# குடி அரசு
# 1925

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

பெரியார் திராவிடர் கழகம்

29 இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்
சென்னை - 600 041

## கூட்டுழைப்பின் விளைச்சல்

*1925 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 1949 நவம்பர் முடிய வெளிவந்த 'குடி அரசு' வார ஏடு தமிழக வரலாற்றுப் போக்கையும் அதனோடு தொடர்புள்ள இந்திய வரலாற்றுப் போக்கையும் சமூகப்புரட்சிப் பார்வையில் புரிந்து கொள்ளவும்; பெரியாரின் பொதுவாழ்வில் நிகழ்ந்த இயங்கியல் மாற்றங்களையும், கொள்கை, வேலைத்திட்ட வளர்ச்சிப் போக்குகளையும் வெளிப் படுத்தவுமான மிகச்சிறந்த ஆவணமாகும்.*

*பெரியார் காங்கிரசில் பணியாற்றிய கால கட்டம் நெடுகிலும் தொய்வின்றி வலியுறுத்தி வந்த வகுப்புரிமை கோரிக்கைகள் சூழ்ச்சியாக ஏமாற்றப்பட்டே வந்ததன் உச்சமாய் 1925 நவம்பர் 21, 22 நாள்களில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாநில மாநாட்டில் கட்சி விதிகளுக்கு இணங்க உரிய எண்ணிக்கை உறுப்பினர்களுக்கும் மேலதிகமாய் ஒப்புதல் பெற்று முன் வைத்த வகுப்புரிமைத் தீர்மானம் விவாதத்துக்குக்கூட எடுத்துக்கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டதால் தன் நண்பர்களுடன் வெளியேறி சுயமரியாதை இயக்கம் கண்டார்.*

*சுயமரியாதை இயக்கம் சுடர்விட்டுப் பரவி காட்டாற்று வெள்ளம்போல் சமுதாயக் கசடுகளை அடித்துச் சிதைத்தவாறு முழு வீச்சோடு களமிறங்கியது. 1938 டிசம்பர் இறுதி நாட்களில் சென்னையில் நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சி என்னும் தென் இந்திய நலஉரிமைச் சங்கத்தின் தலைவராக இந்தி எதிர்ப்புக்காய் சிறைப்பட்டிருந்த நிலையிலேயே பெரியார் தேர்ந்தெடுக்கப் பட்டார். முற்று முழுதாக வேறு திசை விலகலின்றி சமுதாய சமத்துவம், பகுத்தறிவுப் பணிகளை மட்டுமே ஆற்றிவந்த அருமையான காலகட்டம் 1925 முதல் 1938 வரையிலான காலமாகும்.*



RangaRakes
tamilnavarasam.com

இந்தக் கால இடைவெளியில் 'குடி அரசு' ஏட்டில் வெளி வந்துள்ள பெரியாரின் எழுத்துகளையும் பேச்சுகளையும் தொகுத்து வெளியிட வேண்டுமென பெரியார் திராவிடர் கழகம் விரும்பியது. 2001 ஜுன் மாதத்தில் புதிய அமைப்பாகத் தோன்றிய 'தந்தை பெரியார் திராவிடர்கழகம்' (தற்போது 'பெரியார் திராவிடர் கழகம்') 2003 ஆம் ஆண்டு நவம்பரில் 'குடி அரசு 1925' என்ற முதல் தொகுதியை வெளியிட்டது. 2005 ஆம் ஆண்டின் இரு நிகழ்வுகளில் 1926 ஆண்டின் தொகுப்புகளை இரண்டு தொகுதி களாக வெளியிட்டது.

2006 ஆம் ஆண்டில் பெரியாரின் நினைவு நாளாம் டிசம்பர் 24 இல் 1927 ஆம் ஆண்டின் இரண்டு தொகுப்புகளை வெளியிட எல்லா முன்னேற்பாடுகளும் முடிந்த நிலையில்தான் சீரங்கத்தில் திராவிடர் கழகத்தால் நிறுவப்பட்ட பெரியாரின் சிலையை இந்து மத வெறியர்கள் சிதைத்த சம்பவம் நிகழ்ந்தது. அதைத் தொடர்ந்து பெரியார் திராவிடர் கழகத்தினர் நிகழ்த்திய எதிர்வினைகளுக்காக 50 க்கும் மேற்பட்ட தோழர்கள் தளைப்படுத்தப்பட்டதும் குறிப்பாக, ஏழு தோழர்கள் மீது விசாரணை இன்றி ஓராண்டு சிறைவைக்க அதிகாரமளிக்கும் தேசியப் பாதுகாப்புச் சட்டப் பிரிவுகளின் கீழ் சிறைப்படுத்தப்பட்டதுமான நிகழ்வுகள் வெளியீட்டு முயற்சியைத் தள்ளிப்போடச் செய்து விட்டன.

ஒருவாறு வழக்குகளை வென்று தோழர்கள் விடுதலையான பின்னர் 1938 ஆம் ஆண்டு வரையிலான 'குடி அரசு' தொகுப்பு களை ஒரே முறையில் வெளியிட்டுவிடலாமே என்ற சிந்தனை பல்வேறு தரப்புகளிலிருந்து கிளம்பி, இறுதியில் அவ்வாறே வெளியிட்டுவிடலாம் என்று தீர்மானித்தோம்.

1983, 1984 ஆண்டுகளில் தொகுத்து எழுதியவற்றை படி எடுத்து வைத்திருந்த பெரியார் மையத்தின் முன்னணி உறுப்பினர் களான தஞ்சை வழக்குரைஞர் பாண்டியன், திருச்சி சமுத்திர ராசன், இலால்குடி நாகராசன் ஆகியோர் கழகத்தின் மீது நம்பிக்கை வைத்து தங்களிடமிருந்த தொகுப்புகளை கையளித்த மையே இத்தொகுப்புப் பணியின் தொடக்கமாயிற்று. இம் முயற்சி கள் தொடர்ந்த போது, இடையில் தான் திரட்டி வைத்திருந்த குடி அரசு இதழ்களின் தொகுப்புகளையும் கூடுதல் தரவுகளாய்ப்



பயன்படுத்தி இந்தத் தொகுப்புப் பணியை மேலும் சிறப்பாக வெளிக்கொணர துணை நிற்பதாக வாக்களித்து இணைந் தார் தஞ்சை தோழர் இரத்தினகிரி. நாமும் ஆர்வமிக்க பல பெரியா ரியல் பற்றாளர்களும் இப்பணிக்காக மூன்றரை இலட்சம் ரூபாயை தோழர் இரத்தினகிரி அவர்களிடம் தந்தோம். அதன் பின்னர் அவர், தான் திரட்டிய குடி அரசு இதழ்களைப் பயன்படுத் துவதற்காகவும் தனது கடந்த கால உழைப்பு, செலவினங்களுக் காகவும் அய்ந்து இலட்ச ரூபாய் கேட்டதற்கு நாமும் இணங்கி னோம். பின்னர் கேட்புத் தொகை பல மடங்குகள் உயர்ந்தது. அதன் பொருந்தாமையையும் இயலாமையையும் எடுத்துக் கூறினோம். நாங்கள் அளித்த தொகையின் ஒரு பகுதியைக் கொண்டு ஒளி அச்சு செய்திருந்த 1931, 1933 - 1938 ஆகிய ஏழு ஆண்டுகளுக்கான குறுந்தகடுகளை எங்களிடம் கொடுக்காமல் இழுத்தடித்தபடியே இருந்தார்.

2008 ஜுலை இறுதிவரை இந்த இழுத்தடிப்பு தொடர்ந்தது. இனி அவரிடமிருந்து குறுந்தகடுகள் கிடைக்கவே கிடைக்காது என்பதைப் புரிந்துகொண்ட நிலையில்தான் ஏற்கனவே ஈடுபட்டு நிறுத்தி வைத்திருந்த குடி அரசு இதழ்களை திரட்டும் பணியில் தொகுப்புக்குழு முழுவீச்சில் இறங்கியது. இந்த முயற்சிக்கு உதவிட முன்வந்த நல்ல உள்ளங்களை நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

முதலில், திராவிடர் இயக்க மூத்த எழுத்தாளர் ஏ.எஸ்.வேணு அவர்களின் நூல்களை பொறுப்புடன் பராமரித்துவரும் காஞ்சிபுரம் திரு. கே.பி.திருஞான சம்பந்தம் அவர்களை அணுகி 1936, 1938 ஆகஸ்ட் - டிசம்பர் முடிய உள்ள குடி அரசு மற்றும் பகுத்தறிவு இதழ்களைப் பெற்றோம். அதைத் தொடர்ந்து மதுரை யாதவர் கல்லூரியின் தமிழ்த்துறையில் பாதுகாத்து வைத்திருந்த 1936 இன் பிற்பாதி, 1937 முழுதும், 1938 முதல் ஏழு மாத கால குடி அரசு இதழ்களை தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் நாடகத் துறைத் தலைவர் பேராசிரியர் மு.இராமசாமி அவர்களின் வழி காட்டுதலில் யாதவர் கல்லூரி தமிழ்த்துறையில் பணியாற்றும் பேராசிரியர் மோகன் அவர்களின் கனிவு மிகுந்த ஒத்துழைப்பால் படி எடுத்துப் பெற்றோம்.



RangaRakes

tamilnavarasam.com

புகழ்பெற்ற பட்டிமன்ற உரையாளர் மதுரை பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள் தான் போற்றிப் பாதுகாத்து வைத்திருந்த 1928, 1931, 1932, 1933 ஆகிய ஆண்டுகளுக்கான குடி அரசு இதழ்களைக் கொடுத்து அருளினார். அதன்பின் "நாடார் குல மித்திரன்" எனும் சுயமரியாதை இயக்க ஆதரவு ஏட்டினை நடத்தி வந்த மதுரை சூ.அ.முத்து நாடார் அவர்கள் திரட்டி வைத்திருந்த 1934, 1935, 1939, 1940 ஆண்டுகளுக்கான குடி அரசு இதழ்களை அவரது மகன் திரு. முத்துமுருகன் அவர்களின் மகள் மு. அல்லிராணி, மருமகன் சக்தி வடிவேல் ஆகியோர் கொடுத்து உதவினர். அதோடு நாடார்குல மித்திரன் ஏடு வெளியான பத்து ஆண்டுகளுக்கான இதழ்களை குறுந்தகடுகளாக்கியும் அளித்தார். அது மட்டுமின்றி கிடைத்தற்கரிய அறுபதுக்கும் அதிகமான பழைய சுயமரியாதை இயக்க வெளியீடுகளை தானே படி எடுத்தும் கொடுத்தார்.

கழகத்தின் கோவை வடக்கு மாவட்டத் தலைவராக நெடுங் காலம் பணியாற்றியவரும் ஓய்வு பெற்ற நூலகருமான தோழர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் அவர்கள் 1927, 1929, 1930 ஆகிய மூன்றாண்டுகளுக்கான குடி அரசு இதழ்களைத் தந்தார்.

முழுவீச்சில் தொகுப்புப் பணிகளும், அச்சுப்பணிகளும், முன் வெளியீட்டுத் திட்டப்பணிகளும் நடந்து வந்த நிலையில் திராவிடர் கழகத் தலைவர் டாக்டர் கி.வீரமணி அவர்கள் பெரியாரின் அனைத்து நூல்களும் தங்களது அறிவுசார் சொத்து எனவும், யாரும் வெளியிடலாகாது எனவும் அறிக்கை வெளியிட்டார்.

இவ்வறிக்கைக்குப் பின்னரே கழகத்தின் வெளியீட்டு முயற்சிகளை அறிந்த ஆத்தூர் திரு.மவுலானா சாகிப்ஜி அவர்களும் சென்னை திரு.ஞாலன் சுப்பிரமணியம் அவர்களும் அவர்களாகவே தொடர்புகொண்டு தங்களிடமிருந்த குடி அரசு இதழ்களையும் சில தொடக்ககால சுயமரியாதை இயக்க நூற் தொகுப்புகளையும் மனமுவந்து அனுப்பிவைத்தார்கள்.

நாகை சிறுதும்பூர் தென்னவன் அவர்களின் புதல்வரும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியருமான வெற்றிச் செல்வன் தனது தந்தையாரின் நூல் சேமிப்புகளிலிருந்து நமக்கு அனுப்ப குடி அரசு இதழ்களைத் தேடி எடுத்த போது அவை



சிதைந்தும் நொறுங்கியுமே கிடந்தன. பெரியார் இயக்கத்தின் வரலாற்றுப் பதிவான குடி அரசை உண்மையான பல பெரியார் தொண்டர்கள் காலம் காலமாக பாதுகாப்பதில் காட்டிய உறுதியும் ஆர்வமும் எங்களை மெய்சிலிர்க்க வைத்தது. என்றென்றும் பயன்படும் நிரந்தரப் பதிவான இவைகள் அச்சேற்றப்படாமல் இவ் அவலத்துக்கு உள்ளாகி விட்டனவே என்ற உணர்வு இந்தப் பணிகளைச் செய்து முடிப்பதற்கு எங்களை மேலும் உந்தித் தள்ளியது. ஒரு கட்டுரையை முழுமையாகப் பெற மூன்று நான்கு இதழ்களோடு ஒப்பிட்டே இறுதியாக்க வேண்டியிருந்தது. இதழ்கள் கிழிந்தும் சில இடங்களில் சிதைந்தும் எழுத்துகள் மறைந்துமே இருந்தன. எண்பது ஆண்டுகள் கடந்த நிலையில் வேறு எப்படித்தான் அவை இருக்க முடியும்? விடுபட்ட பல கண்ணிகளை முழுமையாக்குவதில் தொடக்க முயற்சியிலிருந்து உதவிக்கரம் நீட்டியவை ரோஜா முத்தையா ஆய்வு நூலகமும் மறைமலை அடிகள் நூலகமுமே ஆகும்.

தங்கள் பெயரை வெளிப்படுத்த விரும்பாத ( திராவிடர் கழகத் தொடர்புடன் இருப்பதால் ) சில பேருள்ளங்கள் புரட்சி, குடி அரசு, பகுத்தறிவு ஏடுகளின் படிகளைத் தந்து உதவியதும் நன்றியுடன் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

இவற்றையெல்லாம் தேடிப்போய் படி எடுத்து வந்து உதவிய தோழர்கள் சென்னை தபசி.குமரன், மதுரை முருகேசன், செம்பட்டி இராசா, வின்சென்ட், நக்கீரன் செய்தியாளர் சிவ சுப்பிரமணியன், தஞ்சை பசு.கவுதமன் ஆகியோரின் பங்களிப்பு அளப்பரியது.

தஞ்சை நாவலர் நா.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி நிர்வாக அறங்காவலர் பேராசிரியர் பி.விருத்தாசலனார், முதல்வர் முனைவர் கு.திருமாறன், தஞ்சை பெ.மருதவாணன், குப்பு.வீரமணி, முனைவர்க.நெடுஞ்செழியன், முனைவர் இரா. சக்குபாய், முனைவர் கு.மா.இராமாத்தாள், கோவை திரு. நடராசன், பொள்ளாச்சி மா.உமாபதி, புலவர்.வீர. பிராட்லா, பொறிஞர் முத்து.மணிவண்ணன், முனைவர் வி.பாரி, முனைவர் வி.தமிழ்ச்செல்வன், பொறிஞர் வி.விடுதலைவேந்தன் ஆகியோர் குடி அரசு தொகுதிகள் வெளிவர வேண்டும் என்ற பெரும்



RangaRakes

tamilnavarasam.com

வேட்கையோடு இப்பணிகளில் காட்டிய ஆர்வமும் கொடுத்த ஒத்துழைப்பும் தொகுப்புக் குழுவுக்கு பெரும் ஊக்கமாய் அமைந்தது. தஞ்சை நாட்டார் திருவருள் கல்லூரியில் இப் பணியில் ஈடுபட்ட திருவாளர்கள் வெ.வரதராசன், நா.அருண்குமார், முனைவர் மு.இளமுருகன், முனைவர் வி.தமிழகன், முனைவர் நா.பெரியசாமி, கோபி ஆனந்த. கவுதமன், மயிலாடுதுறை இர. இரசீத்கான் போன்றோரும் நாட்டார் கல்லூரி மாணவர்களும் ஆற்றிய அரும்பணிகள் நன்றிக்கு உரியன.

தஞ்சை தோழர் இரத்தினகிரி உருவாக்கிய இடர்ப்பாடுகளால் தஞ்சையிலிருந்து விடுவித்துக்கொண்டு மீண்டும் மேட்டூரிலிருந்து பணிகளைத் தொடர வேண்டியதாயிற்று. மேட்டூர் அணை தாய்த்தமிழ்ப் பள்ளியில் முதற்கட்ட மெய்ப்பு பார்க்கும் பணிகள் 2008 மே மாதத்தில் தொடங்கின. சுமார் ஒருமாத காலம் இப்பணி தொடர்ந்தது. கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி தொகுப்புக் குழுவுக்குத் தலைமை ஏற்று முழுவீச்சில் செயல்பட்டார். பிழை திருத்தல், ஒப்பிட்டு சரிபார்த்தல் என்று மே மாதம் அவர் தொடங்கிய பணி இதழ் தயாரித்து முடியும் காலம் வரை தொடர்ந்தது. ஒளி அச்சு செய்யும் பணியில் தோழர்கள் சு.சம்பத் குமார், நந்தகுமார், ஆரோக்கியசாமி, ஜோசப், பார்த்தீபன் ஆகியோர் கடுமையாக உழைத்தனர். மெய்ப்புப் பார்த்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் கழகத் தோழர்கள் மே.கா.கிட்டு, இரா.முத்துக்குமார், இலக்கம்பட்டி அ.குமார், மே.கா.காந்தி, சா. ஜஸ்டின்ராசு, கொளத்தூர் ஆசிரியர் செ.செல்வேந்திரன், பெ.ஆசைத்தம்பி, பொறியாளர் சி. கோவிந்தராசு, மாணவத் தோழர்கள் பா.அறிவுச்செல்வன், மா.பிரபாகரன் ஆகியோர் முழுநேரமும் தொடர்ந்து பணியாற்றினர். இடையில் மெய்ப்புப் பணியில் உதவிட புலவர் செந்தலை ந. கவுதமன், சூலூர் கே.தேவராசு, கோபி நேதா. ஆசைத்தம்பி ஆகியோர் சில நாள்கள் மேட்டூர் பள்ளியிலேயே தங்கி வசதிக்குறைவுகளையும் பொருட்படுத்தாது மனநிறைவோடு பங்களிப்பை வழங்கினர்.

தொகுப்புப்பணியின் ஒருங்கிணைப்பாளராக தோழர் ப.தமிழ்க்குரிசில் செலுத்திய உழைப்பும் சிந்தனையும் அளப்பரியதாகும். கண்டிப்பு நிறைந்த ஆசிரியராக அவர் வழி நடத்தினார். கடமையாற்றிய கழகத்தினர் ஏதேனும் ஒருநாள் விடுப்போ



அல்லது சில மணி நேர தாமத வருகைக்கோ பள்ளி மாணவர்களைப்போல் தயங்கித் தயங்கி அவரிடம் அனுமதி கேட்பதும் அவரோ கோரிக்கையில் பாதியை அதுவும் தயக்கத்துடன் அனுமதித்ததை யெல்லாம் இப்போது நினைத்தால்கூட நகைப்பை ஏற்படுத்தக் கூடியவை. மேட்டூர் தாய்த்தமிழ்ப் பள்ளியில் விடுமுறை காலம் முழுதும் தொடர்ந்த இப்பணிகள் பள்ளி திறப்பிற்குப் பிறகு கொளத்தூர் பெரியார் படிப்பகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டன.

ஒளி அச்சுப் பணிகளை மீண்டும் புதிதாக மேற்கொள்ள வேண்டி இருந்ததால் அந்தப் பணிகள் சேலம், கோவை நகர்களிலும் நடந்தன. 1931, 1933 ஆண்டுகளுக்கான ஒளி அச்சுப் பணிகளை சேலத்தில் தோழர்கள் அடல் வரைகலை சரவணன், இரவி, கண்ணன் ஆகியோர் செய்து முடித்தனர். கொளத்தூருக்கும் சேலத்துக்கும் இடையே நடந்த இப்பணிகளின் இணைப்பாளராக அங்கிருந்து இங்கும் இங்கிருந்து அங்குமாக படிகளை வாங்கித் தந்து இரண்டாம் திருத்தம், மூன்றாம் திருத்தம் என்று பணி முடியும்வரை சலிப்பின்றி செயல்பட்டவர் சேலம் நகர கழகத்தின் செயலாளர் தோழர் இரா.டேவிட் ஆவார்.

1934, 1935, 1936, 1937, 1938 ஆண்டுகளுக்கான ஒளி அச்சுப் பணிகளை கோவை ‘அய்ரீஸ் கிராபிக்ஸ்’ நிறுவன உரிமையாளர் தோழர் இராசாராம் - சீதா இணையர் மேற்கொண்டனர். தோழர் இராசாராம் பெரியாரியலாளர், பெரியார் மையத்தில் செயல்பட்டவர். கோவை விடியல் பதிப்பக உரிமையாளர் தோழர் சிவா இந்தப் பணிக்காக தமது அலுவலகத்தையே தந்து உதவினார். தோழர்கள் கொளத்தூர் மணி, ப.தமிழ்க்குரிசில், இரா.முத்துக்குமார், கோவை சட்டக் கல்லூரி கழக மாணவத் தோழர்கள் பன்னீர்செல்வம், சேகர் ஆகியோர் இரவும் பகலுமாக மெய்ப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது தோழர்களுக்கான உணவை தங்கள் இல்லத்தில் தயாரித்துக்கொண்டு வந்து தோழர்களுக்கு வழங்கிய விடியல் விஜயா அவர்களின் துணைவர் தோழர் தண்டபாணியை மறக்கமுடியாது. இணையர்களின் ஆதரவும் அன்பும் பணிச் சுமைகளால் எழுந்த சோர்வுகளைக் களைந்து உற்சாகத்தை தந்தபோது அதிர்ச்சியான ஒரு செய்தி வந்து சேர்ந்தது. முதல் நாள் இரவு 12 மணிவரை எங்களுடன் இருந்து



RangaRakes

tamilnavarasam.com

உணவு பரிமாறி இல்லம் திரும்பிய தோழர் தண்டபாணி விடியற்காலை மாரடைப்பால் முடிவெய்திய அதிர்ச்சி செய்தி எங்களைக் கலங்கச்செய்து விட்டது. முதல் நாள் எங்களிடம் அவர்பெற்ற விடை நிரந்தர விடையாகு மென்று நாங்கள் நினைத்துப்பார்க்கவே இல்லை.

கொளத்தூர் பெரியார் படிப்பகத்தில்தான் கணினியாக்கம் மற்றும் தொகுப்புப் பணிகள் முழுமையாக நடந்தன. கீழ்த்தளத்திலும் முதல் தளத்திலும் பணிகள் எப்போதும் சுறுசுறுப்பாக நடந்துகொண்டே இருக்கும். காலை பத்து மணிக்குத் தொடங்கும் பணிகள் மறுநாள் அதிகாலை 2 மணி வரை நீடிக்கும். அதையும் தாண்டி 4 மணி வரை நீடித்த நாட்களும் உண்டு. சுமார் மூன்று மாத காலம் பணிகள் தொய்வின்றித் தொடர்ந்தன. தோழர்கள் கொளத்தூர் மணி, ப.தமிழ்க்குரிசில், இரா.முத்துக்குமார், மே.கா.கிட்டு, கொளத்தூர் தா.செ.பழனிச்சாமி, சா.ஜஸ்டின்ராஜ், மே.கா.காந்தி, ஆசிரியர் செ.செல்வேந்திரன், காவலாண்டியூர் ஈ. கனிகாச்செல்வன், மேச்சேரி ஆசிரியர் ரமேசு, இளம்பிள்ளை கோகுலக் கண்ணன், காவலாண்டியூர் கண்ணன், த.விசுவநாதன் ஆகியோர் முழுமையாகப் பணியாற்றினர். தோழர் சூலூர் வீரமணி, தோழியர்கள் சீமா, கலைச்செல்வி, மாதவி ஆகியோரும் அவ்வப் போது வந்து பணியாற்றிச் சென்றனர். பள்ளி, கல்லூரி மாணவர் கள் பலரும் ஆர்வத்துடன் உதவிட முன்வந்தனர். தஞ்சை தோழர் பசு.கவுதமன் தொகுப்புப் பணிக்கு பல்வேறு வழிகளில் உதவிய தோடு அன்றாடம் தொலை பேசியில் தொடர்பு கொண்டு செய லூக்கியாய் கடமையாற்றினார்.

கணினியாக்கப் பணிகளை அதுவரை திருச்சியில் தனது இல்லத்திலிருந்தே செய்து வந்த தோழர் தாமரைக்கண்ணன் நிரந்தரவாசம் புரிய கொளத்தூர் வந்து சேர்ந்தார். மின்சாரம் இல்லாத வேளையில் பணிகள் தடைபடக் கூடாது என்பதற்காக மின்னாக்கி ( ஜெனரேட்டர்) எப்போதும் தயார் நிலையில் இருந்தது. இதற்கான பொறுப்பை ஓவியர் மூர்த்தி, கராத்தே குமார் இருவரும் ஏற்றனர். இறுதிக் கட்டப்பணி நெருங்கிய போது கழகத் தோழர்களே தங்களது சொந்தக் கணினிகளைக் கொண்டு வந்தனர். நான்கு கணினிகளில் இரவும் பகலும் வேலைகள் நடந்தன. கணினியாக்கத்தில் தோழர் தாமரைக்கண்ணனுக்கு உதவியாக



சென்னை தபசி. குமரன், திருப்பூர் இராவணன், மேட்டூர் வானவில் சம்பத், கொளத்தூர் சூர்யா அச்சக உரிமையாளர் சுப்பு, காவலாண்டியூர் சசி, கபிலன் ஸ்டுடியோ விஜயகுமார் ஆகியோர் செயல்பட்டனர்.

படிப்பகத்தில் இருபது தோழர்கள் எப்போதும் முழு நேரமும் பணியில் இருப்பார்கள். இவர்கள் அனைவருக்கும் உணவகங்கள் வழியாக உணவு ஏற்பாடு செய்வது கூடுதல் நிதிச்சுமையுமாகுமே என்று கவலையோடு சிந்தித்த தோழர்கள் ஒவ்வொரு நாளும் ஒரு கழகக் குடும்பம் உணவு வழங்குவதென முடிவு செய்தனர். கழகத் தோழர்கள் மாவட்டச்செயலாளர் டைகர் பாலன், ப.சூரியக்குமார், அருள்சுந்தரம், பெரியசாமி, நகரச் செயலாளர் பெ.இளஞ்செழியன், காவலாண்டியூர் ஈசுவரன், ஆகியோர் இந்த ஏற்பாடுகளுக்குப் பொறுப்பேற்றனர். கழகக் குடும்பத்தினரும், ஆதரவாளர்களும் வகை வகையாக உணவு தயாரித்து, தலைவியும், தலைவனும், குழந்தைகளுமாய் வந்து அன்புடன் பரிமாறிய தோழமையும் பாசமும் பெரியார் குடும்பங்களின் நல்லுறவையும் பாசப்பிணைப்பையும் உறுதியாக்கி நெகிழச் செய்தன. தொலைதூரக் கிராமங்களில் இருந்து கழகக் குடும்பத்தினர் உணவு தயாரித்து பாத்திரங்களில் நிரப்பி பேருந்துகளிலும் வாகனங்களிலும் கொண்டுவந்து பரி மாறிய நாள்களின் எண்ணிக்கை அதிகமாகும். கழகத் தோழர் இராமமூர்த்தி தனது ஆயுள்காப்பீட்டு முகவர் பணிகளுக்கிடையே நேரம் தவறாது உரிய நேரத்தில் உணவும் தேநீரும் வழங் கினார்.

தொடக்ககால செலவுகளுக்காக தேவைப்பட்ட பெருந்தொகையை வழங்கி உதவிய மேட்டூர் தொழிலதிபர் சி. இரத்தின சாமி, தோழர்கள் கொளத்தூர் இரா.நல்லதம்பி, கும்பகோணம் சிற்பி இராசன், மேச்சேரி கோ. தமிழரசன் ஆகியோரின் பேருள்ளத்துக்கு நெஞ்சார நன்றிகூறி மகிழ்கிறோம்.

இத்திட்டத்திற்கு நிதிதிரட்டும் வழியாக நாம் முன் வெளியீட்டுத் திட்டத்தை அறிவித்தபோது அதை ஆர்வத்துடன் வரவேற்று முன்பணம் அனுப்பி பதிவு செய்துகொண்ட அனைத்துத் தோழர்களுக்கும் வெளியீட்டுநிதியாக ஒரு இலட்சம் ரூபாய்களை வழங்கிய தஞ்சை மாவட்டக்கழகம், ஐம்பதினாயிரம் ரூபாய்களை



RangaRakes
tamilnavarasam.com

மேட்டூர் ஆர்.எஸ் கிளைக்கழகத்துக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இதன்வழியாகக் கிடைத்த நிதிதான் இத் தொகுப்புகள் வெளிவருவதை சாத்தியமாக்கியது. முன் பதிவிற்கான விளம்பரங்களை தோழமையுடன் வெளியிட்ட தமிழின உணர்வுள்ள இதழ்களுக்கும் இணையத்தளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

எந்த சிறு தவறும் வரலாற்றுப் பிழையும் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதில் முழுக்கவனம் செலுத்தி இத்தொகுப்பின் ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு வரியிலும் கூர்மையான பார்வையைக் குவித்து பல மாதங்கள் இரவு பகலாக உழைத்து தொகுப்புக்கு உருக்கொடுத்த பெருமை தோழர் ப.தமிழ்க்குரிசிலைச் சாரும். இந்த அரும்பணி வழியாக குடி அரசின் முழுமையான வரலாற்றுப் புலமையாளராக அவர் உயர்ந்து நிற்கிறார்.

அதே போல் பல மாதங்கள் நாளொன்றுக்குக் குறைந்தது பதினைந்து மணி நேரம் அமர்ந்து பணியாற்றி உடலுக்கும் கண்களுக்கும் அயர்ச்சிதரும் பணியை அயராது செய்து கணினிக்கு அருகில் படுத்துறங்கி, உறக்கம் கலைந்தவுடன் மீண்டும் பணி தொடங்கி இத்தொகுப்பு உருப்பெற முழு உழைப்பை நல்கிய தோழர் தாமரைக்கண்ணனின் பங்களிப்பு மகத்தானது.

இத்தொகுப்புப் பணிகள் நடந்த காலம் முழுவதும் நிதி திரட்டல் முதற் கொண்டு அனைத்து நிலைகளிலும் உரிய ஆலோசனைகளை வழங்கி, பணியாற்றிய தோழர்களை அவ்வப்போது நேரில் சந்தித்து உற்சாகமூட்டி, தொகுதிகளுக்கு இறுதிவடிவம் கொடுத்த கழகப் பொதுச்செயலாளர் விடுதலை.க.இராசேந்திரன் அவர்களின் பணி மிக முக்கியமானது.

'குடி அரசு' தொகுப்பை கொண்டு வர வேண்டுமென்று கழகம் முடிவு செய்த நாளில் தொடங்கி தொகுப்பு வெளிவரும் வரை இதையே முதன்மையான முதற்பணியாக்கிக்கொண்டு, தொகுப்புக்கான நிதி திரட்டல், குடி அரசு ஏடுகளைத் தேடி சேகரித்தல், மெய்ப்புப் பார்த்தல், கணினியாக்கம், அச்சாக்கம், பணிகளை ஒருங்கிணைத்தல் என ஒவ்வொரு கட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு மாதங்கள் பலவாய் நள்ளிரவு வரை



பங்காற்றியதோடு, பணிமுடித்த அதிகாலைப் பொழுதிலும் பங்காற்றிய தோழர்களை தனது வாகனத்தில் கொண்டு போய் வீடு சேர்க்கும் வாகன ஓட்டியாய் செயல்பட்டு பெரியார் திராவிடர் கழகத்தின் வரலாற்றில் புகழ் சேர்த்த கடமையைச் செய்து முடித்த பெருமை தலைவர் தோழர் கொளத்தூர் மணியையே சாரும்.

எத்தனையோ தோழர்களின் உழைப்பு, ஊக்கம், ஆதரவு சக்தியோடு உருவாகி இருப்பதுதான் இந்த குடி அரசு தொகுப்பு. இதில் பங்களிப்பை வழங்கிய அத்தனை தோழர்களும் சமுதாயக் கடமை ஒன்றை ஆற்றிய மன நிறைவைப் பெற்றுள்ளார்கள் என்பதை உறுதியாகக் கூறமுடியும். இதில் எவரும் எவருக்கும் நன்றி கூறும் கடப்பாடுகள் ஏதும் இல்லை. இது கூட்டுழைப்பின் விளைச்சல். நன்றி பாராது தொண்டாற்றிய வரலாற்று நாயகனின் சிந்தனைகளை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்ற ஏக்கத்தோடு அந்தப் புரட்சியாளரின் தொண்டால் தலைநிமிர்ந்த தமிழர்கள் நன்றியுடன் மேற்கொண்ட ஒரு முயற்சி.

இத் தொகுப்பின் நிறைகுறைகளைச் சுட்டிக் காட்டும் பெரியாரியல் சிந்தனையாளர்களின் கருத்துகளைப் பரிசீலிக்கவும், மறுபதிப்புகளில் சரியானவற்றை ஏற்று திருத்திக் கொள்ளவும் தயாராகவே இருக்கிறோம்.

தமிழர் சமுதாயத்தின் முன் இத்தொகுப்புகளை மிகுந்த பூரிப்புடன் சமர்ப்பிக்கிறோம்.

**ஆனூர். கோ. செகதீசன்**
துணைத் தலைவர்

**கோவை. கு. இராமகிருட்டிணன்**
பொதுச் செயலாளர்

**வழக்கறிஞர் செ.துரைசாமி**
தலைமைக் குழு

**திருவாரூர்.கே.தங்கராசு**
தலைமைக் குழு

**பெரியார் திராவிடர் கழகம்**



RangaRakes

tamilnavarasam.com

# காலவரிசைத் தொகுப்பு : காலத்தின் தேவை

வரலாறு என்பது ஆட்சியாளர்களின் காலவரிசைப் பட்டியல் அல்ல; அதைவிட ஆழமானது. வரலாறு என்பது மனித வாழ்வு பற்றியது; மனித சமூகத்தின் வாழ்வியக்கம் பற்றியது; வேறு மொழியில் சொல்ல வேண்டு மானால், சமூக மாற்றங்களின் தொகுப்பே வரலாறு.

வரலாற்றுப் பொருள்முதல்வாத நோக்கில் சமுதாயமானது புராதனப் பொதுவுடைமை, அடிமை உடைமை, நில பிரபுத்துவம், முதலாளித்துவம், சோஷலிசம் என்ற படிநிலைகளில் மாற்றம் பெறுவதாக சொல்லப்படுவது உண்டு. ஆனால், இந்தியச் சமுதாயமானது இப்படிப்பட்ட படி நிலைகளை கடந்து வந்தது என்பதை வரலாற்றுச் சான்றுகள் அடிப்படையில் நிர்ணயிக்க இயலாது என்று மார்க்ஸிய வரலாற்று ஆசிரியர் டி.டி.கோசாம்பி கூறுகிறார். இதைத்தான் காரல் மார்க்சும், "இந்தியாவின் கடந்த காலத்தில் அரசியல் அம்சத்தில் எவ்வளவு மாற்றங்கள் நிகழ்ந்திருந்தாலும் மிகத் தொல் பழங்காலம் முதல் 19 ஆம் நூற்றாண்டின் துவக்க காலம் வரை அதன் சமுதாய நிலை மாற்றமின்றி தேக்க நிலையில் இருந்து வந்துள்ளது" என்று கூறினார். ( The British Rule in India - Karl Marx ) இதையே பெரியார், "நமது நாட்டு அடிமைத் தனம் எத்தனை காலமாய் இருந்து வருகிறது என்பதை நினைத்துப் பாருங்கள். தர்ம ராஜ்யம், இராம ராஜ்யம், சத்தியமூர்த்தி அரிச்சந்திர ராஜ்யம் முதலிய அவதார ராஜ்யம் முதல், தெய்வீகத் தன்மை பொருந்திய மூவேந்தர் முதலிய சரித்திர ராஜ்யம் வரை இந்திய மக்கள் நிலையை சற்று ஞாபகப்படுத்தி ஆராய்ச்சி செய்து உண்மையைக் கண்டு பாருங்கள்" ( குடி அரசு- 20.9.1931 ) என்று குறிப்பிட்டார். இந்தத் தேக்கமான சமுதாய அமைப்பில் தனி அம்சமாக சாதி அமைப்பு இருந்தது.

1901 ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பு அறிக்கை சென்னை மாகாணத்தில் அன்று நிலவிய சாதியம் பற்றிக் கூறுகையில், "ஒரு மனிதனின் வாழ்வை, வேலையை, இருப்பிடத்தை, சமூக அந்தஸ்தை, உணவை, பெயரை, உடையை சாதியே தீர்மானிக்கிறது" என்று சுட்டிக்காட்டியது. பிரிட்டிஷார் வருகைக்குப் பிறகுதான் பார்ப்பன மேலாண்மையை நிலைநிறுத்தும் சாதி யமைப்பு சமூகத்தின் உற்பத்தி உறவுகளில், மாற்றங்களுக்கான அறிகுறிகள் தோன்றின.தேக்கங்கள் அசையத் தொடங்கிய அக்காலகட்டத்தில் பார்ப்பன



ரல்லாதார் இயக்கங்களின் உரிமைக் குரல்களும் கேட்கத்தொடங்கின. எதிர் அணியில் பார்ப்பனப் பிடியில் காங்கிரசும் - இந்து மகாசபையும்- 'தேசபக்தி' என்ற முகத்திரையோடு வெளியே வந்தன. இப்படி சமூக முரண்பாடுகள் செயல்படத் தொடங்கிய வரலாற்றுச் சூழலில் - பார்ப்பனரல்லாத சூத்திர, தீண்டப்படாத மக்களின் உரிமைக்கான முழக்கங்களோடு - பெரியாரும் அவரது இயக்கமும் களத்துக்கு வருகிறது. வரலாற்றுப் போக்கில்- இது ஒரு முக்கிய காலகட்டமாகும். தற்போது நூற்றாண்டு விழா காணும் அறிஞர் அண்ணா இதைத்தான் "பெரியார் ஒரு சகாப்தம்; ஒரு காலகட்டம்; ஒரு திருப்பு முனை" என்று படம் பிடித்தார்.

உற்பத்தியில் பரம்பரை அடிப்படையிலான குலத் தொழிலையும், மறு உற்பத்தியில் ஒரே சாதிக்குள் நடக்கும் அகமண முறையும் தீவிரத்துடன் நிகழ்த்திய செயலாக்கத்தின் மீதும், அதன் காரணிகள் மீதும் பெரியார் அடித்த அடி 'இரும்பு உலக்கையாக' வீழ்ந்தது. பார்ப்பனர்களும் ஆதிக்க சக்திகளும் அலறின; சாதியமைப்புக்கான கருத்தியலையும் செயல் திட்டங்களையும் வழங்கிக் கொண்டிருந்த வேத மதமாகிய பார்ப்பன மதத்தின் ஆணிவேரைப் பெரியார் அசைக்கத் தொடங்கினார். அந்த அசைப்புக்குள்ளே வேதம், புராணம், சாஸ்திரம்,மதம், சம்பிரதாயம் மட்டுமல்ல, 'கடவுளும்' சிக்கிக் கொண்டது. வீரியத்துடன் - வீறுகொண்டெழுந்த - அந்த "கலகத்தின்" காலப் பதிவுகளாய் சாட்சியங்களாக இன்னும் நிற்பவை, பெரியாரின் எழுத்தையும் பேச்சையும் கொண்டிருந்த அவர் நடத்திய ஏடுகள் தான் என்பதில், இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை.

பெரியார் காங்கிரசுக்குள் இருந்த காலம் 5 ஆண்டுகள்தான். அந்த அய்ந்தாண்டுகளில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகவோ அல்லது செயலாளராகவோதான் செயல்பட்டு வந்திருக்கிறார். 'குடி அரசு' ஏட்டை காங்கிரசை விட்டு வெளியேறுவதற்கு 6 மாதம் முன்பே காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த காலத்திலேயே தொடங்கிவிடுகிறார்.அப்போதே அவர் 'குடிஅரசி'ல் எழுதினார்.

"ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும். இதை அறவே விடுத்து தேசம், தேசம் என்று கூக்குரலிடுவது எமது பத்திரிகையின் நோக்கமன்று. மக்களுக்குள் தன்மதிப்பும், சமத்துவமும், சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டும்". இப்படி காங்கிரசில் இருக்கும் போதே முதல் 'குடிஅரசில்' தனது நோக்கத்தை பெரியார் பதிவு செய்துள்ளார். காங்கிரஸ் முன் வைத்த 'தேசியம் - காலனியம்' என்ற வட்டத்துக்குள் சுழன்று கொண்டிராமல், அதற்கு வெளியே நின்று சமூகப் பிரச்சினைகளை பெரியார் முன் வைத்தார் என்ற உண்மையை இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே அதிகாரப் பசிக்காக உருவான பார்ப் பனர் கூடாரமான சுயராஜ்யக் கட்சியையும், பார்ப்பனரல்லாத உரிமைக்காக



RangaRakes tamilnavarasam.com

அரசியலில் இறங்கிய தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தையும் (நீதிக்கட்சி) பெரியார் ஒப்பீட்டு அளவில் திறனாய்வு செய்தார். சுயராஜ்யக் கட்சியை முழுமையாகப் புறக்கணித்த பெரியார் – நீதிக்கட்சிக்கான ஆதரவை நிபந் தனைகளுடன்தான் முன் வைக்கிறார். "காலரும், டையும், பூட்சும், சராயும், ஆங்கிலத் தொப்பியுமுள்ளவர்கள் பிராமணரல்லாதார் நன்மையைப் பற்றி பேசினாலாவது தலைமை வைத்து நடத்தினாலாவது, அதோடு ஒரு பயனும் விளையாது. அரசாங்கத்தின் தயவிருந்தால்தான் பிராமணரல்லாதார் முற்போக்கடைய முடியும் என்ற எண்ணத்தை அடியோடு ஒழிக்க வேண்டும்" என்று பெரியார் இடித்துரைக்கிறார். ('குடி அரசு' 3.1.1926)

பார்ப்பனரல்லாதார் யார் என்பதற்கு தெளிவான விளக்கத்தையும், அவர் வரையறை செய்கிறார்.

" பார்ப்பனரல்லாதார் என்றால், பார்ப்பனரல்லாதார் சமூகத்தில் 100க்கு 90 பேர்களாயிருக்கும் பாமர மக்களையும் ஏழை மக்களையும் குறிக்குமே யல்லாமல், 100க்கு 5 பேர்கூட இல்லாத இராஜாக்களையும், ஜமீன்தார்களையும் மாத்திரம் குறிக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்". ('குடி அரசு' 26.12.1926) காங்கிரஸ் கட்சிக்கு முழுக்குப் போட்டு விட்டு, வெளியேறிய பிறகும் கூட பெரியார் காந்தியாரின் தீண்டாமை ஒழிப்பையும், கதர் பரப்ப லையும் தீவிரமாக ஆதரித்து வந்ததோடு, தென்னிந்திய நலஉரிமைச் சங்க மான நீதிக்கட்சியும், இந்தக் கொள்கைகளை, தமது வசமாக்கிக் கொள்ள வேண்டும் என்றே வலியுறுத்துவதிலிருந்து கட்சிகளைத் தாண்டி சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் அவரது கொள்கைப் பார்வை கோலோச் சியதைப் புரிந்து கொள்ள முடியும்.

1926 இல் சென்னை மாகாணத்தில் சுயராஜ்யக் கட்சியின் மறைமுக ஒத்துழைப்புடன் சுப்பராயன் தலைமையில் சுயேச்சை அமைச்சரவை அமைந்தபோது, முதலில் சுப்பராயனை ஆதரித்த சுயராஜ்ய கட்சி, பிறகு, சுப்பராயன் அமைச்சரவையைக் கவிழ்க்கும் முயற்சிகளில் இறங்கியபோது, பெரியார் மேற்கொண்ட அணுகுமுறைகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவதற்காக ராயல் கமிஷன் (சைமன் குழு) வருகை புரிந்த காலமும் அதுதான். அந்தக் குழுவைப் புறக் கணிக்கும் முடிவையே காங்கிரசுடன் சேர்ந்து நீதிக்கட்சியும் எடுத்திருந்தது. அப்போது பெரியார் குரல் மட்டும் தனித்து ஒலித்தது. சைமன் குழுவைப் புறக்கணிக்கக் கூடாது என்று வலியுறுத்திய பெரியார், புறக்கணிப்பாளர் வைத்த வாதங்களை தகர்த்து எறிந்தார். மீண்டும் நீதிக்கட்சி ஆதரவோடு சுப்பராயன் அமைச்சரவையை நீட்டிக்கச் செய்து உறுதியான ஆதரவு தந்து, தடுமாற்றத்திலிருந்த நீதிக்கட்சித் தலைவர் பனகல் அரசரை இடித்துரைத்து, சைமன் குழுவை பார்ப்பனரல்லாத மக்களின் உரிமைக்குப் பயன்படுத்திக் கொள்ளும் சூழலை உருவாக்கிக் காட்டியவர் பெரியார்.

16. குடி அரசு 1925

1926 இல் நீதிக்கட்சி படுதோல்வியை சந்தித்த நிலையில் அடுத்த தேர்தல் வரை துக்கம் கொண்டாடப் போகிறீர்களா? அல்லது பார்ப்பன ஆதிக்கத்தை அழித்து பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையைக் காப்பாற்றப் போகிறீர்களா? என்று நீதிக் கட்சியினரைப் பார்த்து, வினா எழுப்பியதோடு, பார்ப்பனரல்லாதார் மாநாடு ஒன்றைக் கூட்டி, செயல் திட்டங்களை உருவாக் கும் யோசனையை முன்வைத்தார். அக்காலகட்டத்தில் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, பார்ப்பனரல்லாதாரை எழுச்சிப் பெறச் செய்தார். துவண்டு கிடந்த நீதிக்கட்சியை நிமிர்ந்து நிற்கச் செய்தார். பெரியாரின் ஆலோசனையை ஏற்றுத்தான் 1926 டிசம்பர் 26 ஆம் தேதி மதுரையில் நீதிக்கட்சி பார்ப்பனரல்லாதார் மாநாட்டை கூட்டியது. அதற்கான வேலைத் திட்டங்களையும், பெரியாரே முன் வைத்தார். " பார்ப்பனரல்லாதார் சுயமரி யாதைச் சபைகள்" மாவட்டம், வட்டம், கிராமங்கள் தோறும் தொடங்கப் பட வேண்டும் என்று வலியுறுத்தியதோடு, பார்ப்பனரல்லாத காங்கிரசு கட்சி யினரையும் மாநாட்டில் பங்கேற்க அழைத்தார். " இந்த மாநாடு எவ்வித அபிப்பிராய பேதமுள்ள பார்ப்பனரல்லாதாருக்கும் பொதுவானதென்றே சொல்லுவோம்" ('குடி அரசு' 19.12.1926) என்று பெரியார் சுட்டிக் காட்டுவதை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். கட்சி எல்லைகளுக்கு அப்பால் சுய மரியாதை கொள்கைகளுக்கான தளத்தை விரிவுபடுத்தும் பெரியாரின் செயல் உத்தியை இதில் காண முடிகிறது.

தென்னிந்திய நல உரிமைச் சங்கமான நீதிக்கட்சி நடத்தி வந்த 'திராவிடன்' நாளேட்டை அவர்களால் நடத்த முடியாதபோது பெரியாரிடம் அதன் பொறுப்பு வந்தது. பெரியாரும் அதற்கு ஒப்புக்கொண்டார். அப்போது பெரியார் எழுதினார்:

" திராவிடன்" கொள்கை 'குடி அரசு' க் கொள்கைப்படியே தான் இருக்கும்" என்று அறிவித்த பெரியார், " இதற்கு 'திராவிடன்' சொந்தக் காரர்கள் சம்மதிக்காத போது நாம் விலகிவிடுவோம் என்பது உறுதி" என்று அறிவித்து விட்டே, 'திராவிடன்' பொறுப்பை ஏற்றார். சொல்லியவாறே செயல்பட்டார்.

நீதிக்கட்சியில் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்ற முடிவை அக்கட்சி எடுத்தபோது அதே ' திராவிடன்' ஏட்டில் பெரியார், நீதிக் கட்சியை கடுமையாக கண்டிக்கத் தயங்கவில்லை. கடும் விமர்சனங்களைத் தாங்க முடியாத நீதிக்கட்சி தலைவர்கள் ' திராவிடனை' பெரியாரிடமிருந்து திரும்பப் பெறும் முயற்சிகளில் இறங்கினர். பொருள் இழப்போடுதான் பெரியார் 'திராவிடன்' ஏட்டின் பொறுப்பிலிருந்து விலகினார். சில மாதங் களில் அலர்மேலு மங்கைத்தாயார் எனும் அம்மையாரை ஆசிரியராகக் கொண்டு, 'திராவிடன்' நாளேட்டை நீதிக்கட்சி வெளிக்கொண்டு வந்தது. அதில் இப்படி ஒரு அறிவிப்பு இடம் பெற்றது. "திராவிடன் மதவேறுபாடு, வகுப்பு வேறுபாடு காட்டாமல் இனி வெளியிடப்படும்." இந்த அறிவிப்பே,

17. குடி அரசு 1925

RangaRakes
tamilnavarasam.com

பெரியாரிடமிருந்து 'திராவிடன்' மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டதன் நோக்கத்தை சுட்டி நிற்கிறது.

இவற்றை எல்லாம் நாம் இங்கே சுட்டிக்காட்டுவதற்கு முக்கியக் காரணங்கள் இருக்கின்றன. பெரியாரையும் அவரது இயக்கத்தையும் பற்றிய எந்த ஒரு சரியான புரிதலுக்கு பெரியார் இயங்கிய வரலாற்றுச் சூழல்களோடு இணைத் துப் பார்க்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம். அச் சூழலோ டும், சூழலுக்குள்ளும் பெரியாரைப் பொருத்திப் பார்க்கும்போதுதான் முழு மையான பெரியாரியலின் வெளிச்சத்தைப் பெறமுடியும். காலவரிசைப்படி, பெரியாரின் எழுத்தும் பேச்சும் தொகுக்கப்பட வேண்டும் என்பதில் பெரியார் திராவிடர் கழகம் உறுதி காட்டி வருவதற்கும் இதுவே அடிப்படையான நோக்கம்.

நாம் தொடக்கத்திலேயே சுட்டிக்காட்டியதுபோல் வரலாற்று நிகழ்வு களை வரிசைப்படுத்திப் பார்ப்பதல்ல இதன் நோக்கம். வரலாறுகளோடு பெரியார் இயக்கத்தை இணைத்தும் பொருத்தியும் பெரியாரியலின் முழுமை யான பரிமாணத்தை புரிதலுக்கு உட்படுத்தும் முயற்சியே இதன் நோக்கம். இந்த நோக்கம்தான் பெரியார் எழுத்து - பேச்சுகளின் காலவரிசைத் தொகுப்பை நிர்ப்பந்தப்படுத்துகிறது.

1925 இல் தனது பயணத்தைத் தொடங்கிய சுயமரியாதை இயக்கம் 1938ம் ஆண்டு வரை முழுமையான வீச்சோடு சூறாவளியாக சுழன்றடித்தது. சுயமரியாதை இயக்கத்தின் வரலாற்றில் உன்னதமான இக்காலக்கட்டத்தை உள்ளடக்கிய பெரியார் எழுத்துகளையும், பேச்சுகளையும் முழுமையாக ஒரே நேரத்தில் வெளியிட பெரியார் திராவிடர் கழகம் திட்டமிட்டது. இக் கால கட்டங்களில் பெரியார் காந்தியத்தை ஆதரித்துள்ளார்; எதிர்த்துள்ளார்; நீதிக்கட்சியை ஆதரித்துள்ளார்; எதிர்த்துள்ளார்; கட்சிகளைக் கடந்து பார்ப்பனரல்லாதார் ஒற்றுமைக்கு களம் அமைத்திருக்கிறார். கொள்கைப் பார்வையில் கடும் வார்த்தைகளால் - கண்டித்தவர்களையும் - பிறகு - அதே கொள்கைக்காக அரவணைத்துமிருக்கிறார்; தனது சுயமரியாதை கொள்கை களைக் கொண்டு செல்ல சிறு வெளி கிடைத்தாலும் கூட அதையும் தவறாமல் பயன்படுத்தியிருக்கிறார்; அடக்கு முறைகளுக்கு அவர் ஒரு போதும் அஞ்சியதில்லை. அரிமாவாக எதிர் கொண்டிருக்கிறார். எப்படியாவது - இந்த மக்களை மானமும் அறிவும் உள்ள மக்களாக மாற்றியே தீருவதற்கு அவர் கொடுத்த விலைகள் ஏராளம்; அவரது கருத்துப் போர்க்களங்களான ஏடுகள் - சந்தித்த அடக்குமுறைகள் ; ஒவ்வொரு முறையும் ஜாமீன் பணம் கட்டச் சொல்லி அரசின் கெடுபிடிகள்; இவ்வளவு தியாகத் தழும்புகளுக்குமி டையே பார்ப்பனர்களும், பார்ப்பன ஏடுகளும் வழங்கிய பட்டம் 'பிரிட்டிஷ் விசுவாசி' . அடக்குமுறைகளை எதிர்கொள்வதில் கூட சொந்தப் பெருமைக் கும், புகழுக்குமின்றி கொள்கைக்காகவே சந்தித்த அவரது நேர்மைப் பண்பு வியக்க வைக்கிறது.



பெரியார் வரலாற்றை தமிழர்களுக்கு படைத்தளித்த சாமி.சிதம்பரனார் பெரியார் பற்றி கூறும் போது

> " இவர் இந்தியாவிலேயே பெரியார்தான். மனித இயற்கைக்கு மாறு பட்டவர். தோல்வி என்பது அவருடைய வீரத்தையும் அறிவையும் போட்டு காய்ச்சும் நெருப்பு. இத்தீயில் வைத்துக் காய்ச்ச காய்ச்ச அவருடைய இவ் விரண்டு பண்புகளும் ருசியில் அதிகப் பட்டுக் கொண்டே இருக்கும். இதைப் போலவே வெற்றி கிடைத்தாலும் அதற்கு மேல் செய்ய வேண்டியதைப் பற்றியும், அதனால் ஏற்பட்ட அதிகப் பொறுப்பைப் பற்றியும் தான் கவலைப் படுவார். சில இழி மக்களைப் போல் வெற்றி மயக்கத்தால் கூத்தாடும் சிறுமைக் குனம் அவரிடமில்லை. சுருங்கக்கூறினால், பெரியார் ஒரு பிறவிப் போர் வீரர்" என்று துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

7 சதவீதம் பேர் மட்டுமே எழுதப் படிக்க தெரிந்த காலக்கட்டத்தில் ( இதில் 5 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் பார்ப்பனர்கள் ) வாரம் தோறும் 10000 'குடி அரசு' பத்திரிகைகளை அச்சேற்றிய பெரியார், பணம் கிடைக்கக் கூடிய விளம்பரங்களைக்கூட அதிகம் வெளியிட முடியாது என்ற அறிவிப் பையும் வெளியிட்டு, வருவாயையும் இழக்கத் தயாராகியிருக்கிறார். விளம் பரத்துக்கு கூடுதல் பக்கங்கள் ஒதுக்குவதால், கருத்துக்களை சொல்ல முடியா மல் போய்விடுகிறது என்று வருவாயையும் ஒதுக்கித் தள்ளியிருக்கிறார்.

........"கொஞ்ச நாளைக்கு 'குடி அரசு' 16 பக்கத்துடனே வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. என்றாலும் இதனால் வாசகர்களுக்கு அதிகமான குறை ஏற்படாதிருக்கும் பொருட்டு இப்போது விளம்பரத்திற்காக உபயோகப்படுத்தி வரும் சுமார் 7, 8 பக்கங்களை இனி 3 அல்லது 4 பக்கங் களுக்கு அதிகப் படாமல் செய்துவிட்டு சற்றேறக்குறைய 12 அல்லது 13 பக்கங் களுக்கு குறையாத விஷயங்கள் வெளியாக்க உத்தேசித்திருக்கின்றோம். இதனால் ஒரு சமயம் விளம்பர வியாபாரிகளுக்கு சற்று அதிருப்தி இருக் கலாம்"...... *( 'குடி அரசு' - 23.12.1928 )*

பெரியாரின் இந்தப் புரட்சிகர 'எழுத்தும் பேச்சும்' புதைகுழிக்குள் புதையுண்டு போய்விடக் கூடாது என்ற கவலையோடு, இவை சமுதாய மாற்றத்துக்கான 'படைக்கலன்களாக' மாற்றப்பட்டாக வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் கொள்கை உணர்வுள்ள தொண்டர்களின் வலிமையில் மட்டுமே செயல்படும் பொருளாதார வலிமை ஏதுமற்ற பெரியார் திராவிடர் கழகம் 'குடி அரசு' 27 தொகுதிகளையும் 'ரிவோல்ட்' வார ஏட்டில் வெளி வந்த முக்கிய கட்டுரைத் தொகுப்புகளையும் தமிழ்கூறும் நல்லுலகத்தின் முன் பணிவுடன் சமர்ப்பிக்கிறது: இதில் பெருமையடைகிறது. உன்னதமான கடமையைச் செய்தோம் என்ற உணர்வில் தலை நிமிர்ந்து நிற்கிறது.



RangaRakes
tamilnavarasam.com

2003 ஆம் ஆண்டு பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட ‘குடி அரசு’ 1925 முதல் தொகுப்புக்கான வெளியீட்டாளர் உரையில் சுட்டிக் காட்டியதையே மீண்டும் குறிப்பிடுகிறோம்:

“ தமிழர் உரிமை மீட்பர் பெரியார்................... “ அந்தத் தொண்டு செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ, இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால் நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண் டாற்றி வருகிறேன்”....... என்று கூறுவது போலவே தான் எங்கள் முயற்சியும் என்பதைத்தான் இந்த நிலையில் நாங்கள் கூறிக்கொள்ள முடியும்”.

**- தொகுப்புக்குழு**



## குடி அரசு : ஒரு பார்வை

### முதலில். . . . . .

1925 - 1938 காலகட்டம் வரை பெரியாரின் எழுத்துகளையும் பேச்சு களையும் குடி அரசு, புரட்சி, பகுத்தறிவு இதழ்களிலிருந்து தொகுத்திடும் பணியில் பின்பற்றிய நெறிமுறைகளை விளக்கிட விரும்புகிறோம்.

பெரியாரின் எழுத்துகளையும் பேச்சுகளையும் எந்த மாற்றமும் இன்றி வெளியிடுவதில் அல்லது அப்படியே வெளியிடுவதில் முழுமையான கவனமும் கவலையும் செலுத்தினோம்.

பெரியாரின் எழுத்துகள் குறித்து திருநெல்வேலியில் 28.11.1927 இல் நடைபெற்ற மாவட்ட சுயமரியாதை சங்க மாநாட்டில், மாநாட்டைத் திறந்து வைத்து உரையாற்றிய தமிழறிஞர் இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் பேசியதையும் அதற்கு பெரியார் தந்த பதிலையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறோம்.

> “ குடி அரசுக்கு இன்றிருக்கும் யோக்கியதை உங்கட்குத் தெரியும். அதில் மக்கள் மனதை கவரத்தக்க அளவுகடந்த சக்தி இருப்பதற்குக் காரணம் அழகான ஆராய்ச்சியா? தமிழா? இல்லை. பின்? அவர் உள்ளக்கிடக்கிலுள்ளதை அப்படியே எடுத்துச் சொல்லுவது, அதுவும் மிகச்சாதாரண தமிழிலேயே தான் இருக்கிறது. நாயக்கர் படிப்பில் பட்ட தாரி அல்ல. எத்தகைய கல்வியாளரும், கோடிக்கணக்கான ஜன சமூக மும் திகைக்கத்தக்க வன்மையுடைய பத்திரிகையை இவர் கொடுத்தது நமது பூர்வ புண்ணியமேயாகும்.” *( குடி அரசு 04.12.1927, ப. 6 )*

என்று டி.கே.சிதம்பரநாத முதலியார் குறிப்பிட்டதற்கு பெரியார் இவ்வாறு பதிலளித்தார்.

> “ குடி அரசைப் பற்றி மிக அதிகமாகக் கூறினார்கள். அதில் உள்ள குற்றமெல்லாம் எனக்குத் தெரியும். அதில் உள்ள மெல்லின வல்லினம் போன்ற பல இலக்கணப் பிழைகளும், மற்றும் பல பிழைகளும்



RangaRakes
tamilnavarasam.com

எனக்குத் தெரியும். இதற்காக நான் இலக்கணம் கற்கப் போவதில்லை.”

*( குடி அரசு 04.12.1927, ப. 6 )*

பெரியாரின் மொழிநடை பற்றி அவரது வாழ்க்கை வரலாற்றை ‘தமிழர் தலைவர்’ என்ற தலைப்பிட்டு நூலாக எழுதிய தமிழறிஞர் சாமி.சிதம்பரனார் குறிப்பிடுவதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

> “இவர் எதைப்பற்றியும் அஞ்சாமல் எழுதுவார். இவருக்கு இலக்கணம் தெரியாது. எழுதுவதில் எழுத்துப் பிழைகளும் மலிந்திருக்கும். சொற் பிழைகள் நிறைந்திருக்கும். ஒரு வாக்கியம் எப்படி இருக்க வேண்டும் என்பதே இவருக்குத் தெரியாது. இவர் எழுதுவதில் காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளிக்கு வேலையில்லை. ‘ கிணர்’ ‘வயிர்’ ‘சுவற்றில்’ ‘ஆக்ஷி’ ‘சூக்ஷி’ ‘ஆருதல்’ ‘ பொருமை’ போன்ற பிழை கள் தாராளமாகக் காணப்படும். சாதாரணமாகப் பேசுந் தமிழில்தான் எழுதுவார். அதிலும் எழுவாயெங்கேயிருக்கிறது, பயனிலை எங்கே யிருக்கிறது என்று தேடினாலும் சில சொற்றொடர்களில் அகப்படா. ஒரு வாக்கியம் நான்கு முழம் அய்ந்து முழம் நீண்டிருக்கும். இவ் வளவு பிழைகள் மலிந்திருந்தாலும் படிப்போரை தன்வசமாக்கும் சக்தி இவர் எழுத்துக்கு மட்டும் தனியாக அமைந்துள்ளது. அது என்ன சக்தி என்று நம்மாற் சொல்ல முடியாது.” *( ‘தமிழர் தலைவர்’ .ப. 169 )*

என்று குறிப்பிடுகிறார்.

இப்படி மொழி இலக்கணங்களுக்கு அப்பால், அவற்றினுள் முடங்கிக் கொள்ளாமல் ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் அடிமைப் பட்டுக்கிடந்த தமிழினத்தை விடுதலை செய்யும் எதிர்நீச்சல் தொண்டுக்கே முன்னுரிமை தந்த அந்த சமூகப் புரட்சியாளரின் எழுத்துகளையும் பேச்சுகளையும் உள்ளது உள்ளபடியே வெளிக்கொணர வேண்டும் என்ற கவலையோடு இத் தொகுப் புப் பணிகள் நடந்தன. எடுத்துக்காட்டாகக் குறிப்பிட வேண்டுமானால் பெரியார் சில வேளை ஒரே பத்தியில்

| | | |
|---|---|---|
| அனுகூலம் | – | அநுகூலம் |
| அன்னியர் | – | அந்நியர் |
| தகரார் | – | தகறாரு |
| நீச்சல் | – | நீச்சம் |
| சோம்பேறி | – | சோம்பேரி |
| கட்சி | – | கக்ஷி |
| கேட்கிறோம் | – | கேள்க்கிறோம் – கேழ்க்கிறோம் |
| சூழ்ச்சி | – | சூட்சி – சூக்ஷி |
| கடைசி | – | கடசி |



| | | |
|---|---|---|
| தவிற | – | தவிர |
| நாணயம் | – | நாணையம் |
| ஒரு புறம் | – | ஒரு புரம் |
| பழைய | – | பழய |
| பறித்து | – | பரித்து |
| எவரும் | – | யெவரும் |
| முஸ்லீம் | – | முஸ்லிம் |
| தேசீய | – | தேசிய |
| முத்தையா | – | முத்தய்யா – முத்தய்ய |
| வரதராஜுலு | – | வரதராஜலு |
| கல்யாணசுந்தர முதலியார் | – | கலியாணசுந்திர முதலியார் |
| ரெங்கசாமி | – | ரங்கசாமி |
| ஜெயவேலு | – | ஜயவேலு |
| பந்தலு | – | பந்துலு |
| ஜெயகர் | – | ஜயகர் |

என்று பலபட எழுதியுள்ளார். அவற்றை ‘ குடி அரசு’ இதழ்களில் உள்ள வாறே கொடுத்திருக்கின்றோம்.

ஆண்டு , மாதம், தேதி ஆகியவற்றைக் குறிக்க முறையே ௵, ௴, ௳ என்ற குறியீடுகளும் ‘மேற்படி’ என்பதைக் குறிக்க ௸ என்ற குறியீடும் ரூபாய், அணா, பைசா எனும் அன்றைய நாணயமுறைக் கணக்குகளையும் அப்படியே கொடுத்திருக்கின்றோம்.

பெரியார் முதல் முதலாக எழுத்துச் சீர்திருத்தத்தை குடி அரசில் அறிமுகப்படுத்த எண்ணினாலும் அறிமுகப்படுத்தியது 06.01.1935 பகுத்தறிவு வார இதழில்தான். இதற்கான அறிவிப்பு 30.12.1934 பகுத்தறிவு இதழில் ( துணைத் தலையங்கம் ) வெளிவந்திருக்கிறது.

> ....“இன்னமும் தமிழ் பாஷை எழுத்துகளில் அனேக மாறுதல்கள் செய்ய வேண்டி இருந்தாலும் இப்போதைக்கு இந்த சிறு மாறுதலை அனுபவத்திற்குக் கொண்டு வரலாம் என்று கருதி அந்தப்படியே எழுத்துக்களை உபயோகித்து அடுத்தாப்போல் பிரசுரிக்கப்போகும் ‘குடி அரசு’ பத்திரிகையைப் பிரசுரிக்கலாம் என்று இருக்கிறோம்”.....

*( பகுத்தறிவு 30.12.1934, ப.12)*

எழுத்துச் சீர்திருத்தத்தை, நின்றுபோய் மீண்டும் வெளிவந்த குடி அரசில் நடைமுறைப்படுத்துவதற்கான அறிவிப்பை வெளியிட்டாலும் 05.01.1935 சனிக்கிழமை வரை அஞ்சலகத்தின் ஆணை கிடைக்காததால் 06.01.1935 இதழ் பகுத்தறிவு என்ற பெயரிலேயே வெளிவருகிறது. இங்கே



RangaRakes
tamilnavarasam.com

ஒன்றைக் குறிப்பிட வேண்டும். 1935 க்குப் பிறகுதான் பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்தை நடை முறைப்படுத்தினார் என்றாலும் இத்தொகுப்பு முழுமையிலும் சீர்திருத்த எழுத்து முறையே தவிர்க்க முடியாமல் பயன்படுத் தப்பட்டிருக்கிறது. பழைய எழுத்துவடிவங்களைப் பயன்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களே இதற்குக் காரணம். ஆனாலும் பழைய எழுத்து முறையை பெரியார் கடைசியாகப் பயன்படுத்திய 30.12.1934 பகுத்தறிவு இதழில் வெளிவந்த துணைத் தலையங்கம், 06.01.1935 பகுத்தறிவு இதழில் வெளிவந்த அறிக்கை, இவற்றை மட்டும் இளந் தலைமுறையினர் அறிந்து கொள்வதற்காக பழைய எழுத்து வடிவத்திலேயே கொடுத்துள்ளோம்.

பெரியார் பல்வேறு புனைப் பெயர்களில் கட்டுரைகளை எழுதியுள் ளார். இவற்றில், ‘சித்திரபுத்திரன்’, ‘பழைய கருப்பன்’ என்பவை நன்கு அறியப்பட்ட புனைப்பெயர்களாகும். எனவே அப்பெயரில் வெளிவந்த கட்டுரைகளை தொகுப்பில் சேர்த்துள்ளோம். இதைத்தவிர தேசீயத்துரோகி, ஒரு தொழிலாளி, சுமைதாங்கி, யார் எழுதினாலென்ன, எவர் எழுதினா லென்ன, ஒரு நிருபர், நமது அரசியல் நிருபர், பொதுநலப்பிரியன், குறும்பன், உண்மை காண்போன், நம்பிக்கையிழந்தவன், பார்ப்பனரல்லாதான், உண்மை விளம்பி, வம்பளப்போன், பழைய காங்கிரஸ்காரன், வம்பன் என்ற புனைப் பெயர்களில் வெளிவந்த கட்டுரைகள் பெரியாரால் எழுதப்பட்டவை என் பதை உறுதிப்படுத்த முடியவில்லையானாலும் கட்டுரையின் முக்கியத்துவம் கருதி இத்தொகுப்பில் இணைத்துள்ளோம். அதே போன்று சில இதழ்களில் பல காரணங்களால் பிறரும் தலையங்கம் எழுதியுள்ளனர். அவ்வாறான குடி அரசு தலையங்கங்கள் ஈ.வெ.கி., சா.கு., S.R., மா.வா., சா.மா., யம்.வீ என்ற பெயர்க்குறிப்புகளோடு வெளிவந்துள்ளன. இவற்றை வேறு சிந்தனையாளர் கள் எழுதியிருந்தாலும் அக்காலகட்ட நிகழ்வுகளை அறியத் தரும் நோக் கோடு அவையும் இத்தொகுப்பில் அப்பெயர்க் குறிப்புகளுடனேயே இணைத்துள்ளோம். 13.12.1931 அய்ரோப்பிய சுற்றுப்பயணம் மேற்கொண்டது முதல் 11.11.1932 ஈரோடு வந்த சேர்ந்த நாள் வரையிலான காலத்தில் குடி அரசில் எழுதப்பட்டுள்ள தலையங்கங்களும், துணைத் தலையங்கங்களும் தொகுப் பில் இடம்பெற்றுள்ளன.

தலையங்கம், கட்டுரைகள் இவைகளை முழுமையாகப் புரிந்து கொள் வதற்கு உதவியாக இயன்றவரையில் அடிக்குறிப்புகளைத் தந்துள்ளோம். உதாரணமாக, ஒரு மாநாட்டுத் தீர்மானம் பற்றி தலையங்கம் தீட்டும் போது அத்தீர்மானம் முழுமையாக அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளது. பெரியார் நிகழ்த்திய சொற்பொழிவுகள் வெளிவந்த குடி அரசு இதழின் தேதியுடன் அந்த சொற்பொழிவை நிகழ்த்திய ஊர், தேதி முதலிய விவரங்களும் தரப்பட்டுள்ளன. இது தவிர குடி அரசில் இதழ் ஆசிரியரின் கருத்துக்கள் பத்திராதிபர் குறிப்பு என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கின்றன. அந்தக்



குறிப்பைப் புரிந்து கொள்வதற்கு உதவிடும் தகவல்களும் சேர்த்துத் தரப் பட்டுள்ளன. சான்றாக ஸ்ரீமான் வீரய்யன் கொண்டுவந்த லோக்கல் போர்டு சட்ட திருத்த மசோதா பற்றி பத்திராதிபர் குறிப்பு எழுதப்பட்டுள்ளது. குறிப்பைப் புரிந்துகொள்வதற்கு உதவிட அந்த சட்ட திருத்த மசோதாவின் விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

குடி அரசில் இந்தியச் சிந்தனையாளர்கள், மேலைநாட்டு அறிஞர்கள் ஆகியோரின் கட்டுரைகளும் இயக்கங்களின் அறிக்கைகளும் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன. மொழிபெயர்ப்புக்கு முகவுரையாகவும் பத்திராதிபர் குறிப்புகளாகவும் எழுதியுள்ள குறிப்புகளும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் இரண்டு முக்கிய மொழிபெயர்ப்புக்களைக் குறிப் பிட்டாக வேண்டும்.

ஒன்று, 1931 இல் வெளிவந்துள்ள “ சமதர்ம அறிக்கை” ( Communist Manifesto) 04.10.1931 குடி அரசில் தொடங்கி 01.11.1931 முடிய 5 இதழ்களில் ‘சமதர்ம அறிக்கை’யின் முதல்பாகம் தொடர்ந்து வெளிவந்துள்ளது. அறிக் கையின் மொழிபெயர்ப்பு முகவுரையாக,

> “ .....சமதர்மக் கொள்கை சம்பந்தமாக அந்தக்காலத்தில் வெளியான ஒரு அறிக்கையை மக்கள் உணரும்படியாக வெளிப்படுத்தலாம் என்று நாம் கருதுவதால் அதை மொழிபெயர்த்து வெளியிடலாம் என்கின்ற கருத்துக்கு மேல்கண்ட வாக்கியங்களை முகவுரையாக எழுதினோம்........” *( குடி அரசு - 04.10.1931 )*

என்று பெரியார் குறிப்பிடுகிறார்.

மற்றொன்று, பேரறிஞர் அம்பேத்கரின் 1936 இல் லாகூர் ஜாட்– பட் – தோடக் மண்டலத்தார் ( ஜாதி ஒழிப்புச் சங்கத்தார் ) ஆண்டு மாநாட்டு தலைமையுரை ( மாநாடு நடக்காததால் அவரது உரை நூலாக அச்சிட்டு வெளி யிடப்பட்டது) ‘ஜாதி யொழிய வேண்டும்’ என்ற தலைப்பில் மொழி பெயர்க் கப்பட்டு வெளிவந்துள்ளது. *( குடி அரசு - 19.07.1936 )*

‘சமதர்ம அறிக்கை,’ ‘ஜாதி யொழிய வேண்டும்’ இவையிரண்டும் இந்தியமொழிகளில் தமிழிலும், ஏடுகளில் ‘குடி அரசி’லும் தான் முதலில் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தொகுக்கப்பட்ட எழுத்து, பேச்சுகளை தலையங்கம், துணைத் தலையங்கம், கட்டுரை, சொற்பொழிவு, உரையாடல், மதிப்புரை, பயணக் கடிதங்கள், பெட்டிச்செய்தி, செய்திவிளக்கம், செய்திக் குறிப்பு, இரங்கல் செய்தி, இரங்கலுரை, அறிவிப்பு, பத்திராதிபர் குறிப்பு, செய்தி விமர்சனம் என்று வகைப்படுத்தி குறிப்புகளுடன் தரப்பட்டுள்ளன.



RangaRakes

tamilnavarasam.com

‘குடி அரசு’ இதழில் மட்டுமல்லாது ‘புரட்சி’, ‘பகுத்தறிவு’ இதழ்களில் வெளிவந்த பெரியாரின் கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. ஒரே காலத்தில் ‘விடுதலை’ நாளேடும் ‘குடி அரசு’ம் வெளிவந்த போது குடி அரசில் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ள விடுதலை தலையங்கங்களும் தேவை கருதி சேர்க்கப்பட்டுள்ளன. குடி அரசு வெளியிட்ட தலைப்புகளில் மாற்றம் எதுவும் செய்யவில்லை. தலைப்பின்றி வெளி வந்த பெரியார் சொற்பொழி வுகளுக்கு மட்டும் அதன் பொருள் குறித்த தலைப்புகள் தரப்பட்டுள்ளன.

கிடைத்த இதழ்கள் கிழிந்து அரித்த நிலையில்தான் இருந்தன. சிலவற் றில் கட்டுரையின் வரிகள் மறைந்துபோய்விட்டன. இதை நிரப்புவதற்கு முழுமையான பக்கங்கள் கிடைக்க பெரும் முயற்சிகள் மேற்கொண்டும் கிடைக்கவில்லை. எனவே விடுபட்ட வரிகளைக் குறிக்க ............................ என்ற குறியீட்டைப் பயன்படுத்த வேண்டியிருந்தது.

கட்டுரையில் இடம்பெற்றுள்ள சொற்கள் காலத்தால் பழைமை யானவை. தற்காலத்தில் புழக்கத்தில் இல்லாதவை. எனவே அவற்றின் பொருள் புரிவதற்கு அருஞ்சொல் பொருள் விளக்கம் ஒவ்வொரு தொகுதி யின் இறுதியிலும் இணைக்கப்பட்டுள்ளது.

## குடி அரசு : எதிர்நீச்சல் பயணம்

1922 ஆம் ஆண்டு கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு, கோவை சிறையில் பெரியார் அடைக்கப்பட்டபோது, அவரும் அவருடன் சிறையில் உடனிருந்த ஈரோடு கருங்கல்பாளையம் வழக்கறிஞர் தங்கபெருமாள் பிள்ளையும் இணைந்து சிந்தித்த திட்டத்தின் விளைச்சல்தான் ‘ குடி அரசு.’ சிறையிலிருந்து வெளியே வந்தவுடன், 1923 ஆம் ஆண்டிலேயே ‘ குடி அரசை’ பதிவுசெய்த பெரியார், 02.05.1925 ஈரோட்டில் ஞானியார் அடிகளைக் கொண்டு வெளியிட்டார். ஞாயிறுதோறும் ஓரணா விலையில் வெளிவரத் தொடங்கியது குடி அரசு. முதலில் அட்டையில் பாரதத் தாய், இராட்டை சுற்றும் காந்தியார், நெசவு செய்யும் பெண், உழவு செய்யும் விவசாயி, சுத்தி யால் அடிக்கும் தொழிலாளி, மூட்டை சுமக்கும் பாட்டாளி படங்களோடும், ‘எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர் இனம்,’ ‘ சாதிகள் இல்லையடி பாப்பா’ என்ற பாரதி பாடல்களோடும் குடி அரசு வெளிவரத் தொடங்கியது.

தொடக்கக் காலங்களில் வார இதழின் 12 பக்கங்களையும் தாமே எழுதி வந்ததாய் பெரியார் குறிப்பிடுகிறார். ( குடி அரசு 18.04.1926 ) பின்னர், ம.சிங்கார வேலர், சாமி.சிதம்பரனார், கைவல்ய சாமியார், மயிலை.சீனி. வேங்கடசாமி, சா.குருசாமி, சந்திரசேகர பாவலர், ஈழத்து சிவானந்த அடிகள், பண்டிதர் முத்து சாமி, கோவை அய்யாமுத்து, ஜனக சங்கர கண்ணப்பர், அ.இராகவன், ஆர்.நீலாவதி, அ.அன்னபூரணி போன்ற சிந்தனையாளர்களின் கட்டுரை



களும் பாரதிதாசன், ஜீவானந்தம் போன்ற கவிஞர்களின் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

1925 இல் தொடங்கிய ‘குடி அரசு’ 1933 ஆம் ஆண்டில் அரசின் அடக்குமுறைக்கு உள்ளானது. “இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?” என்ற தலைப்பில் பெரியார் எழுதிய தலையங்கத்துக்காக பிரிட்டிஷ் ஆட்சி பெரியார் மீது அரசு துரோகக் குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு தொடர்ந்தது. 9 மாத சிறை தண்டனையும் ரூ.300 அபராதமும் விதிக் கப்பட்டு பெரியார் சிறை யேகினார். ‘ குடி அரசி’ன் பதிப்பாளர் பெரியாரின் தங்கை கண்ணம்மாளும் 6 மாத சிறைத் தண்டனைக்கு உள்ளானார். ரூ.100 அபராதமும் விதிக்கப்படு கிறது. இந்த நிலையில் 19.11.933 – லிருந்து ‘ குடி அரசு’ தற்காலிகமாக நிறுத்தப் பட்டு மீண்டும் 13.01.1935 – லிருந்து வெளிவரத் தொடங்குகிறது. தொடர்ந்து 29.12.1940 வரை வெளிவந்த ‘குடி அரசு’ மீண்டும் நிறுத்தப்பட்டு 16.10.1943 – லிருந்து வெளிவரத்தொடங்கி, 1949 ஆம் ஆண்டில் மீண்டும் அரசின் ஒடுக்கு முறைக்கு உள்ளானது. மேலும் ரூ.3000 ஜாமீன் தொகை கேட்கவே ‘ குடி அரசு’ விடைபெற்றுக் கொண்டது.

> “பார்ப்பனீயத்தின் வலையில் வீழ்ந்து நாம் இன்னதுதான் செய் கிறோம் என்பதை அறியாமலேயே, ஒன்றன் மேல் ஒன்றாகப் புசு புசுத்த அம்புகளைப் பாய்ச்சும் சுயராஜ்ய சர்க்காரே! உங்களுக்குச் சிந் தித்துப் பார்க்கும் போக்கு சிறிதாவது உண்டா? ‘ விடுதலை’க்கு ரூ.1000 என்கி றீர்கள்! ‘ திராவிட நாட்டு’க்கு 3000 என்கிறீர்கள். இதற்கு இந்த நாட்டு மக்கள் அளிக்கும் பதில் என்ன?
>
> இரண்டணா, நான்கணாவாக எத்தனை ஆயிரம் பாட்டாளிமக்கள் வீசி எறிந்து உங்கள் உத்தரவை எவ்வளவு கேவலமாகத் துளைத்து விட்டிருக்கிறார்கள் என்பதை ஏன் நீங்கள் சிந்திக்கக் கூடாது? இந்த ஜாமீன் கூத்தைக் கண்டு எத்தனை ஆயிரம் ஏழைகள் வயிறெரிந்து ‘வாழ்த்து’கிறார்கள் என்பதை ஏன் நீங்கள் எண்ணிப்பார்க்கவில்லை? இதுதான் நாம் உங்களுக்குக் கூறும் புத்திமதி!” *( குடி அரசு 02.07.1949)*

‘குடி அரசு’ 1933 ஆம் ஆண்டில் அடக்குமுறைக்குள்ளாகிய சூழ்நிலையில், “ அடுத்தவாரம் ‘குடி அரசு’ பத்திரிகை வரத் தவறும் பட்சத் தில் வேறு பத்திரிகை வெளிவரும்” என்ற அறிவிப்பு 19.11.1933 ஆம் நாளிட்ட ‘ குடி அரசு’ இதழிலேயே வெளிவந்து விடுகிறது. அறிவித்தது போலவே ‘குடி அரசி’ன் அடுத்த இதழ் வெளிவரவேண்டிய 26.11.1933 ஆம் நாள் ‘குடி அரசு’க்கு பதிலாக ‘ புரட்சி’ என்ற பெயரில் இதழ் வெளிவருகிறது. “ குடி அரசை ஒழிக்கச் செய்த முயற்சியால் ‘ புரட்சி’ தோன்ற வேண்டியதா யிற்று. உண்மையிலேயே பாமர மக்களின் – அதாவது பெரும்பான்மையான மக்களின் ஆட்சியாகிய குடி அரசுக்கு உலகில் இடமில்லையானால்,



RangaRakes

tamilnavarasam.com

கண்டிப்பாகப் புரட்சி தோன்றியேதான் ஆகவேண்டும்" என்ற அறிவிப் போடு 'புரட்சி' வெற்றிநடைபோடத் தொடங்கியது. "புரட்சி"யும் அடக்கு முறைக்குத் தப்பவில்லை. ஆசிரியர் பெயர் இல்லாமல் 'புரட்சி' வெளி யிட்டதற்காக வெளியீட்டாளர் சா.ரா. கண்ணம்மாள் மீது வழக்கு தொடரப் பட்டு 1000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. 1934 ஆம் ஆண்டில் மட்டும் 3 வழக்குகள் அடுக்கடுக்காய் தொடரப்பட்டன. அரசால் ஜாமீன்தொகை ரூ.2000 கேட்கப்பட் டது. ரூ.5000 - த்துக்கும் மேல் இழப்பை சந்தித்த 'புரட்சி' ஏடு 17.06.1934 இதழோடு நிறுத்தப்படும் நிலைக்கு வந்தது.

'புரட்சி' ஏடு வெளிவரும்போதே 15.04.1934 முதல் 'பகுத்தறிவு' எனும் நாளிதழைத் தொடங்கினார். ஆனால், அது வெளிவந்தது குறுகிய காலம்தான். 27.05.1934 ஆம் நாளோடு அந்த நாளேடு நின்று போனது.

பெரியார் ஓய வில்லை. புரட்சி நின்றபின் சுமார் 2 மாத இடை வெளி யில் 26.08.1934 முதல் 'பகுத்தறிவு' வார இதழ் வெளிவரத் தொடங்கியது. 1934 மே 20 இல் பெரியார் சிறையிலிருந்து விடுதலையானார். பகுத்தறிவு வார ஏட்டைத் தொடங்கும் போதே பெரியார் எழுதினார்.

> "முடிவாய்க் கூறுமிடத்து, 'பகுத்தறிவு' மனித ஜீவாபிமானத்துக்கு மக்களை வழிநடத்திச் செல்லுமேயொழிய எக்காரணம் கொண்டும் மக்கள் பின் நடந்து செல்லும்படியான அடிமை வாழ்வில் உயிர் வாழாது என்பதேயாகும்." *(பகுத்தறிவு - தலையங்கம் - 26.8.1934)*

06.01.1935 இல் பகுத்தறிவு வார ஏடு நின்றுபோய் விடுகிறது. "பகுத் தறிவு" ஏட்டையும் அரசு விட்டுவைக்கவில்லை. பகுத்தறிவு வார இதழ் நின்று, மாத இதழாகவும் காலணா தினசரிப் பதிப்பாகவும் நடத்த முயன்றபோது பகுத்தறிவு இதழுக்கும் உண்மை விளக்கம் அச்சகத்துக்கும் இரண்டாயிரம் ரூபாய் பிணையத் தொகை கட்டவேண்டும் என்று 29.01.1935 இல் அரசு ஆணை பிறப்பித்தது. பிறகு மாத ஏடாக வெளிவரத் தொடங்கியது. 1935 இல் தொழி லாளர் தினமான மே முதல் நாளிலிருந்து பகுத்தறிவு மாத இதழாக பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தின் சார்பில் வெளிவரத் தொடங்கியது.

01.06.1935 முதல் வாரம் இருமுறை இதழாக 'விடுதலை' வெளிவரத் தொடங்கியது. அப்போது 'குடி அரசும்' வார இதழாக வெளிவந்து கொண்டிருந்தது. 29.05.1937 இதழோடு விடுதலை வாரம் இருமுறை பதிப்பு நிறுத்தப்படுகிறது. 01.07.1937 முதல் 'விடுதலை' நாளேடாக வெளிவருகிறது. அதற்குமுன் ஜஸ்டிஸ் கட்சி சார்பில் 'விடுதலை' ஏடு வெளி வந்து பிறகு நின்றுபோய் இருந்தது குறிப்பிடத்தக்கது. பெரியார் இவ்வளவு அடக்கு முறைகளை எதிர்கொண்டே பத்திரிகைகளை நடத்தியுள்ளார்.



## குடி அரசு : தோற்றத்தில் நிகழ்ந்த மாற்றங்கள்

பெரும்புரட்சிக்கு வித்திட்ட பெரியாரின் 'குடி அரசு' தொடக்க காலங் களில் பச்சை நிற அட்டையுடனே வெளிவந்தது. எனவே பச்சை அட்டைக் 'குடி அரசு' என்ற செல்லப் பெயரையும் வாசகர்கள் சூட்டினர். 'குடி அரசு' 'கொங்கு நாடு' எனும் பெயர்களில் பெரியார் 19.01.1923 லேயே பத்திரிக் கைக்கான பதிவை செய்துள்ளார் என்றாலும் சுமார் இரண்டு ஆண்டுகள் கழித்து 02.05.1925 அன்றுதான் முதல் இதழ் வெளிவந்தது. ( *2-5-25 சனிக்கிழமை. இனி ஞாயிறுதோறும் வெளிவரும் -அட்டை* ) தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இதழ் வெளிவருகிறது.

ஆண்டின் முதல் இதழ், ஆசிரியர் பெயர் மாற்றம் பெற்றவை, மாற்றம் பெற்ற முகப்பு அட்டைகள் அந்தந்தத் தொகுதியில் இணைக்கப்பட்டுள்ளன. ஆண்டுக்கு 'மாலை' என்றும், இதழுக்கு 'மலர்' என்றும் பெயர் சூட்டப் பட்டிருக்கிறது.

முதல் பக்க அட்டையில் பாரதியார் பாடல் வரியுடன் தான் இதழ் தொடங்கியது.

"எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம்"

"சாதிகள் இல்லையடி பாப்பா"

என்ற பாடல்கள் அட்டையில் இடம் பெற்றுள்ளன. 08.11.1925 இதழ் அட்டை யில் பாரதி பாடல் வரிகள் நீக்கப்பட்டு,

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

என்ற குறள்கள் இடம்பெறுகின்றன. 18.04.1926 இதழில் குறள்கள் நீக்கப்பட்டு 'மகாத்மா காந்தி வாழ்க!' என்ற முழக்கம் இடம்பெறுகிறது. அதே இதழில் அட்டையில் மாலை, மலருக்கு குறிக்கப்பட்ட தமிழ் எண்கள் நீக்கப்பட்டு நடைமுறையில் உள்ள எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. பக்கத்தின் எண்கள் மட்டும் தமிழ் எண்களால் குறிக்கப்பட்டுள்ளன. 20.11.1927 இதழில் 'மகாத்மா காந்தி வாழ்க!' முழக்கம் போய் 'கதர் வாழ்க!' முழக்கம் வருகிறது. 25.12.1927 இதழ் அட்டையில் எந்தப் படமும் இல்லாமல் வெளிவருகிறது. 25.12.1938 இதழ்வரை இந்நிலையே தொடர்கிறது. 'குடி அரசு' எழுத்து வடிவம் மட்டும் மாறி மாறி வருகிறது. ஈரோட்டில் தொடங்கப்பட்டு வெளிவந்த குடி அரசு 16.06.1929 நாளிட்ட இதழிலிருந்து 29.12.1929 இதழ்வரை சென்னையிலிருந்து வெளி வருகிறது. 16.06.1929 இதழிலிருந்து பக்கத்தின் எண்களும் நடைமுறை எண்களாக குறிக்கப்படுகின்றன. 19.01.1930 முதல் மீண்டும் ஈரோட்டில் இருந்து



RangaRakes
tamilnavarasam.com

வெளிவரத் தொடங்குகிறது. 19.11.1933 இதழோடு ‘குடி அரசு’ நிறுத்தப் படுகிறது. மீண்டும் 13.01.1935 இல் இருந்து ‘குடி அரசு’ வெளிவருகிறது. 13.01.1935 குடி அரசின் அட்டையில்,

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் - அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு
எப்பொருள் எத்தன்மைத் தாயினும் - அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு

என்ற குறள்கள் இடம்பெற்றுள்ளன. 25.12.1938 இதழ்வரை மேற்சுட்டிய குறள்கள் இடம் பெற்றுள்ளன.

## குடி அரசு : ஆசிரியர், பதிப்பாளர் மாற்றங்கள்

‘குடி அரசு’ முதல் இதழின் ஆசிரியர்கள் ஈ.வெ.ராமசாமி நாயக்கர், வா.மு.தங்கப்பெருமாள் பிள்ளை ஆகியோர்ஆவர். 07.06.1925 இதழில் வா.மு.தங்கப்பெருமாள் பிள்ளையின் ‘சாதி’ப் பட்டம் நீங்குகிறது. 26.07.1925 இதழிலிருந்து ஈ.வெ.ராமசாமி நாயக்கர் மட்டுமே ஆசிரியராகிறார். 25.12.1927 இதழிலிருந்து ஈ.வெ.ராமசாமி நாயக்கர் பெயரிலுள்ள ‘சாதி’ப்பட்டம் நீங்குகிறது. 1931 இல் பெரியார் உலகப்பயணம் மேற்கொண்டதால் 01.11.1931 முதல் சாமி. சிதம்பரனார் ஆசிரியராகப் பொறுப்பு ஏற்கிறார். பயணம் முடிந்து ஈரோடு திரும்பும் வரையில் அப்பொறுப்பில் இருக்கிறார். 29.11.1931 குடி அரசு முதல் 19.11.1933 குடி அரசு வரை அட்டையில் ஆசிரியர் பெயர் இல்லாமல் இதழ் வெளிவருகிறது. 19.11.1933 இதழோடு இதழ் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு மீண்டும் 13.01.1935 முதல் வெளிவரத் தொடங்குகிறது. அப்போது ஆசிரியர் ஈ.வெ.கிருஷ்ணசாமி. 25.12.1938 வரை அவரே ஆசிரியராக நீடிக்கிறார்.

முதல் இதழின் பதிப்பாளரான க. அப்பையா 20.09.1925 இதழ்வரை பதிப்பாளராக இருக்கிறார். 27.09.1925 முதல் ஈ.வெ.ராமசாமி நாயக்கரும் 18.04.1926 முதல் சா. ராமசாமி நாயக்கரும் பிறகு 09.01.1927 முதல் ஈ.வெ.ரா. நாகம்மாளும் பதிப்பாளர் ஆகிறார்கள். குடி அரசு அலுவலகம் சென்னைக்கு மாறியது முதல் 16.06.1929 இதழில் இருந்து ஜே.எஸ்.கண்ணப்பர் பதிப்பாளர். மீண்டும் ஈரோட்டுக்கு அலுவலகம் மாறியதும் 19.01.1930 இதழில் இருந்து ஈ.வெ.ரா. நாகம்மாள் பதிப்பாளர் ஆகிறார். அவரது மறைவு வரை அவர்தான் பதிப்பாளர். 16.07.1933 இதழ் முதல் சா.ரா.கண்ணம்மாள் ( பெரியாரின் சகோதரி) பதிப்பாளர் ஆகிறார். 19.11.1933 வரை இவரே நீடிக்கிறார். 13.01.1935 இதழில் இருந்து ஆசிரியர் மற்றும் பதிப்பாளராக ஈ.வெ.கிருஷ்ணசாமி (பெரியாரின் சகோதரர்) வருகிறார்.

‘குடி அரசு’ இடையில் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து வெளிவந்த ‘புரட்சி’ வார ஏட்டுக்கு 26.11.1933 லிருந்து 28.01.1934 வரை சா.ரா.கண்ணம்மாள்



அவர்களே பதிப்பாளராகத் தொடர்கிறார். முதல் நான்கு ‘புரட்சி’ இதழ்கள் அட்டையில் ஆசிரியர் பெயர் இல்லாமலேயே வெளி வருகிறது. 24.12.1933 ஒரு இதழில் மட்டும் ஆசிரியர் ஈ.வெ.ராமசாமி. 31.12.1934 முதல் ஈ.வெ.கிருஷ்ணசாமி ஆசிரியராகிறார். 04.02.1934 முதல் 17.06.1934 வரை ஈ.வெ.கிருஷ்ணசாமி பதிப்பாளராகிறார். பெரியார் தொடங்கிய ‘பகுத்தறிவு’ 26.08.1934 முதல் வார இதழாகவும், பிறகு மே 1935 முதல் மாத இதழாகவும் வெளிவருகிறது. பகுத்தறிவு வார இதழுக்கு ஆசிரியராகவும் பதிப்பாளரா கவும் ஈ.வெ. கிருஷ்ணசாமியே நீடிக்கிறார். பகுத்தறிவு மாத இதழுக்கு பொறுப் பாசிரியராக ஈ.வெ.கிருஷ்ணசாமியும் முதன்மை ஆசிரியராக பண்டிதர் சாமி. சிதம்பரனாரும் இருக்கின்றனர். பதிப்பாளர் பொறுப்பில் ஈ.வெ. கிருஷ்ண சாமியே நீடிக்கிறார்.

## தலையங்கப் பக்கம் மாற்றங்கள்

தொடக்கத்தில் தலையங்கங்கள் இதழ்களின் நடுப்பக்கத்தில் வெளிவந் துள்ளன. 10.02.1935 (மாலை 9 - மலர் 27) முதல் 09.06.1935 (மாலை 9 - மலர் 44) முடிய உள்ள குடி அரசு இதழ்களில் மூன்றாம் பக்கத்தில் தலையங்கங்கள் வெளி வந்துள்ளன.

02.05.1925 (மாலை 1 - மலர் 1) முதல் இதழ் தலையங்கப் பக்கத்தில் கை இராட்டினமும்

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின் (குறள்)

என்ற மூன்று குறட்பாக்களும் இடம் பெற்றுள்ளன. 23.08.1925 இதழி லிருந்து குறள்கள் எடுக்கப்பட்டு கை இராட்டினத்துடன்

அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பா யாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும் தானே.



RangaRakes
tamilnavarasam.com

என்ற பாடல் இடம் பெறுகிறது. 08.05.1927 இதழில் "அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி" எடுக்கப்பட்டு கை இராட்டினம் மட்டுமே இடம் பெறுகிறது. 13.11.1927 இதழில் மீண்டும் "அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி" பாடல் இடம் பெறுகிறது. அவ்வப்போது 'அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி' என்ற பாடல் மட்டும் இடம் பெற்றும், கை இராட்டினம் மட்டும் இடம் பெற்றும், இராட்டினம் - பாடல் இரண்டும் இல்லாமலும் இதழ்கள் வெளி வந்துள்ளன.

10.08.1930 குடி அரசு இதழிலிருந்து "அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி" பாடலும் கை இராட்டினமும் தலையங்கப் பக்கத்தில் இடம் பெறவில்லை. 25.12.1938 இதழ் வரை இந்நிலை தொடர்கிறது.

## வெளிவந்துள்ள இதழ்கள்

### (அ) குடி அரசு (வார இதழ்)

**மாலை - 1**

02.05.1925 (மாலை 1 - மலர் 1 ) முதல் 25.04.1926 மாலை 1 - மலர் 48) முடிய 48 வாரம் மட்டுமே இதழ் வெளிவந்துள்ளது.

**1.** 04.10.1925 இல் வெளிவரவேண்டிய இதழ் **அச்சுக்கூடம் மாற்றியக் காரணத்தால்** வெளிவரவில்லை.

**2.** 21.02.1926 இல் வெளிவரவேண்டிய இதழ் **அச்சு இயந்திரம் ஒடிந்து போனதால்** வெளிவரவில்லை.

**3.** 04.04.1926 மற்றும் 11.04.1926 ஆகிய நாள்களில் வெளிவரவேண்டிய இதழ்கள் **புதிய அச்சுக்கூடம் ஏற்பாடு செய்வதில் ஏற்பட்ட கால நீட்டத் தால்** வெளிவரவில்லை.

**மாலை - 2**

02.05.1926 (மாலை 2 - மலர் 1 ) முதல் 24.04.1927 (மாலை 2 -மலர் 52) முடிய 52 வாரமும் இதழ் வெளிவந்துள்ளது.

**மாலை - 3**

01.05.1927 (மாலை 3 - மலர் 1 ) முதல் 22.04.1928 (மாலை 3- மலர் 52) முடிய 52 வாரமும் இதழ் வெளிவந்துள்ளது.

**மாலை - 4**

29.04.1928 (மாலை 4 -மலர் 1 ) முதல் 28.04.1929 (மாலை 4-மலர் 53) முடிய 53 வாரமும் இதழ் வெளிவந்துள்ளது.



**மாலை - 5**

05.05.1929 (மாலை 5 - மலர் 1 ) முதல் 27.04.1930 ( மாலை 5 - மலர் 48 ) முடிய 48 வாரம் மட்டுமே இதழ் வெளிவந்துள்ளது.

**1.** 05.01.1930 மற்றும் 12.01.1930 ஆகிய நாள்களில் வெளிவரவேண்டிய இதழ்கள் 'குடி அரசு அலுவலகம் சென்னையிலிருந்து ஈரோட்டிற்கு மாற்றப் பட்டதால்' வெளிவரவில்லை.

**2.** 26.01.1930 இல் வெளிவரவேண்டிய இதழ் 'குடி அரசு அலுவலகம் சென்னையிலிருந்து ஈரோட்டிற்கு மாற்றப்பட்டு ஆட்சியர் அலுவலகத்தில் பதிவு (டிக்ளரேஷன்) ஆணை பெறுவதில் ஏற்பட்ட கால நீட்டத்தால்' வெளி வரவில்லை.

**மாலை - 6**

04.05.1930 (மாலை 6 - மலர் 1 ) முதல் 26.04.1931 (மாலை 6 -மலர் 52) முடிய 52 வாரமும் இதழ் வெளிவந்துள்ளது.

**மாலை - 7**

03.05.1931 (மாலை 7 - மலர் 1) முதல் 24.04.1932 (மாலை 7- மலர் 52) முடிய 52 வாரமும் இதழ் வெளிவந்துள்ளது.

**மாலை - 8**

01.05.1932 (மாலை 8 - மலர் 1 ) முதல் 23.04.1933 (மாலை 8 -மலர் 52 ) முடிய 52 வாரமும் இதழ் வெளிவந்துள்ளது.

**மாலை - 9**

30.04.1933 (மாலை 9 -மலர் 1) முதல் 11.08.1935 (மாலை 9 - மலர் 53) முடிய 53 வாரமும் இதழ் வெளிவந்துள்ளது.

**1.** 21.05.1933 முதல் 09.07.1933 முடிய எட்டு வாரம் **திரு. ஈ.வெ.ரா. நாகம் மாள் மறைவுக்குப்பின் பதிவு (டிக்ளரேசன்) மாற்ற வேண்டியதில் ஏற்பட்ட கால நீட்டத்தால்** இதழ்கள் வெளிவரவில்லை.

**2.** 19.11.1933 இதழோடு குடி அரசு நிறுத்தப்பட்டு 13.01.1935 இல் தான் குடி அரசு மீண்டும் வெளிவருகிறது.

**மாலை - 10**

'குடி அரசு' ஒன்பதாவதாண்டு மாலை (மாலை 9) க்குப்பின் பதினோ ராவதாண்டு பதினோராவது மாலையாக (மாலை 11) வெளிவருகிறது. பத்தாவது



RangaRakes

tamilnavarasam.com

ஆண்டில் ‘குடி அரசு’ வெளிவராத நிலையில் அக்காலத்தில் புரட்சி, பகுத்தறிவு இதழ்கள் வெளிவந்ததை பத்தாவதாண்டு பத்தாவது மாலையாக வைத்துக் கொண்டு பதினொராவது மாலை வெளிவருகிறது.

**மாலை – 11**

18.08.1935 (மாலை 11 – மலர் 1) முதல் 09.08.1936 (மாலை 11 – மலர் 52) முடிய 52 வாரமும் இதழ் வெளிவருகிறது.

**மாலை – 12**

16.08.1936 (மாலை 12 – மலர் 1) முதல் 08.08.1937 (மாலை 12 – மலர் 52) முடிய 52 வாரமும் இதழ் வெளிவருகிறது.

**மாலை – 13**

15.08.1937 (மாலை 13 – மலர் 1) முதல் 14.08.1938 (மாலை 13 – மலர் 52) முடிய 52 வாரமும் இதழ் வெளிவருகிறது.

28.11.1937 இல் வெளிவரவேண்டிய இதழ் – **விடுதலை நாளேட்டுக்கு புதிய அச்சு இயந்திரம் பூட்டப்படுவதால்** வெளிவரவில்லை.

**மாலை – 14**

21.08.1938 (மாலை 14 – மலர் 1) முதல் 25.12.1938 (மாலை 14 – மலர் 19) முடிய 19 வாரமும் இதழ் வெளிவருகிறது.

## (ஆ) புரட்சி (வார இதழ்)

**மாலை – 1**

26.11.1933 (மாலை 1 – மலர் 1) முதல் 17.06.1934 (மாலை 1 – மலர் 30) முடிய 30 வாரம் மட்டுமே இதழ் வெளிவருகிறது. 17.06.1934 இதழோடு ‘புரட்சி’ நின்றுவிடுகிறது.

## (இ) பகுத்தறிவு (வார இதழ்)

**மாலை – 1**

26.08.1934 (மாலை 1 – மலர் 1) முதல் 06.01.1935 (மாலை 1 – மலர் 20) முடிய 20 வாரம் இதழ் வெளிவருகிறது. 06.01.1935 இதழோடு ‘பகுத்தறிவு’ நின்றுவிடுகிறது.



## (ஈ) பகுத்தறிவு (மாத இதழ்)

1935 மே மாதம் முதல் தேதியிலிருந்து ‘பகுத்தறிவு’ மாத இதழாக வெளிவருகிறது.

1935 மே .1 (மலர் 1 – இதழ் 1) முதல் 1938 திசம்பர் 1 (மலர்4 – இதழ் 8) முடிய எல்லா மாதமும் 44 இதழ் வெளிவந்துள்ளது.

## 1925 – 1938 வெளிவந்துள்ள இதழ்கள்

| | | மொத்தம் |
|---|---|---|
| குடி அரசு | – | 637 |
| புரட்சி | – | 30 |
| பகுத்தறிவு (வா) | – | 20 |
| பகுத்தறிவு (மா) | – | 44 |
| மொத்தம் | – | 731 |

## கிடைக்கப்பெறாத இதழ்கள்

**1.** 10.02.1925 ( மாலை 1 – மலர் 2 ) இரண்டாவது இதழின் முக்கிய ஆறு பக்கங்கள் கிடைக்கவில்லை.

**2.** 28.03. 1926 ( மாலை 1 – மலர் 46 ) இதழின் இரண்டு பக்கம் மட்டுமே கிடைத்துள்ளது.

**3.** 27.04.1930 (மாலை – 5 மலர் 48 ) இதழின் முக்கிய இரண்டு பக்கங்கள் கிடைக்கவில்லை.

## முடிவாய் . . . .

‘குடி அரசு’ தொடங்கி 83 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. பத்தாயிரத்துக்கும் அதிகமான ‘குடி அரசு’ இதழ்கள் வாரந்தோறும் வெளிவந்து தமிழகத்தில் அதிர்ச்சி அலைகளை உருவாக்கின. சமூக வரலாற்றில் விடிவெள்ளியாய் வந்து உதித்த அந்த வரலாற்றுப் பெட்டகத்தை காலவரிசைப்படி தொகுப்பதற்கு நான்கு தலைமுறை இடைவெளி தேவைப்பட்டுள்ளது. இந்தக் கனவு நிறைவேறுமா என்ற கவலையுடன் தமிழின உணர்வாளர்கள், பெரியாரியலாளர்கள் எழுப்பி வந்த கேள்விக்கு இப்போதுதான் விடை கிடைத்துள்ளது. எத்தனையோ தடைகள், முட்டுக்கட்டைகள், மிரட்டல்களைக்



RangaRakes

tamilnavarasam.com

கடந்து பெரியார் திராவிடர் கழகம் களத்தில் இறங்கியது. குடி அரசு இதழ்களை தமிழகம் முழுதும் தேடத் தொடங்கியது. இடைவிடா முயற்சிக்குப் பின்னும் எல்லா இதழ்களும் கிடைக்கப்பெறவில்லையே என்ற வேதனை நமக்கு உண்டு. எவ்வளவோ முயற்சித்தும் கிடைக்க பெறாத மூன்று இதழ்களின் சில பக்கங்களைத் தவிர அனைத்து குடி அரசு, புரட்சி, பகுத்தறிவு இதழ்களிலிருந்தும் பெரியாரின் கருத்துக் கருவூலங்களை முழுமையாகத் திரட்டி தொகுத்து நூலாக்கி எதிர்கால இளம் தலைமுறையிடம் பெரியார் திராவிடர் கழகம் ஒப்படைத்து இவ் வரலாற்றுக் கடமையை ஆற்றியதில் பெரும் மனநிறைவு கொள்கிறது.

**– தொகுப்புக்குழு**

## அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| துவேஷம் | – | வெறுப்பு |
| துர்லபம் | – | பெறற்கரியது |
| தேசோத்தாரணம் | – | நாட்டு முன்னேற்றம் |
| தொந்தம் | – | பந்தம், கட்டு |
| நிவேதனம் | – | படையல் |
| நிர்த்தாக்ஷண்யம் | – | கருணையில்லாமல் |
| நிஷ்காமிய கர்மம் | – | பயன் கருதா பணி |
| நிஷ்டுரம் | – | கொடுமை |
| படாம் | – | மூடுதுணி |
| பராமார்த்தீகம் | – | மெய்ப்பொருள் – உலகியல் |
| அறிவின்றி | | |
| பரிலா | – | ( பரிலா, ரங்கு, பிரிட்ஜ் ) சீட்டு விளையாட்டு வகைகள் |
| பிரவாகம் | – | வெள்ளம் |
| புருடபாரியர் | – | கணவன் மனைவி |
| மஞ்ஞை | – | மயில் |
| மாச்சரியம் | – | பொறாமை, பகைமை |
| முன்னுற்பிடித்துக்கொண்டு | – | முன் நூல் பிடித்துக்கொண்டு |
| யத்தனம் | – | முயற்சி |
| ரங்கு | – | சீட்டுவிளையாட்டு வகை |
| வதியும் | – | வசிக்கும், குடியிருக்கும் |
| வதுவை | – | திருமணம் |
| வரம்பறுத்து | – | வரையறைத்து |
| வாக்குத்தத்தம் | – | வாக்குறுதி |
| வாசாலகம் | – | பேச்சுத்திறன் |
| விதந்தோதிய | – | பாராட்டிப்பேசிய |
| வித்யார்த்தி | – | மாணவர் |
| வியக்தமாக | – | வெளிப்படையாக |
| வியாஜ்யம் | – | வழக்கு |
| வேடைகாலம் | – | கோடை காலம் |
| ஜட்கா | – | குதிரை வண்டி |

RangaRakes

tamilnavarasam.com

# நமது பத்திரிகாலயத் திறப்புவிழா

சகோதரர்களே!

நானும் ஸ்ரீமான் தங்கபெருமாள் பிள்ளை* அவர்களும் இப் பத்திரிகை நடத்துவதைப்பற்றி பலநாள் ஆழ்ந்து யோசித்து இப்பொழுதுதான் நடத்தத் துணிந்தோம்.

## இப்பத்திரிகையை ஆரம்பிக்கும் நோக்கம்:

தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் இன்னும் மற்ற விஷயங்களையும் ஜனங்களிடையுணர்த்துவதற்கேயாம். ஏனைய பத்திரிகைகள் பலவிருந்தும், அவைகள் தங்களது மனசாட்சிக்குத் தோன்றிய உண்மையான அபிப்பிராயங்களை வெளியிட அஞ்சுகின்றன. அவை களைப் போலல்லாமல் பொது ஜனங்களுக்கு விஷயங்களை உள்ளவற்றை உள்ளபடி தைரியமாகத் தெரிவிக்க வேண்டுமென்பதே எமது நோக்கம். இப் பத்திரிகாலயத்தைத் திறப்பதற்கு ஈசன் அருளால் ஸ்ரீ சுவாமிகள் போன்ற பெரியார் கிடைத்தது அரிதேயாகும். இறைவன் அருளாலும், சுவாமிகளது அருளாலும் பத்திரிகை என்றும் நிலைபெற்று மற்றப் பத்திரிகைகளிடமுள்ள குறை யாதுமின்றிச் செவ்வனே நடைபெற வேண்டுமாய் ஆசீர்வதிக்கும்படி சுவாமிகளை வேண்டுகிறேன்.

**குடி அரசு - சொற்பொழிவு - 02.05.1925**

*** வா.மு. தங்கப்பெருமாள் பிள்ளை** B.A., B.L

இவர் ஈரோடு கருங்கல்பாளையத்தில் 'வாத்தியார் வீடு' என்று சொல்லக் கூடிய சைவவேளாள செல்வக்குடும்பத்தில் பிறந்தவர். தன் தந்தையை 12 வயதிலேயே இழந்த இவர், அவரது சிறிய தந்தையார் ஆதரவினால் கல்வி கற்பிக்கப்பட்டு 21 ஆவது வயதில் B.A. பட்டமும் 24 ஆவது வயதில் B.L பட்டமும் பெற்று 1921 ஆம் வருஷத்தில் வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கினார். கருங்கல்பாளையத்தில் வாசகசாலை ஒன்றினைத் தொடங்கி நடத்தி வந்தோடு அதன்வழியே பொதுநலச் செய்திகளையும், தமிழர் பெருமையையும் பாரதியார், வரதராஜுலு நாயுடு, திரு.வி.க, ந.மு.வேங்கடசாமி நாட்டார் போன்றோரை அழைத்து வந்து பேசச்செய்து வந்தவர். இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர்.



# நமது பத்திரிகாலயத் திறப்பு விழா
# ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் சொற்பொழிவு

மெய்யன்பர்களே !

உலகில் நடைபெறும் நிகழ்ச்சி முறைகளைப் பலருக்குத் தெரிவிப்ப தற்கும், நல் உணர்ச்சியை மக்களிடையெழுப்புதற்கும் பத்திரிகைகள் இன்றியமையாதன; கிராமாந்திரங்களில் விஷயம் யாதொன்றும் தெரிந்து கொள்ள இயலாதவர்கள் பத்திரிகைகளினால் வியாபாரம், அரசாங்க முறை, தற்கால நிலை முதலியவைகளைத் தெரிந்து கொள்வார்கள்; பல பெரியார் களின் கருத்தை அறிந்து கொள்வார்கள். வியாபாரம், விவசாயம் முதலிய ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு பத்திரிகையிருத்தல் அவசியமாகும். பல ஜனங்களுக்குப் பிரயோஜனமாகும். விஷயங்கள் பலவற்றிற்குப் பல பத்திரிகைகள் அவசியம். ஸ்ரீமான் நாயக்கரால் ஆரம்பிக்கப்படுகின்ற இக் **'குடி அரசு'** பத்திரிகையின் தன்மையைக் கவனித்தால் மிகுந்த ஆராய்ச்சி யுடன் ஆரம்பிக்கப்போகும் ஒரு பத்திரிகையாகக் காணப்படுகின்றது. ஸ்ரீமான் நாயக்கரவர்கள் பேசியதிலிருந்து பல நாள் யோசித்து ஆரம்பிக்கப் படும் பத்திரிகை என்று தோன்றுகிறபடியால் முன்யோஜனையுடன் இறங்குப வர்கள் என்றும் பின் வாங்காது தைரியமாய் நிலைபெற்று நிற்பார்கள் என்பது உறுதி. மிகுந்த செல்வாக்கையுடைய ஸ்ரீமான் நாயக்கர் அவர்கள் நடத்தும் இப்பத்திரிகை உங்களுக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் மிகுந்த பயனை அளிக்குமென நம்புகிறேன். பல பத்திரிகைகளிருந்தும் இப்பத்தி ரிகை போன்ற கருத்தையுடைய பத்திரிகை வேறொன்றுமில்லை. அதனு டைய பெயரே அதற்குச் சான்றாகும்.

வழக்குரைஞர் தொழில் தொடங்கிய சில மாதங்களிலேயே, வழக்குரை ஞர் தொழிலை விட்டு ஒத்துழையாமை இயக்கத்தில் முழுமையாக ஈடுபட்டார்; கோவை மாவட்ட காங்கிரஸ் செயலாளர், மாநில நிர்வாக சபை உறுப்பினர், கோவை மாவட்டத் தலைவர், மாநிலச் செயலாளர் என காங்கிரஸ் கட்சியில் பல பொறுப்புக்களை வகித்தார். புகழ்பெற்ற கள்ளுக்கடை மறியலில் பெரியாரோடு சிறைபட்டார். எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் விலகிக்கொண்டு பெரியார் 'குடிஅரசை'த் தொடங்கியபோது இவரும் பெரியாரோடு ஆசிரியராக இருந்தார். ஆனால் உடல் நலம் சீர்கெட்டதால் 19.7.1925 இதழோடு அவர் விலகிக் கொண்டார். மருத்துவம் பயனின்றி முப்பது வயதுகூட நிரம்பாத நிலையில் 6.3.1926 இல் மறைந்தார்.



RangaRakes tamilnavarasam.com

நாம் நாளாக ஆக நமது நிலையைக் கீழாக்கிக் கொண்டே வருகிறோம். நல்ல குணம், நம்பிக்கை முதலியவைகளை யாமிழந்து விட்டோம். இந்நிலையில் யாமிருந்தால் முடிவு என்னாகும் என்பதை நாம் கவனிக்கவில்லை. கெட்டவர்களிந்நாளில் மிகுந்து விட்டனர். நன்மையடையும் வழிகள் தடைபட்டுக்கொண்டே வருகின்றன. மேன்மை அடையும் வழியைக் காணோம். கண்டபடி ஆட்சிமுறை நடக்கக் கூடாது. தன்னால், தன் பரிசனத்தால், பகைவரால், கள்வரால், விலங்குகளால் உண்டாகும் துன்பங்களைத் துடைத்துக் காத்தலே ஆட்சி முறையின் ஒழுங்கு. **"குடிஅரசு"** இத்தன்மைக்கு நம்மைக் கொண்டு வரும் என நினைக்கிறேன். அவரவர்களுடைய கருத்துக்களை யாதொரு நிர்ப்பந்தமுமின்றி வெளியிடச் சுதந்திரம் வேண்டும்.

நமக்குள் இருக்கும் அவநம்பிக்கை நீங்கிச் சகோதர பாவம் வளரவேண்டும். இப்பொழுது நாம் பேச்சளவிலும், சிற்றுண்டி முதலிய சில்லரை விஷயத்திலும்தான் சகோதரபாவத்தைக் காண்பிக்கிறோம். உண்மைச் சகோதரத்துவம் எங்கும் காணோம். பிறரது சொத்தைப் பறிப்பதற்கே சகோதர பாவத்தைக் காண்பித்து வருகின்றனர். உயர்வு, தாழ்வு என்ற ஆணவம் மிகுந்து கிடக்கின்றது. பணக்காரராக இருப்பினும் ஏழையாக இருப்பினும் அன்பு என்பது ஒருவருக்கொருவர் மிகுந்திருக்க வேண்டும். சுதந்தரம், சமத்வம், சகோதரத்வம் என்ற உணர்ச்சி எங்கும் பரவவேண்டும். "குடி அரசி"ன் கருத்தும் இதுவே என நான் அறிந்து கொண்டேன். தேசோத்தாரணத்தில் கவனம் வைத்தல் அவசியமாகும்.

தேச சுதந்தரத்தினால் பாஷை, சமயம் முதலியவற்றிற்கு உத்தாரணம் பிறக்கும். சமயத்திலிருக்கும் கேட்டை ஒழிப்பது மிகவும் அவசியமாகும். இவையெல்லாம் "குடிஅரசி"ன் முதல் கொள்கைகளா யிலங்கவேண்டும். யான் இப்பத்திரிகாலயத்தைத் திறந்து வைப்பதால் ஸ்ரீமான் நாயக்கரவர்களுக்கு இதில் எவ்வளவு சிரத்தையுண்டோ அவ்வளவு எனக்கும் உண்டு. பொது ஜனங்களின் நன்மையைக் கோரி உழைக்கும் பத்திரிகையாகையால் எல்லோரும் ஆதரித்தல் அவசியம். இதுகாறும் கூறிய கருத்துக்களில் மாறாது உண்மையான பத்திரிகையாக விளங்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றேன்.

**குடி அரசு – சொற்பொழிவு – 02.05.1925**

*குறிப்பு : 'குடி அரசு' செய்தித்தாள் அலுவலகத்தைத் திறந்து வைத்து திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடம் ஸ்ரீலஸ்ரீ.சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் ஆற்றிய சொற்பொழிவு.*



# ஸ்ரீமான் பி. தியாகராய செட்டியாரின் மரணம்

பார்ப்பனர் அல்லாதார் கூட்டத்தின் தலைவராக விளங்கிவந்த **ஸ்ரீமான் பி. தியாகராய செட்டியார்** அவர்கள் 28.4 .25 உ இரவு 9.45 மணிக்கு இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்திய செய்தியைக் கேள்வி யுற்று நாம் பெரிதும் வருந்துகின்றோம். இச்செய்தி தமிழ்மக்கள் அனைவரை யும் பெருந்துக்கத்தில் ஆழ்த்தும் என்பதில் ஐயமின்று. அவரது இடது கன்னத்தில் முளைத்த ஒரு சிறு கொப்புளமே அவரது ஆவியைக் கொள்ளை கொண்ட கூற்றுவன்! என்னே மனிதர்தம் வாழ்நாளின் நிலை! அரசியல் உலகில் எமக்கும் அப்பெரியாருக்கும் உள்ள வேற்றுமை வடதுருவம், தென் துருவம் எனின் குன்றக் கூறுதலேயாகும். எனினும், அப்பெரியாரின் அருங் குணங்களையும், அளவில்லா தேசபக்தியையும், ஆற்றலையும் நாம் போற்றுகிறோம். ஒரு நாள் சென்னைக் கடற்கரையில் இவரது அரசியல் கொள்கைகளை வெகு தீவிரமாகக் கண்டித்துப் பேசின ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்தர முதலியார் அவர்களை மறுநாள் காலையில் சென்னைத் தெருவில் சந்தித்த போது; ஸ்ரீமான் முதலியாரை விளித்து "நண்பனே! நேற்று கடற்கரையில் நீ என்னை வாய்மொழிகளால் கண்டித்தது போதாது; இக்கழி கொண்டு என்னைப் புடைத்திருத்தல் வேண்டும்" என்று தமது கையிலிருந்த கழியை ஸ்ரீமான் முதலியாரிடம் கொடுத்தனராம். அரசியல் கொள்கையில் தம்மினும் வேறுபட்டாரிடம் இப்பெருந்தகையார் நடந்து கொண்ட பெருந்தன்மையைப் பாராட்டுகிறோம்.

சென்னை நகர பரிபாலன சபையில் நாற்பதாண்டுகள் அங்கத்தினராக அமர்ந்து இவர் ஆற்றிய அருந்தொண்டுகள் யாவராலும் மறக்கற் பாலதல்ல. தமது முதுமையிலும், உடல்வலி குன்றித் தளர்வெய்திய காலத்திலும் நகர மாந்தர் நலத்தையே மனத்துட் கொண்டு சென்னை நகர பரிபாலன சபையின் தலைமையையேற்று உழைத்து வந்தமையே இதற்குத் தக்க சான்றாகும்.

நமது நாட்டுப் பண்டைக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதில் மிக்க ஊக்கங் காட்டி வந்த பெரியார் ஆவார். தமிழ்நாட்டில் கைத்தறி நெசவுச் சங்கம் ஒன்று கண்டு அதில் முதன் முதலாக விசைத்தறியை ( Fly shuttle ) உபயோகிக்க முயற்சி செய்தவராவார். தமது வாழ்நாள் முழுவதும் வைதிகநெறி பற்றியே வாழ்ந்து வந்தார் என்றும், ஆலயத் திருப்பணிகளில் ஆர்வமிக்குடையராய் அரும்பொருள் உதவிவந்தன ரென்றும் அவரையும், அவரது குடும்பத்தையும் அறிந்தோர் நமக்கறிவிக்கின்றனர்.



RangaRakes tamilnavarasam.com

தமது இளவயதில், டாக்டர் நாயர் அவர்களின் கூட்டுறவு பெறும் வரையில் காங்கிரஸ்வாதியாகவேயிருந்து தேசத் தொண்டு ஆற்றி வந்தார். நமது தமிழ்நாட்டுத் தவப்பேற்றின் குறைவினால் பார்ப்பனரல்லாதார் கூட்டம் ஒன்று கண்டார்; இறக்கும் வரையில் அதன் தலைவராக விளங்கி வந்தார். அத்தகைய கூட்டம் ஒன்று காணாது, காங்கிரஸ் வழிநின்று தேசத் தொண்டி யற்ற வந்திருப்பாராயின் நமது நாட்டின் நிலைமை இன்று வேறு விதமாகத் தோன்றும் என்பது எமது கொள்கை. அதுகிடக்க, அவரது அரசியல் கொள்கைகளையும், முறைகளையும் ஆராய்ச்சி செய்வதற்காக நாம் இன்று முற்படவில்லை; அவைகளைக் கண்டித்தெழுதவும் கருதவில்லை.

அப்பெரியாரின் அரசியல் கொள்கைகள் எவ்விதமிருப்பினும், அவருடைய தேசபக்தியையும், அருங்குணங்களையும், உறங்கிக் கிடந்த பார்ப்பனரல்லாதார்களை உயிர்ப்பிக்கச் செய்த பேராற்றலையும் நாம் போற்றி அப்பெரியாரைத் தமிழ்நாடு இழக்க நேர்ந்தமைக்குப் பெரிதும் வருந்துகின்றோம். அவரது புதல்வருக்கும், புதல்விகளுக்கும், மனைவிக்கும் எமது அனுதாபத்தை இதன் வாயிலாக அறிவித்துக் கொள்ளுகிறோம். அவரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் அருள்வானாக.

**குடி அரசு - இரங்கல் செய்தி - 02.05.1925**



# இயந்திரமும் கை இராட்டினமும்

நூல் நூற்கும் விஷயத்தில் விசை இயந்திரத்திற்கும் கை இராட்டினத் துக்குமுள்ள தார தம்மியத்தை நமது நாட்டாரில் சிலர் நன்கு அறிந்து கொள்ளவில்லையென்றே நினைக்க வேண்டியிருக்கிறது. இராட்டை சுற்றுவதினால் நமக்கு வேண்டிய அளவு நூல் உற்பத்தி செய்வது கஷ்ட மென்றும், போதுமான கூலியும் இதில் கிடைக்காதென்றும், இயந்திரத்தினால் அதிக நூல் உற்பத்தி செய்யக்கூடுமென்றும், கூலிக்காரர்களுக்கு அதிகக் கூலி கிடைப்பதுடன், முதலாளிகளுக்கும் நல்ல லாபம் வருகிறதென்றும் இவர்கள் சொல்லுகிறார்கள். நமது நாட்டின் கொடிய வறுமைக்கு முக்கிய காரணம் மேற்சொன்ன இயந்திரங்கள் என்பதை அவர்கள் உணர்வதில்லை. இயந்திரப் பெருக்கினால் ஒருசில கூலிகளும் தனிப்பட்ட முதலாளிகள் சிலரும், பிறநாட்டு இயந்திர வியாபாரிகளுந்தான் பிழைக்க முடியுமே தவிர ஜனங்கள் பிழைக்க முடியாது. நமது ஏழை நாட்டில் வேலையில்லாமல் கஷ்டப்படுவோர் எத்தனையோ பேர் குறைந்த அளவு கூலியைத்தான் எதிர்பார்க்கிறார்கள். இவர்களெல்லோருக்கும் இயந்திர ஆலைகளில் வேலை கொடுக்க முடியாது. ஒவ்வொரு தொழிலிலும் இம்மாதிரியே அநேகம் பேருடைய கூலியை இயந்திரங்கள் விழுங்கி விடுகின்றன. நம் தேசம் உள்ள நிலைமையில் பெரு வாரியான ஏழைக் கூலிக்காரர்களுக்கு வேலை கிடைத்தால்தான் வறுமை நீங்கும். ஒரு சில முதலாளிகளும், அந்நிய நாட்டு இயந்திரத் தொழிலாளரும் பிழைப்பதினால் தேசத்தின் தரித்திரம் நீங்காது. உதாரணமாக, நம் நாட்டில் மில்கள் என்று சொல்லப்படும் நூல் ஆலைகள் அதிகமான நூல் உற்பத்தி செய்கின்றன. ஆனால், இவை எவ்வளவு பேருடைய கூலியைக் கெடுத்து விடுகின்றனவென்பது யோசித்துப் பார்த்தால் தெரியும்.

சாதாரணமாக 20 அல்லது 25 லட்சம் ரூபா மூலதனத்துடன் ஆரம்பிக் கப்பட்ட ஒரு நூல் யந்திர ஆலையை எடுத்துக்கொள்வோம். இவ்வாலையில் ஒவ்வொன்றிலும் 400 - ராத்தல் எடையுள்ள 40 - சிப்பம் (Bale) நூல் உற்பத்தி யாகக்கூடும். அதாவது, மொத்தம் 16,000 - ராத்தல் நூல் உற்பத்தியாகலாம். இவ்வளவு நூல் உற்பத்தி செய்யும் ஓர் ஆலை சுமார் 2000 கூலிகளுக்கும் வேலை கொடுக்க முடியும். தலைக்கு 4 அணா முதல் 1 ரூபாய் வரையில் கூலி கிடைக்கும். முதலாளிகளுக்கு 100 - க்கு 50 சதவீதம் வருஷந்தோறும் லாபம் கிடைக்கலாம். ( இதற்கு மேலாகவும் ஆலை முதலாளிகளுக்குச் சில சமயம் லாபம் கிடைத்திருக்கிறது. ) இதனால் ஏழைகளுக்கு ஏற்படும்



RangaRakes tamilnavarasam.com

நஷ்டத்தைப் பற்றி யோசிப்போம். மேற்சொன்ன 16,000 – ராத்தல் நூலும் கிராமத்தில் வேலையில்லாமல் தவிக்கும் ஏழைக் கூலிக்காரர்களைக் கொண்டு கை இராட்டினத்தில் தயார் செய்து கொள்வதா யிருந்தால் ஒரு நாளில் ஒரு ராத்தல் நூலுக்குக் குறைந்தது மூன்று பேர் வேலை செய்ய வேண்டும். ராத்தலுக்குக் குறைந்த விகிதம் 4 – அணா கூலி கொடுப்பதாயிருந்தாலும் நபர் ஒன்றுக்கு 1 – அணா 4 – பைசா கிடைக்கும். இப்படியாக 16,000 – ராத்தல் நூல் உற்பத்தியில் 48,000 பேருக்கு 1 – அணா 4– பைசா கூலி கிடைக்கிறது.

இவ்வளவு நூலையும் ஓர் ஆலை நூற்றுவிடுவதினால் வேலை செய்யக்கூடிய 46,000 பேருக்கு வேலையில்லாமல் போய்விடுகிறது. இவ்வளவு பேருக்கும் கிடைக்கவேண்டிய கூலியில் சிறுபகுதி ஒரு சில வேலைக்காரர்களுக்கும் பெரும்பகுதி முதலாளிகள், அந்நிய நாட்டு இயந்திர வியாபாரிகள் ஆகிய இவர்களுக்கும் போய்விடுகின்றது. மகாத்மாவினுடைய சுயராஜ்யத்திற்குப் பொருள் ஏழைகள் பிழைக்க வேண்டுமென்பதே. முதலாளிகளும், அந்நியநாட்டு இயந்திர வியாபாரிகளும் பொருள் சேர்க்க வேண்டுமென்பது மகாத்மாவினுடைய சுயராஜ்யத்தின் கருத்தன்று. சிலருக்கு உத்தியோகமும், அதிகாரமும் கிடைக்க வேண்டுமென்பதும் அன்று. இந்த அம்சத்தை நாம் மனதிலிருத்திக் கொண்டால் இராட்டை இயக்கத்தின் கருத்தைச் சரியாக அறிந்து கொள்ளலாம். ஏழைகளிடத்திலும் கூலிக்காரர் களிடத்திலும் அன்பில்லாதவர்களுக்கு மகாத்மா கூறும் சுயராஜ்யத்தின் பொருள் நன்கு விளங்காது. உத்தியோகமும் அதிகாரப் பதவியும் பொருள் தேடலும் தான் சுயராஜ்யமென்று அவர்கள் கருதுவார்கள். இத்தகைய அபிப் பிராயம் தேசத்தில் பரவக் கூடாதென்பதை மனதிற் கொண்டே மகாத்மா காந்தி காங்கிரஸ் அங்கத்தினருக்கு நூல் நூற்பதை முக்கிய கடமையாக ஏற்படுத்தியிருக்கிறார். இந்த முக்கிய கடமையை தேசத்தார் ஏகமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கருதியே வேறு சில விஷயங்களில் தமது உறுதியான கொள்கைகளையும் ஓரளவு விட்டுக் கொடுத்திருக்கிறார். நூல் சந்தாவின் முக்கியத்தை நமது ஜனங்கள் கொஞ்சங் கொஞ்சமாக உணர்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மாதா மாதம் நூல் சந்தா செலுத்துவோரின் தொகை பெருகிக்கொண்டு வருகிறது. ஆனாலும் மற்ற திட்டங்களில் மகாத்மாவின் அபிப்பிராயத்திற்குத் தமிழ்நாடு எவ்வளவு ஆதரவாயிருந்ததோ அவ்வளவு இவ்விஷயத்தில் ஊக்கங்காட்ட வில்லையென்றே சொல்ல வேண்டும். இனியேனும் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தாமல் அலட்சியமாய் இருந்து வருவோமானால் நூல் சந்தாவை எடுத்துவிட வேண்டுமென்று இதற்குள்ளாகவே கூற ஆரம்பித்துவிட்ட சிலருக்கு அனுகூலமாகிவிடும். மற்ற விஷயங்களில் தமிழ்நாடு பெற்றிருக்கும் நற்பெயருக்கும் இதனால் தீங்கு ஏற்பட்டுவிடும்.

நிற்க, நமது தேசத்தின் நிலைமையில் இயந்திரத்தொழில் ஏன் பொருந்தாது என்பதற்கு ஒரு காரணம் மட்டும் கூறி இதை முடிக்கிறேன்.




இயந்திர மோகமுள்ளவர்கள் தேச முழுவதையும் இயந்திரமயமாக்கி விட்டால் எல்லா ஏழைகளுக்கும் நல்ல கூலி கிடைக்குமென்று எண்ணலாம். 48,000 பேர் செய்யக்கூடிய வேலையை 2,000 பேரின் உதவி கொண்டு ஓர் இயந்திரம் செய்து விடுவதால் பாக்கி 46,000 பேருக்கும் வேலையில்லாமல் போய்விடுகிறது என்று மேலே கூறினேன். ஆனால், இவர்கள் எல்லோருமே வேலை செய்யும்படி நாட்டில் ஆலைகளைப் பெருக்கி விட்டால் எல்லோருக்குமே நல்ல கூலி கிடைக்குமே என்று நினைக்கலாம். ஆனால் சிறிது யோசித்துப் பார்த்தால் இந்தியாவில் இது அசாத்தியம் என்பது விளங்கும். இங்கிலாந்து போன்ற தேசத்தில் இது சாத்தியமாகக்கூடும். இதற்கும்கூட ஒரு சிறு தேசத்தின் ஆலையில் தயாராகும் துணிகளை வாங்க பெரிய தேசம் ஒன்று இருந்தால்தான் முடியும். இங்கிலாந்தில் ஜனத்தொகை சுமார் மூன்று கோடி. ஆனால், 33 கோடி ஜனத்தொகையுள்ள இந்தியா, இங்கிலாந்தின் சாமான்களுக்கு சந்தையாக இருக்கிறபடியால் இங்கிலாந்து ஜனங்களில் பெரும் பகுதியினர் ஆலைத்தொழிலில் பிழைப்பது சாத்தியமாயிருக்கிறது. இந்தியா இன்றைய தினம் துணி வாங்க மறுத்துவிட்டால் ஆலைத்தொழில் நிலைமை ஆபத்தாகிவிடும். இங்ஙனமிருக்க 33 கோடி ஜனத்தொகையுள்ள இந்தியாவில் வேலை வேண்டி நிற்கும் கோடிக்கணக்கான ஜனங்கள் ஆலைத் தொழிலில் ஈடுபட்டால் எவ்வளவு துணி உற்பத்தியாகும்? அவ்வளவு துணியையும் விற்பனை செய்யக்கூடிய பெரிய சந்தை நமக்குக் கிடைக்குமா ? என்று யோசிக்க வேண்டும். இந்த அம்சத்தைக் கவனித்தால் நமது நாட்டின் நிலைமையில் கோடிக்கணக்கான ஏழைகளுக்குத் தொழிலளித்துக் காக்கக் கூடிய சாதனம் இராட்டை ஒன்றே என்பது நன்குவிளங்கும்.

*குறிப்பு : குடிநூலில் எழுதிய கட்டுரை*

**குடி அரசு – கட்டுரை – 02.05.1925**



RangaRakes tamilnavarasam.com


குடி அரசு

[வாரப்பதிப்பு]

சிறந்த தமிழ்ப் பத்திரிகை.

வருட சந்தா


ரூபாய் மூன்று தான்.

தமிழ்மக்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைய உழைக்கும் பத்திரிகை இது. ஆகையால் இதனை ஆதரிக்க வேண்டுவது உங்கள் முதற்கடன் ஆகும். உடனே சந்தாதாராய்ச் சேருங்கள்.

காரியஸ்தர்,

"குடி அரசு" காரியாலயம்,




குடி அரசு

[வாரப்பதிப்பு]

சிறந்த தமிழ்ப் பத்திரிகை.

வருட சந்தா

ரூபாய் மூன்று தான்.

தமிழ்மக்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைய உழைக்கும் பத்திரிகை இது. ஆகையால் இதனை ஆதரிக்க வேண்டுவது உங்கள் முதற்கடன் ஆகும். உடனே சந்தாதாராய்ச் சேருங்கள்.

காரியஸ்தர்,

"குடி அரசு" காரியாலயம்,

ஈரோடு.



RangaRakes tamilnavarasam.com

# “நூல் வலை”

மகாராஷ்டிரர்கள் “நூல்வலை”யில் வீழாமல் தப்ப உறுதி கொண்டதன் பொருட்டு அவர்களுக்கு வாழ்த்துக் கூறுவதாக மகாராஷ்டிர மாகாண மகாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீமான் தேசமுகர் கூறினாராம். சட்டசபையென்னும் மாயவலையில் சிக்குண்டவர்களுக்கு மகாத்மா அருளிய “பக்தி வலை” யின் பெருமை எவ்வாறு புலனாகும்? ஆகவே இவ்வாறு இவர்களிக் கூத்தாடுவதில் ஆச்சரியமெதுவுமில்லை. ஆனால் சுயராஜ்யக் கட்சியினர் பெல்காம் ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைக்கும் நேர்மையைப் பற்றி மட்டும் இங்கு சிறிது ஆராய்வோம். சுயராஜ்யக் கட்சியின் திட்டத்தைப் பற்றி ஒத்துழையாதோர் சற்றே வாயைத் திறந்து “இம்” என்றால் போதும்; உடனே “குடி முழுகிற்று” “ஒற்றுமை குலைந்தது” என்று கூக்குரல் கிளம்புகிறது. ஆனால் மகாராஷ்டிர சுயராஜ்யக் கட்சியினரோ தங்கள் மாகாண மகாநாட்டில் நூல் சந்தா ஒழிய வேண்டுமென்று பகிரங்கமாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். காந்தியடிகளைக் காங்கிரஸை விட்டு விரட்டி விடுவதே இவர்கள் நோக்கமென்பதை அக்கிராஸனர் தமது உரையில் தெளிவாகக் கூறிவிட்டார்.

லோகமான்யர் பிறந்த மகாராஷ்டிரம் இந்நிலைக்கோ வந்துவிட்டதென்று நமது நேயர்கள் வருத்தமுறுதல் கூடும். ஒரு விஷயம்அவர்களுக்கு ஆறுதலையளிக்குமென நம்புகிறோம். மாகாண மகாநாட்டில் கூடிய மேதாவிகளின் அபிப்பிராயம் மகாராஷ்டிரர்களின் உண்மை யபிப்பிராயம் அன்று என்றும், அம்மாகாணத்தில் பெரும்பான்மையோர் காந்தியடிகளிடத்தும் இராட்டையிடத்தும் அன்பு பூண்டவர்களென்றும் பம்பாய் “கிரானிகல்” பத்திரிகை கூறுகிறது. நூல் சந்தா விஷயமாக விவாதம் நேரிடலாமென்று எண்ணி ஒத்துழையாதார் எவரும் அம்மகாநாட்டுக்குப் போகவில்லை. இதில் நகைச்சுவை பொருந்திய அம்சம் யாதெனில் ஒத்துழையாதார் இம்மகாநாட்டுக்கு போகாமலிருந்ததும் அவர்களுடைய குற்றமாகிவிட்டது. “வேண்டாமென்ற மனைவி கைபட்டாலும் குற்றம், கால்பட்டாலும் குற்றம்” என்பார்கள். ஒத்துழையாதார் மகாநாட்டுக்குச் சென்றிருந்து நூல் சந்தாவை ஆதரித்திருந்தால் “சண்டையிட்டு ஒற்றுமையைக் கெடுக்க வந்தார்கள்” என்று குறை கூறப்பட்டிருக்கும். மகாநாட்டுக்கு வராதிருந்ததால் அவர்கள் அஹிம்சையைக் கைவிட்டு ஹிம்சைக் குற்றத்துக்கு ஆளாகி விட்டனர் என்று அக்கிராசனர் தேசமுகர் இப்போது கூறுகிறார். அஹிம்சையின் தத்துவத்தைப் பற்றி உபதேசங் கேட்க காந்தியடிகள் இவரிடந்தான் வரவேண்டும். சட்டசபைக்குச் செல்லாதிருத்தலே ஹிம்சையென்று இனி இவர் சொல்வார் போலும்! ஏன் ? ஒத்துழையாதார் உயிருடன் இருத்தலே ஒரு குற்றமாய் விடுதலுங்கூடும்.

காந்தியடிகள் தலைமையின் கீழ் ஒத்துழையாதார் ஒவ்வொரு தடவையிலும் சுயராஜ்யக் கட்சியாருக்கு விட்டுக்கொடுத்து வந்திருக்கும் விஷயம் உலகமறியும். இவர் பொருட்டு பகிஷ்காரப் பிரசாரத்தை - ஏன்? ஒத்துழையாமையையே ஓராண்டிற்கு நிறுத்தி வைத்ததோடன்றி, தமது திட்டத்தில் உயிர்நிலையான கதர் விஷயத்திலும் மகாத்மா இவர்களுக்காக விட்டுக் கொடுத்திருக்கிறார். ஒப்பந்தத்தை உண்மையுடன் நிறைவேற்றி வைப்பார்களென்று காந்தியடிகள் மனப்பூர்வமாக நம்பினார். ஆனால் சுயராஜ்யக் கட்சியினரோ தொடக்கத்திலிருந்து நூல் சந்தா திட்டம் தோற்றே போய் விடுமென்று உறுதிகொண்டுவிட்டார்கள் . இவ்விஷயத்தில் இவர்களுக்கு “விருப்பம் எண்ணத்திற்கு தந்தை”யாயிருந்திருக்கின்றது. மகாராஷ்டிர சுயராஜ்யக் கட்சியினர் தீர்மானத்தைப் பற்றி முன்னர் கூறினோம். மத்திய மாகாணத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் அய்யங்கார் இவர்களைவிட ஒருபடி முன்சென்றுவிட்டார். இவர் இந்தியா சட்டசபையில் சுயராஜ்யக் கட்சியின் பிரபல அங்கத்தினராயிருப்பவர். காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர். நாகபுரி புகைவண்டி நிலயத்தில் இவர் காந்தியடிகளைப் பார்க்க வந்த போது கதராடை அணிந்து வரவில்லையாம். தாம் காங்கிரஸ் காரியமாக வரவில்லை யென்று சமாதானமும் கூறினாராம். இச்சம்பவத்தைப்பற்றிக் காந்தியடிகள் “எங் இந்தியா” வில் மனம் வருந்தி எழுதியுள்ளார். தமது குடும்ப நலத்தை அறியும் பொருட்டு அவர் தம்மைப் பார்க்கவர நியாயமில்லையென்றும், அவர் கூறியது போலிச் சமாதானமென்றும் காந்தியடிகள் எடுத்துக் காட்டுகிறார். சுயராஜ்யக் கட்சியார் நூல் சந்தா திட்டத்தை மனப்பூர்வமாக நடத்தி வைப்பார்களென்று எண்ணி, மகாத்மா காங்கிரஸ் காரியக் கமிட்டியில் அநேகமாக எல்லோரையும் சுயராஜ்யக் கட்சியினராகவே பொறுக்கி எடுத்துக் கொண்டார். ஆகவே ஸ்ரீமான் அய்யங்காரின் செயல் அவருக்குப் பெரும் ஏமாற்றம் அளித்திருப்பதில் ஆச்சரியமில்லை.

**குடி அரசு - தலையங்கம் - 17. 05.1925**



RangaRakes tamilnavarasam.com

# கருங்கல்பாளையம் வாசகசாலை

ஈரோட்டின் ஒருபகுதியாகிய கருங்கல்பாளையத்தில் சென்ற சில காலமாக நடைபெற்றுவரும் வாசகசாலையின் ஒன்பதாவது ஆண்டு நிறைவிழா நேற்றயதினம் இனிது நடந்தேறியது. நமது அருந்தலைவர் ஸ்ரீமான் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் இவ்வைபவத்தின் அவைத் தலைமையை ஏற்று நடத்தியது இவ்வாசக சாலையின் பாக்கியமென்றே கூறுவோம். ஸ்ரீமான் ஆச்சாரியாரின் தலைமையில் அறிஞர் இருவர் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். கருங்கல்பாளையம் வாசிகள் நேற்றைய தினம் காட்டிய ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஆண்டு முழுதும் தொடர்ந்து காட்டினார்களாயின் இவ்வாசக சாலை அண்மையில் பெரிதும் முன்னேற்ற மடைந்து விடுமென்று திட்டமாகக் கூறலாம்.

இத்தகைய வாசக சாலைகளின் அவசியத்தைப்பற்றி நாம் விரிவாகக் கூறவேண்டுவதில்லை. உலகில் மேம்பாடுற்று விளங்கும் நாடுகளில் வாசக சாலைகள் மிகுதியும் வளர்ச்சிபெற்றிருக்கின்றன. லட்சக்கணக்கான புத்தகங்க ளையும், ஆயிரக்கணக்கான அங்கத்தினரையுங் கொண்ட வாசகசாலைகளை மேனாடுகளில் ஒவ்வொரு சிறு நகரத்திலும் காணலாம். இலவச புத்தகாலயங் களும், பத்திரிகைக் கூடங்களும் எண்ணிறந்தன. அரசாங்கத்தாரும், பொது ஜனங்களும் தாராளமாக நன்கொடைகள் வழங்கி இவ்வாசகசாலைகளைப் போற்றி வளர்த்து வருகின்றனர். ஆனால் அடிமை நாடாகிய இந்தியாவில் அரசாங்கத்தாரின் உதவியை எதிர்பார்த்தல் வீண் ஆசையாகவே முடியும். பொதுவாழ்வில் பற்றுக்கொண்ட அன்பர்கள் ஆங்காங்கு முன்வந்து இத்தகைய வாசகசாலைகளை வளர்க்க முற்படவேண்டும்.

சுயராஜ்யப் போராட்டம் ஒருபுறம் நடந்துவருகையில், நாட்டாரின் கவனத்தை இச்சிறு விஷயங்களில் புகுத்துதல் சரியாமா என்று சிலர் ஐயுறலாம். தனிமனிதன், தனிக்குடும்பம், தனிப்பட்ட ஊர் இவர்களின் முன்னேற்றத்தின் வாயிலாக தேசத்தின் முன்னேற்றத்தை நாடுவதே எமது நோக்கமென்று தொடக்கத்திலே கூறியுள்ளோம். முக்கியமாக, ஸ்ரீமான் ஆச்சாரியார் தமது முடிவுரையில் எடுத்துக்காட்டிய வண்ணம், நமது நாட்டின் தற்போதைய நிலைமையில் வாசக சாலைகளும், இராப் பள்ளிக்கூடங்களும், இராட்டைச் சங்கங்களுமே பெரிதும் வேண்டற்பாலன. ஒரு தேசத்தின் சுதந்திர போராட்டத்தில் சிறிதுகாலம் பெருங்கிளர்ச்சியும், உத்வேகமும் தோன்றுவதுண்டு. இக்காலத்தில் பெருங் கூட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும்



மிகுந்திருக்கும். சிறு சங்கங்கள் ஒளி மழுங்கித்தோன்றும். ஆனால், இவ்வுத்வேகக் கிளர்ச்சி என்றும் நீடித்திருக்கமுடியாது. பெருங் கிளர்ச்சியின் வேகம் குன்றுங்காலத்து நாட்டில் சோர்வு மிகுந்திருப்பது இயல்பு. இக்காலத்தில் சிறு சங்கங்களினாலேயே நாட்டிற்கு நீடித்த நன்மைகள் விளையும். இச்சிறு சங்கங்களின் மூலமாகவே மக்களின் குணத்தைப் பண்படுத்தவேண்டும். சத்தியம், உறுதி, தைரியம், விடாமுயற்சி முதலிய உயர் குணங்களை இச்சங்கங்களின் மூலமாகவே வளர்த்தல்கூடும்.

ஆகவே, நமது நாட்டின் தற்போதைய நிலைமையை உய்த்துணர்ந் தோர் இன்று நமது பெருந்தேவை சிறு சங்கங்களே என்பதை எளிதில் அறிந்துகொள்ளலாம். காந்தியடிகள் நிர்மாண திட்டத்தைப் பெரிதும் வலியு றுத்தி வருவதும் இக்கருத்துப் பற்றியே என்பது எமது உறுதி. ஆர்ப்பாட்டமும், உற்சாகமும் அடங்கிய இக்காலத்தில் பொதுஜனங்களிடையே திறமை, தைரி யம், சத்தியம் முதலிய உயர்குணங்களை வளர்த்து நிலையான அடித்தளத்தின் மீது சுயராஜ்ய மாளிகையை எழுப்புவதற்கான திட்டம் நிர்மாண திட்டமாகும். இத்திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்குச் சிறு சங்கங்கள் பெருந்துணை யாயி ருக்கும். ஆகவே, தேச நன்மைக்கு இவ்வளவு இன்றியமையாததொரு விஷயத்தில் தமிழ்நாட்டுக்கு வழிகாட்டும் கருங்கல்பாளையம் வாசகசாலை நிர்வாகிகளுக்குத் தமிழ்நாட்டார் கடமைப்பட்டுள்ளார்.

இவ்வாசகசாலையில் சென்ற ஆண்டில் 1146 புத்தகங்கள் இருந்திருக் கின்றன. இவற்றுள் ஆங்கிலப் புத்தகங்கள் 463. தமிழ்ப்புத்தகங்கள் 683. தமிழ்ப்புத்தகங்கள் 643ம், ஆங்கிலப் புத்தகங்கள் 145ம் அங்கத்தினர் களுக்குப் பயன்பட்டன. தினசரி, வாரப் பத்திரிகைகளும், இரண்டொரு சஞ்சிகைகளும் தருவிக்கப்படுகின்றன. சென்ற ஆண்டில் அங்கத்தினரின் தொகை 76. வாசகசாலையின் ஆதரவில் இலவச இராப் பள்ளிக்கூடம் ஒன்று நடத்தப்படுகிறது. பெரியவர்களும் சிறுவர்களும் சேர்ந்து மொத்தம் 42 மாணவர்கள் கல்வி பயின்றனர். வரவு செலவுக் கணக்குகள் ஒழுங்காக வைக்கப் பட்டிருக்கின்றன.

காரியதரிசிகள் தங்கள் அறிக்கையில் எடுத்துக்காட்டுவதுபோல் அபிவிருத்திக்கு இடமில்லாமலில்லை. கடந்த ஒன்பது ஆண்டுகளாக இவ் வாசகசாலை நடந்து வருவதே மகிழ்ச்சிதரத்தக்க விஷயமாயினும் இத்துடன் திருப்தியடைந்திருத்தல் முறையன்று. கருங்கல்பாளையத்திலுள்ள பெரியோர் வாசகசாலை விஷயத்தில் அசிரத்தை காட்டுகின்றனர் என்று காரியதரிசிகள் வருத்தத்துடன் குறிப்பிட்டிருக்கின்றனர். கருங்கல்பாளையம் வாசிகள் பெரும்பாலும் தனவந்தர்கள், மிராசுதாரர்கள், 'தொழுதுண்டுபின் செல்பவர்'ல்லர். இவர்கள் வயல்வேலை கவனித்த நேரம்போக மிகுதி ஓய்வு நேரத்தில் இவ்வாசக சாலை விஷயத்தைச் சிறிது கவனித்தாலும் எவ்வளவோ முன்னுக்குக் கொண்டு வந்துவிடலாம். ஆண்டுவிழா அன்று மட்டும் வந்துவிட்டுப் பின்னர் வாசக சாலை யொன்றுண்டென்பதையே



RangaRakes tamilnavarasam.com

மறந்துவிடுவதால் யாது பயன்விளையும்? ஆகவே, இனியேனும் சிறிது ஊக்கங்காட்டி இளைஞர்களின் முயற்சிக்கு வலுவளிக்கும்படி கருங்கல் பாளையம் வாசிகளைப் பெரிதும் வேண்டிக்கொள்கிறோம்.

இனி வாசகசாலை நிர்வாகிகளுக்கு நாம் கூறவேண்டிய விஷயமும் ஒன்றுண்டு. அவர்கள் தேசத்தின் நிலைமையையறிந்து வாசகசாலையின் நடைமுறையை மாற்றி அமைத்துக்கொள்ளல் வேண்டும். அங்கத்தினர்கள் சில புத்தகங்களைப் படிப்பதற்காக மட்டும் வாசகசாலை ஏற்பட்டது என்று எண்ணுதல் கூடாது. நாட்டின் விடுதலைக்காக நடைபெறும் பெரிய தேசீய இயக்கத்திற்கு இவ்வாசகசாலையை ஒரு துணைக்கருவியாக அவர்கள் கருதவேண்டும். முக்கியமாக கதர் திட்டத்தை வளர்ப்பதற்கு இவர்கள் பெரிதும் துணைசெய்யலாம். அங்கத்தினர் அனைவரும் கதர் அணியும் படியும், இராட்டை சுழற்றும் படியும் இவர்கள் தூண்டுதல் வேண்டும். ஓர் இராட்டைச் சங்கம் காண்பதற்கு வாசகசாலை ஏற்ற இடமாகும். வாசக சாலை யில் இராட்டை, கதிர், கொட்டிய பஞ்சு முதலியவைகளைச் சேகரித்து வைத்து அங்கத்தினர் நூல் நூற்பதற்கு வேண்டிய வசதி செய்துகொடுக்க வேண்டும். விழாக்கள் நடத்துதல், பெரியாரை அழைத்துவந்து உபந்யாசம் செய்வித்தல் இவற்றுடன் தமது கடன் முடிந்து விட்டதாக அவர்கள் கருதுதல்கூடாது. இராப் பள்ளிக்கூடங்களில் ‘தீண்டாதா’ருக்கும் இடங்கொடுத்துத் தீண்டாமை விலக்குத்திட்டத்திற்குத் துணைசெய்யவும் இவர்கள் முன்வரவேண்டும். ஸ்ரீமான் ஆச்சாரியர் தமது முடிவுரையில் கூறிய உபதேச மொழிகளை மனதிற்கொண்டு வரும் ஆண்டில் இவர்கள் காரியம் செய்வார்களென்று நம்புகிறோம்.

ஈரோடு நகரசபையாரின் பெருந்தன்மையைப்பற்றி இங்குக் குறிப்பிடா மலிருக்க முடியவில்லை. மக்களின் அறிவுப் பயிற்சிக்கு ஆதாரமாயுள்ள இத்தகைய பொது ஸ்தாபனங்களை ஆதரிக்க, நகர வாசிகளின் பிரதிநிதி களாய் விளங்கும் நகர பரிபாலன சபையார் வலிய முன்வரவேண்டும். ஆனால், நமது ஈரோடு நகரசபையாரோவெனில் வாசகசாலைக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்கவும் மனங் கொள்கிறார்களில்லை. சென்றவாண்டில் வாசகசாலையின் சொந்த செலவில் ஒரு தண்ணீர்க் குழாய் ஏற்படுத்தப் பட்டது. ஆனால், இக்குழாய்க்கு மீடர் வைத்துக்கொள்ளவேண்டுமென்று இவ்வாண்டில் நகரசபையார் கூறுகிறார்களாம். தங்களுடைய நற்பெயரை முன்னிட்டேனும் இவர்கள் இந்த யோசனையை வற்புறுத்தமாட்டார்களென நம்புகிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 17.05.1925**



# பூச்சாண்டி

“பூச்சாண்டி வந்து பிடித்துக்கொள்வான்” என்றுகூறி அறியாத தாய்மார் குழந்தைகளைப் பயமுறுத்துவதுண்டு. அரசியல்திருத்தமென்னும் பூச்சாண்டி வரப்போவதாக நம்மையும் தற்போது அச்சுறுத்தி வருகிறார்கள். தாஸ் – பர்க்கென்ஹெட் சமிக்ஞைகளின் கருத்து இஃதேயென்று சிலர் ஊகிக்கின்றனர். அரைகுறைச் சீர்திருத்தத்தை அங்கீகரிக்க வேண்டாமென்று அன்னிபெசன்ட் அம்மையார் எச்சரிக்கை செய்கிறார். அரசியல் திருத்தம் அதிகமாக அளிக்கப் பட்டேயாகவேண்டுமென்றும், ஆனால் ஆங்கிலோ இந்தியரின் உரிமைகளைப் புறக்கணித்து விடக்கூடாதென்றும் கர்னல் கிட்னி கழறுகிறார். மன்னர் பெருமானே இவ்வாண்டினிறுதியில் இந்தியாவிற்கு விஜயம் செய்து விசேஷ உரிமைகள் வழங்கப்போகிறாரென்பது மற்றும் சிலரின் நம்பிக்கை. எம்மைப் பொறுத்தவரையில், இவர்களின் ஊகம் மெய்யாகி அரசியல் திருத்தம் வழங்கப்பட்டால் நாம் ஒரு சிறிதும் வியப்புறோம். வேற்றுமையும், தளர்ச்சியும் நாட்டில் நிலவி நிற்கும் இவ்வேளையில் சொற்ப சீர்திருத்தங்கள் வழங்கி நம்மைச் சரிப்படுத்தி விடலாம் என்று பிரிட்டிஷார் கருதுவது இயல்பே. ஆனால், அவைகளை ஏற்றுக்கொண்டு பாரத மக்கள் மீண்டுமொரு முறை ஏமாந்துபோவார்களா?

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 17.05.1925**



RangaRakes tamilnavarasam.com

# அஞ்சுதல் ஒழிக

அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கதர் அணிய அஞ்சுவதைப் பற்றி ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் “நெஞ்சு பொறுக்குதிலையே” என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ள அரிய கட்டுரையை மற்றொரு பத்தியில் பிரசுரித்திருக்கிறோம். மற்றவர்களைவிட உத்தியோகஸ்தர்களே இராட்டையை ஆதரிக்கப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏழை எளியவர்கள் உள்படப் பொது ஜனங்கள் கொடுக்கும் வரிப்பணத்திலிருந்து தான் இவர்கள் ஊதியம் பெறுகின்றனர். ஆகவே, ஏழை எளியவர்களுக்கு உணவளித்துக் காக்க வல்லதான இராட்டையை ஆதரித்தல் இவர்கள் கடனன்றோ? ஸ்ரீமான் ஆச்சாரியார் எடுத்துக்காட்டுகின்ற வண்ணம் இவர்கள் கதரணிய பயப்படுபவதற்குச் சிறிதும் ஆதாரமில்லை. ஆதாரம் ஓரளவு இருப்பதாகவே வைத்துக்கொண்டாலும், ஆடை அணியும் விஷயத்தில்கூட நமது சுதந்திரத்தைப் பறிகொடுத்தல் பேதமையேயாகும். உத்தியோகஸ்தர்கள் அஞ்சி அஞ்சிச் சாவதொழிந்து தமது கடனாற்ற முன்வருவார்களாக.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 17.05.1925**



# ஒரே திட்டம்

காந்தியடிகள் சுயராஜ்யக் கட்சியின் திட்டத்தை அங்கீகரித்துவிட்டார் என்று கூறுவது உண்மைக்கு மாறுபட்டதாகும் என்று சென்ற வாரம் எழுதினோம். சித்தகாங்கில் மகாத்மா கூறிய அருள்மொழிகள் நமது கூற்றை உறுதிப்படுத்துகின்றன. அவை பின்வருமாறு :–

“போருக்கு என்றும் சளைக்காத ஒரு சாதியாரோடு நாம் சண்டையிடுகிறோம். அந்த ஜாதியார் பணிந்துபோவதென்றால் இன்னதென்று அறியார்கள். இராஜதந்திர முறைகளைக் கையாண்டு நாம் எவ்வளவுதான் முயன்றாலும் அவர்களை நாம் இந்தியாவைவிட்டு ஓட்டிவிடமுடியாது. நமது வெற்றிக்குச் சாதனமாக நான் தேசத்தார் முன் வைத்திருப்பது ஒரே திட்டந்தான். அஃது இராட்டையேயாகும்.’’

அரசியல் கிளர்ச்சி முறைகளில் காந்தியடிகளுக்கு எள்ளளவும் நம்பிக்கையில்லையென்பது இதிலிருந்துதெள்ளிதின்விளங்குகின்றதன்றோ?

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 17.05.1925**



RangaRakes tamilnavarasam.com



குடி அரசு

(வாரப்பதிப்பு)

சிறந்த தமிழ்ப் பத்திரிகை.

வருடச் சந்தா

ரூபாய் மூன்று தான்.

தமிழ்மக்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைய உழைக்கும் பத்திரிகை இது. ஆகையால் இதனை ஆதரிக்க வேண்டுவது உங்கள் முதற் கடன் ஆகும். உடனே சந்தாதாராய்ச் சேருங்கள்.

காரியஸ்தர்,

"குடி அரசு" காரியாலயம்,

ஈரோடு.



# நமது அரசியல் நிலை II

இரு கரையும் புரண்டோடும் வெள்ளப்பெருக்கு இடைமறித்துப் பலமாகத் தடுக்கப்படின், பின்னால் எதிர்த்துத் தாக்கி இருமருங்கிலும் உடைப் பெடுத்து நாலா பக்கங்களிலும் ஓடிச்சென்று சிதறுண்டு போதல் இயற்கை. அதுபோன்று இந்திய மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து நின்ற மாபெரும் இயக்கமாகிய ஒத்துழையாமை இயக்கம் இடையில் ஒடுக்கப்பட்டவுடன், தேச விடுதலை யொன்றிலேயே குறிக்கொண்டு நின்ற மக்கள் மனம் வேற்றுமை யுற்று மிகச் சிறுசிறு விஷயங்களில் தம் மனத்தைச் செலுத்துவராயினர். சில ஆண்டுகளுக்கு முன்னர் துரும்பென மதித்து உதறித் தள்ளியெறிந்த பட்டங்களிலும், பதவிகளிலும், அதிகாரங்களிலும் மீண்டும் மக்கள் மனம் வைப்பாராயினர். பொதுநல எண்ணம் குறைந்தது; தன்நலம் தலைதூக்கி நிற்க ஆரம்பித்துவிட்டது. சாதிப்பற்று என்ற மாயையில் மக்கள் அழுந்துவா ராயினர். ‘எனது கடமை’, ‘எனது கடமை’ என்றதற்குப் பதிலாக ‘எனது உரிமை’, ‘எனது உரிமை’ என்ற முழக்கம் எங்கும் கேட்கிறது. ஒவ்வொரு சாதியினரும் தமது சாதியின் உரிமைகளுக்காகப் போராட முனைந்து நிற்கின்றனர். ஒவ்வொரு சாதியினரும் தமது முன்னேற்றத்திற்காக முற்பட்டு உழைத்தல் சாலவும் சிறந்ததே. தமது உழைப்பால் பிற சாதியினர்களின் உரிமைகள் எவ்வாற்றானும் பாதிக்கப்படாதிருத்தல் வேண்டும் என்ற எண்ண மின்றி எவர் எக்கேடு கெடினும் தாம் மட்டும் பல உரிமைகளைப் பெற வேண்டுமென்ற குறுகிய நோக்கம் இதுகாலை நாட்டில் தலைவிரித்தாடுகிறது. சிறந்த அறிவாளிகளும், உயர்ந்த தேசாபிமானிகளும் இக்குறுகிய நோக் கத்தை அடிப்படையாகக் கொண்ட சாதிப்பற்று என்னும் மாயவலையில் சிக்கி உழலுகின்றார்கள். “நீ யாவன்?” என என்னை ஒருவன் கேட்பானாயின் “இந்தியன், இந்தியன், இந்தியனே” என்று முக்காலும் மொழிவேன் எனக் கூறிய திரு மகம்மதலி ஜின்னாவுங்கூட சாதிப்பற்று என்ற மாயையில் பாவம்! அழுந்திவிட்டார். ஹிந்துக்களும், முஸ்லீம்களும் அரசினர் சட்டசபையில் பெறும் பிரதிநிதித்துவ தொகையை வரம்பறுத்து, சென்ற 1916-ம் ஆண்டில் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதற்குத்தான் “லக்ஷ்மணபுரி ஒப்பந் தம்” என்று பெயர். அவ்வொப்பந்தத்தை தமது சாதிக்கு சாதகமாக மாற்ற வேண்டுமென்று முஸ்லீம்கள் ஒரு பெரும் கிளர்ச்சி செய்து நிற்கின்றனர். சாதிமத பேதங்கடந்து சிறந்த தேசீயவாதியாக இருந்து வந்த, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நாட்டின் நலனைக் கெடுப்பதாகும் என்ற கொள்கையைக்



RangaRakes
tamilnavarasam.com

கைக்கொண்டிருந்த திரு ஜின்னா நாட்டின் தற்கால நிலையில் தமது கொள்கைகளைச் சிறிது மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது என்று கூறி முஸ்லீம்களின் கிளர்ச்சிக்குத் துணை செய்து வருகின் றார். சாதிப்பற்றின் வலிமையே வலிமை! இப்பெருஞ் சமூகத்தினரும் ஒருங்கு கூடிச் செய்து கொண்ட ஒப்பந்தத்தைத் தக்க காரணமின்றி மாற்றுதல் கூடா தென்றும் அவ்விதம் மாற்றுதல் அவசியமாயின் தமது ஜாதியினரின் உரிமைகள் எவ்வாற்றானும் பாதிக்கப்படக் கூடாதென்றும் இந்துக்கள் எதிர் வாதம் புரிந்து வருகின்றனர். இவ்விரு வாதங்களையும் முறையே ஆராய்ந்து முடிவுசெய்யக் கூடின கூட்டமும் அரசியல் கட்சிகளின் ஒற்றுமைக் கூட்டம் போல் ஒன்றும் செய்யாமல் பயனில்வாதம் நிகழ்த்திக் கலைந்து விட்டது.

தமிழ்நாட்டிலோ அரசியல் உலகத்தை சாதிச் சண்டை என்ற படாம் மூடிக் கொண்டிருக்கிறது. சுமார் பத்தாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றி மக்களுக்குள் ஒற்றுமையைக் குலைத்து, வேற்றுமையை நாட்டி, தேச விடுத லைக்குப் பெருந்தடையாக நின்று நாளடைவில் ஒருவாறு ஒடுக்கமுற்று வந்த சாதிச்சண்டை மீண்டும் உயிர்த்தெழுந்து உறுமி நிற்கிறது. பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார், ஆரியர் – தமிழர் என்ற பிரிவுச் சொற்களே எங்கும் முழங்குகின்றன. சுதந்திர வீரர்கள் சுயராஜ்ய வீரர்களாக இலங்கிய நம்மவர் இதுகாலை சாதி வீரர்களாகக் கோலங்கொண்டு நிற்கிறார்கள். தலைவர்களின் சொற்பொழிவுகளிலும், தமிழ்ப் பத்திரிகைகளிலும் காங்கிரஸ் என்ற பேச்சைக் காணோம்! கதர் என்ற பேச்சைக் காணோம்! எல்லாம் சாதி மயமாகவே விளங்குகின்றன. "எல்லாருமோர் குலம், எல்லாரும் இந்திய மக்கள்" என்ற உயரிய கொள்கை, சிறந்த எண்ணம் மக்களை விட்டு அகன்றோடிப் போய் விட்டது. பிறப்பால் உயர்வு, தாழ்வு என்ற கீழ் எண்ணம் நாட்டில் பரவி விட்டது. எல்லாரும் ஒன்றென்று எண்ணி நாட்டின் நலத்திற்காக ஒன்றிய மனத்தினராய்த் தமிழ் மக்கள் உழைக்கும் நாள் எந்நாளோ?

இதுகாறும் நாட்டின் அரசியல் நிலையைப் பற்றிப் பொதுநோக்காக ஆராய்ச்சி செய்தோம். இனி நாட்டின்கணுள்ள பற்பல அரசியல் கட்சியினர் களைப் பற்றிச் சுருக்கமாக ஆராய்தல் செய்வோம்.

நமது நாட்டில் நடைபெற்றுவரும் ஆட்சிமுறையில் எவ்வித தொடர்பும் இன்றி, புறத்தே நின்று ஒத்துழையாமை செய்வதில் எவ்வித பயனுமில்லையெனக் கூறி, அரசினர் சட்டசபைகளில் நுழைந்து ஆங்கு ஒத்துழையாமையை நிகழ்த்தி ஆட்சிமுறை நடைபெறாவண்ணம் இடைய றாது முட்டுக்கட்டை போட்டு, ஆட்சிமுறையை உடைத்தெறிதலே சாலவும் சிறந்ததெனக் கொண்டு காங்கிரஸ்வாதிகளில் ஒரு கூட்டத்தினர் "சுயராஜ்யக் கட்சி" என்ற ஒரு கட்சியைத் தோற்றுவித்தனர். மத்திய மாகாணம், வங்காளம் என்னும் இரண்டு இடங்கள் தவிர மற்றைய இடங்களில் சுயராஜ்யக் கட்சி யினர் போதிய ஆதரவு பெறவில்லை. இடத்திற்கும், காலத்திற்கும் தமது கட்சி யின் பலத்திற்கும் தக்கவாறு தமது கொள்கைகளையும் முறைகளையும்



மாற்றிக்கொண்டே வரலாயினர். சட்டசபைகளில் முழு ஒத்துழையாமை, இடையறாமல் முட்டுக்கட்டை என்று கூறியது பேச்சளவிலே நின்றுவிட்டது.

இந்திய சட்டசபையில் தமது கட்சிக்குப் பலமின்மை கருதி சுயேச்சை வாதிகள் சிலரோடு ஒருவகை ஒப்பந்தம் செய்துகொண்டு முட்டுக்கட்டை முறையை ஓராண்டு கையாண்டு வந்தனர். அதுவும் ஒருசில காரியங்களில் மட்டுமே. ஓராண்டுக்குப் பின்னர் சுயேச்சை வாதிகள் சுயராஜ்யக் கட்சியி னரைக் கைவிட்டு விட்டனர். பாவம்! தன்னந் தனியராய் எடுத்த காரியம் யாவினும் தோல்வி மேல் தோல்வியே பெற்று வந்தனர். இவர்கள் அரும் பாடுபட்டு அரிதிற் பெற்ற சில வெற்றிகளும் அரசப் பிரதிநிதியின் தனி அதிகாரம் எனும் வாளுக்கு இரையாயின. சட்டசபைகள் ஏற்படுத்தும் சிறு கமிட்டிகளில் பதவி பெறலாகாதென்று கொண்டிருந்த நோக்கம் வெறும் எழுத்தளவிலேயே நின்றுவிட்டது. மத்திய மாகாணத்திலும் வங்காளத்திலும் சுயராஜ்யக் கட்சியினரின் முட்டுக்கட்டை ஒருவாறு நிறை வேறிற்றென்றே கூறுதல் வேண்டும். இருந்தாலும், என்? மத்திய மாகாணத்தின் சட்டசபைத் தலைமையைப் பெற சுயராஜ்யக் கட்சியினர் முற்பட்டு, அதனையும் பெற்று விட்டனர். பதவிபெறுதல் கூடாது என்ற அவர்தம் கொள்கைக்கு வியாக்கி யானம் போலும்! சென்னை மாகாணத்தைப் பற்றிய மட்டிலும் சுயராஜ்யக் கட்சியினரை பத்திரிகைகளிலும், பிரசங்க மேடைகளிலும் கண்டோமே யல்லாது சட்டசபையில் காணவே இல்லை. சென்னை சட்டசபையில் சுயராஜ்யக் கட்சியினரும் பிற கட்சியினரும் கையாண்டு வந்த முறைகளில் எவ்வித பேதமும் எள்ளளவும் எமக்குப் புலனாகவில்லை. இது போன்றே மற்றை மாகாண சட்டசபைகளிலும் சுயராஜ்யக் கட்சியினர் இருந்து வருகின் றனர் எனக் கூறுதல் மிகையாகாது.

"சட்டசபைகளில் ஒத்துழையாமை நிகழ்த்துவோம்; முட்டுக்கட்டை போடுவோம்; ஆட்சிமுறையை அழிப்போம்" என்று சுயராஜ்யக் கட்சியினர் வீராவேசம் கொண்டு கூறிய முழக்கச் சொற்கள் பயனிலவாயின; பேச்சில் ஒத்துழையா வீரர்களாகவும், செய்கையில் ஒத்துழைப்பு வீரர்களாகவும் விளங்கி வருகின்றார்கள். அதுமட்டுமோ? பேச்சிலுங்கூட அவ்வீரத்தன்மை ஒழிந்து வருகின்றது. காந்தியடிகளுக்கும், சுயராஜ்யக் கட்சியினருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தை ஒழித்துவிட சுயராஜ்யக் கட்சியினர் முற்பட்டு விட்டனர். அக் கட்சியினர்களுக்குள்ளேயே பற்பல மாறுபட்ட அபிப் பிராயங்கள் தோன்றிவிட்டன. தாஸர் ஒன்று கூறுகிறார்! மகாராஷ்டிர சுய ராஜ்யக் கட்சியினர் ஒன்று கூறுகின்றனர். நிர்மாண திட்டத்தை நிறைவேற்றி வைத்தல் வேண்டுமென திரு தாஸர் கூறுகிறார். நூல் சந்தா தீர்மானத்தை எடுத்துவிட வேண்டுமென்றும், காந்தியடிகளை காங்கிரஸை விட்டு ஓட்டிவிட வேண்டுமென்றும் மகாராஷ்டிரத்தார் கூறுகின்றார்கள். இன்னும் சில நாட் களுக்குள் சுயராஜ்யக் கட்சியினர்களுக்குள்ளேயே பிளவு ஏற்படும் அறிகுறி கள் காணப்படுகின்றன. திரு தாஸர் இந்தியாவிலிருந்து கண் சிமிட்டுகிறார்;



RangaRakes tamilnavarasam.com

திரு பர்க்கன் ஹெட்டு பிரபு இங்கிலாந்திலிருந்து கண் சிமிட்டுகிறார். யாரை யார் மயக்கப் போகிறார்களோ காலந்தான் காட்டும். தன்னைக் கண்டாரை மயக்கமுறச் செய்து கீழே வீழ்த்தும் கொல்லிப்பாவையென விளங்கும் அரசினர் சட்டசபைகளில் அடி வைத்தவர்களின் வழி இந்நிலையுறாது பின் எந் நிலையுறும்? சுருங்கக்கூறின் சுயராஜ்யக் கட்சியினர் தமது பண்டைக் கொள்கைகளைக் கைவிட்டு விட்டனர்; ஒத்துழைப்பாளர்களாயினார்கள். நிர்மாணத் திட்டத்திலும், காந்தியடிகளிடத்திலும் நம்பிக்கையிழந்தனர்; அவர்களுக்குள்ளும் அபிப்பிராய பேதங்கள் தோன்றலாயின; பிளவு அதி விரைவில் ஏற்படுதலுங்கூடும். சுயராஜ்யக் கட்சியினரின் தற்கால நிலை இதுவேயாகும்.

ஸ்ரீமதி அன்னி பெஸண்டும், அவரது கூட்டத்தினரும் இந்திய அரசியல் உலகில் இதுகாலை மிக்க பாடுபட்டு வருகிறார்கள். “அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்” என்ற கொள்கையுடையவர்கள். இந்தியாவில் மட்டும் கிளர்ச்சி செய்தல் பயன் தராது என்றும் இந்திய அரசியல் கிளர்ச்சியை இங்கிலாந்திலும் நடத்துதல் வேண்டும் என்ற நோக்கமுடையவர்கள். இந்திய மக்கள் உண்மையாகவே சுதந்திரதாகங் கொண்டுள்ளார்கள் என்று ஆங்கிலர்கள் அறிவார்களாயின் இந்தியாவின் ஆட்சி முறையில் இந்தியர்களுக்குப் பெரும் பங்கு கொடுக்க ஆங்கிலர்களே முன் வருவார்களென்றும், இந்திய அரசியல் நிலையின் உண்மையையும், இந்திய மக்களின் உள்ளக் கிடக்கையையும் ஆங்கிலர் அறியாத குறையே அவர்கள் கண்மூடித்தனமாக இருப்பதற்குக் காரணமென்றும், ஆங்கிலர்களை வற்புறுத்தினால் அல்லாது அவர்கள் இணங்கமாட்டார்களென்றும், ஆகையினால் உருப்படியான அரசியல் திட்டமொன்றைத் தயாரித்து ஆங்கில நாட்டுப் பாராளுமன்றத்தாரிடம் சமர்ப்பித்தல் வேண்டுமென்றும் இக்கூட்டத்தினர் கூறுகின்றனர். “இந்திய சுயஆட்சி மசோதா” ஒன்றினைத் தயாரித்து அதற்கு இந்திய மக்களின் ஆதரவைப் பெற இந்நாடு முழுவதும் ஸ்ரீமதி அன்னி பெஸண்டு சுற்றுப்பிரயாணம் செய்து வருகின்றனர். ஸ்ரீமான் வி.எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி போன்ற பெரியார்களினுடையவும், மகாராஷ்டிர மாகாண மகாநாடு போன்றவைகளினுடையவும் ஆதரவைத் தமது மசோதாவிற்குப் பெற்றிருக்கின்றார். இதுகாறும் வெளிவந்துள்ள இந்திய அரசியல் திட்டங்களைக் காட்டிலும் இவர் தயாரித்த மசோதா பெரிதும் முற்போக்குடையதாகவும், இந்திய மக்களுக்கு ஆட்சி முறையில் அதிக அதிகாரமும் பொறுப்பும் தரத் தக்கதாகவும் இருக்கிறதென்றே கூற வேண்டும். எனினும் இந்திய நாகரிகத்திற்கும் அரசியல் கொள்கைகளுக்கும் பெரிதும் மாறுபட்ட அம்சங்களைத் தன்னகத்துத் தாங்கி நிற்கிறது. ஆங்கிலர்களை எந்நாளும் சார்ந்து இந்திய மக்கள் பிழைக்க வேண்டுமென்ற கொள்கையை இம்மசோதா ஒப்புக் கொண்டு நிற்கிறது. இந்தியாவிற்கு ஆங்கில நாட்டுத் தொடர்பு இன்றியமை யாததென்று வலியுறுத்திக் கூறுகிறது. இந்தியாவின் காவலன் ( Protector ) ஆக ஆங்கில மன்னன் இருந்தேயாக வேண்டுமாம். இந்தியாவின் மீது ஆணை



செலுத்திவரும் ஆங்கில நாட்டுப் “பிரிவி கவுன்ஸி”லின் ஆதிக்கம் இம் மசோதாவினால் ஒழிந்தபாடில்லை. பிறநாட்டாரின் வியாபாரப் பெருக்கால் இந்தியக் கைத்தொழில்கள் நாசமாக்கப்படாமல் நமது தொழில்களைக் காப்பாற்றிக் கொள்ள காப்புவரி முதலானவை விதிக்கும் உரிமைகள் இம்மசோதாவில் காணப்படவில்லை. இதுகாலை நடைபெற்று வரும் இந்திய அரசாங்கத்தார் கண்மூடித் தனமாகவும், தந்நலத்தைப் பேணியும் பெருக்கி வைத்திருக்கும் கடன்களையும் வேறுசில பொறுப்புகளையும் ஆராய்ந்து உண்மையறிந்து ஏற்றுக் கொள்ளுவனவற்றை ஏற்றுக் கொள்ளவும், ஏற்றுக் கொள்ள முடியாதனவற்றைத் தள்ளவும் இம்மசோதா இந்திய மக்களுக்கு உரிமை அளிக்கக் காணோம். இதுபோன்ற குறைகள் பலவும் இந்திய நாகரிக, அறிவு வளர்ச்சிக்குத் தடையாகவுள்ள குறைகள் பலவும் இம் மசோதாவில் மல்கிக் கிடக்கின்றன. ஆங்கில நாட்டுத் தொடர்பை எக்காலத்தும் இந்தியா விடக்கூடாதென்று அம்மையார் கூறுதல் இயல்பே; அவரும் ஒரு ஆங்கிலராதலின். செருப்புக்கடியின் துன்பத்தை செருப்பணிந்தவனன்றோ அறிவான் ? ஆங்கில நாட்டுத் தொடர்பை அறுத்தெறிய வேண்டுமென்பது இந்தியர்களின் எண்ணமுமன்று. அத்தொடர்பு இரு நாட்டிற்கும் நன்மை பயப்பதாயின் யாவரே வேண்டாமெனக் கூறுவர்? அத்தொடர்பால் நமது நாட்டின் நலத்திற்குக் கேடு விளைவதாயின் நாம் தனித்து நிற்கும் உரிமை நமக்கில்லையா? என்பதே கேள்வி. இக்கேள்விகளுக்குத் தக்க விடை இம்மசோதாவில் காணோம்.

நாட்டில் இன்னும் வேறு பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அவைகள் தொகையில் சுருங்கினவாகவும் செல்வாக்கில் குறைந்தன வாகவும் வெறும் பெயரளவிலேயே நின்று வருகின்றன. “கடப்பார் எவரே கடு வினையை” என்ற கொள்கையையுடைவர்கள். அதிகம் கேட்போம்; கொடுத்தால் அநுபவிப்போம்; சிறிது கொடுப்பினும் வந்தனம் கூறுவோம்; மேலும் மேலும் கேட்டுக் கொண்டேயிருத்தல் வேண்டும்; அதுதான் நமது கடமையென்ற சித்தாந்தமுடையவர்கள். இவர்கள்தான் நிஷ்காமியகர்ம யோகிகள் போலும்.

இதுதான் இந்தியாவின் அரசியல் உலகம்! இதுதான் நமது நாட்டின் அரசியல் நிலை!! இத்தகைய காட்சியை வேறெந்நாட்டு அரசியல் உலகினும் காண்பதரிது. இங்ஙனம் பலதிறப்பட்ட அரசியல் கொள்கைகளையுடைய கட்சிகளைக் கண்டு மக்கள் மனங்கலங்கி நிற்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. அடுத்த கட்டுரையில் காந்தியுலகைப் பற்றியும் மக்கள் கடைப்பிடித்தொழுக வேண்டிய அரசியல் நெறியைப் பற்றியும் ஆராய்ச்சி செய்வோம்.

**குடி அரசு – தலையங்கம் – 24.05.1925**



RangaRakes tamilnavarasam.com

# நமது அரசியல் நிலை III

காந்தியடிகள் இந்திய அரசியல் உலகில் தலையிடுவதற்கு முன்னர் மேனாட்டு அரசியல் முறைபற்றி நமது நாட்டில் அரசியல் கிளர்ச்சி நடைபெற்று வந்தது. மேனாட்டு அரசியல் நூல்களைக் கற்று அந்நாட்டு இராஜ தந்திரத்தில் மோகங்கொண்ட படித்த வகுப்பினர்களே நமது நாட்டின் அரசியல் துறையில் உழைத்து வந்தனர். ஆங்கில ஆட்சியில் நமது நாட்டின் பல வளங்களும் அழிந்து போயிற்று என்ற உண்மையை உணர்ந்தவர்கள் தாம். எனினும் நமது நாட்டின் விடுதலை ஆங்கிலர்களின் உள்ளங் கைக்குள் அடங்கிக்கிடக்கிறதென்ற கொள்கையுடையராய் உழைத்து வந்தனர். தன்னம்பிக்கையும், தன் கையே தனக்குதவி என்ற சீரிய எண்ணமும் இலராய் ஆங்கிலர்களின் புன்சிரிப்பிலேயே தவழ்ந்து தேச விடுதலை வேண்டி நின்றனர். சுயராஜ்யம் ஆங்கிலர் கொடுக்க நாம் பெற வேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்குள் மிக்கு இருந்தது. படித்த வகுப்பினர் ஆண்டுக்கு ஒரு முறை கூடும் கூட்டமே காங்கிரஸ் மகாசபையாக விளங்கி வந்தது. ஆங்கில அரசாங்கத்தாருக்கு "எமக்கு இன்ன குறை உளது, அதனை தயவு செய்து நீக்க வேண்டும்" என்று அடிமைக்குணம் அரும்பிய விண்ணப்பத் தீர்மானங்களும், வேண்டுகோள்களுமே காங்கிரஸ் மகாசபையில் செய்யப்பட்டுத் தாழ்மையுடன் அனுப்பப்பட்டு வந்தன. இந்திய அரசாங்க ஊழியம் இந்தியமயமாக்கப்படின் அதுவே தேசவிடுதலையெனக் கருதி உத்தியோகங்கள் பெறப் பாடுபட்டு வந்தன. படித்த வகுப்பினரே இந்திய மக்கள் என்றும், சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பட்டினங்களே இந்தியாவென்றும் கருதி அரசியல் துறையில் உழைத்து வந்தனர். ஆங்கிலர்களின் மனப்பான்மையை உள்ளபடி ஒருவரும் அறிந்தவர்களில்லை. அறிந்த ஒரு சிலரும் அதற்கேற்ப தக்க முறைகளை மக்களுக்குக் காட்டத் துணிந்து முன் வந்தார்களில்லை.

ஆங்கிலர்களின் உண்மையான மனப்பான்மையை உள்ளபடி அறிந்தவர் உத்தமர் காந்தியடிகளேயாவார். ஆங்கில ராஜதந்திரிகள் போன்ற நிபுணர்களை இவ்வுலகில் எங்கும் காண்டல் அரிது என்றும், அவர்களை அம்முறை கொண்டே வெல்லுதல் அரிது என்றும் இந்திய மக்களுக்கு எடுத்துக் காட்டினார். சுயராஜ்யம் வேண்டி ஆங்கிலர்களிடத்து அடிபணிந்து நிற்பது இழிவு என்றும், சுயராஜ்யம் என்பது ஒருவர் கொடுக்க ஒருவர் பெற்று அநுபவிக்கும் பொருள் அல்லவென்றும், தாமாகவே அடைந்த சுயராஜ்யமே நிலைத்து நிற்கும் என்றும் காந்தியடிகள் மக்களுக்கு எடுத்தோதினர்.



சுயநலமும் இலாபமும் கருதியே ஆங்கிலர்கள் இந்நாட்டில் அரசு செலுத்தி வருகின்றார்கள் ஆதலின் அவர்களாகவே மனமிரங்கி இந்தியாவிற்குச் சுயராஜ்யம் அளிப்பார்களென எதிர்பார்ப்பது பகற்கனவேயாகும். தற்கொலை செய்துகொள்ள விரும்பும் மனிதன் ஒருவனையேனும் இவ்வுலகில் காண்டல் அரிது. தமது நாட்டின் மக்கள் திரண்ட செல்வம் அடைந்து இன்பம் நுகர்வதற்குக் கருவியாக அமைந்திருக்கும் இந்தியாவை விட்டுச் செல்லவும் ஆங்கிலர் ஒருப்படுவரோ? ஆகையினால் அவர்பால் உதவியை எதிர்பார்ப்பது இந்தியரின் தன்மதிப்புக்கும் தன்னம்பிக்கைக்கும் பெரியதோர் குறைவு என்று இடித்துக் கூறினார். நூற்றைம்பது ஆண்டுகளாக இந்தியர்களை அடக்கி, ஒடுக்கி அடிமைக்குழியில் வீழ்த்தின இந்திய ஆங்கில அரசாங்கத்தோடு ஒத்துழையாமையைக் கைக்கொள்வதே சுயராஜ்யம் பெறும் வழியென ஓர்ந்து இந்திய மக்களுக்கு அரிய உபதேசம் செய்தனர். காங்கிரஸ் மகாசபை படித்த வகுப்பினர் கூட்டமாக விளங்காமல் உண்மையான இந்திய மக்களின் பிரதிநிதி சபையாகத் திகழல் வேண்டுமானால் இந்தியமக்கள் அனைவரும் அதில் சேர்ந்து கலந்து உழைத்தல் வேண்டுமென வழிகள் வகுத்தனர். தேசமும், தேச உரிமையும் இன்னதென்றறியாது கிணற்றுத் தவளையென வாளாக் கிடந்த இந்திய மக்களைத் தட்டி எழுப்பி தேச விடுதலையில் ஆர்வங்கொண்டு உழைக்கும்படிச் செய்தனர். இந்தியாவிற்கு சுயராஜ்யம் வேண்டுவது பல்லாயிரக்கணக்கான ஏழை இந்திய மக்கள் விடுதலை பெறவே என்ற உண்மையைக் கண்டு, இதுகாறும் இந்திய மக்களைப் புறக்கணித்து நடைபெற்றுவந்த இந்திய அரசியல் நெறியை மாற்றி படித்த வகுப்பினருக்கும் பாமர மக்களுக்கும் நெருங்கிய தொடர்பை உண்டாக்கி வைத்தனர். இந்தியா என்பது படித்த வகுப்பினரும் பட்டினங்களும் அல்ல; ஏழு லட்சம் கிராமங்களும் அங்கு வாழ்ந்து வரும் முப்பது கோடி மக்களுமேயாவார். சுயராஜ்யம் படித்த வகுப்பினர்க்கு மட்டுமல்ல; உத்தியோகங்களை இந்தியமயமாக்குவதும் சுயராஜ்யமாகாது, வறுமைக்கும், பிணிகளுக்கும், பஞ்சத்திற்கும் அகால மரணத்திற்கும் ஆளாகி எலும்பும் தோலுமாக அலைந்து திரியும் எண்ணற்ற கிராமவாசிகள் நந்நிலையடைந்து உண்ண உணவிற்கும் உடுக்கத் துணிக்கும் வாடி நிற்காமல் நிமிர்ந்த தலையினராய் ஏறுபோல் நடையினராய் வாழ்ந்து இன்பம் நுகரச் செய்வதே சுயராஜ்யமாகும். நமது கிராம வாழ்க்கை மீண்டும் பழைய நந்நிலைமை அடைந்தால் அல்லாது சுயராஜ்யம் பெறமுடியாது என்பது காந்தியடிகளின் முடிந்த கொள்கை. இவ்வாக்க வேலைக்கு இந்திய அரசாங்கம் உதவி புரியுமென எதிர்பார்த்தல் வீணே; கிராம வாழ்க்கையைக் குலைத்து, கிராமவாசிகளின் கைத்தொழிலைத் தொலைத்து, அதன்மேலேயே இவ்வரசாங்கம் கட்டப்பட்டிருக்கிறது என்ற உண்மையைக் காந்தியடிகள் கண்டார்.

இவைகளையெல்லாம் நன்றாய் ஆராய்ந்த பின்னரே தேசம் விடுதலை பெற வேண்டுமானால், சுயராஜ்யம் அடையவிரும்பினால் ஆக்க முறைகளையும் அழிவு முறைகளையும் இந்திய மக்கள் ஒருங்கே கைக்



RangaRakes
tamilnavarasam.com

கொண்டு உழைக்க வேண்டுமெனக் கூறினார். அப்பெரியாரின் கொள்கையைக் காங்கிரஸ் மகாசபையும் ஏற்றுக்கொண்டு ஒழுகியது. அழிவு முறை எனப்படுவது இந்நாட்டில் ஆங்கில அரசாங்கம் நடை பெறுவதற்கு உதவியாக இருப்பவைகளோடு மக்கள் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளாமல் ஒதுங்கி நிற்பது ஆகும். ஆக்க முறையாவது சுயராஜ்யத்தை நல்குவதான நிர்மாண வேலைகளை நிறைவேற்றி வைப்பது ஆகும். அரசாங்கத்தார் அளிக்கும் பட்டங்களையும் கௌரவப் பதவிகளையும் துறத்தல், சட்டசபைகளை விட்டு விலகல், அரசாங்க பாடசாலைகளையும் நீதிமன்றங்களையும் விலக்குதல் ஆகிய இவைகளே அழிவு முறைகளாம். இவ்வரசாங்கத்தாரின் அட்டூழியங்களினால் நசுக்கப்பட்டு இறந்துபோன குடிசைத் தொழிலாகிய இராட்டினத்தில் நூல் நூற்று கைத்தறியில் நெசவு செய்தல், உயிர்ப்பித்தல், இருபெரும் வகுப்பினராகிய இந்துக்களும், முஸ்லீம்களும் எவ்வித வேற்றுமையுமின்றி நட்புரிமை பூண்டு உடன் பிறந்தார்களைப்போல் ஒன்றி வாழ்தல், இந்து சமயத்தின் நற்பெயரைக் கெடுப்பதும், கேவலம் மனித உரிமையை மறுப்பதும் ஆகிய தீண்டாமை என்னும் கொடிய வழக்கத்தை ஒழித்தல் ஆகிய இவைகளே ஆக்க முறைகளாகும்.

பற்பல காரணங்களினால் காந்தியடிகள் கோலிய அழிவுமுறைகள் மக்களால் கைவிடப்பட்டு வருகின்றன. ஆக்கமுறைகளும்கூட புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. இவ்விரு முறைகளே இந்தியாவிற்கு சுயராஜ்யம் தரவல்லது; வேறு எம்முறையும் தராது என்பது உறுதி. ஆங்கிலர்களின் ராஜதந்திரத்தின்முன் நம்மவர் தந்திரம் ஒருக்காலும் தலைதூக்காது; காலத்திற்கேற்ற பேச்சும், வாக்குறுதியைக் காக்கும் குணமின்மையும், வஞ்சகமும், பொய்க்கோட்டையும் பொதிந்துகிடக்கும் ஆங்கில இராஜதந்திரத்தின் வலிமை பாவம்! ஏழை இந்தியர் அறியமுடியுமோ? சட்டசபை சென்றவர்களின் கதி என்னவாயிற்று? "பழைய கருப்பனே கருப்பன்" என்ற நிலைக்கு வந்து விட்டார்கள். ஆங்கில நாட்டுத் தொழிலாளர் கட்சியினரை எதிர்பார்த்து நின்றவர்களின் கதி என்ன ? ஏமாற்றமல்லாது வேறுண்டோ? இது காலை பர்க்கன் ஹெட்பிரபுவை எதிர்பார்த்து நிற்பவர்களின் கதி என்ன ? இந்தியாவைப் பாதுகாக்கும் திறமை இந்தியர்களுக்கில்லை யாதலின் ஆங்கிலர் ஆட்சி இன்றியமையாதது என்றும், மாண்டேகு சீர்திருத்தத்தை ஏற்று நடத்தினால் அல்லாது மேலும் சீர்திருத்தம் வழங்குவதைப்பற்றி ஆலோசிக்க இயலாதுஎன்றும் வாய் கூசாமல் பிதற்றித்திரிகின்றார், காந்தியடி களை உதறித் தள்ளி விட்டு மீண்டும் அடிமை குணத்திற்காளாகி ஆங்கிலர்களை எதிர்பார்க்கும் அறிவாளிகளின் கதி இந்நிலையுற்றதில் ஒரு சிறிதும் வியப்பு இல்லை. ஆகையினால் தமிழ் மக்களுக்கு நாம் அறிவிக்க வேண்டியதொன்றுண்டு. இவ்வழிவு முறைகளை மீண்டும் காங்கிரஸ் மகாசபை ஏற்று நடத்தும் வரையில் ஆக்க முறைகளைக் கைக்கொண்டு இடைவிடாது அல்லும் பகலும் உழைத்து வரல் வேண்டும். காங்கிரஸ் மகாசபை வேறு கட்சிகள் வயப்பட்டு விடுமாயினும் நாம் கவலையுறவேண்டுவதில்லை, அழிவு முறையில் நம்பிக்கையுள்ளோர் அதனை நடத்தியே வரல் வேண்டும். சட்டசபை செல்வோர் செல்க; பட்டங்களையும், பதவிகளையும், பெற்றுமகிழ்வோர் மகிழ்க; உயிரைக் கொல்லும் உடலைக்கொல்லும், அடிமைக் குழியில் வீழ்த்தும் மானிட இயந்திரங்களை உண்டாக்குவிக்கும் பள்ளிகளுக்குப் போவோர் போக; நீதிமன்றம் ஏறுவோர் ஏறுக; ஆங்கிலமாயைகளாகிய இவைகளினின்றும் விடுபட்டு நல்லுணர்வு பெற்று மீண்டும் காந்தியடிகளைச் சாண்புகும் வரையில் மற்றையோர் பொறுத்துக் கொண்டிருத்தல் கடன்; ஆக்க முறைகளை வெகு தீவிரமாக நடத்தி வருதல் வேண்டும்.

ஒத்துழையாமை இயக்கம் இறந்துபடவில்லை. ஒத்துழையாமை ஒடுக்கப்பட்டிருக்கிறதே ஒழிய இன்னும் அறவே ஒழிக்கப்படவில்லை. ஒத்துழையாமை நெறியை விட்டுவிடுவதாக எண்ணவேயில்லை என காந்தியடிகள் கூறுகின்றார். ஆக்க முறைகளை நடத்துங்கள், சுயராஜ்யம் பெறுவீர்கள் எனக் கதறுகிறார். உண்மை! உண்மை!! காந்தியடிகளைவிட வேறு துணை இந்திய மக்களுக்கு இல்லை என்பது உறுதி. மற்றத் தலைவர்கள் அரும் பாடுபட்டுச் சுயராஜ்யம் பெறுதலும் கூடும். அவர்களின் சுயராஜ்யம் இந்திய நாகரீகத்திற்கும், அறிவிற்கும், கலை வளர்ச்சிக்கும் ஏற்றதாக இராதென்பது திண்ணம். உண்மை இந்தியா இன்னதென உணர்ந்தவர் காந்தியடிகள் ஒருவரேயாவார்; மற்றையோர் மேனாட்டுக் கண்ணாடியால் இந்தியாவைப் பார்க்கின்றனர். இஃது தான் காந்தியடிகளின் முறைக்கும் , மற்றையோரின் முறைக்கும் உள்ள வேற்றுமை,

காந்தியடிகளின் ஆக்க முறையில், காங்கிரஸ்மகாசபை இதுகாலைத் தழுவிநிற்கும் ஆக்க முறையில் அரசியல் மணம் இல்லை? ஆதலின், அது சுயராஜ்யம் நல்காது என்று மிதவாத நண்பர்களும், பெஸண்டம்மைக் கூட்டத்தாரும், சுயராஜ்யக்கட்சியினருங்கூடக் கூறுகின்றார்கள். பர்க்கன் ஹெட்பிரபுவோடும் பாராளுமன்றத்தினரோடும் வறிதே வாதாடுவதும், கொஞ்சிக் கூத்தாடுவதும் தான் அரசியல் ஞாபகம் போலும்!

நாட்டின் செல்வ நிலையைப் பெருக்கும் தேச மக்களின் பொருள் வருவாயைப் பெருக்கும் வழி அரசியலின் பாற்படாதோ? ஆங்கில ஆட்சிக்கு ஆதார மாக இருக்கும் வியாபார பெருக்கைத் தொலைக்கும் முறை அரசியலின் பாற்படாதோ? குடியின்றேல் கோல் உண்டோ? நாட்டில் வாழும் மக்கள் நல் வாழ்வுபெற நாடும்வழி அரசியல் முறையாகாதோ? நாட்டிலுள்ள மக்கள் குடிக்கக்கஞ்சியும், உடுக்க கூறையும் இல்லாமல் நாசமுற்று ஒழிந்துபோய்விடின் சுயராஜ்யம் எற்றுக்கு? ஆங்கில ஆட்சியின் கொள்கைகளும் 'பிரித்தாளுதல்' என்ற கொள்கை முதன்மையானதல்லவோ? "பிரித்தாளும் கொள்கை"யை ஒழிக்க இந்து முஸ்லீம் ஒற்றுமையைப் பலப்படுத்தவும், உயர்வு தாழ்வு என்ற வேற்றுமையின் வேராக விளங்கும். தீண்டாமையை ஒழித்து மக்கள் ஒற்றுமையாக வாழவும் பாடுபடுதல் அரசியல் முறையின் பாற்பட்டதாகாதோ ? சுயராஜ்யம் எனின்


RangaRakes tamilnavarasam.com

இதுபோழ்து நடைபெறும் ஆட்சிமுறையைத் திருத்தியோ ஒழித்தோ மக்கள் பிறப்புரிமைகளைப் பெற்று எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமெய்தி வாழ்வதுதானே. இதுபோழ்து நடைபெறும் ஆட்சிமுறையின் அடிப்படைகளாக இருக்கும் நாட்டின் செல்வத்தை கொள்ளை கொள்ளும் வியாபாரம், பிரித்தாளுதல் ஆகியவை களை ஒழிக்கும் முறைகள் அரசியல் முறைகள் அல்லவெனின் பின் எதுதான் அரசியல் முறையோ? தமிழ்மக்களே! பட்ட வேட்டையிலும், பதவி மோகத் திலும் அமிழ்ந்து அலைந்து திரிவோர்களின் மயக்க வார்த்தைகளில் ஈடுபட்டு ஏமாந்து போகாதீர்கள். “கதர், இந்து - முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை ஒழித்தல் ஆகிய இம்மூன்றுமே சுயராஜ்யம் நல்கும். இதுவே எனது சித்தாந்தம்” எனக் காந்தியடிகள் கூறும் அரிய மொழிகளை ஆழ்ந்து ஆராய்ந்து உண்மையைக் கண்டு தேறி, காந்தியடிகள் வழிநின்று தேசவிடுதலைக்காக உழைப்பீர்களாக !.

**குடி அரசு - தலையங்கம் - 31.05.1925**



# ஈரோட்டில் நாடக வரி

கடந்த இரண்டு நாட்களிலும் ஈரோடு அதிகார வர்க்க உலகில் ஒரே பரபரப்பு. எல்லாம் ஓட்டமும் நடையுந்தான் ! மேலதிகாரி முதல் அடியிலுள்ள தோட்டி வரையிலும் வெயிலென்று பாராமலும், வியர்வை ஒழுகுவதைக் கவனியாமலும், ஓடித் திரிந்த வண்ணமாகவே இருந்தனர். ஈரோட்டில் இடிதான் விழுந்துவிட்டதோ? பெரும் புயல்காற்று கொடுமைகள் பல இழைத்ததோ? என்ன விபத்து நிகழ்ந்ததோ? என்று நேயர்கள் ஐயுற வேண்டும். நமது அதிகாரிகளின் மனப்பான்மையை அறிந்தோர் இங்ஙனம் நினையார். ஒரு நாடகக் கூட்டத்தார் எமது அதிகார தெய்வங்களை இவ்வளவு ஆட்டமும் ஆட்டிவைத்துவிட்டனர் ! நாடக புருஷர்கள் யாரென்று எண்ணுகிறீர்கள்? சென்னை செக்ரெடேரியட் ஊழியர்களே! இவ்வூர் நாடக சாலையில் நேற்றிரவு ‘புத்ரோத்ம ராமன்’ என்ற நாடகம் நடத்தினார்கள். மாப்பிள்ளைகளைப்போல் ஊருக்குத் திரும்பிப் போய்விட்டார்கள். மயிலாப்பூரில் நிருவப்பட்டிருக்கும் ‘இராமகிருஷ்ண மாணவர்’ இல்லத்திற்குப் பொருள் சேர்க்கவே இந்நாடகம் நடைபெற்றதாம் ! அநுமதிச்சீட்டு (டிக்கட்) ஒன்றின் ‘விலை’ ரூபா பத்துதான் !!

ஒரு நாடகக் கூட்டத்தாருக்குப் பொருள் சேர்க்கும் ‘ஏஜெண்டு’ களாக அதிகாரிகள் விளங்கின காட்சியை ஈரோட்டில் கண்டோம். சென்னை செக்ரெடேரியட் ஊழியர்களே, நாடக புருஷர்களாக வருவார்களாயின் ஸ்தல அதிகாரிகள் அவர்களுக்கென அநுமதிச்சீட்டு விற்றுக்கொடுக்கும் ‘ஏஜண்டு’ களாக இருப்பதில் குற்றமென்ன? இவர்களின் ஆதரவு இன்றேல் 600 அநுமதிச் சீட்டுகளுக்கு ரூபா 6000 சம்பதிப்பதெப்படி? நாடகக் கூட்டத்தார் சாதாரண மக்களா? சென்னை செக்ரெடேரியட் ஊழியர்கள் அன்றோ? இவர்கள் இட்ட பணியை ஸ்தல அதிகாரிகள் எவ்வாறு மறுப்பது? மறுக்க வேண்டிய அவசியம் தான் என்ன? அதிகாரிகளின் அடி வருடி வாழும் மணியக்காரர்களும், கர்ணங்களுமான கிராமதிகாரிகள் மலிந்து கிடக்கும் போது மேலதிகாரிகளுக்கு என்ன குறை? என்ன கவலை? தத்தம் கிராமங்களில் வாழும் குடிமக்களில் தனவந்தர்களைப் பிடித்து அவர்களின் விருப்பத்திற்கு விரோதமாக ‘மடியைப்பிடித்து மாங்காயைப் போட்டு மயிரைப்பிடித்து பணம் வாங்குவதற்கொப்ப’ சீட்டு ஒன்றுக்கு பத்துரூபா பகற்கொள்ளையடித்த செய்தியை அதிகாரிகள் அறிவரோ? அதிகாரிகள் விரும்பினால் நாடகத்திற்கும் ‘வரி’ விதிக்கலாம் போலும்!



RangaRakes
tamilnavarasam.com

மேலதிகாரிகளின் வெறுப்புக்கும், சீற்றத்திற்கும் ஆளாகாமல் இருக்க வேண்டுமென்ற அச்சத்தால், தம்மிடம் கொடுக்கப்பட்ட சீட்டுகளை பெற்றுக் கொள்வோர் இலாமையினால் கைப்பணம் இழந்த மணியக்காரர்களும் கர்ணங்களும் எத்தனை பேரோ? நாடக 'வரி'க்காக வைத்துக்கொள்ளும்படி கூறித் தங்கள் சம்பளப்பட்டியில் கையெழுத்துமட்டும் பொறித்துவிட்டு வெறுங்கையினராய் வீட்டுக்குத் திரும்பின கிராமதிகாரிகள் எத்தனை பேரோ? மேலதிகாரிகளில் எத்தனை பேர் பணம் கொடுத்து நாடகம் பார்த்தனர் என்று அறிய எமக்கு ஆவல் உண்டு.

ஈரோடு அதிகார வர்க்கப் பேய் எமது நகரசபையையும் விட்ட பாடில்லை. நகரசபையின் கீழ்த்தர சிப்பந்திகள் ஸ்தல அதிகாரிகளின் தலைக் கடையில்தான். ஊரிலுள்ள நாற்காலிகளும், விசுப் பலகைகளும் இந்நகர சபைச் சிப்பந்திகளின் தலைமேல்தான்! நகரசபையில் சுகாதார உத்தி யோகஸ்தர்களும் உளரோ என்ற ஐயம் எமக்கு அடிக்கடி நிகழ்வதுண்டு. இந்த ஐயத்தை நீக்கிய ஷை நாடகக்கூட்டத்தாருக்கு எமது பெரும் வந்தனம். ஊருக்கு வந்த விருந்தினர்களுக்காவது சுகாதார வசதிகள் செய்து கொடுத் தமைக்கு மகிழ்ச்சியடைகிறோம்.

புத்திர உத்தமனான ஸ்ரீ ராமபிரானின் புண்ணிய சரிதையால் இவ்வூர் அதிகாரிகள் கற்றுக்கொண்ட படிப்பினை அதிகார பலத்தாலும், செருக்காலும் குடிமக்களை வருத்தி நாடக 'வரி'யும் வசூலிக்கவேண்டுமென்பதுதான் போலும் !

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 31.05.1925**



# திருச்சி தீர்மானம்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி திருச்சியில் கூடிச்செய்த 'பிறப்பினால் மனிதர்களில் உயர்வு தாழ்வு பாராட்டக்கூடாது' என்ற *தீர்மானத்தைப் பற்றியும் அதைக் குறித்துச் சிலர் செய்த ராஜீனாமாவைப்பற்றியும், "நவசக்தி" பத்திரிகையில் மேற்படி தீர்மானத்தைப்பற்றி எழுதியிருந்த தலையங்கத் தைப்பற்றியும், இவ்வாரம் நமது பத்திரிகையில் வெளியிடவேண்டி **எச்சரிக்கை** என்ற தலைப்பின் கீழ் ஓர் குறிப்பு எழுதிவைத்திருந்தோம். ஆனால், நேற்று பத்திரிகைகளில் டாக்டர் வரதராஜுலு நாயுடு கல்கத்தா வினின்றும் அனுப்பிய தந்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதில் சமூகவாழ் விலும், குருகுலத்திலும் (மனிதர்கள் தங்களுக்குள்) பிறப்பினால் வித்தியாசம் பாராட்டக்கூடாது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் நிறைவேற்றிய தீர் மானத்தையும், அதன்மேல் ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியார் எழுப்பிய ஆட்சேபனைகளையும் காந்தியடிகள் நன்கு பார்த்து அத்தீர்மானம் ஒழுங்கா னதுதானென்றும் அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அக்கமிட்டி அதிகாரமுள்ள தென்றும் சொல்லியதாகக் கண்டிருக்கிறது. இதைவிட நமது குறிப்பு இவர்களின் மனமாற்றத்திற்கு அதிக உதவிசெய்யாதெனக் கருதி நமது குறிப்பை நிறுத்திக் கொண்டோம்.

**குடி அரசு - குறிப்புரை - 31.05.1925**

*** திருச்சியில் 29.1.25 ல கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானம்**

இந்திய சமூக வாழ்க்கையில் பிறப்பினால் எவருக்கும் ஏற்ற தாழ்வு ஏற்படுத்தக் கூடாதென்றும் இக்கொள்கையை தேசீய இயக்கத்தில் ஈடு பட்ட ஸ்தாபனங்கள் அவசியம் அனுஷ்டிக்க வேண்டுமென்றும் தீர்மானிக் கப் பட்டது. இக்கொள்கையை சேரன்மாதேவி குருகுலத்தில் அனுஷ்டானத் தில் கொண்டுவரவேண்டிய முயற்சிகளைச் செய்ய கீழ்கண்ட சப் கமிட்டியை இக்கமிட்டியார் ஏற்படுத்துகிறார்கள்,

ஸ்ரீமான்கள் ஈ.வெ.ராமசாமி நாயக்கர், ஈரோடு.
எஸ். ராமநாதன், மாயவரம்.
அ. வெ. தியாகராஜா, தேவகோட்டை

**குடி அரசு - 17.05.1925 - பக்கம்.11**



RangaRakes tamilnavarasam.com

# காரைக்குடி ஜில்லா முதலாவது அரசியல் மகாநாடு

சகோதரிகளே ! சகோதரர்களே !

காரைக்குடி ஜில்லா முதலாவது ராஜீய மகாநாட்டுக்கு அக்கிராசனம் வகிக்கும் கவுரவத்தை எனக்களித்ததற்கு உங்களுக்கு நான் மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறேன். அல்லாமலும் இந்த தனவைசிய நாட்டில் நடந்த - அதாவது பள்ளத்தூர் மகாநாட்டுக்கும், தேவகோட்டையில் நடந்த திருவாடானை தாலுகா மகாநாட்டிற்கும் அக்கிராசனம் வகிக்கும் கவுரவங்களையும் எனக்கே அளித்திருந்து, மறுபடியும் நடக்கும் இந்த மகாநாட்டு அக்கிராசன கவுரவத்தையும் எனக்கே அளித்திருப்பதைக் கொண்டு என்னிடம் தங்களுக்கு இருக்கும் அன்பைப்பற்றி நான் பெருமை பாராட்டிக் கொள்ளாமலிருக்க முடியவில்லை.

தேசத்தில் ஒற்றுமைக் கெட்டு, ஊக்கம் குன்றி, விடுதலை மறந்து, சுயநலம் மேலிட்டு தலைவிரித்தாடும் இந்தச் சந்தர்ப்பங்களில் மகாநாடுகள் நடத்துவது மிகவும் கஷ்டமான காரியம். அதிலும் செல்வந்தர்களும், கஷ்டமென்பதே இன்னதென்றறியக்கூடாத சீமான்களும் நிறைந்துள்ள இப்பேர்ப்பட்ட குபேர பட்டணங்களில் மகாநாடுகள் நடத்த நண்பர்கள் ஏற்படுவதும், அப்படி ஏதாவது ஒன்று இரண்டு தேசபக்தர்கள் நடத்தினாலும் பொதுஜனங்கள் அதில் கலந்து மகாநாட்டைப் பலனுண்டாக்கும்படி யாக்குவதும் மிகவும் துர்லபம்; அப்படியிருந்தும் இம்மகாநாடு இவ்வளவு சிறப்பாக நடக்கிறதோடு இவ்வளவு மகாஜனங்கள் வந்திருப்பதையும் பார்த்தால் யாரும் பாராட்டாமலிருக்க முடியாது.

கனவான்களே !

காங்கிரஸ் என்ற அரசியல் அமைப்பானது நமது நாட்டில் வெகு காலமாக நம்மனோர் சம்பந்தப்படுவதற்கில்லாததாய், படித்த வகுப்பார் என்று சொல்லப்படுகிற வக்கீல்கள் முதலிய கூட்டத்தாருக்கு உரியதாய் இருந்து, அவர்களுக்கே பலனைக் கொடுத்துக் கொண்டு வந்தது. அவர்களோடு நில்லாமல் நாட்டின் இரத்தத்தையும் உரிஞ்சிக் கொண்டே வந்தது. ஏதோ நம் பாக்கிய வசத்தால் மகாத்மா காந்தி அரசியல் விஷயங்களில் தலையிட ஆரம்பித்தன் பலனாய் அரசியல் விஷயம் இந்திய மக்கள் யாவருக்கும்



பொதுவாய் எல்லோருக்கும் விளங்கவும், எல்லோரும் பங்கெடுத்துக் கொள்ளவும், எல்லோரும் பலனடையக் கூடியதாயுமாகிவிட்டது. அதன் பலனாகத்தான் நீங்களும் நானும் இன்று இங்கு கூடியிருக்கிறோம்.

அரசியல் விஷயத்தைப்பற்றி உங்களுக்கு நான் இப்பொழுது அதிகமாய் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை என்றே நினைக்கிறேன். நாம் செய்யவேண்டிய அரசியல் திட்டங்களும் வெகு சுலபமானதும், யாவருக்கும் புரியக்கூடியதும், யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதும், எவரும் கஷ்டமின்றி எளிதில் செய்யக்கூடியதும், பெரும்பாலும் எதிர்வாதமற்றதுமானவைகள். அதாவது ஒற்றுமை - கதர் - தீண்டாமை - மதுவிலக்கு முதலியவைகளே. இவற்றைப்பற்றி உபசரணைக் கமிட்டியாரால் தயாரிக்கப்பட்டிருக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின், என்னுடைய அபிப்பிராயத்தை முடிவுரையில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்று இவ்வூரில் நடக்கப்போகும் உற்சவத்திற்கு நீங்கள் போக ஆசை கொண்டிருப்பீர்கள் ஆனதால் இத்துடன் மகாநாட்டின் இன்றைய நடவடிக்கைகளை முடித்துவிடுகிறேன்.

நாளை காலை 8 மணிக்கு மகாநாடு மறுபடியும் கூடும். ஸ்ரீமான் எஸ்.ராமநாதன் அவர்கள் கதர் காட்சியைத் திறந்து வைப்பார். அது முடிந்தவுடன் ஸ்ரீமான் சென்னை சுரேந்திரநாத் ஆரியா அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் தொண்டர் மகாநாடு நடக்கும். அது முடிந்தவுடன் மகாநாட்டுத் தீர்மானங்கள் உங்கள் அங்கீகாரத்திற்கு வரும். கோவை ஸ்ரீமதி மீனாட்சியம்மாள் அவர்கள் பெண்கள் கடமையைப் பற்றி பேசுவார்கள். இன்று இரவும் நாளை இரவும் நாகை ஸ்ரீமான் ராஜாராம் பாகவதர் அவர்களால் 'மகாத்மா காந்தி' காலக்ஷேபம் நடக்கும். கனவான்கள் இதுபோலவே வந்து இருந்து எல்லா விஷயங்களையும் கேட்டு மகாநாடு சிறப்பாய் நடப்பதற்கு எனக்கு வேண்டிய உதவி புரியுமாறு கேட்டுக்கொண்டு இப்பொழுது இக்கூட்டத்தைக் கலைக்கிறேன்.

குறிப்பு:- *23,24.05.1925 இரண்டு நாள்கள் பள்ளத்தூரில் நடைபெற்ற காரைக்குடி மாவட்ட முதலாவது அரசியல் மாநாடு - தலைமையுரை*

*( தொடர்ச்சி குடி அரசு 07.06.1925 )*

**குடி அரசு - சொற்பொழிவு - 31. 05 .1925**



RangaRakes tamilnavarasam.com

# இந்துக்களின் கொடிய வழக்கம்

இம்மாதம் வெளியான 'மாடர்ன் ரிவ்யு' எனும் மாதச் சஞ்சிகையில் கோரமான ஒரு பெண் கொலையைப் பற்றிக் கீழ்காணும் விவரங்கள் காணப் படுகின்றன. அவை வருமாறு ;–

"பத்துவயதுள்ள லீலாவதியெனும் பெயருள்ள தனது மனைவியைக் கொன்றதாக ஜோகேந்திரநாத்கான் என்பவன் குற்றஞ்சாட்டப்பட்டு நீதிபதி பேஜ் என்பவரால் மரணதண்டனை விதிக்கப்பட்டான்.

இப்பெண்ணின் பெற்றோர் கல்கத்தாவிலுள்ள சங்கரிதோலா சந்தில் மிட்டாய்க்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார்கள். இப்பெண் ணுக்கும், ஜோகேந்திரநாத் கானுக்கும் இரண்டாண்டுகளுக்கு முன்னர் மணம் நடந்தது. பெண், பெற்றோர் வீட்டிலேயே இருந்துவந்தாள். மனைவியைத் தன்னூருக்கு அழைத்துச்செல்லக் கணவன் சென்ற பிப்ரவரி மீ 9 உ மாமனார் வீட்டுக்கு வந்தான். அடுத்த ஐந்து நாட்களும் சுபதினமல்லவென்று கூறி சின்னாட் கழித்து மனைவியை அழைத்துச் செல்லும்படி பெண்ணின் பெற்றோர் விரும்பினார்கள். அதற்கிசைந்து அவன் மாமனார் வீட்டிலேயே தங்கியிருந்தான். முதல் இரண்டுநாள் இரவிலும் புருஷனும் மனைவியும் ஒரே அறையில் படுக்கை கொண்டனர். மூன்றாம் நாளிரவு, புருஷனுடன் ஒரே அறையில் உறங்கப் பெண் மறுத்து தாயாருடன் படுக்கை கொண்டாள். பிப்ரவரி மீ 12 உ இரவு வெற்றிலை பாக்கு வேண்டுமென ஜோகேந்திரன் கேட்க, அவைகளைக் கொடுத்துவரும்படி தாயார் மகளை அனுப்பினாள். பெண் அறைக்குள் சென்றதும் கணவன் கதவைத் தாளிட்டுக்கொண்டான். சற்றுநேரம் பொறுத்து பெண்ணின் அழு குரலையும், வரிசையாக அடிகள் விழும் சத்தத்தையும் பெண்ணின் தாயாரும், பக்கத்திலுள்ளவர்களும் கேட்டனர். தாயார் அறைக்குள் ஓடிப் பார்க்க இரத்த வெள்ளத்தில் தன்மகள் தரைமேல் முகம் கவிழ்ந்து கிடப்பதைக் கண்ணுற்றனள். இரத்தம் தோய்ந்த கல் குழவியொன்று பக்கத்தில் கிடந்தது. இக்குழவியால் மண்டை உடைக்கப்பட்டு மூளை தெறித்துக் கிடந்தது".

ஆ! கொடுமை! கொடுமை!! இக்கோரமான கொலையை, பாதகச் செயலைக் கேள்வியுற்ற இந்தியமக்கள் அனைவரும் மனம் பதை பதைப்பர்; உள்ளமுருகுவர்; உடலம் நைவர்; கண்ணீரை ஆறாய்ப் பெருக்குவர்; கரைகாணாத் துன்பக்கடலில் வீழ்வர்; இளஞ்செல்வச் சிறுமியர்களாக





இருப்பின், நெருப்பில் வீழ்ந்த புழுப்போல் துடிதுடிப்பர். பெண்மக்கள் எனுஞ் செல்வம் படைத்த தாயரும், தந்தையரும் மனங்கலங்கி, மாழாந்து, வெய்துயிர்த்து நிற்பர்; விம்மி, விம்மி அழுவர். இக்கொலைக் கொடியோ னுக்கு விதித்த தண்டனை போதாது, போதாது என ஒவ்வொருவரின் உள்ளமும் அறைகூவா நிற்கும். இக்கொலைப் பாதகனைச் சித்திரவதை செய்தலே சிறந்த தண்டனையென ஒவ்வொருவரும் எண்ணுவர்.

இக்கொடிய நிகழ்ச்சி எமதுள்ளத்தில் தோற்றுவித்த எண்ணங்களை யெல்லாம் எடுத்துரைக்கப் புகின் இவ்வேடு முழுவதும் போதாதென்றே கூறுவோம். இக்கொடுஞ் செயலை எண்ணி, எண்ணி அழுவதாற் பயனென்ன? உள்ளமுருகுவதால் பயனென்னை? கொலைப்பாதகன் ஜோகேந்திரநாத் கானைக் கடிந்து நோவதாற் பயனென்ன? இத்தகைய கொடியசெயல்கள் நிகழ்வதற்குக் காரணமென்னவென ஆராய்ந்து இனியும் அவ்வாறு நிகழாவண்ணம் ஏற்ற முறைகளைக் கையாள முற்படுவதே அறிவுடைமையாகும். கடந்த செயலைக் கருதி மனம் புழுங்குவதால் ஒரு பயனும் விளையாது. இத்தகைய செயல்களின் விளைவுக்குக் காரணமாக உள்ள இழிதகைமையை, கொடிய வழக்கங்களை ஒழிக்க வழி கோலுதல் அறிவாளிகளின் கடன்; தாய், தந்தையரின் கடன் ; சமூகத்தினரின் கடனாம்.

இக்கோரமான கொலைச் செயல்களுக்குக் காரணமாக இருப்பது பால் மணம் மாறாச் சிறுமியர்களை காமவிகாரத்தாற் கட்டுண்டு விலங்குகளைப் போல் திமிர் கொண்டலையும் இளம் வாலிபர்களுக்கு வதுவை செய்து அவர் பால் ஒப்புவிக்கும் கொடிய, குற்றமான வழக்கமென்று நாம் திண்ணமாகக் கூறு வோம். இத்தகைய கொடிய, அக்கிரமமான வழக்கம் இந்து சமயத்தின் பேரால் நடைபெறுவது நமக்குப் பேரவமானம்; நமது சமயத்தின் நற்பெயரை நாசமாக்கி, நாமும் அழிவென்னும் பெருங்குழியில் வீழ்ந்து இறப்போம். உண்பதும், உறங்குவதும், பூண்டதும், மணவினைசெய்வதும், மக்கள் பெறுதலும் சமயக் கோட்பாடுகள் எனக் கூறின் இதனினும் அறியாமை வேறுளதோ? ஆண்டவனிடத்து மக்களைக்கொண்டு உய்விக்கும் அறிவு வழியே, ஆன்ம நெறியே சமயமல்லாது, சமூகக் கட்டுப்பாடு குலையாமல், சமூகம் என்றும் அழிவுறாமல் நின்று நிலவுதற்கான முறைகளில் சேர்க்கப் படுவனவாகிய இவையெல்லாம் சமயநெறி எனக்கூறுதல் மடமையேயாகும். நமது நாட்டின்கண் தோன்றிய அறநூல்கள் எல்லாம் ஒரு சிறிது ஆண்ட வனைப் பற்றியும், அவனை அடையும் நெறியைப் பற்றியும் கூறிப் பெரும் பாலும் சமூக வாழ்க்கையை மக்கள் இன்னவிதமாக நடத்துதல் வேண்டு மெனக் கூறா நிற்பன; அவ்வற நூல்களில் காணும் சமூக வாழ்க்கையைப் பற்றிய விதிகள், காலம், இடம், மக்களின் மனப்பான்மை இவற்றிற்கேற்ப மாறி மாறி இருக்கும். அவ்விதிகள் இவ்விந்திய நாட்டிலேயே ஒரே பெற்றத்தாய் இருக்கக் காண்கிறோமல்லோம். அவ்விதிகளை காலத்திற்குத் தக்கவாறும், இடத்திற்கேற்றவாறும் மாற்றியமைத்துக் கொள்ளுதல் கூடாதென்று நியதி

RangaRakes tamilnavarasam.com

இல்லை. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகை யினானேன்" என ஆன்றோர் கூறியுள்ளார். மக்கள் செய்யும் மணவினை சமூக வாழ்க்கையைச் சார்ந்தே நடைபெறுவதாகும். குடும்ப வாழ்க்கையை நடத்துவதற்குத் தகுதியற்றப் பருவத்தில் உள்ள சிறுமியர்களை மணம் என்னும் கயிற்றினால் பிணித்து, குடும்பம் என்னும் குழியில் வீழ்த்தி கணவன் என்னும் விலங்கனைய காவலாளி கையில் ஒப்புவிக்கும்படி எந்த அறநூலும், எந்த தர்மசாஸ்திரமும் போதிக்கவில்லை என்பதை மக்கள் உணரல் வேண்டும். மணவினை நிகழுங் காலத்தில் ஓதப்பெறும் மந்திரங்களே எமது கூற்றின் உண்மையை உள்ளங்கை நெல்லியென விளக்கிக்காட்டும். ஒன்றுமறியாத, விளையாட்டு விருப்பம் அசலாத பத்து வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுமியர்களுக்கு மணமுடிக்கவேண்டுமெனச் சாஸ்திரங்கள் கூறுகிறதெனக் கூறுபவர்கள் விரிந்த கல்வியும், பரந்த அறிவும், மக்கள் மேம்பாடுறுவதில் பெருங்கவலையும் உடையராயிருந்த நமது முன்னோர்களின் மீது பெரும் பழிசுமத்துபவர்களாவார்கள். இக்கொடிய விதிகள் எல்லாம் பிற்காலத்தவரால் சுயநலங்கருதியும், பொருளாசை கொண்டும் எழுதி வைக்கப்பட்டனவேயாம். இளஞ்சிறுமியர்களுக்கு மணஞ் செய்யாவிடில் பெற்றோர் எரிவாய் நரகிடை வீழ்வர் என யாரோ சில மானிடப் பதர்கள் கூறியதை வேதவாக்காகக் கொண்டு நம்மவர் அறிவிழந்து, கண்மூடி, வைதிகம், வைதிகம் என்று வாயாற் பிதற்றி "கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுப்பது" போல் தமதருமைச் செல்வச் சிறுமியர்களை படுகுழியில் தள்ளி, சமூக நாசத்தையும், நாட்டின் அழிவையும் தேடும் பாதகச்செயலை விடக் கொடுமையான செயல் வேறுண்டோ? இக் கொடுஞ்செயலினும், ஜோகேந்திரன் கொலை கொடிதோ? பால் மணம் மாறாக் குழந்தைப் பருவமுள்ள, கணவன் இன்னானென அறிந்து கொள்ளவும் முடியாத புருடபாரியர் இயல்பு இத்தன்மைத்து என்றறிந்து கொள்ள இயலாத காமஞ்சாலா இளமையுடையளாய் கணவனுடன் உடலின்பம் நுகரும் பருவமும், ஆற்றலும் பெற்றிலாத மக்களைப் பெறுதற்குப் போதிய உடல் உரமும், உறுப்புக்களின் வளர்ச்சியும் படைத்திராத நம தருமைப் பெண்மணிகளுக்கு, பொம்மைக் கல்யாணம் செய்வது போன்று மணமுடித்து, மணமகன் பால் விடுத்து வைக்கும் கொடிய வழக்கத்தை நமது நாட்டு மக்கள் கைக் கொண்டிருக்குமட்டும். இத்தகைய கொடிய, கோரமான கொலைகள் நடைபெற்றுத்தான் வருமென்பதை நமது மக்கள் உணரல் வேண்டும். 'சமயம் அழியும், சமூகம் அழியும்' என்ற மூடக் கொள்கை களினால் கட்டுப்பட்டு மக்கள் அறியாமை என்னும் இருளில் கிடந்துழலும் வரையில் இத்தகைய கொலைகள் நிகழ்ந்து தான் வரும். அந்தோ! இந்திய மக்களே! உமது நிலைக்கு இரங்குகின்றோம். சமய உண்மையை உணரார்கள்; சமூக வாழ்க்கை நிலையை அறியார்கள். மூடக்கொள்கைகளும், மூட நம்பிக்கையும் தான் இவர்கள் கண்ட உண்மைகள். "விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழுவது" போல், எல்லாமறிந்திருந்தும் இளஞ் சிறுமியர் களுக்கு மணஞ்செய்து, பின்னர் அவர்களுக்கு நேரும் கதியைக் கண்டு ஏன்



அழுகிறீர்கள்? மாய்ம்மாலக் கண்ணீர் விடுகிறார்களென உலகம் உங்களைப் பழித்துரைக்காதா? இளம்வயதில் மண முடிப்பதினால் நேரும் துன்பங்களை நேரில் தாமாகவே அநுபவித்திருந்தும், தாய்மார்கள் இக்கொடிய வழக்கத்தை அறவே ஒழிக்க முன்வராதிருப்பது பெருங் குற்றமாகும். 'வேலியே பயிரை மேய்ந்தால்' வேறு யார் துணை பயிருக்கு! பத்துமாதம் சுமந்து, பெற்று, சீராட்டித் தாலாட்டிப் பொன்னேபோல் போற்றி வளர்த்த பெண் செல்வங் களுக்குத் தாய்மார்களே எமனாக ஏற்பட்டுவிட்டால் அவரைக் காப் பாற்றுபவர் யாவர்?

ஆண்மக்கள்தான் உயர்ந்தவர்கள்; பெண்மக்கள் தாழ்ந்தவர்கள் ; ஆண்மக்கள் தான் அறிவு நிறைந்தவர்; பெண்மக்கள் அறிவில்லாதவர் என்ற கீழான எண்ணமும் இக்கொடுஞ் செயல்களுக்குக் காரணமாகும். இந்தத் தாழ்ந்த எண்ணம் நம்மவர்களை விட்டு அகலல்வேண்டும்; ஆண்மக்களும், பெண்மக்களும் 'சரி நிகர், ஸமானம்' என்ற எண்ணம் வளர்தல் வேண்டும். ஆண்மக்களைவிடப் பெண்மக்கள் எவ்வகையிலும் தாழ்ந்தவர்கள் அல்லர்; சமூக வாழ்க்கையில், குடும்ப வாழ்க்கையில் ஆண்மக்களுக்கு உள்ள உரிமைகள், பொறுப்புகள் பெண்மக்களுக்கும் உண்டு என்ற உயரிய, பரந்த, விரிந்த நோக்கம் நம்மவரிடை உதயமாதல் வேண்டும். அன்றே, அப் பொழுதே, அக்கணமே இத்தகைய கோரமான, மனதைப் பிளக்கும் கொடிய கொலைகள் நிகழா வண்ணம் செய்துவிடலாம். தமிழ்நாட்டுத் தாய்மார்களே! தந்தைகளே!! உங்களுடைய பொறுப்பை உணர்ந்து நடவுங்கள். வங்காளத் தில்தான் இக்கொலையென்று நினையாதீர்கள். நமது கண்முன் நாடோறும் நடைபெறும் கொலைகளும், சித்திரவதைகளும் உங்களுக்குத் தோன்ற வில்லையா? இக்கொடிய வழக்கத்தை ஒழிக்க முற்படா விடில் பல்லா யிரக்கணக்கான இளஞ்சிறுமியர்களின் சாபங்கள் உங்களைச் சூழ்ந்து கொடிய வேதனைக்குள்ளாவீர்கள்! அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் செல்வத் தைத் தேய்க்கும் படை, என்பதை உணருங்கள்.

இக்கொடிய வழக்கத்தைத் தொலைக்க அந்நிய ஆங்கில அரசாங் கத்தார் துணை புரியார்கள். நிச்சயம், இஃது அவருக்கு நன்மையையும், வரு வாயையும் கொடுக்காதல்லவா? சமயம், சமயம் என்று வறிதே கூக்குரலிட்டு ஏமாற்றித் திரியும் அர்த்தமில்லா வைதிகர்களாகிய திரு. டி. அரங்காச் சாரியார்கள் போன்ற சட்டசபை அங்கத்தினர்களின் உதவியை நாடாதீர்கள்! தெய்வத் திருக் கோயில்களில் தேவதாசிகள் இருந்தே ஆகவேண்டுமென்று வாய் கூசாது சட்ட சபையில் கூறும் படிற்றொழுக்கமுடைய அங்கத்தவர் களை எதிர்பார்த்து ஏமாறாதீர்கள்! இது உங்கள் கடமையல்லவா? நீங்களே சீர்திருத்தஞ் செய்து கொள்ளுங்கள்! நீங்கள் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் நமது நாடு சுய ஆட்சி பெற்று நடக்கும் காலையில் இக்கொடிய வழக்கங்கள் புதைக்கப்படும் என்பதை உணர்ந்து நடந்து கொள்ளுங்கள்.

**குடி அரசு – தலையங்கம் – 07.06.1925**



RangaRakes tamilnavarasam.com

# காரைக்குடி ஜில்லா முதலாவது அரசியல் மகாநாடு

சகோதரர்களே !

நமது மகாநாடானது இவ்விரண்டு நாளாக அதிக உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் நடைபெற்று முடிவுக்குக் கொண்டுவர நீங்கள் செய்த உதவிக்கு நான் உங்களுக்கு மிகவும் வந்தனம் செலுத்துகிறேன். இனி என்னுடைய முடிவுரையை மிக ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ஆவலைத் திருப்தி செய்யத்தகுந்ததாக யான் விசேஷமாக ஒன்றும் சொல்லப் போவதில்லை. இன்று முடிவு பெற்ற தீர்மானங்களைப் பற்றியே சில வார்த்தைகள் சொல்லி இக்கூட்டத்தைக் கலைப்பதற்கு நீங்கள் எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும்.

முதலாவது தீர்மானம் நமது பெரியார் சென்னை ஸ்ரீமான் பி.தியாக ராயரின் மரணத்திற்கு அனுதாபம் காட்டிச் செய்த தீர்மானமாகும். அதைப் பற்றி உங்களுக்கு அதிகமாய் யான் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. அவருடைய தன்னலத் தியாகத்தையும், அவர் தமது சமூகத்திற்காகச் செய்த தொண்டையும் போற்றாதாரில்லை. அவருடைய ராஜீய அபிப்பிராயங்களில் நமக்கும் அவருக்கும் வடகோடி தென்கோடி யென வித்தியாசமிருந்த போதிலும், வரவர அவர்களும் சுயராஜ்யம் அவசியமென்றும், சீக்கிரத்தில் வேண்டுமென்கிற நிலைமையில் வந்துவிட்டார்கள். நாமும் சுயராஜ்யம் பெறுவதற்கு இன்ன இன்ன வேலைகள் செய்தாக வேண்டுமென்று கண்டு பிடித்து விட்டோம். ஆனால், அதை அடைகிற வழியில் மாத்திரம்தான் இருவருக்கும் வித்தியாசம் இருக்கிறது. இவ்வித்தியாசங்கள் ராஜீயத் துறையிலுள்ள ஒவ்வொரு கட்சிக்கும் இருந்து கொண்டேதானிருக்கும். சமூக விஷயத்தில் அவருடைய உழைப்பினால் பிராமணரல்லாதார் எவ்வளவோ முன்னுக்கு வந்திருக்கிறார்களென்பதை மறுக்க முடியாது. பிராமணரல்லாதாரின் சுயமரியாதைக் கதவைத் திறந்துவிட்டவர் அவர்தான். அப்பேர்ப் பட்டவருக்காக நாம் அனுதாபப்படுவது நமது கடமையேயாகும்.

இரண்டாவது தீர்மானம் மகாத்மாவிடம் அன்பு செலுத்துவது என்பதே. மகாத்மா அவர்கள் பிறந்து உயிரோடிருக்கிற இந்தக்காலத்தில் நாமிருந்தோம் என்கிற பெருமையே நமக்குப் பெரிய சொத்தாகும். நம் பின் சந்ததியார்கள் மகாத்மாவை நேரில் கண்ட நமது பெருமையைப் பற்றிப்



பேசிப் பெருமையடைவார்கள். இப்பெரியார் வேறு தேசத்தில் பிறந்திருப் பாராயின் அத்தேசம் எவ்வளவோ முன்னுக்கு வந்திருக்கும். அவர் நமது ராஜீயத் தலைவர் மாத்திரமல்ல, உலகத்திற்கே அவர் ஒரு பெரியவர். அவரைப் பூஜிக்கிறோம், புகழ்கிறோம், அவர் பெயரால் பெருமை பாராட்டிக் கொள்கிறோம். அவர் சொல்லுகிற வேலையை நாம் செய்வதில்லை. ஆனால் நமது சுயநலத்திற்கு அவருடைய பெயரை உபயோகப்படுத்துகிறோம். சட்ட சபைகளுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் அவர் பெயரைச் சொல்லிக் கொண்டு நுழையப் பார்க்கின்றோமே தவிர தியாகம் என்று சொன்னால் ஓடி விடுகின்றோம். அவருடைய நிர்மாண திட்டமென்பது தேசத்தின் முன்னேற் றத்திற்கான வேலைகள். அவருடைய அழிவு வேலையென்பது தேசத்திற்குக் கெடுதி தரும் காரியங்களை அழித்தல். இதை நன்றாய் அறிந்திருந்தும் ஆற்றலில்லாத காரணத்தாலும், சுயநலத்தாலும் அலட்சிய மாயிருக்கிறோம். மஹாராஷ்டிர தேசத்தில் மகாத்மாவைக் காங்கிரஸை விட்டு வெளியில் போகும்படி சொல்லுவதும், நூலையும் கதரையும் அவர்கள் அலட்சியம் செய்வதும் அத்தேசத்தில் உள்ள பிராமணர் – பிராமணரல்லாதார் சண்டை தான். எப்படியிருந்த போதிலும் மகாத்மாவின் கொள்கைகளால்தான் நமக்குச் சுயராஜ்யம் கிடைக்கப் போகின்றது. அன்னார் நீடித்திருக்க கடவுள் அனுக்கிரகம் செய்யப் பிரார்த்திப்பது நமது முக்கிய கடமை.

மூன்றாவது நூல் சந்தாவைப் பற்றியது. ஒவ்வொருவரும் நூல் நூற்க வேண்டு மென்று மகாத்மா சொல்வதின் தாத்பர்யம் ஒவ்வொருவரும் கைத் தொழில் செய்யவேண்டுமென்பது தான். உலகமே தொழிலாளிகளுடையது தான். காங்கிரஸ் தொழிலாளிகளுடையதாகத்தான் இருக்க வேண்டும். இவ்வளவு நாள் காங்கிரஸ் பணக்காரர்களுடையதாகவும், ஆங்கிலம் படித்தவர்களுடையதாகவும் இருந்தது. மகாத்மா சொல்லும் சுயராஜ்யம் தொழிலாளிகளுக்குத்தான் வேண்டுமே தவிர ஆங்கிலம் படித்தவருக்கும், பணக்காரர்களுக்கும் அல்ல. அதனால்தான் பேச்சும் பணமும் காங்கிரஸிற்குக்குத் தேவையில்லையென்று சொல்லிவிட்டார். காங்கிரஸில் சேர இஷ்டப்படுகிற ஒவ்வொருவரும் குறைந்தது அரைமணி நேரமாவது தொழில் செய்ய வேண்டு மென்பது அவருடைய விருப்பம். படித்தவர்களும், பணக்காரர்களும் தொழிலாளிகள் அல்லவானாலும், தங்களுக்குத் தொழிலாளிகளிடத்தில் அன்பு இருக்கின்ற தென்பதைக் காட்டிக் கொள்ளவாகிலும் இதைச் செய்ய வேண்டுவது அவசியமென்று கருதுகிறார். அநேக தொழில்களில் நூல் நூற்பது தற்காலம் நமது தேசத்திற்கு இன்றியமையாதது என்று கருதுகிறாராகையால் அந்தத் தொழிலையே எல்லோரையும் இப்போது செய்யும்படிச் சொல்லுகிறார். சுயநலக்காரர்களுக்குத் தொழிலாளிகளிடத்திலும், ஏழைகளிடத்திலும் எப்படி அன்புவரும்? அப்படிப்பட்டவர்கள் ஒருக்காலும் நூல் சந்தாவை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏழைகளும், தொழிலாளிகளும் க்ஷேமமடைவதும் சுயநலக்காரர்களுக்கு விரோதமாகத்தானிருக்கும். அதனால் தான் சிலர் நூல் சந்தாவை எதிர்க்கிறார்கள். எந்தக் காரணத்தைக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டானாலும் நூல் சந்தாவை எதிர்ப்பதை நாம் கண்டிக்காமலிருக்க முடியாது. ஒவ்வொருவரும் நூல் நூற்று நூல் சந்தாச் செலுத்தி அங்கத்தின ராவதுதான் நமது தேசத்திற்கும் ஏழைகளுக்கும் தொழிலாளிகளுக்கும் நன்மை செய்ததாகும்.

## கதர்

நாலாவது தீர்மானம் கதரைப் பற்றியது. நமது ஜனங்களுக்குக் கதருக்கும், தேசவிடுதலையாகிய சுயராஜ்யத்திற்கும் என்ன சம்பந்த மென்பதே தெரியாது. சுயராஜ்ய மென்றால் என்ன என்பதைப் பற்றி நமக்குள் பெரிய அபிப்பிராய பேதமாயிருக்கிறது. நம்மில் படித்தவர்கள் சுயராஜ்ய மானது நம்மை ஆள்வோர்களால் சீமையிலிருந்து அனுப்பப்படுமெனக் கருதுகிறார்கள். நம்மை ஆளுகிறவர்கள் யாரென்பதை நாம் நன்றாய் கவனிக்க வேண்டும். அநேகர் போலீசாரும் கலெக்டரும்தான் நம்மை ஆளுகிறவர்களென்று கருதுகிறார்கள். சிலர் கவர்னரும், நிர்வாகசபை மெம் பர்களும், மந்திரிகளுமென்று கருதுகிறார்கள். வேறுசிலர் வைஸிராயும், பார்லிமெண்டும், இந்திய மந்திரியுமென்று கருதுகிறார்கள். இவர்களில் யாரும், சுதாவாய் நம்மை ஆளுகிறதில்லை, பின்னையாரென்று கேட்பீர்கள்; ஐரோப்பாவிலுள்ள வர்த்தகக் கூட்டத்தார் அரசாட்சி என்கிற பெயரால் நம் நாட்டில் செய்யும் வர்த்தகத்தைத்தான் நாம் அரசாங்கம் என்று கருதி வருகிறோம்.

ஒரு வியாபாரி எப்படி அயலூரிலுள்ள தன்னுடைய வியாபாரத்திற்குத் தன்னூரிலிருந்து ஒரு ஏஜண்டை அனுப்பிக் காரியம் பார்க்கச் செய்கிறானோ, அதுபோலவே ஐரோப்பிய வியாபாரிகள் இந்திய வியாபாரத்திற்கு வைஸிராய் என்ற பெயரால் தங்களது ஏஜண்டு ஒருவரை அனுப்பி விடுகிறார்கள். அவர் தனக்கு வேண்டிய காரியஸ்தர்களையும், கணக்குப் பிள்ளைகளையும், காவல் காரர்களையும், எடுபிடி ஆள்களையும், கவர்னர், நிர்வாக சபை மெம்பர்கள், மந்திரிகள், ஜட்ஜிகள், கலெக்டர்கள், தாசில்தார்கள், மாஜிஸ்ட்ரேட்டுகள், டாக்டர்கள், போலீஸ்காரர்கள், பாரஸ்டுகாரர்கள், ஆப்காரி இலாகாதார்கள் என்கிற பெயர்களால் சிப்பந்திகளாக நியமித்து மேற்சொன்ன தங்கள் வியா பாரத்தை நடத்துகிறார்கள். இவ்வளவு உத்தி யோகஸ்தர்களும், இவர் களுடைய தொழில்களும், ஐரோப்பிய வியாபாரி களுக்குத்தான் பொருப்பே தவிர நமக்கு எந்த வழியிலும் ஜவாப்தாரி களென்று சொல்லுவதற் கில்லை. உதாரணமாக, ஓர் வைஸிராய் என்ற ஏஜண்ட் புதிதாக இந்தியாவிற்கு வருவாரேயானால் இந்தியாவிலிருக்கிற ஐரோப்பிய வியாபாரிகளிடம் போய் அவர்கள் நன்மைகளைக் கவனிக்கத் தானிருப்ப தாகவும், அது விஷயத்தில் கவலைப்பட வேண்டியதில்லையென்றும் அவர்களுக்குத் தைரியம் சொல்லி அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றுத்தான் ஆசனத்தில் அமருவதைப் பார்க்கிறோம். இதுமாதிரியே ஒவ்வொரு குட்டி அதிகாரி ஏஜண்டும் அந்த



RangaRakes

வியாபாரிகளுக்குத்தான் ஜவாப்தாரிகளாயிருப்பதையும் பார்த்து வருகிறோம்.

இந்த முறையில் அவர்கள் நம் நாட்டில் செய்யும் வியாபாரமென்பது கேவலம் நம்மிடமிருந்து வரி வசூல் செய்கிறார்களே அது அல்லவே அல்ல. அதனால் அவர்களுக்கு ஒன்றும் பெரிய லாபம் கிடையாது. தங்கள் வியாபாரத்தின் செலவுக்கு நமது வரிப்பணங்களை உபயோகித்துக் கொள்ளு வது தவிர அதுவே அவர்களுடைய நோக்கமும் லாபமும் அல்ல. ஆனால், அவர்களுடைய லாபமெல்லாம் நம்நாட்டு விளைபொருள்களை தங்கள் நாட்டிற்கு அள்ளிக்கொண்டு போவதும், அவற்றை அங்கு சாமான்களாகச் செய்வதும், அந்தச் சாமான்களை நம் நாட்டில் கொண்டுவந்து விற்பதும் அவைகளை நாம் வாங்கும்படிச் செய்வதும், அதனால் 100-க்கு 100-ம் சில தருணங்களில் 100 -க்கு 1000-மும் லாபம் சம்பாதிப்பதுதான் அவர்களின் நோக்கம். இந்த வகையாய் அவர்கள் செய்யும் வியாபாரத்தினால் நம் தேசத்திலிருந்து தங்கள் நாட்டிற்கு அவர்கள் கொண்டுபோகும் செல்வம் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களாய் விடுகின்றது. இப்படி நமது செல்வம் கொள்ளை போவதால் தான் நம் தேசத்தில் வறுமையும், பஞ்சமும், பிணியும் ஏற்படுகிறதே தவிர வேறுவிதமாகத் தாங்கமுடியாத வரிப்பளுவினா லென்றோ, உத்தியோகமும் அதிகாரமும் இல்லாததினாலென்றோ மாத்திரம் சொல்லமுடியாது. நம் நாட்டுச் செல்வம் அந்நிய நாட்டிற்குப் போகாத முறையில் நம்மை யாராண்ட போதிலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. நம் செல்வங்களெல்லாம் இப்படிக் கொள்ளை போய்க் கொண்டிருக்க நம்மை நாமே ஆண்டு கொண்டாலும் ஒருக்காலும் அது சுயராஜ்யமேயாகாது. ஆகையால்தான் மகாத்மா காந்தி அவர்கள் சுயராஜ்ய மென்பதை நம்நாட்டுப் பொருள் வெளிநாட்டுக்குப் போகக்கூடாதென்பதைத்தான் முதலாவதாகக் கருதுகிறார். அந்நிய நாட்டு சாமான்கள் நமக்கு வேண்டாமென்று நாம் சொல்லிவிட்டால் அந்நியர்கள் உங்களுடைய தேசம் எங்களுக்கு வேண்டிய தில்லை. அநாவசியமாய் நாங்களிங்கு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்க முடியாதென்று மூட்டை கட்டிக்கொண்டு சவாரி அடிக்கப் பார்ப்பார்கள். அப்பொழுது நாம் அவர்களைப் பார்த்து அவசரப்படாதீர்கள் இன்னும் கொஞ்ச காலத்திற்கு இருங்கள்; எங்களுக்குள்ளிருக்கும் தகராறுகளைத் தீர்த்துவிட்டுப் போங்கள் என்றுதான் சொல்ல வேண்டிவரும். ஆகையால் சுயராஜ்யம் பெறுகிற நிலையில் யார் நம்மை ஆளுகிறார்கள். ஆங்கிலர்கள் என்பதைப் பற்றி நாம் கவலையெடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. நம்மை யும் நம் தேசத்தையும் யாருடைய சாமான்கள் ஆளுகிறது? நம் தேசத்து ஏழைகளை, தொழிலாளர்களை எந்த எந்த தேசத்துச் சாமான்கள் பட்டினி போட்டு அவர்களது சுயமரியாதையையும் ஆண்மையையும் கெடுக்கின்றது என்று யோசித்து அந்தச் சாமான்களை விலக்கி நம் சாமான்களை நம்மை ஆளும்படி செய்வதுதான் சுயராஜ்யம். இந்த சுயராஜ்யம் சம்பாதிப்பதற்கு முதலாவது நம்மையும் நமது மானத்தையும் ஆண்டு கொண்டிருக்கிறதும் நம் தேசத்திலிருந்து வருஷம் ஒன்றுக்கு 60, 70 கோடி ரூபாய்க்கு மேலாகக்



tamilnavarasam.com

கொள்ளை கொண்டு நம் நாட்டு ஸ்திரீகளுக்கும், தொழிலாளிகளுக்கும் வேலையில்லாமல் செய்வதான அந்நிய நாட்டுத் துணிகளுக்குப் பதிலாக நம் நாட்டு ஸ்திரீகளைக் கொண்டு கைராட்டினத்தால் நூல் நூற்கச் செய்து நம் நாட்டு நெசவாளர்களைக் கொண்டு கைத்தறியால் நெய்வித்த துணியை நாம் எல்லோரும் உபயோகிப்பதுதான் மகாத்மா அவர்கள் கதர், கதர் என்று சொல்லுவது. இந்தக் கதர் மாத்திரம் மகாத்மாவினிஷ்டப்படி நம்மெல் லாராலும் அங்கீகரிக்கப்படுமேயானால் நம் நாட்டின் தாங்கமுடியாத வரி யென்று சொல்லப்படுகின்ற 150 கோடி ரூபாயில் அரைவாசியாகிய 75 கோடி ரூபாய் நம் நாட்டுக்கு மிகுதியாகி விடும். அந்நிய சாமான்களால் நம் நாட்டிலிருந்து போகிற பணம் ரசவாதத்தைவிட அதிக தந்திரமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. 20 கெஜமுள்ள அந்நிய நாட்டு மல் துணியாகிய பீஸை எடைபோட்டுப் பார்த்தோமேயானால் 2 $^{1}/_{2}$ இராத்தல் கனம் தான் இருக்கும். அதை வண்ணானுக்குப் போட்டுத் துவைத்து அதன் பேரிலிருக்கும் கொழுப் பையும், வெள்ளைக் களிமண்ணையும் நீக்கி எடைபோட்டுப் பார்த்தால் இரண்டு இராத்தல் தானிருக்கும். இந்த இரண்டு இராத்தல் எடையுள்ள இருபது கெஜம் துணியை நமக்கு விற்பது 15 ரூபாய்க்கு. இதற்காக அந்நிய நாட்டார் நம்மிடமிருந்து வாங்கிக் கொண்டுபோகும் பஞ்சிற்கு நமக்குக் கொடுப்பது இரண்டு இராத்தல் எடைக்கு 1 $^{1}/_{4}$ ரூபாய். இந்த 1 $^{1}/_{4}$ ரூபாய்க்கு நம்மிடமிருந்து பஞ்சு வாங்கிக் கொண்டு போய்ச் செய்த துணியை நம்மிடமே 15 ரூபாய்க்கு விற்று 13 $^{3}/_{4}$ ரூபாய் லாபம் சம்பாதிக்கிறார்களானால் நம் தேசத்தில் இப் பொழுது உபயோகப்படுத்துகிற இவ்வளவு அந்நிய நாட்டுத் துணிக்கும் இன்னும் மற்ற மருந்துச் சாமான்கள், கண்ணாடி, பீங்கான்கள் முதலிய எண்ணிறந்த சாமான்களுக்கும் எவ்வளவு பணத்தைக் கொடுத்து நம் தேசம் ஏழையாய்ப் போய்விடுகிறது? அது மாத்திரமல்லாமல் நம் ஏழைத் தொழி லாளிகள் வேலையில்லாமல் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்? ஆகை யால் உண்மையாய் நமக்குச் சுயராஜ்யம் வேண்டுமானால் நம் தேசத்தி லிருக்கும் ஏழைகளிடமும் தொழிலாளிகளிடமும் நமக்கு அன்பிருக்குமே யானால் நாம் ஒவ்வொருவரும் கதர் உடுத்த வேண்டியதும், கதர் உற்பத்திக்கு வேண்டிய அனுகூலம் செய்யவும் வேண்டியதும்தான்.

*குறிப்பு: 23,24.05.1925, பள்ளத்தூரில் நடைபெற்ற காரைக்குடி மாவட்ட முதலாவது அரசியல் மாநாடு - நிறைவுரை தொடச்சி)*

**குடி அரசு -சொற்பொழிவு - 07.06.1925**

*( தொடச்சி . குடி அரசு - 21.06.1925 )*



# வைக்கம் சத்தியாக்கிரகம்

திருவாங்கூர் அரசாங்கத்தார் வைக்கம் சத்தியாக்கிரகத்தை விரை வில் முடித்துவிட ஆவலாய் இருப்பதாகத் தெரிய வருகிறது. அதாவது அச் சமஸ்தானத்துத் திவானான ஸ்ரீமான் ஆர்.கிருஷ்ணபிள்ளையவர்களை சமஸ்தானத்து மகாராணி அவர்கள் வைக்கம் சத்தியாக்கிரக சம்பந்தமாக தமது அபிப்பிராயமென்னவென்று கேட்டிருப்பதாகவும், அதற்குத் திவான் அவர்கள் கீழ்க்கண்ட பதில் பகர்ந்திருப்பதாவும் அறிகிறோம்.

“இவ்விவகாரத்திலுள்ள ரோடுகளை சாதிமத வித்தியாசமில்லாமல் எல்லாப் பிரஜைகளும் உபயோகப்படுத்திக் கொள்ளும்படி விட்டுவிட வேண்டியதென்று யான் அபிப்பிராயப்படுகிறேன். அம்மாதிரி செய்வதை சமஸ்தான அரசாங்கத்தார் எப்பொழுதுமே எதிர்க்கவில்லை. இந்த உரிமை யை சிலர் பலாத்காரத்தினால் அடைய முயற்சி செய்ததால் கலகம் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சியே அரசாங்கத்தார் தடை உத்தரவு போட்டனர். இந்த உரிமையை அவர்களுக்கு கொடுக்கக்கூடாதென்று ஸநாதன இந்துமதம் கூறவில்லை. தாழ்ந்த நிலையிலுள்ள இந்துக்களல்லாதவர்கள் அந்த ரஸ்தாக்களின் வழியாக நடக்கச் சம்மதம் கொடுத்திருக்கின்றபொழுது இந்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு அந்த உரிமையைக் கொடுக்க மறுப்பதில் கொஞ்சமும் ஒழுங்கிருப்பதாகக் காணப்படவில்லை. கூடிய விரைவில் ஒரு அரச விளம்பரத்தின் மூலம் இந்த வித்தியாசத்தைப் போக்க வேண்டுவது அவசியமென்று யான் அபிப்பிராயப்படுகிறேன்” .

இவ்வண்ணமாக திவான் அவர்கள் அபிப்பிராயம் கொடுத்த பிறகு, கூடிய விரைவில் மகாராணி அவர்களுடைய அனுகூலமான ஸ்ரீமுகம் எதிர்பார்ப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனால் இதிலிருந்தே நமது முயற்சிகளை விட்டுவிட வேண்டுமென யாரும் நினைத்தல் கூடாது. திருவாங் கூர் அரசாங்கத்தாரிடமிருந்தே ஒருவேளை அரைகுறையான ஸ்ரீமுகம் வெளியாயினும் ஆகலாம். ஏனெனில் இரண்டு கட்சியாரையும் சமாதானப் படுத்த வேண்டுமென நினைத்து அவர்கள் முயற்சி செய்து கொண்டிருந்ததை யாம் அறிவோம். அம்மாதிரி திருடருக்கும் - திருட்டுக் கொடுத்தவருக்கும் நல்லவர்களாக வேண்டுமென நினைத்து ஏதாவது கொஞ்சம் இடம் வைத்துக் கொண்டு மேற்சொல்லியபடி ஸ்ரீமுகம் வெளியாகுமேயாகில் பூரண வெற்றி பெறும்வரை நமது நிலையினின்றும் தளரக்கூடாது. ஒருவேளை பூரண வெற்றி கிடைத்துவிடினும் அதனுடன் உலகத்தினிடை இம்மாதிரி நிறைந்



RangaRakes tamilnavarasam.com

துள்ள அக்கிரமங்களெல்லாம் ஒழிந்து விட்டனவென்று நினைக்கக் கூடாது. எங்கு எங்கு இவ்விதக் கொடுமைகள் உள்ளனவோ ஆங்காங்குச் சென்று நமது சத்தியாக்கிரகக் கொடியை நாட்டி இக்கொடிய வழக்கத்தை ஒழிக்க அஹிம்சையுடன் பாடுபடுதல் வேண்டுமென்பதை தெரிவித்துக் கொள் கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 07.06.1925**



# தமிழ்நாடு

ஒத்துழையா இயக்கம் காந்தியடிகளால் இந்தியாவில் ஆரம்பிக்கப் பட்ட காலத்தில் தமிழ்நாடுதான் அவ்வியக்கத்திற்கு முதன்முதலாக ஆதரவளித்தது. எண்ணிக்கைக்குக் கிடைக்காத ஏதோ சிலர் தேச முன்னேற் றத்திற்கல்லாது வேறு பல காரணங்களைக் கொண்டு பின் வாங்கியிருந்த போழ்தினும் தமிழ்மக்கள் சாதி, வகுப்பு வித்தியாசமின்றி ஒத்துழையாமை யின் திட்டங்களில் உடல், பொருள், ஆவி மூன்றையும் சிறிதும் மதியாது தியாகமே கடவுள், தியாகமே வீட்டைப் பெறுவிப்பது, தியாகமே உலகம் என நினைத்து எல்லாவற்றையும் துறந்த துறவிகள் போன்று தொண்டாற்றி வந்ததை உலகம் நன்கு அறியும். பெருந்தலைவர்களெனப்படுவோராகிய தாஸர், நேரு, அலி சோதரர், லஜபதிராய், அஜ்மல்கான் முதலிய பெரியோர் களெல்லாம் ஒத்துழையாமைக்கு மாறுதலாக நின்ற காலத்திலும் வணங்கா முடி மன்னனாய் நின்று ஒத்துழையாமையின் தத்துவத்தை அழியவிடாமல் நிலையிலிருத்திவந்ததும் உலகம் அறிந்ததே. அந்நிலையிலிருந்த தமிழ்நாடு, சாதி இருமாப்பிலும், சாதிச்சண்டையிலும், பட்ட வேட்டையிலும், ஓட்டு வேட்டையிலும், உத்தியோக வேட்டையிலும் ஆழ்ந்து கிடக்கக் காரணம் யாது? அதுகாலை தலைமையாக நின்றவர்கள் இதுகாலை மறைந்து விட்ட னரா? அதுகாலை இருந்த தமிழ் மக்கள் இதுகாலை வேறு மக்களாக மாறி விட்டனரா? அவ்வமயம் தியாகத்திற்குத் துணிந்து நின்றவர்கள் இவ்வமயம் அத்தியாகத்திற்குப் பயந்துவிட்டனரா? அல்லது அப்பொழுது நமக்கு ஒத்துழையாமை தேவையாகவிருந்தது; இப்பொழுது அரசாங்கத்தார் ஒத்துழையாமை நமக்குத் தேவையில்லாத நிலைக்கு நல்லவர்களாகி விட்டனரா? இவற்றை ஆராய்ந்தால் ஒன்றும் மாறவில்லையென்றும், சிலரின் சுயநல சூழ்ச்சியால் ஏற்பட்ட மக்களில் ஒருவருக்கொருவர் சந்தேகமும், நம்பிக்கையின்மையும்தான் காரணமென்றும் தோன்றும். இக்காரணம் தமிழ்நாட்டு அரசியல் வாழ்வை மட்டும் அழிக்காது இந்தியாவின் அரசியல் வாழ்வையும் பின்னப் படுத்திவிட்டது. அரசியல் வாழ்வில் தீவிரமாய் வேலை செய்து வந்தவர்கள் அவ் வேலை நின்றவுடன் சமூக வாழ்வில் பிரவேசிக்க நேர்ந்ததும், சமூக வாழ்விலுள்ள ஊழல்கள் வெளியானதும், அவை திருந்த ஒருப்படாத பலர் தேசத்தில் மறைந்து நின்று செய்யும் விஷமங்களும், தந்திரங்களும், மக்கள் மனதைக் கெடுத்துவிட்டன.

நமக்கு எதற்காக சுயராஜ்யம் வேண்டும் என்றும், தற்பொழுது



RangaRakes tamilnavarasam.com

இருக்கும் அரசாங்கம் மாறிவிட்டால் பிறகு நமக்கு எக்கெதி நேரிடுமென்றும் ஐயுற வேண்டிய நிலைக்குக் கொண்டு வந்துவிட்டன. இந்நிலை மாறாது நிலைத்து வருமானால் தேசத்தில் இனியும் ஒற்றுமைக் குறைவும் அவநம்பிக் கையும் பலப்பட்டு கிளர்ச்சிகளும், பயங்கரக் கலாபங்களும்தான் நடை பெறும். காந்தியடிகளும் இதற்கு என் செய்வதெனத் தோன்றாமலோ அல்லது இவை ஓரளவிற்குச் சென்றவுடன்தான் தாம் தலையிட வேண்டு மென்றோ அவற்றைக் கவனியாதவர்போல் இருந்து வருகிறார். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் புது நன்மைகள் ஒன்றும் ஏற்படாவிடினும் தீமைகளாவது ஏற்படாமலிருக்கவேண்டுமாயின் சாதி, மதம், கட்சி பேதம் இல்லாமல் தமிழ்மக்கள் எல்லோரும் ஒன்று கூடி மனதிலுள்ளவற்றை வெளியிற் கூறி தங்களுக்குள் இருக்கும் அவநம்பிக்கை ஒழியுமாறு தமிழ்நாட்டிற்கேற்ற ஓர் திட்டத்தைக் கண்டு அதை மனம், மொழி, மெய்களால் நிறைவேற்றப் போதிய களங்கமற்ற ஓர் கூட்டத்தார் வெளிக்கிளம்ப வேண்டும். அப்படியின்றி, மக்களை ஏமாற்றுவதாக நினைத்துக் கூட்டம் கூடிக்கொண்டு, தேசத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டும், சமூகத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டும் ஓட்டும் உத்தியோகமும் சம்பாதிப்பதற்கு அலைவது தங்களையே ஏமாற்றிக் கொள்வதாகத்தான் கடைசியில் முடியும்.

நிற்க, சிறிது காலமாய் நாட்டினிடை பிராமணர், பிராமணரல்லாதார் என்றவருக்குள் தோன்றியிருக்கும் உணர்ச்சியானது தமிழ்நாட்டைக் கலக்கியதுமன்றி வெளிநாடுகளையும் கலக்கி வருகின்றது. உதாரணமாக, மத்திய மாகாணத்தில் நடந்த பிராமணரல்லாதார் மகாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீ பாக்தே அவர்களின் பேச்சு அந்நாட்டு பிராமணரல்லாதாரின் உணர்ச்சியைக் காட்டுகின்றது. அதுபோலவே தமிழ்நாட்டிலும் ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு, கலியாணசுந்தர முதலியார், ராமசாமி நாயக்கர் முதலி யோர் செய்துவரும் பிரசாரங்கள் தமிழ்நாட்டுப் பிராமணரல்லாதாரின் உணர்ச்சியைக் காட்டுகின்றது. இப்படி ஒரு சமூகத்தாருக்கு திருப்தி அளிக்கக் கூடாததான பிரசாரத்தை இவர்கள் ஏன் நடத்துகின்றனர்? இவர்களுக்கு முன்பின் துவேஷமா? அப்படி இல்லாமல் சில நாட்களுக்கு முன்பு சகோதரர் கள் போன்று அந்நியோந்நியமாய் வேலைசெய்து வந்தவர்களுக்கு திடீரென இப்படிப் படுவானேன்? இவர்களில் எவராவது தங்கள் சுய நலத்திற்காவது அல்லது தங்கள் தனிப்பட்டவருடைய இலாபத்திற்காகவாவது ஆர்வம் கொண்டு தொண்டு செய்கின்றனரா? இவர்கள் கிளர்ச்சி வெற்றிபெற்றால் இவர்களுக்கு ஏதாவது சுயநல லாபம் ஏற்படுமா? ஏன் தங்கள் சிநேகிதர் முன்னிலையிலும் அன்பர்கள் முன்னிலையிலும் அவர்கள் மனம் வருந்தும் படி நடந்து கொள்கின்றனர் என்பதைக் கவனித்தல் வேண்டும். மற்றொரு பக்கம் பம்பாயில் சில நாட்களுக்கு முன்னர் கூடிய ஒரு வைதீகக் கூட்டத்தில் மகாத்மா காந்தியை இதுவரை உயிருடன் வைத்திருந்தது தப்பு என்றும், அடித்துக் கொல்ல வேண்டும் என்றும் சொன்னார். ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரி யார் போன்ற பிராமணத் தலைவர்கள் ஒருவேளை சாப்பாடு ஒரு பிராமண



ரல்லாதார் குழந்தையுடன் ஒரு பிராமணக் குழந்தை உட்கார்ந்து சாப்பிட்டு விடுமேயாகில் யான் ஒரு மாதம் உண்ணாவிரதம் இருப்பேன் என்றும், மனிதனுக்கு மனிதன் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லையென்று சொன்னால் அரை நிமிடம் கூட காங்கிரஸில் இருக்கமாட்டேன் என்றும், காந்தியடிகள் இதை ஒப்புக்கொள்வார்களாயின் அவரையும் எதிர்த்துதான் ஆகவேண்டும் என்றும் எதற்காகச் சொல்லுகிறார்? பாரத தர்ம மண்டலம் என்று சொல்லு கின்ற ஓர் பெரிய வைதீக சபையார் மனிதனுக்கு மனிதன் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்ற தீர்மானத்தை ஏன் கண்டனம் செய்கின்றனர்? திருச்சி யில் கூடி இத்தீர்மானம்* செய்தபின் சிலர் ஏன் ராஜிநாமாச் செய்தனர்? இது இந்நாட்டுப் பிராமணர்களின் உணர்ச்சியைக் காட்டுகிறது. இவர்களுக்கு எல்லாம் மற்ற சமூகத்தாரின் மீது துவேஷமா? அல்லது விரோதமா? ஒவ் வொருவரும் தங்கள் தங்கள் மனப்பூர்வமாய் சத்தியமென்று கருதுவதை நம்பி வாதாடுகின்றனரேயன்றி இதனால் ஒருவருக்கொருவர் மீது துவே ஷமோ விரோதமோவென்று நாம் கருதக்கூடாது. ஆயினும் இப்படித் தாங்கள் நம்புவதையே ஆதாரமாக வைத்துக் கொண்டு இரு கட்சியாரின் பிரசாரங் களும் கிளர்ச்சிகளும் வளர்ந்து கொண்டே போகுமாயின் முடிவு எங்கே? கடைசியாக பலமுள்ளவன் வெற்றி பெறுவான், பலமற்றவன் தோல்வி அடைவான் என்பதையும் அல்லது ஒருவேளை நமது அரசாங்கத்தார் பீரங்கி, வெடிகுண்டு, ஆகாயக் கப்பல்களை நம்பியிருப்பது போன்று இவ்விரு கட்சிகளிலேயும் ஒருவருக்கொருவர் தங்களுடைய தந்திரங்களையும், சூழ்ச்சிகளையும் நம்பிக் கலகத்தை நடத்த ஒருப்படுவார்களாயின் முடிவில் சத்தியம்தான் வெற்றிபெறும் என்கின்ற வாசகம் என்னாகும் என்பதையும் கவனித்தல் வேண்டும். நமது நாடு இப்பொழுது கோருவதெல்லாம் சமத்து வமும், ஒற்றுமையும்தான். இவ்விரு குணத்திற்காக நமது தினசரி வாழ்க்கை யில் உண்மையாக நாம் என்ன செய்தோம், என்ன செய்ய நினைத்தோம், என்ன செய்யப் போகின்றோம் என்று தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ளவேண்டும். மற்றவர்களுடைய மெப்புதலுக்காக "யான் இதைச் செய்தேன், யான் இதைச் செய்து கொண்டிருக்கிறேன்" என்று சொல்வதினால் சத்தியம் ஏமாந்து போகாது. ஒன்று சத்தியத்திற்கு யோக்கியதை இல்லை என்று சொல்லியாக வேண்டும் அல்லது நாம் சத்தியமாய் நடக்கவில்லை யென்று சொல்லியாக வேண்டும். இதையன்றி வேறு ராஜி கிடையாது.

**குடி அரசு – தலையங்கம் – 14.06.1925**

* இந்திய சமூக வாழ்க்கையில் பிறப்பினால் எவருக்கும் ஏற்றத் தாழ்வு ஏற்படுத்தக் கூடாதென்றும், இக்கொள்கையை தேசிய இயக்கத்தில் ஈடுபட்ட ஸ்தாபனங்கள் அவசியம் அனுஷ்டிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது.

29.1.25 திருச்சி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி (குடிஅரசு17.5.1925.பக்கம் 11)



RangaRakes tamilnavarasam.com

# புறப்பாடு வரி

**– சித்திரபுத்திரன்**

சென்ற வாரத்திற்கு முந்திய 'குடி அரசு' இதழில் நாடக வரியைப் பற்றி எழுதியிருந்ததைக் கவனித்த அன்பர்கள் மனம் வருத்தப்படாதிருக்க முடியாது. அவ்வருத்தம் மறைவதற்குள் மற்றொரு வரி தலை விரித்தாடி விட்டது. அஃதாவது ஈரோடு நகரசபை வைத்தியர் அவர்கள் வேறு ஊருக்கு மாற்றமாகிப் போவதை உத்தேசித்து இவ்வூர் அதிகார வர்க்கமும் பிரபுக் கூட்டமும் மற்றொரு வரியை ஜனங்கள் தலையில் சுமத்தினார்கள். இச்சிறிய ஓர் காரியத்திற்காக இந்நகரத்தில் சுமார் ஐநூறு ரூபாய் வரை வசூல் செய்யப் பட்டிருப்பதாக அறிகிறோம். காரியத்தின் யோக்கியதையையும் அவசியத் தையும் அறிந்து மனப்பூர்வமாய் பொருள் உதவிய கனவான்கள் வெகு சிலரே இருப்பர். ஏனையோர் பிரபுத்துவத்திற்கும் அதிகார வர்க்கத்திற்கும் பயந்து உதவியவர்களே என்பதில் ஐயமில்லை.

நாடக வரி வசூலான காலத்தில் நாமும் நாடகத்திற்குச் சென்றி ருந்தோம். நமது சமீபத்தில் ஒரு பக்கம் ஒரு வியாபாரியும் மற்றோர் பக்கம் கிராம அதிகாரி ஒருவரும் வீற்றிருந்தனர். வியாபாரி நம்மை நோக்கி தாங்க ளும் வந்துவிட்டீர்களே, தங்களுக்குமா வரி? என வினவினார். "இல்லை, யான் வேறு ஒருவரிடம் மிகுதியிருந்த அனுமதிச் சீட்டைக் கொண்டு அவருடைய வற்புறுத்தலுக்காக வந்தேன்" என்று கூறியவுடன், அப்படியா யின் நம்மிடம் இன்னும் நான்கு அனுமதிச் சீட்டுக்கள் மிகுதியாக உள்ளன, ஆறு அனுமதிச் சீட்டுக்களை நமது தலையில் கட்டி அறுபது ரூபாய் வாங்கி விட்டார்கள் என்று கூறி, அவற்றையும் கொடுத்து தங்கள் நண்பர் எவரேனும் வெளியிலிருப்பின் வரும்படிச் சொல்லுங்கள் எனக் கூறினார். அதே தருணத்தில் பக்கத்திலிருந்த கிராம அதிகாரி நமது தலையிலும் மூன்று அனுமதிச் சீட்டுக்களைக் கட்டி முப்பது ரூபாய் பெற்றுக் கொண்டனர். யான் வந்த ஒரு அனுமதிச் சீட்டுப் போக மிகுதி இரண்டு என்னிடம் இருக்கிறது. "இவற்றையும் எடுத்துக்கொண்டு தங்கள் நண்பர்களிருப்பார்களாகில் வரும் படி சொல்லுங்கள்" என்றார். ( நமது சர்க்காரார் கள்ளு வரியை ஜனங்களின் கல்விக்குச் செலவு செய்வது போல் சர்க்கார் ஊழியர்கள் நாடக வரியில் தர்ம விடுதி நடத்துகிறார்கள் போலும்.)





நிற்க, அதைப் போலவே நமது ஊர் வைத்தியர் அவர்களின் பிரிவு பசாரத்திற்காக நடந்த கொண்டாட்டத்திற்கு யாம் சென்றிருந்த காலையில் "உங்களுக்கு என்ன வரி, உங்களுக்கு என்ன வரி" என ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் கொடுத்த வரியைச் சொல்லிக் கொண்டு, வரும்படியில்லாத காலத்தில் அதிகாரிகளுடைய தொந்தரவுக்கு என் செய்வது என வருத்தமுற்றனர். அக்காட்சியைக் காணும் போது மனத்திற்குச் சங்கடமாகத்தான் இருந்தது. உள்ளூரிலும், நாட்டிலும் முக்கியமாகச் செய்ய வேண்டிய எவ்வளவோ பொதுக் காரியங்களுக்கு எவ்வளவு தூரம் எடுத்துச் சொல்லிக் கேட்பினும் பணம் பிரிவது கடினமாக இருக்கின்றது. முயற்சி எடுத்து வேலைசெய்வதற்குத் தகுந்த ஆட்களும் கிடைப்பதில்லை. உதாரணமாக, இவ்வூரில் வெகுகாலமாக நின்று போயிருந்த கிராம தேவதையான மாரியம்மன் ரத உற்சவம் எவ்வளவோ கடினங்களுக் கிடையில் இவ்வருடம் நடத்த சந்தர்ப்பம் கிடைத்தது. அதை நடத்துவதற்கு செலவுக்காகப் பணம் திரட்ட அதிகமான முயற்சி எடுத்தும், பணம் திரட்டப் போனவர்களுக்கு அதிகாரமும் செல்வாக்கும் இல்லாத காரணத்தால் சரியானபடி பணம் திரட்ட முடியாமல் போயிற்று. அதனால் உற்சவத்திற்கு செலவு சாமான் கொடுத்த கடைக்காரர்கள் பஞ்சாயத்துக் கச்சேரியில் நிர்வாகி கள் மீது பிராது கொடுத்திருக்கின்றனர். இதை நினைக்கும் பொழுது நமது ஜன சமூகத்தின் நிலையைப்பற்றி நாம் வெட்கப்படாமலிருக்க முடிய வில்லை. நமது மக்களுக்கு தங்களது மனச்சாட்சிப்படி நடப்பதற்கு தைரியமும் தகுதியறிந்து செலவு செய்யும் மனமும் அதிகாரிகளுக்கும் மற்றும் பிரபுக் களுக்கும் பொதுமக்களின் மனதைப் புண்படுத்தாமலும் நிர்பந்தப்படுத் தாமலும் தங்கள் அதிகாரத்தை இம்மாதிரி துர்வினியோகப்படுத்தாமலும் இருக்கக்கூடிய அறிவும் கடவுளால் என்று கொடுக்கப்படுகின்றதோ அன்றுதான் நமது நாடு சுதந்திரமுடையது எனச் சொல்லத் தினை அளவும் பின்வாங்கமாட்டோம்.

**குடி அரசு – கட்டுரை – 14.06.1925**

RangaRakes
tamilnavarasam.com

# துக்கம் கொண்டாடும் வகை

ஸ்ரீமான் வ.வெ.சு. அய்யர் அவர்கள் காலமானதை ஆதாரமாகக் கொண்டு அனுதாபக் கூட்டங்கள் கூட்டிப் பேசுவோர், இந்த அக்கிரம உலகில் அய்யர் இருக்கக்கூடாது என்று கடவுள் அழைத்துக் கொண்டார் என் போரும், வரதராஜுலு நாயுடுவும், ராமசாமி நாயக்கரும் செய்யும் கிளர்ச்சி யில் மனமுடைந்து இம்மாதிரி ஜனங்கள் முன் இருக்கக்கூடாது என்று நினைத்துப் போய்விட்டீர்களோ என்றும், பணம் எவ்வளவு வேண்டுமானா லும் சம்பாதிக்கலாம் ஒரு அய்யரை சம்பாதிக்க முடியுமா என்று வரதராஜுலு நாயுடுவைக் கேட்பது போலவும் எத்தனையோ விதமாய் பெண்கள் ஜாடை பேசுவதுபோல் பேசி மகிழ்கிறார்கள். இதே ஆசாமிகள், இதே சமயத்தில், வரதராஜுலு நாயுடும், ராமசாமி நாயக்கரும் பிரயாணத்தில் ரயில் எங்காவது விழுந்து ஒழிந்து போயிருப்பார்களானால் அப்போது என்ன பேசியிருப் பார்கள்?

டாக்டர் நாயர் லண்டனில் இறந்தபொழுது சிலர் பேசியதையும் பொது ஜனங்கள் நினைத்து பார்க்கட்டும். இவர்கள் இப்படிப் பேசி மகிழ்ந்தால் எதிர் கட்சியிலிருக்கிறவர்கள் என்ன பேசி மகிழ்வார்கள் என்பதையும், இப்படிப் பேசுகிறவர்கள் இறந்தவர்களுக்கு நன்மை செய்கிறார்களா? தீமை செய்கிறார் களா? என்பதையும் யோசித்துப் பார்க்கட்டும்.

**குடி அரசு – கட்டுரை – 14.06.1925**



# தியாகமூர்த்தியின் இறுதித் தியாகம்

பாரத தேவியின் மணிவயிறு வாய்த்த துணிவுடை வீரமைந்தன் – தாய்த்திருநாட்டின் தவப்பேறு – வங்கநாட்டுச் சிங்கம் – உலகில் தியாகம் அனைத்தும் ஒரு வடிவு எடுத்தாலன்ன விளங்கிய விழுமியோன் – இரவலர்க்கு வரையாது கொடுக்கும் வள்ளல் – **தேசபந்து சித்தரஞ்சன் தாஸர்** ஆருயிர் அன்னையாம் பாரதியைப் பரிதவிக்க விட்டு வானுலகு ஏகின கொடுஞ் செய்தி இந்திய மக்கள் அனைவரின் உள்ளத்தையும் ஊடுருவிப் பாய்ந்து வெந்துயர்க் கடலில் வீழ்த்திவிட்டது. இடிமுழக்கம் கேட்ட நாகமே போன்று கொடுங்காலன் இடி கேட்டு இந்தியமக்கள் நவிலொணா நடுக்கத் திற்காளாயினர். இந்திய நாட்டின் – இந்திய மக்களின் வல்வினைதான் இருந்த வாறு என்னே! நம தருமைத் தாய்த்திருநாட்டிற்கு இஃதோர் எண்ணுதற்கரிய பெருஞ் சோதனைக் காலம் போலும்! கொடுங் கூற்றுவனின் கூத்தினைக் கண்டு தமிழ் நாடும், தமிழ் மக்களும் துயருழந்து வாடுங்காலையில், தனது வண்மையைக் காட்டுவான் விரும்பி அக்கொடியோன் வங்க நாடுற்றனன் போலும். வங்க நாட்டுச்சிங்கத்தின் வீர முழக்கம் ஓய்ந்துவிட்டது; தாய் நாட் டின் விடுதலைப் போரில் வீரிட்டு எழுந்து நின்ற ஊக்கக் குன்று தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டது; வீரத்தை உணர்த்த, வீரரை ஆக்க, வீரரை வளர்க்கத் தோன்றிய வீர உடல் மடிந்தது. வறுமை நோய்வாய்ப்பட்டுச் சிறுமையிற் றாழ்ந்து சொல்லொணாத் துன்பத்தில் ஆழ்ந்து அரற்றும் அன்னையை மறந்து பிரிந்து செல்லவும் உள்ளம் ஒருப்பட்டமையை எண்ணுந்தோறும் எமது உள்ளம் உருகுகிறது. தாஸரின் வீரமொழிகளும், தீரச் செயல்களும் எம்முன் தோன்றித் தோன்றி எம்மை ஆற்றொணாத் துயரத்திற்கு ஆளாக்குகின்றன. இத்தகைய வீரரை – வள்ளலை – தியாகச் செல்வரை இனி எந்நாள் காண்போம் என்று எமதுள்ளம் ஏங்குகின்றது.

தாய்நாட்டின் விடுதலைக்காக இடையறாது அல்லும் பகலும் உழைத் தமையினால் உடல் நலம் இழந்த தாஸர் உடல் நலம் பெறுவான் வேண்டி தார்ஜிலிங்கில் மலைவாசம் செய்ய மனைவி, மக்களுடன் சென்றிருந்தார். சென்ற செவ்வாயன்று மாலை 5.30 மணிக்கு அவர்தம் ஆவியைக் கொடுங்கூற்றுவன் கொள்ளை கொண்டனன். என்னே மனிதர் நிலை!

திரு. தாஸர் வங்கநாட்டில் வறியோர்க்கீந்து வறுமை யெய்திய பெருங் குலத்தில் தோன்றியவர்; சிறந்த தேசாபிமானி; தாய்நாட்டின் விடுதலையையே



RangaRakes tamilnavarasam.com

தமக்கு அணியாகப் பூண்டவர்; தியாகமே வடிவாக வந்தவர்; அருளே உருவாக எடுத்தவர்; 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனர்' ; தஞ்ச மென்றடைந்தவரை அஞ்சல் எனக்கூறும் அருங்குணம் வாய்ந்தவர். தமது இளம் வயதில் கல்வி கற்றார் ; பாரிஸ்டர் உத்தியோகம் செய்ய வேண்டுமென்ற ஆவல் தூண்ட ஆங்கில நாடுசென்றார்; அப்பரிக்ஷையிற் றேறினார். ஆங்கில நாட்டில் வதியும் அவ்விளம் பருவத்திலேயே தாய் நாட்டின் தொண்டில் ஈடுபட்டார். நமது பெருங்கிழவர் தாதாபாய் நெளரோஜி, பாராளுமன்றத்தின் அங்கத்தினராதற் பொருட்டு அரும் பெரும்பாடுபட்டார். அரிய சொற்பொழி வுகள் நிகழ்த்தினார். இவ்விளம் வயதில்...... தமது குடும்பத்தின் வறுமையை அகற்றவும், தந்தையார்க்கு நேர்ந்த இழிசொல்லைப் போக்கவும் பொரு ளீட்டுந் தொழில் கற்பான் புகுந்த காலையில் தாய்நாட்டை மறந்தாரல்லர். தாய்நாடு திரும்பி வந்ததும், வக்கீல் தொழிலில் அமர்ந்தார். புதுப் புதுப் புதையல்களைக் கண்டெடுப்பாரே போன்று தமது தொழிலில் பெரும் பொருள் ஈட்டினார். திங்கள் ஒன்றுக்கு 50,000 ரூபாவுக்குக் குறையாமல் பொருள் ஈட்டினாராம். இப்பெரும் பொருளை என் செய்தார்? செழுங்கிளை தாங்குவதில் தமது பொருளைச் செலவிட்டு, கடனும்பட்டு, நீதிமன்றத்தின் காப்புப் பெற்ற (இன்சால்வெண்டு கொடுத்த) தம் தந்தைக்கு நேர்ந்த பழிச்சொல்லை அகற்றுவதில் இப்பெரும் பொருளை செலவிட்டார். 16 இலட்சம் ரூ. இவ்வாறு கொடுத்து 'நீதிமன்றக் காப்புப் பெற்ற கடனாளி' என்னும் பழிச்சொல்லை தம் தந்தையாருக்கில்லா தொழித்தார். என்னே இவரது பெருந்தன்மை! என்னே இவரது அறவொழுக்கம்! இவ்வற வொழுக் கமன்றோ இவரது பிற்காலத் துறவொழுக்கத்திற்கு அடி கோலிற்று? "மகன் றந்தைக்காற்று முதவி யிவன்றந்தை என்னோற்றான் கொல் லெனுஞ் சொல்" என்று ஆசிரியர் திருவள்ளுவர் கூறிய மகனிலக்கணத்திற்கு இலக்கியமாக இலங்கியவர் ஆவர் நமது தலைவராய தாசர்.

திரு. தாசரின் வண்மை அளவிடற் பாலதன்று ; தாம் ஈட்டிய பொருள் அனைத்தினையும், தமக்கென ஒரு சிறிதும் சேர்த்து வையாமல் தாய் நாட்டிற் காகவும், இரவலர்களுக்காகவும் ஈந்து உவந்தனர். "முல்லைக்குத் தேரும், மஞ் ஞைக்குப் போர்வையும்" அளித்த தமிழ் நாட்டு வள்ளல் பாரியே அனைய வள்ளல் ஆவர் திரு தாஸர். இப்பெரியாரது தாராள உள்ளம் கடலினும்பெரிது. இல்லையென்றார்க்கு இல்லை என்னாது ஈந்த வள்ளல். அதிகார வர்க்கத்தாரின் அடக்குமுறைப் பாணங்களுக்கு ஆளாகிச் சிறைக் கோட்டம் நண்ணின தேச பத்தர்களின் குடும்பங்கள் பல தாஸரின் ஆதரவைப் பெற்று வாழ்வு நடாத்தின. இவரால் ஆதரிக்கப் பெற்ற மாணவர்கள் பல்லாயிரவர் ஆவர். ஒரு காசும் ஊதியம் பெறாது தேசத் தொண்டே தமது பெரும் ஊதியம் எனக்கொண்டு எத்துணையோ தேசபக்தர்களுக்காக நீதிமன்றங்களில் வாதித்துள்ளார். வக்கீல் தொழிலில் உயரிய நிலை இவர் உறுவதற்குக் காரணமாக இருந்தது திரு. அரவிந்தகோஷ் எனும் பெரியார் கலந்திருந்த அலிப்பூர் வெடிகுண்டு வழக்காகும். இவ்வழக்கில் இவர் வாதித்து



வெற்றிபெற்றார் ; பின்னர் இவர் தம் புகழ் எங்கும் பரவலாயிற்று. இத்தகைய அரசியல் வழக்குகளினால் தாஸர் கடன் படவும் நேர்ந்ததெனில் இவரது தேசபக்தியின் ஆழத்தை யாவரே அளக்க வல்லார்?

திரு. தாஸர் நேராக அரசியல் உலகில் இறங்கிய காலம் காந்தியடிகள் அரசியலில் தலையிட்ட காலத்தோடு ஒக்கும். பாஞ்சாலப் படுகொலையின் விவரங்களை நன்றாக ஆராய்ந்து அறிக்கையொன்று எழுதும்படி ஏற்படுத்தப் பட்ட பெரியார்களில் திரு. தாஸர் ஒருவர். இவ்வேலையில் இவர்காட்டிய ஊக்கத்தையும், உற்சாகத்தையும், தேசாபிமானத்தையும் காந்தியடிகளே வாயாரப் புகழ்ந்துள்ளார்களெனின் யாம் யாது கூற வல்லோம். தமது சொந்தத் தில் இதற்காக ரூபா 50,000 செலவிட்டிருக்கிறார் எனின் திரு.தாஸரின் தயாள குணத்தை எவ்வாறு எடுத்துரைப்பது?

தேச விடுதலையை அளிப்பது ஒத்துழையாமையே எனக் காந்தியடி கள் கண்டார். காங்கிரஸ் மகாசபையும் அந்நெறியை ஏற்றுக் கொண்டது. இந்திரபோகம் நுகர்ந்து இன்ப வாழ்வில் மூழ்கித் திளைத்துக் கிடந்த திரு. தாஸர் என் செய்தனர்? "இன்பமருஞ் செல்வமும், இவ்வரசும் யான் வேண் டேன்" எனக்கூறி இந்திர போகத்தைத் துறந்து, இன்ப வாழ்வை நீத்து, பெரும் பொருள் ஈட்டிவந்த வக்கீல்தொழிலை உதறித்தள்ளி, தேசத்தொண்டு ஒன்றே தமது வாழ்க்கையின் பயனாமெனக் கொண்டு ஒத்துழையாமை நெறி நின்று, காந்தியடிகளைப் பின்பற்றி உழைத்து வருவாராயினர். தமது அருமை மனைவி வசந்தாதேவியையும், செல்வச் சிறுவனையும் சிறைக்கனுப்பவும் ஒருப்பட்டனர். தாமும் இவ்வரசாங்கத்தினரின் விருந்தினராக ஆறு திங்கள் சிறைச்சாலையாம் தவச்சாலையில் வதிந்தனர்.

இந்நிலையில், காந்தியடிகள் சிறைசென்றனர்; தாஸர் வெளிப் போந்தனர். நாட்டின் நிலைமை ஒத்துழையாமையில் மாறுதல் செய்ய வேண்டு மென அவர் உள்ளத்தில் ஒரு எண்ணத்தை உண்டாக்கிற்று. சட்டசபை புகுந்து, ஆங்கு முட்டுக்கட்டைப் போட்டு ஒத்துழையாமை நிகழ்த்த வேண்டுமென எண்ணினார். இவருக்குப் பல பெருந்தலைவர்களும் துணை போயினர். 'சுயராஜ்யக் கட்சி' யென ஒரு கட்சி கண்டார். தமது கட்சியை வலுப்படுத்த நாடெங்கும் மின்னல்போல்தோன்றி, வீரச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி தமது கொள்கை உரம்பெறச் செய்தார். "சட்டசபையில் முட்டுக்கட்டை போடுவேன்; இரட்டையாட்சியை ஒழிப்பேன்" என வீரமொழிகள் புகன்று உட்சென்றார் தாஸர். வங்கநாட்டில் இரட்டையாட்சியை ஒழித்து வெற்றிபெற்றார். இதன் பயனாய் விளைந்த நலம் யாது என்பது வேறு விஷயம். அவர் எடுத்த காரியத் தில் வெற்றியடைந்தார் என்பதை எவரும் மறுக்கமுடியாது. தமது எண்ணம் நிறைவேறியதாமெனக் கொண்டே இறைவன் திருவடிநீழல் அடைந்தார் போலும்.

திரு. தாஸர் கல்விக் கடல்; அறிவுக்கடல்; உலகவியல் அறிவு மட்டு மன்று சமயஅறிவும், ஆன்ம ஞான அறிவும் நிறைந்த பெரியார். வங்கமொழி



RangaRakes tamilnavarasam.com

யில் பாட்டியற்றவல்ல பெரும் புலமை மிக்கார். இனிய சுவையும், இறைவன றிவும் புகட்ட வல்ல இனிய பாடல்கள் இயற்றியுள்ளார் எனக் கூறுகின்றார்கள்.

இவ்வரும் பெருங் குணங்கள் படைத்த பெரியார் - இதுகாறும் தமது உடலாலும் பொருளாளும், தேச சேவை செய்துவந்த தியாகமூர்த்தி - தாய் நாட்டின் தொண்டில் தம் இன்னுயிரையும் இறுதியாகத் தியாகம் செய்து தமது தியாக வாழ்க்கையின் முடிவெய்தினார். இப்பெரியாரின் வண்மையை எண்ணிக் காந்தியடிகள் கண்ணீர்விட்டுக் கதறினரெனின், இவரது வண்மை யில் வாழ்ந்து வந்த பல்லாயிரவர்களின் உள்ள நிலை எவ்வாறிருக்குமென்று சொல்லவும் வேண்டுமோ? சுயராஜ்யக் கட்சி தனது உயிரை இழந்து விட்டது. நாம் ஒரு பெருந்தலைவரை இழந்துவிட்டோம். தேசம் உற்ற பந்து ஒருவரை இழந்தது. இந்திய மக்கள் ஓர் உண்மைத் தாசனை இழந்தனர். இவரது பிரிவாற்றாமையால் கண்ணீர்ப் பெருக்கி வருந்தி நிற்கும் இவரது அருமை மனைவியாருக்கும், புதல்வனுக்கும் எமது அநுதாபத்தைக் காட்டுவதல்லாது வேறென் செய்ய வல்லோம். தேசபந்து சித்தரஞ்சன் தாஸரின் ஆன்மா சாந்தியடையுமாறு எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 21.06.1925**



# தாசர் தினம்

தேசபந்துவினிடம் இத்தேசத்தார் வைத்திருந்த பேரன்பையும், அவருடைய மரணத்தினால் அடைந்துள்ள துக்கத்தையும் காட்டும்பொருட்டு ஜுலை *மீ* முதல் தேதி மாலை 5 மணிக்குத் தேசமெங்கும் பொதுக்கூட்டங் கள் கூட்டித் தீர்மானங்கள் செய்யவேண்டுமென்று மகாத்மா காந்தி ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். தேசபந்து காலஞ்சென்று அன்றுடன் பதினாறுநாள் ஆகின்றமையால் அன்று அவரது சிரார்த்த தினமும் ஆகும். தமிழ்நாட்டார் இத்தினத்தைத் தகுந்தவண்ணம் நடத்திவைக்க வேண்டுமென நாம் சொல்ல வேண்டுவதில்லை. எல்லாக் கட்சியினரும், எல்லாச் சமூகத் தினரும் அன்று ஒன்றுபட்டு விண்ணுற்ற பெரியாரின் ஆன்மா சாந்திய டையுமாறு இறைவனை வழுத்துவார்களென நம்புகிறோம். தேசபந்துவின் ஞாபக தினத்தில், தேசத்திற்குத் தற்போது இன்றியமையாததாயிருக்கும் ஒற்றுமை விதை விதைக்கப்படுமாக.

## கைம்மாறு யாது ?

இமயம் முதல் கன்னியாகுமரிவரையில் இந்நாட்டு மக்கள் தேச பந்துவின் எதிர்பாரா மரணத்தினால் துயரக்கடலில் மூழ்கியிருக்கின்றனர் என்று கூறுதல் மிகையாகாது. நாட்டில் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் வந்து கொண்டிருக்கும் செய்திகள் இதற்குச் சான்றாகும். லோகமான்ய திலகரின் மரணத்திற்குப் பிறகு இந்தியர் இத்துணைப்பெரிய துக்கம் அடைந்ததில்லை யென்று திட்டமாகக் கூறலாம். ஆனால், துக்கப்படுவதோடு நமது கடமை முடிந்துவிட்டதா என்பது ஆராயற்பாலது. நாட்டிற்கு இத்தகைய அரிய தொண்டுகள் செய்த ஒருவருக்கு நாம் செய்யும் கைம்மாறு யாது? அவருடைய ஞாபகத்தை இந்நாட்டில் நிலைபெறுத்துவதெங்ஙனம்? நாட்டிற்கு நலன் எதுவும் செய்யாத பட்டதாரிகளுக்கும், ஆளும் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் உருவச் சிலைகள் நாட்டப்பட்டிருக்கின்றன. ஆதலால் நமது அருந்தலைவருக்கு உருவச்சிலை நாட்டுதல் போதாதென்று நாம் சொல்லவேண்டுவதில்லை. பின்னர் என் செய்வது? அவருடைய வாழ்க்கை நெறியை ஓரளவேனும் மேற்கொண்டு ஒழுகுதலே அவருக்கு நாம் செலுத்தும் நன்றியாகுமெனக் கருதுகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

## இரு பெருங் குணங்கள்

தேசபந்துவின் உயர்ந்த குணங்கள் பலவற்றுள் தியாகமும், செயல் திறனுமே தலையாயவையென்பது வெள்ளிடைமலை. உண்மையில் உரம் அற்றதான சுயராஜ்யக் கட்சி, சிறிது காலத்தில் நாட்டில் இணையற்ற பலமுள்ள கட்சியானது எவ்வாறு? தேசபந்துவின் தியாகமும், கருமஞ் செய்வதில் அவருக்குள்ள ஆற்றலுமன்றோ இதற்குக் காரணங்கள்? மகாத்மா காந்தியின் கொள்கைகட்கு விரோதமான கட்சியொன்றை - பயனற்றதென்று நாட்டார் நன்கறிந்து தள்ளிவிட்ட திட்டமொன்றை - இவ்வளவு திறமுடன் அமைத்து நடத்த இக் குணங்களில்லாத பிறரால் முடிந்திருக்குமோ? தேசபந்துவின் இவ்விரு குணங்களையும் தேசமக்கள் மேற்கொள்ளுவதுதான் அவருக்கு நாம் செலுத்தக்கூடிய சிறந்த கைம்மாறாகும். சுயநலமும், சோம்பரும் மிகுந் துள்ள இந்நாளில், தேசமக்கள் தாஸரின் தியாகத்தையும், செயல்திறனையும் ஓரளவேனும் பின்பற்றி ஒழுக முன்வந்தால் நாட்டிற்குப் பெருநலம் விளை யும் என்பதில் ஐயமில்லை.

### நமது கடமை

தேசபந்துவைப்போல் லட்சக்கணக்கான வருமானத்தைத் துறக்க எல்லாராலும் முடியாது. எல்லாரும் அவ்வளவு வருவாய் உள்ளவர்களு மல்லர். ஆனால், எத்துணை எளிமையில் ஆழ்ந்தவராயினும், மில் துணி களை அறவே விலக்கிக் கதர் உடை தரிக்கலாம். தாஸரின் பெரிய தியாகத்தை நினைந்து நாம் ஒவ்வொருவரும் இச்சிறு தியாகமேனும் செய்ய ஒருப் படுவோமாக. எல்லாரும் தேசபந்துவைப்போல் ஒருபெரும் அரசியல்கட்சி கண்டு ஜெயம்பெற நடத்த முடியாது. ஆனால், ஒவ்வொரு வரும் தினம் அரைமணிநேரம் நூல் நூற்பதில் தமது செயல்திறனைக் காட்டலாம். கருமஞ் செய்வதில் தேசபந்து காட்டிய பேராற்றலை நினைந்து நாம் இச்சிறு தொண் டேனும் செய்து வரலாகாதா? தாசர் தினத்தன்று இந்நாட்டார் ஒவ்வொருவரும் அவருடைய நினைவை நிலை நாட்டும் பொருட்டு இவ்விரண்டு விரதங் களையும் மேற்கொள்வார்களென நம்புகிறோம்.

குடி அரசு - துணைத் தலையங்கம் - 21.06.1925



# வைக்கம்

வைக்கம் நிலைமையைப்பற்றி முரண்பட்ட செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. கோவில் வீதிகளில் எல்லாச் சாதியாரும் தடையின்றிச் செல்லலாமென்று மகாராணியார் கட்டளைப் பிறப்பித்துவிட்டதாக முதலில் செய்தி கிடைத்தது. ஆனால், அதற்குள் மகிழ்ந்து விடுவதற்கிடமில்லை யென்றும், இன்னும் பேச்சளவில்தான் இருந்து வருகிறதென்றும், மூன்று வீதிகளில் "தீண்டாதார்" செல்வதற்கு மட்டுமே கட்டளைப் பிறப்பிக்க சமஸ் தான அரசாங்கத்தார் முடிவு செய்திருக்கிறார்களென்றும் கடைசியாக வைக்கத்திலிருந்து வந்த செய்தியால் தெரியவருகின்றன. பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும், மற்ற சமஸ்தானங்களுக்கும் வழிகாட்டியாயிருக்கும் பெருமை திருவாங்கூர் சமஸ்தானத்துக்குக் கிடைக்காமலே போய்விடு மோவென ஐயுறுகிறோம். சத்தியாக்கிரஹிகளின் கடமை என்னவோ தெளி வாய் இருக்கிறது. பூரண வெற்றி கிடைக்கும் வரையில் அவர்கள் சத்தியத் தையும், அஹிம்சையையும் உறுதுணைகளாகக் கொண்டு போராட்டத்தை நடத்திவரவேண்டும்.

குடி அரசு - குறிப்புரை - 21.06.1925



RangaRakes tamilnavarasam.com

# காரைக்குடி ஜில்லா முதலாவது அரசியல் மகாநாடு

## தீண்டாமை

தீண்டாமையைப் பற்றி ஓர் தீர்மானம் செய்திருக்கிறீர்கள். அதைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

தீண்டாமை என்பது என்ன? தீண்டாமை காங்கிரஸில் ஒரு திட்டமாய் வருவானேன்? என இவ்விரண்டு விஷயங்களையும் நாம் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். தேசத்தில் நமது இந்து மதத்தில் மாத்திரம்தான் தீண்டாமை அனுஷ்டிப்பதாக நாம் காண்கிறோம். மனிதனுக்கு மனிதன் பார்ப்பது, பேசுவது, பக்கத்தில் வருவது, தொடுவது முதலானவைகள் தீண்டாமையின் தத்துவங்களாக விளங்குகின்றன. இவற்றிற்கு ஆதாரம் என்னவென்றால் வேதமென்று சொல்லுவதும், சிலர் சாஸ்திரம் என்று சொல்லுவதும். சிலர் ஸ்மிருதி என்று சொல்லுவதும், சிலர் புராணங்கள் என்று சொல்லுவதும், சிலர் பழக்கவழக்கங்கள் என்று சொல்லுவதும் இப்படிப் பலவிதமாக ஆதாரங்கள் கற்பிக்கப்படுகின்றன. பழக்கத்தில் தீண்டாமையானது வருணாச்சிரம தர்மத்தில் பட்டதென்றும், வரிசைக் கிரமத்தில் ஒருவருக்கொருவர் தாழ்ந்தவரென்றும், வருணாச்சிரமமானது பிராமணன், க்ஷத்திரியன், வைசியன். சூத்திரன், பஞ்சமன் என ஐந்து வகை ஜாதியாய் பிரிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், இவற்றிற்கு ஆதாரம் மனுஸ்மிருதி என்றும் சொல்லப்படுகின்றது. தமிழர்களாகிய நம்மை இவை எதுவும் சார்ந்ததாகத் தோன்றவில்லை. ஏனெனில் வருணாச்சிரமம் என்பதும், சாதி என்பதும் , பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்பதும் மனுதர்ம சாஸ்திரமோ, மனுஸ்மிருதியோ என்பதும் ஆகிய வார்த்தைகள் தமிழ் வார்த்தைகளல்ல. தமிழ் நாட்டினர்க்கோ, தமிழர்க்கோ இவ்வன்னிய பாஷைப் பெயர்கள் பொருந்துவதற்கே நியாயமில்லை. தவிர இந்த சாதிகளுக்கே ஏற்பட்டிருக்கிற குணமும் தமிழர்க்குப் பொருந்தியது என்று சொல்லுவதற்கும் இடமில்லை. உதாரணமாக, நம்மில் பெரும்பான்மையோர் சூத்திரர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். நாமும் நம்மை அனேகமாய் சூத்திரர்கள் என்றே சொல்லிக் கொள்ளுகிறோம். ஏன் அப்படிச் சொல்லிக் கொள்ளுகிறோமென்பதை பற்றி இப்பொழுது ஆராயத் தேவையில்லை. சூத்திரர் என்பது என்ன? நாம்



சூத்திரர்களா என்பதைக் கவனிப்போம். சூத்திரன் என்றால் மனுஸ்மிருதியில் “விலைக்கு வாங்கப்பட்ட அடிமை, யுத்தத்தில் ஜெயித்து அடிமையாக்கப் பட்டவன், அடிமைத் தொழிலுக்காக ஒருவனால் மற்றொருவனுக்குக் கொடுக்கப்பட்டவன், வைப்பாட்டியின் மகன்” முதலிய ஏழுவித மக்களுக்கு சூத்திரர்கள் என மனுதர்ம சாஸ்திரத்தில் பெயரிடப்பட்டிருக்கிறது. அப் பெயரை நாம் ஏற்றுக் கொண்டு நம்மை நாமே சூத்திரர்கள் என்றுதான் சொல்லிக் கொள்ளுகிறோம். அடுத்தாற்போல் பஞ்சமர்கள் எனச் சொல்லப் படுவது யாரை என்பதே நமக்குச் சரியாய் ஆதாரத்தின் மூலமாய் தெரிந்து கொள்ளக்கூடவில்லை. வழக்கில் சக்கிலி, பறையன், வண்ணான், நாவிதன், பள்ளன், குடும்பன், சாம்பன், வள்ளுவன் சிற்சில இடங்களில் தீயர், ஈழவர், நாடாரையுமே சேர்த்து மேலே சொல்லப்பட்ட பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ஆகிய நான்கு வருணத்தாரும் மேலேகண்ட முறைப்படி கொடுமையாக நடத்தப்படுவதைப் பார்க்கிறோம். இவர்களையே பஞ்சமர்கள் என்று சொல்வதையும் கேட்கிறோம். அநேகமாய், நாம் கூட அவர்களை அதே மாதிரியாக நடத்துகிறோம். அப்படி நடத்தின போதிலும் ‘சூத்திரர்கள்’ என்று சொல்லப்படுகிற நாம் தாழ்ந்தவர்களா ? பஞ்சமர் என்று சொல்லப்படுகின்ற அவர்கள் தாழ்ந்தவர்களா? என்பதை யோசித்துப் பார்த்தால் பஞ்சமர்களை விட சூத்திரர்களே தாழ்ந்தவர்கள் என்பது தெரியவரும். மேலே கூறப் பட்டபடி ‘சூத்திரர்’ என்பதற்கு ஆதாரப்படி தாசிமகன், என்பதுதான் பொருள். தத்துவமாய்ப் பார்த்தால் பறையன், சக்கிலியை விட தாசிமகன் தாழ்ந்தவன் என்பதுதான் எனது தாத்பரியம். என்னை ஒருவன் சூத்திரன் என்று அழைப்பதைப் பார்க்கிலும் பஞ்சமன் என்று அழைப்பதில்தான் நான் சந்தோஷப்படுவேன்.

இவ்விதக் கெடுதியான பெயர் நமக்கு இருப்பதைப் பற்றி நாம் கொஞ்சமும் கவனியாமல் நிரபராதிகளாய் இருக்கும் நமது சகோதரர்களைக் காண, அருகில் வர, தொட, பேச, பார்க்கமுடியாதபடி கொடுமையாய் நடத்தி ஊரிற்கு வெளியில் குடியிருக்கும்படியும் ஸ்நானம் செய்வதற்கோ, வேஷ்டி துவைத்துக் கொள்ளுவதற்கோ, வீதியில் நடப்பதற்கோ, சில இடங்களில் தாகத்திற்குக்கூட தண்ணீர் இல்லாமல் அவஸ்தைப்படும்படி நடத்துகிறோம். மேற்கண்ட கொடுமையான குணங்கள் அவர்களோடு மாத்திரம் நில்லாமல் அனேக சமயங்களில் நாமும் நமக்கு மேல் வருணத்தார் என்று சொல்லுகிறவர்களும்கூட அனுபவிப்பதைப் பார்க்கிறோம். உதாரணமாக, சூத்திரர்களை அதற்கு மேற்பட்ட மூன்று வருணத்தார்களும் தொடுவதில்லையென்பதையும், இவர்கள் முன்னிலையில் அவர்கள் ஆகாரம் எடுத்துக் கொள்வதில்லை என்பதையும், சிற்சில சமயங்களில் இவர்களோடு பேசுவதும் பாவம் என்பதையும் அனுபவிக்கிறோம். அதே மாதிரி வைசியர்களிடத்திலும் க்ஷத்திரியர்கள், பிராமணர்கள் நடந்துகொள்ளுவதையும், அதே மாதிரி க்ஷத்திரியர்களிடத்திலும் பிராமணர் நடந்துகொள்வதையும், பிராமணர்களுக்குள்ளேயும் ஒருவருக்கொருவர் தாழ்மையாக நடத்தப்படுவதையும்



RangaRakes tamilnavarasam.com

பார்க்கிறோம். உதாரணமாக, திருச்செந்தூர், மலையாளம் முதலிய இடங்களில் உள்ள பிராமணர்கள் தாங்கள் உயர்ந்தவர்களென்றும், மற்ற பிராமணர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் கருதி, தங்களுக்கு அனுமதியுள்ள இடத்தில் மற்றொருவர் பிரவேசிப்பது தோஷமெனக் கருதுகிறார். நம் நாட்டிலேயும் முறைப்படி நடக்கின்ற பிராமணர்கள் என்று சொல்லுவோர்கள் க்ஷத்திரியனிடத்திலேயோ, வைசியனிடத்திலேயோ, சூத்திரனிடத்திலேயோ பேசுகின்ற காலத்தில், ஜலமலபாதிக்குப் போகும்போது எப்படி பூணுலைக் காதில் சுற்றிக்கொண்டு போகிறார்களோ அதுபோல பெரிய தீட்டென நினைத்துப் பூணூலைக் காதில் சுற்றிக்கொண்டு பேசுகிறார்கள். இப்படி நமது நாட்டில் தீண்டாமை, பார்க்காமை, பேசாமை, கிட்ட வராமை ஆகிய இவை ஒருவரை யாவது விட்டவை அல்ல. ஒருவர் தனக்குக்கீழ் இருப்பவரைத் தீண்டாதவர், பார்க்காதவர் என்று சொல்லுவதும், அதே நபர் தனக்குமேல் உள்ளவருக்கு தான் தீண்டாதவராகவும், பார்க்கக் கூடாதவராகவும் இருப்பது வழக்கமாயிருப்பது மாத்திரம் அல்லாமல், இவர்கள் இத்தனை பேரும் சேர்ந்து நம்மை ஆளுகிற சாதியாயிருக்கிற ஐரோப்பியருக்குத் தீண்டாதவராகவும், கிட்ட வரக்கூடாதவராகவும் இன்னும் தாழ்மையாகவும் இருந்து வருவதையும் நாம் காண்கிறோம். இந்த முறையில் தீண்டாமை என்பதை ஒழிப்பது என்று சொல்வது கேவலம் பஞ்சமர்களை மாத்திரம் முன்னேற்ற வேண்டுமென்பதல்லாமல் அவர்களுக்கு இருக்கும் கொடுமைகளை மாத்திரம் விலக்க வேண்டுமென்பதல்லாமல் நம் ஒவ்வொருவருக்குள் இருக்கும் இழிவையும், கொடுமையையும் நீக்கவேண்டும் என்பதுதான் தீண்டாமையின் தத்துவம். இதைச் சொல்லுகிறபோது ஆ! தீண்டாமை விலக்கா? பஞ்சமரையா தெருவில் விடுவது? அவர்களையா தொடுவது? அவர்களையா பார்ப்பதென்று ஆச்சரியப்பட்டுவிடுகிறார்கள். நம்மில் ஒரு கூட்டத்தாராகிய சூத்திரர் என்று சொல்லிக்கொள்ளும் நாம், நம்மில் ஒருவன் சூத்திரன் என்று அழைக்கும் போது ஆ! நம்மையா, சர் பட்டம் பெற்ற நம்மையா, ஜமீந்தாராகிய நம்மையா, லட்சாதிகாரியாகிய நம்மையா, சத்திரம் சாவடி கட்டிய நம்மையா, தூய வேளாளனாகிய நம்மையா, பரிசுத்தனாகிய நம்மையா, உத்தமனான நம்மையா, மடாதிபதியான நம்மையா இன்னும் எத்தனையோ உயர்குணங் களும் எவ்வித இழிவுமற்ற நம்மையா தேவடியாள் மகன், வைப்பாட்டி மகன், அடிமையென்று அர்த்தம் கொண்ட சூத்திரன் என்று சொல்லுவதென ஒருவரும் வெட்கப்படுவதேயில்லை. மலையாளம் போன்ற சிற்சில இடங்களில் நாயர்கள் என்று சொல்லுவோர் தங்களைச் சூத்திரர்கள் என்று சொல்லிக்கொள்ளுவதில் பெருமை அடைகின்றனர். இந்த இழிவு சூத்திரர்கள் என்பவரை எப்படிக் கட்டிக்கொண்டது என்பதைப் பார்ப்போமாகில் தங்களுக்குக் கீழ் ஒருவர் இருப்பதாக நினைத்துக் கொண்டு அவர்களைத் தாழ்மைப்படுத்திய பாவமானது இவர்களைத் தேவடியாள் மகன் என்று இன்னொருவர் கூப்பிடும் படியாகக் கடவுள் வைத்துவிட்டார். நமக்கும் அதன் பலனாய் நமக்குக் கீழ் ஒருவர் இருந்தால் போதுமென்று நினைத்து



மகிழ்ந்துகொண்டு நம்மை ஒருவன் வைப்பாட்டி மகனெனக் கூப்பிடுகிறானே, கூப்பிடுவது மாத்திரம் நில்லாது கல்லும் காவேரியும் உள்ளவரை அழியாமல் எழுதி வைத்து விட்டானே, அஃதோடு நில்லாமல் நம்மை நாமே வைப்பாட்டி மகனென்று சொல்லிக்கொள்ளும் நிலைமைக்கு வந்துவிட்டதே யென்றுகூட கவலைப்படுவதேயில்லை. இது எதைப் போலிருக்கிறதென்றால் அரசியல் வாழ்வில் இந்துக்களுக்கு "இந்துக்கள்" என்று சொல்லுவதற்கில்லாமல் நம்முடைய அரசாங்கத்தார் முகமதியரல்லாதார் என்று அழைப்பது போலவும் நாமும் இந்துக்களாகவும், இந்தியாவின் புராதனக்காரராகவும் இருக்கிற நம்மை "அல்லாதார்" என்கிற அணியைக் கூட்டி மகமதியர் அல்லாதார் என்று ஏன் அழைக்க வேண்டும் என்கிற கவலை கொஞ்சமும் இல்லாமல், எப்படியானாலும் உத்தியோகமோ, பதவியோ கிடைத்தால் போதுமென்கிற இழிவான ஆசையில் பட்டு "மகமதியரல்லாதார்" பிரிவுக்கு யான் சட்டசபை அங்கத்தினனாய் நிற்கிறேன் என்று கவுரவமாய் நம்முடைய படித்தவர்கள், பெரியோர்கள், பணக்காரர்கள், சாஸ்திரிகள், ஆச்சாரியார்கள் என்று சொல்லக்கூடிய கூட்டத்தார் நடந்து கொள்வதுபோல் இருக்கிறது.

( தொடர்ச்சி 28.06.1925 குடி அரசு )

குறிப்பு: *23,24.05.1925 இரண்டு நாள்கள் பள்ளத்தூரில் நடைபெற்ற காரைக்குடி மாவட்ட முதலாவது அரசியல் மாநாடு - நிறைவுரை (தொடர்ச்சி)*

**குடி அரசு – சொற்பொழிவு – 21.06.1925**



RangaRakes tamilnavarasam.com

# காரைக்குடி ஜில்லா
# முதலாவது அரசியல் மகாநாடு

## தீண்டாமை

ஆகவே, நம்மில் யாரும் நமக்கு இவ்வித இழிவுப்பெயர்கள் இருப்பதை லட்சியம் செய்யாமல் சுயநலமே பிரதானமாகக் கருதி அலட்சியமாயிருக்கிறோம். யாராவது இவற்றைக் கவனித்து இவ்விதக் கொடுமையும் இழிவும் நமக்கு ஒழிய வேண்டுமென்று முயற்சித்தால் அது சுயநலக்காரரால் துவேஷமென்று சொல்லப்பட்டுவிடுகிறது.

பறையன், சக்கிலி முதலியோரை நாம் ஏன் தொடக்கூடாது, பார்க்கக் கூடாது என்கிறோம் என்பதைச் சற்று கவனித்தால் அவன் பார்வைக்கு அசிங்கமாயிருக்கிறான்; அழுக்குடை தரிக்கிறான்; அவன் மீது துர்நாற்றம் வீசுகிறது; அவன் ஆகாரத்திற்கு மாட்டு மாம்சம் சாப்பிடுகிறான்; மாடு அறுக்கிறான்; மற்றும் சிலர் ‘கள்’ உற்பத்தி செய்கிறார்கள் என்கிறதான குற்றங்கள் பிரதானமாகச் சொல்லப்படுகிறது. இவற்றை நாம் உண்மை என்றே வைத்துக்கொள்வோம்.

இவர்கள் பார்வைக்கு அசிங்கமாகவும், அழுக்கான துணிகளுடனும், துர்வாடை யுற்றும் ஏன் இருக்கிறார்கள் என்றும் இதற்கு யார் பொறுப்பாளி என்றும் யோசியுங்கள். அவர்களை நாம் தாகத்திற்கே தண்ணீர் குடிப்பதற்கில்லாமல் வைத்திருக்கும்போது குளிக்கவோ வேஷ்டி துவைக்கவோ வழி எங்கே? நாம் உபயோகிக்கும் குளமோ, குட்டையோ, கிணறோ இவர்கள் தொடவோ, கிட்ட வரவோ கூடாதபடி கொடுமை செய்கிறோம். அதனால் அவர்கள் அப்படியிருக்கிறார்களேயல்லாமல் அது அவர்கள் பிறவிக்குணமாகுமா? நம்மை யாராவது குளிக்க விடாமலும், வேஷ்டி துவைக்க விடாமலும் செய்து விட்டால் நம்மீது துர்நாற்றம் வீசாதா? நம் துணி அழுக்காகாதா? நாம் பார்வைக்கு அசிங்கமாய் காணப்பட மாட்டோமா? அவர்களுக்குக் குளிப்பதற்கும், துணி துவைப்பதற்கும் நாம் சவுகரியம் செய்து கொடுத்துவிட்டால் பின்னும் இவ்விதக் குற்றமிருக்குமா? ஆதலால் நாம்தான் அவர்களின் இந்நிலைக்குக் காரணமாயிருக்கிறோம்.

மாடு தின்பது முதலியவைகளால் எப்படித் தீண்டாதவனாய்



விடுவான்? ஐரோப்பியர், மகமதியர் முதலானோர் தின்பதில்லையா? அவர்களை நாம் தீண்டாதார், பார்க்காதார் என்று சொல்லக்கூடுமா? அப்படியே சொல்வதானாலும் மாடு தின்பது என்ன ஆடு, கோழி தின்பதை விட அவ்வளவு பாவம்? ஆடு, கோழி, பன்றி தின்பவர்களை நாம் பஞ்சமரைப் போல் நினைப்பதில்லை. கோழியும், பன்றியும் தின்னாத வஸ்துவையா மாடு தின்கிறது? செத்த மாடு தின்பது உயிருள்ள ஜெந்துவை உயிருடன் வதைத்து கொலை செய்து சாப்பிடுவதைவிட உயிரற்ற செத்துப் போன பிராணியின் மாம்சத்தை, மண்ணில் புதைப்பதை வயிற்றுக்கில்லாத கொடுமையால் சாப்பிடுவது எப்படி அதிக பாவமாகும்? மாடு அறுப்பது பாவமென்றால் ஆடு, கோழி அறுப்பதும் பாவம்தான். மனித பிணத்தையும் கூட வைத்திய சாலைகளில் அறுக்கிறார்கள். அவரை நாம் பஞ்சமரென்று சொல்லுகிறோமா?

கள் இறக்குவது குற்றமென்றும், அது பாவமென்றும் அதனால் அவர்களைத் தொடக்கூடாது, தெருவில் நடக்கக்கூடாது என்று சொல்வதும் எவ்வளவு முட்டாள்தனமாகும். அந்தக் கள்ளைக் குடிப்பவனும், அதற்காக மரம் விடுபவனும், அந்த வியாபாரம் செய்பவனும், அதைக் கையில் வைத்துக்கொண்டிருக்கிறவனும் தொடக்கூடியவன், தெருவில் நடமாடக் கூடியவன் என்றால் அதை ஜீவனத்தின் காரணமாய் இறக்குவது மாத்திரம் எப்படிக் குற்றமாகும்? உற்பத்தி செய்வதால் குற்றமென்றால் சாராயம், கஞ்சா, அபின், பிராந்தி இவைகள் உற்பத்தி செய்கிறவர்கள் எப்படி தொடக்கூடியவர்களாவார்கள்? இதில் பணம் சம்பாதிக்கும் நமது அரசாங்கத்தை இன்னும் சம்பாதிக்க விட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த உத்தியோகத்திற்கு நாம் தொங்குகிறோம். இந்தப்பணத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கல்வியை நாம் கற்கிறோம்; இவ்வளவு செய்பவர்கள் யோக்கியர்கள்; தீண்டக் கூடியவர்கள்; பார்க்கக் கூடியவர்கள். ஆனால் மேல் சொன்னவர்கள் மாத்திரம் தீண்டவும், பார்க்கவும் கூடாதவர்கள் என்றால் இது என்ன கொடுமை? இந்த ஜனங்களுக்கு சுயராஜ்யம் எப்படி வரும்? கடவுள் ஒருவர் இருப்பது உண்மையானால் இப்படி கொடுமைப்படுத்தும் சமூகத்தை ஆதரிப்பாரா? இவர்களுக்கு விடுதலையை அளிப்பாரா? அல்லது இவர்களை அடியுடன் தொலைத்து அடிமைப்படுத்துவாரா? என்பதை நினையுங்கள். இந்தக் கொடுமையை நம்மிடம் வைத்துக்கொண்டு வெள்ளையர் கொடுமை என்றும், கெனியா, தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர் ஜாதி இறுமாப்பென்றும் நாம் பேசுவது எவ்வளவு முட்டாள்தனமும், பார்ப்பவருக்குக் கேலியுமாகும் என்பதைக் கவனிக்க வேண்டும். நம் நாட்டில் பிறந்த நம் சகோதரரை நாம் பார்த்தால் பாவம், கிட்டவந்தால் பாவம், தொட்டால் பாவம் என்று சொல்லிக் கொண்டு அதற்கு ஆதாரம் காட்டவும், எழுதி வைத்துக் கொண்டிருக்கும் அக்கிரமத்தை விடவா 1818 – வது வருஷத்து ஆக்டும், ரௌலட் ஆக்டும், ஆள்தூக்கி சட்டமும், 144, 107, 108 பிரிவுப் பிரயோகமும் அக்கிரமமானது என்பதைச் சற்று யோசியுங்கள். நம்மவரை நாமே செய்யும் கொடுமையை விடவா அன்னியர் கொடுமை பெரிது.



RangaRakes tamilnavarasam.com

மதுரைக் கோவிலில் குடிகாரன், மாம்சம் சாப்பிடுகிறவன், குஷ்ட ரோகி முதலிய தொத்து வியாதியஸ்தர் முதலியவர்கள் சுவாமி தரிசனம் செய்யலாம். அன்னிய மதஸ்தர்கள் சுற்றுப்பிரகாரம் கடந்து செல்லலாம். ஆனால் நமது சகோதரர்களான நாடார்கள் எவ்வளவு பரிசுத்தமானவர்களும், தர்மிஷ்டர் களும், ஜீவகாருண்யமுடையவர்களும், படித்தவர்களுமாயிருந் தாலும் வாசப்படி மிதிக்கக்கூடாது, மிதித்தால் தெய்வத்தின் சக்தி குறைந்து போகு மாம். இதற்கு ஆதாரமும் இருக்கிறதென்றால், ரௌலட் சட்டத்திற்கும், ஆள் தூக்கிச் சட்டத்திற்கும் உள்ள ஆதாரங்களை நாம் குற்றம் சொல்வா னேன். இவ்விதம் கொடுமைகள் செய்யும் ஜனசமூகத்திற்கு சத்தியம், தர்மம் என்று பேசிக்கொள்ள யோக்கியதை ஏது? உண்மையில் ஆதாரம் என்று சொல்லக் கூடிய மாதிரியாவது நாம் நடக்குகிறோமா?

(தொடரும)

*குறிப்பு: 23,24.05.1925 இரண்டு நாள்கள் பள்ளத்தூரில் நடைபெற்ற காரைக்குடி மாவட்ட முதலாவது அரசியல் மாநாடு - நிறைவுரை (தொடர்ச்சி)*

**குடி அரசு - சொற்பொழிவு - 28.06.1925**



# சத்தியாக்கிரகம் ராஜிக்கு உட்படாது

பல்லூழிகளாக நின்று நிலவி வரும் இந்து சமயத்தின் நற்பெயரைக் கெடுப்பான் பிற்காலத்தில் ஒரு சில அறிவிலிகளால் அதனுள் புகுத்தப்பட்ட தீண்டாமை என்னும் கொடிய பேயை நாட்டினின்றும் ஓட்டி, இந்துசமயத்தின் தூய தன்மையையும், மக்களின் உரிமைகளையும், சமத்துவத் தன்மையும், நிலைநாட்ட வேண்டுமென்ற உயரிய எண்ணங்கொண்டு திருவாங்கூர் சமஸ் தானத்திலுள்ள வைக்கம் என்னும் ஊரில் சத்தியாக்கிரகம் தொடங்கப் பெற்று நடைபெற்று வருவது நேயர்கள் நன்கு அறிவார்கள். இவ்வுண்மைப் போர் ஓராண்டாக நடைபெற்று வருகிறது ; இன்னும் வெற்றிபெறவில்லை. ஆனால், விரைவில் வெற்றியுறும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. இச் சத்தியாக்கிரக நிகழ்ச்சியைப் பற்றி இவ்வொரு வாரமாக ஒன்றுக் கொன்று முரண்பட்ட செய்திகள் வெளிப்போந்து ஒருகாலை இன்பமூட்டியும், மற்றொரு காலை துன்பமூட்டியும், இறுதியில் மக்களைப் பெருங் கவலையில் ஆழ்த்தி விட்டன என்பதே எமது கருத்து. மக்களுக்குள் பிறப்பினால் உயர்வு, தாழ்வு எவ்வாற்றானும் இல்லையென்ற உயரிய சிறந்த உண்மையை உலகினர்க்கு அறிவுறுத்தும் பெரும் பேறு - ஒரு பெண்ணரசிக்கு வாய்க்கும் என்று யாம் கொண்டிருந்த பேரவா நிறைவுறுங்காலம் நீட்டிக்கப்பட்ட மையைக் காணக் கவற்சியுறுகின்றோம். இத்தகைய பெருமையினை திருவாங் கூர் பெண்ணரசியார் பெறுதற்கில்லாமற் போய்விடுமோ என்றும் அஞ்சுகின் றோம். இது கிடக்க, இதுகாறும் வெளிப்போந்த செய்திகளில், சத்தியாக் கிரகிகள் காந்தியின் உடன் படிக்கையைப் புறக்கணித்து வரம்புமீறி ஒழுகத் தலைப்பட்டுவிட்டனர் என்ற செய்தி பொய் ஆயினமை கண்டு மகிழ்ச்சி உறுகின்றோம்.

வைக்கம் சத்தியாக்கிரகத்தின் வரலாற்றினை ஈண்டுச் சுருக்கமாக நினைவுகூர்தல் இன்றியமையாதது. வைக்கம் கோவிலின் மதிற்சுவர்களைச் சுற்றிலுமுள்ள நான்கு வீதிகளிலும் தாழ்ந்த வகுப்பினர் எனப்படுவோராகிய ஈழுவர் முதலானோர் செல்லுதல் கூடாதென்றிருந்த கொடிய சமூக வழக்கத்தை ஒழித்து, மக்கள் யாவருக்கும் பொதுவான பாதைகளில் எல்லாச் சாதியினரும், சமயத்தினரும் செல்லும் உரிமையை நிலைநாட்ட எழுந்ததாகும் இவ்வைக்கம் சத்தியாக்கிரகப்போர். இப்போரினை எதிர்த்து நின்ற வைதீகக் கூட்டத்தினருக்கு திருவாங்கூர் அரசினர் முதலில் துணைபோந்து



RangaRakes tamilnavarasam.com

தலைவர்களைச் சிறைக்கனுப்பி விட்டு "கோஷா" வீதிகளுக்குக் கொண்டு விடும் நான்கு வீதிகளையும் நடுவில் கழிகள் கொண்டு அடைத்து, போலீஸ் காவலர்களைக் காவல் செய்ய நியமித்துச் சத்தியாக்கிரகிகள் மேற்செல்லா வாறு மறித்தனர். சத்தியாக்கிரகிகள் நாடோறும் கூட்டம் கூட்டமாகச் சென்று வழிமறித்துள்ள விடத்தில் நின்று மழையென்றும், வெயிலென்றும் கருதாமல் சத்தியாக்கிரகம் புரிந்து வந்தனர். வைதீகக் கூட்டத் தினரால் பல்வித அல்லல் களுக்கு ஆளாகியும் சத்தியாக்கிரகிகள் அன்புநெறி, அறநெறிகளினின்றும் ஒரு சிறிதும் வழுவாது காந்தியடிகளின் ஆணையின்படி ஒழுகி வந்ததும், வருவதும் பெரிதும் போற்றத்தக்கது. உள்ளன்புடனும், உண்மையாகவும் உழைத்துவரும் சத்தியாக்கிரகிகள் இறுதியில் வெற்றி பெறுவார்கள் என்பது திண்ணம்.

இவ்வாண்டின் தொடக்கத்தில், சத்தியாக்கிரகிகளுக்கு ஊக்கமும், உண்மைநெறியும் ஊட்ட காந்தியடிகள் வைக்கம் போந்தார். திருவாங்கூர் பெண்ணரசியையும், இளவரசரையும் நேரில் கண்டு வைக்கம் சத்தியாக்கிரகத் தின் உண்மையையும் அதனை அவர்கள் ஆதரிக்கவேண்டிய கடமை யினையும் உள்ளத்தில் பதியும்படி எடுத்துரைத்தனர். வைக்கம் சத்தியாக் கிரகம் தற்காலம் உற்ற நிலைமைக்கு காந்தியடிகள் வைக்கம் போந்ததே ஆகும் எனக் கூறுதல் மிகையாகாது. திருவாங்கூர் அரசாங்கத்தின் போலீஸ் கமிஷனர் பிட் என்பாருடன் காந்தியடிகள் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர். சத்தியாக்கிரகிகள் முன்னேறாவண்ணம் தடுப்பதற்கென வைக்கப்பட்டிருக்கும் போலீஸ் காவலை அரசினர் எடுத்துவிடவேண்டு மென்பதும், சத்தியாக்கிரகிகள் அரசினர் அனுமதியின்றி முன்னேறுதல் கூடாதென்பதும்தான் அவ் உடன்படிக்கையின் முடிவுகள். இம்முடிவுகளை இருகட்சியினரும் ஏற்று அவ்வாறே நாளிதுவரை ஒழுகிவந்தனர்.

வைக்கம் கோவிலைச் சுற்றிலும் உள்ள நான்கு வீதிகளில் கீழ்வீதி ஒன்றினைத் தவிர மற்றை மூன்று வீதிகளிலும் தாழ்ந்த வகுப்பினர் எவ்வித தடையுமின்றிச் செல்லலாமென்று திருவாங்கூர் அரசினர் உத்திரவு செய்திருப் பதாக இதுகாலை யாம் அறிகின்றோம். இச்செய்தியில் யாம் ஒரு சிறிதும் மகிழ்ச்சி உறவில்லை. இது சத்தியாக்கிரகத்தின் வெற்றியுமாகாது. சத்தியாக் கிரகத்தின் உண்மையினை அறியாதாரே இதனை வெற்றியெனக் கொள்வர்.

சத்தியாக்கிரகத்தின் உண்மை யாது? சத்தியாக்கிரகம், உண்மை என்பன ஒரு பொருட் கிளவிகள். சத்தியாக்கிரகம் வெற்றிபெற்றதெனக் கூறின் உண்மை வெற்றிபெற்றதெனப் பொருள். உண்மை எக்காலத்தும் வெற்றி உறும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று; உண்மைக்குத் தோல்வி என்பது எக்காலத்தும் இல்லை. ஆதலால், சத்தியாக்கிரகத்தில் – உண்மையில் "ராஜி" என்பதே கிடையாது. அரசினர் மூன்றுவழிகளில் சத்தியாக்கிரகிகள் செல்லலாமெனக் கூறியது சத்தியாக்கிரகம் அவர்தம் உளத்தைக் கரையச் செய்துவிட்டது என்பதைக் காட்டுகிறதேயன்றிச் சத்தியாக்கிரகம்



வெற்றிபெற்றது என்பதை ஒரு சிறிதும் குறிக்கவில்லை என்ற உண்மையை ஒவ்வொரு சத்தியாக்கிரகியும் உளத்தமைத்தல் வேண்டும்.

ஆகவே, உண்மை முழுவெற்றியுறும்வரை சத்தியாக்கிரகிகள் உழைத்தல் கடனாகும். சத்தியாக்கிரகத்தின் ஆற்றலை அறியாது மயங்கினவர் கள் கண்முன் அதன் ஆற்றலைக் கண்ட பின்னரும் எவ்வித மயக்கமும் உறுதல் வேண்டுவதின்று. அரசினர் குழாத்தினர் உளங்கரையச் செய்த உண்மைப்போர் வைதிகக் கூட்டத்தாரின் உள்ளத்தையும் கரைத்து உண் மையை உணர்ந்து ஒழுகச்செய்யும் என்பதில் ஐயப்பாடில்லை. சத்தியாக் கிரகிகளின் பொறுப்பு முன்னைவிட இதுகாலை பெருகி நிற்கிறதென்றே கூறுவோம். சிறு வெற்றியினைக் கண்டு தலைத் தடுமாறிப் பேய்க் கூத்தில் வீழ்ந்து மாயா வண்ணம் சத்தியாக்கிரகிகள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அன்பு நெறியையும், அறநெறியையும் ஒரு சிறிதும் கை நெகிழ விடாமல் காந்தியடிகளின் ஆணைக்கடங்கி நின்றும், காந்தி – பிட் உடன்படிக் கைக்கு உட்பட்டும் சத்தியாக்கிரகத்தை மிக்க ஊக்கத்துடனும், உற்சாகத் துடனும் சத்தியாக்கிரகிகள் நடாத்திவரும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். உண்மையின் வலிமையை உணராமல் எள்ளி நகையாடி ஒதுங்கி நின்ற பொது மக்களும் தமது குறுகிய நோக்கத்தை அறவே நீக்கிவிட்டுச் சத்தியாக்கிரகி களுக்குத் தம்மாலியன்ற உடல் உதவியும், பொருள் உதவியும் புரிவார்களென எதிர்பார்க்கிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 28.06.1925**



RangaRakes tamilnavarasam.com

# சர்மா சாய்ந்தார்

தமிழ்நாட்டு அருந்தவப்புதல்வர் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி சர்மா இம்மாதம் 24 – ந் தேதி நள்ளிரவு இரண்டு மணிக்குக் காஞ்சியிலுள்ள தமது இல்லத்தில் காய்ச்சலினால் இறந்துவிட்டாரென்ற செய்தியைக்கேட்க ஆற்றொணாத் துயர்க்கடலில் மூழ்கினோம். தேசம் தற்பொழுதுள்ள நிலைமையில் பாரதத்தாயின் உண்மை மக்கள் ஒவ்வொருவராக மடிந்து வருவது நாட்டின் தீவினையேயன்றி வேறல்ல. நமது சர்மா அவர்கள் ஏனைய தேசபக்தர்களைப் போன்று தனது வாழ்நாளில் வேறு ஒரு தொழிலிலிருந்து தேசசேவைக்குக் குதித்தவரன்று. மாணவராக இருக்கும்பொழுதே தேச சுதந்திரத்தில் நாட்டம் உடையவராய் தமது வாலிபகாலத்திற்கு முன்பே தியாகத்தின் வாயிலாய்ச் சிறைவாசம் ஏற்றார். சிறைச்சாலைக் கைதிகளை இக்காலத்தைப் போலல்லாது கொடுமையாகவும், இழிவாகவும் நடத்திவந்த காலமாகிய 1908 –ம் ஆண்டிலேயே மாதக்கணக்கில்லாமல் வருடக்கணக்காய் தண்டனை அடைந்தார். சிறையினின்றும் வெளிவந்ததும் மீண்டும் தேசத்தொண்டிலேயே ஈடுபட்டுழைத்ததனால் யுத்த காலமாகிய 1917 – ம் ஆண்டில் ஒருவருட காலம் வாய்ப் பூட்டப்பட்டிருந்தார். பின்னர் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டுத் தீவிரமாக உழைத்ததின் பயனாக நமது அரசாங்கத்தாருக்கு ஜாமீன் கொடுக்க மறுத்து ஓராண்டு சிறையில் வதிந்தார். அவர் அரசியல் நூல்கள் எழுதுவதில் மிகத் தேர்ச்சி உடையவர். தற்பொழுது நமது கிராம மக்கள் அரசியல் அறிவுபெற அவரது நூல்களே ஆதாரமாகும். அவர் அகில இந்திய காங்கிரஸ் சபையின் அங்கத்தினராகவும், தமிழ்நாடு காங்கிரஸ் சபையின் நிர்வாக அங்கத்தினராகவும் இருந்து காங்கிரஸிற்கு அரிய தொண்டாற்றி வந்திருக்கின்றார். கிலாபத்துக்காகவும் அதிக சேவை செய்துள்ளார். ஒத்துழையாமையின் ஒவ்வொரு தத்துவத்திலேயும் அவர் உண்மையான நம்பிக்கைகொண்டவர். பெல்காம் காங்கிரஸில் ஒத்துழையாமையை அடியுடன் ஒழிக்கும்வரை பூரண ஒத்துழையாதாரராகவே இருந்து முடிவுவரை தமது தொண்டை ஆற்றி வந்தவர். காங்கிரஸின் தற்கால நிர்மாணத் திட்டமாகிய கதர், தீண்டாமை இவ்விரண்டையும் மேடைத் திட்டமாய்க் கொள்ளாமல் உண்மைத் திட்டமாகவே கருதி மனப்பூர்வமாக ஏற்று உழைத்தவர். குருகுல விவாதத்தில் பிராமண சமூகத்தாரிலேயே நம தண்பர் சர்மா ஒருவர்தான் தனது அபிப்பிராயத்தை தைரியமாகவும், வெளிப் படையாகவும் கூறியவர். இப்பேர்ப்பட்ட ஓர் பக்தரை, தமிழ்நாடு தனது சோதனை காலத்தில் இழந்தது பெருத்ததோர்



நஷ்டமாகும். சர்மாவின் குடும்பத்தாருக்கு எமதனுதாபத்தைத் தெரிவிக்கிறோம். அவரது ஆன்மா சாந்திஅடைக!

**குடி அரசு – இரங்கலுரை – 28.06.1925**



RangaRakes tamilnavarasam.com

# அரவிந்தருக்கு அழைப்பு

தேசபந்து தாசர் காலஞ் சென்றதும் ஸ்ரீ பாபு அரவிந்தரை, தாசரின் தலைமைப்பதவி யேற்றுக்கொண்டு தேசத்தை நடத்தும்படி பலர் வேண்டு வதாய்த் தெரிகின்றது. அரவிந்த கோஷர் தலைமை வகித்து தேசத்தை நடத்துவதற்கு மிகவும் தகுதியுள்ளவர் என்பதை எவரும் மறுக்கமாட்டார். ஆனால் காந்தியடிகள் உழுது செய்னேத்தி செய்து வைத்திருக்கும் நிலத்தில் அரவிந்தரின் விளை முளைப்பது கடினம். அரவிந்தர் வருவாராயின் இந்தியா முழுவதும் மறுபடியும் ஓர் முறை உழுது அவரது விதைக்கேற்றவாறு பண் படுத்தவேண்டும். காந்தியடிகளின் திட்டம் முற்றிலும் பயனற்றதாகி காந்தி யடிகளே இந்தத் திட்டத்திற்கு இந்தியா ஏற்றதல்ல என விலகிவிட்டால் மாத்திரம், அரவிந்தர் முதலியோர் தாராளமாக வரலாம். வந்துதான் ஆக வேண்டும். இப்பொழுது அரவிந்தர், காந்தியடிகள் இருவரும் தேசத்தை நடத்துவார்களாயின், பசுவையும், புலியையும் ஓர் வண்டியில் கட்டி ஓட்டுவது போல் தான் ஆகும். காந்தியடிகளே அரவிந்தரை அழைக்கிறாரெனின் அது ஒரு கோமாளி வேடமன்றி வேறல்ல.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 28.06.1925**



# சென்னை முனிசிபல் ஓட்டர்களுக்கு எச்சரிக்கை

**– சித்திரபுத்திரன்**

சென்னை கார்ப்பரேஷனைக் கைப்பற்ற வேண்டும் என்கிற எண்ணத் தின் மேல் மகாத்மா பெயரையும் காங்கிரஸ் பெயரையும் சுயராஜ்ய கட்சியின் பெயரையும் சொல்லிக் கொண்டு சிலர் உங்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள்.

அதோடு மாத்திரம் நில்லாமல் தாங்கள் யோக்கியமான கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும், தங்களுக்கு எதிரிடையாய் நிற்கும் அபேட்சகர்கள் யோக்கியப் பொருப்பில்லாத கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும், கட்சிப் பிரசாரம் செய்து, ஒரு கட்சியார் பேரில் வெறுப்புண்டாக்கவும் பாடுபடுகிறார் கள். முனிசிபாலிட்டிகளுக்கு கட்சிப் பிரதானம் பார்க்க வேண்டியதே இல்லை. அபேட்சகர்கள் யோக்கியர்களா என்று பார்ப்பதுதான் உங்கள் கடமை. இப் பொழுது பெயருக்கு முனிசிபல் விவாதத்தில் பிரஸ்தாபிக்கப்படும் கட்சிகள் இரண்டேதான். ஒன்று பிராமணரல்லாதார் கட்சி என்று சொல்லப்படும் ஜஸ்டிஸ்கட்சி; மற்றொன்று சுயராஜ்யக் கட்சி. இவ்விரு கட்சிகளும் ஒன்றை யொன்று தூற்றிக்கொண்டு பலமான பிரசாரங்கள் நடத்தி வருகின்றன.

இரு கட்சியின் தத்துவங்களும் தேசத்திற்கு விடுதலை உண்டாக்காது. தற்கால நிலையில் கட்சிப் பேர்கள் சொல்லிக் கொள்வதாலேயே ஜனங்கள் ஏமாறக்கூடாது. சென்ற வருஷம் சென்னை முனிசிபல் தேர்தல்களில் ஜனங்கள் கட்சிப் பெயர்களைக்கேட்டு ஏமாந்துவிட்டார்களே அல்லாமல், உண்மை அறிந்து தங்கள் கடமைகளைச் செய்யவேயில்லை. ஆனாலும், அவர்கள் முன்னிருந்தவர்களைவிட என்ன சாதித்து விட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டிருப்பார்கள். காங்கிரசானது சுயராஜ்யக் கட்சியாரை முனிசி பாலிட்டியைக் கைப்பற்றும்படி ஒரு தீர்மானமும் செய்யவேயில்லை. மகாத்மாவும் கட்டளையிடவில்லை. யோக்கியர்கள் கைப்பற்ற வேண்டும் என்பதுதான் அவர் கருத்து.

இப்பொழுது காங்கிரஸ், மகாத்மா பெயரைச் சொல்லிக்கொண்டு அபேட்சகராய் நிற்கும் கனவான்களும் ஜஸ்டிஸ் கட்சி கனவான்களைவிட எவ்விதத்திலும் சிறந்தவர்களல்ல.



RangaRakes tamilnavarasam.com

சுயராஜ்யக் கட்சி அபேட்சகரில் பெரும்பான்மையோர் உங்களிடம் ஓட்டுக் கேட்க வரும்போதுதான் கதர் கட்டிக்கொண்டு மகாத்மா பெயரைச் சொல்லுகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியில் கதரில் நம்பிக்கை உள்ளவர்கள் கட்டுகிறார்கள். நம்பிக்கை இல்லாதவர்கள் கட்டுவதில்லை. சுயராஜ்யக் கட்சியிலும் அநேகருக்கு கதரில் நம்பிக்கையேயில்லை. அவர்கள் உங்களை ஏமாற்ற கதர் கட்டுவதேயல்லாமல், தேச க்ஷேமத்திற்கு கட்டுபவர் வெகுசிலர். அவர்களின் வெளி வேஷம்தான் இப்படியென்றால் உள் வேஷமோ, மகாத்மாவை ( இம்பீச்மெண்ட் ) குற்றவாளியாக்கி தண்டிக்கவேண்டும் என்று சொன்னவர்களும், ஸ்ரீமான் தியாகராஜ செட்டியாரை பஞ்சாப் படுகொலைக் குக் காரணமாயிருந்த டயர் என்று சொன்னவர்களும், தீண்டாமை விலக்கில் நம்பிக்கையில்லாதவரும், பிறப்பினால் தாங்கள் உயர்ந்தவர்கள் மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்கிற ஜாதி இறுமாப்புடையவர்களும், ஒத்துழையாமை ஏற்பட்டது முதல் நாளது வரை பெயரே கேள்விப்பட்டிராதவர்களும், தேச நலத்துக்குக் கூட்டமாய் தலைவர்களும் தொண்டர்களும் ஜெயிலுக்குப் போய்க்கொண்டிருந்த காலத்தில் மறைந்து கொண்டிருந்தவர்களும், "ஒரு வேளை சாப்பாடு ஒரு பிராமணக் குழந்தை ஒரு பிராமண ரல்லாத பிள்ளை கூட உட்கார்ந்து சாப்பிட்டால் ஒரு மாதத்திற்கு பட்டினி விரதம் இருப்பேன்" என்று சொன்னவரும், மகாத்மா தீண்டாமையைப் பற்றிப் பேசினால் அவரை எதிர்த்துக் கவிழ்த்துவிட வேண்டுமென்று சொன்னவரும் மற்றக் கட்சி யாரைவிட தாங்கள் யோக்கியர்களென்று சொல்லிக் கொண்டு உங்களிடம் வருகிறார்கள். சுயராஜ்யக் கட்சியிலிருக்கும் சிலர்களைவிட எத்தனையோ மடங்கு யோக்கியர்கள் மிதவாதக் கட்சியிலும் ஜஸ்டிஸ் கட்சியிலும் இருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஒத்துழையாமை என்கிற தத்துவம் காங்கிரஸிலிருந்து ஒழிக்கப்பட்ட பிறகு கதர், தீண்டாமை விலக்கு என்கிற இரண்டு திட்டங்களைத்தவிர மற்றபடி எந்த விதத்திலும் ஒரு கட்சிக்கு மற்றொரு கட்சி வித்தியாசப் பட்டதல்ல. இந்த இரண்டு திட்டங்களைப் பொருத்தவரை சுயராஜ்யக் கட்சியானது ஜஸ்டிஸ், மிதவாதக் கட்சியைவிட மேலானதென்று சொல்ல முடியாது.

சுயராஜ்யக் கட்சியாரின் பிடிவாதத்தால்தான் காங்கிரசும் வெளி வேஷத்திற்கு மாத்திரம் கதர் கட்டினால் போதும் என்கிறது போல் மீட்டிங்கு களுக்கு வரும்போது மாத்திரம் கதர் கட்டினாலும் அவர் காங்கிரஸ் அங்கத்தி னராகலாம் என்றும், தாங்களே ராட்டினம் சுற்றாவிட்டாலும் வேறு ஒருவர் சுற்றிய நூலைக் கொண்டாவது காங்கிரஸ் அங்கத்தினராகலாம் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீண்டாமை விஷயத்திலோ சுயராஜ்யக் கட்சியாரின் மனோபாவத்தை நாம் சொல்லவே வேண்டியதில்லை. குருகுல சம்பந்தமான விவகாரம் சென்னையில் மகாத்மா வந்திருந்தபொழுது அவரி டம் பிரஸ்தாபிக்கப்பட்ட சமயத்தில் நடந்த வாக்குவாதங்களால் தெரிந்திருக்



கலாம். அன்றியும் ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியார் கூற்றினாலும் தெரிந்திருக் கலாம். வர்ணாசிரம தர்மக் கூட்டங்கள், பிராமணர் சங்கங்கள் இவைகளில் சுயராஜ்யக் கட்சியாரின் உள்குணத்தாலும் அறியலாம். ஆகையால் சென்னை ஓட்டர்களும், வெளி ஜில்லாக்களில் உள்ள ஓட்டர்களும் தேர்தல் காலங் களில் கட்சியின் பேரைக்கண்டு ஏமாந்து போகாமல், நிற்கும் கனவான்களின் யோக்கியதாபட்சத்தை அறிந்தும், அவர் நாட்டிற்கு என்ன செய்திருக்கிறார், என்ன செய்யக்கூடும், நாட்டை நடத்த இவர்களுக்கு எவ்வளவு பாத்தியதை உண்டு என்பதைக் கவனித்து தங்கள் ஓட்டுரிமைகளை உபயோகிப்பார் களென்று நம்புகிறேன்.

**குடி அரசு - கட்டுரை - 28.06.1925**



RangaRakes tamilnavarasam.com

# இந்தியத் தொழிலாளர்

**– ஒரு தொழிலாளி**

தொழிலாளர்கள் என்பது யார் என்கிற விஷயத்திலேயே நான் அபிப்பிராய பேதமுடையவனாகவிருக்கிறேன். பொதுவாய் நமது நாட்டில் தொழிலாளர் என்று அழைக்கப்படுவது கூலிக்காரர்களைக் குறிக்கின்ற தேயன்றி, உண்மையில் சுவாதீனத் தொழிலாளரைக் குறிப்பதில்லை. தொழிலா ளன் என்றால் ஒருவன் தானே தன் இஷ்டம்போல் ஒரு தொழிலைச் செய்து அத்தொழிலின் பயன் முழுவதையும் தானே அடைபவனாய் இருக்க வேண்டும். தற்காலம் வழக்கத்தில் குறிப்பிடும் தொழிலாளி யாரெனின் ஒரு முதலாளியிடம் அவரது இயந்திரத் தொழிலுக்கு உப கருவிபோல் அதாவது, ஒரு இயந்திரத்திற்கு நெருப்பு, தண்ணீர், எண்ணெய், துணி, தோல் முதலிய கருவிகள் எப்படி உபகருவிகளோ அதுபோல் அதன் பெருக்கத்திற்கு சில கூலியாள் என்ற உயிர் வஸ்துவும் அதற்கு உப கருவியாகவிருந்து, அந்த முதலாளி சொல்கிறபடி வேலை செய்பவர்தான் தொழிலாளியென்றும், அவரிடம் கூலிக்குப் போராடுவதைத்தான் தொழிலாளர் இயக்கம் என்று சொல்லப்படுகின்றது. இவர்கள் எந்த விதத்திலும் தொழிலாளி ஆகமாட் டார்கள். இவர்கள் வேலையும், இவர்கள் நேரமும் இவர்களுக்கு எந்த விதத் திலும் சம்பந்தப்பட்டதேயல்ல. இவர்களாகவே கூலிக்கு அமர்ந்து கொண்டு அடிமைபோல் சொல்லுகிறதைச் செய்கிறதாகவும் சம்மதித்து, பிறகு எஜமா னன் அதிக இலாபம் அடைவதைப் பார்த்துப் பொறாமை கொண்டோ, தொழில் திறத்திற்கு என்று அல்லாமல் வயிற்றுக்குப் போதாது என்ற காரணத் தினாலோ தாங்கள் இல்லாவிட்டால் வேலை நடக்காது என்று நினைத்து தங்களுக்கு அதிக கூலி வேண்டும், தராவிடின் வேலை நிறுத்தம் செய்வோம், வேலை நிறுத்தம் செய்தபின் வேறு ஒருவன் அந்த வேலை செய்யவும் சம்ம திக்கமாட்டோம், முதலாளி எங்கள் வேலை நிறுத்தத்தால் நஷ்டமடைய வேண்டும் என்கின்ற முதலியனக் காணப்படும் செயல்களையும் அதன் பலன்களையும்தான் தொழிலாளர் இயக்கமென்பதும், தொழிலாளர் இயக்கத் தின் வெற்றி தோல்வியாய்க் கருதப்படுவதுமாகவிருக்கிறது. இதைக் கூலிக் காரர்கள் இயக்கம் என்றுதான் கூறலாம். இவ்வித இயக்கம் உண்மை யில் நம் தேசத்திற்கோ, நம் தேச மக்களுக்கோ எவ்விதத்திலும் அனுகூலமான இயக்கம் என்று சொல்லமுடியாது. இது மேனாட்டு வழக்கத்தை அனுசரித்தது.



அங்குள்ள முதலாளிகளும், கூலிக்காரர்களும் கீழ்நாட்டுப் பணத்தையும், பதவியையும் கொள்ளையடித்து அதை எப்படிப் பங்கு போட்டுக் கொள்வது என்கிற சண்டைதான் அங்கு தொழிலாளர் இயக்கமாய் விளங்குகின்றது. நம் நாட்டிலோ தொழிலாளி அதிகக்கூலி கேட்க கேட்க முதலாளி, மக்கள் வாங்கும் பொருள்களின் மேல் அதிக விலையை வைத்து, மக்களிடம் பொருள்பறித்து, சிறிது தொழிலாளிக்குக் கொடுத்து மிகுதியைத் தான் எடுத்துக்கொண்டு முன்னிலும் தான் அதிக இலாபம் சம்பாதித்தவனாகி விடுகிறான். உதாரணமாக, ரயில்வே, டிராம்வே தொழிலாளர்களின் இயக்கங் களை எடுத்துக்கொள்வோம். சென்னை டிராம்வே, ரயில்வே தொழிலாளர் கள் தங்கள் எஜமானர்களான கம்பெனிக்காரர்களிடத்தில் அதிகக்கூலி கேட்டார்கள். எஜமானர்களும் முதலாளிகளுமான கம்பெனிக்காரர்களோ கட்டணமாகிய டிக்கெட்டுகளின் விலையை உயர்த்தினார்கள். இவ்வகையில் ஜனங்களின் பணத்தைப் பறித்து தொழிலாளர்களுக்குக் கொஞ்சம் கொடுத்து விட்டு மேற்கொண்டும் தாங்கள் இலாபம் அடைந்தார்கள். இதில் எவருடைய பொருள் நஷ்டமடைந்தது? முதலாளிகள் பொருளா? இம்மாதிரியான நடவடிக்கைகளை சுருக்கமாகக் கூறின் கூட்டுக்கொள்ளை யென்றுதான் சொல்லவேண்டும். இவ்வித இயக்கங்களாலும், நடவடிக்கைகளாலும் தேசம் ஒருபொழுதும் முன்னேற்றமடையாது. ஏழைகளும் பிழைக்க முடியாது. இவ்வித இயக்கங்கள் நடத்துவதைவிட பொதுவுடமைத் தத்துவங்கள் நடத்து வது குற்றமென்று சொல்ல முடியாது. இம்மாதிரி இயக்கங்கள் நாட்டின் உண்மைத் தொழில் அபிவிருத்திக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் கொஞ்சமும் உதவி செய்யாது. இதுமாத்திரமன்றி இவ்வியக்கங்களை நடத்தும் தொழிலாளர்களின் தலைவர்களோ வென்றால் பெரும்பாலும் முதலாளிகளும் எஜமானர்களுமாகவேதான் இருக்கிறார்கள். தொழிலாளி களின் கஷ்டமும் கூலிக்காரர்களின் கஷ்டமும் ஒரு சிறிதும் அறியாமல் தொழிலாளரின் உழைப்பினாலும், கூலிக்காரரின் அறியாமையினாலும் பிழைக்கின்ற இவர் கள் இவ்வியக்கத்தை நடத்துகின்றனர். இது எப்படி முன்னுக்கு வரும்? இதுவரை நம் நாட்டில் தொழிலாளர் இயக்கங்கள் எவ்வளவு முன்னுக்கு வந்தன? எவ்வளவு மறைந்தன? எவ்வளவு வெற்றியடைந்தன? எவ்வளவு தோல்வியடைந்தன? எவர் ஒழுங்காக நடத்தினர்? என்பதைக் கவனித்தால் இவற்றின் பலனை நன்கு அறியலாம்.

தொழிலாளிகளும், தொழிலாளர் இயக்கங்களும் இந்த நாட்டில் முன்னுக்கு வரவேண்டுமாயின், தொழிலாளர்கள் தாங்கள் கற்ற தொழிலைக் கொண்டு தாங்களே ஒரு தொழில் தங்களிஷ்டம்போல் செய்து தொழில் திறத்தையும் ஊழியத்தையும் அறிந்து அத்தொழிலின் பலன்களை நாட்டாருக்குக் கொடுத்து நாட்டாரை அனுபவிக்கச் செய்து, அதன் ஊதிய முழுவதும் தாங்களே அடையும்படியான நிலைமை நாட்டிற்கு என்று வரு கின்றதோ அன்றுதான் தொழிலாளரின் நிலைமை முன்னேற்றமடையுமே அல்லாமல் கைத்தொழில் அழிக்கப்பட்டுப்போன காரணத்தால் முதலாளிகள்



RangaRakes
tamilnavarasam.com

இயந்திரங்களை அதிகம் அமைத்து திக்கற்றவர்களை கூலிக்கமர்த்தி, அவர்களிடம் கொடுமையான வேலை வாங்கி, அதன் பயனாய் கொள்ளை அடிப்பது போன்று இலாபத்தைச் சம்பாதித்து அவை வேலைக்காரர்களும் பொதுஜனங்களும் அடையாதபடி நடுவிலிருந்துகொண்டு முதலடித்து, தானே அனுபவித்து வருவதால் ஒருநாளும் முன்னேற்றமடைய முடியாது. இதுவரை தொழிலாளரின் கதி இப்படியாயினும் இனி எதிர்காலத்திலாவது தொழிலாளர் தங்கள் குழந்தைகளையும் மற்றும் தொழில் வேண்டியவர்களும் தாங்கள் கற்கும் தொழிலைக்கொண்டு மற்றொருவர் பிழைக்கும் மார்க்கமான தொழிலா யல்லாமல் தாங்கள் செய்யும் தொழிலின் பலன்களை முற்றிலும் தாங்களே அனுபவிக்கும் படியான தொழில்களைக் கற்றுக் கொடுப்பதுடன் எக்காரணத்தைக் கொண்டும் தங்கள் இயக்கங்களை முதலாளிகளும் எஜ மானர்களும் தலைமை வகித்து நடத்த விடாமல் தானே தன் கையைக் கொண்டு வேலை செய்யும் தொழிலாளியோ, அல்லது கூடுமானால் தன் கைக் கொண்டு வேலை செய்து அதன் முழுப்பயனையும் தானே அடையும் படியான உண்மையானதும் சுதந்திரமுடையதுமான ஒரு தொழிலாளியோ இயக்கத்தை தலைமை வகித்து நடத்தும்படி வந்தால், இன்றைக்கே இல்லா விடினும் கூடிய விரைவிலாவது தொழிலாளிகளும்,தொழிலாளரின இயக்கங்களும் நாட்டிற்கு நன்மை பயக்கக் கூடியவைகளாக விளங்கும். இல்லாதவரையில் தலைவர்கள் என்போர் சுயநலத்தைப் பெருக்கிக் கொள் ளவோ, முதலாளிகள் கொள்ளை அடிக்கவோ, தொழிலாளிகள் என்போர் சண்டித்தனம் செய்து வயிறு வளர்க்கவோதான் முடியும்.

**குடி அரசு - கட்டுரை - 28.06.1925**



# நிர்மாண திட்டம்

அரசியல் வாழ்வில் தற்காலம் நிர்மாண திட்டங்கள் என்று சொல்லப்படுவது கதர், தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு ஆகிய இம் மூன்றையே குறித்துக்கொண்டு நிற்கிறது. இவற்றை ஏறக்குறைய இன்றைக்கு நான்கு ஐந்து வருடங்களாக மகாத்மா விடாமல் வலியுறுத்தி வந்தும் கோரிய அளவு நிறைவேற்றப்பட்டதாக நாம் சொல்ல முடியாது.

அரசியல்வாதிகள் பலரால் இத்திட்டங்கள் ஊக்கமளிக்கவல்லதல்ல வென்றும், சுயராஜ்யத்திற்கு அவைகளே போதியவை அல்லவென்றும், இத்திட்டங்கள் அரசியல் துறைக்குச் சம்பந்தப்பட்டவையல்லவென்றும், பலவாறாகப் பழிக்கப்பட்டும், மக்களுக்கு இவற்றில் மனம் செல்லாதவாறு கலக்கப்பட்டு வருகின்றது. மகாத்மா அவர்கள் இத்திட்டங்களில் கதர்த் திட்டம் ஒன்றுக்கே தனது முழு பலத்தையும் உபயோகிக்கின்றார். இரவும் பகலும் அவ்வொரு கருமத்திலேயே கண்ணாயிருக்கின்றார். நாம் அதன் தத்துவம் என்ன என்று பார்க்கின்றோமா? இல்லவே இல்லை. வருஷம் ஒன்றுக்கு 60, 70 கோடி ருபாய் நம் நாட்டிலிருந்து அன்னிய நாட்டிற்குப் போகக்கூடியதும், லட்சக்கணக்கான நமது சகோதரிகளுக்கும், சகோதரர் களுக்கும் உணவளிக்கக்கூடியதான இக் கதரை நாம் ஆதரிக்காவிட்டால் பிறகு நமக்கு என்ன தேசபக்தி, என்ன சகோதர பக்தி என்பதை நாமே சிந்திப்போம். ஒரு நாடு முதலில் அது தன் பொருளாதார விஷயத்தில் மேம் பாடடையாவிடில் மற்ற விஷயங்களில் மேம்பாடடையவே முடியாது. நம் நாட்டில் மக்கள் தங்கள் மனசாட்சிப்படி நடக்கமுடியாமல் இருப்பதற்கே தரித்திரம்தான் காரணம். கோடிக்கணக்கான மக்கள் தொழிலில்லாமலும், உணவில்லாமலும் கஷ்டப்படுகிறபடியால் எவ்வகையாயினும் தங்களுக்கு தொழில் கிடைத்தால் போதுமென்றும் உணவு கிடைத்தால் போதுமென்றும் தங்கள் மனசாட்சியை விற்று ஜீவிக்கிறார்கள். கதர், படித்தவர்கள் என்போருக்கும், பணக்காரருக்கும் தொழிலும், உணவும் அளிக்காது என்பது உண்மையே. ஆனால் சுயராஜ்யம் என்பது உண்மையில் அவர்களுக்கு ஆக அல்ல. அவர்கள் இருவரும் உண்மை சுயராஜ்யத்திற்கு விரோதிகளே. படித்தவர்களுக்கு உத்தியோகம் வேண்டும். பணக்காரருக்கு பணமும் பிரபுத்துவமும் வேண்டும். கதரினால் இவ்விரண்டும் சித்திக்காது. ஆனால் நம் நாட்டில் ஏழை மக்களுக்குத்தான் சுயராஜ்யம் வேண்டும். அவர்கள் வாழ்வதையே மகாத்மா சுயராஜ்ய மெனக் கருதுகிறார். அவர்களுக்காகவே ஒவ்வொரு திட்டத்தையும் வழங்குகிறார். அத்திட்டங்கள் நிறைவேற்றி



RangaRakes
tamilnavarasam.com

வைப்பதையே சுயராஜ்ய சித்தியெனக் கருதுகிறார். இவற்றை ஏற்றுக் கொள்ளாமல் படித்தவர்களான அரசியல்வாதிகளோ ஆங்கிலேயனிட மிருந்து அதிகாரமும், பதவியும் பெறுவதே சுயராஜ்யமெனக் கருதி தங்களுக்கு செல்வாக்கு உண்டாக்கிக் கொள்ள மாத்திரம் மகாத்மாவையும், நிர்மாண திட்டத்தையும் உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். பதவியினாலும், அதிகாரத்தினாலும் நமது நாடு ஒரு நாளும் க்ஷேமமடையாது.

மகாத்மாவின் காங்கிரசுக்கு வருமுன் நாம் கிளர்ச்சி செய்து ஆங்கிலேயரிடமிருந்து இருவகையாக சீர்திருத்தங்கள் என்று சொல்லப்படும் அதிகாரங்களும், பதவிகளும் கிடைக்கப் பெற்றோம். அவைதான் இந்திய மந்திரிகளும் நிர்வாக சபை அங்கத்தினர்களும் மற்றும் சில 1000, 2000, 3000, 5000 ரூ. சம்பளமுள்ள ஸ்தானங்களுமாகும். அவற்றால் நம்நாடு அடைந்த பலன் என்ன? பொறாமைகளும், தேசத்தைக் காட்டிக் கொடுக்கும் தன்மைகளும், ஒற்றுமையின்மையும், இந்து முஸ்லீம் சச்சரவும், பிராமணர் - பிராமணரல்லாதார் வேற்றுமையுமேதான் மலிந்தன.

இவ்வுத்தியோகங்களும், பதவிகளும் இப்பெரும் சம்பளங்களும் இல்லாவிட்டால் நம்நாட்டில் மிதவாதக்கட்சி ஏது? ஜஸ்டிஸ் கட்சி ஏது? சுயராஜ்யக் கட்சி ஏது? ஒத்துழையாமை இறப்பதேது? பதவிகளும், அதிகாரங்களும் மக்களை எவ்வளவு பிரிவாக்கிவிட்டன, எவ்வளவு துவேஷத்தையும் அவநம்பிக்கையும் உண்டாக்கிவிட்டன?

மகாத்மாவால் முன்னோக்கிச் சென்ற நம் நாட்டின் விடுதலை எவ்வளவு பின்னடைந்துவிட்டது? இவற்றால் பொதுமக்களுக்கும், ஏழைகளுக்கும் என்ன லாபம் உண்டாயிற்று? வரிப்பளுவு குறைந்ததா? உண்மைக் கல்வி அறிவு ஏற்பட்டதா? தேசத்திற்கு அதிக வரியும் அதிக கஷ்டங்களுமே ஏற்பட்டன.

இச்சீர்திருத்தங்கள் என்னும் சுயராஜ்யம் நமக்கு ஆங்கிலேயர்களால் வழங்கப்படுமுன், நம் நாட்டிற்கு ஏற்பட்டிருந்த வரி சுமார் 30, 40 கோடியிலிருந்து இப்பொழுது ஒன்றுக்கு நான்காய் 150, 160 கோடிக்கு வந்து விட்டது. இந்திய ராணுவச் செலவு சீர்திருத்தம் இல்லாத காலத்தில் சுமார் 20 கோடி ரூ. இருந்தது. சீர்திருத்தம் ஏற்பட்ட பிறகோ 60, 70 கோடி ரூபாய் வரையில் உயர்ந்திருக்கிறது. இவ்வளவும் நாம் கொடுக்கும் வரி மூலமாய்த்தான் செலவு செய்யப்படுகிறது. நம் படித்தவர்கள் மேலும் மேலும் இதையே தான் சுயராஜ்யம் என்று சொல்லிக்கொண்டு இதற்காகவே பாடுபடுகிறார்கள். இதன் காரணம் என்னவென்றால் இவ்வித அபார செலவிற்கு சர்க்காரால் வசூல் செய்யப்படும் பணங்களெல்லாம் பெரும்பாகம் ஏழைகளிடமிருந்தே அல்லாமல் படித்தவர்களிடமிருந்தல்ல என்பதுதான். அதனால்தான் படித்தவர்கள் தங்கள் சுயநலத்தை கவனிக்கும்போது ஏழைகளை மறந்து விடுகிறார்கள். சாதாரணமாய் நம் நாட்டில் சட்டசபைத் தேர்தல்கள் நடந்த காலத்தில் படித்தவர்களும், பணக்காரரும் அத்தேர்தல்களுக்காக எவ்வளவு ரூபாய் செலவழித்தார்கள் என்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். பத்தாயிரம், இருபதாயிரம், முப்பதாயிரம், சிற்சில தேர்தலுக்கு 50 ஆயிரம் ரூ. கூட செலவழித்ததாகச் சொல்லப்படுகிறது. ஆறுமாத காலத்தில் இவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இவற்றை ஓட்டு சம்பாதிப்பதற்கு என்று செலவழிக்காமல் இதில் ஏற்பட்ட செலவையும், சிரமத்தையும், ஊக்கத்தையும் தீண்டாமை விலக்கு, கதர், மதுவிலக்கு ஆகிய இம்மூன்றின் பிரசாரத்திற்கும் செலவழித்திருந்தால் நம் நாடு எவ்வளவு முன்னுக்கு வந்திருக்கும்? இப்பொழுது சென்னையில் நடக்கும் ஓட்டு வேட்டையை கதர் பிரசாரத்திற்கு நடத்தி வந்தால் எவ்வளவு தூரம் நமது நிர்மாண திட்டங்கள் முற்போக்கடைந்திருக்கும்? இவற்றை அவர்கள் கவனிக்காமல் இவ்விதம் செலவும், சிரமமும் படுவதன் காரணம் ஏழைமக்கள் தங்கள் ஞாபகத்துக்கு வந்ததோ அல்லது சுயநலம் இவற்றைவிட முக்கியமானதாகக் காணப்படுவதோ இவ்விரண்டி லொன்றைத்தான் சொல்லியாக வேண்டும்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியதெல்லாம் மகாத்மாவின் நிர்மாண திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமானால் படித்தவர்களாலும், பிரபுக்களாலும் முடியவே முடியாது. கிராமத்தில் இருக்கும் ஏழைகளும், தொழிலாளிகளும்தான் இவற்றை மேற்கொண்டு நடத்த வேண்டும். கதர் திட்டம் நிறைவேறாமல் தரித்திரம் ஒழியவே ஒழியாது.

தீண்டாமை ஒழிக்கப்பட்டால் அல்லாது ஒற்றுமை உண்டாகவே உண்டாகாது. மதுபானம் விலக்கப்பட்டாலல்லாது ஒழுக்கம் ஏற்படவே ஏற்படாது.

**குடி அரசு - தலையங்கம் - 05.07.1925**



RangaRakes tamilnavarasam.com

# கோபுரத்து மீதிருந்து கூவுவேன்

**–சித்திரபுத்திரன்**

லார்டு லிட்டன் அரசாங்கம் சுயராஜ்யக் கட்சியை வெட்டிப் புதைத்துக் கருமாதியும் செய்துவிட்டது. நமது சுயராஜ்யக் கட்சி வீரர்கள் புதைத்த பிணத்தை எடுத்துக் கொண்டு இன்னும் உயிர் இருப்பதாகவே ஜனங்களுக்குக் காட்டி செத்தப் பாம்பை ஆட்டி வருகின்றனர்.

"இரட்டை ஆட்சியை ஒழித்து விட்டோம் – ஒழித்து விட்டோம்" என்று மாத்திரம் சொல்லிக்கொண்டு பொய் வெற்றிமுரசு அடிக்கிறார்கள். லார்டு லிட்டனோ இவர்களுக்குப் புத்தி வரும் வரை இதுதான் இவர்கள் தலையெழுத்து என்று சொல்லிவிட்டார். இந்த நிலையில் சுயராஜ்யக் கட்சித் தலைவர்களுக்கு இனிமேல் என்ன செய்கின்றதென்கிற விஷயத்தில் தங்களுக்கும் புத்தி இல்லாமல் போய்விட்டது. சொல்புத்தி கேட்பதற்கும் சொல்லுவாரற்றுப் போய்விட்டது. சுயராஜ்யக் கட்சியார் முட்டுக்கட்டை போடுவோம் என்று ஜனங்களிடை வீரப்பிரதாபம் பேசும்பொழுதே எப்படிப் போடப்போகிறீர்களென்று பொது ஜனங்கள் கேட்டார்கள். மந்திரிகளை ஒழித்து அரசாங்கத்தை அழித்துவிடுவோம் என்று சொன்னார்கள். மந்திரிகளை ஒழித்துவிட்டால் அரசாங்கத்தாருக்கு லாபமேயன்றி நஷ்டமில்லை. அதற்குமேல் என்ன செய்யப் போகின்றீர்களென்று கேட்டார்கள். செய்வதின்னதென்று அந்த சமயத்தில் நாங்கள் சொல்லுவோம் என்று சொன்னார்கள். அந்த சமயமும் வந்துவிட்டது; இன்னது செய்வதென்று தெரியாமல் விழிக்கிறார்கள். யாரிடத்தில் போனாலும் ஆதரவைக் காணோம். மகாத்மா காந்தியோ இவர்களுக்குப் புத்தி வரும்வரை ஒன்றும் சொல்லப்போவதில்லையென்கின்ற முடிவின் பேரில் இவர்கள் கூடவே சும்மா இருந்து கொண்டிருக்கிறார்கள். மிஞ்சியிருக்கும் தலைவர்களோ எல்லாருக்கும் மூக்குப்போய்விட்டால் யாரை யார் மூக்கரையன் என்று கூப்பிடுவார்களென நினைத்துக் கொண்டு எல்லோரையும் தங்கள் கட்சியில் சேருங்கள் என்று ஜனங்களைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். "வேகின்ற வீட்டில் பிடுங்கியது லாபம்" என்பதுபோல் சிலர் இந்த சமயத்தில் முனிசிபாலிட்டியிலும், தாலூகா போர்டிலும், ராஜாங்க சபையிலும் பதவி பெற மிகவும் அவசரமாய் அலைந்து கொண்டிருக்கின்றனர். தமிழ்நாட்டில் இருக்கும் சுயராஜ்யக் கட்சிக்கோ கட்சி எப்படி ஆயினும் சரி, சுயராஜ்யம் எப்படி ஆயினும் சரி, பிராமணர்களுக்கு



எப்படி உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பது என்பதுதான் அவர்களுடைய திட்டம்.

அவர்கள் சென்ற வருஷத்தில் சென்னைக் கார்ப்பரேஷன் தேர்தலின்போது முதல் முதல் ஜனங்களை ஏமாற்ற வேண்டியிருந்ததால் எல்லா அபேட்சகர்களையும் பிராமணரல்லாதவர்களாகவே போட்டு தங்களுக்கு வகுப்பு வித்தியாசம் இல்லையென்று ஜனங்கள் நம்பும்படியாக நடந்து நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொண்டார்கள். இப்பொழுது இந்த வருஷத்திய தேர்தல்களுக்கோ பிராமண அபேட்சகர்களையே அளவுக்கு மிஞ்சி கொண்டுவந்து நிறுத்தி அபாரப் பிரசாரங்கள் நடைபெறுகின்றன. ஒரு வருஷத்திலேயே இவ்வளவு மாறுதல்கள் இருக்கும்பொழுது இன்னும் அடுத்த வருஷம் எப்படி நடக்கும் என்பதை வாசகர்களே கவனித்துக் கொள்ள வேண்டும். ராஜாங்க சபையிலும் இதே மாதிரியாகவே சுயராஜ்யக் கட்சி என்கின்ற பெயர் வைத்து எல்லா ஸ்தானங்களும் பிராமணர்களுக்கே கிடைக்கும்படியான மாதிரிக்கு பிரசாரங்கள் ஆரம்பமாகிவிட்டன. "பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடிப்பதுபோல்" சுயராஜ்யக் கட்சியின் பெயரால் தமிழ்நாட்டில் அட்டகாசம் செய்யப்பட்டு வருகின்றது. பிராமணர்களே கூடாதென்றாவது, பிராமணரல்லாதார்களே இருக்க வேண்டுமென்றாவது என்னுடைய அபிப்பிராயமல்ல. மிதவாதக் கட்சியின் பெயர் சொல்லிக் கொண்டு பிராமணர்கள் பட்டமும், பதவியும், உத்தியோகமும் பெறுவதைப் பற்றியாவது, ஜஸ்டிஸ் கட்சியின் பெயரைச் சொல்லிக்கொண்டு பிராமணரல்லாதார் பட்டமும், பதவியும், உத்தியோகமும் சம்பாதிப்பதைப் பற்றியாவது நமக்குக் கவலையில்லை. அதற்காகவே அவர்கள் கட்சி வைத்திருக்கிறார்கள். காங்கிரஸ் பெயரையும், மகாத்மா பெயரையும் சொல்லிக்கொண்டு எத்தனையோ தேசபக்தர்களும், தொண்டர்களும் செய்த தியாகத்தையும், அவர்கள் ஜெயிலுக்குப்போய் அனுபவித்த கஷ்டங்களையும் "கரையான் புற்றெடுக்க பாம்பு குடிவருவதுபோல்" சில பிராமணர்கள் உபயோகப் படுத்திக் கொள்ளப் பார்ப்பது யோக்கியமாகுமா? இதை அனுமதிக்கலாமா? என்பதுதான் எனது கேள்வி. அல்லது காங்கிரஸ்காரர்கள் போய்த்தான் ஆக வேண்டும். அவர்கள் ஷை இரண்டு கட்சிக்காரரைவிட யோக்கியர்கள் என்று சொல்லவருவார்களேயானால் அவரவர்களுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தபடி பதவி, பட்டங்கள் உபயோகப்பட வேண்டுமென்பதுதான். பிராமணரல்லாத மற்றவர்களில் இந்த ஸ்தானத்திற்குத் தகுதி உள்ளவர்கள் இல்லையென்கின்ற முடிவுக்கு நாம் வந்துவிட்டால் பிறகு என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். தகுந்த ஆட்கள் இருக்கிறார்களென ஒப்புக் கொண்டு அவர்களுக்காகவே தாங்கள் பாடுபடுவதாக வேஷமும் போட்டு, சமயம் வருகிற காலத்தில் இம்மாதிரி மோசம் செய்வதும் அதற்கு ஏற்ற மாதிரி ஒரு கட்சியை அமைத்துக்கொண்டு பொது நன்மைக்கு என்று சொல்லிக் கொண்டிருந்தால் எத்தனை காலத்திற்கு ஜனங்கள் ஏமாறுவார்கள்! கொஞ்ச காலத்திற்கு எல்லோரையும் ஏமாற்றலாம். கொஞ்சம் பேரை எப்பொழுதும்



RangaRakes
tamilnavarasam.com

ஏமாற்றலாம். எப்பொழுதும் எல்லோரையும் ஏமாற்ற முடியாது என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. இந்தப் பழமொழி சுயராஜ்யக் கட்சிக்காரருக்கு ஞாபகத்திற்கு வரும்படியாக தமிழ் மக்கள் எப்பொழுது நடந்துகொள்கின்றனரோ அப்பொழுதுதான் தமிழ்நாட்டுக்கும், தமிழர்க்கும் விடுதலையும், சுயமரியாதையும் ஏற்படும் என்பதை கோபுரத்து மீதிருந்து கூவுவேன்.

**குடி அரசு - கட்டுரை - 05.07.1925**



# தமிழர் கதி

வைக்கம் சத்தியாக்கிரகமும் சேரன்மாதேவி குருகுலப் போராட்ட மும் தமிழ் மக்களுக்கு தங்கள் நாட்டில் தங்களுக்கு ஏதாவது சுயமரியாதை உண்டா என்பதைப் பற்றியும் இந்து மதத்தில் தங்களுக்கு ஏதாவது இடமுண்டா என்பதைப் பற்றியும் தீர்ப்பளிக்கப் போகின்றது. இது தமிழர்க்கோர் பரீட்சை காலமாகும். வைக்கம் சத்தியாக்கிரகமோ தமிழரைப் பார்த்து நான்கு வீதியில் மூன்று வீதிகளை உங்களுக்குத் திறந்து விட்டாய்விட்டதே ஓர் வீதியில்தானா உங்களுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிட்டது? இதற்காக இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டம் செய்கிறீர்களே இதென்ன பயித்தியமா என்று கேட்கிறது. குருகுலப் போராட்டமோ பதினெட்டுப் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடத்தில் பதினேழு பிள்ளைகள் ஒன்றாக உட்கார்ந்து கொண்டு சாப்பிட்டுக் கொண்டு ஓர் பிள்ளை மாத்திரம் தான் சாப்பிடுவதை மற்றவர்கள் பார்க்கக் கூடாதென்றால் என்ன குடி முழுகிப் போய் விட்டது? இதற்காகவா இவ்வளவு பெரிய கிளர்ச்சி தமிழ்நாட்டில் நடக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்வதல்லாமல், உட்சண்டைகளையும் கிளப்பி விட்டுக் கொண்டிருக்கிறது. வைக்கம் சத்தியாக்கிரகமும் குருகுலப் போராட்டமும் அந்த வீதிகளில் நடப்பதினாலும், ஒரு குழந்தை உண்பதைப் பார்ப்பதினாலும் தமிழர்களுக்கு மோட்சம் கிடைத்துவிடும் என்கிற எண்ணத்தைக் கொண்டதல்ல. வீதிகளில் நடக்கக்கூடாதென்று சொல்லும் பொழுதும், கண்ணால் பார்க்கக் கூடாதென்று சொல்லுகிற பொழுதும், சொல்கிறவர்கள் மனதில் என்ன நினைத்துக் கொண்டு எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு சொல்லுகின்றனர் என்பதைப் பற்றித்தான் யோசிக்க வேண்டும். அன்னிய மதஸ்தர்களான மகம்மதியர்கள், கிருஸ்தவர்கள், பார்சிகள் முதலியோர்கள் நடக்கலாம். பன்றி யும், நாயும், பூனையும், எலியும் வீதியில் நடக்கலாம்; சாப்பிடும் பொழுதோ இதர சமயங்களிலோ பார்க்கலாம்; ஆயிரக்கணக்கான வருஷங்களாக தமிழ்நாட்டில் பிறந்து, தமிழ்நாட்டில் வளர்ந்து, தமிழ் நாட்டைத் தன்னுடைய தாக்கிக் கொண்டிருக்கும் இந்துவாகிய தமிழனை அவனுடைய நாட்டில் மற்றொருவன் “நீ வீதியில் நடக்காதே, என் முன் வராதே” என்று சொன்னால் மனித உடல் தரித்திருக்கும் ஒரு ஜீவன் அதை எப்படி சகித்துக் கொண்டி ருக்கிறது என்பதுதான் வைக்கம் சத்தியாக்கிரகத் தினுடையவும் குருகுலப் போராட்டத்தினுடையவும் தத்துவம். இதே தத்துவத் திற்காகத்தான் மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் செய்த சத்தியாக் கிரகமும், கெனிய



RangaRakes tamilnavarasam.com

ஏகாதிபத்திய பகிஷ்கார தினக் கொண்டாட்டமும் நடத்தப் பட்டனவென்பதை ஞாபகப்படுத்திப் பாருங்கள்.

**குடி அரசு - கட்டுரை - 05.07.1925**



# ஈரோடு நகரசபை நிர்வாகம்

**- பழைய கறுப்பன்**

ஈரோடு நகரசபையின் அமைப்பும், நிர்வாகமும் மிகவும் சீர்கேடான நிலைமையில் இருக்கின்றன. தற்போது உள்ள நகரசபையின் நிர்வாகத் திறனைக் காண்போர் ஒவ்வொருவரின் உள்ளத்தினும் நகரமாந்தரின் நலத்திற்காக நகர சபையா? நகர சபைக்காக நகர மாந்தரா? நகரசபை நிர்வாகிகளுக்காக நகரசபையும், நகர மாந்தர்களுமா? என்ற எண்ணங்கள் குடி கொண்டிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. நகரசபையின் அமைப்பைப் பற்றியும், நிர்வாகத்தைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். அவைகளை நன்கு ஆலோசித்து தக்கது செய்ய வேண்டியது ஈரோடு நகர மாந்தர்களின் கடன்.

## தத்துப்பிள்ளைகள் தலைவரானார்கள்

நகரசபையின் தலைவர் ஒரு வக்கீல், உபதலைவர் ஒரு டாக்டர். இவ்விருவர்களும் சில வருஷங்களுக்கு முன் தங்களுடைய தொழிலை முன்னிட்டு பிறந்த ஊர்களை விட்டு விட்டு இவ்வூரில் குடி ஏறினவர்கள். ஆகவே இவர்கள் ஈரோட்டார் அல்ல. ஆனால், பிற ஊரார் வேறு ஊரில் சில வருஷங்கள் வசித்தால் தாம் அண்டின ஊரின் தத்துப்பிள்ளைகள் ஆய் விடுகின்றனர் என்ற விதி சில நாடுகளில் இருக்கக் காண்கிறோம். அவ்வகையில் இவ்விருவர்களும் ஈரோட்டின் தத்துப்பிள்ளைகளாக ஆயினர். ஈரோட்டாரின் உரிமைகள் இவர்களுக்கும் உண்டு. ஆகவே, தற்காலம் இவர்கள் வகித்துவரும் பதவிகளுக்கு இவர்களுக்கு உரிமை உண்டு. அதை மறுக்க நமக்கு உரிமையில்லை. ஆனால் "ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்ற பழமொழி தமிழில் உண்டு. இத் தமிழ்ப் பழமொழியைப் பெற்ற தமிழர்கள் தத்துப்பிள்ளைகளின் ஆதரவிற்கு உட்படாமல் என் செய்யமுடியும் ? ஈரோடு மாந்தரின் தலைவிதி. இதுநிற்க.

## நகர சபையில் இரட்டை ஆட்சி

'இரட்டை ஆட்சி' என்பதை அறியாத தமிழர் கிடையாது; ஆகையால் ஈரோட்டாரும் இதை அறிந்துதான் இருக்க வேண்டும். இந்திய ஆங்கில அரசாங்கத்தில்தான் இந்த முறை என்று அநேகர் நினைத்துக் கொண்டி



RangaRakes tamilnavarasam.com

ருப்பார்கள். இந்த விதமான ஆட்சி நகரசபைகளில் இருப்பதை ஒருவரும் அறியமாட்டார்கள். பாவம்! ஈரோடு நகரசபை ஒன்று இருப்பது இவர்களுக்குத் தெரியாது. அதனால் அந்த மூட எண்ணம் "இரட்டை ஆட்சி" ஈரோடு நகரசபையில் ஸ்தாபிதம் செய்யப்பட்டு விட்ட சந்தோஷகரமான செய்தியைத் தமிழ்நாட்டாருக்கு இந்தக் குடி அரசின் மூலம் அறிவித்துக் கொள்ளுகிறேன்.

எந்த நகரசபையிலும் காணாத 'இரட்டை ஆட்சி' எங்களூர் நகரசபையில் எவ்வாறு ஏற்பட்டது என்பதை அறிய அநேகர் ஆவல் கொள்வார்கள். அவர்களுக்கு அதன் பிறப்பு, வளர்ப்பைப் பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நகரசபையின் தலைவருக்கும், உபதலைவருக்கும் ஏற்பட்ட ஊடல் இரட்டை ஆட்சி என்னும் குழந்தையைப் பெறத் துணை செய்தது. ஊடல் உண்டாவதெல்லாம் இரண்டு உயிர் அன்பர்களுக்குள்தான். இது உலக இயற்கை. இயற்கை எங்கும் - எவ்விஷயத்திலும் மாறாது. இரு தலைவர்களும் முதலில் ஒரே கட்சியில் மும்முரமாக உழைத்து வந்தார்கள். எமது தலைவர் தமது தற்காலப் பதவியைப் பெற எமது உபதலைவர் பட்டபாடுகள் விவரிக்க முடியாது. அல்லும் பகலும் ஓயாமல் உழைத்து எமது தற்காலத் தலைவரை எமக்குத் தந்தார். ஆகவே, இருவர்களின் நேசத்தைப் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. இருவரும் அதிகாரப் பதவி பெற்றார்கள். மனமொத்து ஒரே கட்சியில் இருந்து வந்த இரு நண்பர்களுக்கிடையே அதிகாரம் என்ற பேய் குறுக்கிட்டு ஊடலை உண்டாக்கிற்று. இந்த ஊடல் நகரசபைக்கு சிப்பந்திகள் நியமிக்கும் விஷயத்தில் சண்டையை விளைவித்தது. தலைவர் நியமித்த சிப்பந்தியை உபதலைவர் ஓட்டி விடுகிறது; உபதலைவர் நியமித்த சிப்பந்தியை தலைவர் வெளியே தாட்டி விடுகிறது. இவர்களின் ஊடல் நகரசபைச் சிப்பந்திகளுக்குச் சனியனாக விளைந்தது. இது எப்படி முடியும் என்று அநேகர் நினைக்கலாம். காரணம் சொல்லுகிறேன். எங்கள் தலைவருக்கு வெளியூரில் அடிக்கடி வேலையுண்டு. அவர் இல்லாத காலத்தில் உபதலைவர் அவர் வேலைபார்த்து வருவதென்பது சட்டம். ஆகவே, தலைவர் ஊரில் இல்லாவிட்டால் உபதலைவருக்குக் கொண்டாட்டம்தான். அவர் இஷ்டத்தை முடித்துக் கொள்ள அதுதான் காலம். சிப்பந்தி நியமன விஷயத்தில் இவ்வளவு சண்டைகள் போட்டுக்கொள்ள என்ன காரணமோ? ஈஸ்வரனுக்குத்தான் தெரியும். நாம் தலைவராகச் செய்து வைத்த ஒருவர் தமது இஷ்டம் போல் நடக்க மறுக்கிறார் என்ற காரணமாக இருக்கலாம் உபதலைவருக்கு. தலைவரின் அதிகாரத்தில் ஒருவர் தலையிடக் கூடாதென்ற காரணமாக இருக்கலாம் தலைவருக்கு. இருவரும் எனக்கு அந்தரங்க நண்பர்கள் அல்ல. ஆகையினால் உண்மைக் காரணம் இன்ன தென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. இப்படித்தான் இருக்கக்கூடும் என்று தானே இந்த நிலைமையில் சொல்லக்கூடும். இருவர்களும் இந்த மர்மத்தை ஈரோடு நகர மாந்தர்களுக்கு விளக்க முன் வருவார்களானால் அவர்களுக்கு ஆயிரம் நமஸ்காரம். 'இரட்டை ஆட்சி'யை மறந்து விட்டதாக நேயர்கள் நினைக்க



வேண்டாம். இந்த சண்டைகளினால் அலுத்துப்போய் இருவர்களும் ராஜி செய்து கொண்டார் போலத் தெரிகின்றது. நகரசபை நிர்வாகத்தில் சில இலாகாக்களைத் தலைவரும், சில இலாகாக்களை உப தலைவரும் வைத்துக் கொள்வதென்பதுதான் ராஜியின் முடிவு. இவ்வாறு 'இரட்டை ஆட்சி' ஸ்தாபிதமாயிற்று.

இவ்விதம் இருவரும் ஒருவாறு ஒன்றானார்கள். ஊடலின் முடிவு கூடல்தானே. இரட்டை ஆட்சிக் குழந்தை பிறந்து இரண்டொரு மாதங்கள் தான் ஆயின. ஆகையினால், அதன் வளர்ப்பைப் பற்றி என்னை ஒருவரும் கேட்கக்கூடாது. இன்னும் சில நாள் சென்றால் நானே சொல்லுகிறேன். அதுவரை நீங்கள் பொறுத்துக்கொண்டுதான் இருக்கவேண்டும். இவ்வளவு கண்டிப்புக்காக மன்னிக்க வேண்டும்.

## நகரசபை ஆபீஸ் தலைவர் வீடு

எங்கள் தலைவருக்கு நகரசபைக் கட்டிடம் தெரியுமோ தெரியாதோ எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மாத்திரம் தெரியும். நகரசபை வேலையெல்லாம் தலைவர் வீட்டிலேயே நடந்து வருகின்றன. நகர சபை சிப்பந்திகளைத் தினந்தோறும் காகிதக் கட்டுகளுடன் தலைவர் வீட்டில் காணலாம். நகரசபை வேலைகள் தலைவர் வீட்டிலேயே நடக்கும்போது, நகரசபை கூடும் கட்டிடத்தைத் தவிர வேலை செய்யும் கட்டிடத்தை வாடகைக்குக் கொடுத்து விட்டால் நகர சபைக்கு நல்ல வருமானம் கிடைக்கும். ஆனால் ஒரு தடை, இரட்டை ஆட்சி இல்லாமல் இருந்தால் இந்த யோசனையை ஒருவேளை நகரசபையார் அங்கீகரிக்கக்கூடும். உபதலைவர் இலாகா வேலைகள் நகரசபைக் கட்டிடத்தில் கவனிக்கப்பட்டு வருவதாகக் கேள்வி. கட்டிடத்தை வாடகைக்கு விட்டுவிட்டால் பாவம் ! அவர்கதி என்ன வாகும். எதற்கும் என் யோசனையை நகரசபை அங்கத்தினர்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

## பெருமாளுக்குப் பதிலாக "பெத்த" பெருமாள்

எங்களூர் நகரசபையாருக்கு சுகாதார விஷயத்தில் மிக்க கவலை. ஆகவே, சுகாதாரக் கேடான காரியங்களைக் கவனிக்காமல் இருக்க முடியாதல்லவா? லார்டு நேப்பியர் வீதியும், ஈஸ்வரன் கோவில் வீதியும் சந்திக்குமிடத்தில் ரோட் மார்ஜனில் சிலர் பலகாரக் கடைகள் வைத்து வியாபாரம் செய்து வந்தனர். அவைகள் எல்லாம் 'மிலிடேரி' கடைகள். பக்கத்தில் விநாயகர் கோவில். பின்னால் நகரசபை அங்கத்தினரும் பணக்காரருமான ஒருவருடைய வியாபாரக்கடை. பலகாரக் கடைக்காரர்கள் அங்கு இருந்ததினால் சுகாதாரக் கேடான காரியங்கள் நிகழ்ந்ததென்பது வாஸ்தவமே. கடைகளோ மிகச் சிறியது; எப்பொழுதும் குளம்போல முன்னால் தண்ணீர் இருந்த வண்ணம் தான் கொசுக்களுக்குத் தாயகம். இவ்வளவு சுகாதாரக் கேட்டை விளைவிக்கும் கடைகளை எடுத்துவிட வேண்டுமென நகரசபையார்



RangaRakes tamilnavarasam.com

தீர்மானித்தனர். 'சிவில்' விநாயகருக்கு 'மிலிடேரி' உணவு பக்கத்தி லிருப்பது இந்துக்களுக்குப் பிடிக்கவில்லை. இந்துக்களின் உணர்ச்சியை மகம்மதிய நண்பர்கள் மதித்து அவைகளை எடுத்துவிட வேண்டுமென்று கூறியதற்கு என்னுடைய வந்தனம். கடைகளை எடுத்துவிடக் காரணம் சுகாதாரக்கேடு - விநாயகர் ஆகிய இரண்டும்தான். இந்த இரண்டு காரணங் கள் தீர்மானித்த காலத்தில் வாயாரச் சொல்லிக்கொண்டது. கடைகள் எடுக்கப் பட்டு விட்டன. மிகவும் சந்தோஷம்! போதும் உங்கள் சந்தோஷம்; தயவு செய்து அடக்கிக் கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். பலகாரக் கடை விஷயம் இன்னும் முடியவில்லை. ஷை கடைக்காரர்கள் எல்லாம் இப்பொழுது முன்னிருந்த இடத்திற்கு 50 அடி தள்ளி குடிசைகள் கட்டி வியாபாரம் செய்து வருகிறார்கள். எங்கே? ரோட் மார்ஜனிலா? இல்லை, இல்லை. ரோட்டின் மேலே சாக்கடைகளை மூடி. பழைய நிலைமை யில் ஷையார் உபயோகிக்கும் தண்ணீர் சாக்கடையிலாவது போயிற்று. இப் பொழுதோ நடுரோட்டிலே தான். எச்சில் இலைகளெல்லாம் நடுரோட்டில் தான். நகரசபையாரின் சுகாதார உணர்ச்சியை நேயர்கள்தான் மெச்ச வேண் டும். சுகாதாரம் சுகாதாரம் என நகரசபையில் முன்னமே கூச்சல் போட்ட தெல்லாம் மாய்மாலம் என்பது வெளியாய்ப் போய்விட்டது. 'விநாயகர்' கூச்சல் எல்லாம் வெறும் வார்த்தைகள் என்பதும் நிச்சயம். 'மிலிடேரி' உணவின் வாசனை 50 அடி தூரத்திலுள்ள விநாயகருக்கு எட்டாமல் போனால் அவருக்கு இந்துக்கள் "கௌரவமான கல்லறை அடக்கம்" செய்ய வேண்டியது. ஆகவே, அவர்கள் கூறின இரண்டு காரணங்களும் சரியல்ல என்பது நிச்சயம். வேறே காரணம் அவசியம் இருக்க வேண்டும். ஷை கடை கள் பழைய இடத்தில் இருந்த காலத்தில் அவைகளுக்குப் பின்னால் இருந்த மண்டி வியாபாரக் கடையாருக்கும் இடைஞ்சல் இருந்திருக்கலாம். நண்பர் கள் உதவி செய்தார்கள் போலும்! இல்லையென்றால், தங்கள் நடவடிக்கைக் குத் தக்க சமாதானம் ஈரோடு மாந்தருக்குச் சொல்ல நகரசபையார் கடமைப் பட்டிருக்கிறார்கள் - கடமை ஏட்டுச் சுரைக்காய்தான் என்றால் நான் ஒன்றும் பேசவில்லை.

## ஜனங்கள் நொண்டியடிக்கிறார்கள்

வேறு சங்கதிக்குப் போகலாம். ஈரோட்டில் நகரசபை ரோட்டுகளில் நடக்கப்போகிறார் என்று வீட்டை விட்டவுடனே எப்படியோ என்னுடைய கால்கள் அறிந்து கொள்ளுகின்றன. பாவம்! அவைகள் கெஞ்சுவதைக் காண எனக்கு மனம் வருந்துகிறது. ஆனால் என்ன செய்வது? காலா சோறு போடுகிறது? கொஞ்ச நாளாக எங்களூரில் வருண பகவானுடைய கிருபை அதிகம். வறண்டு கிடக்கிற காங்கயம் முதலான இடங்கள் அந்த பகவானுக் குக் கண் தெரியவில்லை. வேண்டாம் வேண்டாம் என்றாலும் எங்களை விடுவதில்லை - பாவம்! எங்களூர் நகரசபையாரின் நிர்வாகத்திறன் அந்தப் பகவானுக்குத் தெரியவில்லை. பீஷர் வீதி கொஞ்சம் முக்கியமான வீதி. சந்தைப்பேட்டை அந்த வீதியில்தான் இருக்கிறது. சந்தை வியாபாரப் போக்குவரத்தும் அங்கேதான் அதிகம். நகரசபையாரை சற்று சந்தைப் பேட்டைக்கு முன்னால் எழுந்தருளி தங்கள் பாத தரிசனத்தை அந்த ரோட்டுக்குத் தந்தருளுமாறு வேண்டுகின்றேன். கருங்கல்பாளையம் ரோடு களில் ஓடுகின்ற நாய்கள் எல்லாம் கொஞ்ச தூரத்தில் காலை நொண்டி அடிக்க ஆரம்பித்து விடுகின்றன. மனிதர் சங்கதி சொல்ல வேண்டுமா? நகர சபையாருக்கு ஒரு யோசனை. நகரசபையின் ஆதரவில் ஒரு பாதரட்சைக் கடை திறந்து வைத்து விலையில்லாமல் - முடியாதென்றால் குறைந்த விலைக்காவது நகர மாந்தர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யும்படியாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன். அவ்விதம் செய்வார்களானால் பல்லாயிரம் ஜனங்களின் ஆசீர்வாதத்தையும் வாழ்த்தையும் பெற்று நெடுங்காலம் சுக ஜீவர்களாக இருப்பார்கள். பெரும் புண்ணியமும் உண்டு. ஆனால் இந்த வம்பனுடைய யோசனையை யார் கேட்கப்போகிறார்கள்.

## இருட்டுக்கு வரி

எங்களூர் முழுவதிலும் மின்சார விளக்குப் போடவேண்டுமென்ற உத்தேசம் நகரசபையாருக்கு இருப்பதாக அறிகிறேன். அவ்விதம் ஏற்பட்டு விட்டால் ஈரோட்டை என்னவென்று அழைப்பது என்று எனக்கு இப் பொழுதே யோசனை. தேவலோகத்தில்தான் இருட்டே இல்லை என்கிறார்கள். ஆகையினால் ஈரோட்டை "தேவலோகம்" என்று அழைக்கலாம் என்று யோசனை கூறுகிறேன். இந்த யோசனையின் கதி அதோகதி தான் என்பதும் தெரியும். காரணம் அறிய விரும்பலாம். தேவலோகம் இந்து பெயராயிற்று. இங்கிலீஷ்காரர்கள் கோபித்துக் கொள்வார்கள். என்ன செய்வது? கொஞ்ச வருஷங்களுக்கு முன் நமது ஊரில் நகரசபையார் கட்டின மார்க்கெட்டுக்கு நாமகரணஞ் செய்தது ஞாபகம் இருக்கலாம். ஹெம்மிங்வே மார்க்கெட் என்பது அதன் திருநாமம். இங்கிலீஷ்காரர்கள் பெயரை வைக்காவிட்டால் அவர்கள் கோபித்துக் கொண்டு இந்தியாவை விட்டுப் போய்விடுவார்களே! அப்பொழுது நம் கதி என்ன? முட்டாள் நான், இந்த யோசனை எனக்கு முன்னமே தோன்றாமல் என்னமோ உளறினேன். நகர சபையார் மன்னிப் பார்களாக.

ஆனால் இன்னொரு விஷயம். மின்சார விளக்குதான் வரப்போ கிறதே; அதற்குள் கொஞ்சம் இருட்டில்தான் நம்மவர் இருந்தால் என்ன என்று தற்காலம் நகரசபையார் நினைக்கிறார்கள் போலும். வாஸ்தவம். நிழலின் அருமை வெயிலில் தானே தெரியும். இருட்டில் இருந்து வந்தால்தானே மின்சார வெளிச்சத்தின் வேகம் தெரியும். நகரசபையார் இந்த ஊரில் சுமார் 15 காஸ் லைட்டுகள் போட்டு வருகிறார்கள். அவ்வேலை காண்ராக்ட்டில் நடந்து வருகிறது. சென்ற அமாவாசையன்று காலை 3.30 அல்லது 4 மணிக்கு ஈரோடு ரயில்வே ஸ்டேசனுக்குப் போக வேண்டியிருந்தது. பெண்டு



RangaRakes tamilnavarasam.com

பிள்ளைகளுமாகச் சுமார் 12 பேர்கள் போனோம். எங்கள் வழி லார்டு நேப்பியர் வீதிதான். அந்த வீதியில் 6 காஸ் லைட்டுகள் இருப்பதாக என்னுடைய நம்பிக்கை. தப்பாயிருந்தால் தயவு செய்து திருத்தினால் ஒப்புக் கொள்ளுகிறேன். ஈரோடு மரப்பாலத்தருகில் ஒரே ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. எல்லா விளக்கும் தூங்கிக் கொண்டிருக்கும்போது இந்த விளக்குக்கு வந்த கேடென்ன என்று யோசித்து இங்குமங்கும் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனேன். இன்னும் இரண்டு விளக்குகள் கண்ணுக்குத் தென்பட்டன. எங்கே ? காரை வாய்க்கால் ரோட்டில். இந்த மூன்று விளக்குகள் மாத்திரம் எரிய என்ன காரணம் என்று யோசித்துக் கொண்டே முடிவுக்கு வராமல், ரயிலுக்கு டிக்கட் வாங்கி எல்லோருமாக ............................க்குப் போய் விட்டோம். ஆனால், இந்த சங்கதி மாத்திரம் என் மனதைவிட்டு அகலவேயில்லை. என் மூளைக்கும் எட்டவில்லை. ஒரு நண்பரிடம் இதைப்பற்றிச் சொன்னேன். அவர் ஒரு காரணம் சொன்னார். அது என்னமோ எனக்கு அவ்வளவு நல்ல காரணமென்று தோன்றவில்லை. ஆனால், அவர் சொன்ன காரணத்தைச் சொல்லி விடுகிறேன். இதைப் படிப்பவர்கள் என்ன முடிவு செய்து கொண்டாலும் சரி. காரணம் இதுதான். நகரசபைத் தலைவர் வீட்டுக்கு முன்னாலும் பின்னாலும் தான் அமாவாசை ராத்திரியிலுங்கூட காஸ் லைட் எரியாவிட்டால் காண்ட்ராக்டர் கதி என்னவாகிறது என்பதுதான். அது எப்படியோ போகட்டும். இன்னொரு முக்கியமான சங்கதி. காஸ் லைட் காண்ட்ராக்ட்டு வருஷா வருஷம் கொடுப்பது வழக்கம். இந்த வருஷம் இரண்டு வருஷத்திற்கு ஒட்டுக்காக நகரசபையார் கொடுத்து விட்டார்களாம். இப்பொழுதுள்ள காண்டிராக்டர் தான் போன வருஷமும் இவ்வேலை செய்தவர். அக்காலத்தில் அவருடைய வேலையின் திறமையைப்பற்றி அப்பொழுதுள்ள நகரசபை அங்கத்தினர்களும், தலைவரும் ஷியாருக்குக் கொடுத்திருக்கும் "நற்சாட்சி" பத்திரங்களை இப்பொழுதுள்ள நகரசபையார் வெளியிடுவார்களா என்று கேட்கிறேன். எனக்குப் பதில் யார் சொல்வார்களோ தெரியாது.

## திருடனுக்குப் பதிலாக பக்காத் திருடன்

தற்கால நகரசபையார் ஈரோட்டாரின் சுகாதாரத்திற்காகப் பாடுபடுகிற சங்கதியை முன்னமே சொன்னேன். இன்னொரு சங்கதி. ஈரோட்டிற்குப் புதிதாக ஒரு விருந்தாளி வந்திருக்கிறார். நமது நகரசபையாரின் தண்ணீர் தர்மத்தைக் காணவே வந்திருக்கிறார். மலேரியா ஜுரம் ஈரோட்டில் கிடையவே கிடையாது. தண்ணீர்க் குழாய் ஏற்பட்ட நாள் தொட்டு மலேரியா ஜுரம் நடமாடுகிறது. ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இருந்தால் போதாது. வீணாகிற தண்ணீரும் கெட்ட தண்ணீரும் நகர எல்லையை விட்டு ஓடிப் போனாலல்லவோ கொசு ராஜாவின் பரிபாலனம் இல்லாமல் இருக்கும். குழாயில் இருந்து வரும் ஜலமெல்லாம் குழாய்க்கு அடியிலே குட்டையாகத்தான்; மீறினாலோ, ரோட்டிலேதான். சரியாக சாக்கடைகள் கட்டி, தண்ணீரை வெளியேற்றினால் அல்லவோ நிலம் காய்ந்து கொசுக்கள் இல்லாமல் இருக்கும். கொசு ராஜாவின் இளங்குமாரன்தான் நமது மலேரியா ஜுரம். நகரசபை ஆஸ்பத்திரிகளில் எத்தனை பேர் மலேரியா ஜுரத்திற்காக வருகிறார்கள், போகிறார்கள் என்பதை நகரசபையார் ஒரு நாளைக்குச் சென்று பார்த்தால் சங்கதி தெரியும். நல்ல தண்ணீர் ஜனங்களுக்குக் கொடுத்து காலரா என்ற வியாதியை ஊரை விட்டு ஓட்டின புண்ணியம் நகரசபையாருக்கு உண்டென்பதை மறக்கவில்லை. திருடனைத் துரத்திவிட்டு பக்காத் திருடனைக் கொண்டு வந்த மாதிரியல்லவோ இருக்கிறது காலராவை யோட்டி மலேரியாவைக் கூட்டிவந்தது. காலராவோ மனிதனை இரண்டொரு நாளில் முடிவு செய்துவிடுகிறது. மலேரியா மனிதனை வாட்டி, வாட்டி சித்திரவதை செய்கிறதென்பதை நகரசபையாருக்கு நான் சொல்ல வேண்டிய தில்லை. 'தாடி பற்றி எரியும் போது சுருட்டுக்கு நெருப்புக் கேட்டான் ஒருவன்' என்பார்கள். அந்த மாதிரி இருக்கிறது நமது நகரசபையார் காரியம். மலேரியா ஜனங்களை வாட்டுகிறது. சாக்கடை கட்டுகிற சத்தமே காணோம். குளிர் காய்ச்சலினால் வருந்துகிற ஜனங்கள் முக்காடு போட்டுக் கொண்டு கஷ்டப்பட்டு நல்ல காற்று வாங்குவதற்காக "சிங்கார நந்தவனங்கள்" ஏற்படுத்தும் முயற்சியில் நமது நகரசபையார் இறங்கியிருக்கிறார்கள்! உண்மையாக இந்த ஊரின் சுகாதாரத்தைத் தேடினால் இந்தக் கடைகளையெல்லாம் கட்டிவிட வேண்டும், அவைகளைப் பின்னால் திறந்து கொள்ளலாம். அவசியமான செலவு போக மிச்சமாகும் ஒவ்வொரு தம்பிடியையும் சாக்கடை கட்டுவதில் செலவிட நகரசபையார் முன்வர வேண்டும். ஏழை அழுதகுரல் அம்பலம் ஏறுமா?

## சிங்கார நந்தவனம்

இதேது இவன் நிறுத்தமாட்டான் போல் இருக்கிறதே என்று நினைக்காதீர்கள். 'அழுதபிள்ளைதான் பால்குடிக்கும்' என்று என் தாயார் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். என் தாயார் போய்விட்டார்கள். நகரத் தந்தையாரிடம் அழுதால் ஏதாவது கிடைக்காதா என்று முன் வந்திருக்கிறேன். தந்தையின் யோக்கியதை உலகம் அறிந்ததே. அடித்தாலும் அணைத்தாலும் தாய் என்பது தெரியும். ஆனால் வேறுகதி இப்போது இல்லையே. "சிங்கார நந்தவனம்" என்று மேலே சொன்னேன். அந்த வனம் ஏற்படுத்தப்போகும் இடங்களில் உள்ள சொந்தவனமான கள்ளிகளை எடுக்க காண்டிராக்ட் கொடுத்திருக்கிறார்களாம். இந்த வேலைக்கு நகரசபையின் அநுமதியுண்டோ இல்லையோ தெரியாது. அவர்களின் அநுமதியை எதிர்பார்த்து தலைவரே செய்கிறாரோ என்னவோ அதுவும் தெரியாது. உண்மையை யாராவது சொன்னால் மிக்க வந்தனம். இதற்காக 500 செலவாகுமாம். இதுவும் கேள்வித்தொகைதான். திருத்தினால் வந்தனத்துடன் ஒப்புக் கொள்ளுகிறேன். இந்தத் தொகை உண்மையாக இருக்குமானால் ஈரோட்டாரின் வரிப்பணம் நாசமாகப் போவதைக் குறித்தும் வருந்தாமல் இருக்க முடியவில்லை. ஷி இடத்திலுள்ள கள்ளியை எடுக்க எவ்வளவு அதிகமானாலும் ரூ.250க்கு மேல் தேவை



RangaRakes tamilnavarasam.com

யில்லை. ஏன் இரட்டிப்புச் செலவு என்று கேட்கிறேன்? அநியாயமாக ஏழைகளின் பணத்தை இப்படி நாசமாக்கலாமா? என்று கேட்கிறேன். அவர்கள் தானே வாயில்லாப் பூச்சிகள். பணக்காரனுக்கு வரி போட்டால் அப்பீல் என்கிறான் - பெரிய இடத்து சிபார்சுகள் பறக்கின்றன - அடுத்த எலக்ஷனில் வோட்டு பயம் உண்டாக்குகிறான் - தன் காரியத்தைச் செயித்து விடுகிறான் - ஏழையோ? வரி போட்ட சங்கதியும் தெரியாது, அப்பீல் போட்டாலும் ஆதரிப்பாரைக் காணோம் - அவனுடைய தயவு யாருக்கு வேண்டும்? ஆனால் நகரசபையாருக்கு ஒரு வார்த்தை. "ஏழை அழுத கண்ணீர் ....." அதற்கு மேல் அவர்கள் இஷ்டம்.இவ்வளவோடு போதும் - அழுது அழுது தொண்டையும் காய்ந்து விட்டது; உடலும் சலித்து விட்டது; ஊற்றுப் பேனாவில் இங்கியும் தீர்ந்து விட்டது - பாக்கி அழுகை பின்னால்.......

**குடி அரசு - கட்டுரை - 05.07.1925**



# பர்க்கன்ஹெத் பிரபுவின் பரீட்சை

இந்தியா மந்திரி பர்க்கன் ஹெத் பிரபு "உங்களுக்குக் கொடுத்த சீர்திருத்தத்தை ஒழுங்காக நடத்தவில்லை. இனியாவது இரட்டை ஆட்சியை ஒழுங்குடன் நடத்துவீர்களாயின் 1929 ம் வருஷத்திற்கு முன்னர் சீர்திருத்தம் கொடுக்கலாமா என யோசிப்பேன்" என்று கூறிய உரைகளைக் கண்டு இந்திய அரசியல்வாதிகள் என்போரும் இந்திய அரசியல் பத்திரிகைகள் என்பவைகளும் கண்ணீர்விட்டுக் கரைகின்றதை நோக்குழி பாஞ்சால வீரர்களான டயர், ஓட்வியர் போன்றார் மனதும் இளகிவிடும். ஆயினும், யாம் அதைப்பற்றிச் சிறிதும் கவலை உறக் காரணத்தைக் கண்டிலம். பர்க்கன் ஹெத் பிரபு கழறுவது போன்று மாண்ட் - போர்டு சீர்திருத்தம் என்னும் சர்வகலாசாலையில் யாம் மாணாக்கராய் ஒருபொழுதும் இருந்ததில்லை. மழைக்கும் சற்று நேரம் அக்கலாசாலைக்குச் சென்று ஒண்டியிருந்தோமில்லை. சீர்திருத்தப் பரீட்சை கொடுத்து நற்சாட்சிப்பத்திரம் பெறவும் எமது மனம் ஒருப்படவில்லை. அச்சர்வ கலாச்சாலையில் கற்ற மாணாக்கர்களும் அதன் பரீட்சைக்குச் சென்ற வித்தியார்த்திகளுமே தங்கள் பரீட்சையில் பர்க்கன் ஹெத் பிரபு கழித்து விட்டாரே என அழவேண்டுமே அல்லாது யாம் கவலை உறுவதில் சிறிதும் பொருள் இல்லை. பர்க்கன்ஹெத் பிரபுவினாலோ பிரிட்டிஷாரின் மற்றைய எவரினாலோ இந்தியாவிற்குச் செய்யக்கூடியதோ அன்றி ஆகக்கூடியதோ ஒன்று உண்டோ என ஐயுறுகிறோம். உண்மையான ஒரு பிரிட்டிஷ் மகனிடம் இந்தியா இதுகாலை இவ்வித ஆணவ வீரப்பிரதாபமான உரைகளை அன்றி வேறு என்ன கருத்தை எதிர்பார்க்கமுடியும்? பர்க்கன் ஹெத் பிரபு உண்மையாளராயிருப்பதைக் கொண்டு பிரிட்டிஷாரின் கருத்தை தெளிவான மொழியில் விளக்கினார். சற்று கபடமும் தந்திரமும் உள்ள வேறு ஒரு பிரிட்டிஷ் மகனாய் இருந்தால் இதே கருத்துக்களை நமது அரசியல்வாதிகள் ஆனந்தக்கூத்தாடு வண்ணம் வேறு மொழியில் பொழிந்திருப்பார். மாண்ட் - போர்டு சீர்திருத்தம் என்னும் கலாசாலையை மாண்டேகு துரை மகனார் திறக்கும்பொழுது முகவுரையாகக் குறிப்பிட்ட உரைகளும் இக்கருத்தை உடையவை தான். அதாவது :- "புதிதாய் அரசாங்க பாரத்தைச் சுமக்க விரும்பும் இந்தியர் அவ்வரசாங்கப் பொறுப்பைச் சுமக்க எவ்வளவு தகுதியுடையவர்கள் என்று தங்கள் செய்கைகளால் நிரூபிக்கின்றனரோ அதை அனுசரித்துத்தான் வழங்கப்படும்" என்றும் பிரதம மந்திரியாயிருந்த லாயிட் ஜார்ஜ் துரை மகனும் இதே கருத்தைத்தான் கூறியுள்ளார். அதாவது :-



RangaRakes
tamilnavarasam.com

“இந்தியர்களுக்கு பிரிட்டிஷாரைத் தான் தர்மகர்த்தர்களாக கடவுள் நியமித்திருக்கிறார். அவர்களை எப்படி ஆள்வது என்பதின் பொறுப்பை நிர்ணயிக்க பிரிட்டிஷாருக்குத் தான் அதிகாரம் உண்டு ; சீர்திருத்தத்தின் தத்துவத்தைச் சரிவர அறிந்துகொள்ளாமல் இந்தியர்கள் கூக்குரல் இடுகின்றனர். சீர்திருத்தத்தின் முகவுரையிலேயே இவற்றை எல்லாம் விளக்க மாகச் சொல்லியுள்ளோம். இரும்புச்சட்டத்திற்குள் அடக்கித்தான் ஆளு வோம்” என்று பகர்ந்திருக்கின்றார். ஆதலின் பிரிட்டிஷாரின் எண்ணத்தில் ஒன்றும் களங்கம் இல்லை. உள்ளதை உள்ளவாறே கூறி வருகின்றனர்.

ஒருவேளை பர்க்கன்ஹெத் பிரபு நமது வித்தியார்த்திகளை தமது பரீட்சையில் தேறியவர்களாக மதித்துச் சர்வகலாசாலைப் பட்டம் வழங்கி யிருப்பாராயின் அது எதற்கு உதவும் எனின் மற்றோர் சர்வ கலாசாலை ‘பர்க்கன் – ரீடிங்’ அல்லது ‘ரீடிங் – ஹெத்’ என்ற பெயருடன் திறக்கப்பட்டு அதில் சென்று கல்வி கற்க அனுமதிக்க உதவுமே அல்லாது வேறு என் செய்ய உதவும்? நாட்டில் தரித்திரத்தாலும், பிணியாலும், தொழிலின்மையாலும் இடர்ப்படும் எளிய மக்களுக்கு ஒரு வேளைக் கஞ்சியின் உப்பிற்கு உதவுமா? ஒரு வேளை கஞ்சிக்கு தங்களது கற்பையும் இழக்க அவதிப்படும் நமது ஏழைச் சகோதரிகளின் கற்பைக் காக்கமுடியுமா? மனிதனுக்கு மனிதன் தொட்டால், பார்த்தால், அருகில் வந்தால், பேசினால் பாவம், தனது மதத் தத்துவத்தைப் படித்தால் பாவம் என்று சொல்லும்படியான கொடுமைகளுக் கும் இழிவுகளுக்கும் ஏதாவது விடுதலை உண்டாகுமா? நமது எளிய மக்கள் மெய்வருந்திச் சம்பாதிக்கும் தங்களது சிறு கூலியைக்கூட, கள்ளுக்கும், சாராயத்திற்கும் கொடுத்து வீட்டிலுள்ள குழந்தைகளின் கஞ்சிக்கும் வகையன்றி மானம்கெட்டு, ஒழுக்கம் கெட்டு, அல்லற்பட்டுத் திரியும் அவதியை ஒழிக்கமுடியுமா என்பதைப் பொதுமக்கள் சற்றேனும் சிந்தித்துப் பார்ப்பார்களாயின் இவ்வரசியல்வாதிகள் எனப்படுவோர் படும் துக்கத்தில் சிறிதளவு கலந்துகொள்ள முற்படார். சுயராஜ்யத்திற்கு மாண்ட் – போர்டு சீர்திருத்தந்தான் வழி என்று தாலாட்டி, முத்தமிட்டு வளர்த்திய மிதவாதி களாலும், சீர்திருத்தத்தினாலேயே கடை ஏறி விடலாம் என நினைத்து பிரிட்டிஷாருக்கு நல்ல பிள்ளைகளாய் நடந்துவந்து, நற்சாட்சிப்பத்திரம் பெற்ற ஜஸ்டிஸ் கட்சியினராலும் நாட்டிற்கு என்ன விளைந்தது? இவர்களால் என்ன செய்யமுடிந்தது? கேவலம் மதுபான விஷயத்தில் என்ன செய்தனர்? சென்னை மாகாணத்தில் தான் மந்திரிகள் என்கின்ற பரீட்சைக்கொடுத்த மாணாக்கர்கள் எல்லோரும் “பிராமணரல்லாதார் ஜஸ்டிஸ்காரர் தேசத்தைப் பற்றிக் கவலை இல்லாதவர்கள்; இவர்கள் தேசத்தைப்பற்றிக் கவனிக்க வில்லை” என்று சொல்லுவதாயிருப்பின் பிராமணர்களை மந்திரிகளாகக் கொண்ட மத்திய மாகாணம், பம்பாய், வங்காளம் முதலிய மாகாணங்கள் என்ன சாதிக்க முடிந்தது? இதை நடுநிலை நின்று ஒருவர் நோக்குவாராயின் இச்சீர்திருத்தக் கலாசாலைகள் அரசியல்வாதிகள் என்கின்ற ஆங்கிலம் படித்த சிலருக்கு உதவுமே அல்லாது நாட்டின் உண்மையான தேவைகளை அளிக்க



எவ்வகையிலும் உதவாது என்பது விளங்கும். பர்க்கன் ஹெத் பிரபு சென்னை மாகாணம்தான் சீர்திருத்தப் பரீட்சையில் முதலாவதாகத் தேற இருப்பதாகக் கூறி, சென்னையைப்பற்றிப் புகழுகின்றார். இதற்காக இவர் அளிக்கப்போகும் பட்டம் யாது? B.R., M.R., D.R., என்பது போன்ற பட்டங்கள்தான் அளிப்பார். அதன் பொருள் ‘பாட்ச்லர் ஆப் ரிபார்ம்’ ‘மாஸ்டர் ஆப் ரிபார்ம்’ ‘டாக்டர் ஆப் ரிபார்ம்’ ஆகிய இப்பட்டங்கள்தான் அளிக்கக்கூடும். இதற்கு கவர்னர் உத்தியோகம் வரையிலும் கிடைப்பினும் கிடைக்கலாம். தேசத்திற்கு ஏழை கட்கு இதனால் யாது பலன்கிடைக்கும்? இவற்றையெல்லாம் காந்தியடிகள் நன்கு அறிந்தே அச்சீர்திருத்தம் என்னும் கலாசாலைகளை விடுத்து தமது நிர்மாணத் திட்டம் ஒத்துழையாத்திட்டம் என்னும் கலாசாலைக்கு எல்லோரையும் அழைக்கிறார். காந்தி அடிகளின் இந்நிர்மாண ஒத்துழையாக் கலாசாலையில் சேர நமது ஆங்கிலம் கற்ற அரசியல் வாதிகளுக்கு மனமில்லை. இதில் நாம் உண்மையாய் ஒரு மனதுடன் சேர்ந்தோமாயின் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்கும் யோக்கியதை பர்க்கன் ஹெத் பிரபுவிற்கு ஏது, பர்க்கன் ஹெத் பிரபுவிடம் வாங்கும் இழிமை இந்தியாவிற்கு ஏது என்பதை உணருவோம். இத்தருணத்தில் எமது நினைவிற்கு வரும் கம்பர் அங்கதன் தூதுப்படலத்தில் சொன்ன ஒரு சிறு கவியைச் சொல்லி முடிக்கிறோம்.

**வாய்த்தரத்தக்க சொல்லி என்னையுன்**
**வசஞ் செய்வாயேல்,**
**ஆய்தரத் தக்க தன்றோ தூது வந்த**
**ரசதாள்கை**
**நீ தரக்கொள்வேன்யானோ இதற்குகினி**
**நிகர்வே றென்னில்,**
**நாய்தரக் கொள்ளுஞ் சீய நல்லர**
**சென்று நக்கான்.**

**குடி அரசு – தலையங்கம் – 12.07.1925**



RangaRakes
tamilnavarasam.com

# குருகுலம்

குருகுல விஷயமாய் எனது அபிப்பிராயம் என்ன என்பதைப்பற்றி நான் தெளிவாய்க் கூறவில்லை என்றும், வேண்டுமென்றே அவ்விதம் கூறாமலிருக்கின்றேன் என்றும், முக்கியமான சில கனவான்கள் என்னை, எழுதியும் நேரிலும் கேட்கிறார்கள். இவர்கள் என்னைப்பற்றிச் சரியாய் உணர்ந்து கொள்ளாதவர்கள் என்றுதான் நான் சொல்லக்கூடும். அதோடு தமிழ்நாட்டு நடப்புகளையும் சரிவர கவனித்திருக்க மாட்டார்கள் என்றும் நினைக்கிறேன்.

குருகுல விஷயமாய் டாக்டர் வரதராஜுலு நாயுடு பத்திரிகையின் வாயிலாக எழுதுவதற்கு ஒரு வருஷகால முன்னிருந்தே இதைப் பற்றிய சகல விஷயங்களையும் அநேகக் கூட்டங்களில் தெரியப்படுத்தி யிருக்கிறேன். (சென்ற வருஷம் விருதுப்பட்டியில் ரத்தினசாமி நாடார் ஞாபகச்சின்ன வாசகசாலை ஆண்டு விழாவிலும் பேசியிருக்கிறேன்.) குருகுலத்திற்கு தமிழர்கள் பணம் கொடுக்கக் காரணங்களாயிருந்த நவசக்தி, தமிழ்நாடு முதலிய பத்திரிகை ஆசிரியர்களிடமும், அவர்கள் குருகுலத்திற்குப் பணம் கொடுக்கும்படியாயும், பாரத மாதா கோவில் கட்டுவதற்குப் பணம் கொடுக்கும் படியாயும் தங்கள் பத்திரிகைகளில் எழுதி வருவதைப் பலமாய்க் கண்டித்தும் வந்திருக்கிறேன். ஸ்ரீமான் கலியாணசுந்திர முதலியார் அவர்கள் நான் சொன்ன காலத்தில் நிரம்பவும் பரிதாபமாய் ஏதோ தேசத்திற்காகக் கஷ்டப்பட்டவர்கள்; அவர்கள் விஷயத்தில் நாம் இவ்வளவு கணக்குப் பார்க்கக்கூடாது; பொது ஜனங்களுக்கே இவையெல்லாம் தெரியும்; நாம் இவர்கள் காரியத்திற்குத் தடையாய் நிற்பதாய் அவர்கள் ஏன் நினைக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார்.

டாக்டர் நாயுடு சொன்னதாவது: பாரத மாதா கோவில் கட்டுகிற விஷயத்தில் நான் தெரிந்தேதான் செய்து வருகிறேன். குருகுல விஷயத்தில் நீங்கள் சொல்லுகிற மாதிரி ஸ்ரீமான் அய்யர் அவர்கள் அவ்வளவு மோசமாயிருப்பார் என்று நான் நினைக்கவில்லை. ஸ்ரீமான் அய்யர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிற மாதிரி ஒரு ஆசிரமம் நம் தமிழ் நாட்டிற்கு வேண்டியது தான். நீங்கள் சொல்லுகிற மாதிரி வித்தியாசங்கள் அங்கு நடக்குமேயானால், அதை 5 நிமிஷத்தில் நிறுத்திவிட என்னால் முடியும் என்று சொல்லிவிட்டார். நான் கொஞ்சம் மன வருத்தத்தையும் காட்டிக் கொண்டு சிநேக முறையில் சில கடின பதங்களை உபயோகித்தேன். பிறகு கொஞ்ச நாளைக்குள் திருச்சியில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிப் பொதுக்கூட்டத்தில் ஸ்ரீமான் வ.வெ.சு. அய்யர் அவர்கள் மறுபடி 5000 ரூபாய் காங்கிரசிலிருந்து கொடுக்க வேண்டும் என்று கேட்டபோது, நானும் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை அவர்களும் கண்டிப்பாய் பணம் கொடுக்கக்கூடாது; முன் கொடுத்த பணமே தமிழர்களின் இழிவுக்கு உபயோகப்படுகிறது என்று சொல்லி அங்கு நடக்கும் சில கொடுமைகளை எடுத்துச் சொன்னோம். ஸ்ரீமான் வ.வெ.சு. அய்யர் அவர்கள் நான் அப்படிச் செய்வேனா, அந்த இடம் நிரம்பவும் வைதீகர்கள் நிறைந்துள்ள இடமானதாலும், சமையல் செய்கிறவர்கள் ஒப்புக்கொள்ளா ததாலும், இவ்வித வித்தியாசங்கள் இனிக் கொஞ்ச நாளைக்கு இருக்கும்; சீக்கிரம் மாற்றி விடுகிறேன். அதுவரையில் நானும் சாதம் சாப்பிடுவதில்லை. அதற்காகத்தான் நிலக்கடலை சாப்பிட்டு வருகிறேன் என்று சொல்லிக் கொண்டு வரும்போது, ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தாங்கள் நிலக்கடலை சாப்பிடுவதால் நாயக்கர் சொல்லுகிற ஆட்சேபனை தீர்ந்து போகுமா? இவ்வளவு தூரம் இவர்கள் சொல்லும்படியாய் வைத்துக் கொள்ளக் கூடாது; அதனால் தங்கள் பேருக்குக் கெடுதல் வந்துசேரும். என் குழந்தைகளைக்கூட ஆசிரமத்திற்கு அனுப்பலாம் என்றிருந்தேன். இவை களைக் கேட்ட பின் நானும் அனுப்பப் போவதில்லை. இந்த ஆவலாதிகளைச் சரி செய்து விட்டு, மேல் கொண்டு காங்கிரசைப் பணம் கேளுங்கள் என்று சொன்னார்கள். இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த டாக்டர் நாயுடு, எனக்கும் இம்மாதிரி ஆவலாதிகள் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் ஸ்ரீமான் அய்யர் அவர்கள் சீக்கிரத்தில் ஆவலாதிகளுக்குக் காரணமான வித்தியாசங்களையெல்லாம் ஒழித்து விடுவதாய்ச் சொன்னார். ஸ்ரீமான் அய்யர் அவர்கள் இவ்வித வித்தியாசமெல்லாம் பாராட்டுகிறவர்கள் அல்ல. ஆனால் எப்படியோ திருநெல்வேலி பிராமணர் செல்வாக்குள்ள இடத்தில் குருகுலம் அமைக்கப்பட்டுப் போய்விட்டது. ஆனாலும் சீக்கிரத்தில் ஸ்ரீமான் அய்யர் அவர்கள் சொல்கிறபடி நடக்கும் என்கிற நம்பிக்கையின் மேல்தான் நான் சும்மாயிருக்கிறேன் என்று சொன்னார்.

நான், இவையாவும் ஒழுங்கான பிறகுதான் மேல்கொண்டு ரூபாய் கொடுப்பதைப் பற்றி யோசிக்கப்படும். இந்த நிலைமையில் யோசித்தால் முன் ரூபாய் கொடுத்ததே தப்பு. தங்களுக்கு ரூபாய் கொடுக்கத் தீர்மானித்த மீட்டிங்கில் நான் இல்லை. இருந்திருந்தால் சரியானபடி ரிக்கார்டு செய்து கொண்டுதான் ரூபாய் கொடுத்திருப்பேன். அதுசமயம் செக்கில் கையெழுத் துப்போடும் வேலை எனக்கென்று ஒதுக்கப்பட்டு வைத்திருந்தும், இந்த ஒரு செக்கு மாத்திரம் ஏற்பாட்டுக்கு விரோதமாய் எப்படியோ என் கூட்டுக் காரிய தரிசியால் கையெழுத்துப் போட்டு செக்கு வெளியாகிப் பணம் வெளிப்பட்டு போய்விட்டது. கிரமமாய்ப் பார்த்தால் அந்தப் பணத்தைத் திருப்பி வாங்க வேண்டும் என்று சொன்னேன். ஸ்ரீமான் அய்யர் அவர்கள் மனவருத்தத் துடன் உலகில் எல்லாரும் தர்மம் செய்வார்கள், நமது நாயக்கரோ செய்த தர்மத்தைத் திருப்பி வாங்க வேண்டுமென்கிறார் என்று சொன்னார்கள்.



RangaRakes tamilnavarasam.com

நிற்க, பின்னால் கொஞ்ச நாளைக்குள்ளாகவே மறுபடியும், "தமிழ்நாடு" பத்திரிகை குருகுலத்தைப் பற்றிய விளம்பரங்களும் வசூல் குறிப்புகளும் பிரசுரித்து வந்தது. இதனால் இழிவுபடும் பிராமணரல்லாதாரே தமிழ் நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகம் பணம் கொடுத்து வருவதாய் அறிந்து டாக்டர் நாயுடு இந்த மாதிரி தமிழர்களின் இழிவுக்காக நடத்தப்படும் குரு குலத்திற்குப் பண உதவி செய்யும்படி எழுதுகிறார். அதனால் ஏமாந்த வெகுஜனங்கள் பணம் கொடுத்துவிடுகிறார்கள். இதைப் பற்றிப் பல தடவை களில் நான் சொல்லியும் கேட்கவில்லை என்று பல பேரிடம் நான் டாக்டர் நாயுடு பேரில் குற்றம் சொல்லிக் கொண்டு அதற்கு ஓர் எண்ணத்தையும் கற்பித்து வந்தேன். டாக்டர் நாயுடுவுக்கும் எனக்கும் பொதுவான ஒரு சினேகிதர் என்னுடன் பேசிக்கொண்டு இருக்கும்போது டாக்டர் நாயுடுவிடம் உங்களுக்கு ஏன் தப்பபிப்பிராயமிருக்கிறது? நீங்கள் இரண்டு பேரும் இப்படி இருக்கலாமா என்று கேட்டார். நான் குருகுலத்தை விளம்பரம் செய்வதைப் பற்றிச் சில வார்த்தைகளைச் சொல்லி குருகுலத்திலிருந்து வெளியான ஒரு பையன் சொன்ன சில விஷயங்களையும் சொல்லி மலேயா நாட்டில் குருகுலத்திற்குத் தமிழர் பணம் கொடுத்துக் கொண்டிருப்பதாய் வெளியான ஒரு பத்திரிகையையும் காட்டினேன். அதோடு தமிழ்நாட்டு சுயராஜ்யக் கட்சி சூழ்ச்சிகளையும் சொல்லி அதையும் டாக்டர் நாயுடு ஆதரிக்கிற விஷயத் தையும் சொன்னேன். அதற்கு அவர் டாக்டர் நாயுடு அவர்களுக்கு இவ் விஷயங்களை எடுத்துச்சொல்லி வேண்டியது செய்கிறேன். ஆனால் சில பிராமணர் தந்திரம் தங்களுக்குத் தெரியாததா? டாக்டர் நாயுடு இதை வெளிப் படுத்தினால், வேறு சில பிராமணரல்லாதாரையே டாக்டர் நாயுடுவுக்கு விரோதமாய்க் கிளப்பிவிட்டு நமக்குள்ளேயே சண்டைபிடித்துக் கொண்டு இருக்கும்படி செய்துவிட்டுத் தாங்கள் காரியத்தை நடத்தி கொள்வார்களே பிறகு எழுதினவர்தான் தனியாக நிற்க வேண்டும் என்று சொன்னார். உடனே நவசக்தி முதலிய பிராமணரல்லாத பத்திரிகைகள் எல்லாம் கண்டிப்பாய் நாயுடுவை ஆதரிக்கும். அநேக பிராமணரல்லாத பத்திரிகைகள் இந்த விஷ யங்கள் எல்லாம் தெரிந்திருந்தும் யார் முன்னே எழுதுவது என்று யோசித்துக் கொண்டிருக்கிறது. ஆகையினால் இந்த விஷயத்திற்கு எதிரிடையாய் யோக்கியப் பொறுப்புள்ள பிராமணரல் லாத பத்திரிகைகளோ, பிராமண ரல்லாத பிரமுகர்களோ முன்வர மாட்டார்கள் என்பது எனது உறுதி என்று சொல்லி உடனே குருகுல நடவடிக்கையை வெளிப்படுத்தும்படி ஷை நண்பரைக் கேட்டுக்கொண்டேன். அதற்கேற்றாப் போல் டாக்டர் நாயுடுக்கும், குருகுலவாசி ஒருவரிடமிருந்து ஒரு கடிதமும், மலேயா நாட்டிலிருந்து ஒரு கடிதமும் வந்திருந்த சமயமும் ஒத்துக் கொண்டது; உடனே உண்மையை வெளியிட்டார்; நானும் சில பிராமணரல்லாத பத்திராதிபர்களுக்கு இது விஷயத்தில் நியாயம் செய்யும்படி எழுதினேன். அவர்களும் மற்றும் நான் எழுதாத சில பத்திரிகை கனவான்களும் இந்த முதல் வியாசத்தை தமிழ்நாடு பத்திரிகையிலிருந்து தங்கள் பத்திரிகையில் எடுத்துப் போட்டும், மற்றும் தங்கள் மனசாட்சிக் கொப்ப ஆதரித்தும் வந்தனர். இவை எல்லாவற்றிலும்



'தனவைசிய ஊழியன்', 'குமரன்' இவ்விரு பத்திரிகைகளின் ஆசிரியர் களும் தங்கள் மனசாட்சிப்படி தைரியமாய் உதவி செய்ததைத் தமிழ் மக்கள் மறக்கமுடியாது. இவற்றின் பலனாய், தமிழர் வசிக்கும் வெளிநாடுகளிலும் இவ்விஷயங்கள் பரவி தற்காலம் குருகுல விஷயமாய் மாத்திரம் அல்லாமல் பிராமணர் பிராமணரல்லாதார் என்போருக்குள் வெகுகாலமாய் அடங்கிக் கிடந்த வேதனைகள் எல்லாம் வெளிக்கிளம்பின. இவைகளை எல்லாம் நான் திருவண்ணாமலையில் கூடிய தமிழ்நாடு மாகாண காங்கிரஸில் தலைமை வகித்த காலத்தில் முகவுரையிலும், முடிவுரையிலும் தெளிவாய் சொல்லியிருக்கிறேன்.

(அதற்கேற்றாற்போல் மகாத்மாவும், இவை ஒழியாமல் வெறும் 'ஒத்து ழையாமை ஒத்துழையாமை' என்று வாயில் சொல்லிக் கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனமென்று கருதி கதர், தீண்டாமை இவை இரண்டும் மாத்திரம் நடக்கட்டும், மற்றதெல்லாம் மூட்டைக் கட்டி வைத்துவிடலாம் என்று பெல்காம் காங்கிரசில் காலம் குறிப்பிடாமல் ஒத்துழையாமையை ஒத்தி வைத்துவிட்டார். இனி ஒத்துழையாமையை ஜனங்களை ஏமாற்றுவதற்காகச் சொல்லிக்கொள்ளலாமே ஒழிய, காங்கிரஸில் காரியத்திலோ, தத்துவத்திலோ, கொள்கையிலோ இல்லை.)

இதோடு கூடவே 'தேவஸ்தான ஆக்ட்' என்று சொல்லப்படும் இந்துமத தர்மபரிபாலன மசோதா ஒன்றும் வந்தது. இதைப்பற்றியும் ஜனங்கள் ஒன்றும் அறியாதபடி 'மதம் போய்விட்டது,' 'மடம் போய் விட்டது', 'கோயில் போய் விட்டது' என்று வெறும் பச்சை அழுகை அழுதுகொண்டு மந்திரிகளையும், ஜஸ்டிஸ் கட்சியையும் மாத்திரம் திட்டுவதோடல்லாமல், அந்த மசோதாவையே தொலைத்துப் போட பிராமண பத்திரிகைகளும் பிராமண ராஜீயத் தலைவர்கள் என்போர் பலரும் தங்கள் பத்திரிகைகளில் எழுதவும், மேடைகளில் நின்று பேசவுமாய் அட்டகாசம் செய்துவந்தனர். இதை நம்பிக்கொண்டு பிராமணரல்லாத ராஜீயத் தலைவர் என்போர்கள் பலரும் ஒத்துப்பாடிக் கொண்டு வந்தார்கள். இதையும் பார்த்துச் சகிக்காமல் ஒத்துழையாமையோ ஒத்திப்போடப்பட்டாய் விட்டது. இனி இதைப்பற்றி சும்மா இருப்பது ஒழுங்கல்லவென்று நினைத்தே டாக்டர் நாயுடுவுக்கும், ஸ்ரீ கல்யாணசுந்திர முதலியார் அவர்களுக்கும் நான் காயலாவாய்ப் படுக்கையில் இருந்துகொண்டே சொந்தமாய் இனி நீங்கள் வாய்மூடிக் கொண்டிருக்கக் கூடாது, மந்திரிகளையும் ஜஸ்டிஸ் கட்சியையும் பிராமணர்கள் வைவதைப் பற்றி நமக்கு ஒன்றும் அவ்வளவு வருத்தமில்லை, ஆனால் நல்ல சட்டத்தைப் பாழடிக்கப் பார்க்கிறார்கள். இதை நீங்கள் சகித்துக் கொண்டிருக்கிறீர்களா என்று கண்டிப்பான கடிதம் ஒன்று எழுதிவிட்டு, நானும் என் அபிப்பிரா யத்தைக் கேட்டிருந்த "திராவிடன்" பத்திராதிபருக்கு பதில் எழுதுகின்ற முறையில் எழுதிவிட்டேன். டாக்டர் நாயுடுவும் உடனே தனது அபிப்பி ராயத்தை எழுதிவிட்டார். மறுபடியும் சில பிராமணர்கள் சென்னையில் ஒரு கூட்டம் கூட்டி மசோதாவை கட்டுப்பாடாய் எதிர்ப்பதற்கென்று ஒரு சபை



RangaRakes
tamilnavarasam.com

அமைத்ததைப் பார்த்து ஸ்ரீமான் கல்யாணசுந்திர முதலியார் அவர்களுக்கும் டாக்டர் நாயுடுவுக்கும் 'ஒரு பகிரங்கக் கடிதம்' என்று ஒன்று எழுதி எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பி அவர்களுக்கும் அனுப்பினேன். அதற்கு இவ்விரண்டு தலைவர்களும் பதிலெழுதவேயில்லை. ( அதன் காரணத்தைப் பற்றிச் சாவகாசமாய் பேசிக் கொள்ளலாம் ) மாறுதல் வேண்டாதார் என்று சொல்லப்படும் அநேக பிரமுகர்கள் இதை ஆதரித்து இது சம்பந்தமான எவ்வித பிரசாரத்திற்கும் தாங்கள் உதவி செய்வதாய் எனக்குக் கடிதங்கள் எழுதினார்கள்.

பிறகு, டாக்டர் நாயுடு குருகுலத்தைப் பற்றி வெளியில் பிரசாரத்திற்குப் போயிருந்த காலத்தில் அங்கு நடந்த சம்பவங்களும், பத்திரிகைகளில் வெளிவந்த சம்பவங்களும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொதுக் கூட்டம் கூட்ட வேண்டிய நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டன. அந்தக் கூட்டத்திலும் பலவித தீர்மானங்கள் வந்தன. அவைகளில் ஒன்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி நிர்வாகக் கூட்டத்தாரால் கொண்டு வரப்பட்டது. அதாவது குருகுலம் ஒரு குறிப்பிட்ட கொள்கைப்படி நடக்காததால் அதற்காக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி 5,000 ரூபாய் கொடுத்ததற்காக வருந்துகிறது என்பது. இது நிர்வாகக் கமிட்டியில் ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியார் அவர்களால் திருத்திச் சொல்லப்பட்டு எழுதியது.

இரண்டாவது , ஆசிரம நிர்வாகங்களில் மற்றவர்கள் பிரவேசிக்கக் கூடாது. ஆச்சாரியார் சொல்லுகிறபடியே விட்டுவிட வேண்டும். ஆனால் இவ்வளவு தூரம் குருகுல விஷயம் விவாதத்திற்கிடமாய் விட்டதால் அங்கு சமபந்தி போஜனம் நடைபெற வேண்டும் என்று கேட்டுக் கொள்வது போல் ஒரு திருத்தப் பிரேரேபனை ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு டாக்டர் ராஜன் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

மூன்றாவது, மனிதன் பிறவியினால் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொள்ளக்கூடாது, இந்தக் கொள்கைகளை தேசீய விஷயங்களிலும் தேசீய ஸ்தாபனங்களில் பொருள் பெற்று தேசீய உணர்ச்சியுடன் நடத்திவரும் குருகுலத்திலும் நடைபெறும்படி செய்ய வேண்டுமென்றும் இது நடைபெற சப் கமிட்டி ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்றும் என்பது போன்ற ஒரு திருத்தப் பிரேரேபனை ஸ்ரீமான் எஸ். ராமநாதன் அவர்களால் கொண்டுவரப் பட்டது. இது நானும் ஸ்ரீமான் ராமநாதன் அவர்களுமாய் சேர்ந்து எழுதப் பட்டதாகும்.

இவைகளில் ஸ்ரீமான் எஸ்.ராமநாதன் அவர்கள் தீர்மானம்தான் நிறை வேறியது. உடனே டாக்டர் நாயுடுவிடத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் பொதுக் கமிட்டிக்கு நம்பிக்கை இருப்பதாய் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இந்த நடவடிக்கைகள் நடக்கும் போதும், நடந்து முடிவடைந்து கொண்டிருக்கும்போதும் சிலர் ராஜினாமாச் செய்துவிட்டார்கள். பிறகு, இவர்களைப் பின்பற்றி 4, 5 பேர் ராஜினாமாக் கொடுத்து விட்டார்கள்.



இதற்குப் பிறகு குருகுல வாதம் ஒரு விதமாய் முடிவு பெறுமா என்கிற கவலையுடன் நானும், ஸ்ரீமான்கள் எஸ்.ராமநாதன், எ.வி.தியாகராஜா ஆகிய மூவருமாய் சேர்ந்து தமிழ்நாடு காங்கிரஸ் பொதுக் கமிட்டியாரால் நியமிக்கப் பட்ட சப் கமிட்டியார் என்கிற தன்மையில் ஒரு தடவையும், குருகுலத்திற்குப் பொருள் உதவி செய்த தமிழர் கூட்டத்து நிர்வாக சபையார் * அழைப்புக் கிணங்கி, அவர்களுடன் ஒரு தடவையுமாக இரண்டு தடவை குருகுலத் திற்குப் போயும் வந்திருக்கிறேன். இதன் ரிப்போர்ட்டுகள் பின்னால் வரும். வாசகர்களும் நண்பர்களும் இதிலிருந்து குருகுல விஷயமாய் எனதபிப் பிராயத்தையும் கொள்கைகளையும் தெரிந்து கொள்ளக்கூடும் என்று நினைக்கிறேன்.

**குடி அரசு - கட்டுரை - 12.07.1925**

---

## * தமிழர் கூட்டம்

30.4.25 தேதியில் திருச்சிராப்பள்ளி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் திருவாளர் மு.கா. விஸ்வநாதம் செட்டியார் அவர்கள் அக்கிரா சனத்தின் கீழ் சேரன் மாதேவி குருகுலத்தை சீர்திருத்த பிராமணரல்லாதாரின் மகாநாடு நடைபெற்றது. அடியில் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின :

( க ) சேரமாதேவி குருகுலத்துக்குப் பணவுதவி செய்தது ஸ்ரீமான் வ.வே.சு. ஐயரவர்களை நம்பியேயாதலால், ஐயரவர்கள் பணங் கொடுத்தவர்களைக் கூட்டி ராஜினாமாக் கொடுக்க வேண்டியது நியாயமா யிருக்க, அவ்வாறு செய்யாமல் அங்கு வேலை செய்பவரிடம் தமது தலைமை ஸ்தான ராஜினாமாவைக் கொடுத்ததை இக்கூட்டம் கண்டிக்கிறது.

( உ ) ஸ்ரீமான் வ.வே.சு. ஐயரவர்களின் ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளவே சிறிதும் அதிகாரமில்லாத சிலர் அதனை ஏற்றுக்கொண்ட தோடும் அமையாது குருகுலக் கிளர்ச்சிக்கே பெருங் காரணமாயிருந்த ஸ்ரீ மகாதேவய்யரவர்களைத் தலைவராகவும் தேர்ந்தெடுத்ததை இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது.

( ங ) குருகுல நடைமுறையானது நேரான வழியில் நடை பெற வில்லையா தலால், அதனைத் திறம்பட நடத்துவதற்குப் பின்வரும் கமிட்டி யை இக்கூட்டம் அமைக்கிறது. இக்கமிட்டியாரிடம் குருகுல சம்பந்தமான சகல பொறுப்புக்களையும் ஒப்புவித்துவிட வேண்டுமென்றும், இதற்கு ஐயரவர்கள் ஒரு மாத காலத்திற்குள் இணங்காராயின் வாங்கிய பணத்தைக் கேட்பவர்கட்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றும், ஐயர் அவ்வாறு செய்யாவிட்டால், ஐயரவர்களிடமிருந்து குரு குலச் சொத்துக்களைப் பெறு வதற்குரிய முறைகளை இக்கமிட்டி யார் அநுஷ்டிக் கலாமென்றும் இக் கூட்டம் தீர்மானிக்கிறது. கமிட்டி அங்கத்தினர்கள் பின்வருமாறு :

ஸ்ரீமான்கள் பி.வரதராஜுலு நாயுடு, வயி.சு.ஷண்முகம் செட்டியார், ஆர்.கே. ஷண்முகம் செட்டியார், மு.காசிவிஸ்வநாதம் செட்டியார், ராய. சொக்கலிங்கம் செட்டி யாரை இக்கமிட்டிக்கு காரியதரிசியாகவும் நியமிக்கிறது.

**குடி அரசு - 02.05.1925**



RangaRakes tamilnavarasam.com

# ஒவ்வொரு மாகாணத்திலும் தேவஸ்தான சட்டம் தேவை

**– சித்திரபுத்திரன்**

ஜஸ்டிஸ் கட்சி மந்திரி பனகால் ராஜா கொண்டுவந்த சென்னை இந்து தேவஸ்தான மசோதா நிறைவேறாமல் செய்வதற்காக தமிழ்நாட்டில் ஒரு கூட்டத்தார் பொது மேடைகளிலும் பத்திரிகைகள் வாயிலாகவும் பகீரதப் பிரயத்தனங்கள் செய்த போதிலும் சட்டம் அமுலுக்கு வந்து தற்சமயம் திருப்திகரமான வழியில் காரியங்கள் நடந்து வருகின்றன என்பது நேயர்கள் அறிந்த விஷயம். திருப்பதி தேவஸ்தான நிதியிலிருந்து சந்திரகிரியில் ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்தப் போவதாக பனகால் ராஜா சமீப காலத்தில் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டதைக் கேட்டதும், இச்சட்டத்தின் விரோதிகள் அவர் மேல் சீறி விழ ஆரம்பித்துவிட்டார்கள். 63 -வது சட்டம் இப்படிச் சொல்லுகிறது, 76-வது சட்டம் அப்படிச் சொல்லவில்லை என்றவாறு சிற்சில பத்திரிகைகளின் நிரூபங்கள் நாளுக்கு நாள் குவிந்து கொண்டிருக்கின்றன. சர்வகலாசாலை ஏற்படுத்துவதைக் காட்டிலும், முதலில் திருப்பதி கோயில் கோபுரத்தையும் ஏழுமலைப் படிகளையும் ஏன் பழுது பார்க்கவில்லையென்ற கேள்விகளை இதுசமயத்தில் சிலர் கிளப்பி விடுவது ஆச்சரியமாய் இருக்கிறது. இந்த விதண்டாவாதக்காரர்கள் இவ்வளவு நாள் எங்கு பதுங்கிக் கிடந்தார்களோ தெரியவில்லை. திருப்பதி தேவஸ்தானத்திற்குச் சுமார் 17 – 18 லட்சம் ரூபாய் வருஷ வரும்படி இருப்பதாகத் தெரிகின்றது. இதில் 7 அல்லது 8 லட்ச ரூபாய் செலவாகிறபடியால் வருஷா வருஷம் பத்து லட்சம் ரூபாய் மீதப்படுகிறது. இந்த மீதிப் பணம் சிற்சில ஆடம்பரச் செலவுக்கும், சிற்சில பள்ளிக்கூடங்களை நடத்தவும் செலவு செய்யப்படுகிறது. அப்படி யிருந்தும் இன்னும் நாற்பது லட்சம் ரூபாய் மொத்தமாக மீதியிருக்கிறது. இந்தத் தொகையைக் கொண்டு ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்தப் போவதை கல்கத்தா பாபு ராமானந்த சாட்டர்ஜி அவர்கள் "மாடர்ன் ரெவ்யூ" என்ற தம் சஞ்சிகையில் மனப்பூர்வமாய் ஆதரித்திருக்கிறார். அதுமட்டுமல்ல, சென்னையில் இருப்பது போல ஒவ்வொரு ராஜதானியிலும் தேவஸ்தானச் சட்டம் ஏற்பட வேண்டுமென்றும் அப்பெரியார் அபிப்பிராயப்படுகிறார். அவரது அபிப்பிராயத்தைச் சந்தோஷத்துடன் ஆமோதிக்கிறேன். பனகால் ராஜாவின் நல்ல யத்தனத்திற்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்யும் சுயநலப்புலிகள் ஒரு பக்கமிருக்க, சிறந்த தேச பக்தர்களில் ஒருவராகிய ராமானந்தபாபுவின் பாரபட்சமில்லாத அபிப்பிராயத்தை பொதுமக்கள் கவனிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்..

**குடி அரசு – கட்டுரை – 12.07.1925**



RangaRakes tamilnavarasam.com

# லஞ்சம்

சமீபத்தில் கோயமுத்தூரில் காட்டிலாகா கல்லூரியில் தேறிய மாணவர்களுக்கு நடந்த பரிசளிப்புக் கொண்டாட்டத்தில் காட்டிலாகா தலைமை அதிகாரியான மிஸ்டர் டயர்மன் என்பவர் பின்வரும் புத்திமதியை மாணவர்களுக்குக் கூறினாராம்:-

> "நான் உங்களுக்குச் சில விஷயங்களை வெளிப்படையாகச் சொல்ல விரும்புகிறேன். காட்டிலாகாவில் குறைந்த சம்பளம் வாங்கும் கீழ்த்தர உத்தி யோகஸ்தர்கள் மட்டுமல்லாமல், பெரிய உத்தியோகஸ்தர்களும் யோக்கிய மற்ற செயல்களைப் புரிகின்றனர் என்று சொல்லுவதற்காக வருந்துகிறேன். ஒரு ரேஞ்சர் தனது கீழுள்ளவர்கள் வீட்டில் இலவசமாகப் பல மாதங்கள் உணவு உட்கொண்டதுமன்றி, அவர்களுக்குக் கிடைக்கும் அல்ப சம்பளத் திலிருந்து மாதா மாதம் சிறு தொகையும் வசூல் செய்தும் வந்தார். உயர்தர உத்தியோகஸ்தர்கள் இவ்விதமான இழிந்த நிலையில் இருக்கையில் குறைந்த சம்பளம் வாங்கும் கீழ்த்தர உத்தியோகஸ்தர்களைக் குறை கூறுவதில் பயன் உண்டா? ஜனங்கள் நம் இலாகாவைப்பற்றி பேசுவதற்குக்கூட வெட்கப்படுகிறார்கள் என்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? இப்பொழுது புதிதாகப் பரீட்சை கொடுத்துப்போகும் நீங்களே இம் முறைகளைப் பரிசுத்தம் செய்தல் வேண்டும்".

இவ்விதமான செயல்களை அறிந்தே சென்னை சட்டசபையில் ஒரு அங்கத்தினர் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவதைக் கண்டிக்க ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென்று ஓர் தீர்மானம் கொண்டு போன காலத்தில் அரசாங்க நிர்வாக அங்கத்தினர் அவர் மீது பாய்ந்து அப்பிரேரேபனையைத் திருப்பி வாங்கிக் கொள்ளும்படியான விதத்தில் விரட்டி அடித்து விட்டார். சர்க்கார் இலாகாக்களில் இவ்வித ஊழல்களைப் பரிசீலனை செய்து பஞ்சாப் மாகாண அரசாங்கத்தார் யாதாஸ்து வெளியிட்டிருக்கிறார்களே; அதுபடி சென்னையிலும் செய்ய என்ன தடை ஏற்பட்டது?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 12.07.1925**



# சென்னைத் தேர்தல்

சென்னையில் இப்பொழுது நடந்துவரும் தேர்தல் பிரசாரங்களின் யோக்கியதையைப் பார்த்தால் புதுச்சேரி தேர்தலுக்கு சமமாய் வந்துவிடும் போல் இருக்கிறது. கூட்டங்களில் ஒரு கட்சியார் மற்றொரு கட்சியார் மீது காலிகளைவிட்டுக் கல்லெறியச் செய்வதும், நூற்றுக்கணக்கான போக்கிரிகளை விட்டுக் கூட்டத்தைக் கலைப்பதும் போன்ற காரியங்கள் நடைபெறுவதாய் இரண்டு கட்சிப் பத்திரிகைகளிலும் பார்த்து வருகிறோம். யார் கலகத்திற்குக் காரணம்? யார் தூண்டுதலின் மேல் இம்மாதிரியான காரியங்கள் நடக்கின்றன என்கின்ற விஷயத்தில் நாம் ஒரு முடிவுக்கு வராவிடினும் இம்மாதிரியான காரியங்கள் நடந்தன என்பதைப்பற்றிச் சந்தேகங் கொள்ள இடமில்லை. "குருட்டுக் கோமுட்டிக்கடையில் திருடாதவன் பாவி" என்பது போல், சரியான கல்வி அறிவும், நன்மை தீமைகளை அறிய ஆற்றலும் இல்லாத ஜனங்களிடமிருந்து ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டுமாயின் கையில் பலத்தவன்தான் காரியத்தை அடைவான். எவனுக்குப் பொய் சொல்லத் தைரியம் இருக்கின்றதோ, எவனுக்குப் பொருள் செலவு செய்யச் சக்தியிருக்கின்றதோ எவனுக்குப் பொய்ப் பிரசாரம் செய்ய சௌகரியமிருக்கிறதோ அவனுக்குத்தான் வெற்றி கொடுக்க நம்நாடு தயாராயிருக்கிறது. எவ்வளவோ சீரும் சிறப்பும் பண்டைப் பெருமையும் உள்ள நாடு என்று சொல்லிக்கொள்ளும் நமது இந்தியா இக்கதியில், "பிடித்தவனுக்கெல்லாம் பெண்சாதியாயிருக்கின்ற" தெனச் சொன்னால் நாம் எதற்குத் தகுதியுடையவர்களாவோம்? விடுதலை, விடுதலை என்று சொல்லிக் கொண்டு வெள்ளையரோடு தகராறு செய்வதும் அவர்கள் ஏதோ நமக்குப் பெரிய உதவி செய்வதாய் வேஷம் போட்டுச் சில உபயோகமற்ற பதவிகளை நமக்கு அளிப்பதும் அதை எவர் அடைகிறது என்று நாம் சண்டை போட்டுக் கொள்வதும் திரும்பத் திரும்ப மாறி மாறி தேசத்தின் தலைவிதியாய்ப் போய் விட்டது.

சுயராஜ்யக் கட்சியின் பெயரால் பிராமணர்களும், ஜஸ்டிஸ் கட்சியின் பெயரால் பிராமணரல்லாதாரும் தேசநலத்திற்கே பாடுபடுவதாகச் சொல்லிக் கொண்டு இவ்வளவு இழிவான காரியங்களுக்கெல்லாம் இடம் கொடுப்பதைப் பார்த்தால் வடநாடுகளில் இந்து - முஸ்லீம் சண்டை நமக்கு ஒரு அதிசயமாகத் தோன்றவில்லை. இவ்வித விவகாரங்கள் நாட்டில் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், டாக்டர் கிச்சிலு அகில இந்திய முஸ்லீம் மகாநாட்டில்



RangaRakes tamilnavarasam.com

கூறியிருப்பது போல் ஒற்றுமையில்லாமல் சுயராஜ்யம் இல்லை என்பதையும், ஒற்றுமை வேண்டுமானால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைத் தவிர வேறு ஒரு வழியால் ஒற்றுமையடைய முடியாதென்பதையும் நாம் மனப்பூர்வமாக ஆதரித்துத்தான் தீர வேண்டியிருக்கிறது. தென்னாட்டில் இந்துக்களுக்கும், மகமதியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் சில விஷயங்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டுவிட்டுப் போன படியால் அதைப் பொறுத்தமட்டில் ஒருவருக்கொருவர் வேற்றுமைக்கும், துவேசத்திற்கும் இடமே இல்லாமற் போய்விட்டது. அதுபோலவே பிராமணர், பிராமணரல்லாதாருக்கும் ஒரு விதி ஏற்பட்டுப் போய்விடுமேயாகில் வேற்றுமை இல்லாது போவதோடு கூட இவ்வளவு இழிவான காரியங்களும், காலித்தனமான காரியங்களும், சூழ்ச்சி களும், போலிப் பிரசாரங்களும் செய்ய வேண்டிய அவசியமே இராது. நம் மக்களையும் இவ்வளவு மோசமாக ஏமாற்ற வேண்டிய அவசியமே இருக் காது. ஆனால் இந்தக் கொள்கை தற்கால அதிகாரத்தில் இருக்கும் பிராமணர் களுக்கும் அவர்கள் புன்சிரிப்பில் மூழ்கியிருக்கும் மற்றவர்களுக்கும் அவசியமானதாகத் தோன்றாது. எனினும் தோன்றுங் காலம் சீக்கிரம் வரும்.

**குடி அரசு - தலையங்கம் - 19.07.1925**



# தேர்தல்களின் யோக்கியதையும் புதுச்சட்டத்தின் பலனும்

தேர்தல் சம்பந்தமான ஆட்சேபனை விண்ணப்பங்கள் கொஞ்சகாலத் திற்கு முன் நிர்வாக அதிகாரிகளாகிய கலெக்டர், அரசாங்க முனிசிபல் நிர்வாக அங்கத்தினர் இவர்களுக்குள்ளாகவே முடிவு பெறக்கூடிய தாகவிருந்தது. ஆனால் இப்படி நடப்பதில் தாட்சண்யங்களும், விருப்பு வெறுப்புகளும், சப்ளைகளும் சில்லரை அதிகாரிகளை விலைக்கு வாங்கப் படக்கூடியது களும் நியாயத்தைக் கெடுத்துவிடுகின்றனவென்கிற அனுபோகங்கள் ஏற்பட்டு, இந்த அதிகாரங்களை நிர்வாக அதிகாரிகளிடமிருந்து பிடுங்கி நீதிபதிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று பொதுஜனங்களில் சிலர் வாதாடி னார்கள். அவைகளில் ஒன்றுதான் ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் தன் முனிசிபல் சேர்மன் பதவியையும், ஜில்லாபோர்டு, தாலூகா போர்டு முதலியவைகளில் வகித்துவந்த பதவிகளையும் ராஜீனாமாச் செய்தது. முனிசிபல் புதுச் சட்டம் இயற்றும்போது இவற்றைக் கவனித்து. தேர்தல் சம்பந்தமான ஆக்ஷேபனைகள் இனிமேல் நீதிபதிகளிடம்தான் தெரிவிக்க வேண்டுமென்று சட்டமும் செய்தார்கள். இந்த சட்டம் செய்யப்பட்ட பிறகு விலங்கைத் தறித்துக் குட்டையில் போட்டதுபோல் ஆகிவிட்டது. நீதி ஸ்தலத்திற்குப் போகிற விஷயத்தில் நிர்வாகஸ்தர்களிடம் அனுபவிக்கிற கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்து போய்விட்ட தென்று சொல்வதற்கு இல்லாமல் இருப்பதோடு புதுக்கஷ்டங்கள் அநேகம் ஏற்பட்டுவிட்டன. அதாவது வக்கீல் களை வைத்து வக்கீல்களுக்குப் பணம் கொடுப்பது ஒன்று, சாட்சிகளை அழைத்துக்கொண்டு ஜில்லா கோர்ட்டுக்குப் போவது மற்றொன்று, ஜில்லாக் கோர்ட்டு தீர்ப்பிற்கு மேல் ஐகோர்ட்டுக்குப் போவது வேறொன்று, அதற்கு வக்கீல்களுக்கும், சிப்பந்திகளுக்கும் பணம் கொடுப்பது இன்னொன்று; இவைகளை அல்லாமல் நியாயத்தை விலைக்கு வாங்க அவஸ்தைப்படுவதும், அதற்காகப் பணம் செலவு செய்வதும் இவ்வ ளவும் செய்து முடிவு தெரி வதற்குள், தேர்தல் காலம் இரண்டு வருடமோ, மூன்று வருடமோ கடந்து எப்படித் தீர்ப்பானாலும் பிரயோஜனப்படாமல் போகிற பெரிய அக்கிரமம் ஒன்று. புதுச்சட்டம் ஏற்பட்ட பிறகு கோர்ட்டுக்குப் போகாத முனிசிபா லிட்டியோ, தாலூகாபோர்டோ இருப்பது நிரம்பவும் அபூர்வம் என்று சொல்லத்தக்க நிலைமையில் வந்துவிட்டது. மனச்சாட்சி உள்ளவர்களும், யோக்கியப்பொறுப்பு உள்ளவர்களும் தேர்தல்களுக்கு நிற்கப் பயப்



RangaRakes tamilnavarasam.com

படத்தகுந்த மாதிரிக்குச் சட்டங்கள் இடங்கொடுத்துக்கொண்டு வருகின்றன. நியாயமான முறையில் ஓட்டர்களின் அபிப்பிராயத்தைப் பெற அநேக சமயங்களில் சாத்தியமில்லாமலேயே போய்விடுகிறது. சிற்சில தேர்தல்களின் கதையைக் கேட்டால் உடல் நடுங்குகிறது. ஒரு முனிசிபாலிட்டி, தாலூகா போர்டு எலக்ஷன்களுக்குப் பத்தாயிரம், பனிரண்டாயிரம், சில தருணங்களில் இருபதினாயிரமும் செலவாகிவிடுகின்றது. தேர்தல் ஆட்சேபனை மனுக்களுக்கு அதிகாரிகளுக்கும், வக்கீல்களுக்குமாகவென்று ஐயாயிரம், பத்தாயிரம் செலவாகின்றது. இதுதான் இப்படி ஆகிவிட்டது என்று முடிவு செய்துவிட்டு, சட்டசபை போன்றவைகளின் தேர்தல்களைப் பார்த்தாலோ 'விரல் உரல் ஆனால் உரல் என்ன ஆகும்' என்கிற கதையில் இருக்கிறது. சட்டசபைத் தேர்தலின் பொழுது ஒரு நகரத்தில் ஒரு தேர்தலுக்கு எழுபதினாயிரம் ரூபாய்வரை செலவாயிற்று என்றும் மற்றோரிடத்தில் ஒரு தேர்தலுக்கு முப்பதினாயிரம் ரூபாய் செலவாயிற்று என்பதும், வெளிப் படையான இரகசியங்களாய் விளங்குகின்றன. இவற்றை நிவர்த்திக்க எந்தச் சட்டத்தினாலும் முடிவதில்லை. பணம் இருந்தால் எந்தப் பதவியும், எந்தப் பட்டமும், எந்த உத்தியோகமும் யாரும் விலைக்கு வாங்கிவிடலாம் என்கிற முறையில் நமது சர்க்கார் இடங் கொடுத்துக் கொண்டு வருவது முழுவதும் உண்மைக்கு விரோதமானது என்று சொல்ல முடியாது. ஆகையால் மக்களுக்குள் ஒழுக்கமும் கண்ணியமும் கற்பிக்கப்பட்டால் அல்லது, எவ்வித சட்டங்களாலும் இவ்விதக் குற்றங்களை நீக்கமுடியாது. கூடிய சீக்கிரத்தில் சட்டசபைத் தேர்தல்கள் வரப்போகின்றன. ஓட்டர்களும், ஏஜண்டுகளும் அதை ஒரு வெள்ளாமைக் காலமாக நினைத்துக் கொண்டிருந்தாலும், காங்கிரஸில் ஈடுபட்ட தொண்டர்களென்று சொல்லிக் கொள்ளும் சிலர் கைமுதல் இல்லாது வெள்ளாமை வரப்போகிறது என்று காத்துக் கொண்டிருக் கிறார்கள். இந்த நிலைமையில் தேர்தல்கள் ஜனப்பிரதிநிதித்துவம் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லோரும் ஜனப்பிரதிநிதிகள் என்று நாம் எப்படிச் சொல்லிக் கொள்ளமுடியும்? இதனால்தான் சர்க்காரை ஒழுங்கு படுத்துவதைவிட ஜனங்களை ஒழுங்குபடுத்தவேண்டுவது மிகவும் அவசர மென நினைத்து ஒத்துழையாமையோடு நிர்மாணத் திட்டத்தை இந்திய மக்களுக்கு மகாத்மா வற்புறுத்தி வந்தார். முன்சொன்ன தத்துவத்தில் வாழு கின்றவர்களுக்கு இது பிடிக்காமல் ஒத்துழையாமையை உடைத்தெறிந்து விட்டார்கள். நிர்மாணத் திட்டத்தையும் அழிக்கப்பார்க்கிறார்கள். பொது ஜனங்கள் இதை அறிந்து நிர்மாணத் திட்டத்தை ஈடேற்றி வைத்து தேசத்தை ஒழுக்கமுடையதாகவும், கண்ணியமுடையதாகவும், சுயமரியாதை உடைய தாகவும் ஆக்கி, பிறகு தேர்தல்களில் கவலை செலுத்த விரும்புகிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 19.07.1925**



## திருவாங்கூர் ராஜ்யத்தில் சாதிக் கொடுமை

| | | |
|---|---|---|
| ராஜ்யத்தின் விஸ்தீரணம் சதுர மைல் | – | 7,625 |
| அதிலுள்ள கிராமங்கள் | – | 3,897 |
| இவற்றின் பட்டணங்கள் | – | 38 |
| பட்டணங்களிலுள்ள வீடுகள் | – | 72,011 |
| கிராம வீடுகள் | – | 681,816 |
| ஜனத்தொகை மொத்தம் | – | 4,006,062 |
| இதில் மலையாள பிராமணர்கள் (நம்பூதிரிகள்) | – | 15,000 |
| பரதேச பிராமணர்கள் | – | 45,000 |
| பிராமணரல்லாத தீண்டக்கூடியவர்கள் | – | 800,000 |
| தீண்டாத வகுப்பார் | – | 1,650,000 |
| மகம்மதியர் | – | 275,000 |
| கிருஸ்தவர் | – | 1,200,000 |

**தீண்டாதவர்கள் என்பவர்களின் பிரிவு**

| | | |
|---|---|---|
| ஈழுவர்கள் | – | 675,000 |
| நாடார்கள் | – | 200,000 |
| கம்மாளர் | – | 163,000 |
| புலையர்கள் | – | 200,000 |
| குரவர்கள் | – | 75,000 |
| பறையர்கள் | – | 63,000 |
| வண்ணார்கள் | – | 14,000 |
| நாவிதர்கள் | – | 27,000 |



RangaRakes tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| வாணியர்கள் | – | 19,000 |
| தண்டான் | – | 30,000 |
| வேலன் | – | 13,000 |
| வாலன் | – | 18,000 |
| குயவர்கள் | – | 9,000 |
| பரவர் | – | 11,000 |
| பள்ளர் | – | 16,000 |
| மாரன் | – | 12,000 |
| கணியான் | – | 12,500 |
| கிருஷ்ணவகார் | – | 10,000 |
| அரையான் | – | 9,000 |
| இடையன் | – | 7,500 |
| இலவாணியன் | – | 4,500 |
| மன்னான் | – | 9,500 |
| மறவன் | – | 10,000 |
| குடுமி | – | 7,500 |
| சக்கிலி | – | 5,500 |
| சாலியன் | – | 8,500 |
| வேதன் | – | 6,500 |

இந்தக் கணக்குகளின்படி தென்னாட்டில் தீண்டக்கூடியவர்கள் என்று சொல்லப்படுகிற அநேக வகுப்பார்களை, திருவநந்தபுரத்தில் தீண்டாதார் வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அவைகளில் கம்மாளர், இடையர், வாணியர், நாடார், இலவாணியர் முதலிய அநேக நல்ல சாதிகளையும், சுபாவத்திலேயே எவ்விதத் தனிக்குற்றமும் சொல்லுவதற்கில்லாமல் பரிசுத்த மாகவும் இருக்கிற அதாவது, தமிழ்நாட்டில் தீண்டக்கூடியவர்களென்று பழக்கத்தில் சொல்லப்படுகிற அநேகர்களுக்கு எந்தவிதத்திலும் குறைந்தவர் களல்லாத அநேக சாதியார்களான ஈழுவர், கணியர், கிருஷ்ணவகார், மாரன், சாலியன், வேலன் முதலிய அநேக நல்ல சாதியார்களையும் தீண்டாதவர் களைப் போலவே நடத்தி வருகிறார்கள். இந்தக் கொடுமைகளால் 40 லட்சம் ஜனத்தொகையில் எட்டு லட்சம் தீண்டக்கூடியவர்கள் என்போர் 16 லட்சம் பேரைத் தீண்டாதவர்களாக நடத்திக் கொடுமைப்படுத்துவதோடு அல்லாமல்,



RangaRakes

சென்ற முப்பத்தைந்து வருஷங்களுக்குள்ளாக 7 லட்சம் பேர் இந்து மதத்தை விட்டு அந்நிய மதத்திற்குச் சென்றுமிருக்கின்றனர். அது எப்படியென்றால் 1891– ம் வருஷத்திய ஜனக்கணிதப்படிக்கு திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள கிறிஸ்தவ மகாஜனங்களின் எண்ணிக்கை 526,000 பேர். 1921 – ம் வருஷத்திய ஜனக்கணிதப்படி 1,200,000 பேர். இதே வீதப்படி 1920 முதல் 1925 வரையில் உத்தேசமாய்க் கணக்கிட்டோமாகில் ஒரு லட்சம் பேருக்குக் குறையாது. ஆக நாளது தேதி வரை கிறிஸ்துவர்கள் எண்ணிக்கை 1,300,000 என்று ஏற்படுகிறது. முப்பத்தைந்து வருஷத்திற்குள் 770,000 பேர்கள் திருவாங்கூர் சமஸ்தானமென்கிற ஒரு சிறு ராஜ்யத்தில் இந்து மதத்தை விட்டுக் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி இருக்கிறார்கள். இது 10 வருஷத்திற்கு 100 –க்கு 35 ஆகிவிடுகிறது. இதல்லாமல் மகம்மதிய மதத்தையும் அநேக இந்துக்கள் தழுவி இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த முப்பத்தைந்து வருஷத்திய அனுபவத்தை பார்க்கிறபொழுது திருவாங்கூர் சமஸ்தானமானது பொதுஜனங்களுக்கு, கல்வி அறிவு தாராளமாய் புகட்டி வந்த பிறகுதான் இம்மாதிரி மத மாறுதல் ஏற்பட்டிருக்கிறதே அல்லாமல் அதற்கு முன்பு இவ்வளவு அதிகமில்லை என்றே சொல்லலாம். உதாரணமாக இவ்வளவு கல்வி அபிவிருத்தி ஏற்படாத 1891 –ம் வருஷத்திற்கு முந்திய பத்து வருஷத் தில் 100 –க்கு 5 பேர் வீதம் தான் கிருஸ்தவ மதத்தில் அதிகமாயிருக்கிறார்கள். 1891 – ம் வருஷம் திருவநந்தபுரத்தில் ஜனக்கணிதக் கணக்குப்படி கிறிஸ்தவ மகா ஜனங்களின் எண்ணிக்கை 500,000. 1891 ல் 526,000. இதே மாதிரி இனியும் நடக்குமானால் இன்னும் 50 வருஷத்தில் இந்துக்களே இருக்கமாட்டார்கள். ஆகவே அதிகமாக ஜனங்கள் அந்நிய மதத்தைத் தழுவ ஆரம்பித்தது கல்வி அறிவு ஏறி, சுயமரியாதை ஏற்பட்ட பிறகுதான் என்று உறுதியாய்ச் சொல்ல லாம். இவ்விதம் சுயமரியாதை அடைந்த ஓர் பெரிய சமூகத்தை இந்து மதத் தில் இருக்கக்கூடாது என்று உதைத்துத் தள்ளுவதுபோல் ‘நீ இந்து மதத்தில் இருக்கும் வரை உன்னைத் தொடமாட்டேன், பார்க்கமாட்டேன், தெருவில் நடக்க விடமாட்டேன், உன்னுடைய மதத் தத்துவங்களைப் படிக்கவும் சம் மதிக்க மாட்டேன் என்று கொடுமைப்படுத்தி அந்நிய மதத்தில் சேர நாமே கட்டாயப் படுத்தியவர்களாவோம். இந்தப்பழிக்கு முக்கியமாய்ப் பாத்திய மானவர்கள் 15,000 நம்பூதிரி பிராமணர்களும், 45,000 பரதேசப் பிராமணர் களில் பெரும்பான்மையோரும், அந்த ராஜாங்கத்தில் இவர்களுக்குள்ள ஆதிக்கமும்தான் காரணம், ஏனெனில் மேற்படி சமஸ்தானத்தில் உயர்ந்த ஜாதியார் என்று சொல்லப்படுபவர்களில் பிராமணர் தவிர மற்றவர் அநேக மாய் நாயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஜனசங்கியில் ஏழு லட்சம் உள்ளவர்கள். இவர்கள் தங்களது முன்னேற்றத்திற்காக நாயர் சமாஜம் என்று ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள். அச்சங்கத்தார் வருஷா வருஷம் ஒன்றுகூடி தங்களுடைய முன்னேற்றத்திற்காகவும், மற்றும் பொது நன்மைக்காகவும் பற்பல தீர்மானங்கள் செய்து வருகிறார்கள். அவ்வித, கூட்டங்களில் தீண்டாத வர்களுக்குத் தெருவில் நடப்பதற்கு உரிமை கொடுக்கவேண்டுமென்றும்,



tamilnavarasam.com

அதுமட்டுமல்லாமல் ஆலயப்பிரவேசமும் அனுமதிக்க வேண்டுமென்றும் தீர்மானம் செய்திருக்கிறார்கள். அரசாங்கத்தாருக்கும் இதை அனுப்பி அந்தப் படி செய்யக் கேட்டுக்கொண்டு மிருக்கிறார்கள். சட்டசபையில் இதுவிஷயம் விவாதத்திற்கு வந்த காலத்தில் நாயர் கனவான்கள் அநேகமாய் இந்த தீர் மானத்திற்கு அனுகூலமாகவே இருந்திருக்கிறார்கள். பரதேசப் பிராமணர்கள் என்பவர்களிலும் சிலர் இதற்கு அனுகூலமாகவே இருக்கிறார்கள். இந்தக் கொடுமையைப்பற்றி திருவாங்கூர் அரசாங்கத்தாருடைய கொள்கை இன்ன தென்பதும் ஆக்டிங்கு திவான் ஸ்ரீமான் ஆர்.கிருஷ்ணப் பிள்ளை அவர் களால் தெரிந்து போய்விட்டது.

அவர் சமஸ்தானத்து புதிய ராணியார் அவர்களுக்கு எழுதின கடிதத்தின் சுருக்கமாவது :-

“தெருவில் நடக்கக்கூடிய உரிமையை இந்துக்களில் யாருக்காவது கொடுக்கக்கூடாது என்று சனாதன இந்து மதம் கூறவில்லை. சமஸ்தான அரசாங்கத்தாரும் அதை எப்போதும் எதிர்த்ததேயில்லை. பலாத்காரம் உப யோகித்தால் கலகம் ஏற்படுமே என்று அஞ்சித்தான் தடை உத்திரவு போட்டது”.

இந்த வாக்கியங்களில் இருந்து யாவர் எவரிடம் பலாத்காரம் உபயோ கிப்பது, எவருக்குள் கலகம் ஏற்படும் என்று அரசாங்கத்தார் அஞ்சியது என் பதை நிதானமாய் யோசித்தால் விளங்கும்.

ஆகையால் இந்தக்கொடுமைக்கு ஏதாவது பாவமேற்படுமானால் இந்த 15,000 நம்பூதிரி பிராமண கனவான்களைத்தான் முதலில் சேரும். இதைப் பார்த்தால் இந்து சமூகத்திற்கு இந்தப் பிராமணர்கள் தர்மகர்த்தர்களாக இருப்ப தைவிட டயர், ஓட்வியர், லாயிட் ஜார்ஜ், பர்க்கன் ஹெத் சாதியார் தர்மகர்த் தர்களாய் இருப்பது அதிக கெடுதலாகத் தோன்றவில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 19.07.1925**



# ஊழியன்

காரைக்குடியினின்றும் வாரந்தோறும் வெளியாகும் “தனவைசிய ஊழியன்’’ தனது சிறிய தொண்டை விடுத்து உலகிற்கெல்லாம் தொண்டு செய்தல் வேண்டுமென்ற பரந்த நோக்கத்தோடு இவ்வாரம் “ஊழியன்” என்ற பெரிய பெயர் தாங்கி வெளிப்போந்துள்ளான். “தனவைசிய ஊழியன்” முதலில் தன் சமூகத்திற்கு அதிக ஊழியம் புரிந்து வந்தானாயினும் எம்பெருமான் அறவாழி அந்தணன் காந்தி அடிகளின் ஒற்றுழையா இயக்கம் அத் தனவைசிய நாட்டின்கண் பரவி, அச்சமூகத்தினர்க்குச் சுதந்தர உணர்ச்சி யைக் கொடுத்தவன் தனவைசிய ஊழியனே. அதுவும் ஈராண்டுகளாகத் தன் சமூகத்தைவிடத் தேசமே பெரிதெனக்கொண்டு கதர், தீண்டாமை ஒழித்தல் முதலிய தொண்டுகளில் தனது கவனத்தை இடைவிடாது செலுத்தி வருகின்றான். ஊழியனின் ஆசிரியரைப்பற்றி யாம் அதிகம் கூறவேண்டு வதில்லை. நமது அன்பர் திருவாளர் ராய. சொக்கலிங்கன் அவர்கள் தமிழ் ஆராய்ச்சி மிக்குடையார். காந்தி அடிகளிடத்தில் அளவற்ற பற்றுடையார். “காந்தி பிள்ளைத்தமிழ்” என்ற ஓர் நூலும் ஆக்கியுள்ளார். சீரிய ஒழுக்க முடையார். இளம்வயது உடையவர். சுமார் நான்கு ஆண்டுகளாக இப் பத்திரிகையின் ஆசிரியராகவிருந்து அவர் செய்திருக்கும் தொண்டினை யாம் விரிக்கிற் பெருகும். தனவைசிய நாட்டில் “தேசபக்தி” உண்டாக்கியதற்கு ஊன்றுகோலாக நமதன்பரே விளங்கினார். எதற்கும் அஞ்சாது உண்மையாக நின்று தமது அபிப்பிராயத்தை வெளியிடு வார். இதற்கு இவர் குருகுல விஷயமாகத் தனது அபிப்பிராயத்தை வெளியிட் டதே போதிய சான்றாகும். இவர் விரிந்த நோக்கத்துடன் தமிழ்நாட்டிற்குத் தனது “ஊழியன்” மூலமாகச் செய்யப்போகும் அரிய தொண்டினைக் கண்டு அளவிலா மகிழ்ச்சியுறு கிறோம். “ஊழியன்” டிம்மி அளவுடன் பதினாறு பக்கங்களோடு, பல பெரியார் களின் சிறந்த கட்டுரைகளோடு வெளியாகி உள்ளான். சந்தாவைச் சிறிதும் உயர்த்தவில்லை. முன்இருந்ததுபோலவே வருடம் ஐந்து ரூபாய். தமிழ் நாட்டினர் எல்லோரும் நமது “ஊழியனை” ஆதரித்தல் இன்றியமையாக் கடனாகும். ஊழியன் நீடுழி வாழ்க !

**குடி அரசு - மதிப்புரை - 19.07.1925**



RangaRakes
tamilnavarasam.com



குடி அரசு

[வாரப்பதிப்பு]

வருட சந்தா ரூபாய் மூன்றுதான்.



# தெய்வ வரி

நம் தேசத்தில் நாம் கொடுக்கும் வரிக்கு அளவே இல்லை. அரசாங்க சம்பந்தத்தில் பூமிவரி, வருமானவரி, கள்ளுவரி. துணிவரி, சாமான் வரி முதலியவைகளோடு முனிசிபாலிடி வரி, போர்டுவரி, லஞ்ச வரி, மாமூல் வரி என்று இவ்வாறாக அநேக வரிகள் கொடுக்க வேண்டி இருக்கிறது. இதல்லாமல் தெய்வத்திற்காகவும், மதத்திற்காகவும் கொடுத்துவரும் வரி அளவுக்கு மீறினவைகளாய் இருப்பதோடு நமக்கு யாதொரு பிரயோஜனத்தையும் கொடுக்காமல் மேற்சொல்லிய அரசாங்க சம்பந்த வரிகளின் அளவைவிட ஏறக்குறைய அதிகமாகவே கொடுக்கப்படுகிறது. அன்றியும், இவ்வரிகளால் தத்துவ விசாரணையும் நாம் கொஞ்சமும் செய்வதற்கில்லாமல் செய்து, நமது மூடநம்பிக்கையால் பிழைக்க வேண்டிய சிலரின் நன்மைக்காக அவர்கள் எழுதி வைத்ததையும் சொல்வதையும் நம்பி நாம் கஷ்டப்பட்டு வரி செலுத்துவதல்லாமல், வேறு என்ன உண்மை லாபம் அடைகிறோம்? தெய்வத்தை உத்தேசித்தோ, ஸ்தலத்தை உத்தேசித்தோ, தீர்த்தத்தை உத்தேசித்தோ, நமது பிராயணச் செலவு எவ்வளவு? பூஜை, பூசாரி காணிக்கை, பிரார்த்தனை முதலியவற்றுக்காக ஆகும் செலவு எவ்வளவு? சாதாரணமாய் திருப்பதி வெங்கடாசலபதி என்கிற ஒரு தெய்வத்திற்கு மாத்திரம் வருடம் ஒன்றுக்குப் பதினெட்டு லட்சம் ரூபாய் வரும்படி வருகிறது. இதைத் தவிர மேற்படி யாத்திரைக்காரர்களுக்கும் அங்குள்ள பூசாரிகளுக்காகவும் மற்றும் சில தர்மத்திற்காகவும் அங்கு போகும் ரயில் சத்தம், வண்டிச் சத்தத்திற்காகவும் ஆகும் செலவு எவ்வளவு? இதுபோலவே இமயம் முதல் கன்னியாகுமரி வரை உள்ள தீர்த்தம், ஸ்தலம், கோவில் முதலியவைகளுக்கு மக்கள் போக்குவரவு செலவுகள் முதலியவைகளை நினைத்துப் பார்த்தால் உடல் நடுங்குகிறது. இஃதன்றி வீடுகளில் நடைபெறும் வைதீகச் சடங்குகளான கலியாணம், வாழ்வு, சாவு, திதி இவைகளுக்காகவும் அதை நடத்திவைக்கவும் புரோகிதர் பிராமணர்கள் செலவும் எவ்வளவாகிறது? இவைகளை எல்லாம் மக்களின் பேராசையும், மூடநம்பிக்கையும் தானே செய்விக்கின்றது. தாங்கள் எவ்வளவு கொடுமையும் பாவமும் செய்திருந்தாலும் மேற்கூறிய தெய்வ யாத்திரையோ, வைதீகச் சடங்கோ செய்வதால் தப்பித்துக் கொள்ளலாமென்றும், தாங்கள் யோக்கியதைக்கு மேல் எதை விரும்பினும் பெற்று விடலாமென்றும் நினைக்கிற பேராசை நினைப்புகளும் இவைகளுக்குக் காரணமாய் இருப்பதன்றித் தங்கள் முன்னோர்கள் அவர்களின் குணகர்ம



RangaRakes
tamilnavarasam.com

யோக்கியதையைப் பொறுத்தல்லாமல், தாம் வைதீகச் சடங்கு செய்து பிராமணர்களுக்குப் பணம் கொடுப்பதன் மூலமாய் அவர்களை மோட்சத்திற்கு அனுப்பிவிடலாம் என்கிற மூடநம்பிக்கையும் இவர்களை இப்படிச் செய்விக்கச் செய்கின்றது. இதனால் மக்கள் ஒழுக்கம் பெறுவதற்கு இடமுண்டாகின்றதா? ஒருவர் ஏமாறவும் மற்றொருவர் ஏமாற்றவும் தானே பழக்கப்படுகிறது. கடவுளின் உண்மைத் தத்துவத்தையும், தங்கள் தங்கள் செய்கைகளின் பலன்களையும் மக்களுக்குப் போதித்து வந்திருந்தால் இவ்வளவு பேராசையும், செலவும் தெய்வத்தின் பெயராலும் ஏமாற்றுதலாலும் ஏற்பட்டிருக்கவே முடியாது. தெய்வத்திற்காகச் செலுத்தப்படும் காணிக்கைகள் என்னவாகின்றன? வைதிகச் சடங்குகளின் பலன்கள் என்னவாகின்றன? இவ்விரு கர்மங்களையும் நடத்தி வைப்பவர்களின் யோக்கியதை என்ன என்பதை மக்கள் கவனிப்பதில்லை. “காளை மாடு கன்று போட்டதென்றால் கன்றுக்குட்டியைப் பிடித்துக் கொட்டத்தில் கட்டு” என்றே சொல்லி விடுகிறோம். காளை மாடு எப்படி கன்று போடும் என்பதை நாம் கவனிப்பதே இல்லை. பூசாரிக்குப் பணம் கொடுப்பதாலும், காணிக்கைப் போடுவதாலும், நமது குற்றச் செயல்கள் எவ்வாறு மன்னிக்கப்படும்? நமது ஆசைகள் எவ்வாறு நிறைவேறும்? தெருவில் போகும் பிராமணர்களைக் கூப்பிட்டு அவர்களுக்கு அரிசி, பருப்பு, பணம், காசு கொடுப்பதாலும் அவர்கள் ஏதோ சில வார்த்தைகளை உச்சரிப்பதாலும் நமது முன்னோர்கள் எப்படிச் சுகப்படுவார்கள் என்று யோசிப்பதே இல்லை. இவைகளால் நமது பொருள், நேரம், தத்துவம் வீணாகப் போவதல்லாமல், ஒரு மனிதன் கொலை, கொள்ளை முதலிய துஷ்டச் செயல்கள் செய்யும் பொழுது தன்னுடைய பணச் செருக்கையும், வக்கீல்களையும், அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்பதையும் நினைத்துக் கொண்டு, இவர்களால் தப்பித்துக் கொள்ளலாமென்று எப்படித் தைரியமாய்ச் செய்கிறானோ அப்படியே இந்த க்ஷேத்திரங்களையும், காணிக்கைகளையும், புரோகிதர்களையும் நம்பிக்கொண்டு தைரியமாய்க் குற்றங்கள் செய்கிறான். அதோடு அல்லாமல் தேசத்தில் சோம்பேறிகளும், கெட்டகாரியங்களும் வளருகின்றன. நல்ல யாத்திரை ஸ்தலம் என்று சொன்னால் நல்ல வியாபார ஸ்தலம் என்பதுதான் பொருளாக விளங்குகிறது. தேர்த்திருவிழா ஸ்தலங்களுக்குப் போனவர்களுக்கும், யாத்திரை ஸ்தலங்களுக்குப் போனவர்களுக்கும் அநேகமாக இதன் உண்மை விளங்காதிருக்காது. நல்ல புரோகிதர்கள் என்போர்கள் தங்கள் வரும்படியை விபசாரத்திற்கும், சூதுக்கும், போதை வஸ்துகளுக்குமே பெரும்பான்மை யாக உபயோகித்து வருகின்றனர். வைதீகச் சடங்கைப் பற்றி ஒரு பெரியாரால் சொல்லப்பட்ட ஒரு கதையைச் சொல்லி இக்கட்டுரையை முடிக்கிறோம்.

ஒரு ஆற்றங்கரை ஓரத்தில் ஒரு புரோகிதர் ஒருவருக்கு வைதீககர்மம் செய்து வைத்துக்கொண்டிருக்கும்பொழுது, தான் கிழக்குமுகமாக நின்று தன் இரு கைகளாலும் தண்ணீரை அள்ளி இறைத்துக் கொண்டிருந்தார். அதைக் கண்டு ஒரு பெரியார், தான் மேற்கு முகமாய் நின்று தன் இரு கைகளாலும்



தண்ணீரை அள்ளி இறைத்தார்.

**புரோகிதர் :** ஐயா, என்ன மேற்கு முகமாய்ப் பார்த்துத் தண்ணீரை இறைத்துக் கொண்டிருக்கிறீர் ?

**பெரியார் :** நீங்கள் கிழக்கு முகமாகப் பார்த்து எதற்காகத் தண்ணீர் இறைக்கிறீர்கள்?

**புரோகிதர் :** இது, மேல் உலகத்திலுள்ள பிதுர்க்களைப் பரிசுத்தமாக்கும்.

**பெரியார் :** நான் இறைப்பது என்னுடைய காய்கறித் தோட்டத்தின் செடிகளை நன்றாக வளர்க்கும்.

**புரோகிதர் :** இங்கு நின்று கையால் வாரி இறைப்பது வெகு தூரத்திலுள்ள தோட்டத்திற்கு எவ்வாறு போய்ச்சேரும்? பயித்தியமாய் இருக்கிறீர்களே !

**பெரியார் :** நீர், இறைக்கும் தண்ணீர் மாத்திரம் என்னுடைய தோட்டத்தை விட எத்தனையோ அதிக தூரத்திலிருக்கும் மேல் உலகத்திற்கு எப்படிப் போய்ச் சேரும் ?

**புரோகிதர் :** ( வெட்கத்துடன் ) இந்த வார்த்தையை இவ்வளவுடன் விட்டுவிடுங்கள். வெளியில் சொல்லி என் வரும்படியைக் கெடுத்து விடாதீர்கள்.

இஃதல்லாமல் குருமார்களென்று எத்தனையோ பேர் நமது நாட்டிடைத் தோன்றி மக்களைத் தம் சிஷ்யர்களாக்கி அவர்களிடை எவ்வளவு பணம் பறித்துப் பாழாக்குகிறார்கள் என்பதைப் பற்றி மற்றொரு சமயம் எழுதுவோம்.

**குடி அரசு – கட்டுரை – 26.07.1925**



RangaRakes tamilnavarasam.com

## சுதேசமித்திரனின் மதுவிலக்குப் பிரசாரம்

சென்ற 22.7.25 ல் வெளியான சுதேசமித்திரன் மதுவிலக்கு விஷயமாகச் "சென்னை பிஷப்பின் யோசனை" என்று மகுடமிட்டு எழுதிய குறிப்பைக் காண எமக்கு பெரும் நகைப்பு உண்டாயிற்று. கட்டாயப்படுத்திக் கட்குடியைத் தடுக்க முடியாதெனப் பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவ சகோதரர்களை முக்திக்குச் செலுத்தும் உபதேசியாகிய ஷீ பிஷப் கூறியது சுதேசமித்திரனுக்கு அடக்கமுடியாத ஆத்திரத்தையும் கோபத்தையும் மூட்டிவிட்டது. சுதேசமித்திரனின் இக்கோபக்குறிப்பு எமக்கு வெறுஞ் சிரிப்பையே விளைவித்தது. "கண்ணாடி வீட்டில் வசிப்பவன் பிறன் வீட்டின் மேல் கல் எறிதல் கூடாது" என்ற சிறிய அறிவும் சுதேசமித்திரனுக்கு இல்லாமற் போனது எமக்குப் பெருத்த ஆச்சரியம். அதே சுதேசமித்திரனின் இதழில் முதல் பக்கத்தில் கண்ணைப் பறிக்கும் பெரிய எழுத்துகளில் 'புட்டி' படத்துடன் "எக்ஸ்ஷாஷ்" பிராண்டியைப் பற்றிப் புகழ் மிகுந்த விளம்பரஞ் செய்து பொருள் சம்பாதித்துவரும் சுதேசமித்திரன் மெய்மறந்து பாவம் எழுதிவிட்டான் என்றே நினைக்கிறோம். இத்தகைய விளம்பரங்களின் வாயிலாகத்தான் நமது சுதேசமித்திரன் மதுவிலக்குப் பிரசாரம் செய்து வருகின்றான் போலும்! சுதேசமித்திரன் அகராதியில் 'மதுவிலக்கு' என்பதற்கு 'மதுவருந்த விளம்பரஞ் செய்தல்' என்பதுதான் அர்த்தம் போலும் பணத்திற்குமுன் அறிவு, தேசாபிமானம், சுயஉணர்வு எல்லாம் பறந்து விடுவது சகஜமே. பணமென்றால் பிணமும் வாய் திறக்குமல்லவா? சொல்வதொன்று செய்வதொன்று என்பதுதான் எமது கொள்கை என்று சுதேச மித்திரன் பெரிய விளம்பரஞ்செய்து விடுவானாகில் எமக்குக் கவலையே இல்லை. "கட்டாயத்தினால் குடியை வெருட்டினாலொழிய கல்வி அறிவைக் கண்டு அது ஓடுமென்று நினைக்க உலகின் அனுபோகம் இடங்கொடுக்கவில்லை" என்று வெகு சமத்காரமாகச் சுதேசமித்திரன் செய்த முடிவை நாமும் ஆமோதிக்கிறோம். சுதேசமித்திரனின் சொந்த அனுபோகமே இடங்கொடுக் காமல் இருக்கிறதை நேரில் அறிந்திருந்தும் உலகின் மீது குற்றத்தைச் சுமத்துவானேன் என்று நாம் கேட்கிறோம்? சுதேசமித்திரனின் கல்வியறி வைக் கண்டு ஓடாத கட்குடி, பாமர ஜனங்களின் கல்வியறிவைக் கண்டு ஓடுமென சென்னை பிஷப் கூறியது மிகுதும் அறியாத்தனம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**குடி அரசு - தலையங்கம் - 26.07.1925**



## ஈரோடு முனிசிபல் நிர்வாகம்

**- பழைய கறுப்பன்**

### நான் யார் ?

பழைய கறுப்பன் என்பவர் யார்? என்று அநேகர் என்னையே கேட்டார்கள். அவ்வப்பொழுது என் மனதில் தோன்றின பதிலை அவரவர்களுக்குச் சொன்னேன். சிலருக்கு திருப்தி, சிலருக்கு அதிருப்தி. உலகத்தில் எல்லாருக்கும் நல்லவனாய், எல்லாரையும் திருப்தி செய்ய நினைப்பது முடியாத காரியம். அவ்வித முயற்சி "கிழவனும், மகனும், கழுதையும்" என்ற கதையாய்த்தான் முடியும். ஆகையினால் அதிருப்தியினால் நான் கவலைப்படவேயில்லை. ஆனால் இந்தக் கேள்வியில் அடங்கிக் கிடக்கிற ஒரு உண்மையை எல்லாரும் அறிந்து கொள்ள வேண்டும். விஷயம் முக்கியமா? விஷயகர்த்தா முக்கியமா? என்பதுதான். விஷயகர்த்தா முக்கியத்தினால்தான் இந்தக் கேள்வி பிறந்தது என்று அறிந்தேன். விஷயகர்த்தாவைக் குறித்துதான் விஷயம் நல்லது கெட்டது என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டுமென்று நமது ஜனங்கள் வாழ்ந்து வருகிறார்கள். இத்தகைய மனப்பான்மைதான் நம்மையும் நமது நாட்டையும் தற்கால கதிக்குக் கொண்டுவந்துவிட்டது. நான் யாராயிருந்தாலென்ன? சொன்னதெல்லாம் சரியென்று தோன்றினால் அந்தக் குறை நிவர்த்திக்கப் பாடுபடுங்கள். இல்லையேல் இன்னமும் பாடுபட்டுக் கொண்டிருங்கள். சரியில்லையென்று தோன்றினால், ஏதோ பைத்தியக்காரன் உளறுகிறான் என்று தள்ளி விடுங்கள். என்னுடைய வீரப்பிரதாப வியாக்கியானம் போதும். நிற்க,

### முனிசிபல் கட்சிகள்

தற்கால முனிசிபல் நிர்வாகிகளுக்கு விரோதக் கட்சியில் நானிருப்பதால் அவ்விதம் எழுதினதாகச் சிலருடைய எண்ணம். முனிசிபல் வேலையில் எனக்குக் கட்சியில்லை. என் வார்த்தையை நம்பாவிட்டால் நான் என்ன செய்ய முடியும்? உங்கள் இஷ்டம். முனிசிபல் நிர்வாகத்தில் கட்சி பேதத்திற்கே இடமில்லை. முனிசிபல் வேலை ராஜீய வேலையல்ல. ராஜீயக் கட்சிக்கும் முனிசிபல் வேலைக்கும் வெகுதூரம். காந்தி சொல்லுகிற மாதிரி ஏதாவது ஒரு ராஜீயக் கட்சியின் பலத்தைத் தெரிந்து கொள்ள முனிசிபல் எலக்ஷன்கள் சாதகமாக இருக்குமே ஒழிய வேறு பிரயோஜனம் ஒன்றுமில்லை. ஈரோடு முனிசிபலில் ராஜீயக் கட்சிக்காரர்கள் இருக்கிறார்களா என்றால் அதுவு



RangaRakes
tamilnavarasam.com

மில்லை. ஆனால், இருக்கிறதாகச் சொல்லிக்கொள்ளலாம். அதெல்லாம் வேஷம்தான். நமது முனிசிபாலிட்டியில் எத்தனை கவுன்சிலர்கள் இருக்கிறார்களோ அத்தனை அல்லது ஒன்றிரண்டு குறைந்த கட்சிகள் இருக்கின்றன என்பது என் எண்ணம். எல்லாம் சுயநலக் கட்சியே. எப்படியாவது தங்கள் தங்கள் சொந்த இஷ்டங்களைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்ற கட்சியின் மேல் நமது முனிசிபல் நிர்வாகம் நடைபெறுகிறது. இத்தனைக் கட்சியில் நான் எந்தக் கட்சியைச் சேர்வது? உள்ளுக்கு இருந்தால் நானும் ஒரு சுயநலக்கட்சி ஸ்தாபிதம் செய்து கொள்வேன். அந்தப் பாக்கியம் இல்லை. முனிசிபாலிட்டியில் தற்காலம் நடக்கும் அரசாங்கத்தை முன்னிட்டு இரண்டே கட்சிகள்தான் இருக்க முடியும். ஒன்று அரசாங்கக்கட்சி, மற்றொன்று ஜனங்கள் கட்சி. இதைத்தவிர வேறு கட்சிகள் இருக்க வழியே கிடையாது. ஆனாலோ, மேலே சொன்னமாதிரி நமது முனிசிபாலிட்டியிலோ ஒவ்வொரு வரும் தனிக்கட்சி, இதுவும் ஒரு காட்சி தான். ஈரோடு ஜனங்கள் இந்தக் காட்சியைக் கண்டு களிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## சென்னை கவர்னர் நீடூழி வாழ்க

சென்னை கவர்னர் நீடூழி வாழ ஈரோட்டார் ஒவ்வொரு கோயிலிலும் அர்ச்சனைகளும், பூஜைகளும் செய்யும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தப் புண்ணியவானால் அல்லவா லார்டு நேப்பியர் வீதி நடக்கிறதற்கு யோக்கியமாயிற்று? ஈரோடு ஜனங்களின் எலும்பு தோல் போர்த்த பாதங்களுக்குப் பரிதாபப்படாமல் போனாலும் கூட சென்னை கவர்னருடைய மோட்டார் வண்டி சக்கரத்தின் ரப்பர் தேய்ந்து வருத்தப்படுமேயென்று தங்கள் கண்ணில்பட்டதுபோல எண்ணி முனிசிபாலிட்டியார் இந்த உபகாரம் செய்ததற்கு என்னுடைய மனப்பூர்வமான வந்தனம்.

## கவர்னருக்கு ஒரு வேண்டுகோள்

கவர்னருக்கு ஒரு வேண்டுகோள் செய்துகொள்ள விரும்புகிறேன். ஈரோட்டாரும் என்னோடு “கோவிந்தா” போடுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு. கூடிய சீக்கிரத்தில் ஈரோடு வீதிகளில் சென்னை கவர்னர் மோட்டார்களில் ஒரு தெருவுகூட விடாமலும் ஊர்கோலம் வரும்படியாகத் தம்முடைய அலுவல் திட்டத்தைப் ( Programme ) போட்டுக்கொள்ள வேண்டுமென்பதே எனது வேண்டுகோள். அவ்விதம் அவர் வருவாரானால் வீடு தவறாமல் பூர்ணகும்பம், ஆலாத்தி முதலியவைகள் எடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய என் முழுமனதுடன் “நாய்போல்” உழைக்கிறேன். கேட்டால் கேளுங்கள்.

## முனிசிபல் கவுன்சிலர்களுக்கு ஒரு வேண்டுகோள்

என்னுடைய, நான் நம்புகிறபடி ஈரோட்டு ஜனங்களுடைய வேண்டுகோளின்படி சென்னை கவர்னரை ஈரோட்டுக்கு அழைத்து வரத் தங்களால்



ஆன முயற்சி செய்யும்படி வேண்டுகிறேன். அவ்விதம் செய்வார்களாகில் அவர்களுக்கும் கவர்னருக்குச் செய்யும் மரியாதைகளை வேறொரு நாளில் செய்ய வஞ்சகமில்லாமல் பாடுபடுகிறேன். இப்பொழுது 100 ரூபாய் செலவழித்தார்கள் என்று கேள்வி. அப்பொழுது அந்த தொகைக்கு முன்னால் இன்னொரு பூஜ்ஜியம் சேர்த்துக்கொள்ள மனப்பூர்வமாய் ஆதரவளிக்கிறேன்.

## ரோட் போட்ட செலவு என்ன ?

கவர்னர் மோட்டார்கள் போக ரிப்பேர் செய்த ரோட்டிற்கு என்ன செலவு ஆயிற்று என்பதை அறிய ரொம்ப ஆவல். என் ஆசை நிராசை என்பது தெரியும். ஆவலை அடக்க முடியாமல் வெளியிட்டேன். அவ்வளவு தானே நான் செய்யமுடியும். இதற்கு முன்னால் அந்த ரோட்டிற்கு ஆன ரிப்பேர் செலவுகளையும் இப்பொழுதான செலவையும் பார்த்து உண்மையை வெளியிடுவார்களா? என்று கேட்கிறேன். ஆனால் இன்னொரு சங்கதி, மேட்டூர் அணைப் பணத்திலிருந்து இந்த ரோட் ரிப்பேர் செய்தார்கள் என்று ஒருவர் சொல்லுகிறார். எது உண்மை என்று எனக்குத் தெரியவில்லை. எல்லாம் அறிந்தவர்கள் மௌனவிரதம் சாதிக்கிறார்கள். ஈரோடு ஜனங்கள் வாயில்லாப் பூச்சிகள் மாதிரி இருக்கிறார்கள். யாரை நோவது என்று தெரியவில்லை. என்னைப் பொறுத்த மட்டிலும் ‘கல்லைக் குத்தி கை நோவது’ என்று சொல்வது வெட்கமாக இருக்கிறது. எலக்ஷன் காலத்தில் ராப்பகலாக ஓடி ஆடித் திரிந்து ஆசை வார்த்தைகளைக் காட்டி ஏமாற்றினவர்களைப் பிரதிநிதிகளாக அனுப்பிவிட்டு நமது வார்த்தைகளுக்குக் காது கொடுத்துக் கேட்க மாட்டேன் என்கிறார்களே என்று ஜனங்கள் முணு முணுக்கிறதில் பிரயோஜனமென்ன? இனி மேலாவது புத்திசாலித்தனமாக நடந்து கொள்வீர்களா என்றுதான் ஈரோடு ஜனங்களை நான் இப்போது கேட்கிறேன்.

## வரவேற்புக்கு 100 ரூபாய்

நமது முனிஸிபல் கவுன்ஸிலர்களின் ராஜாபிமானத்தை எந்த அளவு கோல் கொண்டு அளப்பதென்று தெரியவில்லை. இவ்வளவு ராஜாபிமானத்திற்கு, அவசியம் சன்மானங்கள் பெறவேண்டியவர்களே. ஆனால் பாவம். இன்னும் 5, 6 மாதங்கள் காத்திருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய வருத்தம். நமது ராஜாவின் பிறந்த தினம் போய்விட்டது. அப்பொழுதே பட்டங்களும் செலவாய் விட்டன. இந்தப் பாழுங் கவர்னர் இராஜா பிறந்த தினத்திற்கு முன்னாலேயே வந்திருக்கக்கூடாதா? சிந்தின பாலுக்கு அழுது என்ன செய்வது? புதுவருஷப் பிறப்பை நான் எண்ணிக் கொண்டிருக்க வேண்டியதைத்தவிர வேறு வழியில்லை. விதி யாரை விட்டது?

கவர்னர் வரவேற்பு அலங்காரத்திற்கு 100 ரூ. நமது கவுன்சிலர்கள் சாங்ஷன் செய்தார்களாம். இந்தத் தொகையை ஜில்லா கலெக்டர் அநுமதித்து இருப்பர் என்பதில் சந்தேகமில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் நமது முனிசிபா



RangaRakes
tamilnavarasam.com

லிட்டியார் காந்தியடிகளுக்கு வரவேற்பு செய்தது எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. அப்பொழுது ரூ.50 போல் செலவழிக்க கவுன்சிலர்கள் தீர்மானித்தார்கள். சரியான தொகை நினைவில்லை. அப்போதைய கலெக்டர் கண்ணுக்கு காந்தி கவர்னராகத் தோன்றவில்லை. ஆனபடியால் "இவ்வளவு ரூபாய் வேண்டாம். இதை அநுமதிக்க மாட்டேன், முனிசிபாலிட்டியில் காகிதம் இருக்கிறது, பேனா இருக்கிறது, மை இருக்கிறது, சைக்கிளோ ஸ்டைல் எந்திரம் இருக்கிறது. அவைகளைக் கொண்டு வரவேற்புப் பத்திரம் தயாரித்துக் கொடுங்கள்" என்று உத்தரவிட்டாராம் - இந்த அவமானம் இன்னும் நீங்கவில்லை. அதற்குள் கவர்னருக்காக ரூ. 100 செலவழித்து நல்ல பிள்ளைகளாக நமது கவுன்சிலர்கள் முன்வந்துவிட்டார்கள். ஆனால் அப்பொழுது இருந்த கவுன்சிலர்கள் வேறு இப்போது இருப்பவர்கள் வேறு என்று சொல்லலாம். வாஸ்தவம்; ஆனால் முழுவதும் வாஸ்தவம் அல்ல; பழைய புலிகளில் சிலர் இப்போதும் இருக்கிறார்கள் - தம்பிக்கு வந்த அவமானம் தமயனுக்கு இல்லையா? என்று கேட்கிறேன். அதுதான் போகட்டும். முனிசிபல் கவுன்சிலுக்கு அவமானம் என்றால் ஈரோட்டு ஜனங்களுக்கு அவமானம் என்றுதானே அர்த்தம் - அப்போதுள்ள ஜனங்கள்தானே இப்போதும் இருக்கிறார்கள். பழைய ஈரோட்டார் புது உயிரும், புது உருவமும் பெற்று விட்டார்களோ என்னவோ எனக்குத் தெரியாது.

## நமக்கும் ஒரு காரியதரிசி

இனியும் நமது கவுன்சிலர்கள் முனிசிபல் நிர்வாகத்தில் கவலை கொள்ளவில்லை என்று யார் சொல்ல முடியும்? நமது முனிசிபாலிடியில் எப்படியோ திடீரென்று வேலை அதிகமாகப் போய்விட்டது என்று கண்டு கொண்டார்கள் - உடனே தலைவர் - உபதலைவர்களுக்கு உதவியாக ஒரு காரியதரிசி கொடுத்திருக்கிறார்கள். என்னமோ உளறுகிறேன். ஏன் வேலையில்லை? சிங்கார நந்தவனம் - நீந்து கட்டம் ( Swimming Ghat) இவைகள் எல்லாம் ஏற்படப் போகின்றன. மின்சார விளக்கும் வந்து விடும். நெருப்பணைக்கும் கருவியும் வந்துவிட்டது. ஈரோட்டிற்கு அக்கினி பகவான் பிரவேசம் செய்ய நமது கவுன்சிலர்கள் விண்ணப்பம் போட்டு விட்டார்களோ என்னமோ இன்னமும் தெரியவில்லை. அது கிடக்கிறது. இவ்வளவு புதிய வேலைகள் உண்டாகும்போது உதவிக்கு இன்னொருவர் வேண்டாமா? வேண்டும்! வேண்டும்! ஊரார் பணம்தானே? பதவிக்கு சண்டை போட்டவர்கள் வேலை செய்ய உதவி ஆள் தேடுகிறார்கள். ஆனால் காரியதரிசியை நினைக்கும் போதெல்லாம் தாங்கமுடியாத வருத்தம் எனக்குண்டாகிறது. நமது முனிசிபல் ஆட்சியோ இரட்டை ஆட்சி; இதில் எந்தப் பகுதி ஆட்சிக்கு அடங்கினவர் அவர் என்பதுதான் எனது பிரச்சனை. இரண்டு ஆட்சிக்கும் ஆளாக இருக்க முடியுமா என்று சந்தேகம் - பாவம் - காரியதரிசியின் பாடுதான் பரிதாபம் - ஒருவள் இரண்டு புருஷர்களைக் கல்யாணம் செய்து கொண்ட மாதிரிதான். ஒருவனுக்கு இரண்டு பொண்டாட்டிகள் இருந்தால்



கூடுமான வரையில் சண்டை அடுப்பங் கரையில்தான். ஒருவளுக்கு இரண்டு புருஷர்கள் இருந்தால் நடுவீதியில் தான் மல்யுத்தம். "ஊருக்கு ஒரு தேவடியாள் யாருக்கென்று ஆடுவாள்" என்ற பழமொழியும் உண்டு. இந்தச் சங்கடத்தில் இருந்து நீங்கிக் கொள்ள ஒரு வழியுண்டு. அந்தக் காரியம் கவுன்சிலர்களால்தான் ஆகவேண்டும். வேலை மிகுதியாய் விட்டது என்று நிச்சயம் வந்து விட்டது. ஏன் இன்னொரு உப காரியதரிசியையும் நியமிக்கக் கூடாது? கவுன்சிலர்கள் பெரிய மனது செய்தால் முடியாத காரியமுண்டோ? தலைவர் - உபதலைவர் சண்டையும் ஒழியும்! காரியதரிசிகள் பாடும் நிவர்த்தியாகும். இந்த யோசனையைக் கவுன்சிலர்கள் ஏற்பார்களா என்பதுதான் எனக்குச் சந்தேகம் - ஏன் ? அவர்களைத்தான் கேட்க வேண்டும்.

## நன்றி மறவாமை

நமது கவுன்சில் ஹாலில் சில கனவான்களைத் தொங்க விடுவதாக நமது கவுன்சிலர்கள் தீர்மானித்திருக்கிறார்களாம் - இதேது இவன் நிறுத்த மாட்டான் போலிருக்கிறதே என்று வாசகர்கள் சலிப்புக் கொள்ளுகிறார்கள். நிறுத்தி விட்டேன். பாக்கி பின்னால்; அதுவும் வாசகர்கள் விரும்பினால்தான்.

*குறிப்பு :-*

*கவுன்சிலர்களிடமும், வாசகர்களிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டியவனாக இருக்கிறேன். காரணத்தோடுதான். சென்ற வியாசத்தில் 'கள்ளி வனம்' எடுக்க ரூபாய் 500 செலவு செய்வதாகக் கேள்விப்படுகிறேன் என்று எழுதினேன். அப்பொழுதும் நிச்சயமாக ஒன்றும் சொல்லவில்லை. உண்மை தெரியாததினால் தான். ஆனால் அந்த உண்மையை நான் கேட்டுக் கொண்டபடி எவரும் எனக்குத் தெரிவிக்கவில்லை. அப்புறம் உண்மையை அறிய நானே இதைப் பற்றித் தெரிய வேண்டியவரான ஒரு நண்பரைக் கேட்டேன். அவர் ரூ. 235 தான் செலவு என்றார். சரி என்றேன். இப்பொழுது என் மன்னிப்பை சமர்ப்பணம் செய்கிறேன்.*

**குடி அரசு - கட்டுரை - 26.07.1925**



RangaRakes tamilnavarasam.com

# குரோதன வருஷத்தின் பலன்

இவ்வருஷம் சங்கராந்தி வியாபாரிகளின் மேலும், லேவாதேவிக் காரர்கள் மேலும், ஜாதி ஆணவத்தின் மேலும் வந்திருக்கிறது போல் காணப் படுகிறது. ஏனெனில் ஒரு லட்சம், இரண்டு லட்சம் என்று லட்சக்கணக்கான துகைக்குச் சில வியாபாரிகளும், 25 லட்சம், 50 லட்சம், 75 லட்சம் என்று பத்து லட்சக்கணக்கான துகைக்கு லேவாதேவி செய்யும் சில நாட்டுக்கோட்டை செட்டிமார் முதலியவர்களும் தீவாளி ஆகிவருவதாகவும், பார்ப்பது தோஷம், தெருவில் நடப்பது தோஷம் என்கின்ற ஆணவத் தத்துவங்கள் அழிந்து வருவதாகவும், இன்னும் அடியுடன் அழியப் பொதுமக்கள் உணர்ச்சியுடன் முயர்ச்சி செய்வதாகவும் பத்திரிகைகளில் பார்த்துவருகிறோம்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 26.07.1925**



# காவேரி அணை

ஈரோட்டிற்கு முப்பத்தேழு மைல் தூரத்தில் மேட்டூர் என்னும் கிராமத் திற்கு அருகில் ஓடும் காவேரிநதியின் இருகரைகளிலும் இரண்டு பெரிய மலைச்சரிவுகள் இருக்கின்றன. அவ்விரு சரிவுகளுக்கு இடையில் ஓடும் காவேரிநதியின் பிரவாக ஜலத்தை இச்சரிவுகளை ஆதாரமாகக்கொண்டு அணை கட்டி நிறுத்திவிட்டால், வேடைகாலத்திற்கு நீர்ப்பாசனத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்று சுமார் 50, 60 வருஷ காலமாக சென்னை அரசாங்கத்தாருக்கு நிபுணர்களால் யோசனை சொல்லப்பட்டு வந்தது. அந்த யோசனையின் மேல் சுமார் 25 வருடத்திற்கு முன்பாக ஸ்ரீமான் பி.வி.மாணிக்க நாயக்கர் முதலிய இஞ்சினியர்களால் இந்த அணைக்குத் திட்டம் போடப்பட்டிருந்தும் நாளது வரையிலும் வேலைத் துவக்கப்படாமல் இப்பொழுதுதான் வேலைத் துவக்கத்திற்கு ஏற்பாடாக, சென்னை கவர்னர் அவர்களால் மேட்டூரில் சூலை 20 தேதி அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டது. இவ்வேலைக்கு 6 கோடி ரூபாயும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வேலை முடிய குறைந்தது பத்து வருஷம் ஆகும் என்று கருதப்படுகிறது.

இந்த அணையின் நீளம் ஆறாயிரம் அடி நீர்தேக்கத்தின் பரப்பு சுமார் இருபது சதுரமைல். இதன் நீர்ப்பாச்சலினால் மூன்று லட்சத்து முப்பதாயிரம் ஏக்கர்களுக்கு ஒரு போகமும் 70 ஆயிரம் ஏக்கராவுக்கு இரண்டாம் போக மும் தண்ணீர் பாய்ந்து விளைவு உண்டாகும். இவ்வணையின் நீர்பாசனம் முழுதும் தஞ்சை ஜில்லாவுக்கே மிகுதியும் உபயோகப்படுமேயல்லாது கோயமுத்தூர், சேலம் ஜில்லாக்களுக்குக் கொஞ்சமும் உபயோகமில்லை. இவ்வளவு பூமியும் பட்டுக்கோட்டை தாலூக்காவில் தான் திட்டம் போடப் பட்டிருக்கிறது. இந் நீர்ப்பாசனத்திற்கு ஏக்கரா ஒன்றுக்கு 15 ரூ. வீதம் தான் தீர்வை விதிக்கப்படும்.

கோயமுத்தூர், சேலம் ஜில்லாக்களில் ஷை நீர்ப்பாசன வசதி செய்வ தாயிருந்தால் செலவு அதிகமாகுமென்றும் அதனால் ஏக்கரா ஒன்றுக்கு 30 ரூ. தீர்வை விதிக்கவேண்டிவரும் என்றும் கருதி இந்த யோசனையைக் கைவிடப் பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதை புனராலோசனை செய்யும்படி கோயமுத்தூர் ஜில்லாவாசிகள் கூடி யோசித்து ஏக்கரா ஒன்றுக்கு 22 ரூ. தீர்வை கொடுக்கத் தாங்கள் சம்மதிப்பதாயும் கோயமுத்தூர் ஜில்லாவுக்கும் பாசன வசதிசெய்துகொடுக்க வேண்டுமென்றும் தீர்மானித்து அரசாங்கத்திற்கும்



RangaRakes tamilnavarasam.com

தெரிவித்திருக்கிறதாகவும் சொல்லப்படுகிறது. இந்தியாவிலேயே மேட்டூர் காவேரி அணையைப் பெரிய அணைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

நமது தேசத்தில் உள்ள நீர் வசதியைக் கவனித்தால் இம்மாதிரி அனேக அணைகள் கட்டி சமுத்திரத்தில் போய் வீணாக விழும் தண்ணீரைத் தேக்கிக் கோடிக்கணக்கான ஏக்கரா பூமிகளைச் சாகுபடி செய்ய எவ்வளவோ சௌகரியமிருக்கிறது. நமது அரசாங்கத்தார் இத்தேசத்திற்குப் பிழைக்க வந்திருக்கிறவர்களானதாலும், நமது தேசத்தின் வாழ்வுகளில் லட்சியம் செலுத்த வேண்டிய அவசியமில்லாதவர்களாயிருக்கிறவர்களானதாலும் பெரிய கூட்டமாகிய 33 கோடி ஜனங்களை வெகு சிலபேர் ஆளவேண்டி யிருக்கிறதானதினாலும் சந்துபொந்து மூலை முடுக்குகளுக்கெல்லாம் தங்கள் பீரங்கியும், துப்பாக்கியும், பட்டாளங்களும் போகத்தக்கவண்ணம் ரயில் போடுவதிலேயே கவலை செலுத்தி நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை அதற்க்கே செலவிட்டு ரயில் வசதிகளைப் பெருக்கி வந்தார்களே ஒழிய, இவ்வணை கட்டுகிற விஷயத்தில் இவர்களுக்கு இஷ்டமும் கவலையும் மிகுதியாக இருக்கவேயில்லை. அன்றி மற்றொரு காரணமும் கூறலாம். இந்நாட்டில் நீர்ப்பாசன வசதி அதிகமேற்பட்டுவிட்டால் மக்களுக்கு கூலி வசதியும் பிழைப்பு வசதியும் அதிகமாய்விடும். வெளிநாட்டில் உள்ள அன்னிய தோட்டக்காரர்களுக்கு நம் நாட்டிலிருந்து கூலியாட்கள் ஏற்றுமதியாக இடமில்லாமல் போய்விடுமே என்கிற பயமும் இருக்கலாம். நமது சட்டசபை அங்கத்தினர்களுக்கும் இது விஷயங்களில் கவனம் செலுத்தத்தக்க புத்திவரும்படியான கல்வியும் நமது தேசத்தில் இல்லை. மின்சார விசை கொண்டுவந்து விளக்குப்போடவும், யந்திரம் வண்டி கொண்டுவந்து குப்பை வாரவும், இயந்திரம் வைத்து நூல் நூற்கவும் நெசவு செய்யவும், பூமிக்குள் ரயில் போடவும் அல்லாமல், தேச நலத்திற்கோ ஏழைகள் பிழைப்பிற்கோ என்ன செய்வது என்று யோசிக்க நேரமோ புத்தியோ இல்லாமல் போகும்படி கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

பயங்கொள்ளியாகவும் எப்பொழுதும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே கருத்துள்ளதாகவும் குடிகளிடத்தில் சதாகாலமும் சந்தேகமுள்ளதாகவும் அன்பினால் அல்லாமல் துப்பாக்கி, பீரங்கி, வெடிகுண்டினால் ஆளுவதாகவும் இருக்கிற ஒரு அரசாங்கத்தினிடை இவற்றைத் தவிர நாம் வேறு என்ன எதிர்பார்க்கமுடியும்?

**குடி அரசு - கட்டுரை - 26.07.1925**



# ஸ்ரீ சிவம் மறைந்தார்

சென்ற இரண்டு மூன்று வாரங்களாக மறைந்திருந்த துக்கம் நம்மை மீண்டும் சூழ்ந்து விட்டது. இது, தேசத்தின் பிற்கால வாழ்வில் மேலும், மேலும் சலிப்பிற்கே இடம் கொடுத்து வருகின்றது. சின்னாட்களுக்கு முன்பாக ஸ்ரீஜத் சுப்பிரமணிய சிவனார் மதுரையில் நோய்வாய்ப்பட்டு மிக வருந்துகிறார் எனப் பத்திரிகைகளில் பார்த்தோம். கொடிய கூற்றுவன் இவ்வளவு விரைவில் நமது அரிய தேச பக்தரைக் கொள்ளை கொள்வான் எனக் கனவினும் கருதவில்லை. நமது சிவனார் பழைய தேச பக்த வீரர்களில் ஒருவர். 1907ம் ஆண்டில் நமது நாட்டிடை ஏற்பட்ட சுதேசியக் கிளர்ச்சியின் பொழுதே முக்கியமானவராக நின்று தொண்டாற்றியதன் பலனாய் ஸ்ரீமான்கள் வ.உ.சிதம்பரம்பிள்ளை, குருதாதய்யர் முதலிய நண்பர்களுடன் ஆறு வருட தண்டனை அடைந்து சிறையில் பட்ட கடினங்கட்கு ஓர் அளவில்லை. அப்பொழுது அவரைக் கொண்ட நோய்தான் இதுகாலை அவரை வீழ்த்தியது. அக்காலத்தில் சிறை என்றால் எவ்வளவு இழிவும் பயமும் என்பது யாம் எல்லோரும் நன்கு அறிந்ததே. அப்படி யிருந்தும் சிறையினின்றும் வெளிவந்து மீண்டும் அஞ்சாது தேசப் பணியிலேயே தனது காலத்தைக் கழிக்கலானார். சிவம் அவர்கள் ஒத்துழையாத் தர்மத்தில் ஏனையவற்றை ஏற்றுக்கொள்ளினும் சாத்வீகம் என்பதைச் சிறிதும் ஏற்றுக் கொள்ளவேயில்லை. ஒத்துழையாமை ஓங்கி வளர்ந்து நின்ற காலத்தினும் சிவம் அவர்கள் பொழிந்த சொற்பெருக்குகளெல்லாம் வீரத்தை அடிப்படையாகவே கொண்டிருந்தன என்றும் எவரையும் அஞ்சாது எதிர்த்து நிற்பது அவரது வாழ்நாளின் ஓர் பெரிய லட்சியமாகும். இரண்டாம் முறையாக சிவம் அவர்கள் 1921 - ம் ஆண்டு சின்னாள் சிறையிலிருந்து உடல் வலி குன்றி உயிர் போகும் நிலையிலிருந்த காரணத்தால் வெளியில் வந்து விட்டார். மீண்டும் அரசாங்கத்தார் சிவம் அவர்களைச் சிறையிலிட வேண்டிய முயற்சிகளெல்லாம் செய்தனர். சிவம் அவர்கள் அரிய நூல்கள் பல எழுதியுள்ளார். அவர் எப்பொழுதும் இளைஞர்களை வீரர்களாக்க வேண்டும் என்ற கருத்துடையார், அக்கருத்துப்படி இன்றுவரை பல இளைஞர்களைப் பயிற்றுவித்து வந்தார். அவரது இளம் சீடர்கள் மனத் தளர்ச்சி உறாமல் தேசப் பணியிலேயே தங்கள் காலத்தைச் செலுத்த வேண்டுகிறோம். எமது அநுதாபத்தை அவர்கட்குத் தெரிவிக்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 26.07.1925**



RangaRakes tamilnavarasam.com

# சாஸ்திரியாரின் தேசாபிமானம்

திரு.வி.எஸ்.சீனிவாச சாஸ்திரியாரை அறியாத இந்தியர் இரார் என்பது உறுதி. நமது தேசாபிமானிகளில் ஒருவராக அவரும் விளங்கி வருகின்றார். ஆங்கிலேயர் இதுவரையிலும் இந்தியர்களுக்கு அளித்த பட்டங்களில் உயரிய பட்டத்தைப் பெற்றவராவர். இரண்டொரு நாட்களுக்கு முன்னர் அவர் தமது தேசாபிமானத்தின் ஆழத்தை இந்தியருக்கு அளந்து காட்டியிருக்கிறார். நாட்டின் தற்கால அரசியல் நிலையைப் பற்றிச் சிறந்த தேசாபிமானிகளின் அபிப்பிராயங்களை அறிய வேண்டி 'பம்பாய் கிரானிகல்' பத்திரிகை சில கேள்விகளை விடுத்திருக்கிறது. அக்கேள்வி களுக்குப் பதில் அளித்த பெரியார்களில் நமது சாஸ்திரியாரும் ஒருவர். அக் கேள்வி களில் ஒன்று பின்வருமாறு:- "அந்நிய நாட்டு ஆடை அணிவதை விட்டு விடத் தாங்கள் தயாராக இருக்கிறீர்களா? தாங்கள் அந்நிய ஆடையை உபயோகித்துக் கொண்டு வரின், சுதேசி இயக்கம் முன்னேற்றமடைய அதை விட்டுவிட ஒருப்படுகிறீர்களா?" இக்கேள்விக்கு 'இல்லை' என்று ஒரே வார்த்தையில் நமது சாஸ்திரியார் பதில் கூறிவிட்டார். என்னே இவரது தேசாபிமானம்! என்னே ஏழை இந்திய மக்களிடத்து இவருக்குள்ள பேரன்பு! ஏழை இந்திய மக்கள் பாடுபட்டுக் கொடுத்த வரிப்பணத்தில் உலகஞ்சுற்றி வந்த நமது சாஸ்திரியாரா இந்திய ஏழை மக்க ளுக்கு இரங்கப்போகிறார்? எல்லாம் வெறும் பகற்கனவே. ஆங்கில மாயையில் அழுந்திக் கிடக்கிறார் பாவம் நமது சாஸ்திரியார். ஆங்கில மோகத்தின் வலிமையே வலிமை! பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் உதறித் தள்ளிவிடும்படி சாஸ்திரியார் போன்ற உத்தமர்களையும் வெருட்டி விடுகின்றது. சாஸ்திரியார் நீடுழி வாழ்க!

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 26.07.1925**



# அகில இந்திய தேசபந்து ஞாபக நிதி

தேசபந்து தாசர் இரவு பகலாய்ச் செய்யவேண்டுமெனக் கருதி வந்த கிராம நிர்மாண வேலை செய்யும்பொருட்டு இந்நிதி வசூலிக்க காந்தி அடிகள், பண்டித மதிலால் நேரு, சரோஜனி தேவியார், ஜம்னாலால் பஜாஜ், பி.ஸி.ரே, சௌகத் அலி, ஜவஹரிலால் நேரு முதலிய அரிய தலைவர்கள் ஓர் வேண்டு கோள் விடுத்துள்ளார்கள். இந்நிதியைப் பிரசாரத்திற்குச் செலவு செய்யப்படப் போவதில்லை. படித்தவர்களை கிராமங்களுக்கு அனுப்பி அங்கு அவர்கள் கிராம நிர்மாண வேலைகள் செய்வதற்கே செலவு செய்யப்படும். தாசர் இறப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் தார்ஜிலிங்கில் "எனது நோய் குணப்பட்டவுடன் கிராமங்களில் இராட்டினங்களைப் பரவச் செய்வதற்கே வேண்டிய முயற்சி செய்யப்போகிறேன்" என்று காந்தி அடிகளிடம் கூறி னாராம். உணவில்லாது வாடும் மக்களைக் காப்பதற்கு இந்நிதி வேண்டு வது மிகவும் அவசியமாகும். இக்கிராம நிர்மாண வேலையே நமக்குச் சுதந்த ரத்தை அளிக்கக்கூடியது. நகரங்கள் என்னும் பேய்களின் நாகரீகம் என்னும் மாயை ஒழித்து மக்கள் எல்லோரும் கிராம வாழ்வு வாழ்ந்து, பண்டைக் கைத்தொழிலை உயிர் பெறச்செய்தல் வேண்டும். இந்நிதியானது இந்தியா வெங்கும் கிராம நிர்மாண வேலை செய்வதற்கு உபயோகப்படுமாகையால் ஒவ்வொருவரும் எளியவராயினும் சரி, செல்வந்தராயினும் சரி தங்களது சக்திக்கேற்றவாறு உதவி செய்து தாசரின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுவது அவசியமென யாம் கூறவேண்டுவதில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 26.07.1925**



RangaRakes tamilnavarasam.com

## நான்கு சித்திரங்கள்

ஒரு தமிழ் நாட்டுப் பெண் நாட்டியமாடுவது போலவும் ஒரு தமிழ் நாட்டு................ன் ஆட்டுவிப்பது போலவும் சித்திரம் எழுதி, இங்கிலாந்தில் தேசியக் கூத்து என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

இது தமிழ்நாடு சுயராஜ்யக்கட்சி காரியதரிசியாய் இருந்த ஒருவர் இங்கிலாந்துக்கு தேசிய பிரசாரத்திற்கு போவதாகச் சொன்னதையும், அவர் போகும்போது ஒரு நாட்டியப் பெண்ணும் கூடப் போயிருக்கிறது என்று சொல்வதையும் குறிக்கிறது போல் இருக்கிறது.

### மற்றொன்று

ஒருவர் ஒரு மாளிகையில் அன்னிய உடையுடன் ஒரு கையில் சிகரெட்டும் மற்றொரு கையில் பிராந்திக் கோப்பையும் பக்கத்தில் ஒரு சாராயக் குப்பியும் அருகில் ஒரு பொட்லரும் இருக்க அதுசமயம் மகாத்மா உள்ளே வர உடனே வேலைக்காரனைக் கூப்பிட்டு மீட்டிங்குக்குப் போக வேண்டும், மீட்டிங்குக்கு உடுத்துவதான கதர் உடை கொண்டுவா என்று சொல்வது போல் ஒரு சித்திரம் மகாத்மாவின் புது சிஷ்யர்களின் பெருமை யைக் காட்டுவதுபோல் வரையப்பட்டிருக்கிறதுபோல் இருக்கிறது. இது கல்கத்தாவில் மகாத்மாவின் பிரயத்தனத்தால் மேயர் ஆன ஸ்ரீமான் சென்குப்தா அவர்களின் தன்மையைக் காட்ட குறிப்பிட்டது.

### இனியும் ஒன்று

சேரமாதேவி குருகுலத்தில் ஒருவர் தாடியுடன் கால்மேல் கால்போட்டு உட்கார்ந்து பராக்கிரமத்துடன் ஒரு கையில் மீசையைத் தொட்டுக்கொண்டு மற்றொரு கையில் பயப்படாதிருங்கள் ஒரு கை பார்ப்போம் என்று அபயாஸ்தம் காட்டிக்கொண்டும், குருகுலவாசிகள் தாங்கள் இருக்கும்போது எங்களுக்கு என்ன பயம் என்றும் சொல்லுவதுபோலவும் உத்திரவில்லாமல் வரக்கூடாது என்று குருகுல வாயிலில் ஒரு பலகை எழுதிக் கட்டித் தொங்க விட்டு இருப்பது போலவும் வரையப்பட்டிருக்கிறது. இது தமிழர்களிடம் அதிகமாய் பணம் வசூலித்துக்கொண்டு தமிழ்க் குழந்தைகளை இழிவுபடுத்து வதைப் பற்றிக் கேட்டால் அதற்கு வீரியம் பேசுவதைக் குறிக்கிறது போல் இருக்கிறது.



### இன்னும் ஒன்று

ஒரு பக்தி நிறைந்த கணவனும் மனைவியும் தன் முன்னோர்களுக்கு திதி கொடுப்பது போலவும், அவற்றை புரோகிதர்கள் வாங்கி மூட்டைக் கட்டிக் கொண்டு ...... வீட்டுக்குப் போவது போலவும் ஒரு சித்திரம் வரையப்பட்டி ருக்கிறது. இது நம்மவர் யோசனையில்லாமலும் பாத்திரமறியாமலும் திதி கொடுக்கும் பயித்தியக்காரத் தனத்தைக் காட்ட குறிப்பிட்டதுபோல் இருக்கிறது. இவை முறையே தமிழ்நாடு, வங்காளி, ஊழியன் இவைகளில் காணப்படுகிறது.

**குடி அரசு – கட்டுரை – 26.07.1925**



RangaRakes tamilnavarasam.com

# லஞ்சம்

நமது நாட்டிடை இதுகாலை அரசாங்க ஊழியர்களுக்குள்ளும் பொது மக்களுக்குள்ளும் லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் மிகவும் எளிய வழக்கமாகப் போய்விட்டது. மக்களிடையே இவ்வித வழக்கங்களை இழி வாய்க் கருதும் மனப்பான்மையும் மாறிவிட்டது. அரசாங்க ஊழியர்கள் என்போர் ஓர் ஊரினின்றும் மற்றொரு ஊரிற்கு மாற்றப்பட்டு வந்தால் முதன் முதலாக அந்த ஊரில் லஞ்சம் வாங்கிக் கொடுக்கும் தரகர்களைத் தேடுவது தான் அநேகமாய் அவர்களது வேலையாய் இருக்கின்றது. பொதுமக்களும் அரசாங்க நீதிமன்றங்களிலோ, நிர்வாக மன்றங்களிலோ தங்களுக்கு ஏதேனும் அலுவல்கள் ஏற்பட்டால் லஞ்சம் வாங்கிக் கொடுக்கத் தரகர்களைத் தான் முதலில் நாடுகிறார்கள். இவ்விரு கூட்டத்தாரிடையினும் லஞ்சம் வாங்கவும் கொடுக்கவும் தற்காலம் பெரும்பாலும் வக்கீல் கூட்டங்களிலிருந்தே தரகர்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். இதனால் நியாய மன்றங்களில் விவகாரங் களைத் தாக்கல் செய்யவேண்டிய கட்சிக்காரர்கள் நியாயாதி பதிகளுக்குத் தரகர்களாய் இருக்கும் வக்கீல்கள் யாரோ, அவர்களிடமே அதிகம் செல்லு கின்றனர். சில வக்கீல்களும் தங்களுக்கு இவ்வளவு, நியாயாதிபதிக்கு இவ்வளவு என்று பேசியே தொகை வாங்குகின்றனர். சில அதிகாரிகள் லஞ்சம் வாங்குவதில்லை என்று சொல்லிக் கொண்டு சிற்சில வக்கீல்களிடம் சிநேகமாகவும், தாட்சண்யமாகவும், பாரபட்சமாகவும் நடந்து கொண்டு, அதன் மூலமாக வக்கீல்களுக்கு வரும்படி செய்து வைத்து அவர்களிடம் பணமாக அல்லாமல் வேறு வழிகளில் தாங்கள் லாபம் அடைகின்றனர். இதை வழக்கத்தில் லஞ்சம் என்று சொல்லாவிடினும், இதுபோன்ற செயல்கள் உண்மையான லஞ்சத்தின் பலனையே உண்டாக்கு கின்றது. தாட்சண்யம் காட்டப்படும் வக்கீல்கள் இதன் பலனாய் லஞ்சம் என்கிற பெயரால் இல்லாவிடினும், வேறு வழியில் கட்சிக்காரர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுகின்றனர். இதனால் அநேகமாய் இவ்வழக்கமுள்ள வக்கீல் களிடம்தான் கட்சிக்காரர்கள் செல்லுகின்றனரே அன்றி, கெட்டிக்காரர்களா கவும், யோக்கியமாகவுமுள்ள வக்கீல்களிடம் செல்லுவதில்லை. அரசாங்க ஊழியர் என்று சொல்லும் அதிகாரிகளும் லஞ்சம் வாங்குவதில் பலவித தத்துவங்களை உபயோகிக்கின்றனர். சிலர் இரண்டு கட்சிக்காரரிடம் வியாபா ரம் பேசுவது போல் பேசி, அதிக தொகை கொடுத்தவனுக்கு அனுகூல மாகவே தங்கள் தீர்ப்பைக் கொடுக்கின்றனர். சில சமயங்களில் இரண்டு



பேரிடமும் வாங்கிக்கொண்டு இருவரையும் திருப்தி செய்யும்படி ராஜி செய்து அந்த ராஜிக்கு ஏற்றவிதமாய் தங்கள் தீர்ப்பை அளித்து விடுகின்றனர். சில தருணங்களில் ஒரு கட்சிக்காரருக்குத் தெரியாமல் மற்றொரு கட்சிக்காரரிடம் இவ்வளவிற்குக் குறைவில்லாத தொகைக்கோ, தண்டனைக்கோ தீர்ப்புச் செய்கிறேன் என்றும், இன்னொரு கட்சியாரிடம் இவ்வளவுக்கதிகமல்லாத தொகைக்கோ, தண்டனைக்கோ தீர்ப்புச் செய்கிறேன் என்றும் இருவரிடமும் வாங்கிக் கொள்ளுவதும், சில தருணங்களில் பெரிய தண்டனை செய்ய வேண்டியதையோ பெரிய தொகைக்குத் தீர்ப்புச் செய்ய வேண்டியதையோ குறைந்த அளவிற்குச் செய்வதாய்ச் சொல்லி வாங்குவதும், இன்னும் சில சந்தர்ப்பங்களில் தங்களிடமுள்ள விவகாரங்களில் நியாயம் இன்னாருக்குத் தான் என்று தெரிந்து அந்தக் கட்சியாரிடம் வாங்கிக் கொள்ளுவதும் இப்படி இன்னும் அநேக விதமாய் வாங்கப்படுகின்றன. இப்படி வாங்கப்படும் லஞ்சங்கள் பெரும்பான்மையாய் முழுவதும் தாங்களே அடைவதில்லை. மேல் அதிகாரிகளுக்கும் பங்கு கொடுக்க நேரிட்டு விடுகின்றது. அந்தப் பங்கு என்பது தொகையாகவோ, சப்ளைகள் மூலமாகவோ, சாமான்களாகவோ, வேறுவிதமாய் அவரைத் திருப்தி செய்வதன் மூலமாகவோ பங்கு செலுத்தி யாகிவிடுகின்றது. அப்படிச் செலுத்தி மேலதிகாரிகளுக்கு நல்லவனாய் நடந்து கொண்ட இவ்வதிகாரிகள் வெகு தைரியமாய் தங்களுடைய தீர்ப்புகளைக் கடை வைத்து வியாபாரம் செய்வது போல் விற்று வருகின்றனர். பொது ஜனங்களும் கடைகளில் கத்தரிக்காய், வாழைக்காய் விலைபேசி வாங்குவது போல தீர்ப்பை விலைக்கு வாங்குகின்றனர். இவை பெரும்பாலும் வெளிப் படையான இரகசியங்களாய் விளங்குகின்றன. வியாஜ்யங்களும், விவகாரங் களும் அதிகமாகிக் கொண்டு வருவதற்கு நமது நாட்டு வக்கீல்கள் முக்கியக் காரணமென்று சொல்லுவது ஒரு பக்கமிருந்தபோதிலும், இந்த லஞ்சம் வாங்கலும் கொடுக்கலும் அதற்கு எவ்விதத்திலும் குறைந்தது அல்லவென்றே சொல்லலாம். மேல் அதிகாரிகள் என்று சொல்லப்படுவோர் லஞ்சம் வாங்கும் கீழ் அதிகாரிகளிடம் பங்கு வாங்காவிட்டாலும் குருட்டுத்தனமான அபி மானத்தாலோ, வேறு சிபார்சின் காரணங்களாலோ, தங்கள் இஷ்டம் போல் நடக்கிறார்கள் என்பதினாலோ, அல்லது தாம் வாங்குவது போலவே அவரும் வாங்கிவிட்டுப் போகட்டும் என்று கருணை காட்டுவதினாலோ, தம்முடைய மேல் அதிகாரிக்கு வேண்டியவராகவும் இருக்கின்றார்கள் என்ற காரணத்தி னாலோ, அன்றியும் ராஜீய விஷயங்களில் சர்க்காருக்கு அனுகூலமாய் அவரது மனசாட்சிக்கு விரோதமாய் அநேகம் பேரைத் தண்டனை செய்துள் ளார் என்றோ, வெள்ளையருக்கும் இந்தியருக்கும் நடந்த விவகாரங்களில், வெள்ளைக்காரருக்கு அனுகூலமாகத் தீர்ப்புச் செய்துள்ளார் என்றோ இத்தியாதி காரணங்களால் எவ்வளவு வெளிப்படையாயும், எவ்வளவு மக்கள் வருந்தும்படியாயும், லஞ்சம் வாங்கினாலும் கவனிக்காமல் விட்டு விடுகின் றனர். லஞ்சம் என்று சொல்லுவது சாதாரணமாய் போலீஸ், ரிவனியூ, இஞ்சி னியர், வைத்தியம், பாரஸ்ட், சால்ட் முதலிய இந்த இலாகாக்களுக்குப் பிறவிக்



RangaRakes tamilnavarasam.com

குணமாய் இருந்து அரசாங்கத்தாலும் பொதுமக்களாலும் சகஜந்தான் எனக் கருதி கவனிக்காமலே அனுமதிக்கப்பட்டு வந்திருந்த போதிலும், ஜனங்களின் வாழ்வு – தாழ்விற்குப் பெரிதும் காரணமாயிருக்கிற சிவில், கிரிமினல் இலாகாக்களில் கூட தலைவிரித்தாடி வருகின்றன. இவர்களில் சிலர் பணமும், நோட்டும் வாங்கினால்தான் லஞ்சமென்றும், வேறுவித காரியங்கள் என்ன செய்தாலும் லஞ்சம் இல்லை என்கிற எண்ணத்துடனேயே தங்கள் காரியங்களைச் செய்கின்றனர். சாதாரணமாய் உத்தியோகஸ்தர்களில் லஞ்சம் வாங்காதவரை மற்ற அதிகாரிகளும் முட்டாள் என்றே கருதுகின்றனர். அநேகமாய் அவர்களுக்கு மேல் உத்தியோகமும் கிடைப்பதில்லை. தாங்கள் லஞ்சம் வாங்குவதில்லை என்கிற அகம்பாவத்தால் மேல் அதிகாரிகளை இவர்களும் இலட்சியம் செய்யாதிருந்துவிடுவது. அதனால் மேல் அதிகாரிகள் இவர்களைக் கெடுத்து விடுகின்றனர். இவை இப்படியிருக்க, அதிகாரிகளிலேயே சிலரும், படித்தவர்களில் சிலரும் தாங்கள் ஒரு குற்றமும் செய்யாமல் உத்தியோகமும் மேல் உத்தியோகமும் சம்பாதிப்பதற்காகவே ஆயிரம் பதினாயிரக் கணக்காகவும் கொடுக்க வேண்டி ஏற்பட்டுப் போய்விடுகின்றது. சில உத்தியோகஸ்தர்கள் வாங்க இஷ்டப்படாதவர்களாயிருந்தாலும் மேல் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கவும், செலவு செய்வதற்கும் என்றே லஞ்சம் வாங்க வேண்டியவர்களாய் விடுகிறார்கள். சில இலாகாக்களில் லஞ்சம் மாமூலாகவே கருதப்பட்டு வருகின்றது. சில அதிகாரிகள் தாம் வாங்காதிருந்தால் போதும் என்று, மற்றவர்கள் வாங்குவது நன்றாகத் தெரிந்திருந்த போதிலும் கவனியாமலே இருந்து விடுகிறார்கள். இவ்விதமாக அதிகாரிகளின் யோக்கியதை கவனிக்கத்தகுந்த அளவிற்குப் பெருகி வருகிறது. எவ்வளவு ரூபாய் சம்பளம் கொடுத்தால் லஞ்சம் வாங்க மாட்டார்கள் என்று சொல்லுவதற்கு ஒரு தொகையே இல்லாமல் போய்விட்டது.

சில்லறை உத்தியோகஸ்தர்கள் வாங்கும் லஞ்சம் அவ்வளவு கெடுதியை உண்டாக்காவிட்டாலும், அதன் விபரங்களைப் பற்றிப் பின்னர் எழுதுவோம். கவுரவ உத்தியோகஸ்தர்களும் லஞ்சம் வாங்குவது சகஜமாகி விட்டதல்லாமல், அரசாங்கமும் அனுமதித்துவிடும் போலிருக்கிறது. லஞ்சம் விஷயமாய் ஒரு பெரிய அதிகாரிக்கும், ஒரு பெரிய மனிதருக்கும் நடந்த சம்பாஷணையை மாத்திரம் எழுதிவிட்டு இதை முடிக்கிறோம்.

**பெரிய மனிதர் :** என்ன ஐயா, உங்கள் இலாகாவைச் சேர்ந்த ஒரு பெரிய உத்தியோகஸ்தர் இவ்விதமாக லஞ்சம் வாங்குகிறாரே, எங்களுக்கு எல்லாம் வெளியில் தலை நீட்டுவதற்கு வெட்கமாய் இருக்கிறதே, இதைப்பற்றிக் கேள்விமுறை இல்லையா ?

**பெரிய உத்தியோகஸ்தர்:** ஆம்! எல்லாருக்கும் தெரிந்ததுதான். ஆனால்



நான் என்ன செய்யமுடியும்? வேண்டுமானால் அந்த உத்தியோகஸ்தரை வேறு ஊருக்கு மாற்ற முடியும். கேஸ் எடுத்து நடவடிக்கை நடத்தவே முடியாது. அப்படி ஏதாவது ஆரம்பித்து விட்டால் சாதி அபிமானங்களும், சிபார்சுகளும் வந்து கழுத்தை முறித்து விடுகிறது. அதற்கும் துணிந்தால் நமது பேரில் ஏதேனும் கெட்ட எண்ணத்தைக் கற்பித்துப் பழியையும், ஏதாவது ஒரு கெட்ட பெயரையும் ஏற்படுத்தி விடுவதோடு நம்முடைய விருத்தியையும் கெடுத்துவிடுகின்றனர்.

**பெரிய மனிதர் :** அப்படி ஆனால் அவரை வேறு ஊருக்காவது மாற்றித் தொலைப்பதுதானே !

**பெரிய உத்தியோகஸ்தர்:** இதனால் என்ன பொது நன்மை விளையும்? இந்த ஊரில் வாங்குபவர் அங்குபோய் வாங்குகிறார். இப்பொழுது அவர் இருக்கும் ஊராவது பணக்காரர்களும், லஞ்சம் கொடுக்கப் பழகினவர்களாகவும், லஞ்சம் கொடுக்கிறோமே என்று வருத்தப் படாதவர்களும் இருக்கிற ஊராகும். இனி அவரை இதைவிட்டு வேறு ஊரிற்கு மாற்றினால் அங்கு போய் கடைவைத்து வியாபாரம் ஆரம்பிப்பதற்குள் வீண் கெட்ட வாசனை ஏற்பட்டுவிடும்.

**பெரிய மனிதர் :** சரி, சரி அப்படி ஆனால் ஒத்துழையாதார் பேரில் தப்பிதமே இல்லையே?

**பெரிய உத்தியோகஸ்தர் :** யார் தப்பிதம் சொல்லுகிறார்கள்?

**குடி அரசு – கட்டுரை – 26.07.1925**



RangaRakes
tamilnavarasam.com

# நவரத்தினம்

**– சித்திரபுத்திரன்**

1. சாதிக்கர்வமும், மூடநம்பிக்கையும் இந்தியர்களில் பிராமண சகோதரரிடமாத்திரம் இருப்பதாக எண்ணுவது பிசகு, பிராமணரல்லாத சில வகுப்பாரிடமும், பஞ்சமரென்போரின் சில வகுப்பாரிடத்திலும் இருக்கிறது. ஆனால், இவர்கள் படிப்படியாய் மேல் சாதியார் என்போரிடத்திலிருந்துதான் கற்றுக்கொண்டவர்கள்.

2. பிராமணர்களும், அவர்களைப்போல் நடிப்பவர்களும் தங்கள் பெண்கள் விதவை ஆகிவிட்டால் பெரும்பாலும் அவர்களை விகாரப்படுத்த வேண்டுமென்ற எண்ணங்கொண்டே, கட்டாயப்படுத்தி மொட்டையடிப்பதும், நகைகளைக் கழற்றிவிடுவதும், வெள்ளைத்துணி கொடுப்பதும், அரைவயிறு சாப்பாடு போடுவதுமான கொடுமைகளைச் செய்து வருகிறார்கள். ஆனால், இவர்களுக்கடங்காத சில ஸ்திரீகள் வயது சென்றவர்களாகியும் மொட்டையடித்துக் கொள்ளாமலும், நகைகள் போட்டுக்கொண்டும், காஞ்சிபுரம், கொரநாடு முதலிய ஊர்களினின்றும் வரும் பட்டுப்புடவைகளைக் கட்டிக்கொண்டும் நான்கு பேர் நன்றாய் சாப்பிட்டுக் கொண்டுமிருக்கிறார்கள்.

3. ஜஸ்டிஸ் கட்சிக்குப் பாமர ஜனங்களிடத்தில் செல்வாக்கு இல்லாதிருப்பதற்குக் காரணம், அவர்கள் சர்க்காரை வைவது போல வேஷம் போடக்கூட பயப்படுவதுதான். பாமர ஜனங்கள் சர்க்காரை வைதால்தான் சந்தோஷப்படுவார்கள். ஏனெனில் சர்க்காரின் நடவடிக்கை அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

4. ஆங்கிலம் படித்துப் பரீட்சையில் தேறுவதே புத்திசாலித்தனமென்றும், கெட்டிக்காரத்தனமென்றும் சொல்வது அறியாமையாகும். உருப்போடப் பழகினவனும், ஞாபகசக்தியுள்ளவனும் எதையும் படித்து பாஸ் பண்ணிவிடலாம். உருப்போடப் பழகாதவனும், ஞாபகசக்தியில்லாதவனும் பரீட்சையில் தவறிவிடலாம். ஆனால், படித்துப் பாஸ் பண்ணினவன் அயோக்கியனாகவும், முட்டாளாகவும் இருக்கலாம். படித்தும் பாஸ் செய்யாதவன் கெட்டிக்காரனாகவும், யோக்கியனாகவுமிருக்கலாம்.

5. பள்ளிக்கூடங்களும், காலேஜு களும் அடிமைகளை உண்டாக்கும் உற்பத்திசாலை. லா காலேஜ் என்னும் சட்டப் பள்ளிக்கூடம் தேசத் துரோகத்துக்கு உபயோகப்படக்கூடியவர்களை உண்டாக்கும் உற்பத்தி சாலை. மெடிக்கல் காலேஜ் என்னும் வைத்தியப் பள்ளிக்கூடம் நாட்டு வைத்தியத்தைக் கொல்ல எமன்களையும், சீமை மருந்துகளை விற்கத் தரகர்களையும் உண்டாக்கும் உற்பத்திசாலை.



6. இந்தியாவில் ஜாதி அகம்பாவம் இருக்கிறவரையில் இந்தியர்கள் தங்களுடைய யோக்கியதையினாலோ, ஒற்றுமையினாலோ, சாமர்த்தியத்தினாலோ அன்னிய ஆட்சியிலிருந்து விலக முடியவே முடியாது. ஒரு சமயம் ஆங்கிலேயரின் கொடுமையினாலோ, முட்டாள்தனத்தினாலோ இந்தியா ஆங்கிலேயர்களை விட்டு விலகினாலும் விலகலாம். ஆனால் இந்தியர் கைக்கு வருமா என்பது மாத்திரம் அதிக சந்தேகந்தான்.

7. தமிழர்கள் தங்கள் அறியாத்தனத்தினால் வெள்ளைக்காரரைத் துரையென்றும், பிராமணர்களை சாமியென்றும் கூப்பிடுவதோடு இவர்களைக் கண்டால் தாமே முன் மரியாதை செய்ய வேண்டுமென்றும், அதிலும் பிராமணச் சிறுவனைக் கண்டாலும் கும்பிடவேண்டியது மத தர்மமென்றும் எண்ணுகிறார்கள்.

8. ஒரு வேலைக்காகப் போடப்பட்ட விண்ணப்பங்களில் ஆங்கிலத்தில் பெரிய பரீட்சை பாஸ் செய்தவனோ மற்றும் பல பாஸ் செய்தவனோ போட்ட விண்ணப்பத்தைத்தான், எஜமானனாயிருப்பவன் கவனிக்க வேண்டுமென்பதும், அவருக்குத்தான் வேலை கொடுக்கவேண்டுமென்பதும் பொறுப்பற்றதும் முட்டாள்தனமானதுமாகும். வேலைக்கு வேண்டிய யோக்கியதை இருக்கிறதா? இல்லையா? என்று பார்ப்பதுதான் கிரமமானதாகும். கெட்டிக்காரரும், யோக்கியருமானவர்களும் மெட்ரிகுலேசன் படித்தவர்களில் இருக்கிறார்கள். சோம்பேறியும், அயோக்கியர்களும் பி.ஏ. , எம்.ஏ., படித்தவர் களில் இருக்கிறார்கள்.

9. தமிழ்நாட்டு சுயராஜ்யக் கட்சி என்பது தற்காலம் சட்டசபை, ஜில்லா போர்டு, தாலுகா போர்டு, முனிசிபாலிட்டி முதலிய ஸ்தல ஸ்தாபனங்களில் பிராமணரல்லாதாருக்கு ஏற்பட்டிருக்கும் ஆதிக்கத்தை ஒழித்து மறுபடியும் பிராமண ஆதிக்கத்தை ஏற்படுத்தவே தோன்றியிருக்கும் ஒரு சூழ்ச்சியாகும்.

**குடி அரசு – கட்டுரை – 02.08.1925**



RangaRakes tamilnavarasam.com

# இதற்குப் பெயரென்ன ?

சுயராஜ்யக் கட்சியார் காங்கிரஸ் ஒத்துழையாமையைக் கைவிட்ட போதிலும் தாங்கள் ஒத்துழையாமையை விடப்போவதில்லையென்றும், மிதவாதக் கட்சியும் ஜஸ்டிஸ் கட்சியும் சர்க்காரோடு ஒத்துழைப்பதாகவும், ஒத்துழையாதாருக்கே ஓட்டுக் கொடுக்க வேண்டுமென்றும், தேர்தல் சமயங் களில் மேடைமீது நின்று பேசி பாமர ஜனங்களை ஏமாற்றி ஓட்டுப் பெறுகிறார் கள். சுயராஜ்யக் கட்சியின் எல்லா இந்தியத் தலைவ ரான மோதிலால்நேரு அவர்கள் திடீரென்று சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட ராணுவக் கமிட்டியில் அங்கத்தினர் வேலையை ஒப்புக்கொண்டார். இதற்கு மாதக்கணக்கான சம்பளம் வராவிட்டாலும் தினக்கணக்கான சம்பளம் உண்டு. தினம் 100, 200 வீதம் சர்க்காரார் கொடுப்பார்கள். ‘மட்டிமன்’ கமிட்டியில் அங்கத்தை ஏற்றுக் கொள்ளும்படி சர்க்காரார் சொன்னபோதும், தங்கள் அபிப்பிராயத்தையாவது சொல்லுங்கள் என்று கேட்டபோதும், அங்கம் பெற முடியாதென்றும், சர்க்கார் கமிட்டியின் முன் சாட்சியம் சொல்ல முடியா தென்றும் சொன்னவர் அதற் குள்ளாக சர்க்காரிடத்தில் என்ன நல்ல யோக்கிய தையைக் கண்டுவிட்டார்? சர்க்காரோடு ஒத்துழைத்து கமிட்டியில் அங்கம் பெற்று சர்க்கார் அதிகாரி களோடு ஊர் ஊராய்த் திரிந்து சாட்சிகளை விசாரித்து கூட்டு மெம்பர் களுடைய அபிப்பிராயத்தோடு கலந்தோ அல்லது தனி யாதாஸ்து எழுது வதன் மூலமாகவோ தன்னுடைய அபிப்பிராயத்தை தெரியப்படுத்தப் போகிறார் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. ஜின்னா, சாஸ்திரி, சிவசாமி அய்யர், ராமலிங்கஞ் செட்டியார், ராமசாமி முதலியார் முதலியவர்கள் இதைவிட வேறு என்ன செய்தார்கள்? செய்யப் போகிறார்கள்? நேரு அவர் களுக்கு ராணுவக்கமிட்டி முக்கியமானதாகத் தோன்றலாம். ஜின்னா அவர் களுக்கு மட்டிமன் கமிட்டி முக்கியமானதாகத் தோன்றலாம். நாளைக்கு ஏ.ரெங்கசாமி அய்யங்காருக்கும், எம்.கே. ஆச்சாரியாருக்கும் சில பேருக்கு உத்தியோகம் சம்பாதிப்பதும் சில ஜாதியார் தாழ்ந்தவர்கள் என்று சொல்லு வதற்கும் ஒரு கமிட்டி தேச நன்மையை உத்தேசித்து ஏற்பாடு செய்ய வேண்டியது முறையே அவசியம் என்பதாகத் தோன்றலாம். அது சரியா, தப்பா என்கிற விஷயத்தைப்பற்றி நமக்குக் கவலை இல்லாவிட்டாலும் இது ஒத்துழைப்பா, ஒத்துழையாமையா என்பதுதான் தெரியவேண்டும். நேரு அவர்கள் ராணுவக்கமிட்டியில் தன்னுடைய அபிப்பிராயங்களை எழுதி இந்தியர்களுக்கு ராணுவ உத்தியோகம் வாங்கிக் கொடுத்து விட்டால் அவர்க ளைக் கொண்டே இந்தியாவை ஜெயித்து விடலாமென்றும் நினைக்கிறாரா?



அல்லது வெள்ளைக்காரப் பெரிய ராணுவ அதிகாரிகள் நம்முடைய ராணுவ அதிகாரிகளிடம் நம்மைச் சுடு என்று சொன்னால் இந்திய ராணுவ அதிகாரி கள் சுடாமல் இருப்பார்கள் என்று நினைக்கிறாரா? அல்லது சில பேருக்குப் பெரிய பெரிய சம்பளம் வாங்கிக் கொடுத்து விட்டால் அவர்கள் யோக்கியர் களாய் விடுவார்கள் என்றாவது, இந்தியாவின் தரித்திரமே அதனால் ஒழிந்து போய்விடு மென்றாவது நினைக்கிறாரா? ‘பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடிப்பது போல’ மகாத்மா காந்தி தங்கள் வசம் இருக்கிறார்களென்று இறுமாப்புடன், தங்கள் வாயிலிருந்து வருவதெல்லாம் வேதவாக்கென்று நினைத்துக் கொண்டு தாங்கள் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று துணிவார்களேயானால் இந்தியர்களெல்லாம் சுத்தப்பைத்தியக்காரர்கள், முட்டாள்கள் என்று இவர்கள் நினைத் திருப்பதாகத்தான் அதற்கு அர்த்தம். மகாத்மா காந்தியை வேண்டுமானால் இவர்கள் கஷ்ட நிலைமையில் கொண்டு வந்து விட்டுவிடக் கூடுமேயல் லாமல், மகாத்மா இவர்கள் பக்கத்தி லிருக்கிற காரணத்தினால் இவர்கள் சொன்னதெல்லாம் ஜனங்கள் கேட்பார்களென்று நினைப்பது பகற்கனவாகத்தான் முடியும்.

**குடி அரசு - தலையங்கம்- 02.08.1925**



RangaRakes tamilnavarasam.com

## சீனர்களின் கதி

நாகரீகத்தில் சிறந்து விளங்கிய சீனர்களின் நிலை வரவரத் தாழ்மை யுற்று வருகின்றது. இந்தியர்களைக் காட்டிலும் கீழ்நிலை அடைந்து வருகின் றார்கள். தங்கள் நாட்டில் சுதந்திரமில்லாது அந்நியர்களால் மிருகங்களாக நடத்தப்பட்டு வருகின்றனர். அவர்களது நிலையைக் கூறுங்கால் உள்ளம் துடிக்கின்றது. என்று முதலாளிகளின் எதேச்சாதிகாரம் உலகினின்றும் ஒழியுமோ அன்றே உலகிற்கு விடுதலை. ஏழைகள் புத்துயிர் பெற்று இன் புறுவார்கள். ஜப்பான் உட்பட இருபது அந்நிய நாட்டினர் சீனத் தேசத்தினின் றும் மூலப்பொருள்களை சுரண்டுவதில் குந்தகம் ஏற்படுமோ? என்கிற பயத்தால் சீன மக்களைப் பல அட்டூழியங்களுக்கு ஆட்படுத்தி வருகின்ற னர். அக்கொடுமைகளைச் சொல்லவேண்டுவதில்லை. சீனத் தொழிலாளர் களை அடக்கி ஒடுக்கி வருகின்றனர். இவர்கள் தங்களது நாட்டைக் காட்டிலும் சீன தேசத்தில் அதிகம் உரிமை பெற்றிருக்கின்றனர். இந்நிலையில், சீனர்கள் ஆட்படும் கொடுமைகளை அறியாது, அவற்றைக் களையவும் வழி தேட ஆற்றல் இல்லாத பர்க்கன் ஹெத் பிரபு சீன மாணவர்கள் மீது பாய்கிறார். ஏழை மாணவர்கள் கொடுமை செய்கின்றனரா? இரக்கமற்ற எதேச்சாதி காரமே உருவாய்த் திரண்டு விளங்கும் இம்முதலாளிகள் கொடுமை செய் கின்றனரா? என்பதை அம் முதலாளிக் கூட்டத்தைச் சேர்ந்த பர்க்கன் ஹெத் பிரபு அறிவது கடினமே. இனம் இனத்தைத்தான் சேரும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 02.08.1925**



## உலகம் போற்றும் மகாத்மா

அரசியல் விஷயத்தில் பேதம் கொண்ட சிலர் காந்தியடிகளுக்கு செல்வாக்குக் குறைந்து வருகின்றதெனக்கூறி வருகின்றனர். இக்கூற்று ஆதாரமற்றது. காந்தியடிகளின் அன்பரும், சீடருமாகிய பூஜ்யர் ஆண்டுரூஸ் ஒரு பத்திரிகையில் இந்திய சட்டசபையின் அங்கத்தினர்கள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் அங்கத்தினர்கள் போன்று தற்கால நாகரீகத் தில் மயக்க முற்றுள்ளார்கள். பாமர ஜனங்களே, காந்தியடிகளின் உண்மை உபதே சத்தை அறிந்து நிர்மாண வேலையில் திளைத்து நிற்கின்றனர் என வரைந்துள்ளார். இதை உண்மையென்று எவரும் கூறுவர். மேனாட்டு நாகரீகத் தில் மயக்க முற்று நிற்கும் அரசியல்தந்திரிகளுக்கு,எம்பெருமானின் திட்டம் கூடாதுதான். நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றுவது கடினமே. நம் நாட்டைப் போன்றே சீன தேசத்தில் இதுகாலை வாடும் எளிய மக்கள் மகாத் மாவிற்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்கள். உலகில் சுதந்திரமற்று வாடும் நாடுகள் எல்லாம் காந்திய டிகளைத் துணைக்குக் கூவுகின்றன. எல்லாச் சுதந்திரம் பெற்ற மேல்நாட்டி னரும் காந்தியை ஏசுநாதர் எனப் போற்றிப் புகழ்கின்றனர். இந்நிலையில் அப் பெரியாருக்கு மதிப்புக் குறைந்து வருகின்றதெனக் கூறும் அரசியல் தந்திரக் காரர்களைக் கண்டு இரங்காது நாம் வேறு என் செய்வது ?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 02.08.1925**



RangaRakes tamilnavarasam.com

# மலையாளச் சம்பிரதாயம்

**– சித்திரபுத்திரன்**

"கேரளம் வானர வாசாரம்" என்றவோர் இழிச்சொல் இந்நாட்டின் வழக்கத்திலுண்டு. இக்கேரளத்தை நேரில் கண்டு பழகும் பாக்கியம் எனக்குச் சென்றவாண்டில் கிடைத்தது. ஆங்கு நான் கண்டும் கேட்டவைகளில் சில வற்றைக் கீழே குறிப்பிடுகிறேன்.

▲ ▲ ▲

நீர் நில வளப்பமுள்ள நாடுகளில் மலையாளம் முதன்மையானது. தென்னை, கமுகு, மா, பலா, முந்திரி, வாழை முதலியனவும் மரவள்ளிக் கிழங்கும், நெல்லும் ஏராளமாயுண்டு. வருடத்தில் 6 மாதம் நல்ல மழை பெய் கிறது. இயற்கை தேவியின் வனப்பை அந்நாட்டில் தான் கண்டுகளிக்க வேண்டும். ஆண்களும், பெண்களும் அதி சௌந்திரியமுள்ளவர்கள். நகரங் களிலும் கிராமங்களிலும் வீடுகள் விட்டு விட்டு விசாலமாகவே இருக்கின்றன.

▲ ▲ ▲

மலையாளிகள் மிகச் சிக்கனமுள்ளவர்கள். ஆடம்பர வாழ்க்கை அவர்களிடமில்லை. ஆடவருக்கும், பெண்களுக்கும் இடுப்பில் ஒரு துண்டு மட்டுமே ஆடையாகும். பெண்கள் தங்கள் மார்பை மூடுவதை நாகரிகமென்று கருதுவதில்லை. அவர்கள் உணவும் மிகச் சிக்கனமானதே. தமிழரைப்போல் பற்பல சாம்பார் தினுசுகளும், வெகு பல பொறியல்களும் அவர்களுக்குத் தேவையில்லை. வெந்த பருக்கையை, கஞ்சியைத் திருவலிட்டும் ஆனந்தமாய்க் குடிப்பார்கள்.

▲ ▲ ▲

உணவிலும், உடுப்பிலும் மட்டும் சிக்கனமல்ல. அவர்கள் பேசும் பேச்சிலும் சிக்கனமுடையவர்களே. வார்த்தையை அதிகமாகச் செலவழிக்க மாட்டார்கள். பற்பல விஷயங்களையும் கைவிரல் சாடையாலும் கண்களின் மாற்றத்தாலும் முகவாய்க் கட்டையின் அசைவாலும் ஒருவர்க்கொருவர் அறிவித்துக்கொள்வார்கள்.

▲ ▲ ▲

சிக்கனம் இவ்வளவுடன் நிற்கவில்லை. கல்யாணத்திலும் அவர்கள் சிக்கனம் காட்டுவார்கள். அண்ணன் தம்பிகள் இரண்டு மூன்று பேர் ஒன்றாகச் சேர்ந்து பாண்டவரைப்போல் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளு கிறார்கள். ஒவ்வொருவரும் தனித்தனியே ஒவ்வொரு மனைவியுடனிருந் தால் சந்ததியும் செலவும் அதிகமாகவிடுமெனவஞ்சி இச்சிக்கன முறையைக் கையாளுகிறார்கள்.

▲ ▲ ▲

கல்யாணத்திலும் இரண்டு வகையுண்டு. ஒன்று முறைப்படி செய்யப் படும் விவாகம். மற்றொன்று முறையில்லாச் சம்பந்தம். நாயர் பெண்கள் நம்பூதிரியென்னும் பிராமணர்களைச் சம்பந்தம் செய்து கொள்வதிலே பெருமை கொள்ளுகிறார்கள். இப்பிராமண வகுப்பாரின் ஜனசங்கை மிகவும் சொற்பம். சம்பந்தம் செய்து கொள்ளும் நாயர்ப் பெண்டீர்களின் சங்கையோ அதிகம். இக்காரணத்தால் ஒவ்வொரு நம்பூதிரிக்கு நாலைந்து பெண்கள் சம்பந்தப்பட வேண்டியதாகிறது.

▲ ▲ ▲

நம்பூதிரிகள் செய்த பாக்கியமே பாக்கியம். பிறந்தால் கேரளத்தில் நம்பூதிரியாய்ப் பிறக்கவேண்டும். இல்லையேல் இம்மானிடப் பிறவியெடுப் பதில் சிறப்பில்லை. நம்பூதிரி சாட்சாத் சச்சிதானந்த சொரூபியாய் விளங்குகிறார். அவருக்கு இருக்கும் மதிப்பும், வந்தனை வழிபாடுகளும் வேறெந்த மானிடப் பிறவிக்கும் கிடையாது.

▲ ▲ ▲

முறைப்படி ஒரு கணவனைப் பெற்ற நாயர்ப் பெண்ணும், நம்பூதிரி யைக் கலப்பதற்குப் பேராவலுடையவளாயிருக்கிறாள். மகாபாரதத்திலும், புராணங்களிலும் வருணிக்கப்பட்டுள்ள கிருஷ்ணனைக் காணுவதற்காக கோபிகள் தவஞ்செய்தது போல், நாயர்ப் பெண்களிற் பெரும்பாலர் நம்பூதிரி களின் சம்பந்தத்துக்காகத் தவஞ் செய்து வருகிறார்கள்.

▲ ▲ ▲

இம்மோகத்துக்கு நாயர் வகுப்பில் பெண்கள் மட்டுமல்ல பாத்திர மானவர்கள். ஒரு நம்பூதிரி ஒரு நாயரைப் பார்த்து "உன் பெண்சாதி நல்ல அழகுடையவளாயிருக்கிறாள்; நாளைக்கு உன் வீட்டுக்கு வருகிறேன்" என்று சொல்லி விட்டால் நாயருக்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டுவிடும். தேவனே பிரசன்னமாகி இத்திருவாக்கைப் பகர்ந்ததுபோல் எண்ணுவான். ஓடோடியும் வீடு செல்வான். தன் பெண்சாதியிடம் நம்பூதிரித் தம்பிரானுடைய திருமன சைத் தெரிவிப்பான். அவளுக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கோ அளவிராது. உடனே வீட்டை அலங்கரிப்பாள், விளக்குவாள், பெறுக்குவாள் தன்னாபர ணாதிகளைப் பூட்டிச் சிங்காரித்துக் கொள்வாள். நம்பூதிரித் திருமேனியுடைய வரவை எதிர் நோக்கியிருப்பாள். *(தொடரும்)*

**குடி அரசு - கட்டுரை - 02.08.1925**





RangaRakes tamilnavarasam.com

## மாஜிஸ்டிரேட்டின் மயக்கம்

**- குட்டிச்சாத்தான்**

ஒரு மாஜிஸ்ட்ரேட் வீட்டுக்கு ஒரு கிழ வக்கீல் வருகிறார்.

**மாஜிஸ்ட்ரேட்:-** வாருங்கோ சார், சௌக்கியமா?

**வக்கீல்:-** என்ன சௌக்கியம் போங்கள், குளிக்கவும் விபூதி பூசவும் சரி அதற்குமேல் சாப்பாடு முதலியதைப்பற்றிக் கேட்காதீர்கள்; வக்கீல்களுக்கு ஏதாவது வேலையிருந்தால்தானே.

**மாஜிஸ்ட்ரேட்:-** ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? கொஞ்சகால மாகத்தான் நம்ம கோர்ட்டுக்கு நீங்கள் வருகிறதில்லை. முனிசீப்கோர்ட் டெபுடி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு இதெல்லாம் இல்லையோ?

**வக்கீல்:-** முனிசீப்கோர்ட் டெபுடி கெலக்டர் கோர்ட்டு விசேஷம் சாவ காசமாய்ச் சொல்லுகிறேன். எஜமானர் கோர்ட்டுக்கோ முன்போல் கேசே வருகிறதில்லை. வந்தாலும் பிராது வாங்கும்போதே தள்ளிவிடப் பார்க் கிறீர்கள். இல்லாவிட்டால் வாதி பிரதிவாதி இரண்டுபேரையும் தண்டித்து விடு கிறீர்கள். எஜமானர் கோர்டுக்கே கட்சிக்காரர்கள் வர பயப்படுகிறார்கள். ஏதா வது தைரியமாய் வக்கீல் வைத்துக் கொண்டு வந்தால் அந்த வக்கீலை எஜ மானர் மதிப்பதேயில்லை. அவனை வாயெடுக்க விடுவதில்லை. எல்லாக் கேள்விகளையும் கிராசுகளையும் எஜமானரே கேட்டு முடிவு செய்து விடு கிறீர்கள். பிறகு எங்களுக்கு வேலையேது?

**மாஜிஸ்ட்ரேட்:-** ஓ, ஹோ என்னாலா கெட்டுப்போய்விடுகிறது? நான் உண்மை அறிய வேண்டாமா? அநேக பிராதுகள் எழுதிக்கொண்டு வருவ தொன்று, பிரமாண வாக்குமூலம் கொடுப்பதொன்று, பிராதுக்காரர்கள் பிராதில் எழுதியிருப்பதொன்று, வாக்குமூலம் கொடுப்பதொன்று. ஏன் இப்படி என்று கேட்டால் நான் இப்படித்தான் சொன்னேன் நீ சொல்லுகிறபடி எழுதினால் கேஸ் ஜெயமாகாதென்று சொல்லி வக்கீல் தன்னிஷ்டப்படி எழுதிக்கொடுத்து அந்தப் படியே சொல்லச்சொன்னார். எஜமானரை நிஜம் சொல்லும்படி சொன்னதால் நிஜம் சொல்லிவிட்டேன் என்று சொல்லுகிறான். இப்படிப்பட்ட பிராதுகளை நான் என்ன செய்வது நீங்களே சொல்லுங்களே.

**வக்கீல்:-** எஜமானர் இப்படியெல்லாம் பார்த்தால் நாங்கள் பிழைப்ப



தெப்படி? பிராதுக்காரர்கள் சொல்லுகிறபடி எழுதினால் ஒரு கேசுகூட நிற்காது, எஜமானரை கேசை வாங்கிப் பதியசெய்து சம்மன் அனுப்பி 4, 5 வாய்தாப் போட்டு பிறகு என்னமோ செய்துவிடுங்களே, ஏதோ எங்களுக்கும் அரைக் கஞ்சிகிடைக்கும் எஜமானருக்கும்.......

**மாஜிஸ்ட்ரேட்:-** என்னையா, எஜமானருக்கு என்று வாய்க்குள் ளாகவே முணுமுணு என்று பேசிக் கொள்ளுகிறீர்களே.

**வக்கீல்:-** எஜமானருக்குத் தெரியாதது நான் என்ன சொல்லப் போகிறேன்?

**மாஜிஸ்ட்ரேட்:-** என்ன சொல்லுங்களே.

**வக்கீல்:-** எஜமானர் தகப்பனார் பெரிய எஜமானர். மாஜிஸ்ட்ரேட்டா யிருக்கும் போது முதலே நான் வக்கீலாயிருக்கிறேன். அவர் யாரையும் நம்ப மாட்டார். என்னைத்தான் நம்புவார். வீட்டுக்குக் காய்கறி சாமான் முதல் கொண்டு நான்தான் வாங்கிக் கொடுக்கவேண்டும். எஜமானர் இப்போது இருக்கிறது போல் பெரிய எஜமானரும் இருந்திருந்தால் வீடேது, வாசலேது, எஜமானர் சகோதரிகளுக்கு இப்படிப்பட்ட தக்க இடத்து மாப்பிள்ளைகளேது. எஜமானர்தான் படித்துப் பாஸ் செய்து இந்த உத்தியோகத்திர்க்கு வருகிறதேது. இந்த சமயத்தில் ஏதோ உத்தியோகத்தில் நாலு காசு சம்பாதித்தால்தானே பின்னாடிக்கு உதவும்.

**மாஜிஸ்ட்ரேட்:-** இப்பொழுது எனக்கு என்ன குறவு? *மீ* 150 ரூபாய் சம்பளம் வருகிறது. 100 அல்லது 110 ரூபாய் செலவாய்விடுகிறது. மீதி *மீ* 40 ரூபாய் பாங்கியில் போட்டு வருகிறேன்.

**வக்கீல்:-** *மீ* 40ரூ. மீதி செய்தால் அது எதர்க்கு உதவும்? எஜமானர் சம்சாரம் என்கிற பேருக்காவது அம்மாவுக்கு நகை வேண்டாமா? குழந்தைகள் படிக்க வேண்டாமா? 4, 5 பெண்கள் இருக்கிறாப்போல் இருக்கிறது. ( **மாஜிஸ்ட்ரேட்:-**இல்லை இல்லை 3 தான், மற்றது என் மச்சனி குழந்தைகள்) அதுகளுக்கு ஏதாவது நகை செய்து போட வேண்டாமா? 2000, 3000 கொடுக்காமல் இதுகளுக்கு நல்ல படித்த மாப்பிள்ளைகள் கிடைப் பார்களா? இப்பொழுது இதெல்லாம் கவனிக்காமல் இருந்து விட்டு நாளைக்கு பெண்களை மிட்டாய் கடைக்காரர்களுக்கோ, அல்லது பரிசாரகர்களுக் கோவா கட்டிக் கொடுப்பது?

**மாஜிஸ்ட்ரேட்:-** அதற்கு நாம் என்ன செய்யலாம். இதற்கு மேல் எப்படிப் பணம் மீதி செய்ய முடியும்? வீட்டு வாடகை 17ரூ, வண்டிமாட்டுக்கு 10ரூ, ஆளுக்கு 8ரூ. (**வ**:- சேவகர்கள் இருந்துகூடவா? **மா:-** ஆம்) ரீடிங் ரூம் முதலிய சப்ஸ்கிருப்ஷன் 7, 8 ரூ. ஆய் விடுகிறது. குழந்தைகளுக்கு துணிமணி செலவு எனக்கும் வீட்டிற்கும் துணிமணி செலவு இதெல்லாம் குறைக்க முடிகிறதா? அப்புறம் சாப்பாட்டு செலவு, அதுவும் கூடியவரை



RangaRakes tamilnavarasam.com

சுருக்கம் தான். குழந்தைகளுக்குக் காப்பிகூட இல்லை. பழையசோறுதான், எனக்குமாத்திரம் ஒரேஒரு டம்ளர் வெறுங் காப்பி, வீட்டிலோ அதுவும் சாப்பிடுகிற வழக்கமில்லை. நீங்கள் சொன்ன அப்பா சம்பாதித்த வீடு ஊரிலிருக்கிறது. அதற்கு *மீ* 15 ரூ. வாடகை வருகிறது. அதன்பேரில் 1700 ரூ. கடன் இருக்கிறது. வாடகையை வட்டி கட்டி வர ஏற்பாடு செய்திருக்கிறேன். முனிசிபாலிட்டி வரி இங்கிருந்தனுப்புகிறேன். வீணாய் அதிக ஆசைப்பட்டு என்ன செய்வது?

**வக்கீல்:–** எஜமானரு இந்த சம்பளத்தையே நம்பிக்கொண்டிருந்தால் நாளைக்குக் குடும்பம் என்ன கதியாவது?

**மாஜிஸ்ட்ரேட்:–** சம்பளத்தைத் தவிர வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

**(பின்னால் இருந்து கேட்டுக்கொண்டிருந்த மாஜிஸ்ட்ரேட் சம்சாரம்)**

எஜமானருக்கு எல்லாம் விவரமாய் சொல்லவேணுமாக்கும். வக்கீல் தாதா அவர் பிழைக்கவோ இவ்வளவு சொல்லுகிறார். நம்முடையை நிலைமை தெரிந்து பரிதாபப்பட்டுத்தான் இவ்வளவும் சொல்லுகிறார். மாசத்திற்கு எத்தினை பெரிய கேசுகள் வருகிறது? எத்தினை பேர் கேசுக்காரர்கள் நம்ம வீட்டுக்கு வந்து அம்மாவைப் பார்க்கணும் அம்மாவைப் பார்க்கணும் என்று சேவகர்களை கேழ்க்கிறார்கள். சேவகர்களுக்கும் ஒவ்வொரு கேசுக் காரர்கள் வரும்போது பார்த்தால் நாக்கில் ஜலம் ஊருகிறது. எஜமானருக்கு பயந்து கொண்டு அம்மா இல்லை ஆட்டுக்குட்டி இல்லை என்று விரட்டி முடிக்கி அனுப்பிவிடுகிறது. நீங்கள் ஒன்றுக்கும் போகவேண்டாம். நானும், வக்கீல் தாதாவும் பார்த்துக் கொள்ளுகிறோம். நான் பார்த்து கேசை விடு என்றால் விட்டு விடுங்கள், தண்டி என்றால் தண்டித்து விடுங்கள், இவ்வளவு தானே மற்றப்படி என்ன வேப்பெண்ணையா குடிக்கப் போகிறீர்கள்?

சேலத்தில் ஒரு மாஜிஸ்ட்ரேட் உங்களைப்போல்தான் கவனிக்காமல் இருந்தார். திடீரென்று கச்சேரியிலேயே செத்துப்போய்விட்டார். ஊரார் அதுவும் கடைவீதிக்காரர்தான் ஆளுக்கு 1, 2, வரி போட்டு வசூல் செய்து பிரேதத்தை வெளிப்படுத்தி பெண்ஜாதி பிள்ளைகளுக்கும் டிக்கெட் வாங்கிக் கொடுத்து பிறந்த வீட்டுக்கு அனுப்பிக் கொடுத்தார்களாம்.

இங்கே வந்தால் நின்று கொண்டே இருக்கிறாரே அந்த அடுத்தவீட்டு சப் இனிஸ்பெக்ட்டரைப் பாருங்கள். உங்கள் சம்பளத்தில் பகுதிதானாம். அவர் குழந்தை நகையும் உடுப்பும் வெள்ளைக்காரக் குழந்தைகளும் போலவும் பெண்களைப்போலவும் நடக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தைக்கு ஒரு தள்ளு வண்டியை போலீசுகாரர் உடுப்போடவே தள்ளுகிறார்கள். நம்ப எஜமானருக்கு மாத்திரம் சேவகன் பில் போட்டுக்கொண்டு காய்கரிகூட வாங்கக் கூடாதாம். நல்லா சொல்லுங்க தாத்தா.



**வக்கீல்:–**எஜமானருக்கு அனுபோகம் போதாது, சிறுவயதில் கல்யாண மாய் விட்டது. பெரிய எஜமானர் தயவிலே போர்டாபீசில் வேலை கிடைத்து விட்டது. அங்கேயே நாலைந்து வருஷம் இருந்துவிட்டார். அங்கு இருப்பவர்கள் ஆனஸ்ட்டு ஆனஸ்ட்டு என்று அர்த்தமில்லாத வார்த்தை யைக் கற்றுக் கொடுத்து விட்டார்கள். அதை கட்டிக்கொண்டு அழுகிறார். நம்ம டிப்டி கலெக்ட்டர் எஜமானரு பி.ஏ. கூட படிக்கவில்லை. அட்டண்டர் காப்பீஸ்டர் வேலையிலிருந்து வந்தவர், மாதம் 2000ரூ. மச்சினனுக்கு அனுப்புகிறார். இதற்கு ஒரு காசு குறைந்தால் ஆபீசு குமாஸ்தாக்கள் மேலும் சேவகர்கள் மேலும் நெருப்பு மாதிரி விழுவார். பெரிய கலெக்டருக்கும் அந்த எஜமானர் இடத்தில் ரொம்பப் பிரியம்

**(மா:– சம்சாரம்)** ஆமா தாத்தா அவர்கள் வீட்டுக்கு அன்னைக்குகூட பெரிய கலெக்டர் வந்து காப்பி சாப்பிட்டுவிட்டு அவர்கள் வீட்டு அம்புஜத்தை வீணை வாசிக்கச் சொல்லிக் கேட்டுவிட்டுப் போனாராம். நம்ம எஜமானர் போனதற்கு திரும்பிக்கூட பார்க்கவில்லையாம். ஒருமணி நேரம் மரமாட்ட நின்று விட்டு தெய்வமே என்று வந்துவிட்டார். என்னண்டை வந்து துக்கப்பட்டார்.

**வக்கீல்:–** அது மாத்திரமா? இப்படி இருந்தால் எஜமானருக்கு மேல் உத்தியோகம் (பிரமோஷன்) ஆகவா போகிறது? இப்பொழுதே எஜமானருக்கு கீழே இருந்த இரண்டு மூன்று பேருக்கு தாசில் ஆய்விட்டது. அதில் இரண்டு பேருக்கு காயமும் ஆய்விட்டது. அவர்கள் பெயர் டிப்டி கலெக்டர் உத்தியோகம் கொடுக்கக் கூடியவர்கள் பெயர் ஜாப்தாவிலும் பதியப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் கர்மராஜாக்கள், அவர்கள் இங்கு மாஜிஸ்ட்ரேட்டாயிருக்கும் போது கையெழுத்து மாத்திரம் தான் அவர் களுடையது. மற்றதெல்லாம் சேவகர்களும் மாஜிஸ்ட்ரேட் கிளார்க்கும் வைத்ததுதான் சட்டம். நானும் என்பிள்ளைகள் கல்யாணமெல்லாம் அப்பொழுதுதான் செய்தேன். எஜமானர் பெயர் தாசில்தார் ஜாப்தாவில் கூட சேர்க்கப்படவேயில்லை.

**மாஜிஸ்ட்ரேட்:–** என் பெயர் சேர்க்கப்படவில்லை என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?

**வக்கீல்:–** நம்ம மாப்பிள்ளை கலெக்டர் ஆபீசு சிரஸ்தாரிடம் குமாஸ்தா. இந்த வருஷ முதலில் போர்ட்டுக்கு ஜாப்தா போடும்போது கலெக்டர் சிரஸ்தாரை வைத்துக்கொண்டு போட்டாராம். அப்பொழுது எஜமான் பெயர் அதிலில்லை என்பது தெரிந்து சிரஸ்தார் எஜமானர் பெயரைச்சொல்லி எஜமானர் நடவடிக்கையைக் காட்டும் ரிக்கார்டுகளைக் கூட காட்டினாராம். கலெக்டர் கோபமாக (He is an honestfool) அவன் ஒரு பயித்திக்கார முட்டாள் என்று சொல்லிக்கொண்டு ரிக்கார்டுகளை கீழே தள்ளிவிட்டாராம்.இது ரொம்பவும் ரகசியம். வெளியில் தெரிந்தால் நம்ம மாப்பிள்ளைக்கு வேலை போய்விடும்.



RangaRakes tamilnavarasam.com

**மாஜிஸ்ட்ரேட்:-** (கொஞ்ச நேரம் யோசித்து) இன்னம் கொஞ்ச நாள் பார்ப்போம், என்னை மாஜிஸ்ட்ரேட்டாய் அனுப்பின சிவிலியனை இந்த ஜில்லாவுக்குக் கலெக்டராய் போட்டிருப்பதாய் போர்டாபீசிலிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. இன்னும் இரண்டொரு மாதத்திர்க்குள் வந்துவிடுவார். அதற்குப் பிறகு என்ன செய்வது என்பதைப் பற்றி யோசிப்போம். கோர்ட்டுக்கு நேரமாகி விட்டது, தயவுசெய்து போய்வாருங்கள். டேய் ராமா,

**வண்டிக்காரன்:-** எஜமா,

வண்டி கட்டு, பெட்டி எடுத்து வை. சாயந்தரம் வந்து சாப்பிட்டுக் கொள்ளலாம். இன்றைக்கு பட்டணமிருந்து வெள்ளைக்கார பாரிஸ்டர் வருகிறார். சரியாய் 11- மணிக்கு வந்துவிடுவார்.

**வக்கீல்:-** (அம்மாவைப் பார்த்துக்கொண்டே மாஜிஸ்ட்ரேட்டை காட்டி தலையில் அடித்துக்கொண்டே) போய்விட்டார்.

**அம்மாள்:-** சாப்பாடு ஆகிவிட்டது, குளிக்காவிட்டாலும் பரவாயில்லை. சாப்பிட்டு விட்டுப்போங்களே. அன்றைக்கு ஒருநாள் பெரிய கொலை கேசு சர்க்கார் வக்கீல் வருகிறார்கள் என்று சொன்னீர்கள். 12 மணிக்குத்தானே போனீர்கள்.

**மாஜிஸ்ட்ரேட்:-** அவர்கள் எல்லாம் நம்மவர்கள்தானே, இன்று வருபவர் வெள்ளைக்காரர். கலெக்டரிடம் என்னத்தையாவது சொல்லி வைப்பார். அப்புறம் அதுதான் அவர்களுக்கு வேதவாக்கு என்று சொல்லிக் கொண்டே கச்சேரிக்குப் போய்விட்டார்.

**குடி அரசு - உரையாடல் - 02.08.1925**



RangaRakes

# ஒரு கோடி ரூபாயும், இருபத்தோரு நாள் உண்ணாவிரதமும் முப்பதினாயிரம் பேர் சிறைவாசமும்

இந்தியாவானது அந்நிய ஆட்சிக்குட்பட்டு அடிமைத்தன்மை அடைந்து அவதிப்பட ஆரம்பித்தக் காலமுதல் இதுவரையிலும் விடுதலை பெறுவதற்காக மகாத்மாவின் காலத்தில் கொடுத்த விலைபோல் ஒரு பொழுதும் கொடுத்திராதென்றே நினைக்கிறோம். ஆனால், நமது தேசத்திற்கு மாத்திரம் இன்னமும் விடுதலை பெறும் காலம் வரவில்லையென்றே சொல்ல வேண்டும். மூன்று மாதத்திற்குள் ஒரு கோடி ரூபாய் வசூல் செய்தும், மாதம் ஆயிரம், இரண்டாயிரம், ஐயாயிரம், ஐம்பதினாயிரம் ரூபாய் வரும்படி உள்ள வக்கீல்கள் உள்பட சுமார் ஐநூறு பேர் தங்கள் தொழிலை நிறுத்தி தேசத் தொண்டில் இறங்கியும், அரசபோகத்தில் இருந்தவர்கள் முதற்கொண்டு ஜமீன்தார்கள், பிரபுக்கள், வியாபாரிகள் உள்பட ஏழைகள் வரை முப்பதினாயிரம் பேர் சிறைக்குச் சென்றும் மகாத்மாவே இரண்டு வருடங்கள் சிறையில் வதிந்தும் சிறையினின்று வெளிப்போந்து இருபத்தொருநாள் உண்ணா விரதமிருந்தும் இந்தியா சுயராஜ்யம் அடையவில்லை என்று சொன்னால் இனி எப்படி, எப்பொழுது, எவரால் விடுதலை அடையமுடியும்? இனி மறுபடியும் இந்தியா சுயராஜ்யமடைய நாம் பாடுபட வேண்டுமானால் முன் அனுபவங்களை ஆதாரமாக வைத்து அவற்றிலுள்ள பிழைகளைத் திருத்தியும், ஏன் நமக்கு சுயராஜ்யம் கிடைக்கவில்லை என்ற காரணத்தைக் கண்டு பிடித்தும் அதற்கு வேண்டிய முறைகளைக் கையாள வேண்டுமே அல்லாமல் வீணாக இடித்த மாவையே இடித்துக் கொண்டிருப்பது பயித்தியக்காரத் தனமேயாகும். மகாத்மா காந்தி “ஸ்டேட்ஸ்மென்” பத்திரிகைக்கு எழுதிய பதிலில் ஒத்துழையாமை இயக்கம் தோல்வி உற்றதற்குத் தகுந்த காரணத்தைக் காட்டியிருக்கிறார். “படித்த வகுப்பார் நான் சொல்லுகிறபடி கேட்பார்களே யானால் இப்பொழுதே ஒத்துழையாமைத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து சித்தி பெறச் செய்துவிடுவேன்” என்று சொல்லி யிருக்கிறார். இதிலிருந்தே இவ்வளவு ரூபாயும், இவ்வளவு தியாகமும், இவ்வளவு பேர் சிறை சென்றதும், மகாத்மா சிறையில் வதிந்ததும், உண்ணா விரதமிருந்ததும் இப்படித்த வகுப்பினராலேயே பாழடைந்து விட்டதென விளங்கவில்லையா? அஃதோடுமாத்திரம் அல்லாமல் எவ்வளவு பெரிய தத்துவத்திற்காக



tamilnavarasam.com

வசூலிக்கப்பட்ட பணமும், செய்யப்பட்ட தியாகங்களும் சிலர் சட்டசபைக் கும், முனிசிபாலிட்டி, தாலுகா போர்டிற்குப் போவதற்கும், சிலர் மேயர் ஆவதற்கும் அது உதவினதோடு அல்லாமல் விபசாரத்தன்மை ( Immoral ) என்று சொல்லத் தகுந்த மாதிரி, மேடைகளுக்கு வரும் போது மாத்திரம் கதர் உடுத்தி வந்தால் பெரிய காங்கிரஸ்காரனும் தேச பக்தனும் ஆகிவிடலாம் என்ற தீர்மானத்திற்கு விடுதலைச் சபையாகிய காங்கிரஸில் மகாத்மா காந்தியே இடம் கொடுக்கும்படி வந்து விட்டதென்றால் இனி மறுபடியும் பணம் கொடுப்பதும் மக்கள் தியாகம் செய்வதும் என்பது சுலபத் தில் ஜனங் களிடத்தில் எதிர்பார்க்கக்கூடிய காரியமா? ராவணன், இரண்யன் போன்ற பலாஷ்டியர்கள் அருமையாய் செய்த தவத்தின் பலனையும், அற்புதமான கல்வி அறிவையும் - சீதையைக் கற்பழிக்கவும், தன்னையே தெய்வமெனக் கொள்ளவும் முறையே உபயோகப்படுத்திக் கொண்டது போல் மக்களின் தியாகமும், அறிவும் உபயோகப்படுத்தப் படாமல் எவ்வகையிலும் சந்தேக மற்றதும், பாமர ஜனங்களுக்கு நம்பிக்கை உள்ளதும், யோக்கியமானவர் களுடைய தியாகமே தேவை உள்ளதாகவும் அடிக்கடி மாறுபாடுபடக் கூடாத துமான ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்து கொண்டு அத்திட்டத்திற்கு ஒத்த வர்களை மாத்திரம் அதில் சேர்த்துக் கொண்டு படித்த வகுப்பினர் எனப் படுவோரை விலக்கி, பலனைப்பற்றி பயப்படாமல் நடத்தக் கூடிய காலம் என்று மகாத்மாவுக்கு வருகிறதோ, அன்றுதான் இந்தியாவின் ஏழை மக்களுக்கு விடுதலை ஏற்படும்.

**குடி அரசு - தலையங்கம் - 09.08.1925**



# சுரேந்திர நாதரின் மறைவு

வங்கத்தின் முடி சூடா மன்னன் என அழைக்கப்படும் ஸ்ரீ சுரேந்திர நாத பானர்ஜி வியாழனன்று இம்மண்ணுலகினின்று மறைந்தார் என்ற செய்தியைக் கேட்க மிகுந்த விசனத்திலாழ்கிறோம். அப்பெரியார் ஐம்பது ஆண்டுகள் தேசத்திற்குத் தனக்குத் தோன்றிய வழி நின்று சலியாது தொண்டு புரிந்தார். முதன்முதலாக கலெக்டர் உத்தியோகத்தில் சில மாதங்களிருந்து பின்னர் விலக்கப்பட்டார். உடனே கல்வி வளர்ச்சிக்காக உழைக்க முற்பட்டு ரிப்பன் கல்லூரியைக் கண்டு அதில் போதகாசிரியராகவுமிருந்தார். தேசீய உணர்ச்சி பரவாத அக்காலத்தில் இளம் வங்க வாலிப வீரர்களுக்கு மிகுந்த ஊக்கத்தைக் கொடுத்தார். பழைய காங்கிரஸில் ஓர் முக்கியத் தலைவராக நின்று ஊழியம் புரிந்தார். இரண்டுமுறை காங்கிரஸில் தலைமையும் வகித் துள்ளார். ஒத்துழையாமை தோன்றிய காலத்தில், நம் தேசமானது அவ்வியக் கத்திற்குத் தயாராக இல்லை எனப் பலர் கருதியதுபோல் சுரேந்திர நாதரும் கருதி மிதவாதக் கொள்கையையே பின்பற்றி வந்தார். ஸ்ரீ சுரேந்திர நாதர் மீது இந்திய மக்கள் ஏதாவது ஒரு வழியில் அதிருப்தி அடைய வேண்டு மானால், ஒத்துழையாமையின் பலனாய் பின்னர் நடக்கப்போவதை முன்னரே அறிந்து கொண்டார் என்கின்ற ஒரு விஷயத்தில்தான் அவ்வித அதிருப்தி ஏற்படும். அவரது குடும்பத்தினருக்கும் அன்பர்களுக்கும் எமது அநுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.08.1925**



RangaRakes tamilnavarasam.com

# திராவிட சங்கம்

நாகப்பட்டிணத்தில் திராவிட சங்கமென ஓர் சங்கம் நிறுவப்பட்டி ருப்பதாகத் தெரியவருகிறது. ஆனால் முன்பு பிராமணரல்லாதார் சங்கமென்ற பெயருடன் இருந்த ஒரு சங்கத்தையே திராவிட சங்கமெனப் பெயர் மாற்றிப் புதிதாக நிர்வாக உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். சங்கத் தின் அக்கிராசனர் ஸ்ரீமான் கே.ஸி.சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்கள் கதரை ஆதரிக்க வேண்டுமென்றும், தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென ஸ்ரீமான் திருஞானசம்பந்தன் அவர்களும் பேசியிருப்பதாகத் தெரியவரு கிறது. இப்படி வெரும் வாய் வார்த்தையுடனே நின்று விடுவதாயிருந்தால் இச்சங்கம் முன்பு இருந்த பெயருடனேயே இருந்து உத்தியோகத்தை எதிர் பார்த்துக்கொண்டே இருக்கலாம். புதிதாக இவர்கள் பெயரை மாற்றிச் சங்கத்தை நிறுவியதற்கு ஏதாவது ஒரு காரணமாவது, நன்மையாவது அதில் ஏற்படவேண்டாமா? அப்படி ஏற்படவேண்டுமாயின் சங்கத்தின் அங்கத்தி னர்கள் ஒவ்வொருவரும் கதர் உடுத்த வேண்டுமென்றும். சங்கத்தின் அங்கத்தினர்களாய் இருப்பவர்களுக்கு மனிதன் பிறவியில் உயர்வு தாழ்வும், தீண்டாமையும் இல்லையென்றும் ஒரு தீர்மானம் செய்திருப்பார்களானால் புதுச்சங்கம் ஏற்படுத்தியது சரியென்று சொல்லலாம். காங்கிரஸ் சம்பந்தப்பட்ட பிராமணர் அல்லாதாரும் இச்சங்கத்தில் சேருவார்கள். ஒவ்வொரு ஊரிலும் இவ்வித சங்கத்தை பொதுமக்களும் ஆதரிப்பார்கள். அப்படியில்லாமல் பழைய தோசையையே திருப்பிப் போட்டுக்கொண்டு இதற்கு வேறு பெயர் சொன்னால் பொதுமக்கள் எப்படி நம்புவார்கள்? இதற்குள் ஏதோ சூழ்ச்சி இருக்கின்றதெனத்தான் நினைப்பார்கள். ஆகையால் அவ்வித சந்தேகத் திற்கு இடமில்லாமல் இத்தீர்மானத்தை நிறைவேற்றுவார்களென நம்பு கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.08.1925**



# அந்தணர்ப்பேட்டை

அந்தணர்ப்பேட்டை என்பது நாகப்பட்டினத்திற்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள ஒரு சிறிய கிராமம். அதில் தொழிலாளர்கள் வசிப்பதோடு மகம்மதியர்களும் மற்றும் சிலரும் வசிக்கின்றனர். அவ்வூரில் விநாயகர் கதர் நூல் கைநெசவுசாலை என்ற கதர் உற்பத்தி சாலை ஒன்று இருக்கின்றது. அதன் இரண்டாம் ஆண்டு விழாவிற்கு நான் ஸ்ரீமான் சாரநாதனுடன் சென்றி ருந்தேன். ஆண்டு விழாவின் ஊர்வலத்தையும் அதில் வாசித்த உபசாரப் பத்திரங்களையும் இங்கு எடுத்துச்சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆனால் இச்சிறு கிராமத்தில் உள்ள ஜனங்களுக்கு கதரின் மீதுள்ள ஆர்வத் தைக் காட்டுவதற்கு இது குறிக்க வேண்டியதாயிற்று. ஆண்டு விழாவில் அதன் நிர்வாகிகளால் வாசிக்கப்பட்ட கதர் உற்பத்தி சாலையின் யாதாஸ்தி லிருந்து நான் தெரிந்துகொண்ட சிலவற்றைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். அவ்வூர் பிரமுகர்கள் பங்கு முறையில் மூவாயிரம் ரூபாய் சேர்த்து வியாபார முறையில் நடத்தி வருகிறார்கள். இதற்காக கதர்ச்சாலையாரின் இராட்டினம் நாற்பத்தேழும், கூலிக்கு நூற்பவர்கள் இராட்டினம் நாற்பத்தைந்தும் ஆக இராட்டினங்கள் தொண்ணூற்றிரண்டு சுழலுகின்றன. ஆறு தறிகளுக்கும் பூரா வேலை கொடுக்கப்பட்டு வருகின்றது. பங்குக்காரர்களுக்கு இலாபமும் நூற்றுக்கு ஆறு வட்டிவீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முக்கியமாக ஸ்ரீமான்கள் சபாபதி முதலியார், விஜயராகவலு நாயுடு, விநாயகமூர்த்தி முதலியார் இன்னும் சிலரும் இடைவிடாது உழைத்து வருகின்றனர். இதில் உற்பத்தியாகும் கதர் மெல்லியதாகவும், கெட்டியாகவும் இருக்கிறது. மெல்லிய கதர் வேண்டியவர்களின் ஆசையை இக்கதர்ச்சாலை திருப்தி செய்யக்கூடும் எனக் கருதுகிறேன். இங்கு நூல் நூற்பவர்களுக்கு ஒரு ராத்தலுக்கு பன்னி ரண்டு அணா கூலி கொடுக்கப்படுகின்றது. பெரும்பாலும் மகம்மதிய சகோதரிகளே இங்கு நூல் நூற்கின்றனர். இது விஷயமாய்ப் பொது ஜனங்களுக்குச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது நாட்டில் கதர் விர்த்தியாக வேண்டுமானால், அந்த அந்த ஊரில் உள்ள பிரமுகர்கள் ஒன்று கூடி பங்கு முறையில் கைப்பணம் சேர்த்து தங்களுக்கு வேண்டிய கதரை அதில் உற்பத்தி செய்வித்து, தாங்கள் அதைக் கட்டிக் கொள்வது என் கிற பழக்கம் வந்தால் கதர் இயக்கம் மகாத்மாவின் கோரிக்கைப்படி நமது நாட் டில் வெற்றியுறும். இம்மாதிரி செய்வதில் நமக்கு என்ன கஷ்டமிருக்கிறது? வருஷத்தில் பத்து ரூபாய்க்குக் குறைவில்லாமல் துணி வாங்கக்கூடிய



RangaRakes tamilnavarasam.com

குடும்பங்கள் ஒவ்வொரு ஊரிலும் எவ்வளவோ இருக்கின்றன. இவர்கள் ஒவ்வொருவரும் தங்களின் ஒரு வருஷச் செலவிற்கு உண்டான துணிக் கிரயத்தை அட்வான்ஸ் கொடுப்பதுபோல் நினைத்து அதை முதலாக வைத்து அதைக்கொண்டு உற்பத்தி செய்வதும், தங்களுக்கு வேண்டிய துணிகளை அங்கேயே வாங்கிக் கொள்வதுமாக நடைபெற்று வருமாகில் விலையைப் பற்றியோ, துணியின் நயத்தைப் பற்றியோ கொஞ்சமும் அதிருப்தி ஏற்பட இடம் இருக்காது. உதாரணமாக, கானாடுகாத்தானில் உள்ள நாட்டுக் கோட்டைச் செட்டியார்களில் அநேகர் ஒன்றுகூடி கூட்டுறவு பங்கு முறையில் பணம் சேர்த்துத் தங்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து வருகின்றனர். ஆனால் அது மின்சார விளக்குப் போடவும், ஐஸ் உற்பத்தி செய்யவும், இன்னும் இதுபோன்ற மேனாட்டு நாகரீகச் செயல்களுக்கு உபயோகப் படுகிறதேயன்றி தேச நன்மைக்கோ, ஏழைகள் பிழைப்புக்கோ உற்றதல்ல. இதிலிருந்து நாம் எடுத்துக்கொள்ளவேண்டுவது தங்கள் தங்களுக்கு வேண்டிய தேவைகளைத் தங்கள் தங்கள் ஊரிலேயே தங்கள் தங்கள் கூட்டுற வினால் செய்து கொள்ளவேண்டும் என்பதுதான். அந்தணர்ப்பேட்டையில் கதர் விஷயத்தில் ஏற்பட்ட கூட்டுறவு முறையானது முனிசிபாலிட்டி, யூனியன் முதலிய ஸ்தல ஸ்தாபன முறை அல்லாமல் தங்களுக்குள்ளாகவே பஞ்சாயத்து முறை வைத்து தாங்களே வரிவசூல் செய்வதுடன் ஊர் சுகாதாரம் முதலிய விஷயங்களையும் தாங்களே நடத்தி வருகிறார்கள். “குடிநூல்”, “குடி ஆட்சி” என்கிற பதங்களுக்குள்ள தத்துவங்கள் இதுதான்.

‘குடி’ என்கிற பதத்தின் பொருளே அங்குள்ள குடிஜனங்களைத் தான் குறிக்கிறது. கிராமங்கள் ஒழுங்குபட்டுப் படிப்படியாகத்தான் தேசம் ஒழுங்குபடவேண்டும். ஆகையினால் ஒவ்வொரு கிராமத்தாரும் தங்கள் தங்கள் ஊரில் கூட்டுறவு முறையில் ஒவ்வொருவரும் கதர் உற்பத்திக்கு வேண்டிய முயற்சி செய்தல் அவசியமாகும். ஆரம்பத்திலேயே பெரிதாக ஆரம்பிக்க வேண்டுமென்று நினைத்து கஷ்டப்படாமல் கூடிய வரையில் சீக்கிரத்தில் ஆரம்பிக்கத் தகுந்தாற்போல் எவ்வளவு சிறிய மூலதனத்தைக் கொண்டானாலும் முதலில் ஆரம்பிக்க வேண்டியது, பிறகு தானாகவே எல்லாம் கைகூடிவரும்.

( குடி நூலில் எழுதியது )

**குடி அரசு - கட்டுரை - 09.08.1925**



# மதுபானம்

1920 - ம் ௵ சென்னை ராஜதானியில் உள்ள கள்ளுக்கடைகள் 11,034 இவைகளில் விற்ற கள்ளு 11 கோடி காலன். 8 திராம் புட்டி 1 க்கு 2 அணா வீதம் 66 கோடி புட்டிக்கு கிரயம் ரூ. 8 $^1/_2$ கோடி கிரயம் ஆகிறது. இதற்கு அனுகூலமாய் செலவாகும் மாமிசம், புட்டு, தோசை, முட்டை முதலிய உபகருவிகளுக்கு 2 கோடி ரூபாய் ஆக ரூ.10$^1/_2$ கோடி.

சென்னை ராஜதானியில் உள்ள சாராயக்கடைகள் 6,352. இவைகளில் விற்ற சாராயம் 16,75,000 காலன்கள். காலன் ஒன்றுக்கு 12 ரூ. வீதம் 2 கோடியே 1 லட்சம் ரூபாய். இதற்கு மாமிசம், தோசை, புட்டு முதலிய உபகருவிகள் 25 லட்சம். ஆக இரண்டும் சேர்ந்து 12 $^1/_2$ கோடி ரூபாய் செலவாகிறது.

இந்தப் பனிரண்டரைக்கோடி ரூபாய் நமது ராஜதானியில் கள், சாராயத் திற்காக 3 $^1/_2$ கோடி ஜனங்களால் சிலவு செய்யப்படுகிறது. இது அல்லாமல் ஏழை மக்களால் குடியின் பொருட்டு களவு - சூது - பொய் - கொலை, கொள்ளை முதலிய காரியங்களுக்கு ஆகும் செலவு எவ்வளவு? கோர்ட்டு, வக்கீல், லஞ்சம், சப்ளை, மாமூல் வகைகளில்ஆகும் செலவுகள் எவ்வளவு?

மக்கள் ஒழுக்கம், கற்பு முதலிய குணங்கள் ஒழிந்து தேசத்திலும், நாட்டிலும், குடும்பத்திலும் ஏற்படும் கலகங்கள் ஒற்றுமைக் குறைவுகள் எவ்வளவு? இவைகளுக்கு விலைமதித்தால் எந்தக் கணக்கிலடக்கமுடியும்? இவ்வளவு கொடுமைகளையும் செய்வித்து வரும்படிக்காக நமது சர்க்கார் நமது மாகாணத்தில் இதனால் சம்பாதிக்கும் பொருள் எவ்வளவு என்று கணக்குப் பார்த்தால் கள்ளில் 2 கோடியே 31 லட்சமும், சாராயத்தில் 88 $^1/_2$ லட்சமும், ஆக 3 கோடி ரூபாய் 19 $^1/_2$ லட்சம் ரூபாய்தான். இதல்லாமல், கஞ்சா, அபினி, சீமை சாராயம் விற்கும் கணக்குகள் இதில் சேர்க்கப்படவில்லை. இதிலிருந்து சர்க்கார் 3 கோடி ரூபாய் சம்பாதிக்க ஜனங்கள் எவ்வளவு கஷ்டமும் நஷ்டமும் அடைய வேண்டி வருகிறது ?

இதே மாதிரி இந்தியா முழுமைக்கும் 1923 - 1924 -ம் வருஷத்திற்கு நமது சர்க்காருக்கு மது வியாபாரத்தில் வந்த ஆதாயம் 19,40,51,689 ரூபாய். சர்க்காருக்கு 19 $^1/_2$ கோடி வரவேண்டுமானால் பொது ஜனங்களுக்கு ஷை கணக்குப்படி கள்ளும் சாராயமும் குறைந்தது 80 கோடி ரூபாய்க்குக் குறை வில்லாமல் விற்பனை ஆகியிருக்க வேண்டும். இதற்கேற்ற மற்ற சடங்கு களின் செலவையும் சேர்த்துப் பார்த்தால் எவ்வளவு பெரிய தொகை நாட்டின்



RangaRakes tamilnavarasam.com

க்ஷேமத்திற்கல்லாமல் நாட்டினுடையவும், ஒழுக்கத்தினுடையவும் அழிவுக் குச் செலவாகிறது என்பது விளங்கும். சட்டசபை மெம்பர்கள் என்று சொல்லிக் கொள்வோரும், மந்திரிகள் என்று சொல்லிக்கொள்வோரும் இதற்காக என்ன செய்திருக்கிறார்கள்? கேள்வி கேட்பதும் பத்திரிகையில் எழுதிக் கொள்ளு வதுமான காரியங்களைச் செய்து பொதுஜனங்களை ஏமாற்றி சர்க்காருக்கு அனுகூலம் செய்துகொண்டு வந்திருக்கிறார்களே அல்லாமல் உண்மையில் யோக்கியமான வேலை எதுவும் செய்திருக்கிறார்களா ?

சட்டசபையிலேயே குடிக்கும் மெம்பர் சில பேர்கள்; சாராயக்கடை குத்தகையெடுத்துப் பிழைக்கும் மெம்பர்கள் சிலபேர் ; கள்ளுக்கு மரம் குத்தகை விட்டுப் பணம் சம்பாதிக்கும் மெம்பர்கள் சிலபேர்; குடியினால் ஏற்படும் கொடுமைகளினால் பிழைப்பவர்கள் சிலபேர். குடியை விளம்பரப் படுத்தி "நல்ல சாராயம்", டாக்டர் சிபார்சு செய்தது, உடம்புக்கு நல்லது என்று ஜனங்களைக் குடிக்கச் சொல்லிப் பிழைக்கும் மெம்பர்கள் சிலபேர். இப் பேர்ப்பட்ட சிகாமணிகளால் பெரும்பாலும் நிரப்பப்பட்ட சட்டசபை ( இவைகளில் சம்பந்தப்படாத சில பேர் இருக்கலாம் ) ஜனங்களுடைய பிரதி நிதிசபையென்று இப்படிப்பட்டவர்களே பொதுஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி இவைகளை ஒழிப்பதாய் அங்கு போய் உட்கார்ந்து கொண்டு தங்கள் பிள்ளைக் குட்டிகளுக்கும், இனத்தாருக்கும் பிழைப்புக்கு உத்தியோகம் சம்பா திக்கப் பாடுபடுவதல்லாமல் வேறு என்ன பலனை உண்டாக்குகிறார்கள்?

சட்டசபைகள் ஏற்பட்டு மதுபானத்தை ஒழிக்க நம்மவர்கள் பிரயத் தனப்பட்டதாக சொல்லிக் கொள்வதன் பெருமையைக் கீழ்க்கண்ட கணக்கு களால் தெரிந்துகொள்ளலாம். ஜனப்பிரதிநிதிகள் பெரும்பாலும் உள்ள சட்டசபை இல்லாத காலத்தில் நமது சர்க்காருக்கு இந்தியாவில் மொத்தம் கள்ளு சாராயத்தால் வரும்படி:-

அதாவது 1880 - 1881 வருஷத்தில் $3 \frac{1}{2}$ கோடி

அதற்கு வேண்டிய இலாகாக்கள் அமைத்து ஒழுங்குபடுத்தின பிறகும்,

சட்டசபை ஏற்பட்ட பிறகும் 6 கோடி.

1910 - ல் மிண்டோ - மார்லி சீர்திருத்தத்தின் பிறகு 10 கோடி.

1918 - ம் வருஷத்தில் மாண்ட் போர்ட் சீர்திருத்தத்தின் பிறகு $18 \frac{1}{2}$ கோடி

1924 - ம் வருஷத்தில் $19 \frac{1}{2}$ கோடி.

இப்படியே நாளுக்குநாள் உயர்ந்துகொண்டு வருவதல்லாமல் குறைவுபடுவது எங்கே ? இதை நிருத்திவிட வேண்டுமென்று சொன்னால் நமது சட்டசபை மெம்பர்களும் மந்திரிகளும் கூட இந்த வரும்படி போனால் சர்க்கார் நடைபெறாதே என்று விசனப்படுகிறார்களே அல்லாமல், தேசமும் ஜனங்களும் கெட்டுப் போகிறதே என்கிற கவலையே இவர்களுக்கு இல்லை. தவிரவும், மது வரும்படி நின்றால் ஜனங்கள் படிக்கப் பணமில்லையே என்றும் விசனப்படுகிறார்கள். இரண்டு பிள்ளையுள்ள தகப்பனை உன் ஒரு பிள்ளை படிக்க வேண்டுமானால் ஒரு பிள்ளை கள்ளு சாராயம் குடிக்க வேண்டும்; சம்மதமா ? என்று கேட்டால், தகப்பன் ஒரு பிள்ளை குடித்தாலும் சரி ஒரு பிள்ளை படிக்கத்தான் வேண்டும் என்று எவனாவது சொல்லுவானா? ஒருக்காலும் சொல்ல மாட்டான். அதுபோலவே நமது மந்திரிகளும். சட்ட சபை மெம்பர்களும், ஏழை மக்களும், தாங்களும் ஒருவருக்கொருவர் சகோதரர் என்கிற உணர்ச்சி இருக்குமானால் வெகுகாலத்திற்கு முன்பே இந்த மது வியாபாரத்தை சர்க்காரிலிருந்து ஒழித்திருப்பார்கள் அல்லது சட்ட சபையை விட்டு விலகி இருப்பார்கள். மதுவருந்துபவர் பெரும்பாலும் ஏழைகள். சட்டசபைக்குப் போகிறவர்கள் பணக்காரரும், மதுவருந்துபவர்கள் கொடுக்கும் பணத்தால் படித்தவர்களாயுமிருப்பதால் மதுபானமென்பது அவர்களுக்கு ஒரு கவலையற்ற விஷயமாயிருக்கிறது. சட்டசபைப் பயித்தி யம் இருக்கிறவர்கள் மற்றெல்லா விவகாரங்களையும் விட்டுவிட்டு மது விலக்கு என்கின்ற ஒரு காரியத்தில் மாத்திரம் தாங்கள் எல்லாரும் ஒன்றா யிருந்து ஒரேயடியாய் இதை ஒழிப்பதுதான் தங்கள் வேலைத்திட்டம் என்கிற கொள்கையை வைத்துக் கொண்டு சர்க்காரின் அதிகச் செலவைக் குறைத்து கள்ளு வரும்படி இல்லாமலே சர்க்கார் நடக்கும்படியாக வரவு செலவு திட்டத்தைச் சரிசெய்துகொண்டு இதை சர்க்காரை ஒப்புக்கொள்ளச் செய் வோம்; ஒப்புக் கொள்ளாவிட்டால் ராணுவச் சட்டம் வந்தாலும் சரி, சட்ட சபையை வேறுகாரியம் பார்க்கவிடுவதில்லையென்று பிடிவாதம் செய்வ தாக தீர்மானித்துக் கொண்டால் மதுபானம் நமதுநாட்டில் இன்னும் ஒழியாமல் இருக்குமா? ஒருக்காலும் இருக்காது என்றுதான் சொல்லுவோம்.

கள் மரம் வளர்ப்பது நாம், சாராயம் காய்ச்சுவது நாம், விற்பது நாம், குடிப்பது ஏழைகள். யார் பேரில் குற்றம் சொல்வது? மரம் வளர்த்து குத்த கைக்கு விட்டுக் கடை யெடுத்து கள் விற்று, குடிகாரன் போதையில் செய்த காரியத்திற்குக் கோர்ட்டில் ஏற்பட்ட வழக்குக்கு பீசு பெற்று வாழுபவர்கள், சட்டசபைக்குப் போனால் சர்க்கார் பேரில் குற்றம் சொல்லி ஜனங்களை ஏமாற்றுவார்களே அல்லாமல், தங்கள் குற்றங்களை ஒருக்காலும் திருத்திக் கொள்ள மாட்டார்கள். ஆகையால் யாராவது சட்டசபைக்குப் போவதற்காக ஏழை மக்களிடத்தில் வந்து ஓட்டுக் கேட்பார்களானால் அவர்களை சட்ட சபையில் நம்பிக்கை உள்ள ஓட்டர்கள் உங்களுக்கு எத்தனை தென்னை மரம்? அதில் எவ்வளவு கள்ளுக்கு அடைக்கப்பட்டிருக்கிறது? நீங்கள் எத்தனை குடிகாரர் கேசுக்கு ஆஜராகி எவ்வளவு பணம் சம்பாதித்தீர்கள்? குடி விலக்க நீங்கள் இந்த 6 வருஷ காலமாய் சட்டசபையிலும், வெளியிலும் என்ன செய்தீர்கள்? எங்களுக்கு வேறு ஒரு நன்மையும் வேண்டாம்; குடி ஒழிந்தால் போதும்; அதற்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? நீங்கள் சொல்வதை சர்க்கார் கேட்காவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? என்று



RangaRakes tamilnavarasam.com

இம்மாதிரியான கேள்விகளைக் கேட்டு அதற்கு ஏற்ற உண்மை யோக்கியர் களை ஆராய்ந்துப் பார்த்து ஓட்டர்கள் தங்கள் கடமையைச் சரியாய்ச் செய்வார்களானால் மாத்திரம் சட்டசபையால் மதுபானம் ஒழிக்கலாம் என்று ஓட்டர்கள் நம்புவதற்கும், மதுபானம் ஒழியாவிட்டால் சர்க்கார் மீது குற்றம் சொல்லுவதற்கும் அர்த்தம் உண்டு.

**குடி அரசு - தலையங்கம் - 16.08.1925**



# பெரிய வக்கீல்கள்

ஒரு வக்கீல் வீட்டிற்கு ஒரு கக்ஷிக்காரர் வருகிறார்.

**வக்கீல்:-** வாங்க கவுண்டரே, சவுக்கியமா என்ன விசேஷம்?

**கட்சிக்காரன்:-** ஒரு கேசு கீழ் கோர்ட்டில் நமக்கு விரோதமாய்ப் போய் விட்டது. அப்பீல் போடவேண்டும் தயவுசெய்து கட்டை பாருங்கள்.

**வக்கீல்:-** கட்டில் ஒரு ரிகார்ட், அதாவது ஜட்ஜ்மெண்டை எடுத்து பார்த்துக்கொண்டு தன்னுடைய குமாஸ்தாவிடம் பேசுவதுபோல் “ஏண்டா ரங்கநாதா, யாரடா ஜட்ஜிமெண்ட் எழுதிய சப்ஜட்ஜி சுத்த முட்டாளாயிருக் கிறானே. அவன் தனக்குமேல் ஏதாவது கோர்ட்டு இருப்பதாக நினைத்தானா அவனேதான் முடிவான ஜட்ஜி என்று நினைத்துக்கொண்டானா? இந்த ஜட்ஜ்மெண்ட் நம்ம ஜட்ஜி துரையிடம் அரை நிமிஷம் நிற்குமா? அல்லாமலும் இந்த சப்ஜட்ஜை சும்மா விட்டுவிடுவார்களா?”

**கட்சிக்காரன்:-** (என்று பேசிக்கொண்டு இருக்கும்போதே கட்சிக்காரன் ஆனந்தத்துடன்) ஏனுங்கொ எஜமான்றே எதிர்கட்சிக்கு நோட்டீசு அனுப்பி மாற்றுவார்களா? அதில்லாமலே கீழ்கோர்ட் தீர்ப்பை மாற்றிவிடுவார்களா?

**வக்கீல்:-** அதெல்லாம் உங்களுக்கெதற்கு? நான் பார்த்துக் கொள்ளுகிறேன். 700 ரூ. பீசு கொடுத்தால் கேசு அப்பீல் போடுவேன்.

**கட்சிக்காரன்:-** 700ரூ. கேழ்க்கிறீர்களே, சொத்தே 2000ரூ. தான் பொரும். கீழ்கோர்ட்டில் 1000ரூ. க்கு மேலாகவே செலவாய் விட்டது. கேசு போட்டு இரண்டரை வருஷமாச்சுது. கீழ்கோர்ட்டு செலவு பிரதிவாதிக்கு 440ரூ. கொடுக்கும்படி தீர்ப்பாயிருக்கிறது. ஆகையால் 500ரூ. வாங்கிக் கொள்ளுங்கள்.

**வக்கீல்:-**கீழ்கோர்ட்டு செலவை வேறே மாற்றவேண்டும். 700க்கு குறையாது.

இதற்குள் வக்கீல் குமாஸ்தாவும் தரகனும் கட்சிக்காரனுக்கு கண்ண டித்து உடனே ரூ. கையில் கொடுத்துவிடும்படி ஜாடை செய்கிறார்கள். கட்சிக் காரன் சரி 700ரூ. க்கு ஒப்புக்கொள்ளுகிறேன். 500ரூ. எடுத்துக்கொள்ளுங்கள். மீதி அனுப்புகிறேன். மறுபடியும் நான் வரவேண்டுமா?



RangaRakes tamilnavarasam.com

**வக்கீல்:–**அநேகமாய் வரவேண்டியதில்லை. ஒருசமயம் நோட்டீஸ் வந்தால் வாரும். பாக்கி பீசு எப்போது அனுப்புவது?

**கட்சிக்காரன்:–** நான் ஊருக்குப்போன உடன் அனுப்புகிறேன் என்று சொல்லிக்கொண்டு குமாஸ்தாவுக்கும் தரகனுக்கும் 15ரூ. கொடுத்து விட்டுப் போய் விட்டார் – போனவுடன் 200ரூ. யும் அனுப்பிவிட்டார். பிறகு 4 *மீ* கழித்து நோட்டீஸ் வந்த பிறகு விசாரணைக்கு முதல் நாள், கட்சிக்காரர் மறுபடியும் வக்கீல் வீட்டுக்கு வருகிறார்.

**வக்கீல்:–** எந்த ஊரையா நீர்?

**கட்சிக்காரன்:–** நான் தான் 4 மாதத்திற்கு முன் வந்து ஒரு அப்பீ லுக்கு 700 ரூ. பீசு பேசி 500ரூ. கொடுத்து விட்டுப் போய் மறுபடி 200ரூ. அனுப்பினேனே தங்களுக்கு ஞாபகமில்லையா?

**வக்கீல்:–** (குமாஸ்தாவை) ரங்கநாதா இந்த ஆள் யார் பாரு?

**குமாஸ்தா:** இவர்தான் 108 நெம்பர் அப்பீல்வாதி. இந்த கேசு நாளைக்கு போட்டிருக்கிறது.

**வக்கீல்:–** நாளைக்கு கேசு இருக்கும் போது இன்றைக்கே வந்து உபத்திரவம் செய்கிறீரே. நாளை வாரும் போம்.

**கட்சிக்காரர் போய்விட்டார்.**

**வக்கீல்:–** (குமாஸ்தாவை) ரங்கநாதா இந்த கேசு என்ன பார்த்தையா?

**குமாஸ்தா:–** பார்த்தேன். அது ஒன்றும் மாறாது. ஜட்ஜிமெண்டு ரம்பவும் சரியாய் எழுதியிருக்கிறார். அதிலொன்றும் பிசகு இல்லை.

**வக்கீல்:–** நாளைக்கு கோர்ட்டில் வேறு ஏதாவது வேலை இருக்கிறதா?

**குமாஸ்தா :–** இல்லை.

**மறுநாள் கட்சிக்காரர் சிரித்துக்கொண்டே வருகிறார்.**

**வக்கீல்:–** உன்னுடைய கேசைப் பார்த்தேன். கீழ்க் கோர்ட்டில் சரியான வக்கீலை வைத்து வேலை செய்யாமல், எவனையோ ஒரு முட்டாளை வைத்து வேலை செய்திருக்கிறாய், சரியான "இஷுக்களை" போடவில்லை சரியான படி சாட்சிகள் விடவில்லை. கேசை பாழாக்கிவிட்டு இங்குவந்து முட்டிக் கொண்டால் என்ன பிரயோஜனம்? ஒரு ஐந்து நிமிஷமாவது கேசைப்பற்றிச் சொல்வதற்கு ஏதாவது பாயிண்டுகள் வேண்டாமா? இன்றைக்கு கோர்ட்டுக் குப் போவதில் ஒன்றும் பிரயோசனமில்லை.

**கட்சிக்காரன்:–** ஐய்யய்யோ, தாங்கள் அன்று ஜட்ஜிமெண்டைப் பார்த்து இது அரை நிமிஷம் கூட நிற்காது. ஜட்ஜிக்குக்கூட ஏதாவது கெடுதி வரும் என்று சொன்னீர்களே, இப்பொழுது 700ரூ. வாங்கிக் கொண்டு



கோர்ட்டுக்குப்போவதில் பிரயோசனமில்லை என்கிறீர்களே. இந்த கேசு ஜெயிக்காவிட்டால் என் குடித்தனமே முழுகிப்போகுமே; கை முதலும் போய் கடன்காரன் ஆகிவிடுவேனே; அப்பீலுக்காகவென்று ஆயிரம் ரூபாய் என் மைத்துனன் ஜாமீன் பேரில் கடன்வாங்கி செலவு செய்து விட்டேன். இப்பொழுது இப்படிச் சொல்லுகிறீர்களே சாமி சாமி இது தர்மமா!

**வக்கீல்:–** ஓய், நீர் அன்று கட்டுப் பூரா என்னிடம் எப்பொழுது காட்டி னீர்? ஜட்ஜ்மெண்டு மாத்திரம் காட்டினீர். அதில் எனக்குத் தோன்றியதைச் சொன்னேன். இப்போது மற்ற ரிகார்ட்டுகளைப் பார்க்கத்தான் விஷயம் தெரிந்தது.

**கட்சிக்காரன்:–** (அழுதுகொண்டு) எப்படியோ இருக்கட்டும், தாங்கள் இன்று கோர்ட்டுக்கு வாருங்கள், அப்புறம் என் விதிப்படி ஆகட்டும்.

**வக்கீல்:–** மறுபடியும் முட்டாள்த்தனமாய் உளருகிறீரே. கோர்ட்டில் எடுத்து சொல்லவே ஒன்றும் இல்லை என்று சொன்னால் திரும்பவும் கோர்ட் டுக்கு வாருங்கள் என்று கூப்பிடுகிறீரே உமக்கு புத்தி இருக்கிறதா இல்லையா?

**குமாஸ்தா:–** (கட்சிக்காரரைப் பார்த்து) நீங்கள் போய் இருங்கள், நான் வக்கீலை வரும்படி செய்கிறேன்.

அழுதுகொண்டே கட்சிக்காரர் கோர்ட்டுக்குப் போகிறார். கோர்ட்டில் ஜட்ஜி வந்தவுடன் இந்த கேசையே முதலில் கூப்பிடுகிறார். குமாஸ்தா இல்லை, வக்கீல் இல்லை. கட்சிக்காரர் நேரில் போய் வக்கீல் வருவார் கொஞ்ச நேரம் பொறுக்க வேண்டும் என்று கேழ்க்கிறார். ஜட்ஜு கேசை வீட்டிலே படித்து வந்தவராதலால் அப்பீலுக்கு ஒன்றும் சரியான காரணமில்லை. காத்திருப் பதிலும் பிரயோஜனமில்லை என்று சொல்லி அப்பீலை செலவுடன் தள்ளி விட்டார். கட்சிக்காரர் வக்கீல் வீட்டிற்குக் கூடப்போகாமல் ஊருக்குப் போய் பாப்பராய் விட்டார்.

**குடி அரசு – உரையாடல் – 16.08.1925**



RangaRakes tamilnavarasam.com

# பிராயச்சித்தம்

ஒரு பெரிய மனிதர் வீட்டுக்கு ஒரு சாஸ்திரி வந்தார்.

**பெரியமனிதர்:-** வாருங்கள் சாஸ்திரிகளே, உங்களை வரவழைக்க வேண்டு மென்றிருந்தேன். நீங்களே வந்துவிட்டீர்கள்.

**சாஸ்திரிகள்:-** அப்படியா, என்ன விசேஷம்?

**பெரியமனிதர்:-** ஒன்றுமில்லை, ஒரு தத்துக்கிளியின் கழுத்தில் ஒரு பையன் கயிறுகட்டி இறுக்கி அதைக் கொன்று விட்டான். இதர்க்கேதாவது பிராயச்சித்தம் உண்டா?

**சாஸ்திரிகள்:-** ஆஹா உண்டு! அவன் பெற்றோர் தங்கத்தினால் 108 தத்துக்கிளி செய்து 108 பிராமணர்களுக்குக் கொடுத்துவிட்டால் அந்தப் பாவம் தீர்ந்துபோகும். இல்லாவிட்டால் அந்தப் பையனை பார்க்கவே கூடாது.

**பெரியமனிதர்:-** தத்துக்கிளியின் கழுத்தில் கயிறுகட்டி இறுக்கிக் கொன்றது தங்களுடைய மகன்தான், அதற்கு வேண்டியதை சீக்கிரத்தில் செய்துவிட்டு வாருங்கள்.

**சாஸ்திரிகள்:-** ஓஹோ! பிராமண பையனா அப்படியானால் இனிமேல் அப்படிச் செய்யாதே என்று சொல்லி விட்டால் போதும்.

**குடி அரசு - உரையாடல் - 16.08.1925**



# கள்ளுக்கும் விஷத்திர்க்கும் வாக்குவாதம்

**விஷம்-** ஓ கள்ளே! நீ என்ன மகா கெட்டிக்காரன்போல் பேசுகிறாய், ஒரு கடுகளவு ஒரு மனிதனுக்குள் பிரவேசித்தேனேயானால் உடனே அவன் உயிரை வாங்கி பிணமாக்கிவிடுவேன். நீ பீப்பாயளவு உள்ளே போனாலும் ஒன்றும் செய்வதில்லை.

**கள்ளு:-** அப்படியா, உன்னால் என்ன செய்யமுடியும்? ஒரு மனிதன் உயிரை மாத்திரம் தான் வாங்கமுடியும். இது யாரும் செய்து விடுவார்கள். என் சங்கதியைக் கேள். நான் ஒரு மனிதனுக்குள் சென்றேனேயானால் அவன் புத்தி, மானம், சொத்து இவ்வளவையும் பிடுங்கிக் கொள்வதோடு உயிர் இருக்கவே பிணமாக்கிவிடுவேன். இது உன்னாலாகுமா?

**குடி அரசு - உரையாடல் - 16.08.1925**



RangaRakes tamilnavarasam.com

# வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

**–சித்திரபுத்திரன்**

தற்காலம் இந்தியாவின் அபிப்பிராய பேதத்திற்கும், ஒற்றுமையின்மைக்கும், வகுப்புத் துவேஷங்களுக்கும் ஒரே மருந்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்தான் என்று சில நாட்களுக்கு முன்னர் "குடி அரசி"ன் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதைப்பற்றி வெளிப்படையான ஆட்சேபங்கள் ஒன்றும் வரவில்லை. ஆனாலும், அதனால் பாதிக்கப்படக் கூடிய வகுப்பைச் சேர்ந்ததான "சுதேசமித்திரன்" பத்திரிகை **மந்திரி ஒப்புக்கொள்ளுகிறார்** என்கிற தலைப்பின் கீழ் ஒரு சொற்பெருக்கில் தனக்கு அநுகூலமான பாகத்தை மட்டும் எடுத்து எழுதி ஜனங்களை ஏமாற்றி, **யோசித்துப்பாருங்கள்** என்று கேட்டிருக்கிறது. "அதாவது பிரதிநிதிச் சபைகளிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே ஜஸ்டிஸ் கட்சியாரின் லட்சியமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் அது தற்கால ஏற்பாடு. அதை ஒரு ஸ்திரமான ஏற்பாடாகக் கொண்டால், அது நம் தேசிய இயக்கம் சிதருண்டு போகும்படி செய்யக்கூடியது". "திராவிடன்" பத்திரிகை மேற்படி மந்திரியின் சொற்பொழிவை கீழ்க்கண்டவாறு வெளியிட்டிருக்கிறது. "சம நியாயம் கிடைப்பதற்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இன்றிமையாதது. இக் கொள்கை புதிதானதல்ல. சீர்திருத்தச் சட்டம் நடப்புக்கு வந்தபின்னர் ஏற்பட்டதுமல்ல, இம்மாகாணத்தைத் திறமையாய் முன்னர் ஆட்சி செய்தவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்ப காலத்திலேயே இதை ஒப்புக் கொண்டு 1840 –ம் ஆண்டில் போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் 125ல் அமைத் திருக்கிறார்கள். ஆனால் தற்கால முறையாய் ஏற்பட்டதென்பதை நீங்கள் உணரவேண்டும். நிலையாகவோ, முதன்மையாகவோ அஃதிருப்பின் தேசிய அபிவிருத்திக்குக் கெடுதி விளைவிக்கும். எல்லா சமூகத்தார்களும் சமூக அரசியல் பொறுப்புகளை சமமாய் ஏற்றுக்கொள்ளும் காலம் வரும் வரை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருந்தே தீரவேண்டும்" என்று பேசியிருக்கிறார். இவற்றிலிருந்து "சுதேசமித்திரன்" பத்திரிகை ஜனங்களை எப்படித் தனது சூழ்ச்சிகளால் ஏமாற்றி வருகிறதென்றும், அதை நம்பி ஜனங்கள் எவ்வளவு பேர் ஏமார்ந்து போகின்றார்களென்றும் வாசகர்களே அறிந்துகொள்ளலாம். மந்திரி ஸ்ரீமான் பாத்ரோ அவர்கள் தற்கால நிலை மைக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேவையென்று சொல்லுவதோடு நிரந்தரமாய் அது நமக்கு இருக்க வேண்டியதில்லையென்றும், எல்லா சமூக அரசியல் பொறுப்புகளை சமமாய் ஏற்றுக்கொள்ளும் காலம் வரும்வரை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருந்தே தீரவேண்டும் என்றும் சொல்லுகிறார். நமது தேசத்தில் எல்லா சமூகத்தாரும் ஒற்றுமைப்பட்டு ஒருவருக்கொருவர் நம்பிக்கை உண்டாகி, ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைக்கும் வழக்கம் நீங்கி எல்லோரும் சமம் சகோதரர்கள் என்கிற உணர்ச்சிவரும்பொழுது ஒரு தேசத்திற்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டியதில்லைதான். 'அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா' என்று கூப்பிடுவதை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆனால் தற்காலம் தேச முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பது ஒற்றுமைக்குறைவு என்பதையும், ஒற்றுமைக்குறைவிற்குக் காரணம் ஒரு சமூகத்தை மற்றொரு சமூகம் தாழ்த்தி ஏமாற்றி மோசம் செய்துதான் முன்னுக்குவரப் பார்ப்பதுதான் என்றும் வியக்தமாய் தெரிந்துகொண்ட பிறகு தர்ம சாஸ்திரம் பேசுவது ஒழுங்காகுமா? இந்தியக் கிறிஸ்தவர்களுக்கும், மகம்மதியர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும், ஆங்கிலோ இந்தியருக்கும் சில இலாகாக்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்துவிடவில்லையா? அதுபோல், பிராமணர், பிராமணரல்லாதார் என்போருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டுவிடின் தேசத்திற்கு என்ன கெடுதி சம்பவிக்கும்? இந்து, மகம்மதியர், கிறிஸ்தவர் முதலியவர்களுக்குள் இருக்கும் ஒற்றுமையும், நம்பிக்கையும் பிராமணர் பிராமணரல்லாதார் என்கிற வகுப்பினருக்குள் இருக்கிறதா? ஒரு மதஸ்தர்களுக்குள்ளாகவே ஒருவர் தான் பிறவியினாலேயே உயர்ந்தவரென்றும், தான் எவ்வளவு ஈனராயிருந்த போதிலும் பிறவியின் காரணமாகவே தனக்குச் சில பெருமைகளும் உரிமைகளும் உண்டென்றும், பிராமணர் ஒழிந்த மற்றவர்கள் எவ்வளவு உயர்ந்தவராயிருந்த போதிலும் அவர்கள் தாழ்ந்தவர்களென்றும், அவர்களைத் தொட்டால், பார்த்தால், நெருங்கினால், தெருவில் நடந்தால் பாபமென்னும் தத்துவங்களையும், கொள்கைகளையும் மத ஆதார மூலமாக வைத்துக்கொண்டு இருக்கிறவரையில் இரு வகுப்பாருக்குள்ளும் ஒருவருக்கொருவர் நம்பிக்கையும் அன்பும் எப்படி உண்டாகும்? மகம்மதியரும், பிராமணரல்லாத இந்துக்களும், இந்தியக் கிறிஸ்தவர்களும், ஐரோப்பியரும், ஆங்கிலோ இந்தியரும் ஒரு சமயம் ஒற்றுமை ஆனாலும் ஆகலாம். ஆனால் பிராமணரும், பிராமணரல்லாத இந்துக்களும் ஒற்றுமையாக ஏதாவது இடமிருக்கிறதா? இந்துக்களில் பிராமணர் ஒழிந்த மற்றவர்கள் சூத்திரர்களென்றும், அவர்கள் பிராமணர்களுக்கு ஊழியர்களென்றும், அடிமைகளென்றும், தாசி மக்களென்றும், அவர்கள் சொத்துக்கள் வைத்திருப்பதற்குப் பாத்தியமில்லையென்றும், சூத்திரர்களின் சொத்துக்களைப் பிராமணர்கள் பலாத்காரமாய்ப் பிடிங்கிக் கொள்ளலாமென்றும் மனுதர்ம சாஸ்திரத்தில் எட்டாவது அத்தியாயத்தில் 413, 415, 417 சுலோகங்களாக எழுதி வைத்துக்கொண்டு அவற்றையே இந்து சமூகத்திற்கு ஆதாரமாக்கி, அதர்க்குத் தகுந்த மாதிரியாக வாழ்க்கையையும் நடத்திக்கொண்டு அதையே தங்கள் தந்திரங்களாலும், செல்வாக்கினாலும்





RangaRakes tamilnavarasam.com

பாமர ஜனங்களையும் நம்பும்படி செய்து கொண்டிருக்கும் ஒரு சாதியுடன் எப்படி மற்றொரு சாதி ஒருமைப்படமுடியும்? பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவிற்கு வந்த ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலாகியும் இன்னமும் ஆறு ஏழு கோடி ஜனங்கள் தங்கள் நாட்டில் தீண்டாதவர்களாகவும் தெருவில் நடக்காதவர்களாகவும், பார்க்காதவர்களாகவும் கருதப்படுகிறார்களென்றால் இனி எந்தக்காலத்தில் இவர்களுக்கு விமோசனம் உண்டென்று நம்ப இடமிருக்கிறது? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தப்பு என்பாரும், உயர்ந்த சாதி என்பாரும், இந்த அரசாங்கத்தாரும் நாளது வரையில் இந்தத் தீண்டா தாருக்கு என்ன செய்திருக்கிறார்கள்? இனிமேலும் என்ன செய்வார் கள் என்று நம்ப இடமிருக்கிறது? சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்னராவது இந்தத் தீண்டாதாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்திருந்தால் இவர்களின் நிலை இன்று இப்படி இருக்குமா? இந்துக்களில் சிலர் மகம்மதி யர்களையும், கிறிஸ்தவர்களையும் மிலேச்சர்கள் என்று எண்ணிக் கொண்டி ருந்த மனப்பான்மை இப்பொழுது எப்படி மாறிற்று? அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்காமலிருந்திருந்தால் அவர்கள் முன்னுக்கு வந்திருப் பார்களா? நாமும் அவர்களைத் தொட்டால் தொட்ட விரலை வெட்டி எறிய வேண்டும் என்று தானே நமது சாஸ்திரங்கள் சொல்லுகின்றதெனச் சொல்லிக் கொண்டிருப்போம். ஒன்றரை நூற்றாண்டு பிரிட்டிஷ் ராஜ்யபாரம் நடந்தும் பிரிட்டிஷார் வருமுன் ராஜியபாரம் செய்து கொண்டிருந்த சாதியெல்லாம் பிற்போக்கான சாதிகளில் தானே சேர்க்கப்பட்டிருக்கிறது. இவர்களிடம், இவர் களை நம்பி வாழ்ந்தவர்களெல்லாம் முற்போக்குள்ள சாதிகளில் சேர்க்கப் பட்டுப் போய்விட்டது. இந்தத் தீண்டாதவர்களும், பிற்பட்ட சாதிகளும் எந்தக் காலத்திற்குத் தீண்டக்கூடியவராகவும் முற்போக்குள்ள சாதியர்களாகவும் ஆகப்போகின்றனர்? சட்டசபைகளில் சகல சாதிகளுக்கும் உத்தியோகங்கள் சரி வர நிரப்பிக்கொடுக்கப்படவேண்டும் என்று தீர்மானித்தார்களே, அது அமுலில் வருகிறதா? சர்க்காருக்கு சம்பந்தப்பட்ட சகல தெருக்களிலும், சர்க்காரின் சகல பிரஜைகளுக்கும் சம உரிமை உண்டென்று ஒரு தீர்மானம் செய்தார்களே, அது அமுலில் வருகிறதா? காங்கிரஸில் தீண்டாமை ஒழிய வேண்டும் என்று தீர்மானம் செய்தார்களே, அதைக் காங்கிரஸில் உள்ளவர் களாவது ஒப்புக்கொண்டு அமுலில் கொண்டு வந்தார்களா? தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் திருச்சி கூட்டத்தில் பிறவியினால் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு இல்லை என்று தீர்மானம் செய்யப்பட்டதைக் காங்கிரஸ் வாதிகளாவது ஒப்புக்கொண்டார்களா? பறையனுடனும் சாப்பிடுவேன், இன்னும் எங்கு வேண்டுமானாலும் சாப்பிடுவேன், என்ன வேண்டுமானாலும் சாப்பிடுவேன், என் இனத்தார்கள் மாத்திரம் பிராமணரல்லாத பையன்களுடன் உடனுண்ணலை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று சொல்லித் தியாகிகள் என்போரும் யோகிகள் என்போரும் காங்கிரஸில் தங்கள் பதவிகளை விட்டுவிட்டு ஓடிப் போகவில்லையா? எங்கு வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களின் மனப்பான்மையே



இப்படியிருந்தால் ஒருவேளை ஒரு பிராமணரல்லாத பிள்ளையுடன் ஒரு பிராமணப் பிள்ளை உட்கார்ந்து உணவுண்டதாகக் கேள்விப்பட்டால் ஒருமாதம் பட்டினி விரதம் இருப்பேன் என்று சொல்லும் கூட்டத்தாரிடம் நாம் எப்படி ஒத்து வாழமுடியும்? நமக்கும் அவர்களுக்கும் எப்போதாவது ஒற்றுமை ஏற்படும் என்று நாம் எப்படி எதிர்பார்க்கமுடியும்? இம்மாதம் திருச்சியில் நடந்த கூட்டத்தில் சுயராஜ்யக் கட்சித் திட்டத்தில் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்கிற தத்துவத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னதில் சுயராஜ்யக் கட்சியின் தலைவர் இத்திட்டத்தை நீங்கள் அதில் சேர்க்கப் பிரயத்தனப்படுவீர்களானால் கொஞ்சம் நஞ்சமுள்ள பிராமணர்களும் காங்கிரசை விட்டுப்போய் விடுவார்களென்று பயமுறுத்தி னார். தீண்டாமை யை ஒழிக்க வேண்டுமென்று மகாத்மா வாயளவில் சொன்னபொழுது கூடவே கோவிந்தா போட்டுக் கொண்டிருந்தவர்கள் அது அமுலில் வருகிற காலத்தில் ஒரு பக்கம் மகாத்மாவின் பெயரைச் சொல்லிப் பதவிகள் அடைந்து வந்தாலும், மற்றொரு பக்கம் மகாத்மாவின் செல் வாக்கைக் குறைக்கப் பாடுபட்டு வருகிறார்கள், குறைத்தும் விட்டார்கள். இவற்றை யெல்லாம் அறிந்த பிராமணரல்லாதாரில் சிலரும், பிராமணர் களிடத்தில் தங்களுக்குச் செல்வாக்குக் குறைந்து விடும் என்கிற பயத்தி னாலும், அவர்களால் தங்களுக்குப் புகழும் கீர்த்தியும் இல்லாமற் போய் விடுமே என்கிற பயத் தினாலும் விபூஷணாழ்வாரைப்போல் நடிக்கிறார்கள். ராமர் ராஜ்யத்திலேயே விபூஷணர் இருந்தால் பிரிட்டிஷ் ராஜ்யத்தில் விபூஷணர்கள் இருப்பது அதிசயமா? அடிமை வியாபாரத்தை ஒழிக்க சட்ட மேற்படுத்தப்பட்ட காலத்தில் அடிமைகளே அச்சட்டத்தை எதிர்த்தார் களென்று சொல்லப்படுகின்றது. ஆனபோதிலும் வாஸ்தவத்திலேயே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வந்தால் தேச முன்னேற்றம் தடைப்பட்டுப் போய்விடுமோ என்று தெரிந்தோ தெரியா மலோ பயப்படுகிற உண்மையாளர் சிலர் இருக்கிறார்களென்பதை நாம் மறுக்க வில்லை. மகம்மதியர், கிறிஸ்தவர் முதலானவர்களுக்கும் வகுப்புவாரி பிரதி நிதித்துவம் ஏற்பட்டபின் எவ்வித முற்போக்கிற்குத் தடை ஏற்பட்டுவிட்டது? கடைசியாக, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு விரோதமாயிருக்கின்றவர்களை ஒரு கேள்வி கேட்கிறோம். இவர்கள் எப்பொழுதாவது பிராமணர்களும் பிராமணர் அல்லாதாரும் ஒன்றுபடுவார்கள், பிராமணரல்லாதாரை அவர்கள் சுய மரியாதைக்குப் பங்கமில்லாதபடிக்கு எப்பொழுதாவது மதிப்பார்கள், பிராமணரல்லாதாருக்கும் தீண்டாதாருக்கும் இப்பொழுது இருக்கும் குறைவுக ளெல்லாம் நீங்குவதற்கு பிராமணர்கள் அனுகூலமாய் இருப்பார்கள் என்று உண்மையாய் நம்புகிறார்களா? தீண்டப்படாதார் என்னும் 7 கோடி ஜனங் களுக்கு பிராமணரல்லாத இந்துக்கள் என்கிற முறையில் இன்னும் நாம் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்க மறுப்போமேயானால் மகம்மதியர்கள் என்கிற பெயராலோ கிறிஸ்துவர்கள் என்கிற பெயராலோ சீக்கிரத்தில் நாம் அவர்களுக்கு கொடுக்கப் போகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

இவர்கள் எப்படி நம்மை நம்புவார்கள்? நம்முடன் ஒத்துழைப்பார்கள். சர்க்காரோடு ஒத்துழைக்கக் கூடாது என்கிற நாம் நம்மை சூத்திரர் என்றும் அடிமை என்றும் தாசிமக்களென்றும் தொட்டால், பார்த்தால், தெருவில் நடந்தால் பாபம் என்றும் நினைத்துக்கொண்டிருக்கிற ஒரு ஜாதியாருடன் எப்படி ஒத்துழைக்க முடியும்? ஒரு காலத்தில் ஒத்துப் போகலாம் என்றாவது எப்படி எதிர்பார்க்க முடியும். ஒரு வக்கீலும் ஒரு போலீஸ்காரனும் தம்மை பிராமணன் என்றும் உயர்ந்த ஜாதியான் என்றும் எண்ணிக்கொண்டிருப் பானானால் உலகில் சண்டாளரென்று யாரைத்தான் சொல்ல முடியும்? உண்மையாய் பிராமண தர்மத்தோடு இருக்கும் யாரிடத்திலும் நமக்குத் துவேஷமில்லை. இவர்களை வணங்கவும் பின்வாங்கவில்லை, நம்மைப் போலவே நம்மிலும் கீழாகவே இருக்கிற நடக்கிற ஒருவன் நம்மை கீழ்ஜாதி என்று சொல்வதை எப்படி சகிக்கமுடியும்? - என்பதுதான் கேள்வி. இதை நிவர்த்தித்துக் கொள்ளாமல் நமக்கு என்னதான் ராஜிய சுதந்திரம் வந்தாலும் என்ன பலன்? இரண்டு சீர்திருத்தம் வந்தும் தாழ்த்தப்பட்டவர்கள் என்போருக்கு என்ன பலன் கிடைத்தது என்பதை யோசிக்கக் கோருகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 16.08.1925**



# பஞ்சாயத்து

ஒத்துழையாமை திட்டத்தில் சர்க்காரும் பொது ஜனங்களும் ஒப்புக் கொள்ளக்கூடிய பாகம் ஒன்று உண்டு. அதாவது, விவகாரங்களைக் கோர்ட் டுக்குப் போய் பைசல் செய்து கொள்ள நினையாமல் உள்ளூர் பஞ்சாயத்தார் மூலம் வழக்குகளைப் பைசல் செய்து கொள்வது, இருகட்சிக்காரருக்கும் அனுகூலம் என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். இந்த யோசனை கொஞ் சமும் புதிதானதல்ல ஆதியில் ஜனங்கள் பஞ்சாயத்து மூலமாய் தான் தங்கள் வழக்குகளை பைசல் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். ஆரம்ப காலத்தில் ஒவ்வொரு மனிதரும் தனக்குத் தானே பஞ்சாயத்தாராகத்தான் இருந்திருக்கிறார்.

இந்த தன்னுடைய பஞ்சாயத்தை ஒப்புக்கொள்ளாத காலத்தில் மனிதன் பலாத்காரத்தினால் அதை அமுலுக்குக் கொண்டுவரப் பார்க்கிறான். இது ஒருவருக்கொருவர் இரத்தம் சொரியக் கொண்டு வந்துவிட்டதினால், தனக்குத் தானே பஞ்சாயத்தாராக இருக்கக்கூடாது என்று அறிந்து மூன்றாவது மனிதரை பஞ்சாயத்தாராக ஏற்படுத்திக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. அது நாளா வட்டத்தில் வளர்ந்து கிரமமான உபயோகமான பஞ்சாயத்தாக ஏற் பட்டது. பொதுஜனங்கள் தற்கால நிலையில் வக்கீல்களின் ஆசை வார்த்தை களையும் கோர்ட்டின் அக்கிரமங்களையும் நம்பியே பஞ்சாயத்தை அலட்சி யம் செய்து வருகிறார்கள். வக்கீல்களும் கோர்ட்டுகளும் அயோக்கியத் தனமான முறையில் காரியங்களை நடத்துகிறவரையில் ஜனங்களுக்குப் பஞ்சாயத்தில் இஷ்டம் ஏற்படாது, ஏனெனில் கோர்ட்டுகளில் கிரமத்திற்கு விரோதமான அதிக லாபத்தை சம்பாதித்துவிடலாம் என்கிற ஆசை கிரமத்தை ஒப்புக்கொள்ளவோ, கிரமப்படி நடக்கவோ மனிதனைக் கட்டுப் படச் செய்வதில்லை. நியாயம் செய்வதனாலும் நியாயப்படி நடப்பதனாலும் கோர்ட்டுகளுக்கும் வக்கீல் களுக்கும் வேலையே ஏற்படாது.

செலவு செய்து நியாயம் சம்பாதிப்பதற்கு பதிலாய், ஜனங்கள் செலவில் லாத நியாயத்தை சம்பாதிக்க பஞ்சாயத்திற்குத்தான் போவார்கள். இருவரில் ஒரு கட்சிக்காரனுக்காவது கோர்ட்டில் நியாய விரோதமான லாபத்தை அடையலாம் என்கிற ஆசை இல்லாவிட்டால் கண்டிப்பாய் கோர்ட்டுகள் அடைபட்டே போய்விடும்.



RangaRakes tamilnavarasam.com

பொதுவாக நமது நாட்டுப் பஞ்சாயத்துக்கு முட்டுக்கட்டையாய் இருப்பது வக்கீல்களும் கோர்ட்டுகளுமே அல்லாமல் ஜனங்களின் அறியாமை என்று நாம் ஒருக்காலும் சொல்லவே மாட்டோம்.

**குடி அரசு - கட்டுரை - 16.08.1925**



# கோயமுத்தூர் வாக்காளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

## (ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கர்)

நமது நாட்டின் அடிமைத் தன்மைக்கும், அழிவுத் தன்மைக்கும் நமது ஒற்றுமைக் குறைவுதான் காரணமாயிருப்பதென்பதை எல்லோரும் அறிந்த விஷயம். அரசாங்கத்தாரால் நமக்குக் கொடுக்கப்படும் கல்வியும் அக்கல்வி கற்றதற்காக நமக்குக் கொடுக்கப்படும் உத்தியோகமும், பதவியும், அரசாங்கத்தாரால் நமக்கு வழங்கப்பட்டதெனச் சொல்லும் இத்தேர்தல் முறைகளும் ஆகிய இம்மூன்றும் நமது ஒற்றுமையின்மைக்குப் பிறப்பிடமாயிருக்கிறது. முதலிரண்டு காரியமும் படித்தவர்களைப் பற்றிக்கொண்டு ஒற்றுமைக் குறைவும் அடிமைத் தன்மையும் அவர்களால் உண்டாக்கப்பட்டு வந்தாலும் மூன்றாவதான தேர்தல் முறைகளான ( எலக்ஷன்கள் ) படித்தவர்களோடு அல்லாமல் சாது ஜனங்களையும், வியாபாரிகளையும், பொது மக்களையும் ஒற்றுமையோடு வாழ்வதற்கில்லாமல் பிரித்து வைக்கவும், துவேஷங்களையும், குரோதங்களையும் உண்டாக்கி கட்சிப் பிரதிகட்சிகளை ஏற்படுத்தவும் சாத்தியமாயிருக்கிறது. இக்காரணங்களால்தான் பொதுநலத்திற்கு உண்மையாய் உழைக்கிறவர்கள் இத்தேர்தல்களை காங்கிரஸின் வேலைத் திட்டங்களில் புகவிடாமல் தள்ளிவைத்துக் கொண்டே வந்தார்கள். இப்பொழுது நியாயமாகவோ, அநியாயமாகவோ எப்படியோ காங்கிரஸிற்குள்ளாக தேர்தல்கள் வந்து புகுந்துவிட்டதாய் காங்கிரஸ்காரர்களும், பொது ஜனங் களும் எண்ணும் படியாய் ஏற்பட்டு விட்டது. அதன் காரணமாய்ப் பொது ஜனங்கள் காங்கிரஸையும், காங்கிரஸ்காரரையும் எதிர்க்கத் துணிந்து விட்டார் கள். காங்கிரஸிற்கே குறைவுண்டாகும்படியான எதிர்ப்புகள் பலமாக உண்டாவதைக் காங்கிரஸ்காரர்கள் நன்கு அறிந்திருந்துங்கூட காங்கிரஸ்காரர்கள் என்போரில் சிலர் காங்கிரஸின் முக்கிய கொள்கைகளைக் கூட லட்சியம் செய்யாமல், தேர்தல்களில் பிரவேசித்து காங்கிரஸின் பெயரால் அவற்றை நடத்தி மக்கள் ஒருவருக்கொருவர் துவேஷத்தையும், மாச்சரியத்தையும் அடைவதற்கு ஆதாரமாய் நிற்கிறார்கள். சென்னை, மதுரை முதலிய அனேக இடங்களில் இவ்விதமாக நடைபெற்று வந்தாலும் தமிழ்நாட்டுக் காங்கிரஸிற்குப் பேராதரவாயும் வழிகாட்டியாயுமிருந்து தமிழ் நாட்டிற்கே பெருமை உண்டாக்



RangaRakes tamilnavarasam.com

கியதென்று சொல்லப்பட்ட இக்கோயம்புத்தூர் ஜில்லாவும், இதிலுள்ள காங்கிரஸ் பிரமுகர்களும் இத்தேர்தல் சேற்றில் உலவும்படியான காலம் ஏற்பட்டுப் போய்விட்டதென்றால் என்போன்றவர் துக்கப்படாமலிருக்க முடியவில்லை. காங்கிரஸில் எனக்குள்ள பொறுப்பையும், கடமையையும் உணர்ந்து நான் இதில் பிரவேசிக்க வேண்டியதை அலட்சியம் செய்து விட்டாலும், ஒரு சாதாரண மனிதன் என்கிற முறை யிலாவது இதைக் கவனிக்காமலிருக்க முடியவில்லை. இம்மாதம் 18-ந் தேதி எனது சொந்த வேலையாய்க் கோயம்புத்தூரிற்குப் போயிருந்தேன். அங்கு நடத்தப்படும் காங்கிரஸ் தேர்தல் பிரசாரம் என் கண்களுக்கும் காதுகளுக்கும் எட்டின. காதுகளுக்கு எட்டியவைகளையெல்லாம் விட்டுவிட்டு நேரில் கண்டவற்றையும் காங்கிரஸ் நண்பர்கள் மூலமாய் நேரில் அறிந்தவற்றையும் மாத்திரம் குறிப்பிடுகிறேன். காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியின் பெயரால் கோயம்புத்தூர் நகரசபைத் தேர்தலுக்கு எட்டுக் கனவான்களை நிறுத்தி உள்ளார்கள். இவர்களில் சிலரை நான் சந்திக்க நேர்ந்தது. அவர்களில் ஒருவர் தமக்குத் தீண்டாமை விலக்கு என்பதில் கொஞ்சமும் நம்பிக்கை இல்லை யென்றும், தாம் அதற்குக் கட்டுப்படமுடியாதென்றும், காங்கிரஸ்காரர்களிடம் இதைத் தெரிவித்ததாகவும், அவர்கள் அதை ஒப்புக் கொண்டுதான் தம்மை நிறுத்தியிருக்கிறார்களென்றும், மற்றொருவர் கொள்கைகளைப்பற்றி தமக்கு அபிப்பிராயபேதம் இருப்பதைத் தெரிவித்தும் தமக்கு எப்படியும் ஜெயம் கிடைக்கும் என்கிற காரணத்தால் தம்மிடம் கையெழுத்து வாங்கியதாகவும் தெரிவித்தார். வேறொருவர் இதுவரையில் கதரே கட்டவில்லையென்றும் மேடைமீது இருக்கும்போது கூட கதர் கட்டவில்லையென்றும் ஜில்லா காங்கிரஸ் காரியதரிசியின் முன்னரே சொல்லப்பட்டது. அதைக் காரியதரிசி அவர்கள் ஒப்புக்கொண்டு, நவம்பர் மாதம் முதல் கட்டிக்கொள்ளுவதாய்ச் சொன்னாரென்றும் அவ்வளவாவது அவர் ஒப்புக்கொண்டதைப் பெரிதாக நினைத்து தாம் அவரிடம் கையெழுத்து வாங்கியதாகவும், அதற்கும் வேறு ஆட்கள் கிடைப்பதில்லையென்றும் என்னிடம் சொல்லிக் கையெழுத்தையும் காட்டினார். இன்னுமிரண்டொரு விஷயங்களை இதில் எழுதுவதற்கு எனக்கு இஷ்டமில்லை. ஆனால் இவையெல்லாம் முனிசிபல் நிர்வாகத்தை நடத்த யோக்கியதை அற்றதென்றாவது இந்தக் கனவான்கள் முனிசிபல் நிர்வாகத்தை நடத்தத் தகுதியற்றவர்கள் என்றாவது நான் கூறவில்லை. ஆனால் இதே மாதிரி குணமுள்ளவர்களும் எந்தவிதத்திலும் இவர்களுக்குக் குறைவில்லாதவர்களுமான பல கனவான்களுக்கு விரோதமாய்ச் சில கனவான்களை மாத்திரம் தங்கள் கட்சியார் என்று சொல்லிக்கொண்டு வீண் மனக்கசப்புக்கும், மாச்சரியத்திற்கும் இடந்தரும்படியாயும், கோயம்புத்தூர் ஜில்லாவின் பிற்கால காங்கிரஸின் வாழ்விற்கும் விரோதமாய் இதுவரை எவ்வித புகாருக்கும், சந்தேகத்திற்கும் இடம் கொடுக்காத சில காங்கிரஸ் பக்தர்கள் ஏன் இப்படி செய்யவேண்டுமென்பது தான் நமது கவலை; அல்லாமல் இவ்விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் சிலர் பேரில் எவ்வித உள் எண்ணத்தைக் கற்பிக்க நான் துணியாவிட்டாலும் நான் நேரில் அறிந்த மேற்படி காரியங்களைப் பொறுத்தவரையிலாவது இவை பிற்போக்கான காரியமென்று சொல்லாமலிருக்க முடியவில்லை. இந்த நிலைமையிலும் இந்தச் சந்தர்ப்பத்திலும் கோயம்புத்தூர் காங்கிரஸ்காரர்களான என்னுடைய நண்பர்களிடமும் என்னுடன் காங்கிரஸ் வேலை செய்த எனதாப்த நண்பர்களிடமும் யான் செய்யும் வேண்டுகோள் பயனை அளிக்குமோ, அளிக்காதோ என்ற பயமிருப்பினும் பொதுஜனங்களாகிய உங்களிடம் யான் செய்து கொள்ளும் விண்ணப்பம் பிரயோஜன மற்றதென்றும், உசிதமற்றதென்றும் யான் நினைக்கவில்லை. ஆதலால் இவ் விண்ணப்பம் மூலமாய் எனது வேண்டுகோளை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதாவது, நீங்கள் ஒவ்வொரு தேர்தல் அபேட்சகர்களையும் கட்சிப் பலத்தையோ, பிரசாரப் பலத்தையோ, செல்வாக்குப் பலத்தையோ சேர்த்துப் பார்க்காமல் தனித்தனியாய் அவர்களுக்குள்ள ஆற்றலையும், பரோபகார சிந்தையையும் கவனித்து யாரைத் தெரிந்தெடுத்தால் முனிசிபல் நிர்வாகத்தை ஒழுங்காய் நடத்தவும், பொது நன்மைக்கு உழைக்கவும் உதவுவார் என்பதை நன்கு தெரிந்து தக்க ஞானமுள்ளவர்களாகவே பார்த்து உங்களது ஓட்டைக் கொடுங்கள். மற்ற எந்தக் காரணங்களுக்காகவும், எவரையும் விலக்காதீர்கள். காங்கிரஸின் பெயரால் நிற்பவர்கள் எல்லோரும் உண்மையான காங்கிரஸின் கொள்கைக்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதை நான் ஒரு நாளும் நம்ப மாட்டேன். உங்களையும் நம்பும்படி சொல்லமாட்டேன். காங்கிரஸின் பெயரால் நிற்காதவர்கள் எல்லோரும் தேசத்துரோகிகள் என்றோ, காங்கிரஸ் விரோதிகள் என்றோ நினைத்து விடாதீர்கள். இந்தக் காரணங்களால் மாத்திரம் எவரும் முனிசிபல் கவுன்சிலுக்குத் தகுதியுள்ளவர்கள் அல்லர் என்று நினைத்து விடாதீர்கள். இரண்டு பாகத்திலும் நல்லவர்களும், நல்லவர் அல்லாதவர்களும் இருக்கிறார்கள். பிறர் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு உங்களது ஓட்டை தப்பான வழியில் உபயோகப்படுத்தி விடாதீர்கள். எனது அபிப்பிராயத்தை இதற்கு முன்னர் அனேக காங்கிரஸ் மேடைகளிலும் கூறியிருக்கிறேன். இனிமேலும் இதையே மற்ற காங்கிரஸ் தேர்தல்களின் தகரார் உள்ள ஊர்களுக்குத் தெரியப்படுத்தப் போகிறேன்.

**குடி அரசு - வேண்டுகோள் - 23.08.1925**





RangaRakes

tamilnavarasam.com


குடி அரசு.

தேர்தல் பேய்



# தேர்தல் பேய்

இதைப்பற்றி பல தடவைகளில் நமது பத்திரிகையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. தேர்தல்கள் என்பது ஒரு பாத்தியமற்ற, கேள்வியற்ற சொத்தைப்போல் பிடித்தவனுக்குப் பொண்டாட்டி என மதித்து பலாத் காரமான செய்கைக்கொப்ப பல கொடுமைகள் நமது நாட்டில் இதுசமயம் நடந்து வருகின்றன. சென்னையிலும், மதுரையிலும், கோவையிலும் இன்னும் மற்ற இடங்களிலும் நடக்கும் தேர்தல் பிரசாரங்கள் இந்தியா நாகரீகமற்ற தேசம் என்பாருக்கும் இந்திய மக்கள் சுயராஜ்யத்திற்கு யோக்கியதையற்ற வர்கள் என்பாருக்கும் தங்கள் கட்சிக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உபயோகப்படுத்திக்கொள்ளத்தக்கதான சாட்சியாய் விளங்குகிறது. ஆனபோ திலும் நமக்கு இவைகளை மறுக்கும் மார்க்கம் ஏதாவது உண்டா என்று பார்த் தால் பிரஞ்சு தேசத்தில் இப்படி இல்லையா? பிரிட்டிஷ் தேசத்தில் இப்படி இல்லையா? என்று சொல்லித்தான் தப்பித்துக் கொள்ளக் கூடுமாயிருக்கிறதே அல்லாமல் அவர்கள் சொல்லுவதைப் பொய்யென்றும் மறுக்க யோக்கியதை இல்லாதவர்களாயிருக்கிறோம். இதோடு மாத்திரம் அல்லாமல் இந்தியாவின் விடுதலைக்கேற்பட்டதும் 2 வருஷத்திற்கு முன்பு மிகமிக பரிசுத்தத் தன்மையுடையதென்று சொல்லிக் கொள்ளப்பட்டிருந்ததுமான காங்கிரஸின் பெயரும் உலகப்பெரியார், சத்தியாக்கிரக அவதாரம், அஹிம்சையின் சொரூ பம் மகாத்மா என்று உலகோர்களாலேயே சொல்லிக்கொள்ளும் உத்தமரான காந்தியடிகளின் பெயரும், இந்தியா அநாகரீக தேசம் என்றும் சொல்வதற் காதாரமான செய்கைக்கும் சுயராஜ்யத்திற்கு அருகதையற்றது என்று சொல்வ தற்காதாரமான செய்கைக்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறதென்றால் நாட்டுக்கு யோக்கியதை விடுதலை எங்கேயிருக்கிறது? இதற்குக் காரணம் என்ன வென்று யோசிப்போமேயானால், இத்தேர்தல் கருமங்களில் பிரவேசித் திருக்கும் யாரையும் சொல்ல இங்கு நாம் முன்வரமாட்டோம். ஆனால், இதைப் பார்த்துக் கொண்டு மவுனம் சாதித்துக் கொண்டிருக்கும் யோக்கிய மான, உண்மையான என்று சொல்லப்படும் சில பத்திரிகைகளையும், யோக்கியமானவர்கள், உண்மையானவர்கள் என்று சொல்லப்படும் சில தலை வர்களையும்தான் இப்பாதகத் தொழிலுக்குக் காரணம் என்று சொல்லுவோம்.

துரௌபதையை துர்ச்சாதனன் துகிலுரிந்ததையும், மானபங்கப் படுத்தினதையும் தர்மபீமாதிகள் பார்த்து மவுனம் சாதித்துக் கொண்டேயிருந்



RangaRakes tamilnavarasam.com

தார்கள் என்றால் இப்பாரததேவியை சில துர்ச்சாதனர்கள் துகிலுரிவதையும், மானபங்கப்படுத்துவதையும் பார்த்துக் கொண்டிருப்பது அதிசயமா அல்லது அது தப்பிதமாகுமா என்று சிலர் ஐயுறலாம். ஆனால் துரௌபதையின் துகிலுரிவதை பொறுத்துக் கொண்டிருந்தவர்கள் தங்களுக்குப் பலமிருந்தும் பொறுமையின் பலத்தால் பொறுத்துக் கொண்டிருந்தார்கள். பாரதமாதாவின் துகிலுரியப்படுவதை பார்த்துக் கொண்டிருப்பவர்கள் பெரும்பான்மையோர் சுயநலத்தாலும் பேடித்தன்மையாலும் அலட்சியப் புத்தியாலும் தாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எமது தாழ்மையான அபிப்பிராயம். இதன் பலனாய் தேசம் என்ன ஆகிறது என்பதைப் பற்றிக் கொஞ்சமாவது சிந்தித்துத் தாங்கள் செய்த தியாகங்களையும் தங்களது உழைப்புகளையும், தாங்கள் எதற்காகச் செய்தோம், பட்டோம் என்று நினைத்துப்பார்த்து, தேச விடுதலைக் கேதான் செய்தோம், செய்துகொண்டிருக்கிறோம் என்கிற முடிவுக்கு வருவார்களானால் இவர்கள் எப்படி மவுனம் சாதிக்க முடியும்? இவ்வளவு பெரிய அக்கிரமத்திற்குக் கேள்வியில்லையா? எல்லோருமா அறியாமையில் – அலட்சியப் புத்தியில் மூழ்கிவிட்டார்கள்? எல்லோருமா பயங்கொள்ளிகள்? எல்லோருமா சுயநலப்பேயால் ஆட்டப்படுகிறார்கள்? இப்படிச் சொல்வது தர்மமாகுமா? என்று யோசித்தால், மகாத்மாவின் பேரால், காங்கிரஸ் பேரால் நடத்தப்படும் இந்தத் தேர்தல் அக்கிரமங்கள் ஒழுங்கானதா என்கிற எண்ணம் வாட்டுகிறதே; யாரைக் கேட்டாலும் நேரில் பேசும்போது இது அக்கிரமம்தான் என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஒரு கோடி ரூபாயும் 30 ஆயிரம் பேர் சிறை வாசத்தையும் மகாத்மாவின் சிறை வாசத்தையும், ராஜ போகத்தையும், ராஜ சம்பத்தையும், பெருத்த தியாக புத்தியையும் ஆகுதியாய்க் கொண்டு செய்த விடுதலை யாகத்தில் இத்தேர்தல் சூட்சி என்கிற ராட்சஸன்தானா உண்டாக வேண்டும்? உண்மையான சுயமரியாதையும், வீரமும், பொது நல எண்ணமும் தேசபக்தியும் ஒரு இரண்டு மூன்று பேருக்காவது நம் தமிழ்நாட்டில் என்றைக்கு ஏற்படுகின்றதோ அன்றைக்குத்தான் இத்தேர்தல் ராட்சஸன் மாய்வான். அதுவரை தமிழ்நாட்டில் கல்மாரியும், கல்லடியும், தடியடியும், மண்டை உடைவும், உயிர்ச்சேதமும் இன்னும் பல இழிகுணங்களும் தாண்டவமாடிக் கொண்டிருப்பது கொஞ்சமும் ஆச்சரியமல்ல. ஆனால் ஒன்று மாத்திரம் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டு இதை முடிக்கிறோம். அதாவது யோக்கியமான பத்திரிகைகள் என்பது மவுனம் சாதித்துக் கொண்டிருந்தாலும் நமது சகோதரப் பத்திரிகையாகிய ‘ஊழியன்’ எழுதியி ருப்பது “அவரவர் கட்சிப் பத்திரிகைகள் அவரவர்கள் சார்பில் பேசுகின்றன” என்பதை பொது மக்கள் மனதில் வைத்து பத்திரிகையில் காணப்படுவதை நம்பி அவசரப்பட்டு அபிப்பிராயம் கொள்ளாமல் பொறுமையோடிருந்து உண்மையை அறியும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 23.08.1925**



# சுயராஜ்யக் கட்சிக்கு கருவேப்பிலை

வங்காள சுயராஜ்யக் கட்சியிலிருந்த முஸ்லீம்களெல்லாம் ஒருவர் பின் ஒருவராய் விலகிக்கொண்டே வருகிறார்கள். கடைசியாக வங்காள முஸ்லீம்களின் தலைவரும் வங்காள நகர சபையின் டிப்டி மேயருமான டாக்டர் அப்துல்லா சுக்ராவர்த்தி சுயராஜ்யக்கட்சியின் மெம்பர் ஸ்தானத்தை ராஜிநாமாக் கொடுத்து விட்டார். அவர் மேற்படி ராஜிநாமாவுக்குக் காரணம் கூறுகையில் சுயராஜ்யக்கட்சியின் தத்துவம் தமக்குப் பிடிக்கவில்லை யென்றும், அதனால்தான் தாம் ராஜிநாமாக் கொடுத்து விட்டதாகவும், தாம் இன்னமும் தேசத்திர்க்கு உழைக்கத் தயாராயிருப்பதாகவும், தாம் ராஜிநாமாக் கொடுத்ததின் காரணமாக தனக்கு ராஜிய உலகிலிருந்த செல்வாக்குகள் குறைந்தபோதிலும் ஒரு புதிய கொடுமைக்கு உட்பட்டு உயிரை வைத்துக் கொண்டிருப்பதைவிட அரசியல் தற்கொலை செய்துகொள்வது மேல் என எண்ணுகிறேன் என்று கூறியிருக்கிறார். வங்காளத்தில் இப்படியென்றால், பம்பாயிலும் சுயராஜ்யக் கட்சியாருக்கும், சிந்து முஸ்லீம்களுக்கும் ஒற்றுமை இல்லாமல் இருவருக்குள்ளும், ஒத்துழைக்க முடியாதெனக் கூறி அவர்களுடன் ஒத்துழையாமை ஆரம்பித்திருப்பதாய் தெரியவருகிறது. நமது மாகாணத்திலும் மதுரையில் சில சுயராஜ்யக் கட்சியார் சில முஸ்லீம்கள் விஷயமாய் நடந்துகொண்டது மதுரையில் சுயராஜ்யக் கட்சியின் பிரசாரம் என்ற தலைப்பின்கீழ் தினசரிப் பத்திரிகைகளில் பார்த்தால் தெரியவரும். அதுமாத்திரம் அல்லாமல் முஸ்லீம்களுக்குப் பெரிய உத்தியோகங்கள் வருகிறகாலத்தில் இவர்கள் எப்படி நடந்து கொள்ளுகிறார்களென்பதை முஸ்லீம் பெரிய உத்தியோகஸ்தர்களைக் கேட்டால் தெரியவரும். குழம்பு, காய் கரி முதலிய பதார்த்தங்களுக்கு வாசனை உண்டாக்கிக் கொள்ளவேண்டி தாளிதம் செய்யும்போது கருவேப்பிலையை உபயோகித்துக்கொண்டு, சாப்பிடுகிற போது அதை எடுத்து தூர எறிந்து விடுவதுபோல் சமயத்திற்குச் சேர்த்துக் கொண்டு சமயம் தப்பியவுடன் வெளியில் தள்ளிவிடுவதை நமது நாட்டு முஸ்லீம்கள் மாத்திரம் அல்லாமல் நமது நாட்டு இதர மக்களும் அறிய வேண்டுமாய் ஆவல் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 23.08.1925**



RangaRakes tamilnavarasam.com

# வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

## "பகற்கொள்ளைக்காரருக்கு இராத்திரிக் கொள்ளைக்காரர்களே சாட்சி"

இம்மாதம் இருபதாந்தேதி தமிழ் சுயராஜ்யா பத்திரிகையில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தை ஆட்சேபித்து எழுதுவதில் ஜனங்களை மகம்மதியர் என்றும், இந்தியக் கிறிஸ்தவரென்றும், ஐரோப்பியரென்றும், ஆங்கிலோ இந்தியரென்றும், ஒவ்வொரு வகுப்புக்காரர்களால் அவ்வவ் வகுப்பிலுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதால் தங்கள் வகுப்புக் காரியங் களைப் பார்க்கிறார்களே யல்லாமல் பொதுக்காரியம் பார்ப்பதில்லை என்றும் இதனால் வகுப்புத் துவேஷமும் வகுப்புப் பிரிவினையும் ஏற்படுகின்றன என்றும் எழுதியிருக்கிறது. இதற்கு ஆதரவு கொடுப்பதற்கு ஒரு சாஸ்திரி யாரின் உபதேசத்தைக் காட்டுகிறது. சுயராஜ்யா பத்திரிகையோ தேசீய பிராமணர் என்று சொல்லப்படும் "பகற்கொள்ளை"க்காரருடைய பத்திரிகை. திரு சாஸ்திரியார் அவர்களோ மிதவாதப் பிராமணர் என்று சொல்லப்படும் "இராத்திரிக் கொள்ளை"க் கட்சியைச் சேர்ந்த பிராமணர். இப்பகற் கொள்ளைக் கட்சிக்கு ராத்திரிக் கொள்ளைக் கட்சியார் சாட்சியைத்தான் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். போராக் குறைக்கு ஒரு பெரிய பிரட்டு என்னவென்றால் ஒரு பிராமணரல்லாத மந்திரியான ஸ்ரீமான் பாத்ரோ வும் இதை அங்கீகரித்திருக்கிறாராம். இந்த ஒரு விஷயம் பிராமணப் பத்திரிகைகளின் சூழ்ச்சி என்று குடிஅரசும் அதன் சக பத்திரிகைகளும் எழுதி வரும் ஒவ்வோரெழுத்துக்களையும் கல்லின்மேல் எழுதச் செய்கிறது. மந்திரி பாத்ரோ அவர்கள் சம நியாயம் கிடைப்பதற்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இன்றியமையாதது என்றும், இக் கொள்கை புதிதானதல்ல என்றும், எல்லா சமூகத்தார்களும் சமூக அரசியல் பொறுப்புகளை சமமாய் ஏற்றுக் கொள்ளும் காலம்வரை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருந்தே தீர வேண்டும் என்றும், ஆனால் இது நிரந்தரமாய் இருப்பது நன்மை அல்ல கெடுதி என்றும் பேசியிருக்கிறார். அப்படி இருக்க சுயராஜ்யாவின் கூற்றை எந்த வார்த்தை யால் மந்திரி அங்கீகரிக்கிறார் என்பதை பொது மக்கள் கவனிக்கவேண்டும்? சுயராஜ்யா பத்திரிகையின் மற்ற கூற்றுகளுக்கு மறுமுறை பதிலெழுதுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 23.08.1925**



# வக்கீல்கள் வாய்தா வாங்குவது

**வக்கீல்:-** வா கவுண்டா என்ன சங்கதி.

**கட்சிக்காரன்:-** எசமான்று கிட்டதான் ஒரு காரியமாய் வந்தேன்.

**வக்கீல்:-** என்ன காரியம்.

**கட்சிக்காரன்:-** நான் ஒருத்தருக்கு 1000 ரூபாயும் வட்டியும் கொடுக்க வேண்டும் வாங்கி 2 வருசமாச்சிங்கோ. வாய்தா சொல்லி கடந்தும் ஒரு வருச மாச்சிங்கோ. கடைசியா 2 மாச வாய்தா கேட்டேன் அதுக்குள்ளே பிராது போட்டுட்டானுங்கோ. எசமான்று எப்படியாவது ஒரு இரண்டு மாச வாய்தா வாங்கி கொடுத்தாக்க பணம் கட்டிப்போட்ரனுங்கோ.

**வக்கீல்:-** இரண்டு மாதம் தானா இரண்டு வருஷ வாய்தா வாங்கிக் கொடுக்கிறேன் கடைசியாய் அவன் உன்னிடம் பணம் வாங்குகிறதையே நான் பார்த்து விடுகிறேன்.

**கட்சிக்காரன்:-** சாமி சாமி அப்படிச் செய்யாதிங்கோ. அவன் மொதுலுக்கு நானா பிள்ளை. எம் மொதுலை எத்தனையோ பேர் திங்கி ராங்கோ. இரண்டு மாசம் இல்லாட்டா மூணு மாச வாய்தா கிடைத்தால் போரும்.

**வக்கீல்:-** சரி, பீசு என்ன கொடுக்கறே.

**கட்சிக்காரன்:-** எசமாங்க சொன்னாச் சரி.

**வக்கீல்:-** நூறு ரூபாய் கொடுக்கனும் வாய்தா வாங்குகிறது என்றால் விளையாட்டு காரியமல்ல.

**கட்சிக்காரன்:-** 50ரூ. தாரனுங்கோ.

**வக்கீல்:-** வாய்தா வாங்குவதில் உள்ள கஷ்டம் உனக்கு தெரியாது. நான் செய்யும் வேலையினால் முனிசீப்பே 1 வருஷம், 2 வருஷம் வாய்தா கொடுத்தாலும் கொடுப்பார் ஆனதால் பீசு 100-க்கு குறையாது.

**கட்சிக்காரன்:-** அத்தனை நாள் வாய்தா வாண்டாம். 2, 3 மாசம் கிடைச்சால் போதும்.

**வக்கீல்:-** நீ என்ன பயித்தியக்காரனாக இருக்கிறாய்? கடன் கொடுத்த வன் 2 *மீ* வாய்தா கேட்டதர்க்கு கொடுக்காமல் பிராது போடுவதென்றால்



RangaRakes tamilnavarasam.com

அவனுக்கு அத்தனை ஆணுவமா? அவனை விடக்கூடாது. பீசைப் பற்றி நீ கவலைப்படாதே நான் வாங்கும் வாய்தாவினால் உனக்கு மிச்சமாகும். வட்டியைக் கொடுத்தால் போதும்.

**கட்சிக்காரன்:-** அப்படியானால் எசமாங்கோ கேக்கிரபடி தாரேனுங்க. இந்தாங்கோ இப்ப 50ரூ. வாங்கிக்கோங்க.

**வக்கீல்:-** சரி, என்று குமாஸ்தாவை கூப்பிடுகிறார். ராமச்சந்திரா.

**குமாஸ்தா:-** சார்.

**வக்கீல்:-** இவனிடம் ஒரு வக்காலத்து வாங்கி ஒரு ஸ்டேட்மெண்டு நான் சொல்கிறபடி எழுதி கையெழுத்து வாங்கிகொள்.

**குமாஸ்தா:-** காகிதம் இங்கி பெட்டி பேனாவுடன் வந்து வக்கீல் பக்கம் நின்று கொண்டு வக்கீல் சொல்வதை எழுதுகிறார்.

**வக்கீல்:-** சொல்வதாவது - இந்த பிராது மோசடியும் சுத்தப் பொய்யுமானது. இந்தப் பிராம்சரி நோட்டு நான் எழுதிக் கொடுக்கவில்லை. இது போர்ஜரி - என்று சொல்லிக்கொண்டு வரும்போது,

**கட்சிக்காரன்:-** சாமி, சாமி அதெல்லாம் எளுதாதிங்கோ. இந்த பாவத்தை எங்கெ கொண்டுபோய் தொலப்பேன். 3 மாசமா நடந்து கை நீட்டி சொளையாட்ட பணம் வாங்கி ஊடு கட்டி கல்யாணம் பண்ணி இருக்கிறேன். இப்படி எளுதினா கண்ணும் வாயும் வெளங்க வாண்டாமா?

**வக்கீல்:-** கோபித்துக் கொண்டு, என்னடா மகா சத்திய கீர்த்திபோல் பேசறே. அப்படியானால் வாங்கின பணத்தை கொடுத்தவன் கேட்டதும் எரிஞ்சு போடரதானே. இத்தினை நாளாயி இன்னும் வாய்தா என்ன.

**கட்சிக்காரன்:-** சாமி சாமி கோவிச்சுக்காதிங்கோ, கைக்கு பணம் வர வாண்டாமா 2 *மீ* த்தில் வந்தரப் போகுது, கொண்டு போய் குடுத்து கெஞ்சிகிட்டு வந்தடப்போரே. அதுக்குள்ளே நான் எழுதிக் கொடுக்கால போரு சரி என்னு எழுதினா நல்லாவாயிருக்கும்.

**வக்கீல்:-**அப்படியானால் வாய்தா கிடைக்காது, உனக்காக வேணுமானால் எழுதி கொடுத்ததை ஒப்புக்கொண்டு வேறே மாதிரியாய் எழுதுகிறேன்.

**கட்சிக்காரன்:-** சரி அப்படி எழுதுக்கோ சாமி. நமக்கெனத்துக்கு ஊரா முதலு.

**வக்கீல்:-** ராமச்சந்திரா, அந்த 2வது பாராவை அடிச்சி இந்த மாதிரி எழுது - நான் வாதியிடம் ஒரு கூட்டு வியாபாரம் செய்ய ஜாமீனுக்காக இந்த பிராம்சரி எழுதிக் கொடுத்தேன்.

**கட்சிக்காரன்:-** சாமி சாமி அப்படிக்கூட இல்லெங்கே.



**வக்கீல்:-** கோபித்துக்கொண்டு ராமச்சந்திரா, இத்தனை நேரம் வேலையைக் கெடுத்ததற்கு 15 ரூ. பிடித்துக்கொண்டு அவன் பணத்தை தலையைச் சுற்றி எறிந்துவிடு. இதெல்லாம் கிளித்தெரி. இந்த சத்தியகீர்த்தி சாவகாசம் நமக்குவேண்டாம். இவன் சொல்கிறபடி எழுதினால் நாளைக்கு நம்மிடம் ஒரு கட்சிக்காரன்கூட வரமாட்டேன்.

**குமாஸ்தா:-** கடன் வாங்கினவனுக்கு ஜாடைகாட்டி பேசாமல் வாயை மூடிக்கொண்டிருக்கச் சொல்லுகிறார்.

**கட்சிக்காரன்:-** சாமி சாமி எசமாங்கோ இப்படி கோவிச்சிக்கலாமா. நாங்கல்லா காட்டாள்தானே? கோரட்டு சங்கதி எங்களுக்கெப்படி தெரியும். எசமாங்க தானே சொல்லிக்கொடுக்கணும். நீங்க என்னமோ எழுதிக் கொங்கோ. நம்மை ஏதாவது சத்தியம் கேட்டுடப்போறாங்கொ. அது மாத்திரம் பாத்துக் கொங்கோ.

**வக்கீல்:-** சரி, அதெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். ராமச்சந்திரா எழுது பிராம்சரியில் கண்டபடி பரிகாரம் பெரவில்லை. கூட்டு வியாபாரக் கணக்குகள் இருக்கிறது. இதை கமீஷன் வைத்து லாப நஷ்டம் பார்த்து முடிவு செய்யவேண்டும்.

**கட்சிக்காரன்:-** சாமி சாமி அப்படி எழுதினா நாளைக்குக் கணக்கு காட்ட வாண்டாமா?

**வக்கீல்:-** அதெல்லாம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நம்மிடம் எத்தனையோ கணக்குகள் இருக்கிறது. குமாஸ்தாவைப் பார்த்து O.S. 43-க்கு காட்டினமே அந்த கணக்கு புஸ்தகங்கள் எல்லாம் நம்மிடம் இருக்கிறதல்லவா.

**குமாஸ்தா:-** ஆம். அதுவும் இருக்கிறது, வேறு கேசுகளுக்கு வந்த கணக்குகளும் இருக்கிறது.

**கட்சிக்காரன்:-** சாமி சாமி இதெல்லாம் நமக்கு எப்படி ஒதவுமுங்கோ.

**வக்கீல்:-** அடப் பயித்தியக்கார ஏதோ இரண்டு மூட்டை கணக்குகளை கொண்டு போய் திடீரென்று முனிசீப்பு முன்னால் போட்டால் பயந்து கொள்ள வாண்டாமா? நம்ம முனிசீப்பு கணக்கு மூட்டையை கண்டதும் 6 *மீ* வாய்தா தானாகவே கொடுத்து விடுவார்.

**கட்சிக்காரன்:-** அய்யோ சாமி கணக்கை தொறந்து பாக்க மாட்டாங்களா? கம்மிசனர் நேமிக்க மாட்டாங்களா? அப்பரம் சிக்கிக்கிட்டாக்க.

**வக்கீல்:-** அது என் வேலையல்லவா. அப்படி பாக்கரதாயிருந்தால் மூட்டையை பிரிக்க 2 மணி நேரமாகும். அதுவும் மிஞ்சி அதைப் பிரித்தாலும் அந்தக் கணக்கை பார்த்து என்ன கணக்கு யாருடைய கணக்கு என்று கண்டு பிடிக்கவே முடியாது. இன்னும் எத்தனையோ வழி இருக்கிறது. கமிஷனர்



RangaRakes
tamilnavarasam.com

ஏற்பட்டாலும் அவரையும் சரிபண்ணிக்கொள்ளலாம். அதைப்பற்றி நீ கவலைப்படாதே. கமிஷனர் ஏதாவது தகரார் பண்ணினால் அவர் கேசுகளில் நான் கமிஷனரா வந்தா அவரை இழுத்து விட்டு விடுவேன். எதிர் வக்கீலுக்கும் இப்படியெல்லாம் செய்யாவிட்டால் கோர்ட்டுக்கு கேசே வராதென்று தெரியும். அவரும் இப்படி எத்தனையோ தடவை செய்திருப்பார். முனிசீப்பும் ரம்ப நல்லவர் அவரும் வக்கீலாயிருந்து வந்தவர் தானே. இத்தெல்லாம் வாய்தா வாங்க சகஜம்தான் என்று அவருக்கும் தெரியும். உனக்கு எப்படியானாலும் 2 வருஷத்திற்கு கம்மியில்லாத வாய்தா பாத்துக்கோ. அதற்குள் கடன் கொடுத்தவன் அசலில் 100, 200 தள்ளிக் கொண்டாவது கொடு என்று உன் காலை வந்து பிடிக்கிறான் பார்த்துக்கோ. ஒன்றுக்கும் பயப்படாதே.

**கட்சிக்காரன்:-** அய்யய்யோ, அதல்லாம் வாண்டாஞ் சாமி கொடுத்த வனுக்கு நல்ல பிள்ளையாய் போகனும். நீங்க என்னமோ எழுதிக்கோங்க எனக்கெல்லாம் இரண்டே மாசம் வாய்தா போதும்.

**வக்கீல்:-** சரி எழுதப்பா. பாக்கி O.S. 21-க்கு ஸ்டேட்மெண்டு எழுதி னோமே அதைப்பார்த்து எழுதி கையெழுத்து வாங்கிக்கொள். கோர்ட்டுக்கு வரும் போது பாக்கி பணத்தையும் கொண்டு வரச்சொல்லு.

**கட்சிக்காரன்:-** சாமி நாளைக்கு பாக்கி பணங் கொண்டாரனுங்கோ.

**குடி அரசு - உரையாடல் - 23.08.1925**



# சுயராஜ்யக் கட்சியும் ஸ்ரீமான் படேலின் உத்தியோகமும்

சுயராஜ்யக் கட்சியார் தங்கள் கட்சியை ஆரம்பிக்கும்போதே கயா காங்கிரஸ் தீர்மானத்தை மீறிக் கலகம் செய்து காங்கிரசுக்கு விரோதமாய் ஆரம்பித்தார்கள். அதுசமயம் காங்கிரஸில் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டு இருந்தவர்களின் கோழை மனத்தாலும் ஜாதியபிமானத்தாலும் சுயராஜ்யக் கட்சியாருக்கு சட்டசபைப் பிரவேசம் பிறகு அனுமதிக்கப்பட்டுப் போய்விட்டது. காங்கிரஸ் அனுமதித்தாலும் பொது ஜனங்களில் மிகுதி யானவர்கள் தங்கள் பேரால் சட்டசபைப் பிரவேசத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்யலானார்கள்.

ஆனாலும் அதுசமயம் சுயராஜ்யக் கட்சியார் சட்டசபையைப் பற்றி ஜனங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நம்பிப் பலர் அனுமதித்தார்கள். சுயராஜ்யக் கட்சியாருக்கே ஓட்டும் செய்தார்கள். இவ்வாக்குறுதிகள் நிறை வேற்றப்பட்டனவா? அல்லது பிரிட்டிஷாரின் வாக்குறுதிகள் போலாயினவா? அன்றி அதைவிடமோசமாயினவா? என்று பார்ப்போம்.

## வாக்குறுதிகளாவன :

1. தாங்கள் சட்டசபைக்குப் போவது சர்க்காரின் ராஜ்யபாரம் நடை பெறவிடாமல் செய்வதற்கென்றும்,
2. அதற்காக எவ்வித தீர்மானங்கள் வந்தாலும் முட்டுக்கட்டை போட்டு எதிர்ப்பது என்றும்,
3. தங்களுக்கு ( மெஜாரிட்டி ) பெரும்பான்மையோர் கிடைக்கா விட் டால் தாங்கள் சட்டசபை வேலைகளில் கலந்துகொள்வதில்லை என்றும்,
4. காங்கிரஸ் ஒத்துழைத்தாலும் தாங்கள் ஒத்துழைக்கப் போவதில்லை என்றும்,
5. தங்கள் போக்குவரவு செலவுபடியும் கூட பெறுவதில்லை என்றும்,
6. எவ்விதக் கமிட்டியிலும் அங்கத்தினராவதில்லை என்றும்,
7. எவ்வித உத்தியோகத்தையும் பெற்றுக் கொள்வதில்லை என்றும்



RangaRakes tamilnavarasam.com

இன்னும் பலவிதமாய் ஜனங்கள் ஏமாறத்தகுந்த மாதிரியெல்லாம் வாக்குறுதி கொடுத்து ஸ்தானங்களைப் பெற்றார்கள். பெற்ற பின்பு தங்கள் வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை.

ஒத்துழைப்புக் காலத்தில் சட்டசபையில் சிலர் வாயாடிகளாயிருந்து அடிக்கடி ஒவ்வொரு தீர்மானங்களிலும் நடவடிக்கைகளிலும் கலந்து கொண்டு தங்கள் பெயர்களை விளம்பரப்படுத்திக்கொண்டு எப்படி மறு தேர்தலுக்குத் தயாராகிக்கொண்டு வந்தார்களோ அதுபோல் இவர்கள் நடவடிக்கை வந்துவிட்டது. அதுமாத்திரமல்லாமல் சென்னையிலும், மத்திய மாகாணத்திலும் பிராமணரல்லாதாருக்கு விரோதமாயும்,பம்பாயில் பிராமண ரல்லாதாருக்கும், மகமதியருக்கும் விரோதமாயும் வேலை செய்வதை சுய ராஜ்யக் கட்சியார் தங்கள் கொள்கைகளாய் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதை பிராமணர் கட்சி என்று நாம் அடிக்கடி பேசியும் எழுதியும் வந்ததற்கொப்ப சென்னை சட்டசபை எலக்ஷன் தீர்ந்தவுடன் சுதேசமித்திரன் பத்திரிகை எழுதியது ஞாபகமிருக்கும். அதாவது: –

நமது வேலை பிராமணரல்லாதாரை எதிர்க்க வேண்டியதுதான் என்று எழுதியிருந்தது. இதை அப்போதே சில பத்திரிகைகள் கண்டித்திருக்கின்றன. இப்பொழுதும் அதன் பொதுத்தலைவர் பிராமணர், உப தலைவர் பிராமணர், காரியதரிசி பிராமணர் மற்ற மாகாணங்களிலும் பிராமணர்களும், அவர் கை ஆயுதமான சில, அதாவது தங்களையும் பிராமணர் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களும்தான் அதன் மாகாண நிர்வாகிகளாகவும் இருக்கிறார் கள். நிற்க, கொஞ்ச நாளைக்கு முன்பு ஸ்ரீமான் நேரு அவர்கள் தங்கள் வாக்குத்தத்தத்திற்கு விரோதமாய் இந்திய சட்டசபையினரால் நியமிக்கப்பட்ட ஒரு கமிட்டியில் ஸ்தானம் ஒப்புக்கொண்டார் என்பதைப்பற்றி எழுதியிருந் தோம். இப்போது ஸ்ரீமான் படேல் அவர்கள் இந்திய சட்டசபை அக்கிராசனா திபதி உத்தியோகத்தை ஒப்புக்கொண்டார்கள். முன் சொல்லப்பட்ட கமிட்டி மெம்பர் உத்தியோகத்திற்குத் தினச் சம்பளம். இரண்டாவதான அக்கிராச னாதிபதி உத்தியோகத்திற்கு மாதச் சம்பளம். அதுவும் மாதம் 4000, 5000 கிடைக்கக்கூடியது. வருஷம் ஒன்றுக்கு 50 அல்லது 60 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். மூன்று வருஷத்திற்கு 1,50,000 அல்லது 2,00,000 **ஓடு மீன் ஓடி உருமீன் வருமளவும் வாடி இருக்குமாங் கொக்கு** என்கிறபடி ஜனங்கள் இவர்கள் வாக்குத்தத்தத்தை மறக்கிறவரையிலும், தக்க உத்தியோகம் கிடைக் கிற வரையிலும் காத்திருந்து சமயம் பார்த்து உத்தியோகத்தைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். அதிலும் ஸ்ரீமான் படேலின் உத்தியோகம் எவ்வளவு மானக் கேடானது? தமது மனசாட்சியையே விட்டுவிட்டுப் போய்விட வேண்டியது. உத்தியோகம் பெற்றதும் சுயராஜ்யக் கட்சியை ராஜினாமாச் செய்யவேண்டியது. தாம் பம்பாய் கார்ப்பரேஷன் பிரசிடெண்டாய் இருந்த காலத்தில் பஹிஷ்காரம் செய்த ஒரு கனவான் வீட்டுக்கு நாள் ஒன்றுக்குப் பத்து தடவையானாலும் நடக்கத் தயார் என்கிறார் . அதாவது, கூப்பிட்ட



போதெல்லாம் ஓடுவது; ராஜப் பிரதிநிதியுடனும் மற்றும் ஐரோப்பியருடனும், உத்தியோகஸ்தருடனும் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறேன் என்கிறார்.

தமக்கு உத்தியோகம் சம்பாதித்துக் கொடுத்த சுயராஜ்யக் கட்சியார் தம்மை உடனே விடுதலை செய்துவிடவேண்டுமென்கிறார். அவர்களும் அவ்வாறே விடுதலை செய்தாகிவிட்டதென்கிறார்கள். இவ்வித நடவடிக்கை களை பத்திரிகைகள் சிலாகிக்கின்றன. மகாத்மாவும் ஸ்ரீமான் படேலுக்கு ஆசி கூறுகிறார்.

அப்படியானால் மிதவாதக் கட்சியாரும், ஜஸ்டிஸ் கட்சியாரும், சுயேட் சைக் கட்சியாரும் இதைவிடக் கேவலமாய் எவ்விதத்தில் நடந்து கொள்ளு கிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

அன்றி இவ்வித நடவடிக்கைகளை பொதுஜனங்கள் அறிந்து கொள்ளாதபடி, வெற்றி என்கிற தலைப்பின்கீழ் பத்திரிகைகள் பிரசுரித்து தந்திரங்கள் செய்துவருகிறபடியால் ஜனங்கள் ஏமாந்து போகிறார்கள். இவற் றைத் தாராளமாய் வெறுப்பவர் யாரையும் காணோம்.

“நிர்வாண தேசத்தில் கோமணம் கட்டியவன் பயித்தியக்காரன் என்பது போல்” காங்கிரஸில் யாம் ஒரே ஒரு பயித்தியகாரர்தான் உண்டு போல் தோன்றுகிறது.

**குடி அரசு – தலையங்கம் – 30.08.1925**



RangaRakes tamilnavarasam.com

# சென்னையில் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழா

**இவ்வருடம் சென்னை மாகாணத்தில் 84 ஸ்திரீகளுள்பட, 1744 பேருக்கு அடிமை முத்திரை வைக்கப்பட்டது.**

மணிகளாகவும், மாணிக்கங்களாகவும் உள்ள பல வாலிபர்களும், ஸ்திரீ ரத்னங்களும், அடிமை முத்திரையைப் பெற்றுக்கொண்டுவிட்டார்கள்.

அதாவது இவ்வருடம் சர்வகலா சாலைப் பட்டம் வழங்கிய விழாவில்;

| | | |
|---|---|---|
| எம்.எல். | பரீட்சையில் | 4 பேர்கள் |
| பி.எல். | ,, | 234 ,, |
| பி.எஸ்.எஸ்ஸி. | | 1 ,, |
| எம்.பி.பி.எஸ். | ,, | 22 ,, |
| எல்.எம்.எஸ் | ,, | 14 ,, |
| பி.இ. | ,, | 11 ,, |
| பி.எஸ்.ஸி. | ,, | 74 ,, |
| எல்.டி. | ,, | 50 ,, |
| எம்.ஏ. | ,, | 52 ,, |
| பி.ஏ. (ஆனர்ஸ்) | ,, | 89 ,, |
| பி.ஏ. | ,, | 750 ,, |
| கீழ் நாட்டுக்கலை | ,, | 17 ,, |
| பொருளாதார சாஸ்திரம் | ,, | 6 ,, |

மாதர்களில் 84 பேர்களும் பட்டம் பெற்றனர். ஒவ்வொரு வருடமும் இப்படியே இந்தியா முழுவதும் பதினாயிரம் இருபதினாயிரக்கணக்கான பேர்களுக்கு நமது அரசாங்கத்தார் அவர்களது கல்வியான, அடிமைத் தன்மையைப் போதித்து, அடிமை முத்திரையைத் தலையிலடித்து, அடிமைச் சின்னத்தையும் கையில் கொடுத்து, அடிமைக்குத் தக்கவன் என்ற நற்சாட்சிப் பத்திரமும் அளித்து வெளியிலனுப்பி விடுகிறார்கள். இவ் அடிமைகளால் உலகும், உலகிலுள்ள ஜீவன்களும், சத்தியம், தர்மம், நீதி, அன்பு, பரோபகாரம், தேசபக்தி இன்னோரன்ன பிறவும், கடவுள் ஒருவர் இருக்கிறாரா என்றும், சந்தேகப்படத் தக்க வண்ணம் நாசமடைந்து வருகிறது.

## பெண்களையும் பற்றிக்கொண்டது

இவ் அடிமை என்னும் ப்ளேக் வியாதி புருஷர்களைப் பீடித்து, மேல் சொன்னவைகளையெல்லாம் பாழ்படுத்துவதோடல்லாமல், இந்தியாவின் பெருமைக்கு நாயகமாய் இலங்கும் ஸ்திரீ ரத்னங்களையும் பற்றிப் பாழாக்க ஆரம்பித்து விட்டது. இதனால், மேல்சொன்ன தர்மங்கள் அழியக்கிடப்பது மல்லாமல், மேலும் அநேக தர்மங்கள் அழிவதற்கு அடிகோலியாகிவிடுமோ என்று ஐயுறும் நிலையில் இருக்கிறது. இதனால், ஸ்திரீகள் கல்வி கற்கக் கூடா தென்பது நமது அபிப்பிராயமல்ல. புருஷர்களே கற்கக்கூடாது என்றும், இக் கல்வியே இந்தியாவையும், இதன் அரசியல் சுதந்திரங்களையும் பாழாக்கி அடிமையில் ஆழ்த்தியிருக்கிற தென்றும், முன்னே குறிப்பிட்ட தர்மங்களைப் பாழாக்கிற்றென்றும் கருதி, காங்கிரஸ் பகிஷ்காரத் திட்டங்களிலே முதன்மை யானதாக வைத்து, ஆண் மக்களைப் பகிஷ்கரிக்குமாறு வேண்டிக்கொண்ட ஒரு கல்வியை பெண் மணிகளும் கற்க ஆரம்பித்து விட்டார்களென்றால், பிற்கால வாழ்வில் மனித தர்மத்திற்கும், தேசவிடுதலைக்கும் நம்பிக்கை எங்கிருக்கிறது? நமது ஸ்திரீகளையாவது இவ் அடிமைக் கல்வியிலும், அதர்மக் கல்வியிலும் புகவிடாமல் காப்பாற்ற முடியவில்லையானால், புருஷர்களை நாம் எப்படிக் காப்பாற்றப் போகிறோம்?

## பட்டதாரிகள் என்னசெய்யப் போகிறார்கள்?

### எம்.எல்.

நிற்க, இப்பட்டம் பெற்ற 1744 பேர்களும் என்ன செய்யப்போகிறார் களென்று கவனிப்போம். நால்வர் எம்.எல். பரீக்ஷையில் தேறியிருக்கிறார்கள். இவர்கள் அனேகமாய் நமது சர்க்காரில் உத்தியோகம் பெறுவார்கள். இவ் உத்தியோகம் பெறுவதினால் சர்க்காருக்கு நல்ல பிள்ளைகளாக நடந்து, வண்ணான் வாகனம் போல் வைத்த பாரத்தைச் சுமந்து பலவிதத்திலும் கிடைக்கும் வருமானத்தால் தமது பெண்டாட்டி பிள்ளைகளைக் காப்பாற்றிக் காலங் கழிப்பார்களேயொழிய வேறென்ன செய்வார்? இவர்களால் தேசத் திற்கு யாதொரு பயனும் விளையப் போவதில்லை என்பது மாத்திரம் திண்ணம்.





RangaRakes tamilnavarasam.com

## பி.எல்.

அடுத்தபடியாக பி.எல். வகுப்பில் 234 பேர்கள் தேறியிருக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் வக்கீல் தொழில் செய்யவே அமருபவர்கள். இவ் வக்கீல்களால் தேசம் எக்கதியை அடைந்திருக்கிறதென்பதை நாம் சொல்லா மலே விளங்கும். மதுபானக் கடைகளாலும், சூதாடுமிடங்களாலும், விபசாரக் கோஷ்டிகளாலும் செய்யமுடியாத அவ்வளவு அதிகமான கொடுமைகளை இவ்வக்கீல் தன்மை நமது தேசத்தில் விளைவித்து வருகிறது. தேசத்தின் சமாதானத்தையும், ஒற்றுமையையும் கோர முடியாததான இவ்வக்கீல் தொழிலை நம்மில் அனேக உத்தமமானவர்களுக்கு நமது சர்க்காரார் இதற்கென்றே பள்ளிக் கூடங்கள் வைத்து, கற்றுக்கொடுத்து, தேசத்தைக் கெடுக்கத் தகுதியுடையவர்கள் என்று நற்சாட்சிப் பத்திரமும் கொடுத்து வெளி யில் அனுப்பிவிடுகிறார்கள். இது சமயம் நமது தேசத்தில் இக்கோஷ்டியார் சுமார் இருபதினாயிரம் பேர்களுக்குக் குறைவுபடாமலும் முப்பதாயிரம் பேர்களுக்கு அதிகப்படாமலும் இருக்கலாம். இக்கோயமுத்தூர் ஜில்லாவில் மாத்திரம் 250 வக்கீல்கள் இருக்கிறார்களென்றால், நமது மாகாணத்தில், இது போல் இருபத்தி நான்கு ஜில்லாக்கள் இருக்கின்றன. சென்னையில் சுமார் 500 அல்லது 600 வக்கீல்கள் வரை இருக்கிறார்கள். ஆக இம்மாகாணத்தில் மட்டுமே, எவ்விதத்திலும் ஐயாயிரம் வக்கீல்களுக்கு குறைவுபடாது. இப்படியே பார்த்துக்கொண்டு போனால், இன்னும் எத்தனையோ மாகாணங் கள் நமது தேசத்தில் இருக்கின்றன. ஆக சற்று ஏறக்குறைய, சராசரி இருபத் தையாயிரம் வக்கீல்களுக்கு குறைவுபடமாட்டார்களென்றே நம்புகிறோம்.

## ஆறு கோடி ரூபாய்

இவர்களின் சராசரி வரும்படி, பத்தாயிரம் பதினாயிரம் என்று சம்பா திப்பவர்களும் நூறு, இருநூறு என்று சம்பாதிப்பவர்களும் உள்பட நபர் ஒன்றுக்கு, மாதம் ஒன்றுக்கு இருநூறு ரூபாய் வரும்படி என்று வைத்துக் கொண்டாலும், இவ் இருபத்தையாயிரம் வக்கீல்களுக்கும் மாசமொன்றுக்கு ஐம்பது லட்சம் ரூபாய்கள் வீதம் வருடமொன்றுக்கு ஆறு கோடி ரூபாய்கள் பொதுமக்களுடைய பணம் செலவாகிறது. இப்படியிருக்க வருடமொன்றுக்கு 250 பேர்களும், இஃதல்லாமல் முதல் வகுப்பு வக்கீல்கள் என்பவர்கள் ஐம்பது, அறுபது பேர்களும், ஆக முன்னூறு வக்கீல்கள் இம்மாகாணத்திற்கு மட்டும் புதிதாக ஏற்பட்டால், மற்றும் பிற மாகாணங்களிலும் இதே போல் கணக்கிட்டுப் பார்த்தால் வருடமொன்றிற்கு இரண்டாயிரம் பேர்களுக்குக் குறையாமல் புது வக்கீல்கள் உற்பத்தியாகிக் கொண்டே இருக்கிறார்கள். இக்கணக்கு இவ் வண்ணமே வருடா வருடம் பெருகிக்கொண்டே போகுமானால் இதற்கு முடிவு எப்பொழுது? இதன் பலனாய் தேசத்தின் பிற்கால கதியென்னவாகும்?



## வயிறு வளர்க்கும் விதம்

இத்தனை பேரும் இச்சர்க்காரைத் தாங்கிக் கொண்டு, இதன் அதிகாரி களை பிரபுவே! பூஜிக்கத் தகுந்தவர்களே!! துரைகளே!!! கனவான்களே!!!! என்று ஒருபக்கம் ஸ்துதி பண்ணிக்கொண்டும், மற்றொரு பக்கம் பாமர ஜனங்களைக் கூட்டிவைத்து மேடையின் மேலேறி இச்சர்க்காருக்குச் சரியான புத்தி கற்பிக்கவேண்டும், லாயிட் சார்ஜ் துரைக்கு சரியான பதில்சொல்ல வேண்டும், லார்ட் பர்கென் ஹெட் பிரபுவிற்கு பதில் சொல்லவேண்டும், ஜஸ்டிஸ்கட்சியை நம்பாதீர்கள், அன்னார் சர்க்காரைத் தாங்குபவர்கள், மிதவாதக்கட்சியினர் தேசத்தைக் காட்டிக்கொடுத்து பட்டம் பதவிகளைப் பெறுபவர்கள். சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் உண்மையற்றவர்கள், யோக்கியரல்லாதவர்கள் என்று ஒருவரை யொருவர் தூற்றிக்கொண்டு வயிறு வளர்ப்பதற்கும், பெருமை பெறுவதற்கும் அலைவதுதானே இவர்கள் கதி.

## எல். எம். அண்ட் எஸ்.

இவர்கள் கதி இதற்கடுத்தால் போல், எம்.பி.பி.எஸ். எல்.எம்.எஸ் என்ற பரீக்ஷையில் தேறினவர்கள்.

இவர்களால் தேசத்திற்கு உண்டாகும் நன்மையென்ன? இவ் வயித்தி யர்கள் எனச் சொல்லப்படும் டாக்டர்களின் கதியென்ன? இவர்களேற் படாத காலத்தில் ஓர் அரை அணா மருந்தில் தீர்ந்துபோகக்கூடிய ஒரு வியாதி இவர் களேற்பட்டபின் ஒருவனுக்கு வந்தால், இவரைக்கூட்டிக் கொண்டுபோய்க் காட்டுவதற்கு மூன்று ரூபாய். இவர் சொல்லுகிறபடி மருந்து வாங்குவதற்கு ஒன்று, பத்து என்று சொல்லக்கூடிய ரூபாய்கள் செலவு செய்து மருந்து வாங்குவதில், செலவழிக்கச் செய்யும் பணம் எவ்வளவு? இப்படியாக இவர்கள் அன்னியநாட்டு மருந்துகளை விற்கும் தரகர்களாகி நமது நாட்டுப் பெண்களுக்குக்கூட தெரிந்திருந்த சாதாரண வைத்தியக் கைமுறைகளையும், நாட்டு வைத்தியங்களையும், அழித்து ஏழைகளுக்கு வியாதிவந்தால், பார்த்துக் கொள்ளமுடியாத நிலையில் ஆக்கி தாங்கள் மட்டும் பிழைப்பதற்கு உபயோகப்படுவார்களேயல்லாமல் தேசத்தின் வேறு எவ்வித நன்மைக்கு உபயோகப் படப்போகிறது?

## பி. ஏ., எம். ஏ.

பிறகு, தொளாயிரம் நபர்கள் வரையும் பி. ஏ., எம். ஏ. முதலிய பரீக்ஷை களில் தேறி பட்டம் பெற்றதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இவர்களின் கதி யென்ன என்று பார்ப்போமேயானால், பட்ட விழாவில் அடிமை முத்திரை பெற்றதும், முதல்முதலாக பத்திரிகைகளில் எங்காவது விளம்பரங்கள் இருக்கின்றனவா என்று தேடுவதும், வக்கீல் உத்தியோகத்திற்கு போகலாமா, வியாபாரம் செய்யலாமா அல்லது ராஜீய விஷயத்தில் புகுந்து ஏதாவது ஜீவனத்திற்கு வழிதேடலாமா எனவும் மற்றும் பலவிதமாக யோசித்து



RangaRakes tamilnavarasam.com

ஒருபங்கு வக்கீலுக்கும், ஒருபங்கு சர்க்கார் உத்தியோகத்திற்கும், ஒருபங்கு தருதலையாகவும் பிரிந்து வீடுவீடாக ஆபீஸ் ஆபீஸாக அலையவும், நினைத்தபடி யெல்லாம் விண்ணப்பங்கள் போட்டுக்கொண்டு அலையவும், இன்னும் மேலே சொன்ன விபரங்களுக்கல்லாமல் வேறு எதற்கு உபயோகப் படப் போகிறார்கள்? இதைத்தான் நமதுநாட்டில் கல்வியென்றும், இக்கல்வி கற்றோர்கள்தான் கற்றவர்களென்றும், மேதாவிகளென்றும் சொல்லிக் கொண்டும் நமது ஜனங்கள் இக்கல்வியையே பயிலல் வேண்டுமென மோகங் கொண்டு தங்கள் தங்கள் பிள்ளைகளை அனுப்புகிறார்கள். இவற்றை நன் கறிந்துதான் மகாத்மா காந்தியவர்கள் இக்கல்விதான் தேசத்தை இந்நிலைக்குக் கொண்டுவந்துவிட்ட தென்றும், இதை பகிஷ்கரித்தாலல்லது நமது தேசத்திற்கு விடுதலையும் சுயராஜ்யமும் இல்லையென்றுசொல்லி, இதை ஒத்துழை யாமைத் திட்டத்தில் ஓர் முக்கிய பாகமாக வைத்தார்கள். இதை நிறைவேற்ற இப்படிப்புப் படித்தவர்களையே ஆயுதமாக உபயோகித்ததால் ஆரம்பித்த ஒத்துழையாமை தர்மமும் அழிக்கப் பட்டு, தேச முன்னேற்றமும் பாழடைந்து, மகாத்மா காந்திக்கும் இனி நமக்கு சுயராஜ்யம் கிடைக்கவா போகிறதென சந்தேகித்து நடக்கிறபடி நடக்கட்டும் என்று விட்டுவிட்டு, புதுத்திட்டத்திற்கு யோஜனை பண்ணிக்கொண்டிருக்கிறார். நமது தேசம் சுயராஜ்யமடைய வேண்டுமானால், விடுதலைபெற வேண்டுமானால் இக்கற்ற வகுப்பார் தேசத் தொண்டிலிருந்து தொலைந்து, இக்கல்வி முறைகளும் ஒழிந்துபோக வேண்டும். மற்றவைகளைப் பற்றி சமயம் நேரும் பொழுது எழுதுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 30.08.1925**



# வேம்பு இனிக்குமா?

தஞ்சை பிராமணரல்லாதார் மகாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீமான் தணிகாசலஞ் செட்டியாரவர்கள் தமது அக்கிராசனப் பிரசங்கத்தில் தாம் சென்னை நகரசபையில் தேர்ந்தெடுக்கப்படாமல் போனதற்கு காரணம் கூறு கையில், தம்முடைய வண்டியில் 649 ஓட்டர்கள் போனதாகவும், 358 ஓட்டுகள் தான் தமக்குக் கிடைத்ததாகவும், அவர்களில் 108 பேர்கள்தான் பிராமணர் களென்றும், பெரும்பாலோர்கள் தமக்கு ஓட்டுக் கொடுக்கவில்லை என்றும் சொல்லி இருக்கிறார். ஜஸ்டிஸ் கட்சியின் பெயரை வைத்துக்கொண்டு தேர்தலில் நிற்கும் ஓர் பார்ப்பனரல்லாதார் எப்படி பிராமணர்களுடைய ஓட்டுகளை எதிர்பார்க்கலாம்? ஆகையால், பிராமணர்களுடைய ஓட்டுகளை எதிர்பார்த்தது முட்டாள் தனமா? இவருக்கு ஓட் செய்வதாய் சொல்லி இவர் வண்டியிலேயே வந்து மற்றொருவருக்கு ஓட்டு செய்திருந்தால் அது அயோக்கியத்தனமா? என்பதை வாசகர்களே கவனிக்கவேண்டும்.

**குடி அரசு - குறிப்புரை - 30.08.1925**



RangaRakes tamilnavarasam.com

# மதுரையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் கூற்று

ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரவர்களை மதுரை பொதுமக்கள் பகிரங்கமாகத் திறந்தவெளியில் பேசுவதற்கில்லாமல் செய்துவிட்டதின் பலனாய், ஒரு கட்டடத்திற்குள் பேச நேரிட்டு அதை ஸ்ரீமான் அய்யங்கார் பொதுமக்கள் நிறைந்த கூட்டமல்லவென்றும், ஆதலின் அங்கு என்ன வேண்டுமானாலும் பேசலாமென்று நினைத்துப் பேசி இருப்பதாகத் தெரிகிறது. அவ்விஷயத்தைப் பொது ஜனங்கள் சரியாய் அறிந்துகொள்ளக்கூடாதவாறும், தந்திரமாய் ஜனங்களை ஏமாற்றத்தக்க மாதிரியாயும், தேசீயப் பத்திரிகையென்ற போர்வையைப் போர்த்துக்கொண்டிருக்கும் சுதேசமித்திரன் என்னும் பிராமணப் பத்திரிகை கீழ்க்கண்டவாறு பிரசுரித்திருக்கிறது. ஸ்ரீமான் அய்யங்கார் பிரசங்கத்தின் சாராம்சமாவது:- "பெஜவாடாவில் கூடிய சென்ற காங்கிரஸில் எல்லா ஸ்தாபனங்களையும் காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சியினர்...... மகாத்மா காந்தியும் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகவே, எதிரிகளின் பொய்யான வார்த்தைகளைக் கேட்டு மோசம் போகாதீர்கள். அவர்கள் நமக்குள் கட்சிகளை உண்டாக்கப் பலவிதங்களிலும் வழி தேடுவார்கள். அதற்கு நீங்கள் கவலைப்படவாவது கவனஞ்செலுத்தவாவது கூடாது" என்று பேசியிருக்கிறார். இவற்றில், முதல் வாக்கியத்தில் நிருபர் ஏதாவது இரண்டொரு வார்த்தைகளை விட்டு விட்டாரோ, அல்லது அங்குள்ள மீதி வாக்கியங்களை பிரசுரித்தால், பின்னர் ருசு செய்யவேண்டிய பொறுப்பு ஸ்ரீமான் அய்யங்காருக்கு ஏற்பட்டுவிடுமே யென்று நினைத்து, அவரைத் தப்புவிக்க மற்ற வார்த்தைகள் விட்டுவிடப் பட்டனவோ, அல்லது ஸ்ரீமான் அய்யங்காரவர்களே அந்த இடத்தில் "பெஜவாடாவில் கூடிய சென்ற காங்கிரஸில் எல்லா ஸ்தாபனங்களையும் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியினர்" என்று பேசி, பிறகு பொருளில்லாது எதையாவது மெதுவாய்ச் சொல்லி, "மகாத்மா காந்தியும் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்" என்று பலமாய் சொல்லி இருக்கவேண்டும். எப்படி இருந்தாலும், நாம் ஏதோ அங்கு சில வார்த்தைகள் விட்டுப்போனதாகவே நினைத்துக் கொண்டு அங்கு என்ன வார்த்தைகள் இருந்திருக்கலாம் என்று யூகித்துப்பார்த்தால் "காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சியினர் கைப்பற்றவேண்டும் என்று ஓர் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. இதை மகாத்மா காந்தியும் ஒப்புக்கொண்டிருக்கிறார்" என்றுதான் பேசியிருக்கவேண்டும். அப்படியில்லாமல், வேறு என்ன வார்த்தைகள்



அங்கிருந்த போதிலும், "எதிரிகளின் பொய்யான வார்த்தைகளைக் கேட்டு மோசம் போகாதீர்கள்" எனச் சொல்லியிருக்கவேண்டுவதில்லை. அப்படியானால் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காராவது அல்லது அவரது நண்பர்களாவது பெஜவாடா காங்கிரஸில் எந்தத் தீர்மானத்தில் 'காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியினர் எல்லா ஸ்தாபனங்களையும் கைப்பற்றவேண்டும்' என்ற தீர்மானமாயிற்று என்கிற விபரத்தை தெரிவிக்க விரும்புகிறோம். நம்மைப் பொறுத்த அளவில் நாம் காங்கிரசுக்குச் சென்றிருந்தோம். இதைப்பற்றிய எவ்வித தீர்மானமும் காங்கிரஸில் நிறைவேறவில்லை என்பதைத் தெளிவாய்ச் சொல்லுகிறோம். அப்படியிருக்க பொறுப்புள்ள தலைவர்கள் என்று சொல்லப்படுபவர் இம்மாதிரி நடந்துகொள்வார் களேயானால், பொதுஜனங்கள் எப்படி மோசம் போகாமல் இருக்கமுடியும்? ஆகவே நாமும் ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் சொல்லிய கடைசி வாக்கியங்களின்படியே தலைவர்களென்று வரும் பிராமண எதிரிகளுடைய பொய்யான வார்த்தைகளைக்கேட்டு மோசம் போய்விடாதீர்கள். அவர்கள் நமக்குள் கட்சிகளைக் கிளப்ப பலவிதத்திலும் வழிதேடுவார்களென்றும், அதற்கு நீங்கள் கவலைப்படவாவது கவனஞ் செலுத்தவாவது கூடாது என்றும் பிராமணரல்லாதார்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 30.08.1925**



RangaRakes tamilnavarasam.com

# ஜஸ்டிஸ்கட்சி மகாநாடு

தஞ்சையில் நடைபெற்ற ஜஸ்டிஸ்கட்சி மகாநாட்டின் நடவடிக்கைகளையும் அக்கிராசனம் வகித்த ஸ்ரீமான் தணிகாசலம் செட்டியாரின் புலம்பலையும் பத்திரிகைகள் வாயிலாக நேயர்கள் வாசித்திருக்கலாம். இவரது பிரசங்கத்தினின்று ஜஸ்டிஸ்கட்சியின் நிலை எல்லோருக்கும் நன்கு விளங்கிவிட்டது. பிராமணரல்லாதார்களில் அநேகர் இக்கட்சியில் சேராமலிருந்ததற்குக் காரணம் கூலிக்கு ராஜபக்தியும் உத்தியோகவேட்டையும் மிகுந்திருப்பதேயன்றி வேறல்ல. இக்குணங்கள் இக்கட்சியினின்றும் ஒழிந்து இக்கட்சிக்கு இவ்வரசாங்கத்தினிடம் இருக்கும் கூலிபக்தியும் ஒழியுமானால் பிராமணரல்லாதார் எல்லோரும் இதில் சேருவார்கள். இல்லாவிடின் செட்டியாரைப்போன்ற இக்கட்சியார் எல்லோரும் மந்திரிகளுள்பட ஒவ்வொருவராய் ஒப்பாரியிட வேண்டியதாகத்தான் முடியும். சுயராஜ்யக்கட்சியாரும் இவர்கள்போலவே உத்தியோக வேட்டையிலும் பதவிவேட்டையிலும் நுழைந்துள்ளார்கள். இவர்களது ஆர்ப்பாட்டங்களைக்கண்டு தேசமக்கள் முதலில் ஏமார்ந்து போனாலும் இவர்களது யோக்கியதையையும் விரைவில் அறிந்துவிடுவார்கள்.

பாமரஜனங்களை ஏமாற்றுவதால் எந்தக் கட்சி முன்னுக்கு வருவதாயிருந்தாலும் அது வெகு நாளைக்கு நீடித்திருக்காது என்பதை ஜஸ்டிஸ் கட்சியாரும் சுயராஜ்யக்கட்சியாரும் அறியவேண்டுமென விரும்புகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 30.08.1925**



# தஞ்சையில் பிராமணரல்லாதார் மகாநாட்டுக்குப் போட்டியான தேசீய பிராமணரல்லாதார் மகாநாடு

ஜஸ்டிஸ் கட்சியாரால் ஏமாறப்பட்ட தேசீய பிராமணரல்லாதார்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்தார்கள். தேசீயவேலை தீவிரமாய் நடந்துகொண்டிருந்த காலத்தில் இவர்கள் எங்கு போயிருந்தார்கள்?

தேசீய பிராமணரல்லாதாரென்பதற்கு என்ன யோக்கியதை வைத்திருக்கிறார்கள்?

சுயராஜ்யக்கட்சியைப் போல் கைச்சாத்து மட்டும் போட்டால் போதுமா? அல்லது காரியத்தில் ஏதாவது பரீக்ஷை உண்டா?

அப்படியானால் இக்கூட்டத்தைத் தவிர வேறு யாரும் அக்காரியப் பரீக்ஷையில் தேறினவர்கள் இல்லையா?

தேசீயம் என்கிற வார்த்தைக்கு என்னதான் அர்த்தம்?

உத்தியோகத்திற்கு ஆசைப்படுவதாக இருந்தாலே போதுமா?

பிறரை ஏமாற்றுவதாக இருந்தால் போதுமா?

மற்றொருவரைத் திட்டுவதாக இருந்தால் போதுமா?

அல்லது ஏழைகளின் நன்மைக்கு ஏதாவது செய்யவேண்டுமா?

இன்னும் எப்படி இருந்தாலும் சரி. ஒரு விசேஷம் என்னவென்றால் மகாத்மா பெயரையும் காங்கிரஸ் பெயரையும் சொல்லிக்கொண்டு சுயநலத்திற்காகத் திரியும் தமிழ்நாட்டு சுயராஜ்யக் கட்சியைவிட எத்தனையோ மடங்கு இது மேலானதுதான், மற்றொரு விசேஷம் என்னவெனின் சில தேசீய பிராமணரல்லாதாரைப்போல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்றாலே உடம்பு சிலிர்க்கவும் மனச்சான்றுக்காக வருந்துவதும் போலல்லாமல் சுயராஜ்யத்தைச் சீக்கிரத்தில் அடைவதற்கு சகல வகுப்பாரும் உத்தியோகம் முதலியவைகளை அவரவர் வகுப்புகளுக்கு ஏற்றவாறு சமமாகப் பிரித்துக் கொடுக்கவேண்டு மென்றும் ஒற்றுமையடைய வகுப்பு வித்தியாசமில்லாமல் எல்லோருக்குள்ளும் சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும் ஓர்



RangaRakes

tamilnavarasam.com

தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். இம்மகாநாட்டைக் கூட்டினவர் யாராக இருந்தாலும், அவருடைய உத்தேசம் ஏதாயிருந்தாலும் தற்காலம் தேசத்திற்கு வேண்டியதும் இன்றியமையாததுமான ஓர் தீர்மானத்தை தேசீய பிராமணரல்லாதார் பெயரால் நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தமட்டில் நாம் உண்மையாக மகிழ்ச்சி அடைகிறோம்.

குடி அரசு - கட்டுரை - 30.08.1925



# எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டி 28.12.24 தேதியின் ஆறாவது தீர்மானத்தின் உண்மை

இதற்கு முன் நான் பேசியும் எழுதியும் வந்ததில் முனிசிபாலிட்டி தாலூகா போர்டு டிஸ்டிரிக்ட் போர்டு முதலிய ஸ்தாபனங்களை காங்கிரஸின் பெயரால் கைப்பற்ற எல்லா இந்திய காங்கிரசோ மாகாண கான்பரன்சோ ஜில்லா கான்பரன்சோ உத்திரவு கொடுக்கவில்லை என்று வெகு காலமாய் நான் சொல்லி வந்திருப்பதோடு அவ்விதமான ஒரு உத்தரவோ சிபார்சோ காங்கிரஸ் ஸ்தாபனங்கள் செய்யக்கூடாதென்றும் நானும் எனது நண்பர்கள் சிலரும் வாதாடி வந்திருக்கிறோம். அவ்வித ஒரு தீர்மானம் காங்கிரஸில் இல்லாமல் செய்துமிருக்கிறோம். அப்படி இருக்க கோயமுத்தூர் நகர காங்கிரஸ் கமிட்டியின் பேரால் 22. 8. 25 ல் வெளியிடப்பட்டிருக்கும் ஒரு துண்டு பிரசுரத்தில் எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியின் ஒரு தீர்மானத்தை தமிழில் தப்பாய் வெளியிட்டு ஜனங்களை ஏமாறும்படி செய்திருப்பதைக் கண்டு நான் வருத்தப்படாமலிருக்க முடியவில்லை. அத்தோடு பொது ஜனங்களும் இந்தத் தப்பு பிரசாரத்தைக் கண்டு ஏமாறாமல் இருக்கும்படி ஒரு தெளிவு பிரசுரம் செய்யாமல் இருக்கவும் முடியவில்லை. அதாவது ஷை நோட்டீசில்.

“எங்கெங்கே காங்கிரஸின் திட்டங்களை நிறைவேற்றி வைக்கக் கூடுமோ, அவ்விடங்களிலெல்லாம் காங்கிரஸ்காரர்கள் ஸ்தல ஸ்தாபனங் களுக்கு (முனிசிபாலிடி ஜில்லா, தாலூக்கா போர்டுகளுக்கு) அபேக்ஷகர்களாக நிற்பது விரும்பத்தக்கது என இந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மா னிக்கிறது” என்று தமிழில் எழுதியிருக்கிறது.

ஆனால் இங்கிலீஷில்

“Resolved that in the opinion of the Committee it is desirable for Congress-men to offer themselves for elections to local bodies whereever it is likely to further the programme of the Congress.”

Congress men to offer themselves for election

என்றிருப்பதை தப்பு மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார்கள். **Offer themselves** என்கிற பதத்தின் அர்த்தத்தையே தமிழ் மொழிபெயர்ப்பில் மறைத்து விட்டார்கள். அதனுடைய அர்த்தம் **தாங்களாகவே** நிற்க வேண்டும். அதாவது காங்கிரசின் பேரைச் சொல்லிக்கொண்டு நிற்கக் கூடாது



RangaRakes tamilnavarasam.com

என்பதுதான். **ஆதலால் காங்கிரஸின் பேரால் அபேக்ஷகர்கள் நிற்பதும் காங்கிரஸ் சபையார் இவர்களுக்காக பிரசாரம் செய்வதும் தீர்மானத்தின் படியே பெரியதப்பு.**

இத்தீர்மானம் பெல்காம் எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானமாகும்போது நானும் இருந்தேன். இதற்கு ஆதி தீர்மானம் கொண்டு வந்தவர்கள்; காங்கிரஸ்காரர்கள் முனிசிபாலிட்டி முதலியவைகளைக் கைபற்ற வேண்டுமென்று காங்கிரஸ் கட்டளை இடுவதாய் கொண்டு வந்ததை நானும் மற்றும் சிலரும் காங்கிரஸ்காரருக்கு பரிக்ஷையேயில்லாமல் போய்விட்டதால் இத்தீர்மானம் நிறைவேறினால் விரும்பத்தகாதவர்களும் யோக்கியதை அற்றவர்களும் வந்து புகுந்து காங்கிரஸ் பெயரைக் கெடுத்து விடுவார்கள் என்றும் யோக்கியர்கள் தள்ளப்பட்டு போவார்கள் என்றும் இதனால் அந்தந்த ஊர்களில் கக்ஷி ஏற்பட்டுவிடுமென்றும் ஆக்ஷேபித்ததின் பேரில் அதை மாற்றி இங்கிலீஷில் எழுதியிருப்பது போல் நிறைவேறிற்று. அதன் அர்த்தம் உள்ளூர் ஸ்தாபனங்களில் எங்கெங்கே காங்கிரஸ் திட்டங்களை முன்னேறச் செய்யக் கூடுமோ அங்கெல்லாம் காங்கிரஸ் மெம்பர்கள் தாங்களாக (அதாவது காங்கிரஸ் பெயர் சொல்லிக்கொள்ளாமல்) அபேக்ஷகர்களாக நிற்பது விரும்பத்தக்கது என்று இருக்கிறது. இதில் தாங்களாக என்கிற பதத்தை விட்டுவிட்டு மொழி பெயர்த்து உங்களுக்குக் காட்டப்பட்டிருக்கிறது. தாங்களாக என்றால் காங்கிரஸ் பெயரை உபயோகித்துக்கொள்ளாமலும், காங்கிரஸ் பிரசாரத்தை உபயோகித்துக் கொள்ளாமலும் என்றுதான் அர்த்தம் என்று விளங்கவில்லையா? அப்படியிருக்க கோவை நகர் காங்கிரஸ்காரரின் இப்பேர்ப்பட்ட நடவடிக்கை கோவை மகாஜனங்களாகிய நீங்கள் ஏமாற்றப் படுவதோடு அல்லாமல் என்னுடைய எழுத்துக்களையும் வார்த்தைகளையும் உண்மையற்றதாகவும் உபயோகப்படக் கூடியதாயிருப்பதால் இதை வெளிப் படுத்தாமல் இருக்கமுடியவில்லை. ஆகையால் ஓட்டர்களாகிய நீங்கள் யாருக்கு வேண்டுமானாலும் ஓட்டு செய்யுங்கள். எனக்கு வேண்டாதவர்களோ முனிசிபாலிட்டிக்கு உதவாதவர்களோ இப்பொழுது எலக்ஷனுக்கு நிற்கும் சுமார் 20 கனவான்களில் ஒருவரும் இருக்கமாட்டார்கள் என்பதுதான் எனது நம்பிக்கை. காங்கிரஸ்காரர் அல்ல என்பதர்காக மாத்திரம் யாருக்கும் ஓட்டு செய்யாமல் இருந்து விடாதீர்கள். காங்கிரஸ்காரர் என்பதர்க்கு மாத்திரம் மற்ற விஷயங்களை கவனியாமல் நீங்கள் ஓட்டு செய்துவிடாதீர்கள். இந்த வேண்டுகோளை நீங்கள் ஆதரித்தால் மாத்திரம் தான் நீங்கள் உங்கள் ஓட்டை யோக்கியமான வழியில் உபயோகிக்கிறவர்களாவீர்கள்.

**ஈ.வெ.ராமசாமி**

**குடி அரசு - அறிக்கை - 30.08.1925**



# சுயராஜ்யக்கட்சியின் முக்கிய வேலை

சுயராஜ்யக் கட்சியென்று சொல்லப்படும் ராஜுயகட்சி அங்கத்தினர்களுக்கு வேலையென்னவென்றால் தாங்கள் யோக்கியர்களென்பதிலும் தங்கள் கட்சிக்கு பலம் குறையவில்லையென்பதிலும், தங்களுக்கு செல்வாக்கு இருக்கிற தென்பதிலும் சந்தேகமேற்பட்ட காலங்களிலெல்லாம் மகாத்மா விடம்போய் நற்சாட்சிப் பத்திரம் வாங்குவதான வேலையையே அவர்களது தலையில் கடவுள் விதித்து விட்டார் போலும்! இப்படியே இருந்தால் இக்கட்சியின் "செல்வாக்கும் , பலமும், பெருந்தன்மையும்" மக்களுக்கு உபயோகப்படுவது தான் எப்பொழுது என்று தெரியவில்லை.

**குடி அரசு - குறிப்புரை - 30.08.1925**



RangaRakes tamilnavarasam.com

# ஸ்ரீமான் ஆதிநாராயணன் செட்டியாரின் கூற்று

மாயவரம் தாலூகா ராஜீய மகாநாட்டில் அக்கிராசனம் வகிக்க நேர்ந்து ஸ்ரீமான் ஆதிநாராயணஞ் செட்டியார் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிலைமையயைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லி இருக்கிறார். அதாவது:- "மாகாண காங்கிரஸ் கமிட்டியுடன் நில்லாமல் ஜில்லா, தாலூகா கமிட்டிகளும் மிக்க துரதிர்ஷ்டமான நிலையில் இருக்கின்றன. இப்பொழுதுள்ள தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகத்தைக் கவனித்தால் இதைவிடக் கேவலமாக இனி நடத்த முடியாது. முக்கிய நிர்வாக உத்தியோகஸ்தர்கள் ஜாதிக் கொள்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒருவர் (ஸ்ரீமான். பி. வரதராஜலு நாயுடுவை மனதில் வைத்துக்கொண்டு) பகிரங்கமாகவே மிகவும் பிற்போக்கான (ஜஸ்டிஸ் கட்சியில்) கோஷ்டியில் தாம் சேரத் தயாராக இருப்பதாகக் கூறுகிறார். ஆனால், பிராமணர்களை எதிர்த்துப் போராடுவதற்காகவே சேர்வதாக பத்திரமாகக் கூறுகிறார். ஏனெனில் பிராமணர்களை எதிர்த்துப் போராடுவது காங்கிரஸ் கொள்கைகளில் ஒரு பாகம் போலும்! மற்றொருவர் (ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கரை மனதில் வைத்துக்கொண்டு) ஸ்தலஸ்தாபனங்களின் தேர்தல்களில் சுயராஜ்யக் கட்சியாரை தேர்ந்தெடுக்கக்கூடாதென்று விளம்பரப்படுத்துகிறார். வகுப்பு வாரி ஓட்டர்கள் பகுதி ஏற்படுத்த வேண்டுமென்றும் சொல்லுகிறார். காங்கிரஸ் நிதியெல்லாம் செலவழிந்து விட்டது. கொஞ்சம் நஞ்சம் உள்ளதும் யோக்கியதையற்ற தாலூகா காரியதரிசிகளுக்காகச் செலவழிக்கப்பட்டு வருகிறது. அவர்களோ உருப்படியான வேலை ஒன்றும் செய்யாததுடன், தமக்குப் பணம் கொடுப்பவருக்கு (அதாவது ஸ்ரீமான். பி. வரதராஜலு நாயுடுவை மனதில் வைத்துக் கொண்டு) எதிரான அபிப்பிராயம் கொண்டவர்களை அடித்தும் பயமுறுத்தியும் வருகிறார். மிகவும் குறைவாகவுள்ள காங்கிரஸ் பணத்தை நிர்வாகிகளுக்கு (ஸ்ரீமான்கள், பி. வரதராஜலு நாயுடுவையும், ஈ.வெ. இராமசாமி நாயக்கரவர்களையும் மனதில் நினைத்து) வேண்டியவர்களா யுள்ள சிலர் சாப்பிட்டு வருகிறார்கள். நாட்டிற்காகச் சிறைசென்ற அநேக வாலிபர்கள் தங்களுக்கு ஏதாவது உபயோகமுள்ள வேலை கொடுக்கும்படி விண்ணப்பங்கள் போட்டும் அதை இவர்கள் கவனிக்கவில்லை."



## இதற்கு சமாதானம் கமிட்டி நிர்வாகம்

இவற்றில் நிர்வாகத்தைப்பற்றிச் சொல்லியிருக்கும் வார்த்தைகளுக்கு டாக்டர் பி.வரதராஜலு நாயுடு தலைவர் என்ற முறையில் தகுந்த சமாதானம் சொல்லப்போகிறார்களானாலும், நாம் சில வார்த்தைகள் சொல்ல விரும்பின் ஸ்ரீமான் ஆதிநாராயணஞ் செட்டியாரும் ஓர் அங்கத்தினர்தான் என்பதையும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நடவடிக்கைகள் முழுவதும் ஒவ்வொரு மாதத்திய நிர்வாகக் கூட்டங்களிலும் செட்டியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டதே யல்லாமல் செட்டியாரவர்கள் அபிப்பிராயத்திற்கு விரோதமாகவாவது கமிட்டியின் ஆமோதிப்பில்லா மலாவது ஒரு காரியமும் நடத்தப்படவில்லை என்பதைப் பொதுஜனங்கள் அறியவேண்டும். பணம் செலவுசெய்யும் விஷயத்தில் இதற்குமுன் இருந்த காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டிகள் எந்த முறையைக் கையாடி வந்ததோ அந்த முறையை அனுசரித்தும், ஸ்ரீமான் செட்டியாரின் இஷ்டங்களை அனுசரித்துமே செய்யப்பட்டு வந்திருக்கிறது. சில விஷயங்களை உத்தேசித்து ஸ்ரீமான் செட்டியாரவர்கள் வசமும் அவர்கள் சிபாருசுப்படியும் தாராளமாகப் பணம் கொடுக்கப்பட்டுத் தான் வந்திருக்கிறது. ஏதோ ஒரு விஷயத்தில் இவரிடம் கொடுத்திருந்த பணத்தை அவசர நிமித்தம் திருப்பிவாங்க வேண்டி ஏற்பட்டதினால் செட்டியாரவர்களுக்கு கமிட்டியின் பணச்செலவு விஷயத்தில் வருத்தம் ஏற்பட்டு விட்டதுபோலும்!.

## பழைய வருத்தம்

அல்லாமல் செட்டியாரவர்களுக்கு சில வருடங்களாகவே, அதாவது 1922ல் காங்கிரஸ் தொண்டர்கள் தலைவர்கள் கும்பல் கும்பலாய் சிறைசென்று கொண்டிருந்த காலத்தில் செட்டியார் அனுசரித்து வந்த முறையினால் இவர்கள்பேரில் காங்கிரஸில் ஈடுபட்டிருந்த அனேகருக்கு அதிருப்தி ஏற்பட்டு சிலருக்குள் அபிப்பிராய பேதங்களும் ஏற்பட்டன. அதன் பலனாகவே ஸ்ரீமான்களான பி. வரதராஜலு நாயுடும், சி. ராஜகோபாலாச்சாரியாரும், ஈ.வெ. இராமசாமி நாயக்கரும் மற்றும் சிலரும் செட்டியாரின் அதிருப்திக்கு ஆளானார்கள். சாதாரண வாழ்க்கையில் உள்ளதுபோலவே ராஜீய வாழ்க்கையிலும் மேற்கண்ட மூவரிடமும் அதிருப்தி உள்ளவர்கள் செட்டியாரைத் துணைக் கருவியாகக் கொண்டு காங்கிரஸ் நிர்வாக சபையை சென்ற இரண்டு மூன்று வருஷங்களாகத் தாக்கி வந்திருக்கிறார்கள். அதுவுமல்லாமல் ஒருவரைத் தாக்குவதற்காகவோ சுயநலத்திற்காகவோ சமயத்திற்கு தகுந்தாற்போல் ஒவ்வொரு கட்சியிலேயோ, ஒவ்வொரு வகுப்பாருடனேயோ ஒவ்வொரு தனி கனவான்களோடேயோ சேர்ந்து கொண்டு அவர்களுக்கு திருப்தி உண்டாக்க மற்றவர்களையும் மற்ற ஸ்தாபனங்களையும் தாக்கி வருவது அனுபவத்தில் கண்டு வந்திருக்கிறோம். இக்குணங்களெல்லாம் விதிவிலக்கில்லாமல் ராஜீயவாழ்வில் பிரவேசித்ததின்



RangaRakes tamilnavarasam.com

பலனாய்த்தான் ராஜீய வாழ்வே அன்னியர் பார்த்து சிரிக்கும்படியான நிலைமைக்கு வந்துவிட்டது. ஸ்ரீமான் செட்டியாரவர்கள் மனதில் வைத்துக் கொண்டு ஜாடைபேசும் இரு கனவான்களும் செட்டியாரின் தேச பக்திக்கும் தியாகத்திற்கும் ஒழுக்கத்திற்கும் எவ்விதத்திலும் பின்வாங்கியவர்கள் அல்லவென்பதை தமிழ்நாடு நன்றாய் அறிந்திருக்கும். இதை செட்டியாருக்கு ஞாபகப்படுத்திவிட்டு அடுத்த விஷயத்திற்கு வருகிறோம்..

## ஜஸ்டிஸ் கட்சியில் சேருவது

அதாவது ஸ்ரீமான் பி. வரதராஜுலு நாயுடு பிராமணர்களை எதிர்ப்ப தற்காக ஜஸ்டிஸ் கட்சியில் சேர்வேனென்பது; இவ்விஷயத்தில் கொஞ்சமும் குற்றமிருப்பதாய் நமக்குத் தோன்றவில்லை. என்றைக்கிருந்தபோதிலும் ஜஸ்டிஸ் கட்சியாரும் ராஜீய வாழ்விலிருக்கும் பிராமணரல்லாதாரும் தான் ஒன்றுசேர்ந்து சகோதரபாவமாய், சமத்துவமாய் வாழ முடியுமேயல்லாமல் பிராமணர்களோடு சமத்துவமாய் வாழ முடியாது. நாம் அவர்களோடு சேர்ந்து வாழ ஆசைப்பட்டாலும், பிராமணர்களின் கொள்கை நம்மை எக்காலத்திலும் சமத்துவமாய் ஏற்றுக் கொள்ளாததாய் இருக்கிறது. அவர்களது தர்மமோ தாங்கள் உயர்பிறப்பென்றும் (பிராமணர்கள் ஒழிந்த) மற்றவர் தாழ்ந்த பிறப்பு என்றும் அடிமைகளென்றும் தாசி மக்களென்றும் மிலேச்சர்களென்றும் தொட்டால், பார்த்தால், தெருவில் நடந்தால், அருகில் வந்தால் பாவம் என்று அவர்களுக்கு கட்டளையிடுகிறது. இந்நிலையில் இவ்விதக் கொள்கைகளை எதிர்க்காமலோ இவ்வித கொள்கைகளற்ற சகோதரர்கள் ஒன்று கூடாமலோ இருப்பார்களென்று ஸ்ரீமான் செட்டியாரவர்கள் எப்படி நினைத்தார்களோ வென்பது நமக்கு ஆச்சரியமாகவிருக்கிறது. ஒருக்கால் தம்மையும் பிராமணராக நினைத்துக் கொண்டாரோ என்னவோ! அல்லது தன்னை பிராமணர்கள் சமமாய் நடத்துவார்களென்று நினைத்தாரோ!! தெரியவில்லை.

## சுயராஜ்யக் கட்சி

நிற்க, "ஸ்தல ஸ்தாபனங்களின் தேர்தல்களில் சுயராஜ்யக்கட்சியாரைப் பகிஷ்கரிக்குமாறு பிரசாரம் செய்கிறார்" என்று பேசியிருக்கிறார். இது ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கரையேதான் மனதில் வைத்துக்கொண்டு பேசி இருக்கிறார் என்பதில் வாசகர்கள் சந்தேகப்படமாட்டார்கள். சுயராஜ்யக் கட்சியின் சார்பாய் ஒருவர் தேர்தலில் நிற்பதனால் அது காரணமாய் அவரைத் தெரிந்தெடுக்கக்கூடாதென்று ஸ்ரீமான் நாயக்கர் எந்தக் கூட்டத்தில் பேசி இருக்கிறார்? அல்லது எந்த சந்தர்ப்பத்தில் எழுதி இருக்கிறார்? இதைச் செட்டி யார் மெய்ப்பிக்க முடியுமா?

## காங்கிரஸ் தீர்மானம்

அன்றியும் சுயராஜ்யக்கட்சியாரோ அல்லது காங்கிரஸ்காரரோ காங்கிர ஸின் சார்பாய் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நிற்கலாமென்றாவது காங்கிரஸ்



காரர்கள் இவர்களுக்காகப் பிரசாரம் செய்து ஓட்டு சம்பாதித்துக் கொடுக்கலா மென்றாவது, காங்கிரஸின் கட்டளை இருக்கிறது என்று இவர் மெய்ப்பிக்க முடியுமா?

## செட்டியார் சட்டசபைக்குப் போனது

ஒத்துழையாமைத் தீர்மானமும் சட்டசபை பகிஷ்காரமும் அமுலில் இருக்கும் காலத்தில் காந்தி ஆணைப்படி ஆதிநாராயணஞ் செட்டியாரவர் களுக்கு ஓட்டுச் செய்யுங்களென்று விளம்பரம் செய்து கொண்டு தாம் ஓட்டுப் பெற்றாரே அது போல் நாம் செய்யவில்லையென்று வருத்தப்படுகிறாரா?

## தமிழ்நாடு சுயராஜ்யக் கட்சியின் முறை

சுயராஜ்யக்கட்சியில் இன்னாரைத்தான் சேர்த்துக்கொள்வதென்றும், இன்னென்ன யோக்கியதையுடையவர்கள்தான் சேரலாமென்றும், ஒழுங்குமுறை இல்லாமல் ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் போக விரும்புகிறவர் களையெல்லாம் சேர்த்துக் கொண்டு வேடத்திற்குக் கூட கதர் கட்டா விட்டாலும் நவம்பர் முதல் கட்டுவதாய் ஒப்புக்கொண்டால் சரியென்றும், நூல் சந்தாவில் நம்பிக்கை இல்லாவிட்டாலும் அதற்குண்டான பணத்தைக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டால் போதுமென்றும், தீண்டாமை ஒழிப்பதில் கொஞ்சமும் நம்பிக்கையில்லா விட்டாலும், பிராமணர் ஒழிந்த மற்றெல்லோ ரையுமே தீண்டாதவராக பாவிப்பவராக இருந்தாலும் கையெழுத்து மாத்திரம் போட்டால் போதும் என்றும், இவ்வாறாகச் சொல்லி அவர்களோடு வியா பாரம் பேசி அவர்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு காங்கிரஸின் பெய ராலும், மகாத்மாவின் பெயராலும், தியாக மூர்த்திகள் பெயராலும் இவர் களுக்கு ஓட்டுக் கொடுக்கும்படி செய்து யோக்கி யர்களையும், உண்மை யானவர்களையும் நிர்வாகத்தைத் திறமையாக நடத்தக் கூடியவர்களையும் சாதாரண ராஜீய அபிப்பிராயபேதம் காரணமாக இழிவாய்ப் பேசியும் அவர் களுக்கு விரோதமாய் அவர்கள் எதிரிகள் நலத்திற்காக உபயோகப்படுத்தி தக்கோர்களைத் தடுத்து தகாதவர்களை ஏற்பதுமான முறைக்கு காங்கிரசை உபயோகப்படுத்திக்கொள்ள எந்த மனிதன்தான் சம்மதிக்க முடியும்?

## இதைப்பற்றி நாயக்கர் ஆதியிலிருந்தே கண்டித்து வந்திருக்கிறார்

ஸ்ரீமான் நாயக்கரவர்கள் ஸ்தல ஸ்தாபனங்களை காங்கிரஸ் கைப்பற்று வது பற்றி 1922-ம் வருடத்திலிருந்தே ஆட்சேபித்து வந்திருக்கிறார். அப்படி இருக்க மேற்சொன்ன கொள்கையையுடைய சுயராஜ்யக்கட்சியார் ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்ற மற்றவர்கள் ஒருப்படுவாரென்று எப்படி எதிர் பார்க்கிறார்களோ தெரியவில்லை.



RangaRakes tamilnavarasam.com

## வகுப்புவாரி ஓட்டர்கள் தொகுதி

இதைப்பற்றியும் ஸ்ரீமான் செட்டியாரவர்கள் நாயக்கரை உத்தேசித்து ஜாடை பேசி இருக்கிறார். 1919 வருடத்தில் சில தேசீய பிராமணரல்லாதார் என்போர் நடத்திவந்த சென்னை மாகாணச்சங்கம் என்று சொல்லப்பட்ட ஒரு பிரதிநிதித்துவசபையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் வரதராஜலு நாயுடு அவர்களும், ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியாரவர்களும் இதை ஆதரித்து வந்திருக்கிறார்களென்றே எண்ணுகிறேன்.

## மெஸ்டன் தீர்ப்பு

ஸ்ரீமான் ஆதிநாராயணஞ் செட்டியாரவர்களும் பிராமணரல்லாதாருக்கு இத்தனை ஸ்தானங்கள் வழங்கப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்வதற்காக மெஸ்டன் துரையவர்களிடம் சென்ற பிராமணரல்லாத பிரதிநிதிகளில் தாமும் ஒருவர்தானென்பதை மறந்து விட்டார் போலும்.

## தேசீய பிராமணரல்லாதார் தீர்மானம்

அன்றி சென்றவாரம் தஞ்சையில் நடந்த தேசீய பிராமணரல்லாதார் மகாநாட்டில் தானும் பிரசன்னமாய் இருந்தே "தேசீய முன்னேற்றத்தை அடைய தேசீய ஒற்றுமையும் வகுப்பு வித்தியாசமின்மையும் மிகவும் அவசியமென்றும், இம்மாதிரி ஒற்றுமைக்கு உத்தியோகங்கள் முதலியது எல்லா வகுப்பாரும் அவரவர்கள் வகுப்புக்கேற்றவாறு சமமாக அடையும்படியான மார்க்கங்களைத் தேடி வகுப்பு வித்தியாசங்களில்லாமல் சமத்துவத்தை ஏற்படுத்துவது அவசிய மென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார். ஆனால் பிராமணப் பத்திரிக்கைகள் இதை யாரும் தெரிந்து கொள்ளாதபடி பிரசுரித்து விட்டது.

## இதன் முடிவு

இப்படியெல்லாம் இருக்க சில பிராமணர்களின் புன்சிரிப்பும் முகஸ்துதியும் பெறுவதர்க்காக ஏதேதோ பேசி இருக்கிறார். சர்க்காருக்கு நல்ல பிள்ளையாய் நடந்து ஏமாற்றமடைந்த ஸ்ரீமான் ஓ. தணிகாசலம் செட்டியார் தஞ்சை ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் அழுதது போல் நமது ஆதிநாராயணஞ் செட்டியாரவர்களும் இப்பொழுது பிராமணர்களுக்கு நல்ல பிள்ளையாக நடக்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டு இப்படியெல்லாம் பேசுவதின் பலனாய் இருவரும் ஏமாற்றமடைந்து பின்னர் ஒரு காலத்தில் அழுவாரே என்ற பரிதாபத்தோடு இதை முடிக்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 30.08.1925**



# பதவியா? பொதுஜன சேவையா?

பொதுவாக ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்தையும் பொறுப்பையும் உத்தேசிக்கையில் ஸ்தல ஸ்தாபனங்களில் ஸ்தானம் பெறுவது தொண்டு செய்வதற்காகவா பதவியை அனுபவிப்பதற்காகவா என்பதை பெரும்பான்மையான ஓட்டர்கள் உணர்வதே இல்லை. நம்மைப் பொறுத்தவரையிலும் நாம் அதை ஒரு பதவியெனக் கருதுகிறோமேயன்றி அதை ஒரு பொது ஜனசேவையென நாம் கருதுவதேயில்லை. உதாரணமாக, எவ்வித பொது ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் பெற்றாலும் அங்கம் பெற்றவர் அதை ஒரு பதவியாகவே மதித்து அதைப் பிறருக்குக் காட்டிப் பெருமை அடைவதின் பொருட்டாக தம்முடைய பெயருக்குக் கீழ் அப்பதவியின் பெயரையும் அச்சடித்துக் கொள்ளுகிறார். தம்மை அறிமுகப்படுத்திக் கொள்வதற்கும் அதை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார். அந்நியர் இவருடைய கவுரவங்களைப் பற்றிப் பேசும் பொழுதும் அதை சுட்டிக் காட்டுகின்றனர். அல்லாமலும் இந்தத் தேர்தல் ஸ்தானம் பெறுவதின் பொருட்டு ஆயிரம், பதினாயிரம், இருபதினாயிரம் செலவும் செய்கின்றனர். யாரைப்பிடித்தால் தாங்கள் தேர்தலில் வெற்றி பெறலாமெனக் கருதி லஞ்சம் கொடுத்து ஏஜண்டுகளையும் நியமிக்கிறார்கள். தேர்தல் காலங்களில் தங்களுக்கு எதிராக நிற்கும் அபேட்சகர்களை உண்மைக்கு மாறாகவும் மனச்சாட்சிக்கு விரோதமாகவும் வேண்டுமென்றே தூஷிக்கின்றனர். தேர்தல்களில் ஸ்தானம் பெறுவதை ஒரு வெற்றி தோல்வியென மதிக்கின்றனர். தங்களால் செய்யக்கூடாத காரியங்களையெல்லாம் செய்வதாகப் பொய் பேசி ஜனங்களை ஏமாற்றுகின்றனர். ஓட்டர்களுக்கு நிலைமைக்குத் தகுந்த விதமாக லஞ்சம் கொடுக்கின்றனர். உண்மையில் பொது நன்மையின் பொருட்டு இவர்கள் தேர்தலுக்கு நிற்பார்களேயானால் இவ்வித அயோக்கியச் செயல்கள் புரிய அவர்களது மனம் ஒருப்படுமா? நூறுபேர் தேர்தலில் வெற்றி பெற்றிருப்பின் அதில் ஒருவராவது உண்மையாளராயிருப்பாரென நம்ப இடமிருக்கின்றதா? பொதுநன்மைக்குப் பாடுபடுபவர்களின் யோக்கியதை இப்படித்தானிருக்குமா? உண்மையாக பொதுஜன சேவை செய்ய வேண்டுமென்ற ஆசையிருப்பின் தேர்தலில் போட்டிபோட்டு இழிவான செயல்கள் பல செய்தேதான் பொது மக்களுக்கு உழைக்க வேண்டுமா? வெளியிலிருந்துகொண்டு ஒரு நகர பரிபாலன சபையின் உள்ளிருந்து செய்யும் செயல்களைச் செய்யமுடியாதா? ஒரு நகர பரிபாலன சபையை எடுத்துக்கொண்டால் அதற்குப் பல அங்கத்தினர்களும் ஒரு தலைவரும்



RangaRakes tamilnavarasam.com

இருந்தால்தான் அது நடைபெறுமா? இவர்கள் இல்லாவிடின் நகர பரிபாலன சபை நடைபெறாதா! நகர பரிபாலன சபை சட்டப்படி சிப்பந்திகளை நியமித்து விட்டு கையெழுத்துப்போடத் தெரிந்த ஒரு இயந்திர பொம்மையும் அது ஆட்டுகிறபடி தலை ஆட்டுவதற்குப் பத்துப் பூனைக் குட்டிகளையும் உட்காரவைத்துவிட்டால் நகர பரிபாலன சபை இயந்திரம் ஓடுமா ஓடாதா? நகர பரிபாலன சபையில் மனிதர்கள் சென்று உட்காருவதனாலும் அவர்களில் ஒருவருக்கொருவர் உள்ள துவேஷத்தாலும் சுயநலத்தாலும் கலகம் விளைகின்றதே அன்றி நகர பரிபாலன சபையின் நிர்வாகத்தில் கலகம் விளைவதற்குச் சிறிதும் இடமில்லை. தாலூகாபோர்டு, டிஸ்டிரிக்டு போர்டு, முனிசிபாலிட்டி, யூனியன் என்று சொல்லப்படுவது கிரமப்படி சர்க்காரார் செய்யவேண்டிய வேலை. அவர்கள் செய்வதாயிருப்பின் இவற்றிற்கென்று ஒரு தனி வரி வசூலிக்க வேண்டிவருமே என்றும், நிர்வாகத்தில் ஏதாவது குறை ஏற்பட்டால் ஜனங்களுக்கு நேராகத் தெரிந்துவிடுமென்றும், சாதாரண ஜனங்கள் வெகு சுலபமாக சர்க்காரை குறைகூறி விடுவாரே என்றும் யோசித்து இவ்விதக் கஷ்டங்களினின்றும் தப்புவதற்காக தந்திரமாய் பொது ஜனங்கள் கையில் ஒப்புவித்துவிட்டார்கள். இதனால் சர்க்காருக்கு மற்றொரு லாபமும் ஏற்பட்டுப் போய்விட்டது. அதாவது எலெக்ஷன் என்றும் அதற்கு ஓட்டு என்றும் பல முறைகளை ஏற்படுத்தியதால் பட்டணங்களிலோ, கிராமங்களிலோ உள்ள செல்வாக்குள்ளவர்கள் ஒன்று சேராதபடி தேர்தல்களில் நின்று போட்டிபோட்டு ஒருவரை ஒருவர் குறைகூறிக்கொண்டு ஒற்றுமை இல்லாமல் ஊர் இரண்டுபட்டிருப்பதற்கு ஒரு அனுகூலமாகிவிட்டது. இவற்றைத்தவிர, இந்தத் தேர்தல்களினாலோ ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் பெறுவதினாலோ தேசத்திற்கு ஒருவித நன்மையும் உண்டாகப் போவதில்லை. ஆகையினால் ஓட்டர்களாயிருப்பவர்கள் தாங்கள் ஓட்டுச்செய்யும்போது பொது நன்மை செய்வதற்குரியவர்கள் யார் என்று தேடிக்கொண்டு அர்த்தமில்லாது கஷ்டப்படுவதைவிட இந்தப்பதவியை வகிப்பதற்கு - அந்தஸ்து உடையவர் எவர், அருகதை உடையவர் எவர், பாத்தியம் உடையவர் எவர் என்பதை யோசித்து அதற்குத் தகுந்தபடி நடந்துகொள்ளுவார்களே ஆனால் ஓட்டர்கள் தங்கள் கடமையைச் செய்தவர்களாவார்கள்.

**குடி அரசு - தலையங்கம் - 06.09.1925**



# பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்

சுயராஜ்யக் கட்சியாரின் நிலை நாளுக்கு நாள் கேவலமாகி வருவதைப் பொது மக்கள் நன்கு அறிந்து வருகின்றனர். சுயராஜ்யக் கட்சியினர் அரசாங்கத்தோடு உறவாடும் எண்ணத்தோடுதான் தங் கட்சியைத் தோற்றுவித்தார் என்பதின் உண்மை இப்பொழுது வெளியாகிவிட்டது. முதலில் சட்டசபையில் புகுந்து மானத்தை வில்லாய் வளைத்துவிடப் போவதாகக் கூறிய இப்புலிகள் அரசாங்கத்தோடுக் கட்டிக் குலாவ முற்பட்டு விட்டனர். இவர்களால் தேசத்தில் கட்சிபேதங்களும், உலக சிரேஷ்டர் எம்பெருமான் காந்தி அடிகளின் தூய இயக்கத்திற்கு அழிவுந்தான் ஏற்பட்டதே அன்றி வேறல்ல. இரண்டாண்டிற்கு முன் தேசமிருந்த நிலையை நன்கறிந்த உண்மையாளரின் மனம் இச் சுயராஜ்யக் கட்சியினரின் செயல்களைக் கண்டு நோகாமலிராது. சிறிது சிறிதாக தம் மனத்தில் கொண்டிருந்த எண்ணங்களை வெளிப்படையாகவே செய்ய முற்பட்டு விட்டனர். பண்டித நேரு ராணுவக் கமிட்டியில் அங்கம் பெற்றார். ஸ்ரீமான் படேல் இந்திய சட்டசபைக்குத் தலைவரானார். மீண்டும் நேரு, ஸ்ரீமான்கள் கெல்கார், அரங்கசாமி அய்யங்கார் மூவரும் "கோர்ட்டு அவமதிப்பு மசோதாவை"ப் பரிசீலனை செய்ய ஏற்பட்டிருக்கும் கமிட்டியில் அங்கம் பெற்றுள்ளார்கள். இது ஒத்துழைப்பா அல்லது முட்டுக்கட்டையா என்பது எமக்கு விளங்கவில்லை. முட்டுக்கட்டை போடப்போகிறோம் என்று தேச மக்களை ஏமாற்றி ஓட்டுப் பெற்ற இவர்கள் குட்டிக்கரணம் போட ஆரம்பித்து விட்டனர். இன்னும் எத்தனைக் கமிட்டிகள் ஏற்படினும் அதிலும் அங்கம் பெறுவதற்குச் சிறிதும் மறுக்க மாட்டார்கள். மிதவாதிகளும் இதர ஒத்துழைப்புக் கட்சிக்காரர்களும் தங்கள் கட்சிகளின் யோக்கியதைகளைப் பொது மக்களுக்கு வெளிப்படையாகக் கூறிவிடுகின்றனர். பொது மக்களும் அவர்களின் யோக்கியதையை நன்கறிந்து கொண்டிருக்கின்றனர். சுயராஜ்யக் கட்சியினரோ தங்களுக்கிருக்கும் மோகத்தை மறைத்து பொது மக்களை ஏமாற்றி வருகின்றனர். உண்மையை அறியாத பலர் இவர்களது வார்த்தைகளைக் கண்டு மயங்கியும் விடுகின்றனர். இவ்விதமாகப் பொது மக்களை ஏமாற்றி வரும் எக்கட்சியினரும் ஒருநாள் வீழ்ந்து விடுவார்கள் என்பது திண்ணம். பலநாள் திருடன் ஒருநாள் அகப்பட்டுத்தான் ஆகவேண்டும் என்பதை சுயராஜ்யக் கட்சியினர் உணர்வார்களா?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.09.1925**



RangaRakes tamilnavarasam.com

# கோவைத் தேர்தல்

**– சித்திரபுத்திரன்**

கோயம்புத்தூர் நகர பரிபாலன சபையின் தேர்தல் முடிந்தது. எட்டுக் கனவான்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்கள். தேர்தல் பிரசாரங்களில் இரண்டு கட்சிகளின் பெயர் சொல்லிக் கொள்ளப்பட்டன. ஒன்று சுயராஜ்யக் கட்சி, மற்றொன்று ஜஸ்டிஸ் கட்சி. சுயராஜ்யக் கட்சிக்கென கோயம்புத்தூர் காங்கிரஸ் நிர்வாகிகள் என்போர் பிரசாரம் செய்தனர். ஜஸ்டிஸ் கட்சிக்காக எவ்விதப் பிரசாரமும் நடைபெறாவிட்டாலும் காங்கிரஸுக்காரர்கள் நடந்துகொண்ட மாதிரியே, ஜஸ்டிஸ் கட்சிக்குப் பிரசாரம் தேவையில்லாமல் போய்விட்டது. உண்மையிலேயே இப்பொழுது தேர்தலில் வெற்றி பெற்ற கனவான்கள் எவ்விதப் பிரசாரத்தினாலும் பாதகமோ, சாதகமோ அடைய முடியாதவர்கள். இவர்கள் எட்டுப் பேரும் உண்மையில் எவ்வித தனிக் கட்சியையும் சேர்ந்தவர்கள் அல்ல. "அரண்மனை நெல்லுக்குப் பெருச்சாளிகள் சண்டையிட்டுக் கொள்வது போல் " அநாவசியமாய் சொந்த விரோதங்களையும், சுயநலன்களையும் உத்தேசித்து ஒருவரை ஒருவர் திட்டியும், பழி சுமத்தியும் ஆசை தீர்த்துக் கொண்டதல்லாமல் வேறு எவ்வித பொது நன்மையும் பிரசாரங்களில் தோன்றவில்லை. சுயராஜ்யக் கட்சியின் பேரால் வெற்றி பெற்றதாகச் சொல்லப்படும் மூன்று கனவான்களும் காங்கிரஸ் பிரசாரத்தால்தான் வெற்றி பெற்றனர் என்று சொல்ல முடியாது. ஒரு கனவானுக்குப் போட்டியே இல்லை. அவர்தான் ஸ்ரீமான் பழனிச்சாமி செட்டியார் அவர்கள். அவருக்கு யாதொரு பிரசாரமும் தேவையில்லாதபடி அவ்வளவு மிகுதி செல்வாக்கும், ஜனங்களிடம் நம்பிக்கையும் பெற்றவர். அவருக்கு ஜெயம் கிடைக்கும் என்கின்ற உறுதியைக் கொண்டே அவரை சுயராஜ்யக் கட்சி அங்கத்தினர் என்று விளம்பரம் செய்துவிட்டனர். இரண்டாவதாக, சுயராஜ்யக் கட்சியின் பெயரால் வெற்றிபெற்றவர் என்று சொல்லப்படுபவர் ஸ்ரீமான் சி.எம்.ராமச்சந்திர செட்டியார். இவருக்கு காங்கிரஸ்காரர்களின் பிரசாரமே கொஞ்சமும் தேவையில்லாமலிருந்ததோடு காங்கிரஸ் பிரசாரம் தமக்கு ஏதாவது தோல்வியை உண்டாக்கிவிடுமோ என்கிற பயத்தால் காங்கிரஸ் பிரசாரகர்கள் தமது வார்டுக்குள் வரக்கூடாதென்று கண்டிப்பான உத்திரவு போட்டுவிட்டார். தாமும் கொஞ்சமும் இப்பிரசாரங்களில் கலந்து கொள்ளவே இல்லை. ஸ்ரீமான் செட்டியார் அவர்களின் செல்வாக்கும்.



பொதுநல சேவையும், தமிழுக்காகவும், மதுவிலக்குக்காகவும் மற்றும் பொது நலத்துக்காகவும் சேவை செய்து வருவது காங்கிரஸ் நற்சாட்சிப் பத்திரத்தை விட எவ்வளவோ மடங்கு மேலானது.

மூன்றாவது கனவான் ஸ்ரீமான் குப்புச்சாமி நாயுடு அவர்கள். இவர் வெற்றியைப் பற்றியும் காங்கிரஸ்காரர்களின் பிரசாரத்தினால்தான் வெற்றி பெற்றார் எனப் பெருமை பாராட்டிக் கொள்ளமுடியாது. ஸ்ரீமான் நாயுடு அவர்கள் வெகு காலமாகவே காங்கிரஸ் அபிமானியாகவும் பொது நல ஊக்க முள்ளவராகவும் இருந்து வந்திருக்கிறார். மற்றும் பல காரணங்களாலும் ஸ்ரீமான் நாயுடு அவர்களின் வெற்றிக்குக் காங்கிரஸ்காரர்கள் காரணமல்ல வென்று காங்கிரஸ்காரர்களுக்கே தெரியும். இம்மூன்று கனவான்களும் நிச்சயமாய் வெற்றி பெறுவார்கள் என்கிற எண்ணத்தைக் கொண்டே சுயராஜ்யக் கட்சியின் ஜாப்தாவில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. நிற்க , காங்கிரஸ் பிரசாரகர்களுக்கு விரோதமாய் வெற்றி பெற்ற கனவான்கள் ஐவர். இவர்களில் முதலாவதவர் ஸ்ரீமான் சி.வி.சுப்பையா செட்டியார் அவர்கள். இவர் வெற்றிக்கு முக்கியக் காரணம் காங்கிரஸ் பிரசாரத்தின் போக்குதான். இவருக்கு எதிரிடையாக நின்றவரும், காங்கிரஸ் அபிமானியும் பொதுநல ஊக்கமும் அவர் வார்டில் நல்ல செல்வாக்கும் உள்ளவர். முன்பு கவுன்சிலராகவுமிருந்தவர். இவர் வெற்றி அடைந்திருக்க வேண்டியது தான். அப்படியிருக்க அதிகப்படியான ஓட்டுகளால் தோல்வி அடையக் காரணம் காங்கிரஸ் பிரசாரத்தின் ஊழலானது ஜனங்களின் மனதை அவ்வளவு தூரம் மாற்றி விட்டது. காங்கிரஸ் பிரசாரம் இல்லாதிருந்தால் இவர் வெற்றியடையப் போதுமான சவுகரியம் இருந்ததாகவே சொல்லப்படுகிறது. எப்படி இருந்தாலும் ஒரு ஸ்தாபனத்திற்கு இரண்டு பேர் நின்றால் ஒருவருக்குத்தான் வெற்றி கிடைக்கும்.

அடுத்தபடியாக, காங்கிரஸ் பிரசாரத்திற்கு விரோதமாக வெற்றி பெற்றவர் ஸ்ரீமான் வி.எஸ். செங்கோட்டய்யா அவர்கள். இவருடைய வெற்றியைப்பற்றி கோயம்புத்தூர் ஜில்லாவிலேயே எவரும் பொறாமைப்பட மாட்டார்கள். இவர் காங்கிரஸ் அபிமானி. காங்கிரஸிற்கும் பொருள் உதவி வந்திருக்கிறார். கதர் உற்பத்திக்கு சென்னிமலையில் எவ்வளவோ ஏற்பாடு செய்தார். மற்ற பொது நன்மையான விஷயங்களுக்கும் எவ்வளவோ தாராளமாகப் பொருள் உதவி செய்து வருகிறார். பொது நன்மைக்குத் தாராளமாகப் பொருள் உதவி செய்வதில் கோயம்புத்தூருக்குள் ஸ்ரீமான் சென்னிமலை க. கிருஷ்ணன் செட்டியாருக்கு அடுத்தாற்போல் ஸ்ரீமான் செங்கோட்டய்யா அவர்களைத்தான் சொல்ல வேண்டும். இவர் கோயம்புத்தூர் பிராமணர்களுக்கும் நல்லவராக நடந்துகொண்டு வருபவர். ( ஆனால் இந்தத் தேர்தலில் வெகு பிராமணர்கள் இவருக்கு வாக்குத்தத்தம் செய்தபடி ஓட்டுச்செய்யவில்லையெனச் சொல்லப்படுகிறது. இது மெய்யானால் கூட இதில் ஒன்றும் அதிசயமில்லை )



RangaRakes tamilnavarasam.com

மூன்றாவதாக காங்கிரஸ் பிரசாரத்திற்கு விரோதமாய் வெற்றி பெற்ற வர் ஸ்ரீமான் லெட்சுமணத்தேவர் அவர்கள். அவருடைய வார்டில் அவர்கள் வகுப்பைச் சேர்ந்தவர்களே பெரும்பான்மையான ஓட்டர்களானதால் அவ்வகுப்பைச் சேர்ந்தவர்தான் வரமுடியும். இதுபோலவே ஒவ்வொரு வார்டிலும் பெரும்பான்மையான ஓட்டர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர் களோ அவர்கள்தான் எப்பொழுதும் வரவேண்டுமென்று விரும்புகிறோம். இவர் பழைய கவுன்சிலரெனவே தெரிகிறது.

நான்காவது ஐந்தாவதாக வெற்றிபெற்றவர்கள் ஸ்ரீமான்கள் அரி நாராயண பிள்ளை அவர்களும் கேசவப்பிள்ளை அவர்களும் ஆவார்கள். இவர்கள் பழைய கவுன்சிலர்களெனத் தெரிகிறது. ஆகவே இரு கட்சியின் பெயரால் வெற்றி பெற்ற எட்டுக் கனவான்களும் உண்மையில் எத் தனிக் கட்சியையும் சேர்ந்தவர்களல்லர். ஆதலால் அவர்களின் வெற்றி எந்தக் கட்சிக்கும் தோல்வியுமில்லை, வெற்றியுமில்லை. நகர பரிபாலனசபைக்கும் லாபமுமில்லை. காங்கிரஸிற்குச் சிறிது கெட்ட பெயர் ஏற்பட்டதேயன்றி பிரமாதமாக ஒன்றும் முழுகிப்போய்விடவில்லை. காங்கிரஸின் எதிர்கால நிலைமைக்கு தற்காலப் போக்குகள் பலவிதத்திலும் ஆபத்தாகத்தான் இருந்து வருகின்றன. ஆகையால் இதனாலேயே காங்கிரஸ் முழுகிப் போய்விட்ட தென்று சொல்லுவதற்கும் இடமில்லை. காங்கிரஸின் பெயரால் பிரசாரம் செய்தவர்களுக்கும் ஒன்றும் பெரிய தோல்வி வந்துவிடவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு சிலரை ஆசை தீர வைய வேண்டுமென்பதுதான் அவர்களது விருப்பம். அதுவும் அவர்களுக்கு நிறை வேறிவிட்டது. அவர்களால் திட்டப்பட்டவர்களுக்கும் ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை. யாருக்கும் எவ்வித செல்வாக்கும் குறைந்து விடவு மில்லை. எவரோ நான்குபேர் மேடை மீதேறி ஒருவரைத் தூற்றுவதால் அவருடைய செல்வாக்குக் குறைந்து போகுமானால் அவ்விதச் செல்வாக்கு இவர்களுக்கிருந்தும் பயன் என்ன ? முடிவாக கோயம்புத்தூர் நகர பரிபாலன சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற எட்டுக் கனவான்களையும் நாம் பாராட்டுகின்றோம். அவர்களைத் தேர்ந்தெடுத்த ஓட்டர்களுக்கும் நன்றி செலுத்துகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 06.09.1925**



# கும்பகோணம் பிராமணர்களின் தேர்தல் தந்திரம்

கும்பகோணம் முனிசிபல் தேர்தலுக்கு காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சி பெயரைச் சொல்லிக்கொண்டு இரண்டு அய்யர்களும் ஒரு அய்யங்காரும் ஒரு சாஸ்திரியாரும் அபேட்சகர்களாய் நிற்கிறார்கள். காங்கிரஸ் வேலைகள் நடந்த காலத்தில் இவர்கள் எங்கு இருந்தவர்கள்? காங்கிரசுக்கு இவர்கள் என்ன செய்தவர்கள்? காங்கிரஸ் கொள்கையில் எதெதை இவர்கள் ஒப்புக் கொண்டவர்கள்? கும்பகோணம் பொது ஜனங்களும் காங்கிரஸ் தொண்டர் களும் செய்த காங்கிரஸ் கைங்கர்யங்கள் இந்த அய்யர்கள் அய்யங்கார்கள் சாஸ்திரிகள் முனிசிபாலிட்டியில் ஸ்தானம் பெறத்தான் உதவவேண்டுமா? தீண்டாமை விலக்கைப்பற்றியும், குருகுலத்தில் ஏற்பாடு செய்திருந்த பார்க் காமை விலக்கைப் பற்றியும் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு செய்த பிரசாரத்தின் பலனாய் காங்கிரஸ் கமிட்டிக்கு நூல் சந்தாவே அனுப்பக் கூடாது என்று தீர்மானம் செய்து கொண்ட கூட்டத்தாருக்கும், காங்கிரஸ் பதவியிலிருந்து ராஜீனாமாக் கொடுத்து ஓடிப்போன கூட்டத்தாருக்கும் முனிசிபல் தேர்தல் வந்தவுடன் தங்கள் மானம் வெட்கத்தை யெல்லாம் விட்டு காங்கிரஸ் காரர்களின் தியாகத்தின் மறைவில் ஸ்தானம் பெற ஆசைப்பட்டு, காங்கிரஸ் பேரால் ஸ்தானம் பெற முன் வந்து விட்டால் இந்த சுயமரியாதை இல்லாத வகுப்புள்ள நாட்டுக்கு எப்படி சுயராஜ்யம் கிடைக்கும்? கும்பகோணம் பிராமணரல்லாதார், கும்பகோணம் பிராமணர்களாகிய அய்யர் அய்யங்கார் சாஸ்திரிகளின் மாய வலையில் சிக்காமல், போலிக் கட்சிக்காரர் களை உதரித் தள்ளி, உண்மையாய் அந்த ஸ்தானங்கள் பெற யோக்கியதையும் பாத்தியமும் உடையவர்களுக்கு தங்கள் ஓட்டுகளை கொடுக்கவேண்டும். பிராமண ரல்லாதார் புத்தியில்லாதவர்கள் என்றும், மானம் ரோஷம், ஜாதி அபிமானம் இல்லாதவர்கள் என்றும், பிராமணர்கள் நினைப்பதினாலும் வயிற்று ஜீவனத் திற்கும் பொய்க்கீர்த்திக்கும் ஆசைப்பட்ட பிராமணரல்லாதார் சிலர் பிராமணர்கள் பணத்தினாலும் அவர்கள் விளம்பர சவுகரியத்தினாலும் அவர்களுக்கு அடிமைப்பட்டு பிராமணரல்லாதாருக்கு விரோதமாயும் பிராமணர்களுக்கு அனுகூலமாயும் வேண்டிய ஆள்கள் பிராமணரல்லா தாரிலேயே கிடைக்கும் என்கிற தைரியத்தினாலுமே அவர்கள் இந்த தேர்தல்களில் இவ்வளவு தைரியமாய் நிற்கிறார்கள். பிராமணரல்லாதாரே இதை உணருங்கள்!

**குடி அரசு - கட்டுரை - 13.09.1925**



RangaRakes tamilnavarasam.com

# தேர்தல்

## ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவின் அபிப்பிராயம்

ஸ்தல ஸ்தாபனங்களின் தேர்தல்கள் விஷயமாக ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு பொதுமக்களுக்கு மனக்குழப்பத்தை உண்டாக்கும் விதமாக தன்னுடைய கருத்து இன்னதுதான் என்பதைப் பிறர் அறிந்து கொள்ள முடியாதபடி ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு விதமாக எழுதிவருகிறார். இரண்டொரு விஷயத்தை மாத்திரம் இங்கு எடுத்துக்காட்டுகிறோம். கோயம் புத்தூர் தேர்தலின்பொழுது காங்கிரஸ் பிரசாரகர் ஒருவர் எழுதிக் கேட்டதற்கு தேர்தல்களில் நின்ற அபேட்சகர்களை அறிந்தோ அறியாமலோ சுயராஜ்யக் கட்சிக்காரருக்காக வேலை செய்தவர்களைப் பாராட்டியும் சுயராஜ்யக் கட்சிக்காரருக்கே வெற்றி கிடைக்கவேண்டுமென்றும் ஒரு ஆசிர்வாத ஸ்ரீமுகம் அனுப்பினார். அதற்கடுத்தாற்போல் சுயராஜ்யக் கட்சிக்கு விரோத மாக இருந்த ஒருவர் ஸ்ரீமான் நாயுடுவுக்கு ஒரு விண்ணப்பம் செய்து கொண்டார். அந்த விண்ணப்பத்திற்கு மனதிரங்கி அடியிற் கண்டபடி மீண்டும் ஒரு ஸ்ரீமுகம் அனுப்பினார். "சுயராஜ்யக் கட்சியார் சட்டசபைக்கு உள்ளே சென்று அதை ஓடவிடாது தடுக்கவே முன்னால் கைப்பற்றுவதாகச் சொன்னார்கள். சட்ட சபைகளைத் தவிர ஸ்தல ஸ்தாபனங்களில் ஒற்றுழை யாமைக்கோ, முட்டுக் கட்டைக்கோ வழியில்லை. முனிசிபாலிடிகளில் நகர ஜனங்களுக்கு எந்த எந்த விதத்தில் நன்மை செய்யலாம் என்பதை யோசித்துச் செய்வதே அங்கத்தினர் களின் வேலையாயிருக்கின்றதே யொழிய அங்கு எதிர்த்துப் போராடுவதற்கு அதிகார வர்க்கம் அங்கு இல்லை. இதனால் ஸ்தல ஸ்தாபன தேர்தல்களில் ஒருவர் இன்ன கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக மட்டும் அவருக்கு ஓட்டுக் கொடுத்து விடக்கூடாது" என்றும் முடிவில் "அபேட்சகர்களின் உண்மையான யோக்கியதைகளை அறிந்தே ஓட்டர்கள் ஓட்டுக் கொடுக்க வேண்டும்" என்றும் எழுதியிருக்கிறார். மீண்டும் நான்கு நாட்களுக்குள்ளாக திருச்சியில் கூடிய கூட்டத்திற்குச் செல்லமுடியாதவராய், சாதி பேதத்தைக் கவனியாமல் காங்கிரஸ்காரர்களையே தெரிந்தெடுக்க வேண்டுமென்று அக்கூட்டத்திலிருந்த ஜனங்களுக்கு புத்திமதி கூறி ஒரு செய்தி அனுப்பியதாக இந்துப் பத்திரிகை யிலிருந்து தெரியவருகிறது. பின்னும் இரண்டுநாளில் இந்த விஷயத்தில் தங்களுடைய அபிப்பிராய மென்ன என்று நேரில் கேட்ட இரு கனவான்களுக்கு "ஸ்தல ஸ்தாபனங்களின் தேர்தலுக்கு நகர சபையில் வேலை செய்யத் தகுந்த யோக்கியதை உள்ள ஒரு பிராமணரும், ஒரு பிராமணரல்லாதாரும் நிற்பார்களானால் கட்சிப் போக்கு களை கவனியாமல் பிராமணரல்லாதாருக்குத் தான் ஓட்டுச் செய்ய வேண்டும்" என்றும் கூறினார்.

செப்டம்பர் 6-ந்தேதி தமிழ்நாடு பத்திரிகையில் "ஸ்ரீமான் நாயுடுவின் போர் முழக்கம்" என்கிற தலையங்கத்தின் கீழ் பாம்பன், ராமேச்வரம் முதலிய இடங்களில் செய்த பிரசங்கத்தின் சாரமாக ஓரிடத்தில் குறிப்பிட்டிருப்பதில் "சட்டசபைக்கோ, ஸ்தல ஸ்தாபன போர்டுக்கோ தான் போகப்போவ தில்லை யென்றும், ஆனால், **காரியத்திற்குக் கதர் உடுத்தி காங்கிரஸ் பெயரைச் சொல்லித் திரியும் கசடர்கள் உங்களை ஏமாற்றும்படி நான் விடப்போவ தில்லை" என்றும், தான் எந்தக் கட்சியிலும் சேராமலிருப்பதற்கு இதுவே முதல் காரணம்** என்றும் இவர் கூறியதாகக் காணப்படுகிறது. மறுபடியும் ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி தேர்தல் விஷயமாகத் தனது அபிப்பிராயத்தைக் கேட்டதற்கு காங்கிரஸ்காரர்களுக்கே ஓட்டுக்கொடுக்கவேண்டுமென்று கூறியுள்ளார்.

இவ்விதமான கொள்கைகளோ, அபிப்பிராயங்களோ தேர்தல்கள் விஷயமாய்த் தமிழ்நாட்டில் நடக்கும் அக்கிரமங்களுக்கும், கொடுமை களுக்கும் எவ்வளவு தூரம் உதவியாயிருக்கின்றதென்பதை ஸ்ரீமான் நாயுடு அறிய வேண்டுமாய் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 13.09.1925**





RangaRakes tamilnavarasam.com

# போர்

## "சுயராஜ்யா" என்று சொல்லப்படும் பிராமணப் பத்திரிகை

சுயராஜ்யா என்ற போலிப் பெயரை அணிந்து பிராமணர்களின் சுயநலத் திற்கும் பிராமணரல்லாதார் சமுகத்திற்கு துரோகம் செய்வதற்குமான கொள்கையை அடிப்படையாகக் கொண்டு சில பிராமணர்களால் நடத்தப் பட்டுவரும் ஒரு சென்னை தினசரிப் பத்திரிகை கொஞ்சம் கொஞ்சமாக தனது விஷத்தை நாலுங் கக்கிக்கொண்டே வருகிறது. அதாவது இம் மீ 10.9.25ல் வெளியான சுயராஜ்யா பத்திரிகையில் ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் சில சென்னை ஓட்டர்கள் சுயராஜ்யக் கட்சியினரின் தூண்டுகோளின்படி சென்னைக்குச்சென்று ஓட்டர்கள் மகாநாட்டில் பேசிய பேச்சை அரைகுறை யாக மனதில் வைத்துக்கொண்டு மின்னொளி என்ற தலைப்பின் கீழ் சில வார்த்தைகள் காணப்படுகின்றன. 'காவாலித்தனம்' தலை மிஞ்சுகிறது.

நகரசபைகளைக் கைப்பற்ற காங்கிரஸ் முயலுமிடங்களிலெல்லாம் எதிர்க்கட்சியினர் குறும்பு பண்ணுகின்றனர்.

தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்கிக்கொள்வோம் என்கிறார்கள்.

வகுப்பு வேற்றுமைப் பேயைக் கிளப்பி விடுகின்றனர்.

நம்மவரிலே பலர் குட்டிக்கரணம் போடுகின்றனர்.

சின்னாட்களுக்கு முன் மகா தீவிர ஒத்துழையாதாரராகவிருந்தோர் இப்பொழுது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதில் மயங்கிக் கிடக் கின்றனர்.

சுதந்திரப்போரில் முன்னணியினின்று முதுகு காட்டி ஓடுவோம் என்கின்றனர்.

காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சிக்குப் போட்டியான நண்பர்களைத் தயாரிப் போம். ஆதரிப்போம் என்கின்றனர்.

சென்னையிலே பிள்ளையார் வேஷம் கிளம்பியுள்ளது. கும்ப கோணத்தில் மூலவேஷம் தோன்றப் போகின்றது. குட்டிக்கரணம் போட்ட



பானர்ஜி, வாட்சா முதலியோரின் கதியை அன்னார் எண்ணிப்பார்ப்பரோ என்றும் எழுதியிருக்கின்றது.

ஆனால் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் சென்னையில் செய்த பிரசங் கத்தை இப்பத்திரிகையில் வெளியிட ஆண்மைத் தனம் இல்லாமல் மறைத்து வைத்துவிட்டு, ஆடு நனைகிறதென ஓநாய் அழுவதுபோல் நம் தலைக்கு கொள்ளி விலைக்கு வாங்கிக் கொண்டதாகவும், வகுப்பு வேற்றுமையைக் கிளப்பி விட்டுவிட்டதாகவும் மிகவும் பரிதாபப்பட்டு ஓலமிடுகின்றது. முதலாவது, இப்பத்திரிகைக்கு வகுப்பு வேற்றுமை இருக்கிறதா இல்லையா? ஒரே வார்டிற்கு நிற்கும் ஒரு பிராமணருடைய தேர்தலுக்காக கூடிய கூட்டத்தின் நடவடிக்கைகளை தாராளமாய் வெளிப்படுத்தியுள்ளது. மற்றவர்களுடைய கூட்டத்தைப் பற்றியோ நடவடிக்கைகளைப் பற்றியோ தங்கள் சாதிக்கோ தங்களைத் தொங்கிக் கொண்டிருப்பவர்களுக்கோ விரோதமாயிருந்தால் அவற் றைப் பிரசுரிப்பதே இல்லை. இது சாதித் துவேஷ மும் வகுப்புதுவேஷமும் அல்லவா? கள்ளுக்குடித்தாலும், மாட்டுமாமிசம் சாப்பிட்டாலும் நான் பிராமணன், மற்றவர்கள் அப்படிச் செய்யாவிட்டாலும் அவர் சூத்திரர், தொடக்கூடாதவர் என்று ஒருவர் சொல்வாரானால் இது வகுப்பு வேற்றுமையா அல்லவா? கோவிலுக்குப் போகும்பொழுதும் குளத்திற்குப் போகும் பொழுதும் குஷ்டரோகியாகவிருந்தாலும், வியபசாரத் தில் ஜீவிப்பவர்களாயிருந்தாலும் தாங்கள் தான் உள்ளே போக வேண்டும் மற்றவர்கள் உத்தமர்களானாலும், வெளியில்தானிருக்கவேண்டும் மதில் பக்கங்கூட நடக்கக்கூடாது என்று சொன்னால் இது வகுப்பித்துவேஷமா அல்லவா? வியபசாரத்தனம் செய்தாலும், வியபசாரத்தனத்திற்குத் தரகு வாங்கினாலும் தாங்கள்தான் உயர்ந்தவர்கள் மற்றவர்கள் சூத்திரர்கள் பஞ்சமர்கள் என்றும் சொல்லுவது வகுப்புத் துவேஷமா அல்லவா? திருடினாலும், மோசம் செய்தாலும், லஞ்சம் வாங்கினாலும் தாங்கள்தான் உயர்ந்தவர்கள் மற்றவர்கள் மேற்சொன்னவற்றை செய்யா திருந்தாலும் சூத்திரர், தீண்டக்கூடாதவர் என்றால் இது வகுப்புத் துவேஷமா அல்லவா? தாங்கள் எண்ணிக்கையில் நூற்றுக்கு மூன்றுபேர் இருந்தாலும் மற்றவர்கள் தொன்னூற்றேழு பேர் இருந்தாலும் தாங்கள் தான் எல்லாப் பதவி களையும், எல்லா ஸ்தானங்களையும், எல்லா உத்தியோகங்களையும் அடைய வேண்டும் என்று பேராசைப்பட்டுக் கொண்டு மற்றவர்கள் எவ்வளவு எண்ணிக் கையில் அதிகமும் யோக்கியர்களாயு மிருந்தாலும் அவர்கள் அதை அடையக் கூடாதென்ற கெட்ட எண்ணத்தின் பேரில் பிராமணரல்லாதாரிலேயே சில பொக்கிகளையும் வயிறு வளர்க்கவோ உத்தியோகம் பெறவோ என்ன வேண்டு மானாலும் செய்யத் தயாராக இருப்பவர்களையும் பத்திரிகை விளம்பரத்தினால் வாழுபவர்களையும் பணமும் பத்திரிகையில் இடமுங்கொடுத்து தங்களுடன் சேர்த்துக் கொண்டு அதற்குத் தகுந்தவிதமாக ஒரு சூழ்ச்சியான கட்சியையும் ஏற்படுத்திக்கொண்டு ஒரு பெரிய வகுப்பாருக்குத் துரோகமாய் இழிவுப் பிரசாரங்கள் செய்வது வகுப்புத்



RangaRakes
tamilnavarasam.com

துவேஷமா இல்லையா? இந்நிலையிலிருக்கும் வகுப்புத் துவேஷிகள் மற்றவர்கள் வகுப்புவாரி உரிமை கேட்பதையும், கொடுக்கிறேன் என்பதையும் வகுப்புத் துவேஷம் என்று சொல்வார்களானால் இவர்களை வைத்துக் கொண்டு ஒருதேசம் எவ்வாறு முன்னேற்றமடையும்? இந்து, சுதேசமித்திரன் முதலிய பிராமணப் பத்திரிகைகள் பிராமணரல்லாதார் விஷயத்திலேயும் தேச விடுதலை விஷயத்திலேயும் யோக்கியமாய் நடக்க வில்லையென்றும், யோக்கியமாய் நடப்பதற்கு ஒரு பத்திரிகை வேண்டுமென் றும் நினைத்து பிராமணரல்லாதார் பணமே பெரும்பான்மையாகவிருந்த காங்கிரசிலிருந்து ரூபாய் பதினாயிரம் கடனும் கொடுத்து பிராமணரல்லாதா ரிடமே பெரும் பான்மையான பணத்தைப் பங்காய் வசூல் செய்து கொடுத்து நடத்தச்செய்த **சுயராஜ்யா** என்னுமொரு தமிழ்ப் பத்திரிகை இம்மாதிரி விசு வாசத் துரோகமாய் நடந்தால் பிராமணரல்லாதாருக்கு இவ்வித பிராமணர் களிடத்தில் எப்படி அவநம்பிக்கை உண்டாகாமல் இருக்கும்? வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம் கேட்கமுடியாமல் எப்படி இருக்கமுடியும்? இதனாலேயே சுயராஜ்யா எழுதுகிறபடி காவாலித்தனமும் விசுவாசத் துரோகமும் மிஞ்சிப் போய் விட்டதென்றும் (இதற்குப் பணம் கொடுத்ததால் பிராமணரல்லாதார்) தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்கிக் கொண்டது வாஸ்தவம்தான் என்றும் ஒப்புக்கொள்வோம். ஆண்மைத்தனமும் சுத்த இரத்தோட்டமும் உள்ள கூட்டத்தால் அப்பத்திரிகை எழுதப்படுமானால் ஒருவர் கூறியவற்றையும் எழுதியவற்றையும் தமது பத்திரிகையில் எழுதி அதற்கு மறுப்பு எழுதி பொது ஜனங்களின் அப்பிராயத்திற்கு விடுவது யோக்கியத்தனமாகும். அப்படிக் கின்றி நீச்சத்தன்மையும் மோச இரத்தமும் ஓடுகிறவர்களால் எழுதப்படு வதனால் உண்மையான விஷயங்களை விட்டுவிட்டு இழிவுப் பிரசாரம் செய்யும் அயோக்கியத்தனத்தைக் கைக் கொள்ளவேண்டியதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை. சென்னையில் ஸ்ரீமான் இராமசாமி நாயக்கர் இரண்டு தினங்கள் ஓட்டர்கள் மகாநாட்டில் பேசியவற்றில் ஒருவரிகூட தமது பத்திரிகையில் போடாமல் பொதுஜனங்கள் இதை அறிந்துவிட்டால் தங்களுடைய யோக்கியதை வெளியாகிவிடுமே என்று மறைத்து விட்ட தல்லாமல் ஈனத்தனமாய் இழிகுலத்தோர் ஜாடை பேசுவதுபோல் குட்டிக் கரணம் போட்டுவிட்டாரென்றும், முதுகுகாட்டி ஓடி விட்டார் என்றும் எழுதி யிருப்பது இவர்களைப் பற்றி உலகத்தார் எண்ணி யிருக்கும் எண்ணத்தை உறுதிப்படுத்துகிறது. மானம் உள்ள ஆயிரம் வீரரோடு ஒரு ஒத்தைவீரன் சண்டை செய்யமுடியும். மானமில்லாத ஒரு கீழ் மகனோடு ஆயிரம் வீரர்களா னாலும் சண்டை செய்ய முடியாது. உண்மையானவர்களும், யோக்கியமான வர்களும் எக்குலத்தவராயினும் நமக்கு தெய்வம் போன்றவர் களே ஆவார்கள். அஃதின்றி அதற்கு எதிரிடையான மற்றவர்கள் நமது எதிரியே ஆவார்கள். நிற்க, மற்ற சில பிராமணப் பத்திரிகைகளும் மேற்கண்ட குணங் களோடு மாறு பெயர்களை வைத்துக் கொண்டு மறைமுகமாய்ப் பேடி யுத்தம் செய்ய ஆரம்பம் செய்து விட்டன. இவைகளையும், இவைபோன்ற இன்னும்



பல யுத்தங்களையும் எதிர்பார்த்தே ராஜீய உலகத்திலும், ராஜதந்திர உலகத்திலும் கடுகளவு இடம் நமக்கு இல்லாமற் போயினும் உண்மையான பரோபகாரத் தொண்டு உலகத்தில் கடுகளவு இடம் கிடைத்தாலும் போதுமென் கின்ற உறுதியின் பேரிலேயே நாமும் போருக்கு ஆயத்தமாகி விட்டோம். உண்மைக்கு யோக்கியதை இருக்கின்றதா இல்லையா என்பதை ஒரு கை பார்த்தே தீர்க்கப் போகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 13.09.1925**



RangaRakes

tamilnavarasam.com

# கண்ணியமற்ற ஒத்துழைப்பு

மிதவாதக் கட்சியினரும் ஜஸ்டிஸ் கட்சியினரும் வெளிப்படையாக அரசாங்கத்தினோடு ஒத்துழைத்து வருகின்றனர். அவர்களது கொள்கை களில் யாம் அபிப்பிராயபேதம் கொள்ளினும் அவர்களது ஒத்துழைப்பு எண்ணம் கண்ணியமாக வெளிப்படையாகவுள்ளது என்றே சொல்லுவோம். அவர்கள் சுயராஜ்யக்கட்சியினரைப் போல் ஒத்துழையாப் போர்வையைத் தாங்கி ஒத்து ழைக்க முற்படவில்லை. அவர்கள் எப்பொழுதும் பகிரங்கமாகவே ஒத்து ழைத்து வருகின்றனர். சுயராஜ்யக் கட்சியினர் அப்படி அல்லாது தேச மக்களி டம் பொய்யைக்கூறி ஓட்டுப் பெற்றுத் தங்களது பிரதிநிதித்துவத்தை மாறான வழிகளில், காங்கிரஸின் கொள்கைகளுக்கே விரோதமாக உபயோகித்து வருகின்றனர். சட்டசபைகளுக்குச் செல்வதினால் ஒத்துழையாமையை இன்னும் தீவிரமாக அங்கு அனுஷ்டிக்க முடியும் எனக்கூறிய இவர்கள் காங்கிரஸிற்கே உலை வைத்து விட்டனர். **ஒத்துழை யாமை** என்னும் பதம்கூட இப்புண்ணிய சீலர்களின் சூழ்ச்சிகளால் மறைந்துவிட்டது. சுயராஜ்யக் கட்சியினர் பலம் உடையவர்கள் என்று அரசாங்கத்தினர் கருதியிருப்பார் களாயின் இவர்கள் வேண்டுவதெல்லாம் தாங்களாகவே வலுவில் கொடுக்க முன் வந்திருப்பார்கள். இவர்களது செயல்களினால் இவர்கள் நம்முடன் ஒத்துழைப் பார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை என அரசாங்கத்தினர் கருதியதால் அரசப் பிரதிநிதி ரீடிங் பிரபுவும் “நீங்கள் மாண்ட்போர்டு சீர்திருத்தத்தை ஒழுங்குடன் பரீட்சித்துப் பார்த்தும் எங்களுடன் ஒத்துழைப்பும் கொள்வீர் களாயின் நாங்கள் உங்களுக்கு வேண்டுவன செய்வதைப் பற்றி யோசிப்போம்” எனக் கூறிவிட்டார். ஒத்துழையா இயக்கத்தைக் கண்டு பயந்த ரீடிங் பிரபு இவ்விதம் லட்சியமில்லாது நம்மைச் சிறிதும் மதியாது பேசுவதற்குக் காரணம் சுயராஜ்யக் கட்சியினர் தான் என்பதில் ஐயம் யாது? ஒத்துழையா இயக்கத்திற்குக் கூற்றுவனாக விளங்கியவர் இச்சுயராஜ்யக் கட்சியினரே என்பதை யாம் பன்னிப் பன்னிக்கம் கூற வேண்டு வதில்லை. சுயராஜ்யக்கட்சியின் மூல புருஷராக விளங்கிய ஸ்ரீமான் பட்டேல் இந்தியா சட்ட சபையின் தலைவர் பதவி ஏற்றுக்கொண்டதைப் பற்றியும், பண்டித நேரு ஸ்ரீமான்கள் அரங்கசாமி அய்யங்கார், கெல்கார் இவர்கள் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட கமிட்டிகளில் அங்கம் பெற்றதைப் பற்றியும் முன்னர் எழுதியுள்ளோம். நாளாக நாளாக இன்னும் கேவலமாகி வருகின்றனர். அரசாங்கத்தினரைக் கெஞ்சவும் முற்பட்டுவிட்டனர்.



பண்டித நேரு அவர்கள் திங்கட்கிழமை கூடிய இந்திய சட்டசபைக் கூட்டத்தில் கனம் முட்டிமன் அரசியல் சம்மந்தமாக கொண்டுவந்த ஒரு தீர்மானத்திற்கு ஓர் திருத்தப் பிரேரணை ஒன்று கொண்டுவந்தார். அதுவும் நிறைவேறியது. இதில் இந்தியாவுக்கு வேண்டும் தேவைகளை யெல்லாம் கூறியுள்ளாராம். இப்பிரேரணையில் இவர் என்ன வேண்டுமென அரசாங்கத் தினரை வேண்டுகின்றாரோ அதற்கும் மிதவாதிகள் ஜஸ்டிஸ் கட்சியினர் விரும்புவதற்கும் யாதொரு வித்தியாசமும் இருப்பதாக எமக்கு விளங்க வில்லை. சுயராஜ்யக் கட்சியினரின் தேவை இவ்வளவுதான் என்றால் இத் தேவைகளையெல்லாம் முன்னரே அரசாங்கத்தினரின் வாயால் பெற்றி ருக்கலாம். காந்தி அடிகள் ஒத்துழையா இயக்கம் ஆரம்பித்திருக்க வேண்டு வதில்லை. பல தியாகிகள் சிறைக்குச் சென்றிருக்கவேண்டுவதில்லை. வக்கீல் கள் தத்தம் தொழிலை நிறுத்தித் தவிக்கவேண்டுவதில்லை. வாலிபர்கள் பள்ளியை நிறுத்தியிருக்கவேண்டுவதில்லை. இவைகளையெல்லாம் விழலுக் கிறைத்த நீர்போல் ஆக்கிவிட்டனர். காந்தி அடிகளை பள்ளத்தில் இறக்கி விட்டனர். 1921-ம் ஆண்டில் சர். சங்கரன் நாயர் தலைமையின் கீழ் பம்பாயில் கூடிய சர்வகட்சி மகாநாட்டின் பொழுதாவது தங்களது விருப்பம் அரசாங்கத் தாரை அண்டிக் கெஞ்சுவது எனத் தெரிவித்திருப்பார்களாயின் அரசாங்கத் தினர் வேண்டுவன செய்வதாகக் கூறியிருப்பார்கள். அப்பொழுதெல்லாம் தங்களது எண்ணங்களை மறைத்து மாறுவேடம் தாங்கிய இவர்கள் இப்பொழுது தங்களது உண்மை உருவத்தைக் காண்பித்து விட்டார்கள். இவர்களால் காந்தி அடி களுக்கு, காங்கிரஸிற்கு தியாகம் செய்த வீரர்களுக்கு ஏற்பட்டுள்ள அவ மானத் திற்கு ஓர் அளவில்லை. இவர்கள் இந்தியாவின் விடுதலைக்கே பங்கம் வைத்த வர்கள் என்றுதான் சொல்லவேண்டும். இக் கட்சியினரை தேச விடுதலைக் குழைப்பவர்கள் என்று சொல்லி மித வாதிகளைவிடவோ, ஜஸ்டிஸ் கட்சியினரை விடவோ மேலென்று கூறுவது எவ்வாறு ஏற்றதாகும்? இவர்களை உண்மைக்கு மாறானவர்கள் என்றேதான் சொல்லவேண்டும். இனியாவது பொதுமக்கள் இவர்கள் மற்றக்கட்சியினரை விட மேலானவர்கள் அல்லது தேசபக்தி மிகுந்த வர்கள் எனவெண்ணி ஏமாறாதிருப்பார்களா?

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 13.09.1925**



RangaRakes tamilnavarasam.com

# கஞ்சீவரம் மகாநாட்டுத் தலைவர்

கஞ்சீவரத்தில் நடைபெறப்போகும் தமிழ்மாகாண மகாநாட்டிற்கு தலைவர் தெரிந்தெடுப்பதில் பலவிதமான அபிப்பிராயங்களும் வதந்திகளும் உலவி வருகின்றன. முதன் முதலாக ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவை யாம் சிபார்சு செய்தோம். அதை அவர் மறுத்துவிட்டதோடு நில்லாமல் பொது ஜனங்களுக்கு, தன்னை யாரும் சிபார்சு செய்யக்கூடாது என புத்திமதியும் கூறிவிட்டார். இப்படி அவர் புத்திமதி கூறியது தன்னைப் பற்றி அதிகமாய் நினைத்துக்கொண்டார் என்பதைத்தான் காட்டுகிறது. ஸ்ரீமான் தங்கப் பெருமாள்பிள்ளை அவர்களைத் தலைவராகத் தெரிந்தெடுக்கக்கூடுமென்று வதந்தி உலவுவதாக ஜஸ்டிஸ் பத்திரிகையும், திராவிடன் பத்திரிகையும் எழுதியதோடு அதற்குச் சில காரணங்களையும் கூறுகின்றன. இப்படி அப்பத்திரிகைகள் எழுதுவதற்குக் காரணம் ஸ்ரீமான் தங்கப்பெருமாள் பிள்ளை அவர்களை இப்பத்திரிகைகள் நன்கு அறிந்து கொள்ளாததுதான் என்று சொல்லுவோம். ஸ்ரீமான் தங்கப்பெருமாள் பிள்ளை அவர்கள் குருகுலப் போராட்டத்தில் ஸ்ரீமான் அய்யரை ஆதரித்தார் என்னும் கூற்றுக்குச் சிறிதும் ஆதாரமில்லை. தமிழ்நாட்டிலுள்ள எவரையும் விட நாம் அவரிடத்தில் மிகவும் நெருங்கிப் பழகியுள்ளோம். சில பிராமணரல்லாத பெரியோர் என்று சொல்லப் படுகின்றவர்களைப் போல் பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டுகிற குணம் அவரிடம் சிறிதும் கிடையாது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தில் அவருக்குச் சிறிது அபிப்பிராய பேதம் உண்டென்பதை யாமும் ஒப்புக் கொள்ளுகிறோம். அதற்காக பிள்ளை அவர்களைச் சில பிராமணர்கள் சூழ்ந்து போற்றுவதும் உண்மையே. ஆனால் தம்முடைய அபிப்பிராயம் மற்ற பிராமணரல்லாத தலைவர்கள் என்று சொல்லப்படுவோரில் சிலரைப் போன்று, பிராமணரின் போற்றுதலுக்காக ஏற்படுத்திக் கொண்டதல்ல. பிராமணரல்லாத தலைவர்கள் என்று சொல்லப் படுவோரிலேயே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி யாதொரு அபிப்பிராயமும் கூறாமல் மவுனம் சாதித்து இரு சாராரையும் ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர் என்பதை திராவிடன், ஜஸ்டிஸ் பத்திரிகைகள் கவனித்தனவா? எவ்வளவோ அனுபவம் பெற்ற போழ்திலும் ஜஸ்டிஸ், திராவிடன் பத்திரிகைகளுக்கு உறுதியான தேச பக்தர்களை அறிந்துகொள்வதற்குப் போதிய ஆதாரம் இல்லையென்றே சொல்லு வோம்.இதை ஒப்புக்கொள்ளாது அவை மறுக்குமானால் பிராமணப் பத்திரிகைகள் போல் சமயத்திற்கு ஏற்றவிதமாய் ‘குருட்டுக்கண்ணனை செந்தாமரைக் கண்ணன் என்றும்’ சுத்த மதியீனனைத் தத்துவஞானி என்றும், எழுதித் தங் கட்சிக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ளுகின்ற இழி குணத்தைத் தாமும் அநுசரிப்பதாகவாவது ஒப்புக்கொள்ளவேண்டும். ஸ்ரீமான் தங்கப்பெருமாள் பிள்ளை அவர்கள் நமது பத்திரிகையின் துணை ஆசிரியர் பதவியினின்றும் விலகிக் கொண்டதை சில விஷமக்கார நிருபர்களும் பிராமணப் பத்திரிகைகளும் தங்களுக்கு அநுகூல மாய் உபயோகப்படுத்திக் கொள்ளுவதற்காக தப்புக் கற்பனைகள் செய்து விட்டதால் பொதுஜனங்கள் கெட்டெண்ணம் கொண்டு விடமாட்டார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம். ஸ்ரீமான் பிள்ளை அவர்களை அக்கிராச னராக அடையும் பாக்கியம் கஞ்சீவரம் மகாநாட்டிற்கு ஏற்படுமாயின் அதைத் தமிழ் நாட்டின் தவப்பயன் என்றுதான் சொல்லுவோம். ஸ்ரீமான் தங்கப் பெருமாள்பிள்ளை போலும் ஸ்ரீமான் மாய வரம் எஸ்.ராமநாதனைப் போலும் தங்கள் அபிப்பிராயங்களை தைரியமாய் வெளியிடும் தலைவர்கள் ஒருவருமில்லை. தாங்கள் நன்கு அறிந்துகொள் ளாத ஒருவரைப் பற்றி தாங்கள் அறிந்த தாக எண்ணி அவசரப்பட்டு புகழ்ந்தோ இகழ்ந்தோ எழுதுவது உண்மைப் பத்திரிகைகளின் கடமை அல்ல என்பதை யாம் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.09.1925**





RangaRakes tamilnavarasam.com

# ஊன்றிப்படித்து உண்மையை அறியுங்கள்

சென்ற வாரம் "சுயராஜ்யா" பத்திரிகையின் விஷமப்பிரசாரத்தைக் குறித்து எழுதியிருந்தோம். இவ்வாரம் "சுதேசமித்திரன்" பத்திரிகையினுடையவும், ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரினுடையவும் விஷமப் பிரசாரங்களுக்குப் பதில் எழுதும்படி வந்து விட்டது. சுதேசமித்திரன் பத்திரிகையில் சென்னையில் சுயராஜ்யக்கட்சியாரின் வெற்றியைக் கொண்டாட "ஸ்ரீமான் ராமசாமி நாயக்கரின் முயற்சி பலிக்கவில்லை" என்றும் " வேலியே பயிரை மேய்கிறது" என்கிற தலைப்பின் கீழ் குறிப்பிட்டிருக்கும் பல பொய்களுக்கு பதில் எழுதாவிட்டாலும் ஈரோட்டில் தனது தம்பி முனிசிபல் சபையில் ஸ்தானம் பெறும்படி செய்வதற்காக காங்கிரஸ் பெயரையும் மகாத்மாவின் பெயரையும் ஸ்ரீ நாயக்கர் உபயோகப்படுத்திக்கொண்டது ஞாபகமில்லையா என்று பெரிய பொய்யை எழுதியிருக்கிறது. முதலாவது ஸ்ரீமான் ராமசாமி நாயக்கருக்கு தம்பியே கிடையாது. சென்ற வருஷத்தில் நடந்த ஈரோடு முனிசிபல் தேர்தலில் அவர் தமையனார் முனிசிபல் அபேட்சகராய் நிற்கிற காலத்தில் ஸ்ரீமான் நாயக்கர் திருவனந்தபுரத்தில் இருந்திருக்கிறார். அவர் திருவனந்தபுரம் சிறையிலிருந்து விடுதலையாகி ஈரோட்டிற்கு வந்த பொழுது முனிசிபல் தேர்தலுக்கு மூன்று நாட்கள்தானிருந்தன. ஈரோட்டிற்கு வந்த உடனே வேறு கேஸின் பேரில் சென்னைக்கு நாயக்கரைப் பிடித்துக்கொண்டு போய்விட்டனர். சென்னையிலிருந்து எலக்ஷனுக்கு முன்தினம் பகல்தான் ஈரோட்டிற்கு வந்து சேர்ந்தார். ஒருசமயம் ஒன்று இரண்டு ஓட்டர்களோடு பேசக்கூடிய சமயம் இருந்திருந்தாலும் மகாத்மாவின் பெயரையும் காங்கிரஸின் பெயரையும் ஸ்ரீமான் நாயக்கர் பயன்படுத்திக்கொண்டார் எனச்.... வேண்டுமென்றே காங்கிரஸின் பெயரால் நிற்பதற்கு வேண்டி வேறு சில அபேட்சகர்கள் வேறு ஒரு எலக்ஷனுக்காக அச்சுப்போட்டு வைத்திருந்த காங்கிரஸ் நிபந்தனைப் பிரசுரங்களையும் கிழித்து எறிந்திருக்கிறார். ஈரோட்டில் காங்கிரஸின் பெயரை முனிசிபல் நிர்வாகத்திற்குள் கொண்டு வந்து விடக்கூடாது என்று எவ்வளவோ பிரயத்தனப்பட்டு அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்.

அடுத்தபடியாக "ஸ்ரீமான் நாயக்கரின் முயற்சி பலிக்கவில்லை" எனத் தலையங்கம் போட்டு வெற்றி கொண்டாடி இருக்கிறார்கள். ஸ்ரீமான் நாயக்கரின் முயற்சி பலிக்கவில்லையென்பதை ஒரு சமயம் ஒப்புக்கொள்வதானாலும் அதன் வெற்றியை இவர்கள் பாராட்டிக்கொள்ளமுடியாது.



ஏனென்றால் ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரவர்களும், ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களும் செய்த பிரசங்கங்களினாலும் பொதுஜனங்களுக்குத் தெரிவித்துக் கொண்டு வந்த ஸ்ரீ முகங்களினாலும் முறையே பொது ஜனங்கள் இந்தக் கூட்டத்தாரை நம்பும்படியாகி நம்பிக்கைத் துரோகத்தின் மூலமாய் வெற்றி ஏற்பட்டுவிட்டது. நம்பிக்கை துரோகத்தின் மூலமாய் ஏற்பட்ட வெற்றியைக் கொண்டாடுவது கீழ் மக்களின் பிறப்புரி மையே அன்றி மேல் மக்களின் தன்மை அல்ல. பொது மக்கள் ஏமாந்த வர்களாய் இருக்கிற வரையிலும் இவ்விதமான காரியங்களைத் திடீரெனத் தடுப்பது சுலபமான காரியமல்ல. ஆயினும் தேசத்தின் பொருட்டு உண் மையை உரைத்து அதனால் ஏற்படும் துன்பங்களை ஏற்றுக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறோம் என்று ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரவர்கள் சீனிவாசய்யங்கார் வசை பொறுக்காமல் தமது நவசக்தியில் எழுதியிருப்பது போல் நமது கடமையைச் செய்யாமலிருக்கப் போவதில்லை.

ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் அவர்கள் நன்னிலத்தில் ஒரு கூட்டத்தில் பேச சந்தர்ப்பம் கிடைத்தபொழுது கூறியிருப்பதானது ஒரு புத்தி சுவாதீனமில்லாதவரிடம் கூட எதிர்பார்க்க முடியாததாயிருக்கிறது.

**க.** அதாவது:- தென்னாட்டுத் திலகர் கூட மாறி இருக்கிறார். (இது ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவைத்தான் மனதில் வைத்துப் பேசியதாகும்,

**உ.** "சீர்திருத்த விஷயத்தில் பண்டித நேருவுடைய தீர்மானம் தீவிரமானதாக இருக்கவில்லையெனச் சிலர் நினைக்கலாம். அப்படி இல்லையானால் சர். பி. சிவசாமி அய்யரும், ஸ்ரீமான் ரெங்காச்சாரியாரும் எவ்விதம் நம்முடன் வருவார்கள்? சீர்திருத்தம் கிடைக்காவிட்டால் அடுத்தபடியில் இறங்குவதாய்ச் சொல்லியிருக்கிறார். ஆகையால் சுயராஜ்யக் கட்சியினரிடம் சந்தேகம் ஏற்பட நியாயமில்லை.

**ங.** ஸ்ரீமான் ஈ.வி.ராமசாமி நாயக்கரும், ஆரியாவும், ஜஸ்டிஸ் கட்சியினர் ஆதரிக்கும் ஒரு சுயேச்சைக் கட்சியாரை சென்னை முனிசிபல் தேர்தலில் ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள்.

**ச.** ஸ்ரீமான்கள் ஈ.வி.ராமசாமி நாயக்கர், திரு.வி.கலியாணசுந்தர முதலியார் முதலியவர்களின் உட்கருத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஸ்ரீமான் முதலியாரும் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்துவிட்டார். அவருடைய செய்கை மாரீசன் செய்கையாகும். இவர்கள் தீவிர ஒத்துழையாமையை அநுஷ்டிக்க விரும்பினால் பெல்காம் காங்கிரஸில் ஏன் வற்புறுத்தியிருக்கக்கூடாது?

**ரு.** ஸ்ரீமான் ஈ.வி. ராமசாமி நாயக்கர் தீவிர ஒத்துழையாமையை விரும்பின் நான் திருவண்ணாமலையில் கொண்டுவந்த சுயேச்சை தீர்மானத்தை ஏன் எதிர்க்கவேண்டும்?

**சா.** கனம் பனகால் ராஜா கூப்பிட்டுவிட்டார் என்பதற்காக



RangaRakes tamilnavarasam.com

சென்னையில் ஸ்ரீமான் நாயக்கர் பிரசங்கம் புரிய வந்துவிட்டார்.

ஏ. ஆகையால் காங்கிரஸைப் பரிசுத்தப்படுத்த வேண்டியது அவசிய மாயிற்று. நான் அந்த வேலையைத்தான் முதலில் பார்க்கப் போகிறேன்.

**அ.** தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவரைப் பற்றித் தகரார் இல்லை.

**க்ஷ.** குருகுலத்தார் கொள்கையில் எனக்கு அநுதாபம் இருந்த போதிலும் அநுபவத்தில் அது இப்பொழுது சாத்தியப்படாது என்பதனா லேயே நான் ஒதுங்கி நிற்க நேர்ந்தது.

**ய.** எங்கள் கட்சியில் குறைகள் இல்லை என்று சொல்லவில்லை. எங்கள் கட்சியின் க்ஷேமத்தில் உண்மையாக அபிமானம் உள்ளவர்கள் உள்ளே புகுந்துதான் திருத்தவேண்டும் என்று இன்னும் பலவாறாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

## பதில்

**க**. தென்னாட்டுத்திலகரென்னும் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு ஜஸ்டிஸ் கட்சியாரை ஊர் ஊராய்த் தூற்றி வெற்றிமாலை சூடி வந்தகாலத்தில் ஸ்ரீமான் அய்யங்கார் கூட்டத்தினர்தான் ஸ்ரீமான் நாயுடுவுக்கு தென்னாட்டுத்திலகர் என்று பட்டம் கொடுத்ததும் வண்டியில் உட்கார வைத்துக் குதிரையை அவிழ்த்து விட்டுக் கையால் இழுத்ததும் அவர் பின்னால் அய்யர் அய்யங்கார் கூட்டங்கள் போய் அவரைக் கொண்டு தங்கள் பேரில் பொது ஜனங்கள் முன்னால் கவி பாடச் செய்து ஜஸ்டிஸ் கட்சியை ஆழ்த்தி தாங்கள் தலைவர்களாகி விட்டதும் மறந்து விட்டு இப்பொழுது மாறி விட்டார் என்கிறார்கள். ஆனாலும், நாம் அதற்காகச் சிறிதும் கவலைப்படவில்லை. ஏனென்றால், இந்த அய்யர் அய்யங்கார் கூட்டங்களும் அவர்களது பத்திரிகைகளும் மறுபடியும் முன்போலவே ஸ்ரீமான் நாயுடுவின் படத்தை தங்கள் வீட்டில் வைத்து பூஜை செய்யும் படியும் வண்டியில் வைத்து இழுக்கும்படியும் செய்து கொள்ள அவருக்குத் தெரியும்.

**உ**. சீர்திருத்த விஷயமாய் இவர் பெருமை பாராட்டிக்கொள்வதற்குக் காரணம் சர்.பி.சிவசாமி அய்யரும், ஸ்ரீமான் ரெங்காச்சாரியாரும் இவர் களுடன் வரும்படி செய்துவிட்டார்களாம். இப்பேர்ப்பட்ட பிரபுக்களு டன் சேர்ந்து செய்து கொள்ளும் சீர்திருத்தத்தை விட ஜஸ்டிஸ் கட்சி யாருடன் சேர்ந்து செய்து கொள்ளும் சீர்திருத்தம் ஒருவிதத்திலும் கேவலமாக இருக் காது. ஏனென்றால் சிவசாமி அய்யருடைய........கோரிக்கைகளுக்கும், அபிப் பிராயங்களுக்கும் ஜஸ்டிஸ் கட்சியாருடையவோ இன்னும் ஆங்கிலோ இந்தி யர்களுடையவோ இன்னும் மற்றும் எவருடையவோ ராஜிய அபிப்பிராயம் மோசமாயிருக்குமென்று கடுகளவு புத்தி உள்ளவனும் நினைக்க மாட் டான். இதனாலேயே சுயராஜ்யக் கட்சியின் ராஜீயத்திட்டம் எத்தகைய யோக்கியதை உடையதென்பதை பொது ஜனங்களுக்கு நாம் சொல்ல வேண்டுவதில்லை.



**ங.** ஸ்ரீமான் ஆரியாவும், ராமசாமி நாயக்கரும் ஒரு சுயேச்சைக் கட்சி யாரை ஆதரித்ததாக சொல்லுவது உண்மையான காரியமல்ல. ஸ்ரீமான் ஆரியாவைப்பற்றி ஸ்ரீமான் ஆரியாவே பதில் சொல்லுவார். ஸ்ரீமான் ராமசாமி நாய்க்கர் சென்னைக்குப் போனது ஓட்டர்களின் கடமையை எடுத்துச்சொல் வதற்காகவே தான். ஒரு அபேட்சகரையும் ஆதரிக்கவில்லை. சுயராஜ்யக் கட்சியார் சென்னைத் தேர்தலில் செய்யும் கொடுமைகளையும் சூழ்ச்சி களையும் ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் போன்றவர்களால் கேள்விப் பட்டு அதையும் அறிந்து வரவேண்டுமென்கிற கவலையாலுமேதான். அங்குபோய் பார்த்தவரையிலும் சுயராஜ்யக் கட்சியாரின் நடவடிக்கை ஸ்ரீமான் முதலியாரவர்கள் சொல்லியதைவிட எவ்வளவோ மடங்கு அதிக மாயிருந்தது. இவர்களை சுயராஜ்யக் கட்சியென்று கூப்பிடுவதே விபசாரி களை தேவதாசிகளென்று சொல்வது போலும், கொடுமைக்காரரை பிராமணர் கள் என்று சொல்வதுபோலும் தற்காலக் கோர்ட்டுகளையும், வக்கீல்களையும் நியாயஸ்தலம் என்றும், நியாய வாதி என்றும் சொல்வதுபோலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களை பொதுஜன ஊழியர்கள் என்று சொல்வது போலும் தேசத்தின் பொருளை கொள்ளை அடித்துக் கொண்டுபோக வந்திருக்கும் ஒரு வியாபாரக் கூட்டத்தாரை அரசாங்கத்தார் என்று சொல்வது போலும் அந்நிய ராஜ்யம் நிலைபெறுவதற்குப் பாடுபடப் பிறந்திருக்கும் ஒரு கூட்டத்தாரை சுயராஜ்யக் கட்சியாரென்று கூப்பிடுவது குற்றமல்லவென்று நினைக்கும்படி ஆகிவிட்டது.

**ச.** ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியை வைது தனது தேசபக்தன் பத்திரிகையில் கலம் கலமாய் எழுதி அதற்கு செல்வாக்கில்லாமல் அடித்துக்கொண்டு வந்த காலத்தில் அவருடைய மனப் பான்மையானது இந்த ஐயங்கார்களுக்கு வெகு சுலபமாய்த் தெரியக்கூடிய தாகவிருந்தது. இப்பொழுது சுயராஜ்யக் கட்சியின் பெயரால் இந்த ஐயர் ஐயங்கார்கள் செய்யும் அக்கிரமங்களை எவ்வளவோ தற்காப்புடன் கொஞ்சம் வெளியிடுவதினாலேயே அவர் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்துவிட்டார் என்று சொல்லுவதற்கே தைரியம் வந்துவிட்டது. கூட்டத்திலிருந்த ஒருவர் ஸ்ரீமான் முதலியார் கூடவா ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்துவிட்டார் என்று கேட்க, ஆம், ஏழுகிணற்று வீதியில் வந்து விசாரித்துப்பாருங்களென ஐயங்கார் சொல்லி விட்டார். இதைப் பார்த்த ஸ்ரீமான் முதலியார் அவர்களும் மனம் நொந்து ஏழு கிணற்று மீட்டிங்கில் சுயராஜ்யக் கட்சி சார்பில் தாமே அக்ராசனம் வகித்து சுயராஜ்யக் கட்சியார்க்கே ஓட்டுக்கொடுக்க வேண்டுமென்று சொன்னதாகவும் கீழ்ப்பாக்கத்து மீட்டிங்கிலும் ஸ்ரீமான் இ.எல். ஐயருக்கு ஓட்டுக்கொடுக் கும்படிச் சொல்லியதையும் சுட்டிக்காட்டி ஐயங்கார் கூற்றை முழுவதும் பொய்யென்று மறுத்து பத்திரிகை செய்திக்கும் ஒரு மறுப்பும் எழுதி யிருக்கிறார். மற்றோரிடத் தில் ஸ்ரீமான் அய்யங்கார் எம்மை (ஸ்ரீமுதலி யாரை) சுயராஜ்யக்கட்சிக்கு எமன் எனக்கருதி மனம் போனவாறு பேசுகிறார். செல்வச் செருக்கும், செல்வாக்குப் பெருக்கும் நிலையில்லாதது என்பதை



RangaRakes tamilnavarasam.com

ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரருக்கு நினைவூட்டுகிறோம் என்று ஒரு பெரிய சாபமும் கொடுத்துவிட்டு மற்றோரிடத்தில் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தமக்கு தேசமே பெரியதென்றும் தேசத்தின் பொருட்டு உண்மை உரைத்து அதனால் ஏற்படும் துன்பங்களை ஏற்றுக்கொள்ளச் சித்தமாய் இருக்கிறோம் என்றும் வீரப்போர் முழக்கியிருக்கிறார். இதிலிருந்தே ஸ்ரீமான் ஐயங்காரவர் களையும், முதலியார் அவர்களையும் நன்றாய் அறிந்தவர்களுக்கு ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் யோக்கியதை எத்தகையது என்பது நன்கு விளங்கும்.

ஸ்ரீமான் நாயக்கரைப்பற்றி சொல்லியிருப்பவைகளுக்கு அதிகமாக பதில் சொல்லவேண்டியதில்லை யென்றே நினைக்கிறோம். ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்கப் பாடுபட்டு அதை ஒழித்து பிராமணர்களுக்கு ஆக்கம் தேடிக்கொடுத்த ஸ்ரீமான்கள் நாயுடு, முதலியார் போன்றவர்கள் கதிகளே இப்படி இருக்குமானால் ஜஸ்டிஸ் கட்சியைவிட தமிழ்நாடு சுயராஜ்யக் கட்சியார் அரசியல் கொள்கையில் தாழ்ந்தவர்களென்றும் அது பிராமணக் கட்சி என்றும் சொல்லி வருபவரும் எழுதிவருபவரும் சுயராஜ்யக் கட்சி ஜஸ்டிஸ் கட்சியைவிட மோசமான ராஜீயக் கொள்கை உடைய சுயநலக்காரர் கள் கட்சி என்றும் காங்கிரஸிலிருந்து கொண்டு உத்தியோகமும் பணமும் பெருமையும் அடைந்து வருகிறார்களென்றும் எல்லாக் கட்சியிலும் அயோக் கியர்களும், யோக்கியர்களும் இருக்கிறார்களென்றும் சொல்லிவந்த நாயக் கரைப்பற்றி இவர்கள் என்னதான் சொல்ல அஞ்சுவார்கள்? தாங்கள் மனிதர் கள் ஆவதற்காகவும் பாமர ஜனங்களிடம் செல்வாக்குப் பெறுவதற்காகவும் நாயக்கர் பின்னால் இவர்கள் ஊர் ஊராய்த் திரிந்து கொண்டிருந்தகாலத்தில் நாயக்கரை பிரம்மரிஷியென்றும் ராஜரிஷியென்றும் துறவியென்றும், சந்நி யாசியென்றும், தமிழ்நாடு காந்தி என்றும் ஸ்ரீமான் நாயக்கர் போன்றவர் களெல்லாம் காங்கிரஸில் இருக்கும்பொழுது ஏன் பொதுஜனங்கள் காங்கிர சைப்பற்றிச் சந்தேகப்படவேண்டும் என்றும் சொல்லியும் விளம்பரப்படுத்தி யும் வந்தவொரு கூட்டத்தார் தங்களுடைய சுயநலத்திற்குக் கொஞ்சம் விரோதமாக இருப்பதைப் பார்த்தவுடன் ஆரியாவும், முதலியாரும், நாயக்க ரும் காங்கிரஸிலிருப்பதனால் இவர்களைக் காங்கிரசைவிட்டு வெளியாக்கி காங்கிரசைப் பரிசுத்தமாக்கவேண்டியது அவசியமாகிவிட்டதெனச் சொல்லு வது ஓர் அதிசயமா? நாயக்கர் பேசுவதையும் எழுதுவதையும் தாங்கள் சொல்லி எழுதி பதில் சொன்னால் இவர்கள் வீரர்கள்தான். அஃதின்றி கோழைத்தனமாய் உளருவதற்கு என்ன பதில் சொல்லமுடியும்? பெல்காம் காங்கிரசில் நாயக்கர் பூரா ஒத்துழையாமையையும் வலியுறுத்தியதை அய்யங் கார் மறந்து விட்டாரோ?

**ரூ.** திருவண்ணாமலையில் ஸ்ரீமான் நாயக்கர் சுயேச்சை தீர்மானத்தை ஏன் எதிர்த்தார் என்று கேட்கிறார்? ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு சுயேச்சை தீர்மானம் கொண்டுவர யோக்கியதை உண்டா? விடிந்து எழுந்தால் அதிகார வர்க்கத்தினிடம் சென்று கடவுளே பிரபுவே எனக் கெஞ்சுகிறார், அதன் மூலமாகவே பணம் சம்பாதித்து வாழ்கிறார். ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் ஜெயிலுக்குப்போகத் தயார் செய்துகொண்டிருந்த காலத்தில் ஒத்துழையாமை சட்ட விரோதமானது, அதை அடியுடன் ஒழித்துவிடவேண்டுமென சர்க்கா ருக்கு யோசனை கூறினார். சர்க்காரும் இவர் யோசனையை துண்டுபிரசுர மூலம் வெளியிட்டார்கள். காந்தி அடிகள் வக்கீல் தொழிலை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்ட காலத்தில் மகாத்மாவிற்குப் புத்தியில்லை என்று சொல்லிக் கொண்டு லட்சக்கணக்காய் சம்பாதித்துக் கொண்டிருந்தார். இப்பேர்ப்பட்டவர்களை வைத்துக்கொண்டிருக்கும் தேசத்திற்கு முழு சுதந்திரமும் வேண்டுமென்று இவர் கேட்டபொழுது பெரும்பான்மையோர் அதை எதிர்த்தது நாயக்கர்பேரில் ஒரு தப்பிதமாகப் போய்விட்டதாம். மகாத்மா கோரும் ஏழைகளின் சுயராஜ்யமே இவர்களுக்குப் பிடிக்காமல் ஒத்துழையாமையை பாழாக்கிவிட்ட இவர்கள் பூரா விடுதலைக்கு இவர்கள் பாடுபடுவார்கள் என்பதை எந்த மனிதன் நம்புவான்? அப்படித்தான் வேறு யாராவது பாடுபட்டு வாங்கிக் கொடுத்து விட்டால் சுயராஜ்யம் இல்லாத காலத் திலேயே தாங்கள் உயர்ந்த ஜாதியார்கள், மற்றவர்கள் வேசிமக்களென்றும் மனிதருக்கு மனிதர் பார்த்தால், பேசினால், கிட்டவந்தால், தெருவில் நடந்தால் பாபம் என்று நினைத்து அதன்படி நடந்து கொண்டிருக்கிறவர்கள் யோக்கிய மாய் சமத்துவமாய் நடந்துகொள்வார்கள் என்று எப்படி நம்பமுடியும்? அல்லாமல் காங்கிரசாவது தீவிர ஒத்துழையாத் திட்டமாவது ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் கொண்டு வந்த சுயேச்சை தீர்மா னத்தை ஒரு திட்டமாய் கொண்டிருக்கிறதா? அல்லது ஆதரிக்கிறதா? இவற்றை கொஞ்சமும் யோசிக்காமல் ‘தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி தண்டப் பிரசண்டன்’ என்று சொல்லுவதுபோல் பாமர ஜனங்களிடம் என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்று வக்கீல் புத்தியைக் காட்டி விட்டார் போலும்!

**சா.** கனம் பனகால் ராஜா கூப்பிட்டதற்கு ஆக சென்னைக்கு வந்து பேசியது என்பது :– ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து கொண்டனர். பனகால் ராஜா கூப்பிட்டார்; அவரிடம் பேசினார் என்கின்ற இந்த மூன்று. ஆக தங்களா லேயே பிராமணரல்லாத காங்கிரஸ்காரர்களை கொன்றுவிடலாம் என்று நினைத்துக் கொண்டு ஒவ்வொரு சமயத்திலும் இதை உபயோகிக்கிறார்கள். இந்த குணம் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் மாத்திரம் அல்ல. இந்த ஜாதி பத்திரிகைகளிடமும் காங்கிரஸ்காரரிடமும் இருக்கிறது. இதைப்பற்றி முன்னம் ஒரு தடவையும் இப்படியே சொல்லியும் எழுதியுமிருக்கிறார்கள். அது களுக்கு கொடுத்த பதில், மானம் வெட்கம் உள்ளவர்களாயிருந்தால் மூன்று தலை முறைக்கு இப்பேர்ப்பட்ட நீச்சக் காரியத்தில் மறுபடியும் இறங்கத் துணியவே மாட்டார்கள். சென்னைக்கு வந்து ஸ்ரீமான் நாயக்கரைப் பிரசங்கம் செய்யும் படி பனகால் ராஜா கூப்பிட்டதாக இவர் சொல்லுவதை ருஜூ செய்தால் யோக்கியமானவர்தான். இல்லையேல்.........................................................

**குடி அரசு – தலையங்கம் – 20.09.1925**





RangaRakes tamilnavarasam.com

# உண்மையான தீபாவளி

**தமிழ்நாடு கதர்போர்டு அக்கிராசனர் ஸ்ரீயுத ஈ.வெ.ராமசாமி நாய்க்கர் எழுதுகிறார்.**

தீபாவளி என்பது வருஷத்திற்கொருமுறை வந்து பெருவாரியான இந்து குடும்பங்களுக்கு சந்தோஷத்தையும், ஆனந்தத்தையும் கொடுத்து தங்கள் குழந்தை குட்டிகள் மக்கள் மருமக்கள் முதலானவர்களோடு களிக்கும் ஒரு பெரிய பண்டிகையாகும். அப்பண்டிகையன்று ஏழையானாலும் பணக்காரனானாலும், கூலிக்காரனானாலும், முதலாளியானாலும் பண்டிகையை அனுபவிப்பதில் வித்தியாசமில்லாமல் தங்கள் தங்கள் சக்திக்குத் தகுந்தபடி ஸ்நானம் செய்வதும், புது வஸ்திரங்களை அணிவதும், பலகாரங்கள் உண்பதும் முக்கிய கொள்கையாகும். இக்கொள்கைகள் எந்த தத்துவங்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது என்பதில் எவ்வளவு அபிப்பிராய பேதங்கள் இருந்தபோதிலும் பொதுவாய் மக்கள் சந்தோஷத்திற்கு புதிய வஸ்திரங்களையே அணிய வேண்டுமென்றிருப்பதனால் ஏழைத் தொழிலாளருக்கு ஒரு விடுதலையும் ஏற்பட்டு வந்ததென்பது அபிப்பிராய பேதமில்லாமல் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். தற்கால அனுபவத்திலோ சந்தோஷமும் களிப்பும் பலவிதமாயிருந்தாலும் பெரும்பாலும் மேற்படி தீபாவளியானது ஏழை தொழிலாளர்களுக்கு பெருந் துரோகத்தை செய்வதற்கே வருவதாகவும் போவதாகவும் ஏற்பட்டுவிட்டது. இவ்வித துரோகத்திற்கு பணக்காரர்களும், உத்தியோகஸ்தர்களுமேதான் பெரும்பாலும் ஆதரவளிப்பவர்களாயிருக்கிறார்கள். காரணமென்னவென்றால் பட்டு சேலைகளும், பட்டு துப்பட்டாக்களும், சரிகை சேலைகளும், சரிகை துப்பட்டாக்களும், மல்லுகளும், சல்லாக்களும் இவர்கள்தான் வாங்குகிறார்கள். அதோடு இவர்களைப் பார்த்து இவர்களைப் போல் நடிக்க வேண்டுமென்கிற சிலர் தங்களுக்குத் தகுதியில்லாதிருந்தாலும் கஷ்டப்பட்டு இவற்றையே வாங்க ஆசைப்படுகிறார்கள். கூலிக்காரர்களாகவும் ஏழைகளாகவும் உள்ளவர்களுக்கு இந்த முதலாளிகளும் பணக்காரர்களுமாயிருப்பவர்கள் ஏழைகளுக்கும் கூலிக்காரர்களுக்கும் துணிவாங்கிக் கொடுக்கும் முறையிலும் வெளிநாடுகளிலிருந்து வந்த துணிகளையே வாங்கிக் கொடுக்கவும் செய்கிறார்கள். இத்தியாதி காரணங்களால் தீபாவளி வருகிறது என்றால் பெரும்பாலும் ஏழை நூற்புக்காரர்களுக்கும் கை நெசவுக்காரர்களுக்கும், பெரிய துரோகமும் கொடுமையும் வரப்போகிறது என்றுதான்



அஞ்ச வேண்டியதாக இருந்து வருகிறது. மகாத்மா காந்தியின் சகாப்தமானது இத் தீபாவளிப் பண்டிகையை தேசத்திற்கும், ஏழை மக்களுக்கும் உண்மையான சந்தோஷத்தையும் நன்மையையும் கொடுக்கத் தக்கதான பரிசுத்த பண்டிகையாக்க வேண்டுமென்று மூன்று நான்கு வருஷங்களாக எவ்வளவோ பிரயத்தனங்கள் பட்டும் இன்னும் அது சரியான பலனை கொடுக்குமென்று நம்புவதற்கு இடமில்லாமலிருக்கிறது. ஒரு பணக்காரருக்குத் தீபாவளி வருவதாயிருந்தால் பெண்டு பிள்ளைகளையும், மருமக்களையும் சேர்த்து அழைத்துக்கொண்டு ஒவ்வொருவரையும் பார்த்து, உனக்கு எந்தமாதிரி பட்டு வேண்டும்? உனக்கு என்னமாதிரி துப்பட்டா வேண்டும்? என்று கேட்பதும், என்னமாதிரியான பட்டோ, துப்பட்டாவோ, சேலையோ வாங்கினால் அவர்கள் திருப்தி அடைவார்கள் என்பதையும் மாத்திரம் யோசிக்கிறார்களே ஒழிய, என்ன மாதிரி துணிவாங்கினால் நம் நாட்டில் தினம் ஒரு வேளை வயிறார கஞ்சி குடிப்பதற்குக் கூட மார்க்கமில்லாமல் தங்கள் மானத்தையும் கற்பையும் விற்று ஜீவிக்க வேண்டி கட்டாயப்படுத்தப்படுகிற ஏழை நூல் நூற்பவர்களையும், கைநெசவுக்காரர்களையும் திருப்தி செய்வதற்கு உதவும் என்று இவர்கள் கொஞ்சம் கூட எண்ணுவதேயில்லை. கிராமங்களில் கஞ்சிக்குக் கஷ்டப்பட்டு பட்டணங்களுக்கு வந்து தெருக்குத் தெருவாய் அலையும் ஸ்திரீகள் நம் சகோதரிகள் என்பதை கொஞ்சமும் கவனிப்பதில்லை. இந்த ஸ்திரீகளின் வாழ்வும் தாழ்வும் நமக்கும் சம்மந்தப்பட்டதென்பதைக் கொஞ்சமும் உணர்வதில்லை. நெசவுத் தொழிற்காரர்கள் தங்களுக்குச் சரியான தொழிலில்லாமல் வெளிநாடு களுக்குக் கூலிகளாகச் சென்று, வெள்ளைக்காரத் தோட்டக்காரர்களிடமும் கங்காணிகளிடமும் தங்கள் பெண்டு பிள்ளைகளையும் பறிகொடுத்து மானங்கெட்டு கற்பிழந்து கஷ்டப்படுகிறார்களேயென்று கொஞ்சமும் கவலைப்படுவதேயில்லை. அவர்களும் நம்முடைய சகோதரர்கள்தானே அவர்கள் கற்பும் மானமும் கெட்டுக் கஞ்சிக்கு அலைய நாம்தானே காரணமாயிருந்து வருகிறோம் என்று கொஞ்சமும் சிந்திப்பதேயில்லை.

உத்தியோகமும், பணமும், அந்தஸ்தும் வந்தால் முதலாவது தேசாபிமானம் ஓடிப்போய் விடுகிறது. ஏழைகளிடத்தில் அன்பும், தயாளமும் ஏற்படும் வழி அடைபட்டுப்போய் விடுகிறது. இவைகளையெல்லாம் பார்க்கும் பொழுது ஒரு தூக்குத் தண்டனையுள்ளவனுக்கு தூக்கிலிடும் தேதி கிட்ட வரவர எவ்வளவு பயமும் கஷ்டமும் ஏற்படுமோ அதுபோல் தீபாவளி வருகிறதென்றால் தீபாவளி நாள் கிட்ட நெருங்க நெருங்க ஐயோ நம் ஏழைக்கூலிக்கார ஸ்திரீகள் வயிற்றிலும் வாயிலும் மண்ணைப் போடுவதான காரியங்கள் நடைபெறப்போகிற நாள் வரப்போகிறதே! வரப்போகிறதே! என்ற பயமும் கஷ்டமும் மனவேதனையும் ஏற்படச் செய்கிறது. எவ்வளவோ நன்மைக்காக ஏற்பட்ட பண்டிகை இக்கொடுமைக்கு உதவவா வரவேண்டும் என்று மனம் பதறுகிறது. நமது நாட்டில் நன்மைக்காக ஏற்பட்ட காரியங்களெல்லாம் எப்படி தீமைக்குதவப்பட்டு வருகிறதோ அதுபோல



RangaRakes tamilnavarasam.com

நமது தீபாவளியும் இவ்வளவு பெரிய தீமைக்கு ஆளாகிறதே என்று தேச சேமத்தில் கவலையுள்ளவர்களும் ஏழைகளிடத்தில் அன்புள்ளவர்களும் கவலைப்படாமலிருக்க முடியாதென்றே நம்புகிறேன். தீபாவளியின்போது அர்த்தமில்லாமல் சுடும் வெடிமருந்து பட்டாசுக்காக நம் நாட்டிலிருந்து எவ்வளவு பணம் வெளிநாட்டுக்குப் போகிறதென்பதை நமது நாட்டு ஜனங் கள் அறிவதேயில்லை. ஏதோ சிலர் அறிந்தாலும் அதைப்பற்றிக் கவலைப் படுவதேயில்லை. ஒரு தேசம் முன்னுக்கு வரவேண்டுமானால் அத்தேச மக்களுக்கு கடுகளவாவது தேசாபிமானமும், பரோபகார எண்ணமும் ஏற்பட்டால்தான் முன்னுக்கு வரமுடியும். அது இல்லாத நாடு எவ்விதத்திலும் முன்னுக்கு வராது. ஆதலால் இவ்வருஷ தீபாவளியை தேசவிடுதலைக்கும் ஏழைகளின் கஷ்டம் நீங்குவதற்கும் ஏழைத் தொழிலாள சகோதர சகோதரி கள் நன்மைக்கும் உபயோகப்படும்படி கொண்டாட வேண்டுமானால் பணக்காரர்கள், உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், முதலாளிகள் முதல் ஏழை கள், கூலிக்காரர்கள், நடுத்தர வகுப்பினர் முதலிய எல்லோரும் தீபாவளி யின் பொருட்டு தங்களுக்காகவும் தங்கள் பெண்டு பிள்ளைகள் மக்கள் மரு மக்கள் வேலைக்காரர்கள் ஏழைகள் முதலியவர்களுடைய ஒவ்வொருவரு டைய திருப்திக்காகவும் செலவு செய்ய நினைக்கும் ஒவ்வொரு பைசாவும் நம் நாட்டி லேயே இருக்குமா? நம் நாட்டில் கஞ்சிக்கில்லாமல் திண்டாடும் ஏழை களுக்கும் கூலிக்கார சகோதர சகோதரிகளுக்கும் போய்ச்சேருமா? அவர்கள் திருப்தி அடைவார்களா? என்று யோசித்துப்பார்த்தே செலவு செய்ய வேண்டியது முக்கியமான கடமையாகும்.

அப்படிச் செய்வது வாஸ்தவமானால் துணிவாங்குவதில் வெளி நாட்டுக்குப் பணம் போகும்படியான பட்டோ, சரிகையோ, வெளிநாட்டு மல்லோ, சல்லாவோ இன்னும் பலமாதிரியான வெளிநாட்டு சாமான்களையோ வாங்காமல் நம் நாட்டில் நம் ஏழைச் சகோதரிகளால் கை ராட்டினத்தில் நூல் நூற்கப்பட்டு ஏழைச் சகோதர சகோதரிகளால் நெய்யப்பட்டதுமான துணி களை வாங்க வேண்டும். அதையே அணியவேண்டும். அதன் தத்துவத்தை நம்மக்கள், மருமக்கள், பெண்டு பிள்ளைகளுக்குச் சொல்லி அதையே அவர்களையும் பின்பற்றச் செய்ய வேண்டும்.

இதனால் எத்தனை ஏழை குடும்பங்களில் தீபாவளி சந்தோஷமாய் நடைபெறும். இப்படிச் செய்யாவிட்டால் எத்தனை குடும்பங்களுக்கு தீபாவளி இல்லாமல் போய்விடும் என்பதையும் அறியாதவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும்.

இப்படியே ஒவ்வொருவரும் நினைத்து எல்லோரும் கதர் வாங்க ஆரம்பித்தால் ஒருசமயம் எல்லோருக்கும் கதர் கிடைப்பது கஷ்டமாய் போனாலும் போகலாம். ஆதலால் இந்த எண்ணம் உள்ள தேசாபிமானிகளும் ஏழைக்கிரங்குபவர்களும் இப்பொழுதே கதர்வாங்கி வைத்துக் கொள் ளுங்கள். புதுப்பாளையத்திலும், திருப்பூரிலும் இன்னும் சில இடங்களிலும்



RangaRakes

மொத்தமாய் கதர் கிடைக்கும். ஈரோடு, சேலம், மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், மன்னார்குடி, கோயமுத்தூர், கடலூர், மதராஸ், மாயவரம், கரூர், ராஜபாளையம், அந்தணர் பேட்டை முதலிய சில இடங்களில் காங்ரஸ் டெப்போவும், காங்ரஸ் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கதர் கடைகளும் இருக்கின்றன.........................................................................................................

**குடி அரசு – கட்டுரை – 20.09.1925**



tamilnavarasam.com

# கோயமுத்தூர் ஜில்லாவில் பஞ்சம்

இந்த ஜில்லாவின் தென்பாகம் அதாவது ஈரோடு கோயமுத்தூர் இருப்புப்பாதைக்கு தெற்கேயுள்ள எல்லா தாலூக்காக்களிலும் ஜனங்கள் பஞ்சத்தால் வருந்துகின்றனர். இவ்வருஷம் மழையில்லாததால் புஞ்சை வெள்ளாமைகள் செய்யமுடியாமல் போயிற்று. தோட்டக்கால் புஞ்சைகளில் கிணர் வற்றிப்போய் விட்டமையால் விளைவு கிடையாது. ஒவ்வொரு ஊரிலும் ஜனங்கள் தாகத்துக்குத் தண்ணீரில்லாது தவிக்கின்றனர். தென்னை மரங்களும் பனைமரங்களுங்கூட பட்டுப் போயின. கால் நடைகளுக்கு ஓலைகளையும் வேம்பிலைகளையும் முறித்துப் போட்டு மரங்களும் மொட்டையாயிற்று. மனிதர்களுக்கும் மாடுகளுக்குமாக சேர்ந்து கஷ்டம் வந்துவிட்டது. ஒவ்வொரு குடித்தனக்காரரும் கையிலிருந்த காசும் கடன் வாங்கினதும் எல்லாம் செலவு செய்து கிணர்கள் வெட்டியும் பலனில்லாது கைக்காசுகளையும் இழந்தனர். ஏழை மக்களாயுள்ளவர்கள் ஊருக்கு 20, 30 குடிகள் பெண்டு பிள்ளைகளுடன் மலைப் பிரதேசங்களுக்கு போகிற கொடுமை பார்த்து சகிக்க முடியவில்லை. தாராபுரம் தாலூகாவிலிருந்து மட்டிலும் சுமார் மூவாயிரம் குடும்பங்கள் ஓடிவிட்டன. கோயமுத்தூர் ஜில்லாக் கலெக்டரும், அதிகாரிகளும் கஞ்சித் தொட்டி வைப்பதாக கிராமங் கள்தோறும் போகின்றனர். கொலைகளும் வழிப்பறிகளும் திருடர்களும் அதிகமாக நடக்கின்றனர். காங்கயத்தில் கஞ்சித்தொட்டி வைக்க யோசனை செய்து ஜில்லாக் கலெக்டர் வந்தார் என்று கேள்விப்பட்டதும் கிராமஜனங்கள் காங்கயத்துக்கு ஓடி வந்து பார்த்துப் போகிறார்கள்.

கதர் நூல் உற்பத்தி செய்யும் வியாபாரிகளிடம் நூல் நூற்க வரும் கூட்டம் அதிகமாயிருப்பதால் வியாபாரிகள் தங்கள் சக்திக்கேற்ற அளவுதான் பஞ்சுகொடுக்க நேருவதால் அநேகம் பெண்கள் பஞ்சில்லாது திரும்பிப் போகின்றனர். ஜனங்கள் கூலிவேலைகள் கிடைக்காது அலைகின்றனர். கிராமத்திலுள்ள ஏழைக்குடிகள் ரோட்டுகளிலும், இட்டேரிகளிலும் ஏராளமாக நின்று பாம்புக்கும் தேளுக்கும் கூடப் பயப்படாது நாகதாளிப் பழத்திற்கு அலைகிறதைப் பார்க்க முடியவில்லை.

தாழ்த்தப்பட்ட குலத்து ஆண்களும் பெண்களும் சுள்ளிப் பழங் களைக் கூடைகளில் நிறப்பிக் கொண்டு போகின்றனர். இக்கொடுமை களைப் பார்க்க வந்த அதிகாரிகளுக்கு காங்கயத்தில் கிராமதிகாரிகள் கலெக்டர்



தங்கியிருந்த பங்களாவிற்கு தாராபுரத்திலிருந்து வாழை கமுகு கொண்டுவந்து கட்டிவிட்டார்கள், தண்ணீர் 15 மைலிலிருந்து கலெக்டருக்குக் கொண்டு வந்து விட்டார்கள். தண்ணீரில்லாத கொடுமையைப் பார்க்க வந்தவர்கள் கண் ணுக்கு குலையோடு வாழையையும் கமுகையும் ஆற்று ஜலத்தையும் காட்டி னால் அதிகாரிகள் என்ன எண்ணுவார்கள் என்பதை கிராமதிகாரிகள் உண ராமற் போனது என்ன அறியாமையோ தெரியவில்லை.

**குடி அரசு - கட்டுரை - 20.09.1925**



RangaRakes tamilnavarasam.com

# ஊன்றிப்படித்து உண்மையை அறியுங்கள்

சென்றவாரம் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காரின் விஷமப் பிரசாரத்தைக் குறித்து எழுதிய தலையங்கம் முடிவுபெறவில்லை.

அதாவது, நன்னிலத்தில் ஸ்ரீமான் அய்யங்கார் பேசியதாக முன் இதழ் தலையங்கத்தில் எழுதியிருந்த 10 குறிப்புகளில் 6-வது குறிப்புவரையிலும் தான் விளக்கியிருந்தோம். ஆறாவது குறிப்புக்கும் கொஞ்சம் சமாதானம் எழுதினோம்.

6. அதாவது சென்னை அரசாங்க பிரதமமந்திரி கனம் பனகால் ராஜா அவர்கள் ஸ்ரீமான் நாயக்கரை சென்னை முனிசிபல் தேர்தலில் ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கு அனுகூலமாய் பிரசாரம் செய்யக்கூப்பிட்டு விட்டதாகவும், அதற்காக ஸ்ரீமான் நாயக்கர் சென்னைக்குச் சென்று பிரசங்கம் புரிந்ததாகவும், பிறர் நினைக்கும்படி ஸ்ரீமான் அய்யங்கார் பேசியிருக்கிறார். இந்த வாக்கு மூலத்தின்பேரில் ஸ்ரீமான் அய்யங்காரை கோர்ட்டுக்கு இழுத்து அதன்மூலமாய் ஸ்ரீமான் அய்யங்காருக்கு புத்தி கற்பிக்க பலர் ஸ்ரீமான் நாயக்கருக்கு அறிவுறுத் தினார்கள்.

இம்மாதிரியான விஷயங்களில் விசேஷ சந்தர்ப்பங்களல்லாது அரசாங்க நீதிஸ்தலத்தை நாடுவது அவசியமில்லாதது என்பது நாயக்கரின் அபிப்பிராயம். அல்லாமலும் வெள்ளைக்காரருக்கும் இந்தியருக்கும் வழக்கேற்பட்டால் இந்தியர்களுக்கு நியாயம் கிடைப்பது எப்படியோ அதே மாதிரிதான் பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதாருக்கும் வழக்கேற்படுமானால் பிராமணரல்லாதாருக்கு நியாயம் கிடைப்பது. மற்ற இலாக்காக்களில் பிராமணர்கள் அன்னியர்களுக்கு ஏதாவது கொஞ்சம் இடம் கொடுத்திருந்தாலும் நீதி நியாய இலாக்காக்களை மாத்திரம் வெகு ஜாக்கிரதையாக தாங்களே வசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் இதற்காக சர்க்கார் கோர்ட் டுக்குப் போவதைவிட பொதுஜனங்கள் கோர்ட்டே மேலானது என்பது நமதபிப்பிராயம்.

7. காங்கிரசை பரிசுத்தப்படுத்தவேண்டும் என்பது. தேசத்தை காட்டிக் கொடுத்த ஒருவர் தமிழ்நாட்டில் கொஞ்சமும் செல்லுபடியில்லாமலிருந்த ஒருவர் தேசபக்தியினலாவது ஒழுக்கமான நடவடிக்கைகளினாலாவது தியாகத்தினாலாவது அல்லாமல் அக்கிரமமாய் சம்பாதித்த பணத்தைச் செலவு செய்து செல்வாக்கு பெறும் ஒருவர் திருவண்ணாமலை மகாநாட்டில் ஸ்ரீமான் கல்யாணசுந்திர முதலியார் கடாக்ஷத்தினால் காங்கிரசில் செலாமணியாகக் கூடிய நிலைபெற்ற ஒருவர், வாய்கூசாமல் அஞ்சாமல் ஆரியா, முதலியார், நாயக்கர் காங்கிரசிலிருப்பதால் காங்கிரசை சுத்தப்படுத்த வேண்டும் என்று பொருள்படப் பேசி "அந்த வேலையைத்தான் நான் முதலில் செய்யப் போகிறேன்" என்று பேசும்படியான தைரியம் வரும்படியேர்ப்பட்டு போய் விட்டது. இது அவசரத்தில் பேசிய பேச்சல்ல. வெகு முன்ஜாக்கிரதையுடனே சதியாலோசனை செய்து பேசிய பேச்சாகும். ஸ்ரீ முதலியார், நாயக்கர், ஆரியா போன்றவர்களை யெல்லாம் காங்கிரசைவிட்டு விலக்கிவிட்டால் காங்கிரஸ் பரிசுத்தமான பிராமண காங்கிரசாகிவிடும், அதுசமயம் வயிற்றுக் கொடுமைக்கும் மாலைக்கும் வண்டியிலிழுப்பதற்கும் ஆசைப்பட்ட சில அம்மிஞ்சிகளை வைத்துக்கொண்டு மற்ற பிராமணரல்லாதாரை யெல்லாம் ஜஸ்டிஸ் கட்சி ஜஸ்டிஸ் கட்சி என்று இந்த அம்மிஞ்சிகளைவிட்டே திட்டும்படி செய்து தங்கள் இஷ்டம்போல் காங்கிரசை நடத்தி அதுதான் தமிழ்நாட்டு அபிப்பிராயமென்று சொல்லிக்கொண்டு சகல பதவிகளையும் உத்தியோகங்களையும் அதிகாரங்களையும் தாங்களே வைத்துக்கொண்டு மீதி இருக்கும் பிராமணரல்லாதாரையெல்லாம் பஞ்சமராக்கிவிடலாம் என்கிற எண்ணம் கொண்டு தான் இப்படிப் பேசியிருக்கிறார்.

8. தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவரைப்பற்றித் தகரார் இல்லை என்று சொல்லுகிறார். தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு ஸ்ரீமான் அய்யங்காரிடம் இந்த நற்சாட்சிப் பத்திரம் வாங்கக் கொடுத்த விலை எவ்வளவு என்பது வாசகர்களுக்கே தெரியும். அதாவது சுயராஜ்யக் கட்சியின் பேரால் சில போலிகள் தேர்தலில் வெற்றிபெற அனுகூலமாயும் ஸ்ரீமான் நாயக்கர் பிரயத்தனங்களுக்கு விரோதமாயும் அவ்வப்போது எழுதிக்கொடுத்த அபிப்பிராயங்களுக்கு கைமாறாக கொடுக்கப்பட்டது. மற்றவர்களும் தங்க ளுக்குக் கிடைக்கவில்லையே என்று பொறாமைப்பட்டு என் செய்வது? வேலைக்குத் தகுந்த கூலிதானே கிடைக்கும்.

9. குருகுலத்தரார் கொள்கையில் ஸ்ரீமான் அய்யங்காருக்கு அனுதாபம் இருந்தாலும் அனுபவத்தில் இப்போது சாத்தியப்படாது என்பது.

சர்க்காரும் இப்படித்தான் சொல்லுகிறார்கள். இந்தியர் சுயராஜ்யம் பெறவேண்டும் என்பதில் தங்களுக்கு அனுதாபம் இருந்தாலும் காரியத்தில் அது இப்போது சாத்தியப்படாது என்றுதான் சொல்லுகிறார்கள். சர்க்காரைவிட இவர்கள் எந்தவிதத்தில் யோக்கியர்களோ நமக்குத் தெரியவில்லை. 33 கோடி ஜனங்களை பீரங்கி வெடிகுண்டு ஜயில் இதுகளை வைத்துக்கொண்டு சர்க்காரார் அடிமையாக்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்த அய்யர் அய்யங்கார் கூட்டங்கள் கிழிந்த புராணத்தையும், தர்ப்பைப் புல்லையும் கையில் வைத்துக் கொண்டு சர்க்காரார் நம்மை நடத்துவதைவிடக் கேவலமாய் நடத்துகிறார்கள். இதன் தத்துவத்தை வாசகர்களே கவனித்துக் கொள்ளவேண்டும்.



RangaRakes
tamilnavarasam.com

10. தங்கள் கட்சியில் (சுயராஜ்யக்கட்சியில்) குறைகள் இல்லை என்று சொல்லவில்லை. தங்கள் கட்சியில் அபிமானமுள்ளவர்கள் உள்ளே புகுந்து திருத்துவது தானே என்கிறார். தமிழ்நாடு சுயராஜ்யக் கட்சியில் அளவுக்கு மிஞ்சின அபிமானமுள்ளவர்களான ஸ்ரீமான்கள் நாயுடு முதலியவர்களா லேயே ஆகாத திருத்துப்பாடு நம்போன்றவர்களால் ஆகும் என்று நினைப்பதும் சுலபமான காரியமா என்பது நாம் சொல்லாமலே விளங்கும். இதுபோலவே ஜஸ்டிஸ் கட்சியிலும் உள்ள குறைகளை பிராமணர் அல்லாதார் உள்ளே புகுந்து திருத்துவதுதானே என்று யாராவது சொன்னால் உடனே அவர்களை ஜாதியை விட்டுத்தள்ளிவிடுகிறார்கள். பொதுவாய் ஸ்ரீமான் அய்யங்கார் அவர்களின் நன்னில உபன்யாசமானது திடீரென்று செய்யப் பட்டது அல்ல. அது பெரிய சதியாலோசனையின்பேரில் அடுத்து வரும் சட்டசபை தேர்தலில் பிராமண ரல்லாதாரை சட்டசபையைவிட்டு வெளியாக்க இப்பொழுதிருந்தே அஸ்தி வாரம் போடுவதற்காக செய்த பிரசங்கம் என்பதை பிராமணரல்லாதார்கள் உணரவேண்டும். சட்ட சபைத் தேர்தல் வருவதற் குள்ளாக பிராமணரல்லாதாரில் வெகுபேரை விலைக்கு வாங்கி நம்மையே வைவதற்கும் வைது பத்திரிகைகளில் எழுதுவதற்கும் ஏவிவிடப் போகிறார் கள். பொதுவாய் காங்கிரசுக்கு இப்பொழுது எவ்வித ராஜிய திட்டமும் கிடையாது. நமது சுயராஜ்யக்கட்சிக்கோ கதரும் இல்லை, ராட்டினமுமில்லை. தீண்டாமை விலக்கும் இல்லை. ஆனால் ஒரு திட்டம் மாத்திரம் உண்டு. அது என்னவென்றால் பிராமணரல்லாதார்களை ஸ்தல ஸ்தாபனங்களில் இருந்தும் சட்டசபைகளிலிருந்தும் வெளிப்படுத்தி விட்டு தாங்கள் போய் உட்கார்ந்து கொள்ளவேண்டியது என்பதுதான். இதுவே முதலாவதும் கடைசியானதும் முக்கியமானதுமான திட்டம். ஆதலால் பிராமணரல்லாதார்களே! இனி என்ன செய்யப்போகிறீர்கள்?

**குடி அரசு - தலையங்கம் - 27.09.1925**



# ஸ்தல ஸ்தாபனங்களில் லஞ்சம்

வரவர நமது நாட்டு முனிசிபாலிட்டிகளும், டிஸ்டிரிக்ட் போர்டு களும், தாலூகா போர்டுகளும், மனிதர்கள் பதவியை அனுபவிக்க ஒரு சாதன மாயிருப்பதோடல்லாமல் அதன் தலைவர்கள் பணம் சம்பாதிப்பதற்கும் ஒரு சாதனமாகிக்கொண்டு வருகிறது. இவை கொஞ்ச காலங்களுக்கு முன்பாக நூற்றுக்கு பத்து பதினைந்து பேர்கள்தான் இம்மாதிரி தப்புவழியில் நடக்கக் கூடிய தலைவர்களை உடைத்தாயிருந்தன. இப்பொழுது பணம் சம்பாதிக்கும் தலைவர்களின் எண்ணிக்கை அதிகப்பட்டுக்கொண்டு வருவதோடல்லாமல் பொதுஜனங்களுக்கும் சர்க்கார் காரியங்களில் நீதி பெறுவதுபோல் பணம் கொடுத்தால் எந்தக் காரியத்தையும் ஸ்தல ஸ்தாபனங்களில் சாதித்துக் கொள்ள லாம் என்கிற தைரியம் வந்துவிட்டது. இம்மாதிரியான காரியங்கள் இரட்டை ஆட்சி ஏற்பட்டபிறகு அதிகப்பட்டுப்போய்விட்டது. இரட்டை ஆட்சிக்கு முன்பாகவும் இம்மாதிரி காரியங்கள் இருந்துவந்தது என்றாலும் சேர்மன் முதலானவர்கள் இவ்வளவு தைரியமாய் அந்தக் காலத்தில் லஞ்சம் வாங்கத் துணியவே இல்லை. லஞ்சம் வாங்குவதென்பது சகஜமாய் போய்விட்டால் பிராதுகளும், புகார்களும் எப்படி உண்டாகும்? இம்மாதிரியான காரியங்களை அடக்குவதற்கு அரசாங்கத்தால் பிராது எதிர்பார்த்துக்கொண்டிருப்பது சுத்தப் பயித்தியக் காரத்தன மென்பதோடு வேண்டுமென்றே சும்மா இருப்பதற்கு பிராது வரவில்லையே என்ற சாக்கை உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள் என்றுதான் சொல்வோம். எவ்வளவோ உபயோகமில்லாத காரியங்களுக்கு ஸி.ஐ.டி. என்று சொல்லுகிற வேவுக்காரர்களையும் வைத்து வரிகொடுப் போரின் பணத்தைப் பாழாக்குகிற நமது சர்க்காருக்கு லஞ்சம் வாங்குபவர் களைக் கண்டுபிடிப்பதற்கு வேவுக்காரர்களை வைப்பது கஷ்டமென்றோ அதிக செலவென்றோ சொன்னால் எவரேனும் ஒப்புக்கொள்வார்களா? ஜனங்களெல்லாம் யோக்கியமாய் இருப்பார்கள் என்று ‘அரசாங்கத்தார் நினைப்பார்களானால் கோர்ட்டுகளும், நிர்வாகமும் தேவையே இல்லையே. சர்க்காரார் வேண்டுமானால் இது விஷயங்களுக்குச் சுலபமாக ஒரு பதில் சொல்லிவிட முடியும். என்னவென்றால், அப்படிப்பட்ட சேர்மன்களையோ பிரஸிடெண்டுகளையோ அங்குள்ள கவுன்ஸிலர்கள் ஏன் தேர்ந்தெடுத்து நியமிக்கிறார்கள், என்று கேட்கலாம்.

கவுன்சிலர்களும், மெம்பர்களுமே ஆயிரம் பதினாயிரக்கணக்காய் ஓட்டர்களுக்கு லஞ்சம் கொடுத்து பதவி பெறுகிறபொழுது சேர்மன்



RangaRakes
tamilnavarasam.com

முதலியவர்கள் வாங்குகிற லஞ்சம் இவர்களுக்கு எப்படிக் கிரமமாகத் தோன்றும்? இவர்கள் லஞ்சம் கொடுத்து பதவி பெறுகிற காரணத்தினால் லஞ்சம் வாங்குகிற சேர்மனை அநுமதிக்க வேண்டியதாகப் போய்விட்டது. இதுதான் உண்மையான கர்ம பலன் என்று சொல்லுவது.

ஜனங்கள் சுயராஜ்யத்திற்கு அருகர்களாகப் போய்விட்டார்கள். ஆதலால் சுயராஜ்யம் கொடுக்க வேண்டுமென்றும் பிரிட்டிஷார் ஒரு அதிகாரத்தைக்கூட தங்கள் கையில் வைத்துக்கொள்ளாமல் முழு சுதந்தரத் தையும் குடிகளுக்கே வழங்கிவிட வேண்டுமென்றும், கேட்டுக் கொண்டி ருக்கும் இக்காலத்தில் கொஞ்சம் நஞ்சம் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படும் குட்டி சுயஆட்சி ஸ்தாபனங்களிலெல்லாம் இம்மாதிரி லஞ்சங்களும் ஒழுங் கீனமான காரியங்களும் தாண்டவமாடுவதானால் அதற்குப் பொதுஜனங்களே உடந்தை யாயுமிருப்பார்களானால் சுய ஆட்சிக்கு நாம் அருகதை உடைய வர்கள் என்று சொல்லுவதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?

தேசத்தின் சுதந்தரத்திற்காக ஏழைமக்கள் கஷ்டப்படுவதும், தேச பக்தர்கள் தியாகம் செய்வதும் இம்மாதிரி படித்தவர்களும், பணக்காரர்களும் லஞ்சம் வாங்கவும் லஞ்சம் வாங்குவதை அனுமதிக்கவும்தானா உபயோகப் படுத்த வேண்டும்? மகாத்மா சொல்லுகிறபடி தமது சுயராஜ்யத் திட்டத்திற்கு படித்த வகுப்பார் தான் எதிரியாயிருக்கிறார்கள் என்பதோடு மாத்திரம் அல்லா மல் சுயராஜ்யத்திற்கு நாம் அருகர்களல்ல என்பதற்கும் இந்தப் படித்த கூட்டத் தாரே தான் ஆதாரமாயிருக்கிறார்கள் என்பதை நாம் வருத்தத்துடன் சொல்லாமலிருக்க முடியவில்லை.

**குடி அரசு - கட்டுரை - 27.09.1925**



# தமிழ்நாடு பத்திரிகையின் வம்புச் சண்டை

சுயராஜ்யா, சுதேசமித்திரன் முதலிய பிராமணப் பத்திரிகைகளும் ஸ்ரீமான் சீனிவாச அய்யங்கார் போன்ற பிராமணத் தலைவர்களும் நம்முடன் தொடுக்கும் போர் முடிவுபெறாமல் இருக்கும்பொழுதே தமிழ்நாடு பத்திரிகை யும் இதுதான் சமயமென்று நம்மை வம்புச்சண்டைக்கிழுக்கின்றது. இம்மாதிரி வம்புச் சண்டைகளுக்கும் நாம் இடம் கொடுக்கக்கூடாதென்று எவ்வளவோ காரியங்களை சகித்துக்கொண்டு நமது உத்தேச காரியத்தை மாத்திரம் பார்த்துக்கொண்டு வந்தாலும் வேண்டுமென்றே வலிய வரும் சண்டை களுக்கு நாம் என்ன செய்யலாம்? தற்காலம் தமிழ்நாட்டில் சுயராஜ்ஜியக்கட்சி என்கிற பெயரை வைத்துக்கொண்டு பிராமணர் அல்லாதாரின் செல்வாக்கை அடியோடு ஒழிக்க வேண்டுமென்கிற கருத்தோடு சில பிராமணர்களும், அவர்கள் பத்திரிகைகளும் காங்கிரஸ் பெயரையும், மகாத்மா பெயரையும் மற்றும் உள்ள அநேக தியாகிகளின் பெயரையும் உபயோகப்படுத்திக் கொண்டு ஸ்தல ஸ்தாபனங்களிலும், தேர்தல்களிலும் காங்கிரசிலும் செய்து வரும் கொடுமைகளையும், சூழ்ச்சிகளையும் கண்டு உண்மையிலேயே மனம் பொறாதவராகி எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்கிடையில் இவற்றைத் தடுக்க செய்துவரும் ஒருசிறு தொண்டிற்கும் பிராமணரல்லாதாரில் சில தலைவர்கள் என்போர் நமக்கு உதவி செய்யாவிட்டாலும், நமது முயற்சிக்குக் கெடுதலாவது செய்யாது இருக்கவேண்டாமா என்றுதான் பிராமணரல்லா தலைவர்களிடம் நாம் உண்மையாய் எதிர்பார்த்தது. இந்த நிலையில் ஸ்ரீமான் வரதராஜலு நாயுடுவின் தேர்தல் சம்பந்தமான அபிப்பிராயங்கள் நமது முயற்சிக்கு சில இடங்களில் "கொசவனுக்குப் பல நாளைக்கு வேலை, தடியடிக்காரனுக்கு ஒரேநாள் வேலை" என்பது போல் பல தொந்தரவுகளை விளைவிப்பதாகப் பட்டதால் ஸ்ரீமான் நாயுடுவின் அபிப்பிராயங்களை எடுத்துக்காட்ட வேண்டியது நமது கடமையாய் போய்விட்டது. அதற்கு, சரியான சமாதானம் ஒன்றும் சொல்லாமல் ஸ்ரீமான் பட்டாபிராமய்யர் அவர்கள் காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் சுயராஜ்ய கக்ஷி தேசத்துரோகம் செய்துவிட்டது என்று சொன்னபொழுது ஸ்ரீமான் நேரு அதற்கு தகுந்த சமாதானம் சொல்வதற்கு யோக்கியதையில்லாமல் நான் உன்னை ஒரு தூசிபோல் மதிக்கிறேன் என்று சொன்ன அகம்பாவமும் ....... பொருந்திய பதில்போல் **ஸ்ரீமான் நாயக்கரின் கோபத்திற்கும், பயமுறுத்தலுக்கும் பயந்து ஸ்ரீமான் வரதராஜலு நாயுடு தம்முடைய கொள்கையை மாற்றிக்**



RangaRakes tamilnavarasam.com

**கொள்ளப்போவதில்லை** என்று தமிழ்நாடு பத்திரிகை வம்புச் சண்டைக்கு இழுக்கின்றது. சாதாரணமாக பிராமணப் பத்திரிகைகளும், பிராமணத் தலைவர்களும் தான் ஒருவரைப்பற்றி ஏதேனும் குறைகூற வேண்டு மென்று நினைத்துக்கொண்டால் **ஒருவர் என்ன சொன்னார், என்ன பேசினார் என்பதை தங்கள் பத்திரிகையில் எடுத்துக் காட்டாமலும், அதைப் பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்தாமலும் தங்களுக்குத் தோன்றியபடி பத்திரிகை களில் எழுதி அவர்கள் இஷ்டத்திற்கு அனுசரணையான பிரசாரம் செய்வது வழக்கம்.** அதைப்பற்றி நாமும் பலதடவை கண்டித் திருக்கிறோம். அதே கொள்கையை தமிழ்நாடு பத்திரிகையும் பின்பற்றுவ தென்றால் பிறகு நாம் அதை என்னவென்று நினைப்பது? அதனிடத்தில் இனி என்னதான் எதிர்பார்க்க முடியாது? எந்த விஷயத்தில் ஸ்ரீமான் நாயக்கர் கோபித்துக்கொண்டார். எந்த விஷயத்தில் ஸ்ரீமான் நாயுடுவை பயமுறுத் தினார் என்று எழுதி அதன்பேரில் ஸ்ரீமான் நாயுடுவின் வீரப்பிரதாபத்தைக் காட்டியிருந்தால் ஒழுங்காயிருக்கும். அப்படியில்லாமல் வீண்வம்புச் சண்டைக்கு இழுப்பது தர்மமா? நாம் எழுதியதில் ஏதேனும் குற்றமிருக் கின்றதா என்பதை பொது ஜனங்கள் அறியும்படி மறுபடியும் எழுதி இதற்குத் **தமிழ்நாடு** பத்திரிகை சொல்லும் பதிலையும் சொல்லிவிட்டு நிறுத்திக் கொள்ளுகிறோம். இதைப்பற்றி மறுபடியும் **தமிழ்நாடு** கண்டனமோ, மறுப்போ, சமாதானமோ எழுதுகிற பொழுது முன்போல் நடந்துகொள்ளாமல் நாம் எழுதியதைப் போட்டு சமாதானமோ கண்டனமோ, மறுப்போ எழுது மென்று எதிர்பார்க்கிறோம்.

## ஸ்ரீமான் நாயுடுவின் பழைய அபிப்பிராயமாவது

கோயமுத்தூர் தேர்தலின்பொழுது தேர்தலுக்கு நிற்பவர்களின் யோக்கியதையை அறிந்து ஓட்டுச்செய்ய வேண்டுமென்று ஸ்ரீமான் நாயக்கர் கூறிவந்த பொழுது ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு “காங்கிரஸ்காரருக்கே வெற்றி ஏற்படுமாறு ஈசனைப் பிரார்திக்கிறேன்” என்று ஒரு ஸ்ரீமுகம் விடுவித்தார்.

அதற்கு எதிர்க்கட்சியார் ஒரு கடிதமெழுதியபொழுது (அக்கடிதம் ஆகஸ்டு மாதம் 30-ந்தேதி தமிழ்நாடு பத்திரிகையின் 9-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது) சுயராஜ்யக் கட்சியின் பெயரைச் சொல்லிக் கொண்டு பாமர ஜனங்களை போலிகள் ஏமாற்றிவிடாமல் பார்த்துக் கொள்வது தேசீய வாதிகளின் கடமையாகும். ..............சுயராஜ்யக் கட்சியார் சட்டசபைக்குச் சென்று அதை ஓடவிடாது தடுக்கவே கைப்பற்றுவதாகச் சொன்னார்கள். சட்டசபைகளைத் தவிர முனிசிபாலிட்டிகளில் ஒற்றுமையாமைக்கோ முட்டுக் கட்டைக்கோ வழி இல்லை. நகர சபைகளில் எந்த விதத்தில் ஜனங்களுக்கு வேலை செய்யலாம் என்பதே அங்கத்தினர்களின் வேலையாயிருக்கிறதே ஒழிய எதிர்த்துப்போராடுவதற்கு அதிகாரவர்க்கம் அங்கு இல்லை. இதனால்



ஸ்தல ஸ்தாபனங்களில் ஒருவர் இன்ன கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்கு மட்டும் ஓட்டுக்கொடுத்து விடக்கூடாது,.......... அபேட்சகர்களின் உண்மையான யோக்கியதைகளை அறிந்தே ஓட்டுக் கொடுக்க வேண்டும். நீடித்த காங்கிரஸ்வாதியாயும், வெளிவேஷத்திற்கு மாத்திரமல்லாமல் எப்பொழுதும் கதர் கட்டிக் கொண்டிருப்பவராகவும் பார்த்து ஓட்டுச்செய்யவேண்டும் என்று 30.8.25 தமிழ்நாடு பத்திரிகையில் மேற்படி கோயம்புத்தூர் நண்பருக்கு பதில் கூறுமுகத்தான் ஒரு வியாசம் வரைந்துள்ளார். அதற்கு நான்கு நாளைக்குள் திருச்சியில் ஸ்ரீமான் சீனிவாசய் யங்கார் தலைமையின் கீழ் கூடிய ஒரு பொதுக்கூட்டத்திற்கு “ஜாதிபேதமின்றி காங்கிரஸ்காரருக்கே ஓட்டுச் செய்ய வேண்டு” மென்று ஒரு செய்தி அனுப்பினார். பாம்பன் பிரசங்கத்தில் காரியத்திற்குக் கதர் உடுத்தி காங்கிரஸ் பெயரைச் சொல்லித் திரியும் கசடர்கள் உங்களை ஏமாற்ற விடக் கூடாது...............நான் ஒரு கட்சியிலும் சேர்ந்தவ னல்ல............... எனது வேலைத் திட்டம் எனது நண்பர்களின் யோசனை யிலிருந்து வருகிறது.......... என்று குறிப்பிட்டிருக்கிறார்.

“நகரசபையில் வேலை செய்யத்தகுதியுள்ள ஒரு பிராமணரும், ஒரு பிராமணரல்லாதாரும் அபேட்சகர்களாய் நிற்பார்களானால் கட்சிப்போக்கை கவனியாமல் பிராமணரல்லாதாருக்கேதான் ஓட்டுச் செய்யவேண்டும்” (இது சென்னையில் இரண்டு கனவான்கள் நேரில் கண்டு கேட்டபோது சொல்லியது)

அதற்கு அடுத்தநாள் தமது அன்புள்ள ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு எழுதிய கடிதத்தில் காங்கிரஸ் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் நிர்மாண திட்டத்தில் நம்பிக்கை இருப்பதாகத் தான் நம்புவதாயும், நிர்மாணத் திட்டத்தை நம்புபவரும் அனுஷ்டானத்தில் செய்து காட்டுபவரும் காங்கிரஸ் அபேட்சகர் என்று தான் நம்புவதாகவும், அவரை ஆதரிக்கவேண்டுவது பொதுஜனங்களின் கடமை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

## ஸ்ரீமான் நாயுடுவின் தெளிவான அபிப்பிராயமாவது

1. சமீபத்தில் நடைபெற்ற தேர்தல்களில் காங்கிரஸ் வாதிகளை ஸ்ரீமான் நாயுடு ஆதரித்து எழுதிய கடிதங்களை ஸ்ரீமான் நாயக்கர் கண்டிக்கப் புறப்பட்டிருப்பது வேடிக்கையாயிருக்கிறது.

2. உண்மை தேசீயவாதியான ஒரு பிராமணனும் காங்கிரசைச் சேராத ஒரு தமிழனும் தேர்தலுக்கு நின்றால் தேசீய பிராமணனைத்தான் தேசம் ஆதரிக்க வேண்டும். உண்மை தேசீயவாதியான ஒரு பஞ்சமனுக்கும், மிதவாதியான ஒரு பிராமணனுக்கும் போட்டி ஏற்பட்டால் பஞ்சமனைத்தான் பொதுமக்கள் ஆதரிக்கவேண்டும்.

3. ஸ்தலஸ்தாபனங்களில் முட்டுக்கட்டைக்கு இடமில்லை என்பது வாஸ்தவமே. அவ்வித அபிப்பிராயம் நாம் அடிக்கடி கூறுவது உண்டு .



RangaRakes tamilnavarasam.com

ஆனால் அடிமைப்பட்ட நாட்டில் சர்க்காரால் ஏற்பட்டிருக்கும் சகல ஸ்தாபனங்களிலும் தேசீயவாதிகள் நுழைந்து உட்கார்ந்து கொண்டால் சமயம் வாய்ந்தபோது உள்ளிருந்து நாமும் சர்க்காரைக் காக்க அனுகூலமாக இருக்குமன்றோ?

4. அபேட்சகர்களின் உண்மையான யோக்கியதைகளை அறிந்தே ஓட்டர்கள் ஓட்டுக் கொடுக்க வேண்டுமாம்.

5. ஆனால் ஒருவர் ஒழுக்கத்தில் தர்ம ராஜனாயிருந்தாலும் சர்க்காருக்குச் சாதகமானவராயிருந்தால் அவருக்கு ஓட்டு கொடுக்கக்கூடாதாம்.

6. வேறொருவர் ஒழுக்கத்தில் குறைந்தவராயிந்தாலும், தேசீயவாதியாயிருந்து நம்முடைய ஓட்டினாலும், பேச்சினாலும் சர்க்காரின் செல்வாக்கைக் குறைக்கக் கூடியவராயிருந்தால்,ஜனங்கள் அவரை ஆதரிக்கவேண்டுமாம்.

காங்கிரஸில் உயர்வு, தாழ்வு கொள்கையை பிராமணர்கள் செய்கையில் காட்டினால், நிர்த்தாட்சண்யமாக அப்படிப்பட்டவர்களை காங்கிரசினின்று துரத்தி விட வேண்டுமாம். இதைக் குருகுலப்போராட்டத்தில் செய்து காட்டியிருக்கிறாராம் .......................... மேற்கூறியவைகள் தான் ஸ்ரீமான் நாயுடுவின் தெளிவான அபிப்பிராயமாம். மேலும் மேலும் இவ்வித அபிப்பிராயங்கள் ஸ்ரீமான் நாயுடுவுக்கு எவ்வளவு தெளிவான அபிப்பிராயமாய் இருந்தபோதிலும் பொதுஜனங்களுக்கு எவ்வளவு தெளிவைக்கொடுக்கும் என்பதை வாசகர்களே கவனித்துக் கொள்ள வேணுமாய் கோருகிறோம்.

மற்றபடி இவ்வபிப்பிராயத்தின் தத்துவங்களைப் பின்னால் எழுதுவோம்.

## ஸ்ரீமான் நாயுடு

தன்னைப்பற்றி அதிகமாய் நினைத்துக்கொண்டார் என்பதற்குபதில், நாயக்கர் நாயுடுவைப்பற்றி அதிகமாய் நினைத்தாராம் , அதனால் தன்னைப் பற்றி அதிகமாய் நினைத்துக்கொள்வது மேலோர் தன்மை போலும்!

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 27.09.1925**



# பரமசிவனுக்கும் பார்வதிக்கும் நடந்த சம்பாஷணை

**-நாரதர்**

**பார்வதி:-** பிராணனாதா !

**பரமசிவன்:-** என்ன பிராணனாயகி.

**பா-தி:-** சில முனிசிபாலிட்டிகளில் சேர்மெனும், வைஸ்சேர்மெனும் சண்டைபிடித்துக் கொள்ளுகிறார்களே அது எதற்காக?

**ப-சி:-** என் கண்ணே! இது உனக்குத் தெரியாதா? திருடர்கள் இரண்டுபேர் தங்களுக்குள்ளாகவே சண்டைப்போட்டுக்கொண்டால் அது எதற்காக?

**பா-தி:-** நாதா! இது எனக்குத் தெரியாதா? திருட்டு சொத்தை இருவரும் பங்கிட்டுக் கொள்வதில் வித்தியாசம் ஏற்பட்டால் இருவரும் சண்டை போட்டுக்கொள்ள வேண்டியதுதான். முனிசிபாலிட்டிகளில் எப்படி சண்டை வரும்?

**ப-சி:-** அதே மாதிரிதான் முனிசிபாலிட்டியிலும் பொதுஜனங்களி டம் இருந்து வாங்கும் லஞ்சத்திலும் உத்தியோகம் கொடுப்பதற்கு ஆக வாங்கும் தரகிலும் காண்டிராக்டர்களிடமிருந்து வாங்கும் வீதாச்சாரத்திலும் இருவரும் பிரித்துக் கொள்வதில் வித்தியாசம் ஏற்பட்டால் சண்டை வரவேண்டியது தானே?

**பா-தி:-** இதெல்லாம் சேர்மெனுக்கும் முனிசிபல் சிப்பந்திகளுக்கும் தானே சேரவேண்டியது. வைஸ்சேர்மெனுக்கு இதிலென்ன பாத்தியமிருக்கிறது?

**ப-சி :-** நீ என்ன திரேதாயுகத்து சங்கதி பேசுகிறாய்? அந்த மாதிரி



RangaRakes tamilnavarasam.com

இருவருக்குள்ளும் ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால்? அல்லாமலும் அதெல்லாம் பழைய காலம்.

திரேதாயுகத்தில் சிப்பந்திகள் மாத்திரம் தான் மேற்படி ஆதாயங்களை அனுபவித்து வந்தார்கள். திரேதாயுகத்தில் சிப்பந்திகளும் சேர்மெனுமாய் சாப்பிட்டு வந்தார்கள்.

துவாபரயுகத்திலேயே சிப்பந்திகளும் சேர்மெனும் வைஸ்சேர்மெனும் சாப்பிடவேண்டியது. இந்தக் கலியுகத்திலோ சிப்பந்தி, சேர்மென், வைஸ்சேர் மென், கவுன்சிலர்கள் ஆக நான்குபேரும் சாப்பிடவேண்டியது. இந்தப்படி மனுதர்ம சாஸ்திரத்தில் இருந்தபோதிலும் இன்னும் இது பூராவும் அமுலுக்கு வரவில்லை.

**பா-தி:-** அப்படியானால் எனது கேள்விகளுக்கு பொறுமையோடு பதில்சொல்லவேண்டும். முதலில் இருந்து வருகிறேன். முனிசிபல் சிப்பந்திகள் லஞ்சமும் தரகும் மாமூலும் வாங்க காரணம் என்ன? அது யாருடைய குற்றம்?

**ப-சி:-** சர்க்கார் வழக்கமும் சேர்மெனுடைய குற்றமும்தான் காரணம்.

**பா-தி:-** சேர்மெனும் வைஸ்சேர்மெனும் லஞ்சமும் தரகும் மாமூலும் வாங்கவும் பங்கு பிரித்துக் கொள்வதில் சண்டை போட்டுக் கொள்ளவும் யார் காரணம்?

**ப-சி:-** அப்படிப்பட்ட சேர்மெனையும் வைஸ்சேர்மெனையும் நியமித்த கவுன்சிலர்கள் தான் பொறுப்பாளிகளாவார்கள்.

**பா-தி:-** இப்படிப்பட்ட சேர்மென் வைஸ்சேர்மென்களை நியமித்த கவுன்சிலர்களின் நடவடிக்கைக்கு யார் பொறுப்பாளி?

**ப-சி:-** இவர்களுக்கு ஓட்டு செய்த ஓட்டர்கள்தான் பொறுப்பாளி களாவார்கள்.

**பா-தி:-** இம்மாதிரி கவுன்சிலர்களுக்கு ஓட்டு செய்த ஓட்டர்களின் நடவடிக்கைக்கு யார் பொறுப்பாளி?

**ப-சி:-** அனேகமாய் இந்த காரியத்திற்கு ரூபாய்கள்தான் பொறுப் பாளி என்று சொல்லவேண்டும்.



**பா-தி:-** கேவலம் ரூபாய்க்கு இவ்வளவு பெரிய யோக்கியதை ஏற்பட்டு போய்விட்டது என்கிறீர்களே, ரூபாய்கள் இப்படிச்செய்யுமானால் இதற்கு யார் பொறுப்பாளி?

**ப-சி:-** ரூபாய்க்கு நாட்டில் இவ்வளவு ஆதிக்கம் ஏற்பட மனிதர் களின் ஒழுக்கக் குறைவும் வயிற்றுக் கொடுமையும்தான் பொறுப்பாளி.

**பா-தி:-** ஒரு நாட்டில் இம்மாதிரி ஒழுக்கக் குறைவும், வயிற்றுக் கொடுமையும் ஏற்பட யார் பொறுப்பாளி?

**ப-சி:-** சர்க்கார்தான் பொறுப்பாளி.

**பா-தி:-** இம்மாதிரி சர்க்கார் ஏற்பட யார் ஜவாப்தாரி?

**ப-சி:-** ஜனங்களின் ஒற்றுமைக்குறைவுதான்.

**பா-தி:-** ஜனங்களின் ஒற்றுமைக்குறைவிற்கு யார் பொறுப்பாளி?

**ப-சி:-** அவர்களுக்குள்ளிருக்கும் ஜாதி வித்தியாசமும் உயர்வு தாழ்வு என்று சொல்லிக்கொள்வதும் மக்களை ஒன்று சேர்வதற்கில்லாமல் செய்து கொண்டு வருகிறது.

**பா-தி:-** அப்படியானால் இதற்கு என்னதான் செய்வது?

**ப-சி:-** செய்வதென்ன இருக்கிறது? நாட்டிற்கு நல்லகாலம் வரும் போது இவையெல்லாம் தானாக ஓடிப்போகும். அதுவரை நிர்மாண திட்டத் தை நிறைவேற்றிக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

**குடி அரசு - உரையாடல் - 27.09.1925**



RangaRakes tamilnavarasam.com

## பாட்னாத் தீர்மானம்

சென்ற மாதம் 22 -ந் தேதி பாட்னாவில் கூடிய, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானத்தையும், அதைப்பற்றி மகாத்மாவின் தனி அபிப்பிராயத்தையும் நிதானமாய் யோசனை செய்து பார்த்தோம். அவற்றுள் காணப்படும் தத்துவத்தை சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமானால் மகாத்மா காந்தி அவர்கள் காங்கிரஸை சுயராஜ்யக் கட்சியார் வசம் ஒப்படைத்து விடவேண்டும் என்பதாக முடிவு செய்துக்கொண்டு, அந்தப்படியே ஒப்புவித்துவிட்டாரென்றுதான் சொல்ல வேண்டும்.

தீர்மானத்தின் சாரம் என்னவென்றால் நான்கணா கொடுத்தவர்க ளெல்லாம் காங்கிரஸ் மெம்பராகலாம். காங்கிரஸில் பதவி வேண்டியவர்கள் காங்கிரஸ் காரிய சமயங்களில் கதர்கட்டிக் கொண்டிருக்க வேண்டும். சட்ட சபை முதலிய தேர்தலுக்கு நிற்கிறவர்கள் சுயராஜ்யக் கட்சியாரின் தயவைப் பெறவேண்டும். இந்தத் தீர்மானத்தின் மேல் மகாத்மாவின் அபிப்பிராயமோ, இதற்குச் சம்மதமில்லாதவர்கள் காங்கிரஸை விட்டு விலகிக் கொள்ள வேண்டுமேயல்லாமல், உள்ளே இருந்துகொண்டு சுயராஜ்யக் கட்சியின் வேலைகளுக்கு இடையூறாயிருக்கக் கூடாதென்பது தான். அத்துடன் பழைய நிலை ஒன்றும் மாறவில்லையென்றும், நிர்மாணத் திட்டம் பாதிக்கப்பட வில்லையென்றும் கூறுகிறார். மற்ற விஷயங்களைப்பற்றி நாம் அதிகக் கவலைப்படாவிட்டாலும் நிர்மாணத் திட்டம் பாதிக்கப்படவில்லையென் பதை ஒப்புக்கொள்ள முடியாததற்கு வருந்துகிறோம். ஏனெனில் பாட்னா காங்கிரஸின் அதிகாரத்தை சுயராஜ்யக் கட்சியார் கையில் முற்றிலும் ஒப்ப டைத்தாகிவிட்டது என காந்தியடிகளே அக்டோபர் 1 – ந் தேதி “யௌவன இந்தியாவில்” கூறியிருக்கின்றார்.

சுயராஜ்யக் கட்சியாருக்கோ நிர்மாணத் திட்டங்களாகிய கதரிலும், தீண்டாமையிலும் முழு நம்பிக்கையுமில்லை. இந்த நிலைமையில் நிர்மாண திட்டம் எப்படிப் பாதிக்கப்படவில்லையென்பது நமக்குப் புரியவில்லை. சுயராஜ்யக் கட்சியினரல்லாத காங்கிரஸ் வாதிகளுக்கோ சுயராஜ்யக் கட்சித் திட்டத்தில் நம்பிக்கையில்லை. இருந்தால் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்திருப் பார்கள். தங்களுக்கு நம்பிக்கையில்லாததும் தேச நன்மைக்கு ஏற்றதல்ல என்று நினைப்பதுமான திட்டத்தை தேசத்தில் நடத்துவிப்பதற்கான முயற்சிகள் செய்யப்படுவதை, காங்கிரஸில் இருக்க வேண்டுமே என்னும் ஒரு



காரியத்திற்காகச் சகித்துக் கொண்டிருப்பதைவிட, அதை எதிர்க்க வேண்டு மென்றும், அவசியமுள்ளவர்கள் காங்கிரஸை விட்டு வெளியில் போய் தங்கள் மனசாக்ஷிப்படி நடந்து கொள்ளலாமென மகான் சொல்லு வதை காங்கிரசும் ஒப்புக் கொள்ளுமானால் அப்படி செய்வது மேலான தென்றே நினைக்கிறோம்.

அதற்கடுத்தாற்போல், நிர்மாணத் திட்டத்தில் ஒரு பாகமாகிய கதரை உத்தேசித்து நூற்போர் சங்கம் ஒன்று தனியாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இது பெரும்பாலும் மாறுதல் வேண்டாதாருக்கும், ஒத்துழையாதார் என்று சொல்லிக்கொள்ளுபவர்களுக்கும் தேச நன்மையை உத்தேசித்து அதிக திருப்தியைக் கொடுக்குமென்பதில் ஆக்ஷேபனையில்லை.

ஆனால், சுயராஜ்யக் கட்சியார் இதையாவது ஒழுங்குபெற நடக்க விடுவார்களாவென்பதுதான் நமது சந்தேகம். நூற்பதில் நம்பிக்கையில்லாத வர்களும் நூற்பதைக் கேவலமாகக் கருதுபவர்களும் கதரில் நம்பிக்கை யில்லாதவர்களும் உறுதிமொழியில் கையெழுத்திட்டு, உள்ளே வந்து புகுந்து இதிலும் சிறிது சிறிதாக மகாத்மாவை விட்டுக்கொடுத்துக் கொண்டே போகச் சொல்லுவார்களோவென்று நாம் சந்தேகப்படாமலிருக்க முடியவில்லை.

கடைசியாக ஒரு வார்த்தை, நூற்போர் சங்கம் ஏற்படுத்தியதால் நிர்மாணத் திட்டத்தில் ஒரு பாகமாகிய கதர் திட்டம் பாதிக்கப்படவில்லை யென்று சொல்வதானாலும் தீண்டாமை விலக்குத் திட்டம் சுயராஜ்யக் கட்சியார் கருத்துப்படியே தானே மறைந்து போய்விட்டது. பெல்காமில் மதுவிலக்கு மறைந்தது. பாட்னாவில் தீண்டாமை விலக்கு மறைந்தது. இனி கதரின் தலையெழுத்து எந்த ஊரில் முடியப்போகிறதோ தெரியவில்லை. ஆனாலும், சுயராஜ்யக் கட்சியார் அதை ஒழிக்கவும் ஒரு ஊர் மனதில் வைத்துக்கொண்டுதான் இருப்பார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நாம் செய்ய வேண்டியது என்ன வென்பதை யோசிக்க வேண்டும். நம் நாட்டில் சுயராஜ்யக் கக்ஷியாரில்லாமல், காங்கிரஸ்காரருக்குள்ளேயே சுயராஜ்யக் கக்ஷியை ஆதரிக்கிறவர்களும், அதன் திட்டமானது தேசத்திற்கு கெடுதியை விளைவிக்கக் கூடியதென்று நம்பி காங்கிரஸ் அதன்வழி செல்ல விடாமல் தடுத்து, உண்மையான வழியில் நிறுத்த வேண்டுமென்று அந்தரங்க சுத்தியுடன் வேலை செய்பவர்களுமிருக் கிறார்கள். இதில் யார் பெரும்பான்மையோர், சிறுபான்மையோர் என்பதைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. இவர்களிருவருக்கும் காங்கிரஸில் இடமிருக்கின்றதா? இல்லையா? இரண்டாவதவர்களுக்கு இடமில்லை யென்ற தீர்மானம் ஏற்பட்டால் அவர்கள் என்ன செய்ய வேண்டியது என்ப தைப் பற்றியும் அல்லது தனிச் சங்கமொன்று கண்டு அதன் மூலமாக உண்மை ஒத்துழையாமைத் திட்டத்தையும் நிர்மாணத் திட்டத்தையும் நிறைவேற்ற முயற்சி செய்வதா? என்கிற விஷயத்தைப் பற்றியும் கஞ்சீவரம் மகாநாட் டிலும், கான்பூர் காங்கிரசிலுமே நாம் முடிவு செய்யவேண்டியவர்களாயிருக்



RangaRakes tamilnavarasam.com

கிறோம். இது விஷயத்தை தமிழ் நாட்டிலுள்ள தேசீயவாதிகளும் தேசத் தொண்டர்களும் ஆழ்ந்து யோசித்து ஓர் முடிவுக்கு வர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

லாலாஜி அவர்களும் தமது "பீபிள் " பத்திரிகையில் பாட்னா தீர்மானங்களை ஆக்ஷேபித்து விரிவாக எழுதியிருக்கின்றார்.

**குடி அரசு - தலையங்கம் - 11.10.1925**



# ஆரியாவின் அபிப்பிராயம்

ஸ்ரீமான் சுரேந்திரநாத் ஆரியாவை நேயர்கள் நன்கறிவார்கள். இவர் உத்தம தேசாபிமானி. அரிய தியாகம் பல நம் நாட்டிற்கென்று செய்தவர். இவர் சமீபத்தில், சென்னை "ஜஸ்டிஸ்" பத்திரிகையின் நிருபருக்குப் பேட்டி கொடுத்து தம் அபிப்பிராயத்தை வியக்தமாகக் கூறியிருக்கின்றார். இதன் சாராம்சத்தை வாசகர்கள் நமது பத்திரிகையின் வேறொரு பக்கத்தில் காண லாம். பிராமணரல்லாதாரின் இப்போதுள்ள தற்கால நிலைமை எதுவோ, இனி நாம் செய்யவேண்டிய வேலை என்னவுண்டோ, அவைகளை நன்றாய் ஆராய்ச்சி செய்து தீர்க்கதரிசனத்துடன் ஸ்ரீமான் ஆரியா அவர்கள் கூறி யிருப்பதை நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு பிராமணரல்லாதாரும் கவனிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வைதீகப் பிராமணர்கள் ஜாதிச் செருக்குக்கொண்டு மதவிஷயத்திலும், தேசீய பிராமணர்கள் அரசியலிலும் பிராமணரல்லாதாரை தாழ்த்திவைத்து பொய்ப்பிரசாரம் செய்வதையும், இதில் தங்கள் காரியம் வெற்றி பெருவதற்கு அநுசரணையாக, இரண்டொரு பிராமணரல்லாதாரை சேர்த்துக்கொள்வ தையும் நாம் வன்மையுடன் பலதடவைகளில் கண்டித்து வருகின்றோம்.

கடவுளால் படைக்கப் பெற்றுள்ள மாந்தரில் ஒருசாரார் மட்டும் ஏகபோகமாக சுதந்தரங்களை அனுபவித்துக்கொண்டு, பிறரை தாழ்த்தி மோச மான நிலைமையில் வைத்திருப்பதைக் காண, ரோஷமுள்ள தாழ்த்தப் பட்டவர்களின் மனம் ஏன் துடியாது?

ஸ்ரீமான் ஆரியா பிராமணருக்காக உழைத்து பெற்ற பலனை நன்கு கூறியிருக்கின்றார். நன்றி கெட்டவர்களும், ஜாதிக்கொர்வம் படைத்தவர் களும் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள இழிவான முறைகளைக் கைக்கொள்ள சற்றேனும் பின் வாங்காதவர்களுமான, சில தேசீய பிராமணரை ஆரியா போன்ற அநேகர் நம்பி மோசம் போனது பிரத்தியக்ஷம்.

"இக்கொடுமைகளை உணர்ந்தே டாக்டர். நாயர் அவர்கள், ஜஸ்டிஸ் கட்சியைத் தோற்றுவித்தனர். அக்கட்சியானது, இதுவரையிலும் எவ்வித வேலை செய்து கொண்டிருந்தபோதிலும் சரியே. இனியேனும் ஓர் கட்டுப் பாடான முறையைக் கொண்டு, தேசீய பிராமணரல்லாதாருடன் சேர்ந்து இந் நாட்டின் க்ஷேமத்திற்கென்றும், பிராமணரல்லாதாரின் விடுதலைக்கென்றும்



RangaRakes tamilnavarasam.com

உழைக்க வேண்டுமென" ஆரியா அவர்கள் கூறியிருப்பதை நாம் முற்றிலும் ஆதரிக்கிறோம்.

ஜஸ்டிஸ் கக்ஷியானது அதிகாரவர்க்கத்தாரை ஆதரிக்கும் கக்ஷியாகவே இராமல் பிராமணரல்லாதாரின் க்ஷேமத்துக் கென்று உழைக்கக் கூடிய தாயுமிருப்பதுடன் முற்றிலும் தேசீய மயமாக்கப்படவேண்டும். அதற்காக காங்கிரஸில் பிராமணரல்லாதார் எல்லாரும் சேர்ந்து, சுயநலப் பற்றுடன் செய்யும் சூழ்ச்சிகளை ஒழிக்க வேண்டியது மிகவும் அவசியம். மகாத்மாவின் நிர்மாணங்களாகிய கதர், மது விலக்கு, தீண்டாமை, ராட்டினம் முதலியவைகளில் தீவிர முன்னேற்றமடைவார்களானால் அன்றே பிராமணர்களின் ஆதிக்கம் அடங்கி விடுமென ஆரியா அவர்கள் கூறுவதை நாம் ஒப்புக் கொள்கிறோம்.

அன்றியும், பிராமணரல்லாதார் ஒரு விஷயத்தை நன்றாய் கவனிக்க வேண்டும். அதாவது ஜஸ்டிஸ் கட்சி என்று சொன்னால், திடீரென்று தம் மனதில் ஓர்வித வெறுப்பை உண்டாக்கிக் கொள்ளுகிறார்கள். அக்கட்சி என்ன பாவத்தைச் செய்துவிட்டது? சர்க்காரோடு ஒத்துழைப்பதே ஓர் பெரிய பாவமென்று சொல்லுவோமானால் பிராமணர்கள், தங்களுக்குள் சர்க்காருடன் ஒத்துழைக்கும் மிதவாதிகளிடமும் மிதவாத கக்ஷியிடமும் அவ்வளவு வெறுப்பு கொள்ளுகின்றார்கள்? மிதவாத பிராமணர்களும், தேசீய பிராமணர்களும், மாறுதல் வேண்டாத ஒத்துழையாத பிராமணர்களும், ஒத்துழைப்பையும், உத்தியோகத்தையும் இரகசியமாக விரும்பிக்கொண்டு, காங்கிரசை அதற்காக உபயோகப்படுத்திக்கொள்ளும் சுயராஜ்யக் கக்ஷி பிராமணர்களும் தங்கள் பிராமணாதிக்கம் நிலைபெறுவதற்காக வேண்டி வர்ணாசிரம தர்மசபை என்று ஒன்றை ஏற்பாடு செய்துகொண்டு எல்லா பிராமணர்களும் ஒன்றாய்க் கலந்து வேலை செய்யவில்லையா? தங்கள் ஜாதி நன்மையின் பொருட்டு ஸ்ரீமான்கள், ரங்காச்சாரியாரும், எம்.கே. ஆச்சாரியாரும், ஸர். பி.எஸ்.சிவசாமி ஐயரும், மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்த்திரிகளும், ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ஸி.பி.இராமசாமி ஐயர், ஏ.ரங்கசாமி அய்யங்கார், சக்ரவர்த்தி ஐயங்கார் முதலியோரும் ஒன்றுகூடிப் பேசுவதில்லையா? ஸ்ரீமான் ரெங்காச்சாரியார் சர்க்காருக்கு அனுகூலமாய் இருந்துகொண்டு தன் பிள்ளைகளுக்கு உத்தியோகம் சம்பாதித்துக்கொடுத்துக் கொண்டாரென் றாவது, ஸ்ரீமான் ஏ.ரெங்கசாமி ஐயங்கார் ஒத்துழையாமையை ஒழித்துவிடப் பாடுபட்டதின் பலனாக தன் மகனுக்கு உத்தியோகம் சம்பாதித்துக் கொடுத்தா ரென்றாவது இருவர்களையும் எந்த ராஜீய சபையாவது தள்ளிவைத்து விட்டதா? இவைகளைப் பார்த்தாவது, பிராமணரல்லாதாருக்குப் புத்தி வரவேண்டாமா? எந்த பிராமணனாவது எந்த சந்தர்ப்பத்திலாவது ஓர் பிராமணன் மீது குற்றத்தைச் சொல்லவோ, அவன் ராஜீய அபிப்ராயத்தில் தப்பு வியாக்கியானம் செய்யவோ, ஒருவரையொருவர் காட்டிக்கொடுக்கவோ ஒருவருக்கொருவர் விரோதமான பிரசாரம் செய்யவோ முதலிய தங்கள் சமூகத்தாருக்கு



விரோதமான காரியங்களைச் செய்கின்றார்களா? பிராமணரல்லாதாரிடம் கூலி பெற்று பிராமணர்களை வைகிறார்களா? இவற்றையெல்லாம், பிராமணரல்லாதார் கொஞ்சமும் கவனிப்பதேயில்லை. நாமும் ஏன் அம்மாதிரியான நமது சமூக முன்னேற்றத்திற்கென்று, அரசியல் வித்தியாசங்களைக் கவனியாமல், ஒன்றுபட்டிருக்கக் கூடாது? பெரும்பாலும், பிராமணர்கள், சில பிராமணரல்லாதாரைத் தாங்கள் வசப்படுத்திக்கொண்டு அவர்கள் கையைக் கொண்டே ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்களின் கண்ணைக் குத்தச் செய்து ஜஸ்டிஸ் கக்ஷியென்றால் தீண்டாத வகுப்பைவிட கேவலமானது என எண்ணும்படி செய்துவிட்டார்கள். அரசியல் முன்னேற்றத்திற்கு ஒத்துழை யாமை அன்றி வேறொரு சாதனத்தால் பலனில்லையோ, அதுபோல் சமூக முன்னேற்றத்திற்கு, பிராமணரல்லாதார் ஏதாவது செய்யவேண்டுமானால் ஜஸ்டிஸ் கட்சியின் ஒத்துழைப்பில்லாமல், ஒரு காரியமும் செய்யமுடியாது. காங்கிரஸ்காரர்கள், சமூக முன்னேற்றத்திற்காக பாடுபட்டதாகவும், ஜெயிலுக்குப் போனதாகவும் சொல்லிக்கொண்ட போதிலும், உண்மையில் ஜஸ்டிஸ் கட்சியே சமூக முன்னேற்றத்தில் கண் விழிப்புக்கான வேலைகளைச் செய்திருக்கிறது.

ஆனாலும் சுயராஜ்யக் கட்சியினிடமிருக்கும் குற்றங்கள், ஜஸ்டிஸ் கட்சியில் இல்லையென்று சொல்லமுடியாது. சுயராஜ்யக் கட்சியார், தந்திரமாகவும், மறைவாகவும் சூழ்ச்சியாகவும் செய்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியார் வெளிப்படையாகச் செய்கிறார்கள். ஆதலால் அரசியல் விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சியார், காங்கிரஸ்காரர்களின் ஒத்துழைப்பை விரும்புவார்களானால் தங்களுக்கும் சர்க்காருக்குமுள்ள சம்மந்தங்களில் சில மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சுயராஜ்யக் கட்சியைவிட, ஜஸ்டிஸ் கட்சியார் மோசமில்லையென்று சொல்வதினாலேயே அதன் அரசியல் கொள்கைகளை நாம் கண்டிப்பாய் ஒப்புக்கொள்ளமுடியாது. சுயராஜ்யக் கட்சி அரசியல் கொள்கையை நாம் வெறுப்பது போலவே இதையும் வெறுப்பதா யிருந்தாலும் பிராமணரல்லாதார் சுயராஜ்யக் கட்சியாயிருந்த போதிலும், ஒத்துழையா கக்ஷியாயிருந்தபோதிலும் இரண்டுக்கும் மத்தியிலுள்ள வௌவால் கக்ஷியாயிருந்த போதிலும் சமூக முன்னேற்றத்திற்காக ஜஸ்டிஸ் கக்ஷியைப் பலப்படுத்துவதில் யாரும் பின்வாங்கவே கூடாது. எப்படி சில தேசீய பிராமணரல்லாதார் அரசியல் விஷயத்தில் சுயராஜ்யக்கட்சிதான் சர்க்காரை எதிர்க்கிறது என்பதாகக் கூறிக் கொண்டு சுயராஜ்யக் கட்சியாரை ஆதரிப்பது தங்கள் கடமையெனச் சொல்லுகிறார்களோ அதுபோலவே ஜஸ்டிஸ் கட்சிதான் பிராமணரல்லாதாரின் நன்மைக்காக வேலை செய்கிறது என்று சமூக முன்னேற்றத்தை உத்தேசித்து அதை ஆதரிக்க வேண்டியது நம்முடைய கடமையென்று ஒவ்வொருவரும் எண்ண வேண்டும். சமூகவியலும் அரசியலும் ஒன்றுக்கொன்று அதிகார தம்மியமுடையதல்ல. மனிதனுக்கு எப்படி இரண்டு கைகளும் அவசியமோ அதுபோலவே ஓர் நாட்டுக்கும் சமூக முன்னேற்றமும் அரசியலும் முக்கியமானதுதான். அதிலும்



RangaRakes tamilnavarasam.com

தமிழ்நாட்டுக்கு அரசியலைவிட சமூகமுன்னேற்றம்தான் முதலாவதானது. இவற்றைக் கவனியாமல் வெறும் அரசியல் அரசியலென்று கூறிக் கொண்டு பிராமணர்களின் பின்னால் திரிந்து கொண்டு பெருமை பெற்றதின் பலன், இன்றைத் தினமும். பிராமணரல்லாதார் சூத்திரரென்றும், பஞ்சமரென்றும் பார்க்கக் கூடாதவரென்றும், தீண்டக்கூடாதவரென்றும், தெருவில் நடக்கக் கூடாதவரென்றும் சொல்லத் தகுந்த இழிவான நிலையில் இருந்து கொண்டிருப்ப தோடல்லாமல், ஸ்ரீமான்கள் ஆரியா, கல்யாணசுந்திர முதலியார், ராமசாமி நாயக்கரவர்களை காங்கிரசிலிருந்து வெளியாக்க வேண்டிய தவசியமாய் விட்டது. இக்கொடுமைகள் நம் நாட்டிலிருந்து ஒழிந்து, நாமும் பிராமணர்களென்போரும், பஞ்சமர்களென்போரும், கிறிஸ்தவர்கள், முகம்மதியர்களென்போரும் சகோதரர்கள், நம்மில் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வில்லை. நாம் எல்லோரும் சமம் என்கிற உணர்ச்சி ஏற்பட வேண்டுமானால் பிராமணரல்லாதார் எல்லோரும் ஒன்றுகூடி தங்கள் முன்னேற்றத்துக்குப் பாடுபடும்படியான ஓர் பிராமணரல்லாதார் சங்கத்தை பலப்படுத்தவேண்டியதோடு தங்கள் முன்னேற்றத்துக்காக ஒழுங்கான எழுத்துக்களை ஒற்றுமையுடன் தெரிவிப்பதற்கும் பிராமணர்கள் இடம் துவேஷமில்லாமல் கட்டுப்பாடாய் பிரசாரம் செய்வதற்கும் ஓர் பிராமணரல்லாதார் பத்திராதிபர் சங்கமும் காலதாமதமில்லாமல் உடனே ஏற்பாடு செய்ய வேண்டியது பிராமணரல்லாத அறிவாளிகளினுடையவும், தலைவர்கள் என்று சொல்வோருடையவும் முக்கியமான கடமையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 11.10.1925**



# அனுப்பபாளையம்

ஸ்தல ஸ்பனங்களின் நிர்வாகங்களில் பலவித ஊழல்களிருக்கின்றது. அவைகளை நிவர்த்தி செய்யவேண்டுமானால் தேர்தல்கள் ஒழுங்கான முறையில் நடைபெற வேண்டுமென்றும், தேர்தல் மனஸ்தாபத்தின் காரணமாகவே ஸ்தல ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளில் கட்சி வேற்றுமைகளும், காரியக் கெடுதிகளும் ஏற்படுகின்றதென்றுங் கூறியதுடன், இக்குறைகள் அகற்றப்பட வேண்டுமானாலும், பொதுஜனங்களின் வரிப் பணமானது முறையுடன் செலவழிக்கப்பட வேண்டுமானாலும், நிர்வாகத்தை யோக்கியமாய் நடத்தக்கூடிய திறமைசாலிகளையே தெரிந்தெடுக்க வேண்டுமெனக் கூறினார். மற்றும் ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் அரசியல் கட்சிகளைப் புகவிடுவது, வேலைக்கே கெடுதியைத் தருமென்றும், இதை மகாத்மாவும் பலதடவைகளில் வற்புருத்தியிருக்கிறாரென்றும் சொன்னார்.

பின்னர் கதர், மதுபானம் தீண்டாமை முதலியவைகளைப்பற்றி சுருக்கமாகவும் தெளிவாகவும் கேட்போர் மனதில் உணர்ச்சி உண்டாகக்கூடிய வாறு பேசியபின் காங்கிரஸைப்பற்றி ஸ்ரீமான் நாயக்கர் கூறியதின் சாரமாவது:-

காங்கிரஸைப்பற்றி நீங்கள் அதிகமாகக் கவலை கொள்ளவேண்டியதில்லை, ஒத்துழையாமைக் கொள்கைக் காங்கிரஸினின்று எடுபட்டபிறகு காங்கிரஸினால் படித்தவர்களுக்கும் அவர்கள் பிள்ளை குட்டிகள் இரண்டொருவருக்கும் உத்தியோகம் கிடைக்கலாமே தவிர தேசத்திற்கு அதனால் ஒரு காரியமும் உண்டாகாதென்பது என்னுடைய அபிப்பிராயம். பழயபடி காங்கிரஸை ஒத்துழையாமை தர்மத்திற்குக் கொண்டு வரவேண்டு மானால் நாம் யாவரும் காங்கிரஸில் சேர்ந்து உழைப்பதற்கு அர்த்தமுண்டு. அப்படிக்கின்றி யாரோ சில பிராமணர்களும் படித்தவர்களும் உத்தியோகத் திற்குப் போவதற்காக நாம் எல்லாரும் ஜெயிலுக்குப் போவது முட்டாள் தனமென்றே நினைக்கிறேன். இனி பொதுத்தொண்டு செய்பவர்களுக்கு நிர்மாணத் திட்டம் தான் முக்கியமானது. பாட்னா, அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டி மீட்டிங்கில், நிர்மாணத் திட்டம் அடியோடு கைவிடப்பட்டுப் போய் விட்டது. காங்கிரசின் பேரால் பொதுமக்களிடத்தில் பணம் வசூல் செய்யவும், அதை எலெக்ஷன்களுக்குச் செலவு செய்யவும் சுயராஜ்யக் கக்ஷியாருக்கு முழு அதிகாரமும் கொடுத்தாகிவிட்டது. மகாத்மா அவர்களும் காங்கிரசை வைத்துக் கொண்டிருப்பதால், நமக்கு ஒரு பிரயோஜனமில்லையென்று கருதி, கலகக்காரர்



RangaRakes tamilnavarasam.com

களிடமே ஒப்புவித்து விட்டார். நூல்நூற்கும் சங்கத்தில் தனது முழு கவனத்தையும் செலுத்தி வருகிறார். அதற்கு ஒவ்வொருவரும் தங்களா லான உதவியைச் செய்யவேண்டும்.

*குறிப்பு: 30.09.1925 இல் திருப்பூரை அடுத்த அனுப்பபாளையம் கிராமத்தில் யூனியன் பஞ்சாயத்துத் தலைவர் அளித்த ஓர் உபசாரப் பத்திரத்திற்கு பதிலளித்து பேசிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 11.10.1925**



# தென் ஆப்பிரிக்கா தினம்

தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களைத் தாழ்வாய் நடத்துவதைப் பற்றியும், இந்தியர்களை அந்நாட்டைவிட்டு ஒழிப்பதற்கென ஏற்படுத்திய சட்டத்தைப் பற்றியும், சென்ற 11- ந் தேதி இந்தியாவெங்கும் பொது தினமாகக் கொண்டாடி, தேசமெங்கும் கண்டனத் தீர்மானங்கள் நடைபெற்றன. அக்கண்டன விஷயத்தில் நாமும் கலந்து கொள்ளுகிறோம். ஆனால், நமது நாட்டில் கோடிக்கணக்கான சகோதரர்களைத் தீண்டாதாரென்றும், பார்க்கக் கூடாதாரென்றும், தங்களுடைய வேதங்களையே படிக்கக் கூடாதாரென்றும், தங்களுடைய தெய்வங்களையே கண்டு வணங்கக் கூடாதென்றும் கொடுமை செய்திருக்கிற ஒரு நாட்டார் இக்கண்டனத் தீர்மானம் செய்வதில் ஏதாவது பலன் உண்டாகுமா?

இதையறிந்த தென்னாப்பிரிக்கா வெள்ளையர்கள் இக்கண்டனத் தீர்மானங்களை மதிப்பார்களா? அல்லது குப்பைத் தொட்டியில் போடுவார்களா? என்பதை வாசகர்களே கவனித்துப் பார்த்தால் வீணாக ஓர் நாளை இப்போலிக் கண்டனத் தீர்மானங்களுக்காகப் பாழாக்கினோமே யென்ற முடிவுக்குத்தான் வருவார்கள்.

**குடி அரசு - தலையங்கம் - 18.10.1925**



RangaRakes tamilnavarasam.com

# அம்பலத்து அதிசயம்

## ( தேசீய பிராமணர்களின் கண்டனம் )

தேச விடுதலை விஷயத்தில், பிராமணரல்லாதார் பொது நன்மையை உத்தேசித்து, அநேக பிராமணர்களுடைய, கொடுமைகளையும், சூழ்ச்சி களையும் கூட்டாக்காமல் கபடமற்று பிராமணர்களுடன் ஒத்துழைத்து வந்தி ருந்தாலும், அவர்களுடைய உழைப்பையெல்லாம் தாங்கள், தங்கள் வகுப்புச் சுயநலத்திற்கென்று அநுபவித்து கொள்வதல்லாமல் உழைக்கின்ற பிராமண ரல்லாதாருக்கு எவ்வளவு கெடுதிகளையும், துரோகங்களையும் செய்து வந்திருக்கின்றார்களென்பதை - செய்து வருகின்றார்களென்பதைப் பொறு மையோடு படித்து அறிய வேண்டுமாய்க் கோருகிறோம். முதலாவது, பழைய காலத்திய தேசீயவாதிகளில் சிறந்தவர்களில் ஸர்.சி. சங்கரன் நாயர் என்கிற பிராமணரல்லாதார் முக்கியமானவர் ஆவார். அவர் காங்கிரஸிலும் தலைமை வகித்தவர். அப்பேர்ப்பட்டவரை முன்னுக்கு வரவொட்டாமல் தடுப்பதற் காகப் பிராமணர்கள் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்து வந்தார்கள். அவருக்கு கிடைக்கவிருந்த ஹைக்கோர்ட் ஜட்ஜ் பதவியை கிடைக்கவொட்டாதபடிக்குச் செய்ய எவ்வித பொது நலத்திலும் தலையிட்டிராத, ஸர்.வி.பாஷ்யம் ஐயங்கார் போன்றவர்களும் மற்றும் அநேக பிராமண வக்கீல்களும் சீமைக்கெல்லாம் தந்தி கொடுத்த தோடல்லாமல், அவர் பேரில் எவ்வளவோ பழிகளை யெல்லாம் சுமத்திக் கஷ்டப்படுத்தினார்கள். அதன் காரணமாக நான்கு, ஐந்து வருஷங்களுக்கு முன்னதாகவே கிடைக்க வேண்டிய ஹைக்கோர்ட் ஜட்ஜ் பதவி வெகு காலம் பொறுத்துத்தான் கிடைத்தது.

டாக்டர் டி.எம். நாயர் அக்காலத்திய தேசீயவாதிகளில் மிகவும் முக்கிய மான பிராமணரல்லாத தேசீயவாதி. அவர் எவ்வளவோ பொதுக் காரியங் களில் ஈடுபட்டிருந்தவர். அவரையும், மைலாப்பூர் பிராமணர்கள் ஓர் முனிசி பாலிட்டியில் கூட அவர் உட்காருவதை பொறுக்காமல், அவருக்கு விரோத மாகச் சூழ்ச்சிகளைச் செய்து அவரையும் உபத்திரவப்படுத்தினார்கள். ஜஸ்டிஸ் கட்சி ஏற்படுத்துவதற்கு நமது நாட்டில் ஏற்பட்ட முக்கியமான காரணங்களில் இவையிரண்டும் முதன்மையானதென்று, ஓர் காங்கிரஸ் பிராமண பிரசிடெண்டே நம்மிடம் சொல்லியிருக்கிறார்.

இவ்விதமான கஷ்டங்களிலிருந்து பிராமணரல்லாதாரைக் காப்பாற்றுவதற்காக வேண்டி முக்கிய காங்கிரஸ்வாதிகளாயிருந்த டாக்டர்



நாயர் போன்ற பிராமணரல்லாத தலைவர்களால் ஜஸ்டிஸ் கட்சியென்னும் ஓர் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது.

அதை ஒழிப்பதற்காகப் பிராமணர்கள் சூழ்ச்சி செய்து அதற்கு எதிரி டையாக பிராமணரல்லாதார் சிலரைப் பிடித்தே சென்னை மாகாணச் சங்க மென்று ஒன்றை ஆரம்பிக்கச் செய்து அதற்கு வேண்டிய பொருளத் தனையும் பெரும்பான்மையாகப் பிராமணரே உதவி, 'தேசபக்தன்' என்ற தமிழ் தினசரி பத்திரிக்கையையும், 'இந்தியன் பேட்ரியட்' என்ற ஆங்கிலத் தினசரிப் பத்திரிக்கையையும், ஜஸ்டிஸ் கட்சியைக் கொல்லுவதற்காகவே பிரசாரம் செய்யும் பொருட்டு, ஏற்பாடு செய்து கொடுத்து ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும் செல்வாக்கில்லாமல் அடித்தார்கள். 'இந்தியன் பேட்ரியட்' பத்திரிக்கையைத் தங்கள் வேலையை முடித்துக் கொண்டவுடனே ஒழித்துவிட்டார்கள்.

எஞ்சியிருந்த 'தேசபக்தன்' பத்திரிகையை, தேசத்தில் அதற்கு கொஞ்சம் செல்வாக்கு ஆரம்பித்தவுடனே, அதில் ஸ்ரீமான் கலியாணசுந்திர முதலியார் ஆசிரியராயிருப்பதை ஒழிக்க வேண்டுமென்னும் முக்கியக் கருத்துடன் அவருக்கு விரோதமாகச் சில பிராமணரல்லாதாரையே கிளப்பி விட்டு, சில பிராமணர்களும் இரகசியமாக அப்பத்திரிகைக்கு விரோதமாகத் தமிழ்நாட்டில் பிரசாரம் செய்து ஸ்ரீமான் முதலியாரவர்களே 'தேசபக்தனை' விட்டு ஓடிப்போகும்படியாகச் செய்துவிட்டார்கள்.

அதற்குப்பிறகு, அப்பத்திரிகைக்கு பிராமணர்களே ஆசிரியர்களும், எஜமானர்களுமாகி மெதுவாக நழுவவிட்டுக் கொண்டார்கள். இதே மாதி ரியே சென்னை மாகாணச் சங்கத்திலும், பிராமணர்களின் சொற்படி நடந்து கொண்டிருந்த சிலர் ஆதிக்கம் பெற்றிருந்ததை ஆதாரமாக வைத்து அவர்களைக் கொண்டே தங்கள் காரியமெல்லாம் முடிந்து போனவுடன் மறையும்படி செய்துவிட்டார்கள்.

இவையெல்லாம் பழைய காங்கிரஸின் கொள்கைப்படி ஏற்பட்ட திரு விளையாடல்களென்றாலும், ஒத்துழையாமை ஏற்பட்ட காலத்தில் பிராமண ரல்லாத தேசபக்தர்களுக்குச் செய்த கொடுமைகளில் சிலவற்றைக் கீழே குறிக்கிறோம்:-

ஒத்துழையாமை ஆரம்பிப்பதற்குக் கொஞ்ச நாளைக்கு முன்பதாக சென்னையில் தேசீயவாதிகளின் சங்கமொன்று ( Nationalist's Association) என்று ஒன்றை ஆரம்பித்தார்கள். அதற்கு ஸ்ரீமான் சி.விஜயராகவாச்சாரியார் அவர் களை அக்கிராசனராக வைத்து, உப அக்கிராசன ஸ்தானத்துக்கு ஸ்ரீமான் வி.ஓ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பெயரை பிரேரேபித்தவுடன் அவருக்கு அந்த ஸ்தானத்தைக் கொடுக்க இஷ்டமில்லாதவர்களாகி அதை அவர் அடைய விடாமற் செய்வதற்கு எவ்வளவோ பிரயத்தனங்கள் பிராமணர்கள் செய் தார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இதைப் பிராமணரல்லாதாரில் சிலர் தெரிந்து அப்போதே கூச்சல் போட்டதின் பலனாக அநேக உப அக்கிராசனாதிபதிகளை ஏற்பாடு செய்து அந்த ஸ்தானத்திற்கு ஒரு மதிப்பில்லாமல் அடிக்கப் பார்த்தார்கள். இதன் பலனாக, அதன் நிர்வாக சபைகளில் பிராமணரல்லாதாரை அதிகமாகப் போடும்படி நேரிட்டது. இதன் காரணமாக தேசீயவாதிகளின் சங்கமென்பதை குழந்தைப் பருவத்திலேயே கழுத்தைத் திருகிக் கொன்று போட்டார்கள்.

பிறகு, திருப்பூரில் கூடிய தமிழ்நாடு மாகாண கான்பரன்ஸுக்கு ஸ்ரீமான் வரதராஜலு நாயுடு அவர்களை அக்கிராசனம் வகிக்க வேண்டு மென்று சிலர் பிரேரேபித்தார்கள். அதற்கு விரோதமாக ஹிந்து, சுதேச மித்திரன், சுயராஜ்யா ஆகிய மூன்று பத்திரிகைகளும், அதுசமயம் நாயுடு அவர்கள் கான்பரன்சில் தலைமை வகிக்கத் தகுதியற்றவரென்று எழுதி வந்ததோடு பிரேரேபித்தவருக்கும் இம்மாதிரியே பிரேரேபித்தது தப்பித மென்று சொல்லியும், அநேக ஜில்லாக்கள் பெரும்பான்மையாய் ஸ்ரீமான் வரதராஜலு நாயுடுவையே தெரிந்தெடுத்திருந்தும் ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியாரவர்களைக் கொண்டும் ஸ்ரீமான் ஏ.ரெங்கசாமி ஐயங்கார் திருப்பூருக்குச் சென்றதன் பலனாயும் உபசரணைக் கமிட்டியாரை வசப்படுத்தி இவருடைய தேர்தலை ஒப்புக்கொள்ளாமல் நிராகரிக்கும்படிச் செய்து விட்டார்கள்.

பிறகு, மாகாண காங்கிரஸ் கமிட்டியார் பிரவேசித்து அவரை ஒப்புக் கொள்ள வேண்டுமென்று, தங்களுடைய அதிகாரத்தைக் கொண்டு நிர்பந்தப் படுத்தினதின் பேரில் சுயமரியாதையுள்ளவர் ஒப்புக்கொள்ள முடியாதவாறு உள்ள ஓர் தீர்மானத்தைப் போட்டு, அவரையே ஒப்புக்கொண்ட மாதிரியாய் தெரியப்படுத்தினார்கள்.

இத்தீர்மானத்தின் போக்கு யோக்கியதையற்றதாயிருந்தபடியால் ஸ்ரீமான் நாயுடு அதைத் தமக்கு வேண்டாமென நிராகரிக்கும் படியாயிற்று. பிறகு, திடீரென்று ஸ்ரீமான் எம்.ஜி.வாசுதேவய்யரவர்களைக் கொண்டு அம் மகாநாட்டை நடத்திக் கொண்டார்கள்.

அதற்கு அடுத்தாற்போல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு அக்கிராச னாதிபதியாக பெரும்பான்மையோரால் ஸ்ரீமான் ஈ.வெ.இராமசாமி நாயக்கர் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டபோது, தெரிந்தெடுத்த ஒரு மணி நேரத்திற் குள் ஸ்ரீமான் வ.வே.சு.ஐயரவர்கள் ‘நம்பிக்கையில்லை’ என்னும் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அந்த சமயத்தில், ஸ்ரீமான் கலியாணசுந்திர முதலியாரிருந்து இது ராஜீய நோக்கத்துடன் கொண்டுவந்த தீர்மானமல்ல வென்றும், அது ஓர் பிராமணரல்லாதார் இந்த ஸ்தானம் பெறுவதை எப்படியாவது ஒழிக்க வேண்டுமென்கிற வகுப்புத் துவேஷத்தின் மேல் கொண்டு வந்ததென்றும் பொருள்பட உக்ரமாய் அப்பொழுதே பேசியிருக் கிறார்.



இத்தீர்மானம் ஸ்ரீமான் வ.வே.சு.ஐயர் கொண்டு வந்ததின் பலனாய், சில நாட்களுக்குள் ஸ்ரீமான் என்.ஸ்ரீனிவாசய்யங்காரால் ஷை ஐயரவர்களுக்கு குருகுலத்திற்கென்று ரூ.500 நன்கொடை அளிக்கப்பட்டது.

இவ்வருஷம் காஞ்சீபுரத்தில் நடக்கப்போகும் தமிழ் மாகாண மகா நாட்டிற்கு ஸ்ரீமான் கலியாணசுந்திர முதலியாரை சில ஜில்லா கமிட்டிகள் தெரிந்தெடுத்திருந்தும், அதை வெளியாருக்குத் தெரிவிக்காமல் இரகசியமாய் வைத்துக்கொண்டு தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஆகும்படி இரகசிய பிரசாரங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு முன்னெல்லாம் யார் யாரை எந்தெந்த ஜில்லாக்கள் தெரிந்தெடுத்தனவென்பது பத்திரிகை களில் வருவது வழக்கம்.

இப்பொழுது உபசரணைக் கமிட்டியாரும் தெரிவிக்காமல் பத்திரி கைக்காரர்களும் தெரிவிக்காமல் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. தவிர, கும்பகோணம் காங்கிரஸ் கமிட்டி ஸ்ரீமான் வரதராஜலு நாயுடு தமது காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியை இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று தீர்மானமொன்று செய்திருக்கிறது.

சென்னை காங்கிரஸ் கமிட்டி ஸ்ரீமான்கள் ஈ.வி.இராமசாமி நாயக்க ரையும், சுரேந்திரநாத் ஆரியாவையும் கண்டித்து ஓர் தீர்மானம் செய்திருக் கிறது. நன்னிலம் பொதுக்கூட்டத்தில் ஸ்ரீமான்கள் ஈ.வி.இராமசாமி நாயக்கர், கலியாணசுந்திர முதலியார், ஆரியா இவர்களைக் காங்கிரசினின்று வெளி யாக்க வேண்டுமென ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் பேசியிருக்கிறார்.

சட்டசபையில் காங்கிரஸ் பிராமண மெம்பர்களுடைய வேலை, பிராமணரல்லாதாருடைய ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டுமென்பதும் , பிராமணரல்லாதாருக்கு எதிரிடையாய் நிற்கவேண்டுமென்பதுமே என்று சட்டசபையில் எலக்ஷன் ஆனவுடனேயே ‘சுதேசமித்திரன்’ பத்திரிகை எழுதியுமிருக்கிறது. சட்டசபையில் ஒரு பிராமணர், எங்களுக்கு உத்தி யோகம் கொடுக்காவிட்டால், ஒத்துழையாமைக் கக்ஷியில் சேர்ந்து விடுவோ மென சர்க்காரை மிரட்டியிருக்கிறார்.

அன்றி, வைக்கம் சத்தியாக்கிரகத்தின் மூலமாய் அடைந்த தண்டனை யிலிருந்து ஸ்ரீமான் ஈ.வி. இராமசாமி நாயக்கர் விடுதலையாகி தமிழ் நாட்டுக்கு வந்தவுடன், மறுபடியும் வைக்கம் போகாமலிருப்பதற்காக வேண்டி, ஓர் பிராமண சட்ட மெம்பரையும், ஓர் பிராமண அட்வோகெட் ஜெனரலையும் கொண்ட கவர்ன்மெண்டு எட்டு, ஒன்பது மாதங்களுக்கு முன்னால் பேசிய, பழைய குப்பைகளை ஆதாரமாக வைத்து ராஜத்துரோக முதலிய கேஸ் எடுத்து அதன் மூலமாகக் கைதியாக்கிக் கொண்டு போனார்கள்.

பிராமணர்களின் பொல்லாத வேளையாய் ஓர் பிராமணரல்லாத மேஜிஸ்திரேட்டிடம் அந்த கேஸ் நடந்தபடியால், கேஸ் ஒன்றும் ருஜுவாக வில்லையென்றும், அவர் கேஸை முடித்துத் தண்டிக்காமல் திருப்பி ஓட்டி



RangaRakes tamilnavarasam.com

விட்டார். இவ்வளவுமில்லாமல், பிராமணரல்லாத மந்திரிகள், பெரிய உத்தி யோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள். லஞ்சம் வாங்குகிறவர்கள் அது செய்கிறார்கள். இது செய்கிறார்களென்று கிராமம் கிராமமாய் ஊர் ஊராய்ப் பிரசாரம் செய்வதற்குப் பணம் செலவு செய்து, ஆட்களை ஏற்படுத்திப் பிரசாரம் செய்து, அவர்கள் பேரில் தப்பபிப்பிராயத்தைக் கற்பித்து வரு கிறார்கள்.

குருகுலம் சம்மந்தமாய் நடந்த மீட்டிங்குகளில் பிராமணர்கள் கல்லெ டுத்துப் போட்டார்கள். சென்னைக் கார்ப்போரேஷன் தேர்தல்களில், ஸ்ரீமான் ஆரியாவை ஆட்களை விட்டு அடித்தார்கள். பொதுவாய் ஏழைகளுக்கும், முக்கியமாய் பிராமணரல்லாதார்களுக்கும், அவசியமானதாகிய மதுவிலக்கு, தீண்டாமை முதலிய திட்டங்களைக் காங்கிரசை விட்டு ஓட்டி விட்டார்கள். போதாக் குறைக்குக் கதரும் காங்கிரஸில் இருக்க கூடாதென்று, பூனா பிராமண பத்திரிகைகள் இப்பொழுதே எழுத ஆரம்பித்து விட்டன. இதைப் பற்றிச் சென்ற வாரமே 'குடிஅரசில்' ஜோசியம் கூறப்பட்டிருக்கிறது.

பிராமணரல்லாதார் தெய்வத்தின் பேராலும், க்ஷேத்திரங்களின் பேராலும் காணிக்கை வேண்டுதல் மூலமாகக் கொடுக்கின்ற பணங்கள் ஒழுங்கான வழியில் செலவழிப்பதற்காக ஏற்பட்ட தேவஸ்தான ஆக்ட் டானது, பிராமணர்களுடைய எவ்வளவோ எதிர்ப்புகளுக்கும் கண்டனங்க ளுக்கும் தப்பி நிறைவேற்றி விட்டபடியினால், இப்போது அந்த ஆக்ட்டே செல்லாதென்றும் அதை எடுத்துவிட வேண்டுமென்றும், அதை இப்போது அமுலில்லாமல் சஸ்பெண்டு செய்வதற்கு இன்சக்ஷன் தடை கோரி ஹைக் கோர்ட்டில் மகந்துக்கள் பேரால் வியாஜ்யந் தொடுத்திருக்கின்றார்கள். இதற்கு வக்கீல்களோ, ஸ்ரீமான்கள் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார், டி.ரங்காச்சாரியார், டி. ராமச்சந்திர ஐயர் மகந்து பக்கமும், இதற்கு எதிர் வக்கீலாய் ஏற்பட்டவரோ அட்வோகெட் ஜெனரலான ஸ்ரீமான் டி.ஆர்.வெங்கிட்ட ரமண சாஸ்திரிகள் என்ற பிராமணருமே. இந்த ஆக்ட் ஒழிய வேண்டுமென ஹைக் கோர்ட்டில் பிராது தொடுத்திருந்தாலும் இந்த ஆக்ட்டின் மூலமாய் ஏற்பட்ட உத்தியோ கங்களெல்லாம் தங்களுக்கே கிடைக்க வேண்டுமென்று, தேவஸ்தான போர்டு ஆபீஸையும், மந்திரி வீடுகளையும் பிராமணர்கள் சுற்றிக் கொண்டு வருகிறார்கள்.

இவையெல்லாமிருக்க மகாத்மாவையே ஒழிப்பதற்காக "ப்ராமணன்" என்கிற ஓர் பத்திரிகையையும் சங்கராச்சாரியார்கள், மகந்துகள் முதலிய பிராமண சிரேஷ்டர்களென்போரின் ஆதரணையில் ஆரம்பித்திருக்கி றார்கள். மற்றொரு பக்கம் மகாத்மாவின் பெயரைச் சொல்லிக் கொண்டு பதவிகளையும், சட்டசபை ஸ்தாபனங்களையும் பெறுவதற்கு பிராமணரல்லா தாரை ஏமாற்றியும், அலைந்து கொண்டுமிருக்கிறார்கள். இதற்குச் சில பிராமணரல்லாதாரையும் மிரட்டி சுயாதீனப்படுத்திக் கொண்டார்கள்.



தினசரி பத்திரிகைகள் தங்கள் கைகளில் இருக்கிற காரணங்களால் பாமர ஜனங்களை ஏமாற்றித் தங்கள் வசப்படுத்திக் கொள்வதோடு, சில முக்கி யமான பிராமணரல்லாதாரைத் தலையெடுக்கவொட்டாதபடி பத்திரிகைகளில் ஊர், பேர் தெரியாது பிராமணல்லாதாரின் பொய்ப் பெயர்களை இட்டு தூற்றுதலான வியாசங்களை எழுதுவதும், பிராமண வக்கீல்களிடம் (அப்ரெண்டிஸ்) அதாவது வேலை படிக்கும் பிராமணரல்லாத வக்கீல்களான, வாலிபர்களின் கையெழுத்தைப் போடச் செய்து அவர்கள் பெயரால் பிராமணரல்லாதாரை வைது பத்திரிகைகளில் எழுதுவதும், வயிற்றுக்கில்லாத வர்களினுடையவும் பணத்தாசை பிடித்தவர்களினுடையவும் தேசபக்தி யையும் விலைக்கு வாங்கிக் கொண்டு அவைகளை பிராமணரல்லாதாருக்கு விரோதமாக உபயோகப்படுத்தி பணச்செறுக்கால் செய்து வருவது, சென்னைத் தேர்தல்களிலும், மற்ற தேர்தல்களிலும் தெரிந்து போயிருக்கிறது.

ஸ்தல ஸ்தாபனங்களில், பிராமணரல்லாதாருக்குள் கட்சிப் பிரதி கட்சிகளை உண்டாக்கி, இவர்களைக் கோர்ட்டுக்குச் செல்லும்படி செய்வதும் சில பிராமணர்களேயாகும்.

தேசீய பிராமணர்கள், பிராமணரல்லாதாருக்குச் செய்துள்ள கொடுமை கள் இவ்வளவுதானென வரையறுத்துவிட முடியாது. அவர்கள் செய்தவை யும், இன்னும் செய்யப்போகின்றதுமான காரியங்கள் எவ்வளவோ இருக்கின் றன. அவைகளை சமயம் நேரும்போது வெளியிட நாம் பின் வாங்கப் போவதில்லை. இவ்வளவெல்லாமிருக்கும் போது சென்னை காங்கிரஸ் கமிட்டியார் ஸ்ரீமான்கள் இராமசாமி நாயக்கரவர்கள் மீதும், ஆரியா அவர்கள் பேரிலும் கண்டனத் தீர்மானம் செய்திருப்பதை நாம் இலட்சியம் செய்ய வேண்டியதில்லை என எண்ணுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 18.10.1925**



RangaRakes tamilnavarasam.com

## “சுயராஜ்யக் கட்சியின் பரிசுத்தம்”

### விளம்பரம்

பாட்னா முடிவிற்குப் பிறகு, சுயராஜ்யக் கக்ஷியார் வெற்றிக்கொடி பிடித்து திக்விஜயம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். காரியத்தில் எப்படி யிருந்த போதிலும், இவர்கள் போகிற பக்கங்களில் எவ்வளவு இழிவு பட்டுக் கொண்டு வந்தாலும் பத்திரிகைகளில் மாத்திரம், “சுயராஜ்யக் கட்சிக்கு வெற்றி மேல் வெற்றி, சுயராஜ்யக் கட்சி ஸ்தாபனம் செய்தது, சுயராஜ்யக் கட்சியில் அவர் சேர்ந்தார், இவர் சேர்ந்தார்” என்கிற விளம்பரங்களுக்குக் குறை வில்லை. ஆனால் கட்சிக்குள்ளிருக்கிற பழைய தலைவர்களோ ஒருவ ருக்கொருவர் அபிப்பிராய பேதங்களால் சண்டைபோட்டுக் கொண்டிருக் கின்றார்கள்.

தினந்தோறும் விடிந்தெழுந்தால் சுயராஜ்யக் கக்ஷியாரின் நடபடிக் கைக்குச் சமாதானம் சொல்லுவதும், சரியான சமாதானம் ஒன்றும் கிடைக்காத சந்தர்ப்பங்களில் மகாத்மாவின் பெயரைச் சொல்லி மழுப்பி விடுவதுமான தந்திரங்களோடே, பாமர ஜனங்களை ஏமாற்றிக் கொண்டு வரப்படுகிறது.

### அச்சில்லாமல் தேரோட்டம்

சுயராஜ்யக் கக்ஷி, சுயராஜ்யக் கக்ஷியென்ற பேர் மாத்திரம் இருக்கிற தேயல்லாமல், சுயராஜ்யக் கட்சிக்கென ஏற்பட்டிருக்கும் திட்டமென்ன? ராஜீயத் திட்டம் ஏதாவது இருக்கிறதா? பொருளாதாரத் திட்டம் ஏதாவது இருக் கிறதா?சமூக முன்னேற்றத் திட்டம் என ஏதாவது இருக்கின்றதா? வென ஊன்றிப் பார்த்தால் உத்தியோகத்தையெல்லாம் தாங்களே கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்பதைத்தான் ராஜீயத் திட்டமாகவும், அதன் சம்பள மெல்லாம் தங்களுக்கே வரவேண்டு மென்பதுதான் பொருளாதாரத் திட்ட மாகவும் இந்த உத்தியோகமும் சம்பளமும் பிராமணர்களாகிய தங்கள் ஜாதி யாருக்கே வந்துவிட வேண்டுமென்பதுதான் சமூகத் திட்டமாகவும் வைத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. வேறொன்றும் காணோம். இதைத் தவிர தேசநலத்தை யுத்தேசித்தாவது, ஏழை ஜனங்களையும், தொழிலாளரையும் உத்தேசித்தாவது, தாழ்த்தப்பட்டவர்களும், கொடுமை செய்யப்பட்ட வர்களுமான தீண்டாதார் முதலியோர் முற்போக்கைப் பற்றியாவது ஏதாவது ஓர் திட்டம் சுயராஜ்யக் கக்ஷியினர் வசமிருக்கிறதா? என்றாவது பார்த்தால், கதரிலும் நம்பிக்கையில்லை. தீண்டாமையும் காங்கிரசில் இருக்கக்கூடாது. பிராமணரல்லாதார் வசம் இருக்கும் உத்தியோகங்களையும் பிடுங்கிக் கொள்ளவேண்டும் என்கிற கொள்கைதான் நிறைந்து கிடக்கிறது.



ஆனால், இந்த விஷயம் பாமர ஜனங்களுக்குத் தெரியாமலிருக் கும் பொருட்டாக, கூட்டங்களுக்கு வருகிறபோது மாத்திரம் இரண்டொருவர் கதர்த்துணிகளை உடுத்தியும், கதர்க் குல்லாயைப் போட்டும், பொது ஜனங் களை ஏமாற்றுவதும் “தன்னைப் பொறுத்தவரையில் ஜாதி வித்தியாசம் கிடை யாது. ஆனால், தன் ஜாதியார் ஒப்புக்கொள்ளாததினால் அதை இப்போது ஒரு கொள்கையாய் எடுத்துக் கொள்ளுவதற்கில்லை” என்று சொல்லிவிட்டு மகாத்மா காந்தியை வைவதற்கும், தங்கள் ஜாதி ஆதிக்கத்தை நிலை நிறுத்து வதற்கும், ‘பிராமணன்’ என்ற ஓர் பத்திரிகையை நடத்தப் பணங்கொடுப்பதும், வருணாசிரமமென்னும் பிராமணாதிக்கத்தை நிலை நிறுத்த சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டு அதற்கு அக்கிராசனாதிபதியாயிருப்பதும் ஆன காரியங்களைச் செய்துகொண்டு, பிராமணரல்லாதாரில் சில சுயநல அபிமானி களையும், உத்தியோகத்திற்கு ஆசைப்பட்டவர்களையும் தங்கள் சுயாதீனம் செய்து கொண்டு அவர்களைக் கொண்டே தங்களை விளம்பரம் செய்து கொள்ளுவதும், அவர்களைக் கொண்டே தங்கள் கட்சிப் பிரசாரம் செய்து கொள்ளுவதும், வயிற்றுக் கொடுமையினால் கஷ்டப்படுகிறவர்களையும், கீர்த்திக்கு ஆசைப்படுகிறவர்களையும், நிலையில்லாத பயங்கொள்ளிகளை யும் காசு பணம் கொடுத்தும், விளம்பரங்களுக்கு இடம் கொடுத்தும் தங்கள் சுயாதீனப்படுத்திக் கொண்டு, பிராமணரல்லாதாரையும் மற்றும் பல கக்ஷிக் காரர்களையும் காட்டிக் கொடுக்கும் படியும், வையும் படியும் செய்து அச்சில் லாமல் தேரை ஓட்டிக் கொண்டு போகிறார்கள்.

### இதுவரையில் செய்தது

சுயராஜ்யக் கட்சி ஆரம்பித்த காலத்தில் சர்க்காரை ஸ்தம்பிக்கச் செய்ய வெளியில் ஒத்துழையாமை செய்தால் மாத்திரம் போதாது, உள்ளே போயும் ஒத்துழையாமை செய்ய வேண்டும். சட்டசபைகளைக் கைப்பற்றி முட்டுக்கட்டை போட வேண்டும்.

சர்க்கார் எந்தத் தீர்மானம் கொண்டு வந்தாலும் எதிர்க்க வேண்டும். எதிர்க்கச் சக்தியில்லாவிட்டால் ஒரு நடவடிக்கையிலும் கலந்துகொள்ளாமல் ஒதுங்கி நிற்க வேண்டும்.

கமிட்டிகளிலோ அல்லது வேறு எந்தத் தெரிந்தெடுப்பிலோ ஸ்தானம் பெறக்கூடாது. போக்குவரத்து படிச்செலவு ரயில் சார்ஜ் கூட வாங்குவதில்லை என்று இன்னும் பலவாறாக சொல்லிப் பாமர ஜனங்களை நம்பும்படிச் செய்து சட்டசபை ஸ்தானங்களை வெகுவாகக் கைப்பற்றினார்கள்.

ஒருவாறாக உள்ளே சென்று இரட்டையாட்சியை ஒழிக்கிறோம், ஒழிக்கிறோமென்று சொல்லிக்கொண்டு, சட்டசபையிலுள்ள மந்திரி முதலிய



RangaRakes tamilnavarasam.com

இந்திய உத்தியோகஸ்தர்களை மாத்திரம் குறை கூறிக்கொண்டும், அவர்களை உபத்திரவப்படுத்திக்கொண்டும் கொஞ்சம் கொஞ்சமாக சட்டசபைகளின் எல்லா நடவடிக்கைகளிலும் கலந்து எவ்வளவு உத்தியோகங்களையும், பணங்களையும் சம்பாதிக்கச் சாத்தியப்படுமோ அவ்வளவிற்குத் தகுந்தபடி, கிடைக்கக் கூடாத இடத்தில் வேண்டாமெனச் சொல்லிக் கொண்டும், கிடைக்கக் கூடிய இடத்தில் அதுவேறே சங்கதி, இதுவேறே சங்கதி. அது வேறே விஷயம், இது வேறே விஷயம். அந்த மாகாணத்தின் நிலை வேறு, இந்த மாகாணத்தின் நிலை வேறு எனச்சொல்லிக் கொண்டும், இது கக்ஷி சம்மதத்தின் பேரில் செய்யப்பட்டது, அது கட்சி சம்மதமில்லாமல் செய்யப்பட்டது எனச் சொல்லிக்கொண்டும் அகப்பட்ட வரையிலும் அபகரித்துக் கொண்டு வருகிறார்கள். கேட்டால் சுயராஜ்யக் கட்சியாரின் தீர்மானமென்றும், சமயத்துக்குத் தக்கப்படி நடந்து கொள்வது ராஜதந்திர மென்றும் சொல்லிக் கொண்டு ஏமாற்றுகிறார்கள்.

இதுவரையில் சில மாகாணங்களில் தங்கள் உத்தேசப்படி பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப்பற்றி மந்திரி பதவிகளை ஒழித்தார்கள். மேலே இனி என்ன செய்வதென்று அதைப்பற்றி யாதொரு வார்த்தையும் காணோம். ஆனால், அதை யார் பெறுவதென்கிற ஓர் முடிவுக்கு தங்களுக்குள் இன்னும் வராததால், மந்திரி பதவியை ஒப்புக்கொள்ள வேண்டும், ஒப்புக்கொள்ள வேண்டுமெனச் சிலரும், தங்கள் மாகாணத்தில் தங்களுக்குக் கிடையாதென்னும் எண்ணமுள்ளவர்கள் கிடைக்கிற சந்தர்ப்பம் வரையில் வேண்டாம், வேண்டாமெனச் சிலரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கிடைக்கக்கூடிய இவர்களில் வெகு சீக்கிரம் பெற்றுக் கொள்ளப் போகிறார்கள். அதிலொன்றும் ஆக்ஷேபனையில்லை. தவிர, 4000, 5000 சம்பளம் பெறும் உத்தியோகங்கள் பல பெற்றாகிவிட்டது. தினம் 100, 200 கமிஷன் கிடைக்கக்கூடிய கமிட்டிகளில் ஸ்தானம் பெற்றாகிவிட்டது. சில ஸ்தானங்கள் உத்தியோகம் ஏற்றுக்கொண்டது, கட்சி கொள்கைகளை மறந்து கட்சியையே விலகும்படியாகிவிட்டது. உதாரணமாக, ஸ்ரீமான்கள் படேலும், தாம்பேயும் சட்டசபைத் தலைவர்கள் ஸ்தானங்களைப் பெற்ற காரணங்களால், தாங்கள் இனி அக் கட்சிக்காரர்களென்னும் கொள்கைகளிலிருக்கமுடியாமல், ஒரு கட்சியிலும் சேராத பொது மனிதர்களாயிருக்க வேண்டியதென்றும் அதனால் ஒருவர் வைஸிராய் வீட்டுக்கு பத்து தடவை போவதினால் குற்றமில்லையென்றும், மற்றொருவர் நிர்வாக சபை அங்கத்தினர் பதவியை ஒப்புக்கொள்வதில் குற்றமில்லையென்றும் நியாயம் சொல்லி அந்தப்படிக்குச் செய்துமாகிவிட்டது.

இவற்றை கட்சியின் முக்கியஸ்தர்களான தலைவர், உபதலைவர், மாகாணத் தலைவர், காரியதரிசி முதலியோர்களும் ஒப்புக்கொண்டும் ஆகிவிட்டது. பொது ஜனங்களுக்குப் பயந்து கொண்டு ஸ்ரீமான் தாம்பே விஷயத்தில் மட்டும் கட்சியின் சம்மதமிராமல் போனது மாத்திரம் தப்பிதமென்றும் அதைத் துரோகம் என்றும், வெட்கம் என்றும் சொல்லி வருகிறார்கள். ஸ்ரீமான்



தாம்பேக்கோ, கக்ஷியின் சம்மதம் பெறுவதில், ஒருவித ஆக்ஷேபனையில்லாவிட்டாலும், சுயராஜ்யக் கட்சியின் சம்மதங் கேட்க ஆரம்பித்தால், தன்னை ஏமாற்றிவிட்டு வேறு சுயராஜ்யக் கட்சிக்காரர் அதை ஏற்றுக்கொண்டால் என்ன செய்வதென்னும் பயத்தைக் கொண்டு, சட்டசபை அக்கிராசனராயிருக்கச் சம்மதம் கொடுத்ததே போதுமென்று சொல்லுகிறார்.

பம்பாய் மாகாண சுயராஜ்யக் கக்ஷித் தலைவரும், எல்லா இந்திய சுயராஜ்யக் கட்சி நிர்வாக சபை மெம்பருமான, ஸ்ரீமான் ஜெயகர் அவர்கள், "ஸ்ரீமான் படேல் இந்தியா சட்டசபை அக்கிராசனப் பதவியை ஒப்புக் கொண்டதற்கும், ஸ்ரீமான் தாம்பே நிர்வாக சபைப் பதவியை ஒப்புக் கொண்டதற்கும் வித்தியாசமில்லை" என்று சொல்லிவிட்டார். இவர் பம்பாய் மாகாணத்தில் சட்ட ஞானத்திலும் வரும்படியிலும் சென்னை ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் சட்ட ஞானத்திலும், வரும்படியிலும் இளைத்தவரல்ல.

இனி மகாராஷ்டிர தேசத்திய தலைவரும், அகில இந்திய சுயராஜ்யக் கட்சியின் உபதலைவருமான ஸ்ரீமான் கேல்கர், "சுயராஜ்யக் கட்சியின் தலைவரும் காரியதரிசியுமான ஸ்ரீமான்கள் மோத்திலால் நேரு, ஏ.ரெங்கசாமி ஐயங்கார் இவர்கள் ராணுவக் கமிட்டியிலும், கோர்ட்டு அவமதிப்பு மசோதா கமிட்டியிலும் ஸ்தானம் பெற்றதைவிட, ஸ்ரீமான் தாம்பே நிர்வாக சபை ஸ்தானம் பெற்றது மோசமல்ல"வெனச் சொல்லி விட்டார். இவர் சென்னையிலுள்ள ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கும் மத்திய மாகாணத்திலுள்ள பண்டித நேருவுக்கும் ஒரு விதத்திலும் இளைத்தவரல்ல. அதோடு ஸ்ரீமான் திலகருடைய மருமகப் பிள்ளையென்றும், பிரதம சிஷ்யரென்றும் தனி யோக்கியதைப் படைத்தவர். சென்னையிலுள்ள சுயராஜ்யக் கட்சிக்காரர்களோ, ஸ்ரீமான் தாம்பேயின் நியமனத்தைப் பற்றிக் கண்டிக்கக் கொண்டுவந்த கண்டனத் தீர்மானத்தின் போது, சுயராஜ்யக் கட்சித் தலைவர்களிலொருவர் ஷை தீர்மானத்தைக் கண்டித்ததாகவும், இவ்விதம் கண்டித்தால் நமது செல்வாக்கு குறைந்து போய்விடும் என்று அவரைக் கண்டித்ததாகவும், அதனால் அவர் எழுந்து வெளியில் வந்து விட்டதாகவும் ஒரு குருவி வந்து சொல்லியிருக்கிறது. இது உண்மையற்றதாயிருந்தாலும் ஒன்றும் முழுகிப் போகவில்லை. அல்லாமலும் சர்க்கார் அதிகாரிகளின் விருந்து முதலியவற்றுக்குப் போகக் கூடாதென்று, சென்னை சுயராஜ்யக் கட்சிக்காரர் பறையடித்துக் கொண்டது பொது ஜனங்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கும்.

இப்போது, சில தினங்களுக்கு முன்பாக சென்னையில் ஓர் தபால் இலாகா அதிகாரிக்கு நடந்த விருந்திற்கு, சென்னை சுயராஜ்யக் கட்சித் தலைவர்களெல்லாம் போயிருந்தார்கள். இதன் காரணம் விருந்தாளிக்கு பூணூல் இருந்ததினாலும், தங்கள் வகுப்பாருக்கு உத்தியோகங்கள் கொடுக்கத் தகுந்த அதிகாரம் அவர் கையில் இருந்ததினாலும் குற்றமில்லையென்றும் நினைத்துவிட்டார்கள் போலும். இதர மாகாணங்களிலேயும் இதைப் பின்பற்றுவதோடு விருந்துகள் நடத்துவதற்குப் பணமுங் கொடுத்திருக்கிறார்



RangaRakes tamilnavarasam.com

கள். பணம் கொடுப்பதற்கு ஒரு நிபந்தனை மாத்திரம் வைத்துக்கொண்டிருக் கிறார்களாம். அதென்ன வென்றால், தாங்கள் கொடுக்கும் பணத்தில் மாத்திரம் சாராயம் வாங்கக் கூடாதாம். வேறு யார் பணத்தில் வாங்கிக் கொண்டாலாவது உபயோகப்படுத்திக் கொண்டாலாவது தங்களுக்கு தோஷமில்லையாம்.

## உள்ளே ஒத்துழையாமை

ஒத்துழையாமையென்பது சென்னையில் சர்க்காருக்கனுகூலமாய், பிராமணரல்லாதாருக்கு விரோதமாய், பிராமணரல்லாதாருடன் ஒத்துழை யாமை என்பதுதான் சென்னை, பம்பாய், மராட்டா முதலிய சுயராஜ்யக் கட்சி யாரின் அகராதியில் ஏற்பட்டுப் போய்விட்டது. அல்லாமல் சுயராஜ்யக் கக்ஷி ஸ்தாபனம் செய்யும் இடங்களிலெல்லாம் ராவ் பகதூர், ராவ் சாகிப் முதலிய பட்டதாரிகளையும் ஒத்துழைப்புக்காரர்களையும், பூணூல் போட்டவர் களையும் பார்த்தே அவர்கள் வசம் ஸ்தாபனங்கள் ஒப்படைக்கப்பட்டு வருகிறது.

ஏனெனில் அடுத்த தேர்தலை உத்தேசித்து ஸ்தல ஸ்தாபனங்களில் பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் ஒரு மூச்சுப் பறந்து பார்த்தாய் விட்டது. இனி அடுத்தாற் போல் சட்டசபைத் தேர்தல்கள் இருக்கிறது. இப்பொழுதே அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. பணங்களும் லக்ஷக்கணக்காய்ச் சேகரிக்க முற்பட்டாகிவிட்டது. காங்கிரசையும் சுயாதீனம் செய்துகொண்டாகிவிட்டது. மகாத்மாவின் சம்மதமும் கிடைத்துவிட்டது.

## இனி நடக்க வேண்டியதென்ன ?

பிராமணர்களும், அவர்கள் இஷ்டம் போல் நடப்பதாய் வாக்குக் கொடுத்துள்ள பிராமணரல்லாதார்களும், சட்டசபை ஸ்தானங்களைக் கைப்பற்ற வேண்டியதுதான் . கைப்பற்றி, பிராமணரல்லாதார்களுக்காக பிராமணரல்லாத மந்திரிகளும், செய்து வைத்துள்ள பிராமணரல்லாத அங்கத்தினர்களும், தேவஸ்தான மசோதா, சர்வகலாசாலை மசோதா, தொழி லாளரின் அனுகூலங்கள், தீண்டாதாருக்கென ஏற்பட்ட அனுகூலங்கள், சகல சமூகத்தாரும் சமத்வமாய் அநுபவிக்கக் கூடிய சில ஸ்தானங்கள், இவற்றை அடியோடு தலைகீழாகக் கவிழ்த்தி வருணாச்சிரம தருமமென்கிற பிராமணா திக்கத்தை நிறுத்தி வெற்றிக் கொடி நாட்டி, பிராமண சுயராஜ்யம் அடைவது தான் பாக்கியாயிருக்கிறது. பிராமணரல்லாதாரின் தலையெழுத்து எப்படி யிருக்கிறதோ, அதை அனுசரித்துத்தான் இப்போது அவர்கள் புத்தியும் போகும். ஆனால், பாமர ஜனங்கள் ஏமாந்து போகாமலிருக்கும்படி கேட்டுக் கொள்ளுவதைவிட நாம் வேறு ஒன்றும் செய்வதற்கில்லை.

**குடி அரசு - தலையங்கம் - 25.10.1925**



# சுதேசமித்திரனின் ஜாதி புத்தி

சுதேசமித்திரன் பத்திரிக்கை "அதிகார வர்க்கத்திற்கு ஒரு யோசனை" என்கிற தலைப்பின்கீழ் " ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பாட்னா முடிவுக்கு விரோதமாய் தஞ்சையில் சுயராச்யக் கக்ஷியார் தேசத்திற்கு நன்மை செய்ய ஏற்பட்டவர்கள் அல்லவென்றும் சுயராச்யக் கக்ஷியாரும் இதரர்களும் கோருகிற சுயராச்யம் இந்தியாவுக்கு வேண்டியதில்லை என்று சொன்னாராம் என்றும், காங்கிரஸ்காரர் இப்படிச் சொல்லுவது அழகல்லவென்றும் சென்னை கீழ்ப்பாக்கம் தேர்தல் ஸ்ரீமான் நாயக்கர் மனதை வாட்டி வருகிறதென்றும் இப்படிப்பட்டவர் ஜஸ்டிஸ் கட்சி யிலோ வேறு கட்சியிலோ சேர்ந்து கொள்ளலாம் என்றும் எழுதி, நாயக்கர் சுயராச்யமே வேண்டாமென்று பேசியதாக பொது ஜனங்கள் நினைக்கும்படி எழுதியிருக்கிறது. இவ்வெழுத்துக்களில் எவ்வளவு அயோக்கியத்தனமும் அற்பத்தனமும் நிறைந்திருக்கிறது என்பதை வாசகர்களே கவனித்துக் கொள்வார்கள்.

இதற்குமுன் பல தடவைகளில் நாம் குறிப்பிட்டிருப்பதை, இந்த பிராமண பத்திரிகை கவனிக்காமல் மானம் ஈனமின்றி மறுபடி அதே காரியத்தைச் செய்கிறது. தஞ்சையில் நமக்கு வேண்டிய சுயராச்யம் என்ன என்பதைப் பற்றியும், நமக்கு வேண்டாத சுயராச்யம் என்ன என்பதைப் பற்றியும், கதர் தீண்டாமையைப் பற்றி பேசும் பொழுது 2, 3 மணி நேரம் விபரமாய் பேசியிருக்கிறார்.

அந்தப் பேச்சுக்களைக் கிரமமாய் எடுத்துப் போடாமல் அவர் பேசிய பேச்சிலுள்ள எழுத்துக்களைப் பிரித்து தனக்கு வேண்டியபடி வார்த்தை களைக் கோர்த்துக் கொண்டு தங்கள் ஜாதி புத்தியை காட்டியிருக்கிறது.

சுயராச்யம் வேண்டாமென்று இந்தியாவில் ஒரு கட்சியும் சொல்ல வேயில்லை. சுயராச்யம் என்பது என்ன என்பதுதான் இப்போது தகராறி லிருக்கிறது. பிராமணர்கள் படிப்பதும் சர்க்காரில் உத்தியோகம் உண்டாக் குவதும், தம்பிக்கும், மகனுக்கும், தங்கள் கூட்டத்தாருக்கும் உத்தியோகம் சம்பாதித்து கொடுப்பதும்தான் சுயராச்யம் என்று சிலரும் சில கட்சிக்காரரும் நினைக்கிறார்கள். ஏழைகள் வயிராரச் சாப்பிடுவதும், நாட்டில் கைத் தொழில் கள் ஓங்கி தொழிலாளர் பிழைப்பதும், நாட்டில் தரித்திரம் ஒழிவதும், மனிதர் எல்லோரும் சமம் என்ற உணர்ச்சியில் சுயமரியாதையுடன் வாழ்வதும் தான்



RangaRakes tamilnavarasam.com

சுயராச்யம் என்று மகாத்மா உள்பட சிலர் நினைக்கிறார்கள். அதைத்தான் நாம் தேடுகிறோம்.

இரண்டாவதான சுயராச்யம், சுயராச்யக் கட்சியாரால் வருமானால் நான் அதை ஏற்றுக்கொள்வேன் என்று மகாத்மா சொல்வது உண்மைதான். ஆனால் சுயராச்யக் கட்சியார் திட்டத்தில் இவ்வித சுயராச்யம் வருமென்கிற நம்பிக்கை எனக்கில்லை. அதினால்தான் நான் அதில் சேரவில்லை என்கிறார். இந்த இரண்டாவது பாகத்தை விட்டுவிட்டு முதல் பாகத்தை மாத்திரம் தங்கள் பத்திரிக்கைகளில் எழுதி ஏமாற்றப் பார்த்தால் யார் ஒப்புவார்கள். இதைப்பற்றி விவரமாக அடுத்த வாரம் எழுதுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 25.10.1925**



# சென்னை லோகல் போர்டு சட்டம்

## ஸ்ரீமான். வீரையனின் திருத்த மசோதா

1920-ம் வருடத்திய ஸ்தல ஸ்தாபன போர்டு சட்டத்தைத் திருத்தும்படி, ஸ்ரீமான். வீரையன் எம்.எல்.ஸி. கீழ்கண்ட மசோதாவை அடுத்த சட்டசபையில் கொண்டு வரப்போவதாகவும், அதை எல்லா அங்கத்தினர்களும் ஆதரிக்க வேண்டுமென்றும் அறிவிக்கிறார்.

### சென்னை ஸ்தல ஸ்தாபன போர்டு சட்ட திருத்த மசோதா

1920-ம் வருடத்திய சென்னை ஸ்தல ஸ்தாபன போர்டு சட்டத்தை அடியிற் கண்டவாறு மாற்றவேண்டும்.

(1) இந்தச் சட்டமானது 1925-ம் வருடத்திய சென்னை லோகல் போர்டு திருத்தப்பட்ட சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) 157-வது பிரிவுக்குப் பின் 17(ஏ) எந்த பொது ரஸ்தா, தெரு அல்லது பாதை வழியாக நடந்து போகிற அல்லது அதைச் சட்டப் பிரகாரம் உபயோகிக்கிற எந்த நபரையும் எவரும் தடை செய்யக்கூடாது என்னும் புதிய பிரிவு ஒன்று சேர்க்கப்படவேண்டும்.

(3)124-1-பிரிவில் "குடியிருப்பவர்களின் சௌகரியம்" என்னும் வாசகத்திற்கு அடுத்தாற்போல் "மேற்கண்ட காரணங்களுக்காக அவை ஜாதி மத வித்தியாசமின்றி, சகல ஜனங்களாலும் தாராளமாய் உபயோகிக் கப்பட்டதாய் இருக்க வேண்டும்" என்னும் வார்த்தைகள் சேர்க்கப்பட வேண்டும்.

(4)167- பிரிவிலுள்ள, "பொது மார்க்கட்டுகள்" என்ற வார்த்தை களுக்கு அடுத்தாற்போல், "அந்த மார்க்கட்டுகளை சகல ஜனங்களும் ஜாதி, மத வித்தியாசமின்றி தாராளமாய் உபயோகப்படுத் தலாம்" என்னும் வார்த்தைகள் சேர்க்கப்படவேண்டும்.

### 8-வது ஷெடியூலில்

(1) 123(1)-வது பிரிவில் குறிக்கப்பட்டிருக்கிற தண்டனைக்குப் பின் "எந்த ஜாதி, மதம் வகுப்பு முதலியவற்றைச் சேர்ந்த எந்த ஆளையானாலும் சரி தடை செய்தால் அபராதம் ரூ.50" என்று சேர்த்துக் கொள்ளவேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

(2) 157-வது பிரிவில் குறிக்கப்பட்ட தண்டனைக்குப்பின் 157(ஏ) "எந்த பொது ரஸ்தா, தெரு அல்லது பாதையை உபயோகிக்கிற எந்த நபரையாவது, சட்ட விரோதமாய் தடை செய்தால், அபராதம் ரூ.50" என்று சேர்த்துக் கொள்ளவேண்டும்.

(3) 166(1)-வது பிரிவில் ஏற்படுத்தியிருக்கிற தண்டனைக்குப்பின் "எந்த பொது மார்க்கட்டையாவது உபயோகிக்கிற எந்த ஆளையாவது சட்டத்துக்கு விரோதமாகத் தடை செய்தால் அபராதம் ரூ.100" என்று சேர்த்துக்கொள்ள வேண்டும்.

எந்த நகரம் அல்லது கிராமத்திலுள்ள பொது ரஸ்தா, தெரு அல்லது பாதை வழியாக எந்த வகுப்பைச் சேர்ந்த ஆட்களும் நடந்து போவதைப்பற்றி, தடையொன்றுமில்லையென்றும், மேலும் எந்த பொது ஆபீஸ் கட்டிடம், கிணறு, குளம் பொதுஜன வேலை நடக்கிற கட்டிடங்கள் முதலியவைகளை ஏனைய ஜாதி இந்துக்கள் எந்தவிதமாய் உபயோகிக் கிறார்களோ, அதைப்போலவே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும், அவைகளை உபயோகித்துக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை யென்றும், சென்னை சட்ட சபையில் 1924-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 22-ந்தேதி ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதே தீர்மானத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு சென்ற செப்டம்பர் மீ 25-ந்தேதி கவர்ன்மெண்டார் ஓர் உத்திரவு பிறப்பித்துள்ளார்கள். அந்த உத்திரவு ஸ்தலஸ்தாபன போர்டு தலைவர்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறது. எனினும், அதனால் எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. ஆகவே அந்த உத்திரவை சட்ட ரூப மாக்கி ஊர்ஜிதப்படுத்தவே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

**குறிப்பு:-**

ஸ்ரீமான். வீரையனின் சென்னை லோகல்போர்டு சட்டத்திருத்த மசோதாவை மேலே வெளியிட்டிருக்கிறோம். இம்மசோதா, இம்மாகாணத் திற்கு எவ்வளவு அவசியமென்பதை வாசகர்கள் உணர்ந்திருப்பார்கள். நமது தேசமக்களில் ஒரு சாராரை ஒடுக்கப்பட்டவர்களென ஒதுக்கி வைத்து, அவர்களுக்கு சமத்வம் காட்டாது, அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோ மென எதைப்பற்றி யெல்லாமோ பேசுவது வெறும் ஜம்பமேயன்றி வேறல்ல. 1924-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 22-ந்தேதி நடந்த சென்னை சட்ட சபையில் பொது ரஸ்தா, வீதி, பாதை, குளங்கள், கிணறுகள் முதலியவைகளை எல்லா ஜாதியாரும், ஜாதி மத பேதமின்றி அநுபவித்துக்கொள்ளலாம் என ஓர் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், தண்டனையின் போக்கு காட்டப்படாத தால், அத்தீர்மானம் சாரமற்றதாகிவிட்டது. அதனை ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவர வேண்டுமாயின் இத்தகைய திருத்தம் முற்றிலும் அவசியமே யாகும். இம்மசோதாவை ஒத்துழைப்பை விரும்பும் சட்டசபை மெம்பர்கள் யாவரும் ஏகமனதுடன் ஆதரிப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

**குடி அரசு - குறிப்புரை - 25.10.1925**



# நமது பத்திரிக்கை

நமது "குடி அரசுப்" பத்திரிக்கை ஆரம்பித்து ஆறு மாதங் களாகின்றது. அது முக்கியமாய் நமது நாட்டுக்கு சுயராஜ்யமாகிய மகாத்மா வின் நிர்மாண திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவும், தமிழர்களாகிய தீண்டாதார் முதலியோருடைய முன்னேற்றத்துக்கென்று உழைக்கவுமே ஏற்படுத்தப்பட்டது. இத்தொண்டில் "குடி அரசு" சிறிதுங் கள்ளங் கபடமின்றி யாருடைய விருப்பு வெறுப்பையும் பொருட்படுத்தாது தனது ஆத்மாவையே படம் பிடித்தாற்போல் தைரியமாய் வெளிப்படுத்தி தொண்டு செய்து வந்திருக் கின்றது - வரவும் உத்தேசித்திருக்கிறது. "குடி அரசு" குறிப்பிட்ட கருத்தைக் கொண்ட பிரசாரப் பத்திரிகையேயல்லாமல்; வெறும் வர்த்தமானப் பத்தி ரிக்கை அல்லவாதலால், வியாபார முறையையோ பொருள் சம்பாதிப் பதையோ தனது சுயவாழ்வுக்கு ஓர் தொழிலாகக் கருதியோ சுயநலத்திற்காக கீர்த்திபெற வேண்டுமென்பதையோ ஆதாரமாய்க் கொள்ளாமலும் வாசகர் களுக்கு போலி ஊக்கமும் பொய்யான உற்சாகமும் உண்டாகும்படியாக வீணாய் கண்ட கண்ட விஷயங்களையெல்லாம் கூலிக்கு எழுதச் செய்வித்தும், குறிப்பிட்ட அபிப்பிராயமில்லாமல் சமயத்திற்கேற்றாற்போல் ஜனங்களின் மனதைக் கலங்கச் செய்து வருவதுமான பொறுப்பில்லாத ஓர் வேடிக்கைப் பத்திரிக்கையுமன்று. பிரதி வாரமும் "குடி அரசு" தனது ஆத்மாவை வெளிப்படுத்தும்போது கண்ணீர் சொட்டாமலிருக்க முடிவதே யில்லை. இதன் பலனாக உயர்ந்தோரென்று சொல்லிக்கொள்ளுவோராகிய பிராமணர் முதலிய சமூகத்தாருக்கும், ராஜீயத் தலைவர்களென்று சொல்லிக் கொள்ளுவோர்களாகிய பல ராஜதந்திரிகளுக்கும் விரோதியாகவும் அவர் களுடைய சூழ்ச்சிப் பிரசாரங்களுக்கு நமது "குடி அரசு" ஆளாக வேண்டிய தாகவும் ஏற்பட்டிருக்கிறது. இவ்வித நிலையில் "குடி அரசு" சீக்கிரத்தில் பாமர ஜனங்களின் செல்வாக்கைப் போதிய அளவு பெற முடியாமலிருப்பது ஓர் ஆச்சரியமல்ல.

உண்மையில் "குடி அரசு" க்கு எந்த பிராமணரிடத்திலும் குரோதமோ வெறுப்போ கிடையாதென்பதை உறுதியாகச் சொல்லுவோம். ஆனால் பிராமணன் உயர்ந்தவனென எண்ணிக் கொண்டிருப்பதிலும், மற்றவர்கள் தீண்டாதவர்கள், பார்க்கக் கூடாதவர்கள், "இழிவான" மிருக உரிமைக்கும் பாத்திரமில்லாதவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணத்தினிடத் திலும், தங்கள் வகுப்பார்தான் முன்னணியிலிருக்க வேண்டும், மேன்மை



RangaRakes tamilnavarasam.com

யுடன் பிழைக்க வேண்டும் மற்றவர்கள் என்றென்றைக்கும் தங்களுக்கு அடிமையாகவே யிருக்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டும், அதற்காக மற்றவர்களை உபயோகித்துக் கொண்டும் செய்யும், கொடுமையான சூழ்ச்சி களிடத்திலும்தான் "குடி அரசு"க்கு வெறுப்பு இருப்பதுடன், அதை அடி யோடே களைந்தெறிய வேண்டுமென்று ஆவல் கொண்டு உழைத்து வருகிறது.

பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்வோரிடத்தில் "குடி அரசி" ன் தற்காலப் பத்திராதிபர் எவ்வளவோ அன்புடனும், பக்தியுடனும், நட்புடனும் வெகு காலமாக நடந்து கொண்டு வந்திருக்கிறார். அநேக பிராமணர் களுடைய அன்புக்கும் பாத்திரமாயிருந்திருக்கிறார். இன்னும் இருந்து வருகிறார். தேசீய வேலையிலும், பல தேசீய பிராமணர்களுடன் ஒன்றுபடக் கலந்தே ஒத்துழைத்தும் வந்திருக்கிறார். உதாரணமாக, ஒத்துழையாமைக்கு முன்பு சட்டசபைப் பிரவேசங்களுக்கு தனது குடும்ப சகோதரர்கள் போன்ற ஆப்த நண்பர்களான ஸ்ரீமான்கள் கோவை எம். சம்மந்த முதலியார், டி.ஏ. ராமலிங்கம் செட்டியார், எம்.வேணுகோபால் பிள்ளை முதலியோர் களுக்கு விரோதமாகவும், அதற்குமுன் அதிகப் பழக்கமில்லாத ஸ்ரீமான் பி.வி. நரசிம்மய்யருக்கு "தீவிர தேசீயவாதி" என்கிற ஒரு காரணத்திற்காகவே அவருக்கு சட்டசபை அங்கத்தினர் பதவி கிடைக்கவேண்டிய வேலை செய்திருக்கிறார். இதில் ஒரு விஷயத்தை மாத்திரம் இங்கு சொல்வது குற்றமாகாதென்று நினைக்கிறோம். அதாவது, ஸ்ரீமான் வேணுகோபால் பிள்ளைக்காக ஸ்ரீமான் நரசிம்மய்யரை தம் அபேக்ஷகர் ஸ்தானத்தை வாபீஸ் வாங்கிக் கொள்ளும்படி ஒரு சட்டசபைத் தேர்தலில் கேட்கப்பட்டபோது ஸ்ரீமான் பி.வி.நரசிம்மய்யர் ஸ்ரீமான். வேணு கோபால் பிள்ளை தாம் காங்கிரஸ்வாதியென்றும், ஹோம்ரூல் கக்ஷியைச் சேர்ந்தவரென்றும் வெளிப் படையாகப் பத்திரிகைகளுக்கு எழுதினால் தாம் அபேக்ஷகர் ஸ்தானத்தி லிருந்து விலகிக்கொள்வதாகப் பகிரங்கமாகச் சொன்னார். அந்தப்படியே ஸ்ரீமான் வேணுகோபால் பிள்ளையும் தாம் காங்கிரஸ்வாதியென்றும், ஹோம் ரூல் கட்சியைச் சேர்ந்தவரென்றும் பத்திரிக்கைகளுக்கு எழுதிவிட்டார். பேச்சுப்படி ஸ்ரீமான் நரசிம்மய்யர் பின்வாங்கிக் கொள்ளவேண்டுமென்று சொன்ன காலத்தில் முடியாதென்று சொல்லிவிட்டார். இது விஷயங்களைப் பத்திரிகைகளுக்கு எழுதின காலத்தில் "நியூ இந்தியா" "ஹிந்து" "சுதேசமித்திரன்" இம்மூன்றும் பிரசுரிக்கவேயில்லை. இம்மாதிரி நாணயத் தவறுதல் ஏற்பட்ட சந்தர்ப்பத்திலுங்கூட ஸ்ரீமான். நாயக்கர், தம்முடைய ஆப்த நண்பராயிருந்து கொண்டு வந்த ஸ்ரீமான் வேணுகோபால் பிள்ளையவர் களுக்கு விரோதமாகவும், ஸ்ரீமான் நரசிம்மய்யருக்கு அநுகூலமாகவுமிருந்து தம்முடைய வோட்டுகளையும், தம் நண்பர்களுடைய வோட்டுகளையும், ஸ்ரீமான் நரசிம்மய்யருக்கே கொடுத்து அவரை சட்டசபை மெம்பராக இருப்பதற்கும் உதவி செய்தார்.



அல்லாமலும், ஒத்துழையாமை காலத்திலும் தேசீய பிராமணர்களுடன் ஒன்றுபடக் கலந்தே, பரிசுத்தமாய் சில பிராமணர்களைப் பின் பற்றியும், அவர்களைத் தலைவர்களாக்கியும் அவர்களைத் தலைவர்களாகக் கொண் டும் உழைத்து வந்திருக்கிறார். இவையெல்லாம் தேசத்தையும் தேச க்ஷேமத் தையும் முன்னிட்டேயல்லாமல் வேறெவ்வித சுயநலத்திற்காகவும் அல்ல வென்பதை ஸ்ரீமான். நாயக்கரின் எதிரிகளுங்கூட அறிவார்கள். இப்படி யிருக்க, இப்பொழுது, திடீரென்று சில தேசீயவாதிகளென்போரிடமும் முக்கியமாய் பிராமண சமூகத்தில் பலரிடமும் அருவருப்புத் தோன்றக் காரணமென்ன வென்பதை வாசகர்கள் அறிய ஆவல் கொள்ளுவது சுபாவ மேயாகும். நமக்கு இதுவரை ஏற்பட்ட அனுபவத்தில், பிராமண தேசீயவாதி களென்போரில் பெரும்பாலோர், தங்கள் சுயநலத்திற்கும், தங்கள் வகுப்பு முன்னேற்றத்திற்கும், பிராமணரல்லாத மற்ற எல்லா சமூகத்திற்கும் துரோகம் செய்வதற்குமே உழைத்து வந்திருக்கின்றார்களென்றும் - ஸ்ரீமான். நாயக்கர் போன்றாரை உபயோகப் படுத்திக்கொண்டு வந்திருக்கிறார்களென்றும் நினைக்கும்படியாகவே ஏற்பட்டுப் போய்விட்டது. பிராமணர்களின் தியாக மென்று சொல்லப்படுவதும் பிராமணரல்லாதாரின் கெடுதிக்காகவே செய்யப் படுவதாய்க் காணப்படுகிறது. இந்நிலையில் தேசத்தின் பெரிய சமூகத்தாரான, பிராமணரல்லாதாரைப் பலி கொடுத்து பிராமணர்களுக்கு நல்ல பிள்ளை களாய் நடக்க வேண்டும் என்கிற எண்ணம் கொஞ்சமும் தோன்றமாட்டே னென்கிறது. அல்லாமல், இவற்றைப் பற்றிய கவலை எடுத்துக்கொள்ளாமல் எப்படியோ போகட்டும் என விட்டுவிடுவதற்கும் மனம் ஒருப்படுவதில்லை. என்றைக்கிருந்தாலும் இரு சமூகத்தினரும் ஒன்றுபட்டுதானாக வேண்டும். அங்ஙனம் ஒன்றுபடுவதற்கு அவரவர்களுடைய குற்றங்குறைகளை எடுத்துச் சொல்லப் பயந்து கொண்டு மேற்பூச்சுக்கு மாத்திரம் பிராமணர்களிடம் அன்பர்களாய் நடந்து கொள்ளுவதில் இரு சமூகத்தாருக்கும் ஒரு பிரயோ ஜனமுமேற்படாது எனக் கருதியே, யாருடைய நிஷ்டூரம் ஏற்பட்டாலும் அதைப்பற்றிக் கவலையில்லாமல் உண்மையை எடுத்துக் கூறி குற்றங்களைக் கீறி ஆற்றி திருத்துப்பாட்டடையச் செய்து இரு சமூகமும் உண்மையான சகோதர அன்பில் கட்டுப்பட்டு நமது நாடு உண்மையான விடுதலை பெறவே உழைத்து வரப்படுகிறது. இதை ஆரம்பத்திலேயே "குடி அரசின்" முதலாவது இதழ் தலையங்கத்தில் "மக்களுக்குள் தன் மதிப்பும், சமத்வமும், சகோதரத் வமும் ஓங்கி வளரல்வேண்டும், மக்கள் அனைவரும் அன்பின் மயமாதல் வேண்டும், உயர்வு, தாழ்வு என்ற உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் சாதிச்சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாக இருப்பதால் இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணும் உண்மையறிவு மக்களிடம் வளர்தல் வேண்டும், சமயச்சண்டைகள் ஒழியவேண்டும், ஆனதுபற்றியே, "நகுதற்பொருட்டன்று நட்டல் மிகுதிக் கண்மேற் சென்றிடித்தற் பொருட்டு" எனும் தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் வாக்கை கடைபிடித்து, நண்பரேயாயினுமாகுக, அவர் தம் சொல்லும், செயலும் தேச விடுதலைக்குக்



RangaRakes tamilnavarasam.com

கேடு சூழ்வதாயின் அஞ்சாது கண்டித் தொதுக்கப்படும்" என நமது அபிப்பிராயத்தைத் தீர்க்கமாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

இந்நிலையில், நமது "குடி அரசு" பாமர ஜனங்களின் ஆதரவைப் பூரணமாகப் பெறுவது சுலபத்தில் எதிர்பார்க்கக் கூடிய காரியமல்ல, உதாரண மாக, "குடி அரசு" ஏற்பட்டு ஆறுமாத காலமாகியும் இதுவரை ஆயிரத்துச் சில்லரை சந்தாதாரர்களே சேர்ந்திருக்கிறார்கள். இது நஷ்டத்தில் தான் நடைபெற்று வருகின்றதெனச் சொல்ல வருந்துகிறோம். அதனைப் படிக்க வேண்டிய அளவு ஜனங்கள் படிக்கவில்லையென்பதே நமது அபிப்பிராயம். பெரும்பாலும் பிராமணர், செல்வந்தர், முதலாளிகள், வைதீகர் முதலியோ ருடைய குற்றங்களை எடுத்துச் சொல்லிவருவதால் அவர்கள் நமது பத்திரிக்கையை ஆதரிப்பார்களென்று எதிர்பார்ப்பது பைத்தியக்காரத்தன மாகவே முடியும். ஆதலால், நமது பத்திரிக்கையை ஆதரிக்க வேண்டியது பிராமணரல்லாதார், ஏழைகள், தொழிலாளிகள், தீண்டாதாரெனப்படுவோர் முதலிய ஒடுக்கப்பட்ட சமூகத்தாருக்கு ஏற்பட்ட முக்கிய கடனாகும். அந்தப்படி இக்கூட்டத்தார் நமது "குடி அரசை" ஆதரிக்கவில்லையானால், "குடி அரசு" தானாகவே மறைந்து போக வேண்டியதுதான் அதனுடைய கடமையேயல்லாமல், முன்சொன்னது போல் சுயநலம் முதலியவைகளுக் கென்று இப்பத்திரிக்கையை நடத்துவதில் பிரயோஜனமில்லை. ஏனெனில் "குடி அரசா"னது தன்னுழைப்பினாலும், தனது தியாகத்தினாலும் மக்கள் சிறப்பாய் பிராமணரல்லாதார், தீண்டாதார் முதலியோர் விடுதலை பெற்று சுயமதிப்புடன் வாழ்ந்து தேசம் உண்மையான சுயராஜ்யமடைய வேண்டு மென்றும், சகலரும் சமமாய் வாழவேண்டுமானால், தாழ்த்தப்பட்டவர்களெல் லாம் சமநிலைக்கு வரவேண்டுமானால் வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் இன்றி யமையாதெனக் கருதி அதையெல்லா வகுப்பாரும் அடைய வேண்டுமென எதிர்பார்க்கிறதேயொழிய பொது மக்கள் வாழ்வால் "குடி அரசு" வாழ வேண்டுமென்று அது கருதவேயில்லை. ஆதலால், "குடி அரசி"ன் வாழ்வைக் கோருகிற ஒவ்வொருவரும், தங்களாலியன்றளவு புதிய சந்தாதாரர் களைச் சேர்த்துக் கொடுத்தும், மற்றும் தங்களால் கூடிய உதவி செய்தும் இதனை ஆதரிக்க வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 01.11.1925**



# சுதேசமித்திரனின் ஜாதிப் புத்தி

சென்ற வாரம் இத்தலையங்கத்தின் கீழ் "சுதேசமித்திரன்" என்னும் பிராமணப் பத்திரிக்கை, பிராமணரல்லாதாருக்கும், மிக முக்கியமாய்ப் பிராமணரல்லாத தேசத் தொண்டர்களுக்கும், விரோதமாய் வேண்டுமென்றே செய்து வரும் சூழ்ச்சிகளைப் பற்றி எழுதி, மற்றும் மறுமுறையென்று எழுதியிருந்தோம். அவற்றில் முக்கியமாக ஸ்ரீமான்.ஈ.வெ.இராமசாமி நாயக்கரைப்பற்றி தன்னாலும் தான் ஆட்கொண்டவர்களாலும் பொது ஜனங்களுக்கு எவ்வளவு கெட்ட அபிப்பிராயத்தைக் கற்பிக்க வேண்டுமோ, அவ்வளவையும் செய்து பார்ப்பதென்றே முடிவு கட்டிக்கொண்டிருக்கிறது. ஸ்ரீமான். நாயக்கர் எந்த ஊருக்குப் போயிருந்தாலும், என்ன பேசினாலும் அவற்றைத் திரித்துப் பொதுஜனங்களுக்குத் தப்பபிப்பிராயப்படும்படி கற்பனை செய்து பத்திரிக்கைகளிலெழுதுவதும் அவற்றிற் கேற்றார்போலவே சில ஈனஜாதி நிருபர்களை அங்கங்கே வைத்துக்கொள்ளுவதும், அவர்கள் பேரால் ஸ்ரீமான் நாயக்கர் சுயராஜ்யம் வேண்டாமென்கிறார். ஜஸ்டிஸ் கட்சி யில் சேர்ந்துவிட்டார், அதிகார வர்க்கத்தோடு கலந்துவிட்டார், காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாயிருக்கிறார் என்று இவ்வாறாக அப்பத்திரிக்கை எழுதி வருகிறது. உதாரணமாக, பொள்ளாச்சி, மதராஸ், அநுப்பபாளையம், தஞ்சை, மாயவரம் இந்த இடங்களில் ஸ்ரீமான் நாயக்கர் பேசிய பேச்சைப் பற்றி சுதேசமித்திரன் பத்திரிக்கை தாறுமாறாகவும் பிரசுரம் செய்து அதையனுசரித்துப் பல குட்டித் தலையங்கங்களும் எழுதி வந்திருக்கிறது. போதாக்குறைக்கு தன் இஷ்டம் போல் பலவற்றை எழுதிக்கொண்டு சில பிராமணரல்லாதாரிடம் கையெழுத்துப்பெற்று, அவர்கள் பேரால் பிரசுரம் செய்து கொண்டும் வருகிறது. இப்பிராமணப் பத்திரிகைகள், பிராமணரல்லா தாருக்கு விரோதமாய் இங்ஙனம் செய்யும் அயோக்கிய பிரசாரத்தையும், பிராமணர்கள் சிலர் செய்யும் முறையற்ற சூழ்ச்சிப் பிரசாரங்க ளையும் நாம் கண்டித்து எழுதும்போது கடின பதங்களைப் பிரயோகிப்பதாய் சிலர் கூறு கின்றனர். மனிதர்களுடைய யோக்கியதைக்குத் தகுந்த பதம் உபயோகப் படுத்தவேண்டுமேயென்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். மான வெட்க முள்ள ஜனங்களுக்கு உபயோகப்படுத்த வேண்டிய பதம் வேறு, அஃதில்லா தவர்களுக்கு உபயோகப்படுத்தவேண்டிய பதம் வேறு. ஒவ்வொரு பதத்தையும் நாம் மனிதர்களுக்குத் தக்கபடிதான் அளந்து உபயோகிக்கிறோம். நாம் உபயோகப்படுத்துகிற பதங்கள் கடினபதங்களென்று சொல்லப்படுவது



RangaRakes tamilnavarasam.com

கூட, சிலருடைய குணத்தைக் கொஞ்சமும் மாற்ற முடியாததாய் இருக்கிறது. இன்னும் இதிலும், கடினமாகப் பதங்களைத் தேடும்படியாகி விட்டதேயென்று நமக்கு வருத்தமாக தானிருக்கிறது. இந்த நிலையில் பிராமணரல்லாத நம்மவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் காட்டிக்கொடுப்பதால், விஷமஞ் செய்கிறவர்களுக்கு மிகுந்த சவுகரியமேற்பட்டுப் போய் விடுகிறது. அவரவர்களைப்பற்றி வரும்போது தான் அவரவர்கள் கவனிக்கின்றார்கள். உதாரணமாக “சுயராஜ்யா” பத்திரிக்கை ஸ்ரீமான். நாயக்கரின் சென்னைப் பிரசங்கத்தைப் பற்றி நாயக்கரின் குட்டிக்கரணமென்றும், பிள்ளையார் வேஷமென்றும், கீர்த்திக்காக தியாகம் செய்தவரென்றும் எழுதின காலத்தில், பிராமணரல்லாத மற்ற பத்திரிக்கைக்காரர்கள் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தார்கள். இதன் பலனாய் மற்றவர்களையும் தனித்தனியாய் ஷை பத்திரிக்கை தாக்க ஆரம்பித்தது. இப்படியே ஒவ்வொரு சமயத்தில் ஒருவரைப்பற்றி எழுதும்போது மற்றவர் பார்த்துச் சிரிப்பதால் பொதுவாக பிராமணரல்லாதாருடைய நிலைமையே தாழ்வடையக் காரணமாய்ப் போய்விட்டதென்பதை ஒவ்வொருவரும் ஊன்றிக் கவனிக்க வேண்டும். இவ்விஷயத்தை யோசித்துப் பார்த்தால் பிராமணரல்லாத தேசத்தொண்டர்களுடையவும் தேசீயத்தலைவர்களுடையவும் ஒற்றுமையின்மையும் சுயநலமுமே பிராமணரல்லாதாரை இக்கெதிக்குக் கொண்டுவந்து விட்டது. இனியாவது இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், பிராமணரல்லாதார் தகுந்த ஜாக்கிரதையுடன் நடந்து, பிராமணரல்லாத சமூகமும் தீண்டாதாரென்று கூறப்படுவோர்களின் நிலைமையையும், முன்னேற்றமடையச் செய்வித்து சுயமதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளுவார்களென உறுதியாய் நம்புகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 01.11.1925**



# ஈரோடு முனிசிபாலிட்டி

ஈரோடு முனிசிபாலிட்டியைப் பற்றி அதன் கொடுமைகளை வெளியிடாமல் கொஞ்சநாளாக “குடி அரசு” மௌனம் சாதிப்பதாகவும் இதற்கு ஏதோ காரணங்கள் இருப்பதாகவும் சிலர் குறை கூறுகிறார்கள். மற்றும் சிலர் தற்கால முனிசிபல் நிர்வாகத்தை குறை கூற வேண்டுமென்றே பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டதாகவும் பழி சுமத்துகிறார்கள்.

இவ்விரண்டையும் நாம் பொருட்படுத்தவில்லை. நமக்கு தோன்றியதை யாருடைய விருப்பு வெறுப்பையும் லக்ஷியம் செய்யாமல் அவசியம் நேரும்போது வெளியிட்டு வருவோம். உள்ளூர் விஷயத்தில் இன்னும் பல பொது ஸ்தாபனங்களும் புகாருக்கு இடம் வைத்துக் கொண்டு ஒழுங்கீனமாகவும் நடந்து வருகிறது. அவற்றில் பல விஷயங்களை பத்திரிக்கைகளில் வெளியிடாமலே திருத்திக்கொள்ளலாம் என்கிற நம்பிக்கை கொண்டே விட்டு வைத்திருக்கிறதே அல்லாமல், வேறு எவ்வித தயவுக்கோ தாக்ஷண்ணியத்துக்கோ அல்ல. இவ்விஷயமாக நிரூபர்கள் அனுப்பிய பல நிரூபங்கள்கூட பிரசுரிக்காமல் இருப்பதற்கும் இதுவே முக்கிய காரணம். ஆதலால் உள்ளூர் நிரூப நேயர்கள் மன்னிக்க வேண்டுகிறோம்.

நமது ஈரோடு முனிசிபாலிட்டியானது மிக சிறிய முனிசிபாலிட்டி, ஆனால் வரும்படியில் கோயமுத்தூர் சேலம் முதலிய முனிசிபாலிட்டியைவிட விகிதத்தில் அதிகமானது. தற்கால நிலைமையைப் பார்த்தால் உண்மையாகவே வரி விகிதங்கள் சராசரி பொது ஜனங்கள் தாங்கக் கூடாததாயிருக்கிறது. இப்படி தாங்கக்கூடாத வரியை பொது ஜனங்களிடம் வசூலித்தும் அதை சரியான வழியில் பொது ஜனங்களுக்கு உபயோகப்படுத்தாமல் ஜனங்கள் மனம் பதறப் பதற தாறுமாறான வழியிலும் சிலருடைய சுயநன்மைக்கும் சிலருடைய பிழைப்புக்குமே உபயோகப்படுத்திக் கொள்ளப்படுகின்றது. இதை சில கவுன்சிலர்கள் தெரிந்திருந்தும் இம்மாதிரி அக்கிரமங்களுக்கு உடந்தையாயிருக்கிறார்கள் என்று சொல்லுவதை மன்னிப்பார்களாக.

## சிங்காரவனம் (பார்க்)

நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பஞ்சம் உத்தியோகஸ்தர் வக்கீல்கள் தவிர மற்றவர்கள் எல்லோரும் நன்கறிந்ததே,

இப்பஞ்சத்தின் கொடுமையைப் பற்றி சென்னிமலை, கோ-வாப்ரேடிவ்



RangaRakes tamilnavarasam.com

யூனியன் செக்ரட்டேரி ஸ்ரீமான் . எஸ். கே. ராமசாமி முதலியார் நமக்கு அனுப்பியுள்ள பஞ்ச ரிப்போர்ட்டை வேறொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். இந்த விதமான நிலைமையில் தொழிலாளருக்கு தொழில் இல்லை. கூலிக்காரருக்கு கூலி இல்லை. ஏழைகளுக்கு கஞ்சி இல்லை. அநேக இடங்களில் குடிக் கவே தண்ணீர் இல்லை. இப்படியிருக்க ஈரோட்டு ஜனங்களுக்கு மாத்திரம் சிங்காரவனமாம். இதற்கு ஏழை வரி கொடுப்போர் பணம் பதினாயிரக்கணக்காய் செலவு செய்வதாம். இந்த வனம் முடிவுபெற்றால் அனுபவிப்பவர்கள் யார்? வரிகொடுக்கும் ஏழைகளா? கூலிக்காரரா? தொழிலாளிகளா? ஒருக்காலும் இல்லை. இவர்களுக்கு வயிற்றுக்கு கஞ்சிக்கு வழி தேடுவது வைகுண்டமா இருக்கும் போது சிங்காரவனத்திற்குப் போய் காற்றுவாங்க நேரம் எங்கே? மற்றபடி நமது வியாபாரிகள் அனுபவிக்கக்கூடுமா என்று பார்த்தால் அதுவும் முடியவே முடியாது. காலையில் 6 மணிக்கே கடை திறக்க வேண்டும். சிலர் இரவு 8 மணிக்கும் சிலர் 10 மணிக்கும் கடையை பூட்டிவிட்டு வீட்டுக்கு போகவேண்டும். மத்தியில் வீட்டுக்கு சாப்பாட்டுக்குப் போக ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் பகலில் எடுத்துக் கொள்வதையே பெரிய அன்னச் சத்திரம் கட்டுவதுபோல் நினைக்கிறவர்கள் மாலை நேரத்தில் தான் இவர்களுக்கு வியாபார மும்மரம். இந்த சமயத்தில் காற்றுவாங்கப் போய்விட்டால் நாளைக்கு கடன் காரனுக்கு பதில்சொல்ல வேண்டாமா? அல்லது பெரிய மிராஸ்தார்கள் காற்று வாங்குவார்கள் என்றாலோ இந்த காலத்தில் மிராஸ்தார்கள் என்போர் யார் என்றால் அப்பன் தேடி வைத்த அரும்பொருளனைத்தையும் ............................................ என்று டம்பாச்சாரி சொன்னது போல.................... செலவுசெய்யும் வீரர்களைத்தான் மிராஸ்தார்கள் என்று சொல்வது. இவர்கள் நமது நகரில் தாராளமாய் கணக்குப் போட்டாலும் ஒரு ஐந்து அல்லது ஆறு பேர்கள்தான் இருப்பார்கள். இவர்களுக்கும் மாலை நேரங்களில் பல ஜோலிகள் இருக்கும். அவற்றையெல்லாம் விட்டு காற்று வாங்க வருபவர்கள் இரண்டொருவர்தான் இருப்பார்கள். வரிகொடுக்காத உத்தியோகஸ்தர்களாவது அனுபவிப்பார்களா என்றால் அதுவும் முடியாத காரியம். கச்சேரியில் சாதித்தது போதாமல் வீட்டுக்கும் காகிதங்களை கத்தை கட்டிக்கொண்டு போவது ஆதலால் அவர்களுக்கு வழக்கமாய் போய் விட்டது. 1000, 500 என்று சம்பளம் வாங்குகிற இரண்டொருவர்களைத் தவிர மற்றவர்களால் முடியாத காரியம். இந்த இரண்டொருவரும் தொழில் வரிகூட கொடுக்காமல் ஏமாற்றுகிறவர்களாயிருப்பார்கள். பின் யார்தான் அனுபவிப்பார்கள் என்று யோசித்தால் ஒரு சமயம் நமது தேசத்திற்கே பெரிய வினையாய் முளைத்திருக்கும் நமது வக்கீல் சகோதரர்கள் அனுபவிக்கலாம். அதுவும் முன்சீப் காற்று வாங்க போகாவிட்டால் பாதி பேர் போகமாட்டார்கள். டிப்டி கலெக்டரோ மேஜிஸ்ட்ரேட்டோ போகாவிட்டால் கால்வாசிபேர் போக மாட்டார்கள். ரங்கு, பரிலா, பிரிட்ஜ் இதுகளை ஆடுவதை விட்டு அரைகால் வாசிப்பேர் போகமாட்டார்கள். இந்த நிலைமையில் உள்ள சிங்காரவனம் ஏழைகளின் வரிப்பணத்தை எவ்வளவு சாப்பிடுகிறது என்று கணக்குப் பார்த்தால், ஏழைகள் கஷ்டம் எப்படி இருக்கும் என்று அறியாத நமது கவுன்சிலர் பிரபுக்கள் முதல் முதலாக பார்க்கு 3000 ரூபாயில் முடியுமென்று நினைத்து 3000ரூ. சாங்கிசன் செய்தார்கள். 2000 ரூ. குழந்தைகள் விளையாடுமிடத்திற்கென்று சாங்கிசன் செய்ததையும் அதற்கு உபயோகப்படுத்தாமல் கவுன்சில் சம்மதம் இல்லாமலே பார்க்குக்கு உபயோகப்படுத்தியாய்விட்டது. இதைப்பற்றியும் நமது கவுன்சிலர் பிரபுக்கள் கவனித்தவர்களே அல்ல. அல்லாமல் மாதம் 60, 70 சம்பளமுள்ள சூப்பரின்டெண்டு ஓவர்சீயர்கள் வேறே சாங்கிஷன் செய்யப்பட்டது. இஃதன்றி கவுன்சில் சம்மதமில்லாமல், சம்மதத்தை எதிர்பார்த்து செலவு செய்திருக்கும் தொகை சுமார் 3000 அல்லது 4000. இனி செலவு செய்ய சம்மதம் கேட்கும் தொகை 3000 அல்லது 4000. ஆக பதினாயிரம் ரூபாய்க்கு குறையாமல் சிங்காரவனம் விழுங்கப்போகிறது. இதை நிர்வகிக்க மீ 100, 150 வீதம் வருசத்திற்கு 2000 ரூபாய்க்கு குறையாமல் செலவாகப் போகிறது.

தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்திலிருந்து ஒரு கால் அணாவாவது வரி கொடுப்பவர்களாயிருந்தால் இப்படி அக்கிரமமாய் செலவு செய்ய கவுன்சிலர்களுக்காவது சேர்மேனுக்காவது மனம் வருமா? இவர்கள் வரிகொடுப்பவர்களின் உண்மையான பிரதிநிதிகளாய் இருந்தால் இம்மாதிரி ஏழைகளின் வரிப்பணத்தை பாழாக்க சம்மதிப்பார்களா?

கவுன்சிலர் சாங்கிஷன் இல்லாமல் கவுன்சிலர் சம்மதத்தை எதிர்பார்த்து சேர்மென் செலவுசெய்ததாக சொல்லும் அயிட்டங்களை இனிமேல் கவுன்சிலர்கள் ஒப்புக்கொள்ளக்கூடாது என்றும் சேர்மெனும் இனி அவ்விதம் கவுன்சில் உத்திரவு பெறாமல் எவ்வித செலவும் செய்யக்கூடாது என்றும் கொஞ்ச நாளைக்கு முன்பு கவுன்சிலர்களும் சேர்மெனும் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்களாம். அதற்கு பிறகு அனேக தொகைகள் இது விஷயத்தில் மறுபடியும் கவுன்சில் சம்மதத்தை எதிர்பார்த்து சேர்மனால் செலவு செய்யப்பட்டிருக்கிறதாம். சுயமரியாதை உள்ள நமது சில கவுன்சிலர்களாவது ஒப்பந்தப்படி நடக்கப்போகிறார்களா அல்லது தலையாட்டி கவுன்சிலர்களாயிருந்து ஏழைகள் பணம்தானே போகிறது நமக்கென்ன நஷ்டம், நாமும் இரண்டு மூன்று செடிகள் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போகலாம் என்று நினைத்து இதையும் ஒப்புக்கொண்டுவந்து விடுகிறார் களோவென்பது அடுத்த மீட்டிங்கில் தான் தெரியவேண்டும். இம்மாதிரி மனம் பதறப் பதற ஏழைகள் பணம் பாழாவதை பார்த்துக்கொண்டு இந்த கவுன்சிலர் பதவி வகிப்பதை விட வேறு வேலைக்குப் போனாலும் லாபமுண்டாகும்.

நமது ஊரில் எங்கு பார்த்தாலும் கொசுக்கள் உபத்திரவமும் வீட்டுக்கு வீடு குளிரும் காய்ச்சலும் வந்து அவஸ்தைப்படும் ஜனங்கள் கணக்கில்லாமல் கிடக்கின்றன. இவைகளை போக்க வேண்டுமானால் சுகாதார வசதியை நன்றாய் கவனித்துப் பார்ப்பதோடு இன்னும் அநேக இடங்களில் ஜலதாரைகள் கட்டவேண்டும். ஓடையில் ஜலதாரைத் தண்ணீர் தேங்கி கொசுக் களை



RangaRakes
tamilnavarasam.com

உற்பத்தி செய்கிறது. அதன் பக்கத்தில் குடியிருப்பவர்கள் மலைக்காய்ச்சலினால் அதிக கஷ்டப்படுகிறார்கள். இவற்றை கவனிக்கப் பணம் இல்லை, ஆளில்லை. சிங்காரவனத்திற்கு மாத்திரம் ஆள்களும் பணமும் கொள்ளை போகிறது. நமது முனிசிபாலிட்டி நிர்வாகிகளின் பொதுநல அறிவையும் பரோபகாரச் சிந்தையையும் பரிசுத்தத் தன்மையையும் படியை படுக்க வைத்துத்தான் அளக்க வேண்டும். இதல்லாமல் மற்றும் அநேக வழிகளிலும் துறைகளிலும் நமது வரிப்பணம் பாழாவதை அவசியம் நேரும்போது வெளியிடுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 01.11.1925**



# மீண்டும் சத்தியமூர்த்தியின் அட்டகாசம்

## "சௌந்திரிய மஹாலின் இரகசியம்"

"மீண்டும் சத்தியமூர்த்தியின் அட்டகாசம்" என்னும் தலைப்பின் கீழ் சௌந்திரிய மஹாலில் சில தினங்களுக்கு முன் நடந்த மீட்டிங்கைப் பற்றி ஒரு நிருபர் அக்டோபர் *மீ* 15-ந்தேதி ஜஸ்டிஸ் பத்திரிகையில் எழுதியிருப்பதின் சாராம்சமாவது:- சென்னை சுயராஜ்யக் கட்சியின் பிரதம புருஷராகிய ஸ்ரீமான் சத்தியமூர்த்தியும், வைதீகப் பிராமண கோஷ்டியின் தலைவரும், சமுதாய முன்னேற்றத்துக்கு எதிரிடையாயுள்ளவருமான, ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியாரும், புதிதாக இக்கோஷ்டியில் சேர்க்கப்பட்ட ஸ்ரீமான்.டி.குழந்தையும் சில நாட்களுக்குமுன் சௌந்திரிய மஹாலில் நடைபெற்ற மீட்டிங்குக்கு வந்திருந்தனர். ஸ்ரீமான். எம்.கே. ஆச்சாரியார் அக்கூட்டத்தில் தலைமை வகித்தார். இவர் முன்னுரை பேசுகையில் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் சிலரைத் தாக்கிச் சில வார்த்தைகளுரைத்தார். இங்ஙனம் கூறியதற்குக் காரணமென்னவென்றால், காலஞ்சென்ற டாக்டர்.டி.எம்.நாயர், ஸர்.பி.டி.செட்டியார் முதலிய தலைவர்களின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்ட ஜஸ்டிஸ் கட்சியானது பிராமணர்களின் செல்வாக்கை ராஜீய விஷயத்திலும், சமூக விஷயத்திலும் மற்றும் இரண்டொரு துறைகளிலும் குறைத்துக் கொண்டு வருகிறதினாலேயாம். பிராமணரல்லாதாரும், ஆதிதிராவிடர்களும் தங்கள் நிலைமையை நன்கறிந்து உஷாராய் நடந்து கொள்ளச் செய்ததும் இக்கக்ஷியேயாகும். காரியம் இப்படியிருக்க, ஸ்ரீமான். ஆச்சாரியாரின் தாக்குதல் ஓர் அதிசயமுமன்று.

### சத்தியமூர்த்தி

சௌந்திரிய மஹால் கூட்டத்தில் பேசியவர்களில் ஸ்ரீமான். சத்தியமூர்த்தி பிரதானமானவர். இவர் தன் பிரசங்கத்தை ஆரம்பிக்கும்போதே, ஜஸ்டிஸ் கட்சியைத் தாக்கத் துவங்கினார். பிறரைத் தாக்க வேண்டுமானால் மரியாதையின்றி அசட்டுத்தனமாகவும், கண்ணியக்குறைவாகவும் பேசுவதில் இவர் சமர்த்தரென்று கூறலாம். இவர் கூறுவதில் மெய்யும், பொய்யும் நிறைந்து இருக்கும். தான் சட்டசபையிலாகட்டும், சர்வகலாசாலைக் கூட்டத்தி



RangaRakes tamilnavarasam.com

லாகட்டும், மற்றும் எந்த மேடையிலும் பேசும்போது பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்துக்குப் பலத்த சாதனமுள்ள ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாய்ப் பேசுவதில் மட்டும்பின் வாங்குவதில்லை. இப்போர்ப்பட்டவரும் ஓர் தேச பக்தராம்!

## ஆச்சாரியாரின் அதிகப் பிரசங்கம்

அக்கூட்டத்தின் அக்ராசனர், ஸ்ரீமான் ஏ. இராமசாமி முதலியாரை தாக்கிப் பேசினார். ஸ்ரீமான் முதலியார் இங்கிலாந்தில் ஒருவிதமாகவும் இந்தியாவிற்கு வந்ததும் வேறு விதமாகவும் பேசுகின்றாரென்றும், இவருக்கென்று இங்கிலாந்தில் ஒரு கக்ஷியும், இந்தியாவில் மற்றொரு கக்ஷியும் இருக்கின்றதா வென்றும் சுட்டிக்காட்டி அலக்ஷியமாய்ப் பேசினார். இவர் இவ்வித முறையில் பேசுவதற்குக் காரணமென்னவென்பது முன்னரே கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் முதலியார், இங்கிலாந்தில் பேசும்போது, ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே இந்தியா தேசத்தின் விடுதலையைப் பற்றிக் கூறினார். இங்கு வந்ததும், அக்கொள்கை களைக் கொண்டேதான், பிராமணர்களின் கொடுமைகளைத் தகர்த்து பிராமணரல்லாதாரின் விடுதலைக்கென்று பேசிவருகிறார். பிராமணரல்லாத சமூகத்தினுடையவும், தீண்டாதாரல்லாத சமூகத்தினுடையவும், தீண்டாதார் களினுடையவும் விடுதலையே தேச விடுதலையென்பது அவருடைய கருத்து. சென்னை மாகாணத்தில் ஆச்சாரியர்கள், சத்தியமூர்த்திகள், ஐயங் கார்கள் செய்யும் அட்டூழியத்தைக் காணும் எந்தப் பிராமணரல்லாதாரின் மனந்தான் நோகாமலிருக்கின்றது. பிராமணரல் லாதாரின் தலைவர்கள், இந்தப் பாழும் பிராமணர்களைப்போல் வேஷதாரிகளல்ல. உண்மைக்கும் யோக்கிய தைக்கும் பாடுபடுகின்ற பெரியோர் என்பது இந்த ஆச்சாரியாருக்கும் தெரிந்தேயிருக்குமென்பது எனது நம்பிக்கை. இப்பிராமணர்களின் சொல்லொன்று, செயலொன்று என்பதற்கு ஒரு உதாரணத்தைக் கூறிவிட்டு அடுத்த பாகத்திற்குச் செல்லலாம். ஸ்ரீமான்கள் ஆச்சாரியார், ஏ.ரெங்கசாமி ஐயங்கார் முதலியவர்களின் கோஷ்டியினர், மந்திரிகளும், நிர்வாக சபை மெம்பர்களும், கவர்னர்களும் ஆங்காங்கு திக் விஜயம் செய்து வேண்டுவன செய்வதைக் கண்டியாமலிருப்பதில்லை. இந்த பெரிய உத்தியோகஸ்தர்கள், பொது ஜனங்களின் பணத்தைப் பிரயாணத்திலேயே பாதி கழித்து விடுகின் றார்கள் எனக் குறைகூறுவதற்கும் இவர்கள் பின்வாங்குவதில்லை. இதற் கெல்லாம் காரணமென்னவென்றால், இந்த உத்தியோகஸ்தர்கள் "சைத்தான்" கவர்ன்மெண்டில் வேலைபார்க்கிறார்களாம். ஆனால் அதே கவர்ன்மெண் டில் பூணூல் தரித்துள்ள தங்கள் இனத்தானொருவன் உத்தியோகத்திலிருந் தால், முன் கூறிய ஞானம் போய்விடுகிறது. ஜாதி அபிமானம் வந்து ஒன்று சேர்ந்துவிடச் செய்கிறது. பூணூல் தரித்துள்ள ஐயங்கார்கள், ஐயர்கள் மற்றும் எந்த பிராமணனான போதிலும் சரியே, அவர் மிதவாதியோ, காங்கிரஸ் வாதியோ, கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரோ அதைப்பற்றிக் கவலையில்லை, வேண்டியது பூனூல் கோஷ்டிதான். இந்த யோக்கியதையை அநுசரித்தே, தபால் இலாகா அதிகாரி ஸ்ரீமான். ராய்க்கு நடந்த விருந்தில் இந்த பிராமணர்கள் ஆஜராயிருந்தார்கள் போலும். சபாஷ்! இத்தகைய பெயர் வழிகளையா "சுயராஜ்யக்" கட்சியினரென்று கூறுவது? இவர்களில் இங்ங னம், யார் எந்த கொள்கையைக் கொண்டிருந்தபோதிலும், பிராமணன் என்றதும் ஒன்றுகூடிக் கொள்வதற்கெல்லாம் காரணம் உத்தியோக வேட்டை யேயாகும். ஐயங்கார் மகன், ஐயர் மருமகன், ஆச்சாரியார் தம்பி என்று இப்படியே அவர்கள் உற்றார் உறவினர் யாவரும் சம்பிரமமாக உத்தி யோகங்கள் யாவையும் பெற்று சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வதை பிராமண ரல்லாதார் ஊன்றி கவனிக்க வேண்டும்.

## ஜஸ்டிஸ் கட்சியர் செய்துள்ள நன்மைகள்

ஸ்ரீமான். எம்.கே. ஆச்சாரியார் தனது பிரசங்கத்தில் ஜஸ்டிஸ் கட்சி ஜனங்களுக்கு என்ன நன்மையைச் செய்துவிட்டது? அதனுடைய திட்டங்களெவை? எனக் கேட்டார். இவர் இங்ஙனம் கேட்டது, இக் கட்சியின் மீதுள்ள துவேஷத்தினால் ஏற்பட்டதே என்று ஒரு வார்த்தையில் பதில் கூறிவிடலாம். ஆனால், அக்கட்சியானது என்னென்ன நன்மைகளைச் செய்திருக்கின்றது என்பதை மீண்டும் பொது ஜனங்களுக்குக் கூறுவதால் நன்மையுண்டு என எண்ணுகிறேன். இக்கட்சி தோன்றுவதற்கு முன் கவர்ன்மெண்டு ஆபீஸ்களெல்லாம் பிராமண அக்ராகரமாகவும், பூனூல் கோஷ்டியாகவும், சுக்லாம்பாதரக் கூட்டமாகவும் நிறைந்து இலங்கிக் கொண்டிருந்தது. பெரும்பான்மையாக, டபேதார் வேலையொன்றில் தவிர, மற்ற ஹைகோர்ட்டு ஜட்ஜ், டிஸ்டிரிக் முன்சீப், டெப்டிக் கலெக்டர், தாசில்தார், சிரஸ்தார், குமாஸ்தாக்கள் முதலிய சகல உத்தியோகங்களும் இவர்கள் காணியாக ஏகபோகமாகயிருந்தன. ஜஸ்டிஸ் கட்சி தோன்றவே இந்த விஷயத் தில் இவர்களின் செல்வாக்கு குறைய ஆரம்பித்தது. பிராமணரல் லாதாரும், ஆதிதிராவிடர்களும் படிப்படியாக மேலேறி இந்த ஸ்தானங்களைக் கைப்பற்றி வருகின்றனர். பிராமணரல்லாத ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளின் ஆக்ஷியில் அநேக ஸ்தல ஸ்தாபனங்களில் கட்டாய இலவசக் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. பிராமணரல்லாத ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளின் காலத்திலேயே இந்து தேவஸ்தான சட்டம், சர்வகலாசாலை சட்டம், தொழி லாளரின் அனுகூலச் சட்டம், இன்னும் பல அரிய நன்மைகள் செய்யப் பட்டிருக்கின்றது. ஜஸ்டிஸ் கட்சிதான் இந்தியாவில் உருவகமானதும், நியாய மானதுமான காரியங்களைச் செய்திருக்கிறது. இதற்கு ஒரு முக்கிய உதார ணம், இந்துமத தேவஸ்தான சட்டமேயாகும். இன்னும் என்னென்ன நன்மைகளை "ஜஸ்டிஸ்" கட்சி செய்திருக்கிறது என்பது ஸ்ரீமான்.எம்.கே. ஆச்சாரியாருக்குத் தெரியவேண்டுமானால், "ஜஸ்டிஸ்" பத்திரிகை ஆரம்ப மானது முதற்கொண்டு இதுவரை உள்ள பிரதிகளைப் பார்வையிடும்படி கேட்டுக்கொள்கிறேன். அக்கிரமமாயும், அனாவசியமாகவும் ஓர் உண்மை


RangaRakes
tamilnavarasam.com

யான கட்சியைப் பற்றி மாறுபாடாகப் பேசுகிற இவர்கள்தானா சுயராஜ்யக் காரர்!

## மரியாதை தெரியாத சத்தியமூர்த்தி

ஸ்ரீமான். சத்தியமூர்த்தி பேசியதில் சிலவற்றையும் கவனிக்க வேண்டும். இவர் எத்தகைய மனப்பான்மையுடையவர் என்பது இந்த வியாசத்தின் துவக்கத்திலேயே கூறப்பட்டிருக்கிறது. இவர், கனம் பனகல் ராஜா, ஸர். பாத்ரோ, ஸ்ரீமான் எ. இராமசாமி முதலியார் முதலியவர்களைப் பற்றிக் கூறும்போது, கொஞ்சமும் மரியாதையின்றி பனகல், பாத்ரோ, ராமசாமி முதலியார் என்று கூறினார். ஒவ்வொருவருக்கும் கௌரவமாக உள்ள ராஜா, ஸர், ஸ்ரீமான் என்பன போன்றவைகளிருக்க இவர் இப்படிப் பேசியது தான் ஒரு சுயராஜ்யக் கட்சிக்காரர் என்ற எண்ணத்தினாலேயா? அல்லது இவருக்குத் தெரிந்த வித்தை இவ்வளவு தானாவென்பது நமக்கு விளங்கவில்லை. ஸ்ரீமான். சத்தியமூர்த்தி, பலதடவை இங்கிலாந்துக்குப் போயிருக்கிறார். அங்கு “மரியாதை” இன்னது தானென்பதை இவர் கற்றிருந்திருக்கவேண்டும். இங்கிலாந்தில், மரியாதையாகப் பேசுவது, ஜனங்களுக்குரிய விசேஷ இலக்ஷணம். இந்தியாவிலும் இப்பான்மை உண்டு. ஆனால் இம்மூர்த்தியினிடம் தான் அந்தக் கலம் சூன்யமாய் இருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராகிய பனகல் ராஜா இந்த நாட்டிற்கு எத்தகைய உருவகமான வேலைகளைச் செய்திருக்கின்றாரென்பதை பொது ஜனங்கள் அறிவார்கள். ஆனால், சுயராஜ்யக் கட்சி தேசாபிமானியாகிய மரியாதையற்ற சத்தியமூர்த்தியோ ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களின் பாதரட்சையின் வாரையும் அவிழ்க்க யோக்கியதையுடையவரல்ல. இனியேனும் மூர்த்தியும் அவர் கோஷ்டியினரும் மரியாதை இன்னதென்பதைக் கற்றுக்கொள்ளுவார்களாக. மரியாதை தெரியாதவரும் உண்மையற்றவருமான இவர்கள்தானா சுயராஜ்யக்காரர்!

## அடுத்து வரும் சட்டசபை தேர்தல்

அடுத்து நடைபெறப்போகும் சட்டசபைத் தேர்தல்களுக்கு சுயராஜ்யக் கட்சியினர் பெரும்பான்மையான ஸ்தானங்களுக்கு பிராமணரல்லாதாரையே நிறுத்தபோவதாகத் தங்கள் கட்சிக் கூட்டத்தில் பேசியிருக்கின்றதெனக் கூறுகிறார். இவர் கூறுவது பெறும் பித்தலாட்டமேயன்றி வேறல்ல. இம்மாதிரி கூறுவதால் பிராமணரல்லாதார் ஏமாந்து போவார்களென்பது ஐயருடைய எண்ணமானால், அவருடைய புத்திப் போக்குக்காக நாம் இரங்காது வேறென்ன செய்வது? பிராமணர்களே சுயராஜ்யக்கட்சியின் சார்பாக சகல ஸ்தானங்களுக்கும் நிற்கட்டுமென நான் கூறுகிறேன். அப்போதுதான், பொது ஜனங்கள் யார் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்களென்பது தெரியவரும். பிராமணர்கள் அடியோடே தோல்வியடைவார்களென்பது அப்போது தெளிவாகும். மற்றும் எங்கெங்கு தங்களுக்கு ஜெயம் கிடைக்காதோ,



அங்கங்கே வேண்டாமென்றும், எந்த இடங்களில் சுலபமாக ஜனங்களை ஏமாற்றிவிடலாமோ அந்த இடங்களில் தங்கள் கக்ஷியினரை நிறுத்தி வெற்றி கொள்வதும் இவர்கள் வழக்கமென்பது வாசகர்கள் அறிந்ததேயாகும்.

## சுத்தப் பொய்

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி எலெக்ஷன் காலத்தில் ஜஸ்டிஸ் கக்ஷியாவது அல்லது அதைச் சேர்ந்த மந்திரிகளாவது தேர்தல் ஸ்தானங்களுக்கு அபேக்ஷகர்களை நிறுத்தவில்லையென்றும் ஜெயமடைந்த பிரதிநிதிகளைத் தங்கள் கக்ஷிக்குள் இழுத்துக் கொண்டார்களென்றும் கூறினார். இது சுத்தப் பொய்யான வார்த்தைகளேயாகும். தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியினர் தகுந்த அபேக்ஷகர்களை நிறுத்தி பெரும்பான்மையான வோட்டுகளைக் கொண்டு வெற்றி பெற்றிருக்கின்றனர். உண்மையைத் திரித்துக் கூறுவதினால்தான் இவருக்கு அசத்தியமூர்த்தி எனச் சிலர் பெயர் வைத்துவிட்டனர் போலும். மற்றும் மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்வதிலேயே பொது ஜனங்களின் பணத்தைப் பெருமிதமாகச் செலவழித்துவிட்டனரென்று கூறுகிறார். இதுவும் அசட்டு வார்த்தையென்றே கூறுவோம். மந்திரிகள், தங்கள் இலாகாவைச் சேர்ந்த பல ஜோலிகளைக் கவனிக்கப் பல இடங்களுக்கும் போகாமலிருக்க முடியுமா? அங்ஙனம் போகும் போது, பிரயாணத்திற்கெனப் பணம் செலவழிக்காமலிருக்க முடியுமா? இதெல்லாம் சத்தியமூர்த்திகளுக்குத் தெரியாமல், மந்திரிகள் எலக்ஷன் பிரசாரம் செய்கின்றார்களென்றால் இதுவும் அவர்களுடைய பிதற்றல்களிலொன்று எனத் தள்ளிவிடுதலே உசிதம்.

## சத்தியமூர்த்தியின் வீண் பேச்சு

இந்து தேவஸ்தான பரிபாலன மசோதாவைப் பற்றி நமது சத்தியமூர்த்தி பேசும்போது பேசிய பேச்சுக்கள் ஒவ்வொன்றும் அழுத்தமாகக் கண்டிக்கத் தக்கதேயாகும். இந்து தேவஸ்தான மசோதா அடுத்த வரும் தேர்தலுக்கென்று செய்யப்பட்ட சூழ்ச்சி என்கிறார். ஒருவர் ஒரு காரியத்தைச் செய்தால் அதற்கு அர்த்தம் இப்படிச் செய்கிறார். அவர் வேறொன்றும் உருவகமான வேலை செய்திராவிட்டால், இந்த மந்திரிகளால் பிரயோஜனமே கிடையாதென்கிறார். மந்திரிகள் தங்கள் தேசத்திற்குச் செய்யவேண்டிய நன்மைகள் எதுவோ, அவைகளை நன்கு கவனித்து அதற்கென்று, திட்டங்களும் சட்டங்களும் சாதனங்களும் ஏற்படுத்தினால் மூர்த்தி கோஷ்டியார் இவையெல்லாம் எலெக்ஷன் தந்திரமென்கிறார்கள். இவ்விஷயங்கள் யாவையும் ஊன்றிக் கவனிக்கும்போது இவர்களின் பித்தலாட்டம் இன்னதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிகின்றது.



RangaRakes tamilnavarasam.com

## விஷம பிரசாரம்

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி இன்னொரு விஷயத்திலும் பொருந்தாத வார்த்தைகள் சில கூறியிருக்கிறார். அதாவது "டாக்டர் வரதராஜுலுவும், ஸ்ரீமான் வாசுதேவையாவும் ஜெயிலில் கேழ்வரகு அரைக்கும்படி நேரிட்டது இந்த மந்திரிகளின் காலத்திலேயே" என்கிறார். இவர் சில தினங்களுக்கு முன்பாக, டாக்டர் வரதராஜுலுவை முதற்தடவையாக பிராசிகியூஷன் செய்ததற்கு அட்வோகேட் ஜெனரலாக அப்போதிருந்தவர் காரணமில்லையெனக் கூறினார். சட்டரீதியான விஷயங்களுக்கு அட்வோகேட் ஜெனரல்தான், காரணஸ்தரென்பதை யாவரும் அறிவார்கள். இம்மாதிரி விஷயங்களுக்கும், மந்திரிகளின் ஆட்சிக்கும் எவ்வித தொந்தமுமேயில்லை. அப்படியிருக்க முன் பின் யோசியாமல், வாய்க்கு வந்தபடி பேசிவிடுவது யோக்கியமாவென்று கேட்கிறேன். எந்த மந்திரியாவது, "டாக்டர் வரதராஜுலுவும், ஸ்ரீமான் வாசு தேவையாவும் தினம் இவ்வளவுதான் கேழ்வரகு அரைக்கவேண்டுமென எங்கேயாவது குறிப்பிட்டிருக்கிறார்களா"வென்பதை ஸ்ரீமான் மூர்த்தி ருசுச் செய்ய முடியுமா? இவையெல்லாம் வேண்டுமென்று ஒருவர் பேரில் கெட்ட எண்ணம் கற்பிப்பதற்கு செய்யும் பொய் பிரசாரமேயாகும்.

## நமது தீர்மானம்

இந்த ஆச்சாரியார்கள், மூர்த்திகள், ஐயங்கார்கள் போன்ற பூனூல் கோஷ்டியினர் என்ன கூச்சல் செய்யினும் பிராமணரல்லாதாராகிய நாம் அவைகளை லக்ஷியம் செய்ய வேண்டியதில்லை. அடுத்த எலெக்ஷனில் நம் கக்ஷிக்கு வெற்றியேற்பட்ட போதிலும், தோல்வி நேரிட்டபோதிலும் சரியே நாம் யாரும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. நமது கக்ஷியின் நோக்கமெதுவோ, நமது லக்ஷியம் என்னவோ, அவற்றைமட்டும் குறியாகக் கொண்டு உழைப்போம். அப்போது சமுதாய சீர்திருத்தம் மேலோங்க நாட்டிற்கு விடுதலையும் ஏற்படும்.

**குடி அரசு - கட்டுரை - 01.11.1925**


குடி அரசு





RangaRakes tamilnavarasam.com

# தமிழர் மகாநாடு

## நமது நிலை

இவ்வாண்டு காஞ்சீபுரத்தில் நடக்கும் தமிழ்நாட்டு 31 – வது ராஜீய மகாநாடானது தென்னிந்தியத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கூடுகிறது. அதன் முக்கிய நோக்கம் நமது நாடு சுயராஜ்யம் பெறுவதற்கென்று சொல்லிக் கொள்ளப்பட்டாலும் சுயராஜ்ய மென்பது சுயமரியாதையும் சுயேச்சையும் உள்ள சமூகத்துக்குத்தான் பயன் படுமேயல்லாது அஃதில்லாதவருக்கு சுயராஜ்யமென்பதும் பர ராஜ்ய மென்பதும் வித்தியாசமற்றதேயாகும். தென்னாட்டுத் தமிழ்மக்கள் பெரும் பாலும் சுயமரியாதையற்று சுயேச்சையற்று மிருகங்களுக்கும், பக்ஷிகளுக் கும், புழுக்களுக்கும், பூச்சிகளுக்குமுள்ள சுதந்திரமும், சுயாதீனமும் இன்றி கோடிக்கணக்கான மக்கள் உழல்வதை யாரும் மறுக்கமுடியாது. இவர்களின் பொருட்டும்,தேச முழுவதிலுள்ள இவர் போன்றார் பொருட்டும் விடுத லையை உத்தேசித்து மகாத்மா காந்தியடிகளால் ஐந்து வருடங்களுக்கு முன் துவக்கப்பட்ட ஒத்துழையா இயக்கமானது பல்வேறு காரணங்களால் டெல்லி யில் ஆக்கங் குன்றி நாளுக்கு நாள் கருகி வந்து பாட்னாவில் வேருடன் களைந்தெறிந்தாகிவிட்டது. இதன் பலனாய் ஏற்பட்ட நிலைமையானது சுயேச்சையும் சுயமரியாதையும் சுவாதீனமுமற்ற சமூகத்துக்கு அதிலும் முக்கியமாய் தென்னாட்டுத் தமிழ்மக்களுக்கு முன்னிலும் அதிகக் கேவல மான நிலையில் கொண்டுவந்துவிட்டுவிட்டது.

## பிராமணர்கள்

பல ஆயிரக்கணக்கான வருடங்களாக நம்நாட்டு ஜனங்களென்று சொல்லிக் கொள்வோரிலேயே ஒரு வகுப்பார் தங்களுடைய சுயநலத்தையே உத்தேசித்து பொதுஜனங்களிடையே வகுப்பு வித்தியாசத்தையும் துவேஷத் தையும் உண்டு பண்ணி தங்களை உயர்ந்தோரென்று சொல்லிக் கொண்டு தங்கள் உயர்விலும் வாழ்விலுமே கண்ணுங் கருத்துமாயிருந்து தேசத்தையும், மதத்தையும், மற்ற சமூகங்களையும் பாழக்கியதுடன், அந்நிய தேசத்தார் நம்நாட்டிடையே படையெடுத்துவந்த போதெல்லாம் தங்கள் நன்மையின் பொருட்டே எதிரிகளுக்கு உளவு சொல்லியும் தேசத்தையும், மதத்தையும் காட்டிக்கொடுத்தும் அவர்களிடமே மந்திரி முதலிய உத்தியோகங்கள் பெற்று



செல்வாக்கடைந்தும் நமது நாட்டாரை அடக்கியாள அவர்கள் ஓர் ஆயுதமா கவும் பயன்பட்டு வந்திருக்கிறார்கள். இதற்குதாரணமாக இச்சுயநலக் கூட்டத்தார் தங்கள் சூழ்ச்சியாலும், தந்திரத்தாலும் தாங்களே நமது மதாச்சாரி யார்களாகவும், குல குருக்களாகவும், படித்தோர்களாகவும் தேச நன்மைக்கும், சமூக நன்மைக்கும் ஏற்பட்ட இயக்கங்களுக்கு தலைவர்களாகவும், அரசாங் கத்தை நடத்த அவர்களுக்கு ஊழியர்களாயுமிருந்து அரசாங்கத்தை நடத்திக் கொடுத்துக்கொண்டும் மற்றும் அரசாங்கத்திற்கு ஒற்றர்களாயிருந்து நாட்டின் உயிர்நாடியைக் காட்டிக்கொடுத்தும் ஆகிய இவ்வளவு காரியங்களையும் செய்துவருவது இக்கூட்டத்தார்தான் என்பதை இப்பொழுதும் காணலாம்.

## மகாத்மாவின் அபிப்பிராயம்

ஆதிகாலத்தில் மக்கள் ஒற்றுமைக்கும், சமத்துவத்துக்கும் சகோதரத் துவத்துக்கும், ஜீவகாருண்யத்திற்கும், அஹிம்சைக்கும் ஏற்பட்ட இயக்கங் களுக்கும், சாதனங்களுக்கும் இக்கூட்டத்தாரே விரோதிகளாயிருந்து தங்கள் சுயநன்மைக்காகவே அவைகளை ஒழித்து தேசத்தை இக்கெதிக்கு கொண்டு வந்தவர்களும் இவர்களே தானென்பதைச் சரித்திர மூலமாகவும் நேரிலும் காணலாம். மகாத்மாவால் ஏற்படுத்தப்பட்ட அஹிம்சா தர்மத்தோடு கூடிய விடுதலை இயக்கத்தை ஆரம்ப முதல் இன்று வரையிலும் பல சூழ்ச்சிகளா லும் பாழாக்கினவர்கள் இவர்களே யென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். இதை மகாத்மா அவர்களே தம்முடைய இயக்கம் சீர்குலைந்ததற்குக் காரணம் படித்த வகுப்பினர்தான்! படித்த வகுப்பினர்தான்!! எனப் பலமுறை கதறி யிருக்கிறார். நாட்டில் படித்த வகுப்பார் யாரென்பதை நாம் சொல்லத் தேவை யில்லை. அல்லாமலும் பெல்காம் காங்கிரஸின் அக்கிராசனப் பிரசங்கத்தில் “ இந்தியாவுக்கு பிரிட்டிஷார் செய்த கெடுதியைவிட பிராமணர்கள் செய்த கெடுதி குறைவானதல்ல வென்று மகாத்மாவே சொல்லியிருக்கிறார். ஆதலால் நமதுநாடு முன்னேற்ற மடையவோ, நமது சமூகம் முன்னேற்ற மடையவோ மக்கள் யாவரும் சமம் என்னும் உணர்ச்சி அடையவோ எல்லோ ரும் சமமாய் வாழவோ நம்மால் ஏற்படுத்தப்படும் இயக்கம் தங்கள் சூழ்ச்சி யால் பொது மக்களை ஏமாற்றி தங்கள் மாயவலையில் கட்டுப்படுத்தி எதற்கும் தாங்களே முன்னணியிலிருந்துகொண்டு எதையும் தங்கள் சவுகரியத்துக்கு உபயோகப் படக்கூடிய மாதிரியில் திருப்பிக்கொள்ளும் நய வஞ்சகர்களான சுயநல வகுப்பார் கையில் சிக்காமல் தப்ப வழிதேட வேண்டும். அங்ஙனம் நாம் வழி தேடாவிட்டால் நம் விடுதலைக்கென ஆரம்பிக்கப்படும் எந்த இயக்கமும் அதற்காக நம்மால் செய்யப்படும் எவ்வித தியாகமும், அனுபவிக் கப்படும் எவ்வித கஷ்டமும் பயன் தராததோடு இப்பொழுது நாமிருக்கும் நிலைமை யிலும் இன்னும் கீழிறங்க உதவியாகி விடும். ஆகையினால் காஞ்சீபுரம் மகாநாட்டில் கூடும் பொதுஜனப் பிரதிநிதிகள் சுயராஜ்யத்துக் கென்றோ தேச முன்னேற்றத்திற் கென்றோ கருதி ஏமாந்துபோய் மறுபடியும் இக் கூட்டத் தாரின் சூழ்ச்சிக்கு ஆளாகி அவர்கள் சொல்லுகிறபடி நடந்து நமது



RangaRakes tamilnavarasam.com

நன்மைக்கென்று நினைத்து அவர்கள் நன்மைக்கு விட்டுக்கொடுத்துக் கொண்டு போகாமலிருக்கும்படி நாம் எச்சரிக்கை செய்கிறோம்.

## பிராமணர் - பிராமணரல்லாதார்

தென்னாட்டில் பொதுவாக இக்கூட்டத்தாரை நீக்கிய பொது ஜனங்களுக்கு பிராமணரல்லாதார் என்ற பெயர் வழங்கப்பட்டு வருகிறது. முக்கியமாக இதில் கிறிஸ்தவர்கள், முகமதியர்கள், ஆங்கிலோ - இந்தியர்கள் முதலிய இந்துக்களல்லாதவர்களும் பிராமணரல்லாதவர்களே. இந்துக்களுக்குள்ளும் பிராமணர் நீங்கிய மற்றவர்கள் பிராமணர்களால் ஏற்படுத்தப்பட்ட பல ஜாதிப் பெயர்கள் சொல்லிக்கொள்ளப்பட்டாலும் அவர்களும் பிராமணரல்லாதவர்களே. அல்லாமலும் தீண்டாதாரெனக் கூறித் தொடக்கூடாதவர்கள், பார்க்கக் கூடாதவர்கள் என்று தள்ளி வைத்திருக்கும் ஒரு பெரும் கூட்டத்தாரும் பிராமணரல்லாதவர்களே. இவர்கள் யாரும் நாம் மேற்சொன்ன பிராமணர்களின் மாயவலையினின்றும் தப்பி சுயமரியாதையுடன் வாழ வேண்டுமானால் தங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் சிறுசிறு வகுப்பு வித்தியாசங்களையும் பொருளற்ற ராஜீய அபிப்பிராய வித்தியாசத்தையும் மறந்து விடுவதோடு தங்கள் சுயநன்மைக்காக பிராமணர்களுக்கு ஒற்றர்களாகவும், காட்டிக் கொடுப்பவர்களாகவும் இருக்கும் சிறுமைக் குணங்களை விட்டு எல்லோரும் முன்னுக்கு வரவேண்டுமென்ற எண்ணத்துடன் சூழ்ச்சியன்றியிலும், துவேஷமின்றியும் மனப்பூர்வமாக ஒன்றுபட்டு பாடுபட முன் வர வேண்டும். இவர்களுள் காங்கிரஸ்காரர்களென்போரும், மாறுதல் வேண்டாதாரென்போரும் சுயராஜ்யக் கக்ஷிக்காரர்களென்போரும், ஜஸ்டிஸ் கக்ஷியென்போரும், சுயேச்சைக் கக்ஷி என்போரும், பழய மிதவாதக் கக்ஷியென்போரும், பெசண்டம்மைக் கக்ஷியாரென்போரும், மதாபிமானிகளென்போரும், அரசாங்க உத்தியோகஸ்தர்களென்போரும் ஆகிய பல பிரிவினர் களிருக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ராஜீய விஷயத்திலோ மத விஷயத்திலோ தனது வாழ்வு விஷயத்திலோ ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதமுடையவர்களாயிருந்த போதிலும் தாங்கள் எல்லோரும் பிராமணரல்லாதாரென்பதையும், பிராமணர்களின் சூழ்ச்சிகளினின்றும், தந்திரங்களினின்றும் விலகி தாங்கள் சுயமரியாதையுடன் மனிதனாக வாழ வேண்டும் என்கிற ஒரே பொதுவான நோக்கத்தை வைத்து பாடுபடுவதற்கு ஒரு பொது இயக்கத்தைக் காண வேண்டியது தற்சமயம் மிகவும் அவசியமென்பதை பெரும்பாலோர் ஒப்புக்கொள்ளுவார்கள். இதைப்பற்றி நம்மாலும், மற்றும் பல அறிஞர்களாலும் தற்கால நிலைமையை உத்தேசித்து தீவிரமாய் சொல்லப்பட்டு வந்திருக்கிறதை யாவரும் அறிவார்கள். ஆதலால் இவ்வெண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள காஞ்சீபுரத்திற்கு வந்து இதற்கென ஓர் தனி மகாநாடு கூட்டித் தங்களது கொள்கை இன்னதென்பதையும் ராஜீய மகாநாட்டில் பிராமணரல்லாதார் நிலைமை என்னவென்பதையும் முடிவு செய்து கொண்டு அந்த முடிவை ராஜீய மகாநாட்டில் வலியுறுத்த ஒருப்பட



வேண்டுமாய் மிகவும் வினயத்துடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

காஞ்சீபுரம் ராஜீய மகாநாடானது காங்கிரஸ் அமைப்பின் கீழ் ஏற்பட்ட விதிகளின் பிரகாரம் நடத்தப்படுமாகையால், நாம் அழைக்கும் வகுப்பில் சிலருக்கு அதில் கலந்துகொள்ள சந்தர்ப்பமேற்படாது. ஆகையால் இதற்கென பிரத்தியேகமாக ஓர் மகாநாடு அதே சமயத்தில் அதே இடத்திலேயே கூட்டி அதில் நமது நோக்கத்திற்குப் பாடுபட முன் வரும் சகலருக்கும் ஆதரவளிக்க ஏற்பாடு செய்யப்படும். தற்காலம் ஏழை மக்கள் இருந்துவரும் கஷ்டநிலையை நிவர்த்திக்க முன்வரும் தேசபக்தர்கள் அனைவரும் இம்மகாநாட்டில் கலந்து கொள்வார்களென்று நம்புகிறோம்.

## ஒற்றுமைக் குறைவிற்குக் காரணம்

ராஜீய மகாநாட்டில் பிராமணரல்லாதாரும் உணரவேண்டியது ஒன்றுண்டு. முக்கியமாக ராஜீய வாழ்வில் பிராமணருக்கும், பிராமணரல்லாதாருக்கும் ஏற்படுகிற மனஸ்தாபத்திற்கும், சூழ்ச்சிகளுக்கும் காரணமாயிருப்பதும் பிராமணரல்லாதாரில் இந்து முகமதிய கிறிஸ்தவ சமூகங்களுக்கு இந்துக்களில் தீண்டக்கூடியவர், தீண்டாதார் இவர்களுக்குள்ளும் ஏற்படும் மனஸ்தாபங்களுக்கும், ஒற்றுமையின்மைக்கும் காரணமாயிருப்பதும் உத்தியோகங்களைப் பற்றியும் தெரிந்தெடுத்த ஸ்தானங்களைப் பற்றியும் உள்ள போட்டிகள்தான். இந்தப் போட்டிகள் ஒரு வகையாக முடிவு பெறுமானால் பிறகு இந்தியருக்குள் எவ்வித ஒற்றுமையின்மையும் அபிப்பிராய பேதங்களும் ஏற்படக் காரணமேயில்லை. ஆதலால் உத்தியோக விஷயங்களில் ஆகட்டும், மற்றும் தெரிந்தெடுப்பு பதவிகளிலாகட்டும் அல்லது இதர பொது ஸ்தாபனங்களிலாகட்டும் அவரவர்கள் இன்னின்ன அளவுக்கு உரியவர்கள் என்கிற தீர்மானம் ஏற்பட்டுப் போய்விட வேண்டியது. சாதாரணமாக சில விஷயங்களில் மாத்திரம் இந்துக்களுக்கும், மகமதியர்களுக்கும் உரிமையளவு ஏற்பட்ட பிறகு அநேக விஷயங்களில் இந்து - முகமதிய - கிறிஸ்தவ விரோதங்களே பெரும்பாலும் மறைந்து விட்டதுடனல்லாமல், ஒருவரை ஒருவர் தாழ்ந்தவர்களென்று சொல்லி அடக்கியாளுந் தன்மையும் மறைந்துவிட்டது. இப்பொழுது இந்துக்களில் பெரும்பான்மையாய் பிராமண, பிராமணரல்லாதார், தீண்டாதார் என்கிற மூன்று பெரிய பிரிவினைகள் இருந்து வருகிறது. இப்பிரிவினைகளை அரசாங்கத்தாரும், பொதுமக்களும் ஒப்புக் கொண்டுமாகிவிட்டது. அதற்குத் தகுந்த ஆதாரங்களும் ஏற்பட்டுவிட்டது. இம் மூன்று வகுப்பார்களுக்கும் உத்தியோகங்களில் இன்னின்ன அளவென்றும் தெரிந்தெடுப்பு பதவிகளிலும் மற்றும் பொது ஸ்தாபனங்களிலும் இன்னின்ன அளவென்றும் ஏற்பட்டுப் போய் விடுமேயானால் வகுப்புத் துவேஷம், சமூகத் துவேஷம், மதத் துவேஷம் இவைகள் நம் நாட்டை விட்டே பறந்து ஓடிப்போகும்.



RangaRakes tamilnavarasam.com

## பிராமணர்கள் ஒப்பமாட்டார்கள்

இம்முறையானது சிறிய தொகையினராயிருந்து பெரிய பங்கை அனுபவித்துக் கொண்டு வரும் வகுப்பாருக்கு பெருத்த வேதனை யாய்த்தானிருக்கும். அதற்காக பிராமணரல்லாதார் சிலருக்கும், தீண்டாதார் சிலருக்கும் லஞ்ச லாவணம் கொடுத்தாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாம், தேசம் கெட்டுப்போய்விடும் என்று பொய்யழுகை அழச்செய்து மாய்மாலக் கண்ணீர் விடும்படியும் செய்விப்பார்கள். இதையெல்லாம் நாம் கவனிக்கக்கூடாது. ஏனெனில் அவர்கள் உதவி நின்றவுடனே இவர்கள் மறுபடியும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று சொல்ல வந்து விடுவார்கள். எப்படியென்றால் நேற்று தங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம் வேண்டுமென்று கேட்டவர்களும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை காங்கிரஸ் ஒப்புக்கொள்ளாவிட்டால் நான் காங்கிரசில் இருக்க மாட்டே னென்று சொன்னவர்களும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானத்தை ராஜீயக் கூட்டங்களில் பிரேரேபித்தவர்களும் பிராமணர்கள் காலுக்குள் நுழைந்து இன்றைய தினம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாமென்று கூறுவதை நாம் பிரத்தியட்சத்தில் காண்கிறோம். உலகமுள்ள வரையும் இக்கூட்டம் இருந்துதான் வரும். ஆதலால் அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

## தீண்டாதார்

பிராமணரல்லாத இந்துக்களுடைய வகுப்புவாரிப் பிரதிநிதித் துவத்தைவிட தீண்டாத சமூகத்தின் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மிகவும் முக்கியமானதென்பதை நாம் கோபுரத்தின் மீதிருந்தும் சொல்லுவோம். ஏனெனில் அவர்கள் சமூகப் பெருக்கத்திற்குத் தக்கபடி கல்வியிலோ, உத்தியோகத்திலோ மற்றும் பல பொது வாழ்க்கையிலேயோ அவர்கள் முன்னேறவேயில்லை. இதன் காரணத்தினால் தேசத்தில் 5-ல் ஒரு பாகம் ஜனங்கள் தேச நலத்தை மறந்து சர்க்காரின் தயவை நாடி அன்னிய மதத்தில் போய் விழுந்து நமக்கு எதிரிகளாய் முளைத்துக் கொண்டு வருகிறார்கள். சுயகாரியப் புலிகளுக்கு இதைப்பற்றிக் கவலையிராதுதான். பொறுப்புள்ள பொதுமக்கள் இதைக் கவனியாமல் விடுவது தேசத்துரோகமென்று மாத்திரம் சொல்லுவதற்கில்லை. இன்னும் எவ்வளவோ பெரிய பாவிகளென்றுதான் சொல்லவேண்டும். சுமார் 25 வருடங்களுக்கு முன்பாகவாவது இச்சமூகங் களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்குமேயானால் இன்றைய தினம் இந்தியாவில் இருக்கும் இவ்வளவு அபிப்பிராய பேதங்களும், ஒற்றுமையின்மையும் பிரிட்டிஷ் கொடுங்கோன்மையும் பிராமணக் கொடுமையும் நமது நாட்டில் இருக்குமா? தெருவில் நடக்கக் கூடாத மனிதனும், கண்ணில் தென்படக்கூடாத மனிதனும், அவனவன் மதத்தை அறியக்கூடாத மனிதனும், அவனவன் தெய்வத்தைக் காணக் கூடாத



மனிதனும் இந்தியாவில் இருக்கக்கூடுமாவென்பதை பொது நோக்குடைய ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டுவதோடு ராஜீய மகாநாட்டில் இதை வலியுறுத்தி அமுலுக்குக் கொண்டுவரும்படி செய்யவேண்டியது தேச பக்தர்களின் கடமையென்பதை வணக்கத்துடன் மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 08.11.1925**



RangaRakes tamilnavarasam.com

# தீண்டாமை

## சென்னை மாகாண தீண்டாமை மகாநாடு

சென்னையில் தீண்டாமை மகாநாடென்று ஓர் மகாநாடு சென்ற மாதம் 31-ந் தேதி கூடிற்று. பல பெரியோர்களும், பல தீண்டாதார்களும் மற்றும் பலரும் விஜயம் செய்திருந்தார்கள். பல கனவான்கள், வெகு உக்ரமாகவும் பேசினார்கள். தீண்டாமையை விலக்கவேண்டுமென்று பல தீர்மானங்களும் செய்தார்கள். இவற்றினால் தீண்டாமை ஒழிந்து விடுமென்று, நாம் நம்புவதற்கில்லை. இவ்வித மகாநாடு இதற்கு முன் ஆசாரத்திருத்த மகா நாடென்ற பெயரால் எவ்வளவோ நடந்திருக்கிறது. எவ்வளவோ சாஸ்திர ஆதாரங்களெல்லாம் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. எத்தனையோ தீர்மானங்களும் செய்யப்பட்டிருக்கிறது. இவற்றின் பலனாய் என்ன நடந்தது? தீண்டாமை என்னும் கொடுமை நம் நாட்டிலிருந்து நீங்கி மக்கள் எல்லோரும் பிறவியில் சமம் என்கிற உணர்ச்சி பரவி ஒத்து வாழ வேண்டுமானால், ஸ்ரீமான்கள். டி.வி.சேஷகிரி ஐயரும், டி.விஜயராகவாச்சாரியாரும், மகாதேவ சாஸ்திரியாரும், பனகால் இராஜாவும், பாத்ரோவும் போன்றவர்கள் மீட்டிங்கு கூட்டி உபந்யாசம் செய்து தீர்மானங்கள் செய்துவிட்டுப் போவதினால், ஒருக்காலும் நன்மை யேற்படவே மாட்டாது. அல்லாமலும், சட்டசபை முதலிய இடங்களில் போய் உட்கார்ந்து கொண்டு தீண்டாமை யொழியத் தீர் மானங்கள் செய்து பத்திரிக்கைகளில் போட்டு விடுவதினாலும் ஒருக்காலும் நன்மை யேற்படவே மாட்டாது. காங்கிரஸில் தீண்டாமை யென்பது ஓர் முக்கியமான திட்டமெனப் போட்டுத் தீர்மானம் செய்து விடுவதினாலும் முடியக்கூடிய காரியமல்ல. இவைகளை நாம் அனுபவத்தில் பார்த்தாகி விட்டது. இவைகளின் கூட இருந்து வேலை செய்கிறவர்களே வெளியே வந்ததும் இதற்கு விரோதமாய் சூழ்ச்சி செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். உதாரணமாக ஆசாரத்திருத்தக் கூட்டங்களிலிருந்தவர்கள் எத்தனையோ பேர் இன்றையத்தினம் பிறவியில் உயர்வு, தாழ்வு உண்டு என்கிற வருணாசிரம தர்மத்தை ஆதரித்துக் கொண்டு வருகிறதைப் பார்க்கிறோம்.

சட்டசபைகளில், பொதுத் தெருக்களில் எல்லோரும் போகலாமெனத் தீர்மானம் செய்துவிட்டு பின் அவசியமிருந்தால்தான் போகலாமென்று அதற்கொரு வியாக்கியானம் செய்து, தெருக்களில் நடக்கிறவர்களைப் பிடித்துத் தண்டித்துக் கொண்டு வருவதை நாம் பார்க்கவில்லையா? அதுபோலவே காங்கிரஸிலும் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்று தீர்மானம் செய்து விட்டு அதற்காகவே தியாகம் செய்கிறோம், கஷ்டப்படு கிறோம் என்று சொல்லிக்கொண்டிருந்தவர்களெல்லாம், பிறவியினால் ஜாதி வித்தியாசமில்லையென்றும்,பொது ஸ்தாபனங்களில் பொதுப்பணங்களில் நடக்கும் சந்தர்ப்பங்களிலாவது ஒருவர் சாப்பிடுவதை மற்றவர் பார்த்தால் பாவம் என்று சொல்லக்கூடாதென்று தீர்மானம் செய்து சேரமாதேவி குரு குலத்தில் குழந்தைகள் மத்தியிலாவது அமுலுக்குக் கொண்டுவரப்பார்த்த வுடனே, நான் என்ன வேண்டுமானாலும் சாப்பிடுவேன், எங்கு வேண்டுமானாலும் சாப்பிடுவேன், ஆனால் குழந்தைகள் ஒருவர் பார்த்து ஒருவர் சாப்பிடச் சொல்ல மாட்டேனென்றும், ஒரு பிராமணக் குழந்தை சாப்பிடுவதை ஒரு பிராமணரல்லாத குழந்தை பார்க்குமானால் நான் ஒரு மாதம் பட்டினி கிடப்பேன் என்று சொல்லிக்கொண்டும், காங்கிரஸ் ஸ்தாபனங்களில் தம் பதவிகளை ராஜீநாமாச் செய்து ஓடினவர்கள் எத்தனை பெயரைப் பார்க்கிறோம்? இன்னும் பெரிய ஆசார சீர்திருத்தக்காரரென்றும், பஞ்சமர்களுக்கு உழைக்கிறவர்களென்றும் சொல்லிக்கொண்டு, பஞ்சமர்களுடன் திரிந்துகொண்டும் இருந்த ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் போன்றவர்களெல்லாம் மதத்திற்கும், ஒழுக்கத்திற்கும் விரோதமான காரியங்கள் தாங்கள் எவ்வளவு செய்து கொண்டபோதிலும் கூட, சமயம் வந்த காலத்தில் தீண்டாமை ஒழிய வேண்டியது கிரமந்தான். ஆனால் அது இப்போது சாத்தியப்படக்கூடிய காரியமல்லவென்று சொல்லவில்லையா? இந்தக் காரணங்களால் மீட்டிங்குகளாலும், சட்டசபைகளாலும், காங்கிர ஸினாலும் ராஜீயவாதிகளாலும் தீண்டாமை ஒழியுமென்றாவது, தீண்டாத, பார்க்காத, தெருவில் நடக்காத, அண்டாத, கோவிலுக்குள் நுழையாத, தங்களுடைய வேதத்தைப்படிக்கக் கூடாத, சகோதரர்களுக்கு விடுதலை கிடைத்து விடுமென்று எதிர்பார்ப்பது சுத்த முட்டாள்தனமே யென்பதுதான் நம்முடைய அபிப்பிராயம். ஏனெனின், வைக்கத்தில் தெருக்களில் நடக்க, தீண்டாமை விலக்கு மகாநாடோ, சட்டசபை தீர்மானங்களோ, காங்கிரஸ் திட்டங்களோ இந்த உரிமையை வாங்கிக் கொடுக்கவில்லை. முடிவாக, கொஞ்சம் அநுகூல மேற்பட்டிருக்கின்றதென வைத்துக் கொண்டாலும் சத்தியாக்கிரகத்தின் மூலமாகவும், மகாத்மாவின் உதவியாலும் ஏற்பட்ட தேயல்லாமல் வேறொன்றினாலுமல்ல வென்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆதலால், இனியேனும் நம் நாட்டில் தீண்டாமை ஒழிய வேண்டுமென்னும் எண்ணம் யாருக்காவது இருக்குமேயானால், அவர்கள் சத்தியாக்கிரகத்தைத் தான் கடைப்பிடிக்க வேண்டியது. தீண்டாமை ஒழிப்பதற்கு பொருள் உதவி செய்கிறவர்களா யிருந்தால் சத்தியாக்கிரகத்துக்கே கொடுக்கவேண்டியது. தீண்டாமைக்காக தமது வாழ்நாளை அர்ப்பணம் செய்ய வேண்டுமென்றிருந் தால் அவர்கள் சத்தியாக்கிரகத்துக்குத் தான் அர்ப்பணம் செய்ய வேண்டும். இதல்லாமல் வேறு என்ன நினைத்தாலும் மந்திரத்தில் மாங்காய் விழுந்து விடாது. சில சமயங்களில் மாத்திரம் தீண்டாதாரோடு சாப்பிட்டு





RangaRakes tamilnavarasam.com

விடுவதினாலேயோ, சம மாய் உட்காருவதினாலேயோ, அவர்களைத் தொட்டுவிடுவதினாலேயோ தீண்டாமை ஒழிந்துபோகாது. நமக்குத் தெரிய எத்தனையோ பெயர் தீண்டாதவர்களுடன் சரீர சம்மந்தம் வைத்துக் கொண்டிருப்பவர்களும், தீண்டாதார் சாப்பிட்ட எச்சில் பாத்திரத்தில் மதுபானம் செய்கிறவர்களும், தீண்டாதாரிடத்தில் அடிமைகளாயிருப்பவர் களும், அவர்களிடத்தில் கூலிக் காரர்களாயிருப்பவர்களும் அந்த சமயம் தீர்ந்ததும் தங்களை உயர்ந்த ஜாதிக் காரர்களென்றுதான் சொல்லிக்கொள்ளு கிறார்கள். ஆகையினால் முடிவாக, தீண்டாமை ஒழிவது தான் நமது தேசத்தின் விடுதலைக்கு முக்கிய சாதனமென்றும், அதற்காக உழைப்பதும், சத்தியாக்கிரகம் செய்வதுந்தான் தேசவிடுதலைக்கு உழைப்பதென்றும், நாம் உறுதியாகச் சொல்லுகிறோம். இதற்காக, மாயவரம் ஸ்ரீமான் கார்குடி சின்னையா பிள்ளை தலைமையில் தீண்டாமை விலக்க சத்தியாக்கிரக கமிட்டியென்று ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. உண்மையான தியாகத்திற்கும், கஷ்டத்திற்கும் தைரியமுள்ளவர்கள் அதிற்சேர்ந்து, எங்கெங்கு தீண்டாத, தெருவில் நடக்காத, கோவிலுக்குள் செல்லாத கொடுமைகள் இருக்கின்றதோ அங்கங்கு அகிம்சா தர்மத்தோடு, சத்தியாக் கிரகம் செய்து ஆயிரக்கணக்கான சகோதரர்கள் சிறைக்குச் செல்லவேண்டும். இது விஷயத்தில் சர்க்காருக்கும், வர்ணாசிரம தர்மிகளுக்கும் நாம் ஒன்றும் வித்தியாசம் கற்பிக்கமுடியாது. இரண்டு பேரும் நமக்கு எதிரிகளாய்த் தானிருப்பார்கள். பின்னும், சர்க்காரைவிட பிறவியில் உயர்ந்தவரென்று எண்ணிக் கொண்டிருக்கும் பிராமணர்களே, நம்முடைய விரோதிகளென்று சொல்லுவதுடனல்லாமல் ஷை பிராமணர்களைவிட இது விஷயத்தில் சர்க்காரார் கொஞ்சம் மேலானவர்களென்றுகூட சொல்லுவோம். இப்படிச் சொல்லுவது குற்றமென்று யாராவது சொல்லுவார்களேயானால் அவர்களை நாம் தாழ்ந்தவர்களென்போருக்கும், தீண்டாதவர்களுக்கும் துரோகியென்று அழைக்க பின்வாங்கமாட்டோம்.

**குடி அரசு - துணைத் தலைங்கம் - 08.11.1925**



## காஞ்சீபுரம் மகாநாட்டுத் தலைவர்

ஓர் பிராமணர் காஞ்சீபுரம் மகாநாட்டிற்கு அக்ராசனம் வகிக்க வேண்டு மென்று சில பிராமணர்களும், சில பிராமணப் பத்திரிக்கைகளும் அவர்களால் ஆட்கொள்ளப்பட்ட மற்றவர்களும் எவ்வளவோ சூழ்ச்சிகளும், தந்திரங்களும் ஒழுங்கீனமான முறைகளும் செய்தும் கடைசியாக ஓர் பிராமணரல்லாதாரே மகாநாட்டுக்கு அக்ராசனம் வகிக்கத் தேர்ந் தெடுக்கப்பட்டுப் போனதைப்பற்றி பிராமணரல்லாதார் இரண்டொருவர் தவிர மற்ற எல்லாரும் ஏகமனதாய் சந்தோஷப்படுவார்களென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. அத்துடன் இதற்கு விரோதமாயிருந்த சிலர் வருத்தப்ப டுவார்களென்பதைப் பற்றியும் நாம் சொல்லத் தேவையில்லை. தமிழ் நாட்டிலுள்ள மொத்தம் 13 ஜில்லாக்களில் 10 ஜில்லாக்களே வோட் செய்திருப்பதாய்த் தெரியவருகிறது. இவற்றில் ஸ்ரீமான். வி.சக்கரைச் செட்டியாரை சென்னையும், ஸ்ரீமான். தங்கப்பெருமாள் பிள்ளையை திருச்சியும் தெரிந்தெடுத்தது. பாக்கி 8 ஜில்லாக்களில் ஸ்ரீமான் முதலியாருக்கு 4 ஜில்லாக்களும், ஸ்ரீமான் ஏ.ரெங்கசாமி அய்யங்காருக்கு 4 ஜில்லாக்களும் வோட் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. ஸ்ரீமான் அய்யங்காருக்கு வோட் செய்த நாலு ஜில்லாக்களில் கும்பகோணமும் சேலமும் சேர்ந்துதான் நாலு ஜில்லாக்களானதாகத் தெரியவருகிறது. கிரமப்படி இந்த இரண்டு ஜில்லாக்கள் வோட்டையும் செல்லுபடியாக எடுத்துக்கொண்டது கொஞ்சமும் ஒழுங் காகாது. ஏனெனில், சேலம் ஜில்லா வோட்டானது அக்ராசனத் தேர்தலுக்காக ஏற்பட்ட மீட்டிங்கு சட்டப்படி செய்யப்பட்டதல்ல வென்றும், நிர்வாக சபை மெம்பர்களுக்கு நோட்டீஸ் கொடுக்காமல் யாரோ இரண்டுபேர் சேர்ந்து தந்தி கொடுத்துவிட்டதாக ஓர் நிர்வாக சபை மெம்பர் ஆக்ஷேபித்திருந்தார். இதற்கு சேலம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியார் எவ்வித ஒழுங்கான பதிலும் கூறவே யில்லை. இதைப்பற்றி நமக்குக் கவலையில்லை என்று விட்டுவிட்டாலும், அவர்களுடைய தேர்ந்தெடுப்பில் குறிப்பாக ஓர் பெயர் இல்லாமல் பல பெயர்கள் சிபார்ஸ் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. அப்படியிருக்க அதை செல்லுபடியுள்ளதாகக் கருதி அதிலும் ஸ்ரீமான். ஏ.ரெங்கசாமி ஐயங்காரவர்களுக்கு அதைச் சேர்த்துக்கொண்டது எப்படி ஒழுங்காகுமோ தெரியவில்லை. அல்லாமல், கும்பகோணத்தில் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியே கிடையாது. ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அக்ராசனராயிருந்த கனவானை ஒருவர் கண்டு மாகாணக் கமிட்டிக்குத் தலைவர் தேர்தல் செய்தாகி



RangaRakes tamilnavarasam.com

விட்டதாவென்று கேட்டபோது, இங்கு ஜில்லா காங்கிரஸ் கமிட்டியே கிடையாதென்றும், ஆதலால் தெரிந்தெடுக்க முடியாதென்றும் சொல்லி விட்டார். அல்லாமல், காஞ்சீபுரம் மகாநாட்டு உபசரணைக் கமிட்டியார் தெரிவித்திருந்த காலாவதியாகிய அக்டோபர் மாதம் 20-ந் தேதி வரையிலும் கும்பகோணம் "ஜில்லா காங்கிரஸ் கமிட்டியிலிருந்து" யாருடைய பெயரும் ஒழுங்காகவோ தப்பாகவோ அக்ராசனாதிபதி ஸ்தானத்துக்கு அனுப்பிக்கப்படவேயில்லை. இந்த நிலைமையில் கும்பகோணம் வோட் செல்லுபடியென்றும், அதை ஸ்ரீமான் ரெங்கசாமி அய்யங்காருக்குச் சேர்த்து கணக்குப் பார்க்கப் பட்டிருப்பதாயிருந்தால், இவ்விதத் தேர்தல்களை ஜனப்பிரதிநிதித்வ தேர்தலென்றும் ஒழுங்கான தேர்தல்களென்றும் எப்படி பொது ஜனங்கள் நினைக்கக் கூடும்? தாயைக் கொன்றவனுக்கும் ஊரில் பாதிப்பேர் சேருவார்களென்ற பழமொழிபோல் சுய நன்மையின் பொருட்டு ஒத்துழையாமையை ஒழித்துத் தேசத்தைப் பாழாக்கினவர்களுக்கும், சர்க்காருக்கு அடிமையாகி தேசத்தைக் காட்டிக் கொடுத்து தங்கள் பிள்ளை குட்டிகளுக்கு உத்தியோகம் சம்பாதித்தவர்களுக்கும், மகாத்மாவின் பெயரைச் சொல்லிக் கொண்டு தினப்படி சாராயம் முதலிய மதுபானம் விற்கிறவர்களுக்கும், முன்னணியிலிருக்கும் கூட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் ஏ.ரெங்கசாமி அய்யங்காருக்கும் 4 வோட்; தேச நன்மையின் பொருட்டு ஒத்துழையாமையின் காரணமாய் தன்னையே தியாகப்படுத்திக் கொண்டு ஏழைகளின் பொருட்டும், தொழிலாளர்களின் பொருட்டும் தனது சுயநலத்தை மறந்து லக்ஷக்கணக்காய் சம்பாதிக்கக்கூடிய உத்தியோகங்களையும், தொழிலையும் விடுத்து தேசமே முக்கியமானதெனக் கருதி, தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் மனப்பூர்வமாய் அர்ப்பணஞ் செய்த உண்மை தியாகிகளிலொருவரான ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்திர முதலியாருக்கும் நான்கு வோட் என்று சொல்வோமானால், தேசத்தில் ஒழுக்கம், உண்மை, பகுத்தறிவு இருக்கின்றதென்று எப்படிச் சொல்லக்கூடும்? எப்படியோ, ஸ்ரீமான் முதலியார் தெரிந்தெடுக்கப்பட்டு விட்டாரென்று சொல்வதால், இனி இதைப் பற்றிக் கிளற வேண்டிய அவசியமில்லை.

காஞ்சீபுரம் மகாநாடானது ஒரு விதத்தில் மிகவும் முக்கியமான மகாநாடென்றே சொல்ல வேண்டும். ஏனெனில் சென்ற வருடம் நடைபெற்ற திருவண்ணாமலை மகாநாடானது பிராமணரல்லாதாருடைய நிலைமை இன்னதென உணர்வதற்கு அநுகூலமாயிருந்த போதிலும், காஞ்சீபுரம் மகாநாட்டில் பிராமணரல்லாதாருடைய கடமை இன்னதென நிர்ணயஞ்செய்ய வேண்டியதாயிருக்கும். ஆதலால் மகாநாட்டுக்கு பிராமணரல்லாத காங்கிரஸ்வாதிகள் யாவரும் விஜயம் செய்வது அவசியமாய் இருப்பதோடு மனசாக்ஷி முதலிய எந்தக் காரணங்களாலாவது காங்கிரஸில் மெம்பர்களல்லாதிருந்து தேச முன்னேற்றத்திலும், பிராமணரல்லாதார் சமூக முன்னேற்றத்திலும், கவலையுள்ள ஒவ்வொரு பிராமணரல்லாதாரும் விஜயம் செய்யவேண்டியது அவசியமாயிருக்கின்ற படியால் அந்தப்படி விஜயம் செய்வதற்கு, அக்ராசனர் கக்ஷி வேற்றுமையின்றி ஸ்ரீமதி பெசண்டமையார் உள்பட யாவருக்கும் அழைப்புக் கடிதம் அனுப்ப வேண்டுமாயும் அதில் எல்லாக் கக்ஷியாரிடமும் தாம் அன்பாய், சமரசமாய் நடந்துகொள்வதாகவும் எழுதி அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 08.11.1925**



RangaRakes tamilnavarasam.com

# காஞ்சீபுரம் தமிழர் மகாநாடுகள்

காஞ்சீபுரத்தில் 31 – வது ராஜீய மகாநாடு நாளது நவம்பர் மாதம் 21, 22 –ந் தேதிகளான சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சென்னை நவசக்தி ஆசிரியர் ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்தர முதலியாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடும்.

அது சமயம் சர்வ கக்ஷியார்களும் அடங்கிய பிராமணரல்லாதார் மகாநாடொன்றும் கூடும்.

பிராமணரல்லாதார் முன்னேற்றத்தில் கரிசனமுள்ள தமிழ் நாட்டுப் பிராமணரல்லாதார் அனைவரும் வந்திருந்து, தங்களது முன்னேற்றத்திற்கான ஒரு திட்டத்தைக் காணவும், அதைச் சரிவர அமுலுக்கு கொண்டு வரவும், ஏற்பாடு செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இது விஷயத்தில் ஒவ்வொருவரும் தங்கள் ராஜீய அபிப்பிராய பேதங் காரணமாகவாவது, சொந்த அசவுரியங் காரணமாகவாவது அலக்ஷியமாய் இருந்துவிடாமல் கண்டிப்பாய் வரவேண்டுமாய் மறுபடியும் வினயத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தீண்டாமையை ஒழிக்க வேண்டியது பிராமணரல்லாதாருக்கு மிகவும் முக்கியமானதொரு கடனாகும். ஏனெனில், தீண்டாதார்களின் முன்னேற்றந் தான் பிராமணரல்லாதார்களின் முன்னேற்றமாகும். தீண்டாதார்களின் துன்பந்தான் பிராமணரல்லாதாரின் துன்பமாகும்.

தீண்டாமை ஒழிவதன் மூலமாய்த்தான் பிராமணரல்லாதார் கடைத்தேற முடியும். தீண்டாமை ஒழிவதன் மூலமாய்த்தான் நாடு சுயராஜ்யமடையும். ஆதலால் தீண்டாமை விலக்கில் கவலையுள்ளவர்களும், தீண்டாதாரென்று சொல்லப்படுபவரும் அவசியம் காஞ்சீபுரத்திற்கு வந்து அதற்கென்று ஓர் மகாநாடு கூட்டி காரியத்தில் பலன் தரத்தக்க திட்டங்களைக் காண வேண்டுமாயும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஈரோடு **ஈ.வெ.ராமசாமி**
15.11.25

**குடி அரசு – வேண்டுகோள் – 15.11.1925**



# சுதேசமித்திரனின் சின்னபுத்தி

நாளது 1925-ம் ௵ அக்டோபர் ௴ 30-ம் ௳ சுதேசமித்திரன் 4-வது பக்கம் 3- வது பத்தியில் ‘ தர்ம சொத்திலிருந்து கக்ஷிப் பிரசாரமா’ “நாம் எதிர்பார்த்தபடி ஜரூராக காரியங்கள் நடக்கின்றன ” என்ற வாசகத்தின் தொடர்ச்சியாக “இந்துமத தர்ம சொத்து பரிபாலன சட்டம் ஜஸ்டிஸ் கட்சி மந்திரி பிடிவாதமாக இயற்றியது” பரிசுத்தமான நோக்கமுடன் செய்யப்பட்டதாக சொல்லப்படுவதானது எலக்ஷனுக்கு ஓர் முக்கியக் கருவியாக செய்யப்பட்டிருக்கிறதென்று நிரம்பிய அனுபோகம் பெற்ற நிரூபர் சொல்லுகின்றார்.

அதன் உண்மையாதெனில் ௸ சட்டப்படி நியமிக்கப்பட்ட கமிஷனர்களில் ஒருவராகிய ஸ்ரீமான் பி.வி.நடராஜ முதலியார் அவர்கள் சில தினங்களுக்கு முன் கோயமுத்தூர் டவுன் ஹாலில் ஸ்ரீமான் M.சம்பந்த முதலியார் B.A.,B.L. அவர்கள் தலைமையின் கீழ் சில பொது ஸ்தாபனங்களிலிருந்து கமிஷனர் அவர்களுக்கு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கும் காலத்தில் கமிஷனர் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரமாவன :-

“இந்துமத தர்ம பரிபாலன சபைகளிலும், ஆலயங்களிலும் மற்றும் பொது ஸ்தாபனங்களிலும் நடந்து வந்த அக்கிரமங்களையும், நடக்கின்ற அக்கிரமங்களையும் எடுத்துரைத்து இப்போர்க்கொத்த தீயசெயல்கள் இனி நடவாதிருக்கும் பொருட்டும், நடைபெற வேண்டியவைகள் கிரமப்படி நடத்தி வைக்கும் பொருட்டும் இச்சட்டம் ஆக்கப்பட்டதேயன்றி இதன் சொத்திலிருந்து சர்க்கார் கொள்ளையடித்துக் கொண்டு போகவேண்டுமென்கிற கெட்ட எண்ணத்தினால் செய்யப்பட்டதல்ல வென்றும், இதற்காக ஜனங்களும் கூடிய வரை ஒத்துழைக்க வேண்டும்” என்றும் கேட்டுக் கொண்டு தன் சொற்பொழிவை நிறுத்திக் கொண்டார்.

ஆனால் 30.10. 1925- ல் சுதேசமித்திரனில் வெளிவந்த வியாசத்தைக் கவனிக்குமிடத்து, ஆதிகாலம் தொட்டு ஏகபோகமாக கேள்வி கேட்பாரின்றி அனுபவித்து வந்ததுமல்லாமல் தெலுங்கு பாஷையில் செப்பும் பழமொழிக் கிணங்க “மீக்குச் சூப்பு நாக்கு மேப்பு” என்று சொல்லுகிற படியாக நிவேதனத்தை சில ஆலயங்களில் சுவாமிக்குக் காண்பித்தும், காண்பியாமலும் கூட கொள்ளையடித்துத் தின்ற கோவில் பெருச்சாளிகளுக்கும், அவர்களுக்கு ஏவல்காரர்களாக அவர்களின் கீழ் வயிறு வளர்த்து வந்த பணியாளர்களுக்கும், இவர்களுக்கெல்லாம் மேல்பட்ட அந்தஸ்தில் இருந்து கொண்டு அவர்கள் இஷ்டம்போலும் தங்கள் இஷ்டம் போலும்



RangaRakes tamilnavarasam.com

காரியாதிகளை நடத்திக் கொண்டும் திருடிக் கொண்டும் இருந்த சிற்சில பொது ஸ்தாபனங்களின் உத்தியோகஸ்தர்களுக்கும், ஷை சட்டமானது அருவருப்பைக் கொடுக்க கூடியதேயாகும். இவ்வருத்தம் காரணமாக கக்ஷிகளை ஒன்றோடொன்று இணைத்து ஒருவருக்கொருவர் மனத்தாங்கலை யுண்டு பண்ணி பின்னால் மாச்சரியத்தையும் உண்டுபண்ணி வைத்து அவைகளுக் கிடையில் தங்களுடைய “சாண் வயிறு வளர்க்க சலாம் போடும் குலாம்கள்” நேரில் பார்த்தவற்றை எழுதாது ஏதேதோ தாறுமாறாக எழுதத் தலைப்படுகின்றார்கள். இவர்களையும் பத்திரிகை நிரூபர்களாகக் கொண்ட பத்திரிகைகளுக்கு எந்தக் காலத்தில், எந்த நேரத்தில், எந்த வியாசத்தைக் கொண்டேனும் பத்திரிகைக்கு இடையூறு விளைத்து கெடுத்துவிடுவார்களோவென்கிற சந்தேகம் எம் போன்ற பத்திரிகை வாசிக்கும் மித்திரன் நேயர்களுக்கு உண்டாவது சகஜமே.

அல்லாமலும் நமது விரோதிகள் என்னென்னவோ சூழ்ச்சி செய்வதாகவும் அதையும் எதிர்த்துப் போராட எல்லோருடைய ஒத்துழைப்பையும் வேண்டுவதாகவும் மற்றும் பலவாறாகவும் ஸ்ரீமான் நடராஜ முதலியார் அவர்கள் பேசியதாகத் தெரிகிறது என்கிறார். மேல்கண்ட வாசகத்தின்படி பார்க்குமளவில் ஷை வியாசத்தை எழுதிய நிரூபர் தான் நேரில் அப்பிரசங்கத்தைக் கேட்காமலும், ஆனால் யாரோ ஒருவர் சொல்லக் கேட்டும் அதைக் கொண்டு தன்னுடைய நீண்ட கால அனுபவத்திலிருந்து தெரிந்து கொண்ட விஷயங்களில் கொஞ்சம் கலந்தும் வியாசம் வரைய ஆரம்பித்துவிட்டார் போலும். அதாவது “புலியைக் கண்டவரைக் கண்டு கலங்கிய கல் நெஞ்சர் போலும்” எனச் செப்பும் பழமொழிக் கொப்பாகத் தோன்றிவிட்டார்.

நிற்க, தேவஸ்தான பணத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாய் பிரசாரம் செய்வதும் தேவஸ்தான சட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாவெனத் தெரிய வேண்டுமென்றும் ஓர் அதிகாரி தோரணையில் எழுதியுள்ளவர் ஷை தர்மச் சொத்துக்களை “உத்தியோக வேட்டைக்காரர்களைக்” கொண்ட ஒரு கக்ஷியார் துஷ்பிரயோகம் செய்வதை நாட்டார் அழுத்தமாக கண்டிக்க கடமைப் பட்டிருக்கிறார்கள் என்றும் இன்னும் என்னென்ன விபரீதங்கள் நடக்கப் போகின்றனவோ அறியோம் என்றும் மனமானது நைந்து நைந்து துரும்பு போல் இருந்த திரேகம் தூண்போலாக வீங்கவும் கதறுகின்றார்!

உத்தியோக வேட்டைக்காரர்களைக் கொண்ட கக்ஷியார் என்பதாக அவர் சொல்லும் விஷயத்திலிருந்து கவனித்தால் அவருக்கே ஓர் சாதாரண உத்தியோகம் கிடைக்கப் பெறாதிருந்த நிலைமையினாலோ அல்லது அவருடைய உறவினர்கள், நண்பர்கள் எவர்களுக்கேனும் உத்தியோகங்கள் கிடைக்காதிருந்த வருத்தத்தினாலோ தான் சித்த சுவாதீனமிழந்த நிலைமையில் மனதிலுதித்த நிலைமையில், மனதில் உதித்தவற்றையெல்லாம் கொட்டிக் குறை கூற ஆரம்பித்துவிட்டார். இவ்விதம் அசம்பாவிதமாகவும், அநாகரீகமாகவும் நிரூபத் தொழிலை நடத்திக் கொண்டு வரும் நபர்களை நிரூப நேயர்களாக வைத்துக் கொண்டிருப்பதானது சுதேசமித்திரனுக்கு ஓர் பெருங் குறையேயாம்.

ஆதலால், இனி வருங்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடை



பெறாதிருக்குமென்று எண்ணுகிறேன் என ஸ்ரீமான் ஏ.சண்முகசுந்தரம் பிள்ளை எழுதுகிறார்.

**குறிப்பு :**

மேற்கண்ட வியாசம் கோயமுத்தூர் ஸ்ரீமான் ஏ.சண்முகசுந்தரம் பிள்ளையவர்களால், சுதேசமித்திரனுக்கு அனுப்பப்பட, அப்பத்திரிகை இதைப் பிரசுரியாது திரும்ப அனுப்பிவிட்டதாம். பத்திரிகையொன்றில் தாறுமாறான விசயம் ஏதேனும் வருமாயின், அதை மறுத்துக்கூறி எழுதப்படும் நிரூபங்களைப் பிரசுரியாது திருப்பி விடுவது பத்திரிகை நடத்தும் கொள்கைக்கே விரோதமாகும்.

நிற்க, நமது நேயர் குறிப்பிடும் சுதேசமித்திரன் நிரூபரைப் போன்ற பலர் அப்பத்திரிகைக்கு நிரூபர்களாயிருக்கின்றனர். இவர்கள் அயோக்கியத் தனமாகவும், சின்ன புத்திக் கொண்டும், உண்மையைத் திரித்தும் ரிப்போர்ட் செய்வதை நாம் பல தடவைகளில் கண்டித்திருக்கிறோம். இங்ஙனம் கண்டிப்பதில் கடின பதங் கொண்டிருக்கின்றதென சிலர் கூறுகின்றனர். இத்தகைய நிரூபர்களுக்கு நாம் உபயோகிக்கும் வார்த்தைகள் தகுதிதானா அல்லது இன்னும் அதிகக் கடின பதம் வேண்டுமாவென்னும் விஷயத்தைப் பொது ஜனங்களே நிர்ணயம் செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – பத்திராதிபர் குறிப்பு – 15.11.1925**



RangaRakes tamilnavarasam.com

# சுயராஜ்யம்

சுயராஜ்யமென்னும் பதம் நமது நாட்டில் பெரும்பான்மையாய் ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் சுயநலத்துக்கே பயன்படுத்தப்பட்டு வருவதோடு, பாமர ஜனங்கள் அதை அறியாதபடி சுயகாரியப் புலிகளால் சூழ்ச்சிகள் செய்யப்பட்டு வருகிறது. சுயராஜ்யமென்பதைப் பலர் பலவாறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். திருடர்கள் தாங்கள் திருடுவதைப் பிறர் கவனியாமல் விட்டுவிடுவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். சிறை யிலிருக்கும் கைதிகள் தங்களை வெளியில் விட்டு விடுவது தான் சுயராஜ்ய மென்று நினைக்கிறார்கள். குடிகாரர்கள் தாங்கள் தாராளமாகவும், விலை நயமாகவும் வேண்டிய அளவு குடிக்க வசமுள்ளதாய் கலால் வரி எடுபட்டுப் போவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். பாமர ஜனங்கள் பலர் இந்தியாவை விட்டு வெள்ளைக்காரரை விரட்டி விடுவது தான் சுயராஜ்ய மென்று நினைக்கிறார்கள். ஏழைகள் ரூபாய் 1-க்கு 8 படி அரிசி விற்பதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். தரித்திரர்கள் பணக்காரர் சொத்துக்களை யெல்லாம் பிடுங்கித் தங்களுக்குச் சரி சமானமாய்ப் பங்கிட்டுக் கொடுப்பது தான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள்.

இவையெல்லாம் அறியாமையால் நினைப்பதாக வைத்துக் கொண்டா லும் அறிந்தவர்கள், படித்தவர்களென்போரோ வெள்ளைக்காரர் உத்தியோ கங்களையெல்லாம் தாங்களே அனுபவித்துக் கொண்டு 500, 1000, 5000, 10000 ரூபாய் சம்பளம் பெறுவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள்.

உயர்ந்தோர்களென்கிற பிராமணர்களோ பாமர ஜனங்களைக் கொண்டு கிளர்ச்சி செய்வித்து ஷை சம்பளமுள்ள சர்க்கார் உத்தியோகங் களையும், பதவிகளையும் தாங்களே பெறுவதும், தாங்கள் பிறவியில் உயர்ந்தவர்கள் மற்றவர்கள் தாழ்ந்தவர்களென்பதை நிலைநிறுத்தி, ஆதிக்கம் பெறுவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள்.

ராஜதந்திரிகளென்போரும், ராஜீயவாதிகளென்போரும், சீமையி லிருந்து பார்லிமெண்டார் மூலம் நமக்கு வழங்கப்படும் சில அதிகாரங்களை யும், பதவிகளையும்தான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். காங்கிரஸில் தற்காலம் பிரதான ஸ்தானம் வகிப்பதாய்ச் சொல்லப்படும் சுயராஜ்யக் கக்ஷியா ரென்போரும், அரசாங்கத்தாரிடமிருந்து எதையாவது பெறுவதைத் தான் சுயராஜ்யமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ( இவற்றையெல்லா மறிந்துதான் இங்கிலாந்தில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் பிரசங்கம் கேட்ட



கர்னல் வெட்ஜ் வுட் துரை இந்தியர்கள் இன்னமும் தங்களுக்கு வேண்டியது என்ன ( சுயராஜ்யம் ) வென்பதையே தெரிந்து கொள்ளவில்லையென்று சொன்னார் போலும்! )

## மகாத்மா காந்தி

மகாத்மா காந்தியடிகள் இவற்றையொன்றையுமே சுயராஜ்யமென்று கருதவேயில்லை. இவ்வித சுயராஜ்யங்களில் எது வரினும், நமது நாட்டில் இப்போதுள்ள கஷ்டங்கள் எதுவும் மாறவே மாறாதென்பது அவருடைய அபிப்பிராயம். இப்போது சுயராஜ்யமில்லையென்று சொல்லுவதற்கறி குறியாக இருப்பது :-

1. மக்கள் சுயமரியாதையில்லாமலும், சமத்துவமில்லாமலும் ஒருவன் உயர்ந்தவன், ஒருவன் தாழ்ந்தவனெனச் சொல்லிக்கொண்டு, பெரும்பான்மையான மனிதர்களை தீண்டாதார்களென்று ஒதுக்கி, இழிவான மிருகங்களிலும் கேடாய் மதித்து, மனித சுதந்திர மில்லாமல் கொடுமைப்படுத்தி வைத்திருப்பது.

2. தினம் ஒருவேளைக் கஞ்சிக்கும் வழியில்லாமலும், தங்கள் மானத் தைக் காக்க ஆடையில்லாமலும் கோடிக்கணக்கான ஜனங்கள் பட்டினியாலும், மானாபிமானத்தாலும் சாவது.

3. தேசத்தில் பெரும்பான்மையோரான தொழிலாளிகள் தங்களுக்குத் தொழிலில்லாமல், தங்கள் ஜீவனத்திற்காக எதுவும் செய்ய ஒருப் பட்டு ஜீவனத்திற்காக அந்நிய நாட்டுக்குச் சென்று இழிவாய் வாழ்ந்து மாய்வது.

4. நமது தேவைக்கு வேண்டிய சகல வஸ்துக்களும் அந்நிய நாட்டி லிருந்து வருவதாய் ஏற்பட்டு அதன் பொருட்டு நமது செல்வங்கள் வெளிநாடுகளுக்குப் போய் நமது நாடு தரித்திரத்தில் மூழ்கிக் கொண்டு போவது.

இத்யாதி கெடுதிகள் நம் நாட்டை விட்டு என்று அகலுமோ அன்று தான் நமது நாடு சுயராஜ்யம் பெற்ற நாடு ஆகுமேயல்லாமல் அந்நியர்கள் அரசாக்ஷி செய்யுங் காரணத்தினாலேயே சுயராஜ்யமில்லை யென்று சொல்லி விடமுடியாதென்றும், மகாத்மா காந்தி அடிக்கடி கதறி வருவதோடு, இவ்வித சுயராஜ்யத்தை அடையவே ஒத்துழையாமையையும், கதர், தீண்டாமை, மதுவிலக்கு முதலிய நிர்மாணத் திட்டத்தையும் உபதேசித்தார்.



RangaRakes
tamilnavarasam.com

## படித்தவர்கள்

இதனை மேல் ஜாதியாரென்போரும் படித்தவர்களென்போரும் இவ்விரண்டும் சேர்ந்த சுயராஜ்யக் கட்சியாரென்போரும் ஆதியிலிருந்தே ஒப்புக்கொள்ளவில்லை. இவை ஒப்புக்கொள்ளப்பட்டு அமுலுக்கு வந்து பலன் தருவதானால் மேல் ஜாதியாரென்போருக்கும் படித்தவர்களென் போருக்கும் பெரிய ஆபத்தாய்த்தான் முடியும். ஏனெனில், தீண்டாமை யொழிந்தால் மேல் ஜாதியென்பது போய்விடும். கதர், மதுவிலக்கு வெற்றி பெற்றால் ஏழ்மை நிலையும், தரித்திரமும் மறைந்துவிடும். இவ்விரண்டும் மறைந்தால் படித்தவர்களுக்குப் பிழைப்பிருக்காது.

## கூட இருந்தே குடியைக் கெடுத்தது

இந்த இரகசியத்தை அறிந்தேதான், உயர்ந்த ஜாதியார்களென்போரும், படித்தவர்களென்போரும் கூட இருந்தே குடியைக் கெடுத்தது போல் மகாத்மாவின் திட்டத்தை, அவருடன் இருந்தே ஒழித்து விட்டார்கள். அது மாத்திரமில்லாமல், ராஜீய சுதந்திரமென்ற பொய்ப்பெயர் வைத்து, உத்தியோ கம் சம்பாதிப்பதையே பிரதானத் தத்துவமாய்க் கொண்ட சுயராஜ்யக் கக்ஷியென்று ஒரு கட்சியையும் சிருஷ்டித்துக் கொண்டு, காங்கிரஸிலிருந்து மகாத்மாவையும் விரட்டி விட்டு, உத்தியோக வேட்டையாட காங்கிரஸை ஓர் ஆயுதமாயும் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

சுயராஜ்யக் கட்சியாரின் கொள்கையான ராஜீய சுதந்திரமென்னும் பொய் அதிகாரமும், பதவியும் நமக்குக் கிடைக்க கிடைக்க நாடு இன்னும் சீர்கேடடையவும், ஒற்றுமை குலையவும், தரித்திரம் பெருகவும், அடிமைத் தன்மை பலப்படவும்தான் ஆகுமேயல்லாமல் தேசம் ஒருக்காலும் முன்னுக்கு வர முடியவே முடியாது.

## சீர்திருத்தம்

உதாரணமாக, ஒத்துழையாமைக்கு முன்னிட்ட காங்கிரஸ்களின் முயற்சியால், நமது அரசாங்கத்தார் இதுவரை இரண்டு தடவைகளில் ராஜீய சுதந்திரமென்னும் இரண்டு சீர்திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

அதாவது, ஒன்று மிண்டோ - மார்லி சீர்திருத்தம், மற்றொன்று மாண்டேகு - செம்ஸ்போர்ட் சீர்திருத்தம். இவைகளின் பலனாய் தேசம் என்ன வாயிற்று ? இவற்றால் ஏற்பட்ட பதவியையும், உத்தியோகத்தையும் ஆயிரம் பதினாயிரக்கணக்கான சம்பளங்களையும் நம்மில் யார் அடைவது என்கிற சண்டைகளும், பொறாமைகளும் வலுத்து வந்ததும், ஒருவரை ஏமாற்றி ஒருவர் அடைய பொது ஜனங்களை உபயோகித்துக் கொண்டதுமல்லாமல் வேறென்ன கண்டோம்?

5,500 ரூபாய் சம்பளமுள்ள நிர்வாக சபை மெம்பர் பதவிகளும், மந்திரி



பதவிகளும் இந்தியருக்குக் கொடுப்பதென்கிற சீர்திருத்தம் பெறாமலிருந் திருப்போமேயானால், இந்து - முஸ்லீம் சண்டைகளும் பிராமணர் - பிராமண ரல்லாதார் கக்ஷிகளும் உட்பிரிவு துவேஷங்களும், ஏற்பட்டிருக்குமா ?

சுயராச்யக் கக்ஷியென்று ஓர் கக்ஷி ஏற்பட்டு தெய்வீக இயக்கமாகிய மகாத்மாவின் இயக்கத்தைக் குலைத்து, உத்தியோக வேட்டையாட முன் வந்திருக்குமா? ஷை சீர்திருத்தங்களென்னும் ராஜீய சுதந்திரங்கள் கொடுக்கு முன் 70 கோடி ரூபாயாக இருந்த வரி, இப்போது 150 கோடி ரூபாயாக மாறி யிருக்குமா? 24 கோடியாகவிருந்த இராணுவச்செலவு இன்று 60, 70 கோடியாக மாறியிருக்குமா?

அரசாங்கத்தாரிடமிருந்து பெற்ற சீர்திருத்தம் என்னும் சுயராஜ்யத் தாலல்லவா இவ்வித கஷ்டங்கள் விளைந்தன. மகாத்மாவின் சீர்திருத்தமாகிய நிர்மாணத் திட்டமென்னும் சுயராஜ்யத்தைப் பெற்றிருப்போமேயானால், இக்கெடுதிகள் நமக்கு வந்திருக்குமா ? சுயராஜ்யக் கட்சியார் கோருகிறபடி இன்னுமொரு சீர்திருத்தமென்னும் சுயராஜ்யம் சர்க்காரால் கொடுக்கப் பட்டால், நமது கதி என்னவாகும்? இன்னும் எவ்வளவு கோடி ரூபாய் வரி அதிகமாகும்? எவ்வளவு ஜாதிச் சண்டைகளும், வகுப்புத் துவேஷங்களும் வளரும்.

## நாக்கில் ஊறும் தண்ணீர்

இந்த சீர்திருத்தங்களின் பலனால் ஏற்பட்ட உத்தியோகங்கள் தானே, இன்றையதினம் ஸ்ரீமான்களான சி.பி. இராமசாமி ஐயரும், மகமது ஊஸ்மானும், ராமராய நிங்கரும், பாத்ரோவும், சிவஞானம் பிள்ளையும் ஆளொன்றுக்கு மாதம் 5,500 ரூபாய் வீதம் சம்பளம் என்னும் பெயரால் கொள்ளையடிப்பதும், தனி வண்டியில் பிரயாணம் செய்வதுமாயிருக்கிறது.

இதைப் பார்த்துப் பொறுக்காமல், ஸ்ரீமான்கள் ஸ்ரீனிவாசய்யங்கார் நாக்கிலும், ஏ. ரெங்கசாமி ஐயங்கார் நாக்கிலும், சத்தியமூர்த்தி நாக்கிலும் ஊறின தண்ணீர் தானே - நமது நாட்டில் சுயராஜ்யக் கட்சியாய்க் கிளம்பி, தேசத்தையும் சமூகத்தையும் பாழாக்கிக் கொண்டு வருகிறது.

இந்த உத்தியோகங்கள் இந்திய மக்களுக்கு வீண் தெண்டத்துக் காகத்தானே! “குலைக்கும் நாய்க்கு எலும்பு போடுவதுபோல்” அரசாங்கத் தாரால் வீசி எறியப்பட்டிருக்கிறது! இந்த உத்தியோகங்களால், ஏழைகள் தலையில் கை வைத்து வரியை உயர்த்தி, வசூல்செய்து ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒருசிலர் அனுபவிப்பதல்லாமல் வேறென்ன பிரயோஜனம்? இவ்வுத்தியோகங்களில்லாத காலத்தில் ராஜாங்கம் நடக்கவில்லையா?

அந்த ராஜாங்கத்திற்கும், இந்த ராஜாங்கத்திற்கும் வித்தியாசம் தானென்ன? இந்த உத்தியோகங்கள் ஏற்பட்டதின் பலனாய் ஒரு வெள்ளைக் கார உத்தியோகமாவது, அதிகாரமாவது குறைந்ததா?



RangaRakes tamilnavarasam.com

இந்த உத்தியோகத்தின் பலனாய் தேசத்தில் செல்வநிலை பெருகிற்றா? வரி குறைந்ததா? தீண்டாத மக்கள் தங்கள் தெய்வங்களைக் காணவாவது, தெருவில் நடக்கவாவது உரிமை பெற்றார்களா? கோடிக் கணக்காய் அந்நிய நாட்டாரால் வியாபாரத்தின் மூலமாய் சுரண்டப்படும் பணத்தில் முக்கால் துட்டாவது நமது நாட்டில் தங்க வழியேற்பட்டதா? கோடிக்கணக்கான மக்கள் மதுபானத்தினால் பாழாவதையாவது நிறுத்த முடிந்ததா? தேசத்துக்கு என்ன பலனைக் கொடுத்தது?

சுயராஜ்யக் கக்ஷியாரென்போர், பாமர ஜனங்கள் இந்த இரகசியத்தை அறியாதபடி பத்திரிக்கைகளில் சதா காலமும் பொய்யும் புளுகும் எழுதியும், மனதறிந்த பொய்ப்பிரசாரங்கள் செய்தும், பொது ஜனங்களை ஏமாற்றி எல்லா உத்தியோகங்களையும் தாங்களே அடைய வேண்டுமென்னும் ஆசைப் பட்டுக்கொண்டும் கூடிக்கூடி எப்படி இந்த உத்தியோகத்தை அடைவது என்று சதியாலோசனை செய்து கொண்டுமிருக்கிறார்களேயல்லாமல், இவ்வித உத்தியோகங்கள் நமக்கு அவசியமா, அவசியமில்லையாவென்பதைப் பற்றி ஒரு நாளாவது பேசியதே கிடையாது.

## வேண்டாத சுயராஜ்யம்

சுயராஜ்யக் கட்சியாரின் சுயராஜ்யம் தேசத்திற்கு உண்மையான சுயராஜ்யம் ஆகாது. இவ்வித சுயராஜ்யம் நமது நாட்டிற்கு வேண்டவே வேண்டாம். சுயராஜ்யக் கட்சியார் கேட்கிறபடி சர்க்காரால் கொடுக்கப்படும் சுயராஜ்யமென்னும் சீர்திருத்தம் மறுபடியும் வருமானால் படித்தவர்களுக் கும், உயர்ந்த ஜாதியாரென்று சொல்லுபவர்களுக்கும் ஆயிரக்கணக்கான சம்பளமும் உத்தியோகமும் கிடைக்கும்.

இதற்காக மறுபடியும் வரியை அதிகப்படுத்த வேண்டும். மக்களுக்குள் உயர்வு, தாழ்வு நிலைத்திருக்கும். குடியை ஒழித்தால் சர்க்கார் வரும்படி குறைவதன் மூலம் தங்களுடைய சம்பளம் குறைந்து போகுமானதால், குடியை நிறுத்த முடியாது. வியாபாரத்தின் மூலமாக அந்நிய நாட்டுக்குப் போகும் செல்வத்தை நிறுத்த இவர்கள் கையில் திட்டமொன்றுமில்லாததால் அதுவும் சாத்தியப்படாது. உத்தியோகத்தைக் குறைப்பதால், படித்தவர்களுக்கு ஜீவனோபாயத்திற்கு மார்க்கமில்லாமல் போய்விடும். ஆகையால், அதையும் இவர்கள் செய்ய முடியாது.

## வேண்டிய சுயராஜ்யம்

உண்மையான சுயராஜ்யமே நமக்கு வேண்டும். அது மகாத்மாவின் சுயராஜ்யமான கதர் உற்பத்தி செய்வதிலும், அதை உடுத்துவதிலும், தீண்டாமையை ஒழித்து மக்கள் சமமாய் வாழ்வதிலும், மதுபானம் ஒழிந்து மக்கள் ஒழுக்கமடைவதிலுமேதானிருக்கிறது.



மகாத்மா சொல்லும் சுயராஜ்யமாகிய கதர் உற்பத்தி செய்து உடுத்தினால், அந்நிய நாட்டுக்குப் போகும் 70 கோடி ரூபாயும், மில் இயந்திரக்காரர் அநுபவிக்கும் 70 கோடி ரூபாயும், ஆக 140 கோடி ரூபாயில், குறைந்தது வருடம் 1– க்கு 100 கோடி ரூபாயாவது ஏழைகளுக்குப் பங்கு வீதம் கிடைக்கும். மகாத்மா சொல்லும் தீண்டாமை என்னும் சுயராஜ்யத்துக்குப் பாடுபட்டு வெற்றி பெற்றால், மிருகங்களுக்கும், புழுக்களுக்கும் கேவல மாயிருக்கும் தீண்டாதாரென்று சொல்லப்படும் 7 கோடிப் பேர்கள் மனிதர் களாவார்கள். இந்திய மனித சமூகத்துக்கு 7 கோடி மனிதர் லாபமாகும். பிராமணரல்லாதாருக்கும் இழிவான தாசிமக்கள், சூத்திரர் என்கிற பெயரும் நீங்கும். மகாத்மாவின் சுயராஜ்யமாகிய மதுவிலக்குக்கு வேலை செய்து வெற்றி பெற்றால் தேசத்தில் மதுபானம் ஒழியும். ஏழைகள் சுகமாய் வாழ்வார் கள். வருடத்தில் 20 கோடி ரூபாய் ஏழைகளுடைய பணம் மதுபான வகை யில் சர்க்காருக்குப் போய் உத்தியோகஸ்தர்கள் பங்கிட்டுக் கொள்வதை நிறுத்தும். ஆதலால் சுயராஜ்யக் கட்சியின் சுயராஜ்யம் வேண்டுமா? மகாத்மா வின் சுயராச்சியம் வேண்டுமா?

**குடி அரசு – தலையங்கம் – 15.11.1925**



RangaRakes tamilnavarasam.com

# ஈரோடு சேர்மனின் அடாத செய்கை

ஈரோடு முனிசிபாலிட்டியின் பொது ஜனங்களின் வரிப்பணம் தாறுமாறாகச் செலவழிக்கப்பட்டு வருவதைப் பற்றி இதற்கு முன் பல தடவைகளில் குறிப்பிட்டிருக்கிறோம். போதுமான அளவு ஜலதாரை கட்டாததனாலும் ஓடையில் விழுந்து தேங்கும் கசுமாலத் தண்ணீரை ஒழுங்காய் வெளிப்படுத்தாத காரணத்தாலும், அதிலிருந்து கொசுக்களும், விஷக்காற்றுகளும் உண்டாகி, ஊரெங்கும் பரவி, வீடுகள் தோறும் மலைக்காய்ச்சலாலும், குளிர் காய்ச்சலாலும் ஜனங்கள் அவஸ்தைப்படு வதைக் கொஞ்சமும் லக்ஷியம் செய்யாமல், நமது முனிசிபல் சேர்மன் அவர் கள் சிங்கார வனத்தின் பெயரால் வரிப்பணத்தைக் கண்டபடி வாரி இறைப் பதைப் பற்றியும், துர்விநியோகப்படுத்திக் கொள்வதைப் பற்றியும், இதற்கு முன் குறிப்பிட்டிருக்கிறோம். சென்ற 10-ந் தேதி ஈரோடு முனிசிபாலிட்டியில் சிங்காரவனத்திற்காக இது வரையில் கவுன்சிலர்க ளுடைய அநுமதி பெற்றும், அநுமதி பெறாமலும் செலவு செய்திருக்கும் பணத்தைப் பரிசீலனை செய்வதற்காகவும், சேர்மன் கேட்கிறபடி யெல்லாம் மேற்கொண்டு பணம் கொடுக்கலாமா வென்பதைப் பற்றியும் யோசிக்கவும், 10-11-25-ல் சேர்மனால் ஒரு மீட்டிங்கு கூட்டப்பட்டிருந்தது. அந்த மீட்டிங்குக்கு அதிகப்படியான கவுன்சிலர்கள் வந்து சேர்மனுக்கு விரோத மாய்த் தீர்மானங்கள் செய்து விடுவார்களோவென சேர்மன் பயந்து குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே தனக்கு வேண்டிய கவுன்சிலர்களை அழைத்துக்கொண்டு வந்து தன் இஷ்டம்போலெல்லாம் காரியங்களை முடித்துக்கொள்ள, என்னென்ன தீர்மானங்கள் நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமோ அவற்றை இரகசியமாய் எழுதிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மற்ற கவுன்சிலர்களும் வந்துவிட் டார்கள். இதற்கு மேல் நடந்த விஷயத்தைப்பற்றி கவுன்சிலர்களான ஸ்ரீமான் கள். கே.ஏ.ஷேக்தாவுத் சாகிப், ஏ.பழனியப்ப செட்டியார், ஈ.ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆகிய மூன்று கன வான்களும் சேர்மன் மீது ஈரோடு முன்சீப் கோர்ட் டில் வழக்குத் தொடர்ந்து தீர்மானங்களை நிறைவேற்றவொட்டாதபடி இஞ்சங் ஷன் பெற்று விட்டார்கள். அந்த பிராதின் சாராம்சத்தைக் கீழே குறிப்பிடு கிறோம்:-

1. வருஷாந்தர உத்தேச வரவு-செலவு திட்டமாகிய பட்ஜற்றில், சிங்கார வனத்திற்காக 3000 ரூபாயும், குழந்தைகள் விளையாடும் ஸ்தலத்திற் காக 2000 ரூபாயும் ஒதுக்கி வைக்கப்பட்டது.



2. இப்படி ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தாலும் இதை நிறைவேற்றும் போது சேர்மன் ஒவ்வொரு அயிட்டங்களைப் பற்றியும் கவுன்சிலர் களுடைய சம்மதம் பெற்றுத்தான் செலவு செய்யவேண்டும்.

3. இப்படியிருக்க, சேர்மனால் இதற்கென்று இதுவரை 7000 ரூபாய் செலவழிக்கப்பட்டு விட்டது. இவற்றும் 633 ரூபாய் தவிர பாக்கி யெல்லாம் கவுன்சில் சம்மதமில்லாமலே சேர்மென் தன் இஷ்டம் போல் செலவழித் திருக்கிறார்.

இப்படியிருக்க இதுவரை சேர்மனால் செலவு செய்யப்பட்டிருக்கும் தொகைக்கு அநுமதி கொடுக்கவும், மேற்கொண்டு 5000 ரூபாய் அநுமதிக்கவும், கவுன்சிலர்களுடைய சம்மதத்தைப் பெற 26.10.25-ல் சேர்மன் ஓர் மீட்டிங்கு போட்டிருந்தார். அந்த மீட்டிங்கை 2-11-25-க்கு தள்ளிவைத்து அதற்குள்ளாக, சேர்மன் செலவு செய்திருக்கும் தொகைகளைப் பரிசீலனை செய்ய ஓர் சப் கமிட்டி நியமிக்கப்பட்டது.

4. சப்கமிட்டி தன்னுடைய ரிப்போர்ட்டை அநுப்பிவிட்டது.

5. 10-11-25-ந்தேதி மீட்டிங்குக்காக குறிப்பிட்ட நேரத்துக்கு வாதிகளான கவுன்சிலர்களும் மற்ற சில கவுன்சிலர்களும் மீட்டிங்கு நடக்கும் ஸ்தலத்துக்கு வந்து பார்த்தபோது, சேர்மன் மினிட் புஸ்தகத்தில் என்னமோ எழுதிக் கொண்டேயிருந்தார். அந்த சமயம் சேர்மனைப் பார்த்து, நாங்கள் வந்திருக் கிறோம், நீங்கள் மினிட் புஸ்தகத்தில் என்னமோ எழுதிக்கொண்டிருக்கிறீர் களேயென்று கேட்டார்கள். இதை சேர்மன் கொஞ்சமும் கவனிக்காமல் எழுதிக் கொண்டே யிருந்தார். மறுபடியும் கவுன்சிலர்கள் கண்டித்து, அதென்னவென்று கேட்க பின்னால் தெரியும் என்று சொல்லிவிட்டுத் தனக்கு வேண்டி யதை எழுதிக்கொண்டார். கவுன்சிலர் ஸ்ரீமான் ஷேக்தாவுத் சாய்பு சப்கமிட்டி யினுடைய ரிப்போர்ட் என்னவென்பதைப் படிக்கும்படி கேட்டார். அதையும் படிக்கமுடியாதென்று சேர்மன் சொல்லிவிட்டார்.

6. பிறகு சேர்மன் அங்கிருந்த ரெவரெண்ட் ஏ. டப்ளியு பிரவ் என்னும் ஐரோப்பிய கவுண்சிலரை, மேல்கொண்டு வேலை செய்வதற்காக பல அயிட்டங்களுக்கு 2700 ரூபாய் அநுமதிப்பதாக ஓர் தீர்மானத்தை பிரேரேபிக்கும்படி அழைத்தார். அவர் அது போலவே பிரேரே பித்தார். மற்றொரு கவுன்சிலரான ஸ்ரீமான். வி.ஐ.டேவிட் அதை ஆமோதித்தார்.

7. ஸ்ரீமான். ஷேக்தாவூத் சாய்பு அவர்கள், பச்சைக் கொடி பந்தல் போடுவதற்கு 1000 ரூபாய் நீக்கி பாக்கித் தொகையை மாத்திரம் அநுமதிக் கலாமென்று ஒரு திருத்தப் பிரேரேபனை கொண்டு வந்தார். இதை ஸ்ரீமான் பழனியப்ப செட்டியார் ஆமோதித்தார். இதை சேர்மன் வோட்டுக்கு விட்டார். இத்திருத்தப் பிரேரேபனைக்கு 7 கவுன்சிலர்கள்



RangaRakes tamilnavarasam.com

அனுகூலமாக வோட் கொடுத்ததினால், திருத்தப் பிரேரேபனை நிறைவேறிற்று.

8. ஸ்ரீமான். வி.ஐ.டேவிட் என்பவர், சேர்மன் தூண்டுகோலின்பேரில் எழுந்து இத்திருத்தப் பிரேரேபனை ஒழுங்கானதல்லவென்றும் அசல் தீர்மானம் முன்னமே நிறைவேறிவிட்டதால், திருத்தப் பிரேரே பனையைப் பற்றிக் கவனிக்கவேண்டியதில்லையென்றும் சொல்லி விட்டார். ஸ்ரீமான் ஷேக்தாவூத் சாய்பு உடனே எழுந்து ஸ்ரீமான். பிரவ் துரையின் அசல் தீர்மானம் வோட்டுக்கு விடப்படவில்லையென்றும், நிறைவேறவில்லை யென்றும் ஆக்ஷேபித்தார். அசல் தீர்மானத்தைப் பிரேரேபித்த ஸ்ரீமான். பிரவ் துரை தம்முடைய தீர்மானம் வோட்டுக்கு விடப்படவில்லையென்றும், அது நிறைவேறவில்லை யென்றும் சொல்லியும், சேர்மன் கேட்காமல் ஒழுங்குக்கு விரோதமாய், ஸ்ரீமான். பிரவ் துரையின் தீர்மானம் நிறைவேறிவிட்டதாகவும், திருத்தப் பிரேரேபனை ஒழுங்குத் தவறென்றும் தீர்மானித்துவிட்டார்.

9. சேர்மன் ஸ்ரீமான்.பிரவ் துரையின் தீர்மானத்தை வோட்டுக்கு விடாமல் நிறைவேறி விட்டதாகச் சொல்வது சுத்தப் பொய்யும், ஒழுங் கீனமானதுமாகும். ஆதலால் ஷை தீர்மானம் ஒப்புக்கொள்ளத்தக்க தல்ல. சேர்மனானவர் திருத்தப் பிரேரேபனையை வோட்டுக்கு விட்டதையும், மெஜாரிட்டி கவுன்சிலர்களால் தீர்மானிக்கப்பட்ட தையும் பதிவு செய்துகொண்டு அதை அமுலில் கொண்டு வரக் கடமைப் பட்டவர்.

10. இந்தக் காரணங்களால் சேர்மன் ஸ்ரீமான்.ஸ்ரீனிவாச முதலியாரவர் களுடைய காரியம், கெட்ட எண்ணமுள்ளதும், அயோக்கியத் தனமுள்ளதும், அதிகாரத்திற்கு மேற்பட்டதும், அக்கிரமமானதும், தனது யோக்கிதைக்குப் பொருந்தாததுமாகும்.

11. ஆகையால் வரிகொடுக்கும் பொது ஜனங்களின் நன்மையைக் கோரி ஸ்ரீமான்.பிரவ் துரையின் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டு வராமலிருக்கவும், வரிப்பணத்தை எடுத்து இதற்காக ஒரு சைசா வேனும் செலவு செய்யாமலிருக்கவும் ஸ்ரீமான்.ஷேக்தாவூத் சாய்பின் தீர்மானத்தை ஒழுங்குப்படி நிறைவேறினதாகக் குறிப்புப் புஸ்தகத்தில் எழுதித் தீர்மானித்து, அதை அமுலுக்குக் கொண்டுவரவும் வேண் டியது மிகவும் அவசியமான தாயிருக்கிறது.

12. அல்லாமலும், நீதியையும் கிரமத்தையும் அநுசரித்து, பச்சைக் கொடிப் பந்தலுக்கென்று சேர்மன் வரிகொடுப்போர் பணத்தை எடுத் துச் செலவு செய்யாமலிருக்கும்படி சேர்மன் மீது ஓர் இஞ்சங்ஷன் கட்டளையும் பிறப்பிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.



என்று இம்மாதிரி ஓர் பிராது கொடுத்ததின்பேரில் கோர்ட்டாரவர்கள் இதை ஏற்றுக்கொண்டு தற்கால சாந்தியாய் ஓர் இஞ்சங்ஷன் கட்டளையும் பிறப்பித்திருக்கிறார். இதைப்பற்றி வரிகொடுப்போருக்கு அதிகம் ஒன்றும் சொல்லவேண்டியதில்லையென்றே நினைக்கிறோம். பொது ஜனங்களுடைய பணத்தை இம்மாதிரி தப்பான வழியில் செலவழிக்கக்கூடாது என்கிற கக்ஷிக்கு அம்மீட்டிங்கில் அநுகூலமாயிருந்தவர்கள், ஸ்ரீமான்கள். கே.ஏ.ஷேக்தாவூத் சாய்பு, மு.ச.முத்துக்கருப்பன் செட்டியார், மு.ச.பழனியப் பன் செட்டியார், ஈ.வி.நஞ்சப்ப செட்டியார், ஈ.ஜி.சுப்பிரமணிய ஐயர், ஈர்ஜி. காளிதாஸ் சேட், ஆர்.சதாசிவம் செட்டியார் முதலியவர்கள். சேர்மனுக்கு அநுகூலமாயிருந்து சேர்மனுக்கு அநுகூலமாய் வோட் கொடுத்தவர்கள் ஸ்ரீமான்கள். ஸ்ரீனிவாச முதலியார், டேவிட் பிரவ் துரை, பார்க்கர், மை.மைதீன் சாய்பு, காதர் சாய்பு இவர்களில் முதல் நால்வரும் உள்ளூர்வாசிகளல்ல. அதற்கடுத்தவர் சேர்மன் தயவால் நியமனம் பெற்றவர். கடைசியாகக் குறிப்பிட்ட ஸ்ரீமான்.காதர் சாய்பு உள்ளூர்வாசியும், பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவருமாவார். உயர்ந்தவரென்றும் மக்களுக்கு மோக்ஷத்துக்கு வழிகாட்டுபவரென்றும், யேசுநாதரின் உண்மைக் கொள்கை களைப் பரப்புபவரென்றும், ஐரோப்பிய மேன்மகனென்றும் சொல்லிக் கொள்ளும் ரெவரெண்ட் பிரவ் துரையவர்கள் இவ்வக்கிரமங்களில் எப்படிக் கலந்திருக்கிறாரென்பதைப் பொது ஜனங்கள் யோசிக்க வேண்டுமாய்க் கோருகிறோம். மற்றவை பின்னால்.

**குடி அரசு – கட்டுரை – 15.11.1925**



RangaRakes
tamilnavarasam.com

# தமிழ் தினசரி பத்திரிகை

இப்போது தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலராகிய ஆதித்தமிழ் மக்களுக்கு மிகவும் முக்கியமாயும் அவசரமாயும் வேண்டியது பொது நோக்குடைய ஒரு தமிழ் தினசரி பத்திரிகையே ஆகும். தமிழ்நாட்டில் தற்காலம் உலவிவரும் தமிழ் தினசரி பத்திரிகைகள் மூன்று. அதாவது சுதேசமித்திரன், திராவிடன், சுயராஜ்யா ஆகிய இவைகளே. இவற்றில் சுதேசமித்திரன் முதலில் தோன்றியது.

இதன் முக்கியக் கொள்கை பழய காங்கிரஸ் கொள்கைகளைப் போல அரசாங்கத்தினிடம் இருந்து பதவிகளும் உத்தியோகமும் மக்கள் அடையக் கிளர்ச்சி செய்வதாயிருந்தது. இதின்படி பதவிகளும் உத்தியோகங்களும் கிடைக்க கிடைக்க அவையெல்லாம் தங்கள் சமூகமாகிய பிராமணர்களுக்கே கிடைக்கும்படியாகவும் பிராமணர்கள்தான் உயர்ந்தவர்கள், அவர்கள்தான் அறிவாளிகள் என்றும் மற்றும் பிராமண மதம் ஆக்கம் பெறவும் உழைத்து வந்தது.

இம்மட்டோடல்லாமல் வரவர பிராமணரல்லாதாருக்கு உயர்ந்த உத்தியோகங்களும், பதவிகளும், அந்தஸ்துகளும், கீர்த்திகளும் உண்டாவதைக் கூற்றுவன் போல் நின்று தடுத்துக் கொண்டேயும் வந்தது.

இச்சூழ்ச்சி வெகுகாலமாய் பிராமணரல்லாதாருக்குத் தெரியாமல் இருந்துவிட்டதால் சகல பதவிகளும் அரசாங்க உத்தியோகங்களும், அந்தஸ்தும், கீர்த்தியும், பிராமணர்களுக்கே கிடைத்து, அரசாங்கமே பிராமணமயமாய் போய்விட்டதால், பிராமணரல்லாதார் நிலை தாழ்த்தப் பட்டது. அப்போது படித்திருந்த சில பிராமணரல்லாதார் சிலர் தாங்கள் எவ்வளவு கெட்டிக்காரராயும், யோக்கியர்களாயும், புத்திசாலிகளாயும், தேச பக்தி, பரோபகாரம் முதலிய அறுங்குணங்கள் நிறைந்தவர்களாயுமிருந்தும் தாங்கள் ஏன் தாழ்த்தப்பட்டு கிடக்கின்றோம் என்று யோசனை செய்து பார்த்ததில் இப்பிராமண பத்திரிகைகளும், கட்டுப்பாடான பிராமண சூழ்ச்சிகளுமே இதற்குக் காரணம் என்று கண்டுபிடித்துத் தாங்களும் மற்றவர்களைப்போல முன்னேறுவதற்குத் தங்களுக்குள் ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டுமென்றும், தங்களுக்கும் பிரசாரத்திற்கு ஒரு பத்திரிகை வேண்டுமென்றும் கருதி ஒரு சங்கத்தையும் திராவிடன், ஜஸ்டிஸ் என்கிற பத்திரிகைகளையும் ஏற்படுத்தினார்கள்.



இப்பத்திரிக்கையும், சங்கமும், சகலமும் சகல போக்கியங்களையும் தாங்களே ஏகபோகமாய் அனுபவித்து வந்த சுதேசமித்திரன் போன்ற பத்திரிகைக்கும், அதன் கூட்டத்தாருக்கும், இவை போட்டியாய்க் கண்டதால் இவற்றைச் செல்வாக்கில்லாமலடித்து ஒழிக்க பல தந்திரங்களும் செய்ததினால் இத்தந்திரங்களுக்குத் தாக்கு பிடிக்க சுதேசமித்திரன் போலவும், அதன் கூட்டத்தார் போலவும் திராவிடனும் அதன் கூட்டத்தாரும் அரசாங்கத்தை தழுவ நேரிட்டது. என்ன செய்தும் சுதேசமித்திரன் கூட்டத்திற்குள்ள தந்திர சக்தி திராவிடன் கூட்டத்திற்கில்லாததாலும், பிராமணரல்லாதாரில் சிலருக்கு தங்கள் தனிப்பட்ட சுயநலத்திற்கும், கீர்த்திக்கும் சுதேசமித்திரன் கூட்டம் இடங்கொடுத்ததால், இவர்களும் அதோடு சேர்ந்து எதிர்ப்பிரசாரம் செய்ததாலும், திராவிடனுக்குப் பாமர ஜனங்கள் உண்மையை உணரும்படிச் செய்யவும், பாமர ஜனங்களிடத்தில் செல்வாக்குப் பெறவும் முடியாமல் போய்விட்டதால் இது தக்க பலனை தென்னிந்திய மக்களுக்கு அளிக்கக் கூடியதாய் இல்லாமலிருக்கிறது.

இதுதான் இப்படி என்றாலோ, மகாத்மா ஏழை மக்கள் விடுதலையின் பொருட்டுக் காங்கிரஸில் சேர்ந்து, ஒத்துழையாமை என்னும் கொள்கையை உண்டாக்கி நிர்மாணத் திட்டம் என சில திட்டங்களைக் கண்டு வேலை செய்த காலத்தில் ஒத்துழையாமையும், நிர்மாணத் திட்டமும் தங்கள் கூட்டத்தாருக்கும், சுயநலப்புலிகளுக்கும் கஷ்டத்தைக் கொடுப்பதாய் இருந்ததால் ஒத்துழையாமையும் நிர்மாணத் திட்டத்தையும் மகாத்மா செல்வாக்கையும் அழிக்க சுதேசமித்திரன் பிரசாரம் செய்து வந்த காலத்தில் ஒத்துழையாமையிலும் நிர்மாணத் திட்டத்திலும் மகாத்மாவிடமும் ஈடுபட்டிருந்த சிலர் சுதேசமித்திரனால் தேசத்திற்கு ஏற்படும் கெடுதியைத் தடுக்க ஒரு தினசரி ஏற்படுத்த எண்ணினார்கள்.

அதுசமயம் ஆங்கில சுயராஜ்ய பத்திரிகை மக்கள் நம்பக் கூடியது போல் நடந்து வந்ததால், பொது மக்கள் பணமாகிய 10000 ரூபாயை தூக்கி அதன் முக்கியஸ்தரான ஸ்ரீமான் பிரகாசத்தினிடம் கொடுத்து தினசரி ஆரம்பிக்கச் சொன்னார்கள். கடசியாய் சுதேசமித்திரன் திட்டமும், சுயராஜ்யா திட்டமும் வித்தியாசமற்றதாகி இரண்டும் ஒன்றுபடக் கலந்துவிட்டதால் - புதுத் திருடனைவிட பழய திருடனே மேல் என்னும் பழமொழிபோல் இரண்டும் ஒன்று சேர்ந்துக் கொண்டு, பிராமணர்கள் ஆக்கம் பெறவும் பிராமணரல்லாதாரின் அழிவுக்கும் ஒத்து வேலை செய்கின்றதுகள்.

இதில் ஒரு விஷேஷம் சுதேசமித்திரன் ஒரு விதத்தில் சுயராஜ்யாவை விட யோக்கியன் என்றே சொல்லலாம். எப்படி என்றால் சுதேசமித்திரன், “தான் ஒரு பிராமணனைத்தான் ஆசிரியராகக் கொண்டிருக்கிறேன்” என்று உண்மையே பேசுகிறான்.

சுயராஜ்யாவோ இரண்டு பிராமணரல்லாதாரை ஆசிரியராய் வைத்திருப்பதாய் பொய் சொல்லிக் கொண்டு மக்களை ஏமாற்றி தனது அட்டூழி



RangaRakes tamilnavarasam.com

யங்களை நடத்துகின்றது. பத்திரிகைகள் யோக்கியமாய் நடந்திருந்தால் தென்னிந்தியாவில் ஒத்துழையாமை ஒழிந்து சுயராஜ்யக் கட்சியின் சூழ்ச்சி நடந்தேறுமா?

இந்நிலையில், தென்னிந்தியாவுக்கு தென்னிந்தியர்களுக்கு ஒரு நம்பிக்கையும் யோக்கியமுமுள்ள தமிழ் தினசரி பத்திரிகை வேண்டுமா வேண்டாமா என்று யோசிக்க வேண்டும். வேண்டுமென்றால் சுலபத்தில் நடத்திவிட முடியாது. சுதேசமித்திரனின் போட்டியையும், கெடுதியையும் சமாளிப்பது லேசான காரியமல்ல - அதற்கு பிராமணரல்லாதார் பொருள் களும் பிராமணரல்லாதார் சந்தாதாரர்களும் பிராமணரல்லாத சுயநலப்புலிகள் ஆதரவும், சாராய விற்பனை முதலிய விளம்பர வரும்படிகளும் மலிந்து கிடக்கிறது. ஆதலால் நாம் ஆரம்பிப்பதானால் தக்க மூலதனத்துடனும் தக்க ஏற்பாட்டுடனும்தான் ஆரம்பிக்க வேண்டும்.

குறைந்தது ஒரு லக்ஷ ரூபாய் மூலதனம் வேண்டும். ஒரு வருஷத்தில் 10,000 சந்தாதாரர்கள் சேர வேண்டும். 50000 ரூபாயாவது இல்லாமல் ஆரம்பிப்பது நிலை பெறத்தக்கதாகாது. குறைந்த அளவு 5 வருஷ காலத்துக் குக் குறையாமல் பத்திரிகை நடத்தக்கூடிய முஸ்தீபுகளை கையில் வைத்துக் கொண்டு ஆரம்பித்தாலல்லாது எதிர்பார்க்கும் பலனை அடைய முடியாது.

ஆதலால் இவைகளைப் பற்றி சில கனவான்களோடு யோசனை செய்து பார்த்ததில் அடியில் கண்ட விஷயங்கள் புலப்பட்டன. அதாவது, பங்கு 1- க்கு 5 ரூபாய் வீதம் 20000 பங்கு கொண்ட ஒரு லக்ஷ ரூபாய் மூலதனம் வேண்டும். 50000 ரூ. வசூலித்த பிறகுதான் பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும். தமிழ் ஜில்லாக்களாகிய 12 ஜில்லாக்களும், ஜில்லா ஒன்றுக்கு 5000 ரூ. வீதம் முன்பணம் வசூலித்துக் கொடுக்கவேண்டும்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் 1000 ரூ. கொடுக்கக்கூடிய இரண்டு பேர்கள் அவசியம் முன் வருவதோடு பாக்கி மூவாயிரம் ரூபாயையும் வசூலித்துக் கொடுக்க அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆயிரம் கொடுப்பவர்களும், ஊதியமில்லாமல் உழைக்க வருபவர்களும், நிர்வாகிகளாக இருக்க வேண்டும்.

பத்திரிகையின் கொள்கை பிராமணரல்லாதாருடையவும் தீண்டாதா ருடையவும், சமத்துவமும் முன்னேற்றமுமே முக்கியமானதாயிருக்க வேண்டும். பத்திரிகையின் நேரான நிர்வாகமும் பதிப்பும் யோக்கியமான ஒரு சிறு போர்டினிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இப்போர்டில் உள்ளவர்கள் பத்திரிகை நிர்வாகம் பதிப்பு இவைகளைத்தவிர, வேறு எந்தப் பொதுக் காரியங்களிலும் சம்பந்தப்படாதவர்களாயிருக்க வேண்டும்.

குறைந்தது 5 வருஷத்திற்கு ஒரு தரம் இந்த போர்டை புதுப்பிக்கத் தக்கதாயிருக்க வேண்டும். இக்கொள்கைக்கு இதுவரை சில செல்வாக்குள்ள



கனவான்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இதைப்பற்றித் தமிழ் மக்கள் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தால் தமிழ்மக்களுக்கு ஏதாவது சுயமரியாதை உண்டாகலாம் என்று விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 22.11.1925**



RangaRakes tamilnavarasam.com

# சுயராஜ்யக் கட்சியும் அதன் தலைவர்களும்

சுயராஜ்யக் கட்சியின் பொதுக்காரியதரிசியாகிய ஸ்ரீமான் ஏ.ரங்கசாமி ஐயங்கார் இந்திய சட்டசபையின் மெம்பராயிருப்பதன் பயனாய் இந்தியா கவர்ன்மெண்டின் தயவைப் பெற்று தப்பான வழியில் தன் மகனுக்கு ஓர் பெரிய உத்தியோகம் சம்பாதித்துக் கொண்டதையும், அரசாங்க கமிட்டிகளில் தான் மெம்பர் உத்தியோகம் பெற்றுக் கொண்டதையும் இதற்கு முன்பே "குடி அரசில்" குறிப்பிட்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

சுயராஜ்யக் கட்சியின் பெருந்தலைவரான ஸ்ரீமான் பண்டித நேரு அவர்களும் இதே மாதிரியே சர்க்காரின் ராணுவக் கமிட்டியில் அங்கம் பெற்றிருப்பதையும், அதற்காகச் சர்க்காருக்கு யோசனை சொல்ல பல விஷயங்களை அறிந்து வர என்கிற சாக்கின் பேரில் சர்க்கார் செலவிலேயே சீமைக்கு போகப் போகிறாரென்பதும் வாசகர்கள் அறிந்ததே.

இவை மாத்திரமல்லாமல் இன்னொரு ரகசியத்தையும் ஸ்ரீமான் விபின சந்திர பாலரவர்கள் வெளியாக்கி விட்டார். அதாவது பண்டித நேரு அவர்கள் சட்டசபை உத்தியோகம் சம்பாதித்துக் கொடுத்தவரும் அவருக்கு நெருங் கின கட்டுப்பட்ட பந்துவுமான ஒருவர் ஸ்ரீமான் ஏ.ரங்கசாமி ஐயங்காரைப் போலவே தனது பதவியின் செல்வாக்கால் சர்க்காரின் தயவுபெற்றுத் தன்னுடைய மகனுக்கு ராணுவ உத்தியோகத்தில் ஒரு பெரிய பதவி பெற்றி ருப்பதாகவும், இதை ஸ்ரீமான் ஷாம்லால் நேரு அவர்களே என்னிடம் சொன்னாரென்றும், இது ஸ்ரீமான் ஏ.ரங்கசாமி ஐயங்காரின் நடத்தைக்குக் கொஞ்சமும் இளைத்ததல்லவென்றும், ஸ்ரீமான் விபின சந்திரபாலரவர்கள் "இங்கிலீஸ்மென்" பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

இதைப்பற்றி ஸ்ரீமான் ரங்கசாமி ஐயங்காராவது, பண்டிதராவது தங்களுக்காகவாகிலும், கட்சிக்காகவாகிலும் இவ்வித நடவடிக்கைக்கு இது வரையில் எவ்வித மறுப்பாவது, சமாதானமாவது எழுதினவர்களுமல்ல.

ஸ்ரீமான் தம்பே சுயராஜ்யக் கட்சி மெம்பராயிருந்து மத்திய மாகாண நிருவாக சபை அங்கத்தினர் பதவி பெற்ற துரோகத்தைக் கண்டித்த சுயராஜ் யக் கட்சியின் மற்ற அங்கத்தினராவது ஸ்ரீமான் ஐயங்காரையும் பண்டித நேருக்களையும் கண்டித்தவர்களுமல்ல.



ஸ்ரீமான் ஏ.ரங்கசாமி ஐயங்கார் ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டை யாடுகிறது. மிதவாதக் கட்சி உத்தியோக வேட்டையாடுகிறது. சுயராஜ்யக் கட்சியார் ஆகிய நாங்கள் பதிவிரதைகள். சர்க்கார் சம்பந்தமான எந்த உத்தி யோகத்திற்கும் ஆசைப்படமாட்டோம். அது ரொம்பவும் தேசத் துரோக மானது. காங்கிரஸ் ஒத்துழையாமையை விட்டு விட்ட போதிலும் சுயராஜ்யக் கட்சியார் ஒத்துழையாமையை கைவிடப் போவதில்லையென்றும், எங்களைத் தெரிந்தெடுத்தால் சட்டசபைக்குள்ளே போய் சர்க்காரை எவ்வித நடவடிக் கையையும் நடத்தவிடாமல் முட்டுக்கட்டைப் போட்டுத் தடுத்து விடுவோ மென்றும், சர்க்கார் காக்காய் கருப்பென்றால் கூட நாங்கள் வெள்ளை யென்றேதான் சொல்லுவோம் என்றும், எங்கள் காரியம் பலிக்காவிட்டால் உடனே வெளியே வந்து விடுவோம், வெளியில் வந்தவுடன் சட்டமறுப்பு ஆரம்பித்து நாங்களெல்லோரும் ஜெயிலுக்குப் போவோம், எங்களுடைய போக்குவரத்து வழிச் செலவுகூட சர்க்காரிடமிருந்து பெற மாட்டோம் என்றும், பாமர ஜனங்களான ஓட்டர்களிடம் பொய்யையும் புளுகையும் வண்டி வண்டி யாய் அளந்து ஓட்டர்களை ஏமாற்றி சட்டசபைக்குச் சென்று "அநித்திரானி சரீரானி அந்தரு சொம்மு மனக்கே ரானி" என்பதுபோல் சகல உத்தியோக மும் சகல பதவிகளும் மிகவும் பாவமானது, ஆனால் அதுகள் முழுதும் எங்களுக்கே கிடைக்க வேண்டும்.

மிதவாதிகளே! உங்களுக்கும் கொடுக்க மாட்டோம். ஜஸ்டிஸ் கட்சிக் காரர்களே! உங்களுக்கும் கொடுக்க மாட்டோம். உங்களுக்கேதாவது கண்டிப் பாய் உத்தியோகம் பெற்றுத்தான் ஆகவேண்டுமென்கிற ஆசையிருக்கு மானால் எங்கள் கட்சியில் வந்து சேருங்கள்.

"அதாவது, வரும்போது நீங்கள் அரிசி கொண்டு வாருங்கள் எங்களி டத்தில் உமியிருக்கிறது இரண்டையும் கலந்து ஊதி ஊதி இரண்டு பேரும் சாப்பிடலாம்" என்று சொல்லும் சுயராஜ்யக் கட்சியாரின் யோக்கியதையைப் பொது ஜனங்கள் இப்பொழுதாவது தெரிந்து கொண்டிருப்பார்களென்று எண்ணுகிறோம்.

போதாக்குறைக்கு இந்த தடவையும் ஓட்டர்களை ஏமாற்றி சட்ட சபைக்குப்போய் உத்தியோகம் பெறுவதற்காக தைரியமாய்ப் பொய் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். அதென்னவென்றால் பண்டித நேரு அவர்கள் சட்டமறுப்பு ஆரம்பிக்கப் போகிறோம், எங்களை மறுபடியும் சட்டசபைக்கு அனுப்புங்களென்ற பழைய மந்திரத்தையே இப்பொழுதும் ஜெபிக்கத் தொடங்கி விட்டதுதான். சட்ட மறுப்பு தொடங்குவதாயிருந்தால் இவர்களை யார் வேண்டாமென்று சொன்னார்கள்.

இதற்கு முன் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையா? மகாத்மா சட்ட மறுப்பு ஆரம்பித்த காலத்தில் ஸ்ரீமான்களான ஸ்ரீனிவாசய்யங்காரும், ரெங்கசாமி ஐயங்காரும், சத்தியமூர்த்தியும், எம்.கே. ஆச்சாரியாரும் எந்த உலகத்தி லிருந்தார்கள்?



RangaRakes tamilnavarasam.com

வங்காளத்தில் மந்திரி பதவியெடுபட்டவுடன் அவ்விலாக்காக்களை சர்க்காரார் எடுத்துக்கொண்டு ஏகபோகமாய் நடத்த ஆரம்பித்தார்களே அப்பொழுது இவர்கள் எங்கே போய் விட்டார்கள். சட்டசபையில் கொண்டுபோய் நிறைவேற்றிய தீர்மானங்களை வைசிராய்ப் பிரபு குப்பைத் தொட்டியில் போட்டாரே அப்பொழுது எங்கே போய்விட்டார்கள்?

பர்க்கென் எட் பிரபு எவ்வித சீர்திருத்தத்துக்கும் இனிமேல் நீங்கள் லாயக்கில்லையென்று சொல்லிவிட்டாரே அப்பொழுது என்ன செய்து கொண்டிருந்தார்கள். வங்காளத்தில் அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து அநேக நிரபராதிகளை ஜெயிலில் பிடித்தடைத்தார்களே அப்பொழுது சட்டமறுப்பு எங்கே போய்விட்டது. சட்டசபைத் தேர்தல்கள் நடக்கிற சமயத்தில் மாத்திரம் சட்டமறுப்பு, சட்டமறுப்பு என்று சொல்லிக்கொண்டு பாமர ஜனங்களை ஏமாற்றி, சட்டசபைக்குப் போனவுடன் தாங்களும், தங்கள் பிள்ளை குட்டிகளும், தங்கள் பந்துக்களும், உத்தியோகம் சம்பாதிப்பதுதான் சட்டசபை மறுப்பாய் போய்விடுகிறது. இதை இன்னமும் பொது ஜனங்கள் உணரவில்லை என்பது பெருத்த ஆச்சரியமாகத்தானிருக்கிறது.

"சுயராஜ்யக் கட்சியின் திட்டத்தில் நமக்கு நம்பிக்கையில்லை. அக் கட்சியாரும் யோக்கியமாய் நடந்து கொள்ளவில்லை. ஆனாலும் அதொன்றுதான் தீவிர அரசியல் கொள்கையுடைத்தாயிருக்கிறது. அதனால் அதை ஆதரிக்க வேண்டியது நமது கடமை" என்று சொல்வோரின் கூற்று அதை விட நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. நம்பிக்கை இல்லாத திட்டத்தை உடைய கட்சியும் யோக்கியமாய் நடந்து கொள்ளாதவர்களால் நடத்தும் கட்சியும் எப்படி அதி தீவிரக் கட்சியாய் விடுமோ! எதை உத்தேசித்து - அதை ஆதரிக்க வேண்டியது இவர்கள் கடமையோ! இது கடவுளுக்குத்தான் தெரிய வேண்டும். இவர்களையுடைய தேசம் சுயராஜ்யமடையுமென்று நினைப்பது அமாவாசையன்று பூரணச் சந்திரனைப் பார்க்கலாம் என்பது போலத்தான் முடியுமென்று சொல்ல நாம் வருந்து கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 22.11.1925**



## தேவஸ்தான மசோதா

சென்னை மாகாணத்தில் தேவஸ்தானங்களும், தர்ம ஸ்தாபனங்களும், இந்து மத ஸ்தாபனங்களும், மொத்தத்தில் கோடிக்கணக்கான வரும்படி உடையவைகளாயிருந்தும், அவைகள் குறிப்பிட்ட காரியங்களுக்கு உபயோகப்படாமல் பெரும்பாலும் பிராமணர்களும், தாசி, வேசி முதலிய விபசாரிகளும், வக்கீல்களும் அனுபவிக்கவும் - தேவஸ்தான 'ட்ரஸ்டி' என்போர்களும், மடாதிபதி யென்போர்களும், சமயாச்சாரி என்போர்களும், லோககுரு என்போர்களும், மகந்துக்கள் என்போர்களும் சுயமாய்த் தங்கள் இஷ்டம்போல் அனுபவிக்கவும் - கொலை, களவு, கள் குடி, விபசாரம் முதலிய பஞ்சமா பாதங்களுக்கு உபயோகப்படுத்தவும், சோம்பேறிகளுக்கும், விபசாரத் தரகர்களுக்கும், பொங்கிப் போடவும், உபயோகப்படுத்திக் கொண்டு வருவதைத் தென்னிந்தியர்கள் வெகுகாலமாய் அறிந்து வந்திருக்கிறார்களென்பதை நாம் கூறத் தேவையில்லை.

அதன் பலனாய், "காங்கிரஸ் கான்பரன்ஸ்" என்று சொல்லப்படும் ராஜீய ஸ்தாபனங்களின் மூலமாயும், பல சமய சபைகள் மூலமாயும், இவ்வக்கிரமங்களையெல்லாம் அடக்கிக் கோடிக்கணக்கான வரும்படியுள்ள சொத்துக்கள் ஒழுங்காய் பரிபாலிக்கப்படவும், அதன் வரும்படிகள் குறிப்பிட்ட விஷயங்களுக்குக் கிரமமாய் உபயோகிக்கப்படவும் மீதியிருந்தால் இந்துமத சம்பந்தமான ஒழுக்கங் கற்பிக்க பொது ஜனங்களுக்கு உபயோகப்படவும் தக்கதான ஓர் சட்டம் செய்ய வேண்டியது நமது அரசாங்கத்தின் முக்கியக் கடனென்றும், கொஞ்சமும் காலதாமதம் செய்யாமல் உடனே செய்யப்படவேண்டியது மிகவும் அவசியமானதென்றும், இதுவரை செய்யாமல் அரசாங்கத்தார் கவலையீனமாயிருந்தது பெரிய குற்றமென்றும், இதற்கு முன் இதற்காக ஆயிரத்தெட்டு நூற்றுப்பதினேழிலும், ஆயிரத்தெட்டு நூற்று அருபத்திமூன்றிலும் அரசாங்கத்தாரால் செய்யப்பட்டிருக்கும் இந்து மத தர்ம சொத்துக்கள் பரிபாலன சட்டம் போதுமான அளவு பந்தோபஸ் தளிக்கக் கூடியதாயில்லையென்றும் பல தீர்மானங்களைச் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பியுமிருக்கிறது.

உதாரணமாக, ஈரோட்டில் 1915 வருஷம் ஜூலை மாதம் 24, 25 தேதிகளில் டாக்டர் T.M. நாயர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடந்த கோயமுத்தூர் ஜில்லா இரண்டாவது கான்பரன்ஸ் என்னும் ராஜீய மகா



RangaRakes tamilnavarasam.com

நாட்டில் 8- வது தீர்மானமாக அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

அதாவது " தர்ம ஸ்தாபனங்கள் மத சம்பந்தமான தேவாலயங்கள் சரிவர பரிபாலனம் செய்யப்படாததால் கிரமமாய் நடக்கும் வண்ணம் இப்போ திருக்கிற சட்டத்தைக் கொஞ்சமேனும் தாமதிக்காமல் சீர்திருத்தம் செய்து மாற்றிவிட வேண்டுமென்று கவர்ன்மெண்டாரை இக்கூட்டம் வற்புறுத்து கிறது" ( இந்தத் தீர்மானத்தை ஸ்ரீமான் B.V.நரசிம்ம ஐயர்தான் பிரேரேபித் திருக்கிறார் என்பது நமது ஞாபகம் )

இவற்றை அனுசரித்தே சர்க்காரிலுள்ள இது சம்பந்தமான அதிகாரம், ஒரு இந்திய மந்திரியின் கைக்கு வந்ததும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து "சென்னை இந்துமத பரிபாலன மசோதா" என்னும் பெயரால் ஓர் சட்டத்தை இயற்றி பொதுமக்கள் பிரதிநிதியென்று சொல்லும் சட்டசபை அங்கத்தினர்களின் சம்மதம் பெற்று நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டமானது மேலே குறிப்பிட்டபடி தர்ம சொத்துக்களை அதன் கிரமமான உபயோகத்திற்கு அன்றி, தங்களுடைய சுயநலத்துக்காக உபயோகித்துக்கொண்டு வந்த சில மடாதிபதிகளுக்கும், பொதுமக்கள் தர்ம சொத்தைத் தங்கள் வகுப்பார்களே உண்ணவேணும் என்னும் கருத்தின் பேரில் சூழ்ச்சி செய்து பொதுமக்களிடம் பணம்பறித்து, தங்கள் வகுப் பார்க்கே பொங்கிப்போட்டுக் கொண்டிருந்த சில சமயாச்சாரிகளென்போரான சில பிராமணர்களுக்கும், அதன் பலனாய்த் தின்று கொழுத்துத் திரிந்து கொண்டிருக்கும் சில திண்ணைத் தூங்கிகளுக்கும், இவர்களின் தீச்செயல் களுக்கு அனுகூலமாயிருந்து பணம் பறித்துக் கொண்டிருந்த வக்கீல்கள், பஞ்சமகா பாதகத் தரகர்கள் முதலியவர்களுக்கும் விரோதமாயிருந்த படி யாலும் இக்கூட்டத்தார் பெரும்பாலும் பிராமணர்களென்று சொல்லப்படு வோராயிருந்து விட்டபடியாலும், இவைகளுக்கு ஏராளமான சொத்துக்கள் விட்டவர்களும், இன்னமும் கொடுத்துக் கொண்டிருக்கிறவர்களும், பிராமணரல்லாதாராயிருப்பதனாலும் இந்த சட்டமானது பிராமணர்களுக்கு விரோதமாகவும் பிராமணரல்லாதார்களுக்கு அனுகூலமாகவும் இருப்பதாக ஏற்பட்டுப் போய்விட்டது.

இதனால், இக்கூட்டத்தைச் சேர்ந்த பிராமணர்களெல்லாம் ஒன்று சேர்ந்து இந்தச் சட்டமானது மதத்திற்கு விரோதமானது என்றும், மதமே போய்விட்டதென்றும், சர்க்காரார் இந்துமதத்தில் பிரவேசித்து விட்டார் களென்றும், ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்களும் மந்திரிகளும் இச்சட்டத்தை உண்டாக்க அனுகூலமாயிருந்தார்களென்றும், பொய்யழுகை அழுதும், பொய்ப்பழி சுமத்தியும், தங்கள் ஜாதிப் பத்திரிக்கைகளான, 'இந்து', 'சுதேச மித்திரன்', 'சுயராஜ்யா' முதலிய பிராமணப் பத்திரிக்கைகள் மூலமாய்ச் சூழ்ச்சிப் பிரசாரம் செய்தும் பிராமணரல்லாதாரான சில அப்பாவிகளை



ஏமாற்றியும், பிராமண கீர்த்திக்கு ஆசைப்பட்ட சில பயங்கொள்ளிகளைச் சுவாதீனம் செய்து கொண்டும் இச்சட்டத்தை ஒரேயடியாய் தொலைத்துவிடத் தங்களாலான முயற்சிகளெல்லாம் செய்து பார்த்தார்கள்.

ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள், மெம்பர்கள் முதலானவர்களுடைய உறுதியினாலும், முயற்சியினாலும், ஸ்ரீமான்களான ஈ.வெ.ராமசாமி நாயக்கர், வரதராஜுலு நாயுடு முதலியவர்கள் இந்தச் சட்டத்தின் அனுகூலத்தைப் பொது ஜனங்களுக்கு எடுத்துக்காட்டி - இந்து மதத்திற்கும் இந்துமத பரிபால னத்திற்கும் இச்சட்டத்தால் யாதொரு கெடுதியும் உண்டாகாது என்றும், ஆனால் "ஊரார் முதலைத் தின்று வாழ்வதுதான் தர்மமென்ற" கொள்கையை உடைய பிராமண மதத்திற்குத்தான் ஒரு சமயம் ஆபத்து வந்தாலும் வரலாம் என்றும் பத்திரிகை மூலமாகவும், பிரசங்க மூலமாகவும் பொது ஜனங்களுக்கு வெளிப்படுத்தியதன் பேரில், பிராமணர்களின் விஷமப் பிரசாரம் ஒருவாறாய் வெளிப்படையாய்க் குறைந்தது என்றாலும் இன்றைக்கும் ரகசியத்தில் எவ்வளவோ தந்திரங்களும், மந்திரங்களும் நடந்து கொண்டுதான் வருகிறது.

இதற்கு அநுகூலமாய் நமது மடாதிபதிகளும், மகந்துக்களும் பொது ஜனங்களின் தர்மப் பணத்தை அள்ளி புளியங்கொட்டை போல் இரைத்துக் கொண்டுதான் வருகிறார்கள்.

ஐக்கோர்ட்டிலும் இச்சட்டம், சட்டப்படி செல்லாதென்றும், இதைத் தள்ளிவிட வேண்டுமென்றும் வியாஜ்யம் தொடுத்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தில் என்ன கெடுதல் இருக்கிறது என்பதையாவது, இந்தச்சட்டத்தின் எந்தப் பிரிவின்படி இந்துமதத்திற்கோ தர்மபரிபாலனத்திற்கோ என்ன ஆபத்திருக்கிறது என்பதையாவது இதுவரை எந்த பிராமணரும் எடுத்துச் சொன்னதேயில்லை. " மதம் போச்சு ; தர்மம் போச்சு; இந்துமதத்தில் சர்க்கார் பிரவேசிக்கிறார்கள்" என்று பொய்யழுகை அழுகிறது தவிர வேறொன்றும் சொல்வதே கிடையாது.

எந்த உலகத்தில் மதவிஷயங்களை அரசாங்கத்தார் திருத்த பிரவேசிக் காதிருக்கிறார்கள்? 1817 - லும், 1863 - லும் பிரவேசித்த காலத்தில் இந்த ஜாதியார் எங்கு போயிருந்தார்கள். அரசாங்கத்தார் தாமதமின்றி உடனே பிரவேசித்துத் தக்கது செய்யவேண்டும் என்று காங்கிரசிலும், கான்பரன் ஸிலும் தீர்மானித்த காலத்தில் இந்த ஜாதியார் எங்கு போனார்கள்?

" சட்டம் செய்யும் அதிகாரம் நம் கைக்கு வந்துவிடும் நம்மிஷ்டம் போல் நம்ம ஜாதிக்கே எல்லா உரிமைகளும் இருக்கும்படியாகச் சட்டம் செய்து கொள்ளலாம் " என்று நம்பியிருந்தார்கள் போலும் அல்லது பிராமண ரல்லாதார் இவற்றைக் கவனியாமல் இன்னும் பிராமணர்களே ஏக போகமாய் உண்ணும்படி விட்டுக் கொண்டிருப்பார்கள் என்று நினைத்தார்கள் போலும். எந்தக் காரியத்திற்கு நாம் அரசாங்கத்தாரிடம் போகாமல் இருக்கிறோம்? நம்முடைய சாமிக்கு வைக்கும் நாமம் வட கலையா, தென் கலையா என்பதை



RangaRakes tamilnavarasam.com

சர்க்காரிடம் போய்த்தான் தீர்மானித்துக் கொள்ளுகிறோம். மடாதிபதியார் இவரா, அவரா என்று தீர்மானிக்க சர்க்காரிடம்தான் போகிறோம்.

நாம் கோவிலுக்குள் போகலாமா, வேண்டாமா என்பதற்கு சர்க்காரி டம்தான் போகிறோம். என் ஜாதி பெரியதா, உன் ஜாதி பெரியதா என்பதற்கு சர்க்காரிடம்தான் போகிறோம். ஏழ்மைப்பட்ட தேசத்து " பொது ஜனங்களின் பணம் வருஷம் ஒண்ணரைக் கோடி ரூபாயுக்கு மேல் மதத்தின் பேரால் வசூலித்து அயோக்கியர்களுக்கும், பஞ்சமா பாதகத்துக்கும் உபயோகப் படுத்துவதைக் கவனிக்க ஒரு சட்டம் வந்தால் அதுகூடாது" என்று சொல்லு பவர்கள் யோக்கியர்களா? நமக்குள் நாமே பார்த்துக் கொள்ளக்கூடாதா என்றால் இது விஷயத்தில் நமக்குள் என்ன யோக்கியப் பொருப்பு இருக்கிறது?

"10 லக்ஷம், இருபது லக்ஷம் போட்டு நீ கோயில் கட்டிக்கொடுத்து சொத்தும் விட வேண்டும் - நான் செங்கல்லை அடுப்பில் போட்டுச் சூடேற்றி ஈரத்துணி மேல்போட்டு ஆவியுண்டாக்கி, சுடுசாதம் என்று வெறும் பாத்திரத் தைச் சாமிக்கு வைத்து ஆராதனை செய்ய வேண்டும். அது சாதத்தின் ஆவியா, சுடு செங்கல் ஆவியா என்பதைக் கூட நீ பார்க்கக் கூடாது, பார்த்தால் பாவம் " என்று சொல்லுகிற ஜனங்களை வைத்துக் கொண்டு நமக்குள் எப்படி சரிசெய்து கொள்ளுகிறது?

வைக்கத்தில் தெருவில் நடக்க எத்தனை பேர் ஜெயிலுக்கு போக வேண்டிவந்தது? கல்பாத்தியில்* தெருவில் நடக்க 144 யார் வேண்டுகோளின் பேரில் போடப்பட்டது? அதற்காக சர்க்காரிடம் யார் போனது? நமக்குள் சரி படுத்திக் கொள்ளக்கூடாதா? என்கிற யோக்கியர்கள் இந்த சமயம் ஏன் சர்க்காரிடம் போக விட்டார்கள்? பொது ஜனங்கள் பணத்தில் நடத்தப்படும் வேதபாடசாலைகளில் பிராமணன்தான் படிக்கலாம், சூத்திரர்கள் படிக்கக் கூடாது என்று சொல்லுகிறபோது நமக்குள் சரிபடுத்திக் கொள்ளக்கூடாதா என்கிற பிரபுக்கள் எங்கே போயிருந்தார்கள்?

இவற்றை பிராமணரல்லாதார் தயவு செய்து கருத்தாய்க் கவனிக்க வேண்டும். பிராமணரல்லாதாருக்குள் கொஞ்சம் பிளவு ஏற்பட்டவுடன் சட்டசபையால் இந்து தேவஸ்தான சட்டத்தை மாற்ற பிராமணர்களால் தீர் மானம் கொண்டு வந்தாய்விட்டது.

இனி வரப்போகும் சட்டசபைக்கும் தேவஸ்தான சட்டத்தை மாற்ற சம்மதிக்கும் அங்கத்தினர்களுக்குச் சாதகமாய் பிரசாரம் செய்யவும், அவர் கள் செலவுக்குப் பணம் கொடுக்கவும் மகந்துகளும், மடாதிபதிகளும் இப்போதிருந்தே ஏற்பாடு செய்து வருகிறார்கள். சுயராஜ்யக் கட்சி பிரசாரத் திற்கு இந்தப் பணம்தான் தாண்டவமாடும்.

சில பிராமணரல்லாதாரும் இப்பொழுதிருந்தே இதற்குச் சம்மதம் கொடுத்து சில மகந்துகள் தயவையும், மடாதிபதிகள் தயவையும் சம்பாதித்துக்



கொண்டு வருகிறார்கள். பிராமணரல்லாத ஓட்டர்களே! ஜாக்கிரதை! ஜாக் கிரதை! கோட்டையை விட்டீர்களானால் பிறகு வெகு நாளைக்கு பிடிக்க முடியாது.

**குடி அரசு - கட்டுரை - 22.11.1925**

---

* பாலக்காட்டுக்கு அருகிலுள்ள கல்பாத்தியில் பார்ப்பனத் தெருக்களில் ஈழுவர்கள் ( தீண்டத்தகாதார், பார்க்கத்தகாதார்) நடக்கக்கூடாது என்று பார்ப்பனர்கள் தடைசெய்து வைத்திருந்ததையும் , ஈழுவர்களின் ரதம் அவ்வழியே செல்லக்கூடாது என்று அரசாங்கம் விதித்திருந்த தடையையும் பற்றி காங்கிரஸ் தலைவர் வரதராஜுலு நாயுடுவின் ' தமிழ்நாடு ' என்ற நாளேடு எழுதிய தலையங்கத்தை ' குடி அரசு' 27. 12. 1925 ஆம் தேதியிட்ட இதழ் மறுபிரசுரம் செய்தது. அப்போது ஆளுநரின் நிர்வாக சபையில் சட்டத்துறை உறுப்பினராக ( சட்டமந்திரி ) இருந்த சர்.சி.பி. ராம சாமி அய்யர், ஈழுவர்களின் ரதம் சென்றால் அங்கு கலவரம் ஏற்படும் என்று கருதியே அரசாங்கம் தடைவிதித்திருப்பதாக நியாயம் கூறினார். சென்னை நகரில் பார்ப்பனப் பிரமுகர்களின் கூட்டமொன்றைக் கூட்டி, எல்லாக்கட்சிப் பார்ப்பனர்களும் ஒன்றுசேர வேண்டும் என்று அவர் பேசியிருந்ததையும் 'தமிழ்நாடு' சுட்டிக்காட்டியிருந்தது. சென்னை சட்டமன்றத்தில் நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றுடன் தோழமை கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட வகுப்பு (நியமன) உறுப்பினர் ஆர். வீரையன், பொதுச்சாலை களில் எல்லாச் சாதியினரும் நடக்க அனுமதிக்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது அதை எதிர்த்துப் பேசிய சுயராஜ்யக் கட்சிப் பார்ப்பன உறுப்பினர் நரசிமாச்சார்லு " இன்று சாலையில் நடக்க உரிமை வேண்டும் என்பார்கள், நாளை ஆலயப்பிரவேச உரிமை கேட்பார்கள், பிறகு கலப்பு மணம் வேண்டும் என்பார்கள். அதனால் கலவரம் ஏற்படும்" என்று பேசியதையும் 'தமிழ்நாடு' தலையங்கம் சுட்டிக்காட்டியது.

இந்த பிரச்சனையில் வீரைய்யனுக்கு உறுதுணையாக சுயமரியாதை இயக்கம் நின்றது. 28. 11. 1927 இல் நடைபெற்ற திருநெல்வேலி மாவட்ட சுயமரியாதை மாநாட்டில் பெரியாரால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களில் தீர்மானம் 27, கல்பாத்திப் பிரச்சனையில் கிடைத்த வெற்றி பற்றிக்கூறுகிறது.

" கல்பாத்தி பார்ப்பனர்கள் வசிக்கும் பார்ப்பனச்சேரியில் வெகு காலமாய்த் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நடக்கக்கூடாதென்று பார்ப்பனர்கள் செய்து வந்த கொடுமை நீங்கி, எல்லா மக்களும் அவ்வீதி வழி நடக்கத் தகுந்த வெற்றி கிடைத்த மைக்கு இம்மகாநாடு சந்தோஷத்தை அறிவிக் கிறதுடன் அதுவே நமது சுயமரியாதை இயக்கத்திற்கு ஓர் வெற்றிக் குறியென்றும் கருதிகின்றது,"

**குடி அரசு - 11.12.1927**



RangaRakes tamilnavarasam.com

# தீண்டாமைக்கு யார் பொறுப்பாளி

## பாலக்காட்டில் 144-க்கு யார் பொறுப்பாளி?

தீண்டாமை யென்பது நமது நாட்டில் இந்து மதத்தில் மாத்திரம் மனிதனுக்கு மனிதன் பிறவியிலேயே உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றும், மனிதனுக்கு மனிதன் பார்த்தால், கிட்டவந்தால், பேசினால், தெருவில் நடந்தால், தொட்டால், கோவிலுக்குள் நுழைந்தால், சாமியைப் பார்த்தால், மத தத்துவ மென்னும் வேதத்தைப் படித்தால் பாவம் என்னும் முறைகளில் அனுஷ்டிக்கப் பட்டு வருகிறது. இதன் பலனாய் 33 கோடி ஜனசமூகத்தில் 60, 70 லக்ஷம் ஜனங்கள் உயர்ந்தவர்களென்றும், பிராமணர்கள் என்றும் தங்களை சொல்லிக் கொண்டு மற்றவர்களை சூத்திரர்களென்றும் பஞ்சமர் களென்றும் மிலேச்சர்க ளென்றும் அழைப்பதோடு மிருகங்களுக்கும். பட்சிகளுக்கும் பூச்சிபுழுக்களுக்கும் உள்ள சுதந்திரங்கூட கொடுப்பதற் கில்லாமல் கொடுமைப்படுத்தி வைத்திருப்பதை நாம் பார்த்து வருகிறோம். ஒற்றுமையினாலும் அரசாங்கத்தாருக்கு நல்ல பிள்ளைகளாய் நடந்து கொள்ளுவதினாலும் கிருஸ்துவர்களும் மகமதியர்களும் பிராமணர்களாலும் அவர்களது தர்மமான சாஸ்திரங்களாலும் மிலேச்சர்களென்று அழைக்கப் பட்டாலும் தெருவில் நடத்தல் முதலிய சில உரிமைகளை பெற்றிருக்கிறார்கள். இதைப் பொருத்தவரையிலும் கிருஸ்தவர்களும் மகம்மதியர்களும் நமது அரசாங்கத்தாருக்கு நன்றி செலுத்த கடமைப் பட்டவர்களென்பதை நாம் மறுக்கமாட்டோம். அரசாங்கத்தாருக்கு நல்ல பிள்ளைகளாய் நடக்காததாலும் அரசாங்க மதமாகிய கிருஸ்துவ மதத்தைத் தழுவாத "பாவத்தினாலும்" 60, 70 லக்ஷம் பிராமணர்களால் 7 கோடி இந்திய சகோதரர்கள் பஞ்சமர்களென்றும் சண்டாளர்களென்றும் கருதி தீண்டல், தெருவில் நடத்தல் முதலிய மேற்கண்ட உரிமைகள் அற்று உழலுவதை பார்க்கிறோம். இதல்லாமல் சுமார் 16 கோடி இந்தியர் ஷெ 60, 70 லக்ஷம் பிராமணர்களால் (யுத்தத்தில் ஜெயித்து அடிமை யாக்கப்பட்டவன்) தன் தேவடியாள் மகன் குலவழியாக பிராமணருக்கு தொண்டு செய்பவன், அடிமை வேலைக்கு விலைக்கு வாங்கினவன் என்னும் பொருள் அடங்கிய (மனு 8-ம் அத். 415 -வது சுலோகம்) சூத்திரர் என்று கருதப்படுகிறார்கள். (பிராமணன் சம்பளம் கொடுத்தேனும், கொடாமலேனும் சூத்திரனிடத்தில் வேலை வாங்கலாம், ஏனெனில் சூத்திரன் பிராமணர்களுக்கு வேலை செய்வதற்காகவே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். மனு சாஸ்திரம் 8-வது அத். 413 -வது சுலோகம்)



அதோடு மாத்திரமில்லாமலும் இவ்வுயர்வு தாழ்வு என்னும் தொத்து வியாதி பிராமணர்களிடம் இருந்து உண்டாயிருந்தாலும் அவர் ஒழிந்த மற்ற வகுப்புகளுக்குள்ளும் அது பரவி அனேகமாய் ஒவ்வொரு வகுப்பும் மற்ற வகுப்பை தாழ்ந்தவர்கள் என்றும் தீண்டக்கூடாதவர்கள் என்றும் கருதிக் கொண்டு வருவதையும் பார்க்கிறோம். உயர்ந்த தத்துவங்களைக் கொண்ட தும் புல்பூண்டு, பூச்சி, புழு, மரம், கல், பக்ஷி, மிருகம் யாவும் கடவுள் மய மென்றும் ஒவ்வொன்றும் பூசிக்கத் தக்கதென்னும் கொள்கைளைக் கொண்டதுமான இந்து மதம் என்று சொல்லப்படுவது சிலரின் நன்மைக்காக அவர்களின் தந்திரத்தினாலும் மோசத்தினாலும் பாழாக்கப்பட்டு ஒரு பெரிய சமூகமே சின்னா பின்னப்பட்டு அன்னியர் வசமாகி ஒற்றுமையிழந்து துவேஷமேற்கொண்டு மீளா நரகம் என்னும் அடிமைக் குழியில் ஆழ்ந்து கொண்டுபோகிறது. மிகவும் கொடுமையான இவ்வித பிராமண தர்மம், இந்தியாவுக்குள் நுழையாதிருந்திருக்குமானால் இன்றைய தினம் இந்தியா இக்கெதியில் இருந்திருக்கவே மாட்டாது. அப்படி இருந்தும் இப்பிராமண தர்மத்தால் தாங்கள் உயர்ந்த ஜாதியார் என்கிற காரணத்தால் உயர்வாய் அதாவது மற்றவர்களைப் போல் கஷ்டப்படாமல் வாழ சந்தர்ப்பம் கிடைத்து விட்டதாலும் அன்னிய அரசாங்கத்திற்கு அனுகூலிகளாகவும் ஒற்றர் களாகவும் இருக்கிற காரணத்தால், அதில் தங்களுக்கு செல்வாக்கு ஏற்பட்டுப் போய்விட்டதாலும் தீண்டாமை என்னும் கொடுமையால் தேசத்தின் நிலை யையும் அதில் உள்ள மக்கள் படும் துன்பத்தையும் கொஞ்சமும் கவனி யாமல் மேலும் மேலும் அதை நிலை நிறுத்தவே பாடுபடுகிறார்கள். இவ்வித பிராமண தர்மம் என்பது நமது நாட்டை விட்டு ஒழிந்தாலல்லாமல் அல்லது அவர்கள் மற்றவர்களிலும், பிறவியிலேயே உயர்ந்தவர்கள் என்னும் கொள்கையாவது நம்நாட்டை விட்டு ஒழிந்தாலல்லாமல் (என்றைக்காவது ஒரு நாளைக்கு இந்தியாவில் பிராமண கொள்கை இல்லாமல் போகத்தான் போகிறது. ஆனால் அதற்குள் இந்து மதமே போய் இந்தியா முழுவதும் மகமதியர்களும், கிருஸ்தவர்களும் இந்துக்கள் அல்லாதவர்களுமே ஆய்விடப்போகிறார்கள். அப்பொழுது இக்கொள்கை போனாலென்ன இருந்தாலென்ன?) இந்தியர்கள் விடுதலையடைவதோ சுயராஜ்யம் பெறு வதோ அன்னிய அரசாங்கத்தின் கொடுமைகளிலிருந்து மீள்வதோ சூரியன் மேற்கிலுதிப்பது போலத்தான்! ஏனெனில் இவ்வித பிராமண தர்மம் நாடெங்கும் பரவுவதால் தாய்க்கு பிள்ளை தொட்டால் பாவமாகிவிடுகிறது!. இப் பிராமணர்களைப் பார்த்தே மக்கள் எல்லோரும் பிராமணர்களாக பார்க்கிறார்கள். பிராமணர்கள் என்றால் மற்றவனைத் தாழ்ந்தவன் என்றும் தொடக்கூடாதவன் முதலியவன் என்று எண்ணுவது தான் என நினைக்கிறார் கள். உதாரணமாக ஒரு தண்ணீர் குழாயில் தண்ணீர் பிடிக்கவரும் ஒரு பிராமண ஸ்திரீ குடத்தில் கொஞ்சம் தண்ணீரும் கையில் கொஞ்சம் புளியும் கொண்டு வருவதோடு, முகத்தையும் கோணிக்கொண்டு வருகிறாள். குழாயண்டை வரும்போதே நிலத்திலெல்லாம் தண்ணீர் தெளித்துக்கொண்டு குழாயின் மேலும் தண்ணீரைக் கொட்டி புளியால் குழாயை தேய்த்து



RangaRakes tamilnavarasam.com

கழுவியபிறகு தண்ணீர் பிடிக்கிறாள். இதை பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு பிராமணரல்லாத இந்து ஸ்திரீ தானும் அரைக்குடம் தண்ணீரும் கையில் ஒரு புளி உருண்டையும் கொண்டு முகத்தை இழுத்துக்கொண்டு ஷை பிராமணி ஸ்திரீ செய்ததுபோலவே செய்துவிட்டு தண்ணீர் பிடித்து கொண்டு போகிறாள். இதை பார்த்துக்கொண்டிருக்கும் பக்கத்து வீட்டு மகமதிய ஸ்திரீயும் கிருஸ்தவ ஸ்திரீயும் அது போலவே வரும்பொழுதே முக்கால் குடம் தண்ணீரையும் முன்னையதிலும் பெரிய புளி உருண்டையும் கொண்டு முகம் கோணிக்கொண்டு வருவதோடல்லாமல் வாயில் முணுமுணுத்துக் கொண்டே வந்து தெருவெல்லாம் தண்ணீர் தெளித்து குழாயையும் தேயத்தேய கழுவித் தண்ணீர் பிடித்து போகிறாள். பஞ்சம ஸ்திரீ அந்த வீதியில் இல்லாததால் அவர்கள் இதைப் பழக சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இப்படி ஒருவரைப்பார்த்து ஒருவர் பழகியே தீண்டாமையென்னும் தொத்து நோய் தேசம் முழுவதும் பரவி வருகிறது. தீண்டாமை ஒழியவேண்டும் என்று மகாத்மா காந்தியும் மற்றும் பலஜீவகாருண்ணியமுள்ளவர்களும் ஒரு பக்கம் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கும்போது பாலக்காடு முனிசிபல் பொது வீதியில் ஈழுவ சகோதரர்கள் நடக்கக்கூடாது என்று 144 உத்திரவுபோட்டதும் (ஈழுவர்கள் என்பது சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான். O.கிருஷ்ணன் அவர்களுடைய ஜாதியார்தான்) எவ்வளவு அக்கிரமமாகும். இதை நாம் யார் பேரில் சொல்லுவது. இதற்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தார் எந்த விதத்தில் காரணமாவார்கள். பிராமண அரசாங்கத்தார்தானே இவ்வக்கிரமங்களுக்கும், கொடுமைக்கும் பாத்திரமாகவேண்டும். இந்த பிராமண அரசாங்கம் தொலைய வேண்டும், இந்த பிராமண தர்மம் தொலைய வேண்டும் என்று பாடுபடுவதை விட மக்களுக்கு வேறு என்ன தேச சேவையிருக்கிறது? இதை விட வேறு ஜீவ காருண்யம் என்ன இருக்கிறது? இதைவிட வேறு தர்மம் என்ன இருக்கிறது? இதை அறிந்துதான் "தேசபந்து தாசர்" என்னுடைய சுயராஜ்யம் பிராமண ஸ்திரீகளை பிடித்து தீண்டாதாருக்கு கொடுப்பது தான் என்றார் போலும்! இதை அறிந்துதான் சர்.பி.சி.ரே அவர்கள் பிராமணர்களை எல்லாம் சாக்கில் போட்டுக் கட்டி வங்காளக்குடாக் கடலில் போடவேண்டும் என்று சொன்னார்கள் போலும்! சுவாமி விவேகாநந்தர் பிராமண மதம் இருக்கும்வரை இந்தியா அடிமைத்தனத்திலிருந்து மீளாது என்று சொன்னார்போலும்! மகாத்மா காந்தி - இந்தியாவுக்கு பிரிட்டிஷார் செய்த கெடுதியைவிட பிராமணர்கள் செய்த கெடுதி குறைந்ததல்லவென்று சொன்னார் போலும்! சுவாமி சிரத்தானந்தர் - இந்து மதத்திற்கு நாசத்தை விளைவித்தவர்கள் பிராமணர்தான் என்று சொன்னார் போலும்! இனி யார் இவர்களுக்கு நற்சாக்ஷி பத்திரம் கொடுக்க வேண்டுமோ தெரியவில்லை! இவர்கள்தான் சட்டசபைக்கும், மந்திரி வேலைக்கும், தாலூக்கா போர்டு, முனிசிபாலிட்டிக்கும், சர்க்கார் உத்தியோகங்களுக்கும் போய் நமக்கு நன்மை செய்பவர்களாம்.

**குடி அரசு - கட்டுரை - 22.11.1925**



# குமரனும் ஊழியனும்

சுயராஜ்யக் கட்சியைப்பற்றி குமரன் தலையங்கத்திலுள்ள சில குறிப்புகள்:-

"சுயராஜ்யக்கட்சியானது தற்போதைய நிலைமையில் மிகப் பாராட்டத் தக்கதாயிருந்தும் நமது மாகாணத்தைப் பொருத்தமட்டில் அக்கட்சியானது நல்ல நிலையிலில்லை. அது இங்கு வளர்ச்சியடைகிறதென்று கூறவும் முடியவில்லை. இக்கட்சியானது சென்னைப் பத்திரிகைகளின் ஆரவாரத் தாலும், வாசாலகமாகப் பேசும் வல்லமையுள்ள சத்தியமூர்த்தி போன்றவர் களாலும், செல்வாக்கு பெற்ற இரண்டொரு பிராமணத் தலைவர்களாலுமே இயங்கி வருகின்றதென்று கூறுவார் கூற்றை மறுப்பது எளிதன்று.

சென்னை மாகாண சுயராஜ்யக்கட்சியாரின் செல்வாக்கு பிராமண ஜாதியின் ஆதிக்கத்தைப் பலப்படுத்துவதற்குப் பெரிதும் உபயோகப்படுத்தப் படுகிறதென்ற உரையும் பொய்யென்று மறுப்பதற்கில்லை. இம்மாதிரியான நோக்கங்கள் அக்கட்சியின் முன்னணியில் நிற்பவர்களது உள்ளத்தில் பதிந்து கிடக்குமாயின் அக்கட்சி ஒரு நாளும் தமிழ்நாட்டில் வேரூன்றப் போவ தில்லை. ஜாதிக் கொடுமையால் நைந்து புண்பட்டுக்கிடக்கும் தமிழ்நாட்டில் புதிய பிராமண சகாப்தத்தை உண்டாக்க சுயராஜ்யக் கட்சித் தலைவர்கள் எண்ணங் கொண்டு அரசியல் பேச முன்வருகிறார்களென்பது உண்மை யானால் அத் தலைவர்களது செல்வாக்கை அடியோடு ஒழித்தற்கு முயலல் வேண்டும்.

ஸ்ரீமான். எம்.கே. ஆச்சாரியார் போன்ற மகான்கள் தோன்றி ஜாதீ வெறி பிடித்து தலைகால் தெரியாது மகாத்மாவையும் இகழ்ந்து வாய்கூசாது புன்மொழி வழங்கி வருவதையும் பார்த்து வருகிறோம்.

அவர் சென்னை சுயராஜ்யக்கட்சியில் ஒரு முக்கிய அங்கத்தினராவர். அவருக்கு சுயராஜ்யக் கட்சியின் முன்னணியாளர் ஆதரவளித்து வருகிறார் களென்பதையும் அறிகிறோம். இம்மாதிரியான சிறுமைக் குணங்களும் ஜாதி யிறுமாப்பும் கொண்டவர்கள் கையில் இக்கட்சியின் பொருப்பு இருக்கிறவரை உண்மையாக ஒன்றும் நடைபெறப்போவதில்லை".

இவைகளில் சுயராஜ்யக் கட்சியானது தற்போதைய நிலைமையில் மிகப் பாராட்டத்தக்கதாயிருந்தும் என்னும் வாக்கியம் தவிர மற்றதை நாம் ஒருவாறு ஒப்புக்கொள்ளுவோம்.



RangaRakes tamilnavarasam.com

வௌவால் கட்சியாரின் தந்திரமாகிய "சுயராஜ்யக்கட்சி ஒன்றுதான் தற்கால நிலையில் பாராட்டத்தக்கது, தீவிர நோக்கமுள்ளது, அரசியல் கொள்கையுள்ளது" என்று பலவாராக தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாய் அடிக்கடி பாடிவரும் பல்லவியை குமரனும் பாட ஆரம்பித்திருப்பது நமக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.

ஊழியனாவது "காந்தியடிகள் ஆணை" என்னும் சாக்கைக்கொண்டு ஒதுங்கி நிற்கப் பார்க்கிறான். குமரனோ அதைவிட ஓரடி முன்வந்து சுயராஜ்யக் கட்சி பாராட்டத்தக்கது என்கிறான். இராஜீய தந்திரத்தால் வாழவேண்டிய அவசியமில்லாதவர்களும், பயங்கொள்ளித்தனமில்லாத வீரர்களும் உள்ளன்போடும், பரோபகார சிந்தையோடும் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் மந்திரமே கொடியாய்க் கொண்டவர்களுமான குமரனும், ஊழியனும் கூட இத்திருவிளையாடல் புரிவார்களானால் உலகில் என்னதான் எதிர்பார்க்க முடியாது.

சுயராஜ்யக் கட்சியாரின் எந்த நடவடிக்கையை குமரன் பாராட்டுகிறான் என்பதை உலகத்துக்கு விளங்கவைத்தால் குமரனைக் குருவாய்க் கொள்ளத் தயங்கோம்.

சுயராஜ்யக் கட்சியார் காந்தியடிகளின் கொள்கைகளை பாழாக்கி னதையா? ஒத்துழையாமையைக் கொன்றனதையா? காங்கிரசை ஏழை மக்கள் கையிலிருந்து தங்கள் சுயநலத்துக்காக பிடுங்கிக் கொண்டதையா? காந்தியடிகளை காங்கிரசை விட்டு ஓட்டினதையா? கதரில் நம்பிக்கையில்லை என்று சொல்வதையா? ராட்டினம் சுற்றுவதால் சுயராஜ்யம் வரும் என்னும் நம்பிக்கை எங்களுக்கில்லையென்று சொல்லுவதையா? கல்கத்தா சட்ட சபையில் மந்திரி பதவிகளை ஒழித்து சர்க்காருக்கே அவ்வதிகாரங்களையும் ஏகபோகமாய் பொருப்பின்றி நடத்தவிட்டுக்கொண்டு மேலே என்ன செய்வதென்று தெரியாமல் ஆப்பசைத்த குரங்கைப்போல் விழிப்பதையா? போக்குவருத்துக்காக வழிச்செலவு கூட வாங்கப்போவதில்லை என்று சொல்லி ஏமாற்றி சட்டசபைக்குப் போய் 4000, 5000 சம்பளமுள்ள பதவிகள் பெற்றதையா? பெற விழைவதையா? கமிட்டிகளில் உத்தியோகம் அடைந்ததையா? தொழிலாளர் மசோதா சட்டசபையில் வந்த காலத்தில் தொழிலாள சகோதரிகளான கருப்ப ஸ்திரீகளுக்கு பிள்ளைப்பேறு சமயத்தில் கூலியுடன் லீவு கொடுக்கவேண்டும் என்று வந்த தீர்மானத்தை நிறைவேறச் செய்யாமல் செய்த பாதகத்தையா? பிராமணரல்லாதாரை எதிர்க்கவேண்டியது தான் என்றும் அவர்களோடு ஒத்துழையாமை செய்யவேண்டியது தான் என்றும் சென்னை சுயராஜ்யக் கட்சியாரும் பம்பாய் சுயராஜ்யக்கட்சியாரும் முறையே சொல்லுவதையா? சுயராஜ்யக்கட்சித் தலைவர் ஸ்ரீமான் நேரு தனது உறவினருக்கு உத்தியோகம் வாங்கிக்கொடுத்ததையா? காரியதரிசி ஸ்ரீமான். ரங்கசாமி ஐயங்கார் தமது மகனுக்கு உத்தியோகம் வாங்கிக் கொண்டதையா? சென்னை சுயராஜ்யக் கட்சித் தலைவர் ஸ்ரீமான்.சீனிவாச ஐயங்கார்



தீண்டாமை ஒழியவேண்டியதுதான் ஆனால் இப்பொழுது அது சாத்தியப் படாது என்று புகல்வதையா? தீண்டாமை ராஜீய திட்டமாயிருக்கக்கூடாது என்று முணுமுணுப்பதையா?

தீண்டாமை ஒழிக்கும் கமிட்டிக்கு 25 ரூபாய் கொடுத்து விட்டு தீண் டாமை நிலைநிறுத்த ஏற்பட்ட கமிட்டிகளான வருணாச்சிரமதர்ம ஆதரிப்பு சபை முதலிய பிராமண சபைகளுக்கு மறைமுகமாய் ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுத்து எதிர்ப்பிரசாரம் செய்யச் செய்வதையா? ஆதியில் அவர்கள் தம்பட்டம் போட்டுச் சொன்னதுபோல் நடந்து கொள்ளாததையா? சென்னை மாகாணத்தில் சுயராஜ்யக் கட்சி நல்ல நிலையில் இல்லாமல் "பத்திரிக்கை" ஆரவாரத்தாலும், பிராமணத் தலைவராலும் இயங்கிவருவதையா? சென்னை சுயராஜ்யக் கட்சியின் செல்வாக்கால் பிராமண ஜாதியின் ஆதிக்கத்தைப் பலப்படுத்துவதையா? ஜாதிக் கொடுமையால் நைந்து புண்பட்டுக் கிடக்கும் தமிழ்நாட்டில் புதிய பிராமண சகாப்தத்தை உண்டாக்க எண்ணங்கொண்டு அரசியல் பேசுவதையா? அக்கட்சியின் முக்கியஸ்தரான ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியார் போன்றவர்கள் ஜாதி வெறி பிடித்து மகாத்மாவை இகழ்ந்து வாய் கூசாது புன்மொழி வழங்குவதையா? ஷை ஆச்சாரியாருக்கு சுயராஜ்யக் கட்சி யிலுள்ளவர்களும் ஆதரவளிப்பதையா? இம்மாதிரி ஜாதி இறுமாப்புக் கொண்டவர்கள் கையில் சுயராஜ்யக் கட்சியிருப்பதையா? இவைகளில் எதை நமது அன்புள்ள சகோதரனான குமரன் பாராட்டுகிறான் என்பது நமக்கு விளங்க வில்லை.

**குடி அரசு - கட்டுரை - 22.11.1925**



RangaRakes

tamilnavarasam.com

# வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

இதைப்பற்றி கொஞ்சகாலத்துக்கு முன்பு நமது 16-8-25 குடி அரசின் இதழில் சித்திரபுத்திரன் யெழுதிய ஒரு கட்டுரை வாசகர்கள் பார்த்திருக்கலாம். இன்று நடக்கப்போகும் காஞ்சி மகாநாட்டில் ஒரு தீர்மானம் வருவதாய்த் தெரிகிறபடியால் அதனவசியத்தைப்பற்றி வாசகர்கள் மறுபடியும் அதைப் பற்றி அறியுமாறு சில வாக்கியங்கள் எழுதுகிறோம். வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம் என்பது ஒரு தேசத்தின் ஆட்சியின் பொது உரிமையும் அந்நாட்டின் குடிமக்களின் உரிமை சகலமும் எல்லா வகுப்பாரும் ஏற்றத்தாழ்வின்றி சமமாய் அடையவேண்டிய தென்பதுதான். இதன் அரசாங் கத்தாரும் குடி மக்களுக்கு சரியாய் வழங்குவதாய் 1840-ம் வருஷத்திலேயே ஒப்புக்கொண்டு (போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் 125 -ன் மூலமாய்) வெளியிட்டுமிருக்கிறார்கள். ஆதலால் இந்தியர்களுக்கு பெரிய உத்தியோகங்கள் ஏற்பட்டதன் பிறகோ சீர்திருத்தங்கள் ஏற்பட்டதன் பிறகோ வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற பேச்சு பிறந்ததல்ல. ஆனால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டால் யாருடைய செல்வாக்கும் போகங்களும் ஆதிக்கங்களும் குறைந்துவிடுமோ அவர்கள் வசமே அரசாங்கத்தின் ஆதிக்கமிருந்து அவர்களே அநுபவித்துக் கொண்டேவந்த தினால் வகுப்புவாரி பிரதிநிதித்துவமென்பது சர்க்கார் உத்தரவளவிலும் காயிதவளவிலும் நின்று போய்விட்டது. அதன் பலனாய் பிரிவுகளும், வேற்றுமைகளும், துவேஷங்களும், தந்திரங்களும், பகைமை களும் வளர்ந்து கொண்டே வந்து இப்பொழுது அதுகள் பலனளிக்க ஆரம்பித்திருக்கிறது. ஆரம்பித்திருக்கும் முறையைப் பார்த்தால் இதனு டைய முடிவு என்னவாகுமோ என்று எண்ணுகிறபோது பயமாகவே இருக் கிறது. இந்தியா ஒழிந்த மற்ற நாடுகளுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அதிக அவசியம் இல்லாத போதிலும் சிற்சில விடங்களில் தொகுதிகள் பேராலும் வகுப்புகளின் பேராலும் இருந்து கொண்டு தான் வருகிறது. குடியேற்ற நாடுகளிலும் இவ்வழக்கமிருந்து கொண்டுதான் வருகிறது. நமது நாட்டில் சிலர் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வந்தால் ஜனங்களை பிரித்து விடும் என்று சொல்லுகிறார்கள். நமது நாட்டில் மகமதியர்களுக்கும் கிருஸ்து வர்களுக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டதின் பிறகு என்ன பிரிவினை புதிதாய் ஏற்பட்டுப் போய்விட்டது? பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்டு 150 வருஷத்துக்கு மேலாகியும் இன்னமும் தீண்டாதாராகிய ஏழு கோடி மக்களுக்கு ராஜீய வாழ்வில் சுதந்தரம் பெற யோக்கியதை



யில்லையென்றுதானே சொல்லவேண்டியிருக்கிறது. அதன் பலனாய் அவர்களத்தனை பேரும் அரசாங்கத்தைதானே நத்திக்கொண்டிருக்க வேண்டியதாய் போய்விட்டது. பிராமணரல்லாதாரென்னும் 24 கோடி இந்துக்கள் ராஜீய வாழ்வில் சமஉரிமை பெறுவதற்கில்லாமல் பிற்போக்கான வகுப்பில் சேர்க்கப்பட்டு அரசாங்கத்தாரையும், பிராமணர்களையும் நத்திக் கொண்டு தானே இருக்க வேண்டியதாய்ப் போய்விட்டது. இதற்கு காரண மென்ன? பிறவியிலேயே அவர்களுக்கு இவ்வுரிமையை பெற யோக்கிதை இல்லாததா? அல்லது அவர்கள் இவ்வுரிமைபெற வொட்டாமல் உயர்பதவி யிலிருக்கிறவர்கள் தங்கள் செல்வாக்கால் கொடுமைப்படுத்தி முன்னேற வொட்டாமல் அடக்கி வைத்திருப்பதா? குறைந்தது 50 வருஷத்திற்கு முன் பாவது பிராமணரல் லாதாருக்கும், தீண்டாதாரென்போருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிடைத்திருந்தால் இன்றைய தினம் இவர்களிருவரின் நிலைமையும் இப்படி யிருக்குமா? ஸ்ரீமான்களான B.N. சர்மாவுக்கும், C.P. ராமசாமி அய்யருக்கும், கொடுத்திருக்கும் உத்தியோகங்களை ஸ்ரீமான்களான M.C. ராஜாவுக்கும், R. வீரய்யனுக்கும் கொடுத்தால் பார்க்கமாட்டார்களா? C.P. ராமசாமி அய்யர் அவர்கள் இருக்கும் உத்தியோகத்தில் ஸ்ரீமான் வீரய்யன் அவர்கள் இருந்தால் பாலக்காடு தெருவில் நடக்க 144 ஏற்பட்டிருக்குமா? கோவிலுக்கு போனதற்காக தண்டனை அடைந்திருக்க முடியுமா? என்ன காரணத்தால் இவர்களுக்கு அந்த உத்தியோகம் கிடைக்காமல் போய் விட்டது? யோக்கியதை இல்லாததாலா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாததாலா? ஜனாப் சர் முகம்மது ஆபீபுல்லா சாய்புக்கும், டாக்டர் முகம்மது உஸ்மான் சாய்புக்கும் 5000 ம், 6000 ம், சம்பளம் கிடைக்கக்கூடிய பதவிகள் எப்படி கிடைத்தது. இப்பொழுதுதான் அந்த ஸ்தானத்திற்கு அவர்கள் யோக்கியதை உடையவர்களாய் விட்டார்கள் என்கிற காரணத் தாலா? வகுப்புவாரி பிரதிநிதித்துவ கொள்கையின் வாசனையினாலா? இவற்றை பொது மக்கள் சிந்தித்துப் பார்த்தால் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்பட்ட வகுப்பார்கள் என்று கருதப்பட்டவர்களுக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இல்லாமல் எப்படி சமத்துவம் ஏற்படும் என்பதை அறி வார்கள். இப்போது பிற்பட்ட வகுப்பார் என்று அழைக்கிற வகுப்பாரெல்லாம் பிரிட்டிஷார் நம் நாட்டுக்கு வரும்போது பிற்பட்ட வகுப்பாராகவா இருந் தார்கள்? பல பிராமணர்கள் அரசாங்கத்திற்கு அனுகூலமாயிருந்ததாலும் மற்றவர்கள் அப்படியில்லாததாலும் அரசாங்கத்தார் பிராமணர் களுக்கே சகல சவுகரியமும், உரிமையும் கொடுத்ததனால் பிராமணர்கள் முற்பட்ட வகுப்பாராகவும் பிராமணரல்லாதவர்கள், பிற்பட்ட வகுப்பார்களாகவும் ஏற்பட்டுப்போய் விட்டது. இந்த பிற்பட்ட வகுப்பார் வகுப்புவாரி பிரதிநிதித் துவம் இல்லாமல் வேறு எந்த வழியில் முற்பட்டவர்கள் ஆகக்கூடும். இப்போது அவர்களுக்கு புத்தியில்லையா? சக்தியில்லையா? கல்வி யில்லையா? ஏன் தங்கள் தொகைக்குத் தகுந்த உரிமை அடையாதிருக் கிறார்கள். இந்தியர்கள் அநேக ஜாதியார்கள் நாள்போகப்போக உரிமை



RangaRakes tamilnavarasam.com

வளர்ந்துகொண்டேபோகும். பிறகு எத்தனை பேருக்கு கொடுப்பது என்று சிலர் பேசுவார்கள். ஆனால் தற்காலம் அரசாங்கத்தில் தென்னாட்டில் ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், கிருஸ்தவர், மகமதியர், பிராமணர்கள், பிராமணரல்லாதவர்கள், தீண்டதார்கள் என இவ்வெட்டு வகையாய்த்தான் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் ஐரோப்பியர், ஆங்கிலேய இந்தியர், கிருஸ்தவர், மகமதியர் இவர்களுக்கு பிரித்து கொடுத்தாய்விட்டது. இவர் நீங்கிய மற்றவர்களான பிராமணர் பிராமணரல்லாதார் தீண்டாதார் என மூன்று வகுப்பாரையும் மகமதியரல்லாதார் என்னும் பெயரால் அழைக்கப்பட்டு அவர்களுக்கு மாத்திரம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்கப்படாமலிருக் கிறது. இம்மூன்று வகுப்பாருக்கும் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் ஏற்பட்ட பிறகு மறுபடியும் உள் வகுப்புகள் ஏற்படுமே என்கிற பயமிருக்குமானால், அதற்கும் நாம் தயாராயிருக்க வேண்டியதுதான். உத்தியோகங்களுக்கு பெருத்த சம்பளங்கள் கொடுப்பதை நிறுத்திக்கொண்டோமேயானால் எத்தனை வகுப்புகளுக்கு வேண்டுமானாலும் பிரதிநிதித்துவம் கொடுப்பதில் நமக்கு கஷ்டம் ஏற்படாது. மேல் நாடுகளில் பார்லிமெண்டு முதலிய சபைகளுக்கு 500, 1000 என்கிற கணக்குள்ள மெம்பர்கள் இருந்து காரியம் நடத்தவில்லையா அது செய்வது நமக்கு கஷ்டமே இருக்காது. சண்டை வருவதெல்லாம் பெரும் சம்பளத்தை உத்தேசித்துத்தானே. சம்பளமில்லாத அதிகாரத்தை அனேக மாய் யெல்லாரும் விரும்பமாட்டார்கள். ஒருவருக் கொருவர் சண்டைபோட்டு கொள்ளமாட்டார்கள். ஒருவரைக் கெடுக்க ஒருவர் தந்திரங்கள் செய்ய மாட்டார்கள். தேசம் நம்முடையது என்கிற எண்ணமும் தேசத்தின் பொது நலத்திற்கு யெல்லோரும் ஒன்றுசேர்ந்து உழைக்கவேண்டும் என்கிற எண்ண மும் தானாகவே ஏற்படும். இப்போது ஜனங்களுக்குள் இருக்கும் வேற்றுமைகள் ஒழியும்.சர்க்காராரும் ஒருவரை விட்டு ஒருவரை கொடுமைப்படுத்தச் சொல்லமுடியாது. ஆதலால் தேச நலத்திலும் சமூக நலத்திலும் அக்கரையுள்ளவர்கள் காஞ்சீபுரம் மகாநாட்டில் வகுப்புவாரி தீர்மானத்தை கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 22.11.1925**



# காஞ்சீபுரம் மகாநாடுகள்

காஞ்சீபுரத்தில், ராஜீய மகாநாடென்று ஒரு மகாநாடு கூடிக் கலைந் தது. பெயர் ராஜீய மகாநாடென்று சொல்லிக்கொள்ளப் பட்டாலும் அஃதொரு சூதாட்ட மகாநாடாகவே முடிந்தது. சூதாட்டமாட நன்கு தெரிந்த வர்கள் நல்ல லாபமடைந்தார்கள். அது தெரியாதவர்கள் லாபமடையவில்லை. சூதாட்டத் தினால் சம்பாதித்த பொருள் எவ்வளவு காலம் நிற்குமென்பதையும் இச்சூதின் தன்மையை பொது ஜனங்கள் அறிந்து கொண்டால் பிறகு இவர்கள் யோக்கியதை என்னாகு மென்பதையும் இச்சூதாட்டக்காரர்கள் அறியாமல் போனது அவர்களுடைய பொல்லாத காலமேயல்லாமல் மற்றபடி யாருக்கும் ஒன்றும் நஷ்டமாய்ப் போய் விடவில்லை.

## தலைமை உபந்யாசங்கள்

உபசரணைத் தலைவர் ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் வாசித்த வரவேற்பு பிரசங்கம் அவரெழுதியதல்லவென்றும் அவர் கருத்தல்ல வென்றும் அவர் வாசிக்கும் பொழுது கேட்டுக் கொண்டிருந்தவர்களுக் கெல்லாம் நன்றாய் விளங்கியிருக்கும்.

எவரோ ஒரு பிராமணர் தன்னிஷ்டம் போல் பிராமணரல்லாதாரை நன்றாய் வைது எழுதி அவர் கையில் கொடுத்து அவரை வாசிக்கச் சொல்லி அதை கேட்டுக் கொண்டிருந்தவர்களெல்லாம் ஐயோ பாவம்! அவரை வையும் படியும், அவரைத் தலைகுனியும் படியும் செய்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது பிராமண சூழ்ச்சிக்கு ஒரு உதாரணமாய் விளங்கிற்று. இந்தப் பிரசங்கத்தில் சில பாகத்துக்காக ஸ்ரீமான் முதலியார் பேரில் பலர் கொண்டு வந்த கண்டனத் தீர்மானங்களையும் நிறுத்திக் கொள்ளும்படி சொன்னதற்கு இந்த சமாதானம்தான் சொல்லப்பட்டது.

அதாவது இந்த உபந்யாசம் அவர் எழுதியது அல்லவென்றும், இதற்காக பிறகு அவரே வருத்தப்பட்டார் என்றும், ஆதலால் கண்டனம் வேண்டியதில்லை என்றும் சில முக்கியஸ்தர்களால் சொல்லி நிறுத்தி விடப் பட்டது. ஆதலால் அதைப்பற்றி ஆராய்வது வீண் வேலையானாலும் அதில் பிராமணர், பிராமணரல்லாதார் பிணக்கு காங்கிரஸில் இருப்பதாய் ஒப்புக்கொண்டது மாத்திரம் குறிப்பிடத்தக்கது.



RangaRakes tamilnavarasam.com

## மகாநாட்டுத் தலைவர் திரு.வி.கல்யாணசுந்திர முதலியார் உபன்யாசம்

இது 20 பக்கம் கொண்டது. இவற்றில் ஏறக்குறைய 10 பக்கம் தமிழ் நாட்டின் பெருமையைக் காட்டு முகத்தான் தனது கல்விப் பெருமையை காட்ட, புராணங்களின் நாட்டுப்படலமாய் உபயோகித்துக் கொள்ளப்பட்டது. அதின் பாஷையைப் பற்றியோவென்றால் கேழ்ப்போர் ஸ்ரீமான் முதலியார் என்ன பாஷையில் படிக்கிறார் என்று கவனித்து அறியாமலிருக்கும்படியான அவ்வளவு சாமர்த்தியமாயிருந்தது. கருத்தைப் பற்றியோவென்றால் "முன்னால் பார்த்தால் நாயக்கர் குதிரையைப் போல் இருக்கிறது. பின்னால் பார்த்தால் அய்யங்கார் குதிரை போலிருக்கிறது" என்கிற பழமொழிப்படி குள்ள நரி சாக்ஷியாய் இருந்தது. கண்ணோக்கமோ எப்படி நடந்து கொண்டால் பிராமணர் பிராமணரல்லாதார் இரண்டு பேரையும் ஏமாற்றலாம் என்கிற தத்துவத்திலேயே இருந்தது.

சென்னையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் கூட்டம் ஸ்ரீமான் ஆரியாவை அடித்துத் துன்புறுத்திய பிறகு நமது முதலியாரின் கதி ஸ்ரீமான் அய்யங்காரைக் கண்டால் நடுங்க வேண்டியதாய்ப் போய்விட்டது.

ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தான் பயங்காளி என்றும், தான் ஒரு பெண் ஆத்மா என்றும், ஆண் ஆத்மா அல்லவென்றும் அடிக்கடி ஒளிக்காமல் சொல்லிக் கொள்வதுண்டு. அதை காஞ்சியின் தலைமைப் பதவியில் நன்றாய் காட்டி விட்டார்.

இவ்வித சந்தேகம் சிலருக்கு முன்னமேயே யிருந்திருந்தாலும், இவ்வளவு மோசமாய் கொல்லை வழியில் புகுவாரென்று அவர்கள் நினைக்க வேயில்லை. ஸ்ரீமான் முதலியார் தலைவராய் வீற்றிருந்த ஸ்தானத்தில் ஒரு அய்யங்காரோ, ஆச்சாரியாரோ வீற்றிருப்பார்களானால் இவ்வளவு அக்கிரமம் செய்ய அவர்களுக்கு சவுகரியம் கிடைத்திருக்காது. ஸ்ரீமான் முதலியார் தலைவராயிருந்ததால் பயங்காளித் தனத்தோடு ஒரு அய்யங்கார் கையிலும் ஒரு ஆச்சாரியார் கையிலும் குழந்தைபோல் உட்கார்ந்து கொண்டதால் அவர்கள் தங்கள் இஷ்டப்படி முதலியாரை உபயோகப் படுத்திக்கொண்டு சூதில் ஜயித்து விட்டதாக நினைத்துக் கொண்டார்கள். இந்த சூது முதலியார் பெயரைக் கெடுக்கத்தான் அய்யங்கார், ஆச்சாரியார் முதலியோருக்கு உபயோகப்பட்டதே ஒழிய சூது ஆடிகளுக்கு பெரியலாபம் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை.

ஆனால் ஒன்று, முதலியார், நாயுடு, நாயக்கர் என்கிற மூவரின் ஒற்றுமையைக் கெடுக்கவும் ( நாயக்கருக்கு யோக்கியதை இல்லாவிட்டாலும்) முதலியார், நாயுடு இவர்கள் ஆச்சாரியார் அய்யங்கார் இவர்களுக்கு நல்ல பிள்ளைகளாய் நடக்க போட்டி போடவும் உபயோகப்பட்டது.



எப்படி இருந்த போதிலும் ராஜீய மகாநாடுகள் என்பது ஒரு வகுப்பாரை ஏமாற்றி ஒரு வகுப்பார் ஆதிக்கம் பெறத்தான் உபயோகப்படக் கூடிய நிலைமையில் இருக்கிறதே அல்லாமல் விடுதலைக்கு இல்லை என்பது உறுதியாய் விட்டது. பாமர ஜனங்களை யார் ஏமாற்றுவது என்பது தான் மகாநாடுகளின் பெரிய கொள்கையாய் விட்டது. இனி தேசத்துக்கு உண்மையாய் உழைக்கிறவர்கள் காங்கிரஸ் நிர்வாகத்தில் இருக்க வேண்டிய அவசியமே இல்லை. நாலணா மெம்பராய் மாத்திரம் இருந்து காங்கிரஸில் நடைபெறும் சூழ்ச்சிகளையும் பிரட்டுகளையும் வெளியில் சொல்லிக் கொண்டிருந்தால் போதும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் இனி தேசத்தில் எந்தக்கட்சிக் காவது எந்தத் தலைவர்களுக்காவது சமீபத்தில் பொதுமதிப்பு ஏற்பட்டு உபயோகமான எந்தக் காரியமும் செய்யப்போவதில்லை என்பது மட்டும் உறுதியாய் விட்டது. வேண்டுமானால் தனிப்பட்ட மனிதர்களுக்கு தங்களுக்குள்ள பிறரை ஏமாற்றக்கூடிய சக்தியினாலும் சவுகரியத்தினாலும் பணத்தை வாரி தாராளமாக இரைப்பதனாலும் ஜெயம் கிடைத்தால் கிடைக்கலாம். வரப்போகும் தேர்தல்களிலும் பணச்செலவும், லஞ்சமும் கொடுத்து ஓட்டு வாங்குவதுமான காரியங்கள்தான் அநேகமாய் வெற்றி கொடுக்கப் போகிறது.

இவர்களின் 'பாக்கியவசமாக' நாட்டில் தொண்டர்கள் காங்கிரஸ் வேலைக்காரர்கள் என்று ஒரு கூட்டத்தார் ஒத்துழையாமை வேகத்தின் போது ஆவேசத்தில் ஜெயிலுக்குப்போயும் தங்கள் தொழிலை விட்டு காங்கிரசுக்கு உழைத்து வந்தும் இப்போது ஒத்துழையாமை அடங்கி விட்டதாலும் தியாகமும் காங்கிரசுக்கு ஊக்கமான வேலையும் தேவையில்லாததாலும் பலர் வயிற்றுக்கில்லாமலும், தொழில் இல்லாமலும் சும்மா திரிகிறார்கள். இக்கூட்டம்தான் வரப்போகும் சட்டசபை முதலிய ( எலக்ஷன் ) தேர்தல் யுத்தத்திற்கு சேனைகளாக உபயோகப்படப் போகிறார்கள்.

இவர்களுடைய தைரியத்தினால் பணக்கொழுப்புள்ள அநேக தற்குறிகள் தேர்தலுக்கு நின்று வெற்றி பெறப்போகின்றதுகள். இதுதான் மகாநாட்டு வைபவம். தொண்டர் மகாநாட்டைப்பற்றியும் வகுப்புவாரிப் பிரதிநிதித் தீர்மானத்தைப் பற்றியும் காஞ்சி மகாநாடுகளின் மற்றும் பல விஷயங்களையும் பின்னர் எழுதுவோம்.

**குடி அரசு – தலையங்கம் – 29.11.1925**



RangaRakes tamilnavarasam.com

# காஞ்சீபுரம் இராஜீய மகாநாடு

ஸ்ரீமான். ஈ.வெ.ராமசாமி நாயக்கர் அடியோடு அசல் தீர்மானத்தையே* எதிர்த்து பேசுகையில் தீர்மானமே ஜனங்களை ஏமாற்றுகிற மாதிரியில் எழுதியிருக்கிறதென்றும் பாட்னா தீர்மானம் என்ன என்பதும் சுயராஜ்யக்கட்சி திட்டம் என்ன என்பதும் இங்குள்ள அனேகருக்கே தெரியவில்லை என்றும் தெரியும்படி யாரும் எடுத்து சொல்லவில்லையென்றும் காங்கிரசின் பெயர் கெடாமலிருக்கவே சுயராஜ்யக்கட்சி திட்டத்தை காங்கிரஸ் ஒப்புக்கொள்ள வில்லை யென்றும் காங்கிரசுக்காவது மகாத்மாவுக்காவது சுயராஜ்யக் கட்சித் திட்டத்தில் நம்பிக்கையில்லையென்றும் டில்லி காகிநாடா முதலிய தீர்மானங்களாலும் மகாத்மாவின் சலுகையாலும் தாங்கள் வேண்டியளவு பிரசாரம் செய்ய சவுகரியமேற்படுத்திக்கொண்டதோடு வேறுயாரும் எதிர் பிரசாரம் செய்யக்கூடாதென்று மகாத்மாவிடம் சிபார்சு பெற்றுக்கொண்ட தாலும் மீறி எதிர் பிரசாரம் செய்பவர்களை சுயராஜ்யக் கட்சிக்காரரும் அவர்கள் பத்திரிக்கையும் தூற்றி வருவதாலும் அதற்கு பயந்து கொண்டு யாரும் வெளியில் வராமல் வெகுசிலரே துணிவாய் அதன் தந்திரங்களையும் தப்பிதங்களையும் எடுத்துச் சொல்வதாலும் பொது ஜனங்களுக்கு சுயராஜ்யக் கட்சி ரகசியம் ஒன்றுமே தெரிவதற்கில்லாமல் போய்விட்ட தென்றும் இதனால் ஜனங்களுக்கு சட்டசபை என்கிற விஷமே தலைக்கேரி வருகிறதென்றும் இந்த லக்ஷணத்தில் காங்கிரசே சுயராஜ்யக் கட்சி திட்டத்தை ஏற்று வேலை செய்ய வேண்டும் என்பது "குதிரை கீழே தூக்கிப்போட்டது மல்லாமல் ஆளையே புதைத்துவிட குழி பறித்தது" போல் ஆகிவிடும் என்றும் 3 வருஷமாகியும் இதுவரையில் சுயராஜ்யக் கட்சி என்ன வேலை செய்தது? பத்திரிக்கையில் மாத்திரம் வெற்றி மேல் வெற்றி என்று பெரிய எழுத்தில் எழுதிக்கொள்ளுகிறது. யாருக்கு வெற்றி என்று பார்த்தால் சர்க்காருக்குத்தான் என்று தெரிகிறது. 'இரட்டை ஆக்ஷியை ஒழித்தாய் விட்டது' இதனால் லாபமென்னவென்று பார்த்தால் ஒத்தையாட்சி பலப்பட்டது, "வரவு செலவு பட்ஜட் நிராகரிக்கப்பட்டது. இதனால் லாபமென்ன வென்று பார்த்தால் முன்னிலும் அதிக வரி வசூலிக்கப்படுகிறது. "சட்டசபை அக்கிராசனர் பதவி சுயராஜ்யக் கட்சியாருக்கு வந்துவிட்டது." இதனால் லாப மென்னவென்றால் சட்டசபையை ஒழுங்காய் நடத்த சுயராஜ்யக்கட்சியில் இருந்தே ஒரு ஆள் சம்பளத்துக்கு கிடைத்துவிட்டது. அந்த ஆள் ஒழுங்காய் நடத்தித்தருகிறேன் என்று சத்தியமும் செய்து கொடுத்திருக்கிறது. "மந்திரிகள் சம்பளத்தில் கொஞ்சம் ரூ. குறைந்தாய் விட்டது." இதனால் என்ன லாபம் என்றால் வேறு



வேலை செய்ய சர்க்காருக்கு ரூ. கிடைத்தது. இப்படியே சுயராஜ்யக் கட்சியார் செய்யும் ஒவ்வொரு வேலையும் சர்க்காருக்கு வெற்றி மேல் வெற்றியும் தேசத்திற்கு தோல்வி மேல் தோல்வியுமே அல்லாமல் எந்த உத்தியோகம் குறைந்தது? எந்த வெள்ளைக்காரர் சம்பளம் குறைந்தது? எந்த வழியில் நம்ம பணம் சீமைக்குப் போகாமல் இருக்கிறது?

சுயராஜ்யக் கட்சிக்கு இப்போது தேசத்தில் யோக்கியதையும் நாணையமும் செல்வாக்கும் குறைந்து அது சாகப்போகும் தருவாயிலிருந்து தப்புவதற்காக காங்கிரசையே சுயராஜ்ஜியக் கட்சியாக்க தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். சுயராஜ்யக் கட்சி ஓட்டர்களிடம் சொன்னபடி நடந்து கொள்ளவில்லை என்றும் இப்பொழுது கொஞ்சம் சுயராஜ்ய கட்சிக்கு இடம் கொடுத்ததிலேயே தேசத்தில் எவ்வளவு கட்சிகளும் மனஸ்தாபங்களும் வலுத்து நிர்மாணத் திட்டங்கள் கெட்டு ஒத்துழையாமை என்பதே ஜனங் களுக்கு ஒரு பழைய கதையாய் போய்விட்டதென்றும் இனியும் இடம் கொடுத்து காங்கிரசே சட்ட சபைக்கு போவதானால் மறுபடியும் பத்து வருஷ மானாலும் ஜனங்களை திருப்ப முடியாதென்றும் ஆகையால் தீர்மானத்தை அடியோடு நிராகரிக்க வேண்டும்.

*குறிப்பு: 22.11.1925 இல் நடைபெற்ற காஞ்சீபுரம் ராஜீய மாநாடு தீர்மானத்தின் மீது சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 29.11.1925**

## * முதலாவது தீர்மானம்

1. பாட்னாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தை கதராடை எப்போதும் கட்டாயமாய் உடுத்த வேண்டும் என்ற மாறுதலுடன் காங்கிரஸ் உறுதி செய்யவேண்டுமாய் இம் மகாநாடு சிபார்சு செய்கிறது.

2. இப்போது சுயராஜ்யக்கட்சியார் நடத்திவரும் ராஜீயத்திட்டத்தில் குறைவுபடாமல் இன்னும் தீவிரமாக காங்கிரஸ் ராஜீய வேலைத்திட்டத்தை நடத்தி சட்டசபை தேர்தல்களையும் நடத்தவேண்டுமென்றும் இனி சுயராஜ் யக் கட்சி என்ற பெயரே வேண்டாமென்றும் இம்மகாநாடு கான்பூர் காங்கிர சுக்கு சிபார்சு செய்கிறது.

என்ற தீர்மானத்தை ஸ்ரீமான். S. சீனிவாசய்யங்கார் பிரேரேபித்து பேசியதின் சுருக்கம்.

இத்தீர்மானமானது தமிழ்நாட்டிற்கே புதியது என்றும் அதனால்தான் தான் பிரேரேபிப்பதாயும் நமக்கு எதிரிகள் பலமாயிருப்பதால் காங்கிரசும், சுயராஜ்யக்கட்சியும் ஒன்றாகிவிடவேண்டும் என்றும் சுயராஜ்யக்கட்சி சட்ட சபை ஒத்துழையாமை செய்வதில்லை என்று சிலர் சொல்வதை கவனிக்கக்



RangaRakes tamilnavarasam.com

கூடாது என்றும் இதெல்லாம் நாம் சரிசெய்துகொள்ளக்கூடிய சிறு விஷயங்கள் என்றும் முட்டுக்கட்டை போடுவதுதான் சுயராஜ்யக்கட்சி கொள்கையென்றும் வகுப்பு நன்மைகளைப் பற்றிக்கூட சுயராஜ்யக்கட்சியார் கவனிப்பார் என்றும் சொல்லித்தீர்மானத்தை ஆதரிக்கும்படி கேட்டுக் கொண்டார்.



## காஞ்சீபுரம் பிராமணரல்லாதார் மகாநாடு

இன்று தினம் பிராமணரல்லாதாராகிய நாம் எல்லோரும் இங்கு கூடியிருக்கிறோம். இத்தகைய பெரிய மகாநாடு எதன் பொருட்டு கூட்டப்பட்ட தென்பது பற்றியும் இதில் என்னென்ன விஷயங்களைக்குறித்து ஆலோசிக்கப்படும் என்பதைப் பற்றியும் அறிந்து கொள்ள இங்கு கூடியுள்ள பலரும் அவாக் கொண்டிருக்கக் கூடும். இம்மகாநாடு எந்த வகுப்பாரிடத்தும் அதிருப்தியாவது துவேஷமாவது காரணமாகக் கொண்டு கூட்டப்பட்டதன்று. தேசவிடுதலைக்காக ராஜீய விஷயத்தில் நமது நிலைமையைத் தெளிவாக்கி ஒரு திட்டம் நமக்கென அமைத்துக்கொள்வது நியாயமேயாம். நம்முடைய உரிமைகளையும் நன்மைகளையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டுவதன் நிமித்தம், இத்தகைய மகாநாடுகள் கூட்டவேண்டியது அத்தியாவசிய மென்றேற்படுகின்றது. இதுபோன்ற மகாநாடுகள் சென்ற ஐந்தாறு ஆண்டுகளாக மாகாண மகாநாடும் காங்கிரசும் கூடும்போது அவ்வவ்விடத்திலேயோ பிறிதோரிடத்திலேயோ கூட்டப்படுவது வழக்கமாய் வருகிறது. இத்தகைய மகாநாடுகளில் நமது முன்னேற்றத்திற்கான வழிகளைக் குறித்து ஆலோசித்து முடிவு செய்ய வேண்டுவது முதற் செய்ய வேண்டிய வேலைகளில் முக்கியமானதாகிறது. தேசத்தில் பிராமணர் பிராமணரல்லாதார் என்ற தனிப்பட்ட கட்சிகள் தோன்றி பிணக்குறுவது அனைவரும் அறிந்த ஒரு விஷயமேயாகும். இவ்வாறு பிரிவினைகள் இல்லையென்று எவ்வளவுதான் மூடிவைத்த போதிலும் காங்கிரசிலும்கூட இத்தகைய பேதமுண்டென்பதை யாரும் மறுக்கமுடியாது. இதனை வரவேற்புச் சபைத் தலைவர் பிரசங்கத்திலும், தலைவர் பிரசங்கத்திலும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். பிராமணர் பிராமணரல்லாதாரென்னும் பிரிவினை இல்லையென்பது உடலிலுள்ள புண்ணை மூடிவைத்து அழுகவிடுவதற்கொப்பாகும். அதற்கேற்ற பரிகாரம் செய்து உடல் நலத்தைக் கெடுக்கும் புண்ணை ஆற்றமுயலுவதே பொது நோக்குடைய அறிஞர் கடமையாகும். இத்தகைய பிரிவேற்பட்டுள்ளதால் பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்திற்கான விஷயங்களைக்குறித்து ஆலோசிக்கப்படவேண்டுவது ஒவ்வொரு பிராமணரல்லாத மக்களின் கடமை என்பதை நான் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. லக்னோ ஒப்பந்தத்தின் மூலமாக முகம்மதியர்களுக்குத் தனிப்பிரதிநிதித் துவமளிக்கப்பட்டதன் பலனாக அங்கே இந்து முஸ்லீம் வேற்றுமை பெரிதும் ஒழிந்து ஒற்றுமைக்கு இடமேற்பட்டது. அது போன்றே நமது உரிமைகளைப் பாதுகாத்து நாம் முன்னேற்றமடைவதற்கான மார்க்கம் இன்னதென



RangaRakes tamilnavarasam.com

தெளிவாக்குவதன் பொருட்டே இப் பெருங்கூட்டம் கூட்டப்பட்டிருக்கின்றது. இக்கூட்டத்தைச் செவ்வனே நடத்தி வைக்க ஸ்ரீமான். ராமலிங்கஞ் செட்டியாரை தலைமை வகிக்கக்கேட்டுக் கொள்கிறேன்.

*குறிப்பு: 22.11.1925 இல் காஞ்சீபுரத்தில் நடைபெற்ற பிராமணரல்லாதார் மகாநாட்டில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 29.11.1925**



# வைக்கம் சத்தியாக்கிரக வெற்றிக் கொண்டாட்டம்

"எங்களுக்குச் (தனக்கும் தனது மனைவிக்கும்) செய்த உபச்சாரத்திற்காக நன்றி செலுத்துவதோடு சத்தியாக்கிரக இயக்கத்தின் ஜெயிப்பைப் பற்றியும், தோல்வியைப் பற்றியும் பேசுவதற்கு அதற்குள்ள காலம் வந்துவிடவில்லை". தெருவில் நடக்க உரிமை கேட்பவர்களைச் சிறைக்கு அநுப்பிய அரசாங்கம், தெருவில் நடப்பதற்கு இப்போது நமக்கு வேண்டிய உதவி செய்ய முன் வந்திருப்பதைப் பார்த்தால் சத்தியாகிரகத்திற்கும், மகாத்மாவிற்கும் எவ்வளவு சக்தி இருக்கிறதென்பது விளங்கும். சத்தியாக்கிரக ஆரம்பத்தில் பிராமணர்கள் கக்ஷியில் இருந்த அரசாங்கத்தார், இப்போது பிராமணர்களுக்கு விரோதமாகவே தீண்டாதாரென்போரை கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு சர்க்காரார் செல்லுவதை நாம் பார்க்கிறபோது நமக்கே சத்தியாக்கிரகத்தின் தன்மையைப் பற்றி ஆச்சரியப்படத்தக்கதாய் இருக்கிறது.

சத்தியாக்கிரகத்தில் ஏற்பட்ட கஷ்டங்களை நாம் பொறுமையாய் அநுபவித்து வந்ததால் இவ்வித சக்தியை இங்கு காண்கிறோம். பலாத்காரத்திலோ, கோபத்திலோ, துவேஷத்திலோ நாம் இறங்கியிருப்போமேயானால் இச்சக்திகளை நாம் ஒருக்காலும் கண்டிருக்கவே மாட்டோம். சத்தியாக்கிரகத்தின் உத்தேசம் கேவலம் நாய், பன்றிகள் நடக்கும் தெருவில் நாம் நடக்க வேண்டுமென்பதல்ல. மனிதனுக்கு மனிதன் பொதுவாழ்வில் வித்தியாசம் இருக்கக் கூடாதென்பதுதான் அந்த தத்துவம் இந்த தெருவில் நடந்ததோடு முடிந்துவிடவில்லை. ஆகையால், தெருவில் நிரூப்பித்த சுதந்திரத்தை கோவிலுக்குள்ளும் நிரூபிக்க வேண்டியது மனிதர் கடமை. மகாத்மா காந்தியும், மகாராணியாரைக் கண்டு பேசிய காலத்தில் மகாராணியார் மகாத்மாவைப் பார்த்து இப்பொழுது தெருவைத் திறந்து விட்டுவிட்டால் உடனே கோயிலுக்குள் செல்ல பிரயத்தனப்படுவீர்களேயென்று கேட்டார்கள்.

மகாத்மா அவர்கள் ஆம், அதுதான் என்னுடைய குறியென்றும், ஆனால் கோயிலுக்குள் செல்ல உரிமை வேண்டி ஜனங்கள் போதுமான பொறுமையும், சாந்தமும் அவசியமான தியாகமும் செய்யத் தயாராயிருக்கிறார்களாவென்று நான் அறியும் வரையில் அக்காரியத்தில் பிரவேசிக்க மாட்டேனென்றும், அதற்கு வேண்டிய காரியங்களை அது வரையில் செய்து கொண்டிருப்பேனென்றும் சொன்னார்.



RangaRakes tamilnavarasam.com

வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு விரோதியாயிருந்தவர்கள் பிராமணர்களே ஒழிய அரசாங்கத்தார் அல்லவென்பதை அரசாங்கத்தார் நிரூபித்துக் காட்டி விட்டார்கள். மனித உரிமை அடைய அந்நிய மதங்களுக்குப் போவது மிகவும் இழிவான காரியமாகும். அப்படி அவசியமிருந்தாலும் கிருஸ்துவ மதத்திற்காவது, மகமதிய மதத்திற்காவது செல்லலாமேயொழிய ஆரிய சமாஜத்திற்குப் போவது எனக்கு இஷ்டமில்லை. ஏனென்றால், ஆரிய சமாஜத்திற்குப் போவதனால் பொருளில்லாத அர்த்தமற்ற, பூணூல் போட்டுக் கொள்வதோடு பொருளறியாத சந்தியாவந்தனமும் செய்து கொள்ள வேண்டும்.

இப்படி ஒரு காலத்தில் பூணூல் போட்டுக் கொண்டு சந்தியாவந்தனம் பண்ணினவர்கள்தான் இன்றையத் தினம் நமது சுதந்திரத்திற்கும், சீர்திருத்தத்திற்கும் விரோதிகளாயிருக்கின்றார்கள். அந்த நிலைமைக்கு நீங்களும் வரக்கூடாதென்று நினைப்பீர்களேயானால் கண்டிப்பாய் அந்தக் கூட்டத் தில் சேராதீர்கள்.

*குறிப்பு :- 29 .11 . 25 ஆம் நாள் வைக்கம் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஆற்றிய தலைமைச் சொற்பொழிவு*

**குடி அரசு - சொற்பொழிவு - 06.12.1925**



# ஆதி முதற்கொண்டே சூழ்ச்சி

## வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பது நேற்றா ? இன்றா?

காஞ்சீபுரம் மகாநாடு நடந்து இரண்டு வாரங்களாகிவிட்டது. மகாநாட்டின் சம்பவங்களும் பழைய கதை ஆகிவிட்டன. ஆனால் அம் மகாநாட்டின் சம்பவங்களால் ஒவ்வொரு நிமிஷமும் புதிய எண்ணங்களே தோன்றிக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டு காங்கிரஸ் ராஜீய நாடகத்தில் பிராமணரல்லாதவர்களின் சார்பாக ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு, கலியாணசுந்திர முதலியார், ஈ.வெ.ராமசாமி நாயக்கர் ஆகிய இம்மூவர்களின் வேஷமும், விளம்பரங்களும்தான் அடிக்கடி விசேஷமாய்த் தோன்றும். இம் மூவர்கள் தான் காங்கிரஸில் பிராமணரல்லாதாருக்கு உள்ள பற்றுதலுக்கும் காங்கிரஸை பிராமணரல்லாதார் ஆமோதிக்கிறார்கள் என்பதற்கும் ஆதாரமாய் எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள்.

## தென்னிந்திய நல உரிமை கூட்டுறவு சங்கம்

அதோடு மாத்திரமல்லாமல், காங்கிரஸ் " பிராமண ராஜ்யம் " ஸ்தாபிக்கத்தகுந்த சாதனமென்றும் சுய ஆட்சி என்பது - பிராமண ஆக்ஷிதானென்றும் கருதிய பெரியோர்களான டாக்டர் டி.எம்.நாயர், ஸர்.பி. தியாகராய செட்டியார் போன்ற தேசாபிமானமும், அநுபவமும் வாய்ந்த பல பெரியோர்களால் சொல்லி, காங்கிரஸை ஒதுக்கி 'தென்னிந்திய மக்கள் நல உரிமைச் சங்கம்' என்பதாக ஓர் சங்கத்தைக் கண்டு அதன்மூலமாய் பிராமணரல்லாதார் நன்மைக்கென ஜஸ்டிஸ், திராவிடன் என்கிற இரண்டு பத்திரிகைகளையும் தோற்றி, தீவிர பிரசாரங்களைச் செய்து, அதுகாலையில் பிராமணர்கள் வயப்பட்டுக் கிடந்த பெருவாரியான பல அதிகாரங்களையும் பதவிகளையும் பிராமணரல்லாதார் தங்கள் உரிமைக்குத் தகுந்த அளவு அடைய வேண்டும் எனக் கருதி பிரசாரமும் தொடங்கினார்கள்.

## சென்னை மாகாண சங்கம்

அச்சமயத்தில் ஷை சங்கமும், பிரசாரங்களும் தென்னிந்திய மக்கள் பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்லவென்றும், ஏதோ சிலர் அரசாங்கத்தின் வயப்பட்டு அவர்கள் தூண்டுகோலால் நடைபெறுகிற சங்கமென்றும், இதில்



RangaRakes tamilnavarasam.com

பிராமணரல்லாதார் கலந்துக்கொள்ளக்கூடாது என்றும் தென்னிந்திய பிராமணரல்லாத மக்களுக்கு நன்மை செய்யவும், வகுப்புவாரிப் பிரதி நிதித்வ உரிமை அளிக்கவும் சென்னை மாகாணச் சங்கம் என்பதாக ஓர் சங்கத்தை தோற்றியிருக்கிறோம்; அதில் பிராமணர்கள் யாரும் கலப்பில்லை. அதன் தத்துவமே காங்கிரஸ் மூலமாகச் சுயராஜ்யம் பெறுவதும், பிராமண ரல்லாதாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் பெறுவதும்தான் முக்கியமானது என்றும் அதன் அக்கிராசனாதிபதி திவான்பகதூர் பி. கேசவப் பிள்ளை யாகவும், உப அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் ஈ.வெ.இராமசாமி நாயக்கர் முதலியோராகவும், காரியதரிசி ஸ்ரீமான் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு முதலியோராகவும் இதற்குப் பிரசார பத்திரிகைகள் "இந்தியன் பேட்ரியாட்" என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் "தேசபக்தன்" என்கிற தமிழ்ப் பத்திரிகையையும் இவற்றிற்கு திவான் பகதூர் சி.கருணாகரமேனன், திரு . வி. கலியாணசுந்திர முதலியார் ஆகியவர்கள் முறையே பத்திராசிரியர்களாகவும், இருந்து நடந்துவரப்பட்டதோடு, இதன் பலனால் ஜஸ்டிஸ் கக்ஷிக்கு, பிராமணரல்லாத பாமர ஜனங்களிடத்தில் செல்வாக்கில்லாமற் செய்ததுடன், காங்கிரஸ்தான் தேச விடுதலைக்குச் சாதனமென்றும், சென்னை மாகாணச் சங்கம்தான் பிராமணரல்லாதாரின் நன்மையைக் கருதக்கூடிய தென்றும் சென்னை மாகாணத்திலுள்ள பிராமணரல்லாத மேற்கண்ட முக்கியஸ்தர்கள்தான் தென்னாட்டுப் பிராமணரல்லாதார் பிரதிநிதிகளென்றும் சன்னது கிடைத்ததாய்விட்டது.

## வகுப்புவாரி பிரதிநிதித்வம்

இதோடு மாத்திரமல்லாமல், தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தாரும், சென்னை மாகாணச் சங்கத்தாரும் போட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்வ கூச்சல்களினால் கிறிஸ்தவர், மகமதியர், ஐரோப்பியர், ஆங்கிலோ – இந்தியர் முதலிய வகுப்பாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்வமும், விவசாயிகள், லேவா திக்காரர், இந்திய வியாபாரிகள், ஐரோப்பிய வியாபாரிகள் முதலிய தொழி லாளிகளுக்கு தொழில்வாரி பிரதிநிதித்வமும், தேர்தல்களில் கொடுக்கப்பட்ட தோடல்லாமல், பிராமணரல்லாதாருக்கென பல ஸ்தானங்களையும் ஒதுக்கி வைக்கப்பட அரசாங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

## காங்கிரஸில் வகுப்புவாரி பிரதிநிதித்வம்

இது இப்படி இருக்க, ராஜீய சபைகளான காங்கிரஸ் முதலிய சபை களிலும் மகமதியர், கிறிஸ்துவர் முதலியோருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித் வம் கொடுக்க வேண்டும் என்று அவர்களோடு ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டது. இதுமாத்திரமேயல்லாமல் காங்கிரஸ் ஸ்தாபனங்களிலும் உதாரணமாக எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும், மகமதியர்களுக்கு இத்தனை ஸ்தானம், கிறிஸ்துவர்களுக்கு இத்தனை ஸ்தானம், தீண்டா தாருக்கு



இத்தனை ஸ்தானம், இவை நீக்கிய மற்றவர்களுக்கு இத்தனை ஸ்தானம் என மாகாணவாரியாக ஒதுக்கி வைக்கப்பட்டு – அந்தப்படி இப்பொழுது காங்கிர ஸிலும் அமுலில் நடந்து வருகிறது. இவ்வளவிருந்தும் மேலும் மேலும் இவை போதாதென்றும் இன்னும் சில ஸ்தாபனங்களிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம் ஏற்பட வேண்டு மென்றும், ராஜீய காங்கிரசி லும், கான்பரஸ்களிலும் கிளர்ச்சிகளும் முயற்சிகளும் செய்து கொண்டே வரப்பட்டிருக்கிறது.

## காக்கிநாடா காங்கிரஸ்

உதாரணமாக, காக்கிநாடா காங்கிரஸில் ஸ்ரீமான் தாஸ் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரால் ஆமோதிக்கப்பட்ட கல்கத்தா பேக்டினாலும் ( அது தோற்றதிற்கும் ஒரு காரணம் உண்டு. ஆனால் ரகசியம். ) டாக்டர் அன்சாரி, லாலா லஜபதிராய் முதலியோர்களை இந்து – முஸ்லீம் ஒற்றுமைக்கு வழி காண ஒரு ஏற்பாடு கண்டுபிடிக்கும்படி காக்கினாடா காங்கிரசில் ஏற்படுத்திய கமிட்டியினாலும், அதன் குறிப்பு களினாலும் நன்றாய் விளங்கும்.

இன்னமும் தமிழ்நாட்டில் நடந்த மாகாண கான்பரன்ஸ்களின் போதெல்லாம் நடந்த பிராமணரல்லாத தனி கூட்டங்களாலும் நன்றாய் விளக்கலாம். அதாவது:–

## 25– வது ராஜீய மாகாண மகாநாடு

1919 – ம் வருடத்தில் திருச்சியில் நடைபெற்ற 25 – வது ராஜீய மாகாண கான்பரசின் போது அதே கொட்டகையில் ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியாரின் அக்கிராசனத்தின் கீழ் இதைப்பற்றிப் பேசி, ஈரோட்டில் சென்னை மாகாணச் சங்கத்தை நடத்த வேண்டுமென்றும், அதில் வகுப்புவாரிப் பிரதிநிதித்வத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டு அது போலவே தீர்மானமும் நிறைவேறியும் இருக்கிறது.

## 26 – வது ராஜீய மாகாண மகாநாடு

1920 – ம் வருடம் திருநெல்வேலியில் நடந்த 26–வது ராஜீய மாகாண கான்பரஸின் போது பிரதிநிதிகள் சாப்பாட்டு விடுதியில் ஸ்ரீமான் ஈ.வி.இராம சாமி நாயக்கருடைய அக்கிராசனத்தின் கீழ் பிராமணரல்லாதார் கூட்டம் ஒன்று கூடி " சட்டசபைகள் முதலிய தேர்தல் ஸ்தானங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் ஏற்படுத்துவதோடு, அரசாங்க உத்தியோகத்திலும் ஜனசங் கைக்குத் தகுந்தபடி வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் " என்கிற தீர்மானத்தைக் காலஞ் சென்ற ஸ்ரீமான் சோமசுந்தரம்பிள்ளை, ஸ்ரீமான்கள் வி.ஓ.சிதம்பரம்பிள்ளை, தண்டபாணி பிள்ளை மற்றும் திருநெல்வேலி ஸ்ரீவைகுண்டம் முதலிய ஸ்தலங்களிலுள்ள சில வக்கீல்களும் ஆகச் சேர்ந்து உடனே விஷயா



RangaRakes tamilnavarasam.com

லோசனைக் கமிட்டிக்கு அனுப்பிய அத்தீர்மானத்தை - ஸ்ரீமான் ஈ.வி. இராம சாமி நாயக்கர் பிரேரேபிக்க, ஸ்ரீமான்கள் வி.ஓ. சிதம்பரம் பிள்ளை, தண்டபாணி பிள்ளை முதலியோர்கள் ஆமோதிக்க, காலஞ்சென்ற ஸ்ரீமான் எஸ்.கஸ்தூரி ரெங்கய்யங்கார் எழுந்து வீதாச்சாரம் ( Percentage) என்கிற வார்த் தைக்குப் பதிலாக **'போதுமான'** என்னும் அர்த்தத்தைக் கொடுக்கத் தகுந்த **'அடிகுவேட்லி'** (Adequately) என்கின்ற பதத்தை போட்டுக்கொள்ளும்படி ஒரு திருத்தப் பிரேரேபனை கொண்டு வந்தார். இந்த 'அடிகுவேட்லி' என்ற பதத்திற்கு என்ன பொருள் என்று ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் அம்மகா நாட்டிற்கு அக்கிராசனாதிபதியாயிருந்த இதே ஸ்ரீமான் எஸ்.ஸ்ரீனிவாச யங்காரவர்களைக் கேட்க, அவர் இரண்டும் ஒரே அர்த்தம் தான். ஆனால் 'பெர்சண்டேஜ்' என்பதைவிட 'அடிகுவேட்லி' என்பது நல்ல வார்த்தை யென்று சொல்லித் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டார். இதுசமயம் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் முதலியோர்களும் அக்கூட்டத்தில் ஆஜராகித்தான் இருந்தார்கள். அதோடு " ராஜாங்கக் கல்வித்துறைகளில் சமஸ்கிருதக் கல்விப் பயிற்சிக்கு உள்ள யோக்கியதையும், செய்முறையும், தமிழ் கல்விக்கும் இருக்கவேண்டுமென்று " ஒரு தீர்மானம், ஸ்ரீமான் ராமசாமி நாயக்கரால் பிரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீமான் வி.ஓ.சிதம்பரம்பிள்ளையால் ஆமோதிக்கப் பட்டு நிறைவேற்றப்பட்டது. ஆனால் விஷயாலோசனைக் கமிட்டிக்கூட்டம் முடிந்ததும் வெளியில் வந்து ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் சில ஆங்கிலம் படித்தவர்களைக் கண்டு 'அடிகுவேட்லி' என்பதற்கும் 'பர்சண் டேஜ்' என்பதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டபோது, அவர்கள் 'அடிகுவேட்லி' என்பது இருபொருள் கொண்டதென்றும், அதாவது 'யோக்கியதைக்கு தகுந்த' என்கிற பொருள்கூடக் கொள்ளலாம் என்றும், 'பர்சண்டேஜ்' என்கிற வார்த்தைதான் மிகத் தெளிவானது என்றும் சொன் னார்கள். பிறகு மகாநாட்டில் இத்தீர்மானம் வரும்போது, 'பெர்சண்டேஜ்' என்கிற வார்த்தையையே போட்டுக்கொள்ள வேண்டும் என்று ஸ்ரீமான்கள் நாயக்கரும், தண்டபாணி பிள்ளையும் அக்கிராசனர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங் காரிடம் சொன்னார்கள். அவரும் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண் டார். கடைசியாக மகாநாட்டில் இது தவிர மற்ற தீர்மானங்கள் முடிந்தவுடன் அக்கிராசனாதிபதி எழுந்து திடீரென்று தமது முடிவுரையை ஆரம்பித்து விட்டார். ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளை தன்னுடைய வகுப்புவாரிப் பிரதிநிதித்வ தீர்மானம் என்ன ஆயிற்றென்று அக்கிராசனரைக் கூட்டத்தில் கேட்டார். அக்கிராசனர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் அது பொது நன்மைக்கு விரோதமான தீர்மானமாதலால் அவற்றை ஒழுங்குத் தவறானது என்று தீர்மானித்து விட்டதாகச் சொல்லிவிட்டார். உடனே ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை எழுந்து விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தன் தீர்மானம் இங்கு எப்படி ஒழுங்குத் தவறு என்று கேட்டார். அப்போது அங்கிருந்த பிராமணர்கள் ஸ்ரீமான் பிள்ளையை உட்காரும்படிக் கூச்சல் போட்டு அடக்கிவிட்டார்கள். கடைசியாக முடிவுரையில் ஸ்ரீமான் அய்யங்கார் காஞ்சி மகாநாட்டில் ஸ்ரீமான் முதலியாரைக் கொண்டு சமாதானம் சொல்லச் சொன்னது போல் வருத்தப்படுவதாகப் பொய்வேஷம் போட்டு மறைத்துவிட்டார்.



## 27 - வது ராஜீய மாகாண மகாநாடு

பின்னர் 1921 - ம் ௵ தஞ்சையில் நடந்த 27 - வது தமிழ் மாகாண மகாநாட்டில் கோயம்புத்தூர் ஜில்லா பிரதிநிதிகள் கொட்டகையில் ஸ்ரீமான் சர்க்கரை செட்டியார் அக்கிராசனத்தில் தமிழ்நாடு பிராமணரல்லாதார் கூட்டம் ஒன்று கூடி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி பேசி ஸ்ரீமான்கள் சென்னை சிங்காரவேலு செட்டியார், கல்யாணசுந்தர முதலியார், சர்க்கரை செட்டியார், வரதராஜுலு நாயுடு, ராமசாமி நாய்க்கர் ஆகியவர்கள் அடங்கிய கமிட்டி ஒன்று நியமித்து வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்திற்கு வேண்டிய வேலை செய்யவும், ஜஸ்டிஸ் கட்சிக்குப் போட்டியாய் ஆரம்பித்த சென்னை மாகாண மகாநாட்டைக் கூட்டவும் தீர்மானிக்கப்பட்டது.

## 28 - வது ராஜீய மாகாண மகாநாடு

1922-ம்௵ திருப்பூரில் கூடிய 28-வது மாகாண மகாநாட்டிலும் நாடார்கள் முதலியோர்க்கு ஆலயப் பிரவேஷம் கொடுக்க வேண்டும் என்றும் அதற்கு விரோதமான சாஸ்திரங்களையும், பழைய ஆசார வழக்கங் களையும் மாற்ற வேண்டும் என்றும் ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கரால் பிரேரேபிக்கப்பட்டு, விஷயாலோசனைக் கூட்டத்தில் தீர்மானமானதை வெளி மகாநாட்டில் பிரேரேபிக்க முடியாதபடி பல பிராமணர்கள் செய்தும், கடைசியாக பெரிய தகராறின் பேரில் ஸ்ரீமான்கள் கல்யாணசுந்திர முதலியார் பிரேரேபிக்க, ஈ.வெ.ராமசாமி நாயக்கர் ஆமோதிக்க அதின் பேரில் ஸ்ரீமான் கள் எஸ்.சத்தியமூர்த்தி, மதுரை ஏ.வைத்திய நாதய்யர், கும்பகோணம் பந்துலுவய்யர் முதலியோர் ஆக்ஷேபித்து கூச்சல்களையும், கலகத்தையும் உண்டாக்கி எப்படியோ அத்தீர்மானத்தை அப்படியே ஓட்டுக்கு விடாமல் அதன் ஜீவநாடியை எடுத்துவிட்டு ஒரு சொத்தைத் தீர்மானத்தை நிறை வேற்றினார்கள். அதுசமயம் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு மதில் மேல் பூனை போலவே நடந்து கொண்டார் என்கிற பழியும் அவருக்கு வந்தது.

## மதுரை - இராமனாதபுரம் மகாநாடு

1923 - ம் வருஷத்திய மதுரை - இராமநாதபுரம் மகாநாட்டிலும், பிராமணர் - பிராமணரல்லாதார் தகரார் ஏற்பட்டது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் இதில் சிக்கிக்கொண்டு வெகு பாடுபட்டார்.

1923 - ம் வருஷத்தில் திருச்சியில் டாக்டர் ராஜன் வீட்டில் கூட்டிய மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விஷயமாய் ஸ்ரீமான் பி. வரதராஜுலு நாயுடு ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.



RangaRakes
tamilnavarasam.com

அத்தீர்மானத்தை அடுத்த மீட்டிங்கில் வைத்துக்கொள்ளலாம் என்று ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் தந்திரமாய்த் தள்ளி வைத்துவிட்டார்.

## 29- வது ராஜீய மாகாண மாநாடு

1923 - ம் ஸூ த்தில் சேலத்தில் கூடிய 29 -வது தமிழ் மாகாண மகாநாட்டு விஷயாலோசனைக் கமிட்டியில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அதுசமயம் இல்லாவிட்டாலும், அவருக்காக அவர் நண்பர்கள் ஸ்ரீமான்கள் தண்டபாணி பிள்ளையோ அல்லது பவானி சிங்கோ இதே தீர்மானத்தைப் பிரேரேபித்த போது, ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் முதலியவர்கள் இது சமயம் ஒத்துழையாமையே போய்விடும் போல் இருக்கிறது. டெல்லி மகாநாடு தீர்ந்த பிறகு வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லி அதை நிறுத்தச் செய்து விட்டார்கள்.

## 30 - வது ராஜீய மாகாண மகாநாடு

பின்னர் கூடிய 1924 - ம் வருடத்திய திருவண்ணாமலையில் கூடிய 30 -வது தமிழ் மாகாண மகாநாட்டில் அக்கிராசனம் வகித்த ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கருடைய அக்கிராசனப் பிரசங்கத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி விஷேஷமாய் சொல்லப்பட்டுமிருக்கிறது.

## பெல்காம் காங்கிரஸ்

பெல்காமில் கூடிய ராஜீய காங்கிரஸின் போதும் பிராமணரல்லாதாருக்கெனத் தனியாக ஓர் மகாநாட்டைக் கூட்டி வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தைப் பற்றி பேசியதோடு, ஜஸ்டிஸ் கக்ஷியைப் பற்றியும் தீர்மானம் செய்திருக்கிறது. அதே சமயம், மகாத்மாவினிடமும் இதைப்பற்றி விரிவாய் எடுத்துச் சொன்னதோடு ஸ்ரீமான்கள் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார், பி. வரதராஜுலு நாயுடு, ஈ.வெ.ராமசாமி நாயக்கர் முதலியவர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தைப் பற்றிச் சொல்லியுமிருக்கிறார்கள். மகாத்மா காந்தியும் யோசித்து தக்கது செய்வதாய் சொல்லியுமிருக்கிறார்.

## தஞ்சை தேசீய பிராமணரல்லாதார் மகாநாடு

இவ்வருடம் தஞ்சையில் ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியார் உட்பட பிரதிநிதிகளாயிருந்த தேசீய பிராமணரல்லாதார் மகாநாட்டிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தியிருக்கிறது.

இன்னும் எத்தனையோ விஷயங்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ சரித்திரத்தைப் பற்றியும், தலைவர்களென்று சொல்லப்படுவோரின் தந்திரம், சூழ்ச்சி, குட்டிக்கரணம், குலத்தைக் கெடுக்கும் கோடாரிக்காம்புத்தன்மை முதலியவற்றைப் பற்றியும் விரிவாய் எடுத்துச் சொல்ல அடுத்த சந்தர்ப்பத்தை



எதிர்பார்க்கிறோம். அல்லாமலும் பிராமணரல்லாதார் வகுப்பைச் சேர்ந்த உண்மைத் தொண்டர்கள் என்ன செய்ய வேண்டுமென்பதையும் அடுத்தாற் போல் எழுதலாமென்றிருக்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 06.12.1925**



RangaRakes
tamilnavarasam.com

# காஞ்சீபுரம் பிராமணரல்லாதார் மகாநாடு

"தேசத்தின் முன்னேற்றத்தை உத்தேசித்தும், தேசீய ஒற்றுமையை உத்தேசித்தும் அரசியல் சம்மந்தமான சகல பதவிகளிலும் இந்து சமூகத்தில் பிராமணர் - பிராமணரல்லாதார், தீண்டாதார் என்போர் ஆகிய இந்த மூன்று சமூகத்தாருக்கும் அவரவர் ஜனத்தொகையை அனுசரித்து பிரதிநிதி ஸ்தானம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமாய் மாகாண மகாநாட்டை கேட்டுக் கொள்வதோடு இத்தீர்மானத்தை மாகாண மகாநாடு மூலமாய் காங்கிரசையும் வலியுருத்தும்படி தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானத்தை பிரேரேபித்துப் பேசியதாவது:-

நாம் ஒவ்வொருவரும், சுயராஜ்யம் அடைய பாடுபடுவதாய் சொல்லு கிறோம், அதற்காக எவ்வளவோ கஷ்டத்தையும் அனுபவிக்கிறோம். சுயராஜ் யம் கிடைத்தால் அது பொதுமக்கள் ராஜ்யமாயிருக்க வேண்டாமா? நாட்டின் தற்கால நிலைமையைப் பார்த்தால், சுயராஜ்யமென்பது பிராமண ராஜ்யம்தான் என்னும் பயம், இப்போது மக்களிடை உண்டாகி வருகிறது. பிரிட்டிஷ்ஆட்சி புரிகிற இக்காலத்திலேயே, மனிதர்களைத் தெருவில் நடக்கவிடக்கூடாது குளம் குட்டைகளில் தண்ணீர் எடுக்கவிடக்கூடாது என்னும் பல கொடுமைகள் நடை பெறுகிறபோது ராஜ்ய அதிகாரம் ஒருவகுப்பார் கைக்கே வந்து விடுமானால் இனி என்ன கொடுமைகள் செய்ய அஞ்சுவார்களென்று, ஜனங்கள் பயப்படுகிறார்கள். தேச விடுதலைக்கு தியாகம் தேவையாயிருந்த காலத்தில் புறமுதுகு காண்பித்து ஓடிப்போன ஆசாமிகளெல்லாம் ஏதோ சிலர் செய்த தியாகத்தினால் ஏற்பட்ட பலனை அனுபவிக்க வெட்கமில்லாமல் முன்வந்து சூழ்ச்சிகள் செய்து பலனடைவதை பார்க்கிறபோது இவர்களை எப்படி நம்ப முடியும்? வெட்கங்கெட்டவன் சொந்தக்காரன் என்பது போல விவஸ்தையற்ற ஒரு கூட்டத்தார் தேசத்திலிருந்துகொண்டு, தேசத்தைப் பாழ்பண்ணிக் கொண்டுவருவதை நாம் பார்த்துக்கொண்டே வருகிறோம். சாதுக்களான ஏழுகோடி ஜனத்தொகை கொண்ட ஒரு பெரிய கூட்டம், மிருகங்களிலும் கேவலமாய் நடத்தப்படுவதையும் பார்த்து வருகிறோம். இப்படி ஏனிருக்க வேண்டும்? அந்தந்த கூட்டத்திற்கு தகுந்த அளவு, அவர வர்களுக்கு அரசியல் முதலிய உரிமைகளை ஒதுக்கிவைத்து விடுவோமே யானால் சாதுக்களெல்லாம் மிருகங்களாகவும், அயோக்கியர்களெல்லாம் சுவாமிகளாகவும் ஆகிவிட முடியுமா? கட்டுதிட்ட அளவில்லாததனால், கையில் பலத்தவன் காரியமென் பதுபோல், ஏமாற்ற சக்தியுள்ளவனும்;



செல்வாக்குள்ளவனும் மேலேவந்து விடுகிறான். இதனால் ஒருவருக்கொ ருவர், பரஸ்பர நம்பிக்கையில்லாமலும், ஒற்றுமையில்லாமலும் இவர்களை எப்படி ஏமாற்றலாமென்பதே ஒரு கூட்டத்தாருடைய ஜென்மக் கூறாகவும், இவர்கள் தந்திரத்திலிருந்து எப்படி தப்புவதென்பது மற்றக் கூட்டத்தாருடைய கவலையாகவும் போய்விடுகிறது. இந்தநிலைமை, அரசாட்சி புரிபவர்களுக்கு வெகு அனுகூலமாய் ஏற்பட்டுப் போய்விடுகிறது. அதோடு மாத்திரமல்லாமல், அரசாங்கத்தை நடத்துவிக்க வகுப்புக்கு வகுப்பு போட்டி போட்டுக்கொண்டு ஒற்றர்களாகவும், அடிமைகளாகவும் அரசாங்கத்தையே நாடுவதாய் விடு கிறது. இக்குணங்கள் நமது நாட்டை விட்டு அகல வேண்டுமானால், ஒருவகுப்புக்கு மற்றொரு வகுப்பு நம்பிக்கை ஏற்படும்படி ஒருவர் பாத்தியத் தில் மற்றொருவர் பிரவேசிக்காதபடி பந்தோபஸ்து ஏற்பட்டுப் போக வேண்டும். அவ்வித பந்தோபஸ்துதான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ மென்பது நான் பிரேரேபித்திருக்கிற தீர்மானத்தில் இந்த தத்துவம் தான் அடங்கியிருக்கிறது. இது இப்பொழுது மாத்திரம் ஏற்பட்டதல்ல. நீண்ட நாளாகவே இக்கிளர்ச்சி நமது நாட்டில் ஏற்பட்டிருந்தாலும் எப்படியெப் படியோ அதை ஒரு வகுப்பார் கட்டுப்பாடாய் சூழ்ச்சிகள் செய்து சமயத்திற் கேற்றவாறு நடந்து பாமர ஜனங்களை சுவாதீனப் படுத்திக்கொண்டு, வெளிக்கு தெரியாமல் அடக்கிக்கொண்டு வருகிறார்கள். ஆகையால் நீங்களெல் லோரும் நன்றாய் யோசித்து பார்க்கவேணுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

*- 29.11.1925 குடி அரசு தொடர்ச்சி*

*குறிப்பு: 22.11.1925 இல் காஞ்சீபுரத்தில் நடைபெற்ற பிராமணரல்லாதார் மகாநாட்டில் சொற்பொழிவு*

**குடி அரசு - சொற்பொழிவு - 06.12.1925**



RangaRakes tamilnavarasam.com

# ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் 10 கற்பனைகள்

27-11-25 -ல் ஸ்ரீமான். ராஜகோபாலாச்சாரியார் "நவசக்தி" பத்திரிகைக்கு ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அதை நவசக்தி பொய்மான் வேட்டை என்ற தலைப்பில் பிரசுரித்திருக்கிறது. இது நீண்ட வியாசமாயிருப்பதால், அதில் உள்ள முக்கிய 10 விஷயங்களை மாத்திரம் எடுத்து ஆராய்வோம்.

1. "பல காரணங்களால் உயர் பதவியடைந்த ஒரு ஜாதியாரைக்கண்டு பொறாமை கொண்டு மற்ற ஜாதியாரைச் சேர்ந்த பெரியோர்கள் அவர்களைத் தூஷித்து அவர்களை ஒடுக்குவதாக கிளர்ச்சி செய்தால் ......நன்மை விளைவதாக தோற்றம் காட்டலாம்; விரைவில் அப்பொய்த் தோற்றம் மறைந்துபோய் பழைய கதையாய் முடியும்".

2. "நாட்டிலுள்ள மற்ற சமூகங்களின் வெறுப்புக்கும் துவேஷத்திற்கும் பார்ப்பனர் ஆளாகும்படி தீவிர பிரசாரம் சிலர் செய்து வருகிறார்கள். இக்கிளர்ச்சியும், இதனால் உண்டாகும் துவேஷமும், நாட்டிற்கு கேடு விளைவிக்குமென்பதில் ஐயமில்லை".

3. "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்றால் ஒரு ஜாதியாரேயல்லாமல் பல ஜாதியார்கள் அதிகார சபையில் இருப்பது மாத்திரம் அல்லாததோடு, பிராமணர்களை பிராமணர் மாத்திரம் தெரிந்தெடுக்க வேண்டும் என்பதும், மற்ற ஜாதியார்கள் பிராமணரல்லாதார்களைத்தான் தேர்ந்தெடுக்கலாம் என்பதும் இந்த கிளர்ச்சியின் முழுப்பொருளாம் ... .பார்ப்பனர்களில் பெரும்பாலோர் பிராமண சமூகத்தின் பிரத்தியேக நன்மைக்காகவே தெரிந்தெடுப்பார்கள்".

4. "சில பிரதிநிதிகள் தான் உட்புகலாம். பார்ப்பனரல்லாதவர்கள் எந்தப் பார்ப்பனனுக்கும் வாக்குக் கொடுக்க முடியாது, இவ்வகையில் தெரிந்தெடுக்கப்பட்ட சபைகள் அதிகாரம் செலுத்தி வந்தால் நாடு பிற்போக்கு அடையும் என்பதில் ஐயம் இல்லை".

5. "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இனி நீங்கள் நாட்டுக்குத்தொண்டு செய்யக்கூடாது என்று பார்ப்பனர்களுக்கு பெருந்தடையுண்டாக்குவதேயாகும். பல்லாயிர வருஷங்கள் நாட்டிற்கு தொண்டு செய்து வந்த ஒரு



ஜாதியை இவ்வளவு எளிதில் குற்றவாளிகளாகத் தீர்மானித்து ஒடுக்கிவிட முடியாது. அறிவு, பயிற்சி, தொண்டு செய்யும் திறமை கொண்ட எவரும் நாட்டிற்கு வேண்டும்"........

6. "தற்காலத்தில் பார்ப்பனர்களின் மேல் சிலர் கொண்ட கொடுஞ் சினத்தின் காரணம் பண்டை கலை ஒழுக்கம், வேதம், சாஸ்திரம், கோயில், மடம் அனைத்துக்கும் கேடு விளையும் போல் இருக்கிறது. சமஸ்கிருத பாஷைக்கும், தமிழுக்கும் போட்டி; இத்தகைய மயக்கம் தமிழ் மக்களுக்குள் சிலர் உண்டாக்கி வருகிறார்கள்".

7. "பார்ப்பனர்களுடன் புரியும் போரில் கோயில் வேண்டாம், நோன்பு வேண்டாம், ஹிந்து மதமே பொய், பழைய ஒழுக்கங்களே அநாகரிகம் என்ற நாஸ்திக எண்ணங்களைப் பரப்புதல் ஏழை தமிழ் மக்களுக்கு பெருங்கேடாய் முடியும்".

8. "ஜாதிப் பொறாமையை அஸ்திவாரமாகக் கொண்ட கட்சிகள் பயன் பெறாமல் போனபின்னும் உண்மை தேசத்தொண்டு செய்து வந்த என் நண்பர்கள் சிலர் இந்த ஜாதிச் சண்டையை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்".

9. "நின்றால் குற்றம், உட்கார்ந்தால் குற்றம் பழய புஸ்தகங்களில் இம்மாதிரி எழுதி இருக்கிறது என்ற வீண் சண்டைகள் யாதொரு நன்மையும் பயவா".

10 ."அரசாங்க விஷயங்களில் ஜாதிப்பேச்சுகள் கூடாதென்றும், ஆனால் மத ஆசார விஷயங்களில் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க தாம் போர் புரிவதாயும், ஒருவர் வீராவேசப்பேச்சுகள் பேசுகிறார். அரசாங்க விஷயத்திலாவது விஷம முறைகள் அவ்வளவு கேடு விளைவியா, மதாசார சம்பந்தமாய் சாந்தமற்ற முரட்டு முறைகளை பின்தொடர்ந்தால் துவேஷம் அளவு கடந்து பரவி நாட்டில் வேற்றுமையும், பகைமையும், தீமையுமே உண்டாகும்."

என்ற இவைகள் முக்கியமானவைகளாகக் கருதி அவற்றிற்கு சமாதானம் சொல்லுவோம்.

இவற்றிலிருந்து, ஸ்ரீமான். ஆச்சாரியாரின் மனப்பான்மை இன்னதென்று அறிய சவுகரியமேற்பட்டு போய்விட்டது. அதாவது:-

1. பல காரணங்களால் உயர் பதவியடைந்த பிராமணர்களிடம் பொறாமை கொண்டு அவர்களை ஒடுக்குவதற்கு தீண்டாமை விலக்கு பிரசாரத்தின் பேரால் கிளர்ச்சி செய்வதாகவும், அது பலன் கொடுக்காது என்றும் பந்தயம் கூறுகிறார். இவருடைய தத்துவப்படி பார்த்தால் பல காரணங்களால் இந்தியாவை ஜயித்து தங்களது வாழ்க்கைக்கு ஆஸ்பதமான நாடாக்கி ஆண்டு வருவதைப் பார்த்து, பொறாமைப்பட்டுத்தான் சுயராஜ்யம் என்னும் பேரால் கிளர்ச்சி செய்கிறார் போலும். இவரும் பொறாமையால் தான் "இங்கிலீஷ்காரர் வாயில் மண்விழும் படியான" கதர் வேலையில் இவர்



RangaRakes tamilnavarasam.com

ஈடுபட்டிருக்கிறார் போலும். சீமைக்குப் போகும் பணத்தை நிறுத்துவது பொறாமைதான் போலும். வெள்ளைக்காரரில் அயோக்கியனாயிருந்தாலும் பல காரணங்களால் ஜெயித்து விட்ட ஜாதியானதால் அவனைக் கண்டால் நாம் சலாம் போடவேண்டுமென்பதும், அவன் 1000, 500 ரூ. சம்பளத்துக்கு அருகன் என்பதும் நாம் எவ்வளவு யோக்கியனானாலும் நாம் கூலி என்பதும் 10, 20 ரூ. சம்பளத்துக்குத்தான் லாயக்கென்பதும் மாற வேண்டுமென்று கிளர்ச்சி செய்தால் அது பொறாமை போலும். நீயும் நானும் மனிதன் தானே தென் ஆப்பிரிக்கா வீதியில் நீ மாத்திரம் நடக்கலாம், நான் மாத்திரம் ஏன் நடக்கக் கூடாது என்பது பொறாமை போலும், இதெல்லாம் வெள்ளைக்காரரைத் தூஷித்து அவர்களை ஒடுக்கத்தான் ஸ்ரீமான்கள். ராஜ கோபாலாச்சாரியார், சத்தியமூர்த்தி போன்றார்கள் கிளர்ச்சி செய்கிறார்கள் போலும். அப்படியானால் அது கண்டிப்பாய் ஜெயம் பெறாது போலும்.

தன்னைப்போல் பிறரை நேசிக்கும் குணமோ, எண்ணும் குணமோ இருக்குமிடங்களில் இவையெல்லாம் பொறாமை என்கிற எண்ணம் உதிக்குமா?

2. நாட்டிலுள்ளவர்களின் வெறுப்புக்கும் துவேஷத்திற்கும் பிராமணர் ஆளாகும்படி சிலர் பிரசாரம் செய்கிறார்கள், இது நாட்டிற்குத்தான் கேடு என்பது, பஞ்சாபிற்கு சர்க்கார் செய்த அக்கிரமத்திற்கு மகாத்மா கிளர்ச்சி செய்து ஒத்துழையாமை ஏற்படுத்தினது வெள்ளைக்காரர் மேல் நாட்டாருக்கு துவேஷம் ஏற்படத்தான் செய்தது போலும். இக்கிளர்ச்சியால்தான் இந்தியாவுக்கு கேடு விளைந்தது போலும்.

3, 4. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்றால், பிராமணர்களைப் பிராமணர் மாத்திரம் தெரிந்தெடுக்க வேண்டுமென்பது மற்ற ஜாதியார் பிராமணரல்லாதாரைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்கின்ற பொருளாதலால் இவ்வகை தெரிந்தெடுப்பால், நாடு பிற்போக்கடையும் என்பது, கிருஸ்தவர்களை கிருஸ்தவர்கள் தெரிந்தெடுத்தாலும், மகமதியரை மகமதியரே தெரிந்தெடுத்தாலும், இந்துக்களை இந்துக்கள் தெரிந்தெடுத்தாலும்தான் நாடு பிற்போக்கடைந்து விட்டது போலும்; அதற்கு முன் நாடு முற்போக்கிலிருந்தது போலும்; இவற்றிலெல்லாம் ஏற்படாத பிற்போக்கு பிராமணர்களைப் பிராமணர் தேர்ந்தெடுப்பதாலும், பிராமணரல்லாதார்களை பிராமணரல்லாதார் தெரிந்தெடுப்பதினாலும் ஏற்பட்டு விடும்போலும்.

5. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இனி நீங்கள் நாட்டுக்கு தொண்டு செய்யக் கூடாது என்று பார்ப்பனர்க்கு பெரும் தடையுண்டாகுவதோடு பல்லாயிரக்கணக்கான வருஷங்களாய் நாட்டுக்கு தொண்டு செய்து வந்த ஜாதியை இவ்வளவு சீக்கிரத்தில் ஒடுக்கிவிடமுடியாது என்கிற பந்தயமும், அறிவு, பயிற்சி, தொண்டு செய்யும் திறமை கொண்ட எவரும் நாட்டுக்கு வேண்டும் என்பதும், சர்க்காரை, எங்களை நாங்களே தெரிந்தெடுத்துக் கொள்ளும் பாத்தியம் கேட்பது, வெள்ளைக்காரரே நாட்டுக்கு வேண்டாம் என்று



சொல்வதுதான்போலும்; அல்லாமலும் 200 வருஷம் நாட்டுக்குப் "பிராமணர்களைவிட அதிகமாகத் தொண்டு செய்த" ஒரு சர்க்காரை வெகு எளிதில் நாட்டை விட்டு போங்கள் என்று சொல்லுவது போலத்தான் போலும். அறிவு, பயிற்சி, தொண்டு செய்யும் திறமை வெள்ளைக்காரருக்கு மாத்திரம் உண்டு. மற்றவர்களுக்கு இல்லை போலும்; ஆகையால் பிராமணரை நாம் தெரிந்தெடுக்காவிட்டால் அறிவு, பயிற்சி, தொண்டுசெய்யும் திறமை உள்ளவர்கள் வேறு வகுப்பில் சுத்தமாய் கிடைக்கவே மாட்டார்கள் போலும்.

6. பார்ப்பனர்மேல் உள்ள கொடுஞ் சினத்தால் பண்டைக்கலை, ஒழுக்கம், வேதம், சாஸ்திரம், கோவில், மடம் அனைத்துக்கும் கேடு விளையும்போல் இருக்கிறது என்பதும், சமஸ்கிருத பாஷைக்கும் தமிழுக்கும் போட்டி என்பது.

வெள்ளைக்காரர் மேல் உள்ள கோபத்தால்தான் பைபிளை நமது பிள்ளைகளுக்கு நாம் வேண்டாம் என்கிறோம் போலும். நாம் படிக்கக்கூடாது என்றும் சொல்லப்படும் வேதம் நமக்கு எதற்கு? பார்ப்பான் உயர்ந்தவன் மற்றவன் சூத்திரன் தாசி மகன் என்கிற கலையும், சாஸ்திரமும் பார்ப்பனரல்லாதாருக்கு எதற்கு? பார்ப்பனர் தவிர மற்றவர் உள்ளே போவதால் கோவில் அசுத்தமாய்ப் போய்விடுமானால் பார்ப்பனர் தவிர மற்றவர் கிட்டப்போனால் சுவாமிக்கு சக்தி குறைந்தபோகுமானால், அந்த கோவில் நமக்கு எதற்கு? பார்ப்பனரல்லாதார் பணத்தை வாங்கி விபசாரத் தரகுக்கும், தாசி வேசிக்கும், கள்ளு சாராயத்திற்கும் செலவு செய்யவும் வெறும் சோம்பேறிகளுக்கு பொங்கிப்போடவும் செலவழிப்பதும் அல்லாமல் பார்ப்பனரல்லாதார் நன்மைக்கோ சுயமரியாதைக்கோ ஒரு காரியமும் நடவாதிருக்குமானால் அம்மாதிரி மடம்தான் எதற்கு? அதற்கு ஏனோ பார்ப்பனரல்லாதார் பணம் கொடுக்கவேண்டும்? தமிழ்நாட்டு பாஷையாகிய தமிழைப் பற்றி அக்கரையில்லை. தமிழர் கொடுக்கும் வரிப் பணத்தை அள்ளி சமஸ்கிருத பாஷைக்குத்தான் செலவு செய்யவேண்டும். சமஸ்கிருதத்திற்கு சமமாகக் கூட தமிழுக்கு யோக்கியதை கொடுக்கக்கூடாது என்று சொல்வதை ஒப்புக்கொள்ளா விட்டால் அது போட்டி போலும். தமிழ் அகராதி எழுதுவதற்கு 10 வரு காலமாய் லக்ஷக்கணக்கான ரூபாய் செலவு செய்து பார்ப்பனரைத்தான் வைக்கவேண்டும், அவர்கள்தான் தமிழுக்கு உரை எழுதவேண்டும், பார்ப்பனரல்லாதார் அதில் இருக்கக்கூடாது என்பதை ஒப்புக்கொள்ளாவிட்டால், அது தமிழுக்கும் சமஸ்கிருதத்திற்கும் போட்டி போலும். அப்படியானால் பள்ளியில் பாடங்களை தேசபாஷையாகிய தமிழில்தான் கற்றுக்கொடுக்கவேண்டும் என்று சொல்வதுகூட இங்கிலீஷுக்கும் தமிழுக்கும் போட்டி போலும்.

7. பார்ப்பனருடன் புரியும் போரில் கோயில் வேண்டாம், நோன்பு வேண்டாம், ஹிந்து மதம் வேண்டாம், பழைய ஒழுக்கங்கள் அநாகரீகம் என்ற எண்ணங்களை பரப்புதல் ஏழைத் தமிழ் மக்களுக்கு பெரும் கேடாய் முடியும் என்பது.



RangaRakes tamilnavarasam.com

பிராமணன் தவிர மற்றவன் உள்ளே போகக்கூடாது என்பதுதான் கோவிலானால் அது வேண்டவே வேண்டாம். பார்ப்பனருக்குக் கொடுப்பது தான் புண்ணியம்; பார்ப்பனருக்குக் கொடுத்தால்தான் மோக்ஷம் என்பதுதான் நோன்பானால் அந்நோன்பு வேண்டவே வேண்டாம்.

தனது மதத்தில் இருக்கும் வரை ஒருவன் தீண்டாதவன், பார்க்கத் தகாதவன், தெருவில் நடக்கத் தகாதவன், சண்டாளன் வேறு மதத்திற்கு போனால், அவன் பரிசுத்தன் என்கிற கொள் கையை உடையதுதான் இந்து மதம் என்றால், அம்மாதிரியான இந்து மதம் வேண்டவே வேண்டாம். அந்த மாதிரி மதம் பொய்யே பொய்தான்.

திருடினாலும் பிராமணன், குடித்தாலும் பிராமணன், லஞ்சம் வாங்கினாலும் பிராமணன், பொய் சொன்னாலும் பிராமணன், வக்கீல் வேலை செய்தாலும் பிராமணன், கொடுமை செய்யும் அரசாங்கத்திற்கு உளவாளியாயிருந்தாலும் பிராமணன் என்று சொல்வதுதான் பழைய ஒழுக்கமும், தர்மமுமாயிருக்குமானால், அவ்வித ஒழுக்கமும், தர்மமும் நமது நாட்டுக்கும், எதிரியின் நாட்டுக்கும்கூட வேண்டவே வேண்டாம். இவைதான் நாகரீகமானால் இவையல்லாத அநாகரீகமே மேலானது. இதை ஏழை மக்களிடம் பரப்புவதால் தமிழ் மக்களுக்கு கேடு வருவதோடு நரகம் வந்தாலும் அதற்காக பயப்படுபவன் மனிதனல்ல.

8. ஜாதிப் பொறாமையை அஸ்திவாரமாகக் கொண்ட கட்சிகள் பயன் பெறாமல் போன பின்பும், உண்மை தேசத்தொண்டு செய்து வந்த என் நண்பர்கள் இந்த ஜாதிச் சண்டையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது. இது ஜஸ்டிஸ் கட்சியையும், ஸ்ரீமான்கள். எஸ்.ராமநாதன், ஈ.வெ.ராமசாமி நாய்க்கர் முதலியோர்களை குறிப்பது.

இந்நாட்டில் தற்கால மாதிரியான பிராமண ஆதிக்கம் உள்ள வரையில் ஜஸ்டிஸ் கட்சி ஒழியவே ஒழியாது; பயன் பெறாமலும் போகாது. அதுசெய்த பயன் அளவிட்டு சொல்லமுடியாது; ஒத்துழையாமை எவ்வளவு தூரம் நாட்டு பாமர மக்களுக்கும் அரசாங்கத்தின் அக்கிரமம் விளங்கும்படி செய்து அரசாங்கத்தின் அகம்பாவம் ஒழிந்து பிரித்தாளும் தந்திரத்திலும், சூழ்ச்சியிலும் ராஜ்யபாரம் நடக்கச்செய்திருக்கிறதோ, அதுபோல் ஜஸ்டிஸ் கக்ஷி, பிராமணரல்லாத பாமர ஜனங்களுக்கு பிராமண ஆதிக்கத்தின் அக்கிரமங்களை விளங்கும் படி செய்து பிராமணர் தாங்கள் உயர்ந்த ஜாதி என்று சொல்லி ஒரு காரியத்தைச் சாதித்துக்கொள்ளும் அகம்பாவத்தை ஒழித்து பிராமணரல்லாதாரில் சிலரைச் சுவாதீனப்படுத்தி ஒருவர்மேல் ஒருவரை ஏவிவிட்டு பிரித்தாளும் தந்திரத்திலும், சூழ்ச்சியிலும் தங்கள் ஆதிக்கத்தை காப்பாற்றும்படியான நிலைமையில் இறக்கிவிட்டது. ஆயிரக் கணக்கான வருஷங்களின் அக்கிரமங்களை பத்து வருஷத்தில் அஸ்திவாரத்தையே ஆட்டிவிட்டதானால், இனி பாக்கியுள்ள வருஷங்களில் அது எவ்வளவு வேலை செய்யக்கூடும் என்பதை ஆச்சாரியார் அறியாமலில்லை.



ஆனாலும் பாமர ஜனங்களுக்கு சொல்லுவதுதானே என்கிற முறையில் சொல்லுகிறார். ஸ்ரீமான்கள். எஸ். ராமநாதனும், ஈ.வெ.ராமசாமி நாயக்கரும் செய்யும் தொண்டு, ஜாதிச் சண்டையானால் ஸ்ரீமான்கள். சீனிவாசய்யங்காரும், ஏ.ரங்கசாமி அய்யங்காரும், எம்.கே. ஆச்சாரியாரும், ஞ. சத்தியமூர்த்தியின் மகந்துக்களும், லோககுருக்களும், சி.ராஜகோபாலாச் சாரியாரும் செய்யும் தொண்டுகள் என்ன பெயரை உடையதோ! வாசகர்கள்தான் அறிந்து கொள்ள வேண்டும்.

9. நின்றால் குற்றம், உட்கார்ந்தால் குற்றம் பழைய புஸ்தகங்களில் இப்படி இருக்கிறது, அப்படி இருக்கிறது என்ற வீண் சண்டை பலன் தராது என்று பந்தயம் கூறுவது. இதைக்குறிப்பாய் சொன்னால் நன்றாயிருந்திருக்கும். அம்மாதிரி மனு முதலிய பழைய புஸ்தகங்களை இவர் ஒப்புக்கொள்ளுகிறாரா அல்லது தள்ளி விடுகிறாரா? பிராமண ஆதிக்கம் வந்தால் இந்த புஸ்தகம் அமுலுக்கு வருமா வராதா? (திருப்பூர் கான்பரன்சில் ஒரு தகராரின்போது அந்த புஸ்தகங்கள்தான் இன்றைக்கில்லாவிட்டாலும் மற்றொரு நாளைக் காவது தர்மங்களை காக்க உபயோகப்படும் என்று ஸ்ரீமான் ஆச்சாரியார் சொன்னவுடன் வெள்ளைக்கார ஆட்சி அடங்கி பிராமண ஆக்ஷி ஏற்பட்ட உடன்தானே என்று ஸ்ரீமான். ஈ.வெ.ராமசாமி நாயக்கர் சொன்னதும் ஆச்சாரியார் புன்சிரிப்பு சிரித்தார். அது இப்போது ஞாபகத்துக்கு வருகிறது.)

10. அரசாங்க விஷயங்களில் ஜாதிப் பேச்சு கூடாது, ஆனால் மத ஆச்சார விஷயங்களில் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க தாம் போர்புரிவதாய் ஒருவர் வீராவேச பேச்சுக்கள் பேசுகிறார். அரசாங்க விஷயத்திலாவது, விஷம முறைகள் அவ்வளவு கேடுவிளையா. மத ஆச்சார சம்பந்தமாய் தொடர்ந்தால் துவேஷம் அளவுகடந்து பரவி தீமையை உண்டாக்கும் என்பது. இது ஸ்ரீமான். P. வரதராஜுலு நாயுடுவைக் குறிப்பது. ஜாதி வித்தியாசக் கொடுமையை ராஜீய விஷயத்தில் நுழைத்தால் ஸ்ரீமான்கள். ஸ்ரீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ஏ.ரங்கசாமி அய்யங்கார், M.K. ஆச்சாரியார் இவர்கள் “நாடு கெட்டுப் போகும்” என்று சொல்லுகிறார்கள். சமூக மத விஷயத்தில் நுழைத்தால் ஸ்ரீமான் . ராஜகோபாலாச்சாரியார் “நாட்டில் தீமை விளைந்துவிடும்” என்று சொல்லுகிறார். அப்படியானால் ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடுவையும், ஈ.வெ.ராமசாமி நாயக்கரையும், S.ராமநாதனையும் இவர்கள் என்னதான் பண்ணச்சொல்லுகிறார்களோ தெரியவில்லை. ஒருசமயம் ஸ்ரீமான் திரு.வி.கல்யாணசுந்திர முதலியார்போல் திருகணி பீரங்கியாய் இருக்கச் சொல்லுகிறார்களோ என்னமோ தெரியவில்லை. அப்படி இருந்தால் அவரவர்கள் பத்திரிகைகளுக்குகூட வாரம் ஒருமுறை கற்பனைகள் வெளியிடக் கொடுத்து உதவுவார்கள்போல் இருக்கிறது.

**குடி அரசு – கட்டுரை – 06.12.1925**



RangaRakes
tamilnavarasam.com

# இந்து மகாசபையும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும்

இந்து மகாசபை ஆதியில் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே இது பிராமண ஆதீனத்திற்காக ஏற்படுத்தப்பட்டதென்றும், பிராமணரல்லாதாரின் பிறவி இழிவைப் பலப்படுத்துவதாய் முடியுமென்றும், இந்தியாவின் ஜனசமூகத்தின் நான்கிலொரு பாகத்திற்கு மேலாய் இருக்கும் மகமதிய சகோதரர்களின் அதிருப்திக்கும், சந்தேகத்திற்கும் இடமளிக்கக் கூடியதாகும் என்றும் இந்து மகாசபை ஆரம்பித்ததற்கே, மகமதிய சகோதரர்களின் நடவடிக்கையைத்தான் முக்கியக் காரணமாகச் சொல்லி வருவதால் வெகு கஷ்டப்பட்டு மகாத்மாவினால் ஏற்பட்ட இந்து - முஸ்லீம் ஒற்றுமை அடியோடு மறைந்து போகுமென்றும், நமது குடி அரசின் பத்திராதிபர் பல தடவைகளிலும், பல பிரசங்கங்களிலும் சொல்லிக்கொண்டே வந்திருக்கின்றார்.

அதுமாத்திரமல்லாமல், நமது தமிழ்நாட்டில், இந்து மகாசபைக்கு கிளைகளாக ஏற்படுத்தப்பட்ட சபைகளிலெல்லாம் வருணாசிரம தர்மிகளும், பிறவியிலேயே தாங்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களுமே அக்கிராசனாதிபதிகளாகவும், காரியதரிசிகளாகவும் நியமுகம் பெற்றிருக்கின்றார்களென்பதும், அநுபவத்தில் தெரிந்த விஷயம். பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காக, இந்து சபையில் இருக்கும்பொழுது தீண்டாமை ஒழிய வேண்டுமென்று ஓர் போலித் தீர்மானத்தை ஏற்படுத்திக் கொள்ளுவதும், அதே ஆசாமிகள் மறுபடியும் வருணாசிரம சபையென்று ஒன்றுகூட்டி, அதிலும் உட்கார்ந்து கொண்டு தீண்டாமை வேத சம்மதம் என்றும், மநு தர்மவிதியென்றும், வருணாசிரம தர்மத்தைக் காப்பாற்றவேண்டும் என்றும், இதற்கு விரோதமாய் இருக்கும் மகாத்மா காந்தியை ஒழிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்வதை நாம் பார்க்கிறோம்.

சென்னை மாகாணத்தின் இந்து மகாசபையின் கிளைத்தலைவர் ஸ்ரீமான் டி. ஆர். ராமச்சந்திர ஐயர் என்பதை வாசகர்கள் அறிவார்கள். அவர் வருணாசிரம தர்மத்தினுடையவும், பிறவியில் தான் உயர்ந்த பிராமண ஜாதியாமென்பதினுடையவும், தீண்டாதான் என்பவன் தெருவில் நடக்கக் கூடாது, கண்களில் படக்கூடாது என்பதினுடையவும் அவதாரம். அதே மாதிரி கும்பகோணம், தஞ்சை, நாகப்பட்டணம், கோயமுத்தூர் முதலிய இடங்களிலுள்ள இந்து மகாசபைத் தலைவர்களும், சென்னைத் தலைவருக்கு இளைத்



தவர்களல்ல. கும்பகோணம் இந்து மகாசபையிலேயே தீண்டாமை சாஸ்திர சம்மதமானதென்றும், அதை ஒழிக்கக்கூடாதென்றும் ஓர் தீர்மானம் செய்திருப்பதாக நமக்கு ஞாபகமிருக்கிறது. இப்படியிருக்க இந்து மகா சபையை நாட்டில் பரப்புவது எப்படி இந்துமதத்திற்கு நன்மை பயப்பதாகும்? ஓர் கொள்கைக்காக ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டால் அந்தக் கொள்கைப்படி நடப்பவர் கிடைக்காவிட்டாலும், அந்தக் கொள்கையை நம்புகிறவர்களாவது, அந்த ஸ்தாபனத்தை நடத்துகிறவர்களாயிருக்க வேண்டாமா? ஸ்ரீமான் டி. ஆர். இராமச்சந்திர ஐயர் தீண்டாமையை ஒழிப்பதைக் கொள்கையாகக் கொண்ட ஒரு சபைக்கு அக்கிராசனம் வகிப்பதானது, வாஸ்தவத்திலேயே அச்சபையின் யோக்கியதையைக் காட்டுவதாகுமா? அல்லது அச்சபையின் புரட்டுகளை காட்டுவதாகுமா? நமது நாட்டிலுள்ள சில வைதீகர்கள் எப்படி பாமர ஜனங்களை ஏமாற்றி ஆதிக்கம் பெறலாம் என்கிற கொள்கைக்கு ஸ்தாபனங் கண்டுபிடிக்க கருத்தாய் இருக்கின்றார்களேயல்லாமல் உண்மையாக ஓர் காரியத்தைச் செய்வதற்கு ஒருவருமில்லை. இந்து மகாசபையின் ஸ்தாபகர் ஸ்ரீமான் மாளவியா அவர்களே, தீண்டாதாரைப் பற்றி பேசும்போது, கண்களில் ஜலம் விடுகின்றாரேயல்லாமல், பிறவியில் தனக்கும், தீண்டாதாருக்கும் வித்தியாசம் இல்லை என்பதை ஒப்புக்கொள்ளுவதே இல்லை. தன்னை பெரிய வருணாச்சிரமத் தர்மியாகத்தான் ஒப்புக்கொள்ளுகிறார். முஸ்லீம்களின் உபத்திரவங் காரணமாக இந்து மகாசபையை ஏற்படுத்த வேண்டியதாயிற்று என்று சொன்ன காரணத்தால், பஞ்சாபில் முஸ்லீம்கள் நடத்தையால் அதிருப்தி கொண்ட லாலா லஜபதிராய் அவர்களும் இந்து மகாசபையில் சேர்ந்து இந்து மகாசபைக்கு உழைக்க முன் வரவேண்டியதாயிற்று.

இந்துக்கள் அதிகமாயிருக்கிற பாகங்களில், இந்துக்களல்லாதவர்களைத் தாழ்மையாகக் கருதுவதும், இந்துக்களில் பிராமணர்கள் அதிகமாயிருக்கிற பாகங்களில் பிராமணரல்லாதாரைத் தாழ்மையாகக் கருதுவதும், மகமதியர் அதிகமாயிருக்கிற பாகங்களில் மகமதியரல்லாதாரைத் தாழ்மையாகக் கருதுவதும், கிறிஸ்தவர்கள் அதிகமாயிருக்கிற பாகங்களில் கிறிஸ்தவரல்லாதாரைத் தாழ்மையாகக் கருதுவதும் பெரும்பாலும் உலக சுபாவமா கவே கருதுகிறோம். அத்தோடு, கொஞ்சம் செல்வாக்கு உள்ளவர்களும் செல்வாக்கில்லாதவர்களைத் தாழ்மையாகவே கருதுவதும் சுபாவமாகத் தானிருக்கிறது. உதாரணமாக, இந்துக்கள் மகமதியர்களையும், கிறிஸ்தவர்களையும் மிலேச்சர்களென்று சொல்லுவதையும், மகமதியனைத் தொட்டால் தொட்ட பாகத்தை வெட்டியெறிய வேண்டுமெனச் சொல்லி வந்ததையும், இந்துக்களுக்குள் பிராமணனை, பிராமணரல்லாதார் மிலேச்சர்களென்று அகராதியில் எழுதியிருப்பதையும், பிராமணர் பிராமணரல்லாதாரை விபசாரி மகன், வேசி மகன், சூத்திரன் என்று எழுதிவைத்துக் கொண்டிருப்பதையும் மகமதியர் இந்துக்களை 'காபர்' அதாவது 'நாஸ்திகர்' என்று சொல்லுவதையும், கிறிஸ்தவர்கள் இந்துக்களை 'அஞ்ஞானிகள்' என்று சொல்லுவதையும்,



RangaRakes tamilnavarasam.com

தினமும் பார்த்தும் கேட்டும் வருகிறோம். இத் தத்துவத்தினாலேதான், இன்றைய தினம் நாம் நமது ராஜ்யத்தை இந்திய அரசாங்கமாகச் செய்து கொள்ளாமல், பிரிட்டிஷ் அரசாங்கமாகச் செய்து வைத்துக் கொண்டிருக்கிறோம். நமது பொய்க் கிளர்ச்சிகளின் பலனாக ஒருசமயம் பிரிட்டிஷ் அரசாங்கம் தொலைந்தாலும், ஜெர்மனி அரசாங்கமோ, ஜப்பான் அரசாங்கமோ அல்லது வேறு எந்த வெளிநாட்டு அரசாங்கமோ ஏற்படுமேயல்லாமல் ஒருக்காலும் இந்திய அரசாங்கம் ஏற்படுமென்று கருதுவதற்கே வகையில்லாமல் இருக்கிறது. லாலா லஜபதிராய் அவர்கள் தமது பிரசங்கத்தில், "முஸ்லீம்கள், முஸ்லீம் ராஜ்யம் ஸ்தாபிக்க வேண்டுமென்று ஏதோ ஓர் பத்திரிகை எழுதுவதாகவும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பதாகவும், ஆதலால் இடங்கொடுக்கக் கூடாதென்றும்" வெகு எளிதில் சொல்லிவிட்டார்.

இந்திய அரசாங்கத்தில் இந்திய ஜனசங்கையில், நாலிலொரு பங்குக்கு மேற்பட்ட பெரிய சமூகத்தாராகிய மகமதிய சகோதரர்களுக்கு பங்கு உண்டா? இல்லையா? அவர்கள் ஏழரைக் கோடிப்பேரும் இனிமேல் இந்தியாவை விட்டுப் போய்விட முடியுமா? அவர்கள் சுயமரியாதையுடன் வாழ வேண்டுமானால், ராஜீய விஷயத்திலும், மதவிஷயத்திலும் நமக்கு சரியான அந்தஸ்துப் பெற்றுத்தானே ஆக வேண்டும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால் அவர்களுக்கு சமஉரிமை கிடைத்து விடுமா ? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மகமதியர்களுக்கு ஏற்படாததற்கு முன் மகமதியர் கொஞ்சமாயுள்ள எந்தப் பிரதேசத்திலாவது, தேர்தல்களில் ஒழுங்கான பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிறார்களா? அல்லது எந்த கிறிஸ்தவர்களாவது அப்படிப் பெற்றிருக்கிறார்களா? உதாரணமாய், நம் நாட்டிலுள்ள தீண்டாதாரென்று சொல்லப்படுவோரை நாம் எப்படி வைத்திருக்கிறோம்? பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்டு இன்றைக்கு 200 வருடங்களாகியும், ஒரு தீண்டாதானாவது தேர்தல்களில் நின்று இந்தியனுடன் போட்டி போட்டு ஜெயம் பெற சக்தியுண்டாக்கியிருக்கிறானா? எந்த ஒரு தீண்டாதானல்லாத இந்தியனாவது, தீண்டாதவனும் நமது சமூகத்தில் மூன்றிலொரு பங்கு எண்ணிக்கை உள்ளவன் தானே, அவனை நிறுத்தி அவனுக்கு நம்முடைய ஓட்டைக் கொடுத்து, நமது அரசியல், சமூகவியல் இவைகளில் அவனுக்குள்ள பங்கைக் கொடுக்க வேண்டுமென்று ஸ்ரீமான்கள் மாளவியா, லஜபதிராய் போன்ற யாராவது அநுபவத்தில் காட்டியிருக்கிறார்களா? மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் சமசுதந்திரம் அடைவதோடல்லாமல், உயர்ந்த நிலைமையையும் அடைய ஆசைப்படுவது ஒவ்வொரு ஜீவனின் சுபாவமாகும். அப்படியிருக்க, உன்னுடைய சமத்துவத்திற்கு நானும் பிரயத்தனப்படமாட்டேன், நீ பிரயத்தனப்பட்டால் அதையும் ஒழிப்பதற்கு நான் பிரயத்தனப்படுவேன் என்று சொல்வது சமத்துவ மனித தர்மமாகுமா? இந்தியாவில் இந்துக்களும், கிறிஸ்தவர்களும், மகமதியர்களும், இந்துக்களில் தீண்டாதவர்களும், ஒருவருக்கொருவர் பரஸ்பர நம்பிக்கையும் சம உரிமையும் பெற்றாலல்லாது, இந்தியா விடுதலையடையுமென்று நினைப்பது பைத்தியக்காரத்தனமென்றே



சொல்லுவோம். சம உரிமையும் நம்பிக்கையும் ஏற்பட வேண்டுமானால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மனம் ஒப்பிக் கொடுப்பதுதான் ஏற்ற மருந்தாகும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உணர்ச்சியை அடக்கி மழுப்பி விடலாமென்று நினைப்பது, சரீரத்தில் ஏற்பட்ட ஒரு புண்ணை மருந்துபோடாமல் மூடிவைத்து விடுவதினால் அது ஆறிப்போகுமென்று நினைப்பதுபோல்தான் முடியும். இந்து மகாசபைக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் விரோதமென்று சொல்வதானால் அவ்விந்து மகாசபை, நமது தேசத்தின் ஒற்றுமைக் குறைவுக்கும், துவேஷத்திற்கும் ஏற்பட்ட மற்றொரு சாதனமென்றுதான் சொல்ல வேண்டும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி 'இந்து'ப் பத்திரிகையென்னும் பிராமணப் பத்திரிகை எழுதியிருப்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். அதாவது :–

**"வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், ஜனங்களிடை சுயமதிப்பை உண்டு பண்ணியிருக்கிறதென்பதையும், சமுதாய முன்னேற்றத்திற்கு காரணமாயிருக்கிறதென்பதையும், அது ஏற்படுவதற்கு முன் ராஜீய வாழ்வில் அலட்சிய மாயிருந்த வகுப்பினர்க்கு ராஜீய அறிவு புகட்டுவதற்கான வசதிகளை அது உண்டு பண்ணியிருக்கிறதென்பதையும் மறுக்க முடியாது"** என்று எழுதியிருக்கிறது.

இந்தக் குணங்களை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் உண்டாக்கியிருக்குமேயானால், இந்தியாவிலுள்ள மற்ற எல்லா ஸ்தாபனங்களையும் விட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அதிக பலன் அளித்திருக்கிறது என்பதில் சந்தேகம் உண்டா ? ஆதலால் இந்து மகா சமூகமானது, ஒரு கூட்டத்தாரின், ஒரு குறிப்பிட்ட கொள்கைக்கு அநுகூலமானதேயல்லாமல், தேச பொது நன்மைக்கும், சமூக ஒற்றுமைக்கும் உற்றதல்லவென்பதையும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்தான், தேச ஒற்றுமைக்கும், சமூகமுன்னேற்றத்திற்கும், பரஸ்பர நம்பிக்கைக்கும் சஞ்சீவி என்பதையும் நாம் உறுதியாகச் சொல்லுவோம்.

**குடி அரசு – தலையங்கம் – 13.12.1925**



RangaRakes tamilnavarasam.com

# தியாகராயர் திருநாள்

இம்மாதம் 16, 17, 18-ந்தேதி ஆகிய மூன்று நாட்களையும், காலஞ் சென்ற பெரியாரான ஸ்ரீமான். பி. தியாகராய செட்டியாரின் நினைவுக்குறிய திரு நாளாகக் கொண்டாடவேண்டுமென்று, கனம். பனகல் இராஜா ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இதனைப் பற்றி "லோகோபகாரி" பத்திரிக்கை பின்வருமாறு எழுதுகிறது:-

"டிசம்பர் மாதம் 16,17,18-ந்தேதிகளை காலஞ்சென்ற பெரியாரான திரு. பி. தியாகராய செட்டியாரவர்களின் திருநாளாகக் கொண்டாட வேண்டு மென்று தீர்மானித்திருக்கிறார்கள். காலஞ்சென்ற பெரியாருக்கு ஞாபகச் சின்னம் ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்றும், அவர் கொள்கைகளை நாடெங்கும் பரப்பவேண்டுமென்றும், அதற்காக நன்கொடைகள் வசூலிக்க வேண்டுமென்றும் முடிவு செய்திருக்கிறார்கள். காலஞ்சென்ற தியாகராயர் நாட்டின் நல்வாழ்வு கருதியும், சிறப்பாகப் பிராமணரல்லாதாரின் பெரு வாழ்வு கருதியும், பெருந்தொண்டு செய்தாரென்பதை யாரும் மறக்கமுடி யாது. அவர் திரு நாளைத் தக்கதோர் முறையில் கொண்டாடவேண்டும். அவர் நினைவை மற்றவர்கள் எவ்வாறு கொண்டாடினும் கொண்டாடட்டும். தியாகராயர் பெயரால் நாட்டிலே தகுதியான பல இடங்களில், கதர் நெசவுச் சாலைகள் ஏற்படுத்தவேண்டுமென்று நாம் சொல்லுவோம். இதனால் பிராமணரல்லாதார் பெரும்பயனடைவார்கள். காலஞ்சென்ற செட்டியார், சென்னையில் சுமார் பதினைந்து வருடங்களுக்குமுன் ஒரு நெசவுச்சாலை யைத் தமது சொந்தப் பொறுப்பில் நடத்தி வந்தமை இதனையொட்டி நமது நினைவுக்கு வருகிறது."

நமது சகோதரப் பத்திரிக்கையின் ஆசைகளை நாம் மனதார ஆமோ திக்கிறோம். காலஞ்சென்ற பெரியாரின் திருநாளை, உண்மைப் பிராமண ரல்லாதார் யாவரும் தக்க சிறப்புடன் கொண்டாடவேண்டுமென் பதே நமது விருப்பமாகும். இதனை அறிந்தும், பிராமணரல்லாத பத்திரிக்கைகள் பல மௌனஞ் சாதித்திருப்பதை நோக்கும்போது, இப்பத்திரிகைகள் இத்திரு நாளைக் கொண்டாடவேண்டுமென எழுதினால், பிராமணப் பத்திரிக்கை களும், அப்பத்திரிக்கைக் கோஷ்டியினரும் இவர்கள் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து விட்டார்கள் எனக் கூச்சலிடுவார்கள் எனப் பயந்து இருக்கின்றார்கள் போலும்; யார் எப்படியிருந்த போதிலும் நமக்கு அதைப்பற்றிக் கவலை யில்லை. பிராமணரல்லாதார் இத்திருநாளைக் கொண்டாடவேண்டு மென மீண்டும் வலியுருத்துகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.12.1925**



# காஞ்சீ மகாநாட்டுத் தலைவர்

காஞ்சீ மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான். திரு.வி.கலியாணசுந்தர முதலியார், தமது 'நவசக்தி' பத்திரிகையில் "மகாநாட்டுத் தலைவர் ஐயங்கார், ஆச்சாரியார் கைப்பிள்ளையாக நடந்தார் என்னும் உரைகளை 'குடி அரசு' பத்திரிகை திரும்ப வாங்கிக்கொள்வது அதன் பெருந்தகைமையைக் காப்பதாகும். ஒருவர் தனது மனச் சான்றுப்படி நடந்ததை மற்றொருவர் திரித்துத் தம் மனம் போனவாறு கூறுவது அறமாகா. "குடி அரசு" ஆசிரியர்பால் எமக்கு நிரம்பிய அன்பு உண்டு. அவ்வன்பு காரணமாகவே இவ்வாறு எழுதத் துணிந்தோம்" என்று எழுதியிருக்கிறார்.

ஆனால் 'குடி அரசு' அதன் பெருந்தன்மையைக் காப்பாற்றிக் கொள்வதிலோ, சிறுந்தன்மை அடையாதிருப்பதிலோ கருத்துவைத்து அது தமிழ் நாட்டில் உலாவவில்லை. பெருந்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், அனேக சிறுந்தன்மைக் காரியம் செய்யவேண்டுமென்பது அதற்குத் தெரியும். பெருந்தன்மை வந்தாலும் சரி சிறுந்தன்மை வந்தாலும் சரி அல்லது குடி அரசே மறைந்து போவதாயிருந்தாலும் சரி உண்மையை - தன் மனதுக்கு உண்மை என்று பட்டதை - எடுத்துச் சொல்லுவதுதான் அதன் தொண்டாக உடையது என்பதை நவசக்தியும் அதன் ஆசிரியரும் உணரட்டும்.

அல்லாமலும், இது உண்மைக் கலியாணசுந்தர முதலியார் எழுதியிருப் பாராயின், நிபந்தனையில்லாத மன்னிப்புக் கேட்டுக்கொண்டு எழுதியவை களைப் பின்வாங்கிக்கொள்ள வேண்டியது உண்மையை உத்தேசித்து குடி அரசின் கடமையா என்றாவது யோசிக்கும். ஆனால், தமிழ்நாட்டை ஏமாற்றி பிராமணர்களுக்கு தலையையும், பிராமணரல்லாதாருக்கு வாலையும் காட்டும் போலிக் கலியாணசுந்திர முதலியார் எழுதியதைக் "குடி அரசு" எப்படி ஏற்கும்? போலிக் கலியாணசுந்திர முதலியாரின் அரசியல் நடவடிக்கை களைத் திராசின் ஒரு தட்டில் வைத்துக் "குடி அரசு" "தமிழ்நாடு" "ஸைபுல் இஸ்லாம்" "சுகோதயம்" "ஸ்வராஜ்யா" "லோகோபகாரி" "ஊழியன்" "நவ இந்தியா" "தீனபந்து" "வஞ்சிகேசரி" முதலிய பத்திரிக்கைகள் எழுதி யிருப்பவைகளையும் மற்றொரு தட்டில் வைத்தால், ஸ்ரீமான் போலிக் கலியாணசுந்திர முதலியாரின் தட்டு நிலத்தை விட்டுக் கொஞ்சங்கூட அசையாது என்பதோடு, ஸ்ரீமான் முதலியாரின் நடத்தைக்கு 'குடி அரசு'



RangaRakes tamilnavarasam.com

முதலியவைகளெழுதியது ஆயிரத்திலொரு பங்குகூட நிகராகாது என்பது விளங்கும். ஸ்ரீமான். முதலியாரவர்களுக்கு மனச்சாக்ஷியென்னும் பேரால், தாம் நடந்து கொண்ட காரியத்தை மறுபடியும் நினைப்பு மூட்டுகிறோம். இதுதானா ஸ்ரீமான். முதலியாரின் மனச்சாக்ஷி யென்பதை மற்றொருமுறையும் ஸ்ரீமான் முதலியாரைச் சிந்தித்துப் பார்க்கும்படி தாழ்மையாய்க் கேட்டுக் கொள்கிறோம். இதனால் அவருக்கு உண்மை கிடைக்காவிட்டால், தமிழ் நாட்டிலுள்ள ஏதாவதொரு ஐந்து பத்திராதிபர்களைப் பஞ்சாயத்தாராக நியமித்து, அவர்களைக் கொண்டு சொல்லப்படும் முடிவுக்கு ஸ்ரீமான் உண்மைக் கலியாணசுந்திர முதலியார் தயாராயிருக்கிறாராவென்று கேட்கி றோம். பஞ்சாயத்தார் சொல்லும் முடிவுக்கு "குடி அரசு" கட்டுப்படத் தயாரா யிருக்கின்றதென்று இதனால் உறுதி கூறுகிறது. அன்றியும் ஸ்ரீமான். முதலியாரவர்களை "குடி அரசின்" நடத்தைக்காகச் சர்க்கார் நியாய ஸ்தலத் திற்குப் போகும்படி ஒரு நண்பர் அவருக்கு யோசனை சொன்னாராம். அப்படியானாலும், தனது நடபடிக்கையை, நியாயமானதாக்கிக் கொண்டா லுங்கூட சம்மதமே. குடி அரசுக்காவது, அதன் பத்திராதிபருக்காவது நவசக்தியிடமோ, அதன் பத்திராதிபரான ஸ்ரீமான். முதலியாரிடமோ எவ்வித துவேஷமோ, பகைமையோ இல்லையென்பதையும் "குடி அரசும்" அதன் பத்திராதிபரும் உறுதி கூறுகிறார்கள். நிற்க, காஞ்சீயில் கூடின பிராமண ரல்லாதார் மகாநாட்டிற்கு ஸ்ரீமான் முதலியாரவர்கள் வரவேயில்லை. ஸ்ரீமான். டாக்டர். வரதராஜுலு நாயுடு வந்திருந்தார். டாக்டர் வரதராஜுலு நாயுடுவை ஸ்ரீமான் நாயக்கர் மகாநாட்டுக்கு வரும்படி அழைத்தபோது, தான் வருவதில் ஆக்ஷேபணையில்லையென்றும், ஸ்ரீமான். முதலியார் வருவதில்லையெனச் சொல்லிவிட்டாரென்றும் சொன்னார். உடனே ஸ்ரீமான் முதலியாரை, ஸ்ரீமான் நாயக்கர் கேட்டபோது, ஸ்ரீமான் முதலியார் தாம் அப்படி ஒருக்காலும் சொல்லவேயில்லையென்றும், ஸ்ரீமான். நாயுடு வேண்டுமென்றே சொல்லி, நம்மிருவருக்கும் கலகத்தை உண்டாக்கப் பார்க்கின்றாரென்றும், மற்றும் சில விஷயங்களும் சொன்னதோடு, தான் வருவதாகவும் ஒப்புக்கொண்டார். அப்படியிருக்க, பிராமணரல்லாதார் மகாநாட்டிற்கே, ஸ்ரீமான். முதலியார் வராத காரணமென்ன? அதன் நடபடிக்கைகளைக் கூடத் தமது பத்திரிக்கை யில் நடுநிலைமையுடன் பிரசுரிக்காமல், சுதேசமித்திரனைவிட மோசமான நிலைமையில் பிரசுரிக்கக் காரணமென்ன? அல்லாமல், "ஸ்ரீமான். தண்ட பாணி பிள்ளையின் கடுமையான மொழிப் பிரயோகத்தால் கூட்டத்தில் குழப்பமும், கூச்சலும் ஏற்பட்டு கூட்டம் கலைக்கப்பட்டது" என்று விஷம நிரூபம் எழுதக் காரணமென்ன? கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுடைய பெயரை ஏன் குறிப்பிட்டிருக்கக்கூடாது? அன்றி, மகாநாட்டின் விஷயா லோசனைக் கமிட்டியிலோ, மகாநாட்டிலோ ஒருவரும் முறைப்படி பிராமண ரல்லாதார் மகாநாட்டுத் தீர்மானத்தைக் கொண்டுவர வில்லையென்றும் அவை மகாநாட்டில் ஆலோசனைக்கே கொண்டுவரவில்லையென்றும் நவசக்தியில் எழுதியிருப்பது உண்மை முதலியாரின் நடவடிக்கையா? அல்லது போலி



முதலியாரின் நடபடிக்கையா? நிற்க, பிராமணரல்லாதார் மகாநாட்டுத் தீர்மானங்களை மகாநாடு முடிந்தவுடன் விஷயாலோசனைக் கமிட்டியில்,

1. தலைவர் ஸ்ரீமான். முதலியாரிடம் ஸ்ரீமான். நாயக்கர் கொடுத்தாரா? இல்லையா?

2. ஸ்ரீமான். பாவலர் அதைப் பிரேரேபித்தாரா? இல்லையா?

3. ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளை அதை ஆதரித்தாரா? இல்லையா?

4. ஸ்ரீமான். நாயக்கரை ஸ்ரீமான் முதலியார், இரண்டு தீர்மானங் களிருக்கிறதே, உங்களுடைய அபிப்பிராய மென்னவென்று கேட்டாரா? இல்லையா?

5. ஸ்ரீமான். நாயக்கர் எழுந்து பிராமணரல்லாதார் மகாநாட்டுத் தீர்மா னம், நானும் இருந்து செய்ததாதலால் அதற்கு மாறாக இப்பொழுது நான் பேச முடியாது; ஆகையினால் எந்தத் தீர்மானத்துக்கானாலும், வோட்டுக் கேளுங்கள் என்று ஸ்ரீமான். நாயக்கர் சொன்னாரா? இல்லையா?

6. அதன்மேல் ஸ்ரீமான். எஸ்.இராமநாதன் தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்டுத் தோற்றுப் போயிற்றா? இல்லையா?

7. அது தோற்றவுடன், உடனே ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்கார், ஸ்ரீமான். பாவலரை அவர் பிரேரேபித்த தீர்மானத்தை வாபீஸ் வாங்கிக்கொள் ளும்படி சொன்னாரா? இல்லையா?

8. ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளை எழுந்து, ஸ்ரீமான். பாவலர் தீர்மானத்தைப் பின்வாங்கிக்கொள்ளுவதாய்ச் சொன்னாலும், தான் அதை ஒப்புக்கொள்வதில்லையென்று வலியுறுத்தினாரா? இல்லையா?

9. பிறகு ஸ்ரீமான். முதலியார் வாபீஸ் வாங்கிக்கொள்ள அநுமதியளித்து விட்டதாகச் சொன்னாரா? இல்லையா?

10. அந்த அநுமதியை ஸ்ரீமான். நாயக்கர் ஒப்புக்கொள்ளாமல் வாதாடி யதில், மறுபடியும் கொண்டுவர ஸ்ரீமான். முதலியார் அநுமதி கொடுத் தாரா? இல்லையா?

11. ஸ்ரீமான். நாயக்கரை மறுபடியும் பிரேரேபிக்கும்போது, எழுத்து மூலியமாய்க் கொடுங்கள் என்று கேட்டாரா? இல்லையா?

12. ஸ்ரீமான். நாயக்கர் முன்னமே உங்கள் கையில் கொடுத்திருக்கிறதே, அதை நீங்கள் கையில் வைத்துக் கொண்டிருக்கிறீர்களேயென்று சொன்னாரா? இல்லையா?

13. அது சமயம் ஸ்ரீமான். முதலியார் கையில் அத் தீர்மானங்கள் இருந்ததா? இல்லையா?



RangaRakes tamilnavarasam.com

14. தமது கையில் அத்தீர்மானங்களிருந்தும், அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன், வேறு எழுதிக்கொண்டு வாருங்கள் என ஸ்ரீமான். முதலி யார் சொன்னாரா? இல்லையா?

15.ஸ்ரீமான். நாயக்கரும், ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளையும் பிராமண ரல்லாதார் மகாநாட்டுத் தீர்மானத்தை எழுதிக் கொண்டிருக்கும்போது தேர்தலுக்காக ஓர் போர்டு நியமிக்க வேண்டும் என்கிற ஓர் தீர்மா னத்தை ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடுவைக் கொண்டு பிரேரேபிக்கச் செய்து இத் தீர்மானத்திற்கு என்ன சொல்லுகின்றீர்களென ஸ்ரீமான். நாயக்கரைக் கேட்டாரா? இல்லையா?

16.ஸ்ரீமான். நாயக்கர் தனது தீர்மானம் எழுதிக்கொண்டிருக்கிறது, இதைத்தான் வோட்டுக்கு விடவேண்டும் என அக்ராசனராகிய ஸ்ரீமான். முதலியாரைக் கேட்டுக்கொண்டாரா? இல்லையா?

17.பிராமணரல்லாதார் மகாநாட்டுத் தீர்மானம் எழுதி, ஸ்ரீமான். தண்ட பாணி பிள்ளையால் ஸ்ரீமான். முதலியாரிடம் கொடுக்கப்பட்டவுடன், இது ஒழுங்குத் தவறானதென்று ஒரேயடியாய் அடித்து விட்டாரா? இல்லையா?

18.வகுப்புவாரி தீர்மானத்தை ராஜீய மகாநாட்டில் பிரேரேபிக்க ஸ்ரீமான். ராமநாதன் அனுமதி கேட்டதற்கு, ஸ்ரீமான். முதலியார் அனுமதியளித்தாரா? இல்லையா?

19. ஷை தீர்மானத்தை நகல் தீர்மானங்களோடு அச்சடித்து, பிரேரே பிப்பவர் ஸ்ரீமான். எஸ்.இராமநாதனென்றும், ஆமோதிப்பவர் ஸ்ரீமான். இராமசாமி நாயக்கரென்றும் குறிக்கப்பட்டதா? இல்லையா?

20. இப்படியிருக்க, மகாநாட்டின் விஷயாலோசனைக்கமிட்டியிலோ, மகாநாட்டிலோ ஒருவரும் முறைப்படி தீர்மானங்களைக் கொண்டுவர வில்லை யென்று நவசக்தியில் ஸ்ரீமான். முதலியார் எழுதியிருப்பது உண்மை முதலியாரின் கூற்றா? அல்லது போலி முதலியாரின் கூற்றா?

## மகாநாட்டு நடபடிக்கைகள்

21. மகாநாட்டில் இரண்டாவது தீர்மானமாக, ஸ்தல ஸ்தாபனங்களைக் காங்கிரஸ் கைப்பற்றவேண்டும் என்ற தத்துவத்தோடு கொண்டுவந் திருந் ததைப் பிரேரேபிக்க, ஆதரிக்க, ஆமோதிக்க மூன்று கனவான் கள் பெயர் குறிப்பிட்டிருந்ததா? இல்லையா?

22. அந்தப்படிச் செய்யாமல், அக்ராசனாதிபதி தானே எழுந்து அவசர வசரமாய்ப் பிரேரேபித்து நிறைவேறிவிட்டதென்று சொன்னாரா? இல்லையா?



23. இதற்குக் காரணம் ஸ்ரீமான்.இராமசாமி நாயக்கர், பின்னால் தண்ணீர் சாப்பிட்டுக் கொண்டிருந்ததும், அவர் வந்தால் ஆக்ஷேபிப்பார் என்கிற பயந்தானா? அல்லவா? அல்லாமலும், அவர் வந்ததும் ஸ்ரீமான். முதலியாருட்பட யாவரும் சிரித்தார்களா? இல்லையா?

24. பாட்னா தீர்மானம் பாஸானபிறகு, ஸ்ரீமான். இராமசாமி நாயக்கரை, ஸ்ரீமான். முதலியார் கூப்பிட்டு உங்கள் தீர்மானம் ஒரு சமயம் தோற்றா லும் தோற்றுப் போகும்போல் இருக்கிறது. ஆதலால் வாபீஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னாரா? இல்லையா?

25. ஸ்ரீமான். இராமசாமி நாயக்கர் தன்னுடைய தீர்மானம் தோற்கா தென்றும், தோற்றுவிட்டாலும் அதைப்பற்றிக் கவலையில்லை யென்றும் சொல்லிவிட்டாரா? இல்லையா?

26. பிறகு கொஞ்சநேரம் பொறுத்து காங்கிரஸ் விதிப்படி இருபத்தைந்து பிரதிநிதிகளின் கையெழுத்திருந்தால்தான் பிரேரேபிக்கலாமென்று ஸ்ரீமான். இராமநாதனிடம் சொன்னாரா? இல்லையா?

27. இதற்குக் காரணம், 25 கையெழுத்து வாங்குவதற்குள்ளாக மகாநாட்டு மற்ற தீர்மானங்களை யெல்லாம் தானே பிரேரேபித்து அவ சரவசர மாய்த் தீர்மானித்து, மகாநாட்டு நடவடிக்கைகளை முடித்து அத்தீர்மானம் மகாநாட்டுக்கு வரவொட்டாதபடி செய்ய வேண்டு மென்ற எண்ணந்தானா? இல்லையா?

28.அப்படியிருந்தும், கல்பாத்தி தீர்மானத்தின் பேரில் ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்கார் சிநேகிதர்கள் சிலர் பேசக் கேட்டுக்கொண்டதால் அவர்களுக்குப் பேச அநுமதி கொடுத்தால், மத்தியில் கிடைத்த கொஞ்ச நேரத்தில் சுமார் 30 பிரதிநிதிகளுக்கு மேல் ஸ்ரீமான். நாயக்க ரால் தீர்மானத்துக்குக் கையெழுத்து வாங்கிக் கொடுக்கப்பட்டதா? இல்லையா?

29. இது கேட்டதும், கொடுத்ததும், கையெழுத்து வாங்கினதும், பாட்னாத் தீர்மானத்தை ஒப்புக்கொண்டு காங்கிரஸ் சட்டசபைத் தேர் தலை நடத்த வேண்டுமென்ற தீர்மானத்தை ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய் யங்கார் பின் வாங்கிக்கொண்டதற்குப் பிறகுதானா? அல்லவா?

இவற்றிற்கு ஸ்ரீமான். முதலியாரவர்கள் தமது மனச்சாக்ஷி வாதத்தில் என்ன பதில் சொல்லியிருக்கிறார்? அல்லது என்னதான் சொல்லப்போகிறார்? மனச்சாக்ஷிக்கு ஓர் அளவுண்டா இல்லையா? திருடவும், கொலைசெய்யவும், கொள்ளையடிக்கவும், ஒரு மனிதனுக்கு அவனுடைய மனச்சாட்சி இடங் கொடுத்துவிட்டால், உலகத்தார் வாய்மூடிக்கொண்டிருக்க வேண்டியதுதானா? உலகத்தாருடைய மனச்சாட்சி இவ்விதக் காரியங்களை வெளிப்படுத்தக் கட்டளையிட்டால், அவர்கள் மனச்சாட்சிக்கு மரியாதையுண்டா? இல்லையா?



RangaRakes tamilnavarasam.com

மனச்சாட்சியென்றால், ஒருவர் மனச்சாட்சியில் மற்றொருவர் எப்படிப் பிரவேசிக்கலாம்? குடி அரசின் மனச்சாட்சியில் ஏன் ஸ்ரீமான். முதலியார் பிரவேசித்துப் பின்வாங்கிக்கொள்ளும்படி கட்டளையிடுகிறார். ஸ்ரீமான். உண்மை முதலியாருடைய மனச்சாக்ஷியைக் குடி அரசும், அதன் பத்திராதி பரும் நன்கு அறிவார்கள். அது மிகவும் பரிசுத்தமான மனச்சாக்ஷி. காஞ்சீபுரம் மகாநாட்டு நடபடிக்கைகள் கண்டிப்பாய் ஸ்ரீமான். உண்மை முதலியாரின் மனசாட்சி அல்லவே அல்ல. ஸ்ரீமான் அய்யங்கார், ஆச்சாரியாரின் மனச் சாக்ஷிகள் ஸ்ரீமான். முதலியாரின் சரீரத்திற்குள் புகுந்து. ஸ்ரீமான். முதலி யாரின் மனச்சாக்ஷியை அடித்துத் துரத்தி அந்த ஸ்தானங்களை ஆக்ரமித்துக் கொண்டு அவைகள் நடத்தின நடவடிக்கைகள் தானென்பதை குடி அரசும், அதன் பத்திராதிபரும், மற்றும் அதன் நண்பர்களும் கோபுரத்தின் மீதிருந்து கூவவும் அஞ்ச மாட்டார்கள்.

காஞ்சீபுரம் மகாநாட்டில் ஸ்ரீமான். போலி முதலியார் கண்ணுக்கு ஸ்ரீமான்கள். இராமசாமி நாயக்கரும், இராமநாதனும், தண்டபாணி பிள்ளையும் ஓர் சிறிய மூட்டைப் பூச்சிபோல் விளங்கினார்களென்பதையும், அவர்களை மனிதர்களாகக்கூட மதிக்கவில்லையென்பதையும், அவர் மறுக்கவே முடி யாது. ஆனால், ஸ்ரீமான்கள், ராஜகோபாலாச்சாரியாரும் ஸ்ரீனிவாசய்யங்கா ரும், போலி முதலியார் கண்ணுக்குக் குலகுருவாய் விளங்கினார்களென்பதை யும், அவர் மறுக்கவே முடியாது. உண்மை முதலியார் உள்ளத்தில் ஸ்ரீமான் கள். இராமநாதனும், தண்டபாணி பிள்ளையும், நாயக்கரும் எப்படி விளங்கு கின்றார்களென்பதும், ஸ்ரீமான்கள். ஸ்ரீனிவாசய்யங்காரும், இராஜகோபாலாச் சாரியாரும் எப்படி விளங்குகின்றார்களென்பதும் உண்மை முதலியாருக்கும், அவருடைய அன்பர்களுக்கும் நன்றாய்த் தெரியும். ஸ்ரீமான். முதலியாரின் தியாகமும், அவருடைய தேசபக்தியும் அவரது உழைப்பும் தமிழ்மக்கள் வெகுபேர் அறியமாட்டார்கள். சாதாரண மக்களுக்கு ஏதோ அவர் ஓர் தமிழ் படித்தவ னென்று மாத்திரம்தான் தெரியும். வாஸ்தவத்திலேயே ஸ்ரீமான். முதலியார் ராஜீய வாழ்வில் இறங்காமல் தனது தமிழ் உபாத்தியாயர் உத்தி யோகத்திலேயே இருந்திருப்பாரானால், இதுவரையில் லக்ஷக்கணக்கான ரூபாய்கள் சம்பாதித்திருப்பாரென்பதோடு, மஹாமஹோபாத்தியாய பட்டங் களும், மற்றும் தமிழ் அகராதி எழுதுவதற்கும், தமிழ்ப் பிள்ளைகளைப் பரீட் சித்து அவர்கள் பிராமண பரீக்ஷகர்கள் கையில் சிக்கி பரீக்ஷையில் தவறிப் போகாமல் விருத்தியடைவதற்கும், அரசாங்கத்தில் தமிழுக்குத் தக்க யோக்கி யதை சம்பாதிப்பதற்கும் உதவியாயிருந்திருப்பார். இராவணன் தங்கையாகிய சூர்ப்பனகையை மூக்கையும், முலையையும் அறுத்த ராமன், உத்தமன் - விஷ்ணு அவதாரம் என்றும், அதற்குப் பிரதியாய் சீதையைக் கொண்டுபோய் அசோகவனத்தில் வைத்து தன் மகளைக் காவல்போட்டு வைத்திருந்தவன் இராக்ஷஸன் என்றும், காலில்லாதவன் நொண்டி, கண்ணில்லாதவன் குருடன் என்றும், இருக்கிற புஸ்தகப் பள்ளிக்கூடப் பாடங்களை எழுதிக் கொண்டிருந் தால், அளவிட முடியாத பணத்தையும் சம்பாதித்திருப்பார். உண்மையில்



தமிழ் நாட்டு ராஜீய வாழ்விலிருக்கும் எவருடைய தியாகத்திற்கும், ஸ்ரீமான். முதலியார் தியாகம் பின் வாங்கியது அல்ல என்று தான் சொல்லவேண்டும். அவர் தன்னைப்பற்றி விளம்பரப்படுத்திக்கொள்ளுங் குணம் கொஞ்சமும் இல்லாதவரானபடியால், அவருடைய தியாகங்களைப் பொதுமக்கள் அறிய வழியில்லாமற் போய் விட்டது. அது மாத்திரமல்ல, அவரிடத்தில் அந்நியரை மன்னிக்கும் குணம் தமிழ் நாட்டிலுள்ள யாரையும்விட அதிகமாயுண்டு. உதாரணமாக, இரண்டு மாதங்களுக்கு முன்புதான் ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய் யங்கார், நன்னிலத்தில் ஓர் கூட்டத்தில் பேசும்போது, ஸ்ரீமான். முதலியார் மாரீசன் என்றும், ஜஸ்டிஸ் கக்ஷியிலீடுபட்டவரென்றும் அவரை காங்கிரஸை விட்டு வெளியாக்க வேண்டுமென்றும், சொன்னதை உடனே மறந்து ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்கார் தலைமையின் கீழ் தமிழ்நாடு நடக்க வேண்டுமென்றும், அவர் அரும் பெரும் தலைவரென்றும் சொல்லி, அவரைக் காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராக்குவது இலேசான காரியமல்ல. இதற்கு பயங் கொள்ளித்தனம் ஓர் காரணமாயிருந்தாலுங்கூட, மன்னிப்புத் தன்மையின் பெருமையை நாம் மறந்துவிடக் கூடாது. ஸ்ரீமான். ஆச்சாரியாரவர்களைப் பற்றியும் பல புராணங்கள் சொன்னவர் எவ்வளவு சீக்கிரத்தில் அதை மறந்து அவரிடத்தில் அன்பு கொண்டவர் போல் நடப்பதென்றால், அதுவும் பெருந் தன்மையின் அறிகுறியேயாகும். எப்படியான போதிலும் உண்மை முதலி யாரின் மனச்சாக்ஷியைப் பற்றியும், அவரது கொள்கைகளைப் பற்றியும், நமக்கு ஒருக்காலும் விரோதமோ, துவேஷமோ கிடையவே கிடையாது. உண்மை முதலியாரின் பலவீனத்தால், சிற்சில சமயங்களில் திடீரென்று போலி முதலியாரின் ஆதிக்கம் பலப்பட்டு தேசத்தையும், சமூகத்தையும் பாழாக்கும் நிலைமை ஏற்பட்டுப் போய் விடுகிறதே என்பதுதான் நமது கவலை. அத் தோற்றம் இனித் தோற்றக்கூடா தென்பதுதான் நமது உண்மையான ஆசையே யன்றி, உண்மை முதலியாரின் மனத்தைப் புண்படுத்தவோ, கஷ்டப் படுத்தவோ நாம் ஒரு நிமிஷமும் நினைக்கவேயில்லை; நினைப்பதுமில்லை. நமது கேள்விகளுக்குப் பதில் வந்தவுடன் மற்றவை எழுதுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 13.12.1925**



RangaRakes
tamilnavarasam.com

# சேலம் தியாகராய நிலையம் திறப்பும் கதர்ச்சாலை திறப்பும்

சிறந்த தேசபக்தரும், உண்மை சமூகத் தொண்டருமான காலஞ்சென்ற ஸ்ரீமான். தியாகராய செட்டியாரின் ஞாபகார்த்தத்திற்காக ஏற்பட்ட தியாகராய நிலயம் என்னும் கட்டிடத்தைத் திறந்து வைக்கும் பாக்கியம் நான் அடைந்ததைப்பற்றி அளவிலாத மகிழ்ச்சி எய்துகிறேன். இக்காரியத்தைச் செய்ய எனக்குக் கட்டளையிட்ட ஸ்ரீமான். கணபதியா பிள்ளையவர்களுடைய அன்பையும், விடாமுயற்சியையும் நான் பாராட்டுவதோடு, அவருக்கு எனது நன்றியைச் செலுத்துகிறேன். ஸ்ரீமான். கணபதியா பிள்ளையவர்களின் குணாதிசயங்களை ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடுவால் கேள்விப்பட்டிருக்கிறேன். ராஜீய விஷயத்தில் அவருக்கும், நமக்கும் அபிப்பிராயபேதமிருந்தாலும், அவருடைய அபிப்பிராயம் நமது அபிப்பிராயத்தில் குறுக்கிடுவதாயிருந்தாலும், அவரது உண்மைத் தத்துவத்தையும் ஊக்கத்தையும் நான் பாராட்டாமலிருக்க முடியாது.

ஸ்ரீமான். தியாகராய செட்டியார் தென்னாட்டுக்கே பழுத்த தேசாபிமானி. அவர் நமது சமூகத்துக்கு உண்மையாய்த் தொண்டு செய்தவர். பிராமணரல்லாதாருக்கு மறக்க முடியாத தலைவர். அவருடைய காரியங்களெல்லாம் கொஞ்சமும் சுயநலமற்றது. ராஜீய விஷயங்களில் எனக்கும் அவருக்கும் அபிப்பிராய பேதங்களிருந்தாலும், சமூக முன்னேற்றத்தில் எங்களுடைய அபிப்பிராயம் ஒன்றாகவே இருந்து வந்தது. சமூக விஷயத்தைப் பற்றியும், ராஜீய விஷயத்தைப்பற்றியும், அவருக்குள்ள அபிப்பிராயங்களை ஓர் பெரிய தீர்க்கதரிசனமென்றேதான் சொல்ல வேண்டும். சமூக விஷயத்தைப்பற்றி அவர் சொன்ன அபிப்பிராயந்தான், இன்றைய தினம் காங்கிரசிலுள்ள பிராமணரல்லாத பெரும்பாலோர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ராஜீய விஷயத்தில் அவரது அபிப்பிராயங்களை இன்னமும் என் போன்றார் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், காங்கிரசில் பிரதானமானவர்களென்றும், செல்வாக்குள்ளவர்களென்றும் சொல்லப்படும் சுயராஜ்யக்கட்சியாரென்போரும் அதையே பின்பற்றுகிறார்கள். பாஷையில் ஏதாவது வித்தியாசமிருந்தாலும், தத்துவத்தில் வித்தியாசமில்லையென்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளுவீர்கள். இந்திய பொதுஜன சேவையில் ஒரே அபிப்பிராயத்தோடு கிளம்பி தொண்டுசெய்து அதே அபிப்பிராயத்தோடு



காலஞ்சென்றவர் ஸ்ரீமான். தியராகராயசெட்டியார் என்று சொல்லுவது ஒரு விதத்திலும் மிகையாகாது. 5000, 6000 ரூபாய் சம்பளம் வரும் மந்திரி உத்தியோகம் போன்ற பெரும் பதவிகளெல்லாம், தனது காலடியில் வீழ்ந்து கிடந்த காலத்தில் தனக்கென்றாவது, தனது மக்களுக்கென்றாவது, தனது பந்துக்களுக்கென்றாவது எடுத்துக்கொள்ளாமல், அந்நியர்களுக்கே அவைகளை வழங்கி வந்தார். இவ்வித சுயநலமற்ற தன்மையுடைய தலைவர் யாராவது இருக்கின்றார்களாவென்பதை நீங்கள் யோசித்துப் பாருங்கள். இவ்வளவு நேர்மையான பெரியாரை இதுவரை நான் சந்தித்துப் பேசியதில்லையானாலும், அவருடைய மாசற்ற உள்ளத்தினிடம் எனக்கு எப்பொழுதும் பக்தி உண்டு. அப்பேர்ப்பட்ட பெரியாரின் ஞாபகார்த்தத்திற் காக ஏற்படுத்தியிருக்கும் கட்டிடத்தைத் திறந்துவைப்பதை நான் ஓர் பெரும் பாக்கியமாகவே கருதி இத் தொண்டைச் செய்கிறேன். எனக்குக் காயலாவாய் இருப்பதால் அதிகமாகப் பேசமுடியாததற்கு வருந்துகிறே னென்று சொல்லி வெள்ளிச் சாவியினால் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

*குறிப்பு:05.12.1925 இல் சேலம் செவ்வாய்ப்பேட்டையில் கட்டப்பட்ட தியாகராயர் நினைவு கட்டடம் மற்றும் கதர்ச்சாலை திறப்புவிழா உரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 13.12.1925**



RangaRakes tamilnavarasam.com

# மநுநீதி கண்டமுறை

## "உதைத்துக் கொன்றதற்கு ரூபாய் 200 அபராதம்"

அஸாம் தேயிலைத்தோட்டத்தில், வேலை செய்த ஓர் இந்தியக் கூலியை உதைத்துக்கொன்ற ஓர் ஐரோப்பியருக்கு 200 ரூபாய் அபராதம் விதித்ததைக் கேட்க இந்தியர்கள் மனம் பதறுமென்பதில் ஆக்ஷேபனையில்லை. ஆனபோதிலும், இதுமுதல் தடவையல்ல. இதற்கு முன் பல தடவைகளில் இதைவிடக் கொடுமையான சம்பவங்கள் பலவற்றைப் பார்த்திருக்கிறோம்.

இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பாக, செயில்காட் என்கிற இடத்தில் ஓர் இந்திய ஸ்திரீயை நிர்வாணமாய் இழுத்துக்கொண்டுபோய் இரத்தம் வரும் படியாகப் புணர்ந்த ஓர் ஐரோப்பிய சோல்ஜருக்கு, 25 ரூபாய் அபராதம் விதித்த மாஜிஸ்திரேட் தீர்ப்பு எழுதுகையில், "ஓர் இந்திய ஸ்திரீயை, ஓர் ஐரோப்பியர் புணர்ந்ததை ஓர் பெரிய தப்பென்பதாக நான் எடுத்துக்கொள்ளவில்லை, ஆனால் இரத்தம் வரும்படி புணர்ந்ததற்காக அபராதம் விதிக்கும்படியிருக்கிறது. ஆதலால் அதற்காக 25 ரூபாய் அபராதம் விதிக்கிறேன்" எனக் குறிப்பிட்டிருந்தது நேயர்கள் ஞாபகத்திலிருக்கும். வெள்ளைக்காரருடையவும், அரசாங்கத்தாருடையவும், இதுபோன்ற செய்கைகள், மதிக்கத்தகுந்ததும், இந்து தர்மத்திற்கே ஆதாரமானதுமான மநுதர்ம சாஸ்திரத்தை நமக்கு ஞாபக மூட்டுகிறது. ஏறக்குறைய வெள்ளைக்காரருடையவும், அரசாங்கத்தாருடையவும், செய்கையும், மநுதர்ம சாஸ்திரத்தை அடிப்படையாக வைத்துத்தான் கட்டப்பட்டிருக்கிறது என்கிற விஷயத்தில், நமக்கு அதிகமான சந்தேகம் தோன்றுவதே கிடையாது. ஏனெனில், மநு 8-வது அத்தியாயம் 380-வது சுலோகத்தில் "பிராமணன் எப்பேர்ப்பட்ட பாவமான செய்கை செய்தாலும், அவனைக் கொல்லக்கூடாது, காயமும் செய்யக்கூடாது, வேண்டுமானால் அவன்பொருளை அவனுக்குக் கொடுத்து வேற்றூருக்கு அநுப்பிவிடலாம்" என்றும், 381-வது சுலோகத்தில் "எவ்வளவு பெரிய குற்றமானாலும், பிராமணனைக் கொல்லவேண்டுமென்று அரசன் மனதிலும் நினைக்கக்கூடாது" என்றும், 379 - வது சுலோகத்தில், "பிராமணனுடைய தலையை மொட்டையடிப்பது, கொலை தண்டனையாகும்" என்றும், ஸ்திரீ விஷயங்களில் சூத்திரன் காவலில்லாத பிராமண ஸ்திரீயைப் புணர்ந்தால் ஆண்குறியை அறுத்து அவன் தேக



முழுவதையும் துண்டு துண்டாக வெட்டி அவனுடைய எல்லாப் பொருள்களையும் பிடுங்கிக் கொள்ளவேண்டும் என்றும், "ஒரு பிராமணன் கற்புடைய ஒரு ஸ்திரீயை துராக்ரதமாகப் புணர்ந்தாலுங்கூட ஆயிரம் பணத்திற்குள் அபராதம் விதிக்க வேண்டும்" என்னும் கொள்கையுள்ள இந்து தர்ம சாஸ்திரங்களைப் பிரிட்டிஷார் பின்பற்றுவதில் நமக்கு ஒன்றும் ஆச்சரியமாகத் தோன்றவில்லை. ஆனால், இவற்றை அநுமதித்துக் கொண்டு ஓர் பெரிய சமூகம் உயிர் வாழ்கிறதே யென்பதைப்பற்றித்தான் நாம் கவலை கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.12.1925**



RangaRakes tamilnavarasam.com

# கொல்லை வழிப்பிரவேசம், சாக்கடை வழிப்பிரவேசத்தைவிட மோசமானதா?

சென்னை ஜஸ்டிஸ் கக்ஷியைச் சேர்ந்த ஸ்ரீமான். தணிகாசலம் செட்டியாரவர்கள், சென்னை கார்ப்போரேஷனுக்குள் நியமனம் மூலியமாய் பிரவேசித்ததைக் கொல்லை வழியென்று சில பிராமணப் பத்திரிகைகள் கூக்குரலிடுகின்றன. ஆயினும் நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. சுயராஜ்யக் கட்சியாரும், அதன் தலைவர்களும் சாக்கடை வழியில் பிரவேசிக்கிறார்களே, இதை விட ஜஸ்டிஸ் கக்ஷிக்காரருடைய நடவடிக்கை எப்படி மோசமாகும்? கோயமுத்தூர் ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சுயராஜ்யக்கக்ஷித் தலைவருமான ஓர் பிராமணர், பிராமணருக்கு விரோதமான கக்ஷியென்றும், நாட்டிற்குப் பிற்போக்கான கக்ஷியென்றும், சர்க்கார் உத்தியோகத்துக்கும், சுயநலத்துக்கும் ஆசைப்பட்ட கக்ஷியென்றும், தன்னால் சொல்லப்படுகிற ஜஸ்டிஸ் கக்ஷியின் ஆதிக்கத்திலிருக்கிற இலாகாக்களிலொன்றான, ஜில்லாபோர்டு அங்கத்தினர் ஸ்தானத்துக்கு. ஒத்துழையாமையையும் முட்டுக்கட்டையையும் ஆதரிக்கிற தத்துவங்களைக் கொண்டவர், பனகால் இராஜாவைக் கெஞ்சி அவரை ஏமாற்றி, ஜில்லா போர்டுமெம்பர் பதவி பெறுவது சாக்கடை வழியில் செல்லுவதா? அல்லவா? ஜஸ்டிஸ் கக்ஷியாரின் கொள்கைப்படி ஸ்தல ஸ்தாபனங்களில் நியமனம் பெறுவது கடுகளவு அறிவு உள்ளவனும் ஒருக்காலும் கொல்லைவழியென்று சொல்லவே மாட்டான். ஒருக்கால் தேர்தலில் தோற்றுப்போய் நியமனம் பெற்றது குற்றமென்று நினைப்பார்களேயானால், டாக்டர். நாயர் போன்றவர் களெல்லாம் காரியத்தின் அவசியத்தைக் கோரியும், தேர்ந்தெடுக்கும் ஜனங் களின் அறியாமையை உத்தேசித்தும், போட்டியாய் நிற்பவர்களின் தந்திரங் களையும், சூழ்ச்சிகளையும் கண்ணியக் குறைவான நடத்தைகளையும் அறிந் தும், இம்மாதிரியான காரியங்களில் வழி காட்டியிருக்கிறார்கள். ஆனால், தேர்தல்களில் நிற்கக்கூட யோக்கியதையற்றவர்களும் நிற்பதானால் பத்தாயிரம், இருபதினாயிரம் செலவழித்தாலல்லாமல் வெற்றிபெற முடியாமலிருக்கிற ஒரு கூட்டத்தார், இம்மாதிரி நடப்பதற்கு வேறு யாராவது வழிகாட்டியிருக்கிறார்களா? இவையெல்லாம் ஒரு ஜாதியாரின் ஆக்கத்தைக் குறைக்கவேண்டுமென்ற சூழ்ச்சியும், யோக்கியதையற்றவர்கள் முன்னுக்கு வரவேண்டுமென்ற பேராசையும், தங்கள் ஜாதியாரிடத்தில் செல்வாக்குள்ள பத்திரிக்கைகள் இருக்கின்றதென்கிற அகம்பாவமும், இப்படி எழுதச்



செய்கிறதே அல்லாமல், யோக்கியமானவர்களுக்கு இதில் எவ்விதமான உண்மையும் இருப்பதாக நமக்கு விளங்கவில்லை. ஒத்துழையாமை என்பது இல்லையானால், சுதந்தர புத்தியுள்ளவர்களுக்குத் தேர்தலுக்கும், நியமனத் துக்கும் அளவு கடந்த வித்தியாசமில்லையென்பதுதான் நமது அபிப்ராயம். இரண்டு பேரும் தங்களிஷ்டம் போல் வேலைசெய்ய ஸ்தல ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றது. மொத்தத்தில் தற்காலமுள்ள எந்த ஸ்தாபனங் களிலும், தேர்ந்தெடுப்பு மூலியமானாலும், நியமனம் மூலியமானாலும் உள்ளே செல்லுவதால் பிரமாதமான அரசியல் காரியம் எதுவும் செய்ய முடியாதென்பதோடு அதைத் தனது சுயநன்மைக்கு ஓர் பதவியாக மாத்திரம் உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்பதுதான் நமது தாழ்மையான அபிப்ராயம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 13.12.1925**



RangaRakes tamilnavarasam.com

## சுயராஜ்யக் கக்ஷிக்கு சாவுமணி

கவர்ன்மெண்டை முட்டுக் கட்டை போட்டு ஸ்தம்பிக்கச் செய்ய ஆரம்பித்த சுயராஜ்யக்கட்சி, கவர்ன்மெண்டுக்குக் கொஞ்ச நஞ்சம் இருந்த கட்டையும் அவிழ்த்து விட்டுவிட்டு, தனக்கே முட்டுக்கட்டை போட்டுப் பிரசாரம் கூட செய்ய முடியாமல் தன்னையே ஸ்தம்பிக்கச் செய்து கொண்டது. சுயராஜ்யக் கட்சி இந்த நிலைமைக்குத்தான் வருமென்று முன்னமேயே பலர் சொல்லிவந்தது உலகம் அறிந்ததே. ஆனாலும், ஆசை வெட்கமறியாது என்பது போல் பதவிகளும், உத்தியோகங்களும் பெற ஆசை கொண்டவர்கள், உலகத்தார் முன்னிலையில் தங்கள் சுயமரியாதை எவ்விதம் மதிக்கப்படுகிறது என்பதையே லக்ஷியம் செய்யாமல், ஒன்றுகூடி பொய்ப் பிரசாரத்தையும், பாமர ஜனங்களின் அறியாமையையும் தங்களுக்கு ஆஸ்தியாக வைத்துக்கொண்டு, பதவி வேட்டையையும், உத்தியோக வேட்டையையும் அடைய ஆரம்பித்தார்கள். இதன் பலனால் தேசத்தின் ராஜீய வாழ்விலுள்ள கட்டுப்பாடும், கண்ணியமும், மதிப்பும் நீங்கி சுயநலங்கள் மலிந்து, சுயராஜ்யக் கட்சிக்குள்ளாகவே போட்டிகள் ஏற்பட்டு, ஒருவரையொருவர் வெளிப்படுத்திக் கொள்ளவேண்டியதாயிற்று.

சுயராஜ்யக் கட்சியார் பம்பாயில் கூடி ஒருவரையொருவர் வெளிப்படுத்தாமல் உத்தியோகம் சம்பாதித்துக்கொள்ள வழியுண்டா என்று யோசனை செய்து பார்த்து, ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அது தான் ராஜியென்று சொல்வது.

அதென்னவென்றால், “நான் உன் யோக்கியதையை வெளியில் சொல்வதில்லை; நீ என் யோக்கியதையை வெளியில் சொல்ல வேண்டாம்” என்பதற்கிணங்க, கொஞ்ச காலத்திற்கு இரு கட்சியாரும் தங்கள் கொள்கைகளைப் பிரசாரம் செய்யக்கூடாது என்று முடிவு செய்து கொண்டார்களாம். இதன்கருத்து என்ன? பொது ஜனங்களுக்கு, இவர்கள் யோக்கிதையைத் தெரிவிக்காமல் மறைத்து வைத்திருப்பதுதானே.

ஒத்துழையாமைத் தத்துவத்திற்குக் கேடு வருவதற்கும், இம்மாதிரியாக ஒரு தீர்மானம் ஆமதாபாத்தில் செய்து கொண்டதுதான் காரணமாயிருந்தது.



சுயராஜ்யக் கட்சிக்கும் அதே மாதிரி பம்பாயில் ஏற்பட்டு இருக்கிறது. பாமர ஜனங்களை ஏமாற்றித்தான் உத்தியோகம் பெற, காங்கிரசும், ராஜீயக் கட்சிகளும் இருக்கிறதே அல்லாமல், உண்மையான சுயராஜ்யம் பெறுவதற்கு அல்ல என்பதை இனியாவது பொது ஜனங்கள் உணர்வார்களாக.

**குடி அரசு – கட்டுரை – 13.12.1925**



RangaRakes tamilnavarasam.com

# ஈரோடு முனிசிபாலிட்டி

ஈரோடு முனிசிபல் சேர்மன் மீது சில கவுன்சிலர்கள் சென்ற மாதம் ஈரோடு முன்சீப் கோர்ட்டில், உண்மையில் நிறைவேறிய தீர்மானத்தை நிராகரித்து விட்டு , ஒழுங்கற்ற ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியதாக தனது மினிட் புஸ்த்தகத்தில் சேர்மன் குறித்துக் கொண்டாரென்றும் ஆதலால் அதை அமுலுக்குக் கொண்டுவரக்கூடாதென்றும், ஓர் தற்காலத்தடை உத்தரவு பெற்றதைப்பற்றி 15. 11. 25 "குடி அரசு" பத்திரிக்கையில் வாசகர்கள் வாசித்திருக்கலாம். அவ்வழக்கு நாளது மாதம் 8 -ந்தேதி ஈரோடு டி.மு. கோர்ட்டில் மறுபடியும் விசாரணைக்கு வந்தது. விசாரணையில் இது விஷயத்தில் பிரவேசிக்க முன்சீப் கோர்ட்டுக்கு அதிகாரமில்லை யென்றும், அக்ராசனாதிபதி என்ற ஹோதாவில் தான் செய்ததற்கு தானே தான் எஜமானென்றும், தன்னுடைய காரியத்தைச் சரியென்று நிரூபிக்க, சில கவுன் சிலர்களின் பிரமாண வாக்கு மூலங்கள் ஆஜர் செய்யப்பட்டிருக்கின்ற தென்றும், பிரஸ்தாபத் தடை உத்திரவினால், சிங்காரவனத்தின் வேலைகள் தடைப்பட்டு அதற்கென்று வாங்கி வைத்திருக்கும் செடிகளும், கொடிகளும் காய்ந்து வருகிறதென்றும், ஜில்லா கலெக்டரும் தனது காரியத்தைச் சரியென்று ஒப்புக்கொண்டிருக்கின்றாரென்றும் ஆகிய இவை முதலிய காரணங்களால், தடை உத்திரவை நீக்கவேண்டு மென்றும், சேர்மன் சார்பாக வாதிக்கப்பட்டது. மற்றொருபுறம், சேர்மன் சொல்லுவது தப்பென்று ருஜுப் படுத்துவதற்கும், ஒழுங்காய் நிறைவேறிய தீர்மானம் இன்னதெனக்கண்டு பிடிப்பதற்கும், மீட்டிங்கின் தீர்மானப் புஸ்தகமே போதுமான ஆதாரமென்றும், அதில் கிரமமான தீர்மானங்கள் எழுதப்பட்டும் அடிக்கப்பட்டுமிருக்கின்ற தென்றும் சேர்மன் செய்த காரியங்கள் சரியா, தப்பாவென்று சொல்லுவதற்கு சேர்மனே தான் அதிகாரியென்று ஏற்படுமானால், உலகிலுள்ள முனிசிபாலிடி களெல் லாம் சேர்மேனுடைய சொத்தாகிவிடலாமென்றும், கலெக்டருக்கு இதை பற்றிக் கவுன்சிலர்கள் எழுதியதற்குத் தனக்கு அதிகாரமில்லையென்று கலெக் டரிடமிருந்து பதில் வந்துவிட்டதென்றும், மற்றபடி அவர் எழுதியிருப்பது ஒரு பக்ஷத்தை மாத்திரம் கேட்டுக்கொண்டு எழுதிய எழுத்துக்களென்றும் கவர்மெண்டுக்கு எழுதியதற்கு இன்னும் பதில் வராமலிருக்கின்றதென்றும், செடி கொடிகள் காய்ந்து போவதால் 20, 30 ரூபாய் நஷ்டம் தான் வரு மென்றும், தடைஉத்திரவை இப்போது நீக்கிவிட்டால், விவகாரம் தங்கள் பக்ஷ மாய் ஜெயித்தால் ஆயிரக்கணக்கான நஷ்டத்தை ஈடு செய்ய முடியா தென்றும், இம்மாதிரியான விஷயங்களில் நியாயஸ்தலத்திற்கு அதிகார மில்லாமற் போய்விட்டால், முனிசிபல் நிர்வாகமே பாழ்பட்டுப் போய்விடு மென்றும், இது முதலான காரணங்களால், தடை உத்திரவை இவ் விவகாரம் தீரும் வரையில் காயமாக்க வேண்டுமென்று சில கவுன்சிலர்களின் சார்பாக வாதிக்கப்பட்டது. கோர்ட்டார் இருவருடைய விவாதங்களைக் கேட்டு, இவ்விஷயத்தில் பிரவேசிக்கத் தனக்கு அதிகாரமிருக்கின்ற தென்றும், தற் காலம் தன்முன் விஷயங்களிருக்கும் நிலைமையில், தடை உத்திரவைக் காயப்படுத்த வேண்டியது அவசியமென்றும் சொல்லி, இவ் விவகாரம் தீரும் வரை தடை உத்திரவைக் காயப்படுத்தி விட்டார். முனிசிபல் தீர்மானப் புஸ்தகத்தைச் சேர்மன் திருப்பிக் கேட்டபோது, எதிர் கவுன் சிலர்கள், அதைச் சேர்மெனிடம் கொடுக்கக்கூடாதென்றும், திருப்பிக் கொடுத்தால், அதில் ஏதாவது திருத்தங்கள் ஏற்பட்டு விடலாமென்றும், ஆக்ஷேபித்ததின் காரணமாகத் தீர்மான புஸ்தகத்தில் கண்ட விஷயங்களை பொட்டகிறாப் படம் எடுத்துக்கொண்டு வாபீஸ் செய்யப்பட்டது.

**குடி அரசு - கட்டுரை - 13.12.1925**



RangaRakes
tamilnavarasam.com

# சுகோதயம் பத்திரிக்கை

சுகோதயம் என்னும் தமிழ் வாராந்தரப் பத்திரிகை ஆரணியிலிருந்து ஸ்ரீமான். வி.என். ரெங்கசாமி ஐயங்காரவர்களை ஆசிரியராகக் கொண்டு சுமார் நான்கு வருட காலமாக தமிழ்நாட்டில் உலவி வருவது தமிழ் மக்கள் அறிந்த விஷயம். அப்பத்திரிக்கையின் ஆசிரியர் யாதொரு ஊதியமும் இல்லாமல் கௌரவ ஆசிரியராய் இருந்துகொண்டு குறைந்த சந்தாவாகிய வருடம். ரூ 2-8-0 வீதம் ஏழைகளும் படிக்கும்படியான கவலையின் பேரில், எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்கிடையில் நடத்தி வந்திருப்பதைத் தமிழ் மக்கள் பாராட்டாமலிருக்க முடியாது. அதனுடைய ராஜீயக் கொள்கைகள் தமிழ் நாட்டிலுள்ள மற்ற பெரும்பான்மையான பத்திரிக்கைகள் போல் காற்றடித்த பக்கம் சாயாமல் ஒரே உறுதியாகவே இருந்துவந்தது மற்றுமோர் பாராட்டத்தக்க விஷயம்.

வகுப்பு விஷயங்களில் ஒருக்கால் நமக்கும் அதற்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருந்தபோதிலும், ராஜீய விஷயங்களில் பெரும்பாலும் மகாத்மாவையும், சில சமயங்களில் தீவிர ஒத்துழையா தத்துவத்தையுமே அனுசரித்து வந்திருக்கிறது. அவ்விதப் பத்திரிக்கை இது சமயம் சென்னை பிரசிடென்ஸி மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்கு ஒரு வழக்கில் இழுக்கப்பட்டு பத்திராதிபர்களின் உரிமைக்கும், சுயமரியாதைக்கும் பங்கம் வரத்தக்க மாதிரியில் கஷ்டப்படுத்தப்பட்டு வருகிறது. இது சமயம் பொறுப்புள்ள பத்திராதிபர்களும், பத்திரிக்கையின் சுதந்திரத்தில் கவலையுள்ளவர்களும் முன்வந்து, ஷை பத்திரிகைக்கு ஆதரவு அளிக்கவேண்டியது ஒவ்வொரு வரின் கடமையென்பதை நாம் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள் ளுகிறோம். சுகோதயம் பாதுகாப்பு நிதிக்காக நம்மால் கூடிய ஓர் சிறுதொகை யாகிய ரூ.10 இன்று அனுப்பியிருக்கிறதை, ஷை பத்திராதிபர் அன்புடன் ஏற்றுக்கொள்ளவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம். சுகோதயம் பத்திரி கைக்கு வெற்றி உண்டாகுக.

**குடி அரசு - குறிப்புரை - 13.12.1925**



# காங்கிரஸ்

நமது நாட்டில் ராஜீய முன்னேற்றங்களுக்கும், சமுதாய முன்னேற் றங்களுக்கும், பொருளாதார முன்னேற்றங்களுக்கும், மகாத்மாவின் ஒத்துழை யாமை சம்பந்தப்படாததற்கு முன் உள்ள காங்கிரஸ் காலங்களில், இவற்றிற்குத் தனித்தனியாக ஸ்தாபனங்களும், மகாநாடுகளும் நடந்து வந்தன. ஆனால் மகாத்மா அவர்கள் காங்கிரஸில் பிரவேசித்து காங்கிரஸின் மூலமாக ஒத்துழையாமையை வலியுறுத்தியபின், ராஜீய, சமுதாய, பொருளாதார விஷயங்களோடு மாத்திரமல்லாமல், இன்னும் அநேக நன்மைக்கான காரியங்களும் சேர்த்ததுதான் சுயராஜ்யமென்றும், அவ்வித சுயராஜ்யத்தை காங்கிரஸ் மூலமாகவே அடையக்கூடிய நிலைமையில் கொள்கைகளும் திட்டங்களும் அமைத்து அவற்றிற்கனுகூலமான பல காரியங்கள் தேசத்தில் நடைபெற்று வந்தன. ஆனால், மகாத்மா அரசாங்கத்தாரால் சிறையிலடைப் பட்ட பின்பு, மகாத்மாவின் கொள்கைக்கும், திட்டங்களுக்கும் விரோதமா யிருந்து, அதை ஒழிக்கப் பிரயத்தனப்பட்டுக்கொண்டு சமயத்தை எதிர்பார்த்து, மகாத்மா கூடவே இருந்துவந்த சில பேர் மகாத்மா திட்டத்தை ஒழிக்க வெளிக்கிளம்பி பொதுச் சட்ட மறுப்புக்கு ஜனங்கள் தயாராய் இருக் கின்றார்களா? இல்லையாவென்பதைக் கண்டறிவதென்னும் சாக்கைக் கொண்டு 'சிவில் டிசொபிடியன்ஸ்' கமிட்டி என்ற சட்டமறுப்புக் கமிட்டி யெனப் பெயர் வைத்துக்கொண்டு மகாத்மா செய்துவந்த காரியங்களையெல் லாம் அதற்கு நேர் விரோதமாய் இருந்து அடியோடு கவிழ்ப்பதற்கான முயற்சிக்கு அதை உபயோகப்படுத்திக்கொண்டு, ஒத்துழையாமைக்கு விரோதமான தத்துவங்களில் புகுந்து, மகாத்மாவின் உழைப்பால் இரண்டு, மூன்று வருடங்களில் ஏற்பட்ட நன்மைகளையெல்லாம் இடித்துத் தள்ள ஆரம்பித்தார்கள்.

கயா காங்கிரஸில் ஒத்துழையாமை கட்டிடம் உருக்குலையத் தொடங்கி, டில்லியில் அஸ்திவாரமே தளர்ந்து, காக்கினாடாவில் தரை மட்ட மாக்கி விடப் பட்டது. ஜெயிலிலிருந்து வந்த மகாத்மா காந்தி அவர்கள், தான் சிறைக்குச் சென்றபிறகு, தனது கட்டிடத்தை இடிக்கவிடாமல் காக்க வேண்டு மென்று நினைத்துப் பல வழிகளிலும் அவஸ்தைப்பட்டு தங்களால் கூடுமான வரையில், அதன் சின்னமாவது தேசத்தில் இருக்கட்டும் என்று நினைத்து கஷ்டப்பட்டு வந்தவர்களை அலட்சியம் செய்து, இடித்தவர்கள் தானும் கூடவே சேர்ந்து கொண்டு, கொஞ்ச நஞ்ச மீதியுள்ள ஒத்துழையாமையின்



RangaRakes tamilnavarasam.com

அஸ்திவாரங்களையும் இடித்தெறிய 'கல்கத்தா பேக்ட்' மூலமாக முகூர்த்தம் வைத்து, பெல்காம் காங்கிரசில் அடியோடே அஸ்திவாரத்தையும் தொலைத்து, அதை உழுது, ஒத்துழைப்பு விதையையும் விதைத்து, தானே கூட இருந்து தண்ணீரும் பாய்ச்சி, பாட்னாவில் பூவும் பிஞ்சும் விடக்கூடிய நிலைமையில் கொண்டு வந்து விட்டுவிட்டார்.

மகாத்மா அவர்களை, இம்மாதிரி மூன்று வருடத்து வேலையை இப்படி இடித்துவிடலாமாவென்று கேட்டால் என்னுடைய இயக்கத்துக்கு, விரோதமாயிருந்தவர்களின் செய்கை ஒரு புறமிருந்த போதிலும், என்னுடைய இயக்கத்துக்கு அனுகூலமாயிருந்து எனக்கு உண்மையாக உதவி செய்து கொண்டு வந்த என்னுடைய பிரதம சிஷ்யர்கள் என்போரே ரிப்பேர் செய்யக் கூடாத நிலைமையில் கெடுத்துவிட்டதால், ரிப்பேர் செய்ய முடியாத இடிபட்ட ஸ்தாபனத்தை நான் அதை அடியோடு ஒழிப்பதைத்தவிர வேறு வேலை செய்வதற்கில்லை. ஏனெனில்,

1. நான் சிறைக்குப் போன உடனே நான் செய்து கொண்டு வந்த காரியத்தை விட்டு விட்டு நான் யாரை முக்கியமாய் நம்பியிருந் தேனோ அவர்களே சட்டமறுப்புக் கமிட்டிக்கு இணங்கி விட்ட தொன்று.

2. கயாவில் சட்டமறுப்பு ஆரம்பிப்பதென ஓர் தீர்மானம் செய்து கொண்டு, பொது ஜனங்களை ஏமாற்றிப் பணம் வசூல் செய்து சொன்னபடி நடக்காமல், வேண்டுமென்றே சூழ்ச்சி செய்து பொது ஜன நாணயத்தை இழந்ததொன்று.

3. பிறகு, கொஞ்ச காலம் வரையிலும் பிரசாரத்தை நிறுத்தி வைத்திருப் பதென்று ஒப்புக்கொண்டு பொது ஜனங்களுடைய கவனத்தை வேறுவழியில் செல்ல இடங்கொடுத்ததொன்று.

4. டில்லியில் தனிக்காங்கிரசொன்றை ஏற்படுத்தி, அந்தக் கொள்கைக்கு விரோதமான காரியங்களை அநுமதித்ததொன்று.

5. பிறகு, காக்கினாடாவில், நான் சீக்கிரத்தில் விடுதலையாகி வந்து விடுவேனென்ற விஷயம் தெரிந்திருந்தும் எனது சகாக்கள் பொது ஜனங்களை ஏமாற்றி, எனது தத்துவத்துக்கு விரோதமான காரியங்களை ஒப்புக்கொள்ளும்படிக் கட்டாயப்படுத்தினதொன்று,

இந்த நிலைமையில் நான் ஜெயிலிலிருந்து வந்த பிறகு, வேறொன்றும் செய்வதற்கில்லாமல், ஒத்துழையாமையை ஒழித்துவிடுவதைத் தவிர வேறு மார்க்கமில்லையெனக் கண்டுகொண்டேன். எனது இயக்கத்தின்



எதிரிகளின் மனப்பான்மை ஒரு விதமாயிருந்த போதிலும் எனது சகாக்களிலேயே மாகாணங்களுக்கு இரண்டொருவர் தவிர மற்றவர்களுக்கெல்லாம் ஒத்துழைப்பு மனப்பான்மையே வளர்ந்துக் கொண்டு வருவது நன்றாய்த் தெரிகிறதென்றும், ஆதலால் ஒத்துழைப்புக்கே வழியைத் திறந்து விட்டுவிட வேண்டுமென்னும் முடிவுக்கு வந்துவிட்டேன். சரியாகவோ, தப்பாகவோ நான் கட்டின கட்டிடத்தை இடிக்க எனக்கு பாத்தியமுண்டு. இதை ஒப்புக் கொள்ளாதவர்கள் வேண்டுமானால் தாங்களே வேறு கட்டிடம் கட்டிக் கொள்ளட்டும் என்றும் சொல்லி முடிந்துவிட்டதோடு தேசத்தின் நன்மையைக் கோரி, முன் சொன்ன ராஜீய – சமூக – பொருளாதார விஷயங்களுக்கு காங்கிரசை எதிர்பார்ப்பது உபயோகமற்ற காரியமென்றும் கருதி, தனது முக்கியத் திட்டங்களாகிய இந்து – முஸ்லீம் ஒற்றுமை, மதுவிலக்கு, தீண்டாமை முதலிய காரியங்களையும் காங்கிரஸ் திட்டத்திலிருந்து அப்புறப் படுத்தி விட்டு, இந்நான்கில் ஏதாவதொரு காரியத்தை மாத்திரம்தான் எடுத்துக் கொள்வதாகச் சொல்லி, நூல் நூற்கிற விஷயத்தை மாத்திரம் தன் சொந்தத்தில் வைத்துக்கொண்டு மற்றவைகளை விட்டு மெல்ல விலகிக் கொண்டார்.

இந்த நிலைமையில் காங்கிரசானது பழைய கால காங்கிரசை விட சாதாரண நிலைமைக்கு வந்து விட்டது. காங்கிரசின் கொள்கை இந்திய மகா ஜனங்கள் சுயராஜ்யமடைய வேண்டுமென்றும், அதற்கு "நீதியும் அமைதியும்" பொருந்திய எல்லா முறைகளையும் அனுசரிக்க வேண்டு மென்பதுதான்.

இதற்குத் திட்டமாக தற்காலம் காங்கிரசிலிருப்பது, " சட்ட சபைகளைக் கைப்பற்றி, அவற்றை சுயராஜ்யத்திற்கு " உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான்.

நமது நாட்டில் ராஜீய விசயமாக மற்றும் பல ஸ்தாபனங்களுமிருக் கின்றன. அவைகளில் முக்கியமானது மிதவாதக் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, ஐக்கிய தேசீயக் கட்சி, பிராமணரல்லாதார் தேசீயக் கட்சி, சுயேச்சைக் கட்சி, பெஸண் டம்மையார் கட்சி முதலியன.

இவற்றில் ஒவ்வொரு கட்சியும் மேற்கண்ட காங்கிரஸ் கொள்கைக்கும் மாறுபட்டவை அல்லவே அல்ல. உதாரணமாக, ஜஸ்டிஸ் கட்சியும், பிராமண ரல்லாத தேசீயக் கட்சியும் தனது ராஜீயக் கொள்கையை காங்கிரசின் கொள் கையைப் போலவே ஏற்படுத்திக் கொண்டிருப்பதோடு ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்டும், சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டும் எவ்வளவு சீக்கிரத்தில் பெற முடியுமோ அவ்வளவு விரைவில் சுயராஜ்யம் பெறுவதென்ற கொள்கையை உடையதாயிருக்கிறது.

ராஜீய விஷயத்தில் மற்ற கட்சிகளுக்கும், காங்கிரசுக்கும் வித்தியாச மிருந்ததெல்லாம் ஒத்துழையாமை திட்டம் ஒன்றுதான். இது பெல்காமில் எடுபட்டாகிவிட்டது. சட்டத்திற்குக் கட்டுப்பட்டு சுயராஜ்யம் பெறுவதையும் காங்கிரஸ் ஒப்புக் கொண்டதற்கறிகுறியாக சட்டசபைப் பிரவேசத்தையும்



RangaRakes tamilnavarasam.com

அனுமதித்துவிட்டது. பிரிட்டிஷ் சம்பந்தமில்லாமலே சுயஆக்ஷி இருக்க வேண்டும் என்பதே காங்கிரஸ் அபிப்பிராயமல்லவென்பதற்கு அறிகுறியாக ஜனாப் மௌலானா, ஹஸரத் மோகினி முதலானவர்கள் கொண்டு வந்த சுயேச்சைத் தீர்மானத்தையும் காங்கிரஸ் தோற்கடித்து விட்டது.

ஆதலால், தற்காலமுள்ள காங்கிரஸ் கொள்கைகளும், அதன் திட்டமும், ஜஸ்டிஸ் ராஜீயக் கொள்கைகளையே அனுசரித்து இருப்பதுடன் அல்லாமல், காங்கிரஸ் கொள்கையைவிட ஜஸ்டிஸ் கொள்கையானது ஒரு அடி முற்போக்குடையதாயிருக்கின்றதென்று கூட சொல்லலாம். எப்படியெனில் “ காலதாமதமில்லாமல் சீக்கிரம் சுயராஜ்யம் பெற வேண்டும்” என்கிற ஓர் அவசர காலாவதியும் ஜஸ்டிஸ் திட்டத்தில் வைக்கப்பட்டு இருக்கிறது. மற்றபடி, சர்க்காரோடு ஒத்துழைப்பதிலும் சுயராஜ்யக் கட்சியினுடைய அனுபவமானது ஜஸ்டிஸ் கட்சி முதலியவைகளை ஒத்ததாகவே இருக்கிறது. சுயராஜ்யக் கட்சியார், சர்க்கார் கமிட்டிகளிலும் அங்கம் பெற்றிருக்கிறார்கள். சர்க்கார் சம்பளம் பெறத்தக்க உத்தியோகப் பதவிகளிலும் அமர்ந்திருக்கிறார்கள்; சர்க்காரால் அளிக்கப்பட்டுள்ள பட்டங்கள் பெற்றவர்களும், சுயராஜ்யக் கட்சியிலிருக்கின்றார்கள். முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு, தாலூகா போர்டு முதலியவைகளில் சர்க்கார் நியமன ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டவர்களும் சுயராஜ்யக் கட்சியில் இருக்கின்றார்கள். கதரில் நம்பிக்கை இல்லாதவர்களும், சுயராஜ்யக் கட்சியிலிருக்கின்றார்கள். மதுபானம் உற்பத்தி செய்கிறவர்களும், அதனை விற்கிறவர்களும், அதை விளம்பரப்படுத்துகிறவர்களும், அயல்நாட்டுத் துணி வியாபாரிகளும், பிறவியில் உயர்வு தாழ்வு உண்டு என்று சொல்லுகிறவர்களும் சுயராஜ்யக் கட்சியில் இருக்கின்றார்கள். இத்தகைய சுயராஜ்யக் கட்சியாரை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு பிரதான ஸ்தானமும் அளிக்கப்பட்டாய் விட்டது.

இந்த நிலைமையில், இந்தியாவிலுள்ள ராஜீய ஸ்தாபனங்கள் சகலமும் - காங்கிரஸ் உட்பட ஒரே கொள்கையைத்தான் கொண்டதாயிருக்கிறது. ஆகையால் தேச முன்னேற்றத்திற்குக் காங்கிரஸ் மகாசபை யொன்றுதான் உள்ளது என்று சொல்வது இனி பொருளற்ற வார்த்தையாகும். எனவே பொது மக்கள், காங்கிரஸில் சேராவிட்டால் நாம் தேசபக்தர்களாக மாட்டோமோவென்று பயப்பட வேண்டியதும்,ஜஸ்டிஸ் கட்சியிலிருந்தால் காங்கிரசில் இருப்பவர்களைவிடத் தாழ்ந்தவர்களாகிவிடுவோமோமென்றும் பயப்படுவதும் அறியாமையேயாகும்.

இந்தியர் ஒவ்வொருவரும் சுயமரியாதை அடைவதும், விடுதலை பெறுவதும், தனது முக்கிய நோக்கமாகக் கொள்ள வேண்டும். இந்நோக்கம் கொண்ட ஸ்தாபனம் எதுவோ அதெல்லாம், தேசீய காங்கிரஸ்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 20.12.1925**



## ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்தர முதலியார்

காஞ்சீபுரம் மகாநாட்டு விஷயத்தைப் பற்றி நமது பத்திரிக்கையில் “காஞ்சீ மகாநாட்டுத் தலைவர்” என்னும் தலைப்பின் கீழ் எழுதி வந்தோம். இனி, திரு.வி.கலியாணசுந்தர முதலியார் என்னும் தலைப்பின் கீழ் எழுத அவசியமேற்பட்டுப் போனதைப் பற்றி நாம் இதுவரையில் அடைந்திராத வருத்தத்தையும், கவலையையும் உண்மையிலேயே அடைகிறோம். ஆனாலும், கடமையைவிட்டு நழுவி அசத்தியத்தைத் தாண்டவமாடச் செய்ய மனம் ஒருப்படேனென்கிறது.

சென்ற வாரம் ஸ்ரீமான். முதலியாரவர்கள் தன்னுடைய தலைமைப் பதவியை மனச்சாட்சிப்படி நடத்தினாரா? என்கிற விஷயத்தைப் பொது ஜனங்கள் அறிவதற்காக, பல விஷயங்களுக்கு, ஸ்ரீமான். முதலியாரைப் பதிலெழுதும்படி எழுதியிருந்தோம். அவற்றிற்கு நேர்முகமாகப் பதில் சொல்லாமல், இரண்டு, மூன்று விஷயங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு, அதைப் பற்றிச் சில விஷயங்களை எழுதியிருக்கிறார். அவைகளில் பெரும்பான்மை முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோலவேயிருக்கிறது. அதற்குப் பதில் ருஜுவோடு எழுத வேண்டியது நமது கடமையாய்ப் போய் விட்டதாதலால் பின்னால் அவற்றைப்பற்றி எழுதுவதோடு, ஸ்ரீமான். முதலியார் விடை அளிக்காமல் விட்டுவிட்ட விஷயங்களை, மறுபடியும் அவர் ஞாபகத்துக்குக் கொண்டுவர எண்ணியிருக்கிறோம்.

இதன் மத்தியில், இதுவிஷயத்தைப்பற்றி பல கடிதங்கள் நமது கருத்தைத் தழுவி வந்துகொண்டிருக்கின்றன. அவற்றிற்கு நமது பத்திரிக்கையில் இடமில்லாததற்கு வருந்துகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 20.12.1925**



RangaRakes tamilnavarasam.com

# கல்பாத்தி

## 'பிராமணர்களைவிட வெள்ளைக்காரரே மேல்'

கல்பாத்தியில் தீண்டாத வகுப்பாரென்று சொல்லப்படும் இந்து சகோதரர்களை அந்தத் தெருவில் நடக்கக்கூடாதென்று 144 தடை உத்திரவு பிறப்பித்தது பற்றி இச்செய்கைக்கு ஸ்தல அதிகாரிகள் பொறுப்பாளிகளல்ல வென்றும், சென்னை கவர்ன்மெண்டாரே இச்செய்கையின் பெரும் பாகத் திற்குப் பொறுப்பாளிகளென்றும், அதிலும் ஸ்ரீமான். ஸர்.சி.பி. இராமசாமி ஐயர் என்கிற ஓர் பிராமண கனவான் சட்ட இலாகாத் தலைவராயில்லாமலிருந்தால், இம்மாதிரி காரியங்கள் நிகழ்ந்திருக்காதென்றும், பொதுஜனங்கள் அபிப் பிராயப்பட்டிருந்த விஷயமானது, இப்போது அடியோடு பொய்யென்று சொல்வதற்கில்லாமல், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி, சென்னை சட்டசபையில் கேட்ட கேள்விகளினாலும், அதற்கு ஸர்.சி.பி. இராமசாமி அய்யர் அளித்த விடைகளினாலும் இருக்கிறது. அதாவது:- பாலக்காடு மாஜிஸ்திரேட் 144 உத்திரவு போடும்படி கவர்ன் மெண்டார் தூண்டவில்லையானால், கவர்ன் மெண்டுக்கும், பாலக்காடு மாஜிஸ் திரேட்டுக்கும் நடந்த கடிதப் போக்கு வரத்துக்களை காண்பிக்கமுடியுமா என்ற கேள்விக்கு, ஸர்.சி.பி. இராமசாமி ஐயர், அக்கடிதப் போக்குவரத்துகள் இரகசியமானபடியால் காட்ட முடியா தென்று பதிலிறுத்தியிருக்கிறார்.

பாலக்காடு மாஜிஸ்திரேட் கல்பாத்தியில் இவ்விதமான உத்திரவு போட வேண்டிய அவசியமில்லையென்று ஒரு சமயத்தில் வெளியிட்டிருக்கிறாரா? இல்லையா? என்று ஸ்ரீமான். சி.ஆர்.ரெட்டி கேட்ட கேள்விக்கு, சட்டமெம்பர், ஸர்.இராமசாமி ஐயர் தான் பதில் சொல்லத் தயாராயில்லை யென்று சொல்லி விட்டார்.

இந்த கல்பாத்தி விஷயத்தில் என்ன செய்வதென்பதைப் பற்றி கவர்ன் மெண்டை பாலக்காடு மாஜிஸ்திரேட் அபிப்பிராயம் கேட்டாரா? இல்லையா? என்று ஸ்ரீமான். சசிபூஷண ராவ் கேட்ட கேள்விக்கு, சட்ட மெம்பர் ஆம் என்று சொன்னதோடு, பொது நன்மையை உத்தேசித்து, வெகு காலமாக நடந்த வர்த்தமானங்களை வெளியிட தாம் தயாராயில்லையென்று சொல்லிவிட்டார்.

இந்தக் கேள்விகளும், பதில்களும் பொது ஜனங்களைச் சர்க்காரிடத் திலும், பிராமண சட்ட மெம்பரிடத்திலும் சந்தேகங் கொள்ளாமல் எப்படி



இருக்கச் செய்யும்? இந்த இந்திய பிராமணர் இருந்த ஒரு ஸ்தானத்தில் ஸ்ரீமான்கள். எம்.ஸி. ராஜாவோ, ஆர். வீரையனோ இல்லாமலிருந்தாலுங்கூட ஒரு வெள்ளைக்கார மெம்பராவது இருந்திருப்பாரானால், இம்மாதிரி சம்பவங் கள் நடந்திருக்குமா வென்பதை யோசிக்கும்போது பல காரணங்களுக்கு, பிராமணர்களைவிட வெள்ளைக்காரர் கொஞ்சம் மேலென்றுதான் தோன்று கிறது.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 20.12.1925**



RangaRakes tamilnavarasam.com

# சென்னை தேர்தல் கலவரம்

சென்னையில் நடந்த கார்ப்போரேஷன் தேர்தல்களின்போது, கலவரங்களும், பலாத்காரச் செய்கைகளும் நடந்ததாக அவ்வப்போது பத்திரிக்கைகளில் காணப்பட்டு வந்தன. ஆனால் அவற்றின் உண்மையை ஜனங்கள் அறியாதபடி ஓர் கக்ஷியாரைப் பற்றியே குற்றமாய் நினைக்கும்படி சென்னை பிராமணப் பத்திரிக்கைகளும், சுயராஜ்யக் கக்ஷி பிராமணர்களும், சூழ்ச்சிப்பிரசாரம் செய்து வந்தனர். அதன்பின் இது சம்பந்தமாய் ஏற்பட்ட நீதிஸ்தலத்தின் விசாரணையின் போக்கைக் கவனித்தவர்களுக்கு பலாத்காரத்துக்கும், குழப்பத்திற்கும் யார் பொறுப்பாளிகளாயிருந்தார்க ளென்பது விளங்கியிருக்கும். சுயராஜ்யக் கட்சியார் மீது, மற்ற கக்ஷியார் சென்னை பிரசிடென்ஸி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தொடரப்பட்டிருந்த இரண்டு மூன்று விவகாரங்களின் முடிவினால் சுயராஜ்யக் கட்சியார்தான் அதற்குப் பொறுப்பாளிகளென்பதை விளக்கியிருக்கிறது.

அதாவது:- கொஞ்ச நாளைக்கு முன் பைசலான ஒரு வழக்கில் சுயராஜ்யக் கட்சியார் ஒருவர் மற்றக் கட்சியாரைப் பிடித்துத் தள்ளியதும், திட்டியதும் ருஜுவானபோதிலும், தேர்தல்களில் இவைகளெல்லாம் நடப்பது சகஜந்தானென தீர்ப்புச் சொல்லப்பட்டுவிட்டது.

மற்றொன்றில், அடைத்து வைத்தது பற்றி விஷயங்கள் தெளிவான போதிலும், அதுவும் அவ்வளவு பெரிய குற்றமல்லவென்று தள்ளிவிடப் பட்டது. மற்றொன்றில், எதிரிகள் தங்கள் நடவடிக்கைக்கு வருத்தப்படுவதினால் வழக்குத் தொடர்ந்தவர் வாபீஸ் வாங்கிக்கொள்ளவே எதிரிகள் விடுவிக்கப் பட்டனர்.

இவ்விஷயங்கள் இப்படியிருக்க, பொது ஜனங்களுக்கு ஒரே கட்சியார் பேரில் குற்றம் காணும்படியாக பிரசுரஞ் செய்த பிராமணப் பத்திரிகைகளின் சூழ்ச்சிகளை நினைக்கும்போது அவைகளுக்கு நம் நாட்டை ஆக்கவும், அழிக்கவும் சக்தியிருக்கின்றதென்பதை மறுக்க முடியாது. ஆதலால், பொது மக்கள் பிராமணப் பத்திரிக்கைகளின் விஷமப் பிரசாரங்களைக் கண்டு திடீரென்று ஒரு முடிவுக்கு வந்துவிடாமல், நிதானமாய் யோசித்து உண்மை அறிய பிரயத்தனப்பட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 20.12.1925**



# நம்பிக்கை துரோகம்

தென்னாட்டில் பிராமணர்களின் கொடுமைகளை வெளிப்படுத்தி அவர்களால் அமுந்திக் கிடக்கும் பிராமணரல்லாதார் சமூக முன்னேற்றத் திற்குப் பாடுபடும் இயக்கங்களையும், தொண்டர்களையும் ஒழிப்பதற்கு தென்னாட்டு பிராமணர்கள், பிராமணரல்லாதாரிலேயே சில விபூஷணாழ் வார்களை தங்களுக்கு ஆயுதமாக உபயோகப்படுத்திக்கொண்டு வந்தது நமக்குப் புதிய சங்கதியல்ல.

சரித்திர காலம் எப்படியிருந்தாலும், நம் கண்ணெதிராகவே சென்ற 10 வருடங்களாக நடந்த காரியங்களைக் கவனிப்போம். பிராமணரல்லாதார் நன்மைக்கென்று சந்தேகமற்ற தேசபக்தரான டாக்டர் நாயர் போன்றவர் களால் ஏற்படுத்தப்பட்ட, ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க, சில பிராமணரல்லா தாரைக் கொண்டே சென்னை மாகாணச் சங்கமென ஒன்றை உண்டாக்கச் செய்து, அதற்கு வேண்டிய செலவுகளுக்குத் தாங்களே பணம் கொடுத்தும், இந்தியாவில் மாத்திரமல்லாமல், இங்கிலாந்திலும் போய் ஸ்ரீமான் டி.எம். நாயர் அவர்களுக்கு விரோதமாக பிராமணரல்லாதாரைக் கொண்டு எதிர்ப்பிரசாரம் செய்வித்தும் உண்மைக்கு விரோதமான சாக்ஷியம் சொல்லும்படி செய்தது மில்லாமல், ஜஸ்டிஸ் கட்சியார் பிராமணரல்லாதவர்களுக்குப் பிரதிநிதி களல்லவென்றும் நாங்கள்தான் சரியான பிரதிநிதிகளென்றும் சொல்லச் செய்து பணத்திற்கும், விளம்பரத்திற்கும் ஆசைப்பட்ட பல பிராமணரல்லா தாரை தங்களிஷ்டம்போல் ஆட்டுவித்துவரும் சூழ்ச்சிகளையும் நாம் நேரிலேயே பார்க்கிறோம்.

ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாக ஏற்படுத்தப்பட்ட சென்னை மாகாணச் சங்கத்திற்கு முக்கிய கொள்கைகள் மூன்று. அவை, ராஜீய விஷயங்களில் காங்கிரசைப் பின்பற்றுவது; தென்னிந்தியாவில் பிராமணரல்லாதார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அடைவது; பிராமணரல்லாதாருடைய முற்போக்குக்கான காரியங்களைச் செய்வது ஆகியவைகளே.

இக்கொள்கைகளைத் தென்னாட்டு தேசீய பிராமணர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டு தாங்களும் பக்கத்திலிருந்து நிறைவேற்றி வைத்ததோடல் லாமல், தாங்களும் அதற்கு அனுகூலமாயிருப்பதாகச் சொல்லி நமது கூடவே யிருந்து ஜஸ்டிஸ் கட்சியின் செல்வாக்குக் குறைந்ததாக மதித்துக் கொண்டு, இப்பொழுது " மீக்கு பெப்பப்பே, நீவு தாத்தாக்கு பெப்பப்பே" என்பது போல்



RangaRakes tamilnavarasam.com

அடியோடு பழைய சங்கதிகளை மறந்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேசத்திற்குக் கெடுதியென்று, ஞானோபதேசம் செய்ய வந்துவிட்டதோடு, இதற்கும் சில பிராமணரல்லாத விபூஷணாழ்வார்களை சுவாதீனமாக்கிக் கொண்டு, அவர்களைக் கொண்டே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேசத்திற் குக் கேடு என்று சொல்வதோடல்லாமல், சத்தியத்தையும், மனச் சாட்சியையும் கூட மறக்கும்படி செய்து அவைகளைப் பலி கொடுத்து விட்டார்கள். ஜஸ்டிஸ் கக்ஷியை ஒழிக்க வேண்டிய அவசியத்திற்காக சென்னை மாகாணச் சங்கத்தின் மூலம், பிராமணரல்லாதாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுப்பது ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியார் உட்பட பல தேசிய பிராமணர்களுக்கு அவசியமாயும் நாட்டுக்கு நன்மை பல பயப்பதாயும் பட்டது.

ஆனால், சென்னை மாகாணச் சங்கத்தின் மூலமாய் தங்களுக்கு வேண்டிய காரியங்களைச் சாதித்துக் கொண்டதாய் நினைத்துக் கொண்ட வுடன், நமது பிராமண சகோதரர்களுக்கு, இப்போது வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் கொடுப்பது நாட்டுக்குக் கேடு விளைவதாய்ப் போய்விட்டது.

ஈரோட்டில், சென்னை மாகாணச் சங்க மகாநாடு நடைபெற்ற காலத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தீர்மானம் உட்பட சகல தீர்மானங்களும், விஷ யாலோசனைக் கமிட்டியில் ஸ்ரீமான்கள் சேலம் சி.விஜயராகவாச்சாரி யாரவர்களாலும், திரு.வி.கலியாணசுந்திர முதலியாராலும், டாக்டர் வரத ராஜுலு நாயுடுவாலும், வி.ஓ. சிதம்பரம் பிள்ளையாலுமே முக்கியமாய் தயார் செய்யப்பட்டது. அடுத்த நாள் மகாநாட்டிலும் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு வாலேயே பிரேரேபிக்கப்பட்டு நிறைவேறியது.

ஸ்ரீமான்கள் முதலியாரும் நாயுடுவும்தான் சென்னை மாகாணச் சங்கத்தின் பிரமுகர்கள். இவர்களை நம்பித்தான் பிராமணரல்லாதாரில் பலர் ஜஸ்டிஸ் கட்சியை விடுத்து சென்னை மாகாணச் சங்கக் கட்சியில் சேர்ந்தது. பிராமணரல்லாத பாமர ஜனங்களும், தங்களது முன்னற்றத்திற்கு இவர் களைத்தான் எதிர்பார்த்திருந்தார்கள். இப்படியிருக்க இன்றையதினம் இவர் களின் நிலை என்னமாயிருக்கின்றதென்று யோசித்துப் பார்த்தால் எழுதவே கை நடுங்குகின்றது. தலைக்கு மேல் வெள்ளம் போகும்போது சாண் போனா லென்ன ? முழம் போனாலென்ன என்கிற தைரியம் நமது முதலியாருக்கு வந்துவிட்டது. ஸ்ரீமான் நாயுடு அவர்களாவது, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்காவிட்டாலும், அதை எதிர்க்காமல் சும்மாவாவது இருக்கிறார்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்குப் பதிலாக வேறு ஏதாவது மார்க்க முண்டாவென்று யோசிக்கிறார். வேறு மார்க்கம் கிடைக்கா விட்டால், முடி வாய் அவர் என்ன செய்வாரென்கிற விஷயம் நமக்குத்தெரியும்.

நமது முதலியாரோ, துணிந்து “ வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் சென்னை மாகாணச் சங்கத்தார் தற்கால நிலைக்கென கேட்டார்கள்; அந்தப் படியே கிடைத்து, அதன் பயனை நாடு அடைந்து வருகிறது; தற்கால நிலைக்கென கேட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை என்றும் கேட்டுக் கொண்டிருத்தல் நியாயமாகுமா?” என்று சிலம்பொலியில் தர்மநியாயம் பேசுகிறார்.





ஸ்ரீமான் முதலியார் சென்னை மாகாணச் சங்கத்தின் மூலமாய் கேட்கப் பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நமக்குக் கிடைத்துமாய் விட்டது போலும். நாம் அதை அனுபவித்தாய்விட்டதுபோலும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் எதை உத்தேசித்துக் கேட்டோமோ, அவைகள் சரிப்பட்டாகி விட்டது போலும், இன்னமும் அது இருந்தால் நாட்டுக்குக் கெடுதி விளைவிக்குமென்பது போலும், ஆதலால் அதைக் கேட்கக் கூடாதென்பது போலும் உபதேசிக்கிறார்.

இவ்வுரைகள், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் விடுதலை யுரிமையையும் அடைய உத்தேசங்கொண்டு ஆரம்பித்த ‘தேசபக்தன்’ ஆசிரியரும், தொழிலாளர் நன்மைக்கென்று ஆரம்பித்த ‘நவசக்தி’ ஆசிரிய ருமான ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்திர முதலியாருக்குத் தகுமா ? இது தருமந்தானா ? என்று கேட்கிறோம்.

ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க வேண்டியதற்கு மாத்திரம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டியிருந்தது. இப்போது வேண்டாமற் போய் விட்டது! இவ்வித நம்பிக்கைத் துரோகத்தில் நமது திரு.வி.கலியாணசுந்திர முதலியா ரவர்களுக்கு ஏன் பங்கு இருக்க வேண்டும்?

பிராமணர்கள் சம்மதித்தால் தனக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் வேண்டும். அவர்கள் சம்மதிக்காவிட்டால் தனக்கு வேண்டாம் என்கிற கொள்கை நமது முதலியாருடைய கொள்கையாகலாமா? வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் கேட்பதில் நமது முதலியாருக்கு இப்போது உள்ள ஆட்சேப னைகள் அதற்கெனவே ஓர் சங்கத்தை ஸ்தாபித்த காலத்தில் எங்கே மறைந்து கிடந்தது? இவற்றையெல்லாம் கொஞ்சமும் நினைத்துப் பாராமல் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம், உரிமைப் போருக்கு விரோதமென்று சொல்லுகிறார். அவனவன் உரிமை, அவனவனுக்கு வழங்கப்படாமல் வஞ்சித்துக் கையில் பலத்தவன் காரியமாக்குவதுதான் உரிமைப் போரின் தத்துவம் போலும்.

ஸ்ரீமான் முதலியாரவர்களே இந்துக்களுக்குள் இதுபோழ்து மூன்று பிரிவுகள் இருக்கிறதாகவும், அவை பிராமணர், பிராமணரல்லாதார், ஆதி திராவிடர் ஆகிய இவர்களென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவ்வகுப்புகள் அதனதன் உரிமையை ராஜரீகத்திலாவது, சமூக விஷயத்திலாவது, பிரஜா தர்மத்திலாவது சமமாய் அடைந்திருக்கிறதா ? என்று முதலியாரை வணக்கத் துடன் கேட்கிறோம். இவைகளுக்கில்லாத உரிமைப்போர் வேறு எதற்கு? மற்றும் யாருக்கு ?

துறவறத்திற்கு காவி வேஷ்டி உடுத்திக் கொள்வது ஜனங்களை

RangaRakes
tamilnavarasam.com

ஏமாற்ற எப்படி ஒரு சாதனமாயிருக்கிறதோ, அதுபோல் ராஜீயத்திலும் உரிமை – சுயராஜ்யம் என்கிற வார்த்தைகள் ஏழை மக்களை வஞ்சிக்கவும் மற்றும் பாமரர்களை ஏமாற்றவும் மற்றும் பல காரியங்களுக்கு உபயோகப்படுத்தக் கூடிய சாதனமாகப் போய்விட்டது.

இப்பொருள் கொண்ட சாதனங்களை ஸ்ரீமான் முதலியார் ஏன் உபயோகப்படுத்த வேண்டும்? இவற்றை நினைக்கும் போது நமது நாட்டின் பிற்கால வாழ்விலும், பிராமணரல்லாத சமத்துவத்திலும் நம்பிக்கையைவிட அவநம்பிக்கையே வலுத்து வருகிறது. ஆனால், நமது கடமையை நினைக்கும் போது சும்மாயிருக்க முடியவில்லை.

**குடி அரசு – கட்டுரை – 20.12.1925**



# ஒத்துழையாமையே மருந்து

ஸ்ரீமான் சி.ராஜகோபாலாச்சாரியார் அவர்கள், நிர்மாணத் திட்டத்தில் ஒன்றாகிய மதுவிலக்குக்கு சட்டசபையை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்கிற நிலைக்கு வந்திருப்பதாக அவர் பல பத்திரிகைகளுக்கு அனுப்பியிருக்கும் கட்டுரைகளிலிருந்து வாசகர்களுக்கு விளங்கியிருக்கும். அத்தோடு தீண்டாமை ஒழிப்பதற்கும், கோர்ட்டுகளை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பதாகக் கருதியிருப்பதாய் அவர் சென்ற சில தினங்களுக்கு முன் சித்தூர் ஜில்லா சப்டிவிஷனில் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஓர் ஆதி திராவிட ஆலயப்பிரவேச வழக்கில் ஆஜராகி ஜெயம் பெற்றதன் மூலமாகவும் அறியலாம். இனி மகாத்மாவின் மூவகைப் பகிஷ்காரத்தில் முக்கியமாயுள்ளது, சர்க்கார் சம்பந்தப்பட்ட பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடாது என்பதுதான். ஆனால் அது அநுபவத்தில் இப்போது அடியோடு இல்லவே இல்லை. அதில் இப்போது நம்பிக்கை வரவேண்டிய அவசியமும் இல்லை. கோர்ட்டு, சட்டசபை ஆகிய இவ்விரண்டிலும் ஸ்ரீமான் ஆச்சாரியார் அவர்களுக்கு நம்பிக்கை வந்திருப்பது தற்கால நிலைமையில் அதிசயமுமல்ல, அது ஓர் வகையில் குற்றமுமல்லவென்றே சொல்லுவோம். ஆனால் காரியத்தில் இவையிரண்டும் தேசீய சம்பந்தமான விஷயங்களுக்கு பயன்படுமா என்பதுதான் நமது கவலை. ஸ்ரீமான் சி. ஆர். தாஸ் அவர்கள் சட்டசபையை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்ற காலத்தில்,சட்டசபையால் தேசத்திற்கு ஒன்றும் செய்ய முடியாது என்று மனப்பூர்வமாய் நம்பித்தான் நாம் ஆக்ஷேபித்தோமேயல்லாமல் மற்றபடி ஸ்ரீமான் தாஸ் முயற்சிக்கு விரோதமாய் இருக்க வேண்டுமென்கிற எண்ணத்தோடல்ல. அதுபோலவே தேசத்துக்காகத் தொண்டு செய்த நிரபராதிகளை நமது சர்க்கார் வேண்டு மென்றே கூட்டங்கூட்டமாய்ப் பிடித்துத் தண்டித்து ஜெயிலிலடைத்த காலத்தில் அநேகர் எதிர் வழக்காடும் படி அறிவுறுத்தியபோதும் சர்க்கார் கோர்ட்டுகளில் தேசீய சம்பந்தமான வழக்குகளுக்கு நியாயங்கள் கிடைக்காதென்கிற உறுதியின் பேரில்தான், நாம் எதிர் வழக்காட மறுத்தோமேயல்லாமல், வேண்டுமென்றே சிறைக்குப்போக வேண்டுமென்கிற எண்ணத்தினாலல்ல. அப்படியிருக்க, இவ்விரண்டு தத்துவங்களும் இப்பொழுது நம்பிக்கைப் பாத்திரமாகி விட்டதற்கு காரணம் என்னவென்று யோசிக்கும் போது, மகாத்மா காந்தி தனது இயக்கம் வெற்றிப்பெற முடியாமற் போனதற்குக் காரணம் படித்தவர்களென்று சொல்லப்படுவோரின் மனப்பான்மையை மாற்ற தனக்குச் சக்தியில்லாமல்



RangaRakes tamilnavarasam.com

போனதுதானென்று பல முறையும் சொல்லி வந்திருப்பது ஸ்ரீமான். சி. ராஜகோபாலாச்சாரியாரின் புது தோற்றத்தால் கல்லின் மேல் எழுத்து போலாகி விட்டது. அப்படி இல்லையென்று சொல்ல வேண்டுமானால் ஒத்துழையாமை தத்துவம் பொய்த்துப்போய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அவ்விதம் ஸ்ரீமான் ஆச்சாரியார் சொல்ல மாட்டார். ஆனால் ஒரு சமயம் சட்டசபைகளில் பொறுப்பில்லாதவர்களும், சுயநலக்காரர்களுமாகக் கூடிக்கொண்டு ஒருவரையொருவர் தேசத்தின் பேரால் வைது கொண்டும் வழக்காடிக்கொண்டும், சர்க்காருக்கு அனுகூலமாய் இருப்பதின் பலனாய், பொது ஜனங்களைப் பிரிப்பதற்கும், வகுப்பு வேற்றுமைகளையும் உண்டாக்குவதற்கும் காரணமாயிருக்கிறது. ஆதலால் பொறுப்புள்ள ஒரு சிலர் இந்த ஸ்தானங்களை ஆக்கிரமித்துக் கொண்டு தேச நலத்திற்கு நன்மையொன்றுமில்லாவிட்டாலும், கெடுதியாவது உண்டாகாமல் மதுவிலக்கு என்கிற ஒரு நல்ல காரியத்தின் பெயரையாவது சொல்லிக் கொண்டு, காலத்தைக் கடத்தி வரலாம் என்று ஒரு சமயம் கருதி இருக்கலாம். அக்கருத்து ஒழுங்கானதென்றே வைத்துக் கொண்டாலும், காரியத்தில் அது எவ்வளவு தூரம் சாத்தியப்படுமென்பதைக் கவனிக்க வேண்டும். இப்பொழுது சட்டசபையில் நாலைந்து கொள்கைக்காரர்கள் இருக்கின்றார்கள். ஒன்று ஜஸ்டிஸ் கட்சியாரென்போர் மற்றொன்று சுயராஜ்யக்கட்சியார். இன்னுமொன்று சுயராஜ்யக் கட்சியில் சேராமலிருக்கும் சிலரும், ஜஸ்டிஸ் கட்சியில் சேராமலிருக்கும் சிலரும், இவ்விரண்டிலிருந்து பிரிந்து வந்த சிலரும் ஆக மூன்று முக்கியக் கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். இவர்களில் யாரும் மதுவிலக்கு என்கிற ஒரே காரியத்திற்குப் பாடுபடுவதைத் தவிர வேறு காரியம் பார்க்கக் கூடாதென்பதற்கு ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். ஒத்துழையாமை மனப்பான்மையுள்ள ஆசாமிகளைப் பிடித்து சட்டசபைக்கு புதிதாக அனுப்பலாமென்று நினைப்போமேயானால், ஒரு நாலைந்து பேருக்கு மேல் சட்டசபையில் ஸ்தானம்பெற சவுகரியமே கிடைக்காது. ஒவ்வொரு ஜில்லாக்களிலும் ஆயிரம், இரண்டாயிரம், பத்தாயிரம், இருபதினாயிரம் செலவு செய்து கொண்டு சட்ட சபைக்குப் போகிற சுயநலப்புலிகள் போட்டி போடும்போது பெரும்பாலும் தாராளமான பணம், காசு இல்லாத வெறும் ஆசாமியாயிருக்கின்ற ஒத்துழையாதாருக்கு எப்படி ஸ்தானங்கள் கிடைக்கும்? அது மாத்திரமல்லாமல், ஒத்துழையாதாருக்குள்ளேயே வகுப்பு விஷயங்களில் ஒருவருக்கொருவர் அவநம்பிக்கை ஏற்பட்டு ஆளுக்காள் ஜாக்கிரதையாய் இருக்கிற நிலைமை யில் இந்தக் காரியம் ஒழுங்காய் நடைபெறுமென்று எப்படி என்ன முடியும்? இப்பொழுதிருக்கிற வகுப்புக் கட்சி வாதங்களெல்லாம் அதிலும் பிரவேசிக் குமா? பிரவேசிக்காதா? இவ்வளவையும் தாண்டிக் கொண்டு சட்டசபையில் போய் பத்துப்பேர் உட்காருவதாய் வைத்துக்கொண்டாலும், நான்கு வருடமாய் ஒத்துழையாமையின் நிமித்தம் மகாத்மா காந்தி அவர்களும் இன்னும் பல தேசபக்தர்களும் செய்த தொண்டுகளையும், தியாகத்தையும், அனுபவித்த கஷ்டத்தையும், சிறைவாசத்தையும் தங்கள் சுய நன்மைக்கு



அனுபவித்துக் கொள்ள சுயராஜ்யக் கக்ஷியாரென்கிற ஒரு கூட்டத்தார் எப்படித் திடீரென்று வந்து உட்கார்ந்துக் கொண்டார்களோ, அதுபோலவே சட்டசபையிலும் ஒரு பத்துபேர் கஷ்டப்பட்டு சட்டசபையில் ஸ்தானம் பெற்று வாதாடுவதினால் சர்க்காருக்கு ஏதாவது இடைஞ்சல் நேரிடுவதாய் தோன்றி, அவர்கள் ஏதாவது ஒன்றிரண்டு துண்டு வீசுவதாயிருந்தால் அதற்கு ஆசைப்பட்ட சில ஆசாமிகள், அதை உபயோகப்படுத்திக் கொண்டு நம் காரியத்தை கெடுக்க மாட்டார்களென்பது என்ன உறுதி ?

அல்லது, ஒத்துழையாமையில் நம்பிக்கையுள்ளவர்கள் என்று சொல்வோர் தாங்கள் போகவில்லையானாலும் தங்கள் திட்டத்திற்கு அனுகூலமாயிருப்பவர்களை சட்டசபையில் ஸ்தானம் பெற உதவி செய்வதாக வைத்துக் கொண்டாலும், ஒத்துழையாதாரின் உதவிபெற்று சட்ட சபைக்குப் போகிறவர்கள் யோக்கியமாய் நடந்து கொள்பவர்களென்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது? தற்காலம் தேர்தல்களுக்கு நிற்கிறவர்கள் சொல்லுகிற வாக்குறுதிகளும், ஸ்தானம் பெற்ற பிறகு அவர்கள் நடந்துகொள்ளும் யோக்கியதையும் தலைவர் முதல் தொண்டர் வரையில் உள்ளவர்களின் யோக்கியதையையும் நாம் பார்த்துக்கொண்டு தான் வருகிறோம். காஞ்சீபுரம் மகாநாட்டைக் கவனித்தவர்களுக்கு நமது ஜனங்களின் நாணயத்தைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

ஆதலால், இம்மாதிரி திட்டங்கள் போட்டுக் கொண்டிருப்பதைவிட காரியத்தில் பலன் தரத்தக்கதானத் திட்டங்களை வைத்து, பழைய ஒத்துழையாமையையே உயிர்ப்பித்துப் படித்த கூட்டத்தாரை விலக்கி, சட்ட மறுப்பு, சத்தியாக்கிரகம் முதலிய காரியங்களைச் செய்து ஒரே உறுதியாய் அதில் நம்பிக்கையுள்ளவர்களை மாத்திரம் சேர்த்துக் கொண்டு, அதற்கு விரோதமான மனச் சாட்சியுள்ளவர்களையெல்லாம் வெளியில் தள்ளி, பரிசுத்தமான எண்ணத்தோடு பழையபடி மகாத்மா சாரதியாயிருந்து அஹிம்சா தர்ம தேரை ஓட்டினாலல்லாது வேறு எந்த காரியத்தாலும் நாடு விடுதலையும், சுயமரியாதையும் பெறுமென்று எண்ணுவது வெறுங் கனவேயாகும். ஆதலால், இந்நிலை வரும்வரை மனிதரை மனிதர் தின்றும், ஒரு வகுப்பாரை ஒரு வகுப்பார் தின்றும் ஏப்பம் விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உண்மை மனிதனின் கடமை.

**குடி அரசு – தலையங்கம் – 27.12.1925**



RangaRakes tamilnavarasam.com

# ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்திர முதலியார்

ஸ்ரீமான். முதலியார் தனது ‘நவசக்தி’’யில் “எனது நிலை” என்ற தலைப்பிட்டு நமது “குடி அரசின்” 29 கேள்விகள் கொண்ட கட்டுரைக்கு மறுப்பு எழுதுவது போல் எழுதியிருக்கிறார். அதற்கு எமது குடி அரசிலும் எமது நிலை என்று தலைப்பிட்டு ஒரு கட்டுரை எழுதக் கருதி, இவ்வாரம் “குடி அரசுக்கு” எனது நிலை ஸ்ரீமான் முதலியார் நிலை ஆகிய இருவர் நிலை முழுவதையும் விவகரிக்க இடம் போதானெக்கருதி இவ்வாரத்திய “குடி அரசு” பன்னிரன்டு பக்கத்தை, இதற்கென்றே பதினாறு பக்கமாக்கப்பட்டது. வெளிப்படுத்த முடியாத பல இடங்களிலிருந்தும், நண்பர்களிடமிருந்தும், கடிதங்கள் வந்ததாலும், ஸ்ரீமான் முதலியார் அவர்களுக்கும், எனக்கும் பொது வான நண்பர்கள் சிலர் நேரில் வந்து 144 தடை உத்தரவு போட்டதாலும், கருதிய படி நடக்கமுடியவில்லை. ஆனாலும், ஸ்ரீமான். முதலியாரின் மறுப்பில் காணும், விஷயங்களை சுமார் 30 கூறுகளாய் பிரித்திருந்தாலும், இரண்டு ஒன்றை மாத்திரம் பொது ஜனங்களுக்கு விளக்க நண்பர்களின் அநுமதி பெற்று ஓர் சிறு குறிப்பை எழுதி முடித்து விடுகிறேன்.

ஸ்ரீமான். முதலியார் மறுப்பில் காணும் முக்கிய விஷயங்களில் சில கீழே விவரிக்கிறேன்:-

1. “வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஆதரித்து ஸ்ரீமான். முதலியார் எங்கும் பேசவில்லை, எழுதவில்லை” யென்பது.

2. “ஸ்ரீமான். கிருஷ்ணசாமிப் பாவலர், ஸ்ரீமான். இராமநாதன் பிரேரேபனைக்கு 100-க்கு 90 பேர், பிராமணரல்லாதாராயிருக்க வேண்டு மென்று ஒரு துண்டு ஒட்டவைத்தார்” என்பது.

3. “ஸ்ரீமான். இராமநாதனின் தீர்மானம் விஷயாலோசனைச் சபையில் தோற்றுப்போய் விட்டதால், மகாநாட்டில் வலியுறுத்தப்போவதாக அறிவித் ததை ஏற்றுக் கொள்ளப்பட்டது” என்பது.

4. “மகாநாட்டில் முதல் தீர்மானம் விவாதத்திலிருந்த காலத்தில், 25 பிரதிநிதிகள் கையெழுத்துக் கேட்டதாகச்” சொல்லுவது.

5. “ஸ்ரீமான். நாயக்கர் காங்கிரஸோடு சுயராஜ்யக்கக்ஷி கலந்து விடுவ தற்கு சம்மதிக்காமல், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எப்படி கேட்கலா மென்று கருதி வகுப்புவாரி தீர்மானத்தை ஒழுங்குத்தவறென்று நிராகரித்ததாகச் சொல்வதும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தீர்மானத்தை காங்கிரஸ் மகாநாட்டில் அநுமதிப்பது அநாவசியம்” என்பது.

**பதில்**

1. சென்னை மாகாணச் சங்கத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் ஓர் முக்கியமான கொள்கையென்பதும் அச்சங்கத்தின் முக்கியஸ்தராகவே ஸ்ரீமான் முதலியார் விளங்கினாரென்பதும் அச்சங்கத்தை ஆதரித்த முக்கிய பத்திரிகையான “ தேசபக்தனுக்கு”க்கு ஸ்ரீமான் முதலியார் ஆசிரியரா யிருந்தாரென்பதும் அதற்குள் உலகம் மறந்திருக்காது. இந்நிலையில் இவர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை தான் ஆதரிக்கவில்லை யென்று சொல்லுவது, சரியா யென்பதை வாசகர்களே கவனித்துக் கொள்ளட்டும். மற்றும் “தேச பக்தன்” பத்திரிக்கையின் பிரதிகளை ஸ்ரீமான். முதலியாரே சாவதானமாய் படித்துப் பார்க்கட்டும்.

2. ஸ்ரீமான். பாவலர், ஸ்ரீமான். இராமநாதன் தீர்மானத்திற்கு ஒரு துண்டு ஒட்டவைத்தாரென்று சொல்லுவது உண்மைக்கு விரோதமானது. ஸ்ரீமான். இராமநாதன் தீர்மானம் விஷயாலோசனை சபையில் தோற்றுப்போன பிறகு தான், ஸ்ரீமான். பாவலர் தன்னுடையதைப் பின் வாங்கிக் கொண்டிருக்கிறார். இவர் பின்வாங்கிக்கொள்ள ஸ்ரீமான். முதலியார் அநுமதி கொடுத்தது, ஒப்புக்கொள்ளத்தக்கதல்லவென்று கூட நானும் ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளையும் விஷயாலோசனைக் கமிட்டியில் வாதாடியிருக்கிறோம். இவை யெல்லாம் ஸ்ரீமான். முதலியார் ஞாபகமில்லாமற் சொல்லுகின்றாரென்றுகூட சொல்ல மனம் வரவில்லை. உண்மைக்கு நேர்விரோதமாகப் பேசுகின்றா ரென்பது தான் தனது அபிப்பிராயம்.

3 & 4. ஸ்ரீமான். இராமநாதனின் விஷயாலோசனைக் கமிட்டியில், தோற்றுப் போன தீர்மானத்தை மகாநாட்டில் வலியுறுத்த அநுமதித்ததாகச் சொல்லுவது ரொம்பவும்சரி. ஆனால் அப்படி ஒப்புக்கொண்ட அவர் மகாநாட்டிற்கு வந்தபிறகு ஷை தீர்மானத்தைப் பிரேரேபிக்க, 25 பிரதிநிதிகள் கையெழுத்து வேண்டுமென்று சொன்னதை மாத்திரம் ஒப்புக்கொள்ளு கிறாரே தவிர, அப்படிச்சொல்ல நேர்ந்த அவசியமென்னவென்பதை அவர் சொல்லவில்லை. அல்லாமலும், முதல் தீர்மானம் மகாநாட்டில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், 25 கையெழுத்துக் கேட்டதாகச் சொல்வது மனதறிந்து சொல்லும், உண்மைக்கு மாறுபட்ட விஷயமாகும். முதல் தீர்மானத்தின், இரண்டாவது பாகம் பின் வாங்கிக்கொள்ளப்பட்டு, முதல் பாகம் நிறைவேற்றப்பட்ட பின்பு நானும், ஸ்ரீமான். எஸ். ஸ்ரீனிவாசய் யங்காரும், பிராமணர் - பிராமணரல்லாதார் விஷயத்தைப்பற்றி தனியாக ஓர் இடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த சமயத்தில் இது சொல்லப்பட்டது என்பது உறுதி. ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்கார் பக்கத்தில் பேசிக்கொண


RangaRakes
tamilnavarasam.com

டிருக்கும்போதுதான், ஸ்ரீமான். இராமநாதன் என்னிடம் வந்து, ஸ்ரீமான். முதலியார் திடீரென்று 25 பிரதிநிதிகள் கையெழுத்துக் கேட்கிறாரென்று சொன்னது. அதன் பிறகுதான் கையெழுத்து வாங்க ஏற்பாடு செய்து சுமார் 30 கையெழுத்து வாங்கிக் கொடுத்தது. அது சமயம், கல்பாத்தித் தீர்மானம் விவாதத்திலிருந்தது. இதற்கு வேண்டிய ருஜுக்களும் இருக்கின்றது.

5. காங்கிரசோடு சுயராஜ்யக் கட்சி கலருவதற்கும், வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் கேட்பதற்கும் என்ன சம்மந்தம்? வகுப்புவாரிப் பிரதிநிதித்வமென்பது சட்டசபைப் பிரவேசம் மாத்திரந்தானா? நமது நாட்டில் சட்டசபை ஸ்தாபனங்கள் தேர்தல்களில் ஒட்டுமொத்தம் ஒரு நூறு ஸ்தானங்கள்கூட இருக்காது. சட்டசபைகளின் மூலம் ஊதியம் பெறும் ஸ்தானம் ஒரு பத்து ஸ்தானங்கள்கூட இருக்காது. நான் கேட்கும் வகுப்புரிமை ஸ்தானங்கள் ஸ்தல ஸ்தாபனங்களுட்பட பொதுஜன ஊழியம், அரசியல் ஊதிய அதிகாரப் பதவிகளுட்பட காங்கிரஸ் முதலிய பொது ஸ்தாபனங்களின் ஆதிக்கங்கள் உட்பட, ஆகிய இவைகளில் சுமார் லட்சக்கணக்கான ஸ்தானங்களுக்குக் குறையாமல் உள்ள பதவிகளுக்கும், அதிகாரத்திற்கும், நான் வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் கேட்பது. இவ்வளவு பொறுப்புள்ள உரிமைகளையும் காங்கிரஸ், சுயராஜ்யக் கட்சியார் வசம் ஒப்படைத்திருக்கிறதா? ஸ்தல ஸ்தாபனம் முதலியவைகளைக் காங்கிரஸ்காரர்கள் கைப்பற்ற வேண்டு மென்று, காஞ்சீபுரம் மகாநாடு தீர்மானித்திருக்கிறதேயல்லாமல், சுயராஜ்யக் கட்சியார் கைப்பற்ற வேண்டுமென்று தீர்மானிக்கவில்லை. லக்னோ பேக்டும், சுயராஜ்யக்கட்சி ஏற்பட்டதற்குப் பிறகுகூட கல்கத்தா பேக்டும், காங்கிரஸ் மூலியமாகவும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு வகுப்புரிமையும், காங்கிரஸ் மூலமாய் பிரேரேபிக்கப்பட்டதேயல்லாமல், சுயராஜ்யக்கட்சியின் தயவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கவில்லை. காங்கிரஸ் சார்பாக கூட்டப்பட்ட இம்மகாநாடு, வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தை எடுத்துக் கொள்ளவேண்டியது அனாவசியமென்று தான் தள்ளிவிட்டேனென்று ஸ்ரீமான். முதலியார் சொல்வதில் எவ்வளவு ஒழுங்கிருக்கிறதென்பதை வாசகர்கள் கவனிப்பார்களென்று நினைக்கிறேன்.

இதே ஸ்ரீமான். முதலியாரவர்கள் காஞ்சீபுரம் மகாநாட்டுத் தலைமை தனக்குக் கிடைக்கும் முன்பாகத் தனது பத்திரிக்கையிலும், பல மேடைகளிலும் நமது நாட்டில் சுயராஜ்யக் கட்சி ஒன்று தோன்றினபிறகுதான் வகுப்புச் சண்டைகளும், வகுப்புப் பூசல்களும், வகுப்புப் பிணக்குகளும் ஏற்பட்டதாகக் கை ஓய்வுரும்படியும், வாய் ஓய்வுரும்படியும் எழுதியும், பேசியும் வந்திருக்கிறார். அப்படியிருக்க, சுயராஜ்யக் கட்சியின் திட்டத்தைக் காங்கிரஸ் எடுத்துக்கொண்டு நடத்திவைக்கவேண்டும் என்ற தீர்மானத்தைத் தானே பிரயத்தனப்பட்டுக் கொண்டு வரச்செய்ததாகவும், அதை ஸ்ரீமான். நாயக்கர் எதிர்த்தால், வகுப்புரிமை கேட்பதற்கு அர்த்தமில்லையென்றும், ஸ்ரீமான். முதலியார் எழுதுவதற்கு என்ன அர்த்தமென்று விளங்கவில்லை.



கல்பாத்தியில் தெருவில் நடக்காமைக்காக சர்க்கார் சமாதானத்தின் பேரால் போடப்பட்ட 144 உத்திரவும், காஞ்சீபுரம் மகாநாட்டில் வகுப்புவாரிப் பிரதிநிதித்வ தீர்மானத்தைப் பிரேரேபிக்கக்கூடாதென்று ஸ்ரீமான். திரு.வி. கலியாணசுந்தர முதலியார், ஒழுங்கின்பெயரால் போடப்பட்ட 144 உத்தரவும், ஒரே சக்தியை அடிப்படையாகக் கொண்டது என்பதுதான் நமது முடிவு. அந்த சக்தி என்று நம் நாட்டைவிட்டு ஒழியுமோ அன்றுதான் நமது நாட்டுக்கும், சமூகத்துக்கும் விடுதலையும், சுயமரியாதையும் உண்டாகும். மற்றப்படி ஸ்ரீமான். முதலியாரவர்கள் என்னைப்பற்றி எழுதியிருக்கும் பல விஷயங்கள் என்னையே பொறுத்திருப்பதால், நான் அவற்றிற்கு சாவதானமாக நண்பர்களின் விடைபெற்றுப் பதிலெழுதுகிறேன்.

**– ஈ.வெ.ரா**

**குடி அரசு – அறிக்கை – 27.12.1925**



RangaRakes tamilnavarasam.com

## சுயராஜ்யக் கக்ஷியின் பேராசையும் அதன் முயற்சியும்

"எச்சில் சாப்பிட்டாலும் வயிறு நிறைய சாப்பிடவேண்டும், ஏய்த்து பலனடைவதானாலும் ஆசை தீர அடையவேண்டும்" என்று ஒரு பழமொழி யுண்டு, அதுபோலவே நமது சுயராஜ்யக் கட்சியார் ஆதியில் காங்கிரசை மீறிவிட்டு போனார்கள்; பிறகு, தங்கள் மனச்சாக்ஷிப்படி நடக்க தங்களுக்கு அனுமதி வேண்டும் என்று காங்கிரசைக் கேட்டார்கள். பிறகு, தங்கள் மனச்சாக்ஷிப்படி நடப்பதை பிறர் ஆக்ஷேபிக்கக்கூடாது என்றனர்.

பின்பு தங்களுக்கு வேண்டிய உதவியைக் காங்கிரஸ், தனது மன சாக்ஷிக்கு விரோதமில்லாமல் செய்யவேண்டும் என்று கேட்டனர்.

பிறகு காங்கிரசில் தாங்களும் ஒரு சரியான பாகமாயிருக்க வேண்டு மென்று கேட்டனர்.

பிறகு காங்கிரசில் தாங்களே முக்கியஸ்தர்களாக வேண்டும் என்று கேட்டனர். இவ்வளவும் அடைந்தார்கள். இப்போது தாங்களே காங்கிரசாகி விட வேண்டும்; தங்களுக்கு பதவிகளும், உத்தியோகமும், காங்கிரசே வாங்கி கொடுக்க வேண்டும்; அப்படி காங்கிரஸ்காரரே எல்லா பதவியும், உத்தியோ கமும் சம்பாதித்து கொடுப்பதானாலும், தங்களைத் தவிர வேறு யாருக்கும் கொடுக்கக்கூடாது; தங்கள் உத்திரவில்லாமல் காங்கிரஸ்காரரும் அனுபவிக் கக் கூடாது; என்கிற நிலைமைக்கு இப்போது வந்து விட்டார்கள். இதுகள் எல்லாவற்றிற்கும் காங்கிரஸ் சம்மதிக்கலாம்; ஆனால் இதன் பலனாய் தேசத்தில் காங்கிரசுக்கு யோக்கியதையும், பெருமையும் போய்விடுமென்பது மாத்திரம் சத்தியம்.

### கல்கத்தாவில்

சுயராஜ்யக் கட்சியார் தாங்கள் நிராகரித்த மந்திரிகளின் சம்பளத்தை மறுபடியும் அனுமதிக்க, மிதவாதக் கட்சியார் எதிர்த்தும், சர்க்கார் மெம்பர் களோடு, தாங்களும் சேர்ந்துகொண்டு மிதவாதிகளைத் தோற்கடித்து சம்ப ளத்தை அனுமதித்துக் கொண்டார்கள்.



### மத்திய மாகாணத்தில்

முன்பு தாங்கள் குறைத்த மந்திரிகளின் சம்பளத்தை மறுபடியும் உயர்த்த ஒரு தீர்மானம் கொண்டுவந்துவிட்டார்கள்.

இவ்விரண்டு காரியங்களும் அடுத்த தேர்தல்களில் தாங்களே ஜெயிக்கப் போகிறோம் என்கிற உறுதியும், அப்படி ஜெயித்தால் மந்திரி பதவி கள் தங்களுக்கே கிடைக்கும் என்கிற ஆசையும், இப்பொழுது தங்களுக்கு இருப்பதையும், அதற்காக முன் ஜாக்கிரதையாய் இப்பொழுதிருந்தே சம்பளத் தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்கிற தந்திரத்தையும் காட்டுகிறது அல்லவா?

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 27.12.1925**



RangaRakes tamilnavarasam.com

# ஜமீன்தார்கள் வீட்டில் பிராமண எலிகள்

டில்லி ராஜாங்க சபைக்கு இவ்வருடம் நடந்த தேர்தல்களுக்கு அபேக்ஷகர்களிலொருவரான ஒரு பிராமணரல்லாத பிரபு கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள பெரிய ஜமீன்தாரொருவருக்கு தனக்கு வோட் செய்யும்படி கேட்டு இரண்டு மூன்று கடிதங்கள் எழுதியிருந்தார். மற்றொரு பிராமண கனவானும் தனக்கு வோட் செய்ய வேண்டுமாய் ஒரு கடிதம் போட்டிருந்தார். தேர்தல் காலம் சமீபத்திலிருக்கும்போது பிராமணரல்லாத கனவானுக்காக கோயமுத்தூரிலுள்ள ஒரு பிரபல யந்திரசாலையின் நிர்வாகி ஒருவர் வோட் கேட்பதற்கு ஜமீன்தாரிடம் நேரில் சென்று, விஷயத்தை எடுத்துச் சொன்னார். உடனே ஜமீன்தார் இதைப் பற்றி, தனக்குத் தகவலே தெரியாதே; ஒரு பிராமணர்தான் கடிதம் எழுதியிருந் தார்; அவருக்கு வோட் செய்வதாக நமது குமஸ்தாவிடமும் சொல்லிவிட்டேன் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, குமஸ்தாவான பிராமணர் தங்களுக்கு நான்கு வோட் இருக்கிறது; ஒரு வோட் தாங்கள் சொன்னபடி பிராமணருக்குச் செய்துவிட்டாலும், மற்றும் ஒரு வோட் செட்டியாருக்கும் கொடுக்கலா மென் றார். உடனே வோட்டுக் கேட்கப்போன கனவான் தங்களுக்கும் இது விஷயத்தைப்பற்றி 2, 3 கடிதம் எழுதப்பட்டிருக்கிறது, அது தங்களுக்குச் சேராத காரணமென்னவென்று கேட்டார். ஜமீன்தார் ஆத்திரப்பட்டு, ஐயர் குமாஸ்தாவைப் பார்த்து, என்ன ஐயரே, தபால் வந்ததா? என்று கேட்டார். ஐயர், ஒன்றோ, இரண்டோ வந்ததாக ஞாபகம், ஆனால் அதைத் தங்களிடம் சொல்லமறந்து விட்டேனோ என்னமோ என்று சொல்லி மழுப்பிவிட்டார். உடனே, ஜமீன்தாரும் கனவானும் பிராமண சூழ்ச்சிகளைப்பற்றி, ஞாபகப் படுத்திக் கொண்டார்கள். எவ்வளவுதான் பிராமணரல்லாத ஜமீன்தார்களும், பிரபுக்களும் ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்திருந்தாலும், ஜமீன்தாரென்கிற பெருமைக்குண்டான சுகங்களெல்லாம், அனுபவிக்க வேண்டுமானால், பிராமணர்களில்லாமல் இவர்களால் ஒன்றும் முடியவே முடியாது. ஆதலால் ஒவ்வொரு ஜமீன்தார்களும், மிராஸ்தார்களும், பெரிய பண்ணைகளும் தங்கள் நன்மையின் பொருட்டு ஒவ்வொரு பிராமணருக்குள் தான் அடக்கமாயிருக்கிறார்கள் இவையெல்லாம் மாறாமல் ஜஸ்டிஸ் கக்ஷியின் வெறுந் தீர்மானங்கள் மாத்திரம், பெரிய நன்மையொன்றும் செய்து விடாது.

டி.எஸ்.பி

*குறிப்பு:- இதை நாம் நமது அநுபவத்திலேயே பார்க்கிறோம். நமது "குடி அரசு"ப் பத்திரிக்கைக்கூட பிராமணாதிக்கமுள்ள சில ஜமீன்தார்களிடமிருந்தும், பல பிரபல மிராஸ்தார்களிடமிருந்தும் திருப்பியனுப்பப்படுவதை நாம் பார்க்கிறோம். அவர்களை நேரில் காண சந்தர்ப்பம் நேர்ந்த காலத்தில் தங்களுக்கு பத்திரிகை வந்ததும், திருப்பியனுப்பப்பட்டதும் இரண்டும் தெரியாதென்றே சொல்லியிருக் கிறார்கள். இப்படி சொன்னதோடு ஒரு பெரிய ஜமீன்தார் தனது வருத்தத்தைத் தெரிவித்தும் கொண்டார். ஆனால், இவர்களை உங்கள் பிரைவேட் செக்கரடேரி பிராமணர்தானேயென்று கேட்டதற்கு மிராஸ்தார்கள் ஆம் என்று சொல்லிக்கொண்டு சிரித்தார்கள்.* (ப-ர்)

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 27.12.1925**



RangaRakes
tamilnavarasam.com

# கோயமுத்தூர் ஸ்ரீ.தியாகராய செட்டியார் முனிசிபல் ஆஸ்பத்திரி திறப்பு விழா

நமது பெரியாரும் பூஜிக்கத்தகுந்தவருமான காலஞ்சென்ற ஸர்.பி. தியாகராய செட்டியாரவர்களின் பேரால் கட்டப்பட்ட இந்தக் கட்டிடத்தை ஸர்.பி.தியாகராய செட்டியாரவர்களின் திருநாள் சமயத்திலேயே திறந்து வைக்கும் பெருமை எனக்கு அளித்ததற்கு நான் பெருமையடைவதோடு, என் மனப்பூர்வமான நன்றியறிதலையும் செலுத்துகிறேன். பெரியோர்களுடைய திருநாளைக் கொண்டாடுவது நமக்குப் பூர்வீகமான வழக்கம். ஆனால், அப் பெரியார்களைப் பின்பற்றுவதில் நாம் கிரமமாய் நடந்து கொள்வதில்லை. ஸ்ரீமான். தியாகராய செட்டியாருக்கு, அவருடைய தேச சேவைக்காக இந் நாட்டு மக்கள் எல்லோரும் கடமைப்பட்டிருந்த போதிலும், சிறப்பாக பிராமண ரல்லாதார் என்போர் மிகவும் கடமைப்பட்டவர்கள் என்று சொல்லு வேன். தென்னாட்டில், பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்துக்குழைத்து, பிராமண ரல்லாதாரின் சுயமரியாதையை உணரும்படி செய்தவர், நமது தியாக ராயரே யாவார். அவர் கொஞ்சமும் சுயநலமில்லாமலும் அடிக்கடி மாறுபட்ட அபிப் ராயமில்லாமலும், விடா முயற்சியோடு உழைத்து வந்தவர். அப் பேர்ப் பட்ட வர் பேரால் இது போன்ற விஷயங்கள் மாத்திரமல்லாமல், இன்னுமநேக காரியங்கள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். அவருடைய பெருமை அவர் இருந்தபோது விளங்கியதைவிட அவர் இறந்தபிறகுதான் அதிகமாக விளங்கிக்கொண்டு வருகிறது. இங்குள்ள ஒவ்வொருவரும், நமது தியாக ராயரைப் பின்பற்றி உழைக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அது தான் நாம் அவருக்குச் செய்யும் மேலான ஞாபகக்குறிப்பு என்று சொன்ன தோடு, இவ்வித ஆஸ்பத்திரிகள் நமது நாட்டில் பெருகுவதானது, நாட்டில் வியாதிகள் அதிகமாய்ப் பெருகி வருவதையும், நாட்டு பழைய வைத்திய முறைகள் அழிக்கப்பட்டுப் போவதையும், காட்டுவதற்கு நிதர்சனமாக விளங்கினாலும், நமது ஸ்ரீமான். வெரிவாட செட்டியார் தர்ம சிந்தையோடும், உதாரண குணத்தோடும் செய்திருக்கும் இக்கைங்கிரியத்தை நாம் பாராட்டா மலிருக்க முடியாது. கடவுள் அவருக்கு நீண்ட ஆயுளையும், நிறைந்த



செல்வத்தையும் கொடுத்து மென் மேலும் பல தர்ம கைங்கரியத்தைச் செய்ய கடவுள் அருள் புரிவாராக.

*குறிப்பு: 16.12.1925 இல் கோயமுத்தூர் தியாகராய செட்டியார் மருத்துவமனைக் கட்டடத் திறப்புவிழா சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 27.12.1925**



RangaRakes

tamilnavarasam.com

# கோயமுத்தூரில் தென்னிந்திய நலஉரிமைச் சங்க கிளை ஸ்தாபனம் திறப்புவிழா

தான் இக்கூட்டத்திற்கு வரக்கூடுமென்றாவது, இதில் பேச சந்தர்ப்பம் கிடைக்குமென்றாவது ஒரு போதும் எதிர்பார்க்கவேயில்லையென்றும், திறப்பு விழாவிற்கு வந்தவனை திடீரென்று அழைத்ததிற்காகவும், இங்கு பேசும்படி கட்டளையிட்டதற்காகவும், அழைத்தவர்களுக்கும், அக்ராசனாதிபதிக்கும், வந்தனம் செய்வதாகவும், இக்கூட்டத்திலுள்ள பிரமுகர்களெல்லாம் பழைய ஆப்த நண்பர்களென்றும், இவர்களில் அநேகம் பேர் நெருங்கிய பந்துக் களைப் போன்றவர்களென்றும், ராஜீய அபிப்பிராயங் காரணமாக இங்குள்ள அத்தனை பேரையும் நாலைந்து வருட காலமாக தீண்டாதவர் போல் நினைத்து, தான் ஒதுங்கியிருந்ததாகவும், இப்பிரிவினை ஏற்படுவதற்கு முன் கோயமுத்தூருக்கு வந்தால் இங்குள்ள ஒவ்வொரு சிநேகிதர் வீட்டிலும் நாலு நாள், ஐந்து நாள் தங்கி விருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தவன், கொஞ்சக் காலமாக இவ்வூருக்கு வந்தால் பிராமணன் ஹோட்டலுக்காவது போய்ச் சாப்பிடுவதேயொழிய, இந்த அருமையான சிநேகிதர்கள் வீட்டுக்குப் போகாமல் கூட தான் அவ்வளவு ராஜீய பத்தியமாய் இருந்ததாகவும், இப்பொழுது காங்கிரசில் சுயராஜ்யகட்சி தோன்றியபின், இவ்வளவு நாள் கொடுமையான பத்தியமாயிருந்தது அவசியமில்லாத தென்று தோன்றும்படி செய்து விட்டதாகவும், ஜஸ்டிஸ் கக்ஷியின் ஆரம்ப ராஜீய திட்டத்திற்கும் சுயராஜ்யக்கக்ஷியின் தற்கால ராஜீயத் திட்டத்திற்கும், உள்ள பெரிய வித்தியாச மெல்லாம், ஜஸ்டிஸ் கக்ஷி உண்மை பேசுகிறது. சுயராஜ்யக் கக்ஷி ஸ்திரமாய்ப் புரட்டு பேசுகிறது என்பதை தவிர வேறு பிரமாதமான வித்தியாசம் எதுவு மில்லையென்றும், இந்தக் காரணத்தால் தான் காங்கிரஸிற்கும் வரவர மதிப்புக் குறைந்துகொண்டு போவதோடு, மங்கிக் கிடந்த ஜஸ்டிஸ் கட்சிக்கும் தேசத்தில் செல்வாக்கு இப்பொழுது கொஞ்சம் ஏற்பட்டு வருகின்றதென்றும், இந்த சந்தர்ப்பத்தை ஜஸ்டிஸ் கட்சியார் இழந்து விடாமல், தேசத்திற்கும், பிராமணரல்லாதார் சமூகத்திற்கும் உண்மையாய் உழைக்க முன்வர வேண்டு மென்றும், காங்கிரஸ் தேசத்திற்கு அநுகூலமான கொள்கைகளையும், பிராமணரல்லாதாருக்கு மிகவும் அநுகூலமான திட்டங்களையும் வைத்து, உண்மையாய் வேலை செய்து பிற தியாகங்களுக்கும், கஷ்டங்களுக்கும் தயாராயிருந்து சிலபேராவது உழைத்து வந்ததின் பலனாகத்தான் காங்கிர ஸிற்கு அதிக மதிப்பேற்பட்டதோடு, ஜஸ்டிஸ் கட்சியையும், யாரும் லக்ஷியம்



செய்ய அவசியமில்லாததாய்ப் போய்விட்டது என்றும், இப்போது சுயராஜ்யக் கட்சி தோன்றியதின் பலனாய், தேச நன்மைக்கான கொள்கைகளும் போய் நிர்மாணத் திட்டங்களும் பின்பட்டு, உத்தியோக ஆசையும், பிராமணாதிக் கத்திற்கனுகூலமான கொள்கைகளும் காங்கிரஸில் முற்பட்டு நிற்பதற்கு, சுயராஜ்யக் கட்சியார் பிரயத்தனம் செய்வதாலும் காங்கிரசும் அதற்கு இணங்கு வதாலும் சுயராஜ்யக் கட்சியைவிட ஜஸ்டிஸ்கட்சி மோசமானதல்லவென்னும் எண்ணம் தேசத்தில் உதிக்க ஆரம்பித்துவிட்டதென்றும், ஜஸ்டிஸ் கட்சியின் முன்னேற்றத்திற்கு இந்த எண்ணம் மாத்திரம் போதாதென்றும், இதுவரையில் ஜஸ்டிஸ் கட்சிக்கு பொதுஜன அநுகூலமான திட்டம் எதுவும் இல்லை யென்றும், பாமர ஜனங்களிடம் இதற்குச் செல்வாக்கில்லாததற்கு இதுவொரு காரணமென்றும், தீண்டாமை ஒழித்தல், மதுவிலக்கு கதர் முதலிய திட்டம் ஜஸ்டிஸ் கட்சியில் தாண்டவமாட வேண்டுமென்றும், தென்னாடு முழுவதும் இவைகளைப் பரப்பச் சரிவர பிரசாரம் செய்யவேண்டுமென்றும் இவ்வித காரியங்கள் ஜஸ்டிஸ் கட்சியார் செய்யாவிட்டால், எதிரிகள் விஷமத்தால் கட்சியே மறைந்து போகுமென்றும், வெறும் உத்தியோகமும், ஆங்கிலப் படிப்பும் பிராமணரல்லாதாருக்கு நன்மை உண்டாக்கிவிடாதென்றும். நீங்கள் சில உத்தியோகங்களை அடைந்ததினால் தேசத்தில் என்ன பலன் உண்டாய் விட்டதென்றும், நீங்கள் அதிகமதிகமாய் ஆங்கிலம் படிக்கப்படிக்க, உத்தி யோகம் பெறப்பெற, நமது நாடு பிராமணர்களால் எவ்வளவு கஷ்டப்படு கிறதோ, அவ்வளவு கஷ்டம் உங்களாலும் படவேண்டியதாகிவிடுமென்றும், பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்கு உழைக்கவேண்டுமானால், இங்குள்ள வர்கள் கிராமங்களுக்குச் செல்ல வேண்டுமென்றும், கிராம ஜனங்களைக் கலகம் செய்துகொள்ளாமலும், கோர்ட்டுக்குப் போகும்போதும் பெரும்பாலும் பிராமண வக்கீல்களிடமும், அதிகாரிகளிடமும் சிக்கித் தங்களுடைய பொருள்களை பீஸாகவும், லஞ்சமாகவும் கொடுத்து பாழாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்றும், ஆங்கிலப் பள்ளிக்கூடம் பரவியதின் காரண மாகவே, கிராமங்களில் குடியானவர்கள் பேரால் இருந்த பூமிகளெல்லாம், இப்போது பிராமண வக்கீல்கள் பேராலும், அதிகாரிகள் பேராலும், லேவா தேவிக்காரர் பேராலும், மாறிக் கொண்டு வருகின்றதென்றும், இதற்கு சாக்ஷி வேண்டுமானால் கவர்ன்மெண்டு செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரைப் பாருங் களென்றும், இவற்றைத் தடுக்காமல் மந்திரி உத்தியோகம் பெறுவதினாலும், பட்டங்கள் பெறுவதினாலும், உங்கள் பிள்ளைகள் சிலருக்கு உத்தியோகங்கள் சம்பாதிப்பதினாலும், உங்கள் கட்சி எந்த விதத்தில் பிராமண சுயராஜ்யக் கட்சியைவிட மேலானதாகி விட்ட தென்றும், இந்த நிலைமையில் ஜஸ்டிஸ் கட்சி இருந்துகொண்டே வருமானால், என் போன்றவர்கள் தொண்டை நீங்கள் எதிர்பார்க்க முடியாதென்றும், மகாத்மாவின் நிர்மாணத் திட்டங்களை ஏற்றுக் கொண்டு, காரியத்தில் அதைச் செய்யக் கட்டளையிடுவீர்களானால், அதை நான் சிரமேற்கொண்டு தொண்டு செய்யக் காத்துக் கொண்டிருக்கிறே னென்றும் சொன்னதோடு, தான் சொன்னவைகளில் ஏதாவது தங்கள்



RangaRakes tamilnavarasam.com

மனதிற்கு வருத்தத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்குமேயானால், மன்னிக்க வேண்டுமென்றும், தான் தன் மனதில் உண்மையென்று பட்டதைத் தான் ஒளிக்காமல் சொல்லவேண்டுமென்கிற ஆசையால் சொன் னதே யொழிய, யாருக்கும் வருத்தம் உண்டாக்க வேண்டுமென எண்ணி சொல்லவில்லை யெனக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

*குறிப்பு:- கோவையில் 16.12.1925 இல் தென்னிந்திய நலஉரிமைச் சங்கக் கிளை அமைப்பு திறப்புவிழா சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 27.12.1925**



# கோயமுத்தூரில் 17-ந்தேதி மாலை டவுன் ஹாலில் பொதுக் கூட்டம்

நமது நாட்டுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் அவசியத்தைப் பற்றியும், காஞ்சீபுரம் மகாநாட்டு நடவடிக்கைகளைப் பற்றியும், நிர்மாணத் திட்டங்களைப்பற்றியும் எடுத்துச்சொல்லி வருகையில் அவர் முக்கியமாய்க் குறிப்பிட்டதாவது:-

தற்சமயம் நமது தேசத்திலுள்ள பல கட்சிகளுக்கும் ராஜீய திட்டம் ஏறக்குறைய ஒன்றாகி விட்டது. நிர்மாணத்திட்டத்தை நடத்திவைப்பதில், எந்தக் கட்சிக்காரராயிருந்த போதிலும், நிர்மாணத்திட்டம் நடத்துவதற்குப் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. காங்கிரசை ஒப்புக் கொள்ளாதவர் களும் காங்கிரசில் சேரப் பயப்படுபவர்களும் கூட நிர்மாணத்திட்டத்தை நடத்திக் கொண்டு போகலாம். காங்கிரஸில் சேர்ந்தால்தான் நிர்மாணத் திட்டத்தை நடத்தலாம், இல்லாவிட்டால் நடத்தமுடியாது என்னும் பயம் உங்களுக்கு வேண்டாம். மகாத்மாவின் நிர்மாணத்திட்டத்தை ஆதரிக்கக் கூடிய கட்சி எதுவாயிருந்தாலும் அவைகளெல்லாம் எனக்கு ஒன்றுதான். நிர்மாணத் திட்டமில்லாத எந்த ராஜீயக் கட்சியையும் தேசத்திற்கு அநுகூல மானதென்று சொல்லமாட்டேன். நிர்மாணத்திட்டத்தில்தான் தேசத்தின் விடுதலை இருக்கிறது. காங்கிரசிலும் நிர்மாணத்திட்டத்தின் ஆதிக்கமிருந்த தினால்தான் காங்கிரசிற்கும் மூலைமுடுக்குகளிலெல்லாம் மதிப்பு இருந்து கொண்டு வந்தது. இப்போது நிர்மாணத் திட்டத்தின் ஆதிக்கம் ஒழிந்து, காங்கிரசினால் ஒரு காலத்தில் உமிழ்ந்து ஒதுக்கித்தள்ளப்பட்ட சட்டசபைப் பைத்தியத்தையும், உத்தியோகப் பைத்தியத்தையும் மறுபடியும் காங்கிரஸ் எடுத்துக்கொள்ளுமானால், பழைய காலத்துக் காங்கிரஸ் யோக்கியதைக் குத்தான் மறுபடியும் வந்து விடுமென்றும், ஆகையால் நிர்மாணத் திட்டத் தைப் பிரதானமாகக் கொண்ட எந்தக் கட்சியானாலும், நீங்கள் அதிற் சேர்ந்து மனப்பூர்த்தியாய் உழைக்க வேண்டுமென்றும், தீண்டாமை விஷயத்தில் ஏற்படும் எதிர்ப்புக்களை தைரியமாய் முன்னின்று தாக்க வேண்டுமென்றும், அவற்றை அஜாக்ரதையாய் விட்டு விட்டீர்களேயானால் நமது மதமும், சமூகமும் அடியோடு போய்விடுமென்றும், கதர் விஷயத்தில் கவலை எடுத்துக்கொள்ளாமல் சட்டசபைப் பிரவேசத்திலும், உத்தியோக வேட்டை யிலுமே கவனத்தைச் செலுத்துவீர்களானால், தேசத்தில் ஏழைகள் அதிக



RangaRakes tamilnavarasam.com

மாய்ப் போய் கொலை, கொள்ளை முதலியதுகள் பரவிவிடுமென்றும், மதுவிலக்கும் நமது தேச மக்களின் ஒழுக்கத்திற்கு மிகவும் முக்கிய மானதென்றும் சொல்லிக்கொண்டிருக்கையில், ஒரு பிராமணர் மத்தியில் எழுந்து, நீங்கள் ஒத்துழையாதாரராச்சே, எப்படி வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் கேட்கலாம்? என்று சொன்னார். அதற்கு ஸ்ரீமான். நாயக்கர் ஒத்துழையாமை பெல்காம் காங்கிரசின்போதே ஒதுக்கிவைத்தாகி விட்டதென்றும், சட்டசபைப் பிரவேசம் காங்கிரஸ் அனுமதித்து விட்டதென்றும், சுயராஜ்யக் கட்சிக்கு மாத்திரம் சம்பந்தமில்லாத தாலூகா போர்டு, ஜில்லாபோர்டு முதலிய ஸ்தல ஸ்தாபனங்கள் இருக்கிறதென்றும் இவைகளுக்குப் போக இஷ்டப்படும் ஜனங்களுக்கு அவரவருக்கு உண்டான உரிமைகள் அவரவருக்குக் கிடைப்ப தில் ஒருவருக்கொருவரை ஏமாற்றவும், சூட்சிகளும். கலவரங்களும் நடக்க வும் செய்ய இடம் வைக்கக்கூடாதென்றும், ஆனதால் வகுப்புவாரிப் பிரதி நிதித்வம் கேட்பது காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாகாதென்றும், தேசத்தில் பல வகுப்பாரின் ஒற்றுமைக்கும், நம்பிக்கைக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித் வம் அவசியமானதென்றும் சொன்னார். பிறகு மற்றொருவர் தேவஸ்தான மசோதாவைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று, அக்ரா சனாதிபதிக்குச் சீட்டு அனுப்பியதின்பேரில், அதைப் பற்றியும் சில வார்த்தை கள் சொல்ல அக்கிராசனாதிபதி கட்டளையிட்டார். அதன்பேரில் ஸ்ரீமான். நாயக்கர் பேசுகையில் தேவஸ்தான சட்டமானது நமது நாட்டில் வெள்ளைக் காரர் வந்த பின்புங்கூட அதாவது 1817-1863 வருடங்களிலேயே இந்துமத தர்ம பரிபாலனத்தைப் பற்றி சர்க்காரார் என்கிற முறையில் சட்டம் செய்திருக் கின்றார்களென்றும், அந்தச் சட்டம் போராதென்றும், இனியும் கண்டிப்பான சட்டங்கள் செய்யவேண்டுமென்றும் அநேக வருஷங்களாக காங்கிரஸ் கான்பரன்ஸ் முதலிய ராஜீய மகாநாடுகளின் தீர்மானங்கள் மூலியமாகச் சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோமென்றும், 1914-ம் வருஷத்திய கோயமுத்தூர் ஜில்லா கான்பரன்ஸிலும்கூட ஒரு தீர்மானம் இதைப்பற்றி ஸ்ரீமான். பி.வி.நரசிம்ம ஐயரால் பிரேரேபிக்கப்பட்டு தீர்மானமாயிருப்பது தமக்கு ஞாபகமிருக்கின்றதென்றும், ஜஸ்டிஸ் கட்சியார் இந்த சட்டத்தைச் செய்தார்களென்கிற காரணத்திற்காக அதைச் சிலர் தூற்றுவதற்கு நாம் காதுகொடுப்பது பைத்தியக்காரத்தன மென்றும், நமது மதம் தற்காலம் சிரிப்புக் கிடமாய் கோர்ட்டுகளில் தொங்கிக் கொண்டிருக்கின்றதென்றும், யானையின் பின் தொடையில் போடுகிற நாமம், வடகலையா, தென்கலையாவென்பது ஓர் வெள்ளைக்கார அதிகாரி சொன்னால் தான் நமது மனம் திருப்தி யடைகின்றதென்றும், இன்னும் பல முக்கியமான விஷயங்களுக்கு சர்க்கார் பிரவேசத்தையும் எதிர்பாராமலிருப்பதற்கு நமக்கு யோக்கியதை இல்லை என்பதை தினம் காட்டிக்கொண்டிருக்கிறோமென்றும், இந்து மதத்தில் ஒரு இந்து பொதுத் தெருவில் நடப்பதற்குச் சர்க்கார் தயவிருந்தாலுங்கூட நம்மவரே செய்யும் சூட்சிகளால் முடியாமலிருப்பதோடு, இன்னும் பல கெடுதிகள் நம்மவரே செய்கிறார்கள் என்றும் இம்மாதிரியான



ஜனங்களிடையில் வாழவேண்டுமானால் சர்க்கார் சட்டமில்லாமல் எப்படி வாழ முடியுமென்றும், மதத்தின் பேரால் வசூல் செய்யப்படுகிற கோடிக் கணக்கான ரூபாய்களை சரிவரச் செலவழிப்பதற்குக் கணக்குக் கேட்காம லிருக்கக்கூடிய அவ்வளவு யோக்கியர்களா நாம். நமது மடாதிபதிகளையும், மகந்துக்களையும், பூஜாரிகளையும் அடையதகுந்த யோக்கியதைக்கு வந்துவிட்டோமா வென்றும், நமது மதத்தைப்பற்றி நமக்கு என்ன ஞானமிருக் கிறதென்றும், "சுவாமி ஏன் பன்றி அவதாரமெடுத்தார்? உலகத்தைப் பாயாய்ச் சுருட்டிக்கொண்டு ஒரு இராக்ஷசன் சமுத்திரத்துக்குள் ஒளிந்து கொண்டான், அதைப் பிடுங்கிக்கொண்டு வரத்தான் பன்றி அவதாரம் எடுக்கப் பட்டதென்று" சொன்னால், "அப்போது தண்ணீர் எதன் மேலிருந்தது" என்று கேட்கும் பிற மதஸ்தர்களுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் விழித்து, நமது மதத்தை இழந்து, அன்னிய மதத்துக்குப் போய்ச்சேரும் பாமரர்களைத் தடுக்கத் தகுந்த மதக் கல்விக்காவது, நமது பணத்தை ஆயிரம், பதினாயிர மாகக் கொள்ளையடித்து காலைக் கழுவி பாத தீர்த்தமென ஒரு உத்ரணித் தண்ணீரைக் கொடுத்து சோம்பேறிகளுக்குப் பொங்கிப் போட்டுக் கொண்டும், தங்கப் பல்லக்கில் சவாரி செய்து கொண்டும், தாசி வேசிகளை வைத்துக் கொண்டும், மற்றும் கூடா ஒழுக்கத்தில் திரியும் நமது மடாதிபதிகளென் போரும், மற்றோரும் இதுவரை என்னவழி செய்திருக்கிறார்கள் என்றும், இவற்றையெல்லாம் நினைக்கும் போது இப்போதுள்ள தேவஸ்தானச் சட்டம் கூட போதாதென்றே சொல்லி முடித்தார்.

பிறகு அக்ராசனரால் முடிவுரை சொல்லப்பட்டுக் கூட்டம் கலைந்ததும், அக்ராசனருக்கும், உபன்யாசகருக்கும் வந்தனம் சொல்லப்போவதாய் கோய முத்தூர் டவுண் காங்கிரஸ் காரியதரிசியென்ற முறையால், ஒரு பிராமணர் எழுந்து தன்னைக் கேட்காமல் இக்கூட்டம் கூட்டியதென்றபோதிலும், அதைத் தான் ஒப்புக்கொள்ளுவதாகவும், ஸ்ரீமான். நாயக்கர் நிர்மாணத் திட்டத்தைப் பற்றி வெகு அற்புதமாகச் சொன்னாரென்றும், ஆனால் காங்கிரசில் சேராதீர்களென்று சொன்னதை மாத்திரம் தான் ஒப்புக்கொள்ள முடியா தென்றும் பத்திரிக்கை நிருபர்களைப் பார்த்துச் சொன்னார். உடனே அங்கிருந்த ஜனங்களெல்லாம் அவரை, "நீர் சொன்னது தப்பு, ஸ்ரீமான். நாயக்கர் சொல்லாத பொய்யான வார்த்தைகயைச் சொல்லி பத்திரிக்கையில் ஸ்ரீமான். நாயக்கருக்கு விரோதமான பிரசாரம் செய்வதற்கு அநுகூலமாகப் பிராமணத் தந்திரம் செய்திருக்கிறீர், ஸ்ரீமான். நாயக்கருக்கு வந்தனங் கூறுவதாகச் சொல்லி தந்திரமாக மேடையில் ஏறிக்கொண்டு இம்மாதிரி பொய்யான சங்கதிகளைப் பேசுவது மிகவும் ஒழுங்கீனமென்றும், காங்கிரஸ் பெயரைச் சொல்லிக்கொண்டு திரியும் பிராமணர்கள் யோக்கியதையே இப்படியிருக்குமானால், மற்றவர்கள் சங்கதி எப்படியிருக்குமென்றும்" சொன்னார்கள். பிறகு அந்த பிராமணர், தனக்கு அந்தமாதிரி பட்டதாக நினைத்து, அவ்விதம் சொன்னேன் என்று சொல்லிக் கொண்டார். உடனே அக்ராசனர் பொது ஜனங்களை அமர்த்தி, கூட்டத்தைக் கலைத்தார். பிறகு,



RangaRakes tamilnavarasam.com

ஷி பிராமணர் ஸ்ரீமான். நாயக்கரிடம் வெளியில் வரும்போது சமாதானம் சொல்லிக்கொள்ளுவதற்காகப் பேச வந்தார். ஸ்ரீமான். நாயக்கர் உங்கள் சமாதானத்தைப்பற்றி எனக்கு அக்கரையில்லை, கூட்டத்தில் அம்மாதிரி பேசிவிட்டு, தனியாக இங்குவந்து என்னிடம் பல்லைக்கெஞ்சுவதில் என்ன பிரயோஜனம்? ஒரு சிறு சந்தர்ப்பம் கிடைத்தவுடனேயே இவ்வளவு விஷமம் செய்துவிட்டீர்களே, பெரிய யோக்கியதை கிடைத்தால் பிராமணரல்லாதார் களை அடியோடு ஆலையில் வைத்தல்லவா நசுக்கி விடுவீர்கள் என்று சொன்னார். உடனே அந்த பிராமணர் தனக்குக் காங்கிரசிலிருக்கும் சம்பந்தத்தை ராஜீனாமாச் செய்வதாகத் தீர்மானம் செய்து, ராஜீனாமாக் கடிதத்தை எழுதி ஜோப்பில் போட்டுக்கொண்டுதான் உங்கள் கூட்டத்திற்கு வந்தேனென்று சொல்லி அக்கடிதத்தை எடுத்துக் காட்டினார். பக்கத்திலிருந்தவர்கள், "மீட்டிங்குக்கு வரும்போதே இம்மாதிரி கலகம் செய்யலாம், அங்கிருக்கிறவர்கள் ஏதாவது சொன்னால், உடனே ராஜீநாமாக் கொடுத்து விடுவதாய்ச் சொல்லிவிடலாமென நினைத்து ராஜீநாமா எழுதி ஜோப்பில் போட்டுக் கொண்டு, கலகத்திற்குத் தயாராக வந்திருக்கிறீர் என்பது இந்த ராஜீநாமாவால் ருஜுவாகிறதா இல்லையா" வென்று கேட்டார்கள்.

பிறகு அந்தப் பிராமணர் வெட்கி தலைகுனிந்துகொண்டு பேசாமற் போய்விட்டார். கூட்டத்திலிருந்தவர்களுக்கு தேசீய பிராமணர்கள் சூழ்ச்சியின் முறை நன்றாய் விளங்கிற்று.

இப்படியிருக்க, சுதேசமித்திரன் என்னும் பிராமணப் பத்திரிக்கை ஸ்ரீமான், நாயக்கர் பேசியதுபற்றி சரியாய் எழுதாமலும், நடந்த வர்த்தமானங்களைப்பற்றி சரியாய்க் குறிப்பிடாமலும், ஸ்ரீமான். நாயக்கர் பேரில் பழிசுமத்தி எழுதியிருக்கிறது. பிராமணப் பத்திரிகைகளின் வல்லமைகளை அறிவதற்கும், ஆக்கவும், அழிக்கவும் கூடிய சக்திகள் அவைகளுக்குண்டென்பதைக் காட்டவும் இந்த உதாரணமே போதுமானதா? இல்லையாவென்பதை வாசகர்களே யூகித்துக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**குடி அரசு - சொற்பொழிவு - 27.12.1925**



# புது ஆண்டு சன்மானம்

1926-ம் ஆண்டு பிறக்கப்போகிறது; வருடப் பிறப்பிற்காக "குடி அரசு" பத்திரிகைக்கு என்ன சன்மானம் செய்யப் போகிறீர்கள்? ஒன்றா, "குடி அரசு"க்கு அதன் நண்பர்கள் ஒவ்வொருவரும் 3 சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுங்கள் அல்லது நமது சமூகத்துக்கே கேடு சூழும்படியான பிராமணப் பத்திரிக்கைகளின் ஒரு சந்தாதாரையாவது குறையுங்கள். இதை நீங்கள் செய்தால், "குடி அரசுக்கு" மாத்திரமல்லாமல், நாட்டுக்கும், பிராமணரல்லாத சமூகத்துக்கும் விடுதலை அளிக்க உங்கள் கடமையைச் செய்தவர் களாவீர்கள்.

**குடி அரசு - அறிவிப்பு - 27.12.1925**



RangaRakes tamilnavarasam.com

# பிராமணரல்லாதார் மகாநாட்டைப்பற்றி பிராமணப் பத்திரிக்கைகளின் ஓலம்

சென்னையில் இம்மாதம் 20, 21-ந் தேதிகளில் நடைபெற்ற பிராமணரல்லாத 9-வது மகாநாட்டு நடவடிக்கைகளைப்பற்றி, "சுதேச மித்திரன்", "ஸ்வராஜ்யா" முதலிய பிராமணப் பத்திரிகைகள் ஆத்திரம் பொறுக்காமல் வயிறு வயிறாய் அடித்துக்கொண்டு ஓலமிடுகின்றன. அவற்றில் சுதேசமித்திரன் பத்திரிகை "வசவு மகாநாடென்று" தலையங் கமிட்டு அடியிற் கண்ட ஒப்பாரியைச் சொல்லிக்கொண்டு அழுகின்றது. அவற்றில் முக்கிய மான சிலவற்றைக் கீழே குறிப்பிட்டு அதற்குச் சமாதானம் எழுதுவோம்.

1. "இந்த மகாநாட்டிற்கு ஜனங்கள் அதிகமாக வரவில்லையே யென்று ஸ்ரீமான். டாக்டர். சி. நடேசமுதலியார் சொன்னதால், இம்மகாநாட்டிற்கு பிராமணரல்லாதார் ஆதரவு இல்லை" யென்பது.

2. "சில பிராமணரல்லாதாரும், அக்ராசனாதிபதி கனம் யாதவரும் கூடி பிராமணர்களை நன்றாகத் திட்டினார்கள்" என்பது.

3. "இந்த மாகாணத்திலும் பம்பாய் மாகாணத்திலும் ஜஸ்டிஸ் கட்சி அதிகாரப் பதவியிலிருக்கின்றது, ஜனங்களுக்கு இவர்களால் என்ன செய்யப் பட்டிருக்கிறது" என்பது.

4. "பம்பாய் மாகாணத்தில் மதுவிலக்கு விஷயமாய் ஜஸ்டிஸ் கட்சி யாரின் ஒரு லக்ஷியத்தை அந்த கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டனர். ஆனால், இந்தியா கவர்ன்மெண்டார் அதை நிராகரித்துவிட்டனர். அதன் மேல் பம்பாய் மந்திரி ராஜிநாமாச் செய்தாரா?" என்பது.

5. "தென்னாப்பிரிக்கா இந்தியரிடம் அநுதாபம் கூறி ஓர் தீர்மானம் செய்யப்பட்டது. அதை அமுலுக்குக் கொண்டுவர கவர்னர் ஜெனரலோ, அரசர் பெருமானோ நிராகரித்துவிட்டால், கனம் பனகால் இராஜா, கனம் யாதவர் தங்கள் கவர்ன்மெண்டின் மூலமாக இராஜப்பிரதிநிதிக்கு வலியுறுத்த ஏற்பாடு செய்வார்களா?" என்பது.

6. "பிராமணர்களைத் திட்டினால் மாத்திரம், கவர்ன்மெண்டார் சுய ஆட்சி அதிகாரம் கொடுத்துவிட மாட்டார்கள், வருடமொருமுறை தீர்மானம் செய்தாலும் கொடுத்துவிட மாட்டார்கள், உடனே சுயராஜ்யம் பெற வேறு என்ன செய்வார்கள்? எனவே, ஜனங்கள் மெச்ச சுயராஜ்ய அதிகாரம் கேட்டுவிட்டு; அதிகாரவர்க்கம் மெச்ச அவர்களுக்குத் துணை நிற்பார்கள்." என்பது.



## ஸ்வராஜ்யா பத்திரிக்கையின் மாரடிப்பு

சுதேசமித்திரன் சொன்னதில் சிலதையே சொல்லி, இப்பத்திரிகை அடித்துக்கொண்டதோடு, "தொழிலாளருக்கு என்ன செய்தார்கள்?" "ஒடுக்கப் பட்டவருக்கு என்ன செய்தார்கள்?" "வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு என்ன செய்தார்கள்?" "யாராவது சிறைக்குப் போனார்களா?" "ஜில்லா, தாலூக்கா சபைகளில் அக்கூட்டத்தினரைச் சேர்ந்தோரே அதிகம். ஸ்தல சுய ஆட்சி இலாகா அந்தக் கட்சித் தலைவர் கையிலேயே இருக்கின்றது; அதனால் ஜனங்களுக்கு என்ன செய்து விட்டார்கள்?" என்று கேட்கிறது.

"மகாநாட்டுக்கு ஜனங்கள் அதிகமாய் வரவில்லையென்று ஸ்ரீமான் டாக்டர் நடேச முதலியாரே சொன்னதால், இம்மகாநாட்டுக்குப் பிராமணரல் லாதார் ஆதரவில்லையென்பது விளங்குகிறதென்று" இரண்டு பத்திரிகைகளும் கேட்கிறது.

## பதில்

'ஸ்வராஜ்யா' வாவது, "சுதேசமித்திரனா"வது இன்னும் எந்த பிராமண பத்திரிக்கையாவது அந்த மகாநாட்டிற்கு இத்தனை பெயர்கள் தான் வந்தார் களென்று எழுதவேயில்லை. யாரார் வந்தார்களென்று அவர்கள் பெயராவது எழுதவே இல்லை. இவ்வளவு அல்ப புத்தி தம்மிடம் இருப்பதை மறந்து விட்டு, மரியாதைக்காக பெருந்தன்மையோடு நமது கூட்டத்திற்கு வர வேண்டிய ஜனங்கள் வரவில்லையேயென்று ஸ்ரீமான். நடேச முதலியார் சொன்னால், அந்த வார்த்தையை முன்னூற் பிடித்துக்கொண்டு, பிராமண ரல்லாதார் மகாநாட்டுக்குக் கூட்டம் வரவேயில்லை; அது சரியான பிரதிநிதித் துவமல்லவென்று சொல்லுவது, எவ்வளவு சின்னத்தனம். 21-ந்தேதி ஜஸ்டிஸ் பத்திரிக்கையில் கூட்டத்துக்கு வந்திருந்தவர்களில் முக்கியமானவர்களென்று சொல்லி சுமார் 150 கனவான்களுடையவும், சீமாட்டிகளுடையவும், பெயரைக் குறிப்பிட்டு விக்டோரியா பப்ளிக் ஹால் பிடிக்காமல், திரளான பிரதிநிதிகள் வந்தார்களென்று எழுதியிருக்கிறது. அதில் ஏறக்குறைய, சட்டசபை மெம்பர் கள், மந்திரிகள், ஜமீன்தாரர்கள், மகாராஜாக்கள், தாலூகா போர்டு, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி இவைகளின் தலைவர்கள், அங்கத்தினர்கள், ஜட்ஜ், திவான்முதலிய வேலைகள் பார்த்து இளைப்பாறும் கனவான்கள், பெரிய மிராஸ்தாரர்கள், பிரபல வர்த்தகர்கள், கிறிஸ்தவ கனவான்கள், மகமதிய கன வான்கள், தாழ்ந்த வகுப்பாரென்று கூறப் படும் வகுப்பைச் சேர்ந்த கனவான் கள், சர்வ கலாசாலை அதிகாரிகள், வைதீக ஒத்துழையாமையைச் சேர்ந்த வர்கள், சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்தவர்கள், முதலிய கனவான்களாகவே சுமார் 150 பேரும், மற்றும் தொழிலாளிகள், ஏழைக் குடியானவர்கள், நடுத்தர



RangaRakes tamilnavarasam.com

வகுப்பார்கள் ஆகிய அனைவருமாய் மகாநாட்டின் ஸ்தலம் எவ்வளவு இடம் கொள்ளுமோ அவ்வளவும் நிறைந்து, மேற்கொண்டும் வெளியில் இடம் பிடிக்காமல் கூட்டமாகவும் ஜனங்களிருக்க, அவற்றை இம் மாதிரி தங்கள் பத்திரிக்கையில் திரித்துக்கூறி விஷமப்பிரசாரம் செய்திருக்கிறது. இவற்றை நாம் ஓர் கேள்வி கேட்கிறோம். அதாவது தேசத்துக்கே பொதுவான தென்றும், மிகுந்த செல்வாக்குடையதென்றும், யாரோ சிலர் தவிர, மற்றும் எல்லோராலும் ஆதரிக்கப்படுகிறதென்றும் சொல்லுகிறதும், 33 கோடி ஜனங்களுக்கு பிரதிநிதி சபையாயிருக்கிற காங்கிரஸ் மகாசபையின் பேரால், தமிழ் நாட்டில் 2 கோடி ஜனங்களுக்கு மேலாக பிரதிநிதி ஸ்தானம் பெற்றதும், பிராமணர் களால் தமிழ்நாடு காந்தியெனக் கொண்டாடத்தக்கவருமான, திரு.வி. கலியாணசுந்தர முதலியார் தலைமையில் நடந்ததுமான, காஞ்சீபுரம் மகா நாட்டுக்கு எத்தனை பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்? அதற்கு முன் நடந்த திரு வண்ணாமலை, மகாநாட்டுக்கு எத்தனை பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்? இதன் கணக்கைப் போட்டு 2 $^1/_2$ கோடி ஜனங்களுக்கு வீதாசாரம் பிரித்துப் பார்த்து, பிராமணரல்லாதார் மகாநாட்டுக்கும் வந்திருந்த ஜனங்களை கணக் கெண்ணி வீதாச்சாரம் பிரித்துப் பார்த்திருந்தால், தேசத்தில் எதற்கு யோக்கி யதை வளர்ந்து கொண்டு வருகின்றதென்பது நன்றாய் தெரியவரும். திருவண் ணாமலை மகாநாட்டுப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை சுமார் 250 கூட இல்லை யென்பது நமது ஞாபகம். அவற்றில் பல ஜில்லாக்களுக்கும், தாலூகாக் களுக்கும், வேறு ஜில்லாக்காரரும், வேறு தாலூக்காக்காரரும் பிரதிநிதிகளாய்க் கூட இருந்தார்கள். சில ஜில்லாக்களுக்கு இரண்டொருவர்தான் வந்திருந் தார்கள். சென்னையிலிருந்து ஒரு கனவான் தனது கட்சிக்கு மெஜாரிட்டி சம்பாதிப்பதற்காக, தனது ஆட்கள் வசம் ரூபாய்களைக் கொடுத்து அனுப்பி, ஆள் சேர்த்துக்கூட, சரியான படி கூட்டம் சேர்க்க முடியாமறபோய்விட்டது. காஞ்சீபுரத்திலும் மகாநாடு நடந்ததென்று பெயரேயொழிய அங்கும் 250 பிரதிநிதிகள்கூட சேரவேயில்லை. அங்கு வந்திருந்த பிரதிநிதிகளிலேயும், பொது ஜனங்களுக்கு உண்மையான பிரதிநிதிகள் எவ்வளவு பேர்? வரப் போகும் தேர்தல்களில் நின்று ஸ்தானம் சம்பாதிக்க வந்த பிரதிநிதிகள் எவ்வளவு பேர்? தேர்தல்களில் ஏஜண்டு வேலை சம்பாதித்துப் பணமடைய வந்த பிரதிநிதிகள் எவ்வளவு பேர்? ஒரு சமூகத்தாரை ஏமாற்றி தாங்கள் ஆதிக்கம்பெறலாமென்று நினைத்து சூழ்ச்சி செய்ய வந்தவர்கள் எவ்வளவு பேர்? அவர்கள் சொற்படி ஆடவந்தவர்கள் எவ்வளவு பேர்? தங்கள் விளம்பரத்துக்காக வந்தவர்கள் எத்தனைபேர்? என்பதாகக் கணக்குப்போட்டு அவரவர்களையும் கழித்துத்தள்ளி உண்மையாய் தேசத்தின் குறையை எடுத்துச்சொல்லி, அதற்கு வேண்டிய தீர்மானங்களைச் செய்து அந்தப்படி மனப்பூரணமாய், உண்மையாய், உழைக்க வந்தவர்கள் எத்தனை பேர்? என்று கணக்குப்பார்த்தால், பிராமணரல்லாதாரின் மகாநாட்டு யோக்கியதை, காங்கி ரஸ் மகாநாட்டைவிட சிறந்ததா இல்லையாவென்பது தெரியும். அதைவிட காஞ்சீபுரம் மகாநாடு கண்ணியமாய் நடந்ததா? சென்னை பிராமணரல்லாதார்



மகாநாடு கண்ணியமாய் நடந்ததா? என்று பார்ப்பதற்கு, காஞ்சீபுரம் மகாநாட்டில் நிர்வாகம் செய்த தலைவர்களென்போர் நடந்துகொண்ட யோக்கி யதையையும், சென்னை பிராமணரல்லாதார் மகாநாட்டு நிர்வாகிகள் நடந்து கொண்ட யோக்கியதையையும், "குடி அரசு" "தமிழ்நாடு" "நவசக்தி" முதலிய பத்திரிக்கைகளை படித்துப்பார்த்தால் பொது ஜனங்களுக்குத் தெரிய வரும். அல்லது இந்தப் பிராமணப் பத்திராதிபர்களே, கொஞ்ச நேரமாவது தங்களுடைய ஜாதிப் புத்தியை மறந்து, சத்தியத்தை நினைத்து, நெஞ்சில் கை வைத்துப் பார்த்துக்கொண்டார்களானால், அவர்களுக்கும் உண்மை விளங்கும். இப்பொழு தாவது அவர்களுக்கு யோக்கியதை இருக்குமானால், பிராமணரல்லாதாரில் எந்தத் தொழிலுக்கு, எந்த வகுப்புக்கு, எந்த நாட்டுக்கு, எந்த அந்தஸ்துக்கு, எந்த ஜில்லாவுக்கு, எந்த தாலூகாவுக்கு பிராமணரல்லாதார் சார்பாக அம்மகாநாட்டுக்கு பிரதிநிதிகள் வரவில்லையென்பதை எடுத்துக் காட்டட்டும். தேசத்திலும், காங்கிரசிலும், செல்வாக்குள்ளதாய்ச் சொல்லப் படுவதும், காங்கிரசையே தன் சுவாதீனப்படுத்திக்கொண்டதாய்ச் சொல்லப்படு வதும், 33 கோடி ஜனங்களின் ராஜீய நன்மைக்குப் பிரதிநிதித்வமாயிருக்கிற தென்று சொல்வதுமான சுயராஜ்யக் கட்சியின் மகாநாடு கூடுகிற காலத்தில் எத்தனை பிரதிநிதிகள் வருகின்றார்கள்? அதில் எந்தெந்த ஜாதியார், எந்தெந்த வகுப்பார், எந்தெந்த தொழிலாளர், எந்தெந்த வகையில் தேசத்திற்காகத் தியாகம் செய்தவர்கள் அதில் கூடுகிறார்கள். முதலாவது, சுயராஜ்யக் கட்சி மாநாடு கூட்டினால் அதன் உண்மைக் கொள்கைகளைப் பற்றி கதவைத் தாழ் போட்டுக்கொள்ளாமல் இவர்களால் பேச முடிகிறதா? மற்றும் 25 கோடி இந்துக் களின் பாரமார்த்தீக சம்பந்தமான, வருணாசிரம தர்ம முதலிய மகாநாடுகள் கூட்டும்போது எத்தனை பேர் வருகிறார்கள்? எந்தெந்த ஜாதியார் வருகிறார் கள்? இவர்களும், ஏதாவது கூடிப் பேசும்போது கதவைத் திறந்து வைத்துப் பேசக்கூடிய யோக்கியதை இருக்கிறதா? இவற்றையெல்லாம் யோசிக்காமல், மானங்கெட்டவன் சொந்தக் காரன் என்கிற தைரியத்தில் கைவசம் பத்திரிகை இருக்கிறது, படிப்பதற்கு ஏமாந்த ஜனங்களிருக்கின்றார்கள், சத்தம் போடுகிற வர்களைச் சுவாதீனப்படுத்திக் கொள்ள பணம் இருக்கிறது என்கிற தைரியத் தின் பேரில் நினைத்தபடியெல்லாம் எழுதியிருக்கிறதே தவிர, வேறு என்ன கடுகளவு யோக்கியம் இருக்கிறது.?

2. "சில பிராமணரல்லாதாரும் அக்ராசனாதிபதி கனம் யாதவரும் கூடி பிராமணர்களை நன்றாய்த் திட்டினார்கள்" என்று எழுதியிருக்கிறது.

**பதில்**

சில பிராமணரல்லாதாரும், அக்ராசனாதிபதியுந்தான் பிராமணர்களைத் திட்டுகிறார்களா? அல்லது தேசமே அவர்களைத் திட்டுகிறதாவென்பதை இவர்கள் கவனிக்கவேண்டும். இந்தியாவிற்கே அருந்தனமாய் மதிக்கப்படு பவரும், உலகப்பெரியாருமான மகாத்மா காந்தி, இந்தப் பிராமணர்களைப்



RangaRakes tamilnavarasam.com

பற்றி சொல்லும்போது, இந்தியாவுக்கு பிரிட்டிஷார் செய்த அக்கிரமத்தைவிட நமது பிராமணர்கள் செய்தது குறைந்ததல்ல வென்று சொல்லியிருக்கிறார். ஸ்வாமி விவேகாநந்தர், பிராமணர்கள் கக்கின விஷத்தால் தான் இந்தியா கெட்டதென்றும், அவர்கள் விஷத்தைத் திரும்ப அவர்களேதான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், அந்தப் பிராமண விஷம் எடுபட்டாலல்லாது, இந்தியாவுக்கு விடுதலையில்லையென்றும், சொல்லியிருக்கிறார். பெரிய தியாகியும் தேசபக்தருமான தேசபந்து தாஸ் அவர்கள் தனக்கு அதிகார மிருந்தால், பிராமண ஸ்திரீகளையெல்லாம் பிடித்து, தீண்டாதவர்களுக்கு ஒப்புவித்து விடுவேன் என்று தனக்கு அவர்கள் மீதுள்ள ஆத்திரத்தைக் காட்டியிருக்கிறார். இந்திய ரிஷியான ஸர்.பி.ஸி.ரே அவர்கள், இந்தியாவுக்கு சுயராஜ்யம் வேண்டுமானால் பிராமணர்களையெல்லாம், மூட்டையில் போட்டுக்கட்டி, அத்லாந்திக் மகாசமுத்திரத்தில் போட்டுவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இவையெல்லாம் புகழுரைகளா? இன்னும் இந்தப் பிராமணர்களால் மதிக்கப்பட்டவர்களும், மதிக்கப்படுகிறவர்களுமான ஸ்ரீமான்கள். டாக்டர். வரதராஜலு நாயுடு, ஈ.வெ.இராமசாமி நாயக்கர், வி.சர்க்கரைச் செட்டியார், சுரேந்திரநாத் ஆரியா, வி.ஓ.சிதம்பரம் பிள்ளை, தண்டபாணிப் பிள்ளை, எஸ். இராமநாதன், இராமச்சந்திரச் செட்டியார், சுப்பிரமணிய நாயினார், இராமசாமி ரெட்டியார், இராமநுஜ ரெட்டியார், ஆதிகேசவலு நாயக்கர், சிங்காரவேலு செட்டியார், கந்தசாமி பிள்ளை, சுப்பையா, சாமிநாதஞ் செட்டியார், வெங்கிடகிருஷ்ண பிள்ளை, பவானி சிங், சொக்கலிங்கம்பிள்ளை, வயிசு. ஷண்முகம் செட்டியார், ராயசொக்கலிங்கம் செட்டியார், தியாகராய ஞானியார், சுந்திரம் பிள்ளை, ஹமீத்கான் ஆகிய தேசபக்தர்கள், தேசத்துக்காக ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்று தடவை, நான்கு தடவை சிறைக்குச் சென்றவர்கள், ஒரு வருடம், இரண்டு வருடம், மூன்று வருடம், ஐந்து வருடம் தேசத்துக்காக ஜெயிலுக்குச் சென்றவர்கள், பீ.ஏ.,எம்.ஏ.,பி.எல் முதலிய பட்டதாரிகள், வைதீக ஒத்துழையாதார், நடுக் கட்சியார், சுயராஜ்யக் கட்சியார் தொழிலை விட்டவர்கள், தங்கள் வரும் படியை விட்டவர்கள் என்று சொல்லப்படும் இவர்களும், இன்னும் அநேக பெரியார்களும், இன்னும் சில ஜில்லா காங்கிரஸ் பிரசிடெண்டுகளும், தாலுகா காங்கிரஸ் பிரசிடெண்டுகளும், காங்கிரஸ் நிர்வாக மெம்பர்களும், மாகாண காங்கிரஸ் தலைவர்களும், காரியதரிசிகளும், நிர்வாக மெம்பர்களும், மாகாண ஜில்லா, தாலூக்கா மகாநாட்டுத் தலைவர்களும் எல்லாருந்தான் இந்தப் பிராமணர்களைத் திட்டுகிறார்கள். ஸ்ரீமான். கலியாணசுந்தர முதலியார் போன்ற இரண் டொருவர் (அதுவும் வெளியில் மாத்திரம் சொல்வதில்லையே யொழிய மனதில் அடக்கியடக்கியே இளைத்துப் போகின்றார்களென்று சொல்லலாம்.) தவிர, வேறு யார் இவர்களை வாழ்த்துகின்றார்களென்பது நமக்குத் தெரியவில்லை. இந்த நிலைமையில், ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பது போல், ஜஸ்டிஸ் கட்சிக்காரரை மாத்திரம், தங்களை வைகிறார்கள், வைகிறார்களென்று ஓலமிடுவதில் அர்த்தமென்ன?



3. "இந்த மாகாணத்திலும், பம்பாய் மாகாணத்திலும், ஜஸ்டிஸ் கட்சி அதிகாரப் பதவியிலிருக்கிறது; ஜனங்களுக்கு இவர்கள் என்ன நன்மை செய்து விட்டார்களென்று" எழுதியிருக்கிறது.

## பதில்

இந்த இரண்டு மாகாணத்திலும், உள்ள பிராமணர்கள், இவர்களை எதிர்த்து, இந்த ஸ்தானங்களைப்பிடுங்கிக் கொள்ளவேண்டுமென்ற கருத்துக் கொண்டே பிராமணரல்லாத மந்திரிகளை, ஒரு வேலையும் செய்ய வொட்டா மல் தடுப்பதே தங்கள் கொள்கையாக வைத்துக்கொண்டு, அதற்கு ஒரு கட்சியை உண்டாக்கி, தங்கள் பணத்தினாலும், பத்திரிக்கையினாலும், தப்பான வழியில் பாமர ஜனங்களையும் ஏமாற்றி சதா சர்வ காலம், மந்திரிகளோடு தொல்லை கொடுப்பதும், இவர்களுக்குப் பதில் சொல்லுவதிலேயே மந்திரிகளுடைய காலத்தைக் கழிக்க வேண்டி வருவதும், கொஞ்ச நஞ்சம் ஏதாவது வேலை செய்யலாமென்று ஆரம்பித்தால், இந்த இடமே போய் விடுமே. பிறகு அதில் பிராமணர்கள் வந்து உட்கார்ந்து கொண்டு, அடியோடு தங்கள் சமூகத்தை ஒழித்துவிடுவார்களே, இதுசமயம் நல்லது ஒன்று செய்ய முடியாமற் போயினும், கெட்டது செய்யவாவது கொடு மைக்காரர்களுக்கு இடம் கொடுக்காமல் தப்பித்துக் கொண்டால் போதும், என்கிற நிலைமையில், அவர்களிருக்கும்படி இவர்கள் செய்துவிட்டதோடல்லாமல், இவ்வளவையும் தப்பி, தேவஸ்தான மசோதா, கல்வி மசோதா, தொழிலாளருக்கு உபகார மசோதா முதலியதுகளைச்செய்யத்தான் இரண்டொரு நன்மைகளைக்கூட தொலைப்பதற்கு பல சூழ்ச்சிகளும், தந்திரங்களும் செய்து கொண்டு, மந்திரிகள் என்ன செய்தார்களெனக் கேட்பது யோக்கியமாவென்பதை வாசகர்களே கவனிக்கட்டும்.

4. "பம்பாய் மாகாணத்தில் கவர்மெண்டார் ஜஸ்டிஸ் கட்சியாரின் மது விலக்குத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டாலும், இந்தியா கவர்ண்மெண்டார் அதை நிராகரித்து விட்டார்களே; அதன்மேல், ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் ராஜீநாமாச் செய்தார்களா?" என்பது.

## பதில்

இது எவ்வளவு சுவாதீனம் கெட்ட கேள்வியென்பதை, கொஞ்சமாவது தங்களுக்கு மானம், வெட்கம் இருந்திருக்குமேயானால், நன்றாய் உணர்ந் திருப்பார்கள். ஜஸ்டிஸ் கட்சியாரை ஏன் ராஜீநாமாச் செய்யவில்லையென்று கேட்கிற சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த இந்தப் பிராமணர்கள் தங்கள் பிரயத் தனத்தால் இந்தியா சட்டசபையில் நிறைவேறின, ஒரு சத்தில்லாத ராஜீய அமைப்புத் தீர்மானத்தை ராஜப்பிரதிநிதி நிராகரித்துவிட்டாரே; அப்பொழுது இவர்கள் ராஜிநாமாச் செய்தார்களா? இவர்களாவது, தங்கள் காரியம் அரசாங் கத்தில் செல்லாவிட்டால், ராஜீநாமாச் செய்து விடுகின்றோமென்று, பாமர



RangaRakes tamilnavarasam.com

ஜனங்களான ஏழை வோட்டர்களிடம், வாக்குத் தத்தம் செய்து, மகாத்மாவின் ஒத்துழையாத் திட்டத்தையும் பாழாக்கிவிட்டு, சட்டசபைக்குச் சென்ற பொய் சத்தியகீர்த்திகள்! அப்படியிருக்க, இவர்களே ராஜீநாமாக் கொடுக்காமல், இன்னமும் தொங்கிக் கொண்டு, போதாக்குறைக்கு சம்பளம் வருகிற உத்தி யோகத்தையும் பெற்றுக் கொண்டு, சட்டசபைகளை ஒழுங்காய் நடத்திக் கொடுக்க, அடிமைத்தனத்தையும் பூண்டு கொண்டு, இருப்பதைக் கவனிக் காமல், ஜஸ்டிஸ் கட்சியார் ஏன் ராஜீநாமாக் கொடுக்கவில்லை யென்று கேட்க வந்து விட்டார்கள். இது தான் நிர்வாணமாய் நின்றுகொண்டு எதிரில் நிற்பவனைப் பார்த்து நீயேன் கோவணங் கட்டிக்கொண்டிருக்கிறாய், உனக்கு வேஷ்டியில்லையா? என்று கேட்பது போலிருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சிக்காரர், தங்கள் காரியங்களை ராஜாங்கத்தார் ஒப்புக்கொள்ளாவிட்டால் ராஜிநாமாக் கொடுத்துவிட்டு வெளியில் வந்து விடுகிறோமென்று, எங்காவது, எப்போ தாவது, யாரிடத்திலாவது சொல்லியிருக்கிறார்களா? இதை வாசகர்களே நன்றாய்க் கவனிக்க வேண்டும்.

5. “தென்னாப்பிரிக்கா, இந்தியரிடம் அநுதாபம் காட்டி ஓர் திட்டம் ஏற்பாடு செய்து தீர்மானம் செய்திருக்கிறது, இதை அரசாங்கத்தார் நிராகரித்து விட்டால் கனம் பனகல் இராஜா, கனம் யாதவர் வலியுறுத்த ஏற்பாடு செய்வார் களாவென்று” கேட்கிறது.

## பதில்

இந்தியர்கள் கல்பாத்தித் தெருவில் நடக்கக்கூடாதென்று பிராமணர்கள் தடுத்தபோது, சர்க்காரும், சட்டசபையும் அநுகூலமாயிருந்தும், பிராமண மந்திரியான ஸர்.சி.பி.இராமசாமி ஐயர் என்ன சாதித்துவிட்டார்? நல்லது செய்யாவிட்டாலும், கெடுதி செய்யவில்லையென்றாவது ஜனங்கள் நினைப் பதற்கு யோக்கியமாய் நடந்து கொண்டாரா? பிராமண கக்ஷி மந்திரிக்கு ஓர் சட்டம், பிராமணரல்லாத மந்திரிக்கு ஓர் சட்டம் நமது நாட்டுப் பிராமணர் களுக்கு ஏற்பட்டிருக்கிறது போலும். இது கண்ணாடி வீட்டில் குடியிருக்கிற வன், கல்வீட்டின் மேல் கல்லெடுத்துப்போடுவதுபோல் இருக்கிறது.

6. “பிராமணர்களைத் திட்டினால் மாத்திரம், சுயராஜ்யம் கொடுத்து விட மாட்டார்கள்; வருடமொருமுறை தீர்மானம் செய்ததினால் மாத்திரம் சுயராஜ் யம் கொடுத்துவிடமாட்டார்கள்; இதெல்லாம் ஜனங்கள் மெச்சுதலுக்குச் செய்யப்படும் தீர்மானங்கள்தான்; கடைசியாக இவை அதிகாரவர்க்கத்துக்குத் தான் துணையாகும்” என்று எழுதியிருக்கிறது.

## பதில்

இது எப்படியோ இருக்கட்டும். இதைவிட இந்தப் பிராமணக் கட்சியா ரான சுயராஜ்யக் கட்சியார் என்ன சாதித்து விட்டார்கள்? இரவும், பகலும், தூக்கத்திலும் கனவிலும், பிராமணரல்லாதாரைத் திட்டுவதும், அவர்களைப்



பற்றிப் பத்திரிக்கைகளில், பொய்யும், புளுகும் எழுதி அயோக்கியப் பிரசாரம் செய்வதும், இதற்குதவியாய், ஆங்காங்கு கீழ் மக்களையும், மான வெட்க மில்லாதவர்களையும் நிருபர்களாக வைத்துக்கொள்ளுவதும், ஆங்காங்கு வயிற்றுக்கில்லாதவர்களுக்கு ரூபாயைக் கொடுத்து, பிராமணரல்லாதாரை வைவதும், தங்களுக்கு வோட் சேகரித்துக் கொடுக்கும்படி செய்வதும், அதோடு பொது மக்கள் ஏமாறத்தகுந்த இரண்டொரு தீர்மானங்களைப் பற்றி வாயால் பேசுவதுமல்லாமல், வேறென்ன இவர்கள் சாதித்தார்கள்! சாதிக்கிறார் கள்!! சாதிக்கப் போகிறார்கள்!!!

## ஸ்வராஜ்யப் பத்திரிகைக்குப் பதில்.

இதல்லாமல், ஸ்வராஜ்யப் பத்திரிகை “தொழிலாளருக்கு என்ன செய்தார்கள்?” ‘ஒடுக்கப்பட்டவர்களுக்கு என்ன செய்தார்கள்?’ ‘வைக்கம் சத்தியாக்கிரகத்துக்கு என்ன செய்தார்கள்?’ யாராவது சிறைக்குப் போனார் களா?’ ஜில்லா, தாலுகா ஸ்தல ஸ்தாபன சபைகள் ஆதிக்கம் தங்கள் கையி லிருக்கும்போது என்ன நன்மை ஜனங்களுக்குச் செய்து விட்டார்கள்?” என்று கேட்டு அழுகிறது.

## பதில்

தொழிலாளருக்காக வேலைசெய்த, ஸ்ரீமான்கள். கலியாணசுந்தர முதலியார், சுரேந்திரநாத் ஆரியா, வி.சக்கரைச்செட்டியார், சிங்காரவேலு செட்டியார், ஜே.என்.ராமநாதன் இவர்களெல்லாம் பிராமணர்களா? பிராமண ரல்லாதவர்களா? இவர்களுக்கு மேல், பிராமணர்கள் என்ன சாதித்திருக் கின்றார்கள்? மேலும்,

இப்பொழுது ஐயராய்ப் போகப்பார்க்கும் ஸ்ரீமான்.கலியாணசுந்தர முதலியாரவர்களே, தொழிலாளர் கலவரத்தின் போது தங்கள் விஷயத்தில் பிராமணர்கள் எப்படி நடந்து கொண்டார்கள், ஸர்.பி.தியாகராய செட்டியாருட் பட பிராமணரல்லாத அதிகாரிகளும், மந்திரிகளும், தலைவர்களும் எப்படி நடந்து கொண்டார்களென்பதைப் பற்றிப் பலதடவை சொல்லியிருக்கிறார். இது இரகசியமென்றும் சொன்னதினால், இதைப்பற்றி பூராவும் வெளியிட முடியவில்லை, சுருக்கமாய்ச் சொல்வதானால் பிராமணரல்லாத மந்திரிகளின் பிரயத்தனம் இருந்திராவிட்டால், நாங்களெல்லாம் நாடு கடத்தப்பட்டிருப் போமென்று சொல்லியிருக்கிறார்.

ஒடுக்கப்பட்டவர்களுக்கு, ஸ்தல ஸ்தாபனங்களில், கூடுமானவரையில் ஸ்தானங்கள் அளித்தது, பிராமண ஸ்தலஸ்தாபன நிர்வாகிகள் காலத்திலா? பிராமணரல்லாத ஸ்தல ஸ்தாபன நிர்வாகிகள் காலத்திலா?

வைக்கம் சத்தியாக்கிரகத்தில் தொண்டு செய்த ஸ்ரீமான்கள். ஈ.வி.இராம சாமி நாயக்கர், எஸ்.இராமநாதன், அய்யாமுத்துக் கவுண்டர் முதலியவர்க ளெல்லாம் பிராமணர்களா? பிராமணரல்லாதார்களா?



RangaRakes
tamilnavarasam.com

சிறைக்குப்போன ஸ்ரீமான்கள். ஆரியா, தண்டபாணி பிள்ளை, டாக்டர். நாயுடு, வி.ஓ.சிதம்பரம் பிள்ளை, இராமசாமி நாயக்கர் இன்னும் எத்தனையோ எழுத முடியாத கனவான்கள் சிறைக்குப் போனது பிராமணரல்லாதவர்களல்லவா? இன்றையத்தினம் சுயராஜ்யக் கட்சியென்று பேர் வைத்துக் கொண்டு, தாண்டவமாடும் பிராமணர்களில் எத்தனைபேர் இதுகளுக்கு உதவினார்கள் என்பதை இந்தப் பிராமணப் பத்திரிக்கைகள் சொல்லட்டுமே!

ஸ்தல ஸ்தாபன நிர்வாகங்களில் ஜனங்களுக்கு என்ன நன்மை என்று கேட்பதாயிருந்தால், ஸ்ரீமான்கள். வி.கிருஷ்ணசாமி ஐயரும், ஸர்.பி.எஸ். சிவசாமி ஐயருமான பிராமணர்கள் ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் இருந்து நடத்தினதைவிட, பிராமணரல்லாதார் இருந்து நடத்தினதில் என்ன மோசம் ஏற்பட்டுப்போய்விட்டது? பிராமணர்களிருந்த காலத்தில், பிராமணர்களையே நியமித்துக்கொண்டு வந்தார்கள். பிராமணரல்லாதார் இருக்கிற காலத்தில், பிராமணர்களுக்கும் ஒன்றிரண்டு ஸ்தானங்களைக் கொடுத்துவிட்டு, பிராமணரல்லாதாரில், தீண்டாதார் உட்பட பலரையும் நியமித்துக்கொண்டு வருகிறார்கள். வேறு என்ன செய்யவேண்டும்? வேறு என்னதான் செய்ய அந்த ஸ்தானங்கள் உதவும்? இவைகளையெல்லாம் கவனிக்காமல், தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்பதுபோல், பிராமணரல்லாதாரை மூளை இல்லாதவர்களென்று நினைத்துக்கொண்டு, பத்திரிக்கையினாலும், பணத்தினாலும், பிரசாரத்தினாலும் எப்படியாவது ஏமாற்றிவிடலாமென்கிற ஆணுவத்தின் பேரில் செய்கிற விஷமப் பிரசாரம் என்பதை பிராமணரல்லாதார் உணர வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு பிராமணப் பத்திரிக்கைகளையும், பிராமணப் பிரசாரங்களையும், பிராமணரல்லாதார் வெறுக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு பிராமணரல்லாதாருடைய முன்னேற்றம் சமீபத்திலிருக்கின்றதென்பதையும் உணர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 27.12.1925**



# அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அசலாத | – | அகலாத |
| அருந்தனமாய் | – | அரிய செல்வமாய் |
| அனுஷ்டானமாய் | – | ஒழுக்கம், வழக்கம், |
| அனுஷ்டித்தல் | – | கடைபிடித்தல், சடங்கு செய்தல் |
| அபயாஸ்தம் | – | உள்ளங்கையை உயர்த்தி ஆசீர்வதித்தல் |
| ஆப்த | – | நம்பகமான |
| ஆப்காரி இலாகா | – | மதுவரித்துறை |
| ஆஸ்பதம் | – | இடம், பற்றுக்கோடு |
| இட்டேரி | – | நில எல்லைகளில் செல்லும் குறுகிய வழி |
| இதரர்கள் | – | மற்றவர்கள், பிறர் |
| இலங்கிக்கொண்டு | – | விளங்கிக்கொண்டு |
| உத்தாரணம் | – | முன்னேற்றம், ஏறுதல் |
| உத்ரணித்தண்ணீர் | – | கரண்டித் தண்ணீர் |
| கண்ணோக்கம் | – | நோக்கம் |
| சகோதரப்பாவம் | – | சகோதர மனப்பான்மை |
| சந்தியா வந்தனம் | – | சூரியத் தோற்ற, மறைவு வேலைகளில் செய்யும் சடங்கு |
| சம்பிரம் | – | களிப்பு, நிறைவு |
| சன்னது | – | (கல்விப்) பட்டம், அணி |
| சுதாவாய் | – | தானாக, தன்னிச்சையாக, |
| சுயாதினம் | – | உரிமை, தன்வசமாக்கல் |
| சொருபம் | – | உருவம், சாயல் |
| தம்மியமுடையது | – | தாழ்வானது |
| தர்ம பீமாதிகள் | – | தர்மன், பீமன் முதலியோர் |
| தார தம்மியம் | – | ஏற்றத்தாழ்வு |

RangaRakes tamilnavarasam.com

# குடி அரசு

# 1926-1

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 2

பெரியார் திராவிடர் கழகம்

29 இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் – திருவான்மியூர்
சென்னை – 600 041

## ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார்

ஸ்ரீமான். இராஜகோபாலாச்சாரியார் வெளியிட்ட அறிக்கைகளில், முதலில் காங்கிரஸ் தற்காலம் பொது ஜனங்களுக்குச் சேவை செய்ய எவ்விதத் திட்டத்தையும் உடைத்தாயிருக்கவில்லை என்றும், காங்கிரசிற்கு இப்போ திருக்கும் மதிப்பெல்லாம், அது சென்ற நான்கு, ஐந்து வருடங்களாக தேசத் துக்கு அநுகூலமான திட்டங்களை ஏற்படுத்திக் கொண்டு அதற்காகப் பல தலைவர்களும், தொண்டர்களும் கஷ்டங்களையும், நஷ்டங்களையும் ஏற்றுக்கொண்டு பெரிய தியாகங்களையும் செய்து திட்டங்களை நிறைவேற் றப் பிரயத்தனப்பட்டதன் பலனாய் காங்கிரசுக்கு ஏற்பட்ட மதிப்பை வைத்துக் கொண்டு, காங்கிரசின் மூலமாய் பொது ஜனங்களுக்கு நன்மை உண்டாகும் படியான எவ்விதத் திட்டமும் அதில் இல்லாமல், பழைய நிலையின் வாசனை யையே ஆதாரமாக வைத்துக் கொண்டு, காங்கிரஸ், காங்கிரசென்று சிலர் சொல்லி வருகிறார்கள். இப்படியே காங்கிரஸ் இருக்குமேயானால், இனிக் கொஞ்சக் காலத்தில் காங்கிரஸ் மதிப்பே போய்விடும் என்றும் எழுதிவிட்டு, காங்கிரஸிற்கு பூரண மது விலக்கையாவது திட்டமாய் வைத்து அதை ஓட்டர்களுக்கு எடுத்துச் சொல்லி ஓட்டுப் பெற்று சட்டசபைக்குப் போய் ஒரே வருடத்தில் மதுபானத்தை நிறுத்திவிடவேண்டும் என்றும் எழுதியிருந்தார். இது எழுதின சமயம் ஒத்துழையாதாருங்கூட இந்த தத்துவத்தோடு சட்ட சபைக்குப் போய் வேலை செய்ய வேண்டுமென்பது தான் அவருடைய கருத்தாய் இருந்தது. எப்படியெனில், இதைப்பற்றி நம்மிடம் யோசிக்கையில், தானும் சட்டசபைக்குப் போவதில் ஆக்ஷேபனை இல்லை என்றும், இன்னும் பல இடங்களுக்கு ஒத்துழையாதாரர்களையே நிறுத்த வேண்டும் என்றும் சொல்லி, அவர்களுடைய பெயர்களையும் சொன்னார். அதன் பிறகு எழுதிய ஒரு வியாசத்தில், “முட்டுக்கட்டை போட்டு அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் பேச்சு இனி உதவாது, நாம் ஒரே நோக்கத்துடன், திடபுத்தியுடன் உழைத்தோமானால், மதுவிலக்கைச் செய்து முடிக்கலாம். அடுத்த தேர்தல் களை, இந்த மதுவிலக்கு என்னும் ஒரே விஷயத்தின் மேல் நடத்துங்கள், சட்டசபைகளில் தற்போது ஏழைகளுக்கு வேறு என்ன நல்ல தொண்டு செய்ய முடியும்” என்றும், “மதுவிலக்கை சர்க்கார் ஏற்றுக் கொள்ளா விட்டால், அரசாங்க வேலை முற்றிலும் தடை செய்வது நியாயமாகும். சென்னை சட்டசபையைப் பொறுத்த வரையில், சுயராஜ்யக் கக்ஷியின் எதிர்ப்புத் திட்டம் காகிதமளவாகவே இருக்கிறது” என்று சுயராஜ்யக் கக்ஷியினருக்கும் மற்றும்

RangaRakes tamilnavarasam.com

தேசீயவாதிகளுக்கும் புத்தி சொல்லுவது போல் ஒரு வியாசமும் சமாதானமும் எழுதியிருக்கிறார்.

பிறகு சித்தூரில் 22-12-25-ல் நடைபெற்ற ஓர் பொதுக் கூட்டத்தில் "சுயராஜ்யக் கக்ஷியார், முட்டுக்கட்டை போட வேண்டுமென்று சட்டசபைக் குப் போனவர்கள் முட்டுக்கட்டை போட்டார்களா? அவர்களால் போட முடியுமா? முட்டுக்கட்டை போடுவதற்கு அங்கு ஏதாவது இடம் இருக்கிறதா? ஆதலால், நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்து வேலை செய்யக்கூடிய திட்டத்தைக் கண்டு பிடிக்கவேண்டும். அதற்கு மதுவிலக்குத் திட்டம் பொருத்தமான தென்றும் எல்லாருக்கும் பொதுவானதென்றும் நினைக்கிறேன். இதற்குக் கவர்ன்மெண்டு முட்டுக்கட்டை போடுமானால், கவர்ன்மெண்டு நடை பெறாமல் முட்டுக்கட்டை போட இந்தத் திட்டம் உதவும். ஆதலால், ஜனங்கள் இந்த மதுவிலக்குக்கு சாதகமானவர்களையே சட்டசபைக்கு அனுப்பினால் கவர்ன்மெண்டு நடைபெறாமல் முட்டுக் கட்டை போட சாதகமாயிருக்கும். இதுதான் பரஸ்பர ஒத்துழைப்புக்குச் சாதகமாயிருக்கும்" என்று பேசி யிருக்கிறார்.

பிறகு சேலத்தில் டிசம்பர் மாதம் 24 - ந் தேதி நடை பெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியிருப்பதாவது:-

"இதுவரையிலும் கதர், கள்ளு என்ற பல விஷயங்கள் பேசப்பட்டு வந்தன. இனி மதுவிலக்கும், சட்டசபைத் தேர்தலும் மாத்திரம்தான் பேசப்படும் என்று சொல்லிவிட்டு, தான் மாறுதல் வேண்டாத கக்ஷியைச் சேர்ந்தவர் என்றும், சட்டசபைப் பகிஷ்காரத்தில் நம்பிக்கை உடையவர் என்றும், சட்டசபைக்குப் போக விருப்பம் இல்லாதவர்களைப் போகும்படியும், வோட் செய்யும்படியும் பலவந்தப் படுத்துவதில்லை என்றும், சட்டசபைக்குப் போகிறவர்கள் மதுவிலக்கைக் கட்டாயமாக வலியுறுத்த வேண்டும் என்றும், அப்படி வலியுறுத்தினால், கவர்ன்மெண்டுக்கு முட்டுக்கட்டை ஏற்படும் என்றும், ஆகையால் இம்மாதிரி சட்டசபையில் அடுத்த முறை மது விலக்கைப் பூர்த்தியாய் வேலை செய்கிறவர்களுக்கே வோட் கொடுக்க வேண்டுமென்றும், **மதம், ஜாதி, வகுப்பு, குல அபிமானம் இவைகளைக் கருதி வோட்டர்கள் வோட் செய்யக்கூடாது** என்றும்நான் வோட்டர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றும் பேசியிருக்கிறார்.

அதோடல்லாமல், இதையே தான் ஓர் பிரசாரமாகக் கொண்டிருப் பதாகவும், ஆங்காங்கு போய்ப் பிரசாரம் செய்யப் போவதாகவும் சொல்லி யிருக்கிறார்.

மேல்கண்ட இரண்டு வியாசங்கள், இரண்டு உபந்யாசங்கள் ஆக நான்கு சந்தர்ப்பத்திலும், ஸ்ரீமான். ஆச்சாரியாரின் அபிப்ராயங்கள் ஒன்றுக் கொன்று எவ்வளவு மாறுபட்டிருக்கின்றது என்பதை ஊன்றிக் கவனிப்பவர் களுக்கு இதில் ஏதோ ஓர் இரகசியம் இருக்கிறதென்பது நன்றாய் வெளிப்



படும். முதலில், காங்கிரஸிற்கு ஓர் யோக்கியதை உண்டாவதற்காக ஓர் திட்டம் வேண்டும் என்று ஆரம்பித்து பூரண மதுவிலக்கை காங்கிரஸில் ஓர் திட்ட மாக வைத்து, சட்டசபைக்குப் போய் ஒரே வருடத்தில் மதுபானத்தை நிறுத்தி விடவேண்டும் என்று எழுதினார். அதுசமயம் சட்டசபையில் தனக்கு ஒரு நம்பிக்கையும், சட்டசபையின் மூலமாய் மதுவிலக்கை நிறுத்திவிடலாம் என்கிற உறுதியும் அவருக்கு இருந்து இருக்கிறது. அடுத்தாற்போல் சட்ட சபையின் மூலம் கவர்ன்மெண்டு நடக்காமல் முட்டுக்கட்டை போட முடியாதென்று சொல்லிவிட்டு, மறுபடியும் நமது திட்டத்தைச் சர்க்கார் ஏற்றுக் கொள்ளாவிட்டால் முட்டுக்கட்டை போடலாமென்று சொல்லுகிறார். மறுபடி யும், தான் மாறுதல் வேண்டாதவ ரென்றும், சட்டசபைக்குப் போவதிலும் வோட் கொடுப்பதிலும் நம்பிக்கை இல்லையென்றும், போகிறதற்கு இஷ்டப்படுகிறவர் இப்படி நடங்களென்றும், ஜாதி, மத, வகுப்பு வித்தியா சங்களைக் கவனிக்காமல் வோட் கொடுங்கள் என்றும் சொல்லிவிட்டு, தான் அதைப்பற்றி பிரசாரம் செய்யப் போவதாகவும் சொல்லுகிறார்.

காஞ்சியில், பாட்னாத் தீர்மானத்தை, சுயராஜ்யக் கக்ஷியார் சொன்னபடி நடக்கவில்லை, சட்டசபைக்குப் போவதில் பிரயோஜனமுமில்லை என்று ஸ்ரீமான். ஈ.வெ. இராமசாமி நாயக்கர் எதிர்த்தபோது, அவ்வெதிர்ப்புக்கு விரோதமாய் ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார், முதல் பாகத்தை ஆதரிக் கையில் சட்டசபையில் நம்பிக்கை இல்லாதவர்கள், நம்பிக்கையுடன் சட்ட சபைக்குச் சென்று வேலை செய்பவர்களை ஏன் குறை கூற வேண்டும்? என்று சொல்லிவிட்டு, அதற்கு ஓர் உதாரணமும் சொல்லிக் காட்டினார். அதாவது, மாமிசம் சாப்பிடக்கூடாது என்று ஒரு சங்கம் ஏற்படுத்திக் கொள்ளுவதாய் வைத்துக்கொள்ளுவோம்; அச்சங்கத்தில் இருந்த சிலர் நாங்கள் சாப்பிட்டுத் தான் தீருவோம் என்று சொல்லி சங்கத்தின் அனுமதி பெற்றுவிட்டால், அச்சங்கத்தில் இருப்பவர்களுக்கு போனவர்களைப் பார்த்து இந்த மாதிரி ஏன் குழம்பு வைத்துச் சாப்பிடவில்லை? ஏன் பொறியல் வைத்துச் சாப்பிட வில்லை? என்று கேட்க என்ன அதிகாரம் இருக்கிறதென்று சொல்லியும், அவர்கள் இஷ்டம்போல் விட்டுவிட வேண்டுமென்றும் பேசி தீர்மானத்தின் முதல் பாகத்தை ஆதரித்தார். அப்படியிருக்க, இப்பொழுது சுயராஜ்யக் கக்ஷியாருக்கு, அவர்கள் ஜனங்களை எப்படி ஏமாற்ற முடியும் என்பதற்கு யோசனை சொல்லிக் கொடுப்பதுபோல், மதுபானத் திட்டத்தை அதில் சேர்த்துக் கொள்ளுங்கள்; இப்படிச் சொன்னால், ஜனங்களிடம் வோட்டும் பெற்றுக்கொள்ளலாம்; சட்டசபைக்குப் போய் அப்படிச் செய்யலாம் இப்படிச் செய்யலாமென்று தனக்கு நம்பிக்கை இல்லாத விஷயங்களை அவர்கள் நம்பும்படி சொல்லுகிறார்.

அதுமாத்திரமல்லாமல் வோட்டர்களையும், ஜாதி, மத, வகுப்புப் பார்த்து வோட் செய்யக்கூடாது; உங்களுக்கு அனுகூலமான காரியத்தைச் செய்வதாக யார் வாக்குக் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கே வோட் செய்ய



RangaRakes tamilnavarasam.com

வேண்டுமென்றும் சொல்லுகிறார். சட்டசபையில் ஒரு காரியமும் செய்ய முடியாதென்று நினைக்கிற ஒருவர், இன்னின்ன காரியங்கள் செய்வதாக யார் வாக்கு கொடுக்கிறார்களோ, அவர்களுக்கே வோட் செய்யவேண்டுமென்றும் சொல்லுகிறார். சட்டசபையில் ஒரு காரியமும் செய்யமுடியாதென்று, நினைக்கிற ஒருவர் இன்னின்ன காரியங்கள் செய்வதாக வாக்குக் கொடுக்கிறவருக்கு வோட் கொடுங்கள் என்று சொல்வதானது, எவர் பெரிய புரட்டுக்காரரோ அவருக்கு வோட் கொடுங்கள் என்று சொல்வதுதானே கருத்தென்று எண்ண வேண்டும். சுயராஜ்யக் கக்ஷியார் சொன்னபடி நடக்கவுமில்லை; சொன்னபடி நடக்கவும் முடியாது என்றும் சொல்லிவிட்டு இன்னின்ன மாதிரி சொல்லி போய் வோட் கேளுங்கள் என்று சொல்லுவதினாலும், ஜாதி, மத, வகுப்பு வித்தியாசங்களில்லாமல் வோட் கொடுங்கள் என்று சொல்லுவதினாலும், ஒத்துழையாதார் எல்லாம் சட்டசபைக்குப் போகவேண்டுமென்று நினைத்ததினாலும், அடுத்த தேர்தலில் முன்போலவே, பிராமணரல்லாதார்களுக்கு சட்டசபையில் ஆதிக்கம் வந்துவிடுமோவென்று பயப்படுவதாயும், அதற்கு ஏதோ சில வழிகள் கண்டுபிடிப்பதாகவுந்தான் இதிலிருந்து நாம் யூகிக்க வேண்டியிருக்கிறதேயல்லாமல், வேறு ஒன்றும் நினைப்பதற்கிடமில்லை. ஆதலால், வோட்டர்கள் இந்த சட்டசபையானது, தேசத்திற்கு எவ்விதத்திலும் நன்மை செய்ய முடியாது என்பதை நன்றாய் உணர வேண்டும்.

சர்க்காருக்கு விரோதமில்லாமல், வகுப்பு நன்மைகளை உத்தேசித்து, ஏதாவது செய்து கொள்ள வேண்டுமானால், அவைகளுக்கு மாத்திரம் கொஞ்சம் சட்டசபை உதவும். இவ்விதமாகத்தான் அவைகள் ஆக்கப்பட்டுமிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட காரியங்களில் முக்கிய கருத்துடையவர்கள், அந்தந்த வகுப்பார்களையும், அந்தந்த வகுப்புக்கு நன்மையான கொள்கையுடையவர்களையும், சட்டசபைக்கு அனுப்ப வேண்டுமேயல்லாமல், செய்ய முடியாத ஓர் காரியத்தை உத்தேசித்து, செய்யக்கூடிய காரியங்களை அலக்ஷியம் செய்து வகுப்பு வித்தியாசமில்லாமல், சட்டசபையை நிரப்பி விடுவோமேயானால், கஷ்டப்படும் வகுப்பாரும், தாழ்த்தப்பட்ட வகுப்பாரும், பிற்பட்ட வகுப்பாரும் இன்னும் அதிகக் கஷ்டப்படவும், தாழ்த்தப்படவும், பிற்படவும்தான் முடியுமென்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆதலால், சட்டசபை முதலிய தேர்தல்களில் கலந்து கொள்ள வேண்டுமென்கிற ஆசையிருக்கிறவர்கள், கண்டிப்பாய் தங்கள் வகுப்பு நன்மையை மறந்துவிடக் கூடாதென்று நாம் எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 03.01.1926**



# தேசிய காங்கிரஸ்

இவ்வருடம் கான்பூரில் இந்தியாவின் விடுதலைக்கு உழைக்கும் சபையென்னும், இந்திய தேசிய மகாநாடாகிய காங்கிரஸ், கான்பூரில் கூடிக் கலைந்தது.

இந்தியாவின் விடுதலைக்கும், இந்தியரின் சுயமரியாதைக்கும், அரசாங்கத்தை கொஞ்சமும் எதிர்பாராமலும், அவர்களின் அரசியல் மாய்கைகளை உபயோகப்படுத்திக் கொள்ளாமலும், அவர்களோடு விலகியிருந்து நிர்மாணத்திட்டத்தை நிறைவேற்றி வைப்பதன் மூலமாகவே தியாகத்திற்கும் கஷ்ட நஷ்டத்திற்கும், துணிவுகொண்டு உழைப்பதுதான் உண்மையான சுயராஜ்ய மார்க்கம் என்கிற உறுதியைக் கொண்ட கூட்டத்தார், இவ்வாண்டு கான்பூர் காங்கிரஸில் சரிவரக் கலந்து கொள்ளவேயில்லை. மகாத்மா காந்தியும் தான் தனியாக நின்று நடத்துவதாய் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கதர் ஸ்தாபனமாகிய நூல் நூற்கும் சங்கத்தை ஏதாவது ஒழித்து விடுவார்களோ எனப் பயந்து அதைக் காப்பாற்றிக் கொள்ளும் வரை கூட இருந்து விட்டு, மற்றவைகளில் அவரும் கலந்து கொள்ளாமல் காங்கிரஸ் மகாநாட்டுக்குக்கூட வராமல், மெல்ல நழுவி விட்டார். காக்கிநாடாவில் ஸ்ரீமான் ஈ.வெ.இராமசாமி நாயக்கர் “இன்னும் இரண்டு வருடத்தில் இந்த காங்கிரஸானது பழயபடி பேச்சை விற்றுப் பிழைக்கும் வக்கீல் கூட்டத்தார் வசமும் படித்தவர்கள் என்போர் கைவசமும் போய்விடப் போகிறது; உண்மையாய் தேசத்திற்கு உழைக்கிறவர்களுக்கு காங்கிரஸில் இடம் இருக்கப் போவதில்லை. ஆங்கிலம் படித்த சிலர் தங்கள் உத்தியோகமும், பதவியும் சம்பாதிப்பதற்காகவே காங்கிரஸ் உபயோகப்படப் போகிறது; இதற்கே ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் வழி திறந்து விட்டு விட்டார். அவர் தமது தியாகத்தின் பலனாய் அடைந்த செல்வாக்கை இப்போது தன் கூட்டத்தவராகிய படித்த வகுப்பாருடைய நன்மைக்கே உபயோகப் படுத்துகிறார்” என்று கதறினது ஒரு எழுத்துக்கூட பொய்யாகாமல் நடந்து போய்விட்டது.

தமிழ்நாட்டில் இருந்தும், மற்றும் பல மாகாணங்களிலிருந்தும் ஒத்துழையாமையின்போது தியாகம் செய்து சிறை சென்ற முக்கிய தேச பக்தர்கள் அநேகமாய் இந்தக் காங்கிரஸிற்குப் போகவே இல்லை. முந்திய வருஷங் களில், ஏழை மக்களும் விவசாயிகளும், தொழிலாளருமான தேச பக்தர்களே முக்கியப் பிரதிநிதிகளாய் இருந்தார்கள். இவ்வருஷமோ, ஒத்துழையாமை உச்சத்தில் இருக்கும்போது காங்கிரசைத் திரும்பிக்கூட



RangaRakes tamilnavarasam.com

பார்க்காதவர்களும், பெரும்பாலும் ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமணய்யங்கார் போன்றவர்களும், பிராமணர்களுமே தமிழ்நாட்டின் சார்பாக முக்கியப் பிரதிநிதிகளாயிருந்திருக்கிறார்கள். ஏறக்குறைய ஒவ்வொரு மாகாணத் திலிருந்தும் இதுபோலவே பொது ஜனங்களை ஏமாற்றி சட்டசபைப் பதவி பெறவும், உத்தியோகம் பெறவும், தங்கள் வகுப்பு ஆதிக்கத்தைப் பலப்படுத் திக் கொள்ளவும் ஆசைப்பட்டவர்கள்தான் போயிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

காங்கிரசின் பிரதிநிதித்துவம் இப்படி இருக்க, நிறைவேறின தீர்மானங் களைப் பற்றியோவென்றால், எந்தெந்த சர்க்கார் உத்தியோகத்தை ஒப்புக் கொள்ளுவது; எந்தெந்த சர்க்கார் உத்தியோகத்தை தள்ளிவிடுவது; எப்படிப் பட்ட தீர்மானத்தைச் செய்தால் பாமர ஜனங்களை ஏமாற்றி ஓட்டுப் பெறலாம் என்கிற விஷயங்களே காங்கிரஸின் முக்கிய நேரங்களைக் கவர்ந்துக் கொண்டது. அவரவர்கள் மாகாணத்தில் உள்ள அவரவர்களுக்குரிய சௌகரியத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டே சண்டைகள் பிடிக்கப்பட் டன. தமிழ்நாட்டு சுயராஜ்யக் கட்சியாருக்கு, தமிழ்நாட்டில் உத்தியோகம் கிடைப்பதற்கு வழி இல்லாததால், தமிழ்நாட்டுத் தலைவர் "சீ! இந்தப் பழம் புளிக்கும்" என்பது போல் உத்தியோகமே பெறக்கூடாது என்று வாதாடினார் கள். ஆனாலும் இந்தியா சட்டசபையில், தங்களுக்கு கொஞ்சம் செல்வாக்கு இருப்பதின் நிமித்தம், சில உத்தியோகம் பெற சௌகரியம் இருப்பதால் அங்குள்ளவைகளை மாத்திரம் பெற்றுக் கொள்வதில் ஆக்ஷேபனை இல்லை என்கின்றனர். இதுபோலவே மத்திய மாகாணத்திலும் சுயராஜ்யக் கட்சியாருக் குச் சில உத்தியோகங்கள் கிடைப்பதற்கு சௌகரியம் இருப்பதால் அவர்கள் அதைப் பெற்றுக் கொள்ளலாம் என்கின்றனர். இவ்விரண்டு கட்சியாரின் விவாதமே காங்கிரசின் நடவடிக்கையாய்ப் போய்விட்டது. பழைய வழக்கம் போல் தமிழ்நாட்டுப் பிராமணர்கள் ஆதிக்கமே காங்கிரஸில் இருந்ததால் தமிழ்நாட்டு நிலைமையை அநுசரித்தே (தமிழ் நாட்டிலும் உத்தியோகம் சம்பா திக்கக்கூடிய நிலைமை வருகிறவரையில், இந்தியா சட்டசபை உத்தியோ கங்கள் நீங்கலாக) சில உத்தியோகங்கள் பெற்றுக் கொள்ளக்கூடாது என்கிற தீர்மானம் நிறைவேறிற்று.

அதோடு பாமர ஓட்டர்களை ஏமாற்றத்தக்கதென்று சொல்லும்படியாக ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அதாவது, தங்கள் கோரிக்கைகளை சர்க்கார் ஏற்றுக்கொள்ளாவிட்டால், பிப்ரவரி மாதத்தில் கவுன்சில் பதவியை ராஜிநாமாச் செய்து விடுவதென்பது. இது தேசத்தாரை ஏமாற்றுவதற்கென்றே செய்த தீர்மானம் என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் மார்ச்சு மாதத்தில் தானாகவே சட்டசபைகள் கலையப் போகிறது. அப்படியிருக்க மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் கலையப் போகும் சட்டசபை ஸ்தானத்தை பிப்ரவரி மாதம் 28-ந் தேதி ராஜிநாமாச் செய்வதில் சர்க்காரார் பயந்துவிடுவார்களா? அல்லா மலும் சுயராஜ்யக் கட்சியார் கோரிக்கையை இதற்கு முன் பல தடவைகளில்



RangaRakes

நிறை வேற்றினதை சர்க்காரார் ஏற்றுக்கொள்ளாமல் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டார்களே; அப்போது ஏன் ராஜிநாமா செய்திருக்கக்கூடாது. பூனை கண்ணை மூடிக் கொண்டு பால் குடிப்பது போல், இவைகளை யெல்லாம் பொது ஜனங்கள் அறிய மாட்டார்கள் என நினைத்துக்கொண்டு எவ்வளவோ தந்திரமாகக் காங்கிரசை நடத்தி விட்டார்கள்.

33 கோடி ஜனங்களின் விடுதலைக்கும், சுயமரியாதைக்கும், சமத்துவத் திற்கும் உழைப்பதாகச் சொல்லப்படும், இந்திய தேசிய மகாநாடே சூது மகாநாடாய்ப் போய்விடுமானால், குட்டி மகாநாடுகளின் யோக்கியதையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

காங்கிரஸ் தீர்மானத்தைப் பற்றி கல்கத்தா 'சர்வெண்டு' பத்திரிகை எழுதுவதாவது:-

"காங்கிரசில் நிறைவேறின பண்டித நேருவின் தீர்மானமானது மிகவும் சாதுர்யமாக (ஜனங்கள் இரண்டு விதமாக எண்ணும்படி) இருக்கிறது. அதாவது, காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியாரிடம் சரணாகதி அடைந்து விட்டது என்னும் அபிப்ராயங்கொண்ட தத்துவத்தை வெளிப்படையாகச் சொல்லுவதற்குப் பதிலாக, காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சித் திட்டத்தை எடுத்துக் கொண்டு அதை நடத்த வேண்டும் என்கிற வார்த்தைகளைக் கொண்டு தந்திரமாய் தீர்மானம் அமைக்கப்பட்டு இருக்கிறது.

ஜனங்களின் ஓட்டுப் பெறுவதற்காகவே பாமர ஜனங்களை ஏமாற்றத் தக்க வண்ணம் சர்க்காரைக் கடைசி முறையாக சில திருத்தங்கள் கேட்பது அது கிடைக்காவிட்டால் வெளியே வந்து விடுவதென்றும், சட்டமறுப்பு செய்யப்படும் என்று சர்க்காரை மிரட்டுவதுமானதும் சட்டசபைக்கு வெளி யில் நிர்மாணத்திட்டம் நடத்துவது என்கிற பேச்சளவில் நிறைவேற்றக் கூடிய திட்டமும் அத்தீர்மானத்தில் கண்டிருப்பதானது ஓட்டர்களை ஏமாற்றுவதற்கு மிகவும் அநுகூலமானதுதான்." இதிலிருந்து இவ்வருட தேசியக் காங்கிரஸின் போக்கை வாசகர்கள் அறிந்து கொள்ளலாம்.

**குடி அரசு - தலையங்கம் - 03.01.1926**



tamilnavarasam.com

# பிராமணரல்லாதார் காங்கிரஸ்

சென்னை மாகாணத்தில் உள்ள பிராமணரல்லாதார் இயக்கம், தமிழ் நாட்டுப் பிராமணர்களால் சென்சார் வைத்து, வெளி மாகாணங்களுக்குப் போகாமலிருக்கும்படி தடுத்து வந்த பலத்த சூட்சிகளையும் தாண்டிக்கொண்டு இப்போது இந்தியா முழுவதுமே பரவி வருகிறது. அகில இந்தியா பிராமண ரல்லாத காங்கிரசுக்கு இது இரண்டாவது வருஷம்.

தேசீயக் காங்கிரஸ் ஆதியில் கூட்டப்பட்ட காலத்தில் அதற்கு இந்தியா முழுவதுக்குமாக 75 பேர்கள்தான் பிரதிநிதிகளாக வந்திருந்தார்கள். அது நாளுக்கு நாள் அடைய வேண்டிய வளர்ச்சியை அடைந்து மகாத்மா காலத்தில் 5000-கணக்கான பிரதிநிதிகளை அடைந்து, எவ்வளவு மேல் போக வேண்டுமோ அவ்வளவும் போய் இப்போது இறங்கு முகத்தில் இருக்கிறது.

இது இவ்விதமிருக்க, இந்தியா முழுவதுக்குமே பிராமணரல்லாதார் மகாநாடு ஆரம்பித்து இரண்டு வருஷம்தான் ஆகிறது. ஆரம்ப முதல் வருஷத்தில், ஆதி தேசீயக் காங்கிரஸ் போல் பத்துக் கணக்காய் பிரதிநிதிகள் இல்லாமல், நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் பெல்காமில் கூடினார்கள். இரண்டாம் வருஷத்தில் அம்ரோடி என்னும் அமராவதியில் 5000 பிரதிநிதிகள் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். பதினாயிரக்கணக்கான ஜனங்கள் இதில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும், நாளாக ஆக அது என்ன நிலை வந்தெய்தும் என்பது யோசனை யுள்ளவர்களுக்கு நன்றாய் விளங்கும்.

பிராமணரல்லாத இயக்கத்தின் தலைவர்களாகிய ஸ்ரீமான்கள் டாக்டர் டி.எம். நாயர், ஸர்.பி. தியாகராய செட்டியார் ஆகிய இவர்கள் காலமானதற்குப் பிறகு பிராமணரல்லாத பாமர ஜனங்களின் உண்மை நிலையைச் சரியாய் அறியாதவர்களும், அவர்களிடம் பழகாதவர்களும், பணக்காரர்களும், பெரிய மிராஸ்தாரர்களும், ராஜாக்களும், ஜமீன்தாரர்களும், உத்தியோகஸ்தர்களும் தலைமை வைத்து நடத்துவதாயிருப்பதால் பிராமணரல்லாத பாமர ஜனங்களின் முழு செல்வாக்கையும் பெற காலதாமதமாகி வருகிறது. ஆனாலும் பிராமணரல்லாதார் இயக்கம் என்று ஒரே கட்டுப்பாடான இயக்கம் இந்தியா பூராவையும் இன்னும் சரியானபடி ஒன்றாய்ச் சேர்க்கவில்லையென்று வைத்துக் கொண்டாலும், ஆங்காங்கு சிறுசிறு கிராமங்களில் கூட பிராமணாதிக்கத்தின் கஷ்டங்களையும் தந்திரங்களையும் உணர்வதும், அதிலிருந்து தப்ப தனித்தனியாய் வழி தேடுவதுமான மார்க்கங்களில் ஏதோ சிலர் தவிர, (அதுவும் பிராமணர்கள் தயவு இல்லாமல் அடியோடு பிழைக்க - முன்னுக்கு வர - தலைவராக முடியாமல் இருக்கின்ற சிலர் தவிர) மற்றெல்லோரும் ஈடுபட்டிருக்கிறார்கள். பிராமணரல்லாதார் வகுப்பில் பிறந்த மகாத்மாவைப் போல் பார்ப்பனரல்லாதாரான ஓர் உத்தமர் இவ்வியக்கத்தைத் தலைமை வகித்து நடத்துவார்களேயானால், மூன்று வருடங்களுக்கு மேல் இவ்வியக்கமே தேவையில்லாத அளவு முன்னேற்றமடையும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. இந்த பார்ப்பனரல்லாத காங்கிரஸ், இனி வருஷா வருஷம் ஒவ்வொரு பெரிய பட்டணங்களில் கூடிக்கொண்டுதான் வரும். அப்படிக் கூடுவதில் தேசீயக் காங்கிரஸ் கூட்டுமிடங்களில், இதைக் கூட்டுவது நன்மை தரத்தக்கதல்ல என்பது நமது அபிப்ராயம். ஏனெனில் தேசீய காங்கிரஸ் கூடுமிடங்களில் பார்ப்பனரல்லாதார் காங்கிரஸ் கூடுவதாயிருந்தால் பிராமணரல்லாத ஜனங்கள் ஆடம்பரமாயிருக்கும் விஷயத்திற்கு மனம் செலுத்துவார்களேயல்லாமல் முக்கியமான விஷயங்களைச் சரிவரக் கவனிக்க மாட்டார்கள். உதாரணமாக, கதரின் மேன்மையை எடுத்துச் சொல்லவும் குடியின் கேட்டை ஒழிக்கவும் பாமர ஜனங்கள் உள்ள ஒரு இடத்தில் ஒரு கூட்டம் கூட்டி அதற்குப் பக்கத்தில், கழைக் கூத்தனான ஒரு தொம்பனையும் மத்தளம் தட்டி ஆ! ஆ!! என்று சொல்லிக் கொண்டிருக்கச் செய்தால் பாமர ஜனங்கள் கழைக்கூத்தைப் பார்க்கத்தான் போவார்களேயல்லாமல், கதரின் மேன்மையையும், குடியின் தீமையையும் கேட்க வரமாட்டார்கள். அதுபோலவே, தேசீயக் காங்கிரஸிற்குப் பணம் இருக்கிறது; தாராளமாய் பணம் செலவு செய்யும் தலைவர்கள் என்று சொல்லப்படுவோர் வருவார்கள்; நல்ல பேச்சுக்காரர் வருவார்கள் என்று நினைத்து வேஷம் பார்ப்பதிலேயே, பாமர ஜனங்களின் கவனம் இழுக்கப்பட்டுப் போகும். ஆதலால், பார்ப்பனரல்லாதார் மகாநாட்டை தேசீயக் காங்கிரஸ் கூடாத இடத்தில்தான் கூட்ட வேண்டும். தேசீயக் காங்கிரஸ் தீர்மா னங்களைப் போல் சட்டசபைக்குப் போகத் தகுந்த மாதிரியும் உத்தியோகம் பெறத்தகுந்த மாதிரியுமான தீர்மானங்களை மாத்திரம் போட்டுக் கொள்ளாமல், மகாத்மா காங்கிரஸ் தீர்மானங்களைப்போல் தேசத்திற்கும் அநுகூலமுள்ளதாகவும், கிராமம் கிராமமாய்ப் போய் பிரசாரம் செய்து கிராமவாசிகளுக்கு நன்மை பயக்கக் கூடியதான தீர்மானங்களையே செய்ய வேண்டும். செய்தபடி நடக்கவும் வேண்டும்.

தியாகம் செய்வதற்கும், கஷ்டப்படுவதற்கும், துணிந்தவர்களே முன் வந்து வேலை செய்ய வேண்டும். காலரும், டையும், பூட்ஸும், சராயும், ஆங்கில தொப்பியுமுள்ளவர்கள் பிராமணரல்லாதார் நன்மையைப் பற்றி பேசினாலாவது, தலைமை வகித்து நடத்தினாலாவது, அதோடு ஒரு பயனும் விளையாது, அரசாங்கத்தார் தயவிருந்தால்தான் பிராமணரல்லாதார் முற்போக்கடைய முடியும் என்ற எண்ணத்தை அடியோடு ஒழிக்க வேண்டும். அரசாங்கத்தார் தயவில்லாமலே முன்னுக்கு வரக்கூடிய நிலைமையை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட சுயநல எண்ணமில்லாமல், பிராமணரல்லாதார் கட்டுப்பாடாய் உழைப்பதாயிருந்தால், மகாத்மாவின்



RangaRakes tamilnavarasam.com

ஒத்துழையாமை தத்துவத்தாலும், நிர்மாணத் திட்டத்தாலுமே முன்னுக்கு வரலாம். அந்த நிலைமையில் ஏற்படுத்தப்படும் முன்னேற்றம்தான் நிலைத்து நிற்கக் கூடியது. அப்படிக்கில்லாத முன்னேற்றம் நிலையானதல்ல என்பதை பிராமணரல்லாதார்கள் உணர வேண்டும்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 03.01.1926**


குடி அரசு.

"தேசோபகாரி"

"தேசபக்தன்"

உண்மையான கதர்.
கெட்டியான கதர்.



RangaRakes tamilnavarasam.com

# கோவை ஜில்லா செங்குந்தர் மகாநாடு

நமது நாட்டில் செங்குந்தர் குலமானது தக்க பெருமையுடனும், செல்வாக்குடனும் இருந்து வருகிறது. ஆனாலும், அதில் பெண்களை கோவில்களின் பேரால் பொட்டுக்கட்டி தாசி வேசித் தொழில் செய்ய அநுமதிப்பதால் அக்குலத்திற்கு ஒரு இழிவு இருக்கிறது என்பது மறைக்க முடியாத காரியமானாலும், இச்சங்கம் ஏற்பட்ட சென்ற 10 வருஷங்களுக் குள்ளாக எவ்வளவோ சீர்திருத்தமடைந்துவிட்டது. இவ்வளவு தூரம் முன் னேற்றமடையும்படியான காரியம் வேறு எந்த குல சங்கமும் செய்யவே யில்லை. இக்குல முன்னேற்றத்திற்கு இச்சங்கத்தின் மூலமாய் பல குலாபி மானிகள் உண்மையில் பாடுபட்டதனால்தான் இந்த யோக்கியதைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனாலும் இது மாத்திரம் போதாது. இக் குலத்தின் சில ஆண்களிடமும் உள்ள சில குறைவுகளையும் சீர்திருத்தம் செய்ய வேண்டும். அதாவது, நமது நாட்டில் இக் குலத்தாரில் சிலர் மேளம் வாசிக்கும் தொழிலை ஜீவனமாய்க் கொண்டிருப்பதால் ஒரு குறைவான பெயர் இருந்து வருகிறது. இத் தொழில் காரணமாகவே ஆண்கள் சுயமரியா தையைக் கவனிக்காமல் தங்களுக்குள்ளாகவே சிலர் தங்களைத் தாழ்ந்த வர்களாகக் கருதிக் கொண்டு மிகவும் ஒடுங்கியும் பதுங்கியும் நடந்து கொள்கிறார்கள் என்றும், மணி ஒன்றுக்கு 100 ரூ. பெறக்கூடிய நாகசுர வித்து வானும் சபைகளில் சங்கீத ஞானமே இல்லாத ஒரு தற்குறியைக் கண்டாலும் அனுமார் போல் ஒடுங்குவதும் கும்பிடுவதும் தனது குலதர்மம் என்று எண்ணுகிறார் என்றும், தேவக் கோட்டையில் ஒரு ஊர்வலத்தில் 350 ரூ. பேசி நாகசுரம் வாசிக்க வந்த ஒரு நாகசுரக்காரர் வேர்வையைத் துடைக்க தனது தோளின் மேல் ஒரு சிறு துணியை போட்டுக்கொண்டு வாசித்ததில், அந்த மேல் துணியை எடுக்காமல் வாசிக்கக் கூடாது என்று அவ்வூரில் சிலர் சொன் னார்கள் என்றும், சங்கீதம் கேழ்க்க 350 ரூபாயும் 2-வது வகுப்பு படியும் கொடுத்த ஒரு வித்துவானை தோளில் துண்டு போட்டுக்கொண்டுகூட வாசிக்கக் கூடாது என்று சொல்லும்போது நமது பிரபுக்கள் சங்கீதத்தை எவ்வ ளவு மதிக்கிறார்கள் என்பது தெரிகிறதென்றும், ஆதலால் அத்தொழிலை விட்டுவிட வேண்டுமென்றும், சங்கீதத்திற்கு யோக்கியதை வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்றும், நமது ஜனங்களுக்கு இன்னமும் பகுத்தறிவு கிடையாது என்றும், உதாரணமாக ஒரு பிராமணன் ஒத்து ஊதினாலும், ஒரு தாசிக்கு பின்னின்று கொண்டு ஆர்மோனியம் மீட்டினாலும், நட்டுவாங்கம் செய்தாலும், அத்தாசிக்கு ஒரு நாயகனைப் பிடித்து கொடுப்பதற்கு தூது



நடந்தாலும் அவனைப் பார்த்து சுவாமி என்றுதான் கூப்பிடுகிறார்கள். தூதுக் கடிதம் வாங்கும் போதே எழுந்து நின்றுதான் வாங்குகிறார்கள் என்றும், ஆதலால் இவ்வறியாமை நிலைமையிலுள்ள ஜனங்கள் முன்னிலையில் வித்துவானாயிருந்து மேளக்காரன் என்கிற பெயர் வாங்குவதைவிட வீதியில் கல் உடைத்தோ, தெருக் கூட்டியோ முதலி யாராய் வாழ்வது மேலென்றும், அல்லாமலும் சுபாவத்திலேயே நமக்கு ஆண்மைத்தனம் வேண்டுமென்றும், அனாவசியமாய் நாம் தாழ்ந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டு ஒருவரைக் கும்பிடக் கூடாது என்றும், பிராமணர்கள் முதலியவர்கள் நமக்கு மேலான ஜாதி என்று எண்ணுவதே பெரிய நரகமென்றும், பிராமணனுக்குப் பணம் கொடுப்பதால் நமது பாவம் போய்விடு மென்பதும், பிராமணனுக்குப் பணம் கொடுப்பதால் தமது பெற்றோர்கள் மோக்ஷத்திற்குப் போவார்களென்பதும் அவர்கள் படுக்கை விரித்தால்தான் நல்ல சந்தானம் உண்டாகுமென்பதுமாகிய எண்ணங்கள்தான் நமது சுயமரியாதையைக் கெடுத்து விடுகிறதென்றும், அதோடு நமக்குத் தாழ்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்று எண்ணுவதே அடிமை மனப்பான்மைக்கு அஸ்திவாரம் என்றும், நமக்குக் கீழ் ஒருவரில்லை என்று உண்மையாய் நினைப்போமானால் நமக்கு மேலாக ஒருவன் இருக் கவே மாட்டான் என்றும், நாம் அவற்றைக் கவனியாமல் நமக்கு உதவி செய்பவர்களையும், பல வழிகளிலும் நன்மை செய்கிறவர்களையும், நம்மை பரிசுத்தமான காற்றை சுவாசிக்கும்படி செய்பவர்களையும், சாதுக்களையும் நமக்குக் கீழானவர்கள் என்று எண்ணின குற்றத்தின் கரும பலன் தத்துவத்தில் நம்மைவிட ஒரு விதத்திலும் மேலான யோக்கியரல்லாதவர்களும், கீழ் மக்க ளும் நமது இரத்தத்தை உறிஞ்சியே ஜீவனம் செய்ய வேண்டியவர்களும், நமக்கு மேலான ஜாதியாரென்றும் அவர்களை வணங்க வேண்டியது நமது மோக்ஷ சாதனமென்றும் நினைக்கும்படி செய்து விட்டது. இக்குறைகள் நீங்கின நிலைதான் சமத்துவமென்பதும், சமூக முன்னேற்றமென்பதும் என்பதாக நான் நினைக்கிறேன்.

*குறிப்பு : 27, 28.12.1925 இருநாள் அவிநாசியில் நடைபெற்ற கோவை மாவட்ட செங்குந்தர் மாநாட்டில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 10.01.1926**



RangaRakes tamilnavarasam.com

# தமிழ் மாகாண கோ-வம்சத்தினரின்

## ( கோவில் பண்டாரங்கள் )

## இரண்டாவது மகாநாடு

நாளது தை மீ 11, 12 (1926 ஜனவரி 24,25) தேதி ஞாயிறு திங்கள்கிழமைகளில் கொடுமுடி மகுடேஸ்வர சுவாமி கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள சத்திரத்தில் காரமடை ஸ்ரீமான் N.கருப்பண்ண பண்டாரம் அவர்கள் தலைமையின் கீழ் தமிழ் மாகாண கோ - வம்சத்தினரின் 2-வது மகாநாடு நடைபெறும்:-

அதே சந்தர்ப்பங்களில் ஸ்ரீமதி லக்ஷிமி அம்மாள் அக்ராசனத்தின் கீழ் ஸ்ரீகள் மகாநாடும், ஸ்ரீ கணபதி அக்ராசனத்தின் கீழ் மாணவர்கள் மகாநாடும் நடைபெறும். பலவிடங்களிலிருந்தும் அநேக பிரபலஸ்தர்கள் விஜயம் செய்வதாய் வாக்களித்திருக்கிறார் கள். ஆதலால் எல்லா குலாபிமானி களும் இதர சமூக கனவான்களும் அவசியம் விஜயம் செய்ய வேண்டுமாய் வேண்டப்படுகிறார்கள்:-

**- கொடுமுடி வரவேற்புக் கமிட்டியார்.**

**நமது குறிப்பு: -**

நமது தாலூக்காவில் உள்ள சைவப் பண்டாரங்களின் முக்கிய கூட்டமிதுவாகையால், இத்தாலூக்கா வேளாள சமூகத்தார் அனைவரும் விஜயம் செய்து அவர்கள் முன்னேற்றத்துக்கான காரியங்களை அறிவுறுத்தி அச்சமூகம் முன்னேற்றமடைய உதவி செய்ய வேண்டியது முக்கியமான கடமை. ஏனெனில், அவர்கள்தான் பெரும்பாலும் நமது கிராம தேவதைகள் முதலிய கோவில்களில் பூஜை செய்பவர்களாகவும் தவசிப்பிள்ளைகளாகவும் புஷ்பம் தொடுப்பவர்களாகவுமிருப்பதால் அவசியம் அவர்கள் முன்னேற்றத்தையும் ஒழுக்க வழக்கங்களையும் சீர்திருத்தம் செய்ய வேண்டியது குடிமக்கள் கடமையாகும்.

**( பத்திராதிபர் )**

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 10.01.1926**



# ஸ்ரீமான் R. வீரய்யன் கிராமப் பஞ்சாயத்து சட்டத்திற்கு திருத்தம்

தீண்டாதார் வகுப்புப் பிரதிநிதியாய் சர்க்காரால் நியமிக்கப்பட்ட சட்ட சபை மெம்பரான ஸ்ரீமான் ஆர்.வீரய்யன் அவர்கள் சென்னை கிராமப் பஞ் சாயத்து சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வரப் போவதாக சட்டசபைக்கு ஒரு முன்னறிக்கை அனுப்பியிருக்கிறார். அதாவது, அச்சட்டத்தின் ஒரு பாகத்தில் கிராமப் பஞ்சாயத்து மெம்பர்கள் ஸ்தானத்திற்கு தாழ்த்தப்பட்ட வகுப்பாரிலிருந்து சில பிரதிநிதிகளை சர்க்கார் நியமிக்க வேண்டும் என்கிற வாக்கியத்தைச் சேர்த்துக் கொள்ளும்படி அதில் எழுதியிருக்கிறார்.

அதற்கு அவர் காரணம் சொல்லுகையில் தேர்தல்கள் மூலமாக தீண்டா தார் என்போர்கள் ஸ்தானம் பெற முடியாமலிருக்கிறபடியால் முனிசிபாலிட்டி, ஜில்லா, தாலூகா போர்டுகள் போல் கிராமப் பஞ்சாயத்து சபைக்கும் தீண்டாதா ருக்கும் சர்க்கார் நியமனம் கிடைத்தால் அல்லாமல் ஸ்தானம் பெற முடியா தாதலால் சட்டத்தில் இவ்வித திருத்தம் இருக்க வேண்டியது உடன் அவசிய மாகிறது என்று எழுதுகிறார்.

**நமது குறிப்பு:-**

இவற்றை நாம் முழு மனதுடன் ஆதரிக்கிறோம். புருஷன் பெண் ஜாதியாய் வாழுகின்றவர்களே புருஷன் சரியானபடி பெண் ஜாதியை ஆதரிக்காவிட்டால் சர்க்காருக்கு போவதையும், தகப்பன் பிள்ளை சர்க்காருக்கு போவதையும், அண்ணன் தம்பி சர்க்காருக்கு போவதையும் நாம் தினம் அனுபவத்தில் பார்க்கிறோம்.

அதற்காக வேண்டித்தான் , மனிதர்களுக்கு சர்க்கார் என்பது கடவுளால் அளிக்கப்பட்டிருக்கிறது. நமது துர்அதிர்ஷ்டவசமாய் தற்காலம் நமக்கு இருக்கும் சர்க்கார் நமது நன்மைகளைவிட தங்கள் நன்மையே பிரதானமாகக் கருதுகிற ஒரு வியாபாரக் கூட்டத்தாராய் போய்விட்டபடியால், தொட்டதற்கெல்லாம் இம்மாதிரி சர்க்காரிடம் போகலாமா என்கிற ஒரு ஞானம் சிற்சில சமயங்களில் தோன்றுகிறது. ஆனாலும் மகாத்மாவே இனி கொஞ்ச காலத்திற்கு தம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று அலுத்துப்போன பிறகு



RangaRakes
tamilnavarasam.com

தற்கால நிலைமையில் ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும், பிற்பட்டவர் களுக்கும், பலக் குறைவுள்ளவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் சர்க்கார் தவிர வேறு கதி என்ன இருக்கிறது? ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் போன்றவர்களுக்கு தற்சமயம் சர்க்கார் தயவு வேண்டியதில்லை. ஏனென்றால் கொஞ்ச நாளைக்கு முன்பாக சர்க்காருக்கு அனுகூலமாய் இருந்து, மகாத்மா காந்தியைக் கூட ஜெயிலுக்கு பிடிக்கும்படி யோசனை சொல்லி, சர்க்கார் தயவு பெற்று உயர் பதவியும், உத்தியோகமும், பணமும், ஆள்களும் நிறைய சம்பாதித்துக் கொண்டாய் விட்டது. தங்கள் பதவி குறையாமல் இருப்பதற்கு அநுகூலமாய், தீண்டாதார் முன்னேற்றமடைய கேள்க்கும் வகுப்புவாரி உரிமையை எதிர்க்க ஸ்ரீமான் ஜயவேலு போன்றவர்களையும், கிருஸ்தவர்கள் வகுப்பு வாரி உரிமைக் கேட்பதை எதிர்க்க ஸ்ரீமான் குழந்தை போன்றவர் களையும், மகமதியர் வகுப்புவாரி உரிமைகள் கேட்பதை எதிர்க்க ஜனாப்கள் ஷாபி மகமது, அமீத்கான் போன்றவர்களையும், பிராமணரல்லாத இந்துக்கள் வகுப்புவாரி உரிமைக் கேட்பதை எதிர்க்க ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்தர முதலியார் போன்றவர்களையும் அடைந்திருப்பதால் அவருக்குக் கவலை யில்லை. ஆனாலும், இந்நான்கு வகுப்பார்கள் தங்கள் தங்கள் வகுப்புக் கென்று கூட்டும் வகுப்பு மகாநாடுகளில் தங்கள் சுதந்திரங்களைக் காக்க சர்க்கார் தயவைத்தான் நாடுகிறார்கள்.

தீண்டாதார் வகுப்பு மகாநாட்டிலும், மகமதியர்கள் மகாநாட்டிலும், மற்றும் பிராமணரல்லாதார் மகாநாட்டிலும் உரிமை தனித் தேர்தல் மூலமானா லும், ஒதுக்கி வைப்பதன் மூலமானாலும் பெறவேண்டுமென்று கேட்பதெல் லாம் சர்க்காரிடம்தானே ஒழிய வேறு ஒருவரையுமல்ல. வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் வேண்டும், வேண்டாம் என்பதும் அந்தந்த வகுப்பு மகாநாடு களுக்குத்தான் பாத்தியப்பட்டதே தவிர, ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரால் சுவாதீனப்படுத்திக்கொண்ட தனிப்பட்ட ஒரு சிலர்களுக்கு அல்ல. ஆதலால், ஸ்ரீமான் வீரய்யன் கேட்கும் உரிமை மிகவும் நியாயமானதென்றும், அதுதான் அவ்வகுப்பாரின் அபிப்ராயமே தவிர காங்கிரஸிலிருக்கும் ஸ்ரீமான் ஜய வேலு போன்றவர்கள் அபிப்ராயம் அவ்வகுப்பார் உடையது அல்லவென் றும், ஆதலால் சட்டசபையில் இருக்கும் பிராமணரல்லாதார் யாவரும் இதை ஆதரித்து அவ் வகுப்புக்குண்டான நியாயமான உரிமையை அளிக்க தாங் கள் தயாராயிருப்பதாகவும் தெரிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளு கிறோம். இம்மாதிரி நாம் ஒவ்வொரு வகுப்பாரின் உரிமைகளையும் அவர் களுக்கு அளித்து எல்லோரும் சமம் என்கிற தத்துவத்தை முதலில் நிலை நிறுத்தி விட்டோமானால், நமது சர்க்கார் கூட தமது வியாபாரத் தந்திரத்தை விட்டு விட்டு யோக்கியமாய் நடந்து கொண்டாலொழிய இந்தியாவில் வாழ முடியாது என்று நினைக்கும்படியான நிலைமையை ஏற்படுத்தி விடலாம்.

(ப - ர்)

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 10.01.1926**



# கான்பூர் தேசீய காங்கிரஸ் தீர்மானம்

கான்பூர் காங்கிரஸ் தீர்மானத்தைப் பற்றி தேசீயப் பத்திரிகைகளென்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் பத்திரிகைகளெல்லாம் "கங்காதரா மாண்டாயோ! கங்காதரா மாண்டாயோ!" என்கின்ற கதைபோல் ஒரே மூச்சாக கொஞ்சமும் விசாரிக்காமலும் யோசனையின்றியும் "நல்ல தீர்மானம்! நல்ல தீர்மானம்!" என்றே எழுதிக்கொண்டு வருகின்றன. பொது ஜனங்களும் இவற்றைப் பற்றி சரிவரச் சிந்திக்காமல் பத்திரிகைகளை நம்பியே ஏமாந்து போகிறார்கள். காங்கிரஸ் தீர்மானத்தின் முக்கிய தத்துவங்களெல்லாம் இரண்டு, மூன்று விஷயங்களிலேயே அடங்கிப்போயிருக்கிறது. அதாவது, சட்டசபைகளைக் காங்கிரஸ் கைப்பற்ற வேண்டியது; அதற்காகக் காங்கிரஸ் பணத்தை உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டியது. சட்ட மறுப்புத்தான் நல்ல ஆய்தம்; ஆனால், தேசம் அதற்கு லாயக்கில்லை. நிர்மாணத் திட்டத்தைப் பொது ஜனங்களையே நிறைவேற்றி வைக்கச் சொல்லிவிட வேண்டியது. சர்க்காரை இறுதியாகச் சில விஷயங்களைக் கேட்பது, அவர்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால் சட்டசபைகளை விட்டு விலகிவிடுவதுமான விஷயங்கள் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

சட்டசபை செல்லும் நோக்கத்துடன் ஸ்ரீமான் தாஸ் தலைமையாக யிருந்து, காங்கிரஸுக்கு விரோதமான பிரசாரம் செய்து வரும் காலத்திலேயே சட்டசபை பிரவேசம் தேசீய விடுதலையை அளிக்காது, தேசீய ஒற்றுமை யைக் குலைக்கும் என்பதாக நாம் ஆட்சேபித்த காலத்தில் பல காரணங்கள் சொன்னோம். அதாவது, பல காரணங்களால் சட்டசபையில் நமக்கு யோக்கிய மான மெஜாரிட்டி கிடைக்காதென்றும், ஒரு சமயம் கிடைத்த போதிலும், அதனால் தேசத்திற்கு பிரயோஜனத்தை அளிக்கக்கூடிய மாதிரியில் ஒரு வேலையும் செய்து கொள்ள முடியாதென்றும் சொல்லிவந்தோம். சென்ற தேர் தலில் சுயராஜ்யக் கக்ஷியார் சட்டசபைக்கு நின்றார்கள்; சில ஸ்தானங்க ளையும் கைப்பற்றினார்கள்; சிற்சில மாகாணங்களில் "மெஜாரிட்டி" அடைந் தார்கள்; தங்களுடைய தீர்மானங்களையும் நிறைவேற்றினார்கள். இதன் மூலம் நாட்டிற்கு என்ன பலன் உண்டாயிற்று? அலக்ஷியம் செய்யப்பட்டுக் கிடந்த பதவிகளில் மோகம் உண்டாகவும், ஒருவருக்கொருவர் அவநம்பிக்கை உண்டாகவும்,சர்க்காராரையே பயந்து நடுங்கும்படியாய்ச் செய்த ஒத்துழை யாமைத் தத்துவம் ஒடுங்கவும், மகாத்மா காந்தியும் மற்றும் பல தீவிர தேசத்



RangaRakes tamilnavarasam.com

தொண்டர்களும், காங்கிரசில் ஒரு வேலையும் செய்ய முடியாமல் காங்கிரசை விட்டு விலகியிருக்க வேண்டியதுமான நிலைமையுமேயல்லாமல் வேறென்ன செய்ய முடிந்தது?

சட்டசபையில் ஒத்துழையாமை செய்வதென்றும், முட்டுக்கட்டை போடுவதென்றும் சொல்லிப்போன சுயராஜ்யக் கட்சியார் மிதவாதிகளோடு சேர்ந்துக் கொண்டு சர்க்காரை சீர்திருத்தம் கேட்கவும் அதைப்பற்றி விசாரிப்ப தற்காக ஒரு கூட்டத்தையும், ஒரு கமிஷனையும் நியமிக்கும்படி சர்க்காரைக் கேட்கவும், சர்க்காரின் ராஜீய பாரத்திற்கு அநுகூலமாக அவர்களுக்கு யோசனை சொல்வதற்கு அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கமிட்டிகளில் அங்கம் பெறவும், இந்திய சட்டசபையை ஒழுங்காய் நடத்திக் கொடுப்பதற்காக சர்க்காரால் சம்பளம் கொடுக்கப்பட்ட உத்தியோகமாகிய அக்ராசனாதிபதி பதவிகளை ஏற்றுக்கொண்டு சர்க்கார் சட்டசபையை ஒழுங்காய் நடத்திக் கொடுக்கவும் மாத்திரம் முடிந்ததேயல்லாமல் வேறு என்ன காரியம் செய்ய முடிந்தது? மாகாண சட்டசபைகளிலும் கல்கத்தா, மத்திய மாகாணம் ஆகிய இரண்டிடங்களில் மெஜாரிட்டியும் பெற்றார்கள். மந்திரிகள் சம்பளத்தை நிராகரித்தார்கள்; குறைத்தார்கள்; மந்திரிகளும் எடுபட்டார்கள், தங்களுக்கு அநுகூலமான பல தீர்மானங்களையும் செய்தார்கள். இவ்வளவும் செய்து என்ன பயன்? ஒரு மயிர்க் காலளவு சர்க்காரின் அக்கிரமமான ஆதிக்கத்தை அசைக்க முடிந்ததா? வங்காளத்தில் நிராகரித்த சம்பளத்தை சுயராஜ்யக் கட்சியார் தாங்களே மறுபடியும் அநுமதிக்க நேர்ந்தது. மத்திய மாகாணத்தில் குறைக்கப்பட்ட மந்திரிகளின் சம்பளத்தை மறுபடியும் சுயராஜ்யக் கட்சியாராலேயே உயர்த்த நேர்ந்தது. மற்ற மாகாணங்களைப் பற்றியோ வென்றால் பிராமணர்-பிராமணரல்லாதார் சண்டையும் இந்து - முஸ்லீம் சண்டையும் பலப்பட்டது. ஓர் காலத்தில் கதர் மயமாயிருந்த மகமதியர்கள் இன்றையதினம் கதரென்றால், அது ஓர் மத விரோதமான சின்னமென்று கருதுகிறார்கள். காங்கிரஸ் தங்கள் நன்மைக்கு மிகவும் ஆதாரமானதென்று நினைத்த பிராமணரல்லாதார் இன்றையத்தினம் காங்கிரஸ், பிராமணர் ஆதிக்கங்களுக்கு அநுகூலமானதென்று, பெரும்பான்மையான பிராமணரல்லாதார் நினைக்கிறார்கள். மங்கிப் புகைந்துக் கொண்டிருந்த ஜஸ்டிஸ் கட்சி துலக்கம் செய்யப்பட்டு இந்தியா முழுமையுமே பற்றிக் கொண்டது. ஒத்துழையாமையின் பொருட்டு உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்யத் தயாராயிருந்த தொண்டர்களில் பெரும்பாலோர், இன்றைய தினம் வயிற்றுக் கொடுமைக்காக தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக கூலிக்கு எலெக்ஷன் வேலை செய்ய நேர்ந்து விட்டது. இவ்வளவு காரியங்களைச் சட்டசபைப் பிரவேஷத்தின் மூலமாக நன்றாய் அறிந்துவிட்டு, மறுபடியும் சட்டசபைக்குக் காங்கிரஸ்காரர்கள் போக வேண்டும் என்றும், காங்கிரஸ் பணம் அதற்காக செலவு பண்ணவேண்டும் என்றும், காங்கிரஸ் ஸ்தாபனங்கள் அதற்கு உதவி செய்ய வேண்டுமென்றும் காங்கிரஸ் தீர்மானிக்குமானால் தேசத்திலுள்ளவர்களுக்குக் காங்கிரஸினிடம் எப்படி மதிப்பு வரும்? இதே மாதிரி அடுத்த



வருடமும் தேர்தல்களில் சட்டசபைக்கு நின்று ஸ்தானங்கள் பெற்று, இன்னும் கொஞ்சம் அதிகமாகவே ஜெயம் பெறுவதாகவே வைத்துக் கொண்டாலும், சட்டசபைகளில் இதை விட வேறு வேலை என்ன செய்யக்கூடும்? இந்த வேலையையே திரும்பத் திரும்பச் செய்துக்கொண்டு வருவதில் தேசத்துக்கு என்ன பலன் விளையும்? நிர்மாணத் திட்டத்தைப் பற்றிக் கொஞ்சங்கூட கவலையில்லாத மாதிரியில் காங்கிரஸ் ஓர் தீர்மானம் செய்திருக்கிறது. அதாவது, நிர்மாணத் திட்டத்தை ஜனங்களே நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று தீர்மானித்து இருக்கிறது. ஜனங்கள் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கு காங்கிரஸ் எதற்காக யிருக்க வேண்டும்? காங்கிரஸ் பணமெல்லாம் சட்டசபை தேர்தலுக்கு செலவழிக்கப்பட வேண்டும்; காங்கிரஸ்காரர்கள் இவ்வருஷம் பூராவும் எலெக்ஷன் வேலையாய் இருக்க வேண்டும்; நிர்மாணத் திட்டங்களை ஜனங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானிப்பதில் எவ்வளவு மோசமிருக்கிறதென்பதைப் பொது ஜனங்கள் நன்றாய் அறிய வேண்டும். காங்கிரஸ் பிரசாரமில்லாமலும், காங்கிரஸ் தொண்டர்களின் கட்டுப்பாடான வேலையில்லாமலும் நிர்மாணத் திட்டம் எப்படி நிறைவேறும்? கதர் வேலை ஒன்று மாத்திரம் மகாத்மா காந்தி ஏற்றுக்கொண்டார். மற்றபடி மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு, பல வகுப்பு ஒற்றுமை முதலிய காரியங்கள் தேசத்தில் ஏற்படாமல் சுயராஜ்யம் எப்படி ஏற்படும்? இவைகளை எல்லாம் புறக்கணித்துவிட்டு சட்டசபைக்குப் போவதை மாத்திரம் காங்கிரஸின் நேரான வேலையாய் வைத்துக் கொள்ளுவதினால் படித்தவர்களுக்குச் சில வேலையும், பதவியும், சம்பளமும் கிடைக்குமேயல்லாமல் ஏழை ஜனங்களுக்கு - பொது ஜனங்களுக்கு - தொழிலாளருக்கு என்ன பலன் உண்டாகும்? ஆனதால் தேச நன்மைக்கு இம்மாதிரி காங்கிரஸை எதிர்பார்ப்பது போல் பயித்தியக்காரத்தனமான காரியம் வேறொன்றுமில்லை என்பதே நமது அபிப்பிராயம்.

இனி காங்கிரஸின் யோக்கியதை பழய காலப்படி, உத்தியோகங்களை உற்பத்தி பண்ணவும், கோர்ட்டுகளை உற்பத்தி பண்ணவும், அதற்கேற்ற படிப்பான பள்ளிக்கூடங்களை உற்பத்தி பண்ணவும் ஆன காரியத்தைச் செய்யக் கூடியதாயும், காங்கிரஸ்காரர்கள் இதற்காக சட்டசபை முதலிய தேர்தலில் ஜெயம் பெற வேண்டியதாயும் இருக்குமேயல்லாமல் வேறொரு காரியத்திற்கும் உபயோகப்பட முடியாது. இக்காரியங்களால் குடியானவர்களுக்கு இனியும் வரி அதிகமாக உயரப் போகிறது. தொழிலாளிகளுக்கு இனியும் வேலையற்று தரித்திரம் அதிகமாகப் போகிறது. கோர்ட்டுகளுக்கும், வக்கீல்களுக்கும் வேலை ஏற்படுவதற்காக வேண்டி மதுபானத்தை அதிகப்படுத்த வேண்டியதாய்ப் போகிறது. பிராமணர்கள் தங்களுடைய செல்வாக்கினாலும், சர்க்காருக்கு இரகசியமாய் நன்மை செய்வதன் மூலமாகவும் தங்களுடைய ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொள்ள வழி ஏற்படப் போகிறது. இதன் பலனாய் தீண்டாமையும், பிறவியில் உயர்வு தாழ்வும் நிலைத்து நிற்கப் போகிறது. இம்மாதிரியான பலன்களை தரத்தக்கதான காங்கிரஸ் தீர்மானங்களை



RangaRakes tamilnavarasam.com

நல்ல தீர்மானம் என்று சொல்லிக்கொண்டு பத்திரிகைகளால் பிழைக்க வேண்டியவர்களும் ராஜீய விஷயங்களின் பேரால் பிழைக்க வேண்டிய வர்களும் பாமர ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். இந்நிலையுள்ள காங்கிரஸி னாலும் அதன் தற்கால தீர்மானங்களினாலும் இந்தியாவிற்கு எந்த வழியி லேயும் உண்மையான சுயராஜ்யம் கிடைக்காது என்பதே நமது முடிவான அபிப்பிராயம்.

உத்தியோக ஆசையுள்ளவர்கள் போக, காங்கிரஸ் பெயரால் பிழைக்க வேண்டியவர்கள் போக, மற்றவர்கள் தங்கள் சமூக நன்மைக்கும், தேச நன்மைக்கும், நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், இம்மாதிரி காங்கிரஸையே நம்பியிராமல் நூற்போர் சங்கம் போல வேறு பல ஸ்தாபனங் களை ஏற்பாடு செய்துகொண்டு அதன் மூலமாக உழைக்கவும் சட்டசபை யின் மூலம் இவற்றிற்கு ஏதாவது கொஞ்சம் நஞ்சம் அநுகூலம் தேடிக் கொள்ளலாம் என்கிற மனசாக்ஷியுள்ளவர்கள் அந்தந்த ஸ்தாபனங்கள் மூல மாகவே சட்டசபைக்குச் செல்வதுமான காரியங்களைச் செய்வதும்தான் தேச முன்னேற்றத்துக்கான காரியமென்பது நமது அபிப்ராயம்.

மகாத்மா காந்தி அவர்களும் கொஞ்ச காலம் பொறுத்தாவது காங்கிர ஸைத் தமது வழிக்கு அதாவது, தேசத்திற்கு உண்மையான சுயராஜ்யம் சம்பாதித்துக் கொடுப்பதற்கான வழிக்கு மறுபடியும் கொண்டுவரக் கூடு மென்று நினைப்பதும், அதுவரையில் மேற்கண்ட காரியங்களை அடியோடு விட்டு விடாமல் தனி இயக்கப் பொறுப்பிலாவது செய்துகொண்டு வர வேண்டும் என்பதும் நமது அபிப்ராயத்துக்கு ஆதரவளிப்பதெனக் கருதுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 10.01.1926**



# சீப்பை எடுத்து ஒளித்து வைத்துக் கொண்டதினாலேயே கலியாணம் நின்று போகுமா?

நமது 'குடி அரசு' பத்திரிகைக்கு விரோதமாக சில பிராமணர்களும், பிராமணரல்லாத சில வாரப் பத்திராதிபர்களும், வயிற்றுக்கில்லாமல் கஷ்டப் படும் சில காங்கிரஸ் தொண்டர்களென்போருக்குப் பணம் கொடுத்தும், தங்களுடைய வாரப் பத்திரிகைகளை இலவசமாக அனுப்பிக் கொடுத்தும், ஆட்களை ஏவிவிட்டு நாம் ஜஸ்டிஸ் கக்ஷியாரிடம் பணம் வாங்கிக் கொண்டு பத்திரிகை நடத்துவதாகவும் ஜெயிலுக்குப் பயந்து கொண்டும் பதவிகளுக் காசைப்பட்டும் சர்க்காருக்கனுகூலமாய்த் திரும்பி விட்டதாகவும், இன்னும் பல இழிவான காரணங்களையும் சொல்லி அதனால் "குடி அரசை" வாங்கி வாசிக்கக் கூடாதென்றும் ஆங்காங்கு திண்ணைப் பிரசாரங்கள் நடத்தி வருவ தாய் அடிக்கடி நமக்குத் தகவல்கள் எட்டிக்கொண்டே வருகின்றன. இவற் றைப் பற்றி நமது உப பத்திராதிபர் இரண்டொரு இடங்களில் நேரிலும் பார்த் திருக்கிறார். "குடிஅரசு"க்கும் அதன் பத்திராதிபருக்கும் செல்வாக்கு குறைத்தும் போவதினாலேயே பிராமணரல்லாதாருடைய முன்னேற்றத்தை அடக்கி விடலாமென்று நினைப்பது "சீப்பை எடுத்து ஒளித்து வைத்துக் கொண்டால் கலியாணத்தையே நிறுத்திவிடலாம்" என்று நினைக்கிற அறி வீனத்தைப் போறதான் முடியும். இவ்வித விஷமப் பிரசாரகர்கள் இரண் டொரு பத்திரிக்கையை திருப்பி அநுப்பிவிடச் செய்தபோதிலும், பத்திரிகை யின் வளர்ச்சி நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு மேல் வளர்ந்து கொண்டு தான் போகிறது. அது எப்படியானாலும் நமக்கு கவலையில்லை. தேச விடுதலை யின் பொருட்டும், பிராமணரல்லாதார் முன்னேற்றத்தின் பொருட்டும் நமது கருத்தை வெளியிட பத்திரிகையை வைத்துக் கொண்டிருக்கிறோமே தவிர, பத்திரிகை நடத்தி அதனால் பணம் சம்பாதிப்பதற்காக அதை நாம் வைத்துக் கொண்டிருக்கவில்லை யென்பதை மாத்திரம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - அறிக்கை - 10.01.1926**



RangaRakes
tamilnavarasam.com

# பிராமணர்கள் சூழ்ச்சி

## "ஸ்ரீமான். சத்தியமூர்த்தியின் தன்னை அறியா மெய்யுரைகள்"

ஸ்ரீமான் S.சத்தியமூர்த்தி அவர்களின் ராஜீய வாதத்தைப் பற்றி நாம் அநேக விஷயங்களில் மாறான அபிப்ராயம் கொண்டிருந்தாலும், அவருக்கு ஆவேசம் வரும் காலங்களில் தன்னை அறியாமலே ராஜ தந்திரத்தைக் கையாளாமல் உண்மையைக் கொட்டிவிடுகிறார் என்கிற சந்தோஷம் நமக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு. சமீப காலத்திற்கும் இரண்டு சந்தர்ப்பங்களில் இரண்டு உண்மையை தாராளமாய் வெளியிட்டிருக்கிறார். அவற்றில் ஒன்று மிகவும் முக்கியமானது. இது பிராமணரல்லாத பொது ஜனங்கள் நன்றாய் அறிய வேண்டிய விஷயம். அதாவது, காங்கிரஸ் தினம் என்று டிசம்பர் 26- உ சென்னை சவுந்தர்ய மகாலில் ஸ்ரீமான். யூ.ராமராவ் அக்ராசனத்தின் கீழ் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி பிராமணரல்லாதார் மகாநாட்டைப்பற்றி பேசுகை யில் ஒரு பெரிய ரகசியத்தை வெளியிட்டிருக்கிறார். அது வருமாறு:-

**"ஸ்ரீமான் யாதவர் இங்கு வந்து வகுப்புத் துவேஷத்தை மூட்டப் பார்த்தார். சட்ட மெம்பர் ( மனு.சர். C.P. ராமசாமி அய்யர்) தாம் பிராமண ரென்று பயந்து சட்டப்பிரகாரம் கவனிக்காது விட்டுவிட்டார். இவருக்கு தைரியமில்லாவிடில் தம் பதவியை ராஜீனாமா செய்துவிட்டு ஒரு பிராமணரல்லாதாரைக் கொண்டு ஏன் தக்கது செய்திருக்கக் கூடாது."**

(இது 27.12.25 சுதேசமித்திரன் அனுபந்தம் 7-வது பக்கம் 4-வது கலம் 24-வது முதல் 32-வது வரி வரையில்) என்று பேசியிருக்கிறார். இவ்வுரை களின் மூலம் பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் பிராமணர்கள் தங்கள் அதிகார பதவியை எப்படி உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள் என்பதையும், தாங்களாகச் செய்யப் பயப்படுகிற சந்தர்ப்பங்களில் என்ன விதமான வழியைக் கையாளுகிறார்கள் என்கிற விஷயத்தையும், பகிரங்கமாய் எடுத்துக் காட்டி விட்டார். இது கல்பாத்தி விஷயத்தில் தங்கள் அதிகாரம் எப்படி உபயோகப்படுத்தப்பட்டது என்பதும், தாங்கள் கொஞ்சம் பயப்பட வேண்டிய சந்தர்ப்பமாகிய காஞ்சீபுரம் மகாநாட்டில் ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் வகுப்புவாரித் தீர்மான விஷயத்தில் ஒரு பிராமணரல்லாதாரைக் கொண்டு அத்தீர்மானம் ஒழுங்குக்கு விரோதமானது என்று தள்ளும்படி செய்ததும்,





எப்படி தக்கது செய்யப்பட்டது என்பதும் வாசகர்கள் உணர்வதற்குச் சரியான சந்தர்ப்பம் என்று நினைக்கிறோம்:-

இந்த இரண்டு விஷயத்திலும் இருவகையில் தாங்கள் வெற்றி அடைந்ததை மனதில் வைத்துக்கொண்டே வெற்றிமுரசு அடிக்கும் ஆனந் தத்தில் உண்மையைக் கக்கிவிட்டார். இதைப்பற்றி பிராமணரல்லாதார் சார் பாக நாம் நன்றி செலுத்துகிறோம். ஆனாலும், சட்ட மெம்பரையும், காஞ்சீபுரம் மகாநாட்டுத் தலைவரையும் வெளியாக்கி சந்தியில் இழுத்து விட்டுவிட்ட தினால் அவர்களின் மனக்கசப்புக்கு ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஆளாகாமல் இருக்க முடியாதே என்பதற்கு நாம் மிகவும் வருந்துகிறோம்.

தவிர "மதுவிலக்கு விஷயத்தில் பிராமணரல்லாத மந்திரிகள் என்ன சாதித்து விட்டார்கள்" என்று அடிக்கடி பிராமணப் பத்திரிகைகளான இந்து, சுதேசமித்திரன், சுயராஜ்யா முதலியவை பாமர ஜனங்களுக்கு பிராமணரல் லாதார் கட்சியின் பேரில் வெறுப்புண்டாகும்படி தங்கள் பத்திரிகையின் மூலம் விஷமப் பிரசாரம் செய்வது யாவரும் அறிந்த விஷயம். போதாக் குறைக்கு காஞ்சீபுரம் மகாநாட்டிற்குப் பிறகு என்று சொல்லிக்கொண்டு ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியாரும் மதுவிலக்கு என்கிற பெயரைச் சொல்லிக் கொண்டு ஸ்ரீமான் C. ராஜகோபாலாச்சாரியாரும் புறப்பட்டிருக்கிறார்கள். ஸ்ரீமான் ஆச்சாரியாருக்குப் பதில் சொல்லும் வகையில் மதுவிலக்கைப் பற்றி ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி பேசுகையில் "நாம் சுயராஜ்யம் பெற்றாலொழிய குடியை ஒழிக்க சட்டம் ஏற்படுத்த முடியாது" என்று சொல்லியிருக்கிறார். இதனால் இப்பத்திரிகைகள் பிராமணரல்லாத மந்திரிகள் பேரில் குறைகூறும் கூற்றுக்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்பதை வாசகர்களே அறிந்து கொள்ளலாம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 10.01.1926**

RangaRakes

tamilnavarasam.com

# செத்த பாம்பாட்டம்

தமிழ்நாட்டின் தேசீய பிராமணர்களின் சூழ்ச்சிகளையும், தந்திரங் களையும், தமிழ்நாட்டு தேசீய பிராமணரல்லாதார் என்போருக்கு வெளி யாகும் படி செய்தது சேரன்மாதேவி குருகுலமேயாகும். அக்குருகுல இரகசி யத்தை வெளியாக்குவதற்காக நாம் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு தமிழ் நாட்டிலுள்ள பிராமணப் பத்திரிகைகளும், பிராமணத் தலைவர்களும் எவ்வ ளவோ இடைஞ்சல்கள் செய்துக் கொண்டு வந்திருந்தாலும், தமிழ்நாட்டி லுள்ள பிராமணரல்லாதார் பத்திரிகைகளும், பிராமணரல்லாதார் தலைவர் களும் எவ்வளவோ உதவி செய்ததின் பலனாய் முடிவில் வெற்றி கிடைத்த தோடு தமிழ் நாட்டிற்கே ஓர் புதிய உணர்ச்சியையும் உண்டாக்கி வைத்து சேரன்மாதேவி குருகுலமும் கலைந்து போய்விட்டது என்பது உலகமே அறியும். அப்படியிருக்க, செத்த பாம்பை எடுத்து ஆட்டுவது போல் குருகுலத்தால் வயிறு வளர்த்த சில பிராமணர்கள், குறிப்பாய் ஸ்ரீமான் தி.ரா. மகாதேவய்யர் கொஞ்ச காலத்திற்கு முன்பு பத்திரிகைகளுக்கு ஒரு விளம் பரம் அனுப்பியிருக்கிறார். அதில் குருகுலம் ஒழுங்காய் நடந்து வருகிற பாவனையாகவும், தானே அதில் ஆச்சாரியாராய் இருக்கிறது போலும், சுயராஜ்யக் கட்சியாரின் தேசீயத் திட்டம் போல கல்விக்கு ஏதோ பல திட்டங் கள் வைத்திருப்பதுபோலும், பாசாங்கு செய்து பிள்ளைகளை அனுப்பும்படி பெற்றோர்களைக் கேட்கிறார். பிராமணரல்லாத பெற்றோர்கள் இம்மோச விளம்பரத்தை நம்பி தங்கள் பிள்ளைகளை அனுப்பிக்கொடுத்து ஏமாந்து போகாமல் இருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

குருகுலம் அங்கு நன்றாய் நடந்து கொண்டிருப்பதாய், ஸ்ரீமான் வ.வெ.சு. ஐயர் சொல்லிக்கொண்ட காலத்திலேயே நாம் அங்கு போயிருந்த சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் நடத்தப்படும் முறையையும் பார்த்தோம். ஸ்ரீமான். மகாதேவய்யர் என்று சொல்லப்படுகிறவரும், அவர் குழந்தைகளும் கூனி முறை என்பதாகப் பேர் வைத்துக்கொண்டு தாங்கள் பழங்களும், தேங்காயும், வெல்லமும், கரும்பும், மாம்பழமும், முந்திரிகைப் பருப்பும், பேரீச்சம் பழமும், சாரப்பருப்பும் போன்றவைகளைச் சாப்பிட்டுக்கொண்டு ஆஸ்ரமத்தில் படிக்க வந்த மற்ற பிள்ளைகளுக்கு பிள்ளை ஒன்றுக்கு *மீ* ஒன்றுக்கு ரூ.13 வரையிலும் பெற்றுக்கொண்டு மாதம் ஒன்றுக்கு 4 ரூபாய் கூடப் பெறாத மாதிரியில் கஞ்சி சாதமும், அரிசிக் களியும், உப்பு காரமில்லாத அரிசி உப்புமாவும், புளியில்லாத குழம்பும் இம்மாதிரி பதார்த்தங்கள்,



ஜெயிலைவிட மோசமான கவலையற்ற நிலையில் பக்குவஞ் செய்து போட்டுக்கொண்டு இருந்ததை நாமும் நம்முடன் வந்த மற்றும் சில நண்பர்களும் நேரிலேயே பார்த்தோம்.

ஆதலால், சுயராஜ்யம் என்கிற பெயரினால், ஜனங்கள் ஏமாந்து போய் அதற்குள்ளிருக்கும் தந்திரங்களை அறியாமல் சுயராஜ்யக் கட்சிக்குள் விழுவது போல் குருகுலம், ஆசிரமம் என்கிற பெயர்களினால், பெற்றோர்கள் ஏமாந்து போய் அதன் ரகசியத்தை அறியாமல் தங்கள் பிள்ளைகளை அநுப்பி பலி கொடுக்காதிருக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்து மனதார அறிந்ததையும், நேரில் பார்த்ததையும்தான் இங்கு எழுதியிருக்கிறோமே தவிர, மற்றபடி வேறு எந்தக் காரணத்தையும் உத்தேசித்தல்ல என்பதைத் தெரிவித்துக் கொள் கிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 10.01.1926**



RangaRakes tamilnavarasam.com

# தென்னாப்பிரிக்காவும் ஜாலவித்தையும்

தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களை அவ்விடத்திய வெள்ளைக்காரர்கள் தீண்டாதார் போல் நடத்துவதாகவும் தேசத்தின் பிரஜைகளுக்குள்ள சமஉரிமையை அடைவதற்கில்லாமல் வெள்ளைக்காரர்கள் சட்டம் செய் திருப்பதாகவும், இக்காரணங்களால் அங்கு பிழைப்பதற்காகப் போன நமது சகோதரர்களான சுமார் ஒன்றரை லக்ஷம் இந்தியர்கள் கஷ்டப்படுவதாகவும் அதற்கு ஏதாவது பரிகாரம் செய்து கொடுக்கும்படி நமது தேசீய காங்கிரஸை கேட்டுக் கொள்வதற்காக சிலர் அங்கிருந்து வந்திருந்ததும், அதற்கிணங்கி நமது தேசீய காங்கிரசும் மகாத்மா அவர்களின் அபிப்ராயப்படி ஓர் தீர்மானத்தையும் நிறைவேற்றி, வந்திருந்தவர்கள் கண்ணைத் துடைத்து அநுப்பி விட்டதும் வாசகர்கள் அறிந்த விஷயம்.

இதை அநுசரித்தே பிராமணரல்லாதார் காங்கிரசும் ஓர் தீர்மானத்தைச் செய்துவிட்டது. பத்திரிகைகளும் இதைப்பற்றி எழுதி தங்கள் கலங்களை நிரப்பிக் கொள்ளுவதற்கு ஓர் சந்தர்ப்பத்தையும் அடைந்து கொண்டது. முடிவென்ன? இவ்வித தீர்மானங்களால் வெள்ளைக்காரர்கள் பயப்படப் போகிறார்களா? அல்லது தேசீய காங்கிரசினிடமாவது வெள்ளைக்காரர்களுக்கு மதிப்பிருக்கப் போகிறதா? நமது தேசீய காங்கிரஸோ ஜாலவித்தைக் காரனுடைய செய்கைகள் போலாகிவிட்டது. ஜாலவித்தைக்காரன் எப்படி ஜனங்களை ஏமாற்றுவதற்கு தனது பைக்குள்ளிருந்து ஒவ்வொரு சாமானையும் வரவழைத்துக் காட்டிவிட்டு, கடைசியில் எப்படி நம்மை காசு கேட்க வருகிறானோ, அது போலவே காங்கிரசிலும் சிலரிருந்து ஜனங்கள் சந்தோஷப்படும்படி பல தீர்மானங்களை எழுதிக்காட்டி விட்டு கடைசியாக நம்மிடம் ஓட்டுக்கேட்க வந்து விட்டார்கள். இவர்களுக்கு எவ்வளவு சக்தியிருக்கிறது, இவர்களால் என்னென்ன காரியம் செய்ய முடியுமென்பது வெள்ளைக்காரர்களுக்குத் தெரியுமா? தெரியாதா? “குப்பை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானமேறி சந்திரனைப் பிடிப்பேனென்று” சொல்லுவது எவ்வளவு நம்பத்தகுந்ததாயிருக்கும். அதுபோல, கல்பாத்தியில் நமது கண்ணுக்கெதிரில் நம்மிடம் வாங்கித்தின்று பிழைக்க வேண்டியவர்கள் அவர்களைவிட கோடிக் கணக்காய் அதிகமுள்ள சமூகத்தாரை – இந்த நாட்டாரை – இந்நாட்டு ஆதி மக்களை – தெருவில் நடக்கக் கூடாது; குளத்தில் குளிக்கக் கூடாது; கிட்ட வரக்கூடாது; கண்ணில் தென்படக் கூடாது; அவர்கள் தெய்வத்தைக் காணக் கூடாது; அவர்கள் வேதத்தைப் படிக்கக்கூடாது என்று கொடுமைப்படுத்துவதையும் அதற்காக 144 போடுவதையும் சகித்துக்கொண்டு இந்த 144 – ஐ மீற



முடியாமல் பயங்கொண்டு, புறமுதுகிட்டு ஓடிப்போகும் கூட்டத்தார் தென்னாப்பிரிக்கா வெள்ளையர்களை – துப்பாக்கி, பீரங்கி, வெடிகுண்டு, ஆகாயக் கப்பல் வைத்திருப்பவர்களை மிரட்டுவதென்றால், அவர்கள் எப்படி பயப்படக்கூடும்? நமது நாட்டிலுள்ள நம்மை அந்நிய நாட்டிலிருந்து பிழைக்க வந்தவர்கள் செய்யும் கொடுமைகளை ஒழிப்பதற்கு நமக்கு யோக்கியதை இருந்து, ஒன்றுகூடி ஏதாவது ஓர் முயற்சி செய்து வெற்றி பெற்றோமானால் பிறநாட்டார் நம்மைக் கண்டால் கொஞ்சமாவது மதிப்பார்கள். அப்படிக் கின்றி, நமது யோக்கியதை நமது நாட்டில் இப்படி இருக்க தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரர்களை – பீரங்கி, துப்பாக்கி, ஆகாயக் கப்பல், வெடிகுண்டு வைத்திருப்பவர்களை மிரட்டுவதில் என்ன பிரயோஜனம்? உண்மையில் தென்னாப்பிரிக்காவில் வெள்ளைக்காரர் நம்மை நடத்தும் விஷயம் நமக்கு அவமானமாயிருக்குமானால் இந்தியாவில் நம்மை ஒரு சிலர் நடத்தும் விஷயத்தை நாம் சகித்துக் கொண்டிருக்க முடியுமா? நமக்கு ரோஷமிருக்கிறது என்பதை அந்நியருக்குக் காட்டிக்கொள்ள வேண்டுமானால், நமது உடலை, பொருளை, ஆவியை விடத் தயாராயிருக்கிறோமா? என்று பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு நாம் தயாராயிருக்கிறோமென்று நம் மனதே நமக்கு உறுதி சொல்லுமானால் இவற்றுக் கெல்லாம் தீர்மானமே தேவையில்லை; மனதில் நினைத்தவுடனேயே வழி திறந்து விடும். சட்டங்களெல்லாம் சாம்பலாய்ப் போய்விடும். அப்படிக் கில்லாமல், இம்மாதிரி ஜால வித்தையான தீர்மானங்களை வைத்துக்கொண்டு பிழைக்கப் பார்க்கிறோம்; அதனால் பணம் சேர்க்கப் பார்க்கிறோம்; பதவி பெறப் பார்க்கிறோம். இந் நிலையில் இத்தீர்மானங்களுக்கு எப்படி சக்தி உண்டாகும்? ஆதலால், உண்மையாய் இவ்வித கஷ்டங்களுக்குப் பரிகாரம் வேண்டுமானால், மகாத்மா சொல்வது போல் சத்தியாக்கிரகம் செய்வதும், அதன் மூலமாய் உடல், பொருள், ஆவி ஆகியவைகளைத் துறக்கத் தயாராயிருப்பதும் தவிர வெறும் ஜாலவித்தைகளினால் பலன் ஏற்படாதென்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 10.01.1926**



RangaRakes tamilnavarasam.com

# கக்ஷிக்காரன் பணத்தைக் கையாடிய ஓர் பிராமண வக்கீல்

இரண்டொரு வாரங்களுக்கு முன்புதான், சென்னை ஐக்கோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் எம்.ஆர். சுந்தரம் ஐயர் என்கிறவர் ஆறுமாதக் கடுங்காவலும் 1000 ரூபாய் அபராதமும் பெற்றிருந்ததை எழுதியிருந்தோம். இந்த வாரம் மற்றொரு பிராமண வக்கீலின் தண்டனையைப் பற்றி எழுத நேர்ந்திருக்கிறது. அதாவது:-

சென்னை ஐக்கோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் ஏ. துரைசாமி ஐயர் என்பவர் தனது கக்ஷிக்காரன் பணத்தைக் கையாடியதாக அவர் மீது ஓர் வழக்கு ஏற்பட்டு ருசுவானதின்பேரில், அவர் இனிமேல், வக்கீல் வேலையே செய்ய லாயக்கில்லையென்று சொல்லி அவருடைய பெயரை வக்கீல் ஜாப்தாவிலி ருந்து நீக்கிவிடுமாறு ஐக்கோர்ட் ஜட்ஜ் தீர்ப்புச் செய்துவிட்டார். கக்ஷிக்காரன் பணத்தைக் கையாடாத வக்கீல், வக்கீல் வேலைக்கே லாயக்கில்லையென்று ஓர் பழமொழி சொல்லுவதுண்டு. அதற்கேற்றாற் போலவே நமது பக்கங்களில் கக்ஷிக்காரன் பணத்தைக் கையாடாத வக்கீல்கள் மிகவும் அபூர்வம். இப் பொழுது எத்தனையோ வக்கீல்கள் கக்ஷிக்காரர்களின் பணத்தைப் பல வழிகளிலும் சாப்பிட்டுவிட்டு, கல்லுப் போலிருக்கிறார்கள். அப்படியிருக்க, ஸ்ரீமான் ஏ. துரைசாமி ஐயருக்கு மாத்திரம் ஏன் இந்த தண்டனை ஏற்பட்டதோ தெரியவில்லை.

உலகத்தில் எத்தனையோ பெயர்கள் திருடினாலும், கொலை செய்தாலும், போர்ஜரி செய்தாலும், அகப்பட்டுக் கொள்வதினாலும், போலீசா ருக்கும் நியாயாதிபதிகளுக்கும் லஞ்சம் கொடுக்காததாலும், நன்றாய்க் குண்டுப் புரட்டு புரட்டத் தெரிந்த வக்கீல் வைக்காததினாலும், தண்டனை யடைய நேர்வது போல், ஐயோ பாவம்! நமது ஐயர்வாளும் சிக்கிக் கொண்டார் போலும்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 10.01.1926**



# கதர் இலாகா சிப்பந்திகள்

தமிழ்நாட்டில் கதர் ஸ்தாபனங்களுக்கு சம்பந்தப்பட்ட உத்தியோகங் களில் இருப்பவர்களில் சிலர் கதர் கட்டாமல் இருக்கிறார்கள் என்றும், கதர் கிளை டிப்போக்களில் கதர் விற்பவர்கள் கூட கதர் கட்டாமல் அன்னிய நாட்டுத் துணியை அணிந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் அடிக்கடி நமக்குப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. தற்காலம் காங்கிரசிலிருப் பவர்கள் எப்போதும் கதர் அணிய வேண்டியது அவசியமில்லை என்று ஏற்பட்டு விட்டாலும் கதர் ஸ்தாபனங்களுக்கு அந்த சட்டம் எட்டும்படியான காலம் இன்னமும் வரவில்லை என்றே நினைக்கிறோம்.

அல்லாமலும் கதர் ஸ்தாபனங்களில் ஊதியம் பெற்றானாலும், ஊதியம் பெறாமலானாலும், தொண்டு செய்பவர்கள் கதர் உடுத்தியாக வேண்டும் என்கிற நிபந்தனை ஏற்படுத்துவது பாவமல்லவென்றே நினைக்கிறோம். ஆதலால், தமிழ்நாட்டு கதர் கவர்னர், கதர் ஸ்தாபன சிப்பந்திகளுக்கு இதைப்பற்றி ஓர் சுற்றுத்திரவு அனுப்ப வேணுமாய் கோருகிறோம்.

**குடி அரசு - அறிக்கை - 10.01.1926**



RangaRakes tamilnavarasam.com

# கோயமுத்தூர் முனிசிபாலிட்டி

கோயமுத்தூர் முனிசிபாலி ட்டியின் சென்ற வருடத்திய நிர்வாக அறிக்கை வெளியாகியிருக்கிறது. அவ்வறிக்கையிலிருந்து பொதுவாக கோயமுத்தூர் முனிசிபாலிட்டியின் நிர்வாகம் ஒழுங்காய் நடைபெற்றிருப் பதாகவே காணப்படுகிறது. ரோடுகள் நன்றாயிருப்பதாகக் கலைக்டர் அபிப் பிராயப்பட்டிருக்கிறார். கல்வி விஷயத்தில் கல்வி கற்க வேண்டிய சிறுவர் களில் 100-க்கு 99 பேர் வீதம் வாசிக்கின்றார்களென்றும் பள்ளிக் கூடங்களில் சிறுவர்களான ஆண்களுக்கும், பெண்களுக்கும் நூல் நூற்கவும் நெய்யவும், கற்றுக்கொடுக்கப்படுகின்றதென்றும், ஆயுள்வேத வைத்தியசாலை மிகவும் உபயோகப்பட்டு வருகின்றதென்றும், அதில் இவ்வருடத்தில் 20,000 பேர் களுக்கு மேலாக நோயாளிகள் உதவிபெற்றிருக்கின்றார்களென்றும், பிளேக் நோய் சென்ற வருடம் கோயமுத்தூருக்குள் வராமலே தடுக்கப்பட்டிருக் கின்றதென்றும், காலறா முதலிய தொத்து வியாதிகளும் முன்னைய வருடங் களைவிட மிகக் குறைவாய் இருந்திருக்கின்றதென்றும், முனிசிபல் செல்வ நிலை ஒழுங்காய் இருக்கின்றதென்றும், சப் கமிட்டியார்கள் ஊக்கத்துடன் வேலை செய்திருக்கின்றார்களென்றும், கவுன்சிலர்களும் சேர்மனும் ஒற்று மையாயிருப்பதால் கவுன்சிலில் சமாதானம் ஏற்பட்டிருக்கின்றதென்று கலைக்டர் எழுதியிருக்கின்றாரென்றும் மற்றும் பல விஷயங்களும் குறிப் பிட்டிருக்கிறது. இதற்காக சேர்மென் ஸ்ரீமான் C.S. இரத்தினசபாபதி முதலி யாருக்கு கோயமுத்தூர் வாசிகள் மிகுதியும் நன்றி பாராட்டக் கடமைப் பட்ட வர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், ஈரோடு முனிசிபாலிட்டியில் இருக்கிறவர்கள் இதைப்பார்த்து பொறாமைப்படாமலும், வெட்கப்படாமலு மிருக்க முடியாது. கோயமுத்தூர் சேர்மனைப்போல உள்ளூர்வாசியாகவும், உள்ளூர் க்ஷேமத்தில் அக்கரை ஏற்படவேண்டியவர்களாகவும் உள்ள ஒரு சேர்மன் ஈரோட்டுக்கும் ஏற்பட்டால் ஓர் காலத்தில் இது போல் சந்தோஷப் படக்கூடும். இது சமயம் வீணாக ஆசைப்படுவதில் பிரயோஜனமில்லை.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 10.01.1926**



# வகுப்புவாரிப் பிரதிநிதித்வம்

## தேசபக்தர்களின் யோக்கியதை

"வகுப்புவாரிப் பிரதிநிதித்வம்" என்கிற பதத்தை நாம் பொது ஜனங்களின் ஞாபகத்திற்குக் கொண்டுவந்தவுடனே, அதனால் பிரதிகூலம் அடையக்கூடிய ஜனங்கள், தங்களால் கூடிய தடைகளை யெல்லாம் செய்ய மறுபடியும் ஆரம்பித்துவிட்டார்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் என்கிற உரிமையைப் பற்றி நமது நாட்டில் வெளிப்படையாக நாம் அறிய சுமார் 20 வருட காலங்களுக்கு மேலாகப் பிரஸ்தாபிக்கப்பட்டு வந்திருந்தாலும், சுமார் 10 வருடங்களுக்கு முன்பாகவே ராஜீய ஸ்தாபனங்களில் அது பிரவேசித்து முஸ்லீம் சமூகத்தாருக்கு நமது தேசீய காங்கிரசின் மூலமாகவே, அதாவது "தேசம்தான் பிரதானம்; வகுப்புகள் அதற்குப் பிற்பட்டது" என்கிற தத்துவத் தையே கொள்கையாக உடைய காங்கிரஸின் மூலமாகவே அதை ஒப்புக் கொண்டு சர்க்கார் மூலமாய் அதை அமுலுக்குக் கொண்டு வரும்படி ஏற்பாடு செய்யப்பட்டு, இப்பொழுது புழக்கத்திற்கு வந்துவிட்டது.

அதோடு மாத்திரமல்லாமல், காங்கிரஸ் ஸ்தாபனங்களிலேயும், அதி லுள்ள ஸ்தானங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் அளிக்கப்பட்டும் வந்திருக்கிறது. அதாவது, காங்கிரஸ் என்பதை ராஜீய ஸ்தாபன நிர்வாகமாக வைத்துக்கொண்டால், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி என்பது பார்லி மெண்ட் போன்ற ஓர் ஆட்சி சபைக்குச் சமானமாகும். அவ்வித ஆட்சி சபைக்கு இந்தியாவின் சகல பிரஜைகளின் சார்பாக 350 மெம்பர்கள் ஒட்டு மொத்தம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் நமது தமிழ்நாட்டிற்கு மாத்திரம் 25 ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த இருபத்தைந்துக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி விதிகளின் 8- வது பிரிவில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்குத் தேர்தல் என்கிற தலைப்பின் கீழ் "நான்கு முஸ்லீம்கள், ஒரு கிறிஸ்தவர், தீண்டாதார் என்று சொல்லப்படும் ஒருவர்" ஆகிய இவர் களையும் இவர்களைத் தவிர மொத்தத்தில் அதிக வாக்கு பெற்ற 19 அங்கத் தினர்களையும் தேர்தல் செய்ய வேண்டியது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குப் பெயரென்ன? இது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமா? அல்லவா?

அன்றியும் 1917 - ம் வருடத்தில் பிராமணரல்லாதார் ராஜீய உரிமைகள்



RangaRakes tamilnavarasam.com

பெறுவதற்கும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அடைவதற்கும் டாக்டர் டி.எம்.நாயர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பிராமணரல்லாதார் இயக்கம் நாமெல்லோரும் அறிந்ததே. அவ்வியக்கத்தின் கொள்கைகளைப்பற்றி, அவ்வியக்கத்தில் சேராதிருந்த சில பிராமணரல்லாதார்களும் ஒப்புக் கொண்டுதானிருந்தார்கள். ஆனால், அதனுடைய திட்டங்களிலும் அவற்றை அடையும் வழிகளிலும் மாத்திரம் அபிப்ராய பேதம் ஏற்பட்டு அதற்காக அதில் சேராமல், அதே கொள்கைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு சென்னை மாகாணச் சங்க மென்கிற பெயரால் பிராமணரல்லாதார் இயக்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இவ்வியக்கம் பிராமணரல்லாதார் இயக்கமென்று சொல்லப்பட்டாலும் உண்மையில் பிராமணர்களுடைய பொருளும், ஆதரிப்பும், நடத்தும் அதிகாரமும் ஆகிய இவைகளே அவைகளில் குடி கொண்டிருந்தன. அப்படியிருந்த போதிலும் ராஜீய உரிமைகளுக்காகக் காங்கிரசைப் பின்பற்றுவதும், பிராமணரல்லாதார் வகுப்புவாரிப் பிரதிநிதித் வம் அடைவதுமே அதன் கொள்கையாயிருந்ததென்பதில் இப்போது யாருக்கும் அபிப்பிராய பேதமில்லை.

அதற்காதாரமாக 1919-ம் வருடம் அக்டோபர் மாதம் 11,12 தேதிகளில் ஈரோட்டில் ஸ்ரீமான் லாட் கோவிந்ததாஸ் அக்ராசனத்தின் கீழ் நடந்த "சென்னை மாகாணச் சங்க கான்பரென்ஸ்" என்னும் மகாநாட்டில் உபசரணை அக்ராசனராயிருந்த ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் வரவேற்புப் பிரசங்கத்தில் 6- வது பக்கம் "சென்னை மாகாணச் சங்கத்தார் வேலை" என்னும் தலைப்பின் கீழ் 2-வது கலத்தில், "தொழிலாளர் 100-க்கு 99 பேர் பிராமணரல்லாதாரேயாவர். இவர்களுக்கு நலன் செய்து வருவோர் நமது இயக்கத்தில் சேர்ந்தவரா? மற்றப் போலி இயக்கத்தில் சேர்ந்தவரா? தொழி லாளர் இயக்கத்துக்கும், முன்னேற்றத்துக்குமே காரணமாயுள்ள சென்னை மாகாணச் சங்கத்தின் அவசியத்தைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? காங்கிரஸ் கொள்கையைத் தழுவுவதும் வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் பெற முயல்வதும் இந்தியாவில் பிறந்த அனைவரையும் இந்தியரெனக் கொண்டு அவரோடு சகோதரத்துவம் பூண்டு தேச சேவையைச் செய்வ துமே நமது சங்கத்தின் பெரு நோக்கமாதலால், அந்நந்நோக்கத்தை நிறைவேற்ற நமக்கென தனி யாகப் பத்திரிகைகளும்,பிரசாரகர்களும் வேண்டும்" என்று பேசியிருக்கிறார். அதன்படியே ஷை மகாநாட்டிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தைப் பற்றி ஸ்ரீமான்கள் திரு.வி.கலியாணசுந்தர முதலியார், கேசவபிள்ளை முதலியோர் களால் விஷயாலோசனைக் கமிட்டியில் தயாரிக்கப்பட்ட ஒரு தீர்மானத்தை டாக்டர் வரதராஜுலு நாயுடுவால் மகாநாட்டில் பிரேரேபிக்கப்பட்டதில் ஸ்ரீமான் தஞ்சை இராமச்சந்திரம் செட்டியாரவர்களால் ஆட்சேபிக்கப்பட அதற்கு ஸ்ரீமான் நாயுடுவே வகுப்புவாரிப் பிரதிநிதித்வக் கொள்கையை ஒப்புக்கொள்ளாதவர்களுக்கு இம்மகாநாட்டில் இடமில்லையென்று சொன்னதின் பேரில் ஏகமனதாய் நிறைவேறியிருக்கிறது.



அல்லாமலும் காக்கிநாடா காங்கிரஸிலும் ஸ்ரீமான் தாஸும், கல்கத்தா மகமதியர்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித் வத்தையே முக்கியமாகக் குறித்து ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் அவர் களால் பிரேரேபிக்கப்பட்டு இருக்கிறது. சென்னை சட்டசபையிலும், இந்தியா சட்டசபையிலும் மற்றும் பல மாகாண சட்டசபைகளிலேயும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்வத்தின் பேரால் இன்றைய தினமும் இந்திய அங்கத்தி னர்கள் உட்கார்ந்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஸ்தல ஸ்தாபனங்களிலும் மற்றும் பல ராஜீய ஸ்தாபனங்களிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தின் பெயரால் தாழ்ந்த வகுப்பார்கள் சர்க்காரால் நியமனம் பெற்று உட்கார்ந்துக் கொண்டு தான் வருகிறார்கள்.

இன்றைய தினமும், காஞ்சீபுரம் மகாநாட்டில் வகுப்புவாரிப் பிரதிநிதித் வம் கூடாதென்று வாதாடின தீண்டாத வகுப்பைச் சேர்ந்தவரென்று சொல்லும் ஸ்ரீமான் ஜெயவேலுவும், மகமதியர் வகுப்பைச் சேர்ந்தவர்களான ஜனாப்கள் ஷாபி மகமது, அமீத்கான் இவர்களும், வகுப்புவாரிப் பிரதிநிதித்வ கொள்கை யின் மூலமாய் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஸ்தானம் வகித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். திருச்சியில் இரண்டு வருடங்களுக்கு முன் கூடின மாகாணக் காங்கிரஸ் கமிட்டியில் ஸ்ரீமான் ஈ.வெ.இராமசாமி நாயக்கர் அக்ராசனராயிருக்கும் போது, ஜனாப்கள் ஷாபி மகமது, சென்னை அப்துல் ஹமீத்கான் முதலியவர்கள் தங்களுக்கு நான்கு ஸ்தானங்கள் போதாதென்றும் ஆறு ஸ்தானங்கள் அளிக்கப்பட வேண்டுமென்றும் விண்ணப்பம் எழுதி மற்றும் பல மகமதியர்களிடமும் கையெழுத்து வாங்கிக் கொடுத்திருக்கிறார் கள். கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் குழந்தையும் தங்கள் வகுப்பாருக் குள்ள வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தின் பலனை அநுபவத்திருக்கிறார். அவருடைய பெயர் இன்றையத்தினமும் வகுப்புவாரிப் பிரதிநிதித்வ "வோட்டர் லிஸ்டில்" இருந்துதான் வருகின்றது. இவ்வளவு பலம் பெற்று அமுலில் இருக்கும் ஒரு அபிப்ராயத்தை -பொது ஜனங்களின் விருப்பத்தை தங்களுடைய பணப் பெருக்கத்தாலும் மித்திர பேதத்தாலும் அமுத்தி விடலாமென்று நினைப்பது எவ்வளவு யோக்கியப் பொறுப்பற்ற காரியமென் பதைப் பொதுஜனங்களே யோசிக்க வேண்டியது. அல்லாமலும் ஸ்ரீமான் முதலியாரையும், ஜனாப்கள் ஷாபி மகமது, அமீத்கானையும், ஸ்ரீமான்கள் குழந்தை, ஜயவேலு முதலியவர்களையும் பணங்காசு கொடுத்தோ, வேறு வழியில் அவர்களை ஏமாற்றியோ, தாங்கள் சுவாதீனம் செய்து கொண்டதி னால் இவர்களால் என்ன காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியும்? கூட்டங் களிலெல்லாம் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரைத் தலைமை வகிக்கச் செய்யலாம். ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார்தான் தமிழ்நாட்டுத் தலைவர் - தலைவரென சத்தம் போடச் செய்விக்கலாம். ஆனால், தேசத்தார் இவர்களைப் பின்பற்றச் செய்யக்கூடுமா? இவர்கள் வார்த்தையை தேசத்தார் நம்பிவிடுவார்களா? நேற்றும் முன்னும் இவர்கள் பேசியதையும் இவர்களின் நடத்தையையும் பொது ஜனங்கள் ஆராயமாட்டார்களா? எவ்வளவு நாளைக்குப் பொது



RangaRakes tamilnavarasam.com

ஜனங்களை ஏமாற்ற முடியும்? "தண்ணீரில் விழுந்தவனைப் பிடிக்க போய்த் தானும் ஆழ்ந்துவிட்ட கதை" போல் ஸ்ரீமான் முதலியார், ஸ்ரீமான்கள் சீனி வாசய்யங்காருக்கும் சி.இராஜகோபாலாச்சாரியாருக்கும் உதவி செய்யப் போய் நாணய உலகத்திலிருந்து விலகி விட்டார். பொது ஜனங்கள் தன்னை எப்படி மதிக்கிறார்கள் என்னும் கவலையே இல்லாமல் அதிக மதுபானம் செய்தவர்கள் தங்களை உலகத்தார் எப்படி நினைக்கின்றார்களென்பதைப் பற்றி கவலை இல்லாமல் இடுப்புத் துணி நழுவுவது கூடத் தெரியாமல் எப்படித் திரிவார்களோ, அதுபோலவே நமது முதலியார் தன்னையே சுவாதீனம் இழந்து "ஒருவருட காலத்துக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்துக்கு விரோதமாய் பிரசாரம் செய்யப்போகிறேன்" என்று வீரகண்டாமணி ஆட்டு கிறார். பக்கத்தில் இருக்கும் அவருடைய பிராமண நண்பர்கள் "சபாஷ், சபாஷ்" என்று கைதட்டுகிறார்கள். இரண்டு பிராமணர்கள் வாயினால் சபாஷ் என்று சொல்லப்படுவதைக் கேட்டுக் கொண்டு கூத்தாடுகின்றாரேயொழிய கோடிக் கணக்கான மக்கள் இவரை என்ன சொல்லுகிறார்களென்பதைக் கவ னிக்கக்கூட நேரமில்லாமல் மயங்கியிருக்கிறார். பிராமணரல்லாத தொழிலா ளர் அபிமானத்தால் ஏற்பட்ட தன்னுடைய பத்திரிகையாகிய "நவசக்தி"யை அதன் உண்மைப் பெயருக்கேற்ப அதற்கு ஒன்பது வித சக்தியைக் கற்பித்துக் கொண்டு போகிறார். அதாவது : -

1 வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் தான் சென்னை மாகாணச் சங்கத்திலி ருந்தபோது வேண்டும் என்றார்.

2 பிறகு காஞ்சி அக்ராசனப் பிரசங்கத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித் வம் காங்கிரஸில் தான் முட்டிக்கொள்ள வேண்டுமென்கிறார்.

3 அக்ராசனப் பீடத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்வ தீர்மானத்தை மகா நாட்டில் அநுமதிப்பது ஒழுங்குக்கு விரோதமானது என்கிறார்.

4 "நவசக்தி" பத்திரிகையில் சுயராஜ்யக் கட்சியை ஏற்றுக்கொள்ளா தவர் வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் வேண்டுமென்று கேட்பதற்குப் பொருளேயில்லை என்கிறார்.

5 வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தை ஆதரித்து தான் எங்கும் பேசவே யில்லை என்கிறார்.

6. பிறகு வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தால் நன்மையுமிருக்கிறது; தீமையுமிருக்கிறது என்கிறார்.

7 தற்கால நிலைக்கு எனக் கேட்கப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித் வத்தை என்றுங் கேட்டுக்கொண்டிருத்தல் நியாயமா? என்கிறார்.

8 பிறகு ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்காகக் கேட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தை உண்மையென்று நினைத்துக் கொள்ளலாமா? என்கிறார்.

9 பின்பு வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்திற்கு விரோதமாய் தமிழ் நாடெங்கும் ஒரு வருடத்திற்குப் பிரசாரம் செய்யப்போகிறேன் என்கிறார். ( இதுயாரைக் கெடுப்பதற்காகச் சொன்னேன் என்று நாளைக்குச் சொல்லு வாரோ தெரியவில்லை)

ஆகிய ஒன்பது சக்திகளும் நமது முதலியாருக்கு எப்படி படிப்படி யாய் உண்டாகி வந்திருக்கின்றதென்பதை "நவசக்தி" அன்பர்கள் கவனிக்க வேண்டும். இன்னும் எத்தனை சக்திகள் தொக்கி இருக்கின்றதோ ஸ்ரீமான் முதலியாருக்கும் கூடத் தெரியாது என்றே நினைக்கிறோம்.

நமது ஸ்ரீமான் முதலியார் தனது வாதத்துக்கு சக்தியில்லாத சமயங் களில் காந்தியடிகளின் பெயரை இழுத்துவிட்டு விடுவது வழக்கம். ஏனென் றால், அந்தப் பெயரைச் சொல்லி தப்பித்துக் கொள்ளுவ தோடு, நவசக்தியின் வாசகர்கள் தன்னை காந்தி வழியில் நிற்போரென்று எண்ண வேண்டுமென்கிற ஆசை. அதாவது, மகாத்மா காந்தி சுயராஜ்யக் கட்சியாருக்கு உதவி செய்யும் படி சொல்லியிருக்கிறார் என்பதை அடிக்கடி எழுதிக் கொண்டு, தான் அந்த சாக்கில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு உதவி செய்ய வழி தேடுவது. இப் பொழுது சுயராஜ்யக் கட்சிக்கு உதவி செய்வதுடன் நிற்காமல் பிராமணரல்லா தாருக்கு கெடுதி செய்யத்தகுந்த அளவுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்திற்கு இடையூறாய்ப் புறப்படுவேனென்கிறார். மகாத்மா காந்தி சுயராஜ்யக் கக்ஷி யாருக்கு உதவிசெய்யும் திட்டத்தில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்வத்திற்கு எதிர் பிரசாரம் செய்வதையும் சேர்த்திருக்கின்றாரா என்பதைப் பொது ஜனங்கள் கவனிக்க மாட்டார்களென்று ஸ்ரீமான் முதலியார் நினைத்துவிட்டார் போலும். இவைகளெல்லாம் எப்படி இருந்த போதிலும் நமக்கு அதைப்பற்றி அதிக மான கவலை இல்லை. ஆனாலும் ஒன்று மாத்திரம் நாம் சொல்லாமல் இருக்க முடியவில்லை. தேசத்தின் பேராலும், சமூகத்தின் பேராலும், விடுதலையின் பேராலும், சுயராஜ்யத்தின் பேராலும், உரிமையின் பேராலும், காந்தியடிகளின் பேராலும் நமது நாட்டில் கோடிக் கணக்கான பாமர ஜனங்களின் பிரதிநிதி களாய் எப்பேர்ப்பட்ட யோக்கியர்கள் வேலை செய்கிறார்கள் என்பதும், இவர் களிடத்தில் எவ்வளவு நாணயம் இருக்கிறது என்பதும், இவர்களுடைய "பொது சேவையின்" கருத்தென்ன என்பதும் ஆகிய இவைகளை ஜனங்கள் உணரவேண்டுமென்பது மாத்திரம் நம்முடைய பெரிய கவலையாயிருக்கிறது. 15 ரூபாய் சம்பளத்திற்காக முன்பின் அறியாத ஜெர்மானியரோடும் துருக் கியரோடும் சண்டை செய்வதற்காகப் போய் உயிர்விட்ட இந்து , மகமதியர், கிறிஸ்தவர்கள் உள்ள ஓர் நாட்டில், எவ்வளவோ பதவிகளுக்காகவும், எவ்வ


RangaRakes tamilnavarasam.com

ளவோ சபாஷ் பட்டங்களுக்காகவும், எவ்வளவோ சம்பாதனைக்காகவும் மானம் விடுகிற ஜனங்கள் அபூர்வமாகப் போய்விடுமா? தேசத்திற்கு நல்ல காலம் இருக்குமேயானால், இவற்றை எல்லாம் ஜெயித்துக்கொண்டு போனால்தான் முடியுமே தவிர இவற்றை யெல்லாம் ராஜி செய்துக்கொண்டு போவதாய் இருந்தால் ஒரு நாளும் விடியாது; உரிமையும் கிடையாது.

**குடி அரசு - தலையங்கம் - 17.01.1926**



# மதுரைக் கோயில் பிரவேசம்

## லேடி கோஷனும் - நாடார்களும்

மதுரை ஸ்ரீமான் குப்புசாமி ஐயர் என்கிற ஒரு பிராமணர் சென்னை கவர்னரின் மனைவியாரை, மதுரை மீனாக்ஷியம்மன் கோவிலுக்குள் அழைத்துப் போய் எல்லா இடங்களையும் கூட்டிக் காட்டினதாகவும், மிகுந்த மரியாதை செய்ததாகவும் அதற்கு நன்றியறிதலாய் அம்மையார், கோவிற் புத்தகத்தில் தம்மை மிக்க மரியாதையாக கோயிலுக்குள் அழைத்துச்சென்று பல இடங்களையும், நகைகளையும், பொக்கிஷங்களையும் காட்டின ஸ்ரீமான் குப்புசாமி ஐயர் முதலியோருக்கு நன்றி செலுத்துகிறேன் என்று எழுதி நற்சாக்ஷிப் பத்திரமும் கொடுத்துவிட்டுப் போனார்களாம். இதை நாம் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனாலும், அந்த அம்மையார் எவ்வளவு பெரிய அந்தஸ்து உடையவரானாலும், அந்நிய நாட்டார் - அந்நிய மதஸ்தர்- நமது மதத்தையும் சாமிகளையும் பார்த்து பரிகாசம் பண்ணுகிறவர்கள்- நமது மதத்துக்கு விரோதமாய் பிரசாரம் செய்து நம்மவர்களை தங்கள் மதத்துக்குச் சேர்க்கிறதை ஆதரிப்பவர்கள்- நம்மை அஞ்ஞானிகளென்று சொல்லுகிறவர்கள் - நம்மை அடக்கியாண்டு நமது இரத்தத்தை உறிஞ்சி வாழும் ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படியிருக்க, இப்படிப்பட்ட ஒருவரை நாம் நமது கோவிலுக்குள் மரியாதை விருதுகளுடன் கூட்டிக் கொண்டு போய்க் காட்டி நற்சாக்ஷிப் பத்திரம் பெறுகிறோம். அதே கோவிலுக்குள் நமது நாட்டார், நமது மதஸ்தர், நமது தெய்வத்திலும் மதத்திலும் நம்பிக்கைக் கொண்டு கண்டு தரிசிக்க ஆசைப்படுகிறவர்கள் - நமது நாட்டின் க்ஷேமத்தையும், மதத்தின் க்ஷேமத்தையும் சதாகாலமும் கோருகிறவர்கள் - நீ கோயிலுக்குள் பிரவேசிக்கக் கூடாது; நீ தாழ்ந்த ஜாதி என்று உதைத்துத் தள்ளினாலும், உங்கள் மதத்தை விட்டு வேறு மதத்திற்குப் போகேன்; உங்கள் சுவாமியை விட்டு வேறு சுவாமியைக் கும்பிடேன் என்று சொல்லிக் கொண்டு நம்மை விட்டுப் போகாமல் நம்மையே வந்து கெஞ்சுகிறவர்கள் - நமது நாட்டின் க்ஷேமத்துக்கு உழைக்கிறவர்கள் ஆகிய ஒரு பெரிய சமூகத்தாரான நமது நாடார் சகோதரர்களை மாத்திரம், அதே மீனாக்ஷியம்மனுக்கு உன்னுடைய பணம் உதவும் ; உன்னுடைய பால் உதவும் ; உன் பேரால் கட்டளை அர்ச்சனை செய்து பணம் வாங்கிப் பிழைக்கலாம்; உன் வீட்டுக்குச் சமீபத்தில் மீனாக்ஷி வந்து நின்று கொண்டு தீபார்த்தனை செய்யலாம்; உன் மண்டபத்



RangaRakes tamilnavarasam.com

திற்கு மீனாக்ஷி வந்து மண்டபக் கட்டளைசெய்து கொள்ளலாம்; ஆனால் நீ கோவிலுக்கும் - கோவில் வெளிச்சுற்றுப் பிரகாரத்துக்குள்கூட நுழையக் கூடாது; நீ நுழைந்தால் எங்கள் சுவாமிக்குச் சக்தி குறைந்துபோகும், கோவில் கெட்டுப்போகும், இந்து மதம் போய்விடும், வேதத்திற்கும் சாஸ்திரங்களுக் கும் விரோதமாய்விடும் என்று சொல்லுவோமானால் நாமும் மனிதர்கள் தானா? தெய்வம் ஒன்றிருக்குமானால், சத்தியம் ஒன்றிருக்குமானால், தர்மம் ஒன்றிருக்குமானால் நம்மை அவைகள் வாழ விடுமா? நமது நாடார்கள் கோவிலுக்குள் போவதனால் இந்து மதம் கெட்டுப் போகுமானால், அதுவும் ஒரு மதமாகுமா? அம் மாதிரியான மதம் நமக்கு எதற்கு? நமது சகோதரர் களான நாடார்கள் கோவிலுக்குள் போவதனால் நமது சுவாமியின் சக்தி குறைந்து போகுமென்று சொல்லுவோமேயானால், அம்மாதிரியான சுவாமி யும் சுவாமியாகுமா? தன்னைக் கும்பிடாதவர்களும் பரிகசிக்கிறவர்களும் கோவிலுக்குள் வருவதினால் தன் சக்தி குறைந்து போகாது; தன் பக்தன் கோவிலுக்குள் வருவதனால் தன்னைக் கும்பிடுவத னால் தன் சக்தி குறைந்து போகுமென்பதானால், அம்மாதிரியான சுவாமியைக் கும்பிடுவதில் என்ன பிரயோஜனம்? வேதங்களும் சாஸ்திரங்களும் நாடார் சகோதரர்கள் கோவி லுக்குள் போய் தங்கள் தெய்வங்களை வணங்குவதற்கு அநுமதிக்கவில்லை யென்று சொன்னால், அவைகளை நாம் வேதமென்றும், சாஸ்திரமென்றும் சொல்லலாமா? வெள்ளைக்காரர்கள் எப்படி நம்மைப் பிரித்து வைத்து ஒருவ ருக்கொருவர் ஒற்றுமைப்படாமலிருக்கும்படி செய்து வைத்திருக்கும் தந்திரத் தால், 33 கோடி ஜனங்களுக்குள்ள தேசத்தை, துப்பாக்கியையும், பீரங்கியை யும் காட்டிக் கொண்டு அடக்கி ஆண்டு, நமது செல்வத்தைக் கொள்ளை யடித்து வருகிறார்களோ அதுபோலவே பிராமணர்களும் நம்மைப் பல ஜாதிகளாகப் பிரித்து ஒருவருக்கொருவர் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்கிற வித்தியாசங்களைக் கற்பித்து நம்மிலேயே ஒருவருக்கொருவர் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று சண்டையிட்டுக் கொள்ளும்படியாகச் செய்வித்து வேதம், சாஸ்திரம், புராணம், வழக்கம் என்கிற ஆயுதங்களால் நம்மை அடக்கி ஆண்டு தாழ்மைப்படுத்தி, நமது இரத்தத்தை உறிஞ்சிப் பிழைத்துக்கொண்டு வருகிறார்கள். இதை அறியாமல் பிராமணரல்லாத சகோதரர்களும் தங்கள் புத்தியை, தங்கள் சுயநலத்திற்காகவோ அறியாமையினாலோ பறிகொடுத்து விட்டு, வெள்ளைக்காரர்களின் அக்கிரமத்திற்குப் பிராமணர்கள் உதவி செய்வது போல் இம்மாதிரி பிராமணர்களின் அக்கிரமத்திற்குப் பிராமண ரல்லாதாரில் சிலரே இரகசியத்தில் உதவி செய்து கொண்டு தங்கள் மானத் தையும் வெட்கத்தையும் விட்டு பிராமணரல்லாதாருக்குத் துரோகம் செய்து வருகிறார்கள். இம்மாதிரி குணம் நமது சமூகத்திலிருந்து என்றைக்கு விலகுமோ அன்றுதான் நமது நாடு சமத்துவமடையும்; சுயமரியாதை யுமடையும்.

**குடி அரசு - கட்டுரை - 17.01.1926**



# விஷமப் பிரசாரம் - கதர் பக்தி

டாக்டர் நடேசன் சேலத்தில் கதர்ச் சாலையைத் திறந்து வைத்ததினால் பிராமணர்கள் கட்சியான சுயராஜ்யக் கட்சியாருக்குப் பெரிய நடுக்கம் ஏற்பட்டுப் போய்விட்டது. ஏனென்றால் கதரின் பேரைச் சொல்லிக் கொண்டு, தாங்கள் வோட்டர்களை ஏமாற்றுவது போல, பிராமணரல்லாத கட்சியினரும் அதைப் பின்பற்றி விடுவார்களோவெனப் பயந்து கொண்டு ஸ்ரீமான் சத்திய மூர்த்தியும் அவர் கோஷ்டியாரும் ஒவ்வொரு பிரசங்கத்திலும், "டாக்டர் நடேச முதலியார் அந்நிய ஆடையை அணிந்து கொண்டு கதர்ச் சாலையைத் திறந்து வைத்தார். இது பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காகச் செய்த வேலை"யென்று ஓயாமல் பேசியும் வருகிறார்கள்; எழுதியும் வருகிறார்கள்.

இப்படிச் செய்வது வெறும் விஷமப் பிரசாரமே தவிர, இதில் யோக்கி யதை கொஞ்சமுமில்லை. முதலாவது, டாக்டர் நடேச முதலியார் கதர்ச் சாலையை திறந்து வைக்கும்போதே டாக்டர் வரதராஜுலு நாயுடு ஓர் சீட்டில் நீங்களேன் கதர் உடுத்தவில்லை என்று எழுதி அவரைக் கேட்டார். அதற்கு பதிலாய் டாக்டர் நடேச முதலியார் பேசுகையில், தான் அணிந்திருப்பது கதர் தானென்றும், தங்களுடைய கொள்கைப்படி பட்டும் உள்நாட்டு யந்திரத்தால் செய்யப்பட்ட நூலைக் கொண்டு உள்நாட்டு நெசவுக்காரர்களால் நெய்யப் பட்ட துணியும் கதர் என்று பாவிப்பதாகவும், அந்தக் கொள்கைப்படியே நான் இப்போது உள்நாட்டுப் பட்டாடைதான் அணிந்திருக்கிறேனென்றும் சொன்னார். மிதவாதிகளும் சுயராஜ்யக் கக்ஷியாரும் இதே கொள்கையை உடையவர்கள்தான். அதற்குக் காரணமாகத்தான் சுயராஜ்யக் கக்ஷியார், காங்கிரஸில்கூட கதர் ஒரு நிர்ப்பந்தமாயிருக்கக் கூடாதென்று ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். நேற்று பெல்காம் காங்கிரஸிலும், கான்பூர் காங்கிர ஸிலும் ஸ்ரீமான்கள் ஏ. ரெங்கசாமி ஐயங்கார், சத்தியமூர்த்தி இவர்களும், அபயங்கர், ஜெயகர், மூஞ்சி இவர்களும் முறையே அந்நியநாட்டு நூலும், ஜரிகையும் கொண்ட வஸ்த்திரத்தைத்தான் அணிந்து கொண்டிருந்தார்கள். தாங்கள் வோட் பிரசாரம் செய்யும் போது மாத்திரம் தங்கள் கதருக்கு தங்கள் இஷ்டம் போல் வியாக்கியானம் செய்து கொள்ளலாம்; மற்றவர்கள் மாத்திரம் அவர்கள் உண்மையான கொள்கையைப் பின்பற்றுவதே பெரிய தப்பிதமாகக் கருதப்படுகிறது. இவ்வித சூழ்ச்சியால் பிராமணரல்லாதாரை இந்தப் பிராமணர் கள் எவ்வளவு காலத்திற்கு ஏமாற்றலாமென்றிருக் கிறார்களோ தெரிய வில்லை.

**குடி அரசு - கட்டுரை - 17.01.1926**



RangaRakes tamilnavarasam.com

# திருவாங்கூரில் மறுபடியும் சத்தியாக்கிரகம்

## தயார் - தயார்

## தமிழ்நாடு தனது கடமையைச் செய்யத் தயாராயிருக்கிறது

## ( டாக்டர் M.E.நாயுடு எழுதுகிறார்)

திருவாங்கூர் சமஸ்தானத்தில் புண்ணிய க்ஷேத்திரங்களாக பல ஸ்தலங்கள் இருக்கின்றன. அவைகளில் வடக்கே வைக்கமும், மத்தியில் திருவனந்தபுரமும், தெற்கே சுசீந்திரமும் முக்கிய க்ஷேத்திரங்களாகும். வைக்கம் சத்தியாக் கிரகத்தின் பயனாய் வைக்கம் கோயிலைச் சுற்றியுள்ள ரோட்டுகள் ஜாதி உயர்வு தாழ்வு இன்றி சகல பிரஜைகளுக்கும் சமமாய் உபயோகிக்க விட்டாய் விட்டது. மற்றும் சில ரோட்டுகளை சமமாய் உபயோகிக்க அரசாங்கத்தார் வேண்டிய உதவி செய்திருக்கிறார்கள், ஆதலால் திருவாங்கூரிலும், சுசீந்திரத் திலும், கோயிலைச்சுற்றியுள்ள பொது ரோட்டுகளில், மகாராஜாவின் எல்லாப் பிரஜைகளுக்கும் நடக்க உரிமை வேண்டுமென்று முயற்சிகள் நடந்து வரு கின்றன. இந்த தை மீ 5-ந் தேதி மாலை 4 மணிக்கு சுசீந்திரம் கோவிலைச் சுற்றி சகல இந்து ஜாதியாரையும் அழைத்துச் செல்லுவதாய் தீர்மானம் செய்திருக்கிறது. இதைப்பற்றிச் சர்க்காருக்கும், கோவில் அதிகாரிகளுக்கும், மார்கழி மீ 28-ந் தேதி முன்னறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. உரிமை தடுக்கப்பட்டால் சத்தியாக்கிரகம் நடத்தவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**நமது குறிப்பு :-**

இம்மாதிரி நாகர்கோவிலைச் சேர்ந்த கோட்டார் டாக்டர் எம். பெருமாள் நாயுடு அவர்கள் நமக்கு எழுதியிருக்கிறார். மழைவிட்டும் தூற்றல் விடவில்லை என்று சொல்லுவது போல் வைக்கத்தில் சத்தியாக்கிரகம் செய்து தெருவில் நடக்கும் உரிமை பெற்றால், அது வைக்கத்திற்கு மாத்திரம்தான் செல்லும்; மற்ற இடங்களுக்குச் செல்லாது என்கிற வியாக்கியானம் செய்து கொண்டு, அங்குள்ள வர்ணாசிரமிகள் மறுபடியும் உபத்திரவம் செய்வதாய்த் தெரிகிறது. வைக்கம் சத்தியாக்கிரகம் சம்பந்தமாய் திருவாங்கூர் அரசாங்கத்தார் எவ்விதமான உத்திரவும் போடவேயில்லை. வைக்கம் சத்தியாக்கிரகத்திற்குச் சர்க்காரர் செய்த தெல்லாம் தெருவில் ஜனங்களைத் தடுக்க நிறுத்தியிருந்த போலீஸ்காரர்களை எடுத்துவிட்டதுதான் அவர்கள் செய்த வேலை. இதற்காக ஓர் உத்திரவு போடும்படி சர்க்காரைக் கேட்டதற்கு அவர்கள் “தாங்கள் வெகு வருஷங்களுக்கு முன்பதாகவே, பொது ரஸ்தாக்களும், பொதுக்குளங்களும் ஜாதிமத வித்தியாசமில்லாமல் பொது ஜனங்கள் அநுபவிக்கத்தக்கது என்று உத்திரவு போட்டிருக்கிறோம்” என்று மறுமொழி சொல்லிவிட்டார்கள். ஆதலால், இப்பொழுது சர்க்காரார் பேரில் குற்றம் கூற இடமில்லை. பிராமணர்களொழிந்த, நாயர் முதலிய பிராமணரல்லாத உயர்ந்த ஜாதியாரென்று சொல்லப்படுகிறவர்களும், தங்கள் வகுப்பு மகாநாடுகளின் மூலமாக பொது ரஸ்தாக்களிலும், பொதுக்குளங்களிலும், சகல இந்துக்களும் தாராளமாய் நடமாடலாமென்கிற தீர்மானத்தையும் ஏகமனதாய்த் தீர்மானித்திருக்கிறார்கள். ஆதலால், இப்பொழுது சம உரிமைக்கு இடைஞ்சலாயிருப்பவர்கள் பிராமணர்களென்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இம்மாதிரி ஒவ்வொரு காரியங்களுக்கும் சம உரிமைக்கு விரோதமாய் நின்று கொண்டு மனிதர்களைக் கொடுமைப்படுத்தும் இந்த ஜாதியார், எத்தனை நாளைக்கு இப்படியே வாழக் கூடுமென்று நினைக்கிறார்களோ தெரியவில்லை. தமிழ்நாட்டுச் சகோதரர்களே! சுசீந்திரத்தில் டாக்டர் எம். பெருமாள் நாயுடு அவர்கள் எழுதியிருப்பதுபோல் சத்தியாக்கிரகம் செய்யவேண்டிய அவசியமேற்படுமேயானால், வைக்கம் சத்தியாக்கிரகத்துக்கு நமது கடமையைச் செய்தது போலவே, சுசீந்திரம் சத்தியாக்கிரகத்துக்கும் நாம் தயாராயிருக்க வேண்டும். தமிழ்நாட்டின் சார்பாக டாக்டர் எம். பெருமாள் நாயுடு அவர்களுக்கு, தமிழ்நாடு தனது கடமையைச் செய்யத் தவறாது என்று வாக்குக் கொடுக்கிறோம்.

**( ப - ர். )**

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 17.01.1926**



RangaRakes
tamilnavarasam.com

# கதர் பரீக்ஷையில் தவறு

## எல்லாம் நன்மைக்கே

அந்தணர்பேட்டை கதர் விஷயமாய் கதர் போர்டு அதிகாரிகள் பரீக்ஷை செய்துப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏனென்றால், அவ் விடம் தயார் செய்யப்பட்ட கதர்த் துணிகளில் சிலது நூல் சன்னமாயும் ஒரே மாதிரியாயும் இருந்ததோடு, அதிகக் கெட்டியாகவும், பார்வைக்கு மில் துணி போலவும் இருந்தது. இவ்வளவு நல்ல துணி சுத்தமான கதர் துணியாய், இவ்வளவு குறைந்த அதாவது சாதாரண கதர்த் துணி விலைக்கு கொஞ்சம் ஏறக்குறைய இருக்குமா என்கிற சந்தேகத்தின் பேரில் அதை அநுபோக சாலிகளான இரண்டொருவருக்கு பரீக்ஷைக்காக அனுப்பப்பட்டது. பரீக்ஷை யில், பரீக்ஷகர்கள் அது கதராயிருக்க முடியாதென்று அபிப்ராயப்பட்டதால், உடனே அதற்கு கதர் போர்டாரால் அளிக்கப்பட்டிருந்த நற்சாக்ஷிப் பத்திரத்தை வாப்பீசு அனுப்பும்படி எழுதிவிட்டு பத்திரிகைகளுக்கும் அந்தணர்பேட்டை கதர் சுத்தமான கதர் அல்ல என்பதாக அறிவிக்கப்பட்டு விட்டது. பிறகு அந்தணர்பேட்டைக் கதராலயத்தார் தங்கள் ஆவலாதியைத் தெரிவித்துக் கொண்டதன் பேரில், காரியதரிசி ஸ்ரீமான் ராமநாதன் நேரில் போய் பார்த்து அந்தணர்பேட்டைக் கதர் சுத்தமான கதர் என்றும், அதில் எவ்வித வித்தியாசமும் இல்லை என்றும் மனப்பூர்வமாய் அறிந்ததின் பேரில் பரீக்ஷையில் தவறிப் போனதற்கும் அந்தணர்பேட்டை கதராலயத்திற்கு, கெட்டபேர் ஏற்படவேண்டி வந்ததற்கும் தாம் மிகவும் வருந்தி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதை முடிவில் பிரசுரித்திருக்கிறோம். கதர் போர்டார் பரீக்ஷையில் தவறிவிட்டதினால் முடிவாக அந்தணர்பேட்டை கதருக்கு உண்மையில் நன்மை ஏற்பட்டதே தவிர, கெடுதி ஒன்றும் ஏற்படவில்லை. எப்படி என்றால், தமிழ்நாடு கதர்போர்டார் தமிழ்நாட்டில் சுமார் முப்பது நாற்பது கதர்ச் சாலைகளுக்கு மேல் சுத்தமான கதர் என்பதாக நற்சாக்ஷிப் பத்திரம் கொடுத்திருந்தபோதிலும்,அவையெல்லாம் உத்தேசத்தின் பேரிலும், மனிதர்களுடைய யோக்கியதையின் பேரிலும், அக்கம் பக்கம் விசாரித்ததின் பேரிலும், ஆள்களை விட்டு அறிந்து வரச்சொல்லுவதின் பேரிலும்தான் நம்பி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தணர்பேட்டைக்கும் முன் இப்படித்தான் கொடுக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது காரியதரிசி ஸ்ரீமான் ராமநாதன் அந்தணர்பேட்டைக்கு நேரில் போய் ஒவ்வொரு தறிகளையும் ஒவ்வொரு



ராட்டைகளையும் வேலை செய்யும் போது நேரில் பார்த்தும், கணக்குகளை ஆதியோடந்தமாய் பரிசோதித்துப் பார்த்தும் பல வழிகளிலும் சந்தேகமற திருப்தியடைந்து மறுபடியும் புதிதாக நற்சாக்ஷிப் பத்திரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் கதர் போர்டாரால் நற்சாக்ஷிப் பத்திரம் பெற்ற சுமார் 30, 40 கதர்ச்சாலைகளில் ஒன்றாவது, அந்தணர்பேட்டை கதர்ச் சாலைபோல் அவ்வளவு தூரம் பரீக்ஷை செய்து திருப்தி அடைந்து கொடுக்கப்பட்டிருக்காது என்றே நினைக்கிறோம். ஆதலால் அந்தணர் பேட்டை கதர்ச் சாலையை கதர் போர்டார் சந்தேகப்பட்டு அதன் நற்சாக்ஷிப் பத்திரத்தை ஒரு தடவை ரத்து செய்து மறுபடியும் கொடுத்ததானது ஷை கதர்ச் சாலையானது தனது பரிசுத்தத்தைப்பற்றி நெருப்பில் குளித்து வெளியில் வந்தது போல் ஆகிவிட்டது. எதுவும் நன்மைக்காகத்தான் என்று பெரியவர் கள் சொல்லும் வாக்கு இது விஷயத்தில் சரியாய் பலித்திருக்கிறது.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 17.01.1926**



RangaRakes tamilnavarasam.com

# ‘சுதேசமித்திர’னின் ஞானோதயம்

ஜூலை மீ 16 உ “மித்திர”ன் **“இந்து மத தர்ம ஸ்தாபனங்கள் சரியாக நடக்கும்படி செய்யத்தக்க சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டு மென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்”** என்று எழுதியிருக் கிறான். மதவிஷயத் தில் அரசாங்கத்தார் பிரவேசிக்கக் கூடாது என்று எழுதி இதுவரை பாமரர்களை ஏமாற்றி வந்த பார்ப்பன மித்திரனுக்கு இப்போதாவது சர்க்காரால் சட்டம் ஒன்று செய்யப்பட வேண்டும் என்று சொல்லும்படியான புத்தி வந்ததற்கு நாம் மகிழ்கிறோம். ஆனால் இந்தப்புத்தி தானாகத் தோன்ற வில்லை. ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடுகாரும், ஈ.வெ.இராமசாமி நாயக் கரும் தேவஸ்தானச் சட்டத்தை ஆதரித்தும் அதை எதிர்க்கும் பார்ப்பனர் களின் சூழ்க்ஷியைப் பொது ஜனங்கள் அறியும்படி செய்ததின் பலனாகவும் இதை ஒப்புக்கொள்ளாவிட்டால் தங்களுக்கு ஓட்டுக்கிடைக்காமல் போகு மோ என்கிற பயமும் பார்ப்பன மித்திரனான “சுதேசமித்திர”னை “இந்துமத ஸ்தாபனம் சரியாக நடக்க ஒரு சட்டம் அவசியம்” என்று சொல்லும்படி செய்து விட்டது. ஆனால் “மித்திரன்” அதின் கீழாகவே “இந்த சட்டமானது தர்மங்கள் சரியாக நடைபெறும்படி செய்வதற்கு மாத்திரம் உத்தேசிக்கப் பட்டதாக இருக்க வேண்டும்” என்கிறான். அப்படியானால் இப்போதிருக் கும் சட்டம் கோயில்களில் இருக்கும் “கல்லுசாமி”களை யெல்லாம் பிடுங்கி எறிந்துவிட்டு, அந்த ஸ்தானத்தில் ஸ்ரீமான்கள் பனகால் ராஜாவும் வரத ராஜுலு நாயுடுகாரும், இராமசாமி நாயக்கரும் உட்கார்ந்து கொண்டு இந்தப் பார்ப்பனர்களைக் கொண்டு அபிஷேகமும் பூஜையும் செய்யும்படி கேட்பார்கள் என்று “மித்திரன்” உண்மையிலேயே பயப்படுகிறானா அல் லது இந்த முகாந்திரத்தைச் சொல்லி அதை ஒழிக்க சூழ்க்ஷி செய்கிறானா என்பதை வாசகர்கள் உணர்வார்களாக.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 18.07.1926**



# ஸ்ரீமான் C.S.இரத்தினசபாபதி முதலியார் அவர்களுக்கு ஒரு பகிரங்க கடிதம்

ஐயா, தாங்கள் தென் இந்தியா ரெயில்வே கம்பெனிக்கு யோசனை சொல்லும் கமிட்டியில் ஒரு அங்கத்தினராயிருப்பது பற்றி மிகவும் சந்தோ ஷமே. ஆனால், அதில் தாங்கள் இருந்து கொண்டு செய்கிற வேலைகள் ஒன்றும் புதிதாயாவது, முக்கியமானதாகவாவது தெரியவில்லை.

அதாவது, கக்கூஸ் ரிப்பேர் செய்வதும், வண்டியில் சிற்றுண்டி வழங்கு வதும், வண்டியின் நேரங்களை மாற்றுவதுமான காரியங்கள் ஆகிய எதுவும் பொது ஜனங்களுக்கு விசேஷ நன்மை எதுவும் செய்துவிடாது. தங்கள் காலத்தில் ஏதாவது ஒரு நிரந்தரமான நன்மை செய்ததாயிருக்க வேண்டு மானால் - பெரும்பான்மையான ஜனங்களின் உணர்ச்சிகளைத் தாங்கள் மதித்தவர்களாயிருக்க வேண்டுமானால் - ஒரு காரியம் செய்தால் போதும். அதைச் செய்துவிட்டு தங்கள் வேலையை ராஜீநாமா செய்துவிட்டாலும் சரி அல்லது அந்தப்படி செய்ய தாங்கள் பிரயத்தனப்பட்டு முடியாமல் போனால், தாங்கள் ராஜீநாமா கொடுத்துவிட்டு வந்துவிட்டாலும் சரி. அதாவது, தென் இந்தியா ரெயில்வேகாரர்கள் ரெயில்வே இந்து பிரயாணிகளுக்கு உணவு வசதிக்காக முக்கியமான ஸ்டேஷன்களில் கட்டிடம் கட்டி ஓட்டல் வகை யறாவுக்கு பிராமணர்களுக்கு கொடுத்து இருக்கிறார்கள். அவைகளை வாங்கி ஓட்டல் வைத்திருக்கும் பிராமணர்கள் சரிபகுதி இடத்தை ஒதுக்கி பிராமணர் களுக்கு மாத்திரம் என்று போர்டு போட்டு விட்டு, மற்ற பகுதியில் எச்சிலை போடவும், கை கழுவவும் இடம் செய்வதோடு, அந்த இடம் பிராமணரல் லாதாருக்கு என்றும், சில இடங்களில் சூத்திரர்களுக்கு என்றும் போர்டு போட்டு விடுகிறார்கள். இது நியாயமா? 100-க்கு $3\frac{1}{2}$ பேர் உள்ள பிராமணர் களுக்கு பாதி இடம் 100-க்கு $96\frac{1}{2}$ பேர் உள்ள பல வகுப்பாரடங்கிய பிராமண ரல்லாதாருக்கு பாதி இடம் என்றாய்ப் பிரிப்பது ஒழுங்கானதாகுமா? எதற்காக பொது ஸ்தலத்தில் ஒரு வகுப்பாருக்கு மாத்திரம், அதுவும் 100-ல் $3\frac{1}{2}$ பேருக்கு தனி இடம் ஏற்படுத்த வேண்டும்? வெள்ளைக்காரர் தமக்கு மாத்திரம் தனி வண்டி ஏற்படுத்திக் கொள்வதற்கு நாம் எவ்வளவு ஆக்ஷேபணை செய்கி றோம். அல்லாமலும் அது நமக்கு எவ்வளவு அவமானமாயிருக்கிறது. அப்படியிருக்க இது ஏன் தங்களுக்குத் தோன்றுவதில்லை? பிராமணர்கள் தனியாய்ச் சாப்பிடுவதால் நமக்குக் கவலையில்லை. அந்தப்படி அவர்கள்



RangaRakes tamilnavarasam.com

சாப்பிட வேண்டும் என்று நினைப்பதும், அதற்காக பிராமணருக்கு மாத்திரம் என்று போர்டு போடுவதும் எதை உத்தேசித்து? நம்மை தாழ்ந்த ஜாதியார் என்று எண்ணியல்லவா? இது நமது ஜாதி இழிவைக் குறிக்கும் ஒரு நிரந்தர மான அடையாளமும் ஆதாரமுமல்லவா? இவ்வித பிரிவினைகளும் போர்டுகளும் இருப்பது சுயமரியாதை உள்ள ஒருவன் இம்மாதிரியான போர்டுகளைப் பார்க்கிறபோது அவனுடைய இரத்தம் துடிக்குமா? துடிக் காதா? மனம் பதறுமா? பதறாதா? இதற்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? ஆத லால், தயவு செய்து அடுத்த ஆலோசனை சபைக் கூட்டத்தில் இதைப் பற்றி ஒரு பிரேரேபனை கொண்டு போக வேணுமாய்க் கோருகிறேன். அதாவது:-

“தென்இந்திய ரெயில்வே ஸ்டேஷன்களில் உள்ள ஒவ்வொரு போஜன சாலைகளிலும் பிராமணர்க்கு மட்டும் என்றும், பிராமணரல்லா தாருக்கு என்றும் இடங்களை பாகுபடுத்தி போர்டு போடுவது, பிராமணரல்லா தார் பிறவியிலேயே தாழ்ந்தவர்கள் என்பதைக் காட்டுவதற்கு ஏற்பட்ட அறிகுறி போல் இருப்பதோடு பிராமணரல்லாதார் சுயமரியாதைக்கு விரோத மாய் இருப்பதாலும் அதைப் பார்க்கும் போதெல்லாம் பிராமணரல்லாதார் மனம் புண்படுவதாலும் இந்த பாகுபாட்டை ஒழித்து சமமாய் நடத்தும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.”

**– சித்திரபுத்திரன்**

**குடி அரசு – கடிதம் – 17.01.1926**



## பிறப்புரிமை
## சுயராஜ்யமா? சுயமரியாதையா?

நமது நாட்டில் உள்ள பொதுமக்கள் ஒருவருக்கொருவர் தங்கள் சூழ்ச்சிகளாலும் தந்திரங்களினாலும் ஒருவரையொருவர் இழிவுபடுத்தியும் அடிமைப்படுத்தியும் கொடுமைச் செய்து வருவதின் பலனாய், அந்நிய அரசாங்கத்தின் கீழ் ஆளப்பட்டு துன்பமடைந்து வருகிறோம். இத்துன்பம் நமக்கு ஒழிய வேண்டுமானால் நாம் பிறரைச் செய்யும் துன்பம் ஒழிய வேண்டும். அந்நிய அரசாங்கத்தார் நம்மைச் செய்யும் கொடுமையை ஒரு தட்டில் வைத்து, நம் நாட்டில் சிலர் நமக்குச் செய்யும் கொடுமையையும் நம்மைக் கொண்டு மற்றவர்களைச் செய்யச் செய்யும் கொடுமையையும் ஒரு தட்டில் வைத்துத் தூக்கிப் பார்த்தால் அரசாங்கத்தின் கொடுமையை விட நம்மவர்களின் கொடுமையே பெரிய பளுவானதாயிருக்கும்.

நமது நாட்டில் சில வேஷக்காரர்கள் சுயராஜ்யம் என்கிற பதமும், சுதந்திரம் என்கிற பதமும், உரிமை என்கிற பதமும், வாழ்க்கையை உத்தே சித்து வாயளவில் பேசி, பொது ஜனங்களை ஏமாற்றி, நகத்தில் அழுக்குப் படாமல் காலங்கழிக்கப் பார்க்கின்றார்களேயல்லாமல், அதற்காகச் செய்ய வேண்டிய காரியங்களில் தங்களுக்குச் செய்ய யோக்கியதை இல்லாவிட்டா லும் வேறு யாராவது செய்தாலும் தங்களுக்கு யோக்கியதை குறைந்து போகுமேயென்கிற பயத்தால் அதற்கு வேண்டிய முட்டுக் கட்டைகளைப் போட்டு தாங்களே முன்னணியிலிருக்க வேண்டிய மாதிரியில் ராஜீயவாதிக ளென்னும் பேரால் வாழ்ந்து வருகின்றார்கள். நமது நாட்டுக்கு முக்கியமாக வேண்டியது சுயராஜ்யமா? சுயமரியாதையா?

சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்று சொல்லி ஜனங்களை ஏமாற்றிப் பிழைக்கின்ற அநேகர், சுயராஜ்யம் இன்னதென்பதைப் பற்றி ஒரு வார்த்தை யாவது சொன்னவர்களல்ல. அதை ஜனங்கள் அறியாதிருக்கும்படி எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்து வருகின்றார்கள். மகாத்மா காந்தி அவர்கள் சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்பாக சென்னைக்கு வந்திருந்த சமயம் ஓர் கூட்டத்தில் பேசும் போது, “என்னுடைய சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள யோக்கியதை இல்லாமல் இருக்குமானால், நான் சுயராஜ்யத்தை விரும்புவதில் அர்த்தமே இல்லை” யென்று சொல்லியிருக்கிறார். மனித னுக்கு அவனுடைய சுயமரியாதை என்னும் தன்மானத்தைக் காப்பாற்றிக்



RangaRakes tamilnavarasam.com

கொள்ளுவதுதான் பிறப்புரிமையேயல்லாமல், அரசியலான ராஜீயமென்னும் சுயராஜ்யம் ஒருக்காலும் பிறப்புரிமை ஆகமாட்டாது. ராஜீய பாரமானது ஒரு தொண்டு. வீதி கூட்டுவதும், விளக்கு போடுவதும், காவல் காப்பதும் எப்படி சேவையாயிருக்கின்றதோ, அதுபோலவே, ராஜீய பாரமென்பதும் ஒரு சேவைதான். தேசத்தில் அவனவனது வாழ்க்கைக்கும் அல்லது பொது நன்மைக்கும் எப்படி பல தொழில்கள் இருக்கின்றனவோ, அதுபோல ராஜீய பாரமென்பதும் ஒரு தொழில்தான். இத் தொழிலை இன்னார்தான் செய்ய வேண்டுமென்றாவது, இன்னார்க்குத் தான் உரிமை என்றாவது "கடவுள்" யாருக்கும் பிரித்துக் கொடுக்கவே இல்லை. மனிதராகப் பிறந்தவர்கள் எல்லோரும் ஊமை, கூன், குருடு, செவிடு உட்பட இதற்கு அருகர்கள்தான். ஆதலால், இவ்வுரிமையை எல்லோரும் சமமாய் அடைய வேண்டியதுதான். ஆனபோதிலும், மனித ஜென்மத்திற்கு இக்கேவல ஆட்சி பிறப்புரிமை என்று சொல்ல முடியாது. மனிதனுக்கு உண்மையான பிறப்புரிமை என்று சொல்வது அவனது சுயமரியாதையும் பரோபகார மென்பதுமேதான்.

சுயமரியாதை இல்லாத ஒரு மனிதனுக்கு சுயராஜ்யம் அவசியமே இல்லாததாகும். சுயராஜ்யம் இல்லாத எந்த மனிதனுக்கும் கூட சுயமரியாதை என்பது அவசியமானதேயாகும். சுயமரியாதை அற்றவனைப் பிணமென்று தான் சொல்லவேண்டும். அப்படிப் பார்க்கின்றபோது நமது தேசத்தில் சுயமரியாதை அற்று பூச்சி புழுக்கள் போலும், நாய்கள் பன்றிகள் போலும், பிசாசுகள் அரக்கர்கள் போலும் வாழும் ஜனங்கள் கோடிக் கணக்காய் இருக்கின்றனர். லக்ஷக்கணக்காய் தினம் பிறக்கின்றனர். இச்சமூகத்திற்கு சுயராஜ்யம் எதற்கு?

உதாரணமாக, மனித உடல் தாங்கிய ஒருவன் அவனுடைய தெய்வத்தைக் காண, தரிசிக்க உரிமையற்ற ஒருவன் எப்படி சுயமரியாதையுள்ளவனாவான். அந்த சமூகத்திற்கு சுயராஜ்யம் எதற்கு? எந்த ராஜ்யமிருந்தால்தான் அவர்களுக்கு கவலையென்ன? இம்மாதிரி ஒரு சமூகத்தாரை சுயமரியாதை அற்று ஒடுக்கி வைத்திருக்கும் ஒரு ராட்சஸ சமூகத்தார் சுயராஜ்யமடைவது மற்ற சமூகங்களுக்கு நன்மை தருமா? அல்லது ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்கும் சேர்ந்துதான் சுயராஜ்யம் தேடுவது என்று சொல்லுவோமானால் அவர்கள் தங்கள் தெய்வங்களைக் காணவும் தரிசிக்கவும் முடியாத படியும், தெருவில் நடக்கவும், கண்ணில் தென்படவும் முடியாத படியும் வைத்து இருப்பதற்குக் காரணம் சுயராஜ்யம் இல்லாமைதானா?

அந்நிய ராஜ்யம் நமது ஜனங்களை இம்மாதிரி கொடுமையாக நடத்தும்படி நமக்குச் சொல்லவேயில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டோ அந்நிய ராஜீயபாரங்கள் நமது நாட்டிற்கு ஏற்படாமலிருக்குமேயானால், இந்த சுயமரியாதை இன்னதென்று உணர்வதற்குக் கூட நமக்குச் சௌகரியம் கிடைத்திருக்காது. நமது நாட்டு மக்களின் சுயமரியாதைக்கு விரோதமாயிருப்பது, நம் நாட்டார் சிலரின் ஆதிக்கத்தினாலேயல்லாமல், அந்நிய அரசாங்கத்தின் ஆதிக்கத்தினாலல்ல. ஆனால், நமது நாட்டில் பெரும்பாலோர் சுயமரியாதை அற்றிருக்கும் தன்மை, அந்நிய அரசாங்கத்தாருக்கு அநுகூலமாயிருப்பதினால் இக்கொடுமைகளைப் போக்க அவர்களுக்கு அதிகக் கவலையில்லை.



ஆனபோதிலும், அவர்களுடைய தத்துவம் ஒரு நாளும் இவ்வித சுயமரியாதைக் கேடுக்கு அநுகூலமாய் இருப்பதில்லை. ஒரு தேசம் சுதந்திரமடைய வேண்டும் என்ற உண்மையான கவலை இருக்குமானால், அக் கவலைக்கு அவர்கள் அருகர்களா? இல்லையா வென்பதை பரீக்ஷிக்க வேண்டுமானால், அவர்கள் சுயமரியாதை உள்ளவர்களா? இல்லையா வென்பதிலிருந்துதான் அவர்களுடைய அருகதை வெளிப்படும். அஃதில்லாமல் சுதந்திரத்திற்காக செய்யப்படும் எவ்வித முயற்சிகளும் தனிப் பட்டவர்கள் வயிற்றுப் பிழைப்புக்கும், வாழ்க்கை நலத்திற்கும், சுயமரியாதை இல்லாத நிலைமையை பலப்படுத்தவும்தான் ஆகுமேயல்லாமல் வேறொன்றுக்கும் உதவாது. அதை உத்தேசித்தேதான் மகாத்மா காந்தியும், சுதந்திரம் பெறுவதற்காக ஏற்பட்ட திட்டங்களே சுயமரியாதை அடைவதற்கான திட்டங்களாகப் போட்டு விட்டார். தீண்டாமை ஒழிய வேண்டும் என்று சொல்லுவதும் கதர் அணிய வேண்டும் என்று சொல்லுவதும் நம் நாட்டு மக்களின் சுயமரியாதையின் ஜீவ நாடிகள். ஒரு மனிதனை மற்றொரு மனிதன் தெருவில் நடக்கவும், பக்கத்தில் வரவும், கண்ணில் தென்படவும், அவனது தெய்வத்தைக் கண்டு தரிசிக்கவும் முடியாமற்படி வைத்திருக்கிற வரையில் சுயமரியாதை இல்லையென்றும், அப்படிப்பட்டவனுக்கு சுதந்திரமென்பது ஒரு மனிதன் தன் உடலிற் போதிய சக்தியிருந்தாலும், ஜீவனத்துக்கு வேண்டிய அளவு தொழிலில்லாமல் வைத்திருப்பதானால், அவன் எவ்விதத்திலும் சுயமரியாதையோடு வாழ முடியாதென்றும், ஜீவனத்திற்காக எப்படியாவது தன்னுடைய சுயமரியாதையை இழக்கத்தான் நேரிடுமென்றும் கருதியே, பெரும்பான்மையான ஏழைகளுக்கு ஜீவனோபாயத்திற்கு ஆதாரமான கதரையும் வற்புறுத்தி வந்தார். மற்றவர்களை அடிமைப்படுத்தி வைப்பதினாலேயே வாழ முடியும் என்கிற நிலைமை யடைந்து நமது நாட்டில் உள்ள ஒரு சமூகத்தார், இத்திட்டத்தை அடியோடு ஒழிக்க பழையபடி தங்களுடைய ஆதிக்கத்தைப் பலப்படுத்திக்கொள்ளத் தகுந்த மாதிரியில் ஜெயம் பெற்று வருகிறார்கள்.

இந்நிலைமையில் "சுதந்திரம்" "சுயராஜ்யம்" "உரிமை" என்கிற வார்த்தைகள் தேச ஜனங்களுக்குப் பெரிய இழிவுக்கும் கொடுமைக்கும் ஆதாரமானதுதான். ஆதலால், நமது தேசம் உண்மையான உரிமை அடைய பாடுபட வேண்டுமானால் மக்களின் சுயமரியாதைக்காகத்தான் முதலில் பாடு பட வேண்டும்.

**குடி அரசு - தலையங்கம் - 24.01.1926**



RangaRakes tamilnavarasam.com

# தென் ஆப்பிரிக்கா பிரதிநிதிகள்

தென் ஆப்பிரிக்காப் பிரதிநிதிகள் நாளது 24-ந் தேதி கோயமுத்தூர் ஜில்லாவாகிய நமது ஜில்லாவுக்கு வரப்போவதாக அறிந்து மிகவும் சந்தோஷிப்பதோடு, மனப் பூர்த்தியாய் வரவேற்கிறோம். தென் ஆப்பிரிக்காக் கவர்ன்மெண்டார் தென் ஆப்பிரிக்காவிற்குக் குடியேறின இந்திய சகோதரர்களுக்குச் செய்து வரும் ஆணவம் பொருந்திய கொடுமைகள் சுயமரியாதையுள்ள சமூகத்தாருக்குச் சகிக்க முடியாதிருப்பினும் - உயிரைத் துறந்தாவது தங்களுடைய சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியமுள்ளதாயிருப்பினும், இக்கஷ்டத்தை நீக்குவதற்குத் தென் ஆப்பிரிக்கா இந்தியர்கள் தமிழ்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்வதில் காதறுந்த ஊசியளவு பிரயோஜனமாவது உண்டாகுமாவென்பது நமக்குச் சந்தேகமாகவேயிருக்கிறது. ஆயிரம் தென்னாப்பிரிக்கா கவர்ன்மெண்டைக் கசக்கிப் பிழிந்து சத்து எடுத்ததற்குச் சமானமான தமிழ்நாட்டுப் பிராமணர்கள் சிலர், அதாவது, தமிழ் நாட்டில் தங்களுக்கு முந்தியுள்ள பூர்வீகக் குடிகளாகவும் தங்கள் நாட்டாராகவும் இருக்கிற ஜனங்களைத் தொடக்கூடாதவர்கள், தெருவில் நடக்கக் கூடாதவர்கள், கண்ணில் தென்படக் கூடாதவர்கள், அவர்கள் தெய்வத்தைக் காணக் கூடாதவர்கள், அவர்கள் மத - வேத மென்பதைப் படிக்கக் கூடாதவர்கள் என்று கொடுமைப்படுத்தி வைத்திருக்கிற ஒரு கூட்டத்தார் - இக் கொடுமைகளுக்கு ஆதாரமாக ஸ்மிருதிகளையும், சாஸ்திரங்களையும், புராணங்களையும் சட்டமாக வைத்துக் கொண்டிருக்கிற ஒரு கூட்டத்தார்- இக்கொடுமைகளை ஒழிக்கப் பாடுபட்ட மகாத்மா காந்தி போன்றவர்களை மூலையில் உட்கார வைத்த ஒரு கூட்டத்தார் - இக் கொடுமைகளை நிலைநிறுத்த வர்ணாசிரம ஸ்தாபனங்களையும் "பிராமணன்" ஆகிய பத்திரிகைகளையும் வைத்துக்கொண்டும் இக்கொடுமைப்படுகிறவர்களிலேயே சில சுயமரியாதையற்றவர்களையும், சமூகத் துரோகிகளையும் பலவழிகளில் தங்கள் சுவாதீனப் படுத்திக்கொண்டும் பிரசாரம் செய்யும் ஒரு கூட்டத்தார் - இத் தென்னாப்பிரிக்கா தூதர்களை ஊர் ஊராய் கூட்டிக்கொண்டு திரிவதினாலும், இவர்களைக் காட்டி, வரப்போகும் எலெக்ஷனுக்கு தங்களுக்கு வோட் கிடைக்கும்படியான மாதிரியில் சூழ்ச்சிப் பிரசாரம் செய்வதினாலேயும் தென்னாப்பிரிக்கா இந்தியர்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டு விடக்கூடும். இம்மாதிரியான ஜனங்களின் தந்திரங்களால் நடத்தப்படும் பிரசாரம் தென்னாப்பிரிக்கா சகோதரர்களுக்கு எவ்விதம் பயன்படும் என்பதை மாத்திரம் நாம் வெளியில் சொல்லாமலிருக்க முடியவில்லை.



ஆனால், ஆங்காங்கு கூட்டிக்கொண்டு போவதில் அவர்கள் இவர்களுக்கு உபசாரம் படித்துக் கொடுக்கவில்லை; இவர்கள் அவர்களுக்குச் சாப்பாடு போடவில்லை; இவர்கள் அவர்களுக்கு வண்டி கொடுக்கவில்லை என்று இம்மாதிரி ஒரு கக்ஷியாரின் மேல் பொது ஜனங்களுக்குத் துவேஷ முண்டாகும்படியான விஷமப் பிரசாரம் செய்ய மாத்திரம் உபயோகப்படுமென்பதை நாம் மறைக்க முடியாது.

**குடி அரசு - கட்டுரை - 24.01.1926**



RangaRakes tamilnavarasam.com

# கோயமுத்தூர் முனிசிபால்டியில் சுயராஜ்ஜியக்கட்சியும் தீண்டாமையும்

கோயமுத்தூர் முனிசிபல் மீட்டிங்கு 18-1-26ந் தேதி நடந்தது. அன்று ஸ்ரீமான் காலஞ்சென்ற சுல்தான் சாய்ப்பு அவர்களுக்கு அநுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றினார்கள். இரண்டாவது ஒரு முக்கியமான தீர்மானம் ஆலோசனைக்கு வந்தது. பாப்பானாயக்கன்பாளையத்தில் இரண்டு இரவு பாடசாலை யிருந்து வருகிறது. ஒன்று "ஜாதி இந்துக்கள்" இரவு பாட சாலை, இன்னொன்று "பஞ்சமர்" இரவு பாட சாலை. இரண்டு பாடசாலையும் முனிசி பால்ட்டியால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. ஜாதி இந்துக்கள் இரவு பாட சாலைக்கு அதிக வாடகை வேண்டுமென்றும் இன்னொரு உதவி உபாத்தி யாயர் வேண்டு மென்றும், பஞ்சமர் பாடசாலைக்கு 5 ரூபாய் வாடகை வேண்டுமென்றும், அப்பாடசாலைக் கட்டிடக்காரர்கள், விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள். இவ்விஷயம் மீட்டிங்கில் ஆலோசனைக்கு வந்த போது ஸ்ரீமான் வி. அருனாசலம் செட்டியாரவர்கள் பஞ்சமர் பாட சாலையில் 8 பிள்ளைகள் தானிருப்பதால் அதற்கு தனிப் பாடசாலை வேண்டியதில்லை யென்றும் ஜாதி இந்து பாடசாலையில் இந்த 8 பிள்ளை களைச் சேர்த்துக் கொண்டு ஒரு உதவி உபாத்தியாயரும், 15 ருபாய் வாடகை யும் வேணுமானால் கொடுத்து விடலாமென்றும் சொன்னார். சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீமான் சி. எம்.ராமச்சந்திரஞ்செட்டியாரவர்கள், பஞ்சமப் பிள்ளைகளை இந்துக்கள் பாடசாலையில் சேர்க்கக் கூடாதென்று ஆக்ஷே பித்து விட்டார். காரணம் கிராமத்தில் தகறார் உண்டாகும் என்று சொல்லி விட்டார்.

இந்த ஸ்ரீமான் ராமச்சந்திரஞ்செட்டியார் தான், கோயமுத்தூர் முனிசி பால்டியில் காங்கிரஸ்சுயராஜ்யக்கட்சி கவுன்சிலராகத் தேர்ந்தெடுத்து மாலை சூட்டியவர். இன்னும் இவர் டிஸ்ரிக்டு எடுகேஷனல் கவுன்சில் பிரசிடெண்டு. இத்தகைய உத்தமர் பிராமணர்கள் புன்சிரிப்புக்கு மயங்கி காலமறியாமற் போனதுதான் விந்தை. கிராமப்பள்ளிக்கூடம், அதுவும் முனிசிபல் பொதுப் பள்ளிக்கூடம் இதில் பஞ்சம பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள ஆக்ஷேபிப் பாரானால் இவர் எப்படி காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பவராவார். இவர் பிராமணர் பிரசாரத்தால் ஸ்தானம் பெற்றதற்காகத் தீண்டாமை விலக்குக்கு இவ்வளவு தடையாய் இருக்கலாமா? அநேக இடங்களில் இவர் ஜாதிபேதம் இல்லையென்றும், தீண்டாமை இல்லையென்றும் பேசியிருக்கிறார். இப்படிப் பட்டவர், மேளவாத்தியத்துடன் பூமாலையிட்டு பிராமணர்கள் ஊர்கோலம்



செய்து வைத்ததற்காக தன் மனச்சாக்ஷிக்கு மாராய் தீண்டாமை விஷயத்தில் இவ்வளவு தலையிடுவாறானால், எவ்வாறு நம் நாட்டில் ஏழை பஞ்சம மக்களுக்கு சமத்துவமும், கல்வியும் கொடுக்கமுடியும். கிராம இரவு பாட சாலை அக்ரஹாரமில்லாத இடம். இந்த பாடசாலையில் பஞ்சம பிள்ளைகள் சேர்க்கக் கூடாதென்று ஒரு தனி இரவு பாடசாலை வைப்பானேன்? கல்வி யிலாகாவுக்கு இத்தகைய மெம்பர்களிருப்பதால் ஏழை பஞ்சமர்கள் பாடு திண்டாட்டமாகி விடுவதல்லாமல் கசாப்புக்கடைகாரருக்கு ஜீவகாருண்ய சங்கத்துப் பிரசிடெண்டு வேலை கொடுத்தது போலாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்

**ஓர் நிருபர்**

**குடி அரசு - கட்டுரை - 24.01.1926**



RangaRakes tamilnavarasam.com

# தென்னிந்திய ரெயில்வே ஆலோசனை கமிட்டி

இம்மாதம் 27-ந் தேதியன்று சென்னையில் நடைபெறப்போகும், தென்னிந்திய ரெயில்வே ஆலோசனைக் கமிட்டிக்கூட்டத்தில், கீழ்க்கண்ட தீர்மானங்களை கொண்டுவரப் போவதாக, ஷை கமிட்டி மெம்பர், கோயமுத்தூர் ஸ்ரீ மான் . சி.எஸ். இரத்தினசபாபதி முதலியாரவர்கள் தெரிவிக்கிறார்.

(1) ரெயில்வே பிளாட்பாரத்தில் பிரயாணிகளுக்கு தண்ணீர் கொடுப்பதில் எவ்வித வித்தியாசமும் பாராட்டக்கூடாது.

(2) ரெயில்வே ஸ்டேஷன்களிலுள்ள இங்கிலீஸ் உணவுச்சாலைக்கு, ஐரோப்பியர்களோ அன்றி இந்தியர்களோ சென்றால் அவர்கள் யாவரையும் ஒன்று போலவே நடத்தவேண்டும். மற்றும், ரெயில் வண்டியிலிருந்து கொண்டே உணவைத் தருவித்தாலும், அப்போதும் ஐரோப்பியர், இந்தியர் என்கிற வித்தியாசமின்றியே நடத்தவேண்டும். இங்ஙனம் செய்ய ஷை உணவுச்சாலைகளை நிர்வகிக்கும் மெஸர்ஸ் ஸ்பென்ஸர் கம்பெனியாரை இச்சபை கேட்டுக்கொள்ளுகிறது.

(3) ரெயில்வே ஸ்டேஷன்களிலுள்ள இந்திய உணவுச்சாலைகளில் எவ்வித ஜாதிவித்தியாசமும் பாராட்டலாகாது. ஜாதி வேற்றுமையைக் காட்டக் கூடிய - இப்போதுள்ள சாதனங்களை- உடனே நீக்கி விடவேண் டும். மேலும், ஒவ்வொரு போஜன சாலையிலும், சகல ஜாதியார்களிலும், மரக்கறி பதார்த்தங்கள் உட்கொள்ளுபவர்களுக்கென்றும், மாமிச ஆகார வகைகள் உட்கொள்ளுபவர்களுக்கென்றும் இரண்டு இடங்கள் பிரிக்கப்பட வேண்டும். முன்னர் கூறிய பிரிவிற்கு, பிராமண சமையற்காரரையும், பின்னர் கூறிய பிரிவிற்கு மகமதிய சமையற்காரரையோ, அல்லது ரஜபுத்ர சமையற்காரரையோ நியமிக்கவேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் பெண்களுக்கென தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்,

( 4 )இப்பொழுதுள்ள கோயமுத்தூர் ரெயில்வே ஸ்டேஷனை ஒரு ஜங்ஷனாக மாற்றவேண்டும்.

**நமது குறிப்பு:-**

தீர்மானங்களின் பிரேரேபனைகளை நாம் மனப்பூர்வமாய் ஆதரிப்ப



தோடு மிகவும் பாராட்டுகிறோம். உண்மையிலேயே இத்தீர்மானங்கள் வெகு காலத்திற்கு முன்னதாகவே செய்திருக்க வேண்டியது. தென்னிந்திய ரெயில்வே ஆலோசனைக் கமிட்டியிலுள்ள மற்ற கனவான்களும் இதை ஆதரித்து அமுலுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். ஆனால், பிராமண சமையற்காரரையே நியமிக்க வேண்டுமென்பதற்குப் பொருள் விளங்கவில்லை.

**( ப - ர். )**

*குறிப்பு :- 27-1-26- ந் தேதி நடைபெறப்போகும் தென்னிந்திய ரெயில்வே ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றப் போகும் தீர்மானங்களை இ.ந.இரத்தின சபாபதி தெரிவித்தது பற்றிய செய்தி விளக்கக் குறிப்பு.*

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 24.01.1926**



RangaRakes tamilnavarasam.com

# “அதனால்தான் உங்கள் வீட்டின்மேல் காகம் பறந்தது”

சிறு பிள்ளைகள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளும் போது - சரியான தோஷம் சொல்லுவதற்கு வழியில்லாதபோது கோபத்தில் வெறியால் ஏதாவதொன்றைச் சொல்லி வைவதற்கு ஒருவன் மற்றவனைப் பார்த்து அதினால்தான் உங்கள் வீட்டின் மேல் காக்காய் பறந்தது என்று சொல்வதுண்டு. அதுபோலவே, வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தைப் பற்றி குற்றம் சொல்ல வகை இல்லாமற் போனால் ஏதாவது சொல்லித் தீர வேண்டிய நிலைமைக்கு ஸ்ரீமான் கலியாணசுந்திர முதலியார் வந்துவிட்டதால், சென்ற வாரத்திற்கு முந்தின பத்திரிகையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் என்கிற தலைப்பின் கீழ் முஸ்லீம் லீக் தீர்மானத்தைப் பற்றி எழுதிவிட்டு வகுப்பு வாரி தீர்மானம் தப்பு என்கிறதற்கு ஆதாரமாக முஸ்லீம் லீக்கில் மௌலானா முகமதலிக்கும், ஸர். அப்துல் ரஹீமுக்கும் ஷை தீர்மான விஷயத்தில் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தை எடுத்துக்காட்டி இவ்வித அபிப்பிராய பேதம் உண்டாவதால் வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் கூடாது என்கிறார். இருவருக் கும் அபிப்பிராயபேதம், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமா? வேண் டாமா? என்கிற விஷயத்தில் இல்லவே இல்லை என்பதையும் அதற்காக ஏற்படுத்தும் திட்டத்தில்தான் என்பதையும் ஸ்ரீமான் முதலியார் அறிந்தி ருந்தும் இதைப் பொதுஜனங்களுக்கு திரித்துக்கூற வேண்டிய நிலைமை அவருக்கு ஏற்பட்டது பற்றி நாம் பரிதாபப் படுகிறோம். ஸ்ரீமான் முதலியார் கூற்றுப் போலவே அபிப்பிராய பேதம் இருந்திருந்தாலும் அதற்காக அத் தத்துவமே வேண்டாமென்று சொல்லி விடலாமா? சுயராஜ்ய விஷயமான தீர் மான விஷயத்தில், அபிப்பிராய பேதமேற்பட்டால் அதற்காக சுயராஜ்யமே வேண்டாமா? என்று நாம் கேட்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 24.01.1926**



# ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார்

“கள்ளின் வெற்றியே வெற்றி” என்ற தலைப்பின் கீழ் “அரசாங்கத்தார் நடத்திவரும் பொல்லாத கள்ளுக்கடைகளை மூட வழி தேடுங்கள்” என்று சொன்னேன். அதற்கு வகுப்புவாரிக்காரரும் ஜஸ்டிஸ் கக்ஷியாரும் இன்னும் சிலரும் தன்னைப் பற்றி சந்தேகப்படுகிறார்கள் என்று சொல்லுகிறார்.

ஆனால், கக்ஷியார்கள் இவர்பேரில் சந்தேகப்படுவதற்கு சொல்லும் காரணங்களுக்கு மாத்திரம் பதில் சொல்லுவதில்லை. சந்தடி சாக்கில் ஜஸ்டிஸ் கக்ஷியைப் பற்றி சொல்லும் போது **“நியாயக் கட்சி (=பிராமணரல்லாதார் - ஜஸ்டிஸ் கக்ஷி) என்று பெயர் வைத்துக் கொண்டு சிறு வகுப்பார்களை (=பிராமணர்களை ) அநியாயமாய் (= யோக்கியமான பிராமணர்களின் மேல் அபாண்டமான பழிகளைச் சொல்லி) பசு பலத்தால் (= மிருக பலத்தால்) ஒடுக்கியாள (=அவர்களுக்கு மேலே போக) முயலும் (=வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் கேட்கும் ) கக்ஷியாரை (= பிரசாரம் செய்யும் கக்ஷியாரை) நான் ஆதரிப்பதாய் (=பிராமணராகப் பிறந்த நான் ஆதரிப்பதாய்) ஏன் எண்ணுகிறீர்கள்(=பிராமணர்களே பயித்தியக் காரத்தனமாய் ஏன் எண்ணுகிறீர்கள்) என்று எழுதுகிறார்.”** இதிலிருந்தே ஸ்ரீமான் ஆச்சாரியாரின் பரிசுத்தத் தன்மையும், பிராமணர்களையும் பிராமணரல்லாதாரையும் சமமாய் நினைக்கும் தன்மையும் வாசகர்கள்தான் உணர வேண்டும்.

அன்றியும் ஸ்ரீமான் ஆச்சாரியார் ஒரே அடியாய் கள்ளையே நிறுத்தி விடப் போவதாகவும் அப்புண்ணிய காரியத்தை வகுப்பு வாரிக்காரரும் (ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கரும் ஜஸ்டிஸ்காரரும் மற்றும் பல பிராமண ரல்லாதாரும்) ஆக்ஷேபிப்பதாயும், பாமர ஓட்டர்கள் நினைக்கும்படி மிகவும் துக்கப்படுகிறார். ஸ்ரீமான் ஆச்சாரியார் இதுவரை கள்ளை நிறுத்த காரியத்தில் நடக்கக் கூடியதாய் என்ன வழி சொல்லி இருக்கிறார்? சட்ட மறுப்பின் பேரால் சில பேர், முட்டுக்கட்டையின் பேரால் சில பேர், சுயராஜ்யத் தின் பேரால் சில பேர், வெற்றி மேல் வெற்றியின் பேரால் சில பேர் சட்ட சபைக்கு போகப் பார்ப்பது போல் கள்ளை ஒழிப்பதன் பேரால் தனக்கு வேண்டிய சில பேரோ அல்லது தானோ சட்டசபைக்கு போகப் பார்க்கிறார். கள்ளை விலக்க சட்ட சபை உதவுமானால் மகாத்மா அதை விட்டுவிடுவாரா? அல்லது கள்ளுக்கடை மறியலுக்காக ஜெயிலுக்குப் போய் மூத்திரச் சட்டியில் கஞ்சி வாங்கி குடித்த வர்கள் சட்டசபைக்கு போகப் பயப்படுவார்களா? அல்லது அவர்களுக்கு



RangaRakes tamilnavarasam.com

யோக்கியதை இல்லையா? இதையெல்லாம் பொது ஜனங்கள் யோசிக்க மாட்டார்கள் என்றும் பொது ஜனங்களை சுத்த முட்டாள் கள்தானே என்றும் நினைத்துக் கொண்டதால் இவ்வித தந்திர வழிகளில் தன் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ள துணிந்து விட்டார் என்றுதான் எண்ண வேண்டி யிருக்கிறது.

கள்ளை நிறுத்த சட்டம் செய்ய சட்டசபைக்கு போகலாம் என்பவர் தீண்டாமை ஒழிக்க சட்டம் செய்ய சட்டசபைக்கு போகலாம் என்று ஏன் சொல்லக் கூடாது? அப்படிச் சொன்னால் ஒரு சமயம் சர்க்காரார் தீண்டாமை ஒழிய சட்டம் செய்ய சுலபத்தில் ஒப்புக் கொள்ளுவார்கள். பிராமண சட்ட சபை மெம்பர்கள் ஆக்ஷேபனை பலிக்காமல் போய் காரியத்தில் ஒரு சமயம் தீண்டாமை ஒழிந்தாலும் ஒழிந்து போகும். ஆதலால், அதை ஒழிக்க முடியாத இடமாகிய ஜனங்களிடமே சொல்லிக் கொண்டு காலத்தை நடத்தலாம். கள்ளையும் ஒழிக்க முடியாத இடமாகிய சர்க்கார் சட்டசபையிடமே சொல்லிக் கொண்டிருக்கலாம். எப்படியாவது ராஜீய பேச்சு ரதம் ஓடிக் கொண்டிருக்க வேண்டும் என்கிற எண்ணம் போலும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 24.01.1926**



# ஈழவர்களின் கோயிலுக்குள் செல்ல புலையருக்கு அனுமதி

கொச்சி, திருவாங்கூர் சமஸ்தானங்களில் சென்ற சில வருடங்களாக கவர்ன்மெண்டாரது பரிபாலனத்துக்கு உட்பட்டிருக்கும் ஆலயங்களுக்கும் சென்று தொழ தங்களுக்கு அநுமதியளிக்க வேண்டுமென்று ஈழவர்கள் கிளர்ச்சி செய்து வந்த விஷயத்தை வாசகர்கள் மறந்திருக்க முடியாது. எனினும், இவர்களுக்குச் சொந்தமான கோயில்கள் கொச்சி, திருவிதாங்கூர் சமஸ்தானங்களிலிருந்தபோதிலும், இவர்கள் தங்களிலும் கீழ்ப்பட்டவர் களாகக் கருதப்படும் புலையர்களை அவற்றுள் அநுமதிக்கிறார்களா என்கிற சந்தேகம் பொதுஜனங்களுக்கு இருந்து வந்தது. இந்த சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளுவதற்காக அவர்கள் தங்களுடைய எல்லா கோவில்களுக் குள்ளும் புலையர் முதலிய தாழ்ந்த ஜாதியார் என்போரை விட முயற்சி செய்து வருகின் றார்கள். அல்லாமலும் ஏற்கனவே சில கோயில்களுக்குள் புலையர்கள் செல்ல அநுமதி யளித்து விட்டனர். மற்ற கோயில்களிலும் இதே மாதிரி புலையர்களை அநுமதிக்கும்படி வைதீக கோஷ்டியாரைத் தூண்ட சீர்திருத்தக் கோஷ்டியார் சகல முயற்சிகளையும் செய்து வருகின்றார்கள். பல்லுருத்தி பவானீஸ்வர கோவிலுக்குத் தெற்கே, ஸ்ரீமான் கே. நாராண னுக்குச் சொந்தமான ஈழவக் கோயிலுக்குள் செல்ல புலையர்களுக்கு முதல் முதலாக அநுமதியளிக்கப் பட்டது. ஸ்ரீ நாராணகுருவின் பிரதம சீடரான சுவாமி போதானந்தர் தானே புலையர்களைக் கோயிலுக்குள் பிரதட்சணமாக அழைத்துச் சென்று அங்கு அவர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கினார். சுவாமி சத்திய விரதன் என்பவரும் ஸ்ரீமான் கே. ஐயப்பனும் தங்களுக்கும், கீழ் நிலை மையிலுள்ளவர்களுக்கும் உள்ள வித்தியாசங்களைப் போக்கிக் கொள்ளக் கூடிய அவசியத்தைப் பற்றிப் பேசுகையில் சமீபத்தில் பல்லுருத்தியில் புலையருடன் சமபந்தி போஜனம் செய்ததற்காக ஈழவர்களுக்கு ஏற்பட்டி ருந்த மனஸ்தாபங்களைத் தாங்கள் போக்கி விட்டதாகவும் கூறினார். கும்ப மாதத்தில் தங்கள் தோட்டத்தில் பறிக்கும் எல்லா தேங்காய்களையும் இவ்வூரி லுள்ள (கொச்சி) ஈழவர்கள் பள்ளிக்கூடங்கட்கு செலவிற்கு நிதி சேர்ப்ப தற்காக கொடுத்துவிட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதாகத் தகவல் எட்டியிருக்கிறது.

**குடி அரசு - செய்தி விளக்கக் குறிப்பு - 24.01.1926**



RangaRakes tamilnavarasam.com

# பொன்னம்பல சுவாமி மடம்

## ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் குரு பூஜை மகோற்சவம்

சென்ற இரத்தாக்ஷி வருடம் தை மீ 24-ந் தேதி விதேகமுக்தி எய்தின, ஸ்ரீ காசி வாசி சிதம்பர சுவாமிகளின் குருபூஜை மகோற்சவம், நாளது தை மீ 13 - தேதி மங்களவாரம் திருவாதிரை நட்சத்திரத்தில் வருட குருபூஜை வைபவத் திருநாள் நடைபெறும். அன்பர்கள் யாவரும் வந்திருந்து இருமை நலன் பெற்று உய்ய திருவருளை விழைகின்றோம் என ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் மடத்து ஸ்ரீபரஞ்சோதி சுவாமிகள் எழுதுகிறார்.

**நமது குறிப்பு:-**

தென்னாட்டிலுள்ள பல்வேறு மடங்களிலும் ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் மடமானது வைதீகப் போர்வை போர்த்த லௌகீக மடமாயிராமல், உண்மையில் ஜீவன்களிடத்தில் அன்பும், சமரசத் தன்மையும் கொண்டு விளங்குவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்குத் தற்கால மடாதிபதி யாயிருக்கும் ஸ்ரீ பரஞ்ஜோதி சுவாமி அவர்கள் நமது மகாத்மா அவர்களின் கொள்கையைச் சிரமேற்கொண்டு அநுபவத்தில் நடைபெற உழைத்து வருபவர். அத்துடன் மடத்தில் கதர் உற்பத்தியும், பிரசாரமும் நடைபெற்று வருகிறது. வருடத்தில் லக்ஷக்கணக்காய் வரும்படியுள்ள பல மடங்கள் சோம்பேறி மடங்களாய் விளங்குவதை நாம் நேரில் பார்க்கிறோம். அவைகள் நமது ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் மடத்தையும், ஸ்ரீ பரஞ்ஜோதி சுவாமிகளின் உள்ளத்தையும் பின்பற்றினால் தமிழ்நாடும் ஜீவன்களும் முக்தி யடைய ஏற்ற சமயமாய் விளங்கும்.

( ப - ர் )

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 24.01.1926**



# மௌலானா மகம்மதலியும் வகுப்புவாரி பிரதிநிதித்துவமும்

ஸ்ரீமான் ஸ்ரீனிவாச சாஸ்திரியார் அவர்கள் சமீபத்தில் தனது பத்திரிகையில் "மௌலானா மகம்மதலி அவர்கள் மகாத்மா காந்தியுடன் கொஞ்சக் காலம் தேசீய நோக்கத்தோடு வேலை செய்த பிறகு மறுபடியும் தன்னுடைய பழைய குணப்படி ஹிந்து - முஸ்லீம் வேறுபாட்டைக் கருதுகிறார்" என்று எழுதியதற்கு விடையாக மௌலானா அவர்கள் எழுதிய கீழ்க்கண்ட பாகத்தை தமிழர்களுக்கு அறிவுருத்துகிறோம்.

" வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமானது ஏட்டுச் சுறக்காய் அல்லவென்று ஸ்ரீமான் சாஸ்திரியாருக்கு நான் வெளிப்படையாய்ச் சொல்லுகிறேன். நம்முள் குறைந்த தொகுதியாயுள்ள வகுப்பாருக்கு நம்மிடத்திலுள்ள அவநம்பிக்கையும், நாம் முற்காலத்தில் செய்த அநீதிகளுடைய கர்ம பலனும்தான் இவ்வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமென்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அவநம்பிக்கை ஏற்படுகிற இடங்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்தே தீர வேண்டும். ஸ்தல ஸ்தாபனங்களென்றாவது பள்ளிக்கூடங்களென்றாவது இக்கொள்கையை விட்டுக்கொடுக்க முடியாது. ஆனால், இவ்வவநம்பிக்கை எவ்வளவு காலம் நீடித்திருக்க வேண்டுமென்பது பெருவாரியான மற்ற சமூகங்களின் கையில்தானிருக்கிறது. முதலாவதாக ஹிந்துக்கள் தங்கள் மதத்தைச் சேர்ந்த தாழ்ந்த வகுப்பாரென்று கருதப்படுகின்றவர்களை மனிதர்களாகவும், சகோதரர்களாவும் நடத்தக் கற்றுக்கொள்ளட்டும். தேசீயத் திற்கு பெரும் பகையான ஜாதி என்னும் பேயை அவர்கள் அடியோடு ஓட்டட் டும். ஒரு முஸல்மானின் தாழ்ந்த நிலை தங்களுடைய தாழ்மைதான் என்று கருதி தேசீய முயற்சியினால் அத்தாழ்மை உயர்த்தப்பட வேண்டுமென்றும், ஹிந்துக்கள் மாத்திரம் முற்போக்கடையாமல் தேசமே முற்போக்கடைய வேண்டுமானால் ஹிந்துக்கள் இந்நோக்கத்துடன் பாடுபடவேண்டுமென்றும் அவர்கள் காட்டட்டும். அப்படிக் காட்டினால் ஒரு முஸல்மானாவது தனிப் பிரதிநிதித்துவம் கேட்கமாட்டானென்று ஸ்ரீமான் சாஸ்திரியாருக்கு உறுதி கூறுகிறேன்."

ஸ்ரீமான் சாஸ்திரியாரும் மற்றும் சில ஹிந்து மக்களும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு ஒரு தடவை இடங் கொடுத்தால் அது எந்நாளும் மறையாமல் வளர்ந்து தேசீயத்தைக் கெடுக்கும் என்று சொல்லுகிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

ஆனால், சிறுபான்மையோருடைய அவநம்பிக்கையாலேற்பட்ட இவ் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அந்த அவ நம்பிக்கைக்குக் காரணமில்லை என்று ஹிந்துக்கள் வாக்கினாலல்லாது செய்கையினால் என்றைக்கு ரூபிக்கின் றார்களோ, அன்றே இவ்வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மறைந்துவிடும். தங்கள் மதத்தினர்களுக்கு நன்மை தேடிக்கொண்ட ஹிந்துக்கள் படிப்பிலும் செல்வத்திலும் தாழ்மை அடைந்திருக்கும் முஸ்லீம்களுக்கு என்ன நன்மை செய்தார்களென்று தேடிப் பார்க்கட்டும். உண்மையில் ஹிந்துக்கள் தேசத்தை விட தங்கள் மதத்தையே முக்கியமாகக் கருதுகிறார்கள். மேலும் தங்கள் மதத்தையும் விட தங்கள் ஜாதியையே பிரதானமாகக் கருதுகிறார்களென்றும் சொல்லுவேன். நமது சாஸ்திரியாரின் இனத்தவர்கள் தங்களுடைய ஜாதி அபிமானத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் இவ் விஷயத்தில் மற்ற ஹிந்துக்களைப் போலவே நடந்து கொள்ளுகிறார்கள். நான் ஒரு ஹிந்துவாயிருந்து ஸ்ரீமான் சாஸ்திரியாரைப்போல் தேச ஊழியன் என்று பெயர் வைத்துக்கொண்டேனேயானால் இந்தியன் என்னும் முறையிலும் தேச ஊழியன் என்னும் முறையிலும் நமது தேசத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பி னர்க்கு ஊழியஞ்செய்து அவர்களை உயர்த்தவும், சிறு தொகையினரா கியவர்களை மற்ற சமூகத்தினரைப்போல் நல்ல ஸ்திதிக்கு கொண்டு வரப் பாடுபட்டும் அவர்கள் நம்பிக்கையைப் பெறுவேன். ஒரு சங்கிலியின் பலம் அதில் பலம் குறைந்திருக்கும் ஒரு கொக்கியின் பலத்தைவிட அதிகமல்ல. இவ்வுண்மை ஹிந்து தலைவர்களில் அநேகருக்கு இன்னும் புலப்பட வில்லை. நமது ராஜீய வாழ்க்கையில் போட்டி பலத்திருக்கிறது. பலஹீனர் களை ஆதரிப்பாரில்லை. ஒரு ஹிந்து குடும்பத்தில் சரீர திடமுள்ளவன் தனக் காகவல்லாது அக் குடும்பத்தின் பலஹீனருக்காகவே பாடுபடுகிறான். இக் குலதர்மத்தை ஹிந்துக்கள் தங்கள் ராஜீய வாழ்க்கையிலும் நடத்தினால்தான் நன்மை பயக்கும்.

இப்பொழுது ஸ்ரீமான் சாஸ்திரியாருடைய மாகாணத்தில் பிராமண ரல்லாதார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை தழுவி நிற்கிறார்கள். முஸல் மான்களை மாத்திரம் குறைகூற இடமில்லை. முஸ்லீம்களுக்கு அநீதி வழங்கப்படும் வட இந்தியாவில், முஸ்லீம்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கோருவதும், பிராமணராதிக்கத்தினால் பிராமணரல்லாதாருக்கு அநீதி வழங்கப்படும் தென்னாட்டில் பிராமணரல்லாதார் வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம் கேட்பதுவும், இவ்வநீதிகளின் கர்மபலன்தானென்று சொல்ல வேண்டும். இவ்வுண்மையை எந்த ஹிந்துவாவது மறுக்க முடியுமாவென்று நான் கேட்கிறேன். ஜாதி வேறுபாடென்னும் அக்கிரமத்தைக் கையாண்டு தீண்டாமை, நெருங்காமை - என்னும் அநீதிகளை ரக்ஷித்து வரும் ஒரு சமூகத்தார் தாங்களிழைக்கும் குற்றங்களைத் திருத்தாமல் தாங்கள்தான் தேசீய நோக்கமுடையவர்களென்று பெருமை பேசி மற்றவர்களை குறுகிய நோக்க முடையவர்களென்று இழிவுபடுத்துவது சகஜம். நான் இவ்வுண்மையை பல



தடவை யெடுத்துச் சொல்லியும் என்னையும் முஸ்லீம்களையும் எதிர்க்கிறவர் கள், ஜாதி அபிமானமுள்ளவர்களின் குறுகிய நோக்கத்தைக் காண்கின்றார் களில்லை.

**குடி அரசு - கட்டுரை - 31.01.1926**



RangaRakes
tamilnavarasam.com

# தனித்தமிழ் கட்டுரைகள்

இப்பெயர் கொண்ட புத்தகமொன்று வரப்பெற்றோம். இஃது பல்லாவரம், வித்யோதயா மகளிர் கல்லூரியின் தமிழாசிரியர் ஸ்ரீமதி நாகை நீலாம்பிகை அம்மையாரால் எழுதப்பட்டது. தமிழ் பாஷையின் வளர்ச்சி தினே தினே குறைந்துகொண்டுவரும் இக்காலத்தில் வடமொழி கலவாது, தனித் தமிழில் கட்டுரைகள் வரையப்பட்டு, அதுவும் ஓர் புத்தக ரூபமாக வெளி வந்திருப்பது தமிழுலகுக்கு ஓர் நல்விருந்தென்றே கூறுவோம். இத்தகைய புஸ்தகங்களே தமிழ் வளர்ச்சிக்கு உற்ற சாதனங்களாகும். நமக்கு அநுப்பப் பட்டுள்ள இப்புத்தகத்தின்கண் வடமொழிச் சொற்கள் எங்கணும் கண்டோ மில்லை. அதன் அருமை பெருமையை நன்கு விளக்குவான் வேண்டி "தமிழில் வடமொழி கலத்தல் ஆகாது" என்னும் கட்டுரையை இதனடியில் பிரசுரித்திருக்கின்றோம். இப்புத்தகத்தின் விலை ஒரு ரூபா நான்கணாவாகும். இத்தகைய பல புத்தகங்களை வெளியிடுமாறு கடவுள் அநுக்கிரகம் இச் சகோதரிக்குக் கிடைக்குமாக.

**குடி அரசு - நூல் மதிப்புரை - 31.01.1926**



# கதரின் தற்கால நிலை

சென்ற மாதம் "யங் இந்தியா" பத்திரிகையில் இந்தியா ஒட்டுக்குமாக கதர் உற்பத்தியும் செலவும் குறிக்கப்பட்டிருந்தது. (அதில் உற்பத்தியை விட செலவு அதிகமாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்குக் காரணம் சில புள்ளிகளில் ஏதாவது கணக்குத் தவறுதலாக இரட்டிக்கப்பட்டிருக்கலாம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது.)

அக்கணக்கில் இந்தியாவில் மொத்தம் சென்ற வருடத்திற்கு கதர் உற்பத்தி ரூ. 19 லக்ஷம். இப்பத்தொன்பது லக்ஷத்தில் சில பாகம் சிலோன், மலேயா, தென் ஆப்பிரிக்கா முதலிய இந்தியாவை விட்டு வெளி நாடுகளுக் குப் போன வகையில் லக்ஷ ரூபாய் கழித்தாலும் 18 லக்ஷத்திற்குக் குறையாமல் இந்தியாவில் செலவாகி இருப்பதாகத் தெரிகிறது. இந்தியாவின் ஜனத்தொகை 31 $^1/_2$ கோடி. இவர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தேவையுள்ள துணி ஏறக் குறைய 130 கோடி ரூபாய் பெறுமானமுள்ளது. இவற்றில் 65 கோடி ரூபாய் பெறுமான முள்ள துணி அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டும், 65 கோடி ரூபாய் பெறுமான துணி இந்தியாவிலேயே யந்திர நூலைக் கொண்டு யந்திரங்கள் மூலமாகவும் கைத்தறிகள் மூலமாகவும் உற்பத்தி செய்யப்படுவதிலும் ஈடாகி வருகிறது.

ஆகக்கூடி ஷை 130 கோடி ரூபாய் துணிகளையும் 30 கோடி துணி உடுக்கக்கூடிய ஜனங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தோமானால், ஆள் ஒன்றுக்கு சற்றேறக்குறைய நாலரை ரூபாய் துணி வீதம் செலவாவதாக கணக்கு ஏற்படுகிறது. இந்தக் கணக்குப்படி ஷை கதர் உற்பத்தி மொத்தத் துகையாகிய 18 லக்ஷத்தை ஷை நாலரை ரூபாய் வீதமே பங்கிட்டு கொடுப் போமேயானால் இந்தியா மொத்தத்திற்கும் 4 லக்ஷம் ஜனங்கள்தான் கதர் கட்டுகிறவர்களாவார்கள். 30 கோடிக்கு 4 லக்ஷம் பங்கிட்டால், இந்தியாவில் உள்ள மனிதர் 1000-க்கு ஒன்றேகால் மனிதர் வீதம்தான் கதர் கட்டுவதாகக் கணக்கு ஆகிறது. இதில் உற்பத்தியின் அளவும் 130 கோடி ரூபாய்க்கு 19 லக்ஷம் பிரித்துப் பார்த்தோமேயானால் (1000-க்கு 1 $^1/_2$) ஆயிர ரூபாய்க்கு ஒண்ணரை ரூபாய் வீதம்தான் கதர் உற்பத்தி ஆகியிருக்கிறது. மகாத்மா சுமார் 5 வருட காலம் இடைவிடாமல் கதரைப்பற்றி பேசியும் காங்கிரசின் பேரால் வசூல் செய்யப்பட்ட ஒரு கோடி ரூபாயில் ஏறக்குறைய முக்கால் கோடி ரூபாய் வரையில் கதருக்காக செலவு செய்தும், இந்தியா முழுமையிலும் உள்ள



RangaRakes tamilnavarasam.com

காங்கிரஸ் ஸ்தாபனங்களின் முக்கியமான நேரமெல்லாம் கதருக்காகச் செலவழித்தும் சுமார் 25000 பேர் வரையில் ஜெயிலுக்குப் போய் வந்தவர்களும், கதர் கதர் என்று கதர் பிரசாரம் செய்தும், இதுவரையில் ஆயிரம் மனிதருக்கு ஒண்ணேகால் மனிதர் வீதம்தான் கதர் உடுத்தியிருக்கிறார்கள் என்றும் இந்தியாவுக்கு வேண்டிய துணிகளில் (ஆயிரம்) 1000 ரூபாய்க்கு ஒண்ணரை ரூபாய் வீதம்தான் கதர் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறதென்றும் கணக்கு ஏற்படுமானால், மகாத்மாவின் எண்ணப்படி கதர் தத்துவம் நிறைவேறுமா என்பதில் கொஞ்சமும் நம்பிக்கையேற்பட இடமில்லாமலிருப்பதோடு, இந்தியாவைப் பிடித்த தரித்திரமும் ஏழ்மை நிலையும், சீக்கிரத்தில் மாறும் என்று நினைப்பதற்கும் இடமில்லாமல் இருக்கிறது.

இது மாத்திரமல்லாமல் ராஜீய அபிப்ராயங்கள் மாறுபட்டதினாலும், காங்கிரசுக்கு கதரிடத்தில் காரியத்தில் நடத்த நம்பிக்கையில்லாமல் போனதிலிருந்தும், கதரின் வளர்ச்சி குன்ற ஆரம்பித்திருப்பதாகவே கருத இடமேற்பட்டு விட்டது. இதுவரை கதர் கட்டிவந்த ஜனங்களில் பெரும் பான்மையோர் ராஜீய பிரதானத்தைக் கருதியே கட்டி வந்தார்கள். அதுவும் ஏறக்குறைய செல்வந்தர்களும், நடுத்தர வகுப்பாரும் கட்ட முடிந்ததே அல்லாமல் அந்நிய நாட்டுத் துணிக்கும் கதர் துணிக்கும் உள்ள விலை வித்தியாசத்தால் ஏழை மக்கள் கட்ட முடியாமலே இருந்து வந்திருக்கிறது. இந்த நிலையில் கதர் திட்டத்தை காங்கிரசிலிருந்து பிரித்து தனி ஸ்தாபனமாக்கி நடத்தி வருவதில் ஏறக்குறைய காங்கிரசின் போக்கில் நம்பிக்கையற்றவர்களும், மாறுபட்டவர்களும் (அதாவது, ஒத்துழையாமை தத்துவத்திலேயே நம்பிக்கை உள்ளவர்களே) கதர் இயக்கத்தில் பெரிதும் ஈடுபட்டிருக்கிறார்கள். காங்கிரசின் பேரால் காங்கிரஸ் திட்டத்தை நிறைவேற்றுவதென்பது, தேர்தல்களில் போட்டி போட்டு சட்டசபை ஸ்தல ஸ்தாபனம், உத்தியோகம் முதலியதுகளை கைப்பற் றுவதே காங்கிரஸ் வேலையாக காங்கிரஸ்காரர்கள் என்போர் செய்வதாலும், கதரின் மேன்மையையும், அவசியத்தையும் தகுந்தபடி பிரசாரம் செய்ய போதிய வசதி இல்லாததோடு, ஏதாவது கொஞ்சம் நஞ்சம் பிரசாரம் செய்வதாயிருந்தால் அது காங்கிரஸ் தேர்தல் பிரசாரங்களைத் தாக்குவதாய் கருதப்படுகிறபடியாலும், பிரசாரத்திற்கு இல்லாமலே போய் விடுகிறது. அல்லாமலும் காங்கிரசில் கதரை கண்ணியமான ஸ்தானத்தில் வைக்காமல், கலகத்துக்கும், ஒற்றுமைக் குறைவிற்கும் ஆஸ்பதமான தேர்தல் பிரசார சமயத்திற்கு மாத்திரமென்ற கண்ணியமற்ற ஸ்தானத்தில் அதை வைத்துவிட்டதால் கதரினிடத்தில் பெரிய அருவருப்பை வளரச் செய்ய இடமுண்டாகி வருகிறது.

அதாவது, தேர்தல்களுக்கு அபேக்ஷகராய் நிற்பவர் ஓட்டு பெறுவதற்கு ஓட்டர்களுக்கு பணம் கொடுத்து ஓட்டு வாங்குவது எப்படியோ அது போல் ஓட்டர்களிடம் தாங்கள் கதர் கட்டுவதைக் காட்டி ஏமாற்றி வோட்டு வாங்குவதான காரியத்திற்கு உபயோகப்படுவதாயிருக்கிறது.



இம்மாதிரி நிலை கதருக்கு ஏற்பட்ட காரணத்தினால் கதர் கட்டுபவர்களை பொது ஜனங்கள் சந்தேகிக்கவும் சுயகாரியத்திற்காக வேஷத்தின் பொருட்டு கதர் உபயோகிப்பதாகவும் கருதப்படுகிறபடியால் அதன் வளர்ச்சி குறைகிறது. இப்போக்குக்கு ஏதாவது தக்க மாறுதல் ஏற்படாத பக்ஷம், கதருக்காகச் செய்யும் பிரயத்தனங்கள் எல்லாம் வீணாய்ப் போய்விடுமோ என்கிற பயம் பலருக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆதலால் கதர் ஸ்தாபனங்கள் இதில் தகுந்தபடி கவலை யெடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிக்கில்லாமல், கைவசம் இருக்கும் பணம் செலவாகும் வரை காரியம் நடத்தி பெருமை அடைந்து கொண்டு வந்து பணம் தீர்ந்தவுடன், கடையைக் கட்டி விட்டால் கதரின் நிலை, கண்டிப்பாய் ஒரு காலத்தில் கதர் உற்பத்தி பண்ணினோம்; அது அப்படி இருந்தது, இப்படி இருந்தது என்று எதிர் காலத்தில் சரித்திரம் சொல்லக்கூடிய மாதிரியில்தான் வந்து முடியும் என்பதையும் எச்சரிக்கை செய்கிறோம்.

ஒத்துழையாமையின் கதையும் கைப்பணம் தீர்ந்தவுடன் ஒரு காலத்தில் அப்படியிருந்தது, இப்படியிருந்தது என்று சொல்லக் கூடியதாய் போய்விட்டதை நேரில் பார்த்தாய்விட்டது. இந்தக்கதி கதருக்கும் ஏன் வராது என்பதற்கு ஒன்றும் காவல் இல்லை. ஆதலால், ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூக்காவிலும் கதரைப் பற்றி கொஞ்சமும் சந்தேகமும் அபிப்ராயபேதமும் இல்லாதவர்களைக் கொண்டு கதர்ச் சங்கம் என்பதாக சிறுசிறு சங்கங்களை ஸ்தாபிக்க வேண்டும். தக்க பிரசாரர்களையும் நியமித்து சரியானபடி கதர் பிரசாரமும் செய்ய வேண்டும் என்பதை நாம் மிகவும் வற்புறுத்துகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 31.01.1926**



RangaRakes tamilnavarasam.com

# சுசீந்திரம் சத்தியாக்கிரகம்

திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த சுசீந்திரம் என்னுமிடத்தில் சத்தியாக்கிரகம் நடைபெறும் விஷயத்தைப் பற்றி இதற்கு முன் நமது பத்திரிகை மூலமாகத் தெரியப்படுத்தியிருப்பதை வாசகர்களறிவார்கள். அது விஷயமாக அமைக்கப்பட்டுள்ள கமிட்டியின் விஷயத்தையும் இந்த இதழ் 3-வது பக்கம் பிரசுரித்திருக்கிறோம்.

வைக்கம் சத்தியாக்கிரகம் முடிவடைந்து வெகுநாட்களாகிவிட வில்லை. அதற்குள்ளாக மற்றோர் இடத்தில் சமத்வத்தை நிலைநாட்ட தோன்றியுள்ள சத்தியாக்கிரகத்தைக் காண நாம் மகிழ்ச்சியுறுகிறோம். அநீதியும், அக்கிரமமும் தொலைய வேண்டுமானால் வெறும் சட்டங்களாலும், எழுத்தாலும், பேச்சாலும் முடியாதென்றும், சத்தியாக்கிரகமும், தியாகமுமே உற்ற சாதனமாகுமென்றும் பல தடவைகளில் வற்புறுத்தியிருக்கிறோம். நமது நாட்டில் ஜாதிக் கொடுமையும், பிறவியினால் உயர்வு - தாழ்வு என்னும் அகங்காரமும் உடனே தொலைய வேண்டியது அவசியமாகும். இக்கொடுமைகளை ஓர் பக்கத்தில் வைத்துக்கொண்டே, ஜம்பமாக தென் ஆப்பிரிக்கா இந்தியருக்காகப் பரிந்து பேசுவதும், எழுதுவதும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களின் நன்மையையே பெரிதும் கவனிப்பதுபோல் நடித்து நீலிக்கண்ணீர் விடுவதும் தன் மனசாக்ஷி அறியச் செய்யும் மகத்தான அக்கிரமமேயன்றி வேறல்ல.

மேலும், இவர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு, பொதுஜனங்களை ஏமாற்றுவதும், எலெக்ஷன் பிரசாரம் செய்வதும் மிக்க மோசமான செய்கையாகும். தாங்கள் பிழைக்க வேண்டும், தங்கள் மக்கள் நன்றாயிருக்க வேண்டும், தங்கள் சமூகத்தார் மேன்மையான ஸ்திதியிலிருக்க வேண்டும், மற்றவர்கள் அவர்களுக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாய், சாஸ்திரங்களையும், புராணங்களையும், இதிகாசங்களையும், மனு தர்மசாஸ்திரம் என்னும் அயோக்கிய நூலொன்றையும் காட்டிக்கொண்டு வயிறு வளர்ப்பதுடன், தங்கள் கட்சியைப் பலப்படுத்திக்கொள்ள சுயமரியாதையற்ற - ஆண்மையற்ற சிலரைச் சேர்த்துக்கொண்டும் செய்யும் சூழ்ச்சிகளெல்லாம் நொறுக்கப்படவேண்டுமாயின், பொதுமக்கள் சர்வ ஜாக்கிரதையுடனிருந்து விழித்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இவைகளையெல்லாம் சுட்டிக் காட்டவல்லது சுயமரியாதையும், சத்தியாக்கிரகமும், உண்மையான தியாகமுமே என்றுகூறலாம்.



நமது நாட்டிலேயே பிறப்பால் மனிதர்களாயிருந்தும், தாழ்த்தப்பட்டவர்கள் - கண்ணில் தென்படக் கூடாதவர்கள் - தங்கள் தெய்வங்களைத் தரிசிக்கக் கூடாதவர்கள் - தங்கள் வேதத்தைப் படிக்கக் கூடாதவர்கள் என எத்தனையோ லக்ஷம் பேர்களை ஒதுக்கி வைத்திருக்கிறோம். நாய்களுக்கும், பன்றிகளுக்கும் கொடுத்துள்ள உரிமையைக்கூட அவர்களுக்கு அளிக்க மறுக்கின்றோம். இந்நிலைமையில் நமக்கு சுயராஜ்யமும், விடுதலையும் அத்தியாவசியமா? அல்லது முன் கூறியவர்களின் முன்னேற்றமும், சுயமரியாதையும் அத்தியாவசியமா வென்பதை பொது ஜனங்களே சிந்திக்க வேண்டும்.

சமத்வம், சுயமரியாதை என்பது நமது நாட்டிலுள்ள யாவருக்கும் ஏற்பட்டாலன்றி, அதற்கு முன்னர் கிடைக்கும் சுயராஜ்யம் ஓர் ஜாதியார் பிழைப்பதற்கு ஆதாரமாயிருக்குமேயல்லாது வேறல்ல. சுயராஜ்யம் கிடைக்கும் முன், நம்மவர்களுக்குள் எவ்விஷயத்திலும் ஒற்றுமை , சமத்வம், சுயமரியாதை ஏற்படக்கூடிய விதமான வேலைகளைச் செய்து கொள்ள வேண்டியது மிக்க அவசியமாயிருக்கின்றது. சமத்வம் ஏற்படுமானால் பிராமணர்கள் பாடு திண்டாட்டமாகிவிடுமென்பது உண்மையே. முன்னர் கூறிய நூல்களைக் காட்டிக் கொண்டு பிராமணர்கள் வயிறு வளர்ப்பது நின்று போய்விடும். சுயமரியாதை உண்டாகிவிடுமானால் பிராமணர்கள் நிலைமை இப்போதிருப்பது போலிராமல் கீழ் நிலையடையலாம். இங்ஙனம் நேரிடுமென்பதைக் கருத்தாகக் கொண்டே, ராஜீய பிராமணர்களாகட்டும், சில சர்க்கார் உத்தியோக பிராமணர்களாகட்டும் அவர்கள் மிதவாதிகளோ, சுயேச்சைக் கக்ஷியோ, ஆச்சாரியாரோ, ஐயங்காரோ, ஐயரோ, பந்துலுவோ எவராயிருந்த போதிலும் சரி ஒன்று கூடிக்கொண்டு பிராமணரல்லாதாரை - தமிழர்களை எதிர்த்து நிற்கின்றார்கள்.

நிற்க, பிராமணர்கள் அநியாயம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல திருவிதாங்கூரிலும் அதிகமாக இருக்கின்றதை வைக்கம் சத்தியாக்கிரகத்தின் மூலியமாய் யாவரும் அறிவார்கள். திருவாங்கூர் கவர்ன்மெண்டார் இவ்வநியாயங்களுக்கு உடந்தையாயிருக்கின்றார்களோவெனச் சிலர் சந்தேகிக்கக்கூடும். திருவிதாங்கூர் ராஜ்யத்திலுள்ள பொது ரஸ்தாக்களும், பொதுக் குளங்களும் ஜாதிமத வித்தியாசமில்லாமல் பொது ஜனங்கள் அநுபவிக்கலாம் என சில வருடங்களுக்கு முன்னரே உத்தரவு போட்டிருக்கின்றனர். ஆக கவர்ன்மெண்டார் பேரில் குற்றமில்லை. பிராமணர்கள் தவிர்த்த ஏனைய ஜாதியார்களாகிய நாயர் முதலானவர்கள் தங்கள் சமூக மகாநாடுகளில், பொது ரஸ்தாக்களிலும், பொதுக் குளங்களிலும் ஜாதி மத வித்தியாசங் காட்டலாகாது எனத் தீர்மானம் செய்திருக்கின்றனர் - செய்து வருகின்றனர். ஆக பொது ஜனங்களின் சமத்துவத்துக்கும் - சுயமரியாதைக்கும் இடைஞ்சலாயிருப்பவர்கள் பிராமணர்களேயாகும். இதிலும் மலையாள நம்பூதிரிப் பிராமணர்களைவிட அங்கு பிழைக்கவும் அங்குள்ள கோயிற் சோற்றைச் சாப்பிடவும் சென்றுள்ள தமிழ்நாட்டுப் பிராமணர்களே அதிக இடைஞ்சல் செய்பவர்க



RangaRakes tamilnavarasam.com

ளென்று கூறத் தக்க ஆதாரமுண்டு.

இவர்களின் இடைஞ்சல்களும், தொந்தரவும் தொலைய வேண்டுமானால், சத்தியாக்கிரகந்தான் சிறந்த வழி. சுசீந்திரம் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நோக்கமெல்லாம் சமத்வத்தை நிலைநாட்டுவதற்கேயாகும்.

தமிழ்நாட்டினர், வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு எவ்வாறு பணம் கொடுத்தும், ஆட்கள் உதவியும், ஒத்தாசை செய்தார்களோ அவ்வாறே சுசீந்திரம் சத்தியாக்கிரகத்திற்கும், தாங்கள் நன்கொடையளித்தும் ஆட்கள் உதவியும் முழு ஒத்தாசையும் அளிப்பார்களென்று நம்புகிறோம்.

பிராமணர்கள் பலரும், மற்ற வகுப்பைச் சார்ந்த சில சுயநலக்காரர்களும் இச்சத்தியாக்கிரகத்திற்கு எதிரிடையாயிருப்பார்களென்பது உண்மையே. இத்தகைய குறுகிய நோக்கமுடையோர் வெகு சிலரேயானபடியால் பொது மக்கள் இவர்களைப் பற்றிக் கவனிக்க வேண்டிய அவசியமே இல்லை. தங்கள் கடமை எதுவோ எது நியாயமென தங்கள் மனதில் படுகிறதோ அதை மாத்திரம் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இப்போர்ப்பட்ட சமயத்தில், இத்தகைய சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம். தமிழ்நாட்டு தேசீய வாலிபர்களானாலும் சரி, மற்றும் எந்தக் கக்ஷியைச் சேர்ந்த எவரேயானாலும் சரி அனைவரும் சத்தியாக்கிரகத்திற்குத் தொண்டு செய்ய அவசியமேற்படும் போது தயாராயிருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழ்நாட்டார் சுசீந்திரத்தில் உரிமைப் போர் நடப்பதற்கு தங்களால் இயன்ற நன்கொடையைக் கொடுக்கவும் தயாராயிருக்க வேண்டுமென்பதே நமது வேண்டுகோளாகும்.

**சுசீந்திரம் சத்தியாக்கிரகம் வெற்றி பெருமாகுக !**

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 31.01.1926**



## மௌலானா அப்துல்பாரி

உத்தம தேசபக்தரும், முஸ்லீம்களுள் சிறந்த ஞானவான் எனக் கொண்டாடத்தக்கவருமாகிய மௌலானா அப்துல்பாரி அவர்கள் சமீபத்தில் மரணமடைந்தாரெனக் கேள்விப்பட மிகவும் வருந்துகிறோம். இவருடைய பெருத்த ஆதரவைக் கொண்டே கிலாபத் இயக்கமாகிய மத விஷயத்தில் மகாத்மா காந்தி தலையிட்டுழைக்கும்படியாயிற்று. காலஞ் சென்ற மௌலானா அவர்கள், முஸ்லீம்களின் மத கல்வி விஷயத்தில் எடுத்துக் கொண்ட சிரத்தை கொஞ்சமல்ல. இத்தகைய பெரியார் காலஞ்சென்றது மகமதிய சமூகத்துக்கே பெருத்த நஷ்டமாகும் என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

**( ப - ர் )**

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 31.01.1926**



RangaRakes tamilnavarasam.com

# பிராமணப் பத்திரிகைகளும் அதன் பிரசாரங்களும்

அடுத்துவரும் சட்டசபைத் தேர்தல்களில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்தில் கவலையுள்ள எந்த பிராமணரல்லாதாரும் ஜெயம் பெற முடியாதபடி விஷமப் பிரசாரங்கள் செய்து பிராமணர்களும் அவர்கள் தாளத் திற்குத் தகுந்தபடி ஆடும்படியான பிராமணரல்லாதார்களையுமே சட்டசபை யைக் கைப்பற்றும்படியான மாதிரிக்கு வேலைகள் செய்யப்பட்டு வருகிற தைப் பிராமணரல்லாத பாமர ஜனங்கள் இன்னமும் அறியாமல் ஏமாந்து போய்க்கொண்டே இருக்கிறார்கள். இதற்கு அநுகூலமாகவே சில பிராமண ரல்லாத பத்திரிகைகளும், தலைவர்கள் என்போர்களும், தொண்டர்கள் என்போர்களும் ஒத்துப் பாடிக்கொண்டே வருகிறார்கள். ஆனாலும் இப் பத்திரிகைகளும், தலைவர்களும், தொண்டர்களும் தற்காலம் செல்வாக்கும், பெருமையும், ஜீவனோபாய மார்க்கம் அடைந்து இருந்தபோதிலும், தேர்தல் கள் முடிந்து பிராமணர்கள் காரியம் முடிந்தவுடனே காதறுந்த ஊசிபோல கருதப்படுவார்கள் என்பதில் யாதொரு சந்தேகமும் இருக்காது. ஆனாலும், இப்பொழுது ஏன் பிராமணர்களும் அவர்கள் பத்திரிகைகளும் அதிகமான பிரயத்தனங்கள் எடுத்துக்கொண்டு இவ்வளவு பணங்கள் செலவு செய்து பிரசாரங்கள் செய்கிறார்கள் என்கிற விஷயத்தில் சிலருக்கு அதன் அவசியம் விளங்காமலேயிருக்கிறது. இப்பிரசாரங்களின் முக்கியக் காரணம் அடுத்தாற் போல் ஏதோ சில ராஜீய சீர்திருத்தங்கள் என்பது ஏற்படப் போகிறது என்பதாக பிராமணர்களின் கவலையாயிருக்கிறது. அச்சீர்திருத்தங்களுக்காக 1920 –ம் வருடத்திய சீர்திருத்தங்கள் வழங்க வேண்டிய அரசாங்கத்தார் ஒரு விசார ணைக் கமிட்டி ஏற்படுத்தியது போல், இப்பொழுதும் ஒரு விசாரணைக் கமிட்டி ஏற்படுத்துவார்கள். அக்கமிட்டி ஏறக்குறைய 1927 லோ அல்லது 1928 – ம் வருடத்திலோ அமலுக்கு வந்து ஆங்காங்கு சென்று விசாரணைகள் செய்யத் தொடங்கும். அவ்விசாரணையில் பிராமணரல்லாதார் தங்கள் நிலை மையையும் தேவைகளையும் உள்ளபடி ஒற்றுமையாய்ச் சொல்லிவிட்டால், அது பிராமணர்களுக்கு பெரிய ஆபத்தாய் முடிந்துவிடும் என்கிற பயம் வைத்து 1920 – ம் வருஷத்திய சீர்திருத்த விசாரணையின் போது ஜஸ்டிஸ் கக்ஷிக்கு விரோத மாய் சென்னை மாகாண சங்கம் என்று ஒன்றை ஸ்தாபித்து அதற்குப் பத்திரிகைகளையும் ஸ்தாபித்து பிரசாரங்களுக்கு ஆள்களை ஏற் படுத்தி அதற்கு பணங்கள் உதவ சூழ்ச்சிகள் செய்து, ஜஸ்டிஸ் கக்ஷியின்



அபிப்ராயம் நிறைவேற்றவொட்டாமல் செய்தது போல், இப்பொழுதும் பிராமணரல்லாதாரில் சிலரையும் சில பத்திரிகைகளையும் சுவாதீனம் செய்து பிராமணரல்லாதாரின் தேவைக்கு விரோதமாய்ப் பிரசாரம் செய்விக்க வேண டியது தங்கள் அவசிய மாய் போய்விட்டது.

ஆனால் 1920–ம் வருஷத்திய சீர்திருத்தத்தில் பிராமணரல்லாதாரை ஏமாற்றி சரி செய்து கொள்ள ஸ்ரீமான் சி.பி. ராமசாமி அய்யர் செலவுக்குப் பணம் முதலியவைகளும், பிரசார ஏற்பாடு கிரமம் முதலியவைகளும் செய்யும் வேலையை ஏற்றுக் கொண்டிருந்தார். இப்போது 1930–ம் வருடத்திய சீர்திருத்தத்திற்கு பிராமணரல்லாதாரை வஞ்சிக்க செலவுக்குப் பணமும் பிரசார ஏற்பாடும் ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

பிராமணரல்லாதார்களில் அப்பொழுது யார் யாரை தங்கள் வசப் படுத்திக் கொண்டார்களோ, அதுபோலவே இப்பொழுதும் ஏறக்குறைய அதே ஆள்களே அவர்கள் வசப்பட்டிருக்கின்றனர். அவைகளின் இரகசியத்தை யும் சிலர் கோப மயக்கத்தில் வெளியிட்டிருப்பதையும் கூட கவனித்திருக் கலாம். அதாவது, ஜஸ்டிஸ் கக்ஷியை ஒடுக்க (பாமர ஜனங்களை ஏமாற்றி)த் தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கப்பட்டது என்று சொல்லியிருப் பதைக் கவனித்தால் நன்றாய் விளங்கும். சென்ற “சீர்திருத்த” விசாரணையின் போதே சென்னை மாகாணச் சங்கம் என்னும் ஒரு துரோகச் சங்கம் தோன்றி யிருந்திராதிருக்குமாயின் பிராமணரல்லாதார் தங்கள் சமூக நன்மைக்காக எதிர்பார்த்த நன்மைகள் ஏறக்குறைய அடைந்தே இருக்கக்கூடும். இப்பொழு தாவது அதை அடைய மார்க்கமில்லாமல் பிராமணரல்லாத மக்களையே சுவாதீனப் படுத்திக் கொண்டு கொடுமை செய்வதோடு தங்கள் பத்திரிகை களிலும் இதையே முக்கிய கொள்கையாக வைத்துப் பாடுபடுகின்றன. இவற்றை பிராமணரல்லாத பாமர ஜனங்கள் நம்பி மோசம் போகிறார்கள்.

அதாவது, நாம் வெளியிடங்களுக்கு பல காரியமாய்ச் சென்ற சந்தர்ப் பங்களில் சந்திக்க நேர்ந்த சில பிராமணரல்லாத சகோதரர்கள் நம்மிடம் வந்து மிகுந்த பரிதாபப்படுவதை நேரில் பார்த்தோம். எப்படியெனில், நம்மைப் பார்த்து, “ஐயா, தங்களைத்தானே தமிழ்நாட்டு உண்மையான தேசபக்தர் என்று எண்ணியிருந்தோம். தாங்களே இப்பொழுது ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்து விட்டீர்களே. எங்களை இப்படிக் கைவிட்டு விடலாமா? தாங்களே இப்படிச் செய்தால் போலி தேசபக்தர்களைப்பற்றி சொல்லவும் வேண்டுமா? இனி நாங்கள் யாரை நம்புவது” என்று கவலைப்பட்டார்கள்.

நான் ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்ததாய் தாங்கள் எப்படி தெரிந்தீர்கள் என்று கேட்டால் “சுயராஜ்யா” “சுதேசமித்திரன்” பத்திரிகைகளின் மூலமாய் அறிந்தோம் என்று சொல்லுகிறார்கள். சரி, நான் ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந் தேனா இல்லையா என்பதைப் பற்றி அப்புறம் பேசிக்கொள்ளலாம், ஜஸ்டிஸ் கக்ஷி என்றால் என்ன அவ்வளவு பாவமான கக்ஷியாய்ப் போய் விட்டது என்று கேட்டால்,



RangaRakes tamilnavarasam.com

1. அக்கட்சிக்குக் கதரில் நம்பிக்கையில்லை.
2. உத்தியோக ஆசை.
3. ஜெயிலுக்குப் போன தேசபக்தர்களுக்கு சௌகரியம் செய்யக் கூடாது என்று அதன் தலைவர் ஸர். செட்டியார் சொன்னார்.
4. தஞ்சாவூர் ஜில்லா விவசாயிகளுக்கு நிலத்தீர்வை உயர்த்தக்கூடாது என்று சட்டசபையில் வாதாடியபோது ஜஸ்டிஸ் கக்ஷியார் அதை ஆதரிக்காமல் எதிரிடையாய் வோட்டுக் கொடுத்தார்கள்.

ஆகிய இக்காரியங்களை நாங்கள் மிகவும் முக்கியமானதாய்க் கருதுகி றோம். ஆதலால், இம்மாதிரிக் கக்ஷியை தாங்கள் ஆதரிக்கலாமா என்று கேட்கிறார்கள். இது போலத்தான் மற்றும் பாமர ஜனங்கள் நினைத்திருப் பார்கள் என்பதும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் பணம் வாங்கிக் கொண்டு பிரசாரம் செய்யும் பிராமணரல்லாத தொண்டர்களும் இதைத்தான் சொல்லிப் பிரசாரம் செய்துவருகிறார்கள் என்பதும் நமக்கு இதிலிருந்து நன்றாய் விளங்கிற்று.

1 – வது, ஜஸ்டிஸ் கக்ஷிக்குக் கதரில் நம்பிக்கையில்லை என்பது ஒரு முக்கியமான குறைவுதான். தற்காலம் இந்தியாவிலுள்ள எந்த கக்ஷிக்கு கதரில் நம்பிக்கையிருக்கிறது? மிதவாதக் கக்ஷிக்கு நம்பிக்கையிருக்கிறதா? சுயேச்சைக் கக்ஷிக்கு நம்பிக்கையிருக்கிறதா? பெசண்ட் கக்ஷிக்கு நம்பிக்கை இருக்கிறதா? அல்லது காங்கிரஸ் கக்ஷிக்காவது நம்பிக்கை இருக்கிறதா? நூற்போர் சங்கத்தில் இந்தியா ஒட்டுக்குமாக அங்கத்தினராயிருக்கிற சுமார் 3000 பேரைத் தவிர மற்ற ராஜீயவாதிகளுக்குக் கதரில் நம்பிக்கையில்லை என்றே சொல்ல வேண்டும்.

நம்பிக்கை இருந்திருக்குமேயானால், அவரவர்கள் ராஜீய திட்டத்தில் கதர் முதன்மையான ஸ்தானம் பெற்றிருக்கும். அல்லாமலும் சுயராஜ்யக் கக்ஷிக்குக் கதரில் நம்பிக்கையில்லாத காரணத்தாலேதான் காங்கிரஸை விட்டு கதரை வெளியேற்ற வேண்டியதாயிற்று என்பதில் சந்தேகமுண்டா? அப்படிக் கிருக்க சுயராஜ்யக் கக்ஷியை ஆதரிப்பவர்களைப்பற்றி கவலை கொள்ளாமல் ஜஸ்டிஸ் கக்ஷியைப் பற்றி மாத்திரம் ஏன் இவ்வளவு ஆத்திரப்பட வேண்டும்?

2 – வது, உத்தியோக ஆசை என்பது. உத்தியோக ஆசை நமது நாட்டில் எந்தக் கக்ஷிக்கு இல்லை? மேல்கண்ட பல கக்ஷிகள் உத்தியோகம் வகிக்கிறதா? இல்லையா? சுயராஜ்யக் கக்ஷியாரும் உத்தியோகம் வகிக்கிறார் களா? இல்லையா? அவர்களும் சர்க்காரிடம் 4000, 5000 சம்பளம் வாங்கி வருகிறார்களா? இல்லையா? இதைப்பற்றி அவர்களுக்கு சாதகமான பத்திரி கைகளாகிய "நவசக்தி", "தமிழ்நாடு" ஆகிய பத்திரிகைகளே ஸ்ரீமான்கள் பட்டேல், நேரு, ரெங்கசாமி ஐயங்கார் முதலியோர்கள் பார்க்கும் வேலைக்கும் தம்பே முதலியவர்கள் பார்க்கும் வேலைக்கும் வித்தியாசமில்லை என்று



எழுதியதைக் கவனித்தால் விளங்காதா? சில மாகாணங்களில் முக்கியமாய்த் தமிழ்நாட்டில் சுயராஜ்யக் கக்ஷியாருக்கு உத்தியோகம் கிடைப்பது கஷ்டமா யிருக்கிறபடியால் சீ .. அந்தப் பழம் புளிக்கும் என்று ஏமாற்றி வோட்டு வாங்கப் பார்க்கிறார்கள். கிடைக்கும் போலிருந்தால் உடனே பெற்றுக் கொள்ளுவார்கள். காங்கிரஸ் செக்ரட்டேரியான ஸ்ரீமான் A.ரெங்கசாமி ஐயங் காரும், சுயராஜ்யக் கக்ஷி செக்ரட்டேரியான ஸ்ரீமான் T. ஆதிநாராயண செட்டியாரும், தம் மக்களுக்கு நூற்றுக்கணக்கான சம்பளம் பெறத்தக்க உத்தியோகம் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார்களா? இல்லையா? அன்றியும் தங்கள் திட்டத்திலாவது உத்தியோகம் கூடாது என்று ஏற்படுத்திக் கொண்டி ருக்கிறார்களா? அது சமயம் போல் பார்த்துக் கொள்ளலாம் என்று தானே எழுதிவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

3–வது, ஜெயிலுக்கு போனவர்களுக்குச் சவுகரியம் செய்யக்கூடாது என்று ஸர். செட்டியார் சொன்னது.

இந்த வார்த்தைதான் சிலருக்குப் பெரிய ஆதாரமாயிருக்கிறது. இதை வைத்துக் கொண்டுதான் ஸ்ரீமான் பாஷ்யம் ஐயங்காரும், ஸ்ரீமான் சத்திய மூர்த்தியும், அவர்கள் நண்பர் ஜனாப் ஷாபி மகமதும் தியாகராய செட்டியார் தமிழ்நாட்டு "டயர்" என்று சொன்னார்கள். இன்னமும் அதையே சில வயிற்றுச்சோற்று தேசபக்தர்களும் சொல்லிக் கொண்டு பிராமணர்களுக்கு வோட்டு வாங்கிக் கொடுக்கிறார்கள்.

ஸர். செட்டியார் சொன்னதை உண்மையென்றே வைத்துக் கொள்ளு வோம். ஏன் அப்படிச் சொன்னார்? எதற்காக அப்படிச் சொன்னார்? என்ப தைக் கவனிக்க வேண்டாமா? அவருக்கு ஜெயிலுக்குப் போய் அவஸ்தைப் பட்ட ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு, எஸ். ராமநாதன், ஈ.வெ. ராமசாமி நாயக்கர் அவர் மைத்துனனாகிய தேவ நாயக்கர் முதலானவர்களிடம் ஸர். செட்டியாருக்கு விரோதமோ, குரோதமோ, சுயராஜ்யம் வந்து விடுமோ? என்னமோ என்கிற பயமா? இப்படிச் சொல்லித்தான் ஏதாவது பணமோ உத்தி யோகமோ சம்பாதித்துக் கொள்ளலாம் என்கிற சுயநலமா? என்பதைக் கவனிக்க வேண்டாமா?

முதலாவது ஸர். செட்டியார் ஒத்துழையாமைத் தத்துவம் ஒழுங்காய் நடைபெறும் என்கிற நம்பிக்கையில்லாதவர். ஒத்துழையாமைத் தத்துவத்தில் பிராமணரல்லாதார் ஈடுபட்டு உழைப்பதில் அதன் பயனை பிராமணர்கள் அடைவார்கள் என்கிற தீர்க்கதரிசனமுள்ளவர். அல்லாமலும் ஒத்துழையா மையின் பேரால் பிராமணரல்லாதாரில் சில பொறுக்கு மணிகள் தங்கள் முன்னேற்றத்தை கெடுத்துக் கொள்கிறார்களே என்கிற விசனமுடையவர். இவ்வித குணமுள்ள ஒருவர் மக்கள் ஜெயிலுக்குப் போவதை எப்படி ஆதரிக் கக்கூடும்? அதோடு, அவர்களுக்கு வேண்டிய சவுகரியங்களைச் செய்து கொடுக்க எப்படி மனம் வரும்? ஜெயிலுக்குப் போகிறவர்களுக்கு சவுகரி யம் செய்து கொடுப்பதாயிருந்தால், வெளியில் கஞ்சிக்கில்லாமல் திரிகிற



RangaRakes tamilnavarasam.com

ஏழை மக்கள் எல்லோரும் தான் ஜெயிலுக்குப் போய் விடுவார்கள். அல்லாமலும் ஜெயிலுக்குப் போவது தப்பு என்று நினைக்கிறவர் இன்னும் அநேகம் பேருக்கு ஜெயில் ஆசை உண்டாகும்படியாக சவுகரியங்கள் செய்து கொடுக்க எப்படி சம்மதிப்பார்? இதை யோசிக்க வேண்டாமா? இது ஒருபுறம் இருந்தாலும், சுயராஜ்யக் கக்ஷித் தலைவரான காலஞ் சென்ற தேசபந்து தாஸை ஒரு சமயத்தில் பார்த்து "ஜெயிலுக்குப் போயிருக்கும் தேசபக்தர்களைக் கவனிக்காமல் சட்ட சபைக்குப் போக ஆசைப்படுவதின் மூலம் சர்க்காருக்கு உதவி செய்கிறீர்களே" என்று கேட்டதற்கு "ஜெயிலுக்கு போனவர்களைப் பற்றிக் கவலையில்லை. வெளியில் வயிறு வளர்க்க யோக்கியதை இல்லாத கஞ்சிக்கு வகையற்றவர்களே தான் போயிருக்கிறார்கள்" என்று சொன்னார். அது மாத்திரம் குற்றமில்லையா? அப்பேர்ப்பட்டவர்களின் பெயரைச் சொல்லிக் கொண்டுகூட நம் நாட்டுப் பிராமணர்கள் பிழைக்கவில்லையா? ஸர். செட்டியார் சொன்னது மோசமானதா? தேசபந்து தாஸ் சொன்னது மோசமானதா? இதைப்பற்றி யோசிக்க வேண்டாமா?

அன்றியும் தமிழ்நாட்டுத் தலைவர் அநேக தேசபக்தர்களுக்கு தன் வகுப்பு நலத்திற்காக கஞ்சி வார்க்கும் தர்மப் பிரபு ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் வாயாலேயே, ஒரு ஒப்பற்றத் தலைவர் என்று சொல்லப்படும் பெரியாரான ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் ஒத்துழையாமை அன்கான்ஸ்ட்டிடியூஷனல் - சட்ட விரோதமானது, ஆதலால் காங்கிரஸ் ஸ்தாபனங்களையெல்லாம் சட்ட விரோதமான கூட்டமாகத் தீர்மானித்து, காங்கிரஸ் மெம்பர்களையெல்லாம் மகாத்மா உள்பட ஜெயிலில் அடைத்து ஒத்துழையாமையையே ஒழித்துவிட வேண்டுமென்று சொன்னாரே! இது குற்றமில்லையா? இவரை இன்றையத் தினம் தமிழ்நாட்டுத் தலைவராகக் கொள்ளவில்லையா? இவர் சொன்னது மோசமானதா? ஸர்.செட்டியார் சொன்னது மோசமானதா? அப்பேர்ப்பட்ட ஸர்.செட்டியாரை ஸ்ரீமான் ஐயங்கார் தனக்கு மந்திரிபதவி வேண்டும் என்று கேட்டதை விட ஸர்.செட்டியார் சொன்னது மோசமானதா?

4-வது, தஞ்சை ஜில்லா நிலத் தீர்வையைக் குறைப்பதற்கு ஜஸ்டிஸ் கக்ஷியார் விரோதமாயிருந்ததாகச் சொல்வது.

இதைப் பாமர ஜனங்கள் சரியானபடி உணருவதற்கே மார்க்கமில்லாமல் விஷமப் பிரசாரம் நடப்பதால் ஏமாந்து போக நேரிடுகிறதேயன்றி, இதில் ஜஸ்டிஸ் கக்ஷியார் குற்றமென்ன என்பதே விளங்கவில்லை. முதலாவது தஞ்சை நிலத்தீர்வை விஷயம் கக்ஷியைச் சேர்ந்ததே அல்ல. ஜஸ்டிஸ் கக்ஷி மெம்பர்கள் சில பேர் வரி உயர்த்தக் கூடாது என்பதற்கே ஓட்டுக் கொடுத்தார்கள். ஜஸ்டிஸ் கக்ஷி அல்லாத மெம்பர்கள் பல பேர் வரி உயர்த்த வேண்டும் என்பதற்கே ஓட்டுக் கொடுத்தார்கள்.

ஏனெனில், வரி உயர்த்தினது தஞ்சை ஜில்லாவுக்கு மாத்திரம் அல்ல.



30 வருடத்திற்கு ஒரு தரம் ரீ செட்டில்மெண்ட் என்கிற சர்க்கார் சட்டப்படி, ஒவ்வொரு ஜில்லாவையும் 30 வருடத்திற்கு ஒரு தரம் அளந்து சர்வே செய்து ரூபாய்க்கு இவ்வளவு அதிகப்படுத்துவது என்கிற முறைப்படி அனேக ஜில்லாக்களை அளந்து சர்வே செய்து வரி அதிகப்படுத்திவிட்டு, தஞ்சை ஜில்லாவுக்கு வந்து அளந்து வரி போடும் போது தஞ்சை ஜில்லாக்காரர் ஆக்ஷேபித்தால் எப்படி ஒப்புக் கொள்ளக்கூடும்? உதாரணமாக, ஒரு முனிசிபாலிட்டியில் 5 வருடத்திற்கு ஒரு தரம் கவனித்து வரி போடுகிறது என்கிற சட்டப்படி கவனித்து வரிபோடும் முறை துவக்கப்பட்டு 20 வீதிகளுக்கு வரி உயர்த்திப் போட்டு விட்டு 21 - வது வீதிக்கு வரிபோட வரும்போது தங்கள் வீதிக்கு மாத்திரம் வரி உயர்த்தக்கூடாது என்று அவ்வீதிக்காரர் பேரால் அவ்வீதிக் கவுன்சிலர்கள் வாதாடினால் மற்ற கவுன்சிலர்கள் ஒப்புக் கொள்ளுவார்களா? ஒரு சமயம் அறியாமையினால் ஒப்புக் கொண்டாலும், சர்க்கார் சம்மதிப்பார்களா? அது போலவே, மற்ற ஜில்லாக்களுக்குப் போட்டு அமுலில் வருவதை தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் எப்படி இல்லாமல் செய்ய முடியும்? தஞ்சை ஜில்லாவில் பிராமண மிராசுதாரர் அதிகமாயிருப்பதால், தஞ்சைக்கு மாத்திரம் ஒரு சட்டம்; மற்ற ஜில்லாவுக்கு வேறு சட்டமா? வேறு பல ஜில்லாக்களைச் சேர்ந்த தேசீய மெம்பர்கள் கூட இத்தீர்மானத்தை எதிர்த்திருக்கிறார்கள். அப்படியிருக்க இது எப்படி ஜஸ்டிஸ் கக்ஷியின் மீது குற்றமாகும் என்பதைப் பாமர ஜனங்கள் அறிவதில்லை. அல்லாமலும் இதற்காக வரி கொடா இயக்கம் என்று ஒரு பித்தலாட்ட இயக்கம் கூட தஞ்சை ஜில்லாக்காரர்கள் ஆரம்பித்தார்கள். இதைக் கூட காங்கிரஸில் முக்கியஸ்தர் - இப்போது பிராமணர்களால் பெரிதும் கொண்டாடப்படுபவரான ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் தஞ்சையில் நடக்கும் வரி கொடா இயக்கம் சுத்தப் பொய்யான இயக்க மென்றும் பத்திரிகை இயக்கமென்றும் கூடச் சொன்னார். அதைப் பற்றி பேசுவோர் யாரையும் காணோம். இப்போது அவரை பிராமணர்கள் லோககுருவுக்கு அடுத்தபடியில் கொண்டாடு கிறார்கள்.

தங்கள் நன்மைக்கு கொஞ்சம் விரோதமாய் யாராவது பேசினால் மாரீசன் என்று சொல்லி விடுகிறார்கள். தங்கள் நன்மைக்கு அநுகூலமாய் தங்கள் தாளத்திற்கு ஏற்றாற்போல் ஆடினால் மகா சத்தியகீர்த்தி, உத்தமர் என்று சொல்லி விடுகிறார்கள். ஆகிய இம்மாதிரி பிரசாரங்களால் நமது ஜனங்கள் அடியோடு ஏமாந்துபோய் பரிதபிக்கிறார்கள் என்பது நிதர்சனமாயிருக்கிறது. ஆதலால், பிராமணரல்லாதார் ஏதாவது முற்போக்கடைய வேண்டுமானால், சுயமரியாதையோடு வாழ வேண்டுமானால், தங்கள் சமூகத்து பாமர ஜனங்கள் உண்மையை அறியும்படியும், பிராமணப் பிரசாரத்தால் ஏமாந்து சமூகத் துரோகிகள் ஆகாதபடியும் செய்யத் தகுந்த பிரசாரங்கள் நடைபெற வேண்டும். ஜஸ்டிஸ் கக்ஷியின் உண்மையை பொது ஜனங்கள் அறியும்படியும், பொது ஜனங்களுக்கு அக்கட்சியில் உண்மையாய் என்ன குறை இருக்கிறது என்பது உணர்ந்து, ஏதாவது இருந்தால் அதைத் திருத்த வசதி உண்டாகும்படியும் வேண்டிய ஏற்பாடுகள் பிராமணரல்லாதார் வகுப்பில்



RangaRakes tamilnavarasam.com

அக்கறை உள்ளவர்கள் உடனே செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்பதையும் இது சமயம் ஏமாந்து போய் விட்டோமானால் பிறகு ஐயோ என்றாலும் வராது, அம்மா என்றாலும் வராது என்பதையும் உணரக் கோருகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 07.02.1926**



# தலைவர்களின் யோகம்

சட்டசபை வோட்டுப் பிரசாரத்திற்கு *மீ* 30 ரூபாய் சம்பளத்திலும் *மீ* 30 ரூபாய் பத்தாவிலும் ஆக *மீ* 60 ரூபாயில் பிரசாரகர்களை நியமிக்க தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி அதன் அக்ராசனருக்குப் பூரண அதிகாரம் கொடுத்திருக்கிறது.

இனி தேசியத் தொண்டர் என்போருக்கு இது கை முதலில்லாத வியா பாரமாய்ப் போய்விட்டது. ஒத்துழையாமை மும்மரமாக நடந்த காலத்தில் ஆவேசத்தின் காரணமாய் ஜெயிலுக்குப் போய்வந்து பட்டணங்களிலும், கிராமந்தரங்களிலும் செல்வாக்குப் பெற்று இப்போது கஞ்சிக்கில்லாமல் திருட வும், ஒருவரிடம் கூலி வாங்கிக் கொண்டு ஒருவரைத் திட்டவும், அடிக்கவும் செய்து கொண்டிருக்கும் தொண்டர்களுக்கு இப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது தொண்டர்களின் யோகம்தான்.

ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் போன்ற தலைவர்கள், இப்படி ஒரு தீர்மான மில்லாமலிருக்கும் போதே இம்மாதிரியான தொண்டர்களைக் கொண்டு தலைவராகியிருக்க, காங்கிரஸிலே இம் மாதிரி ஓர் தீர்மானமும் அதன் அதிகா ரமும் அவர் கையிலே இருக்க ஏற்பட்டதானது, தொண்டர்களின் யோகத்தை விட தலைவர்களின் யோகமே பெரிதெனச் சொல்ல வேண்டும்.

இனி ஒவ்வொரு ஊரிலும் சுயராஜ்யக் கக்ஷித் தலைவர்களுக்கு "ஜெய்" சப்தம் வானத்தைப் பிளக்கும். ஜஸ்டிஸ் கக்ஷியைத் திட்டும் சப்தம் மேல் உலகத்தையும் நடுக்குறச் செய்யும். சுயராஜ்யக் கக்ஷியை ஒப்புக் கொள்ளாதவர்கள் வெளி ஊர்களில் மீட்டிங்கு போட முடியாது, போட்டாலும் விளக்கு வராது, வந்தாலும் கல்லுகளும், மண்ணுகளும், கேள்விகளும் பறக்கும். மிஞ்சி இத்தனையும் சகித்துக் கொண்டு நடத்தினாலும் பத்திரிகை களில் வராது. கூச்சலும் குழப்பமும் மீட்டிங்கைக் கலைக்கும். இதெல்லாம் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பணமும், காங்கிரஸ் பணமும் செய்தாலும் பிராம ணப் பத்திரிகை ஜஸ்டிஸ் கக்ஷியும் சுயராஜ்யக் கக்ஷியை ஒப்புக் கொள்ளாத வர்களும் செய்ததெனப் பிரசாரங்கள் செய்யும். ஆதலால் சுயராஜ்யக் கக்ஷிக்கு இனி மேல் என்ன குறை! இம்மாதிரி சுயராஜ்யக் கட்சியே! நீ நீடூழி வாழ்க!!

**குடி அரசு - கட்டுரை - 07.02.1926**



RangaRakes tamilnavarasam.com

# மகாத்மாவின் நிலை

காந்தி அடிகளின் திரேக நிலையும் மனப்பான்மை நிலையும் அசை வுற்றுப் போய்விட்டது என்பது அவருக்கு அடிக்கடி ஏற்படும் காயலா மூல மாகவும் அவர் அடிக்கடி வெளிப்படுத்தும் அபிப்ராயம் மூலமாகவும் நன்கு வெளியாகிறது. அவருக்கு மன உறுதியுள்ள காலத்தில் காயலாவே ஏற்படுவ தில்லை. ஏற்பட்டாலும் இயற்கை முறைகளிலேயே சவுக்கியப்படுத்திக் கொள்வார். இப்பொழுதோ அவருக்கு கொய்னாவும் இஞ்சக்ஷனும் தேவை யாய்ப் போய்விட்டது. ஆதலால் இயற்கை சிகிச்சையில் உள்ள உறுதி ஆட்டம் கொடுத்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். அதுபோலவே ராஜீய விஷயத்தில் இருந்த உறுதிகளும் ஆட்டம் கொடுத்து விட்டதாகவே கருத வேண்டியதாய் விட்டது. மகாத்மா ஜெயிலில் இருந்து வந்தவுடன் இருந்த மனநிலையும், ஸ்ரீமான்கள் தாஸ், நேரு இவர்கள் கேட்டுக்கொண்ட பின் ஏற்பட்ட மனநிலையும், கல்கத்தா ஒப்பந்த மனநிலையும், பாட்னா ஒப்பந்த மனநிலையும், தான் ஓய்வு எடுத்துக் கொண்ட மனநிலையும், தனக்கு நம்பிக்கையில்லாத திட்டத்திற்கு தான் தன்னால் கூடிய உதவி செய்வதாகச் சொல்லும் மனநிலையும் பார்த்தால் தயவு தாக்ஷண்ணியம், கருணை என்பதுகள் நமது மகாத்மாவை ஆவாகனப்படுத்திக்கொண்டு பாத்திரா பாத்திரமறியாமலே மகாத்மாவை ஆட்டி வைக்கின்றன. இவ்வளவும் போதா மல் ஸ்ரீமான் சி.ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் விஷயத்திலோ இவைகள் தலைகால் கூட தெரியாமல் ஆட்டி வைக்கின்றது.

ஸ்ரீமான் தாஸ், நேரு இவர்கள் விஷயத்திலேயே அவர்கள் சொல்லு வதுபோலெல்லாம் மகாத்மா ஆடினாரென்றால் ஸ்ரீமான் ஆச்சாரியார் விஷயத்தில் கேட்கவும் வேண்டுமா? ஆச்சாரியார் நினைப்பது போலெல் லாம் ஆடினால்தானே சரியாகவிருக்கும். ஆதலால் அதற்கு ஏற்றாற் போலவே இப்பொழுது மகாத்மா ஆடிவருகிறார்.

**ஸ்ரீமான் ஆச்சாரியார் :-**

மகாத்மாவே! நான் பிரிட்டீஷ் கோர்ட்டுக்குப் போய் எனது வக்கீல் சாமார்த்தியத்தால் ஆர்க்கியுமெண்ட் செய்து ஒரு கேசு ஜெயித்து வந்தேன். ஆனால், ஜனங்கள் சந்தேகப்படுகிறார்கள். தயவு செய்து இதற்கு ஆசி கூறுங்கள்.



**மகாத்மா:-**

ஆ ! ஆ ! ரொம்பவும் சரி. அதுதானே ஒத்துழையாமையின் அடிப்படை. யாரோ என்னமோ சொல்லட்டும். நீங்கள் பயப்படாதீர்கள்.

**ஸ்ரீமான் ஆச்சாரியார்:-**

மகாத்மாவே! மதுவிலக்கு என்கிற கொள்கையை வைத்து சுயராஜ்யக் கட்சியின் பேரால் எனது பிராமண வகுப்பாருக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க வேண்டும். தயவு செய்து இதையும் ஆதரித்து ஆசி கூறுங்கள்.

**மகாத்மா :-**

ஆ ! ஆ! ஆக்ஷேபணை என்ன, நீங்கள் செய்தது ரொம்பவும் சரி. சுயராஜ்யக் கட்சியார் பரம உத்தமர்கள். அவர்கள் மதுவிலக்கை ஏற்றுக் கொண்டது தேசத்திற்கே பெரிய லாபம். அவர்களே ஜெயிக்க வேண்டும். நீங்களும் அவர்களுக்கு வேலை செய்வதுதான் மோக்ஷம்.

என்று இம்மாதிரி அடிக்கடி உதவி வருவதைப் பார்க்கும் போது மகாத்மாவின் மன உறுதியின் நிலை நமது புத்திக்கு புலப்படாதிருப்பதோடு கவலைப்பட வேண்டியதாகவேயிருக்கிறது. ஒரு சமயம் மகாத்மா இவ்வாட்ட மான மன உறுதிகளின் பலனால் பின்னால் எல்லாம் சரிப்படுத்திக் கொள் ளலாம் என்று நம்பிக்கை கொண்டு இருக்கலாம். உதைத்த கால் புழுப்பதற்கு முன் அடிவயிற்றில் சீ கட்டும் போலிருக்கிறதே அதற்கு என்ன செய்வது என்கிற கவலையும், மறுபடியும் நமது நாட்டை நடத்த வேண்டிய நிலை நமது மகாத்மாவுக்கு வருமானால் இப்பொழுது மகாத்மாவை ஆட்டமுறச் செய்தவர்களே அந்தக் காலத்திலும் வந்து குறுக்கிட்டு இந்த மாறுதல்களை யெல்லாம் எடுத்துக்காட்டி மறுபடியும் உபத்திரவம் செய்ய வந்து விடுவார் களே என்கிற பயமும்தான் இவற்றைப் பற்றி கவலைப்பட வைக்கிறதே அல்லாமல் மற்றபடி மகாத்மாவினிடம் எவ்விதச் சந்தேகமோ, கற்பனையோ யாருக்கும் கொஞ்சமும் இருக்காது என்றே உறுதி கூறுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 07.02.1926**



RangaRakes tamilnavarasam.com

# நன்றி பாராட்டுதல்

**உண்மைச் சகோதரர்களே!**

"குடி அரசு" 34 -வது இதழ் (27-12-25) ஒன்பதாவது பக்கத்தில் "குடி அரசு"க்குப் புது ஆண்டு சன்மானம் என்பதாக ஒரு சிறு வேண்டுகோள் விடுத்திருந்தோம். அவ்வேண்டுகோளைச் சகோதரர்கள் மதித்துக் கனப் படுத்தியதற்கு அதாவது 1-1-26 - ந் தேதியிலிருந்து 31-1-26 - ந் தேதி முடிய ஜனவரி *மீ*த்தில் 307 சந்தாதாரர்கள் ஷை வேண்டுகோளை உத்தேசித்துத் தாங்களாகவும், தங்கள் நண்பர்கள் மூலமாகவும் சந்தாதாரர்களாகச் சேர்ந்தும், இரண்டொருவர் சிறு தொகை உதவியும் கனப்படுத்தியதோடு கொழும்பு, மதுரை, திருச்சி, நாகை, கோவை முதலிய ஊர்களில் "குடி அரசி"ன் அபிமான ஏஜண்டுகள், தங்கள் சில்லரை விற்பனையை ஜனவரி மாதத்தில் ஒன்று இரண்டாய், மூன்றாய்ப் பெருக்கியும், "குடி அரசி"ன் முன்னேற்றத்தில் பொறுப்பு எடுத்துக் கொண்டதற்கும் குடிஅரசின் சார்பாகவும், பிராமண ரல்லாதார் பாமர மக்கள் - தீண்டப்படாத மக்கள் சார்பாகவும் நாம் நெஞ்சார நன்றி பாராட்டுகிறோம்.

"குடி அரசு" வாரம் இருமுறை - மும்முறை - தினப்பதிப்பு ஆகிய வைகளாக மாறவேண்டும் என்பதாக ஆசைபட்டு, அதற்குற்ற வழிகளைச் சொன்னவர்களுக்கும் பலவிதங்களில் உதவி செய்வதாகச் சொன்னவர் களுக்கும், மற்றும் "குடி அரசி"னிடம் தங்களுக்குப் பூரண நம்பிக்கை யிருப்பதாகச் சொல்லி நமக்கு ஊக்கமூட்டியவர்களுக்கும் நமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தவிர "குடி அரசை" வாரப் பதிப்பிலிருந்து இது சமயம் எவ்விதமாகவும் மாற்ற சக்தியற்றவராய் இருக் கிறோம். ஏனெனில்,

1. நமது "குடி அரசு" வியாபாரப் பத்திரிகையாயில்லாமல் பிரசாரப் பத்திரிகை என்பதை உத்தேசித்து குறைந்த சந்தா வைத்திருப்பதால் நஷ்ட மடைய நேரிட்டிருப்பதோடு அதிக நஷ்டமடையவும் இதுசமயம் சௌகரிய மில்லாதிருக்கிறது.

2. அன்றியும், அதன் பத்திராதிபரான ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் ஒவ்வொரு வாரமும் 2 அல்லது 3 நாள் பிரசாரத்திற்கு வெளியூர் களுக்குப் போக வேண்டியதாயுமிருக்கிறது.



3. கதர் வேலைக்கும் காலத்தைச் செலவிட வேண்டியிருக்கிறதோடு இன்னும் பல காரணங்களாலும் இது சமயம் மாற்ற முடியாமலிருப்பதற்கு மன்னிக்கவும்.

வேண்டுமானால் வேறு கனவான்கள் யாராவது ஏற்றுக்கொண்டு நடத்துவதாய் இருந்தால், அவர்களிடம் சர்வ சுதந்திரத்துடன் "குடி அரசு" பத்திரிகையை ஒப்புக் கொடுத்துவிட்டு "குடி அரசு"க்கு ஊதியமில்லாத உதவியைச் செய்வதில் யாதொரு ஆக்ஷேபனையும் இல்லை என்பதையும் உண்மையாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 07.02.1926**



RangaRakes tamilnavarasam.com

# எலெக்ஷன் தந்திரம்

## ( தேர்தல் வாக்குத்தத்தம் )

**–சித்திரபுத்திரன்**

தமிழ்நாட்டில் பிராமணாதிக்கம் வலுவடைவதற்காக, வரப்போகும் சட்டசபைத் தேர்தல்களில் பிராமணர்களும் மற்றும் பிராமணர்களின் பிராமணரல்லாத அடிமைகளும் பிராமணாதிக்கத்தின் சார்பாய் எப்படியாவது ஸ்தானம் பெற்று, இதுவரையிலும் பிராமணரல்லாதார் இயக்கங்களின் மூலமாகவும், மகாத்மாவின் ஒத்துழையாக் கொள்கையின் நிர்மாணத் திட்டங்கள் மூலமாகவும் ஒரு சிறிதளவு முன்னேறியிருக்கும் பிராமணரல்லாதார் முன்னேற்றத்தையும், தேச நலத்தையும், அடியோடழித்து ஆதிக்கம் பெற காங்கிரஸின் பெயரால் நமது நாட்டுப் பிராமணர்களின் சூழ்ச்சிக் கொடி வானமளாவப் பறக்கிறது.

இக்கொடியை பிராமணரல்லாதாரிலேயே சில விபூஷணாழ்வார்கள் தாங்கித் திரிகின்றார்களெனச் சொல்ல வெட்கப்படுகின்றேனாயினும் உண்மையைச் சொல்ல அஞ்சுவது அதைவிட வெட்கக் கேடாதலின் சொல்லாமல் விடுவதற்கில்லை.

1. தற்காலம் இந்திய தேசிய காங்கிரஸ் என்று சொல்லும் விடுதலை இயக்கமானது பெரும்பாலும் பிராமணர்கள் கையில் சிக்கிக் கொண்டதென்பதை யாவராலும் மறுக்க முடியாது.

2. காங்கிரஸின் தலைவர் ஸ்ரீமதி சரோஜனி தேவியாராவார். அந்த அம்மையார் பிராமணரல்லாதாருக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாலும் இவர் பிராமண ஸ்திரீ யென்பதில் எவருக்கும் சந்தேகமிருக்காது.

3. அதன் காரியதரிசிகளோ தமிழ்நாட்டுப் பிராமணர்கள் இருவர். ஒருவர் ஸ்ரீமான் ஏ. ரெங்கசாமி ஐயங்கார். அவருடைய மனப்பான்மையும், பிரசாரமும், வாழ்வும் பிராமணரல்லாதாரைத் தீண்டாதாராக்கி, பிராமணாதிக்கமே உலகத்தையெல்லாம் ஆட்கொள்ள வேண்டுமென்கிற கருத்துள்ளவர் என்பதை எவரும் ஆக்ஷேபிக்க முடியாது. அவர் நடத்தும் சுதேசமித்திரன் பத்திரிகைக்குப் பயந்து நமது நாட்டிலுள்ள எத்தனை பிராமணரல்லாத 'வீரர்கள்' சர்க்கஸ்காரனிடம் அகப்பட்ட புலியைப்போல் நடந்து வருகின்றார்களென்பதும், அப்பத்திரிகையின் பிரசாரத்தால் எவ்வளவு தூரம் பிராமணரல்லாதார் முற்போக்கு அழுத்தப்பட்டு வருகின்றதென்பதும் உலகமறிந்த விஷயமே.

4. மற்றொரு காரியதரிசி ஸ்ரீமான் கே. சந்தானம் என்று சொல்லும் (பஞ்சாபிலுள்ள) தமிழ்நாட்டு ஐயங்கார் பிராமணர். இவர் மைலாப்பூர் ஐயங்கார் வக்கீலான ஸ்ரீமான் கே. பாஷியத்தின் சகோதரராவார். "இந்தியப் பிராமணாதிக்கத்தின் சங்கத்தின் சார்பாய் இதர ஒவ்வொரு மாகாணங்களுக்கும் சென்றிருப்பது போல, பஞ்சாப் மாகாணத்துக்குச் சென்றுள்ள பிரசார ஏஜண்டு இவர் என்பதையும்" எவரும் மறுக்க முடியாது.

5. காங்கிரஸின் ( டிக்டேட்டர் ) என்னும் சர்வாதிகாரியான ஸ்ரீமான் மோதிலால் நேரு அவர்கள் வெளிப்படையாய் மாமிசம் சாப்பிட்டாலும் மது வருந்தினாலும் பிராமணர், பிராமணரே என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை.

6. மற்றும் தமிழ்நாட்டின் சார்பாய் காங்கிரஸ் நிர்வாகத்தில் ஸ்தானம் பெற்றவரும் இந் நாட்டுக்கேற்ற திட்டம் வகுப்பவருமான ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்காரும் எப்படியிருந்தபோதிலும் அவரும் பிராமணரே என்பதை நான் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

7. தமிழ்நாட்டுப் பிராமணர்களின் சூழ்ச்சிக்குக் கடுகளவும் பின்வாங்காத, மஹாராஷ்டிர தேசத்துப் பிராமணரில் ஸ்ரீமான் அபயங்கார் என்னும் பிராமணரும் காங்கிரஸின் நிர்வாக அங்கத்தினர் என்பதையும் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

8. மற்றபடி மகாத்மா காந்தி, மௌலானா மகமதலி, ஸ்ரீமான் ஜம்னலால் பஜாஜ் இவர்கள் அங்கத்தினர்களாயிருந்தாலும், தள்ள முடியாமல் தாக்ஷண்யத்திற்குக் கட்டுப்பட்டுத் தங்கள் பெயரைக் கொடுத்து நிர்வாகத்தில் கலக்காமலிருக்கின்றவர்கள் என்பதும் நான் எடுத்துக் கூறத் தேவையில்லை.

9. லாலா லஜபதிராய் அவர்களோ பஞ்சாப் மாகாணத்தில் மெஜாரிட்டியாயிருக்கும் மகமதிய சமூகத்தாரிடம் சந்தேகமும் பயமுங்கொண்டு, பிராமணாதிக்க சபையாகிய இந்து மகாசபையிடம் அடைக்கலம் புகுந்தவர்.

10.மீதியாயிருப்பவர் ஸ்ரீமான் சென்குப்தா. அவர் வைசியராயிருந்த போதிலும் தமிழ்நாட்டு ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு ஒப்பான சத்தியமூர்த்தியாவார். அவருக்கும் நமது சத்தியமூர்த்தி ஐயரைப் போலவே மீட்டிங்குக்கு ஓர் உடையும்,வீட்டில் ஓர் உடையும், வெள்ளைக்காரரைப் பார்க்க ஓர் உடையுமாக ஆக மூவுடை தரிப்பவர். அவருக்கு உலகமே கல்கத்தா கார்பொரேஷன் பிரசிடெண்டு ஸ்தானம்தான்.



RangaRakes tamilnavarasam.com

ஆகிய இவர்கள்தான் 33 கோடி இந்தியருக்கும் ஜாதகமெழுது பவர்கள்.

அப்படியிருந்தாலும், தமிழ்நாட்டுக்கு ஜாதகம் எழுதுகிறவர்கள், குறிப்பாகவும் சிறப்பாகவும் ஸ்ரீமான்கள் ஏ . ரெங்கசாமி ஐயங்கார், கே. சந்தானம் ஐயங்கார், எஸ். சீனிவாசய்யங்கார் ஆகிய மூன்று ஐயங்கார் "சுவாமி கள்" என்பதை எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. இவர்களுக்கு சாரதியா யிருப்பவர் பாரதப் போருக்கு கிருஷ்ணன் போல பிராமணாதிக்கப் போருக்கு நமது ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் "சுவாமிகள்" அமர்ந்திருக்கிறார். அவருக்கு தமிழ்நாட்டின் பெரும்பாகத்தில் நல்ல பிள்ளையென்கிற பெயருண்டு.

ஆதலால், தமிழ்நாட்டு விடுதலை இயக்கம் இவ்வய்யங்கார் "சுவாமி" களிடத்திலேயே அடங்கிவிட்டது. இதை அநுசரித்து தேர்தல் பிரசாரமும் வெளிக்கிளம்பி விட்டது. இதற்காக ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் காங்கிரஸ் கட்சியின் வேலைத்திட்டம் என்கிற ஒரு ஆயுதத்தை வெளிப்படுத்தியிருக் கிறார். அதனுடைய உத்தேசம் தமிழ்நாட்டுப் பிராமணரல்லாதாரை ஏமாற்று வதற்கு இவ்வாயுதம் போதுமா, போதாதாவென்று பரீக்ஷை பார்ப்பதற்காக அனுப்பப்பட்ட முதல் ஆயுதமென்றே நினைக்கிறேன். அத்திட்டத்தில் உள்ள தத்துவங்களாவன:-

1. இரட்டையாட்சியில் உண்மையான அதிகாரமும் பொறுப்பும் இல்லை யென்பதும் அதில் சச்சரவுக்கும் பிளவுக்கும்தான்இடமிருக் கிறதென்பது.

2. இம்முறை அமுலுக்கு வந்த 6 வருட அநுபவத்தில் அதிகச் செலவும் வீண் பிரயாசையும் ஏற்பட்டிருக்கிறதேயல்லாமல் ஜனங்க ளுக்கு எவ்வித நன்மையும் செய்ய ஏதுமில்லாமலிருப்பதால் இம்முறையை நிராகரிக்கும்படி வோட்டர்களைக் காங்கிரஸ் கட்சி வேண்டிக் கொள்ளுகிறது.

3. ஆறு வருஷமாய் ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரி பதவிகளை வகித்து வருகிறார்கள்; அவர்கள் ஜனங்களுக்கு நம்பிக்கை பெறத்தக்க ஒரு காரியத்தையும் செய்யவில்லை; சுயராஜ்யமடைவதற்குப் பாதகம் செய்திருக்கிறார்கள். ஆதலால், ஜஸ்டிஸ் கட்சியாருக்கு வோட் செய்யாமல் காங்கிரஸ்காரர்களுக்கே வோட் செய்து சட்டசபைக்கு அனுப்பவேண்டுமென்பது.

4. காங்கிரஸ் கட்சி அபேக்ஷகர்கள் அப்போதைக்கப்போது காங்கிரஸ் கமிட்டியாரால் பிறப்பிக்கப்படும் உத்திரவுப்படி நடப்பதாகப் பிரமாணம் செய்வார்கள் என்பது.



5. தேசத்திற்கு விடுதலை அளிக்க வல்லது சாத்வீக சட்டமறுப்புத் தான் என்றும், ஆனால் தேசம் அதற்குத் தயாராயில்லை யென்றும், ஆதலால் காங்கிரஸ் கட்சியானது சுயராஜ்யத்திற்கு தடை விளைவிக்கக்கூடிய காரியங்கள் சர்க்காரால் செய்யப்பட்டாலும், மற்றவர்களால் செய்யப்பட்டாலும், எதிர்த்துப் போராடுவதென்றும் உறுதி கூறுகிறது.

6. கான்பூர் காங்கிரஸ் தீர்மானத்தில் சொல்லியுள்ள நிபந்தனை களுக்கு சர்க்காரார் திருப்தியான பதிலளிக்கும் வரை உத்தியோகம் ஏற்காத கொள்கையை அநுசரிக்கின்றதென்றும், நிர்மாணத் திட்டத்தைச் சட்டசபையில் நிறைவேற்றி வைக்கப் பாடுபடு மென்றும், எல்லா ஜாதியினருக்கும் சம அந்தஸ்தும் சந்தர்ப்பங் களும் அளிக்கவேண்டுமென்பதை ஆதரிப்பதாகவும், சென்னை சட்டசபையில் பூரண மதுவிலக்குக்காக அதிகப்படி எதிர்த்துப் போராடுமென்றும், இன்னும் பல ஆசை வார்த்தைகளையும் சென்ற தேர்தல்களில் கொடுத்த வாக்குறுதிகளை விட இன்னும் சில புதிய வாக்குறுதிகளையும் கொடுத்திருப்பதாகக் காண்கிறது.

இவைகளுக்குச் சமாதானம் எழுதுவதற்கு முன் ஒரு சிறு பழமொழி யைச் சொல்லி விளக்கிவிட்டு பின்னால் சமாதானம் சொல்வேன். ஒரு பிராமணன் ஒரு கலியாணத்தில் தட்சணை வாங்கும் போது ஆத்மஸ்துதி, பரநிந்தை, திரவியாபேட்சை ஆகிய மூன்றையும் வெறுத்து, நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்துநாலு கலைக்கியானத்தையும் நெட்டுருப் பண்ணி யிருக்கும் பெரிய கனபாடியாகிய எனக்கும் 2 அணா, எதிரில் நிற்கும் ஒன்றும் தெரியாத தற்குறிக்கும் 2 அணாவா? என்று சொன்னார் என்பதாக ஓர் பழமொழி சொல்லுவதுண்டு. இதில் எந்தெந்த குணத்தை வெறுத்ததாகச் சொல்லுகிறாரோ, அவையெல்லாம் அந்த சொல்லும் வார்த்தையிலேயே அவருடன் தலை சிறந்து விளங்குவதைப் பார்க்கலாம், அதாவது ஆத்மஸ் துதி இல்லையென்கிறார்; நாலு வேதம், ஆறு சாஸ்திரம் முதலியவற்றை நெட்டுருப்பண்ணின கனபாடிகள் என்று சொல்லுகிறார். பரநிந்தையை வெறுத்தேனென்கிறார்; எதிரில் இருப்போனை ஒன்றுந் தெரியாத தற்குறி என்கிறார். திரவியாபேட்சை இல்லை என்கிறார்; அவனுக்கும் இரண்டணா எனக்கும் இரண்டணாவா என்கிறார்.

இது போல நமது சுயராஜ்யக் கட்சிக்காக காங்கிரஸ் போட்டிருக்கும் திட்டமும் இருக்கிறது. அதாவது,

1. "மேல்கண்ட காங்கிரஸ் திட்டத்தில் இரட்டையாட்சியில் உண்மை யான அதிகாரமும், பொறுப்பும் இல்லையென்பதும், அதில்



RangaRakes tamilnavarasam.com

சச்சரவுக்கும், பிளவுக்கும்தான் இடமிருக்கிறதென்பது.”

சுயராஜ்யக் கட்சியார் இம்மாதிரி நினைப்பது வாஸ்தவமானால் இவர்கள் அவ்விரட்டையாட்சி ஸ்தாபனத்தைக் கைப்பற்ற வேண்டிய அவசியமென்ன? அந்த ஸ்தாபனத்தில் பொறுப்புமில்லை; சச்சரவுக்கும் இடமிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் பொறுப்புள்ளவர்களும், சச்சரவு வேண்டாதவர்களுமான யோக்கியர்களாகிய சுயராஜ்யக் கட்சியாருக்கு அங்கு என்ன வேலை? இதிலிருக்கும் இரகசியத்தை வாசகர் கள்தான் தயவு செய்து கவனிக்க வேண்டும்.

2.“இம்முறை அமலுக்கு வந்த 6 வருஷ அநுபவத்தில் அதிகச் செலவும் வீண் பிரயாசையும் ஏற்பட்டிருக்கிறதேயல்லாமல், ஜனங்களுக்கு எவ்வித நன்மையும் செய்ய ஏதுவில்லாமலிருப்பதால், இம்முறையை நிரா கரிக்கும் படி வோட்டர்களைக் காங்கிரஸ் கட்சி வேண்டிக் கொள்ளுகிறது” என்பது.

அதிகச் சிலவும், வீண் பிரயாசையும் ஏற்பட்டு ஜனங்களுக்கு எவ்வித நன்மையும் செய்ய ஏதுவில்லாத ஸ்தாபனத்தைக் காங்கிரஸ்காரர் நிராகரிப்பதென்றால் அதற்கு அர்த்தமென்ன? மகாத்மா காந்தி சொன்னபடி அந்த ஸ்தானங்களையே நிராகரிப்பதா? அல்லது அந்த ஸ்தானங்களில் உள்ளவர்களை வெருட்டிவிட்டு தேச மக்கள் பணச் சிலவில் சுயராஜ்யக் கட்சியார் போய் உட்கார்ந்துக்கொண்டு, அந்த ஸ்தானங்களால் உண்டாகக் கூடிய காரியமாகிய, அதிகச் சிலவையும், வீண் பிரயாசையையும், கட்சிப் பிளவுகளையும் சுயராஜ்யக் கட்சியார் செய்ய காங்கிரஸ்காரர்கள் வோட்டு சம்பாதித்துக் கொடுப்பதாவென்பதை ஊன்றிக் கவனித்தால் சுயராஜ்யக் கட்சியின் காங்கிரஸ் திட்டத்தின் தத்துவம் வெளியாகும்.

3.“ஆறு வருஷமாய் ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரி பதவிகளை வகித்து வருகிறார்கள்; அவர்கள் ஜனங்களுக்கு நம்பிக்கை பெறத்தக்க ஒரு காரியத்தையும் செய்யவில்லை. சுயராஜ்யமடைவதற்குப் பாதகம் செய்திருக்கிறார்கள். ஆதலால் ஜஸ்டிஸ் கட்சியாருக்கு வோட் செய்யாமல் காங்கிரஸ்காரர்களுக்கே வோட் செய்து சட்டசபைக்கு அனுப்ப வேண் டும்” என்பது.

இரட்டையாட்சியின் அமைப்பு பொது ஜனங்களுக்கு ஒரு நன்மையும் செய்ய முடியாதென்றும், அதில் நன்மை செய்யக்கூடிய ஒரு விதமான யோக்கியதையும் இல்லையென்பதும், சச்சரவுக்கும், பிளவுக்கும் இடமிருக்கிறதென்பதையும் காங்கிரஸ்காரர்களே ஒப்புக்கொண்டு, மறுபடியும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் ஒன்றும் செய்யவில்லையென்று அவர்கள் மீது பழி சொல்லுவதின் அர்த்த மென்ன? அந்த ஸ்தானங்களில் இடமிருந்து நன்மை செய்யவோ, பொறுப் பேற்கவோ இடமிருந்து, ஜஸ்டிஸ் கட்சிக்காரர் செய்யாமலிருந்திருந்தால் ஒரு சமயம் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர் பேரில் குற்றம் சொல்லலாம். அப்படி யிருக்க செய்வதற்கு இடமில்லாத ஓர் காரியத்தை ஜஸ்டிஸ் கட்சிக்காரர் செய்யவில்லையென்று சொல்வது யோக்கியமாகுமா? அவ்வளவுடன் நிற்காமல், அவன் கிடக்கிறான் குடிகாரன் எனக்கு இரண்டு திராம் வாரு என்பது போல், ஜஸ்டிஸ் கட்சியாருக்கு வோட் செய்யாதேயுங்கள் எங்களுக்கு வோட் செய்யுங்கள் என்று சொல்லுவது இருக்கிறது. இம்மாதிரியான நாணயமற்ற வார்த்தைகள் தனிப்பட்ட ஹோதாவில் ஒவ்வொருவர் சொல்லிக் கொண்டு போனாலும் ஒரு விதத்தில் சகிக்கலாம். ஆனால், காங்கிரஸின் பேரால் இம்மாதிரியான ஆபாசங்கள் வெளியிடுவதை எப்படி சகித்துக் கொண்டிருக்க முடியுமென்பதை வாசகர்கள்தான் உணர்ந்து கொள்ள வேண்டும்.

4. “காங்கிரஸ் கட்சி அபேக்ஷகர் அப்போதைக்கப்போது காங்கிரஸ் கமிட்டியாரால் பிறப்பிக்கப்படும் உத்திரவுப்படி நடப்பதாகப் பிரமாணம் செய்வார்கள்” என்பது. சந்தையும் ஒருவருடைய தாயிருந்து அதில் கொள்ளையடிப்பதும் அவராகவேயிருந்து விட்டால் அப்புறம் அவர்களைக் கேட்கிறவர்கள் யார்? அதுபோல காங்கிரசும், காங்கிரஸ் நிர்வாகமும், சட்டசபைக்குப் போகிறவர்களும் ஒரே கூட்டத்தினராயிருக்கும் போது வேறு யாருக்கு ஜவாப்தாரியாயிருக்கக் கூடும்? வேறு யார்தான் இவர்களைக் கேட்கக்கூடும். மிஞ்சி யாராவது கேட்டால் கேட்பவர்களை ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களென்று சொல்லிவிடுகிறார்கள். ஆதலால், இந்த வாக்குறுதிகளினால் என்ன பிரயோஜனம்?

5. “தேசத்திற்கு விடுதலை அளிக்கவல்லது சாத்வீக சட்ட மறுப்புத்தான் என்றும், ஆனால் தேசம் அதற்குத் தயாராயில்லை யென்றும், ஆதலால் காங்கிரஸ் கட்சியானது சுயராஜ்யத்திற்கு தடை விளைவிக்கக் கூடிய காரியங்கள் சர்க்காரால் செய்யப்பட்டாலும், மற்றவர்களால் செய்யப் பட்டாலும் எதிர்த்துப் போராடுவதென்றும் உறுதி கூறுகிறது” என்பது.

சட்ட மறுப்பினால்தான் தேசத்திற்கு விடுதலையென்று வாயில் சொல்லிவிட்டு, தேசம் சட்ட மறுப்புக்கு லாயக்கில்லையென்று சொல்லுவதாயிருந்தால் சட்ட மறுப்பைப் பற்றி பேசுவதில் பிரயோஜனம் என்ன? சட்ட மறுப்பைப் பற்றி பேசுகிற சுயராஜ்யக் கட்சியாரும் “சட்ட மறுப்பு என்கிற வார்த்தை சுயராஜ்யக் கட்சியிலிருந்து வருவதால்” சுயராஜ்யக் கட்சியை நான் மெச்சுகிறேனென்று சொல்லும், திரை மறைவிலிருக்கும் சுயராஜ்யக் கட்சியாரும் ஆகியவர்களுக்கு, சட்டமறுப்பு நமது தேசத்தில் மும்முரமாக இருந்த காலத்தில் இவர்களுக்கு அதில் நம்பிக்கையிருந்ததா? ஆயிரக்கணக்கான



RangaRakes tamilnavarasam.com

தொண்டர்கள் தமிழ்நாட்டில் சட்ட மறுப்புச் செய்து ஜெயிலுக்குப் போகும் போது இச்சட்ட மறுப்பு வீரர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? இவர்க ளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்க வில்லையா? சட்ட மறுப்பு இருக்கிற காலத்தில், நம்பிக்கையில்லை, நம்பிக்கையில்லை என்று சொல்லி வக்கீல் உத்தியோ கத்திலும், பத்திரிகை உத்தியோகத்திலும் மாதம் 1000, 10000 மாகப் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்ததோடு, சட்ட மறுப்பையும் தோல்வியுறச் செய்து விட்டு தேசமெல்லாம் ஒற்றுமையாயிருந்து ஒருமிக்கச் செய்தும், தோல்வி யுற்றுப் போன சட்ட மறுப்பைப் பாமர ஜனங்களை ஏமாற்ற வாயிற் சொல்லு வதும், அதுவும் சட்டமறுப்புக் காலத்தில் ஒளிந்து கொண்டு திரிந்த பயங்காளிகள் வாயில் வருவதும்,யோசித்துப் பார்த்தால் இவையெல்லாம் பாமர ஜனங்களுக்கு விளங்காமற் போகாது. ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங் காரும், ஏ. ரெங்கசாமி ஐயங்காரும், சத்தியமூர்த்தியும், சி.வி. வெங்கிட்ட ரமணய்யங்காரும், ஆதிநாராயண செட்டியாரும், திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும், எம்.கே. ஆச்சாரியாரும் சட்ட மறுப்பைப் பற்றிப் பேசுவதும், சட்ட மறுப்புக் காங்கிரஸில் இருப்பதி னால் நாங்கள் சந்தோஷப்படுகிறோம், ஆதலால், சுயராஜ்யக் கக்ஷிக்கு வோட் கொடுங்களென்று சொல்லுவதும் எவ்வளவு கண்ணியமற்ற காரியமென்பது வாசகர்கள்தான் அறியவேண்டும். சட்ட சபையில், சுயராஜ்யத்துக்கு விரோதமான காரியத்தை எதிர்த்துப் போராடுவோமென்று சொல்லுகிறவர்கள் எங்கெங்கு போராடி என்னென்ன பலனை அடைந்தார்கள்? பூரண மெஜாரிட்டியுள்ள மாகாணங்களிலாவது போராடி பலன் அடைய முடிந்ததா?

> 6. "கான்பூர் காங்கிரஸ் தீர்மானத்தில் சொல்லியுள்ள நிபந்தனைக ளுக்கு சர்க்காரார் திருப்தியான பதிலளிக்கும் வரை உத்தியோகம் ஏற்காத கொள்கையை அநுசரிக்கின்றதென்றும், நிர்மாணத் திட்டத்தைச் சட்ட சபையில் நிறைவேற்றி வைக்கப் பாடுபடுமென்றும், எல்லா ஜாதியினருக் கும் சம அந்தஸ்தும், சந்தர்ப்பங்களும் அளிக்க வேண்டுமென்பதை ஆதரிப்ப தாகவும், சென்னை சட்டசபையில் பூரண மதுவிலக்குக்காக அதிகப்படி எதிர்த்துப் போராடுமென்றும், வாக்குறுதிப்படி நடப்போம் என்றும் சொல்லுவது".

சகல சமூகத்துக்கும் சம அந்தஸ்துக் கொடுக்கிறவர்கள் சென்ற வருடம் இந்தியா சட்டசபைக்கும், இராஜாங்க சபைக்கும் எத்தனை பிராமணர் களை நிறுத்தினார்கள்? எத்தனை பிராமணரல்லாதாரை நிறுத்தினார்கள்? என்பதைக் கணக்குப் பார்த்தால் இந்த வார்த்தையின் உண்மை தெரியும். தாழ்ந்த வகுப்பாருக்கு சுயராஜ்யக் கக்ஷியின் மூலம் தேர்தலுக்காக என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்? எம் மாதிரியான தீர்மானத்தை நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள்? ஸ்ரீமான் ஜயவேலுக்கு பத்து, ஐந்து கொடுத்து கூட்டிக் கொண்டு திரிவதினாலேயே தாழ்ந்த வகுப்புக்கு நன்மை செய்ததாக ஏற்பட்டு போய்விடுமா? அல்லாமலும் மதுவிலக்குக்காக முக்கியமாய் வேலை செய்யப் போவதாக ஓர் ஆசை வார்த்தைக் காட்டுகிறார்கள். இது ஸ்ரீமான்



ராஜகோபாலாச்சாரியாரால் சுயராஜ்யக் கக்ஷியின் வெற்றிக்கு ஏற்பட்ட ஓர் புதிய மருந்து. இதை எப்படிப் பொது மக்கள் நம்ப முடியும்? "ஒன்றுக்கும் உதவாத சட்டசபையில் - சச்சரவுகளும், பிளவுகளும், அதிக சிலவும், வீண் வேலையும் ஏற்படும் சட்டசபையில்" எப்படி மதுவை விலக்க முடியும்?

இவ்வளவு தூரம் ஜனங்களை ஏமாற்றத் துணிந்த சத்தியக்கீர்த்திகளால் தேசத்திற்கு நன்மைகள் ஏற்படும் என்று நினைப்பது எவ்வளவு முட்டாள் தனமென்பதை வாசகர்கள்தான் உணர வேண்டும்.

மேலும், சர்க்காரிடம் தேச நன்மைக்காக இப்போதுள்ள சட்ட சபை களில் கேட்கக்கூடிய காரியம் ஒன்றுமில்லையென்றும், ஆகக்கூடியதும் ஒன்றுமில்லையென்றும் மகாத்மா காந்தி முதல் காங்கிரஸிலுள்ள ஒவ்வொரு வரும் ஒப்புக்கொண்டுதான் காங்கிரஸில் ஒத்துழையாமைத் திட்டம் நிறை வேறிற்று. அப்படி இருக்க இப்பொழுது மாத்திரம் சட்டசபையில் என்ன காரியம் கேட்கமுடியும்? ஆனாலும் சுயராஜ்யக் கக்ஷியின் சர்வாதிகாரியான ஸ்ரீமான் நேரு உள்பட பலர் மிதவாதக் கட்சியாரையும் சேர்த்துக் கொண்டு பல தேவைகளைக் கேட்டு பெரும்பான்மையான வோட்டுகளால் சட்ட சபையில் நிறைவேற்றியும், சர்க்காரார் அவற்றைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டதையும் பார்த்துவிட்டு, மறுபடியும் சர்க்காரைக் கேட்கிறோம் என்று சொல்லுவதின் அர்த்தமென்ன? அப்படியே இருந்தாலும் சர்க்காரார் திருப்தியான பதில் அளித்தார்களா? இல்லையாவென்று சொல்லுவதற்கு அதிகாரி யார்? யார் கேட்கிறார்களோ அவர்களேதான் பெரும்பாலும் அதிகாரிகளாயிருக்கின் றார்கள். தமிழ்நாட்டுப் பிராமணர்கள் கைக்கு மந்திரி ஸ்தானங்கள் கிடைக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டால், சர்க்காரார் சுயராஜ்யக் கக்ஷிக்கு தக்க பதிலளித்து விட்டார்களென்றுதான் அர்த்தம்! அந்த நிலைமை ஏற்படும் வரை சர்க்கார் தக்க பதில் அளிக்கவில்லையென்று தான் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். அல்லாமலும் அதுவரை உத்தியோகங் களை ஒப்புக் கொள்ளுவ தில்லையென்று சொல்லுவதற்குத் தான் அர்த்தம் எங்கேயிருக்கிறது. ஸ்ரீமான்கள் நேரு உத்தியோகம் ஒப்புக் கொண்டாகி விட்டது; படேல் உத்தியோகம் ஒப்புக் கொண்டாகிவிட்டது; ஏ. ரெங்கசாமி ஐயங்காரும் உத்தியோகம் ஒப்புக் கொண்டாகிவிட்டது; மற்றும் பல சுயராஜ்யக் கட்சிப் பதிவிரதைகளும் உத்தியோகம் ஒப்புக் கொண்டாகி விட்டது. அது மாத்திரமல்ல சுயராஜ்யக் கட்சியில் இப்போதுள்ள மெம்பர் களிலும் ராவ்சாஹிப், ராவ்பஹதூர், திவான் பஹதூர்களும், தாலூக்கா போர்ட், ஜில்லாபோர்ட், முனிசிபாலிட்டி, யூனியன், பஞ்சாயத்து, செனட்சபை, ஜெயில் கமிட்டி முதலிய பல ஸ்தானங்களில் சர்க்கார் தயவை நாடி நியமனம் பெற்ற மெம்பர்களும் நிறைந்திருக்கிறபோது நாங்கள் சர்க்கார் உத்தியோகத் தைப் பெறமாட்டோமென்று சொல்லுவது எவ்வளவு யோக்கிய மான பேச்சென்பதை வாசகர்கள்தான் உணர வேண்டும்.

சம்பளமில்லாத இந்த உத்தியோகங்களையே பெறுவதற்கு ஆத்திரப்



RangaRakes tamilnavarasam.com

பட்டுக் கொண்டு திரிகிறவர்கள் சம்பளமுள்ள உத்தியோகம் கிடைப்ப தாயிருந்தால் இவர்கள் வேண்டாமெனச் சொல்லி விடுவார்களென்று சொன்னால் எந்த பயித்தியக்காரனாவது நம்பிவிடுவானா?அல்லாமலும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்களென்றும் மறுபடியும் ஓர் முறை சொல்லி புதுப்புது வாக்குறுதிகள் செய்வதை யார் நம்பமுடியும்? மூன்று வருடங்க ளுக்கு முன் செய்த வாக்குறுதிகளெல்லாம் இப்போது எங்கே போய்விட்டது? சட்டசபையில் போக்குவரத்து வழிச்சிலவுகூட வாங்க மாட்டோமென்று சொல்லிப்போன சுயராஜ்யக் கட்சிப் பிரபுக்கள் பொய் பில் கொடுத்து ஒன்று இரண்டாகப் பணம் வாங்குவதை நன்றாய்ப் பார்க்கிறோம். இதைப் பற்றி யாராவது கேட்டால், ஐயோ பாவம்! பிழைத்துப் போகட்டுமே, அவருக்கு இதைத் தவிர வேறு வழி என்னவென்று சொல்லி மழுப்பி விடுகிறார்கள். இப்படியிருக்க, இவர்கள் வாக்குத்தத்தத்தை வேகமாய் ஓடுகிற தண்ணீரில் தான் எழுதி வைக்க வேண்டும். பொய்ச் சத்தியம் செய்கிறவர்கள், இனிமேல் பொய்ச் சத்தியம் செய்வதில்லையென்று ஓர் புதுச் சத்தியம் செய்தால், அது பழைய சத்தியத்தோடு சேருவதற்கு எத்தனை நாள் ஆகும். அல்லாமலும் தேர்தல்களுக்காகச் செய்யும் சத்தியங்களில் குற்றம் கண்டுபிடிக்கக் கூடா தென்றே “காங்கிரஸ் மநுதர்ம சாஸ்திரம்” சொல்லுகிறது. அப்படியிருக்க இவைகளினாலெல்லாம் என்ன காரியம் ஆகிவிடும். தற்காலம் மந்திரி பதவியை வகிக்கும் பிராமணரல்லாதார் செல்வாக்கை எப்படியாவது ஒழித்து, அதைப் பிராமணாதிக்கத்துக்கு உட்படுத்த வேண்டுமென்பதே நமது பிராமணர்களின் முக்கியத் தத்துவமாகப் போய்விட்டது என்பதை நான் நெருப்பின் மேல் நின்று சொல்லவும் தயங்கேன். அம்மாதிரி செய்வதற்கும் அவர்களுக்கு பாத்தியமுண்டு என்பதையும் நான் ஒருக்காலும் மறுக்க மாட்டேன். ஆனால், அதற்காகக் காங்கிரஸின் பெயரையும் மகாத்மாவின் பெயரையும் தேசத்திற்காகத் தியாகம் செய்த, கஷ்டப்பட்ட - தேச பக்தர்களின் செய்கையின் பலனையும் உபயோகப்படுத்திக் கொள்ளுவதைத்தான் விபசா ரத்தனத்தைக் காட்டிலும் இழிவான காரியமென்பதை சொல்லி இவ்வியா சத்தை முடிக்கிறேன்.

**குடி அரசு - கட்டுரை - 07.02.1926**



# சதியாலோசனை

தேசீய பிராமணர்களென்போரும், தேசீயப் பிராமணப் பத்திரிகை களென்பதுவும் பிராமணரல்லாதாரை எவ்விதத்தில் அடக்கியாள்வது என் னும் விஷயமாய் பெரிய சதியாலோசனைகள் செய்து, பிராமணரல்லாதார் செலவிலும், பிராமணரல்லாதார் உழைப்பிலும் தங்கள் காரியத்தை நடத்தி வருகிறது. பிராமணரல்லாதார்களில் பாமர ஜனங்களும் (தங்களது அறியாமை யினாலும்) சோற்றுப் பிரசாரகர்களும், இவர்களுக்கனுகூலமாயிருந்து தங்கள் சமூகத்தின் சுயமரியாதையையே பாழாக்கி வருகின்றார்கள். தன்னுடைய சாமர்த்தியத்தினால் பிராமணரல்லாதாரில் பெரும்பாலோர் தன்னை நம்பும்படி செய்து, அவர்களுக்குத் தலைவருமாகி அச்செல்வாக்கால் மகாத்மாவின் பிரதம சீடராகி ஒரு நிலையான நல்ல பெயரை ஏற்படுத்திக் கொண்ட ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் இப்பொழுது தமது சுயரூபத்தைக் காட்டத் துணிந்து விட்டார். ஒவ்வொரு நாளும் சட்டசபைத் தேர்தலுக்கு சுய ராஜ்யக் கக்ஷியாருக்கே வோட் செய்யுங்கள்; மதுவிலக்குச் செய்ய அவர்கள் ஒப்புக் கொண்டார்கள் என்று விளம்பரம் போட்டு வருகிறார். சுயராஜ்யக் கக்ஷியாரால் எப்படி மது விலக்குச் செய்யக்கூடும் என்பதைப் பற்றி அநேக தடவைகளில் இவரே மறுத்துப் பேசியிருக்கிறார். சுயராஜ்யக் கக்ஷி காரிய தரிசியாகிய ஸ்ரீமான் சத்தியமூர்த்தியும் சுயராஜ்யக் கக்ஷியின் மூலம் மது விலக்குச் செய்ய முடியாதென்று சொல்லியிருக்கிறார். சுயராஜ்யக் கட்சியின் ஆதிக்கத்தால் காங்கிரஸ் காரியதரிசியாகிய ஸ்ரீமான் ரெங்கசாமி ஐயங்காரும் தமது பத்திரிகையின் மூலம் தினமும் சாராயம் விற்றுப் பணம் சம்பாதித்துக் கொண்டுதான் வருகிறார். கோயமுத்தூர் ஜில்லா சுயராஜ்யக் கட்சித் தலைவ ராகிய ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமணஐயங்காரோ இன்னமும் தமது மரங்களில் கள்ளுற்பத்தி செய்வதன் மூலம் பணம் சம்பாதித்துக் கொண்டு தான் வருகிறார். சுயராஜ்யக் கட்சித் தலைவர்களுக்கோ இன்னமும் மதுபானம் இல்லாவிட்டால் ஒரு காரியமும் செய்ய முடியாது.

இவ்வளவும் ஒருபுறமிருக்க, ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரே, சட்டசபைக்குப் போவதைப் பற்றிப் பேசுகையில் வெளியில் சட்ட மறுப்பைச் செய்து கள்ளை நிறுத்துவதென்றும், காசிக்குப் போக முடியாவிட்டால் சட்ட சபைக்கும் போய் கள்ளைக் குடிக்க வேண்டுமென்று சட்டம் செய்வதற்கு அநுகூலமாயிருக்கிற சட்டசபையாகிய கள்ளுக் கடைக்குப் போவதாவென்று பேசியிருக்கிறார். இவ்வார்த்தை சொன்னதற்காக, இவர்பேரில் குற்றப் பத்திரிகை படிப்பதற்கு ஒரு தீர்மானத்தை ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கொண்டு



RangaRakes tamilnavarasam.com

வந்து ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் சட்டசபையைக் கள்ளுக்கடை எனச் சொன்னது தப்பிதமென்றும் அளவுக்கு மிஞ்சிக் கண்டித்து காரியக் கமிட்டியில் பேசியிருக்கிறார். இதை ஸ்ரீமான்கள் எம்.கே ஆச்சாரியாரும், டி. ஆதி நாராயண செட்டியாரும் ஆதரித்து வைது பேசினார்கள். அது சமயம் ஸ்ரீமான் ஈ.வெ.இராமசாமி நாயக்கர் எதிர்த்து (சட்டசபையைப் பற்றி) நிர்மாணத் திட்டங்களையும், விடுதலையையும் பொறுத்த வரையிலும் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் சொன்னதுபோல் சட்டசபைகள் கள்ளுக்கடைகள் தானென்றும் பேசித் தீர்மானத்தைத் தோற்கடித்தார்.

இப்படியெல்லாமிருக்க இப்பொழுது சட்டசபையில் கள்ளை ஒழிப்பதற்கு அநுகூலமிருக்கிறது; சென்ற வருடம் கள்ளுக்கடையாயிருந்த சட்டசபையானது இவ்வருஷம் காசிக்குச் சமானமாகி விட்டது. ஆதலால் மேல் கண்ட கள்ளு உற்பத்திக்காரரும், கள்ளு விற்பனைக்காரரும், கள்ளு குடிப்பவர்களும், கள்ளு குடிப்பவர்களினால் ஜீவனம் செய்பவர்களும், சட்டசபையால் கள்ளை நிறுத்த முடியாதென்கிற தீர்மானமுள்ளவர்களுமான சுயராஜ்யக் கட்சியாருக்கே வோட் கொடுங்கள் என்று உபதேசம் செய்ய வந்து விட்டார். இதையும் பிராமணப் பத்திரிகைகள் கரைகட்டி விளம்பரம் செய்கின்றன. இதில் எவ்வளவு சதியாலோசனைகள் இருக்கின்ற தென்பதையும் பிராமணரல்லாதாரை ஒழிப்பதற்கு என்ன வேண்டுமானாலும் செய்யலாமென்று இத்தேசீய பிராமணர்களும், அவர்கள் பத்திரிகைகளும் கங்கணங் கட்டிக் கொண்டு இருக்கின்றன வென்பதையும் பொது மக்கள் உணர்ந்து ஏமாந்து போகாமலிருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 07.02.1926**



# பேடிப் போர்

நமது நாட்டில் பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் ஏற்பட்டிருக்கும் பல பத்திரிகைகளின் தலையெழுத்து உண்மையை எழுதி வீரப்போர் நடத்த யோக்கியதையின்றி பொய்யை எழுதி பேடிப் போர் நடத்தும்படியாக ஏற்பட்டுப் போய்விட்டது. உதாரணமாக, வட ஆற்காடு சட்டசபை உப தேர்தலைப் பற்றி ஸ்ரீமான் வெங்கிட்டரங்கம் நாயுடுவுக்கு விரோதமாகவும், ஸ்ரீமான் பத்மநாப முதலியாருக்கு அநுகூலமாகவும் நாம் பிரசாரம் செய்யப் போவதாகவும், அதற்குக் காரணம் "முன்னவர் சுயராஜ்யக் கக்ஷியாரென்றும் பின்னவர் ஜஸ்டிஸ் கக்ஷியாரென்றும் சொல்லிக் கொள்ளுவதுதானென்றும்" எழுதியிருக்கின்றன. இப்படியே இன்னும் அநேக பொய்யான விஷயங்களை எழுதியும், மெய்யான விஷயங்களை மறைத்தும் எழுதுவதை தமது தொழிலாகக் கொண்டிருக்கின்றன. சட்டசபைத் தத்துவத்தில், ஸ்ரீமான்கள் வெங்கிட்டரங்கம் நாயுடுவுக்கும் பத்மநாப முதலியாருக்கும் ஒரு வித்தியாசத்தையும் கற்பிக்க இடமிருப்பதாக நாம் கருதவில்லை. ஸ்ரீமான் வெங்கிட்டரங்கம் நாயுடு சட்டசபைக்குச் செல்வதினால் நமக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமென்றோ, ஸ்ரீமான் பத்மநாப முதலியார் சட்டசபைக்குச் செல்லுவதில் பெரிய நன்மை விளைந்து விடுமென்றோ நாம் கருதவில்லை.

இதுவரையிலும் இதற்காக ஒருவருக்கநுகூலமாகவோ மற்றொருவருக்குப் பிரதிகூலம் செய்யவோ நாம் எண்ணவுமில்லை. அப்படி அநுகூலமாகவும் பிரதிகூலமாகவும் இவர்கள் தேர்தலில் பிரசாரம் செய்ய வேண்டியது இதுசமயம் அவசியமுமில்லை என்பதே நமது முடிவு. அவசியமென்று கருதினால் கட்சியையோ சட்டத்தையோ பழியையோ கருதி பயந்து கொண்டிருக்கப் போவதுமில்லை. ஸ்ரீமான் நாயுடுவையும் நமக்கு 6,7 வருஷங்களாகத் தெரியும். அவர் எவ்வளவுதான் பிராமணர்களோடு கட்டிப்புரண்டு திரிந்தாலும், அவருடைய அந்தரங்கமானது பிராமணரல்லாதார் விஷயத்தில் அநுதாபமாகவேதானிருப்பதை அறிந்திருக்கிறோம். இவ்வறிவுக்கு மாறுதல் ஏற்படுகிற காலத்தில் நமது கடமை என்னவென்பது நமக்கே தெரியும். ஸ்ரீமான் முதலியாரைப் பற்றி நல்லவரென்றும், பரோபகார உழைப்பில் கொஞ்சக் காலமாக ஈடுபட்டவரென்றும் கேள்விப்பட்டதேயல்லாமல் நேரில் பார்த்ததே இல்லை.

அல்லாமலும் ஸ்ரீமான் முதலியாருக்கு விரோதமாயும், ஸ்ரீமான் நாயுடுவுக்கு அநுகூலமாகவும் சமீபத்தில் செய்யப்படுகிற தேர்தல்



RangaRakes tamilnavarasam.com

பிரசாரங்களிலும், பிரசாரகர்கள் ஸ்ரீமான் முதலியாரைப் பற்றி கண்ணிய மாகவே பேசி வருவதாகவும் பத்திரிகைகளில் பார்க்கிறோம். ஆதலால் இவ்விருவர்களில் இதுசமயம் உயர்வு தாழ்வு காண முடிய வில்லை.

இப்படியிருக்க பிராமணப் பத்திரிகைகளும், பிராமண ஆதரவுபெற்ற பத்திரிகைகளும் இம்மாதிரியான பொய்களைப் பரப்பிவிடுவது பலனளிக் காதென்பதையும் இப்படிப்பட்ட காரியங்களினால் அவைகளின் யோக்கி யதை இன்னும் அதிகமாக தாழ்த்தப்படுமென்பதையும் குறிப்பிடுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 07.02.1926**



# திரு. முதலியார்

இதுகாறும் திரை மறைவிலிருந்து ஒப்பாரி வைத்த திரு. வி.கலியாணசுந்தர முதலியாரவர்கள் இப்பொழுது வெட்ட வெளிச்சத்தில் வந்துவிட்டார்கள். சென்னைக் கடற்கரையில் சமீபத்தில் கூடிய ஒரு கூட்டத் தில் வகுப்புவாரிப் பிரதிதித்துவத்துக்கு எதிர்ப்பிரசாரம் செய்யப்போவதாக விளம்பரம் செய்துவிட்டார். முதலியாரவர்களின் இவ்வுறுதி நிலையை மிகப்பாராட்டுகின்றோம். நெருக்கடியான சமயங்களில் 'வழ வழ' பாடுவதே திரு. முதலியாரவர்கள் இயல்பு. அந்நிலை மாறி தன் அபிப்பிராயத்தை முதலியாரவர்கள் ஒரு வழிப்படுத்தியது போற்றத்தக்கதே. ஆனால் இந் நிலையைக் காஞ்சி மகாநாட்டின் போது கொண்டிருக்கலாகாதா? உண்மை யாகவே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தில் முதலியாரவர்களுக்கு நம்பிக்கையில்லாதிருந்திருந்தால், திரு நாயக்கரவர்களின் தீர்மானத்தை மகாநாட்டில் பிரேரேபனை செய்ய அனுமதி கொடுத்து, தன் முழுபலத்தோடு அதை எதிர்த்திருக்கலாம். ' வீரம் வீரம்' என்னும் மொழிகளை, தன் அக்கிரா சனப் பிரசங்கம் முழுதும் அடுக்கி வைத்த திரு.முதலியாரவர்களுக்கு அவ் "வீரம் இல்லாதுபோயிற்று! குறுக்குவழியிலிறங்கி தன் குலத்துக்கு வினை தேடி, தமிழுலகத்தில் தான் பெற்றிருந்த மதிப்பையும் ஹோமஞ் செய்து விட்டார்கள். இப்பொழுது முதலியாரவர்கள்கூடப் பக்கமேளம் போடும் பார்ப்பனக்கூட்டத்தார் எதிர்பார்த்ததும் இதுவே. டாக்டர் நாயுடு, திரு.முதலி யார் திரு நாயக்கர் ஆகிய மூவருக்கும் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் மதிப்பைக் குறைக்க அன்னோர் வெகுநாளாக முயற்சி செய்து வருவதை தமிழுலகம் அறியாதா? அவர்கள் விரும்பியவண்ணமே திரு.முதலியார வர்கள் காஞ்சியில் பலியானார்கள். பாக்கியிருவரையும் படுகுழியில் வீழ்த்த அவர்கள் தருணம் நோக்கியிருக்கிறார்கள்; திண்ணைப் பிரசாரமும் செய் கிறார்கள். அவ்விருவர் விதியும் எப்படியோ? ஈசனே அறிவன்;

பிராமணரல்லாதார் பலர் நீங்கி நிற்கும்போது " ஜஸ்டிஸ்" இயக்கம் எவ்வாறு பிராமணரல்லாதார் இயக்கம் ஆகும் என்கிறார் நமது அண்ணா முதலியார். தற்கால காங்கிரஸ் தலைவர்கள் சிறு தேருருட்டி விளையாடிய காலத்திலேயே காங்கிரஸ் வீரர்களாய் விளங்கிய திரு. விபின சந்திரபாலர், சுரேந்திரநாத் பார்னர்ஜி ஆகிய தாராளக் கட்சியாரும், திரு. கெல்கர், ஜெயகர், ஆகிய சுயேச்சைக் கட்சியாரும், ஜஸ்டிஸ் கட்சியாரும் சேராத காங்கிரஸ் எவ்வாறு " நாஷணல் காங்கிரஸ், ஆகுமென்பதை முதலியாரவர்கள் ஏனோ



RangaRakes tamilnavarasam.com

சிந்திக்கவில்லை. ஸ்ரீமான்கள். ஸ்ரீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி , அரங்க சாமி ஐயங்கார் மூவரிலும் இந்தியா லயித்து விட்டதா ? ஸ்ரீனிவாசய்யங்கார் கோஷ்டியாரும் திரு. முதலியாரவர்கள் போன்ற விபீஷ்ணர்களும் சேர்ந் திருப்பதினால் மட்டும் காங்கிரஸ் நாஷணல் காங்கிரஸ் ஆய்விடும் போலும்.

குடி அரசு - கட்டுரை - 07.02.1926



# சட்டசபை தேர்தல் செலவுக்குப் பண வசூலும் நம் நாட்டின் தலை எழுத்தும்

வரப்போகும் சட்டசபைக்குப் பிராமணர்களும் அவர்களுக்கடங்கின மற்ற வகுப்பாருமே சட்டசபையைக் கைப்பற்றத்தகுந்த மாதிரிக்குப் பிரசாரம் செய்ய நிதி வசூல் செய்ய வேண்டியதே காங்கிரஸ் தலைவர்கள் என்னும் நம் பிராமணத் தலைவர்களுக்கு முக்கிய வேலையாய்ப் போய்விட்டது. அதற் காகச் செய்யப்படும் பல தந்திரங்களில், மடாதிபதிகளை ஏய்த்துப் பணம் வாங்குவதும் முக்கிய சூழ்ச்சிகளில் ஒன்றாக இப்போது அமுலில் இருக் கிறதை வாசகர்கள் அறிந்ததே. அதற்கு ஆதாரமாகவே ஸ்ரீமான்கள் சி.வி. வெங்கிட்டரமணய்யங்காரும், சீனிவாசய்யங்காரும் அடிக்கடி மடாதிபதி களைப் போய் பார்ப்பதும் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தியும், சி.வி. வெங்கிட்ட ரமணய்யங்காரும் சட்டசபைகளில் பிரயோஜனமில்லாத தத்துவங்களைக் கொண்டு தேவஸ்தான மசோதாவைத் திருத்தவும் மாற்றவும் அடிக்கடி பிரேரேபனைகள் கொண்டு வருவதும், உபயோகமற்ற கேள்விகளைக் கேட்பதுமான காரியங்களைச் செய்தும் மடாதிபதிகளையும் மகந்துக்களை யும் ஏமாற்றப் பார்க்கிறதைக் கவனித்தாலே உண்மை விளங்கும். சட்டசபை யில் பிராமணரல்லாதாருக்குள்ளாகவே, மந்திரி கக்ஷியார் என்றும் அவர்க ளுக்கு விரோதமாக பொறாமையின் பேரிலோ அல்லது மந்திரிகளின் நடத்தைக் குறைவினாலோ பிரிந்திருக்கும் எதிர்க்கக்ஷியாரும் இத்தேவஸ் தான விஷயம் சட்டசபையில் வரும்போது ஒற்றுமையாயிருந்து சட்டத்துக்கு அநுகூலமாய் வோட்டு கொடுப்பதும், பிராமணர்கள் எல்லாம் ஒற்றுமையா யிருந்து ஷை சட்டத்தை எப்படியாவது ஒழிப்பதற்கு அநுகூலமாய் இருந்து வோட்டு கொடுப்பதும் கவனிக்கிறவர்களுக்கு தேவஸ்தான சட்ட விஷயமான கிளர்ச்சி பிராமணர் - பிராமணரல்லாதார் என்கிற வகுப்பு வேற்றுமைக் கிளர்ச்சியில் சேர்ந்தது என்பது விளங்கும்.

இப்படி இருக்க, பிராமணரல்லாத மடாதிபதிகளும் கொஞ்சமும் தங்கள் மடத்தின் சொத்துக்கள் யாருடையது என்பதையும், யாருக்காக தாங்கள் இருக்கிறார்கள் என்பதையும் கவனிக்காமல் தங்கள் போகத்தையும், போக்கியத்தையும் பிரதானமாகக் கருதிக்கொண்டு, அநாவசியமாய் மடத்துச் சொத்தை திருடி பிராமணர்களுக்குக் கொடுத்து பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் இச்சட்டத்தை ஒழிக்கப் பார்க்கிறார்கள். நமது நாட்டின்



RangaRakes tamilnavarasam.com

தலையெழுத்துக்களில் எதற்கென்றுதான் நாம் அழ முடியும்! க்ஷயரோகம் போல் நம்நாட்டைப் பிடித்து நாளுக்கு நாள் அறித்துக் கொண்டுவரும் அரசாட்சியின் கீழ் இருப்பதற்கழுவதா? அல்லது நமது நாட்டை அந்நிய ஆட்சிக்குக் காட்டிக் கொடுத்து நமக்குள் இருந்து கொண்டே குடியைக் கெடுத்து நம்மைத் தீண்டாதாராக்கி வைத்திருக்கும் பிராமணத் தர்மத்திற் கழுவதா? அல்லது நம்மவரிலேயே சிலர் தமது சமூகத்தையே மறந்து தனது வாழ்வையும், பெருமையையும், போக போக்கியத்தையுமே பிரதானமாய்க் கருதி நமக்குள் இருந்து கொண்டே நம்மைப் பிராமணருக்குக் காட்டிக் கொடுத்தும், அவர்களுக்கு அடிமையாகச் செய்வதுமான பிராமணரல்லாத மடாதிபதிகள் என்றும், தேசீய வாதிகள் என்றும் சொல்லிக் கொண்டு வாழும் கோடாலிக் காம்புகளுக்கு அழுவதா? நம் நாட்டின் தலைவிதி யாரே அறிவார்!

**குடி அரசு - கட்டுரை - 14.02.1926**



# காங்கிரஸில் இருக்க உரிமை உண்டா?

சுயராஜ்யக் கட்சியின் கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்களும், ஜஸ்டிஸ் கட்சி, மிதவாத கட்சி, தேசீயக் கட்சி ஆகியவைகளைச் சேர்ந்தவர்களும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்துபவர்களும், சுயராஜ்யக் கட்சி பிராமணக் கட்சி என்று முடிவு செய்துக் கொண்டிருக்கிறவர்களும், பழய ஒத்துழையாமைத் தத்துவத்திலேயே நம்பிக்கை இருக்கிறவர்களும், சுயராஜ்யக் கட்சி பிராமணரல்லாதாரை ஒடுக்க வந்த கட்சியென்று நினைத்து சுயராஜ்யக் கட்சியை பஹிஷ்கரிக்கவோ அதை ஒழிக்கவோ பிரசாரம் செய்ய வேண்டுமென்கிறவர்களும், நிர்மாணத் திட்டத்தில் நம்பிக்கை இல்லாதவர்களும் காங்கிரஸில் இருக்கலாமா? என்றும் இவர்களில் யாரையாவது காங்கிரஸை விட்டுப் போகச் சொல்ல யாருக்காவது உரிமை உண்டா? என்றும் இன்னும் பலர் பலவிதமாக நம்மை நேரிலும், எழுத்து மூலமாகவும் அடிக்கடி கேட்டு வருகிறார்கள். இந்தியா நீதியும் அமைதியுமான வழிகளில் சுயராஜ்யம் பெறவேண்டும் என்கிற தத்துவத்தை ஒப்புக்கொள்ளுபவர்களான எல்லோரும் காங்கிரஸிலிருக்க பாத்தியமுடைவர்கள். அதின் திட்டங்களில் அவநம்பிக்கையும் அபிப்பிராய பேதமும், எதிர்ப் பிரசாரம் செய்ய வேண்டிய அவசியமும் இருப்பதினாலேயே காங்கிரஸை விட்டுப் போய்விட வேண்டும் என்று யாரும் நினைக்க வேண்டியதில்லை. உதாரணமாக, கயா காங்கிரஸ் தீர்மானத்திற்கு விரோதமாய் பிரசாரம் செய்த ஸ்ரீமான் தாஸ் - நேரு கோஷ்டி யாரும் தமிழ்நாட்டில் டில்லி காக்கிநாடா காங்கிரசுக்கு விரோத மாய்ப் பிரசாரம் செய்த ஸ்ரீமான்கள் சி. ராஜகோபாலாச்சாரியார், ஈ.வெ. ராம சாமி நாயக்கர், எஸ். ராமநாதன் முதலி யோரின் அபிப்பிராயம் கொண்ட கோஷ்டியாரும் காங்கிரஸிலிருந்து கொண்டே தங்கள் பிரசாரத்தை செய்து வந்திருக்கிறார்கள் என்பதையும், இனியும் தங்களுக்கு இஷ்டமில்லாத விஷயங்களில் செய்து கொண்டுமிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 14.02.1926**



RangaRakes tamilnavarasam.com

# பிராமணர்கள் அகந்தையும் சென்னை நகர பரிபாலன சபையும்

காங்கிரசின் பெயரையும், காந்தியடிகள் பெயரையும், ஜெயிலுக்குப் போய் கஷ்டப்பட்ட தேசபக்தர்களின் பெயரையும், ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பணத்தையும், சில பிராமணரல்லாத வயிற்றுப் பிழைப்புத் தலைவர்களின் சமூகத் துரோகத்தையும், கஞ்சிக்கு வகையற்ற சில தொண்டர்களின் காலித் தனத்தையும் ஆதாரமாய் வைத்துக் கொண்டு சென்னை நகர பரிபாலன சபையாகிய கார்பொரேஷனுக்குப் போன சுயராஜ்யக் கட்சி மெம்பர்களில் சில கனவான்கள், கார்பொரேஷனையே குட்டிச் சுவராக்குவதோடு இந்தியர்கள் சுய ஆட்சிக்கு கொஞ்சமும் அருகரல்லர் - மானமுடையவரல்லர்- விடுதலை அடையத் தகுதியற்றவர் என்பதை வைரக்கல்லில் பொன் எழுத்தால் எழுதப் பாடுபட்டு வருகிறார்கள்.

சுயராஜ்யக் கட்சியார் என்று சொல்லிக் கொண்டு கார்பொரேஷனுக்குச் சில பிராமணரல்லாத கனவான்கள் போயிருந்த போதிலும், அதற்குப் பிராமணர்கள் பணமும் பிராமணப் பத்திரிகைகளின் பிரசாரமுமேதான் முக்கியமாயிருந்தபடியால், இவர்களும் அப்பிராமணர்கள் தாளத்திற்குத் தகுந்தபடி ஆட வேண்டியதாய்ப் போயிற்று. அதன் பலனாகவே கார்பொரேஷன் கமிஷனரான ஸ்ரீமான் வெங்கிட்டநாராயண நாயுடு என்கிற பிராமணரல்லாத கார்பொரேஷன் கமிஷனர் ஒருவரை எப்படியாவது ஒழித்து அந்த ஸ்தானத்தில் ஒரு பிராமண ரையோ அல்லது தங்கள் தாளத்திற்குத் தகுந்தபடி ஆடும் பிராமணரல்லாத ஒரு சமூகத் துரோகியையோ கொண்டுவந்து வைக்கத் தங்களால் கூடுமான அக்கிரமங்களையெல்லாம் செய்து வருகிறார்கள். இதைப்பற்றி பிராமணப் பத்திரிகைகளில் வரும் விஷயங்களைப் பார்த்தாலே அதன் சிறுமைக்குணம் நன்றாய் விளங்கும். கார்பொரேஷனுக்கு மெம்பராய் போயிருப்பவர்கள் யோக்கியதையையும், தாங்கள் என்னென்ன விதமான நடவடிக்கைகளால் இந்த ஸ்தானம் பெற்றோம் என்கிற விஷயத்தையும் தங்கள் நெஞ்சில் கையை வைத்துப் பார்ப்பார்களானால் இவ்வித சிறுமைக் குணத்திற்கு தாங்கள் அருகர்கள்தான் என்பதைத் தவிர வேறொன்றும் விளங்காது. ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணா சம்பளத்தின்மீது பொறாமைப் பட்டு அவர் சம்பளத்தைக் குறைக்க வேண்டும் என்று ஸ்ரீமான் சத்தியமூர்த்தி பிராமணர் சட்டசபைக்கு ஒரு தீர்மானம் கொண்டு வந்து இருக்கிறார்.



அல்லாமலும், கார்பொரேஷன் கமிஷனரை சர்க்கார் நியமிக்கக்கூடாது, தாங்களே (தங்கள் அடிமையை) நியமிக்க வேண்டும் என்று ஒரு தீர்மானமும் கொண்டு வந்திருக்கிறார்கள். அல்லாமலும், அற்ப விஷயங்களையெல்லாம் வேண்டுமென்றே அதிகப்படுத்தி கார்பொரேஷன் சபையை ஓடக்கால் தெரு மாதிரி செய்கிறார்கள்.

கமிஷனர் வீட்டில் ஒரு குழாய் மாற்றி வைத்ததற்காகவும், அவர் வீட்டில் இருந்த தண்ணீர் தேக்கத்தை கார்பொரேஷன் சிப்பந்திகளைக் கொண்டு வெளியாக்கியதற்காகவும், இந்தியர்களின் யோக்கியதையை பாதிக்கும்படியாய் ஆயிரக்கணக்கான கேள்விகளும் பிராமணப் பத்திரிகைகளில் "இந்தக் கமிஷனர் இனி உதவாது" என்கிற தலையங்கத்தின் கீழ் இழிவுப் பிரசாரங்களும் நடக்கிறது. இந்த உத்தியோகத்தில் ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணாவுக்கு முன் இருந்த ஐரோப்பியர், இந்தியர் முதலிய கமிஷனர்கள் காலத்தில் இருந்த சம்பளமும்- நியமனமும் முனிசிபல் சிப்பந்திகள் குடும்ப சகிதமாய் கமிஷனர்கள் வீட்டுக்குப் போய் வேலை செய்ததும், அவர்கள் இஷ்டம் போல் எல்லாம் ஆடினதும் இவர்களுக்கு கொஞ்சமும் கவலையை உண்டு பண்ணவேயில்லை . ஆனால் ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணா பிராமணரல்லாத இந்துவாகிவிட்டதால் பிராமணர்களுக்குப் பொறுக்கமுடியவில்லை. மற்றபடி பிராமண அதிகாரிகள் ஒவ்வோரிடங்களில் செய்யும் கொடுமைகள் கணக்கு வழக்கில்லை . உதாரணமாக, சென்ற ஒரு வருஷத்திற்குள்ளாக கவர்மெண்டு பிராமண அதிகாரிகளில் சிலர் ராமகிருஷ்ணா ஹோம் நிதி என்னும் பெயரால், நாடகமாடிக் கொண்டு ஆங்காங்குள்ள சர்க்கார் சிப்பந்திகளைக் கொண்டு 1000, 5000, 10000 ரூபாய்களுக்கு டிக்கட் விற்றுக் கொடுக்கும்படி செய்து, கிராம அதிகாரிகளை யும், குடித்தனக்காரர்களையும், வியாபாரிகளையும் நெருக்கி டிக்கட் 1 - க்கு 10 ரூ. வீதம் ஆள் ஒன்றுக்கு 2,4-5,10 டிக்கட்டுகள் வீதம் கட்டாயப்படுத்தி அவர்கள் தலையில் கட்டி, தெண்டம் வசூல் செய்வது போல் பணம் வசூல் செய்தார்கள்- செய்கிறார்கள்-செய்யவும் போகிறார்கள். இதைப் பற்றி கேட்ப தற்கு ஒரு பிராமணனையும் காணோம். ஒரு சுயராஜ்யக் கட்சி மெம்பரையும் காணோம். ஏன்?

நாடக அதிகாரி பிராமணர் - வசூலிக்கும் அதிகாரிகள் பெரும்பாலும் பிராமணர்கள் - இந்தப் பணத்தை அநுபவிப்பதும் ராமகிருஷ்ணா மடம் என்று சொல்லப்படும் பிராமண ஆதிக்கமுள்ள பிராமண மடம். இது நிற்க, கவர்னர் முதலியவர்களுக்கும் I.C.S. உத்தியோகஸ்தர்களும் ஆகிய வெள்ளைக்காரர்கள் இதைவிட அதிகமாகச் செய்வதை கேட்பதற்கும் ஆளில்லை. ஏனென்றால் பெரும்பாலும் இந்த பிராமணர்களே இருந்து பல ஆபாசங்களை நடத்திக் கொடுக்கிறார்கள். இம்மாதிரி நாம் எழுதுவதால் ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணாவோ மற்றும் பல பிராமணரல்லாத அதிகாரிகளோ பொதுச் சொத்தையனுபவிக்க வேண்டும். அதைப் பிராமணர்கள்



RangaRakes tamilnavarasam.com

விட்டுவிடவேண்டும் என்பது நமது அபிப்ராயமல்ல. குரோதத்தையும், துவேஷத்தையும், பொறாமையையுமே முக்கியக் காரணமாக வைத்துக்கொண்டு அற்ப விஷயங்களில் பிரவேசித்து ஒரு மனிதன் பிராமணரல்லாதாரராய் இருப்பதால் அவரைக் கெடுக்க வேண்டும் என்கிற குஷியின் பேரில் செய்யும் அயோக்கியத்தனமான காரியங்களை நாம் கண்டிக்காமல் இருக்க முடியாது. அல்லாமலும், நமது பிராமணர்களுக்குக் கார்பொரேஷனில் கொஞ்சம் செல்வாக்கு ஏற்பட்டவுடன் ஒரு பிராமணரல்லாத அதிகாரியை அதுவும் லஞ்சம் லாவணம், பொய் புரட்டு இல்லாத கண்டிப்புவாதியானவரும் கெட்டிக் காரரும் என்று பிராமணர்களாலேயே சொல்லப்பட்டு வந்தவரான ஒரு முக்கியஸ்தரையே ஒழிக்கப் பார்ப்பார்களானால் , இவர்கள் கைக்கு மந்திரி உத்தியோகமும் சட்டம் செய்யும் அதிகாரமும் வந்துவிட்டால் கபடம், சூது அறியாத பிராமணரல்லாத பாமர மக்களின் தலையெழுத்து என்ன ஆகும் என்பதைப் பிராமணர்கள் பின்னால் கவிபாடிக் கொண்டும், அவர்களை தலைவராக்கிக் கொண்டும் பிழைக்க நினைக்கும் பிராமணரல்லாத குள்ள நரிகளையும் தங்கள் சுயநலத்தை உத்தேசித்து பிராமணர்களுக்கு ஆக்கம் தேடிக்கொடுத்து பதவி அடைய நினைக்கும் பிராமணரல்லாத சுயகாரியப் புலிகளையும் யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 14.02.1926**



# மகாத்மாவின் ஓய்வு

மகாத்மா ஓய்வு எடுத்துக் கொண்டார் என்பது உலகுக்கே தெரியும். ஆனால், அவர் ஓய்வெடுத்துக் கொண்டாலும் அவரின் பொல்லாத வேளை என்பது அவரை ஓயவிடுவதில்லை. அவரது நண்பர்கள் என்போர்கள் அவரை மறுபடியும் வழுக்கலில் சறுக்கி விட்டுக் கொண்டே வருகிறார்கள். சட்டசபையில் நம்பிக்கையில்லாததால் சுயராஜ்யக் கட்சியைத் தான் ஒப்புக் கொள்ளமுடியாது என்று சொல்லி ஓய்வெடுத்துக் கொண்டவரை மறுபடி மறுபடியும் தொந்தரவு செய்து அவர் காலைப்பிடித்து சாணியை மிதிக்க வைக்கிறார்கள். இருந்தாலும் மகாத்மா தடியும் முறியாமல் பாம்பும் சாகாமல் அடிக்கிறார். அதை விளம்பர சவுகரியக்காரர் தங்கள் சவுகரியத்திற்குத் தக்கபடி மாற்றி விளம்பரப்படுத்தி ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். மகாத்மா இவ்வாரம் "யங் இந்தியாவில்" சுயராஜ்யக் கட்சியார் மதுபானத்தை விலக்குவதற்கு முயற்சி செய்வதைத் தங்களுடைய வேலைத்திட்டத்தில் சேர்த்துக் கொண்டது பற்றி ஏழைகளின் நண்பர்கள் பாராட்ட வேண்டும் என்றும், குடியினால் கெடுதி ஏழைகளுக்குத்தான் அதிகமென்றும், ஆனால் இதை சுயராஜ்யக் கட்சியாரே செய்யவேண்டு மென்பதில்லை; இதர கட்சியாரும் செய்ய வேண்டியது என்றும் எழுதிவிட்டு ஸ்ரீமான் சி.ராஜகோபாலாச்சாரியார் சாமர்த்தியமாய் மதுவிலக்கைப் பற்றி எழுதியிருக்கிறார் என்றும், மதுவிலக்கு விஷயம் ஜனங்களுக்கு ராஜீய விஷயத்தை உண்டுபண்ண ஒரு வழி என்றும் எழுதியிருக்கிறார். இவ்வளவும் மற்றொருவருடைய கட்டாயத்திற்காக எழுதப்பட்டதாகவே தோன்றுகிறதேயல்லாமல், தானாக எழுதினதாக அதில் ஒரு வரிகூடத் தென்படவில்லை. அப்படி இருக்குமானால் , இம்மாதிரி அவர் சொல்லுகிறார்; இவர் செய்கிறார்; அதற்குதவும்; இதற்குதவும் என்கிற வழ வழ எழுத்தே எழுதியிருக்கமாட்டார். அல்லாமலும், மதுபான விலக்கை சட்டசபையின் மூலம் நிறுத்தி விடலாம் என்கிற எண்ணமாவது மதுவிலக்குக்கு சட்டசபையில் உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்கிற எண்ணமாவது அதனிடத்தில் தொனிக்காதபடி ஜாக்கிரதையாகவே எழுதியிருக்கிறார். இவைகளில் மகாத்மாவுக்கு நம்பிக்கையிருக்குமானால், அவர் தன் பழைய கதையை எழுதப் புறப்படுவாரா? மனிதன் ஓய்ந்து போய் மேலால் ஒன்றும் செய்ய முடியாத போதுதான் உட்கார்ந்து பழைய கதை பேசுவது மற்றும் லார்ட் மார்லி போன்ற பெரிய ராஜீய தந்திரிகள் எல்லாம் தாங்கள் ஓய்ந்து போன பிறகுதான் தங்கள் தங்கள் பழைய கதையை எழுத ஆரம்பித்தார்கள். ஆதலால், நமது மகாத்மா அவர்கள், தான் செய்ய வேண்டியது



RangaRakes tamilnavarasam.com

செய்தாய்விட்டது என்றும், இனி இவர்களிடத்தில் மேலாக ஒன்றும் செய்ய முடியாது என்றும் தீர்மானித்துக் கொண்டு தான் ஓய்வெடுத்ததாகச் சொல்லி தன் பழைய கதையை எழுதுகிறேன் என்று உட்கார்ந்து விட்டார்.

ஆனாலும், நமது நாட்டு பிராமணர்கள் இந்த நல்ல பேருடன் ஓய்வெடுக்க விடக்கூடாது; விட்டால் அவர் காலத்திற்குப் பிறகு அவருக்குப் பெருமை நிலைத்து விடும்; ஆதலால் அவர் இருக்கும் போதே அவர் பெருமையையும் உறுதியான எண்ணத்தையும் எப்படியாவது ஒழித்துவிட வேண்டும்; ஒரு பிராமணரல்லாத பெரியார் நம் நாட்டில் பூஜிக்கத்தகுந்தவர், புகழத் தகுந்தவர் என்று இருக்கக்கூடாது என்கிற கெட்ட எண்ணம் வைத்து, மகாத்மாவுக்கு இவர்கள் செய்த நன்றிக்கு கூலி வாங்குவது போல், நினைத்த படியெல்லாம் அவரிடம் வேலை வாங்கி அவருடைய பரிசுத்த தன்மையை கெடுக்கப் பார்க்கிறார்கள். இப்படியெல்லாம் செய்வதாலும் கடைசியாய் இந்தியாவில் கஷ்டப்படும் ஏழை மக்களான பிராமணரல்லாதார் இதை நம்பி ஏமாறுவதாலும், அவர்கள் தலையில்தான் போய் விழுகிறது! நமக்குப் புத்தியில்லாவிட்டால் யார் என்ன செய்வார்கள்?

**குடி அரசு - கட்டுரை - 14.02.1926**



# "தருமத்தின் மேல் தருமம்"

கோவை ஸ்ரீமான் சி.வி.வெங்கிட்டரமண அய்யங்கார் மகாத்மா காந்திக்கு பணமனுப்பியதாகவும், மகாத்மா பெற்றுக் கொண்டு வந்தனமனுப்பியதாகவும் பல பத்திரிகைகளில் வெளியாயிருந்தும், பொது ஜனங்கள் அது ஒரு பெரிய துகையாய் அதாவது நாலு ஐந்து ஆறு ஸ்தானங்கள் கொண்டதாயிருக்கலாம் என்று நினைத்ததும் ஞாபகமிருக்கலாம். ஆனால், இப்போது சரியான இடத்திலிருந்து வந்துள்ள தகவல்படி அத்தொகை மிகச்சிறிய தொகையென்றும் மூன்று ஸ்தானங்கள் கொண்டதுதான் என்றும் தெரிய வருகிறது. ஆயிரக்கணக்காய் கொடுத்த கனவான்களின் பெயரெல்லாம் மூடிவைக்கப்பட்டு நூற்றுக்கணக்காய் கொடுத்த கனவான்கள் பெயர் சந்து பொந்துகளிலெல்லாம் அடிபடும்படியாயிருப்பதும், அதுவும் உண்மைக்கு விரோதமாய் ஜனங்கள் நினைத்து ஏமாறும்படி இருப்பதும், பிராமணப் பத்திரிகைகளின் விளம்பரமும், எலெக்ஷன் தந்திரமும்தானே அல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவது.

இதுபோலவே ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமண ஐயங்காரின் மற்றொரு தர்மம், அதாவது 2 லக்ஷ ரூபாய் தர்மம்; அதற்குக் காலும் இல்லை தலையும் இல்லை. ஆனால், அத்தர்மத்தை துவக்க ஸ்ரீமதி சரோஜினி வருகிறார்; ஸ்ரீமான் நேரு வருகிறார் என்று அசோசியேட் பிரஸ் முதல் அடிபடுகிறது. எலெக்ஷன் தீர்ந்தவுடன் இந்த சப்தங்கள் அடங்கிப்போகும். எலெக்ஷன் வேஷம் போட்டுக்கொண்டால் அதற்கு தகுந்தபடி ஆடித்தானே ஆகவேண்டும். ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரே ஆடும்போது ஐயோ பாவம்! ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்ட ரமணய்யங்காரைப் பற்றி சொல்லவும் வேண்டுமா? இவர்கள் பேரில் குற்றம் சொல்லுவதில் பயனென்ன? இவ்விடங்களுக்கு நம் ஆள்களே திரைபிடித்து திரியவும், இதை நம்பி ஏமாறவும் தயாராயிருக்கும் போது அவர்கள் இங்ஙனம் செய்யாமல் வேறு என்ன செய்யக் கூடும்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 14.02.1926**



RangaRakes tamilnavarasam.com

# மதிமோச விளக்கம்

ஸ்ரீமான். தூசி ராஜகோபால பூபதியவர்களால் இயற்றியதும், சென்னை, பெரம்பூர் பாரக்ஸ், செல்வபதி செட்டி கம்பெனியாரால் அச்சிடப் பட்டதுமான "மதிமோச விளக்கம்" என்னும் புத்தகம் நமது பார்வைக்கு வந்தது. அப்புத்தகத்தில் பொது ஜனங்களை ஏமாற்றிப் பிழைக்கக்கூடிய வேஷக்காரர்களும், தந்திரக்காரர்களும், பொய்யர்களும், பித்தலாட்டக்காரர் களும் எப்படி தங்களுடைய தந்திரம், புரட்டு, பொய், பித்தலாட்டம் முதலிய வைகளை எப்படி ஜனங்களிடம் உபயோகப்படுத்தி வஞ்சிக்கிறார்கள் என்ப தைப் பாமர ஜனங்களும் சுலபத்தில் அறியும்படியாக சுமார் 130 அத்தி யாயங்களாகப் பிரித்து, அவற்றில் 130 விதத் தந்திரங்களை உதாரணமாக எடுத்துக்காட்டி, பெரிய ஸைசில் 225 பக்கங்களாகவும், ஷை புரட்டுகளுக்கேற்ற பல சித்திரங்களையும் கொண்டு எளிய நடையில் தெளிவாய்ப் பிரசுரித்து வெளியிடப்பட்டிருக்கிறது. இதை வாங்கிப் படித்தால், ஒவ்வொருவரும் உலகத்திலுள்ள சகல ஏமாற்றங்களையும் சுலபமாய் அறியலாம். இப்புத்தகத் தின் விலை புத்தகத்தின் அளவுக்கும் விஷயத்திற்கும் மிகக் குறைந்ததென்று சொல்லத்தகுந்த ஒரு ரூபாய்தான். ஆகையால், ஒவ்வொருவரும் இப்புத்த கத்தை வாங்கி வாசித்து புத்திசாலிகளாக வேண்டுமாய் விரும்புகிறோம்.

**குடி அரசு - நூல் மதிப்புரை - 14.02.1926**



# குறள்

**நல்லாண்மை யென்பது ஒருவருக்குத் தான் பிறந்த இல் ஆண்மை ஆக்கிக்கொளல்.**

நாயனார் அவர்கள் குறளில், நல்ல ஆண்மை என்பது ஒருவருக்குத் தான் பிறந்த இல்லாண்மை ஆக்கிக்கொளல் என உரைத்திருக்கின்றதையும், அதன் கருத்து ஒருவனுக்கு ஆண்மை என்று சொல்லப்படுவது தன் குடியை உயர்த்திக் கொள்வது என்பதையும் அனைவரும் உணர்ந்திருப்பார்கள். ஆனால், நமது நாட்டில் ஆண்மைக்காகப் பாடுபடுகின்றோமென்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் நல்லாண்மை ஏற்பட வேண்டுமானால் வகுப்பு நலனையும் குல நலனையும் மறந்துவிட வேண்டும்; தேசத்தையே பெரிதாக நினைக்க வேண்டும் என்று மனதார அர்த்தமில்லாத மாய வார்த்தைகளைச் சொல்லி, பாமர ஜனங்களாகிய தம் குலத்தாருக்கே துரோகம் செய்து, அவர் களைக் காட்டிக் கொடுத்து, அந்நிய குலத்தாருக்கு ஒற்றர்களாகி, அவர் பின் னால் திரிந்து வயிறு வளர்ப்பதையும், தத்தமக்கு ஆக்கந்தேடிக் கொள்ளு வதையும் நாம் பார்க்கும் போது நமது குலம் எவ்வளவு இழிவான நிலைமை யில் இருக்கிறது என்பதும் விளங்கும்.

தற்கால ராஜீய உலகத்தில் எவனாவது ஒருவன் தன் வகுப்பு முன்னேற் றத்தைப் பற்றிப் பேசுவதும், மற்றும் தாழ்ந்த வகுப்பு முன்னேற்றத்தைப் பற்றிப் பேசுவதும் தேசத் துரோகமெனவும், ஆண்மைத் துரோகமெனவும் மதிக்கப் பட்டுப் போகிறது. இந்நிலையும் நமது நாட்டின் பிற்பட்ட வகுப்பாருடைய வும், தாழ்த்தப்பட்ட வகுப்பாருடையவும் ஈனஸ்திதியை விளக்குவதோடு, முற்பட்ட வகுப்பாருடையவும் உயர்ந்த வகுப்பாருடையவும் ஆதிக்கத்தை யும் எடுத்துக் காட்டுகிறது. தமிழ்நாட்டில் நல்லாண்மைக்கென ஏற்பட்ட பத்திரிகைகள் மிகுந்திருந்த போதிலும் அவைகள் முற்பட்ட வகுப்பாருக்கும், உயர்ந்த வகுப்பாருக்கும் பயந்து கொண்டு, வகுப்பு நலனை நாடுவதும், இல் லாண்மை யாக்கிக் கொள்ளுவதும் நல்லாண்மை ஆகாதென்றும் சொல்லி தங்கள் பத்திரிகைகளை நடத்தி வருகின்றன. நாட்டில் ஏற்பட்ட ஒவ்வொரு வகுப்பாருக்கும் தங்கள் தங்கள் ஆண்மைகளை அடையவும், நாட்டு நலன் களில் சமஉரிமை அடையவும் மார்க்கமில்லாதிருக்கும்போது தேச உரிமை யும், நாட்டு உரிமையும் யாருக்கு? வகுப்புரிமை பெற்றால் வகுப்புச் சச்சரவு



RangaRakes tamilnavarasam.com

களை உண்டாக்கும் எனச் சொல்லிக் கொண்டு பல வகுப்புரிமைகளையும் நாசமாக்கி, ஒரு வகுப்பார் சகல உரிமைகளையும் அடைந்து முன் நிற்பதை மற்ற வகுப்பார் பார்த்துக் கொண்டு அவர்களுக்கு அடிமையாயிருக்க வேண்டும் என்று சொல்லுவதில் எவ்வளவு யோக்கியமிருக்கும்? நமது நாட்டில் பல வகுப்புகளிருந்த போதிலும் ஒவ்வொரு வகுப்பையும் கவனித்து அதற்கு வேண்டிய சுயமரியாதை ஏற்பட்டிருக்கின்றதா? தேசத்திற்கு வரும் ஆக்கம் பல வகுப்புகளுக்குள் சரிவரப் போய்ச் சேர மார்க்கமிருக்கிறதா? என்பதைக் கவனித்து வேலை செய்தால் அது தேசத்தையே முன்னுக்குக் கொண்டு வந்ததாகும். அப்படிக்கின்றி முன்னாலிருக்கிற வகுப்பாரை மாத்திரம் கூட்டிக்கொண்டு, அவர்கள் மெச்சும்படி அவர்கள் பின்னாலும் திரிந்து கொண்டு, நாட்டுநலம், நாட்டுநலம் என்று சொல்லிக் கொண்டும், வகுப்பு நலத்தைத் தேடினால் நாடு கெட்டுப்போகும் என்றும் சொல்லிக் கொண்டு திரிந்தால் ஒரு நாடு எப்படி முன்னுக்கு வரும்? ஒரு நாடு என்பது, ஒரு நாட்டிலுள்ள பல வகுப்பாரின் க்ஷேமத்தையும் பொறுத்ததா? ஒரு வகுப்பாரின் க்ஷேமத்தை மாத்திரம் பொறுத்ததா? உண்மை நாட்டுநலம் தேடுவோர் தாழ்ந்த வகுப்பாருடைய நலத்தையும், பிற்பட்ட வகுப்பாருடைய நலத்தையும் தேடுவதைத்தான் நாட்டுநலமென்று நினைப்பார்கள். நாடு என்பது சகல வகுப்பாருக்குமேயொழிய வலுத்த வகுப்பாருக்கென்று மாத்திரம் ஏற்பட்டதல்ல. "வகுப்பு நலன் தேடுவது என்றால் நமது நாடு பல வகுப்புகளை உடைத்தாயிருக்கிறது. ஆதலால் பல வகுப்பாருடைய நலனையும் தேடுவதாய் ஏற்படும் ; அப்போது அது முடியாத காரியமாகிவிடும் ; ஆதலால் நாட்டு நலம், நாட்டுநலம் என்று பொதுவாய்ச் சொல்லிக் கொண்டிருப்பதுதான் அநுகூலமானது" என்று சிலர் சொல்லுகிறார்கள். நமது நாடு பல வகுப்பாரைக் கொண்டதாகவே எந்தக் காரணத்தினாலோ ஏற்பட்டுப் போய்விட்டது. பல வகுப்பாருக்கும் நம்பிக்கை உண்டாகும்படியாக நடந்து கொள்ள வேண்டியது தான் நாட்டின் நலன் தேடுவோரின் கடமை.

நாட்டுநலன் தேடுவோரின் ஒவ்வொரு திட்டமும் சகல வகுப்பாரின் நம்பிக்கைக்கும் ஏற்றதாய்த்தான் இருக்க வேண்டும் .தற்போது நமது நாட்டில் வகுப்பு என்று சொல்லக்கூடிய மாதிரியில் வகுப்புரிமைக்கு ஆவலாயும், ஒன்றுக்கொன்று அவநம்பிக்கையாயும் இருப்பது மூன்றே வகுப்புத்தான். அவை பிராமணர்-பிராமணரல்லாத இந்துக்கள் -பஞ்சமர் என்று சொல்லக் கூடிய மூன்று வகுப்பார்தான். இதை எல்லோருமே சர்க்கார் உள்பட - நாட்டு உரிமை தேடுவோர் உள்பட - எல்லோரும் ஒப்புக்கொண்டாய்விட்டது. ஆந்திரர் -தமிழர்-கர்நாடகர்-கேரளர் என்கிற பிரிவைச் சொல்லி ஜனங்களை ஏய்க்க வேண்டியதில்லை . இவற்றைத் தனித்தனியாகவே பிரிக்கவேண்டுமென்று காங்கிரஸ் ஏற்பாடு செய்தாகிவிட்டது. காங்கிரஸிலும் அதுபோலவே பிரித்தாகிவிட்டது. ஆதலால் அதைப் பற்றிக் கவலையில்லை. எனவே மேற்சொன்ன மூன்று வகுப்பார்தான் ஒருவருக்கொருவர் அவநம்பிக்கையுடனிருக்கிறார்கள். "இவர்களுக்கு உரிமை வழங்கிவிட்டால், இவர்களுக்குள்ளாகவே பல வகுப்புகள் கிளம்பும்" என்று சிலர் சொல்லி ஜனங்கள் புத்தியைக் கலைக்கக்கூடும். அப்படியிருந்தாலும், சகல வகுப்பாரின் நலனையும் கவனிக்கத்தகுந்த திட்டம் போடுவதற்கு முடியாதென்று பயப்பட வேண்டியதில்லை. வகுப்புகளுக்குத் தகுந்தபடி உத்தியோகங்களும் ஸ்தானங்களும் அமைக்கவும் சவுகரியமிருக்கிறது. 3 $^1/_2$ கோடி ஜனங்கள் உள்ள இங்கிலாந்து பார்லிமெண்டில் 700 மெம்பர்கள் இருந்து ராஜீய பாரம் செய்கிறார்கள். ஆதலினால் நமது நாட்டிலும் சகல வகுப்பாரையும் ராஜீய பாரத்தில் சேர்ப்பது கஷ்டமல்ல. இரட்டை முதல் வகுப்புப் படியும், 5000, 6000 ரூபாய் சம்பளமும் கொடுக்காமல் 3-வது வகுப்புப் படிச் செலவும் 400, 300 சம்பளமும் கொடுத்தால் எல்லாம் சரிக்கட்டிப் போகும். அப்போது அதிகப் போட்டி இருக்காது. ஆதலால் வகுப்புரிமையைப் பற்றி பயப்பட வேண்டிய தில்லை. அல்லாமலும், நமது நாட்டில் அதிகமான பிரிவினைகள் இருக்கிற தாக நினைத்துக் கொள்ளுகின்றோமேயல்லாமல், வாஸ்தவத்தில் அளவுக்கு மிஞ்சினதாக ஒன்றுமில்லை. பிராமணர்களும் தாங்கள் ஒரு வகுப்பென்றும், தங்களைத் தவிர மற்றவர்களில் சூத்திரர் - பஞ்சமர் என இரண்டு வகுப்புகள் தான் இருப்பதாக ஒப்புக் கொள்ளுகிறார்கள். பிராமணரல்லாதாரும் மேற்சொன்ன பிராமணரல்லாதார் எல்லாம் ஒரு வகுப்பென்றும், தங்களுக்குக் கீழ் பஞ்சமர் என்று ஒரு வகுப்பும் இருப்பதாகத்தான் ஒப்புக் கொள்ளுகிறார்கள். பஞ்சமர்கள், தாங்கள் ஒரு வகுப்பென்றும், மற்றவர்கள் தங்களுக்கு மேற்பட்ட வகுப்பென்றும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். இம்மூன்று வகுப்பாரும் தங்களில் ஒருவருக்கொருவர் வித்தியாசமிருப்பதாகக் கற்பித்துக் கொள்ளுவதால், இம் மூவருக்கும்தான் ஒருவருக்கொருவர் நம்பிக்கையுண்டாகும்படி தக்க உரிமைகள் ஏற்பட வேண்டியது மிகவும் அவசியமானதாகும். இம் மூவரும் தங்களுக்கும் ஒருவருக்கொருவர் உயர்வு-தாழ்வு இல்லை; எல்லோரும் சமம்தான்; மனித உரிமையை அடைவதில் நாம் ஒருவருக்கொருவர் உயர்ந்தவர் தாழ்ந்தவர்களல்ல என்கிற உணர்ச்சி வருகிற காலத்தில் வகுப்புரிமையைப் பற்றிய கவலையே வேண்டியதுமில்லை. வகுப்பின் பேரால் உரிமையும் கேட்க அவசியம் ஏற்படாது. அப்படிக்கில்லாமல் பல வகுப்பாரும் சேர்ந்து கஷ்டப்பட்டு ஒரு பதவியைச் சம்பாதித்தால், அதை ஒரு வகுப்பாரே அநுபவிப்பதற்கு அநுகூலமாகவும், மற்ற வகுப்பார்கள் சூத்திரர்கள் என்றும், பிற்பட்டவரென்றும், தீண்டாதார்கள் என்றும், தெருவில் நடக்கவும்-கண்ணில் தென்படவும் அருகர்களல்லவென்றும், ஒரு வகுப்பார் ஒரு வகுப்பாரால் கருதப்படுகின்ற போது, வகுப்புரிமையைக் கவனிக்காமல் நாட்டுரிமையைக் கவனிக்க வேண்டுமென்று சொல்லுவது நல்லாண்மையல்லாததும், அர்த்தமில்லாததும், பித்தலாட்ட உரிமையாகவுமே தான் முடியும்.

**குடி அரசு - தலையங்கம் - 14.02.1926**


RangaRakes
tamilnavarasam.com

# ஓட்டர்களை ஏமாற்றுதல்

## ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியார் முதலிய பிராமணர்களின் தந்திரம்

சென்ற சில காலமாக பிராமணரல்லாதார் பெரும்பாலும் சட்ட சபைகளிலும், தாலூகா , ஜில்லா போர்டு, முனிசிபாலிடி முதலிய ஸ்தல ஸ்தாபனங்களிலும் மெஜாரிட்டியாராக ஏற்பட்டு, பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்தைக் கவனித்துக் கொண்டு வருவதில் தென்னாட்டுப் பிராமணர்கள் மனம் பொறாதவராகி பொறாமையுங் கெட்ட எண்ணமுங் கொண்டு, எப்படியாவது பிராமணரல்லாதாரைச் சட்டசபைகளிலிருந்தும், ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்தும் விரட்டியடித்து, முன்போலவே தங்கள் ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தின் பேரில் சகல பிரயத்தனங்களையும் செய்து வருகிறார்கள்.

பிராமணரல்லாதாரில் சில ராஜீயவாதிகளென்போர் இவற்றை நன்றாய் அறிந்திருந்தும், தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கும், வாழ்க்கை நலனுக்கும், கீர்த்திக்கும் ஆசைப்பட்டுக் கொண்டு பிராமணர்களின் வாலைப் பிடித்துக் கொண்டு திரிவதோடல்லாமல், பிராமணரல்லாத சமூகத்தாருக்கே கேடு சூழும்படி வாழ்ந்து வருகிறார்கள். அல்லாமலும், பிராமணரல்லாத தேசீயப் பத்திரிகைகள் என்று சொல்லப்படும் பல பத்திரிகைகளும் தங்களுக்கென ஒரு கொள்கையில்லாமலும், மனிதத் தன்மையும், ஆண்மைத் தனமும் இல்லாமலும் பத்திரிகை நடத்துவதும், பணம் சம்பாதிப்பதும்தான் மோக்ஷ சாதனமெனக் கருதிக்கொண்டு, சமயத்திற்குத் தகுந்தபடி நடந்து கொண்டு தங்கள் சமூக முன்னேற்றத்தைப் பாழாக்கிக் கொண்டு வருகின்றன. அன்றியும், பிராமணரல்லாதாரிலேயே சில படித்தவர்களென்போரும் பிரபுக்களென்போரும், தங்கள் தேசத்தையும் சமூகத்தையும், மனச்சாக்ஷியையும் விற்று விட்டு எப்படி நடந்து கொண்டால் சட்டசபைக்குப் போகலாம்; பதவிகள் பெறலாம்; உத்தியோகம் சம்பாதிக்கலாம் என்கிற கருத்துக் கொண்டவர்களாகி அவர்களும் சமயம் போல் நடந்து வருகிறார்கள். ஆகிய மேற்கண்டவர்களெல்லாம் இம்மாதிரி தங்கள் சுயநலத்தை மாத்திரம் கவனித்து நடப்பதால் பிராமணாதிக்கத்தை நிலை நிறுத்தப் பாடுபட்டு வரும் பிராமணர்களுக்கு



மிகவும் அநுகூலம் ஏற்பட்டு, அவர்கள் வஞ்சகம் சுலபத்தில் ஈடேறும்படியாயிருந்து வருகிறது. இம்மாதிரியான காரியங்களால் பொது ஜனங்களும் இவர்கள் வஞ்சகத்தை அறிய முடியாமற்போய் விடுகிறது. இதனால் பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதாரை என்ன வேண்டுமானாலும் சூழ்ச்சிகள் செய்யலாம்; இதை வெளியாக்குவதற்கு மார்க்கமில்லாமல் பிராமணரல்லாத தலைவர்களென் போரையும், பத்திராசிரியர்களென்போரையும் திசைக் கட்டுக்கட்டி, அடக்கி, சுவாதீனப்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறோம் என்கிற அகம்பாவத்தின் பேரில், அண்டப் புரட்டுகளும், ஆகாசப் புரட்டுகளும் புரட்டி வருகிறார்கள். சென்ற சட்டசபைத் தேர்தல்களில் முட்டுக்கட்டை போடுவதற்காகவும், ஒத்துழையாமை செய்வதற்காகவும் சட்டசபைக்குப் போகிறோம் என்று சொல்லிப் போய், தங்கள் பிள்ளை குட்டிகளுக்கும், இனத்தாருக்கும் உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பதிலேயும், அடுத்த தேர்தலிலும் சட்டசபைக்குத் தாங்களே போவதற்கு ஆக்கந் தேடிக் கொள்ளுவதிலேயும் கவலையாயிருந்து விட்டு, மறுபடியும் இவ்வருடம் மதுவிலக்கை அடியோடு ஒழித்து விடுகின்றோம் என்று சொல்லுவதின் பேரால் வோட்டர்களை ஏமாற்றி சட்டசபைக்குப் போகப் பார்க்கிறார்கள்.

இதற்கு அநுகூலமாக காங்கிரசையும் உபயோகப்படுத்திக் கொள்ளுவதோடு மகாத்மாவின் பெயரையும் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். அல்லாமலும், உண்மையான ஒத்துழையாதாரென்றும், யோக்கியரென்றும், சொல்லும்படியாக ஓர் காலத்தில் பொது ஜனங்களின் அபிப்ராயம் பெற்று விட்ட ஸ்ரீமான் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரும் இச்சூழ்ச்சியின் பெரும் பாகத்தைத் தானே ஏற்றுக்கொண்டு நடத்தி வருகிறார். சென்ற சில வாரங்களாக, பிராமணர்களுக்கே வோட் கொடுங்கள் என்று சொல்லுவதற்குப் பதிலாக, சுயராஜ்யக் கட்சியாருக்கே வோட் கொடுங்கள்; அவர்கள் சட்டசபைகளில் கள்ளை நிறுத்துவார்கள் என்று தைரியமாய் பாமர ஜனங்களை ஏமாற்றுகிறார். இதைக் கண்டு சில பாமர ஜனங்கள் ஏமாந்து போகக் கூடுமாதலால், ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியாரின் யோக்கியதையைப் பொது ஜனங்கள் அறியச் செய்ய வேண்டியது நமது கடமையாகிவிட்டது. சட்டசபையைப் பற்றி சென்ற ஆண்டுக்கு முன்னாண்டில், பொது ஜனங்களிடம் நல்ல பெயர் பெற பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் சட்டசபை என்கிற தலைப்பின் கீழ் வெளியிட்டிருக்கும் நோட்டீசில் கண்ட அபிப்ராயங்களை வெளியிடுகிறோம். அதாவது:–

“இனி நடக்கப் போகும் சட்டசபைத் தேர்தல்களில் சேராமலும், எந்த அபேக்ஷகருக்கும் வாக்குக் கொடுக்காமலும், தேசபக்தர்கள் யாவரும் அபேக்ஷகர்களாக நிற்காமலும் இருக்க வேண்டியது நம்முடைய கடமை.

**இதற்கு முக்கிய காரணங்களாவன : –**

1. சட்டசபைக்குப் போவதில் ஜனங்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாததோடு சிறு விஷயங்களில் கவனம் செலுத்தி பெரிய



RangaRakes tamilnavarasam.com

விஷயங்களை மறக்கும்படி செய்துவிடும்.

2. இராணுவ பலத்தாலும், தங்கள் மிருக பலத்தாலும் ஆண்டுவரும் அரசாங்கத்தார், நம்முடைய சம்மதத்தின் பேரிலும் சமாதானத்தின் பேரிலும் ஆண்டு வருவதாகச் சொல்லித் திரிய இடங் கொடுத்தவர்களாவோம்.

3. சட்டசபையைப் பகிஷ்காரம் செய்ய 1920-ம் வருடத்தில் இருந்த காரணங்கள் இப்போதும் இருந்து கொண்டு வருகின்றன.

4. அரசாங்கத்தார் சட்டசபை விஷயமாகச் செய்திருக்கும் விதிகளின் படி, அதிகார வர்க்கத்தாருடைய செயல்களை சட்டசபை அங்கத்தினர்களால் தடுக்க முடியவே முடியாது. சர்வ அதிகாரமும், அதிகார வர்க்கத்தார் வைத்துக்கொண்டிருப்பதோடு நம்முடைய பிரதிநிதிகள் அதிகாரவர்க்கத்தின் ஏமாற்றுதலுக்கும் உட்பட்டுப் போவார்கள்.

5. நாம் செய்ய வேண்டிய வேலைகள், கதர்ப் பிரசாரம், தீண்டாமையொழித்தல், ஜாதி ஒற்றுமையை வளர்த்தல் முதலிய பல வேலைகளிருக்க, இவைகளை விட்டு வோட்டுகள் சம்பாதிக்கவும், சட்டசபைக்குள் சென்று காலத்தையும் பணத்தையும் வீணாக்குவதும் தவறாகும்.

6. சட்டசபைக்குள் சென்று இராஜபக்தி சத்தியம் செய்வதும், சட்டசபை வேலையைச் சரிவரச் செய்வேனென்று பிரமாணம் கொடுப்பதும் நமது சுயமரியாதைக்கும் மனச்சாக்ஷிக்கும் விரோதமாகும்.

7. தற்போது அமைக்கப்பட்டுள்ள சட்டசபைகள், உபயோகமில்லையென்று உலகமே கோஷித்துக் கொண்டிருக்க நாம் அவைகளுக்குள் பிரவேசிப்பது நகைப்பிற்கிடமாகும்.

8. சட்டசபைக்குள் நமது உண்மைத் தலைவர்களெல்லாம் சென்று விட்டால், காங்கிரஸ் மகாசபைக்கிருக்கும் கௌரவமெல்லாம் குறைந்து, சட்டசபைகளுக்கு மதிப்பு வளர்ந்து சர்க்கார் ஆட்சி நிலைபெற்று விடும்.

9. அல்லாமலும், நமக்குள் இருந்துவரும் ஜாதிச் சண்டைகளும் பொறாமைகளும் அதிகமாகும்.

10. காங்கிரஸ்காரர்கள் சட்டசபைகளைக் கவனியாமலிருந்தால் பொறாமைக்கிடமில்லாமல் ஒற்றுமை வளரும்."



இவ்விதமாக சுமார் 10 அபிப்ராயங்களைச் சென்ற தேர்தலுக்குச் சொன்னவரும், இனியும் தான் ஒத்துழையாதாரராகவே இருக்கிறேன் என்று சொல்லுபவருமான ஸ்ரீமான் ஆச்சாரியார் இவ்வாண்டு பிராமணர்களை சட்டசபைக்கு அனுப்புவதற்கு முயற்சி செய்து கொண்டு சுயராஜ்யக் கக்ஷியின் சார்பாய் பல விளம்பரங்கள் செய்துக் கொண்டு வருகிறார். அதாவது: -

1. காங்கிரஸ் கக்ஷியார் கள்ளை ஒழிக்க உறுதிமொழி கொடுத்துவிட்டார்கள். ஆதலால், அவர்களுக்கு வோட் கொடுங்கள் என்றும்,

2. கள்ளையும் சாராயத்தையும் ஒழிக்க காங்கிரஸ் கக்ஷியார்கள் சட்டசபைக்குள் கடும் போர் புரிவார்கள், அறிந்தீர்களா? ஆதலால், அவர்களுக்கு கொடுங்களென்றும்,

3. மகாஜனங்களே ! காங்கிரஸ் கட்சியார் பூரண மதுவிலக்குக்காக பிடிவாதப் போர் நடத்துவார்கள். ஆதலால், அவர்களுக்கு வோட் கொடுங்கள் என்றும்,

4. கள்ளை நிறுத்தக் காங்கிரஸின் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு வோட் கொடுங்களென்றும், இன்னும் பல இம்மாதிரி வெளிப்படையாகவும் பொருள்படும்படியாகவும் எழுதிக் கொண்டே வருகிறார். தான் போகுமிடங்களிலும் இம்மாதிரியே சுயராஜ்யக் கக்ஷிக்காரருக்கு வோட் செய்யும் படியும், பிராமணரல்லாதார்களை ஜஸ்டிஸ் கக்ஷியின் பேரால் தந்திரமாய்த் தாக்கிக் கொண்டு அவர்களுக்கு வோட் செய்யக்கூடாதென்கிற விதமாகவும் பேசி வருகிறார்.

## ஸ்ரீமான் சத்தியமூர்த்தி

ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியாருடைய யோக்கியதையே இப்படியிருக்குமானால் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் யோக்கியதையைப் பற்றி எடுத்துச் சொல்லவும் வேண்டுமா? ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் கொஞ்ச நாளைக்கு முன்பு கள்ளை ஒழிப்பதாகச் சொல்லி சட்டசபைக்குப் போகலாம் என்று சுயராஜ்யக் கக்ஷியாருக்கு ஒரு யுக்தி சொல்லிக் கொடுத்த காலத்தில், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஸ்ரீமான் ஆச்சாரியார் மீது சந்தேகப்பட்டு,

1. சட்டசபையின் மூலம் கள்ளை ஒழிக்க முடியாதென்றும்,
2. சுயராஜ்யம் வந்தாலொழிய கள்ளை ஒழிக்க முடியாதென்றும்,
3. 25 வருடத்தில் கள்ளை ஒழிக்க ஒரு திட்டம்போடவேண்டுமென்றும்,
4. சட்டசபையின் மூலம் ஒரு காரியமும் செய்ய முடியாதென்று அர



RangaRakes tamilnavarasam.com

சியல் கமிட்டி முன் சாட்சியங் கொடுத்தும்,

5. ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியாரே கலால் இலாகா மந்திரியாய் வந்தாலும்கூட கள்ளை நிறுத்திவிட முடியாதென்றும்,

6. ஆதலால், ஸ்ரீமான் ஆச்சாரியார் சொல்லுவது நடவாத காரிய மென்றும், இதில் என்னமோ தந்திரமிருக்கிறது,

என்று இம்மாதிரி சொல்லிக் கொண்டிருந்த ஸ்ரீமான் சத்தியமூர்த்தி, தன்னை மந்திரியாய் நியமித்தால் உடனே கள்ளை நிறுத்திவிடுகின்றேனெனச் சொல்லு வதும், கள்ளை நிறுத்தப் பாடுபடுவதாய் ஸ்ரீமான் ஆச்சாரியாருக்கு உறுதி கூறியிருப்பதாகச் சொல்லுவதும், ஸ்ரீமான் ஆச்சாரியாரும், இம்மாதிரி யான ஆள்களுக்கு வோட் வாங்கிக் கொடுக்கப் பொது ஜனங்களை வஞ்சிப் பதும் எவ்வளவு யோக்கியமான காரியமென்பதை வாசகர்கள்தான் கவனிக்க வேண்டும். இதைக் கவனிக்கின்ற போது சந்தைக் கடைகளில் மாட்டுத் தரகர்கள் செய்யும் பித்தலாட்டங்கள் நமது ஞாபகத்திற்கு வருகின்றது.

## மாட்டுக்கடைப் பித்தலாட்டம்

சந்தைக்கடைகளில் சிலர் தங்களுடைய உபயோகமற்ற மாடுகளை வயிறு நிறையத் தண்ணீரை நிரப்பிக் கொண்டுவந்து விற்பதற்காக கொண்டு வருவார்கள். அவ்விடங்களில் விற்றுக் கொடுப்பதற்காகத் தரகர்கள் இருப் பார்கள். அவர்களில் இருவர், அம்மாட்டுக்காரர்களிடம் இரகசியமாக நல்ல விலைக்கு விற்றுக் கொடுத்தால் தங்களுக்கு இவ்வளவு கொடுக்க வேண்டு மென்றும், அப்படிக்கில்லாவிட்டால், மாட்டினுடைய யோக்கியதையை வெளி யிற் சொல்லிவிடுவோமென்றும் சொல்லி அவனிடம் தக்கபடி தரகு பேசிக் கொண்டு, தங்கள் மாட்டை விற்றுக் கொடுப்பதற்குப் பிரயத்தனப் படுவார்கள். அப்பொழுது தரகர்கள் இருவருமே, ஒருவன் மாட்டுக்காரனாகவும், மற்றொ ருவன் மாடு வாங்குகிறவனைப்போல் வேஷம் போட்டுக் கொண்டு உண்மை யாய் மாடு வாங்குகிறவர்கள் யாராவது அவ்வழியாகப் போகும்போது, மாட்டின் ஆசனத்தின் வழியாய் மாட்டுத்தினசு என்கிற பூச்சியை உள்ளே செலுத்தி அம்மாட்டைக் குதிக்கச்செய்து கொண்டு, ஒருவருக்கொருவர் விலைபேசுவது போல் பேசிக் கொண்டிருப்பார்கள். உண்மையாய் மாடு வாங்குகிறவன் இதை வாஸ்தவமென்று நினைத்து, மாடு தினசு குடைவதைப் பொறுக்கமாட்டாமல் அங்குமிங்கும் தாவிக் குதிப்பதைக் கண்டு, இது மிகவும் சுறுசுறுப்பான மாடு என்று நினைத்துக்கொண்டு சமீபத்தில் வந்தால், தரகர்கள் ஒருவருக்கொருவர் அது 20 ரூபாய் பெறாத மாடாயிருந்தபோதிலும் , இவன் 60 ரூபாய்க்கு கேட்பது போல் கேட்பதும், அவன் 100 ரூபாய்க்கு குறைந்து கொடுக்கமாட்டேனென்று சொல்லுவதும், மற்றவன் அது 6 மாசத்திற்கு முன்னேயல்லவா 100 ரூபாய் விலை இருந்தது; இப்பொழுது விலை இறங்கிவிட்டது; இந்த 60 ரூபாய்தான் பெறும்; அதற்கு மேல் முடியாது எனப் பேசிக் கொண்டிருப்பதும், உண்மையாய் வாங்குகிறவன், மாட்டைத் தொட்டுப்பார்க்க வந்தால் 60 ரூபாய்க்குக் கேட்கிறது போல் நடித்த தரகன், அது விற்கிற மாடல்ல; 60 ரூபாய்க்கு நான் முன்னமே வாங்கியாகிவிட்டது போமய்யா போம் என்று சொல்லுவதும், மாட்டுக்காரன் போல் நடித்தவன் இல்லய்யா அது 100 ரூபாய் மாடு நான் 60 ரூபாய்க்கு கொடுக்கமாட்டேன்; அவர் கிடக்கிறார்; நீங்கள் வேண்டுமானால் பாருங்கள் என்று சொல்லுவதும், மாடு வாங்க வந்தவன் இவர்கள் நடிப்பதைப் பார்த்து உண்மை தானென நம்பி ஏமாந்து, மாடு தினசு குடைச்சல் பொறுக்க மாட்டாமல் குதிப்பதைப் பார்த்து, சுறுசுறுப்பான மாடென்றும் இவர்கள் விலை கேட்பதைப் பார்த்து உண்மை யாயிருக்குமென்று நம்பியும், பின்னும் விற்பதாய் நடிக்கும் தரகன், வாங்கு கின்றவனைப் பார்த்து, இந்த மாடு சரியாய் வேலை செய்யாவிட்டால் கொண்டு வந்து விட்டுவிடுங்கள்; தீனிச் செலவு, வட்டியெல்லாம் சேர்த்துக் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லும் வஞ்சக வாக்குறுதிகளையும் நம்பி வாங்கி விடுவான். அவன் வாங்கிவிட்டதும், பணத்தை மூவருமாகச் சேர்ந்து பங்கு போட்டுக் கொண்டு சப்பை மாட்டை அவன் தலையில் கட்டி விட்டு ஓடிப் போவார்கள்.

பிறகு மாடு வாங்கினவன் வீடு கொண்டு போய்ச் சேர்ப்பதே பெரிய கஷ்டமாய்ப் போய் விடும் . தினசு செத்துக் குடைச்சல் நின்று போனதற்கப் புறம் மாடு மூத்திரம் பெய்யவும், சாணி போடவும் கூட எழுந்து நிற்பதற்குச் சக்தியில்லாமல் படுக்கையிலேயே இவைகள் கழிக்க வேண்டியதாக இருக்கும்.

அதுபோல, நமது சப்பை மாட்டுக்காரனாகிய சர்க்காருக்கு விற்றுக் கொடுப்பவர்களாகிய ஸ்ரீமான்கள் இராஜகோபாலாச்சாரியார், சீனிவாசய்யங் கார், சத்தியமூர்த்தி போன்ற தரகர்கள், மாடு வாங்கும் குடியானவர்களாகிய பிராமணரல்லாத பாமர வோட்டர் ஜனங்கள் தலையில் சப்பை மாட்டைக் கட்டுவது போல் அவர்கள் வோட்டை வாங்கி தாங்கள் சட்ட சபைக்குப் போய் விலையைப் பங்கு போட்டுக் கொள்ளுவது போல், தாங்களும் தங்கள் பிள்ளை குட்டிகளும் இனத்தார்களும் உத்தியோகம் சம்பாதித்துக் கொண்டு மாடு வாங்கினவன் அதிக விலைபோட்டு வாங்கி சப்பை மாட்டைக் கட்டி அழுவது போல், பிராமணரல்லாதார்கள் தாழ்ந்த நிலையில் தீண்டாதவர் களைப்போல் அவஸ்தைப்படுவது இம்மாதிரி சம்பவங்களுக்குப் பொருத்த மானதென்று எடுத்துக்காட்டத் தேவையில்லை.

**குடி அரசு - கட்டுரை - 14.02.1926**



RangaRakes
tamilnavarasam.com

# பிரசாரக் கூட்டங்களில் குழப்பம்

தற்காலம் சுயராஜ்யக் கக்ஷிப் பிரசாரத்திற்காக ஸ்ரீமான்கள் சீனிவாசய் யங்கார், கலியாணசுந்தர முதலியார் முதலியோர் ஆங்காங்கு செல்லுவதும் சட்டசபை அபேக்ஷகர்களைத் தங்கள் கக்ஷிக்கு இழுப்பதுமான பிரசாரங்கள் நடந்து வருவதைப் பத்திரிகை வாயிலாக அறிகிறோம். அதோடு கூடவே ஒவ்வொரு கூட்டங்களிலும் குழப்பங்களும் கூச்சல்களும் நடப்பதும் பார்க்கிறோம்.

உதாரணமாக, மதுரையில் மீட்டிங்கு நடக்கவிடாமற் செய்ததும் கும்ப கோணத்தில் போலீஸ் உதவியினால் தலைவர்கள் என்போர் வீடு போய்ச் சேர்ந்ததும், காஞ்சீபுரத்தில் கேள்விகளும் குழப்பங்களும் நடந்ததும் பத்திரி கைகள் மூலமாகவும் நிருபர்கள் மூலமாகவும் தெரிய வருகிறது. இம்மா திரியான காரியங்களை நாம் மனப்பூர்த்தியாக வெறுக்கிறோம். பிரசாரகர்கள் என்ன கருத்தோடு வந்த போதிலும் அவர்கள் சொல்லுவது முழுமையும் பொறுமையாய்க் கேட்டுவிட்டு மறுப்பு ஏதாவது இருந்தால் பேசுவதற்கு அவகாசம் கேட்க வேண்டியது, அக்கூட்டத்தார் அதை மறுப்பார்களானால் பேசாமலிருந்து விட்டு அடுத்தநாள் ஒரு கூட்டத்தைக் கூட்டி நமது அபிப்பி ராயத்தைச் சொல்ல வேண்டுமேயல்லாமல், குழப்பம் செய்வதோ, பேச முடியாமற் தடுப்பதோ போலீஸ் தயவைக் கொண்டு வீடு போகச் செய்வதோ மிகவும் இழிவான காரியமென்றே சொல்லுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 14.02.1926**



# தற்கால நிலைமை

## பாலக்காட்டில் சொற்பொழிவு

நமது நாட்டின் தற்கால நிலைமையைப் பற்றி பேசுவதென்றால் நினைக்கும் போதே வேதனையாகவும் துக்கமாயும் இருக்கிறது. எவ்வளவோ பெருமையாக இருந்ததாகச் சொல்லப்படும் நமது நாடு இன்று இருக்கும் நிலை, அந்நிய ஆக்ஷிக்கு அடிமையாகி- அந்நிய ஆக்ஷி என்றால் மனிதத் தன்மைக்கு அந்நிய - அதாவது, மனிதனுக்கு மனிதன் பிடித்து தின்னும் மாதிரியில் வலியவனுக்கு எளியவன் ஆகாரமாய் நடைபெற்று வருகின்றது. நமது நாட்டின் மதக் கொள்கைகளின் பலன்களில் இவ்வந்நிய ஆட்சி ஒன் றென்றும், மதத்தின் பேரால் நம் தேசத்துக்கு ஏற்பட்ட கெடுதியின் பலனாய் நமது நாடு இக்கெதியை அடைந்தது, ஆதலால் வெறும் ராஜீய சீர்திருத் தத்தைப் பேசிக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை, நமது மதத்தின் பேரால் ஏற்பட்ட ஜாதி வித்தியாசங்களில் மனிதர்கள் பிறவியிலேயே பிராம ணன் உயர்ந்த ஜாதியான் என்பதும், பஞ்சமன் தாழ்ந்த ஜாதியானென்பதும் நமது நாட்டை விட்டு ஒழிந்தாலல்லாது நமது நாடு சுதந்திரமும், சுயமரியா தையும், சுய ஆட்சியும் பெற்று வாழ முடியாது. தீண்டாமை யென்பது ஓர் மதத்திலும், நாட்டிலுமிருப்பது அம்மதத்திற்கே பெரிய இழிவு. பிறவியி லேயே உயர்ந்த ஜாதியாரென்று ஓர் கூட்டத்தாரைக் கொண்டாடுவது, அந்த நாட்டின் சுயமரியாதைக்கும் மற்றும் பல வகுப்புக்குள் பெரிய இழிவுக்கும் ஆதாரமாகும். ஆதலால் நமது நாட்டில் மனிதப் பிறவியில் உள்ள உயர்வுத் தாழ்வு வித்தியாசங்களை வேரோடு களைந்து எறிவதுதான் தேசத்துக்கும், சமூகத்துக்கும் ஓர் மனிதன் செய்ய வேண்டிய முக்கியக் கடமை. இவற்றை விட்டுவிட்டு ராஜாங்கத்தினிடத்தில் சட்டசபைகள் முதலிய ஸ்தாபனங்களின் மூலம் தேசத்திற்கு சீர்திருத்தம் பெறுவேனென்று சொல்லுவது பொது தேச சேவையாகாது. அது சுயநலம், சுய ஜாதி நலச் சேவையே தானாகும். ராஜீய விஷயத்திலும் ஏதாவது சிறு பாகமாவது நமது நாட்டுக்கு உபயோகப்படும் படியாக வேலை செய்ய வேண்டுமானால் அது எல்லா ராஜீய உரிமைகளும் நமது நாட்டு சகல வகுப்பாருக்கும் சமனாய் கிடைக்கும்படி ஏற்பாடு செய்வது தான் ஜாதி வகுப்பு வித்தியாசங்களின் கொடுமைகளை ஒழிக்கும். இவ்விஷ யங்களில் கவலை எடுத்துக் கொள்ளாமல் பொதுவாக நாடு, நாடு என்று பேசிக்கொண்டு காலத்தைக் கடத்துவது, சுயகாரியத்தை கவனிப்பதோடு அல்லாது, நாட்டுக்கு ஒரு க்ஷேமத்தையும் விளைவிக்காது. வகுப்பு



RangaRakes tamilnavarasam.com

சமஉரிமைகளை அலக்ஷியம் செய்துவிட்டு ராஜீய உரிமை என்று பேசிக் கொண்டு நடத்தப்படும் எந்தக் காரியத்தையும், சம உரிமைகள் இல்லாத வகுப்புகள் பின்பற்ற முடியாது. அவைகள் வந்து, வகுப்புரிமை சமமாய் அடையும் வரையில் குறுக்கிட்டுக் கொண்டுதான் இருக்கும். ஒரு வகுப்பாரை ஏமாற்றி ஒரு வகுப்பார் முன்னேறுவதற்கான ராஜீய இயக்கங்களை தேச நல இயக்கமெனக் கொண்டு பொதுமக்கள் ஏமாந்து பின்பற்றுவதும், அதற்கும் சில அறியாதார்களும் சுயநலக்காரர்களும் ஆக்கங் கொடுத்து வந்தாலும் முடிவில் அது வீழ்ந்து போகுமென்பது உறுதி. அதற்கு உதாரணமாக ராஜீய உரிமை பெறுவதற்கு தலைசிறந்து விளங்குவதாய்ச் சொல்லப்படும் சுயராஜ்யக் கட்சி யென்னும் ஓர் போலிக் கட்சி தென்னாடு போன்ற பல இடங் களில் பாமர ஜனங்களை ஏமாற்றி வந்தாலும், அநேக இடங்களில் அதன் உண்மைத் தெரிந்து அது உடைபட்டும் இழிவுபட்டும் வருகின்றது. அது வரப்போகும் சட்டசபை முதலிய தேர்தல்களில் ஆக்கம் பெற பலவித சூழ்ச்சி களும் விளம்பரங்களும் செய்து வருகின்றது. சென்ற தேர்தல்களில் அக்கட்சி செய்த சூழ்ச்சிகளையும், வாக்குத் தவறுதல்களையும் நாணயக் குறைவுகளை யும் பொதுஜனங்கள் அறிந்திருந்தும் இவ்வருடம் அவைகள் அறியாமல் மனிதர்கள் கலங்குகிறார்கள். அதற்கு காரணம் ஸ்ரீமான் சி.இராஜகோபாலாச் சாரியார் போன்றவர்கள் இக்கட்சிக்கு அநுகூலமாய் வேலை செய்வது தான். ஸ்ரீமான் ஆச்சாரியார் சுயராஜ்யக் கட்சியை ஆதரிப்பதின் நோக்கமெல்லாம் சட்டசபையை பெரும்பாலும் பிராமணர்களே கைப்பற்ற வேண்டுமென்கிற எண்ணந்தானென்று நான் நினைக்கிறேன். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி போன்றோர் கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களெல்லாம் பிராமணரல்லாத தலைவர்களைப் பற்றி பிராமணரல்லாதாருக்குள்ளாகவே அருவருப்பு ஏற்பட்டு பிராமண ரல்லாத வோட்டர்களெல்லாம் பிராமணர்களுக்கே வோட் கொடுத்து சட்ட சபையை பிராமணாதிக்க சபையாக மாற்றவேண்டும் என்கிற கருத்துக் கொண்டுதானென்றும்,

தற்காலச் சட்டசபைகளும் தங்கள் தங்கள் வகுப்பு நலத்தை நாடு வோருக்கு மாத்திரம் ஏதாவது கொஞ்சம் பிரயோஜனப்படுமேயல்லாமல் வேறொரு காரியத்திற்கும், அதாவது வரிப்பளுவை குறைக்கவோ, மது பானத்தை ஒழிக்கவோ, உண்மையான சுய ஆட்சிப் பெறவோ, ஏழைகள் பிழைக்கவோ, தரித்திரத்தை ஒழிக்கவோ, தொழிலாளர்களைக் காப்பாற்றவோ முடியாது. ஆதலால் வகுப்பு சமத்துவத்திற்கும், வகுப்புரிமைக்கும், வகுப்பு முன்னேற்றத்திற்கும் பாடுபட வேண்டும் என்னும் கவலையுள்ளவர்கள் சட்டசபைக்குப் போவதாய் இருந்தால், அவ்வித உண்மையைச் சொல்லி போவதுதான் ஒழுங்கு, பொதுஜனங்களும் சட்டசபையின் மூலம் இக்காரியங் களைச் சீர்த்திருத்தம் செய்து கொள்ளலாமென்று நினைத்தால் வகுப்புரிமை யையும் வகுப்பு சுயமரியாதையையும் பற்றி சட்டசபையில் உழைக்கிறேன் என்று மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்ளுகின்றவர்களுக்குத்தான் வோட்டுக் கொடுக்க வேண்டும், மற்றபடி அதை செய்கிறோம் இதை செய்கிறோம் என்று



முடியாத காரியங்களைச் சொல்லி ஏமாற்றுகிறவர்கள் வார்த்தையை நம்பி பிராமணாதிக்கத்தை நிலைநிறுத்தப் பாடுபடும் பிராமணர்களுக்கோ, அவர்கள் உதவியாலும், அவர்கள் பிரசாரத்தாலும், சட்டசபைக்குப் போய் அவர்களுக்கு அடிமையாயிருக்கும் ஆட்களுக்கோ வோட்டுக் கொடுத்து இழிவுபடாமல் ஜாக்கிரதையாயும், உங்கள் கையாலேயே கொள்ளிக் கட்டை யை எடுத்து உங்கள் தலையை சொறிந்துக் கொள்வது போல் இராமல் வோட் விஷயத்தில் நீங்கள் புத்திசாலித்தனமாய் இருக்க வேண்டுமென்றும்,

வகுப்புநலன், வகுப்புரிமை ஆகியவைகள் சட்டசபையிற் போய் அடையவேண்டிய அவசியம் இல்லை; வெளியிலேயே பார்த்துக் கொள்ள முடியும். "ஆதலால், தேச நலத்திற்கு தாங்கள் பாடுபட வேண்டும்" என்கிற எண்ணம் யாருக்காவது இருக்குமானால், அவர்கள் கண்டிப்பாய் சட்ட சபையைப் பகிஷ்காரம் செய்துவிட்டு கதர் அணிவதிலும் கதர் உற்பத்தி செய்வதிலும், தீண்டாமையை ஒழிப்பதிலும் பிரயத்தனப்படவேண்டும். கதரை நாம் கை விட்டு விட்டு அந்நிய துணியை ஆதரித்ததினாற்தான் நமது நாட்டில் பெரும்பாலும் தொழிலாளிகளாயிருக்கிற ஏழைகளுக்குத் தொழில் அற்றுபோய் விட்டது. ஓர் காலத்தில் இந்திய ஸ்திரீ தர்மத்தைப் பற்றி எவ்வ ளவோ பெருமையாய் எழுதி வைத்துக்கொண்டும் பேசிக் கொண்டுமிருந்த இந்திய ஸ்திரீ தர்மம் மிகவும் இழிவான நிலையில் இருக்கிறதென்றும், கற்பு என்பது நமது நாட்டுப் பெரும்பான்மையான ஸ்திரீகளுக்குக் காக்கப்படாத கடினத் தத்துவமாய் போய்விட்டது. ஜீவனத்திற்காக விபசாரம் செய்ய வேண் டிய ஸ்திரீகள் நமது நாட்டில் நாளுக்கு நாள் வளர்ந்துக் கொண்டு வருவதற்கு நமது நாட்டுக் கைராட்டினங்கள் அருகிப்போனதுதான் காரணம் தொழிலாளி களின் தரித்திரத்தை ஒழித்து ஸ்திரீகளின் தர்மத்தைக் காப்பாற்ற வேண்டுமா னால், கதரைக் கைக்கொண்டலல்லாமல் வேறு ஒரு சாதனத்தாலும் முடியாது, நமது நாட்டுப் பெருமையை ஒழிக்க ஸ்திரீ தர்மங்களை அழித்து, தொழிலாளர் களையும், ஏழைகளையும் பட்டினிப்போட்டு , நாம் இக்கதியில் இருப்பதற்குக் காரணம் நாம் சர்க்கார் பேரிலேயே சொல்லுவது முழுவதும் உண்மையாகாது, சர்க்காரிடம் ஒரு பாகம் இருந்த போதிலும், பெரும்பாகம் நாமேதான் காரண மாய் இருந்து வருகிறோம்.

நாம் எல்லோரும் கதரை உடுத்துவதாயிருந்தால் நமது சர்க்காருக்கு நமது நாட்டின் பேரில் இவ்வளவு ஆசையிருக்காது; நமது ஜனங்களுக்கும் இவ்வளவு பட்டினி கிடக்கமுடியாது; நமது நாட்டுப் பொருள்களும் அந்நிய நாட்டுக்குக் கொள்ளை போகாது. உதாரணமாக, ஒரு மனிதன் 12 அணாவுக்கு ஒரு கெஜம் அந்நிய நாட்டு மல் துணி வாங்குவானேயானால், அவன் 10 அணா 9 பைசா நமது நாட்டிலிருந்து அந்நிய நாட்டுக்கு அனுப்பிக் கொடுத்து 10 அணா 9 பைசா செலவில் தங்கள் வாழ்நாளைக் கழிக்கக்கூடிய இரண்டு குடும்பத்தை நமது நாட்டில் பட்டினி போட்டதற்கு பொறுப்பாளியாகிறான். ஒரு கெஜம் மல்லில் உள்ள பஞ்சின் விலை ஒன்றேகால் அணாதான் பெறும்;



RangaRakes tamilnavarasam.com

பாக்கி பத்தே முக்காலணாவும் அதன் நூல் நூற்பதற்கும், நெசவுக்குமாகவும் அந்நிய நாட்டினருக்குக் கொடுக்கிறோம். அந்த நூற்றல் வேலையை நமது சகோதரிகளுக்குக் கொடுத்து அந்த நெசவு வேலையை நமது சகோதரர் களான நெசவுக்காரர்களுக்குக் கொடுத்து இருந்தால், இந்த இரண்டு குடும்பங் களும் ஒருநாள் காலத்தை கழித்து இருக்குமா? அல்லவா? ஒரு கெஜம் அந்நிய நாட்டுத் துணி வாங்குவதினாலேயே ஒரு நாளைக்கு 2 குடும்பங் களை பட்டினி போடத்தகுந்த பணத்தை அந்நிய நாட்டுக்கு அனுப்புகின்றோ மென்றால், நீங்கள் அணிந்துக் கொண்டிருக்கும் இவ்வளவு துணிக்கும், நீங்கள் வருடமெல்லாம் வாங்கும் கோடிக்கணக்கான கெஜத் துணிக்கும், எவ்வளவு பேரைப் பட்டினி போட்டிருக்கின்றீர்களென்று கவனித்துப் பாருங் கள். எவ்வளவு ஸ்திரீகளை தொழிற் செய்ய வகையில்லாமல் தெருவில் முடுக்கி அவர்களின் கற்பை இழக்கக் கட்டாயப்படுத்துகின்றீர்களென்பதை நினைத்துப்பாருங்கள்.

ஆதலால், மடங்கள் கட்டுவதும், அன்னதானம் செய்வதும், மடாதிபதி களென்போருக்குப் பணத்தைக் கொடுத்து சோம்பேறிகளுக்குப் பொங்கிப் போடச் செய்து, அவர்கள் காலை கழுவின தண்ணீரைத் தீர்த்தமென்று உட் கொள்வதும், புண்ணியமும், மோக்ஷமும், அன்னதானமும், ஜீவ காருண்ய மும், பாவமன்னிப்பும் ஒருக்காலும் ஆகவே ஆகாது.

ஆகையினால், நீங்கள் ஒவ்வொருவரும் கதரை ஆதரித்து தேசத் தைக் காப்பாற்ற வேண்டும். தேவஸ்தான ஆக்டைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று காரியதரிசி ஸ்ரீமான் மாணிக்கம்பிள்ளை அவர்கள் கட்டளை இடுவதால் அதைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்லுகிறேன்.

சிலர் உங்களை ஏமாற்றி தேவஸ்தான ஆக்டானது, ஹிந்து மதத்திற்கு பெரிய ஆபத்து; ஹிந்து மத தர்ம ஸ்தாபனங்களிலும், ஹிந்து மதத் தத்துவத் திலும் சர்க்காரார் பிரவேசித்து விட்டார்கள்; ஜஸ்டிஸ் கட்சியாரென்று சொல் லப்படும் பிராமணரல்லாத மந்திரிகள் அதற்கு இடங்கொடுத்து மதத் துரோகி களாகி விட்டார்கள்; அவர்களை அந்த ஸ்தானத்தை விட்டு அகற்றி விட்டு தேவஸ்தான சட்டத்தை அழிக்கக் கூடியவர்களுக்கும், அழிப்பதாய் சொல்லி வாக்குறுதி கொடுக்கிறவர்களுக்குமே நீங்கள் வோட்டுக் கொடுத்து அவர் களை சட்டசபைக்கு அனுப்பவேண்டுமென்றும் மற்றும் பல மாதிரியாகவும் பலர் சூழ்ச்சிப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

பிராமணரல்லாதாரிலேயும் பலர் இதை நம்பிக்கொண்டும், சிலர் பிராமணர்களிடத்தில் பணம் வாங்கிக்கொண்டும், அவர்கள் தயவை எதிர்ப் பார்த்துக்கொண்டும் இதேமாதிரி சொல்லிக் கொண்டு திரிகிறார்கள். நீங்கள் இவற்றைக் கொஞ்சமும் நம்பக்கூடாது. முதலாவது நமது தர்ம ஸ்தாபனங் களும், மடாதிபதிகளும் யோக்கியமாய் நடந்து வருகிறார்களா வென்பதை நீங்களே யோசித்துப் பார்க்க வேண்டும். மதத்தை உத்தேசித்துத் தர்ம ஸ்தாப னங்களின் பேரால் ஹிந்து மடாதிபதிகளுக்கும், ஹிந்துக் கோவில்களுக்கும்,



வருடம் ஒன்றுக்கு 2 கோடி ரூபாய் வரும்படி வருகிறதென்றும், இந்த 2 கோடி ரூபாயில் பெரும் பாகம் தாஸி - வேசிகளும், கள்ளு-சாராயமும், வக்கீல்களும் - கோர்ட்டுகளும், சோம்பேறி பிராமணர்களும், மற்றும் உபயோகமற்ற ஆட்களும் சாப்பிட்டுக்கொண்டு ஹிந்து மதத்தின் பெருமையையும், பிராமணரல்லாதாரின் சுயமரியாதையையும் அழித்து இழிவை உண்டாக்கவும் உபயோகப்படுகின்றதேயல்லாமல், தேசத்திற்காவது, மதத்திற்காவது, தமிழ் நாட்டில் உரிமையுள்ளவர்களும், பெரும்பான்மையானவர்களுமான பிராமண ரல்லாதாருக்காவது எள்ளளவு பயன்படுகிறதா? இவற்றைக் காங்கிரஸ் ஏற்பட்ட காலமுதற்கொண்டே அதாவது 30, 40 வருடக் காலமாகவே நம் நாட்டவர் அறிந்து காங்கிரஸ்களிலேயும், மாகாண ஜில்லா தாலூகா மகா நாடுகளிலேயும் தேவஸ்தான ஆக்ட் ஏற்படுத்தும்படி பிரேரேபனைகள் கொண்டு வந்து சர்க்காரைக் கேட்டுக்கொண்டு வந்திருக் கின்றார்கள். இந்த 2 கோடி ரூபாயும் வரும்படி வருவதற்குப் பொது ஜனங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதித்துக் கொடுத்திருக்க வேண்டும். கொண்டு வந்து கொடுப்பவர்கள் எவ்வளவு செலவு செய்து கொண்டு -கஷ்டப்பட்டுக் கொண்டு வந்து கொடுத்திருக்க வேண்டும். உதாரணமாக, திருப்பதி தேவஸ் தானத்திற்கு வருஷத்தில் சுமார் 20 லக்ஷம் ரூபாய் வரும்படி வருகிறது. இந்த 20 லக்ஷ ரூபாய் இமயமலை முதல் கன்னியாகுமரி வரையிலுமுள்ள ஹிந்துக்களால் வழிச் சிலவு செய்து கொண்டு போய், கால்- அரை- ஒன்று- பத்து- நூறு- ஆயிரம்- பதினாயிரமாக ஹிந்துமத பக்தர்கள் என்போர்களால் செலுத்தப்படுகிறது. இப்படிச் செலுத்த சிலவு தொகை 20 லக்ஷத்துக்கு குறையாமல் 30 லக்ஷமென்றுக் கூடச் சொல்லலாம். ஆக திருப்பதி கோவிலுக் காக மாத்திரம், இந்துக்களுடைய பணம் இந்து மதத்தின் பேரால் வருஷம் ஒன்றுக்கு 50 லக்ஷம் செலவாகிறதென்றால், இன்னும் மற்றுமுள்ள கோவில் களுக்கும், நதிகளுக்கும் ஆக எவ்வளவு கோடி ரூபாய் செலவாய்க் கொண்டி ருக்கும். ஒட்டு மொத்தம் கணக்குப் பார்த்தால் தமிழ் நாட்டில் மதத்திற்காக, கோவில்களுக்கும், வைதீகச் சடங்குகளுக்கும், பிராமணர்களுக்காகவும் ஹிந்துக்களால் செலவு செய்யப்படும் பணம் சர்க்காரால் வசூல் செய்யப்படும் வரி வசூல் பணத்திற்கு கூடுதலாயிருக்குமே தவிர குறையாதென்பதுதான் எனது அபிப்ராயம். எப்படியென்றால் ஒரு விதத்திலும் சர்க்காருக்குக் காலணாக்கூட வரி கொடுக்க அவசியமில்லாதவன், மதத்தின் பேரால் கோவிலுக்கும், வைதீகச் சடங்குகளுக்கும் , குருக்களுக்கும், மடாதிபதிகளுக் குமாக 1-10 ரூபாய் கணக்காக ஏறக்குறைய ஒவ்வொரு வருமே செலவு செய்து கொண்டுதான் வருகிறார்கள்.

ஆகையால் சர்க்கார் வரியைவிட மதவரி அதிகமிருக்குமென்பதில் நீங்கள் யாரும் ஆச்சரியப்படமாட்டீர்கள். இப்படிச் செலவு செய்தும், மதம் என்றால் என்ன? தெய்வம் என்றால் என்ன? புண்ணியம் பாவம் என்றால் என்ன? என்பது கூடத் தெரிவதற்கில்லாமல், பிராமணனை வணங்கிக் கொண்டு, அவன் சொற்படியும் அவன் எழுதி வைத்த புத்தகப்படியும்



RangaRakes tamilnavarasam.com

நடப்பது தான் ஹிந்து மதமென்றும், பிராமணன் தனது வரும்படிக்காகக் காட்டிக் கொடுத்து பூஜை செய்வதுதான் தெய்வமென்றும் அவன்பிழைக்க வழி ஏற்படுத்துவதுதான் கோவிலென்றும், பிராமணனுக்குக் கொடுப்பது தான் புண்ணியமென்றும், அவனுக்கு கொடுக்கக் கூடாதென்று சொல்லுவதுதான் பாவமென்றும், அறிந்து கொண்டு இருக்கின்றோமேயல்லாமல் இவ்வறிவுக்கே இவ்வளவு பணச் செலவும் உபயோகப்படுகிறதே அல்லாமல், உண்மையில் ஆத்மார்த்தத்திற்கென்று சொல்லப்படும் ஹிந்து மதத்திற்கு ஏதாவது பிரயோஜனப்படுகிறதா? ஹிந்து மதமே இன்னதென்று, ஹிந்துக்களிலேயே 100-க்கு 99 $^3/_4$ ஹிந்துக்களுக்கு இன்னமும் தெரியவே தெரியாது. ஒரு மகமதியரை மகமதிய மதம் என்னவென்று கேட்டால் தங்களுடைய மதத்திற்கு 'மகமது நபி' ஆதாரப் புருஷரென்றும், மகமதுவின் கற்பனைப்படி நடப்பதென்றும், மகமதுவைப் பின்பற்றுவதென்றும் சொல்லுவார்.

ஒரு கிறிஸ்தவரைக் கேட்டால் தங்கள் மதத்திற்கு கிருஸ்துநாதர் ஆதார புருஷரென்றும், கிருஸ்துவைப் பின்பற்றுவதென்றும், கிருஸ்துவின் கற்பனைப்படி நடப்பதென்றும் சொல்லுவார். அதுபோல் ஒரு ஹிந்துவைக் கேட்டால் தங்கள் மதத்திற்கு தாங்கள் யாருடைய கற்பனைப்படி நடக்கிறதென்றும், யாருடைய கற்பனையை பின்பற்றுகிறார்களென்றும் தங்களுக்கு யார் மத கர்த்தாவென்றும் சொல்லுவதற்கோ, தெரிந்தவர்கள் இருக்கிறார்களாவென்றும் தாங்கள் யாரைப் பின்பற்றுகிறோமென்றும், தாங்கள் யார் கற்பனைப் படி நடக்கிறோமென்றும் சொல்லத் தகுந்தவர் 1000 - ல் ஒருவர் கூட இருப்பதாகச் சொல்ல முடியாது. ஆனால் "இதெல்லாம் நமக்கு எதற்கு? ஐயர் சொன்னால் சரி என்றும், அதெல்லாம் கேட்பதுகூட பாவமென்றும்" சொல்லத்தான் கற்றிருக்கிறார்கள். இப்படி கோடிக்கணக்கான ரூபாய் மதத்திற்காக, நம் மதத்தினர்களால் செலவு செய்யப்பட்டுவிட்டு, மதம் இன்னதென்றே அறியாதிருப்பார்களானால், அம் மதம் எப்படி ஒரு தேசத்தில் நிலைத்திருக்கமுடியும்? இம்மாதிரி மதத்திற்குக் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணம், தூங்காமலும், சாப்பிடாமலும், பட்டினி கிடந்து கொண்டு அநாவசியமாய் ஏன் செலவு செய்யப்பட வேண்டும்?

மதத்திற்காக செலவு செய்து பாப்பரான குடும்பங்கள் நமது நாட்டில் வருடத்திற்கு வருடம் எவ்வளவு வளர்ந்துக் கொண்டு வருகின்றது. வைதீகச் சடங்குகளுக்காகச் செலவு செய்து பாப்பராய்க் கொண்டு வரும் குடும்பங்கள் எவ்வளவு வளர்ந்துகொண்டு வருகின்றது. இவற்றைப்பற்றி இதுவரை யார் கவனித்து இருக்கிறார்கள்? இவற்றை எல்லாம் உணர்ந்துதான் தற்காலமுள்ள பிராமணரல்லாத மந்திரிகள் பிரயத்தனப்பட்டு தேவஸ்தானச் சட்டமென்பதாக ஓர் சட்டம் உண்டாக்கியிருக்கிறார்கள். அச்சட்டத்தில் குற்றமுள்ள பாகம் இன்னதுதான் என்று நாளது வரையில் ஒருவராவது எடுத்துக் காட்டவேயில்லை. வீணாக மதம் போச்சு, மதம் போச்சு என்று சப்தமிடு கின்றார்களேயல்லாமல் குற்றமென்னவென்று சொல்லுவதைக் காணோம். பாமர ஜனங்களையும், ஜஸ்டிஸ் கக்ஷியார் இந்த சட்டத்தைச் செய்தனர் என்கிற காரணத்திற்காக சட்டத்தை சந்தேகிக்கும்படி சில பிராமணர்களும், பிராமணப் பத்திரிகைகளும் பிரசாரம் செய்து வெற்றிப் பெற்று வருகின்றனர். ஏனெனில், ஜஸ்டிஸ் கட்சி என்றாலே, அது தேசத் துரோகக் கட்சி என ஜனங்கள் நினைக்கும்படியாக பிராமணர்களும் அவர்களால் கீர்த்திப் பெற்று வயிறு வளர்க்கும் பிராமணரல்லாதாரும் பொய்ப் பிரசாரம் செய்து ஜஸ்டிஸ் கட்சியார் பேரில் ஒருவித தப்பபிப்பிராயத்தை ஜனங்களுக்குள் உண்டாக்கி வைத்து விட்டப் படியால் பாமர ஜனங்களும் ஏமாந்து நம்பி விடுகிறார்கள்.

இதனால் ஜஸ்டிஸ் கட்சியாரால் நமது நாட்டுக்கு விளைந்திருக்கும் நன்மைகளும் மறைந்து போவதோடல்லாமல் அதையே ஜனங்கள் விரோதமாக நினைக்கும்படியாயும் ஏற்பட்டு வருகின்றது. காரணமென்னவென்றால் இந்தச் சட்டத்தின்படி தர்மச் சொத்துக்களை பிராமணர்களேதான் சாப்பிட வேண்டும் என்பதும் பிராமணர்களுக்குக் கொடுத்தால்தான் புண்ணியம் என்பதும் பிராமணர்கள்தான் இந்து மத தத்துவத்தை அறியலாமென்பதும் பிராமணன்தான் சாமியைத் தொடலாம், பிராமணன்தான் வேதம் முதலியவை படிக்கலாமென்பதும், அவனுக்கு பணம் கொடுத்தாற்தான் சாமி தயவு சம்பாதிக்கலாமென எண்ணுவதுமான குருட்டு நம்பிக்கைகள் நமது நாட்டில் ஒழிந்து போய்விடும். ஆதலாற்தான் பிராமணர்கள் இதை எதிர்க்கிறார்கள்; சட்டசபைகளிலும் இதை ஒழிப்பதற்குப் பிரயத்தனப்படுகிறார்கள்; ஐக்கோர்ட்டிலும் வியாஜ்யம் தொடுத்திருக்கின்றார்கள். மடாதிபதிகளென்போர்களிலும் ஆச்சாரியார்களென்போர்களிலும்; லோககுருவென்போர்களிலும் பலர் இப் பிராமணர்களுக்கு பணத்தைக் கொடுத்துச் சீமைக்கு அனுப்புவதும், சட்டசபையில் ஸ்தானம் சம்பாதிப்பதற்காக வோட்டர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்கும் பிரசாரர்களுக்கு, பிராமணர்களுக்கு வோட் வாங்கிக் கொடுப்பதாகச் செலவுக்குப் பணம் கொடுத்துக் கொண்டும் வருகின்றார்கள். ஆதலால் நீங்கள் இவற்றைக் கண்டு ஏமாந்து போகாமல் உங்களிடத்தில் யார் வந்து வோட் கேட்டாலும், உங்களுக்கு கொடுக்க இஷ்டமிருக்கும் பக்ஷத்தில் தேவஸ்தான ஆக்டைக் கெடுக்காமல் காப்பாற்றுகிறோம் என்று யார் சொல்லுகின்றார்களோ அவர்களிடம் பிரமாணம் வாங்கிக் கொண்டு அவர்களுக்கே வோட் கொடுக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் ஏமாந்து நீங்கள் உங்களுடைய வோட்டுகளை கவலையற்றுப் பொய்ப் பிரசாரங்களைக் கண்டு ஏமாந்து அநாவசியமாய் உபயோகப்படுத்தி விடுவீர்களேயானால் பின்னால் உங்கள் தேசத்திற்கும் மதத்திற்கும், சமூகத்திற்கும், பெரிய ஆபத்து ஏற்படுவதோடு நீங்களும் தீண்டாதார்களாகிவிடுவீர்களென்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

*குறிப்பு : 15.12.1926 ஆம் நாள் பாலக்காட்டில் சொற்பொழிவு*

**குடி அரசு - சொற்பொழிவு - 28.02.1926**



RangaRakes

tamilnavarasam.com

# சுயராஜ்யக் கக்ஷியின் வேஷமும் ஜஸ்டிஸ் கக்ஷியாரின் மனச்சாக்ஷியும்

சென்னை கார்பொரேஷனிலிருக்கும் சுயராஜ்யக் கட்சி அங்கத்தினர்கள் தங்களுக்கு நம்பிக்கையில்லாததும், தாங்கள் செய்யாததும், தாங்கள் எதிர்ப்பதுமான கதர் ராட்டினம் என்னும் விஷயங்களைக் கார்ப்பொரேஷனுக்குள் புகுத்தி, பிராமணரல்லாதார் பேரில் பழியையும் வெறுப்பையும் பொது ஜனங்களுக்கு உண்டாக்குவதற்காக பல தந்திரங்கள் செய்கின்றார்கள். அதாவது கார்பொரேஷன் சிப்பந்திகள் கட்டாயமாக கதர் உடுத்த வேண்டும் என்கிற ஓர் தீர்மானத்தையும், கார்பொரேஷன் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளெல்லாம் கைராட்டினம் சுற்ற வேண்டுமென்கிற தீர்மானத்தையும் நிறைவேற்றியிருக்கிறார்கள். இவ்விரு தீர்மானங்களையும் சுயராஜ்யக் கக்ஷியார் தங்கள் திட்டத்தில் ஒன்றாய் ஒப்புக் கொள்ளுவதுமில்லை; தாங்களும் நடவடிக்கையில் செய்வதில்லை. கதரைப்பற்றிக் கார்பொரேஷன் சபைக்கு வரும்போது மாத்திரமும், வோட்டுக் கேட்கும் போது மாத்திரமும்தான் கதர் கட்டிக் கொள்ளவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். ராட்டினத்தைப் பற்றியோவென்றால், அது மகாத்மா பார்த்துக்கொள்ள வேண்டுமென்று விட்டு விட்டார்கள். இப்படி இருக்க இதை கார்பொரேஷன் சிப்பந்திகளுக்கு கட்டாயப்படுத்த சுயராஜ்யக் கக்ஷியாருக்கு யோக்கியதை ஏது? அப்படி இவர்கள் ஏதாவது தீர்மானம் கொண்டு வருவதாயிருந்தாலும், சம்பளம் வாங்கும்போது மாத்திரம் கதர் கட்டவேண்டுமென்று தீர்மானித்தால் அது சுயராஜ்யக் கொள்கைக்கு யோக்கியமானதாயிருக்கும்! அப்படிக்கில்லாமல், தாங்கள் மாத்திரம் வேஷத்துக்குக் கதர் கட்டவேண்டும், சிப்பந்திகள் மாத்திரம் எப்போதும் கதர் கட்டவேண்டுமென்று சொன்னால், குடிகாரர்கள் மதுவிலக்குப் பிரசாரம் செய்வது போலிருக்கின்றது. ராட்டினத்தைப் பற்றியும் இவர்கள் தீர்மானம் செய்வது, தாங்களும் ராட்டினம் சுற்றாமல், ராட்டினச் சங்கத்தில் தாங்கள் மெம்பராக இல்லாமல்,தங்கள் பிள்ளைகளும் ராட்டினம் சுற்றாமல், ராட்டினம் சுற்றுகிறவர்களையும் பார்த்துச் சிரித்துக்கொண்டும் பரிகாசம் செய்து கொண்டும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளை ராட்டினம் சுற்றக் கட்டாயப்படுத்துவது விபசாரிகள் கற்புப் பிரசாரம் செய்வது போலிருக்கின்றது. எனினும், இம்மாதிரியான தீர்மானங்களைப் பொது ஸ்தாபனங்களில் கொண்டு வந்து பேசுவதின் கருத்து, இவர்களைப் போல் வேஷம் போட இஷ்டமில்லாத ஜஸ்டிஸ் கக்ஷி முதலிய பிராமணரல்லாத மெம்பர்கள் தங்கள் மனச்சாக்ஷியை எடுத்துச் சொல்லுவதின் மூலம், ஜனங்களுக்கு அவர்களிடம் ஒரு வெறுப்பை உண்டாக்குவதற்கு கண்டு பிடிக்கப்பட்ட ஓர் சூழ்ச்சியென்பது கடுகளவுள்ள ஞானமுள்ளவர்களுக்கும் நன்றாய் விளங்கும். எப்படியென்றால் காங்கிரசில் கதரையும், ராட்டினத்தையும் கட்டாயமாக மகாத்மா பிரேரேபிக்கும் போது, ஸ்ரீமான்கள் மோதிலால் நேரு, சீனிவாசய்யங்கார், ரெங்கசாமி ஐயங்கார், சத்தியமூர்த்தி முதலிய பிராமணர்கள் எதிர்த்துப் பேசி அத்தீர்மானத்தைத் தோற் கடித்தது தேச பக்தியும் மனச்சாக்ஷியும்படி நடந்ததாயும் ஆகிவிடுகிறது! கார்பொரேஷன் கூட்டத்தில் ஸ்ரீமான்கள் பி.வரதராஜுலு நாயுடு, சுந்தரராவு நாயுடு, ஓ. தணிகாசலம் செட்டியார் முதலிய பிராமணரல்லாதார்கள் எதிர்த்தது தேசத் துரோகமும் அக்கிரமமும் ஆகி விடுகிறது. இதை யோசிக்கும் போது நமது நாட்டு ராஜீய வாழ்வு பிராமணர்கள் செய்வதெல்லாம் தேசபக்தியென்று சொல்வதாகவும், பிராமணரல்லாதார் செய்வதெல்லாம் தேசத் துரோகமென்று சொல்வதாகவும் ஏற்பட்டு விட்டதாகத்தான் தீர்மானிக்கவேண்டும். அதோடல்லாமல் பிராமணரல்லாதாரிலேயே சிலபேர் இவற்றை ஆதரிக்கவும் இவ்வித பிராமணர்களுக்கு செல்வாக்கு தேடிக் கொடுக்கவும் பிராமணர்கள் வாலைப் பிடித்துக்கொண்டும், கவி பாடிக்கொண்டும் திரியவும் அவர்கள் செய்வது சரி, சரியென்று தங்கள் பத்திரிகைகளில் முழக்கம் செய்யவும் தயாராயிருக்கும் போது நாம் யாரை நோவது?

**குடி அரசு - கட்டுரை - 28.02.1926**



RangaRakes tamilnavarasam.com

# மன்னிக்க வேண்டும்

அச்சு எந்திரம் ஒடிந்து போனதால் சென்ற வார பத்திரிகை அனுப்ப முடியாமல் போய்விட்டது பற்றி சந்தாதாரர்கள் மன்னிக்க வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**- ஈ.வெ.ராமசாமி**

**குடி அரசு - அறிவிப்பு - 28.02.1926**



# ஏமாற்றுப் பிரசாரம்

ஸ்ரீமான்கள் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் காந்தியின் பிரதிநிதி யென்கிற பேரைச்சொல்லிக் கொண்டும், திரு.வி. கலியாணசுந்தர முதலியார் பிராமணரல்லாதார் பிரதிநிதி என்கிற பெயரைச் சொல்லிக்கொண்டும், ஸ்ரீமான்கள் ஏ.ரெங்கசாமி ஐயங்கார், எஸ். சீனிவாசய்யங்கார், எஸ். சத்திய மூர்த்தி ஆகியவர்கள் சுயராஜ்யக் கட்சியின் பேரைச் சொல்லிக்கொண்டும் காங்கிரஸ் சார்பாக தேசத்திற்கு நன்மை செய்கிறவர்கள் போல் நடித்து, நமது நாட்டில் ஏமாற்றுப் பிரசாரம் செய்து வருகின்றார்கள். அப்படிச் செய்வதிலும், இவர்கள் சொல்லிவரும் விஷயங்கள் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத தாய், கொஞ்சம் புத்தியுள்ளவனும் இவர்களுடைய புரட்டுகளை அறிந்து கொள்ளக்கூடிய மாதிரியில் பேசி வருவது நமக்கே ஆச்சரியமாய் இருக் கின்றது. அதாவது:-

பிராமணர்களின் கக்ஷியாகிய தமிழ்நாட்டு சுயராஜ்யக் கக்ஷிக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்கும் விஷயத்தில் "பிராமணரல்லாதார் பிரதிநிதியான" முதலியார் சுயராஜ்யக் கட்சியார் சட்டசபையில் ஒத்துழையாமை செய்வார் கள்; ஆதலால் அவர்களுக்கு வோட்டுக் கொடுங்களென்கிறார். ஸ்ரீமான் ஆச்சாரியாரோ சுயராஜ்யக் கட்சியார் சட்டசபையில் மதுவிலக்கு செய்வார் கள்; ஆதலால் அவர்களுக்கு வோட் செய்யுங்கள் என்கிறார். சுயராஜ்யக் கக்ஷியாரோ உத்தியோகமும் ஒப்புக்கொள்ளமாட்டோம், வெளியிலும் வந்து விடுவோம் என்கிறார்கள். காங்கிரஸோ சர்க்காரிடம் இந்தியாவின் சார்பாய் ஓர் சீர்திருத்தத் திட்டம் கொடுத்தது. அதை ஒப்புக்கொள்ளச் செய்யப் பார்ப்பது; சர்க்கார் ஒப்புக் கொள்ளாவிட்டால், உடனே சட்டசபையை விட்டு வெளியே வந்துவிட வேண்டியது என்று கட்டளை யிட்டிருக்கிறது. சர்க்காரோ இந்தியா சட்டசபையில் சீர்திருத்த சம்பந்தமாய் நிறைவேறின ஓர் தீர்மானத்தை நிராகரித்து குப்பைத் தொட்டியில் போட்டு விட்டதோடல்லாமல், சென்ற வாரம் இராஜாங்க சபையிலும் "உங்கள் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவும் முடியாது; உங்களுக்கு நல்லபுத்தி வரும்வரை உங்களைப் பற்றிக் கவனிக்கப் படவும் மாட்டாது" என்று சொல்லியாகிவிட்டது. இந்த நிலைமையில் சட்டசபையில் வோட்டுக் கேட்பதின் கருத்தென்ன வென்பதை வாசகர்கள்தான் உணர வேண்டும்.

ஸ்ரீமான் முதலியார் சொல்லுகிறபடி சட்டசபையில் ஒத்துழையாமை



RangaRakes tamilnavarasam.com

செய்வதாயிருந்தால், ஒரு தடவை சுயராஜ்யக் கட்சியாரின் திட்டத்தை நிராகரித்தும் சென்ற வாரத்தில் இராஜாங்க சபையில் இந்தியர்கள், எவ்வித சீர்திருத்தத்துக்கும் லாயக்கில்லை யென்றும், உங்களுக்குப் புத்தி வரும் வரை ஒன்றும் கொடுக்கப்படமாட்டாதென்றும் சர்க்காரார் சொன்ன பிறகு கூட, சுயராஜ்யக் கக்ஷியார் சட்டசபைக்குப் போக வோட்டு வாங்கிக் கொடுப்பதற்கு ஏன் ஊர், ஊராய்த் திரிகிறாரோ நமக்கு விளங்கவில்லை. நமது முதலியாருடைய அகராதியில் உதைத்த காலுக்கு முத்தமிட்டுப் பல்லைக் கெஞ்சுவது தான் ஒத்துழையாமைக்கு அர்த்தம் போலிருக்கிறது.

ஸ்ரீமான் ஆச்சாரியார் சொல்லுவது அதைவிட வேடிக்கையாயிருக்கிறது. "திடீரென்று சட்டசபையை விட்டு வெளியே வந்து விடுவதையும், ஒத்துழையாமை உணர்ச்சி உள்ளவர்களையும், உத்தியோகம் ஒப்புக்கொள்ளாதவர்களையும்" வைத்துக் கொண்டு அவர்களுக்கு வோட் வாங்கிக் கொடுத்து, சட்டசபையில் எப்படி கள்ளை நிறுத்த முடியுமோ நமக்குப் புரியவில்லை. கள்ளை நிறுத்த வேண்டுமென தீர்மானம் கொண்டு வருவதாயிருந்தால் அதன் வரும்படியில் நடைபெறும் சர்க்காருக்கு அதனாலேற்படும் நஷ்டத்துக்குத் தகுந்தபடி வரவு - செலவுத் திட்டம் போட்டுக் கொடுக்க வேண்டும். கள்ளை நிறுத்தும் தீர்மானத்தையும், வரவு-செலவு திட்டத்தையும் சர்க்காரார் ஒப்புக்கொள்ளவேண்டும்; அவ்விலாக்காக்களை நடத்த உத்தியோகங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வளவிற்கும் இவர்கள் சம்மதித்தாலும் சர்க்காரார் பூரண மதுவிலக்கை ஒப்புக் கொள்ள வேண்டும். அதற்காக இவர்கள் திட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். இவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கவும் சம்மதிக்க வேண்டும். இவ்வளவும் நடப்பதாயிருந்தாலும் சீர்திருத்த திட்டத்தைச் சர்க்காரார் ஒப்புக்கொள்ளா விட்டால் இவர்கள் வெளியிலும் வந்து விட வேண்டும். இப்படியிருக்க சுயராஜ்யக் கக்ஷியார் மதுவிலக்கைச் செய்து விடுவார்கள் என்று சொல்லுவது எப்படி ஜனங்கள் நம்புவார்களென்று இவர் நினைக்கின்றாரோ தெரியவில்லை. ஸ்ரீமான் ஆச்சாரியார் அகராதியில், அண்டப் புரட்டோ, ஆகாசப் புளுகோ சொல்லி பிராமணரல்லாத வோட்டர்களை ஏமாற்றி, வோட்டு வாங்கிக்கொடுத்து மதுவருந்தும் - மது விற்கும் - மது உற்பத்திசெய்யும்- சட்டசபை மூலம் மது ஒழிக்க முடியாது என்று சொல்லும் பிராமணர்களையும், பிராமணர்கள் தாளத்துக்குத் தகுந்தபடி ஆடும் சில பிராமணரல்லாதாரையும், சட்டசபையில் நிரப்பி, பிராமணரல்லாதாரை ஒடுக்கி ஒழித்துப் பிராமண ஆதிக்கத்தை நிலைநிறுத்தப் பார்ப்பதுதான் மது விலக்குப் பிரசாரம் என்பதற்கு அர்த்தம் போலும். "ஜஸ்டிஸ் கட்சியாரும் மிதவாதக் கட்சியாரும் சுயேட்சைக் கட்சியாரும் ஒத்துழைப்புக்காரர்கள்; நாங்கள் பரஸ்பர ஒத்துழைப்புக் கூடச் செய்ய மாட்டோம்; கவர்ன்மெண்ட்டுக்கு தோல்வி மேல் தோல்வி ஏற்படுத்தி விடுவோம்; எங்கள் சொற்படி சர்க்கார் கேட்காவிட்டால் சட்டசபையை விட்டு விலகி வந்துவிடுவோம்; உத்தியோகம் ஏற்கமாட்டோம்; இரட்டை ஆட்சி உள்ள சட்டசபையில் அதிகாரமுமில்லை, பொறுப்பும் இல்லை; வீண் சண்டைக்கும், கட்சிக்கும், அதிகச் செலவிற்கும்தான் அதிக இடமிருக்கின்றது. ஆதலால் அதை உடைத்தெறிய வேண்டும் என்று சொல்லும் சுயராஜ்யக் கக்ஷியாருக்கு சட்டசபையில் எந்தக் காரியம் செய்ய பொறுப்பேற்றுக் கொள்ள முடியும்? தவிர பட்டதாரிகளும், சர்க்கார் நியமன உத்தியோகம் பெற்றவர்களும் சென்ற தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் 1000, 5000 சம்பளம் வரும் பெரிய உத்தியோகங்களையும், பதவிகளையும் பெற்றுக்கொண்டு, அவைகளின் மூலம் சர்க்காருக்கு உதவி செய்து வரும் கக்ஷியாராகிய இவர்கள் எப்படி வாக்குத்தத்தப்படி நடக்க முடியும்? எப்படி இவர்கள் ஏதாவது ஓர் நிலையில் நிற்க முடியும்? கள்ளை ஒழிக்க சர்க்கார் சம்மதம் வேண்டும். மூன்று வருடக் காலமாவது விடாமல் சட்டசபையிலிருக்க வேண்டும்; சட்டசபையின் மூலம் கள்ளை ஒழிக்கலாமென்ற நம்பிக்கை வேண்டும். ஆகிய இக்கொள்கைகளை ஒப்புக்கொள்ளாதவர்கள் போல் நடிப்பவர்கள் எப்படி சட்டசபைக்கு போகப் பிரியப்படுகின்றார்கள் என்பது வாசகர்களே யோசித்துப் பார்த்தால் இதன் இரகசியம் நன்றாய் விளங்கும். இவர்கள் அகராதியில் சுயராஜ்யக் கட்சி என்பதற்கு என்ன வேண்டுமானாலும் சொல்லி, ஜனங்களை ஏமாற்றித் தாங்கள் சட்டசபையில் போய் உட்கார்ந்துக் கொண்டு பிராமணரல்லாதாரால் செய்திருக்கும் தேவஸ்தான சட்டம், கல்விச் சட்டம், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஆகிய சிறிதளவாவது பிராமணரல்லாதாருக்கு அநுகூலமாயிருக்கும் விஷயங்களை ஒழித்து, அதிகாரத்திலும் பதவியிலுமிருக்கும் பிராமணரல்லாதாரையெல்லாம் வெளியில் இழுத்து விட்டுத் தாங்கள் போய் அந்த ஸ்தானங்களில் உட்கார்ந்துக் கொண்டு சர்க்காருக்கு ஒற்றர்களாயிருந்து, தங்கள் இனத்தாருக்கெல்லாம் உத்தியோகம் வாங்கிக் கொடுத்து, பிராமணரல்லாதாரை அடியோடு நசுக்குவதுதான் சுயராஜ்யக் கட்சிக்கு அர்த்தம் போலும். இதைப்பற்றி பம்பாய் மாகாணத்தில், திலகர் பத்திரிகை யென்று சொல்லப்படும் "மராட்டா" என்கிற ஓர் பிராமணப் பத்திரிகை எழுதியிருப்பதைப் பார்த்தாலே "தமிழ்நாட்டு ராஜீய பிராமணர்களின் யோக்கிய"தை நன்றாய் விளங்கும். அதாவது:-

"தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியார் வெளியிட்டிருக்கும் தேர்தல் விளம்பரமானது கான்பூர் காங்கிரஸ் தீர்மானத்துக்கு விரோதமாயிருக்கிறது. சட்டசபைகளைவிட்டு விலகுதலும் தடை வேலை செய்வதும் தங்களுடைய திட்டமென்று சொல்லிக் கொண்டு, அதே சமயத்தில் கள்ளை ஒழிக்கப் பிரயாசைப்படுகின்றோமெனச் சொல்லுவது ஒன்றுக்கொன்று பொருத்தமாயில்லை. காங்கிரஸ்காரர்கள் அடுத்த தேர்தலில் நாணயமாய் நடந்து கொள்வதானால், முட்டுக் கட்டை போடுவதன் மூலம் சட்டசபையில் வேலை செய்வோமென்று தான் சொல்லிப் போய்ப் போராட வேண்டுமேயொழிய, குடியை ஒழிக்கப்போகிறோம் என்று சொல்லிப் போகப் பார்ப்பது பாமர ஜனங்களின் கண்களில் மண்ணைத் தூவுவதான துரோகம் செய்ததாகும்".

இதற்குக் காந்தியடிகளைப் பின்பற்றுவோர் என்று சொல்லிக் கொள்



RangaRakes tamilnavarasam.com

ளும் ஸ்ரீமான் முதலியாரும், காந்தியடிகளின் சிஷ்யர் என்று பொது ஜனங்கள் கருதும்படி நடக்கும் ஸ்ரீமான் ஆச்சாரியாரும் ஏதாவது பதில் சொல்லு வார்களா? அல்லது "திட்டு வந்து பெட்டி நிறைகிறதா, துட்டு வந்து பெட்டி நிறைகிறதா" என்ற பழமொழிப் படிக்கு யாரோ, எவரோ நம்மை எப்படியும் சொல்லிக் கொள்ளட்டும்; நமக்கு கொஞ்சம் நஞ்சம் உள்ள நற் பெயரைக் கொண்டு பிராமணாதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ளலாம் என்று தங்கள் ஏமாற்றுப் பிரசாரத்தை நடத்திக் கொண்டிருப்பார்களோ தெரியவில்லை.

**குடி அரசு - தலையங்கம் - 28.02.1926**



## வங்காளத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

இம் மாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வங்காள சட்டசபையில் சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த ஒரு பிராமணரல்லாத அங்கத்தினர் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அதாவது:-

"இம்மாகாணத்தில் பற்பல வகுப்பினருடைய ஜனத் தொகைக்குத் தக்கபடி இந்த சபைக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுமாறு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்கிற தீர்மானத்தைப் பிரேரேபித்தார். குறைந்த எண்ணிக்கை உள்ளவர்களான ஆங்கிலோ-இந்தியர், ஐரோப்பியர், இந்திய கிருஸ்தவர் முதலியவர்கள் தங்களுக்கு ஒன்றுமில்லாமல் போய்விடுமோ எனப் பயந்து இதை ஆக்ஷேபிக்கத் தொடங்கினார்கள். ஸர். அப்துர் ரஹிம் இவ்வகுப்பார்களுக்கும் சரியான பிரதிநிதித்துவம் கிடைக்கும் படியாக ஒரு திருத்தம் அசல் தீர்மானத்தோடு சேர்த்தார். அதாவது:-

"குறைந்த வகுப்பினர் முதலியவர்களுக்கும் போதுமான பிரதிநிதித் துவம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்" என்ற திருத்தத்தை பிரேரேபித்தார். இதற்கு விரோதமாயிருந்த சிலர், காஞ்சீபுரத்தில் செய்த தந்திரத்தைப் போலவே சட்டம் ஒழுங்கு என்பதன் பேரால் இதை நசுக்கிவிடப் பார்த்தார் கள். ஆனால் அக்கூட்டத்தின் தலைவர் காஞ்சீபுரத் தலைவர் போல் இல்லா மல் நேர்மையும் தன் காலிலேயே நின்று கொள்ளக்கூடிய சக்தியும் வாய்ந்த வராயிருந்தபடியால், இத்தீர்மானங்கள் ஒழுங்குதான் என்று சொல்லி ஓட்டுக்கு விடப்போகும் தருவாயில், அக்கிராசனாதிபதியை வம்புச் சண்டைக்கு இழுப்பது போல் சிலர் அத்துக்கு மீறிப் பேசி தாங்கள் அக்கிராசனாதிபதியால் வெளியிலனுப்பப்படவேண்டுமென்றே நடந்து கொண்டு வெளியில் போய் விட்டார்கள். பிறகு வெளியே போகப்பட்டவர்கள் ஒன்று கூடி அக்கிராசனாதி பதியை நீக்கிவிட ஒரு தீர்மானம் கொண்டு வருவதாகச் சொல்லிக் கொண்டு உள்ளே வந்தார்கள். அத்தீர்மானத்தையும் அங்கீகரித்து அக்கிராசனாதிபதி ஓட்டுக்கு விட்டதில் அக்கிராசனாதிபதியை நீக்கி விட வேண்டும் என்கிற தீர்மானம் தோல்வியுற்றது. ஆனபோதிலும் நிறைவேறின வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தீர்மானத்தை எப்படியாவது ஒழிக்க மறுபடியும் சிலர் கூடிக் கொண்டு யோசனை செய்வதாய்த் தெரியவருகிறது.

**குடி அரசு - கட்டுரை - 28.02.1926**



RangaRakes tamilnavarasam.com

## பிராமணர்களின் சங்கங்கள்

பிறவியில் உயர்வு தாழ்வு உண்டு என்பதையும், அவற்றில் பிராமணர்களாகிய தாங்கள்தான் உயர்ந்தவர்கள் என்பதையும் நிலை நிறுத்த இதுசமயம் நமது நாட்டில் ஆங்காங்கு பிராமண சங்கங்கள் இரகசியமாயும் வெளிப்படையாயும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. நமது தேசீய பிராமணர்கள் நம்மிடம் வரும்போது எல்லோரும் சமம் என்று சொல்லிக் கொண்டும், தீண்டாமை, உயர்வு - தாழ்வு இவைகளை ஒழிக்கப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டும் வோட்டுப் பெறுவதும், பிராமண சங்கங்களுக்குப் போய் தீண்டாமையையும் உயர்வு தாழ்வையும் நிலை நிறுத்த அவர்களுக்கு வழி சொல்லிக் கொடுப்பதும் அதற்கநுகூலமாய் நம்முடைய வோட்டு பலன்களை உபயோகப்படுத்துவதுமாக இருக்கிறார்கள். இவற்றை நம்மில் பலர் அறிந்தும் தங்கள் சுய நலத்தை முன்னிட்டு அறியாதவர்போல் நடித்து அவர்களுக்கு வோட்டு வாங்கிக் கொடுத்தும், பிராமண சங்கங்களை ஆதரித்தும் திரிகிறார்கள். இதை அறிய வோட்டர்களுக்கு இன்னமும் யோக்கியதை வரவில்லை என்றால் இந்த வோட்டர்களின் பிரதிநிதிகள் எப்படி நமது நாட்டுக்குப் பிரதிநிதிகளாவார்கள்?

**குடி அரசு - செய்தி விளக்கம் - 28.02.1926**



## பிராமண உபாத்தியாயர்களின் பேரில் உள்ள சந்தேகங்களுக்கு ஆதாரம்

பிப்ரவரி மாதம் 19-ந் தேதி கோயமுத்தூரில் நடந்த ஜில்லாக் கல்விச் சபைக் கூட்டத்தில் சட்டசபை மெம்பரான ஸ்ரீமான் ஆர்.வீரய்யன் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அதாவது, "அழுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் அதிகமாகப் படிப்பதற்காகப் பொதுப்பள்ளிக் கூடங்களுக்கு, தாலூகாபோர்டு, ஜில்லாபோர்டு, முனிசிபல் கவுன்சில் முதலியவற்றின் தலைவர்கள் **பிராமணரல்லாத உபாத்தியாயர்களையே நியமிக்க வேண்டும்.** இப்பொழுதுள்ள ஒரு பிராமண உபாத்தியாயர் வேறு பள்ளிக் கூடங்களுக்கு மாற்றி விட வேண்டும்" என்பதாகப் பிரேரேபித்தார். இதை ஜனாப் கலந்தர் சாயபு ஆமோதித்தார். இதை ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்ட ரமணய்யங்கார் இத்தீர்மானம் பிராமணர்களைக் குறைகூறுவதாயிருக்கிறது என்ற காரணத்தால் ஒழுங்குத் தவறென்ற ஆக்ஷேபனை கிளப்பியதில் தலைவர் இவ்வித தீர்மானம் கொண்டுவர யாருக்கும் அவகாசம் உண்டென்றும் ஒழுங்கானதுதான் என்பதாகவும் சொல்லி விட்டார். பிறகு இது வெளிப்படையாய் ஒரு வகுப்பாரைப் பாதிக்கிறது என்று சிலர் கருதியதால், கோயமுத்தூர் ஜில்லாபோர்டு பிரசிடெண்டும் - அந்நகர் முனிசிபல் சேர்மெனுமான ஸ்ரீமான் சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார் முழு தீர்மானத்திற்குமாக ஒரு திருத்தம் கொண்டு வந்தார். அதாவது, "லோகல் போர்டு, முனிசிபாலிட்டி இவைகளின் அக்கிராசனாதிபதிகள், தங்கள் அதிகாரத்தின் கீழ் உள்ள பாட சாலைக்கு அழுத்தப்பட்ட வகுப்புப்பிள்ளைகள் தாராளமாய்ச் சேர்த்துக் கொள்ளத்தக்க உபாத்தியாயர்களையே நியமிக்க இக்கல்விச் சபை சிபார்சு செய்கிறது" என்று பிரேரேபித்தார். தீர்மானம் தெளிவாயில்லாததால் ஸ்ரீமான் வீரய்யன் திருத்தத்தை ஒப்புக்கொள்ள மறுத்து விட்டதின் காரணமாய், அசல் பிரேரேபனை தோல்வியுற்றுப் போய் விட்டது. வாசகர்கள் இதிலிருந்தே கீழ்தர பள்ளிக்கூடத்திலிருந்தே தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிள்ளைகளின் படிப்புக்குப் பிராமண உபாத்தியாயர்களால் எவ்வளவு தடை இருக்கிறது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

**குடி அரசு - கட்டுரை - 28.02.1926**



RangaRakes tamilnavarasam.com

# பிராமணப் பத்திரிகைகளின் பிரசாரம்
# உஷார் ! உஷார்!! உஷார்!!!

**–சித்திரபுத்திரன்**

பொது ஜனங்கள் தேசத்தின் உண்மை நிலையை உணருவதற்கு ஆதாரமாயிருப்பது வர்த்தமானப் பத்திரிகைகள் என்று சொல்லுவார்கள். ஆனால், அவை நமது நாட்டின் உண்மை நிலையை மறைத்துப் பொய்யைச் சொல்லி பாமர ஜனங்களை ஏமாற்றி, ஒருவரைக் கெடுத்து ஒருவர் பிழைப்ப தற்குத்தான் அவை முழுவதும் ஆதாரமாயிருந்து வருகிறது. நமது நாட்டைப் பொறுத்தவரையில், பெரும்பான்மையான மக்கள் தங்கள் முன்னோர்கள் எவ்வளவு பெருமை உடையவர்களாயும், இத் தேசத்தையே ஆண்டவர் களாயும், பராக்கிரமசாலிகளாகவும் இருந்து வந்திருந்த போதிலும் இன்றையத் தினம் "பிற்பட்டவர்"களாகவும், "சூத்திரர்"களாகவும் இருப்பது ஏன்? இதற்குப் பொறுப்பாளி யார் என்று பார்த்தால் அது நமது நாட்டுப் பத்திரிகை களேயாகும்.

தற்காலம் நமது நாட்டில் செல்வாக்குப் பெற்று பெரும்பாலோர் கையிலும் ஊசலாடுவது பிராமணப் பத்திரிகைகளே அல்லவா? அப்பத் திரிகைகளுக்கு அவ்வவ்விடங்களின் சமாச்சாரங்களை எழுதியனுப்பும் நிரூபர்களும் பிராமணர்களே அல்லவா? அப் பத்திரிகைகளுக்கு ஏஜெண்டு களாயிருந்து விற்றுக் கொடுப்பவர்களும் பெரும்பாலும் பிராமணர்களே அல்லவா? அப்படி இருந்தும் அதற்குப் பணம் கொடுத்து வாங்கிப் படித்து கெட்டுப்போகிறவர்கள் பிராமணரல்லாதார்களாகவே மாத்திரம் இருக்கிறார் கள். பிராமணப் பத்திரிகைகள் இதுசமயம் நமது நாட்டில் ஒவ்வொரு பட்டிணங்களிலும், கிராமங்களிலும் பிரவேசித்திருக்கின்றது. அங்குள்ள படிக்கத் தகுந்த ஒவ்வொருவரும் அப்பத்திரிகைகளைப் படிப்பதும், அவற் றை உண்மை என்று நம்புவதும், மற்றவர்களுக்கு அவற்றை எடுத்துச் சொல்லு வதுமான வழிகளில் பிராமணப் பத்திரிகைகளின் அபிப்ராயத்தை தேச மெல்லாம் பரப்பச் செய்துவிடுகின்றன. சாதாரணமாய் நமது கிராமங்க ளிலுள்ள பாமர ஜனங்களும் "சுதேசமித்திரன்" என்னும் பிராமணப் பத்திரிகையின் அபிப்பிராயத்தைத்தான் உண்மையான ராஜீய அபிப்ராய மென்றும், அது யார் யாரைத் தலைவர் என்று சொல்லுகிறதோ அவர்களைத் தலைவர்கள் என்றும், அது யார் யாரைத் தேசத் துரோகியென்று சொல்லு கிறதோ அவர்களைத் தேசத் துரோகி என்றும், அது சொல்லுகிறபடியெல்லாம் நடப்பதும் நினைப்பதும்தான் தேச கைங்கரியமென்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபோலவே மற்றும் "சுயராஜ்யா" என்னும் ஒரு தமிழ் தினசரிப் பத்திரிகையும் பிராமணர்களால் நடத்தப்பட்டாலும் பிராமண ரல்லாதாரை ஏமாற்றுவதற்காக வேண்டி அதன் உண்மைப் பத்திராதி பர்கள் பெயரை மறைத்து பிராமணரல்லாதார் பெயரைப் போட்டு ஏமாற்றி வருகிறார் கள். உண்மையில் அதன் ஆசிரியர்கள் ஒரு ஐயங்கார் பிராமணரும் ஒரு விபூதிப் பிராமணருமாயிருக்க அது வெளியில் தெரிந்தால் அப்பத்திரிகை யைப் பிராமணப் பத்திரிகை யென்று பாமர ஜனங்கள் நினைத்து விடுவார்கள் என்று வேண்டுமென்றே மறைத்துவிட்டு, ஒத்துழையாமையில் ஈடுபட்டுத் தங்கள் உத்தியோகங்களை விட்டு கஷ்டப்பட்டதால் செல்வாக்கு ஏற்பட்டி ருக்கும் ஸ்ரீமான்கள் கிருபாநிதி, திரிகூட சுந்தரம்பிள்ளை ஆகிய இருவர் பெயர்களைக் காட்டித் தங்கள் நன்மைக்கான அபிப்ராயங்களை ஷியார்கள் அபிப்ராயமென்று நினைக்கும்படி ஜனங்களுக்குள் புகுத்தி வருகிறார்கள். இந்த பிராமணரல்லாத கனவான்களும் கொஞ்சமும் கவலையில்லாமல் இவ்வித செய்கைக்குத் தங்கள் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள்.

பெரும்பாலும் இப்பத்திரிகைகளுக்கு மூலதனம் ஏறக்குறைய முக்கால் பாகம் பிராமணரல்லாதார்களுடையதே. அதை வாங்கி வாசித்து அவர்க ளுக்கு லாபம் கொடுக்கிறவர்களும் பிராமணரல்லாதார்களே. இவ்வளவு இருந்தாலும் இப்பத்திரிகைகளைக் கண்டால் பிராமணரல்லாத தலைவர்கள் என்போர்களிலும், பத்திராதிபர்கள் என்போர்களிலும் பெரும்பாலோர் பூனையைக் கண்ட எலி போல் நடுங்குகிறார்கள். தங்கள் ஜாதகத்தையே அவர்களிடம் ஒப்படைத்து விட்டு அந்த பிராமணப் பத்திரிகைகளையே தங்களுக்கு பலன் எழுதும்படி பல்லைக் கெஞ்சிக் கொண்டு திரிகிறார்கள். மகாத்மா போன்றவர்களே இப்பிராமணப் பத்திரிகைகளைக் கண்டால் சில சமயங்களில் பயப்பட்டு சமயோசிதமாய் நடக்க வேண்டியிருக்கிற தென்றால் ஐயோ! பாவம் மற்ற ஆகாசக் கோட்டைகளைப் பற்றிச் சொல்லவும் வேண டுமா? அப்புறம் குட்டித் தலைவர்கள், தொண்டர்கள் என்போர்களைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

இம்மாதிரி ஒரு பெரிய சமூகத்தையே அதன் தலைவர்கள் என்போ ரையே இப்பத்திரிகைகள் அடக்கி ஆண்டுக்கொண்டு, தங்கள் ஆதிக் கத்தைப் பலப்படுத்திக் கொண்டு வருவதை எத்தனை நாள்களுக்குத்தான் சகித்துக் கொண்டு வருவதென நினைத்து சரியான மனிதர்கள் என்போர் யாரா வது துணிந்து இதன் தந்திரத்தை வெளிப்படுத்தக் கொஞ்சம் பிரயத்தனப் பட்டால் அவர்களை அடியோடு ஒழிக்க பிராமணப் பத்திரிகைகளும், பிராமணத் தலைவர்களும், பிராமண அதிகாரிகளும் எல்லாரும் ஒன்று சேர்ந்து விடுகிறார்கள். அந்த சமயங்களில் அய்யர் – அய்யங்கார் –



RangaRakes tamilnavarasam.com

ஆச்சாரியார் – ராவு என்கிற பேதமே இல்லாமலும் மிதவாதி – சுயராஜ்யக் கட்சி – ஒத்துழையாக் கட்சி –காந்தி சிஷ்யக் கட்சி – சர்க்கார் உத்தியோகஸ்தர் என்கிற வித்தியாசமே இல்லாமலும், ஒரே கட்டுப்பாடு – கம்பியில்லாத தந்திபோல் ஒரே அபிப்ராயம், ஆளுக்கொரு வேலை; அதாவது பத்திரிகை களில் வைவதொருவர்; பிரசங்கம் மூலம் வைவதொருவர்; பணம் கொடுத்து வையச் சொல்லுவது ஒருவர்; காந்தியிடம் சாடி சொல்லுவது ஒருவர்; சர்க்கா ருக்குக் காட்டிக் கொடுப்பது ஒருவர்; அதிகாரத்தைக் கொண்டு நசுக்குபவர் ஒருவர்; ஆக ஒவ்வொருவரும் தங்களாலானதை உடனே செய்யப் புறப்படு வதன் மூலம் எப்பேர்ப்பட்டவனையும் நடுங்கச் செய்து விடுகிறார்கள். உதாரணமாக, ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்தர முதலியார் நிலைமையைப் பார்த்தாலே இதன் உண்மை பொது ஜனங்களுக்கு நன்றாய் விளங்கும். சென்ற வருஷ மெல்லாம் சுயராஜ்யக் கட்சியை வைது கொண்டிருந்தவரும், கொஞ்ச நாளைக்கு முன்பெல்லாம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொண்டு இருந்தவரும், செல்வச் செருக்கும் செல்வாக்குப் பெருக்கும் நிலைக்காது என்று ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்காருக்கு சாபம் கொடுத்தவரும் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவம் பெற காங்கிரஸ்தான் தகுந்த இடம் என்று காஞ்சி அக்ராசனப் பிரசாரத்தில் சொன்னவரும், ஸ்ரீமான் ஈ.வெ.இராமசாமி நாயக்கர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரானபோது, ஸ்ரீமான்கள் வ.வெ.சு. அய்யர், சீனிவாசய்யங்கார் சிஷ்யர்கள் முதலியவர்கள் ஸ்ரீமான் நாயக்கர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்த காலத்தில் “ஒரு பிராமணரல் லாதாரான ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் அக்ராசனம் வகிப்பதைப் பொறுக்க மாட்டாமல் பிராமணர்கள் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்; சட்டசபையில் செய்வது போலவே இங்கும் செய்கிறீர்களா”வென்று கேட்டவருமான நமது முதலியார், இப்போது தன்னை மாரீசன் என்று சொன்னவரும், காந்தியடிகளுக்குப் புத்தியில்லை என்று சொன்னவரும், ஒத்துழையாமை சட்ட விரோதமென்று சொன்ன வருமான ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பின்னால் திரிந்து கொண்டும், அந்த ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரையே தமிழ்நாட்டுக்குத் தலைவராக்கப் பாடு பட்டுக் கொண்டும், சுயராஜ்யக் கட்சி யோக்கியமான கட்சியென்றும், அதனிடமும் அதன் தலைவரிடமும் ஒத்துழையாமை வாசனை அடிக்கின்ற தென்றும், சட்டமறுப்பு அக்கட்சியில் தொக்கியிருக்கின்றதென்றும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூடாது என்றும், முன் தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்டது கூட ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்கென்றும், காங்கிரஸில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் கேட்கக் கூடாது என்றும், சுயராஜ்யக் கட்சிக்கே வோட்டுக் கொடுங்களென்றும் சொல்லுவதானால், அதன் சக்தி எவ்வள வென்பது ஒருவர் சொல்லாமலே விளங்கும். இவ்வளவு பயமும், மாறுதலும் இப்பேர்ப்பட்டவர்களுக்கெல்லாம் வரக் காரணமென்ன? பாமர ஜனங்கள் பிராமணப் பத்திரிகைகளை வாங்கிப் படிப்பதும், பிராமணத் தலைவர்களை கொண்டாடுவதும் அவர்கள் சூழ்ச்சிகளை அறியாமலிருப்பதும், அவர்கள்



கையிலிருக்கும் அதிகாரங்களுக்குப் பயப்படுவதுமே அல்லாமல் வேறு என்ன? ஆதலால் ஆங்காங்குள்ள பிராமணரல்லாத பிரமுகர்கள் தங்கள் சமூகத்திற்கு நன்மை செய்ய வேண்டுமென்றிருந்தால், தங்கள் சமூகம் இம்மாதிரி ஏமாறியவர்கள் ஆகாமல் இருக்கவேண்டுமென்று விரும்பினால், ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு குடிசையிலும் “திராவிடன்,” “குடி அரசு” முதலியவைகள் போன்ற உண்மை உரைக்கும் பத்திரிகைகளைச் செலுத்த வேண்டும். உண்மை உரைப்பதன் மூலம் அதன் ஆசிரியர்கள் பிராமண அதிகாரத்தால் ஜெயிலுக்குப் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டா லும் தயாராய்த்தான் இருப்பார்கள். ஆதலால் வஞ்சகப் பத்திரிகைகளைப் பார்த்து மோசம் போகாமலிருக்கச் செய்யவேண்டும்.

இந்தக் காரியங்களை நீங்கள் செய்யாமலிருந்தால் வரப்போகும் சட்டசபை எலெக்ஷனில் பிராமணரல்லாதார் கண்டிப்பாய் தோற்கடிக்கப் பட்டு போவார்கள். ஸ்ரீமான்கள் டி.எம்.நாயரும், ஸர்.பி.டி. செட்டியாரும் எவ்வளவோ அரும்பாடுபட்டு பிடித்துக் கொடுத்த கோட்டையை மறுபடியும் பிராமணர்கள் சுவாதீனப்படுத்திக் கொண்டு உங்களை வெளியாக்கிவிடப் போகிறார்கள். அப்புறம் 10 வருடமோ, 100 வருடமோ கடவுளுக்குத்தான் தெரியும். வீணாய்ச் சர்க்காரை நம்பிக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. சர்க்கார் எந்தக் கை வலுக்குமோ அந்தக் கையில் சேர்ந்து விடுவார்கள். இப்பொழுதே சர்க்காருக்குப் பிராமணர்களிடத்தில் பயம் வந்து விட்டது. அவர்கள்தான் அடுத்த சட்ட சபையில் ஜெயிக்கப் போகிறார்கள் என்று எண்ணிக் கொண்டு அவர்களை இப்பொழுது இருந்தே தடவிக்கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். பிராமணரல்லாதாரே எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!!

**குடி அரசு – கட்டுரை – 28.02.1926**



RangaRakes tamilnavarasam.com

# தமிழிற்குத் துரோகமும் ஹிந்தி பாஷையின் இரகசியமும்

**– சித்திரபுத்திரன்**

நமது நாட்டின் க்ஷேமத்திற்காக என்று எந்தக் காரியம் ஆரம்பிக்கப் பட்டாலும், அவற்றை நம் நாட்டுப் பிராமணர்கள் கைப்பற்றிக் கொண்டு அதனால் தாங்கள் பிழைக்கும்படியாகவும், நமக்கு பெரிய ஆபத்து விளையும்படியாகவே செய்து விடுகிறார்கள். எதுபோலென்றால்; நமது சர்க்கார் நமக்குச் சுயராஜ்யம் கொடுப்பதாய் சொல்லி முதல் தடவை, இரண்டாந் தடவையாகக் கொடுக்கப்பட்டு வந்த சீர்திருத்தங்கள் என்பது, நமது நாட்டுக்கு அதிக வரி போடவும், ஜாதிச் சண்டைகளும், பொறாமையும் மேலிட்டு ஒருவரையொருவர் ஏமாற்றுவதன் மூலம் ஒற்றுமைக் குறைவு ஏற்படவும், கைத்தொழில்கள் அற்றுப் போய் நாளுக்கு நாம் மனச்சாக்ஷி யையும், கற்பையும் விற்று ஜீவிக்கும்படி ஏழைகள் அதிகமாகவும், அரசாங்கத் தார் உத்தேசம் நிறைவேறத்தக்க வண்ணம் நமது நாட்டுப் பணம் கொள்ளை போகவும், உபயோகப்படுவது போலவும், நமது மக்கள் படிக்க வேண்டும் என்கிற எண்ணத்தின் பேரில் சர்க்காரை பள்ளிக் கூடம் வைக்கும்படி நாம் கேட்டுக் கொள்வதினால் அந்தப்படிப்பு நம் நாட்டுக்குத் துரோகம் செய்யத் தக்க அளவுக்குச் சர்க்கார் ஆக்ஷிக்கு அனுகூலமாய் இருப்பது போலவும் ஆய்விடுகின்றது. அதுபோலவே நமது தமிழ்நாட்டில் ஹிந்தி பிரசாரமும் பெரும்பாலும் பிராமணர்களுக்கே அனுகூலத்திற்காக செய்யப்பட்டு இருக்கிறது.

மகாத்மா காந்தி அவர்கள் ராஜீய நோக்கத்தை முன்னிட்டு இந்தியா முழுதுக்கும் ஒரே பாஷையாயிருக்கவேண்டும் என்கிற கருத்துக்கொண்டு ஹிந்தி பாஷைக்காகப் பொதுமக்கள் பணத்தைச் செலவு செய்தும், பொது ஜனங்களும் மகாத்மா சொல்லுகின்றாரே என்கிற பக்தியின் பேரிலும் நம்பி, அதை அமுலுக்குக் கொண்டு வந்ததின் பலன் அதுவும் ஒரு வினையாய் முடிந்து வருகிறது.

இதுவரை ஹிந்திக்காகச் செலவாயிருக்கும் பணத்தில் பெரும்பாகம் பிராமணரல்லாதாருடையது என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்காது. ஹிந்தி படித்தவர்களில் 100-க்கு 97 பேர் பிராமணர்களாகவே இருக்கிறார்கள். தமிழ்நாட்டின் மொத்தத் தொகையில் 100-க்கு 97 பேர் பிராமணரல்லாதாராய்



இருந்தும் 100-க்கு மூன்று வீதம் உள்ள பிராமணர்கள்தான் ஹிந்தி படித்தவர்களில் 100 – க்கு 97 பேர்களாயிருக்கின்றார்கள். பிராமணரல்லாதார் 100 – க்கு 3 பேராவது ஹிந்தி படித்திருப்பார்களோ வென்பது சந்தேகம். இந்த படிப்பின் எண்ணிக்கை எப்படி இருந்தாலும், நமக்கு அதைப்பற்றி அதிகக் கவலை ஒன்றும் இல்லை. ஆனால் இதில் 100-ல் ஒரு பங்கு கவலைகூட தமிழ் பாஷைக்கு எடுத்துக் கொள்ளுவதில்லை என்பதையும் ஹிந்தி படித்த பிராமணர்களால் நமக்கு ஏற்படும் கெடுதியையும் நினைக்கும்போது, இதைப் பற்றி வருந்தாமலும், இம்மாதிரி பலன் தரத்தக்க ஹிந்திக்கு நாம் பாடுபட்ட முட்டாள் தனத்திற்கும், நாம் பணம் கொடுத்த பயித்தியக்காரத்தனத்திற்கும் வெட்கப்படாமலிருக்க முடியவில்லை. இந்த ஹிந்தி பாஷையானது, நம் பணத்தில் – நம் பிரயத்தனத்தில் – நமது நாட்டில் பல பிராமணர்கள் படித்து வெளி மாகாணங்களுக்குப் போய், ஆங்காங்கு நமக்கு விரோதமாய் பிரசாரம் செய்வதும், நம்மை சூத்திரர்கள், புத்தி இல்லாதவர்கள், முட்டாள்கள் என்றும், தென்னாட்டுப்பிராமணரல்லாதாருக்கு மூளை இல்லை என்றும் சொல்லுவதும், வெளி மாகாணங்களில் உள்ள வர்த்தமான பத்திரிகைகளில் போய் அமர்ந்து கொண்டு பிராமணாதிக்கத்தை தேசமெல்லாம் நிலை நிறுத்தவும், பிராமணரல் லாதாரை அமுக்தப் பிரசாரம் செய்யவும், வெளிமாகாண காங்கிரஸ் முதலிய பொது ஸ்தாபனங்களிலும் இவர்களே தலைவர்களாகவும், அவற்றில் மாதம் 100, 200, 300 வீதம் சம்பளம் பெற்றுப் பிழைப்பதுமான காரியத்திற்கல்லாமல், வேறு வழியில் நமக்கு ஒரு பலனையும் அளிப்பதில்லை. இவ்விஷயத்தைப் பற்றி முன் ஒரு சமயம், ஹிந்தி பிரசாரத்திற்காக நம்மிடம் பணம் பறிக்க நமது பிராமணர்களால் வெளி மாகாணத்திலிருந்து தருவிக்கப்பட்ட ஸ்ரீமான் புருஷோத்தம தாஸ் தாண்டன் என்பவரை நேரில் கண்டு, இவ்விஷயத்தை அவரிடம் ஒருவர் நேரில் தெரிவித்ததில்-அதாவது பணம் மாத்திரம் பிராமணரல்லாதாரிடம் வசூல் செய்கிறீர்களே; இது வரையில் ஹிந்தி படித்த பிள்ளைகள் எல்லாம் 100 – க்கு 95 பிராமணப் பிள்ளைகளேதான் படித்திருக் கின்றன; அதன் உபாத்தியாயர்களும் 100 – க்கு 97 பேர் பிராமணர்களா கவேதான் இருக்கின்றார்கள். இதன் காரணமென்ன? சில பிராமணரல்லாத வாலிபர்கள் உபாத்தியாயர்களாகப் பயிற்சி பெற இஷ்டப்பட்டு வந்தவர் களையும், சரியாய் நடத்தாமல் வெளியேற்றப்பட்டதாகவும் என்னிடம் புகார்கள் வந்து கொண்டிருக்கின்ற இந்நிலையில் இதற்காக பிராமணரல்லா தாரை ஹிந்திக்குப் பணம் கேட்பது சரியா என்று சொன்னதற்கு, இவ்வள வையும் கேட்டுக்கொண்டு எல்லாவற்றையும் விசாரித்து தெரியப்படுத்து வதாய் சொல்லிப் போனவர் இதுவரை ஒரு சங்கதியும் தெரிவிக்கவில்லை. அல்லாமலும் முன்போலவே காரியங்கள் மாத்திரம் நடந்து வருகின்றது. இதே மாதிரி நமது நாட்டுப் பிராமணர்கள், இந் நாட்டாரைத் தங்களால் ஏய்க்க முடியாது என்று தெரிகிற சமயத்தில் வெளி மாகாணத்தில் இருந்து ஒருவரைக் கூட்டி வந்து ஏமாற்றி தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வது வழக்கமாக இருந்து வருகின்றது.



RangaRakes tamilnavarasam.com

உதாரணமாக, சுயராஜ்யக் கட்சி என்கிற பிராமணக் கட்சிக்கு நமது நாட்டில் யோக்கியதை இல்லாத காலத்தில், ஸ்ரீமான் தேசபந்து தாஸைக் கூட்டி வந்து செல்வாக்கு சம்பாதித்துக் கொண்டார்கள். இந்து மகாசபை என்கிற பிராமண வர்ணாசிரம தர்ம சபைக்கு நமது நாட்டில் யோக்கியதை சம்பா திக்க, ஸ்ரீமான் லாலா லஜபதிராயைக் கூட்டி வந்து ஏமாற்றினார்கள். காக்கி நாடா காங்கிரஸில் சட்டசபைப் பிரவேசத்திற்கு ஆதரவு கொடுத்ததால் தனக்குக் கொஞ்சம் செல்வாக்கு குறைந்து போய்விட்டதெனப் பயந்த பிராமணர் ஒருவர் ஸ்ரீமான்கள் பஜாஜையும், பாங்கரையும் தருவித்து ஊர் ஊராய்த் திரிந்து, உபசாரப் பத்திரம் பெற்று, ஜனங்களை ஏமாற்றி யோக்கிய தையை நிலை நிறுத்தினார். இனி மகாத்மாவையும் கூட்டி வந்து ஏமாற்றப் போகிறார். இம்மாதிரியாகவே இது சமயமும், ஹிந்தியை பொதுபாஷை ஆக்க வேண் டும் என்கிற கவலை உள்ளவர்கள் போல் தேசத்தின் பேரால் ஆங்காங்கு பல பிராமணர்கள் பேசுவதும், அதைச் சர்க்கார் பள்ளிக்கூடம் முதலிய இடங் களில் கட்டாயப் பாடமாக்கப் பிரயத்தனப்படுவதும் யார் நன் மைக்கு? இனி கொஞ்ச காலத்துக்குள் ஹிந்திப் பிரசாரத்தின் பலனை அநுபவிக்கப் போகி றோம். பிராமணரல்லாதாருக்கு ஏற்பட்ட பல ஆபத்துகளில் ஹிந்தியும் ஒன் றாய் முடியும் போலிருக்கிறது. பொதுவாய் ஹிந்தி என்பது வெளி மாகாணங் களில் பிராமண மத பிரசாரம் செய்ய தர்ப்பித்து செய்யும் வித்தையாய் விட்டது. இந்த இரகசியத்தை நமது நாட்டுப் பாமர ஜனங்கள் அறிவதே யில்லை. இரண்டொருவருக்கு அதன் இரகசியம் தெரிந்தாலும், பிராமணர் களுக்குப் பயந்துக் கொண்டு தாங்களும் ஒத்துப் பாடிவிடுகின்றனர். யாராவது துணிந்து வெளியில் சொன்னால் இவர்களைத் தேசத் துரோகி என்று சொல்லி விடுகிறார்கள்.

## சமஸ்கிருதம்

இதல்லாமல், நமது நாட்டில் சமஸ்கிருத பாஷைக்காக எவ்வளவு லக்ஷம் ரூபாய் செலவாகிறது! அது அவ்வளவும் யாருடைய பணம்? சமஸ்கிருதத்திற்கென்று தனியாய், எவ்வளவோ பள்ளிக் கூடங்கள் இருக்கின் றன. இதில் படிக்கிறவர்கள் எல்லாம் யார்? இதன் உபாத்தியாயர்கள் யார்? பிராமணரல்லாத உபாத்தியாயரையாவது, பிராமணரல்லாத பிள்ளைகளையா வது இதில் சேர்த்துக் கொள்ளுகின்றார்களா? அரசாங்கத்திலாவது சமஸ்கிரு தத்திற்கு இருக்கின்ற யோக்கியதை தமிழுக்கு இருக்கிறதா? இச் சமஸ்கிரு தம் பிராமணரல்லாதார் - தாழ்ந்தவர்கள் - சூத்திரர் - பிறப்பட்டவர்- அடிமைகள் என்பதற்கு ஆதாரமாயிருக்கின்றதே தவிர வேறு எதற்காவது - நாட்டிற்காவதுஉபயோகப்படுகிறதா?

## தமிழ்

ஹிந்தியும், சமஸ்கிருதமும் இப்படியிருக்கத் தமிழைப் பற்றியோ



வென்றால், தமிழ்நாட்டில் தமிழுக்கென்று தனியாய் எத்தனைப் பள்ளிக்கூடம் இருக்கிறது. சமஸ்கிருதத்திற்கு இருக்கும் பள்ளிக்கூடம் அளவில் நாலில் ஒரு பங்காவது இருக்கிறதா? பிராமணரல்லாத தமிழ் வித்துவான்கள் பேராவது பொது ஜனங்களுக்குத் தெரியக் கூடியதாய் இருக்கிறதா? பிரம்மஸ்ரீ உ.வெ. சாமிநாதய்யர், ஸ்ரீலஸ்ரீ. ராகவய்யங்கார் இன்னும் ஸ்ரீ, ஸ்ரீ, ஸ்ரீ, அய்யர், ஐயங்கார், ஆச்சாரியார், ராவு, சர்மா என்று பிராமணர்கள் பெயர்தான் தமிழ் வித்துவான்கள் லிஸ்டிலும் அடிபடுகிறதேயல்லாமல் பிராமணரல்லாதார் பெயர் தெரிகிறதா? இந்த பிராமணர்கள்தான் பழைய தமிழ்க் காவியங்களின் ஏட்டுப் பிரதிகளைப் பிராமணரல்லாதாரிடம் இருந்து வாங்கி, அதை தங்கள் பிராமண மதத்திற்குத் தகுந்தபடி மொழி பெயர்த்துக் கொண்டு, அதை அச்சடிக்கப் பிராமணரல்லாதாரிடமே யாசகமாய்ப் பணம் வாங்கி, அச்சுப் போட்டு, புஸ்தகம் 1 -க்கு 10, 15 ரூபாய் என்று விற்றுக் கொள்ளை அடித்து லக்ஷக் கணக்காகப் பணம் சேர்த்துக் கொள்ளுகின்றார்கள். நிற்க, சர்க்காரில் தமிழுக்கு ஏதோ பெரிய யோக்யதை கொடுப்பது போல் வேஷம் போட்டு ஒரு தமிழ் அகராதி எழுதக் கமிட்டி ஏற்படுத்தினார்கள். அதில் (தமிழுக்கு வார்த்தைகள் கண்டுபிடித்து அர்த்தமெழுதத் தமிழ் படித்த தமிழர்- பிராமண ரல்லாத புலவர்களும், பண்டிதர்களும் எத்தனையோ பெயர் இருக்க அக் கமிட்டிக்கு ) நமது சார்பாய் பிராமணர்களே அங்கத்தினர்களாய் நியமிக்கப் பட்டு இருக்கிறார்கள். இதற்காக லக்ஷக்கணக்கான நம் ரூபாய்களை வருஷக் கணக்காய்த் தின்று கொண்டிருக்கிறார்கள். இந்த பிராமணர்களால் ஏற்பட்ட தமிழ் தான் - தமிழ் அகராதிதான்- தமிழ்நாட்டிற்கு தமிழாய் - தமிழுக்கு ஆதாரமாய் விளங்கப் போகிறது.

இது இப்படியிருக்க, மதுரையம்பதியில் தமிழ்ச்சங்கமென்று ஒரு சங்கமிருக்கிறது. ஆண்டவனே! இதன் கதை வெளியில் சொன்னால் வெட்கக் கேடு. இது பிராமணரல்லாதாரின் பயித்தியக்காரத்தனத்தையும் முட்டாள் தனத்தையும் நிலை நிறுத்தக் கல்லின் மேல் எழுத்துக்கு நேராயிருக் கிறது. அங்குள்ள தமிழ் பரீக்ஷை அதிகாரிகளும், தமிழ்ச் சங்கத்திற்கு வருஷாந்திரப் பிரசிடெண்டுகளும் 100 - க்கு 90 பேர் பிராமணர்கள். அதிலும் "வீடு பிரித்துப் போட்டிருக்கிறது" என்று சொல்லுவதற்கு "வீடு அவுத்துப் போட்டிருக்கிறது" என்று பேசும் படியான பிராமணர்களை அக்கிராசனராகத் தெரிந்தெடுப்பதும் இச்சங்கத்திற்கு நற்சாக்ஷிப் பத்திரங்களாகும். சமஸ்கிருதச் சங்கத்தில் எங்காவது பிராமணரல்லாதார் பரீக்ஷை அதிகாரியாய் இல்லாவிட்டாலும், அங்கத்தினர்களாகவாவது சேர்த்துக் கொள்ளப்படுகிறதா? இப்பொழுது எங்கேயோ தமிழ் காலேஜ் என்று ஒன்று ஏற்படுத்தி இருக்கின்றார்களாம். அதன் அதிகாரிகளும், படிக்கும் பிள்ளைகளும், அளவுக்கு மிஞ்சி பிராமணர்களே. அதன் செலவுக்கு மாத்திரம் பணம் பிராமணரல்லாதாருடை யது. நமது பிள்ளைகளின் படிப்புக்கு அரசாங்கத்தினர் மூலமாய்த் தமிழ்ப் புஸ்தகம் எழுதிக் கொடுப்பவர்களும் பெரும்பாலும் பிராமணர்களே. அவர் கள் தமிழ்ப் புஸ்தகம் என்று பெயர் வைத்து அப்புஸ்தகத்தில் முக்கால் பாகம்



RangaRakes tamilnavarasam.com

சமஸ்கிருத வார்த்தைகளையே நிரப்பி பிராமண வர்ணாசிரமத்தைப் பலப்படுத்துவதான விஷயங்களை நமது சிறு பிள்ளைகளுக்கும் இரத்தத்தில் கலரும்படியான கதைகளையும், வாசகங்களையுமே எழுதிப் பணமும் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள்.

நம்மில் யாராவது, “தமிழ்ப் புஸ்தகம் என்பது சுத்த தமிழில் எழுத வேண்டாமா? அவற்றிற்கு ஏற்ற தமிழ் வார்த்தைகள் இல்லையா? நமது தமிழ் நாட்டின் பழக்க வழக்கம், நாகரீகம் அதில் இருக்க வேண்டாமா?” என்று கேட்டால் நம்மவர்களுக்குள்ளாகவே பாஷாபிமானம், பாஷாபிமானம் என்று பேசி நம்மை ஏமாற்றுபவரும் பிராமண சிஷ்யர்களுமான சிலர் உடனே பிராமணர்களுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு சமஸ்கிருத வார்த்தைகள் தமிழில் கலந்தால் தமிழுக்கு யோக்கியதை குறைந்து போகாது; அப்படிக் கலருவதுதான் பாஷையின் முன்னேற்றம்; பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினால் என்று சமாதானம் சொல்லுவதோடு இதிலும் ஜாதித் துவேஷம் என்கிறார்கள். அப்படியானால் தமிழ் வார்த்தைகளோடு அடிக்கடி இங்கிலீஷ் முதலிய பாஷை சொற்களை கலந்து பேசுவதில் - எழுதுவதில் என்ன குற்றம்?

நமது வீட்டுப் பெண்களிடம் “நாம் தண்ணீர் கொண்டு வா” என்று சொல்லுவதற்குப் பதிலாக, நம்மால் சரியான உச்சரிப்பை உச்சரிக்கவும், தமிழில் எழுதவும், பழக்கமும், சௌகரியமும் இல்லாத சமஸ்கிருத வார்த்தையாகிய “ஜலம் கொண்டுவா, ஜலம் கொண்டுவா” என்று சொல்லுவது குற்றமில்லையானால், அதற்குப் பதிலாக “வாட்டர் கொண்டு வா” என்று ஆங்கிலச் சொல் சொல்லுவதில் தப்பென்ன? தனித்தமிழ் என்கிற பதத்திற்கும், பாஷாபிமானம் என்கிற பதத்திற்கும் பொருள்தான் என்ன? இம்மாதிரி பாஷாபிமானத்திலிருந்தே இவர்களது தேசாபிமானத்தின் யோக்கியதையையும் அறிந்துக் கொள்ளலாம். பழையன கழிந்து புதியன புகுவதாயிருந்தால் நமக்குக் கவலை இல்லை; புதியவை வந்து பலாத்காரத்தில் புகுந்துக்கொண்டு பழையவைகளைக் கழுத்தைப் பிடித்து தள்ளுவதனால் அதையும் சகித்துக் கொண்டு அதற்கு வக்காலத்துப் பேசுவது என்பது பாஷைத் துரோகமும் சமூகத் துரோகமும் ஆவதோடல்லாமல், தமிழ்த்தாயின் கற்பை, தமிழ்த் துரோகிகளுக்கு சுயநலத்திற்காக விற்றவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இம்மாதிரியே மற்றும் நமது அரசியல், மதம், பாஷை, கல்வி, ஆசாரம் , நாகரீகம் முதலியவைகளில் பிராமணர்கள் எவ்வளவு தூரம் ஆதிக்கம் பெற்று இருக்கிறார்கள் என்பதும், அவ்வாதிக்கத்திற்கு நம்மவர்களிலேயே எவ்வளவு பேர் நம்மைக் காட்டிக் கொடுத்துக் கொண்டு வாழ்கிறார்கள் என்பதும், ஒவ்வொரு பிராமணரல்லாதாரும் சுயநலத்தை விட்டு நடுநிலைமையிலிருந்து யோசிப்பார்களானால் விளங்காமற் போகாது.

**குடி அரசு - கட்டுரை - 07.03.1926**



# பாதிரிமார்களும் ஆச்சாரியார்களும்

நம் நாட்டு இந்து ஜனங்களுக்கு பாதிரிமார்களென்றால் ஒரு வித பக்தியும் மரியாதையும் அவர்களிடம் ஏற்பட்டு இருக்கிறது. அவர்கள் இரகசியத்தை நமது மக்கள் உணரவே முடியாமல் போய் விடுகிறது. பொதுவாக பாதிரிமார்கள் என்போர் ஆங்கில அரசாங்கத்திற்கு ஒரு நடுத் தூண் போன்றவர்கள். சுருக்கமாய் ஒரு வார்த்தையில் சொல்லுவதானால் அரசாங்கத் திற்கும், இந்தியக் குடி மக்களுக்கும் இடையில் உள்ள ஒற்றர்கள் என்றுதான் அவர்களைச் சொல்லவேண்டும். அப்பாதிரிமார்களிலேயும் உண்மையாய் கிருஸ்துநாதருடைய கட்டளைப்படி நடக்கக் கூடியவர்களோ, நடக்க வேண்டும் என்கிற ஆசையுள்ளவர்களோ சிலர் இருக்கலாம். நாம் நமது கண்ணுக்குத் தென்பட்ட அளவுக்கு பெரும்பான்மையானவர்களைப் பற்றி நமது அபிப்ராயத்தை எழுதுவோம். ஒரு தேசத்தையோ ஒரு மதத்தையோ ஜெயித்துக் கைப்பற்ற வேண்டுமானால், எப்படி திருடன் ஒரு வீட்டில் திருடுவதானால் கன்னம் வைத்து துவாரம் செய்துகொண்டு முதலில் தன் காலை விட்டு பார்ப்பானோ அதுபோல் பாதிரிமார்களை, அதாவது மதக் குருக்கள் என்பவர்களை முதலில் அனுப்புவது என்பது ஒருவித தந்திரம். உதாரணமாக, நமது நாட்டில் பிராமணர்கள் எப்படி தங்கள் மதத்தைக் காக்க -பரப்ப- தங்களுக்குள்ளாகவே ஒருவரை லோககுரு என்றும், ஆச்சாரியார் என்றும், மடாதிபதிகள் என்றும், மகந்துகள் என்றும் சொல்லிக் கொண்டு அவர்களுக்கு மற்றவர்கள் பார்த்து பயந்து பக்தி கொள்ளும் வண்ணம் அணிவிடை பணிவிடைகள் செய்வதும் கை வாய் பொத்திப் பேசுவதும், சுவாமிகள், சுவாமிகள் என்று கூப்பிடுவதும், அடியேன், அடியேன் என்று சொல்லிக் கொள்ளுவதுமான தந்திரங்களைச் செய்து தங்கள் மதப் பிரசாரம் செய்து (மதப் பிரசாரம் என்பது பிராமணர்கள் உயர்ந்தவர்கள் என்றும், தன்னைத் தவிர மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் படும்படியான மனப்பான்மையை உண்டாக்கி விடுவது) தங்கள் உயர் வாழ்க்கையை நிலைநிறுத்த ஆக்கந் தேடிக் கொள்ளுகிறார்களோ, அதுபோல் ஐரோப்பியர்களும் தங்களுக்குள் ஒருவரை மதக்குரு என்பதாக பேர் வைத்து நமது நாட்டுக்கு அனுப்புவதும், அவர் நமது நாட்டின் இரகசியங்களையும் இங்குள்ள ஜனங்களின் யோக்கியதைகளையும் அறிய மதப் பிரசாரம் செய்வதுபோல் ஏழை மக்களிடையும் பாமர மக்களிடையும் இடம் பொருள், ஏவல் என்கிற சவுகரியங்களால் திரிந்து பழகி அவர்களை தங்கள் மதத்திலும் சேர்த்துக் கொண்டு, தங்கள் சுவாதீனமும் செய்து கொண்டு நம் நாட்டு இரகசியங்களை அறிந்து, பிறகு



RangaRakes tamilnavarasam.com

நாட்டையே சுவாதீனப் படுத்திக்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் செய்வது மாயிருக்கிறது. இந்தப் பாதிரிகள் பெரும்பாலும் நமது குருக்களைப் போலவே பார்வைக்கு கண்ணை மூடிக் கொண்டு, ஜபம் செய்பவர்களா யிருந்தாலும், அந்தரங்கத்தில் இவர்களும் அவர்களைப் போலவே பெரிய ராஜதந்திரிகளாய்த்தான் இருப்பார்கள். (ராஜதந்திரம் என்றால்தான் தெரியுமே! அதாவது, பொய் சொல்லலாம்; உள் ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசலாம்; மோசம் செய்யலாம். நம்பிக்கைத் துரோகம் செய்யலாம்; அதாவது ஒரு காரியத்தைச் சாதிக்க வேண்டுமானால் எதையும் இன்னும் என்ன வேண்டு மானாலும் செய்யலாம். ஆனால், இதற்கு ஒரு விலக்குண்டு. அதாவது இவ்வளவும் தனது சுயநலத்திற்காகச் செய்யக்கூடாது; பொது நன்மைக்காக என்று செய்யலாம்; என்றும் இதற்காதாரமாகவும் "பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த நன்மை பயக்கு மெனில்" என்கிற குறளையும் சொல்லி விடுவார்கள். இதை நமது லோகமான்யர்களில் அநேகர் ஒப்புக் கொண்டாலும் நமது ராஜீயவாதிகளில் 100 - க்கு 99 முக்கால் பேர் ஒப்புக்கொண்டாலும் - காரியத்தில் செய்து வந்தாலும் மகாத்மா காந்தியடிகள் மாத்திரம் இதைக் கண்டிப்பாய் ஒப்புக்கொள்வது இல்லை. இம்மாதிரி ராஜ தந்திரத்தில் அவருக்கு நம்பிக்கையுமில்லை என்றுதான் சொல்வார்கள். ஆனால் தாக்ஷண் யத்தாலும், வாத்சல்லியத்தாலும், கருணையினாலும் சில சமயங்களில் ஏமாந்து போய்விடுகிறார் என்று பலர் சந்தேகப்பட சொல்லிக் கொள்ளக் கூடும். ஆனால் அவரது சிஷ்யர்கள் வெகு பேருக்கு ராஜதந்திரத்தில் நம்பிக்கையுண்டு.)

ஒவ்வொரு ஊரிலும் பிராமணர்கள் எப்படி கக்ஷி, பிரதி கக்ஷி உண்டாக்கி ஆளைத்தூக்கி ஆள்மேல் போட்டு ஒரு கக்ஷியில் தாங்கள் சேர்ந்துக் கொண்டு பீசில்லாமல் பேசுவதும், விலையில்லாமல் கூட தீர்ப்புக் கொடுப்பதுமாயிருக்கிறார்களோ, அது போலவே ஆங்காங்கு உள்ள பாதிரி மார்களும், தங்களுக்கு அநுகூலமாக ஒரு கக்ஷியில் சேர்ந்துக் கொள்ளு வதும், வழியில்லா வழியில் அவர்களது அக்கிரமங்களுக்கு அநுகூலம் செய்வதுமான காரியங்களால் தங்கள் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளுகிறார்கள். ராஜீய விஷயங்களிலும் யார் பேரைச் சொன்னால் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்கிற எண்ணத்தை வைத்துக் கொண்டு, எப்படி நமது பிராமணர்களில் பலர் இரவும் பகலும் உள்ளத்தில் மகாத்மாவை திட்டிக் கொண்டிருந் தாலும் அவர்கள் கொள்கைகளை அழிக்க பிரயத்தனப்பட்டாலும் வெளியில், அவர் பேரைச் சொல்லிக் கொண்டு தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்ளுகிறார்களோ அது போலும் ஒத்து ழையாமைத் தத்துவத்திற்கு யோக்கியதை இருக்கிற காலத்தில் மனதில் ஒத்துழைத்து பதவியும் பணமும் சம்பாதிக்க ஆசை இருந்தாலும், ஒத்துழை யாமையின் பெயரைச் சொல்லிக் கொண்டு, எப்படி தங்கள் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறார்களோ, அது போலவே இப்பாதிரிமார்களும் மகாத்மாவின் கொள்கை உண்மையில் தங்கள் உத்தேசத்திற்கு



விரோதமாயிருந்தாலும், மகாத்மா பெயரைச் சொல்லிக் கொண்டு தங்கள் காரியத்திற்கு ஆக்கம் தேடுவதும், சுயராஜ்யக் கக்ஷியில் உள்ள புரட்டுகளும் பித்தலாட்டங்களும் அதை நடத்துவோரின் நாணயக் குறைவுகளும் தங்களுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தாலும், இக்கக்ஷிக்கு யோக்கியதை ஏற் பட்டால் தங்கள் காரியங்களை தாராளமாய் நடத்தலாம் என்றும், இக்கக்ஷியின் பலனால் தங்கள் நாட்டுக்கும் தங்கள் கவர்ன்மெண்ட்டுக்கும் நிம்மதி ஏற்பட்டு தாராளமாய் தங்கள் காரியம் நடந்தேறுமென்பதையும் மனதில் வைத்துக் கொண்டு அக்கக்ஷியையும் கக்ஷியாளர்களையும் பாராட்டுவதும் அநு போகத்தில் பார்த்து வருகிறோம். அப்படிக்கில்லாமல் இருந்தால் அஹிம்சை, சத்தியம் முதலியது கொண்ட ஒத்துழையாமையைப் பற்றி குற்றம் சொல்லி இந்தியர்களுக்கு புத்தியில்லை என்று சொன்ன பாதிரிகள், பொய்யும் புரட்டும் மோசமும் கொண்ட சுயராஜ்யக் கக்ஷி ஏற்பட்ட பிறகு இப்போதுதான் இந்தி யர்களுக்கு புத்தி வந்திருக்கிறது என்று சொல்லுவார்களா? ஆதரிப்பார் களா? என்பதை நுட்பமாய் கவனிப்பவர்களுக்குத் தெரியாமற் போகாது. இந்தியர் களுக்கு சுவாமியார், குரு, சன்யாசி, துறவி என்கிற பதங்கள் மிகுதியும் மரியாதை செய்யத்தக்கதாகி விட்டதால், நம்மை ஏய்க்க வேண்டியவர்கள் இந்த வேஷத்தைப் போட்டுக்கொண்டு நம்மை ஏய்த்துத் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுகின்றார்கள். அப்படிக்கில்லாம லிருக்கும் பக்ஷத்தில் நம்மை ஏமாற்றி நம்மை இழிவுபடுத்தி நமது இரத்தத்தை உறிஞ்ச வந்த பாதிரி மார்களுக்கும், சங்கராச்சாரியார்களுக்கும், லோக குருக்களுக்கும், மடாதிபதி களுக்கும், மகந்துகளுக்கும் நாம் இவ்வளவு குருட்டு பக்தி வைப்போமா?

**குடி அரசு - கட்டுரை - 07.03.1926**



RangaRakes tamilnavarasam.com

## இந்து மகாசபையின் உண்மை நிறம்!

### சிரத்தானந்தரே அறிந்து விலகிக் கொண்டார்

நமது நாட்டில் இந்து மகாசபை என்னும் பேரால் ஒரு பிராமண வர்ணாஸ்ரம சபை ஏற்பட்டிருப்பதைப்பற்றி நாம் பல முறை – அது, இந்தியாவை அந்நியருக்கு காட்டிக் கொடுப்பதற்கு ஆதரவாயிருந்த – இருக்கிற பிராமண வர்ணாஸ்ரமத்தை நிலை நிறுத்தவும், இந்துக்களும், முஸ்லீம்களும் ஒன்றுபட முடியாதபடி மத்தியில் ஒரு தடைக்கல்லாயிருக்கவும் (ஏனென்றால் இந்துக்களும், முஸ்லீம்களும் ஒன்றாய் விட்டால் சர்க்காரை விட வர்ணாஸ்ரமிகளுக்கு பெரிய ஆபத்து ) ஏற்பட்டதென்றும்; பிராமண சூழ்ச்சிகள் பலவற்றில் இதொன்று எனவும் பேசியும், எழுதியும் வந்திருக்கிறோம். அதற்கு ஆதாரமாகவும் தமிழ் நாட்டிலுள்ள இந்து மகாசபைக்கு வடிகட்டின வர்ணாஸ்ரமியான ஸ்ரீமான் T.R. ராமச்சந்திரய்யர் அக்கிராசனராயிருப்பதும்; ஒரு வேளை சாப்பாடு ஒரு பிராமணக் குழந்தை சாப்பிடுவதை ஒரு பிராமணரல்லாத குழந்தை பார்த்து விட்டால் ஒரு மாதம் பட்டினிக் கிடப்பேன் என்று சொன்ன ஸ்ரீமான் M.K. ஆச்சாரியார் முதலியோர் முக்கியஸ்தர்களாகவும் இருப்பதோடல்லாமல், தமிழ் நாட்டிலுள்ள கிளை இந்து மகாசபைகள் இரண்டொன்றில் தீண்டாமையை ஒழிப்பது தப்பு என்றும், இது விஷயத்தில் பிராமணர்கள் முயற்சியாயிருந்து அதை எதிர்க்க வேண்டும் என்றும், தீர்மானித்திருப்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறோம். அல்லாமலும் அதன் அதிமுக்கியஸ்தர்களில் முக்கியஸ்தரான ஸ்ரீமான் பண்டித மாளவியா அவர்கள் இந்து மகாசபையில் பேசும்போது, தீண்டாமை ஒழிய வேண்டும் என்று பேசுவதும், வர்ணாஸ்ரம பரிபாலன சபையிலிருக்கும் போது தீண்டாமையை ஒழிக்கக் கூடாது என்கிற தீர்மானங்கள் நிறைவேற்றுவதுமாயிருக்கிற தந்திரங்களையும், தீண்டாதாருக்கு மிக உருக்கமாய்ப் பரிந்து பேசுவது போல் சிற்சில சமயங்களில் மாய்மாலக் கண்ணீர் விடுவதையும் எடுத்துக் காட்டியிருக்கிறோம். இந்து மகாசபையின் தந்திரத்தை அறிய இவ்வளவும் போதாது என்று சொல்லுகிறவர்களுக்கு மறுபடியும் ஆதாரங்கள் காட்டவும், பண்டித மாளவியா அவர்களின் உள் கருத்தையும், உண்மை நிறத்தையும், ஆசார திருத்தத்தில் அவருக்குள்ள கவலையின் நிலைமையையும் வெளியார் அறிய சமீபத்தில் மற்றொரு சம்பவமும் நடந்திருக்கிறது. அதாவது, இந்து மகாசபையின் ஒரு கூட்டத்தில் விதவைகள் புனர்விவாகம் செய்து கொள்ளலாம் என்பதாக ஒரு தீர்மானம் ஏகமானதாய் ஒரு பெரிய விஷயாலோசனைக்



கமிட்டியில் நிறைவேறிற்றாம். இது விஷயத்தைப் பண்டித மாளவியா கேள்விப்பட்டதும் இவ்விஷயம் மகாநாட்டுக்கு கொண்டு வரப்பட்டால் மகாநாட்டுப் பந்தலைக்கூட நான் எட்டிப் பார்க்க மாட்டேன் என்று சொல்லி விட்டார். இதை அறிந்த சுவாமி சிரத்தாநந்தர் உடனே இந்து மகாசபை நிர்வாகத்திலிருந்து விலகிக் கொண்டார். ஆதலால், இந்து மகாசபை வர்ணாஸ்ரமசபை என்பதற்கும், ஆசார திருத்தக்காரர்களை ஏமாற்ற ஏற்பட்டதென்பதற்கும் இவற்றை விட இன்னும் என்ன ஆதாரங்கள் வேண்டுமோ நமக்குத் தெரியவில்லை. இவ்வளவையும் அறிந்து நம்மவரில் சிலர் வேண்டுமென்றே இந்து மகாசபை, இந்துக்கள் என்போர்கள் எல்லோருக்கும் பொதுவானது, பொதுவானது; என்று சொல்லுவார்களானால் அதற்கு நாம் என்ன செய்யலாம்? உண்மையில் தூங்குகிறவர்களைத் தட்டி எழுப்பலாம்; ஞாபகத்துடனேயே வேண்டுமென்றே கண்ணை மூடிக்கொண்டு தூங்குவது போல் படுத்திருப்பவர்களை எப்படி எழுப்புவது? தடி கொண்டு தான் தட்ட வேண்டும்.

**குடி அரசு – கட்டுரை – 07.03.1926**



RangaRakes tamilnavarasam.com

# சக்கரை என் நண்பரல்ல

## ( நன்றி கெட்ட தன்மை )

சென்னை கார்பொரேஷன் தேர்தலின் போது சென்னை கார்பொரே ஷனை பிராமணக் கார்பொரேஷனாக்க ஸ்ரீமான்கள் சக்கரை செட்டியாரும், ஆதிகேசவ நாயக்கரும், பிராமணரல்லாதார் பலரும் அரும்பாடு பட்டார்கள்; தங்கள் வகுப்பாரை வைதார்கள்; தேசத் துரோகி என்றார்கள்; சமூகத் துரோகி என்றார்கள்; இன்னும் ஒரு மயிர்க்காலுக்கு ஒரு பொய்யும் சொல்லி பாமர ஜனங்களை ஏமாற்றி பிராமண கார்பொரேஷன் ஆக்கினார்கள். பிறகு, இவர்கள் கதி என்ன ஆயிற்று? ஸ்ரீமான் ஆதிகேசவ நாயக்கரைப்பற்றி எங்கு தேடிப் பார்த்தாலும் ஆசாமி இருக்கிற இடமே தெரியாமல் ஒழித்து விட்டார் கள். ஸ்ரீமான் சக்கரை செட்டியாரைப் பற்றியோவென்றால் நினைப்பதற்கே மயிர் கூச்சல் எடுக்கிறது. அதாவது, சென்ற வாரம் கார்பொரேஷன் மீட்டிங் கில் ஸ்ரீமான் சக்கரை செட்டியார் தனது அருகில் இருந்த ஒரு பிராமண நண்பரிடம் தனது நண்பர் என்கிற முறையில், ஏதோ சில வார்த்தைகள் பேசிக் கொண்டிருந்தாராம். அதை ஒண்டிக் கேட்டுக் கொண்டிருந்த மற்றொரு பிராமண மெம்பர் உடனே அதை கார்பொரேஷன் பிரசிடெண்ட் இடம் சாடி சொன்னாராம். பிரசிடெண்ட் அப்படி சொன்னது தப்பு என்றாராம். அவ்வார்த் தைகள் மீட்டிங்கில் Official ஆய் மீட்டிங்குக்காக பேசவில்லை; நான் என் நண்பராகிய ஸ்ரீமான் புர்றா சத்திய நாராயணாவிடம் தனிப்பட்ட ஓதாவில் பேசினேன். அதற்கும் மீட்டிங்குக்கும் சம்பந்தமில்லை என்றாராம். உடனே ஸ்ரீமான் புர்றா சத்திய நாராயணா என்னும் பிராமண மெம்பர் எழுந்து "சக் கரை செட்டியார் என் நண்பனல்ல" என்றாராம். விவாதத்தின் தன்மை எப்படி யோ இருக்கட்டும், அதைப்பற்றி நாம் இங்கு ஒன்றும் பேச வரவில்லை. ஆனால் இச்சம்பவத்தை நினைக்கும்போது Dr. நாயர் பெருமான் தமிழ் நாட்டுக்காக - தமிழுக்காக லண்டனில் உயிர் துறந்த காலத்தில் அங்கிருந்த தமிழ்நாட்டுப் பிராமணர்கள் நடந்துக் கொண்ட நடவடிக்கை நமது ஞாபகத் துக்கு வந்ததோடு நமது இரு கண்களிலும் கண்ணீர்வந்து காகிதத்தை நனைத்தது. இந்த ஸ்ரீமான் புர்றாவின் எலெக்ஷனுக்கு ஸ்ரீமான் சக்கரை பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் எவ்வளவு பாடுபட்டார்; இந்த சக்க ரையை இந்த பிராமணர்கள் எத்தனைக் கூட்டங்களுக்கு கூட்டிக் கொண்டு போய் நமது நண்பர், நமது தலைவர் சக்கரை செட்டியார் என்று அக்கிராசனம்



வகிக்கச் செய்து ஜேய் போட்டார்கள். தங்கள் காரியம் முடிந்த உடன் இத்தனையும் மறந்து ஒரு நல்ல சந்தர்ப்பத்தில் சக்கரை என் நண்பனல்ல என்று ஒரு பிராமணர் சொல்லுவாரானால் சக்கரை தனியாய் சமுத்திரக்கரை ஓரத்தில் நின்றிருந்தால், சமுத்திரத்தில் தள்ளுவதற்கு அஞ்சுவார்களா? இவ்வளவையும் செய்து விட்டு "சக்கரை செட்டியாரின் அடங்காத்தனம்" என்று பிராமணப் பத்திரிகைகள் தலையங்கம் போட்டு சக்கரை செட்டியா ரையே கண்டித்தெழுதுகின்றன. சக்கரை முதலிய சக்கரை போன்றவர்கள் கதியே இப்படி இருக்குமானால் குழந்தை போன்ற குழந்தைகளின் கதி என்னாகுமென்பதற்கு யாரும் ஜோசியம் கூறத் தேவை இல்லை. ஸ்ரீமான் புர்றா சக்கரை செட்டியாரைக் காட்டிக்கொடுக்க ஆசையிருக்கும் பக்ஷம் ஸ்ரீமான் புர்றா தனது நன்றிகெட்ட தன்மையைக் காட்டாமலே நடந்துக் கொள்ள வழியில்லாமல் போகவில்லை. கண்ணியமாய் எழுந்து ஸ்ரீமான் சக்கரை என்னிடம் மெம்பர் என்கிற ஓதாவில் தான் பேசினார்; இவ் வார்த்தைகள் சபைக்குச் சொந்தமானதுதான்; எங்கள் சுய காரியத்தைச் சேர்ந்த தல்ல என்று சொல்லியிருந்தால் நாம் அதில் குற்றம் சொல்ல நியாயமில்லை. அப்படிக்கில்லாமல் "சக்கரை என் நண்பனல்ல" என்று சொல்வது எவ்வளவு நன்றி கெட்டத்தனம், கொலை பாதகத் தனம் என்பதை வாசகர்களே யோசிக்க வேண்டும். இந்த பிராமணர்கள் கண்ணுக்கு, ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார், சுயராஜ்யக் கக்ஷி வகுப்புப் பூசலை உண்டாக்குகிறது என்று சொன்னவுடன் மாரீசனாய்த் தோன்றிவிட்டார் . ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு பிராமணக் குழந்தை சாப்பிடுவதை பிராமணரல்லாத குழந்தை பார்த்தால்கூட குற்றமா என்று கேட்டதற்கு தென்னாட்டுத் திலகர் கூட மாறி விட்டது போலத் தோன்றிவிட்டார்; ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்று சொன்னதற்கும் வகுப்புவாரி உரிமை கேட்டதற்கும் காங்கிரஸ் துரோகி ஆய்விட்டதோடு டீ பிராமணர்களுக்கு இம்மூவரையும் காங்கிரஸிலிருந்து விலக்க வேண்டியிருந்தது ; ஸ்ரீமான் ஆரியாவை அடிக்க வேண்டியிருந்தது; சீமான் சக்கரை செட்டியாரை நண்பரல்லாதவராக்க வேண்டியதாய் விட்டது. செய்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை என்பதை அடியோடு மறந்து விட்டார்கள். அல்லாமலும் இப்போது ஸ்ரீமான்கள் முதலியாரும், நாயுடுவும் சுயராஜ்யக் கக்ஷி வகுப்புப் பூசலை உண்டாக்கும் என்று சொன்னது தப்பு; அதை மன்னிக்க வேண்டும். நாங்கள் முன் வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்த வகுப்பு உரிமை கேழ்ப்பதுதான் வகுப்புப் பூசலை உண்டாக்கும்; சுயராஜ்யக் கக்ஷிதான் சத்தியமான கக்ஷி என்று சொன்ன இந்த பிராமணர்கள் கண்ணுக்கு அவ்விருவர்களும் சுக்கிரீவன், அங்கதன் போல காணப்படுகிறார்கள். மற்றவர்கள் இன்னமும் மாறாததால் காங்கிரஸை விட்டு விலக்க மதுரையில் சட்டம் செய்ய வேண்டிய தாய்ப் போய்விட்டது.

பிராமண தர்மத்தின் பழங்கதை படித்தவர்களுக்கும் அவர்களோடு பழகினவர்களுக்கும் இதில் ஒன்றும் ஆச்சரியம் இருப்பதாய்த் தோன்ற



RangaRakes tamilnavarasam.com

வில்லை. ஆனால், இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு அநுபவித்துக் கொண்டு இருக்கும், பிராமணரல்லாதாரில் சிலர் இன்னமும் இம்மாதிரி பிராமணர்கள் பின்னால் கவி பாடிக்கொண்டு, தங்கள் மனச்சாக்ஷிக்கு விரோத மாய் அவர்களைத் தலைவர், தலைவர் என்று சொல்லிக் கொண்டு அவர் களுக்கு ஆக்கம் தேடிக்கொடுத்து வயிறு வளர்க்கிறார்களே, இதை நினைக் கும் போதுதான் வெட்கம் உண்டாகிறது. இந்த பிராமணர்களின் காலைக் கழுவித் தண்ணீரைத் தீர்த்தமாகக் குடித்துக் கொண்டிருக்கும் வரையில்தான்; தங்கள் கூடத் திரியும் பிராமணரல்லாதாரை ஆதரிப்பார்கள். அது முடிந்த வுடன் அல்லது கொஞ்சம் மாறினவுடன் பிராமணத் துவேஷி, காங்கிரஸ் துவேஷி என்கிற பட்டமும் முன்னவர்களுக்கு நடந்த கதியும் தான் நமக்கும் கிடைக்கும் என்கிற எண்ணம் பிராமணரல்லாத தலைவர் என்போர்களுக்கும் தொண்டர்கள் என்போர்களுக்கும் உண்மையாகவே தோன்றவில்லையா? அல்லது நடக்கிறவரையில் நடக்கட்டும் நமது காலத்தைக் கழிப்போம் என்கிற பேராசையா என்பதுதான் நமக்குப் புலப்படவில்லை.

**குடி அரசு - கட்டுரை - 07.03.1926**



# தெருவில் நடத்தலும் சர்க்காரின் மனப்பான்மையும்

கோயமுத்தூர் ஜில்லா உடுமலைப்பேட்டை தாலூக்கா குமரலிங்கம் என்னும் கிராம அக்கிரஹாரத்தில் ஒரு சர்க்கார் பொது தபாலாபீஸ் இருந்து வந்தது. அவ்வூர் அக்கிரஹாரவாசிகளாகிய பிராமணர்கள் தாழ்ந்த வகுப்பார் என்று சொல்லப்படும் ஆதி திராவிடர்களை தீண்டாதார் என்னும் காரணத் தால் அந்தத் தபால் ஆபீஸுக்குச் செல்லவும் அவ்வீதியில் நடக்கவும் விடுவ தில்லை. அதைப்பற்றி ஸ்ரீமான் R.வீரய்யன் சட்டசபையில் ஒரு கேள்வி கேட்டார். அதாவது, 1924 ௵ செப்டம்பர் - *மீ* 25- உ சகல பொதுத் தெருக்களிலும் சகல ஜாதி மனிதர்களும் நடக்கலாம் யாரும் ஆக்ஷேபிக்கக் கூடாது என்ற 2660 - ம் நெம்பர் அரசாங்க உத்தரவு குமரலிங்கம் பிராமணர் களுக்குத் தெரிந்திருந்தும், அவர்கள் ஆதிதிராவிடர்களை தெருவில் நடக்கவிடாமல் தடுக்கிறார்களே; இதைப்பற்றி கேள்வியில்லையா என்று கேட்டார். அதற்கு சர்க்கார் மெம்பர் பதிலளித் ததாவது:- இது விஷயத்தைப் பற்றி போஸ்ட் மாஸ்டர் ஜனரலுக்கு எழுதி யிருக்கிறது; அவரும் ஷடி தபாலா பீஸை வேறு வீதிக்கு “மாற்றி விட்டார்” என்று பதிலளித்தாராம். இந்தப் பதிலைப் பார்த்தால், சாத்தூருக்கு தடம் எது என்று ஒருவர் கேட்டால், சாரா யம் திராம் அஞ்சணா என்று பதில் சொல்லுவது போலிருக்கிறது. 2660 நெ. சர்க்கார் உத்தரவுப்படி வீதியில் மனிதர் நடக்கும் உரிமையைப் பிராமணர் பிடுங்கிக் கொள்ளுகிறார்களே என்று கேட்டால் போஸ்டாபீசு வேறு வீதிக்கு மாற்றப்பட்டு விட்டது என்று சொல்லும் பதில் ஷடி கேள்விக்கு சமாதானமா குமா? ஸ்ரீமான் வீரய்யனுக்கும் நமக்கும் போஸ்ட்டாபீஸைப் பற்றியா அதிக கவலை? இவ் விஷயங்களைக் கவனிக்கும்போது குழந்தையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுவது போலிருக்கிறது. இது போலவே பாலக் காட்டிலும், கல்பாத்தி தெருவு பொதுத் தெருவு அங்கு யாரும் நடக்கலாம் என்று சொல்லி விட்டு, இவர்கள் வார்த்தையை நம்பி நடந்தவர்கள் அங்குள் ளவர்களால் அடிபட்ட பிறகு, இப்படி அடித்து விட்டார்களே என்று சொன் னால் நீ ஏன் அங்கு போனாய் என்று கேட்டு விட்டார்கள். மறுபடியும் ஒரு தடவை அங்கு நடந்ததற்காக கேஸ் ஏற்பட்டு மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டின் மூலம், நடந்தது குற்றமில்லை என்று விடுதலையாகியும்கூட, மறுபடியும் நடக்கும்போது வழி மறித்து அடித்துப் பயப்படுத்தி நடந்தவரிடமிருந்து அந்த வீதிக்கு புண்யார்ச் சனை செய்ய 10 ரூபாய்க்கு பாண்டு எழுதி வாங்கிக் கொண்



RangaRakes tamilnavarasam.com

டார்களாம். இதைப்பற்றி கேஸ் நடப்பதாகவும் தெரிகிறது. இம் மாதிரியெல்லாம் வேடிக் கைப் பார்த்துக் கொண்டிருப்பது நல்ல சர்க்காருக்கு அழகாகுமா? நல்ல அரசு என்பது தன்னால் - தன் பரிசனத்தால், திருடரால், அயோக்கியர் முதலியவர்களால், தன் குடி ஜனங்களுக்குத் தீங்கு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டாமா? அதை விட்டுவிட்டு ஒருவனைப் பார்த்து நீ நட, வந்ததுக்கு நானாச்சுது என்பதும், மற்றவனைப் பார்த்து நீ விடாதே, வந்ததுக்கு நானாச்சுது என்பதும், இரண்டு பேரும் உதைபோட்டுக் கொண்டும் வக்கீலுக்கும், போலீஸாருக்கும் அதிகாரிகளுக்கும் பணங்கொடுத்து வாயுங் கையுமாய் அலைவதைப் பார்த்து, இப்படியும் நம்ம ஆள்களுக்கு ஒரு வரும்படி ஆச்சுதே என்றும் ஒருவருக்கொருவர் சுலபமாய் உதை போட்டுக் கொள்ளும்படி செய்துவிட்டோமே என்றும் சிரித்துக் கொண்டு வேடிக்கைப் பார்ப்பதை நல்ல சர்க்கார் என்று சொல்ல முடியுமா?

ஸ்ரீமான் வீரைய்யன் இம்மாதிரி பித்தலாட்டமான சட்ட சபையைக் கட்டி அழுவதை விட, மகாத்மா சொல்படி சத்தியாக்கிரகம் செய்து குறைந்தது ஒரு ஆயிரம் தொண்டர்களையாவது ஜெயிலுக்கு அனுப்பவோ, அவசிய மானால் உயிரைக் கொடுக்கச் செய்யவோ தயாராயிருப்பாரானால், நம் நாட்டிலுள்ள கோடிக் கணக்கான ஆதி திராவிட மக்களை நரகத்திலிருந்து விடுதலை செய்தவராவார்.

**குடி அரசு - கட்டுரை - 07.03.1926**



# இந்து தேவஸ்தான சட்டம்

இந்து தேவஸ்தான சட்டத்தைப் பற்றி பாமர ஜனங்களை ஏமாற்ற தமிழ்நாட்டு தேசீய பிராமணர்களில் பெரும்பாலோர் செய்த கிளர்ச்சி, ஸ்ரீமான் கள் ஈ.வெ.ராமசாமி நாயக்கர், வரதராஜுலு நாயுடு முதலியவர்கள் போட்ட வெடி குண்டினால் நசுக்குண்டு போயிருந்தாலும், வேறு விதமான பல தந்திரங்கள் இன்னமும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அதாவது, வைசிராய் இதற்கு அநுமதி கொடுக்கச் செய்யாமலிருப்பதற்கு எவ்வளவோ பாடு பட்டார்கள். அதுவும் தோல்வியுற்றது. இந்தியா சட்டசபையில் எவ்வ ளவோ தந்திரம் செய்தார்கள். அதிலும் தோல்வியுற்றது. சீமைக்குப் போய் சக்கரவர்த்தியின் மூலம் இச்சட்டத்தை அழிக்கப் பார்த்தார்கள். அதிலும் தோல்வியுற்றது. கடைசியாக தங்கள் சட்ட ஞான தந்திரத்தைக் கொண்டு ஹைகோர்ட்டைப் பிடித்தார்கள். அங்கு ஏதோ கொஞ்சம் ஜயமடைகிறார்கள் போல் தோன்றுகிறது. அதாவது, பல மடாதிபதிகள் பேரால் அவர்களிடம் வக்காலத்து வாங்கி இச்சட்டமே சட்டப்படி செல்லாதென்றோ, இச்சட்டம் செய்ய சட்டசபைக்கு சட்டமில்லை என்றோ, வாதம் சொல்லி வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். வழக்கின் தன்மையைப் பற்றி இது சமயம் நாம் ஒன்றும் சொல்லுவதில்லை. ஆனால், ஒரு விஷயம். சட்டசபையில் பிரேரேபனை வந்து மெஜாரிட்டியாரால் தீர்மானம் நிறைவேறி, கவர்னர் சம்மதம் பெற்று, இந்தியா சட்டசபையிலும் ஒப்புக்கொள்ளப்பட்டு ராஜப் பிரதிநிதியும் சம்மதம் கொடுத்து, சக்கரவர்த்தியும் ஏற்றுக்கொண்டு அமுலுக்கு வந்த ஒரு காரியம் இவ்வளவும் தப்பின பிறகும் பூரா உறுதியாய் விட்டது என்று நினைப்பதற்கு இடமில்லையானால், இம்மாதிரி அரசாங்க அமைப் பைப் பற்றி நாம் என்னவென்று நினைப்பது? அரசாங்கமென்றால் கையில் பலத்தவன் காரியம் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. திருவண்ணா மலையில் உள்ள ஒரு மடாதிபதியின் பிராதின் பேரில் தேவஸ்தான சட்டத் தைக் கொஞ்சக் காலத்திற்கு அம்மடத்து காரியத்தில் கோர்ட்டார் பிரவேசிக் கும் விஷயத்தில் தற்காலிகமாக தடைப்படுத்தப்பட்டிருக்கிறது என்று தமிழ் பத்திரிகைகளில் பார்த்தோம். பிராமணப் பத்திரிகைகள் சாதாரணமாய் இம்மாதிரி விஷயங்களைப் பற்றி எழுதும் போது தலைப்பில் ஜட்ஜுகள் பெயர் எழுதுவதுண்டு, ஆனால் இந்த வழக்கைப் பற்றி எழுதும் போது இன்ன ஜட்ஜு இம்மாதிரி தீர்ப்புக் கூறினார் என்று எழுதவேயில்லை. தொடர்ந்தும் பார்த்தோம்; காணப்படவேயில்லை. இதினால் பெயர் எழுதினால் ஜட்ஜு பிராமணரா, பிராமணரல்லாதாரா என்பதை ஜனங்கள் அறிந்து விடுவார்களே



RangaRakes tamilnavarasam.com

என்கிற எண்ணம் கொண்டோ என்னமோ, ஜட்ஜுகள் பெயரைக்கூட இம்மாதிரி சந்தர்ப்பங்களில் எழுதப் பயப்படுவதாயிருந்தால், இவர்கள் தந்திரத்தை என்னென்று சொல்வது? இவற்றைக் கவனிக்கும் போது என்னமாவது செய்து, யாரையாவது பிடித்து இச் சட்டத்தை ஒழிக்கும் வரை ஓயமாட்டார்கள் என்பது திண்ணம். அதற்கேற்றாற்போல் தோட்டி முதல் தொண்டமான் வரை அநேக இலாகாக்களில், இவர்களாகவே இவர்கள் ஆதிக்கமாகவே இருக்கிறது. போதாக் குறைக்கு அடுத்து வரும் சட்ட சபையும் இவர்கள் மயமாகப் பகீரதப் பிரயத்தனங்கள் நடக்கின்றது. ஹை கோர்ட்டில் தேவஸ்தான சட்டம் அடிபட்டாலும் அடிபடாவிட்டாலும் அடுத்த சட்டசபை இவர்கள் மயமாகி இவர்கள் இஷ்டம் போல் ஷை சட்டத்தை உருக் குலையச் செய்யும் வரையில் ஷை சட்டம் அமுலில்லாமல் வைத்திருந்தாலும் போதும். கேஸின் முடிவு எப்படியோ ஆகட்டும் என்பது சிலரின் எண்ணம். அம்மாதிரி எண்ணக்காரர்களுக்கு இவ்வுத்திரவு வெற்றி கொடுத்திருக்கிற தென்றே சொல்லலாம். மற்றவைகள் ஹைகோர்ட் முடிவைப் பொறுத்திருக் கிறது என்பது ஒரு பக்கமிருந்தாலும் முக்கியமாய் அடுத்த சட்டசபைத் தேர்தலையே பொறுத்திருக்கிறது என்பதுதான் நமது அபிப்ராயம்.

ஆதலால், தேவஸ்தான சட்டத்தையும் ஒரு கையில் ஆதரித்துக் கொண்டு, சட்டத்தை ஒழிக்க நினைக்கும் பிராமணர்களுக்கும் மற்றொரு கையில் வோட் வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களே. அவர்களது உத்தேசம் என்ன என்பதை நாம் அறிய முடியவில்லை.

**குடி அரசு - கட்டுரை - 07.03.1926**



### தங்கப்பெருமாள்

## பாரதத் தாயின் துர்ப்பாக்கியம்

தமிழ்நாட்டின் அருந்தவப்பயன், நமது ஆருயிர் நண்பர் ஸ்ரீமான் வா.மு. தங்கப்பெருமாள் பிள்ளை இம்மாதம் 6 - ந் தேதி காலை 4 மணிக்கு உயிர் நீத்தார் என்னும் சேதியை எழுதவே மெய் நடுங்குகிறது. அவருக்கு இன்னமும் ஆண்டு முப்பது கூட ஆகவில்லை. அவர் ஈரோடு முனிசிபல் எல்லைக்குள் கருங்கல் பாளையம் என்னும் கிராமத்தில் வாத்தியார் வீடு என்று சொல்லும்படியான புராதனமும் கண்ணியமும் வாய்ந்த ஒரு வைணவ வேளாள செல்வக் குடும்பத்திற்குச் செல்வமாய் பிறந்தவர். அவரது இளம் வயதிலே, அதாவது 12 - வது வயதிலேயே தந்தை இறந்து போனார். ஆயினும் சிறிய தந்தையார் ஆதரணையால் கல்வி கற்கப்பட்டு தனது 21 - வது வயதில் B.A பட்டம் பெற்று, 24 - வது வயதில் B.L.பட்டமும் பெற்று, ஈரோடு ஜில்லா முனிசிபு கோர்ட்டில் 1921 - ம் வருஷத்தில் வக்கீல் தொழிலை ஆரம் பித்தார். ஆரம்பித்த மாதமே 200 ரூபாய் வரும்படி கிடைத்தது. அடுத்தமாதம் 250 ரூ. வரும்படி கிடைத்தது. மற்றும் இரண்டொரு மாதங்களிலேயே மாதம் 300 ரூபாய்க்கு மேல் வரும்படி வந்து கொண்டிருக்கும்படியான நிலைமை ஏற்பட்டதோடு ஊருக்குள் பிரபலமும் செல்வாக்கும் ஏற்பட்டு தான் படித்து வந்த மகாஜன ஹைஸ்கூல் என்னும் பள்ளிக்கூடத்திற்கு ஒரு நிர்வாக அங்கத் தினராயும், ஈரோடு நகர பரிபாலன சபைக்கு நிர்வாக அங்கத்தினராகவும் தெரிந்தெடுக்கும் படியான பொதுஜன அபிப்ராயத்தைப் பெற்றார். அவர் தனக்கு விபரம் தெரிந்த காலம் முதலே பொது விஷயங்களில் ஊக்கமும் தன்னைப் போன்ற இளம் வாலிபர்களின் மிகுதியான கூட்டுறவும் தமிழ் பாஷையினிடம் ஒருவித தனிப் பற்றுதலும் உடையவராயிருந்ததோடு தனது ஊராகிய கருங்கல் பாளையத்தில் ஒரு சிறு வாசகசாலை என்பதாக ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் பொதுநல விஷயங்களையும் தமிழர் பெருமை யையும் பற்றி அடிக்கடி தமது நண்பர்களிடம் பேசுவதும் அவ்வாசக சாலைக்கு வருஷா வருஷம் ஆண்டுவிழா என்னும் பேரால் தமிழ் நாட்டுப் பெரியார்களை அதாவது, ஸ்ரீமான்கள் பாரதியார், வரதராஜுலு நாயுடு, வ.வெ.ஸு ஐயர், திரு.வி.க. முதலியார், மூ.வெ. நாட்டார் முதலியவர்களைத் தருவித்து கொண்டாட்டங்கள் நடத்துவதுமான விஷயங்களில் பெரிதும் தனது சகாக்களோடு ஊக்கங்காட்டி வந்தவர். இந்நிலையில் 4, 5 மாதம் கூட



RangaRakes tamilnavarasam.com

தனது வக்கீல் தொழில் நடத்தியிருக்க மாட்டார், இதற்குள்ளாக காந்திய டிகளின் ஒத்துழையா இயக்கம் ஆரம்பமாயிற்று. தனது வக்கீல் தொழி லோடு ஒத்துழையா இயக்க சம்பந்தமான பொதுக்கூட்டங்கள் ஈரோட்டில் நடை பெற்று வந்த சமயங்களில் நமது பிள்ளை அவர்களே அநேகமாய் அக்கிரா சனம் வகிக்க கேட்டுக் கொள்ளப்படுவதும் இவரது அக்கிராசனத்தின் கீழ் ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் முதலியோர் பேசுவதும் வழக்கமாகியிருந் தது. இப்படியே இருக்க ஒரு நாள் கூட்டத்தில் நமது பிள்ளையவர்கள் தனது முடிவுரையில் தான் நாளை முதல் கொண்டு வக்கீல் தொழிலுக்குப் போவதில்லை என்கிற சேதியை அறிவித்துவிட்டார். இவ்வறிவிப்பானது அக் கூட்டத்தில் இருந்த அனைவருக்கும் அவரிடம் அளவு கடந்த பக்தியும் அன்பும் ஏற்படுத்திவிட்டது. பிறகு காங்கிரஸ் நிர்வாகத்திலும் அவர் இழுக்கப் பட்டார். உடனே ஜில்லா காரியதரிசி ஆனார். அடுத்தாற் போல் மாகாண நிர்வாகசபை அங்கத்தினரானார். பெயர் பெற்ற ஈரோடு கள்ளுக்கடை மறியலில் இவர் குற்றஞ் சாட்டப்பட்டு நாயக்கர் உள்பட 40 தொண்டர்களோடு மேஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப்பட்டு சிறைவாசமிருந்தார். சிறையினின்று வெளிவந்ததும், அதிமும்மரமாக ஜில்லா முழுதும் சுற்றும் படியான வேளை யில் தனது மெல்லிய சரீரத்தின் சவுகரியங்களையும் தனது வாழ்க்கை போகத்தின் பழக்கங்களையும் கொஞ்சமும் கவனியாமல் கிராமம் கிராமமாய் திரிந்து வேலை செய்து வந்தார். இன்னிலையில் ஜில்லா தலைவராகவும் மாகாண காரியதரிசியுமானார். இதன் பலனாய் மாகாணமெல்லாம் சுற்றவும் திருச்சியில் மாகாண கமிட்டி காரியாலயத்திற்குத் தன் பத்தினி சகிதமாய் போய் மாதக் கணக்காய் குடியுமிருக்கவும் செய்து வந்தார். ராஜீயநிலை மாறி நிலைகுலைந்ததின் பலனாய், காங்கிரஸ் நிர்வாகத்தில் கலந்து கொள்ள இஷ்ட மற்றவராகி, சகலவித நிர்வாகத்திலிருந்தும் விலகிக் கொண்டு "குடி அரசு" என்னும் பத்திரிகையை ஆரம்பித்து நடத்த முற்பட்டார். இது சமயம் கதர் போர்டு காரியதரிசி பதவியையும் ஏற்றுக்கொள்ள வலியுறுத்தப் பட்டதாலும் உடல் நலிவு ஏற்பட்டு படுக்கையில் கிடக்கத்தக்க அசவுகரியத்தோடு இருந் ததாலும், "குடி அரசு" நிர்வாகத்தை நாயக்கரிடம் ஒப்புவித்து விட்டு விலகி னார். அடுத்தாற்போல், உடல் நலம் செய்து கொள்ள சென்னைக்குப் போகவேண்டியிருந்ததால், கதர் போர்டு காரியதரிசி பதவியையும் ஸ்ரீமான் நாயக்கரிடம் ஒப்புவித்துவிட்டு சென்னைக்குப் போனார். அங்கும் ஒன்று இரண்டு மாதம் இருந்து சிகிச்சை செய்து கொண்டார். பின் வைத்தியர்கள் அநுமதியின் பேரில் ஊருக்கு வந்து 3,4 மாத காலம் படுக்கை யிலேயேயிருந்து சிகிச்சை செய்து வந்தார். என்ன செய்தும் அதிசாரக் கழிச்சல் என்னும் அவருக்கு ஏற்பட்ட வியாதி குணப்படாமல் அவரது முடிவுக்கே கூற்றுவனாயிருந்து கொள்ளை கொண்டு விட்டது. படுக்கையில் இருக்கும்போதும் எழுதுவதும், படிப்பதும், சவுக்கியமான பிறகு தேசத்திற்கு என்ன செய்வது என்று வேலைத் திட்டம் போடுவதிலும் காலத்தைக் கழிப்பார். யாரிடமும் கடினமாகப் பேசமாட்டார். ஒருவருக்கும் மனவருத்தம் ஏற்படும்



படி நடக்க மாட்டார். தான் சொல்லுவது உண்மையானாலும் அதனால் யாருக்காவது சலிப்பு ஏற்படும் என்று பட்டால் பயந்து நிறுத்திக் கொள்வார். தாராளக் கையன். தமிழ்நாட்டுத் தொண்டர்கள் என்போர் அநேகர் அவரிடம் வந்து அடிக்கடி ஏதாவது பெற்று போவார்கள் . நண்பர்களுக்கு சமயங்களில் அவரைப்போல் உதவி செய்பவர்கள் மிகச் சிலர்தானிருப்பார்கள். இல்லை என்று சொல்வதானால் தனக்கும் ஒரு பெரிய பாவத்தைச் செய்கிறோமே என்று நடுங்குவார். தமிழிலும் ஆங்கிலத்திலும் அநேக புத்தகங்கள் வாசித் தவர். தமிழ் நாட்டிலுள்ள தமிழ் ஆராய்ச்சிக்காரர்களில் நமது பிள்ளையும் ஒரு முக்கியமானவர் என்று சொல்லவேண்டும். அவர் காரியாலயம் ஒரு புத்தகாலயம்போல் இருக்கும். ஆராய்ச்சி, ஆராய்ச்சி, ஆராய்ச்சி என்று எப்பொழுது பார்த்தாலும் இதே வேலைதான். நமது நாட்டில் மக்கள் உயர்வு தாழ்வு என்பது எப்படி ஒழியும் என்கிற கவலை அவருக்குள்ள மற்ற எல்லாக் கவலையையும் விட முன்னின்று கொண்டேயிருந்தது. முடிவாய்க் கூறு மிடத்து தன்னலத் தியாகத்தில் ஈடற்ற ஒரு தேசபக்தர் - உண்மைத் தொண்டர்- அஞ்சா நெஞ்சர் - ஆருயிர்த் தோழர்-தமிழ்நாட்டின் ஒரு முக்கிய உருப்பு- கோவை ஜில்லாவின் வலக்கண்-ஈரோட்டின் முடி மறைந்ததென்றுதான் சொல்ல வேண்டும். இப்பேர்ப்பட்ட ஒரு ரத்தினத்தைப் பிரிந்த அவரது குடும்பத்தார், ஆருயிர்ப் போன்ற மனைவி, பரதன் போன்ற தம்பி முதலி யோர்களுக்கும், கன்றை இழந்த தாய் போன்ற தமிழ் மக்களுக்கும் ஈசனே ஆறுதல் அளிப்பாராக.

**குடி அரசு - தலையங்கம் - 07.03.1926**



RangaRakes tamilnavarasam.com

# கதர்

சபாநாயகரவர்களே, சபையோர்களே!

இந்த மகாநாட்டில் எனக்கு முன் பேசிய கனவான்கள் ஒவ்வொரு வரும் முக்கியமாக கதர், மதுவிலக்கு, தீண்டாமை என மூன்று விஷயங் களைத்தான் சொல்லியிருக்கிறார்கள். நான் அதிகம் சொல்ல வேண்டிய தில்லை. ஏதோ என் மனதிலுள்ள சில விஷயங்களைச் சொல்ல அநுமதி கொடுத்ததால் சொல்லுகிறேன்.

கொங்குவேளாள குலத்தினர் இத்துடன் மூன்று மகாநாடு கூடியாகி விட்டது. சற்று உணர்ச்சியையும் கொடுத்திருக்கிறது. மகாநாட்டிற்கு வேளாள சமூகத்தினர் திருவிழாவுக்கு வருவதுபோல் எண்ணி வருகிறார்கள். காப்பியும் சாப்பாடும் சாப்பிட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். இந்த சமூகத்தார்களிருக் கும் நிலைமைக்கு இச்சங்கம் இந்த வேலை செய்தது போதியதல்ல. இச்சமூகத்தின் கஷ்டந்தான் நாட்டின் கஷ்டமாகும். இச்சமூகத்தின் முன்னேற் றந்தான் நாட்டின் முன்னேற்றமாகும். கதரும், மதுவிலக்கும் உங்கள் சமூகத் தினர் செய்யாதது பெருங்குறை. உபசரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் P.ரத்தினசபாபதிக் கவுண்டர் கதரைப் பற்றித் தமது பிரசங்கத்தில் குறிப்பிட வில்லையென்று ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரவர்கள் குறிப்பிட்டார். அதன் காரணம் வேறொன்றுமில்லை; அவர் கதர் கட்டவில்லை; ஆதலால் அவர் குறிப்பிடவுமில்லை. கதரை மனிதன் கட்டினாலும், மரங் கட்டினாலும், யார் கட்டினாலும் அதன் பலனை நீங்கள்தான் அடைகிறீர்கள். பஞ்சமென்று சொல்வது வியாபாரிக்கல்ல, வக்கீலுக்கல்ல, உத்தியோகஸ்தனுக்கல்ல, பஞ்சத்தால் குடிக்கக் கூட தண்ணீர் இல்லையென்றால் யாருக்கில்லை? குடியா னவர்களுக்குத் தானில்லை. ஆகையால், பஞ்சம் என்றால் குடியானவர்களுக் குத் தான் என்று கருத வேண்டும். பஞ்சம் வரக்காரணம் விளையாமையினா லல்ல; பணமில்லாமையினாலல்ல; முன் காலத்தைவிடத் தற்காலம் ஊர் நத்தம், மலை, புறம்போக்கு எல்லாம் விளைவு செய்யப்படுகிறது. விளைவும் குறைந்ததாகக் காணோம். தானியங்கள், பருத்தி, மிளகாய், நிலக்கடலை, தானியம் முதலிய சரக்குகள் எல்லாம் தற்காலத்தில் முன்னைவிட 1-க்கு நாலு பாகம் அதிக விலைக்கே விற்கப்படுகிறது. எத்தனை பணம் வந்தாலும் நம் நாட்டில் பணம் தங்க மார்க்கமில்லாமல் போயிற்று. பண்டம் மாற்றிக் கொண்டு பணமில்லாமலே அக்காலத்தில் பஞ்சமின்றிப் பிழைத்தோம். கொஞ்சம் பணம் வந்தாலும் புதைத்து வைப்போம். அக் காலத்தில் பஞ்சமில்லை.



இத்தனை பணம் வந்தாலும் இக்காலத்தில் எவ்வளவு பெரிய குடும்ப மாயிருந்தாலும் கலியாணம் வந்தாலும் இழவு வந்தாலும் நாட்டுக்கோட்டை யாரிடந்தான் போக வேண்டி வந்துவிட்டது. அநேக குடும்பங்கள் இன்சால் வெண்டு விண்ணப்பம் போட வேண்டியதாய்த்தானிருக்கிறது. சாதாரணக் குடியானவர்கள் நிலை எப்படி இருக்கிறதென்று யோசித்துப் பாருங்கள். பட்டணங்களுக்கு வந்து பால், விறகு விற்றுப் பிழைக்க வேண்டியிருக்கிறது. இவ்வளவு பஞ்சம் வரக் காரணம் வேலையில்லை, தொழிலை யெல்லாம் மற்றவர்களுக்குக் கொடுத்து விட்டோம். ஆகையால், நம் நாட்டு ஏழை மக்கள் வெளிநாட்டுக்குப் போவதைத் தடுக்க முடியவில்லை. காங்கய நாட்டில் ஏழைக் குடியானவர்கள் கட்டில், சட்டி, பானையுடன் பஞ்சத்தால் வெளிநாடு செல்வதைக் கண்டு விசனமடைந்தேன். அவர்கள் வெளிநாடு சென்றும் கால்ரா, பெரு வயிறு இவைகளால் கஷ்டப்பட்டு அநேகர் மாண்டும் போ யினர். இந்தப் பஞ்சம் நமக்கு எது வந்தாலும் தீராது. சர்க்கார் உத்தியோகம் வந்தாலும் தீராது. சர்க்கார் கொடுக்கும் சுயராஜ்யம் வந்தாலும் தீராது. எந்த நிலை நமக்கு நன்மை, எந்த நிலை நமக்குத் தீமை என்பதைக் கவனிக்க வேண்டும்? அவரவர்கள் கையிலேயே தொழிலிருக்கிறது. ராட்டினம் ஒன்று நம்மை விட்டுப் போனதும், அநேக பணத்தை நாம் இழக்க நேரிட்டது. மிஷின் கள் வந்த பின்னே தான் நமக்குப் பங்கம் வந்தது. ஒரு நெல்லு மூட்டை குத்தி னால் இரு குடும்பம் ஒரு நாள் வயிறார சாப்பிட ஏழைகளுக்கு வழியிருந்தது. இம்மாதிரி ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு சாப்பாடு கிடைத்து வந்தது. இப்போது ஆயிரக்கணக்கான ஏழைகளின் வாயில் மண்ணைப் போட்டு விட்டு நெல்மிஷின் என்ற பிசாசு அந்த லாபத்தைக் கொண்டு போய் விடு கிறது. பருத்தி நூல் மிஷின்களும் அப்படியேதான். ஒருநாள் 1-க்கு 40 ஆயிரம் பேர் நூற்கும் நூலை ஒரு மிஷின் நூற்றுவிடுகிறது. அந்த கூலி, 40 ஆயிரம் குடும்பத்தை பட்டினிப் போட்டுவிட்டு முதலாளிக்குத் தான் போய்ச் சேருகிறது. இதில் சில நூற்றுக்கணக்கான கூலிகளுக்குத்தான் கூலி கிடைக்கிறது. ஆகையால் ஒரு மிஷின் முதலாளிக்கு லாபத்தையும் சில பேருக்கு சொற்ப கூலியையும் கொடுத்துவிட்டு ஒருநாள் 1 - க்கு 40 ஆயிரம் ஏழைகள் வாயில் மண்ணைப் போடுகிறது. 3 ராத்தர் பஞ்சு எடையுள்ள ஒரு மல் பீஸில் 1 - 4 - 0 ரூபாய் பஞ்சுக்கு விலை நமக்குக் கிடைக்கிறது. பாக்கி பீஸ் 1 - க்கு 13-12-0 ரூபாய் அந்நிய நாடு போய்விடுகிறது. அந்த 13 - 12 - 0 ரூபாயை நம் நாட்டில் நிறுத்தவேண்டும். காங்கயம் பிர்க்காவில் பஞ்ச நிவாரண வேலை செய்ததாக சிலர் பெயர் பெற்றுக் கொண்டார்கள். அது சரியான நிவாரண வேலையென்று சொல்ல முடியாது. உண்மையில் பஞ்ச நிவாரண வேலை செய்தது மகாத்மா காந்திதான். திருப்பூர், காங்கயம் பக்கம் பஞ்சத்தில் வாடிய ஏழைகளை அரைக் கஞ்சியாவது ஊற்றிக் காப்பாற்றியது கைராட்டினம் தான். அதனால்தான் மகாத்மா மில் தொழிலை ஆதரிக்க வில்லை. கதர் கொஞ்சம் விலை அதிகமாயிருந்தாலும் கொஞ்ச காலம் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான். டிராமா, காப்பி, பீடி, வக்கீல் இவை



RangaRakes tamilnavarasam.com

களுக்கு செலவாவதில் கதருக்கு கொஞ்சம் உபயோகிக்கலாம். ஆகையால், நாம் விட்டுவிட்ட தொழிலை மீண்டும் கொள்ளவேண்டும். போய்விட்ட யோக்கியதையை சம்பாதிக்காதவர்கள் எப்படிப் புது யோக்கியதையை சம்பாதிக்கப் போகிறீர்கள்? குடியைப்பற்றிக்கூட எனக்கு முதலில் அவ்வளவு கவலையில்லை, கதரைக் கட்டுங்கள், குடியை விட கதர் பிரதானமானது என்றுதான் சொல்லுவேன்.

குறிப்பு: *20.2.26 ஆம் தேதி பொள்ளாச்சியில் நடைபெற்ற கொங்குவேளாளர் 3 ஆவது மகாநாட்டு சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 07.03.1926**



# சுயராஜ்ஜிய கக்ஷியின் தேர்தல் உறுதிமொழி நிறைவேற்றல்!

சுயராஜ்ஜியக் கக்ஷித் தலைவரான ஸ்ரீமான் எஸ். சீனிவாஸய்யங்கார், செல்லுமிடங்களிலெல்லாம் ஜஸ்ட்டிஸ் கக்ஷியார் கவர்ன்மென்டு விருந்து களுக்குப் போகிறார்கள். கவர்னர் முதலிய கவர்ன்மென்டு உத்தியோகஸ் தர்களுக்கு விருந்து கொடுக்கிறார்கள். நாங்கள் விருந்துக்கும் போகோம்; விருந்தும் கொடுக்கமாட்டோம்; ஆதலால் நாங்கள் ஒத்துழையாமை வாசனைக்காரர் என்று உறுதிமொழி கூறி ஓட்டு கேட்கிறார்.

இவ்வுறுதிமொழிக்கு ஜாமீன் கொடுப்பது போல் ஸ்ரீமான் சி.ராஜ கோபாலாச்சாரியாரும் சுயராஜ்யா கக்ஷியார் உறுதிமொழிப்படி நடப்பார்கள் அதற்கு நான் ஜாமீன் என்று மேலொப்பமும் போடுகிறார். மேலொப்ப கையெ முத்து முடிவதற்குள்ளாகவே சுயராஜ்யக் கக்ஷி முக்கியஸ்தரான சென்னை கார்ப்பரேஷன் தலைவர் ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியார் கவர்ன ருக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தருக்கும் விருந்து கொடுத்து வருகிறார்.

தேர்தல் பாக்கியிருக்கும்போதே இவ்வளவு நாணயமாய் நடப்பவர் கள் தேர்தல் முற்றும் நடந்த பிறகு என்ன செய்வார்கள் என்பதை ஜாமீன் தாரான ஸ்ரீமான் ஆச்சாரியாரையும் சாக்ஷிக் கையெழுத்து போடுபவரான ஸ்ரீமான் முதலியாரையும் நம்புபவர்கள் தான் பதில் சொல்லவேண்டும்..

**குடி அரசு - செய்தி விளக்கக் குறிப்பு - 07.03.1926**



RangaRakes tamilnavarasam.com

# ஓட்டர்களை ஏமாற்றும் தந்திரம்

இவ்வாரம் பத்திரிகைகளெல்லாம் ஒரே மூச்சாய் சுயராஜ்யக் கக்ஷியார் சட்டசபைகளை விட்டு வெளியேறி விட்டார்கள், வெளியேறி விட்டார்களென்று சுயராஜ்யக் கக்ஷியாருக்காக வஞ்சகப் பிரசாரங்கள் செய்து வருகின்றன. சுயராஜ்யக் கக்ஷியார் எப்பொழுது விலகினார்கள்? எதற்காக விலகினார்கள்? எவ்வளவு நாளைக்கு விலகியிருப்பார்கள்? விலகிய பின் இவர்களுடைய வேலை என்ன? இந்த நான்கு விஷயங்களையும் கவனித்துப் பார்த்தால் சுயராஜ்யக் கக்ஷியாரின் தந்திரம் பொது ஜனங்களுக்கு விளங்காமற் போகாது.

## எப்போது விலகினார்கள்?

இருக்கவேண்டிய நாளெல்லாம் இருந்து விட்டு அடைய வேண்டிய பெருமையையும், உத்தியோகத்தையும், பணத்தையும், தங்கள் பிள்ளைகளுக்கு உத்தியோகத்தையும் சம்பாதித்துக் கொண்டு கடைசியாய் சட்டசபை வேலையெல்லாம் முடிந்து, காலாவதி முடிய ஒரு வாரமிருக்கும்போது விலகி விட்டோம்! விலகி விட்டோம்!! என்று ஆடம்பரம் செய்கிறார்கள்.

## எதற்காக விலகினார்கள்?

விலகி விட்டோமென்று பொதுஜனங்களை ஏமாற்றி மறுபடியும் தங்களுக்கே வோட்டுப் போடும்படி செய்து மறுபடியும் தாங்களே போய் முன்னிலும் பலமாய் உட்கார்ந்துக் கொள்ளுவதற்காக விலகினார்கள். அல்லாமல் தங்களுடைய காரியமொன்றும் பலிக்காததினால் தங்களுக்கே வெட்கம் வந்தோ, அல்லது சர்க்காருக்கு ஒரு உணர்ச்சி உண்டாவதற்கோ விலகினவர்களல்ல.

## எவ்வளவு நாளைக்கு விலகியிருப்பார்கள்?

அடியோடு ஒன்றும் ராஜிநாமாக் கொடுத்து வெளியில் வந்தவர்களல்ல. மறுபடியும் நாளைக்கு வேண்டுமானாலும் இவர்கள் போவதற்கு இடம் வைத்துக் கொண்டுதானிருக்கிறார்கள். மறுபடியும் உள்ளே போய் மூன்று வருடம் உட்கார்ந்து, பதவியும், உத்தியோகமும், பணமும் சம்பாதித்துக்கொள்ள சவுகரியம் கிடைக்கிற வரையில்தான் வெளியிலிருப்பார்கள்.



## விலகின பின் இவர்களுடைய வேலை என்ன?

வோட்டர்களிடம் போய் நாங்கள் வெளியில் வந்து விட்டோம்; எங்களுடைய வீரப் பிரதாபத்தைப் பார்த்தீர்களா? ஆதலால் எங்களை மறுபடியும் அனுப்புங்களென்று வோட்டர்களை ஏமாற்றுவதுதான் இவர்களுடைய முக்கிய வேலை. இவர்களின் நிலையோ சட்டசபையை விட்டு வெளியேறுங் காலத்தில் கக்ஷித் தலைவர் பண்டிதநேரு சொல்லியதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

"சர்க்காரை நாங்கள் பயமுறுத்தவில்லை; சர்க்காருக்கு மகத்தான அதிகாரங்கள் உண்டு; சர்க்காரை எதிர்க்கத் தகுந்த பலம் எங்களிடம் கிடையாது; தேசத்தில் சமூக வேற்றுமை ஏற்பட்டு ஒற்றுமைக் குலைந்திருக்கிறது. ஆதலால், சட்டமறுப்புச் செய்ய எங்களால் ஆகாது. இந்த நிலைமையில் சட்டசபையில் நாங்களிருப்பதில் பிரயோஜனமில்லை. இவ்வளவு பலமுள்ள பெரிய சர்க்காரை ஒழித்துவிடும் நோக்கத்துடன் நாங்கள் வெளியே போகவில்லை. நாங்கள் ஆசைப்பட்டாலும் அது ஆகிற காரியமல்ல. எவ்வளவு கெஞ்சிக் கூத்தாடியும், எங்கள் நோக்கங்களை அடைய முடியவில்லை என்றே வெளியே போகிறோம். வெகு நாளைக்கு முன்னமேயே நாங்கள் சட்டசபையை விட்டுப் போயிருக்க வேண்டும்; சர்க்காருடைய தந்திரம் எங்களை ஏமாற்றிவிட்டது. ஆதலால் நாங்கள் இங்கிருப்பதில் பிரயோஜனமில்லை, போய் வருகிறோம்" என்று சொல்லியிருக்கிறார். இது உண்மையான விஷயம். ஆனால், ஒரு கக்ஷியார் இந்த உண்மையை அறிந்து இந்த தத்துவத்திற்காக வெளியானது உண்மையாய் இருந்து அவர்களுக்கு சுயமரியாதையும் யோக்கியப் பொறுப்பும் இருக்குமானால் மறுபடியும் தாங்கள் விட்டுவந்த சட்டசபையைத் திரும்பிப் பார்ப்பார்களா? மற்றவை மறுமுறை விபரமாய் எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 14.03.1926**



RangaRakes tamilnavarasam.com

# பிராமணர்களுக்கு ஒரு கை ஒடிந்தது
# மந்திரிகளுக்கு ஒரு உபத்திரவம் ஒழிந்தது

**-சித்திரபுத்திரன்**

சென்னை சட்டசபையில் கொழுத்த சம்பளம் பெறும் மந்திரிகளை பொறாமைக் கொண்டு வேண்டுமென்றே உபத்திரவப்படுத்த நமது பிராமணர்களுக்கு ஸ்ரீமான்கள் C.ராமலிங்க ரெட்டியார் அவர்களும் A.ராமலிங்க செட்டியார் அவர்களும் வலக்கை இடக்கை போல் கொஞ்சக் காலமாய் இருந்து வருகிறார்கள். இதில் ஸ்ரீமான் ரெட்டியாருக்கு மாதம் 2000 ரூபாய் சம்பளத்தில் ஒரு உத்தியோகம் கிடைத்துவிட்டது. இதனால் பிராமணர்களுக்கு ஒரு கை ஒடிந்ததென்றுதான் சொல்ல வேண்டும். மந்திரிகளுக்கும் ஒரு உபத்திரவம் குறைந்தது என்றுதான் சொல்லவேண்டும். இதுபோலவே நமது ஸ்ரீமான் செட்டியார் அவர்களுக்கும் ஒரு உத்தியோகம் ஏற்பட்டு விட்டால் பிராமணர்களின் மற்றொரு கையும் தற்கால சாந்தியாய் ஒடியும். மந்திரிகளின் முழு உபத்திரவமும் நீங்கிப் போகும். மந்திரிகளின் அறியாமையினால் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை மந்திரிகள் நழுவ விட்டுவிட்டார்கள். அதாவது, சட்டசபை பிரசிடெண்டு உத்தியோகத்தை செட்டியாருக்கு கொடுக்கத் தவறிவிட்டதுதான். இதை மந்திரிகளின் மன்னிக்க முடியாத குற்றமென்றுதான் சொல்வேன். இவ்விருவருக்கும் தயவுக்காக யாரும் உத்தியோகம் கொடுக்க வேண்டியதில்லை. இருவரும் அந்தந்த ஸ்தானங்களுக்கு மிகவும் பொருத்தமானவர்கள் - உரியவர்கள் என்றே சொல்வேன். (அந்த ஸ்தானங்கள் பொதுமக்களுக்கு உபயோகப்படக் கூடியதா அல்லவா என்பது வேறு விஷயம்) அவரவர் உரிமை அவரவர்களுக்கு அளிக்கப்படாவிட்டால் விதியை எதிர்பார்த்து பொறுமையுடனிருந்து பெருவோர் சிலர்; விதியையும் பொறுமையையும் வீதியிலெறிந்து விட்டு யுத்தம் செய்து பெறுவோர் சிலர்; அவ்வித யுத்தம் சிலர் தர்ம வழியில் செய்வார்கள்; சிலர் அது நீங்கிய வழியில் செய்வார்கள். ஆனால், நமது மந்திரிகள் இவர்களின் தர்ம யுத்தத்திற்கு மடங்காத மந்திரிகளாய்ப் போய்விட்டதால் பிராமணர்களோடு சேர்ந்து கொண்டு யுத்தம் புரிய வேண்டியதாயிற்று- வேண்டியதாயுமிருக்கிறது. ராமாயணம் என்னும் கதைப்படி ராமரே தனது உரிமையைப் பெற "ராக்ஷதர்களில் ஒருவரான விபூஷணனுடன் ஒப்பந்தம் பேசிக்கொண்டு அவனை ஆழ்வாராக்கி ராவணனோடு சண்டை செய்ய வேண்டியிருந்ததென்றால், நமது ஸ்ரீமான்கள் ரெட்டியாரும் செட்டியாரும் பிராமணர்களோடு சேர்ந்து கொண்டு அவர்களைத் தலைவர்களாக்கி உரிமை பெறுவது தப்பாகுமா? சரியோ - தப்போ தமிழ் மந்திரி பதவியின் முதல் சந்தர்ப்பத்தை ஸ்ரீமான் செட்டியாருக்கு கொடுத்திருக்க வேண்டியது கிரமமானதாகும். செட்டியாரின் அவசரமும் மந்திரிகளின் வீம்பும் இக்கிரமத்திலிருந்து தவறும்படி செய்து விட்டது. இவர்கள் இருவரின் தவறுதல்கள் தமிழ் மக்களை பெரிதும் துன்பத்திற்காளாக்கப் போகிறது. ஆகையால், இனியாவது மந்திரிகள் ஸ்ரீமான் செட்டியாருடன் ராஜி பேசிக் கொண்டு அந்த உபத்திரவத்திலிருந்தும் தப்பித்துக் கொள்ள வழிதேட வேண்டியது. இல்லாவிட்டால் "குடிக்க முடியாமல் போனால் கவிழ்த்த வேண்டியது" என்கிற தத்துவம் தலை சிறந்து விளங்கும். ஆத்துத் தண்ணீரை அப்பா குடி, அய்யா குடி என்று சொல்ல வேண்டியதுதான்.

**குடி அரசு - கட்டுரை - 14.03.1926**





RangaRakes tamilnavarasam.com

# ஈரோடு முனிசிபாலிட்டி

ஈரோடு முனிசிபாலிட்டியின் சேர்மன் நடத்தையைப் பற்றி கவுன்சிலர்கள் அடிக்கடி கோர்ட்டுகளுக்குப் போக ஏற்பட்டதைப் பற்றியும், அரசாங்கத்தாருக்கு அடிக்கடி புகார்கள் போய்க் கொண்டிருப்பது பற்றியும் இதற்கு முன் பல தடவைகளில் குறிப்பிட்டிருக்கின்றோம். இவற்றில் சிங்காரவன விஷயமாக நிறைவேறின ஓர் ஒழுங்கான தீர்மானத்தை விட்டு விட்டு, நிறைவேறாத ஓர் தீர்மானத்தை நிறைவேறியதாக கெட்ட எண்ணங் கொண்டு பொய்யாகவும் அக்கிரமமாகவும் நடவடிக்கைப் புத்தகத்தில் பதிந்து கொண்டார் என்கிற காரணம் கொண்டு ஸ்ரீமான்கள் கே.ஏ.ஷேக் தாவூத் சாயபு, மு.ச. முத்துக்கருப்பன் செட்டியார் முதலியவர்கள் இத்தீர்மானம் நிறைவேற்ற வொட்டாதபடி தற்கால தடை உத்திரவு பெற்றிருந்த விஷயம் நேயர்களறிந்திருக்கலாம். அதன் பிறகு இதே சேர்மன் ஸ்ரீமான் ஸ்ரீனிவாச முதலியார் முனிசிபல் பண விஷயங்களில் நாணயமாய் நடந்துக் கொள்ளவில்லை யென்பதாக பல புகார்கள் அதிகாரிகளுக்கு எட்டியிருப்பதன் பலனாய், சிவில் கோர்ட்டு விவகாரங்களை ராஜி செய்துகொள்ள வேண்டியது சேர்மனுக்கு அவசியமாய்ப் போய்விட்டது. அதை முன்னிட்டே தற்காலம் கோர்ட்டிலிருக்கும் பொய்த் தீர்மான விவகாரம், ராஜி செய்து கொள்ள ஏற்பாடாகி, விவகாரத்துக்கு ஆதாரமாயிருந்த தீர்மானத் தை நடவடிக்கைப் புஸ்தகங்களிலிருந்து எடுத்து விடுவதற்காக ஓர் கூட்டம் கூடி, அந்தக் கூட்டத்தில் எடுபட தீர்மானிக்கப்பட்டுவிட்டது. அத்தீர்மானமாவது:-

"2-11-25-ந் தேதி முனிசிபல் மீட்டிங்கில் நிறைவேறியதாகச் சொல்லப்படும் ஓர் தீர்மானமானது அது உண்மையிலேயே நிறைவேறவில்லையென்கிற காரணத்தால், சில கவுன்சிலர்களுக்குள்ளாகவே உரசல் ஏற்பட்டதோடு, முக்கியமாய் முனிசிபல் நிர்வாகத்திற்குக் கேடாய் இருப்பதால் நடவடிக்கைப் புஸ்தகத்திலுள்ள ஷை தீர்மானத்தை மறைந்து போகும்படி அடித்துவிடவேண்டியது" என்று முனிசிபாலிட்டியிலுள்ள பூரா கவுன்சிலர்களும் ஆஜராகி ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டது!

சேர்மன் அவர்கள் இத்தீர்மானத்தின் வாசகம் ரொம்பக் கடுமையாயும், தனது நாணயத்தைப் பாதிக்கக் கூடியதாகவும் இருக்கிறதென்று எவ்வளவோ சொல்லியும், கவுன்சிலர்கள் அதுதான் உண்மையென்று ஒரே பிடிவாதமாய் அப்படியே நிறைவேற்றினார்கள். இதன் பலனாய் முனிசீப் கோர்ட்டில் இப்போது நடைபெற்று வரும் விவகாரம் பின்வாங்கிக் கொள்ளப்படும்.



இப்பணப்புழக்கமான விஷயங்களைப் பற்றிப் பின்னர் விரிவா யெழுதுவோம்.

நமது நாட்டில் முனிசிபல் நிர்வாகமானது சிற்சில இடங்களில் மிகக் கேவலமாயும், நாணயக் குறைவாயும் நடைபெறும் விஷயங்கள் அரசாங்கத்தாருக்குத் தெரிந்திருந்தும் அலக்ஷியமாயிருந்து வருவதினால் முனிசிபல் நிர்வாகிகள் என்ன வேண்டுமானாலும் செய்யத் துணிந்து விடுகிறார்கள். சர்க்காரார் சிறு விஷயங்களையே கவனித்துத் தகுந்தபடி எச்சரிக்கை செய்திருப்பார்களானால் அநேக பெரிய குற்றங்கள் நேரிடுவதற்கே வழியில்லாமற் போயிருக்கும். முனிசிபல் இலாகாவுக்கும் கெட்டபெயர் ஏற்படவும், குற்றம் சொல்லவும் இடமில்லாமலிருந்திருக்கும். இனியாவது மந்திரிகள் கவனித்து தக்கது செய்வார்களென்று நினைக்கிறோம். இவ்விஷயம் மந்திரிகள் ஞாபகத்திற்குக் கொண்டுபோகவேண்டுமென்று நாள் இது வரையில் நினைக்கவேயில்லை. ஆனால், நிலைமை நாளுக்கு நாம் ரொம்பவும் கேவலப்பட்டு வருவதோடு வெறு வாயை மென்றுகொண்டிருக்கும் நமது மந்திரிகளின் எதிரிகளுக்கு அவல் கிடைத்தது போலாகுமென்றே இதைக் குறிப்பிடுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 14.03.1926**



RangaRakes tamilnavarasam.com

## கோயமுத்தூரில் காங்கிரஸ் பிரசாரத்தின் யோக்கியதை !

சில தினங்களுக்குமுன் கோயமுத்தூர் சேர்மெனின் சில பிராமண விரோதிகளும், அவர்கள் வாலைப்பிடித்துக்கொண்டு வயிறு வளர்க்கும் சில பிராமணரல்லாதாரும் சேர்ந்து காங்கிரஸ் மீட்டிங்கு என்பதாக பெயர் வைத்து காங்கிரஸ் கொடியுடன் டவுன்ஹாலில், ஒரு கூட்டம் கூடினார்கள். அக்கூட்டத்தில் ஒரு பிராமணர் அக்ராசனம் வகிக்கவும், மற்றொரு பிராமணர் பேசவும் சில பிராமணர்கள் உட்கார்ந்து கொண்டு சிரிக்கவுமாய் இருந்தது. இந்நிலைமையில் பேசிய பிராமணர், சேர்மெனையும், மற்றும் சில பிராமணரல்லாத கவுன்சிலர்களையும், வைதுகொண்டே வரும் போது, மற்ற பிராமணர்கள் சிரிக்கும் ஆனந்தத்தில் மூழ்கியிருக்க உபந்யாசகர் முனிசிபல் கவுன்சில்களில் சேர்மெனுக்கு அனுகூலமாயிருக்கும் கவுன்சிலர் களெல்லாம் கைதூக்கும் கழுதைகள் என்று சொன்னார். கூட்டத்திலிருந்த ஒருவர், உடனே அடங்காக் கோபப்பட்டு, உபந்யாசகரை அவமானப்படுத்தவும், துன்புறுத்தவும் பிரயத்தனப்பட்டார். அவர் பக்கத்திலிருந்த ஒருவர், அதை தடுத்துப் பக்கத்தில் தேசியக் கொடியும் மகாத்மாகாந்தியின் படமும் இருக்கிறது போலிருக்கிறது, உபந்யாசகர் மேல்படுவதினால் நமக்குக் கவலையொன்றுமில்லை; தேசீயக்கொடியின் மீது விழுந்தால் பெரிய தோசமல்லவா, ஆதலால் மீட்டிங்கு கலைந்து வெளியில் வந்த பிறகு நீங்கள் அவரை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று சொல்லித் தடுத்துவிட்டார். மீட்டிங்கு கலைந்தபிறகு, உபந்யாசகர்களுக்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்று தயாராகயிருந்தார்கள். இது விசயத்தை கூட்டத்து அக்ராசனாதிபதி அறிந்து, உபந்யாசகர் இம்மாதிரி இழிதன்மையாய் பேசியதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டதின் பேரிலும், மற்றும் சில பெரியவர்கள் பிரயத்தனப்பூர்வமாய் இதை அடக்கியதன் பேரிலும், விசயம் அவ்வளவோடு நின்று விட்டதாய்த் தெரிகிறது. இதிலிருந்து மகாத்மாவின் பெயரும் அவருடைய கொடியும் எவ்வளவு யோக்கியப் பொருப்பில்லாமல் உபயோகப்படுகின்றதென்றும், காங்கிரஸ் கூட்டமும், காங்கிரஸ் செல்வாக்கும் எவ்வளவு அல்பத்தனமும், நீச்சத்தனமுமான காரியங்களுக்கு உபயோகப்படுகின்றதென்பதையும், கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து, பதினாயிரக்கணக்கான பேர் ஜெயிலுக்கு போய், நூற்றுக்கணக்கான பேர்கள் பிராணனை விட்டு, செல்வாக்கும், பெருமையும் சம்பாதித்த நமது இந்திய தேசீய காங்கிரஸானது,



இழிமக்கள் கையிலும், காங்கிரசிற்காக யாதொரு விதமான உதவியும் செய்யாத சுயநலக்காரர்கள் கையிலும் சிக்கிக்கொண்டு, தங்கள் வயிற்று பிழைப்புக்கு பணங் கொடுக்காதவர்களையும் வையவும் பிராமணர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு பிராமணரல்லாதாரைத் தூற்றவும் உபயோகப் படுகிறது. இம்மாதிரி ஜனங்கள் உள்ளவரை நமது நாட்டுக்கு விடுதலையென்பது கனவேயாகும்.

**ஒரு நிருபர்.**

**குடி அரசு – செய்தி விளக்கம் – 14.03.1926**



RangaRakes tamilnavarasam.com

# டிப்டி கலெக்டர் உத்தியோகம்

இவ்வுத்தியோகமானது நமது நாட்டின் ராஜ்ய பாரத்திற்குக் கடுகளவு உபயோகமும் இல்லாமல் – வெறும் தபாலாபீசைப் போல் காகிதம் வாங்கி மேலாபீசுக்கு அனுப்புவதும் – அரசாங்க ஜாதியாரின் சுய நன்மைக்காகவே இருந்து நமது பணத்தின் ஒரு முக்கிய பாகத்தைச் செலவு செய்து கொண்டும் வருகிறது. சுமார் 30 வருடங்களுக்கு முன்பாக ஒரு ஜில்லாவை 4-4 தாலூக் காக்கள் கொண்ட 2 டிவிஷன் அல்லது மூன்று டிவிஷன்களாகப் பிரித்து சப் கலெக்டர் என்பவருக்கு ஒரு டிவிஷனும் ஹெட் அஸிஸ்டெண்டு கலெக்டர் என்பவருக்கு ஒரு டிவிஷனும், அஸிஸ்டெண்டு கலெக்டர் என்பவரை ஜில்லாக் கலெக்டர் என்பவர் தன்னிடம் வைத்துக்கொண்டு அவருக்கு ஒரு சின்ன டிவிஷனுமாய் கொடுத்து வந்தார்கள். அப்படியிருந்தாலும் அவர் களுக்குப் பலவேலைகள் இருக்கும். அதாவது கிரிமினல் கேசு விசாரணை கள், கிரிமினல் அப்பீல்கள், ரிவின்யூ வேலைகள் முனிசிபாலிட்டி மேற் பார்வை, தாலூகா போர்டு மேற்பார்வை, இன்கம்டாக்ஸ் போடும் விஷயம், நீர்க்கூலி விதிப்பது, சிவாஜிநாமா உத்திரவு முதலியவைகள் போடுவது, நேரில் பார்ப்பதும் ஆகிய வேலைகள் இருக்கும். இவருக்குக் கீழே உள்ள தாசில்தா ருக்கும் ரிவின்யூ வேலையுடன் கிரிமினல் வேலையும் நிறைய இருக்கும். இப்போது மூன்று டிவிஷனை, 2-2 தாலூக்காக்கள் கொண்ட 5 டிவிஷன் களாக்கி 5 டிப்டிக் கலெக்டர்களுக்குக் கொடுத்து கலெக்டருக்கும் உதவிக்காக ஒரு டிப்டிக் கலெக்டர் கொடுத்து, ஆக ஜில்லா ஒன்றுக்கு அய்ந்து, ஆறு டிப்டி கலெக்டர்களாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அல்லாமலும், தாசில்தார்களுக்கு இருந்த கிரிமினல் உத்தியோகத் தையும் பிரித்து சப் மாஜிஸ்ட்ரேடு என்றும், டிப்டி தாசில்தார் என்றும் உத்தி யோகங்களை ஏற்படுத்தி அவர்களுக்கு அதை ஒப்புவித்துவிட்டு, டிவிஷ னல் ஆபீஸர் அல்லது டிப்டி கலெக்டர்கள் என்பவர்களுக்கு இருந்த ரிவின்யூ வேலைகளையும் பெரும்பாலும் தாசில்தார்களுக்கே கொடுத்து விட்டார்கள். அல்லாமலும் அவர்களுக்கு இருந்த மற்ற வேலைகளும் – அதாவது முனிசிபல் சம்பந்தமான வேலைகள் , தாலூகா போர்டு சம்மந்த மான வேலைகள் இவைகள் முழுவதிலும் டிப்டி கலெக்டருக்கு ஒரு வேலையும் இல்லாமல் போய்விட்டது. இன்கம்டாக்ஸ் வேலையும் டிப்டி கலெக்டர்களிடமிருந்து பிடுங்கி இன்கம்டக்ஸ் ஆபீஸர் என்ற ஜில்லா ஒன்றுக்கு 2 அல்லது மூன்று பேர் வீதம் கொண்ட வேறு டிபார்ட்மெண்டு



ஏற்படுத்தி அவர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டுப் போய்விட்டது. முக்கிய பட்டணங்களில் முதல்வகுப்பு பெஞ்சு கோர்ட்டு ஏற்படுத்தி விட்டதால் கிரிமி னல் அப்பீல்களும் குறைந்து போய்விட்டது. பல தாசில்தார்களுக்கு முதல் வகுப்புக் கிரிமினல் அதிகாரம் கொடுக்கப்பட்டதால் டிப்டி கலெக்டர்கள் விசாரிக்கத் தகுந்த கேஸ்களும் தாசில்தார்களுக்கு அனுப்பத் தகுந்ததாய்ப் போய்விட்டது. இவ்வளவு அதிகாரங்களும், வேலைகளும் குறைந்திருக்க, எண்ணிக்கையும் சம்பளமும் குறையாமல், அதிகாரம் குறைந்து விட்டதால் மேல்வரும்படியும் குறைந்திருக்கும் என்கிற எண்ணங்கொண்டு செய்தது போல் பிறர் நினைக்கும்படி சம்பளங்களையும் ஒன்றுக்கு ஒன்றரையாய் உயர்த்தப்பட்டும் போய்விட்டது. சாதாரணமாய் இப்பொழுது டிப்டி கலெக்டர் என்பதும், டிப்டி கலெக்டர் ஆபீஸ் என்பதும் ஒரு தபாலாபீசைப் போல் கீழே இருந்து வரும் காகிதங்களை முத்திரை போடுவது போல் டிப்டி கலெக்டர் கையெழுத்துப் போட்டு மேலே அனுப்புவதும், மேலே இருந்துவரும் காகிதங்களை ஷ வீதம் கீழே அனுப்புவதுமான வேலைகளைத் தவிர டிப்டி கலெக்டர்களுக்கென்று என்ன அசல் (ஒரிஜனல் வொர்க்) வேலை இருக்கிறது? டிப்டி கலெக்டர்கள் 500,600, 800, 1000, 1200 என்று சம்பளங்களை வாங்கிக்கொண்டு ஆபீஸ்களுக்கு வந்து மேஜையின் மேலே முழங்கையை வைத்து, தாவாக்கொட்டையை உள்ளங்கைகளில் தாங்கிக்கொண்டு குறிப்பில் (டைரியில்) என்ன வேலை செய்ததாக எழுதிக்காட்டலாம் என்று யோசிப் பதும், பிரயாணச் செலவு பெற (டிராவலிங் அலவன்ஸ் ) நாளைக்கு எந்த ஊர் போகலாம் என்பதும், கலெக்டர் தயவு பெற யார் பேரில், என்ன விதமான ரகசிய யாதாஸ்து (கான்பிடென்ஷியல் ரிப்போர்ட்) எழுதலாம் என்கிற யோசனையும், கலெக்டர்களுக்கு மீனும், முட்டையும், கோழியும், ஆடும் வாங்கிக் கொடுப்பதும் துரைசானி தயவு சம்பாதிக்க வாசற்படியில் காத்தி ருந்து, மூக்கு நிலத்தில் படும்படி குனிந்து சலாம் போடுவதுமல்லாமல், வேறு ஒரு தொழிலுமே இல்லாமல் போய்விட்டதோடு, அநாவசியமாய் ரிவின்யூ வேலைகளை இரட்டிக்கவும், காலதாமதமாகவும், பொதுஜனங்களுக்கும் ஒரு வேலை ஆகவேண்டுமானால் தாசில்தார் தயவு, தாசில்தார் ஆபீஸ் குமாஸ் தாக்கள், சேவகர்கள் தயவு சம்பாதிப்பதோடல்லாமல் டிப்டி கலெக்டர் தயவும், அந்த ஆபீஸ் குமாஸ்தா சேவகர்கள் முதலியவர்கள் தயவும் பெற வேண்டியது அவசியமான இரட்டிப்பு கஷ்டமும், நஷ்டமும், காலதாமதமும் ஆகும்படியாய் ஏற்பட்டு விடுகிறது.

இந்த ஒரு இலாகாவால் நமது வரிப்பணத்தில் ஏறக்குறைய ரூ.1 – க்கு ஒரு அணா வீதம் அநாவசியச் செலவு ஆகிறது.

அதாவது:– நமது மாகாணத்தில் இது சமயம் ஏறக்குறைய 150 காயம்(பர்மனெண்ட்) டிப்டிக் கலெக்டர்களும், சுமார் 90 அல்லது 100 ஆக்டிங் டிப்டிக் கலெக்டர்களும் இருக்கின்றார்கள். இந்த 150 பேருக்கும் ஆள் 1 – க்கு மாதம் 1-க்கு 300 ரூபாய் முதல் 1200 ரூபாய் வரை சம்பளம் கொடுக்கப்



RangaRakes
tamilnavarasam.com

படுகின்றன. ஆக்டிங் டிப்டி கலெக்டர்களும் மாதம் 300 ரூ. குறையாமல் 500 ரூ. வரை கூட வாங்குகிறார்கள்.

இவர்களுக்காக என்ன குறைந்தாலும் நமது மாகாணத்தில் மட்டும் 150 ஆபீஸ்கள் வரை டிப்டி கலெக்டர் ஆபீஸ் என்ற பெயராலேயே இருந்து வருகிறது. இவர்களுக்கு குமாஸ்தாக்கள் 80 ரூ. சுமாரில் 2 பேர், 35 முதல் 60 ரூ. சுமாரில் 3 பேர் ஆக 5 குமாஸ்தாக்களுக்கு குறையாமலும், பியூன்கள் என்று சொல்லும் பில்லை சேவகர்கள் 5 பேரும், இவர்களுக்கும் சராசரி *மீ* 75 ரூபாயும், கண்டிஞ்செண்ட் *மீ* 200 ரூபாயும், பிரயாணச் செலவு (டிராவலிங் அலவன்ஸ்) *மீ* 250 ரூபாயும், ஆக ஒரு டிப்டி கலெக்டர் ஆபீசுக்கு மாதத்தில் சராசரி கட்டட வாடகை உட்பட 1600 ரூபாய் வீதம், வருடத்திற்கு சுமார் 20,000 ரூபாயும், இம்மாதிரி 150 ஆபீஸ்களுக்கு 30,00,000 ரூ. (முப்பது லக்ஷம் ரூபாய்) இவர்களுக்குப் பென்ஷன், லீவு வகையறா, ஆக்டிங் டிப்டிக் கலெக்டர்கள் முதலியவைகளும் சேர்த்தால், அதுவும் கிட்டத்தட்ட 4 அல்லது 5 லக்ஷம் ரூபாய்க்கு குறையாது. ஆக, சுமார் வருடம் 1- க்கு 35 லக்ஷம் ரூபாய் செலவாகிறது.

இதல்லாமல் ஜனங்கள் இவர்கள் தயவு பெறக் கொடுக்கும் விலையும், சப்ளையும், மற்றும் பல இழிதொழில்கள் செய்வதன் மூலமும் எவ்வளவோ பணம் செலவாகிறது. ஆக இவ்வளவும் குடிகளுடைய பணம் அநாவசியமாய்ச் செலவாவதோடு அலைச்சல், ஒழுக்கக் குறைவு எவ்வளவு ஏற்படுகின்றன. இதல்லாமல் இந்த உத்தியோகங்களுக்குப் போட்டி போடுவதன் மூலம் நம்மில் படித்தவர்கள், புத்திசாலிகள் என்று சொல்லத்தக்கவர்கள் எவ்வளவு தூரம் தங்கள் மனச்சாக்ஷியை விற்கவும் அடிமையாகவும் நேரிடு கிறது. இவற்றை நமது நாட்டினர் கவனிப்பதில்லை. நமது நாட்டினரை ஏமாற்றிச் சட்டசபைக்குப் போகும் படித்தவர்கள், புத்திசாலிகள் என்று சொல்லிக் கொள்ளும் பிரதிநிதிகளும் இதைப்பற்றிப் பேசப் பயப்படுகிறார்கள். ஏனென்றால், இம் மாதிரி உத்தியோகங் களைக் கொண்டு தானே தங்கள் இனத்தார்கள் பிழைக்க முடியும்; சர்க்காருக்கும் இம் மாதிரி உத்தியோகமான பல துண்டுகள் கைவச மிருந்தால்தானே கடிக்க வருவதற்கெறிந்தது போல் ஆளுக்கொரு துண்டு வீசலாம். சர்க்கார் ஜாதியார் பிழைக்கவும் படித்த ஜாதியார் பிழைக்கவும் ஏழை ஜனங்கள் பணம் எவ்வளவு வீணாகிறது. இம்மாதிரி அதிகச் செலவும் இன்னமும் போலீஸ் இலாகாவில் சர்க்கில் இன்ஸ்பெக்டர் என்கிற தெண்ட உத்தியோகத்திற்கு அழுகும் செலவும், டெட்லெட்டர் ஆபீஸ் என்று சொல்லத் தகுந்த ரிவின்யு போர்டு ஆபீசும் ஒழிந்தால், கள்ளு வரும்படி நின்றால் சர்க்கார் எப்படி நடைபெறும் என்று யாரும் பயப்பட வேண்டியதே இல்லை.

இதைக் கவனிப்பவர்கள் யாரும் இல்லை. இரண்டொரு வருடங்களுக்கு முன்பு டிப்டி தாசில்தார்களைக் குறைத்துவிடலாம் என்று சர்க்காரே யோசனை செய்து பொதுஜன அபிப்பிராயம் கேட்ட போது நம் ஜில்லா சட்ட



சபை மெம்பர் ஸ்ரீமான் சி.வி.வெங்கிட்டரமணய்யங்கார் அதை எடுக்கக் கூடாது; எடுத்தால் பிராமணர்களுக்கு வேலை குறைந்து போகும் என்ற கருத்துடன் அதை எதிர்த்து அவ்வுத்தேசத்தைப் பாழாக்கிவிட்டார். எலும்புருக்கு வியாதி மாதிரி இந்த உத்தியோகங்களும் இம்மாதிரி சட்டசபை மெம்பர் ஜாதியும் நமது நாட்டுக்குப் பெரிய ஆபத்தாயிருக்கிறது.

**குடி அரசு - கட்டுரை - 21.03.1926**



RangaRakes tamilnavarasam.com

# கொங்கு வேளாளர்

## மஹாநாட்டின் தீர்மானத்தின் பலன்

ஈரோடு தாலூக்கா வாயப்பாடி சாராயக்கடை 1-3-26 தேதி ஏலம் போடப்பட்டது. அவ்வூர் பிரபல மிராசுதாரரும் கொங்கு வேளாள குலத்தினருமான ஸ்ரீமான் ரத்தினசாமிக் கவுண்டர் குமாரர் முத்துசாமிக் கவுண்டர் ஏலமாகுமிடத்துக்கு விஜயம் செய்து வேளாள குலத்தினர் யாரும் வாயப்பாடி சாராயக்கடையை எடுக்கக்கூடாதென்று கேட்டுக்கொண்டார். அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்கி, ஏலம் கூற வந்திருந்த வேளாள குலத்தினர் ஏலம் கூறாமல் நின்றுவிட்டனர். வேளாள குலத்தினர் நின்றுவிடவே மற்றெவரும் ஏலம் கூறவில்லை. அதிகாரிகள் என்ன முயற்சித்தும் ஒருவரும் கடை எடுக்கவில்லையென்று கேட்டு சந்தோஷிக்கிறோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 21.03.1926**



# இதுவா வீரம்? இதுவா வீர மொழி?

நமது நாட்டுப் பத்திரிகைகளில் ஒன்றுகூடத் தவறாமல் அதாவது பிராமணப் பத்திரிகைகள், பிராமணரல்லாத பத்திரிகைகள், மகமதியப் பத்திரிகைகள் ஆகிய அனைத்தும் சுயராஜ்யக் கட்சியினர் சட்டசபைகளை விட்டு வெளியேறினதை மெச்சியும், ஆதரித்தும் வெளியேறினதற்கு பண்டிதநேரு சொல்லிய காரணங்களை "பண்டிதரின் வீர மொழிகள்" என மகுடமிட்டும் பிரசுரிக்கின்றன. பிராமணப் பத்திரிகைகளைப் பற்றியோ, அவர்களால் ஆட்கொள்ளப்பட்ட பத்திரிகைகளைப் பற்றியோ கவலைப் படாது தள்ளிவிடினும் மற்றைய சுயேச்சை பத்திரிகைகளுக்காவது ஆத்மா உண்டா? இல்லையா? என்பதும் உண்மையை அறிய ஆற்றலுண்டா? இல்லையா? என்பதும் அல்லது எல்லாமிருந்தும் தன் காலில் நிற்கச் சக்தியற்று கூட்டத்தில் கோவிந்தா போட்டுக் கொண்டுகாலங்கடத்துகிறார்களா வென்பதும், அல்லது முரட்டு வெள்ளத்தில் நாம் எப்படி எதிர் நீச்சல் நீந்துவது என்று பயந்து பொறுப்பு இழந்து வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகிறார்களாவென்பதும், அல்லது ராஜதந்திரம் என்றால் சிலர் எதுவேண்டுமானாலும், என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்களே, அதுபோல நினைத்து அதைப் பின்பற்றுகிறார்களாவென்பதும், அல்லது நிர்வாண தேசத்தில் கோவணம் கட்டுகிறவன் பயித்தியக்காரன் ஆவது போல், பித்தலாட்ட அரசியல் கூட்டத்திலிருந்து கொண்டு நாம் ஒருவன் மாத்திரம் உண்மை பேசி ஏன் பயித்தியக்காரனாக வேண்டும் என்று பயந்து கொண்டிருக்கிறார்களாவென்பதும் நமக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இவர்களில் சுயநலத்திற்காகவும், ராஜ தந்திரத்திற்காகவும், எழுதுபவர்களைப் பற்றி நாம் ஒரு சிறிதுகூட கவலைப்படவே இல்லை. தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் இரண்டொரு பத்திரிகைகளை அதாவது சுயநலத்திற்கோ, சுயவாழ்விற்கோ அல்லாமல் பொது நலத்திற்கென்றும் உண்மை வெளியீட்டிற்கென்றும் உழைத்து வருகிற தென்று நாம் கருதியிருக்கும் பத்திரிகைகளுக்கு மறுபடியும் ஒரு முறை "வெளியேறி" யதைப் பற்றியும் "வீரமொழி" யைப் பற்றியும் ஞாபகப்படுத்துகிறோம். அதாவது, வெளியேறியிருக்கிறவர்கள் ஒவ்வொருவரும் ராஜிநாமா செய்யாமல் சட்டசபை அங்கத்தினர் என்னும் பதவியை வைத்துக்கொண்டேதான் இருக்கிறார்கள் என்பதையும், இப்பதவியின் செல்வாக்கையும், வெளியில் வந்து விட்டோம் என்று சொல்லும் தந்திரத்தையும், புரட்டையும் ஆதாரமாய் வைத்துப் பொது ஜனங்களை ஏமாற்றி வோட்டு வாங்கி மறுபடியும் சட்டசபைக்குள் நுழைவதற்காகவே



RangaRakes tamilnavarasam.com

வெளியில் வந்திருக்கிறார்கள் என்பதையும், இதற்காதாரமாக வெளியில் வந்தவர்களில் அநேகம் பேர் சுயராஜ்யக் கட்சியின் கொள்கைகள் என்று சொல்லப்படுவதையும், காங்கிரஸ் கொள்கை என்று சொல்லப்படுவதையும், நிர்மாணத்திட்டத்தின் தத்துவங்களையும் கொஞ்சங்கூட ஒப்புக் கொள்ளாத வர்கள் என்பதையும், அதாவது சிலர் பட்டதாரிகளாகவும், சிலர் சர்க்காரின் பல நியமனப் பதவி பெற்றவர்களாகவும், சிலர் கதரில் நம்பிக்கை இல்லாதவர் களாகவும், சிலர் தீண்டாமையில் நம்பிக்கை இல்லாதவர்களாகவும், சிலர் மதுவிலக்கில் கவலையுள்ளவர்கள் போல் வாயால் மட்டும் பேசிவிட்டு மது உற்பத்தியிலும், மது விற்பனையிலும், மதுபானத்திலும் வாழ்கிறவர்க ளாகவும் இருப்பதை ஒவ்வொருவரும் நடுநிலைமையிலிருந்து கவனித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

“நேருவின் வீர மொழி” என்பதை மறுபடியும் ஞாபகப்படுத்துகிறோம். பண்டித நேரு கடைசியாய்ச் சொன்னதாவது:-

1. சர்க்காரை நாங்கள் பயமுறுத்தவில்லை.
2. சர்க்காருக்கு மகத்தான அதிகாரங்களுண்டு.
3. சர்க்காரை எதிர்க்கும் பலம் எங்களுக்கு இல்லை.
4. தேசத்தில் சமூக வேற்றுமையால் ஒற்றுமையில்லை.
5. ஆதலால் சட்டமறுப்புச் செய்ய எங்களால் ஆகாது.
6. இந்த நிலைமையில் நாங்கள் சட்டசபையில் இருப்பது பிரயோஜனம் இல்லை.
7. இவ்வளவு பலமுள்ள பெரிய சர்க்காரை ஒழித்துவிடும் நோக்கத் துடன் நாங்கள் வெளியேறவில்லை.
8. நாங்கள் ஆசைப்பட்டாலும் அது ஆகிற காரியமும் அல்ல.
9. சர்க்காரை நாங்கள் எவ்வளவு அடி பணிந்து கெஞ்சியும் எங்கள் நோக்கங்களை அடைய முடியவில்லை.
10. அதனாலேயே வெளியே போகிறோம்.
11. வெகுநாளைக்கு முன்னரே நாங்கள் வெளியே போய் இருக்க வேண்டும்.
12. சர்க்காரின் தந்திரத்தால் நாங்கள் ஏமாந்து போய்விட்டோம்.
13. இனி நாங்கள் இங்கு இருப்பதில் யாதொரு பிரயோஜனமும் இல்லை.
14. இந்த பொம்மை சபைகளில் இனி எங்களுக்கு வேலை இல்லை.
15. தேசத்தின் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நாங்கள் வெளியே போகிறோம்.

என்று சொல்லி இருக்கிறார்.

இந்த தத்துவம் கொண்ட வாக்கியங்களில் எந்த வரியிலாவது எந்த வார்த்தையிலாவது வீரமிருக்கிறதா? வென்பதை கவனித்துப் பார்க்கும் படியும், கோழைத்தனமும் முதுகு காட்டி ஓடுந்தன்மையுமாவது இல்லாமல் இருக்கிறதா? என்பதை மனதறியச் சொல்லும்படி வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறோம். பத்திராதிபர்களாக இருப்பவர்கள் தேசத்திற்கு நன்மை செய்யா விட்டாலும், தேசமக்களை நல்வழிப்படுத்தா விட்டாலும், தேசத் துரோகமும் கொலைபாதகமுமாவது செய்யாமல் இருக்க வேண்டாமா என்றுதான் ஆசைப்படுகிறோம். மகாத்மா காந்தியைப் பின்பற்று கிறோம் என்று தப்பித்துக் கொள்ளுகிறவர்களை உண்மையில் மகாத்மா காந்தியையே பின்பற்றுகிறார்களா என்று மனதில் கை வைத்துப் பார்க்கும் படிக்கும் பிரார்த்திக்கிறோம்.

நிற்க, மேற்கூறிய பல வாக்கியங்களால் பண்டித நேருவால் வர்ணிக்கப் பட்ட சட்டசபைகளுக்கு சுயராஜ்யக் கட்சியார் மறுபடியும் எதற்காகப் போக வேண்டும்? பொது ஜனங்களும் எதற்காக இவர்களுக்கு வோட்டுச் செய்ய வேண்டும்? முதலாவது சுயராஜ்யக் கட்சி என்பது எதற்காக நமது நாட்டிலி ருக்க வேண்டும்? சட்டசபையாலேயே ஒரு காரியமும் செய்ய முடியாது; சட்டமறுப்புக்கும் தேசம் தயாராயில்லை; தாங்கள் சட்டசபையில் பெரும் பான்மையோராக இருந்து பல தீர்மானங்கள் செய்தும் யாதொரு பலனும் இல்லை என்று ஆகிவிட்டால் மறுபடியும் சட்டசபையில் புகுவதில் பயன் என்ன? வெளிவருவதில் பயன் என்ன? மெஜாரிட்டியாராயிருப்பதில் பயனென்ன? ஆகிய இவைகளைக் கவனித்துப் பார்ப்பார்களானால் உண் மை விளங்காமல் போகாது. பத்திரிகைகள் விஷயம் இப்படி இருந்தாலும் ஆங்காங்கு நடக்கும் பிரசாரங்களின் தன்மையோ வெளியில் எடுத்துச் சொல்வதற்குக்கூட வெட்கமாயிருக்கிறது. தேசத்தின் பெயரால் தியாகம் செய்ததாயும், சிறைக்குச் சென்றதாயும் சொல்லப்பட்டவர்களில் பலர் தங்கள் அறியாமையாலும், வயிற்றுக் கொடுமையாலும், சுயநலத்தினாலும், பலஹீனத் தினாலும் கட்டுண்டு இப் போலித் தொண்டு பிரசாரத்தில் இறங்கி தேசம் பாழாகும் வண்ணம் பாமர ஜனங்களிடையே பிரசாரம் செய்து வருகிறார்கள். இதைப்பற்றி நாம் மிகுதியும் வருத்தப்பட வேண்டியதாயிருந்தாலும், பாமர ஜனங்கள் அடியோடு மூடர்கள் என்று நம்புவதற்கில்லாமல், இப்போலிப் பிரசாரங்கள் நடக்கும் கூட்டங்களிலெல்லாம் கூட்டத்திற்கு வரும் ஜனங்கள் ஏமாந்து கேட்டுக் கொண்டிருக்காமல் பிரசாரர்களின் சூழ்ச்சிகளை அறிந்தி ருப்பதற்கு ஆதாரமாய் பல கேள்விகள் கேட்பதும், அதற்குப் பதில் சொல்ல முடியாமல் பிரசாரகர்கள் கூட்டத்தை அவசரத்தில் முடித்துக்கொண்டு ஓடுவதும், கேள்வி கேட்பவர்களுக்கு லஞ்சம் கொடுத்து வாயடக்குவதுமான காரியங்களால் பொது ஜனங்கள் இன்னமும் சரியானபடி ஏமாறவில்லை என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

**குடி அரசு - தலையங்கம் - 21.03.1926**





RangaRakes tamilnavarasam.com

# பி. வரதராஜலு நாயுடு -

## பிராமணர்களின் கொடுமையும் குறும்புத்தனமும்

**-சித்திரபுத்திரன்**

மாயவரம் முனிசிபாலிட்டியில் ஸ்ரீமான் வரதராஜலு நாயுடுவுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் வந்தபொழுது, சில பிராமணர்கள் அதை எதிர்த்தார்கள். இவர்கள் எதிர்ப்பை அலட்சியம் செய்து மற்ற கவுன்சிலர்கள் ஒரேயடியாய் நிறைவேற்றி விட்டார்கள். தங்கள் ஆக்ஷேபனை பலிக்கவில்லை என்று நினைத்த ஷை பிராமணர்கள் அதோடு சும்மாயிராமல் அரசாங்கத்தாருக்கு அடியிற் கண்டபடி தந்தி கொடுத்தார்கள். அதாவது "மாயவரம் முனிசிபாலிட்டியார் டாக்டர் வரதராஜலு நாயுடுவுக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தால் மாயவரத்தில் சமாதானத்திற்கு மிகவும் பங்கம் வரும். ஆதலால், அரசாங்கத்தார் இத்தீர்மானத்தை நிராகரித்து விடவேண்டும்" என்று கண்டிருந்ததாம். இது எவ்வளவு அயோக்கியத்தனமான காரியம் என்பதை வாசகர்கள்தான் முடிவு செய்யவேண்டும். ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், கலியாணசுந்தர முதலியார், ராஜகோபாலாச்சாரியார் முதலியவர்களுக்கு வாசித்துக் கொடுக்கும் உபசாரப் பத்திரங்கள் சமாதானத்தை விளைவிக்கும்; டாக்டர் நாயுடுவுக்கு வாசித்துக் கொடுக்கும் உபசாரப் பத்திரம் சமாதான பங்கம் விளைவிக்கும் என்றால், அய்யங்கார், ஆச்சாரியார், முதலியார் முதலானவர்களிடம் உள்ள எந்த குணம் டாக்டர் நாயுடுவிடம் இல்லை அல்லது அவர்களிடமில்லாத எந்த குணம் டாக்டர் நாயுடுவிடம் இருக்கிறது? எந்த விதத்தில் அம்மூவருக்கும் டாக்டர் நாயுடு இளைத்தவர்? பின்னும் சிற்சில சமயங்களில் டாக்டர் நாயுடு அவர்கள் சில பிராமணர்களின் அயோக்கியத்தனத்தைப் பற்றிச் சொன்ன போதிலும், மறு சமயத்திலேயே அயோக்கியனாயிருந்தாலும் தேசீயவாதியாயிருந்தால் ஓட்டு கொடுங்கள் என்றுகூட சொல்லி அயோக்கியர்களுக்கெல்லாம் வேஷம் போட்டுக்கொள்ள ஒரு போக்கிடமும் காட்டி இருக்கிறார். அதோடு ஸ்ரீமான் திரு.வி.க. முதலியாரவர்களைப் போலவே இவரும் ஒரு சமயத்தில் ஒரு மகாநாட்டில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தீர்மானம் பிரேரேபித்திருந்தாலும் இப்பொழுது பிராமணர்களுக்கு அநுகூலமாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாமென்கிறார். இவ்வளவு நன்றி செய்தவர்களிடமும் நமது பிராமணர்கள் இம்மாதிரி நடந்து கொள்வார்களானால் இப்பிராமணர்களின் நன்றியறிதலை என்னென்று சொல்வது? இதே டாக்டர் நாயுடுவை இந்த பிராமணக் கூட்டத்தார் வண்டியில் வைத்து இழுக்கவில்லையா? தென்னாட்டுத் திலகர் என்று சொல்லவில்லையா? அவர் படத்தை ஆசாரத்திலும், படுக்கை இடத்திலும், பூஜை இடத்திலும் வைத்திருக்கவில்லையா? இப்பொழுது ஏன் அவர் பேரில் இவ்வளவு வெறுப்பு? எந்தப் பத்திரிகை யாவது இப்பிராமணர்களின் நடத்தையைப் பற்றி ஒரு வார்த்தையாவது எழுதினதா? இம்மாதிரி ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்காருக்கோ, ராஜகோபாலாச்சாரிக்கோ உபசாரப் பத்திரம் கூடாது என்று இரண்டு பிராமணரல்லாத கவுன்சிலர்கள் ஏதாவது வாயைத் திறந்திருந்தால் இந்த தேசீய பத்திரிகைகள் என்று சொல்லும் பித்தலாட்டப் பத்திரிகைகளும், அவர்களால் வயிறு வளர்க்கும் தொண்டர்களும் இப்பிராமணரல்லாதார் குடியை அடியோடு கெடுப்பதற்கல்லவா வகை தேடி இருப்பார்கள். வெள்ளைக்காரர்கள் எப்படி தங்கள் இனத்தாரை யாராவது ஒரு இந்தியர் தொட்டுவிட்டால் அதை சர்க்காரோடு யுத்தம் என்று ஆக்கி இராணுவச் சட்டத்தை அமுலில் கொண்டு வந்து விடுவதும், யாராவது ஒரு வெள்ளைக்காரன் இந்தியனைக் கொன்றுவிட்டால் அது அசால்ட்டாகி 10 ரூ. அபராதத்தோடு போய்விடுகிறதோ அது போலவே, பிராமணரல்லாதார் யாராவது பிராமணர்களை ஏதாவது சொல்லிவிட்டால் அது தேசத் துரோகமாகி அவர்களை அடியோடு ஒழிக்கப் பார்ப்பதும், பிராமணரல்லாதாரை பிராமணர் என்ன செய்தாலும் அது தேசச் சேவையும் ஆகிவிடுகிறது. இவர்கள் யோக்கியதையைப் பார்த்தால் வெள்ளைக்காரர் ஆயிரம் மடங்கு யோக்கியர்கள் என்று நெருப்பின் மேல் நின்று சொன்னாலும் கால் வேகாது என்று கூட சொல்லலாம். கேவலம் இந்த உபசாரப் பத்திரத்தைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. அதற்கு மதிப்பிருந்த முட்டாள் அபிப்பிராயம் வெகு நாட்களுக்கு முன்னே போய்விட்டது. மகாத்மாவுக்கும் உபசாரப் பத்திரம், அன்னவரைக் கொலை செய்தவர்களுக்கும்தான் உபசாரப் பத்திரம், யோக்கியனுக்கும் உபசாரப் பத்திரம், திருடனுக்கும் உபசாரப் பத்திரம். உபசாரப் பத்திரம் வாங்க யோக்கியதையில்லாதவன் இனி நமது இந்தியாவில் இல்லை என்பதே நமதுஅபிப்பிராயம். ஆதலால், அதைப்பற்றி கவலை இல்லை. டாக்டர் நாயுடுவும் இதைப் பிரதானமாய் எண்ணியிருக்க மாட்டார். அவர் வீட்டு சமையலறைச் சுவர்கள் பூராவும் சட்டம் போட்ட உபசாரப் படங்களாலேயே மறைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இந்த பிராமண மனப்பான்மையை இன்னும் நமது பாமர ஜனங்கள் அறியவில்லையே என்றுதான் நாம் விசனிக்கிறோம். தேசத்திற்காக மூன்று முறை ஜெயிலுக்குப் போனார்; கேப்பை மாவு அரைத்தார்; ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரைப் போலவே பதினாயிரக்கணக்காக ரூபாய் செலவு செய்தார். ஆனால், சீனிவாசய்யங்காராவது கட்சிக்காரன் பணத்தில் கேசுக்காகப் போய் உபசாரப் பத்திரம் பெற்று வருவார். இவர் தன் சொந்தப் பணத்தையே செலவு செய்து கொண்டுபோய் உபசாரப் பத்திரம் பெறுவார். இதிலிருந்து நாம் நினைக்கவேண்டியது என்ன வென்றால், பிராமணர்களின் பேராசைக்கு





RangaRakes
tamilnavarasam.com

விரோதமான ஒரு சிறு காரியத்தையாவது எந்த பிராமணரல்லாதாராயினும் செய்ய நினைத்து விட்டால் அவர் குடியைக் கெடுக்க இப்பிராமணர்களும் கொஞ்சமும் பயப்படமாட்டார்கள் என்பதும், இதற்குப் பயந்து கொண்டே தான் நமது பிராமணரல்லாதார் எவ்வளவு படித்தவர்களாயிருந்தாலும், எவ் வளவு பணக்காரராக இருந்தாலும் பிராமணர்களைக் கண்டால் நடுங்குகிறார் களென்பதும், அவர்கள் வாலைப் பிடித்துக்கொண்டு திரிகிறார்கள் என்பதும் விளங்குகிறது. படித்தவர்களும் பணக்காரர்களுமே இப்படி இருந்தால் வெறும் ஆசாமிகள் சங்கதியைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா? பிராமணரல்லாதார் நிலை பரிதாபம் ! பரிதாபம் !! பரிதாபம் !!!

**குடி அரசு - கட்டுரை - 21.03.1926**



# ஹிந்து மஹாசபை

ஹிந்து மஹாசபையைப் பற்றி நாம் பல தடவைகளில் அது வர்ணா சிரம சபை என்றும், இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு விரோதமான சபை என்றும், பிராமணாதிக்கத்திற்காக உழைக்கும் சபை என்றும் எழுதி வந்தது வாசகர் களுக்கு ஞாபகமிருக்கலாம். சில நண்பர்களுக்கு இவ்வாறு எழுதியதைப் பற்றி மனவருத்தம் ஏற்பட்டிருந்தாலும் இருக்கலாம். ஆனால் இப்பொழுது வரவர அதன் யோக்கியதை நாம் எழுதியபடியே முழுவதும் வெளியாகி விட்டது. அதாவது, விதவா விவாகத் தீர்மானம் ஹிந்து மஹாசபை மஹா நாட்டின் விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேறினதும், அதன் அக்கிரா சனராகிய பண்டித மாளவியா மஹாநாட்டுப் பந்தல் பக்கம் கூட எட்டிப் பார்க்கமாட்டேன் என்று அத்தீர்மானத்திற்கு ஆதாரமாயிருந்தவர்களை விரட்டித் தீர்மானத்தையே மஹாநாட்டிற்கும் கொண்டு வரவிடாமல் நசுக்கி விட்டார். பின்னர் தீண்டாமையைப் பற்றின தீர்மானம் மஹாநாட்டில் நிறை வேறினவுடன் சபையில் உள்ளவர்களெல்லாம் எழுந்து ஓடிப்போய் விட்டார்களாம் . ஆதலால் தலைவர்கள் எழுந்து போனவர்களை அழைத்து வந்து இத்தீர்மானத்தின் ரகசியத்தை எடுத்துரைத்து, அதாவது இத்தீர்மா னத்தில் தீண்டாமை ஒழியத் தகுந்த மாதிரி எந்த விதமான ஏற்பாடும் நாங்கள் செய்துவிடவில்லை. பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காக வேண்டி ஏதோ தீண்டாமையில் அக்கறையுள்ளவர்கள் போல் காட்டுவதற்காகச் செய்யப் பட்டதே ஒழிய வேறல்ல என்று பொருள்படும்படி பேசி அத்தீர்மானத்தில் யாதொரு சத்துமில்லை என்கிற ரகசியத்தை வெளிக்காட்டி, அதுவும் ஏற்பாடு செய்யுங்களென்று கேட்டுக் கொள்ளுகிறோமேயல்லாமல் வேறில்லை. உங்களுக்கு இஷ்டமிருந்தால் செய்யுங்கள், இல்லாவிட்டால் வேண்டாம். வெளிப் பிரசாரத்திற்கு இம்மாதிரி தீர்மானங்களையெல்லாம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. காரியத்தில் செய்யவில்லையானால் பரவாயில்லை. அது உங்கள் இஷ்டம் என்று சொன்ன பிறகுக் கூட வெளியே போனவர்கள் போயே தீர்ந்தார்களாம். இதோடு ஹிந்து மஹாசபையின் தீர்மானங்களையும், உரிமைகளையும் காப்பாற்றுவதாக வாக்களிப்பவர்களுக்கு மாத்திரமே வோட்டு கிடைக்கும்படி பிரசாரம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்களாம். இதிலிருந்து அறியக் கிடப்பதென்னவென்றால் விதவா விவாகத்தையும், தீண்டாமை ஒழிப்பதையும் ஒப்புக்கொள்ளுகிறவர்களுக்கு ஹிந்து மஹாசபை எதிர் பிரசாரம் செய்யும் என்பதும், மகாத்மா காந்தியடி களே சட்டசபைக்கு நிற்பினும் அவருக்குக்கூட வோட்டுக் கொடுக்கக்



RangaRakes tamilnavarasam.com

கூடாதென்றேதான் சொல்லும். இதுவே அதன் கொள்கையுமாகும் என்பதை இப்பொழுதாவது வாசகர்கள் உணர்வார்கள் என்று நினைக்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 21.03.1926**



# வருண பேத விளக்கம்

"வருணபேத விளக்கம்" என்னும் புத்தகம் காலஞ்சென்ற திரு. ம. மாசிலாமணி அவர்களால் எழுதப்பட்டு தென்னிந்திய பௌத்த சங்கத்தினாதரவில் ஸ்ரீ சித்தார்த்த புத்தக சாலையாரால் பதிப்பித்து பிரசுரிக்கப்பட்டது. இப்புத்தகம் வருணபேதத்தின் இரகசியங்களையும், ஆதிகாலத்திலிருந்தே, பிராமணர்களின் சூழ்ச்சிகளையும், தயவு தாக்ஷண்யமில்லாமல் தைரியமாய் விளக்குகிறது. இப்புத்தகத்தை வாங்கிப் படிப்பவர் இவ்விஷயங்களைப் பற்றி நமது "குடி அரசு" எழுதிவரும் விஷயங்கள் இப்புத்தகத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டதோ அல்லது குடி அரசிலிருந்து எடுத்து இப்புத்தகம் எழுதப்பட்டதோ என்று நினைக்கும்படி பெரும் பாகம் ஒத்திருக்கும். ஆதலால், சிற்சில விஷயங்களில் அபிப்பிராய பேதம் இருந்தபோதிலும் ஜாதி உயர்வு-தாழ்வு இரகசியம் அறிய ஆவல் கொண்டவர்கள் இதனை வாங்கி வாசிக்க சிபார்சு செய்கிறோம். இதன் விலை அணா 0-4-0.

**குடி அரசு - நூல் மதிப்புரை - 21.03.1926**



RangaRakes
tamilnavarasam.com

# இரண்டே வாரம்

நமது **"குடி அரசு"**ப் பத்திரிகை கொஞ்ச காலமாக கூலி அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு வந்தது. ஆனால், அவ்வச்சுக் கூடத்தால் பல தடவைகளில் எதிர்பாராத தாமதங்களுடன் காலந்தவறி பத்திரிகை வெளியாக வேண்டி ஏற்பட்டதினிமித்தம், சந்தாதாரர்களில் பலர் ஏமாற்றமடைய நேர்ந்ததால் தங்கள் மனவருத்தத்தையும் கோபத்தையும் தெரிவித்து வருகிறார்கள். "குடி அரசு" எத்தனை விதமான எதிரிகளின் சூக்ஷிக்கும், கொடுமைக்கும் தப்புவித்து நடந்து வருகிறது என்பதை அவர்கள் அறிவதில்லை. ஆதலின், பத்திரிகையை இரண்டொரு வாரத்திற்கு மட்டும் நிறுத்தி வேறு அச்சுக்கூடம் ஏற்பாடு செய்து, கூடியவரை காலந் தவறாது அனுப்பிவர ஏற்பாடு செய்ய சில யந்திரங்களும் எழுத்துக்களும் வந்திருக்கிறது. இனியும் சில சாமான்கள் வாங்க சென்னைக்கு ஆள் போகிறது. ஆதலால், அதுவரை வாசகர்களை மன்னிக்கும்படி வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 28.03.1926**



# சுரணையற்ற பொய்

நல்ல சமயத்தில் 2 வாரத்திற்குப் பத்திரிகை தாமதிக்க ஏற்பட்டதானது நமக்கு மிகுதியும் ஏமாற்றத்தைக் கொடுத்து விட்டதோடு வாசகர்களுக்கும் விளக்க முடியாத ஏமாற்றம் ஏற்பட்டிருக்கும் என்றே நினைக்கிறோம். இவ்வாரம் எழுத வேண்டிய விஷயங்கள் அநேகம். அவற்றில் பிராமணப் பத்திரிகைகளின் கொடுமையை எடுத்துக்காட்ட வேண்டியது மிகுதியும் அவசியமான சமயம். அவைகளை விளக்க இதில் இடமில்லை. கோவை தாலூக்கா மகாநாட்டைப் பற்றியும் கோவை பொது மீட்டிங்கைப் பற்றியும், சுதேசமித்திரன் சுரணையற்ற வெறும் பொய்யையே பிரசுரித்திருக்கின்றது. அவற்றுள் 100 - க்கு 90 பொய் என்பதை வாசகர் உணர வேண்டுகிறோம்.

**குடி அரசு - அறிவிப்பு - 28.03.1926**



RangaRakes tamilnavarasam.com

# ஸ்ரீமான் தங்கப்பெருமாள் பிள்ளையின் ஞாபகச்சின்னம்

வெள்ளக்கிணற்றில் ஸ்ரீமான்.எஸ். இராமநாதனின் அக்ராசனத்தின் கீழ் நடைபெற்ற கோயமுத்தூர் தாலூக்கா மகாநாட்டில், அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேறிற்று. தமிழ்நாட்டு அருந்தவப் புதல்வரும் மாகாண காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியும், ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் தலை வரும், கோவை தாலூக்கா மகாநாட்டின் அக்ராசனரும், மாகாண காங்கிரஸ் நிர்வாக சபையின் அங்கத்தினரும். கதர்போர்டின் காரியதரிசியும், ஆகிய இவைகளா யிருந்தவரும். உண்மைத் தியாக மூர்த்தியுமாகிய ஈரோடு ஸ்ரீமான். வா. மு. தங்கப்பெருமாள் பிள்ளையவர்கள் காலஞ்சென்றதைக் குறித்து இம் மகாநாடு ஆழ்ந்த துக்கத்தை அடைவதோடு, அவர் குடும்பத்தாருக்கு அநு தாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

காலமான நம்நாட்டுப் பெருந்தேசாபிமானியும். நமது ஜில்லாவாசியு மான ஸ்ரீமான். தங்கப்பெருமாள் பிள்ளையின் ஞாபகச்சின்னமாகவும், அவரது போதனைகளைப் பரப்ப ஓர் சாதனமாகவும், இந்த ஜில்லாவில் ஓர் ஸ்தாபனம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், அதற்காகப் பொருள் சேர்த்தல் முதலிய வேண்டுவன செய்ய, கீழ்க்கண்ட கனவான்களை ஓர் கமிட்டியாக நியமித்திருப்பதாய்த் தீர்மானித்திருக்கிறது.

## கமிட்டி அங்கத்தினர்

ஸ்ரீமான்கள்.ஈ.வெ.இராமசாமி நாயக்கர், அக்ராசனர்,
எஸ். இராமநாதன், காரியதரிசி.

ஈரோடு, எம். எஸ். முத்துக்கருப்பன் செட்டியார்,பொக்கிஷதார். கோயமுத்தூர், டி.ஏ.இராமலிங்கம் செட்டியார், சி.வி,வெங்கட்டரமணய்யங் கார், வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர், ஆர்.கே, ஷண்முகம் செட்டியார், அத்திப்பாளையம் என்.இராமகிருஷ்ண நாயக்கர், திருப்பூர் கே.ஆர். ஈஸ்வர மூர்த்திக் கவுண்டர் - அங்கத்தினர்கள்.

## நமது குறிப்பு :

இம் முக்கியமான தீர்மானத்தை நிறைவேற்றியதை நாம் மிகுதியும் பாராட்டுகிறோம். பொது ஜனங்களும் அவரது ஞாபகக் குறிப்பிற்குத் தங்கள் தங்களாலான உதவியைச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். பணம் அனுப்புகிறவர்கள் ஈரோடு ஸ்ரீமான் எம்.எஸ்.முத்துக்கருப்பன் செட்டியாரவர்கள் பேருக்கு அனுப்பிக் கொடுக்க வேண்டுமாய்க் கோருகி றோம். இத்தீர்மானம் நிறைவேறியவுடன் ஸ்ரீமான்கள் டி.எ. இராமலிங்கம் செட்டியார், ஈ.வெ. இராமசாமி நாயக்கர், வி.சி.வெள்ளியங்கிரிக் கவுண்டர், சி.வி.வெங்கிட்டரமண ஐயங்கார், ஆர். கே. ஷண்முகம் செட்டியார் ஆகிய ஐவர்களும் ஆளுக்கு 100 ரூபாய் வீதம் 500 ரூபாய்க்குக் கையொப்பம் செய்ததை முழு மனதுடன் பாராட்டுகிறோம்.

## முக்கிய குறிப்பு

இப்பேர்ப்பட்ட பிராமணரல்லாத தேச பக்தர் காலமானதைக் குறித்து பிராமண பத்திரிகைகளில் தலைசிறந்து விளங்கும் “ஹிந்து” பத்திரிகை ஒரு வார்த்தையாவது எழுதவே இல்லை. இப்பத்திரிகையைத்தான் நமது டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் மகாத்மாவிடம் யோக்கியமான பத்திரிகை என்று சொன்னாராம்.

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 28.03.1926**


RangaRakes
tamilnavarasam.com


குடி அரசு

வாரப்பதிப்பு

திருப்பூர்

கத்த கதர் ஜவுளிகள்.

திருப்பூர்

கத்த கதர் ஜவுளிகள்.

திருப்பூர்

கத்த கதர் ஜவுளிகள்.



# காந்தீயம்

காந்தீயம் என்பது மகாத்மா காந்தியை மூல புருஷராய் வைத்து அவரது சரித்திரத்தையும், கொள்கையையும், அதன் பலனையும் பற்றியது. எப்படி சைவம் என்பது சிவனை முதன்மையாகக் கொண்டதோ, வைணவம் என்பது விஷ்ணுவை முதன்மையாகக் கொண்டதோ, ராமாயணம் என்பது எப்படி ராமரை முதன்மையாகக் கொண்டதோ அதுபோல் காந்தீயம் என்பது காந்தியை முதன்மையாகக் கொண்டது. இவற்றில் மக்களுக்காக மகாத்மா காந்தி ஏற்படுத்திய கொள்கைகளும் அதற்காக அவரது சேவையும் அவரது தியாகமும் முதன்மையானது. அதனால் ஏற்பட்ட பலன்களும் நிகழ்ச்சிகளும் இரண்டாவதாகச் சொல்லலாம். நமது தேசத்தில் இவ்விருபதாம் நூற்றாண்டில் ராஜாக்களும், பிரபுக்களும், பெரும்பதவி அதிகாரமுடையவர்களும் எத்தனையோ பேர் பிறந்திருந்தாலும் மறைந்திருந்தாலும் 33 கோடி மக்களும் மதிக்கத் தகுந்த மாதிரி மகாத்மா காந்தியைப் போல் மற்றொருவரை சொல்ல முடியாமற் போனதற்குக் காரணம் என்ன? காந்தியை மாத்திரம் மகாத்மா என்று சொல்லக் காரணமென்ன? தங்கள் தங்கள் சுயநலத்துக்காக வாழ்கிறவர்கள் எவ்வளவு பெரியவர்களென்று சொல்லிக் கொண்டபோதிலும் அவர்கள் சாதாரண மனிதர்களாகத்தான் உலகத்தினரால் கருதப்படுவார்கள். உலகத்துக்காக வாழ்கிறவர்கள் எவ்வளவு சிறியவர்களாக இருந்த போதிலும் மகாத்மாவாகத்தான் கருதப்படுவார்கள். அப்படியானால் உலகத்துக்காக வாழ்கிறதாகச் சொல்லிக் கொண்டு எத்தனையோ தலைவர்களிருக்கின்றார்களே. நாமும் அவர்களை எல்லாம் தலைவர்கள் தலைவர்களென்கிறோமே, ஏன் காந்தியை மாத்திரம் மகாத்மா என்று சொல்லவேண்டும் என்கிறதாக ஒரு கேள்வி பிறக்கலாம். மகாத்மாவைத் தவிர மற்ற தலைவர்களெல்லாம் பிறத்தியாருக்கு சொல்ல மாத்திரம் தெரிந்தவர்களேயல்லாமல் அதுபோல நடக்க முடியாதவர்களும், நடக்க இஷ்டமில்லாதவர்களுமாகவே இருப்பார்கள்; ஆனால், மகாத்மாவோ சொல்லுகிறபடி நடப்பவர், நடக்கக்கூடியதையே சொல்லுபவர். இந்தக் குணந்தான் அவரை மகாத்மாவாக்கியது. அவர் கண்ணுக்கு உண்மை தான் வெளிப்படும். அவருடைய மனமும் வாக்கும் உண்மையைத்தான் நினைக்கும், உண்மையைத்தான் பேசும். அவருடைய நோக்கமெல்லாம் ஏழைகளைப் பற்றியதாய்த்தானிருக்கும். அவருடைய கொள்கைகளெல்லாம் ஏழைகளின் கஷ்டத்தை ஒழிப்பதற்குத்தான் ஏற்படும். அவர் இந்தியாவின் விடுதலை என்பது ஏழைகள் விடுதலையைத்தான் குறிக்



RangaRakes tamilnavarasam.com

கும். மகாத்மாவின் சுயராஜ்யமே ஒடுக்கப்பட்டவர்களுக்கும் தாழ்த்தப்பட்ட வர்களுக்கும் சுயமரியாதையையும் சமத்துவத்தையுமே அடிப்படையாகக் கொண்டது. அவருடைய சேவை என்பது தியாகத்தையும் கஷ்டமனுபவிப் பதையும் அடிப்படையாகக் கொண்டது. இந்தக் காரணங்களால் அவர் தானா கவே மகாத்மா ஆகிவிட்டார். உபசாரப் பத்திரங்களில்லையே, வண்டியில் லையே, ஊர்வலமில்லையே என்று விசாரப்படுகிறவர்களும், ஊர்வலத்தை யும் உபசாரப் பத்திரத்தையும் நாடிக்கொண்டு திரிகிறவர்களும், தங்களைத் தலைவர்களென்று சொல்ல வேண்டுமென்று பணம் கொடுத்து சொல்லச் செய் வோர்களும் பாமர ஜனங்களை ஏமாற்றி தாங்களும் தங்கள் குலத்தார்களும் மாத்திரம் மேன்மையடைய வேண்டுமென்று நினைத்துக் கொண்டு அலைவ தையும் தேச சேவை, பொது ஜன சேவை என்று சொல்லிக் கொண்டு திரிவார் களேயானால் அவர்கள் எப்படி மகாத்மாவாகக் கூடும்? பதவிகளையும் பட்டங்களையும் மனதில் குறிப்புக் கொண்டு சுயராஜ்யம் சம்பாதிப்பதற்காக சட்டசபைக்குப் போகிறேன் என்று சொல்லுகிறவர்களும் அதற்கு வோட்டு சம்பாதிப்பதற்காக பணத்தைக் கொடுத்து பலரைக் கூட்டிக் கொண்டு தங்களைத் தலைவர்கள், தலைவர்கள் என்று சொல்லும்படி செய்கிறவர்களும் எப்படி மகாத்மா ஆகக்கூடும். முதல் முதல் பாமர ஜனங்களுக்கு காந்தி யென்று ஒருவர் இருக்கிறார் என்று அறியவே தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் சுயமரியாதைக்காக தானும் தன் குடும்பமும் கூட்டோடு சிறை சென்றதும் அங்கு நினைக்க வொண்ணாத கொடுமைகளையெல்லாம் அநு பவித்ததுந்தான் முக்கியக் காரணங்கள். அதற்குப் பிறகு இந்திய மக்களுக்கு இந்தியாவிலேயே சுயமரியாதை, சமத்துவம் வேண்டுமென்ற சேவையில் இறங்கியதே 2 - வது காரணம். அதற்குப் பிறகு ஏழை மக்களுக்கு வேண்டிய உண்மையான சுயராஜ்யத்தைக் கண்டு பிடித்து அதற்காக அஞ்சாது உண்மை பேசி பதினாயிரக்கணக்கான ஜனங்களைப் பின்பற்றும்படி செய்து தானும் அவர்களுமாய் சிறை சென்றதே மூன்றாவது காரணம். இன்னமும் அவரு டைய கருத்தும் உழைப்பும் ஏழைகளையே பிரதானமாய்க் கொண்டிருக் கிறது. ஆனால், ஏழைகள் விடுதலை பெற்றால், தாழ்த்தப்பட்டவர்கள் சுய மரியாதையடைந்தால், ஒதுக்கப்பட்டவர்கள் சமத்துவமடைந்தால் பிரபுக ளென்போருக்கும் படித்தவர்களென்போருக்கும் உயர்ந்த ஜாதியாரென் போருக்கும் தனி யோக்கியதை இருக்காது என்கிற காரணத்தினால் இம்மூவர் களும் மகாத்மாவுக்கு எதிரிகளாயிருக்க வேண்டிய அவசிய மேற்பட்டுப் போய்விட்டது. அதன் பலனாய் மகாத்மாவின் கொள்கைகள் கொஞ்சங் கொஞ்சமாய் ஓய்வு பெற வேண்டியதாயிருக்கிறது. காந்தீயமென்னும் ஏழை களை விடுதலை செய்ய ஏற்பட்ட இயக்கத்தை பரப்ப, ஆயுதமாய்க் கொண்ட காங்கிரஸ் என்னும் சபையானது படித்தவர்கள் வசமும் உயர்ந்த ஜாதியார் என்று சொல்லுகிறவர்கள் வசமும் செல்வவான்கள் வசமும் சிக்குண்டு போய்விட்டபடியால் படித்தவர்களுக்கு உத்தியோகம் சம்பாதிப்பதற்கும், மேல் ஜாதியாரென்போருக்கு தங்களுடைய உயர்ந்த ஜாதித் தத்துவத்தை



நிலை நிறுத்திக் கொள்வதற்கும் உபயோகப்படுத்திக் கொள்ளத் தக்கதாய்ப் போய்விட்டதோடு ஏழைகளின் நிலைமை நாளுக்கு நாள் அதோ கதியாய் ஒரு வேளைக் கஞ்சிக்கு 2 - தரம் மூன்று தரம் தங்களுடைய கற்பை விற்க வேண்டிய ஸ்திரீகளையும் ஒரு வேளை சாப்பாட்டிற்காக ஏழை மக்களின் துரோகிகளின் பின்னால் திரிந்து கொண்டு அவர்களை இந்திரன் சந்திரன் என்று பாமர ஜனங்களிடம் புகழ்ந்து அவர்களுக்கு வோட்டு வாங்கிக் கொடுக்க தங்கள் மனச்சாக்ஷியை விற்கத்தகுந்த ஆண்களையும் லக்ஷக்கணக் காய் பெருக்கி வருகிறது. இவ்வுண்மையறிந்த மகாத்மா இவர்களோடிருக்க மனம் பொறாதவராகி தனியே பிரிந்து ஏழைகளுக்கு உழைப்பதற்கென்று ராட்டினமும் கையுமாய் உட்கார்ந்து கொண்டு இரவும் பகலும் ராட்டினத்தைச் சுற்றிக்கொண்டு ஏழைகளிடத்தில் அன்பிருக்கிறவர்களெல்லாம் ராட்டினத் தைச் சுற்றுங்கள், கதரை உடுத்துங்கள், ஏழைகளைக் காப்பாற்றுங்கள், சட்ட சபையில் ஏழைகளுக்கான காரியம் ஒன்றுமில்லை; தேச விடுதலைக்கு சட்ட சபையினால் ஒரு பலனும் உண்டாகாது; எனக்கு அதில் கொஞ்சமும் நம்பிக்கையில்லை யென்று சொல்லிக்கொண்டு இருக்கிறார். இதுதான் காந்தீயம் என்பது. காந்தீயம் என்பதைச் சுருக்கமாய்ச் சொல்வதானால் ராட்டி னம் சுற்றுவதும் கதர் உடுத்துவதும்தான் என்று சொல்லலாம். மகாத்மாவின் சுயராஜ்யம் என்பதையும் சுருக்கமாய்ச் சொல்லுவதானால் தீண்டாமையை ஒழிப்பதும் கதர் உடுத்துவதும்தான் என்று சொல்லலாம்.

ஏறக்குறைய 30,40 வருஷங்களாக நமது ஜனங்கள் சட்டசபைக்கு போய்க்கொண்டும் வந்து கொண்டுந்தானிருக்கிறார்கள். சர்க்காரிடமிருந்தும் பல சீர்திருத்தங்களையும் பெற்று அதன் மூலமாய் அநேக பதவிகளையும் உத்தியோகங்களையும் அடைந்துமிருக்கிறார்கள். உதாரணமாய், ராஜப் பிரதிநிதி என்கிற ஒரு உத்தியோகம் தவிர மற்றபடி கவர்னர், நிர்வாகசபை அங்கத்தினர், மந்திரி, ரெவின்யூ போர்டு அங்கத்தினர் முதலிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகங்களும் கலெக்டர், ஜட்ஜு, கமிஷனர் முதலிய அதிகாரம் வாய்ந்த உத்தியோகங்களும் இந்தியர்கள் வகித்து வருகிறார்கள். இதுகளினால் ஏழை மக்களுக்கு இதுவரையில் என்ன பலன் கிடைத்திருக் கிறது. சட்டசபை இல்லாத காலத்தில் இருந்ததைவிட சட்டசபை ஏற்பட்ட பிறகு மக்களுக்கு நிர்ப்பந்தங்கள் அதிகமாகவும், சீர்திருத்தங்கள் இல்லாத காலத்திலிருந்ததைவிட ஏழைகளுக்கு வரி அதிகமாகவும், தரித்திரங்கள் அதிகமாகவும் ஏற்பட்டு இருக்கிறதேயல்லாமல் என்ன தேசத்துக்கு பலன் ஏற்பட்டிருக்கிறது. ஏழைகளின் பிரதிநிதிகள் என்று சொல்லி ஏழைகளை ஏமாற்றி சட்டசபைக்குப் போனவர்கள் தங்களுக்கும், தங்கள் பிள்ளை குட்டிக ளுக்கும், தங்கள் ஜாதியார்களுக்கும் பல உத்தியோகத்தையும் நிரந்தரமான பதவியையும் சம்பாதித்துக் கொண்டார்கள். இனியும் அதற்காகத்தான் படித்தவர்களும் உயர்ந்த ஜாதியாரென்பவர்களும் ஏழைகளை ஏமாற்றி வருகிறார்கள். ஆகையால் சட்டசபைப் பயித்தியத்தை மறந்து விடுங்கள்; ஏழைகளைக் கவனியுங்கள்; காந்தியை நினையுங்கள்; ஏழைகள் வாயில்



RangaRakes tamilnavarasam.com

மண்ணைப் போட்டுவிட்டு துணியின் மூலமாகவும் மற்றும் அந்நிய நாட்டு சாமான்கள் மூலமாகவும் அந்நிய நாட்டுக்கு அனுப்பும் பணத்தை நிறுத்துங்கள்; நீங்கள் கட்டியிருக்கும் அந்நிய நாட்டுத் துணியின் ஒவ்வொரு இழை நூலும் கிராமத்து ஸ்ரீகளான உங்கள் சகோதரிகளைக் கஞ்சிக்கு அலைய விட்டுவிட்டு அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய கூலியை அந்நிய நாட்டுக்குக் கொண்டு போய் விட்டது. நீங்கள் 15 ரூபாய் போட்டு வாங்கும் 1 பீஸ் மல் துணியில் ஒண்ணரை ரூபாய் பொரும்படியான பஞ்சுதானிருக்கிறது. பாக்கி ஏழை மக்களுக்குக் கிடைக்க வேண்டிய கூலியாகிய 13-8-0 ரூபாய் அந்நிய நாட்டுக் குப் போய்விட்டது. இந்த 13-8-0 ரூபாயில்லாமல் நம் நாட்டில் எத்தனை குடும்பம் பட்டினி இருக்கிறதென்பதை நினைத்துப் பாருங்கள். இந்த மல் துணிக்குப் பதிலாய் கதர் துணியை வாங்கிக் கட்டியிருப்பீர்களா னால் அவ்வளவு பணமும் ஏழைத் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக் குந்தானே போய்ச் சேர்ந்திருக்கும். உங்களுக்கு ஜீவகாருண்யம் இருக்குமே யானால் கதரை வாங்கிக் கட்டாமலிருந்திருப்பீர்களா? அன்னதான மென்றாலென்ன? பாயாசத்திற்கு பாதாமிப்பருப்பு போதவில்லை என்று சொல்லித் திரியும் சோம்பேறிகளுக்கு சமையல் செய்து போடுவதில்தான் அன்னதானம் என்று நினைக்கிறீர்களே தவிர பசியால் வாடி தங்களது கற்பையும் தர்மங்களையும் இழந்து திரியும் சகோதரி, சகோதரர்களுக்கு கஞ்சிகிடைக்கும் வழியை கொஞ்சமும் கவனிக்காமலிருக்கிறீர்கள். இனி யாவது சட்டசபைப் பயித்தியத்தையும், படித்தவர்களும் உயர்ந்த ஜாதியா ரென்பவர்களும் தங்கள் உத்தியோகத்திற்கும், உயர்ந்த தன்மையை நிலை நிறுத்திக் கொள்ளுவதற்கும் கூலி கொடுத்து ஆள்களைக் கூட்டிக்கொண்டு வந்து உங்களை ஏமாற்றுவதையும் மறந்து, மகாத்மா காந்தியையும் ஏழைக ளையும் பார்த்து நீங்கள் எல்லோரும் கதர் உடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதுதான் உண்மையான காந்தீயமாகும். காந்தி படத்தை வைத்துக் கொண்டு பூஜை செய்வதும் காந்தி பெயரைச் சொல்லிக்கொண்டு சட்ட சபைக்குப் போவதும் ஒருக்காலும் காந்தீயமாகாது என்று உங்களுக்கு நான் வணக்கத்துடன் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

*குறிப்பு:- திருவாரூர் தேசாபிமானச் சங்கத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழா 24-3-26 லிருந்து 28-3-26 வரை தொடர்ந்து ஐந்து தினங்கள் நடை பெற்றது. இதில் 28-3-26 - ந் தேதி தலைமை வகித்து காந்தீயம் என்பது பற்றி ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 18.04.1926**



# தொழிலாளர் இயக்கம்

## தற்கால நிலைமை

தற்காலம் நமது நாட்டிலுள்ள தொழிலாளர் இயக்கங்கள் என்று சொல்லப்பட்டவைகள் எடுப்பார் கைக் குழந்தைகள் போல் தங்களுக்கென எவ்வித சக்தியும் இல்லாமலும், தங்களுக்கு தேவை இன்னதென்றுகூட அறிய முடியாமலும், தாங்களே தங்கள் சங்கத்தை நடத்திக்கொள்ள சக்தியற்றவர் களாகவும் இருந்து கொண்டிருப்பதுமல்லாமல் சுயநலத்துக்காகவும் வயிற்றுப் பிழைப்புக்காகவும் அரசியலில் சம்பந்தப்பட்டு அரசியல் பேரைச் சொல்லிக் கொண்டு வாழும் சில பொறுப்பற்றவர்கள் தொழிலாளர்களில் வாயாடிகளாக வும் செல்வாக்குற்றவர்களாகவும் இருப்பவர்களை பணங் கொடுத்தோ உதவி செய்தோ அவர்கள் மூலமாய்த் தங்களை தொழிலாளர்களுக்குத் தலைவர் களாகும்படிச் செய்து, அதன் மூலமாய் தலைமை பெற்ற சில சுயநலக்காரர் களை தங்களுக்குத் தலைவர்களாகவைத்துக் கொண்டு அவர்கள் சொல்லுகிற படி ஆடவும் ஒருவரை அடியென்றால் அடிக்கவும் திட்டும்படி சொன்னால் திட்டவும் இம்மாதிரியான காரியங்களைச் செய்து கொண்டு அவர்களின் கை ஆளுகள் போலிருந்து அந்நியரின் நன்மைக்காக தங்கள் சங்கங்களை விட்டுக்கொடுக்கும்படியான நிலைமையிலிருந்து வருகிறது. இவ்விதமான நிலைமையிலுள்ள சங்கங்கள் நாட்டிற்காவது தொழிலாளர்களுக்காவது என்ன நன்மையைக் கொடுக்கமுடியும். உண்மையாகவே நம்நாட்டுத் தொழிலாளர்களுக்கு தங்களுக்குள்ளாகவே ஒரு தலைவரை ஏற்படுத்திக் கொண்டு தங்கள் நன்மைக்கு உழைக்க தங்களுக்குச் சக்தியில்லையானால் அரசியலில் தங்களை விளம்பரப்படுத்திக் கொண்டு வாழும் பொறுப்பற்றவர் களும் சுயநலக்காரர்களுமான அரசியல் தலைவர்களை விட - பிராமணத் தலைவர்களைவிட - அவர்கள் சொற்படி ஆடும் தலைவர்களை விட இத் தொழிலாளர்களின் உண்மையான முதலாளிமார்களே மேலானவர்கள் என்று சொல்லவேண்டியிருக்கிறது. ஏனெனில், அரசியல் தலைவர்களென்போர் தொழிலாளர்களுக்குத் தாங்கள் தலைவர்களாயிருக்கிறோமென்கிற பெருமை யினாலும் அவர்களிடம் தங்களுக்கு செல்வாக்கு இருப்பதாய் பிறர் நம்பும்படி செய்து கொள்வதாலும் முதலாளிகளை விரட்டி தங்கள் சொந்த நன்மை பெறுவதும், தங்கள் பிள்ளைக் குட்டிகளுக்கும் இனத்தார்களுக்கும் முதலா ளிகள் தயவு பெற்று உத்தியோகங்கள் சம்பாதித்துக் கொடுப்பதும், தங்கள் தேர்தல் காலங்களில் வோட்டுகள் பெறவும், தங்களுக்கு வேண்டிய வேறு அபேக்ஷகர்களுக்கும் வோட்டு வாங்கிக் கொடுக்க பிரதிப் பிரயோஜனம்



RangaRakes tamilnavarasam.com

பெறுவதுமான காரியங்களுக்காகவே பிரயத்தனப்பட்டு தொழிலாளர் தலை வர்களாகிறார்களேயல்லாமல் உண்மையில் இவ்வரசியல் தலைவர்களும் பிராமணத் தலைவர்களும் தொழிலாளர் தலைவர்களாகுவதற்கு எவ்வித யோக்கியதை உடையவர்களுமல்ல, நம்பிக்கையுடையவர்களுமல்ல என் பதே நம்முடைய அபிப்பிராயம். அல்லாமலும் முதலாளிமார்கள் தொழிலாளர் களுக்கு ஏதாவது நன்மையோ தீமையோ செய்ய வேண்டுமானால் இம்மாதிரி தலைவர்களுக்கு வேறே பலமாதிரி லஞ்சம் கொடுக்க வேண்டி வருகிறது. எது நன்மை? எது தீமை? என்று அறிய முடியாத பாமர தொழிலாளிகள் தங்களுக்குள்ளேயே ஒரு தலைவரை எடுத்துக் கொள்ள யோக்கியதையும் ஆசாமியும் இல்லையானால் அவ்வித யோக்கியதை வரும்வரை தங்களுக்கு சங்கம் வேண்டாமென்றிருப்பதே நலமென்றுகூடச் சொல்லலாம். அப்படிக் கில்லாமல் கண்டிப்பாய் தங்களுக்கு ஒரு சங்கம் இருந்துதான் தீரவேண்டு மென்கிற பயித்தியமிருக்குமானால் இவ்வித அரசியல் தலைவர்களை விட முதலாளிகள் தலைமை அதிக மோசமானதல்லவென்பதே நமது அபிப் பிராயம். அரசியல் தலைவர்கள் நமது தொழிலாளர்களை உபயோகப் படுத்திக் கொள்ளுவதை பல தடவைகளில் நாம் நேரிலேயே பார்த்திருக் கிறோம். உதாரணமாக கொஞ்ச காலத்துக்கு முன்பு கோகலே ஹால், சௌந் தர்ய மஹால், மகாஜன சபை முதலிய பல இடங்களில் நடந்த அரசியல் சம்பந்தமான கூட்டங்களின் தீர்மானங்களுக்கும் தேர்தல்களுக்கும் தொழி லாளர்களின் வோட்டுப் பெற்று வெற்றி பெறுவதற்காக தொழிலாளர்களி லேயே சில தரகர்களும் அரசியல்காரர்களில் சில தலைவர்களென்போர் களும் முறையே பணம் வாங்கிக் கொண்டும் பணம் சிலவு செய்தும் வோட்டுச் சம்பாதித்துக் கொடுத்ததும் பெற்றதும் நேரிலறிவோம். அல்லாம லும் சமீபகாலத்தில் நடந்த காங்கிரஸ் பெயரைச் சொல்லிக்கொண்டு பிராமணர் பிராமணரல்லாதார் கக்ஷித் தேர்தல்களுக்கும், தொழிலாளர் தரகர் களும் தலைவர்களும் முறையே 200-300 பணம் பெற்றும், சுயநலத்தைக் கோரியும் பிராமணர்களுக்கும் பிராமணர்கள் கக்ஷிக்கும் தொழிலாளர்களின் வோட்டுகளை சேகரித்துக் கொடுத்ததை கேட்டு அறிவோம். இந்நிலையி லுள்ள நமது தொழிலாள சகோதரர்களுக்கு சங்கமிருந்து என்ன பிரயோ ஜனம்? சங்கமில்லாமலிருந்தாலாவது வோட்டுக் கொடுப்பதன் பலன் தங்களுக்கு நேரே வந்தாலும் வரலாம்.

இம்மாதிரி தலைவர்களைக் கொண்ட சங்கமிருக்கிற காரணத்தால் வேறு ஒருவர் சுயநலத்துக்கு இரண்டுமறியாத தொழிலாளர்கள் தங்களது வோட்டுகளை வீணாய் உபயோகிக்க நேரிடுவதும் இதன் கிரையத்தை மற்றவர்கள் அநுபவிக்க நேரிடுகிறதுமாய் முடிகிறது. இப்பொழுதுகூட சில அரசியல் தலைவர் என்போர்களும், தொழிலாளர் தரகர்களும் தொழிலாளர் களிடம் கவலையும் அன்பும் இருப்பது போல் காட்டுவதும் அவர்களுக்குத் தாங்கள் பாடுபடுகிறவர்கள் போலப் பாசாங்கு செய்வதும், **உஷார் உஷார் என்று சொல்லுவதும், விஷமிகள் சூழ்ச்சியில் சிக்காதீர்கள், பழய சங்கத்தைக் காப்பாற்றுங்கள் என்று சொல்லுவதும்,** பக்கத்தில் வரப்



போகும் தேர்தல்களுக்கு வோட்டுச் சேகரிக்கவும், பணம் சம்பாதிக்கவும் கருத்துக் கொண்டுதான் என்பதாக நாம் கோபுரத்தின் மேலிருந்து கூவுவோம்.

அல்லாமலும் இப்பொழுது தொழிலாளர்களுக்குத் தலைவர்களா யிருக்கிறவர்களெல்லோரும் ஏதாவது ஒருவிதத்தில் முதலாளிகளாய்த் தானிருக்கிறார்கள். ஒவ்வொரு தலைவர்களென்போர்களும் அநேகமாய் தங்களிடம் 500,100,50,30,20 கணக்கான தொழிலாளர்களை வைத்து வேலை வாங்குகிற முதலாளிகளும் அவர்கள் உழைப்பில் வாழுகிறவர்களுமாயிருக் கிறார்களே தவிர உண்மையில் தொழிலாளர்களுக்கு அநுகூலமாயிருக்க வேண்டியவர்களாயில்லை. விவசாய சங்கத்துக்கு வியாபாரிகள் தலைவர் களாயிருப்பது போலவும், பிராமணரல்லாதார்களுக்கு பிராமணர்கள் மதகுரு வாயிருப்பது போலவும், இந்தியாவை ஐரோப்பா ஆளுவது போலவும் நமது தொழிலாளிகளுக்கு அரசியல் தலைவர்கள் என்று சொல்லும்படியானவர்கள் தலைவர்களாயிருக்கிறார்கள் என்று சொல்லுவது கொஞ்சமும் குற்றமாகாது. அரசியல் தலைவர்களான கசாப்புக் கடைக்காரன் மூலமாய் நமது தொழிலாளி கள் முதலாளிகளுக்கு உணவாவதைவிட நேரிலேயே போய்விட்டால் ஒரு சமயமில்லாவிட்டாலும் ஒரு சமயத்தில் முதலாளிகளுக்கு ஈவு இரக்கமுண்டா னாலும் உண்டாகலாம்.

அல்லாமலும் அரசியல் தலைவர்கள் தாங்கள் தங்கள் நன்மைக்காக ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பல அரசியல் கக்ஷிகளை தொழிலாளர் சங்கங் களுக்குள் நுழைய வைத்து அதன் காரணமாய் தொழிலாளர் சங்கங்களுக் குள்ளும் கக்ஷிகளை உண்டுபண்ணி அநாவசியமாய் பொது ஜனங்களிடத் திலும் முதலாளிமார்களிடத்திலும் வீண் வெறுப்புகளையும் துவேஷத்தையும் உண்டாக்கி தொழிலாளர்களை கஷ்டத்துக்கு உள்ளாக்குகிறார்கள். தொழிலா ளர்களுக்கு வேலை செய்வதற்கும் தற்கால அரசியல் கக்ஷிகளுக்கும் என்ன சம்மந்தமிருக்கிறது. மகாத்மா கொள்கையைப் போல் தொழிலாளர் நன்மையே தேச விடுதலை என்கிற கொள்கையுடையது. அரசியல் கக்ஷிகளாயிருந்தால் அது நமது தொழிலாளர் சங்கத்தில் பிரவேசிப்பதைப்பற்றி நமக்குக் கவலை யில்லை. அப்படிக்கில்லாமல் தொழிலாளர்கள் வோட்டுப் பெற்று உத்தியோக மும் பதவியும் பணமும் சம்பாதிப்பதற்காய் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சுயராஜ்யக் கக்ஷி முதலிய பல அரசியல் கக்ஷிகளும் அவற்றின் தத்துவங் களை ஒத்துக் கொண்டிருக்கும் காங்கிரஸ் முதலியவைகளும் தொழிலாளர் களுக்கு என்ன நன்மை செய்யக் கூடும்? உண்மையிலேயே தொழிலாளர் தரகர்களுக்கு எந்த கக்ஷியார் அதிகம் பணங் கொடுக்கிறார்களோ அந்தக் கக்ஷியில் தொழிலாளர்கள் சேருகிறதாயிருக்கிறதேயல்லாமல் கக்ஷியின் தத்துவத்தை அறிந்து சேருவதாயில்லை. பிராமணர்களிடம் பணம் வாங்கிக் கொண்ட தொழிலாளர்களால் வசவு கேட்கும் ஜஸ்டிஸ் கக்ஷி கூட தொழிலா ளர்கள் தங்கள் வகுப்பார்களென்கிற காரணத்தினால் தொழிலாளர் களுக்கு பல நன்மைகள் செய்திருக்கிறதை நாம் கேட்டிருக்கிறோம். அதாவது,



RangaRakes tamilnavarasam.com

சென்னையில் சில வருஷங்களுக்கு முன் ஏற்பட்ட தொழிலாளர் வேலை நிறுத்தங்களில் சில பிராமணத் தலைவர்கள் தொழிலாளர் சங்கத்தைக் கை விட்டு விட்டபோதும் சில பிராமணர்கள் சர்க்கார் தயவுக்கு ஆசைப்பட்டு தங்கள் உத்தியோகத்தைக் கொடுமையாய் நடத்தி தொழிலாளர்களை இம்சித்து பிரமோஷன் பெற்ற காலத்திலும் ஸ்ரீமான் ஸர். பி. தியாகராஜ செட்டியாரும் அவருடைய கக்ஷி மந்திரிகளும்தான் தொழிலாளர்களையும் சில தொழிலாளர் தலைவர்களையும் நாடு கடத்த வொட்டாமலும், சுட்டுக் கொல்ல முடியாமலும் காப்பாற்றியிருக்கிறார்கள். இந்த ரகசியங்கள் தொழிலாளர்களின் இரண்டொரு உண்மைத் தலைவர்கள் இன்னமும் மறவாமல் சொல்லிக் கொண்டுதானிருக்கிறார்கள். பழைய கதைகள் வேண்டாமென்று வைத்துக் கொள்வதானாலும் இப்பொழுதும் தொழிலாளர்களுக்குத் தலைவர்களாயிருக்கும் இவ் அரசியல் தலைவர்கள் தொழிலாளிகளிடம் உண்மையான அன்பு இருக்குமேயானால் சென்னை, நாகை, கோவை முதலிய இடங்களில் தங்கள் கக்ஷிக்காக நிறுத்தப் போகும் சட்டசபை ஸ்தானங்களுக்கு தொழிலாளர்களிலேயே சில பிரதிநிதிகளை ஏன் நிறுத்தக் கூடாது. தொழிலாளர்களில் சட்டசபையில் நிறுத்தக்கூடிய யோக்கியதையுள்ளவர்கள் இல்லையென்று சொல்வார்களா? சென்னையிலும், நாகையிலும், கோவையிலும் இத்தலைவர்களின் உபதேசத்தால் வேலைகளைப் போக்கடிக்கப்பட்டு பிழைப்புக்குக்கூட கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் யோக்யமும், அந்தஸ்தும், அறிவும், ஆற்றலுமுடைய பல தொழிலாளர்களி லிருந்து கொண்டுதானிருக்கிறார்கள். அவர்களில் சிலரை ஏன் நிறுத்தக் கூடாது. பஞ்சமர், தீண்டாதவர் என்று சொல்லக் கூடிய கூட்டங்களிலிருந்து கூட நமது சர்க்காரார் சிலரை சட்டசபைக்கு நியமித்ததின் பலனாய் அவர்களால் அந்த வகுப்புகளுக்கு இப்போது எவ்வளவு நன்மை ஏற்பட்டிருக்கிறது. அல்லாமலும் நிர்வாக மெம்பர் வேலை கொடுத்தாலும் மந்திரி வேலை கொடுத்தாலும் பார்க்கத் தகுந்தவர்களாயிருக்கிறார்கள். அல்லாமலும் இப்பொழுது சட்டசபையிலிருக்கிற அநேகம் பேரைவிட தேச நலத்திலும் சமூக நலத்திலும் இவர்கள் உழைப்பு உயர்ந்ததென்றே சொல்லலாம். அது போலவே நமது தொழிலாளர் கூட்டங்களிலேயும் அநேகர்கள் இருக்கிறார்களென்றே சொல்லுவோம். மேல் நாடு முதலிய இடங்களிலும் தொழிலாளர்களுக்கென்று தனிக் கக்ஷியும் தொழிலாளர்கள் பிரதிநிதிகளாக தொழிலாளர்களே இருக்கிறார்களல்லாமல் தொழிலாளர்களுக்காக தொழிலாளர்களல்லாதவர்களும், முதலாளிமார்களும், அரசியல் உத்தியோக ஆசை கொண்டவர்களும் தலைவர்களாகவும் பிரதிநிதிகளாயிருப்பதில்லை. ஆதலால் தொழிலாளர்களும் இது சமயம் கண் விழித்துக்கொண்டு அரசியல் பதவிகளுக்கும் ஸ்தானங்களுக்கும் தங்கள் பிரதிநிதிகளை நிறுத்தும்படி தங்களுக்குத் தலைவர்களென்று சொல்லிக் கொண்டிருப்பவர்களைக் கேட்க வேண்டியது. அவர்கள் சம்மதிக்காவிட்டால் அத்தலைவர்களிடமிருந்து விலகி தாங்களே தங்களுக்குள் ஒருவரை இப்பதவிகளுக்கு தெரிந்தெடுத்து அபேக்ஷகர்களாக



நிறுத்தி ஒற்றுமையாய் வேலை செய்துப் பார்க்க வேண்டியது. இதிலிருந்தாவது தொழிலாளர்களுக்கு தங்கள் நன்மைக்கு உழைக்கிற உண்மைத் தலைவர்கள் யார்? தங்களுடைய சுயநலத்துக்கு தொழிலாளர்களை உபயோகப்படுத்திக் கொள்ள உழைக்கும் போலித் தலைவர்கள் யாரென்று விளங்கும். ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுவது போல் இதுவரையிலும் உங்களை ஏமாற்றி வோட்டுக்கும் பெருமைக்கும் உங்களை உபயோகப்படுத்திக் கொண்டிருந்த போலித் தலைவர்களை இனியும் நீங்கள் நம்பாதீர்கள். மகாத்மா காந்தியால் உலகம் போலிகளை அறிந்து கொண்டு வருகிறது. நீங்கள் மாத்திரம் ஏன் இன்னும் கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறீர்கள். கண் விழியுங்கள். இது சமயம் ஏமாந்தால் இனி வெகு நாளைக்கு உங்களுக்கு விமோஜனமில்லை. போலிகளை விட்டு விலகுங்கள்! விலகுங்கள்!! விலகுங்கள்!!!

**குடி அரசு – கட்டுரை – 18.04.1926**



RangaRakes tamilnavarasam.com

## சுயராஜ்யக் கக்ஷியும் மதுவிலக்கும்

### தென்னாட்டு பிராமணர் சக்தி

பிராமணக் கக்ஷியாகிய சுயராஜ்யக் கக்ஷி சட்டசபைகளில் மது விலக்கு செய்யும் ஆதலால் அவர்களுக்கு வோட்டுக் கொடுங்களென்று இன்னமும் ஸ்ரீமான் சி.ராஜகோபாலாச்சாரியார் பிரசாரம் செய்து வருவது பொது ஜனங்களுக்குத் தெரியும். ஆனால், மதுவிலக்குக்கும் சுயராஜ்ய கக்ஷிக்கும் எவ்வளவு பொருத்தமிருக்கிறது என்பதை ஓட்டர்கள் நினைத்துப் பார்க்கவேண்டும்.

1. சுயராஜ்யக் கக்ஷித் தலைவர் பண்டிதர், வட இந்தியாவில் சாராயம் காய்ச்சும் ஒரு பெரிய கம்பெனியில் பங்குக்காரர் என்று கேள்விப் படுகிறோம். அல்லாமலும் மதுவருந்துவது குற்றமல்ல வென்று நினைத்து அளவாய்க் குடிக்கும் மேல் நாட்டு நாகரிகத்தில் ஈடுபட்டவர்.

2. சுயராஜ்யக் கக்ஷித் தலைவரை நடத்துகிறவரும் சுயராஜ்யக் கக்ஷியைத் தோற்றுவித்தவரும் காங்கிரஸ் காரியதரிசியுமான ஸ்ரீமான் ஏ. ரெங்கசாமி அய்யங்கார் ஒவ்வொரு வீட்டிலும் பிராந்தி என்னும் சாராயம் வைத்திருக்க வேண்டியது அவசியம் என்று விளம்பரம் செய்து சாராயம் விற்கிறவர்.

3. ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

4. ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமணய்யங்காரோ தன் தென்னை மரத்தில் கள் உற்பத்தி செய்வதில் பணம் சம்பாதிக்கிறவர். அவர் இல்லையென்று சொன்னாலும், சிலருக்குப் பணம் கொடுத்து இல்லையென்று எழுதச் சொன் னாலும், பொள்ளாச்சி கான்பரன்சுக்கு போக ஸ்ரீமான்கள் சி. ராஜகோபாலாச்சாரியாரும் ஈ.வெ. ராமசாமி நாயக்கரும் ரயிலில் பிரயா ணம் செய்யும்போது கிணத்துக்கடவு ஸ்டேஷனண்டை வண்டி நின்றதும் ஸ்ரீமான் சி.வி.வெங்கிட்டரமணய்யங்கார் தோப்பில் உள்ள மரங்களில் கள்ளுமுட்டி கட்டியிருந்ததை ஒருவர் காட்டி நேரில் பார்த்தார்கள்.

இவர்கள் சட்டசபைகளில் கள்ளை நிறுத்துகிறவர்கள்; ஸ்ரீமான் சி.ராஜகோபாலாச்சாரியார் இவர்களுக்கு பிராமணரல்லாதாரின் வோட்டுகளை வாங்கிக் கொடுப்பவர்; பிராமண சக்தியின் வலிமை என்னே! என்னே!! இவர்கள்கூடத் திரியும் ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியாரின் தன்மை என்னே! என்னே!!

குடி அரசு - கட்டுரை - 18.04.1926





RangaRakes tamilnavarasam.com

## “ஸ்ரீமான் கலியாணசுந்திர முதலி” யாரின் சுற்றுப் பிரயாணம்

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தால் வகுப்புத் துவேஷம் உண்டாகி விடும் என்று பயப்படுவதாய்ச் சொல்லிக்கொண்டு அதற்கெதிர்ப் பிரசாரம் செய்ய பிராமணர்களுடன் சுற்றுப் பிரயாணம் செய்யும் ஸ்ரீமான் திரு.வி.கலி யாணசுந்திர முதலியார் அவர்கள் ஆங்காங்கு கண்ட காட்சியைப் பற்றி சொல்லும் போதும், எழுதும் போதும், தான் போனவிடங்களில் வகுப்புத் துவேஷங்கள் விளங்கிக் கொண்டிருப்பதாய்ச் சொல்லுகிறார். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வெகுகாலமாய் இல்லாமலிருந்தும் நாட்டில் ஏன் வகுப்புத் துவேஷங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்? இம்மாதிரி வகுப்புத் துவேஷங்கள் நாட்டில் இருப்பதற்குக் காரணம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்ட தினாலா ஏற்படாததினாலா? என்பதை நமது ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தயவு செய்து பிராமணர்கள் இல்லாத சமயத்தில் தனியே உட்கார்ந்து தனது நெஞ்சில் கையை வைத்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 18.04.1926**



## டாக்டர் வரதராஜுலு நாயுடுவின் சுற்றுப் பிரயாணம்

டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் தனது சுற்றுப் பிரயாணத்தில் நாகப்பட்டணம் முனிசிபல் உபசாரப் பத்திரத்திற்கு பதிலளிக்கும்போது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று பேசினார். அதாவது பஞ்சமர் முதலிய சிறுபான்மையோருக்கு தனித் தொகுதி வகுத்து தேர்தல் முறையை அளிக்க வேண்டும் என்று பேசியிருக்கிறார். (இது 21-3-26 தமிழ்நாடு பத்திரிகையின் 7 - வது பக்கம் 23, 24, 25, 26 - வது வரிகளில் பிரசுரமாயிருக் கிறது) நாம் கேழ்க்கும் முதல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இதேதான். இது சமயம் பஞ்சமர்களுக்கு டாக்டர் நாயுடு சொல்லுகிறபடி செய்தால்கூட போது மானது. ஆனாலும் பஞ்சமர் சிறுபான்மையோரல்ல என்பதை டாக்டர் நாயுடு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பஞ்சமர் என்போர் இந்தியா வில் ஐந்தாவது வகுப்பார் என்று சொல்லுவது நிஜமல்லாமலிருந் தாலும் தேச மொத்த ஜனத் தொகையில் 5-ல் ஒன்றுக்கு மேலாயிருக்கிறார்கள். இந்த கணக்கு டாக்டர் நாயுடு அவர்களுக்குத் தெரிந்ததுதான். ஜஸ்டிஸ் கட்சியா ருடைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் தத்துவமும் இதுதான். அதாவது தனித் தொகுதி வகுத்து, தேர்தல் முறையை அளிக்க வேண்டுமென்றுதான் கேள்க்கிறார்கள். நாமும் அதைத்தான் ஆதரிக்கிறோம். டாக்டர் நாயுடு அவர்கள் சொல்லுவது பஞ்சமருக்கும் சிறுபான்மையோருக்கும் என்கிறார். நாம் சொல்லுவதும் அதேதான். அதாவது பிராமணர், பிராமணரல்லாதார், பஞ்சமர் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கும்படி கேள்க்கிறோம். டாக்டர் நாயுடு அவர்கள் சொல்லுவது போல் இம்மூன்று பிரிவில் பஞ்சமருக்கும் சிறுபான்மையோராகிய பிராமணருக்கும் தனித்தொகுதி வகுத்து தேர்தல் முறை அளித்துவிட்டால் பாக்கியிருப்பவர்களுக்கு தானாகவே தனித் தொகுதியும் தேர்தல் முறையும் ஏற்பட்டுவிடுகிறது. மற்றபடி கிறிஸ்தவர், மகமதியர், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் முதலிய வகுப்பார்களுக்கு ஏற்கெனவே ஏற்பட்டுப் போயிருக்கிறது. மற்றபடி எந்த விதத்தில் ஜஸ்டிஸ் கட்சி பிராமணரல்லாதார் கேள்க்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கும், டாக்டர் நாயுடு போன்ற சுயராஜ்யக் கட்சியை ஆதரிக்கும் பிராமணரல்லாதார் கேள்க்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கும், ஸ்ரீமான்கள் எஸ்.ராமநாதன், ஆரியா, சக்கரைச் செட்டியார், தண்டபாணி பிள்ளை, ஈ.வெ.இராமசாமி நாயக்கர் முதலியோர் போன்ற பிராமணரல்லாதார் கேள்க்கும் வகுப்புவாரிப்



RangaRakes tamilnavarasam.com

பிரதிநிதித்துவத்திற்கும் வித்தியாசமிருக்கிறதோ நமக்கு விளங்கவில்லை. இதையறிந்தே தான் நாம் பலதடவைகளில் டாக்டர் நாயுடு அவர்கள் தனது அந்தரங்கத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு விரோதியல்லவென்றும் ஏதோ சிற்சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்திர முதலியார் அவர்களோடு போட்டி போட்டு பிராமணர்களுக்கு நல்ல பிள்ளை யாக வேண்டுமென்கிற சமயங்களில் டாக்டர் நாயுடுவும் முதலியாரைப் போலவே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூடாது என்று சொல்லவேண்டி யதாய்ப் போய்விடுகிறது என்று கருதியே எழுதியிருக்கிறோம். ஆனாலும் ஸ்ரீமான் திரு.வி.கலியாண சுந்திர முதலியார் தான் கொஞ்ச காலத்திற்கு முன் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்டது ஜஸ்டிஸ் கட்சியை ஒடுக்குவதற்காக என்று இப்போது சொல்வதுபோல் நமது டாக்டரும் நாகப்பட்டணத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்பதற்கு ஏதாவது காரணமோ வியாக்கியானமோ சொல்லி, மறுபடியும் வேதாளம் முருங்கை மரத்திலேறினா லும் ஏறலாம். ஆதலால், டாக்டர் நாயுடு முதலியோர்கள் சந்தர்ப்பங்களை உத்தேசித்துச் சொல்லும் வியாக்கியானங்களில் கருத்தைச் செலுத்தாமல் அவர்களின் அந்தரங்கத்தை மாத்திரம் தெரிந்து கொள்ளும்படி வேண்டுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 18.04.1926**



RangaRakes

# தென்னாட்டுத் தலைவர்களின் சுற்றுப் பிரயாணத்தின் பெருமை

தென்னாட்டுத் தலைவர்கள் என்று சொல்லப்படுவோர்கள் வோட்டு வேட்டையென்னும் சுற்றுப் பிரயாணங்களில் ஆங்காங்கு நடக்கும் திரு விளையாடல்களை பிராமணப் பத்திரிகைகள் மறைத்து விட்டு தங்களுக்குப் பெருமை உண்டாகும்படியாக இல்லாத சங்கதிகளையும், நடக்காத கௌரவங் களையும் எழுதி பாமர ஜனங்களை ஏமாற்றி வருகிறது. பிராமணரல்லாத வாரப் பத்திரிகைகள் சிலதும் உண்மைகளை மறைத்துவிடுகிறது. தலைவர் களின் சுற்றுப் பிரயாணங்களின் யோக்கியதையை அறியவேண்டுமானால் "திராவிடன்" பத்திரிகையை வாங்கிப் படித்தால் உண்மை விளங்கும். சுய ராஜ்யக் கட்சியை எதிர்ப்பவர்களுக்கும் பிராமணரல்லாதார்களுக்காக பாடு படும் பிராமணரல்லாதார் கட்சிக்கும் பிராமணர்களின் யோக்கியதையை தைரியமாய் எடுத்து சொல்லுகிறவர்களுக்கும் யோக்கியதையும் மதிப்பும் இருக்கிறதா என்பதையும் நன்றாய் அறியலாம். தூத்துக்குடியில் நடந்த விஷயங்களும் திருச்சியில் நடந்த விஷயங்களும் தலைவர்களைக் கேட்ட கேள்விகளும் அதற்குத் தலைவர்கள் சொன்ன பதில்களையும் பிராமணப் பத்திரிகைகள் பிரசுரிக்காமல் விட்டுவிட்டிருக்கிறது. ஆகையால் அப்பத்திரி கைகளின் பொய் ஆதாரங்களையும் பொய்த் தலையங்கங்களையும் கண்டு ஏமாந்து போகாமல் இருக்கும்படியாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 18.04.1926**



tamilnavarasam.com

# வகுப்புவாரி உரிமை

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி வலியுறுத்த ஆரம்பித்த பிறகு தமிழ்நாடு ராஜீய உலகத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டதோடு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு அநுகூலமாயிருக்கும் சில தேசபக்தர்களுக்கு காங்கிரசில் செல்வாக்கில்லாமலடிப்பதோடு காங்கிரஸையே பிராமண மயமாக்க அவசியம் ஏற்பட்டதும், பிராமணரல்லாதாரில் யாருக்காவது காங்கிரஸ் பெயரைச் சொல்லிக்கொள்ள வேண்டுமானால் அவர்கள் பிராமணர்கள் தயவு பெற வேண்டியிருப்பதால் பிராமணர்களுக்கு பயப்பட்டு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்க்கவேண்டிய அவசியமேற்படவும் ஏற்பட்டிருப்பது நேயர்களுக்குத் தெரிந்த விஷயமே. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒரு நாளும் பிராமணர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் எங்கு ஏற்பட்டுப் போகுமோ என்கிற பயத்தால் தான் பிராமணர்கள் சர்க்காரைத் தொங்கிக் கொண்டிருப்பதும் ஒரு சர்க்கார் இவர்களுக்கு விரோதமாயிருந்தால் வேறொரு சர்க்காரை தயார் செய்வதுமாயிருக்கிறார்கள். அதற்குப் பயந்து கொண்டுதான் வரும் சர்க்கார்களும் பிராமணர்களுக்கு சுவாதீனமாய்ப் போய் விடுகிறார்கள். நம் நாடு ஏதாவது ஒரு காலத்தில் "இயற்கைக்கு விரோதமாய்" நம் நாட்டார்களாலேயே ஆளப்படுகிறது என்கிற யோக்கியதை அடையுமானால் அது கண்டிப்பாய் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதால்தான் முடியும் என்று வைரக் கல்லில் எழுதி வைப்போம்.

அது ஏற்படும் வரை இந்தியாவை இந்தியர் ஆட்சி புரிவது என்பதைத் தூர தள்ளி வைத்துவிடவேண்டியதுதான். நமது வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்திற்கு பிராமணர்கள் மாத்திரம் விரோதிகளல்ல. அந்நிய அரசாங்கத்தாரும் விரோதிகள் என்பதை உணரவேண்டும். ஏனென்றால் எவ்வளவுக் கெவ்வளவு நமக்குள் சண்டையும் சச்சரவும் ஏற்பட்டு ஒற்றுமைக் குறைவாய் இருக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அந்நிய ஆக்ஷியின் எல்லை நீண்டு கொண்டிருக்கும். நமக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்து நம் எல்லோரையும் உத்தியோகத்திற்கும் பதவிக்கும் சண்டை போட்டுக் கொள்ளாமல் அவரவர்களுக்குள்ளது அவரவர்கள் அடையும்படி செய்து ஒருவரை ஒருவர் தின்னாமல் செய்துவிட்டால் பிறகு எல்லோரும் ஒற்றுமையாய் விடுவார்கள். இதனால் அந்நிய ஆக்ஷிக்கு ஆபத்து. ஆதலால் இந்தத் தத்துவம் எப்போதும் அந்நிய அரசாங்கத்திற்கு விரோதமானது.



"பெருங்கூட்டத்தை சிறு கூட்டம் ஆள வேண்டுமானால் சிறு கூட்டத்தார் பெருங்கூட்டத்தை ஒருவருக்கொருவர் பொறாமையும் துவேஷமும் ஏற்படும்படி செய்து பிரித்து வைத்து கலகத்தை உண்டாக்கி விட்டால் தாராளமாய் ஆளலாம்" என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல் சர்க்காரின் நடவடிக்கை; அதுவே நமது பிராமணர்களின் நடவடிக்கை. இதை நம்மில் பலர் அறிவதில்லை; அறிந்தாலும் எப்படி பிராமணர்களுக்கு நல்ல பிள்ளையாகலாம் என்பதில்தான் அதிகக் கவலை. ஆங்கில அரசாங்கத்தின் 150 வருஷத்திற்கு மேற்பட்ட ஆக்ஷியின் பலனாய், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாததின் பலனாய் பிராமணரல்லாத வகுப்புகள் எவ்வளவு முற்போக்கடைந்திருக்கிறது என்று பார்த்தால் உண்மை பிராமணரல்லாத ரத்தம் ஓடும் மனிதன் துடிக்காமல் இருக்கமாட்டான். நம் தென்னாட்டு அரசாக்ஷியில் பிராமணரல்லாதார் நிலை எப்படி இருக்கிறது; பிராமணர்கள் நிலை எப்படியிருக்கிறது என்பது கீழ்க்கண்ட கணக்குகளினால் அறிந்து கொள்ளக் கோருகிறோம். நமது அரசாங்கத் தில் 35 ரூபாய் சம்பளத்திற்கு கீழ்ப்பட்ட உத்தியோகங்களில், அதாவது வாசல் கூட்டுவது, மேஜை துடைப்பது, பங்கா இழுப்பது, அதிகாரிகளுக்கு கால் கை அழுத்துவது முதலிய வேலைகளில் பிராமணரல்லாதவர் 37,125 பெயர்கள் இருக்கிறார்கள். பிராமணர்கள் 1810 பெயர் மாத்திரமே இருக்கிறார்கள். இவர்களும் சம்பளம் குறைவாயிருந்தாலும் தளுக்காய் மேலதிகாரிகளை ஏமாற்றி ஷை வேலைகள் பார்க்காமல் அதிகாரம் செலுத்தி வருவார்கள். 35-க்கு மேல்பட்டு 100 ரூபாய் வரை சம்பளம் உள்ள உத்தியோகத்தில் பிராமணரல்லாதார் 7003, பிராமணர்களோ 10,934. இந்த இடத்திலேயே நம்மைவிட பிராமணர்கள் 4000 பேர் அதிகமாகிவிட்டார்கள். 100 -க்கு மேல்பட்டு சுமார் 250ரூ. வரை உள்ள உத்தியோகத்தில் பிராமணர் 2679 பேரும் பிராமணரல்லாதார் 1666 பேருமாயிருக்கிறார்கள். இந்த இடத்தில் பிராமணரல்லாதாரை விட பிராமணர்கள் 1000 பேர் அதிகமாயிருக்கிறார்கள். 250 ரூபாய்க்கு மேல்பட்டு உத்தியோகங்களில் பிராமணர்கள் 594, பிராமணரல்லாதார் 280 பேர்கள் இருக்கிறார்கள். இந்த இடத்தில் ஒன்றுக்கு இரண்டிற்கு மேல் போய்விட்டார்கள். கலெக்டர் உத்தியோகத்தில் 11 உத்தியோகம் இந்தியர்கள் வகிப்பதில் 9 பேர் பிராமணர்கள். இந்த இடத்தில் ஒன்றுக்கு ஐந்தாய் விட்டார்கள். ரிவின்யூ போர்டில் உள்ள ஒரு இந்திய மெம்பர் உத்தியோகத் தில் பிராமணர்தான் இருக்கிறார். இந்தியருக்கு கொடுக்கப்பட்ட கைத்தொழில் டைரக்டர் வேலையில் பிராமணரே இருக்கிறார். அரசாங்கக் காரியதரிசி வேலையில் உள்ள இந்தியரும் பிராமணரே.

200 ஜில்லா முன்சீப்புகளில் 150 பேர் பிராமணர்கள்; 61 சப் ஜட்ஜுகளில் 45 பேர் பிராமணர்கள்; ஜில்லா ஜட்ஜுகளில் 7 பேர் பிராமணர்கள். அதாவது எடுபிடி உத்தியோகங்களில் பிராமணரல்லாதாரும் 100,500,1000, 2000, 3000 உள்ள உத்தியோகங்களில் பிராமணர்களும் அநுபவிக்கிறார்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாம் என்று சொல்லும் ஸ்ரீமான் திரு.வி. கலி



RangaRakes tamilnavarasam.com

யாணசுந்தர முதலியார் அவர்களை நாம் ஒரு கேள்வி கேள்க்கின்றோம் அதாவது:-

இவ்வித 1000, 2000, 3000 உள்ள உத்தியோகங்கள் பிராமணரல்லாத இந்துக்கள் என்போராகிய 100 - ல் 70 பேருக்கு மேலாக இருக்கும் பிராமண ரல்லாதாருக்கு குறைவாயிருப்பதற்கும், 100-ல் 3 பேராயிருக்கும் பிராமணர் களுக்கு ஏகபோகமாயிருப்பதும் யோக்கியதை இல்லாததாலா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாததாலா? என்று கேள்ப்பதோடு ஸ்ரீமான் முதலியார் கோரும் சுயராஜ்யமோ சீர்திருத்தமோ வரவர பிராமணர்களுக்கு உத்தியோ கம் பெருக்கமாகுமா? அல்லது ஏழைகளுக்கு வரி குறைந்து தொழிலாளி களுக்கு தொழில் கிடைக்குமா? என்று கேள்க்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 18.04.1926**



# சுயராஜ்யக் கக்ஷிக்கு நற்சாக்ஷிப் பத்திரம்

ராஜீய உலகத்திலும் சீர்திருத்த உலகத்திலும் ஸ்ரீமான் சி.விஜயராகவாச் சாரியாரும் ஸ்வாமி சிரத்தானந்தரும் முறையே பேர் போனவர்கள். முதல்வர் காங்கிரசுக்கே அக்கிராசனாதிபதியாயிருந்தவர். இரண்டாவதவர் மனித சமூகத்தின் சம உரிமைக்கு உண்மையாய்ப் பாடுபடுகிறவர். இவர்களிருவரும் சுயராஜ்யக் கக்ஷியைப் பற்றி சொல்லுவதாவது:-

1-வது, சி. விஜயராகவாச்சாரியார் : "கான்பூர் காங்கிரஸ் தீர்மானம் ஒழுங்கில்லையென்பது என் அபிப்பிராயம். காங்கிரஸ் ஒரு கோவிலுக்கு சமானம். அதை சிலர் மாத்திரம் பிடித்துக்கொண்டு பிறருக்கு அதில் தொழும் பாத்திய தையைத் தடுக்கக்கூடாது. ஒரு பெரிய சந்நியாசியாகிய மகாத்மா காந்தியை ஏமாற்றி கான்பூரில் அத்தீர்மானத்தை காங்கிரஸில் நிறைவேற்றப் பட்டிருக்கிறதென்பதே என் அபிப்பிராயம். காங்கிரஸ் 40 வருஷத்திற்கு முன்னாலேற்பட்டது. அப்பொழுது சட்டசபை இல்லை, சட்டசபைக்காக காங்கிரஸ் ஏற்படவில்லை."

2-வது, ஸ்வாமி சிரத்தானந்தர் : "சுயராஜ்யக் கக்ஷியார் சட்டசபை யினின்றும் வெளிவந்ததும் சட்டமறுப்பு ஆரம்பித்திருந்தால் அதை சரியான கக்ஷியென்று சொல்லலாம். பிரயோஜனமில்லையென்று வெளிவந்தபின் மறுபடியும் சட்டசபைக்குப் போகிறோமென்பதை எப்படி நாம் ஒப்புக்கொள்ள முடியும்."

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 18.04.1926**



RangaRakes tamilnavarasam.com

# சர். செட்டியாரும் டாக்டர் அம்மையாரும்

ஒத்துழையாமையின் போது ஜயிலுக்கு ஜனங்கள் போய்க் கொண்டிருந்ததை ஒப்புக்கொள்ளாத ஸர்.பி. தியாகராய செட்டியார் ஜயிலுக்குப் போன ஸ்ரீமான் எஸ்.ராமநாதன் அவர்களுக்கு பிரத்தியேக சௌகரியம் செய்து கொடுக்க சம்மதிக்கவில்லையாம். இது குற்றமல்ல வென்று கஷ்டப்பட்ட ஸ்ரீமான் எஸ்.ராமநாதனே ஒப்புக்கொண்டாலும், மறைந்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த நமது பிராமணர்களுக்கு ஸர்.செட்டியார் "டயராய்" விட்டார். அவருடைய கக்ஷி தேசத்துரோக கக்ஷியாய்ப் போய்விட்டது. ஆனால் பஞ்சாப் படுகொலையானபோது ஸ்ரீமதி பெசண்டம்மையார் "ஜலியன் வாலாபார்க்கில் நிரபராதிகளை டயர் சுட்டது சரி; இவர்கள் கல்லு போட்டார்கள்; அதற்கு டயர் குண்டு போட்டார்; இதிலொன்றும் தப்பில்லை" என்று சொன்னார். அதைப்பற்றி கேள்ப்பாரில்லை. அவருடனும் அந்தம்மாள் கக்ஷியிலும் அநேக பெரிய "மதிப்பு வாய்ந்த" பிராமணர்கள் சூழ்ந்து கொண்டு சபை நடுவிலிருத்தி ஆட்டத்துக்குத் தகுந்த தாளம் போடுகிறார்கள். ஏன்? அந்தம்மாள் பிராமணர்களுக்கு அநுகூலமாய் இருந்துகொண்டு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூடாது என்கிறார். தனக்குள்ள செல்வாக்கை பிராமணர்களுக்கு உத்தியோகங்கள் வாங்கிக் கொடுப்பதிலும் அதற்குத் தகுந்த திட்டம் போடுவதிலும் சிலவிடுகிறார். அல்லாமலும் ஜலியன் வாலா பார்க்கில் குண்டுபட்டு இறந்த குழந்தைக் குட்டிகளும் அவமானப்படுத்தப் பட்ட பெண்களும் ஏறக்குறைய எல்லோரும் பிராமணரல்லாதவர்கள். ஆதலால், அந்தம்மாளுக்கு பிராமண அநுசரணை தாராளமாய் இருக்கிறது. அப்படி இல்லாததால் ஸர். செட்டியாருக்கு பிராமணர்களைத் தவிர பிராமண ரல்லாதாரிலும் சில துரோகிகள் இருக்கிறார்கள். என்னே காலத்தின் கோலம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 18.04.1926**



# மகாத்மாவுக்கு பொது ஜனங்களிடம் உள்ள நம்பிக்கை

கொஞ்ச நாளைக்கு முன்பு ஒரு நூல் சந்தாதாரர், தன் கைப்பட நூற்று நூற்போர் சங்கத்திற்கு அனுப்பிவரும் நூல்களை தனக்கு திருப்பி அனுப்பினால் அதன் கிரையத்தை கொடுத்துவிடுவதாகவும், அந்த நூலைக்கொண்டு நெய்த துணியை அணிய தான் ஆசைப்படுவதாகவும் எழுதியிருந்தாராம். அதற்கு மகாத்மா பதில் எழுதுகையில் அவரவர்கள் நூலை அவரவர்களுக்கு திருப்பி அனுப்பிவிட்டால் மறுபடியும் அந்த நூலையே சந்தாவுக்கு அனுப்பி விடுவார்கள் ஆதலால், அந்த நூலை சலவை செய்து அனுப்பக்கூடும் என்று எழுதினாராம். தினம் நூற்று, மாதா மாதம் நூல் அனுப்புகிறோம் என்று பிரமாணம் செய்து உறுதிமொழியில் கையொப்பமிட்ட நூல் சந்தாதாரரிடமே இவ்வளவு அவநம்பிக்கை இருக்குமானால் மற்றவர் களிடம் எவ்வளவு நம்பிக்கை இருக்கும்? இதிலிருந்து கொஞ்ச காலத்திற்கு முன் மகாத்மாவுக்கு வெறும் ஆள்களிடம் இருந்த நம்பிக்கைக்கூட, உறுதிமொழி கொடுத்தவர் களிடம் இல்லைபோல் இருக்கிறது. தன்னிடம் இருக்கும் உறுதி, ஆட்டம் கொடுத்தவுடன் எல்லாரிடமும் சந்தேகப்படுவது இயற்கைதான்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 18.04.1926**



RangaRakes tamilnavarasam.com

# சுயராஜ்யக் கக்ஷியும் மகமதியரும்

“மகமதியர்கள் பெரும்பான்மையாயுள்ள இந்தியாவின் வட எல்லைப்புற மாகாணங்களுக்கு இந்தியாவின் மற்ற பாகங்களைப் போலாவது சீர்திருத்தங்கள் வழங்கப்படவேண்டும்” என்ற ஒரு தீர்மானத்தை இந்தியா சட்ட சபையில் ஒரு மகமதிய கனவான் பிரேரேபித்தபோது சுயராஜ்யக் கக்ஷியார் அதை எதிர்த்துத் தோற்கடிப்பதற்கு அநுகூலமாயிருந்தார்களாம். சில மகமதிய கனவான்கள் சுயராஜ்யக் கக்ஷித் தலைவரான பண்டித நேருவை எங்கள் விஷயத்தில் ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று கேட்டதற்கு சீர்திருத்தமே போதுமானதல்ல, உபயோகப்படக்கூடியதல்ல; ஆதலால் அது உங்களுக்கு ஆகாது; அதினால்தான் நாங்கள் ஆக்ஷேபித்தோம் என்று பதில் சொன்னாராம். சுயராஜ்யக் கக்ஷி பிராமணருக்கு மாத்திரம் சீர்திருத்தத்தின் பலனாய் ஏற்பட்ட சட்டசபையும், அதில் ஏற்படும் கமிட்டி அங்கத்தினர் பதவியும் 4000, 5000 சம்பளமுள்ள சட்டசபை அக்கிராசனம் முதலிய ஸ்தானங்களும் சுயராஜ்யம் பெற உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடியதும் அதற்குப் போதுமானதுமாயிருக்கிறது. ஆனால், எல்லைப்புற மகமதியர்களுக்கு மாத்திரம் பிரயோஜனமில்லையாம், போறாதாம். இது சிறு குழந்தைகள் ஏதாவது கேட்டால் தொடாதே கடித்துவிடும் என்று சொல்லுவது போலிருக்கிறது. இம்மாதிரி சுயராஜ்யக் கக்ஷியில் எப்படித்தான் உண்மையான மகமதியர்கள் சேருகிறார்களோ தெரியவில்லை. ஆனாலும் இரண்டொரு ஆசாமிகளைத் தவிர பெரும்பாலும் புத்தியுள்ள மகமதியர்களெல்லாம் சுயராஜ்யக் கக்ஷியினின்றும் விலகி விட்டார்களென்றே சொல்லலாம். அந்த இரண்டொருவர்களைப் பற்றிக்கூட நாம் ஆச்சரியப்படக் காரணமில்லை. ஏனென்றால் பிராமணரல்லாதாரிலேயே பிராமணர்களின் சூழ்ச்சி அறிந்த சிலர் தங்களை அறிவாளிகள் என்று சொல்லிக் கொண்டு பிராமணர்களின் வாலைப் பிடித்துக் கொண்டு திரிவார்களேயானால் மகமதியரைப்பற்றி நாம் ஆச்சரியப்பட என்ன நியாயமிருக்கிறது.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 18.04.1926**



# போலீஸ் நிர்வாகம்

கொஞ்சகாலமாக போலீஸ் நிர்வாகம் வெகு தடபுடலாக இருந்து வருவதாகவே சொல்லலாம். வீதிகளில் முக்கு முக்குக்கு போலீஸாரை நிறுத்தி வண்டிகளையும் மோட்டார்களையும் இடம் வலம் பிரித்து அனுப்புவது வெகு மும்முரமாயிருக்கிறது. இது ஒரு விதத்தில் நன்மை ஆனாலும் 15 அடி 20 அடி உள்ள குறுகிய ரோட்டுகளில் கூட போலீஸார் நடுவில் நின்று கொண்டு வண்டிகளை இடம் வலம் பிரிப்பது வேடிக்கையாயிருக்கிறது. ஒவ்வொரு சமயங்களில் போலீஸார் பாடு உயிருக்கே ஆபத்தாய் விடும் போலிருக்கிறது. சிற்சில போலீஸார் தங்கள் மேல் வண்டி ஏறட்டுமென்றே உறுதியாய் விலகாமல் நிற்கிறார்கள். அது சமயங்களில் வண்டிக்காரர்கள் பாடு வெகு கஷ்டமாய்ப் போய்விடுகிறது. அல்லாமல் இந்த கொடுமையான வெய்யிலில் போலீஸ்காரர்கள் அசையாமல் நின்று கொண்டிருப்பதானது போலீஸாருக்கு பெரிய தண்டனை என்றுதான் சொல்ல வேண்டும். பார்க்கிறவர்கள் கண்ணுக்கு இந்த போலீஸார்களின் நிலை மிகப் பரிதாபமாகவே காணப்படுகிறதும் தவிர மாதம் 20, 25 ரூபாய் சம்பளமும் லீவு, பென்ஷன், உடுப்பு வகையறாக்களுக்கு குறைந்தது மாதம் 10 ரூபாய் சிலவுகளும் ஆக மாதம் 35 ரூபாய் சம்பளம் கொடுக்கும் ஆள்களை நடுரோட்டில் வெய்யிலில் கைகாட்டி மரம் போல் நிறுத்தி வண்டிகளை இடது புறம் விடு, வலது புறம் விடு என்பதற்குத்தானா உபயோகப்படுத்த வேண்டும். இந்த ஆளுகளுக்கு எஜமானர்களாய் இருக்க 100,200,500 சம்பளமுள்ள உத்தியோகஸ்தர்கள் வேண்டுமா? இவற்றைக் கவனிக்க சட்டசபை மெம்பர்கள் இல்லை. எந்த உத்தியோகமானாலும் எங்கள் ஜாதிக்கு கொடு என்பதற்கு மாத்திரம் சட்டசபையில் மெம்பர்களுக்கு குறைவில்லை. வண்டி விலக்கி இடம் வலம் விடுவதற்கென்று ஒரு இலாக்கா வைத்து அவற்றிற்கு மாதம் 12 அல்லது 15 ரூ. கொடுத்தால் 1000 –க் கணக்கான ஆள்கள் கிடைக்கும். அதை விட்டுவிட்டு 10 ரூ 15, 20 ரூ அநுபோகம் பெற்ற 20, 25 ரூபாய் ஆளுகளைக் கொண்டு இந்த வேலை வாங்குவது ஸாது ஜனங்களின் வரிப்பணம் கேழ்ப்பாரற்று சிலவாகிறது என்பதைத் தவிர வேறு என்ன சொல்லலாம். அல்லாமலும் போலீஸாரெல்லாம் பிராமணரல்லாதாராய் போய்விட்டபடியாலும், மேலதிகாரிகள் எல்லாம் பிராமணராய் அமைந்து விட்டதாலும் போலீஸ் கான்ஸ்டேபிள்கள் நாயிலும் கடையாய் நடத்தப்படுகிறார்கள். அவர்களை மேலதிகாரிகள் பேசும் வார்த்தைகளோ சில சேரியில் பேசிக்கொள்வது போல்



RangaRakes tamilnavarasam.com

அடே, போடா, வாடா என்பதோடு நாய், கழுதை, எருமை இதுகளுக்குப் பிறந்தவன் என்று பேசுவதோடல்லாமல் பெண்டு பிள்ளைகளும் சில சமயங்களில் தடுமாறிப் போகிறதாம். வெள்ளைக்கார அதிகாரிகள் இவற் றைக் கொஞ்சமும் கவனிப்பதில்லை. போலீஸ் இலாக்காவில் போலீஸாரை மனிதர்களாக பாவிக்கவேண்டுமென்றால் குறைந்தது ஒவ்வொரு இடங் களிலும் சர்க்கிள் இன்ஸ்பெக்டரோ அல்லது சப் இன்ஸ்பெக் டரோ யாராவது ஒருவர் பிராமணரல்லாதாராயிருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படிக்கில்லாமல் சிற்சில சமயங்களில் டிப்டி சூப்ரெண்ட், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர், ஹெட் கான்ஸ்டேபிள், ரைட்டர் ஆகிய எல்லோரும் பிராமணர்களாய் அமைந்து விடுகிறார்கள். இம்மாதிரி சமயங் களில் பிராமணரல்லாத போலீஸ் கான்ஸ்டேபிள்கள் பாடு நரக வேதனைதான். ரைட்டர் முதல் ஒவ்வொரு பிராமண உத்தியோகஸ்தருக்கும் இரண்டு இரண்டு ஆள்கள் வீட்டு வேலைக்கு வேண்டியிருக்கிறது. போகாவிட்டால் பிரமோஷன் இல்லை. கஷ்ட்டமான டூட்டி கொடுத்து அவர்களைக் கொடுமை செய்வது அல்லாமலும் வரும்படி வரக்கூடிய பிராதுகள் ஏதாவது வந்தால் அதுகளைப் பங்கிட்டு நிரவி இவர்களுக்கும் கொடுக்காமல் பிராமண போலீஸ் கான்ஸ்டேபிள், ஹெட் கான்ஸ்டேபிள் இவர்களுக்குள்ளாகவே சரி செய்துக் கொள்வது. இன்னம் இதில் எழுதக்கூடாத எவ்வளவோ கொடுமை கள் பிராமணரல்லாத கான்ஸ்டேபிள்கள் அநுபவிக்க நேரிடுகிறது. பிராமண ரல்லாதாரிலேயே சிலர் பிராமணர்களுக்குள் நுழைந்துக் கொண்டு இவ்வித காரியங்களுக்கும் உடந்தையாயிருப்பதால் பிராமணரல்லாதாரின் நிலை இப்படி இருக்க வேண்டியிருக்கிறது. இந்த கஷ்டங்கள் என்று துலையுமோ நமக்குத் தெரிய வில்லை.

**குடி அரசு - கட்டுரை - 18.04.1926**



# சமாதானமும் வந்தனமும்

நமது "குடி அரசு" இரண்டு வாரம் நிறுத்தப்பட்டதைப் பற்றி அநேக ஆவலாதிகள் வந்தன. அவற்றில் ஒன்று இன்று யார் முகத்தில் முழித்தேனோ "குடி அரசு" வரவில்லையென்றும், மற்றொன்று "குடி அரசு" வராததால் இன்று முழுதும் சாப்பிட மனமில்லை யென்றும், மற்றொன்று "குடி அரசை" ஒழுங்காய் அனுப்புவதானால் அனுப்புங்கள் இல்லாவிட்டால் நிறுத்திவிட்டு என் பணத்தை திருப்பி அனுப்புங்கள், பத்திரிகை திங்கட் கிழமை தபால் நேரத்திற்குக் கிடைக்காவிட்டால் மனம் வருத்தப்படும் என்றும், ஒரு மகமதிய கனவான் மற்றொன்று இந்த ஒரு பத்திரிகையை ஒழுங்காய் நடத்த முடியா விட்டால் எப்படி உங்களை பிராமணரல்லாதார் பின்பற்ற முடியும், இது ஒன்றுதான் உள்ள நிலைமையை எழுதுவதால் அது கிடைக்கா விட்டால் மனது அவ்வளவு வருத்தப்படுகிறது என்றும், மற்றொருவர் திராவிடர்க ளுக்கு ஆசையிருக்கிறதே தவிர பிராமணர்கள் போல் காரியம் நடத்தத்தக்க சக்தியில்லை, வீணாய் அவர்களுடன் போட்டி போட்டு என்ன செய்வது, இந்த ஒரு சிறிய பத்திரிகையை சரியாய் நடத்தத் தங்களால் ஆகவில்லையே, வெறும் வாய்ப் பேச்சில் என்ன பலன் என்றும், இன்னும் பல விதமாகப் பலர் எழுதியிருக்கிறார்கள். இந்தக் குற்றங்களை அன்போடு ஏற்றுக் கொள்ளு கிறேன். ஆனால் நான் ஒருவன், ராஜீய உலகத்தில் எனக்கு சகாயம் செய்ய யாரும் தைரியமாய் வர பயப்படுகிறார்கள். வருவதானால் சர்க்கார் பயம், பிராமணர்கள் பயம் இவ்விருவரின் இடைஞ்சல்கள் இவைகளுக்குத் தயாரா யிருக்கவேண்டும். தபால் தகரார், ரயில்வே தகரார் அல்லாமலும் நானே பத்திரிகை முழுதும் எழுத வேண்டும். இவ்வளவும் இருப்பதோடு பண நஷ்டம் ஒரு புறம் அடைந்து வரவேண்டியிருக்கிறது. அல்லாமலும் வாரம் ஒரு தடவை வெளியூர்களுக்கு பிரசாரத்திற்கும் போகவேண்டும். ஒருநாள் பிரசாரத்திற்கு 3 நாள் மெனக்கேடு. அதாவது போக வர 2 நாள், பிரசாரம் ஒரு நாள். இவ்வளவு கஷ்டமும் பண நஷ்டமும் ஏற்படுவதைக் கவனியாமல் ஆவலாதிகள் மாத்திரம் ஏற்பட்டால் என்ன செய்யக்கூடும். இந்தத்தடவை கூட சொந்த அச்சுக்கூடம் ஏற்படுத்த முடியவில்லை. கோயமுத்தூரிலுள்ள ஸ்டார் பிரஸ் லிமிடெட் கம்பெனியார் தங்களிடம் மீதியாய் ஒரு டிரடிலும், ஒரு டிம்மி பிரஸும் ரிப்பேர் செய்து ஈரோட்டில் ஒரு பிராஞ்ச் ஏற்படுத்து வதாயும் அதற்கு வேண்டிய எழுத்துக்கள் முதலியதுகளில் தங்களுக்குப் போதுமானது போக பாக்கிக்கு மகா ஸ்ரீ சா.ராமசாமி நாயக்கர் போட்டுக் கொண்டு அந்தத் துகையை ஷேராக எடுத்துக் கொள்வதென்றும் முன் நாம்



RangaRakes tamilnavarasam.com

இங்கு கொடுத்த கூலியாகிய பாரம் 1– க்கு 4 ரூபாய் வீதம் கூலி போட்டு பத்திரிகையை ஸ்ரீமான் சா. ராமசாமி நாயக்கரைக் கொண்டே பத்திரிகை நடத்திக் கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டதால் அந்தப் படி ஏற்பாடு செய்து இவ்வாரம் பத்திரிகை தொடங்கியிருக்கிறது. இன்னமும் சாமான்கள் சரியாய் வந்து சேரவில்லை. ஆனாலும் 2 வாரத்தில் பத்திரிகை அனுப்புவதாய் சொன்னபடிக்கு அவசரத்தில் உள்ள சாமான்களைக் கொண்டு ஏதோ ஒரு விதத்தில் இந்த வாரத்தில் வெளியாக்கிவிட்டோம். எல்லா சாமானும் காலத்தில் வருமென்று நினைத்து இவ்வாரம் 16 பக்கம் நெம்பர் போட்டு அச்சேறிய பின்பு சாமான்கள் வராததால் வழக்கம் போல் 12 பக்கமாகவே பத்திரிகை போடப்பட்டிருக்கிறது. ஈரோட்டில் பிராஞ்ச் வைத்த ஸ்டார் பிரஸ் லிமிடெட் கம்பெனியார் லாபத்திற்கு வைத்திருந்தபோதிலும் அதில் பங்கெடுத்துக் கொண்டு நமக்கு சரியாய் பத்திரிகை நடத்திக் கொடுப்பதாய் முன் வந்ததின் மேனேஜிங் டைரெக்டர் எனது மைத்துனர் ஸ்ரீமான் சா.ராமசாமி நாயக்கரவர்களுக்கும் நமது சார்பாகவும் "குடிஅரசு" சந்தாதாரர்கள் சார்பாகவும் வந்தனமளிக்கின்றோம்.

**குடி அரசு – அறிக்கை – 18.04.1926**



# தேசோபகாரி

நம் நாட்டில் நாளுக்கு நாள் மேல் நாடுகளைப்போல் பத்திரிகைகள் பெருகி வருகின்றன. ஆனால், அவ்வாறு தோன்றும் பத்திரிகைகளில் நாட்டின் நலங்கருதி உண்மையான தொண்டாற்றி வருவதுதான் வழக்க மில்லாமலிருந்து வருகிறது. காரணமென்ன வெனில் பத்திரிகைகள் ஆரம் பிக்கும்போது அதன் ஆசிரியர்கள் எவ்வளவு உண்மையான நோக்கத்தோடு ஆரம்பித்தாலும் ஆரம்பித்த பின்னர் பத்திரிகை வளர்ச்சியின் அவசியத்தை பத்திராதிபர் கருத வேண்டி வந்துவிடுகிறது. பத்திரிகை வளர்ச்சியையும் அதனால் தமது கால க்ஷேமத்தையும் எதிர்பார்க்கும் பத்திராதிபர்கள் பத்திரிகையின் கொள்கைகளை தங்கள் மனச்சாட்சிப்படி நடத்திக்கொண்டு போக முடிகிறதில்லை. அப்படிப்பட்ட பத்திரிகைகள் பொது ஜனங்களை சீர்திருத்தத் தமது கொள்கை களை ஜனங்கள் பின்பற்றும்படி செய்ய முடியா மல் எந்த சமயத்தில் எப்படி நடந்தால் தனக்குப் பெரும்பான்மையான ஜனங் களின் ஆதரவும் செல்வாக்குள்ள ஜாதியாரின் தயவும் கிடைக்குமோ அப்படி நடந்துகொண்டு தனது மனச்சாக்ஷியை விற்றுவிட வேண்டிவருகிறது. இது நம் நாட்டின் துரதிஷ்டமே. தமிழர்களின் நலங்கருதி உண்மையாக உழைக்கும் பத்திரிகைகள் நாட்டிற் சொற்பமாயினும் ரங்கூனில் நடைபெற்றுவரும் "தேசோபகாரி" என்னும் வாராந்திரத் தமிழ்ப் பத்திரிகையானது ஆரம்ப நிலையில் எவ்வாறிருப்பினும் நாளுக்கு நாள் நமக்கு அவசியமான சமத்து வத்தையும் சம உரிமையையும் ஆதரித்து வருவது பற்றி நாம் பெரிதும் மகிழ் வெய்துகிறோம். அதன் ஆசிரியர் ஒத்துழையாமைக் காலத்தில் சிறை சென்றவர். இன்றும் சிறையில் வதிகிறார். நல்ல தியாகம் செய்தவர். "தேசோ பகாரி" வாரம் ஒரு முறையாயிருந்து வாரம் இருமுறையானதினாலேயே பத்திரிகையின் வளர்ச்சி நமக்குப் புலப்படுகிறது. ஆகையால் மேற்படி பத்திரிகையை பொது ஜனங்கள் ஆதரிக்கக் கோருகிறோம்.

**குடி அரசு – அறிக்கை – 18.04.1926**



RangaRakes tamilnavarasam.com






# ஸ்ரீமான் சி.வி.வெங்கட்ரமண அய்யங்காரின் தர்ம விளம்பரம்

**– சித்திரபுத்திரன்**

சட்டசபைத் தேர்தல்கள் சமீபத்தில் வர வர அபேக்ஷகர்கள் அதிகமாய் விளம்பரமாகும்படி செய்து கொள்வது எங்கும் சகஜமானது. இதில் அபேக்ஷகர்கள் முன் செய்த வேலைகளையும் பின் செய்யப் போகிற வேலைகளையும் சொல்லுவதும் இயற்கை. ஆனால், நமது ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமணய்யங்கார் அந்த இரண்டுமல்லாத புதிய ஒரு முறையைக் கண்டுபிடித்திருக்கிறார். அதென்னவெனில்:–

ஒரு பெரிய தர்ம விளம்பரம். அதாவது, தான் 2 லக்ஷம் ரூபாய் தனது சொத்திலிருந்து தர்மம் செய்ய இருப்பதாகவும், அந்த தர்மங்கள் இன்ன இன்னாருக்கு உபயோகப்படத்தகுந்தது என்றும் சில ஓட்டர்களுக்கும் வோட்டுத் தரகர்களுக்கும் வாயில் தண்ணீர் ஊரும்படி வாய்ப்பறை, பத்திரிகை பறையடிப்பதோடு நில்லாமல் திறப்பு விழாப் பறையும் அடித்தாகிவிட்டது.

ஆனால், நடந்த விஷயந்தான் என்ன? "தர்ம பிரபு" ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்கார் திறப்புவிழா ஆரம்பத்தில் தனது தர்மத்தின் பெருமையைப்பற்றி பேசியவைகளின் சுருக்கம் இதில் குறிப்பிடுகிறோம். இதிலிருந்தே பல விஷயம் தெரிந்து கொள்ளலாம். இது 14.4.26 –ம் தேதி "சுதேசமித்திரன்" 6-வது பக்கம் 2-வது 3-வது கலங்களில் காணப்படுகிறதாவது:–

1. "எனது நண்பர்களும் பொது ஜனங்களும் என்னை முனிசிபல் கவுன்சிலர் பதவிக்கும் தாலூகா போர்டு பதவிக்கும் தெரிந்தெடுத்தனர். சேர்மெனாகவும் தெரிந்தெடுக்கப்பட்டேன். சென்னை சட்டசபைக்கும் தெரிந்தெடுக்கப்பட்டேன். 1923 –ம் வருஷம் இந்தியா சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டேன்.

**( இது உண்மையல்ல – ப-ர். )**

பொது ஜனங்கள் என்னிடம் நடந்து கொண்ட அன்பைப் பார்த்ததும் என்னுடைய வருவாயில் ஒரு குறிப்பிட்ட பாகத்தை தர்மத்திற்காகச் சிலவிடத் தீர்மானித்தேன். என்னுடைய சொத்தில் ஒரு பகுதியை



RangaRakes
tamilnavarasam.com

தர்மத்திற்காக ஒதுக்கிவைக்க வேண்டுமென்றும் தீர்மானித்தேன்.

2. 1924 – ல் இதனை பகிரங்கப்படுத்த ஆதியில் உத்தேசித்தேன். அப்பொழுது எனக்குப் பெரும் பொருள் நஷ்டமானதால் நான் இதை பகிரங்கப்படுத்துவதை ஒதுக்கி வைக்க நேர்ந்தது. 1925 – ல் முன் வருஷத்தை விட அதிக நஷ்டம் ஏற்பட்டதால் இவ்வருஷத்தில்தான் எனது எண்ணத்தை பஹிரங்கப்படுத்த முடிந்தது. இவ்வருஷத்திலும் எனது செல்வ நிலை சீர்பெற்று விட்டதாகக் கூற முடியாவிட்டாலும் நான் எனது எண்ணத்தை பஹிரங்கப்படுத்துவதை ஒத்தி வைத்துக்கொண்டு போக விரும்பவில்லை. இன்று எனது தர்மத்தின் அங்குரார்ப்பண விழா நடைபெறும் பொழுது அதற்கு ஆசி கூற நீங்கள் எனது வேண்டுகோளுக்கிணங்கி வந்திருக்கிறீர்கள்.

3. தர்மத்திற்காக ஒதுக்கி வைக்கத் தீர்மானித்திருக்கும் நிலத்தின் மதிப்பு 2 லக்ஷம் ரூபாய் பெறுமென்று கருதுகிறேன். இந் நிலங்களுடன் கொஞ்சம் ரொக்கமும் ஒரு வீடும் தர்மத்திற்காக ஒதுக்கி வைக்கலாமென்று உத்தேசித்திருக்கிறேன். இதனைப் பதிவு செய்ய 2000 ரூபாய்க்கு மேல் சிலவாகும். ஆனாலும், சீக்கிரம் சாஸனம் பதிவு செய்யப்படும்.

4. அந்த சாஸனப்படி இந்த சொத்தில் கிடைக்கும் வருஷ வரும்படி 10,000 ரூபாயைக் கொண்டு அடுத்த வருஷம் சிலவு செய்யப்படவேண்டியிருக்கும்.

5. முதல் வருடமான இவ்வருடச் சிலவுக்காக 10,000 ரூபாய் ரொக்கமாய்ச் சிலவு செய்திருக்கிறேன்.

6. (அ) தர்ம சொத்தின் மொத்த வரும்படியில் கால்பங்கு கோவில்களுக்கும், மதக் காரியங்களுக்கும் சாதாரண நிலைமையில் சிலவிடப்படும்.

(ஆ) மற்றொரு கால்பங்கு, கீழ்த்தர வகுப்பிலுள்ள ஏழைகளுக்காக சிலவிடப்படும்.

(இ) மற்றொரு கால்பங்கு, இந்த ஜில்லா கிராமங்களிலுள்ளவர்களின் உதவிக்காக சிலவு செய்யப்படும்.

(ஈ) மற்றொரு கால்பங்கு, கல்விக்கும், கைத்தொழில் கல்விக்கும் சிலவிடப்படும்.

(உ) இப்பணத்தை எவ்வெவ்வழிகளில் சிலவிடப்படும் என்பதை டிரஸ்டிகளே நிர்ணயிப்பார்கள்.



(ஊ) டிரஸ்டிகள் பதவிக்கு பல வகுப்பினரும் தெரிந்தெடுப்பார்கள். எனது குடும்பத்தைச் சேர்ந்த சிலரும் டிரஸ்டிகள் பதவி வகிப்பார்கள்.(டிரஸ்டிகளைப் பற்றி “சுதேச மித்திரனில்” மேற்கண்டபடி கண்டிருக்கிறது. 15.4.26 – ன் “சுயராஜ்யா” வில் “ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமணய்யங்கார், அவரது மனைவி, அவர் குமாரன் காயமான மெம்பர்களாவார்கள்” என்று கண்டிருக்கிறது. **(ப-ர்.)** )

7. பின்வரும் வருவாயை எப்படி சிலவிடவேண்டுமென்று தற்பொழுது சொல்ல எவராலும் முடியாது என்று நான் சொல்லுவதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். ஏனெனில், இது டிரஸ்டிகளால் நிர்ணயிக்கப்பட வேண்டிய விஷயம்.

8. தற்பொழுது பல தர்ம காரியங்களுக்கு பணம் உதவப்படுவதுடன் 6 இராப் பள்ளிக்கூடம்,ஒரு இலவச வாசகசாலை, ஒரு பெண் பள்ளிக்கூடம், ஒரு பெண் பாடசாலை முதலியவற்றை நடத்தவும் ஏழைகளுக்கு அடிக்கடி அன்னமளிக்கவும் ஏற்பாடு செய்ய உத்தேசித்திருக்கிறேன்.

9. இத்துடன் தேசீய வேலை செய்யும் பல தமிழ் பத்திரிகைகளுக்கு பொருளுதவி செய்ய நான் உத்தேசித்திருக்கிறேன்.

10. அல்லாமலும் கிராமத்தில் உருவான வேலை செய்ய உத்தேசித்திருக்கிறேன். ஆனால், சிலவுக்கு மாத்திரம் பணம் வாங்கிக் கொண்டு முணுமுணுக்காமல் வேலை செய்ய முன் வருபவர்களைப் பொருத்தே இக்காரியம் நடைபெற வேண்டியிருக்கிறது. சுப்பிரியின் ஊழியம் எனக்குக் கிடைத்திருப்பது பற்றி சந்தோஷிக்கின்றேன். ஆனால், இன்னும் அவர் போன்றவர்கள் இன்னும் சிலர்வேண்டும்.”

சீனிவாசய்யங்கார் ஒரு சிறிய உபந்நியாசம் செய்தார். (அவர் இந்த விளம்பர தர்மப் புரட்டின் இரகசியத்தை ஜாடையாய் வெளியில் காட்டினார். அதனால் அதை இங்கு வெளியிடவில்லை.) இல்லா விட்டால் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் உபந்நியாசம் கூடவெளியிட முடியாமல் விட்டுவிட முடியுமா?

1. இத்தர்மம் செய்ய எண்ணுவதற்கு ஏற்பட்ட அவசியம் என்ன என்பதை விளக்குகையில், தன்னை சில பதவிகளுக்கு ஜனங்கள் தெரிந்தெடுத்ததினால் 1918–ல் தன்னிடம் ஜனங்களுக்கு அன்பு இருப்பதாய் அறிந்து இத்தர்மம் செய்ய தீர்மானித்தாராம். அதாவது,



RangaRakes tamilnavarasam.com

வரப்போகும் சட்டசபைத்தேர்தலில் இவரை தெரிந்தெடுக்கா விட்டால் இவரிடம் ஜனங்கள் அன்பு வைத்திருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் எண்ணம் என்னவாகும்? அதனால் இத்தர்மம் செய்ய நினைத்திருப்பது என்னவாகும் என்பதை வாசகர்கள்தான் யோசிக்கவேண்டும்.

2. இதை வெளிப்படுத்தவே மூன்று வருஷமாயிற்றாம். காரணம் 1924-ல் நஷ்டம், 1925-ல் அதைவிட நஷ்டம், 1926 ஆரம்பத்திலேயே அதாவது, நஷ்டம் ஈடேறாமல் இருக்கும் போதே இனியும் ஒத்தி வைக்காமல் அதை வெளிப்படுத்திவிடவேண்டிய காரணம் ஏற்பட்டுவிட்டது. அதென்னவென்றால் வரப்போகும் சட்டசபைத் தேர்தல்களுக்காகவல்லாமல் வேறு என்ன காரணம் இருக்கக் கூடும். அப்படியானால் ஒரு தேர்தலுக்கு தர்மம் செய்ய நினைத்து மற்றொரு தேர்தலுக்கு அதை வெளிப்படுத்த வேண்டியதாயிற்று. இதனின்று தர்மத்தின் தத்துவமறியலாம். இத்தர்மத்திற்காக ஒதுக்கி வைக்கத் தீர்மானித்த சொத்தின் மதிப்பு 2 லக்ஷம் பெறுமாம். இதோடு இன்னமும் கொஞ்சம் ரொக்கமும் ஒரு வீடும் ஒதுக்க உத்தேசமாம். சீக்கிரம் சாஸனம் பதிவு செய்யப்படுமாம். இதிலிருந்து எல்லாம் தீர்மானம், உத்தேசம், பதிவு செய்யப்படும் என்கிற எதிர் காலத்தி லிருக்கிறதே தவிர நடந்திருப்பது ஒன்றுமில்லை. ஆனால் அங்கு ரார்ப்பணத் திருவிழா (ஆரம்பக்கொண்டாட்டம்) மாத்திரம் நடந்தாய் விட்டது. "தமிழ்நாட்டுக் கர்ணன்" "பெரிய தர்மம்" "இரண்டு தர்மங்கள்""இந்தியாவின் தர்மம்" என்கிற தலைப்புகளுடன் பிராமணப் பத்திரிகைகளும் பிரசாரகர்களும் தர்மத்தில் பங்குபெற நினைக்கும் பிரசாரர்களும், பிராமணரல்லாத பத்திரிகைகளும், எழுத்துப் பறையும், பிரசங்கப் பறையும் ஆரம்பித்தாய் விட்டது.

4. அந்த சாஸனப்படி, எந்த சாஸனப்படி? இனி செய்யப் போகும் சாஸனப்படி; விடப்போகும் சொத்தில் கிடைக்கப்போகும் வருஷ வரும்படி ரூ. 10,000. இதை சிலவு செய்யப்போகும் காலம் அடுத்த வருஷம்.

5. இந்த வருஷத்திற்கோ 10,000 சிலவு செய்தாகிவிட்டது.

6. எப்படி சிலவு செய்யப்பட்டிருக்கிறதென்றால்: -

(அ) கால்பங்கு கோவில்களுக்கும், மதக் காரியங்களுக்கும். அதாவது யாவரும் போய் தரிசிக்க முடியாத கோவில்களுக்கும், பிராமணன் உயர்ந்தவன், அவரொழிந்த மற்றவர் சூத்திரர் - தீண்டாதவர் என்கிற வர்ணாசிரமத்திற்கும் சிலவிடப்படும்.

(ஆ) மற்றொரு கால்பங்கு கீழ்த்தர வகுப்பிலுள்ள ஏழைகளுக்கு. அது யாரோ! வோட்டுப் போடுகிறவர்களோ, வோட்டு வாங்கிக் கொடுப்பவர்களோ, இதற்குப் பணம் வாங்குகிறவர்கள்தானே கீழ்த்தர வகுப்பாயிருக்கமுடியும். அதுவும் செலவிடப்படுமாம். எப்பொழுது? இவ்வருஷத்திற்கு முன்னமே சிலவு செய்தாய் விட்டது!!

(இ) மற்றொரு பகுதி இந்த ஜில்லா கிராமங்களில் உள்ளவர்களுக்கு உதவி செய்யப்படும். அது எதற்காக? கிராமத்திலுள்ளவர்கள் போட்டி போட்டுக் கொண்டு அய்யங்காருக்கு வோட்டுபோட ஓடிவருவதற்கு! அதுவும் இவ் வருஷத்திற்கு செலவு செய்தாய் விட்டது!!

(ஈ) மற்றொரு கால் பங்கு கல்விக்கும் கைத் தொழிலுக்கும். என்ன கல்வி, என்ன கைத்தொழில். கடவுளுக்குத் தான் தெரியும். நூல் நூற்பதும் நெசவு நெய்வதுமான தொழில் நம்ம அய்யங்காருக்கு ஆபத்து. ஏனென்றால், அவரே கான்பூர் காங்கிரஸில் பேசும்போது தனது பணம் 3 லக்ஷம் நூற்கிற மில்லிலும், நெய்கிற மில்லிலும் போடப் பட்டிருப்பதாய் சொல்லியிருக்கிறார். ராட்டினமும், கைத்தறியும் ஏற்படுத்திவிட்டால் 3 லக்ஷம் ரூபாய் போட்ட யந்திரத்தை கொளுவடிப்பதா? கத்தி செய்வதா? ஆதலால் அதுவும் முடியாது. ஆனாலும் இவ்வருஷத்துக்கு சிலவு செய்தாய்விட்டது!

(உ) இப்பணங்களை எவ்வெவ் வழிகளில் சிலவு செய்வது என்பதைப் பற்றி டிரஸ்டிகளே நிர்ணயிப்பார்களாம். இதனால் மேலே சொன்ன தெல்லாம் அடிபட்டுப் போய்விட்டது.

(ஊ) அந்த டிரஸ்டிகள் பதவிக்கோ இனிமேல் பல வகுப்பினரும் தெரிந்தெடுப்பார்களாம். எந்த வகுப்பினர்? ஒரு சமயம் வடகலை அய்யங்கார் வகுப்பினரும், தென்கலை அய்யங்கார் வகுப்பினராக வுமிருக்கலாம். அதுவும் யார் தெரிந்தெடுப்பவர்கள்? தெரிந்தெடுப் பை இன்னும் கொஞ்சம் விஸ்தரிக்க வேண்டுமானால் அய்யங்கார் புதல்வியும் மாப்பிள்ளையும் சேரலாம். இது போதாதா? இதுவும் போதாவிட்டால் "சுதேசமித்திரன்" பத்திராதிபரான தனது சம்பந் தியை சேர்த்துக் கொள்வது. அடேயப்பா! விளங்குகிற தர்மத்திற்கு இதுபோதாதா? இதற்கு ஆதாரம் "சுயராஜ்யா"விலேயே இருக்கிறது.

7. மறுபடியும் வேதாளம் முருங்கை மரத்திலேறியதைப் போல் பின்வரும் வருவாயை அதாவது தன்னுடைய தர்ம சொத்திலிருந்து வரும்படியை எப்படி சிலவிட வேண்டுமென்று தற்பொழுதே சொல்ல எவராலும் முடியாது. (இது தான் "இத்தர்மத்திற்கு" ஒரு காப்புத் திரவியம். அதாவது பின்னால் தன்னிஷ்டப்படியெல்லாம்



RangaRakes tamilnavarasam.com

சொல்லிக் கொள்வதற்கு ஒரு சௌகரியமான செக்ஷன் –பிரிவு) ஏனெனில் இனிமேல் (தெரிந்தெடுக்கப் போகும்) டிரஸ்டிகளால் நிர்ணயிக்கப்படவேண்டிய விஷயம். போச்சு, போச்சு, இந்த பிரிவினால் எல்லாம் போச்சுது. மேலெழுதியதையெல்லாம் அடித்துவிடவேண்டியதுதான்.

இந்த சமயத்தில் ஒரு சின்ன கதை ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது ஓர் மாஜிஸ்ட்ரேட் கச்சேரிக்கு ஒரு அடிதடி பிராது வந்தது. அதில் ஒரு சாக்ஷியை விசாரிக்கும் போது அந்த சாக்ஷி பேரில் மாஜிஸ்ட்ரேட்டுக்கு கொஞ்சம் கண்ணுண்டு. (ஏனென்றால் அவன் அடிக்கடி இந்த மாதிரி சாக்ஷிக்கு வருகிறவன்) அவன் சாக்ஷி சொல்ல பெட்டிமேலேறியவுடன் ஊர், பெயர், தகப்பன் பெயர், ஜாதி, வயது முதலியவைகள் கேட்கப்பட்டவுடன் பிரமாணம் வாங்கப்பட்டது. அதாவது "சர்வ வல்லமையுள்ள தெய்வத்திற்கு முன்பாக நான் சொல்லுவதெல்லாம் நிஜம்; நிஜம் தவிர வேறொன்றுமில்லை" என்று சொன்னான். இது சொன்னவுடன் மாஜிஸ்ட்ரேட் சாக்ஷியைப் பார்த்து 'உண்மை சொல்ல வேண்டும்'. பத்திரம். அப்புறம் தெரியுமா? என்று மிரட்டினார். சாக்ஷி பார்த்தான்; எஜமானரே காதில் கேட்டதை சொல்லட்டுமா, கண்ணில் பார்த்ததை சொல்லட்டுமா என்று மிகுந்த பயபக்தியோடு கேட்பவன் போல் கேட்டான். மாஜிஸ்ட்ரேட் அதிகார தோரணையில் கண்ணில் பார்த்ததைத்தான் சொல்லவேண்டும்; காதில் கேட்டதைப்பற்றி நமக்கு கவலையில்லை. ஊரில் என்ன என்னமோ பேசிக் கொள்வார்கள்; அதையெல்லாம் நம்பி ஒரு காரியம் செய்ய முடியாது என்று சொன்னார். சாக்ஷி உடனே மாஜிஸ்ட்ரேட் காலில் விழுந்து எஜமானரே நான் முன்னே சொன்னதெல்லாம் தயவு செய்து அழித்துவிடுங்கள். என் தகப்பனார் யார் என்பதும் நான் கண்ணில் பார்த்ததில்லை; எந்த ஜாதியில் பிறந்தவன் என்பதும் கண்ணில் பார்த்ததில்லை; இதெல்லாம் பிறத்தியாரால் கேள்விப்பட்டதுதான் என்று கெஞ்சினான். மாஜிஸ்ட்ரேட் அதைப்பற்றி கவலையில்லை மற்றதைப் பற்றி சொல் என்றார். சாக்ஷி வேண்டாம், வேண்டாம் சர்வ வல்லமையுள்ள தெய்வத்திற்கு முன்பாக என்று சத்தியம் செய்தாய் விட்டது; கண்ணில் பாராத சங்கதியையும் நமக்கு முழுதும் நிஜம் என்று தெரியாத சங்கதிகளையும் சொல்ல முடியாது என்று வாதாடினான். கதையில் இன்னும் சில விஷயம் வரும். அது இந்த வியாசத்திற்கு சம்மந்தப்பட்டதல்ல. அது போல் நமது அய்யங்காரின் தர்ம சாஸனமும் அதாவது தன்னை நம்புவதாயிருந்தால் தான் சொல்வதையெல்லாம் கேட்க வேண்டும். நம்பா விட்டால் டிரஸ்டிகளைத் தான் கேட்க வேண்டும். தனக்கு ஒன்றும் தெரியாது என்பது போலிருக்கிறது.

8. டிரஸ்டிகளைத்தான் கேட்கவேண்டுமென்று முடிவாகச் சொல்லி விட்டால் தன்னிடம் யாரும் வராவிட்டால் என்ன செய்கிறது என்று அதற்காக மறுபடியும் தற்பொழுதும் பல தர்ம காரியங்களுக்கு



பணம் உதவப்படும். அதாவது 6 இராப் பள்ளிக்கூடம், ஒரு பெண் பாடசாலை, ஒரு பெண் பள்ளிக்கூடம் (பாடசாலைக்கும் பள்ளிக்கூடத் திற்கும் என்ன வித்தியாசமோ; அது அய்யங்கார் அகராதியைத்தான் பார்க்கவேண்டும்) ஒரு இலவச வாசக சாலை ! அதற்கு வரும் பத்திரிகைகள் எல்லாம் அய்யங்கார் கோஷ்டியாரும், அய்யங்காரிடம் பணம் வாங்குபவர்களும் போடும் பத்திரிகைகள்தான் வரவேண்டும் என்கிற கருத்தோ என்னமோ. அப்புறம் ஏழைகளுக்கு அடிக்கடி அன்னமளிப்பது. வோட்டு சம்பாதிக்கும் கிராமப் பிரசாரகர்கள் கோய முத்தூர் வருவதால் அவர்களுக்கு சாப்பாடு போட வேண்டாமா? அதற்காக தனது வீட்டில் டிரஸ்ட்டிகள் உள்பட அன்னசத்திரம்.

9. இவ்வளவும் போதாமல் இன்னும் ஒரு பெரிய விளம்பரம், அதாவது தேசீய வேலை செய்யும் சில தமிழ் பத்திரிகைகளுக்கும் பொருளுதவி செய்ய உத்தேசங் கொண்டுள்ளேன் என்பது. இது எந்த முறையில், டிரஸ்டி முறையிலா? அப்படியானால் இவருக்கு அதிகார மேயில்லை. இந்த வருஷத்திற்கு செய்தும் ஆகிவிட்டது! ஒரு சமயம் சட்டசபை அபேக்ஷகர் முறையிலோ வென்றால் அது வேறே தர்மம். இதில் சொல்ல வேண்டியதில்லை. அந்த இரகசியம் நமக்கு சுலபத்தில் தெரியாது. இப்பொழுது அதைச் சொல்லவும் கூடாது. பத்திராதிபர் களின் விண்ணப்பங்கள் வந்தபின் மேல் பார்த்துக் கொள்ளலாம்.

10. இவ்வளவும் அல்லாமல் கிராமங்களில் சில உருவான வேலை களைச் செய்ய உத்தேசித்திருக்கிறார். அதற்கு பிரசாரகர்கள் யோக்கி யர்களாய் கிடைத்தால் மாத்திரம் பணம் கொடுக்கப்படுமாம். ஆனாலும் சுப்பிரி என்கிற ஒரு யோக்கியரின் ஊழியம் மாத்திரம் இப்போது அவருக்குக் கிடைத்திருக்கிறதாம். கிராமத்தில் உருவான வேலை என்ன? அய்யங்கார் தர்மப் பிரபு, கலியுகக் கர்ணன், பஞ்ச நிவாரண வேலை செய்தவர், பருத்திச் செடி பிடுங்குவதை நிறுத்தின வர், ஓட்டு கொடுத்தால் அதற்குப் பதிலாக பெரியதர்மம் செய்வார், பாலங்கட்டிக் கொடுப்பார் என்று சொல்லக் கூடியவர்கள் வேண்டும். அதுவும் இரகசியம். விண்ணப்பங்கள் வந்த பிறகு பார்த்துக் கொள்ள லாம். இந்த கோலாகல திருநாளுக்கு வந்த ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங் கார் ஏமாந்து போனதையும் தான் வெட்கப்பட்டதையும் சுதேச மித்திரன் ரிப்போர்ட்டருக்கு எழுத முடியவில்லையோ, எழுதினதை பத்திரிகையில் போடவில்லையோ, விசாரித்து பாக்கி விஷயத்தையும் தெரிந்து, விட்டுப்போனதையும் சேர்த்து மறுபடி சாவகாசப்பட்டபோது எழுதுகிறேன்.

**குடி அரசு – கட்டுரை – 25.04.1926**



RangaRakes tamilnavarasam.com

# தீண்டாமை

"இந்தக் கிணற்றைத் திறந்து வைக்கும் வேலையை, ஒரு பெருமை யெனக்கருதி நீங்கள் எனக்களித்திருந்தாலும் உண்மையில் எனக்கு அதைத் திறந்து வைக்கக் கொஞ்சமும் மனமில்லை. அல்லாமலும் இதை ஒரு சிறுமையாகவே மதித்து மிகுந்த சங்கடத்துடனேயே இந்த வைபவத்தில் கலந்து கொள்ளுகிறேன். ஆதி திராவிடர்களுக்கென்று தனிக் கிணறுகள் வெட்டுவது அக்கிரமமென்பதே எனது அபிப்பிராயம். இவ்வாறு தனிக் கிணறுகள் வெட்டுவது, ஆதி திராவிடர்கள் நம்மைவிடத் தாழ்ந்தவர்கள், அவர்கள் நம்முடன் கலக்கத் தக்கவர்களல்ல என்று ஒரு நிரந்தரமான வேலியும் ஞாபகக் குறிப்பும் ஏற்படுத்துவதாகத்தான் அர்த்தமாகும். எதற்காக அவர்களுக்குத் தனிக்கிணறு வெட்டவேண்டும்? சிலர் ஆதி திராவிடர்களுக்கு நன்மை செய்வதாக வேஷம் போட்டு தாங்கள் உயர்ந்தவர்கள் என்பதை நிலை நிறுத்திக் கொள்ளத்தான் இவ்வித தர்மங்கள் உதவும். நமது கிணறு குளங்களில் ஆதி திராவிடர்களை ஏன் தண்ணீர் எடுக்க அநுமதிக்கலாகாது? பக்ஷிகளும் மிருகங்களும் குளங்களில் தண்ணீர் சாப்பிடுவதில்லையா? குளங்களுக்கு எங்கிருந்து தண்ணீர் வருகிறது என்பது உங்களுக்குத் தெரியாதா? அதில் என்னென்ன வருகிறதென்பது உங்களுக்குத் தெரியாதா? இவ்விதத் தண்ணீரை இந்த ஆதி திராவிடர்கள் எடுத்து சாப்பிட்டு விடுவதனால் என்ன கெடுதி ஏற்பட்டுவிடும்."

"நீங்கள் எனக்களித்த வரவேற்புப் பத்திரத்தில் உங்களுக்காக நான் அதிகவேலை செய்திருப்பதாகச் சொல்லிப் புகழ்ந்திருக்கிறீர்கள். அது கொஞ்சமும் உண்மையல்ல. உங்களை உத்தேசித்து நான் ஒரு காரியமும் செய்யவேயில்லை. ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்கு உழைப்பதாய் நினைத்துக் கொள்வதும் ஆதி திராவிடர்களுக்கு உழைப்பதாய்ச் சொல்லுவதும் வேஷத்திற்காகத்தான் உழைக்கிறவர்களும் பேசுகிறவர்களுமாயிருப்பார்களென்பது எனது அபிப்பிராயம். அதாவது, இந்தியாவின் நன்மைக்காக ஐரோப்பியர்கள் இந்தியாவை ஆளுகிறார்கள் என்பது போலத்தான் ஆகுமேயல்லாமல் வேறல்ல. நான் அப்படி நினைக்கவேயில்லை."

"பறையர்"என்கிற ஒரு ஜாதிப் பெயர் நம் நாட்டிலிருப்பதால்தான் "சூத்திரர்" என்கிற ஒரு ஜாதிப் பெயர் நம் நாட்டிலிருக்கிறது. "பறையர்" என்கிற ஜாதிப் பெயரை விட "சூத்திரர்" என்கிற ஜாதிப் பெயர் மிக்க இழிவானது. இந்து சாஸ்திரப்படி, பறைய ஸ்திரீகளில் பதிவிரதைகளும், சரியான



ஒரே தாய்க்கும், தகப்பனுக்கும் பிறந்தவர்களுமிருக்கலாம். சூத்திரர்களில் அப்படியிருக்க இடமேயில்லை. ஏனென்றால் "சூத்திரச்சி" என்றால் தாசி, வேசி என்றுதான் பொருள். "சூத்திரன்" என்றால் தாசி மகன், வேசி மகன் என்றுதான் பொருள். இதை ஒப்புக்கொள்ளாதவன் இந்து ஆகமாட்டான் என்பது சாஸ்திர சம்மதம். ஆகையால் என் போன்ற "சூத்திரன்" என்று சொல்லப்படுபவன் "பறையர்கள்" என்று சொல்லப்படுவோர்களுக்கு உழைப்பதாகச் சொல்லுவதெல்லாம் "சூத்திரர்கள்" என்று தம்மை யாரும் கருதக்கூடாது என்பதற்காகத்தானேயல்லாமல் வேறல்ல. ஆகையால், எனக்காக நான் பாடுபடுவதென்பது உங்கள் கண்ணுக்கு உங்களுக்காகப் பாடுபடுவதாய்த் தோன்றுகிறது. உங்களைத் தாழ்மையாய் கருதும் ஸ்திரீகளும், புருஷர்களும் தாங்கள் பிறரால் உங்களை விடக் கேவலமாய் தாழ்மையாய்க் கருதுவதை அறிவதில்லை. அந்நியர்களைத் தாழ்ந்தவர்களாக நினைக்கும் அறியாமையால், தங்களை மற்றவர்கள் தாழ்மையாய் நினைப்பது தங்களுக்கு ஈனமாய்த் தோன்றுவதில்லை.

இந்த லக்ஷணத்தில் உங்களிடம் தப்பிதம் கண்டுபிடித்து, "உங்கள் உடம்பில் துர்வாடை அடிக்கிறது, நீங்கள் ஸ்நானம் செய்வதில்லை, துணி துவைப்பதில்லை, மாட்டு மாமிசம் சாப்பிடுகிறீர்கள், மதுவருந்துகிறீர்கள், இதை விட்டுவிடுங்கள்" என்று ஞானோபதேசம் செய்கிறார்கள். நீங்கள் வேஷ்டி துவைக்காமலும் குளிக்காமலும் இருப்பதற்கு யார் ஜவாப்தாரி என்பதை அவர்கள் உணருவதில்லை. உங்களுக்குக் குடிக்கவே தண்ணீரில்லையென்றால் குளிப்பதெப்படி வேஷ்டி துவைப்பதெப்படி? அழுக்கும் நாற்றமும் உங்கள் கூடவே பிறந்ததா என்று கேட்கிறேன். குளிக்கவும், வேஷ்டி துவைக்கவும், பல் துலக்கவும் தண்ணீர் கொடுக்காமல், மகந்துகள் என்போரையும், சங்கராச்சாரிகள் என்போரையும் கொண்டு வந்து வீட்டிலடைத்து வைத்து விட்டால் அவர்கள் துணி அழுக்கில்லாமல் இருக்குமா? அவர்கள் உடம்பும் வாயும் நாற்றமடிக்காமலிருக்குமா? என்று யோசித்துப் பாருங்கள். நாமே ஒருவனை பட்டினி போட்டுவைத்து, அவன் இறந்துபோன பிறகு பட்டினியினால் இறந்துபோய் விட்டான் பாவி என்று சொன்னால், யார் "பாவி" யென்பதை நினைத்துப் பாருங்கள். அல்லாமலும், மாடு தின்பதும், மதுவருந்துவதும், நீங்கள் "பறையர்"களாயிருப்பதற்குக் காரணமென்று சொல்லுவது கொஞ்சமும் யோக்கியமான காரியமல்ல. மாடு சாப்பிட்டுக் கொண்டும் மதுவருந்திக் கொண்டும் இருக்கிறவர்கள்தான் இப்பொழுது உலகத்தையே ஆண்டு கொண்டிருக்கிறார்கள். தவிரவும், நீங்கள் மாடு சாப்பிடுவதன் குற்றம் உங்களைச் சேர்ந்ததல்ல. உங்களை மற்றவர்களைப் போல சரியானபடி சம்பாதிக்கவும், தாராளமாய் சாப்பிடவும், தெருவில் நடக்கவும், தாராளமாய் எங்கும் போய் வேலை செய்து சம்பாதிக்கவும் வழியில்லாமல் செய்துவிட்டதால் கொஞ்சப் பணத்தில் அதிக ஆகாரம் ஆகக் கூடியதான மாட்டு மாமிசத்தைப் புசிக்க வேண்டியதாயிற்று. மாட்டு மாமிசத்தை அநுமதிக்கும் மதத்தைச் சேர்ந்த மகமதியரிலும் கிறிஸ்தவரிலும் கூட



RangaRakes tamilnavarasam.com

சிலர் கைப்பணந் தாராளமாய்க் கிடைப்பதாயிருந்தால் நாங்கள் மாட்டு மாமிசம் சாப்பிடுகிற வழக்கம் இல்லை என்று சொல்லுகிறார்கள்.

ஆதலால், நமது நாட்டார் மாட்டிறைச்சி சாப்பிடுவதற்கு தரித்திரந் தான் முக்கியக் காரணம். அல்லாமலும், மாட்டு மாமிசம் சாப்பிடுவது ஆடு, கோழி, மீன், பன்றி இவைகளைவிட என்ன அவ்வளவு அதிகமான பாவம் ஆய்ப் போய்விட்டது. கோழியும், மீனும், பன்றியும் எச்சிலையும், பூச்சு புழுக்க ளையும், அழுக்குகளையும், மலத்தையும் சாப்பிடுகிறது. இப்படியிருக்க இதைச் சாப்பிடுகிற வட நாட்டு "பிராமணர்கள்" முதல் தென்னாட்டு "சூத்திரர் கள்" வரை நல்ல ஜாதியாயும், தொடக்கூடியவர்களாயுமிருக்கும் போது, புல்லும் பருத்திக் கொட்டையும், தவிடும், புண்ணாக்கும் சாப்பிடுகிற மாட்டி றைச்சி சாப்பிடுவதனால் மாத்திரம் எப்படி ஒரு மனிதன் தாழ்ந்த வனாவான். அப்படிப் பார்த்தாலும் மாடு சாப்பிடுகிறவர்களையெல்லாம் "தொடாதே", "தெருவில் நடக்காதே", "குளத்தில் தண்ணீர் சாப்பிடாதே", "ஊருக்குள் குடியிருக்காதே" என்று சொல்லுகிறார்களா? இது வீணாய், வேண்டுமென்றே உங்களைத் தாழ்த்தி வைப்பதற்காகச் சொல்லும் ஒரு யோக்கியப் பொறுப்பற்ற காரணமேயல்லாமல் உண்மையான காரணமல்ல என்பதுதான் எனது முடிவு. மதுவையும் மாட்டு மாமிசத்தையும் தள்ள வேண்டும் என்பதை நான் ஆக்ஷே பிக்க வரவில்லை. மதுவையும் மாட்டு மாமிசத்தையும் தள்ளினால்தான் உங்கள் ஜாதி உயரும் என்று சிலர் சொல்லும் அயோக்கியத்தனமான காரணத் தை நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஜாதி உயருவதற்காக மதுவையும் மாட்டு மாமிசத்தையும் விடுங்களென்று கேட்க மாட்டேன். அதற்காக நீங்கள் விடுவதும் அவ்வளவு அவசியமில்லை. நம் நாட்டில் தென்னை, பனை மரங்களில் ஊறும் கள்ளும், காய்ச்சும் சாராயமும் வெளிநாடுகளிலிருந்து வரும் சாராய தினுசுகளும் சென்னை மாகாணத்தில் மாத்திரம் சுமார் 15, 20 கோடி ரூபாய் பொரும்படியானதையெல்லாம் நீங்களேவா குடித்து விடுகிறீர் கள்? யாராவது நம்புவார்களா? ஒருக்காலும் நம்பமாட்டார்கள். ஆதலால், ஜாதி உயர்வை உத்தேசித்து இவற்றை விட்டு விட வேண்டுமானால், மற்றவர்கள் முதலில் விடட்டும்.

மதுபானம் மனிதனின் ஒழுக்கத்திற்கு விரோதமென்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். மதுவிலக்குக்காக நானும் சிறிது தொண்டு செய்திருக் கிறேன். ஆனால், ஜாதி உயர்வுக்கு எல்லா ஜாதியாரும் சாப்பிடும் மதுவிலக்கு ஒன்றும் தடை செய்வதில்லை. ஆகையால், மதுவிலக்கும் மாமிச விலக்கும் ஜாதி உயர்வுக்கு அவசியம் என்று சொல்வது வேண்டுமென்றே சொல்லும் பொய். அல்லாமலும் உங்களிடமும் சில குற்றங்கள் இருக்கிறதை சொல்லா மலிருக்க முடியவில்லை. அதாவது, நீங்களாகவே உங்கள் ஜாதிக்கு இழிவு சம்பாதித்துக் கொள்ளுகிறீர்கள். அநாவசியமாய் யாரைக் கண்டாலும் "சுவாமி" என்று கும்பிடுகிறீர்கள். நீங்கள் தாழ்ந்தவர்கள் என்கிற எண்ணம் உங்கள் ரத்தத்தில் கலந்திருக்கிறது. அதை மாற்றிவிட வேண்டும் . ஒரு



மனிதனைப் பார்த்தால் அவனுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம் என்கிற எண்ணம் உங்கள் மனதில் உதிக்க வேண்டும். சுயமரியாதையில் கவனமில்லாத ஜாதியாரை உயர்த்தினாலும் உயராது. அவனவனுக்கே, தான் மனிதன் என்கிற உணர்ச்சி வரவேண்டும். நீங்கள் இனிமேல் யாரையும் "சுவாமி" என்று கூப்பிடக் கூடாது. வேண்டுமானால் "ஐயா" என்று கூப்பிடுங் கள். நீங்களாகவே பதுங்குவதும் ஒதுங்குவதுமான துர்க்குணங்கள் உங்களை விட்டுப் போகவேண்டும். அன்றுதான் நீங்கள் சமத்துவமாக நடத்தப் படுவீர்கள்.

*குறிப்பு:- காரைக்குடி-சிராவயலில் நடைபெற்ற காந்தி வாசக சாலையின் ஆண்டு நிறைவு விழா மற்றும் காந்தி கிணறு திறப்பு விழாவில் 6-4-26 - ந் தேதி ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 25.04.1926**



RangaRakes tamilnavarasam.com

# ராஜியின் பலன்

## சுயராஜ்யக் கக்ஷியின் கதி

**"பயித்தியம் தெளிந்து போய்விட்டது. உலக்கையை எடுத்துக் கொண்டுவா கோவணங் கட்டிக்கொள்கிறேன்."** என்று ஒரு பழமொழி யுண்டு.

அதாவது, ஒரு வாலிபனுக்குப் பெண்ணாசையால் பயித்தியம் பிடித் திருந்தது. அவன் கோவணமுமில்லாமல் நிர்வாணமாய்த் திரிந்து கொண்டி ருப்பது வழக்கம். அதனால் ஜனங்கள் அவனைப் பிடித்து விலங் கிட்டு ஒரு அறையில் மூடி வைத்திருந்தார்கள். கொஞ்சநாள் பொறுத்து அவ் வாலிபன் "தனக்கு பயித்தியம் தெளிந்து விட்டது. உலக்கை எடுத்துக்கொண்டு வாருங்கள், அதைக் கோவணமாகக் கட்டிக்கொள்கிறேன்" என்று சொன்னா னாம். அது போல் நமது ராஜீயக் கக்ஷிகளுக்குள் ராஜி ஏற்பட்டுப் போய் விட்டதாம்; காங்கிரசுக்கும் நல்ல காலமாம்; தங்கள் கக்ஷிக்கும் இனிமேல் குறைவில்லையாம்; இனி எல்லோரும் ஒத்து வேலைசெய்ய வேண்டியது தான் பாக்கியாம் என்பதாக இன்னும் என்னென்னவோ எழுதி பிராமணப் பத்திரிகைகள் ஏமாற்றுப் பிரசாரம் செய்கின்றன. பயித்தியம் தெளிந்ததாகச் சொல்லுபவன் எப்படி உலக்கையை கோவணம் கட்டிக்கொள்ளலாம் என்று நினைத்தானோ அதேபோல் சுயராஜ்யக் கக்ஷியார் மந்திரி வேலை ஒப்புக்கொள்ளுவதை "காங்கிரஸ்" கட்டளைப்படி நடப்பது என்று தீர்மா னித்து ராஜியாய் விட்டார்கள். இதிலிருந்து என்ன விளங்குகிறது? மந்திரி வேலையைப் பெறும் ஆசையை மனதில் வைத்துக் கொண்டு சட்டசபையில் "ஒத்துழையாமை" என்றும், "உத்தியோகம் ஒப்புக்கொள்ளுவதில்லை' என்றும், "முட்டுக்கட்டை" என்றும் சொல்லிக் கொண்டு வோட்டர்களை ஏமாற்ற நினைத்த தந்திரமும் ரகசியமும் இப்போது வெளியாய் விட்டது. முதலில் ஒத்துழையாதாராயிருந்து சட்டசபைக்குள் "ஒத்துழையாமை", "முட்டுக்கட்டை" என்று மாறி கடைசியாய் பரஸ்பர ஒத்துழைப்பாளருடன் ராஜி செய்துகொள்ளுவது என்கிற சாக்கை வைத்துக் கொண்டு மந்திரிவேலை கிடைத்தால் ஒத்துழைப்பது இல்லாவிட்டால் அப்பதவி கிடைக்கும் வரையில் "ஒத்துழையாமை", "முட்டுக்கட்டை" என்று சொல்லிக் கொண்டிருப்பது என்கிற ராஜிக்கு வந்தாகி விட்டது. சுயராஜ்யக் கக்ஷியின் உள் குட்டை வெளிப்படுத்திய பெருமை ஸ்ரீமான் ஜெயகருக்குத்தான் சேரவேண்டும்.



இந்த ராஜியின் பலனாய் ஐரோப்பிய மகாயுத்தத்தில் 14 நிபந்த னைகள் ஏற்படுத்தின. அமெரிக்கா பிரசிடெண்ட் வில்சன் துரைக்கு இருந்த பெருமை இப்போது எலெக்ஷன் உலகத்தில் ஸ்ரீமான் ஜெயகருக்கு ஏற்பட்டி ருக்கிறது. ஐயோ பாவம்! தலைவர் பண்டிதர் நேருவும், அவரின் வாலான ஸ்ரீமான் ரெங்கசாமி ஐயங்காரும் ஸ்ரீமான் ஜெயகர் பெயரைச் சொல்லித் திரிய வேண்டிய வேலை ஏற்பட்டுவிட்டது. இனி இவர்கள், ஆடுகளுக்கு எவ்வித உபயோகமும் இல்லாமல் கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் 'தாடி' என்று சொல்லக்கூடிய இரண்டு மாமிசத் துண்டுகளைப் போல் ராஜீய உலகத்தில் எவ்வித பிரயோஜனமும் இல்லாமல் இவ்விரண்டு பிராமணர்களும் ஆகிவிட்டார்கள் . ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கோ வயிற்றுக் கடுப்புதான் ஏற்பட்டிருக்கும். அடுத்த காங்கிரசுக்கு ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரே பிரசிடெண்ட் ஆகலாம் என்று நினைத்திருந்தார். அவரின் சிஷ்யர்களான பிராமணப் பத்திரிகைகளும் 'நமது சொந்த நிரூபர்' என்ற பெயரால் தூக்கி விட்டுக்கொண்டிருந்தன. முன் ஒரு காலத்தில் ஸ்ரீமான் திலகர் இறந்த உடன் 'இனி இந்தியாவுக்கு திலகர் லோகமான்ய சீனிவாசய்யங்கார்தான்' என்று 'இந்து' பத்திரிகை முதல் எல்லா பிராமணப் பத்திரிகைகளும் தம்பட்டம் அடித்து வந்தன. கடைசியாய் காந்தி வந்ததும் ஐயங்கார் கொஞ்ச காலம் அஞ்ஞாதவாசம் செய்யவேண்டியதாயிற்று. அது போலவே மகாத்மா காங்கிரஸை விட்டு ஒழிந்ததும், மறுபடியும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரை அந்த இடத்தில் இருத்த பிராமணப் பத்திரிகைகள் பாடுபட்டன. ஐயங்காரின் துரதிருஷ்டத்தால் இப்போது ஜெயகர் முளைத்துவிட்டார். இனி ஐயங்கா ருக்கு காங்கிரஸ் பிரசிடெண்ட் பதவி கிடைப்பது சந்தேகந்தான். ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரைப்பற்றி ஒரு நண்பர் நம்மிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். அவர் ஸ்ரீனிவாசய்யங்கார் பிரசாரத்தைப் பற்றி ஏன் நீங்கள் மிகுதியும் கவலை எடுத்துக் கொள்ளுகிறீர்கள்? அவருடைய ஜாதகக் குறிப்பே 'அவர் தொட்டது துலங்காது' என்று இருக்கிறது. ஐயங்கார் தட புடல் எல்லாம் அவர் பணம் சிலவு செய்கிற வரையில்தான். சிலவு நின்றதும் தானாகவே அமர்ந்து விடுவார். இதுவரையில் அவர் எதாவது ஒரு காரியத்தில் முடிவான வெற்றியடைந்திருக்கிறாரா? அவர் பின்னால் திரியும் சிஷ்யக் கோடிகள் அவரைத் தலைவர், தலைவர் என்று சொல்லிக்கொண்டு திரிவ தோடு சரியாய்ப் போய்விடும் என்று சொல்லுவது வழக்கம். அது போலவே நடந்து வருகிறது.

முதலாவதாக, நமது ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு சென்னை சட்டசபையில் தன் கக்ஷியான சுயராஜ்யக் கக்ஷி உருப்படும் என்கிற நம்பிக் கையே இல்லாமல் போய்விட்டது. இதுவரை அவர் கூட சேர்ந்திருக்கும் ஆள்களெல்லாம் "ஜஸ்டிஸ்" கக்ஷியிலிருந்து பார்த்து உத்தியோகம் கிடைக் காமல் வெளியே வந்தவர்களும் "ஜஸ்டிஸ்" கக்ஷியில் நீக்கப்பட்ட அதன் விரோதிகளுமே தவிர வேறு எவராவது புதிதாக சேர்ந்திருக்கிறார்களா? "ஜஸ்டிஸ்" கக்ஷியார் பழயபடி ஏதாவது கொடுப்பதாகச் சொன்னால், போவ



RangaRakes tamilnavarasam.com

தில்லை என்று சொல்லக் கூடியவர்கள் எவராவது இருக்கிறார்களா? என்பது அவருக்கே தெரியும். அல்லாமலும் இவ்வளவு ஆர்ப்பாட்டத்தோடு ஸ்ரீமான் முதலியார் போன்றவர்களைப் பின்னால் இழுத்துக்கொண்டு ஊர் ஊராய்த் திரிந்தும் இம்மாதம் 18 – உ சட்டசபைகளுக்கு ஆள்களை நிறுத்துவதற் கென்று சென்னை மகாஜனசபைக் கட்டிடத்தில் போட்ட நிர்வாகக் கூட்டத் தின் ரகசியம் 8 நாளாகியும் இன்னும் வரவில்லை. 'திராவிடன்' பத்திரி கையில் மாத்திரம் கொஞ்சம் வெளிவந்திருக்கிறது. நிறுத்த ஆளில்லாமல் இவர்கள் படும் கஷ்டம் கடவுளுக்குத்தான் தெரியும்.

இதிலிருந்தே சுயராஜ்யக் கக்ஷியின் யோக்கியதையும், ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் பணம் செலவானதின் பலனும், முதலியார் உதவியின் பலனும் ஒருவாறு அறிந்து கொள்ளலாம். இதன் பலனாய்த்தான் ஸ்ரீமான் அய்யங்கார் சென்னை சட்டசபைக்கு நின்றால் தனக்கு ஆகுமோ ஆகாதோ என்று பயந்தும், பிராமண வோட்டுக்களே நிறைந்த யூனிவர்சிட்டி ஸ்தானத் திற்கு தான் நிற்பதானால் சென்னை சட்டசபையில் அடிக்கடி வாயாடித்தனம் செய்யக் கூடிய ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு வேறு கதியென்ன? என்று நினைத்தும், சென்னையில் மந்திரி வேலையை எதிர்பார்ப்பது, குழந்தை அம்புலியைக் கையில் பிடிக்க ஆசைப்படுவது போலாகுமென்று கருதி, சென்னை சட்டசபை ஆசையையும் விட்டு இந்தியா சட்டசபைக்குத் தலைவ ராகப் பார்த்தார். அங்கும் ஸ்ரீமான் ஜெயகர் முளைத்துவிட்டார். இனி என்ன செய்வார்? பாவம்!

நேருகளும் ஐயங்கார்களுமே இக்கதியாகி விட்டால் இவர்கள் பெற்றெடுத்த சுயராஜ்யக் கக்ஷி அழிந்து விட்டதா? இல்லையா? என்று கூடக் கேட்க வேண்டுமா? நமக்கு அதைப்பற்றிக்கூட அதிக பரிதாபம் இல்லை. இனி ஐயங்கார் அவர்களின் வலக்கை, இடக்கைகளான ஸ்ரீமான்கள் முதலி யார்கள் கதியும், நாயுடுகள் கதியும் என்ன ஆகும் என்பதும் இவர்களை நம்பி அக்கக்ஷியில் சேர்ந்த மற்றவர்கள் கதி என்ன ஆகும் என்பதும்தான் நமது பரிதாபம். அம்மிக்கல் போன்ற இவர்களே ஆகாசத்தில் பறக்கும்போது மற்றவர்களைப் பற்றி கேட்கவும் வேண்டுமா? வாசகர்களே தெரிந்து கொள்ளலாம்.

**குடி அரசு – தலையங்கம் – 25.04.1926**



# திரு. ஆர்.கே.ஷண்முகஞ் செட்டியார்

அஷ்டதிக்குப் பாலகர்களான ஐயங்கார் கோஷ்டியார் சமீபத்தில் தமிழ் நாடெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்து வரும்போது திரு. ஆர்.கே. ஷண்முகஞ் செட்டியாரவர்களை பல கேள்விகளால் தூத்துக்குடியிலும், திருச்சியிலும் வளைத்துக் கொண்டார்கள். அக்கேள்விகளுள் முக்கியமான இரண்டிற்கு உண்மையிலே தன்னுள்ளத்திலே உறையும் அபிப்பிராயத்தை வெளிப் படையாய்க் கூறிவிட்டார். அவை வகுப்புவாரிப் பிரதிநிதித்து வத்தைப் பற்றியும் ஹிந்துமத பரிபாலனச் சட்டத்தைப் பற்றியுமாகும்.

திரு.ஷண்முகஞ் செட்டியார் இவற்றிற்குப் பதிலளிக்கு முகத்தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே நாட்டின் அமைதியைக் காக்கவல்ல தென்றும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்காகக் காங்கிரசிலும் போராடப் போவதாகவும் கூறியுள்ளார். மத பரிபாலனச் சட்டத்தைப்பற்றிக் கூறும்போது இச்சட்டம் அருமையானதொரு சட்டமென்றும், சட்ட சபையில் இச்சட்டம் நிறைவேற்றப் பெறுதற்குத் தன்னுடைய உதவியையும் அக்காலத்தில் கொடுத்திருப்பதாகவும், இனி காங்கிரசோ அல்லது மற்றையோர்களோ அச்சட்டத்தை அழிப்பதற்கு முற்பட்டால் தன்னுடைய முழு பலத்தையும் செலுத்தி அச்சட்டத்தை நிலைநாட்ட முயலுவேன் என்றும் திரு.செட்டியார் விடையிறுத்துள்ளார். இவ்வாறு தன்னுள்ளத்திலே உறையும் எண்ணத்தை தைரியமாய்க் கூறியது ஆச்சரியத்தைக் கொடுக்காது. ஐயங்கார் கோஷ்டியில் சேர்ந்து தாளம் போடும் உண்மைத் தமிழர் பலருக்கும் இத்தகைய கொள் கையே உண்டென்பதை நாம் தனித்துத் தெரிந்து கொண்டதிலிருந்து அறிவோம். ஆனால், திரு.ஷண்முகஞ் செட்டியாரைப் போன்று மற்றையோர் தைரியமாய் வெளியில் எடுத்துக் கூறப் பின்வாங்குவதற்குக் காரணமில்லாம லில்லை. திரு.ஷண்முகஞ் செட்டியார் சுயராஜ்யக் கட்சியில் சட்டசபை அபேக்ஷகராய் நிற்பினும் அவருக்கு பார்ப்பனர் உதவி வேண்டியதே யில்லை. ஐயங்கார் கோஷ்டியின் எத்தகைய உதவியுமில்லாமலேயே யெல் லாம் நடக்கும். ஆதலினாலேயே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் தேவஸ்தான சட்டத்தையும் தைரியமாய் ஆதரிக்கத் தலைப்பட்டார்.

ஆனால் ஐயங்காரைச் சுற்றிவரும் மற்றையரோ பாவம்! கோழைகள்– காலில் பலமில்லாதவர்கள் – முதுகெலும்பில்லாக் கூனிகள். இவர்கள் நடப்பதற்கும் நிமிர்வதற்கும் ஐயங்கார் கோஷ்டியை எதிர்நோக்க வேண்டிய வர்கள். பத்திரிகை நடத்துவோருக்கு அக்கோஷ்டியின் உதவியும் ஆதரிப்பும்



RangaRakes tamilnavarasam.com

இல்லாவிடில் பத்திரிகை அடங்கி ஒடுங்கி விடும். சட்டசபைக்கு நிற்போருக்கும் அப்படியே. வேறு பலருக்கும் அவ்வத்துறையில் வெவ்வேறு வகையிலேயே அக்கோஷ்டியின் ஆதரிப்பு வேண்டியதாகிறது. இதற்காக தங்களது மனச்சாட்சியையும் கௌரவத்தையும் இழந்து வருவதோடல்லாமல் தங்களுக்கு மட்டுமல்லாது தங்கள் பின் சந்ததிகளுக்கும் குழிதோண்டிக் கொண்டவர்களாகிறோம் என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை.

திரு.ஷண்முகஞ் செட்டியாரல்லாது வேறு எவராலேனும் இவ்வாறு சொல்லப்பட்டிருக்குமானால் இதுவரை அவர் "மாரீசனாக"வும் "தேசத் துரோகி" யாகவும் மாறியிருப்பார். ஆனாலும் பார்ப்பனப் பத்திரிகைகள் தத்தம் ஜாதிப் புத்திப்படியே நடந்து வருகின்றன. தூத்துக்குடியிலும், திருச்சியிலும் மேற்கண்ட இரு முக்கிய விஷயங்களையும் திரு.ஷண்முகஞ் செட்டியாரால் ஸ்பஷ்டமாக எடுத்துக் கூறப்பட்டிருந்தும் உண்மைக்கு மாறாக பாமரரை ஏமாற்றும் வழியில் அவைகளைப் பிரசுரிக்காமல் மறைத்துவிட்டது சின்னத்தனமேயாகும். இவ்விஷயத்தை "திராவிடன்" ஒன்றே தெளிவாகக் கூறியது. ஆதலால் உண்மை எங்கிருக்கிறதென்பதை பொது ஜனங்களையே அறிந்துகொள்ள விட்டுவிடுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 25.04.1926**



# சபர்மதி ராஜி

சபர்மதி ஆச்சிரமத்தில் மகாத்மா காந்தி முன்னிலையில் சுயராஜ்யக் கக்ஷிக்கும் பரஸ்பர ஒத்துழைப்புக் கக்ஷிக்கும் ராஜி ஏற்பட்டுவிட்டதாம். ஆனால், மகாத்மா அதில் கலந்து கொள்ளவே கிடையாது. மகாத்மா காந்திக்கு முன்னிலையில் சபர்மதி ஆச்சிரமத்தில் ராஜி யேற்பட்டுவிட்டதென்று சொன்னால், அதில் ஒரு பெருமையும், பொதுஜனங்களுக்கு ஒரு நம்பிக்கையும் ஏற்பட்டுவிடுமென்ற எண்ணத்தினால் செய்த சூழ்ச்சியேயல்லாமல் வேறல்ல. ராஜியால் விளைந்த பலன், நாளுக்கு நாள் நகர்ந்துதடி அம்மானே என்றபடி சுயராஜ்யக் கக்ஷியார் உத்தியோகம் ஒப்புக் கொள்ளுவதுதான். அதாவது,

> "மந்திரிகள் தங்களுடைய கடமைகளைச் சரியாக நடத்துவதற்கு அவசியமான அதிகாரம், பொறுப்பு, சுயமாகச் செய்வதற்கு சக்தி முதலியவை கொடுக்கப்பட்டால் கவர்ன்மெண்ட் போதுமான அளவு இணங்கிவிட்டதாகக் கருதி சுயராஜ்யக் கக்ஷியார் மந்திரி பதவிகளை ஒப்புக்கொள்ளலாம். மந்திரி பதவிக்கு அவ்வித பொறுப்பும் சுதந்திரமும் கொடுத்திருக்கிறார்களா இல்லையா என்கிற விஷயம் அந்தந்த மாகாண சட்டசபை மெம்பர்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டியது. திரு. ஜெயகரும் திரு. நேருவும் இதை ஊர்ஜிதம் செய்ய வேண்டியது."

**ஒப்பம்:-**

***சரோஜனி நாயுடு, மோதிலால் நேரு, லஜபதிராய், எம்.ஆர். ஜெயகர், என்.சி. கெல்கர், பி.எஸ். ஆனே, டி.வி. கோகலே, ஓகலே.***

முதலில் கவர்ன்மெண்டார் இணங்கி வந்தால் உத்தியோகம் ஒப்புக் கொள்வது என்று காங்கிரஸில் தீர்மானித்தார்கள். சர்க்கார் இணங்கி வரவில்லை; சட்டசபையை விட்டு வெளிவந்தாய் விட்டது. இப்போது மந்திரிகளுக்கு அதிகாரம் கொடுத்தால் ஒப்புக்கொள்ளுவது என்று தீர்மானித்தாய் விட்டது.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 25.04.1926**



RangaRakes tamilnavarasam.com

# சுயராஜ்யக் கக்ஷியும் முகம்மதியரும்

சென்ற வாரம் நமது பத்திரிகையில் இதே தலைப்பின் கீழ் வெளிவந்த விஷயத்தை நேயர்கள் அறிவார்கள். அதில் எல்லைப்புற மாகாண சீர்திருத்தத்தைக் கோரிய சுயராஜ்யக் கக்ஷியைச் சேர்ந்த முகம்மதியர்களின் பிரேரணையை, பண்டித நேரு முதலிய சுயராஜ்யக் கக்ஷியைச் சேர்ந்த தலைவர்கள் சில மொண்டிச் சமாதானங்களைச் சொல்லி முகம்மதியர்கட்கு விரோதமாய் அரசாங்கத்தார் சார்பில் வோட்டுக்கொடுத்து அத்தீர்மானத்தை வீழ்த்தியதினால் சுயமரியாதையுள்ள முகமதியர்கள் சுயராஜ்யக் கக்ஷியினின்று விலகிக் கொண்டனர் என்று எழுதியிருந்தோம். அக்கக்ஷியிலுள்ள முகமதிய பிரதமருள் ஒருவரான மௌல்வி மகமது ஷாபி அவர்கள், தான் சுயராஜ்யக் கக்ஷியிலிருந்து விலகிக் கொண்டதோடல்லாது இந்தியா சட்ட சபை ஸ்தானத்திலிருந்தும் விலகிக் கொண்டதாகத் தெரிகிறது. இது நாம் கூறியதை பலப்படுத்தும். தன் காலில் நிற்கக்கூடிய சுயமரியாதையுள்ள எவரும் இனி அக்கக்ஷியிலிருக்க மாட்டாரென்பது துணிபு.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 25.04.1926**



# காந்தியடிகளும் திரு. கலியாணசுந்திர முதலியாரும்

“நவசக்தி” ஆசிரியர் திரு.வி.கலியாணசுந்திர முதலியார் ஒரு பெரிய காங்கிரஸ் பக்தராம். காந்தியடிகள் கீறிய கோட்டைத் தாண்டாதவராம். இத்தகைய சீரியர் சின்னாட்களாக ‘காங்கிரஸ் தலைவர்’ களெனப்படும் சிலருடன் சேர்ந்துகொண்டு தமிழ்நாட்டில் திக் விஜயம் செய்து வருகின்றார். இவருடன் சேர்ந்து வருபவர்கள் உண்மையான காங்கிரஸ்வாதிகளா? என்பதையும், வாஸ்தவத்திலேயே தேச நன்மைக்கு பாடுபடுகிறவர்களா வென்பதையும் கவனிப்போம்.

உண்மையான காங்கிரஸ்காரர் யார் ? என்ப தைப்பற்றி காந்தி அடிகள் கூறுவதாவது. காங்கிரஸ்காரருக்கு பின்வரும் லக்ஷணங்கள் இருக்க வேண்டும்.

1. கதரில் பூரண நம்பிக்கை கொள்ள வேண்டும். அவர் தற்காலிக உடையாகவோ அல்லது வெளி வேஷத்திற்கான உடையாகவோ கதரை அணிபவராக இருக்கக்கூடாது. உண்மையான ஆர்வத்துடன் கதர் அணிபவராக இருக்க வேண்டும்.

2. தீண்டாமை விலக்கில் நம்பிக்கை கொண்டவராக இருக்க வேண்டும். தீண்டத்தகாதவரென கூறப்படுகிறவருடன் அவர் தாராளமாகக் கலந்துறவாடக் கூடியவராயிருக்க வேண்டும். பல வகுப்பினருள்ளும் ஒற்றுமை இருக்க வேண்டும் என்பதில் நம்பிக்கைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

3. அஹிம்சை, சத்தியம் ஆகிய காங்கிரஸ் கோட்பாட்டில் நம்பிக்கைக் கொண்டவராயிருக்க வேண்டும்.

காந்தி அடிகளார் வகுத்துள்ள மேற்கண்ட நெறிப்படி திரு. முதலியாரைக் கூட்டிக்கொண்டு போகும் ஐயங்காரின் கோஷ்டியினருள் எவராவது இருக்கிறாரா? அந்நெறிப்படியே இருக்கிறவர்களாயிருந்தால் திரு. முதலியாரைப் பற்றியாதல், அவரால் துணை புரியப் பெறும் கோஷ்டியாரைப் பற்றியா



RangaRakes tamilnavarasam.com

தல் இங்கு எழுத நேரிடாது. அக்கோஷ்டியிலிருப்போர் அனைவரும் காங்கிரஸ் நெறிக்கு நேர்மாறாக நடப்பவரேயாகும். திரு. சீனிவாசய்யங்கார் கதரில் கொஞ்சமும் நம்பிக்கையில்லாதவர். சமீபத்தில் அவர் கோவைக்கு வந்திருக்கும் போது கதர் விஷயம் காங்கிரஸில் சேர்க்கப்பட்டதால்தான் காங்கிரஸ் குட்டிச் சுவராய்ப் போயிற்றென்றும் இன்னமும் நூல் நூற்போர் சங்கமும், கதர் போர்டும் காங்கிரசுடன் சம்பந்தம் வைத்திருப்பதாலேயே காங்கிரஸ் இயக்கம் க்ஷீணித்து வருவதாகவும் மற்றும் வேறு பலவாறாக தனது நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தாரென நம்பத்தக்க இடத்திலிருந்து நமக்கு செய்தி வந்திருக்கிறது. இது முதலாவது லக்ஷணத்திற்கு முரணானது. குருகுலக் கிளர்ச்சி கிளம்பியபோது பிராமணரல்லாத குழந்தைகளுக்கு பிராமணக் குழந்தைகளுடன் சமபந்தி போஜனம் அளிக்கக்கூடாதென சிலர் வாதாடியபோது அதற்கு அனுகூலமாய் நடந்து கொண்டவர். இது மகாத்மா கூறிய 2-வது 3-வது லெக்ஷணங்களுக்கு முரணானது ஆகும். ஆகவே இவர் எப்படி காங்கிரஸ்காரராவார். இவர் தேச விடுதலைக்கும், பிராமணரல்லாதாருக்கும் முற்றும் நேர் விரோதியாவார். இதை திரு. முதலியாரால் மறுக்க முடியுமா?

திரு. சத்தியமூர்த்தியும் கதரில் கொஞ்சமும் நம்பிக்கை இல்லாதவரென்றே கூறவேண்டும். சமயத்திற்குத் தக்கபடி நடப்பவரேயாகும். திரு.எம்.கே. ஆச்சாரியாரைப்பற்றி நாம் கூற வேண்டியதில்லை. பிராமணக் குழந்தை ஒன்று பிராமணரல்லாத குழந்தை முன் சாப்பிட்டதாக கேள்விப்பட்டால் ஒரு மாதம் உண்ணாவிரதம் அனுஷ்டிப்போம் என்று கூறிய மகான். இவர்தானா பல வகுப்பினரையும் ஒன்றுபடுத்தப் போகிறவர்? தீண்டாமையை விலக்கப் போகிறவர்? திரு.சி.வி. வெங்கிட்டரமணய்யங்காரைப் பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை.

காங்கிரஸ்காரர் என்று சொல்லிக்கொள்ளுவதற்கே கொஞ்சமும் யோக்கியதை இல்லாத இவர்களையெல்லாம் காங்கிரஸ் தலைவர்கள் என்று கபடு சூதற்ற பாமரர்களிடம் கூறி, அவர்களுக்கு வோட்டுச் சேகரித்துத் தர ஊர் ஊராய்த் திரியும் திரு. கலியாணசுந்தர முதலியாரது செய்கை எப்படி காந்தியடிகளை ஆதரிப்பதாகும்? “எம் காந்தியடிகளார்”, “எம் மகாத்மா”, “எம் சத்திய உரு”, “எம் சாந்தமூர்த்தி” என்று மகாத்மா காந்தியை தனக்கே சொந்தமாக்கிப் பேசிவரும் திரு. முதலியார், மகாத்மா கூறிய லக்ஷணங்களுக்கு எவற்றானும் பொருந்தாதவர்களை காங்கிரஸ் தலைவர்கள் என்று கூறி அவர்களுக்கு வோட்டு சேகரித்துத் தருவதின் ரகசியம் என்ன? என்பதை வாசகர்கள்தான் அறிய வேண்டும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 25.04.1926**



# மூட்டை சோதனை

## பிராமணர்கள் தங்கள் பின்னால் திரியும் பிராமணரல்லாதாரிடம் வைத்திருக்கும் மதிப்பு

சென்ற மாதத்திற்கு முன் மதுரையில் நடந்த மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் முடிந்து எல்லோரும் திரும்பி ரயிலுக்கு வரும்போது ரயில்வே மேடையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருடைய சட்டைப் பையிலிருந்த சிறு பணப்பை காணாமல் போய்விட்டதாம். இதற்காக வேண்டி அவர்களுடன் சென்ற இரண்டு முக்கியமான பிராமணரல்லாதாரின் மூட்டையையும் மடியையும் சோதனைப் போட்டுப் பார்த்ததாக ஒரு நிரூபர் எழுதியிருக்கிறார்.

இதை நாம் கேட்கும் போது நமது காதில் நாராசம் காய்ச்சி ஊற்றியது போலிருந்தது. அவ்விரண்டு பிராமணரல்லாதாருள் ஒருவர் 5,6 வருஷமாய் காங்கிரஸிலுழைத்துவரும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர். மற்றொருவர் செல்வாக்கும் மதிப்புமுள்ள பிரபலஸ்தர்.

இவர்கள் இருவரும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பணப்பைக் காணாமல் போனதற்காக எந்தக் காரணத்தைக் கொண்டானாலும், தங்கள் மூட்டையைப் பிரித்துக் காட்டினதற்கு நாம் மிகவும் வெட்கப்படுகிறோம். அல்லாமலும் இந்தப் பிராமணர்களுக்கு இவர்களைப் பரிசோதனை செய்யும்படியானதோர் தைரியமேற்பட்டதானது பிராமணரல்லாதாரின் நிலையை இகழ்ந்து காட்டுகிறது. இன்னும் சிலருக்கு எந்த சமயத்தில் என்ன மரியாதைகள் கிடைக்குமோ கடவுளுக்குத்தான் தெரியும்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 25.04.1926**



RangaRakes
tamilnavarasam.com

## சட்டசபைக்கு ஆள் பிடிக்கிற
# " தேர்தல் கங்காணிகள்"

தமிழ்நாட்டிலே நிலவும் பத்திரிகைகளில் பெரும்பாலும் தனது மனசாக்ஷிக்கு விரோதமாக எழுதி தன் சுயமரியாதையை இழந்து வருகின்றன. முதுகெலும்பில்லாமல் இருக்கும் இவைகள், எவ்வளவுதான் யோக்கியதை யாயிருப்பதுபோல – போலித்தனமாக கைவீசி காலுதறி நடப்பதாகப் பாவனை செய்துவரினும் அவைகளுக்கு முதுகெலும்பில்லாத தத்துவத்தை நாட்டார் அறியாமலிருக்க மாட்டார்கள். இப்பத்திரிகைகளெல்லாம் உண்மையறிய முடியாமலோ, பலக்குறைவாலோ வேண்டுமென்றே சூழ்ச்சிக்காரர்கள் பக்கமாக வேயிருந்து வருகின்றன. ஆனால் பிறருடைய உதவியை நாடாது தன் கால் பலத்திலேயே நிற்கக்கூடிய பத்திரிகைகளில் ஒன்றாகிய நமது "நாடார் குலமித்திரன்" சுயராஜ்யக் கக்ஷியினுடைய சூழ்ச்சியின் உண்மை கண்டு தைரியமாய் வெளிவந்து எழுதியிருப்பதில் ஒருசிலவற்றை இங்கு குறிப்பிடுகிறோம்.

> "சட்டசபைக்கு ஆள்பிடிக்கிற கங்காணிமார்கள் (சுயராஜ்யக் கக்ஷி யார்) தேசமெங்கும் உலாவித் திரிகின்றனர். . . சொற் கேளாப் பிள்ளையினால் குலத்துக்கீனமென்ற பழமொழி இவர்களுக்கே தகுமென்று மகாத்மா காந்தி மௌன யோகத்திலிருந்து விட்டார். நமது நேரு கங்காணி, தமது தோழர்களையெல்லாம் பிரிய விட்டு விட்டுத் துடித்துக் கொண்டிருக்கிறார். ஸ்ரீனிவாசக் கங்காணி ஆள் பிடிக்கிற வேலையை வெகு துரிதமாய் நடத்திக்கொண்டு வருகிறார். ஒவ்வொரு முக்கிய விடத்திலும் கங்காணியாபீஸ்கள் இரகசிய மாய் அமைத்து வருகிறார்."

இவ்வுரைகள் சீனிவாசய்யங்கார் கோஷ்டிக்கு ஒரு பீரங்கி வெடி போலவே தோன்றும். சுயராஜ்யக் கக்ஷியின் கடடக் கோட்டையைத் தகர்ப்பதில் நாடார்குல மித்திரனும் நமக்குதவியாய் பங்கெடுத்துக் கொண்டிருப்பதற்கு நம் மனப்பூர்வமான நன்றி செலுத்துகிறோம்.

**குடி அரசு – அறிக்கை – 25.04.1926**



# "சுதேசமித்திர"னின் தேசபக்தி

பெருந்தேசபக்தர்களெனப் படாடோபம் செய்து வருகின்றவர்களான பிராமணர்கள் இந்தியாவின் சுயராஜ்யத்திற்காகப் பாடுபடுபவர்களல்லவென்றும், அவர்கள் செய்துவரும் ஆரவாரமனைத்தும் தங்கள் இனத்தவர்களான பிராமணர்கள் மல்கிய பிராமண ராஜ்யம் நிலைநாட்டவேயல்லாமல் வேறில்லை யென்று நாம் பன்முறை கூறிவந்திருக்கிறோம். நாளடைவில் இவ்வுண்மை புலனாகிவருகிறதென்பதை அடியிற்காணும் உரைகளால் அறிந்து கொள்ளலாம்.

திரு. விபினசந்திரபாலகர் சமீபத்தில் நடந்த கல்கத்தா இந்து முஸ்லீம் சச்சரவைப் பற்றி எழுதுங் காலையில், இத்தகைய அமளி நாட்டில் பரவாதிருக்க வேண்டுமானால் விரைவில் சுய ஆட்சி கொடுக்க வேண்டுமென வரைந்து விட்டு, தற்சமயம் "சட்டம் ஒழுங்கு சம்மந்தப்பட்ட பொறுப்பும் மந்திரிகள் வசம் ஒப்புவிக்கப்பட்டால் அவர்கள் ஜாதி வேற்றுமை பாராமல் சரியாக வேலை நடத்துவார்கள்" என்றும் எழுதியுள்ளார். ஒருவகையில் திரு. பாலரின் கருத்து போற்றத்தக்க தொன்றாகும். ஏனெனில் மந்திரிகள் ஜனங்களின் பிரதிநிதிகளாதலாலும் அவர்கள் பாமர மக்களிடம் நெருங்கிப் பழகியவர்களாதலாலும் நாட்டில் அமைதி நிலவ எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதை அறிந்து அதற்கேற்றாப்போல் 'சட்டம் போலீஸ்' வகைகளை சீர்பெற நிர்வகிப்பார்கள்.

திரு. பாலரின் கருத்தைப்பற்றி "சுதேசமித்திரன்" தன் 19 –4 –26 உ பத்திரிகையின் உபதலையங்கமொன்றில் பொருத்தமற்ற சில போலிக் காரணங்களை எழுதிவிட்டு " மந்திரிகள் வசம் போலீஸ் டிபார்ட்டு மெண்டிருந்தால் நலமென்று சொல்வதன் பொருள் நன்கு விளங்கவில்லை" என்று வரைந்து அதைக் கண்டித்துள்ளான். இது " சுதேசமித்திர" னின் இயற்கைக் குணமாகும்.

இப்போது போலீஸ் நிர்வாகமும் சட்டமும் சட்ட மெம்பர் என அழைக்கப்பெறும் கெவர்னரால் நியமிக்கப்பட்ட ஒரு நிர்வாக மெம்பரிடமிருக்கிறது. அதிலும் சென்னையைப் பொறுத்த அளவில் "சுதேசமித்தர"னின் இனத்தைச் சேர்ந்த பிராமணரொருவரிடமிருப்பதால் அதைப் பிடிங்கி மந்திரிகள் வசம் ஒப்புவிக்க "சுதேசமித்திர"னுக்கு எவ்வாறு மனந்துணியும் ? மந்திரிகள் பிராமணரல்லாதவரன்றோ?



RangaRakes tamilnavarasam.com

சமீபத்தில் நடந்த சட்டசபைக் கூட்டமொன்றில் மந்திரிக் கட்சி யைச் சேர்ந்த ஒருவர், போலீஸ் நிர்வாகமும் சட்டமும் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் (பிராமணர்) கையிலிருப்பதால் அதனால் எவ்வித நியாயமும் நன்மையும் பெருதற்கில்லாமல் போய்விடுகிறதென்று பல முகாந்தரங் களுடன் எடுத்துக் கூறியதை பொது ஜனங்கள் ஞாபகப்படுத்தி, ஜனப் பிரதிநிதித்துவம், கொண்ட சுயாட்சிக்குப் போராடுவதாக வாய்ப் பறை யறைந்து வரும் "சுதேசமித்திரன்" எழுப்பியுள்ள இவ்வாதத்தையும் ஒப் பிட்டுப் பார்த்து அதன் கபட மனத்தை அறிந்துகொள்ள வேண்டுகிறோம். கெவர்னரால் நியமிக்கப்படுபவரிடமி ருந்தாலும் பரவாயில்லை, ஜனப்பிரதி நிதிகளான மந்திரிகளிடம் (பிராமண ரல்லாத மந்திரிகளிடம் ) சட்டமும் போலீஸ் நிர்வாகமும் போகலாதென்பது "மகன் இறந்தாலும் பாவா யில்லை, மருமகள் தாலி அறுபட்டால் போதும் என்பது போல் "மித்திரன்" வாதம் செய்கிறான்.

வர வர பிராமணர்களின் நோக்கம் வெளியாகி வருவதை நாட்டார் அறிய வேண்டுகிறோம். பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பு மிகுந்த பிரதிநிதிகளிடம் ஒப்புவித்தலைக் காட்டிலும் அதிகார வர்க்கத்தின் அடிப் பீடமான கெவர்னரால் நியமிக்கப்படும் ஒருவரிடம் நிர்வாகத்தை ஒப்படைத்தலே மேல் என்று கூறும் "பிராமணமித்திரன்", நாளடைவில், "இந்தியாவுக்கு சுய ஆட்சி கொடுப்பதைக்காட்டிலும் இப்பொழுது இருக்கும் ஆட்சியே மேல்" என்று ஏன் கூற மாட்டான். ஏனெனில் சர்க்கார் வசம் அதிகாரம் இருந்தால் எப்படியாவது சர்க்காரை ஏமாற்றி உத்தியோகம் பெற்றுக் கொள்ளலாம். ஜனங்களிடம் இருந்தால் அதிகக் கஷ்டப்பட்டு பணச்செலவு செய்து ஜனங்களை ஏமாற்ற வேண்டி வருகிறது. ஆதலால் இதனின்று, பிராமணர்கள் சுயராஜ்யத்திற்காகப் பாடுபடும் யோக்கிதையை பொது ஜனங்கள் அறிந்து கொள்ளலாம்.

**குடி அரசு - கட்டுரை - 25. 04.1926**



# சத்தியமூர்த்தியும் கதரும்

சில மாதங்களுக்கு முன்னர் சேலத்திலே கதர் சாலையைத் திறந்து வைத்த சென்னை டாக்டர் சி. நடேச முதலியார் அதுசமயம் கதராடை அணிந்து வராமல் சுதேச பட்டுடைகளைத் தரித்திருந்ததைப்பற்றி பிராமண சிகாமணியான ஸ்ரீமான் சத்தியமூர்த்தி எள்ளி நகையாடினார். அதாவது, டாக்டர் முதலியார் மில்லில் நெசவான பட்டாடை தரித்துக்கொண்டு கதர் சாலையைத் திறந்து வைத்ததானது, கொள்கைக்காக நெற்றியில் விபூதியும் வயிற்றுப் பிழைப்புக்காக வயிற்றில் நாமமும் தரித்திருப்பவன் கதையாக யிருக்கிறதென்று கூறினார். அதற்கு டாக்டர் முதலியார் இந்தியாவில் கையி னால் நெசவானாலும் ஆலை நெசவானாலும் இரண்டையும் சுதேசிய மென்றே தாம் கருதுவதாகவும் ஆகையால் சுதேசியத்தை ஆதரிக்க வேண்டியதே எங்கள் கொள்கை என்றும் உள்ளதை வெளிப்படையாகக் கூறினார்.

ஆனால் சத்தியத்திற்கே உழைக்கிறோமென்று சொல்லும் சத்திய கீர்த்தியின் பிள்ளைகளான சத்தியவந்தர் குலத்திலுதித்த நித்தியங்கத்தி "ஸ்ரீமான் சத்தியமூர்த்தி புதுவருஷத் திருநாளன்று திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த பெருங்கூட்டத்தில் முற்றிலும் பரதேசி மயமாய் விளங் கினார்" என்று "லோகோபகாரி"யில் பாரி எழுதியிருக்கிறார்.

இப்படியிருக்க, கொள்கைக்காகத் திருநீறும், பிழைப்புக்காக திரு நாம மும் போட்டுக் கொண்டலையும் பாசாண்டி என இப்பொழுது ஸ்ரீமான் சத்திய மூர்த்தியை அழைப்பதா? அல்லது டாக்டர் முதலியாரை அழைப்பதா? ஆம். பிராமணர்கள் செய்தால் அது மருந்துக்காகச் செய்ததாய்ப் போய் விடுகிறது. பிராமணரல்லாதார் எது செய்தாலும் அது வயிற்றுக்கில்லாமல் செய்தா னென்றாகிவிடுகிறது. ஏனென்றால் செல்வாக்குள்ள பத்திரிகைகள் பிராமணர் கைவசம் சிக்கியிருக்கிறது. நமது ஜனங்களும் அதையேதான் பார்க்கிறார்கள். லோகோபகாரியையும், நாடார்குல மித்திரனையும், குடியரசையும் பார்த்தால் அது தேசத் துரோகமாய்விடும். ஏன் பிராமணர்கள் என்னதான் சொல்ல மாட்டார்கள்?

**குடி அரசு - செய்தி விளக்கம் - 25.04.1926**



RangaRakes
tamilnavarasam.com


[வாரப்பதிப்பு.]

(2—5—26)

மலர் 1.

திருப்பூர்
சுத்த கதர் ஜவுளிகள்.

திருப்பூர்
சுத்த கத்தர் ஜவுளிகள்.

(அத்தாட்சிப் பத்திரம்.)

திருப்பூர்
சுத்த கதர் ஜவுளிகள்,

(அத்தாட்சி பத்திரம்.)

கரூர் ...யப் கத்தர்.

(அத்தாட்சிப் பத்திரம்.)

...ஸ் அத்தாக்ஷி
பெற்ற சுத்த கதர்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.

S. I Ry.

கத்தர் வியாபாரிகளுக்கு
அறிக்கை.



# இனி செய்ய வேண்டியது என்ன?

மத்திய மாகாண அரசாங்கத்தார் மந்திரிகளுக்கென்று மாற்றப்பட்டிருந்த இலாக்காக்களை எடுத்துக்கொண்டு இனிமேல் மந்திரிகள் இல்லாமலே சகல நிர்வாகத்தையும் தாங்களே நடத்துவதென்று தீர்மானித்து விட்டார்கள். இதன் பலனாய் இரட்டையாட்சி ஒழிந்ததென்றே வைத்துக் கொள்ளலாம். மத்திய மாகாணத்தில் இரட்டை ஆட்சியை ஒழித்த பெருமையை சுயராஜ்யக் கக்ஷியாருக்கே கொடுத்து விடலாம். சுயராஜ்யக் கட்சியாருக்கு இந்தப் பெருமையை உண்டாக்கிக் கொடுத்த பெருமையை மகாத்மா சொற்படி நடப்பதாகச் சொல்லிக்கொண்டு சுயராஜ்யக் கட்சிக்கு உதவி செய்த ஸ்ரீமான் முதலியார் போன்ற உண்மைச் சிஷ்யர்களுக்குக் கொடுத்துவிடலாம். ஆனால் தேசத்திற்கு இதனால் என்ன லாபம். மந்திரிகளின் சம்பளம் சர்க்காருக்கு இதனால் மீதியாய் விட்டது. இரட்டை ஆட்சி ஒழிந்து சர்க்காரின் எதேச்சாதிகார ஒத்தை ஆட்சி உறுதியாய் விட்டது. சுயராஜ்யம் கிடைத்து விட்டதா? உரிமை கிடைத்து விட்டதா? சுயராஜ்யத்திற்காவது உரிமைக்காவது ஏதாவதொரு அறிகுறியாவது ஏற்பட்டிருக்கிறதா? இரட்டை ஆட்சியை ஒழித்த பிறகு இரட்டை ஆட்சியை ஒழிக்கப் போன சுயராஜ்யக் கட்சியாருக்கு மறுபடியும் சட்டசபையில் என்ன வேலை? சுயராஜ்யக் கட்சியார் சென்ற தேர்தலில் நின்ற காலத்தில் ஓட்டர்களிடம் கொடுத்த வாக்குறுதி என்ன? “சட்டசபைக்கு எங்களை அனுப்புங்கள்; நாங்கள் அங்கு போய் முட்டுக்கட்டை போட்டு இரட்டை ஆட்சியை ஒழித்து சர்க்காரை நடைபெறாமல் செய்து விடுகிறோம். அப்படி எங்களால் செய்ய முடியவில்லையானால் சட்டசபையை விட்டு விலகிவந்து ஜனங்களிடம் பிரசாரம் செய்து சட்ட மறுப்பை ஆரம்பிக்கிறோம்” என்று சொன்னார்களல்லவா? இப்பொழுது அந்தப்படி செய்தார்களா? சட்ட சபைக்குப் போன உடனேயே முட்டுக்கட்டை போட தங்களால் முடியவில்லை யென்று தெரிந்தும், இரட்டை ஆட்சியை ஒழித்துங்கூட சர்க்கார் நின்று விடவில்லையென்று தெரிந்தும், இரண்டரை வருஷகாலம் சட்டசபைப் பெருமையை அடைத்துக்கொண்டு மறுதேர்தல் வருகின்ற சமயம் பார்த்து, “எங்களால் சபையில் ஒரு காரியமும் செய்ய முடியவில்லை; சர்க்காரை எங்களால் ஜெயிக்க முடியாது ; கெஞ்சியும் பார்த்தோம்; கூத்தாடியும் பார்த்தோம்; சர்க்கார் எங்களைக் கொஞ்சமும் லெக்ஷியங்கூட செய்யவில்லை; சட்டமறுப்புக்கும் தேசம் தயாராயில்லை; நாங்கள் இனி இங்கிருப்பதில் பிரயோஜனமுமில்லை. ஜனங்களிடம் இந்த விஷயத்தை எடுத்துச் சொல்லுவதற்காக நாங்கள் வெளியே போகிறோம்” என்று சொல்லிக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டு வெளியில் வந்தவர்கள் உண்மையில் யோக்கியர்களாயிருப் பார்களானால் இனி செய்ய வேண்டிய வேலையென்ன? நிர்மாணத் திட்டத் தையாவது நிறைவேற்ற வேண்டும். அல்லது சட்ட மறுப்புக்காவது தேசத்தை தயார் செய்யவேண்டும். இரண்டையும் விட்டுவிட்டு "மறுபடியும் நாங்கள் சட்டசபைக்குப் போகிறோம். எங்களுக்கு ஓட்டுக் கொடுங்கள்" என்று பொது ஜனங்களைக் கேட்பதிலும் ஸ்ரீமான் முதலியார் போன்றவர்கள், "சுயராஜ்யக் கட்சியார் வானத்தை வில்லாய் வளைத்து விடுவார்கள்; மணலைக் கயிறாய்த் திரித்து விடுவார்கள்; சுயராஜ்யக் கக்ஷியார் ஒருவர்தான் தேசத்தில் யோக்கியர் கள்; அவர்கள்தான் சொல்லுகிறபடி நடக்கிறவர்கள்; அவர்கள் மேல் ஒத்துழையா வாசனை வீசுகிறது, ஆதலால் அவர்களுக்கு ஓட்டுக் கொடுங் கள்" என்று ஓட்டு வாங்கிக் கொடுக்க ஊரூராய்த் திரிவதிலும் ஏதாவது யோக்கியப் பொறுப்பு இருக்கிறதா? பாமர ஜனங்களுக்குப் போதுமான அறி வில்லை யென்பதையும், தங்களுடைய ஓட்டுக்களை யோக்கிதா யோக்கிதை அறிந்து ஓட்டுக் கொடுக்கும் சக்தியில்லை யென்பதையும் ஆதாரமாக வைத்துக் கொண்டு, நமது நாட்டில் ஒரு கூட்டத்தார் தேச சேவை என்கிற பெயரால் இம்மாதிரி அயோக்கியத்தனமான காரியங்களையெல்லாம் செய்யத் துணிவார்களேயானால் பாமர ஜனங்களுக்கு ஓட்டுரிமை வாங்கிக் கொடுப்ப தனால் என்ன பலன் கிடைக்கும்? இம்மாதிரி பொறுப்பற்ற ஓட்டுரிமை நமது தேசத்தில் இல்லாதிருந்திருக்குமானால் மேற்கண்ட ஆள்களுக்கு இவ்வளவு அக்கிரமங்கள் செய்ய இடமேற்பட்டிருக்காது. ஓட்டர்களுக்கு அறிவில்லை யென்று சொல்லுகிறபோது யாருக்கும் கோபம் வருவதில்லை. ஆனால் இம்மாதிரி அறிவில்லாதவர்களை ஏமாற்றும் ஜனங்கள் மலிந்து கிடக்கும் இந்த நாடு இது சமயம் எவ்விதத்தில் உரிமை பெற யோக்கிதை உடையது என்று எவராவது கேட்பார்களேயானால் உடனே அவர்கள் பேரில் கோபித் துக் கொள்வார்கள். "தேசத்துரோகி" என்று சத்தம் போட்டுவிடுவார்கள். அறிவில்லாத பாமர ஜனங்கள் நிறைந்த நாடு என்பதற்கும், உரிமை பெற யோக்கியதை இல்லாத நாடு என்று சொல்லுவதற்கும் அதிக வித்தியாசம் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. பெரும்பான்மையோரான பாமர ஜனங்களை உரிமைபெற யோக்கியதை உடையவர்களாக்க வேண்டு மென்கிற எண்ணங்கொண்டே **"மகாத்மா காந்தி"** எவ்வள வோ கஷ்டப் பட்டுப் பார்த்தார். எத்தனையோ உண்மையாளர்களும் அவரைப் பின்பற்றி யும் பார்த்தார்கள். கடைசியாய் மானமற்றவர்களும் நாணயமற்றவர்களுமே ஜெயித்தார்கள். மகாத்மா "இந்தப் பாவிகள் நமது நாட்டில் உள்ளவரை ஏழை மக்கள் உரிமையடைய யோக்கியதையுடையவர்களாக மாட்டார்கள்" என்கிற முடிவின் பேரில் இவர்களை விட்டே விலகி, ஏதோ தன்னாலானதைத் தனித்து செய்து வருகிறார். இனி, தேசம் கையில் வலுத்தவன் காரியமாய்ப் போய் விட்டது. எவனுக்கு மானமில்லையோ, எவன் தைரியமாய் பொய் சொல்லக் கூடியவனோ, எவன் பணம் செலவு செய்து சிஷ்யர்களைச் சேர்த்து தன்னைத் தலைவனாக்கிக் கொள்ள சக்தியுடைய வனோ, அவனுக்கு ஏழைகள்



அடிமையாகத் தகுந்த நிலைமைக்கு வந்துவிட்டது. இந்த நிலைமையில் தேச பக்தர்கள் செய்யவேண்டிய வேலை யென்ன என்பதை ஒவ்வொரு உண்மை தேசபக்தர்களும் ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். தேசத்துக்கு உரிமை சம்பாதிக்கிறோமென்று சொல்லிக் கொண்டு அயோக்கியர்கள் பாமரர்களை வஞ்சிக்க இடங்கொடுப்பதா அல்லது இவர்களின் யோக்கியதையை பாமர ஜனங்களுக்குத் தைரியமாய் எடுத்துச் சொல்லி உரிமை அடைய யோக்கியதையுடையவர்களாக்குவதா? என்பதே நமது கேள்வி.

**குடி அரசு – கட்டுரை – 02.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# நமது பத்திரிகை

**"குடி அரசு"** ஆரம்பமாகி ஒரு வருஷம் முடிந்து இரண்டாம் வருஷம் ஆரம்பமாகிவிட்டது. இவ்வொரு வருஷ காலமும் "குடி அரசு" தன்னால் கூடியதை ஒளிக்காமல் உண்மையோடு உழைத்து வந்திருக்கிறது என்பதைப் பற்றி நாமே உணர்ந்து திருப்தி அடைகிறோம். "குடி அரசை" ஆதரித்தும் ஆசி கூறியும் வரும் சமாசாரக் கடிதங்களிலிருந்தே இதை உணரு கிறோம். இதுவரை "குடிஅரசி" ன் தொண்டைப் பற்றிச் சிலாகித்து சுமார் முந்நூறு நானூறு கடிதங்களும் "குடிஅரசி"ன் மீது குற்றம் சுமத்தி சுமார் 3,4 கடிதங் களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. சிலாக்கியமாய் எழுதியவர் களைப் பற்றி இதில் எழுத இடமில்லை; எழுதினாலும் தற்புகழ்ச்சியாக முடியும். ஆனாலும் குற்றங் கூறி எழுதியவர்களைப் பற்றி எழுதுவதற்கு இதில் இடமுண்டு. அதாவது, குற்றங்கண்டு எழுதிய கனவான்கள் நான்கு பேர்; யாரென்றால்,

1. ஸ்ரீமான் ஏ. ரெங்கராம் நாயக்கர், ஆனைமலை.
2. ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர், நெரூர்.
3. ஸ்ரீமான் இராஜரெத்தின முதலியார், காஞ்சீவரம்.
4. ஸ்ரீமான் அ. குப்புசாமி முதலியார் , வேலூர்.

இவர்களுள் முதலாவதவர் எழுதியதாவது:- "உமது பத்திரிகையின் நோக்கம் நல்லதேயாயினும் அதன் போக்கு நமக்குப் பிடிக்கவில்லை" என்றும், இரண்டாவதவர், "தாங்கள் செய்து வரும் வேலையை ஜஸ்டிஸ் கட்சியாரே செய்து வருவதால் இதை விட உபயோகமாகமுள்ளதான பழய ஒத்துழையாமையிலிறங்கி வேலை செய்வீர்களானால் நாங்கள் அநேகம் பேர் தங்களைப் பின்பற்றத் தயாராயிருக்கிறோம்" என்றும், மூன்றாவது, நான்காவ தவர் மிகவும் கடினமான வார்த்தைகளால் அதாவது, "உமக்குப் புத்தி கெட்டுப் போய்விட்டது; ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கத் துடங்கி விட்டீர்கள்; நீர் யோக்கியர் அல்ல" என்று எழுதியதோடு ஜாக்கிரதையாயிருக்கும்படி எச்சரிக்கையும் செய்து எழுதியிருக்கிறார்கள்.

இதுவரை நமக்குள்ள சுமார் இரண்டாயிரம் சந்தாதாரர்களில் இந் நால்வர் அதிருப்திக்கே உள்ளாயிருக்கிறோம். இன்னும் அதிகமாயிருக்கலா மென்று சிலர் நினைக்கக் கூடுமென்றே அவர்கள் பெயரையும் காட்டி விட்



டோம். அல்லாமலும் சுமார் 10, 12 பேர் வரையிலும் காரணம் சொல்லாமல் பத்திரிகை இனி அனுப்ப வேண்டாம் என்று எழுதினார்கள். பத்திரிகை களிலேயும் நமது போக்கை "பிராமணன்" என்கிற ஒரு கும்பகோணப் பத்திரிகையும் "தேசபந்து" என்கிற ஒரு சென்னைப் பத்திரிகையும்தான் இதுவரை அடிக்கடி பலமாய்க் கண்டித்து எழுதி வருகின்றன. சர்க்காரும் நமது பத்திரிகை விஷயத்தில் கவனம் செலுத்தித்தான் வருகிறார்கள் என்பதற்கு உதாரணமாக நமக்கு எச்சரிக்கைகள் கொடுப்பதிலிருந்தும், நமது பத்திரிகையில் குறிப்பிடும் அரசாங்கம் சம்பந்தமானவையும் அரசாங்க உத்தியோகஸ்தர் சம்பந்தமான விஷயங்களையும் கவனித்து கடிதப் போக்குவரத்துக்கள் நடத்துவதிலிருந்தும் தெரிகிறோம்.

மற்றபடி நமது பத்திரிகையைப் பற்றி நம்மிடம் நேரில் பேசுகிற வர்களில் சிலர் "எல்லாம் சரி, பிராமணர்களைத் திட்டுகிறீர்கள். அது போனா லும் போகட்டும், அதிக கடினமான வார்த்தைகளால் திட்டுகிறீர்கள். அது சில சமயங்களில் நமது "குடிஅரசு" பத்திரிகையின் யோக்கியதையைக் கெடுத்து விடுகிறது" என்கிறார்கள். இவ்விரண்டும் உண்மையாயுமிருக்கலாம். அதற்கு நாம் என்ன செய்வது? இதன் ஆசிரியர் முதலில் சர்க்காருக்கு எவ்வளவு நல்ல பிள்ளையாக இருந்தாரோ அதைவிட அதிகமாகத்தான் பிராமணர் களுக்கு நல்ல பிள்ளையாக இருந்து வந்தவர். சர்க்கார் சார்பாக எத்தனையோ கலெக்டர்கள், நிர்வாக பதவி அங்கத்தினர்கள் முதலிய வர்களின் சிநேகமும் கவர்னர் முதலியோரின் நன்றியறிதல் கடிதங்களும் பட்டம் முதலியவை களுக்கு சிபார்சுகளும் பெற்றிருந்தாரோ, அதுபோலவே அநேக பிராமணர் களின் சிநேகமும், உள்ளன்பும், உபசாரப் பத்திரங்களும், தலைவர் பட்டங் களும் பெற்றவர்தான். ஆனால், அவர் சர்க்காரின் குற்றங்களை எடுத்துச் சொல்லும் போதும், சர்க்காரை கடினமான வார்த்தைகளால் திட்டும்போதும், அதற்காக ஜெயிலுக்குப் போகும் போதும், "நாயக்கர் வெகு தைரியசாலி", "உண்மை யான தேசபக்தர்", "வீரர்" என்கிற பெயர் பெற்றார். ஆனால், அவர் பிராமணர்கள் குற்றத்தை எடுத்துச் சொல்லும்போதும், அதற் கேற்ற "கடின பதங்கள்" உபயோகிக்கும்போதும் பிராமணத் துவேஷியாகி விடுகிறார். "கடின பதம்" என்றால் என்ன? பதங்களைப் பார்த்தால் போதுமா? குற்றங் களையும் குற்றம் செய்யும் ஆட்களையும் பார்க்க வேண்டாமா? குதிரையை அடிப்பதானால் கொரடாவை மேலே படும்படி வீசினால் போதும்; எருமையை அடிப்பதானால் பெரிய தடி எடுத்துத்தான் ஓங்கி அடிக்க வேண்டும்; யானையை அடிப்பதாய் இருந்தால் கூர்மையான இரும்புத்தடி (அங்குசம்) கொண்டு குத்த வேண்டும். இவற்றை அறியாமல் பேசுவதில் என்ன பலன்? பிராமணர்களிடம் நமக்குத் துவேஷமில்லை. அவர்கள் சூழ்ச்சிக்கு நமது நாட்டில் யோக்கியதை இருக்கும் வரை நமக்கு விடுதலை யில்லை என்பது நமது துணிபு. ஆகவே, இவ்விரண்டில் பிராமணர் புன்சிரிப்பை எதிர் பார்ப்பதா? விடுதலையை எதிர்பார்ப்பதா?



RangaRakes tamilnavarasam.com

நமது மக்களுக்கு பிராமண சூழ்ச்சியை அறிய சக்தியில்லை. பிராமணர்களின் வெகுகாலத்திய சூழ்ச்சிப் பிரசாரத்தால் அவர்களிடம் ஏற்பட்டிருக்கும் “பக்தி” காரணமாய் நமது பதங்கள் சிலருக்குக் கடினமாகக் காணப்படுகிறது. அவர்களால் நமது குடி கெடுவது நமக்குக் கடினமாய்த் தோன்றுவதில்லை. நாமும் முதலில் மரியாதையாகத்தான் எழுதுகிறோம். அவர்களுக்கு அது சரியானபடி தைக்காததால் தைக்கும்படி எழுதுகிறோம். அதிலும் பிரயோஜனமில்லை. ஆதலால், நமது மக்களுக்குத் தெரியும்படி எழுதுகிறோம்.

“குடி அரசு” எவருடைய தயவுக்கோ, முகஸ்துதிக்கோ, சுயநல வாழ்வுக்கோ, கீர்த்திக்கோ நடைபெறவில்லை. யோக்கியமாய் உண்மையாய் நடக்கக்கூடிய காலம் வரை நடக்கும். அவ்விதம் நடக்க அதற்கு யோக்கியதை இல்லையானால் தானே மறைந்து விடுமேயல்லாமல் மானங்கெட்டு விலங்குகளைப்போல் உயிர் வாழாது.

“குடி அரசு” தோன்றிய பிறகு அது ராஜீய உலகத்திலும் சமூக உலகத்திலும் பெரிய மாறுதல் ஏற்படுத்தியிருக்கிறது என்று பலர் நமக்கு எழுதியிருப்பதை நாமும் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோம். “குடி அரசு” ஆசிரியருக்கு உண்மை நண்பர்களாய் இருந்து வந்த ஸ்ரீமான்களான டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி. கலியாணசுந்தர முதலியார் முதலியவர் களின் கூட்டுறவு “குடி அரசு”க்குக் கிடைத்திருக்குமேயானால் அல்லது குறைந்த பக்ஷம் அவர்களுடைய எதிர்ப்பாவது இல்லாதிருக்குமானால் இன்னும் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கும். என்ன செய்வது? உள்ளதைக் கொண்டு திருப்தி அடைய வேண்டியதுதான்.

இவ்வருஷத்தில் “குடி அரசு”க்கு அதிக வேலையிருக்கிறது. அதாவது, வரப்போகும் தேர்தலுக்காக ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் சென்னைப் பிரசங்கத்தில் காங்கிரஸின் பேரால் பிராமணர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க ஊரூராய், கிராமம் கிராமமாய், தெருத் தெருவாய்த் திரிந்து தனது தொண்டைக் கிழியும் வரை (கிழிந்தாலுங்கூட) பிரசாரம் செய்யப் போவதாய் சொல்லியிருக்கிறார். ஸ்ரீமான் சி.ராஜகோபாலாச்சாரியார் மதுவிலக்கின் பெயரால் பிராமணர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க பத்திரிகைகளில் கோடு கட்டிய குறள்களை எழுதிக்கொண்டு வருகிறார்.

ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்கார் தன் பணத் திமிராலும், மடாதிபதிகள் மகந்துகள் பணத் திமிராலும், கஞ்சிக்கில்லாத பிராமணரல்லாத பிரசாரர்களை நியமித்து விஷமப் பிரசாரம் செய்வதன் மூலமும் பிராமணர்களுக்கு ஓட்டு வாங்கிக்கொடுக்க உறுதி கொண்டிருக்கிறார். டாக்டர் நாயுடு அவர்களோ, எந்தக் கட்சி ஜெயிக்கும் எந்தக் கட்சி தோற்கும் என்று ஜோசியம் பார்த்துக் கொண்டிருக்கிறார்.



ஸ்ரீமான்கள் சர்க்கரைச் செட்டியார், சுரேந்திரநாத் ஆரியா , எஸ். ராமநாதன், தண்டபாணி பிள்ளை போன்றவர்கள் மனதில் மாத்திரம் வேகமாயிருக்கிறார்களே ஒழிய வெளியில் வந்து அவர்களைப் போல் வேலை செய்ய கவலையில்லாதவர்களாய் இருக்கிறார்கள். இந்த நிலைமையில் “குடி அரசு”க்கு இருக்கும் பொறுப்பையும் கஷ்டத்தையும் நினைத்துப் பாருங்கள்.

“குடிஅரசின்” போக்கையும் அதன் தொண்டையும் விரும்பு கிறவர்கள் இது சமயம் முன் வந்து உதவாவிடில் எதிர்பார்க்கும் பலனை அடைய முடியாது. அதாவது ஒவ்வொரு பட்டணங்களிலும் “குடி அரசு”க்கு கௌரவ ஏஜண்டுகள் முன்வர வேண்டும். அவர்கள் பத்திரிகையைத் தெருத் தெருவாய் விற்க வேண்டும். சந்தாதாரர்களைச் சேர்க்க வேண்டும். நமது முன்னேற்றத்திற்கு விரோதமான பத்திரிகைகளை விலக்கச் செய்யவேண்டும்.

இனி ஒன்றிரண்டு மாதங்களுக்கும் ஆயிரம் இரண்டாயிரம் சந்தாதாரர்கள் அதிகமாகச் சேரவேண்டும். ஆங்காங்கு உள்ளவர்கள் கிராமம் கிராமமாய்ச் சென்று சந்தாதாரர்களைச் சேர்க்க வேண்டும்.

இது சமயம் பிராமண சூழ்ச்சிகளைத் தைரியமாய் வெளிப்படுத்த இரண்டே பத்திரிகைகள் உழைத்து வருகின்றன. அதாவது “திராவிடன்” என்னும் தினசரியும் “குடி அரசு” என்னும் வாராந்திரமுமேயாகும். “திராவிடனு”ம் “குடி அரசு”ம் குறைந்தது கிராமத்திற்கு ஒன்றாவது போகும் படி வேலை செய்ய வேண்டும்.

பிராமணர்கள் தங்களை ஆதரித்து தங்களுக்கு ஓட்டுச் செய்யும்படி பிரசாரம் செய்ய ஒவ்வொரு முக்கிய பட்டணங்களிலும் பிராமணரல்லாதாரைக் கொண்டே பத்திரிகை ஏற்படுத்த முயற்சித்து வருகிறார்கள். சில இடங்களிலும் ஏற்பாடாகி விட்டது. இன்னும் பல இடங்களில் ஏற்படப் போகிறது. இதை உணருங்கள், இதற்குத் தகுந்தபடி நடவுங்கள்.

**குடி அரசு – தலையங்கம் – 02.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# இந்தியா சட்டசபையும் சென்னை பிராமணர்களும்

ஆந்திரா காங்கிரஸ் கமிட்டியார்கள் இந்தியா சட்டசபைத் தேர்தலுக்கு அபேக்ஷகர்களை நிறுத்தியாய் விட்டது. அதாவது, மூன்று ஸ்தானங்களுக்கும் மூன்று பிராமணர்களையே நிறுத்தியாய் விட்டது. அவர்களின் பெயர்களாவன:-

1. வி.வி. ஜோகைய பந்துலு

2. டி. பிரகாசம் பந்துலு

3. சி. துரைசாமி அய்யங்கார்

முதல் இரண்டு பேர்களும் தெலுங்குப் பிராமணர்கள்; மூன்றாவதவர் தமிழ் அய்யங்கார் பிராமணர். ஆக மூன்று பேரும் பிராமணர்களேயாவார்கள். ஆந்திரா தேசம் சுமார் 10 ஜில்லாக்களையுடையது. இதில் நூற்றைம்பது லக்ஷம் ஜனங்களுக்கு மேல் மகமதியரல்லாதவர்கள். அதாவது (பிராமணரல்லாத) இந்துக்கள். இந்த ஒன்றே முக்கால் கோடி பிராமணரல்லாதவர்கள் அடங்கிய சமூகத்தில் இந்தியா சட்டசபைக்கு அபேக்ஷகராய் நிற்பதற்கு ஒரு பிராமணரல்லாதார்கூட கிடைக்கவில்லை என்றால், அதாவது இந்தியா சட்டசபைக்கு நிற்க ஒரு பிராமணரல்லாதாருக்குக் கூட யோக்கியதை இல்லை என்றால் இவர்கள் சுயராஜ்யம் அடைய எப்படி யோக்கியதை உடையவராவார்கள்.

மகமதியர்களில் யோக்கியதை உள்ளவர்கள் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களில் யோக்கியதை உள்ளவர்கள் இருக்கிறார்கள். ஆனால், பிராமணரல்லாத இந்துக்களில் மாத்திரம் யோக்கியதை உடையவர்கள் இல்லாமல் போய்விட்டார்கள். காரணமென்ன? மகமதியருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்களில் யோக்கியதை உள்ளவர்கள் இருக்கிறார்கள் . பிராமணர் அல்லாதாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லை. அதனால் அவர்களில் யோக்கியதை உடையவர்கள் இல்லை. இதுதான் காரணமா அல்லது வேறு ஏதாவது காரணம் உண்டா ? என்று "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைத்" துலைக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு தனது தொண்டையைக் கிழித்துக் கொள்ளத் தயாராயிருக்கும் ஸ்ரீமான் முதலியார் அவர்களை வணக்கத்துடன் கேட்கிறோம்.



இனி தமிழ்நாட்டின் கதி எப்படி இருக்கிறதோ! இன்னும் தெரியவில்லை. ஆனாலும் சென்னைக்கு ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் செங்கல்பட்டு, தென்னாற்காடு இவைகளுக்கு ஸ்ரீமான் எம். கே.ஆச்சாரியார், மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் இவைகளுக்கு ஸ்ரீமான் சேஷய்யங்கார்; இவரில்லாவிட்டால் வேறு ஒரு அய்யங்கார்; தஞ்சை, திருச்சி இதுகளுக்கு ஸ்ரீமான் ஏ. ரெங்கசாமி அய்யங்கார். கோயமுத்தூர், சேலம், நீலகிரி இவைகளுக்கு ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகஞ் செட்டியார் பேர் அடிபடுகிறது. ஆனபோதிலும் "கலியுகக் கர்ணனான" ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமணய்யங்காருக்கு கோயமுத்தூர் ஜில்லாவில் சென்னை சட்டசபைக்கு ஓட்டுக் கிடைக்காது. ஸ்ரீமான் இரத்தினசபாபதி முதலியார் ஜெயித்து விடுவார் என்கிற சந்தேகம் வருமானால் ஸ்ரீமான் செட்டியார் பாடு ஆபத்துதான். சுயராஜ்யக் கட்சியில் இருந்து விலகியாவது இன்னொரு 2, 3 லக்ஷ ரூபாய் தர்ம விளம்பரம் செய்தாவது இந்தியா சட்டசபைக்கு நின்று விடுவார் . அப்புறம் செட்டியார் பாடு மறுபடியும் ஜஸ்டிஸ் கட்சிக்குப் போக வேண்டியதுதான். இதன் முடிவு ஸ்ரீமான் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் கோயமுத்தூர் ஜில்லாபோர்டு பிரசிடெண்டு எலெக்ஷனில் பெறும் ஜெயம் அல்லது தோல்வியில் அடங்கியிருக்கிறது. ஆகவே இந்தியா சட்டசபைக்கு தமிழ்நாடு சார்பாக 4 அய்யங்கார் உறுதி, ஒரு அய்யங்கார் சந்தேகம். தமிழ்நாட்டில் இந்தியா சட்டசபைக்குப் போக யோக்கியதை உள்ளவர்கள் அய்யங்கார் ஜாதியார்தானா? பிராமணரல்லாதாரில் எவரும் இல்லையா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிடைத்தால் இந்த ஸ்தானங்களுக்குப் பிராமணரல்லாதார் நிற்காமல் காலியாகி சர்க்கார் நாமினேஷனுக்குப் போய்விடுமா என்று ஸ்ரீமான் முதலியார் அவர்களை கேட்கிறோம். சென்னை சட்டசபையைப் பற்றி பின்னால் எழுதுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 02.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# மகாத்மாவின் நன்றியறிதல்

சபர்மதியில் ராஜி ஒப்பந்தம் முடிந்த பிறகு ஸ்ரீமான் ஜெயக்கர் மகாத்மா விடம் சென்று "இந்த ராஜீயை உண்டு பண்ணியதிற்காக தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்" என்று சொன்னாராம். அதற்கு மகாத்மா "நானும் உங்க ளுக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன்" என்று சொன்னாராம். மகாத்மா எதற்காக இந்த விஷயத்தில் ஸ்ரீ ஜெயக்கருக்கு நன்றி செலுத்த வேண்டும் என்கிற கேள்வி இதில் பிறக்கக் கூடும்.

அது எதற்கு என்று யோசிப்போமானால், சுயராஜ்யக் கக்ஷியார் உத்தி யோகம் ஒப்புக்கொள்ளாத தன்மையின் திருட்டுத்தனத்தை வெளியாக்கிய தற்காகத்தான்.

**குடி அரசு - பெட்டிச் செய்தி - 02.05.1926**



# ஸ்தல ஸ்தாபனங்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே தற்கால அரசியல் முறைக்கு ஏற்ற தென்றும், வகுப்புப் பூசலும் சமயச் சண்டையும் கிளம்பாமலிருப்பதற்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நல்குவதே ஏற்ற மருந்தென்றும் அறிஞர் பலரும் கூறுகின்றனர்.

சென்ற ஏப்ரல் மாதம் 10 - உ பெங்களூர் முனிசிபல் சபையார் இத்தகைய சிறந்ததொரு முடிவுக்கு வந்துள்ளார்கள். அச்சபையில் இனி எவரேனும் ஓர் எஞ்சினீர் நியமனஞ் செய்யப்படுவாரெனின் அவர் பிராமணரல்லாதவராயிருத்தல் வேண்டுமென தீர்மானமொன்று கொண்டு வரப்பட்டு பல பார்ப்பனர்களின் எதிர்ப்புக்கிடையே நிறைவேறியது. மற்ற நகரசபைகளுக்கெல்லாம் ஓர் வழி காட்டியாய் நடந்து கொண்ட பெங்களூர் நகரசபையைப் போற்றுகிறோம். நம் நாட்டிலுள்ள இதர முனிசிபல் சபை, ஜில்லா போர்டு போன்ற ஸ்தல ஸ்தாபனங்களும் பெங்களூர் நகரசபையைப் போன்று உத்தியோகம் நியமிப்பதில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கையாடினால் பெரிதும் நலம் பயக்குமென்று கூறுகிறோம்.

நாட்டிலே தற்காலம் வகுப்புப் பகை வளர்ந்து வருவதற்குக் காரணம் சமூக வாரியாக உத்தியோகம் நல்கப்படவில்லை என்பது பற்றியேயாகும். ஆதலால், தற்காலம் குடிமக்கள் கையிலிருக்கக் கூடிய ஸ்தல ஸ்தாபனங்கள் அனைத்தும் பெங்களூர் முனிசிபல் சபை போன்று சமூக வாரியாக உத்தி யோகம் நல்கி சகலரும் ஒத்து வாழ வழி தேடுமென நம்புகிறோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 02.05.1926**



RangaRakes

tamilnavarasam.com

## பிராமண அகராதி

### வினா - விடை

**வினா** : ஆச்சிரமம் என்றால் என்ன?
**விடை** : காந்தர்வ விவாகமும் ராக்ஷச விவாஹமும் நடக்குமிடங்கள்.

**வினா** : சுயராஜ்யம் என்றால் என்ன?
**விடை** : பிராமணர்கள் உத்தியோகமும் பதவியும் அதிகாரமும் பெறுவதுதான் சுயராஜ்யம்.

**வினா** : பிராமணரல்லாதார்களுக்கு உத்தியோகமும் பதவியும் அதிகாரமும் வந்தால் அதற்குப் பெயரென்ன?
**விடை** : அது அதிகார வர்க்கத்தின் ஆட்சி அல்லது அன்னிய ஆட்சி.

**வினா** : தேச சேவை யென்றால் என்ன?
**விடை** : பிராமணர்கள் பின்னால் திரிந்துகொண்டு ஜஸ்டிஸ் கட்சியைத் திட்டுவது போல் பிராமணரல்லாதாரைத் திட்டுவதும், பிராமணர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு அவர்களை 'தலைவர்', 'தமிழ்நாட்டுக் கர்ணன்', 'கலியுகக் கர்ணன்', 'மகாத்மாவின் சிஷ்யர்' என்று சொல்லி பிராமணரல்லாதாரை வஞ்சித்து பிராமணர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுப்பதுதான் தேச சேவை ஆகும்.

**வினா** : தேசத் துரோகம் என்றால் என்ன?
**விடை** : பிராமணரல்லாதார் நன்மையைப் பற்றிப் பேசுவதும் எழுதுவதும் தேசத் துரோகமாகும்.

**வினா** : பிராயச்சித்தமில்லாத, மன்னிக்க முடியாத தேசத்துரோகம் என்றால் என்ன ?
**விடை** : பிராமணர்களுடைய சூழ்ச்சிகளையும், தந்திரங்களையும், அயோக்கியத்தனங்களையும் வெளியிலெடுத்துச் சொல்லுவதும் எழுதுவதும் மன்னிக்கமுடியாத துரோகமாகும்.

**வினா** : மதுவிலக்குப் பிரசாரம் என்றால் என்ன?
**விடை** : தான் மதுவருந்திக் கொண்டும், தனது மரத்தில் கள்ளு முட்டி கட்டித் தொங்கவிட்டுக் கொண்டும், தனது பத்திரிகைகளில் ஒவ்வொரு மனிதனும் வீட்டில் சாராயம் வைத்திருக்க வேண்டுமென்று எழுதிக்கொண்டும், தன்னை சட்டசபைக்கு அனுப்பினால் மதுவை ஒழித்து விடுகிறேன் என்று சொல்லுவதும், இப்படிப்பட்டவர்களுக்கு ஓட்டுக் கொடுங்கள் என்று சொல்லுவதும் மதுவிலக்கு பிரசாரமாகும்.

**வினா** : சரியான ஜனப்பிரதிநிதி சபை என்றால் என்ன?
**விடை** : எல்லோரும் பிராமணர்களாய் அமர்ந்திருப்பதுதான் சரியான ஜனப்பிரதிநிதி சபையாகும்.

**வினா** : அடுத்தபடியான ஜனப்பிரதிநிதி சபை என்றால் என்ன?
**விடை** : பிராமணர்களும், அவர் சொல்படி கேட்கும் பிராமணரல்லாதார்களும் அமர்ந்திருப்பது இரண்டாந்தர ஜனப் பிரதிநிதி சபையாகும்.

**வினா** : ஜனப்பிரதிநிதி இல்லாத சபை என்றால் என்ன?
**விடை** : பிராமணர்கள் மெஜாரிட்டியாய் இல்லாத சபை எவ்விதத்திலும் ஜனப்பிரதிநிதி சபையாகமாட்டாது.

**வினா** : புத்தியுள்ள ஜனங்கள் என்றால் யார்?
**விடை** : பிராமணர்கள் வண்டி வண்டியாய் பொய்யும் புளுகும் அளந்தாலும் அதையெல்லாம் கேட்டுக்கொண்டு சரி சரி யென்று பேசாமல் இருப்பவர்கள் புத்தியுள்ள ஜனங்கள்.

**வினா** : குழப்பக்காரர்கள், காலிகள் என்றால் யார்?
**விடை** : பிராமணர்கள் வண்டி வண்டியாய் பொய்யையும் புளுகையும் அளக்கும்போது குறுக்கே யாராவது கேள்வி கேட்டால் அவர்கள் காலிகள், குழப்பக்காரர்கள் ஆகிவிடுவார்கள்.

**வினா** : தேசீயப் பத்திரிகை என்றால் என்ன?
**விடை** : பிராமணர்களின் படம் போட்டுக்கொண்டும், பிராமணர்களைத் தலைவர் என்றும், பிராமணர்கள் கட்சிக்கு ஓட்டு


RangaRakes
tamilnavarasam.com

கொடுங்கள் என்றும், பிராமணர்களைப் புகழ்ந்து எழுதிக் கொண்டும், தேவஸ்தான சட்டத்தையும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் கண்டித்துக் கொண்டும் அல்லது அதைப் பற்றி பேசாமல் வாயை மூடிக்கொண்டும் இருக்கிற பத்திரிகைகள்தான் தேசீயப் பத்திரிகைகள் ஆகும்.

**வினா** : தேசத் துரோகப் பத்திரிகை என்றால் என்ன?

**விடை** : பிராமணர்களின் தந்திரங்களை எடுத்து எழுதுவதும், பிராமணரல்லாதார்களின் பெருமையைப் பற்றி எழுதுவதும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் தேவஸ்தான சட்டத்தையும் ஆதரித்து எழுதுவதுமான பத்திரிகைகள் தேசத் துரோகமான பத்திரிகைகள் ஆகும்.

**குடி அரசு - உரையாடல் - 02.05.1926**



# "நவசக்தி" யின் துக்கம்

"சுயராஜ்யக் கக்ஷி அழிந்து ஒழிய வேண்டுமென்பது திரு. ராஜகோபாலாச்சாரியாரின் கருத்தெனத் தெரிய வருகிறது" என்று 'நவசக்தி' தன் 30.4.26 உ தலையங்கத்தில் துக்கப்பட்டு ஆச்சாரியார் மீது சீறுகிறது. சுயராஜ்யக் கட்சியின் தோற்றத்தால் காந்தியடிகள் ஒடுங்கினார், ஒற்றுமை குலைந்தது, ஒத்துழையாமை மறைந்தது, வகுப்புப் பூசல் கிளம்பியது என்று சதா ஓலமிட்டுக் கொண்டிருந்த 'நவசக்தி'க்கு இப்பொழுது சுயராஜ்யக் கட்சி ஒழிந்து போவதில் இவ்வளவு கவலை வரக் காரணம் தெரியவில்லை. சுயராஜ்யக் கட்சி ஒழிந்தால் உலகம் முழுகிப் போகுமோ அல்லது 'நவசக்தி'க்கு செல்வாக்கு குறைந்துப் போகுமோ என்கிற இரகசியத்தை நாம் அறியவில்லை.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 02.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# புது இறக்குமதி

இந்தியாவுக்குப் புதிதாக ஒரு கவர்னர் உத்தியோகம், ஒரு லார்ட் பட்டம், ஒரு ரைட் ஆனரபிள் பட்டம் ஆக மூன்று புதுமைகள் இறக்குமதி ஆகிவந்தது. அந்த மூன்றும் பிராமணர்களுக்கே போய்விட்டது. அதாவது S.P. சின்னா, லார்ட் சின்னா, ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரி ஆகிய மூன்று பிராமணர்களுக்கும், பிளேக்கோ, இன்புளுவென்சாவோ, எக்ஸ் சேஞ்சு நாணய மாற்றுப் பஞ்சமோ முதலிய புதுவியாதிகள் இறக்குமதி யானால் அது முழுமையும் பிராமணரல்லாதாருக்குத்தான் கிடைக்கிறது. பிராமணரல்லா தாரின் பாக்கியமே பாக்கியம்.

**குடி அரசு - பெட்டிச் செய்தி - 02.05.1926**


# மாயவரத்தில் மும்மூர்த்திகள்

சில தினங்களுக்கு முன்பாக மாயவரத்தில் மும்மூர்த்திகள் வந்து சபை கூடி ரகசிய யோசனைகள் செய்து முடிவான தீர்மானங்கள் செய்து கொண்டு போயிருக்கிறார்கள். அவர்கள் 1. ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரியார் 2. சட்ட மெம்பர் சர்.சி.பி. ராமசாமி ஐயர் 3. அட்வகேட் ஜெனரல் கனம் வெங் கட்டராம சாஸ்திரியார் ஆகிய மூவருமேயாகும். இந்த மும்மூர்த்திகளும் சேர்ந்து தற்கால நிலைமையில் பிராமணர்கள் எப்படி உத்தியோகங்கள் பெறுவது, பிராமண வக்கீல்கள் இனி எப்படி பிழைப்பது, பிராமணரல்லா தார்களை ஏய்ப்பதற்கு வழி யென்ன என்று யோசித்து முடிவு செய்துகொண்டு போயிருக்கிறார்களென்றே நினைக்கிறோம். எல்லாம் ரகசியத்திலேயே யிருக்கிறது. குதிரை எப்பொழுது முட்டையிடுமோ பார்ப்போம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 02.05.1926**



RangaRakes tamilnavarasam.com


குடி அரசு.

குடி அரசு பத்திரிகை.

இந்தியன் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்.

# நமது நிருபர்களுக்கு

நமது 'குடி அரசு' மீது அன்பு கொண்டு அடிக்கடி பற்பல முக்கிய விடயம் பற்றி கட்டுரை வரைந்து வரும் அன்பர்களுக்கு நமது நன்றியறி தலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தமிழகத்தின் முன்னேற்றத்தில் ஆர்வங் கொண்டு எழுதப்பெறும் அவர்களின் ஒவ்வொரு வாக்கியத்தையும் போற்றுகிறோம்.

ஆனால் "குடி அரசு"க்கு விஷயதானம் செய்வோரில் பலர் , நமது பத்திரிகை வாரப் பத்திரிகை என்பதையும் சிறிய அளவில் பெரிய விஷயங் களை எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது என்பதையும் அவர்கள் கருதுவ தில்லையென்றே நினைக்கவேண்டி யிருக்கிறது. நமது கட்டுரைக் கர்த்தாக் கள் பக்கம் பக்கமாய் வரைந்த நீண்ட கட்டுரைகளை அனுப்பிவிடுகிறார்கள்.

நாள்தோறும் வரும் இக்கட்டுரைகளை மட்டிலும் பூராவும் பிரசுரிப் பதாக வைத்துக் கொண்டாலும் 12 பக்கங்களுக்கு மேலாகி விடும். அக் கட்டுரைகளைச் சுருக்கி வெளியிடுவதென்றாலும் அதனை ஆக்கியோரின் கருத்து புலனாகாது போய்விடுமென அஞ்ச வேண்டியிருக்கிறது. ஆகவே, மிகுந்த மன வருத்தத்துடன் கஷ்டத்தோடு இத்தகைய கட்டுரைகளை தள்ளி விட நேருகிறது.

ஆகையால், நமது நிருப நேயர்கள் அன்பு கூர்ந்து இனி வரையும் கட்டுரைகளை மிகச் சுருக்கி தெளிவாக இங்கியில் எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலே நன்று.

( ப - ர் )

**குடி அரசு - அறிக்கை - 09.05.1926**



RangaRakes

tamilnavarasam.com

# காந்தியின் மகிமை

## இரண்டு கிராம வாசிகளின் சம்பாஷனை

**சாமுண்டி:**

ஏ, அண்ணே மதுரை வீரா! எல்லோரும் காந்தியை மகாத்மா, மகாத்மா என்று கூப்பிடுகிறார்களே, அவர்கிட்ட ஏதாவது மகிமை இருக்கிறதா?

**மதுரைவீரன்:**

மகிமை என்றால் என்ன ?

**சாமுண்டி:**

மகிமை என்றால் தெரியாதா? சித்து விளையாட்டு. கல்லை கற்கண்டு செய்கிறது; சாணியை சந்தனம் செய்கிறது; கள்ளை பன்னீராக்குவது. இந்த மாதிரி சித்து விளையாட்டுக்கள்தான்.

**மதுரைவீரன்:**

அடேயப்பா! இதுதானா சித்து என்கிறது! இதெல்லாம் அவருடைய சிஷ்யப் பிள்ளைகள் செய்துவிடுவார்கள். அதிலும் தமிழ் நாட்டிலிருக்கும் குட்டி மகாத்மாக்கள் இப்பொழுது கூட செய்து வருகிறார்கள். இது ஒரு அதிசயமா?

**சாமுண்டி:**

அதிசயம் சொல்லுகிறேன் கேளு. சேலம் ஸ்ரீமான் ஆதிநாராயணச் செட்டியாருக்கு வடஆர்க்காடு ஜில்லாவிலே சட்டசபை மெம்பராயிருக்கிறது. இது எப்படிப்பட்ட சித்து பார்த்தாயா? அப்புறம் சென்னைக் கார்பொரேஷனைப் பாரு - பார்த்தாயா? இன்னம் கேளு; இதுகளைவிட ஒரு பெரிய சித்து விளையாட்டு காட்டுகிறேன் பார். ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியாருக்கு இந்தியா சட்டசபை மெம்பராயிருக்கிறது. இதைவிட இன்னம் என்ன பெரிய சித்து வேணும். இந்த சித்துக்கள் எல்லாம் அவருடைய பெயர் என்கிற மந்திரத்தைச் சொன்னதினாலேயே ஏற்பட்டது. இனி இந்த வருஷத்திற்கு அவருடைய சிஷ்யர்கள் குட்டி மகாத்மாக்கள் வேலை செய்யப் போகிறார்கள். அப்பொழுது மகாத்மாவின் மகிமையை ஒரு கை பார்க்கிறாயா?



**மதுரைவீரன் :**

ஓட்டக் காசு, உடைந்த சலங்கை, செல்லாக் காசு, செம்பு, பித்தளைத் துண்டு இதுகள் எல்லாம் இந்தியா சட்டசபைக்கும் சென்னை சட்டசபைக்கும் போய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஐயம்மார் சொற்படி ஆடப் போகின்றதுகள். இதைவிட இன்னும் என்ன மகிமை வேண்டும்?

**சாமுண்டி:**

அடேயப்பா! இது போதாதா? போதும் போதும். மகாத்மாவின் பெயரைச் சொன்னாலே இவ்வளவு காரியம் நடக்கிறதா! இனி அந்த மகான் தங்களுக்கு சுவாதீனமாய் விட்டால் எவ்வளவு நடக்காது?சரி சரி, இனி மேல் பேசுவதில்லை!

**குடி அரசு - உரையாடல் - 09.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# சட்ட கோர்ட்

## பத்திராதிபருக்கும் குடியானவனுக்கும் சம்பாஷனை

**குடியானவன்:** அய்யா, பத்திராதிபரே! சில வக்கீல்கள் இரண்டு கக்ஷியிலும் பீஸ் வாங்கு கிறார்களாமே, இது வாஸ்தவமா?

**பத்திராதிபர் :** ஏன் ? அதனால் என்ன தப்பிதம். ஒரு கக்ஷியில் பீஸ் வாங்கும்போது இரண்டு கக்ஷியில் வாங்கினாலென்ன? மூன்று கக்ஷியில் வாங்குகிற வக்கீல்கள் கூட இருக்கிறார்கள். அதனால் என்ன தப்பு?

**குடியானவன்:** மூன்று கக்ஷியென்றால் என்ன? எனக்கு தெரியவில்லையே.

**பத்திராதிபர்:** இது தெரியாதா? வாதி, பிரதிவாதி, சாட்சி ஆகிய மூன்று கட்சி.

**குடியானவன்:** சாட்சி எதற்காகக் கொடுப்பார்?

**பத்திராதிபர்:** சாட்சி திருடி இருப்பார், ஜெயிலுக்குப் போயிருப்பார், கடன்காரராயிருப்பார், பொய் சாட்சி சொல்லியிருப்பார், அதிகாரிகளுக்கு லஞ்சம் வாங்கிக் கொடுத்திருப்பார், இந்த வக்கீலைப்பற்றி ஏதாவது பேசி யிருப்பார். இவைகளையெல்லாம் கட்சிக்காரர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு பப்ளிக் கோர்ட்டில் அவமானப்படுத்தாமல் இருப்பதற்காக சாட்சி களும் வக்கீலுக்குப் பணம் கொடுப்பதுண்டு.

**குடியானவன்:** இப்படி இரண்டு மூன்று பேரிடம் பணம் வாங்கினால் அது யோக்கியமாகுமா?

**பத்திராதிபர்:** ஏன்? ஒருவனிடம் வாங்குவது மாத்திரம் எப்படி யோக்கியமாகும்? அந்தப் பணமும் அக்கிரமமாகத்தானே வாங்குகிறார்கள். ஏதோ பொய்யோ, புளுகோ, பித்தலாட்டமோ, தந்திரமோ செய்து அவனுக்கு கேஸ் ஜெயித்து கொடுப்பதாகத்தானே வாங்குகிறார்கள். இது எப்படி யோக்கியமாகும்? அதிகாரிகள் லஞ்சம் வாங்கிக் கொண்டு ஞாய விரோத மாய்த் தீர்ப்புச் செய்வதற்கும், வக்கீல்கள் பணம் வாங்கிக் கொண்டு ஞாய விரோதமாய்த் தீர்ப்புப் பெற பாடுபடுவதற்கும் வித்தியாசமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. வக்கீல் ஞாயப்படி பேசுவானேயானால் அது



ஒழுங்குதான். அப்படியானால் வக்கீலே வேண்டியதில்லை. உள்ளதை கட்சிக்காரனே அதிகாரியிடம் சொன்னால் நியாயப்படி நடந்து விடுகிறது. வக்கீல் எதற்கு? ஒரு சமயம் சட்டம் எடுத்துக் காட்டுவதற்கு என்று சொல்ல லாம். சட்டம் இரண்டு கட்சிக்கும்தான் அநுகூலமாயிருக்கிறது. வாதி வக்கீல் ஒரு மதராஸ் சட்ட புஸ்தகம் காட்டினால் பிரதிவாதி வக்கீலும் ஒரு கல்கத்தா சட்ட புஸ்தகம் காட்டுவார். அப்பீலுக்குப் போனால் அங்கே பம்பாய், அலஹா பாத் அல்லது வேறு சட்ட புஸ்தகங்கள். ஐகோர்ட்டுக்கு போனால் அங்கே சீமைப் புஸ்தகங்கள் காட்டப்படும். இதனால் வக்கீலுக்குப் பணம் கொடுப் பதில் லாபமென்ன? சில ஊர்களில் ஒருவருக்கொருவர் சண்டை வந்து விட்டால் ஒருவன் சில போக்கிரிகளுக்கு கள்ளு வாங்கிக் கொடுத்து மற்ற வனை அடிக்கும்படி சொல்லுவதையும், அடிபட்டவன் அதே போக்கிரிக ளுக்கு சாராயம் வாங்கிக் கொடுத்து முதலில் அடிக்கச் சொன்னவனையே திருப்பி அடிக்கச் சொல்லுவதையும் நாம் பார்க்கிறோமல்லவா? அதுபோல் தான் வக்கீல்கள் வைப்பதும். நான் பணம் கொடுத்தால் எனக்கு; நீ பணம் கொடுத்தால் உனக்கு; இரண்டு பேரும் பணம் கொடுத்தால் இரண்டு பேருக்கும். இதில் தப்பு என்ன?

**குடியானவன்:** அப்படியானால் வக்கீல்கள் இரண்டு கட்சியிலும் பணம் வாங்கக் கூடாது என்று சர்க்கார் சட்டமிருக்கிறதே, அதென்ன?

**பத்திராதிபர்:** சர்க்கார் சட்டத்தைப் பற்றி கவலைப்படாதே. அதே சட்டத்தில் வக்கீல்கள் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாய் எதுவும் பேசலாம் என்றிருக்கிறதே பார்த்தாயா? அல்லாமலும் இந்த கூட்டத்தில் இருந்துதானே சர்க்காரார் முனி சீப்பு முதல் ஐகோர்ட்டு ஜட்ஜு வரையிலும் பொருக்கி எடுக் கிறார்கள் என்பதும் அவர்கள் தான் இந்த சட்டத்தை நிறைவேற்றுகிறவர்கள் என்பதும் உனக்குத் தெரியாதா?

**குடியானவன்:** அப்படியானால் எப்படித்தான் நியாயம் கண்டு பிடிக்கிறது?

**பத்திராதிபர்:** நியாயம் கண்டுபிடிக்க வேண்டும் என்கிற கவலை யாருக்கு இருக்கிறது என்று நினைக்கிறாய். வக்கீலுக்கும் இல்லை; அதி காரிக்கும் இல்லை; சர்க்காருக்கும் இல்லை. சர்க்காரார் வக்கீலைக் கொண்டு சட்டம் செய்திருக்கிறார்கள். அந்த வக்கீல்களைக் கொண்டுதான் நிறைவேற்று கிறார்கள். அந்த சட்டபடி எல்லோரும் நடந்து கொள்ள வேண்டும். உதாரண மாக, ஒருவன் மற்றவனுக்குப் பணம் கொடுக்க வேண்டும்; கோர்ட்டில் பிராது செய்தால் கொடுத்தவன் கொடுத்ததாய்ச் சொல்லுகிறான். வாங்கினவன் வாங்கினதாய் ஒப்புக்கொள்ளுகிறான். ஆனால் சட்டப்படி கொடுக்க வேண் டிய தில்லையென்றாய்விடுகிறது. அதுபோலவே ஒருவன் மற்றொருவனைக் கொன்று விடுகிறான். செத்துப் போனதும் நிஜம், கொன்றதும் நிஜம். ஆனால் அவன் சட்டப்படி சாகவில்லை, சட்டபடி ருஜுவாகவில்லை, ருஜுவானாலும் சட்டப்படி கொலை அல்ல என்று தீர்மானமாகி விடுகிறது. இவைகளைப்



RangaRakes tamilnavarasam.com

பார்த்ததில்லையா? கோர்ட்டு என்றால் (லா கோர்ட்டு) சட்டகோர்ட்டு தானே? சட்டப்படி உண்டா? இல்லையா ? என்று தானே பார்க்கிறார்கள். நியாயக் கோர்ட்டு அல்லவே! நியாயப்படி செய்தாரா இல்லையா? என்று பார்ப்ப தில்லையே. ஆதலால் வக்கீல்களைப் பற்றியும் குற்றம் சொல்லாதே; அதிகாரி களைப் பற்றியும் குற்றம் சொல்லாதே; சர்க்காரைப் பற்றியும் குற்றம் சொல் லாதே; இதற்கெல்லாம் ஆதாரமாயிருக்கிற அய்யமாரைப் பற்றி வேண்டு மானால் சொல்லிக் கொள். இல்லாவிட்டால், இதெல்லாம் தெரிந்தும் மறுபடி யும் உனக்குப் புத்தி வருவதில்லையே.ஆதலால் உன்னையே வேண்டு மானால் சொல்லிக்கொள்.

**குடியானவன்:** அப்படியானால் கோர்ட்டுக்குப் போவதே சுத்தப் பயித்தியக்காரத்தனம்தான் என்று படுகிறது. கடன் வாங்கினவனே தின்றாலும் பரவாயில்லை. அவனிடத்தில் வசூல் செய்வதாய் நினைத்துக் கொண்டு அநியாயமாய் வக்கீலுக்கும், சர்க்காருக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் அழுவது புத்தியில்லாத்தனம்தான் என்றும் படுகிறது. இதற்கு ஏதாவது வழியில்லையா?

**பத்திராதிபர்:** வழியென்ன? வக்கீல்கள் ஒழிய வேண்டும். அவர்கள் ஒழிந்தால் முதலாவது சர்க்காரார் யோக்கியமாய் நடப்பார்கள்; ஜனங்களும் யோக்கியமாய் நடப்பார்கள்; நாட்டில் அக்கிரமம் அதிகமாய் நடக்காது.

**குடியானவன்:** அப்படியானால் பிறகு யேன் சர்க்காரார் வருஷத் துக்கு வருஷம் வக்கீல்களையும் கோர்ட்டுகளையும் அதிகப்படுத்திக் கொண்டே வருகிறார்கள்?

**பத்திராதிபர்:** நமது நாட்டில் பார்ப்பனர் என்று ஒரு ஜாதியிருக்கிறது. அதுதான் நமது அய்யர்மார்கள். அவர்களுக்கு உடலில் பலம் இல்லை; பாடு பட்டுத் தின்னக் கையாலாகாது; தலைமுறை தலைமுறையாய் ஊரார் முதலைத் தின்றே வழக்கம்; அதுவும் நகத்தில் அழுக்குப் படாமல் அதிகாரம் பண்ணியே தின்னுகிற பேர்வழிகள். அத்துடன் அவர்களுக்கு, கொஞ்சம் தந்திரமும் தெரியும். அதற்கேற்றாற்போல் நமக்கு வாய்த்த சர்க்காரோ சொல்ல வேண்டியதில்லை. இவர்கள் அய்யமாரை விட ஒன்னாம் நெம்பர் பேர் வழிகள். அய்யமாராவது இங்கேயே தின்று கழித்து விடுகிறார்கள். சர்க்காரோ மூட்டை கட்டிக் கொண்டு போகிற ஆசாமிகள். இவர்கள் இரண்டு பேருக்கும் அநுகூலமான ஒரு பிழைப்பு வேண்டுமானால் கூட்டுக் கொள்ளை அடிப்பது போல் இருக்க வேண்டும். ஆதலால் அதற்கேற்றது இந்த வக்கீல் பிழைப்பும் கோர்ட்டுகளுந்தான். அதனால்தான் சர்க்காரும் இதை வளர்த்துக் கொண்டே போகிறார்கள்.

**குடியானவன்:** சர்க்காரும் பார்ப்பாரும் பிழைக்க நமது ஜனங்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறதா? இது என்ன சர்க்கார்? இது என்ன பார்ப்பார்? இவர்கள் பிழைக்க நாம் கெடுகிறதா? இத்தனை அநியாயமா?



**பத்திராதிபர்:** இதுதானா பெரிய அநியாயம்; கள்ளுக்கடை, சாராயக் கடையைப் பார். கள்ளு உற்பத்தி செய்வது நாம், விற்பது நாம், குடிப்பது நாம், குடி கெடுவது நாம், இதனால் பிழைப்பது வக்கீல் என்கிற அய்யமாரும், சர்க்காரும், அவர்கள் உத்தியோகஸ்தர்களும் தானே. இவ்வளவு பணமும் இவர்கள் தானே பங்குபோட்டுக் கொள்ளுகிறார்கள்.

**குடியானவன்:** இதற்கு என்னதான் செய்வது?

**பத்திராதிபர்:** என்ன செய்தாலும் முடியாது. மகாத்மா காந்தி சொன்னபடி செய்வதுதான் இதற்கு மருந்து.

**குடியானவன்:**மகாத்மா காந்தி இப்பொழுது வர வர என்னமோ வழ வழ என்று போய் விட்டார் என்று சொல்லிக் கொள்ளுகிறார்களே!.

**பத்திராதிபர்:** இப்பொழுது வழவழ என்று இருந்தால் உனக்கென்ன? முன் அவர் சொன்னதும் எழுதினதும் அப்படியேதான் இருக்கிறது. இப்பொ ழுது அதில் ஒன்றும் எவருக்கும் சந்தேகமில்லை. ஆதலால் அந்தப்படி நடங்கள்.

**குடியானவன்:** அதெல்லாம் உங்களைப் போலொத்தவர்கள் தான் நடத்தி வைக்க வேண்டும். நாங்களாக நடப்பதென்றால் ஆகக் கூடிய காரியமல்ல.

**பத்திராதிபர்:** ஆகட்டும். இப்பொழுது என்னமோ இன்னும் 6, 7 மாதத்திற்கு நாட்டில் அயோக்கியர்களுக்கு கொஞ்சம் செல்வாக்கு அதிகமாக இருக்கும். பின்னால் எல்லாம் சரிபட்டுப் போகும். பிறகு நீங்களாகவே நடந்து கொள்ளுவீர்கள். சரி போய் வாருங்கள்.

**குடி அரசு – உரையாடல் – 09.05.1926**



RangaRakes
tamilnavarasam.com

# அய்யங்கார் தர்மம்

**–சித்திரபுத்திரன்**

கோவை ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்கார் தர்மத்தின் இரகசியம் ‘குடி அரசில்’ வெளியானதினால் ஸ்ரீமான் ஐயங்கார் முதல் பல பிராமணர்களுக்கும், அவரது தர்மத்தில் பங்கு கொண்ட – கொள்ள இருக்கும் சில பிராமணரல்லாத பத்திராதிபர்கள், பிரசாரகர்கள் என்போருக்கும் ஆத்திரங் கிளம்பிவிட்டது. தர்மத்தைப் பற்றி நமக்கு பொறாமையா? யார் தர்மம் செய்வதாயிருந்தாலும், அது என்ன தர்மமாயிருந்தாலும், பொதுவாக உண்மைத் தர்மம் என்றாலே அதை வரவேற்பார்களே தவிர எவரும் அதை வெறுக்க மாட்டார்கள். ஆனால் பொது ஜனங்களை ஏமாற்றச் செய்யும் ஒரு சூழ்ச்சிக்கு தர்மம் என்று பெயர் கொடுப்பதனால் அறிவுள்ளவன் – யோக்கியன் பொது ஜனங்கள் ஏமாறும்படி பார்த்துக் கொண்டிருக்கவே மாட்டான். அப்படிப் பார்த்துக் கொண்டிருப்பவன் கோழையும் சுயநலவாதியுமே ஆவான்.

கோவை ஜில்லாவில் உண்மையான தர்மம் செய்த பிரபுக்களில்லாமலில்லை. உதாரணமாக கோவைக்கடுத்த பீளமேடு என்னும் ஊரில் ஸ்ரீமான்கள் பி.எஸ். கோவிந்தசாமி நாயுடு அன் சன்ஸ் என்கிற பிரபல நாயுடு கனவான்கள் குடும்பம் இருந்து வருகிறது. அவர்கள் தக்க செல்வமுள்ளவர்கள். 20 லட்ச ரூபாய் மூலதனமுள்ள ஒரு பெரிய நூல் மில்லை நிர்வகித்து வருகிறார்கள். இவர்கள் பொதுஜன உபகாரத்தில் இறங்கினார்கள். 30, 40 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பெரிய பள்ளிக்கூடம் கட்டினார்கள். அதற்கு பதினாயிரக்கணக்கான பூமி விட்டார்கள். மாணவர்களுக்கு விடுதி (ஹாஸ்டல்) ஏற்படுத்தினார்கள். இளைஞர்கள் விவசாயமும் கைத்தொழிலும் கற்க ஒரு தொழிற்சாலை யேற்பாடு செய்தார்கள். இதற்காக தங்கள் குடும்ப சொத்தில் ஒரு பாகத்தையும் தங்களுக்கு மில்லில் வரும் வருஷவாரி வரும்படியில் ஒரு பாகத்தையும் இத்தர்மத்திற்கு எழுதி வைத்தார்கள். இப்பொழுதும் கோயமுத்தூருக்கு யார் போனாலும் இவற்றைத் தெரிந்து கொள்ளலாம். இதில் இரகசியம் ஒன்றுமில்லை. இந்த தர்மம் தாலூகா, ஜில்லா போர்டு எலெக்ஷனுக்காகவோ சட்டசபை எலெக்ஷனுக்காகவோ அவர்கள் செய்ய வில்லை.

இத்தர்மம் செய்ததைக் கூலி கொடுத்து ஆள் வைத்து விளம்பரப் படுத்தவில்லை. அவர்களது தர்மமும் தானாகவே வருஷக்கணக்காய் நாளுக்கு நாள் விருத்தியாகிக் கொண்டே வருகிறது. சமீபத்தில் சென்னிமலை வேட்டுவபாளையம் பூசாரி என்கிற ஒரு பக்தர் பதினாயிரக்கணக்கான ரூபாய் பெறுமான சொத்தை தர்ம சாசனம் எழுதி அந்நியர் கையிலேயே ஒப்புவித்து விட்டார். அதற்கு ஒரு விளம்பரமும் அவர் செய்யவேயில்லை.

இவற்றைவிட வெகு சமீபத்திலுள்ள கொடுமுடியில் ஸ்ரீமான் பெரியண்ணஞ் செட்டியார் என்கிற ஒரு கனவான் சில நாட்களுக்கு முன் 15,000 ரூபாய் பெறுமானமுள்ள பூமியும், 8000 ரூபாய்க்கு கட்டடமும் கட்டிக் கொடுத்து, இப்போது மறுபடியும் 50,000 ரூபாய்க்கு மேல் பெறும்படியான சொத்துக்களை கொடுமுடி சங்கர வித்தியாசாலை என்கிற பள்ளிக்கூடத்திற்கு செட்டில்மெண்டு மூலம் எழுதி வைத்து சுவாதீனமும் செய்து விட்டார். மேற்கொண்டு ரொக்கப் பணமாக 12,000 ரூபாய் ஸ்கூல் பண்டுக்குக் கொடுத்துமிருக்கிறார். இவர் எவ்வித திறப்புவிழாவும் அங்குரார்ப்பண விழாவும் செய்யவில்லை; விளம்பரமும் செய்யவில்லை. பத்திரிகைக்காரருக்குப் பணங்கொடுத்துப் போடச் சொல்லவுமில்லை. மகாத்மா காந்தி, பண்டித நேரு, ஸ்ரீமதி சரோஜனி முதலிய பெரியார்களுக்குத் தனது தர்மப் பெருமையை எழுதவுமில்லை. இப்படியெல்லாமிருக்க, கேவலம், ஒரு சட்டசபை ஓட்டுப் பெற – எதிர் அபேக்ஷகரைத் தோற்கடிக்க – இவ்வளவு தந்திரங்களும் மந்திரங்களும் செய்தால் செய்தவர் மிகப் பெரியவராய்ப் போய் விடுகிறார். அதை வெளியில் எடுத்துச் சொல்லுபவர் அயோக்கியர்களாய்ப் போய்விடுகிறார்கள் என்றால் மக்கள் நிலையை என்ன வென்று சொல்லுவது.

ஸ்ரீமான் ஐயங்காரைப்போல் தைரியமாய் தர்ம விளம்பரம் செய்ய எவராவது பின் வாங்கினால் அவர்கள் தோல்வியுற வேண்டியதா? இந்த தைரியத்திற்காக மாத்திரம் ஐயங்கார் வெற்றியுறவேண்டியதா? சட்டசபை மெம்பராவதற்கு இந்த தைரியம்தானா யோக்கியதை? ஸ்ரீமான் ஐயங்கார் இவ்வளவு விளம்பரம் ஏன் செய்ய வேண்டும் இவரும் இரண்டு தடவை– ஆறு வருஷகாலம் – சட்டசபைப் பதவியை அடைந்து அனுபவித்தாய் விட்டது; இனி வேறொருவர்தான் அனுபவிக்கட்டுமே; யார் வீட்டு சொத்து. இந்த ஜில்லாவில் 60,000 ஓட்டர்கள் இருந்தால் சுமார் 3,000 ஓட்டர்கள்கூட பிராமணர்கள் இருக்க மாட்டார்கள். 57,000 பிராமணரல்லாத ஓட்டர்கள் இருக்கும் ஒரு ஸ்தானத்திற்கு 3,000 ஓட்டுள்ள பிராமணர் எத்தனை தடவை அந்தப் பதவியை அனுபவிப்பது? ஆறு வருஷம் பார்த்தது போதுமென்று இவர் ஏன் கௌரவமாய் விலகிவிடக் கூடாது? கோயமுத்தூர் ஜில்லாவில் சட்டசபைப் பதவியை அனுபவிக்க இவரைவிட வேறு நபர்கள் இல்லையா? கேவலம் இந்தப் பதவி பெற இவ்வளவு தந்திரம் செய்து 57,000 பேரையும் ஏமாற்றி சட்டசபைக்குப் போகிறவர், போனபின் இவரால் ஜனங்கள் என்ன பலன் அடைய முடியும்? இம்மாதிரி பேராசையுள்ளவர்கள் எவ்வளவு காலத்திற்கு ஜனங்களை ஏமாற்ற முடியும். ஸ்ரீமான் ஐயங்கார் விளம்பரமும் வெற்றியும் ஏதாவது சாமர்த்தியத்தையும், சக்தியையும், தேச பக்தியையும், நாணயத்தையும், தகுதியையும் பொறுத்திருக்கிறதா? ஸ்ரீமான் ஐயங்கார் பணத்தையும்,





RangaRakes tamilnavarasam.com

தந்திரத்தையும், விளம்பரத்தையும் பிராமணரல்லாதார் சமூகத் துரோகத் தையும் அவர்களது முட்டாள்தனத்தையும் தானே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இதை உத்தேசித்துத்தானே அனுபவசாலிகள், அரசியலில் பணத் திமிரும், தந்திரமும், சூழ்ச்சி விளம்பரமும், சமூகத் துரோகமும், அறியாமையால் நேரும் நஷ்டமும், ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட வேண்டும் என்று கதறுகிறார்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டிருந்தால் ஸ்ரீமான் ஐயங்கார் 6 வருஷம் அனுபவித்துவிட்டு இன்னும் 3 வருஷத்திற்கு இவ்வளவு விளம்பரம் செய்வாரா? முதலாவது, ஒரு வருஷத்திற்காவது இவருக்கு முறை வருமா? 30 ஆயிரம் அல்லது 50 ஆயிரம் செலவு செய்தாலும் கிடைத்து விடுமா? 2 லக்ஷமல்ல, 10 லக்ஷம் என்று தர்ம விளம்பரம் செய்தாலும் ஆகி விடுமா? கோயமுத்தூர் ஜில்லாவானது தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிட்ட ஜில்லா. ஸ்ரீமான் ஐயங்காரைப் போல் எத்தனையோ பணக்காரரும், பட்டக்காரரும், ஜமீன்தாரரும், சக்தியுள்ளவர்களும், அவரைவிட தகுதியும் உரிமை யுமுள்ளவர்களுமிருக்க ஐயங்காரே அடிக்கடி வரவேண்டுமென்பது “வேதக் கட்டளையா, சாஸ்திர சம்மதமா? மனுதர்மமா?” இந்த ஒரு சிறு பதவியே பிராமணரல்லாதார் 100-க்கு 97 பேர் உள்ள சமூகத்தை இவ்வளவு மோசம் செய்யுமானால் இன்னும் பெரிய பதவிகள் - சுயராஜ்யப் பரிபாலனம் போன்ற ராஜா மந்திரிப் பதவிகள் - இன்னும் எவ்வளவு மோசத்தை விளைவிக்காது? தவிரவும் இந்த நியாயமான சங்கதியை நாம் எழுதும் போதே ஸ்ரீமான் ஐயங்காருக்கும் அவரது சிஷ்யக் கோடிகளுக்கும் சிப்பந்தி கோடிகளுக்கும் இவ்வளவு ஆத்திரமும் கோபமும் மனவருத்தமும் வருமானால், தமிழ் நாட்டிற்கே ஏன் - இந்தியா தேசத்திற்கே ராகு கேதுகள் போல் இருக்கும் பிராமணப் பத்திரிகைகளும், பிராமணப் பிரசாரகர்களும், அவர்களால் ஆட்கொள்ளப்பட்ட பிராமணரல்லாத பிரசாரகர்களும் உண்மைக்கு விரோத மாய் இரவும் பகலும் பிராமணரல்லாதார் மீது பொய்யும், பித்தலாட்டங்களும் சொல்லி விஷமப் பிரசாரம் செய்கின்றார்களே, அதனால் பிராமணரல் லாதார்களுக்கு எவ்வளவு சங்கடமும், ஆத்திரமும், கோபமும் வராது? “குடி அரசு” போன்ற பத்திரிகையாவது சுமார் 10 பிராமண சந்தாதாரர் களைக்கூட உடைத்தானதாயிருக்காது. அதிலும் 7 பேர் கௌரவ சந்தாதாரர் களாயிருப்பார்கள். ‘சுயராஜ்யா’, ‘சுதேசமித்திரன்’ போன்ற பத்திரிகைகள் பிராமணரல்லாதார் பணத்திலேயே நடக்கிறது. பிராமணரல்லாதார் தங்கள் பணத்தையே கொடுத்து தங்கள் சமூகத்தையே பாழாக்குவதற்கு உடந்தையா யிருப்பது போல் அவைகளுக்கு சந்தாதாரர்களாயிருக்கிறார்கள். இதைக் கேட்பவர்களுக்கு எவ்வளவு மனவேதனை ஏற்படும். ஒவ்வொரு நாளும் இந்தப் பத்திரிகைகளில் பிராமணரல்லாதார்களைப்பற்றி எழுதும் பொய்யும் புளுகும் கணக்கு வழக்கில்லை. அதைக் கவனிக்கவோ, திருத்தவோ, கோபப் படவோ, ஆத்திரப்படவோ ஆளில்லை. ‘குடி அரசு’ உண்மையை- தன் மனதிற்கு உண்மையென்று பட்டதை எழுதினால் இதற்கு - இவ்வளவு அடா துடியா?



ஸ்ரீமான் ஐயங்காருக்குத்தான் பணமிருக்கிறது; பத்திரிகைகள் இருக்கின்றன; பணம் வாங்கிக் கொண்டு பேசவும் எழுதவும் ஆளுகள் இருக்கிறார்கள். இதனால் எவ்வளவு அக்கிரமம் செய்தாலும் தாராளமாய்ப் பெரிய மனிதராய் விடுகிறார். இவைகள் இல்லாதவர்கள் கதி என்ன ஆவது? எவ்வளவு யோக்கியர்களாயிருந்தாலும், தேசபக்தர்களாயிருந்தாலும் அவர்கள் யோக்கியதை வெளிவருவதற்கில்லை. வெளிவராவிட்டாலும் அவசியமில்லை; அவர்களுடைய தொண்டு தேசத்திற்குப் பிரயோஜனமில் லாததோடு அயோக்கியர்கள் செய்கையும் அயோக்கியத்தனமும் உலகத்தில் மதிக்கப்பட்டு மலிந்து போகிறதே என்பதுதான் நமது உண்மையான சங்கடம். அல்லாமலும் தென்னாட்டில் தென்னாட்டாரின் பிரதிநிதிகள் ஸ்ரீமான்கள் சென்னை ஏ.ரெங்கசாமி ஐயங்கார், எஸ்.சீனிவாசய்யங்கார், எஸ். சத்தியமூர்த்தி ஐயர், எம்.கே. ஆச்சாரியார், கோவை சி.வி. வெங்கிட்டரமணய்யங்கார், கும்ப கோணம் சக்கிரவர்த்தி ஐயங்கார் ஆகிய இவர்கள்தானா? இவர்களைவிட யோக்கியர்களும் தேச பக்தர்களும் வேறு எவரும் நமது நாட்டில் இல்லையா? இவர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு பேசுகிறவர்களும் எழுதுகிறவர் களுந்தானா ‘தேசத் தொண்டர்’, ‘தேச பக்தர்’. இவர்களுக்கு எப்படி இந்தப் பதவி வந்தது? பணமும் பத்திரிகையும் தங்கள் கைவசமிருப்பதோடு, யோக்கி யமற்ற வழியில் செலவிடுவதும் எழுதுவதுமான குணத்தினால்தானா அல்லவா?

தமிழ்நாட்டின் சார்பாக சபர்மதி ராஜி ஒப்பந்தத்திற்குப் போயிருப்பவர் கள் எத்தனை பேர்? ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், ரெங்கசாமி ஐயங்கார், சத்தியமூர்த்தி ஐயர் ஆகிய இவர்கள் செய்துவரும் ராஜியை ஒப்புக் கொள்ள வாவது இவர்களை யோக்கியர்கள் என்று சொல்லவாவது தமிழ் நாட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள். இவர்களைத் தலைவர்கள் என்று சொல்லும் நமது ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்தர முதலியாரையே சத்தியமாய்க் கேட்ப் போம். இவர்கள் தலைவர்களா? இவர்களை யோக்கியர்கள் என்று அவர் கருதுகிறாரா? இவர்கள் சொற்படி நடக்க தயாராயிருக்கிறாரா? ஒன்றிற்கு மில்லை. இப்படியிருக்க இவர்கள் எப்படித் தலைவர்கள் ஆகிறார்கள்? பணமும் ஆளும் பத்திரிகையும் தான் காரணம். அநேக யோக்கியர்களும் உண்மை தேசபக்தர்களும் அவர்களது இன்றியமையாத தொண்டும் தேசத்திற்கு உபயோகப்படாமல் ஏன் மறைந்து கிடக்கிறது. பணமும் ஆளும் பத்திரிகையும் இல்லாததால்தான். ஆதலால் பாமர ஜனங்கள் ஓட்டர்கள் இவ்விளம்பரங்களை நம்பி ஏமாறாமலும் அநாவசியமாய் அந்நியரை வைகி றார்கள் என்று நினைத்து நம்மீது அவசரப்பட்டு ஆத்திரப்படாமலும் உண்மையை அறியும்படி வேண்டுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 09.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# சபர்மதி ராஜியின் முறிவு

சுயராஜ்யக் கட்சியாருக்கும் பரஸ்பர ஒத்துழைப்பாளர்களுக்கும் வெளிப்படையாய் உள்ள வித்தியாசமெல்லாம் கவர்ன்மெண்டார் இணங்கி வந்தால் 1,000, 5,000 சம்பளமுள்ள உத்தியோகங்களை ஏற்றுக்கொள்வதென்பது முன்னவருக்கும், கவர்ன்மெண்டார் எவ்வளவு இணங்கி வருகிறார்களோ அவ்வளவுக்குத் தகுந்தபடி 1,000, 5,000 சம்பளமுள்ள உத்தியோகங்களை ஏற்றுக் கொண்டு அதற்குத் தகுந்தபடி நடந்துக் கொள்வதென்பது பின்னவருடையதுமான வெளிப்படை கொள்கைகளாகும். இந்தக் கொள்கைக்கும் மிதவாதம், ஜஸ்டீஸ், பெசண்டம்மையார் ஆகியோர்களுடைய கட்சிக் கொள்கைக்கும் யாதொரு விதமான வித்தியாசமும் வெளிப்படையாகவுமில்லை, இரகசியமாகவுமில்லை. சுயராஜ்யக் கட்சிக்கும் மேற்கண்ட மற்ற கட்சிகளுக்கும் அந்தரங்கத்தில் யாதொரு விதமான வித்தியாசமுமில்லை. சுயராஜ்யக் கட்சி "சாத்தமுதில் மல அமுது விழுந்து விட்டது, வடிகட்டினாப் போல் வாறு" என்பது போல் கவர்ன்மெண்டார் இணங்கி வந்தால் உத்தியோகம் ஏற்றுக் கொள்வதென்று சொல்லுவது, ஓட்டர்களை ஏமாற்றுவதற்கு தமிழ்நாட்டு ஐயங்கார் கோஷ்டிகள் செய்த சூழ்ச்சியேயல்லாமல் வேறல்ல. ஏனென்றால் அவர்கள் தமிழ்நாட்டில் ஜஸ்டீஸ் கட்சியாரைப் போலவும், மிதவாதக் கட்சியாரைப் போலவும், தாங்களும் உத்தியோகம் பெற்றுக் கொள்ளுவதற்கு வந்துவிட்டோமென்று சொன்னால் பாமர ஜனங்கள் ஏமாற மாட்டார்கள் என்று நினைத்து அதற்காக கண்டுபிடித்த தந்திரமாகும். இந்த தந்திரக்காரரே சுயராஜ்யக் கட்சியிலும் காங்கிரசிலும் ஆதிக்கம் செலுத்துகிறவர்களானதினால் அவைகளிலும் தங்கள் தந்திரங்களை நிறைவேற்றிக் கொண்டார்கள். பம்பாய்க்காரரும், மஹாராஷ்டிரக்காரரும் இவர்களைப் போலவே உத்தியோக வேட்டைக்காரர்களானதினாலும், அங்குள்ள பாமர ஜனங்களை ஏமாற்றுவதற்கு இவ்வளவு தந்திரம் வேண்டியதில்லையானதினாலும், அவர்கள் இவர்களுடைய தந்திரத்தை வெளிப்படுத்த முன்வந்தார்கள். அவர்கள் கட்சி வலுக்க ஆரம்பிக்கவே அவர்களை எதிர்த்து நிற்க யோக்கியதையில்லாத சுயராஜ்யக் கட்சியார், பம்பாய்- மராட்டா மாகாணக்காரர்களின் காலுக்குள் நுழைந்து அவர்களுடன் ராஜி செய்து கொள்ள சபர்மதி ஆச்சிரமத்தின் பெயரையும் மகாத்மாவின் பெயரையும் உபயோகப் படுத்திக்கொண்டு "புதுத் திருடன்", "பழய திருடன்" ஆகிய இருவரும் இனிமேல் திருடப் போவதில் ஒரே முறையைத்தான் உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர ஆளுக்கு ஒரு முறையை அனுசரித்து ஒருவருக் கொருவர் காட்டிக் கொடுக்கலாகாது என்ற ராஜிக்கு வந்தார்கள். இந்த ராஜியை மேற்கண்ட திருட்டில் பங்குள்ளவர்களெல்லாம் ஆனந்த மாய்ப் பாராட்டினார்கள். ஆனால், தமிழ்நாட்டிலுள்ள பங்குக்காரர்களுக்கு இதற்கு முன்னமேயே மூக்கு அழுகிப் போயிருந்த படியினால் இந்த ராஜியைப் பாராட்ட ஆரம்பித்தால் மூக்கில் புழு உண்டாகிவிடுமோவென்று அஞ்சி அந்த ராஜியை ஒப்புக்கொள்ள மனமில்லாதவர்கள் போல் பொய்ய முகை அழுதார்கள்.

தமிழ்நாட்டுக்கு பெரிய சந்தோஷ சமாச்சாரம் கொண்டுவருவது போல் இந்த ராஜி சங்கதியைக் கொண்டுவந்த ஐயங்கார் கோஷ்டிக்குத் தமிழ் நாட்டுப் பங்குக்காரர்களின் அழுகை பெரிய ஆபத்தை உண்டாக்கிவிட்டது. இவ் "வெச்சரிக்கை"யைத் தூக்கிக் கொண்டு மறுபடியும் ஆமதாபாத்துக்கு ஓடினார்கள். தலைவர் பண்டித நேருவைப் பிடித்து ஒரு கரணம் போடச் சொன்னார்கள். அவர் அப்படியே ஒரு அந்தர் அடித்தார். இவ்வந்தரை ஜெயகர் கெல்கர் கூட்டத்தார் மதிக்காமல் அவரவர் கையாலானதை அவரவர் பார்த்துக் கொள்வதென்பதன் முடிவின் பேரில் ராஜி முறிந்தது என்கிற பெயரோடு கலைந்து விட்டார்கள். இந்த ராஜி முறிவுக்குப் பண்டித நேரு ஒரு சமாதானம் சொல்லுகிறார். அது எதுபோலென்றால், தேங்காய் திருடுவதற்காக ஒரு திருடன் தென்னை மரத்தின்மேல் ஏறினான்; மரக்காரன் கண்டு கொண்டவுடன் திருடன் தானாகவே கீழே இறங்கி வந்தான். மரக்காரன் திருடனைப் பார்த்து ஏன் மரத்தின் மேல் ஏறினாய் என்று கேட்டான். திருடன் கன்று குட்டிக்குப் புல்லுப் பிடுங்கப் போனேன் என்று சொன்னான். மரக்காரன் தென்னை மரத்தின் மீது புல் ஏதுவென்று கேட்டான். திருடன் அதனால்தான் கீழே இறங்கி வந்து விட்டேன் என்று சொன்னான். அதைப்போல் பண்டித நேரு என்கிற பிராமணர் சமாதானமும், தமிழ்நாட்டு ஐயங்கார் என்கிற பிராமணர் சமாதானமுமிருக்கிறது. பண்டித நேரு யோக்கியமான நிலைமையில் இந்த சமாதானம் செய்து கொண்டிருப்பாரேயானால் தனது சமாதானத்தை தன்னைப் பின்பற்றுவோர் ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று சொன்னவுடனே தலைமைப் பதவியிலிருந்து விலகியிருப்பார். இதுதான் சுயமரியாதைக்கு லக்ஷணம். அதை விடுத்து 'நான் அப்படி நினைத்தேன்; இப்படி நினைத்தேன்; கன்றுக்குட்டிக்குப் புல்லுப் பிடுங்கப் போனேன்; இல்லாததால் திரும்பி வந்துவிட்டேன்' என்று சொல்லுவது சுயராஜ்யக் கட்சியின் யோக்கியதையைப் பற்றியும் அது பிராமணருடைய கட்சியென்பதாகவும், அது யோக்கியமான கட்சி அல்ல வென்றும் நாம் இதுவரையிலும் எழுதியும் பேசியும் வந்ததை வெட்ட வெளிச்சமாய் மெய்ப்பிடித்துக் காட்டி விட்டது என்றே திருப்தி அடைகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 09.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# ஒத்தக்காசுச் செட்டியார்

## பிராமணத் தந்திரத்தின் தோல்வி

பனகால் ராஜா மந்திரியாயிருந்து மாதம் ரூ. 4333 - 5 - 4 சம்பளம் வாங்குவதில் பொறாமை கொண்ட சில பிராமணர் பனகால் ராஜா கட்சியிலிருந்தே ஆசாபங்கமடைந்த ஸ்ரீமான். ஓ. கந்தசாமி செட்டியார் என்கிற ஒருவரைப் பிடித்து பனகால் ராஜாவின் மீது ஏவிவிட்டு, திரை மறைவிலிருந்து சூஸ்திரக் கயிராட்டி வந்தார்கள். அளவுக்கு மிஞ்சி கயிற்றை ஆட்டினதன் பலனாய்க் கயிறு அறுந்துபோய் ஸ்ரீமான் செட்டியாரின் தலை உடைந்து நிரந்தரமான வடு இருக்கும் படியாய் ஒரு பெரிய தளும்பு ஏற்பட்டுவிட்டது.

### விஷயமென்ன?

பனகால் ராஜாவை ஸ்ரீமான் செட்டியார் ஒரு கூட்டத்தில் இகழ்ச்சியாய்ப் பேசினார்; மற்றொரு கூட்டத்தில் ஸ்ரீமான் செட்டியாரை பனகால் ராஜா இகழ்ச்சியாய்ப் பேசினார் . இது அரசியல் உலகில் சாதாரணமாய் நடக்கிற விஷயங்கள்தான். அநாவசியமாய் இந்த சம்பவத்தில் பிராமணர்கள் புகுந்து செட்டியாருக்கு ஏதோ பெரிய மானநஷ்டம் வந்துவிட்டதாகவும், அதற்காக சில பிராமணர்கள் பரிதாபப்பட்டு ஸ்ரீமான் செட்டியாருக்கு ஏதோ பெரிய பரிகாரம் தேடிக் கொடுத்து விடுவதாகவும் பாசாங்கு செய்து, நீதி ஸ்தலத்திற்கு இழுத்துவிட்டு செட்டியாருக்கு என்றென்றைக்கும் நிரந்தரமாய் மானநஷ்டம் வராமல் செய்துவிட்டார்கள். (அதாவது கொஞ்சமாவது மானமிருக்கும் படியாகச் செய்திருந்தால்தானே இனி மானநஷ்டம் வரும்.)

### தீர்ப்பின் தத்துவம்

பனகால் ராஜா செட்டியாரை (கூலிக்கு மாரடிப்பது) என்று சொன்னது நிஜம். செட்டியார் பேசினதற்கு பனகால் ராஜா பதில்பேச வேண்டியதுதான். ஜஸ்டிஸ் கட்சியாரிடமிருந்து செட்டியார் ரூ. 5,000 வாங்கினதும் நிஜம். செட்டியார் அதை வாங்கவில்லை என்று சொல்லுவது பொய்யும் யோக்கியப் பொறுப்பற்றதுமாகும். செட்டியாருக்கும் அவரது புதல்விக்கும் ஜஸ்டிஸ் கக்ஷியார் உத்தியோகம் கொடுக்காததினால் கோபம் வந்துவிட்டதாய்த் தெரிகிறது. ஸ்ரீமான் செட்டியாருடைய மானநஷ்டம் தேசத்திலே நடமாட்டமுள்ள சின்ன நாணயமான ஒரு பைசாவுக்குத்தான் சமானமான



தாகும். இந்த மாதிரி பனகால் ராஜா பேசுவதற்கு ஸ்ரீமான் செட்டியாரே இடங்கொடுத்தவரானதினாலே செலவு தொகைக் கொடுக்கப்பட மாட்டாது, என்கிற தத்துவங் கொண்ட தீர்ப்பை அளித்து விட்டார். இதனால் என்ன விளைந்தது? பனகால் ராஜாவுக்குக் கொஞ்சம் பணம் செலவாயிற்று. ஸ்ரீமான் செட்டியாருக்கு என்றென்றைக்கும் மான நஷ்டம் ஏற்படாமலாயிற்று. பிராமணர்களுக்கு வேடிக்கை பார்த்தது மிச்சம்.

ஒருவரிடம் பணம் வாங்கிக்கொண்டு மற்றொருவரை திட்டினாலென்ன, ஒருவர் பணங்கொடுக்காததற்காக அவரைத் திட்டினாலென்ன? ஆகவே எப்படியும் பணத்திற்காக திட்டினதாய் நீதிபதியின் தீர்ப்பிலிருந்து தொனிக்கிறது. இந்த வழக்கை விசாரித்த ஜட்ஜ் வெள்ளைக்காரராயில்லாமல் கருப்புக்காரராயிருந்தால் என்னவாகியிருக்குமென்பதை வாசகர்களையே அறிந்து கொள்ள விட்டு விடுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# சுயராஜ்யக் கட்சியார்

## கார்ப்பொரேஷனில் செய்த வேலை

சுயராஜ்யக் கட்சியார் என்கிற பிராமணர்கள் சென்னைக் கார்ப்பொரேஷனைக் கைப்பற்ற ஆட்களை நிறுத்தி ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரை சுவாதீனம் செய்து கொண்டு மூலைமுடுக்கெல்லாம் ஜஸ்டீஸ் கட்சியாரை வைது பிரசங்கம் செய்த காலத்தில் தாங்கள் மிகுதியும் யோக்கியர்கள் என்றும், ஜஸ்டீஸ் கட்சியார் தேசத் துரோகிகள் என்றும், கார்ப்பொரேஷனுக்குத் தாங்கள் மெம்பர்களானால் ஜனங்களுக்கு அதிக அனுகூலம் செய்வோம் என்றும், வரிகளைக் குறைப்போம் என்றும் பொய் மூட்டைகளை அளந்தார்கள். இப்பொய் மூட்டைகளை ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரும் தலையில் தூக்கிக்கொண்டு போய் ஓட்டர்கள் வீட்டில் கொட்டினார். இப்பொய்யர்கள் வெற்றியடைந்து கார்ப்பொரேஷன் மெம்பர்களான பிறகு அவர்கள் யோக்கியதை என்ன என்பதை சென்னை வியாபாரிகள் சங்கத்தாரால் செய்த தீர்மானங்களிலிருந்தே பொது ஜனங்கள் அறிந்து கொள்ளலாம். அதாவது:-

“வியாபார சுணக்கத்தால் வியாபாரம் நடப்பதே கஷ்டமாயிருக்கும் போது வியாபாரிகளின் தொழில் வரியைக் கார்ப்பொரேஷன் கவுன்சிலர்கள் 100-க்கு 25 வீதம் அதிகமாக உயர்த்தியதை இச் சங்கம் பலமாகக் கண்டிக்கிறது என்றும், வரி உயர்வு தீர்மானத்தை இந்த டிவிஷன் கவுன்சிலரே ஆமோதித்ததையும் பிரசிடெண்டு இதற்கு அனுகூலமாய் ஓட்டுக் கொடுத்ததையும் இம்மகாநாடு இன்னும் பலமாய்க் கண்டிக்கிறது.......இந்த டிவிஷனின் சுகாதார நிலைமை மிகக் கேவலமாயிருப்பதற்காகவும், இதை கார்ப்பொரேஷன் கவுன்சிலர்கள் கவனிக்காமலிருப்பதற்காகவும் இச்சங்கம் வருந்துகிறது”/ என்று தீர்மானித்திருக்கிறார்கள். சுயராஜ்யக் கட்சியார் எலெக்ஷன் போது ஓட்டர்களிடம் கொடுக்கும் வாக்குத் தத்தத்திற்கும் அதன் பிறகு அவர்கள் நடந்து கொள்ளும் யோக்கியதைக்கும் அவர்களுக்கு ஓட்டு வாங் கிக் கொடுக்கும் ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியாரின் யோக்கியதைக்கும் இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும். கார்ப்பொரேஷனில் வரி, சுகாதாரம் என்னும் இரண்டு முக்கிய காரியம் உண்டு. இந்த இரண்டு முக்கிய காரியத்திலும் இவர்கள் யோக்கியதையைப் பார்த்த ஓட்டர்கள் இனியாவது சுய புத்தியுடன் நடப்பார்களா?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.05.1926**



# எங்கும் இராமசாமி நாயக்கர்

## பம்பாயில் பிராமணரல்லாதார் மகாநாடு

சென்னை மாகாணப் பிராமணர்கள் சென்னையில் மாத்திரம்தான் பிராமணர் - பிராமணரல்லாதார் வித்தியாசமும் ‘வகுப்புத் துவேஷமும்’ ஏற்பட்டிருப்பதாகவும், அதை ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் வளர்த்து வருவதாகவும், அவர் பேச்சை எவரும் கேட்கக் கூடாது என்றும், அவர் சொல்லுவதை எவரும் நம்பக்கூடாது என்றும், அவர் பேரில் பல குற்றங்களைக் கற்பித்து பிராமணர்களும், பிராமணப் பத்திரிகைகளும், அவர்களைத் தலைவராகக் கொண்ட ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் போன்றவர்களும், அவர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு எழுதும் - பேசும் சிப்பந்திகோடிகளும் அவர்கள் தயவால் பதவிபெற நினைக்கும் சில சுயகாரியப் புலிகளும் சதா காலமும் கையொடிய, தொண்டை கிழிய எழுதியும்,பேசியும் வருகிறார்கள்.

இப்பொழுது மத்திய மாகாணத்திலும் (மஹாராஷ்ட்டிர மாகாணத்தில்) பம்பாய் மாகாணத்திலும் பிராமணரல்லாதார் மகாநாடுகள் என்றும் “வகுப்புத் துவேஷங்கள்” வளர்ந்து வருகிறது. பஞ்சாபிலும் கல்கத்தாவிலும் இந்து முஸ்லீம் சச்சரவுகள் இல்லாவிட்டால் அங்கும் பிராமணர்- பிராமணரல்லாதார் “வகுப்புத் துவேஷங்கள்” வளரும். ஆதலால் இராமசாமி நாயக்கர் சென்னையில் மாத்திரம் இல்லை; இந்தியாவெங்கும் இராமசாமி நாயக்கர் மயமாய்த்தான் இருக்கிறது. சென்னையில் 4 பேர் கூலிக்கு மாரடிப்பதால் இராமசாமியை ஒழித்துவிட முடியாது.

சின்னாட்களுக்கு முன் இவர்கள் சென்னையில் சில காலிகளை ஏவிவிட்டு ஸ்ரீமான் சர். தியாகராயச் செட்டியாரை அடிக்க முயற்சித்து அவர் வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் முதலியவற்றையும் உடைத்தார்கள். அதிலும் இந்த இயக்கம் அழிந்துவிடவில்லை. அதற்குப் பிறகு ஸ்ரீமான் சுரேந்திரநாத் ஆரியா அவர்களையும் அடிக்கும்படி செய்தார்கள். அதனாலும், இவர்களுக்குப் பயந்துகொண்டு இயக்கம் போய்விடவில்லை. சமீபத்தில் பேரார் மாகாணத்தைச் சேர்ந்த அமராவதியில், 2- வது அகில இந்திய பிராமணரல்லாதார் காங்கிரஸின் காரியதரிசியாயும், பிராமணரல்லாதாரின் பேருழைப்பாளராகவுமிருக்கும் ஸ்ரீமான் அமிர்த்காரை சில காலிகளைக் கொண்டு பலமாய்



RangaRakes

tamilnavarasam.com

அடித்து விட்டார்கள். இதனாலும் பிராமணரல்லாதார் இயக்கம் ஒழிந்து விட வில்லை. இவர்கள் கெட்ட எண்ணங்கொண்டு தூற்றத் தூற்ற, அடிக்க அடிக்க பந்து கிளம்புவதைப்போல் இயக்கம் இந்தியாவெங்கும் கிளம்பி பரவிக் கொண்டுதான் வருகிறது.

**குடி அரசு - அறிக்கை - 09.05.1926**



## கோயமுத்தூரில் பஞ்ச நிவாரண வேலையும் ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமணய்யங்காரும்

கோயமுத்தூரில் பஞ்ச நிவாரண வேலைக்காக ரூ. 2102-8-0 செலவாகி யிருக்கிறது. கிராமத்து ஜனங்கள் இந்தப் பணம் ஸ்ரீமான் வெங்கிட்ட ரமணய் யங்கார் தான் கையிலிருந்து செலவு செய்ததாக நினைக்கும்படி பல தந்திரங் கள் செய்ததோடு சில காங்கிரஸ் தொண்டர்கள் என்போரும் ஸ்ரீமான் ஐயங் கார் பின் சென்று ஓட்டு வாங்க, பஞ்சப்படி போட்ட ஐயங்கார் என்று அவருக் குப் பெயர் வாங்கிக் கொடுத்து கிராமத்து ஜனங்களை ஏமாற்றியிருக்கிறார் கள். இதன் இரகசியம் என்ன வென்றால் பஞ்ச நிவாரண வேலைக்காக பொது ஜனங்களிடமிருந்து வசூலாகி வந்த பணத்தை ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய் யங்கார் தூக்கி ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்காரிடம் கொடுத்து, செலவு செய்யும்படி சொல்லியிருக்கிறார். அந்தப் பணத்தை வாங்கி, தான் செலவு செய்ததாக அவர் நடித்திருக்கிறார். இந்த நடிப்புக்கு காங்கிரஸ் தொண்டர்கள் திரைப்பிடித்து இருக்கிறார்கள். இவ்வளவுதான் இரகசியம். இதை 3-5-26 உ "சுதேசமித்திரன்" பத்திரிகையிலேயே பார்க்கலாம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 09.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# இந்து மகாசபை

இந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையாகி விட்டால் நமது சர்க்காருக்கு எவ்வளவு சங்கடமோ, அதைவிட அதிக சங்கடம் நமது பிராமணர்களுக்கு ஏற்பட்டுவிடும். ஏனெனில் சிறு வகுப்பாயுள்ளவர்கள் வாழ வேண்டுமானால் பெருவகுப்பாய் உள்ளவர்களை ஒருவருக்கொருவர் உதைத்துக் கொள்ளும்படி செய்து பிரித்து வைத்தால்தான் முடியும் என்பது ஒரு பழமொழி. அப்பழமொழிக்கிணங்கவே சர்க்காராரும் பிரித்தாள பல தந்திரங்கள் செய்து அதில் வெற்றிபெற்று வருகிறார்கள். அதுபோலவே நமது பிராமணர்களும் பிராமணரல்லாதாரை அடக்கியாள அவர்களுக்குள் பிரிவினையுண்டாக்கி ஒருவருக்கொருவர் துவேஷமும் பொறாமையும் நிரந்தரமாய்க் கொள்ளும்படி பல தந்திரங்கள் ஆதியிலிருந்தே செய்து வந்திருக்கிறார்கள். அவைகளின் குறிப்புதான் இன்றைய தினம் இந்தியாவைக் காட்டிக் கொடுக்கும் வர்ணாசிரமமும் பஞ்சமர் என்னும் ஜாதியும்.

இதை மகாத்மா எப்படியாவது ஒழித்து விடுதலை சம்பாதிக்கலாம் என்று எண்ணியவுடன், நமது பிராமணர்கள் புது தந்திரம் ஒன்று செய்திருக்கிறார்கள். அதுதான் “இந்து மகாசபை”. அது இந்துக்களை மாத்திரம் நிரந்தரமாய்ப் பிரித்து வைப்பதோடல்லாமல் இந்து முஸ்லீம் ஒற்றுமையும் நிரந்தரமாய் ஏற்படாமலிருப்பதற்கு செய்த சூழ்ச்சியாகும். தற்காலம் தேசமெங்கும் ஏற்பட்டிருக்கும் இந்து முஸ்லீம் கலவரத்திற்கு இந்து மகாசபையே காரணம் என்பது நாம் சொல்லாமலே விளங்கும். தற்கால பிராமணீயம் உள்ளவரை தேசம் உருப்படப் போவதில்லை என்பது நிதர்சனமாகி வருகிறது.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.05.1926**



# தட்டிப் பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்

## தொழிலாளர் மத்தியில் ஓட்டுப் பிரசாரம்

**- சித்திரபுத்திரன்**

சென்னை எம்.எஸ்.எம். ரயில்வே தொழிலாளர் கூட்டத்தில் ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் அருமையான மாயப்பிரசங்கம் ஒன்று செய்தார். அப்பொழுது அவர் சொல்லியுள்ளவைகளில் முக்கியமானது இரண்டு விஷயம். அதாவது, “உங்களுக்கு அரசாங்க சட்டசபைகளில் பிரதிநிதித்துவம் கிடையாது. அது கிடைக்கிற வரையில் எங்களை அங்கீகரிக்க வேண்டும்” என்று பேசியிருக்கிறார். ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் ஒரு பிராமணர், அதோடு அளவுக்கு மிஞ்சிய வருணாசிரம தர்மி. ஒரு பிராமணக் குழந்தை சாப்பிடுவதை ஒரு பிராமணரல்லாத குழந்தை ஒருவேளை பார்த்து விட்டால் ஒரு மாதத்திற்கு உண்ணாவிரதமிருப்பேன் என்று சொன்னவர்.

அல்லாமலும், பிராமணன் அயோக்கியனாயிருந்தாலும், ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் கூலிக்காரனாயிருந்தாலும், குஷ்டரோகியாயிருந்தாலும் அவன் பிறவியிலேயே உயர்ந்தவன். மற்றவன் சூத்திரன் ஒரு யோக்கியனானாலும் சுயமரியாதை உள்ளவனானாலும் அவன் தாசி மகன்; அடிமை; அவன் பிறவியிலேயே பிராமணனுக்கு வேலை செய்யப் பிறந்தவன் என்று சொல்லும் வருணாசிரம சபைக்குத் தலைவர் .

இவர் 100- க்கு 99 பேர் பிராமணரல்லாதாராயுள்ள தொழிலாளர்களுக்கு எப்படித் தலைவராவார்; உபதேசம் செய்ய யோக்கியதை உடையவராவார் என்பது நமக்கு விளங்கவில்லை. அல்லாமலும் இவரை எப்படி பேசச் சொல்லி “7,000” தொழிலாளர்களும் உட்கார்ந்து கேட்டார்களோ தெரியவில்லை. ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் செல்வச் செருக்கும் செல்வாக்குப் பெருக்கும் தேசத்தில் எவ்வளவு வேலை செய்கிறது. ஸ்ரீமான் அய்யங்கார் பணமே 7000 பேரை உட்கார்ந்து கேட்கும்படி செய்கிறது. ஸ்ரீமான் அய்யங்கார் பணமே ஒருவரை உபதேசம் செய்யச் செய்கிறது.

தொழிலாளர்களுக்கு சட்டசபையில் பிரதிநிதித்துவம் இல்லையென்று மாயக் கண்ணீர் விடும் ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் சுயராஜ்யக் கட்சியின்



RangaRakes tamilnavarasam.com

சார்பாய் ஏன் ஒரு தொழிலாளியை சட்டசபைக்கு அனுப்பக் கூடாது? "சுய ராஜ்யக் கட்சிக்கு தேசத்தில் செல்வாக்கு இருக்கிறது; கட்டுப்பாடு இருக்கிறது; ஒத்துழையாமை நாற்றமடிக்கிறது. அது வொன்றே தற்கால அரசியல் கட்சிகளில் முதன்மையானது" என்று தொண்டை கிழியக் கத்தி ஓட்டு வாங்கித் தருகிறவரும் இதற்கு முன் பல தேர்தல்களில் சுயராஜ்யக் கட்சி யாருக்குத் தொழிலாளர்களின் ஓட்டுகளை வாங்கிக் கொடுத்தவருமான ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் போன்றவர்களும் இருக்கிறார்கள். இந்தியா சட்டசபைக்கு சென்னை மாகாணத்தின் சார்பாய் 10 ஸ்தானங்களுக்கு மேலாக இருக்கிறது. அவைகளுக்கு பிராமணரல்லாதார்களில் ஆள்கள் கிடைக்கவில்லை என்று வெறும் அய்யங்கார்களாக நிற்கிறார்களே; ஏன் ஒரு தொழிலாளிக்கு விட்டுக் கொடுத்து ஒரு அய்யங்கார் விலகிக் கொள்ளக் கூடாது? தொழிலாளர்களுக்கு 'கடவுள்' போல இருக்கும் ஸ்ரீமான் சீனிவாசய் யங்காரே தான் நிற்கும் ஸ்தானத்தை தொழிலாளர்களுக்குக் கொடுக்கட்டுமே. இல்லாவிட்டாலும் "தொழிலாளர்களே உஷார், உஷார் ! ஏமாறாதீர்கள்! ஜஸ்டிஸ் கட்சியாருடன் சேராதீர்கள்! முதலாளிகளுக்குக் காட்டிக் கொடுத்து விடுவார்கள்! பழய சங்கத்தை ஆதரியுங்கள் ! வஞ்சகர் வார்த்தையைக் கேளாதீர்கள்!" என்று சதா சர்வகாலமும் அசரீரி பொழிகின்ற 'சுதேசமித் திரன்' பத்திராதிபரும் தொழிலாளர்களுக்கு "கிருஷ்ண பகவான்" போன்றவ ருமான ஸ்ரீமான் ஏ. ரெங்கசாமி அய்யங்கார் தஞ்சை திருச்சி ஜில்லாவில் தான் நிற்கப் போவதிலிருந்து விலகிக் கொண்டு ஏன் தொழிலாளருக்காக தனது ஸ்தானத்தை விட்டுக் கொடுக்கக் கூடாது? இவர்களில் ஒருவரும் ஒப்ப வில்லையானால் உபதேசியரான ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியாரே தான் விலகிக்கொண்டு தனது ஸ்தானத்தை ஏன் தொழிலாளருக்கு விட்டுக் கொடுக்கக் கூடாது? ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு சொத்திருக்கிறது, மாதம் 10,000 ரூபாய் வரும்படி வருகிறது. ஏ. ரெங்கசாமி ஐயங்காருக்கு மாதம் 1000 ரூபாய் சம்பளம் வருகிறது; அவர் மகனுக்கு சர்க்கார் உத்தியோகத்தில் மாதம் 500 ரூ. சம்பளம் வருகிறது; அவர் தம்பிக்கு சர்க்கார் உத்தியோகத்தில் மாதம் 1500 ரூபாய் சம்பளம் வருகிறது. எம்.கே. ஆச்சாரியாருக்கு சொத்து இல்லா விட்டாலும் இந்த மூன்று வருஷம் வாங்கின இந்தியா சட்டசபைப் பிரயாணப் படிச் செலவு இன்னும் 5,6 வருஷத்திற்குப்போதுமானதாய் இருக்கிறது. இப்படி இருக்க, இவர்களுக்கு ஏன் இத்தனை ஆசை. ஏழைத் தொழிலாளர் தினம் 8 அணா, 10 அணா, 1 ரூபாய் சம்பாதிக்கும் கஷ்ட ஜீவனக்காரர்கள்; அதிலும் பிராமணரல்லாதார்கள் ஏன் ஒருவர் இந்தியா சட்டசபைக்குப் போய் பதவியும் பணமும் தங்கள் கஞ்சிக்கில்லாத பிள்ளை குட்டிகளுக்கு உத்தியோகமும் சம்பாதித்துக் கொள்ளக்கூடாது? இந்த அய்யங்கார்களுக்கே இந்தியா சட்ட சபை கோயில் மானியமா? இவற்றை மறந்துவிட்டு தொழிலாளர் கூட்டத்தில் "உங்களுக்குப் பிரதிநிதித்துவம் சர்க்காரார் வாங்கிக் கொடுக்கவில்லை, ஜஸ்டிஸ்காரார் உதவி செய்யவில்லை, ஆதலால் எங்களுக்கு ஓட்டுக் கொடுங் கள்" என்றால் என்ன அருத்தம்? இப்பொழுது இருக்கும் தொகுதியில்



தொழிலாளர் சட்டசபைக்குப் போனால் கதவு மூடிக்கொள்ளுமா? சட்டசபை மண்டபம் இடிந்து இவர்கள் தலையில் விழுந்து விடுமா? எவ்வளவு நெஞ்சு தைரியமாய்த் தொழிலாளர் மத்தியில் ஓட்டுப் பிரசாரம் செய்ய இந்த அய்யங்கார்களுக்கு தைரியம் வந்து விட்டது. "தட்டிப்பேச ஆளில்லா விட் டால், தம்பி சண்டப் பிரசண்டன்" என்பது போல் ஏழைத் தொழிலாளர் கள் அப்பாவிகள்; அவர்களும் கொஞ்சம் வாய் படைத்தவர் புத்தியை அய்யங் கார் பணம் என்னும் கிரகணம் தீண்டிவிட்டது; இவர்கள் அடித்த மூப்புத் தான் என்று நினைத்துக் கொண்டார்கள் போலும். இந்த லக்ஷணத்தில் ஸ்ரீமதி அலமேலு மங்கைத் தாயாரம்மாள் ஏதோ ஒரு தொழிலாளர் கூட்டத்தில் ராஜீயவாதிகளைத் "திருட்டுப் பசங்கள்" என்று நினைத்து ராஜீயவாதிகளுடன் சம்மந்தப்படாதீர்கள் என்று சொன்னதற்கு "சுதேசமித்திர" னாகிய ஐயங்கார் பிள்ளைக்கு மூக்கு மேல் கோபம் வந்து விட்டதே ஒழிய தங்கள் பித்த லாட்டங்களுக்குக் கொஞ்சமும் வெட்கப்படவேயில்லை. இருந்தால்தானே வரும். ஸ்ரீமதி தாயாரம்மாள் மாத்திரம் இப்படிச் சொல்லவில்லை. அநேக பெரியோர்களும் அனுபவசாலிகளும் உண்மைத் தேசபக்தர்களும் கதறிக் கொண்டுதான் வருகிறார்கள். அய்யங்கார் பணம் இதைக் கவனிக்கச் செய்வ தில்லை. நமது தொழிலாளர்களுக்கு இந்த பிராமண அரசியல்வாதிகளின் சூழ்ச்சிகளை அறிய யோக்கியதை வரும் வரை நமது தொழிலாளர்களுக்கு விடுதலையில்லை என்று காய்ந்த எண்ணெய்க் குடத்தில் கூட கையை விடுவோம்.

**குடி அரசு – கட்டுரை – 16.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# சென்னை ஓட்டர்களுக்கு இனியாவது புத்தி வருமா?

சென்னைக் கார்ப்பரேஷனில் சுயராஜ்யக் கட்சியாரின் தலைக் கொழுப்பு ஒரு நிலையில் நிற்காமல் தலை கிருகிருவென்று சுற்றுவதாகவே தெரிகிறது. ஏமாந்துபோன சென்னை ஓட்டர்களுக்கு இனியாவது புத்தி வருமோ வராதோ நமக்குத் தெரியவில்லை. அதன் பிரசிடெண்டு ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியார் கார்ப்பரேஷனை தனது முன்னோர்கள் வீட்டுச் சொத்து போல் நினைத்து தனக்கே உரிமையாக்கிக் கொண்டதாகத் தெரிகிறது. இவர்கள் கையில் ராஜீய பாரத்தையும் மந்திரி பதவிகளையும் ஒப்புவித்து விட்டால் நாடு துலங்கிப் போகும் போலவே இருக்கிறது. அதாவது 3-5-26-ல் ஒரு மீட்டிங்கு போட்டார். அய்யங்கார் சிஷ்யர் ஒருவர் அன்று வரமுடியாததால் உடனே மாற்றி விட்டார் . அடிக்கடி இம்மாதிரி மீட்டிங் போடுவதும், தங்கள் கட்சி ஆள்களில் ஒரு பூனைக் குட்டிக்கு வர அசவுகரியம் ஏற்பட்டாலும் அதற்காக மீட்டிங் கை தனது இஷ்டப்படி ஒத்தி வைத்து விடுவதுமே வேலையாயிருக்கிறார்.

இதுபோல் இதற்குமுன் பலதடவைகளில் நடந்திருக்கிறது. தங்கள் கட்சியில் ஒரு ஆள் வரமுடியாவிட்டால் தங்கள் கட்சி தோற்றுப் போகக் கூடிய நிலையில் இருக்கிற சுயராஜ்யக் கட்சிக்கு எவ்வளவு பலமிருக்கிறது என்பது பொதுஜனங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. சென்னைக் கார்ப்பரேஷனில் சுயராஜ்யக் கட்சி கவுன்சிலர்களைப் போல் கார்ப்பொரேஷன் கவுன்சிலர் வேலையும் அய்யங்காருக்கு சிஷ்யத்துவமும் மாத்திரமல்லாத வேறு பல வேலை உள்ள கனவான்கள் பலபேர் இருக்கிறார்கள் என்பதை கார்ப்பொரேஷன் சுயராஜ்யக் கட்சித் தலைவர் உணராமல் தன் இஷ்டம் போல் மீட்டிங் போடுவதும் ஒத்தி வைப்பதுமான எதேச்சாதிகாரமான வேலைகளைச் செய்வது தனது அதிகாரத்தை அக்கிரம வழியில் உபயோகப்படுத்துகிறார் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவது. ஜஸ்டிஸ் கட்சியாரை நினைத்ததற்கெல்லாம் "அதிகார துஷ்பிரயோகம்", "அதிகார துஷ்பிரயோகம்" என்று ஓயாமல் தம்பட்டமடிக்குமிவர்கள் இம்மாதிரி கார்ப்பரேஷன் தலைவர் செய்கைக்கு என்ன பெயர் கொடுப்பார்கள். "கண்ணியமற்ற சூழ்க்ஷி" எனப் பெயர் கொடுப்பார்கள். எந்தப் பெயரைக் கொடுத்தாலும் நமக்குக் கவலையில்லை. இனிமேலாவது சென்னை ஓட்டர்களுக்குப் புத்தி வருமா? **குடி அரசு - கட்டுரை - 16.05.1926**



# கல்பாத்தியும் தெருவில் நடக்காமையும்

மலையாளம் ஜில்லாவைச் சேர்ந்த பாலக்காடு முனிசிபல் எல்லைக்குள் கல்பாத்தி என்கிற பாகம் பிராமணர்கள் முக்கியமாய் வசிக்கும் பாகம். அது பல தெருக்களை உடையது. அத்தெருக்கள் எல்லாம் முனிசிபாலிட்டியாரைச் சேர்ந்தது. அதைப் பழுது பார்த்தல், பராமரித்தல் எல்லாம் முனிசிபல் செலவிலேயே நடந்து வருகிறது. அப்படி இருந்தும் அங்கிருக்கும் பிராமணர்கள் அத்தெருவின் வழியாய் "பஞ்சமர்கள்" என்று சொல்லுவோர்களையும் "தீயர்" என்று சொல்லுவோர்களையும் நடப்பதற்கு விடுவதில்லை. அத்தெருக்களின் முகப்புகளில் உள்ள பல வியாபாரக் கடைகளிலும் பிராமணர்கள் வந்து சாமான்கள் வாங்கினால் அதைத் தங்கள் வீட்டுக்குத் தூக்கிச் செல்ல மகமதியக் கூலிகளையாவது, கிறிஸ்தவக் கூலிகளையாவது அமர்த்தி எடுத்துக் கொண்டு போவதே தவிர ஷை இந்து கூலிகளை எடுக்க விடுவதில்லை. இதற்காகவே அக்கடைகளுக்குப் பக்கத்தில் மகமதிய கிறிஸ்துவக் கூலிகள் அதிகமாய் நின்று கொண்டிருப்பார்கள்.

அல்லாமலும் அந்த வீதிகளில் உத்தியோகஸ்தர்களும் குடி இருக்கிறார்கள். அவர்கள் வீட்டுக்கும் ஆபீஸ் சம்மந்தமான காகிதம் போக்குவரத்து முதலியவைகளுக்கும் மகமதிய, கிறிஸ்தவ , பிராமண, நாயர் ஆகிய ஜாதியிலேயே குமாஸ்தா, பியூன் முதலியவைகளை நியமித்துக் கொள்வதே அல்லாமல் தீயர், ஈழவர் என்கிற வகுப்பார்களை நியமிப்பதில்லை. தவிரவும் சென்னையிலிருந்து கள்ளிக்கோட்டைக்குப் போய்க் கொண்டிருக்கும் நேர் ரஸ்தாவில்தான் பாலக்காடு டவுன் பெரிய கடைவீதி இருக்கிறது. அக்கடை வீதிதான் பெரிய மண்டிக்கடை, மளிகைக்கடை, ஜவுளிக்கடை, பாத்திரக்கடை, பலகாரக்கடை, வெத்திலை பாக்குக்கடை, புகையிலை மண்டி முதலிய வியாபாரங்கள் நடக்கும் வியாபார ஸ்தலமாய் இருக்கிறது. இதுவும் முனிசிபல் பொது ரஸ்தாவாகும். இதிலும் சேரி மக்கள் முதலிய சில தாழ்ந்த ஜாதியார் என்போர்கள் நடக்கக் கூடாது. இந்தக் கடை வீதிகளிலும் ஷை தாழ்ந்த ஜாதியார் கூலிவேலை செய்யவுங் கூடாது. தங்களுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கவும் கூடாது. வேறு யாரிடமாவது, ஒரு மகமதியர் மூலமாகவோ, கிறிஸ்தவர் மூலமாகவோ "உயர்ந்த ஜாதி" இந்து மூலமாகவோதான் காசு கொடுத்து வாங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் இந்தக் கடைவீதியில்தான் சர்க்கார் போலீஸ் ஸ்டேசன் இருக்கிறது.

திருட்டு, கொலை, கொள்ளை, போர்ஜரி, விபசாரம் முதலிய வழக்கு



RangaRakes tamilnavarasam.com

களில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகவோ, தண்டித்த கைதியாகவோ இருந்தால் அந்த வீதி வழியாக போலீசு ஸ்டேஷனுக்கு போலீசுகாரர்கள் கை விலங்கிட்டோ சங்கிலியில் பிணைத்துக் கட்டியோ கூட்டிக்கொண்டு போவதை அடிக்கடி பார்க்கலாம். யோக்கியமானவன்தான் அவ்வழியில் நடக்கக் கூடாது. இவ்விஷயங்களைப் பற்றி சுமார் 7,8 வருஷங்களுக்கு முன் ஒரு தடவை சில கனவான்கள் யோசித்து கல்பாத்தி வழியாக சில தாழ்ந்த வகுப்பார் என்கிறவர்களை அழைத்துச் செல்ல முயற்சித்தார்கள். அதுசமயம் கல்பாத்தி பிராமணர்கள் "பொது கடை வீதிகளில் பிராமணரல்லா தவர்கள்தான் மகமதியர், கிறிஸ்துவர்கள், ஈழவர்கள் உள்பட அநேகம்பேர் இருக்கிறார்கள்; அந்த வழியிலேயே தாழ்ந்த ஜாதியார் நடக்கக் கூடாது என்று அவர்கள் சொல்லும் போது, நாங்கள் மாத்திரம் எப்படி எங்கள் தெருவில் நடக்க விடுவோம்" என்றார்கள். அதன் பிறகு உடனே சிலர் சில தாழ்ந்த ஜாதிக்காரரை அழைத்துக் கொண்டு கடைவீதியின் வழியாய் நடக்க ஆரம் பித்தார்கள். ஆனால் அந்தக் கடைவீதியானது பெயருக்கு மாத்திரம் பல வகுப்புக்காரர்கள் அடங்கிய வியாபாரக் கூட்டக்காரரால் வியாபாரம் செய் யப்பட்ட வீதியாயிருந்ததே ஒழிய ஏறக் குறைய எல்லா முக்கிய வியாபாரி களும் கல்பாத்தி முதலிய பிராமண அக்கிரகாரங்களில் உள்ள பிராமணர் களிடத்தில் கடன் வாங்கியவர்களாகவே இருந்ததால் அந்த பிராமணர்களின் இஷ்டத்திற்கு விரோதமாய் நடக்க சக்தியற்றவர்களாகவே இருந்து அந்தப் பிராமணர்கள் தயவுக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டியவர்களானதால் இந்த வியாபாரிகள் கடைவீதியிலும் தாழ்ந்த ஜாதிக்காரர் பிரவேசத்தைத் தடுத் தார்கள். தடுத்ததோடு பிரவேசித்த தாழ்ந்த வகுப்பார்களை நன்றாய் அடித் தார்கள். அதன்மேல் பிராது ஏற்பட்டு அடித்ததற்காக சில செல்வமும் செல்வாக்கும் உள்ள வியாபாரிகள் அபராத தண்டனையும் அடைந்தார்கள். அதற்குப் பிறகு எவரும் செல்லவும் தடுக்கவும் பிரவேசிக்கவுமில்லை. சென்ற வருஷத்தில் வைக்கம் சத்தியாக்கிரகத்திற்குப் பிறகு மறுபடியும் கல்பாத்தி அக்கிரகாரத்திற்குள் ஈழவர்கள் பிரவேசிக்க முயன்றார்கள். அது சமயம் சட்டசபையிலும் எல்லா பொது ரஸ்தாவிலும் எல்லா ஜாதியாரும் போகலாம் என்று ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றினார்கள். அது அமுலுக்கு வரும் போது சட்ட மெம்பர் சர். C.P. ராமசாமி அய்யர் தயவில் "வேலையிருந்தால் தான் போகவேண்டும்" என்கிற வியாக்கியானம் செய்யப்பட்டுப் போய் அந்த தீர்மானத்தை குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. பிறகு சில ஈழவர்கள் ஆரிய சமாஜத்தில் சேர்ந்து மதம்மாறி அவ்வழியே நடந்தார்கள். அவர்கள் மீதும் பிராது கொடுக்கப்பட்டு விடுதலை ஏற்பட்டது. இப்போது மறுபடியும் விடுதலை பெற்ற அதே ஆசாமி, அதாவது ஸ்ரீமான் சங்கரன் என்னும் பத்திரப் பதிவு இலாகா குமாஸ்தா தன் எஜமானன் வீட்டுக்கு சர்க்கார் காரிய மாய்ப் போகும் போது சில பிராமணர்கள் அவரை வழிமறித்து உபத்திரவம் செய்து, அவர் நடந்த வீதியை பரிசுத்தம் செய்வதற்கென 10 ரூபாய்க்கு ஒரு பிராமிசரி எழுதி வாங்கிக் கொண்டு விட்டு விட்டார்கள். இதைப்பற்றி நியாய



ஸ்தலத்தில் பிராது நடந்து கடைசியாக இவ்வாரத்தில் தடுத்த பிராமணர் களுக்கு ஆள் ஒன்றுக்கு 30 ரூ. வீதம் அபராதமும் போடப்பட்டது. இத்தோடு இது முடியும் விஷயமாகவும் இல்லை. மறுபடியும் கடைவீதிகளில் தாழ்ந்த ஜாதியார் நடக்கக்கூடாது என்பதை சிலர் வற்புறுத்தி பிரசாரம் செய்து வரு கிறார்கள். ஆனாலும் இதுசமயம் பாலக்காடு பெரிய கடை வீதி வியாபாரிகள் சுலபத்தில் ஏமாறக்கூடியவர்கள் அல்ல. தாங்கள் சென்ற தடவை தடுத்ததே நியாயமல்ல என்பதை நன்றாய் உணர்ந்திருக்கிறார்கள்; ஆதலால் சீக்கிரத்தில் தாழ்ந்த வகுப்பாருக்கு கடைவீதி பிரவேசமாவது கிடைக்குமென்று நம்பு கிறோம்.

அல்லாமலும் ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் இராமநாதபுரம், தஞ்சை ஜில்லா சுற்றுப்பயணம் முடிந்த பிறகு இதற்காகவே மறுபடியும் பாலக்காடு போக உத்தேசித்திருக்கிறார்.

**குடி அரசு – கட்டுரை – 16.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# இந்து மகாசபையின் பலனும் கிலாபத்தும்

டில்லியில் கூடிய கிலாபத் மகாநாட்டில் மௌலானா மலிக் ஒரு தீர்மானத்தின் பேரில் பேசுகையில் "எங்காவது இந்து முஸ்லீம் கலவரம் ஏற்பட்டால் தற்காப்பிற்கான வழியை மாத்திரம் இத்தீர்மானம் கூறுவதாயிருக் கிறது. ஆனால் இந்து சகோதரருடன் ஒற்றுமை ஏற்படுத்த முடியும் என்று இன்னமும் தாம் நம்புவதால்..." என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே சபையோர்கள் கூச்சலிட்டு 'இந்துக்களை சகோதரர் என்று சொன்னது தப்பு' என்றும் அதை வாப்பீசு வாங்கிக்கொள்ள வேண்டும் என்றும் கோபாவேசத் துடன் கூறினார்களாம். கடைசியாக மௌலானா ஷவுகத்தலி பலதடவை கெஞ்சிக்கேட்டுக் கொண்டதன் பேரில் கூச்சல் அடங்கிற்றாம். இதைப்பற்றி கூச்சல் போட்டவர்கள் பேரில் நமக்கு ஒன்றும் அதிருப்தியும் ஆச்சரியமும் இல்லை; ஆனால் இதிலிருந்து மகமதிய சகோதரர்களின் மனோபாவம் எது வரை பாய்ந்திருக்கிறது என்று இப்போதாவது இந்துக்கள் தெரிந்து கொள் ளலாம். இவ்வித மனோபாவம் ஏற்படக் காரணமென்ன?

நம் தேசத்து வைதீகப் பிராமணர்களின் இந்து மகாசபை செய்த பழிக்கு இந்து சமூகத்தார் அனைவருமே மகமதியரின் இவ்விதத் துவேஷத்திற்கு ஆளாகிறார்கள்.

இதுபோலவே சுயமரியாதை உள்ள ஒரு இந்து பிராமணரல்லாதவன் மனுதர்ம சாஸ்திரத்தைப் படித்துப் பார்த்தால் பிராமணர்களை சகோதரர்கள் என்று சொல்ல மனம் வருமா? "சூத்திரன் என்பவன் பிராமணனின் வைப் பாட்டி மகன்; பிராமணனுக்கு வேலை செய்யவே பிறந்தவன்; அவன் சொத்து வைத்திருக்க உரிமையில்லை; உரிமை மீறி வைத்திருந்தாலும் பிராமணர்கள் பலாத்காரமாய் பிடுங்கிக் கொள்ளலாம்; பிராமணரல்லாத இந்துக்கள் எல்லாம் 'சூத்திர'ர்கள்; சூத்திர ஸ்திரீகள் பிராமணர்களுக்கு உரியவர்கள்; பிராமண ஸ்திரீகளை 'சூத்திரர்'கள் மனதில் நினைத்தாலே அவனது உயிர் நிலையை அறுத்துவிட வேண்டும்" என இம்மாதிரி இன்னும் பலவாறாக எழுதி வைத் திருப்பதுதான் இந்து மதத்திற்கு ஆதாரமாயிருக்கிறது. அதுபோலவே மகமதி யர்கள் விஷயத்திலும் "மகமதியர் என்றால் மிலேச்சர்கள், அவர்களைத் தொட்டால் தொட்ட விரலை வெட்டிவிட வேண்டும்" என இம்மாதிரி எழுதி வைத்துக்கொண்டு இருப்பதோடல்லாமல் அவர்களை எதிர்ப்பதற்கும்



வருணாசிரமம் நிலைப்பதற்கும் என்றே இந்து மகாசபை என்ற ஒரு சபை யையும் வைத்துக்கொண்டு அதில் மகமதியர் மசூதிகளுக்கு முன் (மகமதி யர்கள் மனம் புண்படும்படி) இந்துக்கள் மேளம் அடித்துக்கொண்டு போக வேண்டும் என்றும், இதற்கு மகமதியர்கள் ஆக்ஷேபித்தால் கவர்ன்மெண் டார் பிரவேசித்து மகமதியர்களை அடக்கி தங்களுக்கு மேளம் அடிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கவர்மெண்டைக் கெஞ்சுவதாகவும் ஒரு தீர்மானம் செய்து கொண்டு, மகமதியர்களை வலிய வம்புக்கிழுத்தால் அவர் கள் எப்படி நம்மை சகோதரர்கள் என்று கூப்பிட சம்மதிப்பார்கள். மேளம் அடிப்பது என்பது இந்துக்களது கொண்டாட்டத்தின் அறிகுறி. மகமதியர்கள் ஆக்ஷேபிப்பது என்பது அவர்கள் மதக்கட்டளையாகிய குரான் என்னும் வேதத்தின் பேரால் என்கிறார்கள். பிராமணனாய்ப் பிறக்காதவன் எல்லாம் பிராமணனின் வைப்பாட்டி மகன் என்று சொல்லுகிற ஒரு சாஸ்திரத்தின் ஆதாரத்தின் கீழ் இந்துவாயிருக்கும் அவமானத்தை விட, மகமதியருடைய மதக்கட்டளைக்காக இந்துக்கள் தங்கள் கொண்டாட்டத்தையோ சந்தோஷத் தையோ கொஞ்ச நேரம் நிறுத்தி வைப்பது என்பது இந்து சமூகத்திற்கு பெரிய அவமானம் என்பதாக நாம் கருதவில்லை. மகமதியர்களாவது நமது நாட்டை பிராமணர்கள் காட்டிக் கொடுத்ததின் பலனாய் ஜெயித்து, இந்த பிராமணர் களையே மந்திரிகளாக வைத்து அரசாக்ஷி செய்த காலத்தில், இந்த பிராமணர் கள் உதவியைக் கொண்டே தங்களை உயர்ந்த ஜாதியராகவும் நம்மைத் தாழ்ந்த ஜாதியராகவும் கருத ஏற்பட்டு, அதன் பலனாய் அவர்கள் மதக்கட்ட ளையை நம் மீதும் நிறைவேற்ற சௌகரியம் செய்து கொண்டார்கள். இந்த பிராமணர்களோ நம்மிடம் பிச்சை வாங்கித்தின்று கொண்டே அவர்கள் உண்மையாய் நம்பாததும், வேண்டுமென்றே நம்மைத் தலைமுறை தலை முறையாய் தாழ்த்திவைத்து நோகாமல் – நகத்தில் அழுக்குப்படாமல் பிழைப் பதற்காக வேண்டி வஞ்சக எண்ணத்தோடு நிரந்தர சூழ்ச்சி செய்து நம்மை அவர்கள் கண்ணில் தென்படக் கூடாது, தெருவில் நடக்கக் கூடாது, கிட்ட வரக் கூடாது, பேசக்கூடாது, தொடக்கூடாது, கோயிலுக்குள் போகக் கூடாது, "வேதத்தை" படிக்கக்கூடாது என்கிற கொடுமைகளை செய்து வைத்திருக் கிறார்கள் .

இதை மாற்ற நம்மால் முடியுமானால், கண்டிப்பாய் நமது மத சம்பந்த மான ஊர்வலத்தில் மேளம் அடிப்பதை ஒருக்காலும் மகமதியர்களால் நிறுத்த முடியவே முடியாது. அல்லாமலும் எப்படியாவது நாமும் அவர்களும் ராஜிக்கு வந்துவிடுவோம். அப்படிக்கில்லாமல் பிராமண இந்து மகாசபை, பிராமணரல்லாதார் தலையில் ஒரு காலும், மகமதியர் தலையில் ஒரு காலும் வைத்து இருவரையும் அழுத்தி நசுக்கப் பார்த்தால் இந்த பிராமணர்களை இருவரும் எப்படி உண்மையான சகோதரர்கள் என்று கூப்பிட மனம் வரும்? போலித்தனத்திற்கு 'சகோதரர்கள்' என்று 1000 தடவை வேண்டுமானாலும் ஏமாற்றுவதற்காக சொல்லலாம். ஆனால், அதனால் ஒரு பலனும் உண்டா காது. இந்த கொடுமைகளின் பலனாய் ஏற்பட்ட துவேஷங்கள் நீங்கி,



RangaRakes tamilnavarasam.com

உண்மையான சகோதரத்துவம் ஏற்படாமல், காங்கிரஸ்– சுயராஜ்யம்– உரிமை– விடுதலை என்று பேசுவதெல்லாம் பிராமணர்கள் உத்தியோகம் பெறத்தான் உதவுமேயல்லாமல் மக்கள் உண்மை சுயராஜ்யம் பெற உதவவே உதவாது.

**குடி அரசு - கட்டுரை - 16.05.1926**



# ஸ்ரீமான் சத்தியமூர்த்தி எல்லா இந்தியப் பிரசாரகராய் விட்டாராம்

ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக விளம்பர உபகமிட்டி மெம்பராய்ச் சேர்க்கப் பட்டிருப்பதாகக் காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீமான் ஏ. ரெங்கசாமி ஐயங்கார் அறிவிக்கிறார், என்று “சுதேசமித்திரனில்” குறிப்பிட்டிருக்கிறது. பொதுத் தேர்தலையொட்டி அவர் இந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்வாராம். சரி, இவரை யார் நியமித்தார்கள்? ஸ்ரீமான் ஏ.ரெங்கசாமி ஐயங்கார் நியமித்தார்; ஸ்ரீமான் சத்தியமூர்த்தி இந்தியா வெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்கிறார். யாருடைய பணம்? ஊரார் பொதுப் பணம். என்ன பிரசாரம்? பிராமணத் தேர்தல் பிரசாரம். அதாவது பொது ஜனங்கள் பணத்தில் மாகாணம் மாகாணமாய்ச் சுற்றி “தமிழ்நாட்டில் பிராமணரல்லாதார் என்கிற அப்பிராமணக் கூட்டம் ஒன்று இருக்கிறது; அவர்கள் எல்லோரும் தேசத் துரோகிகள்; அவர்களுக்கு மூளை கிடையாது; பிராமணர்கள்தான் பெரிய தேசபக்தர்கள்; மகா புத்திசாலிகள்; அதிலும் நானும் ஸ்ரீமான்கள் ஏ. ரெங்கசாமி ஐயங்காரும், எஸ்.சீனிவாசய்யங்காரும், சி.வி.வெங்கிட்டரமணய்யங்காரும், எம்.கே. ஆச்சாரியாருந்தான் மகாமகா புத்திசாலிகள், தேசபக்தர்கள்; ஒத்துழையாமையின் போது நாங்கள்தான் முன்னணியிலிருந்து மிகவும் கஷ்டப்பட்டு பெரிய பெரிய தியாகம் செய்தவர்கள்; கதர், மதுவிலக்கு,தீண்டாமை முதலியவைகளில் அதிக நம்பிக்கையுடையவர்கள்; காரியத்திலும் நடத்துகிறவர்கள். அதனால் தான் தமிழ்நாட்டு உண்மை தேச பக்தர்களான ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் போன்றவர்கள் எங்கள் ஐயரையே தமிழ்நாட்டிற்குத் தலைவர்களாகத் தெரிந்தெடுத்து எங்களையே பின்பற்றுகிறார்கள். நாங்கள்தான் தமிழ்நாட்டுக்குத் தலைமை வகிக்க யோக்கியதை உள்ளவர்கள்; எங்களைத் தவிர மற்றவர்களெல்லாம் தேசத் துரோகிகளும் வகுப்பு நலன் நாடுபவர்களுமான குறுகிய புத்தியுடையவர்கள்” என்று பிரசாரம் செய்து எல்லா இந்தியத் தலைவராவார்கள். மற்றபடி வேறு என்ன பிரசாரம் செய்யக் கூடும்?

தமிழ்நாடே! உன் தலைவிதிதான் என்ன? உன்னை இத் “தலைவர்” களுக்குக் காட்டிக் கொடுத்த “தர்மசீலர்”களுக்கு ஆயுள்தான் எவ்வளவோ?....

**குடி அரசு - கட்டுரை - 16.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# தேர்தல் அபேக்ஷகர்கள்

சுயராஜ்யக் கட்சியின் சார்பாய் சென்னை சட்டசபைக்கும் இந்தியா சட்டசபைக்கும் வரப்போகும் தேர்தல்களுக்கு ஐயங்கார் கோஷ்டியாரால் அபேக்ஷகர்களை நியமனம் செய்திருப்பதாகப் பத்திரிகைகளில் வெளி வந்திருக்கிறது. இதனை எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியாரும் ஒப்புக் கொண்டு உறுதிபடுத்தியாய் விட்டதாம். ஆனாலும் இன்னும் பல ஜில்லாக் களுக்கு அபேக்ஷகர்களைப் பூர்த்தி செய்யாமல் காலியாக விட்டுவைத்திருக் கிறார்கள். அது எதற்காக வென்றால் தாங்கள் இதுவரை நியமித்த பட்டிய லானது பிராமணரல்லாதவர்களையே அதிகமாய் நியமித்ததாகப் பொது ஜனங்களை நம்பும்படி செய்வதற்காகவும், பிராமணர்களை நியமிக்கப் போகும் ஸ்தானங்களையெல்லாம் காலியாக வைத்து பின்னால் சமயம் பார்த்து ஜில்லாவுக்கு ஒவ்வொருவராகச் சேர்த்துக்கொள்ளும் தந்திரத்திற் காகவுமே தான் என்று சொல்லுவோம்.

உதாரணமாக, தஞ்சை ஜில்லாவுக்கு ஒரு ஸ்தானம் காலி. இதற்கு ஒரு ஐயரோ, ஐயங்காரோ திரைமறைவில் இருக்கிறார் . அவர் பெயரை இப்போது சொன்னால் கலகம் ஏற்பட்டுவிடும். ஆதலால் மூடு மந்திரமாகவே வைத்தி ருந்து, சமயம் பார்த்து அந்தப் பெயரை வெளிப்படுத்தி விடுவார்கள். ஜனங் கள் ஒரு சமயம் ஒப்பமாட்டார்கள் என்று தெரிந்தால் பிராமணரல்லாதாரிலே ஒரு ஆகாவளியைப் பெயருக்கு மாத்திரம் போட்டு, ஐயரோ ஐயங்காரோ சுயேச்சையாய் நின்று சுலபத்தில் தட்டிக் கொண்டுபோய் விடும்படி செய்வார் கள். மற்ற ஜில்லாக்கள் விஷயத்திலும் இதே இரகசியக் கருத்துதான். இந்த தந்திரத்திற்கு எப்படியாவது, பணச்செலவு செய்தாவது பிராமணரல்லாத "தலைவர்களையும்" பிரசாரகர்களையும் உட்படுத்திக் கொள்ளுவார்கள். ஓட்டர்களும் இதை அறியாமல் "ஐயோ, பாவம் ஸ்ரீமான் ஐயங்காரும் முதலி யாரும் தன்னாலானவரை பிராமணரல்லாதாரையே நிறுத்தப் பார்த்தார்கள்; ஆட்கள் கிடைக்கவில்லையே, என்ன செய்வது" என்று நம்பி ஏமாற அனுகூலமாயிருக்கும் என்கிற முன்னெச்சரிக்கையுடனேயே பல ஸ்தானங் கள் காலியாக விடப்பட்டிருக்கின்றன. ஆனபோதிலும் இப்பொழுது உறுதி படுத்தப்பட்ட அபேக்ஷகர்களை வைத்துக்கொண்டு நமது பிராமணர்கள் செய்யப் போகும் வேலை என்னவென்று பார்ப்போமானால் மகாத்மா பெயரா லும், காங்கிரஸ் பெயராலும், சுயராஜ்யக் கட்சி பெயராலும், ஜெயிலுக்குப் போய் கஷ்டப்பட்ட தேசபக்தர்கள் பெயராலும் ஜஸ்டிஸ் கட்சியை திட்டுவது போல் பிராமணரல்லாதார்களைத் திட்டிக்கொண்டு தங்களுக்குள் தங்கள்



சொற்படி ஆடத் தயாராயிருக்கும் ஆள்களுக்கும் ஓட்டுப்பிரசாரம் செய்வ தைத் தவிர வேறு வேலையில்லை. இதற்காக பிராமணப் பத்திரிகைகளும் பிராமணப் பிரசாரகர்களும் ஏற்கனவே தங்கள் கைவசமிருந்த போதிலும் தற்காலம் உள்ள நிலைமையில் பிராமணரல்லாத பிரசாரகர்களும் பிராமண ரல்லாத பத்திரிகைகளும் இல்லாமல் பிராமணரல்லாதார்களை ஏமாற்ற முடியாமலிருப்பதால் அதற்காக தேர்தல் முடியும் வரை சிலரைப் பணம் கொடுத்து சுவாதீனம் செய்து கொள்ள வேண்டியதிருக்கிறது. அப்படி சுவாதீனப்படுத்திக் கொண்டாலும் சிற்சில பிராமணரல்லாதார் மூலமாகவும் அவர்களது பத்திரிகை மூலமாகவும் இவர்கள் புரட்டும் பித்தலாட்டங்களும் வெளியாகி விடுகிறபடியால், அவர்களை அடக்கவும் அவர்கள் பெயரில் ஏதாவது பழிசுமத்தி அவர்கள் வார்த்தையை பிறர் நம்பாமலிருக்கும்படி செய்யவேண்டிய அவசியமும் இப்போது பிராமணர்களுக்கு ஏற்பட்டுப் போயிருக்கிறது. இதற்காக வேண்டி கோவை கனவான் ஒருவர் சில யுக்திகள் கண்டுபிடித்து , அதாவது முதலாவதாக இப்போது ஸ்ரீமான் ஈ.வெ.இராமசாமி நாயக்கரைப் பற்றி பலவாறான தூஷணைகளைக் கொண்ட துண்டுப் பிரசுரங் களையும் தூஷணையானப் பத்திரிகைப் பிரசாரங்களையும் மற்றும் பல காரியங்களையும் ஆரம்பித்திருக்கிறார். அதென்னவென்றால்,

1. ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் ஈரோடு முனிசிபல் சேர்ம னாயிருந்த காலத்தில் சில தவறுகள் செய்திருக்கிறார்.

2. தங்களது குடும்ப சத்திர தர்மத்தை நடத்துகிற விஷயத்தில் தனது கொள்கைக்கு விரோதமாய் நடந்து வருகிறார்.

3. ஜஸ்டீஸ் கக்ஷியில் சேர்ந்து விட்டார்.

4. ஜஸ்டீஸ் கக்ஷியாரிடம் திரவியம், வாகனம் முதலிய சகாயம் பெற்றுப் பிரசாரம் செய்கிறார்.

5. சர்க்காருக்கு அடிமையாகி விட்டார்.

ஆகிய இவைகளைப் பத்திரிகைகள் மூலமாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், கூலிப் பிரசாரகர்கள் மூலம் திண்ணைப் பிரசார மாகவும் ஓட்டர்களுக்கு வினியோகம் செய்து வருகிறார். இனியும், வேறு சில சதியாலோசனைகளும் நடந்து வருகின்றன. இவற்றைப்பற்றி மறுப்புரை எழுதும்படி பல நண்பர்கள் அவசரமும் ஆத்திரமுங் கொண்டு நமக்குப் பலவிதமான கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் இவ்வாரத்தில் நமக்கு வெளியில் போக வேண்டிய வேலைகள் இருப்பதாலும் இன்னும் என்னென்ன விதமான விஷம விஷயங்கள் கிளம்பப்போகிறது என்று



RangaRakes tamilnavarasam.com

பார்த்து முடிவாக சமாதானம் எழுதலாம் என்கிற காரணத்தாலும் இவ்வாரம் அவைகளைப் பற்றி ஒன்றும் எழுதவில்லை. அடுத்த வாரமோ அல்லது அதற்கடுத்த வாரமோ ஸ்ரீமான் நாயக்கரைப் பற்றி பத்திரிகையில் கண்ட விஷயங்களையும், துண்டுப் பிரசுரங்களில் கண்ட விஷயங்களையும், வாய்ப் பிரசாரத்தில் சொன்னதாகத் தெரியவந்த விஷயங்களையும் சுருக்கமாக நமது பத்திரிகையில் எழுதி தக்க சமாதானம் கூறுவோமாதலால், சில நண்பர் களை தயவுசெய்து அவசரப்படவேண்டாமென்று கேட்டுக் கொள்ளு கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 16.05.1926**



# ஆசை வெட்கமறியாது

## சுயராஜ்ஜியக் கட்சியாரின் வெளியேற்றம்

"சுவற்றுக் கீரையை வழித்துப் போடடி சுரணைக் கெட்ட வெள் ளாட்டி" என்று ஒரு பழமொழி உண்டு. அதாவது ஒரு ஸ்திரீ கீரை கடைந்து தன் கணவனுக்குச் சாதம் போட்டு கீரை பரிமாரினாள். கணவன் மனதில் எதையோ வைத்துக்கொண்டு கோபம் வந்து விட்டதுபோல பாசாங்கு செய்து கீரை பக்குவம் நன்றாக இல்லையில்லை என்று கீரையை வாரி சுவற்றின் மீது இறைத்துவிட்டு எழுந்து போய் படுத்துக் கொண்டான். ஸ்திரீயும் அந்த இலையை இழுத்து வைத்து விட்டு மீதி இருந்ததைப் போட்டு சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொண்டாள். சிறிது நேரத்திற்குப் பிறகு கணவனுக்குப் பசி ஏற்பட்டது. மறுபடியும் வந்து உட்கார்ந்து கொண்டு சாப்பாடு போடச் சொன் னான். அந்த மனைவி முன் இழுத்து வைத்திருந்த இலையையே பக்கத்தில் இழுத்து விட்டுவிட்டு நின்று கொண்டாள். இலையில் வெறும் சாதம் மாத்திரம் தான் இருந்தது. கணவன், மனைவியைப் பார்த்து "இந்த சாதத்திற்கு ஏதாவது கரி வைத்துத் தொலை, தொட்டு சாப்பிட" என்று சொன்னான். அதற்கு மனைவி கரியில்லை என்று சொன்னாள். பழய கீரையாவது வை என்றான். அதற்கவள் "தாங்கள் கீரை நன்றாகயில்லை என்று வேண்டாமெனச் சொன்ன தால் நான் எல்லாம் சாப்பிட்டுவிட்டேன்" என்று சொன்னாள். கணவன் மிகுந்த கோபத்துடன் "அதோ தெரிகிறதே அந்த சுவற்றுக் கீரையை வழித்துப்போடடி சுரணைக் கெட்ட வெள்ளாட்டி" என்று சொன்னான். மனைவி " நானா, நீங்களா, சுரணைக் கெட்டவர்" என்று சொல்லி சுவற்றிலிருந்ததை சுரண்டிப் போட்டாள். கணவன் பேசாமல் சாப்பிட்டுவிட்டுப் போனான் என்பதாக ஒரு கதை உண்டு. அதைப்போல் இருக்கிறார்கள், சர்க்காரோடு கோபித்துக் கொண்டு சட்டசபையை விட்டு வெளிவந்த சிப்பாய்கள்.

நாளது மாதம் 17- ந் தேதி கல்கத்தா சட்டசபைக் கூட்டமொன்று நடக் கிறதாம். அதற்கு 'வெளியேறிய' சுயராஜ்யக் கட்சியார் மறுபடியும் போகப் போகிறார்களாம். இதற்குக் காரணம் என்னவென்றால் சட்டசபையில் அவச ரச் சட்டமொன்று வரப்போகிறதாம். அதை இவர்கள் போய் எதிர்க்கப் போகி றார்களாம். சர்க்காரார் அவசரச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நினைத்தால் இவர்கள் தடுப்பினால் நின்றுவிடுமா? நின்றுவிடுமென்று நினைப் பார்களேயாகில் சட்டசபையிடம் இவர்களுக்கு நம்பிக்கையிருப்பதாக



RangaRakes tamilnavarasam.com

அருத்தமாகவில்லையா? அப்படிப்பட்டவர்கள் ஏன் வெளியில் வந்ததாகச் சொல்லிக் கொள்ள வேண்டும்? இதற்காக தலைவர் பண்டித நேரு ஏன் 'வீர மொழி' பேச வேண்டும். ஒரு தடவை சட்டசபைப் பிரயாணச் செலவைத் தியாகம் செய்ய சக்தியில்லாத சுயராஜ்யக் கட்சி 'வெளியேறி விட்டோம்' என்று சொல்லுவது நகைப்பிற்கு இடமாயிருப்பதை சிறிதும் அறியவில்லை. "ஆசை வெட்கமறியாது" என்பதற்கு நமது சுயராஜ்யக் கட்சியே சரியான உதாரணம். ஆனாலும் இவைகளெல்லாம் நமது ஓட்டர்கள் புத்திக்கு சுலபத்தில் படப் போவதில்லை. என்ன செய்யலாம்? நல்லகாலம் வரும்போது தானாகவே புத்திவரும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 16.05.1926**



# ஆதி திராவிடரும் சுயராஜ்யக் கக்ஷியும்

"சுதேசமித்திரன்" என்னும் பிராமணப் பத்திரிகை ஆதி திராவிடர்களுக்கு ஜஸ்டீஸ் கட்சியார் ஒன்றும் செய்யவில்லை என்றும், தங்கள் கூட்டத்தார் ஆதி திராவிடர்களுக்கு சுவர்க்க வாசலைத் திறந்து விடப் போவதாகவும், இனியாவது தங்களை வந்து சரணமடையும்படி உபதேசிக்கிறது. ஜஸ்டீஸ் கட்சியார் ஆதி திராவிடர்களுக்கு நன்மை செய்தார்களோ, இல்லையோ? அதைப் பற்றி அதிக கவலை வேண்டாம். அது ஆதி திராவிடர்களுக்கே தெரியும். ஆனால் காங்கிரசின் ஆதிக்கத்தை அடைந்த சுயராஜ்யக் கட்சியார் ஆதி திராவிடர்களுக்கு என்ன நன்மை செய்தார்கள்? என்ன பதவி கொடுத்தார்கள்? என்ன உத்தியோகம் தந்தார்கள்? இந்தியா சட்டசபைக்கு ஒரு ஆதி திராவிடரை நிறுத்தினார்களா? நிறுத்த ஆளில்லாமல் திண்டாடும் சென்னை சட்டசபைக்கு ஒரு ஆதி திராவிடரையாவது நிறுத்தினார்களா? சென்னை கார்ப்பரேஷன் கவுன்சிலுக்கு ஆதி திராவிட வகுப்பில் பிறந்த ஒருவரையாவது நிறுத்தினார்களா? வேறு வகையில் இவர்கள் மட்டிலும் என்ன சாதித்து விட்டார்கள்? ஒரு சமயம் ஆதி திராவிடர்களில் எவராவது ஒருவருக்கு அதுவும் தன்னோடு கூடத் தன்னைத் தலைவர் என்று சொல்லித் திரிய - அதுவும் வீட்டில் பட்டினி, சுத்தமாய் செலவுக்கில்லை என்று கேட்கும் போதும் - நீ கொடுக்கிறாயா ஜஸ்டீஸ் கட்சியில் சேரட்டுமா என்று மிரட்டும் போதும் - ஒன்றோ இரண்டோ ரூபாய்கள் பிச்சை போடுவதுபோல் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறதைத் தவிர வேறென்ன செய்திருக்கிறார்கள்? அல்லது ஆதி திராவிடர்களுக்கு வகுப்புவாரி உரிமை வாங்கித் தர சம்மதிக்கிறார்களா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்று சொன்னாலே, சொல்பவனை, "ஜஸ்டீஸ் கட்சியில் சேர்ந்து விட்டான், பாவி, துரோகி" என்று சொல்லுகிறார்கள். இவர்களை நம்பி என்ன பலனை அடைய முடியும்? காஞ்சீவரத்தில் கூடிய பிராமணரல்லாதார்களாவது எல்லோரும் ஒன்றாய்ச்சேர்ந்து ஏக மனதாய் ஆதி திராவிடர்களுக்கு, அவர்கள் எண்ணிக்கைக்குத் தகுந்த அளவுக்கு மேலாகக் கூட சட்டசபை, கார்ப்பரேஷன், உத்தியோகம், பதவி ஆகிய எல்லாவற்றிலும் பிரதிநிதித்துவம் கொடுப்பதாய்த் தீர்மானித் தார்களே; அதைக் கெடுத்தவர்கள் யார்? சுயராஜ்யக் கட்சியின் "மாபெருந் தலைவரான" ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரும் "காந்தி சிஷ்யரும் ஒப்பற்ற தலைவருமான" ஸ்ரீமான் சி.ராஜகோபாலாச்சாரியாரும் கூடி சதியாலோசனை செய்து ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரையும் கெடுத்து, இத்தீர்மானம் காங்கிரஸ் மகாநாட்டிற்கே கொண்டு வரக் கூடாது என்று தடுத்துவிட்டார்கள்.



RangaRakes tamilnavarasam.com

தீர்மானம் கொண்டுவரக்கூட சம்மதிக்காத காங்கிரஸ் தலைவரும், சுயராஜ்யக் கட்சித் தலைவரும் தீர்மானத்தை நிறைவேற்ற சம்மதிப்பார்களா? என்பது ஆதி திராவிடர்களுக்குத் தெரியமுடியாமல் போகாது. ஜஸ்டீஸ் கட்சியாரா வது ஆதிதிராவிடர்கள் கேட்கும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் சரியான தென்றும், அதற்காக தாங்கள் போராடியும், அதை தங்கள் கட்சியின் முக்கியக் கொள்கையாகவும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் கூச்சல் போட்டதன் பலனாய்த்தான் ஸ்ரீமான்கள் எம்.சி.ராஜா, வீரய்யன் முதலிய மணிகள் ஆதி திராவிட வகுப்பில் இருக்கிறார்கள் என்றாவது பிறத்தியாருக்குத் தெரியும் படியாய் இருக்கிறது. அது இல்லாவிட்டால் இவர்களுக்கு சட்டசபை ஏது? கான்பரன்ஸ் ஏது? தீர்மானம் ஏது? "எங்கள் கட்சியில் வந்து சேருங்கள், நாங்கள் சாதித்து விடுகிறோம்" என்று பிராமணர்கள் கூப்பிடுவது ஏது? ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பணம் ஒன்றிரண்டு ரூபாய்கூட ஆதி திராவிடர் களுக்காவது கிடைப்பதேது?

**குடி அரசு - கட்டுரை - 23.05.1926**



# பட்டாபிஷேகம்

## மச்சான் இறந்தால் நல்லதாச்சு அவருடைய கம்பளி நமக்காச்சு

**- சித்திரபுத்திரன்**

ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்காருக்கு எல்லா இந்தியத் தலைமைப் பட்டாபிஷேகம் ஆகிவிட்டது. ஆனால் அது இரண்டு மாதத்திற்கு என்று சொல்லப்பட்டாலும் காயமானதென்பதுதான் நமது அபிப்பிராயம். பண்டித நேரு இரண்டு மாதத்திற்கு ஓய்வு எடுத்துக் கொள்ளுகிறதாய்ச் சொல்லி, தனது விசேஷ அதிகாரத்தால் ஸ்ரீமான் ஐயங்காருக்குப் பட்டாபிஷேகம் செய்து தலைமைப் பதவியை அவர் தலையில் சூட்டிவிட்டுப் போய்விட்டார். இது மகாத்மா ஓய்வெடுத்துக் கொண்டது போலவேதான் முடியும். "வெற்றிமேல் வெற்றி ஏற்பட்டு, இரட்டை ஆட்சி மடிந்தவுடன்" அதற்குமேல் என்ன செய்வ தென்று தெரியாமல் ஸ்ரீமான் சி.ஆர்.தாஸ் நிரந்தர ஓய்வெடுத்துக் கொண்டார். சுயராஜ்யக் கட்சி வெற்றி அடைந்து காங்கிரசையே தனக்குள் ஐக்கியப் படுத்திக் கொண்டவுடன் இனி நமக்கு இங்கென்ன வேலை என்று மகாத்மா ஓய்வெடுத்துக் கொண்டார். அதோடு நிர்மாணத் திட்டங்களும் ஓய்வெடுத்துக் கொண்டன. இப்போது பண்டித நேரு ராஜி ஒப்பந்தம் முடிந்தவுடன் இனி எப்படி ஜனங்கள் முகத்தில் விழிப்பது என்று ஓய்வெடுத்துக் கொண்டார். இது எதற்காகவோ தெரியவில்லை. சட்டசபையை விட்டு வெளியேறின வீரத் திற்கா? அந்த வீரத்தைக் காப்பாற்றி மறுபடியும் சட்டசபையை எட்டிப் பார்க்காமல் இருக்கிற சுத்தத்திற்கா? சபர்மதியில் பரஸ்பர ஒத்துழைப்பாளருக் கும் தங்களுக்கும் ஏற்பட்ட ராஜியை கண்ணியமாய் நடத்தி வைத்துக் கொ டுத்த ஆண்மைக்கா, சத்தியத்திற்கா? எதற்கென்று அறியமுடியவில்லை. ஆனாலும் "நான் பரஸ்பர ஒத்துழையாதாரிடம் செய்துகொண்டு கையெ ழுத்துப் போட்ட ராஜியை எப்பொழுது நிறைவேற்றி வைக்க முடியவில் லையோ தன்னைப் பின்பற்றுவோர்கள் தனது வார்த்தையை எப்பொழுது மதிக்கவில்லையோ அப்பொழுதே, பண்டிதர் "சுயமரியாதை உள்ளவரா யிருந்தால் தலைமைப் பதவியிலிருந்து விலகியிருப்பார். இதுதான் சுயமரியா தைக்கு லக்ஷணம்" என்று 'குடி அரசு' 'சபர்மதி ராஜியின் முறிவு' என்கிற தலையங்கத்தில் எழுதியிருந்தது. அது போலவே பண்டிதர் சுயமரியாதை யைக் காட்டுவதற்கே ஓய்வெடுத்துக் கொண்டாரென்றால் நிரம்பவும்



RangaRakes tamilnavarasam.com

சரியென்றே சொல்லலாம். ஆனால் நமது தமிழ்நாட்டுப் பிராமணர்களுக்கோ "மச்சான் இறந்தால் நல்லதாச்சு, அவருடைய கம்பளி நமக்காச்சு" என்கிற முறைப்படி பண்டித நேரு விலகினதைப்பற்றி கவலையில்லை; அவர் தலைமை ஸ்தானம் இவருக்குப் பட்டாபிஷேகமாய்விட்டதே, அதுவே போதும் என்கிற சந்தோஷத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டுப் பிராமணர்களை, அதிலும் அய்யங்கார் கூட்டத்தை நம்பினவர்கள் இதுவரை யார் உருப்படியாகியிருக்கிறார்கள்? ஆனாலும் ஓய்வு கிடைப்பது மாத்திரம் நிச்சயம். ஸ்ரீமான்களான ரெங்கசாமி ஐயங்காரை நம்பி ஸ்ரீமான் தாஸ் ஓய்வெடுத்துக் கொண்டார்; ராஜகோபாலாச்சாரியாரை நம்பி மகாத்மா ஓய்வெடுத்துக் கொண்டார்; சீனிவாசய்யங்காரை நம்பி பண்டிதர் ஓய்வெடுத்துக் கொண்டார். அம்மூவர் சக்தியும் இம்மூவருக்குள்ளாகவே ஆவாகனமாகியிருக்கிறது. இனி தமிழ்நாட்டிற்கு ஒன்றும் குறைவில்லை. எடுத்த காரியம் யாவினும் வெற்றி. யாருக்கு? பிராமணர்களுக்கு. இந்திய அரசியல் வாழ் வென்பது பிராமணர் வாழ்வுக்கேற்பட்டதென்று நாம் பலமுறை சொல்லி வந்திருக்கிறோம் - சொல்லியும் வருகிறோம் - இனியும் சொல்லுவோம். அனுபவ சாலிகளான நமது முன்னோர் பலரும் சொல்லியிருக்கிறார்கள். இதை நம்மில் பலரும் அறிந்திருக்கிறார்கள். ஆனால் என்ன செய்வது? பிராமணர்களின் செல்வாக்குப் பெருக்கும், அதிகாரப் பெருக்கும், செல்வப் பெருக்கும் பிராமணரல்லாதாரில் இதை அறிந்த பலரையும் "சூரிய சந்திரர்களை கிரகணம் தீண்டி" மறைப்பதைப் போல மறைத்து விடுகிறது. என் செய்வது? ஜஸ்டிஸ் கக்ஷி ஏற்பட்ட காலத்தில் அந்த கக்ஷியார் இதைச் சொன்னபோது பிராமணரல்லாதாரின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு பிராமணர்களுக்கு முன்னணியிலிருந்து அதை ஒடுக்கி வீரகண்டாமணி அணிந்த நமது டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி.கலியாணசுந்தர முதலியார் ஆகியோர் கதி இன்று எப்படி இருக்கிறது? டாக்டர் நாயுடு அஞ்ஞாதவாசம் செய்கிறார்; என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்கிறார்; இனி என்ன பெயர் வைத்துக் கொண்டு மறுபடியும் வெளியாகலாமென்று பதைக்கிறார்; அடியோடு அவரை பிராமணர்கள் கைவிட்டுவிட்டார்கள். சென்னை சட்டசபைக்கு சேலம் ஜில்லா அபேக்ஷகர்களை நிறுத்த சேலத்திற்கு வந்த சீனிவாசய்யங்கார் நமது டாக்டர் நாயுடுவுக்குத் தெரிவிக்கவில்லை; அவர் வீட்டுக்கு வரவுமில்லை; அவரைக் கலந்து பேசவுமில்லை என்றால் டாக்டர் நாயுடுவைப் பற்றி இந்த பிராமணர்கள் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பது புலனாகும். இந்த பிராமணர்களுடன் அவர் திரியும் போது மகாத்மா வந்தாலும் டாக்டர் வீட்டில் தான் இறக்குவது, தேசபந்து தாஸ் வந்தாலும் டாக்டர் வீட்டில் தான் இறக்குவது, இன்னும் யார் வந்தாலும் டாக்டர் வீட்டில்தான் இறக்குவது. இப்போது இந்த பிராமணர்களுக்கு அவருடைய வீடு "அதிகார வர்க்கத்தார்" வீடாய் விட்டது. டாக்டர் நாயுடு அவர்கள் செய்த குற்றம்தான் என்ன? இங்கொரு கால், அங்கொரு கால் வைத்திருப்பதுதான். அதாவது சுயராஜியக் கட்சியை இரவு பகலாய் ஆதரித்தாலும் ஜஸ்டிஸ் கட்சியை பிராமணர்களின் ஆசைதீர திட்டினாலும், தேவஸ்தான சட்டத்தை ஆதரிக்கவும், குருகுலப் புரட்டுகளை



வெளியாக்கவும் உதவியாயிருந்ததுதான் பெரிய குற்றம்.

சரி, நமது ஸ்ரீமான் திரு. வி.கலியாணசுந்தர முதலியார் கதியோ, இந்த பிராமணர்கள் பின் சென்றால்தான் அவர் பெயர் பத்திரிகையில் போடப்படும், அதுவும் அவர் ஜஸ்டிஸ் கட்சியை நன்றாய் திட்ட வேண்டும்; திட்டினதில் ஒன்று சொல்லியிருந்தால், கூட இரண்டு சேர்த்துதான் பிராமணப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்; அதற்கும் சம்மதித்தால்தான் கூடக் கூட்டிக்கொண்டு போகமுடியும்; இல்லாவிட்டால் அதுவும் இல்லை; டாக்டர் நாயுடுபோல் மூலையில் உட்கார வேண்டியதுதான்.

"அரை அந்தணர்" , "முழு அந்தணர்" என்று சொல்லப்படும் பிராமண பக்தர்கள் பிராமண விஸ்வாசிகளான இவர்கள் சங்கதியே இப்படி இருக்குமானால் "பிராமணத் துவேஷியான" ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கரை இன்னும் உலகத்தில் வைத்திருப்பதே நமது பிராமணர்களின் தர்ம சிந்தையல்லவா? மற்றவர்களைப் பற்றியும் கேட்கவேண்டுமோ? தமிழ் நாட்டில் பிராமணரல்லாதார் ராஜீய வாழ்வினால் பிழைக்க வேண்டுமென்றாலும் சரி, தேசபக்தர்களாக வேண்டுமென்றாலும் சரி, பிராமணர்களிடம் லைசென்ஸு பெறாமல் முடியாது என்கிற நிலைமையிலிருக்கிறது. ஆதலால் ஸ்ரீமான்கள் நாயுடு, முதலியார் இவர்களின் நிலைமையை அறிந்தவர்கள் சில "குட்டி தேச பக்தர்கள்" "வயிற்றுச்சோத்து தேசபக்தர்கள்" பிராமணரல்லாதாரை திட்டுவதைப் பற்றியும் பத்திரிகைகளில் தாறுமாறாய் எழுதுவதைப் பற்றியும் கேட்கவும் வேண்டுமா? அதைப் பற்றி பேசவும் வேண்டுமா?

**குடி அரசு - கட்டுரை - 23.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# ஒத்துழையா நாற்றம் வீசும் சுயராஜ்யக் கட்சி மெம்பர்களும் கோயமுத்தூர் ஜில்லா போர்டும்

கோயமுத்தூர் ஜில்லா போர்டின் கூட்டமொன்று பிரசிடெண்டு ராவ் சாஹிப் சி. எஸ்.இரத்தினசபாபதி முதலியார் அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று. இக் கூட்டத்திற்கு 40 அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள். ஏனெனில், ஸ்ரீமான் முதலியாரது நியமனம் பெற்ற பிரசிடெண்டு உத்தியோக காலத்தில் இந்தக் கூட்டம் கடைசி கூட்டமாகும். ஆதலால் ஸ்ரீமான் முதலியாருக்கு ஜில்லா போர்டு மெம்பர்களின் நன்றியறிதலைக் காட்டவும் வந்தனங் கூறவும் "சுயராஜ்யக் கட்சி அங்கத்தினர்கள்" உள்பட ஏறக்குறைய எல்லா மெம்பர் களுமே வந் திருந்தார்கள். அப்பொழுது இம்மாதம் 30- உ கோயமுத்தூருக்கு விஜயம் செய்யப்போகும் கவர்னர் துரை அவர்களுக்கு ஜில்லா போர்டின் சார்பாய் ஒரு உபசாரப் பத்திரம் படித்துக்கொடுக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் வந்துவிட்டது. அக்கூட்டத்தில் ஒத்துழையா நாற்றம் வீசும் சுயராஜ் யக் கட்சி மெம்பர்களான ஸ்ரீமான் ராவ் பஹதூர் டி.எ. இராமலிங்கஞ் செட்டியா ரும் ஜில்லா போர்டுக்கு சர்க்காரால் நியமனம் பெற்ற மெம்பரான ஸ்ரீமான் சி.வி.வெங்கிட்டரமணய்யங்காரும் மெம்பர்களாய் ஆஜராகியிருந்தார்கள். உபசாரப் பத்திரத்தோடு போகாமல் உபசாரப் பத்திரத்திற்கு 350 ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்று அக்கிராசனர் ஒரு தீர்மானங் கொண்டு வந்தார். "ஒத்துழையாமை நாற்றங்"கொண்ட ஸ்ரீமான்கள் செட்டியார் நிலைமையும் ஐயங்கார் நிலைமையும் கஷ்டமாய்ப் போய்விட்டது. தங்களது ஒத்துழையாமை நாற்றத்தை வெளியில் காட்டி அத்தீர்மானத்தை எதிர்த் தாலோ ஸ்ரீமான் செட்டியாரின் வயிற்றுக்குள் இருக்கும் ராவ் பஹதூர் பட்டத் தையும், ஐயங்கார் வயிற்றுக்குள்ளிருக்கும் ஜில்லா போர்டு நியமனத்தையும் வெளியில் கக்க வேண்டியதாயிருக்கிறது. சர்க்காரிடம் பெற்றிருக்கும் தயவுக்காக அத்தீர்மானத்தை ஆதரித்தாலோ தங்கள் மேல் வீசுவதாகச் சொல் லும் ஒத்துழையாமை நாற்றம் மறைந்து போகும்; பிறகு சுயராஜ்யக் கட்சியின் சார்பாய் ஓட்டுக் கிடைக்காது என்கிற பயம். என் செய்வார்கள் பாவம்! திருட னைத் தேள் கொட்டியது போல் செட்டியார் மௌனமாயிருந்தார். ஐயங்காரோ வாதத்தில் கலந்து கொண்டு 350 ரூபாய்க்குமேல் செலவு செய்யக்கூடாது என்று உரத்துப் பேசி "ஒத்துழையாமை"யைக் காட்டிக் கொண்டார்.



தீர்மானமே 350 ரூபாய்க்கு மாத்திரம் இருக்கும்போது ஐயங்கார் 350 ரூபாய்க்கு மேல் போகக்கூடாது என்றால் என்ன அருத்தமோ தெரியவில்லை. ஒரு வீட்டில் ஒருவன் திருடி விட்டான். அவனைப் பிடித்து மேஜஸ்ட்ரேட் கோர்ட்டாரால் விசாரிக்கப்பட்டு மேஜஸ்ட்ரேட் 15 அடி அடிக்கும்படி தீர்ப்புச் சொன்னார். தீர்ப்புச் சொல்லும்போது கோர்ட்டில் கூட்டமிருந்ததால் அக் கூட்டத்தார் தனது திருட்டை மறந்து சாமர்த்தியத்தை அறியும்படி, திருடின வன் மேஜஸ்ட்ரேட்டைப் பார்த்து "15 அடிதான் அடிக்க வேண்டும்; அதற்கு மேல் ஒரு அடி விழுந்துதோ – அப்புறம் தெரியும் நம்ம சங்கதி" என்று வீர மொழி பேசினானாம். அதைப்போல் நமது ஐயங்கார் 350 ரூபாய்க்கு மேல் செலவு செய்யக்கூடாது என்று கண்டித்துப் பேசி அங்கு வந்திருந்த மெம்பர்களுக்கு தனது "ஒத்துழையாமை நாற்றத்தைக்" காட்டி விட்டார். பிறகு உபசாரப் பத்திரம் தயாரிக்க ஏற்படுத்திய கமிட்டியில் ஐயங்கார், செட்டியார் முதலியோரது பெயர் சேர்க்கப்பட்டது. ஸ்ரீமான் ஐயங்கார் ஜாடை காட்டி தமது பெயரை விலக்கி விடும்படி கேட்டுக்கொண்டாராம். செட்டியார் அதைக்கூட சொல்லவில்லையாம். கவர்னரை சந்திக்கும் சந்தர்ப்பத்தை இழக்கச் செட்டியாருக்கு மனமில்லை; ஐயங்காருக்கோ சம்மனில்லாமல் ஆஜராகிக் கொள்ளலாம் என்கிற தைரியம். ஓட்டர்களின் பையித்தியக்காரத்தனமானது இவர்களை இவ்வளவு புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ளச் செய்கிறது. என்ன செய்வது! இந்தியா வின் சுயராஜ்யம் இப்படிப்பட்ட தேசீய வீரர்கள் (?) கையில் சிக்கிக் கிடக் கிறது. நிற்க,

இது நடந்த பிறகு பிரசிடெண்டு ஸ்ரீமான் சி.எஸ்.இரத்தினசபாபதி முதலியாரின் பிரசிடெண்டு வேலையைப் பாராட்டி அடியில் கண்ட தீர்மானம் ஏக மனதாய் நிறைவேறியது. அதாவது, "இந்த போர்டின் பிரசிடெண்டாக ராவ் சாகிப் சி.எஸ்.இரத்தினசபாபதி முதலியார் 3 வருஷ காலமாய் மிகவும் போற்றும் படியாய் இந்த போர்டின் வேலைகளைச் சரிவர நடத்தினதற்காகவும் இந்த ஜில்லாவில் ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சி என்ற சுயராஜ்ய பரிபாலன விஷயத்தில் சம்பந்தப்பட்ட எல்லோரிடமும் அன்னியோன்னியமாய் ஒத்து ழைத்து அபிவிருத்தியைக் காட்டியதற்காகவும், இந்த போர்டார் புகழ்வதுடன் தங்களது உண்மையான வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்" என்கிற தீர்மானத்தை ஊத்துக்குளி ஜமீன்தார் குமார ராஜா அவர்கள் பிரேரே பிக்க ஏகமனதாய் நிறைவேறிற்று. ஒத்துழையாதாரோ, சுயராஜ்யக் கட்சிக்கார ரோ தவிர வேறு யாராவது ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றி நிருவாகம் நடத்தினால் ஸ்தல ஸ்தாபனங்களின் மீது இடி விழுந்துவிடும் என்று சொல்லும் "காங்கிரஸ் விஸ்வாசிகள்" ஒத்துழையாதாரும் சுயராஜ்யக் கட்சியா ரும் அல்லாத ஸ்ரீமான் ராவ் சாகிப் சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார் நிர் வாகம் நடத்தியும் ஸ்தல ஸ்தாபனங்களில் இடி விழுந்து விடாமல் அபி விருத்தி பெற்றிருக்கிறதற்கு என்ன பதில் சொல்லுவார்களோ தெரியவில்லை.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 23.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்தர முதலியார்

ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் செங்கற்பட்டு ஜில்லாவில் பிராமணர்களுக்காக பிரசாரம் செய்து வருகையில் பல்லாவரத்தில் ஒரு பிராமணர் அக்கிராசனத்தின் கீழ் பிராமணர்களின் நற்சாக்ஷிப் பத்திரமான வரவேற்புப் பத்திரம் பெற்றுக்கொண்டு தனது திருவாக்கால் “மேல் நாட்டாருக்கு வயது 42, கீழ் நாட்டாருக்கு வயது 22; நமது நாட்டில் பஞ்சம் அதிகம்; ஆதலால் ஸ்ரீமான் எ. இராமசாமி முதலியாருக்கு ஓட்டுக் கொடுக்காதீர்கள். அவர் அடாத செயல்கள் செய்வதால்தான் அவருக்கு ஓட்டுக் கொடுக்கக் கூடாது என்று சொல்லுகிறேன். ஸ்ரீமான்கள் எம்.கே. ஆச்சாரியார் வகையறாக்களுக்கு ஓட்டுக் கொடுங்கள்” என்று பேசினாராம்.

இவருக்கு ஆத்மா இருக்கிறதா என்பதே நமது சந்தேகம். ஐயோ! நமது முதலியாரின் புத்தி இப்படியும் சபலமாய்ப் போகுமென்று நாம் எந்தக் காலத்திலும் எதிர்பார்த்ததேயில்லை. ஸ்ரீமான்கள் எம்.கே.ஆச்சாரியார், சத்தியமூர்த்தி, எ.ரெங்கசாமி ஐயங்கார் வகையறாக்களைவிட – இவர்களது நாணயத்தைவிட – ஸ்ரீமான் எ. இராமசாமி முதலியார் எந்த விதத்தில் தாழ்ந்தவர்? நமது முதலியாருக்கு என்ன கெடுதி செய்தார்; என்ன அடாத செய்கை செய்து விட்டார்? அல்லது அவர்கள் “கக்ஷிக்கும்” இவர்கள் “கக்ஷிக்கும்” வித்தியாசம்தான் என்ன? ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் கோயமுத்தூரில் பேசிக் கொண்டிருக்கும்போது தனது முழு வேலையும் செங்கல்பட்டு ஜில்லாவிலேயே இருப்பதாகவும், தன்னுடைய “கணங்களை” யெல்லாம் அங்கேயே அனுப்பி எப்படியாவது ஸ்ரீமான் எ. இராமசாமி முதலியாரை ஒழித்துவிடப் போவதாயும் உறுதி சொன்னாராம். அவரது திருவாக்கைப் பரிபாலிக்க நமது முதலியார் மர உரி தரித்துக்கொண்டு செங்கல்பட்டு ஜில்லாவுக்குப் புறப்பட்டு விட்டார் போலும். அல்லது பிராமண அக்கிராசனமும் பிராமண “நற்சாக்ஷிப் பத்திரமும்” நமது முதலியாரை மயக்கி விட்டது போலும். இந்தப் பிராமணர்களே நமது முதலியாருக்கு வரவேற்புப் படித்துக் கொடுத்தாலும் “உண்மை அந்தணர்” என்று வெளியில் சொன்னாலும் இவரைப் பற்றி இந்த பிராமணர்கள் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்களென்பதை ஒரு சிறிதாவது ஞாபகப்படுத்திப் பார்த்தாரா? இப்படி ஒரு ஆசாமியை தங்கள் வசப்படுத்திக் கொண்டு, அவர் வகுப்பார் மீதே வசைமொழிப் புராணம் பாடும்படி செய்து நமது காரியத்தை சாதித்துக் கொள்ளுகிறோம்” என்றுதான் நினைப்பார்கள். அவர்கள் வேலை முடிந்த பிறகு திரு.முதலியாரை



கண்ணெடுத்துப் பார்ப்பார்களா? சுயராஜ்யக் கக்ஷியின் அயோக்கியத் தனத்தை ஒரு நாள் வெளியில் எடுத்துச் சொன்னதற்குத்தானே “சாது” முதலியார், “உண்மை அந்தண”முதலியார், “மாரீச” முதலியாராக மாற்றப்பட்டார்?

“மேல் நாட்டாருக்கு வயது 42 – கீழ் நாட்டாருக்கு வயது 22 – ஆதலால் எம்.கே. ஆச்சாரியாருக்கு ஓட்டுக் கொடுங்கள், எ. இராமசாமி முதலியாருக்கு ஓட்டுக் கொடுக்காதீர்கள்” என்று சொன்னால் என்ன அருத்தம்? எம்.கே. ஆச்சாரியார் பிரம்மாவா? எல்லோர் தலையிலும் நூறு, நூறு வயது என்று எழுதி விடுவாரா? அல்லது எ. இராமசாமி முதலியார் எமனா? 22 வயதிலேயே எல்லோரையும் கொண்டுபோய் விடுகிறாரா? ஐயோ! பாவம்! திரு.வி. கலியாணசுந்தர முதலியாரின் கல்வியும் – பாண்டித்தியமும் – பிராமணரல்லாதார் பிறவியும் செங்கல்பட்டு ஜில்லா பாமர ஜனங்களிடம் போய் “மேல் நாட்டாருக்கு 42– வயது, கீழ் நாட்டாருக்கு 22 – வயது. ஆதலால் இராமசாமி முதலியாருக்கு ஓட்டுப் போடாதீர்கள்; எம்.கே. ஆச்சாரியாருக்குப் போடுங்கள்” என்று சொல்லுவதற்குத் தானா பிரயோஜனப்படவேண்டும். இவையனைத்தையும் பாமர ஜனங்கள் அறியும் நாள் எதுவோ அதுதான் விடுதலை நாள். அதுவரை ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் போன்றோர்கள் நாள்தான்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 23.05.1926**



RangaRakes tamilnavarasam.com

# சுசீந்திரம் சத்தியாக்கிரகம்

சுசீந்திரம் சத்தியாக்கிரகம் ஏதோ ஒரு ரகசிய ராஜியின்மேல் நிறுத்தப் பட்டதாகவும் சீக்கிரத்தில் எல்லாப் பிரஜைகளுக்கும் அனுகூலமான முடிவை திருவாங்கூர் அரசாங்கத்தாரால் நடத்தி வைக்கப்படும் என்றும் பிரஸ்தாபம் வந்தது. ஆனால் ஏறக்குறைய சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டு இரண்டு மாதத் திற்கு மேலாகியும் இன்னமும் அதைப்பற்றி ஒரு விபரமும் தெரிவதற் கில்லாமல் கிணற்றில் கல்லு போட்டதுபோல் மூடுமந்திரமாயிருக்கிறது.

கமிஷனர் பிட்டு துரை மிகவும் நல்லவர். எல்லாருக்கும் சம உரிமை கிடைக்க வேண்டும் என்பதில் அக்கரை உள்ளவர். ஆனால் திவானோ கிறிஸ்துவராயிருந்தாலும் மலையாள பிராமணர்கள் தயவைப் பெற்று புகாரில் லாமல் காலந்தாட்டிவிட்டுப் போகலாம் என்கிற ஆசையுள்ளவராம். இவர்க ளின் நிலைமையை நாம் கவனித்துக் கொண்டிருப்பது சத்தியாக்கிரகத்துக்கு நீதி செய்ததாகுமா? ஆதலால் சத்தியாக்கிரகத்தை மறுபடியும் துவக்கும்படி வேண்டுகிறோம்.

**குடி அரசு - வேண்டுகோள் - 23.05.1926**



# நிரூப நேயர்களுக்கு விண்ணப்பம்

“குடி அரசு” பத்திரிகை மிகவும் குறைந்த அளவுள்ளது. அதில் 10 பக்கங்கள் விஷயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும் பல வர்த்தமானங் களும் நிரூபங்களும் வந்து குவிந்து பத்திரிகை ஏற்படுத்தியதின் கருத்தை நிறைவேற்ற முடியாமல் கஷ்டப்படுத்துகிறது. நிரூபர்களும் வர்த்தமானம் தெரிவிப்பவர்களும் நமது பத்திரிகையை தினசரி என்று கருதிக்கொண்டிருக் கிறார்கள் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. ஆதலால் நாம் உடனுக்கு டன் பிரசுரிக்கவில்லை என்று நிரூப நேயர்கள் நம்மீது வருத்தப்படாமல் இருக்கும்படி வேண்டுகிறோம். பல தேச வர்த்தமானங்களை நாம் பிரசுரிப்ப தில்லையென்றுகூட நம்மீது பல சந்தாதாரர்களுக்கு சலிப்பிருப்பதாய்த் தெரி கிறது. அவர்களும் நமது கருத்தையும் நிலையையும் அறிந்து மன்னிப் பார்கள் என்றே நம்புகிறோம். நமது பத்திரிகை வர்த்தமானப் பத்திரிகை அல்லவென்றும், பிரசாரப் பத்திரிகை என்றும் மறுபடியும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆதலால் நிரூபங்களாலும் வர்த்தமானங்களாலும் நமது பத்திரிகையின் உத்தேசத்தைக் கெடுக்காமலும் வர்த்தமானம் இல்லையே! என்று கருதி அலக்ஷியம் செய்யாமலும் இருக்கும்படி பிரார்த்திக்கிறோம்.

**பத்திராதிபர்**

**குடி அரசு - அறிக்கை - 23.05.1926**



RangaRakes tamilnavarasam.com

## மௌலானா முகமதலியின் மத பக்தி

மௌலானா முகம்மதலி ஒரு கூட்டத்தில் பேசும் போது இஸ்லாத்தை அழிக்க விரும்புவோரின் கையிலிருந்து அதைக் காப்பாற்ற வேண்டுமென் றும் இதுசமயம் இஸ்லாத்துக்கு ஆபத்து வந்திருக்கிறதென்றும் சொல்லி வருகையில் “நாம் இந்துக்களுடன் நேசபாவமாயிருக்கத் தயார். ஆனால் நம்மோடு சண்டைபோட இந்துக்கள் விரும்பும் பக்ஷத்தில் இந்தியாவிலுள்ள 7 கோடி முஸ்லீம்களும் 21 கோடி இந்துக்களைப் பணிய வைக்கமுடியும். நமது நபிகள் நாயகம் காலத்தில் 15 பேர் சேர்ந்து ஒரு சைனியத்தை ஜெயித்து விட்டார்கள். ஆகையால் 7 கோடி மகம்மதியர்கள் 21 கோடி இந்துக்களை ஜெயிப்பது கஷ்டமல்ல” என்று சொன்னாராம்.

இதை ‘சுதேசமித்திரன்’ இந்துக்களுக்கு மகம்மதியர்கள் பேரில் துவேஷம் உண்டாகும்படி ‘மௌலானா முகமதலியின் முழக்கம்’ என்கிற தலைப்பின் கீழ் இதை எழுதியிருக்கிறது. மௌலானா பேசியவைகளில் நமக்கொன்றும் ஆச்சரியமில்லை. மௌலானா கணக்கில் தவறிவிட்டார் என்று எண்ணுகிறோம். 21 கோடி இந்துக்களை அடக்க 7 கோடி முஸ்லீம்கள் தேவையில்லை. இதே 21 கோடி இந்துக்கள் என்போர்களை முக்கால் கோடிக் கும் குறைவான பிராமணர்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் தலையெ டுக்க வொட்டாமல் பணிய வைத்திருக்கவில்லையா? விபசாரத் தரகில் ஜீவிக் கும் பிராமணனை கூட ஜமீன்தாரரான பிராமணரல்லாத இந்து தூதுக் கடிதம் வாங்கும் போதும் “சுவாமி” என்று கூப்பிடவும், தலைவணங்கி கும்பிடவும் அவன் ஆசீர்வாதம் சொல்லி கடிதம் கொடுக்கவும் தானே நடந்து வருகிறது. ஒரு சமூகம் எவ்வளவு பெரிய எண்ணிக்கை உள்ளதானாலும் தங்களுக்குள் அன்பும் ஒற்றுமையும் இல்லாமல் ஒருவரை ஒருவர் தீண்டாதவராய் , பார்க்கக் கூடாதவராய் மதித்துக்கொண்டு மக்களைப் பிரித்து வைத்து ஒருவர் உழைப் பில் ஒருவர் பிழைக்க நினைத்துக்கொண்டு இருப்பவர்களை உள்ளே வைத்திருக்கும் வரையில் மிகச் சிலரால் பணிய வைத்து விடலாம். இதற்கனு கூலமாக நமது நாட்டில் “பிராமணீயம்” இருக்கும்வரை நம்மை யார் வேண்டு மானாலும், எப்படி வேண்டுமானாலும் சுலபமாய் பணிய வைக்கமுடியும். ஆதலால் மௌலானா சொல்லுவதில் கணக்குத் தவறு இருக்கிறதே தவிர அதிசயம் ஒன்றும் இல்லை. அவரும் நாம் மகமதியர்களோடு சண்டை போட நினைத்தால்தான் தன்னால் இந்துக்களை பணிய வைக்க முடியும் என்கிறாரே தவிர மற்றபடி பிராமணர்களை தங்களுக்கு அன்னமளிப்பவர்களை பணிய



RangaRakes

வைத்திருப்பதைப்போல் அல்ல. ஆதலால் மௌலானா சொன்னதில் யாரும் குற்றங் கருதமாட்டார்கள் என்றே நினைக்கிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 23.05.1926**



tamilnavarasam.com

# பப்ளிக் சர்வீஸ் கமிஷன்

## சர்க்கார் ஊழிய சம்மந்தமான விசாரணைச் சபை

இந்தியாவில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சம்பந்தமான விஷயத்தைப் பற்றி விசாரித்து அறிந்து தக்கபடி செய்வது என்ற பெயரை வைத்துக் கொண்டு அதற்காக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் என்று ஒரு கமிட்டியை அரசாங்கத்தார் நியமித்து இருக்கிறார்கள். அக்கமிட்டிக்கு இந்தியர்களின் சார்பாய் - இந்துக்களின் சார்பாய் நியமிக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர் ஒரு தமிழ் நாட்டுப் பிராமணர். இந்தியாவிலிருக்கும் 33 கோடி ஜனங்களில் முக்கால் கோடி ஜனங்கள் கொண்ட வகுப்பார்களான ஒரு சிறு சமூகமான பிராமண கோஷ்டியில் இருந்து ஒருவரைப் பொறுக்கி எடுத்திருக்கிறார்கள். இவர் இந்தியாவிலுள்ள மனிதவர்க்கத்திற்கே உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக் கொள்ளும் ஜாதியைச் சேர்ந்தவர். அதிலும் ஐயங்கார் ஜாதியைச் சேர்ந்தவர்.

இந்தியர்களின் சர்க்கார் உத்தியோக சம்பந்தமான விஷயங்கள் இப்போது இவர் கையில்தான் அடங்கியிருக்கிறது. இனி இந்தியர்களின் தலையெழுத்தையும் ஜாதகத்தையும் கணிப்பவர் இந்த பிராமணர்தான். சர்க்காராரும் எந்த ஆசாமியைப் பிடித்தால் தங்கள் சொல்படி ஆடுவாரோ, தாங்கள் எழுதி வைத்ததில் கையெழுத்துப் போடுவாரோ, அந்த ஆசாமிகளைப் பார்த்துதான் நியமிப்பார்கள். இந்த பிராமணரே இதே சர்க்கார் உத்தியோகத்தில் 250 ரூபாய் சம்பளத்திலிருந்து சர்க்காரின் தாளத்திற்கு தகுந்தபடி ஆடி சர்க்காரின் நம்பிக்கைப் பெற்று சர். பட்டம் பெற்று இப்போது 3500 ரூபாய் சம்பளத்துடன் இந்தப் பொறுப்புள்ள உத்தியோகத்திற்கு வந்திருக்கிறார். சர்க்காராரும் பொறுப்புள்ள உத்தியோகங்கள் எதானாலும் இந்தியர்களுக்குக் கொடுப்பதாயிருந்தால் அவைகளை பிராமணர்களுக்கேதான் கொடுத்து வருகிறார்கள். சர்க்காராருக்கு எப்பொழுதும் பிராமணரல்லாதாரிடம் நம்பிக்கையே கிடையாது. சர்க்காரார் இந்தியர்கள் தலையில் கைவைக்க உத்தேசித்து ஏதாவது ஒரு காரியம் செய்ய வேண்டுமென்றால் அவைகளுக்கு பிராமணர்களைத்தான் நம்புவார்கள். உதாரணமாக, மக்களை மிருகங்களிலும் கேவலமாய் அடக்கி ஆளுவதற்கென்று ரௌலட் ஆக்ட்டு ஏற்படுத்த நியமித்த ரௌலட் கமிட்டிக்கு இந்தியர்கள் சார்பாய் ஒரு பிராமணரைத்தான் நியமித்தார்கள். ( மகாகனம் சாஸ்திரியார்.)



இந்தியர்களுக்கு அவர்களின் ஜீவனத்திற்கு மாதம் என்ன செலவு பிடிக்கும் என்று தெரிந்துகொள்ளுவதற்கு ஐயங்கார் பிராமணர் அபிப்பிராயத்தைத்தான் எடுத்துக்கொண்டார்கள். அதாவது "இந்து" ப் பத்திரிகையின் ஆசிரியராய் இருந்த ஸ்ரீமான் கஸ்தூரி ரெங்கய்யங்காரின் தமயனாரும் இப்போது இந்துப் பத்திரிகைக்கு ஆசிரியராய் இருக்கும் ஸ்ரீமான் எஸ்.ரெங்கசாமி அய்யங்காருக்கு தகப்பனாருமான ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்கார் என்கிற ஐயங்கார்தான் யோசனை சொன்னார். என்ன யோசனை ? ஒரு இந்துவின் ஜீவனத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2 - 8 - 0 ( இரண்டரை ரூபாய்) இருந்தால் போதுமென்று சொன்னார். இன்னமும் இப்படியே நமது தலையில் கையை வைக்க நியமித்த ஒவ்வொரு கமிஷனுக்கும் பிராமணர்களைத்தான் பிடிக்கிற வழக்கம். அதுமாத்திரமல்ல, ஒத்துழையாமையை ஒடுக்க சட்டமறுப்புக் கமிட்டி என்று ஒரு கமிட்டி ஏற்பட்டது. அதிலும் சென்னை மாகாணச் சார்பாய் இரண்டு ஐயங்கார் பிராமணர்கள்தான் நியமிக்கப்பட்டார்கள். மகாத்மா காந்தியை ஜெயிலுக்கு அனுப்ப வேண்டுமென்கிற அவசியம் நமது சர்க்காருக்கு வந்த போது அதற்காகவும் மகாகனம் வி.சீனிவாச சாஸ்திரியார் என்கிற ஒரு பிராமணரைக் கொண்டு அபிப்பிராயம் சொல்லச் செய்து மகாத்மாவை ஜெயிலுக்கு அனுப்பினார்கள்.

இதுமாத்திரமல்ல "இந்துமதப் புராணக் காலங்களிலேயே" ஏதாவது புரட்டுக்கோ, வஞ்சகத்திற்கோ, கொடுமைக்கோ, கொலைக்கோ, ஒருவர் அவசியமிருந்தால் அதற்கும் பிராமணர்களாகவே இருந்திருப்பதாகவும் கடவுளே மனிதராய் வந்து மேற்படி காரியங்களை செய்யவேண்டியிருந்தாலும் பிராமண அவதாரங்களையே யெடுத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அப்படியிருக்க இப்போது மாத்திரம் அது எப்படி பொய்த்துப் போகும். வாயில் மாத்திரம் "ஒத்துழையாமை" என்பார்கள்; "முட்டுக்கட்டை" என்பார்கள்; "சுயராஜ்யம்" என்பார்கள்; "சர்க்காரை ஸ்தம்பிக்கச் செய்வது" என்பார்கள்; "உத்தியோகம் ஒப்புக்கொள்வதில்லை" என்பார்கள்; காரியத்திலுள்ள உத்தியோகங்களை அவர்களே ஆவாகனப்படுத்திக் கொள்வார்கள். மந்திரிகள் உத்தியோக ஆசைபிடித்தவர்கள் என்று சொல்லி ஆள் வைத்து பிரசாரம் செய்து பாமர ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். ஆனால் மந்திரிகள் சர்க்கார் தயவில் ஒரு உத்தியோகமும் பெறவேயில்லை. அவர்கள் கட்சியார் சட்டசபைக்குப் பொதுஜனங்களால் பெரும்பான்மையாய்த் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அதன் பலனாய் அவர்களுக்கு அந்தப் பதவி சீர்திருத்தச் சட்டப்படி கிடைத்தது. ஆனால் பிராமணர்களுக்கு எந்தச் சட்டப்படி கிடைத்தது? சர்க்கார் தயவென்கிற சட்டப்படி கிடைத்தது. சர்க்கார் சொன்னபடியெல்லாம் ஆடி, குடிகள் தலையில் கையை வைத்து சர்க்காருக்கு அனுகூலம் செய்து கொடுத்ததன் பலனாய் அவர்களுக்குக் கிடைத்தது. இது சமயம் உயர்ந்த உத்தியோகமெல்லாம் யாரிடமிருக்கிறது? வெள்ளைக்காரர்களுக்கு அடுத்தாப்போல் பிராமணர்களிடம்தான் இருக்கிறது. பொறுப்புள்ள உத்தியோகமெல்லாம் பெரும்பான்மையாய் அனுபவித்து வருகிறார்கள். நிர்வாக சபை மெம்பர் பிராமணர். ரூபாய் 5333-5-4, ரிவனியு போர்டு மெம்பர் பிராமணர்



RangaRakes
tamilnavarasam.com

ரூ 3500, ஐக்கோர்ட்டு ஜட்ஜிகள் பிராமணர்கள் ரூ 3500. ஜில்லா ஜட்ஜிகள் பிராமணர்கள்; சப் ஜட்ஜிகள் பிராமணர்கள்; ஜில்லா முனிசிப்கள் பிராமணர்கள்; கலெக்டர்கள் பிராமணர்கள்; டிப்டி கலெக்டர்கள் பிராமணர்கள்; அட்வகேட் ஜெனரல் பிராமணர்; அரசாங்கக் காரியதரிசிகள் பிராமணர்கள்; கைத்தொழில் இலாக்கா டைரக்டர் பிராமணர். இன்னமும் 1000, 2000, 3000 சம்பளம் உள்ள எந்த இலாகாவை எடுத்துக்கொண்டாலும் பிராமணர்களே பெரும்பான்மையாய் நிறைந்துகொண்டு பனகால் ராஜா அப்படிச் செய்தார், பாத்ரோ இப்படிச் செய்தார், சிவஞானம்பிள்ளை ஒன்றும் செய்யவில்லை என்பதாகக் கூலியாள் வைத்து தூற்றிக்கொண்டு பொது ஜனங்களையும் ஏமாற்றி இவர்களை சர்க்காருக்கு காட்டிக்கொடுத்து அங்கும் உத்தியோகம் பெற்றுக்கொண்டு வாழ்கிறார்கள். இதை அறியாமல் சில பிராமணரல்லாதார் இந்த பிராமணர்கள் தின்று கழித்த எச்சிலையை தங்களுக்குப் போட மாட்டார்களா என்று அவர்கள் பின்னால் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்படியே நடந்து கொண்டிருந்தால் பிராமணரல்லாதார் கதிதான் என்னாவது? இதை ஒருவரும் கவனிப்பாரில்லையே. நம்மை சிலர் உத்தியோக ஆசை பிடித்தவர் என்று சொன்னாலும் சரி, ஒத்துழைப்பவன் என்று சொன்னாலும் சரி, ஜஸ்டீஸ் கட்சிக்காரன் என்று சொன்னாலும் சரி. இவ்விதம் ஒரு வகுப்பு நம்மைத் "தீண்டாதார்" "வேசி மக்கள்" என்று சொல்லிக் காலில் வைத்து அழுத்திக் கொண்டு அதிகாரங்களையும் பதவிகளையும் பெற்றுக் கொண்டு போக, மற்றவர்கள் கீழே போய்க்கொண்டிருப்பதென்றால், இது பிராமணரல்லாத சமூகத்திற்கே அவமானகரமான காரியம் என்றே சொல்லுவோம். அதிலும் நமது சர்க்காருக்கும் பிராமணரல்லாதார் என்றால் மிகவும் அலக்ஷியமாய் மதிக்கும்படியாகி விட்டது. இதற்குப் பிராமணரல்லாதாரிலேயே பிராமணர்களுடன் சுற்றித் திரியும் சில சமூகத் துரோகிகள் காரணமாயிருந்தாலும் பிராமணரல்லாதாருக்குள்ளும் சில கட்டுப்பாடுகளும் ஒற்றுமையும் தேவையிருக்கிறது. கடுகளவு தியாக புத்தியோடு பிராமணரல்லாதார் கலந்து வேலை செய்வார்களானால் இந்த சர்க்காரை ஆட்டி வைக்கலாம். ஆனாலும் நமது பிராமணர்கள் அதற்கு இடம் கொடுக்க மாட்டார்கள். என்றாலும் இது முடியாத காரியமல்ல. நமது பாமர ஜனங்களுக்கு நாம் செய்ய வேண்டிய பிரசாரம் எவ்வளவோ பாக்கியிருக்கிறது. பிராமணரல்லாதார்களுக்கு இனி ஒவ்வொரு வினாடியும் மிகுந்த விலை உயர்ந்ததாகும். ஒவ்வொரு பிராமணரல்லாதாரும் இனி உறங்கக் கூடாது. மகாத்மாவின் நிர்மாணத் திட்டமாகிய கதர், தீண்டாமை விலக்கு ஆகிய இரண்டுமே பிராமணரல்லாதாரின் ஜீவ நாடியாகும். இதன் மூலமாய்த்தான் கடைத்தேற முடியும். உத்தியோக வேட்டையில் பிராமணரைப் பின்பற்றும் பிராமணரல்லாதாருக்கு இதன் மகிமை தெரியாது. ஆதலால் உண்மை பிராமணரல்லாதாரே! எழுங்கள்!! கிராமப் பிரசாரம் செய்யுங்கள்! கிராமமெங்கும் "திராவிட"னையும் "குடி அரசை"யும் பரவச் செய்யுங்கள்.

**குடி அரசு - தலையங்கம் - 23.05.1926**



# ஏழாயிரம் பண்ணை பாலிய நாடார் சங்கத்தின் இரண்டாவதாண்டு கொண்டாட்டம்

அன்புள்ள வாலிப நாடார் சகோதரர்களே!

தங்கள் சங்கத்தின் நோக்கங்களைக் காண எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. முதலாவது நோக்கமாக "நாடார் சமூகம் அபிவிருத்தி அடையும்படி செய்தல்" என்று வைத்திருக்கிறீர்கள். இதுதான் உண்மையான நாடாராய் பிறந்தவர்கள் செய்ய வேண்டிய காரியம். **"நல்லாண்மை என்பது ஒருவருக்குத் தான் பிறந்த இல்லாண்மை யாக்கிக் கொளல்"** என்று நாயனார் சொல்லியிருப்பதின் தத்துவம் இதுதான். ஒவ்வொரு சமூகமும் தன் சமூக முன்னேற்றத்தை சீர்திருத்திக்கொண்டு பிறகு எல்லாச் சமூகத்தின் நன்மை யையும் பொது நன்மையையும் கவனித்தால்தான் அது முறையாகவும் பயனளிக்கக் கூடியதாகவும் இருக்கும். அஃதில்லாமல் தங்கள் சமூகம் சுயமரியாதை அற்றதாகவும், தீண்டாத சமூகமாகவும் இருப்பதை லக்ஷியம் செய்யாமலும், அதைப் பற்றி உணர்ச்சியில்லாமலும், நான் தேசபக்தன், பொது ஜனசேவை செய்பவன் என்று சொல்லிக்கொண்டு பொது உரிமை, பொதுச் சுதந்திரம் என்று பேசுவதெல்லாம் பொருளற்றதும் அறியாமையும் தனது சுய நலத்திற்கும் சுயகீர்த்திக்கும் பாடுபடுவதுமே ஒழிய வேறல்ல. ஏனெனில் நமது நாடு எக்காரணம் பற்றியோ பல சமூகங்களாக அமைக்கப்பட்டு போனதோடு ஒவ்வொரு சமூகங்களுக்கும் நிரந்தரமான குறைகள் ஏற்பட்டு சமூகக் கொடுமைகளால் அழுந்திக் கிடக்கின்றதுடன் தேச நன்மை, பொது நன்மை, சுதந்திரம், விடுதலை என்று ஏற்படுவதெல்லாம் ஒரு சமூகத்திற்கு நன்மை, ஒரு சமூகத்திற்கு தீமை, ஒரு சமூகத்திற்கு அதிக சுதந்திரம், ஒரு சமூகத்திற்கு அதிகமான அடிமைத் தனம் என்பதான பலனைத்தான் கொடுத்து வருகிறதேயல்லாமல் எல்லாச் சமூகத்திற்கும் சமமான நன்மை, சுதந்திரம், விடுதலை ஏற்படுவதில்லை. ஏனெனில் சில சமூகம் எக்காரணம் பற்றியோ முன்னணியில் இருந்து, கிடைக்கும் நன்மைகளை அபகரித்துக் கொள்ளுகின்றன. பல சமூகம் பின்னணியில் இருந்து அன்னிய சமூகத்திற்கு உழைத்துவிட்டு தேய்ந்துகொண்டு வருகின்றன. உதாரணமாக, நமது நாட்டில் காங்கிரஸ் இல்லாதபோது பிராமணரல்லாத சமூகத்திற்கு அரசியலிலும் பொதுவியலிலும் இருந்த சுதந்திரமும் செல்வாக்கும் காங்கிரஸ் ஏற்பட்ட பிறகு நாளுக்கு



RangaRakes tamilnavarasam.com

நாள் குறைந்துகொண்டே வந்துவிட்டது. அரசியலிலும் பொதுவியலிலும் இப்போது அதிகமான செல்வாக்கு பிராமணர்களுக்குத்தான் இருக்கிறது. பிராமணரல்லாதாரில் நாடார் சமூகத்திற்கு அதிக குறைவாய்த்தான் இருக்கிறது. இந்த நாடார் சமூகமும் தங்களுக்கென ஒரு சமூகத்தை வைத்துக் கொண்டு சமீபகாலமாய் அதற்கென்று உழைக்காமலிருந்திருந்து, வெறும் தேசபக்தியையும் சுதந்திரத்தையும் பேசிக்கொண்டு பொருளற்ற "தேச பக்தர்களாய்" "காங்கிரஸ்காரர்களாய்" இருந்திருந்தால் உங்கள் நிலை என்ன மாயிருந்திருக்கும். வழி நடை பாத்தியம் கூட அடைந்திருக்க மாட்டீர்கள். தீண்டாதவர்கள் கூட்டத்திலேயே இன்னும் இருந்திருப்பீர்கள். உங்கள் பெரியார்கள் சிலர் நாடார் மகாஜன சபை என்று ஒரு சபை ஏற்படுத்தி அதின் மூலம் உங்கள் சமூகத்திற்கு கொஞ்சம் சுயமரியாதை சம்பாதித்துக் கொடுத்த பிறகு இப்பொழுது உங்களில் பலர் 'தேசபக்தர்களாய்' வந்து விட்டார்கள். தனி சமூக முன்னேற்றத்திற்கு ஸ்தாபனமில்லாத, உழைப்பாளிகள் இல்லாத பல சமூகங்களின் கதி இப்போது என்னமாயிருக்கிறது? 'சக்கிலி' 'பறையர்' 'பள்ளர்' என்கிற பல பரம்பரையாய் பொதுஜன உழைப்பாளிகளாய் இருந்து வரும் சமூகங்களின் கதி எப்படி இருக்கிறது? இந்திய சமூகத்திற்கு அரசாங்கத் தாராலும் காலக் கிரமத்தாலும் பல 'சீர்திருத்தங்கள்' வந்தும் இந்தக் கூட்டத் தாருக்கு என்ன நன்மை கிடைத்திருக்கிறது. சர்க்கார் தயவிருந்தால்தானே தெருவில் நடக்கலாம், மனிதர்கள் கண்களில் தென்படலாம் என்றிருக்கிறது. அவர்களுக்கும் தங்கள் சமூக முன்னேற்றச் சங்கங்கள் இருக்குமானால் கூடியவரை அவர்களும் குறைந்த பக்ஷம் உணர்ச்சியுள்ளவர்களாகவாவது ஆகி இருப்பார்கள். மகமதிய கிறிஸ்துவ சகோதரர்கள் தங்கள் சமூக முன்னேற்ற சங்கத்தின் மூலமாய் சுயமரியாதை பெற்றார்களே ஒழிய 'காங்கிர சினாலும்' 'தேசபக்தியினாலும்' அல்லவே அல்ல. ஆதலால் மற்ற சமூகத்தா ரிடம் சமஉரிமை பெற்றுக்கொண்டு பிறகு பொது நலத்திற்கு பாடுபட்டால் பிறகு பொது உரிமை சமமாய் அடைய முடியும். ஆதலால் நாடார் சமூக முன்னேற்றத்தை உங்கள் சங்க நோக்கத்தில் முதன்மையாய் வைத்திருப்பது பற்றி நான் மிகுதியும் சந்தோஷப்படுகிறேன். இது சரியான அளவு கைகூட எல்லாம் வல்ல சக்தியை பிரார்த்திக்கிறேன்.

இரண்டாவது நோக்கம் "நாடார் ஜன சங்கத்தின் நோக்கங்களை அமுலுக்கு கொண்டுவரல்." இது மிகவும் முக்கியமான நோக்கமாகும். நோக்கங்களை அமுலுக்குக் கொண்டுவராத - கொண்டுவரமுடியாத சங்கங்கள் இருந்தாலும் ஒன்றுதான்; இறந்தாலும் ஒன்றுதான். வேஷத்திற்கும் பெருமைக்கும் வெறும் தீர்மானங்களைச் செய்வதில் பலனில்லை. பொது ஜனங்களை ஏமாற்ற பல தீர்மானங்களையும், சுயநலத்திற்காக அமுலுக்குக் கொண்டுவர சில தீர்மானங்களையுமுடைய தற்கால காங்கிரசின் கதி என்ன வாயிருக்கிறது. உண்மையிலேயே பொதுஜன நன்மைக்கான பல தீர்மானங் கள் ஏற்படுத்தி அதை அமுலுக்குக் கொண்டுவர பாடுபட்ட மகாத்மாவின் தலைமையின் கீழிருந்த காங்கிரசுக்கு தேசத்தில் எவ்வளவு யோக்கியதை



இருந்தது. பொதுஜனங்களை ஏமாற்ற நிர்மாணத் திட்டத்தை எழுதி வைத்து விட்டு சுயநலத்திற்கான சட்டசபை உத்தியோகம் முதலிய தீர்மானங்களை அமுலுக்கு கொண்டுவரும் சபையாய் காங்கிரஸ் இருப்பதால் அதனிடம் பொதுஜனங்களுக்கும் மதிப்பில்லை; அதனால் பொதுஜன நன்மையும் ஏற்படப் போவதில்லை. இனியும் கொஞ்ச காலத்திற்கு இப்படியே இருக்குமா னால் காங்கிரஸ் என்பது ஒரு அருவருக்கத்தக்க சாதனமாய்ப் போய்விடும். அதுபோலவே நாடார் மகாஜன சங்கமும் தங்கள் சமூகத்திற்கு ஏற்பட்ட திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவரப் பிரயத்தனப்படாமல், அச் சங்க வாலிபர்கள் தேசபக்தி என்றும் பொதுஜன நன்மை என்றும் சொல்லித் திரிவதானது சமூகத் துரோகமாவதோடல்லாமல் தாயைப் பட்டினி போட்டு வைத்துக்கொண்டு பிராமண சமாராதனை செய்தவனுக்குச் சமானமாவார்கள். ஆதலால் உங்களது இரண்டாவது நோக்கம் மிகவும் பாராட்டத்தக்கதும் ஓர் பரிசுத்தமான நாடார் வாலிபன் செய்யக்கூடியதுமாகும் என்றே சொல்லுவேன்.

மூன்றாவது நோக்கம் "நாடார்களுக்கும் இதர வகுப்பினருக்கும் ஐக்கிய உணர்ச்சியை உண்டுபண்ணுவது" என்பது. இது மிகவும் புத்திசாலித் தனமுடையதாகும். அதாவது முதலாவதாக உங்கள் சமூகத்தை முன்னேற்றிக் கொண்டு, இரண்டாவதாக உங்கள் ஜன சமூகத்தின் குறைவுகளுக்குச் செய்யப் பட்ட தீர்மானங்களை யெல்லாம் காரியத்தில் நிறைவேற்றிக்கொண்டு, மூன்றா வதாக மற்ற வகுப்பாரிடம் ஐக்கிய உணர்ச்சியை உண்டுபண்ணல் என்பது தான் காரியத்தில் ஆகக்கூடிய காரியம். அவனவன் வகுப்பு மற்ற வகுப்பாரால் தீண்டாத வகுப்பாகவும் சுயமரியாதை அற்ற வகுப்பாகவுமாய் இருக்கும் போது மற்ற வகுப்பாரிடம் ஐக்கிய உணர்ச்சி எப்படி உண்டாக முடியும்? மற்ற வகுப்பார்தான் எப்படி ஐக்கியமாயிருக்கச் சம்மதிப்பார்கள்? ஆதலால் இதை மூன்றாவதாக வைத்த நோக்கமும் பிரயத்தனமும் மிகவும் சரியானதே.

நான்காவது "வாசகசாலை ஏற்படுத்தல்" என்பது. இதுவும் முக்கிய மானதுதான். வெறும் B.A. பரீக்ஷையிலாவது, M.A. பரீக்ஷையிலாவது, பண்டித பரீக்ஷையிலாவது, கனபாடி பரீக்ஷையிலாவது, சிரோமணி, மஹாமஹோ பாத்தியாய பரீக்ஷையிலாவது அறிவு வரவே வராது. இவ்வளவும் படித்து முட்டாள்களாகவும் அயோக்கியர்களாகவும் வெகு பேர் இருக்கிறார்கள். இவைகள் ஒன்றும் படிக்காத கையெழுத்துக்கூட போடத் தெரியாதவர்களும் புத்திசாலிகளும் யோக்கியர்களும் பலர் இருக்கிறார்கள். புத்தகப் படிப்பு 'வித்தை' யாகுமே தவிர கல்வியாகாது. பல புத்தகங்களை வாசித்த ஒரு மனி தனும் சரி, பல புத்தகங்களை உடைய ஒரு அலமாரியும் சரி, இரண்டும் ஒன்றுதான். பெயரில் மாத்திரம்தான் வித்தியாசம். அதாவது முன்னையது நடை அலமாரி; பின்னையது நிலை அலமாரி . பல புஸ்தகங்களைப் படித்து அவைகளில் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளித்து பரீக்ஷையில் தேறின மஹாமஹோபாத்தியாய - பண்டித பட்டம் பெற்றவனும் ஒன்றுதான்; பல வழிகளில் செருப்புத் தைக்கும் வழிகளை அறிந்து அதுசம்பந்தமான



RangaRakes tamilnavarasam.com

கேள்விகளுக்குப் பதிலளித்து, பரீக்ஷையில் தேறி அதில் பட்டம் பெற்றவனும் ஒன்றுதான். புத்தகத்தைப் படித்து ஒப்புவிப்பது மனப்பாட வித்தை, செருப்பைத் தைத்துக் காட்டுவது தொழில் வித்தை. இருவரும் 'வித்தை' யாளர்களே தவிர கல்வியாளர்கள், அறிவாளர்கள் ஆகமாட்டார்கள். உண்மையான கல்வியாளர்களாக வேண்டுமானால் உலக அனுபவத்தையும் இயற்கை அனுபவத்தையும் அறியவேண்டும். இதை உத்தேசித்தேதான் **"ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்"** என்றும் **"உலகத்தோடொட்ட வொழுகல் பல கற்றும் கல்லாரறிவிலாதார்"** என்றும் நாயனார் சொல்லியிருக்கிறார். ஆதலால் இவ்வித அறிவுப் பெருக்கத்திற்கும் கல்விக்கும் சங்கமும் யாத்திரையும் வேண்டும். உலக யாத்திரைக்குச் சக்தியற்றவர்கள் பல தேச வர்த்தமானங்களையாவது அறிய வசதி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்குதான் வாசகசாலை என்பது.

*( தொடர்ச்சி 30.05.1925 குடி அரசு )*

*குறிப்பு :- ஏழாயிரம் பண்ணையில் 16.5.26 - ஆம் தேதி நடைபெற்ற பாலிய நாடார் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு கொண்டாட்ட தலைமை உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 23.05.1926**



# மதமும் மததர்ம பரிபாலனமும்

## சென்னை ஹிந்துமத தர்ம பரிபாலனச் சட்டமும் அதன் விரோதிகளும்

உங்களுடைய சங்கத்தின் ஐந்தாவது நோக்கம் மததர்ம பரிபாலனங்களை ஒழுங்காக நடைபெறச் செய்தல் என்பது. இது தற்காலம் நாடார் சமூகத்திற்கு மாத்திரமல்ல, இந்து மதத்திற்கே - இந்தியாவிற்கே - ஏன் உலகத்திற்கே மிகவும் அவசியமானது.

### கடவுள் என்றால் என்ன?

குறிப்பாகவும் சிறப்பாகவும் கடவுள் என்பது என்ன என்பதைப் பற்றியும், மதம் என்பது என்ன என்பதைப் பற்றியும், தர்மம் என்பது என்ன என்பதைப் பற்றியும், பரிபாலனம் என்பது என்ன என்பதைப் பற்றியும் இந்துக்கள் என்போர்களில் ஆயிரத்திற் கொருவருக்குக் கூட குறைந்த அளவு ஞானமுமில்லாமலே இருக்கிறது. இதைப்போல ஒரு பெரிய ஜன சமூகத்திற்கு கேடான காரியம் வேறெதுவும் இல்லை. நம்மில் அநேகர் கடவுள் என்றால் என்ன என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். கடவுள் நம்மைப் போல் மனித உருவத்தோடு இருப்பதாயும்; அதற்கு பெண்டாட்டி, பிள்ளை, தாய் , தகப்பன், வீடு வாசல், சொத்து சுகம் உண்டென்றும், அதற்கும் கல்யாணம், ருது, சாந்தி, படுக்கை, வீடு, சீமந்தம், பிள்ளைப்பேறு உண்டென்றும் இப்படி ஆயிரக்கணக்கான கடவுள் ஆயிரக்கணக்கான பெயரினால் இருக்கிறதாகவும் அதற்கு அபிஷேகமோ, பூஜையோ, தீபாராதனையோ, உற்சவமோ செய்வது தான் பக்தி என்பதாகவும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### ஹிந்து மதம் எது?

அதுபோலவே மதம் என்பதையும் நெற்றியில் நாமமோ, விபூதியோ, கோபியோ, சந்தனமோ பூசுவதுதான் இந்துமதம் என்றும், ஒருவரை ஒருவர் தாழ்ந்த ஜாதி உயர்ந்த ஜாதி என்று சொல்லுவதைத் தான் இந்து மதம் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி சுவாமிகளுக்குக் கோயில் கட்டுவதையும், உற்சவம் நடத்துவிப்பதையும், இந்த உற்சவத்திற்கு வரும் ஜனங்களுக்கு மடம் கட்டுவதும், சத்திரம் கட்டுவதும், சாப்பாடு போடுவதும் தர்மம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வித காரியத்தை பிரசாரம்



RangaRakes tamilnavarasam.com

செய்வதையும் இவ்வித காரியங்களை நிர்வகிப்பதையும் இதற்காகப் பொது ஜனங்கள் பொருளை செலவு செய்வதையும் பரிபாலனம் என்று நினைக்கிறார்கள்.

## கடவுளும் மதமும்

இந்து சமூகத்திற்கு அடிப்படையான குற்றம் - அதாவது அஸ்திவாரத்திலேயே பலவீனம் - நாம் கடவுளையும் மதத்தையும் அறிந்திருக்கும் பான்மையே தான். இந்தப் பான்மையுள்ள சமூகம் உருப்படியாவதற்கு மார்க்கமேயில்லை. தொட்டதற்கெல்லாம் 'கடவுள் செயல்' என்பதும் நமது தேவைகளையெல்லாம், நமது பிரயத்தனமில்லாமல், கடவுளை ஏமாற்றி அடைந்துவிடலாம் என்கிற பேராசைப் பயித்தியமும் நம்மைவிட்டு நீங்க வேண்டும். கடவுள் கை, கால், கண், மூக்குடன் மனிதனைப்போல் எங்கேயோ ஓரிடத்தில் இருக்கிறார், அவரை நினைத்தாலோ, பணிந்தாலோ, "தேங்காய் பழம் உடைத்து பொங்கல் வைத்து பூஜை செய்தாலோ, பூசாரிக்குப் பணம் கொடுத்தாலோ மனிதனாய்ப் பிறந்ததற்கு செய்ய வேண்டிய கடன் தீர்ந்து விட்டது, மனிதன் செய்யும் தப்பிதம் எல்லாம் தீர்ந்து விட்டது என்று எண்ணுகிற எண்ணத்தைப்போல் ஒரு முட்டாள்தனமான எண்ணம் வேறொன்றுமேயில்லை. மனிதர்கள் இவ்வளவு அக்கிரமங்கள் செய்யக் காரணமே, கடவுளை சரியானபடி உணராததும் உணர்ந்திருப்பதாய் நினைக்கும் பலர், கடவுளை வணங்கி மன்னிப்புக் கேட்டால் மன்னித்துவிடுவார் என்கிற நம்பிக்கையும் தான். கடவுள் ஒருவர் இருக்கிறார், அவர் எல்லாவற்றையும் அறிந்து கொண்டு இருக்கிறார் என்று எண்ணுகிற மக்களிலேயே 1000-தில் ஒருவன் கூட கடவுள் கட்டளைக்குப் பயந்து நடப்பது அருமையாய்த்தான் இருக்கிறது. இவற்றிற்குக் காரணம் இயற்கைக்கு விரோதமான கட்டளைகளையும் உண்மையான கடவுள் தன்மையையும் அறியாததேதான்.

## கடவுளின் கட்டளை எது?

கடவுள் கட்டளை என்று சொல்லுவது ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு விதமாக இருந்து வருவதை நாம் காண்கிறோம். இவைகளை எப்படி கடவுள் கட்டளையாக மதிக்கப்படும். அது போலவே பாவ புண்ணியம் என்பது தேசத்திற்கு ஒரு விதமாகவும் மதத்திற்கொரு விதமாகவும் ஜாதிக்கொரு விதமாகவும்தான் கருதப்படுகிறது. நமது கல்யாணங்களிலேயே மதத்திற்கு மதம் வித்தியாசம்; ஜாதிக்கு ஜாதி வித்தியாசம். சிலர் தனது சிறிய தகப்பனார், பெரிய தகப்பனார் புத்திரியை மணக்கிறார்கள்; சிலர் அத்தை மாமன் புத்திரியை மணக்கிறார்கள்; சிலர் யாரையும் மணக்கிறார்கள். ஆகார விஷயத்திலோ சிலர் பசுவை உண்ணுவது பாவம் என்கிறார்கள், சிலர் பன்றியை உண்பது பாவம் என்கிறார்கள். சிலர் கோழியை உண்பது பாவம் என்கிறார்கள், ஜெந்துக்களிலேயே சிலர் பசுவை அடித்து துன்புறுத்தி



வேலை வாங்கலாம், ஆனால் பாம்பை அடிப்பது பாவம் என்கிறார்கள். சிலர் எந்த ஜீவனையும் வதைக்கக் கூடாது என்கிறார்கள். சிலர் எல்லா ஜீவனும் மனிதன் தன் இஷ்டம்போல் அனுபவிப்பதற்குத்தான் படைக்கப்பட்டது என்கிறார்கள். இந்த நிலையில் எது உண்மை? எது கடவுள் கட்டளை? எது பாவம்? என்று எப்படி உணர முடியும். இவற்றைப்பற்றி எவராவது ஆராய்ச்சி செய்யப் புகுந்தால் உடனே அவரை நாஸ்திகர் என்று சொல்லுவதும், இதெல்லாம் உனக்கு எதற்காக வேண்டும் பெரியவர்கள் சொன்னபடியும், நடந்தபடியும் நடக்கவேண்டியதுதானே என்றும் சொல்லி விடுவார்கள்.

## "பெரியவர்கள்" யார்?

பெரியவர்கள் யார் என்று யோசிக்கப் போனால் அதிலிருக்கும் கஷ்டத்திற்கு அளவே இல்லை. அன்றியும் அவர்கள் சொன்னதையும் நடந்ததையும் கவனிக்கப் போனால் அதிலுள்ள கஷ்டத்திற்கும் வியவகாரத்திற்கும் முடிவேயில்லை. உதாரணமாக சிலர் 'வேதம்' என்று ஒன்றைச் சொல்லி அதன்படி எல்லாரும் நடக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். அதில் என்ன சொல்லியிருக்கிறது, நான் பார்க்கலாமா என்றால், அது கடவுளால் சொல்லப்பட்டது, அதை நீ பார்ப்பது பாவம், நான் சொல்லுவதைத்தான் நம்ப வேண்டும் என்பார்கள். உலகத்தில் எத்தனைக் கடவுள் இருப்பார்கள். ஒரு கடவுள் தானே! அவர் சொல்லியிருப்பாரானால் அது உலகத்திற்கெல்லாம் ஒப்புக் கொள்ளப்பட்டதாயிருக்க வேண்டாமா? அப்படியானால், கிருஸ்து, மகம்மது முதலிய மதங்களும் இந்தியா தவிர மற்ற தேசங்களும் இதை ஒப்புக் கொள்ளும்படி கடவுள் ஏன் செய்யவில்லை? ஆனதனால் இது கடவுள் சொன்னார் என்பது பொய் என்று யாராவது சொன்னால் உடனே அவனை 'வேதப் பிரஷ்டன்' என்று சொல்லி விடுவார்கள். இம்மாதிரி மூடுமந்திரமானதும் இயற்கைக்கும் அனுபவத்திற்கும் நாணயத்திற்கும் விரோதமானதுமான கொள்கைகள் நமது நாட்டில் இந்து மதத்தின் பெயரால் இருந்துகொண்டு ஒரு பெருஞ் சமூகத்தையே தேய்ந்து போகும்படி செய்வதோடு - இதன் பரிபாலனம் என்னும் பெயரால் தேசத்தின் நேரமும் அறிவும் பொருளும் அளவற்று அநாவசியமாய்ச் செலவாகியும் வருகிறது.

## மதத்திற்கொரு கடவுளா?

மதத்திற்கொரு கடவுளா? ஜாதிக்கொரு கடவுளா? மதத்திற்கொரு வேதமா? மதத்திற்கொரு புண்ணிய பாவமா? கடவுளுக்கும் மோக்ஷத்திற்கும் நரகத்திற்கும் வேறு ஒரு உலகமிருக்கிறதா? ஒருக்காலும் இருக்கவே முடியாது. பெரியவர்கள் கோவிலில் சுவாமி கும்பிடும்போது கட்கத்திலிருக்கும் குழந்தை எப்படி ஒன்றும் அறியாமலும், மனதில் ஒன்றும் நினைக்காமலும் தானும் கைகூப்பி கும்பிடுகிறதோ, அதுபோலவே நமக்கும் தெய்வம்-மதம்-தர்மம் என்கிற சொற்கள் மற்றவர்கள் சொல்லுவதைக்கேட்டு அர்த்தமில்



RangaRakes tamilnavarasam.com

லாமல் நமக்குள் பதிந்துவிட்டன. இது போலவே பக்தி- தொண்டு - அஹிம்சை என்னும் பதங்களும் அர்த்தமில்லாமலே வழங்கப்படுகின்றன. யோசித்துப் பார்ப்போமேயானால் நம்மிடையில் உள்ள மக்களிடம் காட்டும் அன்புதான் நாம் பக்தி செய்யத்தக்க கடவுள்; அவர்களுக்குச் செய்யும் தொண்டுதான் கடவுள் தொண்டு; அம்மக்களின் விடுதலைதான் மோக்ஷம்; அச்ஜீவன்களிடம் கருணை காட்டுவதும் அவைகள் வேதனைப்படா மலிருப்பதும்தான் அஹிம்சை.

## அஹிம்சை எது?

மாமிசம் சாப்பிடுவதில்லை என்பது மாத்திரமே அஹிம்சையாகாது. பகுத்தறிவுள்ள மக்களை கஷ்டப்படுத்தாமல், அவர்கள் மனவேதனை அடையச் செய்யாமல் இருப்பதும், அவர்களுடைய கஷ்டத்தையும் அடி மைத் தனத்தையும் நீக்க உழைப்பதும்தான் அஹிம்சையாகும். மாட்டு மாமிசம் சாப்பிடாமலிருந்து விட்டு, மாட்டை வண்டியில் கட்டி சுமக்க மாட்டாத பாரம் வைத்து தினம் கஷ்டப்படுத்துவது ஒருக்காலும் அஹிம்சை யாகாது. இப்படியே ஒவ்வொரு விஷயத்திலும் மற்றொரு ஜீவனுக்கு உபத்திரவமும் கொடுமையும் செய்யாமலிருப்பதுதான் அஹிம்சை.

## ஆச்சாரம்

மனிதனுக்கு மனிதன் பார்ப்பது பாவம், தெருவில் நடப்பது பாவம் என்று சொல்லிக்கொண்டும் பட்டை நாமம் போட்டுக் கொண்டும் பஞ்ச கச்சம் வைத்து வேஷ்டி கட்டிக்கொண்டும் வாயால் ‘ராம் ராம்’ என்று ஜபித்துக் கொண்டும் இருந்தால் அது ஆச்சாரமும் பக்தியுமாய்விடுமா?

## சத்திரமும் சாப்பாடும்

நம்மைச் சுற்றி கோடிக்கணக்கான மக்கள் குடியிருக்க நிழல் இல்லாம லும் இரண்டு நாளைக்கு ஒருவேளை கூட சாப்பிட சக்தியில்லாமல் தரித்திரத் தால் வாடிக் கொண்டிருக்கும் போது சோம்பேறிகளும், விபசாரிகளும் தங்கும் படி மடங்களும் சத்திரங்களும் கட்டுவதும், வயிறு நிறைய சாப்பிட்டு விட்டு ‘பாயசத்திற்கு குங்குமப்பூ போட வில்லை’, ‘பொங்கலுக்கு பாதாமி பருப்பு போதவில்லை’ என்று சொல்லிவிட்டுப் போகும் தடியர்களுக்கு பொங்கிப் போடுவதும், சமாராதனை செய்வதும் தர்மமாகுமா? இவைகளை உணராமல் சுயநலக்காரர்கள் தங்கள் நன்மைக்கு எழுதி வைத்திருக்கும் ஆபாசக் களஞ்சி யங்களை நம்பிக்கொண்டு நமது பொருள், நேரம், அறிவு முதலியவற்றை வீணே பாழாக்குகிறோம்.



## ஆச்சாரியார் கொடுமை

இவற்றை இந்துக்கள் என்போர்களோ இந்து மத ஆச்சாரியார்கள் என்போர்களோ சிறிதும் கவலையற்று தங்களது வாழ்வுக்கு இதைத் தொழிலாய் வைத்துக்கொண்டு காலங் கழித்து வருகிறார்கள். இப்படி நடந்து வருவது சில தனிப்பட்ட நபர்களுக்கும் சில தனிப்பட்ட வகுப்புகளுக்கும் அனுகூலமாயிருப்பதால் இவ்வாபாசங்களை வெளியார் அறியாமலிருப்ப தற்கு அவ்வகுப்பாரின் கட்டுப்பாடான சூழ்ச்சியும் மற்ற வகுப்பாரின் அறியாமையும் உதவி செய்து வருகிறது. நமது சென்னை மாகாணத்தில் மாத்திரம் இந்து மத சம்மந்தமான சடங்குகள் பெயராலும், மதப் பெயராலும், தெய்வங்கள் பெயராலும் வருடம் 1-க்கு 10 கோடி ரூ. க்கு அதிகமாக செலவாகி வருகிறது என்று சொல்லுவது அதிகமாகாது. அதாவது எவ்வளவு யாத்திரை ஸ்தலம், எவ்வளவு வேண்டுதல் ஸ்தலம், எவ்வளவு உற்சவ ஸ்தலம், எவ்வளவு மதச்சடங்குகள் இவைகளுக்கேற்படும் செலவு, மெனக் கேடு இவைகளைக் கணக்குப் பார்த்தால் எவ்வளவு 10 கோடி ரூபாயாகும்? இதனால் என்ன பலனை அடைகிறார்கள்? மனதில் ஏற்படும் ஒரு குருட்டு நம்பிக்கையாலும் இதனால் லாபமடையும் வகுப்பார்களால் ஏமாற்றப்படுவ தாலும்தானே நமது மக்கள் இவ்வித கஷ்ட நஷ்ட மெனக்கேடுகளுக்கு கட்டுப்பட வேண்டியிருக்கிறது. அல்லாமலும் இதனால் எவ்வளவு அடிமைப் புத்தி வளர்கிறது?

## மத தர்ம பரிபாலனம்

இவ்விஷயங்களையெல்லாம் ஒழுங்குபடுத்தவும் இம்மாதிரி கஷ்ட நஷ்ட மெனக்கேடுகள் ஏற்படாமலும் அவை உண்மையில் பலனளிக்கத்தக்க வழியில் உபயோகப்படவும் வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்வதுதான் மத தர்ம பரிபாலனங்களை ஒழுங்காக நடைபெறச் செய்தல் என்பது. இவற் றை உத்தேசித்தே இந்துமத பரிபாலன சட்டம் என்று சென்னை சட்டசபையில் ஒரு சட்டம் கூட நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனாலும் அச்சட்டம் பண சம்பந்தமான வரவுசெலவுகளை தணிக்கை பார்க்கக் கூடியதாய் இருக்கிறதே தவிர நான் மேலே சொல்லியுள்ள குற்றங்களை நிவர்த்தி செய்யத்தக்கது என்று சொல்லமுடியாது. ஆனாலும் இவ்வளவாவது எவ்வளவோ சூழ்ச்சிக் கிடையில் நிறைவேற்றி முடித்தவர்களின் வீரத்தைப் போற்றாமலிருக்க முடியாது. ஆனாலும் இன்னமும் அச்சட்டத்தை ஒழிப்பதற்கு அதனால் இப்போது கொள்ளையடிக்க முடியாத ஒரு வகுப்பாரால் எவ்வளவோ காரியங்கள் நடைபெற்று வருகின்றன. ஸ்ரீமான்கள் S. சீனிவாசய்யங்கார், C. ராஜகோபாலாச்சாரியார் முதலியவர்கள் ‘சுயராஜ்யக் கட்சி’ பெயரைச் சொல்லிக் கொண்டும் கள்ளு நிறுத்துவதென்பதைச் சொல்லிக்கொண்டும் சட்டசபைக்கு ஆள் பிடிப்பதும் அவர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுப்பதும் இதே கருத்தைக் கொண்டுதான். நமது மதத்தின் பெயரால் நமது மக்களிட



RangaRakes tamilnavarasam.com

மிருந்து கோடிக்கணக்காய் வசூலாகும் பணத்திற்கு கணக்குக் கேட்பது கூட நமது அய்யங்கார் - ஆச்சாரியார் கூட்டங்களுக்கு கஷ்டமாய் இருப்பதன் காரணம் என்னவென்பதை ஊன்றிக் கவனித்தால் யாவருக்கும் அதன் இரகசியம் விளங்கும். ஆதலால் தர்ம பரிபாலன மென்பது ஒவ்வொரு மனிதனும் கவலையெடுத்துக் கொண்டு அது பிரயோஜனப் படத்தக்க வழியில் உழைக்க வேண்டியது ஒவ்வொரு மனிதனின் முக்கியமான கடமை. அப்போப்பட்ட கடமையை நீங்கள் ஐந்தாவது கொள்கையாக வைத்திருப் பதைப் பற்றி நான் மிகுதியும் போற்றுகிறேன். ஆகவே, உங்கள் சங்கம் நீடூழி வாழ்ந்து அதன் கொள்கைகள் பூராவும் நிறைவேறி தங்கள் சமூகத்திற்கும் நாட்டிற்கும் தக்க பலனையளிக்க எல்லாம் வல்ல சக்தியை வேண்டுகிறேன்.

*குறிப்பு :- ஏழாயிரம் பண்ணையில் 16.5.26 - ஆம் நாள் நடைபெற்ற பாலிய நாடார் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு கொண்டாட்ட தலைமை உரை - தொடர்ச்சி)*

**குடி அரசு - சொற்பொழிவு - 30.05.1926**



# தொழிலாளர் சங்கம் தூய்மையுற வேண்டும்

## அரசியல் கட்சிக்குள் அடைக்கலம் புகலாகாது, தன் கையே தனக்குதவி

சகோதரர்களே!

நான் இதுவரை எந்த தொழிலாளர் சங்கத்திலும் பேசியதேயில்லை. டாக்டர் வரதராஜுலு நாயுடுவுடன் இரண்டொரு சங்கங்களுக்குப் போயிருக் கிறேன். ஈரோட்டில் கூடிய தொழிலாளர் மகாநாட்டில் உபசரணைத் தலைவ ராக இருந்து இரண்டொரு வார்த்தைகள் பேசியிருக்கிறேன்.

### தொழிலாளர் சங்கம்

பொதுவாய் தொழிலாளர் சங்கம் என்றாலே எனக்கு அதனிடத்தில் விருப்பமிருப்பதில்லை. அதில் ஒரு சத்து இருப்பதாகவே எனக்குத் தோன்று வதில்லை. சில வெறும் வெளி ஆசாமிகள் அதை தங்கள் நன்மைக்கும் கீர்த் திக்கும் ஏற்படுத்திக் கொண்ட சாதனமென்பதே என்னுடைய வெகு நாளைய அபிப்பிராயம். அல்லாமலும் நமது நாட்டில் உண்மையான தொழிலாளிகளே கிடையாது.

### தொழிலாளர் யார்?

நமது நாட்டில் இப்போது தொழிலாளிகள் என்று சொல்லப்படுவோ ரெல்லாம் தொழிலாளிகளல்ல. அவர்கள் எல்லாம் கூலிக்காரர்கள்தான் . தொழிலாளி என்பவன் நாட்டின் நன்மைக்கான ஒரு தொழிலைக் கற்று அத் தொழிலைத் தானாகவே சுயேச்சையுடன் செய்து, அதன் பலன் முழுவ தையும் தானும் தன் நாட்டு மக்களும் அடையும்படியான முறையில் தொழில் செய்பவன்தான் தொழிலாளி. நீங்கள் அப்படியில்லை. ஏதோ ஒரு முதலாளி யின் கீழ் தினக்கூலிக்கமர்ந்து, உங்களுக்கு எவ்வித சுதந்திரமுமில்லாமல் முதலாளி சொல்லுகிறபடி செய்துவிட்டு, அதன் பலன் முழுவதையும் அவனே அடையும் படி செய்து, உங்கள் ஜீவனத்திற்குக் கூட போதுமானதா யில்லாத கூலியை வாங்கிப் பிழைக்கிறீர்கள். ஒரு முதலாளிக்குக் கீழ் வேலை செய்து கூலி வாங்குபவன் எவ்வளவு பெரிய கூலிக்காரனானாலும் அவன் கூலிக்காரன்தான்; அடிமை தான்.



RangaRakes tamilnavarasam.com

## தொழிலாளியும் தொழிலும்

தொழிலுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? தொழிலின் பலனுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? தொழிலின் அருமை உங்களுக்கு ஏதாவது தெரியுமா? காலையில் பட்டறைக்குள் போய் புகுந்தால் மாலை வரை அவன் சொல்லுகிறபடி உழைக்க வேண்டியது; வாரத்திற் கொருமுறை கூலி வாங்கிக்கொள்ள வேண்டியது. தெருக்களில் கூலிக்கு மூட்டை தூக்கி அவ்வப்போது கூலிவாங்கும் நபருக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்? அவர்கள் தங்களுக்கு கூலி போதாது, அதிக பாரமா யிருக்கிறது, இன்னும் சேர்த்துக் கொடு என்று முதலாளியைக் கேட்பதற்கும் நீங்கள் சங்கம் என்று பெயர் வைத்துக்கொண்டு செய்யும் தீர்மானங்களுக்கும் என்ன வித்தியாசம்? சில சமயங்களில் கூலிக்காரனாவது தான் தூக்கும் பாரத்தையும், தூக்கிக்கொண்டு செல்லும் தூரத்தையும் அறிந்து கூலி அதிகம் கேட்கிறான். நீங்கள் அதுகூடயில்லை. உங்கள் தொழிலின் அருமை இன்னதென்று கூட உங்களுக்குத் தெரியாமல் முதலாளியைப் பார்த்து, நீ இவ்வளவு ரூபாய் கொள்ளையடிக்கிறாயே, நீ இவ்வளவு சுகப்படுகிறாயே என்கிற பொறாமையின் மேல், ஏன் எனக்கு இன்னும் கொஞ்சம் கூலி சேர்த்துக் கொடுக்கக் கூடாது என்று பல்லைக் கெஞ்சுகிறீர்கள். தனித்தனியாய் கெஞ்சுவதற்குப் பதிலாய் நாலு பேர் சேர்ந்து கெஞ்சுவதைத் தொழிலாளர் சங்கம் என்கிறீர்கள். அதுவும் உங்களுக்குக் கெஞ்சிக் கேட்க சக்தியில்லா மல், உங்கள் தொழிலிலோ உங்கள் கஷ்டத்திலோ கொஞ்சமும் சம்பந்தமில் லாத ஒருவரை உங்கள் சங்கத் தலைவராயும் காரியதரிசியாயும் சில சமயங் களில் நிர்வாகஸ்தர்களாயும் வைத்துக் கொண்டு கூலியை உயர்த்தும்படி கேட்கிறீர்கள்.

## தற்காலத் தலைவர்களால் பயனில்லை

ஒரு முதலாளியிடம் வேறொருவன் போய் "ஐயா! உங்களிடம் உள்ள கூலிக்காரர்களுக்கு கூலி போதவில்லை, கொஞ்சம் சேர்த்து கொடுங்கள்" என்று சொன்னால் அந்த முதலாளிக்கு கூலிக்காரர்களிடம் என்ன மதிப்பு இருக்கும். அதுபோலவே உங்கள் சவுகரியத்திற்கு வேறு ஒருவன் போராடு கிறான் என்றால் உங்களுக்கு உங்களுடைய தேவை இன்னதென்று கூடத் தெரியவில்லை என்பது தானே பொருள். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் உபாத்தியாயரிடம் போய் "எனக்கு வயிறு வலிக்கிறதென்று எங்கள் தாயார் சொன்னார்கள். ஆதலால் இன்றைக்கு லீவு கொடுங்கள்" என்று கேட்பது போலவே நீங்கள் வேறொருவரை உங்கள் சங்கத்திற்கு தலைவராக வைத்துக் கொண்டு காரியங்களைச் செய்வதும், உங்களுக்கு சம்பந்தமில்லாதவைக ளைப் பின்பற்றுவதுமாகும். வெளியிலிருந்து உங்களுக்குத் தலைவர்களாய் வருகிறவர்களுக்கு முதலாவது உங்கள் வேலையிலுள்ள கஷ்டமும், உங்களுக்கு இருக்கிற கஷ்டமும் அவர்களுக்கு எப்படித் தெரியும்?



உதாரணமாக, இது சமயம் நமது நாட்டு தொழிலாளர் சங்கத் தலைவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். யாருக்காவது உங்கள் தொழிலின் அருமை தெரி யுமா? உங்கள் கஷ்டத்தின் கொடுமை தெரியுமா? அவர் தனது கீர்த்திக்காக உங்களுக்கு தலைவராய் இருப்பார். அவர் ஒரு தொழிலும் செய்யாமல் மாதம் 500, 1000, 5000, 10000 என்று பொது ஜனங்களின் பணத்தை உங்கள் முதலாளி களைப் போலவே கொள்ளை அடித்து சுகபோகமனுபவித்துக் கொண்டு, தனது சுயநலத்தை நாடிக் கொண்டிருப்பவராயிருப்பார். அவர்களால் உங்க ளுக்கு எந்தத் துறையில் அனுகூலம் கிடைக்கக்கூடும். அவர்களைக் கண் டால் உங்கள் முதலாளிமார்கள் எப்படி மதிக்கக்கூடும். இதே முகாந்தரங் களால் தான் நமது நாட்டு தொழிலாளர் சங்கங்கள் என்பது இதுவரை உருப்படி யாகாமல் போனதற்குக் காரணம்.

## வேலைநிறுத்தமும் தலைவர்களும்

அநேக இடங்களில் வேலைநிறுத்தம், வெளியேற்றம் நிகழ்கிறது. இவைகள் ஏற்பட்டு என்ன பலன் கிடைத்தது? அதன் பலனாய் எவ்வளவு தொழிலாளிகளுக்கு வேலை போய் கஷ்டமுண்டாயிற்று? இவற்றை எந்தத் தலைவர் கவனித்தார்? பல தொழிலாளி, தலைவர்கள் வார்த்தையைக் கேட்ட தின் பலனாய் வயிறாரக் கஞ்சியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டுதானிருக் கிறார்கள். அவர்களை நடத்தின தலைவர்கள் இன்றைய தினம் முன்னிலும் அதிகமான கீர்த்தியுடனும் வரும்படியுடனும் வயிறு வெடிக்கச் சாப்பிட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். மற்றும் பல தலைவர்கள் தங்கள் பிள்ளை குட்டி களுக்கு உங்கள் முதலாளிமார்களிடம் உத்தியோகம் பெற்றுக் கொண்டுதானி ருக்கிறார்கள். விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுவதுபோல் வெளியார்களை உங்கள் சங்கத் தலைவர்களாய் வைத்துக் கொண்டிருக் கிறீர்கள்.

## தொழிலாளரும் அரசியலும்

அதுமாத்திரமல்ல, உங்கள் சங்கதியே உங்களுக்குத் தெரியாமல் இப்படித் திண்டாடும்போது, சூதாட்டத்திற்குச் சமானமான அரசியல் கக்ஷிகளில் உங்கள் சங்கங்களை நுழைத்துக் கொள்ளுகிறீர்கள்; தனித்தனி யாகவும் நுழைகிறீர்கள். கூலிக்காரனுக்கும் அரசியலுக்கும் வெகுதூரம். அரசியல் என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்கள் வயிற் றுக்கு கூலி கேட்கவே உங்களுக்குத் தெரியவில்லையானால், உலகத்துக்கு தேவையை நீங்கள் அறிவதெப்படி? உங்களுக்கு இருக்கும் வியாதி இன்ன தென்று கண்டுபிடிக்க உங்களால் முடியாமலிருக்கும்போது நீங்கள் ஊரா ருக்கு வைத்தியம் செய்வதென்பது சிரிப்பாயிருக்கவில்லையா? உங்களு டைய அரசியல் என்ன? முதலியாரை வண்டியில் வைத்து இழுக்கலாமா? நாயுடுவை வண்டியில் வைத்து இழுக்கலாமா? அய்யங்காரை வண்டியில்



RangaRakes tamilnavarasam.com

வைத்து இழுக்கலாமா? நாயக்கரை வண்டியில் வைத்து இழுக்கலாமா? என்பது போன்றவையும், யாரை சட்டசபைக்கு அனுப்பலாம், யாருக்கு 'ஜே' போடலாம்? யாருக்கு ஓட்டுச் செய்யலாம்? என்பது தானே. நீங்கள் வண்டி சவாரி செய்யலாமா? நீங்கள் சட்டசபைக்குப்போய் உங்கள் தேவைகளை கவனிக்கலாமா? என்கிற கவலையே உங்களுக்கில்லையே. எப்பேர்ப்பட்ட உண்மைத் தலைவர்கள் மகாத்மா போன்றவர்கள் அரசியல் என்பதை உதறித் தள்ளிவிட்டு, ஏழைகள் கஷ்டத்தை நிவர்த்திக்க வேண்டும், ஒடுக்கப்பட்டவர்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்று தனியே இருந்து இரவும் பகலும் உழைக்கும்போது உங்களுக்கென்ன அரசியல் அழுகின்றது. இப்பொழுது அரசியலில் உழலும் யாருக்காவது விடுதலை என்றால் என்ன? உரிமை என்றால் என்ன? சுயராஜ்யம் என்றால் என்ன? தொழிலாளர் விடுதலை என்றால் என்ன? என்பது தெரியுமா? எப்பொழுதாவது வாயைத் திறந்து சொல்லியிருக்கிறார்களா? வயிற்றுப் பிழைப்புக்கும் உத்தியோகத்திற்கும் 'உரிமை', 'உரிமை', 'சுயராஜ்யம்', 'சுயராஜ்யம்', 'தொழிலாளர்', 'தொழிலாளர்' என்று கத்தினால் நீங்களும் அதில் சேர்ந்துக் கத்துவதா? உங்கள் நிலைமையை இன்னதென்று அறியாமல் இப்படி மோசக்காரர்களுடன் சேர்ந்து அவர்களை உங்கள் தலைவர்களாக்கிக் கொண்டு அவர்கள் பின்னால் திரிந்தீர்களானால், நீங்கள் மற்றவர்களை வண்டியில் வைத்து இழுக்கவும், உங்கள் கழுத்தில் கயிறு கட்டி சந்தைகளில் கொண்டு போய் விற்கவும்தான் நீங்கள் ஆளாவீர்களே தவிர ஒருக்காலும் நீங்கள் மனிதர்கள் போல் வாழமுடியாது.

கண்டிப்பாய் அரசியலில் நீங்கள் சேரவே கூடாது. அரசியல் உங்களிடம் வந்து சேரட்டும். அரசியல்காரர் உங்களைத் தலைவர்களாகக் கொள்ளட்டும். அப்பேர்ப்பட்ட நாளை எதிர்பாருங்கள்.

## சங்கங்களைப் புதுப்பியுங்கள்

உங்கள் சங்கங்களுக்கெல்லாம் நீங்களே தலைவர்களாகுங்கள். உங்கள் நாட்டுத் தொழிலாளர் சங்கங்கள் எல்லாவற்றையும் ஒன்று சேருங்கள். பிறகு தொழிலாளர் கக்ஷி என்று ஒரு பொதுக் கட்சியை ஏற்படுத்துங்கள். அதில் உங்கள் தொழிலின் பலன் முழுவதையும் நீங்களே அடையத்தக்கதாகவும் தொழிலாளர்களுக்கு வேண்டிய நன்மைகளையும், பொதுமக்களுக்கு வேண்டிய நன்மைகளையும் கொள்கையாக வைத்துப் பரப்புங்கள். அதில் எல்லோரையும் வந்து சேரும்படி செய்யுங்கள். தொழிலாளர் கட்சி நாட்டையாளும்படி செய்யுங்கள். அதைவிட்டுவிட்டு எடுப்பார் கைக் குழந்தையாய்த் திரிவது தொழிலாளர் உலகத்திற்கே மானக்கேடு. உங்கள் நிலை என்ன? மாடு கன்றுகள் வளர்க்கிறவர்களாவது அவைகளிடம் வேலை வாங்கின பிறகு நிழலில் கட்டுகிறார்கள்; வேளா வேளைக்குத் தண்ணீர் காட்டுகிறார்கள். உங்களுக்கு அந்த சௌகரியம் கூட எங்கேயிருக்கிறது. பகலெல்லாம் உழைக்க வேண்டியது, கூலி வாங்க வேண்டியது, அதை குடிக்கோ, கூத்திக்கோ, சூதுக்கோ சிலவு செய்யவேண்டியது; பட்டினி கிடக்கவேண்டியது; பெய்யும் மழையும் அடிக்கும் வெய்யிலும் உங்கள் மேலேயே படவேண்டியது என்கிற கேவல நிலைமையிலிருக்கிறீர்கள். உங்களில் இரண்டொருவர் சுகப்படுவதை நினைக்காதீர்கள். பெரும்பான்மையாய் எப்படியிருக்கிறீர்கள்? இதைப்பற்றி யாருக்கும் கவலையில்லை. உங்கள் ஓட்டுகளுக்கு மாத்திரம் அதிக கிராக்கி. யாராவது பணம் கொடுத்து அல்லது யாருக்காவது பணம் கொடுத்து உங்கள் ஓட்டுகளை வாங்கி பதவியைப் பெற்று விடுகிறார்கள்.

## நீங்களே தலைவராகுங்கள்

ஆதலால், இன்று முதல் அரசியலையும் அரசியல்காரரையும் மறந்து விடுங்கள். உங்கள் சங்கத்திற்கும் வருஷாந்திரக் கொண்டாட்டங்களுக்கும் தொழிலாளர்களையே தலைவர்களாய் ஏற்படுத்துங்கள். அவர்களுக்கு சக்தியில்லையே என்று குறைகூறாதீர்கள். அது உங்களுக்கு அவமானம். அதைவிட மோசமானவர்களை நீங்கள் தலைவர்கள் என்கிறீர்கள். அயோக்கியர்களைவிட முட்டாள்கள் நல்லவர்கள் என்றே சொல்லுவேன். இருக்கிறவர்களை வைத்துக்கொண்டு காரியம் நடத்துங்கள். கூடிய சீக்கிரம் எல்லாம் சரிபட்டுப் போகும். நான் ஒரு சிறு கதை கேழ்விப்பட்டிருக்கிறேன். ஒரு குளத்திலுள்ள தவளைகள் ஒன்று சேர்ந்து தங்களுக்கு ஒரு தலைவர் வேண்டுமென்று கடவுளைக் கேட்டதாகவும், கடவுள் ஒரு மரக்கட்டையைத் தலைவராகக் கொடுத்ததாகவும், அம்மரக்கட்டை ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்ததாகவும், பிறகு தவளைகள் கடவுளிடம் எங்களுக்குக் கொடுத்த தலைவர் உபயோகமில்லையென்று வேறு தலைவர் வேண்டுமென்று கேட்டதாகவும், கடவுள் ஒரு பாம்பைத் தலைவராகக் கொடுத்ததாகவும், அந்த பாம்பு தினமும் 10 தவளைகளைத் தின்று வந்ததாகவும், பிறகு தவளைகள் கடவுளை நோக்கி தங்களுக்குக் கொடுத்த தலைவரை எடுத்துக் கொள்ளும்படி வேண்டி தங்கள் காரியத்தை வேறொரு தலைவரில்லாமல் தாங்களே பார்த்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது. அதுபோல் உங்களிலேயே உங்களுக்குத் தலைவர்களும், காரியதரிசியும், நிர்வாகிகளும் கிடைக்கவில்லையானால் கண்டிப்பாய் உங்களுக்கு சங்கம் வேண்டாம். இந்த நிலையில் நீங்களும் சங்கம் வைத்து நடத்த சக்தியற்றவர்கள். உங்களுக்குள் தலைவர் ஏற்பட்டு நடத்த சக்தி வரும் வரை முதலாளிகளை அனுசரித்தே பிழையுங்கள். வீணாக 'குளத்தைக் கலக்கிப் பிராந்துக்கு விட்டது போல்' உங்கள் உழைப்பால் உங்கள் முதலாளிமார் பிழைப்பதோடல்லாமல், உங்களால் மோசக்காரர் பிழைக்கும்படி செய்து நீங்கள் கஷ்டப்படாதீர்கள். நீங்கள் என்னைக் கூப்பிட்ட போதே இதைத்தான் சொல்ல நினைத்தேன். இதுதான் உங்கள் சம்பந்தமான என்னுடைய அபிப்ராயம்.


RangaRakes tamilnavarasam.com

அடுத்தபடியாக நீங்கள் கதரை ஆதரிக்க வேண்டும். தொழிலாளரா யிருப்பவன் முதலாவது செய்ய வேண்டிய வேலை மற்றொரு தொழிலா ளியை ஆதரிப்பதுதான். ஆதலால் கிராமத்து பெண்மணிகள், நமது சகோதரி கள் தொழிலற்று கூலியுமற்று தனக்கும் தனது பிள்ளைக்குட்டிகளுக்கும் ஆகாரமில்லாமல் பட்டினிகிடந்து, விபசாரம் செய்யத்தக்க நிலையில் இருக்கும்போது, நீங்கள் அவர்களை அலட்சியம் செய்து அவர்களது தொழிலை ஆதரிக்காமல் மல் துணிகளையும் மில் துணிகளையும் ஆதரிப்ப தானது மிகவும் பாதகமான காரியமாகும். கதரை ஆதரித்தால் நீங்கள் காலக்கிரமத்தில் கூலிக்காரர்கள் என்கிற பெயர் மாறி உண்மையான தொழி லாளியாவீர்கள்.

*குறிப்பு:- நாகை தென் இந்தியா ரெயில்வே தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் 25.05.1926 ல் ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 30.05.1926**



# திண்ணைப் பிரசாரம்

ஸ்ரீமான் C.V. வெங்கிட்டரமணய்யங்காரின் தேர்தல் சூழ்ச்சிகளைப் பற்றியும் அது சம்பந்தமான அவரது தரும விளம்பரத்தைப்பற்றியும் பல விஷயங்கள் "குடி அரசில்" தோன்றியது வாசகர்களுக்கு நினைவிருக்கும். ஸ்ரீமான் அய்யங்காருக்கு பொது ஜனங்கள் திருப்தி அடையதக்கவண்ணம் இவைகளுக்கு பதில் சொல்ல கொஞ்சமும் சக்தியில்லாமல் போய்விட்ட தால் பிராமண தந்திரத்தை உபயோகித்து பொது ஜனங்களை ஏமாற்றப் பார்க்கிறார். அய்யங்கார் தென்னை மரத்தில் கள்ளு இறக்கப்படுகிறது என்று எழுதியதற்கு நாளதுவரை அய்யங்கார் திருவாக்கால் யாதொரு தகவலும் இல்லவே இல்லை. கூலிக்கு ஆள்களைப்பிடித்து, தென்னை மரத்தில் இப்போது கள்ளு முட்டிகள் இல்லை என்றும், இந்த ஒரு வருஷத்திற்குள் ஒரு குறிப்பிட்ட தோப்பில் கள்ளு கலயம் கட்டியதை ரூபிப்போருக்கு 100 ரூபாய் இனாம் கொடுக்கப்படும் என்றும் அய்யங்காரின் நடத்தைக்கு பொறுப்பில்லாத யாரையோ பிடித்து எழுதச்சொல்லுகிறாரே தவிற, 'எனது தோப்புகளில் நான் கள்ளுக்கு மரம் விடவில்லை' 'அவற்றில் ஒன்றிலும் முட்டி கட்டினதில்லை' என்று இதுவரை சொல்லவே இல்லை. அவரது தர்ம விளம்பரத்தைப் பற்றி நாம் எழுதியதற்கும் இதுபோலவே கூலி ஆள் களைப் பிடித்து தன்னை 'தர்மப்பிரபு' வென்றும், 'கலியுக கர்ணன்' என்றும், 'தமிழ்நாட்டு தர்மமூர்த்தி' என்றும்எழுதச் சொல்லுவதோடு தனது தர்மத்தின் இரகசியத்தைப் பற்றி வெளியிட்டது குற்றமென்றும் எழுதச் சொல்லுகிறாரே யொழிய, இன்ன-இன்ன சொத்து இவ்வளவு ரூபாய் பொறுமானது, இன்ன-இன்ன தர்மத்திற்காக ஒதுக்கி வைத்து, இன்ன - இன்னாரை பரிபாலகராக நியமித்து, இன்ன முறையில் நடக்கும்படி, இன்ன தேதியில் தர்மசாசனம் எழுதி வைத்திருக் கிறது என்று ஒரு வார்த்தையில் பதில் சொல்லாமல், வீணாக பத்திரிகை காரர்களுக்குப் பணம்கொடுத்து தனது படத்தைப் போடச்சொல்லுவதும், இதன் இரகசியத்தை வெளியிட்டவர்களை திட்டச் சொல்லுவதும் 'அசோசியேடட் பிரசு'க்கு தந்தி கொடுப்பதுமான காரியத் தில், ஏமாற்றப் பார்ப்பதில் பயன் என்ன? இதோடுமாத்திரம் இல்லாமல் "குடி அரசு" பத்திரி கைக்கு எதிர்ப்பிரசாரமும் அதன் ஆசிரியர் ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் மீது பழி சுமத்தும் பிரசாரமும் செய்வ தில் என்ன பலன் அடையக் கூடும்? ஸ்ரீமான் நாயக்கர் மீது பழி சுமத்துவதினாலேயே ஸ்ரீமான் அய்யங் காரின் நடவடிக்கைகள் யோக்கியமானதாகிவிடுமா? இதைப்பற்றி பொது ஜனங்கள் என்ன நினைப்பார்கள் என்பதை அறியாமலேயே விஷயப்



RangaRakes tamilnavarasam.com

பிரசாரம் நடத்த ஆரம்பித்துவிட்டார். அதாவது இரண்டொ ருவருக்குப்பணம் கொடுத்து துண்டு பிரசுரங்கள் போடச் செய்தது. அத் துண்டு பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ள விஷயத்தில் முக்கியமானவைகளுக்கு சமாதானம் சொல்வோம்.

## முனிசிபல் நிர்வாகம்

முதலாவதாக நாயக்கர் சேர்மேனாகயிருந்த காலத்தில் ஒரு குளத்துக் கட்டிட கல்லுகளை தனது சினேகிதர் பெயருக்கு கொடுத்து தான் உபயோகப் படுத்திக் கொண்டார் என்பது, - இது சுத்தப் பொய்யான விஷயம். அந்த குளத்தை மூடவும் அதற்காக அதிலுள்ள கல்லுகளை பிரித்துக்கொள்ள வுமான ஒப்பந்தத்தின் பேரில் ஒருவருக்கு முனிசிபல் கவுன்சில் தீர்மானப் படி கன்றாக்ட்டு கொடுக்கப்பட்டது. அந்த கன்றாக்ட்டு நிறைவேறுவதற்கு இல்லாமல் பக்கத்து வீட்டுக்காரர் முனிசிபாலிட்டி மீது கோர்ட்டில் வழக் கைத் தொடரவே அது நின்றுபோய் 5, 6-வருஷம் பொறுத்து இப்போது அந்த குளம் முனிசிபாலிட்டிக்கு சம்பந்தப்பட்டதல்ல, சர்க்காருக்கு சம்பந் தப்பட்டதல்லது என்று ஏற்பட்டு அந்த கல்லுகளை நாயக்கர் நிர்வாகத்திற்குட் பட்ட ஈரோடு தேவஸ்தானத்திற்காக ஜில்லா கலெக்டர் 25-ரூபாயுக்குக் கொடுத்து விட்டார். இப்போதுதான் அவைகள் எடுக்கப்பட்டு தேவஸ்தானத் தில் 2,000 ரூபாய் செலவு செய்து கட்டிடம் ஆகிறது. அந்த கல் பிரித்த குளத்தை முனிசிபாலிடி யார் சொந்த செலவில் மூடிவருகிறார்கள். இன்ன மும் அவ்விரண்டு வேலைகளும் நடந்து வருகின்றன. ஆனால் நாயக்கர் கவுன்சில் தீர்மானப்படி ஒருவருக்கு கன்றாக்ட்டுக்குக் கொடுத்தது சுமார் 350 ரூபாய் பொறுமான மண் கொண்டுவந்து கொட்டி குளத்தை மூடும்படியான பொறுப்புக்கு பதிலாகத் தான் கொடுத்ததே தவிற சும்மா கொடுத்ததல்ல. அது நின்றுபட்டுபோய் விட்டதால் முனிசிபாலிட்டிக்குதான் இப்போது நஷ்டம்.

இரண்டாவது, தனது தமயனார் மரக்கடையில் மரம் வாங்கும் கண்டி ஷன் பேரில் முனிசிபல் வேலைகளை ஒரு கன்றாக்டருக்கு கொடுத்ததாய் குறிப்பிட்டிருக்கிறது. இதுவும் உண்மையல்ல. இந்தப்பழி சம்பந்தப்பட்ட வேலையின் மரத்தின் மதிப்பு சுமார் ஐநூறு ரூபாய் இருக்கும். இதில் பல கடைகளில் கன்றாக்ட்டர் மரம் வாங்கினார். நாயக்கர் சிபார்சு பேரில் சிலர் மரம் கொடுத்ததுண்டு. அந்த மரக்கடைக்காரருக்கு பணங்கூட கொடுக்காமல் கன்றாக்ட்டுதார் கடன் கொடுக்கச் சக்தியற்றவராய்விட்டார். இதில் நாயக்கர் தமயனாருக்கு லாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை.

மூன்றாவது, முனிசிபாலிட்டியில் ஒரு கட்டடம் பிரித்த பழய சாமான் களை தன் மைத்துனர் பேருக்கு ஏலத்தில் எடுத்து தன் சொந்த உபயோகப் படுத்திக் கொண்டார் என்பது - இதுவும் உண்மையல்ல. இது ஒரு பக்கத்து கிராமத்து முதலியாருக்காக அவர் கூட்டாளியாயிருந்த நாயக்கரின் மைத்துனர் கவுன்சிலின் பகிரங்க ஏலத்தில் எடுத்துப்பிரித்து கிராமத்திற்கு



 கட்டிடத்தின் பேரில் இருந்த பழய சாமான்களை மதிப்புத் தெரியாமல் போட்டியில் 300ரூபாய்க்கு ஏலத்தில் கூறி ஏமாந்து விட்டார்கள். ஆதலால் இதில் நாயக்கருக்கு எவ்வித சம்பாத்தியமும் இல்லை.

நான்காவது, நாயக்கர் சேர்மனாயிருக்கும்போது குரங்குடாப்புக்கும் (முன்தாள்வாரம்) சுண்ணாம்பு சூளைக்கும் குப்பை கொட்டி வைப்பதற்கும் மிட்டாய் கடைக்கும் , ஆப்பக்காரி, புட்டுக்காரிகளுக்கும் வரி விதித்தார் என்பது, குரங்குடாப்பு, சுண்ணாம்புச்சூளை, குப்பை சேகரிப்பு, மிட்டாய்க் கடை முதலியவைகள் முனிசிபல் சட்டப்படி வரி கொடுக்கக் கடைமைப் பட்டதேயல்லாமல் நாயக்கர் இஷ்டத்தைப் பொறுத்ததல்ல. ஆப்பக் காரிக் கும், புட்டுக்காரிக்கும் வரி போடப்பட்டது என்பது உண்மையல்ல.

ஐந்தாவது, ஸ்பெஷல் ஆபிசை வைத்து முனிசிபாலிடியில் வரி போட்டது என்பது வாஸ்தவந்தான். அதனால் யாருக்கும் நஷ்டமில்லை. கவுன்சிலர்கள் ஓட்டர்களிடம் உள்ள விருப்பு வெறுப்புக்களால் சில சமயங் களில் தவறி நடந்ததாக ஜனங்கள் கருதுவதுண்டு. இது எங்கும் சகஜம்தான். ஆதலால் அதற்கு ஒரு தனி நபரை கவுன்சில் சாங்ஷன் பேரில் ஏற்படுத்திய துண்டு. ஆனால் அதற்கடுத்த தடைவையில் கவுன்சிலர்களே வரி போட்டதில் முன்பு போட்டதைவிட உயர்த்தினார்களே ஒழிய ஒன்றையும் குறைத்து விடவில்லை.

ஆறாவது, நாயக்கர் பேரில் சில குற்றம் ஏற்பட்டதால் கலெக்டர் விசாரணைக்கு வரும் சமயம் பார்த்து ராஜீனாமா கொடுத்தார் என்பது,- இது வேண்டுமென்றெ சொல்லும் பொய். நாயக்கருடைய ராஜீனாமாவில் காரணம் சொல்லியிருக்கிறது. அதாவது முனிசிபல் நிர்வாகத்தில் சேர்மெ னின் தீர்ப்பை கலெக்டர் மாற்றியதற்காகவே ராஜீநாமா செய்யப்பட்டது. அந்த ராஜீநாமாவில் சுயமரியாதை உள்ள எவனும் இனி முனிசிபல் சேர்மனா யிருக்க முடியாதென்றே எழுதப்பட்டது. நாயக்கர் தன் ராஜீநாமாவை பின்வாங்கி கொள்ளும்படி கலெக்டரும், நிர்வாகசபை மெம்பரும் எவ்வள வோ நல்ல வார்த்தை சொன்னார்கள். அதுசமயம் நாயக்கருக்கு சர்க்காரால் பட்டம் தர சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டது. அப்படி இருந்தும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. நாயக்கரின் ராஜீனாமா காரண மாகவே முனிசிபாலிடிகளில் கலெக்டர்களுக்கு உள்ள அதிகாரங்களை பிடிங்கிக் கொள்ளப்பட்டது. இவ்வாறு பிடுங்குவதற்காக டாக்டர் நாயரும் ஸ்ரீமான் எம்.சம்பந்தமுதலியாரும் பி.வி.நரசிம்மஅய்யரும் அதிகமாய் வாதாடியிருக்கிறார்கள். அக்காலத்திய "இந்து" "சுதேசமித்திரன்" "தேச பத்தன்" முதலிய பத்திரிகைகள்கூட தலையங்கம் எழுதியிருக்கின்றன.

ஏழாவது, நாயக்கர் ஒத்துழையா இயக்கத்தில் தலைவராயிருந்தபோது தனது இனத்தாருக்குப் பல நன்மைகள் செய்ததினிமித்தம் ஒத்துழைய தாரிடம் செல்வாக்கில்லாமல் போய்விட்ட காரணத்தால் இப்போது ஜஸ்டிஸ் கட்சியில் சேரப்பார்க்கிறார் என்பது, நாயக்கர் ஒத்துழையாமையில் தலைவரா



RangaRakes tamilnavarasam.com

யிருந்தபோது தனது இனத்தாருக்கு நன்மை செய்ததானது எல்லாரையும் ஜெயிலுக்கு அழைத்துக்கொண்டு போனதைத் தவிர வேறு உதவி ஒன்றும் செய்யவில்லை. ஈரோட்டிலிருந்து ஜெயிலுக்குப்போன 40 தொண்டர்களில் 13 பேர் நாயக்கர் இனத்தவர்கள். அல்லாமலும் இது விஷயமும், ஜஸ்டிஸ் கட்சியில் நாயக்கர் சேர்ந்து வாரிக்கொள்ளும் விஷயமும், நோட்டீஸ் வினி யோகம் செய்யும் ஸ்ரீமான் அய்யங்காரைவிட பொதுஜனங்களுக்கு அதிக மாய்த் தெரியும். ஆதலால் இதைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

## ஜஸ்டிஸ் கக்ஷிப் பணமா?

மற்றபடி திண்ணைப் பிரசாரமாக, நாயக்கர் பனகால் ராஜாவிடம் பணம் வாங்கி கொண்டார் என்பதும், பனகால் ராஜா மோட்டார்வண்டி கொடுத்தார் என்பதும், ஜஸ்டிஸ்கட்சி மோட்டார் சவாரி என்பதும், ஜஸ்டிஸ் கட்சி அச்சுக் கூடம் என்பதும் அவர்கள் காகிதம் வாங்கித் தருகிறார்கள் என்பதுமான சில விஷயங்கள் – பனகால் ராஜா பணம் கொடுக்கவும் நாயக் கர் வாங்கவுமான யோக்கியதையில் நாயக்கரை கடவுள் வைக்கவில்லை. பனகால் ராஜா மோட்டாரில் நாயக்கர் போகிறார் என்பதும், அய்யங்கா ரோடு இன்னும் சில பிராமணர்கள் சேர்ந்து கட்டிவிட்ட கட்டு. இது உண்மையா என்று கும்பகோணம், குடியாத்தம், மதுரை முதலிய இடங்களில் இருந்து இது விஷயமாய் நமக்கு கடிதங்களும் வந்தன. இது தங்கள் பணம் கொடுத்து பிரசாரம் செய்வதையும் தங்கள் மோட்டாரில் பிரசாரர்களை கூட்டிக்கொண்டு போய் கிராமப் பிரசாரம் செய்வதையும் நாயக்கர் பலமாய்க் கண்டிப்பதால் அதற்குப் பதிலாக கட்டி விட்ட பொய் கட்டு.

இந்தக் கட்டை பிராமணர்களிடம் பணம் வாங்கிப்பிழைக்கிறவர் களும் உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். ஏனென்றால் ‘நாயக்கரே பணம் வாங்கிக்கொண்டு பிரசாரம் செய்யும்போது நான் வாங்கினால் என்ன, என்று சொல்லிக்கொள்வதற்கு அனுகூலமாயிருப்பதற்காகவே அல்லாமல் வேறில்லை. அதைப்பற்றி நாயக்கருக்குக் கவலையில்லை.

ஜஸ்டிஸ் கட்சியார் அச்சுக்கூடம் என்பதும் அவர்கள் காகிதம் வாங்கித்தருகிறார்கள் என்பதும் மிகவும் அக்கிரமமான பொய்க்கட்டு. இதற்கு பதில் சொல்லவேண்டியதேயில்லை. இது அய்யங்கார் பணம் கொடுத்து பத்திரிகை நடத்துவதிலிருந்தும் அய்யங்காரிடம் பணம் வாங்கிக்கொண்டு நடத்துவதிலிருந்தும் பிறருடைய பழிக்குத் தப்பித்துக் கொள்வதற்கென்றே கற்பனை செய்து கொண்டதல்லாமல் வேறில்லை.

தவிற மே மாதம் 6-ந்தேதி தமிழ் “சுயராஜ்யா”வில் ஒரு கந்தசாமி நாயக்கர் என்பவர் பெயரால் எழுதப்பட்ட விஷயங்களைப்படித்தால் எழுதின விஷயம் முழுதும் பத்திரிக்கையில் போடப்பட்டதாய் நினைக்க முடிய வில்லை. நாயக்கருக்கு அனுகூலமானதான சிலதையோ, அல்லது அதிக குற்றமானதான சிலதையோ, மத்தியில். மத்தியில் நீக்கிவிட்டதாகத் தெரிகிறது.



அதில் வெளியானவைகளில் முக்கியமான சிலவற்றிற்கு மாத் திரம் சமாதானம் சொல்லவேண்டியது அவசியம் என்று நினைக்கிறோம்.

## சத்திர நிர்வாகம்

அதாவது, நாயக்கர் தகப்பனார் மாதம் 1-க்கு 1000ரூ. வரும்படியான சொத்துக்கள் தர்மத்திற்கு விட்டிருப்பதாகவும், இந்த தர்மம் நாயக்கர் பார்வைக்கு வந்ததில் தகப்பனார் இஷ்டப்படி சாதுக்களுக்கு சதாவிர்த்தியும், சுவாமி அபிஷேகமும் நடந்து வருகிறதா என்று கேட்கிறார். சாப்பாடும் பூஜையும் நடந்து வருவதோடு வேறு பல தர்மங்களும் நடந்துதான் வருகின்றன.

இவ்வளவு தர்மம் செய்யக்கூடியவர் சேர்மெனாயிருந்த காலத்தில் ஆப்பக்காரிக்கு வரி போடலாமா என்பது ஆப்பக்காரி எவருக்கும் வரி போடவில்லை. மற்றும் சட்டத்திற்கு விரோதமாயாவதும் நியாயத்திற்கு விரோதமாயாவது எவருக்கும் வரி போடவில்லை. வைக்கத்தில் தீண்டாதார் பொது தெருவில் நடக்க சம்சார சகிதமாக போய் சத்தியாகிரகம் செய்தவர் தனது தகப்பனாரால் கட்டப்பட்ட பொது சத்திரத்திலும், பொது விநாயக ரிடத்திலும், பொது கிணற்றிலும் தீண்டாதார் போகக்கூடாது என்ற சத்தியாக் கிரகம் செய்துவருவது உண்மையா என்பது. இது உண்மையல்ல. சத்திரம் பொது சத்திரமல்லவானாலும் இந்துக்களுக்கென்றே கட்டப்பட்டதானாலும் ஜாதி,மதம், தீண்டாத வகுப்பு என்கிற காரணத்தால் யாருக்கும் அதில் பிரவே சிக்க ஆக்ஷேபணை கிடையாது. சுகாதார விதியை அனுசரித்து மாத்திரம் ஆக்ஷேபனை கற்பிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் விதியாய் மாத்திரம் இருக்கிறதே தவிற அமுலில் இல்லை.

மேற்படி சத்திரத்தில் உள்ள இரண்டு பாகங்களில் ஒன்று “பிரமாண ருக்கு” மற்றொன்று “சூத்திரருக்கு” என்று எழுதியிருப்பதற்கு இவர் என்ன பதில் சொல்லுகிறார் என்பது – இதுவெகுகாலத்திற்கு முன் நாயக்கர் தகப்பனாரால் ஒரு பலகையில் எழுதிவிக்கப்பட்டதாகும். இப்பொழுது மறைந்துபோயிருப்பது வாஸ்தவம், ஆனால் கவனமாய் படித்தால் தெரியும் படியாகத் தான் இருக்கிறது. இதை இதுவரை நாயக்கர் அவ்வளவு முக்கிய மானதாய்க் கவனிக்கவில்லை. இதைப்பற்றி பத்திரிகையில் பார்த்ததும், இதற்கு சமாதானம் எழுதிவிட்டு, இப்படி எழுதியிருப்பது சுத்தமாய் மறைந்து போகும்படி அழித்துவிட தீர்மானித்து விட்டார்; அழித்துமாகி விட்டது. ஆனாலும் இந்தப்பிரிவுகள் இந்தப்படி அமுலில்லை. யார் வேண்டுமானா லும் எந்த பாகத்திலும் இறங்கலாம். இது வெகுகாலமாய் நடந்து வருகிறது. ஆனால் ஒரு கட்டுப்பாடுண்டு. அதென்னவென்றால் ஒரு பாகம் சைவ உணவுக்காரருக்கும் மற்றபாகம் மாமிச உணவுக்காரருக்கும் என்று அங் குள்ள சத்திர மேற்பார்வைகாரனால் பிரயாணிகளுக்குச் சொல்லப்படும். இது தான் கட்டுப் பாடாகும்.



RangaRakes tamilnavarasam.com

நாயக்கர் தனது தகப்பனாருக்கு திவசம் செய்கிறார் என்பதும் பார்ப்பனரை அதற்காக அழைக்கிறார் என்பதும் - இது உண்மையல்ல. திவசம் மாத்திரமல்ல, வைதீக சடங்கு ஒன்றையும் நாயக்கர் செய்து கொள்வதே கிடையாது. நாயக்கர் தகப்பனாருக்கு நாயக்கர் தமயனார் திவசம் செய்வதாயிருந்தாலும் அவர் ஸ்ரீரங்கத்திற்கு போய்ச் செய்வார், அல்லது வேறு வீட்டில் செய்வார். திவச தினத்திலெல்லாம் நாயக்கர் தனது வீட்டில் மாமிசம் பக்குவம் செய்து தகப்பனார் இறந்த தினத்தைத் தனது சினேகிதர்களுடன் கொண்டாடுவார். ஏனென்றால் நாயக்கர் தகப்பனார் மாமிசத்தில் அதிகப் பிரியமுள்ளவர் என்பதுதான்.

## கண்டிப்பது குற்றமா?

மகாத்மா முதல் எல்லா தேசபக்தர்களையும் பத்திரிகையில் திட்டுகிறார் என்பது- நாயக்கர் திட்ட வேண்டுமென்று யாரையும் திட்டுவதில்லை. குற்றமென்று தனக்குபட்டால் அதை தாக்ஷண்யமில்லாமல் கண்டிக்கிறார் என்பதை அவரே ஒப்புக்கொள்ளுகிறார். அதில் ஒன்றும் பெரிய பாவமிருப்பதாய் அவர் கருதவில்லை. அம்மாதிரி தைரியமாய் மனதில்பட்டதை வெளியில் சொல்லாமல் மூடிவைக்க வேண்டுமென்றால் பத்திரிகையே நடத்த வேண்டியதில்லை. "குடி அரசு" வயிற்று பிழைப்பிற்கு நடத்தப்படும் பத்திரிகையல்ல. எந்த தனிக்குடும்பத்தின் ஜீவனத்திற்கும் "குடி அரசு" நடத்தப்படுவதில்லை. உண்மையை தனது மனதுக்குப் பட்டதை வெளியில் எழுதக்கூடாது என்கிற நிர்ப்பந்தம் வரும்போது "குடி அரசு" தானாகவே மறைந்துவிடும்; நாயக்கரும் ஜெயிலில் இருப்பார்.

காங்கிரசில் சேர்ந்தவர்கள் ஜெயிலுக்குப் போனவர்கள், சோம்பேறிகள், திருடர்கள், வக்கீல்கள் வரும்படியில்லாததால் ஜெயிலுக்குப் போனார்கள் என்று நாயக்கர் எல்லாரையும் தூஷிக்கிறார் என்பது. எல்லாரையும் அப்படித் தூஷிப்பதில்லை. அப்படியானால் நாயக்கரும் அதில் சேர்ந்தவர்தான் என்று ஆகுமல்லவா? ஒத்துழையாமை சமயத்தில் உள்ள வேகமானது, உண்மையானவர்கள் பலரையும் அப்படிப்பட்டவர்கள் பலரையும் சேர்த்துத்தான் ஜெயிலுக்குள் தள்ளிற்று. வெளியில் வந்தபிறகு அவரவர்கள் யோக்கியதை ஒருவரும் சொல்லாமலேதான் வெளிப்பட்டு வருகிறது. ஜெயிலுக்குப் போன பல தலைவர்கள் சங்கதியும், பல தொண்டர்கள் சங்கதியும், பல தேசபக்தர்கள் சங்கதியும் உலகம் அறிந்ததுதான். இதில் ஒன்றும் இரகசியமில்லை.

## அஹிம்சைக்கு விரோதமா.

அஹிம்சா தர்மத்தைப் பற்றி பிரசங்கம் செய்பவர் மாமிசம் சாப்பிடலாமா என்பது- ஆம், உள்ளூரில் தினமும், வெளியூர்களில் கிடைக்கிற இடத்திலும் நாயக்கர் மாமிசம் சாப்பிடுவதுண்டு. அஹிம்சா தர்மம் என்பது மாமிசம் சாப்பிடுவதால் கெட்டுப்போகாது. கத்திரிக்காய் சாப்பிடுவதற்கும் பால், தயிர் சாப்பிடுவதற்கும் கோழிமுட்டை சாப்பிடுவதற்கும், ஆடு, மாடு சாப்பிடுவதற்கும் ஒன்றும் வித்தியாசமில்லை என்பது நாயக்கரின் கொள்கை. அஹிம்சா தர்மம் என்பது ஜீவன்களை ஹிம்சைப் படுத்தக் கூடாது என்பதேயாகும். இதில் ஜீவன்கள் என்று சொல்லி விட்டால் எறும்பை மிதிக்காமல் இருக்க முடியாது, பாம்பை அடிக்காமல் இருக்க முடியாது, குதிரையை ஓடும்படி அடிக்காமல் முடியாது, மாட்டை பாரம் வைத்து இழுக்கச் செய்யாமலும் ஏர் உழுகச் செய்யாமலும் முடியாது. எந்த ஜீவனையும் கழுத்தில் கயிறு கட்டி தொழுவத்தில் கட்டுவதே ஹிம்சையாய்த்தான் முடியும். திருடனுக்கு நமது வீட்டுக் கதவை தாளிட்டு விட்டால் கஷ்டமாகத்தான் இருக்கும். அயோக்கியர்களுக்கு அவர்கள் குற்றத்தை எடுத்துச் சொன்னால் அவர்கள் மனம் வேதனைப்படத்தான் செய்யும். ஏமாற்றுகிறவனுக்கு ஜனங்கள் ஏமாறாவிட்டால் அது அவனுக்கு ஹிம்சையாகத்தான் இருக்கும். குற்றவாளிகளைத் தண்டித்தால் அது அவர்களுக்கு கொடுமையாகத்தான் இருக்கும். எதை ஹிம்சை என்பது? எதை ஹிம்சை அல்லாதது என்பது ஆதலால் நம்மைப்போல் பகுத்தறிவுள்ள மக்களை நியாயமற்ற முறையில் ஹிம்சிப்பதும் கொடுமைப்படுத்துவதும் நமது நியாயமற்ற முறையால் நம்மைப்போன்ற ஜீவன்கள் மனம் கஷ்டப்படுவதும், நமது பேராசையின் பொருட்டு மற்றவர்களை மனம் பதைக்கச் செய்வதும், நமது வாழ்வின் பொருட்டு மற்ற ஜீவன்களை தாழ்மையாய்க் கருதி அதன் உரிமையை அடையவொட்டாமல் தடுப்பதும் ஹிம்சையின் வகைகளாகும். மாமிசம் சாப்பிடுவது ஹிம்சை என்று சொல்லி விட்டால் உலகத்தில் 100க்கு 99பேர் மாமிசம் சாப்பிடுபவர்களாய்த்தான் இருக்கிறார்கள். மக்களல்லாத ஜீவன்களில் 100க்கு 99 ஜீவன்களும் மாமிசம் சாப்பிடுவதாய்தான் இருக்கின்றன.

இயற்கையின் தத்துவமே ஒரு ஜீவன் அடையும் ஹிம்சையால்தான் மற்றொரு ஜீவன் வாழ்கின்றது. ஆதலால் மக்களைப் பொறுத்தவரை அஹிம்சைக்கு லக்ஷணம் கற்பிப்பதில் அது பிற மக்களுக்கு முறையற்ற ஹிம்சையாய் இருக்கக்கூடாது என்கிற வரையில்தான் அஹிம்சையை அநுஷ்டிக்க முடியும். அப்படியல்லவென்றால் மாமிசம் சாப்பிடாதவர்களை எல்லாம் அதனாலேயே அஹிம்சா தர்ம முடையவர்கள் என்று சொல்ல முடியுமா?

## ஜஸ்டிஸ் கட்சி வண்டி

நாயக்கர் ஒரு மோட்டார் வாங்கி இருக்கிறார். அது கோயமுத்தூர் ஸ்ரீமான் சி.எஸ். இரத்தினசபாபதி முதலியாரிடம் வாங்கியது. அது ஒரு பழய வண்டி, ஸ்ரீமான் முதலியாருக்கு 25ரூபாய்க்கு ஒரு லாட்டரி சீட்டில் வந்தது. சென்ற தேர்தலுக்கு அவர் உபயோகப்படுத்திக்கொண்டு அதை 500 ரூபாய்க்கு விற்கும்படி ஒரு கம்பெனிக்காரரிடம் விட்டிருந்தார். நாயக்கர் குறைந்த விலையில் ஒரு இரண்டாவது கைமாறிய மோட்டார் வாங்க பிரயத்தனப் பட்டத்தில் ஸ்ரீமான் அய்யங்கார் வண்டியைக்கூட பார்க்கப்பட்டு கடைசியில் ஸ்ரீமான் முதலியார் வண்டி பார்க்கப்பட்டது. இது ஐயங்



RangaRakes
tamilnavarasam.com

காருக்கே தெரியும். அவரும் தனது வண்டியை கூட்டிக்கொண்டுபோய் காண்பித்தார். ஸ்ரீமான் முதலியார் வண்டியோ ரிப்பேர் தேவையானதினால் குறைந்த விலைக்கு அதாவது 300ரூபாய்க்குக் கிடைக்ககூடியதாகச் சொல்லப்பட்டது. அதை வாங்கி சுமார் 200ரூபாய் வரை இப்போது ரிப்பேர் செலவு செய்யப் பட்டிருக்கிறது. அதுவுமல்லாமல் தற்கால சௌகரியத்திற்கு இரண்டு டையர் டியூப் 240ரூபாய்க்கு சென்னைக்கு எழுதியிருக்கிறது. வண்டி ஈரோட்டிற்கு கொண்டுவந்து சுமார் 4 மாதமாகிறது. இன்னமும் ரிப்பேரில் தானிருக்கிறது. ஒரு நாளாவது அதில் ஏறி ஒரு பிரசாரத்திற்கும் போகவில்லை. ஸ்ரீமான் C.S. இரத்தினசபாபதி முதலியாரிடம் வாங்கியதால் ஒரு சமயம் இந்த முகாந்திரங்களைக்கொண்டு ஸ்ரீமான் அய்யங்கார் திண்ணைப் பிரசாரத்தில் 'பனகால் ராஜா வண்டி' 'ஜஸ்டிஸ் கட்சி வண்டி' என்று சொல்கிறாரோ என்னமோ தெரியவில்லை. எப்படியிருந்தாலும் நமக்குக் கவலையில்லை. சமாதானம் எழுத வேண்டியவைகள் இன்னம் சிலது இருக்கிறது. இவ்வாரம் வியாழன், சனி இரண்டு நாள் மாத்திரம்தான் ஸ்ரீமான் நாயக்கர் ஈரோட்டி லிருக்க முடிந்தது. ஆதலால் அதிகமாய் எழுத முடியவில்லை. மற்றொரு சமயம் விவரமாய் எழுதப்படும்.

### முடிவு

இவ்வளவும் "தமிழ்நாட்டுக்கர்ணனான" ஸ்ரீமான் வெங்கிட்டரமணய் யங்கார் தர்மத்தின் திருவிளையாடல்களே. ஆனபோதிலும் நமக்கு கவலையில்லை. இந்த விஷயங்கள் திண்ணைப் பிரசாரங்களாய் இல்லாமல் துண்டு பிரசுரம் மூலமாகவும், பத்திரிகை பிரசார மூலமாகவும் நடத்தப் பட்டது. ஒரு வகையில் நமக்கு அதிக சந்தோஷமே. இதன் மூலமாகவாவது நாயக்கர் பேரில் உள்ள குற்றமென்ன? நாயக்கர் செய்த தப்பிதமென்ன? இவ்வளவு எதிரிகளும் சேர்ந்து நாயக்கர் பேரில் வலை போட்டு அரித்தும் கண்டுபிடிக்கப்பட்ட குற்றம்தான் என்ன என்பது பொது ஜனங்களுக்கு அறிய ஒரு சந்தர்ப்பமளித்ததற்கு ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்காருக்கு நாம் மனப்பூர்வமான நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இம்மாதிரியான பழிகள் எவ்வளவு வந்தாலும் அதனால் எவ்வளவு கெட்டபெயர் வந்தாலும் இவைகளுக்குப் பயந்துகொண்டோ எந்தவிதமான நிர்பந்தங்களுக்கு பயந்து கொண்டோ நாயக்கர் தனது முயற்சியை விட்டு விடுவாரோ என்று வாசகர்கள் சந்தேகப்பட வேண்டியதில்லை என்று கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீமான் நாயக்கர் ஒத்துழையாமையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராயிருக்கும்போது ஏற்பட்ட பழிகள் அநேகம். அவற்றை சாவகாச மாய் எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 30.05.1926**



## சுயராஜ்யக் கட்சி

**- சித்திரபுத்திரன்**

தென்னாட்டு அய்யங்கார் பிராமணர்களால் சுயராஜ்யக் கட்சி ஆக்கப் பட்டிருந்தாலும் அதற்குப் பிறப்பிடமாகவும் முதல் பலியாகவும் கொடுக்கப் பட்டது வங்காளமும் பிராமணர் வலையில் சிக்கி ஏமாந்த தேசபந்து தாசருமே யாகும். எப்படியோ, தேசபந்து தாஸ் தனது குற்றத்தை உணர்ந்து வருத்தப் படுவதற்கு முன்னும் உலகத்தார் திட்டும் வார்த்தைகள் தன் காதுக்கு எட்டு வதற்கு முன்னும் பரமபதமடைந்துவிட்டார். தென்னாட்டு பிராமணர்களும் அவருக்கு தென்னாட்டில் கோவில் கட்டி, உருவம் வைத்து, பிரதிஷ்டை செய்துவைத்து விட்டார்கள். விபூஷணஆழ்வார் உருவத்திற்கு வைணவக் கோவில்களில் கிடைத்திருக்கும் இடத்திற்கு மேலாகவே நமது தாஸர் உருவத் திற்கு "சுதேசமித்திரன்" ஆபீசில் இடம் கிடைத்து விட்டது. அதுமாத்தி ரமல்லாமல் நம்நாட்டு பிராமணச் சூழ்ச்சிக்கும் நமது தாஸர் வாழ்க்கையே அடிக்கடி "வேதக் கட்டளையாக" எடுத்துச் சொல்லப்படுகிறது. ஆனால் அவர் பிறந்த வங்காளத்தில் தாஸர் வாக்கு சிரிப்பாய் சிரிக்கிறது. அவர் சிஷ்யர்களும் அவருடைய உபதேசங்களைக் காற்றில் பறக்கவிட்டு விட்டார் கள். கல்கத்தா இந்து முஸ்லீம் ஒப்பந்தமும் இந்து முஸ்லீம் ஒற்றுமையும் இப்போது எவ்வாறு இருக்கிறது? கல்கத்தா இந்து முஸ்லீம் கலவரமும் வங்காள மாகாண மகாநாடு நடவடிக்கையும் கவனித்தவர்கள் வங்காளத்தில் தாஸருக்கு என்ன மதிப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்பது விளங்கும். "500 பிரதிநிதிகள் ஒன்றுகூடி வங்காள ஒப்பந்தத்தை ரத்து செய்தார்கள்" என்கிற செய்தி எட்டியிருக்கிறது. இது சட்டப்படி செல்லுமா இல்லையா ? என்பதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. வங்காளத்தில் சுயராஜ்யக் கட்சிக்கு உள்ள செல்வாக்கையோ அல்லது சுயராஜ்யக் கட்சிக்கு எவ்வளவு கட்டுப்பாடு இருக்கிறது என்கிற விஷயத்தையோ இதிலிருந்து அறிந்துகொள்ளலாம். அல்லாமலும், சட்டசபைகளை விட்டு வெளியேறிய கனவான்களில் வங்காள சட்டசபைக்காரர்கள்தான் மறுபடியும் சட்டசபைக்குள் 'அவசரச் சட்டத்தைத் தடுக்கிறோம்' என்கிற பெயரின் பேரில் முதல் முதல் உள்ளே நுழைந்தவர்கள், நுழைந்து சட்டத்தைத் தடுத்தார்களா? இவர்களால் தடுக்க முடிந்ததா? அன்றைய பிரயாணப்படி சுயராஜ்யக் கட்சி மெம்பர்களுக்கு லாபமாயிற்று. சுயராஜ்யக் கட்சி மெம்பர்களும் இருந்துதான் அவசரச் சட்டம் சட்டசபையில்



RangaRakes tamilnavarasam.com

நிறைவேறிற்று என்கிற கௌரவம் சர்க்காருக்கு கிடைத்தது. இதனால் கஷ்டப் படுகிறவர்கள் பொது ஜனங்கள்.

சென்னை மாகாணத்தின் யோக்கியதையோ வெளியில் பேச வெட்கக் கேடு. அய்யங்கார்களும், அய்யர்களும்தான் சுயராஜ்யக் கக்ஷிக்கு மெம்பர்கள். மற்றபடி யாருக்காவது உத்தியோகமோ, பதவியோ, வயிற்றுக்குக் கஞ்சியோ கொடுப்பதாய்ச் சொன்னால்தான் இவர்களுக்கு பிராமணரல்லாதார்களில் சத்தம் போடவோ, கூடத் திரியவோ இரண்டொரு ஆட்கள் கிடைக்கும். அது நின்று போனவுடனே அந்த ஆட்களே இவர்கள் பேரில் திரும்பிக் கொள்ளுவார்கள். சென்னை மாகாணத்தில் உத்தியோகம் கிடைக்காததினால் மந்திரிகள் பேரில் கோபித்துக் கொண்டும், காங்கிரசில் சேர்ந்து வீராப்பு பேசுவதற்கு வெட்கப்பட்டுக் கொண்டும், சர்க்காருக்கு நல்ல பிள்ளைகளாய் நடக்க ஆசைப்பட்டுக் கொண்டும் இருந்த சுயேச்சைக் கக்ஷியார் என்கிற ஒரு கூட்டத்தார், தங்களுக்கு தேசத்தில் அடியோடு மதிப்பில்லை என்பதை அறிந்து, தங்கள் மானம் வெட்கத்தையெல்லாம் சுட்டெரித்து, தாங்கள் விடிய விடிய குற்றம் சொல்லி பரிகாசம் செய்து கொண்டிருந்த கக்ஷியாகிய சுயராஜ்யக் கக்ஷியில் சரண் புகுந்தார்கள். சுயராஜ்யக் கக்ஷியாருக்கும் இவர்களை விட வேறு கதியில்லாததால் அவர்களையும் இவர்கள் அழைத்தார்கள். இதைப்பற்றி அவர்களைக் கேட்டதற்கு, சுயராஜ்யக் கக்ஷிக் கொள்கையை நாங்கள் ஒப்புக் கொள்ளவில்லை, ஒற்றுமையை உத்தேசித்து ஒப்பந்தத்தில் மாத்திரம் கையெழுத்துப் போட்டோம் என்று சொன்னார்கள். (என்ன ஒப்பந்தம்? இரண்டு பேரும் சேர்ந்து பாமர ஜனங்களை ஏமாற்றலாம்; கிடைப்பதில் ஆளுக்குப் பாதி வைத்துக் கொள்ளலாம் என்கிற ஒப்பந்தம்.) அந்த ஒப்பந்தத்தின் பலனாய் சட்டசபை அபேட்சகர்களாய் சுயராஜ்யக் கட்சியாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டார்கள்.

ஆனால், இப்போது பரஸ்பர ஒத்துழையாதார் என்கிற மற்றொரு கக்ஷியார் சென்னை மாகாணம் தவிர மற்ற மாகாணங்களில் தலைசிறந்து விளங்குவதால் சுயேச்சைக் கக்ஷிக்காரர்கள் ஒவ்வொருவராய் இப்போது பரஸ்பர ஒத்துழையாதார் கக்ஷியில் சேருகிறார்கள். சுயேச்சைக் கட்சித் தலைவர் ஸ்ரீமான் வெங்கட்டபதி ராஜு என்பவர் தன்னை சுயராஜ்யக் கட்சியின் சார்பாய் சுயராஜ்யக் கட்சியார் சட்டசபைக்கு நிறுத்தாமல் ஒரு பிராமணனை நிறுத்தி விட்டதால், அவர் சுயராஜ்யக் கட்சியை விட்டுவிட்டு பரஸ்பர ஒத்துழைப்புக் கட்சியில் சேர்ந்து விட்டார். மற்றபடி, சுயராஜ்யக் கட்சியின் சார்பாக சட்டசபைக்கு நிறுத்தப்படும் ஆள்களின் யோக்கியதைகளைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. மானம், வெட்கம், சத்தியம், தேசபக்தி, நாணயம் ஆகிய குணங்களைச் சுட்டெரித்த பரிசுத்தவான்களாகப் பார்த்தே நியமிக்கிறார்கள். பிரசாரத்துக்கு வெளியில் போகும்போது கூட்டிக்கொண்டு போகும் ஆட்களைப் பற்றியோ சொல்லத் தேவையில்லை. அய்யங்கார் மடியிலிருக்கும் பணம் காணாமல் போய்விட்டால் மடியைப் பிரித்து மூட்டையை அவிழ்த்து பரிசோதிக்கும்படியான நவமணிகளைத்தான் கூட்டிப் போவார்கள். பிரசங்கத்தின் தோரணையோ பிராமணரல்லாதவர்களுக்கெல்லாம் நாங்கள்தான் பிரதிநிதிகள்; எங்களோடுதான் எல்லா பிராமணரல்லாதார்களும் சேர்ந்திருக்கிறார்கள்; எங்கள் அங்கத்தவர்களும் எங்கள் பிரசாரகர்களும் பிராமணரல்லாதார்கள்தான் என்று பறையடிப்பார்கள். அங்கத்தவர்களோ சட்டசபைக்கு நிற்பவர்கள்; பிரசாரகர்களோ இரண்டணா காணாவிட்டாலும் மடியை அவிழ்த்துக் காட்ட வேண்டியவர்கள். இந்த நிலைமையில் நாட்டையே கலக்குகிறார்கள். சட்டசபை உத்தியோக ஆசை பிடித்தவர்கள் தவிர, சுயராஜ்யக் கட்சியில் சர்க்காருக்கு ஒரு நாலணாவாவது வரி கொடுக்கக்கூடிய குடியானவர்கள் எத்தனை பேர் சுயராஜ்யக் கட்சியில் அங்கத்தினர் அல்லது இந்த பிரசார உத்தியோகம் போய் விட்டால் வேறுவழியில் தங்களது மனச்சாக்ஷியை விற்காமல் ஜீவனம் செய்யலாம் என்று சொல்லக்கூடிய பிரசாரகர்கள் எத்தனை பேர் இவர்களோடு இருக்கிறார்கள்.

இவர்கள் தந்திரத்தையும் சூழ்ச்சியையும் அறியாமல், இதனால் தேசபக்தர்களாகலாமா என்று நினைத்துக்கொண்டு ஏதாவது ஒன்றிரண்டு உத்தமர்கள் இருந்தாலும் இருக்கலாம். அவர்களைப் பற்றி கவலையில்லை. தாங்கள்தான் பிராமணரல்லாதார் பிரதிநிதிகள்; தங்கள் கட்சியில்தான் பிராமணரல்லாதார் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது. உண்மையில் பிராமணரல்லாத அறிவாளிகளோ, செல்வவான்களோ, முக்கியஸ்தர்களோ, தேசபக்தர்களோ, சுயராஜ்யக் கட்சியிலாவது, காங்கிரசிலாவது இருப்பார்களானால் இந்தியா சட்டசபைக்கு நிறுத்த இவர்களுக்கு பிராமணரல்லாதாரில் ஆள்கள் கிடைக்காமல் போவானேன். வட ஆர்க்காடு, செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு ஆகிய மூன்று ஜில்லாவில் ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரிக்கு சமானமான ஆள்கூட இவர்கள் கக்ஷியில் பிராமணரல்லாதாரில் கிடைக்கவில்லையா? பெரிய மிராசுதார்களும் அறிவாளிகளும் உள்ள திருச்சி, தஞ்சை ஆகிய ஜில்லாக்களில் ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்காருக்கு சமானமானவர்கள் கூட கிடைக்கவில்லையா?

எவ்வளவோ செல்வவான்களும் அறிவாளிகளும் ஜமீன்தார்களும், தேசபக்தர்களும் நிறைந்த மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் ஆகிய ஜில்லாக்களில் ஸ்ரீமான் சேஷய்யங்காருக்கு சமானமானவர்கள் கூட கிடைக்கவில்லையா? சென்னையில் உள்ள அவ்வளவு பெரிய பிராமணரல்லாத பிரமுகர்களில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரைத் தவிர வேறு யாரும் கிடைக்கவில்லையா? அப்படியானால் இந்த பிராமணர்கள் வெட்கமில்லாமல் எப்படித் தங்களை பிராமணரல்லாதார் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ள முடியும்? ஏதோ சில பிராமணரல்லாதார் அறியாமையாலும், வயிற்றுக் கொடுமையாலும் இவர்கள் பின்னால் திரிந்தால் அவர்களை வைத்துக் கொண்ட இவர்கள் பிராமணரல்லாதார் பிரதிநிதிகளாய் விடுவார்களா? தமிழ்நாட்டில் உள்ள பிராமணரல்லாதார் எல்லாரையும் தங்கள்





RangaRakes tamilnavarasam.com

பின்னால் திரிகிற சிலரைப் போலவே நினைத்து விட்டார்களா? இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? ஜஸ்டிஸ் கட்சியாராவது பிறரால் உத்தியோக ஆசைபிடித்தவர்கள் என்று சொல்லப்பட்டாலும் பிராமணரல்லாதார்களைத் தவிர வேறு யாரும் அவர்கள் அங்கத்தினரல்ல. அவர்கள் கூட்டங்களிலும், மகாநாடுகளிலும் காங்கிரஸ், சுயராஜ்யக் கட்சியார் கூடுகிற கூட்டத்தைவிட எத்தனையோ மடங்கு அதிகமாய்க் கூடுகிறார்கள்.

எல்லா உத்தியோகமும் தங்களுக்கே வரவேண்டுமென்று அவர்கள் பாடுபட்டு உத்தியோகத்திற்கு ஒவ்வொரு ஆள்கள் வீத மாத்திரம் அந்தக் கட்சியில் இருப்பதாய் வைத்துக் கொண்டாலும், அந்த எண்ணிக்கையும் இந்த காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி பிராமணர்களைவிட - இவர்களோடு திரியும் பிராமணரல்லாதார்களைவிட எத்தனையோ மடங்கு அதிகமாய்த்தானிருக்கும். மதுரை மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தையும் சென்னை, கோவை, மதுரை நிர்வாகக் கமிட்டி கூட்டத்தையும் தமிழ்நாட்டின் சார்பாய் எல்லா இந்திய காங்கிரசிற்கும் சபர்மதி ஒப்பந்தத்திற்கும் போன கூட்டத்தையும் எண்ணிப் பார்த்துவிட்டு, இவர்கள் பொதுக்கூட்டத்திற்கும் ஜஸ்டிஸ் கட்சி பொதுக் கூட்டத்திற்கும் வரும் ஜனங்களையும் அதிலுள்ள பிராமணர் -பிராமணரல்லாதாரின் எண்ணிக்கையும் பார்த்தால் எது பொது ஜனங்கள் பிரதிநிதித்துவம் பொருந்தியது? எது பிராமணரல்லாதார் பிரதிநிதித்துவம் பொருந்தியது? எது பிராமணர்கள் பிரதிநிதித்துவம் பொருந்தியது? என்பது கடுகளவு மூளை உள்ளவனுக்கும் விளங்காமல் போகாது.

நமது நாட்டில் பிராமணப் பத்திரிகைகள் பிராமண சூழ்ச்சியில் செல்வாக்குப் பெற்றுவிட்டதினாலும், பிராமண வக்கீல்கள் செல்வாக்குப் பெற்றுவிட்டதாலும், உத்தியோகங்களிலும், பிராமணர்கள் செல்வாக்குப் பெற்றுவிட்டதாலும், பாமர ஜனங்கள் ஏமாறவும் பயப்படவும் ஏற்பட்டுப் போய்விட்டதால் பிராமணரல்லாதாரை பிராமணர்கள் ஏமாற்ற வசதி ஏற்பட்டு விட்டது. ஆதலால் பிராமணரல்லாத உண்மை தேசபக்தர்கள் சிலராவது ஒன்றுகூடி இந்த பிராமணர்கள், காங்கிரஸ் என்பதன் பெயராலும், மகாத்மாவின் பெயராலும், சுயராஜ்யக் கட்சி என்பதன் பெயராலும் செய்யும் புரட்டுகளையும், பித்தலாட்டங்களையும் பாமர ஜனங்கள் அறியும்படி வெளியிலெடுத்துச் சொல்லவும், சொல்லக்கூடிய பத்திரிகைகளை அவர்களிடம் பரப்பவுமான தொண்டை கொஞ்ச காலத்திற்காவது செய்து வந்தால் நமது நிலை இப்படி எடுப்பார் கைக் குழந்தையாய் இனி இருக்க முடியாது என்றே சொல்லுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 30.05.1926**



# திருவாங்கூரில் பத்திரிக்கைச் சட்டம்

திருவாங்கூர் சமஸ்தானத்தில் கொஞ்ச காலமாக சில புதுமைகள் நடந்து வருகின்றன. அவற்றுள் அரசாங்கம் சமீபத்தில் பத்திரிகைகள் மீது தொடுத்துள்ள பாண முறையும் ஒன்றாகும். திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு தாய் அரசாங்கமாய் விளங்கும் இந்திய அரசாங்கத்தில் கூட இத்தகைய சட்டம் இது சமயம் இல்லையென்றே சொல்லலாம்.

இப்பொழுது செய்துள்ள சட்டப்படி திருவாங்கூர் சமஸ்தானத்தில் பத்திரிகை நடத்துவோர் ஜாமீனாக முதலில் ரூபாய் 500 கட்ட வேண்டும். பத்திரிகையில் ஏதாவது குற்றங் காணப்பட்டால் ஜாமீன் தொகையான ஐநூறு ரூபாயும் பறிமுதல் செய்யப்பட்டுவிடும். அதன் பிறகு அப்பத்திரிகை நடைபெற வேண்டுமானால், அரசாங்கம் சம்மதித்தால் ரூ. 2,500 ஜாமீன் கட்ட வேண்டும். மறுபடியும் குற்றங் காணப்பட்டால் அத்தொகை பறிமுதலாவதோடு பத்திரிகையும் அழிந்தொழிய வேண்டியதுதான். இதுவே இப்பொழுது திவானாகயிருந்து லீவின் பேரில் சென்றிருக்கும் திவான் வாட்ஸ் துரை மகனாரின் பெரு முயற்சியால் பிரயோகிக்கப்பட்ட அருமையான சட்டம்.

சுதந்திரத்தையும் உரிமையையும் நோக்காகக் கொண்டே பத்திரிகை நடத்தப்படுவதாகும். பத்திரிகை நடத்த வேண்டிய உரிமையையும் சுதந்திரத்தையும் பறித்து விட்டால் அப்பத்திரிகை நடந்தென்ன? நடக்காமல் அழிந்தென்ன? ஆட்சி முறையில் குற்றங் கண்டவிடத்துக் கடிந்தும், குணங் கண்டவிடத்துப் போற்றியும் வருவதே பத்திரிகையின் இயல்பு.

**"இடிப்பாரை இல்லாத வேமரா மன்னன்**
**கெடுப்பா ரிலானுங் கெடும்."**

என்னும் தமிழ் வேதப்படி, குற்றங்கண்ட விடத்தில் இடித்துக்கூறும் அமைச்சன் இல்லாவிட்டால், கெடுப்பான் இல்லாவிட்டாலும் அரசன் கெடுவான் என்பதைப் போல, குற்றங் கடிந்தும், குணம் புகழ்ந்தும் பேசும் பத்திரிகைகளுக்கு வாய் பூட்டிடுதல் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கே அவமானமாகும்.

இதை உணர்ந்து மேன்மை தங்கிய ரீஜண்ட் மகாராணியார் இந்த புதிய பத்திரிகைச் சட்டத்தை ரத்து செய்வதே கண்ணியம் பொருந்திய செயலாகும். இல்லாக்கால் தன்னுடைய பிரஜைகள் தன் ஆக்கினையை மீறி சிறை செல்வ



RangaRakes
tamilnavarasam.com

தால் தானே பணிந்து வாபஸ் பெற வேண்டிய நிலை சம்பவிக்கும் யென் பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அல்லாமலும், இது தற்காலம் ஆட்சி செலுத்தும் ரீஜண்ட் மகாராணி யாரிடம் நாம் எதிர்பார்த்த குணங்களுக்கு முற்றும் விரோதமாயிருக் கிறது. அமைதியாகவும் குடிகள் விரும்பும் முறைப் படியும் ஆட்சி செலுத்த வேண் டியது நல்லரசின் முறை. அப்படிச் செலுத்த தன்னால் முடியாவிட்டால் தன்னிடம் பிரஜைகள் நல்லபிப்பிராயம் கொண்டுள்ள இக்காலத்திலேயே தன்னுடைய ரீஜண்ட் பதவியிலிருந்து விலகி வேறு ஒருவரிடம் ஒப்புவித்து பழி பாவங்களிலிருந்து தப்புவித்துக் கொள்ளுவதே நல்லது. இல்லாவிட்டால் இவ்வாறான கொடுங்கோலாட்சிக்குத் தன்னை பாத்திரமாக்கிக் கொள்வது புத்திசாலித்தனமாகாதென்றே சொல்லுவோம்.

இனி, திருவாங்கூர் பிரஜைகள் இக்கொடுமையைச் சகித்துக்கொண்டு சும்மா இருக்கக்கூடாது. அரசாங்கம் மூச்சடைத்துத் திணறும்படி செய்தல் வேண்டும். அரசாங்கம் ஒத்து வராவிட்டால் அரசாங்கத்திற்கு (டிபாசிட்டு) ஜாமீன் தொகை கட்டாமலேயே ஒவ்வொருவரும் பத்திரிகைகள் வெளியிட முன் வரவேண்டும். அதனால் அரசாங்கத்தார் கைது செய்வரேல் ஜெயிலுக் குப் போகத் தயாராயிருக்க வேண்டும். இப்படியே ஒவ்வொரு நாளும் தினம் 10,20-பத்திரிகைகள் வீதம் ஆரம்பித்து, அதனால் உறுதியுடன் தினம் 10,20-பேர் ஜெயிலுக்குப் போய் ஜெயிலை நிரப்பிக் கொண்டேயிருந்தால் அப்பொ ழுது அரசாங்கம் தானே பணிந்துவிடும் என்று திருவாங்கூர் பிரஜைகளுக்கு விண்ணப்பம் செய்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - வேண்டுகோள் - 06.06.1926**



# தென் இந்திய ரயில்வே ஸ்டேஷன்களில் சாப்பாட்டு விடுதிகள்

இதைப்பற்றி 'குடி அரசு' பத்திரிகையில் இதற்கு முன் இரண்டொரு தடவை எழுதி இருக்கிறோம். தென் இந்திய ரயில்வே ஆலோசனைக் கமிட்டி யாரும் ரயில்வே அதிகாரிகளுக்கு இதைப்பற்றி பல ஆலோசனைகள் சொன் னார்கள். பிராமணாதிக்கம் நிறைந்த தென்னிந்திய ரயில்வே கம்பெனிக்கு யார்தான் சொல்லி என்ன பிரயோஜனம்?

தஞ்சாவூர் ரயில்வே ஸ்டேஷனில் உள்ள இந்தியர் சாப்பாட்டு விடுதி யை நாம் இவ்வாரம் பார்க்க நேர்ந்தது. அங்கு மாடியின் மேல் கட்டப்பட் டுள்ள இடத்தில் சமையல் செய்யும் பாகம் போக பாக்கியிடத்தில் நாலில் மூன்று பாகத்தைத் தட்டி கட்டி மறைத்து பிராமணர்களுக்கென்று ஒதுக்கி வைத்து விட்டு, நாலில் ஒரு பாகத்தை 'சூத்திரர்', 'பஞ்சமர்' , 'மகமதியர்', 'கிறிஸ்தவர்', 'ஆங்கிலோ இந்தியர்' என்கின்ற பிராமணரல்லாதவருக் கென்று ஒதுக்கி வைத்து, அதிலேயே எச்சிலை போடுவதற்கும், கை கழுவு வதற்கும், வாய் கொப்பளிப்பதற்கும், விளக்குமாறு, சாணிச்சட்டி, கூடை முறம் வைப்பதற்கும், எச்சில் பாத்திரம் சமையல் பாத்திரம் கழுவுவதற்குமாக ஏற்பாடு செய்யப்பட்டு, இவ்வளவு அசிங்கங்களுக்கும் இந்த இடத்தையே உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இவைகளைப் பற்றி யாராவது கேட்டால், கேட்பவர்களை வகுப்பு துவேஷத்தை கிளப்புகிறார்கள்; இது மிகவும் அற்பத் தனமானது என்று நமது பிராமணர்கள் சொல்லுகிறார்கள்; எழுதுகிறார்கள்; அத்தோடு மாத்திரமல்ல, அவர்கள் தயவில் பிழைக்கும் பிராமணரல்லாத பத்திராதிபர்களும்கூட ஒத்துப் பாடுகிறார்கள். ரயிலில் பிரயாணம் செய்து ரயில்வே கம்பெனிக்கு பணம் கொடுக்கும் ஜனங்கள் பெரும்பாலும் எந்த வகுப்பார்? அவர்களின் எண்ணிக்கையென்ன? நூற்றுக்கு தொண்ணூற்றேழு பேர் பிராமணரல்லாதாராயும் நூற்றுக்கு மூன்று பேர் பிராமணர்களாயிருந் தும், உள்ள இடத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து பாகத்தை அவர்களுக்கு எடுத்துக்கொண்டு நூற்றுக்கு இருபத்தைந்து பாகத்தை நமக்குக்கொடுத் திருப்பதோடு அதிலேயே எச்சிலை, சாணிச்சட்டி, விளக்குமாறு முதலியவை களையும் வைத்திருக்கிறார்கள் என்றால் இவர்கள் கைக்கு ராஜீயபாரம் வந்துவிட்டால் இந்தப் பிராமணர்கள் பிராமணரல்லாதாருக்கு எங்கு இடம்



RangaRakes tamilnavarasam.com

ஒதுக்கி வைப்பார்கள்? கக்கூசுக்கு பக்கத்திலாவது ஒதுக்கி வைப்பார்களா? என்பதை 'உரிமை பெரிதா', 'வகுப்பு பெரிதா' என்று பொய் வேதாந்தம் பேசி வயிறு வளர்க்கும் 'உத்தம தேசபக்தர்களை' வணக்கத்துடன் கேட்கிறோம்.

**குடி அரசு - விமர்சனம் - 06.06.1926**



# வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

## I

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி ஸ்ரீமான் சத்தியமூர்த்தி திருச்சி - லால்குடியில் ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்கார் தலைமையின்கீழ் ஒரு பிரசங்கம் செய்ததாக ஜூன் முதல் தேதி 'மித்திரனில்', 'வகுப்பு வேற்றுமை யின் கேடுகள்' என்ற தலைப்பியின் கீழ் பத்தி பத்தியாக எழுதப்பட்டி ருக்கிறது. அவற்றில் அவர் சொல்லும் ஆக்ஷேபனைகளாவன :-

1. இந்தியாவில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமானது லார்ட் மிண்டோ, காலஞ்சென்ற கோகலே இவர்களுடைய ஆலோசனையால் ஏற்பட்டது.

2. முகமதியரைப் பிரீதி செய்ய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தில் இறங்கிவிட்டார்கள்.

3. கோகலே ஒப்புக்கொள்ளாதிருந்தால் வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம் ஏற்பட்டிருக்காது.

4. வகுப்புவாரியை லார்ட் மிண்டோ ஒப்புக் கொண்டதற்கு லார்ட் மார்லி கோபித்துக் கொண்டிருக்கிறார்.

5. இதனால் ஒவ்வொருவரும் தன் தன் வகுப்பு நலனை நாடுகிறார்களே அல்லாமல் சமஸ்தானத்தின் சார்பாக பற்றைக் காட்டுவதில்லை.

6. சில்லரை வகுப்பினர் கிராம யூனியன் முதற்கொண்டு, ராஜாங்க சபை வரை ஒவ்வொன்றுக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கோருகிறார்கள்.

7. கவர்ன்மெண்ட் நிர்வாக சபையில் கூட வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் கேட்கத் தயங்கவில்லை.

8. இவர்களை திருப்தி செய்வதென்றால் சென்னைக்கு மாத்திரம்



RangaRakes tamilnavarasam.com

ஆயிரம் நிர்வாக சபை மெம்பர் ஸ்தானம் வேண்டும்.

9. லக்ஷுமணபுரியில் வகுப்பு ஒப்பந்தம் ஏற்பட்டது. காங்கிரஸ் காரர்கள் தைரியமில்லாததால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு உடன்பட்டார்கள் .

10. மாண்டேகு, செம்ஸ் போர்ட் இருவரும் வகுப்புவாரிப் பிரதிநிதித் துவத்திற்கு விரோதமாயிருந்தாலும் அதிகார வர்க்கம் அவ்வித மிருக்க மாட்டார்கள்.

11. ஏனென்றால் அவர்கள் அதைக் கொண்டுதான் இங்கு நீடித்து இருக்கிறார்கள்.

12. இந்துக்களும் முஸல்மான்களும் தங்கள் வகுப்பை எண்ணாமல் ஒன்றுபட்டால் அரசாங்க எதேச்சாதிகாரம் ஒழிந்துபோய்விடும்.

13. தற்சமயம் இத்தேசத்தில் நடக்கும் வகுப்பு மகாநாடுகள் நடப்பதைப் பார்த்தால் அரசாங்க விஷயமாக யார் என்ன நினைக்கிறார்கள் என்றே தெரியவில்லை.

14. ஒவ்வொரு வகுப்பும் பிரிந்து பல உப வகுப்புகளாய் போவதைப் பார்த்தால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு எல்லையில்லாமல் போய்விடும்.

15. இதனால் சட்டசபைகள் வகுப்புக் காக்ஷி சாலையாக முடியும்.

16. இதோடு நிற்காமல் உத்தியோகங்களிலும் ஸ்தல ஸ்தாபனங்கள் கல்வி போர்டுகளிலும் பிரதிநிதித்துவம் கேட்பார்கள்.

17. உத்தியோகம் பெற்றால் பெற்றவருக்கு நன்மையே தவிர வகுப்புக்கு என்ன நன்மை.

18. 100-க்கு 5 பேருக்கு மேல் உத்தியோகம் கொடுப்பது சாத்தியப் படாது.

19. ஒவ்வொரு வகுப்பைச் சேர்ந்த உத்தியோகஸ்தரும் தங்களு டைய வகுப்புக்கு என்ன செய்வதென்று எண்ணுவார்களே தவிர தேசத்தைக் கவனிக்கமாட்டார்கள் .



20. ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் வகுப்பார் எத்தனை பேர் உத்தி யோகம் பார்க்கிறார்கள் என்கிற கணக்குப் பார்ப்பதிலேயே இருப் பார்களே ஒழிய தேசத்தைக் கவனிக்க மாட்டார்கள்.

21. ஸ்தல ஸ்தாபனம், கல்வித்துறை முதலியவற்றிற்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அநாவசியம்.

22. தாழ்ந்த வகுப்பிற்கு நியமனமாகிறதே என்பதை ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

23. ஆனால் அவர்கள் விஷயத்தில் ஓட்டுரிமையைத் தாராளமாக்கி இதரத் தொகுதிக்கு சமமாய் தேர்தல் நடத்துவது நலம்.

24. ஓட்டர் ஜாப்தாவில் 100 ஓட்டர்கள் இருந்து அவர்களில் 25 பேர் ஆதி திராவிட ஓட்டர்களாயுமிருந்து அவர்களும் பேட்டைக்கு ஐவராக பரவியுமிருந்தால் அந்த பேட்டைகளுக்கு தெரிந்தெடுக்கும் மற்ற வகுப்பார்கள் ஆதி திராவிடரின் நன்மையைக் கவனித்துக் கொள்ளுவார்கள். 125 ஆதி திராவிடருக்கு ஒரு ஆதி திராவிட பிரதிநிதியை விட இந்த ஐந்து வேறு வகுப்புப் பிரதிநிதிகள் நல்ல வேலை செய்ய முடியும் என்பதில் சந்தேகமில்லை.

25. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாமலிருந்தால்தான் இவ்வித நன்மை ஏற்படக்கூடும்.

26. சட்டசபை விஷயத்தில் முஸல்மான்களுக்கும் பிரத்தியேகப் பிரதி நிதித்துவம் இருந்து வருகிறது. ஐரோப்பியரும் ஆங்கிலோ இந்தியரும் தனிப் பிரதிநிதித்துவம் பெற்று இருக்கிறார்கள்.

27. கிறிஸ்தவர்களைப் பற்றிய வரையில் அவர்களில் புத்திசாலிகளான கே.டி.பால் முதலியவர்கள் வகுப்புவாரியை கண்டிக்கிறார்கள். கல்வியில் சிறந்ததும் முன்னேற்றமடைந்ததுமான இவ்வகுப்பினர் பொதுத் தொகுதியில் தேர்தலில் நிற்க பூரண சம்மதமாயிருக் கிறார்கள்.

28. சென்னையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் திறமை வாய்ந்த தலைமையின் கீழ் இந்துக்கள் பிரதானமாயுள்ள பேட்டைகளில் முஸ்லீம்களையும் கிறிஸ்தவர்களையும் நிறுத்தி வெற்றி பெற்றி ருக்கிறோம்.



RangaRakes tamilnavarasam.com

29. ஐரோப்பியர் மிகவும் சொல்ப துகையினரானதாலும் கவர்ன்மெண்ட் ஐரோப்பிய கவர்ன்மெண்ட் ஆனதாலும் அவர்களுக்கு விசேஷ பிரதிநிதித்துவம் அவசியம்.

30. ‘ஆங்கிலோ இந்தியர்’களில் நல்ல புத்தியுள்ளவர்கள் நம்மோடு சேர்ந்துழைக்கத் தயாராயிருக்கிறார்கள்.

31. முஸல்மான்களுடைய பாஷை, மத வித்தியாசத்தை உத்தேசித்து அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கலாமா என யோசிக்கலாம். ஆனால் 20 வருஷமாய் கொடுத்து இதுவரை ஒரு நன்மையும் ஏற்படவில்லை.

32. நான் சட்டசபையிலிருந்த 3 வருஷத்திலும் வகுப்புப் பிரச்சனை வந்ததே கிடையாது. ஜஸ்டிஸ் மந்திரிகள் சில சமயங்களில் வேண்டு மென்றே வகுப்புப் பிரச்சனையாக்கிக் கொண்டு வந்ததுண்டு.

33. வட இந்தியாவிலுள்ள இந்து முஸ்லீம் சச்சரவுகள் வகுப்புவாரி உரிமைக்கு ஏற்பட்டதல்ல. வகுப்புரிமை பெற்றதனால் ஏற்பட்டது.

34. மகமதலி ஜின்னா, பண்டித மாளவியா ஆகிய இவர்கள் அல்ப வகுப்புப் பெருமையை பாராட்டி நிற்கிறார்கள். சர். அப்துல் ரஹீம் புதிதாக இந்த கோஷ்டியில் கலந்திருக்கிறார்.

35. இம்மாகாணத்தில் 50 ஆயிரம் வகுப்பினருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்கிற ஒரு போலி பிரதிநிதித்துவம் இருந்து வருகிறது.

36. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமென்பது 100-க்கு 3 பேரடங்கிய ஒரு வகுப்பினரை நிர்மூலமாக்கவும் அவர் கழுத்தை மற்றவர் அறுக்க வும் ஏற்பட்டிருக்கிறதே தவிர வேறில்லை.

37. கூர்ஜரத்தார் மகாத்மா காந்தியை கொடுத்திருக்கிறார்கள். வங் காளத்தார் அரவிந்தரையும் தாகூரையும் கொடுத்திருக்கிறார்கள். தென்னிந்திய பிராமணர் தேச விடுதலைக்காக தியாகம் செய்துள்ள ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்காரை அளித்திருக்கிறார்கள்.



## நமது பதில்

இந்த விஷயங்கள் பதில் சொல்ல வேண்டிய அவ்வளவு அவசிய மில்லாததென்றே சொல்லலாம். ஏனென்றால் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி பேசி யிருப்பதிலிருந்தே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் அவசியம் விளங்கு கிறது.

1 - 2 - 3 வது, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் காலஞ்சென்ற கோகலே யின் ஆலோசனையினால் ஏற்பட்டது என்று இவரே சொல்லுகிறார். இதன் நன்மை தீமைகளைப் பகுத்து உணர கோகலேயைவிட இந்தியாவிலேயே வேறு ஒருவர் இருந்தார் என்று யாராலும் சொல்ல முடியாது. மகாத்மாவுக்கும் ஸ்ரீமான் ஈ.வெ.இராமசாமி நாயக்கருக்கும் இந்தியாவிலேயே யோக்கியமான பிராமணன் இல்லை என்கிற வாதம் நிகழ்ந்த போது அது சமயம் மகாத்மா “ஒருவர் கூட இல்லை என்று சொல்லக்கூடாது, நான் ஒரு யோக்கியமான பிராமணனைப் பார்த்திருக்கிறேன். அவர்தான் கோகலே” என்று சொன்ன தோடு அதற்குப் பல உதாரணங்களையும் சொல்லி “மனிதர்களில் அவருக்கு மேம்பட்ட மனிதரை தான் பார்த்ததில்லை” என்று சொன்னார். இது சில தென்னாட்டு பிராமணர்களையும் வைத்துக் கொண்டுதான் சொன்னார். இப்பேர்ப்பட்ட ஒரு உத்தம பிராமணராலும், உத்தம தேசபக்தராலும், கொஞ்ச மும் சுயநலமற்ற தியாகியாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு, ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தியும், கலியாணசுந்தர முதலியாரும், குழந்தையும், ஜனாப்கள் ஹமீத்கானும், ஷாபியும், ஸ்ரீமான் ஜயவேலும் எந்த விதத்தில் யோக்கியதை உடையவர்கள் என்பதை வாசகர் களே யோசித்துப் பார்க்க வேண்டும். கோகலேயிக்கு இல்லாத தேசபக்தியும், ஒற்றுமையும், சுயராஜ்யமும், விடுதலையும், சுதந்திரமும் இவர்களுக்கு உதய மாகிவிட்டதா? இந்தக் குழாத்தில் இருப்பவருள், மகாத்மாவினால் தியாகத் திற்கு அழைத்த காலத்தில் உத்தியோகம் விட்டவர்கள் யார்? கோர்ட்டை பகிஷ்கரித்தவர்கள் யார்? ஜெயிலுக்குப் போனவர்கள் யார்? பொருள் நஷ்ட மடைந்தவர்கள் யார்? மகாத்மா சொன்னபடி ஏதாவது ஒரு காரியம் செய்தவர் கள் இதில் யார் இருக்கிறார்கள்? ஆதலால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதற்கு கோகலேயைவிட இனி வேறு எவர் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

4 - வது, லார்ட் மிண்டோ ஒப்புக் கொண்டதைப் பற்றி லார்ட் மார்லி கோபித்துக் கொண்டார் என்கிறார்.

இந்தியாவுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்தால் அவர் களுக்குள் உள்ள கக்ஷி சண்டைகள் அடங்கிவிடும்; எல்லோரும் ஒன்று சேர்ந்து விடுவார்கள். எப்படி என்றால் ஆளுக்கு ஒரு இலை போட்டு சாப்பாடு போட்டால் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ள முடி யாது; மொத்தமாய் அவர்கள் முன்னால் கொட்டி விட்டால் ஒருவருக் கொருவர் சண்டை போட்டு கையில் பலத்தவன் காரியமாகிவிடும். அப்பொ



RangaRakes tamilnavarasam.com

ழுது நமக்கு இவர்களை அடக்கியாள ஆளும் சேரும் ; சௌகரியமாயும் இருக்கும் என்கிற எண்ணத்தின் பேரில் மார்லி பிரபு கோபித்துக் கொண்டார். அப்படிக்கில்லாமல் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சொல்வது போல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இந்தியரை நிரந்தரமாய் பிரித்து வைத்துவிடுமென்று இருக்குமேயானால் அந்நிய அரசாங்கத்தார் உடனே கொடுத்துவிட்டு மறுவேலை பார்ப்பார்கள். இதனால் ஒருவருக்கொருவர் ஏற்படும் சச்சரவை ஒழித்துவிடும்; ஒன்று சேர்ந்து விடுவார்கள் என்று நினைத்துதான் மார்லி கோபித்ததும் அரசாங்கத்தார் ஒப்புக்கொள்ள மறுப்பதும் என்பதை வாசகர்கள் இதிலிருந்தே உணர்ந்து கொள்வார்கள்.

5-வது, ஒவ்வொரு மனிதனும் வகுப்பு நலனை நாடுவானேயல்லாமல் சமஸ்தானத்தின் சார்பாக பற்றைக் காட்டமாட்டான் என்கிறார். இதில் சமஸ்தானம் என்பது நமக்குப் புரியவில்லை. அது திருட்டு வார்த்தையா யிருக்கிறது. அரசாங்கத்தாரை நோக்கி இந்தியர்களுக்கு வகுப்பு உரிமை கொடுக்க வேண்டாம்; கொடுத்தால் உங்களிடம் பற்று இருக்காது; தங்கள் காரியத்தில் ஜாக்கிரதையாயிருப்பார்கள் என்று சர்க்காருக்கு உள் ஆளா யிருந்து எச்சரிக்கை செய்வதாயிருக்கிறது.

முதலாவதாக, மனிதன் தத்தம் வகுப்பைத்தான் கவனிக்க வேண்டும். எல்லா வகுப்புகளும் தன் வகுப்பைச் சீராக்கிக் கொண்டால் எல்லா வகுப்பு களையும் கொண்ட தேசம் உடனே சீராய் விடும். அதில்லாமல் பல வகுப்பார் இருந்து கொண்டு ஒரு வகுப்பாரை மற்றொரு வகுப்பார் ஏமாற்றிக் கொண்டி ருக்கும் வரை எப்படி ஒற்றுமை ஏற்படும்? எப்படி விடுதலை ஏற்படும்? என்பதை வாசகர்களே கவனிக்க வேண்டுகிறோம். ஒரு தோட்டத்தின் வெள்ளாமைக்கு தண்ணீர் பாய்ச்சுவதனால் அந்தத் தண்ணீர் தோட்டத்தில் உள்ள சகல பாகத்திற்கும் தண்ணீர் போய் சேரும் படியிருந்தால் நல்ல விளைவு உண்டாகும். அப்படிக்கில்லாமல் சிற்சில பாகத்திற்கு தண்ணீர் போய் சேர வழியில்லாமல் தடங்கலாயும் மேடாயும் இருக்க தண்ணீர் பாய்ச்சினால் பல பாகம் வறண்டு போவதோடு அதிக தண்ணீர் கொண்ட பாகத்தின் வெள்ளாமை மாத்திரம் சில சமயங்களில் நன்றாய் விளைந்தாலும் சில சமயங்களில் அழுகிப்போகும். அதுபோல் அரசாங்கத்தின் மூலம் பெறும் உரிமையாகிய தண்ணீர் பல வகுப்பு ஜனங்களாகிய தோட்டத்திற்கு சமமாய்ப் பாயும்படி ஏற்பாடு செய்து கொள்ள வேண்டியது முதலாவதவசியமானதாகும்.

6 - வது, சில்லரை வகுப்பும் பிரதிநிதித்துவம் கோருகிறார்கள் என் கிறார். சில்லரை வகுப்பார்களும் மனிதர்களா, அல்லவா? இந்தியர்களா, அல்லவா? அவர்களுக்கும் மற்றவர்கள் அநுபவம் கோர பாத்தியமுண்டா, இல்லையா? உண்டு என்று ஒப்புக்கொள்வதானால் அவர்களுக்கும் விகிதா சார உரிமை கொடுக்கத்தான் வேண்டும். எப்படி கொடுப்பதென்பதைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. கொடுக்க சம்மதித்தால் வழி தானாய் தென்படும்.



7 - வது, கவர்மெண்டு நிர்வாக சபையிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்து வமா? என்கிறார். ஆம். அங்கும் பிரதிநிதித்துவம் கேட்டதால்தான் முஸ்லீம் களுக்காக டாக்டர் மகமது உஸ்மானுக்கு ஒரு ஸ்தானம் கிடைத்தது. இல்லா விட்டால் இந்த பிராமணர்கள் கொடுக்க சம்மதிப்பார்களா? வகுப்புரிமை கேட்பதற்கு முன் அந்த ஸ்தானங்கள் ஸ்ரீமான்கள் கிருஷ்ணசாமி ஐயர், சிவசாமி ஐயர், ராஜகோபாலாச்சாரி என்கிற பிராமணக் கூட்டத்திற்குத்தானே ஏகபோகமாய் இருந்தது? ஆகையால் இதைக் கேட்டதில் என்ன தப்பு?

8-வது, இம்மாதிரியானால் சென்னைக்கு மாத்திரம் ஆயிரம் நிர்வாக சபை மெம்பர் பதவிவேண்டும் என்கிறார்.

ஆயிரம் நிர்வாக சபை பதவிகள் வேண்டியதில்லை. சம்பளம் 5,333 - 5 - 4 வாகயிருப்பதால் அதிகம் தேவையிருப்பதாயும், அதிகமாக்க முடியாததாயும் தோன்றுகிறது. சம்பளத்தையும் போக்கியத்தையும் குறைத்து சரியான பொறுப்பை வைத்து நிர்வாக சபையை சட்டசபைக்குள் கட்டுப்ப டுத்தி விட்டால் அந்த இடத்தில் வகுப்புப் பிரிவினைக்கு இடமில்லை. இன்ன மும் கொஞ்சம் அதிகமான நிர்வாக சபை மெம்பர் பதவிகளும் உயரும். அப்பொழுது அதில் ஒன்றும் கஷ்டமிருக்காது.

9-வது, லக்ஷுமணபுரி காங்கிரசுக்கு தைரியமில்லாததால் வகுப்பு உரிமையை ஒப்புக்கொண்டது என்கிறார். இதிலிருந்து காங்கிரஸ் வகுப்புரி மையை ஒப்புக்கொண்டது நிஜம் என்று ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது லக்ஷுமணபுரி காங்கிரஸ்காரரை விட ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ராஜ கோபாலாச்சாரி, சீனிவாசய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார் இவர்களுடைய காங்கிரசுக்கு அதிக தைரியமிருப்பதால் ஸ்ரீமான்கள் முதலியார், குழந்தை, ஜயவேலு, ஹமீத்கான், ஷாபி முதலிய கனவான்களோடு எதிர்த்து நிற்கிறார் கள் என்பதும் புலனாகிறது. தமிழ்நாட்டு மக்கள் இந்தத் தலைவர்கள் தைரி யத்தையும் அவர்களின் கணங்களின் வீரத்தையும் ஒரு கை பார்க்கத்தான் போகிறார்கள். இவர்கள் தைரியத்தாலும், வீரத்தாலும் வகுப்புரிமை மறைந்து போகிறதா? அல்லது நிலை நிற்கப் போகிறதா? என்பதே பின்னால் பார்க்க இருக்கும் தத்துவம்.

10, 11, 12-வது, மாண்டேகு, செம்ஸ் போர்ட் வகுப்புவாரிப் பிரதிநிதித் துவத்திற்கு விரோதமாயிருந்தாலும் அதிகார வர்க்கம் அவ்விதமாயிருக்காது என்கிறார்.

இது பொருளற்ற சொல்லாயும் முன்னுக்குப்பின் முரணாயுமிருக்கிறது. மாண்டேகு, செம்ஸ் போர்ட் என்றால் அவர்கள் யார்? அதிகார வர்க்கம் என்றால் அவர்கள் யார்? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்தால் வகுப் புச் சச்சரவு உண்டாகும், அதனால் தாங்களும் நீடித்திருக்கலாம் என்பது வாஸ்தவமானால் அதிகார வர்க்கம் உடனே கொடுத்து விடாதா? மாண்டேகு



RangaRakes
tamilnavarasam.com

செம்ஸ் போர்ட் உள்பட்ட அதிகார வர்க்கம் ஏன் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். கோகலேயின் பிடிவாதத்தின் மேல் கொஞ்சம் மாத்திரம் கொடுப்பானேன்? பாக்கியும் கொடுத்தால் சர்க்கார் தயவை யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள்; எல்லோரும் சேர்ந்து சர்க்கார் மேல் பாய்ந்து விடுவார்கள் என்று பயந்து கொண்டே வகுப்புக்கு வகுப்பு பொறாமைப்படவும், முட்டவிடவும், ஒரு வகுப்புக்கு அதிக உரிமையும் மற்றொரு வகுப்புக்கு ஒன்றுமில்லாமலும் செய்கிறார்கள்.

**குடி அரசு - தலையங்கம் - 06.06.1926**



# பிராமணப் பத்திரிகைகளின் அயோக்கியத்தனம்

நம் நாட்டு பிராமணப் பத்திரிகைகளும் அதன் பிராமண நிரூபர் களும் செய்து வரும் அயோக்கியத்தனங்களைப் பற்றி நமது பத்திரிகையில் கடுகளவு சுத்த ரத்தம் உள்ளவர்களுக்கும் இனி இம்மாதிரி நடக்காமலிருக்கும்படியும், மானம், வெட்கம் வந்து தீரும்படியும் பல தடவைகளில் எழுதி வந்திருக்கிறோம். அநேகக் கூட்டங்களிலும் நன்றாய்ப் படும்படி பேசியும் வந்திருக்கிறோம். வேறொரு கூட்டத்தாராய் இருந்தால், ஒன்று யோக்கியர்களாகி இருப்பார்கள் அல்லது தற்கொலையாவது புரிந்து கொண்டிருப்பார்கள். ஆனால், என்ன சொன்னாலும் தங்கள் காரியமானால் போதும் என்கிற எண்ணத்தின் பேரில் மற்றவர்களை எப்படியாவது ஒழித்து வயிறு வளர்ப்பதற்கு மனுஷ சுபாவத்தையே உதறிவிட்டு மேலும் மேலும் அயோக்கியத்தனமான காரியங்களையே செய்து வருகிறார்கள். இந்த மானமற்ற, கூட்டத்தை நமது நாட்டில் இப்படியே வைத்துக் கொண்டு நாம் எப்படி விடுதலையடைய முடியும்? ஸ்ரீமான் ஈ.வெ.இராமசாமி நாயக்கர் நாகை தொழிலாளர் கூட்டத்தில் பேசியவற்றைப் பற்றி ‘இந்து’, ‘சுதேசமித்திரன்’ பத்திரிகைகள் அதன் நிரூபர்கள் எழுதுகிறார்கள் என்று எழுதியிருப்பதானது வேண்டுமென்றே எழுதியிருக்கும் அயோக்கியத்தனமான எழுத்துக்களாகும். நல்ல ஜாதியான்களாயிருந்தால் நாயக்கர் பேசியவற்றை எழுதி அதற்கு தகுந்த மறுப்புகளை எழுதும். அப்படிக்கில்லாமல் பாமர ஜனங்களை ஏமாற்றிப் பிழைக்கிற ஜாதியானதால் பேசியவைகளையும் விட்டு, நடந்த விஷயங்களையும் விட்டு, நடக்காததை எழுதி வயிறு வளர்க்க ஆசைப்படுகிறது. அக்கூட்டத்தின் முடிவில் சங்க உதவி அக்கிராசனர் எழுந்து ஸ்ரீமான் நாயக்கரின் அபிப்ராயந்தான் தனது அபிப்பிராயமென்றும் இவ்வருஷம் சங்க ஆண்டு விழாவுக்கு ஒரு தொழிலாளரையே அக்கிராசனராய்த் தெரிந்தெடுக்கப் போவதாயும், ஆனால் சங்கத்தில் உள்ள சில அங்கத்தினர் ராஜீய விஷயங்களில் பிரவேசித்து சங்க நடவடிக்கையைக் கெடுக்கிறார்கள் என்றும், உதாரணமாக சங்கத்தின் சார்பாய் ஒரு கதர் டிப்போ வைப்பதை சங்கத்தில் உள்ள சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினரே கெடுத்தார் என்றும், இன்னும் பலவிதமாய் ராஜீய அபிப்ராயங்களை சங்கத்தில் கொண்டு வந்து விட்டு சங்கத்தை ஒழுங்காய் நடைபெற முடியாமல் சூழ்ச்சிகள் செய்



RangaRakes
tamilnavarasam.com

கிறார்கள் என்றும், ஆதலால் தான் இதில் ஸ்தானம் வைப்பதில் பிரயோ ஜனமில்லை என்றும் சொல்லி ராஜிநாமா கடிதத்தை வாசித்தார். சங்க காரியதரிசியும் இதை ஒட்டியே சில வார்த்தைகள் சொன்னார். பிறகு, பலர் கேட்டுக் கொண்டதின் பேரில் அதைத் திருப்பி வாங்கிக் கொண்டார். இப்படி இருக்க ஸ்ரீமான் நாயக்கர் சொல்லுவதைத் தான் ஒப்புக் கொள்ளவில்லை என்றும், அந்நியர்கள்தான் சங்கத்திற்கு உதவி தலைவராயிருக்க வேண்டு மென்று சொல்லி அதற்காகவே தான் ராஜிநாமா செய்வதாக சொன்னா ரென்றும் ‘ இந்து’, ‘சுதேசமித்திரன்’ பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. இது யோக்கியமானதாகுமா? நாம் கடினமான பதம் உபயோகிப்பதாய்ச் சொல்லும் மிருதுவான பதக்காரர்கள் இதற்கு என்ன பதில் சொல்லுவார்கள்?

தொழிலாளர் சங்கத்தில் தொழிலாளி அல்லாதவர்கள் ஆதிக்கம் இருக்கக் கூடாது என்றால், இந்த அய்யர், அய்யங்கார் கூட்டங்களுக்கு இவ்வளவு ஆத்திரம் வந்து, இவ்வளவு அல்பத்தனமான காரியம் செய்வானேன்? டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள்கூட தொழிலாளர் நிர்வாகத்தில் அந்நியர் கூடாது என்பதை ஒப்புக்கொள்ளுகிறார். பாவம்! ஏழைத் தொழிலாளரான வாயில்லாப் பூச்சிகளை ஏமாற்றி, தலைவர்களாகி, அவர்களின் ஓட்டு வாங்கி, பிராமணரல்லாதார் தலையில் கையை வைப்ப தற்கு யாராவது விரோதமாயிருந்தால் அவர்களை அடியோடு ஒழிப்பதற்கு இவ்வளவு கொலை பாதகம் செய்யவேண்டுமா? இதுபோலவே கொஞ்ச நாளைக்கு முன் ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் சொன்ன காலத்திலும் இந்தப் பிராமணப்புலிகள் சீறி விழுந்தனர். இந்த பிராமண சிகாமணிகளுக்கு தொழிலாளிகளிடம் அன்பு இருக்குமானால் வெளியிலிருந்து செய்யட்டுமே. முனிசிபல் எலக்ஷனில் யாராவது ஒரு தொழிலாளியை நிறுத்தி ஓட்டு வாங்கிக்கொடுக்கட்டுமே. சட்டசபைக்கு யாரையாவது நிறுத்தி ஓட்டு வாங்கிக் கொடுக்கட்டுமே. ஸ்ரீமான் புர்ரா, பாஷ்யம், மல்லய்யா, ஈ.எல். அய்யர் ஆகிய இந்த பிராமணர்களுக்காக பணம் சிலவு செய்து கவுன்சிலராக்குகிறவர்கள் ஏன் இந்த தொழிலாளிகளில் ஒன்று இரண்டு ஆள்களுக்கு செய்யக்கூடாது. அதையெல்லாம் விட்டு விட்டு தொழிலாளிகளுக்கு என்ன வேண்டும் என்பதே தெரியாத சில பொறுப்பற்ற பிராமணர்கள் ஒன்று சேர்ந்து கொள்வதும், நாங்கள் தான் தொழிலாளிகளுக்கு தர்மகர்த்தா, எங்களுக்கு ஓட்டுக் கொடுங்கள். உங்களுக்கு சாதித்து விடு கிறோம் என்று அவர்களை ஏமாற்றுவதும் அதற்கேற்றாற் போல் தொழிலாளி கள் கூட்டத்தில் ஏதாவது ஒன்று இரண்டு வாயாடிகளை ஏதேனும் கொடுத்து சுவாதீனம் செய்துக் கொண்டு அவர்கள் தயவில் உபசாரப் பத்திரம், மாலை, வண்டி சவாரி, ‘ஜேய்’ முதலியவைகள் அநுபவிப்பதுமான காரியங்களுக்கு மாத்திரம் தொழிலாளிகளின் தலைவர்களாக வேண்டுமானால் இது எப்படி நடக்கும்? இனியாவது நமது தொழிலாள சகோதரர்கள் இந்த பொய்யர்கள், வம்பர்கள், சுயநலப் புலிகள் ஆகிய கூட்டத்தாருக்கு இடம் கொடுக்காமல்



தங்கள் காலிலேயே தாங்கள் நிற்கும்படியான யோக்கியதையை அடைய வேண்டுகிறோம். அதோடு கூடவே இந்தப் பார்ப்பனப் பத்திரிகைகளையும் நம்பி மோசம் போகாதீர்கள் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.06.1926**



RangaRakes tamilnavarasam.com

# எலெக்ஷன் தந்திரம்

## திருப்பூர் கால்நடைக் காட்சி

**– சித்திரபுத்திரன்**

திருப்பூர் கால்நடைக் காட்சியானது 2,3 வருஷங்களுக்கு முன்னால் சென்ற சட்டசபைத் தேர்தலின்போது நடத்தப்பட்டது. அதற்குப் பிறகு இப்போது இவ்வருஷ சட்டசபை எலெக்ஷன் போதுதான் கூட்டப்பட்டிருக் கிறது. அப்படிக் கூட்டப்பட்ட போதிலும் அதில் நடத்தப்பட்ட சடங்குகள் ஒவ் வொன்றும் சட்டசபை மெம்பர்களின் ஓட்டுப் பிரசாரத்தில் குறி கொண்டே நடத்தப்பட்ட மாதிரியாகவே யிருந்தது. அந்தக் குறியின் வேகத்தில் வழக்க மான ஒழுங்கு முறைகள்கூட சிதறப்பட்டு போனதோடு மக்களுக்கு இயற்கை யாய் இருக்கவேண்டிய அபிமானமும் பறந்தோடி விட்டது.

விவசாயம் என்பது மாற்றப்பட்ட இலாக்காக்களில் ஒன்றான அபி விருத்தி இலாகாவைச் சேர்ந்தது. அதை நிர்வகித்து வருகிறவர் பிராமண ரல்லாதார் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீமான் சர்.டி.என். சிவஞானம் பிள்ளை அவர்கள். இப்படி இருக்க கவர்னர் அவர்களைக் கொண்டு கால்நடைக் காட்சி யைத் திறக்கச் செய்வதும் ஸ்ரீமான் சர்.சி.பி. ராமசாமி அய்யர் அவர் களைக் கொண்டு பரிசு வழங்கச் செய்வதுமான காரியங்கள் நடத்தப்பட்டி ருக்கிறது.

முன் ஒரு சமயம் இதே திருப்பூரில் தாலூகா போர்டு கட்டடத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்ட ஸ்ரீமான் சி.பி.ராமசாமி அய்யர் அவர்களை திருப்பூர்க்காரர்கள் அழைத்தபோது ஸ்ரீமான் ஐயர் அவர்கள், தாலூகா போர்டு மாற்றப்பட்ட இலாகாவாகிய மந்திரி பனகால் ராஜா அவர்கள் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டதென்றும், தான் அதில் பிரவேசிக்க முடியாதென்றும் சொன்னவர், இதுசமயம் அதே மாதிரி மாற்றப்பட்ட இலாக்காவாகிய ஸ்ரீமான் டி.என்.சிவ ஞானம் பிள்ளை அவர்கள் ஆதிக்கத்தில் இருக்கும் இலாக்காவுக்கு எப்படி ஏற்றுக்கொண்டார் என்பது விளங்கவில்லை. ஒரு சமயம், மாற்றப்பட்ட இலாகாவில் மந்திரிகளுக்கு அப்போதிருந்த செல்வாக்கு இப்போதில்லாமல் இருக்கலாம் என்று வைத்துக் கொண்டாலும், விவசாயக் கட்சி நடத்திய பிரமுகர் ஸ்ரீமான் வி.சி.வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்கள் இந்த இலாக்கா மந்திரியை அலக்ஷியம் செய்த காரணம் என்னவோ? ஒருசமயம், தானும்



ஸ்ரீமான் டி.எ.இராமலிங்கம் செட்டியார் அவர்களும், ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் அவர்களும் பிராமணரல்லாதார் கட்சியை விட்டு சட்டசபை எலெக்ஷனை உத்தேசித்து இப்போது புதிதாய் பிராமணர் கட்சியான சுயராஜ் யக் கட்சியில் சேர்ந்து விட்டதால் அக்கட்சிக்கு ஒரு ரகசிய சூத்திரராயிருக் கும் பிராமண மந்திரியான சி.பி. ராமசாமி அய்யர் அவர்களுக்கு கௌரவம் கொடுத்து அவர்களால் தங்களுக்கு எலெக்ஷனில் வெற்றி உண்டாக விளம்பரம் செய்யச் சொன்னார்கள் போலும். அதை உத்தேசித்தே ஸ்ரீமான் சி.பி.அய்யர் அவர்களும் தனது பிரசங்கத்தில் ஓட்டர்கள் கவனித்து இவர்க ளுக்கே ஓட்டு செய்யத்தக்க வண்ணம் "மேல் பவானி திட்டமானது இப்போது சென்னை சட்டசபையிலுள்ள உங்கள் பிரதிநிதிகளான ஸ்ரீமான்கள் வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர், டி.எ.இராமலிங்கம் செட்டியார், சி.வி.வெங்கிட்ட ரமணய்யங்கார் ஆகிய இவர்களால் வற்புறுத்தப்பட்டதின் பேரில் மேட்டூர் திட்டம் கவனிக்கப்பட்டதாகவும், மறுபடியும் ஷ மூன்று பிரதிநிதிகளும் நிர்பந்தித்தால் காரியம் நடக்குமென்றும்" சொல்லுகிறார். இதன் அர்த்தம் என்ன? அடுத்த தேர்தலுக்கு மறுபடியும் இந்த மூன்று கனவான்களுக்கே ஓட்டு செய்யுங்கள், உங்கள் பூமிக்கு வாய்க்கால் வரும் என்று சொல்லு வதுதானே அல்லாமல் வேறென்ன?

சீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் என்கிற பிராமணரவர்கள் இந்த மூன்று பேருக்கே ஓட்டு கொடுங்கள், கள்ளு உலகத்தை விட்டே ஓடிவிடும் என்கிறார். சீமான் எஸ். சீனிவாசய்யங்கார் என்கிற பிராமணரவர்கள் இந்த மூன்று பேருக்கே ஓட்டு செய்யுங்கள் சுயராஜ்யம் வந்துவிடும் என்கிறார். சீமான் சத்தியமூர்த்தி என்கிற பிராமணரவர்கள் இந்த மூன்று பேருக்கே ஓட்டு செய்யுங்கள் பனகால் ராஜா கம்பெனியை பாப்பராக்கிவிடலாம் என்கிறார்.

சீமான் ஏ. ரங்கசாமிஅய்யங்கார் என்கிற பிராமணரவர்கள் இந்த மூன்று பேருக்கே ஓட்டு செய்யுங்கள் முட்டுக் கட்டை போடலாம் என்கிறார். சர்.சி.பி. ராமசாமிஅய்யர் என்கிற பிராமணரவர்களோ இந்த மூன்று பேருக்கே ஓட்டு செய்யுங்கள் உங்கள் பூமிக்கு தண்ணீர் பாய்ச்சலாம் என்கிறார். இத்தனை பிராமணர்கள் இம்மூவரும் சட்டசபைக்கு வரவேண்டுமென்று பாடுபடுவதின் நோக்கமென்ன? எப்படியாவது பிராமணரல்லாதார் கட்டுப்பாட்டை உடைத்து, தங்கள் பின்னால் தங்கள் சொற்படி ஆடும் பிராமணரல்லாதாரைக் கூடுமானவரை சட்ட சபைக்கும் இழுத்து எப்படியாவது பிராமணரல்லாதார் இயக்கத்தை அடியோடு துலைத்து பிராமணாதிக்கத்தை நிலை நிறுத்து வதற்கல்லாமல் வேறென்ன? அப்படிக்கில்லையென்றால் சீமான் சி.ராஜகோ பாலாச்சாரியார் ஓட்டுப் பிரசாரத்துக்கு வரக் காரணமென்ன? சர்.சி.பி.அய்யர் இந்த மூன்று பேரால் திட்டம் ஒப்புக் கொள்ளப்பட்டது, இந்த மூன்று பேரும் வலியுறுத்தினால் தண்ணீர் வரும் என்று சொல்லக் காரணமென்ன? இந்த மூன்றில் இரண்டு பேருக்கும் தங்கள் சமூகம் எக்கேடு கெட்டாலும் தங்க ளுக்கு அக்கறையில்லை. எப்படியாவது தங்களுக்கு சட்டசபை மெம்ப ரானால் போதும் என்கிற நிலையில் "என் மகன் செத்தாலும் மருமகள் தாலிய



RangaRakes tamilnavarasam.com

றுத்தால் போதும்” என்கிற மாதிரி பிராமணர்கள் பின்னால் திரிகின்றார்கள்.

தங்களுக்கு, தங்கள் இனத்தாரிடம் ஏதாவது ஓட்டு வேண்டு மென்றிருந்தால் அப்போது மாத்திரம் நானும் வேளாள குலம் நீங்களும் வேளாள குலம் வேளாளர் ஓட்டு வேளாளர் அல்லாதாருக்கு போகலாமா? ஜாதி அபிமானம் வேண்டாமா? என்று உபதேசம் செய்து ஓட்டு கேட்பதும், தாங்கள் வேறு ஒருவருக்கு ஏதாவது செய்யத் தகுந்த சந்தர்ப்பம் இருக்கும் போது அந்த ஜாதியை மறந்துவிட்டு வேறு ஒருவருக்கு, அதுவும் தங்களை சூத்திரன், தாசி மகன், அடிமை என்று சொல்லும் பிராமண வகுப்புக்கு, அதுவும் சர்க்கார் ஊழியருக்கு அதை உபயோகிப்பதுமாயிருந்தால் குலாபிமானத்தின் பேரில் ஒருவரைப் போய் ஓட்டுக் கேட்க இவர்களுக்கு யோக்கியதை ஏது? சீமான் டி.என்.சிவஞானம் பிள்ளை அவர்கள் நல்ல கொழுத்த வேளாளர்; சீமான்கள் வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டரும், டி.எ.இராமலிங்கஞ் செட்டியாரும் வேளாளர்கள். அவருக்கு இவர்கள் என்ன பெருமை தந்தார்கள்?

அல்லாமலும் எலெக்ஷன் சமயம் பார்த்து கண்காக்ஷி எதற்கு கூட்ட வேண்டும். இதனால் எவ்வளவு செலவு. வந்த அதிகாரிகள் பொது ஜனங்கள் பணத்தில் வந்திருக்கிறார்கள். அங்கு வந்த பதினாயிரக்கணக்கான பொது ஜனங்களும் எவ்வளவு பணத்தை சிலவு செய்து கொண்டு வந்திருக்க வேண்டும்? எவ்வளவு பேர் இதன் பயனாக சூதாட்டத்தில் நஷ்டமடைந்திருக்க வேண்டும்? இதனால் யாருக்கு என்ன லாபம்? சர்.சி.பி.அய்யர் வந்து சீமான்கள் சி.வி. வெங்கிட்டரமணய்யங்கார், வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர், டி.எ.இராமலிங்கஞ் செட்டியார் ஆகிய இவர்களுக்கு ஓட்டு கொடுங்கள் என்று ஜாடையாய் (அதுவும் பிராமண நன்மையை உத்தேசித்து) சிபார்சு செய்வதற்கு பொது ஜனங்கள் பணத்தில் இவ்வளவு ஆடம்பரம் செய்யப்பட்டது என்றால் இதன் உண்மையறிந்த யாருக்குத்தான் மனம் வேதனை உண்டாகாது? நம்நாட்டு பாமர ஜனங்கள் இதை அறியாமல் எவ்வளவு பேர் எவ்வளவு பணம் சிலவு செய்து கொண்டு வந்து வேடிக்கைப் பார்த்துப் போனார்கள்? தெருக் கூத்துக்கும் கால்நடைக் காக்ஷிக்கும் என்ன வித்தியாசம்? கூத்தாடியும் ஜனங்களுக்கு ஒரு நல்ல படிப்பு ஏற்படக் கூத்தாடுவதாய் சொல்லுகிறான், கண்காக்ஷியும் ஜனங்களுக்கு விவசாய ஞானம் ஏற்படுத்துவதற்கு என்று சொல்லுகிறார்கள். இரண்டின் உள்கருத்தும் சுயநலம் அல்லாமல் வேறு என்ன?

**குடி அரசு - கட்டுரை - 06.06.1926**



# முஸ்லிம்களும் சுயராஜ்யக் கட்சி பத்திரிகைகளும்

“படிக்கிறது பகவத்கீதை குடிக்கிறது குடக் கள்” என்னும் கதையாய் சுயராஜ்ஜியக் கட்சியாரும் அவர்களது பத்திரிகைகளும் நடந்து வருகின்றன. ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமைப்பட வேண்டும், அதற்காகவே நாங்கள் பாடுபடுகிறோம் என வாய் வேதாந்தம் பேசி வரும் சுயராஜ்யக் கட்சியார், முஸ்மிம்களுக்கு முரணாய் நடந்து வருவதையும்; எல்லைப்புற மாகாண சீர்திருத்தத் தீர்மானத்தில் முஸ்லீம்களுக்கு விரோதமாய் நடந்து கொண்டதையும், கல்கத்தா நகர டிப்டிமேயராக இருக்கும் ஜனாப் எச்.எஸ். ஷுஹரவர்தி என்னும் முஸ்லீம், சுயராஜ்யக் கட்சி அங்கத்தினராயிருந்தும் அவரை டிப்டி மேயர் பதவியினின்று விலக்க வேண்டு மென்ற கருத்துடன் மற்ற சுயராஜ்யக் கட்சி ஹிந்துக்கள் ஐரோப்பியர்களை துணைக்கு அழைத்துக்கொண்டு செய் துள்ள தீர்மானத்தையும், சுயராஜ்யக் கட்சி பத்திரிகைகள் முஸ்லீம்களை மாற் றாந்தாய்க் குழந்தைகளைப் போல் பாவித்து எழுதி வருவதையும் நாம் அறிவதைவிட முஸ்லீம்கள் நன்றாய் அறிவார்கள். நாட் டிலே வீறு கொண்டு முழங்கிய ஒத்துழையாமையை ஒடுக்குவதற்குத் தன்னால் ஏற்படுத்தப்பட்ட சுயராஜ்யக் கட்சியில் முகமதி யர்களையும் சேர்த்து பலந்தேடிக் கொள்ளு வதற்காக ஏற்பாடு செய்த “கல்கத்தா பாக்ட்” என்னும் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை உண்டாக்கியவரான தேசபந்து சித்தரஞ்சன் தாசரால் தோற்று விக்கப்பட்ட “பார்வார்டு” பத்திரிகை இப்பொ ழுது ஹிந்து - முஸ்லீம் ஒற்று மைக்கு நேர்மாறாக எழுதி வருகின்றது. சமீபத்தில் நடந்த ஹிந்து - முஸ்லீம் கலவரத்தின் போது ஹிந்து - முஸ்லீம் கலவரத்தை வளர்க்கக்கூடிய விதமாய் (முஸ்லீம்களுக்கு விரோதமாய்) “பார்வார்டு” பத்திரிகை எழுதிவந்ததால் அப் பத்திரிகை மீது அரசாங்கத்தார் வழக்குத் தொடர்ந்து அதன் ஆசிரியரிடம் 500 ரூபாய்க்கு ஜாமீன் வாங்கி யுள்ளார்கள்.

எனவே இவற்றினின்று விளங்கும் உண்மைதான் என்ன? இந்த சுயராஜ்யக் கட்சியாரால் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படுமா? ஏற்படவே ஏற்படாது. இந்தக் கட்சியாரை நம்பி அவர்களுடன் சேர்ந்து உழைக்கும் முஸ்லீம்கள் மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியோன் கதிக்கே வந்து சேருவார்கள்.

**குடி அரசு - கட்டுரை - 13.06.1926**



RangaRakes tamilnavarasam.com

# பிராமணரல்லாதார் இயக்கத் தத்துவம்

## தற்கால காங்கிரசால்
## பிராமணரல்லாதாருக்கு வந்த கெடுதி

சகோதிரர்களே!

இன்று கூட்டப்பட்ட கூட்டமானது பிராமணரல்லாதார் என்கிற ஒரு வகுப்பு சம்பந்தமான கூட்டம். இக்கூட்டத்தில் நான் இன்று பிராமணரல்லாதார் வகுப்பு முன்னேற்றம் என்கிற விஷயத்தைப் பற்றி பேசப் போகிறேன்.

### மாறுதல் வேண்டாதார் வகுப்பைப் பற்றி பேசலாமா?

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை காங்கிரஸ்காரன், அதிலும் வைதீக ஒத்துழையாதாரரன், மாறுதல் வேண்டாதவன் என்று சொல்லப்பட்ட ஒருவன் வகுப்பைப் பற்றி பேசுவது பொருந்துமா என்று சிலருக்குத் தோன்ற லாம். வைதீக ஒத்துழையாமைக்காரன் என்றால், ஒருவன் கழுத்தை ஒருவன் அறுக்கும்போது பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பவனல்ல, ஒருவன் சொத்தை ஒருவன் கொள்ளை அடித்துக்கொண்டு போனால் வழியைத் திறந்துவிட்டு வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டுமென்பவனல்ல என்பதை முதலில் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அல்லாமலும் மகாத் மாவின் காங்கிரஸும் அவரது ஒத்துழையாமையும் நிர்மாணத் திட்டமும் காங்கிரசிலிருந்து வெளிப்பட்டு மறைந்து கொண்டும் வருகிறது. நிர்மாணத் திட்டங்கொண்ட ஒத்துழையாமைக் காங்கிரஸின் போது வகுப்பு விஷயத் தைப் பற்றி எவரும் யோசிக்கவேயில்லை. அதில் உயர்வு-தாழ்வு என்கிற வித்தியாச மேயல்லாமல் எல்லா வகுப்புக்கும் சமத்துவமும், சுயமரியாதை யும், ஏழை - பணக்காரர் என்கிற வித்தியாசமேயில்லாமல் எல்லோருக்கும் க்ஷேமமும், ஆங்கிலம் படித்தவன்-படியாதவன் என்கிற வேறுபாடு இல்லா மல் எல்லோருக்கும் சம யோக்கியதையும் உண்டாக சௌகரியமிருந்ததால் என் போன்றவர்கள் வகுப்பு என்பதை மறந்து மகாத்மா காங்கிரசிலும் ஒத்துழையாமையிலும் நிர்மாணத் திட்டத்திலும் உழைத்து வந்தோம்.

### ஒத்துழையாமைக்கு முன்னும் வகுப்பிற்கே உழைத்தேன்

மகாத்மா காங்கிரசுக்கு முன்பே நான், வகுப்பு முன்னேற்றத்தில்



கவலை உள்ளவனாகத்தான் இருந்தேன். அதாவது பிராமணரல்லாதாருக்காக இப்பொழுது உள்ள தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்பது போன்ற ஏறக்குறைய இதே கொள்கை உடைய சென்னை மாகாணச் சங்கம் என்கிற ஒரு சங்கம் இருந்ததும், அதில் என் போன்றவர்கள் முக்கியப் பங்கெடுத்து உழைத்ததும் உங்களுக்குத் தெரியும். அது எதற்காகயிருந்தது? பிராமண ரல்லாதார் முன்னேற்றத்திற்கு காங்கிரஸ் போதாது என்றும், நமக்கென்று ஒரு தனியான இயக்கம் இருக்கவேண்டுமென்றும், இப்பொழுது காங்கிரசிலுள்ள பிராமணரல்லாதார் எல்லோரும் ஒன்று கூடித்தான் அச்சங்கத்தின் மூலம் பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்குழைத்ததும், நமது முன்னேற்றத்திற்காக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் முதலியவைகளை நாம் வலியுறுத்தி வந்ததும் உங்களுக்குத் தெரியும்.

### காங்கிரஸினால் ஏற்பட்ட தீவினை

இன்னும் என்னுடைய அபிப்ராயம் என்னவென்றால் நமது நாட்டில் காங்கிரஸ் என்கிற ஒரு இயக்கம் இல்லாவிட்டால் நமக்கு வகுப்பு முன்னேற்ற இயக்கமே தேவையில்லை என்றே சொல்லுவேன். நமது நாட்டில் என்று காங்கிரஸ் ஏற்பட்டதோ அன்றே பிராமணரல்லாதாருக்கு சனியன் பிடித்தது. உதாரணமாக, தமிழ்நாட்டில் காங்கிரஸ் வருவதற்கு முன் பெரிய மனிதர்கள் என்போரும், படித்தவர்கள் என்போரும், தலைவர்கள் என்போரும், தேச பக்தர் கள் என்போரும், பிராமணரல்லாதவர்களாகவேயிருந்தார்கள். ஜில்லா முன்சீப்புகள், சிரஸ்தார்கள், தாசில்தார்கள், இன்ஸ்பெக்டர்கள் ஆகிய இவ் வுத்தியோகங்கள் தான் அக்காலத்தில் இந்தியர்களுக்கு அதிகமாய் வழங்கப் பட்டன.

### காங்கிரஸுக்கு முன் உத்தியோக யோக்கியதை

இவைகளில் நூற்றுக்கு 99 பேர் நாயுடு, முதலியார், பிள்ளை, சாயபு ஆகிய இவர்கள்தான் இருப்பார்கள். இவர்கள் உத்தியோக கண்ணியமும் தர்பாரும் இக்காலத்திலுள்ள ஒரு கலெக்டருக்காவது, நிர்வாகசபை மெம்பருக் காவது கிடையாது. எனக்குத் தெரிய ஒரு நாயுடு இந்த ஜில்லா சிரஸ்தாரா யிருந்தார். அவரை 'கலெக்டர் கூப்பிடுகிறார்' என்று யாராவது கூப்பிட்டால் 'பத்து நிமிஷத்தில் வருகிறேன்' என்றுதான் சொல்லுவார். 15 நிமிஷம் கழித்து மெத்தைக்குப் போவார்; காலில் ஜோடும், ஒரு கையில் தடியும், மற்றொரு கையில் சுருட்டுமாய் மெத்தை ஏறுவார். கலெக்டர் முன்னால் மேஜையின் மேல் சுருட்டையும் தடியையும் வைத்து விட்டு "என்னைக் கூப்பிட்ட விஷயம் என்ன?" என்று கேட்பார். காரியம் முடிந்ததும் சுருட்டும் தடியும் எடுத்துக் கொண்டு வருவார். போலீஸ் ஹெட்குவார்ட்டர் இன்ஸ்பெக்டராக நாயுடு ஒருவர் இருந்தார். அவர் கலெக்டர், சூப்பிரன்டெண்ட் முதலிய வெள் ளைக்கார அதிகாரிகளுடன் சிநேகிதர்கள் போல பேசுவார், உறவாடுவார்.



RangaRakes tamilnavarasam.com

நாயுடுவைத் திடீரென்று கூப்பிட முடியாது. நாயுடுவின் சந்தர்ப்பந் தெரிந்து தான் கூப்பிட வேண்டும். இதுபோலவே அக்காலத்தில் தக்க குடும்ப பரம் பரையும், யோக்கியமும், அந்தஸ்தும், கண்ணியமும் உள்ளவர்கள் பெரிய உத்தியோகம் வகிப்பார்கள். அப்போதைய உத்தியோகங்களுக்கு வேண்டிய யோக்கியதை இவைதான்.

## காங்கிரஸுக்குப் பின் உத்தியோக யோக்கியதை

காங்கிரஸ் ஏற்பட்ட பிறகு உத்தியோகத்தின் யோக்கியதை அடியோடு மாறிவிட்டது. முனிசிபாலிட்டி விளக்கு வெளிச்சத்தில் படித்தவனானாலும் சரி, பஞ்சாங்கம் சொல்லி பிச்சை எடுத்தவன் மகனானாலும் சரி, தூது சென்று பிழைப்பவன் மகனானாலும் சரி, உருப் போடத் தெரிந்து கிராமபோன் மிஷின் போல பார்த்ததை உருப் போட்டு எழுதத் தெரிந்து, மற்ற விதத்தில் எப்படிப் பட்டவனானாலும் சரி, அவன்தான் உத்தியோகத்திற்கு லாயக்குள்ளவனாகப் போய்விட்டான். இதனால் தெருப்பிச்சை யெடுப்போரெல்லாம் உத்தி யோகத்திற்கு லாயக்குள்ளவர்களாகி விட்டார்கள். பரம்பரையாய் பெருங் குடும்பமாய், தேசத்தையே கோட்டைக் கொத்தளங்களோடு அரசாண்டவர் களாய், சுயமரியாதையோடு வாழ்ந்தவர்களாய் உள்ள பிராமணனல்லாத குடும்பங்கள் பின்னடைய ஏற்பட்டு விட்டன. இதன் பலனாய் உத்தியோகங் களுக்கும் மதிப்பு குறைந்துவிட்டன.

## பிராமணர் உத்தியோகம் பெற்ற வழி

காங்கிரஸின் ஆதி சூழ்ச்சியே பிராமணர்கள் எப்படி உத்தியோகம் சம்பாதிப்பது என்கிற அஸ்திவாரத்தின் மேல் கட்டப்பட்டதாகும். அதற்கு ஏற்றாற்போல் அந்த ஜாதிக்கு சுபாவமாய் உள்ள உருப்போடும் வித்தை யையே உத்தியோகத்திற்கு யோக்கியதையாய் வைத்து, அதற்கேற்ற பள்ளிக் கூடங்களை விருத்தி செய்தார்கள். இதன் மூலம் உத்தியோகம் பெற்ற பிராமணர்களால் வெள்ளைக்காரர்களுக்குப் பல விதத்திலும் உபயோக மிருந்ததால் அவர்களும் இந்த பிராமணர்களுக்கு அநுகூலமான உத்தியோக யோக்கியதையையே பரப்பி விட்டார்கள். இப்போது வர வர மேற்படி உத்தியோகங்களின் யோக்கியதையும் குறைந்து விட்டது.

## பிராமண – பிராமணரல்லாத உத்தியோகஸ்தர்களுக்குள்ள பேதம்

பெரும்பாலும் வெள்ளைக்கார அதிகாரிகளுக்குள்ள சகல தேவை களையும் நிறைவேற்றி வைக்கக் கூடியவர்களும், சுயமரியாதை அற்றவர் களும், மனச்சாக்ஷியை இழந்தவர்களும்தான் நல்ல டிப்டி கலெக்டர், நல்ல முனிசீபு, நல்ல தாசில்தார் , நல்ல மேஜிஸ்ட்ரேட், நல்ல இன்ஸ்பெக்டர்களாய் விளங்குகிறார்கள். இந்த உத்தியோகத்திற்கே இவ்வளவு யோக்கியதை



வேண்டுமானால் இன்னும் பெரிய உத்தியோகத்திற்கு எவ்வளவு யோக்கி யதை வேண்டும்? இந்த முறையில் பிராமணரல்லாத வகுப்பார் உத்தியோகம் பெற அஞ்சுகிறார்கள். துணிந்து யாராவது ஒப்புக்கொண்டாலும் மேற்படி யோக்கியதையில்லாத காரணத்தால் நல்ல உத்தியோகஸ்தர்களாக ஆவ தில்லை.

## தமிழரின் தாழ்வுக்கு காங்கிரஸே காரணம்

இம்மாதிரி காங்கிரஸ் நமது நாட்டில் ஏற்படாமலிருந்தால் நமது ஜனங்களின் யோக்கியதை இவ்வளவு கேவலமாய்ப் போயிருக்காது; உத்தி யோகங்களின் யோக்கியதையும் இவ்வளவு இழிவான நிலைமைக்கு வந்தி ருக்காது; வெள்ளைக்காரரும் இவ்வளவு கொடுமையான முறையில் ஆளத் துணியமாட்டார்கள். ஆதலால் பிராமணரல்லாதார் நிலைமையை இவ்வளவு கேவலத்திற்குக் கொண்டுவந்து விட்டதற்கு முக்கியக் காரணங்களில் இந்த காங்கிரஸும் பிரதானமானது. காங்கிரஸ் என்பதே உத்தியோகம் பெற ஏற்பட்டதுதான். அது நமது நாட்டு பிராமணர்களால் வளர்க்கப்பட்டு வந்த தால் பிராமணர்கள் உத்தியோகம் பெறத்தக்க வழியில் நிலை நின்று விட்டது. எந்த அந்தஸ்தும், எந்த உத்தியோகமும், எந்தப் பதவியும், எந்தப் பெரிய உத்தியோகஸ்தனையும் நீங்கள் எடுத்துக் கொண்டீர்களானால் அப்பதவியும் உத்தியோகமும் காங்கிரஸின் பலனாக ஏற்பட்டதாகத் தானிருக்கும்.

## தமிழர் முன்னேற தற்கால காங்கிரஸ் அழிய வேண்டும்

இனி பிராமணரல்லாதார் சமூகத்திற்கு ஏதாவது யோக்கியதை உண் டாக வேண்டுமானால் இந்த காங்கிரஸ் ஒழிய வேண்டும். இது உள்ள வரை பிராமணரல்லாதார் உருப்படியாக முடியாது. மகாத்மா காங்கிரஸ் ஏற்பட வேண்டும்.

ஆனால் சிலர் என்னை இப்படிப்பட்ட காங்கிரஸில் நீ ஏன் இன்னமும் இருக்கிறாய் என்று கேட்கலாம். இப்பொழுது பிராமண உத்தியோகத்திற்கு உழைத்து வரும் காங்கிரஸை மகாத்மா காங்கிரஸ் போல் அதாவது இரண் டொரு வருஷத்திற்கு முன் மூன்று நான்கு வருஷ காலம் இருந்து வந்த காங்கிரஸைப் போல் சகல வகுப்பாருக்கும் சமமான நன்மை வரும்படியாக உண்மையான ஒத்துழையாமைக் காங்கிரஸாக மறுபடியும் மாற்ற வேண்டும் என்கிற ஒரு ஆசையால்தானேயல்லாமல் வேறல்ல. அப்படி மாறும் பக்ஷத் தில் இப்போதுள்ள சுயநலத்தலைவர்கள் மறைந்து விடுவார்கள். சிற்சில சமயங்களில் மகாத்மா பேசுவதைப் பார்த்தால் ஒரு சமயம் மறுபடியும் அந்த நிலைமைக்குப் பாடுபடலாம் என்கிற நம்பிக்கை கொஞ்சங் கொஞ்சம் இருந்து வருகிறது.

அந்த நம்பிக்கை ஒழிந்துவிட்டால் காங்கிரஸில் நான் இருக்க மாட் டேன். ஆதலால் பிராமணரல்லாதார் வகுப்பு நன்மையைப் பற்றி பேசுவதும்



RangaRakes tamilnavarasam.com

காங்கிரசின் குற்றங்களை எடுத்துச் சொல்லுவதும் காங்கிரசிலிருப்பதற்கு யோக்கியதை குறைவாகமாட்டாது.

## கூக்குரல் போடுவது யாருக்கு ஆபத்து ?

தவிர ஸ்ரீமான் ஆரியா பேசும்போது சில பிராமணர்கள் சொந்த விஷயங்களைப் பற்றி பேசக்கூடாது என்று கூச்சல் போட்டார்கள். அது ஒப்பத்தக்கதல்ல. பேசுவதைக் கேட்க வேண்டும்; பேசுவதில் குற்றமிருந்தால் அதற்கு சமாதானம் கேட்கலாம்; அப்படிக்கில்லாமல் கூச்சல்போட்டு கூட்டத் தைக் கலைக்கலாம் என்று எண்ணுவது பயித்தியக்காரத்தனமாகவே முடியும். நான்கு நாளைக்கு முன் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரும் அவரது கோஷ்டியும் இதே இடத்தில் அளந்து கொட்டின வசையும், திட்டும் கணக்கா? வழக்கா? பிராமணரல்லாதார்கள் பொறுமையுடன் அவ்வளவையும் சகித்துக் கொண்டி ருக்கவில்லையா? அவர்களுக்கு இந்த சில பிராமணர்களைப் போல் கூச்சல் போடத் தெரியாமல் போய்விட்டது என்று நினைக்கிறீர்களா? எப்பொழுதும் பிரசங்க கூட்டத்தில் கூச்சல் போடுவது கெட்ட வழக்கம். நான் அடிக்கடி இதை கண்டித்தே வருகிறேன். இந்த வழக்கம் மிஞ்சி விட்டால் யாருக்கு ஆபத்து என்பதை நினைத்துப் பாருங்கள்.

## ஐயங்காருக்கும் எனக்கும் வித்தியாசம்

நான் எவரைப் பற்றியும் குற்றஞ்சொல்ல வேண்டுமென்கிற ஆசை யுடையவனல்ல. நேற்று இங்கு வந்த ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரும் என்னைப் போல் சமூக ஊழியர்தான். எனக்கு அவரிடத்தில் வெறுப்பில்லை. நான் ஏதாவது என் சொந்தத்திற்கு உயில் எழுதுவதாயிருந்தால் அவரைத்தான் யோசனை கேட்பேன் . அவரும் என்னைப் பற்றி தனியாய்ப் பேசினபோது தனது நண்பர்களிடம் என்னை மிகவும் நம்புவதாகவும், என்னிடம் சூது வாது இல்லையென்றும் பேசியிருக்கிறார். நான் எப்படி பிராமணரல்லாதார் சமூகம் முன்னேற்றமடைய வேண்டுமென்று பாடுபடுகிறேனோ, அதுபோலவே அவர் பிராமண சமூகம் முன்னேற வேண்டுமென்று பாடுபடுகிறார் . ஆகவே இரண்டு பேருடைய நோக்கத்திலும் உழைப்பிலும் வித்தியாசமில்லை. ஆனால் நான் உண்மையைச் சொல்லிக்கொண்டு எனது சமூகத்திற்குப் பாடு படுகிறேன். அவர் பொய்யைச் சொல்லிக்கொண்டு அவருடைய சமூகத் திற்குப் பாடுபடுகிறார். அதாவது, நான் பிராமணரல்லாதார் பெயரைச் சொல்லு கிறேன்; அவர் காங்கிரஸ், சுயராஜ்யக் கக்ஷி, மகாத்மா, ஜெயிலுக்குப் போன தேசபக்தர்கள் என்கிற பெயரைச் சொல்லிக்கொண்டு பிராமணருக்குப் பாடுபடுகிறார்.

கொஞ்ச நாளைக்கு முன் சென்னைக்கு முனிசிபல் தேர்தலின் போது ஓட்டர்கள் விருப்பத்தின் பேரில் போயிருந்தேன். அங்கு நான் பேசிய இரண் டொரு கூட்டத்தில் “தேர்தலில் ஒரு பிரயோஜனமும் இல்லை அதனால் ஒரு



பலனும் செய்ய முடியாது. அது ஒரு பதவி. அதில் உங்களுக்கு மோகமிருந் தால் பிராமணரல்லாதாருக்குக் கொடுங்கள்” என்று தைரியமாய்ச் சொல்லி வந்தேன்.

ஆனால் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் அப்படிச் செய்யவில்லை. ஒரு பிராமணரை நிறுத்தி, மறைமுகமாய் காங்கிரஸ், சுயராஜ்யக் கக்ஷி பெயரைச் சொல்லிக்கொண்டு முனிசிபாலிடியில் ஏழைகளுக்கு அப்படிச் செய்கிறோம்; இப்படிச் செய்கிறோம்; வரியைக் குறைக்கிறோம் என்று பொய் சொன்னதல் லாமல்; மகாத்மா ஜெயிலுக்குப் போனார், வரதராஜுலு நாயுடு இரண்டு முறை ஜெயிலுக்குப் போனார், இராமசாமி நாயக்கர் மூன்று முறை ஜெயிலுக்குப் போனார், ஆனதினால் ஸ்ரீமான் இ.எல். ஐயருக்கு ஓட்டுப் போடுங்கள் என்று விளம்பரம் போட்டு ஓட்டு வாங்கினார். அவர்கள் ஜெயிலுக்குப் போனதன் பலனை இவர்கள் அடைய என்ன வார்சு பாத்தியம்? இதுதான் எனக்கும் அவருக்கும் உள்ள வித்தியாசம்.

## சமூகம் அழிவதை பார்த்துக் கொண்டிருப்பதா?

அவரவர்கள் சமூகத்திற்கு அவரவர்கள் பாடுபடுவதை நான் ஆக்ஷே பிக்கவில்லை. ஆனால் பொதுஜனங்களை – பாமர மக்களை ஏமாற்றிக் கொண்டும், சுயராஜ்யம், உரிமை என்று சொல்லிக் கொண்டும், பிராமண ரல்லாத பிரமுகர்களை சர்க்கார் உத்தியோகம் பெறுகிறவர்கள் – தேசத் துரோகிகள் என்று திட்டிக்கொண்டு வைவதற்காக பிராமணரல்லாதாரிலேயே வேறு வழியில் பிழைக்க முடியாத சில ஆளுகளுக்குப் பணம்கொடுத்து உத்தியோக ஆசை பிடித்த சில ஆள்களை ஆசை வார்த்தைச் சொல்லி தங்கள் வசப்படுத்திக் கொண்டு ஜஸ்டிஸ் கக்ஷி என்கிற பெயரால் பிராமணரல் லாத சமூகத்தையே அடிமையாக்க– தீண்டாதவர்களாக்கப் பார்த்தால் அதை எப்படி சகிக்க முடியும்? எந்த சமூகத்திலும் இப்படிப்பட்ட சுயநலக்கார ஆள்கள் இரண்டொருவர் இருக்கத்தான் செய்வார்கள். அப்படிப்பட்ட ஆள் களை இவர்கள் உபயோகித்துக் கொண்டு ஒரு பெரிய சமூகத்தையே அழிக்கப் பார்க்கிறார்கள்.

## காங்கிரஸ் பெயரால் உத்தியோகம்

பிராமணர்களுக்கோ அல்லது அவர்கள் கட்சியான காங்கிரஸ், சுய ராஜ்யக் கட்சிக்கோ, எதற்கு உத்தியோக ஆசையில்லை? பிராமண ஐகோர்ட் ஜட்ஜுகள் எல்லாம் காங்கிரசின் பெயரால் உத்தியோகம் சம்பாதித்தவர்கள் தான். நிர்வாகசபை மெம்பர்கள் ஸ்ரீமான்கள் கிருஷ்ணசாமி ஐயர், சர். சி.பி. ராமசாமி அய்யர் ஆகியவர்கள் காங்கிரஸின் பெயரால் உத்தியோகம் சம்பா தித்தவர்களேயாகும். பிராமணரல்லாதார் கட்சியாரை மாத்திரம் உத்தியோக வேட்டைக்காரர்கள் என்பதற்குப் பொருளென்ன? ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்கள் உத்தியோகம் சம்பாதித்துக் கொண்டார்கள் என்று பொறாமைப் பிரசாரம்



RangaRakes tamilnavarasam.com

செய்வதில் ஏதாவது அவர்களுக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கிறதா?

## கண்ணியமாய் சட்டசபை சென்ற ஜஸ்டிஸ் கக்ஷி

ஜஸ்டிஸ் கட்சிக்காரர் சுயராஜ்யக் கட்சியாரைப் போல் ஏதாவது பொய் சொல்லி ஓட்டர்களை ஏமாற்றி சட்டசபைக்குப் போனார்களா? ஒருக்காலும் இல்லை. ஜஸ்டிஸ் கட்சியார் கண்ணியமாய் ஓட்டர்களிடம் சென்று "நாங்கள் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் அல்ல; காங்கிரஸ் பிராமணர்களின் நன்மையின் பொருட்டு ஏற்படுத்தப் பட்டது; நாங்கள் பிராமணரல்லாதார் நன்மையின் பொருட்டு பாடுபடுகிறோம்; நாங்கள் பொய்யான ஒத்துழையாமைக்காரரல்ல; சீர்திருத்தத்தை ஏற்று சட்டசபைக்குச் சென்று சர்க்காரோடு ஒத்துழைத்து சர்க்கார் உத்தியோகங்களை ஏற்று, பிராமணரல்லாதாருக்கும் தேசத்துக்கும் எங்களால் கூடியதைச் செய்வோம்" என்று சொல்லி சட்டசபைக்குள் நுழைந் தார்கள். ஓட்டர்களும் அதை ஏற்றுக்கொண்டு அவர்களையே அனுப்பி னார்கள். அப்படி இருக்க அவர்கள் உத்தியோகம் சம்பாதித்துக் கொண்டார் கள் என்று சொல்லிப் பொறாமைப்படுவதில் என்ன பிரயோஜனம். சுயராஜ்யக் கட்சியார் பிரயாணப் படி கூட வாங்குவதில்லை என்று சொல்லி சட்டசபைக் குப் போய் தினக்கூலி பெறக்கூடிய கமிட்டி பதவியும், மாதச் சம்பளம் பெறக் கூடிய உத்தியோகமும் பிரயாணப் படியும் பெற்று, சர்க்காருக்கும் அநுகூலமா யிருந்து சர்க்கார் எதிர்பார்த்ததற்கு மேல் ஒத்துழைப்பதைப் பற்றி கொஞ்சமும் வெட்கப்படாமல் மேடைக்கு வந்து பொது ஜனங்களை ஏமாற்றுவது எவ்வளவு பெரிய பித்தலாட்டமான காரியம்?

## அதிகச் சம்பளம்

சுயராஜ்யக் கட்சி உபதலைவர் ஸ்ரீமான் பட்டேல் மாதம் 4000 ரூபாய் சம்பளம் வாங்குகிறார். இது யாருடைய பணம்? இது பொது ஜனங்களின் பணமல்லவா? காங்கிரசையும் ஒத்துழையாமையையும் சுயராஜ்யக் கட்சியை யும் சேர்ந்த 'தேசபக்தர்' பட்டேலுக்கு மாதம் 4000 ரூபாய் எதற்காக வேண்டும்? அவர் உடுத்திக் கொள்ள 6 முழக் கதர் போதும், குடியிருக்க ஒரு குச்சு வீடு போதும். இப்படிப்பட்ட தேசத் தொண்டருக்கு மாதம் ரூ. 11-4-0 இருந்தால் போதும். இவருக்கு மாதம் 4000 ரூபாய் எதற்கு? இது உத்தியோகம் பெறுவதில்லை என்று போனவர் பெறும் சம்பளம். இவருக்கே மாதம் 4000 ரூபாய் வேண்டியதிருந்தால் உத்தியோகம் பெறப் போனவர், பெரிய ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாதம் 4000 ரூபாய் என்றால் எது அதிகம்? யாருக்கு உத்தியோக ஆசை? இதில் யார் யோக்கியர்கள்? என்பதை நீங்களே யோசியுங்கள்.

## சம்பளம் குறைத்துக் கொண்டது யார்?

அல்லாமலும் நமது பிராமணரல்லாத மந்திரிகள் "பணத்தாசை பிடித்தவர்கள்" என்று சொல்லுபவர்கள், தாங்களாகவே மாதம் 5000 ரூபாய் சம்பளத்தை 4000 மாக ஆக்கிக் கொண்டார்கள். வருஷம் ஒன்றுக்கு ஒரு லக்ஷத்துப் பதினெட்டாயிரம் ரூபாய் வேண்டாமென்று சொல்லி விட்டார்கள். 6 வருஷத்திற்கு 7 லட்ச ரூபாய் அவர்களுக்கு வருவதை வேண்டாமென்று சொல்லி விட்டார்கள். காங்கிரஸ் காரியதரிசியாயிருந்தும் தேசத்தாருக்குப் பாடுபடுவதாய்ச் சொல்லியும், நமது ஓட்டுப் பெற்று சட்டசபைக்குப் போய் உத்தியோகம் பெற்ற பிராமணர் சர்.சி.பி.ராமசாமி அய்யர் எவ்வளவு ரூபாய் சம்பளத்தில் குறைத்துக்கொண்டார்? பொதுஜனங்களுக்கு - ஏழைகளுக்கு உழைப்பவர்கள் என்றும், தேச விடுதலைக்காக உழைப்பவர்கள் என்றும், பிரயாணப் படி வாங்குவதில்லை என்றும் சட்டசபைக்குப் போன ஸ்ரீமான் எ.ரெங்கசாமி அய்யங்கார், எம்.கே. ஆச்சாரியார் இவர்கள் எவ்வளவு படிப் பணமும் கமிட்டிப் பணமும் குறைத்துக் கொண்டார்கள்? பாமர ஜனங்கள் பயித்தியக்காரராய் இருப்பதால் இவர்கள் பிராமணரல்லாதாரை கங்கணம் கட்டிக் கொண்டு ஊர் ஊராய்த் திரிகிறார்கள்.

## இவர்கள் யார்?

அல்லாமலும், ஜஸ்டிஸ் கட்சியார், தங்கள் இனத்தார்களுக்கு உத்தி யோகம் கொடுப்பதாகவும் நாமிநேஷன் செய்வதாகவும் மந்திரிகள் பேரில் குற்றம் சுமத்துகிறார்கள். மந்திரிகள் பிராமணர்களுக்குக் கொடுக்கும் உத்தி யோகத்தை இவர்கள் வெளியில் சொல்லுகிறார்களா? ஸ்ரீமான்கள் தணிகா சலம் செட்டியாருக்கும், சி.எஸ்.இரத்தினசபாபதி முதலியாருக்கும் நாமி நேஷன் செய்தால் அதிகாரத் துஷ்பிரயோகம் என்கிறார்கள். ஸ்ரீமான்கள் சி.வி. வெங்கிட்டரமணய்யங்காருக்கு கோயமுத்தூர் ஜில்லா போர்டு மெம்ப ரும், டி.எம். நரசிம்மாச்சாரியாருக்கு கடப்பை ஜில்லா போர்டு பிரசிடெண்ட் டும், சர்.டி.தேசிகாச்சாரியாருக்கு திருச்சி ஜில்லா போர்டு பிரசிடெண்டுமான பதவிகளுக்கு நாமிநேஷன் செய்தார்களே இவர்களெல்லாம் பிராமண ரல்லாதார்களா? அல்லது பிராமணரல்லாதார் கக்ஷியைச் சேர்ந்தவர்களா? இந்த பிராமணர்கள் மந்திரிகளிடம் உத்தியோகம் பெற்றுக் கொண்டதைப் பற்றி எந்த பிராமணர்களாவது, பிராமணப் பத்திரிகைகளாவது ஏதாவது ஒரு வார்த்தை சொல்லுகின்றதா?

## எலெக்ஷன் நாணயம்

தவிர, இந்தக் காலத்து எலெக்ஷன்களாவது யோக்கியமாய் நடக் கின்றதா? எலெக்ஷன்களுக்கு நிற்கிற ஆள்கள் ஓட்டர்களுக்குப் பணங் கொடுத்துப் பழக்கி அவர்களின் நாணயத்தைக் கெடுத்து விட்டதால் யோக்கியர்கள் எலெக்ஷனில் வர யோக்கியமில்லாமல் போய்விட்டது. அப்படியில்லையானால் ஒவ்வொருவருக்கும் இருபது, முப்பதாயிரம் ரூபாய் செலவாகக் காரணமென்ன? அல்லாமலும் சட்டசபையில் நடக்கும் காரியந்


RangaRakes
tamilnavarasam.com

தான் என்ன? எப்படியிருக்கிறது? எப்படியாவது பிராமணரல்லாதார் கெட்டவர்கள்-புத்தியில்லாதவர்கள் என்கிற பெயரை தேசத்தில் பரப்பி, பாமர ஜனங்களை வஞ்சிக்க வேண்டும்; பிராமணரல்லாத உத்தியோகஸ்தர் களையும் கெடுக்க வேண்டும். இதுதான் சுயராஜ்யக் கட்சி என்கிற பிராமணர் களின் கட்சிக்கொள்கை.

## திரு. இராமசாமி முதலியார் இல்லாவிட்டால்

உதாரணமாக, ஒரு சமயம் சட்டசபையில் ஸ்ரீமான் எ.இராமசாமி முதலியார் இல்லாத சமயம் பார்த்து "சுத்தவீரரான"! ஸ்ரீமான் சத்தியமூர்த்தி "வட ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள ஒரு பிராமணரல்லாத உத்தியோகஸ்தர் எலெக்ஷ னில் பிராமணரல்லாதாருக்காகப் பிரயத்தனப்படுகிறார். அவரைப் பற்றி விசாரித்து அவரைத் தூக்கில் போட வேண்டும். இது மகா முக்கியமான காரியம். ஆதலால் சட்ட சபையின் மற்ற காரியங்களை கட்டி வைத்துவிட்டு இதைக் கவனிக்க வேண்டும்" என்று ஒரு பெரிய தீர்மானம் கொண்டு வந்தார். தட்டிப் பேச அதுசமயம் அங்கு ஆளில்லை. பிரசிடெண்ட் இந்த தீர்மானம் ஒழுங்கானதா என்று கேட்டார். இருபதாவது நூற்றாண்டின் 'மனு' வான சர்.சி.பி. ராமசாமி ஐயர், "ஆஹா! மிகவும் ஒழுங்கானது" என்று சொல்லி விட்டார். சரியென்று சத்தியமூர்த்தி ஐயர் வாதம் தொடங்கிவிட்டார். பிராமண ரல்லாத உத்தியோகஸ்தருக்கு சுருக்கு மாட்டியாய் விட்டது; இழுப்பதுதான் தாமதம்.

இந்த சமயத்தில் ஸ்ரீமான் எ. இராமசாமி முதலியார் சட்ட சபைக்குள் நுழைந்தார். என்ன நடக்கிறது என்று பார்த்தார். நடக்கிற விஷயத்தைத் தெரிந்து கொண்டார். உடனே ஸ்ரீமான் முதலியார் எழுந்து, "அது நிரம்பவும் முக்கியமான காரியம். இதைச் செய்து விட்டுத் தான் மற்ற காரியங்களைக் கவனிக்க வேண்டும். நானும் இந்தத் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்று தான் இருந்தேன். எனது நண்பர் சத்தியமூர்த்தி கொண்டு வந்ததற்கு வந்தனம் செலுத்துகிறேன். சட்டமெம்பர் இதை அனுமதித்ததற்கும் வந்தனம் செலுத்துகிறேன்" என்று சொல்லிவிட்டு "இன்னும் இரண்டொரு நபர்கள் பெயரையும் அந்த ஜாப்தாவில் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி, இரண்டொரு ஐயங்கார் ஜில்லா முனிசீப் பெயர்களையும், ஐயர் சப் ஜட்ஜு பெயர்களையும் சொன்னார். உடனே சட்ட மெம்பருக்கும் 'வீரருக்கும்' நாக்கு வறண்டு போய் பேச வாய் வராமல் திக்குமுக்காடி 'வீரர்' சத்தியமூர்த்தி ஐயரை 'மனு' ராமசாமி ஐயர் பிரேரேபனையை வாபீஸ் வாங்கிக் கொள்ளும் படி பல்லைக் காட்டி கெஞ்ச ஆரம்பித்து விட்டார். வீரரும் பின்வாங்கிக் கொண்டார். மற்ற பொம்மைகளெல்லாம் சிரித்தனர். ஸ்ரீமான் **எ. இராமசாமி முதலியார் அன்றையக் கூட்டத்தில் இல்லாதிருந்தால் அந்தப் பிராமண ரல்லாதார் ஓலை 'மனு' ஐயரால் கிழிக்கப்பட்டே இருக்கும்.** இதுதான் சட்டசபை வேலை.



மற்றொரு சமயம் அபிஷியல் ரெபரி ( Official reffery)என்கிற சுமார் மாதம் 1000 ரூபாய் சம்பளமுள்ள ஒரு உத்தியோகம் தற்கால சாந்தியாய் ஆக்கப்படும் போது, சுயராஜ்யக் கட்சி மெம்பர்கள் ஆக்ஷேபித்தார்கள். அது சர்க்கார் மெம்பர்கள் தயவில் நிறைவேறி கடைசியாய் ஒரு பிராமணருக்கு அந்த உத்தியோகம் கொடுக்கப்பட்டு மறுபடியும் அது காயமாக்க சட்ட சபைக்கு வரும்போது சுயராஜ்யக் கட்சி மெம்பர்கள் தாராளமாய் நிறைவேறச் செய்தார்கள். ஏன்? அந்த உத்தியோகம் ஒரு பிராமணருக்குக் கிடைத்தது.

## சத்தியம் தவறிய திரு. சத்தியமூர்த்தி

மற்றொரு சமயம் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியும் ஸ்ரீமான் எ.இராமசாமி முதலியாரும் சீமைக்குப் போயிருந்தபோது, ஸ்ரீமான் சத்தியமூர்த்தி, ஸ்ரீமான் இராமசாமி முதலியாரைப் பார்த்து "நம் நாட்டிலுள்ள பிராமணர் -பிராமண ரல்லாதார் விஷயம் வெள்ளைக்காரர்களிடம் பேசக் கூடாது; அதைப்பற்றி நமது நாட்டில் பேசிக் கொள்ளலாம்; இங்கு பேசினால் எதிரிக்கு இளப்பமாய்ப் போய்விடும். நானும் ஜஸ்டிஸ் கக்ஷியைப்பற்றி பேசுவதில்லை" என்று கேட்டுக் கொண்டாராம். ஸ்ரீமான் முதலியார் அதற்கிணங்கி அங்கு இருக்கும் வரை பிராமணரைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையாம். ஸ்ரீமான் முதலியார் சீமையை விட்டுப் புறப்பட்டு கப்பல் ஏறியவுடன் சத்தியமூர்த்தி ஐயர் தாங்கள் செய்துகொண்ட சத்தியத்தை மீறி மூட்டையை அவிழ்த்து விட்டாராம். இவற்றைப் பத்திரிகைகளில் கூட நீங்கள் பார்த்திருக்கலாம். இம்மாதிரி கூட்டத்துடன் போராடுவதென்றால் லேசான காரியமல்ல. ஆதலால் பிராமணரல்லாதார் இதுசமயம் சுயராஜ்யம், உரிமை, விடுதலை, முட்டுக்கட்டை என்கிற போலி வார்த்தைகளைக் கண்டு ஏமாந்து விடக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

சட்டசபையோ, முனிசிபாலிட்டியோ , இவைகளில் ஏதாவது தேசத் திற்கோ, சுயராஜ்யத்திற்கோ, ஏழை மக்களுக்கோ ஒரு பிரயோஜனமும் தராது. அது ஒரு பதவி. அல்லாமலும், தாழ்ந்து கிடக்கும் பிற்போக்கடைந்திருக்கும் வகுப்பார் உயர்ந்த வகுப்பார் என்பவர்கள் காலில் சிக்கி மிதிபடாமல் இருப்ப தற்கு ஏதாவது வேண்டுமானால் உபயோகப்படலாம். அம்மாதிரி அதை உபயோகப்படுத்திக் கொள்ள நம்பிக்கையும் ஆசையும் உள்ளவர்கள், அப் பதவிகளை தங்கள் சமூகத்தில் அக்கறை உள்ள சமூகத்தார்களுக்கு கொடுக்க வேண்டுமேயல்லாமல் மற்றபடி சுயராஜ்யம், தேசம், உரிமை என்று எண்ணி ஏமாந்து சமூகக் கவலையில்லாதவர்களுக்கோ பிராமணர்களுக்கோ கொடுக்கக் கூடாது என்பதுதான் நீங்கள் கடைசியாக உணர வேண்டியது.

## சமூகமே பெரிது

மௌலானாக்கள் மகமதலி, ஷவுகத்தலி, கிச்சுலு போன்ற வீரர்களின் அபிப்பிராயமென்ன? அவர்களைப் பற்றி பிராமணப் பத்திரிகைகள் பலவாறு



RangaRakes tamilnavarasam.com

தூற்றினாலும் அவர்கள் பேரால் துவேஷம் உண்டாகும்படி எழுதினாலும் அவர்கள் தைரியமாய்ச் சொல்லுவது என்ன? நமது சுயராஜ்யத்தைவிட நமது சமூகத்தின் சுயமரியாதை தான் முக்கியமானது என்கிறார்கள். அதுபோலவே பிராமணரல்லாதாராகிய நமக்கு சுயராஜ்யத்தைவிட நமது சமூகத்தின் சுய மரியாதைதான் முக்கியமானது. உதாரணமாக, சட்டசபையில் கல்பாத்தித் தெருவில் எல்லோரும் நடக்கலாம்; அதாவது பொதுத் தெருவில் மகாராஜா சக்கரவர்த்தியின் பிரஜைகள் எல்லோருக்கும் சம உரிமை உண்டு என்று தீர்மானம் நிறைவேறிற்று. அடுத்த நாள் "வேலை இருந்தால்தான் போகலாம்" என்று பிராமண சட்டமெம்பர் அத் தீர்மானத்திற்கு வியாக்கியானம் எழுதி விட்டார். அந்த ஸ்தானத்தில் ஸ்ரீமான் ஆர். வீரய்யன் இருந்தால் இந்தப்படி வியாக்யானம் செய்திருப்பாரா என்று யோசித்துப் பாருங்கள். நமக்கு சுயராஜ்யம் வந்தாலும் இத்தகைய பிராமண சட்டமெம்பர்கள் இப்படித்தானே வியாக்கியானம் செய்வார்கள். ஆதலால் சுயராஜ்யம் இல்லா விட்டாலும் ஸ்ரீமான் வீரய்யன் போன்றவர்கள் அந்த உத்தியோகத்திற்கு வரும்படியான வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருந்தால் சுயமரியாதை ஏற்படுமா? இல்லையா? சுயமரியாதை ஏற்படாமல், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் நம்பிக்கையும் ஏற்படாமல் நாம் எப்படி சுயராஜ்யத்தைப் பற்றி பேசமுடியும்?

## யார் சம்மதிப்பார்கள்?

நம்மிடமே சகல அதிகாரங்களையும் சகல ராஜீயபாரத்தையும் யாரா வது ஒப்புவித்து விடுவதாயிருந்தால் பெற்றுக்கொள்ள நாம் இப்போது தயாராயிருக்கிறோமா என்பதை யோசித்துப் பாருங்கள். உதாரணமாக, இந்த நாட்டிற்கே இப்பொழுது வைஸ்ராயாக இருக்கும் லார்டு இர்வின் துரை பட்டாள முத்திரையையும் , கஜானா சாவியையும் கொண்டுவந்து கொடுத்து நம்மை எடுத்துக் கொள்ளச் சொன்னால், நம்மில் எடுத்துக்கொள்ள யார் சம்மதிப்பார்கள்? முதலாவது பிராமணர்கள் வந்து எடுப்பார்கள். அதை பிராமணரல்லாத ஹிந்துக்கள் -ஆதிதிராவிடர்கள், மகமதியர்கள், கிறிஸ்தவர் கள் முதலான வகுப்பார் சம்மதிப்பார்களா? பிராமணரல்லாத ஹிந்துக்கள் எடுத்துக் கொள்ளுவதாயிருந்தால் பிராமணர்கள் சம்மதிப்பார்களா? பிராமண ரும் பிராமணரல்லாதவர்களுமாகிய ஹிந்துக்கள் ராஜியாய் எடுத்துக் கொள்ளுவதானால் மகமதியர் சம்மதிப்பார்களா? இந்த மூவரும் சம்மதித்து ஒப்புக்கொண்டால் கிறிஸ்தவர்கள் சம்மதிப்பார்களா? இந்த நால்வரும் ராஜியாய் விட்டாலும் தெருவில் நடக்கவும் குடிக்கத் தண்ணீர் மொள்ளவும் கூட பாத்தியமில்லாமல் வைத்திருக்கும் ஆதி திராவிடர் என்கிற கூட்டத்தார் சம்மதிப்பார்களா? ஒவ்வொரு கூட்டத்தாரும் இர்வின் பிரபுவின் காலைப் பிடித்துக்கொண்டு ஒருவரை ஒருவர், "ஐயா! இந்தப் பாவிகளிடம் ஒப்புவித்து விட்டுப் போனால் எங்கள் கதி என்னாவது என்றும் ஜாதி வித்தியாசமில்லாத ஜாதியாராகிய உங்கள் ராஜீய பாரத்திலே நாங்கள் 'மிலேச்சர்', நாங்கள் 'தாசி மக்கள்', நாங்கள் 'அஞ்ஞானி',நாங்கள் 'முரடர்கள்', நாங்கள் தெருவில்



நடக்க - கண்ணில் பார்க்க - கிட்டவர - சுவாமியைக் கும்பிட முடியாத அவ்வளவு தாழ்ந்தவர்களாயிருக்கும் போது, ஜாதித் திமிர், கூட்டத் திமிர், ஒற்றுமைத்திமிர், அரசாங்கச்சலுகைத் திமிர் பிடித்த இவர்களிடத்தில் பட்டாளத்தையும், கஜானாச் சாவியையும் கொடுத்து விட்டுப்போனால் எங்களை நாய் பன்றிகளைவிட கேவலமாய் நடத்துவார்கள். கழுத்தில் கயிறு கட்டி சந்தையில் விற்பார்கள். ஆதலால், ஐயனே! நீங்கள் போய் விடாதீர்கள்" என்று ஒவ்வொருவரும் குறுக்கே படுத்துக் கொள்வார்களா இல்லையா? நீங்களே யோசித்துப் பாருங்கள். உங்களை ஏமாற்ற வாயில் சுயராஜ்யம், உரிமை, ஒற்றுமை என்று பேசுவதில் என்ன பிரயோஜனம்? மகாத்மா இதை அறியாமலா தன்னை ஒரு வைஸிராய் "சுயராஜ்யம் என்றால் என்ன? என்னதான் வேண்டும்?" என்று கேட்ட காலத்தில் "சுயராஜ்யம் அடைய என் ஜனங்கள் இன்னமும் தயாராக வேண்டும். அதற்குத்தான் நான் தயார் செய்து கொண்டு வருகிறேன். அந்தத் தயார்தான் எனது நிர்மாணத் திட்டம்" என்று சொன்னார்.

நிர்மாணத் திட்டம் நிறைவேறாமல் மகாத்மாவினாலேயே பெறுவ தற்குப் பாரமாயிருந்த சுயராஜ்யம், நிர்மாணத் திட்டத்தைப் புதைத்த நமது சீனிவாசய்யங்கார் கோஷ்டிக்கு மிக லேசாய்ப் போய் விட்டதென்றால் அதன் தத்துவத்தை நீங்களே யோசித்துப் பாருங்கள். சுயராஜ்யம் வந்தால் நமது நிலை என்ன? மகமதியர் நிலை என்ன? கிறிஸ்தவர் நிலை என்ன? என்பது தீர்மானமாகிவிட வேண்டும். இல்லாதவரை ஒருவரை ஒருவர் கொன்றுத் தின்பதுதான் நமது நாட்டில் நடைபெறும். உத்தியோகமும், அதிகாரமும், பதவியும் ஒருக்காலமும் சுயராஜ்யமாகாது. சுயமரியாதையுடன் ஒற்றுமை யால் தாங்கள் தங்கள் ஜீவனத்திற்காக தங்கள் தங்கள் மனசாக்ஷியையும் கற்பையும் விற்காமல் ஜீவனம் செய்வதுதான் சுயராஜ்யம்; இதற்கு நிர்மாணத் திட்டந்தான் முக்கியமானது. இவைகள் எல்லாவற்றிலும் கதரும், தீண்டாமை ஒழிப்பதும் மிகவும் முக்கியமானது. ஆதலால் நீங்கள் ஒவ்வொருவரும் கதர் உடுத்துங்கள்; தீண்டாமையை அறவே ஒழியுங்கள்; வகுப்புவாரி உரிமையை நிலைநாட்டி எல்லோருடைய நம்பிக்கையையும் பெறுங்கள். இல்லாதவரை துவேஷம் வளர்ந்து கொண்டுதான் வரும். இப்போது பாமர ஜனங்களை ஏமாற்றி சிலர் பதவிக்கு வந்துவிடுவதால் அதனால் ஏற்படும் பலன் பின்னால் அவர்கள் சந்ததியாருக்கு ஆபத்தாய் முடியும் என்பதை ஞாபகத்தில் வையுங் கள். ஆதலால் எல்லோரும் ஒன்று கூடி ஒரு திட்டம் போட்டு ஒருவருக் கொருவர் நம்பிக்கை உண்டாக்கி பிற்கால வாழ்வை பயமற்றதாக்கிக் கொள்ளுங்கள்.

*குறிப்பு:- கோயமுத்தூர் டவுன்ஹால் மைதானத்தில் தென் இந்திய நலஉரிமைச் சங்கத்தின் சார்பில் 30.05.26 இல் நடத்தப்பட்ட மகாநாட்டில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 13.06.1926**



RangaRakes tamilnavarasam.com

# ஞானோதயம்

## (உண்மை உணர்ச்சி)

சென்ற வாரம் தலையங்கத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு விரோதமாய் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி லால்குடியில் செய்த பிரசங்கத்தை 37 பிரிவுகளாய்ப் பிரித்து அவற்றில் 12 பிரிவுகள் வரைக்கும் பதில் எழுதிவிட்டு மீதி 25 பிரிவுகளுக்கும் 'நவசக்தி'க்கும் இவ்வாரம் பதிலெழுதுவதாயிருந் தோம். அல்லாமலும் ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்கார் கம்பெனியார் கோபிச் செட்டிபாளையத்தில் நடத்திய ஓட்டு வேட்டை நாடகத்தைப் பற்றியும் இவ்வாரம் எழுத நினைத்திருந்தோம். நாம் கொஞ்சமும் எதிர்பாராத விதமாய் ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தனது 'நவசக்தி' தலையங்கத்தில் "பட்டம் கூடாது" என்கிற தலைப்பில் தனது கையொப்பத் துடன் எழுதியுள்ள விஷயமும், அதை அநுசரித்து ஸ்ரீமான் டாக்டர் வரத ராஜுலு நாயுடு அவர்கள் பத்திரிகையாகிய 'தமிழ்நாடு' பத்திரிகையின் தலையங்கத்தில் 'பட்ட வேட்டை' என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ள விஷயமும் இவ் வாரத்திய முக்கிய சம்பவமாகக் கருதி 'நவசக்தி'க்கு பதில் எழுத வேண்டிய அவசியமில்லை என்று நினைத்து முன் குறிப்பிட்ட விஷயங்களை ஒத்தி வைத்துவிட்டு இவற்றைப்பற்றி எழுதவேண்டிய அவசரமும் அவசியமும் வந்து விட்டது. ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் பொதுக் கூட்டத்திலோ நிர்வாகக் கூட்டத்திலோ அடியிற் கண்ட தீர்மானத்தைக் கொண்டுவர உறுதி கொண்டிருப்பதாய் அவரது பத்திரி கையில் காணக்கிடக்கின்றது. அதாவது:-

1. காங்கிரஸில் சேரும் ஒவ்வொருவரும் என்றும் எவ்வேளையிலும் கதர் தரித்தே தீர வேண்டும். குறிப்பிட்ட சிலபோழ்து கதர் தரித்தல் என்னும் விதி நீக்கப்படல் வேண்டும்.

2. சட்டசபைத் தலைவர் பதவி வகித்தல், அரசாங்க தொடர்புடைய கூட்டங்களில் கலத்தல், பட்டமேற்றல் இன்னோரன்ன பிற விலக்கப் படல் வேண்டும். இப்பதவிகளேற்றுள்ள அன்பர்கள் உடனே அவைகளில் இருந்து விலகிவிடல் வேண்டும். இன்னோரன்ன பிற என்பது "அரசாங்கத்தார் தயவால் பெறும் நியமனம்" ஆகிய இவைகள்



3. தேர்தல் காலங்களில் நாட்டுக்குரிய அறநெறியை கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும்.

இவற்றை ஸ்ரீமான் முதலியார் அவர்களால் ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் அக்கிராசனம் வகித்த திருவண்ணாமலை மாகாண மகாநாட்டிலும், ஸ்ரீமான் முதலியார் அவர்களே அக்கிராசனம் வகித்த காஞ்சீபுரம் மாகாண மகாநாட்டிலும் வலியுறுத்தப் பட்டதை பொது ஜனங்கள் அறிவார்கள். ஆனால் இந்நிபந்தனைகள் இம்மாகாண மகாநாடுகளுக்கு அடுத்தடுத்து கூடிய காங்கிரஸ்களினால் நிராகரிக்கப்பட்டும் போயிற்று. ஆயினும் தமிழ் நாட்டு பிராமணர்கள் தங்கள் கட்சிக்கு ஆள் சேர்ப்பதற்காக மாகாண மகா நாடுகளில் ஒப்புக் கொள்ளுவதும், எல்லா இந்திய காங்கிரசில் தங்கள் செல் வாக்கைக் கொண்டு இவற்றை உதறித் தள்ளிவிடுவதுமாகவே நடந்து வந்திருக்கிறது. ஆன போதிலும் இந்தக் கூட்டத்தார், ஸ்ரீமான் முதலியார் போன்றவர்களை தாங்கள் உபயோகித்துக் கொள்ளுவதற்காகவே "உங்கள் இஷ்டப்படியே செய்யலாம்", "உங்கள் இஷ்டப்படியே செய்யலாம்" என்று ஆசை வார்த்தை சொல்லி அவர்களை ஏமாற்றி தங்கள் சுவாதீனப்படுத்தி வந்திருக்கிறார்கள். பல நாளைய திருடன் ஒரு நாளைக்கு அகப்படுவான் என்பது போல் தமிழ்நாட்டின் சார்பாய் ஐயங்கார் கூட்டத்தாரால் ஸ்ரீமான்கள் நாயுடுகார், முதலியார் ஆகியவர்கள் பெயரால் சட்டசபைக்குப் பொறுக்கி எடுத்த ஆள்களின் யோக்கியதையைப் பார்த்தவுடன் ஐயங்கார் கோஷ்டியின் தந்திரம் ஸ்ரீமான்கள் முதலியாரவர்களுக்கும், நாயுடுகாருக்கும் ஞானோதய மாகி விட்டதென்றே சொல்லுவோம். இவர்கள் எவ்வளவுதான் சகித்துக் கொண்டு இன்னமும் பார்க்கலாம், இன்னமும் பார்க்கலாம் என்று பொறுமை காட்டி வந்தாலும் பிராமணர்களின் அளவுக்கு மீறிய சூழ்ச்சியானது ஸ்ரீமான் முதலியாரின் மனசாக்ஷியை வெல்ல முடியவில்லை. ஆதலால் இனி பொறுமை காட்டுவது தமிழ் மக்களுக்கு ஆபத்தாய் முடியும் என்பதை உணர்ந்து, இப்போது ஸ்ரீமான்கள் முதலியாரவர்களுக்கும் நாயுடுகாருக்கும் ஐயங்கார் கூட்டத்தை இரண்டிலொன்று கேட்க ஆரம்பித்து விட்டார்கள். அதாவது, "சட்டசபையில் ஒத்துழையாமையா? சட்டசபையில் உத்தி யோகமா?" என்பதுதான்.

இதன் பலனாய் நாயக்கரை காங்கிரஸ் நிர்வாக சபையை விட்டு வெளி யேற்று முன்னமே ஸ்ரீமான்கள் முதலியாரும் நாயுடுகாருமே வெளியேற ஏற்படுமென்றே நினைக்கிறோம். அவ்வாறு நேரும் போது, நாம் நமது முழு ஆதரவுடன் அவர்களைப் பின்பற்றத் தயாராயிருக்கிறோம். ஏனெனில் ஐயங் கார் கோஷ்டியானது ஒருக்காலும் சட்டசபையில் முதலியார் கோரும் ஒத்துழையாமைக்குச் சம்மதிக்காது. ஐயங்கார் கோஷ்டி அகராதியில் ஒத்துழையாமைக்குப் பொருள் சட்டசபையில் பிராமணரல்லாத மந்திரிகளை விரட்டி விட்டு, பிராமண மந்திரிகளோ அல்லது ஐயங்கார் சொல்லுகிறபடி ஆடுகிற மந்திரிகளோ அமர்ந்து பிராமணாதிக்கத்தை நிலைநிறுத்துவதுதான்



RangaRakes tamilnavarasam.com

என்பது உலகமறிந்ததாகும். இப்போது ஸ்ரீமான்கள் முதலியார் அவர்கள் கோருவது போலும், நாயுடுகார் கோருவது போலும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியோ, நிர்வாக சபையோ தீர்மானிக்குமானால் முதலாவதாக ஸ்ரீமான்கள் ராவ்பஹதூர் டி.எ. இராமலிங்கம் செட்டியார் அவர்களும், சி.வி.வெங்கிட்டரமணய்யங்கார் அவர்களும் காங்கிரசின் சார்பாய் நிற்க முடியாது. இருவரும் பட்டத்தையும், நியமனத்தையும் முறையே விட வேண்டியதுதான். ஒருசமயம் விட்டாலும் விடுவார்கள்; அல்லது பணம் சிலவு செய்யலாம் என்கிற தைரியத்தால் காங்கிரஸையே விட்டுவிட்டு தனியாய் நின்றாலும் நிற்பார்கள் என்றே வைத்துக் கொண்டாலும், இவைகளாலேயே ஐயங்கார் கோஷ்டிக்கு ஸ்ரீமான்கள் முதலியார் நாயுடுகார் உபத்திரவம் தீர்ந்து போகாது என்றே தோன்றுகிறது. ஏனெனில் மாதம் 4000 ரூபாய் வரும்படி உள்ள சட்ட சபைத் தலைவர் உத்தியோகத்தையும் விட்டுவிடும்படி வேண்டுகிறார்கள். இது முடியவே முடியாது என்றுதான் நினைக்கிறோம்.

ஆதலால் இவ்வாரம் மிகுதி போற்றற்குரிய வாரமேயாகும். மற்றபடி ‘குடி அரசு’ பத்திரிகை, ஸ்ரீமான்கள் முதலியார், நாயுடுகார் ஆகியவர்களைப் பற்றி கொஞ்சமும் தயவு தாக்ஷணியம், பழய விஸ்வாசம் என்பவைகளைக் கவனியாமல் தாக்கி எழுதி வந்ததை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். அவை எதுவும் ஸ்ரீமான்கள் கலியாணசுந்தர முதலியார் அவர்களையும், டாக்டர் நாயுடுகாரையும் சொந்தத்தில் உத்தேசித்தல்லவென்பதும், பட்டம் உத்தியோகம் பெறும் பிராமணர்களுக்கு அநுகூலமாய் இருக்கிறார்களேயென்று நினைத்தேயல்லாமல் வேறல்ல என்பதையும் எல்லோரும் அறிந்திருப்பார்கள். முதலியாருக்கும், நாயுடுகாருக்கும், நாயக்கருக்கும் சொந்தத்தில் எவ்வித அபிப்பிராய பேதமோ, சந்தேகமோ, குரோதமோ, விரோதமோ உண்மையாய் இல்லை யென்றே சொல்லுவோம். ஆனால் பிராமணர்கள் போல் தங்கள் தங்கள் கொள்கையை கட்டி வைத்து தங்கள் சுயநலத்திற்கு ஒன்று கூடி ஒற்றுமையாய் வேலை செய்வதென்ற குணம் பிராமணரல்லா தாருக்குள் இல்லவே இல்லை.

உதாரணமாக, ஸ்ரீமான்கள் சி.ராஜகோபாலாச்சாரியார், எஸ்.சீனிவாசய்யங்கார். சர். சி.பி. ராமசாமி அய்யர் ஆகிய மூவரும் ராஜீய விஷயத்தில் ஒரே கொள்கையிலில்லை. ஆனால் தங்கள் சமூக சுயநல விஷயத்தில் மூவரும் ஒன்று சேர்ந்து உழைக்கிறார்கள். ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் வைதீக ஒத்துழையாதார் என்று சொல்லிக் கொண்டு தன்னாலேயே, ‘அயோக்கியன்’ ‘துரோகி’ என்று சொல்லப்பட்ட பிராமணர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க எவ்வளவு குரல், எவ்வளவு நாடகம், எவ்வளவு சம்பாஷணை, எவ்வளவு சூழ்ச்சி, எவ்வளவு தூரம் தன் மனசாட்சியை விற்று ஒத்துழையாமை தத்துவத்தால் அடைந்து பலனை உபயோகித்தல் முதலிய காரியங்கள் பாலும் பழமும் சாப்பிடுவது போல் செய்துவருகிறார். இந்தியாவிலுள்ள பிராமணர்களிலெல்லாம் பிராமணரல்லாதாருக்குக் கொடுமை செய்வதில் பண்டித மாளவியாவை விட முன்னிற்கிறார். ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் எவ்வளவு பணம் சிலவு செய்கிறார்? எத்தனை பேர் காலில் விழுகிறார்? எத்தனை பேர் தனக்கு அயோக்கியர் என்று தெரிந்தாலும் அவர்களுக்கு நல்ல வார்த்தை சொல்லி ஏமாற்றி அவர்களுக்குப் பணம் கொடுத்து வேலை செய்கிறார். ஸ்ரீமான் சர். சி.பி. ராமசாமி அய்யர் ஷை இரண்டு அய்யங்கார்களுக்கும் முற்றும் மாறுபட்டவர். ஒருவருக்கொருவர் எவ்வளவோ குரோதத்தோடு இருந்தவர்கள். பிராமணர் நன்மை என்கிற விஷயத்தில் கொஞ்சமும் தங்கு தடையின்றி ஒருவருக் கொருவர் உள் ஆளாயிருந்து கொண்டு ஒருவரை ஒருவர் கைதூக்கி விட்டு உத்தியோக விஷயத்திலும் எவ்வளவோ அநுகூலமாகவும், ஒற்றுமையாக வும் எவ்வளவோ காரியத்தைச் சாதித்துக் கொள்ளுகிறார்கள்.

பிராமணரல்லாதாரிலே ஒரு நாயுடு, ஒரு முதலியார், ஒரு நாயக்கர் ஆகிய மூவருக்குள் ஒருவருக்கொருவர் உத்தியோகப் போட்டியில்லை; தலைவர் போட்டியில்லை; வியாபாரப் போட்டியில்லை; சொந்த விரோதமில்லை; சந்தேகமில்லை; கொள்கையிலும் வித்தியாசம் இல்லை. ஆனால் மூன்று பேருக்கும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையில்லை; நாயக்கருக்கும் நாயுடுகாருக்கும் ஒற்றுமையில்லை; நாயுடுகாருக்கும் முதலியாருக்கும் ஒற்றுமையில்லை; முதலியாருக்கும் நாயக்கருக்கும் ஒற்றுமையில்லை. அய்யங்கார் கோஷ்டியார் இப்படி பிரித்து வைத்துவிட்டு நன்னிலத்தில் பேசும் போது, “முதலியார் ‘மாரீசன்’, அவரை காங்கிரசை விட்டு ஒழிக்க வேண்டும். சென்னையில் பேசும் போது நாயுடு மாறிவிட்டார். அவரை வெளியாக்கி காங்கிரசை பரிசுத்தப் படுத்தவேண்டும்”. கோபியில் பேசும் போது நாயக்கரை இன்னும் காங்கிரஸில் வைத்திருக்கிறீர்களே, இது உங்களுக்கு தர்மமா? என்று கேட்பதுமாயிருக்கிறார்கள். இதன் காரணமென்ன? நமது கொள்கை கள் ஒன்றாயிருந்தாலும் நம்மை ஒன்று சேர விடாமல் பிரித்து வைத்து தனித்தனியாக சுலபமாய் கொன்றுவிடுவதற்கு செய்த சூழ்ச்சியல்லாமல் வேறென்ன?

கடைசியாக, நாம் வாசகர்களுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளுவதென்னவென்றால், ஸ்ரீமான் முதலியாரவர்களைப்பற்றி நாம் எழுதியதெல்லாம் ஸ்ரீமான் முதலியாருக்கு பிராமணர்களின் யோக்கியதை தெரிந்திருந்தும் அவர்களைப் பற்றி நமக்குக் கூட தெரியாத பல விஷயங்கள் நமக்கு சொல்லியிருந்தும், பின்னும் பின்னும் பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் பிராமணர்களுக்கு உதவி செய்கிறாரே, இது காங்கிரஸ் கொள்கையை பிரதானமாய் மதித்து காங்கிரசுக்கு பக்தி காட்டுவதன் மூலம் நடந்து கொள்ளுவதாயிருந்தாலும் அது குடியிருந்த வீட்டிற்கு நெருப்பு வைப்பது போன்ற பலனைக் கொடுக்கின்றதே என்கிற ஆத்திரத்தினாலேயே அல்லாமல் வேறல்ல. இப்போது அவர்கள் வெளியிட்டிருக்கும் கொள்கையும் அதையே கடை பிடிக்கப் போவதாய் குறிப்பிட்டிருக்கும் உறுதியும் நமது மனதைக் கவர்ந்து விட்டது. கொள்கை காரணமாகவே ஸ்ரீமான் முதலியார் அவர்களை



RangaRakes tamilnavarasam.com

நாம் தாக்க நேர்ந்ததும், நம்மை ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தாக்க நேர்ந்தது மாகும். இப்போது இருவர் கொள்கையும் ஒன்றென்றே தெரிவதால் இனி ஒருவரை ஒருவர் தாக்க நேராது என்பதையும் வாசகர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் நமது அய்யங்கார் கோஷ்டிக்கும் மற்றும் பார்ப்பன கோஷ்டிக்கும் தென்னாட்டு காந்தியாய், உண்மை அந்தணராய், உத்தமப் பிராமணராய், தியாக மூர்த்தியாய் விளங்கிய ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் இனி எப்படித் தோன்றுவாரோ அறிவோம். ஒரு சமயம் 'சூத்திரராகவும்', 'தேசத் துரோகியாகவும்' தோன்றினாலும் தோன்றலாம். நாயக்கருக்கு ஒரு அண்ணனாகத் தோன்றினாலும் தோன்றலாம். யார் எப்படி நினைத்தாலும் பழய ஒத்துழையாமையும் நிர்மாணத் திட்டமும் நாட்டில் அமலுக்கு வரும்காலத்தில் முதலியாரும், நாயுடுகாரும், நாயக்கரும் முன் போல் ஒன்று கூடி தங்கள் தங்களாலான கருமங்களைச் செய்ய கொஞ்சமும் அஞ்ச மாட்டார்கள். அதுவரை கோவில் நெல்லுக்குப் பெருச்சாளிகள் அடித்துக் கொள்வது போல் பிராமணர்கள் பிழைக்க, உத்தியோகம் சம்பாதிக்க, ஆதிக்கம் பெற நாம் ஒருவருக்கொருவர் காங்கிரசின் பெயரால் போட்டி போட்டு சண்டை போட்டுக் கொள்ளாமல் ஒற்றுமையுடன் சும்மா இருந்தால் அதுவே பிராமணரல்லாதாரின் நல்ல காலம் என்றே சொல்லுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 13.06.1926**



# ஒரு சேதி

## திருவாரூர் திருத் தியாகராஜரின் திருத்தேர் திருத் தீக்கிரையாயிற்று

தியாகராஜ பெருமானின் தேரானது 9.6.26 - உ தீக்கிரையாயிற்று என்ற செய்தியைக் கேட்க இந்துக்களில் பலர் மிகுதியும் துக்கப்படுவார்கள். ஆனால் நாம் அதை ஒரு நல்ல சேதியாகவே நினைக்கிறோம்.

தமிழ்நாட்டிலுள்ள எல்லா தேர்களையும் விட மிகப் பெரியது திருவாரூர் தேரேயாகும். இதை இழுத்துச் செல்ல குறைந்தது மூன்று நான்கு மாதங்களும் 5000 த்துக்குக் குறையாமல் பதினாயிரம் ஆட்கள் வேண்டும். இவர்கள் படிச் செலவும் சுமார் 20,000 ரூபாய்க்குக் குறையாதென்றே சொல்லலாம்.

தற்காலமுள்ள நிலைமையில் இவ்வளவு ஆர்ப்பாட்டம் எதற்கு? இதை நினைக்கும்போது ஒரு சிறுகதை நமது ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது:-

ஒரு குருவுக்கு நான்கு சிஷ்யர்கள் இருந்தார்கள். ஒரு நாள் குருவானவர் கடையில் ஊசி வாங்கிக்கொண்டு வரும்படி தன் நான்கு சிஷ்யர்களிடம் கட்டளையிட்டார். அவர்கள் ஊசி வாங்கிய பிறகு, நால்வரையும் வாங்கிவர கட்டளையிட்டிருக்க ஒருவர் மாத்திரம் இதை எடுத்துப் போனால் கோபித்துக் கொள்ளுவார் என்று ஒரு நீண்ட பனைமரத் துண்டில் ஊசியைக் குத்தி நால்வரும் வழிநெடுக இறக்கி இறக்கி சுமந்துச் சென்று குருவை அடைந்ததும் அவர் அறியும்படி தொப்பென்று போட்டு ஊசியைத் தேடி காணாமல் போகவே நடந்ததைச் சொன்னார்கள். குரு கோபித்துக் கொண்டு, உங்களுக்குள்ள பக்திக்குத் தகுந்த புத்தியில்லையென்று சொல்லி, வேறொரு ஊசி வாங்கி பனைமரத்தோடு சேர்த்துக் கயிறால் கட்டித் தூக்கி வரும்படி கட்டளையிட்டார். உடனே அவர்கள் இதனால் ஒரு நல்ல புத்தி கற்றுக் கொண்டதாக சந்தோஷித்து மறுபடியும் ஊசி வாங்க கடைக்குப் போகும் போது, ஒருவன் குரு ஊசிக்கு மாத்திரம் காசு கொடுத்தாரேயல்லாமல் கயிறு வாங்க காசுக்கு என்ன செய்கிறது என்று கேட்க மற்றவர்கள் "தோஷம், தோஷம் இதெல்லாம் நினைக்கவே கூடாது; நினைப்பது குருத் துரோகமாகும்" என்று சொல்லி நினைத்ததற்குப் பிராயச்சித்தம் செய்து கொண்டார்கள்.



RangaRakes tamilnavarasam.com

அதே போலிருக்கிறது திருவாரூர் தேரில் சுவாமியை வைத்து இழுக்கும் கதை. தேசம் வறுமைப் பிணியால் வதையுற்று கல்வியற்று சிறுமைச் செயலால் சீரழிந்து இருக்கும் இதுகாலை 2000 வேலி நிலமுள்ள தியாகராஜ சுவாமிகளின் தேர் உற்சவத்திற்குச் சிலவிடும் பணத்தைக் கொண்டு தொழிலா லயங்களும் கல்லூரிகளும் அமைத்து வறுமைப் பிணியால் வாடும் மக்க ளுக்கு வேலை கொடுத்து போஷித்தும், கல்வி போதித்து சன்மார்க்க பேதாம் புரிந்துவர பிரயோஜனப்படுத்தலாகாதோ?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.06.1926**



# தமிழர் கடமை

## ஸ்ரீமான் எஸ்.சீனிவாச ஐயங்கார் ராஜீனாமா செய்வாரா?

## இல்லாதவரை அவரை ராஜீனாமா செய்யும்படி வற்புறுத்த வேண்டும்

**-சித்திரபுத்திரன்**

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் சீனிவாச ஐயங்கார் தமிழ் மக்களின் மதிப்பை இழந்து விட்டார்.

பார்ப்பனரல்லாதாரை எப்படியாவது ஒடுக்கி, பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்த வேண்டும் என்கிற கெட்ட எண்ணம் கொண்டு மகாத்மா காந்தியின் கருத்துக்கு விரோதமாகவும், காங்கிரஸின் அடிப்படையான கொள் கைகளுக்கு விரோதமாகவும், வேண்டுமென்றே சர்க்கார் பட்டதாரிகளையும். சர்க்கார் நியமன கௌரவ உத்தியோகம் பெற்றவர்களையும் காங்கிரசுக்குள் புகுத்திக் கொண்டு, அவர்களை சட்டசபைக்கு அபேக்ஷகர்களாக நிறுத்தியும், அவர்களுக்கு ஓட்டு வாங்கிக்கொடுக்க காங்கிரஸையும், காங்கிரஸ் பணத் தையும் உபயோகித்துக் கொண்டு வருவதின் நிமித்தம் காங்கிரஸின் மதிப்பும் யோக்கியதையும் குறைந்து வருவதோடு காங்கிரஸை திருத்த முடியாத நிலைமையில் கொண்டு போய் விட்டுக் கொண்டிருப்பதாலும், காங்கிரஸ் என்பதே பொது நலத்திற்கல்லாமல் ஒரு வகுப்பாரை அழித்து, மற்றொரு வகுப்பாரை ஆதிக்கம் பெறச்செய்ய நிரந்தரமான ஆயுதமாக ஆக்கப்படுகிற படியாலும், தமிழ்நாட்டில் பார்ப்பனரல்லாத பெரும்பான்மையோர்க்கு ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் நம்பிக்கைக் குறைவு அதிகரித்துவிட்டது. ஆதலால் ஸ்ரீமான் அய்யங்கார் அவர்களைக் கண்ணியமாய் விலகிக் கொள்ள வேண்டுகிறேன். அப்படிக்கில்லாத வரை ஆங்காங்குள்ள பார்ப்பன ரல்லாத காங்கிரஸ் வாதிகள் மகாநாடு கூட்டி ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் தங்க ளுக்கு நம்பிக்கை இன்மையைத் தெரிவிப்பதோடு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைமையை இராஜீனாமா செய்துவிடவேண்டும் என்று தீர்மானம் செய்தனுப்ப வேண்டியது. அப்படி அவர் செய்யாதவரை



RangaRakes
tamilnavarasam.com

தமிழ்நாடு மாகாண கமிட்டி கூட்டுவித்து, ஸ்ரீமான் ஐயங்காரைத் தள்ளிவிட்டு, வேறு தலைவரை நியமிக்க வேண்டியது. அப்படிச் செய்யாதவரை காங்கிரஸினால் பார்ப்பனரல்லாதார்கள் மிகுதியும் துன்பமடைய நேரிடும். டாக்டர் வரதராஜுலு நாயுடுகார் நிர்வாகக் கமிட்டியில் இராஜீனாமா செய்து விட்டார்; ஸ்ரீமான் திரு.வி. கல்யாணசுந்தர முதலியாரும், தான் இராஜீனாமா செய்து தீரவேண்டிய நிலைமையை ஏற்படுத்திக் கொண்டார்; ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கரும் காங்கிரஸை விட்டு விட்டதாகத்தான் முடிவு கட்ட வேண்டியிருக்கிறது. இனி யார் காங்கிரஸில் இருக்கிறார்கள்? மற்றபடி காங்கிரசுக்கு உழைத்த பார்ப்பனரல்லாதார்கள் கமிட்டிக்கு வேண்டுமானால் கூலிக்கு ஆள் பிடித்தால் தான் உண்டு. ஆகையால் பார்ப்பனரல்லாதார் இது சமயம் உறங்கக் கூடாது.

**குடி அரசு - கட்டுரை - 20.06.1926**



# வகுப்புவாரி பிரதிநிதித்துவம்
# II

சென்ற வாரத்திற்கு முன் 5-ம் இதழ் தலையங்கத்தில் 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் I' என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி லால்குடியில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி கூறின ஆக்ஷேபனைகளை 37 பாகங்களாக வகுத்து, அவற்றுள் முதல் 12 பாகங்களுக்கு மட்டிலும் தக்கவாறு பதில் எழுதியிருந்தோம். மிஞ்சிய 25 பகுதிகளுக்கும் இவ்வாரம் சில எழுத முற்பட்டுள்ளோம். அவையாவன:-

13 - வது, ஸ்ரீமான் சத்தியமூர்த்தி, தற்சமயம் நடக்கும் வகுப்பு மகாநாடு களைப் பார்த்தால் அரசாங்க விஷயமாக யார் என்ன நினைக்கிறார்கள் என்றே தெரியவில்லை என்கிறார்.

இதை தைரியமாய் ஒப்புக்கொண்டதற்கு நன்றி செலுத்துகிறோம். இவற்றிலிருந்து நாடெங்கும் வகுப்புணர்ச்சி மலிந்திருப்பதும் அக்காரணத் தால் அரசாங்கத்தைப் பற்றி ஜனங்களுக்கு அவ்வளவு கவலை இல்லை என்பதும் புலனாகிறது. ஆதலால் 'இரண்டொருவர் தங்களது சுயநலத்திற்காக வகுப்பு துவேஷத்தைக் கிளப்பி விடுகிறார்களேயல்லாமல் பொது மக்களிடம் அவ்வுணர்ச்சி இல்லை' என்று பிராமணப் பத்திரிகைகள் சொல்லுவது யோக்கியப் பொறுப்பற்றத்தனமென்பதும், நாடு பூராவும் அதே கவனத்தில் இருக்கிறதென்பதும் நன்கு புலனாகும். ஏன் அப்படி வகுப்புக் கவலையில் இருக்கிறது என்று யோசிப்போமானால், ஒரு வகுப்பாருக்கு மற்றொரு வகுப் பார் செய்யும் கொடுமையும் சூழ்ச்சியும் தாங்க முடியாமலேயே யல்லாமல் வேறென்னவென்று சொல்லமுடியும்?

14 - வது, ஒவ்வொரு வகுப்புக்குள்ளும் உப வகுப்புகள் ஏற்படுவதால் பிரதிநிதித்துவம் எல்லையில்லாமல் போகும் என்கிறார்.

இதற்கு ஆதாரமில்லை. அப்படியிருப்பதாக வைத்துக் கொண்டாலும் பாதகமில்லையென்றே சொல்லுவோம். ஆனால் தமிழ்நாட்டில் இந்துக்களும் மூன்று வகுப்புதான் இதுபோழ்ந்து வகுக்கப்பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் முதல் பிராமணர் மற்றும் பலர் ஈறாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அதாவது:-

(அ) பிராமணர் என்று சொல்லிக் கொள்ளப்பட்ட நமது நாட்டுப்பார்ப்பனர்.



RangaRakes tamilnavarasam.com

(ஆ) க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று பார்ப்பனர்களால் சொல்லப்பட்ட பார்ப்பனரல்லாதார்.

(இ) பஞ்சமர் என்றும், தீண்டக்கூடாதவர் என்றும், சண்டாளர் என்றும் பார்ப்பனர்களால் பெயரிடப்பட்ட ஆதி திராவிடர்கள்.

இம்மூன்று வகுப்புக்களுக்குத்தான் இப்போது வகுப்பு வாரியாகப் பிரதிநிதித்துவம் கேட்கப்படுகிறது. இப்போதுள்ளவையும் இம்மூன்று வகுப்பு களேயாகும். இதைவிட அதிகப் பிரிவுகள் ஏற்பட ஆதாரமில்லை. வகுப்பு வித்தியாசங்களின் அஸ்திவாரமெல்லாம் ஒருவன் உயர்ந்தவன், மற்றவன் தாழ்ந்தவன் என்கிற உயர்வு தாழ்வு வித்தியாசத்தைக் கொண்டதேயல்லாமல்; செட்டியார், நாயுடு, நாயக்கர், முதலியார், பிள்ளை, கவுண்டர், உடையார், நாடார், தேவர், ஐயர், ஐயங்கார் என்கிற பட்டத்தை ஆதாரமாகக் கொண்ட தல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

பல காரணங்களால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூடாது என்று சொல்லும் ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் போன்றவர்களும் இம் மூன்று பிரிவையே ஒப்புக்கொள்ளுகிறார்கள். சர்க்காரும் இம்மூன்று பிரிவை ஒப்புக்கொண்டிருக்கிறது. பார்ப்பனர்களும் இம்மூன்று பிரிவை ஒப்புக் கொண்டு, மாண்டேகு - செம்ஸ் போர்டு சீர்திருத்தத்தின் கீழ் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒரு வகையில் வழங்கி இருக்கிறது. காங்கிரசும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொண்டு முஸ்லீம்களுக்குக் கொடுத்ததோ டல்லாமல், மகாத்மாவும் ஒப்புக்கொண்டு காங்கிரஸ்வாதிகளிலேயே முஸ்லீம் களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும், தாழ்ந்த வகுப்பார் என்போர்களுக்கும் பிரதிநிதித்துவம் பிரித்து கொடுத்திருக்கிறது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி விதிகளில் 8-வது விதியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு உள்ள 25 ஸ்தானங்களில் மகம்மதியர்களுக்கு நான்கு, கிறிஸ்தவர்களுக்கு ஒன்று, தீண்டாதவர் என்கிற வகுப்பினருக்கு ஒன்று என்று பிரித்திருக்கிறது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி என்பது தற்சமயம் எப்படியிருந்தாலும் மகாத்மா தலைமையின் போது அதுதான் இந்தியாவின் அரசியல் ஸ்தாபனம். அதைத்தான் இந்திய தேசிய பார்லிமெண்ட் என்றும் சொன்னோம். அதில் வகுப்பையும் பிரித்து பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்திய பிறகும் இந்திய தேசீய சமூகம், சிறப்பாய் தமிழ்நாடு தேசீய சமூகம் முழுவதும் ஒப்புக் கொண்டு அதனால் யாதொரு இடையூறுமில்லாமல் தேசீய காரியங்கள் நடந்து வரும்போதும், ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு எல்லையில்லாமல் போய்விடும் என்கிற பயம் அப்பொழுது ஏற்படாமல் இப்பொழுது ஏற்பட்ட காரணம் என்ன என்பது தெரியவில்லை.

15-வது, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டதானால் சட்டசபைகள் வகுப்புக் காட்சியாய் முடியும் என்கிறார்.



இந்தியா தேசமெங்கும் வகுப்புக் காட்சியாய் இருக்கும் போது அதற்கு ஏற்பட்ட சட்டசபை அதைப் போலவே தான் இருக்க முடியும். அப்படிக் கில்லாமல் எல்லா வகுப்புக்கும் ஒரே வகுப்பார் பிரதிநிதியாய் இருக்கிறார்கள் என்றால், இந்தியாவை இந்தியர்களின் நன்மைக்கு இந்தியர்களே ஆள வேண்டும் என்று கூறுவதற்கும், இந்தியாவிற்கு முழு சுதந்திரம் வேண்டும் என்று கேட்பதற்கும் பொருள் என்ன? வகுப்பு நன்மையைப் பற்றி கவலை யில்லை, ஜாதியைப் பற்றி கவலையில்லை என்று சொல்லுவோமானால் உத்தியோகத்தை ஐரோப்பிய மயமாய் இருப்பதைக் களைந்து இந்திய வகுப்பு மயமாய் ஆக்கவேண்டும் என்று நாம் ஏன் பிரயத்தனப்பட வேண்டும்? ஐரோப்பியர்களை விரட்டி விட்டு அவர்களுடைய உத்தியோகத்தைப் பார்ப்பனர்கள் அநுபவிக்கவா? அல்லாமல் இந்தியர்கள் அநுபவிக்க என்று சொன்னால், இந்தியர்கள் என்றால் என்ன? பல மதம் பல வகுப்புகள் கொண் டது. அப்படியானால் எல்லா மதங்களும், எல்லா மதஸ்தரும், எல்லா வகுப் பினரும் ஆளுவதுதான் இந்தியர் ஆளுகை, இந்தியர் அநுபவம் என்று சொல்லலாம்.

16 -வது, (இதைக் கொடுத்தால்) இதோடு நிற்காமல் உத்தியோகங் களிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும், கல்வி போர்டுகளிலும் பிரதிநிதித்துவம் கேட்பார்கள் என்கிறார்.

ஆம், கேட்போம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் தத்துவமே அதுதான். பல வகுப்பார்கள் கொண்ட இந்தியாவின் ராஜரீக உத்தியோகத் திற்கு ஒரு வகுப்பார் மாத்திரம் எப்படி வார்சுதாரர்களாக ஆகக் கூடும்? "ஐயோ! கேட்பார்களே!" என்று ஏன் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஆத்திரப்பட வேண்டும்? யார் வீட்டுச் சொத்து?

"பிச்சைக்கு வந்தவன் பெண்ணுக்கு மாப்பிள்ளையா" என்பது போல் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் வகுப்புக்கு இந்திய உத்தியோகத்தில் ஏக போக பாத்தியமேது? உத்தியோகங்களிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும், கல்வி போர்டிலும் கண்டிப்பாய் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருப்பதாயிருந்தால் தான் இந்தியா இந்தியர்களால் ஆளப்பட வேண்டும் என்று கேட்க உரிமை உண்டு. அதிலும் கல்வி போர்டில்தான் கண்டிப்பாய் பிரதிநிதித்துவம் வேண் டும். அதில் சரியான பிரதிநிதித்துவம் இல்லாததால்தான் இன்றைய தினம் பிராமணரல்லாதாரும் சிறப்பாய் தீண்டாதார் என்போரும் நமது நாட்டில் இவ்வளவு கேவலமான நிலைமையிலிருக்கக் காரணம். கல்வி இலாக்காவை எடுத்துக் கொண்டால் வைஸ்சான்சலர் ஒரு சிவசாமி ஐயர், செனட் மெம்பர் களோ பல சீனிவாச ஐயங்கார்கள், சர்வகலாசாலை அங்கத்தினர்களோ பல ராமசாமி சாஸ்திரிகள், கல்வி இலாக்கா இன்ஸ்பெக்டர்களோ பல பிராமண சாஸ்திரி சர்மாக்கள், தலைமை உபாத்தியாயர்களோ பல ஐயர், ஐயங்கார், ஆச்சாரியார், சர்மா சாஸ்திரிகள். இவற்றின் செலவுக்கு பணம் மாத்திரம் கவுண்டர், முதலியார், செட்டியார், உடையார், நாயக்கர், நாயுடு, பிள்ளை,



RangaRakes tamilnavarasam.com

நாடார், கோனார் முதலியவர்கள் தங்கள் குடித்தனம் கெடும்படி கள்ளும் சாராயமும் குடித்துக் கொடுக்க வேண்டும். சர்க்கார் அந்த வரும்படி யிலிருந்தே செலவு செய்ய வேண்டும். இத்தனைப் பார்ப்பன ஓநாய்களையும் தப்பி பார்ப்பனரல்லாத பறையர், பள்ளர், சாம்பன், புலையன், சக்கிலி,நாயக்கர், கவுண்டர், பிள்ளை, முதலியார், சாயபு, இன்னாசிமுத்து முதலிய ஆட்டுக் குட்டிகள் கல்வியில் உருப்படி ஆவதென்றால் லேசான காரியமா?

இவ்வருஷம் ஒரு பள்ளியின் அரிவிரி வகுப்பில் 98 பார்ப்பனரல்லாத குழந்தைகளும் 2 பார்ப்பன குழந்தைகளுமாகச் சேர்ந்து படிக்குமானால் இன்றைக்கு 14-வது வருஷம் இவர்களின் படிப்பைக் கவனித்தால் 98 பார்ப்ப னப் பிள்ளைகள் 2 பார்ப்பனரல்லாத பிள்ளைகள் வீதமாகவே பி.ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருப்பார்கள் இதன் காரணமென்ன? கல்வி இலாக்கா போர்டில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாததுதான். அல்லாமல் வேறு காரணம் என்ன சொல்லக்கூடும்? பிராமணரல்லாத பிள்ளைகளுக்குப் புத்தி யில்லை என்று சொல்லிவிடமுடியுமா? ஒவ்வொரு இலாக்காவிலும் பள்ளிக் கூடங்களிலும் வகுப்புப்படி உபாத்தியாயர்களை நியமித்தால் கண்டிப்பாய் எல்லா வகுப்புப் பிள்ளைகளும் சமமாக படிக்க வசதி ஏற்படும். இப்போது கல்வி இலாக்காவில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்படாத காரணமே பிராமணரல்லாதார் கல்வி கற்காமலிருப்பதற்கும், முக்கியமாக, தேசத்திற்கு உபயோகமான கல்வி ஏற்படாமலிருப்பதற்கும், கற்ற கல்வியும் அடிமைத் தனத்திற்கும் இழி தன்மைக்கும் நீச்ச புத்திக்கும் சுயநலத்திற்கும் உதவவும் கொடுமையான சூழ்ச்சி முறையை ஏற்படுத்துவதற்கும் காரணமாயிருந்து வருகிறது.

நமது நாட்டை கொள்ளையடிக்க வந்தவர்கள் "அந்நிய அரசாங் கத்தார்"; நமது நாட்டுக்குக் காவற்காரர்களாய் ஏற்பட்டவர்களோ நமது பார்ப்ப னர்கள்; கொள்ளைக்காரர்களும் காவற்காரர்களும் ஒன்றுபட்டு விட்டால் நமது கதி என்னவாகுமென்பதை சொல்ல வேண்டுமா?

17-வது, 18-வது, உத்தியோகம் பெற்றால் பெற்றவருக்குத்தான் நன்மை யே தவிர வகுப்புக்கு நன்மையில்லை என்கிறார். மேலும்,

19, 20 -ல் ஒவ்வொரு வகுப்பைச் சேர்ந்த உத்தியோகஸ்தரும் தங்கள் வகுப்புக்கு என்ன நன்மை செய்வது என்று எண்ணுவார்களே தவிர தேசத்தைக் கவனிக்க மாட்டார்கள் என்றும் சொல்லுகிறார்.

இங்கு முன்னுக்குப் பின் முரண்படப் பேசியுள்ளார் என்பது வாசகர் களுக்கே தெரியும். ஒவ்வொரு வகுப்பாரும் தத்தம் வகுப்பைப் பார்த்துக் கொண்டுதான் தேசத்தைப் பார்க்க முடியும். அவரவர் பெண்டு பிள்ளை களைப் பட்டினி போட்டு வைத்துவிட்டு பிராமணர்களுக்கு சமாராதனை செய்தால் அதைப்போல முட்டாள்தனமான காரியம் வேறொன்று இருக்காது. பல வகுப்புகள் சேர்ந்ததுதான் நம் நாடு. ஒவ்வொரு வகுப்பும் அதனதன்



நன்மையை நாடிவிட்டால் எல்லா வகுப்பும் நன்மையை அடைந்து விட்டதாகி விடும். அப்போது நாடு முழுவதும் நன்மையை அடைந்ததாகிவிடும்.

18-வது, நூற்றுக்கு ஐந்து பேருக்கு மேல் உத்தியோகம் கொடுக்க முடியாது என்கிறார்.

அப்படியே வைத்துக் கொள்வோம். அந்த நூற்றுக்கு ஐந்து வீதத் தையே வகுப்பு எண்ணிக்கைக்குத் தகுந்த வீதம் வைத்துக் கொள்ளுவதில் ஆக்ஷேபனை என்ன?

21-வது, ஸ்தல ஸ்தாபனம், கல்வித்துறை இவைகளுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அனாவஸ்யம் என்கிறார் .

இதனால் மற்ற துறைகளுக்கு அவசியம் என்பதை இவரே ஒப்புக் கொள்ளுகிறார். ஸ்தல ஸ்தாபனத்திற்கும் கல்வித்துறைக்கும் மாத்திரம் இவர் ஏன் பயப்பட வேண்டும்? முன் சொன்னது போல பிராமணர்களின் அட்டூழி யத்திற்கு அவர்களுக்கு முக்கிய ஆதாரமாயிருப்பது கல்வித்துறையே. ஆத லால் எது போனாலும் அதுமாத்திரம் தங்கள் கையை விட்டுப் போகக்கூடாது என்று இவ்வளவு தூரம் மாயக் கண்ணீர் வடிக்கிறார்.

22 - வது, தாழ்ந்த வகுப்புக்கு நியமனமே போதுமென்கிறார். அப்படிப் போதாவிட்டால்......

23 - ல், அவர்கள் ஓட்டுரிமையை தாராளமாக்கி மற்ற தொகுதிகளுடன் சமமாய் தேர்தல் நடத்துவது நலம் என்கிறார்.

இவைகளில் இருக்கும் திருட்டுத்தனம் படிப்பவருக்கு விளங்காமல் போகாது. அதாவது தாழ்ந்த வகுப்பாரை சர்க்கார் நியமனத்தையே எதிர்பார்த் துக் கொண்டிருக்கும்படி செய்து விட்டால் பிராமணரல்லாதாருடன் சேர மாட்டார்கள் என்கிற தந்திரம் ஒன்று. தாழ்ந்த வகுப்பாரின் ஓட்டுரிமையைத் தாராளமாக்கி வைத்துவிட்டால் அவர்களைத் தங்களோடு சேர்த்துக் கொண்டு ஏமாற்றி அந்த ஓட்டின் பலனாயும் பிராமணரல்லாதார் தலையில் கையை வைத்துவிட்டு எல்லா ஸ்தானங்களையும் தாங்களே அபகரித்துக் கொள்ள லாம் என்கிற தந்திரம் மற்றொன்று.

மற்றவைகளுக்கு மறுமுறையில் எழுதுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 20.06.1926**



RangaRakes tamilnavarasam.com

# இனி தாமதம் வேண்டாம்

தற்கால காங்கிரஸையும் சுயராஜ்யக் கட்சியையும் பார்ப்பன ஆதிக்கத்திற்காக தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களால் சிருஷ்டிக்கப்பட்ட சூழ்ச்சி ஸ்தாபனமென்று பல தடவைகளில் எழுதி வந்திருக்கிறோம். ஆனால் அது சமயம் சிலர் நம்மீது காய்ந்து வந்தார்கள். எனினும் சீக்கிரத்தில் நாட்டிற்கு உண்மை நிலை வெளியாகுமென்றே அவற்றில் கவனம் செலுத்தாமல் நமது கருத்தை ஒளியாது வெளியிட்டு வந்தோம். இப்போது நமது கருத்தைத் தழுவி மற்றும் இரண்டொரு ஆதரிப்புகள் நேர்ந்திருப்பது பற்றி நாம் கழிபேருவகை அடைகின்றோம். அவ்விரு பெரும் ஆதரிப்புகளும் திருவாளர்களான திரு. வி. கலியாணசுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடுகார் ஆகியவர்களின் உண்மை உணர்ச்சிகளினின்றி எழுந்தவைகளேயாகும்.

திரு. முதலியாரவர்கள் பார்ப்பனத் தலைவரான திரு. சீனிவாசப் பார்ப்பனருக்கு விடுத்துள்ள இறுதிக் கடிதத்திலும், பார்ப்பனக் கமிட்டியான காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பியுள்ள தீர்மானத்திலும் * (தீர்மான நகலை மற்றோர் பக்கத்தில் காண்க) தொக்கியிருப்பது என்ன? தெளிந்த சிந்தையுடன் சுருக்கமாயும் நுட்பமாயும் நோக்குங்கால் அதன் உண்மை புலனாகும். அஃதாவது "தங்களது (ஐயங்கார்) தலைமையில் நடக்கும் இயக்கத்தில் ஒத்துழையாமைத் தத்துவம் காணக் கிடைக்கவில்லை; சில சுயநலப் புலிகள் ஒத்துழைப்பு நாட்டங் கொண்டு காங்கிரஸை வயப்படுத்திக் கொண்டார்கள். நான் இதை அறியாமல் உங்களையெல்லாம் நம்பி மோசம் போயினேன். இதுகாலை விழித்துக் கொண்டேன்; விடை தாருங்கள்" என்பதேயாம்.

டாக்டர் வரதராஜுலு நாயுடுகார் அவர்களோ இப் பார்ப்பனர்களிடம் ஆதி முதல் நம்பிக்கையில்லாதிருந்தும் 'தேசம்' 'தேசம்' என்னும் பெயரால் தன்னால் இயன்றவரை இப்பார்ப்பனர்களையும், அவர் தம் சூழ்ச்சி முறைகளையும் ஆதரித்தே வந்தார். எவ்வளவு ஆதரித்தும் டாக்டர் நாயுடுகார் கண்ணுக்கு தேசம் உருப்படுவதாய் தோன்றாததோடு, தன்னையே பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஒரு ஆயுதமாய் உபயோகித்துக் கொள்ளுவதாகவே தோன்றி விட்டது. ஆதலால் அவர் விடை கேளாமலே விலகிவிட்டார். அஃதாவது, தமிழ்நாடு கமிட்டியிலிருந்து ஒரே முடிவாய் விலகிக் கொண்டார். அவரது ராஜினாமாக் கடிதத்தில் தொக்கியிருப்பது யாதெனில் ** (இதையும் மற்றோர் பக்கத் தில் காண்க) "பார்ப்பன ஆதிக்கத்திற்காக காங்கிரஸை உபயோகித்துக் கொண்டு நீங்கள் செய்யும் காரியத்திற்கு நான் உடந்தையாயிருக்க முடியாது" என்பதேயாம்.

யோக்கியமான பார்ப்பனரல்லாதாருக்கு இனி என்ன சான்று வேண்டும்? எனினும் இவைகள் இப்படியே முடிவுறுமா? இவர்கள் இந் நிலையிலே இருக்க நமது பார்ப்பனர்கள் விட்டுவிடுவார்களா? எனப் பலர் ஐயுறலாம். ஏனெனில் நமது பார்ப்பனத் தலைவர்களின் மோட்டார் வாகனங்களும் அவசரத் தந்திகளும் இராயப்பேட்டைக்கும் குற்றாலத்திற்கும் பறந்து கொண்டிருக்கின்றன. மீண்டும் அவர்களை இழுத்து சேற்றில் நுழைத்து மிதித்தாலும் மிதிப்பார்கள். எது எவ்வாறாயினும் ஆக அதன் முடிவைப் பற்றி இனி நமக்கு கவலையில்லை.

ஆனால், "காங்கிரஸ் கட்டளை", "காங்கிரஸ் கட்டளை" என்றும் "தேசத்திற்கு ஏதாவது ஒரு தேசீய காரியம் வேண்டாமா?" என்றும் "இப்போது உள்ள இயக்கங்களில் சுயராஜ்யக் கட்சி ஒன்றே முற்போக்குள்ள கட்சியாய் – நாணயமுள்ள கட்சியாய் – கட்டுப்பாடான கட்சியாய் இருக்கிற"தென்றும் சொல்லிக்கொண்டு பார்ப்பனர்களைத் தொடர்ந்து நடந்து தூது சென்று வயிறு வளர்த்த தரகர்களான தேச பக்தர்கள், தேசீயத் தொண்டர்கள், காங்கிரஸ் பிரசாரகர்கள் ஆகியோரின் கதி என்னவாகுமென்பதே இது போழ்து நம்மிடை எழுந்த வினா. உண்மையிலேயே இப்பொல்லாப் பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளை அறியாமல் திரு. முதலியார், டாக்டர் நாயுடுகார் முதலிய தலைவர்களைப் போன்று நம்பி மோசம் போன சுயநலம் பேணாத உண்மை தேசப் பக்தர்கள், தொண்டர்கள், பிரசாரகர்கள் சிலர் இருக்கலாம். அன்னோரும் இவர்களைப் போன்றே இனி விழித்துக் கொள்வார் என நம்புகிறோம். இதுவரை நாம் தனித்து நின்று இப்போலி இயக்கத்தையும் பார்ப்பனர் தம் சூழ்ச்சியையும் தாக்கியதன் பயனாக நம்மைப் பலர் போற்றியிருப்பினும், சிலர் தூற்றலுக்கும், பொய்ப் பழிகளுக்கும், வசைமொழிகளுக்கும் உள்ளாகியிருக்கும் விஷயம் வாசகர்களுக்கு விளங்கியிருக்கலாம். அது பற்றி ஒரு சிறிதும் நாம் கவலையுறவில்லை. சர்க்காரைத் தாக்குபவருக்கு சிறைவாசமும், நமது பார்ப்பனரைத் தாக்குபவர்களுக்கு பழிச்சொல்லும் கிடைக்காமற் போகா.

சர்க்காருக்குப் பலமிருக்கின்றமையான் அவர்கள் தைரியமாய் முன் வந்து நம்மைப் பிடித்துத் தண்டித்துச் சிறைக்கனுப்புகிறார்கள். ஆனால், நமது பார்ப்பனர்களுக்கோ அத்தகைய பலமில்லை. சூழ்ச்சியும் தந்திரமுமே அவர்களது பலம். அதையே அவர்கள் உபயோகித்து வெல்லப் பார்ப்பார்கள். அம்முறையில் தாங்களும் தங்களால் ஆகாத சமயங்களில் சில 'ஓட்டு'களுக்கும் 'காலி'களுக்கும் பணம் கொடுத்துத் தூற்றவும் பொய்ப்பழி சுமத்தவுமே செய்யக்கூடும். இவை அனைத்தையும் எதிர்பார்த்தே நாம் இத்துறையில் இறங்கினோமேயன்றி, நம்மை இப்பார்ப்பனர்கள் பூஜிப்பார்கள் என்ற அவாவுடன் இறங்கினோமில்லை. எனவே, இப்பழிகளாலும்



RangaRakes tamilnavarasam.com

சூழ்ச்சிகளாலும் நமக்கு எவ்வித கஷ்டமோ அன்றி நஷ்டமோ ஏற்படினும் அவற்றையும் தைரியத்துடன் சகித்தே தீருவோம். இனியும் நமது சொந்த நஷ்டம், கஷ்டம், நமக்கு நாணயக் குறைவு முதலியன ஏற்படுத்த வேண்டும் என்பதாகச் செய்யும் பழிப் பிரசாரத்தின் பலன் ஆகிய இவையனைத்தையும் இக்கருமத்திற்கு ஆகுதியாய்விடத் தயாராகவே இருக்கிறோம். நாம் எடுத்துக் கொண்ட கருமம் நமக்கு பெரிதேயன்றி அதன் பலனாய் நமது கதி என்ன வாகும் என்பது நமக்குப் பெரிதல்ல. ஆதலால் நமது நண்பர்களும் அதைப் பற்றி கவலையுற வேண்டியதில்லை. நண்பர்கள் நம்மை ஆதரித்து எழுதிய பல கட்டுரைகளைப் பிரசுரிக்காதது பற்றி பொறுத்தருள வேண்டுகிறோம்.

இந்நிலைமையில் தமிழர்களான பார்ப்பனரல்லாதார் இனிச் செய்ய வேண்டியது என்னவென்பதுதான் நாம் இது போழ்து முக்கியமாய்க் கவனிக் கத்தக்கது. பார்ப்பனர்கள் முன்னேற்றத்திற்கு காங்கிரஸ், ஹிந்து மகாசபை, வருணாஸ்ரம தர்ம சபை ஆகிய எத்தனையோ ஸ்தாபனங்கள் இருக்கின்றன. மற்றும் வேறு எத்தகைய பொது நலச் சபைகள் என்று ஏற்படுத்தினாலும் அவற்றிற்குள்ளும் தாங்கள் நுழைந்து கொண்டு அவற்றையும் தங்கள் வயப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

பார்ப்பனரல்லாதாருக்கோ இவ்வுலகிலேயே **"தென் இந்திய நல உரிமைச் சங்கம்"** என்கிற ஸ்தாபனம் ஒன்றே சென்னையிலிருக்கிறது. அதுவும் நல்ல வேளையாய் பார்ப்பனர்களைச் சேர்ப்பதில்லையென்ற விதி விலக்குடனிருப்பதால் அதைப் பார்ப்பனர்கள் வசப்படுத்திக் கொள்ள இயலாது போயிற்று. ஆயினும் பார்ப்பனர்களின் எவ்வளவோ சூழ்ச்சிகளால் அதைத் தலையெடுக்கவொட்டாமல் அழுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதை அடியோடு ஒழிப்பதற்காகவே, பார்ப்பனரல்லாதாரில் சிலரை வயப்படுத்தி, சிலவுக்குப் பொருள் கொடுத்து ஏற்பாடு செய்து, சென்னை மாகாண சங்கத் தைத் தோற்றுவித்து அதனாலான கொஞ்ச சகாயத்தையும் சாதித்துக்கொண்ட பிறகு இவர்களின் சூழ்ச்சி வெளியாகும் சமயம் பார்த்து அதை ஒழித்து விட்டனர்.

ஆகவே, இப்போது பார்ப்பனரல்லாதாருக்கென சமூகவியலுக்கும், அரசியலுக்கும் ஸ்தாபனம் வேண்டுமானால் ஜஸ்டிஸ் கட்சி எனப்படும் தென்னிந்திய நலஉரிமைச் சங்கமாகிய மிதவாதக் கொள்கை கொண்ட ஸ்தாபனம் ஒன்றேயிருக்கிறதென்று கூறினோம். ஆதலால், **பார்ப்பனரல் லாதார் சமூக நன்மையையும் தீவிர அரசியல் கொள்கையையும் விரும்பு கிறவர்கள் அத்தென்னிந்திய நல உரிமைச் சங்கமான ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து அதை சுவாதீனப்படுத்திக் கொண்டு, அதினின்றே தீவிர கிளர்ச்சி செய்தல் வேண்டும்.** அக்கட்சியினிடத்து வெறுப்பு இருக்குமேயானால் சமூகவியலுக்கும், அரசியலுக்கும் பொதுவான கொள்கைகளை அமைத்து "தேசீயப் பார்ப்பனரல்லாதார் கழகம்" என்பதாக ஒன்றை ஏற்படுத்தி அதன் வாயிலான் இக்காரியங்களை நடத்தல் வேண்டும். இஃதல்லாது பார்ப்பனர்



மெச்சும்படி ஜஸ்டிஸ் கட்சியை திட்டுவதும் பார்ப்பனரல்லாதார் மெச்சும்படி பிராமணீயத்தைத் திட்டுவதுமான குள்ளநரி வேலை இனி உதவவே உதவாது. உறுதியாய், தைரியமாய், ஆண்மையுடன் வெளி வந்து தான் ஆகவேண்டும்.

நமது நோக்கமும் கருத்தும் என்னவென வாசகர்கள் அறிய விரும்பு வரேல் பார்ப்பனரல்லாதார் சமூக முன்னேற்றங் கருதி உழைக்கும் தென்னிந் திய நல உரிமைச் சங்கத்தைக் கைப்பற்றி, அதில் மகாத்மாவின் நிர்மாணத் திட்டத்தைப் புகுத்தி, அதையே பார்ப்பனரல்லாதாரின் சமூகவியல்-அரசியல் ஸ்தாபனமாக ஆக்கிக் கொள்ளலாம் என்றே தோன்றுகிறது. அது இயலாது என்று தோன்றினால் திரு. கலியாணசுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, ஜனாப் மௌலானா சாஹிபு, திருவாளர்கள் சக்கரைச் செட்டியார், ஆரியா, எஸ்.இராமநாதன், தண்டபாணிப் பிள்ளை முதலியோரும் மற்றும் ஒத்துழையாமையில் ஈடுபட்டு கஷ்ட, நஷ்டங்களை ஏற்று உறுதியுடன் உழைத்து வந்த பார்ப்பனரல்லாத தேசபக்தர்களும் ஒன்று சேர்ந்து எவ்வித திட்டங்கொண்ட ஸ்தாபனம் வேண்டுமென்கிறார்களோ அவ்விதமாகவாவது ஏற்பாடு செய்தல் வேண்டும். **இனித் தாமதித்தால் ஆபத்துக்குள்ளாக நேரும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.**

**குடி அரசு - தலையங்கம் - 20.06.1926**

## * பட்டங் கூடாது

**தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. எஸ். ஸ்ரீநிவாச ஐயங்காருக்கு திரு. கல்யாணசுந்திர முதலியார் காங்கிரஸ் கமிட்டிக் குதான் கொண்டுவர இருக்கும் தீர்மானத்தைப்பற்றி எழுதுவதாவது.-**

அன்பார்ந்த தலைவரே, வணக்கம். வரப்போகுஞ் சென்னைச் சட்ட சபைத் தேர்தலுக்கு காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சித் தொடர்பு கொண்டு அபேட்சகராக நிற்கும் சகோதரருள் சிலர் பட்டஞ் சுமப்பது பற்றியும், அரசாங்கத்தார் தயவால் நியமனம் பெற்றிருப்பது பற்றியும், கதருடையில் பற்றிழந்திருப்பது பற்றியும், தமிழ்நாட்டு அன்பர் சிலர் கடிதம் விடுத்திருக் கிறார். அதைப்பற்றிப் பொது ஜனங்கட்கு ( 11 - 6 - 26 ) "நவசக்தி" வாயி லாகப் பதிலிறுத்தேன். அப் பதிலை நோக்குமாறு தங்களை வேண்டுகிறேன்.

தங்களைப்போல மற்ற அபேட்சகர்களுமிருந்தால் ஐயப்பாட்டிற்கு இடம் ஏற்படல் அரிது. சில அபேட்சகர்கள் பட்டதாரிகளாகவும், அரசாங்கத் தார் தயவால் நியமனம் பெற்றவர்களாகவும், கதரில் பற்றில்லாதார்களாகவும் இருத்தல் உண்மை. இவர்கள் நாளை பதவி ஏற்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உறுதி? இவர்கள் பட்ட முதலியவற்றைத் துறந்து, கதருடையில் பற்றுக் காட்டினாலன்றி என் போன்றார்க்கு நம்பிக்கை ஏற்படாது.

இப்பொழுது நாம் வழ வழவென்று இருப்போமாயின் பின்னே வருந்த நேரும். இப்பொழுதே எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். கட்டுப்



RangaRakes

tamilnavarasam.com

பாடுகளைத் தளர விட விட நமது கட்சியின் ஆக்கங் குன்றுவது திண்ணம்.

காங்கிரசில் ஒத்துழைப்பு நுழையாதவாறு காத்தல் வேண்டுமென்னும் குறியோடு தங்களுடன் சேர்ந்து உழைக்கின்றேனேயன்றி வேறு எக்குறி யோடும் உழைக்கின்றேனில்லை என்பது தங்கட்குத் தெரியும். பட்டத்தை இழித்து இழித்துக் கூறி பட்டதாரிகளை ஆதரிப்பது அறமாகத் தோன்ற வில்லை. கூர்த்த மதியுடைய தங்கட்கு நிலையை இன்னும் விரித்தோத வேண்டுவதில்லை.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் காரிய நிர்வாகக் கூட்டத்திலாதல், பொது கூட்டத்திலாதல் கீழ்வரும் தீர்மானங் கொணர உறுதி கொண்டிருக்கிறேன். அதற்குத் தாங்கள் துணை புரிவீரென நம்புகிறேன். அத்தீர்மானத்தை வரப் போகுந் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் காரிய அல்லது பொதுக்கூட்டத்தில் கிளத்துமாறு வேண்டுகிறேன்.

### தீர்மானம்

கான்பூர் காங்கிரஸ் தீர்மானத்துக்கிணங்கிச் சென்னைச் சட்டசபை அபேட்சகராக நிற்பவருள் எவரேனும் பட்டதாரியாகவும், அரசாங்கத்தார் தயவால் எவ்வமைப்பிலாதல் நியமனம் பெற்றவராயும், கதருடையில் பற்றில்லாதவராயு மிருப்பரேல் அன்னார் முறையே பட்டத்தையும், நியம னத்தையும் துறக்குமாறும், கதருடையில் பற்றுக் கொள்ளுமாறும் இக்கூட்டந் தீர்மானிக்கிறது.

**13-6-26.** **திரு.வி.கலியாணசுந்தரன்**

## * * டாக்டர் வரதராஜுலு நாயுடு மாகாண காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியிலிருந்து விலகுகிறார்

தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியிலிருந்தும், கான்பூர் காங்கரஸ் தீர்மானப் பிரகாரம் அமைக்கப்பட்ட செலக்டு கமிட்டியிலிருந் தும் தம்முடைய பதவிகளை டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் இராஜி நாமாச் செய்துவிட்டார். தேசீயவாதியாக இருக்கும் தாம் காங்கரஸ் பெயரால் தலைவர்கள் செய்யும் பற்பல தவறுதல்களுக்கு அனுமதித்துக் கொண்டு இருக்கமுடியாதெனக் கூறுகிறார். சமூகச் சண்டைகள் அதிகரிப் பதும், பட்டதாரிகளுக்கு காங்கரஸ் அபேட்சகர்களாக நிற்க அனுமதி கொடுத்ததும் இவர் இராஜிநாமா செய்ததற்குக் காரணங்களென்று கூறப் படுகின்றது.



## வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தின் வெற்றி

தாழ்ந்த வகுப்பாருக்கும் தொழிலாளர்களுக்கும் தனிப் பிரதிநிதித்து வம் ஏற்படுத்த வேண்டும் என்பதை நமது பார்ப்பனர்கள் எவ்வளவோ தங்கள் சூழ்ச்சியின் மூலம் எதிர்த்தும், ஸ்ரீமான் ஜயவேலு போன்றவர்களை விலைக்கு வாங்கி தங்களுடன் சேர்த்துக்கொண்டு தங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாம் என்று சத்தம் போடச்செய்தும், சர்க்கார் அவ் வகுப்புக்கென்று பிரதிநிதித்துவம் கொடுக்க பார்லிமெண்டில் சம்மதித்து விட்டார்கள். தொழிலாளர்களுக்கும் அதுபோலவே பார்ப்பனர்களின் எவ்வ ளவோ சூழ்ச்சிகளை மீறி தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்கத் தீர்மானித்து விட்டார்கள். இதைப்பார்த்த பார்ப்பனப் பத்திரிகைகள் தங்கள் சூழ்ச்சிகளும் முட்டுக்கட்டைகளும் பலிக்காமல் போய்விட்டதை மூடிவைத்துவிட்டு தொழிலாளர்களுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பார்களுக்கும் நல்ல பிள்ளைகள் போல் “இனி சும்மாயிருக்கக் கூடாது; அந்தந்த வகுப்பார் வற்புறுத்த வேண் டும்” என்று “கோழி திருடியும் கூடக் குலாவுவது” போல் ‘சுதேசமித்திரன்’ முதலிய பத்திரிகைகள் எழுதுகின்றன. எப்படி இருந்த போதிலும், வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் கிடைப் பதற்கு யார் எந்த வகுப்பார் உதவியாயிருந்தா லும், எந்த வகுப்பார் விரோதமாயிருந்தாலும், இனி அதைப் பற்றி கவனிக் காமல் இவ்வகுப்பினர் ஒற்றுமையாயிருந்து தங்கள் வகுப்பைச் சேர்ந்த உண்மைத் தலைவர்களைப் பின்பற்றி, இதை நிலைநிறுத்தி, அதனால் ஏற்படும் முழு பலனையும் தங்கள் வகுப்பு முன்னேற்றத்திற்கு ஆதாரமாக்கிக் கொள்ள வேண்டும். எந்த காரணத்தைப் பற்றியும் சர்க்கார் நியமனத்திற்கோ பொதுத் தேர்தலில் தங்களுக்கென்று ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பதற்கோ கண்டிப்பாய் ஒப்புக் கொள்ளக்கூடாது. தங்கள் வகுப்புத் தனித் தேர்தல் மூலமே தங்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி பிரயத்தனப்பட வேண்டும். இதைப்பற்றி சீர்திருத்தக் கமிட்டியார் செய்துள்ள சிபார்சுகளில் தாழ்ந்த வகுப்பாருக்கு தங்கள் பிரதிநிதிகளை தெரிந்தெடுக்க ஏற்பாடு செய்ய சென்னை கவர்மெண்டுக்கு ஏற்கனவே அதிகாரமிருப்பதாய்த் தெரிகிறது. ஆனால் இதுவரை அது அமலுக்கு வரவொட்டாமல் மூடி வைக்கப்பட்டு விட்டது. இனியாவது அதை வெளிக்கொண்டு வர முயற்சிக்க வேண்டியது தாழ்ந்த வகுப்பார் என்று சொல்லப்படும் சமூகத்தைச் சேர்ந்த தலைவர் களுடைய கடமை என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 20.06.1926**



RangaRakes tamilnavarasam.com

# இது என்ன மானக்கேடு

சென்னைக் கார்ப்பரேஷனில் சுயராஜ்யக் கட்சித்தலைவர் ஸ்ரீமான் சாமி வெங்கடாஜலம் செட்டியார் புளுகுவதில் கோவை ஸ்ரீமான் சி.வி.வெங் கட்டரமணய்யங்காரை ஜெயித்துவிட்டார். ஸ்ரீ ஐயங்கார் முதலில் தனது தென்னை மரத்தில் கள்ளுக்கு முட்டியே கட்டவில்லை என்றார். பிறகு தெளுவுக்கு மாத்திரம் முட்டி கட்டினதாய்ச் சொன்னார். "சென்ற வருஷம் கோபி மகாநாட்டில் தென்னை மரங்களை ஐந்து வருஷக் குத்தகைக்குக் கொடுத்துவிட்டேன். குத்தகைக்காரன் கட்டினால் நான் என்ன செய்யட்டும் என்று சொன்னீரே இப்பொழுது அடியோடு இல்லை என்கிறீரே இது என்ன பொய்" என்று கேட்க தலை குனிந்து கொண்டார். கடைசியாக வேறு வழி யில்லாத போது "நாயக்கர் என்னை மோட்டார் கார் கேட்டார், நான் கொடுக் காததற்காக என்னைக் கெடுக்கப் பார்க்கிறார்" என்று அழுதார். நமது சென்னைக் கார்ப்பரேஷன் தலைவர் சாமிவெங்கிடாசலம் செட்டியாரோ கார்ப்பரேஷன் பணத்தில் தன் வீட்டுக்கு டெலிபோன் வைத்துக் கொண் டதைப் பற்றி கேட்டால் சர்.பி.தியாகராய செட்டியார் வைத்துக் கொண்டார், அதனால் நானும் அப்படியே வைத்துக்கொண்டேன் என்றார். சர்.பி.டி.செட் டியார் கார்ப்பரேஷன் பணத்தில் டெலிபோன் வைத்துக் கொள்ளவில்லை என்று ஆதாரம் காட்டியபின், அதற்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டு தணி காசலம் செட்டியார் வைத்துக்கொண்டார், அதனால் வைத்துக் கொண்டேன் என்றார். அவரும் வைத்துக் கொள்ளவில்லை என்று ஆதாரம் காட்டினால் இப்போது திருமலைபிள்ளை வைத்துக்கொண்டார். அதனால் வைத்துக் கொண்டேன் என்கிறார். இப்படியே இது எங்கு போய் நிற்குமோ தெரிய வில்லை.

தவிர, தான் ஒருபோதும் ஜஸ்டிஸ் கட்சியில் சேரவில்லை என்கிறார். சேருவதற்காக தான் போட்ட விண்ணப்பத்தை காட்டினால், தெலுங்கர் கக்ஷி உண்டாக்குவதற்காக ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்தேன் என்று சொல்லுகிறார். இது என்ன மானக்கேடு? பரிசுத்தமும் கட்டுப்பாடும் ஒற்றுமையும் இருப்ப தாய் சொல்லப்படும் சுயராஜ்யக் கட்சியில் பொய் சொல்லுகிற விஷயத்தில் தான் பரிசுத்தமான பொய்யும், எல்லோரும் கட்டுப்பாடாகச் சொல்லும் பொய்யும், அய்யங்கார் சென்ற வழியிலேயே செட்டியார் செல்லுகிறது என்கிற ஒற்றுமையான பொய்யுமாய் இருக்கிறதே தவிர வேறுயோக்கிய மான



காரியத்தில் ஒன்றையும் காணோம். ஐயோ! சுயராஜ்யக்கக்ஷியே ! உன்னை மதிக்கும் ஜனங்களும் இருக்கிறார்களே! அவர்களை நினைத்து அழுவதா? அல்லது உன்னை நினைத்து அழுவதா?

**குடி அரசு – கட்டுரை – 20.06.1926**



RangaRakes tamilnavarasam.com

# கோபியில் திரு. சீனிவாசய்யங்கார் நாடகக் கம்பெனி

கோபிசெட்டிபாளையம் என்பது பல பிரபல குடியான மிராசுதாரர்களை யுடையது. அங்குள்ள பூமிகள் ஆதியில் அந்த தாலூகா பார்ப்பனரல்லாத வேளாளர்களுக்கே யிருந்து வந்தது. இப்பொழுதோ அவை ஏறக்குறைய முழுவதும் அடமானம், போக்கியம், கிரயம் மூலியமாய் கோபி பார்ப்பனர்களைச் சேர்ந்திருப்பதுடன் மிகுதியும் சேலம், கோயமுத்தூர், சென்னை முதலிய ஜில்லாக்களில் இருக்கும் பார்ப்பன வக்கீல்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்குமே சொந்தமாயிருக்கிறது. குடித்தனக்காரர்கள் இந்தப் பார்ப்பனர்களை 'சுவாமிகளே' என்று கூப்பிட்டுக்கொண்டு அவர் கள் பின்னால் சுற்றுகிறவர்களாகவேயிருக்கிறார்கள். அல்லாமலும் பெரும் பாலும் இந்தக் குடியானவர்களை தப்பு வழிக்குக் கூட்டிபோவதும் வக்கீல் வீட்டுக்குக் கூட்டிப் போவதும் சூதாடக் கூட்டிப்போவதும், அவர்கள் கலி யாண காலங்களில் அவர்களுக்கு வெளி ஊர்களில் இருந்து தாசி, வேசிகளையும் பார்ப்பன வித்வான்களையும் அழைத்துவரச் செய்து அவர் களுக்கு ஆயிரம் பத்தாயிரமாகச் செலவு செய்யச் செய்வதும் சிலர் அவர் களிடம் தரகு வாங்குவதுமாகிய இவைகளினால் குடியானவர்களைக் கடன் கரராக்கி சிலரைப் பாப்பராக்கி அவர்கள் பூமிகளை எழுதிவாங்குவதும் இந்த சில பார்ப்பனர்களேயாகும். இவ்வளவு யோக்கியதையில் உள்ள தங்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு ஐயங்காருக்கு ஓட்டு வாங்கிக் கொடுப்பதற்கு அந்த ஊர்களில் வாயில்லாப் பூச்சிகளும் சாதுக்களுமான இரண்டொரு குடியானவர்களைக் கை ஆயுதமாக வைத்துக்கொண்டு, கான்பரன்ஸ் என்ற அரசியல் விஷயத்தின் பேரால் ஒரு திருட்டுக் கூட்டம் கூட்டி, அதற்கு ஒரு பார்ப்பனரை தலைவராகத் தெரிந்தெடுத்ததாய் ஏற்பாடு செய்து, சில பார்ப்பனரல்லாத பேராசைக்காரர், அதாவது ஓட்டு வேட்டைக்காரரையும் கூட்டி வைத்துக்கொண்டு, பார்ப்பனரல்லாதாரிலும் காலிகளான இரண்டொரு ஆள்களையும் கூட்டிவைத்து இவர்கள் பெயரால் ஓட்டு பெறச்செய்யும் சூழ்ச்சி நாடகத்தின் யோக்கியதையை என்னவென்று சொல்லுவது?

நாடகத்தின் அயன் ராஜபார்ட்டான தலைவர் திரு. சீனிவாசய்யங்கார் பேசியதாவது:- "பார்ப்பனரல்லாதார் கட்சியான ஜஸ்டிஸ் கட்சியை வெட்டிப் புதைக்கவேண்டும்.பார்ப்பனரல்லாதாரின் நன்மைக்கு பாடுபடும் திரு. ஈ.வெ. இராமசாமி நாயக்கரை வெட்டிப் புதைக்க வேண்டும்." இவைதான் அக்கிராசனர் பிரசங்கத்தின் சுருக்கம். இதைப் பேசும்போதே அவர் மூர்ச்சையாகி கீழே விழுந்து ஆவி ஊஞ்சலாடி நிலை பெற்றதாம். நாடகத்தின் அயன் ஸ்திரீ பார்ட்டான திரு. சி.வி. வெங்கட்டரமணய்யங்காரரோ "நான் மகா காங்கிரஸ் பதிவிரதை' இன்னமும் கன்னியே கழியவில்லை. ஈ.வெ. இராம சாமி நாயக்கர் பேச்சை நம்பாதீர்கள்; அவர் திருடர், பொய்யர், என்னைக் கற்பழிக்கப் பார்த்தவர், நான் ஒரு நாளும் கற்பழியவில்லை." என்று தலைமயிரை அவிழ்த்து விரித்துவிட்டு, மாரடித்துக்கொண்டதுதான் பெண் வேஷத்தின் நடிப்பு. இந்தப் பதிவிரதைக்கு ஆள்களைக் கூட்டிவிட்டு வயிறு வளர்க்கும் தோழிகளான சில பார்ப்பனரல்லாத பிரசாரகர்களோ " ஆமாம்! ஆமாம்,! நாயக்கரை நம்பாதீர்கள். ஸ்ரீமான் வெங்கட்டரமண அய்யங்கார் மகா பதிவிரதை. எனக்குத் தெரியாமல் அவர் ஒரு காரியமும் செய்திருக்க முடியாது. என்னை வைத்துக்கொண்டுதான் என்னால்தான்- அவர் எல்லாக் காரியமும் செய்கிறது; இன்னமும் யாருடைய கையும்படவே இல்லை. ஆதலால் நாயக்கர் வார்த்தையை நம்பாதீர்கள்," என்று சொல்லி ஓட்டு வாங்குவது தான் அத்தோழிகளுடைய நடிப்பாய் இருந்தது. இக்காரியங்களுக்குத் திரை பிடித்தும் தீவட்டி பிடித்தும் நிற்பதுதான் கோபி பார்ப்பனர்களான ஐயங்கார் நாடகக் கம்பெனியின் சிப்பந்திகளது நடிப்பாய் இருந்தது. உப வேஷக்காரர்களான பார்ப்பனரல்லாத சட்டசபை மெம்பர்களோ, யார் நடிப்பு சரியாயிருந்தாலும் சரி, யார் நடிப்பு சரியாயில்லாவிட்டாலும் சரி, எங்களைப் பொறுத்தவரை எங்களுக்கு ஓட்டு கொடுங்கள் என்பதே அவர்கள் நடிப்பாயிருந்தது. இந்நாடகத்தின் பெருமையை விளம்பரப் படுத்தி நோட்டீஸ் வினியோகம் செய்வதே பார்ப்பனப் பத்திரிகைகளின் கடமையாயிருந்தது.

முடிவில் எல்லா யோக்கியதையும் வெளியாகிவிட்டது. அதாவது இந்த நாடகம் நடந்த 4, 5 நாள்களுக்குள்ளாக கோபி பிரமுகர்களும் பொது ஜனங்களும் இவர்களின் யோக்கியதையை அறிந்து, உண்மை அறிய ஆசைப்பட்டு, வேறு ஒரு கூட்டம் கூட்டி, திரு. ஈ.வெ. இராமசாமி நாயக்கரையும் திரு. என். தண்டபாணி பிள்ளையையும் வரவழைத்து உண்மையை வெளியிடும்படி கேட்டுக் கொண்டார்கள். அந்தப்படியே ஒரு பெரிய பிரதிநிதித்துவக் கூட்டம் கூட்டி அக் கூட்டத்தில் அவ்விருவர்களும் திரு, எஸ். இராமநாதன் அவர்களும் மற்றும் திரு, எஸ்.பி. கிருஷ்ணய்யர், திரு. ஜி.வி. நாராயணய்யர் ஆகியவர்களும் பேசினார்கள், பேசிய விஷயம் மறுமுறை வெளியாகும்.

ஆனாலும் கூட்ட ஆரம்பத்திலேயே திரு. எஸ். பி. கிருஷ்ணய்யர் எழுந்து 4, 5 நாளைக்கு முன் இந்த ஊரில் காங்கிரசின் பெயரால் ஒரு நாடகம் நடந்ததென்றும், அது காங்கிரஸுக்கு சம்மந்தப்பட்டதல்லவென்றும், அது பொதுஜனங்களால் நடத்தப்பட்டதல்லவென்றும், யாரோ சிலர் தங்க ளுக்கு



RangaRakes tamilnavarasam.com

வேண்டிய சிநேகிதர்களுக்காக சட்டசபைக்கு ஓட்டு வாங்கி கொடுக்க செய்த சூழ்ச்சியென்றும், அதில் பல ஒழுக்கமில்லாத காரியங்கள் நடந்திருக் கிறதென்றும், அக்கூட்டத்தில் மகாத்மாவைப்பற்றியோ அவர் கொள்கை களைப் பற்றியோ ஒரு பிரஸ்தாபமும் இல்லையென்றும், இரண்டொரு தேசபக்தர்களை திட்டுவதும் எப்படி ஓட்டு சம்பாதிப்தென்பதுமே முக்கிய விஷயமாயிருந்ததென்றும், தலைவரை தெரிந்தெடுத்ததில் கொஞ்சமும் புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ளவில்லையென்றும், இது போலவே உள்ளூர் விஷயங்களிலும் பல தவறுகள் செய்து வருகின்றார்களென்றும், வந்திருக்கும் கனவான்கள் உண்மையான விஷயத்தைச் சொல்வார்கள், கவனமாய் கேட்க வேண்டும் என்றும்" சொன்னார். மற்ற விஷயம் பின்னால்.

**ஒரு நிருபர்**

**குடி அரசு - கட்டுரை - 20.06.1926**



# கோபியில் மா பெருங்கூட்டம்

சகோதரர்களே!

சில தினங்களுக்கு முன் இந்த இடத்தில் நடந்த மகாநாட்டில் பலர் என்னை வாயில் வந்தபடி திட்டியதாகக் கேள்விப்பட்டேன். அதைச் சகிக்காத சில பிராமணரல்லாதார் என்னை இங்கு வந்து உண்மை விஷயங்களைப் பற்றி பேசவேண்டுமென்று கேட்டுக் கொண்டதால் இன்று நாங்கள் வந்திருக் கிறோம். முன்னால் வந்தவர்கள் நடந்து கொண்டது போல் நாங்கள் இங்கு யாரையும் திட்டுவதற்கு வரவில்லை; அந்த எண்ணமுமில்லை. ஸ்ரீமான் தண்டபாணிப் பிள்ளையவர்கள் தமது பிரசங்கத்தில் நமது நாட்டிற்கு பிராமணர்களால் ஏற்பட்டிருக்கும் கொடுமையைக் குறிப்பிட்டார். அவர் எடுத்துக்காட்டிய வித்தியாசங்களைத் திருத்த வேண்டுமென்கிற ஆசையினா லேயே பிராமணர்களால் நமது சமூகத்திற்கு நேர்ந்த ஆபத்துகளைச் சொன் னார். மற்றவர்களெல்லாம் தன்னை நல்லவன் என்று சொல்ல வேண்டுமென் கிற சுயநலத்தோடு அவர் பேசவில்லை. எடுத்துக்காட்டிய குற்றங்கள் நீங்க வும், வகுப்புப் பிணக்குகள் ஒழியவுமே அவர் குறிப்பிட்டுப் பேசினார்.

## வகுப்புப் பிணக்கு

தற்காலத்தில் வகுப்புப் பிணக்குகள் இல்லையென்று மறைத்து வைத்துப் பேசுவதில் பலனில்லை. நம் திரேகத்தில் ஒரு புண் உண்டானால் அதை மறைத்துக் கட்டிவைத்துக்கொண்டிருந்தால் அது திரேகம் பூராவையும் கெடுத்துவிடும். அதை அறுத்து ஆற்றிவிட்டால் அது உடனே ஆறிவரும். அது போல குற்றங்களையும் குறைகளையும் எடுத்துக்காட்டி மாற்றித்தானாக வேண்டும். வடநாட்டில் இந்து முஸ்லீம் வகுப்புச் சண்டைகள் அதிகமாக ஏற்பட்டுக் கொண்டே வருகிறது. கல்கத்தாவில் இந்து முஸ்லீம் கலவரம் மூண்டிருக்கிறது; பம்பாயிலும் புகைந்து கொண்டிருக்கிறது; சீக்கிரம் நம் மாகாணத்திற்கும் வந்து விடுமோவென சந்தேகமாயிருக்கிறது. வீரர்களான மகமதலி முதலிய பெரிய தேச பக்தர்கள் கூட இப்பொழுது இருக்கும் நிலை மையைப் பார்த்து தேசத்தைவிட இஸ்லாம் பெரியது என்று சொல்லி விட் டனர். 7 கோடி முஸ்லீம்கள் 24 கோடி இந்துக்களிடம் அடிமையாக முடியா தென்று அவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். காரணமென்ன? அவர்கள் வீரர் களல்லவா? கிச்சிலு பெரிய தேச பக்தர், பஞ்சாபில் அவரை கவர்மெண்டார் ரகசியமாய்க் கொண்டு போனதினால்தான் அவ்வளவு ஜனங்கள் உயிரையும்



RangaRakes tamilnavarasam.com

விட்டனர். ஒத்துழையாமையே அவரால்தான் அங்கு உண்டானதென்று சொல்லலாம். அத்தகையவரும் தங்கள் வகுப்பு நலனே பிரதானமென்று சொல்லுகிறார். நாளுக்கு நாள் காங்கிரஸை விட்டு எல்லா மகமதிய நண்பர்களும் விலகி நிற்கின்றனர்.

## வகுப்பை மறந்தவர் எவருளர்?

இப்போது தமிழ்நாட்டிலும் காங்கிரஸ் கமிட்டியில் வகுப்பை மறந்த ஏதாவதொரு மதிப்புள்ள பிராமணரல்லாதார் இருக்கிறார்களா என்று பாருங்கள். ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியாரிருப்பதாக நீங்கள் சொல்லுகிறீர்கள். அவரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாமென்று சொல்லவில்லை; வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்கிறார். ஸ்ரீமான் டி.எ.இராமலிங்கம் செட்டியாரிருக்கிறார் என்று சொல்லுவீர்கள். அவரையும் நேரில் போய்க் கேட்டோம். அவர் "நான் வெகு காலத்திற்கு முன்னேயே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று அதற்குரிய இயக்கத்தையும் ஆரம்பித்திருக்கிறேன்; நீங்களெல்லாம் இப்போது வந்தவர்கள்" என்று எங்களிடம் சொன்னார். ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களும் காங்கிரஸிலிருந்து விலக ஆரம்பமாய் விட்டது. ஸ்ரீமான் டாக்டர் நாயுடு அவர்களும் முதலியாரவர்களின் அபிப்பிராயத்தை ஒப்புக் கொள்வதாக "தமிழ்நாடு" தலையங்கம் எழுதிவிட்டது. ஸ்ரீமான் முதலியார் பெயரை வைத்துக்கொண்டு தான் சுயராஜ்யக் கட்சி தமிழ்நாட்டில் நடந்து வந்தது. அவரும் இப்போது உண்மை அறிந்து விலகப் போகிறார். இனி சுயராஜ்யக் கட்சி தமிழ்நாட்டிலும் சாக வேண்டியதுதான். ஆனால், அவரை விலைக்கு வாங்க பிரயத்தனம் செய்கிறார்கள். வட இந்தியாவில் பம்பாய் வரை சுயராஜ்யக் கட்சி செத்துவிட்டதென்றே சொல்லலாம். வட நாட்டில் இந்து முஸ்லீம் கலவரம்; தென்னாட்டில் பிராமணர் - பிராமணரல்லாதார் கலவரம். இந்த நிலைமையில் வகுப்புப் பிணக்கு இல்லை என்று மறைத்துவைப்பதில் என்ன பிரயோஜனம்.

## தற்கால காங்கிரஸ் உத்தியோகத்திற்கு மனுபோடும் தபாற்பெட்டி

தியாக உணர்ச்சி நிறைந்திருந்த காங்கிரஸ் போய்விட்டது. 35 வருஷத்திய பழய உத்தியோக காங்கிரஸ் இப்போது தலையெடுக்க ஆரம்பித்திருக்கிறது. ஆகையால்தான் தற்கால காங்கிரஸ் துலைந்து ஒத்துழையாமைக் காங்கிரஸ் உண்டாக வேண்டுமென்று சொல்லுகிறேன். மகாத்மா காந்தி காங்கிரஸ் மாறியதால்தான் மகாத்மா நம்மை விட்டுப்போய் மூலையில் ஒதுங்கி உட்கார்ந்து கொண்டார். இப்போதைய காங்கிரஸ் உத்தியோகத்திற்கு மனு போடும் தபால் பெட்டி. மகாத்மா காந்தியடிகள்தான் ஒத்துழையாமைத் தத்துவத்தை காங்கிரஸில் புகுத்தினார். அது சமயம் காங்கிரஸினிடத்தில் ஜனங்களுக்கும் நம்பிக்கையிருந்தது, ஒத்துழையாத் திட்டம் வந்ததினால்



அநேகம் சுயநலக்காரர்களுக்கும் உத்தியோக வேட்டைக்காரார்களுக்கும் உயர்ந்த ஜாதி என்று சொல்லுபவர்களுக்கும் காங்கிரஸில் இடமில்லாமல் போயிற்று. ஆதலால் அவர்கள் இப்போது பழைய உத்தியோக காங்கிரஸைக் கொண்டு வந்து விட்டார்கள்.

## நான் வகுப்பு உரிமை கேட்கக் காரணம்

காங்கிரஸிலும் முஸ்லீம்லீக் சபை ஏற்பட்டு அவர்களுக்கென தனிப் பிரதிநிதித்துவமிருக்கிறது. அதற்குக் காரணம் முஸ்லீம்களின் வகுப்பு நலத்தை நாடுவதேயாகும். அது போல் பிராமணரல்லாதாருக்கும் காங்கிரஸில் தனிப்பங்கு வேண்டும் என்பதுதான் எனது நோக்கம். நமது உரிமை நமக்கு வந்துவிடவேண்டும். சென்னை மாகாணச் சங்கம் நமது உரிமை வீதத்தைக் கவனிப்பதற்காகவே ஏற்பட்டது. **நாளைக்கு சுயராஜ்யம் வந்தாலும் நமது நிலைமை என்ன? வெள்ளைக்கார அடிமை நீங்கி பிராமணரின் அடிமை ஆவதா? என்பதுதான் எனது கேள்வி.** மகாத்மாவின் ஒத்துழையாத் திட்டம் நாட்டில் அமலுக்கு வந்திருக்குமானால் நான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்டிருக்க மாட்டேன். மகாத்மாவின் நிர்மாணத் திட்டம் நிறைவேறினால் சண்டைக்கு வழியில்லாமற் போகும். இப்போது மகாத்மாவின் திட்டங்கள் மாறிப் போகவே, எப்படி ஒரு வகுப்பார் ஆதிக்கம் பெறுவது - உத்தியோகம் சம்பாதிக்கிறதென்கிற நிலைமை வந்து விட்டது. ஆதலால் சண்டை ஏற்பட வேண்டியிருக்கிறது.

## பதவி ஆசை யாருக்கில்லை?

கஷ்டப்பட்ட காலத்தில் கஷ்டத்திற்குப் பங்கெடுத்துக் கொள்வாரில்லை; லாபத்திற்கு மட்டிலும் பங்குத் தகறார் வந்துவிட்டது. உத்தியோக ஆசையில்லாத தலைவர்கள் இப்போது காங்கிரஸில் இல்லை. ஸ்ரீமான்கள் டி.எ.இராமலிங்கம் செட்டியாரும், ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும் காங்கிரஸில் இருக்கிறார்களே, அவர்களும் உத்தியோக ஆசைக்காரர்களா? என்று கேட்கிறீர்கள். ஆம்! அவர்களும் உத்தியோகத்திற்கு இரகசியமாய் உள்ளுக்குள் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் கண்ட்றாக்டு பேசி ஏற்பாடு செய்து கொண்டுதான் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து இருக்கின்றனர். சும்மாயிருக்கவில்லை; இன்றைக்கும் அவர்கள் ஹிருதயத்தில் வகுப்புநலன் துடித்துக் கொண்டுதானிருக்கும். என்ன செய்வார்கள் பாவம்! எப்படியிருந்தால் இது சமயம் தங்கள் காரியம் ஆகும் என்பது தெரிந்துதான் சமயம் போல் நடக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் பழைய காங்கிரஸை உண்டாக்கப் பார்க்கின்றனர். காரணமென்ன? பழைய காங்கிரஸ் ஏற்படுத்தியபோதே அதன் மூல மந்திரம் உத்தியோகம் பெறுவதுதான்.



RangaRakes tamilnavarasam.com

## சீர்திருத்தத்தாலுண்டான லாபம்

உத்தியோக காங்கிரஸின் பலனால் நமது நாட்டிற்கு சீர்திருத்தம் இரண்டு தடவை சர்க்காரால் கொடுக்கப்பட்டது. முதல் சீர்திருத்தம் வந்ததும் இந்து முஸ்லீம் கலகம் ஏற்பட்டது. சம்பளங்களை உயர்த்தியதால் வரியதிக மாய்ச் செய்யப்பட்டது. 2- வது சீர்திருத்தமும் வந்து நமக்கு என்ன கிடைத் தது? பிராமணர் பிராமணரல்லாதார் கக்ஷியை உண்டாக்கிற்று. மீண்டும் வரி உயர்ந்தது. இந்த சீர்திருத்தங்கள் காங்கிரஸில் போட்ட சத்தத்தால் ஏற்பட்டது. உத்தியோக காங்கிரஸ் இல்லாதிருந்தால் நாட்டிற்கு இத்தனை கெடுதல் ஏற்பட்டிருக்காது. உத்தியோக காங்கிரஸ் இல்லாத போது 50,60 கோடி ரூபாய்தான் நாம் வரி கொடுத்து வந்தோம். உத்தியோக காங்கிரஸ் பெற்ற சீர்திருத்தத்தின் பலனாய் இப்போது 150 கோடி கொடுக்க வேண்டியதாகி விட்டது. காங்கிரஸ் இல்லாத போது 24 கோடி ரூபாயில் வைத்திருந்த ராணுவச் செலவு, உத்தியோக காங்கிரஸில் சீர்திருத்தம் வேண்டுமெனப் படித்தவர்கள் சத்தம் போட்டதால் இன்றைக்கு 70 கோடி ரூபாய் ராணுவச் செலவில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்தனையும் ஏழைகள் பணந்தான் 1000-க்கு 5 பேர்தான் பணக்காரர்களாயிருப்பார்கள். அவர்கள் வரி கொடுப் பதைப் பற்றிக் கவலை யில்லை. தேசத்தில் 1000-க்கு 900 பேர் 10 ரூபாய்க்கு கீழ்ப்பட்ட வரி கொடுப்போராயிருக்கிறார்கள். அவர்கள் வரி கொடுப்பது தான் சர்க்கார் வரும்படி. இரண்டாவது சீர்திருத்தத்தால் வரி உயர்ந்தது. ராணுவச் செலவு அதிகமாயிற்று; சம்பளங்கள் உயர்ந்தது; 3 பைசா கார்டு அரையணா வாயிற்று; உத்தியோகச் சண்டைகள் மலிந்தன; ஒவ்வொரு ஜாதியாருக்கும் எனக்கு - உனக்கு என்ற சண்டைகள் மிகுந்தன; இந்த உத்தியோகங்களும் நியமனங்களும் எலக்ஷன்களும் இல்லையானால் சண்டையே இல்லை. இதற்கு முன் ஒரு கவர்னர், 2 நிர்வாக சபை மெம்பர் ஆக மூவர் ஒரு மாகாணத்தை ஆண்டு வந்தார்கள். சுமார் 20 ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் நமது மாகாணக் கவர்ன்மெண்டு நடந்து வந்தது. உத்தியோக காங்கிரஸின் பலனாக 3 மந்திரி, 4 நிர்வாக சபை மெம்பர் ஆக 7 பேர் மிகுந்து விட்டார்கள். ஆள் ஒன்றுக்கு 5500 ரூ. வீதம் சம்பளத்தில் நமது மாகாணம் நிர்வகிக்கப்பட வேண்டியதாகிவிட்டது. இந்த சம்பளம் ஏழைகள் தலையில் கை வைத்து அவர்களிடம் வசூல் செய்யப்படுகிறது. இத்தனைக் கெடுதலும் படித்த பிராமண வகுப்பாரால் வந்தது. ஆகையால் தான் மகாத்மா இந்தக் குறைகளை மாற்ற வேண்டுமென்று சொன்னார்.

## எல்லாம் ஏமாற்றமே

இப்போது உங்களிடம் ஓட்டுக் கேட்பவர்கள், "அவன் சட்ட சபைக் குப் போனான் ஒன்றும் செய்யவில்லை; இவன் போனான் ஒன்றும் செய்ய வில்லை; நான் போகிறேன்; பண்ணிப் போடுகிறேன்" என்று உங்களை முட்டாள்கள் என்று நினைத்துக்கொண்டு சொல்லுகின்றனர். வேளாளப்



பிரபுக்கள் ஏமாற்றமடையக் கூடாது. அவர்கள் சொல்வது பொய். அங்கு யார் போனாலும் உங்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது. அதில் தங்களுக்கு உத்தியோகம் தேடிக்கொள்ளத்தான் முடியும். அதற்கு நீங்கள்தான் அதிக வரி கொடுக்க வேண்டி வரும். சட்டசபையில் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லி வெளியில் வந்தவர்கள் மறுபடி எதற்காகப் போக வேண்டும்?

## சுயராஜ்யமென்றால் என்ன?

நமது மகாத்மா காந்தியடிகள் தமது 'சுயராஜ்ய'த்திற்கு இன்னும் அர்த்தம் சொல்லவில்லை. ராஜப் பிரதிநிதி கேட்டபோது கூட அவர் சொல்ல வில்லை. சுயராஜ்யம் கிடைத்தால் அதை அடைய யோக்கியதை வேண்டு மென்றுதான் நிர்மாணத் திட்டத்தையே 'சுயராஜ்யம்' என்று சொன்னார். அதை விட்டுவிட்டு உத்தியோகம் அடைவதை சுயராஜ்யம் என்று உங்களை பிராமணர்கள் ஏமாற்றுகிறார்கள். நாம் உண்மையை உணர வேண்டும்; உண் மையை எடுத்துச் சொல்ல வேண்டும்; உண்மையை எடுத்துச் சொல்லுவதில் என்ன வந்தாலும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். நம் பயித்தியக் காரத்தனம் நீங்கவேண்டும். இப்போது நாளுக்கு நாள் "மகாத்மா காந்தி யென்பவர் ஒருவர் இருந்தார்" என்று சொல்லும் ஸ்திதிக்குக் கொண்டு வந்து விட்டுவிட்டார்கள். இப்போது நமது யோக்கியதை என்ன என்பதுதான் நமது கவலை. நாம் இத்தனை கஷ்டப்பட்ட ஒத்துழையாமைக் காங்கிரஸின் பலனை சுயநலக்காரர்கள் உபயோகப்படுத்திக்கொள்ள விடுவதா என்பதுதான் எனது கவலை.

## வித்தியாசம் ஒழிய வேண்டும்

மறுபடியும் ஏதாவது ஒத்துழையாமை இயக்கத்திற்குப் புத்துயிரளிக்க வழியுண்டா என்பதுதான் இனி யோசிக்க வேண்டிய வேலை. பெருமைக்கு ஆசைவேண்டாம். பெருமை என்றால், பணத்தாலும், சதையாலும், பலத்தா லும் உண்டாகக் கூடியதல்ல. மகாத்மாவை நாம் எதற்காக மதிக்கிறோம்? அவருடைய உத்தமமான கொள்கைக்காகவே "இந்த ராஜாங்க முறை சரியல்ல, இதை தகர்த்து விடவேண்டு"மென்று நாம் சொல்லும்போது "நமது தற்கால காங்கிரஸ் முறை சரியல்ல, அதை ஒழித்து ஒத்துழையாமைக் காங்கிரஸை மீண்டும் உண்டாக்க வேண்டு" மென்று ஏன் நாம் சொல்லக் கூடாது? இத்தனை பலமுள்ள கவர்ன்மெண்டு முறையை ஒழிக்கும் சக்தி நமக்கிருக்குமானால் தற்கால உத்தியோக காங்கிரஸ் முறையை நாம் ஏன் ஒழித்து விட முடியாது? நாமும் மனிதரென்று சொல்லிக் கொள்ளுகிறோமே தவிர, உண்மையில் அதற்கு அர்த்தமில்லை. உத்தியோகக் காங்கிரஸால் நமது பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்திற்கு ஏற்படுகிற தடைகள் பூராவும் நீக்கப்படவேண்டும்; மனிதனுக்கு மனிதன் வித்தியாசமிருக்கக் கூடாது; சம உரிமை வேண்டும் என்கிற காங்கிரஸை ஏற்படுத்த வேண்டும். நமக்குள்



RangaRakes tamilnavarasam.com

வித்தியாசமில்லையென்று மூடி வைப்பதனால் என்ன நன்மை ஏற்படும்? இப்பொழுதிருக்கும் நிலைமையில் பிராமணராயிருந்தாலும் யாராயிருந்தாலும் இந்த வித்தியாசங்களை ஒழிக்க முதலில் பாடுபட வேண்டும். நாம் இந்த வித்தியாசங்களை மறைத்து வைத்தாலும் நம் சந்ததியார்கள் காலத்தில் கலவரம் வந்தே தீரும். அவர்கள் காலத்திலாவது இந்த வித்தியாசம் ஒழிந்தே தான் தீர வேண்டும். விடுதலை வேண்டுமானால் முதலில் இந்த வித்தியாசங்களை ஒழிக்க வேண்டியது முதல் வேலையாகும். 100- க்கு 97 பேர் 'சூத்திரர்', 'தாசி மக்கள்', 'அடிமைகள்' என்ற வித்தியாசம் இன்னும் ஒரு வகுப்பாரிடம் இருந்து கொண்டிருக்கிறது. இவைகள் ஒழிய வேண்டாமா? ஏன் இவைகளை ஒழிக்கக் கூடாது?

## உயர்வு தாழ்வு நிலைக்குமா?

உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது? ஒரு தாழ்ந்த ஜாதியானுடம்பில் இருப்பதும் ரத்தந்தான், நமது நண்பர் தாலூகா போர்டு தலைவர் ஸ்ரீமான் ராஜுக் கவுண்டரவர்கள் உடம்பிலிருப்பதும் ரத்தந்தான், ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்கார் உடம்பிலிருப்பதும் ரத்தந் தான். இம்மூன்று ரத்தத்திற்கும் என்ன வித்தியாசம்? இன்றைக்கு பெரிய ஜாதியாரென்று தாழ்ந்த ஜாதியாரை அவமதிக்கிறார்கள்? அதே 'பஞ்சமன்' கிறிஸ்து மதத்தில் சேர்ந்து கொஞ்சம் படித்து 'டானியல்' என்று பெயர் வைத்துக் கொண்டு ஒரு ரிவினியூ இன்ஸ்பெக்டராக வந்தால் பெரிய ஜாதி மணியக்காா் குனிந்து கும்பிட்டுவிட்டுக் கூப்பிட்ட விடத்திற்கெல்லாம் கட்டைக் கக்கத்தில் வைத்துக் கொண்டு பின்னால் ஓடுவார். வைதீகப் பிராமணன் ஒருவன் ரிவினியூ இன்ஸ்பெக்டராக வந்தால் ஒரு பஞ்சமன் கிறிஸ்து மதத்தில் சேர்ந்து வேறு பெயர் கொண்டு டிப்டி கலெக்டராக வந்து விட்டால் சாஸ்திரியான இன்ஸ்பெக்டர் கும்பிட்டுக் கூப்பிட்ட இடமெல்லாம் பின்னால் ஓடுவார். இந்த வித்தியாசங்கள் அப்பொழுது எங்கே போய் விடுகிறதென்று தான் நான் கேட்கிறேன். இன்றைக்கு நாம் இதே நிலையில் இருந்துவிடலாம் என்றால் அது நிலைக்குமா? உதாரணமாக, ஒரு சூதாடி இன்னொருவனிடம் இருக்கும் பணத்தை சூதாடிக் கெலித்தி விட்டால் தோத்தவன் விடுவானா? மீண்டும் சூதாடிக் கெலிக்கத்தான் கூப்பிடுவான். மரியாதையாய்க் கெலித்தவன் சூதாடாமல் கெலித்த பணத்தைக் கொண்டு ஓட்டம் பிடிக்கப் பார்த்தால் அவனை உதைத்தாவது, கொலை செய்தாவது அந்தப் பணத்தைப் பிடுங்கிக் கொள்ள எண்ணுவான். அதுபோல் இன்றைக்கு ஒரு கூட்டத்தார் உயர்ந்த ஜாதியாராகி விட்டால் மற்றவர்கள் நாளைக்குப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பார்களா? ஒருவரையொருவர் உதைத்தாவது சமத்துவம் தேட எண்ணமுண்டாகும்.



## ஜஸ்டிஸ் கட்சியில்லாவிட்டால். . . . .

பிராமணரல்லாதார் கட்சியை சில சுயநலக்காரர்களும், பிராமணப் பத்திரிகைகளும், பிராமணத் தலைவர்களும் போன விடங்களிலெல்லாம் எழுத்தினாலும் சொல்லினாலும் தூற்றிவருகின்றனர். இன்றைக்கு பிராமணரல்லாதார் கட்சி இல்லாவிட்டால் நம் பிராமணரல்லாதார் நிலை எப்படியிருந்திருக்கும்? நமது மகமது உஸ்மான் அவர்களும் சிவஞானம் பிள்ளையவர்களும் இந்த உயர்ந்த ஸ்தானத்திலிருக்க முடியுமா? நமது வீரய்யன் சட்ட சபைக்குப் போயிருக்க முடியுமா? இதை நன்றாக யோசித்துப் பாருங்கள். நான் இந்த இடத்தில் வந்து பேச எனக்கு வழியேற்பட்டிருக்குமா? ஸ்ரீமான் ராஜுக் கவுண்டரும் பட்டக்காரரும் பிரசிடெண்டாக முடியுமா? இவைகளையும் யோசித்துப் பாருங்கள். ஆதலால் பிராமணரல்லாதார் கட்சியில்லா விட்டால் பிராமணரல்லாதார் பாடு இன்னும் ஆபத்தாய் போயிருக்கும்.

## தீண்டாமை வளர்ந்த விதம்

உயர்வு தாழ்வு வித்தியாசங்கள் பிராமணரிடத்தில் மாத்திரம் இல்லை. பிராமணரல்லாதாரிடத்திலும் இந்த வித்தியாசம் இருந்துதானிருக்கிறது. நாம் பிராமணர்களை மட்டும் ஏன் சொல்லுகிறோமென்று நீங்கள் கேட்கலாம். அவர்கள்தான் வழி காட்ட வேண்டும். முடிச்சுப் போட்டவன் அவிழ்த்தால் சீக்கிரம் அவிழ்க்கலாம். பிராமணர் பார்த்து விமோஜனம் செய்வதானால் சீக்கிரம் ஒழிந்து விடும். காரணம், இவர்களைப் பார்த்துத்தான் மற்ற ஜாதியார் காப்பியடித்தார்கள். எங்கள் ஊரில் தண்ணீர் குழாயை பிராமணப் பெண்கள் கால் குடம் தண்ணீர் கொண்டுவந்து குழாயைக் கழுவித் தண்ணீர் எடுப்பதைப் பார்த்த பிராமணரல்லாத பெண்கள் அரைக்குடம் தண்ணீர் விட்டு குழாயைக் கழுவுகிறார்கள். இதைப் பார்த்த மகமதியப் பெண்கள் தாங்களும் முக்கால் குடம் தண்ணீர் ஊற்றிக் கழுவ ஆரம்பித்துவிட்டார்கள். நாம் பார்த்து வித்தியாசங்களை ஒழித்தால் ஏன் ஒழியாது? கல்லைச் சாமியாக்கும் நமது மந்திரங்கள் ஏன் தாழ்ந்தவர்களை உயர்ந்தவர்களாக்க முடியாது? தாழ்ந்தவர்களை உயர்ந்தவர்களாக்க முடியாத மந்திரம், கல்லை எப்படி சுவாமியாக்கும் என்பதுதான் ஆச்சரியமாயிருக்கிறது. காசியிலிருக்கும் சுவாமியை எல்லோரும் கட்டித் தழுவி கும்பிடலாம். மதுரையிலிருக்கிற சுவாமி மாத்திரம் நாடார் கோவிலுக்குள் வந்தால் ஓடிவிடுமாம். தனது பக்தர்கள் கோவிலுக்குள் வந்தால் ஓடிப்போகும் படியான சுவாமிக்கு நம்மைக் காப்பாற்றும் சக்தி எப்படி வரும்? அப்படி மனிதரைக் கண்டு ஓடும் சுவாமியைக் கும்பிட்டாலென்ன? திருப்பிப்போட்டு வேஷ்டி துவைத்தாலென்ன? நாம் பார்த்து சுவாமியையும் பயித்தியகாரத்தனமாக்கி விடுகிறோம். கடவுளுக்கு வித்தியாசமான மனிதர்களில்லை யென்பதை நீங்கள் உணர வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

## சுயராஜ்யம் யாருக்கு வேண்டும்?

ஜமீன்தாரர்களுக்கும் பணக்காரர்களுக்கும் சுயராஜ்யம் வேண்டிய தில்லை. ஏழைகளுக்குத்தான் சுயராஜ்யம் வேண்டும். சில கவுண்டர்கள் பணக்காரர்களாயிருக்கலாம், நமது பெரும்பான்மையான வேளாள மக்கள் நிலைமை என்ன? ஒரு போலீஸ்காரன் 'சுமையைத் தூக்கு' என்றால் உடனே தூக்க வேண்டும். தூக்காமல் கொஞ்சம் ஆக்ஷேபித்தால், போலீஸ்காரன் பட்டையைக் கழட்டி ஓங்கினால் 'எடுப்பதற்குள் என்னையா அவசரம்' என்றுதான் பதில் சொல்லுகிறார்கள். நம் நாட்டில் இன்றைக்கு விவசாயத்தில் சம்பாதிப்பவர்களெல்லாம் வேளாளர்களேயாகும். ஆனால் அவர்கள் சம்பாதித்து அதை மற்றவர் அநுபவிக்கச் செய்துவிடுகிறார்கள். வேளாள மக்கள் சம்பாதிப்பது பூராவும் வக்கீல் வீட்டுக்கும், கோர்ட்டுக்கும் போய் விடுகிறது. அவர்களில்லாவிட்டால் வியாபாரமேது? இத்தனை வக்கீல்க ளேது? ஆகையால் சுயராஜ்யம் அவ்வித ஏழைகளுக்குத்தான் வேண்டும் என்பது மகாத்மாவின் நோக்கமாகும்.ஒரு சி.பி. ராமஸ்வாமி ஐயருக்கும், ஒரு சிவஞானம் பிள்ளைக்கும் ஆயிரக்கணக்கான சம்பளம் கிடைத்தால் ஏழை களுக்கு என்ன பலன் உண்டு. ஏழை மக்களுடைய க்ஷேமத்திற்குரிய சுய ராஜ்யம்தான் நமக்கு வேண்டும். ஏழைகளுக்காக உயிரைக் கொடுக்கும் தியாகிகளே தேசத்திற்குத் தேவை. நாம் யாரையும் சுலபமாக நம்பி விடுகி றோம். அம்மாதிரி நம்பி இனி ஏமாற முடியாது. சி.பி. ராமசாமி ஐயர் ஸ்தானத் தில், வீரய்யனிருந்திருந்தால் கல்பாத்தி உத்திரவுக்கு ராமசாமி அய்யர் அர்த்தம் செய்தது போல் செய்திருப்பாரா? என்பதை எல்லோரும் கவனிக்க வேண் டும். இதுவரை நான் சொல்லி வந்ததை யாரும் வித்தியாசமாக நினைக்காம லிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். எனக்கு வகுப்புத் துவேஷத்தை உண்டாக்க வேண்டுமென்கிற எண்ணமில்லை. வெள்ளம் வருமுன் அணை போட வேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கமாகும்.

## கதர்

ஏழைகளுக்கு சுயராஜ்யம் வேண்டுமென்றுதான் மகாத்மா காந்திய டிகள் தமது சுயராஜ்யத் திட்டத்தில் ராட்டினத்தையும் கதரையும் பிரதானமாக வைத்தார். ஏழைகளின் பசிக் கொடுமை தீரவேண்டுமென்பதுதான் மகாத்மாவின் முக்கிய நோக்கம். நம் நாட்டில் வீட்டுத் தொழில்கள் மறைந்து போனதால் ஏராளமான ஜனங்கள் கஞ்சிக்கு வாடுகின்றனர்; மலைகளுக்கு ஓடிப் பிழைக்க வழி பார்க்கின்றனர். நாம் கதர் கட்டவும், நூல் நூற்கவும் ஆரம் பித்தால் ஏழைகள் பசி ஆறும். வீட்டில் தொழிலில்லாததினால் கிராமத்துப் பெண்கள் புல்லையும் தட்டையும் எடுத்துக்கொண்டு டவுன்களில் போய் கற்பிழந்து விட சந்தர்ப்பம் ஏற்பட்டு விடுகிறது. ராட்டினத்தை நாம் விர்த்தி செய்தால் கற்பும் கெடாது; கஞ்சிக்கும் வழியுண்டு; புண்ணியமும் உண்டு. நம் நாட்டுப்பொருள் அந்நியத் துணியால் 60 கோடி போகிறது.அதை நிறுத்தலாம். ஏழை மக்களுக்கு கஞ்சி வார்த்த பலனை அடையலாம். இத்தனை அநுகூலம் கதராடைக் கட்டுவதால் உண்டாகும். நாம் கதர் கட்டி ஏழைகளைக் காப்பாற் றும் தர்மம் மேலா, பாயாசத்திற்கு பாதாமிப்பருப்பு இல்லையென்பவர்களுக்கு சமாராதனை செய்வது மேலா என்பதை ஆராய்ந்து பாருங்கள். கதர் கொஞ்சம் விலை அதிகமென்று எண்ணக்கூடாது. ஒரு நாள் காப்பி குடிப்பதை நிறுத்தினால் ஒரு கொத்து வேஷ்டி நஷ்டத்தை சரிக் கட்டலாம். ஒரு நாளைக்கு நாடகத்துக்குப் போகாதிருந்தால் ஒரு கொத்து வேஷ்டியே வாங்கி விடலாம். ஒரு நாளைக்கு வக்கீல் வீட்டிற்குப் போகாமலிருந்தால் ஒரு குடும்பத்திற்கு ஒரு வருஷத்திற்கு வேண்டிய கதர் துணி வாங்கி விடலாம். ஆகையால் எல்லோரும் கதர் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டும், இதுவரை நான் சொல்லி வந்த விஷயங்கள் பூராவும் தற்கால நிலைமையில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் பொருத்ததாகையால் உண்மையை உணர்ந்து உங்கள் புத்திக்கு சரி என்று தோன்றியபடி நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*குறிப்பு: கோபிச் செட்டிபாளையம் வேளாள விடுதி கட்டிடத்தில் 13.6.1926 இல் நடைபெற்ற மாநாட்டில் சொற்பொழிவு .*

**குடி அரசு - சொற்பொழிவு - 27.06.1926**



RangaRakes tamilnavarasam.com

# நமது பார்ப்பனர்
# "இரட்டை ஆட்சி" யைக்
# கொல்ல முயல்வதின் இரகசியம்

"இரட்டை ஆட்சி"யென்றால் என்ன என்பது நமது ஜனங்களில் அனேகருக்குத் தெரியாதென்றே சொல்லவேண்டும். இரட்டை ஆட்சியைத் தகர்க்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என்று பார்ப்பனர்கள் சொல்லும்போது பார்ப்பனரல்லாத பாமர மக்களும் அரசியல் நடை முறையினை அறியாத பல காங்கிரஸ்காரர், பிரசாரகர் என்று சொல்லிக் கொள்பவரும், இரட்டை ஆட்சி என்பதை ஒரு இராணுவ ஆட்சியென்றும் வெள்ளைக்காரரே நேரிலிருந்து செய்யப்படும் காரியமென்றும் இதை ஒழித்துவிட்டால் அரசாங்கம் நம் கைக்கே வந்துவிட்டதென்றும் நினைத்துக் கொண்டு, கூடவே ஒத்துப் பாடுகிறார்கள். இரட்டை ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்று சொல்லுகிற பார்ப்பனர்கள் இரட்டை ஆட்சியை ஒழித்த பிறகு என்ன செய்வதென்று இது வரையில் ஒரு வார்த்தையும் சொல்லவேயில்லை. பார்ப்பனர்களுக்கு விபூஷணாழ்வார் போல் விளங்கின தேசபந்து தாஸரவர்கள் இரட்டை ஆட்சியை ஒழித்த பிறகு என்ன செய்வதென்று சொல்லவேண்டிய அவசியமேற்பட்ட காலத்தில் விண்ணவர்க்கு விருந்தினராகி விட்டார். ஆதலால் இரட்டை ஆட்சி என்ன வென்பதும், அதை அழித்த பிறகு என்ன செய்ய வேண்டுமென்பதும் பாமர ஜனங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது முக்கியமான விஷயமாகும்.

தமிழ்நாட்டுப் பார்ப்பனக் கூட்டத்தினரது தந்திரத்தின் சாமர்த்தியமானது நமது பார்ப்பனரல்லாதார் இரட்டை ஆட்சியின் தத்துவம் தெரியாமலே அதை 'அழிக்கிறேன்' என்று சொல்லுகிறவர்களின் பின்னால் திரியவும் அவர்கள் ஆட்டுவிக்கிறபடி ஆடவும் குழந்தைகள் போலும், "சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை" என்பது போலும் நடந்து கொள்ளுகிறார்கள். இரட்டை ஆட்சி என்பதன் பொருள் 35-வருஷ காங்கிரஸ் கேட்டுக் கொண்டதற்கிணங்க சர்க்காரால் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு 'உரிமை' (பதவி) என்பது பொருள். அஃதாவது "சுயஆட்சி செலுத்த இந்திய மக்களாகிய நாங்கள் தயாராகி விட்டோம். ஆதலால் அரசாங்கத்தின் பொறுப்பை எங்கள் வசம் ஒப்புவித்து விடுங்கள்" என்று நம்முடைய தலைவர்கள் என்போர் சர்க்காரை விண்ணப்பம் மூலமாய்க் கேட்டுக் கொண்டதால், அதாவது ஸ்ரீமதி பெசண்டம்மையாரின் ஆதிக்கத்திலிருந்த காங்கிரஸின் போது '19 பேர் விண்ணப்பம்' என்று சொல்லப்பட்ட நமது பிரதிநிதிகளான 'தலைவர்கள்' ஒன்று கூடி யோசித்துத் தீர்மானஞ் செய்து எழுதி அதில் 19 இந்திய 'தலைவர்' கள் கையெழுத்துப் போட்டனுப்பியதும், மாண்டேகு துரை மகனார் இந்தியாவிற்கு வந்த காலத்தில் அவரிடம் சமர்ப்பிப்பதின் பொருட்டு பத்து லக்ஷக்கணக்கான பாமர மக்களிடம் கையெழுத்து வாங்கி சமர்பித்த விண்ணப்பத்திலும் கண்ட விஷயங்களேயாகும். இம்மாதிரி கையெழுத்து வாங்க யோசனை கூறியவருள் நமது மகாத்மா காந்தியடிகளும் ஒருவராகும். மாண்டேகு துரையிடம் 'நமது தலைவர்கள்' சாக்ஷியம் கூறியபோது, "சில அதிகாரங்களை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள், சில அதிகாரங்களை எங்களுக்குக் கொடுங்கள்" என்று சொன்னவையே இரட்டை ஆட்சிக்கு ஆதாரமாகும். சர்க்காருக்கு இந்தத் தலைவர்கள் வார்த்தையில் நம்பிக்கையில்லாவிட்டாலும், "ஏதோ கொஞ்சம் கொடுத்துப் பார்ப்போம், கொடுக்கப்படும் கொஞ்சத்தையும் இவர்கள் சரியாய் நடத்தாமல் கெடுத்து விட்டால் என்ன செய்கிறது?" என்ற பயத்தின் பேரில் அவர்களுக்குக் கொடுக்கும் அதிகாரத்திலும் தங்களுக்குக் கொஞ்சம் ஆதிக்கமிருக்க வேண்டுமென்னும் கருத்தோடு, "மேற்பார்வை பார்க்கும்" அதிகாரத்துடன் சில இலாக்காக்களின் நிர்வாகத்தை பொதுஜனங்களுக்கு கொடுத்திருப்பதும், சில இலாக்காக்களைத் தாங்களே வைத்துக்கொண்டு இருப்பதும் ஆகிய இந்த இரண்டு நிர்வாகத்திற்குமே 'இரட்டை ஆட்சி' என்று பெயர். இது நமது காங்கிரஸ் தலைவர்கள் சர்க்காரைக் கேட்டுக்கொண்ட தத்துவப்படியே கொடுக்கப்பட்டிருக்கிறதேயல்லாமல் சர்க்கார் இஷ்டப்படி கொடுக்கப்பட்டதல்ல. இதை நமது காங்கிரஸ்காரர்களும் ஏற்றுக் கொண்டதுதான். ஆனால், இது போதாது (Inadequate) என்பதாக மட்டும் சொன்னார்களே தவிர இரட்டை ஆக்ஷித் தத்துவமே கூடாது என்று இதற்கு முன் எப்போதும் சொல்லப்படவேயில்லை. இப்போது 'தலைவர்கள்' கான்பூர் காங்கிரஸின் பிரகாரம் கேட்கும் சுயராஜ்யத் திட்டத்தில் சர்க்காருக்கு ஒருவித அதிகாரமுமின்றி முழுப்பொறுப்பையும் கொடுக்கும்படி எவரும் கேட்கவில்லை. இராணுவம், போலீஸ், பொது ஜனங் களின் பத்திரம், சமாதானம், ஒழுங்குமுறைகள் ஆகியவைகளின் பொறுப்பை சர்க்காரே வைத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் சொல்லிக்கொண்டு அவை நீங்கலாக மற்றவைகளை கொடுக்கும்படி கேட்கிறார்களே தவிர வேறில்லை. இன்னும் இப்போது வர வர நீதி நிர்வாக இலாக்காக்களையும் சர்க்காரே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் இந்திய சட்டசபையில் தமிழ் நாட்டுப் பிரதிநிதி சொல்ல ஆரம்பித்துவிட்டார். அல்லாமலும் இரட்டை ஆட்சியில் மந்திரிகளுக்குள்ள அதிகாரத்தின் மேல் சர்க்காருக்கு ஆதிக்கம் வேண்டுமெனச் சொல்லி இந்திய சட்டசபையிலிருக்கும் ஒரு சென்னை பிரதிநிதி கூறி வாதாடியிருக்கிறார். இந்த நிலைமையில் இரட்டை ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்று சொல்வதன் பொருள் என்ன? இதன் இரகசியம் என்னவென்பதை அறிய வேண்டாமா?



RangaRakes tamilnavarasam.com

அதாவது, இரட்டை ஆட்சியைக் காங்கிரஸ் கேட்கும் போதும் ‘19 பேர்’ கையெழுத்துப் போடும் போதும் அதற்காக கிராமம் கிராமமாய் சென்று பாமர மக்களிடம் கையொப்பம் வாங்கும் காலத்திலும் நமது ‘தலைவர்களான’ பார்ப்பனர்களுக்கு பார்ப்பனரல்லாதார் கட்சி ஒன்று முளைக்குமென்றாவது, முளைத்தாலும் தம்மை மீறி மற்றவர்களால் ஓட்டர்கள் ஏமாற்றப்பட்டு அது செல்வாக்குப் பெறுமென்றாவது, அதன் பலன் முற்றிலும் பார்ப்பனர்களே அடைய முடியாது போகுமென்றாவது அவர்களுக்கு அதுபோழ்து தோன்ற வேயில்லை. ஆதலால் இதன் பலனாய் ஏற்படும் அதிகாரங்கட்குக் கொழுத்த சம்பளங்களனைத்தையும் தாங்களும் தங்கள் பிள்ளை குட்டிகளும் இனத்தார் களுமே அடையலாமென்ற பேரவாவுடன் தீர்மானித்திருந்தனர். இவ்வளவு கொழுத்த பணத்தையும் அதிகாரத்தையும் பார்த்த பின்னர் இப்போது பார்ப்பனரல்லாதார் இயக்கம், மகமதியர் இயக்கம், கிறிஸ்துவர் இயக்கம், தாழ்த்தப்பட்டவரியக்கம், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ இயக்கம் என இத்தகைய பல இயக்கங்கள் இதன் பயனாகத் தோன்றவும், இவ்வதிகாரங் களும் சம்பளமும் பார்ப்பனர்களுக்கு முழுமையும் கிடைக்காமல் பல வழி களில் பிரியவும், பல வகுப்புகளுக்குப் போகவும், அதனால் பார்ப்பனர் களுக்கு ஏமாற்றமேற்பட்டதால், இப்பொழுது பார்ப்பனர்கள் விழித்துக் கொண்டு “முழு அதிகாரங்களும் வெள்ளைக்காரர்களிடமேயிருக்க வேண்டுமேயொழிய, இந்திய மக்கள் கைக்கு வரக்கூடாது; வந்தால் அதற்கு முன் நமக்கு கிடைத்துக் கொண்டிருந்த உத்தியோகங்கள் கூட இப்போது கிடைப்பதற்கில்லாமல் பல வகுப்புகளுக்குப் போய்விடுகிறதென்றும், மற்ற வகுப்பாரும் தங்கள் வகுப்பினருக்குச் சமானமாய் வருவதற்கு வழியேற் பட்டுப் போகிறது” என்றும் நினைத்தே இப்பொழுது ஜனங்களுக்குக் “கொஞ்சமாவது கொடுத்திருப்பதாய்”ச் சொல்லப்படும் அதிகாரத்தையும் வெள்ளைக்காரரே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கிளர்ச்சி செய்ய இரகசியத்தில் தீர்மானித்துக் கொண்டனர்.

எனவே, இப்போதுள்ள இரட்டை ஆட்சி ஒழிய வேண்டிய அவசியம் நமது பார்ப்பனர்களுக்கு ஏற்பட்டு விட்டது. கல்கத்தாவில் இரட்டை ஆட்சியை ஒழித்ததற்கு அவசியமாய் நின்ற காரணம், அங்கு மகமதியர்கள் மந்திரி பதவிக்கு வந்துவிட்டதாலும்; சென்னையில் இரட்டை ஆட்சியை ஒழிக்கவேண்டிய காரணம் இங்கு பார்ப்பனரல்லாதார் மந்திரி பதவியை வகித்திருப்பதாலுமேயல்லாமல் வேறல்ல. மத்திய மாகாணத்தில் இரட்டை ஆட்சியை ஒழித்த காரணம் அங்குள்ள ஒரு வகுப்புப் பார்ப்பனர்களுக்கு அதிகாரமில்லாமல் போனதேயாகும். ஆகவே, கல்கத்தாவிலும் மத்திய மாகாணத்திலும் இரட்டை ஆட்சியை ஒழித்தாகி விட்டது; மகம்மதியரையும் பார்ப்பனரல்லாத மந்திரிகளையும் வீட்டுக்கனுப்பியாகி விட்டது; இனி தமிழ் நாட்டில் ஒழிக்க வேண்டியதுதான் பாக்கியாயிருக்கிறது.

இரட்டை ஆட்சியை ஒழித்த பார்ப்பனர்களின் வேலை யென்ன? முற்கூறிய இரண்டு இடங்களிலும் இரட்டை ஆட்சி அழிந்து முற்றும் சர்க்கார்



RangaRakes

ஆட்சியான ஒத்தை ஆட்சியாக மாறி விட்டது. சென்னையிலும் இரட்டை ஆட்சியை ஒழித்து விட்டதாகவே வைத்துக் கொள்ளுவோம்; மந்திரிகளை வீட்டுக்கனுப்பி விட்டதாகவும் வைத்துக் கொள்ளுவோம்; பிறகு இந்தப் பார்ப்பனர்கள் சாதிக்கப் போவதென்ன? வரி கொடாமைக்கு வருகிறார்களா? சட்ட மறுப்புக்கு வருகிறார்களா? தேசமே சட்டமறுப்புக்கு லாயக்கில்லை என்று காங்கிரஸிலேயே வெட்கமில்லாமல் தீர்மானித்து விட்டனர். தேச மக்களை சட்டமறுப்புக்கு தயார் செய்யும் வேலையும் காங்கிரசுக்கு இல்லை யென்று “அகில இந்திய தலைவர்” ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் மாயவரம் வாக்காளர் மகாநாட்டில் விளம்பரப்படுத்தி விட்டார். அதாவது “கான்பூர் காங்கிரஸ் திட்டமெல்லாம் சட்டசபை என்கிற ஒரு அம்சந்தான்” என்று சொல்லிவிட்டு, அதில் நம்பிக்கையில்லாதவர்கள் -தீவிர ஒத்துழையாதார்கள் -ஒதுங்கிக் கொள்ளலாம் என்று உத்திரவும் பிறப்பித்து விட்டார். (இவ் விஷயம் 23-6-26 ௳ ‘சுதேசமித்திரன்’ பத்திரிகை 7-ம் பக்கத்தில் வெளிவந்திருக்கிறது.)

ஆகலான், எதற்காக இரட்டை ஆட்சியை ஒழிப்பது? பனகால் ராஜாவும், பாத்ரோவும், சிவஞானமும் பதவி வகிக்கும் இரட்டை ஆட்சியை ஒழிப்பதற்கு வேலை செய்வதற்குப் பதிலாய், ஸ்ரீமான் சர்.சி.பி. இராமசாமி ஐயர் வகித்துவரும் ஒத்தை ஆட்சி ஏன் ஒழியக் கூடாது? அதைப்பற்றி நமது பார்ப்பனர்கள் ஒரு வார்த்தையாவது பேசுவதேயில்லை. ஏன்? சர்.சி.பி.இராம சாமி ஐயர் வகித்திருக்கும் உத்தியோகம் இரட்டை ஆட்சியுமல்ல, ஒத்தை ஆட்சியுமல்ல; அது சுத்தமான - கலப்படமில்லாத பார்ப்பன ஆட்சி. அதன் பலனாய் பார்ப்பனர் உயர்ந்த ஜாதி என்பதை நிலை நிறுத்தவும் மற்றவர் தீண்டாத ஜாதி என்று ஒதுக்கவும் சகல உத்தியோகங்களும் பார்ப்பனரே அநுபவிக்கவும் மிக்க அநுகூலமாயிருக்கிறது. உதாரணமாக, இந்த வாரத்தில் 10 ஜில்லா ஜட்ஜி பதவியும், 10 ஜப் ஜட்ஜி பதவியும் கொழுத்த சம்பளமாகிய மாதம் 1000, 2000 ரூபாயில் சர்.சி.பி. இராமசாமி ஐயரால் வழங்கப்பட்டன. யாருக்கு? எல்லாம் பார்ப்பனருக்கு! ஒரு சமயம் அதிலும் இரட்டை ஆட்சி நுழைந்து விட்டால் இருபது ஜட்ஜி பதவிகளும் பார்ப்பனருக்கே கிடைக்குமா?

போலீஸ் இலாகாவில் சர்.சி.பி. இருப்பதால் “சர்வம் பார்ப்பன மயம் ஜகத்” என்பது போல எல்லா உத்தியோகங்களும் பார்ப்பனருக்கே வினியோ கிக்கப்படுகிறது. அதேபோல் நீதி இலாகாவிலும் சர்.சி.பி.இராமசாமி ஆட்சி இருப்பதால் ஜில்லா முனிசீபுகள் முழுதும் மாதத்திற்கு 20,30 “சர்வம் பார்ப்பன மயம் ஜகத்” என்று ஏற்படுகிறது. அல்லாமலும் பார்ப்பனப் பிள்ளைகள் படித்துவிட்டு உத்தியோகமில்லாமல் திண்டாடித் திரிவதால் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காகவே ஒவ்வொரு தாலூகாவிற்கு இரண்டு மூன்று முனிசீப் கோர்ட்டுகளும், ஒவ்வொரு ஜில்லாவிற்கு இரண்டு, மூன்று, நான்கு ஜட்ஜி கோர்ட்டுகளும், அடிஷனல் ஜட்ஜி கோர்ட்டுகளும், சப் கோர்ட்டு



tamilnavarasam.com

களும் சிருஷ்டிக்க சர்.சி.பி.இராமசாமி பிர்ம்மாவாக விளங்குகிறார். இதன் பயன் என்ன? ஊரெங்கும் அக்கிரகாரத் தெருக்களிலுள்ள வீடுகள் தோறும் பார்ப்பன வக்கீல்களின் போர்டுகள் (கருப்புப் பலகை) தொங்கவும், இவர்கள் பிழைக்க ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாதார் தங்களுக்குள்ளாகவே ஒருவர் பேரில் ஒருவர் வழக்குத் தொடர்ந்து முட்டிக் கொள்ளவும், கைப் பணத்தை பார்ப்பனருக்கு அழுதுவிட்டு தலையில் கையை வைத்துக் கொண்டு போகவுமே ஏற்படுகிறது. இரட்டை ஆட்சியை ஒழிப்பதன் இரகசியம் பார்ப்பனர் பிழைப்புக்கு வழி தேடுவதற்கேயல்லாமல் வேறொன்றும் அல்லவே யல்ல. அப்படிக்கில்லாதவரை இரட்டை ஆட்சியை ஒழித்து விட்டு, அதற்கு மேல் என்ன செய்வது என்பதைக்கண்டிப்பாய் சொல்லியிருப்பார்கள். இந்தப் பார்ப்பனரிடம் பணம் வாங்கிக்கொண்டு அவர்கள் பின்னால் வாலை ஆட்டிக் கொண்டு பார்ப்பனரல்லாதாரைப் பார்த்து குலைக்கும் கனவான்களையும் உண்மையிலேயே விஷயம் அறியாமல் எப்படியாவது ராஜீய வாழ்வில் தனது பெயர் அடிபட்டால் போதுமென்று நினைத்துத் திரிகிற அப்பாவிகளையும் நாம் ஒன்று கேட்கிறோம், இரட்டை ஆட்சியை எதற்காக அழிப்பது? அழித்து விட்டதன் மேல் என்ன செய்வது? இரட்டை ஆட்சியை அழித்து ஒத்தை ஆட்சி செலுத்தும் படி விட்டு விட்ட – விடப்போகிற – கிளர்ச்சி செய்வதை நிறுத்தி விட்டு ஒத்தை ஆட்சியே அழியும்படி செய்தாலென்ன? அல்லது இரட்டை ஆட்சியை அழிப்பது என்கிற வார்த்தையில் அரசியலில் எவ்விதத்திலும் இரட்டை ஆட்சியே கொஞ்சமும் கூடாது என்கிற கருத்து அதில் இருக்கிறதா? அப்படி இல்லையானால் சில அதிகாரங்கள் சர்க்கார் கையிலேயே இருந்துதானே தீரும்.

இரட்டை ஆட்சியை ஒழிக்க இந்திய சட்டசபைக்குப் போன ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியாரும் எ. அரங்கசாமி ஐயங்காரும் இந்திய சட்டசபையில் பேசியதின் அர்த்தமென்ன? இரட்டை ஆட்சியைப் பற்றி இவ்வளவு எழுதியதின் கருத்து இரட்டை ஆட்சியை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம் என்பதைக் காட்டுவதற்கு அல்ல. தற்காலம் நம்நாட்டில் அரசியல் தத்துவத்தில் இரட்டை ஆட்சிக்கும், ஒத்தை ஆட்சிக்கும், தற்கால உத்தியோக காங்கிரஸ் கோரும் பார்ப்பன ஆட்சிக்கும் யாதொரு வித்தியாசமே இல்லையென்பதோடு பார்ப்பன ஆட்சியை விட இரட்டை ஆட்சி மோசமானதல்ல என்பதுந்தான் நமது அபிப்பிராயம். ஆதலால் மேற்கண்ட மூவாட்சியிலும் ஏழை மக்களுக்கு – கிராமத்துக் குடியானவர்களுக்கு – தொழிலாளர்களுக்கு – யாதொரு நன்மையும் ஏற்படாததோடு இவைகளின் பலனால் இனியும் அதிகமான கஷ்டம் ஏற்படப் போகிறதென்பதே நமது கருத்து. ஆனால், நம் நிர்வாக சபையிலாகட்டும் மந்திரி சபையிலாகட்டும் மற்ற நீதி இலாக்காக் களிலாகட்டும் ஒத்தை ஆட்சியின் பெயரினாலோ, இரட்டை ஆட்சியின் பெயரினாலோ, நரசிம்ம சர்மா, இராமசாமி ஐயர், வெங்கட்டராம சாஸ்திரியார், சீனிவாசய்யங்கார், இராஜகோபால ஆச்சாரியார், மோதிலால் நேரு, மதன் மோகன் மாளவியா என்கிற பெயர் உடையவர்கள் இருந்து நடத்தும் படியான



ஆட்சியை விட வீரய்யன், சௌந்திர பாண்டியன், அப்துல் ரஹீம், இன்னாசி முத்து, வரதராஜுலு என்கிற பெயர் உடையவர்களிருந்தால் நமது நாட்டில் 6 கோடி மக்கள் கண்ணில் பட – தெருவில் நடக்க–சுவாமி தரிசனம் செய்ய – சுதந்திரமில்லாதவர்களாகவும் 28 கோடி மக்கள் ‘வேசி மக்கள்’, ‘அடிமைகள்’ என்று சொல்லப்படக் கூடியவர்களாகவும் 7 கோடி மக்கள் ‘மிலேச்சர்கள்’ என்று சொல்லப்படக் கூடியவர்களாகவும் ‘ஈன ஜாதிக்காரர்கள்’ என்று சொல்லப்படக் கூடியவர்களாகவும் இருக்கமாட்டார்கள் என்கிற ஒரே எண்ணந்தான். நமது நாட்டில் எந்த ஆட்சி இருந்தாலும் பார்ப்பனர் ஆட்சி கூடாது என்பதின் – என்று நாம் சொல்லுவதின் – முக்கிய கருத்து.

**குடி அரசு – தலையங்கம் – 27.06.1926**



RangaRakes tamilnavarasam.com

# அருஞ்சொல் பொருள்

| | |
|---|---|
| அங்குரார்ப்பண விழா | - ஆரம்ப விழா |
| அ(னு)கூலம் | - உதவி, சாதகம்,நன்மை, காரியசித்தி |
| அஞ்ஞாதவாசம் | - பிறர் அறியாமல் மறைந்து வாழ்தல் |
| அரிவிரி வகுப்பு | - பள்ளியில் தொடக்க வகுப்பு |
| அருகர் | - தகுதியுடையவர், பக்குவ நிலையில் உள்ளவர் |
| அன்னவரை | - ஒத்தவரை, நிகரானவரை, அவரை |
| ஆக்கினை | - கட்டளை, தண்டனை |
| ஆகுதி | - வேள்வியில் இடப்படும் நெய் |
| ஆத்மஸ்துதி | - தற்புகழ்ச்சி |
| ஆசாபங்கமடைந்த | - விரும்பியது பெறாத, ஏமாற்றமடைந்த |
| ஆவலாதிகள் | - குறை கூறும் கடிதங்கள் |
| ஆவாகனப்படுத்திக்கொண்டு | - ஆட்கொண்டு |
| ஈனஸ்திதி | - கீழ் நிலை, இழி நிலை |
| உபசரணைக் கமிட்டி | - வரவேற்புக்குழு |
| உருபு | - வடிவம் |
| காலக்ஷேபம் | - பிழைப்பு, கதையை இசையோடு கூறல் |
| காயமாக்க | - உறுதிப்படுத்த, நிரந்தரமாக |
| காயலா | - காய்ச்சல், உடல்நலக்குறைவு |
| கூற்றுவாய் இருந்து | - எமனாய் இருந்து (எமன் - இறப்புக்கான புராணக் கடவுள் ) |
| கோஷித்து | - முழக்கமிட்டு |
| சயத்திற்கு | - வெற்றிக்கு |
| சந்தானம் | - மகப்பேறு, மரபு, சந்ததி |
| சமாராதனை | - பார்ப்பனருக்கு உணவளித்தல் |
| சைனியத்தை | - சேனையை |
| சிவாஜிநாமா | - தீர்வை செய்யப்பட்ட தரிசு |
| சுற்றுத்திரவு | - சுற்றறிக்கை |
| தவசிப்பிள்ளை | - சைவருக்குச் சமையற்காரர், பூசைப் பணியாள் |
| திரவிய அபேட்சை | - பொருளாசை |
| துலக்கம் | - மெருகூட்டுதல் |
| தூஷை(ண)ன | - பழி, இகழ்ச்சி |
| நட்டுவாங்கம் | - நாட்டியம் பழக்கி ஆட்டுவித்தல் |
| நாராசம் | - இரும்பாணி |
| பங்கா | - கூரையில் தொங்கவிடப் பட்டு வெளியில் இருக்கும் ஆள் கயிற்றை இழுக்க விசிறிபோல் காற்றை வீசும் ஓர் அமைப்பு |
| பத்தா | - படிப்பணம் |
| பண்டித நேரு | - மோதிலால் நேரு |
| பரநிந்தை | - பிறரை இகழ்தல் |
| பிரதிகூலம் | - (பாதகம்) தீமை, தடை |
| பிரேரேப(ண)ன | - முன்மொழிதல் |
| ரஸ்தா | - சாலை, பாதை |
| வாக்குத்தத்தம் | - வாக்குறுதி |
| வாத்சல்லியத்தாலும் | - பேரன்பினாலும் |
| வியாஜ்யம் | - வழக்கு, நீதிமன்ற வழக்கு |
| வேதப் பிரஷ்டன் | - வேதத்தை இழிப்பவன், வேதத்தை தள்ளியவன் |
| க்ஷயரோகம் | - ஈளைநோய், உருக்கிருமல், காசநோய் |
| க்ஷீனித்து | - அழிந்து |
| ஸ்பஷ்டமாக | - தெளிவாக |

RangaRakes tamilnavarasam.com

# குடி அரசு

# 1926-2

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 3

பெரியார் திராவிடர் கழகம்

29 இதழியலாளர் குடியிருப்பு

திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்

சென்னை - 600 041

## முஸ்லீம்கள்

### “சுதேசமித்திர”னும் “ஸைபுல் இஸ்லா”மும்

தென்னாட்டுப் பார்ப்பனர்களின் சூழ்ச்சியை பொறுமையோடு ஜாக்கிரதையாய் கவனித்து வந்த “ஸைபுல் இஸ்லாம்” பத்திரிகையானது ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்தர முதலியார் அவர்களைப் போலும் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களைப் போலும் திடீரென்று ஒரு வெடிகுண்டைப் போட்டு விட்டது.

அதாவது, “மாகாணச் சட்டசபைகள் இந்தியா சட்டசபைகள் முதலிய வற்றிற்கு முஸ்லீம் பிரதிநிதிகள் தங்களது சமூகத்தின் சார்பாக நிற்பது நலமா, அல்லது சுயராஜ்யக் கட்சியாரின் சார்பாக நிற்பது நலமா?” என்றும் , திருச்சி மௌலானா ஸையத் முர்த்துஸா சாஹிபு அவர்கள், முதலில் சுயராஜ்யக் கட்சிக்கு எதிராக நின்று இந்தியா சட்டசபை ஸ்தானம் பெற்ற பிறகு சுயராஜ் யக் கட்சியில் சேர்ந்ததைப் பற்றியும், எல்லைப்புற முகமதியர்களுக்கு சீர்திருத்தம் வேண்டுமென்று மௌலானா தீர்மானம் கொண்டு வந்த காலத்தில் அதை சுயராஜ்யக் கட்சியார் எதிர்த்ததின் காரணமாய் சுயராஜ்யக் கட்சியை விட்டு விலக்கிக் கொள்ளும்படி மௌலானாவைக் கேட்டுக் கொண்டிருக்க இப்போது மறுபடியும் சுயராஜ்யக் கட்சியில் மௌலானா சேர்ந்திருப்பதின் காரணமென்ன வென்றும் இம்மாதிரி சுயராஜ்யக் கட்சியின் சார்பாய் நிற்கும் முஸ்லீம் பிரதிநிதிகளை முஸ்லீம் சமூகம் ஆதரிக்கலாமா என்றும் பலர் தன்னை (ஸைபுல் இஸ்லாம் ) கேட்பதால் அது கீழ்கண்டபடி எழுதுகிறது :-

> “காங்கிரஸிலிருந்து சுயராஜ்யக் கட்சியென்று ஒன்று பிரிந்த காலமுதல் அக்கட்சியினால் தேசத்திற்காவது முஸ்லீம் சமூகத் திற்காவது காங்கிரஸால் உண்டாகும் நன்மைகளைப் பார்க்கிலும் அதிக நன்மை உண்டாகுமென்ற நம்பிக்கை நமக்குச் சிறிதளவும் இருந்தது கிடையாது” என்றும், தாம் அதை ஒருபோதும் ஆதரிக்க வில்லையென்றும், ‘‘சுயராஜ்யக் கட்சியின் மீது நம்பிக்கை இல்லாமல் இருக்கும் சில தலைவர்கள் சுயராஜ்யக் கட்சியை ஜனங்கள் ஆதரிக்க வேண்டுமெனக் கூறி அதற்காகப் பிரசாரம் செய்து வருவது நமக்குப் பிடிக்கவில்லை” என்றும், ஒருவர் “தமது மனச்சாக்ஷி ஒப்புக் கொள்ள முடியாத ஒரு கட்சியை ஆதரிக்கும்படி பொது ஜனங்க ளுக்குப்

RangaRakes tamilnavarasam.com

போதிப்பது கொஞ்சமும் அர்த்தமற்றதன்மை” யென்றும், அப்படி ஆதரித்து வந்த சில தலைவர்களும் விலகி விட்டார்கள் என்றும், சிலர் விலகும் தருவாயில் இருக்கிறார்கள் என்றும் எழுதி விட்டு கடைசியாக தனது முடிவான அபிப்பிராயத்தை எழுதுவதில், **“சுயராஜ்யக் கட்சியார் சமூகப் பிரசினை விஷயங்களில் பக்ஷ பாதம் காட்டி நடந்து கொள்வதால் முஸ்லீம் பிரதிநிதிகள் சட்ட சபைகளுக்கு சுயராஜ்யக் கட்சியின் சார்பாய் நிற்காமல் சமூகத் தின் சார்பாய் நிற்பதே நலம் என்றும்,** முஸ்லீம் சமூகத் தார் “தங்கள் சமூகத்தின் சார்பாய் நிற்கும் பிரதிநிதிகளையே ஆதரித்து அவர் களுக்கே ஓட்டுக் கொடுக்க வேண்டு” மென்றும், முஸ்லீம் சமூகத்தார் “இன்றியமையாத அவசியம் என்று கருதும் சில விஷயங்களை சுயராஜ்யக் கட்சி மறுக்கிறது”என்றும், “இந்நிலைமையில் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து அவர்கள் கொள்கைகளை ஒப்புக்கொண்டு சுயராஜ்யக் கட்சியின் சார்பாக சட்டசபைக்குச் செல்லும் முஸ்லீம் பிர நிதிகளால் முஸ்லீம் சமூகத்திற்கு நன்மை உண்டாகாது என்பதே தனது முடிவு” என்றும் எழுதிவிட்டு பின்னும் “அக்கட்சியின் சார் பாய் நிற்கும் முஸ்லீம் பிரதிநிதிகளை முஸ்லீம் வாக்காளர்கள் ஆதரிக்கக் கூடாது”என்றும், “அதுவே தனது முடிவான அபிப் பிராய”மென்றும் தீர்ப்பு சொல்லிவிட்டது.

இதைப் பார்த்த பார்ப்பன மித்திரனாகிய “சுதேசமித்திரனுக்கு” ஆத்திரம் பொங்கி விட்டது. என்ன செய்வான்? பாவம்! ஒரு துடி துடித்து விட்டு, கடைசியாக தன்னிடமிருக்கும் சர்வ வல்லமைப் பொருந்திய ஒரே ஆயுதமாகிய அதாவது, பார்ப்பனர்களின் சூழ்ச்சியையும் அயோக்கியத் தனத்தையும் யாராவது வெளியிட்டால் அவர்களைக் கொல்லவேண்டும் என்கிற அவசியம் நமது பார்ப்பனருக்கு ஏற்படும் போது கொஞ்சமும் தயவு தாக்ஷணியம் , ஈவிரக்கம் இல்லாமல் தங்கள் முழு பலத்தோடும் கூடி ஓங்கி அடிப்பதற்கு எதை உபயோகிப்பதென்றால் ‘‘ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து விட்டார்”, “ஜஸ்டிஸ் கட்சிக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டார்” என்று சொல்லுவது வழக்க மாதலால், அதே ஆயுதத்தை “ஸைபுல் இஸ்லாமீ” து தொடுத்து விட்டான்.

இந்த ஆயுதத்தைப் பல தடவைகளில் உபயோகித்திருப்பது வாசகர் களுக்குத் தெரியும். உதாரணமாக ஒன்றிரண்டைக் கீழே குறிப்பிடுகிறோம்:-

திருச்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் ஸ்ரீமான் ஈ.வெ.இராம சாமி நாயக்கரை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு தலைவராய்த் தெரிந்தெ டுத்த காலத்தில் நமது பார்ப்பனத் தலைவரான ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார், நாயக்கர் பேரில் “நம்பிக்கையில்லை” தீர்மானம் கொண்டு வரப் பாடுபட்டு அதற்காக ஒரு ஆசாமியைத் தேடிப் பிடித்தார். அது யாரென்றால் ஸ்ரீமான் வா.வே.சு.ஐயரேயாகும். ஏனெனில் சேரமாதேவி குருகுலத்திற்குப் பணம்





கொடுக்கக்கூடாது என்று வாதாடி, ஐயரின் விரோதத்தை சம்பாதித்திருந்ததால் அவரைக் கொண்டு நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவரச் செய்தார். இந்த இரகசியத்தை அறிந்த ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் எழுந்து, “இந்த தீர்மானம் வகுப்பு துவேஷத்தின் மேல் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இப்போதுதான் முதன் முதலாக ஒரு பார்ப்பனரல்லாதார் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகியிருக்கிறார். அதைச் சகிக்காத சில பார்ப்ப னர் செய்யும் சூழ்ச்சி இதுவென்பதை நான் அறிவேன். இதன் பலன் தமிழ் நாட்டுப் பார்ப்பனர்களுக்கு ஆபத்தாய் முடியும்’’ என்று சொன்னார். அதன் பேரில் ஐயங்கார் “கனங்”களும் சில பார்ப்பனர்களுமான 12 பேர் தவிர 90 பேர்களால் ஸ்ரீமான் வா.வே.சு. ஐயரால் கொண்டு வரப்பட்ட ஐயங்கார் தீர்மானம் தோற்கடிக்கப் பட்டது.

அது சமயம் ஸ்ரீமான் முதலியாரைக் கொல்ல “சுதேசமித்திரன்” ‘‘வகுப்புத் துவேஷத்தில் ஸ்ரீமான் முதலியார் புகுந்து விட்டார்’’, ‘‘வகுப்புத் துவேஷம் கிளப்புகிறது’’ என்றும் எழுதி முதலியாரைப் பார்ப்பனர்கள் ஆதரிக்காமல் இருப்பதற்கும், அவர் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து விட்டார் என்று பலர் நினைக்கட்டுமென்றும் கெட்ட எண்ணங் கொண்டு அவர் பேரில் அந்த ஆயுதத்தை எறிந்தான்.

மற்றொரு சமயம் டாக்டர் வரதராஜுலு நாயுடுகார் குருகுலப் போர் ஆரம்பித்த காலத்தில் அவரைக் கொல்லுவதற்கும் “சுதேசமித்திரனும்”, “ஹிந்து”வுமாகிய பார்ப்பனப் பத்திரிகைகள் சூழ்ச்சியை ஆரம்பித்து ‘‘டாக்டர் வரதராஜுலு நாயுடு ஜஸ்டிஸ் ஆபீசிற்குப் போனார்” என்று பெரிய எழுத்துக்களில் எழுதி அவர் பேரில் அந்த ஆயுதத்தை எறிந்தான்.

மறுபடியும் ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கரை ஒழிக்கவும் இதே ஆயுதத்தை உபயோகிக்கிறான். ஸ்ரீமான்கள் சக்கரைச் செட்டியார், ஆரியா இவர்கள் பேரிலும் சமீபத்தில் இதே ஆயுதம் பிரயோகிக்கப்பட்டது.

இவை போன்றே இப்போது நமது “ஸைபுல் இஸ்லாம்” பத்திரிகை மீதும் இந்த சர்வவல்லமை பொருந்திய ஆயுதத்தை எறிவதற்கு ஆரம்பித் திருக்கிறான். அதாவது, இப்போது அவன் உபயோகிக்கும் புது ஆயுதத்தின் வேகம் “ஜஸ்டிஸ் கட்சியில் சேர வேண்டுமென்று ‘ஸைபுல் இஸ்லாம்’ நினைக்கி றதா?” என்று கேட்பதேயாகும். இனி அடுத்த தடவை ‘ஸைபுல் இஸ்லாம்’ ஜஸ்டிஸ் கட்சிக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டது என்றும், அதற்கடுத்த தடவையில் ‘ஸைபுல் இஸ்லாம்’ ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து விட்டது என்றும் ‘சுதேசமித்திரன்’ சொல்லுவான் என்பதில் சிறிதும் சந்தேக மில்லை.

இவ்வளவும் எழுதி பார்ப்பன மித்திரன் மகமதிய சமூகத்திற்கே ஒரு எச்சரிக்கை செய்கிறான். அதாவது, “முஸ்லீம்களுடைய சமூகம் மதம் ஆகியவைகளின் நன்மையைப் பொருத்த காரியங்கள் பிற சமூகங்களின்



RangaRakes tamilnavarasam.com

உரிமையைப் பாதிக்காத வரையில் அவைகளைப் பற்றி எவரும் ஆக்ஷேபிக்க மாட்டார்" என்று சொல்லுகிறான். பாதிப்பதாய் தனக்குத் தோன்றினால் ஆக்ஷேபிப்பேன் என்ற வீரப்பிரதாபம் அதில் தொக்கியிருக்கும்படி இறுதி நிபந்தனை ஏற்படுத்துகிறான். பிற சமூகத்தின் உரிமை என்பதற்கு நயவஞ்சகக் கூட்டத்தின் மித்திரனாகிய 'சுதேசமித்திரன்' அகராதியில் என்ன அர்த்தமிருக்கிறது? பார்ப்பனர் வாழும் தெருவில் பார்ப்பன ரல்லாதார் நடப்பதும், பார்ப்பனர் பக்கத்தில் பார்ப்பனரல்லாதார் வருவதும், பார்ப்பனரோடு பார்ப்பனரல்லாதார் பேசுவதும், பார்ப்பன சமூகத்தின் உரிமையில் குறுக்கிடுவதாகவே அர்த்தம் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பார்ப்பன மத ஆதாரங்களில் – பார்ப்பன வேதங்களில் மகமதியர்கள் – 'மிலேச்சர்கள்' என்று எழுதி வைத்து அதை பூஜித்துக் கொண்டு வரப்படுகிறது. முஸ்லீம் பாஷைக்கும் "மிலேச்சர் பாஷை" என்றே அவர்கள் அகராதியில் எழுதப்பட்டிருக்கிறது. முஸ்லீம்களால் ஆகாரத்திற்காக தங்கள் வேதக் கட்டளைப்படி உபயோகிப்பதாய் சொல்லும் சாதனம் பார்ப்பன மதக் கோட்பாடின்படி மற்ற சமூகங்களின் உரிமைகளில் குறுக்கிடுவதாகவே இருக்கிறது. அது போலவே மற்ற சமூகமும் தங்கள் மத உரிமைகளை நிறைவேற்ற மேள தாளங்களுடன் தெருவில் நடப்பது மகமதிய சமூகத்தின் உரிமைகளில் பிரவேசிப்பதாகவே கருதப்படு கிறது. ஆதலால் சமூக உரிமை என்கிற ஒரு காரணத்தை வைத்துக் கொண்டே 'மித்திரன்' முஸ்லீம் சமூகத்தையே அழித்தாலும் அழிக்கலாம்.

சமூக உரிமை என்று இம்மாதிரி ஒருவருக்கொருவர் ஒரே பிடிவாதமாய் ஒரு சமூகத்தாரின் உரிமைகளில் மற்றவர்கள் பிரவேசித்தால் கலகம் செய்வது என்று வீரப்பிரதாபம் பேசுவதால் தேசத்திற்கு எப்படி நன்மை உண்டாகும் என்று 'சுதேசமித்திரன்' நினைக்கிறான் என்பது நமக்குப் புலனாகவில்லை. ஒருவருக்கொருவர் தங்களது குருட்டு நம்பிக்கையின் உரிமைகளில் கொஞ்சம் விட்டுக் கொடுத்துதான் ஆகவேண்டும். உரிமை என்பது தற்கால வயிற்றுப் பிழைப்புக்கும் சுயநலத்திற்கும் ஒரு சமூகத்தை அடக்கி ஒரு சமூகம் ஆதிக்கம் செலுத்தவுமே உபயோகப்படுகிறதேயல்லாமல் ஜீவன்களுக்குப் பொதுவாய் உள்ள உரிமைகளையோ மனுஷ கோடிகளுக்குப் பொதுவாக உள்ள உரிமைகளையோ காக்க உபயோகப்படுவதில்லை. இந்த நிலைமையில் இம்மாதிரி தந்திரமான வார்த்தைகளால் பாமரர்களை எத்தனை காலத்திற்கு ஏமாற்ற முடியும் என்று 'மித்திரன்' நினைத்துக் கொண்டிருக்கிறான் என்பதும் நமக்கு விளங்கவில்லை. 'மித்திரன்' கூட்டத்தார் இவ்விதம் சொல்லிக் கொண்டு திரியும் இரகசியம் என்ன வென்று நாம் யோசித்துப் பார்ப்போமானால் ஒரே விஷயம்தான் நமக்கு விளங்குகிறது. அதாவது 'உரிமை', 'உரிமை' என்று ஹிந்துக்களையும் மகமதியர்களையும் முட்ட விட்டு நிரந்தரப் பகையை ஏற்படுத்தி விட்டால் தேசத்தில் சிறு வகுப்பார்களாயுள்ள பார்ப்பனருக்கும் அரசாங்கத்தாருக்கும் தங்கள் ஆதிக்கத்தையும் ஆட்சிகளையும் நடத்துவது வெகு சுலபமாகிவிடும். ஹிந்துக்களும் மகமதியர்களும் ஒற்றுமையாகிவிட்டால் பார்ப்பனர்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஆபத்துதான். இந்தக் கருத்தைக் கொண்டேதான் மகாத்மாவின் ஒத்துழையாமையை ஒடுக்க ஒத்துழையாமைக்கு வெளியில் பண்டித மாளவியாவும், ஒத்துழையாமைக்குள்ளிருந்து கொண்டே பிராமண சம்மந்தியாகிய தேசபந்து தாஸைக் கொண்டு தென்னாட்டுப் பார்ப்பனரும் சூழ்ச்சி செய்து ஒத்துழையாமையை அழித்து பழய மாதிரி செய்து விட்டார்கள். இதன் பலனாய் நமது பார்ப்பனர்களுக்கு அரசாங்கத்தாரால் தக்க சன்மானங்கள் இப்போது அளிக்கப்பட்டு வருவதிலிருந்தே எவரும் சுலபத்தில் தெரிந்து கொள்ளலாம். உரிமை என்பது ஜனக் கட்டாலோ, பணத்தாலோ, தந்திரத்தாலோ, ஏமாற்றத்தாலோ பலமுள்ளவனுக்கு ஒரு விதமாகவும் பலமில்லாதவனுக்கு வேறு விதமாகவும்தான் இருந்து வருகிறது.

தங்கள் மத தர்மத்தின்படி தங்கள் கோயிலுக்குப் போய் தெய்வங்களைக் கண்டு தரிசிக்க வேண்டுமென்பது ஒரு சமூகத்தாரின் உரிமை. அவர்களை உள்ளே விடாமல் தடுக்க வேண்டியது மற்றொரு சமூகத்தாரின் உரிமை.

தங்கள் மத வேதத்தைப் படிக்க வேண்டுமென்பது ஒரு மதத்தைச் சேர்ந்த ஒரு சமூகத்தாரின் உரிமை. அப்படி தங்கள் வேதத்தைப் படிக்கக் கூடாது என்பது அதேமதத்தைச் சேர்ந்த மற்றொரு சமூகத்தார் உரிமை.

அதுபோலவே தங்கள் கோயிலுக்கு முன்னால் மேளம் அடிக்கக் கூடாது என்பது மகமதிய மதத்தின் உரிமை என்று சொல்லப்படுகிறது.

இப்படியாக அநேக சமூகங்களுக்கு அநேக உரிமைகள் உண்டு. இவைகளை நிறைவேற்ற எல்லா சமூகத்தினருக்கும் உரிமை இருக்க வேண்டும் என்றுதான் ஒவ்வொரு சமூகத்தார்களும் நினைப்பார்கள். நினைப்பது தப்பித மென்று எவனாவது சொன்னால் அவனை யென்னென்று சொல்லுவது? அவரவர்கள் உரிமை காப்பாற்றப் படவேண்டுமானால் காப்பாற்றப் படக்கூடிய ஸ்தாபனத்தில் – அதிகாரத்தில் – பதவியில் – அவனவனுக்குப் பிரதிநிதித்துவ உரிமை இருந்தால்தான் முடியுமே அல்லாமல் வேறு எப்படி காப்பாற்றப்படும்? அரசியல் என்பதே மனித உரிமை. மனிதன் என்பதும் தேசத்தையும் மதத்தையும் வகுப்பையும் குறிகொண்டிருப்பதேயல்லாமல் வேறல்ல. அப்படிப்பட்ட மனிதனுக்கு உரிமை என்பது, அவனது தேசம் மதம் வகுப்புகளின் உரிமையைக் காப்பதுதானேயல்லாமல் வேறு எதைச் சொல்லக்கூடும்? என்னுடைய வகுப்பார் ஒரு மதத்தில் இருப்பதால் தெருவில் நடக்கும் உரிமை பெற முடியா விட்டால் அந்த மதத்தைப் பற்றி எதற்காக நான் கவலை கொள்ள வேண்டும்? என்னுடைய மதத்தினர் ஒரு தேசத்தில் இருப்பதால் மத உரிமையைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமற்போயின் அந்த தேசத்தைப் பற்றி நான் எதற்காகக் கவலை கொள்ளவேண்டும்? என்னுடைய தேசத்தார் ஒரு அரசாங்கத்தின் கீழ் இருப்பதால் அந்த தேசத்தின் உரிமையைக் காப்பாற்றிக் கொள்ள முடியாவிட்டால் நான் எதற்காக அந்த அரசாங்கத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? ஆதலால் உரிமை யின் தத்துவம் என்ன என்பதை யோசிப்பவர்களுக்கு விளங்காமல் போகாது.


RangaRakes
tamilnavarasam.com

தற்காலம் முன்னேற்றமடைந்து யிருப்பவனே முன்னேறிவருவது தான் அவன் உரிமையென்றும், பின்னடைந்திருப்பவன் - தாழ்த்தப்பட்ட வன் பின்னடைந்து கொண்டிருப்பதுதான் அவன் உரிமையென்றும் சொல்லப் பட்டால் பின்னால் இருப்பவர்கள் கதி என்னவாகுமென்று பிற் போக்க டைந்திருக்கிறவர்கள் சிந்திக்காமலிருக்க முடியாது. அதை உத்தே சித்தே 'ஸைபுல் இஸ்லாம்' வகுப்புவாரி பிரதிநிதித்துவம்தான் மகமதிய சமூகத்தின் உரிமை என்கிறது. அதை சுயராஜ்யக் கட்சி மறுக்குமானால் அதில் எப்படி மகமதியர்கள் வந்து சேரக்கூடுமென்று 'மித்திரன்' எதிர் பார்க்கிறான் என்பது நமக்கு விளங்கவில்லை. ஜனாப்களான ஹமீத்கான் சாஹிப்பையும் ஷாபி மகமது சாஹிப்பையும் பஷீர் அஹமது சையத் சாஹிப் அவர்களையுமே முஸ்லீம்களின் 'சத்து' என்று 'மித்திரன்' நினைத்துவிட்டான் போலும். மௌலானாக்கள் முகமதலி, ஷவுக்கத்தலி, டாக்டர் கிச்சிலு,போன்றவர்களும் சர். அப்துல் ரஹீம் மௌல்வி, அஹமது சையத் சாஹிப் போன்றவர்களும் இன்னும் லக்ஷுமணபுரி காங்கிரஸி லிருந்த மகமதிய தலைவர்களையும் மற்றும் அநேக பெரிய இந்திய மகமதிய தலைவர்களையும் மேலே கண்ட முஸ்லீம் 'சத்து'க்களான ஜனாப்கள் ஹமீத்கான், ஷாபி மகமது, பஷீர் அஹமது சையத் ஆகிய மூவர்களைக் கொண்டே கொன்று விடலாமென்று 'மித்திரன்' நினைக்கிறான் போலும்.

இந்தப் பிரகாரமான பார்ப்பன 'மித்திரன்' சூழ்ச்சி வாதத்திற்கு 'ஸை புல் இஸ்லாம்' தனது ஜுன் 26-தேதி தலையங்கத்தில் 4 கலம் கொண்ட பதிலை தகுந்தபடி எழுதியிருக்கிறது. அவற்றில் மாணிக்கம் போல் உள்ள ஒரு விஷயத்தை மாத்திரம் இங்கு எழுதிவிட்டு இதை முடிக்கிறோம்.

முஸ்லீம்களுக்கு தனி வாக்காளர் தொகுதி வேண்டியதில்லை யென்ப தற்கு 'சுதேசமித்திரன்' சொல்லும் காரணங்கள் என்ன வென்றால் ஜனாப் களான ஹமீத்கான் சாஹிப், ஷாபி மகமது சாஹிப் ஆகிய இரு கனவான்கள் ஹிந்து ஓட்டர்கள் அதிகமாயுள்ள பேட்டைகளில் சென்னைக் கார்ப்ப ரேஷனுக்கு பிரதிநிதிகளாய் நின்று ஜெயிக்க வில்லையா? ஆதலால் முஸ்லீம் களுக்கு தனி வாக்காளர் தொகுதி தேவையில்லை என்பதேயாகும். ஆனால் 'ஸைபுல் இஸ்லாம்' பத்திரிகை **"ஜனாப்களான ஹமீத்கான், ஷாபி முகமது சாஹிப் ஆகிய இருவரும் ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்கார் இஷ்டப்படி நடந்து அவருடைய முழு தயவையும் பெற்று இருப்பதன் காரணமாக ........ஐயங்கார் ஹிந்து வாக்காளர்களுக்குத் தக்க சமாதானம் சொல்லி, ஜனாப்கள் ஹமீத்கான், ஷாபி முகமது சாஹிப் ஆகியோரின் நடத்தைக்கு ஐயங்காரை ஜாமீன் கொடுத்த காரணத்தினாலேயே ஹிந்து வாக்காளர்கள் அவ்விரு முஸ்லீம்களுக்கு ஓட்டுக் கொடுத்திருக் கிறார்கள் என்பது சென்னை மாகாணம் முழுதுமே அறிந்த விஷயம். அல்லாமலும் ஐயங்கார் தயவைப் பெற்று தங்களுக்காக ஐயங்காரை ஜாமீன் வைத்து ஓட்டுப் பெறுவதன் பொருட்டு ஜனாப்கள் ஹமீத்கான்,**



**ஷாபி மகமது சாஹிப் ஆகிய இருவர்களும் நடந்து கொள்ளுகிற மாதிரி சுயமதிப்புள்ள வேறு எந்த முஸ்லீம்களாலும் சாத்தியப்படாதாகையால் ஐயங்காருக்கு நல்ல பிள்ளைகளாய் நடந்து ஓட்டுப் பெற்ற முஸ்லீம் களின் உதார ணத்தை 'மித்திரன்' மற்ற முஸ்லீம்களுக்கும் எடுத்துக் காட்டினால் அதை முஸ்லீம் உலகம் கொஞ்சமும் ஒப்புக் கொள்ள முடியாது..."** என்று எழுதுகிறது. ஆனால் ஜனாப்கள் ஹமீத்கான், ஷாபி முகமது ஆகிய இருவர்களும் தங்களது சொந்த நலத்திற்காக தங்களது சுயமரியாதையை இழந்து விட்டு ஐயங்காருக்கு நல்ல பிள்ளையாய் நடந்து கொள்ளும் விஷயம் உலக மறிந்த இரகசியம் என்றாலும், அதை நாம் எடுத்துச் சொல்லுவதற்கு பல காரணங்களாலும் முஸ்லீம் சமூகத்தின் கௌரதையை உத்தேசித்து மறைத்தே வைத்து வந்தோம். எனினும் தமிழ்நாட்டு முஸ்லீம் பிரதிநிதியாகிய 'ஸைபுல் இஸ்லாம்' தங்கள் சமூகத்தின் நன்மையைக் கோரி இவ்வளவு தைரியமாய் இந்த விஷயங் களை ஒப்புக்கொண்டு வெளியாக்கியதற்காக அதை நாம் மிகுதியும் போற்றுகிறோம். "ஜனாப்களான ஹமீத்கான், ஷாபி முகமது சாஹிப் ஆகிய வர்கள் ஐயங்கார் இஷ்டப்படி நடந்து அவருடைய முழு தயவையும் பெற் றார்கள்" என்று 'ஸைபுல் இஸ்லாம்' எழுதுவதில் எவ்வளவு சங்கதி தொக்கி யிருக்கிறது என்பதைக் கொஞ்சம் கவனித்தாலும் தெரியாமல் போகாது. தவிரவும் இவர்கள் நடத்தைக்காக ஐயங்கார் வாக்காளர்களுக்கு ஜாமீன் கொடுத்தார் என்பதில் எவ்வளவு அர்த்தமிருக்கிறது என்பதையும் கவனித்த வர்களுக்கு விளங்காமல் போகாது.

முஸ்லீம்களுக்கு உண்மையான தனி வாக்காளர் தொகுதி இருந்திருக் குமானால் சுயமதிப்புள்ள முஸ்லீம்கள் நடந்துகொள்ள முடியாத தோரணை யில் நடந்து கொண்டிருக்க முடியுமா? அல்லாமலும் ஒரு முஸ்லீம் சென்னைக் கார்ப்பொரேஷனில் ஸ்தானம் பெற ஐயங்காருடைய ஜாமீன் அவசியமாகுமா? ஐயங்கார் ஜாமீன் பெறுவதற்காக முஸ்லீம்கள் ஐயங்கார் இஷ்டப்படி நடக்க வேண்டிய அவசியம் ஏற்படுமா? என்பவைகளை முஸ்லீம் சமூகம் யோசிக்காமலிருக்குமென்று நாம் நம்பவில்லை.

இப்போது உண்மையாகவே சென்னையில் ஜனசங்கியை 5,30,000. இதில் மகமதியரின் சங்கியை 53,000. சென்னை நகர பரிபாலன சபையாகிய கார்ப்பொரேஷன் சபைக்கு கவுன்சிலர்களின் தொகை 50. இதில் வீதாச்சார எண்ணிக்கைப்படி மகமதியர்களுக்கு 5 ஸ்தானங்கள் கிடைக்க வேண்டும். அதே பிரகாரம் கிறிஸ்துவர்களுக்கு 4 ஸ்தானம் கிடைக்க வேண்டும். மற்றபடி தீண்டப்படாத வகுப்பார் ஐரோப்பிய வகுப்பார் முதலியவர்க ளுக்கும் கொடுத் துவிட்டால் இவர்கள் நீங்கிய பார்ப்பனரல்லாதவர்களுக்கு 20 ஸ்தானங்கள் கிடைக்கலாம். ஆதலால் இவர்கள் யாரும் தங்கள் தங்கள் வகுப்புக்குப் பிரதி நிதித்துவம் பெற ஐயங்காருக்கு நல்ல பிள்ளையாக வேண்டிய அவசிய மில்லை; தத்தம் சமூகத்திற்குத் துரோகம் செய்ய



RangaRakes tamilnavarasam.com

வேண்டியதில்லை; சர்க்கார் தயவையும் நாட வேண்டியதில்லை. மகமதியர் களுக்கு உண்மையான தனி வாக்காளர்கள் தொகுதி இருந்திருக்குமானால் ஜனாப்கள் ஹமீத்கானும் ஷாபி முகமது சாஹிபும் தங்கள் சுயமரியாதையை இழந்து ஐயங்காருக்கு நல்ல பிள்ளைகளாக வேண்டிய அவசியமும் நேர்ந்திருக்காது. உண்மையான முஸ்லீம் பிரதிநிதிகளே வரவும் இட முண்டாகும்.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இல்லாமல் 10 ஸ்தானங்கள் கிடைப்பது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தால் 8 ஸ்தானங்கள் கிடைத்தால் போதும். இதனால் 'ஸைபுல் இஸ்லாம்' சொல்லுகிறபடி சுயமரியாதை இழக்க வேண்டியதில்லை; ஐயங்காருக்கு நல்ல பிள்ளைகளாக வேண்டியதில்லை; சமூகத் துரோகம் செய்ய வேண்டிய அவசியமில்லை; சர்க்கார் தயவைப் பெற வேண்டியதில்லை; தேசத் துரோகம் செய்ய வேண்டியதுமில்லை. ஐயங்கார் இஷ்ட படி நடக்க முடியாவிட்டால் ஸ்ரீமான் சக்கரைச் செட்டி யாரை கேட்பதைப் போல் நம்மை ஒருவன் இராஜினாமாச் செய்யும்படி கேட்க வேண்டிய அவசியமும் இராது. இந்த மாதிரி சிறு பிள்ளைகளைப் போல் அபிப்பிராய பேதம் வந்தவுடன் "நான் செய்து வைத்த கவுன்சிலர் வேலை யை கக்கு" என்று கேட்க வேண்டிய அவசியமும் இராது. நமக்காக ஐயங்கார் ஜாமீன் நின்று எலெக்ஷன்களுக்கு ஆயிரம் இரண்டாயிரம் பணச் செலவும் செய்ய மாட்டார்கள். அந்தப் பணத்திற்கு நம்முடைய மானம், சுயமரியாதை, மனச்சாக்ஷி, மதம், தேசம் இவைகளை விற்க வேண்டியும் வராது. ஆதலால் 'ஸைபுல் இஸ்லாம்' சொல்லும் வேத வாக்கை உண்மையான முஸ்லீம்கள் ஒவ்வொருவரும் கவனித்து சுயராஜ்யக் கக்ஷியின் சார்பாக நிற்காமல் தங்கள் சமூகத்தின் சார்பாகவே நின்று வெற்றி பெற்று இஸ்லாத்தின் நன்மை யையும் கூடுமானால் தேச நன்மையையும் நாடுவார்களாக.

**குடி அரசு - கட்டுரை - 04.07.1926**



# சட்டசபையை விட்டு வெளிவந்த 'வீரர்'களின் செய்கை

சட்டசபையில் ஒரு பலனும் இல்லை என்றும், சட்டசபையிலிருந்து கொண்டு சர்க்காரை எவ்வளவு கெஞ்சிக் கூத்தாடியும் சர்க்கார் மனம் கொஞ்ச மாவது இளகவில்லை என்றும், ஆதலால் இனி சட்ட சபையிலிருப்பது அவ மானம் என்றும், இந்த சர்க்காரின் யோக்கியதையை எடுத்து வெளியில் சொல்லப் போகிறோம் என்றும் வீரப்பிரதாபம் பேசிவிட்டு வெளியில் வந்த 'வீரர்கள், என்ன செய்கிறார்களென்று பார்த்தால், மறுபடியும் சட்டசபைக்குப் போக ஓட்டர்களிடம் போய் எங்களை சட்டசபைக்கு அனுப்பினால் நாங்கள் உங்களுக்கு சாதித்து விடுகிறோம் என்று ஓட்டுப் பிச்சை எடுத்துக் கொண்டு திரிகிறார்கள்.

இம்மட்டோடு நிற்கிறார்களா வென்று பார்த்தால், வீரப்பிரதாபம் பேசி, விட்டு விட்டு வந்த சட்டசபைக்கு அடுத்த கூட்டத்திற்கே போகிறார்கள். ஒரு கூட்டத்தின் பிரயாணப் படியை வாங்காமல் இருப்பதற்கு நமது 'வீரர்(?)' களுக்கு மனம் வரவில்லை. இதை அறிந்து "அகில இந்திய ஒப்பற்ற தலைவர்(?)" திரு. சீனிவாசய்யங்கார் போகும்படி உத்திரவு கொடுத்துவிட்டார்; அகில இந்திய காங்கிரஸ் காரியதரிசி திரு. எ.ரெங்கசாமி ஐயங்கார் மேல் ஒப்பம் போட்டு விட்டார்; ஆகையால் சென்னை, கல்கத்தா, பஞ்சாப், அஸ் ஸாம் முதலிய மாகாண சட்ட சபைகளுக்குப் போய்த்தீர வேண்டும். அங்கு போய் செய்ய வேண்டிய பல முக்கியமான வேலைகள் இருக்கின்றன. நாங்கள் போகா விட்டால் அநேக காரியம் கெட்டுப் போகும். போகாமல் நின்றுவிட்டால் ஓட்டர்களை ஏமாற்றி மோசம் செய்தது போலாகிவிடும். ஆதலால் போகிறோம் என்ற நொண்டிச் சமாதானத்துடன் சட்ட சபைக்கும் செல்லுகின்றார்கள்.

இதில் ஏதாவது கடுகளவாவது நாணயமேனும் யோக்கியப் பொறுப் பேனும் இருக்கிறதா? சட்டசபையில் இவர்கள் போய் செய்ய வேண்டியவை பல வேலைகளிருக்குமானால், ஏன் அதில் ஒன்றும் செய்ய முடியாது என்று வெளியில் வரவேண்டும்? சர்க்காரைக் கெஞ்சியும் கூத்தாடியும் கேட்டும் ஒன்றும் செய்ய முடியாத காரியத்தை சர்க்காருடன் கோபித்துக்கொண்டு வீரப்பிரதாபம் பேசி வந்துவிட்டுத் திரும்பவும் போனால் சர்க்கார் இவர் களை



RangaRakes tamilnavarasam.com

எப்படி மதிப்பார்கள்? இவர்கள் கோருவதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? சட்டசபையை விட்டு வெளியில் வந்த பிறகு கல்கத்தா சட்ட சபைக்கு, அவசரச் சட்டத்தைத் தடுக்க வேண்டும் என்கிற முகாந்தரத்தின் பேரில், போய்ப் பார்த்தார்களே! அவசரச் சட்டத்தை தடுக்க முடிந்ததா என்று கவனித் தார்களா? கவனித்திருந்தால் மறுபடியும் சட்டசபைகளுக்குள் எந்தக் காரியம் செய்ய முடியும் என்பதை உணர்வார்களல்லவா? சட்டசபை யில் மெஜாரிட்டி பலம் பெற்ற வங்காள மாகாண சட்டசபையிலேயே ஒன்றும் செய்ய முடியவில்லையென்றால் மெஜாரிட்டி இல்லாததும் மதிக்கத்தகுந்த மைனாரிட்டி கூட இல்லாததுமான சென்னை சட்டசபையில் என்ன காரியம் செய்ய முடியும்? இதை யெல்லாம் பொது ஜனங்கள் அறிய மாட்டார்களா? அறிந் தால் தங்களை எப்படி மதிப்பார்கள் என்றுகூட நினைக்க முடியாத அவ்வளவு மானங் கெட்டத் தன்மையும் முட்டாள் தனமும் உள்ள 'வீரர்'களால் தேசத்திற்கு என்ன நன்மை விளையும்?

ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்களுக்கும் சுயராஜ்யக் கட்சி மெம்பர்களுக் கும் ஜஸ்டிஸ் கட்சியை விட்டுப் புதிதாய் சுயராஜ்யக் கட்சியில் 'ஞானஸ் நானம்' பெற்ற மெம்பர்களுக்கும் என்ன வித்தியாசமென்று பார்ப்போமா னால் ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்களுக்கு சுயமரியாதை இருக்கிறது ; அதாவது இன்றைக்கு ஓட்டர்களை ஏமாற்றுவதற்காக பொய் வீரம் பேசி வெளியே போய் விட்டால் நாளைக்கு எந்த முகத்தைக் கொண்டு சட்டசபைக்குள் நுழைந்து அங்குள்ளவர்கள் முகத்தில் எப்படி விழிப்பது என்றும்; அங்கு ஒரு காரியமும் செய்ய முடியவில்லை என்று சொல்லிவிட்டு வெளியில் வந்துவிட்ட பிறகு எந்த முகத்தைக் கொண்டு மறுபடியும் ஓட்டர்களிடம் போய் ஓட்டுக் கேட்கிறது என்றும் நினைத்து தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, ஆதியில் ஓட்டர்களிடம் என்ன சொல்லி சட்ட சபைக்குப் போனார்களோ அந்த வார்த்தையிலேயே இன்னும் நிற்கிறார்கள்.

சுயராஜ்யக் கட்சியாரோ சுயமரியாதை, மானம், வெட்கம் ஆகிய எல்லாவற்றையும் உதிர்த்து விட்ட ''மாசில்லா பரிசுத்த'' வான்களாதலால் என்ன வேண்டுமானாலும் செய்யவும் எதை வேண்டுமானாலும் பேசவும் தயாராயிருக்கிறார்கள். இன்னும் இருக்கப் போகிறார்கள். இவைதான் ஜஸ்டிஸ் கட்சிக்கும் காங்கிரஸோடு இரண்டறக் கலந்த சுயராஜ்யக் கட்சிக்கும் உள்ளன வித்தியாசம் .

இந்தியாவின் விடுதலைக்கு - சுயமரியாதைக்கு - சுயராஜ்யத்திற்கு - கையெழுத்துகூடப் போடத் தெரியாத மக்களை 100- க்கு 90 பேராக உடைய பாரதத் தாயின் கற்பைக் காப்பதற்கு திரு.சீனிவாசய்யங்கார் 'தலைவ' ராகவும் திரு. எ. ரெங்கசாமி ஐயங்கார் 'காரியதரிசி'யாகவும் அடையப் பெற்ற இந்தியாவே! உனது பாக்கியமே பாக்கியம்!! ஜப்பானுக்கு வந்த பூகம்பம் உன்னை ஏன் மறந்து விட்டதோ தெரியவில்லை !!!

**குடி அரசு - கட்டுரை - 04.07.1926**



# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

சென்னையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் வீட்டில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகக் கூட்டத்தின் நடவடிக்கைகள் இவ்வாறப் பத்திரிகைகளில் வெளியானதை நண்பர்கள் வாசித்திருக்கலாம். ஆனால் அதில் நடந்த விஷயங்களை ஒவ்வொரு பத்திரிகை ஒவ்வொரு விதமாய் தத்தம் சௌகரி யப்படி பிரசுரித்திருக்கின்றன.

ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரின் தீர்மானமானது ஒரே அடியாய் தூக்கி அடிக்கப்பட்டு உயிர் வாங்கப்பட்டுப் போயிற்று, அதாவது ''காங்கி ரசால் சட்டசபைக்கு நியமிக்கப்பட்ட அபேக்ஷகர்கள் பட்டதாரியாகவாவது அரசாங்க நியமனம் பெற்றவர்களாகவாவது இருப்பரேல், பட்டத்தையும் நியமனத்தையும் விட்டுவிடும்படியும் கதருடையில் பற்றுக் கொள்ளும் படியும் தீர்மானிக்கிறது'' என்பதே ஸ்ரீமான் முதலியார் தீர்மானத்தின் தத்துவம். அப்படியிருக்க திருத்தப் பிரேரேபணையாக ஸ்ரீமான் சத்திய மூர்த்தியால் இம்மாதிரி தீர்மானமே கொண்டுவர ஒழுங்கில்லையென்றும், ஆனால் ஸ்ரீமான் முதலியார் தங்களுக்கு ஓட்டுப் பிரசாரம் செய்யவும் முதலியார் பெயரை விற்று தாங்கள் ஓட்டுப் பெறவும் அவருடைய தயவு வேண்டியிருப்பதால் அவரை ஏமாற்று முகத்தான் ஏதாவது சமாதானம் சொல்ல வேண்டுமே யென்றும், இல்லாவிட்டால் முதலியார் தனக்கு ஏதாவது அவமானம் வந்துவிடுமே யென்று கருதி விலகிவிடுவாரோ என்னமோ என்றும் பயந்து, ஸ்ரீமான் முதலியார் கண்களைத் துடைப்பது போல் ஒரு பொக்கித் தீர்மானம் திருத்தப் பிரேரேபணையாகத் தீர்மானிக்கப் பட்டிருக் கிறது. அதாவது ''காங்கிரசின் கொள்கைப்படி பட்டம் விட வேண்டிய அவசியமில்லாவிட்டாலும் யாராவது பட்டதாரிகள் அபேக்ஷகர்களாயி ருந்தால் காங்கிரசின் கௌரதையைக் காக்க தங்கள் பட்டங்களை விடுவார்கள் எனவும் கதர் கட்டுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது'' என்பதேயாம்.

ஸ்ரீமான் முதலியார் எந்த கருத்துடன் தனது தீர்மானத்தைப் பிரேரே பித்தாரோ அதற்கு நேர் விரோதமாகத் தீர்மானிக்கப்பட்டுப் போயிற்று. முதலாவது, முதலியாரின் கருத்து பட்டம், நியமனப் பதவி இரண்டையும் துறக்க வேண்டுமென்பது. நியமனப் பதவியைப் பற்றி பேசினால் ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமணய்யங்காரை பாதிக்குமானதால் அதை அடியோடு விட்டு விடப்பட்டது. இதைப்பற்றி ஸ்ரீமான் முதலியாருக்கு இப்போது ஒரு ஆக்ஷேபனையும் இல்லாமல் போனதின் இரகசியம்நமக்கு விளங்கவில்லை



RangaRakes tamilnavarasam.com

இரண்டாவது, பட்டங்களை விட வேண்டியது என்ற தீர்மானம் கொண்டுவரும் போது நமது முதலியாரவர்கள், ''பட்டம் பதவியுடைய வர்கள் அவைகளை விட்டுவிடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். அவர்கள் விடாததால் இத்தீர்மானம் கொண்டு வந்தேன்'' என்று சொன்னதோடு ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு எழுதிய பகிரங்கக் கடிதத்தில்,

> "இப்பொழுது நாம் வழ வழவென்று இருப்போமாயின் பின்னால் வருந்த நேரும். இப்பொழுதே எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். கட்டுப் பாடுகளை தளர விட விட நமது கட்சியின் ஆக்கங்குன்றுவது திண்ணம். காங்கிரசில் ஒத்துழைப்பு நுழையாத வாறு காத்தல் வேண்டுமென்னுங் குறி யோடு தங்களுடன் சேர்ந்து உழைக்கின்றேனேயன்றி வேறு எக் குறியோடும் உழைக்கிறே னில்லை"

என்று வீர உரை நிகழ்த்திய நமது ஸ்ரீமான் முதலியார் வழ வழத்ததும், எச்சரிக்கை யற்றதும், கட்டுப்பாடுகளைத் தளர விட்டதும் தமது கட்சியின் ஆக்கங்குன்றக் கூடியதும் காங்கிரசில் ஒத்துழைப்பு நுழையும் படியான தீர்மா னத்தை ஒப்புக்கொண்டதும், பட்டத்தை இழித்துக் கூறியவர், பட்டதாரி களையும் நியமனதாரிகளையும் உடைய அமைப்பிற்குத்தான் ஒரு பிரதான அதாவது, தேர்தல் வேலைக்கு ஏற்பாடு செய்யவும் அவற்றை மேற்பார்வை பார்க்கவும் நியமிக்கப்பட்ட கமிட்டி அங்கத்தினராகவும் இருக்க ஒருப்பட்ட தின் இரகசியம் நமக்கு விளங்கவில்லை. இனி அவர் எக்குறியோடு அய்யங்காருடன் சேர்ந்துழைக்கிறார் என்பதும் நமக்கு விளங்கவில்லை.

ஒரு சமயம் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தான் ஏற்றுக்கொண்ட திருத்தத்தில் தனது மேற்கண்ட கருத்து முழுவதும் பொலிந்து விளங்கக் காண்கின்றாரோ என்பதும் நமக்கு விளங்கவில்லை. எனினும் சீக்கிரத் திலாதல் தெரிந்துவிடுமென்றே நினைக்கின்றோம் .

இரண்டாவதாக, டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரின் இராஜினாமா வைப் புனராலோசனைக்குத் திருப்பி அனுப்பப்பட்டதென்றும் அறிகி றோம். ஸ்ரீமான் முதலியாரின் பிரேரேபணையின் பேரில் பிறந்த விநோத மான திருத் தத்தை அவர் ஒப்புக்கொண்டது போலவே டாக்டர் நாயுடுகா ரின் இராஜினாமாவும் வாபீஸ் வாங்கிக் கொள்ளப்படுமென்றே நினைக் கிறோம்.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் தீர்மானத்தையே ஸ்ரீமான் முதலியார் ஒப்புக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும்போது, ஸ்ரீமான் சத்திய மூர்த்தி கொஞ்ச நாளாய் டாக்டர் நாயுடுகாரின் பக்கத்திலேயே இருப்பதால் இராஜினாமாவை வாபீஸ் பெறும்படி நேருவது முடியாத காரியம் என்ப தாகத் தோன்றவில்லை. இதைப் பற்றியும் பல திறப்பட்ட வர்த்தமானங்கள் அடி பட்டுக் கொண்டிருக்கின்றன. முடிவைப் பொறுமையோடு எதிர்பார்ப் போம்.

மூன்றாவதாக, ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கரை தூக்கில் போட





ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதாவது, "ஸ்ரீமான் நாயக்கர் காங்கிரசுக்கு விரோதமான பிரசாரம் செய்து வருவதால் அவரை காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து விலக்க வேண்டும்" என்று தீர்மானங் கொண்டு வரப்பட்டது. இது ஸ்ரீமான்கள் ஒரு பாவலரால் பிரேரேபிக்கப்பட்டு, ஒரு சாயுபினால் ஆமோதிக்கப்பட்டு, ஒரு முதலியாரால் ஆதரிக்கப்பட்டு, ஒரு பிள்ளையால் தாங்கப்பட்டது.

ஸ்ரீமான் நாயக்கர் மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வந்திருப் பதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. இந்த விஷயத்திலாவது நமது அய்யங்கார்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்தார்களே; அதுவே நமக்கு மிகவும் சந்தோஷம். ஆனால் இத்தீர்மானத்தை ஆமோதித்தல் ஆதரித்தல் விஷயத்தில், ஒரு பார்ப்பனருக்கும் இதில் பிரதிநிதித்துவம் கிடைக்காமல் போனது பற்றியே வருத்தப்படுகிறோம். இதுவும் அவர்களா கவே வேண்டா மென்று சொல்லியிருப்பார்களே ஒழிய ஆசைப்பட்டிருந் தால் கிடைக்காமல் போயிருக்காது. ஆனாலும் தீர்மானத்தின் நிலை என்ன வாயிற்று என்று பார்த்தால், அது அடியோடு ஒழியும் நிலையில் இருந்ததால் மிகத் தந்திரமாய் ஒரு செட்டியாரை திருத்தம் கொண்டுவரச் செய்து, ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அக்கமிட்டியே விசாரித்து அறிக்கையனுப்பத் தீர்மானித்திருப்பதாய்த் தெரிகிறது. அக் கமிட்டியிலாதல் பார்ப்பனருக்குப் பிரதிநிதித்துவம் கிடைத் திருக்கிறதென்பதை அறிந்து சந்தோஷிக்கிறோம். ஆனால் பார்ப்பன மித்திரனான 'சுதேசமித்திரனி'ல் அக்கமிட்டிக்கே நாயக்கரை தூக்கில் போடும் உரிமையும் அளித்திருப்பதாய்க் காணப்படு கிறது.

**இதன் முடிவை ஸ்ரீமான் நாயக்கர் - முதலாவது சார்லஸ் , வாரன் ஹேஸ் டிங்ஸ், லார்டு கிளைவ் இவர்களில் எவருக்காவது ஏற்பட்டது போல் நடக்குமோ அல்லது ருஷியா சக்கிரவர்த்தியான ஜார் சக்கிர வர்த்திக்கு நேர்ந்ததைப் போல் நடக்குமோ என்பதைத் துணிவுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக் கிறாரேயல்லாமல் இந்தூர் அரசர் போல் கமிட்டிக்குப் பயந்து கொள்ளவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.**

**ஏனெனில், இவ்வய்யங்கார்களுக்கு நல்ல பிள்ளையாகி அவர்கள் பின்னால் திரிந்து உயிர் வாழ்வதைக் காட்டிலும் அவர்களால் ''சிலுவையில் அறையப்படுவதையே'' மேல் எனக் கொள்ளுகிறோம்.**

**குடி அரசு - தலையங்கம் - 04.07.1926**

RangaRakes

tamilnavarasam.com

# "சுதேசமித்திர"னின் பித்தலாட்டம்

சென்ற இதழ் 'குடி அரசி'ல் திரு.டி.எ. இராமலிங்கம் செட்டியார் அவர்கள் சுயராஜ்யக் கட்சியிலிருந்து விலகுகிறார் என்பதாக வரைந்திருந்த விஷயத்தை வாசகர்கள் கண்ணுற்றிருக்கலாம். அதைப் பார்த்தவுடன் பார்ப்பனர் கக்ஷியாய சுயராஜ்யக் கட்சிக்குப் பேராபத்து வந்து விட்டதெனக் கருதி "குடி அரசின் கட்டுக்கதை - ஸ்ரீமான் இராமலிங்க செட்டியாரின் மறுப்பு" என்ற தலைப்பில் 'சுதேசமித்திரன்' ஒரு மறுப்பு எழுதியிருக்கிறது.

அதில் திரு.டி.எ. இராமலிங்கம் செட்டியாரவர்கள் 'மித்திரன்' நிரூபரிடம் கூறுவதாக எழுதியிருக்கும் விஷயங்களைக் கவனித்துப் பார்த்தால் 'குடி அரசு' விஷயம் கட்டுக்கதையா, 'சுதேசமித்திரன்' விஷயம் அயோக்கியத் தனமா என்பது புலனாகும். திரு. செட்டியார் மறுபடி கூறுவதாவது:-

> "என்னுடைய அபிப்பிராயம் எதுவும் மாறவில்லை. நான் சுயராஜ்யக் கட்சி அங்கத்தினராக இருந்ததே இல்லை. 'பார்ப்பனரல்லாத கட்சி' என்பது ஜஸ்டிஸ் கட்சியைக் குறிப்பிடுவதானால் அதன் சார்பாக நான் தேர்தலுக்கு நிற்கப் போவதாக எவரிடமும் சொல்லவேயில்லை. உத்தியோகங்களை ஏற்றுக் கொள்ளுவதன் சம்பந்தமாக நான் எவ்வித அபிப்பிராயம் கொண்டி ருக்கிறேன் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. உத்தியோகம் ஏற்றுக்கொள் ளும் விஷயத்தில் வைதீக காங்கிரஸ்காரர்களுக்கும் (தங்கள்) தேசீயக் கட்சி யினருக்கும் அபிப்பிராய பேதமிருந்த போதிலும் நாட்டில் ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்னும் நோக்கத்துடன் காங்கிரஸ் அபேக்ஷகர்களாக நிற்க சம்மதித்தோம். பகிஷ்காரத் தீர்மானங்களை வாபீசு வாங்கிக் கொண்டு நாடு சட்ட மறுப்புக்குத் தயாராயில்லாததால் அதை ஆரம்பிப்பதில்லை என்று காங்கிரஸ் தீர்மானம் செய்ததால் இதற்கு நாங்கள் கட்டுப்பட முடிந்தது. இதன் பிறகு நாட்டின் கட்சிகளின் நிலைமையும் தனிப்பட்டநபர்களின் அபிப்பிராயமும் அடிக்கடி மாறி வருவதால் தேசீயவாதிகள் (தாங்கள் ) அடிக்கடி தங் கள் நிலைமையைப் பரிசீலனை செய்ய உரிமை பெற்றிருக்கிறார்கள். தேசீயவாதிகளில் சிலர் பரஸ்பர ஒத்துழைப்பு மனோபாவம் கொண்டவர்கள் என்பதில் சந்தேகமில்லை. தேசீயவாதிகள் (தாங்கள்) ஜுலை மாதம் சட்டசபைக் கூட்டக்காலத்தில் கூடி யோசனை செய்யும் வரையில் தற்கால ராஜீய நிலைமை சம்பந்தமாக எப்படி நடந்து கொள்வார்களென்று தற்பொழுது கூறமுடியாது"

என்று இவ்வாறு திரு. இராமலிங்கம் செட்டியார் சொன்னதாக எழுதியிருக்கிறது. "மித்திரன்" நிரூபர் எழுதியதில் எவ்வளவு புரட்டு பித்தலாட்டம் இருக்கும் என்பதை மறந்து, 'மித்திரன்' கூற்றை அப்படியே எடுத்துக் கொண்டு பார்ப்போம்.

திரு. இராமலிங்கம் செட்டியார் சுயராஜ்யக் கட்சியை விட்டு விலகி விட்டதாக திரு. செட்டியார் சொன்னார் என்று 'குடி அரசு' நிரூபரிடம் திரு. வெரிவாட செட்டியார் கூறியதாக 'குடி அரசு' எழுதுகிறது. ஆனால் திரு. இராமலிங்கம் செட்டியார் தான் ஒரு நாளும் சுயராஜ்யக் கட்சியில் சேரவேயில்லை என்று சொன்னதாக மித்திரன் நிரூபர் எழுதியிருப்பதாக 'மித்திரன்' பிரசுரித்திருக்கிறது. இவ்விரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன? பின்னும் திரு. செட்டியார் சொன்னதிலிருந்து இதுவரை சுயராஜ்யக் கட்சி பார்ப்பனர்கள் தங்கள் கட்சியில் திரு. இராமலிங்கம் செட்டியார், திரு. வெள்ளியங்கிரி கவுண்டர் முதலியவர்கள் சேர்ந்திருப்பதாய் சொல்லிக்கொண்டது முழுப் பொய்யென்று இப்போது விளங்குகிறது. கோபியில் திரு. நாயக்கர் பேசும் போது சுயராஜ்யக் கட்சியில் வகுப்பு நன்மையைக் கவனிக்காத யோக்கியமான பார்ப்பனரல்லாதார் யாராவது இருக்கிறார்களா என்று கேட்ட போது, உடனே ஒரு ஐயங்காரும் ஒரு ஐயரும் எழுந்து திரு. இராமலிங்கம் செட்டியார் இருக்கிறாரே அவர் யோக்கியமானவரல்லவா என்று கேட்டார் கள். அதற்கு திரு.நாயக்கரவர்கள் ''உத்தியோகம் ஒப்புக் கொள்ளும் நிபந்தனையின் பேரிலேயேயிருக்கிறார்களேயல்லாமல் சுயராஜ்யக் கட்சி நிபந்தனையின்படி இல்லை" யென்றும் இதை செட்டியாரே தன்னிடம் கூறியிருப்பதாகவும் கூறினார். அதுவும் இப்போது ருஜுவாகி விட்டது.

தவிர திரு.இராமலிங்கம் செட்டியார் பார்ப்பனரல்லாதார் சார்பாய் சட்டசபைக்கு நிற்கப் போவதாய்ச் சொன்னதாக அறிகிறோம் என்று 'குடி அரசி'ல் எழுதியிருக்கிறது. அதற்குப் பதிலாக பார்ப்பனரல்லாதார் கட்சி என்று ஜஸ்டிஸ் கட்சியைச் சொல்லுவதானால் மாத்திரம் பார்ப்பனரல்லாதார் சார்பாய் தேர்தலுக்கு நிற்பதாய் சொல்லவில்லையென்றே சொல்லுகிறார். இதனால் 'ஜஸ்டிஸ்கட்சி'யல்லாத பார்ப்பனரல்லாத கட்சியின் சார்பாக நிற்பதாய்ச் சொன்னதாக நன்றாய் வெளியாகிறது. ஒரு சமயம் தஞ்சையில் கூடிய தேசீயப் பார்ப்பனரல்லாதார் சார்பாக நிற்பதாய் வைத்துக் கொண்டா லும் 'குடி அரசு'க்கு இது 'மறுப்பு' என்பதாய் எழுதக் காரணமேயில்லை.

திரு.டி.எ. இராமலிங்கம் செட்டியார் பார்ப்பனரல்லார் கட்சியின் சார்பாக நிற்பதாகவே திரு. வெரிவாட செட்டியார் 'குடி அரசு' பிரதிநிதியிடம் சொல்லியிருக்கிறாரே தவிர ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக நிற்பதாகச் சொன்னார் என்று எழுதவேயில்லை.

தவிர திரு. சீனிவாசய்யங்கார் உடன்படிக்கைப்படி நடந்து கொள்வார்





RangaRakes tamilnavarasam.com

என்கிற நம்பிக்கை தனக்கு (டி.எ.இரா.செட்டியாருக்கு) இல்லை என்று சொன்னதாக நமது பிரதிநிதி எழுதியிருக்கிறார். திரு. இராமலிங்கம் செட்டியாரும் அதை ஒப்புக் கொள்ளுகிறார். அதாவது நாட்டில் கட்சிகளின் நிலைமையும் தனிப்பட்ட நபர்களின் அபிப்பிராயமும் மாறி வருகின்றன. ஆதலால் தேசீய வாதிகளும் ( அதாவது தாங்களும்) தங்கள் நிலைமையை ஜாக்கிரதைப் படுத்திக் கொள்ள உரிமை உண்டு என்று சொன்னதாக நிரூபர் எழுதுகிறார் என்று 'மித்திரன்' எழுதுகிறது.

திரு.வெரிவாடச் செட்டியாரிடம் திரு. இராமலிங்கம் செட்டியார் "ஐயங்கார் ஒப்பந்தப்படி நடந்து கொள்ளுவார் என்று நம்ப முடியாமலிருப் பதால்" என்று சொன்னதாக 'குடி அரசு' பிரதிநிதி எழுதுகிறார். ஆனால் திரு. இராமலிங்கம் செட்டியார் 'மித்திரன்' நிரூபரிடம் "தனிப்பட்ட நபர் களின் அபிப்பிராயம் அடிக்கடி மாறி வருகின்றன" என்றே சொல்லி விட்டார். இதனால் ஐயங்கார் பேச்சுப்படி நடப்பார் என்று நம்பமுடிய வில்லை என்பதற்கும் ஐயங்கார் மாறிவிட்டார் என்பதற்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று பார்த்தால் திரு. இராமலிங்கம் செட்டியார் திரு. வெரிவாடச் செட்டியாரிடம் சொன்னதைப் பார்க்கிலும் 'மித்திரன்' நிரூபரி டம் இன்னும் கொஞ்சம் பலமாகவே சொல்லிவிட்டார்.

'தனிப்பட்ட நபர்' என்பது ஐயங்காரைக் குறிக்குமா என்பது கேள்வி. ஐயங்காரைத் தவிர வேறு தனிப்பட்ட நபரைப் பற்றி செட்டியார் கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லை. செட்டியாருக்கும் பொறுப் பான தனிப்பட்ட நபர் ஐயங்கார்தான். ஆதலால் "குடி அரசுக்கு மறுப்பு என்றும் "குடி அரசு" கட்டுக் கதை" யென்றும் பார்ப்பனப் பத்திரிகையான 'மித்திரன்' எழுதி பொது ஜனங்களை ஏமாற்றுவது எவ்வளவு அயோக்கியத் தன மென்பதை வாசகர் களே உணரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆகவே திரு.இராமலிங்கம் செட்டியார் சுயராஜ்யக் கட்சியில் இல்லை யென்பதை "சுதேசமித்திர"னாலேயே உறுதி செய்யப்பட்டதற்கு வாசகர்கள் மகிழ்வார்களென்றும் திரு.இராமலிங்கம் செட்டியராவர்களிடம் பார்ப்பன ரல்லாதாருக்கிருந்த அதிருப்தி மாறியிருக்கு மென்றும் நினைக்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 04.07.1926**



# திரு. சக்கரையும் திரு. ஆரியாவும்

**- சித்திரபுத்திரன்**

திரு. சக்கரைச் செட்டியார் அவர்கள் ஹிந்துவாயிருந்து கிறிஸ்துவராக மதம் மாறியவர்; அவர் சென்னை திருவாளர்கள் ஓ. தணிகாசலம் செட்டியார், ஓ.கந்தசாமி செட்டியார் ஆகியவர்களுக்கு நெருங்கின உறவினராயிருந்தவர். பி.ஏ.,பி.எல்.,பட்டம் பெற்ற வக்கீல். 1906-ல் அதாவது ஏறக்குறைய 20 வருஷங் களுக்கு முன்னிருந்தே அரசியல் துறையில் இறங்கினவர். வங்காளப் பிரிவினையின் காரணமாக இந்தியா வெங்கும் ஏற்பட்ட "சுதேசி"க் கிளர்ச்சி யின் போதே திரு. சக்கரைச் செட்டியாரும் திரு. சுரேந்திரநாத் ஆரியாவும் சென்னை மாகாணத்தில் - தமிழ்நாட்டில் - மேடை மீதேறி தைரியமாய்ப் பிரசங்கம் செய்த பார்ப்பனரல்லாத வீரர்கள். தேசத்தின் உழைப்பிற்காகவும், உழைத்ததின் பலனாகவும், தங்கள் தங்கள் வரும்படிகளை விட்டவர்கள். உண்மைத் தேசாபிமானம் என்பது இவ்விரு கனவான்களுக்கும் இல்லா திருந்து பார்ப்பனர்கள் போலும் மற்றும் இரண்டொரு பார்ப்பனரல்லாதாரைப் போலும் வயிற்றுப் பிழைப்பு தேசாபிமானிகளா யிருந்திருந்தால் திரு. சக்கரைச் செட்டியார் வயிற்றுப் பிழைப்பு தேசாபிமானத்தால் ஜட்ஜி ஸ்தானம் பெற்ற பார்ப்பனர்களுக்கு முன்னாலேயே, ஹைக்கோர்ட் ஜட்ஜியாக இருப் பார். அதுபோலவே திரு. ஆரியாவும் மாதம் ஒன்றுக்கு ரூ.1000, 1500 சம்பாதிக் கும் உத்தியோகத்தில் இருப்பார். திரு.ஆரியா அவர்கள் தனது உத்தியோ கத்தை விடுங் காலத்தில் மாதம் 700 ரூபாய் சம்பளமும் 300 ரூபாய் படியும் வாங்கிக் கொண்டிருந்தவர். இருவரும் தேச நன்மையின் பொருட்டு இங்கி லாந்து முதலிய ஐரோப்பிய நாட்டிற்குச் சென்று அரசியல் இயக்கங்களின் போக்கை அறிந்து வந்தவர்கள்.

இன்னும் திரு. ஆரியா அவர்கள் மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் வாடகை பங்களாவில் குடி இருக்கிறார். அவரது பங்களாவிலுள்ள பூச்செடி களுக்குத் தண்ணீர் வார்க்க 3,4 ஆள்களை வைத்திருக்கிறார். ஐரோப்பியர் முறையில் தனது வாழ்க்கையை நடாத்துகிறார். அவரது மனைவியார் ஐரோப்பாவில் வாசித்துக் கொண்டிருக்கிறார்.

ஜெயில் என்றால் பொது ஜனங்கள் பயந்து நடுங்கின காலத்தில் சுமார் 20 வருஷம் கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டு, பிறகு பல காரணங்



RangaRakes
tamilnavarasam.com

களால் அத் தண்டனைகள் குறைந்து, ஐந்து வருஷ காலத்திற்குக் குறையாமல் கடினக் காவல் தண்டனை அடைந்தவர்; ஜெயிலில் மாவு அரைத்தவர்; தோட்ட வேலை செய்தவர். திரு.சக்கரைச் செட்டியார் தண்டனை அடைய வில்லையானாலும் ஏறக்குறைய திரு. ஆரியாவைப் போலவே சுக போகத் திலிருந்தவர்.

இவ்வாறு பீடும் பெருமையோடிருந்த இவ்விருவர்கள் நிலைமையும் ஐயங்கார் ராஜீயத்தில் எப்படி மதிக்கப்படுகிறது என்பதை யோசித்துப் பாருங்கள். அப்பொழுதுதான், பார்ப்பனரல்லாத ராஜீயவாதிகள் பார்ப்ப னரைக் கண்டால் ஏன் பயப்படுகிறார்கள்? ஏன் குட்டிக்கரணம் போடுகி றார்கள்? என்பது வெளியாகும். பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிரிடையாய் தீவிர தேசீயவாதிகளான டாக்டர் நாயர், சர்.தியாகராயச் செட்டியார் ஆகியவர் களால் காணப்பெற்ற ஜஸ்டிஸ் கட்சியென்னும் பார்ப்பனரல்லாதாரியக்கத்தை ஒழிக்கப் பார்ப்பனர்களால் உண்டாக்கப்பட்ட சூழ்ச்சிக்கு அனுகூலமாக, பார்ப்பனரல்லாதாரிலேயே சிலர் வேண்டுமென்று பார்ப்பனர்களால் போடப் பட்ட வலையில் திருவாளர்கள் திரு.வி.கலியாணசுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு முதலியவர்கள் சிக்கினது போலவே நமது சக்கரைச் செட்டியாரும் அதில் அகப்பட்டுக் கொண்டதோடல்லாமல் ஜஸ்டிஸ் கட்சியைத் தூற்றும் வேலையைத் திரு.முதலியாரும், டாக்டர் நாயுடுகாரும் தமிழ்நாட்டோடு - தமிழ் மக்களிடத்தோடு - நின்றார்கள். ஆனால் திரு. சக்கரைச் செட்டியாரோ இந்தப் பார்ப்பனர்களுக்காக இந்தியாவை விட்டு ஐரோப்பியா தேசம் போய் லண்டன் பட்டணத்திலுள்ள ஆங்கிலேய மக்கள் வரை சென்று பாடுபட்டவர்.

இப்படிப்பட்ட கனவான்களான திரு.சக்கரைச் செட்டியார் திரு. ஆரியா ஆகிய இருவர்களையும் 'நன்றியறிதலுள்ள' பார்ப்பனர்கள் என்ன செய்தார் கள் என்பது நமதருமைத் தமிழ் மக்கள் கொஞ்சம் அறிய வேண்டாமா?

திரு. ஆரியா அவர்களைக் காங்கிரசிலிருந்து தீர்மான மூலமாய் வெறுட்டுவதோடல்லாமல், காலிகளை விட்டு உதைக்கும்படியும் செய்தார் கள். திரு.சக்கரைச் செட்டியாரைப் பற்றியோவென்றால் சென்னைக் கார்ப்ப ரேஷனில் பார்ப்பனர்கள் ஸ்தானம் பெறும் வரை திரு. செட்டியாரை சுயராஜ்யக் கட்சித் தலைவராய் வைத்து, ஏழை ஓட்டர்களை ஏமாற்றிப் பார்ப்ப னர் கார்ப்பரேஷனுக்கு வரும்படிசெய்து, அவர்கள் உள்ளே வந்தவுடன் திரு. சக்கரையை சுயராஜ்யக் கட்சித் தலைவர் பட்டத்திலிருந்து தள்ளி அந்த ஸ்தானத்தை பாஷ்யம் ஐயங்கார் என்கிற ஒரு பார்ப்பனருக்குப் பட்டம் கட்டி, திரு.சக்கரைக்கு வாக்களித்திருந்த கார்ப்பரேஷன் தலைவர் பதவியையும் அவருக்குக் கொடுக்காமல் மோசம் செய்ததோடல்லாமல், அடியோடு ராஜீய வாழ்விலிருந்தே அவரை டிஸ்மிஸ் (நீக்கி) செய்து விட்டார்கள். இதன் காரணம் என்ன? அடிக்கடி புது ஆட்களைச் சேர்த்தால் தான் இவர்கள் காலைக் கழுவிக் கொண்டே இருக்க சம்மதிப்பார்கள். பழய ஆட்கள்



RangaRakes

கொஞ்ச நாள் போய்விட்டால் இவர்கள் யோக்கியதையை அறிந்து கொள்ளுகிறார்கள். ஆதலால் பழய ஆட்களைக் கொஞ்சமும் வைத்திருக்க மாட்டார்கள். உதாரணமாக, இப்போது புதிதாய் வலை போட்டுப் பிடித் திருக்கும் ஆட்களின் பெயர்களைப் பார்த்தாலே தெரியவரும்.

இனி தமிழ்நாட்டுக்கு உண்மையான யோக்கியன், தேசபக்தன், சமூக பக்தன் யாரென்று நாம் அறிய வேண்டுமானால் இந்தப் பார்ப்பனர்களால் கண்டனத் தீர்மானம் பெற்றவர்களும், உதைபட்டவர்களும், பார்ப்பனக் காங்கிரசிலிருந்து டிஸ்மிஸ் (தள்ளுபடி) செய்யப்பட்ட பார்ப்பனரல்லா தார்களுமேயாவார்கள். மேற்படி குணங்களுக்கு எதிரிடையானவர்கள் யார் என்று கண்டுபிடிக்க வேண்டுமானால் நமது பார்ப்பனர்களால் பூஜிக்கப்பட்ட வர்களேயாவார்கள். எது போலென்றால், ராஜீய காரணங்களுக்காக நமது சர்க்காரால் தண்டிக்கப்பட்டவன் தேசபக்தர்கள் என்று சொல்லுவதும் சர்க்கா ரால் பெரிய பட்டங்களும் பதவிகளும் அடைந்தவர்களை தேசத் துரோகிக ளென்று சொல்லுவது போலவேயாகும்.

அல்லாமலும் காட்டில் கிடக்கும் கல்லை சாமியாக்குவதற்கு நமது பார்ப்பனர்களுக்கு சக்தியிருப்பது போலவே தெருவில் ஓட்டுப் பொறுக்கும் அன்னக்காவடிகளை தேசபக்தர்களாக்குவதற்கும் நமது பார்ப்பனர்களுக்கு சக்தியிருக்கிறது. ஆதலால்தான் பழய 'தலைவர்கள்' கழிபடுவதற்கு முன்னா லேயே அந்தப் பட்டத்திற்கு ஆள்கள் விண்ணப்பம் போட்ட வண்ணமாயி ருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது நமது ஐயங்கார் கோஷ்டிக்கு இப்போது ஆனந்தத்தைத் தரத்தக்கதாயிருந்தாலும் இதன் பலன் கடைசியில் கல்கத்தா ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைப் போல் விளைந்துவிடுமோவென நம்மைக் கவலைப்படச் செய்கிறது. இயற்கை தேவியின் திருவிளையாடல் களை நாம் எப்படி அறிய முடியும்?

**குடி அரசு - கட்டுரை - 04.07.1926**



tamilnavarasam.com

# "தமிழன்"

முன்னர் காலஞ்சென்ற திரு. அயோத்திதாஸ் பண்டிதரவர்களால் ''தமிழன்'' என்னும் பெயர் கொண்ட பத்திரிகை நடாத்தப் பெற்று அவர் காலத்திற்குப் பின்னர் அப் பத்திரிகை நிறுத்தப்பட வேண்டியதாயிற்று. பிறகு சில காலம் மற்றொருவரால் நடாத்தப் பெற்றது. அதன் பிறகும் ஆதரிப்பாரற்று நின்று போயிற்று. மீண்டும் இப்பொழுது சாம்பியன் ரீப்ஸ், கோலார் தங்கவயல் சித்தார்த்த புத்தகசாலை வைத்திருக்கும் திரு. பி. எம். இராஜரத்தினம் அவர்களால் ஜுலை மாத முதல் வெளியிடப்படுமென தெரிவிக்கப்படுகிறோம். திரு. இராஜரத்தினம் அவர்களின் நிர்வாகத் திறமையால் நன்கு நடைபெறுமென நம்புகிறோம்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 04.07.1926**


குடி அரசு.

இந்தியர் கஷ்ட நிவாரண பாங்கு "லிமிடெட்." கோயமுத்தூர்.

சத்திய வேத வீரியதாது லேகியம்.



RangaRakes

tamilnavarasam.com

# இந்து முஸ்லீம் அபிப்பிராய பேதங்களும் கலகங்களும் ஏற்படக் காரணம் என்ன?

தேசத்தின் விடுதலைக்காகவென்றும் சுதந்திரத்திற்காகவென்றும் படித்த வகுப்பார்களால் (பார்ப்பனர்களால்) கிளர்ச்சி ஏற்படும் போதெல்லாம் இந்து முஸ்லீம் கலவரங்களும் அபிப்பிராய பேதங்களும் ஏற்படாமலிருப்பதில்லை.

ஆனால் மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் ஏற்பட்டிருந்த ஒத்துழையாமையின்போது மாத்திரம் கலவரமும் அபிப்பிராய பேதமும் இல்லாமல் இருந்ததோடல்லாமல் நாம் அறிய இதுவரை நமது நாட்டில் ஏற்பட்டிராத இந்து முஸ்லீம் பரஸ்பர நம்பிக்கையும் அபிப்பிராய பேத மின்மையும் ஒற்றுமையும் சகோதரத் தன்மையும் தலைசிறந்து விளங்கிற்று.

ஆனால் இதற்கு சில பொறுப்பற்றவர்கள், அது சமயம் மகமதியர்களுக்குக் கிலாபத் சங்கடம் இருந்ததால் அவர்கள் இந்துக்களோடு ஒத்திருந்தார்கள் என்ற உள் எண்ணம் கற்பிக்கிறார்கள். அதற்கு ஒரு சிறிதும் ஆதாரமில்லை என்றே சொல்லுவோம். ஒத்துழையாமை மகாத்மாவினால் அமுலில் ஆரம்பிக்கும் காலத்திலேயே கிலாபத்து விஷயம் பெரும்பாலும் முடிவடைந்து விட்டது.

அதோடு துருக்கி நாட்டில் கமால் பாஷாவின் ஆதிக்கம் ஏற்பட்டதும் கிலாபத்து விஷயம் வெளிநாட்டு மகமதியர்களால் கைவிடப்பட்டும் போய் விட்டது. ஆகவே, மகமதியர்கள் அந்த எண்ணம் கொண்டே இந்துக்களோடு கலந்திருந்தார்கள் என்று சொல்ல முடியாது. அப்படி இருக்க ஒத்துழையாமையின் போது மாத்திரம் ஏன் தேசத்தில் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட்டது. மற்ற காலங்களில் ஏன் கலவரமேற்படுகிறது என்று ஒவ்வொரு இந்து முஸ்லீமும் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. படித்தவர்கள் என்று சொல்லப்படும் வகுப்பினரான பார்ப்பனரும் மற்றையோரும் தேசீயக் கிளர்ச்சி என்கிற பெயராலும் காங்கிரஸ் என்னும் பெயராலும் செய்து வந்த காரியங்களெல்லாம் தன் வகுப்பாரின் சுய நன்மையைக் கோரியும் அதில் கலந்த மற்றவர்களும் தங்கள் தங்கள் தனித்த நலத்திற்காகவும் உழைப்பதாயிருந்ததால், மற்ற வகுப்பார்கள் தாங்கள் அக்கிளர்ச்சியில் சம்மந்தப்படவில்லை என்று காட்டிக் கொள்வதற்காகவும், அக் கிளர்ச்சியின் பயனாய் அவ்





வகுப்பாருக்கு ஏதாவது பதவியோ நிர்வாக அதிகாரமோ ஏற்படுமானால் அவை தங்கள் சமூகத்திற்கு (முஸ்லீம் சமூகத்திற்கு) சரியான பங்கு அளிக்கப்படாமல் போவதோடு, ஒரு சமூகம் மாத்திரம் முன்னேறி விட்டால் மற்ற சமூகம் அதனால் அமுத்தப்பட நேரிடும் என்றும் பயந்தே முட்டுக்கட்டையாய் நிற்க நேர்ந்தது. அதே காரணம்தான், வங்காள பிரிவினையின்போது முஸ்லீம்கள் இந்துக்களிடம் நம்பிக்கை கொள்ளாதிருந்ததும், பிறகு, லக்னோ காங்கிரசில் முஸ்லீம்கள் இந்துக்களை நம்பும் படியாக ஒப்பந்தமும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவமும் ஏற்றுக் கொண்டதால் இந்துக்களிடம் அவநம்பிக்கையில்லாமலிருந்ததும் எல்லோருமறிந்த விஷயம்.

பின்னும் ரௌலட் சட்டத்தின்போது ஏற்பட்ட கிளர்ச்சியில் முஸ்லீம்கள் கலந்துகொண்டு மகாத்மாவோடு ஒத்துழைத்ததற்கு காரணம், மகாத்மா முஸ்லீம்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதோடு இரு சமூகத்திற்கும் சமத்துவமாய் விடுதலையளிக்கத்தக்க திட்டங்களோடும் உழைத்ததாலும் மகாத்மா திட்டங்களில் எது நிறைவேறினாலும் அது பெரும்பாலும் முஸ்லீம்களுக்கும் சம பாகம் கிடைக்கக் கூடியதாகவும், ஒருவரை ஒருவர் மோசம் செய்ய முடியாததுமான திட்டங்களாய் இருந்ததாலும் அவற்றில் யாரும் சந்தேகப்படுவதற்கே வழியில்லாமல் போனதோடு இத்திட்டங்கள் நிறைவேறக்கூடிய நிலைமையிலும் இருந்தது.

அந்தப்படி மகாத்மா திட்டங்கள் முழுவதும் நிறைவேறி விட்டால், சில வகுப்பார் முக்கியமாய் பார்ப்பனர்கள் இப்போது அனுபவிக்கும் அதிக சுதந்திரமும், ஏகபோக ஆதிக்கமும் அனுபவிக்க முடியாதாகையால் இத்திட்டங்களுக்கு விரோதமாக பார்ப்பனர்கள் கிளம்ப வேண்டியதாயிற்று. இதன் பலனாக தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள், வடநாட்டுப் பார்ப்பனர்களாகிய பண்டித மாளவியாவையும் மகாராஷ்டிரப் பார்ப்பனரையும் தூண்டி விட்டு அவர்களுக்கு உடந்தையாயிருந்து, மகாத்மாவையும் அவரது திட்டத்தை யும் எதிர்க்க வேண்டியதாயிற்று. மகமதிய சமூகம் எண்ணிக்கையில் மிகுந்திருக்கிற மாகாணமாகிய பஞ்சாப்பும், வங்காளமும் இத்துடன் சேர வேண்டியதாயிற்று. லாலா லஜபதிராயும் தேசபந்து தாசும் மகாத்மாவையும் அவரது திட்டத்தையும் எதிர்க்கவும் அழிக்கவும் நேர்ந்தது. இந்த இரகசியத்தை அறிந்த பின்புதான் மகாத்மாவின் முதல் சிஷ்யராகவும் சட்டாம்பிள்ளையாகவுமிருந்த ஸ்ரீமான் சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரும் கடைசியாக அவர்களுக்கு உள்ளாளாயிருந்ததின் இரகசியமும் இந்த உணர்ச்சி ஏற்பட்டதனால்தான். இந்த இரகசியம் வெளியாகாமலிருப்பதற்கு "பார்ப்பனர்கள் கூடி இப்படிச் செய்கிறார்கள்" என்பதை பொது ஜனங்கள் அறியாமலிருப்ப தற்கு தேசபந்து தாசைத் தலைவராக்கவேண்டிய அவசியம் நமது பார்ப்பனர்களுக்கு ஏற்பட்டது. நமது மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைக் கொல்ல - ஜஸ்டிஸ் கட்சியைக் கொல்ல - பார்ப்பனரல்லாதாரிலேயே முதலியார் என்றும், பிள்ளை என்றும், செட்டியார் என்றும், நாயுடு என்றும்,



tamilnavarasam.com

நாயக்கர் என்றும், பாவலர் என்றும், சாயபு என்றும் அப்போதைக்கப்போது எப்படித் தலைவர்களை சிருஷ்டித்துக் கொள்ளுகிறார்களோ அதுபோல் இந்தியாவுக்கே தேச பந்துவைத் தலைவராக்கி அவருக்கு வேண்டிய விளம்பரம் கொடுத்து அவர் கையாலேயே ஒத்துழையாமைக்குக் கொள்ளி வைக்கச் செய்து அவர் வாயாலேயே ஒத்துழைப்பை வெளியாக்கச் செய்து ஒத்துழையாமையும் தேசபந்துவும் மறைந்த பிறகு வார்த்தைக்கு வார்த்தை ஒத்துழையாமையையும் தேசபந்து பெயரையும் சொல்லிக்கொண்டு தங்கள் ஜாதி ஆக்கம் பெற வேட்டை ஆடுகிறார்கள்.

மகாத்மாவையும் அவர் திட்டத்தையும் ஒழிக்கவே பண்டித மாள வியா இந்து முஸ்லீம் கலகத்தை ஆரம்பிக்கக் கருதி இந்து மகாசபை என்று கிளப்பினார். ஒத்துழையாமைக்கு சில முஸ்லீம்கள் அனுகூலமாயிருந்ததால் அவர்களில் சிலரைக் கலைத்துத் தங்களுடன் சேர்த்துக் கொள்ளுவதற் காகவே சென்னையில் சில ஜனாப்களை ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் சேர்த் துக் கொண்டது போல் வங்காளத்தில் சில ஜனாப்களையும் மௌல்வி களையும் சுவாதீனப்படுத்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவங் கொண்ட வங் காள இந்து முஸ்லீம் ஒப்பந்தமொன்றை தேசபந்து தாஸ் ஏற்படுத்தினார். இவ்வொப்பந்தத்தை தேச பந்துகாக்கினாடா காங்கிரசில் பிரேரேபித்தபோது இதை ஆமோதித்தவர் யாரென்று வாசகர்கள் அறிய ஆசைப்படுவார்கள். ஆமோதித்தவர் யாரென்றால் தமிழ்நாட்டுக் காந்தியாகிய ஸ்ரீமான் சி. இராஜ கோபாலாச்சாரியாராகும். எந்த இராஜகோபாலாச்சாரியார் என்று கேட் பார்களேயானால் "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இந்தியாவுக்குக் கூடாது; அது ஒற்றுமையையும் விடுதலையையும் அழிக்கும்; வகுப்புவாரி பிரதி நிதித்துவம் என்பது பார்ப்பனர்களை நசுக்குவதற்காக ஏற்பட்டது" என்பது போன்ற பத்து கற்பனைகள் எழுதி வருகிறாரே அந்த ஸ்ரீமான் இராஜ கோபா லாச்சாரியார்தான். இன்னும் கொஞ்சம் விவரமாய்த் தெரிய வேண்டுமானால் நமது நாட்டில் ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்ட போது அதற்கெதி ரிடையாய் சில பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே சென்னை மாகாணச் சங்கம் என்பதாக ஒன்றை ஏற்படுத்தி அதில் தாங்களும் கலந்து கொண்டு பார்ப்பனரல்லா தாருக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுப்பதில் எங்களுக்கு ஆக்ஷே பனையில்லை. ஆனால் அரசியலில் காங்கிரசை ஏற்றுக் கொண்டால் போதும் என்று சொல்லியும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை அப்போது ஒப்புக் கொண்டு காங்கிரஸ் திட்டத்திலும் தேசீய சங்க (நேஷனலிஸ்ட் கான்பரன்ஸில்) த்திலும் பார்ப்பனரல்லாதாருக்கு இத்தனை ஸ்தானம் என்றும் இத்தனை ஸ்தானங்களுக்குக் குறையாமல் என்றும் வேலைத் திட்டம் வெளியாக்கிவிட்டு இப்போது பார்ப்பனரல்லாதாருக்குள் கட்சி ஏற் படுத்தி அவர்களுக்கும் ஒற்றுமைக் குறைவு உண்டாகும்படி செய்து விட்டு "வகுப்புவாரி பிரதிநிதித் துவம் தேசத்தைக் கெடுக்கும் பிசாசு" என்கிறாரே அந்த ஸ்ரீமான் இராஜ கோபாலாச்சாரியாரால் ஆமோதிக்கப்பட்டு, வேறு பல ஆட்களை விட்டு அதை தோற்கடிக்கச் செய்து இப்போது ஒத்துழை யாமை



அடியோடு நசுக்கப் பட்டுப் போனபின், கல்கத்தா ஒப்பந்தம் கூடாது என்று ஒரு கக்ஷியும், அதைப்பற்றி பேசவே கூடாது என்று ஒரு கக்ஷியுமாய் இருவரும் சேர்ந்து அதைக் கொல்ல நினைப்பதின் ரகசியமும் இதுதான். ஆகவே ஒத்துழையாமை ஒழிந்து விட்டதாலும் மகாத்மா தலைமை ஸ்தானத்தில் இருந்து விலகி விட்டதாலும் அந்த ஸ்தானங்களுக்கு சுயநலமும் பார்ப்பன ஆதிக்கமும் வந்து மகமதிய சமூகத்திற்கு இதற்கு முன் ஏற்பட்டிருந்த நன்மைகளையும் அழிக்க சில முஸ்லீம்களை விலைக்கு வாங்கி அவர்களை உபயோகித்துக் கொள்வதாலும், அவநம்பிக்கையும் ஜாக்கிரதையும் மகமதிய சமூகத்திற்கு அவசியமாகி விட்டது. இதன் பலனாய் எங்குப் பார்த்தாலும் இந்து முஸ்லீம் கலகங்கள் ஏற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுப் போய் விட்டது. ஒரு பக்கம் பண்டித மாளவியா 'உரிமை' 'உரிமை' என்று சொல்லிக் கொண்டு இந்துக்களுக்கு முஸ்லீம்கள் பேரில் ஆத்திரம் உண்டாகும்படி பிரசாரம் செய்வதும் இதை எதிர்க்கவேண்டி மற்றொரு பக்கம் மகமதிய தலைவர்கள் என்போர் 'மதம் மதம்' என்று சொல்லிக்கொண்டு இந்துக்கள் மீது துவேஷம் உண்டாகும்படி பிரசாரம் செய்வதுமாய் ஏற்பட்டுப் போய்விட்டது. இருவர் சொல்லிக் கொள்ளும் உரிமையிலும் மதத்திலும் உண்மையான தத்துவம் இருப்பதாக நாம் நினைக்கவில்லை. பசுக் கொலை யைப் பற்றி இந்துக்கள் முஸ்லீம்களை உபத்திரவிப்பது அனாவசியமென்றே கருதுகிறோம். முஸ்லீம்கள் பசுக் கொலை செய்வதால் இந்துக்களுக்கு எந்த விதக் கஷ்டமோ நஷ்டமோ இருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்துக்களுக்கு எப்படி ஒரு ஆட்டையோ, கோழியையோ, பன்றியையோ விலை போட்டு வாங்கி வளர்த்து கொன்று தின்பதற்கு பாத்தியமுண்டோ, அதுபோல் முஸ்லீம் களுக்கும் பசுவையோ, ஆட்டையோ, கோழியையோ விலை போட்டு வாங்கி கொன்று தின்னப் பாத்தியமுண்டு. இப்படி இருக்க, முஸ்லீம்களுக்கு மாத்திரம் ஒரு ஜெந்து விஷயத்தில் நிர்பந்தம் ஏற்படுத்துவதின் பொருள் என்ன? மாடு சாப்பிடுவதும் மாட்டைக் கொல்லுவதும் நமது தேசத்தில் முஸ்லீம்கள் மாத்திரம் செய்யவில்லை. நமது நாட்டில் பஞ்சமர் என்று சொல்லுவோரில் கோடிக்கணக்கான பேர்கள் அப்படியே செய்கிறார்கள். நாம் இப்போது எந்த அரசாங்கத்தின் கீழ் இருக்கிறோமோ அந்த அரசாங் கமே மாடு தின்கிற வகுப்பைச் சேர்ந்தவர்கள். அதைப்பற்றி நாம் ஒரு சிறிதும் கவலைப் படுவதில்லையே. முஸ்லீம்களும் பஞ்சமர் என்று சொல்லு வோர்களும் பெரும்பாலும் ஏழைகளாயிருப்பதால் முறையே வயதாகி சாகப்போகும் மாடுகளையும், செத்த மாடுகளையும் உபயோகிக்கிறார்கள். நம்மை ஆளும் ஜாதியாரோ நல்ல வாலிபமுள்ளதாய் - காளைத்தரமாய் - உழைக்கக் கூடியதாய் - அழகுள்ளதாய்ப் பார்த்து வாங்கி கொன்று சாப்பிடு கிறார்கள். நமது நாட்டிலிருந்து வருஷம் ஒன்றுக்கு 10 லக்ஷக்கணக்கான மாடுகளையும் பசுக்களையும் விலை போட்டு வாங்கி கப்பலேற்றி மேல் நாட்டுக்குக் கொண்டு போகிறார்கள். இவைகள் எதற்காகக் கொண்டுபோகப் படுகிறது?



RangaRakes
tamilnavarasam.com

ஐரோப்பா தேசத்தில் பசு மடம் கட்டப்பட்டிருக்கிறதா? அல்லது உழவு வேலைக்காவது பாரமிழுக்கும் வேலைக்காவது கொண்டு போகிறார் களா? கொன்று தின்பதற்குத்தான் என்று நமது பார்ப்பனர்களுக்குத் தெரி யாதா? இதனால் இந்த ராஜாங்கத்தை ஒழித்து விட்டோமா? அல்லது வேறு மாடு தின்னாத தேசத்திற்குக் குடிபோய் விட்டோமா? பஞ்சமர்கள் என்று சொல்லுவோரையாவது மாடு தின்னும் காரணத்திற்காக, இந்துவல்ல என்கி றோமா? நமது அரசாங்கத்தாரும் நமது மதத்தாரும் செய்யும் காரியத்தை முஸ்லீம்கள் செய்தால் மாத்திரம் அவர்களோடு கலகத் திற்குப் போவது என்பதின் இரகசியம் என்ன? அல்லாமலும் ஒவ்வொரு பட்டணங்களிலும் முனிசிபாலிட்டியிலும் மாடு அறுப்பதற்கென்றே தனித் தொட்டியும், மாட்டு மாம்சம் விற்பதற்கென்றே தனி கசாப்புக் கடையும் ஏற்பாடு செய்துகொடுத்து அதினால் நாம் பணம் சம்பாதிக்கவில்லையா? இவ்வளவு காரியங்கள் நடக்கும்போதும் இவற்றிற்கு நாம் உடந்தையாய் இருக்கும் போதும் பசுக் கொலை என்பதற்குப் பொருள் என்ன?

அது போலவே மசூதி முன் மேளம் என்பதும் பொருளற்றதாகவே இருக்கிறது. ஒரு வகுப்பார் தங்கள் பள்ளியில் சுவாமியைத் தொழுவதானால் மற்றொரு வகுப்பார் தெருவில் மேளமடித்துக் கொண்டு போகக்கூடாது என்பது கொஞ்சமாவது வாதத்திற்குப் பொருத்தமானதல்ல. இது நமது பார்ப்பனர்கள் தங்கள் வீதியில் மற்ற வகுப்பார்களை நடக்கக் கூடாது என்று சொல்லுவது போலவே இருக்கிறது. ஒருவர் தொழுகைக்கும் மற்ற வகுப்பார் மேளத்திற்கும் என்ன சம்பந்தம்? மேளமடிப்பதால் கடவுளை வணங்கு வதற்கு முடியாமல் போய் விடுமென்று சொல்லுவதானால் அந்த வணக்கத் திற்கு மதிப்பு ஏது? அநேக பள்ளிவாசல்கள் சந்தைக்குப் பக்கத்திலும் அதிகமான ஜனப் புழக்கம், கூச்சல், வண்டிப் போக்குவரத்து முதலியவைகள் உள்ள தெருவிலும், சதா டிராம் வண்டி,ரயில் வண்டி, மோட்டார்கள் முதலி யன கத்திக்கொண்டு போகும் வழிகளிலும் சமுத்திர அலை சதா சர்வகாலம் இரைச்சல் போட்டுக் கொண்டிருக்கும் ஸ்தலங்களிலும், பள்ளி வாசல்களும் தொழுகைகளும் நடந்து கொண்டேதான் இருக்கின்றன. பள்ளி வாசல்க ளுக்குப் பக்கத்தில் உள்ள இந்து, கிறிஸ்தவர்கள் முதலிய வீடுகளிலும் கோவில்களிலும் கல்யாணம், சாவு, உற்சவம் முதலியவைகள் மேளத் தோடும் வாத்தியத்தோடும் நடைபெற்றுக் கொண்டுதான் இருந்து வரு கின்றன. இவைகளெல்லாம் ஆக்ஷேபிக்கப்படுவதில்லை; ஆக்ஷேபிக்க முடிவதுமில்லை. இப்படியிருக்க தெருவில் மாத்திரம் வாத்தியத்தோடு போகக்கூடாது என்பது இஸ்லாம் பள்ளிக்கு இந்துக்கள் மரியாதை செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகத்தான் ஏற்படுமே அல்லாமல் தொழு கைக்கு விரோதம் என்று சொல்லுவதில் பொருளே இல்லை. இம்மாதிரி பொருளற்ற இரு விஷயங்களைத் தங்கள் தங்கள் சுயநலத்திற்காக உபயோ கப்படுத்தி பாமர ஜனங்களைக் கிளப்பி விட்டு கலகங்களை உண்டாக்கி லாபமடைகிறார்கள்.



இது நிற்க, சிலர் தென் இந்தியாவில் இவ்வித கலகம் இல்லை என்று சொல்லிக்கொண்டும் அதற்குக் காரணம் இங்கு ஜனங்கள் பரஸ்பரம் ஒற்றுமை யோடும் இருப்பதாக சொல்லியும் பாசாங்கு செய்து கொண்டும் அவ்வகுப்புக்கு எவ்வளவு கெடுதி செய்யலாமோ அவ்வளவும் செய்து வருகிறார்கள். தென் இந்தியாவில் கலகம் இல்லாதிருப்பதற்கு இந்து முஸ்லீம் பரஸ்பர நம்பிக்கையும் ஒற்றுமையும் ஒருக்காலும் காரணமே அல்ல. முஸ்லீம்களின் எண்ணிக்கைக் குறைவும் இந்துக்கள் எண்ணிக்கை அதிக மும்தான் முக்கியக் காரணம். அப்படிக்கில்லாமல் சம எண்ணிக்கையோ அல்லது இப்போதிருப்பதை விட இன்னும் ஒரு பங்கு அதிகமாகவோ இருந்திருந்தால் தென்னாட்டு இந்து முஸ்லீம் ஒற்றுமை தெரிந்திருக்கும். நமது பார்ப்பனர் தங்கள் பணத்திமிரால் இரண்டொரு மகமதியரை விலைக்கு வாங்கி அவர்களைக் கொண்டு இந்துக்களின் ஓட்டுப் பெற இந்து விக்கிர கங்களை வணங்கச் செய்வதும் நெற்றியில் விபூதி குங்குமம் அணியச் செய் வதும் முஸ்லீம் சமூக நன்மைக்கும் மத உரிமைக்கும் விரோதமாய் அவர் களை பேசச் செய்வதும் எவ்வளவு கஷ்டப்பட்டு சம்பாதித்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வேண்டாம் என்று சொல்லச் செய்வதுமாய் நடந்து கொண்டிருந்தால் யார்தான் சகிப்பார்கள். இது எல்லாம் அடியோடு தப்பு என்று நாம் சொல்லவில்லை. ஆனாலும் சரியோ தப்போ அவரவர்களுக்கு அவரவர் மதக் கொள்கையும் அவரவர் நம்பிக்கையுமேதான் பிரதானமே தவிர வேறொருவரின் உபதேசம் பிரதானமல்ல. ஆதலால் நமது நாட்டில் முஸ்லீம் எண்ணிக்கைக் குறைவாயிருப்பதாலேயே அவர்களை எப்படி வேண்டுமானாலும் உபயோகித்துக் கொள்ளலாம் என்று எண்ணினாலும் அதன் கர்மபலனை அடைய வேண்டி வந்தே தீரும். உண்மையிலேயே நமது பார்ப்பனர்கள் தாங்கள் முன்னால் ஒப்புக்கொண்ட வகுப்புவாரிப் பிரதிநி தித்துவத்தை இப்போது தங்களுக்குப் பலம் அதிகம் ஏற்பட்டு விட்டதென்கிற அஹம்பாவத்தால் எதிர்ப்பார்களேயானால் முன்னால் ஒப்புக் கொண்ட பார்ப்பனரல்லாதாரிலேயே சிலரை விலைக்கு வாங்கி அவர்களைக் கொண்டே விஷமப் பிரசாரம் செய்யச் செய்வார்களேயானால் முடிவில் இந்து முஸ்லீம் கலகமாத்திரமல்ல, பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் கலவரம் கோஹட், கல்கத்தா முதலிய இடங்களைப் போலும் அதற்கு மீறியும் கலவரம் நடந்துவிடுமோ யென்று கவலைப்படுகிறோம். ஆனால் இவ்வளவு அக்கிரமங்கள் செய்யப்பட்டும் இன்னும் நடைபெறாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று சிலர் கருதுவார்கள். இதன் இரகசியங்களும் சூழ்ச்சிக ளும் இன்னும் பொது ஜனங்களுக்கு முழுதும் தெரியத்தக்க காலம் ஏற்பட வில்லை. அல்லாமலும் பார்ப்பனரைப்போல் சில ஆட்களை விலைக்கு வாங்கி வசப்படுத்திவிட பார்ப்பனரல்லாத இதரர்களும் முஸ்லீம்களும் இன் னும் மனம் துணியவில்லை; பாவ புண்ணியத்தை மதிக்கிறார்கள். அப்பேர்ப் பட்ட சமயம் வரும் காலத்தில் இப்போது நமது பார்ப்பனர்களுடன் திரிபவர் களும் அவர்களால் தலைவர்களானவர்களும் அவர்களைக் கை விட்டு



RangaRakes tamilnavarasam.com

விட்டு அவரவர்கள் வகுப்போடு சேர்ந்துக்கொள்ளுவார்களே தவிர இவர்களுக்கு உதவியாய் வரவு மாட்டார்கள்; வந்தாலும் ஒன்றும் செய்யமுடியாது என்கிற சத்தியத்தை இப்போதே உணர்வது நலம் என்றே நினைக்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 11.07.1926**



# டாக்டர் கிச்சுலுவின் உபதேசம்

## முஸ்லீம்கள் அரசியலில் தலையிடக் கூடாது
## நிர்மாண திட்டத்தால்தான் ஒற்றுமை ஏற்படும்

டாக்டர் கிச்சுலு கல்கத்தா இந்து முஸ்லீம் கலவரத்தைப் பற்றி சமாதானம் செய்யப் பிரசாரம் செய்வதில் மூன்று முக்கிய விஷயங்களைப் பற்றி சொல்லியிருக்கிறார்.

1. “இந்து முஸ்லீம் இருவரும் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்ற வேலை செய்தாலொழிய ஒற்றுமை என்பது ஏற்பட முடியவே முடியாது”.
2. “முஸ்லீம்கள் கட்டுப்பாடாய் இருக்க வேண்டும்”.
3. “முஸ்லீம்கள் அரசியலில் தலையிடக் கூடாது”.

என்று பேசியிருக்கிறார். ( இது 5.7.26 உ ‘மித்திரன்’ 4 - வது பக்கம் 5 - வது கலத்தில் காணப்படுகிறது) இப்படியிருக்க, டாக்டர் கிச்சுலு அப்படிச் சொன்னார், இப்படிச் சொன்னார், மகமதியர்களை காங்கிரசில் சேரச் சொன்னார் என்று எழுதுவதின் பொருள் என்ன? பாமர மக்களை ஏமாற்றுவதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்பது ராஜதந்திரமாய்ப் போய் விட்டது. ஒன்றா நிர்மாணத்திட்டம் அல்லது வகுப்புக் கட்டுப்பாடு; இரண்டிலொன்றுக்கு உழைக்க வேண்டுமே அல்லாமல் ஒரு வகுப்பை அமுத்தி, ஒரு வகுப்பு ஆதிக்கம் செலுத்த செய்யப்படும் சூழ்ச்சியாகிய பார்ப்பனக் காங்கிரசோ, சுயராஜ்யக் கக்ஷியோ தேசத் துரோகத்திற்கும் மற்ற வகுப்புத் துரோகத்திற்கும்தான் உதவும் என்பதும் கண்ணை மூடிக்கொண்டு மக்கள் அதில் சேரக்கூடாது என்பதும் டாக்டர் கிச்சுலுவின் உபதேசத்தால் விளங்கி விட்டது. ஆதலால் இனியாவது மகமதியர்கள் போலிகளை நம்பி மோசம் போகாமல் கண் விழித்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

**குடி அரசு - சிறு குறிப்பு - 11.07.1926**



RangaRakes
tamilnavarasam.com

# இனியும் ஆதாரம் வேண்டுமா?

சட்டசபைத் தேர்தலுக்குப் பார்ப்பன ஆதிக்கத்திற்கென சுயராஜ்யக் கட்சியின் சார்பாக காங்கிரசின் பெயரால் ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் கம்பெனியார் நிறுத்தும் அபேக்ஷகர்களைப் பற்றி அப்போதைக்கப்போது எழுதி வந்திருக்கிறோம். அவற்றுள் ஒரு சந்தர்ப்பத்தில் "ஜில்லாவிற்கு இரண்டொரு பார்ப்பனரல்லாதாரை நிறுத்தி பொது ஜனங்களுக்குப் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதார் பெயரைத் தெரியும்படியாகச் செய்து கடைசியில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு பார்ப்பனர் பெயரைப் போட்டுவிட்டார்கள்" என்று எழுதியிருந்தோம். அது இப்போது நிஜமாகவே போய் விட்டது.

திருநெல்வேலி ஜில்லாவிற்கு ஒரு பார்ப்பனர் பெயரை நுழைத்தார்கள். அது ஸ்ரீமான் சாது கணபதி பந்துலுவின் பெயரேயாகும். மதுரை ஜில்லாவிற்கு இப்போது இரண்டு பார்ப்பனர்களை நிறுத்தத் தீர்மானித்து விட்டார்கள். அதாவது, ஸ்ரீமான் முத்துராமலிங்கய்யரை ஒரு ஸ்தானத்திற்கு. மற்றொரு ஸ்தானத்திற்கு இப்பொழுதுதான் மெள்ள வேறொரு பார்ப்பனர் தலையை நீட்டப்படுகிறது. அதாவது, ஸ்ரீ கே. ஆர். வெங்கட்டராமய்யரேயாகும். திருச்சி ஜில்லாவிற்கும் ஒரு பார்ப்பனர் பெயர் நுழைந்து விட்டது. இன்னும் மற்றொரு ஆசாமியின் பெயரும் நுழையும் போலிருக்கிறது. சேலம் ஜில்லாவிற்கு இன்னும் ஒரு ஸ்தானம் பாக்கி இருக்கிறது. கடைசி காலத்தில் ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் பெயர் நுழையப் போகிறது. கடிதப் போக்குவரவுகள் நடந்து கொண்டுதானிருக்கின்றன. தஞ்சை ஜில்லாவிற்குக் காலியாக வைத்திருந்த ஸ்தானத்திற்கு நாம் முன் எழுதியபடியே, ஸ்ரீமான் ராவ்பகதூர் கே.எஸ்.வெங்கட்டராமய்யர் பெயர் போட்டாகி விட்டது. ஆனால் அங்கு இன்னும் இரண்டு பார்ப்பனர் சண்டை யிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதாவது, ஸ்ரீமான்கள் என்.கிருஷ்ணசாமி ஐயங்கார், பந்துலு வெங்கட்டராமய்யர் ஆகிய இருவருமேயாகும்.

ஸ்ரீமான் பந்துலு வெங்கட்டராமய்யர் காங்கிரசுக்கு எவ்வளவோ உழைத்தவராயிருந்தும் அவரை வேண்டுமென்றே தள்ளிவிட்டு, ஒரு பட்டதாரியாகவே பார்த்து நியமித்திருக்கிறார்களாம். ஏனெனில் பந்துலு ஐயர் மறுபடியும் ஒத்துழையாமையைக் கொண்டுவந்து விடுவாரோ என்கிற பயந்தானாம். ஸ்ரீ கே. எஸ். வெங்கட்டராமய்யர் பட்டம் விடப்போகிறார் என்று சமாதானமும் சொல்லுகிறார்கள். பட்டத்தை விட்டுவிடச் சொன்ன காலத்தில் விடவில்லை. அதற்கு மொத்தத்திலேயே யோக்கியதைக் குறைந்த பிறகும் ஸ்ரீமான் முதலியார் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து கொள்வேன் என்று மிரட்டிய பிறகும் பட்டம் விடுகிறார்களாம். சீக்கிரத்தில் ஸ்ரீமான் முத்தையா முதலியார் பெயரும் அடிக்கப்பட்டு அதற்குப் பதிலாக ஸ்ரீமான் கிருஷ்ணசாமி ஐயங்கார் பெயர் எழுதப்படும் என்று ஒரு குருவி சொல்லுகிறது. எப்படியாவது ஸ்ரீமான் மருதவானம் பிள்ளை அவர்களின் பிரசாரச் செலவில் இரண்டு மூன்று பார்ப்பனர் சட்டசபைக்குப் போகப் போகிறார்கள். ஸ்ரீமான் மருதவானம் பிள்ளை அவர்களின் பெரியோர்கள் எப்படி சம்பாதித்தார்களோ தெரியவில்லை, இவ்வித தர்ம கைங்கரியத்திற்குச் செலவாகிறது. இன்னமும் மற்ற ஜில்லாக்களிலும் இதுபோலவே ஒவ்வொரு பார்ப்பனர் பெயரை நுழைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

காஞ்சீபுரம் மகாநாடு நடந்த சமயத்தில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்குத் தலைவர் பட்டம் சூட்டுவதில் ஸ்ரீமான்கள் நாயுடுகாரும் முதலியார்வாளும் போட்டி போட்டபோது சிலர் பார்ப்பனரே கூடாது என்றும், அதிலும் நமது ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் கூடவே கூடாது என்றும் ஆக்ஷேபித்த காலத்தில் "என்னை நம்புங்கள், நான் எல்லாவற்றையும் சரிப்படுத்தி பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் ஜனத் தொகைக்குத் தக்கபடியே ஆள்களை நிறுத்துவதாக உறுதி கொடுக்கிறேன்" என்றும் சொல்லி உறுதி கொடுத்து, பார்ப்பனரல்லாதாரை ஏமாற்றி, ஐயங்காருக்குப் பட்டங்கட்டிய 'வசிஷ்ட முனிவர்கள்' இன்று, ஐயங்கார் 'போடு குட்டிக் கரணம்' என்றால் "சுவாமி எண்ணிக் கொள்ளுங்கள் இதோ போடுகிறேன்" என்கிறார்கள். நாள் செல்லச் செல்ல பார்ப்பனர்களின் பெயர்கள்தான் சட்டசபைகளுக்கு அடிபடுகிறதே தவிர 'வசிஷ்டர்களின்' வாக்கு நிறைவேறுவதாகக் காணவில்லை. ஆதலால் சுயராஜ்யக் கட்சி பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஏற்பட்டது யென்பதற்கு இனியும் ஏதாவது ஆதாரம் வேண்டுமா?

**குடி அரசு - கட்டுரை - 11.07.1926**



RangaRakes tamilnavarasam.com

# எதிர்பார்த்த வண்ணமே!

நாம் எதிர்பார்த்த வண்ணமே திருவாளர் திரு. வி.கலியாணசுந்தர முதலியாரவர்களும் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்த தன் தொடர்பை விலக்கிக் கொண்டார். “இது முடிந்த மொழியன்றி மீண்டு முன்னு மொழி யன்று” என்னும் சொற்களால் இனி மீண்டும் புனராலோசனை செய்வதில்லை எனவும் கூறிவிட்டார்.

இவரது இராஜினாமாவைப் பிரிதொரு பக்கம் பிரசுரித்துள்ளோம். டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரவர்களும் திரு. முதலியாரவர்கட்கு முன்னரே விலகி விட்டார். அவரும் இனி புனராலோசனை செய்ய முடியாது என்பதாக தமிழ் நாடு காங்கிரஸ் நிர்வாகக் கூட்டமும் பொதுக் கூட்டமும் நிகழ்ந்த 29-ந் தேதியில் தலைவருக்குக் கிடைக்கும்படியும் அதைக் கூட்டத்தில் படித்துக் காட்டுமாறு கடிதம் அனுப்பியிருந்தும், நமது பார்ப்பனத் “தலைவர்” அதைப் படித்துக் காட்டாமலும் விஷயத்தையே வெளியிடா மலும் மூடிவைத்துவிட்டு புனராலோசனை செய்யுமாறு கேட்டுக்கொள்வதாக திருட்டுத் தீர்மானம் செய்து ஏமாற்றினார்.

திரு. முதலியார், திரு. நாயுடுகார் ஆகிய இருவரும் காங்கிரஸ் காரியக் கமிட்டியினின்று விலகியே விட்டார்கள். இதன் தத்துவம் என்ன? இது போழ்து இவர்களுக்கு தேசபக்தி இல்லாது போயிற்றா? சுயநலம் முளைத்து விட்டதா? அல்லது சர்க்கார் தயவை நாடியா? அன்றி ஜஸ்டிஸ் கட்சியில் சேரவா? இவை ஒன்றிற்கும் அல்லவே அல்ல. மற்று எதன் பொருட்டு விலகிக் கொண்டார்கள்? காங்கிரஸ் மகாசபையில் பார்ப்பனர்கள் செய்யும் சூழ்ச்சியை அறிந்து, தாங்கள் தற்கால காங்கிரசில் அங்கம் வகித்தி ருப்பதால் நாட்டிற்கு எவ்வித நன்மையும் செய்ய இயலாதென்பதை உணர்ந்து, தங்களை யே கருவியாகப் பிரயோகித்து நமது சமூகத்திற்கு - ( பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு) பார்ப்பனர்கள் ஆபத்து விளைவிக்கிறார் கள் என்பதைக் கண்ணாரக் கண்டுகொண்டதாலுமேயல்லாது வேறல்ல. ஆனது பற்றியே தைரியமாய் விலகி விட்டார்கள். நமது பார்ப்பனர் இனி இவர்கள் மீது வசை புராணம் பாடி இவர்களுக்குப் புன்மொழி மகுடஞ் சூட்ட பார்ப்பனரல் லாதாரிலேயே சில பாவலர், நாவலர் முதலியோரைத் தலைவராக்குவார்கள். நிற்க,



காங்கிரஸ் காரியக் கமிட்டியில் இனியும் நான்கு பார்ப்பனரல்லாத கன வான்கள் அங்கம் வகித்து வருகிறார்கள். அவர்கள் திருவாளர்களான ஈ.வெ.இராமசாமி நாயக்கர், ஆர்.கே. ஷண்முகம் செட்டியார், மருதவனம் பிள்ளை, ஹமீத்கான் ஆகியோரேயாகும்.

இந்நால்வருள் திரு. நாயக்கரைப் பற்றி கவலையுற வேண்டியதே யில்லை. கூடிய விரைவில் பார்ப்பனர்களே அவரை விலக்கிவிடப் போகி றார்கள். திரு. நாயக்கர் காங்கிரசில் அங்கம் வகித்திருப்பது பார்ப்பனர்க ளுக்கு பேரிடராய் இருப்பதாகக் கருதுகிறார்களேயன்றி அவர் இருக்க வேண்டுமென்கிற ஆசை பார்ப்பனர்களுக்கு ஒரு சிறிதும் இல்லை. திரு. ஆர்.கே. ஷண்முகம் செட்டியாரைப் பற்றி சிறிது கவனிக்க வேண்டியதிருக் கிறது. “இப்பொல்லாப் பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாதார் சமூகத்தையும் அவர்களது இயக்கத்தையும், ஆதிக்கத்தையும் அழிப்பதற்காகவே திரு. ஷண்முகம் செட்டியாரை உபயோகித்து வருகிறார்கள். திரு.செட்டியாரும் தனக்கு இந்தியா சட்டசபையில் ஸ்தானம் பெறவேண்டி தமது சமூகத்தைப் பார்ப்பன ருக்கு விற்று பார்ப்பனர் பின் திரிகிறார்” என்று உலகினர் சொல் வதற்கு முன்பே விலகிக் கொள்ளுவார் என்று நம்புகிறோம். ஆனால் திரு. முதலியாரும் டாக்டர் நாயுடுகாரும் விலகிக் கொண்டதால் இனி நமது பார்ப்பன வர்க்கத்திற்கு திரு. ஷண்முகம் செட்டியார் “லோக குருவாக” விளங்கப் போகிறார். அவருக்கு இனி சின்னாட்கள் வரை ‘ஸ்ரீஜத்’ ‘ஸ்ரீலஸ்ரீ’ ‘பிரம்மஸ்ரீ’ முதலிய பட்டங்கள் வழங்கப் பெறும்; அநேக பார்ப்பனக் குழந்தைகட்கு செட்டியாரது திருப்பெயர் சூட்டப்பெறும்; பார்ப்பனர் போகும் கூட்டங்களிலும் நிறுவும் கூட்டங்களிலும் செட்டியாரவர்கள் பெயர் பெரிய பெரிய எழுத்துக்களில் பொறிக்கப்பெறும்; பிரசங்க மேடைகளி லெல்லாம் செட்டியாரது பெயரின் நாதம் தொனிக்கப் பெறும். பார்ப்பனப் பத்திரிகை களெல்லாம் செட்டியார் மயமாகவே இருக்கும். இனி ஆறு மாத காலத்திற்கு - அவ்வளவேது? - நான்கு மாத காலத்திற்கு, தெளிவாகக் கூறுமிடத்து சட்டசபைத் தேர்தல் முடிவுறும் வரை நமது செட்டியாருக்கு எங்கும் வரவேற்பும் வண்டியிழுப்பும் பூமாலைகளும் மாப்பிள்ளைக் கோல மும் பற பறக்கும். நமது செட்டியார் கட்புலனுக்கு, நம்மை நோக்குங்கால் கண்ணகி போன்றும், பார்ப்பனரை நோக்குங்கால் மாதவி போன்றும் புலனாகும். சுலபத்தில் ‘மாதவியை’ விட்டு விலக மனங் கொள்ளார். இனி அவரது யோகமே யோகம் ! போனது போகட்டும். திரு. முதலியாரும், டாக்டர் நாயுடுகாரும் விலகினதினாலாவது நமது செட்டியாருக்கு இத்த கைய ராஜானு ராஜபோகம் வருகிறதே; நாம் ஆசை தீரப் பார்த்து ஆனந்தம் அனுபவிக்கலாம்! எவ்வா நிருப்பினும் இறுதியில் முதலியார் நாயுடு போன்றே செட்டியாரும் பார்ப்பனரை விட்டு விலகியே தீருவார். ஏனெனில் திருவாளர்கள் முதலியார், நாயுடு, நாயக்கர், சக்கரை, ஆரியா, தண்டபாணி, இராமநாதன் ஆகியோர் கட்கு பார்ப்பனர்கள் அளந்த வள்ளம் அட்டத்தில் வைத்திருக்கிறார் களேயன்றி உடைத்தொழித்து விட்டாரில்லை. ஆகவே



RangaRakes tamilnavarasam.com

அவரது மருள் மயக்கம் தெளியும் வரை காத்திருக்க வேண்டியதே.

திரு. மருதவனம் பிள்ளை அவர்களும் மிகவும் நல்லவர். ஆனால் அவர் சுலபத்தில் விலகுவார் என்று எதிர்பார்ப்பதே முட்டாள்தனமாகும். ஏனெனில், அவர் தானும் ஞானஸ்நானம் பெற்று பார்ப்பனராக மாற்ற மடைந்து விட்டதாக உள்ளூற நினைத்துக் கொண்டிருக்கிறார். 1923-ம் ஆண்டு நடந்த தேர்தலின் போழ்து திரு. மருதவனம் பிள்ளையவர்களின் பொருட் செலவாலும் பிரசாரத்தாலும் திரு எ. ரெங்கசாமி ஐயங்கார், பந்துலு ஐயர் ஆகிய இரு பார்ப்பனர்கள் சட்டசபையில் அங்கம் பெற்றிருப்பினும் திரு.பிள்ளைக்கு சுமார் 50,000 ரூபாய் வரை செலவழிந்திருப்பினும், தான் சட்டசபை அங்கம் பெற்றது பார்ப்பனர்தம் கருணையாலும் தயவின் பெருக்காலும் என்றே திரு. பிள்ளை நினைத்துக் கொண்டிருக்கிறார்.

இனி, அடுத்த தேர்தலில் தான் சட்டசபை அங்கம் அடைதலும் அக் கூட்டத்தார் தயவிருந்தால்தான் ஆகும் என்பதாகவே திரு.பிள்ளை நினைக்கிறார். இம்மட்டோ, பார்ப்பனர் விரோதம் நேர்ந்துவிடின் பெரும் சாப மாய் முடியுமென்றும் வாழவே ஏலாதென்றும் முடிவான கருத்துடையவர் நமது பிள்ளையவர்கள். மேலும் திரு. எஸ்.சீனிவாசய்யங்காரின் தயவால் வடபாதி மங்கலம் எஸ்டேட்டுக்கு திரு.பிள்ளை ரிசிவராகயிருக்கிறார் என்று சொல்லிக் கொள்ளப்படுபவர். திரு. எ. ரெங்கசாமி ஐயங்கார் தயவால் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் நாள்தோறும் திகழ்பவர், இன்னும் வேறு பல வழிகளிலும் பார்ப்பனர்களுடன் இரண்டறக் கலந்து கொண்டிருக்கிறார். ஆகவே ''பிள்ளைவாள் பார்ப்பனரை விட்டு விலகுவார்'' என்று எளிதில் எதிர்பார்க்க வல்லதாகா. திருவாளர்கள் முதலியார், நாயுடுகார், நாயக்கர், சக்கரை, ஆரியா முதலிய இவர்கள் பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளையும் கபட வேஷ நாடகத்தையும் அறிய இத்துணை காலமும் இத்துணை மரியாதை களும் வேண்டியிருந்ததெனில் அந்தோ! பாவம்!! சின்னாட்களுக்கு முன்பாக உலக வாழ்க்கையிலிறங்கிய நமது திரு. பிள்ளையவர்களுக்கு எத்துணை காலம் கடக்கவேண்டும்? எனவே நாம் இதை எளிதில் எதிர்பார்த்தல் எங்கனம் சாலும்.

ஜனாப் ஹமீத்கான் சாகிப் விஷயமோ.......... அது பிறந்தகத்திலிருந் தாலும் ஒன்றுதான் புக்ககத்திலிருந்தாலும் ஒன்றுதான். எங்கிருந்தாலும் அப்பாத்திரம் தண்ணீர் மொள்ளுவதற்குப் பயன்படாது. அல்லது அப்பாத் திரம் விலகி வந்துவிட்டாலும் அதைப் போன்ற பாத்திரம் நமது பார்ப்பனர் களுக்கு ஆயிரக்கணக்காக அகப்படும். ஆகவே அதைப் பற்றி எவரும் கவலை கொள்ளார். எனவே இனி பார்ப்பனரல்லாதார் மேற்கொள்ள வேண் டிய கடமை யாது? தாங்கள் ராஜினாமா செய்துவிட்டதாலேயே இனி திரு. முதலியாரும் டாக்டர் நாயுடுகாரும் வாளாவிருக்கப் போவதில்லை என்றும் எழுதியிருக்கிறார்கள் . தங்களுடைய மனதிற்குச் சரியென்று தோன்றும் வண் ணம் வெளியில் பிரசாரம் செய்வதற்கு அவர்கள் காங்கிரஸ் காரியக் கமிட்டி



யில் அங்கம் வகித்திருப்பது ஒவ்வாத காரியமென்கிற உணர்வினாலேயே விலகிக்கொண்டதாக தெரிவித்துள்ளார்கள். இதனின்று அவர்கள் தீவிர பிரசாரத்தில் இறங்கப் போகிறார்கள் என்று தெளிவாகிறது. அத்தீவிர பிரசாரம் யாதென நோக்குழி 9.7.26 -ல் வெளிப் போந்த தமது 'நவசக்தி' பாலின் சிலம்பொலித் தலைப்பில் 'இந்தியாவின் தலை எழுத்து' என்னும் பொருள் பற்றிய கட்டுரையில் திரு. முதலியார் தமது உள்ளக்கிடக்கையை உணர்த்து கிறார். அஃதாவது,

"இயற்கைக்கு மாறுபட்ட பல கொடுமைகளை மக்கள் வாழ்வில் புகுத்தினமையால் மக்கள் அன்பு கட்டுக் குலையலாயிற்று - பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்ததும் - மக்கள் உடல் தாங்கியுள்ள சிலரைத் தீண்டாதாரென ஒதுக்கியதும் - பெண் மக்களைக் கல்வி பெறாத வழியில் அடங்கி வைத்திருப் பதும் - கோயில்களிலும் மக்கட்கு உரிமை படிப்படியாக அளந்து வழங்கி யிருப்பதும் - இவைகள் குற்றமுடையன என்று சொன்ன அறவோர்களைக் கொன்றதும்-ஆகிய கருமங்கள் திரண்டு உருண்டு நாட்டை வருத்துகின்றன- இதுவே இந்தியாவின் தலை எழுத்து - இத்தலை எழுத்தைத் துடைக்க வேண்டுமானால் நாட்டார் என் செயல் வேண்டும்? முதலாவது நாட்டார் தம் பாலுள்ள குறைகளைக் களைய வேண்டும், நாட்டில் பலதிறக் குறைகளை வைத்துக் கொண்டு வெறும் அரசியல் கிளர்ச்சி செய்வதனால் நாட்டிற்கு இடுக்கண் பல நேருகின்றன- இப்போதைய அரசியல் கிளர்ச்சியில் மனிதனை விலங்காக்கும் பேச்சும் செயலும் மலிந்து காணக் கிடக்கின்றன - தற்காலக் கல்வியுடையார் என்று சொல்லப்படுவோர் சாதி வேற்றுமை களையும் கிளப்பி விடுவதில் கண்ணுங்கருத்துமாயிருக்கிறார். **இந் நிலையில் அரசியல் கிளர்ச்சி வழி நண்ணியும், அரசியல் கட்சி வழி நின்றும் உழைப்பதால் நாட்டுக்கு உண்மை நலன் விளையுமென்று சொல்வதற் கிடமில்லை. நம் நாட்டில் பிராமணர் பிராமணரல்லாதார் பகைமை நிலை நண்ணியிருக்கிறது என்பதை மறுப்பதும் மறைப்பதும் அறியாமை யாகும். ஆகவே, இப்பொழுது நம் நாட்டுக்குரிய பணி யாது? வெறும் அரசியல் கிளர்ச்சி பணியன்று. நாட்டில் நீண்டகாலமாக நிலவி வரும் குறைபாடுகளைப் போக்கவும் தற்போதுள்ள சில புதிய குறைபாடுக ளைத் தொலைக்கவும் வல்ல ஒரு பணியில் அறிஞர்கள் தலைப்படல் வேண்டும். உரிமையில்லா நாட்டில் அரசியல் கட்சிகள் வளர்வதும், அவைகளின் வழி உழல்வதும், நாட்டைக் குழியில் வீழ்த்துவதாக முடியும்.**

என்று உரைக்கிறார். இவ்வுரைகளை நாம் பொன்னே போல் போற்று கிறோம். நமது 'குடி அரசு' வின் கொள்கைகளையும் அது ஆரம்ப காலந் தொட்டு இற்றைவரைத் தாங்கி வந்த யாவையும் பொறுக்கித் தரித்துப் புடைத்துப் பார்த்தால் திரு. முதலியார் மேற்கூறியுள்ள கருத்துக்கள் புலனா குமேயன்றி பிறிதொன்றும் புலனாகா.



RangaRakes tamilnavarasam.com

உண்மையில் நமது முதலியார் இக்கொள்கைகளோடு செய்யும் எவ் விதப் பணிக்கும் நாம் தொண்டனாயிருக்க உறுதி கூறுகிறோம். டாக்டர் நாயுடுகாருக்கு இக்கொள்கைகளின் முறையில் இரண்டோரிடத்தில் மாறுபா டாய்த் தோன்றினும் இவற்றுள்ளிருக்கும் சத்து நிரம்பிய தத்துவத்தில் எத்த கைய மாற்றமும் இருக்காதென்றே சொல்லுவோம். தமிழ்நாட்டு மக்களில் பார்ப்பனரல்லாதாரில் 1000-க்கு 999 மக்கள் இக் கொள்கை உடையவர்களாக வேயிருக்கின்றனர். ஜஸ்டிஸ் கட்சியாரது கொள்கையும் இதுவென்றே சொல்கி றார்கள். இவ்வாறாக, நம்முடைய அபிப்பிராய பேத மென்பது மாய்கை கெழு மிய மனக்கசப்பே அல்லாமல் வேறல்ல. ஆகலான் விரைவில் பார்ப்பன ரல்லாதார் அனைவரும் ஒன்றுபட்டு ஓர் மகாநாடு கூட்டி தங்களுக்குள்ளிருக் கும் மனக்கசப்பையும் மாய்கையையும் அகற்றி ஒன்றுகூடி மேற்கண்ட கொள்கையுடையதான ஆக்கல் திட்டத்தை கோலி அஃதினை நிறைவேற்ற உழைப்பது அறிவுடைய மக்களின் செயலாகும். ஆகவே இற்றைவரை நாம் முறையீடிட்டு வந்த வண்ணம் விரைவில் தமிழ்மக்கள் ஒருங்கு சேர்ந்து ஓர் முடிவு காண விழைகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 11.07.1926**



# பார்ப்பனப் பத்திரிகைகள்

நமது நாட்டுப் பார்ப்பனப் பத்திரிகைகளும் பார்ப்பனப் பத்திராதி பர்களும் ஸ்ரீமான் டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரையும் திரு.வி.கலியாண சுந்தர முதலியார் அவர்களையும் குல குருவாய் மதித்து 'ராஜரிஷீ' 'பிர்ம ரிஷீ' என்று புகழ்ந்து வண்டியில் வைத்து இழுத்தது வாசகர்களுக்குத் தெரியும். இப்பேர்ப்பட்ட இருவர்களையும் இன்று என்னமாய் நடத்துகிறார் கள் என்று பார்த்தால் இவ்விரு கனவான்கள் எழுதியனுப்பிய ராஜினாமாக் களை சரியாய் தங்கள் பத்திரிகையில் போடவே இல்லை. எங்கோ ஒரு மூலை யில் ஒன்றரை அங்குலத்தில் பொது ஜனங்கள் ராஜினாமாவின் முழுக் காரியங்களையும் அறியாதபடி போட்டிருக்கிறது. இவர்கள் ராஜினாமாவை மதித்ததாகக்கூட காட்டவில்லை. வேறு ஏதாவது உபசார வார்த்தைகூட எழுதவில்லை. ஒரு வயிற்றுச் சோத்து பார்ப்பனன் ஒரு உத்தியோகத்திலும் இல்லாமல் வெறும் ராஜினாமா அனுப்பியிருந்தால் அதை மகாத்மா காந்தியிடம் கொண்டுபோய் இந்தத் தலைவர் போய்விட்டால் தமிழ்நாடே முழுகிவிடும் என்று சொல்லி மகாத்மாவையே ராஜி செய்யச் சொல்லி ராஜினாமா கொடுத்த தாலேயே அவனை பெரிய தலைவராக்கி விடுவார்கள். இதுபோலவே நமது பார்ப்பனர் தங்களது பத்திரிகையின் பலத்தால் பார்ப்பனரல்லாதாருடைய வாழ்வையும் முற்போக்கையும் பாழ்படுத்தி வரு கிறார்கள். இதிலிருந்தாவது நம் நாட்டு முன்னேற்றத்தையும் பார்ப்பன ரல்லாதார் சுயமரியாதையையும் உத்தேசித்தாவது பார்ப்பனப் பத்திரிகை களை ஒழித்து பார்ப்பனரல்லாத பத்திரிகைகளை ஆதரிக்க முன் வரலா காதா? ஓ! பார்ப்பனரல்லாத மக்களே! நீங்கள் இன்னமும் உணரவில்லையா? அல்லது அலக்ஷியமா! பயமா! சுயநலமா! எழுங்கள்! பார்ப்பனரல்லாத பத்திரிகைகளை பரப்புங்கள்! அஃதின்றி நாம் சுயமரியாதையோடு மனித னாக வாழ முடியாது! ஒவ்வொரு நாளும் படுக்கையை விட்டெ ழும்போது பத்திரிகையைப் பரப்ப இன்று என்ன செய்வது என்று யோசியுங்கள்! படுத் துறங்கும்போது இன்று என்ன செய்தோ மென்று நினையுங்கள்! உங்களுக்கு ரோஷம், மானம், வெட்கம் இல்லையா என்று உங்கள் மனச்சாக்ஷியைக் கேளுங்கள்! அன்றுதான் நாமும் மனிதனாகலாம்! இல்லாதவரை ஸ்ரீமான் ஒத்தக்காசு கந்தசாமி செட்டியார் பிராமணரல்லாதாருக்கு மூளை இல்லை என்பது பலித்தாலும் பலித்துவிடும்!

**குடி அரசு - சிறு குறிப்பு - 11.07.1926**



RangaRakes tamilnavarasam.com

# இந்து முஸ்லீம் சந்தேகத்தை ஒழிக்க வழியாம்

## “பயித்தியம் தெளிந்து போய்விட்டது உலக்கை எடு கோவணங் கட்ட”

5. 7. 26 - தேதி ‘மித்திரன்’ தன் தலையங்கத்தில் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு ஒரு புது வழி கண்டுபிடித்ததாக சாமர்த்தியம் காட்டி விஷச் சிரிப்பு சிரிக்கிறான். அதாவது, சட்டசபைகளிலோ மற்றும் பொது ஸ்தாபனங்களிலோ சமூக சம்பந்தமான பிரச்சினைகள் வரும்போது அந்தந்த சமூகத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களில் முக்கால் வாசிப்பேர் ஆக்ஷேபித்தால் அந்த பிரச்சினைகள் கொண்டு வரக்கூடாதாம். இந்த மாதிரி ஒரு தீர்மானம் செய்துவிட்டதால் முஸ்லீம்களுக்கு பத்திரம் ஏற்பட்டு போய்விட்டதாம். இனி முஸ்லீம்கள் சுயராஜ்யக் கட்சியாரோடு இரண்டறக் கலந்துபோக வேண்டியது தானாம்.

இது “பைத்தியம் தெளிந்து போய்விட்டது, உலக்கை கொண்டு வா கோவணம் கட்டிக் கொள்ள” என்று ஒருவன் தனது பைத்தியம் தெளிந்து போனதற்கு அடையாளமாகப் பேசினது போல் இருக்கிறது. மகமதிய மெம்பர்களில் முக்கால் வாசிப்பேர் ஆக்ஷேபித்தால் இந்து முஸ்லீம் சம்பந்தமான பிரச்சினை சபைகளில் வரக்கூடாது என்பது சரிதான். உதாரணமாக, ஒரு முனிசிபாலிட்டியில் ஒரு பள்ளிவாசலை இடித்து ரோடு போடவேண்டும் என்பதாக ஒரு தீர்மானம் வருவதாக வைத்துக் கொள்வோம். அந்த முனிசிபாலிட்டியில் 30 மெம்பர்களில் மகமதியர்கள் 8 பேர் இருப்பதாகவே வைத்துக் கொள்வோம் . இந்த 8 பேரில் 6 பேர் ஆக்ஷேபித்தால் அந்த தீர்மானம் நிறுத்தப்பட்டுப் போகவேண்டும். இந்த விதி நல்ல விதி தான். இது எப்படி இருந்தால் உண்மையான பலனைக் கொடுக்கும்? இந்த எட்டு மெம்பர்களும் மதப்பற்று உள்ளவர்களாகவும் முஸ்லீம் சமூகத்திற்கு பொறுப்புள்ளவர்களாகவும் இருந்தால் தானே இந்த எட்டு பேரில் ஆறு பேராவது ஆக்ஷேபிப்பார்கள் என்று நம்பலாம். அப்படிக்கின்றி ‘ஸைபுல் இஸ்லாம்’ எழுதுவது போல் ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்கார் பணத்தால், சீனிவாசய்யங்காருக்கு நல்ல பிள்ளைகளாய், சீனிவாசய்யங்கார் ஜாமீன் பேரில் சுயமரியாதையற்றவர்களாய் அந்த சபைக்குப் போகக்கூடியவர்களாயிருந்தால் முக்கால்வாசிப் பேரல்ல முழுவாசிப் பேரல்ல, கால்வாசிப் பேராவது ஆக்ஷேபிக்கக் கூடியவர்கள் கிடைப்பார்களா?





அதே மாதிரி இந்துக்களுக்குள்ளாகவும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற விஷயத்திலும் பார்ப்பனரல்லாதார் தயவில்லாமல் அய்யங்கார் அவர்கள் பணச் செலவில் ஸ்தானம் பெறுகிறவர்கள் நிறைந்த சட்டசபையில் பார்ப்பனரல்லாதாருக்கு எப்படி பந்தோபஸ்து ஏற்படும்? உதாரணமாக, பார்ப்பனரல்லாதார் பணத்திலும் பிரசாரத்திலும் சட்டசபைக்குப் போன ஸ்ரீமான் டி. ஆதிநாராயண செட்டியார் எந்த விதத்திலாவது பார்ப்பனரல்லாதாருக்குப் பொறுப்பாளியாய் இருக்கிறாரா?

குருகுல விவாதத்தில் பார்ப்பனர் சொல்லுவதெல்லாம் சரியென்றார். பார்ப்பனர்களுக்காக ஊர் ஊராய் பிரசாரமும் செய்தார். அதற்காகவே இப்போதும் நமது பார்ப்பனர்கள் அவரை ஆதரிக்கிறார்கள். அவரும் பார்ப்பனர் பணத்தையும் பார்ப்பனப் பத்திரிகைகளின் பிரசாரத்தையுமே நம்பி மறுபடியும் சட்டசபைக்கு அபேக்ஷகராய் நிற்கிறார். நமது ஜனங்கள் மறுபடியும் ஏமாந்து செட்டியாரை ஆதரித்துவிடுவார்கள் போலவே தோன்றுகிறது.

ஆதலால், தெரிந்தெடுக்கும் பொறுப்பு அந்தந்த சமூகத்தார்களுக்கென்று வரையறுத்து வைக்கப்படாத வரையில் வேறு எவ்வித விதி செய்தாலும் யோக்கியர்களும் சமூகப்பற்று மதப்பற்று உள்ளவர்களும் பதவி அடைய முடியவே முடியாது. பார்ப்பனர்களின் ‘கூலிகள்’ வந்து சேரத்தான் இடங்கொடுக்கும் என்பது திண்ணம். ‘மித்திரன்’ இந்த சூழ்ச்சித் தந்திரங்களால் முஸ்லீம்களை ஏமாற்ற முடியாது என்பதும் திண்ணம்.

**குடி அரசு - கட்டுரை - 11.07.1926**

RangaRakes

tamilnavarasam.com

## கிறிஸ்தவ மதப் பிரசாரமா?

"கிறிஸ்தவ மதப் பிரசாரமா?" என்ற மகுடமிட்டு, சென்னைப் பார்ப்பன மித்திரன் சென்ற 5-7-26-ல் குறிப்பொன்றெழுதி, சென்னைக் கடற்கரையில் ஸ்ரீமான் ஆரியா இந்து மத அநுஷ்டானங்களைப் பற்றியும், இந்து தெய்வங்களைப் பற்றியும் குறிப்பாக விக்ரஹ ஆராதனையைப் பற்றியும் தூஷித்துப் பேசியதாகவும், அவர் பேச்சைக் கேட்டு ஜஸ்டிஸ் கட்சியினர் ஆனந்தங் கொண்டதாகவும், இத்தகைய கிறிஸ்தவ மதப் பிரசாரம் செய்ய ஸ்ரீமான் ஆரியா தங்களோடு காங்கிரசிலிருந்த காலத்தில் தைரியங் கொள்ளவில்லையென்றும், இந்து மதத்தை ரட்சிக்கு முகத்தான் எச்சரிக்கை செய்திருக்கிறான். இக் குறிப்பில் அயோக்கியத்தனமும் சூழ்ச்சியும் ததும்பி வடிகிறது. யோக்கியமானவன் ஆரியாவின் பேச்சுக்களை முற்றிலும் பிரசுரித்து, தகுந்த ஆதாரத்தோடு கண்டித்திருப்பான். அவ்வாறின்றி "தூஷித்தார், மதப் பிரசாரம் செய்தார், ஆனந்தங் கொண்டனர், சட்டிக் கூழுக்கு மதத்தைப் புறக்கணித்தது யார்?" என்று எழுதி பொதுவாகக் கிறிஸ்தவ மதத்தின் பேரிலும், சிறப்பாக ஆரியாவின் பேரிலும் பொது மக்களி டையே துவேஷத்தை விளைவிக்கப் பார்ப்பது எவ்வளவு அயோக்யத் தனமும் சூழ்ச்சியுமானதென்று கவனியுங்கள்.

மேலும், இந்து மதமானது போலி அநுஷ்டானங்களிலும், வெறும் விக்ரஹங்களிலும் அடங்கிக் கிடக்கவில்லை. போலி வேடங்களை ஒருவர் கண்டிப்பதாலேயே இந்து மதங் கவிழ்ந்து கிறிஸ்துவ மத மோங்கிவிடாது. இன்று ஆரியாவைக் கண்டிக்கும் இதே பார்ப்பனன், இன்று இந்துப் பறையனாயிருக்கும் கோவிந்தனை பக்கத்தில் வராதே என்று விரட்டுகிறான். அதே கோவிந்தன் நாளைய தினம் மோசஸ் ஆகிவிட்டால் கைலாகு கொடுப்பான். ஆகவே கிறிஸ்தவ மதத்தை இப் பார்ப்பனர்கள் ஆதரிக்கிறார்களா? அல்லது ஸ்ரீமான் ஆரியா ஆதரிக்கிறாரா? இதிலிருந்து இந்து மதத்தைப் பரிபாலிப்பதாகச் சொல்லும் இப்பார்ப்பனனுடைய வாய் வேதாந்தத்தையும் அநுஷ்டானத்தையும் பார்த்தீர்களா? இவ்விதப் பார்ப்பன அநுஷ்டானங்களைஆரியா கண்டித்திருந்தால் அது இந்து மதத்தை சிலாக்கியப்படுத்தியதே ஆகும்.

**குடி அரசு - கட்டுரை - 11.07.1926**



## எவரை பாதிக்கும்?

### சென்னையில் போலீஸ் கமிஷனரின் தடை உத்திரவு

ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாகவும் சுயராஜ்யக் கட்சியின் சார்பாகவும், சென்னையிலே சின்னாட்களாக தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் வெகுமும்முரமாக நடைபெறுகின்றன. அவற்றுள் சுயராஜ்யக் கட்சியின் சார்பாக நடப்பவற்றிற்குப் பொது ஜனங்கள் கூட்டம் அருகி ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக நடப்பவற்றிற்குப் பெருகி வருகின்றன.

எனவே, இப்பொழுது நடக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களும் தலைசிறந்து மிளிர்வது ஜஸ்டிஸ் கட்சியினருடையதே. ஆதலால் கூட்டங் கூடக் கூடாதென உத்திரவு ஏதேனும் கிடைக்குமேல் அது ஜஸ்டிஸ் கட்சியின் கூட்டத்தை பாதிப்பதாகவேயிருக்கும். ஏனெனில் முற்கூறியது போன்று சுயராஜ்யக் கட்சியின் கூட்டத்தைக் கண்டு மதிப்பாருமில்லை மகிழ்வாருமில்லை. இவ்வாறிருக்க, சென்னை நகர போலீஸ் கமிஷனர்,

> "சென்னை நகர எல்லைக்குட்பட்ட எந்தத் தெருவிலும், வீதியிலும், தெரு மூலையிலும், ரஸ்தா மூலையிலும், பொதுமக்கள் நடமாடும் எந்த ராஜ பாட்டையிலும், பொதுஜன நடமாட்டத்திற்குத் தடையாயிருக்கக் கூடிய வேறெந்த பொது இடத்திலும் தேர்தல் கூட்டங்களோ ஊர்வலங்களோ நடத்த இனி அனுமதிக்க முடியாது."

என்றதொரு தடை உத்திரவை பிறப்புவித்திருக்கின்றார். ஆனால், இத்தடை உத்திரவிற்கு 'ஜஸ்டிஸ்', 'திராவிடன்' ஆகிய இரு பத்திரிகைகளும் ஆதரவு கூறுகின்றன. இவைகள் ஆதரவு கூறுவது, எக்காரணம் பற்றியேயாயினும் "யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது" போன்றிருக்கிறது என்பதே நமது கருத்து. ஏனெனில் நாம் முன்பே கூறியிருப்பது போல் சுயராஜ்யக் கட்சிக்கு சார்பாகக் கூட்டம் சேருவதுமில்லை; கூடும் சிறு கூட்டமும் அமைதியோடு கலைவதுமில்லை. ஆனால் ஜஸ்டிஸ் கட்சியின் பிரசங்கங்களிலோ ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடு வதும் பொறுப்பு வாய்ந்த பிரமுகர்களும், பெரிய மனிதர்களும் பேசி வருவதுமாக யிருக்கின்றனர். இம்மட்டோ! காங்கிரஸிலிருந்து தேசத்திற்காக எவ்வளவோ அருந் தியாகமும் பெருந் தொண்டும் ஆற்றிவந்த



RangaRakes tamilnavarasam.com

திருவாளர்கள் ஆரியா, சக்கரைச் செட்டியார், இராமசாமி நாயக்கர், கலியாண சுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடுகார், தண்டபாணி பிள்ளை, இராமநாதன், சின்னையா பிள்ளை, மௌலானா சாகிப் போன்ற நவமணி களும் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக பேசப்போகுங் காலம் சமீபித்துவிடவே போலீஸ் இலாக்கா நிர்வாகம் மைலாப்பூர் கோஷ்டியாரின் இனத்தவர் கையிலிருப்பதால் இவர்களெல்லாம் ஐயங்கார் கட்சிக்கு ஆதரவு கூற வேண்டும். அப்படியல்லாமல் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாகப் பேசினால் 144 – வது பிரிவுப் படி தடை உத்திரவு போடுவேன் என்று சொல்லுவதற்குப் பதிலாகயிருப்பது போன்ற இத்தகைய உத்திரவை போலீஸ் கமிஷனர் பிறப்பித்து விட்டார். இச்சட்டம் பார்ப்பனர்களுக்கு உதவி செய்வதாய் இருந்தாலும்“கோழி திருடியும் கூடக் குலாவுவது போல்” ‘சுதேசமித்திரன்’ இவ்வுத்திரவைக் கண்டிக்கிறான். இத்தடை உத்திரவைக் கொண்டு ‘மித்திரன்’ அடங்கா மகிழ்வு கொள்ள வேண்டியதிருக்க மாயக்கண்ணீர் விடுவது பொதுமக்களை ஏமாற்றுதற்கே யன்றி வேறல்ல.

இனி, ஜஸ்டிஸ் கட்சியார் வாளாக் கிடத்தலாகாது. கட்டிடங்களுக் குள்ளும் சுற்றாலைச் சுவர்களுக்குள்ளும் கூட்டம் நிகழ்த்துவதோடு மட்டும் நில்லாது ஜஸ்டிஸ் கட்சியார் செய்த நன்மைகளையும் சுயராஜ்யக் கட்சியின் பொய்மைகளையும் எழுதி பதினாயிரக்கணக்கான துண்டுப்பிரதிகளும் துண்டுப் புத்தகங்களையும் அச்சிறுத்தி ஒவ்வொரு வீடு தோறும் வழங்க வேண்டுமென்பதாக ஜஸ்டிஸ் கட்சியாருக்கு நினைவூட்டுகிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 18.07.1926**



# ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்காருக்கு ஒரு புது யோகம்

**– சித்திரபுத்திரன்**

கோயமுத்தூர் ஜில்லா தலைவர்கள் மகாநாடு ஒன்று கோயமுத்தூரில் கூட்டப்பட்டது வாசகர்களுக்குத் தெரியும். அக்கூட்டத்திற்கு ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமணய்யங்காருக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்படவில்லை. அழைப்புக் கடிதம் அனுப்பப்படாததற்கு ஸ்ரீமான் அய்யங்கார் பொறுப்பாளி யா, அல்லது அய்யங்காரின் கூட்டு அபேக்ஷகர்களில் எவராவது பொறுப் பாளியா, அல்லது கூட்டப்பட்டவர்கள் பொறுப்பாளியா என்பது அவ்வளவு சுலபமாய் வெளியில் சொல்லக்கூடிய விஷயமல்ல.

இதனால் நமது அய்யங்காருக்கு ஒரு புது யோகம் பிறந்து விட்டது. அதாவது தன்னை அக்கூட்டத்திற்கு அழைக்காத காரணத்தைக் கொண்டு ஒவ்வொரு பார்ப்பனர்கள் வீட்டுக்கும் போய், பார்ப்பனரல்லாதார் எல்லாம் தன்னைத் தள்ளிவிட்டதாகவும், இந்தக் காரணத்திற்காகவே பார்ப்பனர்கள் எல்லாம் கட்டுப்பாடாக பார்ப்பனர்களுக்கே தனி ஓட்டு (சிங்கிள் ஓட்டு) போட வேண்டுமென்றும், ஒரு பார்ப்பனனாவது பார்ப்பனரல்லாதாருக்கு ஓட்டுச் செய்யக்கூடாது என்றும் சொல்லி ஒவ்வொரு பார்ப்பன ஓட்டரிடத்திலும் பிரமாணமும் வாக்குத் தத்தமும் வாங்கி கட்டுப்பாடு செய்து வருகிறா ரென்றும், பார்ப்பனர்களும் கூட்டம் கூட்டமாகப் போய் அய்யங்காருக்குப் பிரமாணம் செய்து கொடுத்துவிட்டு வருகிறார்களென்றும் இதன் காரணத் தாலேயே தான் கூட்டத்திற்கு அழைக்கப்பட்ட சில பார்ப்பனர்களும் அக் கூட்டத்திற்கு வரவில்லை என்றும் சொல்லப்படுகிறது. அவ்வாறு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டும் கூட்டத்திற்கு வராது நின்றவர்கள் ஸ்ரீமான்கள் சி.எஸ்.சாம்பமூர்த்தி அய்யர், கே.இராகவேந்திரராவ், இராமசாமி அய்யங்கார் ஆகிய மூவருமேயாவார்கள். இவர்கள் வக்கீல் உலகத்தில் செல்வாக்குள் ளவர்கள்; பொது ஜனங்களாலும் மதிக்கப்பட்டவர்கள்; பொது ஜனங்களில் பலரும் இவர்கள் செல்வாக்குக்குக் கட்டுப்பட்டவர்கள். இப்பேர்ப்பட்ட வர்களே கட்டுப்பாடாயிருந்து அய்யங்கார் யோகத்திற்குக் காரணமானவர் களாயிருப்பார்களானால், மற்றப் பார்ப்பனர்களின் கட்டுப்பாடும் நமது அய்யங்காரின் யோகத்திற்கு எவ்வளவு காரணமாயிருக்காது?

ஆனால் நமது அய்யங்காரின் இவ்வித கட்டுப்பாட்டையும் யோகத் தையும் நாம் மனமார உள்ளூற வரவேற்கிறோம். ஏனெனில் இவர்களைப்



RangaRakes tamilnavarasam.com

பார்த்தாவது மற்ற வகுப்பாருக்கு புத்தி வராதா, அல்லது மற்ற வகுப்பாருக்கு புத்தி கற்பிக்கவாவது இந்த பார்ப்பனக் கட்டுப்பாடு ஒரு துணைக் கருவியா யிருக்காதா என்கிற ஆசையினால்தான். ஆதலால் இப்போது நமது ஜில்லா வுக்கு நிற்கும் அபேக்ஷகர்களில் நமது அய்யங்கார் பார்ப்பனரொழிந்த மீதி அபேக்ஷகர்கள் மூவரும் பார்ப்பனரல்லாதாராயிருப்பதுடன் மூவரும் வேளா ளர்களாகவே இருக்கிறார்கள். அதாவது ஸ்ரீமான் வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் கொங்குவேளாளர், ஸ்ரீமான் இரத்தினசபாபதி முதலியார் தொழுவ வேளாளர், ஸ்ரீமான் டி.எ. இராமலிங்க செட்டியாரும் சோழ தேசத்து வேளாளர். அதுபோலவே நமது ஜில்லா ஓட்டர்களில் 100-க்கு 75 பேருக்கு மேலாகவே வேளாளர்களாவார்கள். மீதி 25 பேரிலும் 20 பேர் பார்ப்பன ரல்லாதார் ஆவார்கள். ஆதலால் நமது பார்ப்பனரல்லாதாரில் வேளாளர் களும் மற்றவர்களும் நமது பார்ப்பனர்களைப் போலவே பார்ப்பனரல்லா தாரான வேளாளர்களுக்குத் தான் ஓட்டு செய்வதே அல்லாமல் பார்ப்பனர் களுக்கு ஓட்டு செய்வதில்லை என்று கட்டுப்பாடுடன் உறுதி செய்து தீர்மானித்துக் கொண்டால் பார்ப்பனரல்லாத சமூகங்கள் தானாகவே முற் போக்கடையும்.

பார்ப்பனரல்லாத குடியானவர்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சொட் டும் படியாக இரவு பகலாய்ப் பாடுபட்டு சம்பாதிக்கும் பணத்தை பார்ப்பனர் களிடம் கொட்டிக் கொடுத்து விட்டு 'சாமி' 'சாமி' என்று அவர்கள் வீட்டு பந்தக்காலைக் கட்டிக் கொண்டு திரியவேண்டிய அவசியமில்லை.

நமது நாட்டில் வேளாளர்கள் பஞ்சம் பஞ்சம் என்று அடித்துக் கொள்ளுவதெல்லாம் முழுதும் மழை பெய்யாததாலோ வெள்ளாமை விளை யாததாலோ என்று சொல்ல முடியாது. வேளாள சமூகத்திற்கு ஏற்பட்ட பஞ்ச மெல்லாம் வக்கீல்கள் அடிக்கும் கொள்ளையினால் ஏற்பட்டதே அல்லாமல் வேறல்ல. இப்பேர்ப்பட்ட வக்கீல்கள் ஏற்படுத்தவும் வழக்குகளை உற்பத்தி செய்யவும் நமது பார்ப்பனருக்கு அனுகூலமாயிருப்பது இந்த சட்ட சபை களேயாகும்.

ஆகையால் இவற்றை ஒழித்து வேளாள சமூகம் முன்னுக்கு வர வேண்டுமானால், கூடுமானவரை பார்ப்பனர்களை சட்டசபைக்கு அனுப் பாமல் உண்மையாய் வேளாளர் நன்மைக்கு உழைக்கும் வேளாளரே போகும் படி பார்த்துக் கொண்டால் போதுமானது.

சட்டசபை மூலம் சுயராஜ்யம் வரும் என்று எண்ணுவதெல்லாம் "கேள்வரகில் (ராகியில்) நெய் ஒழுகுகிறது" என்று சொல்லுவது போன்றே யாகும். ஆதலால் பார்ப்பன சமூகத்தார் எப்படி தங்களுடைய ஓட்டுகளை ஒரு பார்ப்பனருக்குக் கொடுப்பதேயல்லாமல் பார்ப்பனரல்லாதாருக்குக் கொடுப்பதில்லை என்று ஸ்ரீ சி.வி.வெங்கிட்டரமணய்யங்காருக்குக் கட்டுப் பாடாக பிரமாணம் செய்து கொடுக்கிறார்களோ, அதுபோலவே நமது ஜில்லா பார்ப்பனரல்லாதாரும், முக்கியமாய் வேளாள சமூகத்தாரும் கண்டிப்பாய் தங்கள் சமூகத்தாராகிய பார்ப்பனரல்லாத அபேக்ஷகர்களுக்கே ஓட்டுப்



போடுவது என்று உறுதி செய்து கொள்வார்களானால் அதுவே தேசத்திற்கும் தங்கள் சமூகத்திற்கும் உழைத்ததாகும். அப்படிக்கில்லாமல் தங்கள் சமூகத் தாரை அலக்ஷியம் செய்துவிட்டு பார்ப்பனர் தயவுக்கும் அவர்கள் பசப்பு வார்த்தைக்கும் தந்திரத்துக்கும் ஏமாற்றலுக்கும் கட்டுப்பட்டும், பார்ப்பனர் களிடம் பணம் வாங்கிக் கொண்டோ அவர்கள் தயவுக்கு கட்டுப்பட்டோ ஓட்டு சம்பாதிக்கும் தரகர்களுக்குக் கட்டுப்பட்டும் ஏமாந்து பார்ப்பனர் களுக்கு ஓட்டுச் செய்வார்களேயானால் அதைப்போல தேசத் துரோகமும் சமூகத் துரோகமும் வேறில்லை என்றே சொல்லுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 18.07.1926**



RangaRakes tamilnavarasam.com

# "தொட்டது துலங்காது"

## கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் சம்பாஷனை

**அர்ஜுனன்** : ஏ, கிருஷ்ணா! சுயராஜ்யக் கக்ஷி காங்கிரசில் சேராமல் தனித்திருந்த போது அதற்குக் கொஞ்சம் மரியாதை இருந்தாப் போல் தெரிந்ததே. இப்பொ ழுது காங்கிரசில் சேர்ந்து சுயராஜ்யக் கக்ஷியே காங்கிர சாக மாறி மகாத்மா காந்தியும் ஆசீர்வாதம் பண்ணியும் அவர் சிஷ்யர்களும் எவ்வளவோ அதற்கு வெளிப்படையாயும் இரகசியமாயும் உதவி செய்தும் இப்படி துள்ளத் துள்ள செத்துப் போய் விட்டதே அதன் காரணம் என்ன?

**கிருஷ்ணன்** : ஓ , அர்ஜுனா! இது உனக்குத் தெரியவில்லையா? கலியுக பத்மா சூரன் கை வைத்தால் எதுதான் வாழும்?

**அர்ஜுனன்:** அது யார்? எனக்குத் தெரியவில்லையே.

**கிருஷ்ணன் :** உண்மையாய் தெரியாதா?

**அர்ஜுனன்** : ஆம், தெரியாது.

**கிருஷ்ணன்:** அதுதான் நமது ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்கார் .

**அர்ஜுனன்:** ஓஹோ! அவர் தலைவரானதினால்தான் போய்விட்டதோ? சரி, சரி, அதனால்தான் நமது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட செத்துப் போய்விட்டது. இப்பொழுது எனக்குப் புரிந்தது. கொஞ்ச காலத்திற்கு முன்கூட ஒரு நண்பர் எனக்குச் சொல்லியிருக்கிறார். அதாவது, "நம் தலைவர்(?) ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் தொட்டது துலங்காது, எதில் போய் அவர் கையை வைத்தாலும் பத்மாசூரன் கை வைத்தது போலவே தான் முடியும். கடைசி காலத்திற்குத்தான் எந்த இயக்கமும் அவரிடம் போய்ச் சேரும்" என்று சொன்னார். அது சரியாய்ப் போய்விட்டது.

**கிருஷ்ணன் :** இப்போது உனக்குப் புரிந்ததா.



**அர்ஜுனன்:** புரிந்தது. ஆனால் இன்னும் ஒரு சந்தேகம்.

**கிருஷ்ணன்:** என்ன சொல்லு?

**அர்ஜுனன்:** இது இரண்டும் ஒழிந்து போனது நல்ல காரியந்தான். சிலர் காங்கிரஸ், காங்கிரஸ் என்று இன்னமும் சொல்லிக் கொண்டிருக் கிறார்களே அதென்ன?

**கிருஷ்ணன்:** காங்கிரசுக்கு காலம் கிட்டிக் கொண்டது. இப்பொழுது தொண்டையில் உயிர் இருக்கிறது. இந்த வருஷம் நமது அய்யங்கார் அதற்கும் தலைவராக வரப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். நம்மை பிடித்த நல்ல வேளையாய் அதிலும் அவர் கை வைக்கும்படி ஏற்பட்டுவிட்டால் அதுவும் தீர்ந்து போகும்.

**அர்ஜுனன்:** இம்மூன்றும் ஒழிந்தால் நமது நாட்டைப் பிடித்த சனியன் ஒழிந்து போகுமல்லவா?

**கிருஷ்ணன்:** இம்மூன்றும் ஒழிந்தால் போதாது. மயில் ராவணன் தலை மாதிரி வெட்ட வெட்ட முளைத்துக் கொண்டுதான் வரும்.

**அர்ஜுனன்:** பின்னை இன்னமும் என்னவாக வேண்டும்?

**கிருஷ்ணன்:** நாட்டுக்கு நல்லகாலம் வர வேண்டுமானால், நமது நாட்டு பிராமணீயம் ஒழிய வேண்டும்.

**அர்ஜுனன்:** அது லேசில் ஒழியாது போல் இருக்கிறதே.

**கிருஷ்ணன்:** அர்ஜுனா! நீ அப்படி நினைக்க வேண்டாம். இனி நமது கலியுக பத்மாசூரரான சீனிவாசய்யங்கார் பிராமணீயத்திற்கும் ஒரே தலைவராகப் போகிறார். அப்போது அதுவும் ஒழியும். அய்யங்கார் பிரளயம் இந்தக் கொடுமைகளையெல்லாம் ஒழித்த பிறகு மகாத்மா காந்தி மறு படியும் வருவார். அப்போது உலகத்துக்கு க்ஷேமம் பிறக்கும்.

**அர்ஜுனன்:** அப்படியா! ரொம்பவும் சந்தோஷம்.

**குடி அரசு - உரையாடல் - 18.07.1926**



RangaRakes tamilnavarasam.com

# மலையாளக் குடிவார மசோதா

மலையாளக் குடிவார மசோதா என்கிற ஒரு மசோதாவின் பேரில் சென்னை சட்டசபையில் இவ்வாரம் வாதம் நிகழ்ந்து வருகிறது. இம்மசோதாவின் தத்துவம் பிராமணர் பிராமணரல்லாதார் என்கிற வகுப்பின் நன்மை தீமைகளை அஸ்திவாரமாகக் கொண்டது. எப்படியெனில், மலையாள தேசத்தில் உள்ள பூமிகள் பெரும்பாலும் அத்தேசத்திய பிராமணர்களுக்குச் சொந்தமானது. அத்தேசத்துப் பிராமணர்களில் பெரும்பாலோர் நம்பூதிரிகள் என்னும் மலையாளப் பிராமணர்கள். இவர்களுடைய சொத்துக்கள் பாதிக்கப்படுவதேயில்லை. இந்தப் பிராமணர்கள் தங்களுக்கு அதிகக் குழந்தைகள் பிறந்து விட்டால் குடும்பத்திற்கு அதிகச் செலவாகி விடுமென்றும், பங்கு போட்டுக் கொண்டே போனால் சொத்துக்களின் அளவு குறைந்து போகுமென்றும் எண்ணியே தங்கள் குடும்பங்களில் தலைவனாக உள்ளவன் (மூத்தவன்) மாத்திரந்தான் கல்யாணம் செய்து கொள்வது என்றும் மற்றவர்களெல்லாம் “சூத்திர ஸ்திரீ”களை அதாவது நாயர் ஸ்திரீகளை சம்பந்தம் செய்து (தமிழ் நாட்டு தாசி வேசிகளைப் போல் ) ஒவ்வொரு பிராமணரல்லாத ஸ்திரீயை வைப்பாட்டியாக வைத்துக் கொள்வதென்றும், அவர்களுக்குத் தாங்கள் வருஷம் ஒன்றுக்கு நாலு முழத் துண்டுகள் இரண்டு ஜோடியும், தலை முழுக எண்ணையும் கொடுத்து விடுவதென்றும், இதன் மூலமாய் பெறும் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தங்களுக்குக் கொஞ்சமும் இல்லாமல் ஏற்பாடு செய்து அதை வெகு நாளாகப் பழக்கத்தில் வைத்திருக்கிறார்கள்.

இப்பழக்கங்கள் யாதொரு விதமான தங்கு தடையில்லாமல் நடைபெறவே, மலையாள தேசத்துப் பிராமணரல்லாத ஸ்திரீகளுக்கும் பிராமண சம்பந்தமே புண்ணியமானதென்றும் மோட்சத்திற்கு ஏதுவானதென்றும் சாஸ்திர ஆதாரங்களையும் ஏற்படுத்தி அவர்களை நம்பச் செய்திருக்கிறார்கள். இவ்வித சாஸ்திரங்களில் நம்பிக்கையில்லாமல் யாராவது தகராறுக்கு வந்து விட்டால் என்ன செய்கிறதென்று நினைத்து, சாஸ்திர ஆதாரத்திற்கு மேல் பொருளாதாரத்திலும் ஜாக்கிரதையா யிருந்து, அந்த நாட்டிலுள்ள பூமிகள் பூராவும் தங்களுடையதாக்கிக்கொண்டு, எந்த பிராமணரல்லாதாரும் குடி இருப்பதற்குக் கூட இந்த பிராமணர்களின் தயவில் – பிராமணர்களின் பூமியில் – இருக்கும் படியாயும், இந்த பிராமணர்களின் அதிர்ப்திக்கு ஆளானால் மோட்ச வீடு இல்லாமல் போவதோடு, குடியிருக்க வீடும் இல்லாமல் போகும்படி ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார்கள்.





இது எப்படி இவர்களுக்குச் சாத்தியமாகிறது என்று பார்த்தால், நமது நாட்டுப் பிராமணர்களுக்கு எப்படித் தாங்கள் உயர்ந்த ஜாதியார் என்பதற்கும் தங்களை ‘சுவாமி’ என்று மற்ற வகுப்பார் கூப்பிட்டுக் கும்பிடுவதற்கும் வேத சாஸ்திர ஆதாரத்தோடு உத்தியோக அதிகார ஆதாரமும் தேடி வைத்திருக்கிறார்களோ, அது போலவே இவர்களுக்குப் பூஸ்திதி அதிகம்; செலவு குறைவு; இவர்களைத் தவிர மற்றவர்கள் “கூலி ஆட்கள்”, “வைப்பாட்டி மக்கள்”. இந்த நிலைமையில் ஒவ்வொரு பிராமணக் குடும்பத்திற்குப் பணம் வருஷத்திற்கு ஆயிரக்கணக்காய் மீதப்படுவதால் அக்கம் பக்கம் உள்ள அன்னியன் பூமிகளை எல்லாம் இவர்களே வாங்கிக்கொள்ள சௌகரியப்படுகிறதும், மற்றவர்களுக்கு அதிகச் செலவும் வரும்படிக் குறைவும் ஏற்படுவதால் எப்படி யாவது இவர்களுக்கே தங்கள் பூமியை விற்றுவிட்டுப் போக வேண்டியதுமான நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

சாதாரணமாக, ஒரு பிராமணன் ஏறக்குறைய 40–50 பெண்களுக்குக் கூட சம்பந்தம் வைத்துள்ள புருஷனாக ஏற்படுகிறதும் உண்டு. ஏனெனில் மலையாள தேசப் பெண்கள் தங்களை வைப்பாட்டியாக வைத்திருப்பவன் பிராமணன் என்று சொல்லிக்கொண்டால் தான் அவர்களுக்குப் பெருமை. அதிலும் கொஞ்சம் பெருமையுள்ள குடும்பஸ்தார்களாயிருந்துவிட்டால் கட்டாயம் பிராமணன் பெயரைத்தான் சொல்லிக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அந்தக் குடும்பத்திற்கு கௌரவக் குறைவு என்று எண்ணுவார்கள். சிற்சில கௌரவம் பொருந்திய நாயர் குடும்பங்களில் உள்ள பெண்களுக்குப் பிராமணர்கள் பெயரைத் தங்கள் புருஷனாகச் சொல்லிக் கொள்ளுவதற்கு ருது சாந்தியில்லாமல் 5 வருஷம் 10 வருஷம் காத்திருப்பதும், கடைசியாய் சில சமயங்களில் அந்தப் பிராமணர்களில் யாராவது ஒருவனுக்குப் பணம் கொடுத்துத் தன் சம்பந்தக்காரன் என்று சொல்லிக் கொள்ளுவதற்கு உரிமை கேட்பதும் சாதாரணமாய் நடப்பதுண்டு. பெரிய நாயர் குடும்பங்களில் வீடு கட்டுவதானால் தங்கள் வீட்டைச் சேர்ந்தாப் போல் இந்தப் பிராமணர்களுக்கென்று அவர்கள் வரப்போக தங்கியிருப்பதற்கும் பொங்கி சாப்பிடுவதற்கும் ‘மடம்’ என்பதாக ஒரு தனிக் கட்டிடமும் கட்டிக் கொள்வதுண்டு.

இவ்வளவுமல்லாமல் அங்குள்ள நாயர்களில் யாருடைய சம்சாரமாவது கொஞ்சம் அழகுள்ள பெண்ணாயிருக்கிறாளென்று ஒரு பிராமணன் கேள்விப்பட்டால் அந்த பிராமணன் மேற்படி பெண்ணுடைய புருஷனைக் கூட்டி வரச்செய்து, “அடே, மாதவா உன்னுடைய பாரியாள் அதிக அழகுள்ளவளென்று கேள்விப்பட்டேன். அது வாஸ்தவமா” என்று கேட்பான், அதற்கு மாதவன் “அடியேன், எல்லாம் தங்களுடைய பாக்கியம்” என்பான். இதைக்கேட்ட பிராமணன் “அப்படியானால் அவளை நம்முடைய மடத்திற்கு வந்து ஒரு வாரம் இருந்து போகும்படி சொல்லு” என்று சொல்லுவான். ஏதாவது அழகுள்ள ஸ்திரீ தெருவில் நடந்து போவதைக் கண்டால் உடனே



RangaRakes tamilnavarasam.com

அவளைக் கூப்பிட்டு, "ஏ பெண்ணே! உன்னுடைய வீட்டுப் பெயரென்ன?" என்று கேட்பான். அந்தப் பெண் தன்னுடைய வீட்டுப் பெயரைச் சொன்னவுடன், "இன்றைய ராத்திரிக்கு நான் வருகிறேன் என்று உன்னுடைய தாயாரிடம் போய்ச் சொல்லு" என்று சொல்லுவான். இம்மாதிரியாக இந்தப் பிராமணர்கள் தங்களுடைய திருப்திக்காகவே அந்நாட்டிலுள்ள ஸ்திரீகளையெல்லாம் கடவுளைக் கொண்டு தாங்களே சிருஷ்டிக்கச் செய்ததாக எண்ணிக்கொண்டு காரியம் நடத்தி வருகிறார்கள்.

இது மாத்திரமல்லாமல், அந்த நாட்டுப் புருஷர்களை நடத்துகிற மாதிரியோ இதைவிட மோசமாயிருக்கும். அதாவது யாரைக் கூப்பிடுவதானாலும், 'டோய்', என்கிற சப்தத்தை முன்னால் வைத்துத்தான் கூப்பிடுவார்கள். பெயரோடுகூடிய 'சாமி' 'அப்பன்' என்கிற பதங்கள் இருந்தால் அதைத் தள்ளி 'டோய் ராமா', 'டோய் கிருஷ்ணா' என்று தான் கூப்பிடு வார்களேயல்லாமல் 'ராமசாமி' என்று கூப்பிடவே மாட்டார்கள். அவர்கள் வீட்டுக்குப் போனால் மேலே வேஷ்டி போட்டுக்கொண்டிருக்கக் கூடாது. அரைக்கை, கால்கை சட்டைகள் போட்டிருந்தாலும் கழட்டி இடுப்பில் கட்டிக் கொண்டு தான் போக வேண்டும். பேசும் போது ஒரு கையைக் கட்டிக் கொண்டும் மற்றொரு கையால் வாயை மூடிக்கொண்டுந்தான் பேச வேண்டும். வார்த்தைக்கு வார்த்தை முன்னிலையாய் பேசும் போது தாங்கள் என்பதற்கு 'திருமேனி' என்றும், 'திருமனசு' என்றும், 'தம்பிரான்' என்றும், தன்மை யில் பேச வேண்டுமானால் 'அடியேன்', 'அடியேன்' என்றுந்தான் பேச வேண்டும். இன்னும் மலையாள நாட்டில் அந்நாட்டு பிராமணர்கள் அங்குள்ள பிராமணரல்லாத மக்களுக்கும் அவர்களது பெண்களுக்கும் செய்யும் கொடுமைகளையும் நடத்தும் பான்மைகளையும் எழுதுவதென்றால் இது சமயம் எடுத்துக் கொண்ட வியாசத்திற்கு இடம் கிடையாது போய்விடும் என்று இது சமயம் இவ்வளவோடு நிறுத்திவிட்டோம்.

இப்பேர்ப்பட்ட கொடுமைகளையும் இந்தப் பிராமணாதிக்கத்தையும் ஏழைகளின் கஷ்டத்தையும் ஒழித்து அங்குள்ள பிராமணரல்லாதாரின் சுயமரியாதையைக் காப்பாற்றி அங்குள்ள பிராமணரல்லாதார்கள் வெகு காலமாகப் பிரயத்தனப்பட்டு வருவது யாவருமறிந்த விஷயம். இதன் பலனாகவே கொச்சி, திருவாங்கூர் முதலிய இடங்களிலும் பிரிட்டிஷ் மலையாளத்திலும் "நாயர் ஆக்ட்" என்று சொல்லப்படும் சட்டம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது . ஆனாலும், அந்தச் சட்டமானது பொருளாதார விஷயத்தில் பிராமணர்களுக்கு இருக்கும் நிரந்தர ஆதிக்கத்தால் சரியான பலன் தருவதற்கில்லாமல் செய்து விடுகிறபடியால் அது விஷயத்திலும் சிறிது சீர்திருத்தங்கள் செய்யவேண்டிய அவசியமிருந்தபடியால் "மலையாளக் குடிவார மசோதா" என்ற ஒரு மசோதாவை சட்டசபை மூலம் கொண்டு வர ஏற்படுத்தி, அதை ஒரு தனிக் கமிட்டிக்கு விட்டு அக்கமிட்டியிலேயே வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு அது அமுலில் வருவதற்கு சட்ட சபையின் மூலம் நிறைவேற வேண்டியதற்காக இப்போது சட்டசபையில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டு அது நடைபெற்று வருகிறது.





இந்த மசோதா கமிட்டியில் ஏற்பாடு செய்திருக்கிறபடி நிறைவேற்றப் பட்டுவிட்டால் பிராமணர் ஆதிக்கத்திற்குக் கொஞ்சம் ஆபத்து வந்துவிடுமென்னும் காரணத்தினால், பிராமணக் கக்ஷியான சுயராஜ்யக் கட்சியார் சட்டசபையில் ஒரு காரியமும் செய்ய முடியாது என்று வெளியில் வந்த பிறகும் இந்த மசோதாவிற்கு மட்டிலும் போய் சட்டசபையின் மூலம் சில காரியங்கள் செய்துகொள்ளலாம் என்று போனார்கள்.

இந்த 5, 6 – நாட்களாக சட்டசபையில் அந்த மசோதாவைப் பற்றி நடக்கும் வியவகாரங்களைக் கவனித்தவர்களுக்கு இந்த மசோதாவின் உயிர்நாடியை வாங்குவதற்குப் பிராமணர்கள் ஒற்றுமையாய் எவ்வளவு பிரயத்தனங்கள் செய்கிறார்கள் என்பதும், பிராமணரல்லாதார்கள் எவ்வளவு தூரம் கஷ்டப்படுகிறார்கள் என்பதும் விளங்காமல் போகாது. மலையாளத்துப் பிராமணர்களும் பெரிய பூஸ்திதியுள்ள சில ஜமீன்தாரர்களும் ஸ்ரீமான் சர்.சி.பி. இராமசாமி அய்யர் அவர்களைத் தங்கள் நாட்டுக்கு வரவழைத்து பெரிய வரவேற்பும் ஆடம்பரமும் செய்ததையும் நேயர்கள் பத்திரிகை களில் பார்த்திருப்பார்கள் . இப்போதோ இதே ஸ்ரீமான் சர்.சி.பி.இராமசாமி அய்யர் இந்த மசோதாவின் உயிர்நாடியை வாங்க கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார். இதற்கனுகூலமாக மற்ற பிராமண மெம்பர்களும் தங்களால் ஆனவரையிலும் கூடச் சேர்ந்து தாங்கி வருகிறார்கள்.

இம்மசோதாவின் உயிர்நாடியான சில பாகங்களை சர்.சி.பி. அய்யர் எதிர்க்கும் போது சர்.கே.வி.ரெட்டி நாயுடு பதில் சொல்லுகையில், **"மலையாள தேசத்துப் பெண்கள் பக்குவமானால் முதல் முதல் பிராமணன்தான் அவளைப் புணர வேண்டும் என்று இருக்கிற அக்கிரமங்கள் எல்லாம் துலைந்துபோய் விடுகிறதே என்று பயப்படுகிறீர்களா"** என்றும், "சர்.சி.பி அய்யரே நீங்கள் கவர்ன்மெண்டு சார்பாய் பேசுகிறீர்களா அல்லது மனுதர்மத்தின் சார்பாய் பேசுகிறீர்களா"என்றும் கேட்டார். இது சர். சி.பி. இராமசாமி அய்யருக்கு கோபத்தை மூட்டாவிட்டாலும், ஸ்ரீமான் எஸ்.சத்தியமூர்த்தி அய்யருக்கு மனுதர்ம சாஸ்திரத்தைப் பற்றி பேசலாமா என்று கோபம் வந்து,சர்.சி.பி. அய்யருக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு, சர்.சி.பி. அய்யர் கவர்மெண்டார் சார்பாய் பேசுகிறபடியால் அவரை 'நீங்கள்' என்று முன்னிலைப்படுத்தி பேசியது தப்பு என்று சிபார்சுக்கு வந்து விட்டார். உடனே ஸ்ரீமான் சர்.கே.வி. ரெட்டி நாயுடு "பார்ப்பனரைப் பாதிக்கும்படியான ஒரு சிறு வார்த்தை ஏற்பட்டாலும்கூட உடனே எல்லா பார்ப்பனர்களும் கட்சி பேதமில்லாமல் ஒன்று சேர்ந்து விடுகிறார்கள். சர்.சி.பி.அய்யருக்குப் பேசத் தெரியாதா? அல்லது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் சர்க்கார் மனுஷரா? அல்லது இதனால் ஏதாவது பொது ஜனங்களுக்கு ஆபத்து ஏற்பட்டு விட்டதா? இதிலிருந்தே பார்ப்பனர்களின் மனப்பான்மையைத் தெரிந்து

RangaRakes tamilnavarasam.com

கொள்ளுங்கள்'' என்று சொன்னவுடன் சத்தியமூர்த்தி அய்யர் வெட்கிப் போய் விட்டார்.

மற்றொரு சமயத்தில் திவான் பஹதூர் எம். கிருஷ்ண நாயரின் தீர்மானத்தை சர்.சி.பி. அய்யர் எதிர்க்கும் போது சபையைப் பார்த்து "நீங்கள் இங்கு இத்தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டதினாலேயே அது அமுலுக்கு கொண்டு வரமுடியாது'', என்றும் "கவர்னரைக் கொண்டு இந்த தீர்மானத்தை தள்ளிவிடச் செய்யப்படும்'' என்றும் சொல்லி மிரட்டினார். ஸ்ரீமான் எம். கிருஷ்ண நாயர் அதற்குப் பதில் சொல்லும்போது இந்த பில் விஷயத்தில் சர்க்காரார் ஜனங்களை அனுசரித்துப் போகாமல் பொறுப்பற்றதனமாய் நடந்து கொள்வதையும் சர்.சி.பி.இராமசாமி அய்யர் ஜனங்களின் மனப்பான்மையைக் கவனிக்காமல் கொஞ்சமும் பயமின்றி நெஞ்சும் குடலும் அஞ்சாமல் எழுந்து நின்று "நீங்கள் நிறைவேற்றினாலும் நான் கவர்னரைக் கொண்டு நிராகரித்துவிடுவேன் என்று சொல்லும்படியான தைரியம் வந்து விட்டதல்லவா'' என்று சபையைப் பார்த்து ஓர் அதட்டு அதட்டியவுடன் சர். அய்யருக்கு நடுக்கம் வந்து "நான் அப்படிச் சொல்லவில்லை, இப்படிச் சொல்லவில்லை'' என்று மழுப்ப ஆரம்பித்து விட்டார்.

பிறிதொரு சமயத்தில் இந்த மசோதாவை இந்தத் தடவை எப்படியாவது தள்ளிவைத்து வாய்தா போட்டுவிட்டால் பிறகு இந்தக் கவுன் சிலே கலைந்து போய்விடும். அதன் பிறகு புது கவுன்சிலுக்குப் புது மெம்பர் கள்தானே வருவார்கள் என்று நினைத்து, ஒரு வெள்ளைக்காரரைவிட்டு மெதுவாய் காலம் குறிப்பிடாமல் தள்ளி வைக்கும்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதன் வார்த்தைகள் சட்டத்திற்குப் பொருத்தமில்லை என்கிற காரணத்தால் அத் தீர்மானம் தள்ளுபடியாகப்போகும் சமயத்தில், அட்வெகேட் ஜெனரல் ஸ்ரீமான் வெங்கிட்டராம சாஸ்திரியார் அந்த வெள்ளைக்காரருக்கு வார்த்தை திருத்திக் கொடுத்தார். இந்த தீர்மானத்தை ஸ்ரீமான் எம்.கிருஷ்ண நாயர் எதிர்க்கும் போது "துரைக்கு இந்த மசோதாவின் தத்துவமும் வாய்தாவின் அவசியமும் ஒன்றுமே தெரியாதென்றும், இதெல்லாம் உங்களுக்கு வேறு ஆட்கள் இருந்து கொண்டு செய்கிற காரியங்களல்லவா'' என்றும் கண்டித்ததும் அட்வெகேட் ஜெனரல் ஸ்ரீமான் வெங்கிட்டராம சாஸ்திரியார் எழுந்து "நான் திருத்தினேனே ஒழிய எனக்கும் அதற்கும் சம்மந்தமில்லை'' என்று சொல்லிக் கொண்டார். கடைசியாக தீர்மானங்கள் ஓட்டுக்கு வந்த காலத்தில் சர்.சி.பி. இராமசாமி அய்யர் உள்பட ஏறக்குறைய எல்லா பார்ப்பனர்களும் ஒன்று சேர்ந்தே ஒரு பக்கத்திற்கு ஓட்டுக் கொடுப்பதும், எல்லா பார்ப்பனரல்லாதாரும் ஒன்று சேர்ந்து மற் றொரு பக்கத்திற்கு ஓட்டுக் கொடுப்பதுமாகவே இருந்து வந்தது.

இதிலிருந்து பார்ப்பனர் ஆதிக்கத்திற்கு ஏதாவது கொஞ்சம் ஆட்டம் வருவதாயிருந்தாலும் எல்லோரும் ஒன்று சேர்ந்துக் கொள்வதன் மூலம், பார்ப்பனர்கள் எவ்வளவு தூரம் பார்ப்பனரல்லாதாரின் அடிமைத்தனத்தை



விலக்குவதில் எதிரிகளாயிருக்கிறார்கள் என்பதும் விளங்குதற்காகவே இவைகளை இங்கு எடுத்து சொல்லப்பட்டது.

இந்த மசோதா விவாத விஷயத்தில் பார்ப்பனரல்லாத அங்கத்தினர்களான கனவான்கள் திவான்பஹதூர் எம். கிருஷ்ண நாயர், சர்.கே.வி. ரெட்டி, ஸ்ரீமான் நரசிம்மராஜு முதலியவர்கள் நடந்து கொண்ட உறுதியும் பார்ப்பனர்களுக்கும் அவர்களுடைய அதிகாரங்களுக்கும் கொஞ்சமும் பயப்படாமல் அவர்களின் திருட்டுத் தனத்தை தைரியமாய் வெளியிட்டுக் கண்டித்த வீர மொழிகளும் தங்க நீர் துவைத்த எழுத்துக்களால் அச்சடித்து கண்ணாடிக்குள் சட்டம் போட்டு வைக்கத்தக்க சொற்களாகவே ஜொலிக்கின்றன.

இனியும் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையைக் காப்பாற்றுவதற்கு இதுபோலவே அநேக மசோதாக்கள் கொண்டு வரவேண்டியிருக்கிறது. அவற்றிற்கெல்லாம் அனுகூலம் செய்யப்படவேண்டுமானால் பார்ப்பனரல்லாதார்களையே சட்டசபைக்கு அனுப்பினால்தான் முடியும். அரசியல் சம்மந்தமாக சட்டசபையில் ஒரு காரியமும் செய்துகொள்ள முடியவே முடியாது. பார்ப்பனர்களின் கொடுமையில் இருந்து விடுதலை பெறுவதற்குத்தான் சட்டசபையைக் கொஞ்சம் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அதுவும் பார்ப்பனரல்லாத அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டால்தான் முடியுமே அல்லாமல், பார்ப்பனப் பத்திரிகைகளின் மோசப் பிரசாரத்தில் மயங்கியோ அவர்களின் ஆசை வார்த்தையில் ஏமாந்தோ இன்று அவர்களுக்கு ஓட்டுக் கொடுத்துவிட்டால், நாளைக்கு அப்பா என்றாலும் வராது சாமி என்றாலும் வராது. காரியம் ஆனவுடன் நம் தலையிலேயே காலை வைக்க வந்து விடுவார்கள். உதாரணமாக, ஸ்ரீமான் சி.வி.வெங்கிட்டரமணய்யங்காருக்கு பனகால் ராஜா ஜில்லா போர்டு மெம்பர் பதவி கொடுத்த மூன்றாம் நாளே ராஜாவுக்கு விரோதமாய் அவரின் விரோதிகளுடன் சேர்ந்து கொண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஓட்டுக் கொடுத்ததை எல்லோரும் பார்க்கவில்லையா? ஆதலால் நம்மிடம் காரியம் ஆகும் வரையில் நமது நன்மைக்குப் பாடுபடப் போவதாகவே சொல்லுவார்கள். காரியம் ஆனவுடன் நம்மை எந்த ஊர் என்று கேட்பதோடு தங்கள் ஜாதி நலனுக்கும் தங்கள் ஆதிக்கத்திற்குந்தான் நாம் செய்து வைத்த வேலையை உபயோகப் படுத்திக் கொள்வார்கள். ஆதலால் வரப் போகும் தேர்தல்களில் ஏமாந்து போகாமல் ஒவ்வொரு ஓட்டரும் தங்கள் தங்கள் கடமையைச் செய்ய வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 18.07.1926**



RangaRakes tamilnavarasam.com

# தமிழ் 'சுயராஜ்யா'

பார்ப்பனர்களின் நயவஞ்சக ஆதிக்கம் பொங்கித் ததும்பி பூரணமாய்த் தாண்டவம் ஆடப்பெறும் தமிழ் 'சுயராஜ்யா' பார்ப்பனரல்லாதார் கொடுத்த தமிழ்நாட்டு காங்கிரஸ் பணத்தைக் கொண்டு நடைபெறுகிறதென்பதைப் பலரும் அறிவர். அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடும் படுபாவிகளைப்போல பார்ப்பனரல்லாதாரின் பணத்தாலேயே பிறந்து, பார்ப்பனரல்லாத சந்தாதாரர்களாலேயே வளர்க்கப்பட்ட தமிழ் 'சுயராஜ்யா' பார்ப்பனரல்லாதாருக்கே கேடு விளைவித்து வருகிறது. இப்பத்திரிகை பார்ப்பனரல்லாதாரின் க்ஷீனத்தைக் கோரி பார்ப்பனரல்லாதாருடன் போர் புரிந்து வருவதை உலகமறியும்.

சின்னாட்களுக்கு முன் பார்ப்பனரல்லாத கட்சியின் கூட்டம் சென்னை சௌந்தரிய மகாலில் நடைபெற்றது. 'சுயராஜ்யா' பத்திரிகை அக்கூட்டத்தில் கூடியிருந்தோர் அனைவரையும் "உத்தியோகம் நக்கிப் பொறுக்கிகள்" என்று மானங்கெட்டத்தனமாய் பெயரிடுகிறது. ஊரூராய்த் திண்டாடித் தெருவில் நின்று பார்ப்பனரல்லாதார் வீடுதோறும் அலைந்து திரியும் "உத்தியோகம் நக்கிப் பொறுக்கிகள்" 'சுயராஜ்யா' பத்திரிகை ஆசிரியரின் இனத்தைச் சேர்ந்த பார்ப்பனக் கூட்டமேயன்றி, சௌந்தரிய மகாலில் அன்று குழுமியிருந்த பார்ப்பனரல்லாதவர்களன்று. இதைப்பற்றி 'திராவிடன்' கூறியுள்ள முத்து போன்ற எழுத்துக்களைக் கவனிப்போம்.

> "தமிழ் "சுயராஜ்யா" அற்பத்தனமாயும் அயோக்கியத்தனமாயும் எழுதத் துவங்கிவிட்டது மிகவும் வருந்ததக்கதாகும். "உத்தியோக நக்கிப் பொறுக்கிகள்" சௌந்தரிய மகாலில் பெருந்திரளாய்க் கூடியிருந்தவர்கள னைவருமாம். வீடுதோறும் பிறப்புக்கும், கலியாணத்துக்கும், இழவுக்கும் அழையாவிட்டாலும் நாய்போல் வந்து பல்லைக் காட்டி அரையணா, ஒரு அணா பெற்றுப் பொறுக்கித் தின்பவர்கள் பார்ப்பனர்களே நிருவாகசபை உத்தியோகங்கள் முதல், கேவலம் செருப்புத் தைத்தல், கும்பகோணம் வேலையில் ஈடுபடல் ஆகிய இழிதொழில்கள் செய்து கால்களை நக்கிப் பொறுக்கித் தின்று வயிறு பிழைப்பவர்கள் பார்ப்பன மாக்களே யன்றி பார்ப்பனரல்லாத மக்களல்ல."

இதைப்பார்த்த பின்னும் இவ்வாறு அந்த பார்ப்பனப் பத்திரிகையால் பார்ப்பனரல்லாதாரை ஏழேழு ஜென்மத்திற்கும் மறையாத மாசுடையோராய் இழித்துரையாடப் பெற்ற 'நக்கிப் பொறுக்கிகள்' என்ற வார்த்தையைக் கேட்ட பிறகும் - தன் நரம்பிலே பார்ப்பனரல்லாதாரின் சுத்த ரத்தம் ஓடப் பெறும் எவராவது - பார்ப்பனரல்லாதாராய் பிறந்த எந்த ஆண்மை யுடையோராவது இனி 'சுயராஜ்யா'ப் பத்திரிகையை கையில் தொடுவாரா? கண்ணில் பார்ப்பாரா? மானம், வெட்கம், ரோஷம், சுயமதிப்பு உடைய எந்த பார்ப்பனரல்லாதாரும் இனி அப்பத்திரிகையைப் பார்க்கவும் தொடவு மாட்டார்களென்றே நம்புகிறோம்

**குடி அரசு - கட்டுரை - 18.07.1926**



RangaRakes
tamilnavarasam.com

# ‘சுதேசமித்திர’னின் ஞானோதயம்

ஜுலை மீ 16 உ “மித்திர”ன் **“இந்து மத தர்ம ஸ்தாபனங்கள் சரியாக நடக்கும்படி செய்யத்தக்க சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டு மென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்”** என்று எழுதியிருக் கிறான். மதவிஷயத் தில் அரசாங்கத்தார் பிரவேசிக்கக் கூடாது என்று எழுதி இதுவரை பாமரர்களை ஏமாற்றி வந்த பார்ப்பன மித்திரனுக்கு இப்போதா வது சர்க்காரால் சட்டம் ஒன்று செய்யப்பட வேண்டும் என்று சொல்லும் படியான புத்தி வந்ததற்கு நாம் மகிழ்கிறோம். ஆனால் இந்தப்புத்தி தானாகத் தோன்ற வில்லை. ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடுகாரும், ஈ.வெ.இராமசாமி நாயக் கரும் தேவஸ்தானச் சட்டத்தை ஆதரித்தும் அதை எதிற்கும் பார்ப்பனர்களின் சூழ்ச்ஷியைப் பொது ஜனங்கள் அறியும்படி செய்ததின் பலனாகவும் இதை ஒப்புக்கொள்ளாவிட்டால் தங்களுக்கு ஓட்டுக்கிடைக்கா மல் போகுமோ என்கிற பயமும் பார்ப்பன மித்திரனான “சுதேசமித்திர”னை “இந்துமத ஸ்தாபனம் சரியாக நடக்க ஒரு சட்டம் அவசியம்” என்று சொல்லும்படி செய்து விட்டது. ஆனால் “மித்திரன்” அதின் கீழாகவே “இந்த சட்டமானது தர்மங்கள் சரியாக நடைபெறும்படி செய்வதற்கு மாத்திரம் உத்தேசிக்கப் பட்டதாக இருக்க வேண்டும்” என்கிறான். அப்படியானால் இப்போதிருக் கும் சட்டம் கோயில்களில் இருக்கும் “கல்லுசாமி”களை யெல்லாம் பிடுங்கி எறிந்துவிட்டு, அந்த ஸ்தானத்தில் ஸ்ரீமான்கள் பனகல் ராஜாவும் வரத ராஜுலு நாயுடுகாரும், இராமசாமி நாயக்கரும் உட்கார்ந்து கொண்டு இந்தப் பார்ப்பனர்களைக் கொண்டு அபிஷேகமும் பூஜையும் செய்யும்படி கேட்பார்கள் என்று “மித்தி ரன்” உண்மையிலேயே பயப்படு கிறானா அல்லது இந்த முகாந்திரத்தைச் சொல்லி அதை ஒழிக்க சூழ்ச்ஷி செய்கிறானா என்பதை வாசகர்கள் உணர்வார்களாக.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 18.07.1926**



# பார்ப்பனரல்லாதார்களுக்கு ஓர் வேண்டுகோள்

தற்காலம் நமது நாட்டில் சட்டசபைத் தேர்தல் நெருங்கி வருகிறது. தேர்தல்களில் வெற்றி பெறுவோர்களில் பலருக்கு மந்திரி, தலைவர் முதலிய கொழுத்த சம்பளமுள்ள உத்தியோகங்களும், தங்களுக்கு வேண்டிய பலருக்கு 1,000, 500 ரூபாய் சம்பளமுள்ள உத்தியோகங்கள் கொடுக்கக் கூடிய அதிகாரங்களும் கிடைக்க வசதியிருப்பதால், இத்தேர்தலுக்குப் பெரிய மதிப்பு ஏற்பட்டிருப்பதோடு, இவ்வுத்தியோகங்கள் அடைய எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு சட்டசபையில் ஆள் பலமும் கட்சிப் பெயர்களும் வேண்டியிருக்கிறபடியால் தேசத்தின் பெயராலும் சமூகத்தின் பெயராலும் பலர் பல கட்சிகளை ஏற்படுத்திக் கொண்டு, ஒவ்வொன்றிற்கும் ஜனங்கள் ஏமாறத்தக்க வண்ணம் ஒவ்வொரு பெயரை வைத்துத் தங்களைப் போன்ற சுயநலவாதிகளாகப் பலரைச் சேர்த்துக் கொண்டு கூட்டுக் கொள்ளை அடிப் பது போல் பலவித மோச வார்த்தைகளையும், பொய் வாக்குத் தத்தங்க ளையும் ஓட்டர்களிடம் சொல்லி அவர்களை ஏமாற்றி ஓட்டுப் பெற பலவித முயற்சி செய்து வருகிறார்கள். நாட்டில் எங்கு பார்த்தாலும் சில வகுப்பினர் இதே வேலையாகத் திரிந்து வருகின்றனர். இதனால் தேசத்திற்கும் ஏழை மக்களுக்கும் திருத்த முடியாத கெடுதிகள் ஏற்பட்டு வருகின்றன.

ஏழை மக்களிடத்தில் கவலையுள்ளவர்கள் இந்த சமயத்தில்அலக்ஷிய மாயிருக்கக் கூடாது என்கிற எண்ணத்தின் பேரில் அனேகர் இதற்கேதே னும் வழி செய்து ஏழை மக்களை உண்மை உணரும்படி செய்யவேண்டும் என்கிற ஆசையின் பேரில் எவ்வளவோ முயற்சி செய்து வருகிறார்கள். இம் முயற்சியானது பலர் சேர்ந்து குறிப்பிட்ட கட்டுப்பாடோ, திட்டமோ ஏற்படுத் திக் கொள்ளாமல் தனித்தனியாய்ச் செய்து வருவதால் எதிர்பார்க்கும் பலனை அடையக் கூடுமோவென சந்தேகிக்கக் கூடியதாயிருக்கிறது. இவ்வார ஆரம்பத்தில் ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடுகார், திரு.வி. கலியாணசுந்தர முதலியார், ஆர். கே.ஷண்முகஞ் செட்டியார், என். தண்ட பாணி பிள்ளை முதலியவர்களோடு சென்னையில் கூடி இரண்டு நாள் யோசித்தும் பல காரணங்களால் தேர்தலுக்கு முன் ஒருவித முடிவுக்கு வர முடியாமல் போய்விட்டது.



RangaRakes tamilnavarasam.com

ஆனபோதிலும் ராஜீய விஷயத்திலும் சமூக விஷயத்திலும் வகுப்பு விஷயத்திலும் தேர்தல்கள் விஷயத்திலும் "குடி அரசு" தனது அபிப்பி ராயத்தை கொஞ்சமும் ஒளிக்காமல் வெளியிட்டுக் கொண்டு வந்திருக்கிறது. அதே தத்துவங்களை வைத்து சில திட்டங்களைக் கோரி அவற்றை நிறைவேற்றப் பலர் சேர்ந்து கட்டுப்பாடாக வேலை செய்வதற்காக அடுத்த வாரத்தில் ஒரு அறிக்கை வெளியிட வேண்டுமென்கிற ஆவல் கொண்டி ருக்கிறோம். இவ்வறிக்கையில் பல கனவான்களின் கையொப்பங்களையும் சேர்த்து வெளியிட வேண்டுமென்கிற விருப்பம் கொண்டிருக்கிறபடியால் இத்தத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் கனவான்களை தங்கள் பெயரையும், அவ்வறிக்கையில் சேர்த்துக் கொள்வதற்கு முழு விலாசத்துடன் தங்கள் சம்மதத்தையும் உடனே எழுதியனுப்பும்படி வேண்டிக் கொள்ளுகிறோம். தேர்தல் காலம் நெருங்கி விட்டதாலும் நாளுக்கு நாள் நெருக்கடி ஏற்பட்டு வருவதாலும் அன்பர்கள் அலக்ஷியமாய் இருக்காமல் தயவு செய்து அவசர மாகக் கவனிப்பார்களாக.

**ஈ.வெ.இராமசாமி**

**குடி அரசு - தலையங்கம் - 25.07.1926**



# ஜனாப் யாகூப் ஹாசன்

## ( எதிரிகளுக்கு ஒரு நல்ல வேட்டை )

ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க வேண்டும் என்று கஷ்டப்படுகிற அதன் எதிரிகளுக்கும் ஜஸ்டிஸ் கக்ஷியைத் திட்டி கூலி வாங்கிப் பிழைப்பவர் களுக்கும் இந்த மாதம் நடந்த சென்னை சட்டசபைக் கூட்டத்தினால் ஒரு நல்ல வேட்டை கிடைத்ததென்றே சொல்லலாம். மலையாளக் குடிவார மசோதாவைப் பற்றி பார்ப்பனர்கள் பேரில் ஏற்பட்டிருந்த கெட்ட பெயரை மாற்றிக் கொள்ளவும், சர்.கே.வி. ரெட்டி மலையாளக் குடிவார மசோதாவை நிறைவேற்றும் விஷயத்தில் ஆண்மையுடன் எடுத்துக்கொண்ட முயற்சியி னால் ஏற்பட்டிருந்த நல்ல அபிப்பிராயத்தை மாற்றவும், நமது பார்ப்பனர்கள் ஜனாப் யாகூப் ஹாசன் சேட்டு பெயரால் தந்திரம் செய்து வெற்றிபெற்று விட்டார்கள். அதாவது ஜனாப் சேட் அவர்கள் சட்டசபைக்கு அபேக்ஷகரா யிருக்கத் தனது சிறை வாசத்தால் ஏற்பட்டிருக்கும் தடையை நீக்கும்படி சென்னை அரசாங்கத்தாருக்கு மிதவாதிகளைப் பிடித்து ஒரு விண்ணப்பம் செய்து கொண்டார். அது பலிக்காமல் போகவே இந்தியா அரசாங்கத்தாருக்கு ஒரு விண்ணப்பம் செய்து மிதவாதிகளைப் பிடித்து சிபார்சு செய்யச் செய்து பார்த்தார். அதுவும் பலனற்றுப் போயிற்று. இது தெரிந்த சுயராஜ்யக் கக்ஷியார் ஜனாப் சேட் அவர்கள் தங்கள் கக்ஷியில் சேராததாலேயே இப்படி ஏற்பட்ட தென்றும், தங்கள் மூலமாய்ப் பிரயத்தனப்பட்டால் இதற்கு விமோசனம் ஏற்படும் என்றும் ஜாடை காட்டினார்கள். ஜனாப் சேட் அவர்களும் இதை நம்பி சுயராஜ்யக் கக்ஷியாரின் தயவை நாடி அவர்கள் பின்னால் திரிந்தார். இதன் பலனாக சுயராஜ்யக் கக்ஷியார் நமது சேட் அவர்களுக்குத் தனது தடையை நீக்கிக் கொள்ள இனிமேல் பிரயத்தனப்படவேண்டிய அவசியமே இல்லாமல் செய்துவிட்டார்கள். இம்மட்டோ? தேச மகாஜனங்களுக்கே சேட் அவர்களின் தடை நீங்க இஷ்டமில்லை என்கிற தீர்ப்பையும் வாங்கிக் கொடுத்து விட்டார்கள்.

ஸ்ரீமான் ஒத்தக்காசு செட்டியாரை அந்த விதத்தில் கெடுத்தார்கள். ஜனாப் சேட் அவர்களை இந்த விதத்தில் கெடுத்தார்கள். இந்த விஷயம் சட்டசபைக்குப் போனால் ஜெயிக்காது என்பது நன்றாய்த் தெரிந்திருந்தும் தங்களின் "கட்டுப்பாட்டையும்" மீறிக்கூட ஜனாப் சேட் விஷயத்தில் நல்லது செய்யப் போகிறவர்கள் போல் நடித்துப் பார்ப்பனர்களுக்கும் சேட்டுக்கும்



RangaRakes tamilnavarasam.com

உள்ள பழைய விரோதத்தின் பழியைத் தீர்த்துக் கொண்டார்கள். இது போலவேதான் ஸ்ரீமான் ஒத்தக்காசு செட்டியார் ஜஸ்டிஸ் கக்ஷியில் இருக்கும் போது இந்தப் பார்ப்பனர்களைத் திட்டிய பழியைத் தீர்த்துக் கொள்ளவே அவரைப் பிடித்து பனகால் ராஜா மீது பிராது கொடுக்கச் செய்து செட்டியார வர்களுக்கு என்றென்றைக்கும் மானக்கேடு வருவதற்கில்லாமல் செய்து, அவருக்கிருந்த பட்டத்தையும் ஒழித்து தங்கள் பழியைத் தீர்த்துக் கொண் டார்கள். இதை நமது சேட்டு அவர்கள் நன்றாய்ப் பார்த்திருந்தும் அவர்கள் கையில் சிக்கி இந்தக் கதிக்கு ஆளாகிவிட்டார். இது உலக வழக்கம்தான். தாசி வீட்டுக்குப் போகும் வாலிபர்களைத் தடைசெய்து அவர்களுக்குப் புத்தி சொன்னால் அவர்கள் கேட்பதில்லை. யாவர் வார்த்தையையும் தட்டி அங்குப்போய் சுகம் அனுபவிப்பது போல் நினைத்துக்கொண்டு தனது பொருள்களையெல்லாம் தோற்று, ரத்தம் கெட்டு, வியாதி பெற்று வீட்டுக்குத் திரும்புகிற காலத்தில்தான் படுகிறது. அதுவும் சிலருக்குத்தான் படுகிறது. சிலர் கடைசிவரை அதிலேயே உழன்று வருகிறார்கள். அதுபோலவே பார்ப்பனக்கக்ஷி என்றாலும் அதன் மறை பெயரான சுயராஜ்யக் கக்ஷி என் றாலும் ராஜீயத் துறையையே தங்கள் வாழ்வாய்க் கொண்டவர்களுக்கு அத னிடத்தில் பிரிய முடியாத மோகமாய்த்தான் இருக்கும். ஏனெனில் அக்கக்ஷி யார் தாசிகளை விட அதிகப் பகட்டும் போலி அன்பும் காட்டு கிறார்கள்.

இவை ஒரு புறமிருக்க, சட்டசபையில் நடந்த கதைகளைக் கவனிப் போம். ஜனாப் சேட் அவர்களின் தடையை நீக்கவேண்டிய வேலை முற்றிலும் சர்க்காரையே சேர்ந்தது. அதனால் சர்க்காருக்கு ஏதேனும் பழி ஏற்படுமானால் அது முற்றிலும் சட்ட மெம்பரையே சேர்ந்தது. சட்ட மெம்பர்தான் சர்க்காரின் இஷ்டத்தை நிறைவேற்றி வைக்க வேண்டியவர். அப்படியிருக்க, சட்ட மெம்பர் தைரியமாய் எழுந்து ஜனாப் யாகூப் ஹாசன் சேட்டின் தடையை நீக்குவதற்குப் போதுமான காரணமில்லை என்று சொல்லித் தனது கடனைத் தீர்த்துக் கொண்டார். ஆனால் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் தங்கள் இஷ்டத் தைத் தாங்களும் அதே மாதிரியாகவே ஒரு வார்த்தையில் சொல்லி முடித்து விட்டு ஓட்டுக் கொடுக்கும் போது தங்கள் இஷ்டம் போல் நடந்து கொள்ள லாம் என்று இராமல் அனாவசியமாய் வியவகாரத்தில் தலையிட்டுக் கொண்டு தாறுமாறாய் உளறி இருக்கிறார்கள். அதில் சர்.கே.வி.ரெட்டி அவர் கள் தன் பேரில் பொதுஜனங்கள் தப்பபிப்பிராயப்படும் வண்ணம் பேசியிருப் பதைப் பார்த்தால் நாம் வருத்தப்படாமலிருக்க முடியவில்லை. ஜனாப் யாகூப் ஹாசன் சேட்டைப் பற்றி நிகழும் வியவகாரத்தில் ஜனாப் சேட் அவர்களைப் பொறுத்த மட்டிலும் பேச வேண்டுமேயல்லாமல் தேசத்தின் பெயரால் ஜெயிலுக்குப் போனவர்களெல்லாம் 'பாப்பர்'களென்று சொல்லி யிருக்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. இம்மாதிரி இவர் சொன்னதால் ஜெயிலுக்குப் போன தேசப் பக்தர்களுக்குப் பெருத்த அவமானம் வந்த விட்ட தென்பதாக நாம் நினைக்கவுமில்லை. ஆனால், ஜஸ்டிஸ் கட்சியின் எதிரிகள் சர்.கே.வி. ரெட்டியின் பேரில் பொது ஜனங்களுக்கு அதிருப்தி ஏற்படும்படி பிரசாரம் செய்ய இதை ஒரு வகையாக உண்டாக்கிக் கொண்டார் களென்றுதான் நாம் சொல்லுகிறோம். இதன் பலனாய் சர்.கே.வி. ரெட்டிக்கு ஒன்றும் நஷ்டம் ஏற்பட்டு விடாது என்று நினைத்தாலும், அவர் சார்ந்திருக் கும் கட்சிக்குப் பாமர ஜனங்களிடம் மரியாதை யில்லாமல் போய்விடு மென்பது சர். ரெட்டி நினைக்காமல் போனது அக்கட்சியின் துர்ரதிர்ஷ்ட மென்றே சொல்ல வேண்டும்.



இதே மாதிரியாகவே பல சமயங்களில் பல பார்ப்பனர்களும் பாமர ஜனங்களிடத்தில் கவலையில்லாமல் சர்க்கார் தயவுக்காகப் பரிந்து பேசி சர்க் காரிடம் பரிசுகள் பெற்றிருக்கிறார்கள். உதாரணமாக, ஸ்ரீமான் பி.என். சர்மா என்னும் ஒரு பார்ப்பனர் பஞ்சாப் அட்டூழியத்தின் போது லார்டு செம்ஸ் போர்டை ஆதரித்ததினால் மாதம் 6000, 7000 ரூபாய் சம்பளம் வாங்கக் கூடிய உத்தியோகமும் சர். பட்டமும் அனுபவிக்கிறார். ஸ்ரீமான் வி.எஸ். சீனிவாச சாஸ்திரி என்கிற ஒரு பார்ப்பனப் பள்ளிக்கூட உபாத்தியாயர் மகாத்மா காந்தியை ராஜத் துரோகி என்றும் மற்றும் பலவாறாகவும் திட்டியதின் பல னாய் 'மஹா மஹா கனம் பொருந்திய' என்கிற பட்டமும், ராஜபோகமும் அனுபவிக்கிறார். ஸ்ரீமதி பெசண்டம்மையார் என்கிற ஆங்கில மாது, பஞ்சாப் அட்டூழியத்தில் ஜெனரல் டையர் சுட்ட குண்டுகளை ஆதரித்ததன் பலனாய் அம்மையாரின் சிஷ்ய கோஷ்டிகளான ஸ்ரீமான் சி.பி. இராமசாமி ஐயர் போன்ற பலர் 5000, 6000 ரூபாய் சம்பளமும் நிர்வாக சபை மெம்பர் போன்ற பல உத்தியோகங்களும் சர். பட்டமும் ராஜபோகமும் அனுபவித்து வருகிறார்கள். ஒத்துழையாமையை ஒழிப்பதற்கு நமது பார்ப்பனர்களுக் காக ஆளாயிருந்த தேசபந்துவென்று சொல்லப்படும் பார்ப்பன மாப்பிள் ளையான நமது சி.ஆர்.தாஸ் அவர்கள் நாக்பூர் தேசியக் கொடி சத்தியாக் கிரகத்தில் ஜெயிலுக்குப் போன ஆயிரக்கணக்கான தேசபக்தர்களைக் கஞ்சிக்கு வகையில்லாத ஆட்கள்தான் ஜெயிலுக்குப் போயிருக்கிறார்கள் என்று சொன்னதன் பலனாய் விபீஷணாழ்வாரைப்போல் பார்ப்பனர் பூஜிக்கும் சிலையாய் 'சுதேசமித்திரன்' ஆபீசிலும் பார்ப்பனர் மடங்களிலும் விளங்குகிறார்.

அதுபோலவே நமது சர்.ரெட்டியும் ஜெயிலுக்குப் போனவர்களை 'பாப்பர்' என்று சொல்லிவிட்டு போகபோக்கியங்கள் அடைவதில் நமக் கொன்றும் முழுகிப் போகாது. ஆனால் முன்னவர்கள் சார்ந்ததாய்ச் சொல்லிக் கொண்ட கட்சியானது பொறுப்பற்றதாயும் தேசத்துக்கோ ஒரு சமூகத்துக்கோ எவ்வித நன்மைக்கோ அருகதையற்றதாகவும் பின்பற்று வோரில்லாததா கவும், தங்கள் தங்கள் நன்மைக்கும் தங்களைப் புகழ்வோர்களின் நன்மைக் குமே ஏற்பட்டதாயிருந்து வந்தது. ஆனால் சர்.கே.வி.ரெட்டி தன்னைப் பொறுத்த வரையில் என்று சொல்லிக் கொள்வாரேயானால் அதைப்பற்றி நாம் அவ்வளவு கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் நமது நாட்டில் ஜனத் தொகையில் 100 -க்கு 97 பேர்களாயுள்ள பெரிய சமூகமான பார்ப்பனரல்லா



RangaRakes tamilnavarasam.com

தார் வகுப்புக்கு பிரதிநிதி என்று சொல்லிக்கொண்டு இம்மாதிரி பேசியிருப்பதானது பார்ப்பனரல்லாதார் என்கிற முறையில் நாம் கண்டிக்காமலும் சர்.கே.வி. ரெட்டியின் தவறுதலுக்காக நாம் பரிதாபப்படாமலிருக்க முடியவில்லை. இவர் அம்மாதிரி பேசியதின் பலனாக அத்தீர்மானத்திற்கு என்ன அதிகமான ஆதரவு கிடைத்தது? அப்படிப் பேசாதிருந்திருந்தால் அத்தீர்மானத்திற்கு எவ்வித ஆதரவு குறைந்து போயிருக்கும்? எப்பொழுது சட்டமெம்பரான சர்.சி.பி. இராமசாமி ஐயர் அத்தீர்மானத்தை எதிர்த்தாரோ அப்பொழுதே சர்.கே. வி. ரெட்டி பேசினாலும் பேசாவிட்டாலும் அத்தீர்மா னம் தோற்றுப் போய்த் தானே ஆகவேண்டும்? ஒரு சமயம் ஜெயித்து விட்டாலும் சர்.சி.பி. அய்யர் கவர்னரைக் கொண்டு(கேன்சல்) தள்ளுபடி செய்து தானே ஆகவேண்டும்? ஆதலால் இனியாவது இப்பேர்ப்பட்ட விஷயங்களில் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வார்களென்றே எதிர்பார்க்கிறோம்.

பொதுவாய் தேசத்திற்காகவும் மதத்திற்காகவும் ஜெயிலுக்குப் போன தேசபக்தர்கள் கூலி கேட்காமலிருந்தால்தான் அவர்கள் செய்த தியாகத்திற்குப் பலனும் மதிப்பும் ஏற்படும். அப்படிக்கில்லாமல் கேவலம் இந்த சட்டசபைக்குப் போக பிரயத்தனப்பட்ட நமது ஜனாப் யாகூப் ஹாசன் சேட் அவர்கள் கருத்து நமக்கு விளங்கவில்லை. கிலாபத்துக்காகவும், சுயராஜ்ஜியத்திற்காகவும் ஜெயிலுக்குப் போன நமது ஜனாப் சேட் அவர்களுக்கு இப்பொழுது சட்டசபைக்குப் போக வேண்டிய அவசியம் என்ன வந்து விட்டது. சட்டசபைக்குள் சென்றதும் கிலாபத்தையும் சுயராஜ்யத்தையும் எடுத்து நிறுத்தி விடலாமென்று நினைக்கிறாரா? எந்த கவர்ன்மெண்டாரை திட்டி ஜெயிலுக்குப் போனாரோ அந்த கவர்ன்மெண்டுக்கே விண்ணப்பம் போட்டுதான் சட்டசபைக்குப் போக அனுமதி கேட்பது நியாயமாகுமா? சர்க்கார் சட்டசபையில் ஏதாவது செய்யக் கூடுமென்கிற நம்பிக்கை இவருக்கிருக்குமானால் முதலாவது இவர் செய்ய வேண்டிய வேலை கவர்ன்மெண்டாரை அடிபணிந்து, முன் தான் நினைத்ததற்கும் நடந்து கொண்டதற்கும் நிபந்தனையில்லா மன்னிப்பு விண்ணப்பம் போட்டு மன்னிப்பைப் பெற்ற பிறகு சட்டசபைக்கு விண்ணப்பம் போட்டிருக்க வேண்டும். அப்படிக்கில்லாதவரையில் ஆண்பிள்ளை சிங்கம் போல் சர்க்கார் தயவை எதிர்பாராமல் சர்க்காராகவே தன்னை விரும்பும் வரையில் தன்னாலானதைச் செய்துகொண்டிருக்க வேண்டும். அப்படியுமில்லாமல் இப்படியுமில்லாமல், “கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை” என்பது போல், வழ வழ வென்று நடந்து கொண்ட தானது ஜனாப் யாகூப் ஹாசன் சேட் அவர்களின் நிலைமை ஆடிப்போன தல்லாமல் நமது நாட்டு தேசபக்திக்கும் தியாகத்திற்கும் மாசை ஏற்படுத்தி வைத்து விட்டார் என்று சொல்ல நேர்ந்தது பற்றி நாம் மிகவும் வருந்துகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 25.07.1926**



# பிராமணீயம்!

இந்திய மக்களின் ஒற்றுமையைக் குலைத்து வேற்றுமையை அதிகரித்தது எது?
**சுயநலம் கொண்ட பிராமணீயமே.**

இந்து முஸ்லீம் கலகங்களை விளைவிப்பதெது?
**சுயநலக் கூட்டத்தாரின் ஆதிக்கம் கொண்ட பிராமணீயமே.**

இக்காலத்தில் பார்ப்பன - பார்ப்பனரல்லாதார் கட்சி உண்டாகக் காரண பூதமாய் நிலவுவதெது?
**பாழான பிராமணீயமே.**

எனவே என் செய்தல் வேண்டும்?

**பிராமணீயத்தைச் சுட்டெரித்து சுடுகாட்டுக்கனுப்ப வேண்டும்.**

**தமிழர்களே!ஒன்று படுக! ஒருங்கு சேருக!**

**பிராமணீயத்துடன் போர் தொடங்குக!**

**வீரர்கள் நம்மவரே!**

**ஆதலால் வெற்றியும் நம்முடையதே!**

**காகம் உறவு கலந்துண்ணக் காண்கிறீர்.**

**ஆதலால் சேரவாரும் ஜெகத்தீரே!**

**குடி அரசு - பெட்டிச் செய்தி - 25.07.1926**



RangaRakes tamilnavarasam.com

# "சர்க்காருக்கு ஜேய்"

## சர்க்கார் கக்ஷிக்கு சென்னை சட்டசபையில் இன்னும் 5 மெம்பர்கள் அதிகம்

## ( தொழிலாளர் நிலை)

தாழ்ந்த வகுப்பார்களுக்கென்றும் தொழிலாளர்களுக்கென்றும் சர்கார் தயவில் இந்தியா பூராவுக்கும் 12 ஸ்தானங்கள் அதிகப்படுத்தப் பட்டிருக் கிறது. ஆனால் இந்த 12 - ஸ்தானங்களும் அந்தந்த வகுப்பார்களால் தெரிந் தெடுக்கப்படாமல் சர்க்காரால் நியமிக்கப்படுவதாய்ப் போய்விட்டது. இதற் காக நாம் தற்கால நிலைமையில் தொழிலாளர்கள் பொருட்டும் தாழ்த்தப் பட்ட வகுப்பார்கள் பொருட்டும் விசனப்படாவிட்டாலும் ஓட்டர்கள் பொருட்டு நாம் மிகுதியும் விசனப்படுகிறோம். தொழிலாளிகளுக்கென்றோ, தாழ்த்தப்பட்டவர்களுக்கென்றோ தேர்தலுக்கு அந்தந்தப் பிரிவார் கொண்ட ஓட்டர் தொகுதியில்லாத வரையில் தற்காலத் தேர்தலைவிட நியமனம் அத் தனை மோசமானதல்ல வென்பது நமது அபிப்பிராயம். ஏனெனில் தற்கால நிலைமையில் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கென்று சொல்லிக்கொண்டு ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியார் போன்ற ஒரு வருணாச்சிரம தர்மி நிற்கக் கூடும். அதற்கு மற்றொரு வருணாச்சிரம தர்மியாகிய ஒரு மகந்து பணம் செலவு செய்யக் கூடும். ஆச்சாரியார் சட்ட சபையில் வந்து உட்கார்ந்து கொண்டு "ஒரு பார்ப்பனக் குழந்தை சாப்பிடு வதை ஒரு பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்து விட்டால் ஒரு மாதம் பட்டினி இருப்பேன்" என்று சொல் லுவார். பார்ப்பனரல்லாத உயர்ந்த ஜாதியார் என்போர் பார்த்துவிட்டதா லேயே ஒரு மாதம் பட்டினி கிடக்கும் நமது ஆச்சாரியார், ஒரு சமயம் "தாழ்ந்த வகுப்பார்" என்று சொல்லப்பட்டவர்கள் பார்க்க நேர்ந்துவிட்டால் உடனே அவர்களைத் தூக்கில் போடவேண்டும் என்றுதான் தீர்மானம் கொண்டு வருவார்.

அதுபோலவே தொழிலாளர்களுக்கென்று தேர்தல் ஏற்பட்டால் முதலாளிகளைவிட மோசமான முதலாளி கூட்டத்தினரான ஸ்ரீமான் எ.ரெங்கசாமி அய்யங்கார் தொழிலாளி அபேட்சகராக நிற்பார். ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பணம் செலவு செய்வார். சட்டசபையில் போய் உட்



RangaRakes

கார்ந்துகொண்டு பார்ப்பனர்கள் கூலி கொடுக்காவிட்டாலும் "சூத்திரர் களான" தொழிலாளிகள் வேலை செய்துதான் தீர வேண்டும். ஏனெனில் பார்ப்பனர்களுக்கு வேலை செய்வதற்கென்றே("பார்ப்பனர்களின் வேசி மக்களான") "சூத்திரர்"களைக் கடவுள் சிருஷ்டித்து இருக்கிறார் என்கிற மனுதர்ம சாஸ்திரத்தைத் தீர்மானமாகக் கொண்டுவருவார். இந்த நிலைமை யில் நல்ல வேளையாக இப்பன்னிரண்டு ஸ்தானங்களும் பொதுத் தொகுதி தேர்தலுக்கு வராமல் போனதைக் குறித்து சர்க்காரின் நடவடிக்கைக்கும் இவ்விரு வகுப்பாரின் பாக்கியத்திற்கும் நாம் சந்தோஷப்படுகிறோம். ஆனால் பொதுத்தொகுதி ஓட்டர்களைப் பற்றி நாம் ஏன் விசனப்படு கிறோமென்றால், இந்த 12-ஸ்தானங்களின் தேர்தலுக்காக செலவு செய்யப் படும் பணத்தில் பங்குபெறக் கூடிய யோகம் இந்நியமனங்களால் சில ஓட்டர்களுக்கு இல்லாமல் போய்விடு கிறதே என்பதுதான்.

நிற்க,சர்க்கார் இந்நியமனங்களையாவது அந்தந்த வகையாரிலேயே செய்வார்களா என்பது நமக்குப் பெரிதும் சந்தேகமாகவே இருக்கிறது.

இவ்வித அனர்த்தங்கள் விளையக் காரணஸ்தர்கள் யாரென்று பார்ப் போமானால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு விரோதிகளாயிருப்பவர் களேயாகும்.எத்தனைக் கெத்தனை எல்லா வகுப்பாருக்கும் சரியான பிரதி நிதித்துவம் கிடைப்பதற்கில்லாமல் ஒரு வகுப்பாரே எல்லா வகுப்புக்கும் பிரதிநிதிகளாயிருக்க சூழ்ச்சியும் தந்திரங்களும் செய்கிறார்களோ, அத்த னைக்கத்தனை பிரதிநிதித்துவமற்ற வகுப்பார் சர்க்கார் தயவை நாடித்தான் பிரதிநிதித்துவம் பெற முடியும். இதில் சர்க்கார் தயவை நாடும் வகுப்பார் மீது கொஞ்சமும் குற்றமில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நானும் பிரதிநிதித்துவம் பெற சம்மதிக்கமாட்டேன், சர்க்காரிடமும் நீ பிரதிநிதித் துவம் பெறக் கூடாது" என்று யாராவது சொல்வார்களானால் அவர்கள் எப்பேர்ப் பட்ட கொடுமைக்காரர்கள் என்பதை பொது ஜனங்கள் தான் உணர வேண்டும். அல்லாமலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்து விட்டால் சர்க்கார் தயவை எதிர்பார்ப்பதற்கும் ஆள்கள் இல்லாமல் போய் விடும். ஆதலால் தான் அதிக பிரதிநிதித்துவம் அடையத்தக்க முறையில் முன்னணி யில் நிற்கும் பார்ப்பனரும் சர்க்காரும் வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் என்றால் தங்களுக்கு ஆபத்து வந்து விட்டதாய்ச் சொல்லிக் கொண்டு தேசம் போய்விடும் - தேசம் போய்விடும் என்ற சத்தம் போடுவதே யொழிய வேறில்லை . தேசம் யாருக்குப் போய்விடும்? பார்ப்பனருக்கும் சர்க்காருக் கும் தான் போய்விடும்? மற்ற வேறு யாருக்கும் போய்விடாது.

இப்பன்னிரண்டு ஸ்தானங்களுள் தொழிலாளருக்கு ஏற்பட்ட நான்கு ஸ்தானங்களில் ஒன்று கூட தமிழ் நாட்டிற்கு இல்லாமல் போனதை நினைத் தால் நம் நாட்டு தொழிலாளிகள் ஏமாற்றமடைந்ததாகவே கருதி துக்கப்படு வார்கள். ஆனால் அவர்கள் ஒரு சிறிதும் துக்கப்படக் காரணமில்லை யென்றே சொல்லுவோம் . சென்னை மாகாணத்திலாகட்டும் தமிழ் நாட்டிலா



tamilnavarasam.com

கட்டும் ஒழுங்கான தொழிலாளர் சங்கங்கள் ஒன்று கூட இல்லை என்றே சொல்லுவோம். உதாரணமாக சென்னையில் உள்ள பக்கிங்ஹாம் கர்னாட்டிக் மில் தொழிலாளர்களின் யோக்கியதையோ மிகவும் வேடிக்கையானது. ஒரு தொழிற்சாலை தொழிலாளருக்கு இரண்டு சங்கம் இருக்கிறது. அதில் ஒன்று பார்ப்பனர் கட்சியான சுயராஜ்யக் கட்சியின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. மற்றொன்று முதலாளிகள் கட்சியும் பார்ப்பனரல்லாத ஜஸ்டிஸ் கட்சியும் ஆகிய இவ்விரண்டு கட்சிகளின் ஆதிக்கத்திலுமுள்ளது. எப்படியெனில் முன்னையதற்கு ஸ்ரீமான் சிவராவ் என்கிற ஒரு பார்ப்பனர் அக்கிராசனர். முதலாளியும் சுயராஜ்யக் கட்சி ஜீவனுமான ஸ்ரீமான் எ.ரெங்கசாமி அய்யங்கார் உப அக்கிராசனர். இவர்கள் இருவரும் சுருதி யுக்தி அநுபவம் ஆகிய இம்மூன்றில்எந்த வகையில் தொழிலாளருக்குத் தலைவர்களாகவோ பிரதிநிதிகளாகவோ உரிமை உண்டு என்பது நமக்கு விளங்கவில்லை . இது போலவே மற்றொரு கட்சியாரான ஜஸ்டிஸ் கட்சி யாருக்கு தொழிலாளர் ஏறக்குறைய எல்லோ ரும் தங்கள் வகுப்பார் என்பதைத் தவிர, வேறு எந்த வழியில் இப்போதி ருக்கும் முதலாளிகளையோ ஜஸ்டிஸ் கட்சியையோ சேர்ந்த தலைவர்கள் தொழிலாளிகளை நடத்தவோ பிரதிநிதிகளாகவோ உரிமை உடையவர்கள் என்பது நமக்கு விளங்க வில்லை.

இவ்விரண்டுந்தான் இப்படி இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும், தொழிலாளிகளுக்காவது தனித்த முறையில் தங்களுக்கு ஒரு ஸ்தாபனத்தை வைத்து நடத்திக் கொள்ள யோக்கியதை இருக்கிறதா என்ற பார்த்தால், சில காரணங்களால் அதுவும் இருப்பதாகச் சொல்லிக் கொள்ளு வதற்கு யோக்கியதை இல்லை. என்னவெனில், காலம் சென்ற ஸ்ரீமான் டாக்டர் நாயர் பெருமானின் ஞாபக தினத்தை கொண்டாட சென்ற வாரம் சென்னை கடற்கரையில் ஒரு பெரிய கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத் தில் பக்கிங்ஹாம் கர்னாட்டிக் மில் தொழிலாளர்கள் சார்பாய் டாக்டர் நாயர் பெருமான் ஞாபகத்திற்காக ஒரு வெள்ளிக்கிண்ணம் அளிப்பது என்று தொழிலாளர்கள் சுமார் 5000, 6000 பேர் வரையில் வந்து கூடினர். அக்கூட்டத்திற்கு டாக்டர் நாயர் பெருமானால் ஆரம்பிக்கப்பட்ட பார்ப்பனரல்லாதார் கக்ஷித்தலைவரும் சென்னை அரசாங்க முதன் மந்திரியுமான கனம் சர். பனகால் ராஜா அக்கிராசனம் வகித்தார். இக்கூட்டத்திற்கு சென் னையில் உள்ள பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் ஏராளமாய் வந்திருந்தார்கள். இக்கூட்டம் சென்னைப் பார்ப்பனரின் கக்ஷிக்கு பெரிய கண்வலிப் போல் இருந்து இருக்கும் என்பது யாவருக்கும் தெரியும். அப்படியிருக்க அப் பார்ப்பனரின் தலைமையின் கீழ் உள்ள பார்ப்பனரல்லாத தொழிலாளி களான ஆயிரக்கணக்கான பேர் கலகம் செய்வதற்கென்றே அக்கூட்டத் திற்கு வந்து அப்பார்ப்பனர்கள் திருப்தி அடையத்தக்க வண்ணம் அடி தடியும் கலகமும் உண்டாக்கியும் கல்லுகள் எறிந்து நிரபராதிகளைக் காயப் படுத்தவும் செய்தார்களாம். இப்படி இருந்தால் இவர்கள் தனித்து தங்கள் சங்கங்களை நடத்திக் கொண்டு போகத்தக்க யோக்கியதை உடையவர்கள் என்று யார்



ஒப்புக்கொள்வார்கள்? கலகம் செய்து கல்லெறிந்தால் யாருக்கு லாபம் ஏற்பட்டது; யார் யோக்கியதை குறைந்தது என்று யோசித்தால் பார்ப் பனர்கள், தொழிலாளர்களுக்கும் புத்தியில்லை, அவர்களை நடத்த நாங்கள் தான் தர்மகர்த்தாக்கள் என்று சொல்லிக் கொள்ள இடம் கிடைத்தது. பார்ப்பனரல்லாத தொழிலாளிகளுக்கு, “காலிகள்” “கலகக் காரர்”கள் என்று சொல்லும்படியான கெட்டபெயர் கிடைத்தது. காலஞ்சென்ற கனவானைக் கௌரவிப்பதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்தில் தொழிலாளிகள் வந்து கலகம் செய்யக் காரணம் என்ன? என்பது நமக்கு விளங்கவில்லை. தொழிலாளிகளுக்குப் பணம் இல்லாததற்குக் காரணம் வேண்டுமானால் முதலாளிகளின் கொடுமை என்ற சொல்லிக் கொள்ளலாம்.

குலாபிமானமும் ஒழுங்கு முறையும் இல்லாததற்கு யார் பேரில் குற்றம் சொல்லுவது? பார்ப்பன விஷமமும் பார்ப்பன சூழ்சியுந்தான் காரணம் என்ற சொல்ல வேண்டும். அத்தொழிலாளர் கூட்டத்தில் கண்ணியமான தொழிலாளர்களாயிருப்பவர்கள் டாக்டர் நாயர் பெருமானை உத்தேசித்தாவது தங்களின் இவ்வித நடவடிக்கைகளுக்குக் கடவுளை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டும். எவ்விதத்திலும் பார்ப்பனர் சம்பந்தத்தையும் முதலாளிமார்கள் சம்பந்தத்தையும் விலக்கிக்கொண்டு தங்கள் கால்களிலேயே நிற்க வேண்டும். தங்களுக்கு எல்லா விஷயங்களுக்கும் தனிப் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி உழைக்க வேண்டும். அப்படிக்கில்லாத வரையில் தொழிலாளர்களுக்காக எத்தனை ஸ்தானங்கள் சட்டசபையிலோ இந்தியா சட்டசபையிலோ ராஜாங்க சபையிலோ வழங்கப்பட்டாலும் ஒரு பலனும் இல்லை என்றே சொல்லுவதோடு சென்னை சட்டசபைக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்காக புதிதாக ஏற்பட்ட 5-ஸ்தானங்களும் சர்க்கார் கட்சிக்கு இன்னும் 5-மெம்பர்களை அதிகமாகக் கொடுத்திருக்கிறதென்றுதான் சொல்லுவோம்.

**குடி அரசு – கட்டுரை – 25.07.1926**



RangaRakes tamilnavarasam.com

## ஏமாந்து விடாதீர்கள்! ஏமாந்து விடாதீர்கள்!

# சைவ சமயிகளுக்கு ஓர் எச்சரிக்கை

சில தினங்களில் சுமார்த்த மத குருவாகிய சங்கராச்சாரியார் வரப் போகிறார். சைவ சமயிகள் அவர் அணிந்திருக்கிற விபூதி உருத்திராக்கத்தைப் பார்த்தும், சுமார்த்தப் பிராமணர்கள் சைவர்கள் பணத்தைத் தங்கள் வகையினர்க்குப் பயன்படுத்தும் பொருட்டு தங்கள் குருவை உலகத்தினர்க்கெல்லாம் குருவென்ற முறையில் **"லோக குரு"** வென்று கூறும் தந்திர வார்த்தையில் நம்மவர்கள் மயங்கி அவருக்கு வந்தன வழிபாடு, பாத காணிக்கை முதலியன செய்து பாவத்தை ஏற்றுப் பொருளிழந்து வறியவர்களாகாமலிருப்பார்களாக. நம்மவர்களுக்கு உண்மை நெறியை உணர்த்த எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வழுத்துகிறோம்.

**குடி அரசு - வேண்டுகோள் - 01.08.1926**



# நமது தனிப்பெரும் விண்ணப்பம்

சென்ற " குடி அரசு" இதழில் திரு. ஈ.வெ.இராமசாமி நாயக்கரவர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு விடுத்த வேண்டுகோளை அன்பர்கள் கண்ணுற்ருக்கலாம். தற்காலம் தமிழ்நாட்டு அரசியல் நிலைமையும் சமூக நிலைமையும் பெரிதும் குழப்பத்தோடிருக்கிற தென்பதை தமிழ் நாட்டவர்களுக்கு நாம் எடுத்து கூற வேண்டியதவசியமில்லை. இத்தகைய குழப்பமான நிலைமையில் அரசியல் துறையையும் சமூக விஷயத்தையும் சத்தியமான, ஒழுங்கான, உண்மையான அமைப்போடும் திட்டத்தோடும் நிலையிறுத்திச் சீர்பெறச் செய்வான் பொருட்டே திரு. நாயக்கரவர்கள் அவ்வேண்டு கோளை விடுத்தார்.

திரு. நாயக்கரவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி இற்றைவரை சுமார் 500 தமிழர்கள் " குடி அரசி"ன் கொள்கையை ஏற்றுக்கொள்வதாகவும் திரு. நாயக்கருள்ளிட்ட பலர் வெளியிடப் போகும் அறிக்கையில் தங்கள் பெயரையும் சேர்த்துக் கொள்ளுமாறும் தங்கள் கையொப்பம் அளித்துள்ளார்கள். இத்தகைய முறையில் அவ்வமைப்பு ஏற்படுத்தி இத்தகைய திட்டங்கோல வேண்டுமென்பதாகவும் ஒத்துழையாமை காங்கிரசில் முன்னின்றுழைத்த பல அறிஞர்கள் நீண்ட கடிதங்கள் எழுதி வருகிறார்கள். தேர்தல் காலம் மிகவிரைவாக நெருங்கி வருகிறது. ஆதலால் நமது கொள்கையை ஏற்கும் பார்ப்பனரல்லாத சகோதரர்கள் சிறிதும் காலந் தாழ்த்தாது உடனே தங்களதும் மற்றைய அன்பர்களதும் கையொப்பங்களைப் பொறித்தனுப்ப வேண்டுகிறோம். இன்று நாளை யெனக் காலங்கடத்த இது சமயமன்று. காலச் சக்கிரம் அதி விரைவாய் சுழன்று வருகிறது. ஆதலால் உடனே தமிழர்கள் தங்கள் கடமையைச் செய்வார்களாக. நன்றென்பதை இன்றே செய்யுங்கள்.

**குடிஅரசு - துணைத் தலையங்கம் - 01 .08.1926**



RangaRakes
tamilnavarasam.com

# நாயுடு, முதலியார், நாயக்கர்.

## சென்னையில் டாக்டர் வரதராஜுலு நாயுடுகார்

## ( தற்கால நிலைமை )

சென்னையில் இம்மாதம் 17-ந் தேதி திருவல்லிக்கேணி கடற்கரையில் ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்கார் அக்கிராசனத்தின் கீழ் டாக்டர் நாயுடுகார் ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார். அவை பல பத்திரிகைகளில் பலவிதமாக வெளிப் பட்டிருந்தாலும் அவரது 'தமிழ் நாடு' பத்திரிகையில் சுருக்கமாக வெளி வந்திருக்கிறது. அவற்றில் சில உண்மைகள் விளங்குவதை மாத்திரம் நாம் இதனடியில் குறிப்பிடுகிறோம்.

அதாவது "பெரிய சந்தேகம்" என்ற தலைப்பின் கீழ் **"இந்த சர்க்காரை இப்பொழுதே நாம் நிருத்திவிட முடியும். ஆனால் அதற்குப் பிறகு (நிருத்திய பிறகு) இத்தேசத்தை எப்படி நிர்வகிப்பதென்பதுதான் இப்பொழுது பெரிய சந்தேகம்"** என்று பேசியிருக்கிறார். தற்கால நிலைமையில் யோக்கியமான ராஜீயவாதிகளின் கருத்து இதுவேதான். ஏனெனில், நமது தேசத்தில் ஒருவன் உயர்ந்தவன் என்றும் பிராமணன் என்றும், மற்றவன் தாழ்ந்தவன் என்றும், சண்டாளன், பார்க்கக் கூடாதவன், தெருவில் நடக்கக் கூடாதவன் என்றும், ஒரு மதம் உயர்ந்த மதம், மற்றொரு மதம் தாழ்ந்த மதம், ஒரு வகுப்பார் தான் மூளை உள்ளவர்கள், மற்ற வகுப்பார் மூளை இல்லாதவர்கள் என்று சொல்லிக்கொண்டு அவனவன் சுயநலத்துக்காக மானம், கற்பு, மனச்சாக்ஷி இவைகளை விற்று ஏழை மக்களை நசுக்கிப் பிழைத்துக் கொண்டிருக்கிற காலத்தில் இந்த சர்க்கார் நின்று போனால் தேசம் என்ன கதி அடையும் என்பதை யோசித்துப் பார்த்தால், "இந்த சர்க்காரை நடைபெற வொட்டாமல் செய்கிறோம், வெள்ளைக்காரரையே ஓட்டி விடுகிறோம்" என்று சொல்லி ஓட்டுக் கேட்பவர்கள் எவ்வளவு அயோக்கியர்கள் என்பது விளங்கும். இந்த உண்மையை டாக்டர் நாயுடுகார் தைரியமாய் எடுத்துச் சொன்னதற்கு நாம் அவரைப் பாராட்டுகிறோம்.

அடுத்தபடியாக "முறைகள்" என்ற தலைப்பின் கீழ் **"காங்கிரஸ் முன்னிருந்த நிலைமையில் இப்பொழுதில்லை. அதில் முன்னிருந்த கட்டுப்பாடுகளும் இப்பொழுதில்லை"** என்று சொல்லியிருக்கிறார்.



இதையும் அவர் தைரியமாய் எடுத்துச் சொன்னதற்கு நாம் பெரிதும் பாராட்டுகிறோம். ஏனெனில் காங்கிரஸ்வாதிகளென்போர்கள் காங்கிரசின் குற்றங்களை எடுத்துச் சொன்னால் பெரிய பாவமென்றும் தேசத் துரோகமென்றும் சொல்லி ஏமாற்றும் பார்ப்பனர்கள் மத்தியிலிருந்து கொண்டு காங்கிரசின் ஊழல்களை எடுத்துச் சொல்வதென்றால் அதற்கு மிகவும் தைரியம் வேண்டும். ஆதலால் நாம் இதையும் போற்றாமலிருக்க முடியாது.

மற்றோரிடத்தில் **"சட்டசபைக்குச் செல்லுபவர்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்று** சொல்லிவிட்டு **"ராயல் கமிஷன் வருவதற்கு முன்பு நமது அபிப்பிராயங்களை சட்டசபைகளில் சரியாய்த் தெரிவிக்க உதவும்"** என்று சொல்லி இருக்கிறார். இதுவும் உண்மையான விஷயம் தான். இப்போது சட்டசபைக்குப் போகிற பார்ப்பனர்கள் கருத்தும் அதுதான். ஏனெனில் இப்பொழுது கொடுத்திருக்கும் 'சீர்திருத்தம்' நமது மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் கொஞ்சமாவது முன்னேறுவதற்கு உதவி செய்திருக்கிறது. பார்ப்பனரல்லாத மந்திரிகள் நிர்வாகத்திற்கு வரவும், பார்ப்பனரல்லாதாரில் சிலருக்காவது உத்தியோகம் பதவி முதலியவைகள் ஏற்படவும், அதன் மூலம் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை காப்பாற்றப்படவும் அது உதவியாயிருக்கிறது. ஆதலால் 1929-ம் வருடம் வரும் ராயல் கமிஷனில் நமது பார்ப்பனர் தேசத்தின் பேரால் சட்டசபைக்கு வந்ததாகச் சொல்லிக் கொண்டு இதுவரை பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்பட்டிருக்கும் நன்மைகளை அழிக்கவும் கொஞ்சமாவது கொடுத்திருப்பதாய்ச் சொல்லும் அதிகாரங்களை திருப்பி எடுத்துக் கொள்ளச் செய்து சர்க்கார் மூலம் தங்களுக்கே உத்தியோகமும் பதவியும் பெரிய சம்பளங்களும் கிடைக்கும்படியாகப் பாடுபடவும், வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் கூடாது, எல்லாவற்றிற்கும் எல்லா வகுப்புக்கும் எல்லா மதத்திற்கும் பார்ப்பனர்கள் தாங்களே பிரதிநிதியாயிருந்து கொண்டு மற்றவர்களை மிலேச்சர், தீண்டப்படாதவர் என்று சொல்லிக்கொள்ள சவுகரிய மேற்படுத்திக் கொள்ளலாம் என்பதும்தான் அவர்கள் கவலை. அதற்காகத்தான் இப்போது சட்டசபைக்குப் போக இவ்வளவு தந்திரங்கள் செய்வது என்பதுதெளிவாய் விளங்க, டாக்டர் நாயுடுகாரின் மேற்கூறிய வார்த்தைகள் போதுமானது.

"பட்டதாரிகள்" என்ற தலைப்பின் கீழ், **"தேர்தலுக்குக் காங்கிரஸ் அபேக்ஷகர்களைத் தெரிந்து எடுக்கும்போது சிறந்த தேசாபிமானிகள் அபேக்ஷகர்களாய் கிடைக்கவில்லை"** என்று சொல்லியிருக்கிறார். இதுவும் சத்தியமான வாக்கென்றே சொல்லுவோம். காரணம் அவர் என்ன சொல்லியிருந்த போதிலும்கூட "சிறந்த தேசாபிமானிகள் காங்கிரஸ் அபேக்ஷகர்களாய்க் கிடைக்கவில்லை" என்பது மிகவும் சத்தியமானது. ஏனெனில் காங்கிரசில் தேசாபிமானிகள் இல்லை என்பதை ருஜுப்படுத்த இதைவிட வேறு எதையும் அவர் சொல்லியிருக்க முடியாது.

'ஜமீன்தாரர்கள்' என்ற தலைப்பின் கீழ் **"பணக்காரருக்கு ஓட்டுக் கொடுக்கக்கூடாது"** என்று சொல்லியிருக்கிறார். இதுவும் சரியான விஷயம்.



RangaRakes tamilnavarasam.com

பணக்காரர்கள் சட்டசபைக்குப் போனால் தங்கள் நிலைமையாகிய பணக்காரர்கள் நன்மைக்குத்தான் பாடுபடுவார்கள். ஏழைகளைப் பற்றி கவனிக்க மாட்டார்களென்பதுதான் அதன் தத்துவம்.

'பார்ப்பனரல்லாதார்' என்ற தலைப்பின் கீழ் **"ஜஸ்டிஸ் கக்ஷி பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு என்று ஸ்தாபிக்கப்பட்டது"** என்று சொல்லியிருக்கிறார். இதை டாக்டர் நாயுடுகார் ஒப்புக் கொண்டதற்கு பார்ப்பனரல்லாதார் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள். ஏனெனில் நமது பார்ப்பனர் சில காலங்களுக்குக் கூலி கொடுத்து ஜஸ்டிஸ் கட்சி 'சர்க்கார் கட்சி', 'உத்தியோக வேட்டைக் கட்சி', 'ஒரு சில பதவிக் கேற்பட்ட கட்சி' என்று எழுதியும் பேசியும் வரும்படி செய்து பார்ப்பனரல்லாதார் கட்சியையே அடியுடன் ஒழிக்கக் கங்கணங்கட்டிக் கொண்டு வேலை செய்யும் சமயத்தில் நமது டாக்டர் நாயுடுகாரவர்கள் ''ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காக ஏற்பட்ட கட்சி'' என்று சொல்லி பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளும், தந்திரங்களும் அடங்கும்படி கர்ஜித்ததற்கு நன்றி பாராட்ட வேண்டியது நமது கடமை.

அல்லாமலும், பார்ப்பனரல்லாதாருக்கு சர்க்கார் உத்தியோகங்கள் அதிகமாகக் கிடைப்பதின் மூலமாய்த்தான் முன்னேற முடியுமென்று அறிவித்து விட்டே அவர்கள் வேலை செய்து வருகிறார்கள். ஆதலால் **"உத்தியோகம் பெறுவது தங்கள் கொள்கை என்று பகிரங்கமாகச் சொல்லும் ஒரு கக்ஷியாரை எப்படி பதவி வேட்டைக்காரர் என்று சொல்ல முடியும்?"** என்று வினவியிருக்கிறார். இது பார்ப்பனருக்குமாத்திரமல்லாமல் பார்ப்பனரல்லாதாரிலேயே சில பைத்தியக்காரர், பார்ப்பனரல்லாத கக்ஷியினரைப் 'பதவி வேட்டைக்காரர்' என்று சொல்லித் திரிவோர்களுக்கும் புத்தி வரும்படி செய்திருக்குமென்றே நினைக்கிறோம்.

'பூர்வீக பிராமணர்' என்ற தலைப்பின் கீழ் **"இப்போது பார்ப்பனர்களே எங்கு பார்த்தாலும் உத்தியோகங்களில் நிறைந்திருப்பதால் தங்களுக்கும் உத்தியோகம் கிடைக்க வேண்டுமென்று ஜஸ்டிஸ் கக்ஷியார் கேட்கிறார்கள். தங்களுக்குரிய பங்கைக் கொடுக்கும்படி ஒருவர் கேட்கும் போது அதைப் பதவி வேட்டை என்று எப்படிச் சொல்ல முடியும்?"** என்றும் சொல்லியிருக்கிறார் . இது ஒரு வகுப்பார் உரிமை கேட்பதால் தேசம் கெட்டுப்போகுமென்று சொல்லித் திரிபவர்களுக்குச் சரியான பதிலாகும்.

'பார்ப்பனரின் கொடுமை' என்ற தலைப்பின் கீழ் **"வெள்ளையர்களிடம் இந்தியர் என்ன கேட்கிறார்களோ அதையேதான் பார்ப்பனர்களிடம் பார்ப்பனரல்லாதார் கேட்கிறார்கள்"** என்று சொல்லியிருக்கிறார். அல்லாமலும் **"குருகுலப் போராட்டத்திலிருந்து நான் பார்ப்பனர்களிடம் வைத்திருந்த நம்பிக்கையை இழந்து விட்டேன்"** என்றும் **"பார்ப்பனர்களது கொடுமைகளின் காரணமாகவே தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டேன்"** என்றும்





சொல்லியிருக்கிறார். இதனாலேயே காங்கிரஸ் பார்ப்பனர்கள் ஸ்தாபனமென்பது யாவருக்கும் நன்றாய் விளங்கும். இல்லாவிட்டால் பார்ப்பனர்கள் கொடுமைக்காக ஒருவரும் காங்கிரஸ் பதவியிலிருந்து விலகவே மாட்டார்கள் என்பதை யாவரும் சுலபத்தில் உணரலாம்.

"ஜஸ்டிஸ் கக்ஷிக்கு வேண்டுகோள்" என்ற தலைப்பின் கீழ் **"வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் நல்லதல்ல, ஆனால் தங்களுடைய நன்மைக்கு ஆபத்து வராமல் காத்துக்கொள்ள தற்கால ஏற்பாடாக ஏதாவது ஒன்றைச் செய்து கொள்ளலாம்"** என்றும் **"ஒருவருக்கொருவர் நம்பிக்கை யேற்படுகிற வரையில் இம்முறையைக் கைக் கொள்ளலாம்"** என்றும் "ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை விட முடியாதென்ற எண்ணமிருந்தால் அவர்கள் காங்கிரசில் வந்து ஏன் வற்புறுத்தக் கூடாது ? அவ்வாறு செய்யும்படி அவர்களைக் (ஜஸ்டிஸ் கக்ஷியாரை) கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றும் சொல்லியிருக்கிறார்.

இவற்றில் மேற்கூறிய இரண்டொரு வார்த்தைகளைத் தவிர மற்றவைகளை மாத்திரம் நாம் ஆதரிக்க முடியாதிருப்பது பற்றி வருந்துகிறோம். டாக்டர் நாயுடுகார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தப்பென்றாலும் "ஒருவருக்கொருவர் நம்பிக்கை ஏற்படும் வரை தற்கால யேற்பாடாக ஏதாவதொன்றைச் செய்து கொள்ளலாம்" என்று சொல்லுகிறார். 'அது எது', 'என்ன செய்து கொள்ளலாம்' என்று சொல்லியிருந்தால் நன்றாயிருந்திருக்கும். ஒருவருக்கொருவர் நம்பிக்கையில்லாததால்தான் தனிப் பிரதிநிதித்துவம் கேட்கிறார்கள் என்கிறதை ஒப்புக்கொண்ட டாக்டர் நாயுடுகார் தானும் ஒரு வழி சொல்லாமல் பிறத்தியார் கேட்பதையும் தப்பென்று சொன்னால் வேறு கதி என்னவென் பதுதான் நமது கவலை. ஆனால் சமீபத்தில் டாக்டர் நாயுடுகாரவர்கள் இரண் டோர் இடங்களில் பேசியபோது, சில வகுப்பாருக்கு வாக்காளர் தனித் தொகுதியுங்கூட கொடுக்க வேண்டுமென வற்புறுத்தியுள்ளார். சில இடங்களில் பேசும் போது ஜஸ்டிஸ் கட்சியார் கேட்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தப்பல்ல என்றும் சொல்லியிருக்கிறார். நாமும் இரண்டொரு சமயத்தில் டாக்டர் நாயுடுகாரின் அபிப்பிராயத்தைப் பற்றி எழுதும் போது டாக்டர் நாயுடுகார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அடியோடு கூடாதென்று சொல்லவில்லை யென்றும், அதில்லாமல் வேறு வழியில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் கருத்தைப் பூர்த்தி செய்ய முடியுமாவென்று பார்க்கிறார் என்றும், முடியாவிட் டால் அவர் என்ன செய்வாரென்பது நமக்குத் தெரியுமென்றும் எழுதியிருந் தோம். ஆதலால் அவர் தற்கால நிலையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கைக்கு விரோதியல்ல வென்பதும், அதனுடைய வழிகளில் தான் கொஞ்சம் குழப்பமாயிருக்கிறார் என்பதும் நமது நம்பிக்கை. அப்படியில்லா விட்டால் ஜஸ்டிஸ் கட்சியாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்க சுதந்திரம் உண்டென்றும் காங்கிரசில் வந்து கேட்கும் படியும் சொல்லியிருக்க மாட்டார்.

RangaRakes tamilnavarasam.com

ஆனால் பார்ப்பனரல்லாதார் ஏழு பேரும், பார்ப்பனர் இரண்டு பேரு மாயிருக்கும் காங்கிரஸ் நிர்வாக சபையிலிருந்து, டாக்டர் நாயுடு கார் போன்ற வீரர்களே பார்ப்பனர் கொடுமையைச் சகிக்க மாட்டாமல் மனம் நொந்து அதைவிட்டு விலக வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கும் போது ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் எத்தனை பேர்கள்தான் காங்கிரசுக்குள் வந்தாலும் பார்ப்பனர் கொடுமையிலிருந்து தப்பமுடியுமா? அல்லாமலும் காங்கிரசிலி ருந்து வகுப்பு வாரி உரிமையை வற்புறுத்தும்படி டாக்டர் நாயுடுகார் கேட்டுக் கொள்ளுகிறார். இதுவும் நமக்கு ஆச்சரியமாகவேயிருக்கிறது.

காங்கிரஸ் கமிட்டிக்கு டாக்டர் நாயுடுகார் தலைவராகயிருந்த சமயத் தில் ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் தலைமை வகித்ததும் 100–க்கு 90 பேர் பார்ப்பனரல்லாதாராய்க் கூடியிருந்ததுமான தமிழ் மாகாண மகா நாட்டில், மும்முறை காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாகவும், இரண்டு முறை கமிட்டித் தலைவராகவும், ஒருமுறை தமிழ் மாகாண மகாநாட்டுக்குத் தலைவ ராகவும், மூன்று முறை ஜெயிலுக்குப் போனவரென்று சொல்லப்பட்டவராக வுமுள்ள ஒரு இராமசாமி நாயக்கர் என்பவரே வகுப்புவாரி தீர்மானம் காங்கிரசின் பேரால் கொண்டுபோய் பிரேரேபிக்கக்கூட அனுமதி கிடைக்கா மல் ஓடிப்போகும்படி நேர்ந்திருக்கும் போது, ஐயோ பாவம்! எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கொண்டும் காங்கிரஸ் உலகத்தில் கெட்ட பெயர் வாங்கிக் கொண்டுமிருக்கும்படியான ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரசில் வந்து சேர்ந்தால் அவர்களைப் பார்ப்பனர்கள் சும்மா விடுவார்களா?

இந்நிலைமையில் இது ஆகிற காரியமா? ஒரு சமயம் தமிழ்நாடு கமிட்டியில் ஒப்புக்கொண்டாலும் அகில இந்திய காங்கிரசில் ஒப்புக் கொள்ளும்படி பார்ப்பனர் சம்மதிப்பார்களா? இவைகளை யோசித்துப் பார்த்தால் உண்மை விளங்காமல் போகாது. ஜஸ்டிஸ் கட்சியாரைத் தற்கால காங்கிரசுக்குக் கூப்பிடுவதானது பார்ப்பனரல்லாதாரியக்கத்தை ஒழிப்ப தாகுமே தவிர அவர்களுக்கு அநுகூலம் செய்வதாகாதென்றே உறுதி கூறு வோம். இது ‘‘அங்கேண்டி மகளே ஆலாய்ப் பறக்கிறாய் இங்கு வா காற் றாய்ப் பறக்கலாம்’’ என்பது போலிருக்கிறது. நம்மால் ஜஸ்டிஸ் கட்சிக்கு உதவி செய்ய முடியா விட்டாலும் நாம் அதற்குக் கெடுதி செய்யாமலிருந் தாலே கோடிக் கன்னிகாதானம் செய்த பலனுண்டு. ஆதலால் இந்த இரண் டொரு விஷயத்தைத் தவிர மற்ற விஷயங்களில் நமது டாக்டர் நாயுடுகார வர்கள் சொன்னதாக நாம் ‘தமிழ் நாடு’ பத்திரிகையிலிருந்து மேலே எடுத்துக்காட்டிய விஷயங்கள் முழுவதையும் மனப்பூர்வமாய் ஆதரிக் கிறோம்.

இதற்கு முன் ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்தர முதலியாரவர்கள் எழுதிய ‘இந்தியாவின் தலையெழுத்து’ என்ற விஷயமும் ‘குடிஅரசு’ எழுதிவரும் விஷயமும் டாக்டரவர்கள் சொன்னதாக இதில் எடுத்தாண் டிருக்கும் விஷயமும், பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார் என்கிற விஷயத் தைப் பொறுத்த வரையிலும் தற்கால காங்கிரசின் யோக்கியதையைப்





பொறுத்த வரையிலும் ஜஸ்டிஸ் கட்சியைப் பொறுத்தவரையிலும் யாதொரு அடிப்படை யான வித்தியாசமும் இருப்பதாய் நாம் நினைக்கவில்லை.

ஆனால் நாம் பச்சைத் தமிழில் எழுதுகிறோம்; பேசுகிறோம். டாக்டர் அவர்கள் ராஜதந்திரத் தமிழில் எழுதுகிறார். பேசுகிறார். ஸ்ரீமான் முதலியா ரவர்கள் சங்கத்தமிழில் எழுதுகிறார்; பேசுகிறார். இதுதான் வித்தியாசமே தவிர வேறில்லை. பல காரணங்களால் பலருக்குப் பச்சைத் தமிழ் வராது. இதற்காக வேண்டி ஒருவரும் கலக்கமுற வேண்டியதில்லை. தேர்தல்கள் சமீ பித்து விட்டன; சூழ்ச்சிகள் மலிந்து விட்டன; தமிழ் மக்கள் பாஷை வித்தி யாசத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது பைத்தியக்காரத்தனம். திருட்டுப் போன பின்பு கதவைத் தாழ்ப்போடுவதில் பயனில்லை. ஆதலால் பார்ப்பன ரல்லாதார் உடனே ஒன்று கூடித் தேர்தலில் தங்கள் சமூக முன்னேற்றத் திற்கும், சமூகக் கட்டுப்பாட்டிற்கும், பத்திரத்திற்கும், சுயமரியாதைக்கும் பங்கமில்லாதபடி நடந்து கொள்ள வேண்டியது ஒவ்வொரு பார்ப்பனரல்லா தாரின் முக்கியக் கடமை யாகும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 01.08.1926**

RangaRakes

tamilnavarasam.com

# தமிழ் சர்வகலாசாலைக் கமிட்டி

தமிழ் நாட்டிற்கென ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்துவான் வேண்டி சின்னாட்களாகப் பல தமிழர் கிளர்ச்சி செய்து வருகின்றார்கள். இக்கிளர்ச்சியை ஒடுக்குவான் வேண்டியும், தமிழ் கலாசாலையே ஏற்படாதிருக்க பார்ப்பனர்கள் செய்துவரும் சூழ்ச்சி முறைகளையும் அனேகர் அறிந்திருக்கலாம். கடைசியில் இக்கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு வழியில்லாது போய் தமிழ் சர்வகலாசாலை ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்பட்டுவிட்டது. இதற்கென ஒரு கமிட்டியும் நியமிக்கப்படலாயிற்று.

இக்கமிட்டியும் பெருங் கபடத்துடனேயே நியமிக்கப்பட்டுள்ளதெனக் கூறவேண்டும். ஏனெனில் தமிழ் மொழியின் ஆணி வேர் நுனி வரை நுணுகி ஆராய்ந்து தமிழ் மொழியே உயர் தனிச் செம்மொழியெனக்கொண்டு, தமி ழையே உயரினும் பெரிதாய் ஓம்பி வளர்த்து, அதற்கெனவே அருந் தொண் டாற்றி வரும் திருவாளர்கள் சுவாமி வேதாச்சலனார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், த.வே.உமாமகேசுவரம் பிள்ளை, பா.வே.மாணிக்க நாயக்கர், கா.சுப்பிரமணிய பிள்ளை, மு.சா. பூரணலிங்கம் பிள்ளை முதலியோரை நியமிக்காது, ஆரியத்திற்கும் தமிழுக்கும் உள்ள பதத்தை ஒரு சிறிதும் உணராத பலரையும் தமிழில் பற்றுடைய மிகச் சிலரையும் நியமித்திருக் கிறார்கள். இவ்வாறு அடிப்படையிலே கையை வைத்து நியமிக்கப்பட்ட கமிட்டியால் தமிழ்த் தாய்க்கு எவ்வித ஆக்கமும் அளிக்கப் பெறாதென்பதே நமது கருத்து.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 01.08.1926**



# முனிசிபாலிட்டியில் சுயராஜ்யம்

**- சித்திரபுத்திரன்**

கொஞ்ச நாளாக எங்கு பார்த்தாலும் முனிசிபல் சேர்மென்கள் வசூல் செய்யத் தவக்கப்பட்ட காரணத்தினால் முனிசிபாலிட்டிக்கு ஏற்பட்ட வரி நஷ்டத்தை அவ்வித சேர்மென்களிடமிருந்து வசூல் செய்யப்பட வேண்டுமென்று கவர்ன்மெண்டார் உத்திரவு போட்டு வருகிறார்கள். ஆனால் சேர்மென்கள் திருடுகிற - திருடிக் கொண்ட பணத்தை வசூல் செய்யவும் அவர்கள் பேரில் நடவடிக்கை நடத்தவும் அதிகாரிகளும் கவர்ன்மெண்டாரும் கவலைப் படுவதேயில்லை போலிருக்கிறது. அதிகாரிகளைக் கண்டு “சேர்மென்கள் இம் மாதிரி கொள்ளையடிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே இது சரியா?” என்று கேட்டால், நாங்கள் என்ன செய்வோம்; நீங்கள் தானே சுயராஜ்யம் கேட்டவர்கள்; நாங்கள் சுயராஜ்யம் கொடுத்து விட்டோம்; அந்த நிர்வாகம் உங்கள் மந்திரிகளிடம் இருக்கிறது; அவர்களைப் போய்க் கேளுங்கள். நீங்கள் கேட்ட சுயராஜ்யத்தை நீங்கள்தானே அநுபவிக்க வேண்டும்? எங்களை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்?” என்கிறார்களாம். கவர்ன்மெண்டார் என்கிற மந்திரிமார்களை இதைப் பற்றி கவனிக்கும்படி சொன்னால் “நீங்கள் தெரிந்தெடுத்த சேர்மென்தானே, அவரால் ஏற்படும் சுக துக்கத்தை நீங்களே அனுபவியுங்கள்” என்று சொல்லுகிறார்களாம். “நாங்கள் தெரிந்தெடுக்கவில்லை, ஏமாற்றி விட்டார்கள்” என்று சொன்னால் ‘கோர்ட்டுக்குப் போங்கள்’ என்று சொல்லுகிறார்களாம். ஊரில் சிநேகிதமாய் உள்ள சிலரிடம் சொல்லியாவது இதைத் திருத்தலாமென்றால் சேர்மெனின் நண்பர்கள் “இதனால் என்ன முழுகிப் போய்விட்டது. அவரும் ஒரு பார்ப்பனரல்லாதார் (நான் பிராமின்) தானே, சாப்பிட்டுப் போகட்டுமே. இதனாலேயா முனிசிபாலிட்டி முழுகிப் போய்விடும்?” என்று சொல்லி விடுகிறார்களாம்.

சாக்ஷிக்காரர்கள் காலில் விழுவதை விட சண்டைக்காரர் காலிலேயே விழுந்து விடலாமென்று சேர்மெனிடம் போய் ‘‘ஐயா! இப்படிச் செய்கிறீர்களே, இது யோக்கியதையா? உம்முடைய அக்கிரமத்தினால், சுயராஜ்யம் என்றாலே ஜனங்கள் பயப்படும் படியாயிருக்கிறதே, கொஞ்சமாவது சர்க்காருக்கு மேலதிகாரம் இருக்கும் போதே இப்படிக் கொள்ளையடித்தால் சர்க்கார் சுத்தமாய் விலகிவிட்டால் முனிசிபாலிட்டியார் கதியென்னாவதென்று ஜனங்



RangaRakes tamilnavarasam.com

கள் நினைக்கும்படி செய்கிறீர்களே" யென்று கெஞ்சினால், சேர்மென்கள் "அதெல்லாம் சரி, அந்த தர்ம நியாயம் எனக்கும்தான் தெரியும். ஆனால் எனக்கு சோத்திற்கு வேறொரு வழிகாட்டுங்கள். நானும் உங்களோடு தர்ம நியாயம் பேசுகிறேன். எனக்கு பெண்டு - பிள்ளை - நல்லது - கெட்டது இவைகளில்லையா? எந்த ஊரில் பிறந்து இந்த ஊருக்கு வந்து சும்மா உழைக்க நாமென்ன முட்டாளா? உங்கள் தகப்பன்மார் காலந்தொட்டு நான் இப்படித்தான் நடக்கிறேன்" என்றும் "ஒரு சம்பளச் சேர்மென் வைத்தாலும் மாதம் 500 ரூ. செலவாகுமல்லவா? அதற்கு மேலாகவா என்னால் முனிசிபா லிட்டிக்கு செலவாகிவிடுகிறது?" என்று சொல்லி வருத்தப்படுகிறார்களாம்.

இந்நிலைமையில் கஞ்சிக்குங்கூட வழியில்லாத ஆட்களை சேர்மென் உத்தியோகத்தில் போட்டு அவர்கள் மீது இம்மாதிரி குற்றங் குறை சொல்லு வதை விட, சேர்மென் வேலைக்கு வருகிறவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் வரையில் படி உண்டென்று ஏற்பாடு செய்துவிட்டால் இம்மாதிரி கஷ்டங்கள் ஏற்படாததோடு முனிசிபாலிட்டிக்கும் அதிக நஷ்ட மேற்படாது. இல்லாவிட்டால் சேர்மென் மாதம் 500 ரூபாய் சம்பாதிக்க வேண்டியிருந்தால் முனிசிபாலிட்டிக்கு எவ்வளவு ரூபாய் நஷ்ட மேற்படு கிறது? பணம் சம்பாதிப் பதற்காக அவசியமில்லாத வேலைகள் எல்லாம் செய்ய வேண்டி நேரிடுகிறது.

உதாரணமாக, சேர்மெனுக்கு ஒரு 100 ரூபாய் வரும்படி வர வேண்டு மானால் கன்ட்ராக்டருக்கும் 200 ரூபாய்க்குக் குறைவில்லாமல் லாபம் இருக்க வேண்டும். இவைகள் தவிர ஆபிஸ் சிப்பந்திகள் ஓவர்சீயர் முதலி யவர்களுக்கும் 50 ரூபாய்க்குக் குறையாமலாவது வரும்படி இருக்கவேண் டும். இதற்காகத்தான் குறைந்தது ஒரு 2000 ரூபாய் வேலையையாவது உற்பத்தி செய்ய வேண்டும் . இம்மாதிரி இவர்கள் சாப்பிடுவதை அனுமதிக் கிறதற்குக் கவுன்சிலர்களுக்கு நல்ல பிள்ளையாய் நடந்து கொள்ள வேண் டும். அவர்களுக்கும் பல சௌகரியங்கள் செய்து கொடுக்க வேண்டும். அவர்களில் யாராவது இரண்டொரு கவுன்சிலர்கள் சாப்பாட்டிற்கு வழி இல்லாதவர்கள் வர நேர்ந்து விட்டால் அவர்களுக்கும் மாதம் 100,50 கிடைக் கும்படி செய்ய வேண்டும். இவ்வளவுமில்லாமல் தன்னைத் தாங்கிப் பேச ஊரில் சில ஆட்களைச் சுவாதீனம் செய்து கொள்வதற்காக அவர்களுக் கும் வேறேதாவது உத்தியோகமோ கன்றாக்டோ, வரி குறைவோ முதலிய உதவி கள் செய்ய வேண்டும். இவ்வளவையும் பார்த்துக் கொண்டிருக்கிற முனிசி பல் சிப்பந்திகள் சும்மா இருக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. ஆத லால் அவர்கள் செய்யும் அக்கிரமங்களையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். இவ்வளவு மல்லாமல் ஊர் ஜனங்களிடம் பணம் வாங்க ஆரம் பித்து விட்டால் அவர்களுக்கும் முனிசிபல் வரியோ, சொத்தோ உதவ வேண் டும். ஆட்களிடம் பணம் பெற்றாக வேண்டும். இம்மாதிரி சேர் மெனுக்கும் சிப்பந்திக்கும் பணம் கொடுத்தும் சிபார்சு பிடித்தும் உத்தி யோகம் பெறுபவன்



யோக்கியதையும் தகுதியுள்ளவனாயுமிருப்பானா? ஒருக்காலும் இருக்க முடியாது. ஆகவே, எவ்வெவ் விதங்களில் நமது சுயராஜ்யம் பெற்ற ஸ்தாபனங்கள் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது என்பதை பொது ஜனங்கள் அறிவார்களாக.

**குடி அரசு - கட்டுரை - 01.08.1926**



RangaRakes tamilnavarasam.com

# சென்னையில் கர்மபலன்

கர்மபலன் என்றால் மனிதர் தங்கள் வாழ்நாளில் செய்யும் காரியங் களுக்கும் பேசும் விஷயங்களுக்கும் நினைக்கும் எண்ணங்களுக்கும் தக்க பலனை அவரவர் இறந்த பிறகு 'மேல் லோகத்தில்' கடவுள் முன்னிலையில் அனுபவிப்பதென்றும், அந்த அனுபவம் மோக்ஷம் நரகம் என்கிற இடங்களில் என்றும், சில சமயங்களில் அதற்கு மீறி அடுத்த ஜென்மம் எடுத்து அதில் அனுபவிக்க வேண்டும் என்றும், மனிதன் அதற்குத் தப்பித்துக் கொள்ள வேண்டுமானால் பார்ப்பனர்களுக்குப் பணம் கொடுத்து அவர்கள் சொல்லுகிறபடி கேட்டால் தப்பித்துக் கொள்ளலாம் என்றும், நமது பார்ப்ப னர்கள் அனேக ஆதாரங்கள் எழுதி வைத்துக்கொண்டு தங்கள் பிழைப்புக்கு அதையும் ஒரு வழியாக உபயோகித்து வருகிறார்கள்.

ஆனால், நாம் கர்மபலன் என்பதை அவ்விதத்தில் பொருள் கொள்வ தில்லை. கர்மபலன் என்றால் வேலையின் கூலியென்று தான் நினைக்கி றோம். கர்மம் என்றால் வேலை, பலன் என்றால் அதனால் நாமடையும் பிரதிப் பிரயோஜனம்; இதை நாம் கூலியென்று சொல்லுகிறோம். அந்தக் கூலியை மேல் லோகத்தில் பெறுவதென்பதும், அங்கு பட்டு மெத்தை, கட்டில், நாற்காலி, பங்கா, அழகிய பெண்கள் முதலிய சுகானந்தமடையத் தக்கதான ஒரு இடம் மோக்ஷம் என்று இருக்கிறதாகவோ அல்லது கல், முள், தேள், பாம்பு, மலம், புழு முதலிய கஷ்டமனுபவிக்கத்தக்க சாதனங்களோடு நரகம் என்று ஒரு ஸ்தானமிருக்கிறதாகவோ புத்தியிருக்கிறவர்களும் பார்ப்பனர் மாய்கையில் சிக்காதவர்களும் கொஞ்சமும் நினைக்க மாட்டார் கள். ஆனால் கர்மபலன் என்பதற்கு நாம் எப்படிப் பொருள் கொள்ளு கிறோமென்றால் நாம் எண்ணிய-பேசிய - செய்த நமது எண்ணம் - பேச்சு - காரியம் ஆகிய இவற்றின் பலன்களை நாமே நேரில் இந்த உலகத்தி லேயே நேருக்கு நேராய் அனுபவிக்கிறோம் என்பதுதான். இந்த முடிவைக் கொண்டே இன்று "சென்னையில் கர்மபலன்" என்கிற தலையங்கம் கொண்டு எழுதத் தொடங்கினோம்.

சென்னையில் நமது பார்ப்பனர் மகாத்மாவின் பெயரைக் கொண்டும், தேசத்திற்காக உண்மையில் தியாகம் செய்தும் ஜெயிலுக்கு போயும் கஷ்டப் பட்டவர்களின் பெயரைக் கொண்டும், காங்கிரஸ் என்கிற பொய்மான் பெயரைக் கொண்டும் சுயராஜ்யம் என்கிற மாய்கையைக் கொண்டும் தமிழ்



மக்களை ஏமாற்றி தாங்கள் ஆதிக்கம் பெற பலவித சூழ்ச்சிகள் செய்து வந்தார்கள் - வருகிறார்கள் - வரப்போகிறார்கள் என்பது நாடறிந்த விஷ யம். இதற்காக அவர்கள் இந்த இரண்டு மூன்று வருஷங்களாய் எண்ணிய கெட்ட எண்ணங்களும், பேசிய பொய் வார்த்தைகளும், புன்மொழிகளும், செய்த அக்கிரமங்களும் ஒரு அளவுக்கடங்கியதல்ல. உதாரணமாக தாங் கள் காந்தி சீடர்களென்றும், தங்களுக்குக் கொடுக்கும் ஓட்டு மகாத்மா காந்திக்கு கொடுப்பதென்றும், பார்ப்பனரல்லாத கக்ஷிக்காரரான ஜஸ்டிஸ் கக்ஷியாருக்குக் கொடுக்கும் ஓட்டுகள் தேசத் துரோகிகளுக்கும் சுயநலக் காரர்களுக்கும் கொடுக்கும் ஓட்டென்றும் சொன்ன தோடல்லாமல், பார்ப் பனரல்லாத கக்ஷியார் கூட்டும் கூட்டங்களில் காலிகளை விட்டு கல்லெறியச் சொல்லு வதும் கூட்டத்தைக் கலைக்கச் செய்வதும், பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவர்களை அவர்கள் வீட்டுக்கு முன்னால் நின்று கொண்டு யோக்கியப் பொறுப்பில்லாமல் துர்பாஷையால் திட்டச் சொல்வதும் பார்ப் பனரல்லாத தேச பக்தர்களான ஆரியா முதலியவர்களை ஆட்களை விட்டு அடிக்கச் சொல்வதும், தேர்தல் சமயங்களில் தேர்தல் ஸ்தானங்களில் பெரிய மனிதர்களையும் ஸ்திரீகளையும் துர்பாஷையாகப் பேசியும் காலித்தனமாய் நடத்தும் பல காரியங்களைச் செய்த விஷயம் சென்ற சென்னை முனிசிபல் தேர்தல் சம்பந்தமாய் நியாய ஸ்தலத்திற்கு சென்ற பல வியவகாரங்களி லிருந்தும் அவை உண்மைதானா அல்லவா என்பதை கடைசி வியவகார மாகிய ஸ்ரீமான் ஆரியா அவர்களை அடித்ததாக ஏற்பட்ட வியவகாரம் முடிந்த விதத்திலிருந்தும் அறிந்திருக்கலாம்.

தேர்தல்கள்தான் இப்படி என்றால் தேர்தல்களுக்கு முன்பாக ஒத்து ழையாமை இருந்த காலத்திலும் சக்ரவர்த்தித் திருமகனார் சென்னைக்கு வந்த காலத்தில் அவரைப் பார்க்கச் சென்ற பார்ப்பனரல்லாத தலைவர்களைத் திட்டியும் அடித்தும் துன்புறுத்திய தோடல்லாமல் அவர்கள் ஏறிச் சென்ற மோட்டார் வண்டி முதலிய வாகனங்களின் மேல் கல் எறிந்து காயப் படுத்தியும் சேதப்படுத்தியும் அவர்களை ஓடி ஒளியும்படி செய்ததையும் பார்ப்பனரல்லாதாரின் மாபெருந்தலைவரான சர்.பி. தியாகராய பெருமானின் வீட்டுக்குக் கூட சில காலிகளை விட்டு அவர் வீட்டு ஜன்னல் கதவு கண்ணாடி முதலியவைகளை உடைத்தும் அவரைக் கொல்ல ஏற்பாடு செய்தும் அவர் பத்தினியார் வந்து இக்காலிகளின் காலில் விழுந்து தனக்கு மாங்கல்லியப் பிச்சை கொடுக்க வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டும் அப் பாவிகளுக்கு மனமிளகாமல் துர்பாஷையால் அவ்வம்மையாரைத் திட்டி உள்ளே நுழையப் பிரயத்தனப்பட்டும் அங்குள்ளவர்கள் அப் பெரியாரை ஒளியச் செய்யும்படியான அவ்வளவு அக்கிரமங்கள் செய்யச் செய்ததையும், சென்ற வாரத்திலும் பார்ப்பனரல்லாத தலைவரான காலஞ் சென்ற டாக்டர் நாயர் பெருமான் ஞாபக தினத்தைக் கொண்டாடும் முக்கிய சம்பவமான ஒரு பெரிய கூட்டத்தில் கலகம் செய்யச் செய்தும் பார்ப்பனரல்லாத தேசபக்தர்கள் தலைமீது கல் போட்டு காயப்படுத்தியும் கூட்டத்தைக் கலைக்கச் சூழ்ச்சி



RangaRakes tamilnavarasam.com

செய்தும் மற்றும் எவ்வளவோ கொடுமைகள் செய்ததை யும் உலகமறிந்திருக்கும். இப் பார்ப்பனர்கள் செய்வித்த இவ்வித அக்கிரமங் களைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும் மகாத்மா காந்தியும் முறையே தீர்மான மூலமாகவும் 'எங் இந்தியா' பத்திரிகை மூலமாகவும் கண்டித்திருப் பதும் உலகமறிந்த விஷயம். இவைகள் மாத்திரமல்லாமல் வெளியூர் களிலும் கூலிக்கு ஆட்களை அமர்த்தி ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாத தலைவர்களையும் பெரிய மனிதர்களையும் திட்டுவதற்கு ஏவி விடுவதும் அவர்கள் பேரில் பொய்யும் புளுகும் சொல்லச் செய்து கலக முண்டாக் குவதுமான பல கொடுமைகளைச் செய்து வருவதும், தங்கள் கைவசம் உள்ள பத்திரிகைகளைக் கொண்டு பார்ப்பனரல்லாதாருக்கும் அவர்களு டைய கட்சிக்கும் அக்கட்சித் தலைவர்களுக்கும் நமது பார்ப்பனர் செய்து வரும் கொடுமைகளும் அளவிடக் கூடியதல்ல.

இவ்வளவு கஷ்டங்களையும் கொடுமைகளையும் அபாயங்களையும் சகித்துக்கொண்டு பார்ப்பனரல்லாதார் சும்மாயிருப்பதாயிருந்தாலும் வேலை செய்தவன் கூலி பெறாமல் போக இயற்கைதேவி சம்மதிப்பாளா? ஒரு சமயம் இயற்கைதேவி சம்மதித்தாலும் உலகம் பொறுக்குமா? ஒருக்காலும் பொறுக் காது. ஆகையால் உண்மையான கூலி அடையாவிட்டாலும் அடையக்கூடிய நிலைமையிலாவது இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ளப்படுகிறது. அதுவுமில்லாமல் வேலை செய்தவர்களே கூலி அடைகிறோம் என்றாவது சொல்லிக் கொள்ளத்தக்க சம்பவம் ஏற்படுகிறது. உதாரணமாக 'சுதேச மித்திரன்' என்னும் பார்ப்பன மித்திரன் பத்திராதிபரான ஸ்ரீமான் எ. ரெங்க சாமி அய்யங்கார் ஒரு கூட்டத்தில் பேசும் போது அவர் பேசிய பொய்க் கூற்றை வெளிப்படுத்த சிலர் அவரைக் கேள்வி கேட்டதாகவும், அதற்கு ஸ்ரீமான் அய்யங்கார் பதில் சொல்லாமல் போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கூப் பிட்டு "இதோ கேள்வி கேழ்க்கிறானே, அவனை அரஸ்ட் செய்" என்று கட்டளை இட்டதாகவும், அந்த இன்ஸ்பெக்டர் "அவர்கள் கலகம் செய்தால் அரஸ்ட் செய்யலாம், நீர் பேசியதிலிருக்கும் புரட்டுகளை வெளியாக்க வேண்டும் என்கிற நல்ல எண்ணங்கொண்டும் பொதுஜன நன்மையை உத்தேசித்தும் கேள்வி கேட்டால் அதற்காக எப்படி அரஸ்ட் செய்வது?" என்று கேட்டதாகவும், அதன் பேரில் ஸ்ரீமான் அய்யங்கார் வெட்கித் தலை குனிந்ததாகவும், பிறகு தங்களது வஜ்ஜிராயுதமாகிய பத்திரிகையில் போலீஸாரைப் பற்றி தூஷித்தெழுதி வருவதாகவும் சொல்லப்படுகிறது. பிறகு ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியார் ஒரு கூட்டத்தில் பேசும்போது "காங்கிரசில் இப்போது காந்தியிருக்கிறாரா?" வென்று ஒருவர் கேட்க, அவரைச் (கேட்ட வரை) காலியென்று சொல்லிப் பார்ப்பனரல்லாதார் கக்ஷியைத் தூஷித்த தாகவும் அது சமயம் பக்கத்திலிருந்த ஒருவர் காலியென்று சொன்னதையும் தூஷித்த கெட்ட வார்த்தையையும் வாபீசு வாங்கிக்கொள்ளும்படி கேட்ட தாகவும், அதற்கு ஸ்ரீமான் ஆச்சாரியார் சம்மதிக்காமல் மேலும் மேலும் அப்படியே பேசினதாகவும், இந்த வார்த்தைகளைப் பின்வாங்கிக் கொள்ளும்



படி தன் பக்கத்தில் வந்து சொல்லச் சொன்ன ஆளைப் பிடித்து ஸ்ரீமான் ஆச்சாரியார் தள்ளியதாகவும் அந்த ஆள் ஆச்சாரியாரின் தாடி யைப் பிடித்து ஆட்டினதாகவும் சொல்லிக் கொள்ளப்படுகிறது. ஸ்ரீமான்கள் எம்.கே. ஆச் சாரியாருக்கும் எ.ரெங்கசாமி அய்யங்காருக்கும் ஏற்பட்ட இச் சம்பவத்தைக் குறித்து நாம் வருந்துகிறோம். கூட்டங்களில் இம்மாதிரி நடந்து கொண்டவர்களையும் நாம் அழுத்தமாகக் கண்டிக்கிறோம். ஆனால் நமது வருத்தமும் நமது கண்டிப்பும் ஒரு மனிதன் தான் செய்த கருமத்திற்காக அனுபவிக்கும் பலனைத் தடுக்க முடியுமாவென்பது நமக்குச் சந்தேகமாகத்தானிருக்கிறது.

ஆனாலும் ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியார் போன்றவர்கள் பார்ப்பன ரல்லாதார் உள்ள பொதுக் கூட்டங்களில் நின்று பேசுவது கொஞ்சமும் சரி யல்ல வென்பதுதான் நமது அபிப்பிராயம். அப்படிப் பேசுகிற கூட்டங்களில் கலகம் நடப்பது நியாய விரோதமானாலும் சுபாவத்திற்கு விரோதமென்று சொல்ல வழியில்லை. ஏனெனில் **"ஒரு பார்ப்பனக் குழந்தை சாப்பிடுவதை ஒரு பார்ப்பனரல்லாத குழந்தை ஒருவேளை பார்த்து விட்டால் நான் ஒரு மாதம் பட்டினி கிடப்பேன்"** என்று சொன்னவரும், **"பிறப்பில் பார்ப்பனனும் சூத்திரனும் சமம் என்று சொன்னால் நான் காங்கிர சிலேயே இருக்க மாட்டேன்"** என்று சொல்லிக் காங்கிரசை விட்டு வெளி யில் போனவரும், கல்பாத்தி ரோட்டில் பார்ப்பனரல்லாதாரை நடக்க விடும் படிக் கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்துப் பேசியவருமான நமது எம்.கே. ஆச்சாரியார் எந்த முகத்தைக் கொண்டு பார்ப்பனரல்லாதார் கூடி யுள்ள கூட்டங்களில் பேசத் துணிகிறார் என்பதும் எந்த முறையில் பார்ப் பனரல்லாதார் ஓட்டுக்களை தனக்குப் போடும்படி கேட்கிறாரென்பதும் நமக்கு விளங்கவில்லை. அதோடுகூட பார்ப்பனரல்லாதாரில் பலர் ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியார் பின் சென்று ஆச்சாரியாருக்கு ஓட்டுவாங்கிக் கொடுக்க எப்படிச் சம்மதிக்கிறார்கள் என்பதும் நமக்கு விளங்கவில்லை. பார்ப்பனரல் லாதார் பார்த்த ஆகாரம் சாப்பிடுவது மாத்திரம் பெரிய தோஷமானால் அவர்கள் ஓட்டுக்களை வாங்கிப் பதவி பெற்றுப் பணம் சம்பாதித்து வயிறு வளர்ப்பது மாத்திரம் நமது பார்ப்பனர்களுக்கு மோக்ஷம் போலும்.

இம்மாதிரியான அக்கிரமங்களின் பலனையும் சூழ்ச்சிகளின் பல னையும் ஒரு மனிதன் அனுபவிக்க முடியாமல் செய்ய வேண்டுமென்று ஒருவன் எண்ணுவானேயானால் அது சூரியன் உதிக்கக் கூடாது என்று சொல்லுவது போல்தான் முடியும். ஆனாலும் பொதுவாய் பார்ப்பனரல்லா தாருக்கும் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்குப் பாடுபடுவதாய்ச் சொல்லும் அன்பர்களுக்கும் நாம் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறோம். அதா வது, எந்தக் காரணத்தைக் கொண்டும் எவ்வளவு கோபமூட்டப்பட்டாலும், கூட்டங்களில் ஒருவரை ஒருவர் திட்டுவதோ கலவரம் செய்வதோ அடி தடி ஏற்படும்படி நடந்து கொள்வதோ பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே கஷ்டமும்



RangaRakes tamilnavarasam.com

அவமானமும் கெட்ட பெயரைத் தரத்தக்கது என்றே சொல்லுவோம்.

முதலாவது, இம்மாதிரி செய்யும் காரியமே மிகவும் இழிவானது. அல்லாமலும் "முள்ளு வாழையிலையின் மேல் பட்டாலும் வாழையிலை முள்ளின் மேல் பட்டாலும் இலைக்குத்தான் கெடுதியே தவிர, முள்ளுக்கு ஒரு கெடுதியுமில்லை" என்று ஒரு பழமொழியுண்டு. அது போல் பார்ப்பனக் கட்சிக்காரர் பார்ப்பனரல்லாத கட்சிக்காரரை அடித்தாலும் திட்டினாலும், பார்ப்பனரல்லாதாருக்குத்தான் கஷ்டமும் அவமானமும் ஏற்படுகிறது. எப்படியென்றால் இரண்டு கட்சியிலும் சண்டை பிடித்துக்கொள்ளும் போதும், அடிதடி செய்து கொள்ளும் போதும் பார்ப்பனரல்லாதார்களாகவே இருக்கிறார்கள். உதாரணமாகப் பார்ப்பனக் கட்சிக்காரர்களின் சார்பாய் பார்ப்பனரல்லாதாரைத் திட்டுவதற்கு நமது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதாரகப் பார்த்தே ஏவி விடுகிறார்கள். உதாரணமாக, இப்போது பார்ப்பனரல்லாதார்களைத் திட்டுபவர்கள் யாரென்று பார்த்தால் ஸ்ரீமான்கள் பாவலர், மயிலை ஜயவேலர், மயிலை ரெத்தினசபாபதி முதலியார், குப்புசாமி முதலியார், அண்ணாமலைப் பிள்ளை, சுப்பிரமணிய நாயக்கர், ஜனாப்கள் ஷாபி மகமது, அப்துல் ஹமீத்கான் என்கிற கனவான்களாகவே இருக்கிறார்களேயொழிய வேறில்லை. இவர்கள் பார்ப்பனரல்லாதாராயிருந்தும் இவர்கள் திட்டுவதும் அடிப்பதும் பார்ப்பனரல்லாதாரையேதான். இதற்குத் திருப்பி திட்டுவதாயிருந்தாலும், அடிப்பதாயிருந்தாலும் இவர்களைத்தான் திட்டவும் அடிக்கவும் நேருமேயல்லாமல் பார்ப்பனர்கள் சுலபத்தில் சிக்கிக் கொள்ள மாட்டார்கள். எப்படியாவது நமது கையைக் கொண்டே நமது கண்ணைக் குத்துவார்கள். ஆதலால் எந்த வகையிலும் நமக்குத்தான் கஷ்டம். நியாய மும் சத்தியமும் நம்முடைய பங்கில் இருப்பதனால் நமக்குத் திட்டும் வேலையும் அடிக்கும் வேலையும் கண்டிப்பாய்க் கூடாதென்றே சொல்லு வோம். தவிரவும் நமது காரியங்கள் ஒவ்வொன்றிலும் பாமர பொது ஜனங் களைக் கொண்டே செய்ய வேண்டியதாகையால் நாம் பொது ஜனங்களின் அன்பையும் ஆதரவையும் பெற வேண்டியது முக்கியமான காரியம். அடிதடி சம்பவம் யாரால் ஏற்பட்டாலும் நமக்குத்தான் கெட்ட பெயரென் பதையும் நமக்குத்தான் நஷ்டமென்பதையும் வற்புறுத்திக் கூறுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 01.08.1926**



# கோயில்

இந்து மதத்தினரெனக் கூறப்படும் மக்கள் பல பிரிவும் பல வகுப்பும் பல குலமுமாக எண்ணுதற்கரிய சாதி சாதியென்று பிளவுண்டு ஓர் வகுப்பினருடன் மற்றோர் வகுப்பினர் சேராமலும் ஓர் குலத்தினரிடம் மற்றோர் குலத்தினர் உண்ணல் - தின்னல் கிடையாமலும் இருந்து வருகின்றனர். எவரிட்ட சாபமோ இன்னும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் ஒரே மதத்தினர் என்று கூறிக் கொண்டு இவ்வாறு பல பிரிவினராயிருந்து வருகின்றனர். இத்தகைய பிரிவிற் கெல்லாம் மூலகாரணம் "பனவராம் பெரும் படிறற் உஞயற்றிய கள்ளமாயை". அதாவது சூழ்ச்சியிலேயே ஊறிப் பிறந்த வஞ்சகர்களான பார்ப்பனர்கள் என்னும் இரு பிறப்பாளர்கள் ஏற்படுத்திய திருட்டு வித்தியாசத் தத்துவமே யாகுமென்னும் பெரியார் வாக்கினின்று பார்ப்பனர்களே என்பதை அறிவாளர் எவரும் மறுக்க மாட்டார்கள்.

தமிழ்நாட்டிலேயுள்ள கோயில்களெல்லாம் பண்டைத் தமிழ் வேந்தர்களால் சமரசம், ஒற்றுமை, நல்லொழுக்கம், பக்தி முதலிய தூய எண்ணம் துலங்க வேண்டுமெனக் கருதியே கோயில்கள் நிருமாணிக்கப் பெற்றதாகும். இதற்காக மானியங்களும் அவைகளைக் கட்டிய தமிழரசர்களால் ஏராளமாக விடப்பட்டிருக்கின்றன. பஞ்ச தந்திரத்தில் பெயர் பெற்று விளங்கும் பார்ப்பனக் கூட்டம் தந்திரமாய் தமிழரசர்களின் தயவாலும் பல தமிழர்களின் மூட நம்பிக்கையினாலும் சன்னஞ் சன்னமாக கோயில் அர்ச்சகர்களென்றும் ஆலயங்களை சுத்தப்படுத்துவோர் என்றும் புகுந்து நாளடைவில் கோயிலையே தங்கள் வசப்படுத்திக் கொண்டார்கள்.

இப்பொழுது சைவ வைணவ கோயில்களிலெங்கும் பார்ப்பன ஆதிக்கமே மல்கிவிட்டது. நாட்டின் நல்ல காலமாக, கோயில் பொருளாதார விஷயத்தில் பார்ப்பன ஆதிக்கமில்லாதபடி- பார்ப்பனர் இஷ்டம் போல் செலவு செய்து கணக்கெழுதுவதற்கு முடியாதபடி- இந்து மத பரிபாலனச் சட்டம் என ஒரு சட்டம் வந்து அவர்களின் அகங்காரத்தை ஒருவாறு ஒடுக்கிற்று. இவ்வாறு பார்ப்பனர்களின் "கொள்ளை"த் தொழிலுக்கு இந்துமத பரிபாலனச் சட்டம் ஓரிடராயிருப்பதன் பொருட்டே பார்ப்பன ராஜ்யத்தை நிலை நாட்டுதற்கு முயன்று வரும் சீனிவாசய்யங்கார் கோஷ்டியினர் அச்சட்டம் கூடாதெனத் தங்கள் ஊத்தை வாய் திறந்து உளறியும் அதை அழிக்க வேண்டுமென்ற ஒரே பெருங்கருத்துடன் சட்டசபைக்கு மெஜாரிட்டியாகச் செல்ல முயன்றும் வருகின்றனர்.



RangaRakes tamilnavarasam.com

சமத்துவம் விரவ வேண்டுமெனக் கட்டப்பட்ட ஆலயம் உயர்வு தாழ்வு கற்பிப்பதற்கு இப்பொழுது உதவி வருகிறது. சுவாமியிருக்கும்படியான கற்பக் கிரகத்திற்குள் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் தான் போகவேண்டுமென்றும் மற்ற வகுப்பார் போகக் கூடாதென்றும் இன்னின்ன வகுப்பார் கோயிலுக்குள் அடியெடுத்து வைக்கவே கூடாதென்றும் இதைமீறி ஆண்டவன் பக்தியால் கோயிலுக்குள் பிரவேசித்துவிட்டால் அதனால் ஆலயத்தின் தூய்மையே அழிந்து விட்டதென்றும், அதனால் ஏற்பட்ட "தீட்டைப்" போக்க பார்ப்பனர்களே கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்றும் பார்ப்ப னர்கள் பணித்து விட்டனர். இதனைச் சீர்திருத்தம் செய்வதற்கு தமிழ் நாட்டிலே ஓர் பெரும் எழுச்சி ஏற்படல் வேண்டுமென்பது நமது முக்கியக் கருத்துக்களிலொன்று. இந்துமத பரிபாலனச் சட்டம் சமூக சம்பந்தமாய் ஆலயத்தில் நடக்கும் அக்கிரமங்களை ஒன்றும் செய்வதற்கில்லை. தமிழர்களே இதற்கெனத் தனித்ததோர் பெருங்கிளர்ச்சி செய்தல் வேண்டும். இப்பொழுது நமது பார்ப்பனக் கட்சியினர் ஆலய விஷயத்தில் அக்கறை காட்டுவதெல்லாம் தங்களதும் தங்கள் வகுப்பினரதும் வயிற்றுப் பிழைப்பைக் கருதியேயாகும். எனவே கோயில் விஷயமாய்க் கிளர்ச்சிசெய்து பெருஞ் சீர்திருத்தம் செய்ய வேண்டிய பொறுப்பு தமிழர்களின் கடனேயாகும்.

பினாங்குவாசியான திரு.வை.க.சபாபதி முதலியார் கோயிலைக் காப்பாற்றுங்களென்று 'தமிழ்நாடு' வாயிலான் தமிழர்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அதில் தமிழ் மன்னர்கள் கட்டிய கோயில்களில் பார்ப்பனர் செல்வாக்கு மிதமிஞ்சியிருத்தலை அழுத்தமாகக் கண்டிக்கிறார். கோயில்களில் பூசை செய்யும் பார்ப்பன அர்ச்சகர்களிற் பலர் ஒழுக்கங் குன்றி இழிதகைமை உடையோராய் இருக்கிறார்களென்பதை நன்கு எடுத்துக் காட்டு கிறார். இதற்குச் சான்றாக,

**சத்தியமின்றித் தனி ஞானந் தானின்றி**
**ஒத்தவிடயம் விட்டு ஓரும் உணர் வின்றிப்**
**பத்தியு மின்றிப் பரன் உண்மை யின்றி ஊண்**
**பித்தேறும் மூடர் பிராமணர்தான் அன்றே.**

என்ற **திருமூலர்** வாக்கை தமிழர்கள் கவனிக்குமாறு அவர் எடுத்துக் காட்டி இடித்துக் கூறுவதோடு படிற்றொழுக்கம் மல்கி அந்தணத்தன்மை அருகி, பஞ்சமா பாதகம் நிரம்பியுள்ள ஒரு கூட்டத்தை பிறப்பளவில் உயர்ந்தோரெனக் கருதி கோயில் பூசை செய்ய விடுவதை விலக்கிவிட்டு ஒழுக்கத்தால் வேதியராக உள்ள நல்லோர்கள் எந்த சாதியில் இருந்த போதிலும் அவர்களை நமது கோயில்களில் பூசை செய்யுமாறு வேண்டுவன செய்தல் வேண்டுமெனப் பொறித்துள்ளார். 'லோகோபகாரி' பத்திரிகை இதைப் பற்றி எழுதி விட்டு தன்னுடைய முடிவுரையாக "நமது கோயில்கள்



இன்னும் சீரழியாமலிருக்க வேண்டு மானால் நமது சமயம் சிறந்தோங்க வேண்டு மானால், இந்தச் சீர்திருத்தத்தை நம்மவர்கள் இன்னும் தாமதமின்றி உடனே செய்ய வேண்டும்" என்று எழுதியுள்ளது. இதனைத் தமிழர்கள் கவனிப் பார்களாக.

**குடி அரசு - கட்டுரை - 01.08.1926**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ் இருப்பதை விட இறப்பதே மேல். ஏன்? இப்பொழுதுள்ள காங்கிரஸ் பார்ப்பன காங்கிரசே

அக்கிராசனாதிபதி அவர்களே! கனவான்களே!

நான் எந்தக் கட்சியின் சார்பாகவும் பேச வரவில்லை. தற்காலம் இந்த தேர்தலில் பெருத்த கலவரமாயிருந்து வருகையில் ஓட்டர்களுடைய கடமை என்ன என்பதை எடுத்துக் கூறவே நான் வந்திருக்கிறேன். அக்கிராசனாதிபதி அவர்கள் என்னைப் பற்றியும் என்னுடைய வேலையைப் பற்றியும் கூறினார். எத்தனையோ தேசபக்தர்கள் நாட்டிற்காக தியாகம் செய்த காலையில் நான் அவர்களுக்குத் தொண்டு புரிந்து என்னால் கூடிய அளவு ஊழியம் செய்திருக்கிறேனே ஒழிய வேறில்லை. ஒத்துழையாமைக் காங்கிரசில் கலந்துள்ள நான் இக்கூட்டத்தில் பேசலாமாவென்ற சந்தேகம் சிலருக்கிருக் கலாம். காங்கிரஸ் எப்படியிருந்தது? இப்போது என்ன ஸ்திதிக்கு வந்தது? என்ற விஷயங்கள் தெரிந்து விட்டால் அந்தக் கவலை உங்களுக்கு இருக் காது. அந்த விஷயங்களை எடுத்துக் கூறவே நான் இங்கு வந்துள்ளேனே யொழிய, தனிப்பட்டவர்களைப் பற்றியாவது கட்சியைப் பற்றியாவது பேச நான் வரவில்லை. நாம் தனிப்பட்டவர்களைப் பற்றி பேசினால் கலகம்தான் நடக்கும். சென்ற வருடத்தில் நான் இங்கு வந்திருந்த போது திரு.வாசு நாயுடு டிவிஷனில் பல பிரசங்கம் செய்தி ருக்கின்றேன். எலக்ஷன் காலத்தில் அங்கு கலகம் நடந்ததும் நாலைந்து வழக்குகள் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் கோர்ட் டில் இருந்து ஒருவாறாக முடிவடைந்ததும் உங்களுக்குத் தெரியும். அந்த சமயத்தில் ஏதோ ஓட்டர்களை ஏமாற்றி ஓட்டுப் பெற்று சென்றிருந்த போதி லும் அதன் பலன் அடுத்தடுத்து வரும் தேர்தல்களில் தெரிந்து விடும்.

இப்போது நடக்கிற தேர்தலில் அனுஷ்டிக்கப்படுகின்ற காரியங் களைப் பார்க்கையில் விரோதமும் குரோதமுமே அதிகரித்து வருகிறதென்று ஒரு பத்திரிகை குறிப்பிட்டிருக்கின்றது. அவ்வாறு விரோத உணர்ச்சி ஏற்படா மல் நாம் நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். இப்போது பார்ப்பனர் பார்ப்ப னரல்லாதார் என்கிற கட்சியின் பெயரை வைத்துக்கொண்டு தேர்தல் சண்டை நடந்து வருகின்றது. நம்மில் சிலரை ஒரு சாரார் தூண்டி விட்டு தூரத்திலிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டு வருகிறார்கள். ஒரு சாராரின் தூண்டுதலின்படி



செய்யும் பார்ப்பனரல்லாதாருக்குக் கூலியோ அல்லது வேறு வித உப சாரமோ கிடைக்கிறது. ஆகவே அவர்கள் நம்மையே திட்டும் படியாக ஏற்பட்டு விடுகிறது. எதிரிகள் கலகப் பிரசாரம் செய்யும்படி சில ஆட்களை ஏவிவிட்டு கலகம் செய்யும்படியும் தூண்டி விடுகிறார்கள். சென்ற வருஷத்தில் கலகம் நடந்ததன் பயனாகப் பிராதுகள் கொடுக்கப்பட்டன. சிலர் தண்டிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களை அவ்வித காரியங்கள் செய்யும்படி தூண்டி விட்டவர்கள் யார் என்று கண்டுபிடித்து அவர்களை அடக்க நாம் முயற்சி செய்யவில்லை. சென்னை மாகாணம் பூராவும் கட்சி வித்தியாசத்தில் மனக்கசப்பு ஏற்பட்டு வருகிறது. அது பார்ப்பனர் பார்ப்பன ரல்லாதார் என்கிற இரண்டையே பொறுத்திருக்கின்றது. பிராமணர்களு டைய ஆதிக்கத்தைப் போக்க பல ஆயிரம் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னதாகவே பல மகான்கள் பாடுபட்டிருக்கின்றனர். கபிலர், புத்தர் முதலியவர்களெல்லாம் பாடுபட்டனர். புத்தரும், சமணர்களும் அதற் காகவே பாடுபட்டார்கள். இராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம், இரண்ய புராணம் முதலியவைகளெல்லாம் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் போராட்டத்தையே விளக்குகின்றன. ஆகவே சர்.தியாகராயரும் டாக்டர் நாயரும் தோற்றுவித்த இந்த இயக்கமானது அநேக ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நம் நாட்டில் இருக்கிற தென்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

## காங்கிரஸ் என்றால் என்ன?

நாம் எவ்வளவு படித்தவர்களாக இருந்த போதிலும் நமது திரு. தணிகாசலம் செட்டியாரைப் போன்ற திவான் பகதூரும், அதற்கு மேற்பட்ட பட்டதாரிகளாயிருந்தபோதிலும் ஒரு பார்ப்பனர் தர்ப்பப் புல்லை எடுத்துக் கொண்டு வருவாரேயாகில் 'சாமி', 'சாமி' என்று அவர் காலில் விழக்கூடிய வர்களாகவே இருக்கின்றோம். நம் பார்ப்பனரல்லாதார் கட்சி சுயராஜ்யத்தைப் பெறுவதற்காக ஏற்பட்டதேயொழிய உத்தியோகத்துக்காக ஏற்பட்டதல்ல. நாம் தேவடியாள் மகன், அடிமை, சண்டையில் பிடிபட்டவன் என்று பொருள்படக் கூடிய 'சூத்திரன்' என்ற பதத்தால் அழைக்கப்படாமல் இருப்பதற்கும் நாம் மனிதர்கள் என்று காண்பிக்கவுமே இவ்வியக்கம் தோன்றியிருக்கிறது. இப் போது நம் எதிரிகள் காங்கிரசின் பெயரால் கூறுவதெல்லாம் சுயநலத்தைக் கருதியேதான். மகாத்மா காந்தி அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தோற்றுவித்தபோது நானும் ஸ்ரீமான்கள் கலியாணசுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, எஸ்.இராமநாதன், தண்டபாணி பிள்ளை முதலியவர் களும் அதில் ஈடுபட்டோம். நம்முடைய குறைகளை நிவர்த்தி செய்வதே அந்த இயக்கத்தின் தத்துவமாக இருந்தது. கிராமங்களிலுள்ள ஏழை மக்கள் ஒரு வேளை சாப்பாட்டுக்குக் கூட வகையின்றி கஷ்டப்படுவதைக் கண்ட மகாத்மா கைராட்டையில் நூல் நூற்க வேண்டுமென்று போதனை செய்தார். தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்ற தத்துவத்தில் மனிதனுக்கு மனிதன்



RangaRakes tamilnavarasam.com

உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வித்தியாசம் அடிப்பட்டுப் போகின்றது. நாங்கள் இன்னும் ஒத்துழையாமையிலேயே இருக்கின்றோம். நம் நாட்டுப் பார்ப்பனர்கள் ஒத்துழையாமை இயக்கம் மனிதனுக்கு மனிதன் சமத்துவத் திற்காகப் போராடுவதை உணர்ந்ததும் அதை நிறுத்தப் பாடுபட்டார்கள். அதற்காக இங்கும் அங்கும் பல ஆட்களைப் பிடித்து சூழ்ச்சியான வேலை கள் செய்து மகாத்மாவை காங்கிரசிலிருந்து பிரிந்து போகும்படி செய்து விட்டனர். காங்கிரசானது மனிதனுக்கு மனிதன் சமம் என்பதையும் தீண்டாமை விலக்கையும் கதர் உற்பத்தி செய்வதையும் முற்றும் விட்டுவிட்டு, இப்போது சட்டசபைக்குச் செல்ல ஆட்களை நிறுத்தி வேலை செய்கின்றது. யார் யார் பார்ப்பனரல்லாதார்களின் நன்மைக்காகப் பாடுபடுகின்றார்களோ அவர்களையெல்லாம் கார்பொரேஷனை விட்டும் சட்டசபையை விட்டும் விரட்டியடித்து விட்டு அந்த ஸ்தானங்களில் பார்ப்பனர்களை நுழைய வைக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர். அல்லாமலும் காங்கிரஸ்காரார் கார்ப்பொரேஷனுக்குச் சென்றால் வரி குறையுமென்றும் சுயராஜ்யம் வரு மென்று சொல்லுகிறார்கள். யாருக்கு வரும் என்று நினைக்கிறீர்கள். பார்ப் பனர்களுக்கே. பார்ப்பனரல்லாதார்களுக்கோ தீங்கே விளையும்.

## இப்போதைய காங்கிரஸ் இறப்பதே மேல்

காங்கிரஸ் முன்னிருந்த நிலைமையையும் இப்போதுள்ள நிலைமை யையும் நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும். காங்கிரஸ் ஏற்பட்டு 40 வருஷ மாகிறது. அதனால் என்ன பலன் கிடைத்தது? அது ஏற்படாததற்கு முன்பு என்ன பலன் கிடைத்தது? காங்கிரஸ் இருப்பதா மடிவதா? என்று இன்று துண்டுப் பிரசுரம் வழங்கப்பட்டிருக்கிறதாக அறிகிறேன். என்னைக் கேட் டால் தற்போதுள்ள காங்கிரஸ் மடிவதே நன்று என்று சொல்லுவேன். இப்போ துள்ள காங்கிரசைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டும். காங்கிரஸ் ஏற்படாத தற்கு முன்பு பிராமணரல்லாதார்கள் செல்வாக்கும் யோக்கியதையும் அடைந் திருந்தார்கள். அன்றியும் சகல உத்தியோகங்களையும் நம்மவர்களே வகித்து ஒற்றுமையாக நடத்தி வைத்திருக்கிறார்கள். நீதி நிர்வாகங்கள் ஒழுங்காக நடந்து வந்தன. முன்பு கேசவலு நாயுடு என்று ஒரு சிரஸ்தார் இருந்தார். கலெக் டர் கூப்பிட்டாலும் கையில் தடியும் வாயில் சுருட்டும் பிடித்துக் கொண்டே போய் என்னவென்று கேட்பார். கலெக்டரும் அவருக்கு மரியாதை கொடுத்து வந்திருக்கின்றார். முனிசீப் ஒருவர் இருந்தார். அவரும் அவ்வித உத்தியோகத்தைத் திறமையாக நடத்தியிருக்கின்றார். திரு.பெத்தண்ணா என்ற ஒரு தாசில்தார் இருந்தார். அவருக்கு இங்கிலீஷில் கையெழுத்துப் போடத்தான் தெரியும். ஆனால், வேலையில் திறமைசாலி. அவரை வேறு இடங்களுக்கு மாற்றினதற்காக பல தடவை இராஜினாமா கொடுத்தார். அப் போது உத்தியோகங்களுக்கு கௌரவமும், யோக்கியதையும், மரியாதையும் ஏற்பட்டிருந்தது. காங்கிரசுக்குப் பின் தெருப் பிச்சை எடுக்கிற வகுப்பினர் களெல்லாம் உத்தியோகங்களுக்கு வந்துவிட்டதால் மரியாதையைக்



கெடுத்துவிட்டார்கள். இவர்களை வேலையிலிருந்து விலக்கிவிட்டாலோ, அதிகாரிக்கு கும்பிடு போட்டோ அல்லது அந்த அதிகாரிக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் செய்து கொடுத்தோ அந்த வேலையை சம்பாதித்துக் கொள்ளுவார்கள். காங்கிரஸ் ஏற்பட்டதன் பயனாக பார்ப்பன ரல்லாதார்களுக்குப் பெருத்த கஷ்டமும், நீதி நிர்வாகங்களுக்கு அநீதியும் ஏற்பட்டு விட்டதென்றே சொல்லுகின்றேன். காங்கிரஸ் போர்வையைப் போர்த்திக் கொண்டே நிர்வாக சபை அங்கத்தினர் பதவி முதற்கொண்டு கீழ்த்தர உத்தியோகம் வரையிலும் பார்ப்பனர்களே புகுந்து விட்டார்கள். காங்கிரஸ் ஏற்பட்டு முப்பது முப்பந்தைந்து வருடங்கள் வரையிலும் இவ் விதமாகவே நடந்து வந்திருக்கின்றது. காங்கிரசின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஒரு வகுப்பார் எல்லா உத்தியோகங்களையும் அனுபவித்து வருவ தைக் கண்ட மகாத்மா காந்தி அவர்கள் எல்லோரையும் சமம் செய்யும் உத்தேசத்தோடு ஒத்துழையாமை ஆரம்பித்து, ஒருவரும் அரசாங்க உத்தி யோகங்களுக்குப் போகக்கூடாதென்று உபதேசம் செய்தார். அப்பொழுது இந்தப் பார்ப்பனர்களெல்லாம் ஏன் அரசாங்க உத்தியோகங்களை விட்டு வெளியே வரவில்லை? இப்போது இந்த டிவிஷனுக்கு அபேட்சகராக நிற்கும் திரு.பி.டி. குமாரசாமி செட்டியாருக்கு எதிராக ஒரு பிள்ளையை நிறுத்தி வைத்திருக்கும் சுயராஜ்யக் கட்சியார், ஈ.வெ.இராம சாமி நாயக்கர் ஜெயிலுக்குப் போனார்; டாக்டர் வரதராஜுலு நாயுடு ஜெயிலுக்குப்போனார்; என்.தண்டபாணி பிள்ளை, ஆரியா முதலியோர் ஜெயிலுக்குப் போனார்கள் ஆகவே சுயராஜ்யக் கட்சி அபேட்சகருக்கு ஓட்டுக் கொடுங்கள் என்று கேட் கின்றார்கள். (நகைப்பு) காங்கிரசின் பெயரைக் கேட்டு நீங்கள் ஏமாந்து போகக்கூடாது. ஓட்டர்கள் தங்களுக்குள்ள பகுத்தறிவைக் கொண்டு சீர் தூக்கிப் பார்த்து எது நியாயமோ அதன்படி தங்கள் வாக்குகளைக் கொடுக்க வேண்டும். கார்ப்பொரேஷனில் யார் கவுன்சிலராகப் போனாலும் வரியைக் குறைக்க முடியாது. நான் முனிசிபல் சேர்மெனாயிருந்து நிருவாகம் உணர்ந் தவனாகையால் இவ்விதமாக உறுதியுடன் கூறுகின்றேன். வீட்டு வரியைக் குறைத்தால் முனிசிபல் நிருவாகம் சரியாக நடைபெறுவதற்காக வேறு விதமான வரிபோடத்தான் வேண்டும். முனிசிபாலிட்டி நடைபெறுவதற்கு இத்தனை லட்சம் ரூபாய் வேண்டுமென்று ஏற்பட்டுவிட்டது. முனிசிபா லிட்டியின் நிருவாகம் இன்னின்னவாறு நடைபெற வேண்டுமென்று சட்டங்களும், விதிகளும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் தெரிந்தெடுக்கப்பட்டபோதிலும் அங்கு சென்றதும் முனிசிபல் சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடப்பதாக வாக்குறுதி செய்ய வேண்டிய தாகயிருக்கிறது. வாக்குத் தத்தம் செய்து கொடுத்துவிட்டு ஒருவரும் மீறி நடக்க முடியாது. மீறி நடப்பவர்கள் அயோக்கியர்களேயாவார்கள். பத்துப் பதினைந்து வருடங்களாக சென்னைக் குழாய்களில் பூச்சியும் புழுக்களும் வந்து கொண்டிருக்கின்றன. அதை நிவர்த்தி செய்வதாக யிருந்தால் 30 அல்லது 40 இலட்ச ரூபாய் செல்லும். அதற்கு உங்கள் மீதுதான் வரி போட



RangaRakes tamilnavarasam.com

வேண்டி வரும். ஆதலால் இப்போது நீங்கள் போன போதிலும் சரி அல்லது ஒரு பூனைக் குட்டியை கவுன்சிலராக அனுப்பியபோதிலும் ஒரே வேலைதான் செய்யமுடியும். கையெழுத்துப் போடுவதற்கு ஒரு இயந்திரம் இருக்கும் பட்சத்தில் முனிசிபல் நிருவாகம் செவ்வனே நடைபெற்று விடும்.

## முனிசிபாலிட்டிக்கு தங்கள் நலனைக் கருதியே செல்லுகிறார்கள்

முனிசிபாலிட்டிக்குச் செல்லுபவர்கள் தங்களுடைய நன்மையைக் கருதியே போகின்றார்கள். முனிசிபாலிட்டியில் பலவித உத்தியோகங்கள் இருக்கின்றன. பார்ப்பனர்களை அங்கு போகும்படி விட்டுவிட்டால் மேல் உத்தியோகம் முதற்கொண்டு பங்கா இழுக்கும் வேலை வரையிலும் பார்ப் பனர்களையே போட்டு விடுவார்கள். பார்ப்பனரல்லாதார்களை அனுப்பி னால் உங்களுக்கு நன்மை உண்டு. பார்ப்பனரல்லாதார்களுக்குள்ளே போட்டி ஏற்படுமேயானால் உங்கள் வகுப்பின் நன்மைக்காக யார் பாடுபடுவார் களென்று தெரிகின்றதோ அவர்களையே ஆதரிக்கவேண்டும்.

## காங்கிரஸ்காரர்களுக்கு முனிசிபாலிட்டியில் வேலை கிடையாது

காங்கிரஸ்காரர்கள் சர்க்காரோடுதான் முட்டுக்கட்டை போடுவதாகச் சொன்னார் கள். அப்படியிருக்க இவர்கள் முனிசிபாலிட்டியில் எவ்விதமான முட்டுக் கட்டையும் போடமுடியாது. எல்லா விஷயங்களையும் சரிவர நடத்துவதாக வாக்குறுதி செய்து பிறகே ஸ்தானம் ஏற்றுக் கொள்பவரால் அதற்கு மீற முடியாது. அன்றியும் முனிசிபாலிட்டிற்கு வருபவர்கள் சுயராஜ் யத்துக்காக எந்த மனுவும் அரசாங்கத்தாருக்கு அங்கிருந்து போட முடியாது.

சுயராஜ்யக் கட்சியார் மூன்றாவது வருடம் நடைபெற்ற தேர்தலில் பார்ப்பனர்களில் 3 பேரையும் சென்ற வருடம் 5 பேரையும் அபேட்சகராகப் போட்டார்கள். இந்த வருடத்தில் 10 ஸ்தானத்துக்கும் பார்ப்பனர்களைப் போட்டுவிடலாமென்று கருதியிருந்தார்கள். இப்போது அவர்களுடைய நிலைமை ஜனங்களுக்குத் தெரிந்து விட்டது. ஓட்டர்களாகிய நீங்களும் விழித்துக் கொண்டீர்கள். ஸ்ரீமான் வி. சக்கரை செட்டியார் சிறிது காலம் அவர் களுடன் சேர்ந்து கொண்டிருந்தார். அவரது உடம்பில் பார்ப்பனரல்லாதார் இரத்தம் ஓடுகின்றபடியால், ஒவ்வொரு சமயத்திலும் பார்ப்பனரல்லாதார்கள் நன்மைக்காகப் போராடினார். இதைக் கண்ட பார்ப்பனர் இவரைத் தள்ளி விட்டு வேறு ஒருவரை கார்ப்பொரேஷன் பிரசிடெண்டாக்கி விட்டார்கள். திரு. புர்ரா முனிசிபல் கவுன்சிலராக வருவதற்கு திரு. சக்கரை எவ்வளவோ பிரயாசைப்பட்டார். இப்படியிருக்க ஒரு விஷயத்தில் திரு.சக்கரை பேசிக் கொண்டிருக் கையில் அவரை திரு.புர்ரா தன்னுடைய நண்பரல்லவென்று சொன்னார். (வெட்கம்) சுயராஜ்யக் கட்சியார் பார்ப்பனரல்லாதார்களுக்கு என்னென்ன கெடுதல் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்திருக்கின்றனர். திவான் பஹதூர் ஜே.வெங்கட்ட நாராயணா கார்ப்பொரேஷன் கமிஷனராக வந்தது முதல் அவரை ஒழிக்க சுயராஜ்யக் கட்சியார் பாடுபடுவானேன்? அவரிடத்தில் பூநூல் இல்லை. இவர் பார்ப்பனரல்லாத பிள்ளைகளுக்கு வேலை முதலியவை கொடுத்து ஆதரிக்கிறாராம். அதற்காக அவரைத் தள்ளிவிடப் பாடுபடுகின்றார்கள். நேற்று முன் தினம் நடைபெற்ற கூட்டத் தில் ஒரு விஷயம் வாதிக்கப்பட்டது. ஒரு உத்தியோகஸ்தரை நாலைந்து வருடங்களுக்கு மேல் ஒரு ஊரில் வைக்கக்கூடாதென்று அடிக்கடி மாற்று வது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது. அதுபோலவே சென்னைக் கார்ப்பொரேஷன் சுகாதார உத்தியோகஸ்தரை வேறு உத்தியோகத்துக்கு மாற்றிவிட்டார்கள். அந்த உத்தியோகஸ்தரே 10 வருடம் கார்ப்பொரேஷனில் வேலை பார்த்திருக்கின்றார். அப்படியிருக்க அந்த உத்தியோகஸ்தரே வேண்டுமென்று சுயராஜ்யக் கட்சியார் சொல்லுவதன் காரணம் யாதெனில் அவர் ஒரு பார்ப்பனராகயிருப்ப தேயாகும். இதற்காக அவர்கள் அரசாங்கத் தாரை ஏன் கண்டிக்க வேண்டும்?

'ஜஸ்டிஸ்', 'திராவிடன்' ஆகிய இரு பத்திரிகைகளுக்கும் இந்த வருடத்தில் கார்ப்பொரேஷன் விளம்பரங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு முன்பாக பல வருடமாக 'இந்து', 'சுதேசமித்திரன்' பத்திரிகை ளுக்கே விளம்பரம் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. பார்ப்பனரல்லாதா ரால் நடத்தப்படும் பத்திரிகைகளுக்கு இந்த வருடம் விளம்பரம் கொடுப் பதைக் கண்டதும் அப்பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பானேன் என்று கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டார்கள் . கார்ப்பொரேஷன் விளம்பரம் கொடுத்து ஆதரித்தால் அப்பத்திரிகைகள் அதிகமாக நாட்டிற்கு உழைக்க முற்பட்டுவிடுமென்றே அவர்கள் விளம்பரம் கொடுக்கக் கூடாதென்கிறார் கள். முனிசிபாலிட்டிக்குக் கட்டப்படும் வரிகளில் 100-க்கு 97 பாகம் பார்ப் பனரல்லாதார்களாகிய நீங்களே கொடுக்கின்றீர்கள். ஆகவே பார்ப்பனரல்லா தார்களாலேயே அதன் நிருவாகம் நடைபெற வேண்டும். இப்போது நடை பெறப்போகும் முனிசிபல் தேர்தலில் காங்கிரஸ் கட்சியார் என்றாவது சுயராஜ் யக் கட்சியார் என்றாவது அவர்கள் சொல்லுவதைக் கேட்டு ஏமாந்து போகக் கூடாது. உண்மையாக உங்களுக்கு உழைப்பவர்களை ஆதரிக்க வேண்டும். இன்னும் இரண்டு மூன்று தடவை நான் பேச எண்ணியிருக்கிறபடியால் அவ்வப்போது மற்றும் சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன்.

*குறிப்பு: 29.07.1926 ஆம் நாள் சென்னை வண்ணாரப்பேட்டையில் அகில இந்திய பார்ப்பனரல்லாதார் காங்கிரஸ் சார்பாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 08.08.1926**


RangaRakes

tamilnavarasam.com

# சென்னையில் திரு.எஸ்.ஆர். தாசும் பார்ப்பனர்களின் தந்திரமும்

ஸ்ரீமான் எஸ். ஆர்.தாஸ் அவர்கள் ஸ்ரீமான் சி. ஆர். தாஸ் அவர்களின் தாயாதி சகோதிரர். வங்காளத்தில் மாதம் நாற்பதினாயிரம் ஐம்பதினாயிரம் சம்பாதித்துக் கொண்டிருந்த பிரபல பாரிஸ்டர். இப்பொழுது டெல்லி இந்திய அரசாங்க நிர்வாக சபை அங்கத்தினராயிருப்பவர். இந்திய அரசாங்கத்திற்கு நமது தமிழ்நாட்டுப் பார்ப்பனரல்லாதார்களைப் பற்றி நமது பார்ப்பனர்கள் பத்திரிகைகளின் மூலமாகவும் கோள் சொல்லுவதன் மூலமாகவும் ஏற்படுத்தி வைத்திருக்கும் தப்பபிப்பிராயங்களை அறிந்த நமது பனகால் அரசர் டெல்லிக்குப் போய் அரசப் பிரதிநிதியாரிடம் நமது உண்மையான நிலையை எடுத்துச் சொன்னதன் பலனாய் வைசிராய் ஆச்சரியமடைந்து தமிழ்நாட்டுப் பார்ப்பனரல்லாதாரின் உண்மை நிலை மையை நேரில் அறிந்து வரும்படி தனது நிர்வாக சபையில் ஒரு பொறுப் புள்ள அங்கத்தவரான ஸ்ரீமான் எஸ். ஆர். தாஸ் அவர்களை அனுப்பி யதாகத் தெரிந்தோம்.

ஸ்ரீமான் எஸ்.ஆர். தாஸ் அவர்கள் சென்னைக்கு வந்ததும் சென்னை யிலுள்ள பார்ப்பனத் தலைவர்கள் ஒன்றுகூடி ஸ்ரீமான் ரெங்காச்சாரியார் பெயரால் ஸ்ரீமான்கள் திருப்பதி மகந்து, சர். சதாசிவய்யர், மகாகனம் சீனி வாச சாஸ்திரி, ஜட்ஜுகள் குமாரசாமி சாஸ்திரி, சீனிவாசய்யங்கார், எ.ரெங்க சாமி ஐயங்கார் , வி.ராம்தாஸ், எ.வி. இராமலிங்கய்யர், வி.டி. கிருஷ்ண மாச்சாரி, சர்.சி.பி. இராமசாமி ஐயர், அட்வகேட் ஜெனரல் வெங்கட்டராம சாஸ்திரியார், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், எஸ். வரதாச்சாரி, கே. பாஷ்யம் ஐயங்கார், ஜி.எ. நடேசன் ஐயர் முதலிய பல பார்ப்பனர்கள் பெரிய விருந்து நடத்தி தாஸ் அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். இவ்விருந்தின் செலவின் பெரும்பாகம் திருப்பதி மகந்துவினுடையதென்று சொல்லப்படுகிறது. இந்த விருந்துக்கு தன்னை சன்னியாசி என்று சொல்லிக்கொள்ளும் திருப்பதி மகந்தும், காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்தவர்களும் அரசாங்க சம்பந்தமான நபர்களுக்கு நடக்கும் விருந்து முதலியவைகளை பகிஷ் காரம் செய்து முட்டுக்கட்டை போடுகிறவர்களும், ஒத்துழையா நாற்றம் தங்கள் மீது வீசப் படுகிறதாகக் கூறிக் கொள்ளுகிறவர்களுமான ஸ்ரீமான் எ. ரெங்கசாமி ஐயங்கார், வி.ராம்தாஸ், கே. பாஷ்யம் ஐயங்கார் முதலிய பார்ப்பனர்களும் வந்திருந்ததிலிருந்தும், அவ்விருந்தில் வாலிபப் பெண்கள் மூலமாக சங்கீதம் நடத்தி ஸ்ரீமான் எஸ். ஆர். தாசை ரம்மிக்கச் செய்ததிலிருந்தும் இவ்விருந்தின் சூழ்ச்சியும் தந்திரமும் விருந்து நடத்தியவர்களின் கருத்தும் நாம் சொல்லாமலே விளங்கும்.

ஸ்ரீமான் எஸ். ஆர். தாஸ் விருந்துக்கு திருப்பதி மகந்தைத் தருவிக்க வேண்டிய காரணம் என்ன? பெண்களை அழைத்து சங்கீதம் நடத்த வேண்டிய அவசியமென்ன? திருவாடுதுறை மடத்திலிருந்து வந்ததாகச் சில விஷயங்களை ஸ்ரீமான் எஸ். ஆர். தாசுக்கு அறிவிக்க வேண்டிய காரணம் என்ன? சர்க்காரை பகிஷ்கரிக்கும் சுயராஜ்யக் கட்சியார் அங்கு வர வேண் டிய வேலை என்ன? ஸ்ரீமான் சாமி வெங்கடாஜலம் செட்டியார் கவர்னருக்குக் கொடுத்த ஒரு விருந்தின் போதே அது சுயராஜ்யக் கட்சியாருடைய விருந்தல்ல, தனிப்பட்ட நபர் செய்த விருந்துமல்ல என்று சொல்லித் தப்பித்துக்கொண்ட நமது சுயராஜ்யக் கக்ஷிப் பார்ப்பனர்கள் ஸ்ரீமான் ரெங்காச் சாரியார் என்கிற ஒரு தனிப்பட்ட நபர் நிர்வாக சபை மெம்பர் என்கிற சர்க்கார் பிரதிநிதி உத்தியோகஸ்தருக்கு, அவர் சர்க்கார் வேலை சம்பந்தமாய் வந்திருக்கும் சமயத்தில் கொடுக்கப்படும் விருந்திற்கு இவர்கள் எப்படிப் போகக்கூடும்? இவற்றையெல்லாம் யோசித்துப் பார்த் தால் நமது பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் இந்திய அரசாங்கத்தில் நமது பார்ப்பனர்கள் இதுவரை சொல்லி வந்திருக்கும் கோள்களையும் செய்து வந்திருக்கும் சூழ்ச்சிகளையும் கெடுதிகளையும் உண்மை என்று உறுதிப்படுத்துகிறது.

**குடி அரசு - கட்டுரை - 08.08.1926**



RangaRakes



tamilnavarasam.com

# கோயமுத்தூர் ஜில்லா போர்டு தேர்தல்

இம்மாதம் 4-ம் தேதி கோயமுத்தூரில் நடந்த ஜில்லா போர்டு தலைவர் தேர்தலில் ஸ்ரீமான் சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களும் ஸ்ரீமான் வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்களின் இளைய சகோதிரரான ஸ்ரீமான் பழனிச்சாமிக் கவுண்டர் அவர்களும் அபே க்ஷகர்களாக நின்றதில் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட அங்கத்தினர் ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதைக் கேட்க வாசகர்கள் மிகுதியும் சந்தோஷமடைவார்களென்றே எண்ணுகிறோம்.

ஸ்ரீமான் முதலியார் அவர்கள் கோயமுத்தூரில் பல தலைமுறையாய் இருந்துவரும் கௌரவமும் பிரபலமுமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். பத்து லட்சம் இருபது லட்சம் முதல் வைத்து நடத்தும் பல கூட்டுறவு பாங்கிகளுக்கு பிரசிடெண்டாகவும் டைரக்டராகவும் இருந்து வருபவர். ஏறக்குறைய கோய முத்தூர் ஜில்லாவிலேயே 24-வயதிற்கு மேற்பட்டு 36-வயதிற்கு உட்பட்டி ருக்கிற ஒவ்வொரு வாலிபருக்கும் ஆப்த நண்பனாகவும் உற்ற மந்திரியாக வும் இருந்து வருபவர். அவர் பெரிதும் குடியானவர்களிடத்திலும் ஏழை மக்களி டத்திலும் அன்பு கொண்டவர். உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்கிற வித்தி யாசமே கொஞ்சமும் அற்றவர். ஏறக்குறைய பத்துப் பதினைந்து வருஷ காலமாகவே கோயமுத்தூர் முனிசிபல் கவுன்சிலராகவும் ஐந்தாறு வருஷ காலமாய் முனிசிபல் சேர்மெனாகவும் தென்னிந்திய ரெயில்வே போர்டு அட்வைசரிக் கமிட்டியிலும், தமிழ் சர்வகலாசாலைக் கமிட்டியிலும் அங்கத்தி னராகவும் இருந்து வருகிறார். அதோடு கூட 4,5 வருஷ காலம் கோயமுத்தூர் தாலூக்கா போர்டு பிரசிடெண்டாகவும் இருந்து வந்ததோடு சென்ற மூன்று வருஷ காலம் கோயமுத்தூர் ஜில்லா போர்டுக்குப் பிரசிடெண்டாகவும் இருந்து வந்திருக்கிறார்.

இவ்வளவு செல்வாக்கும் பெருமையும் அந்தஸ்தும் உடையவர் கோயமுத்தூர் ஜில்லா போர்டுக்கு மறுபடியும் பிரசிடெண்டாய்த் தேர்ந்தெடுக் கப்பட்டிருப்பதில் அதிக ஆச்சரியப்படத்தக்க விஷயம் ஒன்றுமில்லையா னாலும், போட்டியன்னியிலேயே தேர்ந்தெடுக்கப்படாமல் போனது கோய முத்தூர் ஜில்லா போர்டு ஓட்டர்கள் தங்களுடைய புத்திசாலித்தனத்தைக் காட்டிக்கொள்ள வாய்த்த ஒரு சந்தர்ப்பத்தை இழந்துவிட்டார்களென்றுதான் சொல்ல வேண்டும்.



மகாத்மா காந்தியை காங்கிரஸ் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுத்த காலத் திலும் அபிப்பிராய பேதமும் எதிர் ஓட்டுக்களும் சிலது இருந்ததென்றால், நமது முதலியார் தேர்தலில் எதிர் ஓட்டு இருப்பது அதிசியமல்லவென்றே சொல்லுவோம் . ஆனால் தேர்தல் காலத்தில் ஸ்ரீமான் முதலியார் விஷயத் தில் கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள பெரிய ஜமீன்தாரர்களும், மிராஸ்தாரர் களும், மற்றும் பெரிய பாங்கர்களும், பெரிய இயந்திரசாலைக்காரர்களும், வியாபாரிகளும், பொது ஜன சேவையிலீடுபட்டவர்களும் முதலியாருக்காக எடுத்துக் கொண்ட ஊக்கமும் உணர்ச்சியும் அளவிடத் தகுந்ததல்ல. மற்றும் சகல வகுப்பார்களிடமும் நமது முதலியாருக்கு செல்வாக்கிருக்கிறது என்பதற்கு உதாரணமாக தேர்தல் காலங்களிலும் மற்ற சமயங்களிலும் நடந்த வைபவங் களையும் பிரயத்தனங்களையும் பார்த்தால் நன்றாய் விளங்கும்.

ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களாகிய ஸ்ரீமான்கள் எம். சம்பந்த முதலியார், வெரிவாட செட்டியார் வகையறாக்களும், காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியாரான அதன் காரியதரிசி ஸ்ரீமான் ஆர்.கே.ஷண்முகஞ் செட்டியார் வகையறாக் களும், வர்ணாசிரம பார்ப்பனரான ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமணய்யங் கார் முதலியவர்களும், ஒத்துழையாதாரைச் சேர்ந்த ஸ்ரீமான் டி.எஸ்.பாண்டே முதலியவர்களும், கொங்கு வேளாள சமூகத்தில் முக்கியஸ்தர்களான கொங்குவேளாள சங்கக் காரியதரிசி பொள்ளாச்சி ஸ்ரீமான் இரத்தின சபாபதிக் கவுண்டரவர்களும், வடகரை வேளாள சமூகத்தில் முக்கியஸ்தரான கோவை தாலூக்காபோர்டு பிரசிடெண்டு ஸ்ரீமான் ராஜாக் கவுண்டர் என்கிற நஞ்சப்பக் கவுண்டரவர்களும், வேட்டுவக் கவுண்டர் சமூகத்தில் பிரதானஸ் தரான அப்பிச்சிமார் மடாதிபதி ஸ்ரீமான் ஆண்டமுத்துக் கவுண்டரவர்களும், ஜமீன்தாரர்களில் முக்கியஸ் தரான ஊத்துக்குளி ஜமீன்தாரும், பொள்ளாச்சி தாலூக்காபோர்டு பிரசிடெண்டுமான ஸ்ரீமான் துரைராஜா அவர்களும், பட்டக்காரர்களில் முக்கியமானவர்களுள் ஒருவரான சங்கரண்டாம்பாளை யம் பட்டக்காரர் ஸ்ரீ வேணுடையாக் கவுண்டரவர்களும், நாயுடு சமூகத் தலைவர்களான ரெங்க விலாஸ்மில் ஏஜண்டு ஸ்ரீமான் பி.எஸ். குருசாமி நாயுடுகார், பல்லடம் தாலூக்காபோர்டு பிரசிடெண்டு ஸ்ரீலட்சுமி நாராயண சாமி நாயுடுகார் முதலியவர்களும் பஞ்சமர் என்று சொல்லப்படும் வகுப்புத் தலைவரான ஸ்ரீமான் முனியா மேஸ்திரி முதலியவர்களும், ஒக்கிலியக் கவுண்டர் சமூகத்தாரில் பிரதானப்பட்டவர்களான ஸ்ரீமான்கள் பட்டக்கார வீரப்பக் கவுண்டர் அவர்கள், புளியம்பட்டி கிஞ்சப்பக் கவுண்டர் அவர்கள் முதலியவர்களும், நாட்டுக் கோட்டை நகரத்தார்களில் சிறந்தவரான காளீஸ்வரர் மில் ஸ்ரீமான் சாத்தப்ப செட்டியார் அவர்களும், மகமதிய சமூகத்தின் சிரேஷ்டர்களான ஈரோடு ஜனாப் கா. அ.ஷேக்தாவூத் சாயபு பகதூர், உடுமலைப்பேட்டை ஜனாப் காஜா முகய்யதீன் சாயபு பகதூர் முதலியவர் களும் இன்னமும் இந்த ஜில்லாவில் பெரிய வியாபாரிகளான ஸ்ரீமான்கள் வி.எஸ். செங்கோட்டய்ய முதலியார், மு.ச. முத்துக்கருப்பஞ் செட்டியார் போன்றவர்களும், சன்னியாசிகளில் ஸ்ரீலஸ்ரீ கைவல்லிய



RangaRakes tamilnavarasam.com

சுவாமியார் போன்றவர்களும் ஸ்ரீமான் முதலியாரவர்களைத் தேர்தலுக்கு நிற்கும்படி வற்புறுத்தியும் அவருக்காக ஊக்கத்துடன் பிரயத்தன மெடுத்துக் கொண்டுமிருக்கிறார்கள் என்றால் மற்றபடி முதலியாரின் குணாதிசயங் களைப் பற்றியும் அவரது செல்வாக்கைப் பற்றியும் யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய திருக்காதென்றே எண்ணுகிறோம்.

ஸ்ரீமான் முதலியார் அவர்களை இந்த ஜில்லாவின் சார்பாய் சட்டசபை அங்கத்தினராக்க வேண்டுமென்கிற எண்ணங்கொண்டே இவ்வளவு பெரிய மனிதர்களும் இந்த ஜில்லா போர்டு தலைவர் ஸ்தானத் திற்கு ஸ்ரீமான் முதலியார் அவர்கள் அவ்வளவு லட்சியமில்லாதிருந்துங்கூட ஒரே மூர்ச்சாய் இவரை பிரசிடெண்டாக ஆக்கியிருக்கிறார்கள். இது போலவே சட்டசபைத் தேர்தல் விஷயத்திலேயும் மேற்சொன்ன கனவான் களெல்லோரும் முதலியாருக்காக வேண்டிய வேலை செய்வதாக வாக்குறுதி கொடுத்திருப்பதோடு இதுமுதலே முயற்சி செய்து கொண்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

ஸ்ரீமான் முதலியார் அவர்கள் சட்டசபை மெம்பர் பதவியை அடை வதிலோ அதன் மூலமாய் தன்னால் செய்யக்கூடுமென்று நினைக்கிற விஷயங்களைப் பொது ஜனங்களுக்குச் செய்வதிலேயோ நமக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை. ஆனால் இப்போது தேச முன்னேற்றத்திற்கு அவசியமான தும் மகாத்மாவின் உபதேசமானதுமான தீண்டாமை விலக்கு, கதர் என்கிற இவ்விரண்டு விஷயத்திற்கனுகூலமாக தமது பெருமையையும், செல்வாக்கையும், பதவிகளையும் கொஞ்சம் உபயோகப்படுத்துவார்களே யானாலும் அதைத் தான் நாம் உண்மையான பொதுநல சேவை, தேச கைங் கரியம் என்று சொல்வோம். தீண்டாமை விலக்கு விஷயத்தில் நமது முதலி யார் சுமார் 20 வருஷத்திற்கு முன்பாகயிருந்தே அனுகூலமாயிருக்கிறார் என்பதும் அவருக்கு அவ்வித வித்தியாசமில்லை என்பதும் நமக்குத் தெரிந்த விஷயமே. ஆனால் கதர் விஷயத்தில் கதரின் தத்துவங்களை உணர்ந்திருந்தும் வீட்டில் கதர் வஸ்திரங்களை உபயோகப்படுத்திக் கொண்டு வந்தும் வெளியில் கதர் அணிவதற்கு வெட்கப்படுகிறாரா? அல்லது பயப்படுகிறாரா? என்பது நமக்குப் புலனாகவில்லை. இதுவரையில் எப்படியிருந்து வந்த போதிலும் இனிமேலாவது கதரைத் தவிர வேறு வஸ்திரங்கள் உடுப்பதில்லை என்றும் தன்னுடைய செல்வாக்குகளை கதருக்கு உபயோகப்படுத்துவதில் எவ்வித ஆட்சேபனையுமில்லை என்றும் உறுதி சொல்வாரேயானால் சட்ட சபைப் பதவியை அடைவதற்கு இப் பொழுது நிற்கும் நான்கு ஐந்து அபேட்சகர்களில் நமது முதலியார் முதன்மையானவர் என்று சொல்லக்கூட நாம் முன் வருவோம். அதில்லாத வரையில் மற்றவர்களைப்போல் இவரும் ஒருவர் என்றுதான்சொல்லுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 08.08.1926**



# பார்ப்பனர் சூழ்ச்சிக்குத் தோல்விகள்

சென்னையிலும் மற்றும் பல வெளியிடங்களிலும் சுயராஜ்யக் கட்சி காங்கிரஸ் என்கிற தேசீய வார்த்தைகளின் பெயரால் நமது பார்ப்பனர்கள் செய்து வந்த சூழ்ச்சிகளுக்கு இவ்வாரத்தில் பெருந் தோல்வி யென்றே சொல்ல வேண்டும். சென்னையில் சென்ற 4-ம் தேதி நடந்த தேர்தல்களின் முடிவானது நமது பார்ப்பனர்களுக்கு முற்றும் விரோதமாகவே போனதோடு, அங்குள்ள பாமர ஜனங்கள் பார்ப்பனர்களின் சூழ்ச்சியை அறிந்து கொண் டோம், அறிந்து கொண்டோம் என்று ஆரவாரம் செய்து விட்டார்கள். சென்னைத் தேர்தல்களில் முக்கியமாய் டாக்டர் நடேச முதலியாரை ஒழிக்க வேண்டுமென்பதுதான் நமது பார்ப்பனர்களுக்குப் பெரிய ஆத்திரமாயி ருந்தது. அதற்காக வேண்டி ஸ்ரீமான் ஓ. கந்தசாமி செட்டியார் அவர்களைப் பிடித்து, அவருடைய ராவ்பகதூர் பட்டத்தையும் விடச் செய்து, டாக்டர் நடேச முதலியாருக்கு விரோதமாய் நிறுத்தி, எவ்வளவோ பொய்ப் பிரசாரங் களையும் இழிவுப் பிரசாரங்களையும் செய்து, ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யத் துணிந்தும் கடைசியாய் ஓட்டர்களை ஏமாற்ற முடியாமல் போய்விட்டது.

இதுபோலவே ஸ்ரீமான் குமாரசாமி செட்டியார் அவர்களையும் தோற்கடிக்க வேண்டுமென்கிற எண்ணங் கொண்டு அங்கும் ஸ்ரீமான் இராமலிங்கம் பிள்ளை என்கிற ஒருவரை நிறுத்தி எவ்வளவோ சூழ்ச்சிப் பிரசாரங்களெல்லாம் நடத்தியும் பயன்படாமல் அளவுக்கு மிஞ்சிய தோல்வி ஏற்பட்டிருக்கிறது.

டாக்டர் நடேச முதலியார், குமாரசாமி செட்டியார் ஆகிய இரு தலை வர்களையும் தோற்கடித்து விட்டால் பார்ப்பனரல்லாதாரையே ஒழித்து விட்டதாகுமென நினைத்துக்கொண்டு செய்த பகீரத பிரயத்தினத்தின் பலன், நமது பார்ப்பனர்களை மறுபடியும் இவ்விதக் கெட்ட எண்ணத்தில் தலையிடுவதற்கே கருதுவதற்கில்லாமல் செய்து விட்டதென்றே சொல்ல லாம். பார்ப்பனரல்லாத கட்சியின் பெயரால் நின்ற ஸ்ரீமான் குமாரசாமி செட்டியாருக்கு 614 ஓட்டுகளும் பார்ப்பனக்கட்சியான சுயராஜ்யக் கட்சியின் சார்பாய் நின்ற ஸ்ரீ இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு 47 ஓட்டு களுந்தான் கிடைத்திருக்கிறது. டாக்டர் நடேச முதலியார் அவர்களுக்கு 454 ஓட்டுகளும் ராவ் பஹதூர் பட்டத்தை விட்ட ஸ்ரீ கந்தசாமி செட்டியாருக்கு 194



RangaRakes tamilnavarasam.com

ஓட்டுகளுமே கிடைத்திருக்கிறது. சென்ற வருஷங்களில் பார்ப்பனரல்லாதார் கட்சிக்குப் பார்ப்பனர்களால் சென்னைத் தேர்தல்களில் பெரும் தோல்வி ஏற்பட்டிருந்தாலும், பார்ப்பனக் கூலிகளால் வசைமொழி களும், அடிதடிகளும், கல்லடிகளும், காலித்தனங்களும் நடந்திருந்தாலும் பார்ப்பனரல்லாதார் போதுமான பிரசாரம் செய்யாததாலும், பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளைத் தைரியமாய் எடுத்துச் சொல்லாததாலும் பாமர ஜனங்கள் ஏமாந்து போக நேரிட்டதென்பதை நாம் ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும். இது போலவே வெளியிலும் அனேக இடங்களில் பார்ப்பன ரல்லாதாருக்குப் பூரண வெற்றி கிடைத்துக் கொண்டு வருவதுடன் பார்ப்பனக் கட்சிக்கு சாவு குறியும் காணப்பட்டு வருகிறது.

பார்ப்பனர் கட்சிக்கு எங்கு வெற்றி ஏற்பட்ட போதிலும் அவைக ளெல்லாம் பார்ப்பனர்களின் சூழ்ச்சியை பார்ப்பனரல்லாதார் தைரியமாய் எடுத்துச் சொல்லப் பின் வாங்கி நின்ற காரணங்களினாலும் பார்ப்பனர் களைப்போல் பார்ப்பனரல்லாதார் அனைவரும் ஒன்று கூடி ஒற்றுமையாய் வேலை செய்ய முன் வராததாலுமேயல்லாமல் வேறல்ல. அல்லாமலும் பார்ப்பனர்களுக்குப் பிரசாரம் செய்வதற்கு மகந்துகளும் மடாதிபதிகளும் தாராளமாய்ப் பணம் கொடுப்பதாலும், கூலிக்கு உழைப்பதற்குப் பார்ப்பன ரல்லாத வயிற்றுச் சோத்து பிரசாரகர்கள் எளிதில் கிடைப்பதனாலும் பார்ப் பனர் சூழ்ச்சி செல்வாக்குப் பெற இடமேற்பட்டுவிடுகிறது. அதை எதிர்த்து நிற்க வேண்டுமானால் பார்ப்பனரல்லாதாரிலேயும் பார்ப்பனரல்லாதார்களும் பிரசாரத்திற்குப் பணமும் உண்மையான பிரசாரர்களும் ஏற்பாடு செய்து தானாக வேண்டும்.

இவ்வொரு வருஷத்தில் பார்ப்பனரல்லாதார் கொஞ்சமாவது துணிந்து பார்ப்பனர்களின் சூழ்ச்சியை வெளியிட்டதன் பலனாலும் ஸ்ரீமான்கள் ஆரியா, தண்டபாணி பிள்ளை, சக்கரை செட்டியார், வரதராஜுலு நாயுடு, கலியாணசுந்தர முதலியார் போன்றவர்களுக்கு பார்ப்பனர்களின் சாவகா சத்தை விட்டும் காங்கிரசின் ஊழல்களை அறிந்து அவற்றின் நிர்வாகங்களி லிருந்து விலகவும் தைரியம் ஏற்பட்டதன் பலனாகவே பார்ப்பன சூழ்ச்சி தோல்வி அடைய சௌகரியமேற்பட்டது. சென்னையிலாகட்டும் மற்றும் வெளியிடங்களிலாகட்டும், சட்டசபை முதலிய ஸ்தாபனங்களுக்கு அபேட் சகர்களாகக் கூட நிறுத்துவதற்கு ஆளில்லாமல் பார்ப்பனர்கள் திண்டாடவும் இவர்களை நம்பி ஏமாந்து இவர்கள் சார்பாய் அபேட்சகர்களாய் நின்ற இரண்டொருவர்களும் இப்பொழுது ஒவ்வொருவராய் விலகிக்கொண்டு போவதையும் பார்த்தால் இந்த பிரசாரங்கள் சென்ற வருஷத்திலேயே தொடங்கியும் இப்பொழுது விலகிய கனவான்களுக்கு சென்ற வருஷத்தி லேயே விலகும்படியான தைரியம் இருந்தும் இருக்கு மானால் இதுவரை யில் பார்ப்பனர் சூழ்ச்சியும் அதன் பலனாய் ஏற்பட்ட காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சிகளும் மாண்டு ஒழிந்து போயிருக்கு மென்பதுடன் மகாத்மாவின்



ஒத்துழையாமைக் காங்கிரஸ் மறுபடியும் தொடங்கப்பட்டி ருக்குமென்றே சொல்லலாம். மகாத்மாவின் காங்கிரஸ் தொலைவதற்கு அப் பார்ப்பனர்களே முக்கிய காரணஸ்தர்களென்று சொல்ல வேண்டுமானாலும் கூட, அக் காரணங்களுக்கு மேற்சொன்ன பார்ப்பனரல்லாத தலைவர்களும் இதுவரை உதவியாயிருந்து வந்ததும் ஒரு காரணமென்பதையே நாம் வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. இனியும் பார்ப்பன சூழ்ச்சியோ சுயராஜ்யக் கட்சியோ பார்ப்பன காங்கிரசோ ஒரு கடுகளவு நமது நாட்டில் ஒரு க்ஷணம் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் அது நமது பார்ப்பனரல்லாதாரின் சுயநலமும் சமூகத் துரோகமும் வயிற்றுப் பிழைப்பு தேசபக்தியுமே காரண மேயல்லாமல் வேறல்ல வென்பதை உறுதியாய்ச் சொல்லுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 08.08.1926**



RangaRakes tamilnavarasam.com

# தேவஸ்தான மசோதா

## பார்ப்பனரின் சூழ்ச்சி, 'மித்திர'னின் அகம்பாவம்

சென்ற புதன் வியாழக் கிழமைகளில் தேவஸ்தான மசோதாவைப் பற்றி பார்ப்பன மித்திரனாய 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் 'அக்கிரமத் திற்கும் அளவில்லையா?' என்கிற தலைப்பின் கீழ் சில விஷமத்தனமான வார்த்தைகளை எழுதியிருக்கிறது. அது எதைப்பற்றி என்றால் வரப்போகிற சென்னை சட்டசபைக் கூட்டத்தில் தேவஸ்தான சட்டத்தில் உள்ள சில சட்ட சம்பந்தமான சிறு தவறுதல்களைத் திருத்துவதற்காக ஒரு மசோதா சர்க்காரால் கொண்டு வரப்படப் போகிறது. ஏனெனில் அச் சிறு சட்ட சம்பந்தமான தவறு தல்களை ஆதாரமாக வைத்தே தேவஸ்தான மசோதாவை அடியோடு ஒழிப்பதாகச் சொல்லி நமது பார்ப்பனர்கள் மகந்துகளையும், மடாதிபதி களையும் ஏமாற்றி அவர்களிடமிருந்து லட்சக்கணக்கான பொருளைக் கவர்ந்து வியவகாரங்களை உண்டாக்கி நியாயஸ்தலங்களில் தற்காலத் தடை உத்திரவும் பெற்று இன்னும் பல மடாதிபதிகளை ஏமாற்றிப் பொருள் பறிக்கப் பிரயத்தனப்பட்டு வருகிறார்கள். இப்பொழுது சர்க்காரால் கொண்டு வரப்படப் போகும் மசோதா நிறைவேறிவிடுமானால் இம்மாதிரி நமது பார்ப்பனர்கள் மடாதிபதிகளையும் மகந்துகளையும் ஏமாற்றிப் பொருள் பறிக்கவும் தற்காலத் தடை உத்திரவுகள் பெற்று தர்ம சொத்துக்களைக் கொள்ளையடிக்கவும் முடியாமல் போய் விடுமாகையால் இது பற்றியே 'சுதேசமித்திரன்' இம் மசோதாவைப் பற்றி அதிகப் பிரசங்கித்தனமாகவும் "அக்கிரமத்திற்கும் அளவில்லையா" என்று தலையங்கமிட்டு என்னென் னமோ பிதற்றுகிறான்.

1. "1923-ம் வருஷத்தில் இம் மசோதா சட்டசபை அங்கத்தினர்களில் ஹிந்துக்கள் பலரால் எதிர்க்கப்பட்டும் ஹிந்துக்களல்லாதாரின் உதவியைக் கொண்டு நிறைவேற்றப்பட்டது" என்று எழுதுகிறான். இம்மசோதா சட்ட சபையில் நிறைவேறும்போது எதிர்த்த ஹிந்துக்களைவிட எதிர்க்காத ஹிந்துக்களே அதிகமாயிருந்து நிறைவேற்றி யிருக்கிறார்கள். 'மித்திரன்' அகராதியில் ஹிந்துக்களென்று சொன்னால் பார்ப்பனர்களும் பார்ப்பனர் கள் தாளத்திற்கு ஆடும் பார்ப்பனரல்லாதாரையும்தான் குறிக்கும் போலிருக் கிறது. பார்ப்பனர்களுடைய அயோக்கியத்தனத்தை யாராவது வெளியி லெடுத்துச் சொன்னாலாவது அவர்களுக்கு விரோதமாய் யாராவது நடந்து கொண்டாலாவது அவர்கள் இந்துக்கள் அல்லபோலும்."



2. அல்லாமலும் "ஆதி மசோதா கோர்ட்டில் வியவகாரத்திலிருக் கும்போது புது மசோதா வெளியிட அவசியமில்லை" என 'சுதேச மித்திரன்' கூறுகின்றான். மசோதாவில் சட்டசம்பந்தமான சில குற்றமிருந்ததன் பல னாய் கோர்ட்டில் மசோதாவைத் தள்ளி வைக்க வியவகாரம் தொடுத்திருந் ததாக வைத்துக்கொண்டாலும் இந்த சமயத்தில் மசோதாவின் குற்றத்தை நீக்குவதில் 'மித்திரனுக்கு' நஷ்ட மென்ன? மசோதாவின் குற்றம் நீங்கி கோர்ட்டிலுள்ள வழக்குகள் மேல் நடவடிக்கைகள் நடத்த வேண்டிய அவசியமில்லாமல் நின்று விட்டுப்போக வேண்டிய அவசியம் ஏற்படுமே யானால் தங்கள் ஜாதியாருக்கு பீஸாப்பிடாமல் போய்விடுமே என்கிற பேராசைக் கெட்ட எண்ணமும் வரப்போகும் தேர்தல்களில் பிரசாரம் செய்வதற்காக மடாதிபதிகளிடம் தேவஸ்தான மசோதாவை ஒழிக்க சட்ட சபைக்கு ஆட்களை சேர்க்கிறோம், ஆட்களை சேர்க்கிறோம் என்று ஏமாற்றிப் பொருள் பறிக்க முடியாமல் போய்விடுமே என்கிற சின்னப் புத்திதானா அல்லவா?

3. தவிறவும் "பொது ஜன அபிப்பிராயம் தெளிவாக வெளிப்படப் போகும் சமயமான சட்டசபைத் தேர்தலுக்கு முன் இம் மசோதாவை சட்ட மாக்க முயலுவதால் பொதுஜன அபிப்பிராயத்தை மந்திரிகள் லட்சியம் செய்யவில்லை" என்றும் "இந்த மந்திரிகளை ஒழித்தால்தான் ஜனங்களு டைய அபிப்பிராயத்திற்கு மதிப்பு ஏற்படும்" என்றும் கூறுகிறான். இது மகா அக்கிரமமான வாசகமென்றே நாம் சொல்லுவோம். இப்பொழுது சட்டசபை யிலுள்ள கனவான்களின் அபிப்பிராயம் பொதுஜன அபிப்பிராயம் அல்லவென்று 'மித்திரன்' எப்படிச் சொல்லக் கூடும்? பொதுஜனங்க ளென்றால் யார்? 'மித்திரனு'டைய இவ்வார்த்தையானது பொது ஜனங்க ளையே அவமானப் படுத்தத்தக்கதாயிருக்கிறது. பார்ப்பனர் தவிர பார்ப் பனர் பெரும்பான்மையாயிருக்கிற சபைகள் தவிர மற்ற சபை பொதுஜன சபை அல்லவென்றும் பொதுஜன அபிப்பிராயமல்ல என்றும் 'மித்திரன்' கருதுவானேயானால் இப்பார்ப்பனர்களும் 'மித்திரனும்' பொது ஜனங்கள் அல்லவென்று நாம் நிரூபித்தாலொழிய நமது நாடு முன்னுக்கு வரா தென்று தான் நாம் சொல்லுவோம். இப் பார்ப்பனர்கள் தாங்கள் எந்த முறையில் சட்டசபையில் போயிருந்து கொண்டு பொது ஜனப்பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ளுகிறார்களோ, அதே முறையில் சட்டசபைக்குச் சென்ற பார்ப்பனரல்லாதாரும் தாங்களும் பொது ஜனங்களின் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்வதற்கு உரிமை பெற்றவர்கள் என்ற அறிவு 'மித்திரனுக்கு' ஏன் இல்லாமல் போய் விட்டது? இம்மாதிரி ஒரு சமூகத்தையும் சமூகப் பிரதிநிதிகளையும் கேவல மாகவும் அவமானமாகவும் மனம் புண்படும்படி யாகவும் எழுதக் கூடிய ஆணவத்தை என்றைக்கு நாம் அழிக்கிறோமோ அன்றுதான் நாட்டிற்கே க்ஷேமமுண்டாகும். அதில்லாமல் இவைகளை இப்படியே அதிகப்பிரசிங்கித் தனமாக நடக்கவிட்டுக் கொண்டிருக்கும் வரையில், கோயில் சொத்தைத் தின்னுகிறவர்களும், மகந்து மடாதிபதி



RangaRakes tamilnavarasam.com

களுக்கும் தாசி வேசிகளுக்கும் இடையில் தூது நடக்கிறவர்களும், வழக்குகள் பெயரால் தர்மச் சொத்தை கொள்ளையடிக்கிறவர்களும், பாமர ஜனங்களை ஏமாற்றி வயிறு வளர்க்கிறவர்களும் தேசத்திற்கோ மதத்திற்கோ கொஞ்சமும் பொறுப்பற்ற சுயநலப் பிணங்களுந்தான் நமது நாட்டுப் பொது ஜனங்களாகக் கருதப்படு வார்களென்றே நாம் பயப்படுகிறோம்.

அடுத்தாப்போல் சட்டசபையில் தேவஸ்தான மசோதா வரும் போது சட்டசபையை விட்டு வெளியில் வந்துவிட்டோமென்று சொன்ன பார்ப்பன சுயராஜ்யக் கட்சி 'வீரர்கள்' மீண்டும் சட்டசபைக்கு வருவார்களா வரமாட்டார்களா என்பதும் தேவஸ்தான மசோதா விஷயம் சுயராஜ்யக் கட்சிக்கு சம்பந்தப்பட்டதா தனித்தனி நபர் சம்பந்தப்பட்டதா என்பதும், தனித்தனி நபர் சம்பந்தப்பட்டதானால் கட்சித் தலைவரின் உத்திரவில்லாமலே சட்ட சபைக்குப் போகலாமா என்பதும் அறிய வெகுஜனங்கள் இச்சமயம் ஆவலாக எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 08.08.1926**



# பம்பாயில் பார்ப்பனர் கொடுமை

"மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" என்பது ஓர் பழமொழி. அத்தகைத்தே நமது பார்ப்பனர்களின் தன்மையாகும். பல நூறு ஆயிர ஆண்டுகளாக பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களை, தூர்த்தர்களான பார்ப்பனர்கள் தங்களின் வயிற்றுப் பிழைப்பைக் கருதி உண்டாக்கிய சாஸ்திரங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு அட்டை போல் உறிஞ்சி வந்தனர் - வருகின்றனர். எத்தகைய கேவலத் தொழிலையும் செய்யப் பின் வாங்காத இழிதகைமை படைத்த இப்பார்ப்பனக் கூட்டம் இந்துக்களின், அதாவது பார்ப்பனரல்லாதாரின் மதகுருவென்றும் சுபா சுப காரியங்களை நடத்தி வைக்கும் புரோகிதர்களென்றும் மக்களை ஏமாற்றி ஆதிக்கஞ் செலுத்தி வந்தனர் - வருகின்றனர். இவர்களின் பஞ்சதந்திரக் கொடுந்தன்மைகளை பார்ப்பனரல்லாதார் அறியவே சுபா சுப காரியங்களில் இவர்களை விலக்க வேண்டுமென்ற பரபரப்பும் துடிதுடிப்பும் அதிவேகமாக நாடெங்கும் பரவி வருகிறது.

சென்னை மாகாணத்திலே பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோன்றிய சின்னாளுள் இந்து சமூகத்தாருள் எவ்வளவோ பல சமூக சீர்திருத்தங்களும் மாறுதல்களும் நடந்து வருகின்றன. அவற்றுள் பார்ப்பனரல்லாதார்கள் சுபா சுப காரியங்களுக்கு பார்ப்பனர்களைப் புரோகிதர்களாகத் தருவிக்காது தங்கள் சமூகப் பெரியோர்களைக் கொண்டே நடத்திவர முற்பட்டு விட்டமை ஒன்றாகும். சென்னை மாகாணத்தில் இந்துக்கள் ஒவ்வொரு கிரிகைகளுக் கும் பார்ப்பனர்களை வைத்தே அதை நடத்த வேண்டுமென்ற விதி சட்டமூலமாகக் கிடையாது. அவரவர்கள் விருப்பப்படி யாரை வேண்டுமானாலும் வைத்துக் கொண்டு நடத்திக் கொள்ளலாமென்று இருப்பதால் மேற்கூறிய காரியங்கள் எளிதிலே நடாத்தற்கு இலகுவாகிறது. ஆனால் பம்பாய் மாகாணத்திலோ அப்படியில்லை. பம்பாய் பார்ப்பனரல்லாதார் தங்கள் சுபா சுப காரியங்களுக்குப் பார்ப்பனப் புரோகிதர்களை அழைத்தாலும் அழைக்கா விட்டாலும் அவர்களுக்கு தட்சணை என்னும் கட்டாயப் பிச்சை கொடுத்தே தீர வேண்டுமென்று சட்ட வாயிலாக ஏற்பட்டிருக்கிறது. சென்னையிலே தோன்றிய பார்ப்பனரல்லாதாரியக்கம் இந்தியாவெங்கும் பரவி வருகின்றமை யான் ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாதார் தங்கள் தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்ற முனைந்து வருகின்றனர். பம்பாய் மாகாணத்திலே உள்ள அத்த கைய கொடிய சட்டத்தை அறவே ஒழிப்பான்



RangaRakes tamilnavarasam.com

வேண்டி சின்னாட்களுக்கு முன் கூடிய பம்பாய் சட்டசபைக் கூட்டத்தில் பார்ப்பனரல்லாதாரின் தலைவர்களும் ஒருவரான திரு. எஸ். கே. போலே என்பார் ஓர் திருத்த மசோதா கொண்டு வந்தார். ஒவ்வொரு மனிதரும் தத்தம் மனச்சாக்ஷிப் படியும் விருப்பப்படியும் மத அனுஷ்டானங்களை நடத்த உரிமையிருக்க வேண்டு மென்பதே இம்மசோதாவின் முக்கியக் கருத்து.

திரு.எஸ்.கே. போலே அவர்களின் திருத்த மசோதாவை எதிர்ப்பதற் கென்றே சுயராஜ்யக் கட்சி சட்டசபை அங்கத்தினர்கள் அக்கூட்டத்திற்கு வந்திருந்ததாக 'சுதேசமித்திரன்' நிருபர் எழுதியிருக்கிறார். சுயராஜ்யக் கட்சியினரென்பது யார்? என்றும், அவர்கள் நாட்டிற்கு எத்தகைய ராஜ்யம் வேண்டுமென்கிறார்கள்? என்பதும் இவற்றினின்று நன்கு அறிந்து கொள்ளலாம். அதாவது சுயராஜ்யக் கட்சியார் பார்ப்பனக் கட்சியேயென்பதும் அக்கட்சியார் கோருவது பார்ப்பன ராஜ்யமே என்பதும் இவற்றினின்று தெள்ளிதிற் புலனாகும் என்பதே. திரு. போலே அவர்களின் திருத்த மசோதா சுயராஜ்யக் கட்சியினரால் மிகுந்த பலத்தோடு தாக்கப்பட்டதாகத் தெரிகி றோம். அக்கட்சியார் புரோகிதர்கள் சார்பாய் வாதாடும் போழ்து அத்திருத்த மசோதா போல்ஷ்விக் கொள்கை உடையதாயிருக்கிறதென்றும் பிராமண துவேஷத்தை வளர்க்கக்கூடியதென்றும் கூறி அம்மசோதாவைத் தனிக் கமிட்டிக்கு அனுப்புமாறும் வாதம் நிகழ்த்துவதானால் அடுத்த கூட்டத்திற்கு ஒத்திவைக்குமாறும் பல திருத்தங்களும் மாற்றங்களும் கொண்டு வரப்பட்டன. எவ்வளவோ சூழ்ச்சி செய்தும் சுயராஜ்யக் கட்சி யினரின் திருத்தத்தின்மேல் வந்த திருத்தங்கள் முற்றும் தோற்கடிக்கப் பட்டன.

இவ்வாறு புரோகிதர் கட்சி வீழ்ச்சி பெறுவதைக் கண்ட டாக்டர் பரஞ் சப்பே அவ்விரு கட்சிக்கும் ஒரு ராஜி செய்ய முயன்றார். இவரது ராஜியின் தோரணையைக் கவனித்தால் பூனைகள் திருடிக்கொண்டு வந்த அப்பத்தைப் பங்கிடப் புகுந்த குரங்கின் கதையாகவே யிருக்கிறது. ஏனென்றால் சாதி அபிமானம் சந்நியாசிக்கும் போகாது என்பது போல் டாக்டர் பரஞ்சப்பே பார்ப்பனரானதால் அவர் தம் இனத்தவராய பார்ப்பனப் புரோகிதர்களின் சார்பிலேயே பஞ்சாயம் செய்தார். அதாவது பரம்பரையாக இருந்துவந்த பாத்தியதையை இழக்க நேரும் புரோகிதர்களுக்கு ஒருவகை நஷ்டஈடு கொடுத்துவிடுமாறும் சிவிலியன்கள் சீர்திருத்தம் வழங்கப்பட்டவுடன், வீதாச்சாரப் பென்ஷன் பரிகாரம் முதலியவற்றிற்காகப் பிரமாதக் கிளர்ச்சி செய்ததை கவர்ன்மெண்டின் ஞாபகத்துக்குக் கொண்டு வருவதாகவும் அதே போல் ஆயிரக்கணக்கான வருஷங்கள் அனுபவித்து வந்த பாத்தியதை களைப் புரோகிதர்கள் இழப்பதற்குப் பரிகாரமளிக்க வேண்டாமா என்றும் பேசியிருக்கிறார். மற்றொருவர் புரோகிதரைக் கூப்பிட விரும்பாதவர்கள் அனைவரும் அதற்குப் பதிலாக தடவை ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார். கல்வி மந்திரி கனம் யாதவ் டாக்டர் பரஞ்சப்பே அவர்கள் பேசியதை எதிர்த்து "மசோதாவின் உத்தேசம்



கிராம ஜனங்களுக்குப் பூரா விடுதலையளிப்பதாகையால் நஷ்டயீடு அளிப்பது அந்தத் தீய முறையை இன்னும் நீடிக்கச் செய்வதாகும்" என்று அழுத்தமாகப் பேசியிருக்கிறார்.

பார்ப்பனரல்லாதாரிடம் புரோகிதர்கள் நஷ்டஈடு கேட்டதற்கு எத்த கைய உரிமை உண்டு என நமக்கு விளங்கவில்லை. இவர்கள் பார்ப்பனரல் லாதாரின் பின் வழித்தோன்றிய சந்ததியாரா? பார்ப்பனரல்லாதாரின் வாழ்வை அழியாது நிலை நிறுத்திய வீரர்களா? எனக் கடாவுகின்றோம். பார்ப்பனர் களின் எதிர்ப்பைத் தாக்கிய திரு. சூர்வே, "பார்ப்பனப் புரோகிதர்கள் ஜனங் களுடைய விருப்பப்படி சடங்குகளை நடத்தி வைக்காததால்தான் மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது" என்று கூறியதிலிருந்து அப் புரோகிதர்களே கிரிகைகளை நடத்தி வைக்கவும் அவற்றிற்கு கௌரவப் பிச்சை பெறவும் எவ்வாறு உரிமை உடையார் என்பதை வாசகர்கள் அறிந்து கொள்ளலாம்.

முதற்கண் மேற்கண்ட கிரிகைகள் எதற்காக என்ன பலனைக் கருதி, பார்ப்பனர்களைக் கொண்டும் அக்காரியங்கள் நடத்தி வைக்க வேண்டு மென்பது நமக்குத் தெரியவில்லை. வயிற்றுப் பிழைப்பிற்காக ஒரு கூட்டத்தார் செய்த அக்கிரமத்திற்குப் பார்ப்பனரல்லாத சமூகம் நஷ்டயீடு கொடுக்க வேண்டுமாம். இவ்வரசாங்கம் பார்ப்பனர்களுடையதாயிருக்குமே யாகில் புரோகிதர்களை விலக்கும் பார்ப்பனரல்லாதாரை ஸார் சக்கிரவர்த்தி யின் தலையை வாங்கியதைப் போன்றே அப்பார்ப்பனரல்லாதாரின் தலையை வாங்கும்படி தீர்மானம் செய்வார்களென்பதில் சந்தேகமில்லை.

ஜனங்களுடைய விருப்பப்படியும் கிரிகை செய்வதில்லை. இதற்குப் புரோகிதர்களை வேண்டாமென்று நிறுத்தினாலும் அதற்குத் தண்டவரி கொடுக்க வேண்டுமென்றால் இந்த அக்கிரமத்திற்கு எங்கு போய் முறையிடு வது? இவற்றினின்று சுயராஜ்யக் கட்சி பார்ப்பனக் கட்சி என்பதையும் அக்கட்சி பாடுபடுவதனைத்தும் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே என்பதையும் நமது வாசகர்கள் உணர்ந்து கொள்வார்களென்று நம்புகிறோம்.

பார்ப்பனரல்லாதார் பார்ப்பனர்களை நம்பியிருந்த காலத்தில் பார்ப் பனர்கள் பம்பாய் அரசாங்கத்தில் புகுந்து தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி புரோகிதர்களை அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்ற இவ்வித சட்டத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். இப்பொழுது பார்ப்பனரல்லாதார் விழித்துக் கொண்டு தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள முன் வந்தது போற்றத்தக்கதாகும். இவர்களது முயற்சி வெற்றி பெறுமென்று திரு.போலேயின் மசோதாவின் பேரில் நடைபெறும் விவாதத்திலிருந்து அறிகிறோம். அவர்களது முயற்சியை நாம் போற்றுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 08.08.1926**



RangaRakes
tamilnavarasam.com

# பண்டித மாளவியாவின் புது தைரியம்

## இப்போது சட்டத்தை மீறுவது தேசத்தைக் கருதியா? வகுப்பைக் கருதியா?

ஒத்துழையாமையின்போது சர்க்காரால் போடப்பட்ட எத்துணையோ இலட்சக்கணக்கான அநாகரீகமானதும் அநியாயமானதுமான உத்திரவு களை இந்திய மக்களில் பதினாயிரக்கணக்கான பேர் மீறி ஜெயிலுக்குப் போய்க் கொண்டிருந்த காலத்தில் இவைகளில் ஒன்றாவது நமது பண்டித மாளவியாவுக்கு அநியாயமான உத்திரவென்றோ அநாகரீகமான உத்திர வென்றோ தோன்றாமல் போய்விட்டது ஏன்? அது தேச நன்மைக்கும், இந்திய மக்களின் சுயமரியாதைக்கும் பஞ்சாப்புக்கும் கிலாபத்துக்கும் ஏற்பட்ட அநீதிக்கும் பரிகாரம் தேட ஏற்பட்ட வழிகளைத் தடைப்படுத்த ஏற்பட்ட உத்திரவானதால் அதைப்பற்றி நமது பண்டிதருக்கு லட்சிய மில்லை. ஆனால் இப்பொழுது கல்கத்தா கலவர சம்பந்தமாய் உண்மையாய் கொலைகளும், கொள்ளைகளும், அடிதடி கலவரங்களும் இரு பக்கமும் நடந்து கொண்டிருக்கிற காலத்தில் வங்காள அரசாங்கத்தார் போட்ட தடை உத்திரவை மீறுவதற்கு நமது பண்டிதருக்கு வெகு அவசரம் ஏற்பட்டு விட்டது. ஏனென்றால் இந்த உத்திரவானது வெறும் வகுப்பு சம்பந்தத்தையே ஆதாரமாகக் கொண்டிருப்பதால்தான். ஆனதால் நமது பண்டிதர் வகுப்பு வாதியா, தேசீயவாதியா என்பதை வாசகர்களே உணர்ந்து கொள்ளலாம். பண்டிதர் பார்ப்பனராயிருப்பதால் அவர் செய்யும் காரியங்களும் கிளர்ச்சி களும் இந்து சமூகத் திற்கு என்கிற பெயரை வைத்துக்கொண்டு பார்ப்பன சமூகத்திற்கும் வர்ணா சிரமத்திற்கும் ஆதரவளிக்கச் செய்வதாயிருப்பதால் நமது நாட்டுப் பார்ப்பனப் பத்திரிகைகளும் பார்ப்பனத் தலைவர்களும் பண்டிதரின் நடவடிக்கையை வகுப்புத் தொண்டு என்று சொல்லாமல் தேசீயத் தொண்டு என்று சொல்லி பண்டிதரை பெரிய தேசபக்தராக்க விளம்பரம் செய்வார்கள்.

வங்காள உத்திரவை யோக்கியமான உத்திரவென்று நாம் சொல்லா விட்டாலும் பண்டிதர் பெற்ற பிள்ளையாய இந்து மகாசபை பிறந்திருக்கா விட்டால் இந்தியாவில் இந்து முஸ்லீம் கலகமும் மகாத்மாவின் ஒத்துழை யாமைக்கு சாவும் ஏற்பட்டிருக்காதென்றே நெருப்பின் மீது நின்று கூறுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 08.08.1926**



RangaRakes

# பார்ப்பனர்களுக்கு சரியான இடி

## பார்ப்பன பார்ப்பனரல்லாதாரின் வகுப்பு வித்தியாசத்தைப் பற்றி ஸ்ரீமான் எஸ். ஆர். தாசின் அபிப்பிராயம்

“நான் இங்கு வந்ததின் முக்கிய நோக்கமெல்லாம் இங்குள்ள விஷயங்களை நேரில் அறிந்து அரசப் பிரதிநிதிக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற அபிப்பிராயத்தின் பேரிலேயேயாகும். இங்கு வந்து நேரில் விஷயங்களைக் கவனிக்கிறபோது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஆகிய இரு சமூகத்தாருக்குள்ளும் இருக்கும் வகுப்பு உணர்ச்சி எனக்கு நன்றாகத் தெரிகிறது. நான் எப்பொழுதும் இம் மாகாணத்திலுள்ள தாழ்ந்த நிலையிலி ருக்கும் வகுப்பாரிடமே அபிமானம் கொண்டிருப்பேன். ஏனென்றால் தாழ்ந்த சமூகத்தினர் முன்னுக்கு வரும்வரையில் தேசம் சுயராஜ்யம் பெறமுடியாது. தாழ்ந்த சமூகத்தினர் முன்னுக்கு வரவேண்டுமென்று சொல்வதையும், பிற்பட்ட வகுப்பினர் - தாழ்ந்த வகுப்பினர்களென்றும் பிறத்தியாரால் அமுத்தப்பட்டுக் கிடக்கிறவர்களென்றும் நினைத்துக் கொண் டிருக்கிற ஜனங்கள் தங்கள் முன்னேற்றத்திற்காக ஏற்படுத்திக் கொண் டிருக்கும் எந்த இயக்கங்களையும் வகுப்பு இயக்கங்களென்று சொல்லவே கூடாது. அவற்றையெல்லாம் தேசீய இயக்க மென்றே சொல்ல வேண்டும். ஏனெனில் தாழ்த்தப்பட்ட- பிற்பட்ட- அமுத்தப் பட்ட சமூகத்தார் முன்ன ணிக்கு வருகிறவரையில் தேசீய இயக்க மென்று சொல்லிக்கொண்டு வேலை செய்வது பிரயோஜனத்தைத் தராது. தாழ்ந்த வகுப்பினர் முன்னேற்றமடைய முயல்வதன் பயனாய் ஏற்கனவே முன்னணியிலிருந்து - உயர்ந்த வகுப்பார் என்று சொல்லுகிறவர்களுக்கு சிறிது பாதகம் ஏற்பட நேரும். அந்த பாதகங் களையும் தேச முன்னேற்றத்தை உத்தேசித்து ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இவ்வித விஷயங்களையெல்லாம் தேசீய விஷயங்களாகத் தான் கருத வேண்டும். இதை உணர்ந்தால் தேசீய உணர்ச்சியுள்ள எந்தப் பார்ப்பனனும் உங்கள் இயக்கத்தைத் தடுக்க முன்வரமாட்டான். சில பார்ப்பனர்களாவது யோக்கியர்களாக இருக்கக்கூடும். அப்படியிருந்தால் அவர்களுடைய ஒத்தாசை உங்களுக்குக் கிடைக்கும். பார்ப்பனர்களும் அநாவசியமாக பார்ப்பனரல்லாதார்களுடைய முன்னேற்றத்தைக் கண்டு



tamilnavarasam.com

பயந்து இடைஞ்சல் செய்யமாட்டார்கள். புத்திசாலிகளாயுள்ள பார்ப்பனர் கள் பார்ப்பனரல்லாதாருக்கு உதவியாயிருந்து, பார்ப்பனர் பார்ப்பனரல்லா தார் என்கிற வகுப்புப் பிரச்சினையை தேசீயப் பிரச்சினையாக்கி, விரைவில் தேசம் முன்னேறுவதற்கு வேண்டிய உதவி செய்ய வேண்டும். பார்ப்பன ரல்லாதார் பார்ப்பனரைக் கொஞ்சமாவது நம்ப வேண்டும்" என்று பேசி யிருக்கிறார்.

இம்மாதிரி ஸ்ரீமான் எஸ். ஆர். தாஸ் அவர்கள் பேசி வகுப்புக் கிளர்ச்சிகளை ஆதரித்து "அதைத் தேசீயக் கிளர்ச்சியாகக் கருத வேண்டுமேயல்லாமல் வகுப்புக் கிளர்ச்சி என்று அதை அடக்கப் பிரயத்தனப்படக் கூடாது" என்று சொன்னதோடல்லாமல் இவ்வித கிளர்ச்சிகளுக்குத் தன்னாலான உதவியும், செய்வதாக வாக்களித்தும் போயிருக்கிறார். இப்படியிருக்க 'சுதேசமித்திரன்' இவற்றைத் தனக்கனுகூலமாகத் திருத்தி எழுதிக் கொண்டு "ஜஸ்டிஸ் கட்சிக்குச் சாட்டை" என்று விஷமத் தலையங்கமிட்டு வகுப்புப் பேச்சும் வகுப்புத் துவேஷமும் வேண்டா மென்று அவர் சொன்னதாகக் குறிப்பு எழுதி, முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல் யோக்கியப் பொறுப்பற்ற பிரசாரம் செய்திருக்கிறான். ஆகையால் ஒருவரும் இதை நம்பாமல் ஆங் காங்கு உயர்ந்த வகுப்பார் களால் கொடுமைப் படுத்தப்பட்டு வரும் ஒவ்வொரு சமூகத்தாரும் தைரிய மாய் வெளியில் வந்து தங்களுக்கிருக்கும் கொடுமைகளை எடுத்துச் சொல்லி அதைப் போக்கிக் கொள்வதற்குக் கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டும். தற்காலம் நமது நாட்டின் தேசீய வேலை இதுவே யாகுமே யல்லாமல், வயிற்றுப் பிழைப்புக்காரர்களும் பஞ்ச தந்திரப் பார்ப்பனர் களும் சொல்லிக் கொண்டு திரியும் சுயராஜ்யம், தேசம், விடுதலை, காங்கிரஸ், சர்க்காரை அழிப்பது என்கிற அர்த்தமற்றதும் முட்டாள் தனமானதும் சூழ்ச்சி களும் தந்திரங்களும் சுயநலமும் நிரம்பியதான போலி வார்த்தைகள் அல்லவென்பதைப் பொதுமக்கள் உணர வேண்டுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 08.08.1926**



# இரு பார்ப்பன சீனிவாசர்களின் பொய்மான் அறிக்கை

## இதை மண்டையில் அடித்துப் புதைக்க வேண்டும்.

ஸ்ரீமான்கள் மகாகனம் சீனிவாச சாஸ்திரியும், எஸ்.சீனிவாசய் யங்காரும் சதியாலோசனை செய்து ஒரு பொய்மான் அறிக்கை வெளியிடச் செய்திருக்கிறார்கள். இப்பொய்மான் அறிக்கையைக் கண்டு பொதுஜனங்கள் ஏமாந்து போகக்கூடாது. அவ்வறிக்கையை ஒரே அடியாய் மண்டையில் அடித்துக் கொன்று குழியில் புதைக்க வேண்டும். அது எதுவென்றால் அதுதான் இந்திய தேசீய ஐக்கியச் சங்கம் என்பது. இதை உண்டாக்க நேரு-ஆசாத் அறிக்கை என்பதாக ஒன்றைக் கட்டி விட்டிருக்கிறார்கள். உஷார்! உஷார்!! உஷார்!!!

**குடி அரசு - கட்டுரை - 08.08.1926**



RangaRakes tamilnavarasam.com

# நீதி நிர்வாகத்தில் வகுப்பு உணர்ச்சி

## மதுரை முனிசிபல் சேர்மென் தேர்தல்

மதுரை முனிசிபாலிட்டிக்குச் சேர்மெனாகப் பொது ஜனங்களாலும் இயற்கை தேவியாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் ஆர்.எஸ். நாயுடுவை நமது பார்ப்பன தேவதைகள் ஐந்து, ஆறு மாத காலமாக அந்த ஸ்தானத்தில் உட்காருவதற்கில்லாமல் செய்து விட்டார்கள். அது என்னவென்றால் ஸ்ரீமான் ஆர்.எஸ். நாயுடுவும் மற்றொரு கனவானும் சேர்மென் பதவிக்குப் போட்டியாக நின்றார்கள். ஸ்ரீமான் நாயுடு பார்ப்பனர்களின் எடுப்பார் கை குழந்தையாயில்லாமல் சுயமரியாதை உள்ளவராயிருந்துவிட்டபடியினால் அங்குள்ள பார்ப்பனர்கள் நாயுடுவுக்கு விரோதமாக ஒருவரை நிறுத்தி சுயராஜ்யக் கட்சியின் பெயராலும் காங்கிரஸ் பெயராலும் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தும் ஸ்ரீமான் நாயுடுவுக்கு சம ஓட்டு கிடைத்ததால் திருவுளச் சீட்டு போட வேண்டிய அவசியமேற்பட்டு, திருவுளச் சீட்டிலேயும் ஸ்ரீமான் நாயுடு வுக்கே ஆகிவிட்டது. இதைப் பொறுக்காத பார்ப்பனர்கள் ஒரு பார்ப்பனரை நியாயாதிபதியாய் அடைந்திருக்கிறோமென்ற தைரியத்தின் பேரில் கோர்ட்டுக்குப் போய் அத் தேர்தலை ரத்துசெய்து, வேறு தேர்தல் செய்யும்படி தீர்ப்புப் பெற்று விட்டார்கள். நல்ல வேளையாய் பார்ப்பனரல்லாதார் அப்பீல் நியாயாதி பதியாய் இருக்கும் படியான ஒரு நியாயஸ்தலம் நமது நாயுடுவுக்குக் கிடைத்த படியினால், அங்கு நாயுடு அப்பீல் செய்து கொண்டதன் பலனாய் அந்த பார்ப்பன நியாயாதிபதியின் உத்திரவு மாற்றப்பட்டு பொது ஜனங்கள் இஷ்டப் பிரகாரமும் இயற்கை தேவியின் ஆசீர்வாதத்தாலும் ஸ்ரீமான் நாயுடுவே சேர்மென் வேலை பார்க்கும் படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. எவ்வளவு தான் சட்டங்களுக்கும் தேசத்தின் மானத்திற்கும் பயந்து கொண்டு விஷயங்களைச் சகித்து சகித்துப் பார்த்தாலும் வகுப்புணர்ச்சிகளின் பலனாய் ஒரு வகுப்பாருக்கு மற்றொரு வகுப்பார் செய்யும் கெடுதியை மறைக்க முடியவில்லை. சுருக்கமாய்ச் சொல்லுவதானால், நமது நாட்டில் வெள்ளைக்காரர்களுக்கும் கருப்பு மனிதர்களுக்கும் ஏற்படும் வகுப்பு வியவகாரங்களில் வெள்ளைக்கார நியாயாதிபதிகளிடமிருந்து பெரும்பாலும் கருப்பு மனிதர்கள் நியாயம் பெற முடியாத நிலைமையில் இருக்கிறார்களோ அது போலவே பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற உணர்ச்சியின் பேரில் ஏற்படும் வியவகாரங் களில் பார்ப்பனர்களிடமிருந்து பார்ப்பனரல்லாதார்





நியாயம் பெற முடியாமலிருப்பதோடு கஷ்டமும் நஷ்டமும் அடைய வேண்டியதாயிருக்கிறதை இதுசமயம் நாம் சொல்லித் தீர வேண்டியதாயிருக்கிறது.

நமது கொஞ்சகால ராஜீய அனுபவத்தில் பார்ப்பனரல்லாத வக்கீல் கள் பார்ப்பன நியாயாதிபதிகளிடத்தில் அடையும் இழிவும் கொடுமையும் பாரபக்ஷமும் சுயமரியாதை உள்ளவர்களென்போர் வெளியில் சொல்லிக் கொள்ள முடியாததாயிருப்பதை அனுபவத்தில் பார்த்து வருகிறோம்.

இவ்வித வித்தியாசங்களுக்கு ஒரு சிறிய போலீஸ் அதிகாரி முதல் உயர்தர நீதிமன்றம் வரையில் ஆளாக வேண்டியதாகவேயிருந்து விடுகிறது. இதற்கு உதாரணங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் இதிலிருந்து நமது மக்கள் எப்படித் தப்புவது என்பது தான் நமக்குப் பெருத்த கவலையாயிருந்து வருகிறது. ஒரு வகுப்பாருக்கு மாத்திரந்தான் இப்போது இந்தக் கஷ்டமிருக்கிறது என்று நாம் இங்கு சொல்ல வரவில்லை. தேர்தல் வியவகாரங்கள் நூற்றுக்கு 90 குறைவில்லாமல் அப்பீலில் மாறியிருப்பதின் சம்பவமென்ன? ஏறக்குறைய தற்காலம் நமது நாட்டில் நடக்கும் தேர்தல் வியவகாரங்களெல்லாம் வகுப்புணர்ச்சியை ஆதாரமாக வைத்தே நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகுப்பு உணர்ச்சி கள்தான் இவ்விதத் தீர்ப்புகளுக்கும் ஆதாரமென்றே நாம் நம்ப வேண்டி யிருக்கிறது. இதிலிருந்து நாம் என்ன முடிவுக்கு வர வேண்டிய திருக்கிற தென்றால் தேர்தல் சம்பந்தமான வியவகாரங்களை நீதிபதிகள் கைக்குக் கொண்டு போகாமல் நிர்வாக அதிகாரிகள் கையிலேயேயிருக்கச் செய்தால் ஒழுங்காயிருக்க முடியுமா என்று கூட நினைக்க வேண்டியதாயிருக்கிறது. நிர்வாக அதிகாரிகள் செய்யும் கொடுமைகள் நீதிபதிகள் செய்யும் கொடுமைகளைவிடக் குறைந்ததல்லவானாலும் (உதாரணமாக ஈரோடு முனிசிபல் நிர்வாக ஊழல்களைப் பற்றி மேல் நிர்வாகிகள் நடந்து கொள்ளும் தோரணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்) இவ்வளவு காலதாமதமும் பணச் செலவும் மினக்கேடும் வக்கீல்கள் சூழ்ச்சியும் குறையுமென்றே நம்புகிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 08.08.1926**

RangaRakes
tamilnavarasam.com

# பிராமணீயத்தை ஒழித்தவர்கள்

சென்னையில் கொஞ்ச நாளைக்கு முன்பு ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடுகார், ஆர்.கே. ஷண்முகஞ் செட்டியார், திரு.வி. கலியாண சுந்தர முதலியார், ந. தண்டபாணி பிள்ளை, ஈ.வெ.இராமசாமி நாயக்கர் முதலியவர்கள் கூடிப் பேசியதாகவும் அதன் முடிவு என்ன என்பதைப் பற்றியும் முந்திய இதழில் எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அதாவது, அரசியல் விஷயத்தைப் பற்றி அவரவர்கள் அபிப்பிராயப்படி நடந்து கொள்வதென்றும், சமூக சமத்துவ விஷயங்களில் எல்லோரும் ஒரே அபிப்பிராயமாயிருக்கிறோம் என்றும், அது விஷயத்தில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது என்றும் எழுதியிருந்தோம். அதன் பலனாக அதே சமயத்தில் சமூக சமத்துவ விஷயமாய் எல்லோரும் ஒத்துப் பிரசாரம் ஆரம்பிக்கப்படும் முன்பு பார்ப்பனரல்லாதார் வைதீக சடங்குகள் என்று பெயர் வைத்துக் கொண்டு ஒவ்வொரு குடும்பங்களிலும் பார்ப்பனர்களைக் கொண்டு செய்யப்படும் சடங்குகளை நிறுத்துவதற்கு முதல் முதலாகப் பிரசாரம் செய்யவேண்டுமென்றும், அப்படிச் செய்வதில் தங்கள் தங்கள் பெற்றோர்களையும் மற்றோர்களையும், மோக்ஷத்திற்கனுப்புவதற்கென்றும், அவர்கள் சுகமாய் இருப்பதற்கென்றும் பார்ப்பனர் களைக் கொண்டு திதி, திவசம் என்றோ சிரார்த்தம் என்றோ சொல்லும்படியான பல வைதீகச் சடங்குகள் செய்வதில் ஒன்றும் பலனில்லையென்றும், அம் மாதிரி சடங்குகள் பார்ப்பனர்களின் பிழைப்புக்கு ஏற்படுத்திக் கொண்டதல்லாமல் வேறல்லவென்பதை பார்ப்பனரல்லாதாருக்குத் தெரிவிப்பதற்காக ஒரு பிரசாரம் ஆரம்பிப்பதென்றும் அதில் அப்பொழுதிருந்து பேசிய ஐவரும் மற்றும் அதற்கு சம்மதித்தவர்கள் பெயரையும் வெளியிட்டு வருவதென்றும் முடிவு செய்து அதன்படியே சென்றவாரத் 'தமிழ்நாடு' பத்திரிகையிலும் "பிராமணீயத்தை ஒழித்தவர்கள்" என்ற தலைப்பின் கீழ் பல கனவான்களின் பெயர் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இன்னமும் தெரியப்படுத்தும் கனவான் கள் பெயரும் அவ்வப்போது வெளிப்படுத்திக் கொண்டுவரப்படும். அதா வது, யார் ஒருவர் பார்ப்பனரைக் கொண்டானாலும் மற்றபடியானாலும் தாங் கள் செய்யும் திதியோ, திவசமோ, சிரார்த்தமோ அல்லது வேறு பல சடங்கு களால் இறந்து போன தங்கள் பெற்றோர்களுக்கோ, மற்றோர்களுக்கோ "மேலுலகத்திற்கு"ப் போய்ச் சேரும் என்று நினைத்துக்கொண்டு ஒன்றும்



RangaRakes

செய்வதில்லை, அவ்விதச் சடங்குகளில் நம்பிக்கையில்லை என்று யாருக்கு ஏற்படுகிறதோ அவர்கள் தங்கள் பெயரைத் தெரியப்படுத்தினால் பத்திரிகையில் பிரசுரித்து வரப்பெறும்.மேற்கூறிய பிரகாரம் பிராமணீயத்தை விரட்டியவர்களாவன:-

**ஸ்ரீமான்கள்**

1. டாக்டர் வரதராஜுலு நாயுடு, "அசோக விலாஸ்", சேலம்.
2. திரு.வி.கலியாணசுந்திரமுதலியார், "நவசக்தி" ஆசிரியர்,சென்னை.
3. ஈ.வெ.இராமசாமி நாயக்கர், 'குடி அரசு' ஆசிரியர், ஈரோடு.
4. ஆர்.கே. ஷண்முகஞ் செட்டியார், 'ஹவார்டன்', கோயமுத்தூர்.
5. சனக சங்கர கண்ணப்பர், 'திராவிடன்' ஆசிரியர் , சென்னை.
6. என். தண்டபாணி பிள்ளை, 6-99 பவழக்கார தெருவு, சென்னை.
7. ச. சொக்கலிங்கம் பிள்ளை, 'தமிழ் நாடு' துணை ஆசிரியர், சென்னை.
8. வெ. சுப்பையா பத்தர், 84 முதல் வீதி , ரங்கூன்.
9. திரு. அ.மு. அ. அண்ணாமலை செட்டியார், ஆத்தங்குடி.
10. எம். என். முத்துக்குமாரசாமி பாவலர் , பரோபகார சங்கத்தலைவர், மேல்பாதி, நெல்லிக்குப்பம்.
11. எஸ். இராமநாதன் , காரியதரிசி, தமிழ் மாகாண அ.பா.சர்க்கா சங்கம், ஈரோடு.
12. சா. இராமசாமி நாயக்கர், வியாபாரம், ஈரோடு.
13. ஓ.சி. முத்துசாமிக் கவுண்டர், வியாபாரம் , ஈரோடு.
14. மணவை ரெ. திருமலைசாமி, 'குடி அரசு' துணை ஆசிரியர், ஈரோடு.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 08.08.1926**



tamilnavarasam.com

# “தேசபக்தன்”

‘தேசபக்தன்’ பத்திரிகை கொழும்பிலிருந்து வெளிவரும் வார மும்முறைப் பதிப்பாகும். இதன் ஆசிரியராயிருக்கும் திரு. கோ. நடேசய் யரைப் பற்றி நாம் நன்கு அறிவோம். தஞ்சையினின்று வெளி வந்த ‘வர்த்தக மித்திரன்’ பத்திரிகையும் திரு. நடேசய்யரையே தன் ஆசிரியராகக் கொண்டி ருந்தது. அக்காலை ‘வர்த்தகமித்திரனி’ல் ஒழுங்காகவும் தேசநலங்கருதியும் எழுதப்பட்ட கட்டுரைகளே வெளிவந்தன.

ஆனால் இப்பொழுது அதே திரு. நடேசய்யரை ஆசிரியராகக் கொண்ட ‘தேசபக்தன்’ தாங்கி வரும் கட்டுரைகள் ஒரே ஒரு குறிப்பிட்ட ஜாதியின் மாட்டு அன்போடும் அபிமானத்தோடும் எழுதி வருவது பெரிதும் வருந்தத்தக்கதாகும். வெளிப்படையாகக் கூறப்புகின் ‘தேசபக்தனும்’ பார்ப்பனப் பிரசாரம் செய்யத் தொடங்கிவிட்டான் என்றே கூற வேண்டும். சென்னையில் நடைபெறும் பார்ப்பனப் பத்திரிகைகள் செய்துவரும் பார்ப்பனப் பிரசாரம் போதாதென்று வெளிநாடு சென்று பிழைக்கப்போன தமிழரின் குடியைக் கெடுக்க, மலாய் நாட்டில் ‘தமிழ் நேசன்’ என்றும் இலங்கையில் ‘தேசபக்தன்’ என்றும் இரு பார்ப்பனப் பத்திரிகைகள் தோன்றியுள்ளதென்றே கூறவேண்டும்.

கறுப்பு நிறங்கொண்ட ஆட்டை வெள்ளாடு என்பது போல பார்ப் பனப் பக்தனாகயிருப்பவன் ‘தேசபக்தன்’ என்று பெயர் பூணி தமிழர்களைப் பாழ்படுத்த முயலுவதை நாம் கண்டிக்காமலிருக்க முடியவில்லை. ஆதலால் இதை இனித் தமிழ் மக்கள் ஆதரிப்பது கொள்ளிக்கட்டை எடுத்து தலையைச் சொரிந்து கொள்வதாகும்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 08.08.1926**



# நாகையில் பார்ப்பனரில்லாத திருமணமும் பிரார்த்தனையும்

நாகபட்டணம் தென் இந்தியா ரயில்வேயைச் சேர்ந்த தொழிலாளரும், ஸ்ரீமான் பாலையத் தேவர் குமாரருமான ஸ்ரீமான் பா. காளியப்பத் தேவர் அவர்களுக்கும் பட்டுக்கோட்டையைச் சேர்ந்த படப்பக்காட்டிலிருக்கும் ஸ்ரீமான் இராசாமித் தேவரவர்கள் குமாரத்தி ஸ்ரீமதி செல்லம்மாளுக்கும் இவ்வாவணி- *மீ* மூன்றாந்தேதி (19-8-26 ) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நாகை கோட்டைமேட்டுத் தெருவில் உள்ள மணமகன் இல்லத்தில் திருமணம் நடைபெறும். அத்திருமணத்தில் மணமகனும் மணமகளும் கதரா டையே அணிவதுடன் **பார்ப்பனர் சம்மந்தமே இல்லாமல் அத்திருமணச் சடங்கும் நடைபெறும்.** நம் தென்னாட்டில் இம்மாதிரி கதருடையுடன் இதுவரை பல திருமணங்கள் நிகழ்ந்திருந்தாலும் பார்ப்பனப் புரோகிதரில் லாமல் திருமணங்கள் நடப்பது அதிசயமாகக் கருதப்படுவதுடன் வெகுசில திருமணங்களே இதுவரை நடைபெற்றிருக்கின்றன.அவற்றுள் சென்ற மாதம் வட ஆற்காடு ஜில்லா ஆம்பூர் சாணாங் குப்பத்திலிருக்கும் திருவாளர்கள் வெங்கிடசாமி முதலியாரும் அவரது உறவினர் இருவரும் சேர்ந்து நடத்தி வைத்த மூன்று திருமணங்களும் நாகையில் நடக்கப் போகும் இத் திருமண மும் முக்கியமானதென்றே சொல்லலாம். இனியும் தமிழ்நாட்டில் நடக்கும் அநேக திருமணங்களும் இதுபோலவே தங்கள் தங்கள் வகுப்பிலுள்ள முதிர்ந்த பரிசுத்தம் பொருந்திய பெரியோர்களைக் கொண்டே நடத்திக் கொள்வது திராவிட மக்களின் சுயமரியாதையைக் காப்பதாகுமென்று விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம். சுமார் 30, 40 வருஷங்களுக்கு முன்னால் தென்னாட்டில் விசேஷமாய்ப் பார்ப்பனரின்றியே விவாகம் முதலிய அநேக சடங்குகளும் நடைபெற்று வந்திருக்கிறது.

முக்கியமாய் இன்னாட்டுக் கொங்கு வேளாள சமூகமாகிய பெரும் சமூகத்தார் தங்கள் மணச்சடங்குகளைத் தங்கள் சமூகத்திலேயே உள்ளவ ரான அருமைக்காரர் என்னும் பெரியார்களைக் கொண்டே நடப்பித்து வந்திருக் கிறார். கொஞ்சம் செல்வமோ, அல்லது நாகரீகப்பேயோ ஏதாவது ஒரு குடும்பத்திற்குப் புதிதாய் ஒட்டிக் கொண்டால் அவர்கள் பார்ப்பனரைக் கொண்டு சடங்குகள் செய்வது ஒரு பெருமை என்று நினைத்துவர பார்ப்பனர்களே இருந்து நடத்த வேண்டும் என்று செய்து விட்டார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இன்னமும் அவ்வகுப்புக்களிலும் மற்றும் பல வகுப்புக்களிலும் 100-க்கு 90 குடும்பங்கள் பார்ப்பனர் இல்லாமலே நடைபெற்று வருகின்றன. சிரார்த்தம் முதலிய சடங்குகள் வேளாள சமூகமாகட்டும், பலிஜா சமூகமாகட்டும் மற்றும் பல சமூகங்களாகட்டும் இப்பொழுதும் பெரும்பான்மையான குடும்பங்கள் பார்ப்பனரைக் கொண்டு செய்வதே இல்லை. இப்படி இருந் தும் பார்ப்பனர்கள் சூழ்ச்சியினால் பார்ப்பனர்களைக் கொண்டு செய்யும் சடங்குகளும் ஒரு பெருமை இருப்பதாகக் கருதிப் புதிது புதிதாய் அவ் வழக்கங்களை ஸ்தாபித்து வருகிறார்கள். இவை பார்ப்பனர்கள் வயிற்றுப் பிழைப்புக்கு அனுகூலமே தவிர நமக்காவது நமது பெற்றோர்களுக்காவது நமது மணமக்களுக்காவது யாதொரு பயனும் இல்லை. அவர்கள் சொல்லும் மந்திரங்கள் என்னும் சமஸ்கிருத வார்த்தைகளிலும் யாதொரு விசேஷப் பொருளும் இல்லை. அதைச் செய்து வைக்கும் புரோகிதர்களோ உபாத்தி யாயர்களோ அப்படி ஒன்றும் விசேஷ சக்தியோ யோக்கியதையோ பெரு மையோ படைத்தவர் களுமல்ல. வீண் பிரமையும் போலி நாகரீகம் என்கிற முட்டாள்தனமுமேயல்லாமல் இதில் வேறு ஒரு பலனும் இல்லை. உண்மை யாகவே பார்ப்பனர் இல்லாமலும் பார்ப்பனரைக் கொண்டு சடங்குகள் செய்யாமலும் சிராத்தம் தர்ப்பணம் முதலிய பார்ப்பனர் வயிர் வளர்க்கும் போலிச் சடங்குகளில்லாமலும் இருக்கும் ஜனங்களும் சமூகமும் ஜாதியும் சேர்த்து கணக்குப் பார்த்தால் இவைகளையெல்லாம் பார்ப்பனர்களைக் கொண்டு செய்கிறவர்களை விட எத்தனையோ மடங்கு அதிகமாய்த்தானி ருப்பார்கள். இதினாலேயே அவர்கள் க்ஷேமமாய் வாழவில்லையென் றாவது அவர்கள் பெற்றோர் மோக்ஷம் அடையவில்லை என்றாவது சொல்லி விட முடியுமா? ஆதலால் பார்ப்பனரல்லாத இந்து மக்கள் இனி மேலாவது தங்கள் சுயமரியா தையையும் தத்துவத்தையும் உத்தேசித்தாவது பார்ப்பனர் இருந்து நடத்தும் காரியங்கள் தான் உண்மையானது என்றும் உயர்ந்தது என்றும் கடவுள்களும் மோக்ஷத்திற்கும் பிரீதியானது என்றும் பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் என்றும் எண்ணி தங்கள் தங்கள் சமூகத்தையே தாழ்த்திக் கொள்வதற்குத் தாங்களே பணங்கொடுத்து ஆளாகாமல் தங்கள் தங்கள் சமூகத்தாரைக் கொண்டே செய்து கொள்ள வேண்டுமாய் பிரார்த்திக் கிறோம்.

*குறிப்பு: இத்திருமணத்திற்கு ஸ்ரீமான் நாயக்கரையும் அவசியம் வரும்படி வேண்டிக்கொண்டிருப்பதால் அநேகமாய் ஸ்ரீமான் நாயக்கரும் போகலாம்.*

**குடி அரசு - சிறு குறிப்பு - 15.08.1926**



RangaRakes

# வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

## ஸ்ரீமான் S.சத்தியமூர்த்தி அய்யர்

சென்ற வாரம் வெள்ளிக்கிழமை சென்னை கோகலே மண்டபத்தில் ஸ்ரீ எஸ்.சத்தியமூர்த்தி அய்யர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி பேசியதில் கடைசியாக **“பிராமணர் - பிராமணரல்லாதாரின் நம்பிக்கைக் குப் பாத்திரமாகும் வண்ணம் நடந்து கொள்ள வேண்டும்.** உத்தியோக விஷயத்தில் பிராமணரல்லாதாருக்கு நியாயமாகவே குறையிருக்கிறது. அக் குறையில்லாதபடி பிராமணர்கள் நடந்து கொள்ள வேண்டியது அவசியம்” என்று பேசியிருக்கிறார். இது மிகவும் சரியான வார்த்தை; நாமும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் கேட்பதற்கு இந்தக் குறைகளைத்தான் சொல்லுகி றோம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிடைத்தால் தான் இக்குறைகள் நீங்கும்; அல்லது சுவாமி சிரத்தானந்தர் சொன்னபடி செய்தாலாவது கொஞ்சம் நீங்கலாம். இரண்டு மில்லாமல் ஸ்ரீமான்களான குழந்தையையும் ஓ.கந்தசாமி செட்டியாரையும், பாவலரையும், ஐயவேலரையும் பிடித்து வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் வேண்டாம் என்று சொல்லச் செய்வதாலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பவர்களைத் திட்டச் செய்வதினாலும் இக்குறை நீங்கி விடுமா? என்று கேட்கிறோம்.

**குடி அரசு - சிறு குறிப்பு - 15.08.1926**



tamilnavarasam.com

# பார்ப்பனரின் பிறப்புரிமை

வங்காள அரசாங்கத்தார் ஒற்றுமையும் சமாதானமும் என்னும் பெயரால் பண்டித மாளவியா அவர்களுக்கும் டாக்டர் மூஞ்சே அவர்களுக்கும் வங்காளத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதென்பதாக 144 உத்திரவு போட்டார்கள். அவற்றை ஷை இரு கனவான்களும் வீரர்களைப் போல மீறி நடந்தார்கள். அம்மீறுதலானது கேவலம் வகுப்பு பிரச்சினையை உத்தேசித்தே மீறினார்கள் என்று நாம் நினைக்க ஏற்பட்ட போதிலும் இக்கனவான்களுடைய புதிய வீரத்தை நாம் மனதில் பாராட்டினோம்.

அம்மீறுதலின் பேரில் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தும் இம்மகிழ்ச்சிக்கு அதிக ஆயுள் இருக்காதென்று நாம் சந்தேகப்பட்டதுண்டு. அதுபோலவே இப்பொழுது பண்டிதர் பேரிலும் டாக்டர் மூஞ்சே அவர்கள் பேரிலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாதென்று ஸ்ரீமான்கள் சர்.சிவசாமி அய்யர், டி. ரங்காச்சாரியார் முதலிய பார்ப்பனர்கள் அரசப் பிரதிநிதியிடம் போய் பல்லைக் கெஞ்சுவதாய்த் தெரிய வருகிறது. ஜனங்களை ஏமாற்றுவதற்கு ஒருபுறம் வீரமும் சர்க்காரை ஏமாற்றுவதற்கு மற்றொருபுறம் பல்லைக் கெஞ்சுவதும் நமது பார்ப்பனர்களுக்கு பிறப்புரிமை என்பது இதனால் விளங்கவில்லையா?

**குடி அரசு - சிறு குறிப்பு - 15.08.1926**



RangaRakes

# பிராமணீயக் கொடுமை

இந்தியாவின் ஒற்றுமையைக் குலைப்பது
**பிராமணீயம் !**

இந்தியாவை வேற்றரசர் கையில் கொடுத்தது
**பிராமணீயம்!**

இந்து முஸ்லீம் கலகங்களை மூட்டுவது
**பிராமணீயம்!**

தமிழரை வறுமைக்குள்ளாக்கியது
**பிராமணீயம்!**

இந்தியா சுயராஜ்யம் அடைவதற்குத் தடைக் கல்லாயிருப்பது
**பிராமணீயம்!**

உடன்பிறந்த சகோதரர்களான தமிழர்கள் அடித்துக் கொள்ளவும் நீதிமன்ற மேறி வழக்காடவும் காரண பூதமாயிருப்பது
**பிராமணீயமே!**

தமிழர்களே! இந்தப் பாழான **பிராமணீயத்தை** நாட்டை விட்டு ஓட்டுக.

**குடி அரசு - சிறு குறிப்பு - 15.08.1926**



tamilnavarasam.com

## டாக்டர் நாயுடுகாரின் வீர கர்ச்சனை

இந்து தேவஸ்தான மசோதாவைப் பற்றி பார்ப்பனர்கள் தங்கள் சுயநலத்திற்காக எதிர்க்கக் கடமைப்பட்டிருந்தாலும் அதைத் தாங்களே எதிர்ப்பதற்குப் போதுமான தைரியமும் யோக்கியதையும் இல்லாததால், குரங்கு கையில் பூமாலை கிடைத்தது போல், தங்கள் கையில் சிக்கி நசுக்குண்டு கொண்டிருக்கும் காங்கிரசை இதற்காக உபயோகப்படுத்திக் கொண்டு காங்கிரசின் பெயரால் இந்துமத தர்ம பரிபாலன மசோதாவை சுயராஜ்யக் கட்சியார் எதிர்க்க வேண்டு மென்று ஒரு பொருளற்ற உத்திரவைப் போட்டுக் கொண்டு வரப்போகும் சட்டசபையில் பல பார்ப்பனரும் அவர்களது சிஷ்ய கோடிகளும் எதிர்க்கப் போகிறார்களாம். இதையறிந்த நமது டாக்டர் வரத ராஜுலு நாயுடுகார் அவர்கள் வீர கர்ச்சனை முழங்கியுள்ளார். அதாவது:-

> "இப்பொழுது சட்டசபையில் வரப்போகும் சீர்திருத்தம் பெற்ற இந்து மத பரிபாலன மசோதா சம்பந்தமான விவாதம் அரசி யல் கட்சிப் பிரச்சினை அல்ல. ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டி யார் உள்பட காங்கிரஸ்காரர்கள் இம்மசோதாவை ஆதரிக்கிறார்கள். மசோதாவை சுயராஜ்யக் கட்சியார் சட்ட சபைக்குப் போய் எதிர்ப்பது இம்மாகாணத்தில் காங்கிரசுக்கே அழிவு தேடுவதாகும். ஆதலால் சட்டசபையிலுள்ள சுயராஜ்யக் கட்சி சட்டசபை அங்கத்தவர்கள் கண்டிப்பாய் இது விஷயத்தில் நடுநிலைமை வகிக்க வேண்டு மென்று வேண்டிக்கொள்ளுகிறேன். அரசியல் வேற்றுமை இருந் தாலும் சென்னை அரசாங்கத்திற்குக்கூட இது சம்பந்தமாய் நான் ஒரு தந்தி அனுப்பியிருக்கிறேன்".
>
> "அதாவது, வெளியிடப்பட்டிருக்கும் இந்துமத பரிபாலன மசோதாவை எல்லா பார்ப்பனரல்லாதாரும் முழு மனதுடன் ஆதரிக் கிறார்கள். மசோதாவுக்கு விரோதமாய் செய்யப்படும் கிளர்ச்சியானது சுயநலத்தை உத்தேசித்து சில சுயநலக்காரரால் நடத்தப்படும் பொய்க் கிளர்ச்சியாகும். இது விஷயமாய் அரசாங்கத்தாரோடு ஒத்துழைக்க வும் தயாராயிருக்கிறேன்"

என்று பார்ப்பனருக்கும் அரசாங்கத்திற்கும் தந்தி கொடுத்திருக்கிறார். ஆனால் இதற்கு மேல் ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் என்ன செய்யப் போகிறாரோ தெரியவில்லை. எப்படியிருந்தாலும் இதை நாம் முழு



மனதோடு போற்றுவதோடு மனப்பூர்வமாய் ஆதரிக்கவும் செய்கிறோம். இப்பார்ப்பனர்களின் கொடுமையானது அதிலிருந்து தப்புவதற்குத் தீவிர தேசீயவாதிகளை ஜஸ்டிஸ் கட்சியாரோடு சேரும்படி செய்வது மாத்திர மில்லாமல் சர்க்காரோடும் ஒத்துழைக்கச் செய்கிறது. இனியும் நமது பார்ப் பனர்களின் சூழ்ச்சியும் கொடுமையும் வெளியாக வெளியாக இன்னமும் என்னென்ன செய்யச் சொல்லுமோவென்பதை இப்பொழுது நம்மால் நிர்ணயிக்க முடியவில்லை. இயற்கை தேவிதான் அறிவாள்.

**குடி அரசு - கட்டுரை - 15.08.1926**



RangaRakes
tamilnavarasam.com

# முறியடிக்கப்பட்டவர்களுக்கு 'மித்திரனி'ன் நற்சாக்ஷிப் பத்திரம்

சென்னைத் தேர்தல்களில் பார்ப்பனரல்லாத கட்சியாருக்கு வெற்றி ஏற்பட்டதைப் பற்றி 'மித்திரன்' தன்னை திருப்தி செய்து கொள்ளுகையில் சென்னை வெற்றி பார்ப்பனரல்லாத கட்சியான ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றி யல்லவென்றும், ஜஸ்டிஸ் அபேட்சகர்களான கனவான்கள் அந்தந்த பேட்டை ஓட்டர்களுக்குச் செய்த சேவையினாலேயே அவர்களுக்கு வெற்றி கிடைத்த தென்றும் சொல்லுகிறான். இதிலிருந்தே பார்ப்பனக் கட்சியான சுய ராஜ்யக் கட்சியாரின் சார்பாய் நிறுத்தப்பட்ட அபேட்சகர்களை ஓட்டர் கள் மதிக்க வில்லை என்றும் இவர்கள் நன்மை செய்வார்கள் என்று ஓட்டர்கள் நினைக்கவில்லை என்றும் ஏற்படுகிறது. இதைப் பார்க்கும் போது, ஐயோ பாவம்! நமது ஸ்ரீமான் ஒத்தக்காசு செட்டியாரை இப்பார்ப்பனர்கள் பழைய குரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு எந்தெந்த விதத்தில் கெடுத்து விட்டார்கள் - கெடுத்து வருகிறார்கள் என்பதை நினைக்கும் போது செட்டி யார் பேரில் அளவு கடந்த பரிதாபமேற்படுகிறது.

ஸ்ரீமான் செட்டியாரின் மான நஷ்ட வழக்கில் செட்டியார் மானம் ஒத்தக்காசுதான் பெறும் என்று தீர்ப்பு வாங்கிக் கொடுத்து விட்டார்கள். ஸ்ரீமான் செட்டியார் தனது பேராசையினிமித்தம் தனது பட்டத்தையும் விட்டுஏமாறினார் என்கிற பெயர் வாங்கிக் கொடுத்து, பட்டத்தையும் பிடுங்கி விட்டார்கள். போதாக் குறைக்கு சென்னைத் தேர்தலில் ஸ்ரீமான் செட்டியார் தோல்வியுற்றதற்குக் காரணம் ஓட்டர்களுக்கு செட்டியாரிடத்தில், தங்க ளுக்கு நன்மை செய்வார் என்கிற நம்பிக்கையில்லாததால்தான் ஓட்டுக் கிடைக்க வில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஸ்ரீமான் செட்டியார் வெற்றி பெற்றிருந்தால் அது செட்டியாரின் நல்ல குணத்திற்கு அல்லவென்றும் சுயராஜ்யக் கட்சியாரிடத்தில் ஜனங்களுக்குள்ள மதிப்பு என்றும் சொல்லிக் கொள்ளுவார்கள். ஸ்ரீமான் செட்டியார் தோற்றதால் அது சுயராஜ்யக் கட்சிக்கு ஜனங்களிடத்தில் உள்ள வெறுப்பும் அவநம்பிக்கையும் அல்ல வென்றும் செட்டி யாரிடத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கையில்லாததால்தான் என்றும் சொல்லி விட்டார்கள். நாளைக்கு சென்னை சட்டசபைத் தேர்தலில் செட்டியார் அவர்கள் அநேகமாய்த் தோற்றுப் போகலாம். அப்போது செட்டியாரைப் பற்றி என்ன சொல்லுவதற்குத் தயாராயிருக்கிறார்களோ தெரியவில்லை.



RangaRakes

எப்படியாவது நமது ஸ்ரீமான் செட்டியாருக்கு நாள் கழிந்தால் போதும்; யார் என்ன சொன்னாலும் கவலை இல்லை போல் இருக்கிறது. செட்டியாரின் பரிதாப நிலைக்கு நாம் மிகுதியும் இரங்குகிறோம்!

**குடி அரசு - கட்டுரை - 15.08.1926**



tamilnavarasam.com

# உஷார் !உஷார்!! உஷார்!!!
# பார்ப்பனர்களின் புதிய தந்திரம்

இந்தியாவின் நன்மையின் பொருட்டும் மக்களின் சம உரிமையின் பொருட்டும் மகாத்மா காந்தியால் ஏற்படுத்தப்பட்ட நிர்மாணத் திட்டமும் பகிஷ்காரத் திட்டமும் கொண்ட ஒத்துழையாமையை காங்கிரசின் மூலம் நடத்தப்பட்டு வந்த காலத்தில் நாட்டில் சுயநலம் படைத்த பார்ப்பனர்களும் ஆங்கிலம் படித்த அடிமைகளும் தவிர மற்றவர்களுக்குள் ஒற்றுமையும் நம்பிக்கையும் கூடிய வரையில் கட்டுப்பாடும் இருந்து வந்தது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அதற்கு முன் இருந்து வந்த வகுப்பு உணர்ச்சிகளுக்கும், வகுப்புத் தந்திரங்களுக்குங்கூட பலம் குறைந்திருந்தது என்பதையும் யாரும் மறுக்க மாட்டார்கள்.

அவ்விதமிருந்த தேசத்தை, அது முன்னேறி நிர்மாணத் திட்டமும் பகிஷ்காரத் திட்டமும் வெற்றி பெற்று மக்கள் சமத்துவமும் சுதந்திரமும் அடைந்து விட்டால் 'வாழ முடியாத' வகுப்பார்களாகிய வஞ்சகப் பார்ப்பனர்களும் ஆங்கிலம் படித்த அடிமைகளும் இவற்றை எதிர்த்துப் பலவித சூழ்ச்சிகளால் கூடவே இருந்து குடியைக் கெடுத்து தேசத்தின் மக்களை பழயபடி உயர்வு தாழ்வு வித்தியாசத்திலும் அடிமை வாழ்வில் பிழைக்க வேண்டிய அவசியத்திலும் கொண்டுவந்து விட்டு விட்டார்கள். இதன் பலனாய் இப்போது தேசத்தில் எங்கு பார்த்தாலும் பழயபடி வகுப்பு உணர்ச்சிகள் பெருகி, ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் சுயமரியாதையையே சுதந்திரம் என்பதாகக் கொண்டு, தங்கள் தங்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபடுகிறார்கள். இப்படிப் பாடுபடுவதானது சாது ஜனங்களை ஏமாற்றி ஏற்கனவே பல சுதந்திரங்களும் சௌகரியங்களிலும் செய்து வைத்துக் கொண்டிருக்கிற பார்ப்பனர்களுக்கு தங்கள் அதிகாரமும் அதிக சுதந்திரமும் போய்விடுமே என்கிற கவலை ஏற்பட்டு, பொதுமக்கள் அடையும் சமத்துவத்திற்கும் முற்போக்கிற்கும் முட்டுக்கட்டையாய் இருக்க வேண்டியது. (நமது பார்ப்பனர்களின் வேதக் கடமையாய்ப் போய்விட்டது. இதற்காக ஆங்காங்குள்ள பார்ப்பனர்கள் ஒன்று கூடி எவ்வளவோ சூழ்ச்சிகளும் பகீரதப் பிரயத்தனங்களும் செய்து பார்க்கிறார்கள். உதாரணமாக வர்ணாசிரம சபை, இந்து மகாசபை, சங்கதன் சுத்தி, சுயராஜ்யக் கக்ஷி, பெங்கால் பேக்ட், இந்தி பாஷை, இரட்டை ஆக்ஷியை ஒழித்தல் ஆகிய இவ்வளவு இயக்கங்களும் பார்ப்பன





ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும் ஆங்கிலம் படித்த ஒரு சிலர் வயிறு வளர்க்கவும் பொதுமக்கள் சமத்துவமும் சுயமரியாதையும் பெறுவதையும் பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியவர்கள் விடுதலை பெற்று முன்னேறுவதைத் தடுக்கவும், முட்டுக்கட்டை போடவுமே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் இப்போது வர வர பாமர ஜனங்கள் இவைகளை உணர்ந்து, இப் பார்ப்பனர்களின் சூழ்ச்சி வலையில் சிக்காமலும், சிக்கினவர்களும் சூழ்ச்சியறிந்து வெளிவருவதாலும் நமது பார்ப்பனர்களுக்கு இதுவரையில் ஏற்பட்டிருந்த கவலையை விட இப்போது கொஞ்சம் அதிகமான கவலை ஏற்பட்டு இதற்கு வழி தேடுகிறார்கள். தற்காலம் நமது நாட்டில் பார்ப்பனர்கள் ஆதிக்கத்தில் இருக்கும் எவ்வித ஸ்தாபனங்களுக்கும் பாமர ஜனங்களிடையில் மதிப்பில்லாமல் போய் விட்டபடியால், புதிதாய் ஒரு ஸ்தாபனத்தை உண்டாக்கி அதன் மூலம் ஜனங்களை மயக்க நமது பார்ப்பனர்கள் புதியதொரு தந்திரம் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அது என்ன வென்றால், "தேசீய ஒற்றுமைச் சங்கம்" என்பதாக ஒன்றைப் புதிதாகத் தாங்களே சிருஷ்டித்து அதில் இரண்டொரு ராஜீய விளம்பரக்காரர்களிடம் கையெழுத்து வாங்கி தாங்களும் கையெழுத்திட்டு இன்னும் பல சுயநலத்திற்காக எதையும் தியாகம் செய்யத்தக்க "தியாக புருஷர்களின்?" கையெழுத்தையும் வாங்கப் போகிறார்கள்.

இந்து மகாசபை போலவே இச்சங்கத்தை ஒவ்வொரு ஊரிலும் ஸ்தாபிப்பார்கள். அதில் வகுப்பு நலன் நாடுபவர்கள் யாவரும் சேர்த்துக் கொள்ளப் படமாட்டார்களாம். இது ஒரு புதிய தந்திரமென்றே சொல்லுவோம்.

தமிழ்நாடு சார்பாய், ஸ்ரீமான்கள் சீனிவாச சாஸ்திரிகளும் சீனிவாசய்யங்காரும் கையெழுத்திட்டிருக்கிறார்களாம். இந்த இரண்டு பெரியார்களும் வகுப்பு உணர்ச்சியே இல்லாதவர்கள் போலும்! சமத்துவமே ஒரு உருவாய் வந்தவர்கள் போலும்! இருவர்களும் மகாத்மாவையும் ஒத்துழையாமையையும் ஒழித்ததற்குக் கொஞ்சங் குறைய முழுப் பொறுப்பாளிகள். பண்டித மாளவியா அவர்களும் இதில் சேர்ந்து விட்டால் மூவரும் முழுப் பொறுப்பாளிகளாய் விடுவார்கள்.

இந்த சிகாமணிகள் தேச நன்மைக்குப் பாடுபடுகிறவர்களாம். இந்தியாவின் முட்டாள் தனத்தாலும், அடிமைத் தனத்தாலும் அன்னியர்களுக்கு ஒற்றர்களாயிருப்பதாலுமே வாழ வேண்டிய இந்த "பிரபுக்கள்" - இந்தியா சமத்துவமும் சுதந்திரமும் அடைந்த உடன் இந்த நாட்டை விட்டு ஓடவோ அல்லது இந்தியாவிற்கு வேற்றரசரைக் கூட்டி வரவோ வேண்டிய அவசியமுள்ள இந்த 'வீரர்கள்' இந்தியாவின் நன்மையை நாடுவதற்கு எப்படி அருகர்களாவார்கள்? இவர்கள் எப்படி நம்முடைய பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ள யோக்கியதை உடையவர்கள் ஆவார்கள்? ராஜீய - மத - வகுப்பு உணர்ச்சி உள்ளவர்களே இதில் சேரக்கூடாது என்று சொல்லி ஒரு சங்கம் ஸ்தாபித்தால், அதில் யார் போய்ச் சேரக்கூடும்? ராஜ்ஜியத்தை

RangaRakes
tamilnavarasam.com

அன்னியனுக்குக் காட்டிக் கொடுக்கத் தயாராயிருக்கிறவனும், மதம் இல்லாதவனும், தான் எந்த வகுப்பு என்று தெரிந்து கொள்ள முடியாதவனும் அல்லாமல் வேறு யாராவது இந்த சங்கத்தில் சேரக்கூடுமா என்பது நமக்கு விளங்கவில்லை. மனிதனாய்ப் பிறந்த ஒருவன் தனது தேசாபிமானம் இல்லாமல் எப்படி இருக்க முடியும்? அது போலவே தனது மதாபிமானமும் குலாபிமானமும் இல்லாமல் எப்படி இருக்க முடியும்? இம் மூன்றையும் விட்டுவிட்டு இப்பார்ப்பனர்களிடம் வந்து ஒருவன் அனுபவிக்கப் போகிற லாபம் என்ன? இச்சங்கம் என்பது தற்காலம் ஒவ்வொரு மதஸ்தர்களுக்கும் ஒவ்வொரு வகுப்பாருக்கும் ஏற்பட்டிருக்கும் சுயமரியாதை உணர்ச்சியைக் கொல்ல ஏற்பட்ட சங்கமே அல்லாமல் வேறல்லவென்றே கூறுவோம். ஆதலால் நமது முஸ்லீம் சகோதரர்களே! கிறிஸ்துவ சகோதரர்களே! பார்ப்பனரல்லாத இந்து சகோதரர்களே! இம் மாய்கையில் சிக்கிக் கொள்ளாமல் உஷாராயிருக்க வேண்டும் . இந்து மகாசபையை எப்படித் தமிழ்நாட்டிற்குள் நுழைய விடாமல் மண்டையிலடித்து ஒழித்தோமோ, அதுபோலவே இத் தேசீய ஐக்கியச் சங்கம் என்னும் பார்ப்பன அயோக்கியச் சங்கத்தைத் தமிழ்நாட் டிற்குள் நுழைய விடாமல் வாசற்படியிலேயே அடித்துக்கொல்ல வேண்டும்.

இது சமயம் தமிழ் மக்களின் தலையெழுத்து எவ்வளவு மானக்கேடானதாகவும் இழிவானதாகவும் இருக்கிறது என்பதை சற்று நிதானமாய்க் கவனித்துப் பாருங்கள். கோடிக்கணக்கான தமிழ் மக்களுக்கு தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்கள் யார்? ஸ்ரீமான்களான எஸ். சத்திய மூர்த்தி அய்யர்,எ. ரெங்கசாமி அய்யங்கார், எம்.கே.ஆச்சாரியார், எஸ்.சீனி வாசய்யங்கார், வி.எஸ்.சீனிவாச சாஸ்திரிகள் முதலிய பார்ப்பனர்களே. இவர்களுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? இவர்கள் பிறப்பு என்ன? இவர் கள் ஒழுக்கம் என்ன? இவர்கள் வளர்ப்பு என்ன? இவர்கள் ஜீவனம் என்ன? எந்த வகையில் இப்பொழுது மனிதர்களாய் வாழ்கிறார்கள்? என்ன எண்ணத்தின்மேல் நமக்கு இவர்கள் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்? நமக்குத் தலைவர்களாய் இருக்க இவர்களுக்கு என்ன பாத்தியதையும் யோக்கியதையும் இருக்கிறது? பிச்சைக்கு வந்தவன் பெண்டுக்கு மாப்பிள்ளையானது போல் நமது நாட்டைக் காட்டிக் கொடுத்ததல்லாமல், அரசையும் போக போக்கியத்தையும் பாழாக்கியதல்லாமல் நமது சுயமரியாதையை அடியோடு துலைத்ததல்லாமல், நமக்குள் ஒற்றுமைக்கே மார்க்கமில்லாமல் செய்ததோடல்லாமல், நம்மைத் தாழ்ந்தவர்கள், தெருவில் நடக்கக் கூடாதவர்கள் கண்ணில் பார்க்கக் கூடாதவர்கள் , கூடப் பேசக் கூடாதவர்கள், சுவாமியினிடம் போகக் கூடாதவர்கள், கோயிலுக்குள் நுழையக் கூடாதவர்கள், தீண்டப்படாதவர்கள், தாசி மக்கள், வேசி மக்கள், தங்கள் வைப்பாட்டி மக்கள், சண்டாளர்கள் என இப்படிப் பல மாதிரியாக ஆக்கி வைத்துக் கொண்டதோடல்லாமல் இன்னமும் நம்மைக் கெடுத்து ‘நமது இரத்தத்தை’ உறிஞ்சிக்கொண்டிருக்கும் இந்தக் கூட்டம் கொஞ்சமேனும் அச்சமும் நாணமும் இல்லாமல் இனியும் நமக்குத் தலைவர்கள் என்று சொல்லிக்



RangaRakes

கொள்ளவும் நாம் இவற்றைப் பொறுத்துக் கொள்ளவும் இருப்பதென்றால், நமக்கு அறிவு உணர்ச்சி ஆண்மை ரத்தம் இருக்கிறதா என்றுதான் கேட்கிறோம். ஆதலால் இந்து முஸ்லீம் கிறிஸ்துவ சகோதரர்களே! பார்ப்பனப் பூண்டு கலந்த எந்தச் சங்க மானாலும் எந்த ஸ்தாபனமானாலும் அதைத் திரும்பிக்கூடப் பார்க்காதீர்கள் ! மோக்ஷமானாலும் சரி நரகமானாலும் சரி, உங்கள் காலைக் கொண்டு நீங்கள் நில்லுங்கள். உங்களிடம் பார்ப்பனர்கள் உங்களை தங்களோடு சேரும் படிக்கோ அல்லது தங்களை உங்களுடன் சேர்த்துக் கொள்ளும் படிக்கோ வந்து கேட்பார்களேயானால் முதலாவதாக இந்து மகாசபையையும் வர்ணா சிரம சபையையும் ஒழித்துக் கதவடைத்து விட்டு வரச் சொல்லுங்கள்! தாங்கள் கடவுளின் முகத்திலிருந்து பிறந்தவர்கள், உயர்ந்தவர்கள் என்றும், நாம் அவர்கள் வைப்பாட்டி மக்கள், தாழ்ந்தவர்கள், அடிமைகள் என்று சொல்லும் சாஸ்திரங்களையும் ஆதாரங்களையும் நெருப்பில் போட்டுப் பொசுக்கி சாம்பலாக்கி விட்டு வரச் சொல்லுங்கள்! அதை யாராவது இனிமேல் வைத்திருந்தால் அவர்களைக் கழுவிலேற் றுவது என்றும் தூக்கில் போடுவது என்றும் சட்டம் செய்து கொண்டு வரும் படி சொல்லுங்கள்! ஒரு காலத்தில் அவர்கள் நம்மை இப்படிச் செய்துதான், அதாவது நம்முடைய பழைய ஆதாரங்களையும் நமது பெருமைகளையும் கூறும் நூல்களைப் பொசுக்கி அவர்களுக்கு சாதகமாகப் பலவித சட்டங்களைச் செய்து நம்மை இவ்விழிந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டு தாங்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லும்படி செய்து கொண்டார்கள். நாம் அப்படிச் செய்யவில்லை. ஆனால் நாம் கேட்பது என்ன? சமத்துவமாக இருக்கச் சொல்லுகிறோம். “நீயும் சரி நானும் சரி, இருவ ருக்கும் சம உரிமை உண்டு” என்றுதான் சொல்லும்படி கேட்கிறோம். இந்து முஸ்லீம் கிறிஸ்துவ சகோதரர்களே! நல்ல சமயத்தைக் கைவிட்டு விடாதீர்கள்! பார்ப்பனரின் பசப்பு வார்த்தையில் ஏமாந்து விடாதீர்கள்! உங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள இத்தருணம் தப்பினால் இனி எத்தருணமும் வாய்க்காது! இதுதான் சமயம்! மகாத்மா காந்தியை நினையுங்கள்! மறுபடியும் அவரை உங்களது தலைவராயிருந்து இழிதன்மையையும் தாழ்மை நிலைமையையும் அடிமைத்தனத்தையும் போக்கிச் சுயமரியாதையையும் சமத்துவத்தையும் விடுதலையையும் சம்பாதித்துக் கொடுக்கச் சொல்லுங்கள்! இவைகளுக்காக உங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்யத் தயாராயிருக்கிறோம் என்று உங்கள் சுத்தமான இரத்தத்தினால் பேனாவைத் துவைத்து உறுதி மொழிக் கையெழுத்திட்ட விண்ணப்பம் அனுப்புங்கள்! வருவார்! வருவார்!! வருவார்!!! வந்து வினை தீர்ப்பார்!!!!

**குடி அரசு - தலையங்கம் - 15.08.1926**



tamilnavarasam.com

# தேவஸ்தானச் சட்டம்

## பார்ப்பனர் குட்டு வெளியாய் விட்டது.

## அதிகார துஷ்பிரயோகம் செய்வது நாமா? பார்ப்பனர்களா?

## டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரும் ஆர்.கே.ஷண்முகம் செட்டியாரும் தங்கள் வாக்கை நிறைவேற்றுவார்களா?

சென்னை இந்து பரிபாலன மசோதாவானது தற்காலம் நமது நாட்டில் அரசியல் விஷயமாகவோ பொது நன்மை தீமை என்கிற விஷயமாகவோ கருதப்படாமல் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற விஷயமாய்க் கருதப் பட்டு வருகிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அல்லாமலும் அம் மசோதாவைப் பற்றிக் கண்டபடி தூற்றி வரும் பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிகைகளும் நாளது வரையில் அதிலுள்ள ஒரு சிறு கெடுதியையாவது பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டியவர்கள் அல்ல. சுயராஜ்யம் என்றும் சர்க்காருடன் போராடுவதென்றும் பொய்யும் புளுகும் சொல்லி கேப்பமாரித் தனம் செய்து அரசியல் விஷயத்தில் ஆதிக்கம் பெற்று எப்படி தங்களுக்கும் தங்கள் இனத்தாருக்கும் உத்தியோகமும் ஆதிக்கமும் சம்பாதித்துக் கொள்ளு கிறார்களோ அதுபோலவே இந்த மசோதா விஷயத்திலும் வேண்டு மென்றே மனப்பூர்த்தியாய் 'மதம் போச்சு', 'தெய்வம் போச்சு', 'இந்து மதத்தில் அரசாங்கத்தார் புகுந்துவிட்டார்கள்', 'அநியாயமாய்ப் புது வரி போடப் போகிறார்கள்', 'நமது இந்துமத தர்ம சொத்துக்களை சர்க்காரார் எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்' 'மகமதியருக்கும் கிறிஸ்துவர்களுக்கும் கொடுக் கப் போகிறார்கள்', 'அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கும் பள்ளிக் கூடத்திற்கும், ரோட்டிற்கும், முனிசிபாலிட்டிக்கும் உபயோகப் படுத்தப் போகிறார்கள்' என்றும், இன்னமும் எத்தனையோ விதமாய் அயோக்கியத் தனமானதும் இழிவானதுமான பல பொய் வார்த்தைகளைச் சொல்லி பாமர ஜனங்களை ஏமாற்றி அம் மசோதாவை ஒழித்துத் தங்கள் பிழைப்புக்கு வழி



RangaRakes

தேடிக்கொள்ளப் பார்க்கிறார்கள்.

இது விஷயமாய் நாம் ஒரு பந்தயம் கூறுகிறோம். அதாவது இந்து மத சம்பந்தமான இனாம்களைக் குறித்த 1923 -ம் வருஷத்திய சென்னப் பட்டணத்து ஆக்டு என்று சொல்லப்படும் பிரஸ்தாப சட்டத்தில் 9- அத்தியாயங்களும் அவைகளில் மொத்தம் 81- பிரிவுகளும் (செக்ஷன் களும்) 3 - ஷெடியூல்களும் இருக்கின்றன. இவைகளில் எந்தப் பிரிவின் படி நமது மதங்களிலோ தர்மங்களிலோ கோயில்களிலோ வரும்படி களிலோ தர்மச் சொத்துக்களிலோ இது வரையில் இல்லாத மாதிரி சர்க்கார் பிரவேசிக்கிறார்கள் என்றாவது, வேறு மதத்தினர்களின் உபயோகத்திற்கு நமது தர்மச் சொத்தை செலவழிக்கிறார்கள் என்றாவது, முனிசிபாலிட்டிக்கோ அல்லது சர்க்காருக்கோ இந்த வரும்படியைக் கொடுக்கலாம் என்றாவது அல்லது எந்தப் பிரிவின்படி புதுவரி ஜனங்களுக்குப் போட இடமிருக்கிறது என்றாவது, மற்றும் இந்து மதத்திற்கோ சமூகத்திற்கோ கோயில், குளம், தெய்வம் முதலியவைகளுக்கோ ஆபத்து வரக் கூடியதாய் இருக்கிறது என்றாவது எவரேனும் காட்டுவார்களேயானால், இந்தப் பார்ப்பனர்களை நாம் நமது தலைவர்கள் என்றும், இந்த மசோதாவை ஒழிப்பதற்கு நாமும் சேர்ந்து பாடுபடத் தயாராயிருக்கிறோம் என்றும் உறுதி கூறுகிறோம். இல்லா தவரை இந்தப் பார்ப்பனர்கள் இனிமேல் நமக்காவது நமது நாட்டுக்காவது தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் அல்பத்தனத்தை விட்டுவிடு கிறார்களா என்று கேட்கிறோம்.

தவிரவும் ராஜீய விஷயத்தில் தேவஸ்தான மசோதாவைப் பற்றியும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விஷயத்தைப் பற்றியும் பேசக் கூடாது என்று இதுவரை சொல்லி வந்து விட்டு சந்தர்ப்பம் வந்த உடன் தேவஸ்தான விஷ யத்தை ராஜீயத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டு சுயராஜ்யக் கட்சியாருக்கு சட்டசபைக்குப் போய் தேவஸ்தான மசோதாவை எதிர்க்க வேண்டும் என்று ஸ்ரீமான் ரெங்கசாமி அய்யங்கார் சுற்று உத்திரவு அனுப்பக் காரணம் என்ன?

சுயராஜ்யக் கட்சி என்றால் பார்ப்பனர் கட்சி, பார்ப்பனர் கட்சி என்று இதுவரை சாற்றி வந்தோம். இதை சில நண்பர்கள் விரும்பவில்லை என்பதாகக் காட்டி வந்தார்கள். இப்போது சுயராஜ்யக் கட்சி பார்ப்பனர் கட்சிக் கூட அல்ல, ஆனால் சுயராஜ்யக் கட்சி பார்ப்பனரின் குலாம் கட்சி என்றே சொல்லுவோம்.

தேவஸ்தான மசோதா, வரப்போகும் சென்னை சட்டசபைக் கூட்டத் திற்கு வரப்போவதாய் சுமார் ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே சுயராஜ்யக் கட்சிக்கு நன்றாய்த் தெரியும். அப்படி இருக்க அதை எதிர்ப்பதற்காக சட்டசபைக்கு சுயராஜ்யக் கட்சியார் போவதா இல்லையா என்பதாக ஸ்பெஷல் கமிட்டியை கேட்க காங்கிரஸ்காரியதரிசியாகிய ஸ்ரீமான் எ. ரெங்க சாமி அய்யங்காருக்குப் போதுமான சாவகாசமிருந்தது; இன்னமும் இருக் கிறது. இப்படியிருக்க தங்கள் கட்சியைச் சேர்ந்த இரண்டொரு அடிமை



tamilnavarasam.com

களிடமிருந்து கடிதம் வந்ததாகப் பெயர் வைத்துக் கொண்டு, அதுவும் மடாதிபதிகளிடம் பொறுக்கித் தின்பவர்களிடமிருந்து கடிதம் வந்ததாகப் பெயர் வைத்துக்கொண்டு அதன் பேரில் காங்கிரஸ் காரியதரிசியாயிருக்கும் ஒரு பார்ப்பனரான ஸ்ரீமான் எ. ரெங்கசாமி அய்யங்கார், சுயராஜ்யக் கட்சி 'ஆக்டிங் தலைவராயிருக்கும்' மற்றொரு பார்ப்பனரான ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்காரிடம் யோசனை செய்ததாகவும், தேவஸ்தான மசோதா 69 -வது பிரிவுப்படி ஜனங்களுக்கு அதிக வரி போட இடந்தருவதாகவும், ஆதலால் சுயராஜ்யக் கட்சியார் போய் இதைத் தடுக்க வேண்டியதென்றும், இது முக்கியமான விஷயமானதால் இதற்காக நியமித்த ஸ்பெஷல் கமிட்டி யை அனுமதி கேட்க வேண்டியதுகூட அவசியமில்லை என்றும் இவர்கள் தீர்மானித்து விட்டு தாங்களே உத்திரவு கொடுத்திருப்பதாயும் சுயராஜ்யக் கட்சி சட்டசபை மெம்பர்களுக்கு ஒரு சுற்று உத்திரவு அனுப்பப்பட்டிருக் கிறது. இதிலிருந்து காங்கிரஸ் பார்ப்பனர்களுடையது என்றும், பார்ப்பன ராஜ்யத்திற்குத் தான் காங்கிரஸ் உபயோகப்பட்டு வருகிறதென்றும், பார்ப் பனர்கள் தங்களுக்குக் கிடைத்த அதிகாரத்தைப் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்றும், காங்கிரஸ் பொது காங்கிரஸ் என்று சொல்லிப் பாமரர்களை ஏமாற்றவே அதில் சில பார்ப்பன ரல்லாதார் பெயர்களையும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்றும், சில பார்ப்பனரல்லாத கனவான்களும் இந்த அக்கிரமங்களை அறிந்தே தங்களு டைய பெயரையும் இந்தப் பார்ப்பனர்கள் உபயோகப் படுத்திக்கொள்ள சம்மதித்திருக்கிறார்கள் என்றும் எழுதியும் சத்தம் போட்டும் வந்தோம். அது இப்போது வெளிப்படையாய் ருஜுவாகி விட்டதென்றே சொல்லு வோம்.

பார்ப்பனர்களின் இந்தப் புரட்டுகளை எதிர்பார்த்தே சென்னையில் ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களையும் ஆர்.கே. ஷண் முகம் செட்டியார் அவர்களையும் நாம் சந்தித்த காலத்தில் தேவஸ்தான மசோதாவைப் பற்றி நமது பார்ப்பனர்கள் இதேமாதிரி செய்வார்களே, அப்போது தாங்கள் என்ன செய்வீர்கள் என்று கேட்டோம். அது சமயம் டாக்டர் நாயுடுகார் அவர்கள் சொன்னதாவது:-

**எந்தெந்த விஷயங்களில் சுயராஜ்யக் கட்சியார் சட்டசபைக்குப் போக லாம் என்கிற விஷயத்தை நிர்ணயிக்கவும், சுயராஜ்யக் கட்சிக்கு சட்ட சபைக்குப் போக அனுமதி கொடுக்கவும் ஏற்பட்ட தனிக்கமிட்டி யில் தானும் ஒரு அங்கத்தினரானதால் தான் இதற்கு உத்திரவு கொடுக்க மாட்டேன் என்றும் அப்படி மீறி அவர்கள் போனால், அந்தக் கமிட்டி யிலிருந்து தான் விலகுவதோடு மட்டும் நில்லாமல் அதற்கு மேல் என்ன செய்வது என்பது தனக்குத் தெரியும் என்றும் சொன்னார்.**

ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் சொன்னதாவது:-

**தேவஸ்தான மசோதா விஷயம் சுயராஜ்யக் கட்சித் திட்டத்தில் ஒன்றாக இப் பார்ப்பனர்கள் கருதி ஏதாவது செய்வார்களேயானால் தான்**



RangaRakes

**சுயராஜ்யக் கட்சியில் இருந்து விலகி விடுவதாய்ச் சொன்னார்.**

இவ்விரண்டு கனவான்களும் தங்கள் வாக்கை நிறைவேற்ற வேண்டிய காலம் வந்து விட்டது. என்ன செய்யப் போகிறார்கள் என்பதை தமிழ் மக்கள் ஆவலாய் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தப்பாகாது.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 15.08.1926**



tamilnavarasam.com

# முளையிலேயே குறும்புத்தனம்

"சென்ற ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு சென்னை பார்ப்பன ரல்லாத மாணவர், தங்கள் சொந்த பணத்தைக் கொண்டு ராவ்பகதூர் வி. ரெங்க நாதன் செட்டியார் கட்டிய வெங்கடேஸ்வரர் ஹாஸ்டலில், சென்ற கார்ப்ப ரேஷன் தேர்தல்களில் வெற்றி பெற்ற நமது டாக்டர் சி.நடேச முதலியார்,திரு. பி.டி. குமாரசாமி செட்டியார், பி. ரெங்கநாதஞ் செட்டியார் முதலியவர் களுக்கும் பனகால் ராஜா, மதன கோபால் நாயுடு, ஆரியா முதலியவர்களுக் கும், சென்ற தேர்தல்களில் நமது ஜஸ்டிஸ் கட்சி வெற்றி பெற்றதற்காக சிற்றுண்டி வழங்கினர். 90 பேர் இருக்கும் ஹாஸ்டலில் 25 பேர்தான் நம்மவர். அந்தோ! பார்ப்பனரல்லாதாரின் தருமம் இப்படியும் வீணாக வேண்டுமா? அப்படியிருந்தும், அன்று பார்ப்பனப் பிள்ளைகள் நமது தலைவர்களை அவமானப்படுத்த எண்ணங்கொண்டு, வார்டனிடமும், செட்டியாரிடமும் சென்று இந்த கொண்டாட்டத்தை தடை செய்யச் சொன்னார்கள். அவர்கள் மறுத்து விடவே, ஹாஸ்டலை விட்டு எல்லாப் பார்ப்பன மாணவர்களும் தலைவர்கள் வரும் சமயத்தில் வெளியேறினர். ஆனால் மாலை 8 மணிக்குத் திரும்பி வந்து விட்டனர்" என்று ஒரு நிருபர் எழுதியுள்ளார்.

சென்னையில் பார்ப்பனரல்லாத தலைவர்கள் நகரக் கார்ப்பரேஷன் தேர்தலில் பார்ப்பனரின் பலமான சூழ்க்ஷிக்கிடையில் தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியானது சென்னையில் உள்ள பார்ப்பனரல்லாத மாணவர்களுக் கெல்லாம் பெரிய உணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் உண்டாக்கிவிட்டது. அதன் பலனாக சென்னையில் பார்ப்பனரல்லாத ஒரு தர்மப் பிரபுவான ராவ் பகதூர் வி. ரெங்கநாதம் செட்டியார் அவர்களால் கட்டப்பட்ட வெங்கிடேஸ் வரர் ஹாஸ்ட்டல் என்கிற ஒரு விடுதியில் வசிக்கும் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கும் மகிழ்ச்சி யேற்பட்டு, வெற்றிபெற்ற தலைவர்களுக்குத் தங்கள் மகிழ்ச்சியையும் மரியாதையையும் காட்டிக் கொள்வதற்காக, வெற்றி பெற்ற கனவான்களையும் மற்றும் உள்ள சில தலைவர்களையும் தங்கள் விடுதிக்கு விஜயம் செய்து தங்கள் மரியாதையைப் பெற்று ஆசிர்வதித்துப் போகும்படி வேண்டிக் கொண்டார்கள். பார்ப்பனரல்லாதாரால் கட்டப்பட்ட அந்த விடுதியில் 90 பிள்ளைகள் வசித்தாலும் அதில் 65 பிள்ளைகள் பார்ப்பனப் பிள்ளைகளாயும் 25 பிள்ளைகள் மட்டும் பார்ப்பனரல்லாத பிள்ளைகளாயிருந்தும் மேற்படி 65 பார்ப்பனப் பிள்ளைகளும், பார்ப்பனரல் லாதாரின் தர்மத்தால்தானே இந்த விடுதியில் நாம் வசிக்கிறோம் என்கிற நன்றி



அறிதல் இல்லாமல், இம்மாதிரி பார்ப்பனரல்லாத தலைவர்களுக்குக் காட்டும் மரியாதையை 'நாங்கள் சகிக்க மாட்டோம், அவற்றை நடக்கவும் விடமாட்டோம்' என்று பல சூழ்ச்சிகள் செய்து, அவற்றில் வெற்றி பெறா மல் போனதினால் தலைவர்கள் வரும் சமயம் பார்த்து வெளியேறினார் களாம். இந்தப் பார்ப்பன மாணவர்கள் உண்மையிலேயே யோக்கியமும் நன்றியறிதலும் சம உணர்ச்சியும் போர் வீரத் தத்துவமும் உடையவர்களா னால் இவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? தாங்களும் இந்த மகிழ்ச்சி யில் கலந்து தங்களுக்குப் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற வித்தியாச மும் துவேஷமும் இல்லை என்று காட்டிக் கொண்டிருக்க வேண்டும்; அப்படிக்கில்லா விட்டால் மனிதத் தன்மையை உத்தேசித்தாவது சும்மா இருந்திருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் தானம் கொடுத்த மாட்டை பல்லைப் பிடித்து பார்ப்பது போல் தாங்கள் வெளியேறினது எவ்வளவு அல்ப புத்தியையும் நன்றி கெட்டத் தன்மையையும் காட்டுகிறது. நம் நாட் டுப் பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிகைகளும் தங்களுக்குக் கொஞ்சம் கூட பார்ப்பனரல்லாதார் மீது துவேஷ புத்தி இல்லையென்றும் பார்ப்பன ரல்லாதார்தான் இவற்றைக் கிளப்பி விட்டுக் கொண்டு வருகிறார்கள் என்றும் தினமும் பிதற்றி வருகிறதை நாம் பார்க்கிறோம். ஆனால், இப்போது இந்த சம்பவத்தைக் கொண்டே பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் துவேஷம், பொறாமை, வயிற்றெரிச்சல், குடி கெடுக்கும் தன்மை, நன்றி கெட்டதனம் ஆகியவைகள் பார்ப்பன மூளைகளிடமிருந்தே இருந்து வருகிறதா? பார்ப்பனரல்லாதாரிடம் இருக்கிறதா? என்று கேட்கிறோம். அவர்கள் இவ்வ ளவு தூரம் தங்களின் துவேஷத்தைத் தைரியமாய் வெளிக் காட்டிய பிறகும், நாம் இனியும் சும்மாயிருப்பது சுத்தப் பயித்தியக்காரத் தனமென்றே சொல்லு வோம். ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் 'அறிவிரி' அதாவது பாலர் வகுப்பிலிருந்தே பிள்ளைகளுக்குப் பார்ப்பனர்களின் அட்டூழியத்தையும் கொடுமையையும் அவர்களால் நாம் அடைந்த கதியையும் பாடப் புத்தகமாய் வைத்து சொல்லிக் கொடுக்கும் படியும் சென்னையில் மற்ற பொது மாணவர்கள் ஆரம்பித்தது போல ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் பார்ப்பனரல்லாத பிள்ளைகள் சங்கம் என்பதாக ஒரு சங்கம் ஸ்தாபித்து அதில் தங்கள் வகுப்பார் முன்னேற்றத்திற்கு வேண்டிய கவலை செலுத்தி வரும்படி செய்ய வேண்டியது இது சமயம் மிகவும் அவசியமாயிருக்கிறது. மாணவர்கள் இது சமயம் அரசியலில் பிரவேசிக் காமலிருக்க வேண்டும் என்பதை நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் அவர்கள் தங்கள் சமூக விஷயங்களிலும் சுயமரியாதை விஷயங்களிலும் முன்னேற வேண்டியது அடிமைக் கல்வியை விட முக்கியமானதென்றே சொல்லுவோம். ஆதலால் சென்னை மாணவர்களைப் பின்பற்றி மற்றும் வெளியிடங்களிலுள்ள மாணவர்களும் நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதோடு சென்னை மாணவர்களை மிகுதியும் போற்றுகிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 15.08.1926**



RangaRakes tamilnavarasam.com

# பிராமணீயத்தை ஒழித்தவர்கள்

பார்ப்பனரல்லாதார் வைதீகச் சடங்குகள் என்று பெயர் வைத்துக் கொண்டு தங்கள் குடும்பங்களில் நடக்கும் சுபா சுப காரியங்களுக்கு திதி, திவசம் என்றோ, சிரார்த்தம் என்றோ, தங்கள் முன்னோர்களின் ஞாபகார்த்த மாகச் செய்யும் காரியத்தை, முன்னோர்களை மோட்சத்திற்கு அனுப்பச் செய்யப்படும் கிரிகை என்ற மூட நம்பிக்கையால், அக் காரியத்திற்கு 'பிராமணர்'களை அழைத்து அதை அவர்களைக் கொண்டே செய்ய வேண்டுமென, உடம்போடொட்டிய அழுக்குபோல் தங்கள் மனத்தில் படியப் பெற்று, ஒரு பார்ப்பனனைக் கூட்டி வந்து பலவகைத்தான சன்மா னங்களை அப்பார்ப்பனனுக்கு அளித்து, அவன் சொல்லும் பிரகாரமெல் லாம் சொல்லி, அவன் காலில் விழுந்து விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து வருவதும், அதேபோன்று கலியாணம் முதலிய சுப காரியங்க ளுக்கும் பார்ப்பனனை அழைத்து, மண மக்களுக்கு ஆயுள் விருத்தியை யும் புத்திர சம்பத்தையும் அப்பார்ப்பனன் இரக்ஷாபந்தனமளித்து வருவதாகப் பிரேமைக்குள்ளாகி பார்ப்பனனைக் கொண்டு செய்து வருவ தும் – வீண் அர்த்தமற்ற – பொருளற்ற – சுயமரியாதையை இழக்கச் செய்யத் தக்க – ஒரு கூட்டார் தங்கள் பிழைப்பைக் கருதி செய்து வைத்து ஏமாற்றி வரும் காரியமாகும்.

இவ்வுண்மையைத் தெரிந்த பலர் சின்னாட்களாக அவ்வித மூடநம் பிக்கைக்குள்ளாகாமல் விழித்துக் கொண்டனர் – விழித்து வருகின்றனர். இவ் வாறு தங்கள் சுபா சுப காரியங்களுக்குள் பிராமணீயம் வந்து நுழையாமல் விரட்டியவர்களுள் 14 கனவான்களின் பெயரை சென்ற இதழில் இதே தலை யங்கத்தின் கீழ் வெளியிட்டிருந்தோம். இவ்விதழிலும் பிராமணீயத்தை ஒழித்தவர்களுள் சில கனவான்களின் பெயரைக் கீழே வெளியிட்டுள்ளோம். இனியும் அவ்வாறு சடங்குகள் செய்வதில் நம்பிக்கையில்லாதவர்கள் பெயரைத்தெரியப்படுத்தினால் வாரந்தோறும் பத்திரிகையில் பிரசுரித்து வரப்பெறும்.

மேற்கூறிய பிரகாரம் பிராமணீயத்தை விரட்டிய மற்ற கனவான்களின் பெயர்களாவன :–

15. எஸ்.எ.கே. கலியப்பெருமாள் நாயுடு, ஆஞ்சிநேய வார்ப்படத் தொழிற் சாலை, திருச்சி.



16. ச.ப.சி . பரமசிவன் செட்டியார், கதர் டெப்போ, திருச்சி.

17. அ. சிவப்பிரகாசம் பிள்ளை, தலைமைத் தமிழாசிரியர், அர்ச் சூசையப்பர் கலாசாலை, திருச்சி.

18. தி. திரவியம் பிள்ளை, முனிசிபல் கவுன்சிலர், திருச்சி.

19. பி.ஏ. சுப்பிரமணிய பிள்ளை, இராகவ செட்டித் தெருவு, திருச்சி.

20. ஈ.என். வெங்கடப் பெருமாள் நாயுடு, பி.ஏ.,பென்ஷன் தாசில்தார், ஈரோடு.

21. கு.வீராசாமி நாயுடு, ஈரோடு.

22. சி. கந்தசாமி, திருநெல்வேலி கதர் நெசவுச் சாலை, சாவடியகம், திசையன்விளை.

**குடி அரசு – செய்திக் குறிப்பு – 15.08.1926**



RangaRakes tamilnavarasam.com

# கோயமுத்தூர் ஜில்லா போர்டு தேர்தல்களும் வேளாளர்களும்

கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்ட் தேர்ந்தெடுத்தலின் முடிவையும் ஷை ஸ்தானத்திற்கு அபேட்சகராக நின்று தோல்வி அடைந்தவரின் வகுப்பைச் சேர்ந்த மெம்பர்களின் ஏராளமான தொகைகளையும் கவனித்தால் ஒரு விதமான ஆச்சரியமும் , வியப்புமுண்டாகும்.

ஆனால், இந்த ஜில்லாவிலுள்ள வேளாளர்களைப் பொருத்த மட்டும் இந்த தேர்ந்தெடுத்தலின் முடிவானது அநேக கிளர்ச்சியை உண்டு பண்ணக் கூடியதாய் இருக்கிறது. இந்த ஜில்லாவில் பெரும் பான்மையோர் வேளாள குலத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் தனவந்தர்களாகவும் ஈகை முதலிய குணங்களில் சிறந்தவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் மற்ற குலங்களெல்லாம் தத்தம் முன்னேற்றத்தைப் பற்றி வேண்டிய முயற்சிகள் செய்து கொண்டிருக்கும் போது இவர்கள் மாத்திரம் கட்சிப் பிரதி கட்சிகளிலும், மௌடீகத் தன்மையிலும், கல்வியறிவின்மையிலும் மூழ்கி யிருப்பது மிகவும் வருத்தத்தையுண்டு பண்ணுகிறது. நாகரீகம் அதிகரித்து வரும் இக்காலங்களிலுங் கூட தங்களுடைய அற்ப பொறாமைகளையும், குறுகிய நோக்கங்களையும், வினோதங்களையும் போக்கி ஒத்துழைத்து தங்கள் ஜாதி அபிமானத்தையும் அபிவிருத்தியையும் சிறிதேனும் கவனியாமல் ஆனந்த மௌடீகத்தில் காலங்கழிப்பது பரிதபிக்கத்தக்கதே. இன்னும், இக்குலத்தைச் சேர்ந்த கௌரவமும் அந்தஸ்தும் உடைய அங்கத்தினரின் நோக்கம் அதிக விந்தையாயிருக்கிறது. தங்களில் ஒருவரை பொறுப்பான ஸ்தானத்திற்கு கொண்டு வரக்கூடிய சமயமும் சக்தியும் இருந்தும் அவர்களுக்கு சிறிதேனும் ஊக்கமும், ஜாதி அபிமானமும் ஒற்றுமையுமில்லையென்பது நன்கு விளங்குகிறது. மற்றும் தங்களுக்குள்ளே உள்ள சிறிய மனஸ்தாபங்களைப் பெரிதாக நினைத்துக் கொண்டும், மனோபாவனையான சந்தேகங்களை உண்டு பண்ணிக் கொண்டும், மற்றவர்களின் சுவையான வார்த்தைகளினாலும், வாக்குத் தத்தங்களினாலும் தங்கள் நிலையை மறந்து நடந்து தங்களுக்கும் தங்கள் குலத்திற்கும் அபகீர்த்தியையும் அவமானத்தையும் உண்டாக்கினார்கள். தங்கள் பொறுப்பை மறந்து நடந்த காரியம் தங்களைத்தான் பற்றுமென்பதை நினைக்கவில்லை போலும். வோட் கொடுக்கிறோமென்று உறுதியாய்ச் சொல்லி, இறுதியில் இம்மாதிரி செய்வது ஏனோ விஷமம்? இப்படி இருக்க குலத்தாரை நம்பி தோல்வியடைந்த அபேட்சகருக்கு ஒருவிதமான அபகீர்த்தியுமில்லையென்றே சொல்லலாம்.



ஆகையால் நமது குல முன்னேற்றத்திற்காக நான் ஒரு விண்ணப்பஞ் செய்து கொள்ளுகிறேன். மேலே கண்ட விஷயமானது நமது குலத்தின் கண்ணைத் திறக்குமென்று நம்புகிறேன். இனிமேலாவது நமது குலத்தினர் ஒற்றுமையாயிருந்து முன்னேற்றமடையக் கூடிய வழியைத் தேடுவாராக.

அ. பழனிசாமிக் கவுண்டர், பி.ஏ., கோயமுத்தூர்

**குறிப்பு :**

கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டு தேர்தல்களைப் பற்றி அபேட்சகர்கள் திருப்தியுடனிருந்த போதிலும் பலரால் பல கட்டுரைகள் நமக்கு பிரசுரிப்பதற்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. அவர்கள் பெரும்பாலும் ஒவ்வொன்றும் தெரிந்தெடுக்கப்பட்டவருக்கும் தெரிந்தெடுக்கப்படாதவருக்கும் இரு சார்பாரை ஆதரித்தவர்களுக்கும் மனம் புண்படும்படியாகவும் ஒருவருக்கொருவர் துவேஷத்தையும் வைராக்கியத்தையும் உண்டாக்கத்தக்க மாதிரியாகவும் இருப்பதாகக் காணப்படுவதால் நாம் அவைகளைப் பிரசுரிக்காததற்காக மன்னிக்க வேண்டுகிறோம்.

ஏனெனில் பார்ப்பனர்களின் கொடுமையிலிருந்தும் தப்ப பார்ப்பனரல்லாதாராகிய நாம் ஒற்றுமையோடும் உணர்ச்சியோடும் இது சமயம் செய்ய வேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்க, எவ்வகையிலும் உயர்வு, தாழ்வு இல்லாத சமூகத்தார் வெள்ளாளரென்றும், வெள்ளாளரல்லாதவரென்றும், வெள்ளாளரில் பலவிதம் என்றும் ஒருவரையொருவர் புண்படுத்தத்தக்க மாதிரியான உணர்ச்சி மிகவும் அசம்பாவிதமானது.

தேர்தலில் நின்ற இருவர்களும் வேளாளர்களேயாவார்கள். இருவரை ஆதரித்தவர்களும் மிகுதியும் வேளாளர்களும் தக்க அந்தஸ்தும் கண்ணியமும் பொருந்தியவரேயாவார்கள். இப்படியிருக்க, இது சமயத்தை ஆதாரமாகக் கொண்டு தங்கள் சுய நலத்திற்காக உண்மையிலேயே வித்தியாசம் உயர்வு, தாழ்வு இல்லாத வகுப்புக்கும் வித்தியாசங்களிருப்பது போல் பேச வருவது நன்மைகளான காரியமல்ல வென்றே கருதுவோம். அல்லாமலும் இப்படி யெல்லாம் நூல் பிடித்துக் கொண்டே போனால் ஒவ்வொரு தனி மனிதனும் ஒவ்வொரு வகுப்பாய் தான் முடியும். அப்பொழுது அது பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதையைத் தடைப்படுத்தும். ஆதலால் தனிப்பட்ட சுயநலத்தை முன்னிட்டு அவ்வுணர்ச்சிகளை விட்டுவிட்டு ஒத்துழைத்து பொது நலத்துக்கான காரியத்தில் கட்டுப்பாடாய் இரங்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

(ப - ர்)

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 15.08.1926**



RangaRakes tamilnavarasam.com

## சென்னையில் குழுமிய சீர் பெருங்கூட்டம்

## "சுயராஜ்யத்தைவிட சுயமரியாதையே பிரதானம்"

## வகுப்புத் துவேஷத்தைக் கிளப்புகிறவர்கள் யார்? பார்ப்பனர்களே.

## நால்வகை வகுப்பு நாட்டில் உதித்த வகை

## பார்ப்பனர்கள் நம்மை ஏமாற்றி விட்டார்கள். எப்படி? "மோக்ஷம்" "சுயராஜ்யம்" என்கிற வார்த்தைகளால்.

## நாம் போராடுவது சுயமரியாதைக்காகவே

நான் இன்று உங்கள் முன்னிலையில் பேசப்போகும் விஷயமானது கேவலம் தேர்தல்களைப் பற்றியோ, தேர்தல்களில் யாருக்கு ஓட்டுக்கொடுப்பது என்பதைப் பற்றியோ பேச வரவில்லை. இத் தேர்தல்களில் யார் ஜெயித்தாலும் யார் தோற்றாலும் நமக்குப் பெரிய லாபமும் நஷ்டமும் ஒன்றும் ஏற்பட்டு விடாது. ஆதலால் அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. எனக்குள்ள கவலை யெல்லாம், மக்களின் பெரும் பகுதியினராகவும் எல்லா வழிகளிலும் இன்னாட்டிற்கு முக்கியமானவர்களாகவும் உள்ள நாம் தாழ்ந்தவர்களென்றும் அடிமைகளென்றும் கருதப்பட்டு சுயமரியாதையற்று கிடக்கி றோம். அன்னியர்களால் விலங்குகளைப் போல் நடத்தப்படுகிறோம். ஆத லால் இவ்விதக் குறைகள் ஒழிய வழி தேட வேண்டியது இப்பொழுதுள்ள நமது முக்கியக் கடமை என்பதேயாகும். அவற்றிற்கு நம்மாலானதைச் செய்ய வேண்டுமென்றும் அதற்காக நீங்கள் என்ன செய்யப் போகிறீர் களென்றும் சொல்லித் தெரிந்து போகவே இங்கு வந்திருக்கிறேன். நமது தேசத்தில் இப்போது ஒரு வகுப்பார் சுயநலங் கருதி 'காங்கிரஸ்', 'தேசீயம்' 'சுயராஜ்யம்' என்கிற பல செல்வாக்குள்ள பெயர்களைச் சொல்லிக் கொண்டு நமது சமூகத்தை அழித்துத் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள இத் தேர்தல்களை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறபடியால் அவ் வேமாற் றத்தில் நீங்கள் ஏமாந்து போகக் கூடாதென்று சொல்ல வந்திருக்கிறேன் (கரகோஷம்)



RangaRakes

தயவு செய்து இனி மேல் கை தட்டாதீர்கள்.

தற்காலம் இந்நாட்டிலுள்ள ராஜீய வேஷங்கொண்ட பல பார்ப்பனர்கள் என்னை வகுப்புத் துவேஷக்காரனென்றும் வகுப்புக் கலவரங்களை மூட்டிவிடுகிறவனென்றும் சொல்லியும் எழுதியும் ஆள்களை விட்டுப் பிரசாரம் செய்தும் வருகிறார்கள். வகுப்புத் துவேஷமும் வகுப்பு வேற்றுமைகளும் என்னால் ஏற்பட்டதா? அல்லது நம்நாட்டுப் பார்ப்பனர்களால் ஏற்பட்டதா? என்பதை நீங்களே சற்று யோசித்துப் பாருங்கள். தயவு செய்து நீங்கள் என்னோடு எழுந்து வருவீர்களானால் இவ்வூருக்குள் சுற்றிப் பார்த்தால், பார்ப்பனர்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு காப்பிக் கடைகளிலும் சாப்பாட் டுக் கடைகளிலும், ரயில்களில் உள்ள காப்பி சாப்பாட்டுக் கடைகளிலும், சத்திரம் சாவடிகளிலும், கோயில் குளங்களிலும் இது பிராமணர்களுக்கு, இது சூத்திரர்களுக்கு, பஞ்சமர்களுக்கும் முகமதியர்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் இங்கு சாப்பாடு, பலகாரம், தண்ணீர் வகையறா முதலியன கொடுக்கப்பட மாட்டாது; இந்த இடத்தில் சூத்திரர்கள் தண்ணீர் மொள்ளக் கூடாது; இந்த இடத்தில் சூத்திரர்கள் குளிக்கக் கூடாது ; இந்தப் பள்ளிக் கூடத்தில் சூத்திரர்களை சேர்த்துக் கொள்ள முடியாது; இன்னின்ன விஷயங்களை சூத்திரர்கள் படிக்கக் கூடாது; பிராமணர்கள் மாத்திரம் இது வரையில் செல்லலாம்; சூத்திரர்கள் இந்த இடத்திற்கப்புறம் போகக் கூடாது; இந்த வீதியில் சூத்திரர் குடியிருக்கக்கூடாது; இன்ன தெருவில் பஞ்சமர் நடக்கக் கூடாது என்று இன்னும் பலவாறாகப் போர்டுகள் போட்டும் நிர்பந்தங்கள் ஏற்படுத்தியும் பிரித்து வைத்துத் துவேஷத்தையும் வெறுப்பையும் இழிவையும் உண்டாக்கி வருவது நானா? அல்லது பார்ப்பனர்களா? என்பதைக் கவனியுங்கள்.

தாங்களே நம் ஜாதிகளைப் பிரித்து நம்மை இழிவுபடுத்தித் தாழ்த்தி வைத்து விட்டு ஏனையா இப்படிச் செய்கிறீர்கள் ? இது தர்மமா? நியாயமா? என்று கேட்டால், நம்மை வகுப்புத் துவேஷக்காரன் என்றும் வகுப்புப் பிரிவினைக்காரன் என்றும் வகுப்புரிமைக்காரன் என்றும் சொல்லி கொன்று விடப் பார்த்தால் அதற்கு நான் பயந்து கொள்ளுவேனா என்று கேட்கிறேன். ரயில் வே ஸ்டேஷன்களிலுள்ள ஓட்டல்களை எடுத்துக் கொள்ளுங்கள். ரயிலில் பெரும்பான்மையாய்ப் பிரயாணம் செய்கிறவர்கள் நாமாயிருக்கிறோம். ஓட்டல்காரனுக்கு அதிகமான லாபம் கொடுக்கிறவர்கள் நாமாயிருக்கிறோம். ஆனால் அந்த ஓட்டலுக்காக ரயில்வே அதிகாரிகள் கொடுத்த இடத்தில் முக்கால் பாகத்திற்கு மேலாக தாங்கள் எடுத்துக் கொண்டு கொஞ்சம் இடத்தை நமக்கு ஒதுக்கி வைத்துவிட்டு, அந்த இடத்திலும் எச்சில் போடவும் சாணி சட்டி விளக்குமார் வகையறாக்களை வைக்கவும் கை கழுவவும் செய்கிறார்கள். ஒரு பார்ப்பனன் குஷ்டரோகியானாலும் அவன் நேரே சமயலறைக்குப் போய் சுடச் சுட உள்ள பதார்த்தங்களில் தனக்கு வேண்டுமானதை அடுப்பிற்குப் பக்கத்திலிருந்தே எடுத்துச்சாப்பிட்டு



tamilnavarasam.com

விடுகிறான். நம்மில் எவ்வளவு பெரிய மனிதர்களானாலும் வெளியில் நின்று கொண்டு நாலாணாவைக் கையில் தூக்கி காட்டிக் கொண்டு, இடைச்சி மார்க்கு கட்டிப் பால் விளம்பரப் படத்தில் பெண்கள் கூட்டம் பால் கேட்பது போல் ஒரு கையைத் தூக்கிக் கொண்டு சாமி சாமி என்று கத்த வேண்டிய தாயிருக்கிறது. ஆறினதையும் ஈ, பூச்சி, புழுக்கள் வீழ்ந்த தையும் விற்காமல் தேங்கினதையும் நாம் வாங்கிச் சாப்பிட வேண்டியதாயிருக்கிறது. இந்த நிலையில் வகுப்பு வித்தியாசத்தையும் வகுப்புத் துவேஷத்தையும் வளர்க்கிறவர்கள் நாமா? இந்தப் பார்ப்பனர்களா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

நம்முடைய பணத்தைக் கொண்டு மத சம்பந்தமான கல்விகளுக் கென்றும் வேத பாடசாலை என்றும் பெரிய பெரிய பள்ளிக்கூடங்களைக் கட்டிக்கொண்டு அதில் பிராமணர்கள்தான் படிக்கலாம், சூத்திரர்கள் படிக்கக் கூடாது என்று சொல்லி நம்மைத் தள்ளி வைத்து விடுகிறார்கள். ஜாதி வித்தியாசத்தையும் வகுப்புத் துவேஷத்தையும் வளர்க்கிறவர்கள் நாமா? அவர்களா? நம்முடைய பணங்களிலேயே பெரிய பெரிய கோவில்கள் கட்டப்பட்டு, நம்முடைய பணங்களைக் கொண்டே பூஜைகள் செய்யப்பட்டு வரும் சுவாமிகளிடத்தில் நம்மைப் போகக்கூடாது என்று சொல்லுகிறார்கள். இதனால் வகுப்புத் துவேஷத்தை உண்டாக்குகிறவர்கள் நாமா? அவர்களா? ஆகவே இப்பொழுது ஜாதி வித்தியாசம் வளரக்கூடாதென்பதும் வகுப்புத் துவேஷங்கள் ஒழிய வேண்டுமென்பதும்தான் நமது கொள்கை. அதற்காகத்தான் நான் பாடுபடுகிறேன். ஜாதி வித்தியாசங்களான மக்கள் உயர்வு, தாழ்வு என்பதை ஒழிப்பதற்கும் வகுப்புத் துவேஷங்கள் ஒழிவதற்கும் முட்டுக்கட்டையாயிருந்து வருகிறவர்கள் நாமா? அந்தப் பிராமணர்களா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

ஜாதி வித்தியாசம் நிலைத்திருப்பதற்கும் வகுப்புத் துவேஷங்கள் வளருவதற்கும் நிரந்தரமான ஏற்பாட்டை பார்ப்பனர்களே செய்து வைத்துக் கொண்டு நம் மீது குறை கூறுகிறார்கள். நாம் இப்போது பார்ப்பனர்களைக் கேட்பதெல்லாம் எங்களையும் சமமாகப் பாவியுங்கள், எங்களைத் தாழ்ந்த வர்கள் என்று சொல்லி இழிவுபடுத்தி எங்களுடைய சுயமரியாதையைக் கொல்லாதீர்கள் என்பதையன்றி வேறில்லை. இதை அவர்கள் கொஞ்சமும் கவனியாமல் இந்த தேசத்தில் 100-க்கு 97 பேர்களாயிருக்கிற நம்மை சூத்திரர் களென்றும் தாழ்ந்தவர்களென்றும் சொல்லுவதோடல்லாமல் நமக்கு இவர்கள் தர்மகர்த்தாக்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு சர்க்காருக்கு உள் உளவா யிருந்து எல்லா உத்தியோகங்களையும் அதிகாரங்களையும் இவர்களே கைப்பற்றிக்கொண்டு நமக்குக் கொடுமை செய்துவருகிறார்கள். நாம் நமது சுயமரியாதைக்காகத்தான் இவ்வளவு பிரயத்தனப்படுகிறோமேயல்லாமல் கேவலம் இந்த உத்தியோகத்திற்கு ஆசைப்பட்டல்ல. ஆனால் நமது பார்ப்ப னர்கள் இந்த உத்தியோகங்களைக் கைப்பற்றிக் கொண்டதன் பலனாகவே



நம்மை தங்களுக்கும் சர்க்காருக்கும் நிரந்தரமான அடிமைகளாக்கி நம்மீது ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இவற்றிலிருந்து தப்பி நமது சுயமரியாதை யைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே இப்பார்ப்பனர்களை எப்படியாவது எல்லாவித உத்தியோகங்களிலிருந்தும் ஒழிக்க வேண்டுமென்று கஷ்டப் படுகிறோம்.*(பார்ப்பனர்களுக்கு வெட்கம், வெட்கம் என்கிற சப்தமும்* கரகோஷமும்)

இவ்விதம் நீங்கள் கூச்சலிடுவதில் பயனில்லை; கூச்சலிடுவதற்கா கவோ கரகோஷம் செய்வதற்காகவோ நான் உங்கள் முன்னால் பேச வர வில்லை. உத்தியோக விஷயத்தில் மாத்திரம் பார்ப்பனர்கள் விஷயத்தில் பொறாமையும் துவேஷமும் இருக்கிறதேயல்லாமல் வைதீகச் சடங்குகளில் நீங்கள் அவர்களை உங்களை விட உயர்ந்தவர்களென்றே எண்ணியிருக் கிறீர்கள். நீங்கள் எவ்வளவு படித்தவர்களாயிருந்தாலும், எவ்வளவு பெரிய பதவியிலும் அதிகாரத்திலும் இருந்தாலும் இரண்டு காய்ந்த தர்ப்பைப் புல்லைக்கொண்டு சாம்பலையோ நாமத்தையோ அடித்துக் கொண்டு ஒரு பார்ப்பனன் உங்கள் வீட்டிற்கு வருவானேயானால் 'சுவாமி' என்று அவன் காலில் விழுகத் தயாராயிருக்கிறீர்கள். அவனுக்குப் பணத்தைக் கொடுத்தால் உங்கள் பெற்றோருக்கு மோக்ஷம் கிடைக்கும் என்கிற முட்டாள் தனமான எண்ணம் இன்னமும் உங்கள் ரத்தத்தில் கலந்து கொண்டு இருக்கிறது. அவன் கைப்பட தாலி எடுத்து கொடுத்து நீங்கள் அதை கும்பிட்டு வாங்கி பெண் களின் கழுத்தில் கட்டினால்தான் உண்மையான கலியாணம் என்று நினைக் கிறீர்கள்; ஒரு பார்ப்பனன் உங்கள் வீட்டுப் பெண்ணையும் பிள்ளையையும் படுக்கை அறைக்குள் அனுப்பிக் கதவைச் சாத்தினால்தான் நல்ல பிள்ளைகளைப் பெற முடியுமென்று நினைக்கிறீர்கள்; ஒரு பார்ப்பனனுக்கு பணத்தைக் கொட்டிக் கொடுத்து அவன் காலைக் கழுவின தண்ணீரை சாப்பிட்டால்தான் உங்கள் பாவம் துலையுமென்றும் நீங்கள் மோக்ஷத்திற்குப் போகக் கூடுமென்றும் நினைக்கிறீர்கள். இவ்வித முட்டாள்தனமான மனப் பான்மையை மாற்றிக் கொள்ளத் தயாராயிருக்கிறீர்களா? (ஆம், ஆம் என்கிற சப்தம்) அப்படியானால் உங்களுடைய சந்தோஷங்களுக்குப் பொருள் உண்டு. அப்படிக்கில்லாமல் வீண் ஆரவாரங்களினாலும் அற்ப சந்தோஷத் தினாலும் பலனென்ன?

ஆதலால் நாம் இப்பொழுது செய்யும் இந்தப் போராட்டம் சுய மரியாதைப் போராட்டமேயல்லாமல் உத்தியோகத்திற்காகவே செய்யும் உத்தியோகப் போராட்டமல்லவென்பதை நன்றாய் உணருங்கள். நமது சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இவ்வித உத்தியோகங்கள் சகாயமாயிருக்கும். மோட்சம் என்கிற வார்த்தையினாலும், சுயராஜ்யம் என்கிற வார்த்தையினாலும், சமூக வாழ்க்கையிலும் அரசியலிலும் முறையே நம்மைப் பார்ப்பனர்கள் ஏமாற்றி ஆதிக்கம் பெற்று விட்டார்கள். இவ்விரண்டு விஷயங்களிலும் பார்ப்பனர்களுக்குள்ள ஆதிக்கத்தை விரட்டி அடித்தால்



RangaRakes tamilnavarasam.com

தான் நாம் சுயமரியாதை அடைய முடியும். இந்தச் சுய மரியாதைக்காக நாம் இன்று, நேற்று மாத்திரம் போராடவில்லை. ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டும், நாயர், செட்டியார் என்கிற மகான்களின் இயக்கம் ஏற்பட்டும் சுமார் பத்தாண்டுகள் தானாகின்றன. இன்றைக்கு எத்தனையோ ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்ன தாகவே இப்பார்ப்பனரின் கொடுமையை உணர்ந்த நம் தமிழ் மக்கள் அதிலிருந்து தப்பவேண்டு மென்று எவ்வளவோ பிரயத்தனம் செய்திருக்கிறார்கள். நமது சித்தர் களெல்லாம் எவ்வளவோ தெளிவாய்ப் பார்ப்பனர்களின் அக்கிர மங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் நமது பார்ப்பனர்கள் சித்தர் நூல்களையெல்லாம் ஒழித்து, சித்தர் உபதேசங்களையெல்லாம் மறைத்து இராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம் முதலிய நூல்களைப் பார்ப்பனர்களுக்கனுகூலமாக எழுதி அவற்றிக்குச் செல்வாக்குண்டாக்கி, அவற்றைப் படித்தால் மோட்சம் என்று சொல்லி நம்மை ஏமாற்றி விட்டார் கள். கபிலர், பாய்ச்சலூரார், ஔவையார், திருவள்ளுவர் முதலிய பெரியோர் கள் செய்திருக்கும் நூல்களினாலும் அவர்களுடைய உபதேசங் களினாலும் இன்றைக்கு ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பாகவே பார்ப்பனர்கள் கொடுமைகளை வெளிப்படுத்தி அவைகளை ஒழிக்கப் பிரயத்தனப் பட்டிருக்கிறார்கள். சமீபகாலத்தில் புத்தர், சமணர் முதலியோர்களும் பார்ப்பனர்கள் கொடுமையை ஒழித்து மக்கள் எல்லோரும் சமம் என்பதும் அன்பும் சமரச உணர்ச்சியும் தான் கடவுளென்பதும் உலகத்திற்குணர்த்த வந்ததை இப்பார்ப்பனர்கள் சகிக் காமல் இவர்கள் பிரயத்தனத்தையெல்லாம் ஒழித்து விட்டார்கள்.

பார்ப்பனர்கள் தங்களை உயந்த ஜாதியார் என்று சொல்லிக் கொண்ட காலத்தில் பலவான்களாக இருந்தவர்கள் அதை ஒப்புக் கொள்ளாமல் பலாத் காரத்தை உபயோகப்படுத்த வந்த சமயத்தில், தந்திரமாய் நீங்கள் க்ஷத்திரியர் களாயிருந்து அரசாட்சி செய்யுங்கள், நாங்கள் உங்களுக்கு மந்திரி களாயிருந்து 'யோசனை' சொல்லுகிறோமென்று சொல்லி அவர்களை ஏமாற்றி கைக்குள் போட்டுக் கொண்டார்கள். கையில் செல்வமும் செல்வாக்கு முள்ள மற்றொரு கூட்டத்தார் 'நீங்கள் எப்படி உயர்ந்த ஜாதியாகலாம்' என்று விவாதிக்கையில் 'நீங்கள் வைசியர்களாக இருங்கள், உங்களுக்குக் கீழ் அநேகர் இருக்கிறார்களெ'ன்று சொல்லியும் 'உங்களுக்கும் எங்களைப் போல் பூணூல் போடுகிறோ'மென்றும் சொல்லி அவர்களையும் ஏமாற்றி கைக்குள் போட்டுக் கொண்டார்கள். பிறகு பெரும்பான்மையாயிருந்த விவசாயக் காரர்களையும் கைத் தொழிற்காரர்களையும் பார்ப்பனர்களுக்கு முதல் மூன்று வகைப் பிரிவுக்காரர்களுக்கும் வேலை செய்கிறவர்களென்று ஏற்படுத்தி விட்டார்கள். அவர்களில் பலர் இதை ஒப்புக் கொள்ளாமல் வாதாடவே 'உங்களுக்கும் கீழாக ஒரு பிரிவாரை வைத்திருக்கிறோம், அவர்களுக்கு நீங்களே தான் எஜமானர்கள், உங்கள் இஷ்டம் போல் அவர் களை நடத்திக் கொள்ளலாம்' என்று சொல்லி சாந்தமே உருவாகவும், சூது வாது தெரியாத சாது ஜனங்களாகவும் இருந்தவர்களை பஞ்சமர்களென்று பெயர் வைத்து அவர்களை ஷை சூத்திரர் என்பவர்களுக்குக் காட்டிக் கொடுத்து அவர்களையும் ஏமாற்றி விட்டார்கள். கடைசியாக வாயில்லாப் பூச்சிகளாகிய ஒரு வகுப்பார் தீண்டாதவர்களாகி துன்பப் பட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

இவ்விதக் கொடுமை செய்தவர்களைத்தான் நீங்கள் இன்றைய தினம் உங்கள் மத குருவாய் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இவ்விதக் கொடுமை நம்மை விட்டு விலக வேண்டுமானால் மத விஷயத்திலும் அரசியல் விஷயத்திலும் நாம் ஆதிக்கம் பெற வேண்டும். ஆக்கம் பெற்று நமது சுயமரியாதையை அடைய முயற்சிக்க வேண்டும். ஒரு சமூகத்திற் கானாலும் ஒரு தேசத்திற்கானாலும் சுயராஜ்யத்தை விட சுயமரியாதையே பிரதானமான தென்பது எனது தாழ்மையானதும் முடிவானதுமான கொள்கை. அச் சுயமரியாதைக்கு மகாத்மாவின் நிர்மாணத் திட்டமும் மறைவுபட்ட இந்த சமயத்தில் அரசியலிலுள்ள சகல பதவிகளையும் சகல ஸ்தானங்களையும் சகல அதிகாரங்களையும் சகல உத்தியோகங்களையும் எப்படியாவது நாம் கைப்பற்றியாக வேண்டும். ஆதலால் இப்பொழுது நடக்கிற தேர்தல் ஸ்தானங்கள் எல்லாம் இக்கருத்துக் கொண்ட பார்ப்பன ரல்லாதார்களே கைப்பற்றும்படி நாம் செய்ய வேண்டும். அதின் மூலம் நமது கருத்தை நிறைவேற்றிக்கொள்ள எவ்வெவ் வழிகளில் சாத்தியப்படுமோ அவ்வவ்வழிகளிலெல்லாம் உழைக்க வேண்டும். இதுதான் நம்முடைய தேசீய வேலை. இதை விட்டு விட்டு காங்கிரஸ் என்றும் சுயராஜ்யம் என்றும், காங்கிரஸ் மூலம் சுயராஜ்யம் அடையலாமென்றும் சொல்லுவதெல்லாம் பார்ப்பனர் மூலம் மோட்சமடையலாமென்று சொல்லுவது போலத் தான் ஆகும். ( தொடர்ச்சி : 22.08.1926 இதழில்)

*குறிப்பு : சென்னை திருவல்லிக்கேணியில் 31.07.1926 இல் நடைபெற்ற கூட்டத்தில் சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 15.08.1926**



RangaRakes tamilnavarasam.com

# சென்னையில் குழுமிய சீர் பெருங்கூட்டம்

## "சுயராஜ்யத்தைவிட சுயமரியாதையே பிரதானம்"

## "மகாத்மா காந்திக்கு மண்டையில் மூளையில்லை" என்று சொன்ன மகான் ( ! ) இப்பொழுது காங்கிரஸ் தலைவராய் விளங்குகிறார்

## திரு.இராஜகோபாலாச்சாரியாரின் இரகசியம்

## "சென்னையிலும் வங்காளத்தைப் போல் கலவரம் மூட்ட பார்ப்பனர்கள் முயலுகிறார்களா?"

### பலனடைந்தவர் பார்ப்பனரே

காங்கிரசின் ஆரம்பமே பார்ப்பனர்கள் எப்படி உத்தியோகம் சம்பாதிக்கலாம் என்கிற கருத்தைக் கொண்டுதான் ஆரம்பிக்கப்பட்டதே யல்லாமல் வேறல்ல. அது போலவே காங்கிரஸ் ஏற்பட்டதற்குப் பிறகுதான் உத்தியோகங்களெல்லாம் பார்ப்பன மயமாவதற்கு அநுகூலமேற்பட்டது. மகாத்மா காந்தி காங்கிரசை தலைமை வகித்து நடத்திய காலத்தில் பார்ப்பனர்களுக்கு ஆதிக்கமும் செல்வாக்கும் உத்தியோகமும் குறையத் தலைப்பட்டது. அதனால்தான் இந்தப் பார்ப்பனர்கள் மகாத்மாவை காங்கிரசை விட்டு ஓடும்படி செய்துவிட்டார்கள். அதனாலேயேதான் தமிழ்நாட்டில் மகாத்மா காங்கிரசுக்காக உழைத்து வந்த பார்ப்பனரல்லாத பிரமுகர்களையும் காங்கிரசை விட்டு ஓடும் படி செய்து விட்டார்கள். காங்கிரஸ் ஏற்பட்டதின் பலனாய் பார்ப்பனர்கள் லாபமடைந்தார்களே ஒழிய ஏழைகளுக்கும் தொழிலாளர்களுக்கும் குடியானவர்களுக்கும் அதிக கஷ்டம் தான் ஏற்பட்டது.

### சீர்திருத்தத்தால் விளைந்த கேடு

உதாரணமாக காங்கிரசுக்கு முன்பாக 50 கோடி ரூபாயிக்குள்ளாகத் தான் நாம் சர்க்காருக்கு வரிகொடுத்துக் கொண்டு வந்தோம். காங்கிரஸ்



பெருக்கப் பெருக்க ஏழைகளுக்கும் வரி பெருகிக் கொண்டே வந்து 50 கோடி ரூபாயிலிருந்த வரி இன்றை தினம் 160 கோடி ரூபாயில் வந்து நிற்கிறது. காங்கிரஸ் பெற்ற பிள்ளைகளான இரண்டு சீர்திருத்தங்களும் தேசத்திற்கு கஷ்டத்தையும் அதிக வரியையும் ஒற்றுமைக் குறைவையும் ஜனங்களுக்கு பந்தோபஸ்துக் குறைவையும்தான் ஏற்படுத்தி இருக்கிறதே யல்லாமல் வேறு ஒருவித நன்மையும் உண்டாக்கவேயில்லை. இன்னும் ஒரு சீர்திருத்தம் வருமேயானால் இனியும் அதிகமான வரியும் கஷ்டமும் பந்தோபஸ்து குறைவும் தான் ஏற்படுமேயல்லாமல் அநுகூலம் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. இப்பொழுதிருக்கும் காங்கிரஸ் பார்ப்பன ஆதிக் கத்திற்காக வேண்டி பொய்யும் புரட்டும் ஏமாற்றமும் நிறைந்து கிடக்கின்றன.

### தூக்குமேடை!

அதில் ஏமாற்றுகிறவர்களுக்கும் வஞ்சிக்கிறவர்களுக்கும் சுயநலக் காரர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும்தான் இடமிருக்கிறதே யல்லாமல் யோக்கியர்களுக்கு இடமில்லாததோடு ஏழைகளுக்கனுகூலமான திட்டங்களும் அதில் ஒன்றுகூட இல்லை. காங்கிரசின் குற்றங்களை எடுத்து யாராவது வெளியில் சொன்னால் அவர்களை காங்கிரஸ் துரோகி என்று சொல்லுகிறார்கள். சர்க்காரின் குற்றங்களை யாராவது வெளியில் எடுத்துச் சொன்னால் எப்படி அவன் ராஜத் துரோகியாய் விடுகிறானோ, பார்ப்பனர் குற்றங்களை யாராவது வெளியில் எடுத்துச் சொன்னால் எப்படி அவன் பிராமணத் துவேஷியாய் விடுகிறானோ, சாஸ்திரங்களின் புரட்டுகளை யாராவது வெளியில் எடுத்து சொன்னால் எப்படி அவன் மதத்துரோகியாய் விடுகிறானோ அது போலவே நமது பார்ப்பனர்களும் தங்கள் அநுகூலத்திற்காக ஏற்படுத்தி வைத்திருக்கிற காங்கிரஸ் குற்றத்தை யாராவது பேசினால் அவனைக் காங்கிரஸ் துரோகி என்பதோடு மாத்திரமல்லாமல் தேசத் துரோகி என்றும்கூட சொல்லி பிரசாரம் செய்கிறார்கள். இதற்காக வேண்டியே என்னை தூக்கில் இடுவதற்காக நமது பார்ப்பனர்கள் ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். எனது நண்பர்கள் ஸ்ரீமான்கள் சக்கரை, ஆரியா இவர்களை தூக்கில் போட்டு விட்டார்கள். மற்றும் ஸ்ரீமான்கள் கலியாணசுந்தர முதலியார், வரதராஜுலு நாயுடுகாரு இவர்களை மிரட்டிக் கொண்டும் இருக்கிறார்கள்.

### தலைவிரித்தாடும் தற்காலத் தலைவர்கள்

காங்கிரசைப் பற்றி குற்றம் சொல்லாத மனிதர்கள் யாராவது இருக்கிறார்களா? ஒரு காலத்தில் காங்கிரஸ் தலைவர்களின் பேரில் செருப்பையும் ஜோட்டையும் வீசி யெறிந்துவிட்டு வெளியில் வந்து விட்ட மகான்களின் படம் இன்றைய தினம் உங்கள் வீடுகளிலெல்லாம் தொங்குகிறதா, இல்லையா? காங்கிரசையும் காந்தியையும் குழி தோண்டிப் புதைக்க வேண்டுமென்று சொன்னவர்கள் இன்றைய தினம் பெரிய தலைவர் களாகவில்லையா?



RangaRakes tamilnavarasam.com

“மகாத்மாவிற்கு மண்டையில் மூளை இல்லை” என்று சொன்னவர்களும் மகாத்மா சொல்லுவது சட்டத்திற்கு விரோதமென்று சொல்லி அவரைக் கைது செய்யச் சொன்னவர்களும் இன்றைய தினம் காங்கிரசுக்கும், சுயராஜ்யக் கட்சிக்கும் தலைவராக இல்லையா? இன்னும் ஸ்ரீமதி பெஸண்ட் அம்மையார் முதற்கொண்டு, மகா மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரி முதற் கொண்டு ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி அய்யர், ரெங்கசாமி ஐயங்கார் வரையிலும் எத்தனையோ பேர் காங்கிரசையும் மகாத்மாவையும் திட்டிக்கொண்டு அதன் கொள்கைகளுக்கு விரோதமாய் எதிர்ப்பிரசாரமும் திருட்டுப் பிரசாரமும் செய்துகொண்டு இருந்தவர்கள் இன்றைய தினம் யோக்கியர்களாகி விடவில்லையா? அவர்களுக்கெல்லாம் தூக்குக் கிடை யாது; எங்களை மாத்திரம் தூக்கில் போட வேண்டுமாம். காங்கிரஸ் யோக்கியமாயிருந்த காலமாகிய மகாத்மா காங்கிரசில் இருந்த காலத்தில் இப்போதைய காங்கிரஸ் தலைவர்களாகிய இந்தப் பார்ப்பனர்களெல்லாம் அப்பொழுது எங்கு போயிருந்தார்கள்?

காங்கிரஸ் யோக்கியப் பொறுப்பற்று விபசாரித்தனமாயிருக்கிற காலத்தில் இப்பொழுது வந்து அதைக்கட்டி அணைந்து கொண்டாடுகிறார்கள். இப்போதைய காங்கிரஸ் தேசத்திற்கனுகூலமாக என்ன திட்டத்தை உடைத்தாயிருக்கிறது? என்ன காரியத்தைக் கொண்டு காங்கிரசை நாம் மதிக்கக் கூடியதாயிருக்கிறது? ஒரு ஸ்தாபனத்திற்கு நாம் மதிப்புக் கொடுப்பதாயிருந்தால் அதனிடத்திலிருக்கிற கொள்கைக்காகவேயல்லாமல் அதனுடைய பெயருக்காக அல்ல. அதுபோலவே மகாத்மா காந்தியை நாம் மதிப்பதும் அவரிடத்தில் பக்தி செலுத்துவதும் அவரிடத்திலுள்ள கொள்கைக்கும், குணத்திற்கும், நடவடிக்கைக்குமேயல்லாமல் அவருடைய பெயருக்கும், சரீரத்துக்கும், யௌவன அழகுக்குமல்ல. ஆதலால் காங்கிரசின் குற்றத்தை வெளியில் எடுத்துச் சொல்வதினாலேயே ஒருவன் தேசத் துரோகியென்று அழைப்பதென்றால் அப்பேர்ப்பட்ட தேசத் துரோகத்திற்கு நான் கொஞ்சமும் பயப்படவில்லை.

## இராஜகோபாலாச்சாரியாரின் இரகசியம்

1923 - ஷ த்தில் நடந்த சென்ற சட்டசபைத் தேர்தலின்போது கூட நானும் எனது நண்பர்கள் ஸ்ரீமான்கள் எஸ்.இராமநாதன், தண்டபாணி பிள்ளை, ஆர்.சின்னைய பிள்ளை முதலிய அநேகர் ஒத்துழையாமைக்கு விரோதமாய்ப் புறப்பட்டு டில்லி ஸ்பெஷல் காங்கிரஸ் கட்டளைக்கு விரோதமாக எங்கள் சொந்தத்திலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து கொண்டு பிரசாரங்கள் செய்தோம். மறுபடியும் என்னையேதான் காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராகவும் ஸ்ரீமான் இராமநாதன் அவர்களைக் காரியதரிசியாகவும் நியமித்தார்கள். நாங்கள் ஒப்புக் கொள்ள மாட்டோம் என்று கூட சொன்னோம். ஆனால் ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார்



அவர்கள், இப்பொழுது ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் அஸ்ஸாம் காங்கிரஸில் எல்லாம் சரிப்படுத்தி விடுகிறேன் என்று சொல்லி ஏமாற்றி ஆள் சேர்த்து வருவதுபோல், காக்கிநாடாக் காங்கிரசில் எல்லாம் சரிப்படுத்தி விடுகிறேன் என்று சொல்லி எங்களை ஒத்துக் கொள்ளும்படி செய்தார். காக்கிநாடா காங்கிரசில் ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார்தான் எங்களிடம் சொன்னதற்கு விரோதமாய் சட்ட சபைப் பிரவேசத்தை ஆதரித்துத் தீர்மானத்தை பிரேரேபித்தார். அது முதற் கொண்டே எங்களுக்கும் அவருக்குமிருந்த கட்டுப்பாடும் நம்பிக்கையும் குலைந்து போய் விட்டது. அதிலிருந்துதான் ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாகவும், நாங்கள் பார்ப்பனரல்லாதாருக்கு அனுகூலமாகவும் இருந்து வருகிறோம். ஆனால் அவர் இரகசியமாகவும் தந்திரமாகவும் செய்கிறார்; நாங்கள் வெளிப்படையாகவும் தைரியமாகவும் செய்கிறோம். கள்ளை நிறுத்துவது என்கிற பெயரை வைத்துக் கொண்டு பார்ப்பனர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுப்பதற்காக ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் ஒரு இயக்கம் என்று ஆரம்பித்துக் கொண்டு ஊர் ஊராய்ப் பிரசாரம் செய்தார். அதன் பலனாகத்தான் ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்காருக்கு ஓட்டு வாங்கிக் கொடுப்பதற்காக சில கிராமங்களுக்குச் சென்று பிரசாரமும் செய்தார். அதனால்தான் ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்காரின் உண்மை நிலையைப் பற்றி நானும் எனது பத்திரிகையின் மூலம் பிரசாரம் செய்தேன். ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் சுயராஜ்யக் கட்சிக்காரர் கள்ளை நிறுத்துவதாக ஒப்புக் கொண்டார்கள், ஆதலால் அவர்களுக்கு ஓட்டுக் கொடுங்கள் என்கிறார்; ஆனால் சுயராஜ்யக் கட்சிக்காரர்களோ, ஒருவர் சட்டசபையில் கள்ளை நிறுத்த முடியாது என்கிறார்; மற்றொருவர் முட்டுக்கட்டை போடுவோமென்கிறார்; வேறொருவர் முட்டுக் கட்டை போட முடியாது அரசாங்கத்தைத் திணறச் செய்யலாமென்கிறார்; பிரிதொருவர் அரசாங்கத்தை அசைக்க முடியாது, இதன் மூலம் ஜனங்களுக்கு ஒரு படிப்பினை உண்டாக்கலாமென்கிறார்; இன்னொருவர் படிப்பு ஒன்றும் உண்டாக்க முடியாது; இரட்டை ஆட்சியை ஒழிக்கலாமென்கிறார்; மற்றொருவர் இரட்டை ஆட்சியை ஒழிப்பதில் ஒரு காரியமும் முடிந்து விடாது, சர்க்கார் சொல்லுகிறபடி கேட்கிற ஆள்கள் போய் உட்காருவதைவிட தேசீயவாதியாகிய நாம் போய் உட்காருவது நல்லதல்லவா என்கிறார்; வேறொருவர் தேசீயவாதியானாலும் சரி, யாரா னாலும் சரி எப்படியாவது ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்காகப் போக வேண்டுமென்கிறார்.

## சென்னையைக் கல்கத்தாவாக்க முயலுகிறார்களா?

வெளியில் இப்படி பலவித அபிப்பிராய பேதங்களிருப்பதாகக் காட்டிக் கொண்டாலும் உள் அந்தரங்கத்தில் இவர்கள் எல்லோருக்கும் ஒரே அபிப்பிராயந்தான். அதென்ன வென்றால் எப்படியாவது பார்ப்பனரல்லாதாருக்கு இதுசமயம் கொஞ்ச நஞ்சமிருந்துவரும் செல்வாக்கையும், அதிகாரங்களையும், உத்தியோகங்களையும் ஒழித்து அந்த ஸ்தானங்களையும்



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனர்களே கைப்பற்ற வேண்டுமென்பதுதான். இந்த மாதிரி கெட்ட எண்ணங்கள் என்றைக்கிருந்தாலும் ஒரு நாளைக்கு நமது பார்ப்பனர் களுக்கு ஆபத்தாய்த்தான் முடியப் போகிறது. உதாரணமாக, கல்கத்தாவில் இரட்டையாட்சியை ஒழித்ததன் பலன்தான் அங்கு இந்து முஸ்லீம் கலகமென்னும் நெருப்பு பற்றி எரிந்துக் கொண்டிருக்கிறது. கல்கத்தா இரட்டையாட்சியை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணமே அங்குள்ள மகமதிய மந்திரிகளை ஒழிப்பதற்காக செய்த சூழ்ச்சிகளேயாகும். மந்திரி களை ஒழித்து வெற்றி பெற்றதன் பலன் இந்து முஸ்லீம் கலகமாய்ப் போய் விட்டது. அதுபோலவே சென்னையிலும் பார்ப்பனரல்லாத மந்திரிகளை ஒழிக்க நமது பார்ப்பனர்கள், காங்கிரஸ் பெயராலும் தேசத்தின் பெயராலும் செய்யும் சூழ்ச்சிகள் நிறைவேறுமானால் என்ன நடக்குமென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். சென்ற வருடம் சுயராஜ்யக் கட்சிப் பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சி வெற்றியடைந்ததினால் இவ் வருடம் அத்தேர்தல்களில் என்ன நடக்கிறதென்பதைக் கவனித்தால் நடக்கப் போவது நன்றாய் விளங்கும். சென்ற வருடத்திய பஜனை எங்கே? கொடிகள் எங்கே? மகாத்மாவின் படமெங்கே? தேங்காய் பழம் பூஜையெங்கே? இவர் களுக்காகப் பிரசாரம் செய்த ஸ்ரீமான்கள் சக்கரைச் செட்டியார், டாக்டர் வரத ராஜுலு நாயுடு, கலியாணசுந்தர முதலியார் முதலிய பெரியார்களெங்கே? வீதிவீதிக்கு கூட்டமெங்கே? சோம்பேறிப் பையன்களுக்குக் காசு கொடுத்து பார்ப்பனரல்லாத பெரியார்களை திட்டச் சொன்னதும், அடிக்கச் சொன்னது மான தைரியமெங்கே? ஒரு சிறு புரட்டு வெளியானதெங்கே? இவ்வளவு பலன் கள் காரியங்கள் மறைபட்டிருந்தால் இனி பெரும் புரட்டு வெளியாய் விட்டால் இந்தப் பார்ப்பனர்களின் கதி என்ன ஆகுமென்று நினைக்கிறீர் கள்? வங்காளத்தை விட எண்மடங்கு அதிகமாகுமா இல்லையா? அப்புறம் யாரால் இக்கலகங்களை அடக்க முடியும். அரசாங்கத்தாரும் நன்றாய் வேடிக்கை பார்த்துக் கொண்டு சிரிப்பார்களேயொழிய ஒரு கட்சிக்கும் சிபார் சுக்கு வரமாட்டார்கள். பின்னால் கையில் பலத்தவன் காரியமாய்த்தான் போய் விடும். பிராமணர்களே மந்திரியாயும் போலீஸ் அதிகாரியாகவும் வந்தாலும் கூட பார்ப்பனரல்லாதார்கள்தான் போலீஸ்காரர்களாகவும் பட்டா ளத்து சிப்பாய்களாவும் இருப்பார்கள். அதுசமயம் மகாத்மா காந்தி வந்தா லும் 4 நாள் பட்டினி இருக்கத்தான்முடியுமே தவிர வேறு ஒரு காரிய மும் செய்து விட முடியாது. ஆதலால் இப்பொழுதிருக்கிற ஏதோ சில விஷமக் கார பார்ப்பனர்கள் தாங்கள் வெகு புத்திசாலிகளென்றும் தந்திரசாலி களென்றும் நினைத்துக் கொண்டு செய்வதின் பலன் நாளைய தினம் ஒரு பாவமுமறியாத இவர்களின் குழந்தை குட்டிகளுக்கும் மாணவர்களுக்கும் மற்றும் உள்ளவர்களுக்கும் கஷ்டத்தை விளைவிக்குமென்று வருத்தப் படாமலிருக்க முடியவில்லை. ஆதலால் பார்ப்பனர்களில் வாலிபர் களாகவும் பட்ச பாதமற்ற வர்களாகவும், பரிசுத்தர்களாகவும் இருக்கிறவர்கள் தேச நன்மையையும், தங்களது சமூக நன்மையையும் உத்தேசித்து ஒன்று சேர்ந்து தங்கள் சமூகத்திற்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணம் வைத்துக்கொண்டு தேசத்தின் பெயரால் சாது ஜனங்களுக்குச் செய்யும் கொடுமையைத் தடை செய்து கர்மபலனை அடையாமலிருக்கும்படி பிரயத்தனப்பட வேண்டியது அவர்களது கடமையாகும்.

## பார்ப்பனர்கள் கடமை

இவ்விஷயங்களைப் பற்றி எடுத்து நான் சொல்லுவதை நீங்கள் அலட்சியமாய் கருதிவிடக்கூடாது. என்னைப் பொருத்தவரையிலும் நான் உண்மையாய் உணர்வதையும் எனக்கு உண்மை என்று பட்டதையுமே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். பார்ப்பனர்களை உதைத்துவிட முடியுமென் றாவது இந்நாட்டை விட்டு ஓட்டிவிட முடியுமென்றாவது நான் ஒரு காலமும் நினைக்கவே இல்லை. எப்படியானாலும் மகமதியர் கிறிஸ்தவ சகோதரர் களைப் போலவே அவர்களும் இந்த நாட்டிலேயே இருக்கவேண்டியதுதான். ஆனால் அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரர்களாகவும் தேச நன்மைக்குற்ற வர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும். தேசத்தில் அவர்களிடத்தில் யாருக்கும் நம்பிக்கையில்லை.

## சுயராஜ்யமா? சுயமரியாதையா?

இக்காலத்தில் நானும் இந்தப் பார்ப்பனர்களை நம்பி அவர்கள் பின்னால் திரிந்துகொண்டு ஜஸ்டிஸ் கட்சியார் உத்தியோக வேட்டைக் காரர்கள் என்று சொன்னதுண்டு. ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிரிடையாக வேலை செய்த காலமுமுண்டு. அப்படியிருக்க அவர்களைப் பற்றி நான் ஏன் இப்பொ முது குறை கூறுகிறேன். அவர்களால் எனக்கு ஒரு கெடுதியும் ஏற்பட்டு விடவில்லை. ஆனால் அவர்களுடைய அந்தரங்கத்தைக் கூடவேயிருந்து பார்த்ததில் அவர்களை விட ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் ஆயிரம் மடங்கு யோக்கியர்களென்பதே எனது அபிப்பிராயம். பார்ப்பனர்கள் தங்கள் நன்மைக்கும் பார்ப்பனரல்லாதாரை ஒழிப்பதற்கும் நம்மை உபயோகப் படுத்திக் கொண்டார்களென்பதையும், இவர்களால் என்றைக்கும் நமது நாட்டிற்கு சுயராஜ்யம் வராதென்பதையும் நன்றாய் நான் அறிந்து கொண் டேன். சுயராஜ்யத்தை விட சுயமரியாதை தான் இப்போது எனக்குப் பெரிதா யிருக்கிறது. நமது சமூகத்திற்கு ‘சூத்திரன்’ என்கிற பெயர் இனி அரை நாழி கையும் இருக்கக்கூடாது. நம்மை அடிமை என்றும் வைப்பாட்டி மகன் என்றும் சண்டையில் ஜெயித்த கைதிகளென்றும் பொருள்கள் கொண்ட ‘சூத்திரன்’ என்கிற பெயரால் அழைப்பதை எப்படி பொறுத்துக் கொண்டிருக்கலாம். ஆதலால் சுயமதிப்பையே பிரதானமாகக் கருதுவது ஒருக்காலும் குற்ற மாகாது. இம்மாதிரி ஒரு வகுப்பாரை ஒரு வகுப்பார் கொடுமைப்படுத்தியும் தாழ்மைப் படுத்தியும் தீண்டாதாராக்கியும் நடத்திக் கொண்டிருப்பதை விட மனதில் லாதிருக்கும் போது அந்த தேசம் எப்படி சுயராஜ்யம் அடைய முடியும்?


RangaRakes
tamilnavarasam.com

## யார் சம்மதிக்கிறார்கள் ?

இவ்விதம் தங்கள் சுயமரியாதையைப் பெறமுடியாத ஜனங்கள் எப்படி சுயராஜ்யம் பெறத் தகுதியுடையவர்களாவார்கள்? வெள்ளைக்காரர் கள் நம்மைப் பார்த்து உங்கள் ராஜ்யத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள், நாங்கள் போகிறோம் என்று சொன்னால் ஏற்றுக் கொள்ளுவதற்கு இந்திய ராகிய நம்மில் யார் தயாராயிருக்கிறோம்? யார் ஏற்றுக் கொள்வதை யார் சம்மதிக்கத் தயாராயிருக்கிறார்கள் ? இந்துக்கள் வசம் ஒப்படைத்தால் முஸ்லீம்கள் சம்மதிப்பார்களா? இந்து முஸ்லீம் இருவர்களும் சம்மதித்தால் கிறிஸ்தவர்கள் சம்மதிப்பார்களா? இந்து முஸ்லீம் கிறிஸ்தவர்கள் மூவரும் சம்மதித்தாலும் தீண்டக் கூடாது, தொடக்கூடாது, தெருவில் நடக்கக்கூடாது என்று கொடுமைப்படுத்தி வைத்திருக்கும் பஞ்சமர்கள் என்று சொல்லும் சகோதரர்கள் சம்மதிப்பார்களா? முதலாவது இந்துக்களிலேயே யார் ஏற்றுக் கொள்வதை யார் சம்மதிக்கப் போகிறார்கள்? (பனகால் அரசர் ஏற்றுக் கொள் வதை நானும் நீங்களும் சம்மதிப்போம் என்கிற குரல்) நானும் நீங்களும் சம்மதித்தால் போதுமா? மயிலாப்பூர் அய்யங்கார், அய்யர் சம்மதிப்பார் களா? அல்லது பார்ப்பனர்கள் ஏற்றுக்கொள்வதை நாம் சம்மதிப்போமா? ஆகையால் இதுசமயம் ஒற்றுமைக்கும், நம்பிக்கைக்கும், சுயமரியாதைக்கும் பாடுபடுவதை விட்டுவிட்டு சுயராஜ்யத்தைப் பற்றிப் பேசுவது வீண் பேச்சேயாகும்.

*குறிப்பு: சென்னை திருவல்லிக்கேணியில் 31.07.1926 இல் நடைபெற்ற கூட்டத் தின் சொற்பொழிவு தொடர்ச்சி.*

**குடி அரசு - சொற்பொழிவு - 22.08.1926**



# தேவஸ்தானச் சட்டம்

## பார்ப்பனக் கட்சியின் சூழ்ச்சி பொடி பொடியாய் தகர்க்கப்படுகிறது.

## பிரபல தேசபக்தர்களின் கருத்து

**சட்டப்பேரவையில் வரப்போகும் திருத்தத்தை சுயராஜ்யக் கட்சியார் எதிர்ப்பது**
**" தீண்டாமைக்குத் துணைபோவதாகும்,"**
**கூடாவொழுக்கமாகும்,"**
**"புரட்டான போலிச் செயலாகும்."**
**" காங்கிரசுக்கு அழிவுதேடுவதாகும்."**

திரு.ஈ.வெ.இராமசாமி நாயக்கர் தந்திமூலம் பத்திரிகைகளுக்கு அறிவித்ததாவது:-

"தேச மகாசபையின் பெயரால், இந்துமத பரிபாலன மசோதாவை எதிர்ப்பது போலிச் செயலாகும். மகந்துகளையும் மடாதிபதிகளையும் தொங்கிக் கொண்டு நிற்கும் சுயநலங் கொண்ட பார்ப்பனர்களின் இழிவான தந்திரங்கள் வெளிப்படையாய்ப் புலப்படுகின்றன. தென்னிந்தியப் பார்ப் பனரல்லாதாரின் சார்பாக மசோதாவை நான் முழுமனதுடன் ஆதரிக் கிறேன்."

**( பu.ர் )**

**குடி அரசு - அறிவிப்பு - 22.08.1926**



RangaRakes tamilnavarasam.com

# வரப்போகும் தேர்தல்

## தமிழர்களுக்கு ஓர் தனிப்பெரும் விண்ணப்பம்

வரப்போகும் தேர்தல்கள் தென்னிந்திய தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ஏற்படுகிறது. அதன் முக்கிய நோக்கம் நமது நாடு சுயராஜ்யம் பெறுவதற்கென்று சொல்லிக் கொள்ளப்பட்டாலும், சுயராஜ்யம் என்பது சுயமரியாதையும் சுயேச்சையும் உள்ள சமூகத்துக்குத்தான் பயன்படுமே அல்லாது அஃதில்லாதவருக்கு சுயராஜ்யமென்பதும் பரராஜ்யமென்பதும் வித்தியாசமற்றதேயாகும். தென்னாட்டுத் தமிழ்மக்கள் பெரும்பாலும் சுயமரியாதையற்று, சுயேச்சையற்று மலந்தின்னும் பன்றிகளுக்கும் கழுதைகளுக்கும் புழுக்களுக்குமுள்ள சுதந்திரமும் சுயாதீனமுமின்றி கோடிக்கணக்கான மக்கள் உழல்வதை யாரும் மறுக்க முடியாது. இவர்களின் பொருட்டும், தேச முழுவதிலுள்ள இவர் போன்றோர் பொருட்டும் விடுதலையை உத்தேசித்து மகாத்மா காந்தியடிகளால் ஆறு வருடங்களுக்கு முன் துவக்கப்பட்ட ஒத்துழையா இயக்கமானது பல்வேறு காரணங்களால் வேருடன் களையப்பட்டு விட்டது. இதன் பலனாய் ஏற் பட்ட நிலைமையானது சுயேச்சையும், சுயமரியாதையும், சுவாதீனமுமற்ற சமூகத்துக்கு, அதிலும் முக்கியமாய் தென்னாட்டுத் தமிழ்மக்களுக்கு முன்னிலும் அதிக கேவலமான நிலையில் கொண்டு வந்து விட்டுவிட்டது.

பல ஆயிரக்கணக்கான வருடங்களாக நம் நாட்டு ஜனங்களென்று சொல்லிக் கொள்ளுவோரிலேயே ஒரு வகுப்பார் தங்களுடைய சுயநலத்தையே உத்தேசித்து பொது ஜனங்களிடையே வகுப்பு வித்தியாசத்தையும் துவேஷத்தையும் உண்டுபண்ணி தங்களை உயர்ந்தோரென்று சொல்லிக் கொண்டு தங்கள் உயர்விலும் வாழ்விலுமே கண்ணுங்கருத்துமாயிருந்து தேசத்தையும், மதத்தையும், மற்ற சமூகங்களையும் பாழாக்கியதுடன் அந்நிய தேசத்தார் நம் நாட்டிடையே படையெடுத்து வந்த போதெல்லாம் தங்கள் நன்மையின் பொருட்டே எதிரிகளுக்கு உளவு சொல்லியும் தேசத்தையும் மதத்தையும் காட்டிக் கொடுத்தும் அவர்களிடமே மந்திரி முதலிய உத்தியோகங்கள் பெற்று செல்வாக்கடைந்தும், நமது நாட்டாரை அடக்கியாள அவர்கள் ஓர் ஆயுதமாகவும் பயன்பட்டு வந்திருக்கிறார்கள். இதற்கு உதாரணமாக, இச்சுயநலக் கூட்டத்தார் தங்கள் சூழ்ச்சியாலும் தந்திரத்தாலும் தாங்களே நமது மதாச்சாரியார்களாகவும், குல குருக்களாகவும், படித்தோர்



களாகவும், தேச நன்மைக்கும் சமூக நன்மைக்கும் ஏற்பட்ட இயக்கங்க ளுக்கு தலைவர்களாகவும், அரசாங்கத்தை நடத்த அவர்களுக்கு ஊழியர்களாகவுமிருந்து அரசாங்கத்தை நடத்திக் கொடுத்துக் கொண்டும், அதே சமயத்தில் அரசாங்கத்திற்கு ஒற்றர்களாயிருந்து நாட்டின் உயிர் நாடியைக் காட்டிக் கொடுத்தும் ஆகிய இவ்வளவு காரியங்களையும் செய்து வருவது இக்கூட்டத்தார்தான் என்பதை இப்பொழுதும் காணலாம்.

அல்லாமலும் ஆதிகாலத்தில் மக்கள் ஒற்றுமைக்கும் சமத்துவத்துக்கும், சகோதரத்துவத்துக்கும், ஜீவகாருண்யத்துக்கும், அஹிம்சைக்கும் ஏற்பட்ட இயக்கங்களுக்கும் சாதனங்களுக்கும் விரோதிகளாயிருந்து தங்கள் சுய நன்மைக்காகவே அவைகளை ஒழித்து தேசத்தை இக் கெதிக்கு கொண்டு வந்தவர்களும் இவர்களேதான் என்பதை சரித்திரம் மூலமாகவும் நேரிலும் காணலாம். மகாத்மாவால் ஏற்படுத்தப்பட்ட அஹிம்சா தர்மத்தோடு கூடிய விடுதலை இயக்கத்தை ஆரம்ப முதல் இன்று வரையிலும் பல சூழ்ச்சிகளாலும் பாழாக்கினவர்கள் இவர்களேயென்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். இதை மகாத்மா அவர்களே தம்முடைய இயக்கம் சீர்குலைந்ததற்குக் காரணம் படித்த வகுப்பினர்தான்! படித்த வகுப்பினர்தான்!! எனப் பலமுறை கதறியிருக்கிறார். நாட்டில் படித்த வகுப்பார் யாரென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. அல்லாமலும், பெல்காம் காங்கிரஸின் அக்கிராசனப் பிரசங்கத்தில் இந்தியாவுக்கு பிரிட்டீஷார் செய்த கெடுதியை விட பார்ப்பனர்கள் செய்த கெடுதி குறைவானதல்லவென்று மகாத்மாவே சொல்லியிருக்கிறார். ஆதலால் நமது நாடு முன்னேற்றமடையவோ, மக்கள் யாவரும் சமம் என்னும் உணர்ச்சி அடையவோ, எல்லோரும் சமத்துவத்துடன் வாழவோ, நம்மால் ஏற்படுத்தப்படும் இயக்கம், தங்கள் சூழ்ச்சியால் பொது மக்களை ஏமாற்றி தங்கள் மாயவலையில் கட்டுப்படுத்தி எதற்கும் தாங்களே முன்னணியிலிருந்து கொண்டு எதையும் தங்கள் சௌகரியத்துக்கு உபயோகப்படக்கூடிய மாதிரியில் திருப்பிக் கொள்ளும் நயவஞ்சகர்களான சுயநல வகுப்பார் கையில் சிக்காமல் தப்ப வழி தேட வேண்டும். அங்கனம் நாம் வழி தேடா விட்டால் நம் விடுதலைக்கென ஆரம்பிக்கப்படும் எந்த இயக்கமும், அதற்காக நம்மால் செய்யப்படும் எவ்வித தியாகமும், அனுபவிக்கப்படும் எவ்வித கஷ்டமும் பயன்தராததோடு இப்பொழுது நாமிருக் கும் நிலையிலும் இன்னும் கீழிறங்க உதவியாகிவிடும். ஆகையால் வரப்போகும் சட்டசபை முதலிய தேர்தல்களில் காங்கிரசென்றோ சுயராஜ்ய மென்றோ தேசமென்றோ பார்ப்பனரின் மாய்கையில் விழுந்து அக் கூட்டத் தாருக்கு நமது ஓட்டுகளைக் கொடுத்து ஏமாந்து போகாமலிருக் கும்படி நாம் எச்சரிக்கை செய்கிறோம். தென்னாட்டில் பொதுவாக இக்கூட்டத்தாரை நீக்கிய பொது ஜனங்களுக்கு பார்ப்பனரல்லாதார் என்ற பெயர் வழங்கப் பட்டு வருகிறது. முக்கியமாக இதில் கிறிஸ்துவர்கள், முகமதியர்கள், ஆங்கிலோ - இந்தியர் முதலிய இந்துக்களல்லாதவர்களும் பார்ப்பனரல்லாத வர்களே. இந்துக்களுக்குள்ளும் பார்ப்பனர் நீங்கிய மற்றவர்கள் பார்ப்பனர் களால்



RangaRakes tamilnavarasam.com

ஏற்படுத்தப்பட்ட பல ஜாதிப் பெயர்கள் சொல்லிக் கொள்ளப்பட்டா லும் அவர்களும் பார்ப்பனரல்லாதவர்களே. அல்லாமலும் தீண்டாதாரெனக் கூறி தொடக்கூடாதவர்கள், பார்க்கக் கூடாதவர்கள் என்று தள்ளி வைத்திருக் கும் ஒரு பெரும் கூட்டத்தாரும் பார்ப்பனரல்லாதவர்களே. இவர்கள் யாரும் நாம் மேற்சொன்ன பார்ப்பனர்களின் மாயவலையினின்றும் தப்பி சுய மரியாதையுடன் வாழ வேண்டுமானால், தங்களுக்குள் ஏற்பட்டிருக் கும் சிறு சிறு வகுப்பு வித்தியாசங்களையும் பொருளற்ற ராஜீய அபிப்பிராய வித்தியாசங்களையும் மறந்து விடுவதோடு தங்கள் சுய நன்மைக்காக பார்ப்பனர்களுக்கு ஒற்றர்களாகவும், காட்டிக் கொடுப்பவர்களாகவும் இருக் கும் சிறுமைக் குணங்களை விட்டு எல்லோரும் முன்னுக்கு வர வேண்டு மென்ற எண்ணத்துடன், சூழ்ச்சியின்றியும் துவேஷமின்றியும் மனப்பூர்வ மாக ஒன்றுபட்டு பார்ப்பனரல்லாதாருக்கே எல்லாப் பார்ப்பனரல்லாதாரும் கண்டிப்பாய் தங்களது ஓட்டைக் கொடுக்க வேண்டியது அவரவர்களின் சுயமரியாதை தர்மமென்றே சொல்லுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 22.08.1926**



# திரு. சீனிவாசய்யங்காரின் தைரியம்

திருவாளர் எஸ். சீனிவாசய்யங்கார் அவர்கள் தேவஸ்தான சட்டத் தைப் பற்றி எழுதும்போது ‘பார்ப்பனரல்லாத காங்கிரஸ்காரர்கள் தேவஸ்தான சட்டத்தை ஆதரிப்பதாக’ மனப்பூர்த்தியாய் வேண்டுமென்றே இல்லாத காரியத்தைச் சொல்லுகிறார். திரு.சீனிவாசய்யங்காருக்கு பொய் சொல்லு வதிலும் மறுபடியும் அதை மறுத்து இல்லை என்று சொல்லுவதிலும் அனுப வம் அதிகமாகி அதன் பலனாய் எவ்வளவு திருப்பாட்டு கிடைத்தபோதிலும் அதை ஏற்று ஏற்று அவர் மானம் நன்றாய் மரத்துப் போய்விட்டது. திருவாளர் கள் மாளவியா, ஜெயக்கர், கெல்கர், நரசிம்மராஜு, இராமலிங்க செட்டியார், ஆந்திர தேசத்து தேசீயப் பத்திரிகைகள் முதலிய பிரபல கனவான்கள் எல்லோரிடமும் திரு.சீனிவாசய்யங்கார் சொல்லியவற்றையெல்லாம் வெகு தைரியமாய் இல்லையென்று ஒரே அடியாய் சொல்லிவிட்டார். பத்திரிக் கைகள் பெரும்பாலும் பார்ப்பன ஆதிக்கம் உடையவைகளாகவே இருந்து விட்டதால் அவைகள் இவற்றைப்பற்றி ஒன்றும் எழுதாமல் திரு. அய்யங்கார் புளுகுக்கு ஆதரவளித்து வருகின்றன. சில பார்ப்பனரல்லாத பத்திரிகைகளும் நெஞ்சில் உரம் இல்லாததால் இவற்றைப் பற்றி ஒன்றும் எழுதாமல் தந்திரமாய் இருந்து விட்டன. இதன் பலனாய் திரு. அய்யங் காருக்கு பொய் சொல்லுகிற விஷயத்தில் வரவர தைரியம் அதிகமாகி கொஞ்சம்கூட மானம் வெட்கம் பயம் என்பது அடியோடு இல்லாமல் போய் இப்போது தேவஸ்தான சட்டத்தை பார்ப்பனரல்லாத காங்கிரஸ்வாதிகள் ஆக்ஷேபிக்கிறார்கள் என்று எழுதியிருக்கிறார். அப்படியானால் அவர்கள் பெயர் என்ன? எப்போது ஆதரித்தார்கள்? பார்ப்பனரல்லாத காங்கிரஸ் மெம்பர்களான திருவாளர்கள் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி.கலியாணசுந்தர முதலியார், தண்டபாணி பிள்ளை, எஸ்.இராமநாதன் முதலிய பழய கனவான் களும், காங்கிரசுக்காக தியாகம் செய்தவர் எல்லாம் தேவஸ்தான சட்டத்தை ஆதரிக்கும்போது நமது ஸ்ரீமான் அய்யங்காருக்கு இச்சட்டத்தை ஆக்ஷேபிக்க கிடைத்த காங்கிரஸ் மெம்பர்கள் யார் என்பதை பொது ஜனங்களுக்குத் தெரியப் படுத்தினால் கண்ணியமாயிருக்கும். அஃதில்லாமல் வக்கீல்வாதம் பேசுவது போல் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் பொய் பேசுவது எவ்வளவு மோசமான காரியம் என்பதை உணரும் வாசகர்கள்தான் புத்தி சொல்ல வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

சென்ற இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் ஜஸ்டிஸ் கட்சிக் காரர்கள் "யோக்கியமுள்ள பார்ப்பனரல்லாதார் யாரும் காங்கிரசில் இல்லை" என்று சொல்லும்போது அதற்கு மறுப்பாக திரு.சீனிவாசய்யங்கார் கடற் கரையில் பேசும்போது காங்கிரசில் பார்ப்பனரல்லாதார் இல்லை என்று ஜஸ்டிஸ் கட்சியார் சொல்வது தப்பு என்றும் பார்ப்பனரல்லாதாரின் உண்மை யான தலைவர்களாகிய திருவாளர்கள் கலியாணசுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு போன்றவர்களெல்லாம் இருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களின் எழுத்துக்களையும் பிரசங்கங்களையும் படித்துக்காட்டி பாமர ஜனங்களைத் திருப்தி செய்தார்கள். ஆனால் இப்போது அவர்கள் மாறுபட்ட அபிப்பிராயங் கொண்டதும் நமது திரு. அய்யங்கார் காங்கிரசில் வேறு பார்ப்பனரல்லாதார் இருப்பதாகச் சொல்ல வந்து விட்டார். அது யாரை நினைத் துக் கொண்டு சொல்லுகிறாரோ தெரியவில்லை. ஒரு சமயம் திருவாளர்கள் ஜெயவேலு, பாவலர், மயிலை இரத்தினசபாபதி முதலியார், ஜனாப்கள் ஷாபி முகமது, ஹமீத்கான் ஆகிய இவர்களை நினைத்துக் கொண்டு சொல்லு கிறாரோ அல்லது இன்னும் யாரையாவது தன்னுடைய டிக்கட் பாக்கட்டில் வைத்துக் கொண்டிருக்கிறாரோ தெரியவில்லை. இந்தப் பிரபு இவ்வளவும் போதாமல் அஸ்ஸாம் காங்கிரசுக்குத் தலைவராகப் போகிறார். பார்ப்பன சக்தி எவ்வளவு இருக்கிறது என்பதை இப்போதாவது தமிழ் மக்கள் உணர்வார்களா?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 22.08.1926**



# "விதவா விவாக விளக்கம்"

பழுத்த ஞானமும் நீடிய அனுபவமும் கொண்ட அறிஞர் திருசிரபுரம் திருவாளர் சி.பி.இராஜகோபால் நாயுடு அவர்கள் தாம் ஆக்கிய விதவா விவாக விளக்கம் என்னும் புத்தக அச்சுப் பிரதியை அனுப்பி எனது அபிப் பிராயத்தை எழுதுமாறு எழுதியிருந்தார். விதவா விவாகத்தைப் பற்றி நான் தீவிரக் கருத்துக் கொண்டவனேயாகிலும் போதிய அமயமும் அவகாசமும் வாய்த்திலாமையான் அஃதினை ஊன்றிப்படித்து விரைவில் எனது கருத்தினை வெளியிடவியலாது போயிற்று. பிறகு அப் புத்தகம் முடிவு பெற்று புத்தக ரூபமாய்க் கிடைக்கப் பெற்றேன். அஃதினை அமைதியுடன் படித்து எமக்குத் தோன்றிய சில கருத்துக்களை எழுத முற்பட்டேன்.

இந்திய நாட்டின் ஆளுகை உரிமை இந்தியருக்கே கிடைக்க வேண்டுமென அரசியல் சீர்திருத்தக்காரர்களும், இந்திய மக்களுக்குள் ளிருக்கும் வகுப்புப் பிரிவினையும் ஜாதி வேற்றுமையும் தொலைய வேண்டுமென்பதாக சமூக சீர்திருத்தக்காரர்களும் போராடுகிறார்களேயன்றி பெண் மக்களுள் ஒரு பகுதியார் அழிந்து வருவதை பாராமுகமாகவே பார்த்து வருகின்றனர். (இயற்கை தேவியார்) சிருஷ்டிக் கர்த்தா, மக்கட் படைப்பில டங்கிய ஆண் பெண்களை ஏற்றத் தாழ்வுடன் படைக்கவில்லை யென்பதை அறிவுடைய உலகம் ஏற்கும். அங்க அமைப்பிலன்றி அறிவின் பெருக்கிலோ வீரத்தின் மாண்பிலோ ஆண் பெண்களுக்குள் ஏற்றத் தாழ் வான வித்தியாசம் காண இயலுமோ? இயலவே இயலாது. ஆடவரிலும் சரி பெண்டிரிலும் சரி, முறையே அறிவாளிகளும், ஆண்மையுடையோரும் அறிவிலிகளும், பேடிகளும் உண்டு. இவ்வாறிருக்க, திமிர் படைத்த இந்த ஆண் உலகம் சாந்த குணபூஷணமான பெண்ணுலகைத் தாழ்த்தி அடிமைப்படுத்தி வருதல் முறையும் தர்மமுமான செயலாகாது.

ஹிந்து மத ஆண் உலகம் தங்களது பெண் உலகத்தின் மாட்டு பூண்டொழுகும் கொடுமைச் செயல்கள் பலவற்றிற் இங்கு நாம் விதவை களைப் பற்றி மட்டும் கவனிக்க வேண்டியுளது.

உலக இன்பத்தை நுகர்ந்து அலுத்துப் போயிருக்கும் பழுத்த கிழவனே யாயினும், தன் மனைவியார் இறந்து பட்டவுடன் மறுமணம் புரிய முயலுகின்றான். அதுவும் வனப்பு மிகுந்த - எழில் பொருந்திய இளஞ் சகோதரிகளையே தன் மணத்திற்குத் தேர்ந்தெடுக்கின்றான். ஆயின் ஓர்



RangaRakes tamilnavarasam.com

பெண் மகள் தன் கொழுநனை இழந்துவிட்டால், அவள் உலக இன்பத் தையே சுவைத்தறியாதவளாயிருப்பினும் - தன் ஆயுட்கால முற்றும் அந்தோ! தன் இயற்கைக் கட்புலனை இறுக மூடி, மனம் நொந்து, வருந்தி மடிய நிபந்தனை ஏற்பட்டு விடுகிறது. என்னே அநியாயம்!

ஹிந்து சகோதரர்கள் இவ்வாறு தங்கள் சமூகம் அநியாயமாய் அழிந்து வருவதை பார்த்துக் கொண்டு வருவது பெரும் பாபகரமான செயலாகும்.

முன்நாளில் தன் கணவனைப் பறிகொடுத்த மனைவியும் உடன் கட்டையேறுதல் வழக்கமாயிருந்தது. இக்கொடிய வழக்கத்தை அக் காலத் தில் ஆங்கிலோ இந்திய வியாபாரக் கூட்டத்தின் தலைவராயிருந்த வாரன் ஹேஸ் டிங்ஸும், சுவாமி தயானந்த சரஸ்வதி போன்ற இந்திய நாட்டு அறிவா ளிகளும் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியால் நிறுத்தப்பட்டது. உடன் கட்டை யேறுதலை நிறுத்துதற்காகப் போராடிய அக்காலத்திலும் ஆச்சாரமே அழிந்து போவதாகவும் மதமே கெட்டுப் போவதாகவும் பெருங்கிளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் நாளடைவில் அக் கூக்குரலும் அடங்கி 'ஸககமனம்' என்னும் உடன்கட்டையேறுதலான கொலை வழக்க மும் அறவே மறைந்தது.

இதுபோழ்து நம் நாட்டில் விதவைகள் மறுமணம் செய்து கொள்ளலா காதென்னும் வழக்கமிருப்பது பாரபட்சம் நிரம்பிய கொடுமையான செய லாகும். தன் மனைவியை இழந்த கிழவன் மறுமணம் செய்து கொள்ளலா மென்றும் தன் கணவனை இழந்து மகப் பேறு பெறாத இளமங்கை மறுமணம் செய்து கொள்ளலாகாதென்றும் கூறுவது நடுநிலைமை கொண்ட அறச் செயலாகா.

விதவைகள் மறுமணம் செய்து கொள்ளும் வழக்கம் கற்புக்குப் பங்கம் விளைப்பதாகும் எனக் கூறினால் அது பொருந்தாது. விதவைகளை மறுமணம் செய்விக்காதிருத்தலினாலேயே அவர்கள் கற்பழிந்து மாய் கின்றனர். காமச்சுவை கருதும் இளங் கைம்பெண்கள் படிற்றொழுக்கத்தில் வீழ்ந்து, அதனால் கருப்பந்தரித்து இரண்டோர் திங்களுள் சிசுஹத்தி தோஷத்திற்கு உள்ளாகின்றார்கள். இப்பாவம் யாரைச் சாரும்? விதவை களை மறுமணம் செய்து கொள்ளல் ஆகாதென்று கட்டாயப்படுத்தி வரும் பெற்றோர்களையே சாரும். மறுமணம் விரும்பாத பெண்களைத் தவிர்த்து ஏனைய கைம் பெண்களுக்கு மறுமணம் செய்வித்தலே நன்று.

விதவைகளின் கலியாணத்தைப் பற்றி இவ்வாறு எழுதும் நான் எழுத்தளவோடும் சொல்லளவோடும் ஆதரிக்கின்றேனா அன்றி செய்கை யிலும் ஆதரித்துள்ளேனா என்ற ஐயம் அன்பர்களுக்குத் தோன்றலாம். இதன் பொருட்டேனும் எனது கருத்தை பிரதிபலிக்கும் செய்கையைக் கூற விரும்புகிறேன்.

நான் கர்நாடக பலிஜவார் வகுப்பைச் சேர்ந்தவன். எனது வகுப்பின் பெண்மக்கள் முக்காடுடன் கோஷாவாக இருக்க வேண்டியவர்களெனவும்



விதவா விவாகத்தை அனுமதிக்கப்படாத வகுப்பினரெனவும் வழங்கப்படு பவர்கள். நான் பிறந்த குடும்பமோ அளவுக்கு மிஞ்சிய ஆசாரத்தையும் வைணவ சம்பிரதாயத்தையும் கடுமையாய் ஆதரிக்கும் குடும்பம். இப்படி யிருந்த போதிலும் என்னுடைய 7-வது வயதிலிருந்தே மக்களில் உயர்வு, தாழ்வு கற்பித்தலையும் ஒருவர் தொட்டதை மற்றொருவர் சாப்பிடலாகா தெனச் சொல்வதையும் நான் பரிகாசம் செய்து வந்ததோடு யாரையும் தொடுவதற்கும் எவர் தொட்டதையும் சாப்பிடுவதற்கும் நான் சிறிதும் பின் வாங்கியதே கிடையாது. என்னை, இளம் போதிலிருந்தே எங்கள் வீட்டு ஆக்குப் புரைக்குள் செல்ல அனுமதிப்பதில்லை. நான் தொட்ட சொம்பை எனது தகப்பனார் தவிர மற்றையோர் கழுவாமல் உபயோகப்படுத்த மாட்டார் கள். எங்கள் குடும்ப ஆச்சார அனுஷ்டானங்களைப் பார்த்து பொறாமைப் படுபவர்கள் என்னைப் பார்த்து சாந்தியடைந்து விடுவார்கள். ''நாயக்கருக்கு அவர்கள் ஆச்சாரத்திற்கேற்றாற் போல்தான் ஒரு பிள்ளை என்றாலும் பிள்ளை நவமணியாய்ப் பிறந்திருக்கிறது'' என்று சொல்லுவார்கள். என்னு டைய 16-வது வயதிலேயே பெண் மக்களை தனித்த முறையில் பழக்கு வதும் அவர்களுக்கென சில கட்டுத் திட்டங்களை ஏற்பாடு செய்வதையும் ஆண் மக்களின் அகம்பாவம் என்று நினைத்து வந்தேன்.

இவ்வாறாக, என் தங்கை தனது இளம் வயதிலேயே ஓர் பெண் குழந்தையையும், ஓர் ஆண் குழந்தையையும் விடுத்து விண்ணுற்றாள். அவற்றுள் ('அம்மாயி' என்றழைக்கப் பெறும்) அப் பெண் குழந்தைக்கு அதன் 10-வது வயதில் சிறந்த செல்வாக்கோடு ஒரு செல்லக் கலியாணம் செய்து வைத்தோம். கலியாணம் செய்த 60-ம் நாள் அப்பெண்ணின் கணவன் என்னும் 13 -வயதுள்ள சிறு பையன் பகல் 2 மணிக்கு விஷபேதி யால் விண்ணுற்றான். அவன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்டதும் அப்பெண் குழந்தை என்னிடம் ஓடி வந்து, ''மாமா! எனக்குக் கலியாணம் செய்து வை என்று நான் உன்னைக் கேட்டேனா? இப்படி என் தலையில் கல்லைப் போட்டாயே'' என்று ஓவென்று அலறிய சத்தத்தோடு என் காலடி யில் மண்டையில் காயமுண்டாகும்படி திடீரென்று விழுந்தது. துக்கம் விசாரிப்பதற்காக அங்கு வந்திருந்த ஆண் பெண் உள்பட சுமார் 600,700 பேர்கள் அக்குழந்தையையும் என்னையும் பார்த்த வண்ணமாய் கண்களி லிருந்து தாரை தாரையாய் நீர் வடித்தனர். எனக்கும் அடக்கவொண்ணா அழுகை வந்துவிட்டது. ஆனால் கீழே கிடந்த அந்தக் குழந்தையை நான் கையைப் பிடித்து தூக்கும் போதே அதற்கு மறுபடியும் கலியாணம் செய்து விடுவது என்கிற உறுதியுடனேயே தூக்கினேன்.

பிறகு அந்த பெண் பக்குவமடைந்த ஒரு வருடத்திற்குப் பின் அதற்கு கலியாணம் செய்ய நானும் எனது மைத்துனரும் முயற்சி செய்தோம். இச் செய்தி எனது பெற்றோருக்கும் மற்றோருக்கும் எட்டவே அவர்கள் இதை தங்கள் வகுப்புக்கு ஒரு பெரிய ஆபத்து வந்துவிட்டது போலக் கருதி



RangaRakes tamilnavarasam.com

பெரிதும் கவலைக்குள்ளானவர்களாகி நாங்கள் பார்த்து வைத்த இரண்டொரு மாப்பிள்ளைகளையும் கலைத்தார்கள். முடிவில் எனது மைத்துனரின் இரண்டாந்தாரம் மைத்துனரைப் பிடித்து சரிசெய்து, எவரும் அறியாவண்ணம் பெண்ணையும் மாப்பிள்ளையையும் சிதம்பரத்திற்கழைத் துச் சென்று அங்கு கோயிலில் கலியாணம் செய்வித்து ஊருக்குக் கூட்டி வந்தனர். ஆனால் நான் அங்கு போகாமல் ஊரிலேயே இருக்க வேண்டிய தாயிற்று. ஏனெனில், அவர்கள் போயுள்ள செய்தியை சுற்றத்தார் அறிந்தால் ஏதாவது மாப்பிள்ளையை தடைசெய்து விடுவார்களோ என்கிற பயத்தால், நான் ஊரிலிருந்தால் கலியா ணத்திற்காக வெளியூருக்குப் போயிருக்கிறார்க ளெனச் சந்தேகமிருக்காது என்கிற எண்ணங்கொண்டேயாகும். இக் கலியா ணத்தின் பலனாக இரு, மூன்று வருட காலம் பந்துக்களுக்குள் வேற்றுமை யும் பிளவும் ஏற்பட்டு ஜாதிக் கட்டுப்பாடு இருந்து பிறகு அனைத்தும் சரிபட்டுப் போயின.

பெண்ணும் மாப்பிள்ளையும் ஒத்து வாழ்ந்து ஓர் ஆண் மகவைப் பெற்றனர். ஆனால் துர்ரதிஷ்டவசமாக கொஞ்ச நாளையில் அந்த இரண்டா வது புருஷனும் இறந்துவிட்டான் . இப்பொழுது தாயும் மகனுமே க்ஷேமமா யிருக்கிறார்கள். இன்னமும் எனது வகுப்பில் 13 வயதுக்குக் கீழ்ப்பட்ட விதவைக் குழந்தைகள் சிலர் இருக்கின்றனர். பாவம் அக் குழந்தைகளை அவர்களின் பெற்றோர்கள் தீண்டாதார் போல் கருதி நடத்துவதை தினமும் பார்க்க பாவமாயிருக்கிறது.

எவ்வளவோ இடருக்குள்ளாகப்பட்டு அக் கலியாணத்தை முடித்து வைத்தோம். ஆனால் கடைசியில் அந்த இரண்டாவது கணவனும் மரிக்கவே விதவா விவாக விஷயத்தில் தீவிரமாகத்தலையிட வேண்டுமென எனக் கிருந்த கருத்துக்கு பெரிய முட்டுக்கட்டை போட்டது போலாயிற்று.

விதவைகளின் விஷயம் நினைவிற்கு வரும் போதும் நேரில் காண நேரும் போதும், உலக இயற்கை எளியாரை வலியார் அடக்கி ஆண்டு ஹிம் சிப்பதல்லாமல் வேறல்லவென்றே முடிவு செய்வேன். நமது ஹிந்து சமூகம் எந்தக் காலத்தில் எவருடைய ஆதிக்கத்தில் கட்டப்பட்டதோ, அன்றி மத மில்லாமல் முறையில்லாமலிருந்து இயற்கையாகவே ஏதாவது கட்டுப்பாடு கள் ஏற்பட்டு அவற்றை வலியவர்கள் தங்கள் தங்கள் சுயநலத்திற்குத் தக்கபடி திருப்பிக் கொண்டார்களோ என நினைக்கும்படி இருந்தாலும் பொதுவாய் விதவைத் தன்மை நிலைத்திருக்கும் காரணத்தினாலேயே ஹிந்து மதமும் ஹிந்து சமூகமும் ஒரு காலத்தில் அடியோடு அழிந்து போனாலும் போகு மென்பதே எனது முடிவான கருத்து.

அரசியல் என்றும் சமூகவியல் என்றும் ஜனாச்சார சீர்திருத்தவியல் என்றும் பெண்மக்கள் முன்னேற்றமென்றும் சொல்லிக் கொண்டிருக்கும் மக்களில் பெரும்பான்மையோர் இவற்றைத் தங்களது வாழ்வுக்கும் கீர்த்திக்



RangaRakes

கும் சுயநலத்திற்கும் உபயோகப்படுத்திக் கொள்ளுவோராக இருக்கிறார் களே தவிர உண்மையில் அக்கருத்துக் கொண்டு உழைப்பவர்கள் அரிதினுமரிதாகி விட்டனர் என்று சொல்லுவதை மன்னிக்க வேண்டுகிறேன். அன்றியும் இவ் விதத்துறைகளிலும் சீர்திருத்தங்களிலும் பாடுபடுபவர் களாய்க் காணப்படுவோரில் பெரும்பாலோர் தாங்கள் செய்வது சரியென்ற தீர்மானம் தங்களுக்கேயில்லாமல் உலக மெய்ப்புக்குச் செய்கிறவர்களாகவே இருக்கிறார்கள். பெண்மக்கள் முன்னேற்றத்தைப் பற்றி பேசுவோர் தங்கள் வீட்டுப் பெண்களைப் படுதாவுக்குள் வைத்துக் கொண்டும், விதவா விவாகத்தைப் பற்றி பேசுவோர் தங்கள் குடும்பங்களில் உள்ள விதவை களை காவல் போட்டு விதவைத் தன்மையைக் காப்பாற்றிக் கொண்டும் இருக்கிறார்களே தவிர உண்மையில் ஒரு சிறிதும் தாங்கள் நடவடிக்கையில் காட்டுவதில்லை. இதன் காரணம் என்னவெனப் பார்க்கும் போது, பெண் மக்கள் என்று நினைக்கும் போதே அவர்கள் அடிமை, நமக்கடங்கினவர்கள், கட்டுப்படுத்தி வைக்கப்பட வேண்டியவர்கள் என்கிற உணர்ச்சி ஏற்படுகிறது என்றே நினைக்கிறோம். இதனாலேயே அவர்களை விலங்குகளைப்போல் நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு சுதந்திரங் கொடுப்பது என்கிற விஷயத் தை நினைக்கும் போது செய்யக்கூடாத ஒரு பெரிய குற்றமான செய்கை யைச் செய்ய நினைக்கிறது போலவே தோன்றுகிறது. அதனால் மனித சமூகத்தில் சரி பகுதியான எண்ணிக்கைக்கு பிறவியிலேயே சுதந்திரம் இல்லை என்பது தானே இதன் பொருள்? ஆடவருக்கு பெண்டிரை விட சிறிது வலிமை அதிகமாக ஏற்பட்ட குற்றந்தானே இம்மாதிரி ஒரு சரி சமமான சமூகத்தை சுதந்திரமில்லாமல் அடிமைப்படுத்தும் கொடுமையை அனுஷ்டிக்க வேண்டியதாயிற்று. இந்தத் தத்துவமே வரிசைக்கிரமமாக மேலோங்கி எளியோரை வலியோரால் அடிமையாக்கச் செய்கிறது.

உலகில் மனித வர்க்கத்திற்கு அடிமைத் தத்துவம் ஒழிய வேண்டு மானால் பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும் கொடுமையும் ஒழிய வேண்டும். இது ஒழிந்த நிலையே சமத்துவம் சுதந்திரம் என்னும் முளை முளைக்கும் இடம்.

உலகிலேயே மிகப் பெரிய சீர்திருத்தக்காரரான மகாத்மா காந்தி யடிகள் இந்து விதவைகளைப் பற்றி அநேக சந்தர்ப்பங்களில் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார். அவற்றுள் சென்ற ஆண்டு 'நவஜீவன்' பத்திரி கையில் மகாத்மா எழுதியிருக்கும் விஷயத்தைக் கவனித்தால் விதவை களின் விடுதலை சம்பந்தமாய் மகாத்மா எவ்வளவு தூரம் உழைக்கிறார் என்பது புலனாகும். அக்கட்டுரையின் ஒரு சில பாகமாவது:-

> "பால்ய விதவைகளைக் கட்டாயப்படுத்தி வைத்திருப்பது போன்று இயற்கைக்கு விரோதமான பொருள் உலகில் வேறொன்றும் இல்லை என் பது எனது திடமான நம்பிக்கை. விதவைத் தன்மை என்பது எவ்விதத்திலும் ஒரு தர்மமாகா. பலாத்காரத்தினால் அநுஷ்



tamilnavarasam.com

டிக்கச் செய்யும் எவ்விதச் செயலும் அறமாகாது. பலாத்காரத்தினால் நடத்தும் விதவை வாழ்வு பாவமானது. பதினைந்து வயதுள்ள ஒரு பால்ய விதவை தானாகவே விதவை வாழ்வைக் கொண்டிருக்கிறாள் என்று சொல்லுவது, அவ்விதமாகச் சொல்லுவோரின் கொடூரச் சுபாவத்தையும் அறியாமையையுமே விளக்குகிறது''

என்று எழுதிவிட்டு விதவைகள் மறுமணம் செய்துகொள்ள வேண்டு மென்பதாக தன் உள்ளன்போடும் ஆவேசக் கிளர்ச்சியோடும் மகாத்மா கூறிய மணி வாசகங்களில் ஒரு சிலவற்றைக் கவனிப்போம்.

"......அமைதியுடன் தங்களுடைய துக்கத்தைச் சகித்துக் கொண்டு தங்களுடைய உண்மையான கருத்தைத் தங்களின் பெற் றோர் அல்லது போஷகர்களான ஸ்திரீ புருஷர்களிடம் தைரிய மாய்ச் சொல்லிவிட வேண்டும். அவர்கள் அதை கவனிக்கா விட்டால் தாங்களே ஒரு யோக்கியமான புருஷன் கிடைத்தால் உடனே விவாகம் செய்து கொள்ளட்டும். அதுவரையில் யோக்கிய மான புருஷனை அடைய தமயந்தி சாவித்ரி முதலியவர்கள் போல் தவம் செய்வதே ஏற்ற வழியாகும். . . . . . . . விதவைகளின் போஷகர்கள் இவற்றைச் சரிவரக் கவனியாவிடில் பின்னால் பச்சாதாபப் படுவார் கள். ஏனெனில் நான் ஒவ்வோரிடத்திலும் துராசாரமே பார்த்துக் கொண்டு வருகிறேன். விதவைகளைப் பலாத்காரமாய் தடுத்து விதவைத்தன்மையை அநுஷ்டிக்கச் செய்வதால் விதவை களுக்கா வது, குடும்பத்திற்காவது அல்லது விதவா தர்மத்திற்காவது மேன்மை உண்டாகவே மாட்டாது. இம்மூன்று தத்துவங்களும் நசித்து வருவதை என் கண்களினாலேயே பார்த்துக் கொண்டிருக் கிறேன். பால்ய விதவைகளே! நீங்களும் உங்களைப் பலவந்தப் படுத்தி விதவைகளாக வைத்திருக்கும் ஸ்திரீ புருஷ வர்க்கங்களும் இதை அறியுமாக''

இவ்வாறாக, 1921 - ம் வருடத்திய ஜனசங்கியைப்படி ஹிந்து கைம் பெண்களின் தொகையினை நோக்குகையில் ஐயகோ! என் நெஞ்சு துடிக்கிறது!

| | |
|---|---|
| 1 வயதுள்ள விதவைகள் | 597 |
| 1 முதல் 2 வயதுள்ள விதவைகள் | 494 |
| 2 முதல் 3 வயதுள்ள விதவைகள் | 1,257 |
| 3 முதல் 4 வயதுள்ள விதவைகள் | 2,837 |
| 4 முதல் 5 வயதுள்ள விதவைகள் | 6,707 |
| ஆக மொத்தம் | 11,892 |
| 5 முதல் 10 வயதுள்ள விதவைகள் | 85,037 |





| | |
|---|---|
| 10 முதல் 15 வயதுள்ள விதவைகள் | 232,147 |
| 15 முதல் 20 வயதுள்ள விதவைகள் | 396,172 |
| 20 முதல் 25 வயதுள்ள விதவைகள் | 742,820 |
| 25 முதல் 30 வயதுள்ள விதவைகள் | 11,63,720 |
| ஆக மொத்த விதவைகள் | 26,31,788 |

அல்லாமலும் இத்தகைய விதவைத் தன்மையானது பிரஜா உற்பத் திக்கு பேரிடராயிருக்கிறது. நமது ஹிந்து மதத்திலிருந்து எவரேனும் இரண் டொருவரை பிற மதத்திற்கு மாற்றப்பட்டால் நம் மக்களுக்கு எவ்வளவோ துன்பம் நேரிட்டுவிட்டதாகக் கருதி பரிதாபப்படுகிறார்கள். இதன் காரணம் நமது மதத்தினரில் இருவர் குறைந்து விட்டதால் ஹிந்து சமூகத்திற்கு கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டு விட்டது என்பதினாலேயன்றோ? அந்த இரண்டு நபருக்கு இவ்வளவு துக்கமும் துயரமும் ஏற்படுமானால் தற்காலம் நமது இந்திய நாட்டிலுள்ள இருபத்தாறு லட்சத்து முப்பத்தோராயிரத்து எழுநூற்று எண்பத்தெட்டு விதவைகளும் கலியாணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கை நடத்துவதாயிருந்தால் எத்துனை குழந்தைகள் பெறக் கூடும். சராசரி மொத்தத்தில் மூன்றில் இரு மடங்குப் பெண்கள் 2 வருடத்திற்கு ஒரு குழந்தை வீதம் பெறுவதாக வைத்துக்கொண்டாலும் தடவை ஒன்றுக்கு 87,726 குழந்தைகள் வீதம் வருடம் ஒன்றுக்கு 4,38,631 பிரஜா உற்பத்தியை நாம் கெடுத்துக் கொண்டு வருகிறோம். இது இரண்டொருவர் மதமாறுவதால் நஷ்டம் வந்து விட்டதாகக் கருதுவோருக்குப் புலப்படுவதில்லை. பால் மண மாறாத 5 வயதிற்குட்பட்ட இளங்குழந்தைகள் மட்டிலும் 11,892 பேர் இருக் கிறார்களென்பதையும் தன் பிறவிப் பயனையே நாடுதற்கில்லாது, இன்பந் துய்த்தற்கில்லாது, அடங்கி வைக்கப்பட்டிருக்கும் 15 வயதிற்குட்பட்ட கைம் பெண்கள் 2,32,147 பேர் இருக்கிறார்களென்பதையும் கேட்கவே என் குலை நடுங்குகிறது. இத்தகை படுமோசமான விதவைத் தன்மையை எந்த நாகரீக உலகம் ஏற்கும்?

விதவைகளின் கொடுமையை நீக்க ஒரு நூறு வருடங்களாக இராஜா ராம் மோகன்ராய், ஈஸ்வர சந்திர வித்யா சாகரர், கோலாப்பூர் மகாராஜா, சுரேந்திரநாத் பானர்ஜி முதலிய அறிஞர்கள் பாடுபட்டுழைத்தனர். இது போழ்தும் இத்தகைய சீர்திருத்தத் துறையில் பாஞ்சாலத் தலைவர்கள் பலர் இறங்கி உழைத்து வருகின்றனர்.

நமது நண்பர் திருசிரபுரம் திரு.சி.பி.இராஜகோபால நாயுடுகார் விதவை களை ரக்ஷிப்பது என்னும் பரோபகாரத் துறையில் இறங்கி, 'ஆச்சாரம்' 'வழக்கம்' என்று உளறும் வைதீகப் பைசாசங்களின் பலமான எதிர்ப்புக் கிடையே நுணுகிய ஆராய்ச்சியுடனும் அனுபவத்துடனும் ''விதவா விவாக

RangaRakes
tamilnavarasam.com

விளக்கம்” என்னும் புத்தகத்தை எழுதியிருக்கிறார். இதில் நம்நாட்டு மக்களுக்கு இருக்கும் கஷ்டமும் கொடுமையும், அவர்களால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்படும் அபகீர்த்தியையும், விதவைத் தன்மையைக் காப்பாற்றும் பொருட்டு பெரிய பெரிய இழிச்சொல்லையும் சகித்துக் கொண்டிருக்கும் சாதனையும், விதவைத் தன்மையைக் காப்பாற்றும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இவ்வித அபகீர்த்தி நேருகிறபடியால் இது உலக வழக்கம் என்று சமாதானப் படுத்திக்கொள்ளும் தன்மையும் எவ்வளவு தைரியமாயும் தெளிவாயும் அனுபவமாயும் தெரிவிக்கக் கூடுமோ அதற்கும் மேலாகவே அனைவரும் சரி என்று ஒப்புக்கொள்ளத்தக்க வண்ணம் விவரித்து எழுதியிருக்கிறார். இப் புத்தகத்தை வாசிப்பவர்கள் எவ்வளவுதான் ‘ஆச்சாரம்’, ‘பழக்கம்’, ‘வழக்கம்’ என்னும் மூடநம்பிக்கையில் ஈடுப்பட்டகல் நெஞ்சர்களா யிருந்தாலும் அவர்கள் மனதை இளக்கி விதவைகள் பால் கருணைக் காட்டும் படி செய்து விடுமாதலால், புத்தகம் சிறியதாயிருப்பினும் உலகிற்குப் பயன்படக் கூடிய வகையிலிருப்பதால் இதை பெரிய நூல் என்றே கூறவேண்டும். இப் புத்தகத்தால் திரு.நாயுடுகார் நம் நாட்டிற்குப் பெருந் தொண்டு செய்தவராகிறார். இது பற்றி திரு. நாயுடுகார் அவர்களுக்கு நமது நாடும் ஹிந்து மதமும் பெண்டீருலகமும் நன்றி செலுத்தப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

**குடி அரசு – நூல் மதிப்புரை – 22.08.1926**



# பார்ப்பனரின் வெடிகுண்டு

ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் கும்பகோணத்தில் பேசிய பேச்சைப் பற்றி 18.8.26– உ ‘சுதேசமித்திரன்’ தனது உப தலையங்கத்தில் ‘அபத்தப் பஞ்சாங்கம்’ என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீமான் இராமசாமி நாயக்கர் எழுத்தும் பிரசங்கங்களும் வரவர விபரீதமாயிருக்கிறது என்றும், நாயக்கருக்கு சீக்கிரத்தில் கவர்ன்மெண்டு அடிமை முத்திரை போடப்பட்டுவிடும் என்றும், நாயக்கர் பேசுகையில் எவ்வித காரணமில்லாமல் சிறை சென்றதற்கு விசனப்படுகிறேன் என்றும், பிராமண சூழ்ச்சி வலையில் அகப்பட்டுக் கொண்டேன் என்றும் சொன்னதாக எழுதி, இதன் மூலம் நாயக்கருக்கு அசட்டுப் பட்டம் ஏற்பட்டு விட்டதாகவும் நாயக்கரை ஒரு பிராமணனும் ஏமாற்றி சிறைக்கனுப்ப வில்லை என்றும் காங்கிரசினால்தான் பனகால் ராஜாவுக்கு மந்திரியானதென்றும் நாயக்கருக்கு ராஜீய உலகில் ஒரு முக்கிய ஸ்தானம் கிடைத்ததென்றும் அப்படி இருக்க, காங்கிரசை இகழ்வது மாதுரு துரோகமென்றும் எழுதுகிறான். இவற்றை நன்றாய் ஆராய்ந்து நாயக்கர் மாதுரு துரோகியா அல்லது ‘மித்திரன்’ கூட்டத்தார் மாதுரு காமியா என்பதை கவனிப்போம்.

இப்பார்ப்பன ‘மித்திரன்’ யோக்கியனாயும் பயங்காளியா யில்லாதவனாயுமிருந்திருந்தால் கும்பகோணத்தில் நாயக்கர் இரண்டரை மணி நேரம் பேசிய பேச்சை கொஞ்சமாவது எழுதியிருக்க வேண்டும். ‘மித்திரனே’ நாயக்கரைப் பற்றி எழுதுகையில் நாயக்கர் வெறும் ஆளல்ல, ராஜீய உலகத்தில் (எந்த விதத்திலோ) ஒரு முக்கிய ஸ்தானம் அடைந்தவர் என்று ஒப்புக்கொள்ளுகிறான். அப்படியிருக்க, அப்படிப்பட்டவர் பேசியதை பிரசுரிக்காமல் விட்டது எவ்வளவு அக்கிரமம் என்பதை வாசகர்களே உணர வேண்டும். நாயக்கர் ஜெயிலுக்குப் போனதைப் பற்றி சொன்ன வார்த்தைகள் என்னவென்றால் இந்த பார்ப்பனர்களை நம்பி சுயராஜ்யத்திற்கு என்று ஜெயிலுக்குப் போனது முட்டாள்தனமென்று உணருவதுடன் இப்படிப்பட்டவர்களை நம்பி ஜெயிலுக்குப் போனோமே, இப்போது அதன் பலன்கள் சுயராஜ்யத்திற்கு உதவாமல் பார்ப்பனராட்சிக்கு உதவுவதோடு பார்ப்பனரல்லாதாரின் அடிமைத் தனத்திற்கும் நிரந்தர தாழ்வுக்கும் உபயோகப்படும் படியாய் விட்டதே என்று வருத்தப்படுவதுடன் இக்காரியத்திற்கு நாமும் துணை நின்றோமே என்று நினைத்து வெட்கப்படவேண்டியதாயுமிருக்கிறது என்றே பேசினார். அல்லாமலும் இனியும் இந்த பார்ப்பன ஆதிக்க மிருக்கும்



RangaRakes tamilnavarasam.com

வரை சுயராஜ்யத்திற்கென்று ஜெயிலுக்குப் போவது பயித்தியக் காரத்தனமாய் முடியுமென்றே இன்னமும் சொல்லுகிறோம்.

ஏனெனில் ஸ்ரீமான்கள் நாயக்கர், நாயுடு முதலிய பல ஆயிரக் கணக்கான பேர்கள் நமது நாட்டில் ஜெயிலுக்குப் போனதை சொல்லிக் கொண்டு அதன் பலனை நமது பார்ப்பனரே அனுபவிக்கிறார்கள். தேச மக்களுக்கு அது கொஞ்சமும் உபயோகப்படாமலே செய்து விட்டார்கள். பார்ப்பன சூழ்ச்சி வலையில் அகப்பட்டுக் கொண்டேன் என்று சொல்ல வர வில்லை. பார்ப்பனர்களை நம்பினேன் அவர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்கள் என்றே சொன்னோம். ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்காரை யும், எ. ரெங்கசாமி அய்யங்காரையும், எஸ். சத்தியமூர்த்தி அய்யரையும் நாம் எப்பொழுதுமே நம்பவில்லை. அவர்களால் ஏமாந்ததாகவும் சொல்ல வில்லை. ஆனால் ஸ்ரீமான் சி.இராஜகோபாலாச்சாரியாரை நம்பினோம்; அவர் மோசம் செய்து விட்டார். அவரை நம்பி மோசம் போனோமே என்று தான் வருத்தப்பட்டோம். இதை மகாத்மா காந்தியிடமும் நேரில் சொன் னோம். இதற்காக 'மித்திரன்' நாயக்கர் ஏமாறுவதற்கு அவர் சிறு பிள்ளையா சிறுபிள்ளைத்தனமா? என்று எழுதியிருக்கிறான். நாயக்கர் சிறு பிள்ளையா? கிழவனா? என்பதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். ஏனெனில் நாயக்கர் மாத்திரம் பார்ப்பனர்களால் ஏமாறவில்லை. கோடிக்கணக்கான பார்ப்பனரல் லாத ஜனங்கள் ஏமாந்து போனார்கள்; ஏமாந்து போகிறார்கள்; இன்னமும் பார்ப்பனர்களை நம்பி ஏமாந்து கொண்டுதான் வருகிறார்கள். இவ்வளவும் போதாமல் **மகாத்மா காந்தியே இப்பார்ப்பனர்களை நம்பி ஏமாந்து போய்விட்டதோடு** "படித்தவர்களை நான் நம்பினேன் நம்பின அளவு பலனடைய வில்லை" என்றே சொல்லியிருக்கிறார். படித்தவர்கள் யார் என்று கூட சொல்ல வேண்டுமா?

நிற்க, ஜெயிலுக்குப் போவதில் இன்னமும் நமக்கு சலிப்பு ஏற்பட்டுப் போகவில்லை. பார்ப்பன ஆதிக்கத்திற்காக ஜெயிலுக்குப் போவது தப்பு என்று மாத்திரம் எண்ணுகிறோமே ஒழிய பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிப்ப தற்கு நாமும் நம் குடும்பமும் நண்பர்களும் இனியும் எத்தனை தடவையா னாலும் ஜெயிலுக்குப் போகக் காத்துக் கொண்டுதானிருக்கிறோம். சட்ட சபைத் தேர்தல்கள் முடிந்தவுடன் கண்டிப்பாய் அந்த பாக்கியம் கிடைக்கு மென்றே மனைவியார் சகிதம் சந்தோஷத்துடன் காத்துக்கொண்டே இருக்கி றோம். அதற்கு வேண்டியகாரியங்கள் நமது பார்ப்பனர்களால் வெகு நாளாக வே நடந்து வருவதையும் நாம் அறிவோம்.

தவிர காங்கிரசினால்தான் நமக்கு யோக்கியதை வந்ததாக 'மித்திரன்' எழுதுகிறான். காங்கிரசினால் நமக்கு யோக்கியதை வந்ததா? நம் போன்றவர் களால் காங்கிரசுக்கும் 'மித்திரன்' கூட்டத்தாராய இப்பார்ப்பனர்களுக்கும் யோக்கியதை வந்ததா? என்பதை வாசகர்களேதான் அறிய வேண்டும்.

நாயக்கர் காங்கிரசுக்கு வரும்போது காங்கிரசுக்கு நாட்டில் இருந்த



யோக்கியதை யாரும் அறியாததல்ல. யாரோ நான்கு படித்த பார்ப்பனர்க ளான அனாமதேயங்களும், அன்னக் காவடிகளும் அதில் சேர்ந்து பணம் சம்பாதித்து வந்தார்கள். அவைகளை வைத்துக்கொண்டு மாதம் 10 ரூபாய் கூட தங்கள் வக்கீல் உத்தியோகத்தில் சம்பாதிக்க முடியாமலிருந்தவர்கள் காங்கிரசில் சேர்ந்து, பத்திரிகைகள் போட்டு, வெறும் அபத்தப் பஞ்சாங்கத் தையே எழுதி அதன் பேரால் மாதம் 1000, 2000, 5000 ரூபாய் வீதம் நமது பொருளைக் கொள்ளை அடித்துக் கொண்டு வந்தார்கள். அதல்லாமலும் தாங்கள் காங்கிரசில் இருப்பதன் மூலம் சர்க்காருக்கு தேசத்தை காட்டிக் கொடுத்தும் தங்கள் பிள்ளை குட்டிகளுக்கு உத்தியோகம் சம்பாதித்து கொடுத்துக் கொண்டும் வந்தார்கள். இந்த மாதிரி காங்கிரசைப் பற்றி 100-க்கு 99 பேர் பார்ப்பனரல்லாதாருக்கு யாதொரு விஷயமும் தெரியாமலே இருந்தது.

இந்த நிலையில் இந்தக் கூட்டத்தாரை ஒழிக்க சர்க்காரார் அடக்கு முறைச் சட்டங்கள் போட்டதற்கும் ஜஸ்டிஸ் கட்சியார் உதைபோட ஆரம் பி த்ததற்கும் பயந்து கொண்டு மகாத்மாவையும் நம் போன்றவர்களையும் தஞ்சமடைந்து அதிலிருந்து தப்பினார்கள். இந்த நிலையில் நாயக்கர் போன்றவர்கள் காங்கிரசுக்குள் வரும்போது அவருடைய யோக்கியதையும் காங்கிரசுக் குப் போன பின்பு அவருடைய யோக்கியதையும் யோசித்துப் பார்த்தால் 'மித்திரனின்' கூட்டத்தாருக்கு யோக்கியதை கிடைத்ததா? நாயக் கருக்கு யோக்கியதை கிடைத்ததா? என்பது விளங்காமல் போகாது.

ஸ்ரீமான் நாயக்கர் காங்கிரசுக்கு வருமுன் வருஷம் 1000 ரூபாய் வரு மானவரி செலுத்தி வந்தார். பல பெரிய மில்லுகளுக்கு ஏஜண்டாக யிருந்தார். சொந்தத்தில் யந்திரசாலைகள் வைத்து நடத்தி வந்தார். இப்போது அவருக்கு வியாபாரத்தில் ஒரு காசுகூட வருமானவரி இல்லை. அவர் இருந்த ஏஜண்டு வேலைகளுக்கு அவருக்குப் பின்னால் வந்தவர்கள் 4 லட்சம் 5 லட்சக் கணக்கான பணம் சம்பாதித்திருக்கிறார்கள். ஒத்துழையாமையின் போது பதினாயிரக்கணக்கான ரூபாய் பத்திரங்கள் ஆதாரங்கள் வாய்தா கடந்து நஷ்டமேற்பட்டது. உதாரணமாக ஒரு முப்பது ஆயிரம் ரூபாய் பத்திரம் சம்பந்தமான விவகாரத்தில் வழக்காடாமல் அப்படியே அடியோடு விட்டு விடப்பட்டது. அப்போதைய காங்கிரஸ் பிரசிடெண்டான ஸ்ரீமான் சி.விஜய ராகவாச்சாரியாருக்கு இது நன்றாய் தெரியும். அதோடு அவர் எதிர் வழக்கா டும்படியும், கண்டிப்பாய் ஜெயித்து 30 ஆயிரம் ரூபாயை பெறலாம் என்றும், தானே பீசில்லாமல் வந்து பேசுவதாகவும் நாயக்கரை எவ்வளவோ கட்டாயப்படுத்தினார். ஸ்ரீமான் ஆச்சாரியார் இப்போது சேலத்தில் இருக் கிறார். யார் வேண்டுமானாலும் எழுதிக் கேட்டுக் கொள்ளலாம். இன்னும் நாயக்கர் காங்கிரசுக்கு வருமுன் முனிசிபல் சேர்மென், ஜில்லா - தாலூக்கா போர்டுமெம்பர், ஆனரரி மேஜிஸ்ட்ரேட்டு முதலிய சர்க்கார் சம்பந்தப்பட்ட பதவி வேலையிலும் இருந்து வந்ததோடு ஒரே தாளில் இவை அனைத்



RangaRakes tamilnavarasam.com

தையும் ராஜினாமா கொடுத்தார். ராஜினாமா செய்த பிறகும் இரட்டை முதல் வகுப்பு பிரயாணப்படியும், நாள் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் கௌரவப் படிப்பணமும் சர்க்கார் கொடுப்பதாகவும் தெரிவித்து, இன்கம்டாக்ஸ் அப்பீல் போர்ட்டில் கமீஷனராக இந்தியா கவர்மெண்டாரால் நியமிக்கப் பட்டவ ராகவுமிருந்தார். சர்க்காரிலும் அசிஸ்டெண்ட் ரெக்ருட்டிங் ஆபீசர் வேலை கொடுக்கத்தக்க நம்பிக்கையுடையவராகவும் இருந்தார். (இது ராணுவ சம்மந்த மான உத்தியோகம்) இன்னும் பல வகைகள் இருந்தாலும் இவைகளைப் பற்றி எழுதுவது தற்பெருமைக்கு இந்த சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக் கொண்டதாகக் கருதப்படும் என்று அஞ்சுவதோடு இதையும் தற்பெருமைக்கு எழுதுவதாகவே சிலர் கருதுவார்கள் என்று பயப்படுகிறோம். ஆனாலும் இப்பார்ப்பனர்களின் அக்கிரமத்திற்குப் பதில் சொல்லாமலிருக்க முடிவ தில்லை. இவ்வைந்தாறு வருஷ காலத்தில் வருஷம் பதினாயிரக்கணக்கான ரூபாய் சம்பார்த்தனையும் போய், கை முதலும் எவ்வளவோ நஷ்டப்பட்டு மிருக்கிறோம். ஸ்ரீமான்கள் சத்திய மூர்த்தி சாஸ்திரிக்கோ, எ.ரெங்கசாமி அய்யங்காருக்கோ, எஸ். சீனிவாசய் யங்காருக்கோ, வி.எஸ். சீனிவாச சாஸ்திரிக்கோ, பி.என். சர்மாவுக்கோ, எம்.கே.ஆச்சாரிக்கோ மற்றும் பல அய்யர், ஆச்சாரியார், சர்மாவுக்கோ காங்கிரசில் சேர்ந்து எவ்வளவு ரூபாய் எவ்வளவு கௌரவ நஷ்டம் ஏற் பட்டது? இவர்களிடம் இருந்து காங்கிரசைக் கழித்து விட்டால் மீதி என்ன என்பதை இவர்களே யோசித்துப் பார்க்கட்டும். இப்படி இருக்க நாம் காங்கிர சின் மூலம் யோக்கியதை அடைந்து விட்டதாக சொல்லுகிறார்கள். இவ்வள வும் போதாமல் நம்மிடம் பிராமணத் துவேஷ மிருக்கிறது என்கிறார்கள். நம்மிடம் உண்மையில் துவேஷமிருக்கிறதா, இவர்களிடம் இருக்கிறதா? நம்மிடம் இருக்குமானால் குறைந்த அளவு அவர்கள் நம்மைச் சொல்லுவது போலவாவது நாமும் அவர்களைச் சொல்ல மாட்டோமா? அவர்கள் நம்மை சூத்திரன் என்று கூப்பிடுவதோடு, சூத்திரன் என்றால் வைப்பாட்டி மகன், தாசி மகன் என்று எழுதியே வைத்துக் கொண் டிருக்கிறார்களே, நாமும் அவர்களை அந்த மாதிரி சொல்ல மாட்டோமா? சொன்னால் தலை போய் விடுமா? பார்ப்பனர் விஷயத்தில் அவர்கள் யோக்கியதையைப் பற்றி எவ்வளவோ உண்மைகளைக்கூட நாம் சொல்லப் பயப்படுகிறோமே. இப்படியெல்லாம் நாம் பயப்படும்போதே இவர்கள் நம்மை இவ்வளவு தூரம் ஒழிக்கப் பார்க்கிறார்கள். ஆனால் இவைகளை எதிர்பார்த்தே இக் கருமத்தில் இறங்கினோமானதால் இவைகளைப் பற்றி ஒரு சிறிதும் நாம் கவலைப்படாமல் இன்னும் இப் பார்ப்பனர்கள் வெடிகுண்டுக்கு மார்பைக் காட்டிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதாக உறுதி கூறுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 29.08.1926**



# பார்ப்பன அகராதி

**- சித்திரபுத்திரன்**

**காங்கிரஸ் என்றால் என்ன?**

வெள்ளைக்கார ஆதிக்கத்தை ஒடுக்கி பார்ப்பன ஆதிக்கத்தை ஏற்படுத்துவது.

**வெளியேற்றம் என்றால் என்ன?**

பார்ப்பனரல்லாதார் சமூகத்தையும், அவர்கள் சுயமரியாதையையும் ஒழிக்க மறுபடியும் சில குல துரோகிகளை கூட்டிக்கொண்டு வாக்குத் தத்தத் தை மீறி மனச்சாக்ஷியின் பேரால் கட்டுப்பாடாய் சட்டசபைக்குப் போ வதுதான்.

**தொழிலாளிகள் நன்மை என்றால் என்ன?**

தொழிலாளிகளை ஏமாற்றி அவர்களுக்குத் தலைவர்களாகி அவர்கள் ஓட்டுப்பெற்று சட்டசபை ஸ்தல ஸ்தாபனங்களில் ஸ்தானம் பெற்று, தொழி லாளர்களையே விட்டு பார்ப்பனரல்லாதாரையும், தலைவர்களையும் ஈனத் தனமாகவும் இழித் தன்மையாயும் திட்டும் படியும் அடிக்கும்படியும் கலகம் செய்யும்படியும் தூண்டி விடுவது.

**இந்துமத பரிபாலன சட்டத்தால் இந்துமதம் போய்விடுமே என்று பயப்படுகிறார்கள் என்றால் என்ன?**

பார்ப்பனருக்கு வரும்படி போய்விடுமே என்று பயப்படுவது.

**மத விஷயத்தில் சர்க்கார் பிரவேசிக்கிறார்களே என்றால் என்ன?**

பார்ப்பனரல்லாதார் பிரவேசிக்கிறார்களே என்பது.

**சட்டசபை கலையும்போது மத பரிபாலன சட்டத்தை நிறை வேற்றுகிறார்களே என்றால் என்ன?**

பார்ப்பனரல்லாதார் எல்லாம் இம்மசோதாவை ஆட்சேபிப்பவர்க ளுக்கு மறுதேர்தலில் ஓட்டுக்கொடுக்க மாட்டார்களே என்கிற பயம் தான்.

**பார்ப்பனரல்லாத தலைவர்கள் என்றால் என்ன?**



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனர் பார்த்து, போடு தோப்புக் கரணம் என்றால் இதோ போடு கிறேன் எண்ணிக்கோ என்று சொல்பவர்களைத்தான்.

**பிராமணத் துவேஷமென்றால் என்ன?**

பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கு பாடுபடுவதுதான்.

**சுயராஜ்யக் கட்சியின் கட்டுப்பாட்டிற்கு கட்டுப்படுவது என்றால் என்ன?**

பார்ப்பனரல்லாதாரை ஒடுக்க பார்ப்பனர் சொல்லுகிற படியெல்லாம் கொஞ்சமும் தவறாமல் கட்டுப்பாடாய் நடப்பதுதான்.

**காங்கிரஸ் துரோகம் என்றால் என்ன?**

காங்கிரஸ் பேரால் பார்ப்பனர் பாமர ஜனங்களை ஏமாற்றுவதை வெளியிலெடுத்துச் சொல்வதுதான்.

**காங்கிரஸ் தோல்வி என்றால் என்ன?**

பார்ப்பனருக்கும் அவர்களின் அடிமைகளுக்கும் சட்ட சபையிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும் இடம் கிடைக்காமல் போவதுதான்.

**பொது ஜனங்களுக்கு ராஜீய ஞானம் இல்லையென்றால் என்ன?**

பார்ப்பனரல்லாதாருக்கு ஓட்டுப் போடுவதுதான்.

**பொது ஜனங்கள் ஏமாறவில்லை என்றால் என்ன?**

பார்ப்பனருக்கு ஓட்டுப் போடுவதுதான்.

**பிராமண விசுவாசம் என்றால் என்ன?**

கர்ப்பதான முகூர்த்தம் முதல் பிறந்து வளர்ந்து செத்தும், செத்த பிறகும் பார்ப்பனருக்கு பணம் கொடுத்து சடங்கு செய்து பார்ப்பனர்கள் தயவால்தான் மோக்ஷத்திற்கு போகலாம் என்று சொல்வதுதான்.

**தரும பூஷணம் என்றால் என்ன?**

ஆயிரக்கணக்கான ரூபாயை ஒரு பார்ப்பனரின் காலில் கொட்டி தங்க புஷ்பத்தால் அருச்சனை செய்து அக்காலைக் கழுவி அந்தத் தண்ணீரை சாப்பிடுவது தான்.

**செல்லுபடி இல்லாத எலெக்ஷன் என்றால் என்ன?**

பார்ப்பனர் தோற்றுப்போகும் எலக்ஷன்கள்தான்.

**நல்ல நிர்வாக அதிகாரி என்றால் யார்?**

பார்ப்பனருக்கு உத்தியோகம் கொடுப்பவன்தான்.



**கொடுமையான அதிகாரி என்றால் யார்?**

பார்ப்பன சிப்பந்திகள் செய்யும் அயோக்கியத்தனத்தைக் கண்டிப்பவன்தான்.

**மகா அயோக்கிய அதிகாரி என்றால் என்ன?**

பார்ப்பன சிப்பந்திகள் லஞ்சம் வாங்குவதைக் கண்டுபிடித்து இனிமேல் இப்படிச் செய்யாதே என்று சொல்லுகிறவன்தான்.

**சுதேச வைத்தியம் என்றால் என்ன?**

பார்ப்பனர் மாத்திரம் படிக்கத்தக்க வைத்திய முறையும் பார்ப்பனர்களே வைத்தியர்களாயிருந்து தீர்க்கத்தக்க வைத்தியமுமாகிய சமஸ்கிருதத்தில் உள்ள ஆயுர்வேத வைத்தியம்தான்.

**பரதேச வைத்தியம் என்றால் என்ன?**

பார்ப்பனரல்லாதார் படிக்கத்தக்கதும் பார்ப்பனரல்லாதார் வைத்தியராகத் தக்கதுமான தமிழில் உள்ள சித்த வைத்தியந்தான்.

**இந்தியாவுக்கு பொது பாஷை என்றால் என்ன?**

பார்ப்பனர் மாத்திரம் படித்து இந்தியா பூராவும் சுற்றிப் பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்த உபயோகப்படும் ஹிந்தி பாஷை தான்.

**தமிழ்ச்சங்கம் என்றால் என்ன?**

அக்கிராசனாதிபதி பார்ப்பான்; உப அக்கிராசனாதிபதி பார்ப்பான்; காரியதரிசி பார்ப்பானாக இருக்கும் சங்கம்தான்.

**தமிழ் கலாசாலை என்றால் என்ன?**

பிரின்ஸ்பால் பார்ப்பனன், உதவி பிரின்ஸ்பால் பார்ப்பனன், உபாத்தியாயர் பார்ப்பனன், படிக்கும் பிள்ளைகளும் பார்ப்பனப் பிள்ளைகளாய் இருப்பதுதான்.

**சமஸ்கிருதத் துரோகிகள் என்றால் யார்?**

தனித்தமிழ் பேசுகிறவரும் எழுதுகிறவரும்தான்.

**தமிழில் தக்க ஆராய்ச்சியுடையவர் என்றால் யார்?**

சமஸ்கிருதத்தில் இருந்துதான் தமிழ் வந்தது. தமிழுடன் சமஸ்கிருத வார்த்தைகளையும் சேர்த்துப் பேசுவதுதான் தமிழுக்கு அதிக யோக்கியதையைக் கொடுக்கும் என்று சொல்லுபவர்தான்.

**தமிழில் கொஞ்சமும் ஆராய்ச்சி இல்லாதவன் என்றால் யார்?**

தமிழ் தனிப்பாஷை, வேறு எந்த பாஷையின் உதவியில்லாமலே அது



RangaRakes tamilnavarasam.com

இருந்திருக்கிறது என்று சொல்லுபவன்தான்.

**தேசீயப் பத்திரிகை - யோக்கியமான பத்திரிகை என்றால் எது?**

பார்ப்பனர்களுக்கு விரோதமில்லாமல் அவர்கள் செய்யும் அக்கிரமங்களையெல்லாம் மூடி வைத்துவிட்டு காங்கிரசைப் போற்ற வேண்டும், சுயராஜ்யக் கட்சியில்தான் தேசீயத் திட்டம் இருக்கிறது, அதை ஆதரித்து ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்கவேண்டும் என்று எழுதுவதுதான்.

**யோக்கியப் பொறுப்பற்ற - தேசபக்தி இல்லாத பத்திரிகை என்றால் எது?**

காங்கிரசின் தற்கால யோக்கியதையையும் அதில் இருக்கும் பார்ப் பன சூழ்ச்சியையும் வெளியிலெழுதுவதும், சுயராஜ்யக் கட்சி சுத்தமாய் பார்ப்பனக் கட்சி என்று எழுதுவதுமான பத்திரிகைதான்.

**குடி அரசு - உரையாடல் - 29.08.1926**



# தென்னாட்டு ஜமீன்தாரர்களுக்கு ஆபத்து

சென்னை சட்டசபைக்கு ஜமீன்தாரர்களின் நன்மையை உத்தேசித்து சில ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

அந்த ஸ்தானங்களுக்கு இதுவரையில் அது எந்த உத்தேசத்தைக் கொண்டு ஒதுக்கி வைக்கப்பட்டனவோ அது போலவே நபர்களும் தெரிந்தெடுக்கப்பட்டு வந்தனர்.

ஏறக்குறைய ஜமீன்தார்கள் என்கிற பாகுபாடு பெரும்பாலும் பழைய காலத்தில் அரசர்களாகவோ சிற்றரசர்களாகவோ பெரிய பாளையப் பட்டுகளாகவோ அரசாங்கப் பொறுப்பை வகித்தவர்களாகவோ மிக்க பெருமையோடு வாழ்ந்த குடும்பங்கள் என்பதாகவோ இருந்த சமூகத்தை ஆங்கில அரசாக்ஷி ஏற்பட்ட பிறகும் அவர்களை அந் நிலைமையிலேயோ அல்லது அந்த சமூகத்தின் ஞாபகக் குறிப்பாவது இருக்கும்படியாகவோ கருதி நமது அரசாங்கத்தார் அவர்களை கௌரவிக்கும் முகத்தான் அவர்களுக்கென்று பல சட்ட திட்டங்களும் சலுகைகளும் கொடுத்து கூடியவரை அவைகள் மறைந்து போவதற்கில்லாமலும் அந்தந்த குடும்பங்களுக்கு ஒரு தனி கௌரவம் இருக்கும்படியாகவும் செய்து வருகிறார்கள்.

இதன் பலனாகவே நமது சென்னை சட்டசபைக்கும் இந்த ஜமீன்தாரர்களின் நன்மையையும் அவர்களது கௌரவத்தையும் தனியே உத்தேசித்து அவர்களுக்கென்று சில ஸ்தானங்கள் ஒதுக்கிவைத்து அவைகளுக்கு ஓட்டர்களையும் அந்தக் கூட்டத்தார்களுக்குள்ளாகவே ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். இதுவரையிலும் ஏறக்குறைய அந்த ஸ்தானங்களுக்கு அந்த சமூகத்தாரிலேயே தெரிந்தெடுக்கப்பட்டும் வந்திருக்கிறார்கள். இந்த ஜமீன்தார் சமூகம் ஆதியில் கண்டிப்பாய் பார்ப்பனரல்லாதார்களாகவே ஏற்பட்டுப்போய் விட்டதாலும் இவர்களுக்கு நாட்டில் பெருத்த செல்வாக்கு இருப்பதோடு இதுசமயம் நாட்டின் பெரும்பான்மையான பார்ப்பனரல்லாத சமூகத்திற்குத் தலைவர்களாகவும் அக்கூட்டத்தாரிலேயே பலர் ஏற்பட்டு விட்டதாலும் அத்தலைவர்களும் தாங்கள் வெறும் போகபோக்கியமே ஜமீன்தார் தத்துவம் என்று எண்ணாமல் தங்கள் சமூகத்தாரும் ஆதியில் தங்கள் ஆளுகையில் இருந்தவர்களுமான பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு உழைக்கவேண்டும் என்கிற எண்ணங் கொண்டவர்களுமாகி தைரியமாய் உழைக்க அவர்கள் இப்போது வெளியில் வந்து விட்டதாலும் நமது பார்ப்பன



RangaRakes tamilnavarasam.com

சகோதரர்களுக்கு இது பொறுக்காமல் இதுவரை பல ஜமீன்களுக்குத் தாங்கள் மந்திரிகளாகவோ, ஜமீன்தாரர்களுக்கு தாங்கள் காரியதரிசிகளாகவோ இருந்து அவர்களில் சிலரை கூடா ஒழுக்கங்களில் சம்பந்தப்படுத்தியும் விவகாரங்களில் இழுத்துவிட்டும் அவர்களை கடன்காரர்களாக்கவும் அதின் மூலம் ஜமீன்களை இழக்கவும் செய்து, அவற்றைத் தாங்களே விலைக்கு வாங்கி ஜமீன்தார்களுமாகி இன்னமும் கொஞ்ச நஞ்சம் மீதி இருப்பவைக ளையும் அடியுடன் ஒழித்து அந்த மரியாதை, சொத்து சுகங்களையும் தாங்கள் கைப்பற்றி இருப்பதும் போக ஜமீன்தாரர்களுக்கு தாங்களே பிரதிநிதியுமாக வேண்டும் என்கிற எண்ணம் கொண்டு இப்போது இதிலும் சூழ்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

அஃதென்னவென்றால் சென்னை, செங்கல்பட்டு, நெல்லூர் முதலிய ஜில்லாக்களின் சார்பாய் ஜமீன்தார் தொகுதிக்கு இதுவரை தெரிந்தெடுக்கப் பட்டு வந்த **பனகால் ராஜா** அவர்கள் இதுசமயம் தென்னாட்டு மக்களின் நன்மைக்கென ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனத்திற்குத் தலைவராயிருப்பதாலும் அவருடைய தலைமை ஸ்தானத்தை பார்ப்பனரல்லாத மக்களின் இரண் டொரு பார்ப்பன சிஷ்யர்கள் தவிர மற்றெல்லா பார்ப்பனரல்லாதாராலும் ஒப்புக்கொள்ளப் படுவதினாலும் இப்படிப்பட்ட தலைவர் மறுபடியும் தெரிந்தெடுக்கப்பட்டு சட்டசபைக்குப் போவாரானால் அங்கு பார்ப்பன சூழ்ச்சிகள் மிகுதியும் பாதிக்கப்பட்டு விடும் என்றும், பார்ப்பனரல்லாதார் சமூகம் சுயமரியாதையும் முன்னேற்றத்தையுமடைந்து விடும் என்றும், ஜமீன் முழுதையும் பார்ப்பன ஜமீனாக்க முடியாதென்றும் கருதி ஆத்திரப்பட்டு எப்படியாவது அவரை இந்தத் தடவை சட்டசபைக்குத் தெரிந்தெடுக்க விடாமல் செய்வதற்காக, அவருக்கு விரோதமாய் ஒரு பார்ப்பனர் நிற்பதற்கு தந்திரத்துடனும் சூழ்ச்சிகளுடனும் வெகு மும்மரமாய் ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன. அதென்ன வென்றால் தத்துவத்தில் எவ்விதத்திலும் ஜமீன்தார்களின் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ளுவதற்கு அருகதை யில்லாத ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் என்கிற ஒரு பார்ப்பன வக்கீல் பனகால் ராஜாவை சட்ட சபைக்குத் தெரிந்தெடுக்கப்படாமல் செய்வ தற்காக அந்த ஸ்தானத்திற்குப் போட்டி போடப் போகிறார். இதை உத்தே சித்தே 4, 5 மாதங்களுக்கு முன்பாக ஷ 1 க்கு சுமார் 2 - 3 ஆயிரம் ரூபாய் வரும்படி வரத்தக்க ஒரு சிறிய மிட்டாவை சொல்ப துகைக்கு விலைக்கு வாங்கி ஜமீன்தார் கூட்டத்தில் தானும் ஒரு ஓட்டராகப் பதிவு செய்து கொண்டும் ராஜாவுக்கு எதிராக போட்டி போடத் தீர்மானித்துக் கொண்டும் வேலை செய்து வருகிறார்.

இந்த தொகுதிக்கு மொத்தம் ஓட்டுகள் சுமார் எண்பத்தி ஐந்தே தான். இவற்றில் பார்ப்பன ஓட்டர்களின் சங்கியை 20 அல்லது 22 இருக்கும். இந்த இருபது பேர் பார்ப்பனர்களாய் உள்ள கூட்டத்தார் இந்த ஸ்தானத்திற்கு நின்று 65 பேர் பார்ப்பனரல்லாதாராயிருக்கும் ஜமீன்தார் கூட்டத்தாரை அவர்கள்



மூளையில்லாதவர்கள் என்றும் தன் வக்கீல் ஆதிக்கத்தில் கட்டுப்பட்டவர் களென்றும் எண்ணி சுலபமாய் ஏமாற்றி ஸ்தானம்பெற்று பார்ப்பனரல்லா தாரை ஒழித்துவிடலாம் என்கிற தைரியத்தின் பேரில் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஸ்ரீமான்கள் எஸ். சீனிவாசய்யங்கார், டி.வி. வெங்கிட்டராம சாஸ்திரியார், சி.பி.இராமசாமி அய்யர் போன்ற பிரபல பார்ப்பனர்கள் எல்லாம் உள் உளவாய் இருந்து கொண்டு வேலைசெய்தும் வருகிறார்கள். தென்னாட்டு ஜமீன்தாரர்கள் தொகுதிக்கு ஒரு பார்ப்பனர்- அதிலும் வெகு சாதாரண பஞ்சாங்கப் பார்ப்பன குடும்பத்தைச் சேர்ந்தவர் - ஜமீன்தாரர்கள் கெடுவதினாலேயே பிழைக்க வேண்டியவராயுள்ள ஒரு வக்கீல் - ஜமீன்தாரர்கள் எல்லோரும் முட்டாள்கள் புத்தியில்லாதவர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர் - ஜமீன்தார்கள் ஒற்றுமையாகவோ மேன்மையாகவோ விவகார வில்லங்கங்களுக்கு மார்க்கமில்லாமலோ வாழ்வதாயிருந்தால் தங்களுக்கு வரும்படியில்லாமல் பட்டினி கிடக்க வேண்டியவரான வக்கீல் கூட்டத்தைச் சேர்ந்தவர் - ஜமீன்களும் ஜமீன் மைனர்களும் தப்பு வழியிலும், கூடா ஒழுக்கத்திலும் நடந்தால்தான் தங்கள் சமூகத்தார் பெரும்பாலும் காலக்ஷேபம் செய்யலாம் என்கிற நிலையில் உள்ள வகுப்பைச் சேர்ந்தவர் - அன்றியும் எவ்வளவு பெரிய கல்வி, புத்தி, ஒழுக்கம், பரம்பரை கண்ணியம் உள்ள ஜமீன்தாரரானாலும், பார்ப்பனரல்லாதார் என்கிற காரணத்தால் 'சூத்திரன்' 'வேசி மகன்' என்றும், ஒரு அயோக்கிய னாயிருந்தாலும் மற்றும் எவ்வளவு கூடா ஒழுக்கக் காரனாயிருந்தாலும்கூட 'பிராமணன்', 'உயர்ந்தவன்' என்று சொல்லிக்கொள்ளுபவராகவும் இருக்கிற ஒருவர் நம்நாட்டுப் பழம் பெருங்குடி மக்களான ஜமீன்தார் கூட்டத்திற்கு பிரதிநிதியாக முன் வந்திருக்கிறார் என்றால் இப்பார்ப்பனர் களின் தைரியத் தையும் துணிவையும் நாம் என்னவென்று சொல்லுவது? இது கேவலம் தான் வக்கீலாயிருப்பதாலும் தன்னுடைய வக்கீல் தொழில் மாய்கையில் ஜமீன் குடும்பங்கள் தனக்கு அடிமையாய் கட்டுப்பட்டு கிடக்கிறது என்கிற அகம் பாவத்தாலும் இவ்வளவு முக்கியமான ஸ்தானத்தின் யோக்கியதையை அழிக்கத் துணிந்துவிட்டாரென்றே சொல்ல வேண்டும்.

வக்கீல்கள் என்றால் ஜமீன்தாரர்கள் பயப்படும் காலமெல்லாம் மலை யேறிப் போய்விட்டது என்பதையும் வக்கீல் கூட்டத்திற்கு யோக்கியதை போய்விட்டது என்பதையும் தாசிகள் போல் வக்கீல்களும் தரகர்களை வைத் தோ வாசற்படியில் காத்துக் கொண்டிருந்தோ கக்ஷிக் காரர்களைத் தேடிப் பிடிக்க வேண்டிய நிலைமை வந்து விட்டதென்பதையும் இவர் மறந்து விட்டார் போலும். இவர் எதற்காக ஜமீன்தார் தொகுதிக்கு நிற்கிறார்? ஜமீன் தார் நன்மையில் இவருக்கு என்ன அனுதாபம் உண்டு? ஜமீன் குடும்பத்தின் பெருமையையும் கட்டுப்பாட்டையும் காப்பாற்ற இவருக்கு என்ன யோக்கி யதை உண்டு? அந்தக் குடும்பங்கள் ஒழியாமலும் அந்தச் சொத்துக்கள் காப்பாற்றப் படாமலிருப்பதைக் காப்பாற்றவும் இவருக்கு எந்த விதத்தில்



RangaRakes tamilnavarasam.com

அக்கறை உண்டு. பழைய ஜமீன் குடும்பங்களின் தர்மம், தானம், பரோபகாரம் முதலியவைகள் இவருக்குண்டா? சுயமரியாதைத் தத்து வத்தைக் காப்பாற்ற முடியுமா? பார்ப்பனர்களுக்கு எந்தப் பதவி கிடைத் தாலும் தங்கள் இயற்கை சுபாவம் எப்படி மாறும்?

உதாரணமாக, புதிய சீர்திருத்தத்தின்படி , ஜமீன்தார் தொகுதிக்கென்று தனியாக ஸ்தானங்கள் பிரிந்த காலத்திலேயே ஜமீன்தாரர்கள் மற்ற சாதாரண ஓட்டர்களைப்போல் போலிங் ஸ்தானத்திற்கு வந்து வோட்டு போடும்படியாய் இல்லாமல் ஓட்டுச் செய்யும் கடுதாசிகளை ஜமீன்தாரர்களுக்கே நேரில் போய்ச் சேரும்படி தபாலில் அனுப்பி அவர்கள் ஒரு சமயம் அயலூரிலிருந் தாலும் ஓட்டு செய்து திரும்பவும் தபாலிலேயே அனுப்பிவிடும்படியான சௌகரியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி இருப்பதை நமது ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் “சுக்கிலாம் பரதாம்” என்கிற போதே கண்ணைப் பார்த்து குட்டிக் கொள்வதுபோல், இந்த சுதந்திரம் ஜமீன்தாரர்களுக்கு வேண்டியதில்லை. ஜமீன்தாரர்கள் போலிங் ஆபிசுக்கு போய் அங்கிருந்துதான் தன்னுடைய ஓட்டுகளைக் கொடுக்க வேண்டும் என்கிற ஏற்பாடு செய்வதற்காக வேண்டிய சூழ்ச்சி செய்து, இதை ஜமீன்தாரர் களே கேட்டுக் கொள்வது போல் விண்ணப்பம் எழுதி, தனக்குக் கட்டுப்பட்ட ஜமீன்தாரர்கள் சிலரிடம் கையெழுத்து வாங்கி சர்க்காருக்கு அனுப்பி விட் டாராம். இந்த அய்யர் என்கிற வார்த்தையை நம்பி ஏமாந்த ஜமீன்தாரர் களில் ஜயபூர் மகாராஜாவும் ஒருவர் என அறிகிறோம். பிறகு இரண்டொரு ஜமீன்தாரர்களுக்கு இந்த விஷயம் வெளியானதின் பேரில் பழையபடியே இருக்கட்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டதினால் ஜமீன்தாரர்கள் கௌரவம் ஸ்ரீமான் அய்யர் என்கிற ஜமீன்தார் சூழ்ச்சியிலிருந்து தப்புவிக் கப்பட்டதாம். தபால் மூலம் ஓட்டு அனுப்பும் சுதந்திரம் சாதாரண ஆசாமி களாகிய யூனிவர்சிட்டி பட்டம் பெற்றவர்களுக்குக் கூட இருக்கிறது. அதாவது ஒரு மனிதன் பி.எ. பாஸ் செய்து *மீ* 35 ரூபாயுக்குத் தன் மனச்சாட்சியை விற்றுக் கொண்டிருக்கிறவனாயிருந்தாலும் அவனுக்கு ஓட்டுக்காகிதம் தபாலில் வரும்படி சட்டம் செய்து வைத்துக் கொண்டிருக் கிறார்கள். ஏன்? இந்த கூட்டத்தார் முக்காலே மூன்று வீசமும் பார்ப்பனர் களாயிருப்பதால் தங்களுக்கு இந்த கௌரவம் வேண்டும். ஜமீன்தாரர்கள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதாராயிருக்கிறபடியால் அவர் ஓட்டு எடுக்கு மிடத்திற்குப் போய் ஒரு மாதம் 35 ரூபாய் பார்ப்பனன் முன்னால் கைகட்டிக் கொண்டு ஓட்டுப்போட வேண்டும் போலும். ஓட்டுப் போடுகிற இடத்திற்கு வந்தால் அங்கு உள்ள பார்ப்பனரைக் கொண்டு தந்திரம் செய்து தனக்கு அனுகூலமாய் ஓட்டு வாங்கிக் கொள்ளலாம் என்கிற ஆசையின் பேரில் ஜமீன்தாரர்களின் கௌரவமே குறைந்தாலும் பரவாயில்லை என்று துணிந்து இந்த சுதந்திரத்தையும் சுயமரியாதையையும் இழக்கத் துணிந்தார் என்றால் இதுபோலவே மற்ற காரியங்களும் தங்கள் சுயநலத்திற்காக இன்னும் என்ன



என்ன உரிமைகளை இழக்கத் துணியமாட்டார்; மற்றவர் களையும் ஏமாற்ற மாட்டார் என்பதை ஜமீன்தாரர்கள்தான் உணர வேண்டும்.

ஆதலால் வரப்போகும் தேர்தலில் இந்த தொகுதியைச் சேர்ந்த ஜமீன் தாரர்கள் எப்பாடுபட்டாவது ஜமீன்தார் தொகுதி ஸ்தானத்திற்கு உண்மை யாகவும் பாரம்பரியமாகவும் சுயமரியாதையிலும் ஜமீன் தாரர்களின் உரிமை களில் கவலையுள்ளவர்களாகவும் பார்த்தே தெரிந்தெடுத்தனுப்பி, தங்கள் சமூகத்தின் யோக்கியதையைக் காப்பாற்றி முற்போக்கடைய பாடுபட வேண்டுமேயல்லாமல்“மகன் செத்தாலும் சம்மதம், மருமகள் தாலி அறுபட் டால் போதும்” என்கிற கொள்கைப்படி துவேஷத்தை முன்னிட்டோ பொறா மையை முன்னிட்டோ சொந்த அபிப்பிராயபேதத்தை முன்னிட்டோ தங்கள் கடமைகளையும் தர்மத்தையும் அலக்ஷியம் செய்து பார்ப்பன ரையோ வக்கீல்களையோ தெரிந்தெடுக்க நினைத்து தங்கள் சமூகத்தையும் பாரம்பரியமாய் தங்களுக்கிருந்துவரும் கண்ணியத்தையும் சுயமரியாதை யையும் இழந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றே கேட்டுக் கொள்ளுகிறோம். தற்காலம் நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பார்ப்பன ரல்லாதார் முன்னேற்றத்தை ஒழிப்பதற்கு நமது பார்ப்பனர்கள் செய்யும் சூழ்ச்சி அறியாதார் யாரும் இல்லை. இப்படியிருக்க நமது ஜமீன்தார் சமூகத்திற்கு இந்த தகவல் எட்டி இருக்காது என்று நினைத்துக்கொண்டு பார்ப்பனரல்லாதாரின் முற்போக்குக்கு இடையூறு செய்ய நமது பார்ப்பனர் கள் ஜமீன்தார் சமூகத்தைப் பிடிப்பது பைத்தியக்காரத்தனமென்றே சொல்லுவோம். நமது நாட்டு பண்டைப் பெருமையையும் பண்டை இலக்கி யங்களையும் காட்டுவதற்கு அந்த ஒரு (ஜமீன்தார்) சமூகம்தான் இருக்கிறது. அதிலும் கையை வைத்து அதையும் ஒழித்துவிட்டால் பிறகு வெகு சுலபமாய் பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்துவது பார்ப்பனருக்கு அனுகூலமாய் போய்விடும். ஆதலால்தான் இப்போது அதில் கையை வைக்க ஆரம்பித்து விட்டார்கள். இதுவரையில் அவர்கள் செய்து வந்த சூழ்ச்சிகளின் பலனாக, நமக்கு ஆச்சாரியார் என்னும் மதத்தலைவர்கள் பார்ப்பனர், அரசியல் தலைவர் பார்ப்பனர், நியாயாதிபதி பார்ப்பனர், நியாயவாதி பார்ப்பனர், உபதேசகர்த்தா பார்ப்பனர், உபாத்தியாயர் பார்ப் பனர், உத்தியோகஸ்தர் பார்ப்பனர், வைத்தியர் பார்ப்பனர், வைதீகச் சடங்கு செய்யும் வாத்தியார் பார்ப்பனர், நம்மையும் நம் பெற்றோர்களையும் மோக்ஷத்திற்கனுப்புபவர் பார்ப்பனர், சங்கீத வித்துவான் பார்ப்பனர், நாட்டிய வித்துவான் பார்ப்பனர், தமிழ் வித்துவான் பார்ப்பனர், தமிழ்ச் சங்கத் தலை வர் பார்ப்பனர், சோறு விற்கும் ஓட்டல்காரர் பார்ப்பனர், சிற்றுண்டி விற்பவர் பார்ப்பனர், தூது செல்வோரும் பார்ப்பனராகவே இருந்து அரசியல் மதவியல் சமூகவியல் கலைகளின் இயல் நித்திய வாழ்க்கையின் இயல்கள் ஆகிய எல்லாவற்றிலும் ஆதிக்கமடைந்து விட்டார்கள். செல்வத்திலும் ஆதிக்கம் பெற்று வருகிறார்கள். ஆனால் நாம் முன் சொன்னதுபோல் நமது பழங்கால பெருமையைக் காட்டும் ஜமீன்தார்கள், மகாராஜாக்கள் ஆகிய இவைகளில்



RangaRakes tamilnavarasam.com

இவர்களின் ஆதிக்கம் இதுவரை வளராமல் இருந்து வந்தது. இப்பொழுது தான் மெள்ள மெள்ள அவைகளிலும் கையை வைக்கத் துணிகிறார்கள். ஜமீன்தார் பிரபுக்களே! இன்று இப்பார்ப்பனர் பசப்பு வார்த்தையைக் கேட்டு ஏமாந்து போய்விட்டால் நாளைய தினம் என்ன பாடுபட்டாலும் வராது. ஆதலால் இவ்விஷயத்தில் ஒவ்வொரு ஜமீன் தாரர்களும் தங்கள் சுயமரியாதையையும் கண்ணியத்தையும் காப்பாற்றிக் கொள்வார்களாக.

**குடி அரசு - தலையங்கம் - 29.08.1926**



# யாரை யார் மோசஞ் செய்தார்கள்?

ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசும் போது "பார்ப்பனராகிய நான் யாரையும் ஏமாற்றவில்லை, பார்ப்பனரல்லா தாராகிய ஈ.வெ.இராமசாமி நாயக்கர் என்னை ஏமாற்றி விட்டார்" என்று சொன்னாராம். நாயக்கர் எந்த விதத்தில் ஸ்ரீமான் அய்யங்காரை ஏமாற் றினார் என்பதையும் கூடவே சொல்லியிருந்தால் கண்ணியமாயிருந்திருக் கும். அப்படிக்கில்லாமல் பொதுப்படையாய்ச் சொல்லுவது விஷமத்திற் காக என்றே தான் சொல்ல வேண்டும். ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்கார் திருச்சியில் கூட்டிய மாகாணக் காங்கிரஸ் கமிட்டி பொதுக்கூட்டத்தில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுகாரவர்கள் பார்ப்பனரல்லாதார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விஷயமாய் ஒரு தீர்மானம் கொண்டுவந்த சமயத்தில் நாயுடு காரைப் பார்த்து "எப்படியாவது இந்த தீர்மானத்தை இதுசமயம் வாபீசு வாங்கிக் கொள்ளுங்கள்; மூன்று மாதம் பொறுத்தவுடன் இதற்கு நான் வகை செய்கிறேன்" என்று சொல்லி நாயக்கரையும் ஸ்ரீமான் நாயுடுகாரையும் கெஞ்சி நம்பச் செய்து அதைப் பின்வாங்கிக் கொள்ளும்படி செய்தார்.

காஞ்சீபுரம் மகாநாட்டில் நாயக்கரும், ஸ்ரீமான் இராமநாதனும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ தீர்மானம் கொண்டு வந்த சமயத்திலும் வெளிப்படையாய் மகாநாட்டில் பிரேரேபிக்க அக்கிராசனர் வசம் தீர்மானம் ஒப்படைத்த சந்தர்ப்பத்தில் நாயக்கரை ஸ்ரீமான் அய்யங்கார் தனியாய் கூட்டி வைத்து இது சமயம் இதை வலியுறுத்தாதீர்கள். மூன்று மாதத்தில் எல்லாம் சரிபடுத்தி விடுகிறேன் என்று உறுதி கொடுத்தார். இதற்கு சாட்சி ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் அக்கிராசனராக ஸ்ரீமான் நாயுடுகாரால் பிரேரே பித்து ஆமோதித்து நிறைவேறியபின் தீர்மானம் சபையோரால் அங்கீகரிக் கப்பட்டதாய் ஏற்பட்ட பின்பும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் எழுந்து நின்று சபையோரைப் பார்த்து "நீங்கள் எல்லாம் என்னைத் தெரிந்தெடுத்தாலும் ஸ்ரீமான் ஈ.வெ.இராமசாமி நாயக்கர் என்னுடைய தேர்தலை ஒப்புக் கொண்டதாக அவர் வாயால் சொன்னால்தான் நான் இந்த ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ளுவேன்" என்று சொன்னார். அதுசமயம் ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு, முதலியார் முதலியவர்களும் நாயக்கரைப் பார்த்து "ஒப்புக் கொண்டேன்" என்று சொல்லும்படி சொன்னதின் பேரில், நாயக்கர் எழுந்து பேசும்போது தீர்மானம் நிறைவேறிய பின்பு என்னை கேட்பதில்



RangaRakes tamilnavarasam.com

பிரயோஜனமில்லை. ஆனாலும் ஸ்ரீமான் அய்யங்கார் தலைவராய் இருப் பதில் தனக்கு ஆட்சேபணை இல்லை என்றும் ஸ்ரீமான் அய்யங்காரை விட உயர்ந்தவர்களும் தாழ்ந்தவர்களும் இந்த ஸ்தானத்தில் இருந்திருக் கிறார்கள் என்றும், ஆனால் அய்யங்கார் இடத்தில் இதுசமயம் தனக்கு உள்ள மனவருத்தமெல்லாம் வகுப்புவாரி பிரதிநிதித்துவ விஷயத்தில் அய்யங் கார் வாக்கு தவறி இருக்கிறார் என்பதினாலேயேதான் என்றும், இனியாவது அவர் சொன்ன வாக்கைக் காப்பாற்றுவதானால் தானும் இத்தீர்மானத்தை ஒப்புக் கொள்ளுவதாகவும் சொல்லியிருக்கிறார். இதிலிருந்து சமயம் வரும் போது வாக்குத்தத்தமும் நம்பிக்கையும் கொடுத்து சமயம் தப்பினவுடன் மோசம் செய்கிறவர்கள் பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

ஸ்ரீமான் சி.பி. இராமசாமி அய்யர் சட்டசபைக்கு நிற்கும்போது பார்ப்பனரல்லாதாருக்கு நம்பிக்கை கொடுத்து அவர்கள் ஓட்டுப்பெற்று சர்க்கார் அடிமையாகி 5500 சம்பளமுள்ள உத்தியோகமும் பெற்று பார்ப்ப னரல்லாதாருக்கு விரோதமாய் நடப்பது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்காக ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்ட போது சில பார்ப்பனரல்லாத இளைஞர்களைப் பிடித்து ஏமாற்றி தங்கள் வசப் படுத்திக் கொண்டு "வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கைகளை நாங்க ளும் ஒப்புக் கொள்ளுகிறோம்; ஆனால் ஜஸ்டிஸ் கக்ஷி சர்க்காருக்கு அனு கூலமாயிருக்கிறது; அதை ஒழிக்க வேண்டும்" என்று சொல்லி அந்தக் கக்ஷியும் அந்தக் கக்ஷிப் பத்திரிகையும் செல்வாக்கற்றுப் போகும்படி செய்து அது முடிந்த உடன் வேறு சில பார்ப்பனரல்லாத வாலிபர்களை சேர்த்துக் கொண்டு **"நீக்கு பெப்பெப்பே, நீ தாத்தக்கு பெப் பெப்பே"** என்று சொல்லி துரோகம் செய்வது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

இம்மாதிரி தலைமுறை தலைமுறையாய் வழி வழி வம்சமாய் இனி பிறக்கப்போகும் பார்ப்பனரல்லாதாரைத் துரோகம் செய்வதற்கு இனி பிறக்கப் போகும் பார்ப்பனருக்குக்கூட ஆதாரம் தேடி வைப்பது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

பனகால் ராஜாவிடம் போய் ஜில்லா போர்டு மெம்பர் வேலை வாங்கிக் கொண்டு மூன்றாவது நாளே பனகால் ராஜாவுக்கு விரோதமாய் நம்பிக்கை இல்லா தீர்மானத்திற்கு ஓட்டுக் கொடுத்து அவருக்கு துரோகம் செய்தது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

பார்ப்பனரல்லாதார் கட்டுப்பாட்டைக் கலைப்பதற்காக பார்ப்பனரல் லாதார் கூட்டத்தில் இருந்த ஒரு கனவானுக்கு நீதி இலாக்காவில் பெரிய உத்தியோகம் கொடுப்பதாய் வாக்களித்து ஆசை காட்டி அவரைக் கொண்டு பனகால் ராஜாவின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஓட்டுப்பெற்று பிறகு அவருக்கு வேலை கொடுக்காமல் அவருக்கு என்று வாக்களித்த உத்தியோகத்தை பார்ப்பனருக்கே கொடுத்து வருவதின் மூலம் பார்ப்பன



ரல்லாதாரை ஏமாற்றி துரோகம் செய்தது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

பார்ப்பனரல்லாதாருக்கு சில உத்தியோகம் கிடைக்க வழி ஏற்பட்ட வுடன் அரசியலில் இனியும் சீர்திருத்தங்கள் ஏற்பட்டு விட்டால் அதன் பலனாய் ஏற்படும் உத்தியோகங்கள் பார்ப்பனரல்லாதாருக்கு போய்விடுமே என்கிற குரோத புத்தியோடு எங்களுக்கு சீர்திருத்தமே வேண்டாமென்று சர்க்காருக்கு சொல்லுவது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

கல்பாத்தி தெருவில் நடக்க சர்க்காரும் ஜனப்பிரதிநிதி சபை என்னும் சட்டசபையும் ஒப்புக்கொண்ட பிறகுகூட "வேலையிருந்தால் தான் போக லாம்" என்கிற வியாக்கியானம் செய்து பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதை யை ஒடுக்கி வைத்து அவர்களுக்குத் துரோகம் செய்து வருவது பார்ப் பனரா? பார்ப்பனரல்லாதாரா?

எல்லைப்புற மகமதிய சமூகத்திற்கு மற்ற பாகத்திற்கு அளிக்கப்பட்டி ருக்கும் சீர்திருத்தத்திற்கு சமமாகவாவது பாரபக்ஷமில்லாமல் சீர்திருத்தம் அளிக்கவேண்டும் என்று கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு விரோதமாய் அதை எதிர்த்து தோற்கடித்து அச்சமூகத்திற்கு துரோகம் செய்தது நம் நாட்டுப் பார்ப்பனரா ? பார்ப்பனரல்லாதாரா?

மகமதியச் சமூகத்திற்கு எவ்வளவோ கஷ்டப்பட்டு அனேக மகமதிய தலைவர்களால் சம்பாதிக்கப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழிப்ப தற்காக பொறுப்பற்ற இரண்டு மகமதிய வாலிபர்களை பிரதிப் பிரயோஜனம் கொடுத்து அமர்த்திக்கொண்டு மகமதியர்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித் துவமே வேண்டாம் என்று சொல்லும் படி செய்து மகமதிய சமூகத்திற்கும் மதத்துக்கும் துரோகம் செய்வது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

இந்தியா சட்டசபைக்கு கிறிஸ்துவ சமூகத்திற்கு வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் இல்லாததால் மகமதியரல்லாத பொதுத் தொகுதியின் பேரால் நிற்கும் ஸ்ரீமான் வி. சக்கரை செட்டியார் அவர்களை பிராமணரல்லாத இயக் கங்களும், ஸ்தாபனங்களும் ஆதரித்தும் இந்தியா சட்டசபைக்கு தமிழ்நாடு சார்பாய் ஏற்பட்டுள்ள ஸ்தானங்கள் 6-ல் 5 -க்கு அய்யங்கார்களாகவே நின்று கொண்டு கிறிஸ்தவர் என்பதைக் கூட பார்க்காமல், ஒரு அய்யங்கார் பார்ப்ப னரே அதுவும் கிறிஸ்தவ சமூகத்திற்குத் தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாமலே அனுகூலம் செய்கிறேன் என்று சொல்லும் தலைவரே நின்று கொண்டு அச்சமூகத்திற்கு துரோகம் செய்வது பார்ப்பனரா? பார்ப்பனரல் லாதாரா? இந்தக் கொடுமை செய்துகொண்டும் அச்சமூகத்திற்கு விரோதமாய் ஒரு கிறிஸ்தவ வாலிபரை விலைக்கு வாங்கிக்கொண்டு அவர் மூலம் தம் சமூகத்திற்கு வகுப்புவாரி உரிமையே வேண்டாமென்று சொல்லும்படி செய்து அச்சமூகத்திற்கு துரோகம் செய்வது பார்ப்பனரா? பார்ப்பனரல் லாதாரா?

தொழிலாளர் சமூகத்துக்கு பாடுபடுவதாய் வேஷம் போட்டு அச் சமூகத்தை பல தந்திரங்களால் சுவாதீனம் செய்து கொண்டு அவர்களை



RangaRakes tamilnavarasam.com

ஏமாற்றி அவர்களுக்குத் தலைவராகியும் அவர்கள் ஓட்டுப் பெற்று பதவி அடைந்தும் கடைசியாய் தொழிலாள ஸ்திரீகள் கர்ப்பவதியாயிருந்து பிள்ளை பெற்ற சமயத்தில்கூட சிலநாள் ஓய்வு கொடுக்கக்கூடாது என்று சட்டசபையில் வாதாடி அந்த நலத்தைக் கெடுத்து தொழிலாள சமூகத்திற்கும் பெண்கள் சமூகத்திற்கும் துரோகம் செய்தது நம் நாட்டுப் பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு நாங்கள் நன்மை செய்கிறோம் என்று வாயால் சொல்லிக்கொண்டு காரியத்தில் அச் சமூகத்தை இன்னமும் தாழ்மைப்படுத்த அச்சமூகத்திலேயே ஒரு பொறுப்பற்ற ஏழையை விலைக்கு வாங்கிக் கொண்டு அவரைக் கொண்டே தங்கள் சமூகத்திற்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை வேண்டாம் என்று பிரசாரம் செய்யச் செய்து அச் சமூகத்திற்கு துரோகம் செய்து வருவது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

குழந்தைப் பருவத்திலிருந்தே சுயமரியாதையையும் சமத்துவத்தை யும் வளர்ப்பதற்காக ஒரு குருகுலம் ஆரம்பிப்பதாய் சொல்லி பொது மக்களின் சபையான காங்கிரசை நம்பச் செய்து 10 ஆயிரம் ரூபாய் சாங்கி ஷன் செய்யப்பட்டு, பார்ப்பனரல்லாத ஒரு காங்கிரஸ் காரியதரிசி நிபந் தனை எழுதி பணம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்ல, அவருக் குத் தெரியாமல் மற்றொரு பார்ப்பன காரியதரிசியைப் பிடித்து முறைக்கு விரோதமாக இரகசியமாய் 5000 ரூபாய்க்குச் செக்கு எழுதி ரூபாய் வாங்கிக் கொண்டு போய் பார்ப்பனக் குழந்தை சாப்பிடுவதை பார்ப்பனரல்லாத குழந் தை பார்த்தால் பாவம் என்று இருசார்பு குழந்தைகளுக்கும் முளையி லிருந்தே வித்தியாசம் கற்பித்து பார்ப்பனரல்லாதாரை நிரந்தரமாய்த் தாழ்த்து வதற்காக அந்தப்பணத்தை உபயோகித்த துரோகத்தை செய்தது பார்ப் பனரா? பார்ப்பனரல்லாதாரா?

காங்கிரசில் தீண்டாமை ஒழிப்பது என்கிற தத்துவத்தை எல்லாரும் ஒப்புக்கொள்வதாய்ச் சொல்லி பார்ப்பனரல்லாதாரை யெல்லாம் காங்கிரசில் சேர்த்து ஜயிலுக்குப் போகச் செய்து, மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்று தீர்மான மூலமாய்ச் சொன்னவுடன் ராஜினாமா கொடுத்து வெளியில் போய் மகாத்மா காங்கிரசையே ஒழித்து பார்ப்பனக் காங்கிர சாக்கி தேசத்திற்கும் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கும் துரோகம் செய்தது பார்ப்ப னரா? பார்ப்பனரல்லாதாரா?

பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை, எல்லோரும் சமம் என்று சொல்லி, பார்ப்பனரல்லாதார் ஓட்டுப் பெற்று இந்தியா சட்டசபைக்குப் போய் பிரயாணச் செலவின் பேரால் ஆயிரக்கணக்கான ரூபாய்களை சம்பாதித்துக் கொண்ட பிறகு ஒரு பார்ப்பனக் குழந்தை சாப்பிடுவதை ஒரு பார்ப்பன ரல்லாத குழந்தை பார்த்து விட்டால், தான் ஒரு மாதம் பட்டினி கிடப்பேன் என்று சொல்லி பார்ப்பனரல்லாதாரை இழிவுப்படுத்தி துரோகம் செய்தது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?



RangaRakes

மகாத்மா காந்தியடிகளின் கொள்கைக்கு 'இந்து' பத்திரிகையும் 'சுதேச மித்திரன்' பத்திரிகையும் விரோதமாய் பிரசாரம் செய்வதால் காங்கிரசில் ஒரு பத்திரிகை இருக்க வேண்டும் என்று சொல்லி காங்கிரஸ் பணத்திலும் 10000 ரூபாய் பெற்று பார்ப்பனரல்லாதாரிடமும் பதினாயிரக் கணக்கான ரூபாய்க்கு பங்குகள் விற்று பணம் பெற்று 'சுயராஜ்யா' என்ற பத்திரிகை ஆரம்பித்து "அவன் போனால் கலகமாகிவிடும் நான் போனால் செருப்பாலடித்து விட்டு வருகிறேன்" என்று சொல்லுவது போல் 'இந்து', 'சுதேசமித்திரனு'க்கு விரோத மாய் பிரசாரம் செய்வதாய் சொல்லி இப்போது அவைகளுக்கு மேலாக பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு விரோதமாயும் மகாத்மா காந்தியின் காங்கிரசை ஆழக்குழியில் போட்டு புதைப்பதற்கும் வேலைசெய்து கொண்டு பங்குக் காரர்களையும் பங்கு சேர்த்துக் கொடுத்தவர்களையும் வைது கொண்டு அச்சமூகத் திற்கே துரோகம் செய்து வருவது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

"ஆகையால் தட்டிப் பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்" என்பது போல் தன்னுடைய சம்பள சிப்பந்திகளை வைத்துக் கொண்டு, தன்னிஷ்டப்படிப் பேசி பத்திரிகையில் பார்ப்பனரல்லாதார் பார்ப்பனருக்கு துரோகம் செய்து விட்டார்கள் என்று சொல்லுவது எவ்வளவு நன்றி கெட்டத்தனம்? ஒவ்வொரு பார்ப்பனரும் தனியாய் நின்றுகொண்டு தங்கள் வாழ்வுகளையும் தங்கள் செல்வங்களையும் போக போக்கியங்களை யும் நன்றாய்க் கவனித்து இதெல்லாம் யாரை ஏமாற்றி அனுபவிக்கிறோம், யாரை துரோகம் செய்து அனுபவிக்கிறோம், எவ்வித நன்றி கெட்ட தன்மை யாய் அனுபவிக்கிறோம் என்று அவர்கள் நிதானமாய் யோசித்தால் விளங்கா மல் போகாது.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 29.08.1926**



tamilnavarasam.com

# ஸ்ரீமான் ஓ. கந்தசாமி செட்டியாரிடத்தில் பார்ப்பனர்களுக்குள்ள அபிமானம்

ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காருக்கு ஸ்ரீமான் ஓ. கந்தசாமி செட்டியாரிடம் அனுதாபமிருந்து அவரை முனிசிபல் கவுன்சிலராக்க வேண்டும் என்கிற எண்ணம் இருக்குமானால் பார்ப்பனர்கள் ஓட்டு அதிகமாயிருக்கும் திருவல்லிக்கேணி வார்டில் போட்டு கவுன்சிலர் பதவியை ஏன் அவருக்கு செய்து வைத்திருக்கக்கூடாது? பட்டத்தையும் விட்ட “பரிசுத்தமான ஒத்துழையா தத்துவம் கொண்ட காங்கிரஸ்வாதி” இப்போது ஸ்ரீமான் அய்யங்கார் கூட்டத்தில் நமது ஸ்ரீமான் கந்தசாமி செட்டியாரை விட வேறு யார் இருக்கிறார்கள்? அல்லாமலும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் இன்னமும் இதற்கு முன்னும் வக்கீல் உத்தியோகம் செய்து வருகிறார். சர்க்கார் நியமன பதவிகளும் சிலவற்றை வைத்துக்கொண்டிருக்கிறார். இவரை விட ஸ்ரீமான் செட்டியார் எந்த விதத்தில் குறைந்தவர்? அல்லாமலும் இந்த பார்ப்பனர் வார்த்தையைக் கேட்டு நடந்ததின் பலனாக பார்ப்பனரல்லாத சமூகத்தில் செட்டியாருக்கு இதுசமயம் செல்வாக்கும் குறைந்துபோயிருக்கிறது. இந்த விஷயம் சேப்பாக்கம் டிவிஷனில் செட்டியார் தோல்வியுற்றதினாலும் ராயப்பேட்டை டிவிஷனுக்கு பட்டம்விட்ட நமது செட்டியாரைப் போடாமல் பட்டம் தாங்கும் ஸ்ரீமான் ராவ்பகதூர் ஓ.ஏ.ஓ.கே. லக்ஷ்மணன் செட்டியாரை இவர்களே (பார்ப்பனர்கள்) போட்டதினாலேயும் நன்றாய் விளங்குகிறது. ஆதலால் பார்ப்பனர் அதிகமாயுள்ள வார்டுக்கு இவரை ஏன் போட வில்லை? இதுதான் போகட்டும். சட்டசபைத் தேர்தலிலாவது இந்த பார்ப்ப னர்களுக்கு நமது ஸ்ரீமான் கந்தசாமி செட்டியாருக்கு ஒரு ஸ்தானம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றிருந்தால் பார்ப்பனர்கள் மிகுதியுள்ளதும் கண்டிப்பாய் பார்ப்பனர் சொல்லுகிறபடி ஓட்டுக் கிடைப்பதுமான யூனிவர் சிட்டி தொகுதிக்கு ஏன் நிறுத்தக் கூடாது. ஸ்ரீமான் சத்தியமூர்த்தி படிப்பை யும் அனுபோகத்தையும் விட ஸ்ரீமான்செட்டியார் எந்த விதத்தில் தாழ்ந்தவர்? இவற்றை யோசிக்கும்போது “உங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொடுக்கிறாய்? எங்கள் வீட்டுக் கு வந்தால் என்ன கொண்டு வருகிறாய்?” என்ற பழமொழிபோல் இதைப் பார்ப்பனர்களின் சாவகாசம் என்பது இதிலிருந்தாவது விளங்கவில்லையா?

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 29.08.1926**



# நமது துணை ஆசிரியர் விலகுகிறார்

“குடி அரசு”க்குத் துணை ஆசிரியராயிருந்து வரும் திருவாளர் **மணவை ரெ. திருமலைசாமி** செப்டெம்பர் மாதம் 1-ம் தேதி முதல் நமது ஆசிரியர் குழாத்திலிருந்து விலகுகிறார். இனி அவர் ஐப்பசி மாதம் முதல் திருசிரபுரத்திலிருந்து அரசியல், இலக்கியம், சமத்துவம் ஆகிய துறைகளில் நின்று **“சிவாஜி”** என்ற பெயரை மருவி ஏழை மக்களின் தோழனாய் வெளி வரப் போகும் வாரப் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தை ஏற்றுக் கொள்ளுவார்.

இற்றைவரை “குடி அரசு” காரியாலயமிட்டு அவருக்குக் கடிதம் முதலியன எழுதி வந்த அன்பர்கள் இனி திரு. மணவை. ரெ. திருமலைசாமி, காஜாப்பேட்டை, திருச்சிராப்பள்ளி என்ற விலாசத்திற்கு எழுதுமாறு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

( ப.ர் )

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 29.08.1926**



RangaRakes tamilnavarasam.com

# லாலாஜியும் சுயராஜ்யக் கட்சியும்

ஒத்துழையாமையையும், மகாத்மா காந்தியையும் ஒழிப்பதற்கென் றும் நமது தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் பல சூழ்ச்சிகள் செய்தும் பயன் படாமல் போனது கண்டு, கடைசியாக வங்கத்து வீரரும் ஸ்தோத்திரப் பிரியருமான ஸ்ரீமான் தாஸ் அவர்களைப் பிடித்து அவருக்குப் பட்டா பிஷேகம் செய்வதாய் ஏமாற்றி அவரை விபூஷணராக்கி அவரைக் கொண்டு தங்கள் எண்ணிய எண்ணத்தை முடித்துக் கொண்டார்கள். அது சமயம் தங்களுக்கென்று ஒரு கக்ஷியிருப்பதாயும் அதற்கு பொது ஜனங்கள் ஏமாறத்தக்க வண்ணம் பஞ்சாப், கிலாபத் சுயராஜ்யக் கக்ஷி என்று பெயரு மிட்டு ஒரு பொய் மாயமானை சிருட்டித்தார்கள். பெயர் நீளமாயிருப்பதாக பலர் பரிகாசம் செய்யவே அதை சுயராஜ்யக் கக்ஷி என்று சுருக்கிக் கொண்டார்கள். இக்கட்சியின் உற்பத்தியையும், வளர்ச்சியையும் மனப்பூர்வ மாய் அறிந்தும் தன் காலிலேயே நிற்கக் கூடிய சக்தி இல்லாத சில தலைவர் கள் என்போர்களும் தேசீயப் பத்திரிகை என்பதுகளும், அப்பொய்மானை எதிர்க்க சக்தியில்லாதவர்களாகி, சமயம் வரும்போது நாமும் ஒரு கல்லைத் தூக்கிப் போடலாம் என்கிற எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு வெளியில் சுயராஜ்யக் கக்ஷியை ஆதரிப்பவர்கள் போலவே நடித்து தங்கள் நிலையைக் காப்பாற்றி வந்தார்கள். இதன் பலனாய் இப்பொய்மானை எதிர்க்க யாராவது வெளிக் கிளம்புவது என்றாலே பயப்பட வேண்டியதும் ராஜீய உலகத்தில் உயிருக்குத் துணிய வேண்டியதும் மிகவும் அவசிய மாயிருந்துவிட்டதால் வெகுசிலர் கூட வெளிக் கிளம்ப முடியாமல் போய் விட்டது. இந்த நிலைமையானது நமது பார்ப்பனர்களுக்கு பாமர ஜனங் களை வஞ்சித்து பதவிகள் பெறவும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ள அதுகளை உபயோகித்துக் கொள்ளவும் வெகு அநுகூலமாய்ப் போய்விட்டது. இதைக் கண்டு இரண்டொருவர் அரசியல் உலகத்தையே துறந்து தங்கள் சொந்தத்திற்கு ஏற்படக் கூடிய பல துன்பங்களுக்கும் கஷ்டங்களுக்கும் துணிந்தும் அரசியல் உலகில் கடுகத்தனை இடம் இல்லா மல் போனாலும் உண்மைத் தொண்டுக்கும் சத்தியத்திற்கும் யோக்கியதை இருக்கிறதா இல்லையா என்பதை ஒரு கை பார்த்தே தீருவோம் என்று இறங்கி இப் பார்ப்பனர்களின் சூழ்ச்சிக்கும், தந்திரத்திற்கும், பழிக்கும், விஷமப் பிரசாரத்திற்கு கூலி கொடுத்து ஆள்களை விட்டு திட்டவும், வைது எழுதவும் செய்வித்த கொடுமைகளுக்கெல்லாம் பயந்து ஓடாமல் முகம் கொடுத்ததின்



பலனாகவும் இப்பொய்மானை பாமர ஜனங்கள் கொஞ்ச மாவது உணரவும், இப் பொய்மானை நம்பி ஏமாந்த தலைவர்கள் கண் விழிக்கவும், தன் காலில் நிற்க முடியாமல் தவித்துக் கொண்டு இரண்டும் கெட்டானாய் இருந்தவர்கள் உறுதியுடன் நிற்கவும் முடிந்தது. ஆனால் லாலா லஜபதிராய் போன்ற வீரர்கள் எல்லாம் இப்பொய்மானால் ஏமாற்றப் பட்டார்கள் என்றால் மற்ற யார் ஏமாந்ததைப் பற்றி நாம் குற்றம் சொல்ல முடியும். பல அரசியல் தலைவர்கள் ஏமாறவில்லையானாலும் அதுசமயம் வேறு மார்க்கமில்லாமல் தெரிந்தே கட்டுப்பட்டிருக்க வேண்டியிருந்த தையும் நாம் ஒப்புக் கொண்டுதானாக வேண்டும்.

இந்த நிலைமையில் இன்னமும் சுயராஜ்யக் கட்சி என்கிற பொய்மான் சில புது ஆசாமிகளை ஏமாற்றிக் கொண்டுதான் வருகிறது. ஆதலால் அதனிடத்தில் உள்ள மாய்கையில் பல சுயநலக்காரர்கள் மயங்குவது பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் பாமர ஜனங்கள் அதன் மாய்கையில் விழ இடங்கொடுக்கக் கூடாதென்றே ஆசைப்படுகிறோம்.

சுயராஜ்யக் கட்சி என்பது எந்த வகையில் நாட்டிற்கு அநுகூலமான கொள்கையை உடைத்தாயிருக்கிறது? எவ்விதத் தலைவர்களை அது உடைத் தாய் இருக்கிறது அல்லது அதனிடத்தில் எவ்வித கண்ணியமிருக்கிறது? அல்லது நமது நாட்டில் எந்தக் கூட்டத்தாரிடத்தில் அதற்கு மதிப்பு இருக்கி றது? இவைகளையெல்லாம் பாமர ஜனங்கள் அறியும்படி யோக்கியமான பத்திரிகைகள் என்று சொல்லப்படுவதும் உண்மையான அரசியல் தலைவர் கள் என்போர்களும் உண்மைத் தொண்டர்களும் தங்கள் மனச்சாட்சி சொல்லுகிறபடியாவது வெளியிட்டிருப்பார்களானால் ஒத்துழையாமையும் காந்தியடிகளும் ஒடுங்கியிருக்க முடியுமா? காலகதியில் ஒடுங்கியிருந்தா லும் இன்னமும் தலையெடுக்காமலாவது இருந்திருக்க முடியுமா? என்றுதான் நாம் கேழ்க்கிறோம்.

ஒத்துழையாமை ஒடுங்கினதற்கும் மகாத்மா விலகிக் கொண்டதற்கும் நமது பார்ப்பனர்களின் சூழ்ச்சியே காரணமானாலும் அச் சூழ்ச்சிகளுக்கு ஆக்கமளித்த பார்ப்பனரல்லாத தேசீய பத்திரிகைகளும், தேசீயத் தலைவர் களும், தேசீயத் தொண்டர்களுமே இதன் பெரும் பாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள். ஒரு வீட்டில் உள்ள சொத்துக்கள் களவு போனதற்கு களவா ளியே காரணமானாலும் கதவைத் திறந்து வைத்து விட்டவர்களே அதிக காரணஸ்தர்கள் ஆவார்கள். ஆரம்பத்தில் கதறினோம் எல்லோரும் இதற்கு உடந்தையாய் இருக்கிறார்களே, அறியாமலா அல்லது வேண்டுமென்றா அல்லது நாம் மாத்திரம்தான் பைத்தியக்காரரா என்று கூட எழுதினோம். நமது எதிரிகள் ஆம், ஒரே ஒரு பைத்தியக்காரன்தான் ஈரோட்டில் இருக் கிறான் என்று கூட எழுதிற்று. இப்பொழுது நாள் ஆக ஆக அதிக பைத்தியக் காரர்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகிறார்கள். நாம் பயித்தியக்காரரான வெகு நாள் பொறுத்துதான் மகாத்மாவும் பயித்தியக்காரர் ஆனார். பிறகு அநேகம்



RangaRakes tamilnavarasam.com

பயித்தியக்காரர்கள் ஆனார்கள். கடைசியாக லாலா லஜபதிராயும் நம்மைப் போலவே பயித்தியக்காரராகி விட்டார். இப்போது நமது பார்ப்பனர்கள் அவரை மிதவாதி என்றும், பொறுத்தமற்ற நடவடிக்கைக்காரர் என்றும் வெள் ளைக்காரரிடம் சபாஷ் பட்டம் வாங்கி விட்டார் என்றும் சொல்லுவதோடு லாலா அவர்கள் நிர்மாண வேலை செய்வதாய் ஒப்புக் கொண்டு என்னையும் நம்பச்செய்து தங்கள் கக்ஷியில் சேர்த்துக்கொண்ட பிறகு (கொள்கை) நிர்மாண வேலையைப் பற்றி ஒன்றும் செய்யவில்லை என்று கேட்டால் அதற்கு மறு மொழி, தாங்கள் செய்யாமல் தேசத்தாரை ஏமாற்றி விட்டதற்கு வெட்கப்படாமல் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று திருப்பிக் கேட்டிருக் கிறார்கள் . இன்னும் லாலாஜி அவர்களை லாலாஜி சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து தனக்காக செய்து கொள்ளவேண்டிய அவசியம் இருந்ததாகவும் இப்போது அது தீர்ந்தவுடன் அதைவிட்டு விலகி விட்டதாகவும் ஒரு கெட்ட எண்ணமும் கற்பிக்கப்படுகிறது. மற்றும் பல கடுமொழிகளும் உபயோகப் படுத்தப் பட்டிருக்கிறது. இது எவ்வளவு கொடுமை என்பதை வாசகர்கள் யோசிக்க வேண்டும்.

## தலைவர்கள்

முதலாவதாக, இது பெயருக்கு மாத்திரம் பண்டிட் மோதிலால் நேரு என்கிற ஒரு மத்திய மாகாண பார்ப்பனரால் எழுதப்பட்டது என்று வெளி யில் தெரிவதாயிருந்தாலும் உண்மையில் அது தமிழ் நாட்டுப் பார்ப்பனர் ஒருவரால் எழுதி, பண்டிதர் பேரால் வெளிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும் என்றே எண்ணுகிறோம். எப்படி என்றால் கவர்னர் போன்றவர்களுக்கு ஏதாவது உபசாரப் பத்திரமோ விண்ணப்பமோ கொடுத்தால் அதற்கு பதில் கவர்னரோ அல்லது கவர்னர் பேராலோ கொடுக்கப்பட்டாலும் அதை தயார் செய்வது இலாக்கா காரியதரிசிதான். அது போல் இதை எழுதியவர் இலாக்கா காரிய தரிசியாகிய ஸ்ரீமான் எ.ரெங்கசாமி அய்யங்காராகத்தான் இருக்க வேண்டும். அது எப்படியிருந்த போதிலும் இப்பார்ப்பனர்கள் அபிப்பிராயத் திற்கு யாராவது மாறுபட்டால் அவர்கள் வெள்ளைக்காரரின் ஆள், சுயநலக்காரர், பொம்மை, தத்துவம் உணராதவர், துரோகி என்று சொல்லிவிடுகிறார்கள். லாலாஜி அவர்கள் யோக்கியதையையும் இவ்விரு பார்ப்பனர்கள் யோக்கியதையையும் நினைத்துப் பார்த்தால் யார் தேச பக்தர்கள், யார் சுயஜாதி பக்தர்கள், யார் சுயநல பக்தர்கள் என்பது விளங்காமல் போகாது. மத்திய மாகாண பார்ப்பனரான பண்டிதர் அவர்கள் பாமர ஜனங்களை ஏமாற்றி மாதம் 10,20 ஆயிரம் ரூபாய் கொள்ளை அடித்துக்கொண்டு ராஜபோகம் அனுபவித்துக் கொண்டு தேசபக்தராய் இருந்த காலத்தில் லாலாஜி தூக்கிச் செல்லப்பட்டதும், அன்னிய நாடுகளில் சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாமல் திண்டாடினதும் வருஷக்கணக்காய் ஜெயிலில் வதிந்ததையும் உலகம் அறியாதா? இந்த தமிழ் நாட்டுப் பார்ப்பனரான அய்யங்கார்கள் இவர் ஜெயிலுக்கு போனார்; அவர்



ஜெயிலுக்குப் போனார் என்று எழுதி தானும் தன் இனத்தாரும் மாதம் ஆயிரம் இரண்டாயிரம் கொள்ளையடித்துக் கொண்டு தேச பக்தராயிருந்த (இருக்கிற) காலத்தில் லாலாஜி ஜெயிலிலும் வெளிநாடுகளிலும் அவஸ்த் தைப்பட்டுக் கொண்டிருந்தவர். இப்படிப்பட்டவர் இந்த பார்ப்பனர்களுக்கு உள்ளாளா யில்லாவிட்டால் உடனே ஒழிப்பதற்குத் துணிந்து விடுகிறார்கள்.

## கண்ணியம்

அதன் கொள்கைகளும் தலைவர்களும் இப்படி இருந்தாலும் அதன் கண்ணியம் எப்படி இருக்கிறது என்று பார்ப்போம்.

கடைசி விஷயமாகிய சட்டசபையை விட்டு வெளியேறிய வெளி யேற்றத்தைப் பற்றி யோசிப்போம்.

சட்டசபை உபயோகமற்றதென்று வெளியேறியபின் தேசப் பொது நன்மையின் அவசியத்தைப் பற்றி அப்போதைக்கப்போது வரும் விஷயங் களை அனுசரித்துப் போவதும் போகாமலிருப்பதும் கமிட்டியார் தீர்மானிக் கிறபடி நடந்துக் கொள்வதென்று தீர்மானித்தார்கள். இந்துமத பரிபாலன மசோதா விஷயத்தில் கமிட்டியைக் கேளாமல் கமிட்டியின் பேரால் உத்திரவு போட்டு சுயராஜ்யக் கட்சியார் மசோதாவை எதிர்க்க வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள்.

பிறகு அதன் தலைவர் அதை ஆதரித்து அந்த உத்திரவு சட்டப்படி செல்லத்தக்கது என்றும், கமிட்டி சாங்ஷன் அவசியமில்லையென்றும் சொன் னார். சுயராஜ்யக் கட்சி முக்கிய மெம்பரான தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி சுயராஜ்யக் கட்சியார் சட்டசபைக்குப் போய் மசோதாவை எதிர்த்தால் கட்சியை விட்டு விலகுவதாய் சொன்னவர், அவரும் பத்திரிகைக்கு ஏதோ எழுதிவிட்டு விலகாமலே இருக்கிறார். கமிட்டி மெம்பர் ஒருவர் கமிட்டி சாங்ஷன் இல்லாமல் சுயராஜ்யக் கட்சியார் சட்டசபைக்கு போனதைக் கண்டித்து '2' வார்த்தை சொல்லி விட்டு கமிட்டி மெம்பராகத் தான் இருந்து வருகிறார். இவ்வளவும் பொறாமல் அதன் தலைவர் மறுபடியும் முன் எழுதிய தற்கு விரோதமாய் இந்துமத தர்ம மசோதா கட்சி விஷயமு மல்ல பொது விஷயமுமல்ல தனிப்பட்ட விஷயம். அவரவர்கள் இஷ்டப் படி நடக்கலாம் என்றார். அப்படியானால் சட்டசபையை விட்டு வெளி வந்ததற்கு என்ன அருத்தம்? கட்டுப்பாட்டுக்கு என்ன அருத்தம்? கமிட்டி நியமித்ததற்கு என்ன அருத்தம்? கமிட்டி மெம்பர் மிரட்டுவதற்கு என்ன அருத்தம்? காரியதரிசி விலகுவதாய்ச் சொன்ன வாக்குறுதிக்கு என்ன அருத்தம்? இது மாத்திரமா, வகுப்புப் பிரசாரம் என்கிற பெயரை வைத்துக் கொண்டு பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பிடுங்க இந்தியா சட்டசபையில் சர்க்கார் கொண்டு வந்த மசோதாவை எதிர்க்காமல் சுயராஜ்யக் கட்சியார் கட்சிக்கட்டுப்பாடு என்கிற பெயரைச் சொல்லிக் கொண்டு அதை நிறை வேற்ற அநுகூலமாயிருந்ததற்கு என்ன அருத்தம்?



RangaRakes tamilnavarasam.com

## யார் மதிக்கிறார்கள்

கண்ணியம் இப்படியிருந்தாலும் அதை யார் மதிக்கிறார்கள் என்று பார்ப்போம். சுயராஜ்யக் கட்சியென்கிற பெயரை ஜனங்களுக்கு பித்தலாட் டம் என்று சொல்லும் வார்த்தைக்கு மாறு பெயராய் உபயோகிக்கிறார்கள். கும்பகோணம் என்ற வார்த்தைக்கு எப்படி சூழ்ச்சி, மோசம் என்கிற வார்த்தை அகராதியில் இருக்கிறதோ அது போல் சுயராஜ்யக் கட்சியென்றால் பார்ப்பனப் பித்தலாட்டம் என்கிற கருத்துடன் சாதாரண மக்களிடையே பழக்கத்தில் இருந்து வருகிறது. சர்க்காராருக்கும் சுயராஜ்யக் கட்சி என்றால் வெகு பரிகாசமாய் விட்டது. அதன் மூலம் சில தலைவர் களுக்கும் தொண்டர்களுக்கும் உள்ள யோக்கியதையும் குறைந்தது. பார்ப்பனர் ஒருவர் தவிர வேறு யாரிடத்திலும் இது சமயம் அக்கட்சிக்கு மதிப்புமில்லை. அதோடுமாத்திரமல்லாமல் அக்கட்சிக்கு ஆதரவளித்தவர் களுக்கும் கெட்டபேர் ஏற்பட்டுவிட்டது. ஒத்துழைப்புக்கு மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டது. பார்ப்பனர் பிழைக்க வேண்டி இவ்வளவு மோச மானதும் புரட்டானதுமான ஒரு கட்சியின் பெயரைச் சொல்லி சுயராஜ்யத் திற்குப் பாடுபடுவதாய் பாமர ஜனங்களை ஏமாற்றி ஆதிக்கம் பெற நினைத்த தின் பலன் பொது ஜனங்களுக்கு பார்ப்ப னர் யோக்கியதை வெளியாக இது ஒரு சந்தர்ப்பமாக ஏற்பட்டதோடல்லாமல் மகாத்மா செய்த வேலையும் கெட்டு, சர்க்காரிடம் பொது ஜனங்களுக்கு நம்பிக்கையும், ஒத்துழைக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுப் போய் விட்டது. இனியும் கொஞ்ச காலத்திற்கு இப்பார்ப்பன சூழ்ச்சி நிலைத்திருக்கு மானால் தற்காலம் மக்களுக்கு இருப்பதாய்ச் சொல்லப்படும் சிறு சிறு உரிமை கள் என்பது கூட சர்க்காரிடமே ஒப்படைக்க வேண்டிவருமென்றே பயப்படுகிறோம். ஆதலால் பொதுமக்கள் இக்கட்சியை விளையாட்டுக்காவது ஆதரிக்காமல் வரப் போகும் தேர்தலில் குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்பதை ஞாபகமூட்டுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 05.09.1926**



# முளையிலேயே வெருப்பு

பார்ப்பனர் தங்கள் குழந்தைகளை சிறு பிராயம் முதற் கொண்டே நம்மை தாழ்ந்த ஜாதியார் என்று நினைக்கும்படி பழக்கி வருகிறார்கள். அதாவது, தங்கள் குழந்தைகளை “அடீ!அடீ!! அவள் மீது படாதடி; அவள் சூத்திரச்சிடீ; அவள் மீது பட்டு விட்டையே! போய் பாவாடையை நனைத்து குளித்து விட்டுவா என்று பெண் குழந்தைகளுக்கும், அடே சூத்திரன்கள் மேலெல்லாம் பட்டு அவன்களை தொட்டூட்டு வந்துட்டையே! போ! போ! போயி குளிச்சூட்டு வா என்றும், பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போன வுடன் பாவாடையை அவிழ்த்து வை, துண்டை அவிழ்த்து வை என்றும் சொல்லி நம்மிடம் அதுகளுக்கு ஒரு இழிவை சொல்லி கற்பிக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் ஏதாவது ஏனம்மா பள்ளிக்கூடத்திற்கு போனதற்காக துண்டை அவிழ்த்து வைக்கச் சொல்லுகிறாய் என்று கேட்டால், “என்னடி அங்கு போய் சூத்திரக் குட்டிகளோடு நெருங்கி உட்கார்ந்து அவர்களை எல்லாம் தொட்டுவிட்டு இங்கு வந்து வீட்டிற்குள் புகலாமா?” என்கிறார்கள். இதிலிருந்து அந்தக் குழந்தைகளுக்கு முளையில் இருந்தே பிராமண ரல்லாதாரிடம் அருவருப்பும், அவர்கள் தொடக் கூடாத ஜாதி என்கிற உணர்ச் சியும் ஏற்பட்டு விடுகிறது. இந்தக் கொடுமைகளையெல்லாம் நமது பெரியவர்கள் அறிந்தேதான் பார்ப்பனன் என்பது அமங்கலவஸ்த்து வென்றும், அவனைக் காண்பதே சகுனத் தடை, அதாவது கெட்ட சகுனம் என்றும், நாம் போகும் காரியங்கள் அவன் கண்ணுக்குத் தெரிந்தால் கூட அவற்றைக் கெடுத் துதான் வாழப் பார்ப்பான் என்கிற எண்ணமும் அதில் வைத்து அவ்வளவு தாழ்மையாய் கருதி அனுபவத்தில் நமது பிள்ளைகளுக் கும் கற்றுக் கொடுத்து வந்தார்கள். ஆனால், நாம் அவற்றையெல்லாம் மறந்து அதற்கு நேர் விறோதமாய் பார்ப்பனர் எழுதி வைத்ததை ஒப்புக்கொண்டு நாமும் நம்ம குழந்தை களுக்கு அய்யர் மேல் பட்டுவிடாதே, அம்மாமி மேல் பட்டு விடாதே, அவர்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லுவதுடன் நாமும் நம்மைத் தாழ்ந்தவர்கள் என்றே நினைத்துக் கொள்ளுகிறோம். ஆதலால் நமது குழந்தைகளுக்கும் பள்ளிக்கூடப் படிப்பிலிருந்தே இதை ஒருபாடமாய் வைத்து இவைகளின் உண்மைகளைப் பற்றி சொல்லிக் கொடுத்து அவர்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தை மாற்ற தகுந்த ஏற்பாடு செய்து வந்தால்தான் நமது சுயமரியாதையையாவது அடைய முடியும்.

**குடி அரசு - கட்டுரை - 05.09.1926**



RangaRakes tamilnavarasam.com

# தீண்டாமையும் பார்ப்பனரும்

## முனிசிபல் சட்டத்தில் ஸ்ரீமான் வீரய்யனின் திருத்த மசோதா

இவ்வாரம் நடைபெற்ற சென்னை சட்டசபைக்கு ஸ்ரீமான் வீரய்யன் அவர்கள் முனிசிபல் சட்டத்திற்கு ஒரு திருத்த மசோதா அனுப்பியிருந்தார். அதாவது "பொதுத் தெருவை எவரேனும் உபயோகிக்க முடியாமல் தடுப் பவருக்கு 100 ரூபாய் வரையில் அபராதம் விதிக்கலாம்" என்று ஒரு பிரிவை அதில் சேர்க்க வேண்டும் என்று அனுப்பியிருந்தார். அது பிரேரே பணைக்கு வரும்போது சில பார்ப்பனர்கள் தங்கள் ஜாதிப் புத்தியின்படி அதைக் கொல்ல சட்ட சம்பந்தமான ஆக்ஷேபணைகளை எழுப்பி விட்டார் கள். தாங்கள் பார்ப்பனர் சந்ததியார்கள் என்று சொல்லிக் கொள்வதால் பெருமைப் படும் சில பார்ப்பனரல்லாதாரும் ரகசிய வருணாசிரம தர்மிகளும் அதற்கு உடந்தையாயிருந்து இந்த சபையில் அதை நிறைவேறாமல் செய்துவிட்டார்கள். பொதுத் தெருவை பொதுமக்கள் உபயோகப்படுத்திக் கொள்வதைத் தடுத்தவர்களுக்கு அபராதம் போடலாம் என்றால் அதை ஆக்ஷேபிப்பதற்கு நமது நாட்டில் ஜனங்கள் இருக்கும் போதும், அப் பேர்ப்பட்டவர்களை சட்டசபைக் குத் தெரிந்தெடுக்கக்கூடிய பைத்தியக்கார ஓட்டர்கள் நமது நாட்டில் மலிந்தி ருக்கும் போதும், வெள்ளைக்காரரைப் பார்த்து "நாங்கள் சுயராஜ்யத்திற்கு தயாராகி விட்டோம். எங்களிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு நீங்கள் போய் விடுங்கள்" என்று சொல்வது எவ்வளவு மடத்தனம் என்பதை வாசகர்கள்தான் உணர வேண்டும்.

இம்மாதிரி ஜனங்கள் மூலம் வரும் சுயராஜ்யம் பொது மக்களுக்கு உபயோகப்படுமா என்பதை பொது மக்களே உணர வேண்டும். ஸ்ரீமான் வீரய்யன் அவர்களும் எம்.சி. ராஜா அவர்களும் வெள்ளைக்கார அரசாங்கம் இருப்பதின் பலனாகத்தான் சட்டசபைக்குப் போகவும், தங்கள் சகோதரர்க ளாகிய 7 கோடி பேர்களுக்கு தெருவில் நடக்கும் உரிமையைக் கேழ்க்கவும் சந்தர்ப்பம் கிடைத்தது. இப்பார்ப்பனர்கள் காங்கிரசும், அது கோரும் சுயராஜ்யமும் ஒரு சமயம் நமக்குக் கிடைத்து விடுவதாயிருந்தால் ஸ்ரீமான் கள் வீரய்யனும் ராஜாவும் கோறும் தெருவில் நடக்கும் பாத்தியம் இவர்க ளுக்குக் கிடைக்குமா வென்பதை ஒவ்வொருவரும் நிதானமாய் யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம். "குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் போட்டுப் புதைப்பதற்கு குழி தோண்டிற்று" என்று ஒரு பழமொழி சொல்வதுண்டு. அதுபோல் தீண்டாத வகுப்பார் என்று ஒதுக்கி வைத்த ஸ்ரீமான்கள் வீரய்யன், எம்.சி. ராஜா, ஹைக் கோர்ட்டு ஜட்ஜ் கிருஷ்ணன் ஆகியவர்களையும் அவர்கள் சகோதரர்களையும் தாங்களும் அனுமதிக்கக் கூடாது, சர்க்காரும் அவர்களுக்கு உதவி செய்யக் கூடாது, அவர்களாகவும் தலையெடுக்கக் கூடாது என்று கொடுமைப்படுத்துவதினால் அம் மக்களுக்கு வேறு கதிதான் என்ன? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேழ்ப்பதும் வகுப்புப் பிரச்சினை களைக் கிளப்புவதும் தேசத் துரோகமென்று வெகுசுலபத்தில் நமது பார்ப்பனர் கள் சொல்லி பாமர ஜனங்களை ஏமாற்றி விடலாம். ஸ்ரீமான் ஜயவேலு போன்றவர்களைக் கொண்டு மீ 40, 50 ரூபாய்கள் கொடுத்து ஸ்ரீமான் ராஜாவையும் வீரய்யனையும் மற்றும் இதுகளுக்காக உழைப்பவர்களையும் வையும்படி செய்யலாம். இதுகளுக்குப் பயந்துக் கொண்டு சிலரை அடங்கி இருக்கும் படியும் செய்து விடலாம். ஆனால் அவர்கள் மனதில் உள்ள வழிநடை சுதந்திர தாகத்தை அடக்கிவிட முடியுமா என்பதை யோசிக்க வேண்டும். சென்ற மாதம் நாம் கும்பகோணம் சென்றிருந்த போது அந்த டவுனில் 3, 4 வீதிகளில் அதாவது அய்யங்கார் தெருவு, வியாசராயர் அக்கிராரம், பட்டாச் சாரித் தெருவு முதலியதுகளில் இன்னமும் சிலர் நடக்கக் கூடாது என்கிற கொடுமை இருந்துதான் வருகிறது. இதோடு மற்றொரு வேடிக்கை, அதென்னவென்றால் கூரத்தாழ்வார் கோவில் என்று ஒரு கோவில் இருக்கிறது. அதற்குள் பார்ப்பனரின் காப்பிக் கடை இருக்கிறது. அக் காப்பிக் கடைக்காக ஒரு கக்கூசு இருக்கிறது. அக் கக்கூசு எடுக்க தீண்டப் படாதவர் தினமும் இரண்டு தடவை மல பாண்டங் களுடன் போய் வந்து கொண்டிருக்கிறார். கூரத்தாழ்வார் கோவிலை விட இந்த அய்யங்கார் வீதியும், வியாசராயர் வீதியும், பட்டாச்சாரி வீதியும் நமது பார்ப்பனருக்கு உயர்ந்த தாய்ப் போய்விட்டது.

மல பாண்டத்துடன் கோவிலுக்குள் போய் வருவதை விட வெறுங் கையுடன் நடப்பது நமது பார்ப்பனருக்கு அதிக பாவமாய்ப் போய் விட்டது. இவ்வளவு துப்பாக்கியும், பீரங்கியும், ஆகாயக் கப்பலும், பட்டாள மும் இருந்தும் வீதியில் நடக்கவிடாமல் உதைக்கிறார்கள் என்றால் இதுகள் ஒழிந்த பிறகு இவர்கள் என்னதான் செய்ய மாட்டார்கள். வெள்ளைக்காரர்கள் வந்து 150 வருஷங்கள்தான் ஆகிறது. இந்தக் கொடுமை ஏற்பட்டு 1000-க் கணக்கான வருஷங்கள் ஆகிறது. ஏறக்குறைய வெள்ளைக்காரர்கள் வந்த பிறகே இக் கொடுமைகள் கொஞ்சமாவது மாறுபாடு அடைந்திருக்கின்றன. ஆதலால் வெள்ளைக்காரரை ஓட்டுவது இம்மக்களுக்கு உரிமைக்கும் சுயமரியாதைக் கும் நன்மைப் பயக்குமா? இப்பார்ப்பனீயத்தை அழிப்பது நன்மைப் பயக்குமா? என்பது நாம் சொல்லாமலே விளங்கும். யாரோ இரண்டொரு பார்ப்பனர் நம்ம வீட்டில் சாப்பிடுவதாலும் "தீண்டாதார் தொட்டதை சாப்பிடுவதினாலும் மக்கள் உரிமை பெற்றுவிட முடியுமா? பார்ப்பனரிலும்





RangaRakes tamilnavarasam.com

சில யோக்கியர்கள் இருக்கிறார்கள்" என்று சில ஏமாந்த சோணகிரிகளை ஏய்க்கவே அவர்கள் நம்ம வீட்டில் சாப்பிடுவதே ஒழிய வேறில்லை என்றே உறுதியாய்ச் சொல்லுவோம்.

உதாரணமாக, ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் குடியை ஒழிப்பதற்காக சட்டசபைக்கு ஆட்களை அனுப்புகிறேன் என்று சில பார்ப்பனர்களை அதுவும் கள் உற்பத்தி செய்து, கள்ளினால் பணம் சம்பாதித்து ஏழைகள் வயிற்றில் மண்ணைப் போட்டு, அவர்கள் தொழிலைக் கெடுத்த பார்ப்பனர்கள் பின்னால், அவருக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க கிராமம் கிராமமாய்த் திரிந்தாரே; இம்மாதிரி தெருவில் நடக்கும் உரிமையும் கண்ணில் தென்படும் உரிமையும் இல்லாமல் தவித்துக் கொண்டு பூச்சி புழுக்களிலும் கேவலமாய், நாய் பன்றிகளை விட இழிவாய் நடத்தப்பட்டு கொடுமைப்படும் சகோதரர்களுக்காக சட்டசபைக்கு ஏன் ஆட்களை அனுப்பக் கூடாது? மதுவை விலக்கத் தீர்மானம் செய்தால் அது செல்லாது என்பதும் அனுபோகத்தில் நடக்காது என்பதும் நன்றாய்த் தெரிந்திருந்தும் பார்ப்பனரல்லாத மந்திரிக்கும் அவர்கள் கட்சிக்கும் கெட்ட பெயரை உண்டாக்கி அடுத்த தேர்தலுக்கு அவர்கள் சட்டசபைக்குப் போக முடியாமல் செய்து பார்ப்பனரையும் அவர்கள்தம் அடிமைகளையும் சட்டசபைக்கு அனுப்ப முயற்சித்துப் பார்த்தார். ஆனால் தீண்டாமை விலக்குக்காக ஆள்களை சட்டசபைக்கு அனுப்பினால் அவர்கள் மெஜாரிட்டியாய் இருந்து செய்யும் தீர்மானம் நிறைவேறும். நிறைவேறியபடி நடக்க சவுகரியமுண்டு. சர்க்கார் இதில் பிரவேசிக்க முடியாது. நாம் சட்டம் செய்து கொடுத்து விட்டால் அவர்கள் அதை நிறைவேற்றியே ஆக வேண்டும். அப்படியானால் அது பார்ப்பன ஆதிக்கத்திற்கு இடையூறாயிருக்கும் என்கிற எண்ணத்தினாலேயே அதைக் கவனிக்காமல் மூடி வைத்து விட்டார். இப்போதும் அதிக காலதாமத மேற்பட்டுவிடவில்லை. தீண்டாமை என்கிற ஒரு விஷயத்திற்கு மாத்திரம் சட்டசபைக்குப் போவதாய் "தீண்டாமையில் அனுதாபமுள்ள ஆச்சாரியார்" வெளிக்கிளம்பினால் அவரை ஆதரிக்க தமிழ் மக்கள் தயாராயிருக்கிறார்கள். அது நிறைவேறுவதாய் இருந்தால் தேவஸ்தான மசோதா கூட அவ்வளவு அவசியமில்லை. யார் வருவதானாலும் ஒத்து வேலை செய்யவும் தயாராயிருக்கிறோம். பார்ப்பனரல்லாதாராகிய ஜஸ்டிஸ் கட்சி யாரும் தயாராகவே இருக்கிறார்கள். ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடு, கலியாணசுந்தர முதலியார், இராமசாமி நாயக்கர், ராமநாதன் முதலிய வர்கள் அந்தக் காரியத்திற்காக சட்டசபைக்குப் போகவும்கூட தயாராயிருப் பார்கள். அதை விட்டு விட்டு ஆகாத காரியத்தைச் சொல்லிக் கொண்டு யோக்கியர்கள் அல்லாதவர்களும் கண்ணியமற்றவர்களும் மாத்திரம் தன்னுடன் வந்து சேரும்படியாகப் பார்த்து, அதற்காக ஒரு கட்சிப் பேரை யும் மகாத்மா பேரையும் உபயோகப்படுத்திக் கொண்டு தேச நன்மை, ஏழை கள் நன்மை என்று ஏமாற்றும் காலம் மலையேறி விட்டதென்றும், பொது ஜனங்கள் இத்தந்திரக்காரப் பார்ப்பனரை நன்றாய் அறிந்துகொண்டார்கள் என்றும், வரப்போகும் தேர்தலில் அவர்களுக்கு நல்ல



பாடம் கற்பிக்கப் போகிறார்கள் என்றும் சொல்லுவதோடு ஸ்ரீமான்களான வீரய்யன் அவர் களுக்கும் எம்.சி.ராஜா அவர்களுக்கும் உங்கள் தீர்மானத்தை சில பார்ப்பனர் சூழ்ச்சியால் இந்த சட்டசபைக் கூட்டத்தில் தள்ளி வைக்க நேர்ந்தாலும் அடுத்த கூட்டங்களில் கண்டிப்பாய் அது நிறைவேறவும் அமுலில் வரவும் கூடிக் காரியங்களைச் செய்ய தயாராயிருக்கிறோம் என்பதாக உறுதி கூறுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 05.09.1926**



RangaRakes tamilnavarasam.com

## பூனா பார்ப்பனரின் கர்மபலன்
## கண்டனக் கூட்டம்

பூனா பிராமணர்கள் பெரும்பாலும் லோகமானிய திலகர் என்றழைக் கப்படும் கடும் வர்ணாசிரமியான ஸ்ரீமான் திலகர் ஜாதியைச் சேர்ந்தவர்கள். மகாத்மா காங்கிரசுக்கு முந்திய காங்கிரசுகள் இப்போதைய காங்கிரசைப் போலவே பார்ப்பனக் காங்கிரசாயிருந்ததாலும் இப்போதைய 'தலைவர்கள்' ஸ்ரீமான்கள் பண்டித நேரு, பண்டித சரோஜினி, எஸ்.சீனிவாசய்யங்கார், எ. ரெங்கசாமி அய்யங்கார், எம்.கே. ஆச்சாரியார், சத்தியமூர்த்தி போன்ற பார்ப்பனர்கள் இந்திய தேசத் தலைவர்களாயிருப்பது போலவே அப்போதும் ஸ்ரீமான்கள் திலகர், மாளவியா முதலிய பார்ப்பனர்களே தலைவர் களாயிருந் தார்கள். இப்போது இவர்கள் பார்ப்பனப் பத்திரிகைகளாலும் பிரசாரத்தாலும் படம் வைத்து கும்பிடத் தகுந்தவர்களாயிருந்த போதிலும், சமுதாய விஷயத் திலும் சமத்துவ விஷயத்திலும் ஸ்ரீமான் திலகர் நமது ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியாருக்கு ஒரு படி முன்னால் இருப்பவர். அப்பேர் பட்டவர் பத்திரிகை உலகத்திலும், பிரசார உலகத்திலும், அரசியல் உலகத்தி லும் சிரேஷ்ட்டமாய் விளங்கி செல்வாக்கோடு வாழ்ந்த ஊராகிய பூனா நகரத்தில் பார்ப்பனா திக்கம் எவ்வளவு வளர்ந்திருக்கும், எவ்வளவு குடி கொண்டிருக்கும் என்பது நாம் சொல்லாமலே விளங்கும். அதின் பலனாய் அவ்வூரில் உள்ள பார்ப்பன ரல்லாதார் தீண்டப்படாதாரைப் போல் கருதப் படுவதுடன் தண்ணீர்க் குழாய் முதற்கொண்டு பார்ப்பனருக்கு தனித்தனி யாய் ஏற்பட்டு வந்ததும், பார்ப்பனரல்லாதார் பார்ப்பனப் புரோகிதரைக் கொண்டே வைதீகச் சடங்குகள் நடத்த வேண்டும் என்கிற சட்டமிருக்கிறது மான கொடுமைகள் நடத்த சௌகரிய மேற்பட்டிருந்தது. ஆனால் ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டதின் பலனாய் அவ்விடத்திய பார்ப்பனரல்லாதார் தங்கள் சுயமரியாதையை உணர ஆரம்பித்தார்கள். ஆரம்பித்து அவர்கள் மனோ பாவம் எதுவரை சென்றது என்று தெரிய வேண்டுமானால் சென்ற வருஷம் மத்திய மாகாணத்தில் நடந்த பார்ப்பனரல்லாதார் மகாநாட்டு அக்கிராசனர் ஸ்ரீமான் பாக்தே அவர்களின் சொற்பொழிவையும் அங்கு நடந்த திரு விளையாடல்களையும் கவனித்தால் தெரியவரும். அதாவது, கொட்ட கையில் கட்டியிருந்த திலகர் படத்தை எடுத்து எரிந்தும், ஸ்ரீமான் திலகரைப் பற்றி அக்கிராசனர் பேசும் போது அவரைக் கண்டித்ததும், பிராமணர்களை அடியோடு ஒழித்தால் அல்லது சுயராஜ்யம் வராது என்று சொன்னதும், சில பார்ப்பனரையும் அவர்களுக்கு அனுகூல மாயிருந்தவர்களையும் தடியி னால் அடித்தும், கத்தியில் குத்தியும் உபத்தி ரவப்படுத்தியதும் ஆகிய இன் னும் பல காரியங்கள் நிகழ்ந்தன. அல்லாமலும் அது புகைந்து கொண்டே இருந்து இப்போது தெருவில் நடக்கும் பார்ப்பனப் பெண்களைக் கூட உபத்திரவப் படுத்துவதாகவும் தெரியவருகிறது. இவைகளை நாம் பலமாய் வெறுக்கி றோமானாலும் இதைக் கர்மபலன் என்றுதான் சொல்ல வேண்டும். இதற்காக பூனா பார்ப்பனர்கள் சிவாஜி மந்திரத்தில் ஆறாயிரம் பேர் கூடி பார்ப்பன ரல்லாதார் பார்ப்பனரிடம் துவேஷம் கொண்டிருப்பதையும், பார்ப்பன ஸ்திரீகளை பார்ப்பனரல்லாதார் அவமதிப்பாய்ப் பேசுவதையும், மானபங்கப் படுத்துவதையும் ஒரு வருஷ காலமாக நடந்து வருவதை கவர்ன்மெண்டார் பார்த்துக் கொண்டு தெரியாதவர்கள் போல் இருப்பதாயும் கூறி பார்ப்பனர் மீது துவேஷம் உண்டாகும்படி பார்ப்பனரல்லாதார் பிரசுரிக் கும் துண்டுப் பிரசுரங்களை நிறுத்த கவர்ன்மெண்டார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் பேசி, ஸ்ரீமான் திலகரின் மருமகப் பிள்ளையாகிய ஸ்ரீமான் கெல்கர் உள்பட கண்டனத் தீர்மானங்கள் செய்து கவர்ன்மெண்டை உதவிக்கழைத்திருப்பதாய் 31.8.26 உ மித்திரனால் தெரிகிறது. இதில் கவர்ன்மெண்டார் என்ன செய்யக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை. பார்ப்பனரின் நடவடிக்கையை உள்ளபடி எடுத்துச் சொன் னால் யார் என்ன செய்ய முடியும்? இந்தப் பார்ப்பனர்கள் சர்க்காரை சகாயத் திற்கு கூப்பிடு வதை விட ஏன் தங்களுடைய நடவடிக்கைகளை திருத்திக் கொள்ளக்கூடாது. ஒரு மனிதன் தனது கரும பலனை அடையாமல் இருக்கும்படி செய்ய கடவுளாலும் ஆகாதென்றால் இந்த சர்க்காரால் என்ன ஆய் விடும்? ஆதலால் இவைகளைப் பற்றி சிபார்சுக்கு ஆள்களைக் கூப்பிடுவதில் பிரயோஜன மில்லை. பார்ப்பனர் புத்திசாலிகளாயிருந்தால் பூனா பார்ப்பன ருக்கும் பார்ப்பன ஸ்திரீகளுக்கும் ஏற்பட்ட இந்த வியாதிக் குத் தக்க பிராயச்சித்தம் செய்து மற்ற நாடுகளுக்குப் பரவாமல் பந்தோபஸ்து செய்வதுதான் ஒருக்கால் முடியக்கூடிய காரியமாகலாம். அஃதில்லாமல் ஸ்ரீமான்கள் ரெங்கசாமி அய்யங்காரும், சத்தியமூர்த்தி சாஸ்திரிகளும், எம்.கே.ஆச்சாரியாரும், சீனிவாசய்யங்காரும் சி.ராஜகோபாலாச்சாரியாரும், சி.வி. வெங்கிட்டரமணய் யங்காரும் நடந்து கொள்ளுகிற மாதிரியும், பார்ப்பனரல்லாதாருக்குள் ளாகவே கட்சி ஏற்படுத்துவதும், பார்ப்பனரல்லாதார் கட்சியை அழிக்க சூழ்ச்சிசெய்வதும் ஆகிய தந்திரங்கள் கண்டிப்பாய் பார்ப்பன சமூகத்தையே கர்மபலனை அடையச் செய்யுமென்று உறுதி கூறுகிறோம். இந்த பார்ப்பனத் தலைவர்கள் தங்களிடம் கூலி வாங்கிப் பிழைக்கும் ஆள்களுடையவும் தங்கள் தயவுக்குக் காத்திருக்கும் ஆள் களுடையவும் மனோபாவத்தை மாத்திரம் அறிந்திருக்கிறார்களே அல்லா மல் மற்றபடி சுதந்திரமுள்ள பார்ப்பனரல்லாதார் மனோபாவம் என்ன என்பதையே அறியாமலிருப்பதற்கு நாம் மிகவும் பரிதாபப்படுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 05.09.1926**



RangaRakes
tamilnavarasam.com

# ஒரு சம்பாஷணை

**கருப்பண்ணன் :-**என்ன சுப்பண்ணா! இந்த பார்ப்பனர் மாத்திரம் சின்ன பையன்களுக்கெல்லாம் கலியாணம் செய்து விடுகிறார்களே. அதென்ன சங்கதி?
**சுப்பண்ணன் :-**ஓ! இது உனக்குத் தெரியாதா? இவர்களுக்கு பிச்சை வாங்கி பிழைப்பதுதானே வேலை. ஆதலால் நம்முடைய பெரிய வர்கள் கலியாணமானவனுக்கு ஒரு அணா, கலியாணமாகாதவனுக்கு காலணா கொடுக்கிற வழக்கம். ஆதலால் சின்னப் பையனுக்கும் சின்னப் பெண்ணுக்கும் ஒரு அணா கிடைக்கட்டுமென்று கலியாணம் செய்து விடுகிறார்கள்.

**கருப்பண்ணன் :-** அப்படியா! இதற்காகத்தானா இவ்வளவு பெரிய அனியாயம். பிச்சை கொடுப்பவர்களுக்கு எப்படி கலியாணம் ஆனதும் ஆகாததும் தெரியும்.
**சுப்பண்ணன் :-** கலியாணமான சின்னப் பையன்கள் வடக் கயிறு போல பூணூலை மொத்தமாகப் போட்டிருப்பார்கள். கோவணம் வைத்து வேஷ்டி கட்டிக்கொள்ளுவார்கள். அந்தச் சிறு பெண்களும் கோவணம் போட்டு சீலை கட்டிக் கொள்ளுவார்கள். தாலியை நன்றாய் வெளியில் காட்டிக் கொள்ளுவார்கள்.

**கருப்பண்ணன் :-**சரி,சரி. இப்பொழுது எனக்கு நன்றாய் விளங்கிற்று. இந்த பிச்சைக் காசுக்காக எத்தனை பார்ப்பனப் பெண் தாலியருப்பது. அனியாயம், அனியாயம்.

**குடி அரசு - உரையாடல் - 05.09.1926**



# இந்துமத பரிபாலன மசோதா

இவ்வார சட்டசபைக் கூட்டத்தில் நமது பார்ப்பனர்களுக்கு எமனாய் விளங்கும் இந்துமத பரிபாலன மசோதா முக்கால் பாகம் பார்ப்பனர்களின் பஞ்ச தந்திரங்களுக்கிடையில் பெரும் பாகம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மற்ற பாகமும் நிறைவேற்றப்பட்டு மலையாளக் குடிவார மசோதாவைப் போல் பூரண வெற்றி பெற வேண்டுகிறோம். இவ்விரண்டு மசோதாவையும் எதிர்த்தவர்களுக்கு அடுத்த தேர்தலில் தக்கபடி புத்தி கற்பிப்பார்கள் என்றே நம்புகிறோம்.

**குடி அரசு - சிறு குறிப்பு - 05.09.1926**



RangaRakes tamilnavarasam.com

# மலையாளக் குடிவார மசோதா

இவ்வார சட்டசபையில் நமது பார்ப்பனர்கள் கடும் சூழ்ச்சிகளுக் கிடையில் **மலையாளக் குடிவார மசோதா சட்டமாக்கப்பட்டுவிட்டது.** இனி மலையாளத்தில் உள்ள பார்ப்பன ஆட்சிக்கு இதன் மூலம் வீழ்ச்சி ஏற்பட்டு விட்டது என்பதையும் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளு கிறோம்.

**குடி அரசு - சிறு குறிப்பு - 05.09.1926**



# ஓர் வேண்டுகோள்

பார்ப்பனரல்லாதாருக்கு ஓர் வேண்டுகோள் என்னும் தலைப்பின் கீழ் 25.7.26 உ 'குடி அரசு' தலையங்கம் எழுதி பார்ப்பனரல்லாதாரின் சுயமரியா தையைக் காக்கவும், தாழ்த்தப்பட்ட மக்களை சமத்துவப்படுத்தவும், பொது அரசியல் உரிமையை எல்லாச் சமூகமும் சமமாய் அடைய இந்திய மக்க ளுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெறவும், 'குடி அரசி'ன் தத்துவங் களை வைத்து சில திட்டங்களை வகுக்கவும், அவற்றை தமிழ் மக்கள் சேர்ந்து கட்டுப்பாடாய் நிறைவேற்றவும், ஒரு அறிக்கை வெளியிடவும், அவ்வறிக் கையில் பல கனவான்களின் கையொப்பங்களையும் சேர்த்து வெளியிட வேண்டுமென்ற விருப்பங் கொண்டு யார், யார் இத் தத்துவங்களை ஏற்றுக் கொள்ள சம்மதிக்கிறார்களோ, அக்கனவான்கள் பெயரை அவ்வறிக்கையில் வெளியிட வேண்டும். ஆகையால் தங்கள் தங்கள் பெயரையும் முழு விலாசத் தையும் சம்மதத்தையும் எழுதியனுப்புமாறு வேண்டிக் கொண்ட தில் இதுவரை சுமார் ஆயிரம் பெயர்களுடைய கையெழுத்தும் சம்மதமும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இன்னும் இத் தத்துவங்களை ஏற்றுக் கொள்ளும் கனவான்கள் தயவு செய்து சீக்கிரத்தில் அனுப்பிக் கொடுப்ப தோடு மற்றும் இதை ஏற்றுக் கொள்ளும் தங்கள் தங்கள் நண்பர்களிடமும் கையொப்பம் வாங்கியனுப்ப வேண்டுகிறோம். பார்ப்பனீயத்தை விட்டவர் கள் கையொப்பமும் வந்து கொண்டிருக்கிறது. அவற்றை இனி அனுப்பு பவர்கள் சென்னை 'தமிழ்நாடு' பத்திரிகைக்கு அனுப்பினால் அதைப் பார்த்து 'குடி அரசி'ல் பதிப்பிக்கப்படும். இல்லாதவரை இரண்டு இடத்திற் கும் அனுப்புவது சிரமமாயிருக்கும். ஆதலால் 'குடி அரசி'ன் தத்துவங் களை ஒப்புக்கொள்ளும் கையொப்பங்களை மட்டும் நமக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

**குடி அரசு - வேண்டுகோள் - 05.09.1926**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனரல்லாத பிரமுகர்களின் சுற்றுப் பிரயாணம்

இவ்வருட இறுதியில் நடைபெறப்போகும் இந்தியா சட்டசபை, சென்னை சட்டசபை முதலிய தேர்தல்களுக்கு கூடுமானவரை நமது பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரை அழுத்தி, பார்ப்பன ஆட்சியை நிலைநாட்ட பல வழிகளிலும் செய்து வரும் சூழ்ச்சிகள் நமது நாட்டில் அறியாதார் இருப்பார்கள் என்று நாம் நினைக்கவில்லை. ஆனாலும் பார்ப்பனரல்லாதாரில் சில சுயநலக்காரர்களையும் வயிறு வளர்க்க வேறு வகையில்லாதவர்களையும் ஆயுதமாகக் கொண்டு பாமர மக்களை ஏமாற்ற நமது பார்ப்பனர் செய்து வரும் தந்திரங்களைக் கண்டு நாம் பயப்படாமலிருக்கவும் முடியவில்லை. உதாரணமாக, தமிழ் நாட்டில் இந்தியா சட்டசபை தேர்தலுக்கும் சென்னை சட்டசபைத் தேர்தலுக்கும் காங்கிரசின் பேரைச் சொல்லிக்கொண்டும் சுயராஜ்யம் பெறுவதற் கென்றும் நிறுத்தப் பட்டிருக்கும் ஆசாமிகளை கவனிக்கும் போது பாமர ஜனங்கள் இதை நம்பி இந்த ஆசாமிகளுக்கு ஓட்டுக் கொடுத்து சட்டசபைகளுக்கு அனுப்பி விட்டால் கண்டிப்பாய் பார்ப்பன ஆட்சிக்கு வழி ஏற்பட்டுவிடுமென்பதில் சந்தேகமில்லை. எப்படியெனில் சென்னை முதல் திருநெல்வேலி வரை யிலும் நிறுத்தப்பட்டிருக்கும் கனவான்கள் சற்றேறக்குறைய எல்லோருமே பார்ப்பன ஆதிக்கத்துக்குப் பாடுபடுபவர்களும், பார்ப்பன ஆதிக்கத்திற்கு சம்மதப்படுபவர்களுமாகவே காணப்படுகிறார்கள். இந்த நிலைமையில் சுத்த ரத்த ஓட்டமுள்ளவரும் சுயமரியாதை உடையவருமான பார்ப்பன ரல்லாதார் இதை எப்படிச் சகித்திருக்க முடியும்? என்பது நமக்கு விளங்க வில்லை. கோவை, திருச்சி, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி, தென் னார்க்காடு, சென்னை முதலிய ஜில்லாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஒன்றுக்குக் குறையாத பார்ப்பனரை நிறுத்தி இருக்கிறார்கள். அதாவது ஸ்ரீமான்கள் கோவைக்கு ஸி.வி. வெங்கிட்ட ரமணய்யங்கார், திருச்சிக்கு ஆர். சேதுரத்தின மய்யர், தஞ்சைக்கு கே. எஸ். வெங்கிட்டராமய்யர், தென்னார்க்காடுக்கு சீனிவாசய்யங்கார், மதுரைக்கு முத்துகிருஷ்ணய்யர், திருநெல்வேலிக்கு சாது கணபதி பந்துலு, மதுராசுக்கு மல்லையா முதலிய கனவான்களை நியமித்திருக்கிறார்கள். இந்த கனவான்கள் சென்ற நான்கு ஐந்து வருஷம் காங்கிரசுக்காக என்ன செய்தார்கள்? எவ்வித தியாகத்தில் ஈடுபட்டவர்கள்? நிர்மாணத் திட்டத்தில்



எதில் நம்பிக்கையுள்ளவர்கள்? பகிஷ்காரத் திட்டத்தில் எதை பின் பற்றியவர்கள்? எதை ஒப்புக் கொள்ளுகிறவர்கள்? ஒத்துழையாமையின் போது இவர்கள் எங்கிருந்தார்கள்? தேவஸ்தான மசோதா விஷயத்திலும் குருகுல விஷயத்திலும் இவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள்? குடியான வர்களுக்கும், தொழிலாளிகளுக்கும், ஏழைகளுக்கும், இவர்களுக்கும் என்ன சம்பந்தம்? ஆகிய இவைகளைப் பற்றி யோசித்துப் பார்த்தால் எவ்வளவு முட்டாளாயிருந்தாலும் இதன் இரகசியம் விளங்காமல் போகாது. பத்திரிகை செல்வாக்காலும் பணம் கொடுத்து பிரசாரம் செய்வதாலும் பாமர மக்களின் கண்ணைக் கட்டிவிட்டு சட்டசபை ஸ்தானங்களை கொள்ளை யடித்துக் கொண்டு போகப் போகிறார் கள். இதைப் பற்றி பார்ப்பனரல்லாத தேசீயப் பத்திரிகைகள் ஒரு எழுத்தா வது எழுதுவதில்லை. பார்ப்பனரல்லாத தேசீயத் தலைவர்கள் என்போரும் ஒரு வார்த்தையாவது பேசுவதில்லை. நமது பார்ப்பனர்கள் பார்த்து முனிசிப லாபீசில் மகாத்மா படம் தொங்கவிட ஜஸ்டிஸ் கட்சியார் அனுமதிக்க வில்லை என்று ஒரு கட்டு கட்டிவிட்டால் அதைப்பற்றி சரியாய் விசாரிக்காமல்கூட "கங்காதரா மாண்டாயோ, கங்காதரா மாண்டாயோ" என்று எல்லா பார்ப்பனரல்லாத பத்திரிகைகளும் கூப்பாடு போட ஆரம்பித்து விடுகின்றன. ஆனால் இம்மாதிரி கொடுமைகளைப் பற்றிப் பேச, எழுத பயப்படுகின்றன. என்ன செய்யலாம் பார்ப்பன ஆட்சியின் ஆதிக்கம் அவ்வளவு வலுவடைந்திருக்கிறது; அவ்வளவு நடுங்கச் செய்கிறது. பார்ப்பனரைப் பற்றி பார்ப்பனரல்லாதார் ஏதாவது சொல்லி விட்டால் ஏன் சொன்னான், எதற்காகச் சொன்னான் என்று யோசிக்காமலும் விசாரிக்காமலும் வக்காலத்து வாங்கிக்கொண்டு சிபார்சுக்கு வந்து விடுகின்றன. பார்ப்பனர்கள் சொல்லுவதும், எழுதுவதும் இதுகளின் கண்களுக்குப் புலப்படுவதே இல்லை. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் நிறுத்தப்பட்டிருக்கும் பார்ப்பனரல்லாத கனவான்களின் பெயரைப் பார்த்தாலோ பார்ப்பனாதிக்கத்திற்காக பார்ப்பனரை விட ஒருபடி முன்னிற்பவர்களாகப் பார்த்தே நிறுத்தப்பட்டிருக்கிறது. சென்னைக்கும் செங்கல்பட்டுக்கும், வட ஆர்க்காட்டிற்கும், தென் ஆர்க்காட்டிற்கும், தஞ்சைக்கும், திருச்சிக்கும் மற்ற ஜில்லாக்களுக்கும் நிறுத்தப்பட்டவர்கள் யார்? சென்னைக்கு நிறுத்தப்பட்டவர் ஒருவர் தன்னையே பார்ப்பனர் என்று நினைத்துக் கொண்டு இருப்பவர்; மற்றவர் பார்ப்பனரல்லாதாருக்கு மூளையில்லை என்று சொல்லுபவர். செங்கல்பட்டுக்கு நிறுத்தப்பட்டவரோ ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியாரைவிட ஒருபடி மேல்பட்ட வருணாசிரமதர்மி, பார்ப்பனர் தலைமேல்தான் உலகம் நிற்கிறதென்று நினைத்துக் கொண்டிருப்பவர். வட ஆர்க்காடோ சொல்ல வேண்டிய தில்லை. ஒருவர் அப்புறத்திய ஜில்லாக்காரார்; மற்றவர் இப்புறத்திய ஜில்லாக் காரர். அந்த ஜில்லாவுக்கு இதை விட வேறு அவமானமே வேண்டிய தில்லை. இருவரும் பார்ப்பனர் பார்த்து போடு கரணம் என்றால் இதோ போடுகிறேன், எண்ணிக் கொள்ளுங்கள் என்கிறவர்கள். இதே மாதிரியான ஆட்களைத்தான் மற்ற ஜில்லாக்களுக்கும் போட்டிருக்கிறார்கள். தமிழ் மக்களாகிய நாம் இதைச்



RangaRakes tamilnavarasam.com

சகித்துக் கொண்டிருப்பதா என்றே கேட்கிறோம். இந்த நாட்டு நன்மை தின்மை பெரும்பாலும் யாருக்குச் சேர்ந்தது? சட்டசபையின் பலாபலனை அனுபவிப்பவர்கள் யார்? யார் வந்து யாரை நிறுத்துவது? சுத்த ரத்தோட்ட முள்ளவர்களுக்கு இதெல்லாம் தோன்ற வேண்டாமா? யாரோ தெருவில் போகிறவன் காங்கிரசென்று சொல்லிக் கொண்டு நம்ம வீட்டிற்குள் புகுந்து எதை எடுத்துக் கொண்டு போனாலும் நாம் கை கட்டிக் கொண்டிருப்பதா? நாம் என்ன பஞ்சபாண்ட வர்களாகி விட்டோமா? இன்றைக்கு பஞ்சபாண் டவர்களாகி விட்டால் நாளைக்கு வாவென்றால் வருமா? இவற்றை நினைத் தால் இரத்தம் துடிக்கிறதே, நெஞ்சம் குமுருகிறதே, கேழ்வியில்லையா? இதுதானா தமிழ் மக்கள் அறிவு? இதுதானா தமிழ் மக்கள் வீரம்? வீணாக பாட்டிக் கதை பேசுவதில் லாபம் இல்லை. தயவு செய்து விழித்தெழுங்கள். தட்டி எழுப்ப ஆட்கள் வரப் போகிறது. அதாவது:-

**பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையைக் காப்பாற்ற தென் ஜில்லாக்களில் சட்டசபைத் தேர்தலுக்கு அபேக்ஷகர்களைத் தெரிந் தெடுக்கவும் அவர்களுக்குள் பார்ப்பன சூழ்ச்சியின் பலனால் ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களை நீக்கி ஒற்றுமைப்படுத்தவும் தேர்தலுக்கு நிறுத்தப்பட்ட அபேக்ஷகர்களுக்கு பார்ப்பனரல்லாதார் கட்டுப்பாடாய் ஓட்டுச் செய்து தேர்தல்களில் வெற்றி பெறச் செய்யவும்** பார்ப்பன ரல்லாத பிரமுகர்களான ராமனாதபுரம் ராஜா, ஸ்ரீமான்கள் உத்தமபாளையம் சுப்பிரமணிய முதலியார், திருநெல்வேலி மார்த்தாண்டம் பிள்ளை முதலியவர்கள் இம்மாதத்திற்குள் சுற்றுப் பிரயாணம் வரப்போகிறார். பனக்கால் ராஜாவும் வருவார். ஆதலால் ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் வரப்பட்டவர்களை வரவேற்று அங்கங்குள்ள நிலைமையை நன்றாய் விளக்கி இப்பிரமுகர்கள் மூலம் பாமர ஜனங்கள் உண்மை நிலை மையை அறியும்படி செய்து நம்மவர்கள் சுயமரியாதையைக் காப்பாற்றப் படும்படியாக உதவி செய்ய வேணுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 05.09.1926**



# தேர்தல் படிப்பினை

இவ்வாரம் சென்னையில் நடந்த முனிசிபல் தேர்தல்களில் பார்ப்பனர் கட்சிக்கு இரண்டு ஸ்தானங்களும், பார்ப்பனரல்லாத கக்ஷிக்கு ஒரு ஸ்தான மும், இரண்டு கட்சிக்கும் பொதுவான கக்ஷி என்கிற சுயேச்சைக் கட்சி என்பா ருக்கு ஒரு ஸ்தானமும் கிடைத்திருக்கிறது. பொதுப்படக் கூறும்போது ஜஸ்டிஸ் கட்சிக்கு சென்ற மாத தேர்தலில் ஜயம் கிடைத்தது போல் பூரண ஜயம் கிடைக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். இப் பூரண ஜயம் பெறாததற்கு காரணம் ஜஸ்டிஸ் கட்சியாரின் அளவுக்கு மீறின நம்பிக்கையே அல்லாமல் பார்ப்பனக் கட்சியின் சாமர்த்தியமும் செல்வாக்கும் அல்லவே அல்ல. அம்மன் கோவில் வார்டில் ஜயம் பெற்ற சுயேச்சைக் கட்சி என்று சொல்லிக் கொண்டவராகிய டாக்டர் ஆசீர்வாத நாடார், தான் பார்ப்பனரல் லாதார் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவன் என்றும் பார்ப்பனக் கட்சி யாகிய சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்தவன் அல்ல வென்றும் தன்னையே ஜஸ்டிஸ் கட்சி அபேக்ஷகராய் நிறுத்தும்படியும் எவ்வளவோ தூரம் கேட்டுக் கொண்டும் ஜஸ்டிஸ் கட்சியார் கவனியாமல் ஒரே கட்சிக்கு இருவரை நிறுத்தியது போல் நடந்து கொண்டது ஒரு பிசகு என்றே சொல்லுவோம். அல்லாமலும் ஸ்ரீமான் ஆசீர்வாத நாடார் ஒரு சமயம் ஏதாவது ஒரு விஷயத் தில் ஜஸ்டிஸ் கட்சி அபிப்பிராயத்தில் மாறுபட்டாலும் எந்த விதத்திலும் பார்ப்பனர் கட்சியில் சேரவோ அவர்கள் கைப்பிள்ளையாய் இருக்கவோ ஒருக்காலும் உடன் படமாட்டார் என்பது உறுதி . ஆதலால் டாக்டர் நாடார் வெற்றி எவ்விதத்திலும் பார்ப்பனர் கட்சிக்கு அனுகூலம் இல்லையென்றே சொல்லுவோம். நிற்க, ஆர்பர் டிவிஷனில் பார்ப்பனர் கட்சிக்கு போட்டியாய் இரண்டு நபர்களை நிறுத்தியதும் ஜஸ்டிஸ் கட்சியாரின் யோசனை குறைவென்றே சொல்லுவோம். பார்ப்பனருக்கு எதிராக 200 பேருக்கு மேல் ஓட்டுச்செய்தும் அது பாகமாய்ப் பிரிந்ததால் 138 ஓட்டுகள் மாத்திரம் கிடைக் கப்பட்ட பார்ப்பனர் கட்சி ஆசாமிக்கு வெற்றி கிடைக்க இடமேற்பட்டு விட் டது. இதுபோல்தான் இந்தியா சட்டசபைக்கு சென்ற தேர்தலில் இரண்டு பார்ப்பனரல்லாதார் நின்றதால் ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியாருக்கு சுலபமாய் வெற்றிகிடைக்க இடமேற்பட்டது. இது தெரிந்திருந்தும் இம்மாதிரி செய்த தாலும் பார்ப்பனக் கட்சியின் ஆட்சியை சரியானபடி அந்த வார்டில் ஓட்டர் களுக்கு எடுத்துச் சொல்லாததாலும் பார்ப்பனர் தங்களுக்கு வெற்றி என்று சொல்லிக் கொள்ள இடமேற்பட்டு விட்டது. திருவல்லிக்கேணி வார்டில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகளுக்கு வெற்றி ஏற்பட்டதில் நமக்கு



RangaRakes tamilnavarasam.com

அதிசயம் ஒன்றும் இல்லை. ஏனெனில் ஆயிரத்துச் சில்லரை ஓட்டர்களில் 800த்துச் சில்லரை ஓட்டர்கள் பார்ப்பன ஓட்டர்கள். அந்த வார்டில் ஒரு பூணூல் போட்ட மரக்கட்டையை நிறுத்தி விட்டாலும் அதற்கெதிரி டையாய் மகாத்மா காந்தி வந்து நின்றாலும் ஒரு பார்ப்பன ஓட்டுக்கூட கிடைக்காது. ஆதலால் அந்த வார்டுக்கு ஜஸ்டிஸ் கட்சிக்காரர் அபேக்ஷகரை நிறுத்தாமல் இருந்தது புத்திசாலித்தனமென்றே சொல்லுவோம். அமீர் மகால் வார்டில் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீமான் ரங்க ராமானுஜத்திற்கு வெற்றி கிடைத் திருக்கிறது. மொத்தத்தில் ஐந்து ஸ்தானங்களில் பார்ப்பனர் கட்சிக்கு இரண்டு ஸ்தானம் கிடைத்து விட்டது. இதை யோசிக்கும் போது நமது நாட்டில் இன்னமும் எந்த விதத்திலேயோ பார்ப்பனர் சூழ்ச்சிக்கு இடமிருக்கிற தென்றே சொல்லியாக வேண்டும். ராயப் பேட்டை டிவிஷன் தேர்தல் சட்ட சம்பந்தமான ஆக்ஷேபணையினால் ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றியேற்பட்டால் அதை நாம் வெற்றியாகக் கருதக் கூடாது. அந்த விஷயம் கோர்ட்டு மூலம் மறுபடியும் தேர்தலுக்கு வந்து பொது ஜனங்களிடையும் ஓட்டர்களிடையும் பார்ப்பன ஆட்சியை நன்றாய் எடுத்துச் சொல்ல சந்தர்ப்பம் கிடைக்க வேண்டுமென்றே கோருகிறோம். இந்த ஒரு விஷயத்தை முக்கியமாய் உத்தேசித்தேதான் நாமும் தேர்தல் பிரசங்கங்களில் கலந்து கொள்ள ஆசைப் படுகிறோம். எப்படியாவது பார்ப்பன சூட்சியை வெட்டிப் புதைக்கிற வரை யில் நமக்கு எத்தினை தோல்வி வந்தாலும்கூட நாம் அதைப்பற்றி மனம் தளரக் கூடாது. உலகம் இன்றோடு முடிவடைந்துவிடப் போகிறதில்லை. ஆத லால் பந்து அடிக்க உயரமாய்க் கிளம்புவது போல் அளவுக்கு மிஞ்சின நம்பிக்கையில் இருந்தும் மமதையில் இருந்தும் தட்டி எழுப்ப இம்மாதிரி சிறு சம்பவங்களை மனப்பூர்வமாய் வரவேற்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 05.09.1926**



# வைப்பாட்டிக் கதை

சென்னையில் ஒரு பொதுக் கூட்டத்தில் ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் பார்ப்பனர் கோரும் சுயராஜ்யம் வந்துவிட்டால் பார்ப்பனரல்லாத ஸ்ரீகளை பார்ப்பனர் தங்களுக்கு வைப்பாட்டிகளாக இருக்க வேண்டும் என்று சட்டம் செய்து விடுவார்கள் என்று சொன்னதாகவும், அது பார்ப்பனரல் லாதார் சமூகத்திற்கே அவமானமாய் விட்டதாகவும் ஸ்ரீமான் சீனிவாசய் யங்கார் ஒரு கூட்டத்தில் நீலிக் கண்ணீர் விட்டார். இதைப் பார்த்து அவரது இரண்டொரு பார்ப்பனரல்லாத சிஷ்யர்களும் பின்பாட்டுப் பாடி தங்கள் சமூகத்திற்கு அவமானம் ஏற்பட்டு விட்டதாக கூலி மாரடித்துக் கொண்டார் கள். இவர்கள் உண்மையிலேயே நாயக்கர் சொன்னதற்காக மாரடித்துக் கொண்டார்களா? அல்லது அய்யங்காரின் உப்புக்காக மாரடித்துக் கொண் டார்களா? என்பதைக் கவனிப்போம். பார்ப்பனரல்லாதார் ஸ்ரீகளைப் பார்ப்பனர்கள் வைப்பாட்டிகளாக இருக்க சட்டம் செய்து விடுவார்கள் என்று சொன்னதில் என்ன தப்பு. இதற்கு முன்னமே அந்த சட்டம் அமுலில் இருக்கிறதை இவர்கள் அறிந்தும் இன்றுதான் இதை நாயக்கர் சொல்லக் கேட்டவர்கள் போல் பாசாங்கு செய்கிறார்கள். இந்து உலகத்தில் பார்ப்பனர் கள் பார்ப்பன ரல்லாத இந்துக்களுக்கு என்ன பெயர் கொடுத்திருக்கிறார்கள். இந்துவா யிருந்தால் பிராமணன், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரன், பஞ்சமர் என்கிற ஐந்து வகுப்பில்தான் சேர வேண்டும். "கலியுகத்திலோ க்ஷத்திரிய ரும் வைசியரும் இல்லை" என்கிறார்கள். ஓட்டல்களிலும் பிராமணன் சூத்திரன் என்றுதான் எழுதுகிறார்கள். ஆதலால் மீதி இருப்பது பிராமணன், சூத்திரன், பஞ்சமன் ஆகிய மூன்று வகுப்பார்கள். இதில் பார்ப்பனர் தவிர மற்றவர்கள் தங்களை பிராமணர் என்று சொல்லிக் கொள்ள முடியாது. அய்யங்கார் சிஷ்யர்கள் தங்களைப் பஞ்சமர்கள் என்றும் சொல்லிக் கொள்ள மாட்டார்கள். ஆகவே இவர்கள் சூத்திரர் என்பதை மறுக்க முடியாது. சூத்திரன் என்றால் யார்? இந்து மதத்திற்கும் வருணாசிரமத்திற்கும் ஆதார மான மனுதர்ம சாஸ்திரம் எட்டாம் அத்தியாயம் 415, 417 -வது சுலோகங் களில் சூத்திரன் என்றால் தேவடியாள் மகன் என்றும், வைப்பாட்டி மகன் என்றும் எழுதியிருப்பதோடு இவர்கள் வசமுள்ள பொருள்களை பலாத் காரமாகவும் பார்ப்பனர் எடுத்துக் கொள்ளலாம் என்றும், நமது பின் சந்ததி களையும் கட்டுப்படுத்தும்படி எழுதி வைத்திருக்கிறார்கள். இது ஏன்? நமது நாட்டில் சில பாகத்தில் மாத்திரம் அமுலில் இல்லை என்றால் பார்ப்பனர் கோரும் சுயராஜ்யம் இல்லாததால்தான் என்கிற பொருள் கொண்டே அன்று



RangaRakes tamilnavarasam.com

சொன்னோம் என்றும் உறுதியாய்ச் சொல்லுவோம். ஆனால் சில பாகத்தில் இன்னமும் அமுலில் வைத்துக் கொண்டும் நமது சகோதரிகளை தங்கள் வைப்பாட்டிகளாக்கிப் பிள்ளைகள் பெற்று உலகத்திலுள்ள ஓட்டல்களுக்கும் காப்பிக் கடைகளுக்கு மெல்லாம் எச்சில் எடுக்கவும், எச்சில் கிண்ணம் கழுவவும் அடிமைகளை வினியோகித்துக் கொண்டுதான் வருகிறார்கள். இதனால் இந்த சிங்கங்களுக்கு மானக்கேடு வரவில்லையா? அந்த சகோதரி கள் இவர்களுடைய சகோதரிகள் அல்லவா? கிராமத்து ஜனங்கள் இந்தியன் பினல்கோட் சட்டத்தைப் பற்றி வேடிக்கையாய்ப் பேசிக் கொள்வார்கள். அதாவது, ஒரு மனிதனை ஒரு மனிதன் செருப்பாலடிப்பதாய்ச் சொன்னால் ஆறு மாதம் தண்டனை. அடித்து விட்டால் ஒரு மாதம்தான் தண்டனை என்பார்கள்.(அதென்னவென்றால் அடித்தால் அது அசால்ட்டு குற்றமாய் விடுகிறதாம். சொன்னால் அது மான நஷ்டக் குற்றமாகி விடுகிறதாம்.) அது போல் நமது சகோதரிகளை வைப்பாட்டிகளாய் வைத்துக் கொண்டிருப் பவர்கள் மேல் கோபமில்லாமல் அவர்கள் பின்னால் திரிந்து வயிறு வளர்த்துப் பெருமை பெற்றுக் கொண்டு இக்கொடுமையை வெளியி லெடுத்துச் சொன்னவன் மேல் கோபப்படுவதானால் இந்த சிப்பாய்களின் கோபத்தின் மதிப்பென்ன? என்பதை வாசகர்கள்தான் உணர வேண்டும். சட்டசபையில் மலையாளக் குடிவார மசோதாவைப் பற்றி ஸ்ரீமான் கே.வி. ரெட்டி அவர்கள் பேசும் போது "நமது பெண்கள் ருதுவானால் அவர்களை முதல் முதல் பார்ப்பனர்தான் புணர வேண்டும் என்கிற சட்டம் மலையாள நாட்டில் அமுலில் இருக்கிறது" என்று சொன்னாரே அதைக் கேட்ட போது இந்த வீரர்களுக்கு மானக்கேடு ஏற்படவில்லையா என்று நாம் கேழ்க் கிறோம். இந்த சிப்பாய்களை பார்ப்பனர் காசும் பார்ப்பனர் தயவும் இன்னம் என்ன என்ன செய்யச் சொல்லும் என்பதை பொருமையுடன் கவனிப்போம்.

**குடி அரசு - கட்டுரை - 05.09.1926**



# தலைவர் பதவி பெறும் வழி

நம் நாட்டில் தேர்தல்களில் பதவிகள் பெறுதல், பட்டம் பெறுதல், சர்க்கார் உத்தியோகம் பெறுதல் முதலிய பல காரியங்கள் பெரும்பாலும் முக்காலே மூணு வீசமும் கண்ணியக் குறைவாலும் பொய்ப் பிரசாரத்தாலும் இழி தொழிலாலுமே கிடைக்கப்பட்டு வருகிறது என்பதை சத்திய நெறியுடைய எவரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் காங்கிரஸ் பிரசி டெண்ட் என்கிற ஸ்தானம் கொஞ்ச காலமாய் அப்படிக்கில்லாமல் தனிப் பட்ட மக்களின் சுதந்தி ரத்திற்கு விடப்பட்டு வந்தது. உதாரணமாக, இதற்கு ஆள்களை விட்டு பிரசாரம் பண்ணியும் பணம் செலவு செய்தும், பொய் வாக்குத்தத்தம் செய்தும் இதுவரை யாரும் அந்த ஸ்தானத்தை அடைந்த தில்லை. நமது பார்ப்பன ஆதிக்கத்திற்கு காங்கிரஸ் வந்ததின் பலனாய் இப்போது இதற்கும் மற்ற தேர்தல்களைப் போலவே யோக்கியதைகள் ஏற்பட்டுப் போய்விட்டது.

ஏனெனில் மற்ற தேர்தல்களையும் பட்டங்களையும் உத்தியோகங்க ளையும் பெற நமது பார்ப்பனர்கள் என்னென்ன முறைகள் கையாண்டு அதன் யோக்கியதையைக் கெடுத்து வாழ்கிறார்களோ, அதுபோலவே இதிலும் பிரவேசித்து விட்டார்கள். ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காருக்கு காங்கிரஸ் பிரசிடெண்ட் வேலை கிடைப்பதற்கு ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ் வொரு சென்னை பார்ப்பனர் போய் பிரசாரம் செய்யவும் ஆங்காங்குள்ள காங்கிரஸ் கமிட்டிகளில் பிரதானமாயுள்ளவர்களில் யாராவது பணங் காசு வாங்கக் கூடியவர்களாயிருந்தால் அவர்களையும் திருப்தி செய்தும், பதவி ஆசையுள்ளவர்களாயிருந்தால் அவைகளையும் பற்றி பொய் வாக்குத் தத்தம் செய்தும் ஓட்டுகள் பெற பிரசாரம் செய்ததால் உண்மையிலேயே அதிக ஓட்டுப் பெற்றவரும் இன்னும் பெற இருந்தவருமான டாக்டர் அன்சாரி அவர்கள் இவற்றை அறிந்தே இந்த பிரசிடெண்ட் உத்தியோகம் என் போன்றவர்களுக்கு லாயக்கில்லை; இதெல்லாம் பெரிய மனிதர்கள் என்கிறவர்களுக்கு வேண்டிய பதவி என்று பரிகாசமாய்ச் சொல்லி விலகிக் கொண்டார்.

அடுத்தபடி அதிக ஓட்டுக் கிடைக்கப் பெற இருந்த ஜனாப் மஷ்ருல் ஹக் என்னும் பெரியாரும் இவ்வித இழிவுப் பிரசாரத்தில் இரங்க மனமில்லா



RangaRakes tamilnavarasam.com

தவராகி இம்மாதிரி போட்டிபோடுவதானால் எனக்கு வேண்டாம், கண்ணிய மாய் வருவதானால் வரட்டும் என்றே சொல்லி போட்டியில் இருந்து அறவே விலகிவிட்டார். எவ்வளவு உயர்ந்த தத்துவங்களைக் கொண்டதானாலும் எவ்வளவு பரிசுத்தமானதானாலும் நமது பார்ப்பனர் அதில் கலந்தால் அதில் யோக்கியதை பார்ப்பனீயத்திற்கு தகுந்தபடி ஆகி விடுகிறது என்பதை பொது ஜனங்கள் அறிவதற்காகவே இதைக் குறிப்பிடுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 05.09.1926**



RangaRakes

# ஜேஷ்டபுத்திரனும் தேசபக்தனும்

சென்ற ஜுலை *மீ* 25, 26 நாட்களில் இக்கொழும்பில் நடந்தேறிய இந்திய வாலிபர் சங்க ஆண்டுவிழாவிற்கு தலைமை வகிக்க திருவுளங் கொண்டு இனனாடடைந்து அறிய உயறிய சொற்பொழிவுகள் சில நிகழ்த்தி தாய்நாடு போந்த உண்மை தேசபக்தரும் நம் தமிழணங்கின் திருக்குமாரருமாகிய உயர்திரு. கலியாணசுந்தர முதலியாரவர்கள் இவ்வூ ரையடைந்து சொற்பொழிவுகள் நிகழ்த்தி பிரவூர் சென்றதைப்பற்றி இக்கொழும்பு மாநகரில் கௌரவ நடேசையரவர்களால் பிராமண ரல்லாதாரின் உதவியாலும் முயர்ச்சியாலும் நடத்தப்படுகிற தேசபக்த னென்னும் தமிழ்ப்பத்திரிகையை தற்பொழுது பி.பி. அய்யங்கார் என்பவ ரால் நடத்தப்படுகிறதாம். இப் பக்தனுக்கும் முதலியாருக்கும் என்ன வருத்தம்? இப்பத்திரிகைக்கு எவ்விதத்திலாவது ஏதாவது உதவியோ சந்தா அல்லது விளம்பரம் சேர்த்துக்கொடுத்தோர்களும், காங்கிரஸ் காரர்களும் போலி தேசாபிமானிகளும் பொதுக்காரியங்களுக்கென்று பணம் திரட்ட வருவோரும், பணக்காரர், செட்டிகள், பிராமணர்கள் முதலிய வர்களில் எவராவது இந்நாட்டிற்கு வருவதாகயிருந்தால் உடனே போற்றிப் புகழ்ந்து “நல்வரவாகுக” என்றும் தாய்நாடு செல்வதாகயிருந்தால் சென்று வருகவென்றும் பத்தி பத்தியாக அவர்களை சிறப்பித்து எழுதுகிற இப்பக்தனுக்கு இப்பெரிய தமிழ்நாட்டு தவப்புதல்வர் வருவது தெரியா மலா போய்விட்டது? டிப்டிட் காந்தியும் மகாத்மாவிற்கு மூளையில்லை என்றவரும் வந்திருப்பார்களானால் என்ன நடக்கும்? இப்பக்தனும் தற்பொழுது கும்பகர்ணன் வேலையை ஒப்புக்கொண்டுள்ள காந்தி சங்கமும் இந்நகரில் இருந்தென்ன பலன்? இச்சங்கமும் பத்திரிகையும் ஒன்றுபட்டு தென்இந்திய மக்களின் தலைவர்களில் ஒருவருமான ஸ்ரீ முதலியாரை வரவேற்று உபசரித்து முக்கியமான இடங்களில் இன்னும் சில கூட்டங்களைக் கூட்டுவித்து சம்ரம்மாக வழியனுப்பி வைத்தால் இன்னும் எவ்வளவு சிறப்பாக இருக்கும். ஏதோ கடனுக்கெழுதுவது போல் பக்தன் மட்டும் முதலியார் கண்டிக்குப் போகிறதைப் பற்றி ஓர் மூலையில் குறித்திருந்தது. அதுவும் பக்தனை ஆதரிப்போரின் கோபத்திற்காளாகும் படி நேருமோவென்றும் தமது பிரதிநிதியை பேட்டிகண்டு பேசியதற்காக வுமே எழுதியிருக்க வேண்டும். இவ்வளவு தூரம் பக்தனுக்கு திரு.முதலி யாரின் பேரில் வெறுப்புண்டாக காரணமென்ன? அன்னாரும் பிராமணர் களின் சூழ்ச்சியைக் கண்டித்து பிராமணரல்லாதாரின் சுயமரியாதையை ஆதரிப்பதாக இருப்பதால் தான் இப்பக்தன் அப் பெரியாரைப் பற்றி வரவேற்றுபசரித்து வழியனுப்பி உபசாரம் கூராததால் அவருக்கு ஒன்றும் குறைவில்லை. அதனால் பக்தரின் துவேஷபுத்தி வெளியாவதோடு பழிச்



tamilnavarasam.com

சொல்தான் கிடைத்திருக்கிறது. இனியாவது இம்மாதிரி பொதுமக்களிடை வகுப்பு வேற்றுமையில்லாமலும் ஆத்திரத்திற்காளாகாமலும் உயரிய நோக்கங் கொண்டு உண்மையுடன் உழைத்து உலாவி வருவானாக.

**( உண்மையுரைப்போன் )**

**குறிப்பு** :

இப்பார்ப்பனார்கள் நமது சுயமரியாதைக்கு முழு எதிரிகள் என்று தெரிந்திருந்தும் இவர்களை அழைத்துக் கொண்டு நமது ஸ்ரீமான் முதலியாரும் ஆர்.கே.ஷண்முகம் செட்டியாரும் ஊர் ஊராய்த் திரிந்து இப் பார்ப் பனர்களுக்குக் கிடைக்கும் கல்லடியையும் சாணி அடியையும் மீத்து வைத்ததோடு இவர்களை நாக்குக் கூசாமல் தலைவர்கள் என்று சொல்லி பாமர ஜனங்களுக்கு அறிமுகம் செய்வித்து ஒரு மணிநேரம் இரண்டு மணிநேரம் தொண்டை கிழியச் செய்த பிரசங்கங்களையே ஒரு அங்குலம் ஒண்ணரை அங்குலம் அதுவும் பொய்யும் புளுகுமாய் பிரசுரித்துவிட்டு அங்கு பேசுவதற்கே இடம் கிடைக்காத ஸ்ரீமான் சத்தியமூர்த்தி போன்றவர்களை பெருத்த கரகோஷத்தினிடையே பேசினார் என்று மூன்று கலம் நான்கு கலம் எழுதுகிறவர்கள் இந்த நாட்டு விஷயமும் இப்பார்ப்பனர்கள் அக்கிரமமும் தெரியாத கொளும்பு தேசத்தில் பேசியதை ஒரு பார்ப்பனப் பத்திரிகை போடவில்லை என்று சொல்வது தேளால் கடிபட்டவன் இதென்ன வலிக் குதே என்று சொல்வது போல் இருக்கிறது. கொழும்புத் தமிழ் மக்கள் இவ் விதப் பார்ப்பனர் பத்திரிகைகளை ஆதரிப்பது நமக்கு ஆச்சரியமா யிருக்கிறது.

**( ப - ர் )**

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 05.09.1926**



# சென்னை பார்ப்பனரல்லாத வாலிப சங்கம்

எனதருமை வாலிப சகோதரர்களே!

இச்சங்கத்திற்குப் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம் எனப் பெயரிட்டிருப்பதே பார்ப்பனரல்லாதாராகிய நமது பிற்கால க்ஷேமத்தில் மிகுதியும் நம்பிக்கை ஏற்படுத்துகிறது. இன்றைய தினம் வாலிபர்களாயிருக்கிற உங்களில் இருந்துதான் புத்த பகவானும், மகாத்மா காந்தியும், நாயர் பெருமானும், தியாகராயரும் போன்றோர் தோன்ற வேண்டும். இவர்கள் எல்லாம் உங்களைப் போல் வாலிபர்களாயிருந்தவர்கள்தான். எந்தத் தேசமும் எந்தச் சமூகமும் பெரும்பாலும் அவ்வத் தேசத்திய வாலிபர்களைக் கொண்டுதான் முன் வந்திருக்கிறதே அல்லாமல் பெரியோர்களையும் முதியோர்களையும் கொண்டல்ல. உலக வாழ்க்கையில் ஈடுபட்ட பெரியோர்களிடம் பொது நலமும் தியாக புத்தியும் காண்பது மிகவும் அரிது. சுயநலந்தான் வளர்த்து கொண்டு போகும். அவர்கள் பொதுநலத்திற்கு உழைப்பதாய்க் காணப்படுவது அவர்களுடைய சுயநலத்தை உத்தேசித்துத்தான் என்று உறுதியாய்ச் சொல்லுவேன். மகாத்மாவைப் போலவும் நாயர் பெருமான் போலவும் தியாகராயர் போலவும் சிலரே உண்மையான பெரியோர்களாய் இருக்கக்கூடும். உதாரணமாக, நாயர் பெருமானுக்கும் தியாகராயருக்கும் பதிலாக வந்த கஷ்டத்தை ஈடு செய்ய முடியவில்லை என்பதை அனுபவத்தில் அறிந்து விட்டோம். 33 கோடி மக்களில் மகாத்மா காந்திக்கு அடுத்தபடியாக இன்னொருவரை நினைக்க முடியாமலிருக்கிறது. ஆதலால் உலக வாழ்க்கையில் ஈடுபடாத வாலிபர்கள் ஆகிய உங்களுடைய மனம்தான் பொது நலத்திற்கு ஏற்ற பரிசுத்தமான தன்மையுடையது. உங்களிடம்தான் எவ்வித தியாகத்தையும் எதிர்பார்க்கலாம். ஆனால் இதுபோழ்து நமது நாட்டில் வாலிபர் முன்னிலையில் மிகவும் மலிந்து கிடப்பது ராஜீய விஷயம். அது உங்களைப் போன்ற வாலிபர்களுக்கு மிகவும் ஆபத்தான காரியம் என்று எச்சரிக்கை செய்கிறேன். பொதுவாகவே ராஜீய விஷயமென்பது ஒரு நாணயக் குறைவான காரியம். இதைப்பற்றி அனேகம் பெரியோர்கள் ராஜீய விஷயத்தில் ஈடுபடுவதென்பதை மனிதன் எல்லாவித அயோக்கியத்தனமான காரியங்களையும் செய்து பார்த்தும் பிழைக்க முடியாவிட்டால் கடைசியாகப் பிழைப்புக்கு வழி ஏற்படுத்திக் கொள்ளத்தக்க அயோக்கியத்தனம் என்று சொல்லி இருக்கிறார்கள். என்னு டைய ஆறேழு வருஷ கால அனுபவத்தினால் அது



RangaRakes
tamilnavarasam.com

சரி என்றே உணர்கிறேன். ஆதலால் உற்சாகமாகப் பேசும் வயிற்றுப் பிழைப்பு அரசியல்வாதிகளைக் கண்டும் அவர்கள் பேச்சைக் கேட்டும் ஏமாந்து போகாதீர்கள். உண்மையான அரசியல் சுதந்திரத்திற்கு இருக்க வேண்டிய பக்குவமே வேறு. நம் மக்களுக்கு இருக்க வேண்டிய நிலை மையே வேறு. இந்த நாட்டுக்கு எந்த விதத்திலும் இப்போது அரசியல் சுதந்திரம் அவ்வளவு முக்கியமான தல்ல. இந்நாட்டு மனித சமூகத்திற்கு வேண்டியதெல்லாம் முதலில் சுயமரியாதைதான். அதுதான் ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்புரிமை. பார்ப்பனரல்லாத வாலிபர்களாகிய உங்களிட மிருந்து உங்கள் சமூகம் இது சமயம் எதிர்பார்ப்பதெல்லாம் சுயமரியாதை யைக் காப்பாற்றிக் கொடுக்கும் படியாகத் தான். பார்ப்பனரல்லாத சமூகத்தில் பெரிய மனிதர்களானாலும் சரி, அரசியலில் பெரிய உத்தியோகம் பெற்றவர் களானாலும் சரி, சிறந்த மனிதர்களானாலும் சரி, துடிக்கும் ரத்தமுள்ள உங்களைப் போன்ற வாலிபர்களானாலும் சரி, தற்போது சுயமரியாதை யற்றுத்தானிருக்கிறார்கள் என்பதை உணருங்கள். இன்னும் எவ்வளவு பெரிய அரசியல் உரிமையும், உத்தியோகமும், பதவியும், கீர்த்தியும் பெற்று வாழ்ந்தாலும் அவையெல்லாம் தனித்தனி மனிதன் அனுபவித்து ஒழியத்தக்கதேயல்லாமல் அவர்கள் சாகும் போதே அவர்களுடைய சந்ததிகள் சுயமரியாதையற்றுத்தான் நடைப் பிணமாய் இருந்து சாவார்கள். ஆதலால் உங்கள் உழைப்பு பொது நலமும் தியாகமும் சுயமரியாதை பெறுவதற்குத்தான் இருக்க வேண்டும். ஆனால் நமது நாட்டில் நமது அரசியல் சுதந்திரத்தை விட நமது சுயமரியாதைக் குத்தான் விரோதிகள் அதிக மாயிருக்கிறார்கள். ஆதலால் இவ்வேலையில் இறங்குவதில் அஞ்சாமையும் மன உறுதியும் சலிப்பின்மையும் இருக்க வேண்டும். ஏனெனில் நமது சுயமரியாதைக்கு எதிரிகள் பெரும்பாலும் நமது நாட்டி லேயே இருக்கும் பார்ப்பனர்களே ஆனதால் அவர்களை வெல்லு வது சுலபமான காரியமல்ல. இதற்கு ஒற்றுமையும் தியாகமும் வேண்டும். இதுகள் உங்களிடம்தான் எதிர்பார்க்கலாம். ஆதலால் உங்களுக்குத் தன்னம் பிக்கையும் வேண்டும்; உங்களுக்குள் இருக்கும் பல குருட்டு நம்பிக்கை களும் ஒழிய வேண்டும். இதற்கு முதலாவது பிறவி காரணமாய் உங்களை விட உயர்ந்த மக்கள் இருக்கிறார்கள் என்பதையும், உங்களை விட தாழ்ந்த மக்கள் இருக்கிறார்கள் என்பதையும் உங்கள் மனதைவிட்டு அறவே வெளி யேற்ற வேண்டும். உங்கள் வாழ்க்கைச் சடங்குகளிலும் வைதீகச் சடங்கு களிலும் உங்களை விட பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் என்கிற எண்ணம் ஒழிய வேண்டும். பார்ப்பனரல்லாதாரில் பார்ப்பனரல்லாதாருக்குழைப்ப தாய்ச் சொல்லும் வெகு பெரியார்களுக்கு இந்தக் குருட்டு நம்பிக்கை இருக்கிறதை நான் பார்க்கிறேன். உங்கள் கலியாண காலங்களில் பார்ப்பனர் இருந்து நடத்தி வைத்தால்தான் அக் கலியாணம் செல்லுபடி உள்ளதென்றும் நல்ல வாழ்க்கை ஏற்படும் என்றும் நம்புகிறீர்கள். உங்கள் சாந்தி முகூர்த்தத் திற்கு பார்ப்பனர் பக்கத்தில் இருந்து வீட்டிற்குள் தள்ளிக் கதவு மூடினால் தான் நல்ல குழந்தை பிறக்குமென்று நம்புகிறீர்கள். உங்கள் பெரியோர்களை



நீங்கள் பார்ப்பனருக்குப் பணம் கொடுத்து மோக்ஷமடையச் செய்யலாம் என்று நம்புகிறீர்கள். இவற்றை ஒழியுங்கள்; ஒழிக்கப் பிரசாரம் செய்யுங்கள். நமக்குத் தாழ்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்கிற மனப்பான்மை உள்ளவர்கள் இந்தப் பிரசாரத்திற்கு கொஞ்சமும் உதவ மாட்டார்கள். உங்களுக்குள் சரியான கட்டுப்பாடு வேண்டும். ஒவ்வொரு ஊர்களிலும் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம் ஏற்படுத்த வேண்டும். இதற்கென்றே சிலர் புறப்பட வேண்டும். இதற்குப் பொருள் வேண்டும். பொருள் இல்லாமல் ஒரு காரிய மும் நடக்காது. மகாத்மா காந்திக்கும் ஒரு கோடி ரூபாய் சேர்ந்ததால்தான் இவ்வளவு காரியங்கள் செய்ய முடிந்தது. இன்னும் ஒரு கோடி அவர் கையில் இருந்தால் இன்னும் இரண்டு வருஷத்திற்கு அவரது ஒத்துழையாமை நிலைத்திருக்கும். ஆதலால் பொருள் மிகவும் அவசியமானது. இதற்காகப் பொருள் சேர்க்க வேண்டும். கடைசியாக பிச்சை எடுக்கவும் தயாராயிருக்க வேண்டும். சரியான படி கணக்கு வைக்க வேண்டும். யார் இதில் மும்மர மாய் வேலை செய்கிறார் களோ அவர்களை ஒழிக்க நமது எதிரிகள் பெரும் பழிகளைச் சுமத்துவார்கள். அதற்குப் பயப்படுவதனால் நாம் ஒரு காரியத் திற்கும் உதவ மாட்டோம். அனேக கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டு வேலை செய்வது எப்படி தியாகத்தில் சேர்ந்ததோ அது போலவே எதிரிகளின் பழியை லக்ஷி யம் செய்யாமலும் அதனால் நம்முடைய பெயர் கெட்டுப்போகுமே என்று பயப்படாமலும் கெட்டாலும் அனாவசியம் என்று எண்ணிக் கொண்டு வேலை செய்வதும் ஒரு பெரும் தியாகம்தான். மகாத்மா மீதில் என்ன என்ன பழியோ நமது பார்ப்பனர்கள் கட்டி விட்டார்கள். அவரது அஞ்சாமையும் பரிசுத்தத் தன்மையும் எதிரிகளின் பழிகளை எல்லாம் சாம்பலாக்கிவிட்டன.

உங்களுடைய விடுமுறை நாட்களை வீணாக்காதீர்கள். இச் சங்கத்தைப் பற்றி நமக்கு அதிக நம்பிக்கை இருக்கிறது. ஏனெனில் இதன் காரியதரிசி ஸ்ரீமான் T.R. சுந்தரம்பிள்ளையவர்கள் உண்மையான ஊக்க முள்ளவர். அவரிடம் அற்புதசக்தி இருக்கிறது. அவர் பிடித்த காரியத்தை சாதிக்கும் ஆவேசம் உடையவர். அவர் கோயமுத்தூரில் தங்கியிருந்த சில நாளில் அபூர்வ வேலை செய்திருக்கிறார். ஸ்ரீமான் C.S..இரத்தினசபாபதி முதலியாரின் அளவு கடந்த வெற்றிக்கு நமது பிள்ளை அவர்கள் முக்கியக் காரண மாவார். உங்கள் சங்கத் தலைவர் ஸ்ரீமான் ஆரியா ஒரு உண்மை வீரர். அவரைப் பற்றி நான் உங்களுக்கு சொல்வது தகப்பன் வீட்டுப் பெருமையை தங்கை தமையனுக்கு எடுத்துச் சொல்வது போலிருக்கிறது. ஏனென்றால் நீங்கள் சென்னையில் இருந்து நேரில் பார்த்து வருகிறீர்கள். அவருடைய எதிரிகள் அவரைப் பற்றி என்ன என்னமோ கரடி விட்டாலும் அவர் அதை ஒரு சிறிதும் லக்ஷியம் செய்யாமல் கருமமே கண்ணா யிருக்கிறார். இப்படிப் பட்ட வீரர்கள் நமது சங்கத்திற்குக் கிடைத்தது நமது பாக்கியம்.

தவிர வரப்போகும் தேர்தல்களில் உங்கள் சமூகத்தின் சுயமரியாதைக்



RangaRakes
tamilnavarasam.com

குப் பாடுபடுபவர்களுக்கு வெற்றி சம்பாதித்துக் கொடுங்கள். பார்ப்பன வாலிபர்கள் தேர்தலில் எவ்வளவு வேலை செய்கிறார்கள் என்பதைப் பாருங்கள். பார்ப்பன ஆதிக்கத்திற்குப் பாடுபடுபவர்க்கு அவர்கள் தங்கள் படிப்பைக் கூட விட்டு விட்டு ஓட்டு வாங்கிக் கொடுக்கப் பாடுபடுகிறார்கள். ஆதலால் நீங்களும் அவர்களைப் போலவே வீதி வீதியாய் ஊர் ஊராய்த் திரிந்து உங்கள் சுயமரியாதைக்கு வெற்றி அளியுங்கள்.

படுக்கையில் இருந்து எழும்போது இன்று உங்கள் சமூகத்தின் சுயமரியாதைக்கு என்ன செய்வது என்று யோசியுங்கள். படுக்கைக்குப் போகும் போது இன்று என்ன செய்தோம் என்று நினையுங்கள். ஒன்றும் செய்யாத நாள் வீணாய்ப் போனதாகவும், உங்கள் வாழ்வில் ஒரு நாள் குறைந்ததாகவும் நினையுங்கள். ஒவ்வொரு வாலிபரும் தங்கள் கடமையை உணருங்கள். உங்கள் சுயமரியாதைக்கு உங்கள் உயிரைக் கொடுக்கும் பாக்கியத்தை அடைய தபசு இருங்கள் . இனி எனக்கு விடை தாருங்கள். கை குலுக்கிப் போகிறேன் (பெருத்த கரகோஷம்)

*குறிப்பு : 1926 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதக் கடைசியில் சென்னை சர்.தியாகராயர் நினைவுச்சின்ன கட்டடத்தில் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம் சார்பாக நடைபெற்ற கூட்டத்தில் தலைமை வகித்து ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 12.09.1926**



# வடஆற்காடு ஜில்லாவுக்கு சட்டசபை அபேக்ஷகர்கள்

பார்ப்பனர் ஆயுதமாகிய காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியின் சார்பாக வடஆற்காடு ஜில்லாவுக்கு மைலாப்பூர் அய்யங்கார் 'சுவாமி'களால் சட்ட சபைக்கு நிறுத்தின பான்மையும், நிறுத்தப்பட்ட மூன்று கனவான்களின் யோக்கியதையைப் பற்றியும், ஆரணி, ஆற்காடு ஜில்லா காங்கிரஸ்வாதி ஒருவர் எழுதிய கடிதத்தை வேறு இடத்தில் பிரசுரித்திருக்கிறோம். அதை ஊன்றிப் படிப்பவர்களுக்கு அய்யங்கார் சூழ்ச்சிகளின் தத்துவம் விளங்கா மல் போகாது. அதிற்கண்ட ஸ்ரீமான் செட்டியார் பார்ப்பனரல்லாதாரிடம் வரும் போது நானும் பார்ப்பனரல்லாத வகுப்பைச் சேர்ந்தவன். எப்படி யாவது நமது நாட்டுப் பார்ப்பனீயத்தை ஒழித்தால்தான் சுயராஜ்யம் வரும் என்று சொல்லு வார். பார்ப்பனர் இடம் செல்லும் போது "ஏமி சுவாமிலூ மனக்கெப்புடு அமாவாச சூத்திரவாள்ளரு எப்புடு அமாவாச" என்று கேட்பார். அதாவது "என்ன சுவாமிகளே நமக்கு என்றைக்கு அமாவாசை, சூத்திரன்களுக்கு என்றைக்கு அமாவாசை" என்று கேட்டல். அல்லாமலும் காங்கிரஸ் வாதி எழுதியிருப்பது போல் தனக்கு லாபம் இல்லாமல் அவரிடம் ஒரு காரியமும் இருக்காது. நமது மந்திரிகளைக் காணும்போது நான் பார்ப்பனர் கூடவே இருந்து அவர்களை ஒழித்து விட்டு வந்து விடுகிறேன். சற்று பொறுங்கள் என்பார். ஸ்ரீ சர்.சி.பி. அய்யரிடம் போகும் போது ஜஸ்டிஸ் கட்சியைக் குழி வெட்டிப் புதைக்க நாள் ஆச்சுது ; முதலில் என் மகனுக்கு ஒரு உத்தியோகங் கொடு என்பார். மொத்தத்தில் "நீக்கு பெப் பெப்பே நீ தாத்தரு பெப் பெப்பே" என்று இரண்டு பேரையும் ஏமாற்றி விடுவார். தன் வீடுதான் அவருக்கு தேசம், தன் பிள்ளை குட்டிகள்தான் அவருக்கு தேச மக்கள். இப்படிப்பட்ட தேச பக்தர்களாகவே பார்த்து போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இதை அறிந்து அந்த ஜில்லாவாசிகள் இப்போது இரண்டு மூன்று கன வான்கள் அந்த ஜில்லாவாசிகளாகவும் பொது வாழ்க்கையில் சுயநலமின்றி உழைத்து வருபவர்களாகவும் பார்த்து நிறுத்தி இருக்கிறார்களாம்; அதாவது ஆரணி ஸ்ரீமான் G.N..பரசுராம் நாயக்கர் அவர் களையும், வேலூர் சேர்மெனும் ஜில்லா போர்டு தலைவருமான ஸ்ரீமான் கரூர் கிருஷ்ணசாமி நாயுடுகார் அவர்களையும் கேட்டுக் கொண்டதில் அவர்களும் சம்மதம் கொடுத்து விட்டதாய்த் தெரிகிறது. மற்றொரு ஸ்தானத்திற்கு யாரை நியமிப்பார்களோ



RangaRakes tamilnavarasam.com

தெரியவில்லை. எப்படியாவது இந்த கனவான்களைப் பற்றி அந்த ஜில்லா வாசிகளுக்கு நாம் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. அல்லாமலும் இவர்களின் யோக்கியதாம் சத்தை அந்த ஜில்லாவாசிகளுக்கு அறிவிப்பதை விட பார்ப்பனர்களால் நிறுத்தப்பட்டிருக்கும் கனவான்களின் யோக்கியதாம் சத்தை அஜ்ஜில்லா பாமர ஜனங்களும் ஓட்டர்களும் கொஞ்சமாவது அறியும் படி செய்து விட் டால் கண்டிப்பாய் அந்த ஜில்லாவாசிகளால் நிறுத்தப்பட்ட கனவான்களே போட்டியன்னியில் தெரிந்தெடுக்கப்பட்டார்கள் என்று சொல்லும்படியாக வெற்றி பெறுவார்கள் என்பது உறுதி என்றே சொல்லு கிறோம்.

( ப - ர் )

**குடி அரசு - வேண்டுகோள் - 12.09.1926**



# ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காரின் ஆசை

நமது ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காரும் அவரது கோஷ்டியாரும் காங்கிரஸ் பிரசாரம் என்கிற பெயரை வைத்துக்கொண்டு பார்ப்பனரல்லாத சமூகத்தை அடியோடு அழிப்பதற்காக ஆங்காங்கு செய்து வரும் பிரசாரத் தைப் பற்றி நாம் அடிக்கடி எழுதி வருகிறோம். அதன் மூலம் அவர்கள் கோருவது என்ன என்பதையும் அவர்களின் ஆசை என்ன என்பதையும் பொதுமக்கள் ஒருவாறு அறிந்திருக்கலாம். ஆனால் சமீபகாலமாய் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் பல பதவிகள் அதாவது, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர், தமிழ்நாடு சுயராஜ்ய கக்ஷித் தலைவர், எல்லா இந்திய சுயராஜ்ய கட்சித் தலைவர், எல்லா இந்திய காங்கிரஸ் தலைவர் ஆகிய பதவிகள் அடையக் கோரி செய்து வந்த பிரயத்தனங்கள் பலித்து விட்டதின் பலனாய்த் தலை கிறுகிறுத்துப்போய் குடிகாரன் வெறிகாரன் பேசுவது போல் பேசத் தொடங்கி விட்டார். இதன் பலனாய் அவரது உள்ளக் கிடக்கை அப்படியே வெளியாய் விட்டது.

அதென்னவெனில் இம்மாதம் 10 உ 'தமிழ்' சுயராஜ்யாவில் 6-ம் பக்கத்தில் அரசாங்கத்தார் என்ன செய்கிறார்கள் என்கிற தலையங்கத்தின் கீழ் - ஸ்ரீமான்கள் ஈ.வெ.இராமசாமி நாயக்கரும் சுரேந்திரநாத் ஆரியாவும் அரசி யல் என்று கூறிக் கொண்டு வகுப்புத் துவேஷங்களை உண்டு பண்ணிக் கொண்டு வருகிறார்கள் . அவர்கள் இந்த துவேஷத்தை இதுகளுக்கு ஊட்டி விடுகின்றனர். காங்கிரஸ்வாதிகளைச் சிறையிலடைத்த அரசாங்கம் இப்பொழுது ஏன் இதை பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறது.

சென்னை கவர்ன்மெண்டாரும் அட்வொகேட் ஜெனரலும் சட்ட மெம்பரும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நான் அவர்களைக் கேட்கிறேன். இதற்கு அவர்கள் பதிலளிக்க வேண்டும் என்றும், ஸ்ரீமான்கள் ஈ.வெ. இராமசாமி நாயக்கர், டாக்டர் வரதராஜுலு நாயுடு, சக்கரை ஆகியோர் காங்கிரசை விட்டுப் போய் விட்டதால் காங்கிரஸ் சுத்தமடைந்து வருகிறது என்றும், இவர்கள் கொஞ்ச நாளைக்கு முன்பே போயிருந்தால் நாம் சீக்கிரம் முன்னேற்றமடைந்திருப்போம் என்றும், தலைவர் பதவி கிடைக்காததால் கட்சியைவிட்டு ஓடுவது யோக்கியமல்லவென்றும், இத்தகையவர்கள் காங்கிர சை விட்டு ஒழிவது நமக்குத்தான் அனுகூலமென்றும் பேசியிருக்கிறார். இது போலவே பம்பாய் மாகாண மந்திரி கனம் யாதவர் சென்னை மாகாணத்திற்கு வந்தபோது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களும் பேசியிருக்கிறார்.



RangaRakes tamilnavarasam.com

அதாவது, சென்ற ஷ டிசம்பர்–மீ 26 உ சென்னை சவுந்தர்யமஹாலில் பேசும் போது ஸ்ரீமான் யாதவர் இங்கு வந்து வகுப்புத் துவேஷத்தை மூட்டப் பார்த்தார். சட்ட மெம்பர் (சர். C.P. ராமசாமி அய்யர்) தாம் பிராமண ரென்று பயந்து கொண்டு அவரைச் சட்டப்பிரகாரம் கவனிக்காது விட்டு விட்டார். இவருக்குத் தைரியமில்லாவிடில் தம் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு ஒரு பிராமணரல்லாதாரைக் கொண்டு ஏன் தாக்கீது செய்திருக்கக் கூடாது என்று பேசியிருக்கிறார். (இது 27.12.25 சுதேசமித்திரன் 7–வது பக்கம்) இதுகளில் இருந்து இந்தப் பிராமணர்களின் சுயராஜ்யம் என்ன? அவர்களின் ஆசை என்ன என்பதை நன்றாய் யோசித்துப் பாருங்கள்.

ஸ்ரீமான்கள் இராமசாமி நாயக்கரும் ஆரியாவும் யாதவரும் வகுப் புத் துவேஷத்தை உண்டாக்குகிறார்களா? அல்லது ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய் யங்கார் மடாதிபதிகளையும் குடியானவர்களையும் ஏமாற்றிக் கொள்ளை யடித்து பணத்தைக் காலிப் பையன்களுக்கும், சில்லரைப் பையன்களுக்கும் கொடுத்து பார்ப்பனரல்லாத மக்களை அடிக்கவும், வையவுமான காலித் தனம் செய்வித்து சமாதானத்துக்கு பங்கம் விளைவிக்கிறாரா என்று நாம் கேட்கிறோம்.

நமது அய்யங்கார் கோருகிறபடி ஸ்ரீமான்கள் ஈ.வெ.இராமசாமி நாயக்கரையும் ஆரியாவையும் சர்க்காரார் ஜெயிலில் போட்டு விட்டால் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்தி விடலாம் என்று நினைக்கிறாரா? சென்னை மாகாணத்தில் உள்ள நாலு கோடி மக்களில் இவ் விரண்டுபேர் போய் விட்டால் பாக்கி உள்ளவர்களின் நிலைமையைக் கொஞ்சமாவது யோசித்தாரா என்றுதான் கேட்கிறோம். ஏதோ வயிற்றுக் கொடுமையின் பலனாகவோ பேராசையின் பலனாகவோ சில பார்ப்பனரல்லாத பதர்கள் அய்யங்கார் வாலைப் பிடித்துக் கொண்டு திரிவதினாலேயே நான்கு கோடி மக்களையும் இது போலவே எண்ணி விட்டாரா என்றும்தான் நாம் கேட் கிறோம். சட்டசபைத் தேர்தல்கள் தீர்ந்தவுடன் ஆயிரக்கணக்கான பார்ப்பன ரல்லாத வாலிபர்களும் முதியோர்களும் அய்யங்கார் சொன்னாலும் சொல்லாவிட்டாலும், இஷ்டப்பட்டாலும், படாவிட்டாலும் ஒத்துழையாக் காலத்தில் ஜெயிலுக்குப் போன அவசரத்தை விட அதி வேகமாக இப் பார்ப்பனீய ஆதிக்கத்தை அழிப்பதற்குக் கும்பல் கும்பலாக ஜெயிலுக்குப் போகத்தான் போகிறார்கள். அப்போது நமது ஸ்ரீமான்கள் ஸ்ரீனிவாசய்யங் காருக்கும் சத்தியமூர்த்தி சாஸ்திரிகளுக்கும் இதைப் பார்த்து சந்தோஷப் படக் கூட நேரமிருக்காது என்றே உறுதி கூறுவோம். ஸ்ரீமான் நாயக்கரும் ஆரியாவும் யாதவரும் என்ன கொடுமை செய்தார்கள்? அவர்கள் செய்த கொடுமைக்கு பீனல்கோட் சட்டத்தில் தண்டிக்கும்படியான பிரிவு இல் லையா? இருந்தால் இவர்கள் ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் அட்வொகேட் ஜெனரலையும் சட்ட மெம்பரையும் கெஞ்ச வேண்டும்? இதிலிருந்தே ஸ்ரீமான் அய்யங்கார் அட்வொகேட் ஜெனரலாயிருந்த போது



எப்படி நடந்து கொண்டிருந்தார் என்பதும் இப்பொழுதும் ஸ்ரீமான் அய்யங்காருக்கு அட்வொகேட் ஜெனரல் வேலையோ ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகளுக்கு சட்ட மெம்பர் ஸ்தானமோ கிடைத்தால் என்ன செய்வார்கள் என்பதையும் நாம் எடுத்துக் கூற வேண்டியதில்லை. அல்லாமலும் ஸ்ரீமான்கள் நாயக்கர், டாக்டர் நாயுடுகார், சக்கரை இவர்கள் காங்கிரசை விட்டுப் போனதால் காங்கிரஸ் பரிசுத்தமாய் விட்டதாம். இது உண்மையாயிருக்குமானால் டாக்டர் நாயுடுவை இராஜினாமாவை வாப்பீசு வாங்கிக் கொள்ளும்படி ஸ்ரீமான் அய்யங் கார் தந்தியும் ஆளையும் அனுப்பிக் கெஞ்சி இருப்பானேன்? சென்ற மாதம் நாயக்கர் சென்னைக்கு வந்திருந்தபோது கூட “தமிழ்நாடு ஆபிசுக்குத் தூது அனுப்பி நாயக்கருக்கு என்ன வேண்டும்? தாம் கூட்டத்திற்கு வருவதற்கு என்ன நிபந்தனை கேட்கிறார்?” என்று ராஜி செய்வதற்குத் தூது ஆள் அனுப்புவானேன்? எப்படி ஆனாலும் இப்போது அய்யங்காரிடம் பல்லைக் கெஞ்சி வயிறு வளர்க்கவோ பதவி பெறவோ ஆசையுள்ள ஆட்கள் தவிர மற்ற சுயமரியாதையும் சுயேச்சையுமுள்ளவர்கள் வெளியில் போய்விட்ட தால் பார்ப்பன ஆதிக்கத்திற்கு உழைக்கத் தகுந்தபடி காங்கிரஸ் பரிசுத்தப் பட்டு போய் விட்டது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்.

தலைவர் பதவி கிடைக்காததால் காங்கிரசை விட்டு நாயக்கர் நாயுடு கார் முதலியவர்கள் ஓடி விட்டதாகச் சொல்லுகிறாரே, எந்தத் தலைவர் பதவி யாருக்குக் கிடைக்கவில்லை? யார் ஆசைப்பட்டார்கள்? என்பதற்கு ஒரு சின்ன ஆதாரமாவது சொல்லி இருந்தால் கொஞ்சமாவது அதில் கண்ணிய மிருப்பதாய் நினைக்கலாம்.

நிற்க, இவ்விஷயங்களையெல்லாம் தேர்தல் காலத்தில் நமது பார்ப்ப னர்கள் எடுத்துச் சொல்லி வருவதற்கு நாம் மகிழ்ச்சி அடைய வேண்டி யதுதான். சீக்கிரத்தில் மகாத்மா காந்தியையும் இது போலவே வெளிப் படையாய் பேசக் கூடிய காலம் வரும் என்றே எதிர்பார்க்கிறோம். என்றா லும் தேர்தல் விஷயங்களில் பார்ப்பன ஓட்டர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஞானம் போல் நமது மக்களுக்கு ஏற்பட முடியாதபடி இதுவரை நமது தேர்தல்கள் நடத்தப்பட்டு வந்திருப்பதால் இந்தப்பார்ப்பனர்களுக்கு இம்மாதிரி பேசத் தகுந்த அளவு தைரியமேற்பட்டிருக்கிறது . பார்ப்பன ஓட்டர்கள் கொஞ்சம் மிகுதியாய் இருந்தாலும் அந்தத் தொகுதிகளில் எந்த விதத்திலும் பார்ப்பன ரல்லாதாருக்கு வெற்றி கிடைப்பது என்பது கனவிலும் நினைக்க முடியாத காரியம். ஆனால் 70 ஆயிரம் ஓட்டர்களில் 5 ஆயிரம் ஓட்டர்கள் பார்ப்பனராயிருந்தாலும் கூட அதில் பார்ப்பனர்கள் நின்று வெற்றி பெற்று வருவதை நாம் தினமும் பார்த்து வருகிறோம். ஆதலால் இப்போது பொதுநல சேவையில் ஈடுபட்டிருக்கிறவர்கள் செய்ய வேண்டிய வேலையெல்லாம் ஓட்டர்களுக்கு ஞானமுண்டாகும்படி செய்வதுதான் இம்மாதிரி பேச்சுக்களுக்கும் காரியங்களுக்கும் தக்க சமாதானமென்றே



RangaRakes
tamilnavarasam.com

சொல்லுவோம். இது சமயம் நமது தமிழ் நாட்டில் உள்ள பார்ப்பனரல்லாத பத்திரிகைகள் பெரும்பாலும் ஏதோ கதைகளை எழுதி வயிறு வளர்ப்பதில் காலத்தைச் செலுத்துகிறதே அல்லாமல் இவ்வார்த்தைகளையும் செய்கை களையும் கொஞ்சமும் லட்சியம் செய்வதற்கில்லாதபடி தங்கள் தோல்களை அவ்வளவு மொத்தமாக்கிக் கொண்டிருப்பதற்கு வருந்தாமலிருக்கமுடியாது.

**குடி அரசு - தலையங்கம் - 12.09.1926**



RangaRakes

# ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் சமத்துவ ஞானம்

ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் திருவல்லிக்கேணி கடற்கரையில் தனது வெற்றிக் கொண்டாட்டத்தில் பேசும் போது சமத்துவத்தைப் பற்றிச் சொன் னதில் "ஜாதி வித்தியாசத்தை சமூக விஷயங்களில் வைத்துக் கொள்ளுங்கள். அரசியல் விஷயத்தில் அது வேண்டாம்" என்று சொன்னதாக 6 -ந் தேதி 'மித்திரனில்' காணப்படுகிறது. இதன் தத்துவம் என்ன என்பதை அவர் பின்னால் திரியும் கோடாரிக் காம்புகள் யோசிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறோம்.

சமூக விஷயத்தில் ஜாதி வித்தியாசம் என்றால் என்ன? அவர்கள் பிராமணர்கள் நாம் சூத்திரர்கள் என்பதை வைத்துக் கொள்ள வேண்டியதும் பிறவியிலேயே அவர்கள் உயர்ந்தவர்கள், நாம் தாழ்ந்தவர்கள் என்கிறதும் தானா அல்லவா? அல்லாமல் எல்லோரும் சமம் என்கிற கருத்தாயிருந்தால் சமூக விஷயத்தில் ஜாதி வித்தியாசம் எதற்காக இருக்க வேண்டும் என்கிறார்.

தவிர அரசியலில் ஜாதி வித்தியாசம் வேண்டாம் என்றால் அதனின் தத்துவம் என்ன? அரசியலில் உள்ள எல்லா சுதந்திரங்களையும் பதவி களையும் உத்தியோகங்களையும் ஜாதி வித்தியாசமில்லாமல் "படித்த வர்களும் கெட்டிக்காரர்களும் தகுதியுடையவர்களும்" ஆகிய நாங்களே பார்த்துக் கொள்ளுகிறோம். இதில் ஜாதி வித்தியாசம் வேண்டியதில்லை; யார் அனுபவித்தாலென்ன; எல்லாம் சமம் என்று ஏமாற்றுவதும் இதில் யாரும் ஜாதி உரிமை காட்டக் கூடாது என்பதுதானா அல்லவா? இதையும் நமது கோடாரிக் காம்புகள் கேட்டுக் கொண்டு இன்னமும் அவர் பின்னால் திரிவது என்றால் இதில் ஏதாவது இரகசியம் இருக்குமா? இல்லையா? என்பதைப் பொது ஜனங்களே உணரட்டும்.

**குடி அரசு - வேண்டுகோள் - 12.09.1926**



tamilnavarasam.com

# சேவையும் பாராட்டுதலும்

கனவான்களே!

நான் உங்கள் அழைப்பிற்கு வந்தேனேயொழிய பிரசங்கம் செய்ய வரவில்லை. முதலியாரைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லும்படி அக்கிராசனர் கட்டளையிட்டார். நான் அவரை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். ஸ்ரீமான் முதலியார் எனது நண்பர்; அவரைப் பற்றி நான் புகழ் பேசுவது எனக்கும் ஒழுங்கல்ல; ஸ்ரீமான் முதலியார் அவர்களும் இதைப் பொறுக்கமாட்டார். அல்லாமலும் இது சமயம் அவர் தேர்தல் வேலையில் இருக்கிறார். நான் ஏதாவது இப்பொழுது அவரைப் பற்றி பேசுவதாயிருந்தாலும் அதை பொது ஜனங்களோ அல்லது அவர் போன்ற அபேக்ஷகர்களோ முதலியாருக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க நான் அவரைப் புகழ்வதாய் நினைக்கக் கூடும். தவிரவும் ஸ்ரீமான் முதலியார் அவர்களும் இம்மாதிரி ஆடம்பரத்தையும் வரவேற்பையும் விரும்பும் சுபாவமுடையவரல்லர் என்பது என்னுடைய அனுபவம். ஆனால் என்ன செய்வார் பாவம். இந்தக் காலத்தில் சட்டசபைத் தேர்தலுக்கு நிற்பவர்களுக்கு இந்த மாதிரி ஆடம்பரமும் வரவேற்பும் விளம்பரங்களுமே பிரதான யோக்கியதாம்சமாய்ப் போய்விட்டதால், இவரும் சட்டசபைத் தேர்தலுக்கு நிற்பதால், இந்த வேஷத்தையும் போட்டுக் கொள்ள வேண்டியதாயிற்று. பொது ஜனங்களும் தாங்கள் தெரிந்தெடுக்கும் கனவான்களிடம் இத்தகைய விளம்பரங்களைத்தான் எதிர்பார்க்கிறார்களே அல்லாமல் உண்மையான பொது நலத்திற்குத் தேவையான யோக்கியதையை எதிர்பார்ப்பதில்லை. இதன் பலனாக பொது நல நன்மையை நாடி உழைப்பவர்கள் இப்பதவிகளுக்கு வர முடியாமல் போன தொன்று, வந்தாலும் அவர்களை அறிந்து தெரிந்தெடுப்பதற்கு ஓட்டர்களுக்கு ஞானமில்லாமல் போனது ஒன்று ஆகிய இந்த இரண்டு குணங்களும்தான் இப்போதிய சீர்திருத்தத்தின் பலனாய் ஏற்பட்ட தேர்தல்களின் தத்துவமாய்ப் போய்விட்டது. இதன் பலனாகவே அந்த ஸ்தானங்களும் பொது நலத்திற்கு யோக்கியதை அற்றதாகப் போய் விட்டன. உதாரணமாக, எவ்வளவு பொது நல ஊழியர்களாயிருந்தாலும் எவ்வளவு சுயநலமற்றவர்களாயிருந்தாலும் எவ்வளவு பெரிய தியாகத்திற்கும் தயாராயிருப்பவர்களானாலும் தற்கால சட்டசபைக்கு நிற்க முடியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

அல்லாமலும் இதற்கு நேர் விரோதமாய் எவ்வளவு சுயகாரியப்



புலிகளாயிருந்தாலும், எவ்வளவு தூரம் ஏழை மக்களையும், குடியானவர்களையும், தொழிலாளர்களையும், சர்க்காருக்குப் பலி கொடுத்துத் தங்கள் யோக்கியதையையும் தங்களுக்கும் தங்கள் பிள்ளை குட்டிகளுக்கும் உத்தியோகத்தையும் சம்பாதித்துக் கொள்ளுபவர்களானாலும் எவ்வளவு சிறிய தியாகத்திற்கும் பயப்படுபவர்களானாலும் இப்படிப் பட்டவர்களே தற்கால சட்டசபைக்கு நிற்க சவுகரியமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். ஏன்? சட்டசபைக்கு நிற்பதென்றால் பத்தாயிரம், இருபதாயிரம், ஐம்பதாயிரம் ரூபாய்கள் செலவழிக்கத் தயாராயிருக்க வேண்டும். ஆதலால் பணக்காரர்கள்தான் இந்த வேலைக்கு லாயக்காய்ப் போய்விட்டார்கள். தேச பக்தர்களுக்கும் பொதுநல சேவைக்காரருக்கும் பணம் இருக்காது. பணக்காரர்கள் என்பதே தேசத்தையும் ஏழைகளையும் குடியானவர்களையும் தொழிலாளிகளையும் கெடுத்துத்தான் பணம் சம்பாதித்தவர்கள் என்பது சத்தியம். யோக்கியர்களுக்கும் தேச பக்தர்களுக்கும் பணம் சம்பாதிக்கும் வழிக்கும் வெகு தூரம். ஆதலால் அவர்கள் ஏழைகளாய்த்தான் இருப்பார்கள். அல்லாமலும் ஓட்டர்களோ மிகுதியும் ஏழைகள், மிகுதியும் பாமர ஜனங்கள். இவர்களை விலைக்கு வாங்குவது வெகு சுலபம். அம்மாதிரி காரியத்திற்கு உண்மையான பொது நல ஊழியர்கள் சம்மதிக்க மாட்டார்கள். தேர்தலுக்கு நிற்பதானால் கணக்குப் பிள்ளை, மணியக்காரர், பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் முதலியவர்கள் தயவு வேண்டியதாய்ப் போய்விட்டது. அவர்களோ அரை வயிற்றுக் கஞ்சிக்கும் மார்க்கமில்லாத சம்பளத்தை உடையவர்கள். அன்றியும் அந்தந்த கிராமத்தில் செல்வாக்குள்ளவர்கள், நாட்டாமைக்காரர்கள், பெருத்த குடித்தனக்காரர்கள் இவர்கள் தயவும் வேண்டும். இப்படிப்பட்டவர்களில் 100-க்கு 90 பேர் கடன்காரர்கள், ஜப்தி வாரண்ட் முதலிய கஷ்டத்தில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருக்கிறவர்கள். இந்த இரண்டு கூட்டத்திலும் உத்தமமானவர்கள் சிலர் இருப்பது எனக்குத் தெரியும். ஆனாலும் பெரும் பான்மையோர்கள் இந்த நிலையில் இருப்பதால் தேர்தலில் நிற்பவர்கள் இதை உபயோகப் படுத்திக்கொள்ளுகிறார்கள். உதாரணமாக, "ஓட்டர்களைக் கூட்டி வந்து ஓட்டு வாங்கிக் கொடுப்பதற்கும் அவர்களுக்கு தாகத்திற்கு உதவுவதற்கும் செலவுக்காக வைத்துக்கொள்ளுங்கள்" என்று கணக்கு மணியக்காரர்களிடம் ஓட்டு எண்ணிக்கைக்குத் தகுந்தபடி 100, 200 ரூபாய்களை சட்டசபைக்கு நிற்பவர்கள் வலியக் கொடுக்கிறார்கள். இதை எப்படி வேண்டாம் என்று சொல்ல மனம் வரும். அது போலவே பெரிய குடித்தனக்காரரைப் பார்த்து "என்னுடைய தேர்தலுக்கு வேலை செய்யக்கூட தங்களுக்கு சாவகாசமில்லைப் போல் இருக்கிறது. ஏதோ ஒரு பாக்கி தீர்க்கும் விஷயமாய்த் தாங்கள் அடிக்கடி திரிவதாகக் கேள்விப் பட்டேன். இந்தாருங்கள் ஆயிரமோ, ஐயாயிரமோ கொண்டுவந்திருக்கிறேன். பாண் டோ அடமானமோ எழுதிக்கொடுத்து இன்றைக்கே பெற்றுக் கொள்ளுங்கள். எலக்ஷன் தீர்ந்த பிறகு இக் கடனைக் கட்டிவிடலாம்" என்று சொன்னால் எந்த மிராசுதாரர்களாவது வேண்டாமென்று சொல்லுவார்களா? காலமோ பஞ்சகாலம். 3,



RangaRakes tamilnavarasam.com

4 வருஷமாய் மழையில்லை. என்ன செய்வார்கள்? இம் மாதிரியே தேர்தலுக்கு நிற்கிறவர்கள் பொது ஜனங்களை நாணயக் குறை வாய் நடக்கக் கட்டாயப் படுத்தி விடுகிறார்கள். இதன் மூலம் ஒரு பணமில் லாதவனோ அல்லது பணமிருந்தும் இம்மாதிரி நாணயக்குறைவான காரியங்களுக்குக் கட்டுப்படாதவனோ சட்டசபைக்கு நிற்க மார்க்கமில்லா மலே போய்விட்டது. ஆதலால் பொது நல சேவையும் பொதுநலப் பாராட்டு தலும் உண்மையான பொதுநல சேவையாயும் உண்மையான பாராட்டுத லாயும் இல்லை. சேவைக்கு வருகிறவர்களுக்கும் உள் எண்ணம் சுயநல மாய் விட்டது. பாராட்டுகிறவர்களுக்கும் உள் எண்ணம் சுயநலத்திற்காகவே ஆய்விட்டது. இந்த நிலைமையில் உண்மையான பொதுநலச் சேவை செய்கிறவர்களின் கடமை என்னவென்றால் போலிப் பொதுநலச் சேவை செய்கிறவர்களை வெளிப்படுத்துவதும் சுயநலத்துக்காக பாமர ஜனங்களை ஏமாற்றி, ஓட்டு வாங்கிக் கொடுக்கும் தரகர்களின் ஏமாற்றத்திலிருந்து தப்பு விப்பதும்தான் பொதுநலச் சேவையும் பாராட்டுதலும் ஆகும் என்று அபிப் பிராயப்படுகிறேன். இதற்காக மன்னிக்கவும்.

*குறிப்பு : கோவை ஜில்லா போர்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.சி.எஸ்.இரத்தின சபாபதி முதலியார் அவர்களுக்கு கொடுமுடி மக்கள் சார்பில் உபசாரப் பத்திர வழங்கும் விழாவில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 19.09.1926**



# பார்ப்பனர் தேர்தல் முழக்கம்

சென்னையில் தேர்தல் முழக்கம் தெருத்தெருவாய் முழங்குகிறது. பார்ப்பன ஆதிக்கத்திற்காக ஸ்ரீமான்கள் எஸ்.சீனிவாச அய்யங்கார், எஸ். சத்தியமூர்த்தி சாஸ்திரிகள், எ.ரெங்கசாமி அய்யங்கார் எம்.கே. ஆச்சாரியார் முதலியவர்கள் மடாதிபதிகள் பணத்தாலும் மகந்துகள் பணத்தாலும் தெருத் தெருவாய், ஜில்லா ஜில்லாவாய்ப் பார்ப்பனரல்லாத சில கயவர்களையும் சேர்த்துக் கொண்டு தேர்தல் முழக்கம் செய்கிறார்கள். அம்முழக்கத்தில் உபயோகிக்கும் தந்திரங்கள் என்னவென்று பார்ப்போமானால், பார்ப்பன ரல்லாதார் முற்போக்குக்காக ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வரும் இயக்கங் கள் மீது, பார்ப்பனரல்லாத பாமர மக்களுக்கு வெறுப்பு உண்டாகும்படி தூஷணை செய்வதும், தேசத்திற்கும் பார்ப்பனரல்லாத மக்களுக்கும் உழைத்து வரும் தலைவர்கள் மீதும் தொண்டர்கள் மீதும், பொல்லாப்பு களையும் பழிகளையும் சொல்லி அவர்களிடம் பொது ஜனங்களுக்கு அதிருப்தி உண்டாகும்படி செய்வதுமாகவே இருக்கின்றன. இதன் பயனாய்ப் பார்ப்பனரல்லாத பாமர மக்களை ஏமாற்றி அவர்கள் ஓட்டு பெற்று சென்னை சட்டசபை, இந்தியா சட்ட சபை முதலிய ஸ்தானங்கள் பெற்று அவற்றின் மூலம் ஏற்பட்ட உத்தியோகங்கள் அதிகாரங்கள் முழுவதையும் தங்கள் இனத்தவர்களாகிய பார்ப்பனர்களுக்கே கிடைக்கும் படிச் செய்து பார்ப்பன ரல்லாதாரை நுழையக்கூடாதவர்களாகவும் மற்றும் நிரந்தர ஈனஸ்திதி யிலேயே இருக்கும்படியானவர்களாகவும் செய்தும் வரப்பார்க்கிறார்கள். குறிப்பாய் பார்ப்பனரல்லாதாருக்கு உழைக்கும் ஜஸ்டிஸ் கட்சியையும், அதன் தலைவர்களில் பிரமுகர்களான ஸ்ரீமான்கள் பனகால் அரசர், ஏ.ராமசாமி முதலியார் ஆகிய இருவர்களையும்தான் இப் போது நமது பார்ப்பனர்கள் முக்கிய விரோதிகளாய் நினைத்துக் கொண்டு அவர்களை எந்த வழியிலாவது ஒழிப்பதே தங்கள் கடனாய் வைத்து 'காங்கிரஸ்' 'தேசம்' 'சுயராஜ்யம்' என்கிற ஆயுதங்களை அதற்காக உபயோகித்து வருகிறார்கள். அதோடு மாத்திரமல்லாமல் ஸ்ரீமான் பனகால் அரசர் மீதும் ஏ. ராமசாமி முதலியார் மீதும் சில ஈனத்தனமான பழிகளையும் சுமத்தி வருகிறார்கள் என்றும் அறிகி றோம். அவைகள் என்ன வென்றால் தங்கள் அதிகாரத்தின் கீழ் உள்ள காரியங்களைச் செய்வதில் பணம் சம்பாதிக்கிறார்கள் என்று சொல்லி வருவ தோடு சில பார்ப்பனரல்லாத பதர்களையும் கொண்டு வெளியிடங்களிலும் வக்கீல் குமாஸ்தா பார்ப்பனன், ஓட்டல்காரப் பார்ப்பனன், பொதுப் பெண்



RangaRakes tamilnavarasam.com

களிடம் தூது செல்லும் பார்ப்பனன் முதலானவர்கள் உட்பட பிரசாரம் செய்யவும் இரகசிய சுற்றுத் திரவுகள் பறந்து திண்ணைப் பிரசாரங்கள் நடந்து வருகின்றன. அதோடு மாத்திர மல்லாமல் தங்கள் சுயநலத்தை மனதில் வைத்து வெளிக்குப் பார்ப்பன ரல்லாதார்க்கு உழைப்பதாக வேஷம் போட்டுக் கொண்டு ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து தங்கள் எண்ணம் ஈடேறாமல் ஏமாற்ற மடைந்து வெளிவந்த சில பச்சோந்திகளும் இதற்குத் துணை புரிந்து வருகிறார்கள் என்பதாகவும் தெரிய வருகிறது. யார் எப்படி கத்தினாலும் கத்தட்டும். இதைப் பற்றிப் பொதுஜனங்களுக்கு ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லுவோம். இவர்கள் சொல்லுகிற மாதிரி பணம் சம்பாதிக்க வேண்டும் என்கிற ஆசை ஸ்ரீமான் பனகால் அரசருக்கோ ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியாருக்கோ இருக்கு மானால் மலையாளக் குடிவார மசோதாவினும் இந்துமத பரிபாலன மசோதா வினும் எவ்வளவு லக்ஷ ரூபாய் சம்பாதித் திருக்கக் கூடும் என்பதை பகுத்தறிவைக் கொண்டு யோசித்துப் பார்த்தால் தெரியவரும். உபயோக மில்லாத வெறும் பார்ப்பனர்களுக்கு பல மடாதிபதி களும் மகந்துக்களும் மலையாள ஜன்மிகளும் லக்ஷக்கணக்கான ரூபாய் செலவு செய்ததாகத் தெரிகிறது. இந்தப் பார்ப்பனர்களால் இந்தக் காரியமாகும் என்ற நம்பிக் கையே இல்லாமல் சூதாடுவது போல் இவ்வளவு பணம் செலவு செய்திருக்கிறார்கள். ஸ்ரீமான் பனகால் அரசரோ ஸ்ரீமான் ராமசாமி முதலியாரோ இந்து மத பரிபாலன சட்டத்தை முழுவதும் நிறுத்திக் கொள்ளத் தேவையில்லை; ஒரு கோவிலையும் நான்கு மடங்களையும் மாத்திரம் இச்சட்டத்திலிருந்து விலக்குவதானால் 7 லக்ஷ ரூபாய் கொடுக்க ஆள்கள் இன்றைய தினமும் தயாராயிருக்கிறார்கள் என்றும், இதை முடித்துக் கொடுக் கும் தரகருக்கு பதினாயிரக்கணக்கான பொன்னும் பீதாம்பர சால்வையும் தயாராயிருக்கிறதென்றே நாம் கேள்விப் படுகிறோம். இதிலிருந்தே நூறு, இருநூறு, ஐந்நூறு வீதம் சிறு சிறு பதவிகளுக்கு பணம் வாங்குவது என்பது உண்மையானால் இந்த லக்ஷக்கணக்கான ரூபாயை வேண்டாம் என்று சொல்லுவார்களா? என்பதைப் பொது ஜனங்கள் யோசித்துப் பார்க்க மாட்டார் களா என்கிற ஞானம் கூட இல்லாமலே இவ்வித இழிவான தன்மையில் பிரசாரங்கள் செய்கிறார்கள். அல்லாமலும் இவர்களுக்கு எதிரிடையாய் நிறுத்தப் பட்டிருக்கும் கனவான்களும் இவற்றையே வெளியில் பேசுகிறார் கள் என்றும் நமது காதுக்கு வந்து கொண்டிருக்கிறது. இதிலிருந்து நமது மக்கள் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் நமது பார்ப்பனர் கள் தங்கள் சுயநலத்திற்காக எதையும் செய்ய அஞ்ச மாட்டார்கள் என்பது தான். ஜமீன்தாரர்கள் மத்தியிலும் செங்கல்பட்டு ஜில்லாவாசிகள் மத்தியிலும் தான் இவ்வித ஈனத்தனமான பிரசாரம் அதிகமாய் நடத்தப்பட்டு வருவதாகவே கேள்விப்படுகிறோம். பார்ப்பனரல்லாத மக்களுக்குள் கொஞ்சமாவது மூளை இருக்கிறது, பகுத்தறிவு இருக்கிறது என்பது வெளியாக வேண்டு மானால், அது முக்கியமாய் செங்கல்பட்டு ஜில்லாவாசிகளிடம் இருந்து தான் பார்ப்பனரல்லாதார் சமூகம் எதிர்பார்க்கிறதென்றே சொல்லுவோம். சென்னை



சட்ட சபைக்கு ஸ்ரீமான் ராமசாமி முதலியார் வரக்கூடாது என்கிற எண்ணங் கொண்டே நமது பார்ப்பனர்கள் செங்கல் பட்டு ஜில்லா தொகுதிக்குத் தங்கள் சார்பாகப் பார்ப்பனரல்லாதாரையே நிறுத்தி அவருக்கு எதிராய்ப் போட்டி போடச் செய்து தாங்கள் தங்கள் பணத்தைக் கொண்டும், மகந்துக்கள் பணத்தைக் கொண்டும் பிரசாரம் செய்து வருகிறார்கள். சென்னை சட்ட சபையில் இப் பார்ப்பனர் போடும் கூச்சலுக்கும் அவர்கள் கிளப்பிவிடும் விவகாரங்களுக்கும், சட்ட சம்பந்தமான சிக்கல்களுக்கும் ஆப்படித்த மாதிரி பதில் சொல்லி அவர்களை அடக்கி வைக்கத் தகுந்த சக்தி ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியார் அவர்களிடம் இருப்பதினால்தான் நமது பார்ப்பனருக்கு அவர் எதிரியாய்த் தோன்றுகிறார். உதாரணமாக, சென்னை சட்டசபையில் கொஞ்ச நாளைக்கு முன் ஒரு பார்ப்பன சட்டசபை மெம்பர் ஒரு பார்ப்பன ரல்லாத உத்தியோகஸ்தரைக் கெடுக்க எண்ணங் கொண்டு அவர் பேரில் ஒரு பழியைச் சுமத்தி அதாவது குறிப்பிட்ட பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர் தேர்தல் விஷயத்தில் பிரவேசித்திருக்கிறார்; அவரைப் பற்றி விசாரிக்க வேண்டும்; ஆதலால் சபை நடவடிக்கை களை ஒத்தி வைக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இதைப்பற்றி பிரமாதமாய்ப் பேசி அந்த உத்தியோ கஸ்தரைப் பற்றி கெட்ட அபிப்பிராயம் உண்டாகும்படி செய் தும் அவரை ஒழிக்க சட்ட மெம்பருக்கு அதிகாரம் கொடுக்கப்போகும் சமயத் தில் ஸ்ரீமான் ஏ.ராமசாமி முதலியார் சட்டசபைக்கு வந்து விஷயம் இன்ன தென்று தெரிந் ததும் உடனே ஆம், ஆம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்; இன்னும் இரண் டொரு உத்தியோகஸ்தர்களைப் பற்றியும் நான் கேள்விப் பட்டேன் அவரை யும் அந்த லிஸ்ட்டில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி ஒரு பார்ப்பன ஜில்லா கலெக்டர் பெயரையும் ஒரு பார்ப்பன சப் ஜட்ஜி பெயரையும் சூசனை காட்டினார். உடனே பார்ப்பன சட்ட மெம் பரே பார்ப்பன சட்டசபை மெம்பரை கெஞ்சிக் கேட்டுக் கொண்டு தன்னு டைய பிரேரே பணையை வாபீசு வாங்கிக் கொள்ளவே வெகு பாடுபடும்படி செய்து விட்டார். இம்மாதிரி அவர் ஒருவர் அங்கிருந்து கொண்டு பார்ப்பன ரல்லாதார் விஷயத்திலும் பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர் விஷயத் திலும் எவ்வளவோ பாடுபட்டு வருவது பார்ப்பனர் கண்களில் ஊசி குத்துவது போல் இருப்பதால் அவருக்கு எதிரிடையாய் செங்கல்பட்டு ஜில்லா தொகுதி ஒரு பார்ப்பனரல்லாதாரையே நிறுத்தி முன் சொன்னது போல் மகந்துக்கள் பணத்தை செலவு செய்து சில பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே பிரசாரம் செய்கிறார்கள். ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காரும் தான் தூங்கும் போதும் சாப்பிடும் போதும் மற்றும் ஒவ்வொரு சமயத்திலும் ஸ்ரீமான் ஏ.ராமசாமி முதலியார் உருவமே தம் முன் தோன்றுவதாகவும் அவரை ஒழிப்பதே தமது வெற்றி என்றும் அந்த விஷயத்திலேயே தமது முழுக்கவனத்தையும் பலத்தையும் செலுத்தப்போவதாகவும் சொல்லியிருக்கிறார். இதற்காகவே இஜ்ஜில்லா மிராசுதாரர்களையும் ஜமீன்தாரர்களையும் சுவாதீனப்படுத்திக் கொண்டு உள்நாட்டு சண்டைகளையும் கக்ஷிகளையும் கிளப்பி விட்டுக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டும் வருகிறார். ஆதலால் செங்கல் பட்டு ஜில்லாவாசிகள் இந்த சமயம் தங்கள் புத்திகளையும் மனச்சாக்ஷி களையும் பார்ப்பனர் சூழ்ச்சிக்கும் தந்திரத்திற்கும் பறி கொடுத்து விடாமல் நமது நாட்டு நிலைமையும் நமது பார்ப்பனரல்லாதார் வகுப்பு நிலைமை யையும் கவனித்து புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ள வேண்டு கிறோம். செங்கல்பட்டு ஜில்லா ஜமீன்தாரர்கள் தங்களை எவ்வளவு பெரிய ஜாதியார் என்று சொல்லிக் கொண்டாலும் தாங்கள் எவ்வளவு பெரிய வர்ணாசிரம தர்மி என்று சொல்லிக் கொண்டாலும், பார்ப்பனர் அகராதியில் அவர்களை சூத்திரர்கள் என்றுதான் குறிக்கப்பட்டி ருக்கிறதே அல்லாமல், ஜமீன்தார்கள் வேறு பிறவி என்று இல்லவே இல்லை. ஆகையால் உள்நாட்டு க ட்சி விவ காரத்தின் பலனாய் பார்ப்பனர்களின் கையாளாயிருக்கக் கூடாது என்று ஜமீன்தாரர்களையும் மிராசுதாரர்களையும் மறுமுறை வேண்டிக்கொள்ளு கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 19.09.1926**



# பிராமணீயத்தை ஒழிப்பதென்றால் என்ன?

## கும்பகோணத்து "பிராமணனின்" லஜ்ஜையும் சீற்றமும்

பிராமணீயத்தை ஒழிப்பது என்பதில் பார்ப்பனர்களை ஒழிப்பது என்பதும் அவர்களுக்குப் போகும் பிச்சைக் காசையும் பிச்சைச் சாமான் களையும் நிறுத்துவதும் என்பதே நமது கருத்து என்பதாகப் பலர் அபிப் பிராயப்படுவதாகக் கற்பனை செய்து கொண்டு பார்ப்பனரினால் வயிறு வளர்க்கும் சில பார்ப்பனரல்லாதாரும் , சில பார்ப்பனரும், பார்ப்பனப் பத்திரி கைகளும், "பிராமணன்" என்கிற பார்ப்பன வருணாசிரம தர்ம பத்திரிகை யும் கூச்சல் போடுகின்றதுகள். பிராமணீயத்தை ஒழிப்பது என்பதை நாம் எந்தக் கருத்தின் பேரில் தொடங்கினோம் என்றால் நம்மைவிடப் பார்ப்ப னன் உயர்ந்தவன் என்று எண்ணுவதும், அவன் பிழைப்புக்காக ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருக்கும் வஞ்சக சாஸ்திரங்களையும், பொய்ச் சுருதிகளை யும், புரட்டு ஆகமங்களையும் நம்புகிற மூடநம்பிக்கையையும் நமது மனதை விட்டு அகற்றுவதும், நம்மை விடப் பஞ்சமன் என்பவன் தாழ்ந்த வன் என்று எண்ணுவதை ஒழிப்பதுமாகிய தத்துவத்தைத்தான் முதன்மை யாகக் கருதித் தொடங்கினோமேயல்லாமல் வேறல்ல. உதாரணமாக, பார்ப்பனனை நாம் ஏன் 'சுவாமி' என்று கூப்பிட வேண்டும்? அவனைக் கண்டால் நாம் தான் முதலில் கும்பிட வேண்டும் என்கிற மனப்பான்மை நம்மிடத்தில் ஏன் இருக்க வேண்டும்? பார்ப்பனரும் ஏன் அதை எதிர் பார்க்க வேண்டும்? அவனுக்குப் பணம் கொடுப்பதும் சாப்பாடு போடு வதும் புண்ணியம் என்று ஏன் நாம் நினைக்க வேண்டும்? இது போன்ற பல உயர்வுகள் நம் போன்ற நம்மிலும் பல வழிகளில் தாழ்ந்தவனாயிருக்கிற வனுக்கு பார்ப்பனனாகப் பிறந்தான் என்கிற காரணத்திற்காக ஏன் கொடுக்க வேண்டும்? அல்லாமலும் நம்மை விட எந்த விதத்திலும் தாழ்மையில்லாதவனையும் நம்மிலும் பல விதத்தில் உயர்குணங்கள் கொண்டவனையும் போலிப் பிறவிக்காரணமாக நாம் ஏன் தாழ்ந்தவன் என்று சொல்ல வேண்டும்? அவன் நம்மைக் கும்பிடும்படி ஏன் நாம் எதிர்பார்க்க வேண்டும்? ஒருவனை நாம் தொட்டால் தோஷம் என்று நாம் ஏன் நினைக்க வேண்டும்? ஆகிய இப்பேர்ப்பட்டதான அஞ்ஞானத்தை, மூட நம்பிக்கையை, கொடுமையை, அகம்பாவத்தை, கொலை பாதகத்தை, வஞ்சகத் தத்துவத்தை ஒழிப்பதல்லாமல் பிச்சை எடுக்கும் பார்ப்பனர் மேல்



RangaRakes tamilnavarasam.com

துவேஷங்கொண்டு செய்வதல்ல என்பதை உறுதியாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறோம். உதாரணமாக, பார்ப்பனனுக்கு பிச்சைக் கொடுப்பதை நாம் வேண்டாமென்று சொல்ல வரவில்லை. ஆனால் அவனுக்குக் கொடுப்பது புண்ணியம்; மோக்ஷத்திற்கு கொடுக்கும் விலை என்கிற மூட நம்பிக்கையின் பேரில் கொடுத்து ஏமாறாதீர்கள் என்றுதான் சொல்லுகிறோம். கஞ்சிக்கில்லாமல் கஷ்டப்படுகிறான், பாடுபட்டுத் தின்பதற்கு யோக்கியதை இல்லா நிலையில் இருக்கிறான் என்று காணப்பட்டால் கண்டிப்பாய் அவனுக்கு உதவ வேண்டியது மனித தர்மமென்றே சொல்லுவோம். இந்த நிலை 'பிராமணனிடம்' கண்டாலும் சரி 'பஞ்சமனிடம்' கண்டாலும் சரி உடனே உதவ வேண்டியது மனிதனின் ஆண்மையிலும் சுயமரியாதை யிலும் பட்டதென்று கூடச் சொல்லு வோம். உப்பற்ற கஞ்சி கண்டு 8 நாள் ஆன மனிதன் தெருவில் உயிர் போகுந் தருவாயில் இருக்கும் போது "பாயாசத்திற்கு குங்குமப்பூ போதவில்லை; அக்கார வடிசிலுக்குப் பச்சைக் கற்பூரம் போதவில்லை என்ன சமாராதனை செய்து விட்டான் லோபிப் பயல்" என்று சொல்லுகிற காளைத் தடியர்களுக்கு சாப்பாடு போடுவது தர்மம் என்று எண்ணுகிற முட்டாள்தனத்தை விட வேண்டும் என்பதையும் தான் பிராமணீயத்தில் இருந்து விடுபட்டதென்று சொல்லுகிறோம்.

'பிராமணன்' என்கிற ஒரு பத்திரிகை 'பஞ்சாங்கப்' பிராமணர்களை உண்மைப் பிராமணர்கள் தாழ்வாய்க் கருதுவதாகவும், அவர்களுக்கு அவ்விழிதொழில் கூடாதென்றும், அவர்கள் வேறு தொழிலில் பிரவேசிக்க வேண்டுமென்றே தான் விரும்புவதாகவும், ஜம்பமாய் எழுதிவிட்டுப் பார்ப்பனர் "இவ்விழிதொழில்" செய்வதற்குப் பார்ப்பனரல்லாதார் காரணஸ்தராயிருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ளும் 'தமிழ்நாடு' பத்திரிகை மீது சீறி விழுவதன் காரணம் இன்னதென்று தெரியவில்லை. தவிர பார்ப்பனர்களில் இவ்விழி தொழிலில் ஜீவித்து வருபவர்கள் பதினாயிரத்திலொருவர் கூட இல்லை என்றும், மற்றவர்கள் எல்லாம் கௌரவமான தொழிலில் வாழ்கிறார்கள் என்றும் ஜம்பம் பேசிக் கொள்ளுகிறது. ஆனால் ஸ்ரீமான் சத்திய மூர்த்தி சாஸ்திரிகளோ ஏதோ பதினாயிரத்தில் ஒருவர்தான் உத்தியோகம் காப்பி ஓட்டல் முதலிய இழி தொழில்களில் இருக்கிறார்கள்; மற்றவர்கள் எல்லாம் மகா பரிசுத்த பிராமணீயத் தொழிலாகிய பஞ்சாங்கத் தொழிலில் இருக்கிறார்கள்; அவர்களிடத்தில் பார்ப்பனரல்லாதாருக்குத் துவேஷம் ஏன் இருக்க வேண்டும்? என்று பேசியிருக்கிறார். ஆதலால், உத்தமமான தொழில் இன்னது, இழி தொழில் இன்னது என்பதுகளிலேயே இவ்விரு பார்ப்பனர்களுக்கும் வித்தியாசமிருப்பதால் நாம் இதில் கலந்து கொள்ள இஷ்டமில்லை. ஆனாலும் பதினாயிரத்தில் ஒருவன்தான் பஞ்சாங்கப் பிராமணன் என்பதை மாத்திரம் நாம் மறுக்கிறோம்.

இன்றைய தினம் உத்தியோக முறையில் உயர்ந்த ஸ்தானம் வகித்தும், மாதம் பதினாயிரம் இருபதினாயிரம் சம்பாதித்து வரும் பிராமணர்கள் என்று





சொல்லிக் கொள்ளுபவரான ஸ்ரீமான்கள் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள், நரசிம்மேஸ்வர சர்மா அவர்கள், சி.பி. ராமசாமி அய்யர் அவர்கள், எஸ். சீனிவாசய்யங்கார் அவர்கள், டி.ஆர். வெங்கிட்டராம சாஸ்திரிகள், மகா மகாகனம் பட்டம் பெற்ற ஸ்ரீனிவாச சாஸ்திரிகள், சர். சிவசாமி அய்யர் அவர்கள் முதலியவர்கள் உட்பட அனேக சாதாரண உத்தியோகப் பிராமணர்களும், அரசியல் பிராமணர்களும், சன்னிதானங்கள், மடாதிபதிகள், மகந்துகள் என்று சொல்லத்தகுந்த பல வைதீகப் பிராமணர் களும், சிலர் பஞ்சாங்கப் பிராமணர்களின் சந்ததிகள், சிலர் பஞ்சாங்கப் பிராமணர்களின் பிள்ளைகள், பலர் பஞ்சாங்கப் பிராமணர்களின் சகோதரர்கள், பலர் உத்தியோகத்திலும், வைதீகத்திலும், பஞ்சாங்கத்திலுமாக மூன்றிலும் வயிறு வளர்க்கிறவர்கள் என்பதை மாத்திரம் தெரியப்படுத்திக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. "பிராமணன்" உண்மையிலேயே இந்த 'இழி தொழிலாகிய' பஞ்சாங்கத் தொழிலைச் செய்வதிலிருந்தும் மூட நம்பிக்கையில் பார்ப்பனரல்லாத மக்களை இறக்கி அவர்களால் வயிறு வளர்க்கும் தொழிலிலிருந்தும் 'பிராமணர்களை'க் கடைத் தேற்றி 'பிராமணன்'சொல்லுகிறபடி அவர்களை 'கௌரவமான' வாழ்க்கையில் நடக்கும்படி செய்யும் பிரசாரத்திற்கு நம்மையும் அழைத்தால் நாமும் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம்.

நாம் பிராமணீயத்தை விட்டவர்கள் பெயர்களைப் போட்டு வருவது போலவே பஞ்சாங்கத் தொழிலாகிய 'இழிதொழிலை விட்ட பிராமணர்' பெயர்களையும் வாரா வாரம் 'பிராமணன்' பத்திரிகை கொண்டு வெளி வருவானானால் நாம் பிராமணனை மிகுதியும் போற்றுவோம். அதில்லாமல் எழுத்தில் மாத்திரம் காட்டுவதில் என்ன பயன்? தாசிகளைக் கேட்டால்கூட அவர்கள் தங்கள் தொழில் இழி தொழிலென்று ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனால் இருட்டானவுடன் தெருவில் நடப்பவனைப் பார்த்து கண்ணடிப்பதில் பின் வாங்குவதில்லை. வக்கீல்களும் அது போலவே தங்கள் தொழிலை இழி தொழில் என்று ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனால் தாசிகள் புருஷர்களைத் தேடுவது போல் வாயிற்படியிலும் ரயில்வே பிளாட்பாரத்திலும் காத்திருந்து கட்சிக்காரர்களைத் தேடுவதில் குறைவில்லை. அதுபோல பிராமணனும் பஞ்சாங்கத் தொழில் இழி தொழில் என்று வாயில் ஒப்புக் கொண்டதைப் பற்றி நாம் மிகுதியும் சந்தோஷப்பட முடியவில்லை. அது காரியத்தில் காட்டி தனது சமூகத்தாருக்கு அத்தொழில் இல்லாமல் செய்ய பிரயத்தனப்படுவானானால் அத்தொழிலின் பலனாய் மூட நம்பிக்கையில் ஈடுபட்டுச் சுயமரியாதை இன்றிக் கிடக்கும் கோடிக் கணக்கான பார்ப்பனரல்லாத மக்களுக்குச் சுயமரியாதைக்கு வழிகாட்டின பலம் பார்ப்பனர்களுக்கு கிடைக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 19.09.1926**

RangaRakes

tamilnavarasam.com

# ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார்

ஸ்ரீமான் ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் இம்மாதம் 16-ல் கோவையிலிருந்து கொழும்பு மார்க்கமாக ஆஸ்திரேலியாவுக்குப் பிரயாண மாகிறார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள பார்லிமெண்ட் பிரதிநிதிகள் எல்லோரையும் ஆஸ்ற்றிய அரசாங்கத்தார் தருவித்து ஒவ்வொரு பார்லி மெண்டின் நடவடிக்கைகளையும் போக்கையும் பற்றி எடுத்துப் பேசி ஒருவ ருக்கொருவர் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை பரிமாறிக் கொள்வதற் கும் நன்மையான முறைகளை ஒவ்வொருவரும் ஒருங்கே கையாளவும், தீமையின் முறைகளைக் கைவிடவும் ஒரு பயிற்சி ஏற்படுவதற்காக கூடப் படும் ஏகாதிபத்தியம் மந்திராலோசனை சபைகளின் பிரதிநிதிகள் கூட்ட மொன்று ஆஸ்த்திரேலியா அரசாங்கத்தாரால் கூட்டப்படுகிறது. இக்கூட்டத் திற்குப் பிரிட்டிஷாருக்குள்ள "குடியேற்ற நாடுகளின் பார்லிமெண்ட்" என்று சொல்லப்படும், மந்திராலோசனை சபையார்கள் எல்லாம் தங்கள் தங்கள் சபைச்சார்பாக பல பிரதிநிதிகளை தெரிந்தெடுத்தனுப்புகிறார்கள். அது போலவே நமது இந்தியாவுக்கும் ஷை மகாநாட்டுக்கு இந்திய பிரதிநிதி யாக இந்தியா சட்டசபையாரும் நமது ராஜாங்க சபையாரும் நமது ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியாரையும் மற்றொரு ஐரோப்பியரையும் தெரிந் தெடுத்திருக்கிறார்கள். ஷை மகாநாட்டுக்குச் செல்லும் சுமார் 50 பிரதிநிதிகளில் நமது செட்டியார் ஒருவர்தான் கருப்பு மனிதர். மற்றவர்கள் எல்லோரும் வெள்ளைக்காரர். அல்லாமலும் இந்த மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப் புவதில் முக்கியமாய் கவனித்த விஷயம் அரசியல் மந்திராலோசனை அறி வும், அரசியல் அனுபவமும், ஆங்கில பாஷா ஞானமும், வாக்கு வன்மை யும், பொறுப்பையுமே பிரதானமாகக் கருதப்பட்டிருக்கிறது. இவ்வளவு உயர் குணங்களோடு கூடிய ஒரு இந்தியர், இந்திய பாமர ஜனங் களின் பிரதிநிதி சபை என்று சொல்லிக் கொள்வதான இந்திய சட்டசபையும், மிராஸ்தார்கள் பிரதிநிதி சபை என்று சொல்லப்படுவதான அரசாங்க சபையும் நமது ஸ்ரீமான் ஆர்.கே. சண்முகம் செட்டியார்தான் என்றும், அவரே இம்மகாநாட்டுக்குப் போகத் தகுந்தவர் என்றும் கருதி, அவரையே ஷை சபைகள் மனப்பூர்வ மாய்த் தெரிந்தெடுத்திருக்கின்றன. இப்படிப்பட்ட ஒருவர் இவ்வளவு பொறுப்புள்ள காரியத்திற்குப் போவதைப் பற்றியும், அவரின் யோக்கியதாம் சங்களைப் பற்றியும், போகும் காரியங்களின் விபரத்தைப் பற்றியும், நமது நாட்டுப் பாமர ஜனங்கள் அறியும் பொருட்டு, இது வரையில் ஒரு பார்ப் பனப் பத்திரிகையும் வெளிப்படுத்தவேயில்லை. இந்த மாதிரி ஸ்தானங்களுக்கு யாராவது ஒரு



அனாம தேயப் பார்ப்பனன் ஒருவன் போவானேயானால் அவனைப் பற்றி பெரிய பெரிய தலையங்கங்களும், பட்டங்களும், (இண்டர்வியூ ) "பேட்டி கண்டு பேசிய அபிப்பிராயங்களும்" பத்தி பத்தியாய் விளங்கும். ஆங்காங்கு பல உபசாரப் பத்திரிகை களும், வழியனுப்பு உபசாரங்களும் நடக்காதன கூட நடந்தவனவாக நிரூபங்கள் நிறையும். இதுவரை எத்தனையோ பார்ப்பனர்கள் நமது ஸ்ரீமான் செட்டியார் அவர்களைப் போல் பொது ஜனங்களால் தெரிந் தெடுக்கப்படாமல் இந்தியாவுக்குத் துரோகம் செய்வதற்கென்றே சர்க்கார் ஊழியராகச் சர்க்காரார் சொல்லிக் கொடுத்த வார்த்தையைக் கிளிப்பிள்ளைப் போல் போய்ச் சொல்லி விட்டு வரவும், தன் இஷ்டப்படி ஒரு வார்த்தைகூட சொல்ல அதிகாரமில்லாத நிலையில் அடிமையாய்ச் சென்ற பார்ப்பனர் களைப் பற்றி கூட நமது பார்ப்பன பத்திரிகைகள் எவ்வளவு எழுதி இருக்கின்றன என்பது வாசகர்களுக்குத் தெரியும். அப்படியிருக்க பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட நமது செட்டியாரைப் பற்றி ஒரு வார்த்தையாவது எந்த பத்திரிகையாவது எழுதிற்றா? மகாத்மா காந்தியைச் சிறைக்கனுப்ப உதவியாயிருந்த ஸ்ரீமான் சீனிவாச சாஸ்திரிகளும், காங்கிரஸ் பெயரைச் சொல்லி ஓட்டுப் பெற்று மாதம் 5500 ரூபாய் சம்பளத்திற்காக சர்க்கார் அடிமையான ஸ்ரீமான் சி.பி.ராமசாமி அய்யரும், காங்கிரஸினால் பஹிஷ்கரிக்கப்பட்ட ஏகாதிபத்திய கண்காட்சிக்கு இந்தியாவின் சார்பாய்ச் சென்ற சர்க்கார் ஊழியரான ஸ்ரீமான் டி.விஜ யராகவாச்சாரியாரும், வெளி நாடுகளுக்குப் போன காலங்களில் அவர்கள் படம், அவர்கள் புகழ், சரித்திரம், பேட்டிக் கண்டு பேசிய விபரம் முதலியதுகளை இப்பார்ப்பனப் பத்திரிகைகள் எவ்வளவு விளம்பரங்கள் செய்தன என்பது யாவருக்கும் தெரியும். இம்மூவர்களும் சுயராஜ்யத்திற்காக பாடுபடுவதாய்ச் சொல்லும் நமது பார்ப்பன பத்திரிகைக்காரர் அபிப்பிராயத்திற்கும், காங்கிரசுக்கும் சுயராஜ்ய கட்சிக்கும் முற்றும் மாறுபட்டவர்களாயிருந்தும் அவர்களை விளம்பரப் படுத்துவதில் நமது 'இந்து' 'சுதேசமித்திரன்', 'சுயராஜ்யா', 'நியூ இந்தியா' முதலிய 'தேசீயப் பத்திரிகைகள்' கொஞ்சமும் பின் வாங்க வில்லை. ஆனால் நமது ஸ்ரீமான் ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் காங்கிரஸ் வாதி, சுயராஜ்யக் கக்ஷி 'கொரடா', தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி. இவ்வளவு யோக்கியதையுடன் காங்கிரஸ், சுயராஜ்யக் கட்சி, பார்ப்பனக் கட்சி என்கிற உண்மையை பாமர ஜனங்கள் அறியாதபடி மறைக்கவும், இப் பார்ப்பனர்கள் வெளியில் போய் பார்ப்பனப் பிரசாரம் செய்வதில் கல்லடி, சாணி உருண்டை, மலச்சட்டி முதலியதுகள் பார்ப்பனர் பேரில் விழாமல் காக்க வுமான காரியத்திற்குப் பார்ப்பன ஆயுதமாயிருந்து இப் பார்ப்பன அபிப்பி ராயந்தான் இந்திய தேசிய அபிப்பிராயமென்றும், சொல்லி வந்த இப்படிப் பட்ட ஒரு உபகாரிக்கே இவர்கள் இவ்வளவு துரோகம் செய்வார்களானால் மற்றவர்களுக்கு எவ்வளவு கொடுமை செய்ய மாட்டார்கள். இன்றைய தினமும் நமது சென்னை மாகாணத்தை எடுத்துக் கொண்டாலும் ஏறக்குறைய 4 கோடி ஜனங்களுக்குள் விஷயங்களைப் பாகுபடுத்தி மக்களுக்கு நன்றாய்



RangaRakes tamilnavarasam.com

விளங்கும்படி செய்யவும், விவகார ஞானத்துடன் விவகரிக்கவும், எதிரிகளின் சூழ்ச்சிகளை அறியவும் தக்க யோக்கியதை உடையவர்கள் எந்த வகுப்பிலிருக்கின்றார்கள் என்றால் பார்ப்பனரல்லாதார் வகுப்பில்தான் இருக்கிறார்கள். அவர்களில் சிறந்தவர் கள் என்று சொல்லத் தக்கவர்கள் யார் என்று பார்த்தால் நமது ஸ்ரீமான் கள் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் அவர்களையும், சென்னை ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியார் அவர்களையுமே சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட இருவரும் பிரகாசிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்னவென்று யோசித்தால் நமது பார்ப்பனப் பத்திரிகைகளின் விஷமமேயல்லாமல் வேறல்ல. எத்தனையோ ‘ஆகாவழிகள்’ பார்ப்பனர் என்கிற காரணத்திற் காக ‘தலைவர்களாய்’ பிரகாசிக்கிறார்கள். இதன் காரணம் என்ன வென்றால் இப்படிப்பட்டவர்கள் பார்ப்பனர் என்பதற்காகத் தான். உதாரணமாய், சுயராஜ்ஜியக் கட்சித் தலைவர், தமிழ் நாட்டுத் தலைவர், காங்கிரஸ் தலைவர் என்று விளம்பரம் முழங்கும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் அறிவிற்கும் ஆற்றலுக்கும் இக்கனவான்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஒத்துப் பார்த்தால் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது என்பதைக் காணலாம். ஸ்ரீமான் அய்யங்கார் சட்ட ஞானத்தில் நிபுணராயிருக்கலாம்; அது போலவே மற்றொருவர் சித்திரம் எழுதும் ஞானத்தில் நிபுணராயிருக்கலாம்; மற்றொரு வர் கவிப்பாடுவதில் நிபுணராயிருக்கலாம்; மற்றொருவர் செருப்புத் தைப்பதில் நிபுணராயிருக்கலாம். இம்மாதிரி பல கலை ஞானங்களுக்கு நிபுணராயிருப்பதற்கும் உலக ஞான அறிவுக்கும் எவ்வளவோ வித்தியாச முண்டு. இக் கலை ‘நிபுணத்துவம்’ கூட சூழ்ச்சியினால் பெற்று விடலாம். இதைப்பற்றி மற்றொரு சமயம் விரிக்கலாம். நிற்க, ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் இந்தச் சமயத்தில், தான் ஆஸ்திரேலியாவுக்குப் போகத் துணிந் ததை நாம் யோசிக்கும் போது அவரது ஊக்கத் தையும், தேசாபிமானத்தை யும், உறுதியையும் யாரும் போற்றாம லிருக்க முடியாது. ஏனெனில் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் அடுத்து நடக்கப் போகும் இந்தியா சட்டசபைத் தேர்தலில் ஒரு அபேக்ஷகராய் கோயமுத்தூர், நீலகிரி, சேலம், வடஆற்காடு ஆகிய நான்கு ஜில்லாக்களின் சார்பாய் நிற்கிறார். இவருக்கெதிராகப் பலர் நிற்கிறார்கள். இனியும் நிற்க நினைப்பார்கள். ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் தேர்தலுக்கு முன் திரும்பி வரவும் முடியாது . அப்படி யிருந்தும் தேர்தலைக் கூட அவ்வளவு லட்சியம் செய்யாமல் போகத் துணிந்தது நாம் மிகுதியும் பாராட்டத்தக்கதுதான். செட்டியார் அவர்கள் அரசியல் அபிப்பிராயத்தில் பார்ப்பனக் கட்சியான சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்திருந்தாலும் மற்றும் எல்லாக் கட்சியாரின் நம்பிக்கையையும் பெற்றிருக்கிறார் என்றே சொல்வ தோடு முழுதும் பார்ப்பனர் கை ஆயுதமாக இல்லையென்றே சொல்ல வேண்டும். தற்காலம் நமது நாட்டில் பேருக்குப் பல கட்சிகள் இருந்தாலும், அதைப் பாகுபடுத்தினால், இரண்டு கட்சிகள்தான் விளங்கும். ஒன்று பார்ப்பனர் கட்சி, மற்றொன்று பார்ப்பனரல்லாத கட்சி. இரண்டு கட்சியிலும் சுயநலக்காரர் இருந்தாலும் அபிப்பிராயம் இரண்டுந்தான். அதில் பார்ப்பன



ஆதிக்க அபிப்பிராயம் பார்ப்பனரல்லாதார் ஆதிக்க அபிப்பிராயம் - இரண்டு தான். இவற்றிற்கு ஆதாரம் விவாதத்திலிருப்பதும் இரண்டுதான். அரசியலில், அதாவது ஒன்று பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் என்கின்ற வகுப்புவாரி வாக்காளர் உரிமைக் கொண்ட வகுப்புவாரி பிரதிநிதித்து வமும், சமூகவியலில் மக்கள் பிறவியில் உயர்வு, தாழ்வு என்கிற வித்தி யாசத்தை ஒழிப்பதற்கு அஸ்திவாரமாய் ஏற்படுத்தப் பட்டிருக்கும் இந்துமத தர்ம பரிபாலன சட்டமும் தான். இவ்விரண்டையும் நிறைவேற்ற பார்ப்பனரல்லாதாரும் இவ்விரண்டையும் அழிக்கப் பார்ப்பனர்களும் போடும் சண்டைதான் இப்போது பல கட்சிகளாய் விளங்குகிறது. ஆன போதிலும் இவ்விரு தத்துவங்களையும் நிறைவேற்றவும், அழிக்கவும் இரு கட்சியாரும் மற்ற கட்சிகளிலிருந்து ஆசாமிகளைப் பலவித சூழ்ச்சிகளினாலும், கூடா ஒழுக்கத்தினாலும், சுவாதீனப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறைக்க முடியாது. ஆனாலும் நமது செட்டியார் அவர்கள் இவ்விரு அபிப்பிராயங்களிலும் தனது மனச் சாட்சியில் ஒரு கடுகத்தனையாவது பார்ப்பனருக்கு விற்காமல் பார்ப்பனர் கட்சியாகிய சுயராஜ்யக் கட்சியிலிருக்கிறார் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. உதாரணமாக காஞ்சீபுரம் அரசியல் மகாநாட்டின் போது ஸ்ரீமான் டி.ஏ. ராமலிங்கஞ் செட்டியார் அவர்களின் தலைமையின் கீழ் கூடிய எல்லா கட்சி பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் ஸ்ரீமான் இராமசாமி நாயக்கராலும் ஸ்ரீமான் எஸ். ராமநாதன் அவர்களாலும் பிரேரேபித்து ஆமோதிக்க ஏற்படுத்திய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தீர்மானத்தை தயார் செய்தவரே ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்மு கம் செட்டியார் அவர்கள் தான். இரண்டாவதான இந்துமத பரிபாலன சட்டத்தைப் பற்றி, நமது பார்ப்பனர்கள் சுயராஜ்யக் கட்சி என்பது பார்ப்பனக் கட்சிதான் என்பதை உலகத்தார் உணருவதற்கு அனுகூலமாய் அடுத்த சட்டசபையில் வரப் போகும் இந்துமத பரிபாலன மசோதாவைச் சுயராஜ்யக் கட்சியார் (பார்ப்பனருக்காக) எதிர்க்க வேண்டும், வெளியேறின வீரர்கள் சட்டத்திட்டங்களை மீறிக் கூட உள்ளே போக வேண்டுமென்று பார்ப்பனர் அறிக்கை விட்டிருந் தும், நமது ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் ஒருவர் மாத்திரந்தான் தைரியமாய் வெளியில் வந்து இந்துமத பரிபாலன சட்டவிஷயம் அரசியல் விஷயமல்ல. அது பிராமணர் - பிராமணரல்லாதார் என்கின்ற வகுப்பு விஷயம். ஆதலால், இதை ஆதரிப் பவர்களோ எதிர்ப்பவர்களோ தனி ஹோதாவில் வகுப்பு முறையில் எதிர்க்கலாமே ஒழிய அரசியல் தத்துவ முறையில் எதிர்க்கக்கூடாது. அப்படி எதிர்த்தால், தான் சுயராஜ்யக் கட்சியையும், காங்கிரஸையும் கூட விட்டு வெளியேற வேண்டி இருக்கும் என்று பார்ப்பனர் திடுக்கிடும்படியும், தான் பார்ப்பனர் அடிமை அல்ல என்பதை மக்கள் உணரும்படியும், இறுதிக் கடிதம் வெளியிட்டார். இதிலிருந்து வேறு எந்தக் காரியங்களுக்குக்கென்றோ ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் எந்தக் கட்சியிலிருந்த போதிலும் நாட்டின் நலத்திற்கும், பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கும், சமத்துவத்திற்கும் ஏற்படும் பிரச்சினைகளில், தனது இரத்தம் பார்ப்பனரல்லாதார் இரத்தம்



RangaRakes tamilnavarasam.com

என்பதையும், தான் பரிசுத்தமான பார்ப்பனரல்லாதார் சந்ததி என்பதையும் தாராளமாய்க் காட்டிக் கொண்டார். இதை உத்தேசித்தே பார்ப்பனரல்லாதார் கட்சியாகிய 'ஜஸ்டிஸ் கட்சி' சார்பாய் நின்றிருந்த ஸ்ரீமான் எம். சம்பந்த முதலியார் அவர்களும் ஸ்ரீமான் செட்டியாருக்குப் போட்டியாய் நிற்பதி லிருந்து விலகிக்கொண்டு செட்டியாருக்கு உறுதி கொடுத்து வழியனுப்பி யிருக்கிறார். அக்கட்சியாரும் இனி வேறு யாரையும் செட்டியாருக்குப் போட்டியாய் நிறுத்த மாட்டார்கள் என்றே நினைக்கிறோம். சுயராஜ்யக் கட்சி பார்ப்பனரும் ஸ்ரீமான் செட்டியாருக்கு போட்டியாய் யாரையும் நிறுத்த மாட்டார்கள் என்றே தோன்றுகிறது. ஆனால் சென்னை சட்டசபைக்கு நிற்கும் சுயராஜ்யக் கட்சி கனவான்களில் இரண் டொருவர் தங்களுக்கு சென்னை சட்டசபை ஸ்தானம் கிடைப்பது சந்தேகம் என்று பட்டால் மாத்திரம் கட்சிப் பெயர்களை விட்டு விலகி சுயேச்சை வாதியாக நிற்பார்கள் என்று பலரால் ஊகிக்கப்படுகிறது. ஆன போதிலும் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் இந்த நான்கு ஜில்லாவாசிகளான ஓட்டரிடத்தில் உறுதிவைத்தே, தான் போன சமயம் பார்த்து, தான் இந்நாட்டிலில்லாத அந்த விஷயத்தை உபயோகப் படுத்திக் கொண்டு இந்த ஸ்தானத்திற்கு நிற்பார்க ளேயானால் அவர்களுக்கு ஷை ஓட்டர்கள் தகுந்த புத்திக் கற்பிப்பார் என்று நம்பி தனது பிரயாணத்தை உறுதிச் செய்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் ஆஸ்திரேலியாவுக்குப் போய் வருவ தினாலாவது, இந்தியா சட்டசபை ஸ்தானத்திற்குப் போட்டியின்றி தேர்ந் தெடுக்கப்படுவதினாலாவது, தேசத்திற்குப் பிரமாதமான நன்மைஏற்பட்டு விடும் என்றாவது சுயராஜ்யம் கிடைத்துவிடுமென்றாவது நாம் ஒரு சிறிதும் நம்பி செட்டியார் அவர்களை வெற்றி பெற ஆசீர்வதிக்கவில்லை. ஆனால் செட்டியார் போன்றவர்கள் பார்ப்பனரைப் போலவே காங்கிரஸ் பெயரை யும், சுயராஜ்யக் கட்சிப் பெயரையும் சொல்லிக் கொண்டாலும் சர்க்கார் பதவிக ளுக்கும், உத்தியோகங்களுக்கும் அதாவது ஜட்ஜிகளாகவோ, சட்ட மெம்பர் களாகவோ, அட்வொகேட் ஜெனரலாகவோ வருவாரானால் பார்ப்பனரல் லாதார் மக்களது சுயமரியாதையை ஒழிக்க தெருவில் நடக்க வேண்டா மென்றும், கோவிலுக்குள் போக வேண்டாமென்றும், சட்டப்படி குற்றமென் றும், வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பியதால் பிடித்து ஜெயிலில் போடு என்றும் அட்வொகேட் ஜெனரலும் சட்ட மெம்பரும் ஏன் சட்டபடி ஸ்ரீமான்கள் இராமசாமி நாயக்கர் மீதும், ஆரியா மீதும், கனம் மந்திரி யானவர் மீதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை யென்றும், கேட்கவா வது சுயமரியாதையின் எதிரிகளான நமது பார்ப்பனர்களுக்கு தைரிய மில்லாமலி ருக்கத் தகுந்த அளவுக்காவது பிரயோஜனப்படாதா? என்கிற ஆசையின் பேரிலேயே செட்டியார் போன்ற மனப்பான்மை உள்ளவர்களை நாம் ஆதரிக்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 19.09.1926**



# தற்கால நிலைமையும் நமது கடமையும்

சகோதரி சகோதரர்களே!

நான் இந்த ஊரில் தமிழ்நாடு காங்கிரஸ் மகாநாடு நடந்த பிறகு இன்று தான் முதல் தடவையாக வந்திருக்கிறேன். இந்தக் காஞ்சீபுரம் நமது சரித்திர புராணக் காலங்களில் எப்படி முக்கியமானதோ அது போலவே தற்கால அரசியல் சமூகவியல் முதலிய இயக்கங்களின் சரித்திரத்திற்கும் முக்கிய மானதாக இருந்து வருகிறது. ஸ்ரீமதி பெசண்டம்மையாரின் ஹோம் ரூல் இயக்கம் தேசத்தில் செல்லுபடியற்றதாக ஏற்படுவதற்கும், பெசண்டம்மை யாரின் அரசியல் வாழ்வில் மாற்றம் ஏற்படவும், இந்தக் காஞ்சீபுரத்தில் ஸ்ரீமதி சரோஜினியம்மாள் அக்கிராசனத்தின் கீழ்க் கூடிய சென்னை மாகாண கான் பரன்சில்தான் அஸ்திவாரம் போடப்பட்டது. அது போலவே காங்கிரஸ் இயக் கம் தேசத்தில் செல்லுபடியற்றதாகவும், சுயராஜ்யக் கட்சிக்கு உளைமாந்தை வரவும், பார்ப்பனர்களின் சூழ்ச்சி வெளியாகவும் இந்தக் காஞ்சீபுரத்தில் ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய தமிழ்நாடு மகாநாட்டில் தான் அஸ்திவாரம் போடப்பட்டது. காஞ்சீபுரம் மகாநாட்டிற்கு அப்புறம் தமிழ்நாட்டில் மாத்திரமல்லாமல் இந்தியா தேசத்தி லேயே அரசியலிலும் சமூகயியல்களிலும் பெரிய மாறுதல்களும் ஏற்பட்டி ருப்பது உங்களுக்குத் தெரியாததல்ல. பொதுவாகப் பார்க்கும் போது ஸ்ரீமான் திரு.வி.கலியாண சுந்தர முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் நடந்த மகாநாட்டுச் சம்பவங்கள் நன்மைக்கு ஏற்பட்ட தென்றே தான் சொல்ல வேண்டும். அப்போது நடந்த சம்பவங்கள் அம்மாதிரி நடந்திருக்கவில்லை யானால் நாம் எவ்வளவோ ஏமாந்து போயிருப்போம். அச்சம்பவமே நம்மெல்லோரையும் கண்விழிக்கச் செய்தது. தவிர "தற்கால நிலைமையும் நமது கடமையும்" என்பது பார்ப்பன ரல்லாதவர்களின் தற்கால நிலைமை யும், பார்ப்பனரல்லாதார்களாகிய நமது கடமையும் என்பதுதான் இன்றைய விஷயமாதலால், காஞ்சீபுரம் மகாநாட்டிலிருந்தே நமது நிலைமையும் நமது கடமையும் என்ன என்பதை நீங்கள் நன்றாய் அறிந்திருப்பீர்கள். அம் மகாநாட்டில் அம்மாதிரி நடைபெறாமலிருந்தால் காங்கிரஸ், சுயராஜ்யக் கட்சி, சுயராஜ்யம், உரிமை ஆகிய வார்த்தைகள் நம்மை ஏமாற்றி நாம் என்றென்றும் தலையெடுக்க முடியாமல், நமது பார்ப்பனர்களால் அமுத்தப்பட்டுக் கிடக்க நேரிட்டிருக்கும். இந்நாட்டின் சுக துக்கத்திற்குப் பொறுப்பானவர்களும், பெரும்பான்மையானவர்களுமான நாம் காங்கிரஸ் பெயரால் நமது



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனர்களாலும் அவர்களது அடிமைப் பிரசாரகர்களாலும் ஏமாந்து, நமது நலனைக் கெடுத்துக் கொள்வதோடல்லாமல், நமது நன்மைக்கு என்று ஏற்பட்டதான பிராமணரல்லாதார் இயக்கமாகிய ஜஸ்டிஸ் கட்சியையும் ஒடுக்கியிருப்பார்கள். தற்கால காங்கிரஸ் நமக்கு எவ்வளவு தூரம் கெடுதி செய்திருக்கிறது என்பதும், அதனால் நமக்கு எந்தக் காலத்திலும் நன்மை இல்லாததோடு நமது சமூகத்திற்கே அது பெரிய ஆபத்தாயிருக்கிற தென்பதும் நான் சொல்லாமலே நீங்கள் எல்லோரும் அறிந்த விஷயம். இந்தக் காங்கிரசின் மூலம் நமக்காவது நமது நாட்டிற்காவது அனுகூலமான திட்டங் கள் ஏதாவது இருக்கின்றனவா? என்பதை நன்றாய் யோசித்துப் பாருங்கள். பார்ப்பனரல்லாதாரில் சிலர் காங்கிரசில் சேர்ந்ததும், அதற்காக உழைத்ததும், கஷ்டப்பட்டதும், நஷ்டப்பட்டதும், சிறை சென்றதும் எதை உத்தேசித்து என்றால் மகாத்மா திட்டங்களாகிய கதரும், தீண்டாமையும், ஒற்றுமையும், மதுவிலக்கும் மிகுதியும் பார்ப்பன ரல்லாதாராகிய நமது சமூகத்திற்கே நன்மை விளைவிப்பதும், தரித்திரத்தை ஒழிப்பதும், சுயமரியாதையையும் சமத்துவத் தையும் அளிப்ப தும் ஆன வழிகளுக்கு அனுகூலமாயிருந்ததால்தான் நாம் அதில் முழு மனதோடு இறங்கி உழைத்து வந்தோம். இத்திட்டங்கள் நிறைவேறினால் நமது பார்ப்பனர்கள் வாழ்க்கைக்கு ஆபத்து வந்துவிடு மென்று நினைத்து அவர்கள் இவற்றை காங்கிரசிலிருந்து விலக்கப் பிரயத்தனப்பட்டு அதில் வெற்றியு மடைந்து, இப்போது காங்கிரசையே தங்கள் ஒரு வகுப்புக்கு மாத்திரம் அனுகூலமாக வும் மற்ற வகுப்பாருக்கு ஆபத்து உண்டாக்கத்தக்க மாதிரி யாகவும் அமைத்துக் கொண்டார்கள். இப்போதைய காங்கிரசில் நிர்மாணத் திட்டமே தாவது இருக்கிறதா? என்று யோசித்துப் பாருங்கள். கதரை அடியோடு காங்கிரசிலிருந்து ஒழித்து விட்ட தோடு அதை ஒரு கண்ணியக் குறைவாக வும் கருதும்படி செய்து விட்டார்கள். அதாவது, காங்கிரசுக்காரர்கள் ஓட்டுக் கேட்கும் போது மாத்திரம் கதரைக் கட்டிக்கொள்ளவேண்டிய மாதிரியில் தீர்மானம் செய்திருக்கிறார்கள். இதனால் உண்மையிலேயே ஒருவன் கதரிடம் அபிமானம் கொண்டு கட்டி இருந்தா லும், பொது ஜனங்கள் அவனைப் பார்த்தால் சந்தேகிக்கப்படும்படியாகவும் இவன் திருட்டு ஆசாமி பொது ஜனங்களை ஏமாற்றி ஓட்டு வாங்க கதர் கட்டி இருக்கிறான் என்று பொது ஜனங்கள் நினைக்கும்படியும் செய்து விட்டார்கள். இதனால்எவ்வித அவமானத்திற்கும் கட்டுப்பட தைரியமிருக்கிறவர்தான் கதர் கட்டிக்கொள்ள முடிகிறது. இதனாலேயே தன்மானத்தில் லக்ஷியமுள்ளவர் கள் கதர் கட்டப் பயப்படுகிறார்கள். தீண்டாமை விஷய மாவது காங்கிரசில் இருக்கிறதா? என்று பாருங்கள். தீண்டாதவர்களையும் நம்மையும் கண்ணில் பார்ப்பதற்கே நமது பார்ப்பனர்கள் சம்மதிப்பதில்லை. இது குருகுல விவாதத் தில் நன்றாய் தெரிந்திருப்பீர்கள். இரண்டாவது, மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்று தீர்மானம் செய்தவுடன் ஸ்ரீமான்கள் சி. ராஜகோபாலாச் சாரியார், ராஜன், சாஸ்திரி போன்றவர்களே காங்கிரஸ் கமிட்டியினின்றும் ராஜினாமாச் செய்து விட்டார்கள் என்றால் மற்றப் பார்ப்பனர்களைப் பற்றி



நினைக்கவும் வேண்டுமா? ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பேசும்போதெல்லாம் அரசியலில் தீண்டாமையைக் கலக்காதீர்கள் என்று பேசி வருகிறார். ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியார் "பார்ப்பனக் குழந்தை சாப்பிடுவதைப் பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்து விட்டால் ஒரு மாதம் பட்டினி இருப்பேன்" என்று சொல்லிக் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து ஓடிப்போய் விட்டார். இதிலிருந்து காங்கிரசில் தீண்டாமை விலக்கு இருக்கிறதா? என்று பாருங்கள். மதுவிலக் காவது காங்கிர சிலிருக்கிறதா? என்றால் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் பாமர ஜனங் களை ஏமாற்றிப் பார்ப்பனருக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க கருதி மாத்திரம் இவ் வருஷம் "மதுவிலக்குச் செய்ய சம்மதித்தவர்களுக்கு ஓட்டுக் கொடுங்கள்" என்றார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சட்டசபையில் மதுவிலக்குச் செய்ய முடியாது என்று சொல்லி விட்டார். பிறகும் ஸ்ரீமான் ஆச்சாரியார் மதுவிலக்கு என்று சொல்லிக் கொண்டு மது உற்பத்தி செய்பவர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்கப் பிரசாரம் செய்தார். இப்பவும் காங்கிரசிலுள்ள தலைவர் களில் 100-க்கு 90 பேர்களில் மது உற்பத்தி செய்கிறவர்கள் சிலரும், விற்பவர்கள் சிலரும், அருந்துபவர்கள் சிலரு மாகவே இருக்கிறார்கள். இன்றும் நாளையும் காங்கிரஸ் காரியதரிசியான ஸ்ரீமான் எ.ரெங்கசாமி அய்யங்கார் சாராயம், பிராந்தி விற்பனையில் பணம் சம்பாதித்துக் கொண்டு தான் வருகிறார். இன்னமும் சில சுயராஜ்யப் பார்ப்பனர் கள்ளுக்கு மரம் விட்டுக் கொண்டிருக்கிறார். ஒற்றுமைக்காகவா வது ஏதாவது திட்டம் காங்கிர சில் இருக்கிறதா என்றால் அதுவும் ஒன்றுமில்லை. காங்கிரசிலிருந்து ஸ்ரீமான்கள் இராமசாமி நாயக்கர், வரதராஜுலு, கலியாண சுந்தர முதலியார், ஆரியா, சக்கரை, தண்டபாணி பிள்ளை முதலிய பார்ப்பனரல்லாதார்கள் போய் விட்ட தால் காங்கிரஸ் பரிசுத்தமாய் விட்டது என்கிறார்கள் நமது பார்ப்பனர்கள். அல்லாமலும் ஸ்ரீமான்கள் ஆரியாவை யும் ஈ.வெ.இராமசாமி நாயக்கரையும் ஜெயிலில் பிடித்துப் போட வேண்டு மென்று கவர்னரையும் பார்ப்பன அதிகாரிகளையும் கெஞ்சுகிறார்கள்; விண்ணப்பமும் போட்டிருக் கிறார்கள் நமது பார்ப்பனத் தலைவர்கள். இந்து முஸ்லீம் ஒற்றுமையாவது இருக்கிறதா என்று பார்த்தால் மகமதியர்களுக்கு சுயராஜ்யம் கொடுக்கக் கூடாது என்று காங்கிரசின் பேராலேயே இந்தியா சட்டசபையில் ஆக்ஷேபித் துச் சர்க்காரோடு சேர்ந்து ஓட்டு கொடுத்திருக் கிறார்கள். ஒருவரை யொருவர் சந்தேகிக்காமலிருக்கவும், ஒருவரை ஒருவர் மோசம் செய்யாமலிருக்கவும், எல்லோரும் சம உரிமை அடையவும் தக்க பந்தோபஸ்தான வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றால், அதைப்பற்றி காங்கிரசுக்குள்ளாகவே பேசக் கூடாது என்று பார்ப்பனரல்லா தாரைக் கொண்டே சொல்லி விட்டார் கள். ஆனால் ஜஸ்டிஸ் கக்ஷி ஏற்பட்ட போது அதைக் கொல்ல எண்ணி பார்ப்பனரல்லாதாரான ஸ்ரீமான்கள் நாயுடு, முதலியார் இவர்களை வசப்படுத் திக் கொண்டு "தேசீய பார்ப்பனரல்லாதார் சங்கம்" என்பதாக ஒன்றை ஏற்படுத்தச் செய்து அதன் மூலம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் கேட்டுவிட்டுப் பார்ப்பனரல்லாதாருக்குள் கட்சி ஏற்பட்டதும், இப்போது



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனரல்லாதா ருக்கே பணங் கொடுத்து அதை எதிர்க்கச் சொல்லுவதோடு தாங்களும் அநேக சூழ்ச்சி செய்து வருகிறார்கள். ஆகிய இக் காரணங்களால் காங்கிரசில் தேசத்துக்கு அநுகூலமான திட்டம் ஏதாவது கொஞ்சமாவது இருக்கிறதா? என்று நீங்கள் நன்றாய் யோசித்துப் பாருங்கள். பார்ப்பனர் களுக்கு ஆதிக்கம் வரவும், உத்தியோகம் வரவும், பார்ப்பனரல்லாதார் தாழ்த்தப்படவும், உத்தியோகங்களிலிருந்து விலக்கப் படவும் நாம் காங்கிரசில் சேர வேண்டுமா? காங்கிரஸ் தேசத்திற்கு அநு கூலமாக இருந்தால் மகாத்மா காந்தியும் லாலா லஜபதிராயும் ஏன் காங்கிர சுக்கு உழைக்காமல் ஒதுங்கி இருக்கிறார்கள். ஸ்ரீமான்கள் நாயுடு, முதலியார், ஆரியா, தண்டபாணி பிள்ளை முதலியவர்களும் ஒதுங்கியிருப்பதோடு என் போன்றவர்கள் இந்த மாதிரி காங்கிரசுக்கு எதிர்ப் பிரசாரமும் ஏன் செய்கிறோம்? இவற்றை நன்றாய் யோசித்துப் பாருங்கள். பார்ப்பனர்கள் உங்களை ஏமாற்றவே காங்கிரஸ் என்ற ஆயுதத்தை உபயோகிக்கிறார்கள். "சம உரிமையும், வகுப்புச்சுதந்திரமும், சுயமரியாதையும் இல்லாத நாட்டிற்கு (காங்கிரஸ் போன்ற) அரசியல் இயக்கம் இருப்பது அறிவுடைமை ஆகாது. அதை ஒழிக்க வேண்டியது அறிவுடை யோர் கடமை" என்ற பொருள் பட 'காங்கிரஸ் காங்கிரஸ்' என்று கதறிக் கொண் டிருந்த ஸ்ரீமான் கலியாண சுந்தர முதலியாரே எழுதியிருக்கிறார். இனிமேல், தான் அரசியலில் (காங்கிர சில்) உழைப்பதில்லை என்றும், மக்கள் சமத்துவத்திற்குழைப்பதாகவும் விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறார். இதுவரை அரசியலுக்குழைத்ததற்காகத் தனது அறியாமையின் பொருட்டு என்னைப் போலவே விசனப்பட்டும் இருக்கிறார். ஆதலால் சகோதரர்களே! பார்ப்பனருக்காவது அவர்களால் நிறுத்தப்பட்ட நமது கோடரிக் காம்பு களுக்காவது வரும் தேர்தல்களில் நீங்கள் கண்டிப்பாய் ஓட்டுச் செய்யாதீர்கள். ஜஸ்டிஸ் கட்சியின் மூலம் நிர்மாணத் திட்டத்தை நடத்தவே நான் பாடுபடு கிறேன். பார்ப்பனரின் எதிர்ப்பும் சூழ்ச்சியும் அடக்கப்பட்டு விட்டால் கண்டிப் பாய் நிர்மாணத் திட்டத்தை ஜஸ்டிஸ் கட்சி மூலம் நிறைவேற்றலாம். நிர்மாணத் திட்டம்தான் முக்கியமாய் பார்ப்பனரல்லாதாருக்கு விடுதலை அழிப்பது. எவ்விதத்திலும் பார்ப்பனர்கள் நிர்மாணத் திட்டத்திற்கு அநுகூலமாயிருக்க மாட்டார்கள். அதோடு அதை பார்ப்பனரல்லாதார் நடத்த வும் பார்ப்பன ஆதிக்கம் இடம் கொடுக்க மாட்டாது. ஆதலால் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க ஜஸ்டிஸ் கட்சிக்கு உதவி செய்யுங்கள். அடுத்த தேர்தலில் நீங்கள் உங்கள் முன்னேற்றத்திற்கும், சுயமரியாதைக்கும் மாத்திரமே ஓட்டுக் கொடுங்கள். கண்டிப்பாய் காங்கிரஸ், சுயராஜ்யக் கட்சி என்கிற மாய வலை யில் சிக்கி ஏமாந்து போகாதீர்கள் என்று உங்களுக்கு எச்சரிக்கை செய் கிறேன்.

*குறிப்பு : 20.09.1926 இல் காஞ்சீபுரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 26.09.1926**



# கோயமுத்தூர் ஜில்லா சட்டசபைத் தேர்தல் நிலைமை

கோயமுத்தூர் ஜில்லாவில் சட்டசபைத் தேர்தலுக்கு ஏற்பட்ட 3 ஸ்தா னங்களுக்கு இதுவரை ஐந்து கனவான்கள் நிற்கிறார்கள். அவர்கள்:-

ஸ்ரீமான் சி.எஸ்.ரத்தினசபாபதி முதலியார், வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர், டி.ஏ. ராமலிங்கம் செட்டியார், சி.வி. வெங்கிட்டரமணய்யங்கார், பட்டக்காரர் வேணாவுடையாக் கவுண்டர் ஆகிய ஐந்து கனவான்கள். இவர்களுள் ஸ்ரீமான்கள் வெங்கிட்டரமணய்யங்கார், ராமலிங்கம் செட்டியார், வெள்ளியங்கிரிக் கவுண்டர் ஆகிய மூவரும் இதற்கு முன் இரண்டு தடவை 6 வருஷம் சட்டசபையிலிருந்து அப்பதவியையும் பெருமையையும் அனு பவித்து வந்தவர்கள். இவர்கள் இதுவரை என்ன செய்தார்கள் என்பதைப் பற்றி நமக்கு அதிகக் கவலையில்லை. ஏனெனில் சட்டசபையில் அரசியல் சம்பந்தமாய் ஒரு காரியமும் செய்ய முடியாது என்பது நமது தாழ்மையான தும் உறுதியானதுமான அபிப்பிராயம். ஆனால் அதன் மூலம் தங்கள் தங்கள் சமூகத்தின் சுயமரியாதைக்கு ஏதாவது உழைக்க அதை உபயோகப் படுத்திக் கொள்ளலாம் என்பதோடு அப்பதவி ஒரு கௌரவமும் அந்தஸ்து முள்ள ஸ்தானம் என்றே தான் சொல்ல வேண்டும். இந்த நிலையில் இந்த பழைய மெம்பர்கள் தங்கள் தங்கள் சமூக நன்மைக்கு ஏதாவது உழைத்து வந்திருக் கிறார்களா என்பதும் இக்கௌரவ அந்தஸ்தை அடைய இஜ் ஜில்லாவிலேயே இவர்களேதான் நிரந்தரமான யோக்கியதையுடைய வர்களா? அல்லது வேறு யாரும் இல்லையா? என்பதும் யோசிக்கத் தக்கன. ஸ்ரீமான் ஐயங்காரவர்கள் கூடுமானவரை தனது சமூகமான பார்ப்பனர் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும், ஆதிக்கத்திற்கும் மிகுதியும் உழைத்து வந்ததோடு, பார்ப்பனரல்லாத சமூக முன்னேற்றத்திற்கும், அக்கட்சி கொள்கைக்கும், அச் சமூகத்தார் உத்தியோகம் முதலியன பெறுவதற் கும் எவ்வளவு முட்டுக்கட்டை போட வேண்டுமோ அவ்வளவும் போட்டு வந்தவர். உதாரணமாக, தேவஸ்தான சட்ட விஷயத் திலும் வகுப்புவாரி பிரதி நிதித்துவ விஷயத்திலும் எதிரிடையாய் இருந்து வந்ததோடு பார்ப்பன ரல்லாத மந்திரிகளிடம் தனக்கு வேண்டிய காரியங்கள் செய்துகொண்டு, பல கமிட்டிகளிடம் ஜில்லா போர்டிலும் மெம்பர் ஸ்தானமும் பெற்றுக் கொண்டு அரசாங்க நிருவாகத்தில் பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தை ஒழித்துப் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்த எவ்வளவோ சூழ்ச்சியும்



RangaRakes tamilnavarasam.com

செய்து மந்திரிகள் பேரில் நம்பிக்கையில்லை என்கிற தீர்மானமும் கொண்டு வந்த வர். மற்ற இரு கனவான்களான ஸ்ரீமான்கள் செட்டியார், கவுண்டர் ஆகிய இருவர்களும் தேவஸ்தான சட்டத்திலும் வகுப்புவாரிப் பிரதிநிதித் துவத்திலும் பார்ப்பனரல்லாதாருக்கு அனுகூலமாயிருந்தாலும் ஸ்ரீமான் செட்டியாரவர்கள் உத்தியோக விஷயமாய் மந்திரிகளோடு அபிப்பிராய பேதப்பட்ட காரணத்தால் பார்ப்பனரல்லாதார் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சி யையே அழிக்க முயற்சி செய்ததோடு ஸ்ரீமான் கவுண்டர் அவர்களையும் வசப்படுத்திக் கொண்டு, பார்ப்பனரல்லாத மந்திரிகள் பேரில் நம்பிக்கை யில்லாத தீர்மானத்திற்கு உடந்தையாயிருந்து மந்திரிகளுக்கு விரோதமாய் ஓட்டு செய்து கொண்டு வந்தவர். ஸ்ரீமான் கவுண்டர் அவர்களோ தனக்கென சுயேச்சை யில்லாது அரசியலிலும் சமுதாயயியலிலும் ஸ்ரீமான் செட்டியார வர்களையே கண் மூடிக் கொண்டு பின்பற்றி வந்தவர் – வருகிறவர் என்றே சொல்லலாம். இதற்கு ருஜு என்னவென்றால் செட்டியாருடன் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து வெளி வந்ததுடன் அவரோடு நம்பிக்கையில்லாத தீர்மானத்திற்கு ஓட்டு கொடுத் ததும், ஸ்ரீமான் செட்டியாரோடு தஞ்சை தேசீய பிராமணரல்லாத மகாநாட்டுக் கொள்கைகளை ஒப்புக்கொண்டதும், சட்ட சபையை விட்டு வெளிவந்ததாக சுயராஜ்யக் கட்சியார் ஆடிய பொய் நாடகத்தில் செட்டியாருடன் தானும் கலந்து கொண்டதும், சுயராஜ்யக் கட்சியார் தலைமையில் சட்டசபைத் தேர்தலுக்கு ஸ்ரீமான் செட்டியாருடன் தானும் நின்றதும், சுயராஜ்யக் கட்சியார் நிபந்தனையில் செட்டியாரோடு தானும் கையெழுத்திட்டதுடன் சுயராஜ்யக் கட்சியிலிருந்து விலகி விட்டதாக ஸ்ரீமான் செட்டியாரவர்கள் எழுதிய ஒரு பரிகசிக்கத் தகுந்த அர்த்த மில்லாத கடிதத்தில் தானும் கையெழுத் திட்டதும் ஆகிய காரியங்களே போதிய சான்றாகும். அரசியல் விஷயங்களில் ஸ்ரீமான் கவுண்டரவர்கள் இப்படியிருந் தாலும் பொதுவாய் சமூக முன்னேற்றத்தில் குற்றம் சொல்வ தற்கு இடமில்லாம லேயே கூடியவரை நடந்து வந்திருக்கிறார்கள் என்பதை யாரும் ஒப்புக்கொள் வார்கள். கதர் விஷயத்தில் ஸ்ரீமான் செட்டியாரவர்களுக்கு சுத்த சுத்தமாய் நம்பிக்கை யில்லாவிட்டாலும் ஸ்ரீமான் ஐயங்காரவர்கள் வெளிக்குத் தெரிய எலக்ஷன் வரையில் கதர் கட்டுவதானாலும் ஸ்ரீமான் கவுண்டரவர்கள் கதரின் உண்மைத் தத்துவத்தை அறிந்து மனப்பூர்வமாய் அதை ஆதரித்து அனுப வத்திலும் நடத்தி வருகிறவர். மதுவிலக்கு விஷயத்தில் மற்றவர்களைப் போல பொய் நாடகம் நடிக்காமல் உண்மையிலேயே பாடுபடுவதுடன் தனது மரங்க ளைக் கள்ளுக்கு விடாமல் இருக்கிறார். ஸ்ரீமான் சி.எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்களோ பார்ப்பனரல்லாதார் கட்சியிலும் அவர்களது முன்னேற்றத்திலும் தீவிரமானதும் மாறுபாடில்லாததுமான மன உறுதி உடையவர்; சென்ற சட்ட சபைத் தேர்தலில் நின்று பலவிதமாய் ஓட்டுப் பிரிந்ததால் வெற்றியடையாமல் போனவர்; ஜில்லா போர்டு தலைவராய் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பவர்; இதுவரையில் அப் பதவியை அடையாத புதியவர்; சட்டசபையில் பெருத்த அரசியல் கொள்கையைப் பற்றியோ பெரிய





உத்தியோகங்களை அடைய வேண்டு மென்பதைப் பற்றியோ முறையே நம்பிக்கையும் ஆசையும் இல்லாதவர். பட்டக்காரர் ஸ்ரீமான் வேணாவுடை யாக் கவுண்டர் அவர்களைப் பற்றியோவென்றால் இத்தொகுதியின் ஓட்டர் களின் பெரும் பகுதியான வகுப்பைச் சேர்ந்தவர்; இதுவரையிலும் அப் பதவியை அடையா தவர்; பெரிய சமூகமாகிய நம் நாட்டு வேளாள சமூகத் தலைவர்; சுயராஜ்யக் கட்சியின் பேரால் நிற்பதாக தெரியப்படுத்தப்பட்டவர்; ஸ்ரீமான் ஐயங்காரு டன் சேர்ந்து வேலை செய்பவர்; ஐயங்காருக்கு முதல் ஓட்டு போட்டு பிறகு தனக்கு ஓட்டுப் போடும்படி கேட்பவர்; ஸ்ரீமான் ஐயங்கார் தன்னை உபயோகப்படுத்திக் கொள்வதையும் அனுமதித்துக் கொண்டிருப்பவர். சட்டசபைக்கு வர வேண்டும் என்கிற இஷ்டமுடையவ ரானாலும் மற்ற நான்கு கனவான் களைப்போல் அவ்வளவு ஆசையும் ஆத்திரமும் கவலையுமுள்ளவரல்ல. பொது ஜனங்கள் நம்மை தேர்ந்தெடுத் தனுப்பினால் சந்தோஷம், இல்லாவிட்டால் ஓட்டர்களின் இஷ்டம் என்று சொல்லுபவரே அல்லாமல் பணம் செலவு செய்தோ, தந்திரங்கள் செய்தோ, கட்சி உண்டாக்கியோ, ஆளைத் தூக்கி ஆள்மேல் போட்டோ, வேறு ஆட் களை உபயோகித்து கட்சி, பிரதி கட்சிகளை உபயோகப்படுத்திக் கொண்டோ சட்டசபைக் குப் போக வேண்டும் என்கிற தீவிர கவலையுடையவர் அல்ல. இப்படியெல்லாம் இருந்தாலும் இந்த 5 கனவான்கள் நிற்பதில் யாராவது மூன்று பேருக்குத்தான் சட்டசபை ஸ்தானம் கிடைக்கக்கூடும். 2 கனவான் களுக்கு தோல்வி நிச்சயம். இப்போதிருக்கும் நிலையில் அது யாராயிருக் கலாம் என்று ஞான திருஷ்டியில் பார்ப்போமானால் நமது நாட்டின் உண்மை பிரதிநிதிகளான குடியானவர் களுக்குத் தான் தோல்வி ஏற்படக்கூடும் என்று சொல்லுவதற்கு நாம் மிகுதியும் வருத்தப்படுவதோடு, இதற்காக அவ்விரு கனவான்களையும் நம்மை மன்னிக்கும்படி வேண்டுகிறோம். ஏன் இப்படிச் சொல்லுகிறோம் என்றால் இந்த ஜில்லா ஓட்டர் தொகுதிப்படி ஓட்டர்கள் மொத்தம் 70000 பேரா யிருந்தாலும் நாற்பத்தி ஐயாயிரம் பேருக்கு மேலாக வேளாளக் கவுண்டர் களாகவே இருந்தும் அவர்களுக்குள் சமூகக் கவலை என்பதே ஒரு சிறிதும் இல்லை. ஒற்றுமையும் கட்டுப்பாடும் இல்லை. பெரிய பெரிய மிராசுதாரர்களான கவுண்டர்களுக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் பொறாமையும் அசூயையும் இருப்பதோடு தங்களுக்கு வேண்டாதபோது சமூகக் கட்டுப் பாடாவது அபிமானமாவது மதிக்கப்படாமலும் தங்களுக்கு வேண்டிய போது சமூகப் பேரையும் கட்டுப்பாட்டையும் சொல்லிக் கொண்டு வருவதுமாய் இருப்பதால் அச்சமூகத்தில் இதுவரை உண்மையான கட்டுப் பாடு வளர்வ தற்கு இடம் இல்லாமல் போய்விட்டது. நாம் விசாரித்து அறிந்த வரையில் வேளாளக் கவுண்டர் கனவான்களே இப்போது நிற்கிற கனவான் களிடம் கொஞ்சமாவது பற்றுகள் இருப்பதாக காட்டிக் கொள்வதே இல்லை. கொஞ்ச நாளைக்கு முன் ஒரு உள்பாக கிராமத்திற்கு போய் இருந்தபோது அங்கேயே ஒரு யோக்கியமான வேளாளக் கனவானைக் கண்டு பேசிக் கொண்டு இருக்கையில் வேடிக்கையாக வரப்போகும் சட்டசபைத் தேர்தலில்

RangaRakes tamilnavarasam.com

தாங்கள் யாருக்கு ஓட்டுச் செய்யப் போகிறீர்கள் என்று கேட்டதில் உடனே மறுமொழியாக ஒரு ஓட்டு ஐயங்காருக்குப் போடுவோம். பாக்கி உள்ள இரண்டு ஓட்டுகள் நீங்கள் சொல்லுகிறபடி போடுவோம் என்றார்கள். மற்ற அந்த இரண்டு ஓட்டுக்கும் உங்களுக்கு கொஞ்சமாவது குறிப்பு இல்லையா என்று நாம் கேட்டதற்கு அவர் ஒன்று முதலியாருக்கு போடலாம் என்று இருக்கிறோம். மீதியுள்ளதை செட்டியாருக்கு போட்டால் போகுது என்று அசாா்சமாய் சொன்னார்கள். ஸ்ரீமான் ஐயங்காரைப் பற்றி மாத்திரம் உங்க ளுக்கு என்ன அவ்வளவு கவலை என்று கேட்டோம். அதற்கு உடனே பதிலாக ஐயங்கார் இதோடு இரண்டு மூன்று முறை நம்மை பார்த்தார். "உலக சேவை" என்கிற பத்திரிகை ஒன்று அனுப்பி வருகிறார். இம்மாதிரி நம்மைத் தேடி வந்து கேழ்ப்பவர்களை விட்டு விட்டு பின்னை யாருக்கு ஓட்டு செய்வது என்று கேட்டார். ஸ்ரீமான்கள் பட்டக்காரரும், கவுண்டரும் உங்கள் இனத்தாரல் லவா? அவர்கள் உங்களை நம்பித்தானே நின்று இருக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் பற்றியே நினைக்காமல் வேறு யார் யார் பெயரையோ சொல்லு கிறீர்களே என்று நாம் கேழ்க்க, அவர்கள் நம்ம இனத்தார் அல்ல. ஒருவர் பட்டக்காரர் ஜாதியைச் சேர்ந்தவர் மற்றவர் கவுண்டர் ஜாதியைச் சேர்ந்தவர். நாங்கள் காட்டுக் குடியானவர்கள் ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தனக்கு இவர்கள் பெயரில் அருவருப்பு இருப்பது போல் சொன்னார். ஏனையா இப்படிச் சொல்லுகிறீர்கள்; அவர்களும் வேளாளர் கள்தானே என்று கேழ்க்க, ஓட்டுக் கேட்கும் போது மாத்திரம் எல்லாம் ஒரு ஜாதி என்று சொன்னால் போதுமா? பட்டக்காரர்கள் என்பவர்கள் நாங்கள் தொட்ட சொம்பை கவிழ்த்து தான் வைக்க வேண்டும். அதன் பேரில் தண்ணீர் தெளித்துதான் எடுப்பார்கள். அவர்கள் சாப்பிடுவதை நாங்கள் பார்க்கக் கூடாது. எங்கள் வீட்டில் அவர்கள் ஜலபானம் கூட செய்ய மாட்டார்கள். நாங்கள் அவர்களை பட்டக்காரர் எசமாங்கோ என்று கூப்பிட மாத்திரம் ஆசைப்படுகிறார்களே யொழிய எங்களுடைய சுக துக்கங்களில் அவர் களுக்கு கொஞ்சமும் கவலை இல்லை. எங்களுக்காக அவர்கள் ஒரு வேலையும் செய்வதில்லை என்று சொன்னார். பிறகுகவுண்டர் அவர்களைப் பற்றி ஏன் அலக்ஷியமாகப் பேசுகிறீர்கள் என்று கேழ்க்க, அவரும் அப்படித் தான் எங்களிடம் வந்து ஓட்டு கேழ்ப்பதையே அவமானமாகக் கருதுபவர்; தங்களை ஒரு தனி சமூகம் என்று நினைத்துக் கொண்டு இருப்பவர்; சர்க்காரில் பெரிய உத்தியோகத்தில் இருக்கிற வீட்டார் போல் அதிகாரத் தோரணையுடன் நடந்து கொள்ளுகிறவர்கள் அல்லாமலும் வேளாளர் பெயரைச் சொல்லிக் கொண்டு சகல கவுரவங்களும் தங்கள் குடும்பத்திற்கே வேண்டும் என்று சொல்லுகிறவர்கள். உதாரணமாக, பெரிய கவுண்டர் சட்டசபை மெம்பர், அதற்கிளையவர் தாலூக்காபோர்டு பிரசி டெண்ட், அதற்கிளையவர் ஜில்லா போர்டு வைஸ் பிரசிடெண்ட் (இது நிஜமல்ல, அவர்கள் சொந்தக்காரர்கள் என்று சொன்னோம்) இவ்வளவும் இருக்க ஜில்லா போர்டு பிரசிடெண்டும் தன் தம்பிக்கே வேண்டுமாம். இரண்டு தடவை ஆறு



வருஷம் சட்டசபை மெம்பராய் இருந்துவிட்டு மறுபடியும் தானே சட்டசபைக்குப் போக வேண்டுமாம். என்ன ஆசை? மற்ற வெள்ளாளர் யாராவது இந்த உத்தியோகங்கள் பார்க்கக் கூடாதா? இவர்களேதானா வேளாளர் கூட்டத்திலேயே யோக்கியதை உள்ளவர்கள் என்று சொன்னார். நான் இதுகளைக் கேட்டதும் மிகுதியும் வருத்தமுற்று இம்மாதிரி வகுப்புகள் எப்படி முன்னுக்கு வரும் என்றும் இந்த ஒரு வகுப்பாரை நம்பித்தானே சர்க்கார் முதல் எல்லா ஜனங்களும் பிழைக்கிறார்கள். இப்படி இருக்க இவர்களுக்கும் இப்படி அபிப்பி ராயபேதமிருக்கிறதே என்று வருத்தப்பட்டு மற்ற மூவர்கள் எந்த விதத்தில் இருவர்களைவிட உயர்ந்தவர்கள் என்று கேழ்க்க, மற்றவர்களாவது இரண்டு கோணை எழுத்து (இங்கிலீஷ்) படித்திருக் கிறார்கள். ஏதோ ஒரு சங்கதிப் போல் நேராகச் சொல்லிக் கொள்ளலாம். சட்டசபைக்கு நிற்கும் பட்டக்காரர் வீட்டுக்கும் கவுண்டர் வீட்டுக்கும் போனால் பந்தக் காலைக் கட்டிக் கொண்டுதானே நிற்க வேண்டும் என்று சொன்னார்கள். இதைக் கேட்டவுடன் இங்கிலீஷ் படிப்புக்கும் குடியான வர்கள் நன்மைக்கும் ஒரு சம்மந்தமும் இல்லை என்றும் இம்மாதிரி நீங்கள் நினைப்பதே உங்கள் சமூகத்திற்கே கெடுதி என்றே சொன்னதோடு குடியான கனவான்களையே தெரிந்தெடுக்க வேண்டிய அவசியத்தையும் அவர்கள் எந்த விதத்திலும் மற்ற மூவர் களுக்கு இளைத்தவர்கள் அல்லவென்றும் தக்கப்படி சொல்லி கூடிய வரை அவரின் மனதைத் திருப்பிவிட்டு நாம் போன காரியத்தையும் பார்த்து விட்டுத் திரும்பி வந்து விட்டோம். இந்த ஜில்லா சட்டசபைக்குக் கண்டிப்பாய் பார்ப்பனரல்லாதாராகவும் அதுவும் மூன்று பேரும் குடியானவர்களாகவுமே போக வேண்டுமென்பதே நமது உண்மை யான ஆசை. அந்த நிலைமை நமக்கு வருகிறவரை சட்டசபைகள் என்பது நமக்கு ஆபத்தான கெட்ட சபைகள் என்றே சொல்லுவோம். ஒரு தேசத்தின் நன்மை அந்த தேசத்துக் குடியானவர்கள் நன்மையைத்தான் பிரதானமாகக் கொண்டதே அல்லாமல் வக்கீல்களுக்கும் லேவாதேவிக்காரருக்கும் சம்மந்தமே இல்லை. அல்லாமலும் நாட்டின் ஆதிக்கம் பார்ப்பனர் கையில் வருவது அந்த நாட்டிற்கே கேடாகும். உதாரணமாக, சுமார் 2000 வருஷங் களுக்கு முன்னாலேயே ஒளவை பிராட்டியார் மந்திரித் தன்மை யாரிடம் இருக்க வேண்டும் என்று ஒரு அரசன் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் **"நுலாலே நாடு கெடும், நுந்தமரால் வெஞ்சமராம், கோ லால் குடிய னைத்தும் கொள்ளைப்போம் - நாலாவான் மந்திரியுமாவான் வழிக்குத் துணையாவான்"** என்று ஒரு பாட்டுப் பாடி இருக்கிறார். அது ஒளவையார் புராணத்திலும் தனிப்பாடல் திரட்டிலும் இருக்கிறது. அதன் பொருள் என்னவென்றால் நூலை அணிந்தவர்களாகிய பார்ப்பனர் கையில் அதிகாரம் இருந்தால் அந்த நாடு கெட்டுப்போகும் என்றும் அதற்கடுத்த அரசர்களிடம் அதிகாரம் இருந்தால் தேசத்தில் கலகம் நடைபெறும் என்றும் தராசு கோலுடைய வணிகர்கள் இடங்களில் அதிகாரம் வந்தால் செல்வத்தைக் கொள்ளையடித்து சேர்ப்பதிலேயே கவலையாயிருப்பார்கள் என்றும்



RangaRakes tamilnavarasam.com

நாலாவான் என்று சொல்லப்பட்ட வேளாளர்கள்தான் மந்திரி பதவி முதல் கொண்டு நம்பிக்கைக்கும் உரியவர்கள் என்றும் பொருள் கொண்ட பாட்டை பாடி இருக்கிறார். அல்லாமலும் 45000 வேளாள ஓட்டர்கள் தொகுதி கொண்ட வகுப்பார் அந்தத் தொகுதிக்கு தங்கள் வகுப்பிலிருந்து ஒரு பிரதிநிதி அனுப்ப முடியாமல் 5000 ஓட்டர் தொகுதி கொண்ட ஒரு பார்ப்பனர் 100 - க்கு 97 பேர் கொண்ட ஜனத்தொகுதிக்கு பாக்கி 65 ஆயிரம் ஓட்டர்களை ஏமாற்றி பிரதிநிதியாய் வரச் செய்வதென்றால் இதைவிட அந்தத் தொகுதிக் கும் அந்த நாட்டுக்கும் மானக்கேடான காரியம் வேறு எதுவும் இல்லை. சட்டசபை ஸ்தானத்தைப் பொருத்தவரை அந்தப் பதவியை அனுபவிப் பதற்கோ தங்கள் சமூகத்தின் முன்னேற்றத்தை கவனிப்பதற்கோ மற்றவர் களைவிட இவ்விரு கவுண்டர் கனவான்களும் ஒரு விதத்திலும் தாழ்ந்த வர்கள் அல்ல என்று நாம் பந்தயம் கூறுவோம். கவுண்டர்கள் இருவரும் இப்பொழுதும் ஒற்றுமையோடு வேலை செய்யப் பிரயத்தனப்பட்டால் கிராமக் குடியானவர்களின் தப்பபிப்பிராயத்தை மாற்றி வெற்றி பெறக் கூடும் என்றே நினைக்கிறோம். கோவை ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் நடக்கும் வரை கவுண்டர், செட்டியார், முதலியார் என்று சொல்லிக் கொள்ளும் வேளாளர் களான மூன்று பார்ப்பனரல்லாதார்களே இவ்வருஷம் வெற்றிப் பெறக் கூடிய நிலைமை நமது ஜில்லாவில் ஏற்பட்டிருந்தது. இந்த நிலைமை உண்டாக்கு வதற்கு நாமும் எவ்வளவோ பங்கெடுத்துக் கொண்டோம். அப்படி இருக்க இப்போது எப்படியோ அந்த நிலைமை மாறிவிட்டது. இப்போதும் தக்க முயற்சி எடுத்துக் கொண்டால் இரு கவுண்டர் கனவான்களில் யாராவது ஒருவராவது வெற்றி பெறச் சௌகரியமிருக்கிறதென்றே சொல்லுவோம். அதாவது இரண்டு கனவான்களில் யாராவது ஒருவர் மற்ற கவுண்டர் கனவானுக்காகப் பின்வாங்கிக் கொள்ளவேண்டும். இதில் பட்டக்காரக் கவுண்டர் அவர்கள் வாங்கிக் கொள்வதே அதிக அனுகூலம். நாம் இப்படிச் சொல்வதால், ஸ்ரீமான் பட்டக்காரர் வேணாவுடையக் கவுண்டர் சட்ட சபைக்கு வரக்கூடாதென்றா வது அவரைவிட ஸ்ரீமான் வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் உயர்ந்தவர்கள் என்றாவது நாம் சொல்வதாக யாரும் நினைக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறோம். பட்டக்காரக் கவுண்டர் அவர்கள் அதிக காலதாமதமான பிறகு வந்திருக்கிறார்கள் என்பதும் தனக்குள்ளாகவே மற்றவர்களைப் போல் அவ்வளவு தீவிரமான பிரசாரம் செய்வதற்கு யோசித் துக் கொண்டிருக்கிறார் என்றே கேள்விப்படுகிறோம். மற்றபடி சட்டசபைப் பெருமையையும் பதவியையும் அடைய ஸ்ரீமான் கவுண்டர் அவர்களைவிட பட்டக்காரர் அவர்கள் உரிமை உள்ளவர்கள் என்று தான் சொல்லுகிறோம். பாக்கி இருக்கும் பார்ப்பனரல்லாத கனவான்கள் மூவரும் ஸ்ரீமான் பழையக் கோட்டை பட்டக்காரர் அவர்களும் மற்றும் பல பிரபலஸ்தர்களும் ஒரு அறிக்கையில் கையொப்பமிட வேண்டும். எலக்ஷனுக்கு என்று ஒரு பிரசாரக் கமிட்டி ஏற்பாடு செய்து அதன் மூலம் ஒற்றுமை யாய் தந்திர மந்திரமில்லாமல் வெளிப்படையாய் பிரசாரம் செய்ய வேண்டும். இம்மாதிரி ஒரு ஏற்பாடும்



இல்லாமல் யார் பின்வாங்கிக் கொண்டாலும் பிரயோஜனப் படாது என்றே சொல்லுவோம். இப்படிக்கு செய்ய முடியா விட்டால் ஸ்ரீமான் வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்களாவது தயவு செய்து கொஞ்சம் கவலை வைத்துத்தான் தனியாய் ஓட்டர்களை எல்லாம் ஒரு தடவை நேரில் போய்ப் பார்க்க முயற்சி செய்ய வேண்டும். இப்போது ஸ்ரீமான் வெங்கிட்ட ரமணய்யங்கார் அவர்களுக்கு இருக்கும் சட்டசபை யோக்கியதை கள் எல்லாம் ஒவ்வொரு கிராமத்தையும் இரண்டு தரம், மூன்று தரம் போய்ப் பார்த்துதான் முக்கியமாய் ஏற்பட்டன. அவர் பணம் செலவு செய்கிறார் என்பதைப் பற்றிக்கூட அவ்வளவு நாம் கவலைப்பட வேண்டியதில்லை யாதலால் ஸ்ரீமான் வி.சி.வி. கவுண்டர் அவர்களும் தயவுசெய்து எல்லா கிராமத்தையும் ஒரு தடவையாவது பார்த்து வரவேண்டும் என்று மறுபடியும் கேட்டுக் கொள்கிறோம். அனாவசியமாக சில யோக்கியமான குடியானவர்க ளுக்குள் இருந்து வரும் தப்பபிப்பிராயத்தை மாற்ற பிரயத்தனப்பட வேண்டி யது அதைவிட முக்கியமானதாகும். நமது ஜில்லாவுக்கு சுயமரியா தையும், பகுத்தறிவும் இருப்பது மெய்ப்பிக்க வேண்டுமானால் ஸ்ரீமான் வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் உள்பட மூன்று பார்ப்பனரல்லாத கனவான் கேள வெற்றி பெற வேண்டியது அவசியமாகும். இச்ஜில்லாவின் ஓட்டர் களுக்கு ஓட்டின் கடமையை எடுத்துச் சொல்லி அவர்களை உண்மையான ஓட்டருக்கு தகுதி உடையவர்களாக்கி வைத்திருக்க வேண்டியது ஸ்ரீமான் கவுண்டரின் கடமையாய் இருக்கிறது. அக் கடமையை அவர் சரியாய் செய்யாத குற்றத்திற்காக கவுண்டர் தோல்வி அடைந்தால் அது ஆச்சரியமா காது. ஆனால் அச் சமூகத்திற்கே மானக்கேடாகும். ஆதலால் இச்ஜில்லா பார்ப்பனரல்லாத அபேக்ஷகர்கள் தங்கள் தங்கள் சுயநலத்தையும், ஒருவரை ஒருவர் மோசஞ் செய்ய நினைத்திருப்பதையும், ஒருவர் பேரில் ஒருவர் புறங்கூறிக் கொண்டு திரிவதையும், ஒருவரை ஒருவர் நம்பாமல் மோசம் போவதையும் விட்டு விட்டு உண்மையாய் ஒன்றுபட்டு பிரசாரம் செய்தால் வெற்றி பெறலாம் என்றும் இப்பொழுதும் அதிக காலதாமதமாகி விடவில்லை என்றும் விண்ணப்பம் செய்து கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 26.09.1926**



RangaRakes

tamilnavarasam.com

# தமிழ்நாட்டுத் தலைவர்கள்

காஞ்சீபுரம் மஹாநாட்டில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு நல்ல பிள்ளையாவதற்கு தமிழ்நாட்டுத் தலைவர்கள் என்று சொல்லப்படும் ஸ்ரீமான்கள் திரு.வி.கலியாணசுந்தர முதலியார் அவர்களும் டாக்டர் வரத ராஜுலு நாயுடு அவர்களும் போட்டி போட்டுக் கொண்டு இருந்தார்கள் என்று நாம் அப்போது எழுதியிருந்தோம். பிறகு எப்படியோ நாட்டின் நல்ல காலத்தின் பலனாய் இவ்விருவர்களும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரை பிரிந்த தல்லாமல், அவர் தலைமை வகிக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலும் தாங்கள் இருப்பது சரியல்ல என்று கருதி ஏதோ சாக்கைச் சொல்லிக் கொண்டு வெளியே வந்து விட்டார்கள். இவ்விரு கனவான்களும் தைரியமாய் வெளி வந்த காரணம் மறுபடியும் தங்களில் யாரும் ஸ்ரீமான் அய்யங்காருடன் போய் சேர்ந்து கொண்டு ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்க நினைக்க மாட்டார்கள் என்கிற பரஸ்பர நம்பிக்கைதான் அய்யங்காரின் "பூளவாக் கையும்", "அரசியல் யோக்கியதையும்" தைரியமாய் வெளியிட இடம் கொடுத்தது என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. அதற்கு உதாரணம், ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தனது பத்திரிகையில் "உரிமையில்லா நாட்டில் அரசியல் கட்சிகள் வளர்ப்பது நாட்டைக் குழியில் வீழ்த்துவதாக முடியும்" என்றும் "தற்கால கல்வியுடையோர் என்று சொல்லப்படுவோர் சாதி வேற்றுமைகளைக் கிளப்பி விடுவதில் கண்ணுங் கருத்துமாயிருக் கிறார்கள்" என்றும் எழுதியிருப்பதே போதுமானது . இதன் பொருள் என்ன? நமது நாட்டில் அரசியல் கட்சிகள் என்பது காங்கிரஸ் முதலிய கட்சி கள்தான். இதுகளை வளர்ப்பது நாட்டை படுகுழியில் வீழ்த்துமென்றால் காங்கிரசை வளர விட்டால் நாடு நாசமடையும் என்பதுதானே பொருள். ஆதலால் காங்கிரசை ஒழிக்க வேண்டியது ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் போன்றவர் களின் கடமை என்பதில் சந்தேகமில்லை. தற்காலக் கல்வி யுடையோர் ஜாதி வேற்றுமையை வளர்த்துகிறார்கள் என்றால் தற்கால கல்வி என்பது ஆங்கிலம் என்பதையும் அதைப் படித்தவர்கள் என்பது நமது நாட்டில் பெரும் பாலும் பார்ப்பனர்கள்தான் என்பதையும் ஒருவரும் ஆக்ஷேபிக்க மாட்டார் கள். இன்னமும் எவ்வளவோ விளக்கமாய் தற்கால அரசியல் நிலைமையைப் பற்றியும் பார்ப்பனர் சூழ்ச்சியைப் பற்றியும் எழுதியும் பேசியும் வந்த ஸ்ரீமான் முதலியார் அவர்களுக்கு இப்போது ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் ஸ்ரீமான்கள் ராமசாமி நாயக்கரையும் ஆரியா வையும் ஜெயிலில் வைக்க வேண்டுமென்று



சொன்ன பிறகும் ஸ்ரீமான்கள் நாயக்கர், நாயுடு,சக்கரை, ஆரியா முதலிய வர்கள் காங்கிரசை விட்டுப் போய் விட்டதினால் காங்கிரஸ் பரிசுத்தமாய்ப் போய் விட்டது என்று சொன்ன பிறகும் நாட்டைக் கெடுக்கும் அரசியலும் படித்த வகுப்பாராகிய அய்யங் காரும் முறையே உத்தமமானதும் பரிசுத்த மானது மாகப் போய் இரட்டை ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்ற பழைய பல்லவியும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வகுப்பு வேற்றுமையை வளர்க் கிறது என்கிற பல்லவியும் பாட ஆரம்பித்து விட்டார். இதோடு நில்லாமல் "அய்யங்காரின் அட்ட காசம்" என்கிற தலைப்பின் கீழ் "தமிழ்நாடு" அய்யங்காரின் நடத்தையைக் கண்டித்த பின்பு நமது ஸ்ரீமான் முதலியார் அவர்கள் அய்யங்காருடன் கொஞ்சிக் குலாவ வேண்டிய அவசியமும், அய்யங்காருக்கு வரப்போகும் தேர்தலில் தொழிலாளர்கள் ஓட்டு வாங்கிக் கொடுக்க வேண்டிய அவசிய மும் வந்து விட்டது என்றால் இதைப்பற்றி நாம் என்ன சொல்வது. ஸ்ரீமான் அய்யங்காருக்கு நமது தொழிலாளரை அறிமுகம் செய்து வைத்து அய்யங்கார் தொழிலாளருக்கு பாடுபடுவார் என்று சொல்லி தொழிலாளரின் ஓட்டுகளை அய்யங்காருக்கு வாங்கிக் கொடுத்து ஸ்ரீமான் சக்கரை செட்டியாரை தோற்கடிக்க வைப்பதில் ஸ்ரீமான் முதலியாருக்கு வரும் லாபமென்ன? என்றுதான் நாம் கேட்கிறோம். இதன் ரகசியம் நமக்கு விளங்க வில்லை. அதுவும் அல்லாமல் தன்னுடைய நண்பர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஸ்ரீமான் நாயுடுகார் அய்யங்காருடன் யுத்தம் ஆரம்பித்திருக் கும் போதும் நாயக்கரை ஜெயிலில் வைக்க அய்யங்கார் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கும் போதும் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் அய்யங்கார் பின்னால் திரிவதென்றால் எவ்வளவு பொறுமை யுள்ளவனுக்கும் மனம் பதருமா இல்லையா? இது வெண்ணெய் திரண்டு வரும்போது சட்டியை உடைப்பது போலில்லையா? இதை எழுதும் போது நமக்கு மிகுதியும் சங்கடமாகத்தான் இருந்தது. என்ன செய்யலாம்? ஸ்ரீமான் முதலியாரது இம்மாதிரி எழுத்தும் பேச்சும் செய்கையும் நமது பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் வென்று விட்டதற்கு ஸ்ரீமான் முதலியார் அவர்களை நம்மை மன்னிக்கும்படி வேண்டுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 26.09.1926**



RangaRakes tamilnavarasam.com

## இந்துமத பரிபாலன மசோதாவும் பார்ப்பனர்கள் சூழ்ச்சியும்
## பனகால் ராஜாவுக்கே ஜே!

தென்னாட்டுப் பார்ப்பனர்களின் எவ்வளவோ சூழ்ச்சிக்கும் தப்பி இந்துமத பரிபாலன மசோதா என்று சொல்லப்படும் தேவஸ்தான மசோதா சட்டசபையில் சட்டமாக நிறைவேறி விட்டது. தேவஸ்தான சட்டம் சட்ட சபைக்கு வந்தவுடன் பலர் அதை முட்டித் தள்ளிவிட என்ன என்னமோ சூழ்ச்சிகள் செய்து பார்த்தும் சுமார் 500 திருத்தப் பிரேரேபணைகளைக் கொண்டு வந்து தங்களால் ஆனவரையில் அதை ஒழிக்கப் பார்த்தார்கள். கடைசியாகப் பொது ஜனங்களின் அதிகப் படியான பிரதிநிதிகளும் சர்க்காரும் இவைகளுக்குக் கொஞ்சமும் மனந் தளராமல் ஒரே உறுதியாய் இருந்து சட்டத்தை நிறைவேற்றி விட்டார்கள். திருத்தப் பிரேரேபணைகளின் யோக்கியதைகளைச் சரியாய் கவனித்து வந்தவர்களுக்கும் சட்ட சம்மந்த மாய் கிளப்பப் பட்ட ஆக்ஷேபணைகளை சரியாய் கவனித்து வந்தவர்களுக் கும், இச்சட்டத்தை ஆக்ஷேபித்தவர்கள் கருத்து என்ன என்பது விளங்கா மல் போகாது. இதில் பொதுமக்கள் கவனத்தைக் கவரத்தக்க ஒரு திருத்தப் பிரேரே பணையைப் பற்றி இதில் பிரஸ்தாபிப்போம். அதாவது எல்லா கோவில்களிலும் பஞ்சமர்கள் என்றும் ஒடுக்கப்பட்டவர்கள் என்றும் சொல்லப்படும் வகுப்பாரும் கோவில்களுக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்ய உரிமை இருக்கத்தக்க வண்ணம் ஒரு திருத்தப் பிரேரேபணையைக் கொண்டு வந்தார்கள். இந்த திருத்தப் பிரேரேபணை யானது தாழ்ந்த வகுப்பார் என்பவர்கள் தெருவில்கூட நடக்கக்கூடாது என்று வாதாடும் கூட்டத்தாராகிய பார்ப்பனர்களின் சூழ்ச்சியாலேயே இரண்டு வித உத்தேசத் துடன் கொண்டு வரப்பட்டது. அதாவது, அதை ஒப்புக் கொண்டாலும் கஷ்டம், ஒப்புக் கொள்ளா விட்டாலும் கஷ்டம் என்கிற “இரட்டை வெட்டில்” ஜஸ்டிஸ் கக்ஷியாரைக் கொண்டுவந்து சங்கட நிலையில் நிறுத்தச் செய்த குயுக்தியான தந்திரமாகும். எப்படியெனில் அதை ஒப்புக் கொண் டால் அச்சட்டத்தையே நிறைவேறாமல் செய்ய நமது பார்ப்பனர்களுக்கு சவுகரியமேற்பட்டுவிடும். முதலாவது, இச்சட்டத்தை சட்டசபைக்கு மறுபடியும் கொண்டு வரவேண்டி யிருந்த அவசியமென்னவென்றால் அதில் சில சட்ட சம்பந்தமான குறைகள் இருந்து விட்டதுதான். அக் குற்றங்களை நிவர்த்தி செய்து அமுலுக்குக் கொண்டு வருவதற்காக மறுபடியும் சில சிறு திருத்தங்களோடு சட்டசபை மூலமாய் நிறைவேற்றி இந்தியா கவர்ன்மெண்ட்டுக்கு அனுப்ப வேண்டியதாயிற்று. இச்சட்டத்தை மறுபடியும் சட்டசபைக்கு கொண்டுவர வைசிராய் பிரவுவிடம் பனகால் அரசர் அனுமதி கேட்கச் சென்ற இரண்டு மாதத்திற்கு முன் டில்லி போயிருந்தபோது நமது பார்ப்பனர்கள் இங்கிருந்து சில மடாதிபதிகள் பேரால் பல தந்திகளும் மகஜர்களும் அனுப்பி சட்டத்தில் அதிக திருத்தம் செய்யப் போகிறார்கள் என்றும், இதனால் மதம் கெட்டுப் போய்விடும் என்றும், பெரிய கலகம் ஏற்படும் என்றும் மிரட்டினார் கள். இதை நம்பி வைசிராய் பிரபு பனகால் அரசருக்கு சில குறிப்பிட்ட நிபந்தனையின் மேல் மறுபடியும் திருத்த மசோதா கொண்டு வர அனுமதி கொடுத்தார். இது நமது பார்ப்பனர்களுக்கு நன்றாய் தெரியும். ஆதலால் சட்டத்தில் ஏதாவது பிரமாதமான திருத்தங்கள் செய்து அதை மந்திரி ஒப்புக் கொண்டால் இதை ஆதாரமாய் வைத்துக் கொண்டு வைசிராய் பிரபுவிடம் போய் பழக்கத்திற்கு விரோதம், வழக்கத்திற்கு விரோதம், சாஸ்திரத்திற்கு விரோதம், வேதத்திற்கு விரோதம், மதத்திற்கு விரோதமென்று மாரடித்து அவர் அனுமதி கிடைக்க விடாமல் செய்து அதை செல்லுபடியற்ற தாக்கி சட்டத்தையே ஒழித்து விடலாம் என்கிற கெட்ட எண்ணத்தின் பேரிலும், ஒரு சமயம் இதை மந்திரி ஒப்புக் கொள்ளாவிட்டால் தாழ்ந்த வகுப்பார் என்கிறவர்களைத் தூக்கி விட்டு அவர்களிடம் போய் நாங்கள் உங்களை கோவிலுக்குள் விட அனு மதிக்கும் படியான சட்டம் செய்யத் திருத்தம் கொண்டு வந்தோம்; அதை உங்கள் ஜஸ்டிஸ் கக்ஷியார்தானே தோற்கடித்து விட்டார்கள்; இதிலிருந்து தாழ்ந்த வகுப்பாருக்கு நாங்கள் உதவியாயிருக்கிறோமா? ஜஸ்டிஸ் கக்ஷி யார் உதவியாயிருக்கிறார்களா? என்பதை தெரிந்து கொள்ளுங்களென்று சொல்லி, ஜஸ்டிஸ் கக்ஷியார் பேரில் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குத் துவே ஷத்தை உண்டாக்கி விடலாம் என்கிற கெட்ட எண்ணத்தின் பேரிலும் இத் திருத்தத்தை கொண்டு வந்தார்கள். இதை லக்ஷியம் செய்யாமல் மந்திரி கட்சியார் தைரியமாய் எதிர்த்துத் தோற்கடிக்கச் செய்தது அவர்களின் புத்தி சாலித் தனத்தைக் காட்டுகிறது. ஏனெனில் தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் நிஷ்டூரம் வருமே என்பதாகப் பயந்து திருத்தத்தை ஒப்புக் கொண்டிருப் பார்களே யானால் கண்டிப்பாய் வைசிராய் பிரபு சட்டத்தையே நிராகரித் திருப்பார். அப்படி நிராகரிக்கப்பட்டு அமுலுக்கு வரமுடியாத சட்டத்தில் எந்த பிரேரே பணையை சேர்த்தால் தான் என்ன பிரயோஜனம்? ஆதலால் ஏதாவது ஒரு சட்டத்தை நிறைவேற்றி அதற்கு எல்லா அனுமதியும் பெற்று அது முதலில் அமுலுக்கு வரும்படி செய்து கொண்டால் பிறகு தனித் தனியாய் இவ்விதத் திருத்தம் கொண்டு வருவதில் யாருக்கு ஆக்ஷேபணை இருக்கிறது என்று பார்த்தால் அப்பொழுது தான் இந்தப் பார்ப்பனரின் தாராள குணமும் அவர்கள் சிஷ்யர்களின் தாராள குணமும் நன்றாய்த் தெரியும். இதைப் பற்றி நாம் ஸ்ரீமான் ஆர்.வீரய்யன் அவர்களைக் கண்டு பேசியதில் அவர்கள்


RangaRakes tamilnavarasam.com

இப்பார்ப்பனர்களின் சூழ்ச்சியை நன்றாய் அறிந்திருப்பதாகவே தெரிய வந்தது. அவர் சொன்ன தென்ன வென்றால் "இச் சட்டத்திற்கு வைசிராய் பிரபு சம்மதம் கொடுக்காமல் நிராகரித்து விடுவதற்கு ஆதாரம் வேண்டு மென்றே இத் திருத்தம் கொண்டு வந்தார்கள் என்றே எனக்குத் தோன்றிற்று. இது பாசாகி இருந்தால் கண்டிப்பாய் இந்த சட்டம் முழுதுமே நிராகரிக்கப்பட்டு அடிப் பட்டுப்போகும்" என்பதும் எனக்குப் பட்டது என்று சொன்னார். அப்படியானால் தாங்களும் ஏன் இதை ஆதரித்தீர்கள் என்று கேட்டதில் "நான் ஆதரித்திராவிடில் இந்தப் பார்ப்பனர்கள் எனக்கும் என் சமூகத்தா ருக்கும் கோவில் பிரவேசம் கிடைப்பதில் சம்மதம் இல்லை என்று கட்டி விட்டு, பின்னால் சமயம் வரும்போது நானும் கோவில் பிரவேசத்தை எதிர்த்தவன் என்கிற ரிக்கார்டு செய்து கொள்வார்கள். ஆதலால் தான் நான் ஆதரித்தே னேயொழிய வேறல்ல" என்ற பொருள் படச் சொன்னார். உண்மையில் இப்பார்ப்பனர்கள் தாழ்த்தப்பட்டவர்களைக் கோவிலுக்குள் செல்லவோ சம உரிமை கொடுக்கவோ இஷ்டப்பட்டு அத்தீர் மானம் கொண்டு வந்திருப்பார்களேயானால் இப்பொழுதும் ஒன்னும் முழுகிப் போய் விட வில்லை, சுயராஜ்யக் கக்ஷியார் என்கிற பார்ப்பனர் "நாங்கள் தெரிந்தெ டுக்கப் பட்டால் தாழ்ந்த வகுப்பார் என்று சொல்லப் படுகிற இந்துக்கள் எல்லோரையும் சென்னை மாகாணத்தில் பொதுவாயுள்ள எல்லா கோவில் களுக்குள்ளும் பிரவேசிப்பதைத் தடுப்பவர்களுக்கு 6 மாதம் தண்டனையும் 1000 ரூபாய் அபராதமும் போடப்படும்" என்று இந்தியன் பீனல் கோடில் ஒரு திருத்தமும் தேவஸ்தான சட்டத்தில் ஒரு திருத்தமும் கொண்டு வருகிறோம் என்று எழுதி விளம்பரப்படுத்தட்டுமே பார்ப்போம். இப்படி செய்வார்களா னால் எலெக்ஷ னில் இவர்கள் வெற்றி பெற எல்லோரும் முயற்சி செய்யலாம். அதில்லாமல் உள்ள சட்டத்தையும் கூடப் போடுவதற்காக தந்திரம் செய்து கொண்டு நீலிக் கண்ணீர் விட்டால், ஜஸ்டிஸ் கக்ஷியார் இதற்கு ஏமாந்து விடத்தக்க அவ்வளவு பைத்தியக்காரரா என்றுதான் நாம் கேழ்க்கிறோம். பொதுவாக செல்வாக்குள்ள பத்திரிகைகள் எல்லாம் பார்ப்பனர்கள் கையில் இருப்பதால் அவர்கள் தங்கள் பத்திரிகை யில் இந்தப் பித்தலாட்டங்களை வெளிப்படுத்தாமல் ஜஸ்டிஸ் கட்சி யாரிடம் பொதுஜனங்களுக்கு வெறுப்பும் துவேஷமும் உண்டாகும்படி தாறு மாறாக உண்மைக்கு விரோதமாய் எழுதி வந்ததின் பலனாய் பாமர ஜனங்கள் ஏமாந்து விட்டார்கள் என்றே சொல்லு வோம். இவ்விஷயத்தைப் பற்றி சில தாழ்த்தப்பட்ட வகுப்பாரிடமிருந்தும் நாடார் வகுப்பாரிடமிருந்தும் பார்ப் பனரல்லாத கட்சியார் பேரில் குறைகூறி பல கடிதங்கள் வந்து கொண்டி ருக்கின்றன. அதற்காகவே இதை எழுது கிறோம். இம்மாதிரி பார்ப்பனர்களால் கட்டி விட்டுக் கொண்டிருக்கும் விஷமங்களுக்கு எவ்வளவுதான் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியும். பார்ப்பனப் பத்திரிகைகளே தமிழ்நாட்டில் பெரும்பாலும் செல்வாக்குப் பெற்று உலவி வருவதாலும் பார்ப்பனரல்லாத பத்திரிகைகள் பெரும்பாலும்



இதைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் வயிற்றுப் பிழைப்பையோ போலித் தலை மைப் பதவியையோ தாக்ஷண்ணியத்தையோ நோக்கமாகக் கொண்டு நடந்து வருவதால் உண்மை அறிய முடியாமல் போகிறது. பார்ப்பனப் பத்திரிகை களை நம்பி ஏமாந்து போய் தங்கள் சமூகத்திற்கு குழி வெட்டிக் கொள்ளா திருக்குமாறும் பார்ப்பனருக்கும் அவரது சிஷ்யர்களுக் கும் ஓட்டுச் செய்யாதிருக்குமாறும் எச்சரிக்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 26.09.1926**



RangaRakes tamilnavarasam.com

# சென்னை வாசிகளே
# என்ன செய்யப் போகிறீர்கள் ?

**-சித்திரபுத்திரன்**

ஈரோடு ராமசாமி நாயக்கர், டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு. வி. கலியாணசுந்திர முதலியார், ஆரியா, சக்கரை செட்டியார் , தண்டபாணி பிள்ளை, பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராய், பம்பாய் புலி ஜயகர் ஆகிய பார்ப்பனரல்லாத காங்கிரஸ் தியாகிகளை யெல்லாம் காங்கிரசை விட்டுப் போகும்படி துரத்திவிட்டு இவர்கள் எல்லாம் காங்கிரசை விட்டுப் போய் விட்டதால் காங்கிரஸ் பரிசுத்தமாய் போய்விட்டதென்று சொன்னவரும் இன்னமும் வக்கீல் தொழிலில் மாதம் 10,000 சம்பாதித்துக் கொண்டு இருப்ப வரும், நேற்று காங்கிரசில் வந்து சேர்ந்தவருமான ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய் யங்கார் என்கிற பார்ப்பனருக்கு ஓட்டுக் கொடுக்கப் போகிறீர்களா? அல்லது பி.ஏ.,பி.எல்., 20 வருஷத்திற்கு முன் படித்திருந்தும் நாளது வரை வக்கீல் உத்தியோகத்திற்கு போகாதவரும் பள்ளியில் படிக்கும்போதுமுதலே தேசத்திற்காகப் பேசி, தேச பக்தராயிருந்த பார்ப்பனரல்லாதார் நன்மையின் பொருட்டு லண்டனுக்குப் போனவருமான ஸ்ரீமான் வி. சக்கரை செட்டியார் என்கிற பார்ப்பனரல்லா தாருக்கு ஓட்டுச் செய்கிறீர்களா?

தேசத்திற்காக 5 வருஷ காலம் ஜெயிலுக்குப் போன ஸ்ரீமான் ஆரியா வையும், பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்காக மூன்று முறை ஜயிலுக்குப் போன ஈ.வெ.ராமசாமி நாயக்கரையும் ஜயிலில் போட வேண்டுமென்று பார்ப்பன அட்வொகேட் ஜெனரலையும் பார்ப்பன சட்ட மெம்பரையும் கெஞ்சும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் என்னும் பார்ப்பனருக்கு ஓட்டுப் போடப் போகிறீர்களா? அல்லது பார்ப்பனரல்லாத ஸ்ரீமான் சக்கரைச் செட்டி யாருக்கு ஓட்டுப் போடப் போகிறீர்களா? பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும், பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தை ஒழித்து பார்ப்பனரல்லாதார் இப்பொழுது பார்த்து வரும் உத்தியோகங்களையெல்லாம் பிடுங்கி பார்ப்பனர் கையில் கொடுத்து விட்டு பார்ப்பனரல்லாதார் சூத்திரர், பார்ப்பன ரின் வைப்பாட்டி மக்கள் என்னும் கொள்கையை நிலைநிறுத்தப் பாடுபடும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் என்னும் பார்ப்பனருக்கு ஓட்டுப் போடப் போகிறீர்களா? அல்லது பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கும், மனுசத் தன்மைக்கும், தேச விடுதலைக்கும் உழைக்கும் ஸ்ரீமான் வி. சக்கரை செட்டியாரான பார்ப்பனரல்லாதாருக்கு ஓட்டுப்போடப் போகிறீர்களா? இதில்தான் உங்கள் மூளையின் தத்துவம் விளங்கப் போகிறது.

**குடி அரசு - கட்டுரை - 26.09.1926**



RangaRakes



tamilnavarasam.com

# பனகால் ராஜாவின் உளறலா? பார்ப்பனர்களின் போக்கிரித்தனமா?

## ( மித்திரனின் விஷமம் )

தென் ஆப்ரிக்காவில் இருந்து வந்த தூதர்களுக்கு சென்னை மந்திரிகள் ஒரு விருந்து நடத்தியிருக்கிறார்கள் . அவ்விருந்தில் அத்தூதர் களை பனகால் ராஜா பாராட்டிப் பேசுகையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் ஏற்பட்ட பல நன்மைகளைப் பற்றியும், தென்னாப்பிரிகா போன்ற பல குடியேற்ற நாட்டின் சம்பந்தத்தைப் பற்றியும் சில வார்த்தைகளும் சொல்லி விட்டு இந்தியாவிலிருக்கும் சில பண்டைக்கால நாகரீகத்தின் வேறுபாடு களுக்காக எங்களைத் தாழ்வாய் கருதக்கூடாது, தற்கால சமூக சம்பிரதாயங் களுக்கு அதுகள் பிடிக்காமல் இருப்பது வாஸ்தவம்தான் ஆனால் அவை துரிதமாக மறைந்து வருகிறது என்று சந்தோஷத்துடன் தெரிவிக்கிறேன் என்று பேசியிருக்கிறார். (இது சுதேசமித்திரனிலேயே இருக்கிறது) இந்த வார்த்தைகளுக்காக மித்திரன் 'பனகால் ராஜாவின் உளறல்' என்று போக்கிரித் தனமான தலையங்கமிட்டு இதைக் குறிப்பிட்டிருப்பதுடன் 'தேசாபிமானமற்ற மந்திரி' என்கிற தலையங்கங் கொண்ட வியாசமும் எழுதியிருக்கிறான். அதோடு தென்னாப்பிரிக்காவில் உள்ள தங்கள் கோவில்களில் 'நாய்களும், கருப்பு மனிதர்களும் உள்ளே வரக்கூடாது' என்று விளம்பரம் எழுதி ஒட்டியிருப்பதற்காக மிகவும் வருந்துவதாக நீலிக்கண்ணீர் விட்டு இந்தக் காரணங்களால் குடியேற்ற நாட்டு சம்பந்தத்தால் இந்தியா கவுரவக் குறைவை அடைந்திருக்கிறது என்றும் எழுதியிருக்கிறான். திரும்பவும் இந்தியாவிலி ருக்கும் பல கெடுதலான நாகரீகத்திற்கும் சமாதானமாக இங்கிலாந்தில் எல்லோரும் மிதமாய் குடிக்கிறார்களாதலால் அந்த நாகரீகத்திற்கும் இந்த நாகரீகத்திற்கும் சரியாய் போய்விட்ட தென்றும் கொஞ்சமும் வெட்கமில் லாமல் எழுதுகிறான். இன்னும் இதுபோல் பலதுகள் எழுதிவிட்டு பனகால் ராஜா தன்னை வெகுஜனப் பிரதிநிதி என்று சொல்லிக் கொண்டது தப்பிதம் என்றும், இனி அப்படிச் சொல்லிக் கொள்ளச் செய்யாமல் செய்துவிட வேண்டும் என்றும் எழுதி முடித்திருக்கிறான். இதில் எவ்வளவு அயோக்கி யத்தனமும், ஆணவமும், இழிகுணமும் இருக்கிறதென்பதை வாசகர்கள் நன்றாய் கவனிக்க வேண்டும். நமது மக்களின் அறியாமையால் தங்களுடைய பத்திரிகை பாமர மக்களை ஏமாற்றத்தக்கதாக இருக்கிறது என்கிற ஒரு



காரணத்தினாலேயே நமது பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாராகிய நம்மை அடியோடு அழுத்துவதற்கு என்ன என்ன சூழ்ச்சிகள் செய்கிறார்கள் என்பதை இதிலிருந்தே அறிந்து கொள்ளலாம் . இந்தியாவுக்குப் பார்ப்பனர் கொடுமையில் ஏற்பட்ட 'நாகரீகத்தை' கனம் பனகால் ராஜா எடுத்துச் சொல்லாவிட்டால் தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரருக்குத் தெரியாமல் போகுமென்று 'மித்திரன்' நினைத்துக் கொண்டு ஆத்திரப்பட்டி ருக்கின்றான் போலும். இது எவ்வளவு அறிவீனம். ஐரோப்பாவில் குளிருக்காகவும், ஜீரண சக்திக்காகவும், சிறு அளவாகக் குடிக்கும் சாராயத்திற்கும் நமது நாட்டு நாகரீகத்திற்கும் ஒப்பிட்டிருப்பது எவ்வளவு மோசமானது என்பது நாம் சொல்லாவிட்டாலும் வாசகர்களுக்கு விளங்காமல் போகாது. இந்த நாட்டுக்கு பிச்சை எடுக்க வந்த ஒரு கூட்டத்தார் தங்களை பிராமணர்கள் என்றும், உயர்ந்த ஜாதியார் என்றும், லோக குரு என்றும், மகந்துகள் என்றும், ஆச்சாரியார்கள் என்றும் இந்நாட்டு வாசிகளை ஏமாற்றி தங்கள் கால்களை கழுவின தண்ணீரை வெள்ளியும் தங்கமும் கொடுத்து வாங்கிக் குடித்தால் மோட்ச வீடு திறக்கப்படுமென்று ஏமாற்றும் அயோக்கியத் தனம், ஐரோப்பா வில் குளிருக்காகவும் ஜீரண சக்திக்காகவும் என்று அந்த நாட்டு சீதோஷ்ண ஸ்திதியை அநுசரித்து சிறு அளவாகக் குடிக்கும் சாராயத்திற்கு ஒப்பு ஆகுமா? இந்நாட்டுப் பார்ப்பனர் தாங்கள் எவ்வளவு அயோக்கியர்களாக இருந்தாலும் திருடர்களாக இருந்தாலும் தாங்கள் ஒரு வகுப்பில் பிறந்து விட்ட காரணத் தினாலேயே தங்களை உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக் கொண்டும், மகாத்மாவானாலும் எவ்வளவு யோக்கியர்களானாலும் தர்ம ஸ்ரேஷ்டர்களா னாலும் தியாகிகளானாலும் ஒரு வகுப்பில் பிறந்தார்கள் என்கிற காரணத் திற்காகவே சூத்திரன், வேசி மகன், அடிமை என்று கூப்பிடும் அக்கிரமத் திற்கும் ஐரோப்பியர்கள் சிறு அளவாய் குடிக்கும் சாராயத்திற்கும் ஒப்பாய் விடுமா? தவிர தென்னாப்பிரிக்கா கோவில்களில் நாய்களும் கருப்பு மனிதர் களும் போகக்கூடாது என்று போர்டுகள் போட்ட தினாலேயே கருப்பு மனித ருக்கு அவமானம் வந்து விட்டதாகவும், இதினா லேயே இப்படிப்பட்ட குடி யேற்ற நாட்டு சம்பந்தத்தை பனகால் ராஜா வெறுக்காதது தேசாபிமானமற்றது என்றும் எழுதி இருக்கிறான். வெள்ளையர் கள் தங்கள் சொந்தக் கோவிலில் நாய்களையும் கருப்பு மனிதர்களையும் விடாததற்காக அவர்களை வெறுக்க வேண்டுமானால் நமது பார்ப்பனர் நமது பணத்தைச் செலவு செய்து போடப் பட்ட நமது ரோட்டில் நாயும், பன்றியும், கழுதையும், மலமும், மூத்திரச் சட்டியும் போகலாம், ஆனால் இந் நாட்டு மக்கள் நடக்கக் கூடாது என்று சொல்லுபவர்களை என்ன செய்ய வேண்டுமென்று கேட்கிறோம்?

பூனை, செத்துப் புழுத்த எலியைத் தூக்கிக் கொண்டு புழு கீழே உதிர உதிர உள்ளே போகலாம், பார்ப்பனர் குஷ்டரோகியானாலும் விபசாரி வீட்டு மாமாவானாலும் கோவிலுக்குள் திருடவும், புரட்டுப் பண்ணவும், சுவாமி சொத்தைக் கொள்ளையடிக்கவும் சுவாமியிடம் போகலாம், சுவாமியைத் தொடலாம், ஆனால் நமது பணத்தைச் செலவு செய்து கட்டிய கோவிலுக்குள்



RangaRakes tamilnavarasam.com

நாம் மாத்திரம் பக்தியோடு பரிசுத்தத் தன்மையோடு சுவாமியைக் கும்பிடக் கூட சுவாமி பக்கத்தில் போகக்கூடாது என்றால் இவர்களை என்ன செய்ய வேண்டும்? தங்கள் பெண்கள் எல்லாம் பிராமண ஸ்திரீகள்; நமது பெண்களை எவ்வளவு பதிவிரதைகள் ஆனாலும் சூத்திரச்சிகள் என்று ஒரு கூட்டத்தார் சொல்வதானால் அவர்களை என்ன செய்ய வேண்டும்? இம்மாதிரி கொடுமை செய்பவர்களையெல்லாம் வைத்துக் கொண்டும், அவர்களோடு உறவாடிக் கொண்டும், அவர்களை வணங்கிக் கொண்டும், மலையாளம் முதலிய இடங்களில் அவர்களுக்கு நமது ஸ்ரீகளை அனுபவத்திற்கு விட்டுக் கொண்டும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கும் மித்திரனுக்கு, தென்னாப்பிரிக்கா தூதுவர்களை வரவேற்கையில் அவர்களைப் புகழ்ந்து பேசிய நமது பனகால் ராஜாவின் பேச்சுக்கள் தேசாபிமானமற்றதாகிவிட்ட தென்றால் இம்மித்திரன் கூட்டத் தாரோடு உறவாடிக் கொண்டும், அவர்கள் அக்கிரமங்களையும் அயோக் கியத்தனங்களையும் சகித்துக் கொண்டும் இருப்பவர்களுடைய செய்கை தேசத்துரோகம் ஆவதோடு, இப்படிப்பட்ட பார்ப்பனர் சம்பந்தத் தால் இந்தியா சுயமரியாதை அற்றுக் கிடக்கிறதா இல்லையா? என்று நமது பார்ப்பனரையும், மித்திரனையும் கேட்கிறோம். தவிர பனகால் ராஜா அவர் கள் இந் நாட்டுப் பிரதிநிதி என்று சொல்லுகிறார் என்றும், இனி அப்படிச் சொல்லிக் கொள்ள செய்யக்கூடாது என்றும் சொல்லு கிறான். இதிலிருந்து இதுவரை பனகால் ராஜாவை பொது ஜனங்களின் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ள பொது ஜனங்கள் உரிமை கொடுத்திருக் கிறார்கள் என்பதை மித்திரன் ஒப்புக் கொள்ளுகிறான் என்பது வெளியாகிறது. ஆனால் இனிமேல் அவரைத் தள்ளிவிட வேண்டுமென்கிறான். அப்படி யானால், மற்றபடி யாரை பொது ஜனங்களின் பிரதிநிதி என்று சொல்ல வேண்டு மென்று மித்திரன் ஆசைப்படுகிறான் என்பது நமக்கு விளங்க வில்லை. நாயுடு, நாயக்கர் முதலியோர் காங்கிரசை விட்டு ஒழிந்ததால் காங்கிரஸ் பரிசுத்தமாய் விட்டது என்றும், நாயக்கரையும் ஆரியாவையும் ஏன் இன்னமும் ஜெயிலில் பிடித்து அடைக்கவில்லை என்று சர்க்காரையும் பார்ப்பன உத்தியோகஸ்தரையும் கெஞ்சும் ஸ்ரீமான் அய்யங்காரையா? பார்ப்பனரல்லாதாரை ஒழிக்கவும் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்டவும், பணங்காசு செலவு செய்து பிரசாரம் செய்து மகாத்மா காங்கிரசின் யோக்கி யதையையும் கெடுத்து, தன்னை காங்கிரஸ் தலைவராக்கிக் கொண்ட ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரையா? ஒரு பிராமணக் குழந்தை சாப்பிடுவதை ஒரு பிராமணரல்லாத குழந்தை பார்த்து விட்டால் ஒரு மாதம் பட்டினி கிடப்பேன் என்று சொன்ன ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியாரையா? சென்னை பார்ப்பன ரல்லாத மகாநாட்டுக்குத் தலைமை வகித்து வந்த கனம் யாதவர் என்கிற பார்ப்பனரல்லாத பம்பாய் மந்திரியை ஏன் சிறையிலடைக்கக் கூடாது என்று கேட்ட ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகளையா? மக்கள் பிறவியில் உயர்வு, தாழ்வு இல்லை என்று சொன்னவுடன் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து ராஜினாமா கொடுத்துத் தன்னுடைய இஷ்டர் களையும் ராஜினாமா கொடுக்கச் செய்து



தொழிலாளர்கள் வயிற்றில் மண் ணைப் போட்டுக் கொண்டிருப்பவரும் கள்ளு உற்பத்தி செய்பவருமான பார்ப்பனருக்கு ஓட்டுவாங்கிக் கொடுக்க கிராமம் கிராமமாய்த் திரிந்த ஸ்ரீமான் சி.ராஜகோபாலாச்சாரியாரையா? கல்பாத்தி பொதுத் தெருவில் யார் வேண்டுமானாலும் நடக்கலாம் என்று சட்டசபைத் தீர்மானத்தின் பேரில் சர்க்கார் உத்திரவு போட்டிருந்தும், வேலையிருந்தால்தான் போகலாம் என்று வியாக்யானம் செய்த சட்டமெம்பர் ஸ்ரீமான் சி.பி.ராமசாமி அய்யர் அவர்க ளையா? மகாத்மாவை சிறையில டைத்து ஆறு வருஷம் தண்டிப்பதற்கு உதவியாயிருந்து சர்க்காருக்கு தைரியம் சொல்லி தன் மக்களுக்கு பெரிய பெரிய உத்தியோகம் சம்பாதித்துக் கொண்ட ஸ்ரீமான் மகா மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரிகளையா? ரௌலட் ஆக்டுக்கு கையொப்பமிட்ட ஸ்ரீமான் குமாரசாமி சாஸ்திரிகளையா? சுதேச மித்திரன் பத்திரிகை ஒழுங்காயில்லை; மகாத்மா காந்திக்கும் பார்ப்பன ரல்லாதார் நன்மைக்கும் விரோதமாய் எழுதி வருகிறது; ஆதலால் காங்கிரசி லிருந்து பத்தாயிரம் ரூபாய் கொடுத்தால் பொதுவாகவும் சத்தியமாகவும் எழுதி வருகிறோம் என்று சொல்லிப் பொதுப் பணத்திலிருந்து பத்தாயிரம் பெற்று “அவன் போனால் கலகமாகி விடும்; நான் போனால் செருப்பாலடித்து விட்டு வருகிறேன் என்று ஒருவன் சொன்னானாம்” அதுபோல் சுதேச மித்திரனை விட கேவலமாய் பார்ப்பனரல்லாதாருக்கு துரோகம் செய்துவரும் ஸ்ரீமான் பிரகாசம் அவர்களையா? சென்னை நகரப் பொதுமக்கள் பிரதிநிதி யாக இந்தியா சட்டசபைக்குப் போய் அதன் பலனாய் படிக்காத தன் மக்க ளுக்கு எல்லாம் 400, 500 ரூபாய் சம்பள முள்ள உத்தியோ கங்களை சம்பாதித் துக் கொண்ட ஸ்ரீமான் டி. ரங்காச்சாரியார் அவர்களையா? பார்ப்பனரல்லா தாரை ஒழிப்பதற்கென்றே பார்ப்பனர் அல்லாதார் பணத்திலேயே பத்திரிகை நடத்தும் .........ஸ்ரீமான் எ.ரெங்கசாமி அய்யங்கார் அவர்களையா? அல்லது வேறு அய்யர், அய்யங்கார், ஆச்சாரியார், சர்மா, சாஸ்திரியார் முதலியவர் களையா? என்பது நமக்கு விளங்கவில்லை. பார்ப்பனரல்லாத மக்களின் ஒற்றுமையற்ற நிலையையும், தங்கள் பத்திரிகை பலத்தின் ஆணவத்தையும், பாமர ஜனங்களின் அறியாமையையும் அறிந்த பார்ப்பனர்கள் இவ்வளவு தான் சொல்லுவார்களா? இன்னமும் அதிகமாய்ச் சொல்லுவார்களா? என்பதைப் பற்றி நாம் யோசிக்கவே வேண்டியதில்லை.

**குடி அரசு - கட்டுரை - 03.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# "காங்கிரஸ் விளம்பர சபை"

நமது பார்ப்பனர்கள் பாமர ஜனங்களை ஏமாற்றும் பொருட்டும் வஞ்சிக்கும் பொருட்டும் 'காங்கிரஸ் விளம்பர சபை' என்பதாக ஒரு யோக்கியப் பொறுப்பற்றதும், அயோக்கியத்தனமானதுமான ஒரு பெயரை வெளிக்குக் காட்டி அதன் பேரால் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாயும், பார்ப்பனரல்லாதார் பேரிலும் அவர்கள் இயக்கத்தின் பேரிலும் பொது ஜனங்களுக்கு அசூயை, துவேஷம் முதலியதுகள் உண்டாகும்படியும் பல கட்டுக் கதைகளை ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் எழுதி வருகிறார். இது எவ்வளவு கெட்ட எண்ணமும் வஞ்சகப் புத்தியும் கொண்டது என்பது நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. இதுகள் ஒவ்வொன்றுக்கும் பதிலெழுத வேண்டுமானால் அதற்கென்றே தனிப் பத்திரிகையும் ஆள்களும் வேண்டும். ஆனால் 'ஒரு பானை அரிசிக்கு ஒரு சோறு பதம்' என்பது போல் ஒரு விஷயத்தை விளக்குகிறோம். அதாவது, மலையாள மாப்பிள்ளை கலவரத் தில் மூடு வண்டியில் அகப்பட்டு திக்கு முக்காடி இறந்து போன சம்பவத்தைக் குறித்து 22.9.26 உ சுதேசமித்திரனில் பார்ப்பனரல்லா தார் கட்சியாகிய ஜஸ்டிஸ் கக்ஷியார் இதைப்பற்றி ஒன்றும் செய்யவில்லை என்றும் மற்றவர்கள் செய்ததற்கு விரோதமாயிருந்ததாகவும் எழுதியிருக் கிறது. இது எவ்வளவு பெரிய அக்கிரமம். மூடு வண்டி கொலைபாதகம் விஷயமாய் சட்டசபை நடவடிக்கையை ஒத்தி வைக்க வேண்டுமென்ற தீர்மானம் கொண்டு வந்தவர் அப்போது ஜஸ்டிஸ் கட்சியில் முக்கிய ஸ்தா னத்தையும் ஒரு மந்திரிக்கு காரியதரிசியுமாயிருந்த ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியாரே ஆவார். அவர் அதற்காக ஏற்பட்ட கமிட்டியில் முக்கிய அங்கத்தினராயிருந்து சர்க்காருக்கு எதிராய் பலமாய் வாதாடிய வரும் ஷை ஜஸ்டிஸ் கட்சி அங்கத்த வரே ஆவர். ஆனால் அக்கமிட்டியில் இருந்து கொண்டு சர்க்காரை ஆதரித்த வர் ஒரு பார்ப்பனரே ஆகும். அவர்தான் ஸ்ரீமான் மஞ்சேரி ராமய்யர். ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர் மலை யாள மாப்பிள் ளைகளுக்கு அனுகூலமா யும் சில வெள்ளைக்காரருக்கு விரோதமாயும் அபிப்பிராயம் கொடுத்ததால் தான் அந்த ரிப்போர்ட் வெளி யில் வராமல் போய் விட்டது. ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் அந்த காலத்தில் ஜஸ்டிஸ் கட்சி பிரதிநிதியாக இருந் தார் என்பதை ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஒப்புக் கொள்ளுகிறாரா? மறுக்கிறாரா? இம்மாதிரி வேண்டு மென்றே ஜனங்களை ஏமாற்ற இந்தப் பார்ப்பனர் எழுதும் எழுத்தும், பேசும் பேச்சும் சூழ்ச்சித் தனமானது என்று இதிலிருந்தாவது பொது ஜனங்களுக்கு விளங்கவில்லையா?

**குடி அரசு - கட்டுரை - 03.10.1926**



# ராயப்பேட்டைத் தேர்தல்

## பார்ப்பனர்களின் சட்ட ஞானம்

ஸ்ரீமான் பி.எஸ். குருசாமி நாயுடு அவர்களும் ஸ்ரீமான் ஒ.எ.ஒ.கே. லட்சுமணன் செட்டியார் அவர்களும் ராயப்பேட்டை டிவிசன் நகரசபைத் தேர்தலுக்கு அபேக்ஷகர்கள். இதில் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் நியமனத் தேதியில் கௌரவ மாஜிஸ்திரேட்டாக இருந்ததால் சட்டப்படி அபேக்ஷக ராயிருக்க அருகரல்லவென்று கமிஷனர் அவரை நீக்கித் தேர்தல் நடத்த உத்திரவிட்டார். இதன் மேல் அத் தேர்தலை நிறுத்த நமது பார்ப்பனர்கள் சென்னை ஸ்மால் காஸ் கோர்ட்டில் ஒரு பார்ப்பன நீதிபதியிடம் தடை உத்திரவு வாங்கினார்கள். அது அவரிடமே நிவர்த்தி செய்யப்பட்டும், மறுபடியும் இதன் பேரில் நமது பார்ப்பனர் ஹைக் கோர்ட்டில் பார்ப்பன ரல்லாத மூன்று ஜட்ஜிகளிடம் ஒரு தடை உத்திரவு வாங்கினார்கள். இதையும் அவர்களிடமே நிவர்த்தி செய்து 30-ந் தேதிக்குள் தேர்தல் நடத்த மூன்று ஜட்ஜிகளால் உத்திரவிடப்பட்டது. இம்மூன்று ஜட்ஜிகள் உத்திரவிற்கு விரோதமாய் மறுபடியும் ஒரு பார்ப்பன ஹைகோர்ட் ஜட்ஜிடம் நமது பார்ப் பனர் அத்தேர்தலையும் நடைபெறாதபடி ஒரு தடை உத்திரவு வாங்கி விட்டார்கள். இந்த நிலையில் சென்னை பிரதம நீதிபதி அவர்கள் இந்த நடவடிக்கையில் சந்தேகப்பட்டு மூன்று ஜட்ஜிகள் கூடி பைசல் செய்த ஒரு விஷயத்தை மறுபடியும் ஒரு ஜட்ஜிடம் போய் எப்படி மாற்றிக் கொள்ள லாம் என்று கூட கோர்ட்டில் பார்ப்பன வக்கீல்களைக் கேட்டிருப்பதாகவும் அதற்கு அவர்கள் சட்ட சம்பந்தமான ஆதாரமிருப்பதாகவும் ஓரிஜினல் என்ற கார ணத்தை உத்தேசித்து அங்கு போனதாகவும் சொல்லி திருப்தி செய்திருக் கிறார்கள். அப்படியானால் அதையும் என்னிடமே ஏன் கொண்டு வந்திருக்கக் கூடாது என்றும் பிரதம நீதிபதி அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கு சட்ட சம்பந்தமான சமாதானமாக அந்த காரணம் இந்தக் கோர்ட்டுக்கு வரக் கூடியதல்ல என்று சொன்னதாக தெரிய வருகிறது. இதைப் பார்த்தால் சட்ட மியற்றுவது பார்ப்பனர்; அதை விவாதிப் பது பார்ப்பனர்; அதற்கு தீர்ப்புச் சொல்லுவதும் பெரும்பாலும் பார்ப்பனர் என்று ஏற்படு கிறது. இந்நிலையில் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்கிற வகுப்பு உணர்ச்சி உள்ள விவகாரங் களில் பார்ப்பனரல்லாதாருக்கு நியாயம் கிடைக்குமென்று உறுதியாய் நம்ப இடமிருக்கிறதா? என்பதை முடிவு செய்யும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டு விடுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 03.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# கோயமுத்தூர் ஜில்லா சட்டசபைத் தேர்தல்

நமது ஜில்லா சட்டசபைத் தேர்தல் விஷயமாக சென்ற இதழில் ஒரு வியாசம் எழுதப்பட்டிருந்ததை நேயர்கள் வாசித்திருக்கக் கூடும். அவ்வியாசத்தின் வேண்டுகோட்படியே குடியான வகுப்பைச் சேர்ந்த அபேக்ஷகர்களான இரண்டு கவுண்டர் கனவான்களில் ஒரு கனவானான ஸ்ரீமான் வி.சி.வெள்ளியங்கிரிக் கவுண்டர் பின்வாங்கிக் கொண்டதாக கேள்விப்படுகிறோம். தங்கள் சமூக நன்மையை உத்தேசித்து தங்கள் சமூகத் தாரில் யாராவது ஒரு கனவான் சட்டசபைக்கு வரவேண்டும் என்கிற ஒரே எண்ணத்தின் பேரில் மற்றொரு கவுண்டர் கனவானுக்காக விட்டுக் கொடுத்த ஸ்ரீமான் வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்களின் பெருந் தன்மை யையும் குலாபிமானத்தையும் நாம் மனமாரப் போற்றுகிறோம். நாம் முந்திய வார இதழில் எழுதியது போலவே ஒருவர் பின்வாங்கிக் கொண்டதினாலே மற்ற கனவானுக்கு யாதொரு பிரயத்தனமுமில்லாமல் சட்டசபை ஸ்தானம் கிடைத்து விடும் என்று நம்பி அஸ்வாரஸ்யமாய் இருந்துவிடக் கூடாது என்றும் தக்க முயற்சி எடுத்துக்கொண்டு கிராமம் கிராமமாய் வேளாள சமூக பிரசாரகர்களைக் கொண்டு பிரசாரம் செய்து கிராமத்து குடியான மக்களு டைய மனதைத் திருப்ப முயற்சி செய்ய வேண்டும் என்றும் அப்படிக்கில் லாமல், அஸ்வாரஸ்யமாயிருந்தால் கண்டிப்பாய் ஏமாற்றமடைய நேரிடும் என்றும் தெரிவித்துக் கொள்வதோடு ஸ்ரீமான் சங்கரண்டாம் பாளையப் பட்டக்காரக் கவுண்டர் அவர்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டியது அவசிய மென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - அறிக்கை - 03.10.1926**



# தீண்டாமை விலக்குச் சட்டம்

"பொதுத் தெருக்களில் எவரையேனும் நடக்கக்கூடாது என்று தடுப்பவருக்கு 100 ரூபாய் வரையில் அபராதம் போடலாம்" என்கிறதாக ஒரு பிரிவை சென்னை ஜில்லா லோக்கல் போர்டு சட்டங்களில் ஒரு பிரிவாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று ஸ்ரீமான் வீரய்யன் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் சட்டசபையில் நிறைவேறி விட்டதாகவும், முனிசிபாலிட்டி சட்டத்திலும் இவ்வித திருத்தம் செய்யவேண்டுமென்று கொண்டு வரப்பட்ட திருத்தம் தான் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் ஸ்ரீமான் வீரய்யன் அவர்களால் தெரிவிக்கப்படுகின்றன.

குறிப்பு : இவ்வித சட்டம் செய்யப்பட்டது பற்றி நாம் மிகுதியும் களிப்பெய்துகிறோமானாலும் பார்ப்பன வக்கீல்களும் பார்ப்பன நீதிபதிகளும் இச்சட்டம் செய்தவர் கருத்துப்படி பலனளிக்கச் சம்மதிப்பார்களா? அவர் களது சட்ட ஞானமும் பாஷ்ய ஞானமும் இச்சட்டத்தை உயிருடன் வைத் திருக்கச் சம்மதிக்குமா என்று கேட்கிறோம்?

**( ப - ர் )**

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 03.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# “தேசிய அறிக்கை”

மேல்படி தலையங்கம் கொண்ட அறிக்கையொன்று சென்னை ‘தமிழ்நாடு’ காரியாலயத்திலிருந்து நமக்கு அனுப்பப்பட்டதை வேறு இடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதை அனுசரித்து ஸ்ரீமான் டாக்டர் வரதராஜுலு நாயுடுகார் அவர்களால் ஒரு அச்சடித்த அழைப்புக் கார்டும் சிலருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவ்வழைப்புக்கு யாவரும் போக வேண்டுமென்றே வேண்டிக் கொள்ளுகிறோம் . ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் தாயாருக்கு இது சமயம் கடினமான காயலா வாயிருக்கிற படியால் 9-ந் தேதிக்கு சென்னை போக அவருக்கு சவுகரியமாயிருக்குமோ இருக் காதோ என்பது சந்தேகமாயினும் அது பற்றி நமது அபிப்பிராயத்தை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தேசீய அறிக்கையில் குறித்திருக் கும் ஒரு விஷயத்தை நாமும் பலமாய் ஆதரிக்கிறோம். அதாவது, “சுயராஜ்யக் கக்ஷி பிராமணரல்லாதாருக்கு விரோதமாய்க் கட்டுப்பாடாகப் பிரசாரம் செய்து வருகிறது. இம்மாதிரியான நிலைமையை இன்னும் வளர விட்டுக் கொண்டே போனால் பிராமணரல்லாதாருக்குக் கெடுதல் வரும்” என்ப தாகும். இந்த அபிப்பிராயத்தை நாம் இரண்டு வருஷத்திற்கு முன்ன தாகவே கொண்டுள் ளோம். ஆதலால் ‘தமிழ்நாடு’ம் டாக்டர் நாயுடுகார் அவர்களும் இப்போது இதை வெளிப்படையாய் வலியுறுத்த முன் வந்ததற்குப் பார்ப்பனரல்லாத மக்கள் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருப்பதுடன் இதற்காக ஸ்ரீமான் டாக்டர் நாயுடு அவர்கள் எடுத்துக் கொள்ளும் எவ்வித முயற்சிக்கும் ஆதரவளிக்க வேண்டியது தமிழ் மக்கள் கடமை என்றே சொல்லுவோம். ஆனால் காங்கிரஸ் என்னும் விஷயத்தில் டாக்டர் நாயுடு அவர்கள் அபிப்பி ராயத்தை நாம் ஆதரிக்க முடியாததற்கு மிகுதியும் வருந்துகிறோம். சுயராஜ் யம் என்னும் தேசீய உணர்ச்சியில் டாக்டர் நாயுடு அவர்களுக்கு நாம் மேம்பட்டவரல்ல வென்றா லும் குறைந்தவரல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்ளுவதோடு சுய ராஜ்யத்தை விட மக்கள் சுயமரியாதையே சிறந்ததென் பதும், அதுவே மக்களின் பிறப்புரிமை என்பதும் நமது அபிப்பிராயம். அல்லாமலும் காங்கிரஸ் என்கிற விஷயத்திலும் அதில் உள்ள கொள்கையை உத்தேசித்து தான் அதனிடம் மக்கள் பக்தி செலுத்தவேண்டுமே அல்லாமல் காங்கிரஸ் என்கிற பெயருக்கே பக்தி செலுத்த வேண்டும் என்று சொல்லு வதை நாம் ஒப்புக் கொள்ள முடியாததற்கும் மன்னிக்க வேண்டுகிறோம். உதாரணமாக, பிராமணன் என்பவன் மதிக்கத்தக்கவன் என்றால் பிராமணன்



என்கிற பெயரை உடைத்தாயிருப்பதற்காகவா? அல்லது பிராமணர் என்பதற்கு ஏற்பட்ட கொள்கையை உடைத்தாயிருப்பதற்காகவா? அன்றியும் நமது டாக்டர் நாயுடுகாரு அவர்களே சுயராஜ்யக் கட்சியை முன்பெல்லாம் ஆதரித்த காலத்திலும் தேச முன்னேற்றத்தை உத்தேசித்துதான் தாம் அதை ஆதரிப்பதாகச் சொல்லி வந்தார். ஏனெனில் அதனிடத்தில் சில ஒப்புக் கொள்ளத்தக்க கொள்கை இருப்பதாலேயே என்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் இப்போதும் அதே பெயரும், அதே கொள்கையும், அதே திட்ட மும் இருக்கும் போதே “சுயராஜ்யக் கட்சி பிராமணக் கட்சி; அது அடுத்த தேர்தலில் வெற்றி பெற் றால் பிராமணரல்லாதாருடைய கதி அதோகதியாய் போய்விடும்” என்று ‘தமிழ்நாடு’ மூலமாய் எழுதியிருக்கிறார். இதுபோல வேதான் நாமும் காங்கிரஸ் என்பது பார்ப்பனர்களும் படித்தவர்களும் முறையே பார்ப்பனரல்லாதாரையும் பாமர மக்களையும் ஏமாற்றி உத்தி யோகம் பதவி முதலியதுகள் பெற்று வாழ ஏற்பட்டு அதற்கேற்ற கொள்கை களே அதனில் இருத்தப்பட்டிருக்கிறது என்றும், மத்தியில் மகாத்மா தலைமை வகித்து நடத்திய காலத்தில் சுயமரியாதை, உண்மையான சுயராஜ் யம் முதலியவைகள் அடையத்தக்க கொள்கைகள் அவற்றில் இருந்தது என்றும், இப்போது பழையபடி பார்ப்பனர், படித்தவர் ஆகியவருக்கு அநுகூலமாகவும் மக்கள் சுயமரியாதைக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் ஆபத்தானதாகவும் உள்ள கொள்கைகளே காங்கிரசில் வைக்கப்பட் டுப் போய்விட்டதால் மக்கள் சுயமரியாதையையும் பார்ப்பனரல்லாதார் சமத்து வத்தையும் உத்தேசித்து காங்கிரசை திருத்தவோ அழிக்கவோ வேண்டியது பொது மக்களின் கடமை என்றும், ஏனெனில் காங்கிரசுக்கு இது சமயம் கொள்கை என்பதே இல்லாமல் சுயராஜ்யக் கட்சியின் கொள்கைகளைத்தான் அப்படியே தனது கொள்கையாக ஏற்றுக் கொண்டுவிட்டதென்றும் சுயராஜ் யக் கட்சி கொள்கைகளோ பார்ப்பனரல்லாதாரை அழிக்கக் கட்டுப் பாடாய்ப் பார்ப்பனர்கள் செய்து வரும் சூழ்ச்சி என்றும் இதை டாக்டர் நாயுடுகார் அவர்களே ஒப்புக் கொள்ளுகிறார் என்றும் சொல்லுகிறோம்.

தேசீய உணர்ச்சி மக்களுக்குள் விளங்க வேண்டும் என்கிற டாக்டர் நாயுடுகாரின் அபிப்பிராயத்தையும் நாம் மனமார ஆதரிக்கிறோம். ஆனால் இது இன்னது என்று விளக்கப்பட வேண்டும். அதற்காக ஏற்படுத்தப்படும் இயக்கத்திற்கும் முயற்சிக்கும் தேசீய உணர்ச்சிக்கேற்ற கொள்கைகளை அமைக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் புண்ணியம், தருமம், மோக்ஷம், தெய்வம் என்கிற பெயரைச்சொல்லிக்கொண்டு பார்ப்பனர்கள் வயிறு வளர்ப் பது போல் சுயராஜ்யம், உரிமை, தேசீய உணர்ச்சி, சர்க்காரை எதிர்த்தல், காங்கிரஸ், சுயராஜ்யக் கட்சி என்கிற பெயர்களைச் சொல்லிக் கொண்டு பாமர மக்களை ஏமாற்றி பலர் வயிறு பிழைக்கும்படியும் உத்தியோகம் பெறும் படியும் செய்துவிடக் கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அல்லாமலும் சுயராஜ்யக் கட்சியோடு ஜஸ்டிஸ் கட்சியை ஒப்பிடு



RangaRakes tamilnavarasam.com

வதிலும் நாம், டாக்டர் நாயுடுகாரு அவர்களின் அபிப்பிராயத்திற்கு சற்று மாறுபட நேர்ந்ததற்கும் மன்னிக்கவேண்டுகிறோம். சுயராஜ்யக் கட்சியைப் பற்றி டாக்டர் நாயுடுகாரே அது பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் கட்டுப்பாடாகப் பிரசாரம் செய்யும் கட்சி என்று ஒப்புக்கொண்டு விட்டதால் இனி நாம் அதன் கேட்டைப் பற்றி பேச வேண்டியதில்லை. இப்படியிருக்க ஜஸ்டிஸ் கட்சியை அதற்குச் சமமாய்ச் சொல்லக் காரணம் என்ன? ஜஸ்டிஸ் கட்சியானது பார்ப்பனரல்லாதார் நன்மைக்காக ஏற்பட்டது என்றும், அது நமது நாட்டுப் பார்ப்பனரல்லாதாருடைய கட்சி என்றும், அது பார்ப்பனரல்லா தாருக்கு பல நன்மைகள் செய்திருக்கிறது என்றும் டாக்டர் நாயுடுகாரே பல தடவைகளில் பேசியும் ''தமிழ்நாட்டில்'' எழுதியும் இருக்கிறார். அதற்கும் பல ஆதாரங்கள் இருக்கின்றன. அப்படிக்கு இருக்க அந்த கட்சியை பார்ப்பனரல்லாதாரை அழிக்க கட்டுப்பாடாய் வேலை செய்யும் சுயராஜ்யக் கட்சிக்கு சமமாக எப்படி சொல்லக்கூடும். ஜஸ்டிஸ் கட்சியார் உத்தியோகம் பெறுகிறார்கள் என்று சொல்வதானால் உத்தியோகம் பெறக்கூடாது என்று எந்த தேசீய திட்டம் சொல்லுகிறது. காங்கிரசிலாகட்டும் வேறு எதிலாகட்டும் சர்க்காரோடு ஒத்துழையாமை என்பதே கிடையாது. உத்தியோகங்களோ இருக்கின்றன; இதை என்ன செய்வது. ஜஸ்டிஸ் கட்சியார் இந்த உத்தியோகங் களை வேண்டாமென்று சொல்வதன் மூலம் சுயமரியாதைக்காவது சுயராஜ்யத் திற்காவது காங்கிரசுக்காவது லாபமுண்டா? அப்படியிருக்க ஜஸ்டிஸ் கட்சி யார் உத்தியோகம் பெறுகிறார், உத்தியோகம் பெறுகிறார் என்று சொல்லுவதின் அர்த்தமென்ன? மொத்தத்தில் நமது தேசத்தில் உள்ள உத்தியோகம்தான் எவ்வளவு? காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக் கொண்ட பிராமணர்கள் அனுபவிப்பது எவ்வளவு? மிதவாதிகள் என்று சொல்லிக் கொண்ட பிராமணர்கள் அனுபவிப்பது எவ்வளவு? இவர்கள் சந்ததிகள் அனுபவிப் பது எவ்வளவு? உண்மையில் ஒன்றிலும் சேராத மக்கள் அனுபவிப்பது எவ்வளவு? இந்தக் கணக்குப் பார்த்தால் ஜஸ்டிஸ் கட்சியார் அனுபவிப்பது எவ்வளவு? என்பதும், அதினால் சர்க்காருக்கு ஏற்பட்டு விட்டதாகச் சொல்லும் பலம் எவ்வளவு? என்பதும், அவர்கள் அனுபவிக்காவிட்டால் சர்க்கார் பலம் எவ்வளவு குறையும் என்பதும், அதோடு பார்ப்பனரல்லாதார் கதி என்னவாகும்என்பதும் விளங்காமல் போகாது. பொதுவாக ஜஸ்டிஸ் கட்சியின் அரசியல் திட்டத்தை ஒத்துழையா மனப்பான்மை கொண்டவர்கள் எவரும் ஆதரிக்க முடியாது என்பதை நாமும் ஒப்புக் கொள்ளுகிறோ மானாலும் பார்ப்பனரல்லாதார் நன்மையை உத்தேசித்து ஜஸ்டிஸ் கட்சியு டனும் அவசியமேற்பட்டால் சர்க்காருடன் ஒத்துழைப்பதாக டாக்டர் நாயுடு காரு அவர்கள் சொல்லியுமிருக்கிறார். ஆதலால் டாக்டர் நாயுடு காரு வாக்குப்படியே சுயராஜ்யக் கட்சி பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் பார்ப்பனரல்லாதாரை அடியோடு ஒழிக்க கட்டுப்பாடாய் வேலை செய்கிற கக்ஷியாய்ப் போய்விட்டதால் பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு உழைக்கிறவர் கள் சர்க்காரோடு ஒத்துழைக்காவிட்டாலும் ஜஸ்டிஸ் கக்ஷியா ரோடாவது



ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதுவும் இல்லா விட்டாலும் அதற்கு கெடுதி செய்யாமலாவது இருக்கக் கடமைப்பட்டிருக் கிறார்கள். பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்படப் போகும் ஆபத்தை நீக்கும் பொருட்டும் தேசீய உணர்ச்சியை வளர்க்கும் பொருட்டும் 8.10.26 - ல் அல்லது 9.10.26 -ல் சென்னை 'தமிழ்நாடு' ஆபீசில் கூட்டப்படும் தேசீயவாதிகள் மகாநாட்டுக்கு இதை விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 03.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# நவசக்தி

இத் தலைப்பைக் கண்டவுடன் 'நவசக்தி'க்கும் 'குடிஅரசு'க்கும் ஏதாவது போர் நிகழுமோ என பலர் சங்கடப்படவும், பலர் சந்தோஷப் படவும், பலர் வேடிக்கைப் பார்க்கலாம் என்று நினைக்கவும் இடங் கொடுக்குமோ என்று நினைக்கிறோம். ஆனாலும் அம்மாதிரியாக எதிர்பார்ப்பவர்கள் கண்டிப்பாய் ஏமாற்றமடையக் கூடும். நிற்க, சென்ற 'குடி அரசு' இதழில் ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்காரை ஸ்ரீமான் முதலியாரவர்கள் தொழிலாளர் சங்கத்திற்கு அழைத்து அவரை அறிமுகப்படுத்தி வைத்ததைப் பற்றி எழுதியிருந்தோம். அதைக் கண்டு அவரது 'நவசக்தி' 'குடிஅரசை' ச்சீறி இருக்கிறது. ஆனால் அதற்காக நாம் சீற்றம் கொள்ளவில்லை. தொழிலாளருக் கென்றே அவதரித்தவர் எனத் தொழிலாளரின் நன்மதிப்பையும், பின்பற்று தலையும் பெரிதும் பெற்ற ஸ்ரீமான் முதலியாரவர்கள் வாக்கால் "ஸ்ரீமான் அய்யங்கார் தொழிலாளர் விஷயத்தில் மிகுந்த சிரத்தை உள்ளவர் என்றும், காங்கிரஸ் அக்கிராசனப் பிரசங்கத்தில் தொழிலாளரைப் பற்றிக் கூற வேண்டும் என்றும், ஸ்ரீமான் அய்யங்கார் சட்டசபையில் தொழிலாளருக்கு ஏற்ற சீர்திருத்தங்கள் செய்ய வேண்டு மென்றும்" கேட்டுக்கொண்டால் இந்தத் தேர்தல் காலத்தில் தங்கள் ஓட்டுகளை வினியோகிக்கும் விஷயத்திலாகட்டும், தேர்தலுக்கு உதவி செய்யும் விஷயத்திலாகட்டும் தொழிலாளர்களின் மனப்பான்மை என்னவாகும் என்பதுதான் நமது கவலையே ஒழிய 'நவசக்தி' சொல்லுகிறபடி பிரசாரத்தில் கலவாது விலகி நிற்கும் ஸ்ரீமான் முதலியாரை 'குடி அரசு' வலிய ஈர்க்கவில்லை என்பதை உறுதி கூறு கிறோம். ஆனால் ஒரு சந்தேகம்; ஓட்டுகள் இருக்கும் தொழிலாளர் சகோ தரர்களிடம் தேர்தலுக்கு நிற்கும் ஸ்ரீமான் அய்யங்காரை அழைத்துப் போய், அய்யங்கார் தொழிலாளருக்கு உழைத்தவர், அவர் இன்னமும் உழைக்க வேண்டும், தொழிலாளருக்கு சட்டசபையில் இன்னது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டால் (24.9.26 சுதேசமித்திரனில் காண்க) இது வெளிப்படையான பிரசாரமல்ல என்று ஒப்புக் கொள்ளுவதானாலும் மறைமுகமான பிரசாரம் என்றாவது எண்ண, இந்த சந்தர்ப்பம் இடம் கொடுக்குமா கொடுக்காதா என்பதைப் பொது மக்களே சொல்லட்டும்!

அல்லாமலும் ஸ்ரீமான்கள் டாக்டர் நாயுடு, ஆரியா, நாயக்கர், சக்கரை செட்டியார் ஆகிய இவ்வளவு பெயரையும் வைது கொண்டும் ஜெயிலில் வைக்கப் பிரயத்தனப்பட்டுக் கொண்டும் இருக்கிற ஒருவரைப் பற்றி இது



சமயம் நல்லுரை பகரவேண்டிய அவசியம் நமது முதலியாரவர்களுக்கு வருமானால் அதைப்பற்றி யார் மனந்தான் வெதும்பாமல் இருக்கும். இவற்றைப் பற்றி 'குடி அரசு' பிரஸ்தாபித்ததைக் கண்டு 'நவசக்தி' சீறி விழுந்து 'குடி அரசு' வெறுக்கத்தக்க உரைகளைப் பெய்திருக்கிறது'' என்று எழுதி இருக்கிறதின் திறத்தை அறிய பொது மக்களுக்கே விட்டு விடுகி றோம். அல்லாமலும் நவசக்தியையோ ஸ்ரீமான் முதலியார் அவர்களையோ இவ் விஷயத்தில் குற்றம் சொல்ல வேண்டும் என்னும் எண்ணத்துடன் ஒரு எழுத்தும் எழுதவில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம் .

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 03.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# இந்தியாவின் 'ஏக தலைவ'ரான ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காரின் முடிவான லக்ஷியம்

எல்லா இந்திய காங்கிரஸ் தலைவரும், எல்லா இந்திய சுயராஜ்யக் கட்சித் தலைவரும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், தென்னாட்டுப் பார்ப்பனத் தலைவரும், மாஜி அட்வொகேட் ஜெனரலும் ஆகிய 'ஏக தலைவரான' ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்காருக்கு இன்னும் மூன்று லக்ஷியம் தான் இருக்கிறதாம்.

அதாவது:-

1. ஸ்ரீமான்கள் ஏ.ராமசாமி முதலியாரவர்களையும், பனகால் ராஜாவையும் சென்னை சட்டசபையில் ஸ்தானம் பெறாதபடி செய்துவிடவேண்டும்.

2. தான் இந்தியா சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.

3. ஸ்ரீமான்கள் ஈ.வெ.ராமசாமி நாயக்கரையும், ஆரியாவையும் ஜெயிலுக்கு அனுப்பிவிட வேண்டும்.

ஆகிய இம்மூன்று லக்ஷியங்களும் நிறைவேறிவிட்டால் பிறகு, தான் ராஜீய வாழ்விலிருந்தே விலகி விடுவாராம். ஏனெனில் ஒரு மனித னுக்குச் செல்வம், பெண்,கீர்த்தி ஆகிய மூன்று சாதனங்கள்தான் லக்ஷியமான தாகுமாம். அவற்றில் முதல் இரண்டைப்பற்றி தான் திருப்தியடைந்தாய் விட்டதாம். மூன்றா வதான கீர்த்திக்கு முட்டுக்கட்டையாக மேற்சொன்னபடி சென்னை சட்ட சபையில் ஸ்ரீமான்கள் ஏ.ராமசாமிமுதலியார், பனகால் அரசர் ஆகியவர்களும் இந்தியா சட்டசபைக்குப் போகாமல் இருக்கும்படி தடை செய்வதும், ஸ்ரீமான்கள் நாயக்கர், ஆரியா ஆகியவர்கள் தன்னைத் தூற்றுவதும் ஆகிய காரியங்கள்தான் தடங்கலாயிருக்கிறதாம். அய்யோ பாவம்! இம்மூன்று காரியங்களும் அய்யங்கார் இஷ்டம் போல் நிறைவேறினா லாவது அய்யங்காரின் கடைசி லக்ஷியம் நிறைவேறுமா என்பது நமக்கு சந்தேகமாகவே இருக்கிறது.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 03.10.1926**



# சென்னைத் தொழிலாளர்களும் தேர்தல் கூட்டங்களும்

ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் அவர்கள் தொழிலாளர்களுக்கு நமது ஸ்ரீமான் முதலியார் அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பிறகு சென்னையில் ஜஸ்டிஸ் கட்சியார்களால் ஏற்படுத்தப்படும் கூட்டங்களில் ஆலைத் தொழிலாளர்கள் கலகம் செய்வதாக 'திராவிடனில்' காணப்படுகிறது. இதில் உண்மை இருக்கிறதோ இல்லையோ; ஆனாலும் நாம் நமது தொழிலாளர், பார்ப்பனரல்லாதார் ஆகிய சகோதரர்களை ஒன்று கேட்கிறோம். அதாவது, நவம்பர் மாதம் 8 உ (சட்டசபைத் தேர்தல் தீர்ந்த தற்குப்)பிறகு இந்தப் பார்ப்பனர்கள் நமது தொழிலாள சகோதரர்களையாவது மற்றும் இப்போது அவர்கள் நியமித்துக் கொண்டிருக்கும் பார்ப்பன ரல்லாதார்களையாவது திரும்பிப் பார்ப்பார்களா, கவனிப்பார்களா என்பதை தயவு செய்து யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 03.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# உண்மையான தீபாவளி

தீபாவளி என்பது வருஷத்திற்கொருமுறை வந்து, பெருவாரியான இந்து குடும்பங்களுக்கு சந்தோஷத்தையும் ஆனந்தத்தையும் கொடுத்து தங்கள் குழந்தை குட்டிகள், மக்கள், மருமக்கள் முதலானவர்களோடு களிக் கும் ஒரு பெரிய பண்டிகையாகும். அப்பண்டிகையன்று ஏழையானாலும் பணக்காரனானாலும் கூலிக்காரனானாலும் முதலாளியானாலும் பண்டிகை யை அனுபவிப்பதில் வித்தியாசமில்லாமல் தங்கள் தங்கள் சக்திக்குத் தகுந்தபடி ஸ்நானம் செய்வதும், புது வஸ்திரங்களை அணிவதும், பலகாரங் களை உண்பதும் முக்கிய கொள்கையாகும். இக்கொள்கைகள் எந்த தத்துவங்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது என்பதில் எவ்வளவு அபிப்பி ராய பேதங்கள் இருந்த போதிலும், பொதுவாய் மக்கள் சந்தோஷத்திற்கு புதிய வஸ்திரங்களையே அணிய வேண்டுமென்றிருப்பதானால் ஏழைத் தொழிலா ளருக்கு ஒரு விடுதலையும் ஏற்பட்டு வந்ததென்பது அபிப்பிராய பேதமில்லா மல் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். தற்கால அனுபவத்திலோ சந்தோஷமும் களிப்பும் பலவிதமாயிருந்தாலும், பெரும்பாலும் மேற்படி தீபாவளியானது ஏழைத் தொழிலாளர்களுக்கு பெருந் துரோகத்தை செய்வ தற்கே வருவதாகவும் போவதாகவும் ஏற்பட்டு விட்டது. இவ்வித துரோகத் திற்கு பணக்காரர்களும் உத்தியோகஸ்தர்களுமேதான் பெரும்பாலும் ஆதரவளிப் பவர்களாயிருக்கிறார்கள். காரணமென்னவென்றால் பட்டு சேலைகளும், பட்டு துப்பட்டாக்களும், சரிகை சேலைகளும், சரிகை துப்பட் டாக்களும், மல்லுகளும், சல்லாக்களும் இவர்கள்தான் வாங்குகிறார்கள். அதோடு இவர்களைப் பார்த்து இவர்களைப் போல் நடிக்க வேண்டுமென் கிற சிலர் தங்களுக்குத் தகுதியில்லாதிருந்தாலும், கஷ்டப்பட்டு இவற்றையே வாங்க ஆசைப்படுகிறார்கள். கூலிக்காரர்களாகவும் ஏழைகளாகவும் உள்ளவர் களுக்கு இந்த முதலாளிகளும் பணக்காரர்களுமாயிருப்பவர்கள் துணி வாங்கிக் கொடுக்கும் முறையிலும் வெளிநாடுகளிலிருந்து வந்த துணிக ளையே வாங்கிக் கொடுக்கவும் செய்கிறார்கள். இத்தியாதி காரணங்களால் தீபாவளி வருகிறது என்றால் பெரும்பாலும் ஏழை நூற்புக்காரர்களுக்கும், கை நெசவுக்காரர்களுக்கும் பெரியதுரோகமும் கொடுமையும் வரப்போ கிறது என்றுதான் அஞ்ச வேண்டியதாக இருந்து வருகிறது. மகாத்மா காந்தியின் சகாப்தமானது இத்தீபாவளிப் பண்டிகையை தேசத்திற்கும் ஏழை மக்க ளுக்கும் உண்மையான சந்தோஷத்தையும் நன்மையையும் கொடுக்கத்



தக்கதான பரிசுத்த பண்டிகையாக்க வேண்டுமென்று மூன்று நான்கு வருஷங்களாக எவ்வளவோ பிரயத்தனங்கள் பட்டும் இன்னும் அது சரியான பலனை கொடுக்குமென்று நம்புவதற்கு இடமில்லாமலிருக்கிறது. ஒரு குடும்பத்திற்கு தீபாவளி வருவதாயிருந்தால் தங்கள் மக்களையும் , மரு மக்களையும் சேர்த்து வைத்துக்கொண்டு ஒவ்வொருவரையும் பார்த்து உனக்கு எந்த மாதிரி பட்டு வேண்டும்? உனக்கு என்ன மாதிரி துப்பட்டா வேண்டும்? என்று கேட்பதும், என்ன மாதிரியான பட்டோ, துப்பட்டாவோ, சேலையோ வாங்கினால் அவர்கள் திருப்தி அடைவார்கள் என்பதையும் மாத்திரம் யோசிக்கிறார்களே ஒழிய, என்ன மாதிரி துணி வாங்கினால் நம் நாட்டில் தினம் ஒரு வேளை வயிறார கஞ்சி குடிப்பதற்குகூட மார்க்கமில் லாமல் தங்கள் மானத்தையும் கற்பையும் விற்று ஜீவிக்க வேண்டி கட்டாயப் படுத்தப்படுகிற ஏழை நூல் நூற்பவர்களையும் கை நெசவுக்காரர் களையும் திருப்தி செய்வதற்கு உதவும் என்று இவர்கள் கொஞ்சம்கூட எண்ணுவதே யில்லை. கிராமங்களில் கஞ்சிக்குக் கஷ்டப்பட்டு பட்டணங்களுக்கு வந்து தெருத் தெருவாய் அலையும் ஸ்திரீகள் நம் சகோதரிகள் என்பதை கொஞ்ச மும் கவனிப்பதில்லை. இந்த ஸ்திரீகளின் வாழ்வும், தாழ்வும் நமக்கும் சம்பந்தப்பட்டதென்பதை கொஞ்ச மும் உணர்வதில்லை. நெசவுத் தொழிற் காரர்கள் தங்களுக்குச் சரியான தொழிலில்லாமல் வெளி நாடுகளுக்குக் கூலி களாகச் சென்று வெள்ளைக்காரத் தோட்டக்காரர்களிடமும் கங்காணிகளிட மும் தங்கள் பெண்டு பிள்ளைகளையும் பறிகொடுத்து, மானங்கெட்டு, கற்பிழந்து கஷ்டப்படுகிறார்களேயென்று கொஞ்சமும் கவலைப்படுவதே யில்லை. அவர்களும் நம்முடைய சகோதரிகள்தானே. அவர்கள் கற்பும் மானமும் கெட்டு கஞ்சிக்கு அலைய நாம் தானே காரணமாயிருந்து வருகிறோம் என்று கொஞ்சமும் சிந்திப்ப தேயில்லை.

உத்தியோகமும், பணமும், அந்தஸ்தும் வந்தால் முதலாவது தேசாபிமானம் ஓடிப்போய் விடுகிறது. ஏழைகளிடத்தில் அன்பும் , தயாளமும் ஏற்படும் வழி அடைபட்டுப் போய்விடுகிறது. இவைகளை யெல்லாம் பார்க்கும் பொழுது ஒரு தூக்குத் தண்டனை உள்ளவருக்கு தூக்கிலிடும் தேதி கிட்ட வர வர எவ்வளவு பயமும் கஷ்டமும் ஏற்படுமோ, அதுபோல் தீபாவளி வருகிற தென்றால் தீபாவளி நாள் கிட்ட நெருங்க நெருங்க ஐயோ! நம் ஏழைக் கூலிக்கார ஸ்திரீகள் வயிற்றிலும் வாயிலும் மண்ணைப் போடுவதான காரியங்கள் நடைபெறப் போகிற நாள் வரப் போகிறதே! வரப் போகிறதே! என்ற பயமும் கஷ்டமும் மனவேதனையும் ஏற்படச் செய்கிறது. எவ்வளவோ நன்மைக்காக ஏற்பட்ட பண்டிகை இக் கொடுமைக்கு உதவவா வர வேண்டும்? என்று மனம் பதறுகிறது. நமது நாட்டில் நன்மைக்காக ஏற்பட்ட காரியங் களெல்லாம் எப்படி தீமைக்கு உதவப்பட்டு வருகிறதோ அதுபோல நமது தீபாவளியும் இவ்வளவு பெரிய தீமைக்கு ஆளாகிறதே என்று தேச க்ஷேமத் தில் கவலையுள்ளவர்களும் ஏழைகளிடத்தில் அன்புள்ளவர்களும் கவலைப் படாமலிருக்கமுடியா தென்றே நம்புகிறோம். தீபாவளியின் போது



RangaRakes
tamilnavarasam.com

அர்த்தமில்லாமல் சுடும் வெடி மருந்து, பட்டாசுக்காக நம் நாட்டிலிருந்து எவ்வளவு பணம் வெளி நாட்டிற் குப் போகிறதென்பதை நமது நாட்டு ஜனங்கள் அறிவதேயில்லை. ஏதோ சிலர் அறிந்தாலும் அதைப்பற்றி கவலைப்படுவதேயில்லை. ஒரு தேசம் முன்னுக்கு வரவேண்டுமானால் அத்தேச மக்களுக்கு கடுகளவாவது தேசாபி மானமும், பரோபகார எண்ண மும் ஏற்பட்டால்தான் முன்னுக்கு வரமுடியும். அது இல்லாத நாடு எவ்விதத்தி லும் முன்னுக்கு வராது. ஆதலால், இவ்வருஷ தீபாவளியை தேச விடுதலைக் கும் ஏழைகளின் கஷ்டம் நீங்குவதற்கும் ஏழைத் தொழிலாள சகோதர சகோதரிகள் நன்மைக்கும் உப யோகப் படும்படி கொண்டாட வேண்டுமா னால் பணக்காரர்கள், உத்தி யோகஸ்தர்கள், வக்கீல்கள், முதலாளிகள் முதல் ஏழைகள், கூலிக்காரர்கள், நடுத்தர வகுப்பினர் முதலிய எல்லோரும் தீபாவளி யின் பொருட்டு தங்களுக்காகவும் தங்கள் பெண்டு பிள்ளைகள், மக்கள், மருமக்கள், வேலைக்காரர்கள், ஏழைகள் முதலியவர்களுடைய ஒவ்வொரு வருடைய திருப்திக்காகவும் செலவு செய்ய நினைக்கும் ஒவ்வொரு பைசாவும் நம் நாட்டிலேயே இருக்குமா? நம்நாட்டில் கஞ்சிக்கில்லாமல் திண்டாடும் ஏழை களுக்கும், கூலிக்கார சகோதர சகோதரிகளுக்கும் போய்ச் சேருமா? அவர் கள் திருப்தி அடைவார்களா? என்று யோசித்துப் பார்த்தே செய்ய வேண்டி யது முக்கியமான கடமையாகும்.

அப்படிச் செய்வது வாஸ்தவமானால் துணி வாங்குவதில் வெளி நாட்டுக்குப் பணம் போகும்படியான பட்டோ, சரிகையோ, வெளிநாட்டு மல்லோ, சல்லாவோ, இன்னும் பலமாதிரியான வெளிநாட்டு சாமான்க ளையோ வாங்காமல் நம்நாட்டில் நம் ஏழைச் சகோதரிகளால் கைராட்டினத் தில் – நூற்கப்பட்டு ஏழைச் சகோதரர்களால் கைத்தறியில் நெய்யப்பட்டது மான கதர் துணியையே வாங்க வேண்டும்; அதையே உடுத்தவேண்டும்; அதன் தத்துவத்தை நமது மக்கள், மருமக்கள், பெண்டு பிள்ளைகளுக்குச் சொல்லி அதையே அவர்களையும் உடுத்தச் செய்ய வேண்டும். இதனால் எத்தனை ஏழைக் குடும்பங்களில் தீபாவளி எவ்வளவு சந்தோஷமாய் நடைபெறும். இப்படிச் செய்யாவிட்டால் எத்தனைக் குடும்பங்களுக்கு தீபாவளி இல்லாமல் போய்விடும் என்பதையும் அறியாதவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். இப்படியே ஒவ்வொருவரும் நினைத்து எல்லோரும் கதர் வாங்க ஆரம்பித்தால் ஒரு சமயம் எல்லோருக்கும் கதர் கிடைப்பது கஷ்டமாய்ப் போனாலும் போக லாம். ஆதலால் இந்த எண்ணம் உள்ள தேசாபிமானிகளும் ஏழைக்கிரங்கு பவர்களும் இப்பொழுதே கதர் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். புதுப் பாளையத்திலும் திருப்பூரிலும் இன்னும் சில இடங்களிலும் மொத்தமாய் கதர் கிடைக்கும். ஈரோடு, சேலம், மதுரை,திருநெல்வேலி, காரைக்குடி, விருதுநகர், திருச்சி, தஞ்சாவூர், மன்னார் குடி, கோயமுத்தூர், கடலூர், மதராஸ், மாயவரம், வேலூர், ராஜபாளையம் முதலிய இடங்களில் காங்கிரஸ் டெப்போவும் காங்கிரஸ் நற்சாக்ஷிப் பத்திரம் பெற்ற கதர்க் கடைகளும் இருக்கின்றன.



சர்க்கா சங்கத்தார் கூடுமானவரை விசாரித்து சுத்தமாய் கதர் உற்பத்தி செய்பவர்களுக்கும் விற்பவர்களுக்கும் காங்கிரஸ் நற்சாக்ஷிப் பத்திரங்களும் கொடுத்திருக்கிறார்கள். வாங்குகிறவர்கள் தயவு செய்து கவனித்து சுத்த கதராய்ப் பார்த்து வாங்க வேண்டும். போலி கதர், மில் நூல் கதர், வெளிநாட்டு நூல் கதர் இவைகள் வாங்குவதால் தேசத்திற்கோ ஏழைச் சகோதர சகோதரிகளுக்கோ ஒருவித நன்மையும் உண்டாகப் போவதில்லை.

( குடி நூல் ) **ஈ.வெ.ரா**

**குடி அரசு – கட்டுரை – 10.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# டாக்டர் வரதராஜுலு நாயுடுவுக்குப் பூச்சாண்டி காட்டல்

ஸ்ரீமான் டாக்டர் வரதராஜுலு நாயுடு சுயராஜ்யக் கட்சியைப் பார்ப்பனர் கட்சி என்றும், அதை ஒழிக்க வேண்டும் என்றும், தேர்தலில் சுயராஜ்யக் கட்சி வெற்றி பெற்றால் பார்ப்பன ஆதிக்கம் ஓங்குவதுடன் பார்ப்பன ரல்லாதாருக்கு மீளாத ஆபத்து வரும் என்றும் சொன்னதிலிருந்து, நமது பார்ப்பனரும், அவர்களிடம் கூலி பெற்று வயிறு வளர்க்கும் கூலிகளும், பத்திரிகைகளும் டாக்டர் நாயுடுவுக்குப் பூச்சாண்டி காட்ட ஆரம்பித்து விட்டார்கள். அதாவது "நாயுடு சங்கதியை வெளிப்படுத்தப் போகிறோம். அவர் ஜயிலில் நடந்து கொண்டதை வெளிப்படுத்துகிறோம்" என்று என்ன என்னமோ ஈனத்தனமாய்க் கூச்சல் போடுகின்றார்கள். அப்படியானால் டாக்டர் நாயுடுவின் செய்கை என்ன என்பதை ஒரு கை பார்த்தே விடலாம். சுயராஜ்யக் கட்சித் தலைவர்களைப் போல் கள், சாராயம் , பிராந்தி, சாப்பிடுகிறாரா? சுயராஜ்யக் கட்சி பிரதானிகள் போல் தேவடியாளைக் கூட்டிக் கொண்டு ஊர் ஊராய்த் திரிகிறாரா? அல்லது போன இடங்களிலெல்லாம் குச்சு புகுந்து அடிபட்டாரா? சாராயம் பிராந்தி விற்றுப் பணம் சம்பாதிக்கிறாரா? பத்திரிகையில் பேர் போடுவதாகவும் படம் போடுவதாகவும் சொல்லிப் பணம் சம்பாதித்தாரா? பத்திரிகைச் செல்வாக்கை உபயோகித்து மடாதிபதிகளிடம் பணம் வாங்கினாரா? மகனுக்கு உத்தியோகம் சம்பாதித் துக் கொண்டாரா? வாங்கின கடனை ஏமாற்றினாரா? அல்லது வீட்டில் மல் துணியும், பெண்சாதிக்குப் பட்டு, சல்லா முதலிய அன்னிய நாட்டுத் துணியும் உபயோகித்துக் கொண்டு மேடைக்கு வரும் போது கதர் கட்டிக் கொண்டு வந்து பொது ஜனங்களை ஏமாற்றுகிறாரா? திருட்டுத் தனமாய் சர்க்கார் அதிகாரிகளிடம் கெஞ்சி ஏதாவது தயவு பெற்றுக் கொண்டாரா? மந்திரி உத்தியோகம் வேண்டுமென்று யார் காலிலாவது விழுந்தாரா? பெரிய பெரிய உத்தியோகங்களையும் பதவிகளையும் பெறலாமென்று தனது உத்தியோகத்தை ராஜினாமா கொடுத்து ஜனங்களை ஏமாற்றினாரா? அல்லது இன்னமும் தனக்கு ஏதாவது ஒரு உத்தியோகமோ பதவியோ கிடைக்குமென்று எதிர்பார்க்கிறாரா? எந்த விதத்தில் அவர் 'பூளவாக்கை' வெளிப்படுத்தக் கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை. ஆதியில் பார்ப்பனரல்லாதார் கட்சி பலமாய் ஆரம்பித்த காலத்திலும், அதைக் கொல்ல இம்மாதிரியே சுக்கிரீவனைப் போலவும் விபூஷணனைப் போலவும் அனுமார்களைப் போலவும் ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடு வையும் கலியாணசுந்திர முதலியாரையும் மற்றும் பல பேர்களையும் தங்கள் சுவாதீனப்படுத்திக் கொண்டு அவர்களுக்கு ஜாதி, குல அபிமானம் இல்லாமல் செய்தும், அவர்கள் மூலமாய் பார்ப்பனரல்லாதார் கட்சியைத் தலையெடுக்க வொட்டாமல் செய்ய பாடுபட்டதுமல்லாமல் இப்பொழுதும் அவர்களை மிரட்டிப் பூச்சாண்டி காட்டுவதானால் இவர்கள் பூச்சாண்டிக்கு யார்தான் பயப்படுவார்கள்? இவர்கள், இவர்களைப் பற்றி வெளியாக்கப் போகும் விஷயம் என்னவென்றுதான் ஒரு கை பார்க்கலாம் என்றே தயாராயிருக்கிறோம். இதன் பலனாகவாவது அரசியல் துறையிலுள்ள எல்லாருடைய யோக்கியதையையும் வெளியாக்கக் கூடுமென நினைத்தே அவற்றை மனப்பூர்வமாய் வரவேற்கிறோம் .

**குடி அரசு - கட்டுரை - 10.10.1926**





RangaRakes tamilnavarasam.com

# 5000 ரூபாய் இனாம்

தமிழ்நாட்டுச் சார்பாக இந்திய சட்டசபைக்குச் சென்ற தடவை ஒருவர் தவிர எல்லோரும் ஐயங்கார் பார்ப்பனர்களாகவே நின்றார்கள். இந்தத் தடவையும் அதேமாதிரி எல்லோரும் ஐயங்கார் பார்ப்பனர்களாகவே நிற்கிறார்கள். பார்ப்பனரல்லாதார் சார்பாய் இந்திய சட்டசபைக்கு சென்னை நகரத் தொகுதிக்கு நிற்கும் ஸ்ரீமான் சக்கரை செட்டியாருக்கு விரோதமாய் ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்கார் நிற்கிறார். எப்படியாவது ஸ்ரீமான் சக்கரை செட்டியாரை தோற்கடித்துத்தான் வெற்றிபெற ஆசைப்பட்டு பணங் கொடுத்து ஆள்களைச் சேர்த்து பொய்ப் பிரசாரம் செய்கிறார். இதற்காகத் தன்னைப் பெரிய தியாகி என்று சொல்லச் சொல்லுகிறார்; தனக்கு ஓட்டுக் கொடுத்தால் சீக்கிரம் சுயராஜ்யம் வருமென்று சொல்லச் சொல்லுகிறார். ஆனால் ஒருவராவது இதுவரை ஐயங்கார் என்ன தியாகம் செய்தார் என்று சொல்லவில்லை. ஒருவராவது இதுவரை ஐயங்காரின் சுயராஜ்யத் திட்டம் இன்னது என்று சொல்லவில்லை. ஐயங்கார் தியாகமெல்லாம் வக்கீல் உத்தி யோகத்தில் மாதம் பத்தாயிரம் இருபதாயிரம் சம்பாதித்துப் பணம் சேர்த்து வருவதோடு, காலி ஆசாமிகளுக்கும் கொஞ்சம் கூலி கொடுத்து பார்ப்பனரல் லாதார் கட்சியையும் பார்ப்பனரல்லாதார் தலைவர்களையும் திட்டும்படி சொல்லுவதும், கூட்டங்களில் கலகம் செய்யச் செய்வதும், பணம் கொடுத்துப் பிரசாரம் செய்து காங்கிரஸ் தலைவர் பதவி பெற்றதுமானவை தவிர வேறு என்ன என்ன தியாகங்கள் செய்திருக்கிறார் என்று சொல்லுகிற வர்களுக்கு 5000 ரூபாய் இனாம்.

ஸ்ரீமான் ஐயங்காரின் சுயராஜ்யத் திட்டம் பார்ப்பனரல்லாத கட்சியை ஒழித்து, பார்ப்பனரல்லாத மந்திரிகளைத் தள்ளிவிட்டு, அந்த ஸ்தானத்தில் தாங்களும் தங்கள் இனத்தாரும் உட்கார்ந்து கொண்டு,பார்ப்பனரல்லாதார் அனுபவித்து வருவதாய்ச் சொல்லும் அதிகாரங்களையும், வேறு பதவிக ளையும், உத்தியோகங்களையும் பிடுங்கிப் பார்ப்பனர்களுக்குக் கொடுத்து பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதைத் தவிர உண்மையான சுயராஜ்யத் திட்டம் ஏதாவது அவருள்ளத்தில் இருக்கிறதா என்று கண்டு பிடித்துச் சொல்லுகிறவர்களுக்கு 1000 ரூபாய் இனாம். ஸ்ரீமான் ஐயங்காருக்காகப் பிரசாரம் செய்கிறவர்களிலாவது மேடைமேல் நின்று பேசுகிறவர்களிலாவது பத்திரிகையில் எழுதுகிறவர்களிலாவது ஸ்ரீமான் ஐயங்காரிடம் கூலி





வாங்காமல் பேசுகிற எழுதுகிற ஒரு நபரையாவது காட்டுபவர்களுக்கு 1500 ரூபாய் இனாம்.

இப்போது அவர் கூலி கொடுத்து பொய்ப் பிரசாரம் செய்விக்கும் ஆள் களையாவது கூட்டத்தில் கலகம் செய்விக்கும் ஆள்களையாவது நவம்பர் மாதம் 8-ந் தேதி (எலெக்ஷன்) ஆனபிறகு கிட்டத்தில் சேர்ப்பார் என்று ரூபிப்பவருக்கு 2000 ரூபாய் இனாம்.

சென்னை வாசிகளே! சக்கரை செட்டியாரின் தோல்வி பார்ப்பன ரல்லாதாரின் தோல்வியாகும். ஐயங்காரின் வெற்றி பார்ப்பன ஆதிக்கத்திற்கு வெற்றி ஆகும். ஆதலால் வீணாகக் கூலிக்கு மாரடிப்பவர்கள் வார்த்தை களை நம்பி மோசம் போகாதீர்கள்.

**குடி அரசு - கட்டுரை - 10.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# வெற்றி நமதே

## சட்டசபைத் தேர்தலில்
## பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு வெற்றி உறுதி

சென்னை மாகாண சட்டசபை முதலியவைகளுக்கு இம்மாதம் நாலாம் தேதி அபேக்ஷகர்கள் நியமனம் செய்யப்பட்டு விட்டது. அபேக்ஷ கர்கள் பற்பல கக்ஷிகளின் பெயரைச் சொல்லிக் கொண்டு நியமனம் பெற்று இருந்தாலும் அவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர் கட்சி, பார்ப்பனரல்லாதார் கட்சி என்னும் இரண்டு கட்சிகளுக்குள்ளாகவே ஐக்கியப்பட்டிருக்கிறார்கள். ஆனால் சிலர் இரு கட்சிகளையும் பற்றி லட்சிய மில்லாமல் தங்கள் சுயநல மொன்றையே பிரதானமாய்க் கருதி நின்றிருக் கலாம். அதாவது, பார்ப்பன ரல்லாதார்களில் யார் யார் சுயராஜ்யக் கட்சியின் பேரால் நிறுத்தப்பட்டிருக் கிறார்களோ அவர்களில் பெரும்பாலோர் சுயநலத்தை உத்தேசித்தே அக்கட்சியின் பெயரைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். உதாரணமாக, சுயராஜ்யக் கட்சியில் இருக்கும் பார்ப்பன ரல்லாதாராகிய ஸ்ரீமான்கள் முத்தையா முதலியார், துளசிராம் போன்ற பலரைச் சொல்லலாம். இவர்கள் முதலில் ஜஸ்டிஸ் கக்ஷியில் இருந்து மனஸ்தாபத்துடன் விலகினவர்கள். இப்போது சுயராஜ்யக் கட்சியின் பெயரைச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இதற்குக் காரணம் இதுசமயம் பார்ப்பனர் தயவில்லாமல் சட்டசபைக்கு வர முடியாது என்கிற பயமும், எதிர்க் கட்சியில் இருந்து மிரட்டினால் ஜஸ்டிஸ் கட்சியார் பயந்து கொண்டு ஏதாவது உத்தியோகம் கொடுக்க மாட்டார்களா என்கிற தந்திரமும் தான். பார்ப்பனர்களும் எப்படியாவது யாரைக் கொண்டாவது ஜஸ்டிஸ் கட்சியை ஒழித்து விடவேண்டும் என்கிற கொள்கை யுடையவர்களாயிருப்பதால் அங்கு யார் சண்டை போட்டுக் கொண்டு வருகிறவர்களானாலும், அவரைப் பூரண கும்பத்துடன் வரவேற்கிறார்கள். மற்றும் பலர் தாங்கள் இதுசமயம் சுயராஜ்யக் கட்சிப் பெயரைச் சொல்லிக் கொண்டால் பார்ப்பனர் உதவி செய்து சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கச் செய்து விடுவார்கள்; பிறகு எப்படி வேண்டுமானாலும் திரும்பிவிடலாம் என்கிற எண்ணத்தின் பேரிலேயே அந்தக் கட்சியின் பெயரைத் தற்கால சாந்தியாகச் சொல்லிக்கொண்டு நின்றிருக்கிறார்களே அல்லாமல் உண்மை யான கட்சிப் பற்று என்று சொல்லவே முடியாது. மற்றும் பலருக்கு எந்தக் கட்சியின் பெயரையும் சொல்லிக் கொள்வதற்கு தைரியமில்லாதவர்களாகி



ஒரு கட்சியிலும் சேராதவர்கள் என்று சொல்லிக்கொண்டு சுயேச்சைவாதி களாக நின்றிருக்கிறார்கள்.

இம்மாதிரி இதுவரை சென்னை சட்டசபைக்குப் பொதுத் தேர்தலில் நின்ற எல்லா அபேக்ஷகர்களிலும் 64 பேர் சுயராஜ்யக் கட்சி காங்கிரஸ் கட்சி என்றும் சொல்லிக் கொள்பவர்கள்; 56 பேர் ஜஸ்டிஸ் கட்சி என்றும் 61 பேர் சுயேச்சைவாதிகள் என்றும் சொல்லிக் கொள்பவர்களாக நின்றிருந்த போதி லும், சுயராஜ்யக் கட்சித் திட்டத்தின்படி பணம் கொடுத்து முச்சலிக்காவில் கையெழுத்துச் செய்திருப்பவர்கள் 10 அல்லது 15 பேர் கூட இருக்கமாட்டார் கள். அன்றியும் எலக்ஷன் நடப்பதற்குள்ளாகக் கட்சி மாறுகிறவர்கள் பலர் இருக்கலாம். எலக்ஷன் ஆனவுடன் மாறுகிறவர்கள் பலர் இருக்கலாம். உதாரணமாக, ஸ்ரீமான்கள் திருச்சி சேதுரத்தினமய்யர், டி.எ.ராமலிங்கம் செட்டியார் போன்றவர்கள் நாட்டில் சுயராஜ்யக் கட்சிக்குச் செல்வாக்கிருக் கிறது என்கிற எண்ணத்தின் பேரில் சுயராஜ்யக் கட்சித் திட்டத்தில் கையொப் பமிட்டு ரூபாயும் கொடுத்தவர்கள்; இப்போது அக்கட்சிக்கு தேசத்தில் செல்வாக்கு இல்லை என்று தெரிந்தவுடன் தங்களை சுயேச்சைக் கட்சியார் கள் என்று விளம்பரப்படுத்திக் கொண்டார்கள். எப்படி இருந்த போதிலும் சட்டசபைகளில் சுயராஜ்யக் கட்சி என்கிற பார்ப்பனர் கட்சியும் ஜஸ்டிஸ் கட்சி என்கிற பார்ப்பனரல்லாதார் கட்சியும் தன் தன் நோக்கங்களை நிறை வேற்றும் போது பார்ப்பனர்கள் பார்ப்பன ஆதிக்கத்திற்குத்தான் ஓட்டுச் செய்வார்கள். பார்ப்பனரல்லாதார் பெரும்பாலும் சிலர் தவிர மற்றவர்கள் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்குத்தான் ஓட்டுச் செய்வார்கள் என்பது உறுதி. உதாரணமாக, தேவஸ்தான மசோதா வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானம் முதலியவை களில் ஸ்ரீமான்கள் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார், டி.எ. ராமலிங்கம் செட்டியார் ஆகியவர்கள் செய்கையைப் பார்க்கலாம். இது போலவேதான் சுயேச்சைவாதிகள் என்பாருள் பெரும்பாலோரும் நடந்து கொள்ளுவார்கள். ஆதலால் சுயேச்சைவாதிகளில் உள்ள பார்ப்பனர்களை சுயராஜ்யக் கட்சி யிலும், பார்ப்பனரல்லாதாரை ஜஸ்டிஸ் கட்சியிலும் சேர்த் துத் தான் கணக்குப் பார்க்க வேண்டும். மற்றும் தேர்தல் ஆனபிறகு சில பேர் சுயராஜ்யக் கட்சியில் இருந்தும் மெல்ல மெல்ல சுயேச்சை வாதியாகி கடைசியாக ஜஸ்டிஸ் கட்சிக்கு வரக்கூடும். ஏனெனில் இதுசமயம் சுயராஜ் யக் கட்சி என்கிற பார்ப்பனர் கட்சிக்குத்தான் பிரசாரம் செய்யவும் மக்களை ஏமாற்றவும் பத்திரிகைகளும் மடாதிபதிகள் பணமும் கூலி ஆட்களும் தாராளமாய் இருப்பதால் அதன் பெயரைச் சொன்னால்தான் அநுகூலங் கிடைக்குமென்று நம்பும்படியாக நமது பார்ப்பனர்கள் பொய்ப் பிரசாரம் செய்துவிட்டதால் இப்போது அந்தப்படி சொல்லிக் கொள்ள வேண்டிய தாயிற்று. ஆனால் சுயேச்சைவாதிகளிலும், சுயராஜ்யக் கக்ஷியாரிலும் பலபேர் ஜஸ்டிஸ் கக்ஷிக்கு வந்து சேருவார்கள் என்று எதிர்ப்பார்ப்பது போல் ஜஸ்டிஸ் கக்ஷியிலிருந்து சுயராஜ்யக் கக்ஷிக்கு யாராவது வந்து சேரு வார்களா என்று எதிர்பார்க்க முடியாது. இதை ஸ்ரீமான் சத்தியமூர்த்தியும் பார்ப்பனப் பத்திரிகைகளும் ஒப்புக் கொள்ளுகின்றன.



RangaRakes tamilnavarasam.com

ஏனெனில் அப்படிச் சேருகிறவர்களாயிருந்தால் இப்போதே பார்ப்பனர் விளம்பரங்களைக் கண்டு மயங்கிப்போய் அதில் போய்ச் சேர்ந்திருப்பார் கள். ஆதலால் பார்ப்பனப் பத்திரிகைகள் எவ்வளவு ஜால வித்தை செய்தாலும், எவ்வளவு பொய்ப் பிரசாரம் செய்தாலும், அடுத்துக் கூடும் சட்டசபை பார்ப்பன ஆதிக்கத்திற்கு உலை வைக்கக் கூடியதாகத்தான் முடியும். நமது பார்ப்ப னர்கள் தங்கள் ஆதிக்கத்திற்கு எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்து எத்தனையோ பார்ப்பனரல்லாத ஆட்களைச் சுவாதீனம் செய்து பார்த்தார் கள். ஒரே நிலையாய் ஒரு வருஷமாவது பார்ப்பனரோடு இருந்த ஒரு பார்ப்பன ரல்லாதார் பெயரையாவது கண்டுபிடிக்கக் கூடுமானால் பார்ப்பனரல்லாதா ரால் பார்ப்பனரல்லாதார் கட்சியைக் கெடுக்கக் கூடும் என்று நினைக்கலாம். இதுவரை பார்ப்பனர்கூடச் சேர்ந்திருந்த பார்ப்பனரல்லாதார் எல்லோரும் பார்ப்பனர் யோக்கியதை அறிந்து ஒவ்வொருவராக வெளி வந்து கொண்டு தான் இருக்கிறார்கள். இனியும் வெளிவரத்தக்க ஆட்கள்தான் அவர்களோடு இருக்கிறார்களே தவிர அவர்களுக்கு அனுகூலமாக யோக்கியமுள்ள ஒருவராவது இது சமயம் அவர்களிடம் இல்லை. உதாரண மாக, சென்னை பார்ப்பன பிரசங்க மேடைகளில் இருக்கும் ஆட் களைக் கவனித்துப் பார்த்தாலே தெரியவரும். ஆகையால் வரப்போகும் தேர்தலின் முடிவானது சென்ற வருஷம் பார்ப்பனரல்லாதார் கட்சியில் இருந்த சட்ட சபை மெம்பர் களின் எண்ணிக்கையை விட குறைந்தது 10 அங்கத்தினரா வது அதிகமாயி ருக்குமே தவிர எவ்விதத்திலும் குறையாது. வீணாக ஸ்ரீமான்கள் சத்திய மூர்த்தியின் ‘புரட்டையும்’ சுதேச மித்திரனின் ‘புளுகை யும்’ கண்டு யாரும் மயங்க வேண்டியதில்லை என்றும், எந்த விதத்திலாவது அடுத்த வருஷத்திய சட்டசபையில் பார்ப்பனர் கை உயர்ந்து விடுமோ என யாரும் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் உறுதி கூறுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 10.10.26**



# யாருக்கு ஓட்டு கொடுப்பது

**- சித்திரபுத்திரன்**

**ராஜு :** என்னப்பா சுந்தரம் சட்டசபை எலக்ஷன் வந்து விட்டதே, கண்டவர்கள் எல்லாம் அபேக்ஷகராய் நிற்கிறார்களே இவர்களில் யாருக்கு ஓட்டுப் போடுவது.

**சுந்தரம்:** யாருக்கோ ஒருவருக்குப் போட்டால் போகிறது. நாம் என்ன ஒத்துழையாதாரா? யாருக்கும் போடுவதில்லை என்று சொல்லுவ தற்கு. அதெல்லாம் மலையேறிப் போய்விட்டது. இப்பொழுதெல்லாம் ஒத்துழைப்பேற்பட்டதோடு ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு ஒத்துழைப் பதாய்ப் போய்விட்டது.

**ராஜு:** நீ சொல்லுவது சரிதான். ஆனாலும், அதிலும் தராதரம் இல்லையா?

**சுந்தரம்:** தராதரம் என்ன? சுயராஜ்ஜியக் கட்சிக்காரருக்குத்தான் போட்டு விடேன்.

**ராஜு:** அதென்ன அவ்வளவு அசார்சமாய்ச் சொல்லுகிறாய். சுயராஜ்ஜியக் கட்சி என்றால் என்ன? அதன் கொள்கை என்ன? அதன்றி வேறு கட்சிகள் என்ன என்ன இருக்கிறது? இவைகள் தெரிய வேண்டாமா?

**சுந்தரம்:** ஓஹோ ! இதுவே இன்னமும் உனக்குத் தெரியாதோ. சரி சரி, நீ சரியான தற்குறி போல் இருக்கிறாய். சுயராஜ்யக் கட்சி என்பது அரசியல் கட்சி என்று பெயர். அது முதலில் ஒத்துழையாமை கொண்ட மகாத்மா காங்கிரசுக்கு விரோதமாய் மகாத்மா ஜெயிலில் இருக்கும் சமயம் பார்த்து நமது பார்ப்பனர்கள் அதைக் கொல்லுவதென்றே தேசபந்து தாஸ் என்கிற ஒரு பார்ப்பனரல்லாத நபரை முன்னால் வைத்துக் கொண்டு ஆரம்பித்த கட்சி. தேசபந்து தாசுக்கு ஒத்துழையாமையின் பலனாய் கொஞ்சம் செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. அதை நமது பார்ப்பனர்கள் இதற்கு அவரை உபயோகப் படுத்தும்படி செய்துவிட்டார்கள். வெளியில் வந்த மகாத்மாவும் தேசபந்து



RangaRakes tamilnavarasam.com

தாஸை எதிர்க்க இஷ்டமில்லாததால் தாக்ஷண் ணியத்திற்குக் கட்டுப்பட்டு கொஞ்சங் கொஞ்சமாக விட்டுக் கொடுத்துக் கொண்டே வந்து கடைசியாக தானும் விலகி விட்டார். இதன் மத்தியில் தாசரும் செத்துப் போனார். கடைசி யாக இந்த சுயராஜ்ஜியக் கட்சி என்பது நமது பார்ப்பனர்கள் கைக்கே வந்து சேர்ந்தது. அவர்கள் இதை சர்க்காரை எதிர்ப்பதற்கு என்று சொல்லிக் கொண்டு பார்ப்பன ஆதிக்கத்திற்காக உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் சுயராஜ்ஜியக் கட்சி என்பது. மற்றொரு கட்சி ஜஸ்டிஸ் கட்சி என்று ஒன்று இருக்கிறது. அது ஆதியில் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காக இரண்டு உத்தம தேசபக்தர்களான ஸ்ரீமான்கள் டி.எம். நாயர் அவர்களாலும் சர்.பி.டி. தியாகராய செட்டியாராலும் ஏற்பட்டது. இதற்கும் நமது பார்ப்பனர்கள் ஒத்துழையாமையை கொல்ல செய்த சூழ்ச்சி போலவே ஸ்ரீமான்கள் வரத ராஜுலு நாயுடு, கலியாண சுந்தர முதலியார் என்கிற சில பார்ப்பன ரல்லாதாரைச் சேர்த்துக் கொண்டு அவர்களைத் தலைவர்களாக்கி அவர்கள் மூலமாகவே எவ்வளவோ சூழ்ச்சி கள் செய்து இதையும் கொல்லப் பார்த்தார் கள். என்ன செய்தும் எவ்வளவோ தத்துக்கும் ஆபத்துக்கும் தப்பி பார்ப்ப னரல்லாதார் என்கிற ஒரு கூட்டம் தென்னாட்டிலிருக்கிறது என்றும், அவர் களும் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் உலகமறியச் செய்த தோடு, மக்களுக்குச் சுயமரியாதை என்ற ஒன்று இருக்கிறது, அதை அடை வதுதான் மக்களின் பிறப்புரிமை என்று போதித்து பார்ப்பனர் ஏகபோகமாய் அனுபவிக்கும் அரசாங்க அதிகாரம், ஆதிக்கம், பதவி, உத்தியோகம் முதலியதுகளில் சிலதாவது பார்ப்பனரல்லாதாருக்கும் கிடைக்கும்படி செய்ததல்லாமல் பார்ப்பனரல்லாத பெரும்பான்மையான மக்களான ஒடுக்கப்பட்டவர்கள் முதலானவர்களுக்கும் ஒரு உணர்ச்சியை உண்டாக்கி அவர்களையும் மனிதராக்கப் பாடுபட்டு வருகிறது. இதுதான் ஜஸ்டிஸ் கட்சி என்பது. சுயேச்சைக் கட்சி என்பது தனித்தனி மனிதனுக்கு ஒவ்வொரு கட்சி என்று அர்த்தம். சமயம்போல் பார்த்துக் கொள்வதுதான் இதன் கொள்கை. ஆகிய இக்கட்சிகள்தான் இப்போதைய தேர்தல் உலகத்தில் அடிபடுகிறது.

**ராஜு:** அப்படியானால் என்ன ஆதாரத்தைக் கொண்டு சுயராஜ்யக் கட்சிக்கு ஓட்டுப் போட்டால் போகுது என்று சொன்னாய்.

**சுந்தரம் :** ஆதாரம் ஒன்றுமில்லை. காங்கிரஸ், சுயராஜ்யம், சர்க்காரை எதிர்த்தல் என்கிற வார்த்தைகளைச் சொல்லுகிறார்களே அதனால் அதற்குப் போட்டால் போகுது என்று சொன்னேன்.

**ராஜு:** நீ என்ன சுத்தப் பயித்தியக்காரனாய் இருக்கிறாய்! காங்கிரஸ், சுயராஜ்யம், சர்க்காரை எதிர்த்தல் என்று எவராவது வாயில் சொல்லிக் கொண்டால் அவருக்கு ஓட்டுப் போடுகிறதா? இதற்கா நமது பெரியோர்கள் நமக்கு ஓட்டு வாங்கிக் கொடுத்தார்கள். நீயே இப்படி நினைத்தால் சாதாரண பாமர ஜனங்கள் என்ன நினைக்கமாட்டார்கள். சுயராஜ்யம் என்றால் என்ன?



சர்க்காரை எதிர்ப்பது என்றால் என்ன? இதற்கு உதவும்படியான கொள்கை ஏதாவது அவர்களிடம் இருக்கிறதா? இதுகளை யோசிக்க வேண்டாமா? முதலிலேயே சுயராஜ்யக் கட்சி பார்ப்பனரிடம் சிக்கிக்கொண்டது என்று சொல்லி விட்டாய். பார்ப்பனர்கள் எல்லோரும் சர்க்கார் உத்தியோகத்திலும் வக்கீல் உத்தியோகத்திலும் இருக்கிறார்கள். அவர்கள் எப்படி சுயராஜ்யத் திற்குப் பாடுபட சம்மதிப்பார்கள். நமக்கு உண்மையான சுயராஜ்யம் வருமா னால் இம்மாதிரி சர்க்கார் உத்தியோகங்களும் ஒழிந்துபோகும்; கோர்ட்டு களும் ஒழிந்துபோகும். அப்பொழுது இப்பார்ப்பனர்கள் தர்ப்பைப் புல்லைக்கொண்டுதான் பிழைக்க வேண்டிவரும். ஜஸ்டிஸ் கட்சியின் பலனாய் தர்ப்பைப் புல்லுக்கும் நமது நாட்டில் செலாவணி குறைந்து போய்விட்டது. ஆதலால் எந்தக் காரணத்தை முன்னிட்டும் பார்ப்பனர்கள் சுயராஜ்யத்திற்கு அனுகூலமாயிருக்கவே மாட்டார்கள். சர்க்காரை எதிர்ப்பது என்பதோ சுத்தப் புரட்டு. சர்க்காரை எப்படி எதிர்ப்பது? கத்தி கொண்டா? துப்பாக்கி கொண்டா? எப்படி எதிர்க்க முடியும். சட்டசபையில் போய் கத்தினால் யார் கேட்கிறார்கள்? வாய் வலிப்பதுதான் மீதியே அல்லாமல் காரியம் ஒன்றும் பலியாது. உண்மையாக சர்க்காரை எதிர்க்க வேண்டு மானால் சர்க்காரை பணியச் செய்ய வேண்டுமானால் ஒத்துழையாமை, சட்டமறுப்பு ஆகியவைகளைத் தவிர மற்ற வழிகளில் எதிர்ப்பதாகச் சொல்லுபவர்கள் ஒண்ணாம் நம்பர் திருட்டு ஆசாமிகள் என்றே நினைத்துக் கொள். ஒத்துழையாமைக்காவது சட்ட மறுப்புக்காவது இந்தப் பார்ப்பனர்கள் ஒருக்காலும் முன்வர மாட்டார்கள். உதாரணம் வேண்டுமானாலும் பார்த்துக் கொள். ஒத்துழையாமையைச் சட்ட விரோதம் என்று சொன்னவர்களும், ஒத்துழையாமைக்கு உலை வைத்தவர்களும், சட்ட மறுப்பின் போது தலைமறைவாய்த் திரிந்தவர்களும், மக்கள் கூட்டம் கூட்டமாய் ஜெயிலுக் குப் போய்க் கொண்டிருந்த காலத்தில் மாதம் 1000, 2000, 10000 ரூபாய் சம்பாதித்துக் கொண்டு உல்லாசமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வர்களும் நமது பார்ப்பனர்களே ஆவார்கள். அவர்கள்தான் இப்போது சர்க் காரை எதிர்க்கிறோம் என்று சொல்லுகிறவர்கள். இவைகளை எப்படி நம்பு வது? இதுவரை நான் உன்னை பகுத்தறிவுள்ளவன் என்று நினைத்திருந்தேன் நீ என்ன சுத்த சூன்னியனாயிருக்கிறையே!

**சுந்தரம் :** சரி சரி, நீ சும்மா திட்ட வேண்டாம். நாம் இரண்டு பேருமே யோசிக்கலாமே. யாருக்குத்தான் ஓட்டுப் போடலாம் சொல் பார்ப்போம் .

**ராஜு:** அரசியல் விஷயமாய்ப் பேசினால் ஒத்துழைப்பு ஒத்து ழையாமை என்கிற இரண்டு நிலைமைகள்தான் உண்டு. அரசியல் இயக்கம் என்று சொல்லப்படும் காங்கிரஸில் ஒத்துழையாமை திட்டம் இல்லை என்றால் மரியாதையாய் ஒத்துழைப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான் யோக்கிய மானது. இதற்கு மத்தியில் மத்தியஸ்தம் ஒன்றும் கிடையாது. உண்மையான



RangaRakes
tamilnavarasam.com

சுயராஜ்யம் ஒத்துழையாமையினாலல்லது எந்த வழியிலும் ஒத்துழைப்பின் மூலம் வரவே வராது. சட்டசபைக்குள் நுழைவது கலப்பில்லாத ஒத்துழைப்பே தவிர வேறல்ல. ஆதலால் சர்க்காரை எதிர்க்கிறேன், எனக்கு ஓட்டுக் கொடு என்று சொல்லுகிற பொய்யனை விட சர்க்காரோடு ஒத்து உழைக்கிறேன், எனக்கு ஓட்டுக் கொடு என்று சொல்லுகிற மெய் பேசுகிறவனே யோக்கியன் என்று சொல்லுவேன். அல்லாமலும் இதுசமயம் சுயராஜ்யக் கட்சி மூலமோ வேறு எந்தக் கட்சி மூலமோ அரசியல் சம்பந்தமான எதையும் எதிர்பார்க்க முடியாது. மற்றபடி இதுசமயம் மக்களுக்கு வேண்டியது சமத்துவமும் சுயமரியாதையும் என்பதை நீ மறுக்க மாட்டாய். அந்தபடி சமத்துவம் சுயமரியாதை என்பதை எந்தக் கட்சியின் மூலமாய் அடையலாம் என்று பார்த்தால் இவைகள் கண்டிப்பாய் சுயராஜ்யக் கட்சியின் மூலம் அடைய முடியவே முடியாது.

**சுந்தரம் :** அதென்ன அப்படிச் சொல்லுகிறாய். சுயராஜ்யக் கட்சியார் அதற்கு விரோதமாய் இருக்கிறார்களா?

**ராஜு :** உனக்குத் தெரியாதா? கட்சியின் பேரால் தேவஸ்தான மசோதாவை எதிர்க்க வேண்டுமென்று உத்திரவு போட்டார்களே அதன் அர்த்தமென்ன? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி பேசவே கூடாது என்கிறார்களே அதன் அருத்தமென்ன? மக்கள் பிறவியில் உயர்வு, தாழ்வு இல்லையென்று தீர்மானம் செய்தவுடன் காங்கிரஸ் கமிட்டியில் ராஜினாமாச் செய்தார்களே அதன் அர்த்தமென்ன? பார்ப்பனக் குழந்தை சாப்பிடுவதை பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்து விட்டால் ஒரு மாதம் பட்டினி கிடப்பேன் என்று சொன்னார்களே அதன் அர்த்தமென்ன? குருகுலத்தில் மக்கள் எல்லோருக்கும் சமஉரிமை கொடுக்க வேண்டும் என்று மகாத்மா சொல்லியும் கேட்காமல் அது அவரவர்கள் இஷ்டம் என்றார்களே அதன் அருத்தமென்ன? தீண்டாமை விலக்கைப் பற்றியோ, சமத்துவத்தைப் பற்றியோ, சுயராஜ்யக் கட்சியில் பேசக்கூடாது என்று தலைவர்ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பல தடவை சொல்லியிருக்கிறாரே அதன் அருத்தமென்ன? பார்ப்பனப் புரோகிதனைக் கூப்பிட்டாலும் கூப்பிடா விட்டாலும் அவனுக்குப் பணம் கொடுத்துத் தான் தீரவேண்டும் என்று பம்பாய் சட்டசபையில் சொன்னார்களே அதன் அருத்தமென்ன? தாங்கள் அனுபவிக்கும் அரசியல் சீர்திருத்தம் எல்லைப்புற மகமதியர்கள் அனுபவிக்கக்கூடாது என்று எதிர்த்தார்களே அதனுடைய அருத்தமென்ன? பார்ப்பனர்கள் அனுபவிக்கும் உத்தியோகங்களைப் போலவே பார்ப்பனரல்லாதாரும் அந்த கணக்குப்படி அனுபவிக்க வேண்டு மானால் அதை வகுப்புத் துவேஷம் என்கிறார்களே அதன் அருத்தமென்ன? உனக்கு இன்னம் இதே போல் எவ்வளவு சங்கதி வேண்டும்.

**சுந்தரம் :** அப்படியானால் யாருக்கு ஓட்டுச் செய்யலாம் என்கிறாய்.



**ராஜு :** நீ தான் சொல்லேன்.

**சுந்தரம் :** சொல்லுவதென்ன, இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்த்தால் அரசியல் சுதந்திரத்திற்கு கவலைப்படுவதில் யாதொரு பிரயோசனமும் இல்லை என்று தீர்மானமாய் விட்டது.

சமூக சமத்துவமும்,சுயமரியாதையும் அடைய வேண்டுமானால் ஜஸ்டிஸ் கட்சியினால்தான் முடியும். தேவஸ்தான சட்டம், வகுப்புவாரி உரிமை முதலிய விஷயங்களில் அக்கக்ஷியார் கொள்கை என்ன என்பது விளக்கமாய் போய்விட்டது. இவைகளை நடத்தி வைக்க வேண்டுமானால் சட்டசபைக்கும் செல்ல வேண்டியதும், பல உத்தியோகங்களை ஏற்றுக் கொள்ள வேண்டியதும், சர்க்காரோடு ஒத்துழைக்க வேண்டியதும் மிகவும் அவசியமானதாகும். இக் காரியங்களை ஜஸ்டிஸ் கட்சி கண்ணிய மாக ஒப்புக் கொள்ளுகிறது. .ஆதலால் ஓட்டுச் செய்வதாயிருந்தால் ஜஸ்டிஸ் கட்சிக்குத்தான் ஓட்டுச் செய்ய வேண்டும். ஒத்துழையாமைக் காரராயிருந்தால் யாருக்கும் ஓட்டுச் செய்ய வேண்டியதில்லை. இந்த இரண்டு மார்க்கத்தைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று எனக்கு தோன்றுகிறது.

**ராஜு:** உனக்கு மாத்திரம் தோன்றுவது என்பது என்ன? புத்திசாலிகளுக்கும் யோக்கியர்களுக்கும் இதுதான் தோன்றும். ஆதலால் அதுவே சரி.

**சுந்தரம்:** எலக்ஷன் நாள் கிட்ட நெருங்கி வருகிறது. இதை பாமர ஜனங்கள் அறியும்படியும் பார்ப்பனர்கள் ஏமாற்றுதலில் விழுகாத படிக்கும் செய்யவேண்டியது நமது கடமை. ஆதலால் நான் அந்த வேலையை ஏற்றுக் கொள்ளுகிறேன். எனக்கு உத்திரவு கொடு. நமஸ்காரம்.

**ராஜு :** சரி, போய்விட்டு வா. உஷார் ! உஷார்!! ஜாக்கிரதை!

**குடி அரசு - உரையாடல் - 10.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# தமிழ்நாட்டிலிருந்து ‘மற்றொரு இந்தியத் தலைவர்’

பண்டித மோதிலால் நேரு அவர்கள் தனக்கு அசௌகரியம் ஏற்படும் போதெல்லாம் நம் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களில் ஒருவரைத்தான் பதில் (ஆக்டிங்) தலைவராய் நியமிப்பது வழக்கம். அது போலவே சென்ற வாரமும் தனக்கு லாகூரில் இருக்க சவுகரியமில்லாததால் ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி சாஸ்திரிகளை வந்து தனது ஸ்தானத்தை ஒப்புக்கொள்ள அழைத்து இருக்கிறார். முதல் தடவை ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு அழைப்புவந்தது. மறுதடவை ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்காருக்கு அழைப்பு வந்தது. மூன்றாம் தடவை ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி சாஸ்திரி களுக்கு அழைப்பு வந்திருக்கிறது. இனி நான்காந் தடவை கும்பகோணம் சக்கரவர்த்தி ஐயங் காருக்கு அழைப்பு வருமென்று எண்ணுகிறோம். ‘‘இந்தியாவின் பாக்கியமே பாக்கியம். அதிலும் தமிழ்நாட்டின் பாக்கியமே பாக்கியம்.’’

**குடி அரசு - செய்தி விளக்கம் - 10.10.1926**



# செந்தமிழ்ச் செல்வி

## ( மாத வெளியீடு )

நாகரீகத்தில் சிறந்து விளங்கும் நாடுகளில் பத்திரிகைகள் தலை சிறந்து நிற்கும். மேனாடுகளை நோக்க நமது நாட்டில் பத்திரிகைகளின் தொகையும் செல்வாக்கும் குறைவுதான். பல அறிஞர்களின் உள்ளக் கருத்துக்களை ஒருங்கு திரட்டி உணர்த்தலால் மக்கள் அறிவை பண்படுத்து தலில் பத்திரிகைகள் வல்லன. நமது நாட்டில் தினசரி, வாரப் பத்திரிகைகள் ‘அரசியல் கிளர்ச்சியில்’ பாய்ந்து செல்லும் வேகத்தில் சமூக சீர்திருத்த விஷயத்தில் அசிரத்தை காட்ட வேண்டிய நிலையில் இருக்கின் றன. கல்வி, சமயம், தத்துவம், சமத்துவ உணர்ச்சி ஆகிய விஷயங்களில் எல்லாருக்கும் பயன்படத்தக்க ஒரு ஸ்திரமான திருத்தம் ஏற்பட்டால்தான் நமது சமூகத்தை பிணித்திருக்கும் குருட்டு நம்பிக்கைகள் ஒழியும். இத்துறையில் வேலை செய்ய வல்லன மாத வெளியீடுகளேயாகும். ஏனெனில் அறிஞர்கள் சாவதா னமாக ஆராய்ந்து கண்ட முடிவுகளே அவற்றில் வெளி வர இயலும். தமிழ்நாட்டில் அத்தகைய திங்கள் வெளியீடுகளிற் சிறந்தது நமது “செந் தமிழ்ச் செல்வி” எனத் துணிந்து கூறலாம். இதில் பெரும்பாலும் ஆங்கிலத் திலும் தமிழிலும் வல்லவர்களான பேரறிஞர்களின் ஆராய்ச்சி உரைகளே வெளிவருகின்றன. பார்ப்பனீயத்தின் மாயப்புரட்டுகள் வெளியாக்கப் படுகின்றன. தமிழர் நாகரிகம் தெள்ளத்தெரிய விளக்கப்படுகிறது. பண்டைய இலக்கிய இலக்கண ஆராய்ச்சிகளும் புதிய மேனாட்டுச் சாஸ்திர முறை களும் ஆராய்ச்சி வல்லுநரால் பொருத்தமாய் எழுதப்படுகின் றன. மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்றும் மாதம் தோறும் வெளியாகும் ‘செந்தமிழ்’ வெளி யீடு பார்ப்பன கோஷ்டியிலகப்பட்டுப் பார்ப்பனமயமாகிக் கொண்டி ருக்கிறது. அதைத் தோற்றுவித்த ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்களின் உத்தேசம் அடியோடு புறக்கணிக்கப்படுகிறது. பார்ப்பனரல்லாதார் பொருள் ஏராளமாயிருந்தும் சேதுபதி மஹாராஜா தலைவராயிருந்தும் தமிழ்ச் சங்கத்தையும் அதைச் சார்ந்த கலாசாலையையும் ‘செந்தமிழ்’ மாத சஞ்சி கையையும் பார்ப்பனராதிக்கத்தில் ஒப்படைக்கப்பட்டிருப்பது பரிதபிக்கத் தக்கது. இக்குறைகளைக் கண்டே பல தமிழபிமானிகள் தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என்னும் பெயரால் மற்றொரு உண்மைத் தமிழ்க் கழகம் கண்டனர். மதுரை தமிழ்ச் சங்கத்தைப்போல், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துக்கு புதுக்கோட்டை மஹாராஜா, ராமநாதபுரம்



RangaRakes tamilnavarasam.com

மஹாராஜா, ஏனைய ஜமீன்தார்கள், நாட்டுக்கோட்டை நகரத்தார் பிரபுக்கள் முதலியோருடைய நன்கொடைகளும் ஆதரவும் இல்லையாயி னும் அது தோன்றிய குறுகிய காலத்துள் நாவலர் பதிப்பு, சங்கப் பதிப்பு ஆகியவைகளையும் தோற்கடிக்கத்தக்க நிலைமையில் பல பழைய புதிய நூல்களை அது வெளியேற்றியிருக்கிறது. ஒரு சிறு பிழையுங் காண முடி யாது. பெரும்பாலும் புத்தக கட்டடங்களும் நவீன முறையில் கண்கவர் வனப்பினவாயிருக்கும். நாம் தலைப்பிற் குறித்த 'செந்தமிழ்ச் செல்வி'யும் இக்கழகத்தினின்றும் வெளி வருவதுதான். உயர்திருவாளர்கள் கா. சுப்பிர மணியப் பிள்ளையவர்கள், எம்.ஏ., எம்.எல்., பா.வே.மாணிக்க நாயக்கர் போன்ற இரு மொழிப் புலவர்களின் பேராதரவு பெற்ற " செந்தமிழ்ச் செல்வி"யின் மாட்சியை விரிக்கவும் வேண்டுமோ? தமிழ் மக்களின் முன் னேற்றங்கருதி உழைக்கும் சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப்பேரா சிரியர் மணி.திருநாவுக்கரசு முதலியாரவர்களே நமது, 'செல்வி'யின் ஆசிரியரார்கள். வடமொழிக் கலப்பில்லாத 'தனிச் செந்தமிழ் நடை' படிக்கப் படிக்க இனிக்கும். ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மகளும் அன்புடன் வரவேற்று ஆதரிப்பாராக.

**வருட சந்தா**

| | |
|---|---|
| உள்நாடு | ரூ. 3-0-0 |
| வெளிநாடு | ரூ. 3-8-0 |

**கிடைக்குமிடம்** :-

திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்

கழகம் (லிமிடெட்), 306 லிங்க செட்டி தெரு, சென்னை.

**குடி அரசு - நூல் மதிப்புரை - 10.10.1926**



# தென்னாட்டு ஜமீன்தாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்

சென்னை மாகாண வட மத்தியபாக ஜமீன் தொகுதியான சித்தூர், செங்கல்பட்டு, சென்னை, கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தப்பூர் ஆகிய ஜில்லாக்களின் ஜமீன்தாரர்கள் பிரதிநிதியாக சென்னை சட்டசபைக்கு வரப்போகும் தேர்தலுக்கு கனம் பனகால் ராஜா அவர்களுக்குப் போட்டியாக சென்னை ஹைகோர்ட் வக்கீல் ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் என்கிற ஒரு பார்ப்பனர், ஜமீன்தார் என்கிற பேரால் நிற்கிற விஷயம் எல்லோரும் அறிந்ததே. சுமார் ஒரு மாதத்திற்கு முன்னதாகவே நாம் இதைப் பற்றி எழுதியிருந்தோம். ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் சட்ட சபைக்கு நிற்கும் நோக்கமெல்லாம் எவ்வகையிலாவது பனகால் ராஜாவை சட்டசபையிலிருந்து துரத்திவிட்டுப் பார்ப்பன ஆதிக்கத்தைச் சட்ட சபையில் நிலை நிறுத்த வேண்டும் என்கிற எண்ணமே. ஆதலால் பார்ப்பன ரல்லாத ஜமீன்தார்கள் ஓட்டுகளே 100க்கு 75 பேராக இருந்தும் பனகால் ராஜாவின் விரோதிகளான இரண்டொரு ஜமீன்தாரர்களின் ஆதரவையும் ஸ்ரீமான் அல்லாடி ஐயரின் வக்கீல் உத்தியோகத்தின் பலனாய் அடிமை கொண்ட சில ஜமீன்தாரர்களுடைய உதவியையும், மற்றும் கடனில் சிக்கி அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கும் சில ஜமீன்தாரர்களுடைய நிலைமை யையும் ஆதரவாய்க் கொண்டு நிற்கத் துணிந்திருக்கிறார். ஆனால் இம்மூவித ஜமீன்தாரர்களை அதாவது ஜமீனுக்கு ஜமீன் விரோதமும், ஜமீன்தாரர் களுக்கு கோர்ட்களில் விவகாரமும், ஜமீன்தாரர்களுக்குக் கடனும் ஆகிய இக்கஷ்டங்கள் ஜமீன் தாரர்களுக்கு மாத்திரமே அல்லாமல் மற்றும் இந் நாட்டிலுள்ள பெருங்குடி மக்களுக்கும் உண்டாவதற்கே காரண பூதர்களா யிருப்பவர்கள் நம்நாட்டுப் பார்ப்பனரும் பெரும்பாலும் பார்ப்பன வக்கீல் களுமேயாவார்கள் என்பது ஜமீன் சமூகம் அறியாததல்ல. அன்றி இனியும் நம்நாட்டில் நமது பார்ப்பனரல்லாத சமூகத்தாருக்குள் இம் மாதிரி யான கலகத் தையும் விவகாரத்தையும் அநாவசியச் செலவையும் ஏற்படுத்தி வைத்து அதன் மூலம் அவர்களை பல விதத்திலும் தங்களுக்கு அடிமைப் படுத்தி வைத்துத்தான் வாழ வேண்டி யிருக்கிறார்களே அல்லாமல் வேறு மார்க்கம் அவர்களுக்கு இல்லையென்பதும் உலகமறிந்த விஷயம். அப்படி யிருக்க நம் நாட்டின் பழம் பெருங்குடி மக்களும் ராஜவம்சத்தினருமான ஜமீன்தார் தொகுதிக்கு ஒரு பார்ப்பனர் அபேக்ஷகராக நிற்க நேர்ந்திருக் கிறதென்றால்



RangaRakes tamilnavarasam.com

அத்தொகுதியின் பிற்கால நிலைமையைப் பற்றி யாரும் கவலைப்படாம லிருக்க முடியாது. புதிய சீர் திருத்த சந்தர்ப்பத்தில் ஜமீன்தார் களுக்கென்று தொகுதிகளை வகுத்து அவைகளுக் கென்று சில ஸ்தானங் களையும் ஒதுக்கி வைத்தது இவ்வித வக்கீல் பார்ப்பனர்கள் கைப்பற்றுவதற் காகத்தானா? என்பதை ஒவ்வொரு ஜமீன்தாரரும் நடுநிலையிலிருந்து சிந்தித்துப் பார்ப்பார்களேயானால் அதன் உண்மை விளங்காமல் போகாது. ஜமீன்தாரர் களின் நன்மையை ஒரு வக்கீல் - அதிலும் ஜமீன்தாரர்களின் ரத்தத்தை உறிஞ்சிப் பிழைக்கும் பார்ப்பனராயிருக்கிற ஒரு வக்கீல் எவ்வழி யில் பாதுகாக்க முடியுமென்பது நமக்கு விளங்கவில்லை. தவிரவும், ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் ஜமீன் தொகுதியின் மூலம் நிற்பதினு டையவும் அதிலும் பனகால் ராஜாவுக்குப் போட்டியாயிருப்பதினுடை யவும் ரகஸ்யம் தான் என்ன? ஜமீன்தார் தொகுதியின் நன்மையை உத்தேசித்தா? அல்லது பனகால் ராஜா பேரில் உள்ள மனஸ்தாபத்தை உத்தேசித்தா? என்று பார்ப்போமானால் இவ்விரண்டும் அல்லவென்பது நன்றாய் விளங்கும். எப்படியெனில் ஜமீன்தார் நன்மையிலோ வக்கீல் அய்யருக்கு கவலை இருக்க நியாயமே இல்லை. பனகால் ராஜாவுக்கும் ஸ்ரீமான் ஐயருக் கும் நேரிட்டு விரோதம் இருப்பதாயும் சொல்லுவதற்கில்லை. ஆனால் வேறு காரண மொன்றிருக்க வேண்டும். அதென்னவென்றால், தற்காலம் பார்ப்பனரல்லா தார் முன்னேற்றத்திற்கென்று ஏற்பட்டிருக்கும் ஸ்தாபனத் திற்கு பனகால் ராஜா தலைமை வகித்திருப்பதும் அத்தலைமையின் பலனாய் பார்ப்பன ஆதிக்கம் தடைபட நேர்வதுமாயிருக்கிற ஒரே எண்ணத்தாலேயே அவரை எப்படியா வது தலைமை ஸ்தானத்திலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என்கிற பெருங் கவலையோடு நமது நாட்டுப் பார்ப்பனர்களெல்லாம் ஒன்றுகூடி சதியா லோசனை செய்து, ஸ்ரீமான் அல்லாடி அய்யரைக் கேட்டுக் கொண்டதற் கிணங்க அவர் நிற்கிறார். இதற்கு ஸ்ரீமான்கள் எஸ்.சீனிவாசய்யங்கார், டி.வி. வெங்கட்டராம அய்யர், சி.பி.ராம சாமி அய்யர் முதலிய பார்ப்பனர்கள் உள் உளவாக இருந்து கொண்டு ஜமீன்தாரர்களைப் பல வழிகளிலும் வேட்டை யாடுகிறார்கள். அதன் ரகஸ்யத்தை இதில் எழுதவே முடியாத மாதிரியில் இருப்பதோடு மற்றும் பலர் பணத்தை மூட்டை மூட்டையாக வைத்துக் கொண்டு ஜமீன்தாரர் களின் வீடு வீடாய் அலைகிறார்களெனவும் தெரிய வருகிறது. இப்பொழுது ஸ்ரீமான் அல்லாடி ஐயரின் வெற்றி ஜமீன்தாரர்களின் வெற்றியா? அல்லது பார்ப்பனர்களின் வெற்றியா? என்பதும் பனகால் ராஜாவின் தோல்வி தனிப் பட்ட அவருடைய சொந்த தோல்வியா? அல்லது பார்ப்பனரல்லாத சமூகத்தினுடையவும் ஜமீன்தார் தத்துவத்தினுடையவும் தோல்வியா? என்ப தையும் இந்நாட்டுப் பெருங்குடி மக்களின் பொறுப்புள்ள தலைவர்களாகிய ஜமீன்தார் சமூகத்தார் உணர வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம். தேர்தல் தீருகிற வரையிலும் நமது பார்ப்பனர்கள் ஜமீன்தாரர்களை எஜமானரென்றும், ராஜாவென்றும், மஹாராஜாவென்றும், தலைவரென்றும் சொல்லி ஏமாற்றுவார்கள். தேர்தல் தீர்ந்த உடனே



அவர்களுடைய வாசலில் போய் நின்றால் கூட நீ யார்? எந்த ஊர்? என்றுதான் கேட்பார்கள். இந்த ஒரு முக்கியமான தென்னாட்டின் சோதனை காலத்தில், ஜமீன்தார், பிரபுக்கள் தங்களுடைய பொறுப்புகளை பார்ப்பனர் களின் சூழ்ச்சிக்கு விற்று விடுவார் களேயானால் தங்கள் ஜமீன்தார் சமூகத்தை தாங்களே கெடுத்துக் கொள்வ தோடல்லாமல், பார்ப்பனரல்லாதாரின் உயிர் நாடியைப் பார்ப்பனர் கையில் கொடுத்து நசுக்கிக் கொல்லச் செய்தவர்களே ஆவார்கள். ஆதலால் ஜமீன் பிரபுக்களே இத்தேர்தலில் கண்டிப்பாய் பார்ப்பனரல்லாத உங்கள் பிரதிநிதியையே ஆதரித்துப் பார்ப்பனரல்லா தாரின் சுயமரியாதையைக் காப்பாற்ற வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 17.10.1926**



RangaRakes
tamilnavarasam.com

# ‘குடி அரசு’ வாசகர்களுக்கு ஓர் உண்மையான முன்னறிவிப்பு

அன்புள்ள வாசகர்களே!

இதுசமயம் நமது ‘குடி அரசு’ வாரா வாரம் 4000 பிரதிகள் வரை போய்க் கொண்டிருந்தாலும், சட்டசபைத் தேர்தல் தீர்ந்த அடுத்த வாரம் முதல் கொண்டே சுமார் 1000 அல்லது 1500 பிரதிகள் திடீரென்று குறைந்து சுமார் 2500 பிரதிகள் போலத்தான் போக நேரிடும். ஏனெனில், சட்டசபைத் தேர்தலின் பொருட்டு நமது பார்ப்பனர் செய்துவரும் பொய்ப் பிரசாரத்தை வெளிப்படுத்த வேண்டி ‘குடி அரசு’க்கு முன்பணமாக சந்தா வந்தாலும் வராவிட்டாலும் இதுவரை அனுப்பிக் கொண்டே வந்தோம். இதனால் பெருத்த நஷ்டமும் நேரிட்டிருக்கு மென்று சொல்லத் தேவையில்லை. ஆதலால் சில பாக்கிதாரருக்கு மாத்திரம் வி.பி.பி. மூலம் அனுப்பிப் பார்க்க விருக்கிறோம். தேர்தல் முடிந்த உடன் வி.பி.திருப்பியவர்களுக்கும் சந்தா பாக்கிதாரர்களுக்கும், முன் பணமனுப்பாதவர்களுக்கும் பத்திரிகைகள் அனுப்பப்படமாட்டா. நிற்க, தேர்தல் முடிந்த பின்னர் நமது ‘குடி அரசு’ அரசியலையே முக்கியமாய்க் கருதாமல் மக்களின் சுயமரியாதையைக் கெடுக்கும் பார்ப்பனீயத்திற்கு ஆதாரமான வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, இதி காசம், புராணம் என்று சொல்லப்பட்ட ஆரிய சம்மந்தமான நூல்களிலும், செயல்களிலுமுள்ள தந்திரங்களையும், புரட்டுகளையும், பக்ஷபாதங்களை யும், வஞ்சனைகளையும் தெள்ளத்தெளிய விளக்குவதோடு அந்நூல்களி லுள்ள விஷயங்களை நமது பார்ப்பனர்கள் தங்கள் சுயநலத்திற்காக எப்படி மறைத் தும், திருத்தியும், தப்பு வியாக்யானப்படுத்திக் கூறியும், நம்மை ஏமாற்றி வருகிறார்கள் என்பதையும் முறையே வெளியிடுதலையே பிரதான மாய்க் கருதி தக்க ஏற்பாடு செய்துள்ளோம். ஆதலால் சந்தா பாக்கியுள்ளவர் கள் சந்தாத் தொகையை அனுப்பியும் மற்றவர்கள் புது சந்தாதாரர்களாகச் சேர்ந்தும் ‘குடி அரசை’ ஆதரித்து அடுத்த மாத ஆரம்பத்திலிருந்தே வாசித்து வர வேண்டுமென நாம் மனப்பூர்வ விநயமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**– ஈ.வெ.இராமசாமி**

**குடி அரசு – அறிவிப்பு – 17.10.1926**



# சோதனை காலம்

சென்னை மாகாணத்தில் சிறப்பாய் தமிழ்நாட்டில் உள்ள தமிழ் மக்கள் பார்ப்பனீய ஆதிக்கத்தின் பலனாய் கட்டுக் குலைந்து, தாழ்த்தப் பட்டு சுயமரியாதையை இழந்து, நாட்டின் நலத்தை மறந்து ‘மூலபலச் சண்டை’ என்பது போல் தம்மில் ஒருவர் மேல் ஒருவர் பகைமை கொண்டு அரசியலிலும் சமூக இயலிலும் மீளா அடிமையாகி உழல்வதைக் கண்ட பெரியார்களான ஸ்ரீமான்கள் டாக்டர் நாயர், தியாகராயர், மகாத்மா காந்தி ஆகியோர் முறையே பார்ப்பனரல்லாதார் இயக்கமென்றும், ஒத்துழை யாமை இயக்கமென்றும் பல இயக்கங்களைத் தோற்றுவித்தனர். இவற்றை அறிந்த நமது பார்ப்பனர்கள் தங்களது கட்டுப்பாட்டாலும், செல்வத்தாலும், சூழ்ச்சியாலும், அதிகார வசதியாலும் பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைக் கொல்லவும், மகாத்மாவின் ஒத்துழை யாமை இயக்கத்தை ஒழிக்கவும் முயற்சி செய்து வெற்றிக்குறியைக் கண்டு விட்டார்கள் என்றே சொல்லலாம். பார்ப்பனரின் இவ்வெற்றிக் குறிக்கு தமிழ் நாட்டைப் பொறுத்த வரை ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடுகார், திரு.வி.கலியாணசுந்தர முதலியார் போன்றோர்களும் இந்தியா தேசத்தைப் பொறுத்தவரை தேசபந்து தாசரும் பார்ப்பன மாய்கையில் பட நேர்ந்ததே மூல காரணம் என்று சொல்வது எவ்வகையிலும் மிகையாகாது. ஏனெனில் 1917 ஆ வாக்கில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அடிப்படையாய்க் கொண்டு ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரால் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத் திற்கென ஆரம்பிக்கப்பட்ட இயக்கத்தை ஒழிப்பதற்கென்றே பார்ப்பனரால் பார்ப்பனர் பண உதவியில் அதே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையே அடிப்படை யாக வைத்து, “சென்னை மாகாணச் சங்கம்” என்கிற போலிப் பார்ப்பனரல்லா தார் கட்சி ஒன்றை ஆரம்பிக்க ஸ்ரீமான்கள் டாக்டர் நாயுடு, முதலியார் போன்றார்கள் ஆதரவாயில்லாதிருந்தால், ஜஸ்டிஸ் கட்சி இதுவரை அது ஏற்றுக்கொண்ட வேலையின் பலனை நமக்க ளிக்காமல் இருந்திருக்க நியாயமே இல்லை. இக் கனவான்கள் இப்போதைய ஜஸ்டிஸ் கட்சியை குறை சொல்லக் காரணம் கண்டுபிடிப்பதாயிருந்தாலும் டாக்டர் நாயர், சர். செட்டியார் ஆகிய கனவான்களையும் அவர்கள் ஆரம்பித்த அடிப்படையான நோக்கங் களையும் பல தடவைகளில் ஒப்புக்கொண்டே இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அக்கட்சியில் தங்களுக்கு குற்றமாய்த் தோன்றும் பாகங்களைத் திருத்த கொஞ்சமும் முயலாமல் அதன் எதிரிகளுக்கு அனுகூலமாயிருக் கும்படி மேலும் மேலும் அக்கட்சியைக் குற்றம் சொல்லிக்கொண்டும் பாமர



RangaRakes tamilnavarasam.com

ஜனங்களுக்கு அதனிடை வெறுப்பும் அதன் எதிரிகளிடை அன்பும் உண்டாகும்படி செய்துவருவது நாட்டினுடையவும், தமிழ் மக்களினுடையவும் நல்ல காலமின்மையையே காட்டுகிறது. இவ் விஷயம் சென்றவாரம் 'தமிழ்நாடு' ஆபீசில் கூடிய 'தேசிய மகாநாடு' என்னும் கூட்டத்தின் நடவடிக்கைகளைக் கவனித்தவர் களுக்கு விபரம் நன்றாய் விளங்கும். அதன் அறிக்கையின் சுருக்கமாவது:–

சுயநலம் கருதும் தனி நபர்களும் , கட்சியாளரும் தங்களுக்குச் சாதகமாக பிரசாரம் செய்து வருகின்றனர்.

ஒரு கட்சி சமூக சுதந்திரத்தையும் மற்றொரு கட்சி அரசியல் சுதந்திரத் தையும் மறுத்து வருகின்றன.

ஒத்துழையா இயக்கம் நிறுத்தப்பட்ட பின்னர் தேசீய வேலை திட்டத் தில் சமூக வேலையை சுயராஜ்யக் கட்சியினர் கைவிட்டு விட்டனர்.

சுயராஜ்யக் கட்சி பிராமண வகுப்பிற்கு அதிக சலுகை காட்ட ஆரம் பித்து விட்டது.

ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனரல்லாதார் முன்னேற்ற உத்தேசத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அத்திட்டத்தை நிறைவேற்ற அது ஒன்றும் செய்ய வில்லை.

பிராமணர்களுக்குப் பதிலாகப் படித்த பிராமணரல்லாதாருக்கு வேலை செய்து கொடுக்கவே இவர்கள் கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள்.

இந்த முயற்சியில் வகுப்பு உரிமையை உத்தேசித்து அரசியல் சுதந்திரத்தை விட்டுக் கொடுத்து விட்டது.

என்ற குறிப்புகளுடன், "இரு கக்ஷிகளையும் பொதுஜனங்கள் ஆதரிக் கக் கூடாது என்றும் தனிப்பட்ட மனிதர்களின் யோக்கியதையைப் பொறுத்து ஓட்டுச் செய்ய வேண்டு" மென்ற கருத்து அடங்கிய ஒருதீர்மான மும் செய்த தோடு ஏறக்குறைய அவ்விரு கட்சிகளின் வேலைத் திட்டங் களையே தங்க ளது நோக்கமாகவும் வைக்கப்பட்டிருக்கிறது. காங்கிரசினால் ஒப்புக் கொள்ளப்பட்ட கட்சியாகிய சுயராஜ்யக் கட்சிக்கு ஓட்டுக் கொடுக்கக் கூடாது என்று சொல்லுவதற்கும் அதற்கு விரோதமாக வேலை செய்வதற் கும் தேசீயக் கட்சி என்பது தீர்மானம் செய்திருக்கிறதைப் பார்க்கிற போது சுயராஜ் யக் கட்சியின் திட்டத்தை ஒப்புக்கொண்ட காங்கிரஸ் தேசீய சபை அல்ல வென்பதையும், அக்காங்கிரசை தேசீயக் கட்சி ஒப்புக் கொள்ள வில்லை என்பதையும், தைரியமாக வெளியிலெடுத்துக் காட்டிவிட்டதைப் பொறுத்த வரையில் நாம் அதைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை. ஆனால் ஜஸ்டிஸ் கட்சியை எந்த ஆதாரத்தைக் கொண்டு தேசீயக் கட்சி என்பது குற்றம் சொல்லுகிறது? என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. தேசீயக் கட்சிக்கு தனிப்பட்ட மனிதர்கள் நடவடிக்கை பிடிக்கவில்லையா? அல்லது கட்சிகள்



கொள்கைகள் பிடிக்கவில்லையா? என்பதே நமக்கு விளங்கவில்லை. தனிப்பட்ட மனிதர்கள் நடவடிக்கைகள் பிடிக்க வில்லையானால் கட்சிகளைக் கைப்பற்றி அம்மனிதர்கள் தங்கள் நடவடிக்கை களுக்கு கட்சிகளை உபயோகப்படுத்திக் கொள்ளாமல் செய்ய வேண்டும். அல்லது மனிதர்கள் பிடித்து கட்சிகள் பிடிக்க வில்லையானால் அம் மனிதர்களை சுவாதீனப் படுத்திக்கொண்டு கட்சிகளை ஒழிக்க வேண்டும். இரண்டுமில்லாமல் இன்ன கட்சியின் இன்ன கொள்கை தப்பு என்று அறிவிக்காமலும், இன்ன கட்சியைச் சேர்ந்த இன்னாரின் நடவடிக்கை தப்பு என்று அறிவிக்காமலும் கண்களை மூடிக்கொண்டு அந்த கொள்கை களையும் அந்த மனிதர்களையுமே குற்றம் சொல்லிக்கொண்டு வேறு கட்சி என்று ஒன்றை ஆரம்பிப்பதில் நாட்டுக்கோ அல்லது குறிப்பிட்ட சமூகத் திற்கோ என்ன லாபம் என்பது விளங்கவில்லை. ஜஸ்டிஸ் கட்சியினர் அரசியல் விஷயத்தில் இந்த தேசீயக் கட்சியார் என்போர் கோருகிற சுயராஜ்யத்தைத்தான் அதிவிரைவில் அடைய வேண்டும் என்ற கொள்கை யை ஏற்படுத்தி கொண்டிருக்கிறார்கள். சமூக விஷயத் திலும் இந்த தேசீயக் கட்சியார் நோக்கத்தை விட ஒருபடி அதிகமாகவே தங்களது கொள்கை யாகவும் வைத்துக் கொண்டிருப்பதோடு பார்ப்பன ஆதிக்கத்திற்கு அநுகூலமாக பார்ப்பனர் கைப்பற்றி இருக்கும் உத்தியோகங்களையும் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு அநுகூலமாக கிடைக்கும்படி செய்திருக் கிறார்கள். இப்படி இருக்க எந்த வகையில் ஜஸ்டிஸ் கட்சி பிற்போக்கானது என்பதையும், எந்த விதத்திலும் அது ராஜீய சுதந்திரத்தை மறுக்கிறது என்பதையும், தேசீயக் கட்சி என்பது பொது மக்களுக்கு விளங்க வைக்க வில்லை. அன்றியும் சமூக முன்னேற்றத்துடன் ஆரம்பிக்கப் பட்ட ஜஸ்டிஸ் கட்சி அத்திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று தேசீய அறிக்கை சொல்லுகிறது. எவ்வகையில் அது நிறைவேற்றி வைக்கவில்லை என்று சொல்ல முடியுமா? சமூக முன்னேற்றத்திற்காக முதலாவதாய் வகுப்பு வாரித் திட்டத்தை வலியுறுத்துகிறது. தனது சமூகத்தாருக்குப் பார்ப்பனர்கள் போலவே அரசியலில் உத்தியோகம் கிடைக்கப் போராடி வருகிறது. சில துறைகளில் செய்துமிருப்பதாய் தேசீய அறிக்கையே ஒப்புக் கொள்ளுகிறது. சமத்துவத்திற்கும் மதவித்தியாசமின்மைக்குமாக மலையாளக் குடிவார மசோ தா, தேவஸ்தான மசோதா முதலியன கொண்டு வந்து நிறைவேற்றியுமிருக் கிறது. மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு முதலியவற்றிற்கும் இப்போதைய நிலைமையில் தன்னால் கூடுமானதைச் செய்துமிருக்கிறது.

நிற்க, வகுப்புரிமையை உத்தேசித்து அரசியல் சுதந்திரத்தை விட்டுக் கொடுத்ததாய் தேசீய அறிக்கை சொல்லுகிறது. எந்த விதமான சுதந்திரத்தை ஜஸ்டிஸ் கட்சி விட்டுக் கொடுத்தது? அதுவுமல்லாமலும் தற்கால அரசியல் நிர்வாகத்தில் வேறு எந்தக் கட்சியாவது 'சுதந்திரத்தை' விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று சொல்லி நிறுத்திக் கொள்ளத்தக்க சுதந்திரமுள்ள அரசியல் கட்சி ஏதாவது இருக்கிறதா என்று தேசீய அறிக்கை சொல்ல முடியுமா? ஆகையால், தேசீய அறிக்கை என்னும் பேரால் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி



RangaRakes tamilnavarasam.com

குற்றம் சொல்லியிருக்கும் விஷயங்கள் அவ்வளவும் அர்த்தமற்றதும் பொருத்தமற்றதுமென்றேதான் சொல்ல வேண்டியிருக்கிறதே அல்லாமல் அதில் ஒரு சிறிதும் உண்மையும் நியாயமும் இல்லை என்றே சொல்லுவோம். இம்மாதிரி ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அர்த்தமற்ற தேசீயத்தின் பெயரையும் பொறுப்புள்ள சமூகத்தின் பெயரையும் சொல்லிக்கொண்டு ஒரு கூட்டம் புறப்பட்டு, அதற்கு தேசீயக் கட்சி என்றும் பெயர் வைத்துக்கொண்டு தங்கள் மனம் போனபடி காரியங்களை நடத்துவதென்பது தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் சோதனை காலம் என்றே சொல்ல வேண்டும். நமது நாட்டின் பொல்லாத வேளையின் பலனாக ஓட்டுரிமை இன்னது என்பதையே நமது பாமர மக்களான 100-க்கு 90 பேர் இன்னமும் அறிந்து கொள்ள முடியாமலே செய்து வந்திருக்கிறோம். ஓட்டுரிமை அறிவிக்காமலே போலி அரசியலின் பேரால் பாமர மக்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுத்ததானது இப்போது நமது நாடும் நமது சமூகமும் அடிமைப்படவும், சுயமரியாதை இழக்கவுமேதான் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. எப்படியெனில் நமது நாட்டில் பார்ப்பனர்களுக்கும் ஓட்டு இருக்கிறது. பார்ப்பனரல்லா தாருக்கும் ஓட்டு இருக்கிறது. பார்ப்பன ஓட்டுகள் கண்டிப்பாய் பார்ப்பனர் களுக்கே போகிறது. அதுபோல் பார்ப்பனரல்லாதார் ஓட்டுகள் பார்ப்பன ரல்லாதாருக்குப் போவதில்லை. பார்ப்பனர்களால் ஏமாற்றப்பட்டு பார்ப்பன ருக்கே போகக்கூடிய நிலையிலேயே இருக்கிறது. உதாரணமாக, திருச்சி ஜில்லா போர்டு பிரசிடெண்ட்டு தேர்தலில் 100 - க்கு80 பேருக்கு மேல் பார்ப்பனரல்லாத மெம்பர்களாக இருந்தும் ஒரு பார்ப்பனர்தான் வெற்றி பெற்றார். சென்ற சட்டசபைத் தேர்தல்களிலும் கோயமுத்தூர், தஞ்சை, தென்ஆற்காடு, திருச்சி, சென்னை முதலிய ஜில்லாக்களில் 100 க்கு 90 பேருக்கு மேலாக பார்ப்பனரல்லாத ஓட்டர்களே இருந்தும் பார்ப்பனர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். எந்த வழியில் தோல்வியுற்ற பார்ப்பனரல்லாத அபேக்ஷகர்களை விட வெற்றிபெற்ற பார்ப்பன அபேக்ஷகர்கள் சிறந்தவர் கள் என்பது நமக்கு விளங்கவில்லை. சென்ற தேர்தலில் கோயமுத்தூர் ஜில்லாவில் ஸ்ரீமான்கள் சி.எஸ்.இரத்தினசபாபதி முதலியார் தோல்வியுற்றார்; ஸ்ரீமான் சி.வி. வெங் கிட்ட ரமணய்யங்கார் வெற்றி பெற்றார். இதில் ஸ்ரீமான் முதலியாரை விட ஸ்ரீமான் அய்யங்கார் எந்த விதத்திலாவது உயரிய கொள்கையையோ நோக்கமோ உடையவர் என்று யாராவது சொல்ல முடியுமா? சென்ற தேர்தலில் இந்த ஸ்தானத்திற்கும் ஸ்ரீமான் முதலியாரைத் தெரிந்தெடுத்திருந்தால் தேவஸ்தான சட்டத்தை எதிர்க்க பார்ப்பனர் கட்சிக்கு ஒரு நபர் அதிகமாக இருக்குமா அல்லது ஸ்ரீமான் அய்யங்காரைத் தெரிந்தெடுத்த ஓட்டர்கள் அய்யங்காரை தேவஸ்தான சட்டத்தை எதிர்க்கச் சொன்னார்களா? எதிர்க்க ஆசை கொண்டவர்களா? மறுபடியும்தான் ஸ்ரீமான் அய்யங்கார் நிற்கிறார். இம்மாதிரியே தென்ஆற்காடு ஜில்லா ஓட்டர்களும் அந்த ஜில்லா பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ளும் ஒரு அய்யங்காரை தேவஸ்தான சட்டத்தை எதிர்க்கச் சொன்னார்களா? அந்த ஜில்லாவின் சார்பாய் இவ்வருஷமும் அதே அய்யங்கார் நிற்கிறார். மற்றும் சில ஜில்லாக் களிலும் தேவஸ்தான சட்டத்தை எதிர்த்த அய்யர், அய்யங்கார்கள் போட்டி யன்னியில் கூட தெரிந்தெடுத்ததாக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் எதைக் காட்டுகிறது. நமது ஓட்டர்களை நாம் சரியானபடி அவர்கள் ஓட்டுரிமையை அறியும்படி செய்யவில்லை என்பதைக் காட்டுகிறதா இல்லையா? இம்மாதிரி பாமர ஜனங்களிடத்தில் மறுபடியும் குழப்பமான தேசீய அறிக்கைகளும், தேசீயக் கட்சிகளும் புறப்பட்டால் "கீழே விழுந்த குழந்தைக்கு அரிவாமணை உதவியது" போல் பார்ப்பனரல்லாத பாமர ஓட்டர்களை அவர்களுக்குச் சமத்துவமும் சுயமரியாதையும் கொடுக்க இஷ்டமில்லாத அவர்களது எதிரிகள் ஏமாற்ற அனுகூலமாயிருக்குமென் பதில் சந்தேகமென்ன? அல்லா மலும் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் காங்கிரஸ் விளம்பரசபை என்னும் பெயராலும், எ.ரங்கசாமி அய்யங்கார் காங்கிரஸ் காரியதரிசி என்னும் பெயராலும், எஸ்.சீனிவாசய்யங்கார் காங்கிரஸ் தலைவர், சுயராஜ்யக் கட்சியின் தலைவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் தென்னாட்டுத் தியாக மூர்த்தி என்னும் பெயராலும், சி.ராஜகோ பாலாச்சாரியார் தென்னாட்டு காந்தி என்னும் பெயராலும், சி.வி.வெங்கிட்ட ரமணய்யங்கார் பருத்திச்செடி அய்யர்; தர்மப்பிரபு என்னும் பெயராலும், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் ஜமீன்தார் என்னும் பெயராலும், எம்.கே. ஆச்சாரியார் காந்தி சிஷ்யர் என்னும் பெயராலும், சி.பி.ராமசாமி அய்யர் சட்ட மெம்பர் என்னும்பெயராலும், டி. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரிகள் அட்வெகேட் ஜனரல் என்னும் பெயராலும், மகா மகாகனம் சீனிவாச சாஸ்திரி கள் கோகலேவுக்குப்பின் வந்தவர் என்னும் பெயராலும் மற்றும் எத்த னையோ பார்ப்பன கனவான்கள் ஐகோர்ட்டு ஜட்ஜி முதல் அட்டெண்டர் என்னும் பதவிகள் பெயராலும், சென்னையில் சில காலிகள் காங்கிரஸ் தொண்டர் என்னும் பெயராலும், சில தொழிலாளர்கள் சுயராஜ்யம் என்னும் பெயராலும், சில போலீசு அதிகாரிகள் சமாதானம் ஒழுங்கு என்னும் பெயராலும், சில பார்ப்பனரல்லாத தலைவர்கள் வாயை மூடி வேடிக்கைப் பார்த்துக்கொண்டும், சிலர் காங்கிரஸ் கட்டளையின் பெய ராலும், சிலர் தேசம், அரசியல், உரிமை, சுயராஜ்யம், சுதந்திரம், சர்க்காரை எதிர்த்தல், அதிகார வர்க்கத்துடன் போர்புரிதல் என்னும் வார்த்தைகள் பேராலும் செய்துவரும் திருவிளையாடல்கள் போதாதென்று தேசீயக் கக்ஷி என்று ஒன்று புறப்பட்டி ருப்பது தமிழ் நாட்டினுடையவும் தமிழ் மக்களு டையவும் நெருக்கடியான சோதனை காலம் என்றே சொல்லுவோம். இந்த சோதனை காலத்தில் தமிழ் நாட்டையும் தமிழ் மக்களையும் இயற்கை தேவி தான் காப்பாற்ற வேண்டும்.

**குடி அரசு - தலையங்கம் - 17.10.1926**





RangaRakes tamilnavarasam.com

# ஸ்ரீமான் சீநிவாச சாஸ்திரியார் கொல்லத் தெருவில் ஊசி விற்பனை

மகா மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் வரப்போகும் தேர்தலில் பார்ப்பனர்களுக்கு வெற்றி கிடைப்பதற்காக ஊர் ஊராய் பிரசங்கம் செய்து வருகிறார். இந்த முறையில் கோயமுத்தூருக்கும் வந்து மாணவர் சங்கத்திலும் "வகுப்பு வாதத்தால் ஏற்படும் தீங்கு" என்பதைப் பற்றி பேசியிருக்கிறார். வகுப்பு வாதத்திற்கு ஏற்பட்ட கட்சி தன்னை ஜனநாயகக் கட்சியென்றும், தேசீயக் கட்சி என்றும் சொல்லிக் கொள்வது தகாது என்றும், இதைப்போல் இந்திய ராஜீயத் துறையில் அதிகமான கேட்டை விளைவிப் பது வேறெது வுமில்லை என்றும் கூறுகிறார்.

இதில் எவ்வளவு புரட்டுகள் இருக்கின்றன என்பதை யோசியுங்கள். முதலாவது, ஸ்ரீமான் சாஸ்திரி இந்திய மக்களின் சார்பாக பேசுவதற்கே யோக்கியதை அற்றவர் என்பதே நமதபிப்பிராயம். அவர் நமது சர்க்காருக்கு உள் உளவாயிருந்து தனக்குப் பெரிய அந்தஸ்தும் பட்டமும் பதவியும் பெற்றுக் கொண்டு தன்னுடைய பிள்ளை குட்டிகளுக்கும் பெரிய பெரிய உத்தி யோகத்தை வாங்கிக் கொண்டவர். அல்லாமலும்,தேசத்திற்காகவும் ஜனநாயக தத்துவத்திற்காகவும் பாடுபட வந்த அவதார மூர்த்தியாகிய மகாத்மா காந்தியை 'அராஜகர்' என்றும், அவரை சும்மா வைத்துக் கொண்டி ருந்தால் ராஜ்யமே கெட்டுப் போய்விடும் என்றும், சர்க்காருக்கு உபதேசித்து அவரை ஜெயிலில் வைக்க சர்க்காருக்கு உதவியாயிருப்பதற்காக பதவி பெற்றவர். ஜனநாயக தத்துவம் முறையே அடைவதற்காக பாரதமாதா முடிவு செய்து கொண்டு அதன் மக்கள் பதினாயிரக்கணக்கான பெயரை ஜெயிலுக்குள் தள்ளிக் கொண்டிருக்கும் பொழுது வெள்ளைக்காரர்களுக்கு அனுகூலமாய்ப் பேசிக் கொண்டும், மகாத்மாவை அடக்கினால்தான் இவ்வியக்கம் அடங்குமென்றும் சொல்லிக் கொண்டு, தான் மேல்நாடுகளில் உல்லாசப் பிரயாணம் செய்து வெள்ளைக் காரருடன் விருந்துண்டு கொண்டு கேளிக்கை யாயிருந்தவர். ஜனநாயக தத்துவத்திற்காக நாளிதுவரை ஸ்ரீமான் ஸ்ரீநிவாச சாஸ்திரியாரால் ஒரு காதொடிந்த ஊசிக்கு சமானமான உதவியா வது உண்டா? வகுப்புவாதம் கூடாது என்று சொல்ல பிராமணருக்கு யோக்கி யதை ஏது? பிராமணன் வகுப்பு வாதத்தையே அடிப்படையாகக் கொண்ட வன். எப்பொழுது ஒரு மனிதன் தான் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவன் என்று



சொல்லிக் கொள்கிறானோ அப்பொழுதே அவனிடத்தில் தன்னுடைய வகுப்பு உயர்ந்த வகுப்பு மற்றவர்கள் தன்னிலும் தாழ்ந்த வகுப்பு என்கிற வகுப்புவாதம் இருக்கிறதா இல்லையா? முதலில், தான் அதை விட்டு விட்டுப் பார்ப்பனர்களையும் அதை விடச் செய்த பிறகு வகுப்பு வாதம் கூடாது என்று உபதேசிக்க வந்தால் அப்போது ஸ்ரீமான் சாஸ்திரியாருக்கு பேச உரிமை உண்டு. தங்கள் வகுப்பு உயர்ந்த வகுப்பு என்பதைப் பற்றியும் யாரும் ஆக்ஷேபிக்கக்கூடாது; அது அப்படியே இருக்க வேண்டும்; அதற்கு வேண்டிய பிரயத்தனமும் செய்யவேண்டும்; மற்றவர்கள் மாத்திரம் வகுப்பைப் பற்றிப் பேசக்கூடாது; தாழ்ந்த வகுப்பாரா கவே இருக்க வேண்டும் என்று சாஸ்திரியார் கனவு கண்டால் அதற்கு மற்றவர்கள் இடம் கொடுப்பார் கள் என்று சாஸ்திரியார் நினைக்கிறார் போல இருக்கிறது. அல்லாமலும் பிராமணனால்தான் வகுப்புவாதம் ஏற்பட்டது. ஆதலால் அவனிடத்தில் இருப்பதை ஒழித்தால் தான் வகுப்புப் பிசாசு நம் நாட்டை விட்டுத் தொலையும் என்று நாம் சொல்லும் போது பிராமணன் வந்து இதில் நியாயாதிபதியாயிருக்க இடமேது? திருடனையே தன் திருட்டுக்கு நியாயாதிபதியாய் வைத்தால் அவன் தன்னை தண்டித்துக் கொள்வானா? அதுபோல் பார்ப்பனன் குற்றவாளி என்றால் பார்ப்பனனே வந்து நான் குற்றவாளி அல்ல என்று தீர்ப்பு சொல்லிக் கொள்ள பாத்திய மேது? சாஸ்திரியார் பார்ப்பனன் என்கிற முறை யில் வேண்டுமானால் தன்னிடம் குற்றமில்லை என்று வாதாடிக் கொள்ள லாமேயொழிய, தான் நடு நிலைமைக்காரர் போல் வேஷம் போட்டுக் கொண்டு மாணவர்களுக்கு உப தேசம் பண்ண யோக்கியதை ஏது? என்று தான் நாம் கேட்கிறோம். ஆனால் இதிலும் அதிகமான பார்ப்பன சூழ்ச்சி களைக் கண்டு தேறியிருக்கும் கோவை பார்ப்பனரல்லாத மாணாக்கர் முன்னிலையில் பார்ப்பன சாஸ்திரி யாரின் உபதேசம் "கொல்லத் தெருவில் ஊசி விற்கப் போனதற்கு சமானமே யொழிய வேறில்லை" என்பதே நமதபிப்பிராயம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 17.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# கோயமுத்தூர் ஜில்லா தேர்தல்

கோயமுத்தூர் ஜில்லாவின் சார்பாக சென்னை சட்டசபைக்குப் பார்ப்பனரல்லாத அபேக்ஷகர்கள் மூன்று பேரும் பார்ப்பன அபேக்ஷகர் ஒருவரும் ஆக நான்கு அபேக்ஷகர்கள் நிற்கிறார்கள். இந்நான்கு கனவான் களும் பெயருக்கு மாத்திரம் தனித்தனிக் கக்ஷியைச் சேர்ந்ததாகச் சொல்லிக் கொண்டாலும் தத்துவத்தில் பார்ப்பனரல்லாத கக்ஷிக்கு மூன்று பேரும், பார்ப் பனக் கக்ஷிக்கு ஒருவருமாய் இருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். உதாரணமாக, ஸ்ரீமான் அய்யங்கார் தேவஸ்தான மசோதாவையும், வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தையும் எதிர்ப்பதினாலும், ஸ்ரீமான் செட்டியார் முதலா னவர்கள் இவ் விரண்டையும் மனப்பூர்வமாய் ஆதரிப்பதினாலும் தெரிந்து கொள்ளலாம். நாம் இதற்கு முன் பல தடவைகளில் எழுதி வந்தது போலவே சட்டசபைகள் மூலம் குடிமக்களுக்கு எவ்வித அரசியல் நன்மையும் செய்ய முடியவே முடியாது என்பதை இப்பொழுதும் சொல்லுகிறோம். ஆனால் வேளாள குடிமக்கள் இந்நாட்டில் உள்ள மற்ற எல்லா மக்களைவிட உயர்ந்த தன்மை உடையவர்களாயிருந்தாலும் பார்ப்பன ஆதிக்கத்தில் சிக்கி விவ காரம் முதலியவைகளால் குடி கெடுவதையும் வைதீகச் சடங்குகளால் தாழ்த்தப்பட்டு அடிமைகளாவதிலிருந்தும் தப்புவிக்க உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லுவோம். ஆனால் பல காரியங்கள் செய்திருப் பதாய் ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்கார் போன்ற பல பார்ப்பனர்கள் பத்திரிகைகள் மூலமும் விளம்பரங்கள் மூலமும் பறையடிப்பதெல்லாம் குடியான மக்களை ஏமாற்றச் செய்யும் வெறும் மோசடியே தவிர வேறில்லை. அதுபோலவே அதைப் பார்த்து பார்ப்பனரல்லாத அபேக்ஷகர்களும் குடியானவர்களை ஏமாற்ற பார்ப்பனர்களைப் பின்பற்றி பொய் விளம்பரம் செய்ய வேண்டி ஏற்படுகிறது. உண்மையில் ஸ்ரீமான் வெங்கிட்டரமணய் யங்கார் போன்றவர்கள் வெளிப்படுத்தி இருக்கும் வேலைகளின் இரகசியங் களை அறிந்தால் அது ஸ்ரீமான் அய்யங்காரால் நடந்ததா? அல்லது ஸ்ரீமான் கள் டி.எ.இராமலிங்கம் செட்டியார், சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார் போன்றவர்களின் பிரயத்தனத்தால் நடந்ததா என்பது நன்றாய் விளங்கும். ஸ்ரீமான் அய்யங்கார் விளம்பரம் செய்து கொள்வதில் அதிக ஆசை உள்ள வராகவும் அதைப்பற்றி பிரத்தியார் தன்னை எவ்வளவு கேவலமாகப் பேசினாலும் அதைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் எப்படியாவது சட்ட சபைக்குப் போனால் போதும் என்கிற கவலை உள்ளவருமானதால் எவ்வளவு தூரம் குடியானவர்களை ஏய்க்கலாமோ அவ்வளவு தூரம் விளம்பரப்படுத்திக்



கொள்ளுகிறார். ஸ்ரீமான்கள் செட்டியாரும், முதலியாரும் தங்களைப் புத்தி சாலிகள் கேவலமாய் நினைப்பார்களே என்று பயப்படுவதாலும் தற்புகழ்ச்சி செய்து கொள்ள வெட்கப்படு வதாலும் அவர்களின் உண்மையான பெருமை களும் செய்த வேலைகளும் கூட வெளியாருக்குத் தெரிவதற்கிடமில்லாமல் இருக்கிறது. ஸ்ரீமான் வேணாவுடையாக் கவுண்டர் அவர்களுக்கு இதில் அநு போகமில்லாததாலும் அவரும் விளம்பரம் செய்து கொள்ள வெட்கப் படுவதாலும் அவரது நிலைமையும் சரிவர ஓட்டர்கள் உணர்வதற்கில்லாமல் இருக்கிறது. ஆதலால் பார்ப்பனரல்லாத ஓட்டர்கள் வெறும் விளம்பரங்க ளைக் கண்டு ஏமாறாமல் பார்ப்பனரல்லாத அபேக்ஷகர்களையே ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். குறிப்பாய் இச்சில்லா வேளா ளக் கவுண்டர் கனவான்கள் எவ்வளவுக்கெவ்வளவு தங்களுடைய ஓட்டுக ளைப் பார்ப்பன அபேக்ஷகருக்குக் கொடுக்கிறார்களோ அவ்வளவுக்கவ் வளவு தங்கள் வகுப்புத் தலைவராகிய ஸ்ரீமான் பட்டக்காரர் வேணாவுடை யாக் கவுண்டர் அவர்கள் சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப்படுவதைக் கண்டிப்பாய் தடைப்படுத்தும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 17.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# மார்க்கெட் நிலவரம்

**– சித்திரபுத்திரன்**

**சட்டசபை**

| | | |
|---|---|---|
| **ஓட்டு ஒன்றுக்கு** | 1 முதல் | ரூ.5 |

| | |
|---|---|
| ஒரு கிராமத்தின் மொத்த ஓட்டுகளுக்கு மணியக்காரருக்கு | ரூ.100 |
| கணக்குப் பிள்ளைக்கு | ரூ. 50 |
| பள்ளிக்கூட உபாத்தியாயருக்கு | ரூ. 25 |
| கிராமாந்திரங்களில் செல்வாக்குள்ள | |
| குடித்தனக்காரருக்கு | ரூ.5000 முதல் 15000 வரை கடன் |
| முனிசிபல் சேர்மென்களுக்கு | ரூ.1000 முதல் ரூ. 1500 வரை கடன் |
| வைஸ் சேர்மென்களுக்கு | ரூ.250 முதல் ரூ. 500 |

**போலிங் ஆபீசர்கள் நிலவரம்**

பஜாரில் இன்னும் புதுசரக்கு வராததால் வாங்குவாரில்லை.

## முனிசிபல் ஓட்டுகளுக்கு

| | |
|---|---|
| இவ்வாரம் ஓட்டு ஒன்றுக்கு | ரூ. 5 முதல் ரூ.15வரை |
| சேர்மென்களுக்கு | ரூ.150 |
| வைஸ் சேர்மென்களுக்கு | ரூ.250 |
| 20 ஓட்டு 30 ஓட்டுள்ள தொகுதிகளில் | |
| ஓட்டு ஒன்றுக்கு | ரூ.150 முதல் ரூ. 250 வரை |

*போலிங்ஆபீசர்கள் விஷயம் கேழ்ப்போருக்கு மாத்திரம் தெரிவிக்கப் படும்.

பஜார் நோக்கம் இன்னமும் துகை உயரும் போல் இருக்கிறது.

**குடி அரசு – செய்திக் குறிப்பு – 17.10.1926**



# தீ பா வ ளி

# கதர்! கதர்!! கதர்! ! !

**தீபாவளியை தேசபக்திக்கு உபயோகப்படுத்திக் கொள்ளப் போகிறீர் களா? அல்லது தேசத் துரோகத்திற்கு உபயோகப்படுத்தப் போகிறீர்களா?**

நாளிது ஐப்பசி மீ 19 உ க்குச் சரியான நவம்பர் மீ 4 உ வியாழக் கிழமை இந்நாட்டுப் பெரும்பான்மையான மக்கள் மிகுதியும் கொண்டாடத் தக்க தீபாவளி என்னும் பண்டிகை வரப் போகிறது. அப்பண்டிகை கொண்டா டுவது என்பதற்கு எண்ணெய் ஸ்நானம் செய்து புதிய வஸ்திர மணிந்து பட்டாசு சுட்டு பலகாரம் சாப்பிடுவதுதான் முக்கியச் சடங்காக இருக்கிறது. இவற்றுள் எண்ணெய் ஸ்நானம் செய்வதிலும் பலகாரம் செய்து சாப்பிடு வதிலும் நமது நாட்டிற்கு எவ்விதக் கெடுதியும் இல்லை. ஆனாலும் புதிய வஸ்திரமணிவது என்பது முக்கியமாக ஏழைகளின் வாயில் மண்ணைப் போட்டு அவர்களைப் பட்டினி கிடக்கச் செய்வதற்கும் பெரும் பாலும் நமது நாட்டுச் செல்வத்தை அன்னிய நாட்டார் கொள்ளை கொண்டு போவதற்குமே உதவுகிறது. நமது நாட்டிற்கும் நமது நாட்டுப் பெரும் பான்மையான மக்க ளுக்கும் நலமும் நல்வாழ்வும் உண்டாக பெரியோர் களால் ஏற்படுத்தப்பட்ட பண்டிகையானது, இப்போது அதற்கு நேர் விரோதமான பலனைக் கொடுத்து வருகிறது. எப்படி யெனில் நாம் நமக்கு ஒருவருஷ அனுபவத்திற்கு வேண் டிய துணிகளில் கிட்டத்தட்ட பகுதிக்குக் குறையாமல் தீபாவளிக் கென்றே வாங்கிவிடுகிறோம். அன்றியும் செல்வந் தர்களாயிருப்பவர்கள் மக்கள், மருமக்கள் முதலானவர்களை சந்தோஷிப் பதற்கென்று பட்டு, சரிகை, அழகு, வழவழப்பு, மெதுவு என்கிற வகையில் அதிகமான பணத்தைச் செலவு செய்து வருகிறார்கள். இவைகளில் செலவிடும் பணம் அவ்வளவும் கதரைத் தவிர அதாவது கைராட்டினத்தால் நூற்ற நூலைக் கொண்டு கைத்தறியால் நெய்த துணி அல்லாமல் மற்றபடி வேறு எதை வாங்குவதாலும் ஏழைகள் தொழிலற்று பட்டினி கிடக்கவும் நமது செல்வங்கள் வெளிநாட்டிற்குப் போகவுமே உபயோகப்படுகிறது. நீங்கள் பட்டும் சரிகையும் அன்னிய நாட்டு வஸ்திரமும் உள்நாட்டு யந்திர வஸ்திரமும் வாங்கி அழகு பார்ப்பதின் மூலம் நமது நாட்டு ஏழைகள் பட்டினி கிடந்து நமது நாட்டு செல்வம் அன்னிய நாட்டுக்குப் போவது நியாயமாகுமா? நீங்கள் கதர் அல்லாததை அணிவதின் தத்துவம்



RangaRakes tamilnavarasam.com

என்ன? "எனக்கு இந்த நாட்டினிலாவது இந்நாட்டு ஏழை மக்களிடத்திலாவது அன்பு கிடையாது" என்று சீட்டெழுதி நெற்றியில் ஒட்டிக் கொள்ளுகிறீர்கள். காரியத்தில் இப்படிச் செய்து விட்டு "நானும் சுயராஜ்யவாதி, தேசபக்தன், ஏழை களின் நண்பன், தொழிலாளரின் நண்பன்" என்று வாய்பறை அடித்து பாமர மக்களை ஏமாற்றுகிறீர்கள்.

சுயராஜ்யம் என்றால் என்ன? நாட்டின் தரித்திரம் ஒழிந்து ஏழைகளும் தொழிலாளிகளும் வயிறார உண்ணும்படி செய்து நமது நாட்டு செல்வத்தை அன்னியர் கொள்ளை கொள்ளாமல் இருக்கும்படி செய்வது தானே அல்லாமல் படித்த கூட்டத்தார் உத்தியோகத்தின் மூலமாயும் பணக்கார கூட்டத்தார் யந்திரங்கள் மூலம் விளம்பரம் செய்வது மூலமாகவும் பணம் சம்பாதிப்பது அல்ல. இதனால்தான் மகாத்மா **"ராட்டினம்தான் சுயராஜ்ய மளிக்கவல்லது"** என்று சொல்வதோடு **"உத்தியோகமும் யந்திரங்களும் சுயராஜ்யத்தை தூரமாக்குவதோடு தடைபடுத்தும்"** என்கிறார். செல்வ வான்களின் செல்வமும் செல்வத் திமிரும் ஏழைகளுக்கு உபயோகப்பட வேண்டுமானால், செல்வவான்கள் தங்களுக்கு ஏழைகளிடத் தில் அன்பு இருக்கிறது என்று காட்ட வேண்டுமானால், அன்னிய நாட்டார் கொள்ளை கொண்டு போக உபயோகப்படாமலிருக்க வேண்டுமானால், கதரை வாங்கி அணிவதை விட வேறு மார்க்கமில்லை. மாணாக்கர்கள் தங்களுக்கு தேசத்தினிடத்திலும் தேசத்துப் பெரும்பான்மையான ஏழை மக்களிடத்திலும் பக்தியும் அன்புமிருக்கிறது என்பது உண்மையானால் அவர்கள் கதரைத்தான் வாங்கி அணிய வேண்டும். விவசாயிகளும் தொழிலாளர்களும், கூலிக்காரர் களும் தங்களுக்கும், தங்கள் சகோதர விவசாயிகள், தொழிலாளர்கள், கூலிக்காரர்கள் முதலியவர்களுக்கும் நன்மை செய்பவர்களானால் அவர்கள் கண்டிப்பாய் கதரையேதான் வாங்கி அணிய வேண்டும். இவர்கள் வாங்கும் ஒவ்வொரு ஜான் நீளமுள்ள அன்னிய துணியும் யந்திரத் துணியும் குறைந்தது ஒவ்வொரு ஜான் வயிற்றை பட்டினி போடுகிறது. உதாரணமாக, 20 கஜம் நீளமுள்ள 1703 நெம்பர் மல் பீசு 1-க்கு 15 ரூபாய் விலை கொடுத்து வாங்கு கிறோம். அதன் இடை சுமார் மூன்று ராத்தல்தான் இருக்கும். அந்த மூன்று ராத்தல் பஞ்சும் நம்மிடமிருந்துதான் 1-8-0 ரூபாய்க்கு வாங்குகி றார்கள். அதை தங்கள் நாட்டிற்குக் கொண்டு போய் நூலாய் நூற்று துணியாய் நெய்து வெள்ளைக் களிமண்ணையும் கொழுப்பையும் பூசி அழகும் வழவழப்பும் மினுமினுப்பும் செய்து நமது தலையிலேயே கட்டுவதற்காகக் கொண்டு வருகிறார்கள். நாமும் மயங்கி சங்கராச்சாரியாருக்கு காணிக்கை வைப்பது போல் 15 ரூபாய் வைத்து விட்டு வாங்கிக் கட்டி அழகுபடுத்திக் கொள்ளு கிறோம். இந்த பதினைந்து ரூபாயில் பஞ்சுக் கிரையம் ரூ. 1-8-0 போனால் மீதி ரூ. 13-8-0 யாருக்குப் போய் சேருகிறது? அது யாருடைய பணம்? யாருக்குச் சேர வேண்டியது? என்று பார்த்தால் அதன் உண்மை விளங்கும். மேல்படி 13-8-0 ரூபாயும் 6000 மைல் பறந்து போய்விட்டது. இந்த மாதிரி நாம் அன்னியத் துணி வாங்காமல் கதர் துணியை வாங்குவோமானால் அது



நமது நாட்டு ஏழைப் பெண்மக்கள் நூற்பதின் பலனாய் ஏழைக் குடும் பங்களுக் குப் போய்ச் சேர்ந்திருக்கும். நமது நாட்டு ஏழை கை நெசவுக் காரர்களுக் குப் போய்ச் சேர்ந்திருக்கும் ஏழைக் குடும்பத்திற்கும் ஏழைத் தொழிலாளி களுக்கும் போய்ச் சேரவேண்டிய அந்த 13-8-0 ரூபாயும் அவர்க ளுடைய பணமல்லவா? இந்த 13-8-0 ரூபாயும் அவர்களுக்குப் போய்ச் சேராமல் தடுத்து அவர்களைப் பட்டினிப்போட்டு அவர்களது வயிற்றுப் பிழைப் புக்கு அவர்கள் கற்பையும் சுயமரியாதையையும் கூட மனச்சாக்ஷியையும் விற்கச் செய்வது அன்னியத் துணி வாங்கினவர்களாகிய நாமா அல்லவா?

ஆதலால், வரப்போகும் தீபாவளியை அதன் உண்மையான தத்து வத்தில் கொண்டாட வேண்டுமானால் கதர் வாங்கி அணிவதை விட வேறு வழியில்லை. இதை உத்தேசித்தே மகாத்மா அகில பாரத சர்க்கா சங்கம் என்பதாக ஒன்றை ஏற்படுத்தி அதற்கும் பல லக்ஷ ரூபாய்களை முதலாக வைத்து நாடுகள் தோறும் கிளைச் சங்கங்கள் ஏற்படுத்தி கதர் உற்பத்தி செய்யச் செய்து ஜில்லா தலைமை நகரங்கள், முக்கியப் பட்டணங்கள் ஆகிய வைகள் தோறும் கதர் கடைகள் வைத்து சுத்தமான கதர் விற்க ஏற்பாடு செய்திருக்கிறார். அல்லா மலும் நல்ல மரத்தில் புல்லுருவி ஏற்பட்டது போல் இவ்வுத்தமமான சேவைக்கு ஆபத்தாக நமது மக்களிலேயே சிலர் போலிக் கதரை உற்பத்தி செய்து அதை யும் கதர் என்றே பாமர ஜனங்கள் நம்பும்படி செய்து விற்று வருவதன் மூலம் கத்தர் இயக்கத்தைக் கொன்றவர்களாகிறார் கள். சத்தியாக்கிரகமோ சட்டமறுப்போ செய்தாலொழிய இம்மாதிரியான துரோக செய்கைகளை நிறுத்த முடியாததலால் அவைகளை கூடுமான வரையிலாவது குறைக்க உத்தேசித்து சுத்தமான கதர் விற்பனைக்கும் போலிக் கதர் விற்பனைக்கும் வித்தியாசம் தெரிவதற்காக சர்க்கா சங்கத்தா ரால் விற்பனைக் கடைகளை பரிசோதிக்க பரிசோதகர்களை நியமித்து கூடுமான வரை பரிசோதிக்கப்பட்டு சுத்தமான கதர் விற்பவர்களுக்கும் உற்பத்தி செய்பவர்களுக்கும் சர்க்கா சங்கத்தாரால் அத்தாக்ஷிப் பத்திரம் கொடுக்கப் பட்டு வருகிறது. ஆகையால் கதர் வாங்குகிற ஒவ்வொருவரும் கதர் வாங்குவதில் கவலை யீனமாயிராமல் தாங்கள் வாங்கும் கடைகளிலும் கதர் விற்கும் மற்ற நபர் களிடமும்அகில பாரத சர்க்கா சங்க தமிழ்நாடு காரியதரிசி யான ஸ்ரீமான் எஸ். ராமநாதன் அவர்களால் கையொப்பமிட்ட நடைமுதல் காலத்து அத்தாட்சிப் பத்திரம் இருக்கிறதா இல்லையா என்பதை நன்றாய்ப் பார்த்து வாங்குங்கள். சிலர் பழய அத்தாட்சிப் பத்திரம் வைத் திருப்பார்கள். அது நடைமுதல் காலத்துக்குச் செல்லாது என்பதையும் கவனிக்க வேண்டுமாய்க் கோரு கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 24.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# ஈரோடு முனிசிபாலிட்டி

நாளது அக்டோபர் ௴ 19 - தேதியின் சுதேசமித்திரனில் ‘ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கருக்கு ஒரு மறுப்பு’ என்னும் தலையங்கத்தின் கீழ் ஈரோடு சேர்மென் ஸ்ரீமான் ஸ்ரீநிவாச முதலியாரவர்களுடைய கடிதம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஸ்ரீமான் நாயக்கர், ஸ்ரீமான் ஸ்ரீநிவாச முதலியாரவர்களைப் பற்றி எழுதியிருந்ததற்குப் பதில் அனுப்பி பிரசுரம் செய்யும்படி கேட்டுக் கொண்டதாகவும் ஸ்ரீமான் நாயக்கர் அப்படிச் செய்ய வில்லையென்றும் ஸ்ரீமான் முதலியார் எழுதியிருக்கிறார். அது உண்மைக்கு விரோதமானது. ஸ்ரீமான் முதலியார் ‘குடி அரசு’க்கு எழுதிய மறுப்பில் ஸ்ரீமான் நாயக்கருக்கும் தனக்கும் பழைய விரோதமிருப்பதாகக் குறிப்பிட்டு சில விஷயங்கள் எழுதியிருந்தார்.

அவ்விரோதத் தன்மையைப் பொறுத்தவரை விவகரிக்காமல் நிறுத்தி விட்டு அவர் மறுத்த விஷயத்திற்கு மாத்திரம் அவருடைய மறுப்பையும் அவற்றிற்குச் சமாதானத்தையும் முறையே வெளியிடத் தீர்மானித்தே ஸ்ரீமான் முதலியார் பொய்யென்று மறுத்த மூன்று முக்கிய விஷயங்களை அப்படியே எடுத்தெழுதி அவற்றிற்கு சமாதானம் தக்க ஆதாரத்துடனும் தேதி கையெழுத்து முதலியதுகளுடனும் எழுதிவிட்டு இவற்றையும் ஸ்ரீமான் முதலியார் மறுக்கிறாராவென்று குறிப்பும் எழுதி அதன் பதில் வந்த உடன் மற்றும் முதலியாரின் மறுப்பை வெளியிடுவதாகவும் எழுதியிருந் தோம், அதற்கு உண்டு, இல்லை என்ற இரண்டிலொரு விஷயத்தை எழுதா மல் ஸ்ரீமான் நாயக்கர் பேரில் குற்றஞ் சொல்லிக்கொண்டு ‘மித்திரனை’ அபயங் கொண்டதின் கருத்து நமக்கு விளங்கவில்லை. ஆனபோதிலும் ‘மித்திரன்’ அதைப் பிரசுரித்திருப்பதைப் பற்றி நாம் மிகவும் திருப்தியடை கிறோம். ஏனெனில் இதன் மூலம் ‘குடிஅரசு’ பத்திரிகையோ அல்லது நாயக்கரோ உண்மை பேசுகிறார்களா? அல்லது ஸ்ரீமான் முதலியாரைப் பற்றி வேண்டுமென்றே பழி கூறுகிறார்களா? என்பது வெளியாக மற்று மொரு சந்தர்ப்பம் கிடைத்த தல்லவா என்கிற சந்தோஷம்தான். ‘மித்தி ரனில்’ பிரசுரித்த ஸ்ரீமான் முதலியா ரவர்கள் மறுப்பில் முன்பாகம் மூன்று விஷயங்களைக் கொண்டிருக்கிறது. அவையாவன:-

1. முனிசிபல் பணத்தை ஸ்ரீமான் முதலியார் சொந்த உபயோகப் படுத்தியதாய் ‘குடி அரசு’ சொல்வது முற்றிலும் பொய்.

2. இது விஷயமாய் ஒரு கவுன்சிலர் தன்னை கேள்வி கேட்டதாய் சொல்லுவதும் பொய்.

3. மற்றொரு கவுன்சிலர் கணக்குப் பார்க்க வேண்டிக் கொண்டார் என்று சொல்லுவதும் பொய்.

என்று எழுதிவிட்டு மற்றும் சில விஷயங்களுக்கு நீண்ட சமாதா னங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமான் முதலியார் பொய்யென்று சொல் லும் ௸ மூன்று விஷயங்களுக்கும் ‘குடி அரசு’ தனது 10.10.26 தேதி இதழில் பதில் எழுதியிருக்கிறது. அதாவது,

முனிசிபல் பணத்தை சொந்த உபயோகப்படுத்தவில்லை என்ப தற்குப் பதில் 1925 - வருஷம் ஜுன் ௴ 19 தேதி எவ்வித ஆதாரமும் இல்லாமல் 700 ரூபாய்க்கு தன் பேருக்கே செக் எழுதி ரூபா பெற்று ஜுன் ௴ 26 தேதி ஈரோடு அர்பன் பாங்கியில் 750 ரூபா தனது சொந்தக் கடனின் பாக்கிக்காக கட்டப்பட்டிருக்கிறது. 50 ரூபா கிடைக்காதலால் 5, 6 நாள் பணம் கையில் வைக்கப்பட்டிருந்தது. இந்த 50 ரூபா ஒரு வழியில் கிடைத்தபிறகு அதையும் சேர்த்து அர்பன் பாங்கியில் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு முனி சிபல் செக் புஸ்தகத்தில் அர்பன் பாங்கு கணக்கு ஆதாரங்கள் இருக்கின்றன.

2. இதைப்பற்றி கவுன்சிலரும் கேள்வி கேட்கவில்லை என்பதற்குச் சமாதானம் அப்போது கவுன்சிலராயிருந்த ஸ்ரீமான் E.S.கணபதி ஐயர் அவர்கள் சேர்மன் அவர்கள் தன் பேருக்கே செக் எழுதி 700 ரூபா அட் வான்ஸ் என்று எடுத்துக் கொண்டது உண்மையா? அப்படியானால் அதை ஏதாவது ஒரு கவுன்சில் தீர்மானத்தை முன்னிட்டு எடுத்துக் கொண்டதா? அல்லது கவுன்சில் தீர்மானத்தை எதிர்பார்த்து என்றெடுத்து பின்னால் சரிசெய்து விடலாமென்றா? என இம்மாதிரி பல கேள்விகள் (இன்டர் புலே ஷன்கள்) எழுதி சேர்மனுக்கனுப்பி இதற்கு வரவு தேதி போட்ட ரசீதும் வாங்கியிருக்கிறார். அதன் நகலும் பிரசுரிக்க நமக்கனுப்பி இருக்கிறார். இதற்கு நாளது வரை சேர்மனால் யாதொரு பதிலும் அளிக்கப்படவே யில்லை.

3. மற்றொரு கவுன்சிலர் கணக்குக் கேட்டது பொய்யென்பது, அப்போது கவுன்சிலராயிருந்த ஸ்ரீமான் M.S. முத்துக்கருப்பன் செட்டியார் அவர்கள் 5. 12. 25 தேதியில் சேர்மன் அவர்களுக்கு முனிசிபல் ஆபிஸ் குறிப்புப் புஸ்தகமும் சிட்டாவும் செக் புஸ்தகமும் பார்க்க உத்தரவு கோரி ஒரு கடிதம் எழுதி சேர்மனுக்குச் சேர்ப்பித்து அதற்கும் வரவு தேதி போட்ட ரசீது வாங்கி வைத்திருக்கிறார். இதற்குப் பதில் சேர்மன் ஸ்ரீநிவாச முதலியார் அவர்களால் கவுன்சிலர் கணக்கைப் பார்க்க வேண்டுமென்று எழுதிய வேண்டுகோள் படிக்கப்பட்டது. முனிசிபல் ஆக்ட் 20, 21, 34 பிரிவுப்படி அது போன்ற கணக்குப் பார்க்க கவுன்சிலர்களுக்கு உரிமையில்லாததால் அனுமதிக்க முடியாது என்று பதிலெழுதியிருக்கிறார். இதற்கு மேல் மறுபடி



RangaRakes tamilnavarasam.com

யும் எவ்வளவோ தகராறுகள் நடந்திருக்கின்றன. இதற்கு ஆதாரங்களும் நமக்கு ஸ்ரீமான் செட்டியார் அவர்களால் பிரசுரிக்கஅனுப்பப்பட்டிருக்கிறது.

இவற்றை ஸ்ரீமான் முதலியார் அவர்கள் உண்மை யென்றோ அல்லது கற்பனை என்றோ சொல்லாமல் நாயக்கர் மீதும் ‘குடி அரசு’ மீதும் குற்றம் சொல்லி வீண்பழி சுமத்துவது தர்மமாகுமா?

தவிர, சேர்மனின் இம்மாதிரியான நடவடிக்கையின் பலனாகவும் அரசாங்கத்தார் இவற்றை அனுமதித்து வருவதன் பலனாகவும் பொறுப்புள்ள அதாவது வருஷம் 1000, 2000 ரூ. இன்கம்டாக்ஸ் செலுத்துகிற கவுன் சிலர்களும் வருஷம் 2000, 3000 ரூபாய் சர்க்கார் கந்தாயம் செலுத்துகிற கவுன் சிலர்களும் சர்க்காரால் நியமிக்கப்பட்ட பென்ஷன் தாசீல்தார் போன்ற கவுன் சிலர்களும் ஆக 12 பேர் தங்கள் கவுன்சிலர் பதவியை ராஜினாமா கொடுத்து விட்டு வெளியிலும் வந்து விட்டார்கள். இதோடு மாத்திர மல்லாமல் ஈரோடு வக்கீல் சங்கத்தார் ஒன்று கூடி தங்கள் சங்கத்தின் மூலம் ஷை 12 கவுன்சிலர்கள் ராஜினாமா கொடுத்ததைப்பற்றிக் கவலை எடுத்துக் கொண்டு முனிசிபல் நிர்வாகத்தைத் திருத்தவும், இப்பேர்ப்பட்ட குற்றங் களுக்கு இடமில்லாமல் சரிவர நடத்தவும், வக்கீல் சங்கத்தார் முயற்சியெடுத் துக்கொள்ள வேண்டு மென்று ஒரு தீர்மானமும் கொண்டு வந்தார்கள். அந்த வக்கீல் சங்கத்துக்கும் ஸ்ரீமான் ஸ்ரீநிவாச முதலியாரவர்களே பார்ப்பன ரல்லாதார் என்கிற சலுகையின் பேரில் தலைவராயிருக்க நேர்ந்தமையால் இத்தீர்மானத்தை தலைவர் முறையில் நிராகரித்தும், அவரில்லாமலே உப தலைவரைக் கொண்டு வக்கீல் சங்கக் கூட்டம் கூட்டி தீர்மானத்தை நிறைவேற்றி ராஜினாமா செய்யப்பட்ட கவுன்சிலர் ஸ்தானத்துக்கு சங்கத்தின் சார்பாய் ஒரு வக்கீலை யும் நிறுத்தி சேர்மெனின் இவ்வித நடவடிக்கைகளை பொதுஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். ஸ்ரீமான் ஸ்ரீநிவாச முதலியாரவர்கள் கொஞ்சமாவது சுயமரியாதையுடை வராயிருந்திருந்தால் தன்னுடைய தலைமை ஸ்தானம் மற்ற அங்கத்தினர் களால் அலக்ஷியம் செய்யப்பட்டதற்கு உடனே ராஜினாமா செய்திருப்பார். அப்படியில்லாமல் அவர்களாகத் தன்னை வெளியிலனுப்புகிற வரையில் அதில் அட்டைப் போல் ஒட்டிக்கொண்டேயிருக்கிறார். தவிர எடுத்ததற் கெல்லாம் நாயக்கருக் கும் தனக்கும் விரோதம் என்கிற ஒரு பல்லவி பாடிக்கொண்டே தன்னுடைய சகல அக்கிரமங்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார் . நாயக்கருக் கும் முதலியாருக்கும் என்ன விரோதம் என்பதைப் பொது ஜனங்கள் அறிந்துகொள்ள வேண்டியது. இது சமயம் மிகவும் அவசியம் தான். ஏனெனில் ஜனங்கள் உண்மை அறிவதற்கு அது ஒரு அநுகூலமாயிருக்கு மென்பதே சுமார் 17, 18 வருஷங்களுக்கு முன்பாக ஈரோட்டுக்கு ஒரு பார்ப்பனரல்லாதார் வக்கீல் வேண்டுமென்கிற எண்ணத் தின் பேரில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாச முதலியாரவர்களை நாயக்கர் முன்பின் அறியாதவராயிருந்தாலும் கோயமுத்தூர் ஸ்ரீமான் வேணு கோபால் பிள்ளை அவர்களின் வேண்டு



கோளின்படி ஸ்ரீமான் முதலியாரைத் வருவித்து அவருக்கு வேண்டிய சவுகரியமும் செய்து கொடுத்து வெகு நேசமாயிருந்து வந்ததில், அதுசமயம் ஏற்பட்ட முனிசிபல் சேர்மென் தேர்தலில் ஸ்ரீமான் முதலியாருக்கும் மற்றொரு கனவானுக்கும் நேர்ந்த போட்டியில் நாயக்கருக்கும் ஸ்ரீமான் முதலியாருக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தால் ஸ்ரீமான் முதலியார் சேர்மென் ஆனதும் தனது அதிகாரத்தை துஷ்பிர யோகம் செய்து நாயக்கர் தனது வீட்டில் சில பிரபல சங்கீத வித்வான்களைக் கொண்டு ஒரு பாட்டுக் கச்சேரி நடத்த ஏற்பாடு செய்திருந்த சமயத்தில் லைசென்சில் லாமல் நடத்தக் கூடாது என்று தடுத்து போலீசாரையும் போய் தடுக்கும்படி ஏற்பாடு செய்திருந்தார். நாயக்கர் சேர்மென் உத்திரவையும் போலீசார் தடங்கலையும் மீறி சட்ட மறுப்பு செய்து பாட்டுக் கச்சேரியை நடத்தி விட்டதால் நாயக்கரை யும் அவர் தமயனாரையும் பிராசிகூஷன் செய்தார். இந்த பிராசிகூஷன் சட்ட சபையில் கேள்வி கேட்கப்பட்டு கவர்மெண்டாராலேயே பின்வாங்கிக் (வித்திட்ரா) கொள்ளப்பட்டது. இதைத்தான் ஸ்ரீமான் முதலியார், “நான் சேர்மெனாயிருக்கும் போது நாயக்கர் பேரில் நடவடிக்கை எடுத்துக் கொண டேன். அதனால் எங்கள் இருவருக்கும் விரோதம் விரோதம்” என்று தொட்ட தற்கெல்லாம் பல்லவி பாடுவது, அதற்கப்புறம் இருவரும் நேசபாவமாகவே இருந்திருப்பதைக் காட்டாமல் தனது குற்றங்களுக்கெல்லாம் இந்த ஒரு சமாதானமே போதுமென்று நினைத்தால் அதன் தன்மையைப் பொது ஜனங்களே அறிந்து கொள்ளட்டும்.

**குடி அரசு - கட்டுரை - 24.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# தமிழ்ப்பொழில் அன்பர்கட்கு வேண்டுகோள்

தஞ்சாவூர் "கரந்தை தமிழ்ச்சங்க"த்தினின்றும் "தமிழ்ப் பொழில்" என்னும் பெயரிய ஒரு திங்கள் வெளியீடு தமிழறிஞர் திருவாளர் ஆர்.வேங்கடாசலம் பிள்ளையவர்களை ஆசிரியராகக் கொண்டு ஓராண்டு வெளிப் போந்து நற்பயன் அளித்தமை நேயர்களுணர்ந்திருக்கலாம் என்றும் இடையறாது உரிய காலங்களில் வெளிவரற்குறிய சில முன் ஏற்பாடுகள் செய்தற் பொருட்டுப் 'பொழில்' சிறிது காலந்தாழ்ந்து வெளிவரும் என முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆசிரியர்க்குள்ள அலுவல் மிகுதியால் சிறிய காலஅளவு கொஞ்சம் பெரிதாக நீண்டது. முன் ஏற்பாடுகள் முன்னரே செய்யப்பட்டிருக் கின்றன. நிற்க, 'தமிழ்ப் பொழிலி'ன் முன்னேற்றங் கருதி உழைக்க ஆங்கில மும் தமிழும் கற்று வல்ல அறிஞராகிய திருவாளர்கள் நீ.கந்தசாமி பிள்ளை யவர்கள், எம். ஆர்.ஏ.எஸ்., அரசர்மடம் பள்ளிக்கூட தமிழாசிரியர் சாமி சிதம்பர உடையாரவர்கள் ஆகிய இருவரும் முன் வந்துள்ளார்கள். இவருள் முன்னவர் உதவி ஆசிரியர், பின்னவர் உடனின்று துணை செய்தலேயன்றி வெளியிடங் கட்குச் சென்று பொழிற்கு அன்பர்களைத் திரட்டும் உதவியாளர் ஆவார். திருவாளர் உடையாரவர்கள் தாம் எய்தி வந்த ஊதியத்தினையும் விட்டு விட்டுத் (தமது சுருங்கிய செலவுகளை மட்டும் பெற்றுக்கொண்டு) தொண்டு செய்ய முன்வந்திருப்பது மிகப் பாராட்டற்பாலது. செந்தமிழ்ச் செல்வர்கள், ஊதியம் கருதாது தமிழ்த் தொண்டொன்றே கருதித் தனித் தீந்தமிழில் வெளிவரும் பொழிலைப் புரந்து தமிழ்த்தாயைப் போற்றி வருமாறு வேண்டுகிறோம்.

**( ப - ர் )**

**குடி அரசு - வேண்டுகோள் - 24.10.1926**



RangaRakes

# யோக்கியமான பார்ப்பனர் ஒருவராவது உண்டா?

வரப்போகும் சட்டசபைத் தேர்தலுக்குப் பார்ப்பனரல்லாதார்களுக்கு விரோதமாகப் பார்ப்பனர்கள் எல்லோரும் அதாவது, உத்தியோக பார்ப்பனர், வக்கீல் பார்ப்பனர், மிதவாதப் பார்ப்பனர், பஞ்சாங்கப் பார்ப்பனர், வாத்தியார் பார்ப்பனர், ஒத்துழையாமைப் பார்ப்பனர் ஆகிய எல்லோரும் ஒன்றுகூடி அவரவர்கள் தங்களுக்கும் எவ்வித அபிப்பிராய பேதமும் இல்லாமல், ஏதாவது கொஞ்சம் இருந்தாலும் அதை அடியோடு மறந்து விட்டு ஒரேமாதிரி பிரசாரம் செய்து வருகிறார்கள் என்பதைப்பற்றி பல தடவை எழுதி இருக்கிறோம். உதாரணமாக உத்தியோகப் பார்ப்பனர்கள் விஷயமாய், சர்.சி.பி. அய்யர் அவர்கள் ஜினிவா மகாநாட்டுக்கு அனுப்பப் பட்டபோது 'இந்து', 'சுதேசமித்திரன்', 'சுயராஜ்யா' முதலிய பார்ப்பனப் பத்திரிகைகள் இது சமயம் போகிறாரே என்று ஓலமிட்டதிலிருந்தே தெரிந்திருக்கலாம்.

மிதவாதப் பார்ப்பனர்கள் விஷயத்தில் மகா மகாகனம் சீனிவாச சாஸ்திரியார் 'இந்திய ஊழிய சங்கம் வெந்து போனதற்காக பணம் சேர்க் கிறேன்' என்கிற பேரால் தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கு சென்று பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைப் பற்றி வைது பேசுவதிலிருந்தே தெரிய லாம். வக்கீல் பார்ப்பனர்கள் விஷயத்தில் "ஜமீன்தார் தொகுதிக்கு நிற் கிறேன்" என்ற பெயரை வைத்துக் கொண்டு பார்ப்பனரல்லாதார் இயக்கத் தலைவரையே தோற்கடிக்க ஜமீன்தார்கள் இடம் பிரசாரம் செய்வதிலும் பணம் செலவு செய்வதிலுமே பார்க்கலாம். உபாத்தியாய பார்ப்பனர்கள் விஷயத்திலோ என்றால், உபாத்தியாயர்கள் ஆங்காங்கு 'உபாத்தியாயர்கள் மகாநாடு' என்று கூடி அதற்குப் பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்கு விரோதி களாயிருப்பவர்களையும் பார்ப்பனர்களையுமே அழைத்து தலைமை வகிக்கச் செய்து ஒவ்வொரு உபாத்தியாயரும் தேர்தல்களில் பார்ப்பன ருக்கே வேலை செய்யவேண்டும் என்று இரகசியத் தீர்மானங்கள் செய்து கொண்டு போவதிலிருந்தும் அவர்கள் அக்கூட்டங்களில் பேசுவதிலிருந் தும் தெரிந்துகொள்ளலாம். பஞ்சாங்கப் பார்ப்பனர்கள் என்கிற விஷயத் திலோ லோக குருக்கள், மகந்துகள், மடாதிபதிகள் என்கிற ஆசாமிகள் பணம் கொடுப்பதிலிருந்தும் அவர்களது காரியஸ்தர்களுக்கும் முக்கிய சிஷ்யர்களுக்கும் ஊர் ஊர்களில் இருக்கும் ஆசாமிகளுக்கும் இரகசிய



tamilnavarasam.com

‘ஸ்ரீமுகங்கள்’ அனுப்பும் விஷயத்திலிருந்தும் நன்றாய் அறிந்து கொள்ள லாம். ஒத்துழையா பார்ப்பனர் என்றும் யோக்கியமான பார்ப்பனர் என்றும் சொல்லிக் கொள்பவர்களிலோ இவற்றையெல்லாம் விட ஆபத்தாயிருக் கிறது. உதாரணமாக, மகாத்மா காந்தியின் சிஷ்ய கோடிகளின் சட்டாம் பிள்ளையாகிய தமிழ்நாட்டுக் காந்தி ஸ்ரீமான் சி.ராஜகோபாலாச் சாரியார் அவர்களும் அவர்களுடைய பார்ப்பன சிஷ்யர்களும் செய்துவரும் பிரசாரம் மற்றெல்லாவற்றையும் விட மீறின தாயிருக்கிறது. ஸ்ரீமான் ஆச்சாரியாரின் கோடு கட்டிய குறள்களும் ‘கருப்பாயி, பாவாயி’ சம்பாஷணைகளும் ‘பொய்மான் வேட்டை’ வியாசங்களும், ‘கள்ளு நிறுத்தும் பிரசாரங்களும்’ எவ்வளவு விஷமத் தன்மை பொருந்தியிருக் கிறது என்பதை நாம் விளக்கிக் காட்ட வேண்டிய தில்லை. ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி சாஸ்திரிகளும் எம்.கே. ஆச்சார்ய சுவாமிகளும் கலம் கலமாய் பக்கம் பக்கமாய் எழுதித் தள்ளுவதும் சரி, நமது ஆச்சாரியார் அவர்கள் இரண்டு வரி எழுதி கோடு கட்டுவதும் சரி, பத்து கல எழுத்தின் விஷம் இந்த இரண்டு வரி எழுத்தில் இருக்கும். உதாரணமாக, “நாட்டுக்கு நல்ல காலம் வந்து விட்டது. சுயராஜ்யக் கட்சியார் கள்ளை நிறுத்தி விட ஒப்புக் கொண்டார்கள். ஓடுங்கள், ஓடுங்கள் எல்லோ ரும் ஓடிப்போய் சுயராஜ்யக் கட்சிக்கு ஓட்டு செய்துவிட்டு வாருங்கள்” என்பது போல் எழுதிக் கொண்டி ருந்தார். இவற்றையெல்லாம்விட ஒரு பெரிய விஷமம் இவரது குறள் களுக்கு மகாத்மாவின் மேலொப்பமும் வாங்கி விட்டார். பிறகு என்ன காரணத்தாலோ கொஞ்சகாலம் அஞ்ஞாத வாசமாய் இரகசிய பிரசாரத் திலிருந்தவர் இப்போது மறுபடியும் தைரியமாய் வெளிப் பட்டு வெளிப் படையான பிரசாரத்திலிறங்கியிருக்கிறார். இறக்கின வர்தான் தனியாக ஊர் ஊராய்ப் போகாமல் கூட ஒரு பார்ப்பனரல்லாத பிரசாரகரையும் அழைத்துக் கொண்டுபோய் அவரை மனதாரப் பொய்யும் புளுகும் அளக்கச் செய்து இவர் பக்கத்திலிருந்து அந்த பொய்களை பாமர ஜனங்கள் நம்பும்படி செய்து கடைசியாக சுயராஜ்யக் கட்சிக்கு ஓட்டுச் செய்யுங்கள் என்று சொல்லி உறுதிப் படுத்திவிட்டு வருகிறார். சமீபத்தில் சேலம் ஜில்லா சுயராஜ்யக் கட்சி அபேக்ஷகருக்காக சேலத்திற்கு தானும் ஸ்ரீமான் கந்தசாமிப் பிள்ளையுமாய் கூட்டம் கூட்டி அக்கூட்டத்தில் தான் பக்கத் துணையாய் இருந்து கொண்டு ஸ்ரீமான் கந்தசாமிப் பிள்ளை அவர்களை விட்டு ஜஸ்டிஸ் கட்சியின் பேரில் பொய்யும் புளுகும் சொல்லி வையும்படி செய்திருக்கிறார். அவற்றில் ஒரு புளுகு மலையாள மாப்பிள்ளை மூடு வண்டிக் கொடுமையைப் பற்றி சட்ட சபையில் கேள்வி கேட்டதில் ஜஸ்டிஸ் கக்ஷியார் மாப்பிள்ளைகளுக்கு விரோதமாய் கை தூக்கினார்கள் என்றும், ஜஸ்டிஸ் கக்ஷியார் உப்புவரியை இரட்டிக்க மன்றாடி போராடி உயர்த்தினார்கள் என்றும், பல தியாகிகளை வைதார்கள் என்றும், கள்ளுகளை ஒழிக்கவில்லை என்றும், கல்விக்கு ஒன்றும் செய்யவில்லை என்றும் பேசச் செய்திருக்கிறார். உண்மையில் மலையாளக் கலவரத்தின் மூடுவண்டி சம்பவத்தைப் பற்றி கேள்வி கேட்டவர் ஒரு பார்ப்பனரல்லாதார் என்பதும் அதுவும் ஜஸ்டிஸ் கக்ஷியைச் சேர்ந்தவர்



என்பதும் அதிலும் ஜஸ்டிஸ் கக்ஷி மந்திரிகளின் உத்தியோக தோரணை காரியதரிசியான ஸ்ரீமான் ஆர்.கே.ஷண்முகம் செட்டியார் என்பதும் நமது ஆச்சாரி யாருக்குத் தெரியும். உப்பு வரியை இரட்டிக்க மன்றாடிப் போராடி னார்கள் என்பதும் அடியோடு பொய். உப்பு வரியை உயர்த்தவும் குறைக்கவும் சென்னை சட்ட சபைக்கு அதிகாரமே இல்லை. அது சுயராஜ்யக் கக்ஷி யாரும் சுயேச்சைக் கக்ஷியாரும் சேர்ந்து மெஜாரட்டி யாய் உட்கார்ந்திருந்த இந்தியா சட்டசபைக்குக் கட்டுப்பட்ட விஷயம்; அவர்களது அதிகாரத்திற்கு கட்டுப் பட்டது. இதுவும் நமது ஆச்சாரியாருக் குத் தெரியும். மந்திரிகள் கள்ளை ஒழிக்கவில்லை என்பதும் தப்பு, சட்டசபையின் மூலம் கள்ளை ஒழிக்க முடியாது என்று ஸ்ரீமான்கள் ஆச்சாரியாரும் சத்தியமூர்த்தியும் எத்த னையோ தடவை எழுதியும் பேசியும் இருக்கிறார்கள். மகாத்மா காந்தியும் சட்டசபை மூலம் கள்ளை ஒழிக்க முடியாதென்றே சொல்லியிருக்கிறார். அப்படியிருக்க, மந்திரிகள் கள்ளை ஒழிக்கவில்லையென்று சொல்வதில் எவ்வளவு புரட்டு இருக்கிறது. தவிர ஸ்ரீமான் தாஸ் முதலானவர்களை கிரிமினல் குற்றவாளிகள் என்று ஜஸ்டிஸ் கக்ஷியார் சொன்னார் என்று சொல்லு வதும் பெரும் பொய். ஸ்ரீமான் தாசைப் பற்றி அவர்கள் யாரும் கொலைகாரர், திருடர் என்று சொல்லவே இல்லை. ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரைப் போலவே ஸ்ரீமான் தியாகராய செட்டியா ருக்கும் ஒத்துழையாத்திட்டம் பிடிக்காததால் அத்திட்டத்தின் கீழ் ஜயிலுக் குப் போனவர்களை தனிமரியாதை கொடுத்து ஆதரிக்கக் கூடாது என்று சொன்னார். தேசபந்து தாசர் நாக்பூர் கொடி சத்தியாக்கிரகத்தில் ஜயிலுக்குப் போனவர்களை காங்கிரஸின் மூலம் ஆதரிக்கவேண்டுமென்று ஒருவர் சொன்னபோது கொடி சத்தியாக்கிரகத்தில் ஜயிலுக்குப் போனவர்கள் கஞ்சிக்கில்லாத தத்தாரிகள் அவர்களை ஆதரிக்கக்கூடாது என்று தேசபந்து தாஸ் சொன்னார். அப்படிச் சொன்னவ ருடைய உருவத்தை சுதேசமித்திரன் ஆபீசில் வைக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி சொல்லுவதற்கு ஆள்கள் நமது பார்ப்பனர்களுக்குக் கிடைப்பதில்லை.

தவிர, பார்ப்பனரல்லாதார் படிப்புக்கு ஜஸ்டிஸ் கக்ஷியார் யாதொரு கவலையும் எடுத்துக்கொள்ளவில்லையென்றும் சொல்லியிருக்கிறார். இது மேற்கண்டவைகள் எல்லாவற்றையும்விட வேண்டுமென்றே மனதறிந்து சொல்லும் பெரிய பொய். கடவுள் என்று ஒருவர் இருப்பது உண்மையாயிருந் தால் இந்த வார்த்தைகள் சொல்லும்போதே சொன்னவர் கண்ணையும் வாயையும் சொல்லச் செய்தவரின் கண்ணையும் குயுத்தியை யும் உடனே பிடுங்கி இருப்பார் என்றே சொல்லவேண்டும். ஜஸ்டிஸ் மந்திரிகள் வந்த பிறகு நமது மாகாணத்தில் இலவசக் கல்வியும் கட்டாயக் கல்வியும் ஏற்பாடு செய்து அநேக இடங்களில் அமுலில் கொண்டு வந்திருக்கிறார்கள். 5 வயது முதல் 12 வயது வரை ஒவ்வொரு குழந்தையும் கண்டிப்பாய் படிக்க வைத்தாக வேண்டும். இல்லாவிட்டால் பெற்றோர் களுக்கு தண்டனை என்று சட்டமும் செய்திருக்கிறார்கள். அதன் மூலம் படிக்கும் லக்ஷக்கணக்கான பிள்ளைகளில்



RangaRakes
tamilnavarasam.com

100-க்கு 99 பேர் பார்ப்பனரல்லாதார். இதுவும் நமது ஆச்சாரியாருக்கு நன்றாய்த்தெரியும்.

இந்த மாதிரி “உயர்ந்த தத்துவமுள்ளவர்கள், பொதுவானவர்கள், உண்மையான தேசபக்தர்கள்” என்று சொல்லப்பட்ட கூட்டத்தைச் சேர்ந்த மேல்கண்ட பார்ப்பனர்களின் விஷமப் பிரசாரமே இப்படி இருந்தால் மற்ற சாதாரணப் பார்ப்பனர்களின் விஷமப் பிரசாரங்கள் எவ்வளவு பொய்யை யும் புளுகையும் கொண்டிருக்கும் என்பதை வாசகர்களே யோசித்துப் பார்க்கட்டும்.

தவிர, ஸ்ரீமான் ஆச்சாரியார் பேசும்போது “ஸ்ரீமான் முனுசாமிக் கவுண்டர் எக்காரணம் பற்றியும் ஜஸ்டிஸ் கக்ஷியார் மாய வலையில் அகப் படமாட்டார்; காங்கிரஸ் கட்சியிலேயே இருப்பார் என்று பொது ஜனங்க ளுக்கு ஜாமீன் கொடுத்திருக்கிறார். இதன் ரகசியம் என்ன? ஸ்ரீமான் முனு சாமிக் கவுண்டர் ஒரு சமயம் தேர்ந்தெடுக்கப்பட்டால் தங்கள் அடிமையாக இருக்க வேண்டுமென்று கவுண்டரிடம் உறுதிமொழி வாங்குவதுதானே. காங் கிரஸ் கட்டளைகள் என்ன அவ்வளவு யோக்கியமானது? காங்கிரசின் யோக் கியதையையும் நாணயத்தையும் பார்க்க ஒரே ஒரு உதாரணம் போதாதா? சட்டசபையை விட்டு எல்லோரும் வெளிக் கிளம்பினதும் மறுபடியும் உள்ளே நுழைந்ததும் யோசித்துப் பார்த்தால் ஸ்ரீமான் ஆச்சாரியார் போன்றவர்கள் கடுகளவாவது யோக்கியப் பொறுப்புள்ளவர்களாயிருப்பார் களானால் சுய ராஜ்ஜியக் கட்சி அபேக்ஷகருக்கு ஓட்டு போடும்படி சொல்ல மனம் வருமா?

ஸ்ரீமான் சர்.பி. தியாகராய செட்டியார் அவர்கள் ஒரு காலத்தில் அரசியல் பார்ப்பனர்கள் எல்லாம் அயோக்கியர்கள் என்று சொன்னார் என்று சமீபத்தில் டாக்டர் வரதராஜுலு நாயுடுகார் எழுதியிருந்தார். இதிலி ருந்து ஸ்ரீமான் செட்டியாருக்காவது ஒரு வித தெளிவு இருந்ததாய் தெரிய வருகிறது. ஆனால் நமக்கு வேறு எந்த இயல் பார்ப்பனர்கள் தான் யோக்கியர் என்று சொல்ல முடியாமல் இருக்கிறது. ஆதலால் வரப்போகும் தேர்தல்களில் பார்ப்பனரல்லாத பொதுமக்கள் எந்தக் காரணம் கொண்டும் ஏமாந்து போய் பார்ப்பனருக்கு ஓட்டு செய்து தங்கள் சமூக முன்னேற் றத்திற்கே தடையும் அழிவையும் தேடிக் கொள்ளாமல் கண்டிப்பாய் பார்ப்பனரல்லாதாருக்கே ஓட்டு செய்து தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமாய்க் கோருகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 24.10.1926**



RangaRakes

# ஜஸ்டிஸ் கக்ஷி கனவான்களே!

நீங்கள் உண்மையாய் பார்ப்பனரல்லாதாரின்

நண்பர்களானால் உடனே கதரை உடுத்துங்கள்.

அதுதான் உங்களுக்கு பரீக்ஷை.

கதர் தரித்திரத்தைப் போக்கி எல்லோருக்கும் விடுதலை அளிக்கும்.

**“காங்கிரஸ் சுயராஜ்ஜியம்”**

பார்ப்பனருக்கு மாத்திரம் உத்தி யோகமும் ஆதிக்கமும் அளிக்கும்.

**குடி அரசு - பெட்டிச் செய்தி - 24.10.1926**



tamilnavarasam.com

## வேளாள கனவான்களின் பொறுப்பு

கோயமுத்தூர் ஜில்லா சட்டசபைத் தேர்தலுக்கு மூன்று ஸ்தானங்களுக்கு நான்கு கனவான்கள் நிற்கிறார்கள். மூன்று கனவான்கள்தான் வெற்றி பெறக்கூடும். இதில் தோல்வியடைவது யார் என்கிற விஷயத்தில் உண்மையை ஒழிக்காமல் வெளியிட வேண்டுமானால், இது சமயம் உள்ள நிலைமையின்படி, ஸ்ரீமான் சங்கராண்டாம்பாளையம் பட்டக்காரர் வேணாவுடையாக் கவுண்டர் அவர்களாவது அல்லது C.V. வெங்கிட்டரமணய்யங்கார் அவர்களாவது தோல்வியடைய நேரிடுமென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இவர்களுள் ஸ்ரீமான் பட்டக்காரக் கவுண்டர் அவர்கள் தோல்வியடைய நேரிட்டால் இச்சில்லா வாசிகள் பெரும்பான்மையாக உள்ளதும் பொறுப்பும் அந்தஸ்துமுள்ளதுமான வேளாள சமூகத்திற்கு தங்களது சமூக நலத்தை நாடும் யோக்கியதை இல்லையென்றுதான் சொல்ல வேண்டி வருமென்று சொல்லவே பயப்படுகிறோம். ஆனால் அச்சமூகத்திய தலைவரும் பிரதிநிதியுமான ஸ்ரீமான் பட்டக்காரக் கவுண்டர் அவர்கள் தோல்வியடை வதில் ஆச்சரியமொன்றுமில்லை என்றும் சொல்லுவோம். ஏனெனில் சென்ற தேர்தலிலும் இதே மாதிரி அதாவது கொங்குவேளாள சமூகத்திற்கே இரண்டு கண்கள் என்று சொல்லத்தகுந்த மாதிரியில் இச்சில்லாவில் இரண்டு வகைப் பெரியார்கள் உண்டு. அவர்கள் கனம் தங்கிய ஊத்துக்குளி ஜமீன்தார் போன்ற ஜமீன்தார்களும் கனம் பழயகோட்டைப் பட்டக்காரர் முதலிய பட்டக்கார கனவான்களுமேயாவார்கள். அடுத்தாப்போல் அச்சமூக பிரமுகர்களிலும் பிரமுகராயிருப்பவர்கள் ஸ்ரீமான் V.C. வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்கள். இப்பேர்ப்பட்ட தலைவர்களையும், பெரியார்களையும், பிரமுகர்களையும், நமது கொங்கு வேளாள சமூகம் உடைத்தாயிருப்பதற்கு மிகுதியும் பெருமையும் பாராட்டிக் கொள்ள வேண்டியிருப்பதோடு அப்பெருமைகள் சிறப்புற்று விளங்க ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். அப்படியிருக்க சென்ற 3 வருஷத்திற்கு முன்னிட்ட சட்டசபைத் தேர்தலில் ஊத்துக்குளி ஜமீன்தார வர்களைத் தோல்வியடையச் செய்து விட்டார்கள். அது மாத்திரமல்லாமல் ஸ்ரீமான் வெள்ளியங் கிரிக்கவுண்டர் அவர்களையும் தோல்விக்கு மிக சமீபத்தில் நிற்கும்படி செய்து விட்டார்கள். அது சமயம் ஒத்துழையாமையிலீடுபட்டிருந்த சிலரும் ஸ்ரீமான் கவுண்டர் அவர்களுக்கு தோல்வி ஏற்படுமோ என அஞ்சி தங்களது கொள்கை களையும் விட்டு கவுண்டருக்காகப் பிரசாரம் செய்து மூன்றாவதாராக வெற்றி பெறச் செய்ததும் நாம் அறிவோம். அதோடு வேளாள சமூகத்தாரல்லாத வரும் வேளாளர்களை



சரிசமமாகக் கூட நடத்தாமல் இழிவாய் நடத்துகிற வரும் வேளாள இரத்தத்தை உறிஞ்சியே வாழ வேண்டிய சமூகத்தாராகிய ஸ்ரீமான் C.V. வெங்கிட்ட ரமணய்யங்கார் அவர்கள் எல்லோரையும்விட அதிகமான ஓட்டுப் பெறும் படியாகவும் செய்த நமது கொங்கு வேளாள சமூகத்தில் இவ் வருஷமும் அவர்களுடைய தலைவரான பட்டக்காரக் கவுண்டர் தோல்வியுற்றால் ஆச்சாரியப்படுவதற்கில்லை என்று சொன் னோம். அல்லாமலும், ஸ்ரீமான்கள் ஜமீன்தாரும் தோல்வியுற்று வெள்ளியங் கிரி கவுண்டரும் குறைந்த ஓட்டுப் பெறவும் அநுமதித்து சும்மாயிருந்து விட்ட பட்டக்காரக் கவுண்டர் தோல்வியுறுவது கருமபலன் என்று கூட கருமபலனில் நம்பிக்கை உள்ளவர்கள் கண்டிப்பாய் ஒப்புக் கொள்ளு வார்கள்.

ஆனால், நாம் ஓட்டு செய்வதாயிருந்தால் முதலாவது ஸ்ரீமான் பட்டக்கார வேணாவுடையாக் கவுண்டருக்கும், இரண்டாவது முதலியாருக்கும், மூன்றாவதாக செட்டியாருக்கும்தான் போடுவோமே ஒழிய எந்தக் காரணத்தைக் கொண்டும் அய்யங்காருக்குப் போடவே மாட்டோம். இதற்குக் காரணம் சொல்லுவதற்கு முன் ஒரு விஷயத்தை எல்லோரும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டியது. அதாவது தற்கால அமைப்பின் படி சட்டசபைக்குப் போவதன் மூலம்அரசியல் சம்பந்தமாய் எவ்வித காரியமும் செய்ய முடியாது.

1. கந்தாயம், வரி, வட்டம் முதலியதுகளைக் குறைத்துக்கொள்ள முடியவே முடியாது.

2. வசூல் செய்த கந்தாயங்களையும் வரிகளையும் நம்மிஷ்டம் போல் சிலவு செய்யவும் சர்க்கார் இஷ்டம் போல் சிலவு செய்வதைத் தடுக்கவும் முடியாது.

3. வேளாள சமூகத்தையே அழிப்பதற்காதாரமான வியாஜ்ஜியம், விவகாரம், கோர்ட்டு முதலிய விஷயங்களில் குடியானவர்களுக் கனுகூலமான எவ்வித சீர்திருத்தங்கள் கூட செய்ய முடியாது. எங்காவது செய்யக்கூடிய வழிகள் இருந்தாலும் அதனாலேயே பிழைக்கப் பிறந்த நமது பார்ப்பனர்கள் கொஞ்சமும் இடம் கொடுக்கவுமாட்டார்கள்.

4. கள், சாராய உற்பத்தியையோ விற்பனையையோ குறைக்கமுடியவே முடியாது. ஏனெனில், குடியானவர்கள் குடிப்பதற்காக கொடுக்கும்பணத்திலிருந்துதான் பார்ப்பனர்கள் படிக்கவேண்டும். குடியானவர்கள் குடித்துக் கெடும் பணத்திலிருந்து தான் பார்ப்பனர்கள் பிழைக்க வேண்டும். அந்த மாதிரி நிலையில்



RangaRakes tamilnavarasam.com

சர்க்காரார் குடி தத்துவத்தை வைத்திருக்கிறார்கள். இம்மாதிரியே பொது ஜனங்களுக்கோ குறிப்பாய் வேளாள சமூகத்திற்கோ சட்டசபை மூலம்ஒரு காரியமும் செய்துகொள்ள முடியாது.

மற்றபடி எதனால் கவுண்டரவர்களுக்கு முதலில் ஓட்டு போடு வோமென்றால் சட்டசபை மெம்பர் என்பது ஒரு பதவி, பெருமை, கீர்த்தி முதலியதுகளுக்குஉபயோகமானது. இம்மாதிரி பதவி, கீர்த்தி, பெருமை முதலியதுகள் அடைய பாத்தியமுள்ளவர்கள் இந்நாட்டு பெரும்பான்மை யும் முக்கியமுமான வகுப்பாகிய வேளாள சமூகத்தினரானதினாலும் சென்ற ஆறு வருஷமாய் அதிலிருந்து பெருமை அடையாத புதியவராயிருக்கிற தினாலும் ஒரு பெருமையை ஒருவரே அட்டை போல் ஒட்டிக் கொண்டு சாகளவும் வேறொருவருக்கு விடாமல் அனுபவிப்பதைவிட ஆளுக்கொரு தரம் அனுபவிக்கலாம் என்கிற முறைப்படியும் கவுண்டருக் குத்தான் ஓட்டு செய்ய வேண்டும். இந்தத் தத்துவத்தை உத்தேசித்தே ஸ்ரீமான் வி.சி. வெள் ளியங்கிரிக் கவுண்டர் அவர்களும் புதிதாய் ஒருவருக்கு இப் பதவியை அளிக்க வேண்டு மென்ற எண்ணங்கொண்டே தனக்குக் கண்டிப் பாய் சட்ட சபை மெம்பர் ஆகி விடும் என்கிற உறுதியிருந்தும் புதிதாக ஒருவருக்கு கொடுக்க வேண்டுமென்று கண்ணியமாய் விலகிக் கொண்டார். ஆனாலும் பட்டக்காரக் கவுண்டர் அவர்கள் நின்றிருந்தாலும் தானும் நின்றிருந்தால் அதில் தப்பு ஒன்றும் சொல்ல முடியாது. ஆனால் ஸ்ரீமான் வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்கள் தாங்கள் சமூகத்தாரின் குலாபிமானத்தைச் சென்ற தேர்தலில் கண்டு கொண்ட அனுபவத்திலிருந்து ஒரு கவுண்டருக்காவது நமது வேளாள சகோதரர்கள் போடுவார்களோ போட மாட்டார்களோ என்பது உறுதி இல்லாதிருக்கும்போது இருவர் நின்றால் நாளை எல்லோரும் இதனாலேயே போய் விட்டது என்று சொல்லுவார்கள் என்று பயந்து கொண் டும் எப்படியாவது நமது வகுப்பார் ஒருவராவது கஷ்டமில்லாமல் வரட்டு மென்கிற பெரு நோக்கத்துடன் விலகிக் கொண்டார். அதற்காக வாவது பட்டக்காரக் கவுண்டருக்கு ஒவ்வொருவரும் முதலாவதாக ஓட்டுப் போடக் கடமைப் பட்டிருக்கிறார்கள் .

ஸ்ரீமான் சி.எஸ்.ரத்தினசபாபதி முதலியாரவர்களுக்கும் இதுபோன்ற காரணம்தான். அதாவது, இதற்குமுன் இப்பதவியிலிருந்தவரல்ல. சென்ற தடவை இந்த ஸ்தானத்திற்கு நின்று ஏராளமான செலவு செய்து தோல்வி யுற்றவர். ஜில்லா பொதுமக்கள் பலரால் நல்லவர் என்று கொண்டாடப் பட்டவர். மற்றும் பல நல்ல சுபாவங்களுமுடையவர். அடுத்தபடியாக ஸ்ரீமான் டி.எ.ராம லிங்க செட்டியார் அவர்கள் இதற்கு முன் இரண்டு தடவை அப்பதவி வகித் தவராயிருந்தாலும் குடியான சமூகத்திலாவது பார்ப்பனரல்லாதார் சமூகத்தி லாவது வேறு யாரும் இன்னொரு அபேக்ஷக ராக நிற்கவுமில்லை. அல்லா மலும் பார்ப்பனரல்லாத சமூகத்தவர் பெரும் பான்மையான ஜனங்கள்



எதிர் பார்க்கப்படுகிறதான பணமும் படிப்பும் உள்ளவர். பல நல்ல சுபாவங் களுமுள்ளவர். இப்பதவி அனுபவிக்க ஆசைப்படத்தகுந்த யோக்கிய தையுமுடையவர். இந்தக் காரணங்களோடு மற்றொன்று என்னவென்றால் மக்கள் யாவரும் கடவுள் முன்னிலையில் சமம் என்றும் பிறவியில் மக்களுக் குள் உயர்வு தாழ்வைக் கற்பித்து ஒருவரை ஒருவர் இழிவுபடுத்துவது தப்பு என்கிறதுமான கொள்கைகளை இம்மூவரும் உடையவர்கள். தற்காலம் நமது பிரதிநிதியாக சட்டசபைக்குப் போக இந்த ஒரு யோக்கியதையேதான் நம்மைப் பொறுத்தவரையில் முக்கியமானது என்று எண்ணுவதால்தான் நாம் ஓட்டுப் போடுவதாயி ருந்தால் இதுசமயம் இம்மூவருக்கேதான் ஓட்டுச் செய்வோம் என்று சொல்ல நேரிட்டது. அல்லாமலும் ஸ்ரீமான் சி.வி.வெங் கிட்டரமணய்யங்காருக்கு ஏன் போடக்கூடாது என்பதற்கும் சில காரணங்கள் சொல்லாவிட்டால் பொதுஜனங்கள் திருப்தியடைய மாட்டார்கள் என்றே எண்ணுவதால் அதையும் சொல்லுகிறோம்.

ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்கார் சட்டசபைக்கு போவதற்குச் சொல்லும் அரசியல் காரணங்களை நாம் ஒப்புக் கொள்வதில்லை, அவரு டைய கட்சியான சுயராஜ்யக் கட்சி என்பதை நாம் ஒரு புரட்டுக் கட்சி என்றும் கட்சியின் பேரால் சட்டசபையை விட்டு வெளியில் வந்தவர் மறுபடி கட்சி உத்திரவு இல்லாமல் உள்ளே போனவர். அது பார்ப்பனரல்லாதாரைத் தாழ்த்த வும், பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும் ஏற்பட்ட பார்ப்பனக் கட்சி என்பதே நமதபிப்பிராயம். தன்னை ஒரு சமயம் காங்கிரசுக்காரர் என்று சொல்லிக் கொள்ளக்கூடும் என்றால், காங்கிரஸ் கட்டளை சட்டசபைக்குப் போகக்கூடாது என்று இருந்த காலத்தில் அதைமீறி சட்டசபைக்குப் போனவர்; காங்கிரசுக் கட்டளைப்படி அநேக தேசபக்தர்கள் கள்ளுக்கடை மறியல் செய்து ஆயிரக்கணக்கான தொண்டர்கள் ஜெயிலுக்குப் போய்க் கொண்டிருந்த காலத்தில் தனது ஆயிரக்கணக்கான தென்னை மரங்களில் முட்டி கட்டி கள்ளுற்பத்தி செய்து பதினாயிரக்கணக்கான ரூபாய் சம்பாதித் துக் கொண்டிருந்தவர். ஒத்துழையாமைக்காக இந்தியாவில் முப்பதாயிரம் பேர் ஜெயிலுக்குப் போயிருக்கும் போது இவர் சட்டசபையில் மெத்தை போட்ட நாற்காலியில் உட்கார்ந்து காற்று வாங்கிக்கொண்டு அரசாங்கத் தாரோடு ஒத்துப் பாடிக் கொண்டு வந்தவர்; தன்னை ஒரு ஒத்துழையாதான் என்று சொல்லிக் கொள்ளுவாரா என்றால் அரசாங்கத் தயவில் ஜில்லா போர்டு மெம்பரும், கல்விச் சங்கத் தலைவர் பதவியும் அரசாங்க நியமன மாய்ப் பெற்றவர்; ஒரு சமயம் நிர்மாணத் திட்ட மாகிய கதர், தீண்டாமை, மதுவிலக்கு இதுகளுக்கு அநுகூலமாய் இருப்பவர் என்று சொல்லிக் கொள்ளுவாரேயானால், யந்திர நெசவு மில்லை வைத்து தினம் ஒன்றுக்கு பதினாயிரக்கணக்கான கெஜம் துணிகளை தனது யந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்து தினம் பதினாயிரக் கணக்கான நெசவுக்காரர் தொழிலைக் கெடுத்து அவர்கள் வயிற்றில் மண்ணைப் போட்டுக் கொண்டு இருப்பவர்; எப்படி



RangaRakes tamilnavarasam.com

தன்னை கதரில் நம்பிக் கை உள்ளவர், கதருக்கு ஆதரவு அளிப்பவர் என்று சொல்லிக்கொள்ள முடியும்? எலெக்ஷன் தீரும்வரை பொது ஜனங்களை ஏய்ப்பதற்காக கதர் கட்டிக் கொண்டிருந்தால் போதுமா? தீண்டாமையில் கவலை உள்ளவர் என்று தன்னைச் சொல்லிக் கொள்ளு வாரானால் முதலாவது தேவஸ்தான மசோதாவை ஆக்ஷேபித்திருக்க முடியுமா? அவரைப்போல் கல்வியும் செல்வமும் அவரைவிட அழகும் குணமும் உள்ள குடியானவர்களையே சூத்திரர் என்றும், தான் சாப்பிடு வதைப் பார்க்கக் கூடாது என்றும், தொட்டு விட்டால் தீட்டாய்ப் போய் விட்டது என்றும் சொல்லுபவர் ‘சக்கிலிப் பறையர்’ என்று சொல்லும் சகோதரர்களாகியவர் களை கிட்டவரவொட்டுவாரா? மதுவிலக்கைப் பற்றியோவென்றால், முன்னமேயே பேசிப்பேசி தீர்ந்து போய் விட்டது. ஒரு சமயம் தேர்தலுக்காக ஏதாவது முட்டி இறக்கியிருப்பாரேயானால் சட்டசபை தீர்ந்தவுடன் பத்தி லேயே மறுபடியும் இறக்கின முட்டிகள் ஒன்றுக்குப் பத்தாய் மரம் ஏறப் போகிறது. இவ்வளவும் தவிர தன்னை நமது சகோதர வகுப்பார் என்று சொல்லிக்கொள்ளுவா ரேயானால் எப்படி இவர்கள் வகுப்பு நமக்கு சகோதர வகுப்பாகும். நாம் நமது நாட்டி லுள்ள எந்த வகுப்பாரோடு சேர்ந்து அவ் வகுப்பாரில் கலந்து கொள்ள வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம். உதாரணமாக, நாம் ஐரோப்பாவுக்குப் போய் சிலகாலம் இருந்து விட்டு வந்தால் ஐரோப்பியராய் விடலாம். ஐரோப்பிய சம்பந்தம் வைத்துக் கொண்டால் சட்டைக் காரராய் விடலாம். மகமதுவைப் பின்பற்றி தலையை மொட்டை அடித்து லுங்கி கட்டி அல்லாவை வணங்கினால் மகம்மதியராய் விடலாம். ஏசுவைப் பின் பற்றி கழுத்தில் சிலுவைப் போட்டுக் கொண்டால் கிறிஸ்து வராகி விடலாம். இவ்வளவு பெயரையும் நாம் சகோதரர் என்று கூப்பிடலாம். அவர்கள் நம்மை சகோதரர் என்று கூப்பிடலாம். ஆனால் நாம் என்ன செய்தால் பிராமணனாகலாம்? பூமியில் பிறந்து விட்டால் சாகும் வரை அவன் வேறு, நாம் வேறு; எந்த விதத்திலும் ஒன்றாக முடியாத பார்ப்பனீயம் என்னும் பெரிய தடை மத்தியில் இருக்கிறது.

ஆதலால், இந்நிலையில் நமக்கும் பார்ப்பனருக்கும் எவ்வித சம்பந் தமோ ஒற்றுமையோ ஒருவர் நன்மையில் மற்றவருக்கு கவலையோ இருக்கிற தென்பதெல்லாம் புரட்டேயொழிய உண்மையல்ல. ஆதலால், ஓட்டுப்போட இஷ்டமுள்ள இச்சில்லா பார்ப்பனரல்லாத ஓட்டர்களும் குறிப்பாய் வேளாள ஓட்டர்களும் தங்கள் தங்கள் ஓட்டுக்களைக் கண்டிப் பாய் முன்கூறிய வரிசைப்படி பார்ப்பனரல்லாத மூவருக்கே போடும்படி வேண்டிக் கொள்ளு கிறோம். எந்த விதத்திலாவது பார்ப்பன ஓட்டர்கள் ஒருவராவது பார்ப்பனரை விட்டு பார்ப்பனரல்லாதாருக்கு ஓட்டுக் கொடுப் பார்கள் என்று நம்பவே வேண்டியதில்லை. பெரும்பான்மையான பார்ப்பன மக்கள் ஸ்ரீமான் அய்யங்காருக்கு தனி வோட்டுகளே போடுவார்கள். சிலர் மீதி ஓட்டுகளை ஸ்ரீமான் செட்டியாருக்கும் முதலியாருக்குமாவது செய்வார்களே ஒழிய



ஸ்ரீமான் கவுண்டருக்குக் கண்டிப்பாய் செய்ய மாட்டார்கள். ஏனெனில் தோல்வி அடைவது ஸ்ரீமான் கவுண்டரா அய்யங் காரா என்பதாகவே இருப்பதால்தான். ஆதலால் அய்யங்காருக்கு போடப் பட்ட ஒவ்வொரு ஓட்டுக்களும் பட்டக்காரக் கவுண்டரைத் தோற்கடிக் கத்தக்கது என்று மறுபடியும் சொல்லுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 24.10.1926**



RangaRakes
tamilnavarasam.com

# மகாஜன நேசன்

கோயமுத்தூரிலிருந்து வெளியாகும் 'மகாஜன நேசன்' என்னும் ஒரு சகோதரப் பத்திரிகை "கோயமுத்தூர் ஜில்லா தேர்தலும் கவுண்டரும்" என்கிற தலையங்கத்தின் கீழ் ஒரு வியாசத்தை பிரசுரித்துவிட்டு அதன் கீழ் பத்திராதிபர் குறிப்பாய், "இவ்வியாசத்தை பிரசுரம் செய்ததின் நோக்கம் யாதெனில் 'குடி அரசு'ப் பத்திரிகையின் மேல் ஜனங்களுக்கு இருக்கும் அதிருப்தியைப் போக்கி உண்மைத் தொண்டு புரியும்படி தூண்டுதற்பொருட்டே வியாசத்தைச் சற்று அப்பத்திரிகையை உயர்த்திப் பேச இடமளித்தோம்" என்று எழுதி ஆசிரியர் என்று கையொப்பமிட்டிருக்கிறார்.

இதில் இவ்விதம் குறிப்பு எழுதியது அப்பத்திரிகை நடந்து கொள்ள வேண்டிய தன்மைக்கு மீறினதென்றும் 'குடி அரசி'ன் மீது பொதுஜனங்களுக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்குமானால் அதைப் போக்குவதற்கும் 'குடிஅரசு' உண்மைத் தொண்டு செய்யாமலிருந்தால் அதைச் செய்யும்படி செய்வதற்கும் 'மகாஜன நேசன்' அணுக வேண்டிய வழி இது வல்லவென்றும் 'நேசனுக்கும்' அமுழ்ந்திக் கிடந்த பொறாமை இது ஒரு சந்தர்ப்பமாய்'நேசனை' அறியாமலே நேர்ந்து விட்டதென்று மாத்திரம் இதுசமயம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 24.10.1926**



# வகுப்புத் துவேஷிகள் யார்?

## பார்ப்பன பிரசாரத்தின் தன்மை

மகா மகாகனம் பொருந்திய ஸ்ரீமான் சாஸ்திரியார் அவர்கள் தென் ஆப்பிரிக்கா ரவுண்ட் டேபிள் கான்பரன்சுக்கு சர்க்காரால் நியமிக்கப்பட்டு போவதை ஒட்டி 'இந்து' பத்திரிகை பிரமாதமாய் எழுதி இருப்பதோடு, அவரது படத்தையும் தனது பத்திரிகையில் போட்டு அவரை விளம்பரப் படுத்தியிருக்கிறது. ஸ்ரீமான் சாஸ்திரிகள் இந்து பத்திரிகையின் கோஷ்டிக்கும் அதன் கொள்கையான சுயராஜ்யக் கட்சிக்கும் விரோதமானவர். அப்படி யிருந்தும் அதாவது தங்களது கோஷ்டிக்கும் தங்களது கொள்கைக்கும் விரோதமாயிருந்தும் ஸ்ரீமான் சாஸ்திரியார் பார்ப்பனர் என்கிற காரணத்துக் காக அவரை விளம்பரப்படுத்தி தூக்கி விடுகிறது. அதுபோலவே ஸ்ரீமான் சர்.சி.பி. ராமசாமி அய்யர் அவர்களும் சர்க்கார் உத்தியோகஸ்தராயிருந்தும், சுயராஜ்யக் கட்சிக்கு விரோதமாய்ப் பேசிக்கொண்டிருந்தும் சர்க்கார் மனுஷனாக மேல் நாட்டுக் குப் போயிருந்தும்கூட அவரது பிரயாணத்தையும், வருகை, வரவேற்பு, உபசாரம் முதலியதுகளையும், சென்றிருந்த இடத்தில் நடந்த விசேஷங் களையும் பேட்டி கண்டு பேசியதுகளையும் பார்ப்பனர் என்கிற காரணத்திற் காக படம் போட்டுத் தனது பத்திரிகையில் பிரசுரித்து விளம்பரப்படுத்தி யிருக்கிறது. ஸ்ரீமான் ஸ்ரீவிஜயராகவாச்சாரியார் என்கிற வரும், ஒரு பார்ப்பனரும் சர்க்கார் ஊழியர் என்கிற முறையில் மேல்நாட்டுக் குப் போயும் சுயராஜ்யத்திற்கு இந்துக்கள் இன்னும் பக்குவம் இல்லை என்றுகூடச் சொல்லியும் சுயராஜ்யக் கட்சி வேஷத்திற்கு விரோதமாய்ப் பேசியும், பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு ஏற்பட்டது இந்தியாவின் பாக்கியம் என்றும், கடவுள் அருள் என்றும் பேசியும், பிரிட்டிஷாரின் பெயரை இந்தியர்கள் பெறும் குழந்தைகளுக்கு வைக்க வேண்டிய மாதிரிக்கும், தான் நிர்வாக சபை மெம்பர் வேலை பெறத்தக்க அளவுக்கும் ராஜபக்தி காட்டியு மிருக்கிறார். அப்படிப்பட்டவர் ஒரு பார்ப்பனர் என்கிற காரணத்துக்காக அவரது பிரயாணத்தையும் வரவையும் அங்கு போய் செய்ததையும் பேட்டி கண்டு பேசியதையும் படம் போட்டு விளம்பரப் படுத்தியிருக்கிறது.

கோயமுத்தூர் ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் பார்ப்பனரல்லாத கட்சியிலிருந்து விலகி பார்ப்பனர் கக்ஷியான சுயராஜ்யக் கக்ஷியினராயும், அக்கட்சியில் முக்கிய கொரடாவாயுமிருந்தும் தமிழ்நாடு



RangaRakes tamilnavarasam.com

காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாயிருந்தும் பார்ப்பனர் சொல்லுகிற பக்கங் களிலும் கூட்டங்களிலும் அவர்களுக்குக் கிடைக்கும் அவமரியாதைகளை யெல்லாம் தான் முன்னிருந்து காப்பாற்றியும் பார்ப்பனர்கள் "தங்கள் கக்ஷியிலும் ஒரு யோக்கியதையுள்ள பார்ப்பனரல்லாதார் இருக்கிறார்" என்று சொல்லிக் கொள்ளுவதற்கு உடந்ததாயிருந்திருப்பதுமல்லாமல் ஆஸ்ட்ரே லியா பார்லிமெண்ட் கான்பரன்ஸ் என்கிற ஒரு முக்கிய கூட்டத்திற்கு இந்தியாவின் பொது மக்கள் சார்பாய் பொதுமக்கள் பிரதிநிதிகளால் தெரிந் தெடுக்கப்பட்டும் போயிருக்கிறார். இப்படிப்பட்ட ஒருவரைப் பற்றி அவர் பார்ப்பனரல்லாதார் என்கிற காரணத்தினாலேயே பிரயாணமும் இல்லை, உபசரிப்பும் இல்லை, அவரது படமும் இல்லை அங்குபோய்ச் சேர்ந்தாரா? இல்லையா? அது விபர மும் இல்லை. அவர் ஆஸ்ட்ரேலியாவில் என்ன செய்கிறார் என்ற தகவலும் இல்லை. ஒன்றும் இல்லாமல் ஏதோ ஒரு அநாம தேயம் போல் கொஞ்சம் கூட கணக்கிலேயே சேர்க்காமல் வேண்டுமென்றே அடக்கி வைத்து அலக்ஷியப் படுத்தி இருக்கிறார்கள். தங்கள் சுயநலத்திற் காக "சுயராஜ்யக் கட்சிக்கு மற் றொரு மெம்பர் போட்டியில்லாமல் தெரிந் தெடுக்கப்பட்டார்" என்று சொல்லிக்கொள்ள மாத்திரம் அவரது பெயரை உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். மற்றபடி வெகு ஜாக்கிரதையாய் விலகிக் கொண்டு வருகிறார்கள். இந்தப்படி இவர்கள் நடந்து கொண்டு மற்றவர்களை மாத்திரம் வகுப்புத் துவேஷம் வகுப்புத் துவேஷம் என்று சொல்லிக் கொள்ளுகிற இந்தப் பார்ப்பனர்கள் தங்களது நடவடிக்கைகளையும் தங்களி டம் இருக்கும் வகுப்புத் துவேஷத்தையும் பிறத்தியார் அறிய மாட்டார்கள் என்றும் பார்ப்பனரல்லாதார்கள் எல்லாம் முட்டாள்கள், இந்த சூழ்ச்சியை அறிய சக்தியற்றவர்கள் பார்ப்பனரல்லாப் பத்திரிகைகளும் எல்லாம் சுத்தப் பயங்கொள்ளிகள் தங்கள் சமூகத்தைக் காட்டிக் கொடுத்து வயிறு வளர்ப் பவர்கள் என்று நினைத்துக் கொண்டு தாராளமாய் தங்கள் வகுப்புப் பிரசாரம் செய்கிறார்கள். இதிலிருந்தாவது வகுப்புத் துவேஷக்காரர்கள் பார்ப்பனர் களும் அவர்களுடைய பத்திரிகைகளுமா? அல்லது பார்ப்பனரல்லாதாரும் அவர்களுடைய பத்திரிகைகளுமா? என்று பொது ஜனங்கள் யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அதோடு வரப்போகும் தேர்தலி லும் இப்பார்ப்பனர்களுக்கு தக்க பாடம் கற்பிக்க வேண்டுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 24.10.1926**



# கையெழுத்து போடக் கூடாது

இந்து மத பரிபாலன மசோதா என்னும் இந்து தேவஸ்தான மசோதா இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் சென்னை சட்டசபையில், நமது பார்ப்பனரின் கடுமையான எதிர்ப்பை ஜெயித்து நிறைவேறி, அரசாங்கத்தார் சம்மதம் பெற்று சுமார் 2 வருஷ காலம் அமுலிலும் இருந்து வந்த பிறகும் நமது பார்ப்பனர்கள் அதில் சில சட்ட சம்மந்தமான பிரச்சினைகளைக் கிளப்பி ஹைக்கோர்ட்டில் தங்களுக்குள்ள சட்ட ஞானத்தையும் செல்வாக் கையும் கொண்டு விவகாரம் தொடுத்து அச்சட்டத்தை செல்லுபடியற்றதாக்க பிரயத்தனப்பட்டதால் மறுபடியும் ஒருமுறை அச்சட்டம் சட்டசபைக்கு வர நேர்ந்தது. அந்தப்படி சட்டசபைக்கு வந்த சமயத்தில் நமது பார்ப்பனர்கள் ராஜீய இயக்கங்களையும் ஸ்தாபனங்களையும் தாங்கள் கைப்பற்றிக் கொண்ட தனால் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கைக் கொண்டு சில பார்ப்பனரல்லாத சட்ட சபை அங்கத்தவர்களை (அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்றால் இந்த தேவஸ்தான சட்டம் ஆரம்பத்தில் அதாவது 3, 4 வருஷங்களுக்கு முன்னால் தயாரிக்கும் போது கூட உதவியாயிருந்த வர்களும் இச்சட்டத்தை ஏற்படுத்தத் தீவிர முயற்சி யெடுத்துக் கொண்டவர் களுமாவார்கள்) தங்கள் சுபாவ வஞ்சகத்தாலும், பிரித்தாளும் தத்துவத் தாலும்,அவர்களுக்கு ஆசை வார்த்தைகள் காட்டி சுவாதீனம் செய்து கொண்டு அரசியல் காரணம் என்னும் பெயரையும், பொதுஜன நன்மை என்னும் பெயரையும், மத சம்பந்தமான நன்மைக்காக என்னும் பெயரையும் வைத்துக்கொண்டும் எவ் வளவு வேஷங்கள் போட்டாலும் ஜெயிக்க மாட்டோம் என்று தெரிந்திருந் தும் எப்படியாவது அதை தாமதப்படுத்தி சென்ற சட்டசபை கலைவதற்குள் நிறைவேறாதபடி செய்து விட்டால் பிறகு கலைந்து புதிதாய் கூடும் சபையில் வேறு ஏதாவது தந்திரங்கள் செய்து கொள்ளலாம் என்று சுமார் 500 திருத்தப் பிரேரேப ணைகள் என்னும் பேரால் எவ்வளவோ தந்திரங்கள் செய்து பார்த்தும், ஸ்ரீமான் பனகால் ராஜா அவர்களின் உறுதியினாலும் ஸ்ரீமான்கள் ஏ . ராமசாமி முதலியார், பி.டி. ராஜன், டாக்டர் நடேச முதலியார், டி.எ. ராம லிங்கம் செட்டி யார் முதலியவர் களின் பலமான உதவியினாலும் மறுபடியும் முன்போலவே நிறைவேற்றி வைஸிராய் பிரபுவின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. இந் நிலையில் கூட அதை எப்படியாவது ராஜப் பிரதிநிதியின் அனுமதி கிடைக்க வொட்டாமல் செய்து அச்சட்டத்தை அழிக்கவேண்டும் என்கிற எண்ணத்தின் மேல் பொது ஜனங்கள் பேரால் பல தந்திரங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அதாவது, சில மடாதிபதிகளும்



RangaRakes
tamilnavarasam.com

மகந்துகளும் பணம் செலவு செய்து பொதுமக்கள் பேரால் வைஸிராய் பிரபுவுக்கு ஒரு விண்ணப்பம் தயார் செய்து பாமர மக்களின் கையெழுத்து வாங்க பிரயத்தனங்கள் நடை பெற்று வருகிறது.

அவ்விண்ணப்பங்களை "இந்து" முதலிய பார்ப்பனப் பத்திரிகைகள் தங்கள் பத்திரிகைகளில் வைத்து அனுப்பி சந்தாதாரர்களாக ஆங்காங்குள்ள பார்ப்பன வக்கீல்களையும் மிராசுதாரர்களையும் கையெழுத்து வாங்கி வைஸிராய் பிரபுக்கு அனுப்பும்படியாகவும் செய்திருக்கின்றன. இது போலவே மலையாளக் குடிவார மசோதா என்று ஒரு சட்டம் சட்டசபையில் நிறைவேற்றி இருப்பதையும் அரசாங்கத்தாரின் சம்மதம் பெற்று அமுலுக்கு வரச் செய்யாதபடி ரகஸ்யமாக நமது பார்ப்பனர்களால் பலமான பிரசாரம் செய்யப்பட்டும் வருகின்றது. இவ் விரண்டு சட்டங்களுக்கும் விரோதமாய்ப் பிரசாரம் செய்ய முறையே மகந்துகளாலும் மலையாள ஜன்மிகளாலும் ஏராளமாக அதாவது லக்ஷக்கணக்கான பணமும் உதவப்பட்டு வருகின்றது. அப் பணம்தான் சட்ட சபை முதலிய ஸ்தாபனங்களில் பார்ப்பனக் கட்சிக்கு ஆள்சேர்க்க இப்போ தும் சென்னை மாகாணம் முழுதும் தேர்தலுக்காக விநியோகிக்கப்பட்டு வருவதோடு பார்ப்பனரல்லாதார் தேர்தல் கூட்டங் களில் கல்லெறிதல், கலகம் செய்தல், காலித்தனம் செய்தல் முதலிய காரியங்க ளுக்கு ஆதாரமாயுமிருந்து வருகிறது. ஆதலால், இம் மாதிரியான சூழ்ச்சி களையும், போலி விண்ணப்பங்களையும், விஷமப் பிரசாரங்களையும், காலித்தனங்களையும் எதிர்த்து நிற்க வேண்டிய தோடு பார்ப்பனரின் விஷமப் பிரசாரங்களிலும் போலி விளம்பரங்களிலும் பார்ப்பனரல்லாத பாமர மக்கள் மயங்கி ஏமாந்து போகாமல் இருக்கும் படிக்கும் முயற்சிகள் எடுத்துக்கொண்டு தக்க பிரசாரம் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுவதோடு பார்ப்பனர்களாலும் அவர்களது கூலிகளாலும் கொண்டு வரப்படும் எவ்வித விண்ணப்பங்களிலும் கண்டிப்பாய் கையெழுத்திடாம லும் இருக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 24.10.1926**



# பொய்ச் சமாதானம்

ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் மண்ணடியில் ஸ்ரீமான் முதலியாரைப் பற்றி ஒன்றும் பேசவில்லை, ஒன்றும் பேசவில்லை என்று அய்யங்கார் பத்திரிகைகளும் அவரிடம் கூலி வாங்கும் பத்திரிகைகளும் விளம்பரப் படுத்திய வண்ணமாகவே இருக்கின்றன. அய்யங்கார் சொன்னதாக வைத்துக் கொண்டாலும் யாருக்கும் ஒன்றும் முழுகிப் போகவில்லை. தொழிலாளிகளை ஏமாற்றும் விஷயத்தில் ஸ்ரீமான் அய்யங்காருக்கு ஸ்ரீமான் கலியாணசுந்திர முதலியார் தயவு வேண்டி வந்து விட்டதால் கூலி கொடுத்து மறுக்கிறார். ஆனால் நன்னிலத்தில் ஸ்ரீமான் நாயுடுகாரை தென்னாட்டுத் திலகரும் மாறி விட்டார், முதலியார் மாரீசனாய் விட்டார், ஆரியாவும் நாயக்கரும் வெளிப் படையாய் காங்கிரசுக்கு விரோதமாய்ப் போய் விட்டார்கள்; இவர்களை காங்கிரசை விட்டு வெளியாக்கி காங்கிரசை சுத்தப்படுத்தும் வேலையையே இவ்வருஷம் செய்யப் போகிறேன் என்று சொன்னதோடு கூட்டத்தில் இருந்த ஒருவர் முதலியார் கூடவா மாறி விட்டார் என்று கேட்டதற்கு ஏழு கிணத்து வீதியில் போய் கேட்டால் தெரியு மென்று சொன்னாரே; இதுகள் அப்போதே பல பத்திரிகைகள் இருந்ததே அதுகளை ஏன் மறுக்கவில்லை? அல்லாமலும் அப்போது தான், டாக்டர் நாயுடுவைப் பற்றி பேசவில்லை மற்றவர்களைப் பற்றித்தான் பேசினேன் என்று சொன்னதோடு, டாக்டர் நாயுடுவுக்கும் கடிதம் கூட எழுதினார். இவை கள் உண்மையா இல்லையா? அப்படியிருக்க இப்போது முதலியாரைப் பற்றி ஒன்றும் பேசவில்லை என்பதை இவ்வளவு விளம்பரப் படுத்த வேண்டிய அவசியமென்ன? முதலியார் வசமிருக்கும் வாயில்லாப் பூச்சி களாகிய தொழி லாள சகோதரர்களை ஏமாற்றி அவர்களது ஓட்டுக்களை ஸ்ரீமான் முதலியார் மூலம் பெறுவதற்கல்லாமல் வேறு காரண மென்ன? ஓட்டுத் தீர்ந்த மறுநாள் ஸ்ரீமான் முதலியாரும் இன்னும் அவரை விட பெரியவர்களும் காங்கிரசை விட்டு ஒழிந்தாலல்லாமல் ஸ்ரீமான் அய்யங் கார் காரியம் நடக்காது என்பது ஸ்ரீமான் முதலியாருக்குத் தெரியா விட்டா லும் தெருவில் போகிறவர்களுக்கெல்லாம் தெரியும். ஸ்ரீமான் முதலியாரோ, நாயுடுகாரோ, நாயக்கரோ, ஆரியாவோ, சக்கரையோ இன்னும் யார் போய் விட்டாலும் அய்யங்காருக்கு எவ்விதக் குறைவும் வந்து விடாது என்பது நமக்கு நன்றாய் தெரியும். இவர்களுக்குப் பதிலாக ஸ்ரீமான்கள் பாவலர், கந்தசாமி செட்டியார், குப்புசாமி முதலியார், அண்ணாமலைப் பிள்ளை, இரத்தினசபாபதி முதலியார், மாரிமுத்து பிள்ளை, ஷாபி மகம்மது, அமித்கான்,



RangaRakes tamilnavarasam.com

குழந்தை, ஆதிகேசவ நாயக்கர் முதலிய கனவான்கள் இருக் கிறார்கள் என்பதும் இவர்களும் விலகி விட்டால் இவர்களை விட இன்னும் மேலான ஆயிரம் பேர்கள் ஸ்ரீமான் அய்யங்காருக்குக் கிடைப் பார்கள் என்பதும், நமது உறுதியே ஒழிய முதலியார் நின்று போனால் அய்யங்கார் கல்யாணம் நின்றுவிடும் என்று நாம் நினைக்கவில்லை. பொது வாக நமது அய்யங்கார், அய்யர் முதலியவர்கள் தங்கள் ஆதிக்கத்திற்கு ஆள் சேர்க்கும் விதத்தையும், அவர்களை ஒழிக்கும் விதத்தையும், அவர் களுக்கு பதிலிகள் நியமிக்கும் விஷயத்தையும் பொது ஜனங்கள் உணர வேண்டுமென்றே குறிப்பிட்டோமே அல்லாமல் வேறல்ல.

**குடி அரசு - கட்டுரை - 24.10.1926**



# சர்.சி.பி. அய்யரின் விஜயம்

சென்னையில் சுயராஜ்யக் கட்சியின் பேரால் நடைபெற்று வந்த காலித் தனங்களும் போலீசாரின் அலக்ஷியமும், சர்.சி.பி.ராமசாமி அய்யர் அவர்கள் இந்தியாவை விட்டு கப்பலேறியும் அடங்கிக் கிடந்தது. இப்போது அவர் ஜினிவாவிலிருந்து இந்தியாவுக்கு வர கப்பலில் காலடி வைத்த உடன் பழைய படி ஆரம்பமாய் விட்டது. காலிகள் கூட்டங்களில் கல்லெறியவும், மோட்டார் டயர்களைக் கிழிக்கவும், பலவந்தமாய்த் தாக்கவும் ஆரம்பித்து விட்டார்கள். அவர் சென்னைக்கு வந்து சேர்ந்ததும் காலித்தனங்களும், போலீசைப் பற்றி பயமற்ற தன்மையும் கடைத்தெரு விலும் மூர் மார்க்கட்டிலும் விற்க ஆரம்பமாய் விட்டது. இது எங்குபோய் நிற்குமோ தெரியவில்லை. "முள் வாழையின் மேல் பட்டாலும் வாழைக் குத்தான் கேடு, வாழை முள்ளின் மேல் பட்டாலும் வாழைக்குத்தான் கேடு" என்பது போல் காலித்தனம் நடந்தாலும் பார்ப்பனரல்லாதாருக்குத் தான் உபத்திரவம். அதை அடக்கப் பிரயத்தனப் பட்டாலும் பார்ப்பனரல்லா தாருக்குத்தான் உபத்திரவம் என்கிற நிலையில் நமது பார்ப்பனர்கள் நம்மை வைத்துக் கொண்டு தங்கள் சூழ்ச்சி ரதத்தை ஓட்டுகிறார்கள்.

**குடி அரசு - சிறு குறிப்பு - 24.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# கக்ஷிகள்

## தயவு செய்து ஊன்றிப் படியுங்கள், உங்கள் நண்பர்களையும் படிக்கச் சொல்லுங்கள்.

அடுத்த வாரம் நடைபெறப்போகும் சட்டசபைத் தேர்தலில் பெரும் பாகம் இரண்டு கக்ஷிகளின் பெயர்களே அடிபடுகின்றன. அவற்றின் பெயர்களுள் ஒன்று ஜஸ்டிஸ் கக்ஷி, மற்றொன்று சுயராஜ்யக் கட்சி. இவை தவிர சுயேச்சைக்காரர் என்று சிலர் சொல்லிக் கொள்வதும் உண்டு.

### சுயேச்சைக் கக்ஷி

ஆனால் அச் சுயேச்சைக்காரர்களுக்கு மெய்யாகவாவது, பொய் யாகவாவது, வேஷத்திற்காவது ஒரு ஸ்தாபனமோ கொள்கையோ இல்லாமலும் சுயேச்சை என்றால் சட்டசபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தன்னிஷ்டம் போல் தான் நடந்து கொள்வதைத் தவிர வேறு எவ்வித இயக்கத்திற்கும் கொள்கைக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்ல என்பதே அதன் கருத்து. அல்லாமலும், அவர்களில் (சுயேச்சைக்காரர் என்பவர்களில்) ஒருவருக்கொருவர் கட்டுப் பட்டவர்கள் அல்ல என்பதும், குறைந்தது இரண்டு பேராவது சேர்ந்து ஒரு அபிப்பிராயம் கொண்டவர்கள் என்று சொல்லுவதற்கும் போது மான ஒற்றுமை இல்லாதவர்கள். அப்பெயர் கொண்டவர்கள் பெரும்பாலும் ஜஸ்டிஸ் கட்சி, சுயராஜ்யக் கட்சி என்கிற இரண்டு கட்சிக்கும் நல்ல பிள்ளைகளாக நடக்க வேண்டுமென்கிற எண்ணமும் தேசத்தில் எந்தக் கக்ஷிக்கு செல்வாக்கு இருக்கிறது என்ற உறுதி இல்லாமையும் இது சமயம் எந்தக் கட்சியின் பெயராவது சொல்லிக் கொண்டால் தங்களுக்கு ஒருசமயம் ஓட்டுக் கிடைக்காமல் போகுமோ என்கிற பயமுள்ளவர்களேயாவார்கள். ஆதலால் இப்படிப்பட்ட இவர்கள் ஒரு சமயம் வெற்றி பெற்றால் அநேக மாய்ப் பார்ப்பனர்கள் எல்லாம் பார்ப்பனக் கட்சியான சுயராஜ்யக் கட்சியி லாவது அல்லது அக்கட்சிக் கொள்கைக்கு அநுகூலமாகவாவது இருப்பார்களேயொழிய எந்த விதத்திலும் ஜஸ்டிஸ் கட்சிக்கு அநுகூலமாக இருக்க மாட்டார்கள். அதிலுள்ள பார்ப்பனரல்லாதாரும் அது போலவே ஒரு சமயம் வெற்றிபெற்றால் உத்தியோகம் பதவி முதலிய விஷயங்களில் ஜஸ்டிஸ் கட்சியாருடன் பிணங்கிக் கொண்டவர்கள் தவிர மற்றபடி உள்ள பார்ப்பனரல்லாதார் அநேகமாய் ஜஸ்டிஸ் கட்சியில் சேருவதோ அல்லது ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைக்கு அநுகூலமாயிருப்பதோ ஆகிய இம்மாதிரிதான் இருக்கக் கூடும். நிரம்பவும் ஜாக்கிரதையான சுயேட்சைக் கட்சியார் என்போர் ஜெயித்த உடன் எந்தக் கட்சி வெற்றி பெறுமோ அதில் சேர்ந்து விடுவார்கள். ஆதலால் சுயேச்சைக் கட்சி என்பதைப்பற்றி இதுசமயம் நாம் விவரிக்கத் தேவையில்லை.

### மற்றக் கக்ஷிகளும்

ஜஸ்டிஸ் கட்சி, சுயராஜ்யக் கட்சி என்கிற இரு கட்சிகளைப் பற்றியோ வென்றால் இவ்விரண்டும் தேசத்தின் உண்மையான சுயராஜ்யத்திற்கு அடிப்படையான கொள்கையை உடையவையல்ல. உண்மையான சுயராஜ் யத்திற்கு அடிப்படையான கொள்கைகள் உள்ள மகாத்மாவின் ஒத்துழை யாக் காங்கிரஸ் திட்டத்திற்கு இவ்விரண்டு கக்ஷிகளுமே விரோதமா யிருந்தன. ஆனால் ஜஸ்டிஸ் கட்சியானது அக்கொள்கைகளிலும் திட்டத் திலும் நம்பிக்கை இல்லாமல் காங்கிரசுக்கு வெளியில் இருந்து கொண்டு அதற்கு விரோதம் செய்து கொண்டிருந்தது. சுயராஜ்யக் கட்சியார் என்பாரோ அப்படிச் செய்யத் தக்க தைரியமில்லாததால் காங்கிரசுக்குள் புகுந்து கூடஇருந்தே காங்கிரசின் குடியைக் கெடுப்பதுபோல் காங்கிரசின் கொள்கைகளைக் கெடுத்து அதன் யோக்கியத்தையும் அழித்து அதை வெட்டிப் புதைக்க வேண்டிய நிலைமையில் கொண்டுவந்து விட்டு விட்டார் கள். இதன் பலனால் உண்மை சுயராஜ்யத் திட்டம் என்பது இரண்டு கட்சியிலும் இல்லை, இவ்விரண்டு கட்சியும் உண்மை சுயராஜ்யத்திற்கு விரோதமாகவே இருக்கின்றன. அல்லாமலும் அரசியல் சம்பந்தப்பட்ட வரையிலும் கூட இரண்டு கட்சியில் எதையும் நாம் நம்பவோ ஒப்புக் கொள்ளவோ முடியாத நிலைமையில் இருக்கிறோம். மற்றபடி மதம், சமூகம், சமுதாயம், சமத்துவம் ஆகிய விஷயங்களில் மாத்திரம் ஒரு கட்சி உரிமை பெறவும், மற்றொரு கட்சி மறுக்கவுமாக இரண்டு கட்சியும் தீவிர கவலை கொண்டு உழைத்து வந்து இருக்கின்றன. அதாவது சுயராஜ்யக் கட்சி என்னும் பார்ப்பனக் கட்சியின் கவலையெல்லாம் மத விஷயத்திலாவது, சமுதாய விஷயத்திலாவது, சமத்துவ உரிமை மற்ற சமூகத் தாரும் அடை யாமலிருக்க வேண்டுமென்று மறுப்பதோடு அதற்கென்றே காங்கிரசின் பெயரையும் உபயோகப்படுத்தி வருகிறது. மற்றொரு கட்சியானது மேற் கண்ட மத, சமுதாய, சமத்துவ உரிமையையே அடிப்படையாய்க் கொண்டு அதை எவ்வழியிலாவது பெறுவதற்கென்று ஜஸ்டிஸ் கட்சி என்ற ஒரு கட்சியை நிருமாணித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இவ்விரு கட்சி களும் பொது ஜனங்களின் செல்வாக்கைப் பெறவும் ஒரு கட்சி மற்றொரு கட்சிக்குப் பொது ஜனங்களிடம் செல்வாக்கில்லாமல் செய்யவும் கருதியே தங்கள் தங்கள் கட்சிகளின் அடிப்படைத் தத்துவம் ‘சுயராஜ்யம்’ பெறுவது என்று சொல்லிப் பொது மக்களை ஏய்க்கின்றன. பொதுவாய் நோக்குமிடத்து இரண்டு கட்சிகளும்


RangaRakes tamilnavarasam.com

ஒவ்வொரு கருத்தில் சுயராஜ்யத்திற்கு விரோதமான தத்துவமுள்ள கட்சிகள் என்றே சொல்ல வேண்டும். 'சுயராஜ்யம்' என்பது வந்து விட்டால் இரண்டு கட்சிக்கும் ஒவ்வொரு வழியில் ஆபத்தாகவே இருக்கும்.

### சுயராஜ்யக் கக்ஷி

எப்படியெனில் மகாத்மா கோரும் சுயராஜ்யம் அடைவதோ அதற்குத் தகுதி ஆவதோ நமது பார்ப்பனர்களான சுயராஜ்யக் கட்சியார் ஒரு போதும் சம்மதிக்க முடியாது. ஏனெனில் மகாத்மாவின் சுயராஜ்யத்தில் ஜாதி உயர்வு தாழ்வு இல்லை. ஆங்கிலப் படிப்பு ஆதிக்கத் திலிருக்காது. தற்கால மாதிரி யான கோர்ட்டுகள் இரா. இம்மாதிரியான கோர்ட்டுகளுக்கு சதா வேலையிருக்கும்படியான மதுபானம் ஒழிந்து, கட்சி பிரதி கட்சிகள் விவகாரங்கள் முதலியவைகளும் உண்டாக இடமிருக்காது. கதர் திட்டங்கள் ஈடேறினால், நமது தேசத்து செல்வத்தை கொள்ளை கொண்டு போகத்தக்க அரசாங்கம் நமது நாட்டில் வலுப்பெற்றிருக்க முடியாது. இவைகளெல்லாம் ஒழிந்து போகுமானால் வெள்ளைக்காரர்கள் ஒரு சமயம் நமது நாட்டில் இருக்க முடிந்தாலும் முடியுமே அல்லாமல் கண்டிப்பாய் நமது நாட்டில் பார்ப்பனர்கள் வாழவே முடியாது.

### தீண்டாமை

எதனாலென்றால், ஜாதி உயர்வு தாழ்வு ஒழிவதால் பார்ப்பனர்களுக்கு சமூக விஷயத்தில் எவ்வித ஆதிக்கமும் யோக்கியதையும் இல்லாததோடு நமது நாட்டில் தற்காலமுள்ள தெருப் பிச்சைக்காரர்களுக்கும், நாடோடிப் பிச்சைக் காரர்களுக்கும் உள்ள மரியாதைதான் இருக்க முடியும். ஆதலால் ஜாதி உயர்வு தாழ்வை ஒழிக்கப் பார்ப்பனக் காங்கிரசும் பார்ப்பன சுயராஜ்யக் கட்சியும் சம்மதிக்க மாட்டா.

### ஆங்கிலப் படிப்பு

ஆங்கிலப் படிப்பு ஒழிந்தால் பார்ப்பனர்களுக்கு உத்தியோக வாழ்க்கை கொஞ்சமும் கிடையாது. அந்தப்படி பார்ப்பனர்களுக்கு அநுகூல மானதெனக் கருதியே "காங்கிரஸ்" மூலமாகவே வளர்த்து வரப்படுகிறது. எனவே, ஆங்கிலம் ஒழிந்த அன்றே பார்ப்பன உத்தியோக ஆதிக்கமும் ஒழிந்து போவதோடு தூது செல்வதல்லாமல் மற்றெவ்வித உத்தியோகத் திற்கும் அவர்கள் அருகர்களாக மாட்டார்கள். ஆதலால், ஆங்கிலப் பள்ளிக் கூடத்தை ஒழிக்கவும், பார்ப்பனக் காங்கிரஸ், பார்ப்பன சுயராஜ்யக் கக்ஷி ஒருநாளும் சம்மதிக்காது.

### தற்கால கோர்ட்டுகள்

கோர்ட்டுகள் ஒழிந்தால் பார்ப்பன அதிகாரத்திற்கும் ஆதிக்கத்திற்கும்



போக போக்கியத்திற்கும் எவ்வளவு ஆபத்து ஏற்படும் என்பதை நாம் சொல்ல வேண்டியதே இல்லை. படித்தவர்களான பார்ப்பன உத்தியோகஸ் தர்களும் பார்ப்பன வக்கீல்களும் பிழைப்பதற்காக கோர்ட்டுகளேயொழிய பொதுமக்களுக்கு நியாயம் வழங்கவோ விவகாரத்தை ஒழிக்கவோ ஏற்பட்ட தல்ல என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. ஆதலால் கோர்ட்டுகள் ஒழியும் படியான சுயராஜ்யம் வர ஒரு க்ஷணம்கூட நமது பார்ப்பனக் காங்கிர சும் பார்ப்பன சுயராஜ்யக் கட்சியும் சம்மதிக்கவே சம்மதிக்காது.

### மதுவிலக்கு

கோர்ட்டுகள் இருந்தாலும் அதற்கு சதா வேலை கொடுக்கத்தக்க மதுபானம் ஒழிந்து விட்டால் கலகங்கள் ஏற்படுமா? கக்ஷிப் பிரதி கக்ஷிகள் ஏற்படுமா? மதுபானக் கடை போர்டு பலகைகள் ஒழிந்தால் அந்த நிமிஷத் திலேயே வக்கீல் போர்டு பலகைகளும் எடுபட்டுப் போகும் என்பதும் உத்தி யோக அளவும் குறைந்து விடும் என்பதும் உலகம் ஒப்புக் கொள்ளப்பட் டதுதான். ஆதலால் பார்ப்பனக் காங்கிரசோ பார்ப்பன சுயராஜ்யக் கக்ஷி யோ மதுவிலக்கைக் கனவிலும் ஒப்புக் கொள்ளாது.

### கதர்

நமது நாட்டுச் செல்வம் கோடி கோடியாய் வெளிநாட்டுக்குக் கொள்ளை போய், நமது ஏழை மக்களையும் தொழிலின்றிப் பட்டினி போட்டு வைப்பதற் காதாரமான அந்நியத் துணி, யந்திரத் துணி முதலியவை ஒழியத் தக்க கதர்த் திட்டம் நிறைவேறினால் கொள்ளை கொள்ளும் அந்நிய அரசாங் கத்தார் ஆதிக்கம் இங்கு நிலைபெறவே பெறாது. அந்நிய அரசாங்கம் இல்லா விட்டால் பார்ப்பன ஆதிக்கம் நிலைத்திருக்க முடியவே முடியாது. ஆதலால் கதர் திட்டத்தையும் பார்ப்பனக் காங்கிரசோ பார்ப்பன சுயராஜ்யக் கட்சியோ ஒப்புக்கொள்ள முடியவே முடியாது.

### ஜஸ்டிஸ் கட்சி

அதுபோலவே பார்ப்பனர் கோரும்படியான சுயராஜ்யம் ஏற்படு வதை பார்ப்பனரல்லாத மக்கள் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சி ஒரு நாளும் சம்மதிக்காது. ஏனெனில் பார்ப்பனர் கோரும் சுயராஜ்யமெல்லாம் முன் சொன்ன மகாத்மா சுயராஜ்யக் கொள்கையை அடியோடு ஒழித்து விடுவதல் லாமல் பார்ப்பனர்கள் பிழைக்கத் தகுந்த மாதிரி பல உத்தியோகங்களும் பதவி களும் சம்பாதிப்பதுடன் பார்ப்பனர் ஆதிக்கம் நிலைத்திருத்தத்தக்க திட்டங் களையே வைத்துக் கொண்டிருப்பதும் அல்லாமல் பார்ப்பனரல்லா தார் விடுதலைக்கும் சுயமரியாதைக்கும் விரோதமாக முட்டுக்கட்டை போடுவ தையே கொள்கையாகவும் வைத்திருப்பதால் பார்ப்பனரல்லாத மக்கள் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சி இதை ஒருநாளும் அனுமதிக்காது என்று சொன்னோம். ஆனாலும் பார்ப்பனரல்லாதார் கட்சி ஏற்பட்டதின் பின்னால்



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனரல்லாதார் சமூகங்களுக்கு சமத்துவம் சுயமரியாதை என்கிற துறைகளில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதை பிரத்தியக்ஷத்தில் பார்க்கலாம்.

## ஜஸ்டிஸ் கட்சியால் ஏற்பட்ட பலன்

ஜஸ்டிஸ் கட்சி என்று ஒரு கட்சி ஏற்பட்டிராவிடில் ஹைகோர்ட் ஜட்ஜுகளில் இன்றைய தினம் ஐந்து ஜட்ஜுகள் அதாவது ஸ்ரீமான்கள் கனம் சி. கிருஷ்ணன் "தீண்டாத வகுப்பைச் சேர்ந்தவர்,'' தேவதாஸ் கிறிஸ்த வர், வெங்கிடுசுப்பராவ் ஆந்திர தேசத்து கோமட்லு செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர், மாதவன் நாயர் மலையாள நாயர் வகுப்பு, சுந்தரம் செட்டியார் தமிழ்நாடு கோமட்லு வகுப்பு ஆகிய ஐந்து பார்ப்பனரல்லாத கனவான்கள் ஹைக்கோர்ட் ஜட்ஜுகளாக முடியுமா?

## ஜஸ்டிஸ் கட்சி இல்லாத காலத்தில்

ஸ்ரீமான் சங்கரன் நாயர் அவர்களை அவரது சாமர்த்தியத்தை மெச்சி சர்க்காரர் ஹைகோர்ட் ஜட்ஜு பதவிக்கு சிபார்சு செய்த காலத்தில் நமது பார்ப்பனர்கள் ஒன்று கூடி சூத்திரனுக்கு ஹைகோர்ட் ஜட்ஜு பதவி கொடுத்து விட்டால் தாங்கள் அவரை 'பிரபுவே' என்று கூப்பிடவேண்டி இருக்கு மென்றும், அந்த ஜட்ஜு அதிகாரத்தால் பல பார்ப்பனரல்லாதாரை முனிசீப்பு களாக்கி விடுவார்கள் என்றும், பிறகு அந்த முனிசீப்புகளைத் தாங்கள் 'எஜமானே', 'சமூகமே' என்று கூப்பிட வேண்டி வருமே என்றும், இவர்கள் செல்வாக்கால் பல பார்ப்பனரல்லாத வக்கீல்கள் தோன்றி தங்கள் தொழிலுக் குப் போட்டி போட வந்து விடுவார்கள் என்றும் கருதி காலஞ் சென்ற கன வான்களாகிய பாஷ்யம் ஐயங்கார், கஸ்தூரி ரங்கய்யங்கார் முதலிய பார்ப்பனர் கள் கவர்னரை நேரில் பார்த்தும், சீமைக்குத் தந்தி கொடுத்தும், சர்.சங்கர நாயருக்குக் கிடைக்க வேண்டிய உத்தியோகத்தை வெகு காலம் தடைப் படுத்தி வைத்திருந்தமை உலகமறிந்த இரகசியம். நமக்கு இந்த இரகசியத்தை ஒரு பார்ப்பனக் காங்கிரஸ் தலைவர்தான் முதன்முதல் சொன்னார்.

## வகுப்புவாரி உரிமை

ஜஸ்டிஸ் கட்சி இல்லாவிட்டால் சென்னை அரசாங்க நிர்வாக சபையில் மாதம் 5000, 6000 ரூபாய் சம்பளம் வாங்கத்தக்க நிர்வாக சபையில் மெம்பராக கனம் அபீபுல்லா, கனம் மகம்மது உஸ்மான் ஆகிய இரண்டு மகம்மதியர்கள் வர முடியுமா? சென்னை சட்ட சபைக்கு மாதம் 2000 ரூ. சம்பளம் வாங்கத்தக்க ஒரு கிறிஸ்தவர் தலைவராக வரமுடியுமா? ஸ்ரீமான்கள் சுப்பராய ரெட்டியார், ராமராய நிங்கார், கே.வி. ரெட்டி நாயுடு, பாத்ரோ, சிவஞானம் பிள்ளை முதலிய பார்ப்பனரல்லாதார்கள் மந்திரிகளாக வரமுடியுமா? ஸ்ரீமான்கள் எம்.ஸி. ராஜா, மருதபிள்ளை, ஆர். வீரய்யன், குருசாமி முதலிய (பஞ்சமர் என்று பார்ப்பனர் களால் சொல்லப்பட்ட) கனவான்கள் சட்டசபை மெம்பராக வந்திருக்க



RangaRakes

முடியுமா? ஸ்ரீமான்கள் சர்.ஆர். வெங்கிட்டரத்தினம், சி. ஆர். ரெட்டி முதலியவர்கள் மீ 2000 ரூ. சம்பளம் வாங்கத் தகுந்த கல்வி இலாக்கா வைஸ் சான்சலராக வந்திருக்க முடியுமா? ஸ்ரீமான் ஜே. வெங்கிட்ட நாராயண நாயுடு கார்ப்பரேஷன் கமிஷனராக வந்திருக்க முடியுமா? ஜஸ்டிஸ் கட்சியே இல்லாதிருக்கும் பட்சத்தில் நமது பார்ப்பனர்கள் ஷை நாயுடுகாரை உத்தி யோகத்தில் வைத்திருப்பார்களா? ஸ்ரீமான் சண்முகம் செட்டியார் ஏகாதிபத் திய பார்லிமெண்டு மகாநாட்டுக்கு ஆஸ்திரேலியாவுக்குப் போயிருக்க முடியுமா?

## சர்க்கார் உத்தியோகம்

இப்பொழுது அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் இவ்வளவு எண்ணிக்கை உள்ள பார்ப்பனரல்லாத கலெக்டர்கள், ஜட்ஜுகள், சப் ஜட்ஜு கள், முனிசீப்புகள், டிப்டி கலெக்டர்கள், தாசில்தார்கள், மேஜிஸ்திரேட்டுகள், சூப்பிரண்டுகள், டெப்டி சூப்பிரண்டுகள், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள், உயர்பதவி இஞ்சினீர்கள், டாக்டர்கள் ஆகிய அதிகார மும் செல்வாக்குமுள்ள உத்தியோகங்கள் பார்ப்பனரல்லாதாருக்குக் கிடைத்திருக்குமா?

## ஸ்தல ஸ்தாபனம்

இன்னமும் ஜில்லா போர்டு தாலூக்காபோர்டு மெம்பர்கள், பிரசி டெண்டுகள், முனிசிபல் சேர்மென்கள், கவுன்சிலர்கள், பெஞ்சி மேஜிஸ் திரேட்டுகள், யூனியன் சேர்மென்கள், பிரசிடெண்டுகள் ஆகியவர்கள் இவ்வளவு பார்ப்பனரல்லாதார்கள் வந்திருக்க முடியுமா? ஜஸ்டிஸ் கட்சியே இல்லாதிருக்குமானால்.

## அரசியல் தலைவர்கள்

அரசியல் சங்கங்களிலாவது ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடு, கலியாணசுந்திர முதலியார், தண்டபாணி பிள்ளை, சிங்காரவேலு செட்டியார், பாவலர், குப்புசாமி முதலியார், அண்ணாமலை பிள்ளை, வெங்கிடு கிருஷ் ண பிள்ளை, ராமசாமி நாயக்கர், சக்கரை செட்டியார், மயிலை ரத்தினசபாபதி முதலியார், முனுசாமி கவுண்டர், அமீத்கான் சாயபு, ஷாபி மகம்மது சாயபு, மாரிமுத்து பிள்ளை முதலிய எத்தனையோ கனவான்கள் தலைவர்களாகவும் தொண்டர்களாகவும் வந்திருக்க முடியுமா? முடியுமென்று சொல்லுவார் களானால் ஜஸ்டிஸ் கட்சி இல்லாதபோது ஐந்தைந்து வருஷம் ஜெயிலுக்குப் போன உண்மையான தேசபக்தர்களான ஸ்ரீமான் வ.உ.சிதம்பரம்பிள்ளை முதலிய கனவான்கள் உண்மையான தேசத் துரோகிகளான பல பார்ப்பனர் கள் மூட்டை தூக்கியும், அவர்களை 'சுவாமிகளே' என்று கூப்பிட்டுக் கொண்டும், அவர்கள் வாலைப் பிடித்து திரிந்தால் மாத்திரம் வாழும் படியான



tamilnavarasam.com

நிலைமையில் இருக்கவில்லையா? அவர்களைவிடவா இந்தக் கனவான்கள் அதிகமான தேசபக்தி, தியாகம், கஷ்டம், சிறைவாசம் முதலியவைகள் உடைத்தானவர்கள்.

## ஒத்துழையா மனப்பான்மை

ஆனால் இதுகளினால் மக்களுக்கு என்ன லாபம்? தேசத்திற்கு என்ன லாபம்? என்று சிலர் கேட்கலாம். இந்தக் கேள்வி ஒத்துழையா மனப்பான்மை கொண்டவர்கள் கேட்கத்தக்கதுதான். ஆனால் நாம் இவைகளை அவர்களுக் குச் சொல்லவில்லை. இந்த ஸ்தானங்களுக்கும் உத்தியோகத்திற்கும் மதிப்பு கொடுக்கும் பார்ப்பனரல்லாத மக்களுக்கே சொல்லுகிறோம். ஒத்துழையாதா ருக்கும் ஒன்று சொல்லுகிறோம். ஜஸ்டிஸ் கட்சி இல்லாதிருந்தால் இந்தப் பதவியும் அதிகாரமும் ஆயிரக்கணக்கான சம்பளமும் பார்ப்பனருக்குப் போயிருக்குமா? பார்ப்பனரல்லாதார்களுக்குக் கிடைத்திருக்குமா? 10 வருஷ காலமாய் ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டு எவ்வளவு கஷ்டம், நஷ்டம், சூழ்ச்சியும், விபூஷணாழ்வார்கள் துரோகமும், கோடாரிக் காம்புகள் கொடுமையும் ஆகிய முதலியவை மலிந்து அதன் கடமையைச் செய்ய விடாது தடுத்தும் இதுவரை அதனால் ஏற்பட்டிருக்கும் நன்மைகள் இவைகளானால் இக்கொடுமைகளும் சூழ்ச்சிகளும் இல்லாதிருந்தால் எவ்வளவு நன்மைகள் உண்டாகி இருக்கும்?

## எல்லாவற்றிற்கும் மேற்பட்ட நன்மை

நன்மையோ தீமையோ எது எப்படியிருந்தாலும் இந்து மத பரிபாலன மசோதா என்னும் தேவஸ்தான உரிமை மசோதாவும், மலை யாளக் குடிவார மசோதா என்னும் மலையாளப் பெண்கள் கற்பைக் காக்கும் மசோதாவும் நிறைவேற்றப்பட்டதானது தமிழ் மக்கள் லக்ஷக்கணக்கான பேர் பிராணனைக் கொடுத்தாலும் கோடிக் கணக்கான பொன் திரவியத்தைக் கொடுத்தாலும் சாதிக்க முடியுமா? இதன் அருமை இவ்விரண்டு தத்துவங் களிலும் பார்ப்பனர்கள் இதுவரை செய்து வந்த அக்கிரமங்களை அறியத் தகுந்த கவனிப்பாளர்களுக்குத் தான் தெரியுமே அல்லாமல் மற்றவர்களுக்கு விளங்காது. ஆதலால், ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி நமது பார்ப்பனர்கள் தூற்றுவதும் ஆட்களை விட்டு திட்டச் செய்வதும் அக்கக்ஷியின் உழைப் பினால் பார்ப்பனரல்லாதார்களுக்கு ஏற்படும் நன்மைகளை ஒழிப்பதற்கும் பார்ப்பன ஆதிக்கத்திற்கு பங்கமில்லாமல் பார்த்துக் கொள்வதற்காகவே இவ்வளவு பிரயத்தனங்களும் சூழ்ச்சிகளும் செய்கிறார்களேயொழிய வேறில்லை. இவற்றை நமது மக்கள் அறியாமலும், அறிந்தும் பலர் லட்சியமில்லாமலும், லட்சியமிருந் தாலும் தங்கள் சுயநலத்தைக் கருதியும் பார்ப்பனர்களுக்கு ஆளாயிருந்து இவ்வளவு முக்கிய மானதும் அவசிய மானதுமான இயக்கத்திற்கு விரோதமாய்ப் பார்ப்பனர் செய்யும் சூழ்ச்சி களுக்கு துணை நிற்கிறார்கள்.



## ஜஸ்டிஸ் கக்ஷி அரசியல் உரிமைக்கு விரோதமா?

பலர் இக்கட்சியை வெகு சுலபமாக அரசியல் உரிமைக்கு விரோத மான கட்சி என்று சொல்லி பாமர மக்களை ஏமாற்றி விடுகிறார்கள். அரசியல் உரிமைக்கு எக்கட்சியாவது அநுகூலமாய் உழைக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா? அரசியல் உரிமை என்றால் என்ன? என்றாவது யாரா வது இதுவரை பாமர மக்களுக்கு தெரிவித்திருக்கிறார்களா? முதலாவது, சுய ராஜ்யம் என்றாலாவது என்ன என்று எந்த தலைவர்களாவது தேசீயப் பத்திரிகைகளாவது விளக்கியிருக்கின்றனவா? படித்தவர்கள் உத்தியோக மும், பதவியும், பணமும் சம்பாதிப்பதுதானே சுயராஜ்யமாகவோ அரசியல் தந்திரமாகவோ விளங்கி வருகிறது.

## காங்கிரஸ்

காங்கிரஸ் ஏற்பட்ட காலம் முதல் கொண்டு நாளது வரை (மகாத்மா காங்கிரசாகிய 2, 3 வருஷம் காங்கிரஸ் போக) காங்கிரசின் மூலம் மக்கள் அடைந்த நன்மை என்ன? காங்கிரஸ் ஏற்படுவதற்கு முன்னால் இந்திய மக்கள் அரசாங்கத்தாருக்குச் செலுத்தி வந்த வரியைவிட இப்போது மூன்று பங்கு வரிகள் அதிகமாய்ச் செலுத்துகிறார்கள். அதாவது காங்கிரசுக்கு முன் அரசாங்கத்திற்கு மக்கள் செலுத்திய வரி 50 கோடி ரூபாயைவிட குறைந்தது இப்போது காங்கிரசின் பலனாகவும் சீர்திருத்தங்களின் பலனாகவும் அரசாங் கத்திற்கு மக்கள் செலுத்த வேண்டி ஏற்பட்ட வரி 150 கோடி ரூபாயை விட அதிகமானது. காங்கிரசுக்கு முன்னால் நமது மக்கள் குடித்துக் கொண்டிருந்த கள்ளு சாராயத்தை விட காங்கிரசும் அதன் பலனாய் ஏற்பட்ட சீர்திருத் தத்திற்கு பின்னால் ஒன்றுக்கு 10 பங்கு குடி அதிகமாகிவிட்டது. அதாவது காங்கிரசுக்கு முன்னால் சர்க்காருக்கு கள், சாராயம் முதலிய விற்பனையில் கிடைத்த ரூபாய் 2 கோடி. காங்கிரசுக்கும் அதன் பலனாய் ஏற்பட்ட சீர்திருத் தங்களுக்கும் பின்னால் சர்க்காருக்கு கள், சாராயம் முதலிய விற்பனையில் கிடைக்கும் ரூபாய் 20 கோடி. காங்கிரசுக்கு முன்னால் நமது நாட்டில் ஏற்பட்டிருந்த கோர்ட்டுகளுக்கும் உத்தியோகங்களுக்கும், காங்கிரசுக்குப் பின்னால் ஏற்பட்ட உத்தியோகங்களுக்கும் கணக்குப் பார்த்தால் ஒன்றுக்கு நான்கு ஐந்து ஆகி விட்டது. அதாவது, காங்கிரசுக்கு முன் ஒரு ஜில்லாவுக்கு 2 முனிசீப்பு கோர்ட்டுகள் இருந்திருந்தால் காங்கிரசுக்கும் சீர்திருத் தத்திற்கும் பின்பு 8,10 முனிசீப்பு கோர்ட்டுகளாகி விட்டன. ஒரு ஜில்லா வுக்கு 2 உதவிக் கலெக்டர்கள் இருந்தால் இப்போது 5, 6 உதவிக் கலெக்டர் களாக உயர்வு ஆகிவிட்டது. காங்கிரசுக்கு முன்பு இருந்த சம்பளத்தைவிட ஒன்றுக்கு இரண்டு மூன்று பங்கு வீதம் உயர்ந்து விட்டது. காங்கிரசுக்கு முன்னால் நமது நாட்டுத் தொழிலாளிகளுக்கு இருந்த தொழில்களில் 8 -ல் ஒரு பங்கு கூட



RangaRakes tamilnavarasam.com

காங்கிரசுக்குப் பின்னால் கிடையாது. காங்கிரசுக்கு முன்னால் இருந்த செல்வமும் செழிப்பும் இப்போது மறைந்து போய் காங்கிரசும் சீர்திருத்தமும் ஏற்பட்ட பிறகு தரித்திரமும் பட்டினியும் அதிகமாகி விட்டது. ஆனால் காங்கிரசுக்கு முன் விளைந்த விளை பொருள்களை விடவும் அதன் விலைகளை விடவும் ஒன்றுக்கு மூன்றாய் விளை பொருள்கள் விளைந்தும் தரித்திரமாகி விட்டது. காங்கிரசுக்கு முன்னால் நமது பணம் எவ்வளவு வெளிநாட்டுக்குப் போய்க் கொண்டிருந்ததோ அதைவிட பதின்மடங்கு காங்கிரசுக்குப் பின்னால் துணிக்கும் மற்ற சாமான் களுக்குமாக வெளிநாட்டுக் குப் போகிறது. தேசத்தில் காங்கிரசுக்கு முன் இருந்த ஒற்றுமை அடியோடு கலைந்துபோய் இந்து, மகம்மதிய, கிறிஸ்தவ மத விரோதங்களும், இந்துக் களுக்குள் பிராமணர் - பிராமணரல்லாதார் விரோதங்களும், பிராமணர்களுக் குள் ஐயங்கார் ஸ்மார்த்தர் மாத்துவர் என்கிற விரோதமும், அய்யங்காரில் வடகலை தென்கலை விரோதங்களும், இதுபோலவே பார்ப்பனரல்லாதாருக் குள் ஆந்திர தேசத்தான், தமிழ்நாட் டான், கேரளத்தான் என்கிற பாகுபாடும், தமிழ்நாட்டாருக்குள் பிராமணரல் லாதாரிலேயே திராவிடர் - ஆதிதிராவிடர் என்கிற வித்தியாசமும் இன்ன மும் எத்தனையோ பாகுபாடும், அபிப்பிராய பேதமும் வளர்ந்து விட்டன. காங்கிரசுக்கு முன் தாய் பிள்ளைகள் பந்துக்கள் போல பழகி வந்த ஒரு கிராமத்தார் காங்கிரசும் அதன் பலனாய் ஏற்பட்ட சீர்திருத்தத்தின் மூலம் உண்டான தேர்தல் (எலக்ஷன்)களால் கிராமங்களுக் குள் கட்சியும், அண்ணன் தம்பிகளுக்குள் விரோதமும், குடும்பங்களில் கலகமும் உண்டாயிருக்கின்றன. காங்கிரசுக்கு முன்னால் அதிகாரிகளிடத்தி லும் மக்களிடத்திலும் இருந்த நாணயமும் கண்ணியமும் காங்கிரசுக்குப் பின்னால் அடியோடு மாறி ஹைகோர்ட்டு முதல் கிராமாதிகாரி கோர்ட்டு வரை லஞ்சம் வாங்குவதைப் பற்றி அதிகாரிகள் அருவருக்காமலும் மக்கள் கொடுப்பதற்கு பின்வாங்காமலும் ஏற்பட்டுப் போய் விட்டது. காங்கிரசுக்கு முன் இருந்த நீதிக்கும் நிருவாகத்திற்கும் காங்கிரசுக்குப் பின்னால் ஏற்பட்ட நீதிக் கும் நிருவாகத்திற்கும் மலையும் சமுத்திரமும் போன்ற வித்தியாசமேற் பட்டு விட்டது. பணக்காரனுக்கு எவ்வித தீர்ப்பு வேண்டுமானாலும் கிடைக்கத் தக்கதாகவும் ஏழைகளுக்கு நீதி என்பதே குதிரைக் கொம்பாக வும் போய் விட்டது.

## எந்த விதத்தில்

எந்த விதத்தில் காங்கிரசினாலும் அது பெற்றெடுத்த சீர்திருத் தங்களி னாலும் மக்கள் அநுகூலமடைந்திருக்கிறார்கள் என்று யாராவது சொல்ல முடியும்? அறியாமையின் பலனாகவும் மாயையின் பலனாகவும் நமக்குப் பல நன்மைகள் ஏற்பட்டிருப்பதாய்ச் சொல்லும் காரியங்கள் எல்லாம் தேசத்தின் கெடுதிக்கும் மக்களின் தரித்திரத்திற்கும் ஆதார மாயிருக்கிறதே அல்லாமல் ஊன்றிப் பார்த்தால் கடுகளவு நன்மையும் ஏற்பட்டதில்லை.



## உண்மையாய் காங்கிரசினால் ஏற்பட்ட லாபம் என்னவென்றால்

காங்கிரசினால் ஏற்பட்ட உண்மையான லாபம் என்னவென்றால் காங்கிரசுக்கு முன்பு பிச்சையெடுத்த பார்ப்பனனும், தூது சென்ற பார்ப்பன னும், பஞ்சாங்கம் சொல்லி வயிறு வளர்த்த பார்ப்பனனும் காங்கிரசின் பலனாய் வைசிராய் நிருவாகசபை மெம்பர், கவர்னர் நிருவாகசபை மெம்பர், கலெக்டர், மாதம் 10,000, 20,000 சம்பாதிக்கத்தக்க வக்கீல்கள், ஜமீன்தாரர்கள், திவான் பகதூர், சர், மகா மகாகனம் முதலிய பட்டங்கள், பெரிய பெரிய பங்களாக்கள், மோட்டார் வண்டிகள், செலூன், முதல் வகுப்பு இரண்டாவது வகுப்பு பிரயாணம், அவரவர்கள் பெண்டு பிள்ளைகள் 1,000, 10,000 பெறத்தக்க வயிர ஓலை, அட்டிகை, காப்பு, வளையல்கள் , 100, 200 பெரும் படியான சேலைகள், 30,40 பெறும்படியான ரவிக்கைகள் அணிவது முதலியது களோடு, திருடினாலும், குடித்தாலும், சூதாடினாலும், விபசாரத்திற்கு தரகு வாங்கினாலும், விபசாரத்தால் கால் கை அழுகினாலும் தங்களை பிராமணர் கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுவதைப் பலப்படுத்திக் கொள்ளவுமான காரியங்களுக்கு உபயோகப்பட்ட தல்லாமல்,

## மற்றும்

காங்கிரசுக்கு முன்னாலும் ஆங்கிலேயர் இந்நாட்டுக்கு வருவதற்கு முன்னாலும் அரசர்களாகவும், ஜமீன்தாரர்களாகவும், பாளையக்காரர்களாக வும், பாரம்பரியமாய் பெருங்குடி மக்களாகவும் வாழ்ந்து வந்தவர்கள் காங்கிரசின் பலனாய் பிற்பட்ட வகுப்பார்களாகவும், பங்கா இழுப்பவர் களாகவும், கூலிகளாகவும், கூலி கூட கிடைக்காமல் வெளி நாடுகளுக்கு வயிறு பிழைக்க பெண்டு பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு குடிபோகவுமான நிலைமைக்கு வந்திருக்கிறார்கள்.

## ஆதலால்

ஆதலால் பார்ப்பனரல்லாத மக்களே காங்கிரஸ் என்னும் மாய வலை யில் சிக்கி பார்ப்பனர்களால் பார்ப்பனரல்லாதார் சமூகம் இதுவரை அழிந்த தும் அமுத்தப் பட்டதும் போதாமல் இனியும் தாழ்ந்து பார்ப்பனர்களால் மிதிபட்டு அழிந்து போகாமல் தற்காத்துக் கொள்ள வேண்டியது உங்கள் ஒவ்வொருவருடையவும் கடமையாகும். இது வரை ஏமாந்து வந்திருப் பதைக் கொஞ்சமாவது கவனித்து பார்ப்பனரல்லாதார் நிலைமை காங்கிர சுக்கு முன் எப்படியிருந்தது காங்கிரசுக்குப் பின் எப்படியிருக்கிறது, நம் நாட்டுப் பார்ப்பனரின் நிலைமை காங்கிரசுக்கு முன் எப்படியிருந்தது காங்கிரசுக்குப்



RangaRakes tamilnavarasam.com

பின் எப்படியிருக்கிறது என்று பழம்பெரும் அனுபவசாலி களைக் கேளுங் கள். நானும் தேசபக்தன் என்று சொல்லும் வயிற்றுப் பிழைப்புக் கத்துக்குட்டி களை நம்பி மோசம் போகாதீர்கள்.

## டாக்டர் நாயர் பெருமான் மகாத்மா காந்தி

டாக்டர் நாயர் பெருமானைவிட நீங்கள் பெரிய தேசபக்தர்கள் என்றா வது அநுபவசாலிகள் என்றாவது, மகாத்மா காந்தியைவிட பெரிய தியாகி கள் என்றாவது காங்கிரஸ் பக்தர்கள் என்றாவது நினைத்துக் கொள்ளாதீர்கள். டாக் டர் நாயர் ஏன் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகி பார்ப்பனரல்லாதார் கட்சி ஏற்படுத்தினார் என்பதை நன்றாக யோசித்துப் பாருங்கள். பணத்திற்கா, உத்தியோகத்திற்கா, பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையைக் காக்கவா என்பதை யோசியுங்கள். மகாத்மா காந்தி ஏன் காங்கிரஸ் நிர்வாகத்திலிருந்து விலகி ராட்டினம் சுற்றுகிறார். அவரைவிட நீங்களும் இந்தப் பார்ப்பனர் களும் அதிக ராஜீய ஞானம் உடையவர்களா? சட்டசபை மூலம் அரசியல் நன்மை ஏற்படுமானால் மகாத்மா சும்மா இருப்பாரா என்பதை யோசியுங் கள். கண்டிப்பாய் பார்ப்பனர் சட்டசபைக்குப் போவது பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கே அல்லாமல் வேறல்ல! வேறல்ல!! வேறல்ல வேயல்ல!!!

பார்ப்பனரல்லாதார் (ஜஸ்டிஸ் கட்சியார்) சட்டசபைக்குப் போவது பார்ப்பனரல்லாதார் நன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் அவர்களது சுய மரியாதையைக்காக்கவுமே அல்லாமல் சர்க்காருக்கு அநுகூலத்திற்காக அல்லவே அல்ல! அல்லவே அல்ல!! அல்லவே அல்ல!!! இது சத்தியம். சர்க்காருக்கு உதவியாகவும், ஒத்துழைப்பாளராகவும், ஒற்றர்களாகவும் இருப்பது பார்ப்பனர்களே தான்! பார்ப்பனர்களே தான்!! சத்தியமாய் பார்ப்பனர்களேதான்!!!

## முடிவுரை

நாளது நவம்பர் *மீ* 8 உ வரப் போகும் சட்டசபைத் தேர்தல்களில் ஓட்டுப் போட இஷ்டமிருந்தால் உங்கள் மனதை உறுதிப்படுத்திக் கொண்டு பார்ப்பனரல்லாதாருக்கே ஓட்டுப் போடுவதென்று முடிவு செய்து கண்டிப்பாய் பார்ப்பனருக்கோ அவரால் நிறுத்தப்பட்டிருக்கும் காங்கிரசு சுயராஜ்யக் கட்சி என்று சொல்லும் ஆட்களுக்கோ ஓட்டுப் போடுவதில்லை என்று சத்தியம் செய்துகொண்டு உங்கள் இனத்தார்களையும் நண்பர் களையும் இம்மாதிரி செய்யும்படி தூண்டி பார்ப்பனரல்லாத கட்சியாகிய சுயமரியாதைக் கட்சிக்கு வெற்றி கொடுத்துப் பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதையைக் காக்க பிரார்த்திக்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 31.10.1926**



# பார்ப்பனரின் கனவு பலிக்காது

வரப்போகும் தேர்தலில் பார்ப்பனர்களின் வெற்றியும் தோல்வியும் ஸ்ரீமான்கள் பனகால் ராஜா, ஏ.ராமசாமி முதலியார் ஆகிய இருவர்களின் வெற்றியையும் தோல்வியையும் பொறுத்திருப்பதாகவே நமது பார்ப்பனர் கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து கனவு கண்டு கொண்டு லக்ஷக்கணக்கான ரூபாய்களையும் சர்வப் பிரயத்தனத்தையும் இதற்காகவே செலவழித்து வருவ தோடு பஞ்சதந்திரங்களையும் செய்து வருகிறார்கள். அல்லாமலும், மற்ற இடங்களிலும் தங்கள் கட்சி ஆட்களே வெற்றி பெறுவதற்காக ஓட்டர் களை ஏமாற்றும் பொருட்டு பனகால் ராஜா தேர்தலில் தோற்றுவிட்டா ரென்றும், ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் வெற்றிபெற்றுவிட்டா ரென்றும், மற்றும் பல விடங்களில் பார்ப்பனக் கட்சியே வெற்றிபெறுமென் றும், ஆதலால் அல்லாடி அவர்களே அடுத்த தடவைக்கு முதல் மந்திரியாக நியமிக்கப்படப் போகிறாரென்றும் பொய்க் கட்டுகள் கட்டிவிட்டுப் பஞ்சாங் கப் பார்ப்பனர், காபி ஓட்டல் பார்ப்பனர், வக்கீல் குமாஸ்தா பார்ப்பனர், பரிசாரகப் பார்ப்பனர் முதல் கொண்டு எல்லா பார்ப்பனர்களும் திண்ணைப் பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆனால் இவ்வித திண்ணைப் பிரசாரங் களுக்கெல்லாம் பார்ப்பனரல்லாத ஓட்டர்கள் மாறிவிடுவார்கள் என்று நினைப்பது கனவாகவே முடியும்.

தற்காலம் சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் தேர்தல் முடிவுகள் சென்ற தேர்தலில் அதாவது சென்ற மூன்று வருஷ காலமும் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு எவ்வளவு பலமிருந்ததோ அதைவிட அதிக மாகவே குறிப்பிடத்தக்க பலமிருக்குமென்றே சொல்லத்தகுந்த மாதிரிக்கே வெற்றி கிடைக்குமென்றே சொல்லலாம். உதாரணமாக, ஆந்திர மாகாணத்தில் எவ்வளவு குறைந்தாலும் சென்ற வருஷத்தை விட சுமார் 10 ஸ்தானங் களுக்குக் குறையாமலே ஜஸ்டிஸ் கட்சிக்கு முன்னிலும் அதிக மான நபர்கள் வெற்றி பெறுவார்கள் என்கிற உறுதி ஏற்பட்டு விட்டது.

தமிழ்நாட்டிலும் ஆந்திர நாட்டைப் போல் அவ்வளவு அதிகமான நபர்கள் முன்னிலும் அதிகமாய் வெற்றிபெறுவது சந்தேகமேயானாலும், குறைந்தது 3, 4 நபர்களாவது அதிகமாக வெற்றி பெறுவதில் ஆக்ஷேபணை யில்லை. உதாரணமாக, கோயமுத்தூர் ஜில்லாவில் சென்ற தேர்தலில் சுயராஜ்யக் கட்சிக்கு மூன்று மெம்பர்கள் அநுகூலமாய் வெற்றி பெற்றார்கள். இவ் வருஷமோ ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமணய்யங்கார் ஒருவர்தான்



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனக் கட்சியின் சார்பாக நிற்கிறார். அவருக்கு வெற்றி கிடைப்பது இப்போது பெரிய சந்தேகத்தில் வந்துவிட்டது. மீதி இரு ஸ்தானங்களில் வெற்றி பெறுகிறவர்களில் ஒருவர் கண்டிப்பாய் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந் தவர். மற்றவரும் ஜஸ்டிஸ் கட்சி கொள்கையையே உடையவர். எப்படியா னாலும், சுயராஜ்யக் கட்சி என்கிற பார்ப்பனக் கட்சிக்கு 2 ஸ்தானம் இழக்கப் பட்டுப் போய்விட்டது என்பதும், ஒன்று கஷ்டத்தில் இருக்கிறது என்பதும், ஜஸ்டிஸ் கட்சி என்கிற பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு 2 ஸ்தானம் கூடுதல் என்பதும் உறுதியாகி விட்டதென்றே சொல்லலாம் .

இதுபோலவே தஞ்சை ஜில்லாவிலும் சென்ற தேர்தலில் பார்ப்பனக் கட்சிக்கே மூன்று ஸ்தானங்களும் அநுகூலமாக வெற்றி பெற்றிருந்தன. இவ்வருஷம் ஒரு ஸ்தானமாவது கிடைக்குமா வென்பதே சந்தேகமாயிருக் கிறது. அந்த ஜில்லாவிலுள்ள மூன்று ஸ்தானங்களுக்கு பார்ப்பனக் கட்சியின் சார்பாய் நிறுத்தப்பட்டிருந்த மூன்று கனவான்களுமே தங்களுக்குக் கிடைப்பது சந்தேகம் என்பதாய் கருதி தனித்தனியாய் கட்சியின் பெயரை விட்டுவிட்டு பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஸ்ரீமான் முத்தையா முதலியாரவர்கள் தேர்தல் அறிக்கையில், காங்கிரசைப் பற்றியாவது சுயராஜ்யக் கட்சியைப் பற்றியாவது ஒரு வார்த்தைகூட குறிப்பிடவேயில்லை. தவிர பார்ப்பனக் கட்சித் தலைவர்களான ஸ்ரீமான்கள் எ. ரெங்கசாமி அய்யங் கார், ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்களும், ஸ்ரீமான் முத்தையா முதலியார் அவர்களின் பேரில் சந்தேகப்பட்டுக் கொண்டு ஸ்ரீமான்கள் சிவசுப்பிரமணிய அய்யருக்கும் மருதவாணம் பிள்ளைக் குமே ஓட்டுப் போடும்படிக் கேட்டு வருகிறார்கள். ஸ்ரீமான் முத்தையா முதலியாரும் தனக்குக் கட்டுப் பட்ட இடத்தில் தனி ஓட்டுகளே கிடைக்கும் படியாகவும் மற்றவிடத்தில் தனக்கு ஒரு ஓட்டு போட்டு விட்டு மற்றவை களை வேறு யாருக்கு வேண்டுமா னாலும் போட்டுக் கொள்ளுங்கள் என்றும் வேலை செய்து வருகிறார். அவர் வெற்றி பெற்றாலும் கண்டிப்பாய் பார்ப்பனர் கட்சியுடன் சேருவதில்லை யென்றே சொல்லி விட்டார். மற்ற இருவர்களோ ஸ்ரீமான் குன்னியூர் அய்யர் என்கிற கனவான் தனக்கு ஆனாலும் சரி, ஆகாவிட்டாலும் சரி என்கிற கவலையற்று இருக்கிறார். ஸ்ரீமான் மருதவாணம் பிள்ளையோ சென்ற வருஷத்தில் செலவு செய்ததில் 4-ல் ஒரு பாகம்கூட இவ்வருஷம் செல ழிக்க மனமில்லாதவராய் நடக்கிறபடி நடக்கட்டும் என்றிருக்கிறார்கள். மற்றபடி பார்ப்பனரல்லாத கட்சியைச் சேர்ந்த இரண்டு கனவான்களும், அதாவது ஸ்ரீமான்கள் பூண்டி வாண்டையார், நெடும்பலம் முதலியார் ஆகிய இருவர்கள் ஒற்றுமையாகவே வேலை செய்கிறார்கள். எவ்விதத்திலும் இவ்விருவருக்கும் வெற்றிக் குறிகள் வெளிப்படையாயிருக்கின்றன. ஏனெ னில் இவ்விருவர் களும் மற்ற அபேக்ஷகர்களைவிட பணக்காரர்கள். அதா வது ஒருவருக்கு சுமார் 1000 வேலியும் மற்றவருக்கு சுமார் 500 வேலியும் நிலம் உண்டு. அல்லாமலும் சென்ற தேர்தலில் செலவு செய்து சலிப் படையாதவர்கள். தங்கள் தங்களுக்கு கட்டுப்பட்டது என்று சொல்லும்



படியாக தனித்தனியாய் 2, 3 தாலுக்காக்களில் செல்வாக்குள்ளவர்கள். தனி வோட்டுகள் வேண்டுமானால் 10,000 கணக்கான ஓட்டுகள் பெறக் கூடிய வர்கள். அல்லாமலும் நமது பார்ப்பனர்களின் வார்த்தையைக் கேட்டு அரசியல் கட்சிகளின் பெயர்களைச் சொல்லிக் கொண்டு இதுவரை எவ்வித நாணயக் குறைவான பெயர்களும் அடைந்தவர்களல்ல. தஞ்சை ஜில்லா விலுள்ள பார்ப்பனரல்லாதார் கட்சியைச் சேர்ந்த ஜில்லா போர்டு பிரசி டெண்டு நான்கைந்து தாலூக்காபோர்டு பிரசிடெண்டுகள் மற்றும் பல பெரிய கனவான்கள் ஆகியவர்கள் எல்லாம் இவ்விருவர்களுக்கே வேலை செய் கின்றார்கள். ஆதலால் இவர்களுக்கே வெற்றி கிடைப்பது உறுதியென்றே சொல்லி விடலாம். அதிலும், ஸ்ரீமான் வாண்டையாருக்கு இப்பொழுதே எழுதி வைத்து விடலாம். சுயேச்சைவாதியென்று சொல்லப்பட்ட ஸ்ரீமான் நாடிமுத்துப் பிள்ளை அவர்களுக்கும் வெற்றிக் குறிகள் பலமாகக் காணப் படுகின்றன. பார்ப்பனரல்லாதார் கட்சி அபேக்ஷகர்களும் தங்களுக்கு இரண்டு ஓட்டுப்போக பாக்கியை ஸ்ரீமான் நாடிமுத்துப் பிள்ளைக்கே போடும் படி பிரசாரம் செய்கிறார்கள். ஸ்ரீமான்கள் மருதவாணம் பிள்ளை, குன்னியூர் அய்யர் ஆகிய இருவர்களும் தங்களுக்கு இரண்டு ஓட்டுப் போட்டு, மீதியை ஸ்ரீமான் நாடிமுத்துப் பிள்ளை அவர்களுக்கே போடும்படி சொல்லுகிறார்கள். ஸ்ரீமான் முத்தையா முதலியாரும் ஸ்ரீமான் நாடிமுத்துப் பிள்ளைக்கு அநுகூலமாயிருப்பதன் மூலம் அவருடைய சகாயமும் பெறலாமென்று கருதி அவருக்கு அநுகூலமாயிருக்கிறார். ஆகவே, பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு இரண்டு ஸ்தானமும், சுயேச்சைக் கட்சி என்கிற ஸ்ரீமான் நாடிமுத்து பிள்ளைக்கு ஒரு ஸ்தானமும்தான் கிடைக்கும். இதில் ஏதாவது தவறும் பட்சத்தில் ஒரே ஒரு ஸ்தானம் தான் மாறலாம். அதுவும் இப்போது சுயராஜ்யக் கட்சி என்னும் பார்ப்பனக் கட்சியிலிருந்து பிரிந்திருக் கும் ஸ்ரீமான் முத்தையா முதலியாருக்குத் தான் கிடைக்கலாம். அது தவறும் பக்ஷம் ஸ்ரீமான் மருதவாணம் பிள்ளைக்கு கிடைக்குமேயல்லாமல் கண்டிப் பாய் அய்யருக்கு கிடைக்காது. அந்த ஜில்லாவைப் பொறுத்தவரை பார்ப்பன ரல்லாதார் என்கிற வகுப்பு உணர்ச்சி அவ்வளவு நன்றாக விளங்குகிறது. ஆதலால் சென்ற வருஷத்தைவிடப் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு அதிக ஸ்தானங்களே கிடைக்கும்.

இதுபோலவே மற்ற ஜில்லாக்களிலும் இதை அனுசரித்தேதான் இருக் கிறது. அல்லாமலும் சென்ற இரண்டு தேர்தல்களிலும் பார்ப்பனர்கள் வார்த் தையை நம்பி ஏமாந்து போனவர்களும், தங்கள் நன்மையையும் நல்ல பெய ரையும் கெடுத்துக் கொண்ட பலருக்கு இவ்வருஷம் புத்தி வந்துமிருக்கிறது. ஆதலால் எவ்வகையிலும் பார்ப்பனக் கட்சி தலையெடுப்பதற்கு இடமில் லாமல் இருப்பதோடு பார்ப்பனரல்லாதார் கட்சி மேலும் மேலும் உரம் பெற்று வருகிறது.

தவிர, பனகால் ராஜா விஷயத்தில் வெற்றிக்கு எவ்விதத்திலும் சந்தேக



RangaRakes tamilnavarasam.com

மேயில்லை. இதுவரை பதிவுசெய்து அனுப்பியிருக்கும் ஓட்டுக் களிலேயே மெஜாரிட்டி ஏற்பட்டிருப்பதாகவே தக்க ஆதாரத்தின் மீது நம்பத் தகுந்த இடத்திலிருந்து தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியாரைப் பற்றியோவென்றால் வெற்றி யைப் பற்றி எவ்விதத்திலும் ஆக்ஷேபணை சொல்வதற்கே சிறிதுமிட மில்லை. ஆனால் பார்ப்பனர்களுக்கு சூழ்ச்சியும், தந்திரமும் , வஞ்சகமும் கூடிய பிரசாரங்கள் செய்வதற்கு பல வழிகளில் சவுகரியமிருந்தது. அதுபோன்ற சவுகரியங்கள் பார்ப்பனரல்லாதாருக்கு இல்லை. உதாரணமாக, பார்ப்பனர் தங்களுக்கு வெற்றி கிடைக்காது என்று தெரிந்தாலும் பனகால் ராஜா, ஸ்ரீமான் ராமசாமி முதலியார் போன்றவர்கள் வெளியிடங்களுக்குப் போய் பிரசாரம் செய்வதற்கில்லாமல் அவர்கள் தொகுதிகளில் எதிர் அபேக்ஷகர்களை நிறுத்தி இவ்விருவர்களையும் அவரவர்கள் தொகுதி யிலேயே கட்டிப்போட்டு விட்டார்கள். ஆனால் தாங்கள் மாத்திரம், அதாவது ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ரெங்கசாமி அய்யங்கார் இருவரும் தங்களது சூழ்ச்சிகளால் போட்டியின்றி தெரிந்தெடுக்கத்தக்க மாதிரி ஏற்பாடு செய்து கொண்டு மற்றத் தொகுதிகளில் பார்ப்பனரல்லாதாருக்கு எதிராய்ப் பிரசாரம் செய்யத்தக்க இடம் செய்து கொண்டார்கள். அல்லாமலும், தேர்த லுக்கு சவுகரியமாய் தங்கள் ஆதிக்கத்தில் உள்ள இலாக்கா உத்தியோகஸ்தர் களை ஆங்காங்கு மாற்றி பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் இரகசிய பிரசாரம் செய்ய சவுகரியம் செய்து கொண்டார்கள். தவிர செலவு செய்யவும், காங்கிரஸ் பணம், மடாதிபதிகள் பணம், மகந்துகள் பணம் முதலிய பல பொதுப் பணங்கள் லட்சக்கணக்காய் இவர்களுக்கு கிடைத்திருக்கிறது. செல்வாக்கு பெற்று விட்ட பத்திரிகைகளாகிய ‘இந்து’, ‘சுதேசமித்திரன்’, ‘சுயராஜ்யா’ முதலிய பத்திரிகைகளும் அவர்கள் சுவாதீனத்தில் இருக்கின் றன. மற்றும் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு பார்ப்பனப் பத்திரிகையும் இருக்கிறது. பார்ப்பன ரல்லாத பல பத்திரிகைகளையும் விலை கொடுத்தும், மிரட்டியும், கட்டிப் போட்டுவிட்டார்கள். இவ்விரண்டிலும் கட்டுப்படாத பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகளிலும் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு பார்ப்பன ஒற்றர்களை அனுப்பித் தங்களுக்கு அநுகூலமாய் திருப்பி விட்டார்கள். மிகுதியும் பார்ப்பனரல்லாதார் கஷ்ட நஷ்டங்களாலும், தியாகத் தாலும் செல்வாக்கு பெற்றுவிட்ட காங்கிரஸ் முதலிய தேசீய இயக்கங்கள் என்பனவற்றையும் கைப்பற்றி மற்றவர்கள் உள்ளே நுழையாதபடி முற் றுகை போட்டுக் கொண்டார்கள். காங்கிரசின் மூலம் பொது ஜனங்களுக்கு அறிமுகமான தொண்டர்களையும் அவர்களது வயிற்றுக் கொடுமையின் காரணமாக பலவழிகளிலும் தங்களுடைய அடிமைகளாக்கிக் கொண்டார் கள். இனியும் இதில் எழுதத்தகாத பல வழிகளிலும் செல்வாக்குள்ளவர்கள் பிரபலஸ்தர்கள் என்கிற பேர் வழிகளையும் உள் சட்டப்பையில் போட்டிருக்கிறார்கள். இவ்வளவு சவுகரியங்கள் பார்ப்பனர்களுக்கு இருந்தும் ஒரு மயிர்க்காலாவது தங்கள் தங்களது நிலையை இருப்பிடத்தை விட்டு அசைக்க முடியாமல்



போய் விட்டதோடு பார்ப்பனரல்லாதார் எவ்வளவோ முன்னுக்கு வர சவுகரியமும் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும்போது நமது நாட்டிலுள்ள பார்ப்பனரல்லாத மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட்டு விட்ட தென்றேதான் சொல்லவேண்டும்.

ஆதலால், பார்ப்பனர்களின் திண்ணைப் பிரசாரத்தை யாரும் நம்பி மோசம் போக வேண்டாம் என்று வேண்டிக் கொள்வதோடு எவ்விதத்திலும் பார்ப்பனர் தங்கள் கட்சி வெற்றி பெறுமென்று காணும் அவர்களது கனவு பலிக்காதென்றே உறுதி கூறுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 31.10.1926**



RangaRakes
tamilnavarasam.com

# கல்பாத்தி

மலையாளத்தைச் சேர்ந்த பாலக்காட்டு கல்பாத்தி ரோடுகளில் ஈழவர், தீயர் சகோதரர்கள் நடக்கக்கூடாது என்கிற உபத்திரவம் இருந்து வருவதும், அதில் பிரவேசிக்கப் பல வருஷ காலமாய் பலர் முயற்சித்து வருவதும் வாசகர் அறிந்திருக்கலாம். இதை உத்தேசித்து சென்னை சட்டசபையில், "பொதுத் தெருக்களில் யாரும் நடக்கலாம்" என்று ஒரு தீர்மானம் நிறை வேற்றியதும் ஞாபகமிருக்கலாம். அத்தீர்மானம் அமுலுக்கு வருவதற்கில் லாமல் "வேலையிருந்தால்தான் போகலாம்" என்று சட்ட மெம்பர் வியாக் யானம் செய்ததும் ஞாபகமிருக்கலாம். ஆனால், சென்ற வருஷங்கூட தாழ்த்தப்பட்ட கனவான்களும் பலர் செல்ல முயற்சித்தும் அவர்களுக்கு 144 உத்திரவு போடச் செய்ததும் ஞாபகமிருக்கலாம். மற்றும் சில சமயங்களில் சிலர் மீறிச் சென்று அவர்கள் பேரில் நடவடிக்கை நடத்தப்பட்டு கோர்ட்டு களில் விசார ணையாகி விடுதலை ஆனதும் ஞாபகமிருக்கலாம். மற்றொரு சமயம் ஆரிய சமாஜி என்கிற முறையில் ஒருவர் சென்ற பொழுது அவரைத் தடுத்து உபத்திரவப்படுத்தியதற்காகச் சில பார்ப்பனர்கள் பேரில் நடவ டிக்கை நடத்தப் பட்டு தண்டிக்கப்பட்டதும் ஞாபகமிருக்கலாம். இப்போது இம்மாதம் கல்பாத்தியில் ரதோற்சவமான படியால் மறுபடியும் ஈழவர்கள் எங்கு பிரவேசித்துவிடப் போகிறார்களோ என்பதாக நினைத்து மலையாளப் பார்ப்பனர்கள் இப்பொழுதிருந்தே வேண்டிய சூழ்ச்சிகள் செய்து வருவ தாய்த் தெரிகிறது.

அங்குள்ள ஒரு பார்ப்பன மாஜிஸ்ட்ரேட்டு இப்போதிருந்தே 144 தடைபோட ஆசை உள்ளவராக இருக்கிறார். முடிவு என்னவாகுமென்பது தெரியவில்லை. "பார்ப்பனரல்லாதார் நன்மை காங்கிரஸ் மூலம்தான் ஏற்படும்" என்று சொல்லும் காங்கிரஸ் பார்ப்பனர்கள் இது சமயம் "திருட னைத் தேள் கொட்டியது போல்" மௌனம் சாதிக்கிறார்கள். பார்ப்பனரல் லாதார் கட்சியும், அவர்களுடைய பொதுமக்கள் உணர்ச் சியும் இவ்வளவு பலப்பட்டிருக்கிறபோதும், சட்டங்களும் அநுகூலமாயிருக்கிற போதும், தேர் தல் சண்டை இருக்கிறபோதும் தெருவில் நடக்கும் உரிமை கூட இல்லாமல் நம்மைக் கொடுமைப்படுத்தத் தயாராயிருப்பார்களேயானால், இவர்கள் கைக்கு ராஜ்யமே வந்து விட்டால் நம்மை என்ன செய்ய மாட்டார் கள் என்பதை நன்றாய் யோசித்துச் சட்டசபைத் தேர்தலில் பார்ப்பனர் களுக்குத் தக்க புத்தி கற்பிக்கக் கோருகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 31.10.1926**



# கலியாண சந்தடியில் தாலி கட்டுவதை மறந்து விடாதீர்கள்

சட்டசபைத் தேர்தல்களில் மக்கள் அபரிமிதமான ஊக்கத்தில் இருப்பதால் தீபாவளிக்குக் கதரை மறந்து விடுவார்களோ என சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. பார்ப்பனரல்லாத மக்களைப் பொறுத்தவரை பார்ப்பன ரல்லாதார் கட்சியினால் ஏற்படும் நன்மைகளைவிட, பதின் மடங்கு நிரந்தர மான நன்மைகள், கதரினால் பெரும்பான்மையான பார்ப்பனரல்லாத சமூக மாகிய ஏழைச் சகோதரி சகோதரர்களுக்கு ஏற்படும் என்பதை மறவாதீர்கள். ஏழைகளுக்கு கஞ்சி வார்க்காமல் என்ன சுதந்திரமோ, சுயராஜ்யமோ பெற்றா லும் அது உண்மையான சுயராஜ்யமாகாது. பார்ப்பனரல்லாத சகோதரர்கள் ஒவ்வொருவரும் சுயநலத்தை உத்தேசித்து அல்லாமல் உண்மையாய்ப் பார்ப்பனரல்லாதாருக்கு உழைப்பவர்களாயிருந்தால், கதரின் மூலமாகத்தான் வெளியாகும். கதரை மதிக்காத பார்ப்பனரல்லாதார் கட்சி ஜெயிப்பதும், பார்ப்பனரல்லாதாரை அழுத்தப் புறப்பட்ட காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி ஜெயிப்பதும் ஒன்றுதான். ஆதலால் கலியாண சந்தடியில் தாலி கட்டுவதை மறந்தது போல் தேர்தல் தடபுடலில் கதரை மறந்து விடாதீர்கள்.

**குடி அரசு - சிறு குறிப்பு - 31.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# காலித்தனத்தை அடக்க சர்க்கார் உத்திரவு

சென்னையில் ஜஸ்டிஸ் கட்சியார்கள் தேர்தல் பிரசாரத்திற்கென்று ஏற்பாடு செய்யும் கூட்டங்களிளெல்லாம் மயிலைப் பார்ப்பனர்கள் கூலி கொடுத்து காலிகளை விட்டு குழப்பமும் கலகமும் செய்து வந்ததையும், போலீசாரர்கள் இதைப் பற்றி சரியான நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் கவலை ஈனமாயிருந்ததையும் அறிந்த ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் கவர்னர் பிரபுவைக் கண்டு இக்காலித்தனத்தை “நீங்கள் அடக்க வழி செய்கிறீர்களா? அல்லது நாங்களே அடக்க ஏற்பாடு செய்வதா?” என்று இறுதி பிரேரே பணை செய்தார்கள். அதற்கு கவர்னர் பிரபு தானே தக்கது செய்வதாய் ஒப்புக் கொண்டு தேர்தல் கூட்டங்களைப் பற்றிய அரசாங்க உத்திரவு என்பதாக ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறார். அவ்வுத்திரவின் சாரமாவது:

காலிகள் கூட்டத்தில் வந்து கூட்டத்தை கலைப்பார்கள் என்று யாருக் காவது தோன்றி அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டால், அவர்களுக்காக அக்கூட்டத்தை ஒழுங்காய் நடத்திக் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்ய வேண்டியது என்றும், கூட்டத்தின் அமைதிக்கு கெடுதி இல்லாமல் யாராவது கேள்வி கேட்டால் அனுமதிக்க வேண்டுமென்றும் பிறப்பித்திருக்கிறார்கள்.

இவ்வுத்திரவினால், இவ்வுத்திரவிற்கு முன்னாலேயே கலகம் செய்து கூட்டத்தை கலைக்கக் கொடுத்த கூலிகள் எல்லாம்வீணாய்ப் போய்விட்டது. தவிர கலகம் செய்வதற்காக கூலி வாங்கிப் பிழைக்கலாம் என்று நினைத்து வேறு வேலைகளையும் விட்டு இதை நம்பி இருந்தவர்கள் வாயிலும் மண் விழுந்து விட்டது. யாரும் கேள்வி கேட்க மாட்டார்கள். ஆள் பலத்தில் நின்றுகொண்டு சண்டப் பிரசண்டமாய் பொய்யும் புளுகும் வண்டி வண்டி யாய் அளக்கலாம் என்று நினைத்திருந்த “வீரர்கள்” இனி கூட்டத்தில் பேசுவதில்லையென்று உறுதி செய்து கொள்ள வேண்டியதாய்விட்டது. “ஐயோ பாவம்! வேறு கூட்டத்தில் கலகமும் செய்யக் கூடாது; தாங்களும் மேடையில் நின்று பொய்யும் புளுகும் அளக்கக் கூடாது” என்றால் “இது என்ன அக்கிரமமான உத்திரவு”, எப்படி ஜனங்களை ஏமாற்றுவது? இதற்கு ஏதாவது சட்ட சம்மந்தமான ஆக்ஷேபனை இருக்கிறதா என்று பார்க்க



வேண்டும். அல்லது இவ்வுத்திரவுப் போடக் கூடிய இடத்திலாவது ஒரு பார்ப்பனரையே அதிகாரியாய் வைக்கச் செய்து, அதை கேன்சல் செய்ய வேண்டும். இவ்விரண்டிலொன்று செய்யா விட்டால் எப்படி தேர்தலில் ஜெயிக்க முடியும்” என்று சுயராஜ்யக் கட்சியார் நினைக்கும்படியாய் விட்டது. சர்க்கார் “அக்கிரமத்திற்கு” யார் என்ன செய்ய முடியும்? சட்டத்தை யாவது மீறலாமென்றாலோ 100, 200 கொடுத்தாவதும் ஜெயிலுக்குப் போக ஆள் கிடைப்பதில்லை. சட்ட மெம்பரிடத்திலும் அட்வகேட் ஜெனர லிடத்திலும் போய் முறையிட்டுப் பார்ப்பதைத் தவிர வேறு வழி இல்லாமல் போய் விட்டது. ஐயோ பாவம்!

**குடி அரசு - கட்டுரை - 31.10.1926**



RangaRakes tamilnavarasam.com

# என். தண்டபாணி கம்பெனி

தண்டபாணி கம்பெனியின் வியாபார ஸ்தலத்தைப் பற்றி ஒரு விளம்பரம் அடுத்த பத்தியில் பிரசுரித்திருக்கிறோம். பொது ஜனங்கள் வெளி யிலிருந்து சாமான் தருவிப்பதில் பல பேருக்கு ஆர்டர் அனுப்பி ஏமாந்து விடுகிறார்கள். இக் கஷ்டம் நிவர்த்தியாவதற்காகவே தேசபக்தர் ஸ்ரீமான் என். தண்டபாணி பிள்ளை அவர்கள் சென்னையில் ஒரு வியா பாரக் கம்பெனி ஏற்படுத்தி நடத்தி வருகிறார். இக்கம்பெனிக்கு யாரும் நம்பிக்கையாய் எவ்வளவு பணத்திற்கு வேண்டுமானாலும் ஆர்டர் அனுப்பலாம். அத்துடன் எவ்வளவு தொகையும் முன்பணமாக அனுப்ப லாம் என்று தைரியமாய் சிபார்சு செய்கிறோம்.

**குடி அரசு - செய்தி அறிவிப்பு - 07.11.1926**



# வரப்போகும் சென்னை சட்டசபைத் தேர்தலும் பார்ப்பனரல்லாதார் கடமையும்

சகோதரர்களே!

## சட்டசபை பார்ப்பனரல்லாதார்

இன்றைய விஷயம், வரும் சட்டசபைத் தேர்தலும் பார்ப்பனரல் லாதார் கடமையும் என்பதைத் தாங்கள் துண்டு விளம்பரம் மூலம் அறிந் திருப்பீர்கள். ஒத்துழையாமையில் நான் தொண்டு செய்து கொண்டிருந்த காலத்தில், இந்தத் தேர்தல், பார்ப்பனரல்லாதார் என்கிற இரண்டு வார்த்தை களையும் நான் பெரிதும் அநாவசியமாய்க் கருதி வந்ததோடு பொது மக்க ளிடையிலும் இவ்விரண்டிலும் கவலை செலுத்தாதீர்கள் என்றும் பிரசாரம் செய்து வந்தவன். ஆனால் மகாத்மாவின் ஒத்துழையாமைக் காங்கிரஸ் மறைந்து விடவே, இவை இரண்டும் இப்போது லக்ஷியம் பெறத்தக்கவை யாகிவிட்டன. மகாத்மாவின் காங்கிரசில் இருந்த கொள்கைகள் சட்ட சபையை பஹிஷ்காரம் செய்ய வேண்டியதா யிருந்ததாலும், பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்கிற வித்தியாசமில்லாமல் மக்கள் ஒன்று சேர்ந்து தொண்டு செய்யவும், அதனால் ஏற்படும் பலன் எல்லா சமூகத்தாருக்கும் சமத்துவமும், சம உரிமையும் கிடைக் கத்தக்கதாகவும் இருந்ததாலும் அவற் றில் இவ்விரு வார்த்தைகளுக்கும் இடமில்லாதிருந்தது.

## பார்ப்பனர்கள்

தேச மக்கள் சமத்துவத்தையும் சம உரிமையையும் அடைவதை ஒப்புக் கொள்ள முடியாத நமது நாட்டுப் பார்ப்பனர்களும், சட்டசபையை பஹிஷ்கரிப்பதனால் உத்தியோகமும் ஆதிக்கமும் பெற முடியாதே எனப் பயந்த பார்ப்பனருமேதான் ஒத்துழையாமைத் திட்டத்தை அடியோடு காங்கிர சிலிருந்து எடுத்துவிட முயற்சி செய்தவர்கள்.

## நான் முன்னமேயே சொன்னேன்

இம் முயற்சிக்கு விரோதமாய் தமிழ்நாட்டில் நான் எவ்வளவு தூரம் பிரயத்தனப்பட்டேன் என்பதும் ஒத்துழையாமைத் திட்டம் மறைவுபட்டால் தேசத்தில் மக்களின் ஒற்றுமை குலைந்து வகுப்புப் பிணக்குகளும் வகுப்பு



RangaRakes tamilnavarasam.com

வாதமும் தலையெடுக்கும் என்றும் ஒத்துழையாமையின் பலனாய் பொது ஜனங்கள் கையில் இருக்கும் காங்கிரசு, வக்கீல்கள் கைக்கும் செல்வந்தர்கள் கைக்குமே போய்விடுமேயல்லாமல் பெரும்பான்மை மக்களாகிய ஏழைக் குடியானவர்கள், தொழிலாளிகள் முதலியோர்களுக்கு காங்கிரசில் எவ்வித ஸ்தானமும் இல்லாமல் ஏமாற்றப்பட வேண்டிவரும் என்றும், தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் விஷயத்தில் கவலை செலுத்தும் தன்மை போய் உயர்ந்த வகுப்பார் என்கிறவர்கள் தங்கள் ஆதிக்கத்தை பலப்படுத்திக் கொள்ள உபயோகப்படுத்தப்படும் என்றும் வெளிப்படையாய் காக்கிநாடா காங்கிர சின் போது அங்கு கூடிய ஒரு தனிக் கூட்டத்திலும் மற்றும் பல மாகாண மகா நாட்டின் போதும் பேசியிருக்கிறேன். நமது பார்ப்பனர், தேசபந்து தாசை வசப்படுத்திக் கொண்டு அவரால் நமது தமிழ்நாட்டில் பிரசாரம் செய்விக்கும் போதும் நான் ஊர் ஊராய்த் திரிந்து எதிர்ப் பிரசாரம் செய்து மிருக்கிறேன். கடைசியாய் பெல்காமிலும் மகாத்மாவினிடம் நேரிலேயே சொன்னதில் அவர் இன்னும் 3 மாதத்தில் இதை மாற்றி விடுகிறேன் என்றுகூடச் சொன்னார். இவ்வளவும் நான் செய்தும் ஒத்துழையாமையை அழிப்பதிலும் மகாத்மாவை விலக்குவதிலும் நமது பார்ப்பனர் தாங்கள் செய்த பிரயத்தனத் தில் வெற்றி பெற்று தேசீயசபை என்கிற காங்கிரசையும் தங்கள் ஆதிக்கத் திற்கு ஆயுதமாயும் செய்து கொண்டார்கள். இதன் பலனாக நான் முன் சொன்னது போல் பார்ப்பனரல்லாதார் பார்ப்பனர்களால் பார்ப்பன ஆதிக்கத் திற்காக ஏமாற்றப் படவும் சமத்துவமும் சம உரிமையும் அடியோடு மறுக் கப்படவும் நேரிட்டது. நமது பார்ப்பனரின் பொய்மானாம் காங்கிரஸ் என்னும் மாய்கைக்கு இனி நமது நாட்டில் கடுகளவு இடம் கொடுத்தாலும் அது பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு மலையளவு கெடுதி யைச் செய்வ தோடு பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கே குழி தோண்டிய தாய் விடும்.

## நானே முன் அணியில் நிற்பேன்

உண்மையில் காங்கிரசோ மற்ற எந்த சாதனமோ தேச மக்களுக்கு சுயமரியாதையையும் விடுதலையையும் அளிப்பதானால் மற்றெல்லோரை யும் விட நானே காங்கிரசின் முன்னணியில் நிற்பேன். நாளைக்கும் காங் கிரசோ மற்றெந்த சாதனமோ எல்லா மக்களின் முன்னேற்றத்திற்கும் சமத்து வத்திற்கும் அநுகூலமாய் ஏற்பட்டால் எவ்வித ஆபத்து வருவதானாலும் நானே அதின் முன்னணியில் நிற்பேன்.

## அழிக்கப் பின்வாங்க மாட்டேன்

அதுபோலவே பொதுமக்களின் சுயமரியாதைக்கும், உரிமைக்கும், விடுதலைக்கும் ஆபத்தான இயக்கம் என்று எதையாவது நான் கருதினால் அதை அடியோடு அழிக்கக் கொஞ்சமும் பின் வாங்க மாட்டேன். எவ்வித பழியோ, அபகீர்த்தியோ, ஆபத்தோ வருவதானாலும் அவற்றைக் கொஞ்ச



மும் லக்ஷியம் செய்யாமல் என்னால் கூடியதைச் செய்துதான் தீருவேன்.

## நான் செய்த தொண்டு

நான் பொது வாழ்வில் உழைக்க ஆரம்பித்த பிறகு இக்கொள்கையை என்னால் கூடியவரை அனுசரித்து வந்திருக்கிறேன். உதாரணமாக, ஹோம் ரூல் கிளர்ச்சியின்போதும் ஈரோட்டில் நடந்த கொடித் தகராறில் நானே முன்ன ணியில் இருந்ததும், என் வீட்டில் கொடி கட்டினதும், ஜஸ்டிஸ் கக்ஷி ஆரம் பித்த காலத்தில் அது ‘தேசத் துரோகமான கக்ஷி’ என்று நமது பார்ப்பனர்கள் செய்த பிரசாரத்தில் ஏமாந்து போய் அதற்கு எதிராக சென்னை மாகாணச் சங்கம் ஏற்படுத்துவதற்காக கூட்டின முதல் கூட்டத் திற்கு என்னுடைய முழு ஆதரவையும் கொடுப்பதாக வாக்களித்து 1000 ரூபாய் தந்தியில் வாக்களித்து அனுப்பியதும், அக் கூட்டத்திற்கும் முன் னணியில் இருந்து மகாநாடுகள் முதலியவை நடத்தியதும் உப அக்கிராச னாதிபதியாயிருந்ததும் பிறகு ஹோம் ரூல் கிளர்ச்சியில் உள்ள சில புரட்டு கள் வெளியானதும் அதை ஒழிப்பதற்கென்று “நேஷனலிஸ்ட் அசோசி யேசன்” என்பதாக சென்னை யில் ஒரு தேசீய சபை ஸ்தாபித்த காலத்தில் அதிலும் முன்னணியிலிருந்து அச்சபைக்கு தமிழ்நாடு காரியதரிசியா யிருந்ததும் மற்றும் அதற்குப் பிறகும் முன்னும் தேசீய சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் (மனப்பூர்வமாய்) எவ்விதக் கஷ்டத்தையும் பொருட்படுத் தாமல் ஊழியம் செய்ததையும் நீங்கள் நேரில் பார்த்திருப்பீர்கள். அப்படிப் பட்ட ஒருவன் இன்று ஏன் தற்கால காங்கிரசு பார்ப்பனரல்லாத மக்களுக்கு ஆபத்து என்று சொல்ல வந்திருக்கி றேன் என்பதை சற்று யோசியுங்கள். காங்கிரசால் வரும் பெருமையையோ சுயராஜ்யத்தையோ அடைய எனக்கு இஷ்டமில்லாததாலா? அல்லது சுயராஜ்யத்திற்கு விரோதமாயிருந்தால் அரசாங்கத்தாரிடம் ஏதாவது பட்டம் பதவி அல்லது எனது மக்களுக்கு உத்தியோகம் முதலியவை பெறலா மென்றா? எனக்கு இனி எப்பேர்ப்பட்ட பட்டமும் கிடைக்காது; உத்தியோக மும் கிடைக்காது; எனக்குப் பிள்ளை குட்டிகளும் இல்லை. மற்றபடி ஜஸ்டிஸ் கட்சியாரால் ஏதாவது ஜீவனத்திற்கு ஆதாரமோ அல்லது கவுரவ உத்தியோகங்களோ அடையலாம் என்று நினைக்கிறேன் என்றாலோ நான் எல்லா உத்தியோகங்களும் பார்த்து இராஜினாமா கொடுத்துவிட்டு ஒத்து ழையாமைக்கு வந்தவன். ஆனரரி மேஜிஸ்டிரேட் ஒன்றரை வருஷத்தில் இராஜினாமா கொடுத்த வன். தாலூக்காபோர்டு மெம்பர் இரண்டு வருஷத்தில் இராஜினாமா கொடுத்தவன். ஜில்லா போர்டு மெம்பர் 2 வருஷத்தில் இராஜி னாமா கொடுத்தவன். முனி சிபல் சேர்மென் பதவி ஒன்றரை வருஷத்தில் இராஜினாமா கொடுத்தவன். ஆகவே இனி எந்த உத்தியோகம் நான் பார்க்க ஆசை கொள்ள வேண்டும்? ஆசை கொண்டால் ஜஸ்டிஸ் கட்சி தயவில்லா மல் கிடைக்காதா என்பதை நீங்களே நடுநிலைமையிலிருந்து யோசித்துப் பாருங்கள். எனது தாலூக்கா தேவஸ்தான கமிட்டி பிரசிடெண்டாக மாத்திரம் இருக்கிறேன். ஆனால் இது சுமார் 15 வருஷத்திற்கு மேல்பட்டு பார்த்து



RangaRakes tamilnavarasam.com

வருகிற வேலையானதாலும் இதற்கு மற்றொருவர் தயவும் வேண்டியதில்லை. ஆதலால் எதை உத்தே சித்து நான் காங்கிரசை வேண்டுமென்று குற்றம் சொல்ல நினைப்பேன் என்பதை நீங்களே யோசியுங்கள்.

## பார்ப்பனர் சொல்வதைக் கேளாதீர்கள்

ஆனால் நமது பார்ப்பனர்கள், தங்களுடைய ஆதிக்கத்திற்கு அநுகூலமாய் உழைக்கிறவன் எவ்வித அயோக்கியனானாலும் அவனை தேச பக்தன் என்பார்கள். அவர்கள் நன்மைக்குக் கடுகளவு விரோதம் ஏற்படத் தக்கதாக எவராவது நடந்து விட்டால் எல்லாப் பார்ப்பனர்களுக்கும் கம்பியில்லாத தந்தி போல் எல்லோருக்கும் ஏக காலத்தில் உதயமாகி எல்லோரும் கூடிக் கொண்டு தேசத் துரோகி, தேசத் துரோகி என்று பயம் காட்டி விடுவார்கள்.

ஸ்ரீமான்கள் பாவலரும், குபீல் சுந்திரேசரும், குப்புசாமி முதலியா ரும், குழந்தையும், சக்கரவர்த்தி அய்யங்காரும் நமது பார்ப்பனர்கள் உதடு களில் தேச பக்தர்களாய் உருளுவதும் லாலா லஜபதிராய், டாக்டர் வரத ராஜுலு, ராமசாமி நாயக்கர் முதலியோர்கள் தேசத் துரோகிகளாய் விளங்கு வதும் இதன் தத்துவமே தான். ஆதலால் நீங்கள் இவை ஒன்றையும் லட்சியம் செய்யாமல் நான் சொல்லுவதை கவனமாய்க் கேட்டு எது சரி எது தப்பு என்பதாக உங்கள் புத்தியைக் கொண்டே நன்றாய் யோசித்துப் பார்த்து உங்களுக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதை தைரியமாய்ச் செய்ய முன் வாருங்கள். குருட்டு நம்பிக்கைக்கோ, பயங்கொள்ளித் தனத்திற்கோ, உங்கள் தனித்த சுயநன்மைக்கோ கட்டுப்பட்டு சொந்த புத்தியையும், பகுத்தறிவையும் பறிகொடுத்து விடாதீர்கள் என்று முதலில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## காங்கிரசால் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட நன்மை

சகோதரர்களே! காங்கிரஸ் என்பதை நமது நாட்டையும் இந்நாட்டிலுள்ள பெரும்பான்மையான நமது சமூகத்தையும் அழிக்க வந்த ஒரு அரக்கனென்றுதான் சொல்ல வேண்டும். காங்கிரஸ் என்கிற ஒரு விஷத் தன்மை நமது நாட்டில் ஏற்பட்டுப் பரவாதிருந்திருக்குமானால் முதலாவது, நமது நாட்டில் அந்நிய ஆட்சி இவ்வளவு பலமாய் ஆதிக்கம் பெற்று இருக்காது. இரண்டாவது, இவ்வந்நிய ஆட்சி பலமாய் ஆதிக்கம் பெறவும் அதற்கு ஒற்றர்களாயிருந்தும், அஸ்திவாரம் போலும், தூண்கள் போலுமிருந்தும் அவ்வந்நிய ஆட்சி இந் நாட்டிலிருப்பதாலேயே வாழக் கூடியவர்களான நமது பார்ப்பனர் ஆதிக்கமும் நமது நாட்டில் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்காது. இந்தப் பார்ப்பனர்கள் ஒன்றா ஆற்றோரங்களில் காலை மாலைகளில் மூக்கைப் பிடித்து முணுமுணுத்துக் கொண்டிருந்து விட்டு நம்மிடம் பிச்சை எடுத்து வயிறு வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும். அல்லது வேறு ஏதாவது ஒரு தேசத்துக்குப் போய் அத்தேச மக்களின் மேல்



ஆதிக்கம் செலுத்த வேற்றரசர்களைக் கூட்டிக் கொண்டு வந்து வைக்க பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். அப்படிக்கெல்லாம் இல்லாமல் சுவாமி கைவல்லியம் அவர்கள் சொல்லுவது போல் இப்போது பார்ப்பனப் பெண்களுக்கு வைர அட்டிகை, பட்டுப் புடவை, கால் ஜோடு, கைத் துணி, மோட்டார் கார், பங்களா பீச்சுக் காத்தும், புருஷர்களுக்கு 5,000, 10,000 சம்பளம், புல் சூட்டு, சர், மகாகனம், மகா மகோபாத்தியாயர் முதலிய பட்டம், முதலாவது- இரண்டாவது வகுப்பு வண்டி பிரயாணம், ஐரோப்பா- ஆஸ்திரேலியா தூது ஆகியதுகள் இப்பார்ப்பனர்களுக்கு கிடைக்க வழியேது? இவைகள் இவர்களுக்கு இவர்கள் பெரியோர் தேடிய சொத்தா? ஜாதித் தொழிலா? வேதக் கட்டளையா? பாரம்பரிய அநுபவமா? என்பதைக் கவனித்தீர்களானால் நன்றாய் விளங்கும்.

## காங்கிரசால் பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்பட்ட கெடுதி

காங்கிரஸ் இல்லாதிருக்குமானால் பார்ப்பனரல்லாதார் நிலை இவ்வளவு கேவலமாயிருக்குமா? காங்கிரசுக்கும் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் முன்னால் இருந்தப் பார்ப்பனரல்லாதார் பெருமக்கள் குடும்பங்கள் எல்லாம் எங்கே? மோக்ஷம் மோக்ஷம், தர்மம் தர்மம், புண்ணியம் புண்ணியம் என்று சொல்லி அநேக குடும்பங்களை மூட நம்பிக்கையிலும் முட்டாள் தனத்திலும் இறக்கி அவர்கள் செல்வத்தைக் கொள்ளை கொண்டு பல குடும்பங்களைக் கெடுத்து விட்டார்கள். சுயராஜ்யம், விடுதலை, ஹோம் ரூல், உரிமை என்பதாகச் சொல்லி மக்களை ஏமாற்றி இவர்கள் அரசியல் உத்தியோகம் பெற்று ஜட்ஜிகளாகவும் வக்கீல்களாகவும் வந்து விவகாரம் என்கிற வழியில் லஞ்சமாகவும் பீசாகவும் பெருங்குடி மக்களின் செல்வங்களைக் கொள்ளை அடித்து ஓட்டாண்டி ஆக்கிவிட்டார்கள். இப்போது நமது நாட்டில் பெரும் பணக்காரர்கள் யார்? குடியானவர்களுக் கும் ஜமீன்தாரர்களுக்கும் இருந்த பூமிகள் எல்லாம் எங்கே? ஒரு பாகம் மடம், ஆச்சாரியார், அர்ச்சகர் என்கிற பார்ப்பனர்கள் வசம் மானியமாகவும் மற்றொரு பாகம் ஜட்ஜி, கலெக்டர், வக்கீல், நிர்வாகசபை மெம்பர்கள், அரசாங்கத்திற்கு சிநேகிதர்கள், ராஜ பக்தர்கள், தேச பக்தர்கள் என்கிற பார்ப்பனர்களுக்குமாக மாறி இருக்கிறதே அல்லாமல் வேறு எங்கே இருக்கிறது? இன்றைக்கும் நாளைக்கும் தர்மம் செய்ததாலும் விவகாரம் செய்ததாலும் கெட்டுப் போன குடிகளிடமிருந்து விற்கப்படும் பூமிகளும் ஜமீன்களும் கோர்ட் ஏலத்தில் விடப்படும் பூமிகளும் ஜமீன்களும் யார் ஏலத்தில் எடுக்கிறார்கள்? இன்றைய தினம் லக்ஷாதிபதியாய் இருக்கும் பார்ப்பனர்களை மூன்று தலைமுறைக்கு முன் அவர்கள் எப்படி இருந்தார்கள் என்று கொடி வழிப் பட்டி எடுத்துப் பார்த்தால் ரிஷிமூலம் நதி மூலம் பார்ப்பது போல்தான் இருக்கும். ஆனால் அவர்கள் இந்த உயர் நிலைக்கு வரக் காரணமென்ன? என்பதற்கு இந்த காங்கிரசும் மூட பக்தியுமல்லாமல் வேறு என்ன காரணம் சொல்ல முடியும்?



RangaRakes tamilnavarasam.com

## புண்ணியமும் சுயராஜ்யமும் ( புண்ணியம் )

உண்மையாக பார்ப்பனருக்குக் கொடுப்பது புண்ணியமானால் பார்ப்பனருக்குக் கொடுத்த குடும்பங்கள் எல்லாம் இன்று அரைக் கஞ்சிக்கு ஆவலாய் பறக்கக் காரணம் என்ன? உண்மையில் காங்கிரசு சுயராஜ்ய மளிக்குமானால் நாட்டு மக்களுக்கு வரியும், அறியாமையும், விவகாரம் வில்லங்கங்களும், அடிமைப் போட்டியும், தரித்திரமும், தொழில் குறைவும் நாளுக்கு நாள் விஷம் ஏறுவது போல் வளருவதற்குக் காரணம் என்ன? உதாரணமாக, தஞ்சாவூர் மகாராஜா செய்த தர்மமும் அவர்கள் அந்த ஜில்லா பார்ப்பனர் குடும்பங்களுக்கு விட்ட மானியமும், கட்டின சத்திரங்களும், அதில் சாப்பிடும் பார்ப்பனர்களின் எண்ணிக்கையையும் பார்த்தால் மகாத்மா காந்திக்கும்கூட வயிறு வேகும். அப்படிக் கொடுத்த தஞ்சாவூர் மகாராஜாவின் ராஜாங்கம் இன்று இருக்குமிடத்தைக் காணோம். சேரனும், சோழனும், பாண்டியனும் செய்த தருமமும், கட்டிய கோவிலும், வெட்டிய ஆறுகளும், விட்ட மானியங்களும் இன்றும் பார்க்கலாம் நாளையும் பார்க்கலாம்; அவர் கள் அரசாங்கமெங்கே? சந்ததி எங்கே? இன்னும் எங்கள் குடும்பத்திலும் செய்த தர்மமும் சமாராதனையும் கொஞ்சமென்று சொல்ல முடியாது. குளிப்பும், பூஜையும், போடும் நாமமும் இன்னம் ஒரு ஐந்தாறு தலைமுறைக்கு எங்கள் பின் சந்ததியார் செய்யா விட்டாலும் தாங்கும்படி அவ்வளவு செய்திருக்கிறார்கள். என்ன ஆச்சுது? மாணிக்கம்போல் சீமைக்குப்போய் படித்துவிட்டு வந்த 22 வய துள்ள ஒரே பையனும் மற்றும் ஒரே பெண்ணும் க்ஷயரோகத்தால் முன் பின் மூன்று மாத வித்தியாசத்தில் இறந்துபோனார்கள். பார்ப்பனர்களுக்கு போளி, பேணி, லட்டு, ஜிலேபி, சேமியா பாயாசத்துடன் சமாராதனை செய்து என் தாயார் தகப்பனார் இடுப்பு கட்டிக் கொண்டு ஆயிரக்கணக்கான எச்சிலை களைத் தாங்களே எடுத்து எறிவார்கள். வேறு யாராவது எடுத்தால் அந்தப் புண்ணியத்தில் அவர்களுக் கும் பங்குபோய்விடுமாம். அவ்வளவு அழுத்தத் தன்மையோடு புண்ணி யம் சம்பாதித்தார்கள். என்ன பலன் கண்டார்கள்? ஆயுள் வளர்ந்ததா? சந்ததி வளர்ந்ததா? செல்வம் வளர்ந்ததா? இரண்டு தங்கைகளுக்கும் உள்ள ஒரே பெண்ணுக்கு 10 வயதில் செல்லக் கலியாணம் செய்தார்கள். அது சரியாய் 60 வது நாளில் தாலி அறுத்தது. அதற்கு மறுபடியும் எங்கள் குலத்தி லில்லாத வழக்கப்படி மறுவிவாகமும் செய்து வைத்தேன். மறுபடியும் 15-வது வயதில் தாலி அறுத்துவிட்டது. என்ன பாக்கியம் கிடைத்தது. இதை எல்லாம் சொன்னால் அவரவர் தலைவிதிக்கு யார் என்ன செய்வார்கள் என்று சொல்லிவிடுவார்கள். அவரவர் தலைவிதிப்படி நடக்கும் காரியத் திற்காக இந்த ஆட்களுக்கு சமாராதனை செய்வதும் சத்திரம் கோவில் கட்டுவதும் மானியம் விடுவதும் கல்விதானம் கன்னிகாதானம் பூமிதானம் செய்வதும்





சக்கரவர்த்தி தலைபோட்ட தங்கப்பவுனால் பாதபூஜை அட்டோத்திரம் சஹஸ்திரோத்திரம் செய்து அவர்களது கால்கழுவி தீர்த்தம் சாப்பிடுவதும் எதற்காக என்றுதான் கேட்கிறேன்.

## சுயராஜ்யம்

அதுபோலவே சுயராஜ்யம் என்னும் பேரால் பொது ஜனங்களை ஏமாற்றி வருஷம் ஒருமுறை தேசியக் கூட்டம் என்று பல பார்ப்பனர்கள் முக்கியஸ்தராயிருந்து கூடி மேடையில் ஏறி தங்களை விளம்பரம் செய்து கொண்டு பொது ஜனங்கள் பேரால் சர்க்காரில் கோர்ட்டுகளையும் உத்தியோ கங்களையும் அதிகப்படுத்திக்கொண்டு தாங்களும் தங்கள் மக்கள் மரு மக்கள் அண்ணன் தம்பி சுற்றத்தார் ஆகிய இவர்கள் 1000, 2000, 5000, 10,000 ரூபாய் சம்பளமுள்ள உத்தியோகங்களைப் பெற்றுக்கொண்டு அது களுக்காக சர்க்காருக்கு ஏற்படும் செலவுக்காக மறுபடியும் மக்கள் தலை யிலேயே தாங்க முடியாத அதிகவரி போட்டும் இவ்வுத்தியோகங்கள் இவர் களுக்கு கொடுத்ததற்கு பதிலாக நம் நாட்டிலிருந்து கோடிக்கணக்கான செல் வம் அந்நிய நாட்டிற்கும் அந்நிய நாட்டு சாமான்கள் நாம் வாங்குவதன் மூலம் கொள்ளை அடிக்கப்பட்டு நாம் சுயமரியாதையற்று பாப்பராய் விடுகிறோம்.

## காங்கிரசை வளர விட்டால்

இன்னமும், காங்கிரஸ் வளர வளர பார்ப்பனர் அதிகாரமும் அவர் களுக்கு உத்தியோகமும் அவ்வுத்தியோகத்திற்கு ஏற்றதும் தேசத்துக்கு துரோகமானதுமான படிப்பும் ஜனங்களுக்கு அதிக வரியும் வெள்ளைக் காரருக்கு அதிகமான ஆதிக்கமும் நாட்டில் ஒற்றுமைக் குறைவும் துவேஷங் களும் ஒருவரையொருவர் ஏமாற்றலும் அடிமைக்குப் போட்டிபோடலும் ஆகிய கொடுமைகள் அதிகப்படுமே அல்லாமல், எல்லாவிதத்திலும் நாட்டிற்கு ஒரு கடுகளாவாவது நன்மை இல்லை.

## காங்கிரசில் நன்மை இருந்தால்

நன்மையிருந்தால் மகாத்மாவும் லாலா லஜபதிராயும் காங்கிரஸ் நிருவா கத்தை விட்டு ஓடுவார்களா? சுயராஜ்யக் கட்சியை எதிர்ப்பார்களா? என் பதை நன்றாய் யோசியுங்கள். உதாரணமாக, எல்லா இந்திய காங்கிரஸ் ஏற்பட்ட பிறகுதான் அரசாங்கத்திற்கு நாம் செலுத்திய வரி அதிகமாயிற்று.

## காங்கிரசுக்குப் பிறகு

அதாவது, காங்கிரஸ் ஏற்படுவதற்கு முன்னால் நமது சர்க்காரார் வருஷம் 1-க்கு நம்மிடமிருந்து வசூல் செய்த வரி 50 கோடி ரூபாய்க் குள்ளாகவே இருந்தது. காங்கிரஸ் ஏற்பட்ட பிறகு ஒன்றுக்கு மூன்றாய் 150

RangaRakes tamilnavarasam.com

கோடி ரூபாய்க்கு மேலாய்விட்டது. காங்கிரசுக்கு முன்னால் ராணுவச் செலவு வருஷம் 1-க்கு 15 கோடியாயிருந்தது. காங்கிரசுக்குப் பின்பு 76 கோடி வரையிலும் ஏறி இப்போது ஒத்துழையாமையின் பலனாய் 52 கோடி ஆயிருக்கிறது. குடியும் காங்கிரசுக்கு முன்பு வருஷம் ஒன்றுக்கு சர்க்காருக்கு வரவு இரண்டரைக் கோடி ரூபாயிலிருந்தது. இப்போது இருபது கோடிக்கு வந்திருக்கிறது. ரயில் சார்ஜ்ஜு விஷயத்திலும் காங்கிரசுக்கு முன்னால் மைல் ஒன்றுக்கு ஒன்றரைக் காசு வீதம் இருந்தது. இப்போது நாலரைக் காசுக்கு வந்து விட்டது. இம்மாதிரியாகவே கார்டு, கவர், பத்திரம், ஸ்டாம்பு, கோர்ட் செலவு, அரிசி, பருப்பு, உப்பு, காற்று, தண்ணீர், நெருப்பு வரையில் காங்கிரசுக்கு முன் எப்படி இருந்தது? இப்போது எப்படி இருக்கிறது? என்பதும் கடைசியாய் பார்ப்பனரல்லாதவர் நிலை காங்கிரசுக்கு முன் எப்படி இருந்தது? பின் எப்படி இருக்கிறது? என்று பார்த்தாலும் நன்றாய் விளங்கும். ஆதலால் இனி அரை நிமிடமாவது நமது நாட்டில் காங்கிரஸ் இருப்பதைப் போல் நமக்கும், நமது நாட்டிற்கும் ஆபத்தான சாதனம் வேறொன்றுமில்லை.

## இதுசமயம் நமக்கு வேண்டியது

அன்றியும் இதுசமயம் நமக்கு வேண்டியது சுயமரியாதையே ஒழிய பார்ப்பனர் மூலம் வரும் மோக்ஷமும் சுயராஜ்யமும் அல்லவே அல்ல. ஆதலால் வரப்போகும் தேர்தலில் உங்களுக்கு ஓட்டுச் செய்ய இஷ்டப்பட்டால், சுயராஜ்யம் என்று சொல்லிக்கொண்டு உங்களிடம் வந்து யார் ஓட்டுக் கேட்டாலும் அவர்களை வடிகட்டின அயோக்கியர்கள், தேசத் துரோகிகள், சுயகாரியப் புலிகள் என்று நினைத்துக் கொள்ளுங்கள். சுய மரியாதைக்கு என்று யார் வந்து ஓட்டுக் கேட்டாலும் தாராளமாய்க் கொடுங்கள். அதனால் ஒரு சமயம் நன்மை இல்லாவிட்டாலும் தீமை இல்லை. சுயராஜ்யம் என்று நினைத்து ஓட்டுச் செய்வீர்களானால் கொள்ளிக்கட்டையை எடுத்து தலை யைச் சொறிந்துக் கொண்டதையே ஒக்கும். உண்மையான சுயராஜ்யம் மகாத்மா திட்டத்தில்தான் இருக்கிறது. உண்மையான சுயமரியாதை ஜஸ்டிஸ் கக்ஷி திட்டத்தில்தான் இருக்கிறது. நமது பார்ப்பனரிடமோ அவர்கள் கை வசமுள்ள காங்கிரசிடமோ சுயராஜ்யக் கட்சியிடமோ பார்ப்பன ஆதிக்கத் திட்டம்தான் இருக்கிறது. ஆதலால் ஏமாந்து விடாதீர்கள் . தீபாவளியின் போது ஏழைகளையும் தொழிலாளர்களையும் தேசத்தையும் மறந்து இவர்களுக்கு துரோகிகளாகாமல் கதரை உடுத்துங்கள்.

*குறிப்பு : 1926 அக்டோபர் கடைசி வாரத்திலும் நவம்பர் முதல் வாரத்திலும் திருச்சி, தஞ்சை, கும்பகோணம், திருநெல்வேலி முதலிய இடங்களில் நிகழ்த்திய சுயமரியாதைப் பிரசார சொற்பொழிவுகள்.*

**குடி அரசு - சொற்பொழிவு - 07.11.1926**



# சட்டசபைத் தேர்தல்

அடுத்து வரப்போகும் சட்டசபைத் தேர்தல் பிரசாரங்களைப் பற்றி இதுவே கடைசித் தடவையாக இருக்கும். ஏனெனில் அடுத்த திங்கட் கிழமை தேர்தல் நடக்கப் போகிறது. தேர்தல் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டு பல மாதங்களானபடியால் இவ்வளவு நாள் எழுதாத விஷயங்கள் ஒன்றும் இன்று புதிதாக எழுதப் போவதில்லை. சுருக்கமாகச் சொல்லவேண்டு மானால் தேர்தல்கள் என்பது ஒரு பெரிய சூதாட்டத்திற்குச் சமானமானதாகி விட்டது. தேர்தலில் இறங்குகிறவர்களோ எவ்வெவ் வழிகளில் பாமர மக்களை ஏமாற்றி வெற்றி பெறலாம் என்பதில் கருத்தாயிருக்கிறார்களே ஒழிய தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம் பொது ஜனங்களுக்கு எப்படி உழைக்கலாம் என்பதைப் பற்றிக் கவலையே இல்லை. தேர்தலில் வெற்றி பெற வேண்டியவர்களுக்குப் பொய்யும், ஏமாற்றலும், தந்திரங்களும், சூழ்ச்சிகளும், பணச்செலவும்தான் யோக்கியாதாம்சங்களாய்ப் போய்விட்டதே தவிர பரோபகாரம், சத்தியம், நீதி இவைகள் கொஞ்சமும் யோக்கியதை அற்றதாய்ப் போய்விட்டன. ஓட்டர்களும் ஆடம்பரத்தையும் விளம்பரத் தையும் தங்களது சுயநலத்தையுமே விரும்புகிறார்களே ஒழிய யோக்கியத் தன்மையையோ நாட்டின் க்ஷேமத்தையோ குலாபிமானத்தையோ கொஞ்ச மும் கவனிப்பதில்லை. இம்மாதிரி தேர்தல்களாலும் அபேக்ஷகர்களாலும், ஓட்டர்களாலும் தேசத்திற்கோ மக்களுக்கோ குலத்திற்கோ என்ன நன்மை ஏற்படப் போகின்றது என்பது நமக்கே விளங்கவில்லை. நம்நாட்டுத் தேர்தலில் இப்போது இருக்கும் கட்சிகள் எல்லாம் பிராமணர் பிராமண ரல்லாதார் என்கிற இரண்டே கட்சிதான். இதில் பார்ப்பனர்களுக்கு உள்ள நோக்கமும் யோக்கியதையும் என்ன என்று பார்ப்போமானால் பார்ப்பனர் கள் தேசம், சுயராஜ்யம், தியாகம், மகாத்மா, சர்க்காரை எதிர்த்தல் ஆகிய வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டும் பார்ப்பனரல்லாதாரை தேசத் துரோகிகள், சர்க்கார் அடிமைகள், வகுப்புவாதிகள் என்று சொல்லிக் கொண்டும் பொது மக்களை ஏமாற்றி தாங்கள் ஆதிக்கம் பெறவேண்டும் என்கிற ஒரே நோக்கத்தைத் தவிர வேறொன்றுமில்லை. இவை எல்லோ ருக்கும் வெளிப்படையாய்த் தெரிந்த விஷயமே அல்லாமல் மறை வானவையல்ல. இதற்காக இவர்கள் கையாளும் வழிகளோ பொய்ப் பிரசாரம் செய்வதும், எதிரி பேரில் பழி சுமத்துவதும், கூலி கொடுத்து ஆள்களை வைத்து எதிரிகளை வையச் செய்வதும், காலித்தனங்கள் செய்வ தும், பணம் கொடுத்து ஓட்டு வாங்குவதும் ஆகியவைகளே முக்கியமானவை. பார்ப்பனரல்லாதாரின் நோக்கமோ ஆயிரக்கணக்கான



RangaRakes tamilnavarasam.com

வருஷங்களாய் பார்ப்பனர்களால் தாங்கள் ஏமாற்றப்பட்டு வந்ததின் காரண மாய் சுயமரியாதையற்று சமத்துவமற்று மனிதத் தன்மையற்று அடிமைத் தனத்தில் ஆழ்ந்து கிடப்பதிலிருந்து வெளியேற வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தோடு எந்தெந்த வழிகளில் பார்ப்பனர் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருகிறார்களோ அவ்வழிகளை அடைத்தும் அதற்கு எதெதை ஆயுதமாக உபயோகித்து வருகிறார்களோ அந்த ஆயுதங்களையும் கைப் பற்ற வேண்டுமென்பதே அவர்களது முயற்சியாகும். இதுதான் நாளைய தேர்தலின் இரு கட்சியின் தத்துவமும் முடிவான லக்ஷியங்க ளுமாகும். இந்த லக்ஷியத்தில் நமது பார்ப்பனர்கள் நம்மை இதுவரை ஏய்த்து வந்தது போல் இனி ஏய்க்க முடியாது என்று தைரியமாய்ச் சொல்லு வோம். பாமர மக்கள் ஏறக்குறைய பார்ப்பனர்களின் நோக்கங்களையும் தந்திரங்களையும் அறிந்து கொண்டார்கள் என்றே சொல்ல வேண்டும். எதனால் நாம் இப்படிச் சொல்லுகி றோம் என்றால் பார்ப்பனர்களுக்கும் அவர்களது பிரசாரங்களுக்கும் நாட்டில் உள்ள மதிப்பைப் பார்த்தாலே தெரியவரும். தமிழ்நாட்டில் எந்த ஊரிலானா லும் கிராமத்திலானாலும் ஒரு பார்ப்பனர் தானாகப் போய் ஒரு கூட்டம் கூட்டி பேசுவதற்கு யோக்கியதை யில்லாமல் போய் விட்டது. எங்கே போவதானா லும் கூட ஒரு பார்ப்பனரல் லாதார் இருந்தால்தான் இவர்கள் பேச முடிகிறது. உதாரணமாக, சென்னை யில் பேசக் கூடிய பார்ப்பனர்கள் எவ்வளவோ பெயர்கள் இருந்தும் இப் பார்ப்பனரல்லாத ஆள்களுக்கு கூலி கொடுத்துத் தான் மேடைகளில் பிரசாரம் செய்யச் செய்ய முடிகிறதே அல்லாமல் பார்ப்பனர்கள் மேடையில் ஏறி பேச முடிவதில்லை. வெளியிடங்களிலும் இவர்கள் போய் பேச ஆரம்பித்தால் கலகம் நடக்காமல் இருப்பதும் இல்லை. இது எல்லாம் எதைக் காட்டுகின்றன என்றால் தேசத்தில் இவர்களது யோக்கியதையைப் பாமர ஜனங்கள் அறிந்து கொண்டதையே காட்டுகின்றது. இதை அனுசரித் துதான் வரப்போகும் தேர்தல்களின் முடிவும் ஏற்படப் போகிறது. நமது எதிரிகள் தங்கள் முழு பலத்தையும் கொண்டு வேலை செய்தது முக்கியமாய் இரண்டு ஸ்தானங்களில்தான். அதாவது, பனகால் ராஜாவின் ஸ்தானத்தில் ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர் களை நிறுத்தியும் ஸ்ரீமான் ஏ.ராமசாமி முதலியார் அவர்கள் ஸ்தானத்தில் ஸ்ரீமான் ஒரு முத்துரங்க முதலியார் என்பவரை நிறுத்தியும் எவ்வளவோ பணச் செலவும் சூழ்ச்சியும் செய்து போட்டிப் போட்டு வேலை செய்து வந்தார்கள். ஆனபோதிலும் ஸ்ரீமான்கள் பனகால் ராஜாவுக்கும், ஏ.ராமசாமி முதலியாருக்கும் வெற்றி நிச்சயம் என்பது உறுதியாகி விட்டது. மற்றும் பல இடங்களிலும் இது போலவே வெற்றி கிடைக்கப் போகிறது என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் ஒரு சில இடங்களில் மாத்திரம் பார்ப்பனர் பொய்ப் பிரசாரங்களுக்கு மதிப்பு இருக்கிறதாகத் தோன்றுகிறது. அதுவும் பார்ப்பனர் கள் நேரிட்டுச் செய்வதாயில்லாமல் பார்ப்பனரல்லாதாரைக் கொண்டு செய் விக்கும் இடங்களில்தான் பாமர ஜனங்கள் ஏமாற்றமடைகிறார்கள். இதுவரை எந்தப் பார்ப்பனராவது பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு அநுகூல மாய் பிரசாரம்



செய்ய வந்திருக்கிறாரா? என்றால் ஒருவர் கூட இல்லை யென்றுதான் சொல்ல வேண்டும். பார்ப்பனருக்கு வேறு எவ்வளவு கெட்ட குணம் இருந்தாலும் தங்கள் வகுப்பு விஷயத்தில் எல்லோரும் ஒன்று சேருவது அவர் களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டிய விஷயம். பார்ப்பனரல் லாதாரிலோ இந்தக் குணம் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காக தங்கள் குலத்தையும் சுயமரியாதையையும் விற்கும் படியான இழிகுணம் படைத்த ஜனங்கள் இருப்பதானது பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே மானக்கேடான காரியம். இம்மாதிரி கூலிக்கு மாரடிக்கும் ஆள்கள் நமது வகுப்பில் இருக்கிற காரணத்தினாலேயேதான் இவ்வருடத் தேர்தலில் நமது பார்ப்பனர் இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டம் செய்ய முன் வந்தார்கள். இல்லாதவரை இதற்குள்ளாக மூட்டைகளைக் கட்டிக் கொண்டு பஞ்சாங்கத்திற்கே புறப்பட்டிருப்பார்கள். என்ன செய்யலாம்? இழி மக்களைப் பெற்ற தாய், அதன் பலனை அடைந்துதான் தீர வேண்டும். ஆனபோதிலும் இம்மாதிரி கூலித்தொண்டர்கள் வார்த்தையில் மயங்கி தங்களது ஓட்டுரிமையை பார்ப்பனர்களுக்கோ அல்லது அவர்களது கட்சியாகிய சுயராஜ்ய கட்சியார்களுக்கோ கொடுத்து தங்களது முன்னேற்றத்தை தடை செய்துக் கொள்ள மாட்டார்கள் என்றே நினைக்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 07.11.1926**



RangaRakes tamilnavarasam.com

# சுயராஜ்யக் கட்சி பார்ப்பனர் கட்சி என்பதற்கு உதாரணம்

சுயராஜ்யக் கட்சிக்கு விரோதமாக வடநாட்டில் லாலா லஜபதிராயவர்களும் பண்டித மாளவியா அவர்களும் வேலை செய்து வருவது உண்மை. ஆனால் சுயராஜ்யக் கட்சியார் தேர்தல்களில் தங்கள் கட்சிக்கு ஆட்களை நிறுத்தியதில் லாலா லஜபதிராயவர்களுக்கு விரோதமாய் மாத்திரம் நிறுத்தியிருக்கிறார்களே யொழிய பண்டித மாளவியாவுக்கு எதிரியாய் யாரையும் நிறுத்தவேயில்லை. இதன் காரணம் என்னவென்றால் லாலாஜி வருணாசிரம தர்மத்தில் நம்பிக்கையும் கவலையும் இல்லாதவர்; பண்டிதரோ வருணாசிரம தர்மத்தை நிலை நிறுத்தி பார்ப்பன ஆதிக்கத்தை நிரந்தரப்படுத்தவே ஒவ்வொரு நிமிடமும் உயிர் வாழ்பவர். ஆதலால் பண்டிதருக்கு எதிரியில்லாமல் செய்துவிட்டு லாலாஜிக்கு மாத்திரம் எதிரியை நியமித்திருக்கிறார்கள். சுயராஜ்யக் கட்சி பார்ப்பனர் கட்சி என்பதற்கு புத்திசாலிகளுக்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 07.11.1926**



### காங்கிரஸ் தலைவியாகிய

# ஸ்ரீமதி சரோஜினி தேவியின் வாக்கு

## "ஜஸ்டிஸ் கட்சியை நான் வரவேற்கிறேன்"

"நான் தென்னிந்திய பார்ப்பனர்களின் யோக்கியதையை நன்றாயறிவேன். அப்பொல்லாப் பார்ப்பனர்களின் கொடுமையினால்தான் பார்ப்பனரல்லாதாரியக்கம் உண்டாக வேண்டியதாயிற்று. அவர்கள் தங்களை உயர்வாய்க் கருதிக்கொள்ளும் அகம்பாவத்தை நான் பலமாய் வெறுக்கிறேன். பார்ப்பனரல்லாதாரியக்கம்தான் எல்லா வகுப்பாரும் சமமாய் முன்னேற்றமடைவதற்கு உதவியாயிருக்கிறது. எல்லா வகுப்பாருக்கும் சமமான உரிமை பங்கு கிடைக்குமட்டும் இந்த பார்ப்பனரல்லாதாரியக்கம் (ஜஸ்டிஸ் கட்சி) உயிருடன் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆதலால் இந்த பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை (ஜஸ்டிஸ் கட்சியை) நான் மனப்பூர்வமாய் வரவேற்கிறேன். பார்ப்பனரல்லாதார் தங்களுடைய நிலை மையை அறிந்து நியாயமான உரிமை பெறுவதற்கு இது சமயம் விழித்துக் கொண்டதைப் பற்றி நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்" என பெல் காமில் 1924-ஸு கூடிய அகில இந்திய பிராமணரல்லாதார் காங்கிரஸ் மஹா நாட்டில் தேசீய காங்கிரஸ் தலைவியான ஸ்ரீமதி சரோஜினி தேவியே பேசி யிருக்கிறார் களென்றால் மற்றபடி அதன் பெருமையைச் சொல்ல வேண்டுமா? ஆதலால் இத் தேர்தலில் சமத்துவத்திலும் சுயமரியாதையிலும் கவலையுள்ள யோக்கியமான பார்ப்பனரல்லாதார் யாருக்கு ஓட்டுச் செய்ய வேண்டுமென்பதைப் பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லையென்றே நினைக்கிறோம்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 07.11.1926**



RangaRakes tamilnavarasam.com

## பார்ப்பனர்களால் வந்த வினை

மலையாளக் குடிவார மசோதாவை ஒழித்து விட்டார்கள். இனி தேவஸ்தான மசோதாவை ஒழிப்பதுதான் பாக்கி. இனியும் பார்ப்பனர்களுக் காவது அவர்களால் நிறுத்தப்பட்ட ஆட்களுக்காவது சட்டசபைக்கு ஓட்டுக் கொடுப்பீர்களானால் நமது கதி அதோ கதி தான்.

மலையாளக் குடிவார மசோதா சட்டசபையில் நிறைவேற்றக் கொண்டு வந்த காலத்தில் பார்ப்பன சட்ட மெம்பரான சர். சி.பி. ராமசாமி ஐயரவர்கள் ஆணவத்தோடு மிரட்டி இச்சட்டத்தை கவர்னரைக் கொண்டு நிராகரிக்கச் செய்து அமுலுக்கு வராமல் செய்து விடுவேன் என்று வீரம் கூறியது வாசகர்கள் அறிந்திருக்கலாம். இப்போது அவர் சொன்னது போலவே சட்டசபையில் பெரும்பான்மையோரால் நிறைவேறின இச் சட்டத்தை ஏதோ சில நொண்டிச் சாக்குகளுடன் கவர்னர் பிரபு நிராகரித்து விட்டார் . நமது நாட்டில் வெள்ளைக்கார அதிகார வர்க்க ஆட்சி, பார்ப்பன ஆதிக்க வர்க்க ஆட்சி என இரண்டு கொடுமையான ஆட்சிகளின் கீழ் நாம் பாசாணத்தில் புழு இருப்பது போல் காலந்தள்ள வேண்டியவர்களாயிருக் கிறோம். நம்முடைய மேன்மைகளும் முன்னேற்றங்களும் வெள்ளைக் காரருக்கோ பார்ப்பனருக்கோ தங்களது ஆதிக்கத்திற்குக் கடுகளவு இடைஞ் சல் செய்வதாயிருந்தாலும் கொஞ்சமும் தயவு தாட்சண்யம் இல்லாமல் அடியோடு நசுக்கி விடுகிறார்கள். அரசாங்கத்தார் எந்தக் கட்சி ஜெயிக்குதோ அந்தக் கட்சியைத் தான் ஆதரிப்பார்களேயல்லாமல் நியாயம் சத்தியம் என்பவை களைக் கொஞ்சமும் கவனிக்க மாட்டார்கள். ஆதலால் அடுத்த சட்டசபையில் பார்ப்பனரல்லாதார் கட்சி வெற்றி பெறாமல் போய் பார்ப்பனர் வெற்றிபெற ஏற்படுமானால் பாக்கி இருக்கும் தேவஸ்தான மசோதாவையும் கண்டிப்பாய் ஒழித்து விடுவார்கள். இதை உத்தேசித்தாவது இனியும் பார்ப்பனர்களுக் காவது அவர்களால் நிறுத்தப்பட்ட ஆட்களுக்காவது சட்டசபைக்கு ஓட்டுக் கொடுப்பீர்களானால் நமது கதி அதோ கதிதான்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 07.11.1926**



## சுயராஜ்யக் கட்சிக்கு தேசத்திலுள்ள செல்வாக்கு “சென்றவிடமெல்லாம் சிறுமை”

சுயராஜ்யக் கட்சியார் இதுவரை தங்களுக்குத் தேசத்தில் பிரமாத மான செல்வாக்கு இருப்பதாகவும் செல்லுமிடங்களிலெல்லாம் தங்கள் கட்சிக்குப் பெரிய ஆதரவு இருக்கிறதென்றும் பறையடித்துக் கொண்டு வந்தது வாசகர்கள் அறிந்திருக்கலாம். ஆனால், இதனுடைய உண்மை கடந்த ஒருமாத காலமாக ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ஏ.ரெங்கசாமி அய்யங்கார், பண்டித நேரு முதலிய பார்ப்பனர்கள் பிரசாரத்திற்கென்று எங்கெங்கு செல்லுகிறார்களோ அங்கெல்லாம் இவர்களது இரகசியம் வெளியாகி பொது ஜனங்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லமுடியாமல் கூட்டத்தைக் கலைத்து விட்டு ஓடின வண்ணமாகவே இருக்கிறார்கள். உதாரணமாக, கும்பகோணத்தில் ஸ்ரீமான் ரெங்கசாமி அய்யங்கார் அவர்கள் பொது ஸ்தலங்களில் கூட்டம் போட முடியாமல் ஒரு கட்டிடத்திற்குள் கூட்டம் போட்டும் அங்கும் பொது ஜனங்கள் ஒரு அக்கிரா சனரைப் பிரேரேபிக்க பார்ப்பனர்கள் வேறு ஒருவரைப் பிரேரேபிக்க கடைசியாய் அய்யங்கார் போலீசார் தயவு தேட வேண்டியதாயிற்று. மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரவர்கள் சென்ற காலத்திலும் கூட்டங்களிலும் பொது ஜனங்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் கூட்டத்தைக் கலைத்து விட்டு ஓடும்படியாய் விட்டது. பண்டித நேரு அவர்களும் செல்லுகிற இடங்களில் கூட்டங்களில் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறுகிறார். இவைகள் ‘சுதேசமித்திரன்’ பத்திரிகையில் பார்த்தால் தென்படாது. திராவிடன், வட நாட்டுப் பத்திரிகை கள் ஆகியவைகளில் காணலாம். இவர்கள் பேச்சைக் கேட்க இஷ்டமில்லாத ஜனங்களும் மற்றும் கேட்கும் கேள்விகளால் இவர் களது யோக்கியத்தையே வெளியாக்கும் ஜனங்களும் இவர்களுக்கு ஓட்டுப் போட்டு சட்ட சபைக்கு அனுப்புவார்களா? பொது ஜனங்களே யோசித்துப் பார்க்கட்டும்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 07.11.1926**



RangaRakes
tamilnavarasam.com

# பனகால் அரசர் வெற்றி

கனவான்களே!

பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவரான கனம் பனகால் அரசரின் வெற்றிக்காக இக்கூட்டம் கூட்டி நாம் கொண்டாட வேண்டுமென்பது அவ்வ ளவு அவசியமானதல்ல என்பது எனது அபிப்பிராயம். ஆனால் நமது முன்னேற்றத்திற்கு எதிரிகளாயுள்ளவர்கள் நமது பனகால் அரசர் வெற்றிக்குத் தடையாக செய்த சூழ்ச்சிகளும், முயற்சிகளும், அக்கிரமமான செய்கை களும் பொதுமக்களின் உணர்ச்சியைப் பலமாகக் கிளப்பி விட்டுவிட்டது. அதுமாத்திரம் அல்லாமல் "பனகால் வீழ்ந்தார், பார்ப்பனரல் லாதார் கட்சிக்கு சாவு மணி" என்பதாகவும், மற்றும் மேடைகளில் பேசும் சோமாறிகள் "பனகாலை வெட்டிப் புதைத்தாகிவிட்டதென்றும் கொள்ளி வைத்தாகி விட்டதென்றும் பலமாதிரி லுச்சத்தனமாகப் பேசி வந்ததாலும் சுயராஜ்யக் கட்சித் தலைவர்கள் என்று சொல்லுபவர்களில் சிலரும் அவரைப் பற்றி மிகுதியும் ஈனத்தனமாய் பேசி வந்ததாலும் பார்ப்பனரல்லாத பெருவாரி மக்களுக்கு பனகால் அரசரிடம் ஒருவித அன்பு ஏற்பட இடம் கொடுத்தது. அதற்காக கொண்டாட வேண்டியதாயிற்று. உதாரணமாக, நானும் ஸ்ரீமான் எஸ்.ராமநாதன் அவர்களும் மதுரை பிளாட்பாரத்தில் ரயில் வண்டியிலி ருந்தபடியே சில கனவான்களோடு பேசிக் கொண்டிருக்கையில் எங்கள் அறைக்கு அடுத்த அறையில் இருந்த ஒரு பார்ப்பனத் 'தலைவர்' மற்றொரு பார்ப்பனத் 'தலைவரோடு' பேசிக் கொண்டிருக்கையில் "அவனொரு முட்டாள், அயோக்கியன்; அவனை அடக்க நீரே தக்கவர்; அவன் ஒழிந்தால் அந்த ஸ்தானத்திற்கு நீங்கள்தான் தகுந்தவர்" என்று இம்மாதிரியாக இன்னும் அநேக அல்ப வார்த்தைகளால் குடிகாரர் வெறிகாரர் பேசுவது போல் பேசினார். அந்த மதுரைத் 'தலைவருக்கு' இது பிடிக்காமல் தனது அருவருப் பைக் கூட காட்டினார். இன்னும் எத்தனையோ இதுபோல் நடந்தன. இவ்வளவு பெயர்களால் வசவு கேட்டவரும் ஒழிந்து போனார்; செத்துப் போனார்; குழியில் புதைக்கப்பட்டு போனார் என்று சொல்லப்பட்ட வருமான ஒருவர் "உயிரோடிருக்கிறார், பிழைத்து விட்டார்" என்கிற செய்தி யைக் கேட்டால் சந்தோஷப்படாமல் இருக்க முடியுமா? இது ஒருபுறமிருந் தாலும் தேர்தல் விஷயத்திலும் நமது சுயமரியாதைக்கு எதிரிகளான பார்ப்பனர் பனகாலைத் தோற்கடித்து விட்டால் தங்கள் ஆதிக்கம் நிரந்தரமாய் நிலை



நிறுத்தப்பட்டுவிடும் என்கிற அபிப்பிராயத் தின் பேரில் பனகாலை வெற்றி பெறாமல் செய்வதற்குப் பட்ட பாடுகள் கணக்கு வழக்கில்லை என்பதும் உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஐகோர்ட் ஜட்ஜிகள், ஜில்லா ஜட்ஜிகள், சப் ஜட்ஜிகள், ஜில்லா கலெக்டர், அரசாங்க நிருவாகசபை மெம்பர்கள் ஆகிய பெரிய உத்தியோகமுள்ள கூட்டங்களில் பலரும், போலீசு நிர்வாக உத்தியோக கூட்டங்களில் பலரும், பெருத்த லேவாதேவிக் கூட்டங்களில் பலரும் ஒன்று சேர்ந்து ஜமீன்தார் களின் ஓட்டுகளை ஸ்ரீமான் அல்லாடி அய்யருக்கு வாங்கிக் கொடுப்பதற் காக பட்ட பாடுகள் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாதென்று கேள்விப் பட்டேன். இன்னும் எத்தனை ஜமீன்தார்களின் விவகாரத்தைக் காட்டி மிரட்டியும், ஆசை வார்த்தைச் சொல்லியும், எத்தனை ஜமீன்தாரர்கள் கடனைக் காட்டி மிரட்டியும் ஆசை வார்த்தைச் சொல்லியும், கொடுமை செய்தும் ஓட்டுகள் வாங்கப் பிரயத்தனப்பட்டதையும் கேள்விப் பட்டேன். இவைகள் பொய்யானாலும் சரி மெய்யானாலும் சரி இவ்வளவுக்கும் தப்பி வெற்றி பெற்று விட்டார் என்றால் கேட்போருக்குக் கொண்டாட்டம் ஏற்படுமா? ஏற்படாதா? இவ்வளவுதான் கொண்டாட்டத் திற்கு காரணமே யல்லாமல் பனகால் சட்டசபை மூலம் நமக்கு வேண்டியதை யெல்லாம் சாதித்து விடுவார் என்று எனக்கு எள்ளளவும் நம்பிக்கை கிடையாது. இவர்கள் போன்றவர்கள் தோல்வியுற்றால்தான் பார்ப்பனரல்லாதார்கள் விழிப்பார்கள். சட்டசபையைப் பற்றி எனது அபிப்பி ராயம் தங்களுக்குத் தெரியும். சட்ட சபையில் ஆகிற காரியம் ஒருபுற மிருந்தாலும் சட்டசபைத் தேர்தல் முறையே நம்ம நாட்டுக்குக் கேடானது என்பது எனது பலமான அபிப்பிராயம். இம்மாதிரி தேர்தல் மூலம் பிரதிநிதித் துவம் அளிப்பது என்பது கலால் இலாக்கா மூலம் குடியை ஒழிப்பது என்பது போலத்தான் ஏற்படும். இத்தேர்தல் முறை நமது நாட்டுக்கு வருமுன் மக்களி டை இவ்வளவு ஒழுக்க ஈனமும் கண்ணியக் குறைவும் இல்லவே இல்லை.

உதாரணமாக, இந்த சட்டசபைப் பிரதிநிதித்துவம் சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்னால் இருந்த மாதிரியானது இப்போது இருந்ததைப் போலல்லாமல் எவ்வளவு கண்ணியமானதாயிருந்தது. அதாவது, சென்னை மாகாணத்திற்கு மூன்றே சட்டசபை மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். அவர்களும் கூடியவரையில் ஸ்ரீமான்கள் சேலம் சி.விஜயராகவாச்சாரியார், ரத்தினசபாபதி முதலியார் , ஜம்பு லிங்க முதலியார் போன்ற கூடுமானவரை கண்ணியமுள்ளவர்களாய் இருந்தார்கள். இவர்களைத் தெரிந்தெடுக்கும் ஓட்டர்கள் தொகையோ எல்லாம் சேர்ந்து மாகாணத்திற்கே சுமார் 100 பேர்கள் தான் இருப்பார்கள். அதாவது, ஒவ்வொரு முனிசிபல் சபைக்கு ஒரு ஓட்டு வீதம் ஜனப் பிரதிநிதி சபைகளுக்கு ஓட்டு இருந்து வந்தது. இதனால் பணம் கொடுத்து ஓட்டு வாங்கவும் பணம் வாங்கி ஓட்டுக் கொடுக்கவும் வழியில்லாமல் இருந்தது. அதற்குப் பிறகு 1910 -ல் ஏற்பட்ட சீர்திருத்தம் 8 ஜில்லாவுக்கு 1 மெம்பர் என்பது மாறி 3 ஜில்லாவுக்கு 1 மெம்பர் வீதமும், 8 ஜில்லாவுக்கு முப்பது, நாற்பது ஓட்டர்கள் என்பது மாறி 3 ஜில்லாவுக்கு 300



RangaRakes tamilnavarasam.com

ஓட்டர்கள் வீதமும் ஏற்பட்டது. அந்த ஓட்டர்கள் குறைந்த அளவு ஞானம் உள்ளவர்களாகவாவது இருந்தார்கள். எப்படியென்றால் தாலூக்காபோர்டு மெம்பர், முனிசிபல் கவுன்சிலர், ஜில்லா போர்டு மெம்பர் என்கிற ஏதாவது ஒரு யோக்கியதாம்சம் உடையவர் களாகவே இருந்தார்கள். இந்தத் தொகுதி யிலும் ஓட்டர்களை ஏமாற்ற முடியாமலும் கணக்குப்பிள்ளை, மணியக்கார், வாத்தியார், பிரசாரகர் முதலிய தரகர்களுக்கு பணம் கொடுத்து ஓட்டுச் சேகரிக்க முடியாமலும் கூடியவரை வெகு சிலரே பணத்திற்கு ஆசைப்படத் தக்கதாகவும் வெகுசிலரே கொடுக்கத் தக்கதாகவும் இருந்து வந்தது. இப்போது 1920 வருஷத்திய சீர்திருத்தத்தில் 3 ஜில்லாவுக்கு ஒருவர் மெம்பர் இருந்தது போய் ஒரு ஜில்லாவுக்கு 3 மெம்பர் வீதமும், மூன்று ஜில்லாவுக்கு 300 ஓட்டர்கள் இருந்தது மாறி ஒரு ஜில்லாவுக்கு எழுபது ஆயிரம் ஓட்டர்கள் வீதமும் ஏற்பட்டதின் பலனாய் ஏய்க்க சக்தி படைத்தவனும், பணம் செலவு செய்ய சக்தி படைத்தவனும் சட்டசபைக்குப் பிரதிநிதியாகத்தக்க யோக்கிய தையாய் முடிந்து விட்டது. 2 அணா கொடுத்தால் தங்கள் வோட்டுகளை யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கத்தக்கவர்களாகவும் ஒரு குடம் கள்ளுக்கு 30 அல்லது 40 ஓட்டுகள் கிடைக்கும்படியாகவும் வோட்டர் நிலை மை ஏற்பட்டுப் போய்விட்டது. இப்படி நான் சொல்லுவதால் 30 வருஷத் திற்கு முன் சட்டசபை மூலம் நமக்கு கிடைத்து வந்த நன்மை இப்போது போய்விட்டது என்று சொல்லவரவில்லை. அதுவும் உபயோகமில்லாதது. ஆனாலும் சட்டசபைத் தேர்தல் முறையில் அபேக்ஷகர்கள் யோக்கியதை யும் ஓட்டர்கள் யோக்கியதையும் மிகுதியும் கேவலப்பட்டு விட்டதோடு தேசத்தில் மக்களிடை அயோக்கியத்தனமும் நாணயக் குறைவும் பரவு வதற்கு இம்முறைகள் அதிக ஆஸ்பதமாயிருக்கிறதென்றே சொல்லுகிறேன். இனியும் காங்கிரசோ சுயராஜ்யக் கட்சியோ வாங்கிக் கொடுக்கப் போகும் அடுத்த சீர்திருத்தத்தில் மனிதப் பிறவியாய் பிறந்து 20 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் சகலருக்கும் ஓட்டுரிமையும் அபேக்ஷக உரிமையும் வழங்கு வது என்று வந்துவிட்டால் தேசத்தில் எவ்வளவு பித்தலாட்டம், சூழ்ச்சி, அயோக்கியத்தனம், நாணயக் குறைவு முதலிய ஒழுக்க ஈனங்கள் ஏற்படும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். நான் இப்படிச் சொல்லுவதால் மக்களுக்கு சுதந்திரம் வேண்டாமென்று சொல்லுவதாக யாரும் நினைக்கக் கூடாது. மக்களை கண்ணியக் குறைவிலும் ஒழுக்க ஈனத்திலும் கொண்டு வந்துவிடும் சுதந்திரங்கள் வளர்ந்து கொண்டே போனால் மக்கள் கதி என்ன ஆவது? இத்தேர்தல் மூலம் உண்மையான சுதந்திரம் வருவதாயிருந்தால் முதலாவது நமது சுயமரியாதைக்கும் சுதந்திரத்திற்கும் பிறவி எதிரிகளான இப்பார்ப்பனர்கள் சுதந்திரம் வேண்டுமென்று சர்க்காரை கேட்டிருப்பார் களா? கேட்டாலும் அவர்களது பங்காளிகளான வெள்ளைக்காரர்கள் கொடுத்திருப் பார்களா? என்பதை நீங்களே நன்றாய் யோசித்துப் பாருங்கள், சுதந்திரம் கொடுப்பதற்கும் ஓட்டுரிமை கொடுப்பதற்கும் சர்க்காருக்காவது பார்ப்பனர் களுக்காவது நமக்கு வேண்டியது இன்னது என்பது தெரியாதா? மதுபா னத்தை நிறுத்த சட்டசபை மூலம்தான் சண்டை போட வேண்டுமா? உத்தி யோகம் கொடுக்க சட்டசபை மூலம்தான் கேட்க வேண்டுமா? தீண்டாமை ஒழிய சட்டசபையில்தான் தீர்மானம் கொண்டுவர வேண்டுமா? 150 வருஷமாய் நம்மை ஆண்ட ஒரு அரசாங்கத்திற்கு நமக்கு வேண்டியதை சட்டசபை மூலம் கேளுங்கள் என்றால் இது போகாத ஊருக்கு தடம் காட்டுவதேயல்லாமல் வேறென்ன? “கொக்குத் தலையில் வெண்ணெய் வைத்து” அது உருகி கண்ணை மூடும்போது அதை பிடித்துக் கொள்ளலாம் என்பது போலில்லையா? உண்மையாய் சர்க்காரும் பார்ப்பனரும் செய்ய வேண்டுமென்று கருதினால் சட்டசபை இல்லாமல் செய்ய முடியாதா? அதுதான் அப்படி என்றாலும் உண்மையாகவே இப்போது சட்டசபை மெம்பர்களுக்கு என்ன யோக்கியதையைக் கண்டு ஓட்டர்கள் ஓட்டு செய்கிறார்கள் என்பதையாவது பாருங்கள். ஒரு மெம்ப ருக்கு ரோட்டு மேஸ்திரி ஓட்டுப் போடச் சொன்னார் என்பதும், மற்றொரு மெம்பருக்கு வக்கீல்களும் வக்கீல் குமாஸ்தாக்களும் ஓட்டுப் போடச் சொன்னார்கள் என்பதும், மற்றொரு மெம்பருக்கு கவுண்டர் ஓட்டுப் போடச் சொன்னார் என்பதும், மற்றொரு மெம் பருக்கு பட்டக்காரர் ஓட்டுப்போடச் சொன்னார் என்பதும் ஆகிய இவைகள் தானே யோக்கியதையாய் இருக்கிறதே அல்லாமல் வேறென்ன? இது தவிர இந்த மெம்பர்களும் ஓட்டுப் பெற எவ்வளவு பொய்யும் புளுகும் அளக்க வேண்டியிருந்தது. எவ்வளவு அக்கிரமங்கள் செய்ய வேண்டி இருக்கிறது? சட்டசபை வேலையான பிறகு இந்த ஓட்டர்களுக்கும் மெம்பர்களுக்கும் மறு தேர்தல் வரை ஏதாவது சம்பந்தமுண்டா? எந்த ஓட்டரையாவது மெம்பர்களுக்கு அடையாளம் தெரியுமா? இந்த ஓட்டர்களின் தேவை இன்னது என்று மெம்பர்களுக்குத் தெரியுமா? மெம்பர்களின் சக்தி, யோக்கியதை, அவர் களது எண்ணம் இன்னது என்று ஓட்டர்களுக்குத் தெரியுமா? என்பதை யோசித்துப் பாருங்கள். வீணாய் நமது மக்களை பிரித்து வைத்து அவர் களை கண்ணியக் குறைவில் பழக்கி ஏமாற்றிப் பிழைக்க சர்க்காரும் பார்ப் பனரும் சேர்ந்து செய்த சூழ்ச்சியில் நமது மக்கள் அறியாமல் சிக்கிக் கொண்டு வெளியேற வகை தெரியாமல் நாசமாய்ப் போகிறார்களே அல்லா மல் இத்தேர்தலால் வேறு என்ன நடக்கிறது. இவ்வித தேர்தல் முறைகளை இந்நிலையில் வளரவிடுவது நமது நாட்டுக்குப் பெருங் கேடாகுமென்று மறுமுறையும் சொல்லுகிறேன்.

நிற்க, தேர்தல் யோக்கியதைக்கு படித்தவர்கள் படியாதவர்கள் என இரண்டு பிரிவுகள் சொல்லிக் கொள்ளப்படுகிறது. நமது நாட்டில் படித்தவர் களுக்கும், படியாதவர்களுக்கும் என்ன தாரதம்மியம் இருக்கிறது. படிக்காத வன் என்பவன் குற்றம் செய்கிறான் என்று வைத்துக் கொண்டால் படித்தவன் என்பவன் அக்குற்றத்திற்கு தக்க தண்டனையடையாமல் செய்து விடுவித்து, மறுபடியும் அதே குற்றத்தைச் செய்யத் தூண்டுகிறான்.

குற்றம் செய்தவன் தண்டனை அடையத்தக்க நீதி நமது நாட்டில்





RangaRakes tamilnavarasam.com

வழங்கினால் இவ்வளவு குற்றங்கள் நமது நாட்டில் வளருமா? இதற்கு இடையூறாயிருப்பவர்கள் படித்தவர்களா? படிக்காதவர்களா? என்பதை யோசித்துப் பாருங்கள். ஒரு வக்கீல் ஒரு சமயத்தில் தனது பெருமையை சொல்லிக் கொள்ளும்போது 22 தடவை கொலை செய்தவனை 22 தடவை தப்பித்து வைத்தேன் என்று சொல்லிக் கொண்டாராம். இதுதான் படித்தவர் களின் மேன்மை. இன்னமும் படித்தவர்கள் செய்யும் அக்கிரமங்களையும் படியாதவர்கள் செய்யும் அக்கிரமங்களையும் பார்த்தால் படித்தவர்களில் 100-க்கு 90 பேர் அயோக்கியர்கள் இருந்தால், படியாதவர்களில் 100-க்கு 10 கூட அகப் படமாட்டான். இம்மாதிரியான படிப்பை படிப்பு என்று சொல்லி அதற்கு யோக்கியதை கொடுத்து வந்தால் அந்த நாடு ஒழுக்கமடையுமா? யோக்கிய மடையுமா? ஆதலால் தற்கால யோக்கியதையும் தேர்தலும் தேச க்ஷேமத்தின் பிரதிநிதித்துவத்திற்கு யோக்கியமானதல்ல என்பதே நமதபிப் பிராயம். தேச க்ஷேமத்திற்கு வேலை செய்பவர்களுக்கு சட்ட சபையில் ஒரு வேலையும் இல்லை. இந்த ஜில்லாவுக்கு இவ்வருஷம் பிரதிநிதிகளாய் நிற்கும் 4 மெம்பர் களும் செய்த பணச் செலவும் பட்ட கஷ்டங்களும் சட்ட சபைத் தேர்தலுக்கு செலவு செய்யாமல் ஓட்டர்களுக்கு ஓட்டின் தன்மையை படிப்பிப்பதிலோ உண்மையான பொது நல சேவையைச் செய்வதிலோ செலவழித்திருந்தால் ஒரு வருஷத்தில் இந்த ஜில்லாவுக்கு எவ்வளவோ நன்மைகள் ஏற்பட்டி ருக்கும் என்றே சொல்லுவோம். ஆதலால் பனகால் ராஜாவின் வெற்றி விஷயத்தில் நமது பார்ப்பனர்கள் எண்ணம் பலிக்க வில்லை என்பதைப் பொறுத்தவரை நாம் திருப்திக் கொள்ள வேண்டிய தோடு நமது முற்போக் குக்கு இடையூறாக எவ்வளவு தூரம் நமது பார்ப்பனர் கள் முயற்சி செய்கிறார் கள் என்பதை பாமர ஜனங்களும் தெரிந்து கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாய் ஏற்பட்டது என்பதைப் பொறுத்தவரையும்தான் கொண்டாடத்தக்கதே அல்லா மல் நாட்டிற்கோ, சமூகத்திற்கோ பிரமாதமான நன்மை எதுவும் இதனாலேயே உண்டாகி விடாது. சட்டசபை அங்கத்தினர் என்பது சர்க்கார் உத்தியோகம், பட்டம் முதலியதுகள் போல ஒரு பதவியே அல்லாமல் வேறல்ல. உத்தி யோகம் பெறுவதற்கும் பட்டம் பெறுவதற்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர் களுக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் பணம் செலவு செய்ய வேண்டும். சட்டசபை மெம்பர் பதவி பெறுவதற்கு பிரசாரகர்களுக்கும் தரகர்களுக்கும் ஓட்டர்களுக்கும் பணம் செலவு செய்ய வேண்டும். இவ்வளவுதான் வித்தியாசமே ஒழிய வேறொன்றும் பிரமாத வித்தியாசமில்லை. அதிக செலவில்லாமல் இப்பதவி கிடைப்பதானால் ஏன் நம்ம வருக்கே கிடைக்கக் கூடாது என்று பார்ப்பனரல்லாதார் ஆசைப்பட பாத்தியமுண்டு என்பதையும் ஞாபக மூட்டுகிறேன்.

*குறிப்பு :- 10.11.1926 இல் கோவை டவுன்ஹாலில் நடைபெற்ற பனகால் அரசர் வெற்றிக்கொண்டாட்ட நிகழ்ச்சியில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 14.11.1926**



RangaRakes

# கக்ஷிப் புரட்டு

## பார்ப்பனப் பத்திரிகைகளின் கண்கட்டு ஜால வித்தை

சென்னை சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அங்கத் தினர்களைப் பற்றி கக்ஷி பிரித்தெழுதுவதன் மூலம் பார்ப்பனக் கக்ஷிக்கு அதிகமான ஆள்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாய் பொது ஜனங்களை யும், சர்க்காரையும் ஏமாற்றுவதற்காக 'சுதேசமித்திரன்', 'இந்து', 'சுயராஜ்யா' முதலிய பார்ப்பனப் பத்திரிகைகள் செய்துவரும் கண் கட்டு ஜால வித்தை கள் கணக்கு வழக்கு இல்லை. இதுகளை நம்பி ஏதோ சில பாமர ஜனங்கள் ஏமாந்து போகக்கூடுமே தவிர யாரை ஏமாற்றுவதற்காக இப்பார்ப்பனப் பத்திரிகைகள் இஜ்ஜால வித்தைகள் செய்கின்றனவோ அவர்கள், அதாவது சர்க்காரும் பார்ப்பனரல்லாத சட்டசபை அங்கத்தினர்களும் ஒருக்காலமும் ஏமாறப் போவதில்லை என்பது உறுதி. முதலாவதாக ஒரு விஷயத்தை சந்தோஷத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம். அதாவது, நமது நாட்டுப் பார்ப்பனர் தங்களைத் தவிரவும் தங்களது அடிமைகளைத் தவிரவும் வேறு ஒருவரையும் கிட்டத்தில் அணுகவொட்டாத மாதிரியில் சுயராஜ்யக் கட்சி என்பதாக ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு அநேக பார்ப்பனரல்லாத அரசியல் பாஷாண்டிகளின் ஆதரவையும் விலை கொடுத்து வாங்கி அதனா லேயே பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்திவிடலாம் என்பதாகக் கருதி பொய் அமக்களம் செய்து வந்த சுயராஜ்யக் கட்சி என்கிற விஷக் காற்று இந்த தேர்த லில் தலைக் காட்டாமல் ஒழிந்து போய்விட்டது என்பதும் அதை நமது பார்ப்பனர்களே வாயினால் சொல்லிக் கொள்ளக்கூட வெட்கப்படும் படி ஆய் விட்டதென்பதும் உறுதியாகிவிட்டது. எப்படியெனில் மற்ற மாகாணங்களைப் பற்றி தேர்தல் விஷயங்களை எழுதுகிறபோது மாத்திரம் சுயராஜ்யக் கட்சி, சுயேச்சைக் கட்சி என்று எழுதுகிறார்களே தவிர நமது மாகாணத்தைப் பற்றி எழுதும் போது சுயராஜ்யக் கட்சி என்பதை விட்டு விட்டு காங்கிரஸ் கட்சி, சுயேச்சைக் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி என்று எழுதுகிறார் கள். தேர்தல் ஆரம்ப காலத்தில் அபேட்சகர்களைப் பொருக்கி எடுத்த காலத்தில் காங்கிரஸ் கட்சியாக நிறுத்தப்பட்ட அபேட்சகர்கள் எத்தனைப் பேர்? அவர்களில் காங்கிரஸ் கொள்கைப்படி நிபந்தனைகளில் கையெ ழுத்து போட்டு, காங்கிரஸ் நிபந்தனைப்படி ஆயிரம் ஆயிரம் ரூபாய் வீதம் டிபாசிட் கட்டி நின்றவர்கள்



tamilnavarasam.com

எத்தனைப் பேர்? இவர்களில் ஜெயித்தவர்கள் எத்தனைப் பேர்? தோற்றவர்கள் எத்தனைப் பேர் என்று கணக்குப் பார்த்தால் தெரியவரும். இவர்களில் பார்ப்பன காங்கிரசு தீர்மானப்படி உத்தியோகம் கிடைத்தால் ஒப்புக்கொள்ள சம்மதமில்லாதவர்கள் எத்தனைப் பேர்? சட்டசபையில் ஒத்துழையாமை செய்யப் போயிருப்பவர்கள் எத்தனைப் பேர்? மகாத்மா சொல்வது போல் காங்கிரஸ்காரர்கள் எத்தனைப் பேர்? 4 அணா சந்தா பணம் கொடுத்து காங்கிரஸ் மெம்பர்கள் ஆனவர்கள் எத்தனைப் பேர்? என்று கணக்குப் பார்த்தால் இக்கட்சி ஜாலத்தின் ரகசியம் தெரியும். தாங்கள் இதுவரை தெரிந்தெடுக்கப்பட்டதாய் எழுதிக்கொள்ளும் பெயர்களையே 'இந்து' ஒரு விதமாகவும் 'சுதேசமித்திரன்' ஒருவித மாக வும், 'சுயராஜ்யா' ஒரு விதமாகவும் கட்சிப் பெயர்கள் எழுதி வருகின்றன. 'சுதேசமித்திரனே' ஒருவருக்கே ஒரு நாளைக்கு ஒரு கட்சிப் பெயரும், மற்றொரு நாளைக்கு மற்றொரு கட்சிப் பெயரும் கொடுக்கிறது. ஸ்ரீமான் பானோஜி ராவ் என்பவரைப் பற்றியும் இன்னும் சிலரைப் பற்றியும் மாறிமாறி எழுதி வருகிறது. இது இப்படி இருந்தாலும் காங்கிரஸ் கட்சி என்கிற தலைப்பில் மித்திரனும், இந்துவும், சுயராஜ்யாவும் பிரசுரித்திருக்கும் நபர்கள் சர்க்காரிடம் அபேட்சக நியமனச் சீட்டுகள் கொடுக்கும்போது அவர்கள் கலெக்டரிடம் சொன்ன கட்சி எது என்று பார்த்தால் இவற்றுள் 4 -ல் ஒரு பங்காவது சுயராஜ்யக் கட்சியா யிருக்குமா அல்லது காங்கிரஸ் நிபந்தனைப் படி கையெழுத்திட்டு பணம் கட்டியவர்களாயிருக்குமா? என்பது தெரியும்.

அல்லாமலும் காங்கிரஸ் கட்சிக்கு 34 பேர்கள் என்று போட்டுக் கொண்டதில் இவ்வளவு புரட்டு இருந்தாலும் காங்கிரஸ் கட்சிக்கு கொள்கை என்ன? அவர்கள் சட்டசபையில் செய்ய உத்தேசித்திருக்கும் வேலை என்ன? என்பது யாருக்காவது தெரியுமா? அல்லது "காங்கிரஸ்"கட்சி மெம் பர்களுக்காவது தெரியுமா?

குரங்காட்டி குரங்குகளை ஆட்டுவது போல் ஸ்ரீமான் சீனிவாசய் யங்காரான குரங்காட்டி உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பேன் என்கிற தடியை கையில் வைத்துக் கொண்டு 'காங்கிரஸ் கட்சி' சட்டசபை மெம்பர் களான குரங்குகளை தன்னிஷ்டப்படி உட்கார், எழுந்திரு, சட்டசபையை விட்டு வெளியில் வா, உள்ளே போ என்பதான கரணங்களைப் போடச் சொல்வதல்லாமல் வேறு என்ன காரியம் காங்கிரஸ் திட்டமாக நடத்தப் பட்டது? இது தவிர சுயேச்சைவாதிகள் என்பதற்காவது பொருள் என்ன? பார்ப்பனர் கட்சி மூலம் உத்தியோகம் கிடைப்பதானால் அவர்களோடு சேர்ந்து கை தூக்கவும் பார்ப்பனரல்லாதார் கட்சி மூலம் உத்தியோகம் கிடைப்பதானால் அவர்களோடு சேர்ந்து கை தூக்கவும் அல்லாது அவர் களுக்கு ஏதாவது கொள்கை உண்டா? இது தவிர ஜஸ்டிஸ் கட்சிக்கு குறைந்த எண்ணிக்கை போட்டிருப்பதால் அக்கட்சிக்கு என்ன நஷ்டம்? ஜஸ்டிஸ் கட்சி அல்லாதாரெல்லாம் அக்கட்சி கொள்கைக்கு விரோதம் என்று அருத்தமா?



RangaRakes

ஜஸ்டிஸ் கட்சி கொள்கையும் திட்டமும் என்ன? முறையே பார்ப்பனரல் லாதார் முன்னேற்றமும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் தானே. இதற்கு விரோதமாக 'காங்கிரஸ் கட்சியைச்' சேர்ந்த பார்ப்பனரல்லா தாரிலும் சுயேச்சைக் கட்சியைச் சேர்ந்த பார்ப்பனரல்லாதாரிலும் எத்தனைப் பேர் இருக்கி றார்கள் என்று சொல்ல முடியுமா? ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று பார்ப்பனரல்லாதார் தவிர மற்றபடி அதுகளிலுள்ள எல்லா பார்ப்பன ரல்லாதாரும் இக் கொள்கைகளை ஒப்புக் கொண்டவர்களே தவிர வேறில்லை. ஆகையால் பார்ப்பனர்களின் கட்சி ஜாலத்தைப் பற்றி யாரும் ஏமாந்து போய் கவலைப்பட வேண்டியதில்லை. தமிழ்நாட்டில் உள்ள தெல்லாம் இரண்டே கட்சி. ஒன்று பார்ப்பன ஆதிக்கத்திற்கு பாடுபடும் கட்சி, மற்றொன்று பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கு பாடுபடும் கட்சி. இரண்டி லும் வாய் வைக்கும் அலிக் கட்சி என்கிற தனி நபர்கள் சிலர் இருக்கலாம். அவர் களைப் பற்றி கவலை இல்லை. ஆதலால் இந்த இரண்டு கட்சிகளின் தோல்வியும் வெற்றியும் பார்ப்பனர்களின் கட்சி ஜாலத்தில் முடிந்து விடும் என்று யாரும் நினைக்க மாட்டார்கள். வரப்போகும் கமிஷனில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்து வத்தை ஒழிக்கவும் கூடப்போகும் புது சட்டசபையில் தேவஸ்தான மசோ தாவை ஒழிக்கவும் ஏற்பட்டால் மாத்திரம் "பார்ப்பன ஆதிக்கக் கட்சிக்கோ", "காங்கிரஸ் கட்சிக்கோ" வெற்றியும் பார்ப்பனரல் லாதார் சுயமரியாதைக் கட்சிக்கு தோல்வியும் என்று சொல்லலாமே தவிர மற்றபடி வெற்றி தோல்வி ஒன்றுமில்லை. இதைத் தவிர மலையாளக் குடிவார மசோதாவை சர்க்காரைக் கொண்டு அழித்தவகையில் பார்ப்பனக் கட்சிக்கு ஒரு வெற்றி தான். காங் கிரஸ் கட்சி சுயராஜ்யம் சம்பாதிக்கும், தேசத்தை விடுதலை செய்யும் என்று சொல்லுவதும், பார்ப்பனர் அல்லாதார் கட்சியை ஜஸ்டிஸ் கட்சி, உத்தியோகக் கட்சி, தேசத் துரோகக் கட்சி என்று சொல்லுவதும் பார்ப்பனரினது அயோக்கியத்தனமும் பார்ப்பனரல்லா தாரினது அறியாமையும் மற்றும் சிலரினது வயிற்றுக் கொடுமையுமே அல்லாது வேறில்லை என்று உறுதி கூறுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 14.11.1926**



tamilnavarasam.com

# தக்க சமயம்

## சட்டசபைத் தேர்தல் முடிவு ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை

சட்டசபைத் தேர்தல்களின் முடிவானது தமிழ்நாட்டில் நாம் எதிர்பார்த்ததற்குச் சிறிது மாறாய் ஏற்பட்டு இருக்கிறது. ஆனபோதிலும் இதில் ஒன்றும் ஆச்சரியப்படத்தக்கதில்லை. பாமர மக்களுக்கு போதுமான அறிவு உண்டாகும்படி செய்வதற்கு முந்தி அவர்கள் வசம் ஓட்டு என்னும் ஆயுதத்தைக் கொடுத்த பிறகு அது அவர்களையே கெடுத்துக் கொள்ள உபயோகப் படுத்தப்பட்டால் அதற்காக யாரும் ஓட்டர்களைக் குற்றம் சொல்ல முடியாது. எனினும் இதுவரை வெளிவந்திருக்கும் தேர்தல் முடிவு களின்படி பார்ப்பனரல்லாதார் பயப்படத்தக்க மாதிரி ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. பொதுவாக நாம் சட்டசபை மூலம் அரசியல் சம்பந்தமான ஒரு காரியத்தையும் செய்து கொள்ள முடியாது என்று அநேக தடவைகளில் எழுதியும் பேசியும் வந்திருப்பது வாசகர்களுக்கு நன்றாய்த் தெரியும். பார்ப்பனரல்லாதார் சமூக சம்பந்தமாக பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கு பார்ப்பனரல்லாதார் செய்யும் முயற்சிக்கு பார்ப்பனர்கள் சட்டசபையின் மூலம் இடையூறு உண்டாக்காமல் இருக்கச் செய்யலாம் என்கிற ஒரே எண்ணத்துடன் மாத்திரம் சட்டசபையில் நம்பிக்கை உள்ளவர்களை இன்ன கொள்கைக்காரர்களுக்கு ஓட்டுச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண் டோமே தவிர இன்னும் சுயராஜ்யமோ சுயமரியாதையோ சட்டசபையில் கிடைத்துவிடும் என்பதற் கல்ல. எந்த விதத்திலும் சென்ற தேர்தல் முடிவைவிட இத்தேர்தல் முடிவு அதிகமான பார்ப்பனர்களை சட்டசபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பிவிட வில்லை. இரண்டாவது பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை விஷயத்திலாவது வகுப்புவாரி உரிமை பெறும் விஷயத் திலாவது அதிகமான எதிரிகள் சட்ட சபைக்கு தெரிந்தெடுக்கப்பட்டு விட்டார்கள் என்றும் சொல்லி விடுவதற்கு மில்லை. உத்தியோக ஆசையின் காரணமாகவும் சுயநலத்தின் மூலமாகவும் பல பார்ப்பனரல்லாதார் தாங்கள் தெரிந்தெடுக்கப்படுவதற்கு பார்ப்பனர்களின் உதவியை நாடியே தீர வேண்டியதாயிற்று. ஏனெனில் ஓட்டர்களோ பாமர ஜனங்கள்; மொத்தத்தில் 100-க்கு 75 பேருக்கு மேலாகவே ஓட்டுரிமை இன்னதென்றறியாத அப்பாவிகள்; அதில் பலர் ஓட்டுக்களை சுயநலத்திற்கும் பண விலைக்கும் விற்க வேண்டிய அவசியமுடையவர்கள். இவை



இரண்டுமல்லாமலும் எப்படி நமது மக்களின் 100-க்கு 90 பேருக்கு மேல் மோக்ஷம், புண்ணியம், தருமம் என்று 1000-க்கணக்கான வருஷங்களாக வைதீகத்தில் பார்ப்பனர்களுக்கு அடிமையாகி அறிவிலிகளாய் மூட நம்பிக்கையில் கட்டுண்டு இருக்கின்றார்களோ அது போல் காங்கிரஸ், சுயராஜ்யம், வரி குறைவு, அரிசி ரூபாய்க்கு 8 படி என்கிற லௌகீக 'அறிவீனத்'திலும் பேராசையிலும் சுமார் 40 வருஷ காலமாய் முழுகி இருக்கிறவர்கள். அது மாத்திரமல்லாமல் மேல்படி வைதீகத்தின் பேரால் பார்ப்பனர் தங்கள் வயிறு வளர்க்க ஏற்படுத் தப்பட்ட வேதம், சாஸ்திரம், புராணம் என்பவைகளை தங்களுக்கே பொய் புரட்டு என்று தெரிந்திருந் தாலும் அவைகளை பாடம் பண்ணிக்கொண்டும் வைதீக வேஷம் போட்டுக் கொண்டும் பாஷாண்டிகளாய் புராணப் பிரசங்கம் செய்து கொண்டும் பார்ப்பன ஆதிக்கத்திற்கு இடம் கொடுத்து வயிறு வளர்த்து கீர்த்தி சம்பாதித்துக் கொண்டு சில பார்ப்பனரல்லாதார்கள் திரிவது போலவே இந்த லௌகீகத்திலும் காங்கிரஸ், சுயராஜ்யம், உரிமை, தேசம், தேசியம், சர்க்காரை எதிர்த்தல், அரசாங்கத்தைத் தகர்த்தல், முட்டுக் கட்டை ஆகிய சொற்களை சொல்லிக்கொண்டு சாண் வயிறு வளர்க்கவும் பொய்ப் புகழ் சம்பாதிக்கவும் திரியும் ஒரு போலி அரசியல் பாஷாண்டிக் கூட்டத்தார் பார்ப்பனரல்லாதாரி லேயே உண்டு. பெரும்பாலும் சமூகத்திற்கும் நாட்டிற் கும் கேட்டை வளர்க்கும் பார்ப்பனீயத்திற்கும் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் ஆதி முதல் இன்றுவரை உதவி செய்து வந்து நமது சுயமரியாதையை ஒழித்தவர்கள் இப் பாஷாண்டிக் கூட்டத்தாரேயாவர். ஒரு காலத்தில் மகாத்மா ஒத்துழையாமை யை குலைத்தது சுயராஜ்யக் கட்சியல்ல. ஒத்துழையாமை யில் ஒரு காலும் சுயராஜ்யக் கட்சியில் ஒரு காலும் வைத்துக் கொண்டு "ஒத்துழையாமை தான் தேசத்திற்கு விடுதலை அளிக்க வல்லது, சுயராஜ்யக் கட்சிதான் தீவிரமான தேசீய கொள்கை உடையது" என்று சொல்லிக் கொண்டு இருதலைப் பாம்புகளாய் வாழ்வை நடத்திய வௌவால் கட்சி யார்களால்தான் ஒத்துழை யாமை ஒழிந்தது என்று சொன்னது போல் இப்போது பார்ப்பனரல்லாதார் சமூக சுதந்திரத்திற்கும் சுயமரியாதைக்கும் இந்த பாஷாண்டிகளே காரண மாயிருக்கிறார்கள் என்று சொல்வது மிகை யாகாது. இவ்வித பல நிலைமை கள் பார்ப்பனர்களுக்கு அநுகூலமாய் இருப்பதோடு இவைகள் அனைத் தையும் தங்களுக்கு ஒழுங்காய் உப யோகப்படுத்திக் கொள்ள சகல வசதியும் உடைத்தாயிருக்கிறார்கள். முதலாவது அவர்கள் பிறரை ஏமாற்றியே பிழைக்க வேண்டிய யோக்கியதையில் பாரம்பரியமாய் தலைமுறை தலைமுறையாய் இருந்து வருவதால் ஏமாற றத்தக்க வழிகள் இன்னதென்றும் அதற்குற்ற சாதனங்கள் இன்னதென்றும் அறிந்திருப்பதோடு இத்தொழிலில் கைதேர்ந்த அநுபவமும் ஆற்றலுமுடையவர்களாகவும் நம்மில் பல பாஷாண்டிகளை எப்படி தங்கள் வசமாக்கி நம்மை ஏமாற்றச் செய்யலாம் என்கிற வகை தெரிந்தவர்களாகவும் இருக்கி றார்கள். அதற்கேற்றாற்போல் நமக்கு ஏற்பட்ட அரசாங்க வர்க்கத்தாரும் அவர்களைப்போலவே மக்கள் அறிவீனத்தினா



RangaRakes tamilnavarasam.com

லேயே பிழைக்கத்தக்க வர்க்கமாக அமைந்து அறிவீனத்தை வளர்த்துக் கொண்டே வந்திருக்கிறார் கள். வியாஜ்ஜியக்காரர்களை ஏமாற்ற எப்படி வக்கீலும் அவர்களது (டவுட் கள்) புரோக்கர்களும் ஒன்று சேருகிறார்களோ! வாலிபர்களை ஏமாற்ற எப்படி வேசிகளும் அவர்களது தரகர்களும் ஒன்று சேருகிறார்களோ அது போலவே நமது மக்களை ஏமாற்ற அரசாங்க வர்க்கத் தாரும் பார்ப்பனர் களும் ஒன்று சேர்ந்து நமது பாஷாண்டிகளது உதவியால் நமது அறிவீனத்தை வளர்க்க வேண்டியதாயிற்று. ஆனபோதிலும் நமது நிலை முன் தேர்தல் காலத்தில் இருந்ததை விட இந்த தேர்தலின் பலனாய் ஒன்றும் பிற்போக்கடைந்து விடவில்லை. முன் தேர்தலை விட இப்போது சில ஸ்தானங்கள் நமது கொள்கையில் லக்ஷியமில்லாதார் வசம் போய்விட்டது என்று சொல்லுவதானால் அது வெறும் மாய்கைதானே ஒழிய அதனால் நமது முற்போக்குக்கு ஒன்றும் அதிகமான கெடுதி ஏற்பட்டு விடாது. நல்ல அறிவோடு யோசித்துப் பார்த்தால் நமது முற்போக்குக்கு நன்மை என்றே சொல்லலாம். அதாவது இத்தேர்தல் முடிவு மூலம் நமக்கு உள்ள குறை என்ன என்பதை உணரவும், அதை திருத்த ஊக்கத்தோடு முயலவும் இத் தேர்தல் முடிவு தூண்ட ஏற்பட்டது. உத்தியோகம் பெறுவது மாத்திரம்தான் பார்ப்பன ரல்லாதார் கட்சியின் கொள்கை என்பது வாஸ்தவமானால் மாத்திரம் இத் தேர்தலால் பார்ப்பனரல்லாதாருக்கு தோல்வி என்று சொல்லலாம். பார்ப்பன ரல்லாதார் சுயமரியாதைக்கும் முற்போக்குக்கும் இக் கட்சி ஏற்பட்டது என்று சொல்லுவதானால் தேர்தல் முடிவு பார்ப்பனரல்லாதா ருக்கு அநுகூலம் என்றே சொல்லுவோம். இதுதேர்தல் முடிவைப் பார்த்த பிறகு சீ! புளிக்கும் என்று சொல்வதல்ல. தேர்தல் முடிவுக்கு முன்பே இதை நினைத்தோம். உதாரணமாக சென்ற மாதக் கடைசியில் சேரமாதேவியில் ஸ்ரீமான்கள் ஜோசப், எஸ். ராமநாதன், ராய சொக்கலிங்கம், காசி விஸ்வ நாதம், பிச்சயப்பா, சுப்பிரமணியம் முதலிய பல முக்கியஸ்தர்கள் கூடி பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையைப் பற்றியும் முற்போக்கைப்பற்றியும் பேசி அதற்காக என்ன செய்வது என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டி ருந்த சமயத்தில் நமது சமூகத்திற்கு முற்போக்கேற்பட அறிகுறி வேண்டு மானால் வரப் போகும் தேர்தலில் பனகால் அரசரும் ராமசாமி முதலியாரும் மற்றும் இரண்டொரு வரும் ஆகிய சக்தியும், அறிவும், ஊக்கமும் உள்ள குறிப்பிட்ட 10 கனவான்களுக்காவது தோல்வி ஏற்பட வேண்டும் என்றும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி முதன் மந்திரியாகவும் ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமணய் யங்கார் இரண்டாவது மந்திரியாகவும், ஜனாப் அமீத்கான் மூன்றாவது மந்திரியாகவும் வரவேண்டுமென்றும் பிரார்த்தித்தோம். கோவையில் பனகால் அரசர் வெற்றிக் கூட்டத்திலும் இந்தக் கருத்தை வெளி யிட்டிருக்கிறோம். ஆதலால் இம்முடிவைக் கண்டு பார்ப்பனரல்லாத பிரமுகர்களோ, வாலிபர் களோ, தொண்டர்களோ மனச்சலிப்புக் கொள்ளக் கூடாது. இம்முடிவு நாம் செய்கிற வேலைக்கும் செய்யப் போகும் வேலைக்கும் வழியை ஒழுங்கு படுத்தி இருக்கிறது. மக்களின் அறியா மையை விளக்கதக்க சமயமாயும்



ஏற்பட்டிருக்கிறது. பார்ப்பனரல்லாத மக்களுக்காக தியாகம் செய்யத் தயாராயிருப்பவர்களையும் பார்ப்பனரல்லாதார் கட்சி உத்தியோகத்திற்கு ஏற்பட்டதா அன்றி உண்மையாக அச்சமூகத்தின் முற்போக்குக்காக ஏற்பட்டதா என்று பரீக்ஷிப்பதற்கும் ஒரு உரைக்கல்லாய் இருக்கிறது. ஸ்ரீமான்கள் ராமசாமி முதலியார், தணிகாசலம் செட்டியார், நடேச முதலியார் போன்ற பார்ப்பன ரல்லாதார் கட்சித் தலைவர் களின் சமூக பக்தியைப் பொது ஜனங்கள் அறி வதற்கு ஒரு அவகாசமும் கிடைத்திருக்கிறது. இனி ஏற்படப் போகும் பார்ப்பன அடக்கு முறைக்கு மார்பு கொடுக்கும் வீரர்கள் யார் என்பதையும் நமது சமூகத்தார் அறிய காலம் வந்திருக்கிறது. ஆதலால் உலகம் இதோடு முடிந்து விட்ட தென்றாவது சட்டசபையைத் தவிர சுயமரியாதைத் தொண்டிற்கு வேறு இடமில்லை என்றாவது சட்டசபைக்கு இத்தேர்தல்தான் முடிவான தேர்தல் என்றாவது கருதி யாரும் நம்பிக்கையை விட்டுவிட வேண்டியதில்லை. ஒத்துழையாமைக்கு யோக்கியதை ஏற்பட்ட தெல்லாம் தியாகமும் தன்னல மறுப்புமே அல்லாமல் சட்டசபையாலல்ல. ஆதலால், சுயமரியாதைக்கு உழைக்க இஷ்டமுள்ளவர்களும் அவ்வுழைப் பினால் ஏற்படக்கூடிய கஷ்டங்களை அனுபவிக்கத் தயாராயிருப்பவர்களும் வெளியில் வர இதுவே தக்க சமயம். அதற்குற்ற நமது வேலைத் திட்டத்தை யும் வெகு சீக்கி ரத்தில் வெளியிட எண்ணியுள்ளோம்.

**குடி அரசு - தலையங்கம் - 14.11.1926**



RangaRakes tamilnavarasam.com

# ஜஸ்டிஸ் கக்ஷிக்கு ஓர் எச்சரிக்கை

## சமய சஞ்சீவிக் கூட்டம்

சட்டசபைத் தேர்தலின் முடிவுகளைக் கண்டு பலர் பலவிதமாக அக்கட்சியை தாக்கிப் பேசவும் எழுதவும் ஆரம்பித்து விட்டார்கள். உலக வாசனை இன்னதென்றே அறியாது சமயத்துக்கு தக்கபடி மனிதர்களுக்குத் தக்கபடி இச்சகம் பேசி வயிறு வளர்ப்பவர்கள் இந்த சமயத்தில் பெரிய மேதாவிகளைப்போல் அக்கட்சிக்கு ஞானோபதேசம் செய்ய வந்து விட்டார்கள். இக்கூட்டத்தார் காங்கிரசுக்கென்று தங்கள் சுயநலம் கருதாமல் ஒரு காதொடிந்த ஊசியளவு உதவியும் செய்திருக்க மாட்டார்கள்;; அல்லது ஜஸ்டிஸ் கட்சியின் மூலம் எவ்விதமான நன்மையுமாவது அடை யாமலும் இருந்திருக்க மாட்டார்கள். அல்லாமலும் நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் சுவற்றுமேல் பூனையாகவும், சமயத்திற்கு தகுந்தபடியும், தங்களது சுயநலத்திற்கு ஆதாரமாகவும் அவ்வப்போது நடந்தும், பேசியும், எழுதியும் காலங்கழித்து வந்த இவர்கள் இப்போது "வகுப்பு வாதத்தால் ஜஸ்டிஸ் கட்சிக்கு தோல்வி என்றும் தேசீய வாதத்தால் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி ஏற்பட்டது என்றும் ஆதலால் வகுப்பு வாதத்தை விட்டு விட்டு தேசீய வாதத்தில் சேருங்கள்" என்றும் பார்ப்பனர் மகிழும்படி பேசுகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியார்கள் ஜெயித்து விட்டார்கள் என்று பார்ப்பனப் பத்திரிகைகள் கலம் போட்டு எழுதி இருக்குமானால் அப்போது இந்த சமய சஞ்சீவிகள் என்ன எழுதுவார்கள் பேசுவார்கள் என்பதை யோசித்துப் பார்த்தால் இதற்கு மாறாக "காங்கிரஸ் தேச நன்மையை மறந்து ஒரு வகுப்பாருடைய அநுகூலத்திற்கு வசப்படுத்திக் கொள்ளப்பட்டது; காங்கிரஸினால் சுயராஜ்யக் கட்சி வகுப்புப் பூசல் கிளப்பிவிட்டது; அதனால் ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றி ஏற்பட்டது; ஆதலால் காங்கிரஸ்காரர் வகுப்புகளுக்கு ஆதாரமான கொள்கைகளை விட்டு தேச காரியத்தில் பிரவேசிக்க வேண் டும்" என்று எழுதுவார்கள். அது போலவே இப்போது வேதாந்தம் பேசும் மேதாவிகள் பேசியும், எழுதியும் வந்திருக்கிறார்கள். இதைப் பற்றியும் ஆச்சரியப்படவில்லை. உலகம் உள்ளவரை இப்படி ஒரு கூட்டம் இருந்து தான் வரும். ஆண்மையோடு வாழ முடியாத நிலைமையை அடைந்தவர் கள் தங்களுக்கோ ஒருவித கொள்கையும் அற்றவர்கள். ஓடுகிற மாட்டின் வாலைப் பிடித்து முறுக்குவார்களே தவிர ஓடாத மாட்டை ஓட்டுவிக்க முயலவே மாட்டார்கள்.



### வகுப்புத் துவேஷமென்றால் என்ன? அது யாரிடம் இருக்கிறது?

உண்மையாக வகுப்புத் துவேஷம், வகுப்பு வாதம், தேசீயம், உரிமை என்பதற்கு இவர்களுடைய பொருள்தான் என்ன? பார்ப்பனர் தங்கள் சுயநலத்திற்கு ஒன்றைச் சொன்னால், இவர்களும் கூடவே கோவிந்தா போடுவதுதான் தேசீயமென்பதற்கு அருத்தமா? உண்மையாகவே வகுப்புத் துவேஷமும் வகுப்பு வாதமும் பார்ப்பனர்களிடம் இருக்கிறதா? ஜஸ்டிஸ் கட்சியினிடம் இருக்கிறதா? என்பதை இவர்கள் உணராதவர்களா? நான் உயர்ந்த ஜாதி, நீ தாழ்ந்த ஜாதி என்று சொல்லுபவனிடம் வகுப்புத் துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? அல்லது நீயும் நானும் சமமான ஜாதிதான்; நம்மில் உயர்வு இல்லை; தாழ்வு இல்லை என்கிறவர்களிடம் வகுப்புத் துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? நான் கடவுள் தலை யில் பிறந்தேன்; நீ காலில் பிறந்தாய்; நான் உயர்ந்தவன் - பிராமணன், நீ தாழ்ந்தவன் - வேசி மகன், வைப்பாட்டி மகன், சூத்திரன் என்று சொல்லுபவ னிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? நீயும் நானும் ஒரே இடத்திலிருந்துதான் பிறந்தோம்; நீ பிராமணனுமல்ல, நான் வைப் பாட்டி மகனுமல்ல; நாம் இருவரும் சகோதரர்கள் என்று சொல்லுகிற ஜஸ்டிஸ் கட்சியில் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? அல்லது தெய்வம் என்றும் தீர்த்தம் என்றும் மோக்ஷமென்றும் புண்ணிய மென்றும் தர்மமென்றும் தானமென்றும் உன் சொத்தும் வரும்படியும் எங்களுக்கே கொடுக்க வேண்டும்; அதுகள் எல்லாம் எங்களுக்கேதான் சேர வேண்டும்; நாங்கள் உயர்ந்த ஜாதியாரானதால் அவற்றை எங்கள் இஷ்டம் போல் விநியோகித்துக் கொண்டு நாங்களே சாப்பிடுவோம்; நீங்கள் தாழ்ந்த ஜாதியாரானதால் உங்களுக்கு தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்தாலும் தோஷம்; ஆதலால் அதில் ஒன்றும் பாத்தியமில்லை, கொடுத்ததிற்கும் நீங்கள் கணக்குக்கூட கேட்கக் கூடாது என்று சொல்லுகிறவர்களிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? நீ கேட்கிறபடியும் அதற்கு மேலும் உன் இழவுக்கு அழுது விடுகிறோம்; ஆனால் அதுகளுக்கு கணக்கு மாத்திரம் காட்டு என்று கேட்பவர்களிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? அல்லது எங்கள் கால் கழுவின தண்ணீரை தீர்த்தமாக சாப்பிடுவதுதான் உங்களுக்குப் புண்ணியம்; நாங்கள் உங்களைத் தொட்டால், கிட்ட வந்தால், தெருவில் நடக்க விட்டால், கண்ணால் கண்டால் கூட எங்களுக்குப் பாவம் என்று சொல்லுகிறவர்களிடம் வகுப்பு துவேஷ மும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? உங்கள் கால்களைக் கழுவின தண் ணீரை வேண்டுமானாலும் குடிக்கிறோம்; அதற்குப் பணம் வேண்டுமானா லும் கொடுக்கிறோம்; எங்களையும் உள்ளே விடுங்கள் ; தெருவில் நடக்க விடுங்கள் என்று கேட்பவர்களிடம் வகுப்பு வாதமும் வகுப்பு துவேஷமும் இருக்கிறதா?



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனரில் பெரிய தேசீயவாதியும் காங்கிரஸ்காரருமான ஸ்ரீமான் வி. கிருஷ்ணசாமி அய்யர் தர்மப் பள்ளிக்கூடம் வைத்தார். அதற்கு பெரிய பண்டும் வைத்தார். ஆனால் அதில் பார்ப்பனர்கள் மாத்திரம் படிக்கலாமே ஒழிய பார்ப்பனரல்லாதார்கள் படிக்கக் கூடாது என்று எழுதி வைத்திருக் கிறார். இவரிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? அல்லது திருப்பதியில் பார்ப்பனரல்லாதார் பணத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்பட்டு இருந்தும் அதில் பார்ப்பனரல்லாதார் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள் ஐயா என்று கெஞ்சுபவர்களிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா?

பார்ப்பனரல்லாதாரான தஞ்சாவூர் மகாராஜா சுமார் வருஷம் இரண்டு லட்சம் ரூபாய் வரும்படி வரும்படியான சொத்துக்களை தர்மமாக விட்டிருக்கிறார். அதை ஸ்ரீமான் எம்.கே. ராமாநுஜாச்சாரியார் ஜில்லா போர்டு அக்கி ராசனராயிருக்கும் வரை அய்யங்கார் பார்ப்பனப் பிள்ளை களே சாப்பிட்டுக் கொண்டும், பார்ப்பனப் பிள்ளைகளே சம்பளமில்லாமல் படித்துக் கொண்டும், அய்யங்கார் பார்ப்பன உபாத்தியாயர்களே உத்தியோ கம் பெற்றுக் கொண்டும் லட்சக்கணக்கான ரூபாயை அனுபவித்து வந்தார் கள். வாசல் பெருக்கவும் எச்சிலை எடுக்கவும் தவிர வேறு காரியத்திற்கு பார்ப்பனரல்லாதார்களை உள்ளே விடாமல் அடித்துக் கொண்டிருந்தாரே அவரிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருந்ததா? அல்லது இப்போது பார்ப்பனரல்லாத ஸ்ரீமான் பன்னீர்செல்வம் ஜில்லாபோர்டு பிரசி டெண்டாகவும் ஸ்ரீமான் உமா மகேஸ்வரம் பிள்ளை தாலூக்காபோர்டு பிரசி டெண்டாகவும் வந்ததால் பார்ப்பனரும் பார்ப்பனரல்லாதாரும் சாப்பிடும் படியாகவும், சம்பளமில்லாமல் படிக்கும்படியாகவும், பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்களும் உத்தியோகம் பெறும்படியாகவும் செய்தார்களே இவர்களிடம் வகுப்பு துவேஷமும் வகுப்புவாதமும் இருக்கிறதா?

பார்ப்பனரல்லாத பெண்கள் ருதுவானால் பார்ப்பனர்கள்தான் முதல் முதல் சாந்தி முகூர்த்தம் செய்ய வேண்டும்; பார்ப்பனர்களுக்கெல்லாம் பார்ப்பனரல்லாத பெண்கள்தான் வைப்பாட்டிகளாயிருக்க வேண்டும்; ஒரு பார்ப்பனர் பார்ப்பனரல்லாத பெண்ணை சம்போகத்திற்கு கூப்பிட்டால் உடனே அவள் புருஷன் கூட்டிக் கொண்டு வந்து படுக்கையை விரித்து படுக்க வைத்துவிட்டுப் போக வேண்டும். இல்லாவிட்டால் நரகம் கிடைக் கும்; நரகத்துக்கு பயப்படாவிட்டால் ஊரை விட்டு வெளியே ஓடிப்போக வேண்டும் என்கிற கொடுமை தீர மலையாளக் குடிவார மசோதா கொண்டு வந்தால் அதை ஒழிக்கப் பாடுப்பட்ட ஸ்ரீமான் சி.பி. ராமசாமி அய்யரிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? இக் கொடுமை ஒழிக்க மசோதா கொண்டு வந்த ஸ்ரீமான் சி.கிருஷ்ணன் நாயரிடம் வகுப்பு துவேஷ மும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? பொது ஜனங்கள் பணத்தால் ரிபேர் செய்யப்படுவதும் பொது ஜனங்களின் பணத்தால் நிர்வகிக்கப்பட்டு



வருவதுமான அநேக முனிசிபல் தெருக்களில் பன்றி, நாய், மலச் சட்டி, மல வண்டி, பிணம் முதலியதுகள் போகலாம் மனிதன் மாத்திரம் ஏன் போகக் கூடாது. ஏனென்றால் நாங்கள் பிராமணர்கள், நீங்கள் தாழ்ந்தவர்கள் ஆதலால் நடக்கக்கூடாது என்று சொல்லுபவர்களிடம் வகுப்பு துவேஷ மும், வகுப்பு வாதமும் இருக்கிறதா? அல்லது நாங்களும் மனிதர்கள்தானே, நாய், கழுதை, பன்றியைப் போலாவது எங்களை நினைக்க வேண்டாமா என்று கேட்பவர்களிடம் வகுப்பு வாதமும், வகுப்பு துவேஷமும் இருக் கிறதா?

நீயும் நானும் இந்துமதம் ; இந்து மதத்திற்கு ஆதாரம் வேதம்; நான்தான் அதைப்படிக்க யோக்கியதை உள்ளவன்; நீ சூத்திரனானதால் அதைப் படிக்கக்கூடாது என்று சொல்லுபவர்களிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? எங்கள் மத ஆதாரத்தையாவது படிக்கக் கூடாதா? நாங்கள் என்ன அவ்வளவு தாழ்ந்தவர்களா? அது எதில் இப்படி சொல்லியிருக்கிறது; அதையாவது பார்க்கக் கூடாதா? என்று கேட்பவர் களிடம் வகுப்புத் துவேஷமும், வகுப்பு வாதமும் இருக்கிறதா? மக்களுக்கு சமத்துவமும் ஆண்மையும் சுயமரியாதையும் சம்பாதித்துக் கொடுப்பதாய் பார்ப்பனரல்லாதாரிலேயே மிகுதியும் கொடுக்கப்பட்ட பணத்திலும் காங்கிரஸ் பொதுப் பணத்திலும் குருகுல ஆச்சிரமம் வைத்து பார்ப்பனக் குழந்தை சாப்பிடுவதை பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்தால் பாவம் என்று சொல்லுகிறவர்களிடம் வகுப்பு வாதமும் வகுப்புத் துவேஷமும் இருக் கிறதா? எங்கள் பணத்தையே வாங்கிக்கொண்டு எங்கள் குழந்தைகளுக்கே தாழ்வையும் சின்னத்தனத்தை யும் சிறு வயது முதலே படிப்பிக்கிறீர்களே இது தர்மமாகுமா என்று கேட்கிற வர்களிடம் வகுப்புத் துவேஷமும், வகுப்பு வாதமும் இருக்கிறதா?

ஒரு பிராமணக் குழந்தை சாப்பிடுவதை ஒரு பிராமணரல்லாத குழந்தை பார்த்து விட்டால் ஒரு மாதம் பட்டினி கிடப்பேன் என்று சொன்ன ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியாரிடம் வகுப்புத் துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? அவருக்குப் போட்டியாய் நின்ற ஸ்ரீமான் முத்தையா முதலி யாரிடம் வகுப்பு வாதமும் வகுப்புத் துவேஷமும் இருக்கிறதா? தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் "மக்கள் பிறவியில் வகுப்பு வித்தியாசம் இல்லை" என்கிற ஒரு தீர்மானம் ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கராலும், எஸ். ராம நாதன் அவர்களாலும் கொண்டு வந்து நிறைவேற்றியவுடன் காங்கிரசை விட்டு வெளியே போன எம்.கே. ஆச்சாரியாருக்கும் காங்கிரஸ் கமிட்டியில் இருந்து ராஜீனாமா கொடுத்து விட்ட ஸ்ரீமான்கள் சி. ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், டாக்டர் சாஸ்திரி, சந்தானம், வரதாச்சாரி ஆகிய பார்ப்பனர் களிடமும் வகுப்புத் துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? அல்லது இத் தீர்மானம் கொண்டு வந்தவர்களிடமும் ஆதரித்தவர்களிடமும் இருக்கிறதா?

முனிசிபாலிட்டி பொதுக் குழாயில் தங்கள் வகுப்பார்களைத் தவிர



RangaRakes
tamilnavarasam.com

மற்ற வகுப்பார் தண்ணீர் பிடிக்கக்கூடாது என்றும், இன்ன படித்துறையில் தங்கள் வகுப்பார்களைத் தவிர தண்ணீர் மொள்ளக் கூடாது, குளிக்கக் கூடாது என்றும், இன்ன படித்துறையில் தங்கள் தூரமான ஸ்திரீகளைத் தவிர வேறு யாரும் துணி துவைக்கக் கூடாது என்றும் சொல்லி இடம் ஒதுக்கி வைத்துக் கொள்ளுகிறவர்களிடம் வகுப்புத் துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? அல்லது எல்லோரும் தண்ணீர் மொள்ளலாம்; எல்லோரும் தண்ணீர் பிடிக்கலாம்; எல்லா பெண்டுகளும் குளிக்கலாம், துவைக்கலாம் என்று சொல்லுகிறவர்களிடம் வகுப்புத் துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா?

பார்ப்பனரல்லாதார் லட்சக்கணக்காய் செலவு செய்து கோவில் கட்டினால் நீ சூத்திரன், நீ வைசியன், நீ வாணியன், நீ நாடான், நீ பஞ்சமன், நீ இதுவரை வரலாம், நீ இதுவரை வரலாம், நீ வாசற்படி கிட்டக்கூட வரக் கூடாது, நீ தெரு மதிலைக்கூட தொடக் கூடாது, நீ தெரு வழிக் கூட நடக்கக் கூடாது என்று சொல்லுகிறவர்களிடம் வகுப்பு வாதமும் வகுப்பு துவேஷ மும் இருக்கிறதா? அல்லது சுவாமி, சுவாமி கொஞ்சம் கண்ணால் பார்த்து ஓடிப் போகிறோமே, கொஞ்சம் காலைத் தொட்டு கும்பிட்டு விட்டு ஓடிப் போகிறோமே என்று கெஞ்சுகிறவர்களிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? இன்னமும் ஜஸ்டிஸ் கட்சியையும் அதன் தலைவர் களையும் வகுப்புத்துவேஷக் கட்சி, வகுப்புவாதக் கட்சி என்கிறவர்கள் நன்றாய் யோசித்து சுயராஜ்யக் கட்சியிலோ, காங்கிரஸ் கட்சியிலோ, ஒத்து ழையாமைக் கட்சியிலோ எந்தப் பார்ப்பனத் தலைவராவது வகுப்புத் துவேஷமும் வகுப்பு வாதமும் இல்லாதவர்கள் இருக்கிறார்களா? என்பதை யும், சுயராஜ்யக் கட்சியிலோ காங்கிரசிலோ வகுப்புத் துவேஷமோ வகுப்பு வாதமோ நீங்கக்கூடிய ஏதாவது ஒரு திட்டம் நடைமுறையிலாவது எழுத்தி லாவது இருக்கிறதா? என்பதையும் சுயநலத்தையும் அறிவீனத்தையும் விட்டு நடுநிலையில் இருந்து யோசித்துப் பார்த்தார்களானால் அவர்களுக்கு உண்மை தெரியாமல் போகாது. ஜஸ்டிஸ் கட்சியை வகுப்புத் துவேஷம் வகுப்பு வாதம் என்று சொல்லுகிற – எழுதுகிற எத்தனையோ மேதாவிகள் தங்களது உண்மையான தாயும் தகப்பனுக்கும் பொதுவாய் தங்கள் நெஞ்சில் கையை வைத்துப் பார்ப் பார்களானால் தாங்கள் உண்மை பேசுகிறார்களா? பார்ப்பனர்கள் புன்சிரிப்புக்கோ, தங்களது வயிறு வளர்ப்புக்கோ, சுயநலத் திற்கோ பேசுகிறார்களா? அல்லது தேசத்திற்கோ தங்களது சமூகத்திற்கோ பேசுகிறார்களா? என்பது விளங்காமல் போகாது.

## இவைகளுக்கு பயப்படக்கூடாது

இக்கூட்டங்களை நாம் கணக்கில் வைக்க வேண்டிய அவசியமே இல்லை. இதுகளை மதிக்காமலும் இதன் எதிர்ப்புகளுக்கு சளைக்காமலும் இருக்கத்தக்க நிலைமை எப்பொழுது பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு வருகி



றதோ அன்றுதான் வகுப்புத் துவேஷமும்,வகுப்பு வாதமும், வகுப்பு ஆதிக்க மும் ஒழிந்து மக்களுக்கு சுயமரியாதை ஏற்படுமே அல்லாமல் இதுகளை மதித்துக் கொண்டும் இந்த எதிர்ப்புகளுக்குப் பயந்து கொண்டும் உள்ளவரை சுயமரியாதை உண்டாகாது. சுயமரியாதை என்பது கிள்ளுக்கீரை அல்ல. அதை அடைந்த சமூகமானாலும் தனி மனிதனானாலும் அவனுக்கு உலகமே தூசுக்கு சமானமாக இருக்கும். அச்சமூகத்தாரை எந்த அரசாங்க மும் அக்கிரமமாய் ஆளமுடியாது. அதன் மேல் எந்த வகுப்பும் ஆதிக்கம் செலுத்த முடியாது. பார்ப்பனரல்லாத மக்களின் அறிவீனத்தையும் சுய மரியாதையில் லக்ஷியமற்றிருக்கும் விலங்குத் தன்மையையும் விளக்க இத்தேர்தலின் முடிவை விட வேறு என்ன சாக்ஷி வேண்டும்?

## சர்க்கார் தயவையும் எதிர்பார்க்க முடியாது

இதில் தோல்வியுற்றவர்கள் பார்ப்பனரல்லாதாரின் நன்மைக்கும் சுயமரியாதைக்கும் உழைப்பவர்களானால் அவர்கள் சட்டசபையையும் சர்க்காரையும் லட்சியம் செய்வார்களா? எந்த உலகத்திலாவது அன்னிய அர சாங்கத்தார் – ஒரு தேச மக்களின் அறிவீனத்தாலும் சொரணையற்ற தன்மை யிலும் ஆண்டு கொண்டிருக்கும் அரசாங்கத்தார் – மக்கள் வயிற்றுப் பிழைப்புக்காகவே மானத்தையும், கற்பையும், மனசாக்ஷியையும் விற்கும் படியான நிலைமையில் தனது பிரஜைகளை வைத்திருந்தாலொழிய அரை நிமிஷமும் ஆளமுடியாத அரசாங்கத்தார் – அந்நாட்டு மக்களின் சுய மரியாதைக்கு உதவியாயிருப்பார்களா?

## நமது தற்கால வாழ்வு நிலை பொய்யா?

அன்றியும் பார்ப்பனரல்லாதார் கட்சி, தங்களுக்கு இருப்பதாய்ச் சொல்லும் குறைகள் இல்லை என்றாவது தாங்கள் முன்னேற வேண்டு மென்று கோருவது குற்றமென்றாவது இப்போது அவர்கள் மற்ற வகுப்பார் களால் தாழ்வாய் மதிக்கப்படாமல் சமத்துவத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ்கிறார்கள் என்றாவது யாராவது சொல்ல முடியுமா? முதலாவது சர்க் காராரே நம்மை காங்கிரஸ் ஏற்பட்டதற்குப் பிறகு பிற்பட்ட வகுப்பிலேயே சேர்த்து இருக்கிறார்கள். பார்ப்பனர்களோ நம்மை பஞ்சமர்கள் என்றும் சூத்திரர்கள் நாலாவது வகுப்பார் என்றும் சொல்லுவதோடு வைதீகத்தில் நம்மை சிஷ்யர்களாக்கி வைத்திருக்கிறார்கள் என்பதில் யாருக்காவது ஆக்ஷேபணை உண்டா? மற்றபடி ஜாதி வகுப்பு வைதீக நிலைமைகளை விட்டு விட்டு அரசியலிலும் லௌகீகத்திலும் நமக்குத் தக்க உரிமை வேண்டுமென்றால் நீ படிக்கவில்லை, உனக்குப் புத்தியில்லை, உங்களுக்கு வேலை பார்க்க சக்தி யில்லை, நிர்வாகத் திறமை இல்லை என்று சொல்லு கிறார்களே இவைகள் உண்மையாய் இருந்தாலும் சரி பொய்யாயிருந்தாலும் சரி இந்தக் காரணத்தாலோ அல்லது இப்படிச் சொல்லுவதாலோ நாம்



RangaRakes tamilnavarasam.com

பின்னமடைந்து இருக்கிறோம் என்பதையும் யாராவது மறுக்க முடியுமா?

## ஏமாந்து போகக்கூடாது

ஆகவே, இந்த நிலைமையிலிருந்து விடுதலையாகி முற்போக் கடைய வேண்டுமா? வேண்டாமா? இதற்கு என்ன வழி என்பதை இப்பொழுது "வகுப்பு துவேஷம் தோல்வியுற்றது" என்று பிதற்றும் எந்த மேதாவியாவது இதுவரை சொன்னாரா? அல்லது செய்து காட்டினாரா? ஒன்றுமில்லாமல் எதையோ தனக்கே புரியாமல் கூட்டத்தில் 'கோவிந்தா' போட்டுக் கொண்டு இருந்து விட்டும் இப்போது பார்ப்பனர்கள் கை உயர்ந்த தாக கனவு கண்டு கொண்டும் "வகுப்பு வாதம் தோற்றது", "வகுப்பு துவேஷம் தோற்றது" என்று சொல்லுகிற வார்த்தைகளை பார்ப்பனரல் லாதார் கேட்டு ஏமாந்து போகக்கூடாது. நாம் சுயமரியாதையைக் கோரு வதும் அதற்கான நமது கொள்கைகளும் செய்கைகளும் வகுப்பு வாத மானாலும் சரி, வகுப்பு துவேஷமானாலும் சரி, நாஸ்திகமானாலும் சரி, ராஜ துரோகமானாலும் சரி வேதத் துரோகமானாலும் சரி நரகசித்தியாவதானா லும் சரி, நமது கோரிக்கை கை கூடும் வரை உழைக்க வேண்டியதேயல் லாமல் அவர் என்ன சொல்லு கிறார்? இவர் என்ன சொல்லுகிறார்? சட்டம் என்ன சொல்லுகிறது? என்பவைகளைக் கவனிக்கவே கூடாது என்று எச்சரிக்கிறோம்.

நமது எண்ணம் நல்ல எண்ணமா? கெட்ட எண்ணமா? நமது சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும் பாடுபடுகிறோமா? அல்லது யாரிடத் திலாவது துவேஷத்தினாலாவது துரோகம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தினாலாவது மற்றவர்களுடைய நியாயமான சுதந்திரத்தைப் பிடுங் கிக் கொள்ள வேண்டுமென்றாவது பாடுபடுகிறோமா என்பதான இவை களை மாத்திரம்தான் நாம் நன்றாய் கவனமாய் நடுநிலையிலிருந்து சிந்தித்து ஒரு முடிவுக்கு வர வேண்டுமே அல்லாமல் மற்றபடி யோசிப்பது நமது வெற்றிக்கு இடையூறாகும்.

## எந்த விதத்திலும் நமது திட்டங்களை மாற்றக் கூடாது.

எனவே எந்தக் காரணத்தை முன்னிட்டும் நமது சுயமரியாதைத் திட்டங்களையும் முன்னேறும் பிரயத்தனங்களையும் கைவிட்டு விடக் கூடாது என்றும் எச்சரிக்கை செய்கிறோம். இன்னும் 3 ஸ்ரீ பொறுத்துதான் அனேகமாய் சட்டசபைத் தேர்தல் வரும். ஒரு சமயம் இப்போது இருக்கும் நிலையைப் பார்த்தால் மத்தியில் ஒரு தரம் கலைத்து மறுபடியும் தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் வந்தாலும் வரும். எப்படி ஆனாலும் அதைப் பற்றி கவலையுமில்லை. அதற்காக நாம் இப்போது கவலைகொள்ள வேண் டிய அவசியமுமில்லை. நமது சுயமரியாதையின் கொடிய எதிரியான பார்ப்பனியத்தைச் சுட்டு வீழ்த்துங்கள் ! அதைக் கொன்று குழி தோண்டிப் புதையுங்கள்! புதைத்தவுடனே அக்குழியில் இருந்தே உண்மையான



சுயராஜ்ஜியம் முளைக்கும். அது எந்த வகுப்பாருக்கும் இடைஞ்சலா யிருக்காது, சர்க்காருக்கும் இடைஞ்சலாயிருக்காது. பேராசைக்காரருக்கு மாத்திரம் கொஞ்சம் அதிருப்தியாயிருக்குமே அல்லாமல் வேறில்லை. அதுவும் நாம் உண்மையாய் வேலை செய்வதைக் கண்டால் தானாகவே சரி பட்டுப்போகும். ஆதலால் பார்ப்பனர்கள் பத்திரிகைகளையும் அவர்க ளது திண்ணைப் பிரசாரங்களையும் வயிறு வளர்ப்புப் பத்திரிகைகளையும், வயிற்றுச் சோத்து தேசபக்தர்களின் ஆரவாரங்களையும் கண்டு ஜஸ்டிஸ் கட்சியார் மருண்டு தங்கள் கொள்கைகளுக்கு பொது மக்களிடம் செல் வாக்கு இல்லையென்றோ தங்களுக்கு பொது மக்கள் ஆதர வில்லை யென்றோ நினைத்துத் தங்களது கொள்கைகளை மாற்றிக் கொள்ள நினைப் பார்களானால் அது தற்கொலைக் கொள்கையேயாகும். ஜஸ்டிஸ் கட்சியார் பாமர மக்களை திருப்தி செய்ய என்று வேறு எப்பேர்ப்பட்ட கொள்கைகளை ஏற்படுத்திக் கொண்டாலும் நமது சுயமரியாதையின் எதிரிகளான பார்ப்பனர்கள் அதையும் ஒழிக்கத்தக்க மற்றொரு கொள்கை ஆரம்பிக்கக் கூடிய தந்திர சக்தி வாய்ந்தவர்கள் என்பதையும் நினைப்பூட்டுகிறோம். சுயமரியாதைக்கும் சமூக சமத்துவத்திற்கும் இன்னும் தீவிரமான திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமே அல்லாது இதிலிருந்து கொஞ்சமும் பின் போகக் கூடாது.

## கதரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்

ஜஸ்டிஸ் கட்சி திட்டத்தில் பார்ப்பனரல்லாதாருக்கே மிகுதியும் உதவத்தக்க கதர் திட்டத்தையும் இன்றியமையாததாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதையும் வற்புறுத்துகிறோம்.

## நமது கடமை

பாமர மக்களிடை இவைகளை சரியானபடி பிரசாரம் செய்யவும் பார்ப்பனர்களின் சூழ்ச்சிப் பிரசாரங்களால் நமது பாமர மக்கள் ஏமாறாதிருக் கவும் தகுந்த பிரசாரங்கள் செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் எவ்வளவுக் கெவ்வளவு அசார்சமாயிருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமது காரி யம் குந்தகப்பட்டுப் போகும் என்பதை அழுத்திக் கூறுகிறோம். மற்றபடி அரசியல் விஷயமாய் அரசாங்கத்தோடு ஒத்துழையாமை செய்வதாகவோ அரசாங்கம் நடைபெறாமல் முட்டுக்கட்டை போடுவதாகவோ பார்ப்பனர் கள் சொல்லுவதை அடியோடு புரட்டு என்றே சொல்வோம். ஆகையால் அவைகளை நாமும் சொல்ல வேண்டியதில்லை. இவைகளைப் பற்றி மகாத்மா காந்தி நடத்துவதாய்ச் சொன்னால் மாத்திரம் கவனிக்கலாமே ஒழிய சுயநலக் கூட்டத்தால், பாமர மக்களை ஏமாற்றுவதற்கென்றே காங்கிரஸ் பெயர் வைத்து செய்யும் புரட்டுகளுக்கும் ஏமாற்றுப் பிரசாரங்களுக்கும் நாமும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. கூடுமான வரை அப்புரட்டுகள்



RangaRakes tamilnavarasam.com

வெளியாவதற்கு தைரியமாய் பிரசாரம் செய்ய வேண்டும். ஜில்லாக்கள் தோறும் ஒவ்வொரு வாரப் பத்திரிகைகள் ஏற்பட வேண்டும். எந்த விதத்திலும் பார்ப்பன சம்பந்தமில்லாமலே அவைகள் நடைபெற வேண்டும். வைதீக விஷயத்திலும், லௌகீக விஷயத்திலும், அரசியல் விஷயத்திலும் பார்ப்பனர் செய்யும் புரட்டுகளை தைரியமாய் வெளியிட வேண்டும். ஒவ்வொரு மிராசுதாரர்கள் அதன் நஷ்டங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். போலித் தலைவர் களையும், போலி தேசீயப் பத்திரிகைகளையும், வயிற்றுச் சோற்று தேச பக்தர்கள் யோக்கியதையையும் துணிந்து வெளியாக்க வேண்டும். இவைகளையெல்லாம் செய்யாமல் தேர்தல்கள் சமயத்தில் 1000, 10000, 50000 செலவழிப்பதில் ஒரு பயனும் உண்டாகாது. பார்ப்பனப் பிரசாரங்களையும், பார்ப்பனப் பத்திரிகைகளை யும், பார்ப்பனத் தலைவர்கள் தந்திரங்களையும், பார்ப்பன மடாதிபதிகள் மகந்துக்கள் செய்யும் செலவுகளையும் பார்த்தாவது நாம் விஷயங்களை அறிந்துக் கொள்ள வேண்டாமா? எதை ஆதாரமாக வைத்து பாமர ஜனங் கள் ஒரு அபிப்பிராயம் கொள்ளுகிறார்கள் என்பது தெரியாதா? எதை ஆதாரமாய் வைத்து பாமர ஜனங்களின் ஓட்டுப் பெறுகிறார்கள் என்பது தெரியாதா? வெற்றியும் தோல்வியும் எதைப் பொறுத்திருக்கிறது என்பது தெரியாதா? இந்த விஷயங்களை அறிந்தவன் உண்மையான தொண்டனா யிருந்தால் ஒருக்காலும் வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படாமல் பாமர ஜனங்களுக்கு உண்மையைப் புகட்டுவதிலேயே கண்ணுங் கருத்து மாயிருப்பான். ஆதலால் நாம் செய்ய வேண்டிய வேலையெல்லாம் நமது தற்கால கொள்கைகளை மக்களிடம் பரவச் செய்வதற்கு முயல வேண்டி யதே அல்லாமல் மக்களைத் திருப்திச் செய்யவோ அவர்களை ஏமாற்றவோ தகுந்தபடி கொள்கைகளை மாற்றுவதல்ல என்பதை வலியுறுத்துவதுடன் கொள்கைகளை மாற்றுவது சமூகத் தற்கொலையாகும் என்பதை மறுபடியும் எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 21.11.1926**



# நாகைத் தொழிலாளர் சங்கம்

நாகை தென்இந்திய ரயில்வே தொழிலாளருக்கும் ஷை ரயில்வே அதிகாரிகளுக்கும் நாகையை விட்டு பொன்மலைக்கு தொழிலாளர் குடிபோக வேண்டிய விஷயமாய் ஏற்பட்ட சிறு தகராறு தீர்ந்து விட்டதாகத் தெரிந்து சந்தோஷமடைகிறோம். ஆனாலும் மத்தியஸ்த தீர்ப்பினால் தொழிலாளருக்கு எவ்வித லாபமும் சவுகரியமும் ஏற்பட்டிருப்பதாய்ச் சொல்ல கொஞ்சமும் இடமில்லை. தொழிலாளர்களுக்கு வெகு காலமாக இருக்கும் சுதந்திரங்களை ரயில்வே அதிகாரிகள் பிடுங்கிக் கொள்வதாய்ச் சொன்னதில் மத்தியஸ்தர் வந்து பிடுங்கிக் கொள்வது சரியல்லவென்று சொல்லி விட்டதினால் தொழிலாளருக்கு லாபம் என்ன? இத்தகராறு ரயில்வேக்காரர்கள் முன் யோசனையின்மேல் செய்த கெட்டிக்காரத்தனமான தந்திரமே அல்லாமல் வேறல்ல. ஏனெனில் வெகு காலமாய் வீடு வாசல் களுடன் வாழ்ந்து வந்த தொழிலாளர்களை ஊரைவிட்டு வேறு ஊருக்கு வாருங்கள் என்று கூப்பிட்டால் யாருக்கும் வர இஷ்டமிருக்காது என்பதை உணர்ந்தும் இதற்காக ஏதாவது அதிகப்படியான சுதந்திரங்கள் கேட்பார்கள் என்று எண்ணியே முன் ஜாக்கிரதையுடன் ஏற்கனவே இருக்கிற சுதந்திரத்தை யும் பிடுங்கிக் கொள்வோம் என்று சொன்னால் மத்தியஸ்தத்திற்கு வருகிற வர்கள் அப்போது "அதிக சுதந்திரமும் வேண்டாம்; இருக்கிற சுதந்திரங்க ளையும் பிடுங்கிக் கொள்ள வேண்டாம்" என்று பைசல் செய்து விடுவார்கள் என்று செய்ததுவே தவிர வேறில்லை. ஆனபோதிலும் தொழிலாளர்கள் கண்ணியமுடன் ஒப்புக் கொண்டது மிகவும் பாராட்டத்தக்கதே. ஆனாலும் தொழிலாளர்கள் கட்டுப் பாட்டுடன் இருந்து தங்களது கிரமமான நன்மை களையும் பிரதிநிதித்துவங்களையும் பெருக்கிக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும். நமது மாகாணத்தில் உள்ள தொழிலாளர் சங் கங்களிலெல்லாம் நாகை தொழிலாளர் சங்கமே கூடியவரை உண்மையான சங்கமென்றே சொல்லலாம். அது மற்ற சென்னை முதலிய சங்கங்களைப் போல் 'தலைவர்களின்' நலத்திற்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் ஆயுத மாயிராமல் தங்கள் காலிலேயே நிற்கத் தகுந்த யோக்கியதையை அடைந் திருப்பதைப் பற்றி மிகுதியும் பாராட்டுகிறோம். அதற்குத் தலைவராக தொழிலாளர்கள் தங்களுக்குள் ஒருவரையே தெரிந்தெடுத்துக் கொண்டது அச்சங்கத்தின் முற்போக்குக்கும் நமது மாகாணத்தில் அதுவே ஆதிக்கம் பெற்ற சங்கமாகப் போகிற தென்பதற்கும் அறிகுறியாகும். இனியும்



RangaRakes tamilnavarasam.com

அச்சங்கம் அரசியல் சூழ்ச்சியிலிருந்தும் முழுதும் விடுபட்டுவிட்டால் அதனால் நமது மாகாணத்து மற்ற தொழிலாளர் சங்கங்கள் எவ்வளவோ பயனடையத்தக்க மாதிரிக்கும் பின்பற்றத்தக்க மாதிரிக்கும் வந்துவிடும் என்றும் உறுதி கூறுவோம். அதன் நிருவாகஸ்தர்களும் தங்களுக்குள் ஏதாவது சிறு அபிப்பிராய பேதங்கள் இருந்தால் அதை தொழிலாளர்கள் நன்மைக்காக விட்டுக் கொடுத்து ஒற்றுமையுடன் உழைத்து தொழிலாளர் உலகத்துக்கு நன்மை செய்யுமாறு வேண்டுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 21.11.1926**



## இதுகூட வகுப்பு துவேஷமா?

திருநெல்வேலி ஜில்லா தென்காசியிலுள்ள ஒரு சிவன் கோவிலில் சமஸ்கிருதத்தில் வேத பாராயணம் செய்த பிறகு தமிழில் தேவார பாராயணமும் செய்த பிறகு எல்லோருக்கும் விபூதி பிரசாதம் கொடுக்க வேண்டும் என்பதாக கோவில் அதிகாரிகள் ஏற்பாடு செய்தார்களாம். அங்கு வேத பாராயணம் செய்து வந்த பார்ப்பனர்கள் தேவார பாராயணம் செய்த பிறகு விபூதி பிரசாதம் வாங்குவது தங்கள் உயர்வுக்குக் குறைவு தேடினதாக ஆகுமென்று நினைத்து கலகம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறதை வேறு இடத்தில் பிரசுரித்திருக்கிறோம். கோவிலில் தேவாரம் படிக்க வேண்டுமென்று சொன்னால்கூட அது நமது பார்ப்பனர்களுக்கு வகுப்புத் துவேஷமாய்ப் படுகிறதாயிருந்தால் பிறகு எங்கு போய்த்தான் பிழைக்கிறது.

தேவாரம் படிக்காததினால் மோக்ஷம் கெட்டுப்போய் விட்டது என்பதாக நாம் பயப்படவில்லை. மக்களிடம் அன்பு செய்வதைத்தான் கடவுள் பக்தி என்று நினைக்கிறோமே அல்லாமல் வேத பாராயணமும் தேவார பாராயணமும்தான் கடவுள் பக்தி என்று நாம் நினைப்பதில்லை. ஆனாலும் தமிழ் மொழி என்றால் இந்தப் பார்ப்பனர்களுக்கு இவ்வளவு ஆத்திரம் வருவானேன் என்பதுதான் நமது கவலையே தவிர வேறில்லை. நமது தென்னாட்டு பிரயாணத்தில் ஒரு சமயம் அங்கு போக நேரிடினும் நேரும்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 21.11.1926**



RangaRakes tamilnavarasam.com

# வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது இந்திய மக்களில் பார்ப்பனர் தவிர மற்றெல்லா வகுப்பார்களாலும் வெகு காலமாக அதாவது இந்திய பிரதி நிதித்துவம் என்கிற வார்த்தை என்றைக்கு ஏற்பட்டதோ அது முதல் அரசாங் கத்தாரைக் கேட்டு வரப்படும் ஒரு கோரிக்கை.

இக்கோரிக்கை ஏற்பட்ட காலமுதல் இந்நாட்டுப் பார்ப்பனர்கள் - குறிப்பாய் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் பல வழிகளிலும் தந்திரங்களிலும் சூழ்ச்சிகளிலும் அது ஈடேறாமல் இருப்பதற்காக வெகு பாடுபட்டு வந்திருக் கிறார்கள். என்ன பாடுபட்டும் அரசியல் இயக்கங்களான காங்கிரசும் அரசாங் கமும் அதை ஒப்புக்கொண்டு அது ஒரு அளவு அமுலில் வரவும் ஏற்பாடு செய்தாய் விட்டது. உதாரணமாக, இந்தியாவிலுள்ள இந்திய மக்களில் மகம்மதியர்களுக்கு இத்தனை ஸ்தானங்களென்றும், சீக்கியர்களுக்கு இத்தனை ஸ்தானங்களென்றும், கிறிஸ்தவர்களுக்கு இத்தனை ஸ்தானங்க ளென்றும், மகம்மதியரல்லாதாருக்கு இத்தனை ஸ்தானங்களென்றும், மகம்மதியரல்லாதாரில் பார்ப்பனரல்லாதாருக்கு இத்தனை ஸ்தானங்களென் றும், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஆகியவர்களுக்கு பொதுவில் இத்தனை ஸ்தானங்களென்றும் பிரிக்கப்பட்டு 6, 7 வருஷ காலமாய் அதாவது மூன்று தேர்தலாய் அமுலில் வந்தாய் விட்டது. அது போலவே காங்கிரசிலும் கிறிஸ்தவர்களுக்கு இத்தனை ஸ்தானமென்றும் மகம்மதியர்களுக்கு இத்தனை ஸ்தானமென்றும் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் சேர்த்து மொத்தத்தில் இத்தனை ஸ்தானமென்றும் தீண்டாத வகுப்பார் என்று சொல்லப்பட்ட ஒடுக்கப்பட்டவர்களுக்கு இத்தனை ஸ்தானமென்றும் ஒதுக்கப்பட்டு அதுவும் சுமார் 5, 6 வருஷ காலமாய் அமுலில் இருந்தும் வருகிறது என்பதும் எல்லோரும் அறிந்த விஷயமே. இப்போது அதில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற விஷயத்தில் வகுத்திருக்கும் முறை காரியத்தில் பிரயோசனப்படாததாயும் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் இடையூறாயும் இருப்பதால் அதையும் தெளிவுபடுத்திவிட வேண்டும் என்பதே இப்போது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்று சொல்வதின் பொருளே அல்லாமல் புதிதாக ஒன்றும் ஏற்பாடு செய்யவோ அல்லது கண்டு பிடிக்கவோ யாரும் கோரவில்லை. இக் கொள்கைகளை அரசாங்கத்தாரும் சுமார் 85 வருஷங்களுக்கு முன்னாலேயே ஒப்புக் கொண்டு 1840 -ம் வரு ஷத்தின் 125 வது ஸ்டேன்டிங் ஆர்டரில் விவரமாக சொல்லியிருக்கிறார்கள்.



அக்காலத்தில் இந்தியாவில் நிர்வாகம் செய்த வெள்ளைக்காரர்களும் இதை வற்புறுத்தி இருக்கிறார்கள்.

ஆனாலும் சகல உத்தியோகங்களும் பதவிகளும் அரசாங்கத்தார் கைவசமே இருந்து அவர்களே ஏறக்குறைய சரிவர வினியோகித்து வந்த தால் அதற்காக யாரும் கொள்கை ஒன்று ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியமே இருந்து வரவில்லை. ஆனால் காங்கிரஸ் என்பதாக ஒரு ஸ்தாபனத்தை சிருஷ்டித்துக் கொண்டு அதை தேசப் பிரதிநிதித்துவம் பொருந்தியது என்று சொல்லி அரசாங்கத்தை மிரட்டி அவர்கள் மூலம் சில பதவிகளும், பிரதிநிதித் துவங்களும் அதிகமாய் வினியோகிக்க செய்ததில் அவைகள் காங்கிரசில் உழன்று கொண்டிருக்கிற பார்ப்பனர்களான ஒரு கூட்டத்தாருக்கே போய்ச் சேருவதைப் பார்த்த உடனும் மற்றவர்கள் காங்கிர சில் ஆதிக்கம் பெறமுடியாமலும் மற்றவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்க முடியாமலும் கட்டுப்பாடாய் பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்ததின் பலனாகவும் காங்கிரசில் விசேஷ தீவிரவாதிகளாய் இருந்த பார்ப்பனரல்லா தார்களில் வடநாட்டில் மகம்மதியர்களும் தென்னாட்டில் மகம்மதியரல்லா தார்களுமான பார்ப்பனரல்லாதாரும் காங்கிரசினால் ஏற்படும் உத்தியோகங்க ளையும் பதவிகளையும் பிரதிநிதித்துவங்களையும் எங்களுக்கும் சமமாய் விகிதாச்சாரம் பங்கு கொடுக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் காங்கிர சிற்கு விரோதமாயிருந்து அரசாங்கத்தாரிடமிருந்து நேரில் பெற பிரயத் தனம் செய்வோம் என்றும் வாதாடியதில் காங்கிரசிலுள்ள பார்ப்பனர்கள் மகம்மதி யர்களுக்கு மாத்திரம் ஒப்புக்கொண்டு மற்றபடி மகம்மதியரல்லாத பார்ப்பன ரல்லாதாருக்கு ஒப்புக் கொள்ளாமல் ஆக்ஷேபணை செய்தார்கள். இதன் பலனாய் அப்போது அரசியல் வாழ்விலும், காங்கிரசிலும், பிரதான ஸ்தானத் திலும், அநுபோகத்திலும் இருந்த ஸ்ரீமான்கள் டாக்டர் நாயர், தியாக ராய செட்டியார் போன்றவர்கள் தென்னிந்தியர்களின் நல உரிமைச் சங்கம் என்ப தாக ஒன்றை ஏற்பாடு செய்து அதில் தென்னிந்தியாவிலுள்ள பார்ப்பனரல் லாத மக்கள் எல்லோரையும் சேர்த்து காங்கிரஸ் என்பது பார்ப்பன முன்னேற் றத்திற்கு ஏற்படுத்திய ஆயுதமே ஒழிய ஜனப் பிரதிநிதித்துவம் பொருந்தி யதோ அல்லது எல்லா மக்களும் சம உரிமை அடையத்தக்கி னதோ அல்ல வென்றும், சுயராஜ்யம் என்பது பார்ப்பன ராஜ்யமே அல்லா மல் பொது மக்கள் ராஜ்யம் அல்லவென்றும் பிரசாரம் செய்ததின் பலனாய் காங்கிரஸ் ஆதிக்கமும் குலையத் தலைப்பட்டது. இதை அறிந்த பார்ப்பனர் கள் ஒன்று கூடி யோசித்து ஒரு தந்திரம் செய்தார்கள். அதென்ன வென்றால் இப்போது ஸ்ரீமான்கள் சக்கரை, ஆரியா, ஈ.வெ. ராமசாமி நாயக்கர் முதலிய காங்கிரசில் ஈடுபட்டிருந்தவர்களின் அபிப்பிராயத்தையும், அவர்களது பத்திரிகை களையும் எதிர்க்க எப்படி ஸ்ரீமான்கள் மயிலை ரெத்தின சபா பதி முதலியார், பாவலர், குப்புசாமி முதலியார் என்கிற பெயர் உள்ளவர் களை தலைவர் களாக்கியும் "தேசபந்து" என்கிற பெயர் கொண்ட பத்திரி கையை உண்டு பண்ணவும் முயற்சிகளைச் செய்தார்களோ அதுபோலவே அப்போதும்



RangaRakes tamilnavarasam.com

ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு என்கிற கனவான்களை தலைவர்களாக்கி "தேசபக்தன்" என்ற பத்திரிகையையும் உண்டாக்கி டாக்டர் நாயர் முயற்சிகளை ஒழிக்க பிரயத் தனப்பட்டார்கள். அதனால் அச்சமயம் பார்ப்பனர்களின் யோக்கியதை யையும் டாக்டர் நாயர் போன்ற தேசபக்தர்கள் எடுத்துச் சொன்னவைகளை தேசம் நம்பியதே அல்லாமல் ஸ்ரீமான்கள் நாயுடு, முதலியார், 'தேசபக்தன்' போன்றவர்கள் சொல்லுவதை ஜனங்கள் காது கொடுக்காததால் அதற்காக வேறு தந்திரம் எடுத்து, எதுபோலவென்றால் மகாத்மாவின் ஒத்துழையாமை ஆரம்ப மானவுடன் தென்னாட்டுப் பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிகை களும் விரோதமாயிருந்தும் ஸ்ரீமான் எஸ்.சீநிவாசய்யங்கார் ஒத்துழை யாமை சட்டவிரோதமென்று சொல்லியும் ஸ்ரீமான் கஸ்தூரி ரங்க அய்யங் கார், எ.ரங்கசாமி அய்யங்கார், எஸ். சத்தியமூர்த்தி முதலியவர்கள் சென்னை ராஜதானி காங்கிரஸ் கமிட்டியில் இருந்து ராஜினாமா கொடுத்து விட்டு வெளி யில் போய் எவ்வளவோ தூரம் மகாத்மாவையும் ஒத்துழையாமை யையும் தாக்கிப் பேசியும் எழுதியும் இவர்கள் ஜபம் செல்லாததால் நுழைந்து கொடுத்து உள்ளே போய் கூட இருந்தே ஒத்துழையாமையைக் குலைத்தார் களோ அதுபோல் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தார் கேட்கும் வகுப்பு வாரி உரிமையை நாங்களும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் காங்கிரசை எதிர்க்கக் கூடாது என்பதாக இப்போது போலவே தேச பக்தி வேஷத்தைப் போட்டு, அதற்கெதிராக ஒரு சங்கத்தையும் ஸ்தாபிக்கச் செய்து அதற்கு வேண்டிய பணங்களையும் பிரசாரங்களுக்கும் பத்திரிகை நடத்துவதற்கும் பணத்தையும் கொடுத்து பார்ப்பனரல்லாதாரை இரண்டாகப் பிரித்து அச் சங்கத்திற்கு கொஞ்சம் கொஞ்சமாக மதிப்பு குறையச் செய்தார் கள். அச் சங்கத்தின் மதிப்பு குறைந்து விட்டது என்று தெரிந்தவுடனும் இவர்கள் பணம் கொடுத்து ஏற்படுத்தின சென்னை மாகாணச் சங்கமும் இப்பார்ப்பனர்களின் யோக்கியதையை அறிந்து கொண்டது என்று தெரிந்த உடனும் இச்சங்கத் தையும் ஒழிப்பதற்குச் சூழ்ச்சி செய்து இச்சங்கத்தில் முக்கியமாய் இருந்தவர் களையும் வசப்படுத்தி இதையும் அடியோடு ஒழித்து விட்டார்கள். இதன் பலனாய் என்ன ஏற்பட்டது? டாக்டர் நாயர் கட்சியாகிய தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தார் கேட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ மும் போய் அதற் கெதிரிடையாய்த் தாங்களும் அதையே கோருவதாகச் சொல்லிய சென்னை மாகாணச் சங்கத்தார் கோரிய வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம் கொண்ட தேசபக்தியும் போய், பழைய பார்ப்பன ஆதிக்கமே ஏற்பட்டு இதற்கு உதவி செய்த ஸ்ரீமான்கள் கலியாணசுந்தர முதலியாரும் டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரும் பார்ப்பனர்கள் மேல் பிணக்கு கொண்டு காங்கிரஸ் நிர்வாகத்தி லிருந்து விலகுவதாய் மிரட்டியும் "நீங்கள் போனால் வேறொரு முதலியா ரையும் நாயுடுகாரும் சேர்த்துக் கொள்ளத் தெரியும்" என்று சொல்லி வெளியி லேயே அனுப்பி விட்டு தங்கள் ஆதிக்கத்தையும் நிலைநிறுத்திக் கொள்ள ஏற்பாடு செய்து வருவதும் உலகம் அறிந்தது.



இதுபோலவே பார்ப்பனரல்லாத சங்கத்திற்கு அநுகூலமாய் சாக்ஷி சொல்ல சீமைக்குப்போன டாக்டர் நாயர், ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் இவர் களுக்கு மாறாக ஸ்ரீமான்களான ஒரு சக்கரைச் செட்டியாரையும் ஒரு செஞ்சையாவையும் சீமைக்குப் பணம் கொடுத்து அனுப்பினார்கள். இப் போது இந்தப் பார்ப்பனர்கள் யோக்கியதையை அறிந்து ஸ்ரீமான் சக்கரைச் செட்டியார் அவர்களை விட்டு விலகியதும் அதற்குப் பதிலாக ஸ்ரீமான்கள் ஒரு ஓ.கந்தசாமி செட்டியார் என்பவரையும் முன் பார்ப்பனரல்லாதாருக்காக சாக்ஷி சொல்ல சீமைக்குப் போயிருந்த எல்.கே. துளசிராம் என்பவரையும் ஆசை வார்த்தைகள் சொல்லி தங்கள் பக்கம் சேர்த்துக்கொண்டு அப்போது ஸ்ரீமான் சக்கரைச் செட்டியார் செய்த வேலையை இவர்களைக் கொண்டு செய்து வருகிறதோடு அவருக்குப் பதிலாய் இவர்களை உபயோகித்துக் கொள்ளப் போகிறார்கள். இவ்வளவு தீவிரமாகவும், இவ்வளவு பிரயத் தனமாகவும், இவ்வளவு செலவு செய்து கொண்டு இது சமயம் இந்தப் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு விரோதமாய் கட்சி சேர்த்து கிறதின் முக்கிய நோக்கமென்னவென்றால் 1920 ௵ த்தில் சில "சீர்திருத் தங்கள்" அரசாங்கத்தார் நமக்கு வழங்கியிருப்பதாகச் சொன்ன யாதாஸ்தில் "இன்னும் பத்து வருஷம் சென்ற உடன் இப்போது கொடுத்த சீர்திருத்தத்தை எப்படி உபயோகித்திருக்கிறீர்கள், மேல்கொண்டு உங்களுக்கு சீர்திருத்தம் கொடுத்தால் அதை சரியாய் உபயோகித்துக் கொள்ளக்கூடிய யோக்கியதை உங்களுக்கு இருக்கிறதா? இல்லையா? என்கிறதை பரீக்ஷித்துப் பார்த்து இன்னும் சில சீர்திருத்தம் கொடுப்போம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதன்படி சர்க்கார் வழக்கம் போல் 1928 லோ 1929 லோ ஒரு கமிஷனை நியமிக்கப் போகிறார்கள். அந்த கமிஷனில் நமது பார்ப்பனர்களுக்கு மேல் கொண்டு "சீர்த்திருத்தம்" கொடுத்தாலும் சரி, கொடுத்திருப்பதையும் பிடுங்கிக் கொண்டாலும் சரி அதைப் பற்றியெல்லாம் கொஞ்சமும் கவலை யில்லை. எப்படியாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதை ஒழித்து விட்டால் அதுவே பார்ப்பனர்களுக்கு சுயராஜ்யமளித்த மாதிரியாகையால் அதை ஒழிக்கக் கட்சியும், பலத்தையும் சேர்க்கத்தான் இவ்வளவு தந்திரங் களும் சூழ்ச்சிகளும் பணச்செலவும் செய்வதே தவிர வேறில்லை. அதனால் தான் பார்ப்பனர் என்ற கூட்டமே அடியோடு ஆண் பெண் அடங்கலும் கட்சி பேதம், அபிப்பிராய பேதம் இன்றி ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். இதற் காகவே ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியாரும் அடிக்கடி பட்டணம் போவ தும் ஸ்ரீமான் சீநிவாசய்யங்கார் வெற்றிக்காக காத்திருப்பதும் அவர்கள் கூட்டங் களில் பேசுவதும் வகுப்புவாதம் மாத்திரம் கூடாது என்பதும் ஆகிய தந்திரங் களை செய்து வருவதும் ஸ்ரீமான் சீநிவாச சாஸ்திரிகள் வகுப்புவாதம் கூடாது என்பதும் பார்ப்பனரல்லாதாரிலும் மகம்மதியர் களிலும் கிறிஸ்தவர்களிலும் தீண்டாதார் என்னும் வகுப்புகளிலும் கூலி கொடுத்து ஆள்களைப் பிடித்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூடாது என்று சொல்லச் செய்வதும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை அரசியலில் பேசக் கூடாது என்று சொல்லச்



RangaRakes tamilnavarasam.com

செய்வதுமான காரியங்களைச் செய்து வருகிறார்கள். ஆதலால், தமிழ் மக்கள் இது சமயம் ஏமாந்து போகாமல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் அவசியத் தையும், அதற்கெதிரிடையாய்ப் பார்ப்பனர்கள் செய்யும் பிரசாரத்தின் நோக்கத்தையும், பார்ப்பனர்களுக்காக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு விரோதமாய் பார்ப்பனர் அல்லாதார் கூலிப்பிரசாரம் செய்யும் நோக்கத்தை யும், அவர்களுடைய யோக்கியதைகளையும் முன் பின் அபிப்பிராயங்க ளையும் பாமர மக்கள் சரியாக உணரும்படியான பிரசாரங்களைச் செய்து எப்படியாவது அதை அடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையே செய்ய வேண்டி வற்புறுத்து கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 21.11.1926**



# ‘வெற்றிக் கொண்டாட்ட’ விளம்பரம்

வெற்றிக் கொண்டாட்டம் என்னும் பேரால் நமது பார்ப்பனர்கள் தங்களது பார்ப்பனப் பிரசாரங்களை மறுதேர்தல்களுக்கும் கூட சேர்த்து இப்பொழுதிலிருந்தே நடத்த ஆரம்பித்து விட்டார்கள். யாரோ வெகு பேர் கள் இவர்களை உத்தியோகம் ஏற்றுக்கொள்ளும்படியும் மந்திரி சபை களை அமைக்கும்படியும் கேட்டுக்கொண்டது போலவும் வாக்காளர்களுக்குத் தாங்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டி மந்திரி பதவிகளை மறுப்பது போலவும் வேஷம் போடுகிறார்கள். இதைப் பாமர ஜனங்களும் நம்பி “ஆ! ஆ!! நமது பார்ப்பனர்கள் என்ன, சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் என்ன, காங்கிரசுக்காரர்கள் என்ன! ஆகிய ஸ்ரீமான்கள் ஸ்ரீநிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ஏ.ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்கள் எவ்வளவு நாண யக் காரர்கள் மந்திரி உத்தியோகத்தைக் கூட வேண்டாமென்று சொல்லி விட்டார்கள்” என்று இவர்களைப் பாராட்டுவதில் ஏமாந்து போனாலும் போவார்கள். இப்பொழுது ஜயித்தவர்கள் யார்? பார்ப்பனர்களா? சுயராஜ்யக் கட்சியாரா? காங்கிரசுக்காரர்களா? யார் என்று தக்க ஆதாரத்துடன் பதில் சொல்ல யார் தயாராயிருக்கிறார்கள்? கட்சி என்பதற்கு என்ன பொருள்? சுதேசமித்திரனும் இந்துவுமான பார்ப்பனப் பத்திரிகைகள் கலம் கட்டி எழுதி விட்டால் அதுவே முடிவு என்று அர்த்தமா? கட்சியாக மித்திரன் குறித் துள்ள கணக்குப்படி காங்கிரசுக்காரர்கள் என்போர்கள் 47 பேரில் காங்கிரஸ் மெம்பர்கள் எத்தனை பேர்? எது முதல் இவர்கள் காங்கிரஸ்காரர்கள்? என்றைய தினம் கையெழுத் துப் போட்டு சேர்ந்தார்கள்? காங்கிரசில் எந்தக் கொள்கைகளைப் பின்பற்றினார்கள்? மித்திரனும் இந்துவும் கண்ணை மூடிக் கொண்டால் உலகமே கண்ணை மூடிக் கொண்டதாக அருத்தமா? ஸ்ரீமான் சத்தியமூர்த்தி முதல் எந்த பிராமணராவது தங்களை காங்கிரசுக்காரர் என்று சொல்ல அவர்களுக்கு யோக்கியதை இருக்கிறதா? சத்தியமூர்த்தி இந்த 5 வருஷ காலத்தில் என்றைக்காவது ஒரு நாள் காங்கிரஸ் கொள்கைப்படி நடந்ததாகச் சொல்ல முடியுமா? என்றைக்காவது ஒரு நாள் சர்க்காரின் குற்றங்களைப் பற்றி சர்க்காரைக் கண்டித்து பேசியதாகவோ, சர்க்கார் உத்தி ரவுகளை மறுத்ததாகவோ, சர்க்கார் தயவை எதிர்பாராததாகவோ இருந்த தாகச் சொல்ல முடியுமா? அல்லது சர்க்காரிலிருந்து ஏதாவது ஒரு உத்தி யோகம் கிடைப்பதாயிருந்து வேண்டாம் என்று சொன்னதாக யாராவது சொல்ல முடியுமா? அல்லது இன்றைய தினமாவது நமது சர்க்காரால் கொடுக் கப்பட்ட



RangaRakes tamilnavarasam.com

ஏதாவது ஒரு கவுரவ மெம்பர் ஸ்தானம் தான் அடைந்திருக் கவில்லை என்று சொல்ல முடியுமா? மித்திரன் கலத்தில் 'தலைவர்' தலைப்பில் பேர் போட்டவர் யோக்கியதையே இப்படி இருந்தால் மற்றபடி அந்தக் கூட்ட யோக்கியதையைச் சொல்ல வேண்டுமா? அந்த வரிசையில் பட்டம் பெற்றவர்கள் இல்லையா? கவுரவ சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இல்லையா? நேற்று ஒரு கட்சிப் பேர் இன்று ஒரு கட்சிப் பேர் சொன்னவர் கள் இல்லையா? நாளைய தினம் வேறு கட்சிக்குப் போகிறவர்கள் இல்லையா? இவர்கள் எல்லோரும் மித்திரனுக்கு காங்கிரசுக் காரர்கள் என்று எப்படித் தெரியும்? ஸ்ரீமான் வேணாவுடையக் கவுண்டர் காங்கிரசுக்காரரா? ஸ்ரீமான் ராவ் பஹதூர் சி.வி.எஸ். நரசிம்ம ராஜூ காங்கிரஸ் உத்தியோகம் ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் சொன்னதை நம்பி வந்தேன்; இப்போது அவர் பொய் பேசுகிறார்; ஆதலால் நான் சுயராஜ்யக் கட்சியையும் காங்கிரசையும் விட்டுப் போகிறேன் என்று சொல்லிப் போன வர்தானே? ஸ்ரீமான் முத்தையா முதலியார் தனது பிரசார அறிக்கையில் காங்கிரஸ் திட்டத்தையே ஒப்புக் கொள்ளாமலும் காங்கிரஸ் என்கிற வார்த்தையைக் கூட பிரஸ்தாபிக்காமலும் காங்கிரஸ் கொள்கைக்கு விரோத மாகவே நான் சட்டசபையில் அது செய்கிறேன் இது செய்கிறேன் என்று சொல்லி எழுதி ஓட்டு வாங்கினவர்தானே? ஸ்ரீமான் சேதுரத்தினமய்யர் தான் காங்கிரஸ்வாதி என்று சொல்லாமலும் சொல்லுவதற்குப் பயந்து கொண்டும் வேறு பெயரைச் சொல்லிக் கொண்டு அபேக்ஷகராய் நின்றவர் தானே? அதுபோலவே ஜனாப் டாஜூடீனும் தான் சுயராஜ்யக் கட்சியாரோடு சேருவ தில்லை என்று தனது சமூகத்தாருக்கு வாக்கு கொடுத்தவர்தானே? ஸ்ரீமான் கோபால் மேனனுக்கும் காங்கிரசுக்கும் என்ன சம்பந்தம்? அவர் காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொண்டு நின்றாரா? ஸ்ரீமான் யூ.ராமசாமி அய்யருக்கு காங்கிரஸ் என்றால் என்ன என்று தெரியுமா? அவர் காங்கிரஸ் பெயரைச் சொல்லிக்கொண்டு நின்றாரா? இரண்டு ஆடுகள் போட்ட சண்டையின் பலனாக ஒழுகின ரத்தத்தை குடித்து வந்தவர்தானே? இதில் யாரைப்பற்றி எழுதுவது? யாரின் காங்கிரஸ் பக்தியைப் பற்றி வர்ணிப்பது? ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் என்றைக்கு காங்கிரஸ் மெம்பர் ஆனார்? மகாத்மாவிடம் பதினாயிரம் சர்க்கா மதுரையில் சுற்ற வைக்கிறேன் என்றாரே அன்றைக்கா? தேவஸ்தான மசோதா செய்யும்போது பனகால் கூடவே இருந்தாரே அன்றைக்கா? பார்ப்பனரல்லாதார் சார்பாக காங்கிரசின் அக் கிரமங்களை எடுத்துச் சொல்ல சீமைக்குப் போனாரே அன்றைக்கா? அல்லது மதுரைக் கலெக்டரிடம் சட்டசபை அபேக்ஷக விண்ணப்பம் போடும்போது தன்னைக் காங்கிரசுக்காரர் அல்லவென்றும் சுயராஜ்யக் கட்சிகாரர் அல்ல வென்றும் தாம் சுயேச்சை, தாராள கொள்கைக்காரர் என்று வாக்கு மூலம் கொடுத்தாரே அன்றைக்கா? அல்லது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர் கள் மதுரை பிளாட்பாரத்தில் ஸ்ரீமான் துளசிராம் அவர்களை, பனகால் ஒழிந்து விட்டார்; தங்களை நான் மந்திரியாக்கப் போகிறேன் என்று வாக்கு கொடுத் தாரே



அன்றைக்கா? என்றைக்கு என்று மித்திரன் சொல்லக்கூடுமா? உத்தி யோகங்களுக்கு ஆசைப்பட்டு மந்திரி கட்சி என்று பனகாலின் வாலைப் பிடித்துக் கொண்டு திரிந்து உத்தியோகம் பட்டம் பதவிகள் எதிர்பார்த்தபடி கிடைக்காததால் ஏமாந்து போய் மந்திரி கக்ஷியுடன் சண்டைபோட்டுக் கொண்டு வந்த சிலரை தாங்கள் ஆசை வார்த்தைகள் சொல்லி ஏமாற்றி தங்கள் ஆளுகள் என்று பெயர் கொண்டதினாலேயே அவர்கள் காங்கிரசுக் காரர்கள் ஆகிவிடுவார்களா? உத்தியோகம் இல்லை யென்று தெரிந்தால் இவர்களுடன் இருப்பார்களா? உத்தியோகம் கிடைப்பதாயிருந்து ஒப்புக் கொள்வதாகவே இருந்தால் இப்போது வாக்குத்தத்தம் செய்து சேர்ந்திருக் கும் ஆட்களுக்கெல்லாம் உத்தியோகம் கொடுக்க முடியுமா? கொடுக்கா விட்டால் இந்தப் பார்ப்பனர்களை விட்டு மறுபடியும் பனகாலிடம் போய் சேரமாட்டார்களா? மூன்று மந்திரி, மூன்று காரியதரிசி, ஒரு பிரசிடெண்ட் ஆக 7 ஸ்தானங்களை "50 காங்கிரஸ்கார" ருக்கும் "25 சுயேச்சைக்கார" ருக்கும் ஆக 75 பேருக்கு எப்படி பங்கிட்டுக் கொடுக்க முடியும்? அப்படி கொடுப்பதாயிருந்தால் பார்ப்பனர்களுக்கும் கொடுக்க வேண்டாமா? மகம் மதியர்களுக்கும் கொடுக்க வேண்டாமா? கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்க வேண்டாமா? அல்லது இவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்றால் கவர்ன் மெண்டு ஆபீசு கதவடைத்துப் போகுமா?

வெற்றி! வெற்றி! என்று வெள்ளிக் கோலில் அடிபடுவதைத் தவிர தேசத்திற்கோ சமூகத்திற்கோ அல்லது பார்ப்பனரல்லாதாருக்கோ முக்கால் துட்டு லாபமுண்டா? பணங்களை வாரி இறைத்ததுதான் பலன்; தொண்டைக் கிழிய கத்தினதுதான் பலன்; அல்லாமல் சாதிப்பது ஒன்றுமில்லை என்ப தோடு மறுபடியும் பனகால் ராஜ்யத்தை வெற்றிலை பாக்கு வைத்து அழைக் கப் போகிறார்கள் என்பது உறுதி என்றே சொல்வோம். இதுகள் எல்லாம் பொது ஜனங்களுக்குத் தெரியாது என்று நினைத்து கலம் போட்டு 47 பேர்க ளின் பெயர்களை எழுதி விட்டால் ஜஸ்டிஸ் கட்சி செத்துப் போய்விடும். இங்கி லீஷ் அரசாங்கம் மத்தியதரைக் கடலில் மூழ்கிப்போகும், தாங்கள் போய் கை கொடுத்து மறுபடியும் கூட்டி வரலாம், அதன் மூலம் பார்ப்பனர் ஆதிக்கம் நிலைத்துவிடும் என்று நினைத்துக்கொண்டு கனவு கண்டதாகத் தெரிகிறது.

அதைப்பற்றி இங்கு யாருக்கும் கவலையில்லை. இன்னமும் 98 பெயர்களையும் காங்கிரசுக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டு அவர்கள் படத்தையும் போட்டுக் கொண்டாலும் நமக்கு அதைப்பற்றி கவலையில்லை. இப்பொழுது எப்படித் தங்களை சுயராஜ்யக் கட்சிக்காரர் என்று சொல்லிக் கொள்ளவே பயப்படும்படியாக ஆகிவிட்டதோ அது போலவே அடுத்த தேர்தலுக்குள் தங்களை காங்கிரசுக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளவும் 'தேசபக்தர்கள்' என்று சொல்லிக் கொள்ளவும் பயப்படும்படியான காலத்தை இவர்களுடைய 'தேசபக்தி' கொண்டுவரப் போகிறது நமக்குத் தெரியும். ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையை இதுவரையில் யாரும் தப்பு என்று சொல்லி



RangaRakes tamilnavarasam.com

காங்கிரசுக்காரருக்கோ சுயராஜ்யக் கட்சிக்காரருக்கோ ஓட்டு கொடுத்து விடவில்லை என்பதும் நாம் அறிவோம். பாமர மக்களை ஏமாற்றி யதிலும் மகந்துக்களுனுடையவும் மடாதிபதிகளினுடையவும் பணங்காசு செலவு செய்ததிலும் தந்திரத்திலும் வஞ்சகத்திலும் ஓட்டுக் கிடைக்கிறதே அல்லாமல் சர்க்காருக்கு 10 ரூபாய் பூமி கந்தாயம் கொடுக்கும் ஒவ்வொரு ஓட்டரும் தேசத்தின் தத்துவத்தையும் நிற்பவர்களின் யோக்கியதையும் காங்கிரசின் நாணயத்தையும் கவனித்து ஓட்டுக் கொடுத்தார்கள் என்று யாரா வது சொல்ல முடியுமா? என்று கேட்கிறோம். பார்ப்பனப் பத்திரிகைகள்தான் இம்மாதிரி புரட்டுகளைச் செய்கிறது என்று சொன்னால் பார்ப்பனரல்லா தாரால் நடத்தப்படும் சில பத்திரிகைகளும் “ஈ அடித்தான் காப்பி” என்று சொல்வது போல் கொஞ்சமும் முன்பின் யோசிக்காமலும் பகுத்தறிவை உபயோகப் படுத்தாமலும் பார்ப்பனப் பத்திரிகைகளின் கூற்றை அப்படியே எடுத்து காப்பி அடித்திருக்கின்றன. அதோடு மாத்திரமில்லாமல் அவை களையே பின்பற்றி தங்கள் அபிப்பிராயமும் எழுதுகின்றன. இவற்றை நினைக்கும் போது நமது மக்களின் நிலையைக் குறித்து வெட்கப்படாம லிருக்க முடியவில்லை.

ஆதலால் இதுகளுக்குத் தக்க மருந்து, யார் மந்திரியாய் வருவார்கள்? யார் அரசாங்கத்தை நடத்தப் போகிறார்கள்? யார் அரசாங்கத்தை தகர்க்கப் போகிறார்கள்? என்பதல்ல. அதைப்பற்றி கவலையும் வேண்டியதில்லை. எப்படி பாமர மக்களை இக்கொடுமையிலிருந்து தப்புவிக்கிறது என்கிற விசயத்தில்தான் நமது நாட்டினிடமோ சமூகத்தினிடமோ உண்மையான கவலை உள்ளவர்கள் செய்ய வேண்டியது என்பதாகத் தெரிவித்துக் கொள்ளு கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 21.11.1926**



RangaRakes

# பார்ப்பனீயத்தை ஒழித்த கல்யாணங்கள்

சேலம் அடுத்த தாதம்பட்டி என்னும் கிராமத்தில் பல்ஜிய நாயுடு வகுப்பைச் சேர்ந்த வீடுகளில் மூன்று கல்யாணங்கள் வெகு விமரிசையாய் நடந்தன. அம்மூன்று கல்யாணங்களுக்கும் பார்ப்பன புரோகிதர்கள் இல்லாமல் பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே முகூர்த்தம் செய்விக்கப் பட்டது. இவைகளில் ஒரு கல்யாண வீட்டுக்காரருக்கு மாத்திரம் ஆரம்பத் தில் நாம் ஏன் இதை முதன் முதலாகச் செய்ய வேண்டும், மற்றும் யாராவது செய்த பிறகு நாம் செய்யலாம் என்கிற எண்ணம் மனதுக்குள்ளாக இருந் திருக்கிறது. அதற்கேற்றாப் போல் அவர் ஒரு பார்ப்பனப் புரோகிதரையும் தருவித்து விட்டார். ஆனால் மற்ற இரண்டு கல்யாண வீட்டுக்காரரும் தைரியமாய்ச் செய்ய ஆரம்பித்த பிறகும் ஈரோட்டிலிருந்து கல்யாணத்திற்கு வந்திருந்த ஸ்ரீமான்களான அ.கோவிந்த நாயக்கர், வெ. முத்து நாயக்கர், ரா. துரைசாமி நாயக்கர், வெ. எல்ல நாயக்கர், எ.எல்ல நாயக்கர், கே. ராமசாமி நாயக்கர், ஈ.வெ. ராமசாமி நாயக்கர் முதலிய இன்னும் பல கனவான்கள் சொன்ன பிறகும் தான் தருவித்த பார்ப்பனப் புரோகிதருக்கு ஏதோ பணம் கொடுத்தனுப்பி விட்டு அவரும் பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே தனது வீட்டு முகூர்த்தத் தையும் நடத்திக் கொண்டார்.

ஆகவே, இந்த மூன்று கல்யாணங்களும் எவ்வித சடங்குக்கும் பார்ப்பன சம்பந்தமில்லாமலே இனிது நிறைவேறிற்று. அதோடு அங்கு வந்தி ருந்த மற்ற பந்து மித்திரர்களும் தங்கள் தங்கள் வீட்டு சுபா சுபகாரியங்களை யும் இனி பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே செய்து கொள்வது என்னும் அபிப்பிராயத்தையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த வகுப்பார் பார்ப்பனீயத்தை நீக்கி கல்யாணம் செய்த கௌரவம் சேலம் தாதம்பட்டிக்கே கிடைத்ததோடு மற்றவர்களுக்கும் வழி காட்டின பெருமையும் அவர்களுக்கு கிடைத்ததைப் பற்றி நாம் மிகுதியும் மகிழ்ச்சி அடைகிறோம். அதோடு இதற்கு முக்கியமாய் நின்று வேலை செய்த ஸ்ரீமான்கள் எல்ல நாயக்கர், கே. ராமசாமி நாயக்கர் முதலிய கனவான் களையும் பாராட்டுகிறோம்

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 21.11.1926**



tamilnavarasam.com

# பிள்ளை வரத்திற்குப் போய்ப் புருஷனைப் பறி கொடுப்பதா?

## கொள்கைக்காக மந்திரி பதவியா? மந்திரி பதவிக்காக கொள்கையா?

பணகால் ராஜா அவர்கள் மந்திரி பதவிகளை பங்கிட்டுக் கொள்ளும் விஷயத்தில் சட்டசபை சம்பந்தப்பட்ட வரையில் 'ஜஸ்டிஸ் கட்சி' அல்லது பிராமணரல்லாதார் என்கிற கட்சிப் பெயரைக் கூட விட்டுவிட்டு அதற்கு வேறு பெயர் வைத்துக் கொள்ள சம்மதித்ததாக 'மித்திரன்' முதலிய பத்திரிகைகளில் காணப்படுகிறது. ''செருப்புக்காகக் காலா? காலுக்காகச் செருப்பா?'' என்னும் பழமொழி போல் கட்சிக்காக மந்திரியா, மந்திரிக்காக கட்சியா? மந்திரி உத்தியோ கத்திற்காக கட்சியின் பெயரை மாற்றிக்கொள்ள சம்மதித்த பணகால் ராஜாவின் நிலைமையை யாரும் கண்டிக்காமலிருக்க முடியாது. சட்டசபையில் பணகால் அரசர், தானும் தனது கட்சியாரும் பார்ப் பனரல்லாதார் கட்சிப் பிரதிநிதி என்பதை மாற்றிக் கொள்வார்களேயானால் சட்டசபையைப் பொறுத்த வரையில் வேறு யாருடைய பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ள அருகதையுடையவர்கள் ஆவார்கள். டாக்டர் நாயரவர் களும் சர். தியாகராய செட்டியாரவர்களும் எந்த சமயத்திலும் தங்களுடைய கட்சிப் பெயரையோ கொள்கையையோ ஒரு கடுகளவு மாற்றிக் கொள்வ தற்கும் எப்பேர்ப்பட்ட நெருக்கடியான சந்தர்ப்பத்திலும் சிறிதும் சம்மதித்த வர்களல்லர். அந்த உறுதி அவர் களிடத்தில் இருந்ததினாலேயே பார்ப்பன ரல்லாதார்களுக்கே ஒரு அந்தஸ்து இருந்து வந்திருக்கிறது. அவர்கள் காலத்தில் நடந்த இரண்டு தேர்தல்களிலும் பூரண வெற்றி பெற்று மந்திரி களை நியமிக்கும் யோக்கியதைகளையும் அடைந்திருந்தார்கள். அவர்கள் காலமான பிறகு அது போல் உறுதியும் நேர்மையுமில்லாத தலைவர்கள் மூலம் அக்கட்சி நடைபெற வேண்டியிருந்தபடியால் பார்ப்பனர்கள் சூழ்ச்சி இக்கட்சியை வெகு சுலபத்தில் கலைக்கத் தைரியம் கொண்டு விட்டது. ஒரு சிறு மாறுதல் ஏற்பட்ட காரணத்தினாலேயே ஒரு நெருக்கடி யான சமயத்தை சமாளிக்க முடியாமல் கட்சியின் பெயரை விட்டு விட சம்மதித்தது கொஞ்ச மாவது சுயமரியாதையுள்ளவர்களும் சுயநலமற்றவர்களும் செய்யும் காரியமென்று சொல்ல முடியாது. பணகால் அரசர் உண்மையிலேயே உறுதியும்



சுயமரியாதையும் உள்ளவராகயிருந்தால், கவர்னர் பிரபு தன்னை அழைக்காமல் வேறு ஒருவரை அழைத்து, மந்திரி சபையை அமைக்கும் படி கேட்டதன் பின் கண்டிப்பாய் மந்திரி விஷயத்தைப் பற்றி எந்த விதத்திலும் கலந்து கொள்ளாமலிருப்பதே அறிவுடைமையும் சுயமரியாதை யுமாகும். எப்பொழுது கவர்னர் பிரபு தன்னைக் கூப்பிடவில்லையோ அப்போழுதே தான் தலைமை வகித்து நடத்தும் கட்சியாகிய பார்ப்பன ரல்லாதார் கட்சி சிறுபான்மைக் கட்சி என்றோ தோல்வியடைந்த கட்சி என்றோ கவர்னர் பிரபு நினைத்து விட்டாரென்பது அர்த்தமா அல்லவா? அப்படி அவர் நினைத்த பிறகு அம்மந்திரி பதவியை எந்த வழியிலாவது ஏற்பது மானமுடைமை யாகுமா? கவர்னரே மறுபடியும் பனகால் அரசரைக் கூப்பிடுவதாயிருந்தாலும் மாட்டேன் என்று சொல்லிவிட்டு சட்டசபைக்கு வெளியில் இருந்து கொண்டு தீவிரப்பிரசாரம் செய்து தங்கள் கட்சியார் சிறுபான்மையோரா பெரும் பான்மையோரா என்பதை கவர்னர் அறியும் படிச் செய்வதும் சர்க்காரின் யோக்கியதையையும் பார்ப்பனர்களின் சூழ்ச்சி யையும் பொது மக்கள் அறியும்படி செய்வதும் முக்கியக் கடமையாகும். அப்படிக்கில்லாமல், கக்ஷி, மந்திரிசபை நியமிக்க முயற்சி செய்வதிலோ அல்லது மற்றவர்கள் முயற்சி செய்தால் அதில் தானும் அல்லது தனது கட்சியாரும் ஒன்றிரண்டு மந்திரி ஸ்தானத்தை ஒப்புக் கொள்வதிலோ கவலை செலுத்துவார்களேயானால் அடுத்த மூன்று வருஷத்திற்குப் பார்ப்பனரல்லாதார் கட்சியும் அவர்களது கொள்கையும் ஸ்தம்பிக்கப்பட்டுப் போய்விடும் என்றே எச்சரிக்கை செய்வோம். ஜஸ்டிஸ் கட்சி அடுத்த மூன்று வருஷ காலத்துக்கு மந்திரி பதவி விஷயத்தில் சம்பந்தப்படாமலிருந்து விடுமேயானால் பொது மக்கள் அக் கட்சியின் கொள்கையை முன்னிலும் பதின் மடங்கு வேகத்தோடு ஈடேற்றி வைப்பதற்குத் தானாகவே முன் வருவார்கள். அரசாங்கத்தாரும் ஒருவர் பேரில் ஒருவரை தூண்டிவிட்டு வேடிக்கைப் பார்க்கும் தன்மையிலிருந்தும் கொஞ்சம் மாறுவார்கள். அடுத்து வரப்போகும் மூன்று வருஷ காலத்துக் குள்ளாக மந்திரி பதவி இல்லாவிட்டால் பார்ப்பனரல்லாதார்கள் அடியோடு ஒழிந்து போய் விடுவார்களா? ஜஸ்டிஸ் கட்சியும் மந்திரி பதவி இல்லா விட்டால் செத்துப் போக வேண்டியதுதானா? ஒரு மயிர் உதிர்ந்து போனால் கவரிமான் வாழா தென்பார்கள். அப்படிப்போல் ஒரு மந்திரி பதவி போய் விட்டால் ஜஸ்டிஸ் கட்சி வாழ முடியாதா? மந்திரி பதவிக்காகவா இக்கட்சி ஏற்பட்டது? அப்படியானால் அது ஒழிந்து போக வேண்டியதுதான்; அப்படிக் கில்லாமல் பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதைக்காக ஏற்படும் கட்சியா யிருக்குமானால் அது மந்திரி சபையை மறந்து வெளியில் வந்து ஆண்மை யுடன் போராட வேண்டியதுதானேயொழிய கட்சிப் பெயரை மாற்றியாவது பதவி பெற நினைப்பது சுயமரியாதைக்காகப் பாடுபடும் தலைவர்களின் கடமை அல்லவென்றே சொல்லுவோம். சட்டசபையின் மூலமும் மந்திரி பதவியின் மூலமும் நாட்டுக்கு ஒரு பலனும் ஏற்பட்டு விடாதென்பதை நாம் பல தடவை சொல்லியிருக்கிறோம். ஆறு வருஷ காலம் இப்பதவியை



RangaRakes tamilnavarasam.com

அநுபவித்தவர்களும் பெரும்பாலும் இதே அபிப்பிராயத்தை சொல்லி யிருக்கிறார்கள். அன்றியும் பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதையின் எல்லை முழுவதும் சட்டசபையின் மூலம் அடைந்து விடலாம் என்பதும் பகற் கனவேயாகும். நமது சுயமரியாதையின் எதிரிகளால் ஏற்படும் சூழ்ச்சி களில் ஒரு சிறிது ஒழிக்க முடியுமானாலும் இச்சிறு நன்மைக்காக கட்சியின் பேரையே பலி கொடுப்பது பிள்ளை வரத்திற்குப் போய் புருஷனைப் பறிகொடுத்ததற் கொப்பாகுமே தவிர வேறல்ல. தவிரவும் ஏதாவதொரு கட்சிக்குத் தலைவர்களாயிருப்பவர்களுக்கு ஏதாவதொரு பதவியோ அதிகாரமோ கிடைக்கக் கூடிய சந்தர்ப்ப மேற்பட்டாலே அக்கட்சிக்கு முடிவு காலமென்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் அதிகார பதவி களிலிருப்பவர்கள் ஒருக்காலும் யோக்கியமாய் நடந்து கொள்ள முடியவே முடியாது. அவ்வதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், கட்சி சேர்க்கவும் அநேக அயோக்கியத்தனமான காரியங்கள் செய்ய வேண்டியதோடு மற்ற வர்கள் செய்யும் அக்கிரமங்களையும் நாணயக் குறைவுகளையும் அநு மதிக்க வேண்டியும் வரும். ஆதலால் நிவர்த்தி இல்லாத சமயங்களில் மாத்தி ரம் ஏதோ பதவிகளை ஏற்றுக் கொள்ளலாமே தவிர மற்றபடி பதவிகளை வகிப்பது கட்சிக்கு ஆபத்தாகவே முடியும். பணகால் அரசர் சென்ற மூன்று வருஷங்களாக மந்திரி பதவியில்லாமல் வெளியிலிருந்திருப்பாரானால் ஜஸ்டிஸ் கட்சியின் நிலைமை தேர்தலில் வேறு மாதிரியாயிருந்திருக்கு மென்று உறுதியாய் சொல்லுவோம். சர்.தியாகராய பெருமானுக்கிருந்த மதிப் பெல்லாம் அவர் வெளியிலிருந்ததினால்தானே யொழிய மந்திரியா யிருந்த தினாலல்ல. ஆதலால் என்ன வரினும் கட்சியையும் கட்சிப் பெயரை யும் விட்டுக் கொடுக்காமலும் தலைவர்களாயிருப்பவர்கள் பதவிகளில் பிரவே சிக்காமலும் இருப்பதே கட்சியைக் காப்பாற்றுவதாகும். தவிரவும் மந்திரி பதவியை ஏற்பவர்கள் வாங்கும் சம்பளங்கள் ஒரு குறிப்பிட்ட சிறு தொகை தவிர மற்றவை கட்சிப் பிரசாரத்திற்கே ஒப்படைக்கப்பட வேண்டும். அது முடியாதாயின் மந்திரியின் சம்பளத்தை வருஷம் ஒன்றுக்கு பதினாயிரம் ரூபாய்களுக்குள்ளாகவே நிர்ணயிக்க வேண்டும். அப்பொழுது தான் பதவிகளுக்கு இத்தனை ஆத்திரங்களும் பதவியிலிருப்பவர்கள் மேல் இவ்வளவு பொறாமைகளும் விரோதிகளும் ஏற்படமுடியாது. பதவிகளை ஏற்ற பிறகும் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ள இவ்வளவு அக்கிரமங் களும் செய்ய வேண்டி வராது. அரசியலிலானாலும் சுயமரியாதையிலானா லும் கட்சி நலத்துக்கென்று சட்டசபைக்கு நிற்பவர்கள் மிகவும் அருமையா கவே இருக்கிறார்கள். ஏறக்குறைய இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சுமார் நூறு பேர்க ளிலும் 2 அல்லது 3 பேராவது கட்சியையோ தேசத் தையோ சமூகத்தையோ சுயமரியாதையையோ லட்சியம் செய்து சட்ட சபைக்கு வந்தார்களென்று யாராவது சொல்ல முடியுமா? அப்படி இருந்தால் கவர்னர் பிரபு வாலழைக்கப்பட்ட ஸ்ரீமான் நரசிம்ம ராஜு அவர்கள் மூன்று மாதத்தில் ஆறு கட்சி மாறியிருப்பாரா? பனகால் அரசர் கட்சிப் பெயரை மாற்றச்



சம்மதிப்பாரா? ஸ்ரீமான் ஐயங்காரவர்கள் பதினாயிரக்கணக்கான புரட்டுப் பேசியிருப்பாரா? ஸ்ரீமான் ஆச்சாரியாரவர்கள் ஆயிரத்தெட்டு சூழ்ச்சிகள் செய்வாரா? கட்சித் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர் களின் நிலைமையே இப்படியிருந்தால் மற்றபடி வாலர்களின் யோக்கியதை யைப்பற்றி எழுத ஆரம்பித்தால் அது படிப்பதற்கே அருவருக்கத்தக்கதாகு மென்றே நினைக்கிறோம். ஆதலால் ஜஸ்டிஸ் கட்சி என்பதோ பார்ப்பன ரல்லாதார் கட்சி என்பதோ மக்களுக்குப் பயன் அளிக்க வேண்டுமானால் இம்மாதிரி நிலைமைகளிலும் இம்மாதிரி தலைவர்களிடமும் சிக்கி அல்லல் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதோடு நமது சுயமரியாதைக்கு எதிரிகளான பார்ப்பனர்களும் மற்றவர்களும் தேர்தல் முடிவுகளைக் கூறிக் கொண்டு ஜஸ்டிஸ் கட்சி மாண்டு விட்டது; பார்ப்பனரல்லாதார் கட்சி செத்தது; வகுப்புத் துவேஷக் கட்சியை பொது ஜனங்கள் விரும்பவில்லை என்று பசப்பி ஓலமிட்டுத் திரிவதற்கு அநுகூலமாக நடந்து கொள்ளாமல் மன உறுதியுடனும் சுயமரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும். கட்சி என்று சொல்லுவ தெல்லாம் அதிலுள்ள கொள்கைகளுடையவும் திட்டங் களுடையவும் மதிப்பைப் பொறுத்ததே ஒழிய ஆள்களின் மதிப்பையும் ஆள் கூட்டத்தின் எண்ணிக்கையையும் பொறுத்தது அல்ல. ஆதலால், கொள்கையையும் உறுதியையும் கடைப்பிடித்த சிலரையாவது கொண்டு பார்ப்பனரல்லாதார் கட்சி கட்டுப்பாடாய் வேலை செய்யாத பக்ஷம் அடுத்த மூன்று வருஷத்திற்குள் கண்டிப்பாய் இருக்குமிடம் தெரியாமல் மறைந்து விடுமென்றே கவலையுடன் எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 28.11.1926**



RangaRakes

tamilnavarasam.com

# டாக்டர் வரதராஜுலு நாயுடு

டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் 'மந்திரிசபை' என்னும் தலைப்பிட்டு தமிழ்நாடு பத்திரிகையில் எழுதி இருக்கும் வியாசம் பாமர மக்களை குழப்பமடையச் செய்யக் கூடியதாயிருப்பதால் நிலைமையைத் தெளிவு படுத்த வேண்டி அவ்வியாசத்தின் போக்கைப் பற்றிச் சிறிது ஆராய வேண்டியிருக்கிறது. டாக்டர் நாயுடுகாரு வியாசத்தில் குறிப்பிட்டிருக்கும் சில முக்கிய விஷயங்களை இதில் குறிப்பிடுகிறோம். "ஸ்ரீ வில்லிபுத்தூர் மகாநாட்டில் நான் வேண்டிக் கொண்டபடியும், தேசீய சங்கத்தின் அறிக் கைப் படியும் சுயராஜ்யக் கட்சிக்கோ ஜஸ்டிஸ் கட்சிக்கோ பெரும்பான்மை யான ஸ்தானங்கள் கிடைக்கமுடியாமல் செய்து விட்டதைக் கண்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்" என்று எழுதியிருக்கிறார். இதில் கடுகளவு உண்மை யாவதிருக்கிறதா? டாக்டர் நாயுடுகாரு கணக்குப் படிக்கே சுயராஜ் யக் கட்சிக்கு 46 ஸ்தானங்கள் என்று போட்டிருக்கிறார். ஒட்டு மொத்தம் தொண்ணூற்றாறு என்றும் போட்டிருக்கிறார். இவர்களில் கட்சி இல்லாத ஐரோப்பியர்களை நீக்கிவிட்டால், டாக்டர் கணக்குப்படியே சுயராஜ்யக் கட்சிக்காரர் மெஜாரிட்டி யாகி இருக்கிறார்கள் என்பதை நாயுடுகாரு ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அப்படி இருக்க தனது வார்த்தையை தேசத்தார் கேட்டு அதன்படி நடந்தார்கள் என்று பெருமை பாராட்டிக் கொள்வதில் எவ்வளவு அசட்டுத் தனம் இருக்கிறது என்பது அறிஞர்களுக்குத் தெரியா மல் போகாது. இதனால் டாக்டர் நாயுடுகாரு அடையும் பெருமையைப் பற்றி நமக்கு சந்தோஷமே ஆனாலும், பாமர மக்களை இது ஏமாற்றுகிறதே என்கிற விஷயத்தில் உண்மையை வெளிப்படுத்தாமல் இருக்கக் கூட வில்லை. முதலாவது நாயுடுகாரு ஸ்ரீ வில்லிபுத்தூரிலும் தேசீய அறிக்கை யிலும் யோக்கியர்களுக்கு ஓட்டுச் செய்யுங்கள் என்று வெளிப்படுத்தினாரே அல்லாமல் ஒரு கட்சியும் மெஜாரிட்டியாராக வராமல் இருக்கும்படி ஓட்டுச் செய்யுங்கள் என்று சொல்லவும் இல்லை. இந்நிலைமையில் டாக்டர் எக்கட்சியைத் தனக்கு பிடித்த யோக்கியமானவர்கள் என்கிறார்? ஜனங்கள் எக்கட்சியை அயோக்கியமானவர்கள் என்று தள்ளிவிட்டதாகச் சொல்லு கிறார்? பெரும்பான்மையானவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டதாய் நாயுடுகாரே சொல்லும் கட்சியான சுயராஜ்யக் கட்சியை நாயுடுகாரே பிராமணக் கட்சி என்கிறார். அல்லாமலும் அது கட்டுப்பாடாக பிராமணரல்லாதாருக்கு விரோதமாய்ப் பிரசாரம் செய்வதின் பலனாய் ஜாதித் துவேஷம் வளருவதோடு தேசீய வாழ்க்கைக்கும் ஆபத்து ஏற்பட்டு வருகிறது என்றும் தனது தனி தேசீய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். அப்படி இருக்க அக்கட்சியை பெரும்பான்மையாய் தெரிந்தெடுப்பதாய் நாயுடுகாரே ஒப்புக் கொண்டிருக் கையில் நாயுடுகாரு வார்த்தையை தேசம் மதித்ததாக பெருமை பாராட்டிக் கொள்ள இடமெங்கே? தவிர ஜஸ்டிஸ் கட்சி தோல்வியைப் பார்த்து பலர் அதிலிருந்து விலகி சுயேச்சைக் கட்சியில் சேர்ந்திருப்பதாகவும், சுயராஜ்யக் கட்சி வெற்றியைப் பார்த்து சுயேச்சைக் கட்சியார் சிலர் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்திருப்பதாகவும் சொல்லுகிறார். இதனாலும் நாயுடுகார் சொல்லியபடி ஜனங்கள் 'தக்க யோக்கியர்களை' பெருவாரியாகவும் தெரிந்தெடுத்ததாக அவரே ஒப்புக் கொள்ளவும் முடியாது. தவிர "ராஜீய விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளை நான் எப்போதும் ஆதரித்தது கிடையாது. ஜஸ்டிஸ் கட்சியை விட சுயராஜ்யக் கட்சியே சிலாக்கியமானது என்று பல தடவை சொல்லியிருப்பது போலவே இப்போதும் ஜஸ்டிஸ் கட்சி மந்திரி சபை அமைப்பதைவிட சுயராஜ்யக் கட்சி அமைப்பதே சிலாக்கியமானது என்று நினைக்கிறேன்" என்று சொல்லுகிறார். இதிலும் கொஞ்சமாவது யோக்கியப் பொறுப்பு இருக்கிறதா என்பதை வாசகர்களே உணர வேண்டும். தோற்றுப் போனதாகச் சொல்லும் கட்சியை குறை சொல்லுவதற்கு நாயுடு காரைப் போன்றவர்களே வேண்டுமென்பதில்லை. தெருவில் போகும் பிச்சைக் காரன்கூட தாராளமாய்ச் சொல்லிவிடலாம். பொறுப்புள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நாயுடுகாரைப் போன்றவர்கள் காரணம் காட்டி இரண்டிற்குமுள்ள தாரதன்மையையும் காட்டிச் சொன்னால் அது அழகாயும் கண்ணியமாயுமிருக்கும். டாக்டர் நாயுடுகாரவர்களே மற்றொரு சமயத்தில் **"சுயராஜ்யக் கட்சி பிராமணக் கட்சி, அடுத்த தேர்தலில் அது வெற்றி பெற்றால் பிராமணரல்லாதாரு டைய கதி அதோகதியாய்ப் போய்விடும் என்பது நமது பலமான நம்பிக்கை"** என்று சொல்லி இருக்கிறார். அல்லாமலும் சுயராஜ்யக் கட்சியால் தேசீய வாழ்க்கைக்கு ஆபத்தேற்பட்டு வருகிறது. கட்டுப்பாடாக பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் பிரசாரம் செய்து வருகிறது. அது வெற்றி பெற்றால் பிராமணரல்லாதாருடைய கதி அதோகதியாய்ப் போய் விடும் என்று சொல்லியும் எழுதியும் இருக்கும் டாக்டர் நாயுடுகாரு அவர்கள் இப்போது "சுயராஜ்யக் கட்சி மற்றெல்லா வற்றையும் விட மேலானது. அக்கட்சி மந்திரி சபை அமைப்பதே சிலாக்கிய மானது" என்று சொல்லுவதானால் டாக்டர் நாயுடுகாருக்கு தேசீயக் கவலை யாவது பிராமணரல்லாதார் அபிமானமாவது இருக்கிறதாக யாராவது சொல்லமுடியுமா? மறுபடியும் "தேசீய வாழ்க்கைக்கு ஆபத்தானதும் பார்ப்பனரல்லாதார் கதியை அதோகதியாக்கும் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய்க் கட்டுப்பாடாய் வேலை செய்யும் பிராமணக் கட்சியுமான (இவை நாயுடுகாரே சொன்ன வார்த்தைகள்) சுயராஜ்யக் கட்சியார் மந்திரி பதவிகளை ஒப்புக்கொள்ள மறுப்பார்களானால் ஜஸ்டிஸ் கட்சியார் பெற்று விடுவது நிச்சயம். அப்படிச் செய்வது நாட்டிற்கு நன்மை அல்ல" என்று



RangaRakes tamilnavarasam.com

எழுதுகிறார். ஜஸ்டிஸ் கட்சிக்காரர் மந்திரி பதவி ஒப்புக் கொண்டால் சுயராஜ்யக் கட்சிக்காரரைவிட நாட்டிற்கோ தேசீயத்திற்கோ என்ன கெடுதி வந்து விடும் என்று நாயுடுகாரு பயப்படுகிறார் என்பதும், சுயராஜ்யக் கட்சியாரால் என்ன நன்மை எதிர்பார்க்கிறார் என்பதும் விளங்கவில்லை. தவிர சுயராஜ்யக் கட்சியார் மந்திரி சபை அமைக்க மறுப்பார்களானால் முன்னால் சட்டசபை பஹிஷ்காரத்தால் ஏற்பட்ட கெடுதல் வந்து சேரு மென்று எச்சரிக்கை செய்கிறேன் என்று எழுதுகிறார். சட்டசபை பஹிஷ் காரத்தால் என்ன கெடுதி ஏற்பட்டது? சென்ற மூன்று வருஷமாக சட்டசபை ஏற்பினால் என்ன நன்மை விளைந்தது? டாக்டர் நாயுடுகாரு சட்டசபை பஹிஷ்காரத்திற்கு பிரசாரம் செய்தாரா இல்லையா? சட்டசபையில் பலனில்லை என்று சொன்னாரா இல்லையா? தவிர, "தான் சுயராஜ்யக் கட்சிக் காரரல்லவானாலும் மகாத்மா காந்தி எப்படி சுயராஜ்யக் கட்சிக்காரரல்லாத காங்கிரசுக்காரரோ, அது போன்ற காங்கிரசுக்காரர்" என்று தனது நிலையை விளக்கியிருக்கிறார். அப்படியானால் மகாத்மா சட்டசபைக்குப் போய் சுயராஜ்யக் கட்சியை (நாயுடுகாரு கொள்கையில்) மந்திரி பதவிகளை ஒப்புக் கொள்ளச் சொன்னாரா? ஆதலால் நாட்டிற்கு என்ன கெடுதி? எப்படி நேரிடும் என்று பயப்படுகிறார் என்பது வாசகர்கள்தான் கண்டுபிடிக்க வேண் டியதாயிருக்கிறது. தவிர "மந்திரிசபையை அமைக்கும்படி சத்தியமூர்த்தி யைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று எழுதியிருக்கிறார். மந்திரிசபை அமைக்க சத்தியமூர்த்திக்கு என்ன பாத்தியமிருக்கிறது என்று கருதினாரோ தெரியவில்லை. சட்டசபையில் சுயராஜ்யக்கட்சித் தலைவரா? அல்லது பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்கிற பொது மக்களால் தெரிந் தெடுக்கப் பட்டவரா? அல்லது கவர்னரால் கூப்பிட்டுக் கேட்கப்பட்டவரா? எந்த முறையில் அவர் மந்திரிசபை அமைக்க வேண்டியவர்? எந்த முறை யில் நாயுடுகார் கட்டளை இட வேண்டியவர்? என்பது வாசகர்கள்தான் உணர வேண்டும். தவிர "சுயராஜ்யக் கட்சியார் தேவஸ்தான சட்டத்தை எதிர்ப்பார் களே; பிராமணரல்லாதாருக்கு விரோதம் செய்வார்களே என்று சிலர் பயப் படலாம். சுயேச்சைவாதிகள் பலமில்லாமல் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. சுயேச்சைவாதிகளில் ஒன்று இரண்டு பேரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் பிராமணரல்லாதார். ஆகையால் தேவஸ்தானச் சட்டத்தைத் தொலைக்கவோ பிராமணீயத்திற்காக வேலை செய்யவோ சுயராஜ்யக் கட்சியார்களால் ஒரு நாளும் முடியாது" என்று சொல்லுகிறார். அப்படியா னால் சுயராஜ்யக் கட்சியார் எல்லோரும் பார்ப்பனர்களா? நாயுடுகாரு கணக்குப்படி வெள்ளைக்காரர்களை நீக்கி 13 பேர்கள்தான் சுயேச்சைக் கட்சியிலிருப்பதாய் ஏற்படுகிறது. இந்த பதின்மூன்று பேர்களில் சில பார்ப்பனர்களை நீக்கிவிட்டால் 10 பேர்தான் ஆகிறது. நாயுடுகார் கணக்குப் படிக்குள்ள ஜஸ்டிஸ் கட்சி 28 பேரும் சுயேச்சை 10 பேரும் சேர்ந்தாலும் சுயராஜ்யக் கட்சியை வெல்ல முடியாத மைனாரிட்டியில் தானே இருக்கிறது. அப்படிக்கு இருக்க தேவஸ்தான சட்டத்தை ஒழிக்கவோ பிராமணீயத்திற்கு





வேலை செய்யவோ ஒரு நாளும் முடியாது என்று எந்தக் கணக்கில் சொல்லு கிறார் என்பதும் வாசகர்கள்தான் உணர வேண்டும். இது தவிர "சுயராஜ்யக் கட்சியார் தேவஸ்தானச் சட்டத்தை எதிர்க்காமல் இருந்தால் பெரும்பான்மை யான ஸ்தானத்தைப் பெற்று இருக்கலாம். இப்பொழுதாவது சுயராஜ்யக் கட்சிக்கு புத்தி வந்திருக்குமென்று நம்புகிறேன்" என்று சொல்லுகிறார். அப்படியானால் தேவஸ்தானச் சட்டத்தைக் கொண்டு வந்து ஆதரித்தவர்கள் பெரும்பான்மையாய் வந்திருக்கிறார்கள் என்று நாயுடுகாரு கருதுகிறாரா? என்பதையும் வாசகர்கள்தான் முடிவு கட்ட வேண்டும். தவிர, "மேலும் ஜஸ்டிஸ் கட்சியைவிட நமது மாகாணத்தில் ராஜீய விஷயத்தில் சிலாக்கிய மானது சுயராஜ்யக் கட்சியை விட வேறில்லை என்று தான் நான் சொல்லுகிறேனே ஒழிய அதில் சேர்ந்திருப்பவர்கள் அனைவரும் பரிபூரண யோக்கியர்கள் என்று நான் சொல்ல வரவில்லை" என்கிறார். தேசீய வாழ்விற்கு ஆபத்தை விளைவிக்கிறவர்களாகவும் பார்ப்பனரல்லாதார் கதியை அதோகதியாக்கக் கூடியவர்கள் என்றும் நாயுடுகாராலேயே ஒப்புக் கொள்ளப் பட்டவர்கள் எப்படி ராஜீய விஷயத்தில் சிலாக்கியமானவர்கள் என்று நாயுடு காரு எப்படி கருதுகிறார் என்பதும் நமக்கும் விளங்கவில்லை. தவிர "1929 ம் வருஷத்தில் அதிக சுதந்திரங்கள் கொடுப்பதைப் பற்றி யோசிக்க ராயல் கமிஷன் நியமிக்கப்படுமாகையால் அச்சபையில் தேசாபி மானமுள்ள மந்திரி சபையிருப்பதுதான் நாட்டிற்கு நன்மையாகுமாதலால் இதை சுயராஜ்யக் கட்சியார் யோசிக்க வேண்டுமென்று" அவர்களைக் கெஞ்சுகிறார். ராயல் கமிஷனில் நாயுடுகாரே ஒப்புக்கொள்ளும் பார்ப்பனக் கட்சியாகிய சுயராஜ்யக் கட்சியால் நாட்டிற்கு என்ன நன்மை விளையும். பார்ப்பனீயத்தை வளர்க்க வந்த சுயராஜ்யக் கட்சியால் நாட்டிற்கு என்ன நன்மை எதிர்பார்க்கிறார் என்பதும் விளங்கவில்லை. தவிர, "ராமநாதபுரம் ராஜா மந்திரிசபை அமைக்க சுயராஜ்யக் கட்சியார் உதவி செய்யவேண்டும்" என்று பிரார்த்திக்கிறார். ராஜா அவர்களின் தேசீயக்கொள்கை என்ன? ஒத்துழையாமையா? ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கையில் எதற்கு மாறுபட்டவர்? சுயராஜ்யக் கட்சிக் கொள்கையில் எதை ஒப்புக் கொண்டவர்? ராஜா அவர் களிடம் எவ்விதமான தேசீயக் கொள்கைகளைக் கண்டு நாயுடுகாரு மயங்கு கிறார் என்பதும் நமக்கு விளங்கவில்லை.

இம்மாதிரி இன்னமும் என்ன என்னமோ எழுதி இருக்கிறார். அவற்றை எல்லாம் ஒரே சமயத்தில் ஆராய்வது முடியாத காரியம். இவரைப் போலவே ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப் அவர்களும் பலவிதமாக எழுதி இருக் கிறார். மற்றும் பல ஒத்துழையாதார் என்போர்களும் என்ன என்னமோ பேசியிருக்கிறார்கள். ஆகவே இவர்கள் நாட்டின் பெரிய நெருக்கடியும் கலாட்டாவும் ஏற்படுகிற சமயத்தில் பொதுமக்கள் தங்களை மறந்துவிட்டால் என்ன செய்கிறது என்று ஏதாவது எழுதுவதன் மூலம் தலையைக் காட்டிக் கொள்வதில் நமக்கு ஆக்ஷேபனை இல்லை. ஆனால் வஞ்சகர்களாலும் சூழ்ச்சிக்காரர்களாலும் ஏற்கனவே ஏமாந்து கிடக்கும் நமது பாமர ஜனங்கள் இவ்வித அர்த்தமற்றதும்

RangaRakes tamilnavarasam.com

சமயத்திற்குத் தக்கதுமான விஷயங்களால் எவ்வ ளவு தூரம் இன்னமும் ஏமாற்றப்படுவார்கள் என்பதைப் பற்றித் தான் நாம் கவலைப்பட்டு விளக்கவேண்டி இருக்கிறதே தவிர வேறில்லை. முதலாவது ஸ்ரீமான்கள் நாயுடுகாரும் ஜார்ஜ் ஜோசப்பும் இப்போது ஏற்பட்ட வெற்றி யையும் தோல்வியையும் நமது நாட்டின் உண்மையான பிரதிநிதித்துவம் என்றும் நாணயமான காரியங்களால் ஏற்பட்ட வெற்றி தோல்வியென்றும் மனப் பூர்த்தி யாய் ஒப்புக்கொள்ளுகிறார்களா? மந்திரி பதவிகளைப் பற்றி இவர்களுக்கு ஏன் இவ்வளவு கவலை? சட்டசபை உபயோகமற்றது என்றும் மந்திரிகளுக்கு சுயேச்சை அதிகாரமில்லை என்றும், அரசியல் கொள்கை களோ, கட்சிகளோ, வகுப்புக் கொள்கைகளோ, கட்சிகளோ நாட்டின் நன் மைக்கு உற்றதாக இல்லையென்றும் சொல்லி வருகிறவர்கள், விலகினவர் கள், நீயே வா, நீயே வா, நீ எடுத்துக்கொள் மந்திரி பதவியை; நீ எடுத்துக் கொள் பதவி அமைப்பை என்று சொல்லுவதில் என்ன நியாயமும் பொறுப் பும் இருக்கிறது? உண்மையில் இவர்களுக்குப் பொறுப்போ நாட்டினிடம் பக்தியோ இருக்கு மானால் “இப்போதைய நிலைமையில் ஜனப் பொறுப்பாட்சிக்கு தக்க திட்டங்கள் ஒன்றும் அரசியலில் இல்லை; ஜனப் பொறுப்பாட்சியை வகித்து நடத்தத்தக்க கட்சியோ மக்கள் செல்வாக்கிலும் இல்லை; ஆதலால் மந்திரி சபை வேண்டியதில்லை. மந்திரிசபையின் மூலம் சர்க்காரார் மக்களை ஏமாற்றித் தங்கள் ஆதிக்கத்தை செலுத்தும்படி விடக்கூடாது; தேசீயக் கவலை உள்ளவர்கள் யாரும் பதவியை ஒப்புக்கொள்ளாமல் ‘ஜஸ் டிஸ் கட்சியும்’ அரசாங்க அடிமைக் கட்சியும் சர்க்காரும் சேர்ந்து அமைக் கப் போகும் மந்திரிசபையை எதிர்த்து ‘வங்காளம்’, ‘மத்திய மாகாணம்’ போல் மந்திரி களை ஒழிக்க வேண்டும்” என்று சொல்வார்களானால் ஏதோ வார்த்தை அளவிலாவது சீர்திருத்தத்தை வெறுக்கிறோம் என்றாவது காட்டிக் கொள்ள இடமுண்டாகும். பாமர ஜனங்களுக்கும் ‘தேசீயத்தில்’ கவலையுண்டாகும். அதை விட்டு விட்டு நாக்கில் தண்ணீர் சொட்டிக் கொண்டு “நீ ஒப்புக் கொள், நீ ஒப்புக் கொள்” என்று சொல்லுவதின் அருத்த மென்ன? சுயராஜ்யக் கட்சியார் மந்திரி பதவியை ஒப்புக்கொண்டால் ‘தேசீயம்’ வளர்ந்து விடுமா? “வகுப்புத் துவேஷம்” ஒழிந்துவிடுமா? “வகுப்புக் குறைகள்” நீங்கி விடுமா? என்பது நமக்கு விளங்கவில்லை. இவைகளை யெல்லாம் நினைக்கும் போது நமது நாட்டின் விடுதலைக்கும் மக்களின் சுயமரியாதைக்கும் நாளுக்கு நாள் எதிரிகளும் தடைகளும் அதிகமாய்க் கொண்டு வருகிறது என்று எண்ண வேண்டியிருக்கிறதே தவிர அநுகூலம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறதென்று சொல்லுவதற்கே இடம் இல்லையென்றே வருந்துகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 28.11.1926**



# இனி என்ன செய்யவேண்டும்?

சென்னை மாகாண நிர்வாகத்திற்கு புதிய மந்திரிகள் நியமன மாய்விட்டது. அதாவது, **ஸ்ரீமான்கள் டாக்டர்** P. **சுப்பராயன்,** A. **ரங்கநாத முதலியார்,** R.N. **ஆரோக்கியசாமி முதலியார்** ஆகிய மூன்று கனவான்கள் நியமனம் பெற்றுவிட்டார்கள். இவர்களுள் முறையே ஒருவர் ஜமீன்தார். ஒருவர் பிரம்மஞான சங்கத்தார். ஒருவர் சர்க்கார் பென்ஷன் உத்தியோ கஸ்தர்.

ஆனபோதிலும் இவர்கள் தங்களுக்கு என்று யாதொரு தனி கொள்கையும், இயக்கமும் இல்லாதவர்களாகையால் தனித்தனியாக சமயம் போல் அவர்களுக்குத் தோன்றியபடி நிர்வாகத்தை நடத்திக் கொண்டு போவார்கள் என்றேதான் நாம் நினைக்க வேண்டும். அதோடு மந்திரிகள் மூவரும் பார்ப்பனரல்லாதார்கள்தான் என்று சொல்வதாயிருந்தாலும் தங்கள் தங்கள் காலிலேயே நிற்கத்தகுந்த பொதுஜன ஆதரவோ, கட்சி பலமோ, கொள்கை பலமோ இல்லாதவர்கள். ஆதலால் நமது முன்னேற்றத்தின் எதிரிகளான பார்ப்பனர்களின் தயவில்லாமல் அரை நிமிஷமும் உயிர்வாழ முடியாதவர்கள். ஆனதால் இம்மந்திரி நியமனம் பார்ப்பனர்களுக்கு அனு கூலமே தவிர பார்ப்பனரல்லாதார்களுக்கு ஒன்றும் அனுகூலம் இல்லை யென்றே சொல்லவேண்டும். தேசத்திற்கு மந்திரிகளால் நன்மையோ தீமை யோ ஏற்படக்கூடும் என்று ஒருபொழுதும் நாம் எண்ணியதும் கூறியதும் இல்லை. ஆதலால் தேச முன்னேற்றத்திற்கு இவர்களிடமிருந்து நாம் ஒன்றும் எதிர்பார்க்கவில்லை. நிற்க, இனி ஜஸ்டிஸ் கட்சி என்ன செய்யப் போகிறது. அடுத்த தேர்தல் வரையில் அதாவது இன்னும் மூன்று வருஷ காலத்திற்கு மந்திரி பதவி காலமாய் விட்டதற்கு துக்கம் கொண்டாடப் போகிறதா அல்லது உருப்படியான ஏதாவது ஒரு பிரசாரத்தை செய்து பார்ப் பன ஆதிக்கத்தை அழித்து பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதையைக் காப்பாற்றப் போகிறதா என்பது தான் நமது கவலை. உண்மையில் மந்திரி பதவி போய் விட்டதால் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு ஒன்றும் தடை ஏற்பட்டு விடவில்லை. தற்கால மந்திரி பதவியால் பார்ப்பனரல்லா தாருக்கு அதிகமான கெடுதி ஏற்பட்டு விடுவதாய் வைத்துக்கொண்டாலும் அது என்னவாயிருக்கக் கூடும். பார்ப்பனரல்லாதாருக்கு சர்க்கார் உத்தியோக மில்லாமல் செய்யக்கூடும். சர்க்கார் உத்தியோகங்களில் இருக்கும் பார்ப்பன ரல்லாதார்



RangaRakes tamilnavarasam.com

பலருக்கு உத்தியோகம் போகக்கூடும். இதற்கு மேல் ஒரு கடுகளவு கெடுதிகூட ஏற்பட கொஞ்சமும் இடமில்லை. இதைத்தவிர வேறு ஒரு கெடுதியும் பார்ப்பனரல்லாதாருக்கு செய்துவிடவும் முடியாது. செய்யவும் அதில் இடமில்லை. இம்மாதிரி மாறுதல் ஏற்பட்ட சமயத்தில் நமது நாட்டு மக்கள் இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்கிற யோசனை யின்பேரில் தலைவர்கள் என்போர்களே எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில் ‘ஜஸ்டிஸ்’ ‘திராவிடன்’ ஆகிய கட்சிப் பத்திரிகைகள் யாதொரு தகவலும் தெரிவிக்காமல் வாய்மூடிக் கொண்டிருப்பதின் இரகசியம் விளங்கவில்லை. இதைக் கவனிக்கும் போது அக்கட்சித் தலைவர்களுக்கு இனியும் மந்திரி பைத்தியம் இருப்பதாகவே எண்ண வேண்டியிருக்கிறது. ஆதலால் இனியும் இது போலவே வாய்மூடிக் கொண்டிருக்காமல் உடனே கோயமுத் தூர், திருச்சி, மதுரை ஆகிய மூன்று இடங்களில் ஏதாவது ஒரு இடத்தில் ஒரு பார்ப்பன ரல்லாதார் மகாநாடு கூட்டி இனியும் தீவிரமான திட்டம் வகுத்து பார்ப்பனர் அடக்கு முறையையும் சூழ்ச்சிகளையும் எதிர்த்து நின்று உடனே வேலை செய்யத் தொடங்கவேண்டும். இல்லையேல் நமது எதிரி கள் “பார்ப்பன ரல்லாதார் கட்சி உத்தியோகக் கட்சி என்பதும் பார்ப்பனரல் லாதார் கட்சி ஒழிந்தது” என்பதும் நிஜம் என்று எண்ண இடமுண்டாகி விடும்.

**குடி அரசு - தலையங்கம் - 05.12.1926**



# “பொய் பொய் முற்றும் பொய்” ஆனால் மெய் மெய் முற்றும் மெய் எங்கே?

ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் தேர்தல்கள் விஷயத்தில் பார்ப்பனரல்லாதார்களுக்கு விரோதமாகவும் பார்ப்பனர்களுக்கு அநுகூலமாகவும் தேசபக்தியைச் சாக்காட்டிக் கொண்டு பிரசாரம் செய்து வந்ததை பல தடவைகளில் நாம் பலமாய்க் கண்டித்திருப்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். கடைசியாக ஸ்ரீமான் A. ராமசாமி முதலியாருக்கு விரோதமாக செங்கல்பட்டு ஜில்லாவில் பாமர மக்களிடையில் போய் சீமையிலுள்ள மனிதர்களுக்கு சராசரி வயது 50 என்றும், நமது நாட்டிலுள்ள மக்களுக்கு சராசரி வயது 25 என்றும், அதற்குக் காரணம் ஜஸ்டிஸ் கட்சியும் A. ராமசாமி முதலியார்தான் என்றும், ஆதலால் அவருக்கு ஓட்டுச் செய்ய வேண்டாம் என்றும் இன்னமும் இதுபோல் பல விஷயங்கள் பேசியதாக பத்திரிகைகளில் பார்த்து கண்டித் தெழுதி இருந்தோம். அதுசமயம் நான் அப்படிப் பேசவில்லை என்றும், பார்ப்பனர்கள் தங்கள் பத்திரிகையில் அப்படி எழுதிக் கொண்டார்கள் என்றும் அவர் சொன்னார். அதற்குப் பிறகு கூட ஸ்ரீமான் சக்கரை செட்டியாருக்கு விரோதமாய்த் தொழிலாளர் சங்கங்களுக்கு ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரை அழைத்துப்போய் அய்யங்கார் அவர்கள் இந்தியா சட்டசபையிலும் காங்கிரசிலும் தொழிலாளர்களுக்கு உதவி செய்ய வேண்டு மென்றும், உதவி செய்வார் என்றும் சிபார்சு செய்தார். அதுசமயம் நாம் கண்டித்தெழுதியிருந்த போதும் ஸ்ரீமான் முதலியார் அவர்கள், நான் அறிமுகம் செய்து வைத்தேனே ஒழிய சிபார்சு செய்யவில்லை என்று எழுதியதோடு “குடி அரசு” இழி மொழிகளை எழுதி இருக்கிற தென்று எழுதியிருந்தார். அதன்பிறகு கொஞ்ச நாள் பொறுத்து ஸ்ரீமான் சக்கரை செட்டியாருக்கு விரோதமாகவே தேர்தலில், ஸ்ரீமான் சீனிவாசய்யங் காரையே ஆதரிக்க வேண்டுமென்று ஸ்ரீமுகமும் அனுப்பினார். இதை “சுதேசமித்திரன்” முதலிய பத்திரிகைகள் பிரசுரித்திருந்ததோடு பார்ப்பனர் கள் அதைத் துண்டுப் பிரசுரங்களாகவும் வழங்கினார்கள். இதைப் பற்றியும் நாம் எழுதினால் இதற்கும் ஏதாவது சமாதானம் சொல்லுவாரென்றே கருதி சும்மாயிருந்தோம். கடைசியாக ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் தேர்தலில் வெற்றிபெற்ற தமது “வீரப்பிரதாபத்தை முழக்கி வெற்றிச்



RangaRakes tamilnavarasam.com

சங்கூதுகையில்" ஸ்ரீமான்களான வரதராஜுலு நாயுடு, கல்யாணசுந்தர முதலியார், ராமசாமி நாயக்கர் முதலிய எத்தனையோ பார்ப்பனரல்லாதார் எதிர்த்தும் வெற்றி பெற்றுவிட்டேன் என்று எழுதி இருந்தார். இதைப் பார்த்ததும் வந்துவிட்டது கோபம் நமது முதலியாருக்கு! எழுந்தார் பேனாக் கோடாலியைப் பிடித்தார்! "பொய் பொய், முற்றும் பொய்" என சத்திய மூர்த்தியைப் பிளந்தார். ஏன்? பார்ப்பனத் தலைவர் நமது சத்தியமூர்த்தி களேயாவர். வஷிஷ்டர் வாயால் பிரம்மரிஷிப் பட்டம் பெற்றால்தான் மற்ற ரிஷிகள் மதிப்பார்கள். அப்படிப் போல ஸ்ரீமான் சத்தியமூர்த்தி வாயால் திரு.முதலியார் அவர்களைப் புகழா விட்டாலும் இகழாமலாவதிருந்தால் தான் பார்ப்பனர்கள் முதலியாரைத் திரும்பியாவது பார்ப்பார்கள். ஆதலால் சத்தியமூர்த்தியைப் பிளக்க வேண்டிய அவசியம் வந்து என்ன எழுதினார் என்றால், தான் தேர்தல் பிரசாரத்தில் கலவாதிருந்தாலும்கூட தேர்தலுக்கு 2 நாள் முன்னதாகக் கூட ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரை ஆதரித்துக் கூறிய உரைகள் பல பத்திரிகைகளில் வெளியாயிற்று. அவ்வுரைகள் துண்டுப் பிரசுரங்களாகவும் விளங்கிற்று........ ஆதலால் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் கூற்று "பொய் பொய் முற்றிலும் பொய்" என்று சாக்ஷி ஆதாரங்களுடன் பிளந்திருக்கிறார். அப்படியானால் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தேர்தலில் கலவாதிருக்கப் போவதாகச் சொன்னதும் சுயராஜ்யக் கட்சியாலும் கட்சித் தலைவர்களாலும் வகுப்புப் பூசலும் வகுப்பு வாதமும் நமது நாட்டில் ஏற் பட்டது என்றதும் அரசியல் சங்கங்களை வளரவிடுவது நாட்டிற்குக் கேடு என்றதும் நம்மவர்களுக்கு விரோதமாகவோ பார்ப்பனர்களுக்கு அனுகூல மாகவோ வேலை செய்யவில்லை என்றதும் மெய் மெய் முற்றும் மெய் என்று சொல்வதற்குச் சாட்சி ஆதாரமெங்கே என்று கேட்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 05.12.1926**



# சங்கரநாராயணர் கோவிலுக்குள் கக்கூசும் மிதியடியும்

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சங்கரன்கோவிலென்னும் சங்கர நாராயணன் கோவிலானது அச்சில்லாவில் உள்ள முக்கிய கோவில்களுள் ஒன்று. அக்கோவிலுக்கு ஏராளமான சொத்துக்கள் வரும்படி உண்டு. லோககுரு என்றும் சங்கராச்சாரியார் சுவாமிகள் என்றும் சொல்லப்பட்ட ஸ்மார்த்தர்களின் குருவானவர் இம்மாதம் அவ்வூருக்கு வந்து அக் கோவி லை தனக்கும் தனது பரிவாரத்திற்கும் ஜாகையாக வைத்துக் கொண்டார். அதோடல்லாமல் "சுவாமிகளின்" திருக் கக்கூசும் அக் கோவிலுக்குள் ளாகவே கட்டப்பட்டு "சுவாமி களின்" திரு மலமும் கோவிலிலேயே சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. அக்கோவில் டிரஸ்டி கனவான்களில் பார்ப்பன ரல்லாதார் அதிகமாய் (மெஜாரிட்டியாய்) இருந்தும் இதை ஆக்ஷேபிக்கத் தைரியமில்லை. ஏனென்றால் அவ்வூர் அதிகாரிகள் எல்லாம் குட்டி சுவாமிகள் குழாங்களாகவே இருக்கின்றன. அதோடு மாத்திரமில்லாமல் "சுவாமிகள்" சங்கரநாராயண சுவாமியை திருக்கண் பார்ப்பதாயிருந்தாலும், திரு மிதியடியை தாங்கிய திரு பாதத்துடனேதான் மூலஸ்தானத்திற்குப் போய்த் திருக்கண் பார்த்தருளினாராம். அதோடு மாத்திரமல்லாமல் "சுவாமிகள்" கோவிலுக்குள் நுழையும் போது திரு மேனாவில் திருப் பள்ளிக்கொண்ட கோலத்துடனேயே சென்றாராம். மாமிக்கோர் மாமியுண் டானால் சுவாமிக் கோர் சுவாமி வேண்டாமா? அதுதான் நமது "லோக குரு" "சங்கராச்சாரியார்" , "சுவாமிகள்" போலும். "சுவாமிகளின்" இந்த வைப வங்களையும், தெய்வத் தன்மையையும் கண்ட திருநெல்வேலி நெல்லையப் பர் சுவாமி கோவில் பக்தர்களும், தர்ம கர்த்தாக்களும் குறைந்த பக்ஷம் நெல்லையப்பர் கோவிலுக்குள் "சுவாமிகளின்" திருக் கக்கூசாவது கட்டப் படாமல் இருக்க வேண்டுமென்று கருதி லக்ஷக்கணக்கான துண்டு விளம் பரங்கள் போட்டும் தர்மகர்த்தாக்களுக்கு நோட்டீசு விட்டும் சத்தியாக் கிரகம் செய்வதாய் பய முறுத்தியும் ஆர்பாட்டம் செய்து "சுவாமிகளின்" திருக் கக்கூசை திருக் கோவிலுக்குள் கட்டாமலிருக்கத் தக்க ஏற்பாடு செய்து விட்டார்கள். இது தவிர, நெல்லையப்பர் சுவாமி கோவிலுக்கு முன்னால் "சங்கராசாரிய சுவாமிகள்" வருகையை முன்னிட்டு போடப்பட்ட அலங் காரப் பந்தல்கள் போட அனுமதித்ததின் பலனாய் அஷ்டமி உற்சவத்தின் போது நெல்லையப்பர் சுவாமி எழுந்தருளுகையில் பந்தல் சமீபம் வந்தவுடன்



RangaRakes tamilnavarasam.com

தாழ்ந்தும் குனிந்தும் வெளியே வரவும் உள்ளே போகவும் ஏற்பட்டது. இதைப் பற்றி பல பக்தர்களுக்கு மனவருத்தமிருந்தாலும் "சங்கராசாரிய சுவாமி"களும் அவரது திருக்கூட்டத்தாரும் இல்லா விட்டால் நெல்லையப் பருக்கு இவ்வளவு மகத்துவமும் இவ்வளவு வேலி நிலமும் இவ்வளவு சொத்துக்களும் சுகங்களும் ஏது? ஆதலால் "சங்கரா சாரிய சுவாமிகளின்" "பந்தலுக்கு நெல்லையப்பர் தாழ்ந்து குனிந்து வணங்க வேண்டியது தான்."

**குடி அரசு - கட்டுரை - 05.12.1926**



# கோவை ஜில்லா சட்டசபைத் தேர்தல் முடிவு

கோயமுத்தூர் ஜில்லா சட்டசபைத் தேர்தல் முடிவு இச்சில்லா வாசிகளில் பெரும்பான்மையான பேர்கள் மாத்திரமில்லாமல் வெளி ஜில்லா மக்களும் மிகுந்த ஏமாற்றத்தையும் வருத்தத்தையுமே அடைந்தார்கள் என்பதாகவே அறிகிறோம். என்னவெனில் ஸ்ரீமான் வெங்கிட்டரமணய் யங்கார் அவர்கள் 100 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றிபெற்றதும் ஸ்ரீமான் ராமலிங்கஞ் செட்டியார் அவர்கள் 100 ஓட்டு வித்தியாசத்தில் தோல்விய டைந்ததும் கேட்போருக்கு கர்ண கடூரமாயிருந்திருக்குமென்பதில் அதிசய மில்லை. ஆனால் அத்தேர்தலுக்காக ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் செய்த பணச் செலவும் முயற்சியும் ஸ்ரீமான் அய்யங்கார் அவர்கள் செலவு செய்த தில் 10-ல் ஒரு பாகம்கூட இருக்காது. அதாவது ஸ்ரீமான் அய்யங்கார் அவர் களுக்கு 50 ஆயிரம் ரூபாய் செலவாகி இருந்தால் ஸ்ரீமான் செட்டியாருக்கு ரூபாய் ஐயாயிரத்துக்குள்ளாகத்தான் இருக்குமென்பார்கள்.

ஆனபோதிலும் பொது மக்களுக்கு செட்டியாரவர்கள் இடத்தில் ஒருவித மதிப்பு உண்டு. அதாவது சட்டசபை விஷயத்திலும் வரவு செலவு சிக்கன விஷயத்திலும் அநுபோகம் உள்ளவர் என்றும் அவர் மந்திரியாக வரவேண்டும் என்றும் நினைத்து விரும்புவதுண்டு. அப்படிப்பட்டவர்கள் முன்னால் ஸ்ரீமான் செட்டியார் தோல்வியடைந்தால் அது வருத்தப்படுத் தத்தான் செய்யும். ஆனால் இத் தோல்விக்கு அய்யங்கார் ஒரு சிறிதும் காரணரல்லர். பார்ப்பனரல்லாதார் நன்மைக்காக ஏற்பட்ட கட்சியான ஜஸ்டிஸ்கட்சி பிரமுகர்களாலேயே செட்டியார் தோல்விக்கு இடமேற்பட்டு விட்டது. கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்ட் தேர்தல் சம்பந்தமாக ஒரு கூட்டத்தார் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் மீது அதிருப்தி கொள்ள இடமேற்பட்டு விட்டது. அதோடு ஸ்ரீமான் ஐயங்கார் அதன் பயனை அடைய தந்திரங்கள் செய்து அவ்வதிருப்தியைத் தனக்கு அனுகூலமாகத் திருப்பிக் கொண்டார். அந்தக் காரணமே ஸ்ரீமான்கள் செட்டியார் தோல்வி யடையவும் ஐயங்கார் வெற்றி பெறவும் பெரிதும் அனுகூலமாயிருந்து விட்டது. டிஸ்டிரிக் போர்டு எலெக்ஷன் மனஸ்தாபம் குறைந்தது 3000 ஓட்டு களுக்குக் குறையாமல் செட்டியாருக்கு விரோதமாய் பதிவு செய்யவும், குறைந்தது 1500 ஓட்டுகளுக்கு குறையாமல் ஐயங்காருக்கு அனுகூலமாய் பதிவு செய்யவும்



RangaRakes tamilnavarasam.com

இடமேற்பட்டுவிட்டது. டிஸ்டிரிக் போர்டு மனஸ்தாபம் இல்லாமலிருந்தால் செட்டியாருக்கு 17,000 ஓட்டுகள் கிடைத்திருக்கும். ஸ்ரீமான் அய்யங் காருக்கும் 10,000 ஓட்டுகளுக்கு உள்ளாகவேதான் கிடைத்திருக்கும். இந்தக் காரணத்தாலும் திருச்சி நகரத் தொகுதி தேர்தல் மாதிரியினாலும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் என்று பெயர் சொல்லிக் கொண்டு இருந்த சில கனவான் களிடத்தில் அவர்களது "கட்சி பக்திகள்" நன்றாய் விளங்க இடமேற்பட்டு விட்டது. சுயநலங்கள் தோன்றும் போது கட்சி வாதங்கள் பறந்துபோய் விடுகிறது என்பதற்கு இவைகள் ஓர் உதாரணம். நிற்க, ஸ்ரீமான்கள் இரத்தின சபாபதி முதலியார் அவர்களும் பட்டக்காரர் வேணாவுடையாக் கவுண்டர் அவர்களும் வெற்றி பெற்றதில் நமக்கு ஆச்சரியமொன்றுமில்லை. பதிவான ஓட்டுகளில் 100-க்கு 75 ஓட்டுகள் குடி யானவர்களுடையது. அவர்கள் ஸ்ரீமான்கள் முதலியார் அவர்களையும் பட்டக்காரர் அவர்களையும் மனப்பூர்த்தியாய் ஆதரிக்கக் கடமைப்பட்டவர்களே. ஆனால் ஸ்ரீமான் முதலியார் அவர்களுக்கும் பட்டக்காரர் அவர்களுக்கும் வெற்றி ஏற்பட்ட சந்தோஷத் தின் தன்மைக்கு மேலாகவே ஸ்ரீமான் செட்டியார் அவர்களுக்கு தோல்வியானதைக் குறித்து ஏற்பட்ட வருத்தம் அதிகமென்றே சொல்லு வோம். தோற்றவர்கள் பேரில் குற்றம் சொல்வது அதர்மமானதாலும் உண்மை யாகவே நாம் ஒன்றும் சொல்வ தற்குமில்லை. ஆனாலும் பொது ஜனங்களை வசியப் படுத்தத்தக்க படிப்பும் நமது செட்டியார் அவர்களுக்கு இனியும் கொஞ்சம் அதிகமாக வேண்டுமென்று மாத்திரம் சொல்லுவோம். மற்றபடி மற்றவர்கள் வெற்றி பெறுவதற்கும் செட்டியார் அவர்கள் தோல்வியுறுவதற் கும் மதிக்கத் தகுந்த வேறு வித்தியாசமான காரணங்கள் ஒன்றும் கொஞ்சமும் இல்லை என்பதே நமது அபிப்பிராயம். எந்தவிதத்திலும் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் தோல்வியைப் பற்றி பொது ஜனங்கள் வருத்தப் படுகிறார்கள் என்பதையும் செட்டியாருக்கு விரோதமாக வேலை செய்தவர்களில் பெரும் பாலோரும் கூட தாங்கள் நடந்துகொண்டதை குற்றமாக எண்ணி தங்களுக் குள்ளாகவே வருத்தப்படுகிறார்கள் என்பதையும் நாம் நன்றாக அறிகிறோம். இதனால் செட்டியாருக்கு பெருத்த ஏமாற்றம் என்பதையும் தெரிவிக்கிறோம். அதாவது 100 ஓட்டில் அதுவும் தனக்கும் ஸ்ரீமான் அய்யங்காருக்கும் வித்தியாசமாக ஏற்பட்டு தோல்வியடைய நேர்ந்ததும் வெற்றி பெற்றிருந்தால் செட்டியார் அவர்களை முதல் மந்திரியாகவும் மற்ற 2 மந்திரிகளைக்கூட நியமிக்கும் அதிகாரமுடைய வராயிருக்கக் கூடிய உறுதியான சந்தர்ப்பத்தில் தோல்வி ஏற்பட நேர்ந்ததும் அவருடைய எதிரிக்கும் பரிதாபமாக இருக்கு மானால் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் ஏமாற்றமடைந்ததாக நினைப்பதும் வருத்தப்படுவதும் அதிசயமாகுமா? ஆதலால் இதிலிருந்தாவது தோல்வி யடைந்தவர்களும் தோல்வி அடையச் செய்தவர்களும் ஒரு படிப்பினை பெறுவர்கள் என்றே நம்புகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 05.12.1926**



# "மத விஷயத்தில் சர்க்காரைப் பிரவேசிக்கச் செய்யாத பார்ப்பனர்கள்"

## தேவார பாராயணத்திற்கு தடை உத்திரவு ( இஞ்சங்ஷன் )

நமது பார்ப்பனர்கள் தென்காசி கோவிலில் சுவாமியுடனும், தேவாரத் துடனும் ஒத்துழையாமையும் பஹிஷ்காரமும் செய்ய நேர்ந்தது போலவே சங்கரன் கோவிலிலும் செய்ய நேரிட்டுவிட்டால், தங்கள் வரும்படிக்கு ஆபத்து வந்துவிடுமே எனப் பயந்து சங்கரன் கோவில் டிஸ்டிரிக்ட் முனிசீப்பு கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடுத்து தங்களுக்கு பிரசாதம் கொடுக்காததற்கு முந்தி தேவாரம் படிக்கக்கூடாது என்று (இஞ்சங்ஷன்) தடை உத்திரவு வாங்கி விட்டார்களாம். கோவில் அதிகாரிகள் அதை அப்பீல் செய்ய பிரயத்தனப் பட்டுக் கொண்டிருக்கிறார்களாம். "இந்துமத சம்பந்தமான விஷயத்தில் சர்க்காரார் மூலமாய் நமது இந்துக்கள் பணங் காசுக்கு வரவு செலவு கேட்பதுகூட இந்து மதத்தில் சர்க்காரை பிரவேசிக்க விட்டுவிட்டார்கள்" என்று மாய்மாலக் கண்ணீர் விடும் நமது பார்ப்பனர்கள் தேவார பாராயணம் செய்வதை நிறுத்த சர்க்காரிடம் போயிருப்பதும், இந்துக்கள் அல்லாதவர்கள் கூட ஒரு சமயம் இதற்கு தீர்ப்பு எழுதும்படியாகச் செய்வதும், இந்துமதத்தில் சர்க்காரை நுழைய விட்டதல்ல போலும்! ஏன்? பார்ப்பனர் கோர்ட்டுக்கு போனால் மதபக்தி; பார்ப்பனரல்லாதார் கணக்கு கேட்டால் மதத்துரோகம் போலும்!

**குடி அரசு - செய்தி விளக்கம் - 05.12.1926**



RangaRakes tamilnavarasam.com

# சந்தா நேயர்களுக்கு

நமது 'குடி அரசு' பத்திரிகை சரிவரக் கிடைப்பதில்லை யென்று - நூற்றுக்கணக்கான சந்தாதாரர்கள் குறை கூறி அடிக்கடி எழுதிக் கொண்டே வருகிறார்கள். நாங்கள் யாதொரு தடையும் தாமதமுமின்றி கிரமமாய் பத்திரி கைகளை அனுப்பிக் கொண்டுதான் வருகிறோம். நேயர்கள் கூறும் குறை களுக்கு உற்ற காரணங்கள் நமக்கு விளங்கவில்லை.

தயை கூர்ந்து அந்தந்தத் தபாலாபீசுகளின் போஸ்ட் மாஸ்டர்களுக்கு குறை கூறும் நேயர்கள் எழுதிக் கேட்டு எமக்கும் அறிவித்தால் மேலதி காரிகளுக்குத் தெரிவித்து தக்க ஏற்பாடுகள் செய்ய இயலும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

- பத்திராதிபர் -

**குடி அரசு - அறிவிப்பு - 05.12.1926**



# வகுப்பு வாதம் ஒழிந்ததா? அல்லது முன்னிலும் அதிக பலம் பெற்றதா?

## அது பார்ப்பனரிடம் இருக்கிறதா? அல்லது பார்ப்பனரல்லாதாரிடம் இருக்கிறதா?

இவ்வாண்டு நடந்த சட்டசபைத் தேர்தல் மூலம் பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகமே கண்ணை மூடிக் கொள்ளும் என்று நினைத்து பேசுவது போல் நமது பார்ப்பனர்கள் வகுப்பு வாதம் ஒழிந்தது என்று கத்திக் கொண்டு வேஷப்பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் தேர்தல் வகுப்பு வாதத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டே நேரிடையாகவும், மறைமுக மாகவும், சூழ்ச்சியாகவும் நடைபெற்று வந்திருக்கிறது என்பதை பொது ஜனங் கள் அறியமாட்டார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் . அதாவது, இந்தியா சட்டசபைக்கு சென்னை நகரத் தொகுதிக்கு ஒரு ஸ்தானம் உண்டு. அந்த ஒரு ஸ்தானத்திற்கு மூன்று தடவையும் பார்ப்பனர்களே வெற்றி பெற்றிருக்கிறார்கள். மற்ற 23 ஜில்லாக்களுக்கு 9 ஸ்தானங்கள் உண்டு. இந்த 10 ஸ்தானங்களுக்கு 8 பார்ப்பனர்; அதில் 6 அய்யங்கார். அதாவது ஸ்ரீமான்கள் 1.சீநிவாசய்யங்கார், 2. எம்.கே. ஆச் சாரியார், 3. துரைசாமி அய்யங்கார், 4. எ.ரங்கசாமி அய்யங்கார், 5. சேஷய் யங்கார், 6. கே.வி. ரங்கசாமி அய்யங்கார், 7. ஜே. கையாபந்தலு, 8. டி. பிரகாசம் பந்துலு ஆகிய 8 பார்ப்பனர்களும் 2 பார்ப்பனரல்லாதார் அதாவது ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியாரும் மற்றொரு ஆந்திர தேசத்தார் அவர் பார்ப்பனரா அல்லவா என்பது கூட தெரியவில்லை.

ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார் அவர்களும்கூட பார்ப்பனர்களுக்கு அடிமையாயில்லாதிருந்தால் அந்த ஸ்தானமும் மற்றொரு அய்யங்காருக்கு போயிருக்கும் என்பதே உறுதி. இது வகுப்பு வாதமும், வகுப்புச் சலுகையும், வகுப்புப் பிரசாரமும் இல்லாமல் பொது நோக்கில் நடந்ததா? அப்படி யானால் சென்னை மாகாணமாகிய இந்த 24 ஜில்லாக்களிலும் இந்திய சட்டசபைக்கு யோக்கியதையுள்ள பார்ப்பனரல்லாதார் ஸ்ரீமான் சீநிவாசய் யங்காரைத் தலைவர் என்று பிரசாரம் செய்த ஸ்ரீமான் ஆர்.கே ஷண்முகம் செட்டியாரைத் தவிர வேறு ஆள் கிடையாதா? இந்த 8 பார்ப்பன அய்யங் கார்களைத் தவிர தேசாபிமானமும் தேசபக்தியும் உள்ளவர்கள் இல்லையா? இந்த 8 பார்ப்பன



RangaRakes tamilnavarasam.com

அய்யங்கார்களைப் போல் அதாவது, ஒரு பார்ப்பன குழந்தை ஒரு வேளை சாப்பிடுவதை ஒரு பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்து விட்டால் ஒரு மாதம் பட்டினி கிடப்பேன் என்று சொன்ன பார்ப்பனர்களைப்போல் வகுப்பு வித்தியாசமில்லாதவர்கள் இல்லையா? என்று தான் கேட்கிறோம். ஏறக்குறைய இத்தேர்தல்களில் பார்ப்பனரல்லாதார்கள் வேண்டுமானால் வகுப்பு நலத்தையும் வகுப்புவாதத்தையும் மறந்திருக்கிறார்களே ஒழிய எந்தப் பார்ப்பனராவது வகுப்பு வாதத்தை விட்டுக் கொடுத்தாரா? ஒவ்வொரு ஊர் தேர்தலிலும் உதாரணமாக திருநெல்வேலி ஜில்லாவில் நாடார் சகோதரர் ஒருவரை சுயராஜ்யக் கட்சியில் சேர்த்துக் கொண்டு ஒரு பார்ப்பனர் வேலை செய்தாரே, நாடார் கனவானுக்கு பார்ப் பனர்கள் ஓட்டு செய்தார்களா? ஓட்டுப் பிரசாரம் செய்யும் போதே கூட ஜாயிண்டாக நின்ற பார்ப்பனர் நாடார் அபேக்ஷகரை, பிராமணாள் வீட்டுக்குள் நீங்கள் வரக்கூடாது என்று வெளியில் நிறுத்திவிட்டு உள்ளே போய் தனக்கு மாத்திரம் தனி வோட்டு கேட்டுவிட்டு வெளியில் வந்து உங்களுக்கும் போடுவதாய் ஒப்புக் கொண்டார்கள் என்று சொல்லி ஏமாற்றி னார்கள். கடைசியாக முடிவு பார்க்கும் போது பார்ப்பனர் ஓட்டுக்கள் மாத்திரம் பார்ப்பனருக்கும், நாடார் ஓட்டுக்கள் மாத்திரம் நாடாருக்கும் கிடைத்தது. அய்யருக்கு 6000 ஓட்டு, நாடாருக்கு 5000 ஓட்டு. இதுதான் வகுப்புவாதம் புதைக்கப்பட்ட தேர்தல்களாம்! மற்ற இடங் களிலும் பார்ப்பனர்கள் பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாதார் 2 பேருக்குமாக அதாவது, "மீ சொம்மு மா சொம்மு மா சொம்மு மா சொம்மு" உங்கள் சொத்து எங்களு டையது எங்கள் சொத்து எங்களுடையது என்கிற மாதிரியாக நடந்திருக்கிறது. இதிலிருந்து வகுப்பு உணர்ச்சி யாரிடம் இருக்கிறது? இனி யாருக்கு ஏற்பட வேண்டும் என்பதையும் அது ஒழிய வேண்டுமானால் முதலில் யாரிடம் ஒழிய வேண்டும் என்பதையும் யோசித்தால் விளங்காமல் போகாது. அதோடு வகுப்பு வாதம் கூடாது என்று பேசும் சில நாடார் வாலிபர் களையும், ஜஸ்டிஸ் கட்சியார் என்று சொல்லும் பார்ப்பனரல்லா தாரிடம் வகுப்பு வாதம் காரியத்தி லிருக்கிறதா? சுயராஜ்யக் கட்சியார் என்று சொல்லும் பார்ப்பனர்களிடம் வகுப்புவாதம் காரியத்திலிருக்கிறதா? என்ப தையும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருந்தால் தேசத்தின் பேரால் ஸ்தா னம் பெறாமல் சர்க்கார் தயவில் ஸ்தானம் பெற நேரிடுமா? என்பதையும் யோசித்துப் பார்த்து நடுநிலைமையில் இருந்து உண்மை அறிய வேண்டு கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 12.12.1926**



# பார்ப்பனரல்லாதார் மகாநாடு

சென்ற வாரம் "குடி அரசு" தலையங்கத்தில் இனி என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி எழுதி இருந்தோம். அதுபோலவே ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் இம்மாத கடைசி வாரத்தில் மதுரையில் ஒரு பார்ப்பன ரல்லாதார் மகாநாடு கூட்டப் போவதாக அறிந்து சந்தோஷமடைகிறோம். கூட்டுவதில் காங்கிரஸ் மகாநாடுகள் என்ற பெயரால் பார்ப்பனர்கள் கூட்டம் கூடி பொது மக்களை ஏமாற்றி தங்கள் வகுப்பார் ஸ்தல ஸ்தாபனங்களிலும் சட்டசபைகளிலும் ஸ்தானம் பெற சூழ்ச்சிகள் செய்வது போலவும் , சர்க்கார் உத்தியோகம் பெற தந்திரங்கள் செய்வது போலவும் இல்லாமல் நாட்டிற்கும், சிறப்பாக பார்ப்பனரல்லாதாருக்கும் உண்மையான நன்மைகள் ஏற்படும் படியாகவும், பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை காப்பாற்றப்படும் படியாக வும், ஏற்ற கொள்கைகளை வைத்து அதற்கான திட்டங்களை வகுத்து காரியத்தில் நடத்த முயலவேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள்ளு கிறோம்.

## தலைவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்களாவன:-

**மகாநாட்டுக்கு பலவித ராஜிய அபிப்பிராயமுள்ள பார்ப்பனரல் லாதார்களை எல்லாம் அழைக்க வேண்டும். யார் யாருடைய உண்மை யான கூட்டுறவும் ஒத்துழைப்பும் எவ்வளவுக் கெவ்வளவு கிடைக்குமோ அவைகளையெல்லாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.**

**தலைவர்களாயிருப்பவர்கள் பிரசார வேலைகளை ஆறுமாத காலத்திற்காவது தொடர்ந்து முறையாக நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.**

**குறைந்தது 5 லக்ஷ ரூபாயிக்கு குறையாமல் பண்டு சேர்க்க வேண்டும்.**

**தமிழ்நாட்டிலுள்ள பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர்களும், வக்கீல் களும் தங்கள் வரும்படிகளில் ஏதாவது ஒரு பாகத்தை மாதா மாதம் கொடுத்து வரும்படியாக ஏற்பாடு செய்து அவற்றை ஒழுங்காய் வசூலிக்க ஏற்பாடுகளும் செய்யவேண்டும்.**

**மாதம் தோறும் வரவு செலவு கணக்குகள் வெளியாக வேண்டும்.**



RangaRakes tamilnavarasam.com

**ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூக்காவிலும் தக்க கிராமங்களிலும் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை சபைகள் ஏற்பாடு செய்ய வேண்டும்.**

**ஜில்லாக்கள் தோறும் காரியதரிசியையும் பிரசாரகரையும் நியமித்து நமது கொள்கைகளை பரவச் செய்ய வேண்டும்.**

**தமிழ் தினசரி பத்திரிகையை இன்னமும் கொஞ்சம் பலப்படுத்தி குறைந்த பக்ஷம் 10,000 பிரதிகளாவது தமிழ்நாட்டில் உலாவும்படி செய்ய வேண்டும்.**

## கொள்கைகளாவன

**இந்திய மக்கள் சுயமரியாதையையும் சுயராஜ்யத்தையுமடைய முக்கிய சாதனமான கதரை ஒவ்வொருவரும் இன்றியமையாத சாதனமாய்க் கொள்ள வேண்டியதோடு கதரை அணிவது முக்கியக் கடமைகளில் ஒன்றாய்க் கொள்ள வேண்டும்.**

**தீண்டாமையை அடியோடு ஒழிப்பதோடு மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்கின்ற தத்துவத்தை திரிகரண சுத்தியாய் ஒப்புக் கொள்ள வேண்டும்.**

**மது விலக்கு நாட்டிற்கே அவசியமானாலும் சிறப்பாய் பார்ப்பனரல்லாத மக்களுக்கே மிக மிக அவசியமானபடியால் அதை ஒழிக்க வேண்டி யதையும் முக்கியக் கடமையாய்க் கொள்ள வேண்டும்.**

**கோர்ட்டு விவகாரங்களே பார்ப்பனரல்லாத மக்கள் அடிமைத் தன்மைக்கும், குடும்ப அழிவுக்கும், செல்வங்கள் ஒழிவதற்கும் அடிப்படையான ஆதாரமாயிருப்பதால் சகல விவகாரங்களையும் பஞ் சாயத்து மூலமாக பைசல் செய்ய வசதி ஏற்படுத்தி கோர்ட் விவகாரங் களை ஒழிக்க வழி தேட வேண்டும்.**

ஆகிய இக்கொள்கைகளை அடிப்படையாக வைத்து காரியத்தில் கொண்டு வரக்கூடிய அளவுக்கு திட்டங்களை ஏற்படுத்தி பிரசார வேலை செய்ய வேண்டும். இதல்லாமல் உத்தியோகங்களையும் பதவிகளையும் பெறுவது மாத்திரமே, பார்ப்பனரல்லாதார் இயக்கங்களின் கொள்கை என்றும் திட்ட மென்றும் பிறர் நினைக்கும் படியாகவாவது நடந்து கொண்டால் உத்தியோகத்திற்கும் பதவிக்கும் ஆசைப்பட்டவர்கள் போக மற்றவர்கள் இச்சங்கத்தில் சேர மாட்டார்கள் என்பதையும், பதவிக்கும் உத்தியோகத்துக்கும் ஆசைப்பட்டவர்கள் உள்ள சங்கம் ஒரு நாளும் உருப்படாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நாம் அறிந்தபடி இம்மாதக் கடைசியில் மதுரையில் கூட்டப் போகும் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுக்கு (கூடுவதாயிருந்தால்) ஒவ்வொரு ஜில்லா தாலூக்காகிராமங்களிலிருந்தும் ஏராளமான கனவான்கள் வர வேண்டும்.



அசார்சமாயிருக்கக் கூடாது. சர்க்கார் அதிகாரிகள் கூட வருவதில் யாதொரு ஆக்ஷேபணையும் இராது என்றே நினைக்கிறோம். இது ஒரு ( குறிப்பிட்ட சமூக) ஜாதிய மகாநாடே அல்லாமல் ராஜீய மகாநாடு அல்லவென்றே சொல்லுகிறோம். உதாரணமாக பிராமணர் மகாநாடு என்றும் வருணாசிரம தர்ம பரி பாலன மகாநாடு என்றும் ஆரிய தர்ம பரிபாலன மகாநாடு என்றும் பல மகாநாடுகள் பார்ப்பனர்கள் கூட்டுவதில் அநேக உத்தியோகஸ்தர்கள் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். அதுபோலவே மற்ற சமூகத்தார் கூட்டும் சமூக மகாநாடுகளிலும் அந்தந்த சமூகத்தார் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆதலால் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுக்கு வர யாரும் எந்த உத்தியோகஸ்தர்களும் பயப்பட வேண்டியதில்லை. வீணாக நம் உத்தியோகஸ்தர்கள் பயப்படுவதினாலேயே நமது உத்தியோகஸ்தர்களுக்கு பெரும்பாலும் சுயமரியாதை இல்லாமல் போகக்கூட நேரிடுகிறது. ஆகையால் பெருவாரியான ஜனங்கள் ஆஜராகி ஒற்றுமைப்பட்டு நடவடிக்கையில் கலந்து நமது சுயமரியாதைக்கும் முற்போக்குக்குமான காரியத்தைச் செய்ய வேண்டுமாய் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம். இதுபோன்ற சமயம் இனி கிடைக்காது என்பதையும் ஞாபகமூட்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 12.12.1926**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனர்களின் தலைக் கொழுப்பு

தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள், தற்காலம் ஐகோர்ட், நிர்வாக சபை முதலிய ஆதிக்கம் உள்ள பதவிகளிலும் மற்றும் அதிகாரம் உள்ள பதவிகளிலும் வக்கீல் முதலிய செல்வாக்குள்ள பதவிகளிலும் ஏகபோக மாய் அமர்ந்திருப்பதின் மமதையினாலும், பார்ப்பனரல்லாதாரில் சில பதர்கள், வயிற்றுக் கொடுமையாலும் பேராசையினாலும் சுயமரியாதையற்று பார்ப்பனர்கள் பாதம் வருடித் திரிவதினாலும், வேறு பல வழிகளிலும் பார்ப்பன மாய்கையில் பல உணர்ச்சியற்ற ஜமீன்தார் மிராஸ்தார் முதலிய செல்வந்த வாலிபர்கள் அவர்களுக்கு சர்வ சுவாதீனப்பட்டு கிடப்பதாலும், பொதுவாகப் பார்ப்பனரல்லாதார் அறிவீனத்தால் கட்சி, பிரதி கட்சி விவகார வில்லங்கங்கள் முதலியவைகளினால் பார்ப்பனர் களுக்கு அடிமைப் பட்டு கிடப்பதினாலும், பாமர மக்கள் உண்மை நிலையை அறியாதபடி பார்ப்பனர் கள் செய்யும் சூழ்ச்சிப் பிரசாரங்களாலும் சமீப தேர்தல்களில் பார்ப்பனர்கள் தங்களுக்கு வெற்றி கிடைத்ததாய்ச் சொல்லிக் கொள்ளக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டு விட்டது என்பதை யாவரும் ஒப்புக் கொள்ளுவார்கள். இவ்வெற்றி நிலையைத் தாங்க முடியாமல் நமது பார்ப்பனர்கள் தலைக்கு கொழுப்பேறி தலை கால் தெரியாமல் ஆடுவதை நாம் வரிசையாகப் பார்த்து வருகிறோம். உதாரணமாக, இந்த ஒரு மாத காலத்திற்குள் எவ்வளவு அகந்தையும் ஆணவமும் கொண்ட செய்கைகள் பார்ப்பனர்களால் நடத்தப்பட்டிருக் கின்றன என்பதைக் கவனித்தவர்களுக்கு பார்ப்பனர்களின் தலை கொழுப்புத் தன்மை விளங்காமல் போகாது.

## கார்பொரேஷன்

சென்னை கார்பொரேஷனில் கவுன்சிலர்கள் என்கிற பெயர் வைத்துக் கொண்டு கார்பொரேஷனில் நடத்தும் குறும்புத் தனத்திற்கும் அளவே இல்லை. குழந்தை பாதுகாப்பு ஆஸ்பத்திரிக்குச் சென்று, அங்கு அவ்வாஸ் பத்திரியின் தலைவி இல்லை என்பதை அறிந்தும் அங்குள்ள மருத்துவப் பெண்களிடம் அடாபிடியாய் நடந்து கொண்டதும், அருவருக்கத் தகுந்த கேள்விகள் கேட்டு அப்பெண்களைஅவமானப்படுத்தியதும் இவ்வளவும் செய்துவிட்டு பின்னும் அவ்வுதவியற்ற பெண்களை வேலையை விட்டு நீக்க வேண்டுமென்று கொடுமை செய்ததையும் பார்க்கிற போதும் ஸ்ரீமான் கோபதி நாராயணசாமி செட்டியார் என்கின்ற நாயுடு கார்பரேஷன் பிரசி டெண்டாய் வந்து விட்டாரே என்கின்ற ஆத்திரத்தினாலும் தாங்கள் ஆட்டுகிறபடி ஆடக்கூடியவர் வரவில்லையே என்கின்ற ஆத்திரத்தினா லும் கார்பரேஷ னில் நடந்து கொள்ளும் யோக்கியதையும் மீன் கடை, கள்ளுக் கடை, குச்சுக்கார வீதி இதுகளில் நடப்பது போன்ற இழிவான வாக்குவாதங்களும் மானங்கெட்ட வெளியேற்றங்களும் அதிகபிரசிங்கித் தனங்களும் அளவுக்கு மிஞ்சி நடப்பதும் பத்திரிகைகள் தங்கள் வசம் இருக் கின்றன என்கின்ற காரணத்தால் நடந்த விஷயங்களைத் திரித்தும் பொய் களைச் சேர்த்தும் ஜனங்கள் தப்பாய் நம்பும் படியாக பிரசுரித்து வருவதும் மற்றும் காங்கிரஸ் என்னும் பேரால் காலிகளையும், அன்னக் காவடிகளை யும், பேராசைக்கார களிமண் தலைகளையும் சேர்த்துக் கொண்டு அவர்களை விட்டு ஈனத்தன மாய் பார்ப்பனரல்லாத தலைவர்களையும் தொண்டர்களையும் வையும்படி செய்வதும், அடிக்கும்படி செய்வதுமான காரியங்கள் செய்வதும் சகிக்க முடியாததாயுமிருப்பதும் பார்த்து வருகிறோம்.

## ஸ்ரீமான் பக்கிரிசாமிப் பிள்ளை

பொது ஜனங்கள் பணகால் ஆட்சியை மறுக்கிறார்களென்று கட்டி விடுவதற்காக பொது ஜனங்கள் பேரால் தங்களிலேயே சில காலிகளை விட்டு மீட்டிங்கு கூட்டச் செய்து அம் மீட்டிங்குகளில் தாங்களே போய் இருந்து கொண்டு இரணியனைப் போல் தன்னையே தலைவரென்று சொல்ல வேண்டு மென்று "ஸ்ரீநிவாசய்யங்காருக்கு ஜே" என்று சொல்லும்படி கட்டாயப் படுத்தினதும், அப்படிச் சொல்ல மறுத்த ஸ்ரீமான் பக்கிரிசாமி என்கின்ற வாலிபரைப் பிடித்து போக்கிரிகளை விட்டு கடுமையாய் அடிக்கச் செய்ததும், அவர் தான் செத்தாலும் சரியென்று சீனிவாசய்யங்காருக்கு ஜே! சொல்லாமல் அடிபட்டு ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகப் பட்ட தும், தமிழ் மகாநாடு என்கின்ற பெயரால் கோகலே ஹாலில் நடத்தப்பட்ட ஐயங்கார் கூட்டத்திற்குச் சென்றிருந்த ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை அவர் களை அடித்து உதைத்து அவமானப்படுத்தி விட்டால் தமிழ்நாட்டிலுள்ள மற்ற பார்ப்பனரல்லாத வாலிபர்களும் பயந்து பார்ப்பனர்களின் அயோக் கியத் தனத்தை வெளியி லெடுத்துச் சொல்லாமலிருக்கச் செய்துவிடலா மென்கிற எண்ணத்தின் பேரில் அவரை இப் பார்ப்பனர்கள் கூலிகளை விட்டு உபத்திர வித்ததைப் பார்க்கும் போதும் சுத்தமான பார்ப்பனரல்லாதார் ரத்த ஓட்டமுள்ள எந்த மனிதனுடைய ரத்தமும் கொதிக்காமல் இருக்காது.

## ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை

ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை ஆகஸ்டு *மீ* 23 உ யிலேயே 4 அணா சந்தா கொடுத்து காங்கிரஸ் மெம்பராகச் சேர்ந்து 15 223 நெம்பர் ரசீது வாங்கி



RangaRakes tamilnavarasam.com

யிருக்கிறார். ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை உண்மையான சுயராஜ்யத்திற்கு ஒரு நாளும் எதிரியல்ல. ஆனால் பார்ப்பனர் ஆதிக்கம்தான் சுயராஜ்யம் என்று சொல்லப்படும் சுயராஜ்யத்திற்குத் தான் எதிரியாயிருக்கிறார். பார்ப்பன ஆதிக்க சுயராஜ்யத்தின் சூழ்ச்சிகளை தாராளமாய் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார். இதற்காகத்தான் அவரைப் பார்ப்பனர்கள் ஒழிக்கப் பார்க்கி றார்கள். அதற்கு அவர் பயப்படுவதில்லை. ஆதலால் தமிழ்நாடு மகாநாட் டிற்கும் ஒரு பிரதிநிதியாய்ப் போக ஆசைப்பட்டார். பிரதிநிதிப் பத்திரம் பெற்றார். பிரதிநிதிக் கட்டணம் ரூ. 2 ம் செலுத்தினார். காங்கிரஸ் கமிட்டி குமாஸ்தாவிடம் 61 நெ. பிரதிநிதி டிக்கெட்டும் பெற்றார். இதன் பயனாய் தாராளமாய் உள்ளே விடப்பட்டார். உள்ளே போய் தனது சகாக்களிடம் உட்கார்ந்தார். இதைப் பார்த்த பார்ப்பனர்களுக்கு ஆத்திரம் வந்துவிட்டது. ஏனெனில் காங்கிரஸ் என்பதும் கான்பரன்ஸ்கள் என்பதும், நமது நாட்டுப் பார்ப்பனர்கள் தங்கள் தங்கள் தாய் தகப்பன்மார்கள் தங்களது ஆதிக்கத் திற்குத் தேடிவைத்த சொத்துக்களாக நினைத்துக் கொண்டிருப்பதால் தங்கள் குண்டியைத் தாங்கி பூட்ஸைத் துடைத்து காலைக் கழுவிச் சாப்பிட சம் மதித்த ஆள்களைத் தவிர மற்றவர்கள் உள்ளே வரக்கூடாது என்கின்ற ஆணவம் அவர்களுக்கு உண்டு. அதனால் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை யைக் கண்டு ஆத்திரப்பட்டது ஆச்சரியமல்ல.

## வெளியாக்க சூழ்ச்சி

ஆதலால் ஸ்ரீமான் பிள்ளையை வெளியாக்க எண்ணி ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்காரால் பாவலர் என்கின்ற ஒரு பார்ப்பனரல்லாதாரை ஏவி விடப்பட்டது. அவர் முதலாவதாக சட்டப்படி ஸ்ரீமான் பிள்ளை உள்ளே வந்தாரா? அல்லது சட்ட விரோதமாய் வந்தாரா? என்பதைக் கவனிப்ப தற்காக பிரதிநிதி ரிஜிஸ்டரை பரிசோதித்தார்; அதில் 61 –வது நெம்பர் பிரதி நிதியாக பதிவு செய்யப்பட்டு கட்டணமும் வரவு வைக்கப்பட்டிருந்தது. அதின் மேல் ஒன்றும் செய்ய முடியாமல் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரி களை யோசனை கேட்டார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் ஒரு யுக்தி செய்தார். அதென்னவென்றால் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளைக்கு பிரதிநிதி சீட்டுப்பெற பிரதிநிதி சர்டிபிகேட் கொடுத்த தஞ்சை காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியான ஸ்ரீமான் வெங்கிடகிருஷ்ணப்பிள்ளை என்கிற ஒரு பார்ப்பனரல்லாதாரைப் பிடித்து அவ்வுரிமைச் சீட்டை எப்படியாவது ரத்து செய்வித்து ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையின் டிக்கெட்டை மெல்ல ஏமாற்றி வாங்கிக் கொண்டு டிக்கெட்டில்லாமல் வந்தார் என்கிற பெயரை வைத்து வெளியிலனுப்பிவிட தோது சொல்லிக் கொடுத்தார். ஆனால் ஸ்ரீமான் வெங்கிடகிருஷ்ணப்பிள்ளை ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையின் டிக்கெட் டைப் பெற பல வழிகளில் முயன்றும் முடியாததால் ஸ்ரீமான்கள் சத்திய மூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார் முதலியவர்கள் வேறு வழியில் ஸ்ரீமான் பிள்ளையை வெளியாக்க யோசனை செய்ய வேண்டிய தாய் விட்டது.



## மறுநாள் சம்பவம்

இந்த நிலையில் அன்றைய மகாநாட்டின் விஷயம் முடிந்து விட்ட தால் மகாநாடு கலைக்கப்பட்டு விட்டது. ஸ்ரீமான் பிள்ளையவர்கள் அதே டிக்கெட்டைக் கொண்டு மறுநாள் மகாநாட்டிற்கும் சென்றிருக்கிறார். டிக்கெட் பரிசோதகர்கள், ஸ்ரீமான் பிள்ளையின் டிக்கெட்டை பரிசோதித்து மறு நாளும் உள்ளே விட்டிருக்கிறார்கள். அப்படி இருக்க மறுபடியும் முத லாவதாக ஒரு பார்ப்பன வாலண்டியர் ஸ்ரீமான் பிள்ளையின் பக்கத்தில் போய் அவரை வெளியில் போகும்படி சொல்லச் செய்தார்கள். பிள்ளை மறுத்தார். டிக்கெட்டைப் பிடுங்கிக் கொள்ளும் நோக்கத்துடன் டெலிகேட் டிக்கெட்டை காட்டும் படி கேட்டார்கள் . ஸ்ரீமான் பிள்ளை மடியில் வைத்துக் கொண்டு மற்றவர்களையும் பரிசோதித்தால் நானும் காட்டுவேன் என்றார். பிறகு அவரை மேடை மீது உட்காரக் கூடாது என்று சொன்னார்கள். பிள்ளை அலக்ஷியமாயிருக்கவே ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார் ஆகியவர்கள் ஸ்ரீமான் குழந்தை என்கிற ஒரு பார்ப்பன ரல்லாதாரைக் கூப்பிட்டு ஸ்ரீமான் பிள்ளையை வெளியாக்கக் கட்டளை யிட்டார்கள். அவர் பல பார்ப்பனத் தொண்டர்களை அழைத்து வந்து ஸ்ரீமான் பிள்ளையை தூக்கச் சொன்னார். தொண்டர்கள் அடியோடு தூக்கவே ஸ்ரீமான் பிள்ளை மேல் கிளம்பிய நிலையில் சபையோர்களைப் பார்த்து சிரித்துக்கொண்டு பேச ஆரம்பித்தார். இந்த சமயத்தில் ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியார் தன் கைத்தடியால் குத்தினார். உடனே மற்ற பார்ப்பனர் களும் கிளம்பி இவரை வெளியாக்கும்படி சத்தம் போட்டிருக் கிறார்கள். இவ்வளவு பேரையும் உதறித் தள்ளி விட்டு மறுபடியும் கொஞ்சம் முன்னேறி உட்கார்ந்து கொண்டார். இந்த சமயத்தில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் எழுந்து அவனுக்கு இங்கு வேலையில்லை; வெளியில் பிடித்துத் தள்ளுங்கள் என்றும், ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் எழுந்து என்னை வைத வனுக்கு இங்கு என்ன வேலை, வெளியில் தள்ளுங்கள்; முடியா விட்டால் இவன் டெலிகேட் அல்லவென்று சொல்லி விடும் என்று ஸ்ரீமான் ஏ.ரங்க சாமி அய்யங்காருக்கு உத்திரவு போடவும், ஸ்ரீமான் ஏ.ரங்கசாமி அய்யங்கார் எழுந்து “ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை காங்கிரஸ் மெம்பரும் அல்ல டெலிகேட்டும் அல்ல” என்று விளம்பரம் (டிக்ளேர் ) செய்யவும், கூட்டத்தில் இருந்த பார்ப்பனர்கள் “அவனுக்கு (ஸ்ரீமான் பிள்ளைக்கு) ஸ்ரீமான் என்று சொல்லக் கூடாது” என்று கத்தியும் கடைசியாக தங்களால் ஸ்ரீமான் பிள்ளை யை வெளியேற்ற முடியாமல் போனதால் ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்கார் எழுந்து “கீழே விழுந்தும் மீசையில் மண் படவில்லை” என்பது போல் “ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்” என்று சொல்லி தங்கள் பிகுவைக் காப்பாற்றிக் கொண்டார்கள். பின்னர் அக்கிரா சனர் இதைக் கவனித்து ஸ்ரீமான் பிள்ளையைப் பக்கத்தில் அழைத்து விபரங் களைக்



RangaRakes tamilnavarasam.com

கேட்டு அவருக்கு அங்கிருக்க உரிமை உண்டென்று தனது பக்கத் தில் உட்காரச் செய்து கொண்டார். இவ்வளவையும் நடக்கும் போது பார்த்தி ருந்த பார்ப்பனப் பத்திரிகைகள் எல்லாவற்றையும் மறைத்து விட்டு "தண்ட பாணி பிள்ளை திருவிளையாடல்" என்று தலையங்கமிட்டு பொய்யும் புரட்டும் எழுதி இருக்கின்றன.

## ஸ்ரீமான் குழந்தையினிடம் அபயம்

மறுபடியும் ஸ்ரீமான் குழந்தை என்னும் ஒரு பார்ப்பனரல்லாத கிறிஸ்தவர் பேரால் பார்ப்பனப் பத்திரிகைகள் ஒரு கடிதம் பிரசுரித்திருக் கின்றன. இதை குழந்தைகள் கூட நம்ப முடியாது. என்ன வென்றால் ஸ்ரீமான் கள் சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார், ஸ்ரீமான் குழந்தையை அபயமடைந்து அவர் காலுக்குள்புகுந்து "எங்களப்பன் குதிருக்குள் இல்லை" என்பது போல் பார்ப்பனர்கள் இச்சம்பவத்திற்குப் பொறுப்பாளிகள் அல்ல என்று அவர் பேரால் எழுதிக் கொண்டிருக் கிறார்கள்.

அல்லாமலும் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை ஒழுங்கு முறைப்படி பிறப்பிக்கப்படாத டிக்கெட்டுடன் வந்தார் என்றும், தான் தான் அவரைத் தூக்கிச் செல்ல தொண்டர்களை ஏவினதாகவும் அவர் சரியானபடி டிக் கெட்டை வைத்துக் கொண்டிருந்ததாகவும் காங்கிரசுக்கு விரோதியானதா லும், மகாத்மா காந்தியை மோசக்காரர் என்று சொன்னதாலுமே பிள்ளை அங்கு இருக்கக் கூடாதென்று கருதி அம்மாதிரி செய்ததாகவும் வீரமாய் எழுதிவிட்டு இது போலவே மற்றவர்களுக்கும் நடக்கும் என்றும் ஒரு ஸ்ரீமான் குழந்தை யின் பேரால் எழுதியிருக்கிறார்கள். இவைகளையெல் லாம் கவனிக்கும் போது பார்ப்பனர்களுக்கு எவ்வளவு தலை கொழுத்திருக் கிறது? பார்ப்பன ரல்லாதவர்கள் எவ்வளவு சுயமரியாதையற்று இருக்கிறார்கள்? சீர்காழி ஸ்ரீமான் சாமிநாத செட்டியார் தவிர அக்கூட்டத்திலிருந்த பார்ப்பனரல்லாத அம்மாஞ்சிகள் வாயை மூடிக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்றால் இதற்கு எதை சமாதானமாகச் சொல்லுவது. மானம், வெட்கம், சுயமரியாதை என்பது சிலருக்கு தங்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளை கையைப் பிடித்து இழுப்பது தான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் போல் தோன்றுகிறது. இச்சம்பவம் இதற்கு சமானம் அல்ல என்று நினைத்து விட்டார்கள் போல் இருக்கிறது. இப்படிப்பட்ட ஜனங்களையுடைய சமூகம் சுயராஜ்யத்திற்கு லாயக்கா? என்று தான் கேட்கிறோம். சுயமரியாதை இல்லா மல் சுயராஜ்யம் சம்பாதிப்பது சுயமரியாதை அற்றவன் கலியாணம் செய்து கொண்டால் அப் பெண்ணின் கதி என்னவோ அது போல்தான் முடியும். ஆதலால் பார்ப்பன ரல்லாத மக்கள், முதல் முதல் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள முயல வேண்டும் அதிலேயே சுயராஜ்யமிருக்கிறது.

ஆதலால் பார்ப்பனர்களுக்கு குலாமாகவும் கால் வருடிகளாகவும் இருந்து வயிறு வளர்ப்பதை விட மானக் கேடானதும் சுயமரியாதையற்றது மான காரியம் உலகில் வேறொன்றுமில்லை என்பதாக உணர்ந்து ஒவ்வொரு வரும் பார்ப்பனரல்லாத சுயமரியாதைச் சங்கத்தை ஆதரித்து முதலில் சுயமரியாதையை அடைவார்களாக.

**குடி அரசு - கட்டுரை - 12.12.1926**


RangaRakes
tamilnavarasam.com

# தென்காசியில் பார்ப்பனர்கள் ஒத்துழையாமையும் பகிஷ்காரமும் கதவடைப்பும்

தென்காசி சிவன் கோவிலில் பார்ப்பனர்களின் வேத பாராயணத் தைப் போலவே தமிழ் மக்களின் தேவாரப் பாராயணமும் செய்யப்பட வேண்டும் என்பதாகக் கருதி தேவாரப் பாராயணம் ஆன பிறகு பிரசாதம் கொடுக்கப்பட வேண்டும் என்று தேவஸ்தான போர்டாரும் கமிட்டியாரும் தர்மகர்த்தாக் களும் உத்திரவு போட்டதினால் அப்பேர்ப்பட்ட சுவாமி தெரிசனமும் பிரசாதமும் தங்களுக்கு வேண்டியதில்லை என்று சொல்லி அதோடு ஒத்துழையாமையும் பஹிஷ்காரமும் செய்து அவ்வூர் பார்ப்பனர்கள் எல்லாம் ஒன்று கூடி பார்ப்பன ஸ்ரீகள், புருஷர்கள், குழந்தை குட்டிகள் சகிதம் யாரும் அக் கோவிலுக்குப் போகக் கூடாது என்றும், சுவாமியை தரிசிக்கக் கூடாதென்றும் பரிசாரகம் முதலிய வேலையைச் செய்யக் கூடாது என்றும், சுவாமி தங்கள் வீதிக்கு எழுந்தருளி வந்தாலும் ஒவ்வொரு பார்ப்பனரும் வீதி தெருக் கதவை அடைத்துக் கொள்ள வேண்டும் என்றும் தீர்மானம் செய்து கொண்டு அந்தப்படி அமுலிலும் நடத்தி வருகிறார்கள் என்கின்ற விபரம் அறிய மிகவும் சந்தோஷமடைகிறோம். ஏனெனில் பார்ப்பனர்கள் பஹிஷ் காரம் செய்த வேலைகளை ஆதி சைவ குருக்கள் பட்டமார்களைக் கொண்டு கோவிலதிகாரிகள் வேலை வாங்கி வருகிறார்கள். இது போலவே மற்ற ஊர்களிலும் உள்ள பார்ப்பனர்களும் மற்ற கோவில்களோடும் சுவாமிக ளோடும் ஒத்துழை யாமையும் பஹிஷ்காரமும் செய்து விடுவார்களேயானால் நமது தெய்வங் களைப் பிடித்த சனியனும் நமது மதங்களைப் பிடித்த கிரகங்களும் அடி யோடு ஒழிந்து யோக்கியமானதும் உண்மையானதுமாக விளங்கும்.

**குடி அரசு - கட்டுரை - 12.12.1926**



# சுயமரியாதைச் சங்க ஸ்தாபனம்

சகோதரர்களே!

இந்த எனது சுற்றுப் பிரயாணத்தின் நோக்கம் இன்னது என்பதை ‘குடி அரசு’ பத்திரிகையின் மூலம் ஏறக்குறைய ஒரு வருஷ காலமாக தெரியப் படுத்திக்கொண்டு வந்திருக்கிறேன். சென்ற வருஷம் காஞ்சீபுரத்தில் நடந்த தமிழ்நாடு அரசியல் மகாநாட்டிலிருந்தே நமது சுயமரியாதையைக் காப்பாற்ற நமக்கு ஒரு தனி இயக்கம் வேண்டும் என்பதாக பலமுறை பேசி யும் எழுதியும் வந்திருக்கிறேன். அவற்றை நீங்கள் எல்லோரும் ஏகமன தாய் ஒப்புக் கொண்டதாலும் வரவேற்பதாய் தெரிவித்துக் கொண்டதாலும் என்னுடைய அபிப்பிராயம் முன்னிலும் அதிகமாகப் பலப்பட்டது. அதை உத்தேசித்தே தான் உங்கள் விருப்பத்திற்கிணங்கி வந்திருக்கிறேன். இச் சங்கத்தின் நோக்கங்களையும், கொள்கைகளையும் இதற்கு முன் இரண் டொரு சமயங்களில் இவ்விடம் வந்தக்காலத்திலும் சுருக்கமாக எடுத்துச் சொல்லி இருக்கின்றேன். இந்த தேசத்தில் 22 கோடி மக்களுக்கு மேலாக இருக்கும் நாம் வெகு சொற்பமான எண்ணிக்கையுள்ளவர்களால் நாம் எவ்வித பொறுப்பாளிகளல்லாத பிறவி காரணமாய் எவ்வளவு இழிவாயும், தாழ்மையாயும் கருதப்பட்டு விலங்கு, பூச்சி, புழுக்களிலும் கேவலமாய் நடத்தப்படுகிறோம் என்பதை ஒவ்வொருவரும் அறிந்தே இருக்கிறோம். இதைப் போக்கிக் கொள்வதற்காக நமது முன்னோர்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களாக எவ்வளவோ முயற்சித்து வந்திருக்கிறார்கள். நமது இழிவை யும் தாழ்வையும் நீக்கி நமக்கு சுயமரியாதையும் சமத்துவமும் அளிப்பதற் கென்றே கபிலர், புத்தர், ராமானுஜர் போன்ற எவ்வளவோ பெரியார்கள் அவதாரமும் செய்து இதற்காகவே உயிரையும் விட்டார்கள். எவ்வளவு செய்தும் நமது இழிவினாலும் தாழ்மையினாலும் சுயமரியாதையில் லட்சிய மின்மையினாலும் வாழ வேண்டிய இயற்கை நிலை படைத்த நமது எதிரிகள் (பார்ப்பனர்கள்) அவ்வப்போது அதற்குத் தகுந்த சூழ்ச்சிகள் செய்து நம்மில் சிலரையே தங்கள் ஆயுதமாகக் கொண்டு அம் முயற்சிகளையெல்லாம் அழித்துக் கொண்டே வந்திருக்கிறார்கள். எவ்வளவு அழித்தாலும் எவ்வளவு சூழ்ச்சி செய்தாலும் எவ்வளவு தோல்வி ஏற்பட்டாலும் மேலும் மேலும் இவ்விழிந்த தன்மைகளாலான கொடுமையிலிருந்து நீங்க வேண்டும் என்கிற அவா மாத்திரம் நமக்கு நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே வந்ததே அல்லாமல் குறையவே இல்லை. அதோடு, பொதுஜன அபிப்பிராயமும் ஒன்று



RangaRakes tamilnavarasam.com

போலவே இருந்து வருகிறது. ஆதலால் இவ்விழிவுகளை நீக்கி நமது சுயமரியாதையைப் பெறுவதற்கும் காப்பதற்கும் இதுவே தக்க சமயம். இது விஷயத்தில் நாம் எல்லோரும் ஒற்றுமையுடன் கூடி ஒரே அபிப்பிராயமாக இருந்து தீவிர முயற்சி எடுத்து உழைக்க வேண்டும். நமது முயற்சிக்கும் உழைப்புக்கும் பலவித எதிர்ப்புகளும் பழிப்புகளும், பொய் கற்பனை களும், பழிகளும் நமது சுயமரியாதையின் எதிரிகளால் (பார்ப்பனர் களாலும் அவர்களது கூலிகளாலும்) ஏற்படும். அதாவது நம்மிலேயே பலர் அவர் களோடு சேர்ந்துக் கொண்டு தங்களது வாழ்விற்கும் வயிற்றுப் பிழைப்புக் குமாக தேசாபிமானம் என்னும் போர்வையைப் போர்த்திக்கொண்டு நமது இயக்கத்திற்கு கேடு சூழ எதிரிகளுக்கு அனுகூலமாயிருப்பார்கள். இவை களையெல்லாம் நாம் பொருட்படுத்தக் கூடாது. நாம் யாருக்காவது கெடுதி செய்ய நினைக்கிறோமா? யாருடைய கிரமமான உரிமைகளையாவது பறிக்கிறோமா? நமது சுயமரியாதைக்கு பாடுபடுகிறோமேயல்லாமல் மற்ற வர்கள் சுயமரியாதைக்கு நாம் விரோதிகளா யிருக்கிறோமா? நமது வீட்டுப் பொருள் கொள்ளைப் போகாமல் நமது வீட்டுக் கதவை தாழிட்டு பந்தோ பஸ்து செய்தால் நமது பொருளைக் கொள்ளை கொண்டே பிழைக் கக் காத்திருக்கும் திருடர்களுக்கு நாம் கெடுதி செய்தவர்களாவோமா? அவர் களைப் பட்டினி போட்டப் பாவத்திற்காளாவோமா? இதனால் மற்றொருவரை மோசம் செய்து உயிர் வாழ்வது வாழ்வல்லவென்றும் திருடிப் பிழைப்பது ஒரு பிழைப்பல்ல வென்றும் திருடனுக்குத் தோன்றும் படி செய்து அவனைக் கண்ணியமான தனது உழைப்பினால் வாழும்படி தூண்டுவதாகாதா? இதற்காகத் திருடன் நம் பேரில் கோபித்துக் கொண்டால் அதற்கு நாம் என்ன செய்வது? நாம் சுயமரியாதை அடைய வேண்டுமா? வேண்டாமா? நமது இழிவுகளும் தாழ்வுகளும் ஒழிய வேண்டுமா? வேண்டாமா? என்பவை களைத்தான் நாம் கவனிக்க வேண்டுமே ஒழிய அவர் என்ன சொல்லுகிறார் இவர் என்ன எண்ணுகிறார் என்பதைப் பற்றி நாம் அதிக கவனம் செலுத்தக் கூடாது. இப்போது சர்க்கார் சட்ட மெம்பராயிருப்பவரும் தனது சரீரத்தில் ஒவ்வொரு அணுவும் ஒவ்வொரு மூச்சும், பார்ப்பன மயமாயிருப்பவருமான சர்.சி.பி.ராமசாமி அய்யர் என்கிற ஒரு பார்ப்பனரே சென்ற ௵ நாடார் மகாநாட்டில் அக்கிராசனம் வகித்துப் பேசு கையில் குறிப்பிட்டிருப்பதாவது:-

> "ராஜீகத்திலும் வியாபார விவகாரங்களிலும் ஐரோப்பியர்கள் நமக்கு மேலானவர்கள் போல் நடக்கவிடக் கூடாது என்றும் சமத்து வமாகவே நடக்கச் செய்ய வேண்டும் என்றும் இந்தியர்களாகிய நாம் கூறி வருகின்றோம். காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஆரம்ப முதற் கொண்டே இந்த லட்சியத்தை பலவழிகளிலும் எடுத்துரைத்து அமுலுக்குக் கொண்டு வர முயற்சிக்கின்றன. அப்படி இருக்கும் பொழுது அது போலவே தற்செயலாகவோ துர் அதிர்ஷ்ட வசமாக வோ நம்மில் தாழ்ந்தவர்களாக நம்மால் கருதப்பட்டவர்கள் உயர்ந்த வகுப்பார்களுடன் போராடித் தாங்களும் அவர் களுக்குச் சமமான வர்கள் என்பதை நிலை நாட்டிக் கொள்ள முயற்சிக்கின்றனர். இந்தப் போராட்டம் கட்டாயம் நடக்க வேண்டியது தான். இது மிகவும் அவசிய மானதாகும். ஆரம்ப திசையில் ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தின் மீது குரோதம் கொண்டு அதனைத் தாக்கவும் வேண்டி வரும். வழக்கம் என்னும் பெயரால் இருந்து வரும் இம்மாதிரி அநுஷ்டானங்களை மாற்றி தங்கள் தங்கள் உரிமைகளை ஸ்தாபித் துக் கொள்ள முயலும்போது ஒருவருக்கொருவர் மனஸ்தாபங்களும் சச்சரவுகளும் ஏற்படுவது சகஜமே. சமூக சமத்துவங்களுக்கு இந் நிலை இன்றியமையாயது என்பதைத் தீர்க்க திருஷ்டி உள்ளவர்கள் உணர்ந்தே தீருவார்கள்"

என்று பேசியிருக்கிறார். அல்லாமலும் உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்தாரும் ஒவ்வொரு மதத்தாரும் ஒவ்வொரு சமூகத்தாரும் ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் குறைகளை நீக்கிக் கொள்ளவும் முன்னேற்ற மடையவும் தங்கள் தங்கள் தேசத்தின் பெயராலோ, மதத்தின் பெயராலோ, சமூகத்தின் பெயராலோ, வகுப்பின் பெயராலோ ஒவ்வொரு இயக்கங்களை ஏற்பாடு செய்து கொண்டும் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ முன் னேறி ஆதிக்கம் பெற முயற்சித்து வருவதை நாம் பார்த்து வருகிறோம்.

உதாரணமாக ஆசியா, ஐரோப்பா,அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசத்தார் தங்கள் தங்கள் நாட்டின் பேரால் பல இயக்கங்களும் மகம்மது, கிறிஸ்து, புத்தர் முதலிய மதஸ்தர்கள் தங்கள் தங்கள் மதத்தின் பேராலும் அதாவது முஸ்லீம்கள் 'முஸ்லீம் லீக்', 'மஜிலிஸ் உலாமா', 'ஜெமேயதுல் உலாமா' முதலிய சங்கங்களும் எல்லா இந்திய கிறிஸ்தவ சங்கம், புரட்டெஸ் டெண்ட் லீக் முதலிய சங்கங்களும் இருப்பதைப் பார்த்துவருகிறோம். அது போலவே நமது நாட்டில் அரசாங்கத்தாரால் மகம்மதியரல்லாதார் என்றழைக் கப்படும் வகுப்பாராகிய பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக் கொள்ளும் வகுப்பார்களுக்குள்ளும் பொதுவில் என இந்து மகாசபை என்றும், பார்ப்பனர்களால் பிராமண மகாசபை என்றும், ஆரிய தர்ம பரி பாலன சபை என்றும், வர்ணாசிரம தர்ம பரிபாலன சபை என்றும் பல ஸ்தாபனங்களும் ஸ்தாபித்து மகாநாடுகளும் நடத்தப்பட்டு வருவ தையும் அதில் தங்களது உயர்வுகளையும் ஆதிக்கத்தையும் நிலைநிறுத்த கொள்கை களையும் திட்டங்களையும் தீர்மானித்து 'பிராமணன்' முதலிய பல பத்திரிகைகள் மூலம் பிரசாரத்துடன் அமுலில் நடத்தி வருவதையும் பார்த்து வருகிறோம். அவர்களுக்குள் உள் வகுப்பில் ஸ்மார்த்த பிராமணர், வைணவப் பிராமணர், மாத்துவப் பிராமணர், மகாராஷ்டிரப் பிராமணர், சௌராஷ்டிர பிராமணர், விஸ்வ பிராமணர் என சங்கங்களும் ஏற்படுத்தி பிரசாரங்கள் செய்து வருவதையும் பார்த்து வருகிறோம். அதுபோலவே பார்ப்பனரல்லாதார் (திராவிடர், தமிழர்) களுக்குள்ளும் பொதுவில் தென்னிந் திய நல உரிமைச் சங்கம், பார்ப்பனரல்லாத சங்கம் என்னும் ஸ்தாபனங் களை


RangaRakes

tamilnavarasam.com

ஸ்தாபித்து மகாநாடுகள் கூட்டி அதற்கேற்ற கொள்கைகளையும் திட்டங்க ளையும் வகுத்து பிரசங்கங்கள் மூலமாகவும் 'ஜஸ்டிஸ்', 'திராவி டன்' முதலிய பத்திரிகைகள் மூலமாகவும் பிரசாரங்கள் செய்து வருவதையும் சைவ சமய சங்கம், வைணவ சமய சங்கம் என்றும் மற்றும் உள் வகுப்புகள் பேரால் ஆதி திராவிட சங்கமென்றும், சோழிய வேளாள சங்கமென்றும், தொண்டை மண்டல வேளாளர் சங்கமென்றும், கொங்கு வேளாளர் சங்கமென்றும், வன்னிய குல க்ஷத்திரிய சங்கமென்றும், பலிஜ வாரு சங்கமென்றும், கம்மவாரு சங்கமென்றும், பார்க்கவகுல சங்கமென்றும், முத்திரிய சங்கமென் றும், சேனைத்தலைவர் சங்கமென்றும், அருந்ததியர் சங்கமென்றும், மருத்து வர் சங்கமென்றும், குலாலர் சங்க மென்றும், இந்திர குலாதிபர் சங்கமென்றும், ரசபுத்திரர் சங்கமென்றும், தன வைசிய சங்க மென்றும், ஆரிய வைசிய சங்கமென்றும், காசுக்கார செட்டியார்கள் சங்க மென்றும், பன்னிரண்டாம் செட்டியார்கள் சங்கமென்றும், ஐந்நூற்றான் செட்டி யார் சங்கமென்றும், அறுபத்திநாலுமனை செட்டியார் சங்கமென்றும், இருபத்தி நாலு குலச் செட்டியார் சங்கமென்றும், விஸ்வகர்ம சங்கமென்றும், சிவாச்சார்கள் சங்க மென்றும் இன்னும் இதுபோன்ற எத்தனையோ வகுப்பார் சங்கங்களை ஸ்தாபித்துக் கொண்டு தங்களது குறைகளைப் போக்கிக் கொள்ளவும் அன்னியர்களால் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமை களிலிருந்து தப்பிக் கொள்ளவும், தங்களது சுயமரியாதைக்கும் சமத்துவத் திற்கும் தடையா யிருக்கும் சாதனங்களை விலக்கவும் முயற்சித்து வருவதை யும் பார்த்து வருகிறோம். இப்படிச் செய்து வருவதை சில சமயங்களில் மற்றொரு சமூகத் தாருக்கு அதிருப்தியைக் கொடுக்கக் கூடியதாக விருந் தாலும் இருக்கலாம். அதற்காக மற்றவர்கள் மேல் குற்றம் சொல்வதில் பொருள் இல்லை. உதாரணமாக ஆரியர்களாகிய பார்ப்பனர்கள் ஆரிய தர்ம பரிபாலன சபை மூலமாயும் வருணாசிரம தர்ம பரிபாலன சபை மூலமாயும் என்ன கோரு வார்கள்? வருணாசிரம தர்மம் நிலைக்க வேண்டு மென்றும், தாங்கள் உயர்ந்த ஜாதியார்கள் என்றும், மற்றவர்கள் சூத்திரர்கள் (தங்களது வைப்பாட்டி, வேசி மக்கள்) என்றும், பஞ்சமர்கள் (சண்டாளர்கள்) என்றும் உள்ள தர்மம் நிலைத்திருக்க வேண்டு மென்றும், இச் சூத்திரர்களும் பஞ்சமர்களும் வருணாசிரம தர்மத்திற்கு விரோதமாய் சுயமரியாதை அடைய விரும்புவதும் சமத்துவமும் சுதந்திரமும் அடைய விரும்புவதும் தங்களது ஆரிய தர்மத் துக்கு கெடுதி என்றும், வருணாசிரம தர்மமும் ஆரிய தர்மமும் காப்பாற்றப்பட வேண்டுமென்றும், சூத்திரத் தன்மையையும் பஞ்சமத் தன்மையையும் மறைய விடக் கூடாது என்றும், அதை மறைக்கச் செய்ய ஏற்படுத்தப்படும் இயக்கங் களுக்கும் முயற்சிகளுக்கும் விரோதமாயிருந்து பலவித சூழ்ச்சிகளாலும் தந்திரங்களாலும் அவ்வியக்கங்களையும் முயற்சிகளையும் அழிக்க வேண்டும் என்றும் பேசி அதற்கு வேண்டிய தீர்மானங்கள் செய்வார்களே ஒழிய தங்களது வருணாசிரம தர்மங்கள் கெட ஒருக்காலும் சம்மதிக்க மாட்டார்கள். அதுபோலவே மற்ற வகுப்பார்களும் முன்னேறி தங்களது





பிறப்புரிமைகளான சுயமரியாதையையும் சமத்துவத் தையும் வேண்டு மானால் அதற்கெதிராயுள்ள ஆரியதர்மமும் வருணாசிரம தர்மமும் தங்கள் தோலில் ஏறாமலும் அதனால் தங்களுக்கு கெடுதி ஏற்படாமலும் எவ்வளவு தூரம் தடுக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் தடுக்க வேண்டியதுதான். ஆரிய தர்மக் கொள்கைகளும் வருணாசிரம தர்மக் கொள்கைகளும் நமது சுயமரியா தைக்கும் சமத்துவத்திற்கும் எவ்வளவு தூரம் கொடுமை இழைக்கின்றன என்பதை வெளியிலெடுத்துச் சொல்ல வேண்டியது தான். இதனால் ஒருவரையொருவர் துவேஷமென்றோ துரோக மென்றோ சொல்லிக் கொள் வது கொஞ்சமும் பொருந்தாது. ஆனால் செல்வாக்கில்லாதவர்களின் சுயமரியாதைக் கொள்கை செல்வாக்குள்ளவர்களின் சுயநலக் கொள்கைக்கு விரோதமாயிருக்குமானால் அச் செல்வாக்கின் மூலம் செல்வாக்கில்லாதவர் களுக்குப் பல கெடுதிகளும் இடையூறுகளும் ஏற்படுவது சகஜம் தான். உண்மையாக சுயமரியாதைக்கும் சமத்துவத்திற் கும் உழைப்பவர்கள் இவைகளுக்குப் பின்வாங்கக் கூடாது. வருவது வரட்டும் என்று தைரியமாய் தலை கொடுக்க வேண்டும். உதாரணமாக, நமது சுய மரியாதைக்கும், சமத்துவத்திற்கும் என்று கவலை எடுத்து அதில் உள்ள கஷ்டங்களை நாம் வெளியிலெடுத்துச் சொல்ல ஆரம்பித்த உடன் பார்ப்பனர்களால் பிராமணத் துவேஷிகள் என்றும் வகுப்பு வாதக்காரர்கள் என்றும் தேசத் துரோகிகள் என்றும் நாஸ்தீகர்கள் என்றும் குற்றம் சொல்லப்பட்டு விட்டோம். இதையும் நமது பாமர ஜனங்கள் நம்பும்படியாகவும் ஆகிவிடுகிறது. காரணம் என்ன வென்றால் தற்கால அரசியலிலும் வைதீகத்திலும் பார்ப்பனர்களுக்கு செல்வாக்கும் ஆதிக்கமும் இருப்பதுதானே ஒழிய வேறில்லை.

அச் செல்வாக்கும் ஆதிக்கமுமே நமக்கு இவ்வளவு கொடுமைகள் இழைக்க இடம் கொடுக்கிறது. முதலாவது, வகுப்பு வாதமும் வகுப்புத் துவேஷமும் நம்மிடம் எங்கே இருக்கிறது? பிராமணர் - பிராமணரல்லாதார் என்கிற பிரிவினை யாரிடமிருந்து உண்டாயிற்று? கோவில்களிலும், தீர்த்தங்களிலும், நதிகளிலும், பள்ளிக்கூடங்களிலும், வாசம் செய்யும் தெருக் களிலும், ஓட்டல்களிலும், காப்பிக் கடைகளிலும் பிராமணர், சூத்திரர் என்கின்ற பிரிவும் முறையே உயர்வு தாழ்வு என்கிற பாகுபாடுகளும் பார்ப்பனரல்லாதாராகிய நம்மால் ஏற்பட்டதா? அல்லது பார்ப்பனர்களால் ஏற்பட்டதா? என்று யோசித்தால் நம்மை யாராவது வகுப்புத் துவேஷி என்றோ வகுப்புவாதக்காரர் என்றோ சொல்ல முடியுமா? பார்ப்பனர்கள் தங்கள் உயர்வையும் ஆதிக்கத்தையும் உண்டாக்கிக் கொள்வதும் நம்மைத் தாழ்ந்த நிலையிலும் இழிதன்மையிலும் இருக்கும்படி செய்வதும் கொஞ்ச மாவது குற்றம் என்று அவர்கள் நினைப்பதில்லை. ஆனால் நாம் அவர் களால் தாழ்மையாயும் இழிவாயும் கருதப்படாமல் சமத்துவமாக சுயமரியா தையுடன் நடத்தப்பட வேண்டுமென்று நினைப்பது மாத்திரம் குற்றமாய் விடுகிறது. எப்படியெனில்

RangaRakes tamilnavarasam.com

ஆரிய தர்ம பரிபாலனம் வர்ணாசிரம பரிபாலனம் இதனால் தீண்டாமை சூத்திரன் இவைகள் நிலைத்திருப்பது ஆகியவைகள் தெய்வீக இயக்கம், ஆஸ்தீக இயக்கம் என்கிறார்கள். சூத்திரன், தீண் டாமை ஆகியவை ஒழிக்கும் இயக்கம் நாஸ்திக இயக்கம் பிராமணத் துவேஷ இயக்கம் என்று சொல்லுகிறார்கள் .

2. நம்முடன் அவர்கள் பேசுவதும் நம்மை அவர்கள் பார்ப் பதும் அவர்களுக்குப் பாவம், தோஷம் என்கிறார்கள். ஆனால் நாம் அவர்கள் காலில் விழுவதும் சுவாமி என்று கும்பிடுவதும் நமக்கு புண் ணியம் என்கிறார்கள்.

3. நாம் தொட்டதையோ பார்த்ததையோ நமக்குக் கொடுத்த பிறகு அவர்களுக்குக் கொடுப்பதையோ தோஷம் என்கிறார்கள். அவர் கள் எச்சிலையோ கால் கழுவின தண்ணீரையோ நாம் சாப்பிடுவது மோக்ஷம் என்கிறார்கள்.

4. நம்மோடு அவர்கள் பேசும் போது அவர்களதுபூணூலை காதில் சுற்றிக் கொள்வார்கள். (ஏனென்றால் பார்ப்பனர்கள் மல, ஜலம் கழிக்கும் போது அவர்களது சரீரம் அசுத்தமாய் விடுகிறபடியால் அசுத்தப் பட்ட சரீரத்தில் பூணூல் தரித்திருப்பது தோஷம். ஆதலால் காதில் சுற்றிக் கொண்டு இருந்து தேகம் பரிசுத்தமான பின்பு தோளில் போட்டுக் கொள்வார்கள். அது போலவே சூத்திரனாகிய நம்முடன் பேசும்போதும் அவர்களது திரேகம் அசுத்தப்பட்டு போகிறதாம்.)

5. நாம் அவர்களுடன் பேசும் போது வாய் பொத்திக் கொள்ள வேண் டும். ( ஏனென்றால் வாயிலிருந்து வரும் காற்று அவர்கள் மீது பட்டு விடுமாம்.)

இம்மாதிரி ஆயிரக்கணக்கான உதாரணங்களைக் காணலாம். இந் நிலையில் நமது முன்னேற்றத்தின் எதிரிகள் நம்மை வகுப்புத் துவேஷக் காரர்கள் என்றோ நாஸ்தீகர்கள் என்றோ சொல்லுவார்களே என பயந்து நமது ஜீவாதாரமான உரிமைகளை அறியச் செய்ய வேண்டிய கடமைகளில் இருந்து கொஞ்சமும் பின் வாங்கிக் கொள்ளக் கூடாது. அரசியல் விஷயங்களில் நமது தற்கால யோக்கியதை என்ன என்பதைக் கவனித்துப் பாருங்கள். பார்ப்பனர் கள் உத்தியோகம் சம்பாதிப்பதற்காக ஏற்படுத்திக் கொண்ட இயக்கத்தை அவர்கள் தேசீய இயக்கம் என்பதாக பெயரை வைத்துக் கொண்டு நம் பேராலே நமது நாட்டிற்கும் நமது வகுப்பிற்கும் கேடான காரியங்களைச் செய்து அரசாங்கத் தாருக்கு அநுகூலம் செய்து கொடுத்து 1000, 2000, 5000, 7000 ரூபாய்கள் சம்பளமுள்ள உத்தியோகங் களையும் சம்பாதித்துக் கொண்டும் கோர்ட்டுகள் என்றும் பள்ளிக்கூடங்கள் என்றும் அரசாங்கத் திற்கும் தங்களுக்கும் அநுகூலமான ஸ்தானங்களையும் அரசாங்கத்திற்குள் உளவாயிருந்து ஏற்பாடு செய்து கொண்டு அதின் மூல மாய் பிழைத்து



வருகிறார்கள். நாம் ஏதாவது இதுகளில் ஆசைப்பட்டால் நமக்கு யோக்கியதை இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். யோக்கியதை உண்டாக்கிக் கொள்ளலாம் என்று பிரயத்தனப்பட்டால் தேசத் துரோகி, வகுப் புத் துரோகி என்று சொல்லி விடுகிறார்கள். ஆதலால் இவ்வித கஷ்டங்களில் இருந்து வரும் நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் சுயமரியாதையும் விடுதலை யும் ஏற்படவும் நமக்கென்று ஒரு தனி இயக்கம் இருந்துதான் ஆக வேண்டும். அவ்வியக்கத்தில் நாம் எல்லோரும் ஈடுபட்டு ஒற்றுமையாய் உழைக்க வேண்டும்.

*குறிப்பு : நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, மதுரை ஆகிய ஊர்களில் 28.11.1926 முதல் 3.12.1926 வரை ஆற்றிய உரைகளின் சுருக்கம் .*

**குடி அரசு - சொற்பொழிவு - 19.12.1926**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனீய சம்பாஷணை

**– சித்திரபுத்திரன்**

**மணி:** ஏன்டா சேஷா ! நம்ம தலைவர்களான ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி , ரெங்கசாமி அய்யங்கார் , சீனிவாச சாஸ்திரி, சிவசாமி அய்யர், C.P. அய்யர் மற்றுமுள்ள பிராமணோத்தமர்கள் எல்லாம் இந்த எலக்ஷனில் எவ்வளவோ பாடுபட்டு மடாதிபதிகள் மகந்துகள் பணத்தை லட்சக்கணக்காக செலவு செய்து ஜெயித்து விட்டோம், ஜெயித்து விட்டோம் என்று தப்பட்டை அடித்தார்களே, கடைசியில் பார்க்கிறபோது பழையபடி மூன்று சூத்திரர்கள் தானே மந்திரிகளாய் விட்டார்கள். இதில் என்ன நமக்கு லாபம். ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ரெங்கசாமி அய்யங்கார். M.K ஆச்சாரியார், வெங்கிட்ட ரமணய்யங்கார் இவர்களெல்லாம் மந்திரிகளாய் வருவார்கள் என்றல்லவா நாம் எல்லோரும் எவ்வளவோ பாடுபட்டோம். கணக்கு, மணியக்காரர், காப்பிக் கடை, பஞ்சாங்கம், புரோகிதம், வக்கீல் குமாஸ்தா, வக்கீல், முனிசீப், ஜட்ஜ், நிர்வாக சபை எல்லாம் பாடுபட்டும் பழையபடி சூத்திர ராஜாங்கம்தானே ஆகிவிட்டது.

**சேஷன்:** மணி! நீ என்ன பெரிய முட்டாளாயிருக்கிறாயே. நமக்கு எவ்வளவு பெரிய வெற்றி தெரியுமா? இந்தப் பணகால் ராஜாவை ஒழிச்சமே அது ஒன்றே போதுமே.

**மணி:** பணகால் என்ன அவ்வளவு மோசமான ஆசாமியா?

**சேஷன் :** அட பயித்தியமே! நம்ம கூட்டத்திற்கே இந்த ஆள் பெரிய எமனாக வல்லவா 6 வருஷமாய் வந்து உட்கார்ந்துக் கொண்டு பிராமணாள் வாயில் நிரந்தரமாய் மண்ணை போடத்தக்க மாதிரி எவ்வளவோ வேலை செய்து சூத்திரர்களை யெல்லாம் கை தூக்கி விட்டார். நீயே நன்றாய் கவனித்துப் பார். பணகால் மந்திரியானபிறகு, சூத்திரன்களில் எவனாவது பிராமணனைக் கண்டால் சுவாமி என்கிறானா? கும்பிடுகிறானா? பிராமணன் என்கிற மரியாதை வைத்துப் பேசுகிறானா? இதை நினைத்தால் வயிறு எரிகிறதே.

**மணி:** நீ சொல்வது தப்பு. இன்னமும் கிராமாந்திரங்களில் எவ்வளவு





பெரிய மிராஸ்தாரானாலும் ஒரு சின்ன பிராமணப் பையனைக் கண்டால் எழுந்து நிற்கிறான். வாங்க, வாங்க சாமி என்று குனிந்து கும்பிடுகிறான். இந்தப் பையன் அடே போடா வாடா என்று பேசினாலும் அவர்கள் அதை இழி வாய்க் கருதுவதில்லை. கிராமாந்திரங்களில் தாசிகள் பிராமணாளிடத் தில் பணமே வாங்குவதில்லை. பிராமணன் என்றால் இன்னம் எவ்வளவோ காரியங்கள் நடக்கிறது. சும்மா பனகால் மீதில் வீண் பழி சுமத்துகிறாயே.

**சேஷன்:** அட மண்டுவே! நீ பட்டிக்காட்டான் ஆனதினால் கிராமத்து சங்கதியை கட்டிக் கொண்டு அழுகிறாய். பட்டண வாசல்களில் நடக்கும் அபாயம் உனக்கு என்ன தெரியும்? காப்பிக்கடையில் போய் பார். முன்னெல்லாம் சுவாமி சுவாமி ஒரு இட்டெலி கொண்டு வாருங்கள் என்று வணக்கமாய் கேட்பார்கள். இப்போது ஓய் ஐயரே இட்டிலி கொண்டு வா என்று அதிகாரம் பண்ணுகிறான். வக்கீல்களைக் கண்டால் நடுங்குகிறவர்கள் இப்போது குடியானவன் கூட வாய்யா போய்யா என்கிறான். தாசி வீட்டிற் குப் போனால் பிச்சை எடுக்கிற பார்ப்பானுக்கு தேவடியா ஒரு கேடா என்கி றாள். பெரிய பெரிய அதிகாரமுள்ள உத்தியோகத்தில் எல்லாம் சூத்திரன் களே வந்துவிட்டார்கள். தாலுக்கா, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி இது களில் சூத்திரன்களே நிறைந்து விட்டார்கள். ஒரு பிராமணன் அந்தஸ்துக்கு வரவேண்டுமானால் எவ்வளவோ திருப்தி செய்ய வேண்டியதாயிருக்கிறது. பனகாலினால் பிராமணனுக்கு எவ்வளவு கஷ்டம் தெரியுமோ? பட்டிக் காட்டான் நீ என்ன கண்டாய்!

**மணி:** நீ சொல்லுகிறபடி எனக்குத் தோன்றவில்லையே. எங்கு பார்த்தாலும் முனிசீப்புகள், ஜட்ஜுகள், அங்குள்ள குமாஸ்தாக்கள் எல்லாம் நம்ம பிராமணாளாகத்தானே இருக்கிறார்கள். நீ நன்றாய் கவனித்து பாரு.

**சேஷன்:** சரி! சரி!! அது ஒன்றுதான் நமது தலைவர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு சூத்திரன்கள் கைக்குப் போகாமல் வைத்திருக்கிறார்கள். அதுதான் உன் கண்ணுக்கு தெரிகிறதாக்கும். இதில் பனகாலுக்கு ஒரு அதிகா ரமும் இல்லை தெரியுமா? அல்லாமலும் அந்த இலாக்கா சட்ட மெம்பர் என்கின்ற பேரால் நமது பிரம்மஸ்ரீ சி.பி.ராமசாமி அய்யர்வாளண்டையில் இருக்கிறது. அல்லாமலும் அந்த அதிகாரமுள்ள ஐகோர்ட் ஜட்ஜிகளுக்கு எவ்வளவோ நல்ல பிள்ளைகளாய் நம்மவர்கள் நடந்து கொண்டிருப்பதால் அதில் நம்மிடவளே ரொம்பி இருக்கிறார்கள். இல்லாவிட்டால் எத்தனை சாயபு முனிசீப்பாய் விடுவார்? எத்தனை கிறிஸ்தவர் முனிசீப்பாய் விடு வார்? எத்தனை கவரை நாயுடு, முதலி, செட்டி, பிள்ளை முதலிய ஆள்கள் முனிசீப், ஜட்ஜிகளாக வந்து விடுவார்கள் தெரியுமா? ஒரு மலையாளி ஐகோர்ட்டுக்கு வந்ததில் எத்தனை ஜட்ஜி, முனிசீப்புகள் மலையாளிகளாக வந்து விட்டார்கள் பார். என்னமோ நம்முடைய நல்லவேளை சுயமரியாதை உள்ள சூத்திரன்கள் ஐகோர்ட்டில் சரியானபடி இல்லாததால் நம்ம பாடு இவ்வளவிலாவது இருக்கிறது.

RangaRakes tamilnavarasam.com

**மணி:** மற்ற இலாக்காக்களில் நம்மிடவாள் இல்லையென்றா சொல்லு கிறாய்.

**சேஷன்:** இருந்தென்ன பிரயோஜனம். நாமே ஏகபோகமாய் அனுப வித்து வந்தது போய் இப்போது அவர்களும் நமக்கு கிட்டக் கிட்ட சரியாய் வந்து விடுவார்களே. மெடிகல் இலாக்கா என்கிற வைத்திய இலாக்காவிலும் இந்த பனகால் வெள்ளைக்காரன்கள் தலையிலும் கையை வைத்து எல்லாம் சூத்திரன் களாகவே கொண்டு வந்தாய் விட்டது. அதனால்தான் வெள்ளைக் காரர்களுக்கும் பனகாலைக் கண்டால் பிடிக்கிறதில்லை.

**மணி:** வெள்ளைக்காரனை ஒழித்தது நல்லது தானே?

**சேஷன்:** நீ சுத்த அசடாயிருக்கிறாயே! நீ பிராமண விந்தே அல்ல போல் இருக்கிறது. வெள்ளைக்காரன் இல்லாவிட்டால் நம்ம பாடு ஆபத்து தானே. அது தெரியுமா? வெள்ளைக்காரனை எப்படியாவது சரிபடுத்திக் கொண்டு நாம் சுகமாக காலம் கழிக்கலாம். சூத்திரன்கள் வந்து விட்டால் நம்ம கதி அதோ கதிதான். அவன் சூத்திரன்களையே தேடித் தேடி உத்தி யோகத்திற்கு நியமிப்பான். வெள்ளைக்காரனைச் சரிபடுத்த நமக்குத் தெரிந்த தந்திரமும் நமக்குள்ள சௌகரியமும் சூத்திரன்களுக்குக் கிடையாது. இருந் தாலும் செய்ய மாட்டார்கள். பிராமணாதிக்கம் வேண்டுமானால் வெள்ளைக் கார உத்தியோகமும் ஆதிக்கமும் இருப்பதே மேல்.

**மணி :** அப்படியானால் நம்ம பிராமணாள்தானே சுயராஜ்யம் வேணும், சுயராஜ்யம் வேணும் என்றும், இரட்டை ஆட்சி ஒழிய வேண்டும் என்றும், பூரா சுயராஜ்யம் அதாவது வெள்ளைக்கார ஆதிக்கமேகூடாது என்றும் சத்தம் போடுகிறார்கள். அப்படி இருக்க நீ வெள்ளைக்கார ஆதிக்கம்தான் பிராமணாளுக்கு நல்லது என்கிறாயே! அதன் இரகசிய மென்ன?

**சேஷன்:** அட கேனமே! அதெல்லாம் சும்மா, சும்மா. வெள்ளைக் காரருக்கும் நமக்கும் இரகசிய ஒப்பந்தம். "நான் நோகாமல் அடிக்கிறேன் நீ ஓயாமல் அழு" என்கிற மாதிரி சூத்திரன்களை ஏமாற்ற நம்மிட பெரியவாள் ஏற்பாடு செய்து வைத்த தந்திரம். உண்மையான சுயராஜ்யம் வந்தால் பிராமணாள் சங்கதி பெரிய ஆபத்தாயல்லவா முடியும். இவ்வளவு உத்தியோகமும், பணமும், அதிகாரமும், பதவியும் பிராமணாளுக்குக் கிடைத்து விடுமா? எல்லாவற்றையும் சூத்திரன்கள் பிடுங்கிக் கொள்வார்கள். ஒரு சப்பட்டை மந்திரி உத்தியோகப் பனகாலால் எத்தனை சூத்திரன் களுக்கு உத்தியோகம் வந்து விட்டது. இரட்டை ஆட்சியை ஒழிப்பது என்பதன் இரகசியம் உனக்குத் தெரியாதா? எல்லா உத்தியோகமும் அதிகாரமும் வெள்ளைக்காரன் கையிலே இருக்க வேண்டும். எங்களுக்கு கொடுத்தது தப்பு. அது சூத்திரன்களுக்கே அநுகூலமாய் போய்விட்டது. இப்படி ஆகுமென்று



தெரியாமல் கேட்டு விட்டோம். ஆதலால் திரும்பவும் நீயே எடுத்துக் கொண்டு ஒத்தை ஆட்சி ஆக்கிக் கொள் என்பதுதான் அதன் தத்துவம்.

**மணி :** அது சரி, பூரா சுதந்திரம் என்பது என்ன?

**சேஷன்:** அது ரொம்ப இரகசியம். விளையாட்டுக்காவது அப்படிச் சொன்னால் தான் பாமர ஜனங்கள் நம்முடன் சேருவார்கள். தவிர, கதர், தீண்டாமை, மதுவிலக்கு இதெல்லாம் பனகால் எடுத்துக் கொண்டு வேலை செய்யப்போவதாக கேள்விப்பட்டதால் அதற்கும் மேலாக மிகவும் தீவிர மான கொள்கை நம்மிடம் இருப்பதாக ஜனங்கள் நினைக்கும்படி காட்டிக் கொள்ள வேண்டாமா? அதற்காகத்தான் இந்த தோது செய்தார்கள். தவிரவும் இப்படிச் சொன்னால்தான் வெள்ளைக்காரரும் நம்மையே நம்புவார்கள். ஏனென்றால் ஒரு சமயம் அம்மாதிரி கிளர்ச்சி ஏற்பட்டு விட்டால் என்ன செய்கிறது என்று பயந்து நம்மிடவாள் இடமே எல்லா பெரிய உத்தியோகத் தையும் நம்பிக் கொடுத்து வைப்பான். சூத்திரனிடம் கொடுத்தால் ஒரு சமயம் தங்களை எதிர்த்தாலும் எதிர்த்து விடுவார்கள் என்கிற பயம் இப்போதும் வெள்ளைக் காரருக்கு உண்டு.

உண்மையான முழுச் சுதந்திரம் கேட்பவர்கள் நடந்து கொள்வதைப் பார்த்தே நீ தெரிந்து கொள்ளக் கூடாதா? விடிந்தெழுந்தால் வெள்ளைக் காரர்களிட கச்சேரிக்கு போய் அவர்களைக் கெஞ்சி *மீ* 10, 20 ஆயிரம் வக்கீலிலும், ஜட்ஜிலும், முனிசீப்பிலும், கலெக்டர் முதலிய பல உத்தியோகத் திலும் சம்பாதிப்பவர்கள் வெள்ளைக்காரர்களை ஓட்டுவதாக சொல்ல முடியுமா?

**மணி:** சரி, அப்படியானால் பனகால் போனது பிராமணாளுக்கு நல்லதாச்சுது. சில சூத்திரன்களும் பணகால் போகணும் போகணும் என்று கத்தினான்களே அதென்ன?

**சேஷன்:** அதெல்லாம் நம் ஸ்ரீநிவாசய்யங்கார் மடாதிபதிகளிடம் வாங்கின பணத்தைக்கொண்டு சில சூத்திரன்களுக்கு கூலி கொடுத்து கத்தச் சொன்னது தானே. நிஜமாலுமா அவன்கள் கத்தினான்கள்?

**மணி:** அது சரி, மறுபடியும் வந்திருக்கும் சூத்திர மந்திரிகள் பணகால் மாதிரி ஆகமாட்டார்களா?

**சேஷன்:** ஒருக்காலும் ஆகமாட்டார்கள்.

**மணி:** அதென்ன அவ்வளவு தைரியம்?

**சேஷன் :** இந்த மந்திரிகள் மூன்று பேரும் நம் தலைவர்களால் சாணியில் பிடித்த பிள்ளையார்கள் போல்தானே. நாம் சொல்லுகிறபடி கேட்டுக் கொண்டிருக்கிற வரையில் அவர்கள் பிள்ளையார்கள் (மந்திரிகள்) தான். கொஞ்சம் தவறினால் உடனே சாணிப் பிள்ளையாரை எருவாமுட்டை



RangaRakes
tamilnavarasam.com

(நம்பிக்கை இல்லாத தீர்மானம்) தட்டி விட மாட்டார்களா? அந்த பயம் அவர்களுக்கும் உண்டு. இவ்வளவு பாடுபட்ட நம்மடவாளுக்கு இது தெரியாமல் இருக்குமென்றா நினைத்தாய்? தவிரவும் சூத்திரன்களைக் கொண்டே சூத்திரன்கள் கண்ணைக் குத்துவது நல்லதே ஒழிய நாம் பிரவேசித்தால் பார்ப்பான் செய்து விட்டான் என்று கூப்பாடு போடுவான்கள். உதாரணமாக காஞ்சீபுரம் மகாநாட்டில் ஒருவன் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தீர்மானம் கொண்டு வந்ததற்கு ஒரு சூத்திரன் பிரசிடெண்டாயிருந்ததினால்தான் நமது தலைவர்கள் வெகு சுலபத்தில் அத் தீர்மானத்தை மீட்டிங்குக் கூட கொண்டு வராமல் தள்ளச் செய்ய சவுகரியமாயிருந்தது. பாமர ஜனங்களும் நம்பினார்கள். அப்படிக்கில்லாமல் ஒரு பிராமணன் அந்த ஸ்தானத்தில் இருந்திருந்தால் கட்டாயம் அத்தீர்மானம் நிறைவேறியேயிருக்கும். அல்லாமலும் அத்தீர்மானத்தை ஒரு பிராமணன் தள்ளியிருந்தால் பெரிய கூப்பாடு போட்டிருப்பான்கள். ஆதலால் இப்படி இருப்பதுதான் நல்லது.

**மணி:** சரி !சரி! எனக்கு இப்போதுதான் புரிந்தது. நானும் இனிமேல் இம்முறைகளைக் கைக்கொள்ளுகிறேன்.

**குடி அரசு - உரையாடல் - 19.12.1926**



# மதுரையில் பார்ப்பனரல்லாதார் மகாநாடு

நாளது டிசம்பர் *மீ* 25, 26 - ந் தேதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மதுரை மாநகரில் பார்ப்பனரல்லாத மக்களின் மகாநாடு கூட்டப்போகும் விபரம் சென்ற வாரத்திதழிலேயே தெரிவித்திருக்கிறோம். இம்மகாநாடு பார்ப்பனரல்லாதார் களுக்கு மிகவும் முக்கிய மகாநாடாகும். பெரும்பாலும் நமது மக்களின் பிற்கால நிலைமை இதன் மூலமாகவே இச்சமயம் நிர்ணயமாக வேண்டியிருக்கிறது. பார்ப்பனரல்லாதாரிடம் கவலை உள்ளவர்கள் என்றும் பார்ப்பனரல்லாதாருக்கு உழைப்பவர்கள் என்றும் பறையடித்துக் கொள்ளுபவர்கள் அவசியம் தவறாமல் இம்மகாநாட்டிற்கு வந்து கலந்து தங்களது அபிப்பிராயத்தையும் சொல்லி ஒப்பச் செய்து மேலால் நடந்து கொள்ள வேண்டிய விபரத்திற்கு ஒரு திட்டம் ஏற்பாடு செய்ய உதவி புரிய வேண்டும். மகாநாடு எவ்வித அபிப்பிராய பேதமுள்ள பார்ப்பனரல்லாதாருக்கும் பொதுவானதென்றே சொல்லுவோம். பொறாமையாலோ துவேஷ புத்தியினாலோ மகாநாட்டிற்கு வராமலிருந்துவிட்டு பின்னால் “அது தப்பு இது தப்பு; இது யாரோ சிலர் கூடிக் கொண்டு நடத்திய மகாநாடு; ஆதலால் என்னைக் கட்டுப்படுத்தாது; இதில் சேராதவர்கள் அனேகர் இருக்கிறார்கள்” என்று நோணா வட்டம் பேசுவதில் ஒரு பயனும் இராததோடு இவ்வித செய்கை சமூகத் துரோகம் சமயோசித வயிற்றுப் பிழைப்பேயாகும். “தவிர மகாநாட்டின் தீர்மானம் என்னவானாலும் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறோம். ஆதலால் நாம் போக வேண்டிய அவசியமில்லை” என்பதாக சோம்பேறி வேதாந்தம் பேசாமல் வேறு விதமான தவிர்க்க முடியாத சந்தர்ப்பம் ஏற்பட்டாலன்றி மற்றபடி கூடிய வரையில் எல்லா முக்கிய கனவான்களுமே ஆஜராக வேண்டு மென்றே வேண்டுகிறோம். நமது மக்கள் தங்கள் வாழ் நாள்களில் எவ்வளவோ பணமும் எவ்வளவோ காலமும் வீணாய் விரையம் செய்து வருகிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படியிருக்க இவ்வுத்தமமானதும் சுயமதிப்புள்ள ஒவ்வொரு மனிதனின் கடமையானதுமான இந்த முக்கியமான கூட்டத்திற்குப் போவதை ஒரு செலவாகவோ காலப் போக்காகவோ கருதக் கூடாது என்றும் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆனால் சிலர் அதாவது பார்ப்பனர் புன்சிரிப்புக்கு ஆசைப்பட்டவர்களும் பார்ப்பனரின் மனக்கோணலுக்கு பயப்பட்டவர்களும் தனக்கென ஒரு கொள்கையில்லாமல் வலுத்த கையோடு சேர்ந்துக் கொண்டு



RangaRakes tamilnavarasam.com

ஞானோபதேசம் செய்து தங்களது மனிதத் தன்மையை காப்பாற்றிப் பிழைப்பவர்களும் சுலபத்தில் வர தைரியம் கொள்ளமாட்டார்கள் என்பதையும் நாம் நன்றாய் உணர்வோம். அப்பேர்ப்பட்டவர்களைப் பற்றி நாம் குற்றம் கூறாமல் உண்மையிலேயே பரிதாபப்படுகிறோமானாலும் அவர் களால் நேரிடும் கெடுதியை இனிச் சகிக்க முடியாதென்பதையும் வணக் கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நிற்க, இம் மகாநாடு பார்ப்பனர் களின் கான்பரன்ஸ் மகாநாடு களைப் போல் 12 ஜில்லா விலுள்ள 2 $^{1}/_{2}$ கோடி மக்களுக்கும் பிரதிநிதித் துவம் பொருந்திய அரசியல் சபை என்று வேஷம் போட்டுக் கொண்டு தங்கள் சொற்படி ஆடும் சோனகிரிகளான 100 அல்லது 150 பெயர்களை தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் என்று வைத்துக் கொண்டு தங்கள் அபிப்பிராயத் துக்கு மாறுபட்டவர்கள் உள்ளே வரமுடியாதபடி தந்திரங்கள் செய்து மீறி யாராவது வந்து விட்டால் அவர்களை அடித்து துரத்தி தங்கள் இஷ்டம் போல் தங்களுக்கு அநுகூலமானபடி தீர்மானங் களை நிறைவேற்றிக் கொள்ளும் பார்ப்பன சூழ்ச்சி மகாநாடுகள் போல் அல்லாமல், ஆயிரக்கணக்கான உண்மை சுதந்திரப் பிரதிநிதிகள் வந்து கூட வேண்டுமென்பதாகவும் வேண்டிக் கொள்ளுகிறோம். ராஜாக்கள், ஜமீன் தாரர்கள், மிராஸ்தார்கள், குடியானவர்கள், தொழிலாளர்கள், கூலிக் காரர்கள், வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள், பெண் மக்கள் ஆகிய எல்லா வகை யாரும் தவறாமல் விஜயம் செய்து மகாநாட்டின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும். ஒவ்வொரு ஜில்லா தாலூக்கா கிராமங்களிலுமுள்ள பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியுள்ள ஒவ்வொரு குலாபிமானிகளும் தங்களால் கூடுமான வரை பிரதிநிதிகளைச் சேர்த்து அழைத்துக் கொண்டு வரவேண்டுமென்றும் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம். வெறும் உத்தியோகமும், பட்டமும், முனிசிபல், தாலுக்கா, ஜில்லா போர்டு மெம்பர் பதவியும் பெறும் வரை தன்னை பார்ப்பனரல்லாதார் உணர்ச்சிக்காரர் என்று சொல்லிக்கொண்டு தங்கள் காரியம் ஆனவுடனோ அல்லது இனி இவர்களால் நமக்கு ஆக வேண்டியதொன்றுமில்லை, இனி மேல் இம்மாதிரி காரியங்களுக்கு பார்ப்பனர்களின் தயவுதான் வேண்டும் என்பதாக நினைத்து வரவில்லை என்று அன்னியர் மனசில் நினைக்கவோ அல்லது வெளியில் சொல்லவோ இடம் வைக்காமல் இந்நிலையில் உள்ள கனவான்களும் அவசியம் விஜயம் செய்ய வேண்டுமாய் வேண்டுகிறோம். இவ்வளவு தூரம் நாம் ஏன் எழுதுகிறோ மென்றால் கோடிக்கணக்கான நமது சமூகத்தின் பேரால் உள்ள ஸ்தாபனமும் மகாநாடும் நமது எதிரிகளாலும் அவர்களது கூலிகளாலும் குற்றம் சொல்லுவ தற்கிடமில்லாமலும் இவ்வளவு நாள் இருந்தது போல் பொது மக்கள் பாரா முகமாய் இல்லாமல் அதனிடம் பக்தி செலுத்தத் தக்க தன்மையுடையதாகவும் தக்க பயனளிக்கக் கூடிய தாகவும் இருக்க வேண்டுமென்கிற ஒரே ஆசையேயல்லாமல் வேறல்ல. தென்னாட்டிலுள்ள சுயமரியாதைச் சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களும்



பிரமுகர்களும் அவசியம் தக்க பிரதிநிதிகளோடு வர வேண்டுமென்றும் பிரத்தி யோகமாய் வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 19.12.1926**



RangaRakes tamilnavarasam.com

# புது ஆண்டு பரிசு

1927 - ஆம் ஜனவரி-மீ த்தில் 'குடி அரசு'ப் பிரதியின் எண்ணிக்கை 5000 த்தையாவது தாண்டிவிட வேண்டாமா?

அப்படியானால் ஒவ்வொருவரும் மும்மூன்று புது சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுங்கள்:-

அப்படிக்கில்லாமல் குடிஅரசே! குணக்குன்றே! அஞ்சா வீரமே! உண்மை அவதாரமே! சுயமரியாதைச் சூரியனே!

..................என்று கவி பாடுவதில் ஒரு பலனுமில்லை. காரியத்தில் காட்டுங்கள்.

குடி அரசு - வேண்டுகோள் - 19.12.1926



# மகாத்மா காந்தி காங்கிரஸிற்கு போகும் ரகசியமும் காங்கிரசின் பிரதிநிதித்துவ தன்மையும்

சென்ற - ஆம் கான்பூர் காங்கிரசின் போது மகாத்மா காந்தி காங்கிரஸ் காரியங்களில் இருந்து விலகிக் கொண்டது முதல் இது வரையில் எவ்வித காரியங்களிலாவது நிர்வாகத்திலாவது கொஞ்சமும் கலந்து கொள்ளாமல் இருப்பது எல்லோரும் அறிந்ததே.

ஆனால் இவ்வருஷம் பரிசுத்தமாய் பார்ப்பனர்களினுடையவும் படித்தவர்களுடையவும் காங்கிரசாய்ப் போய் விட்டதால் பொது ஜனங் களும் மகாத்மாவைப் போலவே காங்கிரஸ் காரியங்களிலிருந்து பெரும் பான்மையாய் விலகி வருகிறார்கள் என்பதை நமது பார்ப்பனர்கள் உணர்ந்து பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காக பண்டித மோதிலால் நேரு என்கிற பார்ப்ப னரை விட்டு மகாத்மா காந்தியை காங்கிரசில் கொண்டுவந்து காட்டி ஏமாற்று வதற்கு சூழ்ச்சி செய்து வெற்றி பெற்று விட்டார்கள். ஆனால் மகாத்மா இந்த தந்திரத்தை அறிந்தே "நான் காங்கிரஸுக்கு வேடிக்கைப் பார்க்கப் போகிறேனே அல்லாமல் காங்கிரஸ் காரியத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை" என்று பொது ஜனங்களுக்கு அறிவித்து விட்டார். ஏனென் றால் மகாத்மா பெயரையும் மற்றும் ஜெயிலுக்குப் போன தேச பக்தர்கள் பெயரையும் சொல்லிப் பொது ஜனங்களை ஏமாற்றி சட்டசபைக்கும் முனிசி பாலிட்டி தாலூக்காபோர்டுக்கும் நமது பார்ப்பனர் போனது அவருக்கு நன்றாய்த் தெரியுமாதலால், இனியும் பொது ஜனங்கள் ஏமாறாதிருக்க வெளிப்படுத்தி விட்டார். ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் இம்மாத ஆரம் பத்தில் மகாத்மா வைப் பார்க்கப் போயிருந்த இரகசியமும் இதுவே தான். எப்படியாவது மகாத்மாவை கையைப் பிடித்து சாணியை அள்ளச் செய்வது போல் கட்டாயப் படுத்தி காங்கிரஸுக்குப் போகச் செய்து பார்ப்பன காங் கிரஸ் அல்ல, மகாத்மா காங்கிரஸ்தான் என்று சொல்லி பார்ப்பன ஆதிக்கத் திற்கு ஆதாரம் தேடவே அவர் கஷ்டப்பட்டிருக்கிறார்.

அது மாத்திரமல்லாமல் காங்கிரஸுக்கு தமிழ்நாட்டிலிருந்து பார்ப்பனரல்லாதார்களும் வந்திருந்தார்கள் என்று பேர் பண்ணுவதற்காக சில பார்ப்பனரல்லாத கூலிகளுக்கும் ரயில் சார்ஜும் டெலிகேட் கட்டண மும்,



RangaRakes tamilnavarasam.com

சோறு, காப்பி, உப்புமா முதலியதுகளும் கொடுத்து கூட்டிக் கொண்டு போகப் போகிறார்கள். அதற்கு வயிற்றுச் சோற்று 'தேசபக்தர்' களாகவே பலர் விண்ணப்பம் போட்டிருப்பதாகவே தெரிகிறது. ஆனால் அய்யங்கார் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமான கூலிகள் மாத்திரம்தான் இதில் தெரிந்தெடுக்கப்படுவார்கள். 33 கோடி ஜனங்களுக்குப் பிரதிநிதித்துவம் என்று பார்ப்பனர்களால் பறையடிக்கும் காங்கிரசின் யோக்கியதை என்ன என்பதும், அதை நடத்துகிறவர்கள் யார் என்பதும், இதைப் பார்த்து ஏமாறுகிறவர்கள் யார் என்பதும், இதனால் பலனடைகிறவர்கள் யார் என்பதும் கடுகளவு சுயமரியாதையோடு யோசித்தால் களிமண் மூளைக்காரருக்கும் விளங்காமல் போகாது. அதாவது எல்லா இந்திய காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார், மாஜித் தலைவர் சரோஜினி தேவி பார்ப்பனத் தியார், காரியதரிசி ஸ்ரீமான் ஏ.ரங்கசாமி அய்யங்கார், உதவி காரியதரிசி ஸ்ரீமான் ராஜாராவு, காங்கிரஸில் பிரதான ஆதிக்கம் பெற்ற எல்லா இந்திய சுயராஜ்யக் கட்சித் தலைவர் பண்டித மோதிலால் நேரு, ஒரு காரியதரிசி ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரி, தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீனிவாசய்யங்கார். மாஜித் தலைவர் ஸ்ரீனிவாசய்யங்கார், காரிய தரிசி சத்தியமூர்த்தி சாஸ்திரி, குமாஸ்தாக்கள், மானேஜர்கள், பார்ப்பனர்கள் (ஆர்.கே.ஷண்முகம் செட்டியாரை தேவஸ்தான ஆக்டை ஆதரித்ததற்காக கமிட்டியில் இருந்து நீக்கியாய் விட்டது) தமிழ் மாகாண சுயராஜ்யக் கக்ஷித் தலைவர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார், காரியதரிசி ஸ்ரீமான் சத்தியமூர்த்தி, சென்னை சட்டசபையில் சுயராஜ்யக் கட்சித் தலைவர் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி, ஆந்திரா மாகாண மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான் டி.பிரகாசம், பிராமணர் தமிழ் மாகாண கான்பரன்ஸ் மகாநாட்டுத் தலைவர் கே.வி.ரங்கசாமி அய்யங்கார் உபசரணைத் தலைவர் ஸ்ரீமான் ஏ.ரெங்கசாமி அய்யங்கார் (ஆனால் 'குடிஅரசு' க்குப் பயந்து கொண்டு ஏ.ரெங்கசாமி அய்யங்கார் மூலவராயிருந்து பார்ப்பனரல்லாதாரில் ஒரு உற்சவரைப் பிடித்து தன் இஷ்டப்படி காரியத்தை நடத்தி பொது ஜனங்களை ஏமாற்றினார்) தமிழ் மாகாண மகாநாட்டிலோ இரண்டு தலைவர்களும் தங்கள் பிரசங்கங்களைப் படித்ததும் ஆங்கிலத்தில். மகாநாட்டுக்கு 12 ஜில்லாக்களும் 2 $^1/_2$ கோடி ஜனங்களுக்கும் பிரதிநிதிகளாகப் போயிருந்த டெலிகேட்டுகள் 200 க்குள். அதிலும் பார்ப்பனர்கள் 100-க்கு 75. சென்னை மாகாணத்தில் நடைபெறும் 'தேசீயப் பத்திரிகை'களோ நான்கு. 'இந்து' அய்யங்கார் எடிட்டர், 'மித்திரன்' அய்யங்கார் எடிட்டர், 'சுயராஜ்யா' பந்தலு எடிட்டர், 'தமிழ் சுயராஜ்யா' அய்யர் எடிட்டர், 'காங்கிரஸ் விளம்பர சபை' சத்தியமூர்த்தி அய்யர் எடிட்டர், ஆங்காங்கு நிரூபர்கள் அய்யர். அய்யங்கார், சர்மா, ராவு, சாஸ்திரி. பார்ப்பனரல்லாத கனவான்களும் கலந்திருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமோ ஸ்ரீமான் அமீத்கான் சாயபு, ஷாபி மகம்மது சாயபு, பாவலர், குப்புசாமி முதலியார், அண்ணாமலைப் பிள்ளை, வெங்கிடு கிருஷ்ணப் பிள்ளை, குழந்தை, ஐயவேலு இவர்களே முக்கியமாய் காரியத்தில் கலந்து



கொள்ளும் சகல வகுப்புப் பிரதிநிதித்துவமும் பொருந்திய பார்ப்பனரல்லாதாராயிருக்கிறார்கள். பெயர் கடன் கொடுப்பதற்கோ ஸ்ரீமான்கள் மருத வானம் பிள்ளை; எழுதிக் கொடுத்ததை வாசிப்பதற்கோ ஸ்ரீமான்கள் கோவிந்தராஜ முதலியார், முத்துரங்க முதலியார்; சமயத்தில் ஒத்தாசை செய்வதற்கோ 'தமிழ் நாட்டுத் தலைவர்கள்'. ஆகவே தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவம் இதற்குள் அடக்கி விட்டது. ஆதலால் சுயராஜ்யத்திற்கும், சுயமரியாதைக்கும், வகுப்பு உரிமைக்கும் என்ன குறை என்பதை வாசகர் களே உணர்ந்து கொள்ள வேண்டியதுதான்.

**குடி அரசு - கட்டுரை - 19.12.1926**



RangaRakes tamilnavarasam.com

# "தமிழ்நாடு கான்பரன்ஸின்" யோக்கியதை

நமது பார்ப்பனர்கள் தமிழ்நாடு கான்பரன்ஸ் என்பதாக பெயர் வைத்து தமிழ்நாட்டுப் பொது மக்களின் பேரால் ஒரு மகாநாடு என்று ஒரு சிறு கூட்டம் கூட்டி அதன் மூலம் தங்களது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள எவ்வளவோ தந்திரங்களும் சூழ்ச்சிகளும் செய்தும் கடைசியாக மகாநாட்டின் உண்மை வேஷம் வெளியாகி விட்டது. மகாநாட்டுக்கு உபசரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் கோவிந்தராஜுலு முதலியார் அவர்கள் அவசரத்தில் பிடித்து வைத்த பிள்ளையாரைப் போல் கொண்டு வந்து வைக்கப்பட்ட வராவார். அவர் கிளிப்பிள்ளையைப் போல் சொல்லிக் கொடுத்ததைச் சொல்லும் நல்ல சுபாவமுள்ளவர் என்பதும் பெஸண்டம் மையார் காலம் முதல் கொண்டும் ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாய் ஆரம்பிக்கப்பட்ட சென்னை மாகாணச் சங்கமென்னும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ மருவிய காங்கிரஸ் கொள்கையுடைய பார்ப்பனரல்லாதார் சங்கம் ஏற்பட்டது முதல் கொண்டும் பார்ப்பனருக்கு நல்ல பிள்ளையாய் நடந்து பார்ப்பனர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். அன்னவரைப் பிடித்து உபசரணை அக்கிராசனர் வேஷம் போட்டு பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை நன்றாய் வையும்படி ஏவினர். ஸ்ரீமான் முதலியாரும் தன்னை நம்பி அக்கிராசனராக்கியவர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யாமல் ஆசை தீர ஒரு மூச்சு பார்ப்பனரல்லாதார் புத்திசாலித்தனத்தை இகழ்ந்தும் பார்ப்பனரின் புத்திசாலித்தனத்தை புகழ்ந்தும் பேசி பார்ப்பன ரல்லாதார் இயக்கத்தையும் குறை கூறி தனது நடனத்தை முடித்துக் கொண்டார். மகாநாட்டுத் தலைவரோ சொல்ல வேண்டியதில்லை. பெரிய வருணாசிரம தர்மப் பார்ப்பனர். நமது நாட்டுப் பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகளில் சிலதுக்கு கொள்கையும் இல்லை, சில சமயங்களில் மானமும் இல்லை என்று சொல்லி விடலாம். எப்படியாவது பொழுது விழுந்து பொழுது புலர்ந்தால் போதும் மற்றபடி உண்மையைப் பற்றிக் கவலையில்லை. ஒரு சமயத்தில் பார்ப்பனர்கள் அயோக்கியர்கள் என்பார்கள். ஆனால் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி சாஸ்திரி, ரங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார் இவர்கள் மூவர் மாத்திரம் யோக்கியர்கள் என்பார்கள். மற்றொரு சமயம் ராஜகோபாலாச்சாரியார் மாத்திரம் யோக்கியர் என்பார்கள். மற்றொரு சமயம் சதாசிவய்யர் மாத்திரம் யோக்கியர் என்பார்கள். மற்றொரு சமயம் அரசியல் பார்ப்பனர்கள் மாத்திரம் அயோக்கியர்கள் ஸ்ரீமான் K.V. ரங்கசாமி அய்யங்கார் யோக்கியர் என்பார்கள். ஸ்ரீமான் K.V. ரங்கசாமி அய்யங்கார் எந்தப் பார்ப்பனர்? பஞ்சாங்கப் பார்ப்பனரா? அல்லது வருணாசிரம பார்ப்பனரா? அல்லது அரசியல் பார்ப்பனரா? என்பதைச் சொல்லமாட்டார் கள். இந்த நிலைமையில் ஸ்ரீமான் K.V. ரங்கசாமி அய்யங்காருக்கு யோக்கியர் பட்டம் எப்படிக் கட்டினார்கள்? எதற்காக அவரை "அரசியல் பார்ப்பனர் கள் எல்லாம் அயோக்கியர்" என்று ஒப்புக் கொள்ளப்பட்டவராலேயே "முதல் முதல்" தெரிந்தெடுக்கப்பட்டாரோ தெரியவில்லை. அந்த மகானுக்கு தெய்வானுகூலத்தால் ஒரு சவுகரியம் உண்டு. அதாவது "அங்கு என்ன நடந்தது. எனக்கு ஒன்றும் கேட்க வில்லையே" என்று சொல்லி தப்பித்துக் கொள்ளக் கூடும். இதைத் தவிர வேறு எந்த வழியில் தமிழ் மாகாண மகாநாட்டுக்கு தலைவர் யோக்கியதை பெற்றவர் என்பதும் தெரியவில்லை. தேசத்திற்காக, நாட்டிற்காக, சமத்துவத்திற்காக, ஒத்துழையாமைக்காக, முட்டுக்கட்டைக்காக என்ன செய்தார். ராஜாங்க சபைக்குப் போனார், சட்ட சபைக்குப் போனார் என்பதைத் தவிர செய்ததென்ன? ஒன்றும் செய்ய வேண்டாம் என்றாலும், யோக்கியமாக வாவது நடந்து கொண்டாரா என்று பார்த்தால் அயோக்கியத்தனமாக ஒரு உதாரணக்கதை சொல்லியிருக்கிறார். ஒரு பார்ப்பனரல்லாதாருக்காவது இக் கதையின் இழிவு தெரியவில்லை. அதோடு மாத்திரமல்ல அவரைப் புகழ்ந்து மிருக்கிறார்கள். ஐயோ! நமது மானங்கெட்டத் தன்மையை என்ன வென்று சொல்லுவது. அவர் உதாரணமாகச் சொன்ன கதை என்னவென்றால் "கூண்டில் அடைபட்டுக் கிடந்த புலியை ஒரு பிராமணர் விடுவித்து விட்டாராம். அந்தப் புலி வெளியே வந்து அவனையே தின்னப் பிரயத்தனப்பட்டதாம். இந்த விசுவாசத் துரோகத்தை வேறு யாவரும் கேட்கவில்லையாம். கடைசியாக ஒரு நரியிடம் போய் பிராமணர் அழுதாராம். நரி வந்து பஞ்சாயத்து செய்யும் போது புலி எப்படியிருந்தது, பிராமணன் எப்படித் திறந்து விட்டான் என்பதை நேரில் பார்க்க ஆசைப்பட்டதால் பழையபடி புலி உள்ளே போய் தான் இருந்த மாதிரியை காட்டிற்றாம். பிராமணரை கதவை இருகப் பூட்டி விட்டு தன் வேலைக்குப் போகும்படி நரி சொல்லிக் கொடுத் ததாம்." அது போல் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாராகிய புலிகள் கூண்டுக்குள் அடைபட்டிருந்ததை வெளியாக்கினதாகவும், விசுவாசங் கெட்டப் பார்ப்பனரல்லாதார் வெளியாக்கிய பார்ப்பனர்களை வைததாகவும், சூசனை காட்டியிருக்கிறார். இதில் நரிகள் யாரோ தெரியவில்லை. ஸ்ரீமான்கள் குழந்தை, குப்பு சாமி முதலியார், ஷாபி மகம்மது சாயபு, அமீத்கான் சாயபு, பாவலர், கோவிந்தராஜுலு முதலியார், சாமி வெங்கிடாசலம் செட்டியார் ஆகியவர்களோ அல்லது ஸ்ரீமான்கள் கலியாணசுந்தர முதலியார், டாக்டர் வரத ராஜுலு நாயுடுகாரு, R.K. ஷண்முகம் செட்டியார், வெங்கிடபதி ராஜு, முத்தையா முதலியார் போன்றவர்களோ அல்லது பணம் கொடுத்த மடாதி பதிகள் மகந்துகள் முதலியவர்களோ அல்லது ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி சாஸ்திரி, ரங்கசாமி அய்யங்காரோ அல்லது எஸ்.சீனிவாசய்யங்காரோ அல்லது வெள்ளைக்காரர்கள்தானோ இன்னாரைத் தான் ஸ்ரீமான் K.V. ரங்க சாமி அய்யங்கார் மனதில் குறித்துச் சொன்னார் என்பது விளங்கவில்லை. அது



RangaRakes tamilnavarasam.com

எப்படியானாலும் பார்ப்பனரல்லாதாருக்கு இக்கதை எவ்வளவு இழிவைக் கொடுக்கிறது என்பதை மாத்திரம் குறிப்பிடுகிறோம். தவிர ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரைப் பற்றி புகழ்ந்திருப்பதை நோக்கும்போது ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்கார் யோக்கியதை மண்டுகளுக்கும் விளங்காமல் போகாது. அவர் புகழ்வதாவது: "தீர்க்க தரிசனமுடைய தலைவர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் மக்களின் அறியாமையை போக்கி, ஜாதி பேதத்தை ஒழிக்க அவரது முயற்சியே பயனளித்தது. ஒரு தலைவருக்கு இருக்க வேண்டிய எல்லா குணமும் அவரிடம் இருக்கின்றன. அவரது அறிவின் திறமையும், தியாக உணர்ச்சியும், தேசாபிமானமும், பெருந்தன்மையும் பாராட்டத் தக்கது. அவரில்லாதிருந்தால் நமது கட்சி என்னவாயிருக்கும்?" என்று பேசியிருக்கிறார். இதிலிருந்து ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்காரின் மன உணர்ச்சி இப்படிப்பட்டதென யாரும் சுலபத்தில் அறியலாம். இவரை சில பார்ப்பனரல்லாத பத்திரிகைகள் வானமளாவப் புகழ்ந்ததின் இரகசியம் நமக்கு விளங்கவில்லை. அக்கிராசனர், தலைவர் ஆகியவர்களின் குணங் கள் இப்படி என்றால் நடந்த தீர்மானங்களின் கதி என்னவென்று பார்ப்போம். ஒன்பது தீர்மானங்கள். அதாவது:

1. இறந்து போனவர்களுக்கு அனுதாபம்.(இது வழக்கப் பிர காரம்)

2. சர்க்கா சங்கத்தார் வேலையைப் பாராட்டியும் காங்கிரஸ் காரர் கதர் கட்ட கோரியும் ஒரு தீர்மானம். (இதற்காக தங்களுக்குள் ஒரு திட்டமும் இல்லை; பிரசாரமும் இல்லை. பேருக்குமாத்திரம் தீர்மானம் போட்டதாக பொது ஜனங்களை ஏமாற்றச் செய்யத் தந்திரமே ஒழிய இதில் காரியம் ஏதாவது இருக்கிறதா.)

3. தீண்டாமையை ஒழிக்க காங்கிரசுக்கு சிபார்சு செய்வதாக ஒரு தீர்மானம். (தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு இதில் ஒரு வேலையும் இல்லை; ஒரு பிரசாரமும் இல்லை; காங்கிரசிலும் தீண்டாமை ஒழிய வேண்டும் என்பதாக ஒரு தீர்மானம் ஏற்படலாம். இதில் தீண்டாமை ஒழிய வழி உண்டா? ஏதாவது திட்டமோ பிரசாரமோ செய்ய இடமிருக்கிறதா? ஆதலால் இதுவும் பாமர ஜனங்களை ஏய்க்கச் செய்த சூழ்ச்சி.)

4. அந்தமான் தீவிலுள்ள மாப்பிள்ளைமார்களைப் பற்றி ஒரு தீர்மானம். (இது பழய காலத்து காங்கிரஸ்படி ஒரு விண்ணப்பம். தவிரவும் மகம்மதியர்களை ஏமாற்றுவதற்கென்று ஏற்படுத்தின எழுத்து தீர்மானம். இதற்கும் காங்கிரஸ் கமிட்டிக்கு திட்டமோ வழியோ கிடையாது.)

5. ஸ்தல ஸ்தாபனங்களை காங்கிரஸ் கைப்பற்ற வேண்டும். (இதற்கு மாத்திரம் காங்கிரஸ் பிரசாரம், காங்கிரஸ் பணம் செலவு எல்லாம் உண்டு. எப்படி என்றால் காங்கிரஸ் கைப்பற்ற வேண்டுவதற்கு செலவும் பிரசாரமும் செய்யலாம். இது பார்ப்பனரல்லாதார் பெரு வாரியாய் ஸ்தல ஸ்தாபனத்தில் இருப்பதை ஒழித்துப் பார்ப்பனர் கைப் பற்றச் செய்யும் சூழ்ச்சி. அடுத்த வருஷம் பூராவும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இந்த வேலையில்தான் இருக்கப் போகிறது என்பது உறுதி.)





6. இந்தியா பூரண சுதந்திரமடைவதே லக்ஷியமாய்க் கொள்ள வேண்டும் என்பது. (இது பெரிய புரட்டான தீர்மானம் என்று தான் சொல்ல வேண்டும். பூரண சுதந்திரமென்றால் அர்த்தம் என்ன என்று சொல்ல வில்லை. சுயராஜ்யம் என்றால் அருத்தம் சொல்லாமல் ஏய்ப்பது போலவே இதுவும் ஒரு புரட்டான வார்த்தை. பாமர ஜனங் களை ஏய்ப்பதற்கு செய்யப்பட்ட தீர்மானமே அல்லாமல் பலனுள்ள தல்ல.)

7. தஞ்சை ஜில்லா போர்டு ரயில்களைக் குறித்தது. (இது தஞ்சாவூர் ஜில்லா போர்டை பார்ப்பனமயமாக்க ஏற்படுத்திக் கொண்ட ஆரம்ப சூழ்ச்சி.)

8. தொழிலாளர்கள் முன்னேற்றத்திற்கு காங்கிரஸ் மகாசபை பிரசாரம் செய்து தீவிரமாய் உழைக்க வேண்டும் என்பது. (இதற்கு மாத் திரம் காங்கிரஸ் பிரசாரம் செய்ய வேண்டுமென்று தீர்மானம் போட்டுக் கொள்வது. தொழிலாளர்களை சுவாதீனம் செய்து ஓட்டுப் பெறவே அல்லாமல் வேறல்ல. கதருக்கும் தீண்டாமைக்கும் காங்கிரஸ் பிரசாரம் செய்ய தீர்மானம் போடாமல் சும்மா வேண்டுதலையும், சிபார்சும் மாத்தி ரம் செய்திருக்கிறது . ஆனால் ஸ்தல சுயாட்சியைக் கைப்பற்றவும் தொழிலாளர்கள் ஓட்டுப் பெறவும் மாத்திரம் காங்கிரஸ் பணம் செலவு செய்ய வேண்டுமாம்.)

9. தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்திய மக்கள் சம உரிமை பெற ஒரு தீர்மானம். (இதைப்போல் மானங் கெட்டதும் திருட்டுத் தனமா னதுமான தீர்மானம் வேறு எதுவுமே இல்லையென்று சொல்லலாம். ஏனென்றால் இந்தியாவில் இருக்கும் இந்திய மக்கள் குழந்தைகள் சாப்பிடுவதை கண்ணில் பார்க்கும் சமத்துவம் அடைவதானால் ஒரு மாதம் பட்டினி கிடக்கும் யோக்கியர்கள் தென்னாப்பிரிக்காவில் உள்ள மக்களுடைய சமத்துவத்திற்கு தீர்மானம் போடுவதில் எவ்வளவு யோக் கியதை இருக்கும். )

இந்தியாவில் உள்ள இந்திய மக்கள் தெருவில் நடக்க வேண்டு மானால் வேலை இருந்தால்தான் போகலாம் என்று வியாக்யானம் செய்து மறுக்கும் பிரபுக்கள் தென்னாப்பிரிக்கா மக்கள் சமத்துவத்திற்கு தீர்மானம் போடுவது உண்மையானதாயிருக்குமா?

இந்தியாவில் இருக்கும் இந்திய மக்கள் தங்கள் கடவுளைப் பார்க்கக் கூடாது; அவர் அவர்கள் வேதத்தைப் படிக்கக் கூடாது என்று சொல்லுகிற யோக்கியர்கள் தென்னாப்பிரிக்கா மக்களுக்கு சமத்துவம் கொடுக்கத் தீர்மானம் போடுவதில் ஏதாவது நாணயம் இருக்குமா?)

RangaRakes
tamilnavarasam.com

ஆக 9 தீர்மானங்களும் எவ்வளவு மோசமானது என்பதும் பாமர மக்களை எவ்வளவு தூரம் ஏமாற்றக் கூடியது என்பதும் வாசகர்களே யோசித்துப் பார்க்க வேண்டியது. இதையெல்லாம்விட ஒரு இரகசியம் என்ன வென்றால் "மகாத்மா காந்தியின் தலைமையில் இம் மகாநாட்டிற்கு நம்பிக்கை இருக்கிறது" என்று ஒருவரால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை வெளியிலேயே விவகரிக்க கொண்டு வராமல், விலை கொடுத்து அடக்கி விட்டதுதான். இதிலிருந்து மகாத்மாவிடம் மகாநாட்டுக்கு உள்ள பக்தியும் மகாத்மா கொள்கைகளை ஒப்புக் கொள்ளும் யோக்கியதையும் விளங்காமல் போகாது. மற்றபடி மகாநாட்டிற்குப் போன உண்மையான தேசபக்தர்களி டமும் உண்மையான தியாகிகளிடமும் மகாநாட்டில் இருந்த ஆள்களுக்கு எவ்வளவு அன்பு இருந்தது என்பதும் அங்குள்ள மற்ற ஆள் களுக்கு யோக்கியதை இன்னது என்பதையும் ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளை அவர் கள் விஷயத்தில் இருந்து தெரிந்து கொண்டிருக்கலாம்.

**குடி அரசு - கட்டுரை - 26.12.1926**



# சுயராஜ்யக் கட்சிப் பார்ப்பனரின் பதிவிரதா தன்மை

சென்னையின் யோக்கியதையை அறிந்து போக வெளியிடங் களிலிருந்து யார் வந்தாலும் அவர்களை நமது பார்ப்பனர்கள் எப்படியாவது மயக்கி குல்லாய் போட்டு தங்கள் சுவாதீனம் செய்து கொள்ளும் தந்திரமும் சௌகரியமும் நம்மவர்களிடத்தில் இல்லை என்பதை எல்லோரும் அறிந்த விஷயம். தேவஸ்தான சட்ட சம்மந்தமாய் இந்தியா நிர்வாக சபை மெம்பர் ஸ்ரீமான் எஸ். ஆர். தாஸ் இங்கு வந்த பொழுது அவருக்குப் பார்ப்பனர்கள் செய்த விருந்தும், பெண்களைக் கொண்டு ஆடல் பாடல் கச்சேரிகள் செய்ததும், மடாதிபதி மகந்துகளையும் கூட்டி அறிமுகம் செய்து வைத்த தும், அந்த விருந்துக்கு ஒத்துழையாத பார்ப்பனர் என்பவர்கள் முட்டுக் கட்டை பார்ப்பனர் என்பவர்கள், பூரண சுயேச்சை பார்ப்பனர் என்பவர்க ளும், அரசாங்க உத்தியோகஸ்தர் வெள்ளைக்காரர்கள் ஆகியவர்களின் அரசாங்க சம்மந்தமான களியாட்டு காரியங்களில் கலந்து கொள்ளக் கூடாது என்ற பார்ப்பனர்களும், காந்தி குல்லாயும் தேசீயக் கொடியும் பிடித்து இரும்புச் சட்டத்தைத் துலைக்க வேண்டும் என்று சொல்லித் திரியும் பார்ப் பனரும், "அரசாங்கத்திற்கு குலாமல்லாத" பார்ப்பனர்களும், மற்றவர்களை நக்கிப் பொருக்கி, குலாம், சர்க்கார், பூஜாரி என்று சொல்லும் பார்ப்பனர் களும், சென்று நன்றாய் தின்று குடித்து களியாட்டத்தில் கலந்திருந்தது எல்லோருக் கும் தெரிந்த விஷயமே. அது போலவே இம்மாதத்திலும் இந்தியா நிர்வாக சபையில் இருந்து சர் அலெக்ஸாந்தர் மட்டிமென் என்கிற ஒரு துரை மகன் வெள்ளைக்காரர் வந்ததற்கு அதே ஸ்ரீமான் ரங்காச்சாரியார் கொடுத்த விருந்திற்கு ஒத்துழையாமை, முட்டுக்கட்டை, சர்க்கார் சம்மந்த விருந்து பஹிஷ்காரம், பூரண சுயேச்சை ஆகிய பல பார்ப்பனர்களின் தத்துவ தலைவருமான ஸ்ரீமான்கள் எஸ்.சீனிவாசய்யங்கார், எ. ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்கள் போய் உண்டு, குடித்து, களித்து புரண்டதோடு ஒன்றாய் உட்கார்ந்து படம் பிடித்துக் கொண்டார்கள் என்றால் இதன் அர்த்தமென்ன? "ஒரு ஊரில் ஒரு புராணப் பிரசங்கியார் ஒரு விதவா ஸ்ரீ ரத்தினத்தை வைப்பாக வைத்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் புராணப் பிரசங்கம் செய்யும் போது விதவா சம்மந்தம் கூடாது என்றும், அது இருவருக்கும் பாவமென்றும், மேல் லோகத்தில் நெருப்பில் காச்சிய இரும்புத் தூணைக் கட்டி



RangaRakes tamilnavarasam.com

பிடிக்கச் சொல்லுவார்கள் என்றும், அதனால் சிரேய்சு குறைந்து போகு மென்றும் இன்னமும் பலவிதமாக ஞானோ பதேசம் செய்தார். சாஸ்திரியாரின் வைப்பாட்டியான விதவை அம்மாள் அவர்களும் அந்தப் பிரசங்கத்திற்குப் போயிருந்தார்கள். சாஸ்திரியார் வீட்டுக்கு வந்த உடன் நீர் இனிமேல் என்னைத் தொடாதீர்! இவ்வளவு பாவமும் தோஷமும் மேல் லோகத்தில் இவ்வளவு கஷ்டமும் இருக்கிற சங்கதி எனக்கு இது வரையில் தெரிவிக் காமல் சாஸ்திரிகள் சம்மந்தத்தால் மோக்ஷம் புண்ணியம் என்று சொல்லி என்னை ஏமாற்றி விட்டீர்! போதும், போதும் எட்டி நில்லும் என்று சொல்லி விட்டாள். சாஸ்திரியார் உடனே அம்மாள் காலில் விழுந்து நான் அது ஊரார்களை ஏய்த்து வயிறு வளர்க்கச் சொன்னதே தவிர நமக்கும் உனக்கும் அது கட்டுப்படுத்தாது. எங்காவது ஒரு ஸ்திரீ எவ்வளவுதான் பதி விரதை யானாலும் புருஷனில்லாமல் இருக்க முடியுமா? புருஷன்தானாகட்டும் எப்படிப் பட்டவனானாலும் ஸ்திரீ இல்லாமல் இருக்க முடியுமா? இயற்கைக்கு விரோதமாய் எங்காவது பாவ மும் தோஷமும் ஏற்படுமா?" என்று சாஸ்திரி யார் வேதாந்தம் போதித்தாராம். அது போல் நமது சென்னைப் பார்ப்பனர்கள் வெளியில் செய்யும் புராணப் பிரசங்கம் வேறு, தாங்கள் நடந்து கொள்ளும் இயற்கை வேதாந்தம் வேறு. இதை நமது பாமர ஜனங்கள் சரிவர உணராமல் ஏமாந்து போகிறார்கள். என்ன செய்வது? வயிற்றுக் கொடுமையும் பேராசை யும் நம்மவர்களைப் போட்டு நசுக்கும் போது எப்படி யோக்கியமாகவும் ஏமாறாமலும் இருக்க முடியும்.

**குடி அரசு - கட்டுரை - 26.12.1926**



# பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுத் தலைவர்களுக்கு ஒரு விண்ணப்பம்

சென்னை மாகாணத்தில் சிறப்பாக தமிழ் நாட்டில் சுமார் 10 வருஷங் களுக்கு முன்பாக பார்ப்பனரல்லாதார் சங்கம் ஏற்பட்டதும் அதை ஏற்படுத்த ஸ்ரீமான் டாக்டர் நாயர் அவர்கள் முதன்மையாகவும், சர்.தியாகராய செட்டி யார் உதவியாகவும் இருந்து அதை உலகினர் ஒப்புக் கொள்ளும்படி செய்து, தங்களது கொள்கைகளையும் நிலை நிறுத்தியது உலகமறிந்த விஷயம்.

ஆனால் இன்றைய தினம் நம்மில் பெரும்பான்மையான மக்கள் அக்கட்சியின் பெயரைச் சொல்லிக் கொள்ளவே வெட்கப்படுகிறார்கள். காரணமென்ன? தமிழ்நாட்டில் இக்கட்சியின் கொள்கைகளைப் பிரசாரம் செய்ய பணமில்லாதிருந்ததா? பத்திரிகை இல்லாதிருந்ததா? உத்தியோக மும், அதிகாரமும் இல்லாமலிருந்ததா? எல்லாமிருந்தும் இக்கதி ஆவா னேன்? எதிரிகளின் சூழ்ச்சியும் தந்திரமும் என்று சொல்லலாம். ஸ்ரீமான்கள் நாயரும் செட்டியாரும் உள்ள காலத்திலும் இவ்வெதிரிகள் இருந்தவர்கள் தானே? இப்பொழுது மாத்திரம் இவர்கள் சூழ்ச்சி பலிப்பானேன்? ஒருசமயம் நமக்குள் ளாகவே எதிரிகள் ஏற்பட்டுவிட்டார்கள் என்று சொல்லலாம்.

அப்படியானால் இனிமேலாவது நமக்குள்ளாக எதிரிகள் ஏற்படா மலிருக்க இப்போது என்ன செய்யப் போகிறோம்? இனிமேலாவது எதிரி களின் சூழ்ச்சியிலிருந்து தப்புவதற்கு என்ன செய்யப் போகிறோம்? மகாநாடு கூடிக் கலைந்தால் போதுமா? முதலாவது, நம்முடைய லட்சியம் என்ன என்பதை பாமர ஜனங்கள் அறியும்படி செய்திருக்கிறோமா? பாமர ஜனங்களின் அனுதாபத்தை பெற நாம் ஏதாவது வழி செய்தோமா? கவலை யாவது கொண்டோமா? மக்களின் உண்மையான தேவை என்ன என்பதி லாவது நாம் அபிப்பிராய பேதமில்லாமல் இருக்கிறோமா? நமது நாட்டினி டமாவது, நமது மக்களிடமாவது அபிமானம் உள்ளவர்கள் என்பதற்கு நம்மிடம் ஏதாவது ஒரு அடையாளமிருக்கிறதா? உத்தியோகங்கள் பெற் றோம்; பட்டங்கள் பெற்றோம்; பதவிகள் பெற்றோம். இதனால் நமது மக்க ளுக்கு அடிப்படையான நன்மை என்ன செய்தோம்? பார்ப்பன ஆதிக்கம் வளராமல் இருக்க இவைகளை உபயோகித்துக் கொண்டோம் என்கிற வரை யில் இவற்றைப் பெற்றது சரி. பாமர ஜனங்கள் மூட நம்பிக்கையுடையவராய்,



RangaRakes
tamilnavarasam.com

ஏழை ஜனங்களாய், தொழிலாளர்களாய், கூலிகளாய் உள்ள நமது மக்களின் குறைகளை நீக்கி என்ன நன்மையை உண்டாக்கினோம்? பார்ப்பன மாய்கையில் மூழ்கி, விவகாரத்தில் சிக்கி அல்லல்பட்டு அழியும் குடியான வர்களுக்கு நாம் என்ன செய்தோம்? அறிவீனத்தில் மூழ்கி மதுவருந்தி, ஒழுக்கங் கெட்டு நாசமாகும் ஏழைக் குடும்பங்களுக்கு என்ன பந்தோபஸ்து செய்தோம்? உத்தியோகம் ஒப்புக் கொண்ட அளவில் உத்தியோகத்தைக் கொண்டு எவ்வளவு செய்யக் கூடுமோ அவ்வளவு செய்திருக்கிறோம் என்கிற பதில் போதுமா? உத்தியோ கத்திற்கு வெளியில் செய்யக் கூடிய வேலைகளில் ஏதாவது செய்தோமா? நமது மனதையே நாம் கேட்டுப் பார்ப்போம். நமது எதிரிகளான பார்ப்பனர்கள் தேசத்தின் பெயரையும் காங்கிரஸ் பெயரையும் சுயராஜ்யம், உரிமை என்கிற பெயர்களையும் வைத்துக் கொண்டு பாமர ஜனங்களை ஏமாற்றி உத்தியோக மும் பதவியும் பெற்று தங்கள் ஆதிக்கத்தை பலப்படுத்திக் கொள்ளுகி றார்களே அதுபோலவும், நம்மில் பல கூலிகள் பார்ப்பனருக்கு ஒத்துப்பாடி அவர் களும் தேசம், சுயராஜ்யம், தேசீயம், உரிமை என்பவைகளைச் சொல்லி வயிர் வளர்க்கிறார்களே அதுபோலவும் நாமும் செய்தால் பார்ப்பனரல்லாத மக்கள் முன்னேறி விடுவார்களா? இவற்றை மகாநாட்டுக்கு வரும் பொது ஜனங்கள் நன்றாய் யோசிக்க விரும்புகிறோம். உத்தியோகம் பதவி பட்டம் பெற வேண்டாமென்று நாம் இப்போது சொல்ல வரவில்லை. ஆனால் அதுவே நமது லட்சியமல்லவென்பதையும் அதனாலேயே நமது குறைகள் முழுவ தும் நிவர்த்தியாகி விடாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளாமலிருக்க முடியவில்லை. ஆதலால் உண்மையில் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத் திற்கு தகுந்த கொள்கைகளும் திட்டங்களும் வகுத்து பாமர மக்களிடை தாராளமாய் பிரசாரம் செய்யத்தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். உத்தம மான தலைவர்களையும், உண்மையான தொண்டர்களையும், உறுதியான கொள்கைகளையும், யோக்கியமான பிரசாரகர்களையும் கொண்டு சரியான படி ஒரு வருஷத்திற்கு வேலை செய்தால் நமது சமூகம் சுயமரியாதை யையும் சுதந்திரத்தையும் அடைந்து விடலாம். இதற்கு முதலா வது எல்லோரும் கதரை ஒப்புக் கொள்ள வேண்டும். தீண்டாமை விஷயத்தில் வெளிப்படையாய்ச் சொல்லி விட வேண்டும். அதாவது மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்று ஒப்புக் கொள்ள வேண்டும். இந்த இரண்டு விஷயத்தில் ஆக்ஷேபணை உள்ளவர்கள் சுதந்திரத்துக்கும் சுயமரியாதைக் கும் விரோதிகள் என்றே சொல்லுவோம். அங்கத்தினர் உறுதி மொழிப் பத்திரத்திலேயே இவைகள் குறிக்கப்படவேண்டும். மற்றபடி ‘ஒத்துழையா மையோ’ ‘ஒத்துழைப்போ’, ‘பரஸ்பர ஒத்துழைப்போ’, ‘முட்டுக்கட் டையோ’, ‘சட்டவரம்பிற்கு உள்பட்ட கிளர்ச்சியோ’, ‘வெளிப்பட்ட கிளர்ச்சியோ’, ‘பிரிட்டீஷ் குடைக்குள் சுயராஜ்யமோ’, ‘குடைக்கு வெளி யில் சுயராஜ்யமோ’, ‘இரட்டை ஆட்சியோ’, ‘ஒத்தை ஆட்சியோ’, ‘சாதா ரண சுயராஜ்யமோ’, ‘பூரண சுயராஜ்யமோ’, அவரவர்கள் கொள்கை அவர் களுடனேயே இருக்கட்டும். இது சமயம் இவைகள் எல்லாம் அடியோடு புரட்டு என்றும் பார்ப்பனர்களும், ஆங்கிலம் படித்தவர்களும், பாமர ஜனங்களையும் சர்க்காரையும் ஏமாற்றி வயிறு வளர்க்கச் செய்யும் தந்திரங்கள் என்றும் நாம் உறுதியாய் நம்புவதால் அதைப்பற்றி யாருக்காவது கெடுதியோ நன்மையோ ஒன்றும் ஏற்பட்டு விடப்போவதில்லை. ஆதலால் அவைகள் ஒவ்வொரு மனிதனின் தனித்தனி அபிப்பிராயமாய் இருந்து கொள்ளலாமே தவிர சங்கத்தின் கொள்கைகளில் கலக்க வேண்டியதில்லை. சுயமரியாதை யும் சுதந்திரமும் பெறுவது என்பதை லட்சியமாக வைத்துக் கொண்டாலே போதுமென்று நினைக்கிறோம். ஏனெனில் பார்ப்பனரல்லாதார் என்றால் பார்ப்பனரல்லாதார் சமூகத்தில் 100 - க்கு - 90 பேர்களாயிருக்கும் பாமர மக்களையும் ஏழை மக்களையும் குறிக்குமே அல்லாமல் 100-க்கு 5 பேர் கூட இல்லாத ராஜாக்களையும் ஜமீன்தாரர்களையும் பிரபுக்களையும் வக்கீல் களையும் மாத்திரம் குறிக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பார்ப்பனரல்லாதார் முன்னேற்றம் என்பதும் 100-க்கு 90 பேர்களின் முன்னேற்றத்தையும் சேர்த்து குறிக்குமேயல்லாது 100- க்கு 5 பேர்களின் முன்னேற்றத்தை மாத்திரம் குறிக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்ளு கிறோம். இச்சங்கம் உண்மையான பார்ப்பனரல்லாதார் முன்னேற்றச் சங் கமா அல்லது யாரோ சில குறிப்பிட்ட நபர்களின் முன்னேற்றச் சங்கமா என்பது வெளியாக இது ஒரு தக்க சமயமாய் ஏற்பட்டு விட்டதால் ஒவ் வொரு தலைவரும் பொறுப்புடனும் புத்திசாலித்தனத்துடன் நடந்து கொள்ளவேண்டும் என்பதாக விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 26.12.1926**



RangaRakes

tamilnavarasam.com

# வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்றால் நமது பார்ப்பனர்கள் ஒரே கூச்சலாக 'தேசம் போச்சுது', 'ஒற்றுமை குலைந்தது', 'வகுப்பு வாதம் மிகக் கெட்டது' என்று ஒரே கூச்சலாக எல்லாப் பார்ப்பனர்களும் ஒன்றாய்க் கூப்பாடு போடுவதுடன் கூலி கொடுத்தும் நம்மவர்களைப் பிடித்தும் அப்படியே கத்தச் சொல்வதும் நாம் எல்லோரும் அறிந்த விஷயமே. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஏன் பார்ப்பனர்கள் எதிர்க்கிறார்கள் என்பதற்கு காரணம் ஸ்ரீமான் சி.ராஜகோபாலாச்சாரியார் கொஞ்ச நாளைக்கு முன்பு "பொய் மான் வேட்டை" என்று நவசக்திக்கு எழுதிய ஒரு வியாசத் தில் தன்னை அறியாமலே காட்டிவிட்டார். அதாவது, "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது பார்ப்பனர்களை இனி நீங்கள் நாட்டுக்குத் தொண்டு செய்ய வேண்டியதில்லையென்று ஒதுக்கி வைப்பதாகும். பல்லாயிர வருஷங்களாக நாட்டுக்குத் தொண்டு செய்து வந்த ஒரு ஜாதியினரை இவ்வளவு சுலபத்தில் (வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் மூலம் ) ஒதுக்கி விட முடியாது. அறிவும் பயிற்சியும் திறமையும் கொண்டவர்கள் நாட்டிற்கு வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார். இதில் உள்ள மற்ற அம்சங்களைப் பற்றி இப்போது கவனிக்காவிட்டாலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பார்ப்பனருக்குத்தான் கெடுதி என்பதாக அவரே வெளியிட்டிருக்கும் போது மற்ற பார்ப்பனர்கள் ஆக்ஷேபிப்பதற்குக் காரணம் வேண்டுமா? அது மாத்திரமல்லாமல் இப் பார்ப்பனர்கள் தங்களுக்கு கெடுதி என்று வெளிப் படையாய்ச் சொல்லிக் கொள்ள யோக்கியதையும் தைரியமும் இல்லாததால் தேசத்திற்கு கெடுதி என்று வெள்ளைக்காரர்கள் சொன்னார்கள்; ஜெர்மா னியர்கள் சொன்னார்கள்; ஜப்பானியர்கள் சொன்னார்கள்; துருக்கியர்கள் சொன்னார்கள் என்றும் சமாதானமும், ஆதாரமும் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்வதானது "பள்ளிக்கூடத்து குழந்தைகள், பள்ளிக்கூடம் போக திருட்டுத்தனம் செய்து விட்டு மறுநாள் போகும்போது உபாத்தியாயர் நேற்று ஏன் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை என்று கேட்டால் எனக்கு நேற்று வயிற்று வலி சார் என்கிறதும், வயிற்று வலி என்றால் என்ன என்று கேட்டால் அதென்னமோ எங்கள் அம்மா சொன்னாங்க சார் என்கிறதும்," போல் இருக் கிறது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கெடுதி, கெடுதி, என்றால் யாருக்குக் கெடுதி? பார்ப்பனருக்குக் கெடுதி. இதற்காக அவர்கள் மற்றவர்களை ஒருவருக்கொருவர் உதை போட்டுக் கொள்ளும்படியும், வைது கொள்ளும் படியும், தங்களை வந்து அடைக்கலம் புகும்படியும் செய்து வருகிறார்கள்,



கொஞ்ச நாளைக்கு முன்பு வைசிராய் பிரபுவும் கவர்னர் பிரபுவும் "வகுப்பு வாதம் கூடாது" என்று சொன்னார்கள் என்றும் அதை தங்களுக்கு ஆதரவாய் வைத்துக் கொண்டும் பெரிய ஆர்ப்பாட்டம் செய்தார்கள். கடைசியாய் பார்க்கிறபோது மேன்மை தங்கிய வைசிராய் பிரபுக்கும் கவர்னர் பிரபுக்கும் முதலாளிகளான வெள் ளைக்காரர்கள் கான்பூரில் கூடிய எல்லா இந்தியா ஐரோப்பிய சங்கத்தின் மகாநாட்டில் இந்தியாவின் இயற்கை நிலையை உத்தேசித்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இந்தியாவுக்கு அவசியம் வழங்க வேண்டும் என்பதாகவே பேசியிருக்கிறார்கள். தவிரவும் தற்காலம் நடை பெறும் அரசியல் விவகாரங் களில் வகுப்புப் பிரச்சினைகள் இல்லாத இலாக்காவோ, ஸ்தாபனமோ, தேர்தல்களோ கண்டிப்பாய் இல்லை என்றே சொல்லலாம். தவிரவும் அரசாங்கத்தாரால் அளிக்கப்படும் உத்தி யோகங்களும், நியமனப் பதவிகளும், வகுப்புப் பிரச்சினையின் பலனாகவே அழிக்கப்பட்டு வருவதும் பொது ஜனங்களாலும் கேழ்க்கப்பட்டு வருவதும் இரகசியமானதல்ல. அப்படியானால் எதற்காக இனியும் கேழ்க்க வேண்டும் என்கிற கேள்வி பிறக்கலாம். உத்தியோகங்களும் பதவிகளும் சர்க்கார் தயவாலும், தேர்தல் களில் ஸ்தானங்கள் பார்ப்பனர்களின் தயவாலும் வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம் பெறக் கூடியதாயிருப்பதால் மக்கள் தங்கள் தங்கள் தேச சமூக நலத்தையே கவனிக்காமல் அனேக சமயங்களில் தேசத்தையும் வகுப்பையும் சர்க்காருக்கும் பார்ப்பனருக்கும் காட்டிக் கொடுத்தும் துரோகம் செய்து ஸ்தானம் பெற வேண்டியிருக்கிறது. உதாரணமாக சட்டத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்கப் பட்டிருந் தால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு வியாக்யானம் செய்வதிலேயே ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் போன்றவர்கள் சமயத்திற்குத் தகுந்தபடி பார்ப்பனர்களுக்கு பயந்துக் கொண்டு பேச வேண்டியதில்லை. ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் அரசியலில் தலையிடும் போதே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கட்சியார் மூலமாகவே அ , ஆ படித்தவர். ஸ்ரீமான் டி.எ. ராமலிங்கம் செட்டியாரும் அதுபோலவே வகுப்புப் பேரைச் சொன்னதினால்தான் அரசியல் உலகில் அன்னியர்களுக்கு மனிதர்களாக காணப்படுகிறார். ஸ்ரீமான் முத்தையா முதலியார் வகுப்புவாரிப் பேச்சு வெளியான பிறகுதான் அரசியல் உலகில் அப்படி ஒருவர் இருக்கிறார் என்று தெரியப்பட்டார். டாக்டர் வரதராஜுலு நாயுடு என்பவரும் வகுப்புவாரிப் பேச்சில்லாமல் இருந்தால் பூதக்கண்ணாடி வைத்துப் பார்த்தாலும் அரசிய லில் கண்ணுக்குத் தென்படாத நிலையில் இருப்பார். ஸ்ரீமான் திரு.வி.கல் யாணசுந்திர முதலியார் என்பவரும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் பொது மக்கள் ஞாபகத்துக்கு வரக்கூடாதவராகவே இருந்திருப்பார். இம் மாதிரிச் செய்ய நமது பார்ப்பனருக்கு சக்தி உண்டு. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ கொள்கை முற்ற முற்றத்தான் ஸ்ரீமான்கள் பாவலர், குப்புசாமி முதலியார், குழந்தை, வெங்கிட கிருஷ்ண பிள்ளை, ஷாபி மகம்மது சாயபு, அமீத் கான் சாயபு முதலிய கனவான்கள் பெயரும் பிரபலமாகவும், அவர்களே பார்ப்பனரல்லாதார் தலைவர்களாகவும் இடம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது.



RangaRakes tamilnavarasam.com

(தலைவர் பட்டம் ஒருவருக்கே சாஸ்வதமா?) அல்லாமலும் வகுப்புவாரி உரிமை சட்டத்தில் இல்லாததால்தான் எல்லாத் தலைவர்களும் ஒரு நாள் வகுப்புவாரி உரிமை கேட்கவும், மறு நாளைக்கு வேண்டாம் என்கவும், ஒரு நாள் காங்கிரஸ்தான் நாட்டுக்கு நல்லதென்கவும், மறு நாளைக்கு எல்லோருக் கும் உரிமை இல்லாத நாட்டில் காங்கிரஸ் கேட்டை விளைவிக்குமென்கவும், ஒரு நாள் செல்வச் செருக்கும் செல்வாக்குப் பெருக்கும் நிலைக்காதென்கவும், மறுநாளைக்கு ஸ்ரீமான் சீனிவாசய்யங் கார்தான் யோக்கியமான தலைவர் என்கவும், ஒரு நாளைக்கு ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கையில் ஜால்ரா கொடுக்க வும், மறு நாளைக்கு ஸ்ரீமான் சத்தியமூர்த்தியைக் கூப்பிட்டு மந்திரிசபை அமைக்கச் சொல்லவும் நேரிடு கிறது. இப்படிப்பட்ட கனவான்களையே இன்னமும் தாராளமாய் ஆயிரக் கணக்காய் நமது பார்ப்பனர்கள் சிருஷ்டிக் கவும் அழிக்கவும் முடிகிறது. இந்த தைரியத்தால்தான் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை போன்றவர்களை அரசியல் மகாநாட்டிலிருந்து அடித்து துரத்தி விடலாம் என்கிற தைரியமும் அவர்களுக்கு உண்டாகிறது.

1919 ஷூ கடைசியில் திருச்சினாப்பள்ளி தில்லை நாயகம் பிள்ளை படித்துறையில் பார்ப்பனப் பெண்கள் தண்ணீர் மொள்ளக் கூட யோக்கி யதை இல்லாமல் நடுக்கமுற்றுக் கிடந்த காலத்தில் இந்தப் பார்ப்பனர்களுக்கு ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையும், வரதராஜுலு நாயுடுவும், கலியாணசுந்திர முதலியாரும் வீரர்கள் போலவும், தென்னாட்டுத் திலகர்கள் போலவும், சாதுக்கள் போலவும் காணப்பட்டார்கள். அவர்களை திருச்சிக்கு கூட்டிக் கொண்டு போயும் பார்ப்பனரல்லாதார் கட்சியை திட்டச் செய்தும், வையச் செய்தும் தாங்களும் தங்களது பெண்களும் தாராளமாய்த் தெருவில் நடக்கும் யோக்கியதைப் பெற்றார்கள். இப்போது இவர்களுக்குப் பதிலாய் ஸ்ரீமான்கள் பாவலர், குப்புசாமி முதலியார், குழந்தை முதலியவர்களை ஏற்பாடு செய்து கொண்டவுடன் இவர்களையே அதாவது ஸ்ரீமான் தண்ட பாணி பிள்ளையை அடிக்கவும் வரதராஜுலு நாயுடுவை ஒழிக்கவும் கல்யாணசுந்திர முதலியாரை மிரட்டவும் துணிந்து வெற்றி பெற்றும் வரு கிறார்கள். அதற்குப் பயந்து கொண்டு இவர்களும் நிமிடத்திற்கு ஒரு வேடம் போடவும் துணிகிறார்கள். ஆதலால் பார்ப்பனர்களுக்கு நம்முடைய தலைவர்களை ஆக்கவும் அழிக்கவும் சக்தியில்லாமல் செய்ய வேண்டுமானாலும் பார்ப்பனர் தயவும் சர்க்கார் தயவும் இருந்தால்தான் தலைவராகலாம், பதவி பெறலாம், மந்திரி யாகலாம், உத்தியோகம் பெறலாம் என்கிற எண்ணத்தால் தேசத்தையும் சமூகத்தையும் பார்ப்பனருக்கு விட்டுக் கொடுக்காமலிருக்க வேண்டுமானா லும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது சட்டத்தில் ஏற்கப்பட்டுவிட வேண்டுமே அல்லாமல் சர்க்கார் தயவிலும் பார்ப்பனர் தயவிலும் இருக்கக் கூடாது என்பதுதான் நமது கக்ஷி.

**குடி அரசு - கட்டுரை - 26.12.1926**



# மைசூரில் வகுப்பு வாதம்

மைசூர் அரசாங்கத்தில் பார்ப்பனரல்லாதார் விஷயம் கொஞ்சம் கவனிக்கப்பட்டு அரசாங்க உத்தியோகத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கவனிக்கப்பட்டு வருகிறது. இதை ஒழிக்க அங்கும் பல பார்ப்பனர்கள் பிரயத்தனப்பட்டு சட்ட மூலமாய் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைத் தடுக்க தீர்மானங்கள் கொண்டு வந்தவண்ணமாயிருக்கிறார்கள். வகுப்புவாரி பிரதி நிதித்துவம் வேண்டாம் என்பதற்கு அங்குள்ள பார்ப்பனர்கள் சொல்லும் காரணம் எல்லாம் திறமையைப் பார்த்து உத்தியோகம் கொடுக்க வேண் டுமே அல்லாமல் வகுப்புக் கணக்குப் பார்த்துக் கொடுக்கக் கூடாது என் கிறார்கள். அப்படியானால் உலகத்தில் பார்ப்பனர்களைத் தவிர திறமை சாலிகள் வேறு வகுப்பில் இல்லை என்பதே இவர்களுடைய அபிப்பிராய மாய் இருக்கிறது. இந்த அகம்பாவம் என்றைக்குப் பார்ப்பனர்களிடமிருந்து ஒழிகிறதோ அன்று தான் இந்தியாவில் பார்ப்பனர்களும் வாழலாம் என்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். அதில்லாமல் இருவரும் ஒத்து வாழ்வதென்பது முடியாத காரணம் என்றே சொல்லுவோம்.

நிற்க, எந்த உத்தியோகத்தில் பார்ப்பனரல்லாதாரைவிட பார்ப்பனர் கள் திறமைசாலிகள் என்று சொல்லிக் கொள்ள முடியும்? இதுசமயம் சென்னை மாகாணத்தில் எந்த உத்தியோகத்தில் பார்ப்பனருக்கும் பார்ப்பன ரல்லாதாருக் கும் திறமை வித்தியாசம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது? அல்லது ஒழுக்கத் திலாவது கண்ணியத்திலாவது பார்ப்பனரல்லாதார் எந்த விதத்தில் பார்ப்பனர் களை விட அதிகமாக குற்றம் சொல்லக் கூடியவர்களா யிருக்கிறார்கள்? காங்கிரஸ் என்கிற பார்ப்பனர் உத்தியோகம் சம்பாதிக்கும் இயக்கம் ஆரம் பிக்கு முன்பு நமது நாட்டில் 100 -க்கு 90 பேர் பார்ப்பன ரல்லாதார்களாகவே உத்தியோகங்களில் அமர்ந்திருந்தார்கள். காங்கிரஸ் ஏற்பட்ட பிறகுதான் பார்ப்பனர் ஏகபோகமாய் இவ்வளவு அதிகமான உத்தி யோகங்கள் உற்பத்தி செய்யவும் அடையவும் நேர்ந்தது . அதற்கு முன் திறமையைப் பற்றி பேச்சே இல்லாமலிருந்தது. ‘ஒண்ட வந்த பிடாரி ஊர் பிடாரி ஆனது’ போல் பார்ப்பனரல்லாதாருக்கு திறமை இல்லை என்று சொல்லக்கூட நமது பார்ப்ப னர்களுக்கு தைரியம் வந்துவிட்டது. அல்லா மலும் பார்ப்பனர்கள் நமது நாட்டிற்கு வருமுன் இந்நாட்டின் ராஜிய பாரமே பார்ப்பனரல்லாதாரிடம் இருந்ததை நமது பார்ப்பனர்கள் நன்றாய் அறிவார் கள். அந்த ராஜாக்களிடம் இந்தப் பார்ப்பனர்கள் பிச்சை வாங்கி உண்டதற் கும் இன்னமும் ஆதாரம்



RangaRakes tamilnavarasam.com

வைத்திருக்கிறார்கள். அப்படியிருக்க இப்போது திறமையைப் பற்றி பேசும் படியான ஆணவம் வந்து விட்டதானது பார்ப்பனரல்லாதாரின் பைத்தியக் காரத்தனத்தைக் காட்டுகிறது.

சர். சங்கர நாயர், சர். அப்துல் ரஹீம் போன்றவர்கள் எந்த பார்ப்பன ஜட்ஜிக்கு இளைத்தவர்கள்? ஸ்ரீமான் பி.வி. மாணிக்கம்நாயக்கர் எந்த பார்ப்பன இன்ஜினீயருக்கு இளைத்தவர்? ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணா எந்த பார்ப்பன கலெக்டருக்கு இளைத்தவர்? டாக்டர் குருசாமி முதலியார் எந்த பார்ப்பன டாக்டருக்கு இளைத்தவர்? ஸ்ரீமான் சி. ஆர். ரெட்டி எந்த பார்ப்பன கல்வி இலாக்கா அதிகாரிக்கு இளைத்தவர்? சர். மகமது அபீ புல்லாவும், சர்.மகமது உசுமானும் எந்த பார்ப்பன நிர்வாக சபை மெம்பர் களுக்கு இளைத்தவர்கள்? ஸ்ரீமான் எல்.டி.சாமிக்கண்ணு பிள்ளை எந்தப் பார்ப்பன கல்வியாளருக்கு இளைத்தவர்? டாக்டர் நாயர் எந்த பார்ப்பன தேசீயவாதிக்கு இளைத்தவர்? இவர்களையெல்லாம் பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்து வேண்டுமென்றே பிரகாசமடையாமல் செய்துவிட்டு அகம்பாவத் தாலும், அயோக்கியத்தனத்தாலும் திறமை, திறமை என்று பேசி இன்னமும் ஏய்க்கப் பார்க்கிறார்கள். ஆதலால் இத்திறமையை காட்டவாவது வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் பஞ்சமர்கள் என்று சொல்லப்படுவோர்கள் முதற் கொண்டு சற்று நமது பார்ப்பனர்களுக்கு அறிவுருத்த வேண்டியது சுய மரியாதை உள்ளவர்கள் கடமை என்றே சொல்லுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 26.12.1926**

# அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அசார்சமாய் | - | பொருட்படுத்தாமல் |
| அசூயை | - | அவதூறு, பொறாமை |
| அஞ்ஞானம் | - | அறியாமை |
| அபகீர்த்தி | - | இகழ்ச்சி |
| அபயம் | - | அடைக்கலம் |
| அமயம் | - | பொழுது, உரிய காலம் |
| அருமைக்காரர் | - | கொங்குவேளாளர் சமூகத்தில் மண விழாவை நிறைவேற்றும் அதே சமூகத்தைச் சார்ந்த ஒருவர் |
| ஆக்குப்புரை | - | சமையற்கூடம் |
| ஆஸ்தபம் | - | இடம், பற்றுக்கோடு |
| இச்சகம் | - | நேரில் புகழ்தல் |
| இடை | - | எடை |
| இத்துணை | - | இவ்வளவு |
| இரங்குதல் | - | ஈடுபடுதல் |
| இரக்ஷாபந்தனம் | - | மந்திராட்சர யந்திரக் காப்பு |
| ஈனஸ்திதி | - | இழிநிலை, கீழ்நிலை |
| உபசரணை | - | வரவேற்பு |
| உளைமாந்தை | - | கடுமையான நோய், உட்புண் |
| கர்ணகடூரம் | - | செவிக்கு கடுமையாக |
| காமியர் | - | காமவேட்கையுள்ளவர் |
| காயலா | - | காய்ச்சல், உடல்நலக்குறைவு |
| காலகதி | - | காலப்போக்கு, விதி |
| குச்சு புகுந்து | - | சேலையின் முன் மடியை இழுத்து |
| குலாம் | - | அடிமை |
| கும்பகோணம் வேலை | - | சூழ்ச்சி செய்தல், மோசடி செய்தல் |

RangaRakes
tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| சங்கதன் சுத்தி | – | மதம் மாறியோரை மீண்டும் இந்துக் களாக்கும் சடங்கு |
| சம்ரம்மாக | – | களிப்பாக, நிறைவாக |
| சமாராதனை | – | பார்ப்பனருக்கு உணவளித்தல் |
| சர்க்கா | – | கை இராட்டினம் ( நூல் நூற்பது ) |
| சல்லா | – | மெல்லிய துணி |
| சிசுஹத்தி | – | கருச்சிதைவு |
| சிரார்த்தம் | – | இறந்தோர்க்குச் செய்யும் சடங்கு |
| சிலாகித்தல் | – | புகழ்தல் |
| சுற்றுத்திரவு | – | சுற்றறிக்கை |
| சூசனை | – | குறிப்பு |
| தத்தம் | – | ஈகை, கொடை |
| தத்தாரிகள் | – | கண்டபடி திரிவோர் |
| தத்துக்கும் | – | பாய்ச்சலுக்கும் |
| தர்ப்பணம் | – | தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பிதிரருக்கும் நீர்க்கடன் |
| தவக்கப்பட்ட | – | தாமதம், தடைபட்ட |
| தாரதம்மியம் | – | ஏற்றத் தாழ்வு |
| தாயாதி | – | ஒருகுடியில் பிறந்த உரிமைப் பங்காளி |
| திருப்பாட்டு | – | வசைச் சொல் |
| தின்மை | – | தீமை |
| தீர்க்க திருஷ்டி | – | தொலை நோக்குப் பார்வை |
| துராசாரம் | – | ஒழுக்கக் கேடு, தீயொழுக்கம் |
| தூர்த்தகன் | – | காம வெறியன், கொடியோன் |
| தூஷனை(ன)ண | – | பழி, இகழ்ச்சி |
| தோமர்கள் | – | கூட்டத்தார் |
| நடை முதல் | – | நடப்பிலுள்ள ஆண்டு |
| நசித்து | – | அழித்து |
| நிஷ்டூரம் | – | கொடுமை |
| பஞ்சாங்கத்திற்கே | – | புரோகிதத் தொழிலுக்கே |
| பங்கா | – | கூரையில் தொங்கவிடப்பட்டு வெளி யில் இருக்கும் ஆள் கயிற்றை இழுக்க விசிறிபோல் காற்றை வீசும் ஓர் அமைப்பு |
| படிற்றொழுக்கம் | – | காமம் |
| பரிசாரகம் | – | ஏவற்றொழில், சமையல் தொழில் |
| பரோபகாரம் | – | பிறர்க்குச் செய்யும் உதவி |
| பறபறக்கும் | – | மிக விரைதல் |
| பக்ஷபாதங்கள் | – | ஒரு தலைச் சார்பாக |
| பாப்பர் | – | பொருளிலி, இல்லாதவன், நொடித்தவன் |
| பாராயணம் | – | முறைப்படி ஓதுதல் |
| பரிசாரகன் | – | சமையற்காரன், ஏவற்காரன் |
| பாரியாள் | – | மனைவி |
| பாஷாண்டி | – | சமய நூல் வல்லோன் |
| பாச(ஷ)ாணம் | – | நஞ்சு |
| பிரத்தியக்ஷத்தில் | – | காட்சியில், காட்சியளவில் |
| பிரஸ்தாபித்தல் | – | அறிவித்தல் |
| பீஸாப்பிடாமல் | – | வழி வழி உரிமையாகாமல் |
| பிரீதி | – | விருப்பம், விழைவு, அன்பு |
| பூளவாக்கை | – | தகுதி |
| மரித்தல் | – | இறப்பு |
| மிட்டா | – | வட்டார ஆட்சியாளன் |
| ஜன்மிகள் | – | நிலவுடைமையாளர்கள் |
| லூச்சாத்தனமாக | – | கீழ்த்தரமாக |
| மாதுரு துரோகி | – | தாய்க்கு இரண்டகம் செய்வோன் |
| மாதுரு காமி | – | தாய்மீது காமுறுவோன் |

# குடி அரசு

# 1927-1

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 4


## பெரியார் திராவிடர் கழகம்

29 இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்
சென்னை - 600 041


## பார்ப்பனரல்லாதார் மகாநாடு

சென்ற மாதம் 25, 26 உ சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மதுரை மாநகரில் பார்ப்பனரல்லாதார் மகாநாடு கூடிக் கலைந்து விட்டது. மகாநாடானது சென்னை தென் இந்திய நல உரிமைச் சங்கத்தினரால் பார்ப்பனரல்லாதார் மகாநாடென்று முறையாகச் சென்ற பத்து வருஷ காலமாய் நடந்து வந்ததை அனுசரித்தே கூட்டப்பட்டது என்பதாகக் கருதி, "பார்ப்பனரல்லாதார் 10வது மகாநாடு" என்னும் பேரால் கூட்டப்பட்டது என்று சொல்வதானாலும் இவ்வருஷம் பார்ப்பனரல்லாதார் முதல் மகாநாடென்றே சொல்ல வேண்டும். இந்த மகாநாட்டிற்கு வந்தால் தங்கள் வாழ்வில் மண் விழுந்து விடுமோ, பெருமை குறைந்துவிடுமோ, பார்ப்பனர்கள் அழித்து விடுவார்களோ என்று பயந்தவர்களும், தவிர்க்க முடியாதபடி பார்ப்பனர்களின் தாக்ஷண்ணியத்திற்கு கட்டுப்பட்டவர்களும், எப்போதும் பார்ப்பனரல்லாதார் கூட்டத்தில் சேருவதில்லை என்பதாக பார்ப்பனருக்கு வாக்குறுதி கொடுத்து அப்புறம் இப்புறம் ஒப்பந்தம் பேசிக்கொண்டவர்களும், தவிர்க்க முடியாத அசந்தர்ப்பத்தில் பட்டவர்களும் தவிர, மற்றெல்லா முக்கியஸ்தர்களும் பிரதிநிதிகளும் விஜயம் செய்திருந்தார்கள். இம்மகாநாடு கூட்ட வேண்டு மென்று "குடி அரசி"ன் மூலம் வெகுநாளாக எழுதிக்கொண்டு வந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கும். இதை அனுசரித்தே சென்னை ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களையும் மற்றும் ஜில்லாக்களிலுள்ள பலதிறப்பட்ட அபிப்பிராயம் கொண்ட பார்ப்பனரல்லாத பிரமுகர்களையும் இவ்வாறு மாத காலமாய் கண்டு பேசி நமது திட்டங்களை விளக்கிக் காட்டி, அவர்களது சம்மதமும் பெற்றுவர ஸ்ரீநாயக்கர் ஆங்காங்கு சென்று கொண்டிருந்ததும் வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆகவே இதன் பலனாக சட்ட சபைத் தேர்தல்கள்முடிந்தவுடன் இம்மகாநாடு கூட்டுவதாய் உத்தேசித்திருந்தபடி மகாநாடு மதுரையில் கூட்டினதும், எல்லாப் பிரமுகர்கள் விஜயம் செய்திருந்ததும், அவர்கள் ஏற்கனவே ஒப்புக் கொண்டது போல் நமது திட்டமாகிய நிர்மாணத் திட்டத்தை மகாநாட்டில் நிறைவேற்றிக் கொடுத்ததும் நமக்கு மிகுதியும் சந்தோஷமே. இந் நிர்மாணத் திட்டம் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டதைப் பற்றி நமது எதிரிகளான பார்ப்பனரும் நமது கோடாலிக் காம்புகளான பார்ப்பனரல்லாதாரில் சிலரும் என்ன சொல்லிக் கொண்டபோதிலும் நமக்கு கவலையில்லை. காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொண்டு இவ்விரு

RangaRakes tamilnavarasam.com

கூட்டத்தாரும் நடந்து கொள்ளும் இழி தன்மையைப் போலவும் வஞ்சக நினைவோடு தீர்மானிக்கும் போலித் தீர்மானங்களைப் போலும் அல்லாமல் மதுரை மகாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேறின. மிகப் பெரும் பகுதி மக்களால் உண்மையான ஊக்கத்தோடும் எவ்விதத்திலாவது நிறைவேற்றி வைக்க வேண்டும் என்னும் ஆவலோடுமே அவைகள் ஏகமனதாய் நிறைவேற்றி வைக்கப் பட்டிருக்கின்றன.

தீர்மானங்களையும் மக்களின் உண்மையான நிலையையும் கவனிக்காமல், சில வாய்ப்பந்தல் பதர்கள் அக்கிராசனர் இப்படிச் சொன்னார்; வரவேற்பு அக்கிராசனர் அப்படிச் சொன்னார்; பெயர் நன்றாக இல்லை; சுரைக்காய்க்கு உப்பு இல்லை என்று சோம்பேறி ஞானம் பேசிக் கொண்டும் எழுதிக் கொண்டும் வருவது நமக்கு ஒன்றும் அதிசயமாக இல்லை. உலக அனுபவ சரித்திரத்தில் இப்படி ஒரு கூட்டம் இருந்துகொண்டுதான் வந்திருக்கிறது. ராவணனுக்கு தன் தம்பியே துரோகியாயிருந்தான். கிறிஸ்துவுக்கு தனது சிஷ்யனே துரோகியாயிருந்தான். மகாத்மாவையும் தனது சிஷ்ய கோடியிலொருவரே மூலையில் உட்கார வைத்துவிட்டார். ஆகவே பஞ்சமும், நோயும், பார்ப்பனச் சூழ்ச்சியும் உற்றதும், சுயமரியாதை அற்றதுமான நமது நாட்டில் இத்திருக்கூட்டம் தோன்றுவது அதிசயமல்ல. இக்கூட்டம் யோக்கியமான கூட்டமாயிருக்குமானால் மகாநாட்டிற்கு வந்து தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லவோ, மகாநாட்டுக்கு தெரிவிக்கவோ செய்திருக்கும். அது யாருக்கும் ஆட்சேபமுமிருக்கவில்லை. சிலருக்கு பார்ப்பனரல்லாதார் என்கிற பெயர் பிடிக்கவில்லையாம். இதனால் தங்களுக்கு பெருத்த அவமானமாயிருக்கிறதாம். இவர்கள் இதுவரை எந்த உலகத்திலிருந்தார்களோ தெரியவில்லை. இவர்களையும் இவர்கள் பெற்றோர்களையும் சந்ததிகளையும் சேர்த்து வெள்ளைக்காரன் , "மகமதியரல்லாதார்" என்று மேளம் போட்டு அழைக்கிறானே இதனால் இவர்களுக்குமானம் போகவில்லையா? என்று கேட்கிறோம். இந்தப் பெயரோடு இவர்கள் சகோதரர்கள் சட்டசபைக்குப் போக உடந்தையாய் இருந்தார்களே இதனால் இவர்கள் மானம் போகவில்லையா? என்று கேட்கிறோம். கொஞ்சமாவது நெஞ்சில் ஈவு, இரக்கம், குலாபிமானம், தேசாபிமானம், வெட்கம் இல்லாமல் தன் வாழ்வையும் தன்பெயர் தம்பட்டமடிப்பதையுமே கருத்திலிருத்திக்கொண்டு மகாநாடு எதற்காக நடத்தப்பட்டது இதனால் யார் பலன் அடைவார்கள், இம்மாதிரி ஒரு கூச்சல் ஏற்பட்ட பிறகு நமது மக்களின் நிலை என்னவாயிருக்கிறது என்பதை கொஞ்சமும் உணராமல் "உபதேசியார்" வேடம் போடுவதானால் அது மனதிற்கு எவ்வளவு வேதனையைக் கொடுக்கும் என்பது அனுபவித்தவருக்குத்தான் தெரியும்.

நிற்க, மகாநாட்டுக்கு வந்தவர்களுக்கும் மகாநாட்டு அனுதாபிகளுக்கும் ஒரு வார்த்தை. தீர்மானங்களை நிறைவேற்ற அனுகூலமாயிருந்ததும், தீர்மானங்களை நிறைவேற்றியதும் மாத்திரம் போதாது.



பார்ப்பன காங்கிரஸ்காரர்களுக்கானால் இது போதும். ஏனெனில் காங்கிரசு என்பது நமது நாட்டைப் பொறுத்தவரையில் பார்ப்பனர்களும், படித்தவர்களும் இவ்விரு கூட்டத்தவர்களின் கூலிகளும் சிஷ்யர்களுமுடையதுமாயிருப்பதால், ஏதோ ஒரு தீர்மானம் பாமர மக்கள் ஏமாறும்படி போட்டு, சட்டசபைக்குப் போய் உத்தியோகம் பெறவேண்டியதே அதன் தத்துவம். ஆனால் மதுரை மகாநாட்டிற்கு வந்திருந்த 5000 பிரதிநிதிகளில் உத்தியோகத் திற்கு லாயக்கானவர்களோ சுமார் ஒரு நூறு பேர்கள் கூட இருக்க மாட்டார்கள். மற்ற 4900 பேரும் தங்கள் நாட்டினுடையவும், சமூகத்தினுடையவும் சுயமரியாதையைக் காப்பாற்ற வந்தவர்கள். ஆதலால் இவர்கள் இனி சும்மா இருக்காமல் இத் திட்டங்களை நிறைவேற்ற முயலவேண்டும். சென்னைத் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களின் யோக்கியதை இம்மகாநாட்டில் நன்றாய் விளங்கிவிட்டது. ஆதலால் அவர்களை நம்புவதில் முழுப் பலனையும் அடைந்து விடமுடியாது. ஆங்காங்கு ஜில்லா, தாலூக்கா, கிராம வாரியாக கிளைச் சபைகளை ஏற்பாடு செய்வதும் பிரசாரம் செய்வதும், நிர்மாண திட்டங்களை நிறைவேற்றுவதும் பொதுமக்களுடைய வேலையாய் விட்டது. சீக்கிரத்தில் வேலை செய்வோரின் கூட்டம் என்பதாக ஒரு கூட்டம் கூட்டி ஜனவரி மாதத்திற்குள்ளாகவே இத்திட்டங்களை நிறைவேற்றத் தகுந்த வழிகளைக் காணவேண்டும்.

இக்கூட்டத்தின் அங்கத்தினர்கள் கூடியவரையில் எந்தத் தேர்தலுக்கும் நிற்கக்கூடாதவர்களாகவும் தங்களது முழு நேரத்தையும் இதற்கே செலவிடுபவர்களாகவும் இருக்க வேண்டும். 12 பேருக்கு குறையாமல், மாதம் 30 ரூபாய்க்கு அதிகப்படாத சம்பளமும், 10 ரூபாய்க்கு அதிகப்படாத படியும் கொடுத்து ஜில்லா சுற்றுப்பிரயாண அமைப்புக்காரரையும் மாதம் 50 ரூபாய்க்கு அதிகமில்லாத சம்பளமும் 25 ரூபாய்க்கு அதிகமில்லாத படியும் கொடுத்து 3 மண்டலாதிபதிகளை தணிக்கையாளராகவும் நியமித்து வேலை துவங்க வேண்டும். ஆக இந்த செலவுகளுக்கும் சில்லரைச் செலவுகளுக்குமாக மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் குறைந்தது மூன்று மாதத்திற்காவது தமிழ் நாட்டிற்கு 3000 ரூபாய் வேண்டும். இந்தப் பணத்தை யாராவது சிலரோ ஒருவரோ தருவதாக, இந்த இரண்டு வாரத்திற்குள் ஸ்ரீமான் மதுரை P.T. ராஜன் அவர்களுக்கு தங்களது பெயர்களையும் தொகைகளையும் அனுப்பி விட வேண்டும். அப்படிக்கு இயலாதவரை ஸ்ரீமான் P.T. ராஜன் 1000ரூபாயும் சவுந்திரபாண்டிய நாடார் 1000ரூபாயும், ஈ.வெ.ராமசாமி நாயக்கர் 500 ரூபாயும், ஸி.எஸ். ரத்தின சபாபதி முதலியார் 500 ரூபாயுமாகப் போட்டுக் கொண்டு ஜனவரி 15 உ யில் கூட்டம் கோவையிலோ, மதுரையிலோ போட்டு காரியங்கள் துவக்க வேண்டும். அப்படிக்கு இல்லாதவரை நமது மகாநாடு என்பது நமது எதிரிகள் சொல்வது போல்தான் என்று பிறர் நினைக்க இடமுண்டாகிவிடும். மகாத்மா காந்தியவர்கள் ஏப்ரல் மத்தியில் நமது நாட்டிற்கு விஜயம் செய்யப்போகிறார். அக்காலத்தில் பார்ப்பனரல்லாதார் இயக்கம்



RangaRakes tamilnavarasam.com

மக்களின் சுயமரியாதைக்கும் பொருளாதார நிலைமைக்கும் வேலை செய்ததா? அல்லது காங்கிரஸ் வேலை செய்ததா? என்பதை அறியச் செய்து, கதரைப் பரப்ப நாம் எவ்வளவு தூரம் பிரசாரம் செய்திருக்கிறோம் என்பதைக் காட்டி நமது இயக்கத்திற்கு மகாத்மாவின் ஆசியைப் பெற வேண்டும். மகாத்மாவின் அபிப்பிராயங்கள் வர வர தாக்ஷண்ணியத்திற்கு கட்டுப் படக்கூடியதாயிருந்தாலும் அதுவும் பெரியோர் குணத்திலொன்றாதலால், மகாத்மாவின் ஆசி நமக்கு இருப்பதென்பது நமது சுயமரியாதை இயக்கத்திற்கு எவ்வளவோ மேன்மையை உண்டாக்கும். ஆதலால், மகாநாட்டுக்கு வந்து போனவர்களும் மகாநாட்டு அனுதாபிகளும் இதைக் கவனித்து உடனே தாங்கள் செய்ய வேண்டியதைச் செய்வதுடன் முதல் காரியமாக வரப்போகும் பொங்கல் பண்டிகைக்கு எல்லோரும் கதரையே வாங்கி உடுத்த வேண்டும் என்றும் தங்கள் சிப்பந்திகளிடையிலும் வேலைக்காரர்களிடையிலும் தங்கள் ஆதிக்கத்தில் உள்ள ஸ்தாபனங்களின் இடையிலும் கதரைப் பரப்ப வேண்டும். அதிலில்லாமல் வாயில் பேசுவ தானது பார்ப்பன அரசியல் புரட்டுக்கு இளைத்ததாகாதென்று கண்டிப்பாய் தெரிவித்துக் கொள்ளு கிறோம்.

*குறிப்பு : இம்மாதம் 1 ஆம் தேதி முதல் கதரின் விலையும் கஜம் ஒன்றுக்கு 9 பைசா வீதம் குறைவு பட்டிருக்கிறது.*

**குடி அரசு - தலையங்கம் - 02.01.1927**




# சுவாமி சிரத்தானந்தர்

சுவாமி சிரத்தானந்தர் என்னும் பெரியாரை உலகம் முழுதும் தெரியும். இவர் தேசத்திற்காகவும், சமூகத்திற்காகவும் ஒதுக்கப்பட்டவர்களின் உயர் முன்னேற்றத்திற்காகவும் தனது தொழில், செல்வம், குடும்பம் முதலிய வற்றைத் தியாகம் செய்து தனது ஜீவிதத்தின் பெரும்பான்மையான பாகத் தையும் சந்நியாசியாகவிருந்தே தான் எடுத்துக்கொண்ட காரியத்திற்காக அஞ்சாநெஞ்சத்தோடும், இளையா ஊக்கத்தோடும் தொண்டாற்றினார். இவர் ஒரு முஸ்லீமால் படுகொலையுண்டிறந்தது ஒவ்வொரு மனிதனுடைய மனதையும் பெரும் துன்பத்திற்குள்ளாகுமென்பதற்கு சிறிதேனும் ஐய மில்லை. சுவாமிகளது மரணத்தால் இந்தியா தனது உண்மை புத்திரர்களில் ஒருவரை இழந்ததென்று சொல்வது மிகையாகாது. ஆயினும் இதை ஆராயு மிடத்து இதுவும் ஒரு நன்மைக்கென்றே கொள்ள நேரும். ஏனெனில் பிறப் பெய்திய ஒவ்வொரு மனிதனும் இறக்க வேண்டியதவசியமே. அங்ஙனம் சுவாமிகள் சாதாரணமாக ஏதோ ஒரு நோயின் பேரால் இறந்திருப்பாரே யாயின் இன்றிருக்கும் உணர்ச்சிக்கும் அவரது தொண்டில் மக்களுக்கிருக்கும் ஊக்கத்திற்கு இத்தனை ஏதுவில்லாமலிருக்கும். இப்படுகொலையினால் அனாவசியமாய் ஒரு கூட்டத்திற்கு பழியேற்பட நேரிட்டதேயன்றி சுவாமி களுக்கேனும் அவர் கொண்ட தொண்டிற்கேனும் யாதொரு குறையும் வந்த தாக எண்ண இடமில்லை. அவர் தான் கொண்ட காரியத்திற்காக இரத்தம் சிந்தி, உயிர் துறந்து, தானும் தானெடுத்த காரியமும் உலகினின்று மறையா வண்ணம் செய்திருக்கிறார். ஏசுநாதர் சிலுவையிலறையப் படாதிருந்தால் இன்று அவருக்கித்தனை பக்தர்கள் இருக்க மாட்டார்கள். அது போலவே சுவாமிகளும் அழியாப் புகழ் பெற்று விட்டார். ஆதலால் அவரது உண்மை பக்தர்களுக்கிடையில் இக்கொலைக்காகப் பரபரப்பும் கிளர்ச்சியும் ஒரு சிறிதும் வேண்டியதில்லை. அவர்களுக்கு முன்னிருந்ததைவிட பன்மடங்கு சுவாமிகள் காரியத்தில் அபிமானம் கொள்ள அவகாசம் கிடைத்திருக்கிறது. இத்தருணத்தை வீண் போக்காது அப்பெரியார் விட்டுப்போன காரியத்தை சிரமேற்கொண்டு வினையாற்ற வேண்டியதே கடனாகும். தான் கொண்ட கொள்கைக்காக கடைசி வரை கொஞ்சமும் தளராமல் உழைத்து வந்து அதற் காகவே தனது உயிரையும் துறந்த சுவாமிகளது ஆத்மா சாந்தி அடைவதாக.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 02.01.1927**



RangaRakes tamilnavarasam.com




[வாரப்பதிப்பு]

உண்மையான கதர்

காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்டக் கற்றுக் கொள்ளலாம்

கதர்! கதர்!! கதர்!!!

சுத்த கதர் ஜவுளிகள்.

கதர் வியாபாரிகளுக்கு அறிக்கை



# இனிச் செய்ய வேண்டிய வேலை

மதுரை மகாநாட்டைப் பற்றிப் பாராட்டுக் கடிதங்கள் வந்த வண்ண மாயிருக்கின்றன. மகாநாட்டிலிருந்து பார்ப்பனரல்லாத மக்கள் உணர்ச்சி யுடன் இருக்கிறார்கள் என்பதும் சுயமரியாதை தாகமுள்ளவர்களாக இருக்கி றார்கள் என்பதும், பார்ப்பனர்களின் ஆயுதமான போலிச் சுயராஜ்ஜிய மாயை யில் விழுந்து தங்கள் சமூகத்திற்குக் கேடு சூழும் கோஷ்டியில் சிக்கவில்லை என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கிவிட்டது. ஆனால் இந்த விளக்கம் மாத்திரம் போதுமா? இதனாலேயே நாம் சுயமரியாதை அடைந்து விட்டோமா? என்பதை யோசிக்க வேண்டும். சமீபத்தில் நடந்த தேர்தல்களில் பார்ப்பனர்களின் சூழ்ச்சியினாலும், விஷமப் பிரசாரத்தினாலும் சுவாதீன புத்தியுள்ள பல பார்ப்பனரல்லாதார் தோல்வியுற்று விட்ட காரணத்தாலும், சுயராஜ்ஜியக் கட்சி என்னும் பார்ப்பனக் கட்சியின் புரட்டுகளைக் கண்டு சகியாததாலும், பார்ப்பன ஆதிக்கத்திற்காக உள்ள காங்கிரஸ் சபையினிடம் உள்ள அதிருப்தியினாலும் திடீரென்று மதுரை மகாநாட்டிற்கு இவ்வளவு பிரதிநிதிகள் வரவும் உற்சாகம் காட்டவும் முடிந்ததே அல்லாமல் முழுதும் ஏற்கனவே ஏற்பட்டுள்ள உற்சாகமென்றாவது நிரந்தரமாயிருக்கக்கூடிய உற்சாக மென்றாவது சொல்லிவிடமுடியாது என்றே நினைக்கிறோம். நமது மக்கள் பார்ப்பன சூழ்ச்சியில் விழுகாதிருக்க வேண்டுமானாலும், நமது மக்க ளின் முன்னேற்றத்திற்கு அநுகூலமான மகாநாட்டுத் திட்டங்கள் நிறைவேற் றப்பட வேண்டுமானாலும் தலைவர்களும் தொண்டர்களும் தொடர்ந்து வேலை செய்ய வேண்டியது மிகவும் அவசியமானதாகும். பிரசாரங்களைச் செய்ய வேண்டியதைப் பற்றியும், அமைப்பு விஷயங்களைப் பற்றியும் சென்ற வாரத்தில் எழுதி இருக்கிறோம். அதைப்பற்றி இவ்வாரத்திலும் எழுத வேண்டியதில்லை. தவிர மகாநாட்டிற்கு ஒவ்வொரு ஜில்லா தாலூகா விலிருந்தும் தக்க பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகள் வந்து போயிருக்கிறார் களானதால் அவர்கள் தங்கள் தங்கள் ஜில்லாவிலும் தாலூகாவிலும் ஜில்லா தாலூகா மகாநாடுகள் கூட்ட வேண்டும். அதை ஆதாரமாக வைத்தே ஜில்லா முழுவதும் அமைப்புகளை ஏற்படுத்தச் சவுகரியமாயிருக்கும். அந் தந்த இடங்களில் இப்போது நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்தார் இந்த மகாநாட்டு வேலையை எடுத்துக் கொண்டு ஆங்காங்குள்ள பெரியோர்களைப் பிடித்து மகாநாட்டை கூட்டுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். திருநெல்வேலி, திண்டுக்கல், திருச்சி, தஞ்சை, தென்னாற்



RangaRakes
tamilnavarasam.com

காடு, வடஆற்காடு, சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களில் இப்போது அவசரமாய் ஜில்லா மகாநாடுகள் கூட்ட ஏற்பாடு செய்யவேண்டும். இப் போதே அந்தந்த ஜில்லாக்களில் இருக்கும் தென்னிந்திய நல உரிமைச்சங்க கிளை ஸ்தாபனத் தலைவர்கள் இதை உடனே கவனிக்க வேண்டுமாய் வற்புறுத்துகிறோம். தேர்தல்களில் நிற்பதும் தேர்தல்களுக்குச் செலவு செய்வதும் தேர்தல்களின்போது ஊர் ஊராய்ச் சென்று ஓட்டர்களை ஏமாற்றுவதுமே தென்னிந்தியநலஉரிமைச் சங்கத்தார் வேலையானால் இந்தச் சங்கத்தைவிட காங்கிரஸே மேலானது என்று சொல்லுவோம். உண்மை யிலேயே பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதைக்கும், முன்னேற்றத் திற்கும் உழைப்பதானால் குறைந்தது இந்த மாதத்திலேயே இரண்டு மூன்று ஜில்லா மஹாநாடுகளாவது கூட்ட வேண்டுமென்று விரும்புகிறோம். சேலம், கோயமுத்தூர், திருச்சி ஆகிய மூன்று ஜில்லாக்காரர்களுக்கும் இந்த மாதத்தில் கூட்ட ஆக்ஷேபனை இருக்காது என்றே நினைக்கிறோம். மற்றபடி அந்தந்த தாலூகாக்காரர்களுக்கும் கூட்ட வசதி இல்லாமற் போகவில்லை. ஆதலால் இந்த மூன்று மாதத்திற்குள் இந்த வேலைமுடிந்து, கதர், பார்ப்பன ஆதிக்கப் புரோகிதத்தை ஒழித்தல், தீண்டாமைவிலக்கு, மதுவிலக்கு இவைகளில் தக்க முன்னேற்றம் ஏற்படும்படி செய்யவேண்டும். இதில் பார்ப்பனரல்லாத எவ்வித ராஜீய அபிப்பிராய பேதமுடையவர்களாயிருந்தாலும் இந்த மேற்கண்ட கொள்கை களை ஒப்புக் கொள்ளக்கூடிய யாரையும் அக்கிராசனராக அழைப்பதில் ஒன்றும் குற்றமில்லை என்றே நினைக்கிறோம். வீண் செலவும் ஆடம்பரமும் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை என்பதையும் ஞாபக மூட்டுகிறோம். மகாநாட்டுப் பிரதிநிதிகள் எல்லோரும் கதர் உடுத்த வேண்டும் என்கிற ஒரு நிபந்தனையே மதுரை மகாநாட்டில் நிறைவேறிய கதர் திட்டத்திற்கு மிகுதியும் துணைப்போவதாகும். அன்றியும் கிராமங்களில் தொழிலுமற்றுச் சுயமரியாதையுமற்று இரண்டு நாளைக்கு ஒருவேளைக் கஞ்சிக்கும் வகையற்றுப் பட்டினி கிடந்து தவிக்கும் பார்ப்பனரல்லாத ஏழை மக்களின் பசியைத் தீர்த்து, பட்டினிக்காக அவர்கள் இழக்க நேரிடும் கற்பையும், மனச்சாட்சியையும் காப்பாற்ற இது ஒரு ஒப்பற்ற சாதனமாகவும் இருக்கும். ஆதலால் கதரைப் பிரதிநிதிகளுக்குக் கட்டாயமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். தவிர வரப்போகும் பொங்கல் பண்டி கைக்கு எல்லாரும் கதரே உபயோகிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 09.01.1927**



# பொங்கல் வசூல்

**பார்ப்பனரல்லாத வாலிபர்களே!**

பொங்கல் தினங்களில் உண்டி மூலம் வீடு வீடாய்ச் சென்று பணம் வசூல் செய்யுங்கள்.

**பார்ப்பனரல்லாத பெரியோர்களே !**

வாலிபர்கள் உங்களைத் தேடி உண்டிகைக் கொண்டு வந்தால் இல்லை யென்று சொல்லாமல் உங்களுக்குத் தோன்றியதை உண்டியில் போடுங்கள். வசூலான தொகையை அந்தந்த ஜில்லா ஸ்தாபனங்களுக்கு தெரியப்படுத்தி அவர்கள் கட்டளைப்படி உபயோகப்படும்.

**குடி அரசு - அறிவிப்பு - 09.01.1927**



RangaRakes tamilnavarasam.com

# தஞ்சை ஜில்லா போர்டை பார்ப்பன அக்கிரஹாரமாக்கச் சூழ்ச்சி !

தஞ்சை ஜில்லா போர்டைப் பற்றி பார்ப்பனர்கள் எவ்வளவு தூரம் விஷமப் பிரசாரங்கள் செய்து வருகிறார்கள் என்பது பார்ப்பனப் பத்திரிகைகளைப் பார்ப்பவர்களுக்கு விளங்காமற் போகாது.

ஆனால், அதன் காரணம் என்ன என்பதை வெகு பேர்கள் அறியாமல், விஷமப் பிரசாரங்களை நம்பி ஏமாந்து போவார்கள் என்றே நினைக்கிறோம். தஞ்சை ஜில்லா போர்டுக்கு இப்பொழுது பிரசிடெண்டாய் இருக்கும் ஸ்ரீமான் பன்னீர் செல்வத்திற்கு முன் ஒரு அய்யங்கார் பார்ப்பனர் அதாவது ஸ்ரீமான் வி.கே. ராமாநுஜாச்சாரியார் என்பவர் பிரசிடெண்டாய் இருந்த காலத்தில் தஞ்சை ஜில்லா தாலூகா போர்டுகள் முழுதும் பார்ப்பன ஆதிக்கமாகவும், பார்ப்பனர்கள் அக்கிரஹாரமாகவும், பார்ப்பனர்கள் சாப்பிடும் அன்ன சத்திரமாகவும் இருந்து வந்தது யாவரும் அறிந்ததே. ஆனால், அந்தக் காலத்தில் பார்ப்பனப் பத்திரிகைகள் அவரைப் புகழ்ந்தது வானம் கூட ஓட்டையாய்ப் போயிருக்கும். ஸ்ரீமான் பன்னீர் செல்வம் வந்த பிறகு பார்ப்பன தனி ஆதிக்கத்தை ஒழித்து எல்லோருக்கும் பங்கு இருக்கும்படி செய்து பார்ப்பனரல்லாதாருக்கும் சௌகரியமுண்டாகும்படி செய்திருக்கிறார். உதாரணமாக ஒரத்தநாடு சத்திரத்திலுள்ள ஒரு தர்மப் பள்ளிக்கூடமானது (அதாவது சாப்பாடு போட்டு சம்பளமில்லாமல் சொல்லிக்கொடுக்கும் உயர்தரப் பள்ளிக்கூடம்) வெறும் பார்ப்பனப் பிள்ளைகளும் பார்ப்பன உபாத்தியாருமே அடைந்து இருக்கும்படி இருந்தது. இப்பொழுது எல்லா வகுப்புப் பிள்ளைகளும் சாப்பிடும் படியாகவும், உபாத்தியாயர்களாகும்படியாகவும் செய்யப்பட்டிருக்கிறது.

திருவையாற்றில் உள்ள சமஸ்கிருத காலேஜ் என்பது சாப்பாடும் போட்டு சமஸ்கிருதமும் சொல்லிக் கொடுக்கப்பட்டு வந்தது. இது முழுதும் அய்யங்கார் அக்கிரஹாரமாகவும் அய்யங்கார் பிள்ளைகள் சாப்பிடும் தர்ம சத்திரமாகவும் இருந்து வந்தது. இப்போது கொஞ்சம் பாகம் பார்ப்பனரல்லாத பிள்ளைகள் சாப்பிடவும், அய்யங்கார் அல்லாத பார்ப்பன உபாத்தியாயர்கள் பிழைக்கவுமாய் இருக்கிறது. மற்றும் பல பெண் பள்ளிக்கூடங்களும், பல சத்திரங்களும், பல உத்தியோகங்களும், பார்ப்பனரல்லாதாரும் பிழைக்கும்படி செய்யப்பட்டிருப்பதால் பார்ப்பனர்கள் ஒரே கூச்சல் போடுகிறார்கள். இதற்கேற்றார் போல், ராவணனைக் கொன்று விபீஷணனுக்கு பட்டம் தருவதாய் ராமன் வாக்களித்து ஆட்களைச் சேர்த்துக் கொண்டது போல் இங்கும் சில விபீஷணர்களுக்கு ஜில்லா போர்டு பிரசிடெண்ட் பட்டம் கட்டுவதாய் பார்ப்பனர்கள் வாக்குறுதி கொடுத்து அவர்களையும் சேர்த்துக்கொண்டு அவர்களது உதவியால் ஸ்ரீமான் பன்னீர் செல்வத்தை ஒழித்து அய்யங்கார் ஆதிக்கத்தில் இருந்ததுபோல் தஞ்சை ஜில்லா போர்டையும் தாலூகா போர்டுகளையும் பார்ப்பன அக்கிரஹாரமும் அன்ன சத்திரமும் ஆக்கப் பார்க்கிறார்கள். மந்திரியும் இவர்களால் ஏமாற்றப்பட்டுப்போவார் போலவே காண்கிறது. இதற்கேற்ற விபீஷணர்கள் பலரும் பட்டத்திற்கு எதிர்பார்த்து தலையை நீட்டிக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது. பாமர ஜனங்கள் பைத்தியக்காரராயிருக்கும் வரை பார்ப்பன ஆதிக்கத்திற்கு யோகம்தான் .

**குடி அரசு - கட்டுரை - 09.01.1927**



RangaRakes

tamilnavarasam.com

# நல்ல இடி

சேலம் பார்ப்பனருக்கும் அவர்களது வால் பிடித்துத் திரிபவர்களுக்கும் நமது முதல் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் நல்ல இடி கொடுத்ததாக தெரிந்து நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். ஆனாலும் காண்டா மிருகத்தோல் படைத்த அப்பார்ப்பனருக்கும் அவர்களது அடிமைகளுக்கும் அது கொஞ்சமாவது சொரணை உண்டாகுமா என்பதுதான் நமது கேள்வி?

அதாவது கனம் சுப்பராயனவர்களை சேலம் பார்ப்பனர்கள் தங்கள் டிக்கட் பாக்கட்டில் போடுவதற்காக "லிட்டரரி சொசைட்டி" என்கிற ஒரு பார்ப்பனக் கூட்ட நிலையத்தில் ஒரு கூட்டம் கூட்டி அவரை வானமளாவப் புகழ்ந்தும் இதற்கு முன் மந்திரியாய் இருந்தவர்களை ஆசைதீர வைதும் பேசினார்களாம். இதற்குப் பதிலளிக்குமுகத்தான் கனம் சுப்பராயன் இம்மாதிரி ஒருவரை, உத்தியோகம்விட்டுப் போனபின் வைவது இழிவு என்றும், நாளைக்கு என்னையும் இப்படித்தான் வைவீர்கள் என்றும், இப்படிச் செய்வது உங்களுக்கு யோக்கியதை அல்ல வென்றும் சொன்னாராம். வைததில் பெருமை கொண்டவர்களும் வைததைக் கேட்டு ஆனந்தம் கொண்டவர்களும் வெட்கித் தலைகுனிந்தார்களாம். இதோடு இந்தப் புத்தியை விட்டு விடுவார்களா?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.01.1927**



# பார்ப்பனர் விஷமப் பிரசாரம்

மதுரை முனிசிபல் சேர்மனுக்கு *மீ* 1க்கு ரூ. 900 சம்பளம் கவுன்சிலர்களால் நிர்ணயிக்கப்பட்டவுடன் அச்சேர்மென் ஒரு பார்ப்பனரல்லாதாராயிருப்பதோடு பார்ப்பனர்களின் தாளத்திற்குத்தகுந்தபடி ஆட மறுப்பவராயிருப்பதால் நமது பார்ப்பனர்கள் ஒப்பாரி வைத்தழுது கூச்சல் போட்டு விஷமப் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். மதுரை முனிசிபாலிட்டியானது சுமார் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகளும் லக்ஷத்து நாற்பதினாயிரம் ஜனத்தொகையும், சுமார் 3. 4 லக்ஷ ரூபாய் வரும்படிக்கு மேற்பட்டதுமான பெரிய முனிசிபாலிட்டி. அதன் சேர்மென் ஸ்ரீமான் ஆர்.எஸ். நாயுடு பாரிஸ்டர் பரீக்ஷை தேரினவரும் பாரம்பரியமாய் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவருமான ஒரு கண்ணியமான கனவான். மதுரை மகா ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு அவரது வேலையையும் மதுரைப் பட்டணத்தின் நிலைமையையும் உத்தேசித்து பெரும்பான்மையான கவுன்சிலர்களால் *மீ* 1க்கு ரூ. 900 கொடுக்க வேண்டும் என்று அபிப்பிராயப்பட்டு அந்தப்படி தீர்மானித்து இருக்கிறார்கள். இதனால் பொறாமை கொண்ட பார்ப்பனர்களிற் சிலர் தங்கள் ஜாதிப் புத்திக்கு ஏற்ப "பணம் போச்சே" "பணம் போச்சே" என்று மாரடித்துக் கொள்ளுவதின் அர்த்தமென்ன? இந்தப் பார்ப்பனர்கள் தங்களும் தங்களது சிஷ்யர்களுடனும் வெளியேறினதாகச் சொல்லும் வெட்கங் கெட்ட வெளியேற்றத்தின் அர்த்தமென்ன? இந்தப் பார்ப்பனர்களுக்கும் அவரது கூட்டத்தாருக்கும் உண்மையிலேயே பணம் நஷ்டமாகிறதே என்கிற கவலை இருக்குமானால் மாடு மேய்க்கக் கூடத்தெரியாத விளையாட்டுப் பிள்ளைகள் எல்லாம் B.A,B.L., என்கிறதாக பேர் வைத்துக்கொண்டு ஒரு பலகையை போட்டுக்கொண்டு ஜட்ஜ்,முனிசீப் மேஜிஸ்திரேட் இவர்களை சரிப்படுத்திக் கொண்டு *மீ* 500, 1000, 5000, 10000 என்பதாக ஏழைகளின் தலையிலும் முட்டாள்களின் தலையிலும் கை வைத்து கொள்ளை அடித்து நாட்டைப் பாழாக்கி "அந்நிய அக்கிரம ஆட்சிக்கு" ஒற்றர்களாயிருக்கிறார்களே அதைப்பற்றி இவர்கள் கவனிக்கக் கூடாதா? சராசரி மாதத்தில் நாலுநாள் வேலைகூட இல்லாத வெறும் வேலையான சட்டசபைத்தலைவர் உத்தியோகத்திற்கு *மீ* 1 க்கு ரூ. 2000, 3000, சம்பளம் வாங்குகிறார்களே அதுவும் இந்த வருஷம் பார்ப்பனர் கட்சியான சுயராஜ்ஜியக் கட்சியாரே தங்களுடைய பக்த கோடிகளில் ஒருவரை நியமித்தார்களே அதில் ஏன் *மீ* ரூ.1900 குறைத்துக் கொள்ளக்



RangaRakes
tamilnavarasam.com

கூடாது? இந்த 2000 ரூபாய்க்கு வேலை என்ன இருக்கிறது? 128 மெம்பர்களில் இந்த மெம்பரும் ஒருவர் தானே; அவர்களுக்குள்ள மெனக்கேடு தானே இவருக்கும்;. இதைப்பற்றி எவருக்காவது "பணம் போச்சே, பணம் போச்சோ" என்கிற விசாரமிருக்கிறதா? மற்றபடி முனிசிபாலிட்டிகளில் தான் இவர்க ளுக்கு அதிக கவலை என்று வைத்துக் கொண்டால் **ஈரோடு முனிசிபாலிட்டி யில்** உள்ள சேர்மன் முனிசிபல் சொத்தைக் கொள்ளை அடிப்பதும் ரிகார்டுகளைத் திருத்தி பணம் திருடுவதும், கவுன்ஸிலில் பாசாகாத பொய்த் தீர்மானங்களை மினிட் புஸ்தகத்தை வீட்டிற்குக் கொண்டுபோய் புகுத்தி முனிசிபல் சொத்தை அனுபவிப்பதும் தனது சகாக்களான கவுன்சிலர் களுக்கும்முனிசிபல் சொத்தை வாரி இறைப்பதுமான அநேக அக்கிரமங்கள் செய்யப்படுகின்றன. இதை எந்தப் பார்ப்பனராவது அவர்களது கட்சியாவது கவனிக்கின்றதா? எந்தப் பார்ப்பனப் பத்திரிக்கையாவது பார்ப்பன நிரூபங் களாவது கண்டித்ததா? அல்லது மந்திரிகளாவது கவனிக்கின்றார்களா? ஏன் கவனிப்பதில்லை என்று பார்த்தால் இத்திருடர்கள் பார்ப்பனரின் தாளத்திற்குத் தகுந்த படி ஆடிவிடுகிறார்கள். பார்ப்பன தேர்தலுக்கு வேலை செய்து வரு கிறார்கள். அதோடு சில வெள்ளைக்காரருக்கும் பங்கு கொடுத்து விடுகிறார் கள். வெள்ளைக்காரர்கள் தயவும் பார்ப்பனர்கள் தயவும் இருந்து விட்டால் உலகத்தில் என்ன அக்கிரமம் செய்தாலும் கேள்வி இல்லாமற் போய் விடுகிறது. மந்திரிகளுக்கோ பார்ப்பன சிபார்சுகள் வந்துவிடுகிறது. அவர் களும் தங்களது வாழ்வு நீர்மேற்குமிழியாயிருப்பதால் பயப்படுகிறார்கள். இப்படி இன்னமும் எத்தனையோ இலாகாக்களில் உபயோகமில்லாமல் அவசியமுமில்லாமல் எத்தனையோ ஆட்கள் இருந்துகொண்டு *மீ* 1000, 5000 கொள்ளை அடிப்பதற்குச் சமானமாகவும் மற்றும் பல பெயரினாலும் கண்ணியமற்ற வழிகளில் தின்கிறதைப்பற்றி இந்தப் பார்ப்பனருக்கு ஒரு சிறிதும் கவலை இல்லாமல் வீண் வேஷம் போடுவதை ஜனங்கள் நம்பி ஏமாந்து போகிறார்கள். அப்படி இந்தப் பார்ப்பனருக்கு உண்மையில் அக்கரை இருக்குமானால் மந்திரிகள் சம்பளத்தை *மீ* 1000 ரூபாய் ஆக்கினால் ஆக்க தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்ற முயற்சித்தால் இவர்கள் யோக்கி யர்கள் தான். மதுரை சேர்மெனை விட இந்த மந்திரிகளும் சட்டசபைத் தலைவரும் எந்த விதத்திலும் அதிக யோக்கியதாம்சமுடையவர்கள் அல்ல என்பதனை சிறு பிள்ளைகள் முதல் யாரும் ஒப்புக் கொள்ளக் கூடியது தான். இதையெல்லாம் விட்டுவிட்டு யாராவது தங்களுக்கு அடிமைப்படவில்லை யானால் அதற்காக கூப்பாடு போட்டு ஜனங்களை ஏமாற்றுவதென்பதை பார்ப்பனர்களின் விஷமப் பிரசாரம் என்பதல்லாமல் வேறு என்னவென்று சொல்வது?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.01.1927**



# மகாநாட்டு உபந்நியாசங்களும், பார்ப்பனரல்லார் பத்திரிகைகளும்

இம்மாதம் நடந்த மகாநாடுகளில் உபசரணை அக்கிராசனர். மகா நாட்டுத் தலைவர் ஆகியவர்களின் பிரசங்கங்களைப்பற்றி பார்ப்பனப் பத்திரிகைகள் தங்கள் ஆதிக்கத்திற்கு அநுகூலமாய் பேசியவற்றையும் பேசினவர்களையும் புகழ்ந்தும் அதற்கு விரோதமாய் பேசியவர்களை இகழ்ந்தும் எழுதியிருக்கின்றன என்றாலும் பார்ப்பனரல்லாதார் பத்திரிகை களில் பெரும்பாலும் தங்களுக்கென கொள்கையும் சுயமரியாதை உணர்ச்சியும் இல்லாமல் அவற்றையே பின்பற்றித் திரிகின்றன. இதற்காக பொதுமக்கள் பணமும் நேரமும் எவ்வளவு வீணாய்போகிறதென்பதைக் கவனிப்பவர்களுக்கு துக்கம் ஏற்படாமலிருக்க முடியாது.

சிலபத்திரிகைகள் "பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுத் தலைவர் ஒத்துழைப்பைப்பற்றி பேசிவிட்டார். ஆதலால் பார்ப்பனரல்லாதாருக்கு அவமானம் ஏற்பட்டுவிட்டது" என்பதாக அளவுக்கு மீறி துக்கப் படுவதாகவும் வெட்கப்படுவதாகவும் வேஷம் போட்டிருக்கின்றன. ஆனால் பார்ப்பனர்களில் சிலர் அதாவது மாதம் 5000, 10000 சம்பளம் வாங்கியவர் களும் தங்கள் வீட்டு பூனைக்குட்டிக்கு முதல் சர்க்காரில் மாதம் 500, 1000, 2000, 3000 உத்தியோகம் பெற்று கொள்ளை அடிக்கிறவர்களும் ஒன்று சேர்ந்து மிதவாத மகாநாடு என்பதாகக் கூட்டி "சர்க்காரோடு ஒத்துழைக்க வேண்டும். தங்கள் பிள்ளை குட்டிகளுக்கும் சர்க்கார் பெயர் வைக்க வேண்டும்" என்றும் பேசிக் கொண்டதைப் பற்றி இந்த ரோஷமுள்ள, தேசாபிமானமுள்ள, சுயமரியாதையுள்ள பார்ப்பனரல்லாதார் பத்திரிக்கைகள் ஒன்றும் எழுதவேயில்லை என்ற இவர்களின் தேசாபிமானத்தையும் சுயமரியாதையையும் என்னவென்று சொல்வது என்பது நமக்குத் தெரியவில்லை.

இதுவரை பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் மிதவாதப் பார்ப்பனர் களைப் பின்பற்றி ராஜ விசுவாசத் தீர்மானம் என்பதாக வருஷாவருஷம் பல்லவி பாடிவந்த ஒரு தீர்மானத்தை இவ்வருஷம் தீர்மானிக்கப்படவில்லை என்பதை ஒரு பார்ப்பனரல்லாத "தேசீயவாதியும்" அவர்களது பத்திரிகையும்



RangaRakes
tamilnavarasam.com

பாராட்டவே இல்லை. நம் கூட்டத்திலேயே இப்படி ஆட்கள் மலிந்திருக்கும் போது இந்த சமூகம் சுயமரியாதை பெறுவது சுலபமான காரியமாவென்று கேட்கிறோம்? தவிர, அஸ்ஸாம் காங்கிரசின் உபசரணை அக்கிராசனரின் பிரசங்கமானது எவ்வளவு கேவலமான தென்றும் பார்ப்பனரல்லாதாருக்கு எவ்வளவு இழிவையும் அவமானத்தையும் கொடுக்கத்தக்கதென்பதையும் ஒரு பார்ப்பனரல்லாத "தேசீய பத்திரிகை"யாவது கவனித்ததாகச் சொல்ல முடியவில்லை. உபசரணை அக்கிராசனர் ஸ்ரீ பூக்கன் ஒரு பார்ப்பனர். அதாவது ஆரியரென்று சொல்லிக்கொள்ளுபவர். அவர் தனது பிரசங்கத்தில் ஆரியரல்லாதார் (பார்ப்பனரல்லாதார்) ஆகிய நம்மைப்பற்றி கூறியிருக்கும் இழி மொழிகளும், நம்மை அசுரரென்று குறிப்பிட்டிருப்பதும், நமது அரசர்களை அசுர அரசர்கள் என்று குறிப்பிட்டிருப்பதும், நமது கலாஞானம் வித்தை பண்டை வழக்க ஒழுக்கம் நமது நாகரீகம் முதலியவைகளை இழிவுபடுத்தி இருப்பதும், அவற்றைத் தாங்கள் ஒழித்ததையே தங்களது பெருமையாகக் குறிப்பிட்டிருப்பதும், சங்கராச்சாரியார், மத்துவாச்சாரியார் முதலிய அரிய மதஸ்தாபகர்கள் நமது கலை, பண்டைய ஒழுக்கம், நடையுடை பாவனை, நாகரீகம் முதலியவைகளை அழித்து வெற்றிபெற்றதையும், பார்ப்பன ஆதிக்கம் வேரூன்றினதையுமே பெருமையாகப் பேசியிருக்கிறார். "தமிழ்நாடு அரசியல்" மகாநாட்டின் அக்கிராசனர் ஸ்ரீமான் கே.வி. ரங்கசாமி அய்யங்காரும் தனது அக்கிராசனப் பிரசங்கத்தில் இதேமாதிரியாகவே பார்ப்பனரை உயர்த்தியும் பார்ப்பனரல்லாதாரை இழிவுபடுத்தியுமே பேசியிருக்கிறார். இதுகள் ஒன்றும் நமது "தேசீய பத்திரிகை"களுக்குத் தெரிவதில்லை. பார்ப்பனரல்லாதார் எதுபேசினாலும், எழுதினாலும் குற்றமாகவே தோன்றுவதும், பார்ப்பனர் நம்மை எவ்வளவு இழிவாகவும் தாழ்வாகவும் பேசினாலும் அது தேசீயமாகத்தோன்றுவதும் தான் பார்ப்பனரல்லாத் தேசீயவாதிகளுக்கும் அவர்களது பத்திரிகைகளுக்கும் ஜன்மக் குணமாய் போய்விட்டது. வெட்கம்! வெட்கம்!! இதைவிட வெட்கம்!!! என்ன?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.01.1927**



# பிறப்புரிமையும் அதன் தடைகளும்

## மனிதப்பிறவி

பிறப்புரிமை என்பது யாருடைய பிறப்புரிமை என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். நான் எடுத்துக்கொண்டது மனிதனுடைய பிறப்புரிமை என்பது தான். தடைகள் என்பன மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட தடைகளைத்தான் "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என்று பெரியோர்கள் சொன்னதாகச் சொல்வார்கள். நான் அதை ஒப்புக்கொள்ள முடியாததற்கு என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். "கொடுமை கொடுமை மனிதராகப் பிறப்பது மிகக் கொடுமை" என்பது எனது தாழ்மையான அபிப்ராயம். உலகில் உள்ள ஜீவகோடிகளில் எல்லாவற்றினும் மனிதப்பிறப்பே மிகத் தாழ்ந்த பிறப்பு என்பதும் மனிதராகப் பிறப்பது மிகவும் கொடியது என்பதும் மனிதனைப்போல் அடிமை, உலகில் வேறு ஜீவன்கள் இல்லை என்பதும் என் அபிப்பிராயம். மனிதனைத் தவிர மற்ற ஜீவகோடிகள் எவ்வளவோ சந்தோஷத்துடனும் அடிமை உணர்வில்லாமலும் சுதந்திரமாய் வாழ்வதை நாம் பார்க்கிறோம். அவைகளில் சிலவற்றிற்கு கஷ்டமும் அந்நியரால் கஷ்டப்படுத்தத் தக்க நிலைமையும் ஏற்பட்டு இருந்தாலும் மனிதனைப் போல் உணர்ந்து துக்கிக்கிற சக்தியாகிய கொடுமை அவற்றிற்கு இல்லை.

## பகுத்தறிவு

ஏனெனில், பகுத்தறிவு என்கிற ஒரு உபத்திரவம் கொடுக்கத் தக்க குணம் அவைகளுக்கில்லாததால்தான். உதாரணமாக குதிரைகளை ஜட்கா வண்டியில் பூட்டி ஒரு முரட்டு நூல் கயிற்றை மடித்துக்கொண்டு ஓட ஓட அதனின் மிகு மெல்லியதும் அதிக உபத்திரவம் கொடுக்கத்தக்க இடமுமாகிய மர்ம ஸ்தானத்தில் அடித்தாலும், நல்ல வாலிபமுள்ள காளை மாடுகளைக் கட்டித்தள்ளி அதன் விதர்களை மரக்கட்டையின் மேல் வைத்து மரக்கொட்டாப் பிடியினால் தண்ணீர் போல் கரையும்படி தட்டினாலும் அவைகளுக்கு கஷ்ட மாத்திரம் தோன்றுமே அல்லாமல் அதற்கு தன் பிறப்புரிமை இழந்து இப்படி கஷ்டமனுபவிக்கிறோமே என்கிற உணர்ச்சி இருக்காது. தவிரவும் அதற்கு மானம், அவமானம் என்கிற உணர்ச்சியும் இல்லை. இதோடு நாளைக்கு வேண்டுமே என்கிற கவலையும் இல்லை. எவ்வளவு கிடைத்



RangaRakes
tamilnavarasam.com

தாலும் போதாது என்கிற ஆசை என்னும் அடிமைத் தன்மையும் இல்லை. ஆகவே, மனிதன் மற்ற ஜீவராசிகளைவிட மானம், அவமானம் என்கிற உணர்ச்சியும், நாளைக்கு என்ன செய்வது என்கிற தன்னம்பிக்கையற்ற தன்மையும், எவ்வளவு கிடைத்தாலும் திருப்தியடைய முடியாத ஆசை என்னும் அடிமைத் தன்மையும், உடைத்தாயிருப்பதால் மனித ஜன்மமானது பிறவியிலேயே மிகுதியும், இழிவானதும் கொடுமையானதும் அடிமைத் தன்மை கொண்டதானதுமாய் இருக்கிறது என்பது நான் கொண்ட கருத்து.

## பிறப்புரிமை

இப்படிப்பட்ட மனித ஜீவனுக்கு எல்லாவற்றையும் விட முக்கியமான உணர்ச்சியாக மான, அவமானம் என்னும் தன்மானமாகிய சுயமரியாதை யைத்தான் பிறப்புரிமையாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் மனிதன், மானிடன் என்கிற பதங்களே மானத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட மொழிகள். ஆதலின், மனிதன் என்பவன் மானமுடையோன். எனவே, மனிதனுக்கு மனிதத் தன்மையைக் காட்டும் உரிமையுடையது மானம்தான். அத் தன்மானமாகிய சுயமரியாதையைத்தான் மனிதன் பிறப்பு ரிமையாக கொண்டிருக்கிறான். இது ஒவ்வொரு மனித ஜீவனுக்கும் உரிமை யுடையது. திலகர் பெருமான் “சுயராஜ்ஜியம் பிறப்புரிமை” என்று சொன்னா ரென்றால் அவரும் வருணாசிரம தர்மப் பார்ப்பனராதலால் பார்ப்பனர்க ளுக்கு பிறரை தாழ்வாய்க் கருதுவதே பிறப்புரிமை என்று நினைக்கிற முறையில் பொருளில்லாததும் அனுபவத்தில் பெரிதும் ஏமாற்றமே பொருளா கக் கொண்ட அரசியல் சம்பந்தமான சுயராஜ்ஜியம் என்னும் வார்த்தையை அவர் பிறப்புரிமைக்கு உபயோகிக்க வேண்டியவரானார். நாம் யாரையும் ஏமாற்றிப் பிழைக்க வேண்டியவர்கள் அல்லோம். உண்மையான மானிடத் தன்மையை அறிய வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆதலால், மனிதனுக்கு பிறப்புரிமை தன்மானம்தான்.

## தடைகள்

அதற்கு நம் முன் நிற்கும் தடைகள் என்ன என்பது இரண்டாவது விஷயம். தடைகள் இரண்டு விதம். ஒன்று இயற்கையாய் ஏற்பட்ட தடை. மற்றொன்று மற்றவர்களால் ஏற்பட்ட செயற்கைத் தடை.

## இயற்கைத்தடை

நாளைக்கு வேண்டும் என்று தேடும் தன்னம்பிக்கையற்றதன்மையும், எவ்வளவு கிடைத்தாலும் போதாது என்கிற ஆசை அடிமைத்தன்மையும் மனிதனின் பிறப்புரிமையாகிய தன்மானத்திற்கு இயற்கைத் தடைகள். இத் தடைகள் நீங்குவதென்பது முற்றும் துறந்த துறவிகளுக்கே முடியக் கூடியது.



## செயற்கைத்தடை

ஆதலால், நான் செயற்கைத் தடைகளைப் பற்றியே பேசப் போகிறேன். இந்தச் செயற்கைத் தடையென்பது ஒவ்வொரு தேசத்திற்கு ஒவ்வொரு மாதிரியாகக் காணப்படுகிறது. நமது நாட்டில் நமது பிறப்புரிமையாகிய சுயமரியாதைக்கு முக்கியமாய் இரண்டு விதமான செயற்கைத் தடைகளைச் சொல்லலாம். ஒன்று அரசியல் சம்பந்தமாக பார்ப்பனர் என்னும் வகுப்பார் நம்மை ஏமாற்றி நமது சுயமரியாதையைக் கெடுத்திருப்பது. மற்றொன்று அதே வகுப்பார் பரமார்த்திகத்திற்கு என்று மதம் என்கிற பெயரால் நம்மை ஏமாற்றி நிரந்திர அடிமையாக்கி நமது சுயமரியாதையை அடியோடு களைந்து வருவது. ஆகிய இந்த இரண்டு விஷயத்திலும் நமது மக்கள் ஏறக்குறைய எல்லோருமே - சிலர் ஏதாவது ஒன்றில் - சிலர் இரண்டிலும் மயங்கி அவ் வகுப்பாருக்கு அடிமையாகி மொத்தத்தில் சுயமரியாதையற்று இருக்கிறோம். அன்றியும் அவ்வகுப்பாரைப் பின்பற்றி நம்மவருட் சிலரும் வயிறு வளர்ப்ப தன் மூலமும் நமது சுயமரியாதைக்கு தடைகளாக இருக்கிறார்கள். ஆயினும், இந்த சமயத்தில் அரசியல் என்பதின் மூலமாயுள்ள தடையை விட்டு பரமார்த்தம் என்னும் பேரால் உண்டாக்கிய தடைகளைப் பற்றியே இங்கு பேச எண்ணி இருக்கிறேன்.

## “இந்து மதம்”

நமது ஆத்மார்த்தத்திற்கென்றும் பரமார்த்தத்திற்கென்றும் இந்து மதம் என்பதாக ஒரு கற்பனையை இப்பார்ப்பனர்கள் நமது தலையில் சுமத்தி இருக் கிறார்கள். இந்துமதம் என்கிற இவ்வார்த்தைக்குப் பொருளே காண முடிய வில்லை. இந்து என்கிற வார்த்தையே தமிழ் வார்த்தையல்ல என்பதை நீங்கள் முதலில் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். இது பார்ப்பன பாஷை (ஒலி). பார்ப்பன பாஷையிலாவது இந்து என்பதற்குப் பொருளுண்டா என்று பார்த்தால் மதத்திற்கு பொருத்தமானதாக ஒரு பொருளும் இல்லை. வேறு ஏதாவது பாஷையில் இருக்கிறதா என்று பார்த்தால் பார்சி பாஷையிலோ அரபி பாஷையிலோ இந்து என்பதற்கு திருடன் என்கிற பொருள்தான் இருக்கிறது. சிலர் சிந்து நதிக்கரையில் இருந்ததால் சிந்து என்பது இந்து என்பதாக மருவி அது ஒரு கூட்டத்தினருக்குபெயராகிப் பிறகு மதமாகி விட்டதாகவும் சொல்கிறார்கள். அது எப்படியோ இருக்கட்டும் இந்து மதம் என்றால் என்னவென்பதையாவது கவனிப்போம். கிறிஸ்துமதம் என்றால் கிறிஸ்து மகான் கட்டளையை அடிப்படையாகக்கொண்டது. மகமதிய மதம் என்றால் மகமது நபியின் கட்டளைகளை அடிப்படையாகக் கொண்டது. பௌத்தமதம் என்றால் புத்த பகவானின் கட்டளையை அடிப்படையாகக் கொண்டத. இது போல் மதம் என்று சொல்லக்கூடியவை ஒவ்வொன்றுக்கும் மத கர்த்தா இன்னார் அவரது கொள்கை கட்டளை இன்னது; இன்ன காலத்தில்



RangaRakes
tamilnavarasam.com

ஏற்பட்டது; என்கற உண்மைகள் உண்டு. அப்படி இந்து மதத்திற்கு யார் கர்த்தா? என்ன கொள்கை? எந்தக் காலம்? என்று சொல்வதற்கு என்ன ஆதாரமிருக்கிறது.

## வேதம்

"அநாதி காலம் தொட்டு இருப்பது வேதம்" "அது கடவுள்சொன்னது" என்று சொல்லி ஏய்த்து விடுவதாயிருந்தால் அது பொருத்தமாயிருக்க வேண்டாமா? அநாதியும் கடவுள் சொன்னதாயுமிருந்தால் கடவுளால் உண்டாக்கப்பட்ட எல்லா தேசத்திற்கும் கண்டத்திற்கும் இதுவே வேதமும் மதமுமாய் அல்லவா இருக்க வேண்டும். பல்வேறு மதங்கள் இருப்பானேன்? கடவுளால் சொல்லப்பட்ட வேதம் எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாயல்லவா இருக்க வேண்டும்? உலகத்தில் உள்ள கடவுளின் மக்களிலும் முக்காலே அரைக் கால்வாசிப் பேர்களுக்கு இவ்வேத சம்பந்தமே இல்லாமல் வேறு வேறு வேதம் இருப்பானேன்? இந்து மதஸ்தர்கள் என்று சொல்லிக் கொள்பவருக்குள்ளாகவே சிலர் இவ்வேதத்தைப் படித்தால் கண்ணைக் குத்த வேண்டியதும், சிலர் காதினால் கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டியதும் எதற்காக? கிறிஸ்தவருக்கும், மகமதியருக்கும் முறையே ஞாயிற்றுக் கிழமையும், வெள்ளிக் கிழமையும் மத சம்பந்தமான விசேஷ நாட்களாயிருக்கும் போது இந்துக்கள் என்பவர்களுக்குள்ளாகவே ஒருவருக்கு திங்கட் கிழமை, ஒருவருக்கு சனிக் கிழமை, ஒருவருக்கு வெள்ளிக் கிழமை இப்படியாக ஒரு வாரத்திலுள்ள 7 நாட்களுக்கும் வெவ்வேறு மனிதர்களாகவும் இன்னும் சிலருக்கு நாள்கள் போதாமலும் போவானேன்?

## மதக் குறி

மத சின்னங்கள் விஷயத்தில் ஒருவர் நாமம், ஒருவர் விபூதி, ஒருவர் கருப்பு பொட்டு, ஒருவர் சந்தனக் கீரல், ஒருவர் முத்திரை, ஒருவர் நெடுக்கு, ஒருவர் குறுக்கு இப்படியாக பல மாறுதல்கள் ஏற்படுவானேன்? இந்த மாறுதல்களோடு இதற்குக் காரணங்கள் ஆளுக்கு ஒரு விதமாய்ச் சொல்லுவானேன்? இந்த வித்தியாசங்களை சுவாமிகளுக்கும் புகுத்துவானேன்? நாமம் என்பது என்ன என்று கேட்டால் சிலர் சுவாமியின் பாதம் என்கிறார்கள். வெள்ளை நாமம் இரண்டும் பாதமானால் நடுவில் உள்ள சிவப்பு நாமத்திற்கு பெயர் என்ன? அப்படியே சுவாமியின் பாதம் என்பதாகவே ஒப்புக்கொள்ளுவோமேயானால் சுவாமியின் பாதத்தையே சுவாமியின் நெற்றியில் கொண்டு போய் வைப்பானேன் ? இந்த நாமத்திற்கும் பாதம்வைத்த நாமம், பாதமில்லாத நாமம் என்பதாக வடகலை தென்கலை என்று ஒருவருக்கொருவர் உதை போட்டுக் கொள்வானேன்? இவைகளில் ஒரு நாமம் 3 நாமம் பதினோரு நாமம் என்கிற கணக்குச் சண்டை எதற்கு? இந்துக்களிலேயே ஒரு சாரார் இந்த நாமத்தைப்பற்றி கேவலமாகப் பேசுவானேன்? இதுபோலவே விபூதி, பொட்டு,



முத்திரை இதுகளுக்குப் பல பல மாதிரி வியாக்கியானங்கள் இருப்பானேன்? இதை மற்ற தேசத்தாரும் ஒப்புக்கொள்ளாததேன்?

## சுவாமி

லிங்கத்தைப் பற்றியும் ஆவுடையாரைப் பற்றியும் பலவிதமாகப் பேசுவானேன்? நமது சுவாமிகளுடைய பெயரெல்லாம் குறிகளெல்லாம் நமது தமிழ் பாஷையில் இல்லாமல் அன்னிய பாஷையாகிய ஆரிய பாஷையில் இருப்பானேன்? சுவாமியை பூஜிப்பதற்கு நமக்கும் சுவாமிக்கும் மத்தியில் ஒரு அன்னியன் இருப்பானேன்? அன்னிய பாஷையில் மந்திரங்களும் தோத்திரங்களும் இருப்பானேன்? ஆளுக்கு ஒரு விதமாக பூசை செய்வானேன்? இதற்காக நாம் பணம் கொடுப்பானேன்? ஒவ்வொரு சுவாமிக்கும் ஒவ்வொரு வித வாகனங்கள் ஏற்படுத்துவானேன்? சுவாமிக்கு பெண்டு பிள்ளைகள், வைப்பாட்டிகள், தாசிகள், விபச்சாரத் தன்மைகள் ஆகியவைகளை கற்பிப்பானேன்? சிலர் சுவாமியைப் பார்த்தால் சுவாமி சக்தி ஓடிப் போவானேன்? சிலர் கோவிலுக்குள் வந்தால் கோவிலும் சுவாமியும் தீட்டாய்ப் போவானேன்? சிலர் சுவாமியைத் தொட்டால் சுவாமி இறந்து போவானேன்? ஒரே பெயரும் ரூபமும் உள்ள சுவாமிகளுக்கு ஊருக்கு ஒரு விதமாய் சக்திகள் ஏற்பட்டிருப்பானேன்? காசி, ஜகந்நாதம், பண்டரிபுரம் முதலிய ஊர்களில் உள்ள சுவாமிகள் யார் தொட்டாலும் சாவதில்லை. கோவிலுக்குப் போகிறவர்கள் எல்லாம் தாங்களே நேரில் சுவாமியைத் தொட்டு தலையில் தண்ணீர் விட்டு புஷ்பம் போட்டு கும்பிடுகிறார்கள். அதே பெயருள்ள சுவாமிகள் நமது நாட்டில் நாம் தொட்டால் செத்துப் போய்விடுகிறது. சீரங்கம், சிதம்பரம், பேரூர், பவானி, கொடுமுடி, திருச்செங்கோடு, கரூர் முதலிய முக்கிய க்ஷேத்திரங்களில் உள்ள சுவாமிகள் நாடார்கள் கோவிலுக்குள் போய் கும்பிட்டால் அக்கோவில்களும் சாமிகளும் சாவதில்லை. மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களில் உள்ள கோவில்களும் சுவாமிகளும் மாத்திரம் நாடார்கள் போய் கும்பிட்டால் உடனே செத்துப் போய் விடுகின்றன. இப்படி சுவாமிகளின் சக்தியும் உயிரும் கோவில்களின் யோக்கியதையும் ஊருக்கு ஒரு விதமாய் இருப்பானேன்? பிறகு பார்ப்பனருக்கு மாத்திரம் அந்த சுவாமியை உயிர்ப்பிக்கும் சக்தி இருப்பானேன்?

## செலவு

நமது வேதம், சுவாமி பூஜை வணக்கம் முதலியன சம்பந்தமான விஷயங்கள் இப்படி இருக்கிறதென்றால், இந்த லக்ஷணத்தில் இம்மாதிரி சுவாமியினாலும், கோவிலினாலும் நமது சுயமரியாதை எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறது என்பதோடு நமது பணம் எவ்வளவு செலவு ஆகிறது என்பதையும் கவனித்துப் பாருங்கள். சென்னை மாகாணத்தில் மாத்திரம் இந்து மத சம்பிரதாயப்படிக்கு ஏற்பட்ட கோவில்களுக்கும் மடங்களுக்கும்



RangaRakes tamilnavarasam.com

வருஷம் ஒன்றுக்கு “ 2 ” கோடி ரூபாய் வரும்படி வருகிறது. 2 கோடி ரூபாய் வரும்படி வந்தால் மக்களுக்கு எத்தனை கோடி ரூபாய் செலவு ஆகும். சாதாரணமாக திருப்பதிக்கு மாத்திரம் சர்க்கார் கணக்குப்படி வருஷம் ஒன்றுக்கு 20 லக்ஷம் வரும்படி வருகிறதாக ஏற்படுகிறது. கணக்குக்கு வராமல் மகந்துகளுக்கும், கோவில் அதிகாரிகளுக்கும், பூஜாரிகளுக்கும் போகும் பணங்களுக்கு அளவேயில்லை. யாத்திரைக்காரர்கள் காணிக்கையாகக் கொண்டு வரும் தொகைகளை அறிந்த மகந்து, கோவில் அதிகாரிகள் முதலியவர்கள் யாத்திரைக்காரர்களைக் கூப்பிட்டு “கோவில் கடாரத்தில் காணிக்கையைப் போட்டால் சர்க்காரார் எடுத்து ஜர்மன் யுத்தத்திற்கு வாங்கிய கடனுக்கு வட்டி கட்டி விடுவார்கள்; மகந்துவிடம் கொடுத்தால்தான் சுவாமிக்குப் போய்ச் சேரும்; நீர் இவ்வளவு ரூபாய், இவ்வளவு நகை கொண்டு வருவதாக சுவாமி எனது சொப்பனத்தில் சொல்லிற்று” என்று ஏமாற்றி வழிப்பறி செய்வதில் கொள்ளை போகும் பணம் இந்த 20 லக்ஷத்தில் சேர்ந்ததல்ல. இன்னமும் யாத்திரைக்காரன் ரயில் சார்ஜ் சில்லரைச் செலவு மெனக்கேடு தேங்காய் பழம் முதலிய செலவுகள் எத்தனை லட்சமாகும் என்று கணக்குப் பாருங்கள்.

## திருவிழா

இன்னும் உற்சவாதிகள், சுவாமிக்கும் அம்மனுக்கும் கலியாணம், சுவாமி தாசி வீட்டுக்குப் போதல், ஒரு காலைத் தூக்கி ஆடுதல், நரியை குதிரையாக்குதல் முதலிய திருவிழாக்களும் 10 மனுவு இடையுள்ள சுவாமியை 200 டன் இடையுள்ள தேரில் வைத்து 10,000 பேர் இழுப்பதும், அதற்கு 50,000 பேர் வேடிக்கை பார்க்க பல இடங்களிலிருந்து வருவதும் ஆகிய காரியங்களுக்கு ஆகும் செலவுகளும் சுவாமிகளுக்கு அபிஷேகம், பூஜை, சதிர், பாட்டுக் கச்சேரி, நகை, பட்டுப் பாவாடை, புனுகு, ஜவ்வாது, பச்சைக் கற்பூரம் குங்குமப்பூ முதலியவைகளின் செலவுகளும் எல்லாம் சேர்த்து இந்துமத சாமிகளின் பூஜைக்கும் உற்சவங்களுக்கும் மாத்திரம் தென் இந்தியாவில் வருஷத்திற்கு 25 கோடி ரூபாய்க்குக் குறைவில்லாமல் செலவாகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த 25 கோடி ரூபாயும் நாம் சுயமரியாதை அற்றுக் கிடக்கின்றோம் என்பதை உறுதிப்படுத்துவதற்கும் தினம் தினம் நமக்கு ஞாபகப்படுத்துவதற்கும் செய்யும் செலவே அல்லாமல் இதனால் வேறு என்ன பலனை அடைகிறோம்? இப்பேர்ப்பட்ட “இந்துமதம்” தான் சென்னை சட்டசபையில் இந்த பணங்களுக்கு கணக்கு கேட்க ஏற்படுத்திய இந்து மதபரிபாலன மசோதாவினால் அடியோடு பாதிக்கப்பட்டுப்போய் விட்டதாம். இம் மாதிரி நமது சுயமரியாதையை ஒழிக்கும் “இந்துக்கள்” தான் “மதம் போச்சுது”, “மதம் போச்சுது” என்று மாயக் கண்ணீர் விடுகிறார்கள். சாமி பூஜை, உற்சவம் முதலியதுகளில் நமது யோக்கியதையையும், சுயமரியாதைக்கேடும் இப்படி இருப்பதோடு இந்துமதச் சடங்கு என்னும் பேரால் நமது தலையில் எவ்வளவு பளுவைச் சுமத்தி நமது பணம் எவ்வளவு



கொள்ளை கொண்டு நமது பிறப்புரிமையான சுயமரியாதையை எவ்வளவு தூரம் நசுக்கி இருக்கிறார்களென்பதை கவனிப்போம்.

## இந்துமதச் சடங்கு

இந்துமதம் என்பதாக ஒன்றை நாம் ஒப்புக்கொள்வதால் நமது நிலை பிறவியிலேயே இழிவானதாகவும், இந்து மதஸ்தர்கள் என்று சொல்லிக் கொள்வோரிலேயே ஒரு வகுப்பாருக்கு நாம் அடிமைகளாகவும் வைப்பாட்டி மக்களாகவும் கடவுளாலேயே உண்டாக்கப்பட்டவர்கள் ஆகிறோம். நம்மை இழிவாய்க் கருதுபவர்கள் காலிலேயே விழுந்து கும்பிட வேண்டியவர்களாகிறோம். இன்னும் நமது வாழ்நாள் முழுவதும் அதாவது தாய் வயிற்றில் கருத்தரித்த நிமிட முதற்கொண்டு நமது மதச்சடங்கு செலவைப் பாருங்கள். சர்க்கார் நம்மிடம் வரி வசூல் செய்கிறார்கள்; இதை அதிகமென்கிறோம். தவிர நம்மிடம் வசூலிக்கும் வரியை நமக்காக செலவு செய்வதில்லை என்றும், இது நமது சுயமரியாதைக்கு ஈனம் என்று சொல்லி சர்க்காருடன் சண்டை செய்கிறோம். பாமர ஜனங்களை சர்க்காருக்கு விரோதமாய் கிளப்பிவிட்டு பெரிய பெரிய சர்க்கார் உத்தியோகங்களைப் பார்ப்பனர்கள் பெற்று நமது சுயமரியாதைக்கும் அவ்வுத்தியோகங்கள் மூலமாய் இழிவை ஏற்படுத்திக் கொள்கிறோம்.

## பார்ப்பன வரி

ஆனால், மதத்தின் பேரால் பார்ப்பனர் நம்மிடம் வசூலிக்கும் வரியைப்பற்றி நாம் ஒரு சிறிதும் கவலைப்படுவதில்லை. சர்க்கார் வரிக்காவது ஒரு கணக்கு வைத்திருக்கிறார்கள். அதாவது பூமி வரி, வருமான வரி, ஸ்டாம்பு வரி என்பதாக குறிப்பு இருக்கிறது. இதுகளுக்கு பூமி உள்ளவர்கள், இவ்வளவு ரூபாய் வரும்படி உள்ளவர்கள், பிராது உள்ளவர்கள் முதலியவர்கள்தான் இந்த வரிகள் கொடுக்கக் கட்டுப்பட்டவர்கள் வரிகொடுக்க கட்டுப்படாதவர்கள் 100–க்கு 90 பேர்கள் இருக்கிறார்கள். இந்த வரியையும் நமக்காக ஏதோ செலவு செய்வதாய் கணக்கும் காட்டுகிறார்கள். ஆனால், மதச் சடங்குகளின் பேரால் பார்ப்பனர் வசூல் செய்யும் வரிக்கு அளவே இல்லை. மனிதனாகப் பிறந்தவன் எல்லாம் அதாவது தன்னை எவனாவது இந்து என்று சொல்லிக்கொண்டால் அவனை உடனே பார்ப்பன வரி சனியன் பிடித்துக் கொண்டது என்பது போல் காலவரையறை ஒன்றுமே இல்லாமல் கர்ப்பந் தரித்தது முதல் சாகும் வரை – செத்தும் விடாமல் அதாவது கர்ப்பதான வரி, சீமந்த வரி, பிள்ளைப் பேறுகால வரி, தீட்டுக்கழித்தல் வரி, தொட்டிலடல்வரி, பேர் வைத்தல் வரி, ஆயுசு ஓம வரி, சோறூட்டல் வரி, கிரக தோச வரி, வித்தியாப்பியாச வரி, கல்யாண வரி, சாந்தி முகூர்த்த வரி, தாசி வைத்தால் அதற்கு ஒரு சாந்தி முகூர்த்த வரி, சாவு வரி, சாக 10 நாழிகை வரி, செத்த பின்னும் வரி, செத்தவர் மக்களைப் பிடித்து வருஷா வருஷம் வரி ஆகிய



RangaRakes tamilnavarasam.com

பல துறைகளில் (இவற்றைப் பற்றி மதுரை மகாநாட்டில் ஸ்ரீமான் K.V. ரெட்டி நாயுடுகாரு , அன்னிய வகுப்புப் புரோகிதரை விலக்க கொண்டு வந்த தீர்மானத்தில் பேசியவைகளை அனுசரித்ததாகவே பேசினார். ஆதலால் அதைப்பார்த்து கொள்ளலாம் ( 2. 1. 27 "குடிஅரசு" 7 ம் பக்கம் பார்க்க ) காலாவதி இல்லாமலும் ஒரு நபரைக்கூட விடாமல் 100 -க்கு 100 பேரிடம் பணக்காரன் ஏழை என்கிற பாகுபாடே இல்லாமல் கொடுப்போர் முட்டாள்தனத்துக்கும், களிமண் மூளைக்கும் தகுந்தபடி வரி கறந்து விடுகிறார்கள்.

## வரியுங் கொடுத்து காலிலும் விழுவது

இந்த வரி வசூலுக்கு ஏதாவது பலன் உண்டா என்று பார்த்தால் இதை விட முட்டாள்தனமான காரியம் உலகில் வேறொன்றுமில்லை என்று சொல்லத்தக்கமாதிரி அதாவது "சுவாமிகளே! நான் கொஞ்சமாகச் செய்திருந் தாலும் என்னுடைய பக்தி சிரத்தையை மதித்து அதை பெரிதாக எண்ணி காசி கங்கையில் செய்தது போலவும் பிரயாகை வடவால விருக்ஷத்தின் கீழ் செய்தது போலவும் ஆகும்படி செய்து எனது பெற்றோர்களுக்கு மோக்ஷமும் திருப்தியும் உண்டாகும்படி அருளுவதுடன் என்னையும் சிரஞ்சீவியாக்கி எனது பாவங்களை மன்னித்து மோக்ஷம் லபிக்கும்படி கிருபை செய்ய வேண்டியது" என்று சொல்லி பார்ப்பனர் காலில் நமது தலை முட்டும்படி விழுந்து கும்பிட்டு ஆசீர்வாதம் பெறுவதுமாய் நடந்து வருகிறோம். இவ்வித சடங்குக்குச் செலவாகும் பணம் எத்தனை கோடி, தங்கச் சொம்பு, வெள்ளிச் சொம்பு, வீடு, பூமி, கன்னிகை முதலிய தானங்கள் சமாராதனைகள், சாந்திகள் முதலிய காரியங்களில் ஆகும் செலவுகள் இதுகள் எத்தனை கோடி ஆகும் என்பதை கவனித்துப் பாருங்கள். இதற்கு ஏதாவது பிரயோஜனமுண்டா என்பதை யோசியுங்கள். இந்தச் செலவுகள் ஒருபுறம் நம்மை பிச்சு பிடுங்கித் தின்னவும் இதன் மூலம் நமது பிறப்புரிமையாகிய சுயமரியாதை எவ்வளவு பாதிக்கப்பட்டு அடிமையாகி வாழுகிறோம் என்பதையும் யோசியுங்கள். இப்படி எத்துணையோ விதமான தடைகள் செயற்கையிலேயே அதாவது நமது அறிவீனத்தினாலேயே நம்மைச் சூழ்ந்து கொண்டு வாட்டுகின்றன. இவைகளைக் களைந்தெறிய வழிதேடுங்கள். பிறகு சுயராஜ்ஜியம் தானாக வந்துவிடும். பார்ப்பானுக்குப் பணம் கொடுத்து அவன் காலில் விழுந்தால் நமது பெற்றோர்கள் மோக்ஷத்திற்கு போவார்கள், நமது பாவம் தீரும் என்று நினைத்துக்கொண்டிருக்கும் ஜன சமூகத்திற்கு சுயராஜ்ஜியம் வேண்டு மென்பது யாராவது நம்பக்கூடிய காரியமா? வீணாக அதாவது சில பார்ப்பனர் கள் பிழைக்க இந்துக்களாக இருப்பது போலவே சில புரட்டுக்காரர்களும் பித்தலாட்டக்காரர்களும், அயோக்கியர்களும் பிழைக்க சுயராஜ்ஜியம், சுயராஜ்ஜியம் என்று கத்தி ஏமாறாதீர்கள்.



## உண்மை சுயராஜ்யம் காணுமிடம்


சுயமரியாதை கண்டவிடம்தான் சுயராஜ்ஜியமே தவிர சுயராஜ்ஜியம் என்று ஒரு தனி வஸ்துவில்லை என்பதை உணர வேண்டும். ஆதலால் பிறப்புரிமை இன்னது என்பதும் அது இன்ன விஷயங்களால் தடைப் பட்டிருக்கிறது என்பதும் அத்தடைகளிலிருந்து விலக இன்னின்னது செய்ய வேண்டும் என்பதும் சுயராஜ்ஜியம் என்பது இதுபோலவே மக்களை ஏமாற் றும் ஒரு புரட்டான மார்க்கமென்பதும் சுயமரியாதை கண்டவிடத்தில் உண்மையான சுயராஜ்ஜியம் என்பது துலங்கும் என்பதும் விளங்கி இருக்கு மென்று நினைக்கிறேன்.

*குறிப்பு : 29.12.26 இல் சென்னிமலையில் பாப்பாரப்பட்டி யூனியன் சேர்மேன் ஸ்ரீமான் சின்னமுத்து முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் கூடிய கோய முத்தூர் ஜில்லா 14 -வது செங்குந்தர் மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 09.01.1927**



RangaRakes tamilnavarasam.com






# பார்ப்பனரின் அரசியற் புரட்டு

**இரட்டை ஆட்சியும் வகுப்பு வாதமும் நமது பார்ப்பனர்களின் சூழ்ச்சியால் ஒழிந்ததா? அல்லது முன்னிலும் பன்மடங்கதிகமாய்ப் பெருகிற்றா?**

என்பதை பார்ப்பனரல்லாத மக்கள் பகுத்தறிவு கொண்டு கவனித்துப் பார்க்க வேண்டுமாய் வற்புறுத்துகிறோம். ஒத்துழையாமை என்பது மும்மரமாய் இருந்த காலத்தில் நமது பார்ப்பனர்கள் எவ்வளவோ சூழ்ச்சிகளின் மூலம் அதை ஒழிப்பதற்கு பிரயத்தனப்பட்டது வாசகர்கள் அறிந்ததுதான். அதாவது கல்கத்தா தனிக் காங்கிரசின் போது தெருவில் போகும் பிச்சைக் காரரையெல்லாம் பிடித்து அவர்களுக்கு நாமம் போட்டு சென்னை மாகாணப் பிரதிநிதி என்று ஏமாற்றி ஆள்களைச் சேர்த்தும் அங்கும் தோற்றுப் போனதும், சென்னையில் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும், காரியதரிசிகளாகவும், இருந்த பார்ப்பனர்களான ஸ்ரீமான்கள் கஸ்தூரி ரங்கய்யங்கார் , ரங்கசாமி அய்யங்கார், சத்தியமூர்த்தி முதலியவர்கள் ராஜீநாமாக் கொடுத்து வெளியேறி ஒத்துழையாமையையும், மகாத்மாவையும், வாய் கொண்ட மட்டும் வைதும், பழி சுமத்தியும் பார்த்தும் முடியாமல் போனதும், அட்வொகேட் ஜெனரலாயிருந்து மந்திரி உத்தியோகம் பெற ஆசைப்பட்டு அதை ராஜீனாமாக் கொடுத்து வெளிவந்த ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் சர்க்கார் தயவு பெற ஒத்துழையாமை சட்ட விரோதமானதென்றும் அதை உடனே அடக்க வேண்டுமென்று சர்க்காருக்கு யோசனைச் சொல்லிக் கொடுத்தும் தனது சகாக்களான வக்கீல் சைன்யங்களை ஒத்துழையாமையில் சேரக்கூடாதென்று சொன்னதோடு ஒத்துழையாமைக்கு விரோதமாயிருக்க வேண்டுமென்று ஏவிவிட்டும் முடிவில் ஒன்றும் பயன் பெறாமல் ஒத்துழையாமை செல்வாக்குப் பெற்று வலுக்கவே கடைசியாக தங்களுக்கு புத்தி வந்தது போல் பாசாங்கு செய்து ஒத்துழையாமை திட்டம் ஒன்றையும் ஒப்புக்கொள்ளாமலும் தாங்களும் அந்தப்படி நடவாமலும் தங்களையும் ஒத்துழையாதார் என்கிற பெயரைச் சொல்லிக் கொண்டு காங்கிரசுக்குள் புகுந்து காங்கிரசிலும், கான்பரன்சுகளிலும் ஒவ்வொரு தீர்மானத்தையும் எதிர்த்துக்கொண்டும் வந்து கடைசியாக உண்மையான ஒத்துழையாதார் என்று வேஷம் போட்டுக் கொண்டு காந்தி சிஷ்யர்கள் என்று சொல்லிக்கொண்டிருந்த சில பார்ப்பனர்களின் உதவியால் சட்ட சபையில் போய் ஒத்துழையாமை செய்வது,



RangaRakes tamilnavarasam.com

முட்டுக்கட்டை போடுவது, இரட்டை ஆட்சியை ஒழிப்பது என்கிற பெயரைச் சொல்லிக்கொண்டு காங்கிரசையும் தங்கள் வசமாக்கி பாமர மக்களையும் ஏமாற்ற சில பார்ப்பனரல்லாதாரையும் கூலிக்குப் பிடித்துக் கத்தச் சொல்லி அவரவர்கள் பத்திரிகைகளிலும் எழுதும்படி செய்து ஒத்துழையாமை தத்துவத்தையே அழித்து கடைசியாக வெற்றியும் பெற்று விட்டார்கள். ஆனால் இப்போது நடந்த தென்ன என்பது தான் முக்கியமான விஷயம். சட்டசபையில் ஒத்துழையாமை நடந்ததா? என்று பார்த்தால் அந்த பிரஸ்தாபமே அடியோடு மறைந்து போனதோடு காங்கிரசிலும் ஒத்துழையாமை எடுபட்டுப்போய்விட்டது. முட்டுக் கட்டை நடந்ததா? என்று பார்த்தால் அந்த பிரஸ்தாபமும் இப்போது அடியோடு மறந்துபோய் சர்க்காருக்கும் தங்களுக்கும் வேண்டிய தீர்மானங்களுக்கு அனுகூலமாக இருந்தும் தங்களுக்கு வேண்டியபடி தீர்மானங்கள் கொண்டுவந்தும் தங்களுக்கு மறுபடியும் சட்டசபை ஸ்தானம் கிடைக்கும்படி பல கேள்விகள் கேட்டும் பொது மக்களிடை சட்ட சபைக்கு ஒரு யோக்கியதை சம்பாதித்துக் கொடுத்தாய் விட்டது. கல்கத்தாவிலும், மத்திய மாகாணத்திலும் வகுப்பு வாதம் காரணமாய் அதாவது வங்காளத்திலிருந்து முஸ்லீம் என்கிற காரணத்தாலும் மத்திய மாகாணத்தில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற காரணத்தாலும் மந்திரி பதவிப் போட்டியின் காரணமாக கொஞ்ச காலம் மந்திரி உத்தியோகங்கள் காலியாய் யிருந்ததையே பிரமாதமாய் பார்ப்பனர்களும், பார்ப்பனப் பத்திரிகைகளும் அவற்றை குருவாகக்கொண்ட பார்ப்பனரல்லாத பத்திரிகைகளும் "இரட்டை ஆட்சி மடிந்தது", "சுயராஜ்ய கட்சி ஜெயித்தது", "எங்கள் காரியம் முற்றுப் பெற்றது" என்று பாமர மக்களை ஏமாற்றி தயவு பெற்றும், கூலி பெற்றும் பார்ப்பனர்களுக்கும் அவர்களது பக்தர்களுக்கும் ஓட்டு வாங்கிக் கொடுத்து வீரர்களானார்கள். இதன் பலனாய் மற்ற இடங்களில் "இரட்டை ஆட்சி ஒழிந்தது" என்று சொல்லிக் கொண்டிருந்ததோடு சென்னை மாகாணத்தில் வகுப்பு வாதமும் வகுப்புக் கட்சியும் குழி தோண்டி புதைக்கப்பட்டது என்றும் தம்பட்டமடித்துக் கொண்டார்கள். இப்போது இரட்டை ஆட்சி எங்கே ஒழிந்தது? என்று பார்த்தால் ஒவ்வொரு மாகாணத்திலும் இரட்டை ஆட்சியை நடத்திக்கொடுக்க சுயராஜ்யக் கட்சியில் இருந்த ஆள்களே பலவேறு வேஷங்கள் போட்டுக்கொண்டு போட்டி போடுவதும் எல்லா மாகாணங்களிலும் இரட்டை ஆட்சியை நடத்திக் கொடுக்க ஆள்கள் ஏற்பட்டு இரட்டை ஆட்சி தலை சிறந்து விளங்குவதும் மறைக்க முடியாத விஷயமாய்ப் போய்விட்டது. சென்னை மாகாணத்திலோ, சுயராஜ்யக் கட்சியார் என்கிற பார்ப்பனர்கள் திருட்டுத் தனமாய் இரட்டை ஆட்சிக்கு ஆதரவளிப்பதாய் கூறி இப்போது தங்கள் ஆதரவில் மந்திரிகளையும் நியமித்துக்கொண்டு, தங்கள் சுயநலக் காரியங்களை சாதித்துக்கொண்டு வருவதும் மறைக்கக் கூடிய விஷயமல்ல. இரட்டை ஆட்சி ஒழிந்ததென்பது இப்படி இருந்தாலும் வகுப்பு வாதம் ஒழிந்து குழியில் போட்டு புதைத்தாய் விட்டதா? என்று பார்த்தால் அதுவும் தலை மாகாணமாகிய பஞ்சாப்பு முதல் ஒவ்வொரு மாகாணமும் வகுப்புப் படியே



மந்திரிகள் நியமித்துக்கொண்டு வருவதும் யாரும் அறியாத விஷயமல்ல. பஞ்சாப்பில் ஒரு இந்து, ஒரு சீக்கியர், ஒரு முசல்மான் என்கிற வகுப்பு மந்திரிகளே! கல்கத்தா மத்திய மாகாண முதலிய எல்லா மாகாணங்களிலும் இதுபோலவே வகுப்பு பிரித்து மந்திரிகள் நியமிக்கப்பட்டு விட்டார்கள். சென்னை மாகாணத்தில் வகுப்பு வாதம் ஒழிந்த யோக்கியதையும் மந்திரி நியமனமும் சட்டசபைத் தலைவர் நியமனமும் டிப்டி தலைவர் நியமனமும் எதை ஆதாரமாய் வைத்து நியமிக்கப்பட்டது? வகுப்புவாதம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டால் ஏன் ஒரு பார்ப்பன மந்திரியாவது, தலைவராவது, உப தலைவராவது ஏற்பட்டிருக்கக்கூடாது? பார்ப்பனர்களில் யோக்கியதை உடையவர்கள் இல்லையா? உப தலைவர் பதவிக்கு "ஒரு மகமதிய கனவானையே நியமிக்க வேண்டும் என்று" வகுப்பு பெயர் சொல்லி சுயராஜ்ஜியக் கட்சி தன் 'தலைவர்' ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு அதிகாரம் கொடுப்பானேன்? சட்டசபையில் சுயராஜ்ஜி யக் கட்சித் தலைவர் (லீடர்) பதவிக்கு ஏன் ஒரு பார்ப்பனரைத் தெரிந்தெடுக்கக் கூடாது. லீடர் பதவிக்கு யோக்கியதை உள்ள பார்ப்பனர் இல்லையா? ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியாருக்கு இருக்கிற யோக்கியதை ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, சி.வி. வெங்கிடரமண ஐயங்கார் ஆகிய பார்ப்பனர்களுக்கு இல்லையா? வகுப்புவாதம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டது வாஸ்தவமானால் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி தனக்கு லீடர் பதவி கிடைக்காததற்காக கட்சியை விட்டுப் போவதாக மிரட்டிக் கொண்டிருப்பானேன். "தலைவர்" ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்குத் தலைவர் பட்டம் வாங்கிக் கொடுக்க ஒவ்வொருவரையும் ராஜீனாமா கொடுக்கும்படி கெஞ்சுவானேன்? மதுரை மகாநாட்டிற்கு இவ்வளவு பிரதிநிதிகள் வருவானேன்? கோக்கலே ஹால் சென்னை மாகாண மகாநாட்டுக்கு 150 பிரதிநிதிகளே மாத்திரம் வருவானேன்? அதுவும் சென்னை பிரதிநிதிகள் 125 பேர்களாயிருப்பானேன்? காங்கிரசுக்கு வருஷா வருஷம் சென்னை மாகாணத்திலிருந்து 1000 பிரதிநிதிகள் போய்க் கொண்டிருக்க இவ் வருஷ காங்கிரசுக்கு 100 பேர்கள் கூட போகாமல் இருக்கக் காரணம் ஏன்? அதுவும் "தலைவர்" ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பணம் கொடுத்துச் சிலரைக் கூட்டிக்கொண்டு போவானேன்? இன்னும் அனேக ரகசியங்கள் உண்டு. இவைகளையெல்லாம் பார்த்தால் இரட்டை ஆட்சியும் வகுப்பு வாதமும் ஒழிந்ததா? நிமிர்ந்ததா? வாசகர்களே! நன்றாய் யோசிக்க மறுபடியும் கோருகிறோம். ஆகவே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அடைய இதுவே தக்க சமயம். வீணாய்ப் பார்ப்பனர்களின் அரசியல் புரட்டில் மயங்கி தக்க சமயத்தைக் கைவிட்டு விடாதீர்கள் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 16.01.1927**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனரல்லாதார் பிரசாரமும் மகாநாடுகளும் சங்கங்களும்

இம்மாதம் 15-ந்தேதி வாக்கில் கோயமுத்தூரிலாவது மதுரையிலாவது பார்ப்பனரல்லாதார் பிரசாரத்திற்காக வேலைக் கமிட்டி ஒன்று கூட்டி பிரசாரம் ஆரம்பிக்க வேண்டுமென்று எழுதியிருந்தோம். சில கனவான்கள் அதை ஒப்புக்கொண்டு தங்களாலான உதவி செய்வதாகத் தெரிவித்தும் இருக்கிறார்கள். ஆனால், ஸ்ரீமான் P.T. ராஜன் அவர்கள் சென்னையிலே தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் நிர்வாகக் கூட்டம் ஒன்று ஏற்படுத்துவதாகவும் அதற்குப் பிறகு இதைப் பற்றி யோசிக்கலாம் என்பதாகத் தெரிவித்திருப்பதாலும் குறிப்பிட்ட கூட்டம் கூட்டுவதை ஒத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. தவிரவும் பல இடங்களிலிருந்து ஜில்லா, தாலூகா, கான்பரன்சுகள் கூடப் போவதாகவும், பல இடங்களில் பார்ப்பனரல்லாதார் சங்கமும், பார்ப்பனரல்லாதார் வாலிப சங்கமும், சுயமரியாதைச் சங்கமும் ஸ்தாபிக்கப் போவதாகவும் தெரிவிக்கப் பட்ட கடிதங்கள் மிகுதியும் வந்து கொண்டு இருப்பது பற்றி நமக்கு மிகவும் சந்தோஷமே. ஆனால், ஒவ்வொன்றுக்கும் அக்கிராசனம் வகிக்கவும், துவக்க விழா நடத்தவும் நாயக்கரே வரவேண்டுமென்று எதிர்பார்ப்பது மிகவும் கஷ்டமான காரியம் என்பதை தெரிவித்துக் கொள்ளாமலிருக்க முடியவில்லை. சங்க ஸ்தாபனங்களுக்கு அந்தந்த ஜில்லாவில் உள்ளவர்களில் முக்கியமானவர் களைக் கொண்டே செய்து கொள்வது நலம் என்றும் அநுகூலம் என்றும் தெரி வித்துக்கொள்ளுகிறோம். மகாநாடுகளுக்கு தலைமை வகிக்கவும் நாம் முன் எழுதியபடி அரசியலில் எவ்வித கொள்கை உடையவர்களாயிருந்தாலும் நிர்மாணத்திட்டத்தையும் சிறப்பாக சுயமரியாதைத் திட்டத்தையும் ஒப்புக் கொள்ளுகிற பார்ப்பனரல்லாத கனவான்கள் யாரையும் அக்கிராசனம் வகிக்கக் கேட்டுக்கொள்ளலாம் என்று மறுபடியும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நாயக்கருக்கு சாவகாசம் கிடைத்தாலும் மகாநாட்டுக்கு விசிட்டர் முறையில் அவசியம் வரக் காத்திருக்கிறார் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம். அதோடு பார்ப்பனரல்லாத தலைவர்களான கனவான்களும் எந்த மகாநாட்டுக்காவது அழைக்கப்பட்டால் அரசியல் காரணத்தை பிரமாதப்படுத்திக் கொண்டு வர மறுக்காமல் சௌகரியப்பட்டவர்கள் அவசியம் வேண்டு கோளை ஒட்டிக்கொண்டு விஜயம் செய்ய வேண்டுமாயும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 16.01.1927**



# பார்ப்பனர்களின் ஒற்றுமை

கொஞ்ச நாளைக்கு முன் இந்தியாவிலிருந்து இந்தியர்களின் ஊழியராகவும், ஒரு இந்தியராகவும், இந்துவாகவும் உள்ள ஸ்ரீமான் சர்.டி. விஜயராகவாச்சாரியார் இந்திய பிரதிநிதியாக கனடாவுக்கு அனுப்பியதும் அங்கு போய் தென்னை மரம் இருக்கும் வரை குடித்துத்தான் தீருவோம். பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தையே இந்தியர்கள் விரும்புவதோடு, இதைக் கடவுள் அனுப்பியதாக இந்தியர்கள் பாவிக்கிறார்கள் என்றும், ஆங்கில நாகரீகத்தையே இந்தியர்கள் விரும்புகிறார்கள் என்றும், அதற்கு உதாரணமாக எனது குமாரத்தியே தலை மயிரைக் கத்தரித்துக் கொண்டிருக்கிறாள் என்றும் சொன்னதாக பத்திரிகைகளில் வந்தது ஞாபகமிருக்கும். அதையே ஸ்ரீமான் R.K. ஷண்முகம் செட்டியார் அவர்களுக்கு திருப்பூர் முனிசிபல் சங்கத்தார் வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்த காலையில் ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் எடுத்துச்சொல்லி நமது ஸ்ரீமான் செட்டியார் அப்படிப் பேசாமல் சுதந்திரத்தோடும் ஆண்மையோடும் பேசினதாக குறிப்பிட்டிருந்தார்.

இதை மறுப்பதற்கு, இதில் யாதொரு சம்பந்தமும் இல்லாதவரும் இன்னமும் ஒத்துழையாதாரென்று வேஷம் போட்டுக்கொண்டிருப்பவருமான ஸ்ரீமான் C. இராஜகோபாலாச்சாரியார் மகாத்மாவின் "யங் இந்தியா" பத்திரிகையைப் பிடித்து அதில் மறுப்பெழுதி உலகமெல்லாம் பரவச் செய்திருக்கிறார் என்றால் பார்ப்பன ஒற்றுமை எவ்வளவு தூரம் பதிந்திருக்கிறது? மழை யில்லாமல் போனதற்கும், ரயில்வண்டி சார்ஜ் உயர்ந்ததற்கும், வெயில் அதிகமாய்க் காய்வதற்கும் பனகால் ராஜாதான் காரணம், ஜஸ்டிஸ் கட்சிதான் காரணம் என்று தான் பிறரைச் சொல்லும்படி செய்வதிலும், பிறரை நம்பும்படி பிரசாரம் செய்வதிலும் உடந்தையாயிருப்பவர், தன் இனத்தாரைக் காப்பாற்றுவதில் எவ்வளவு கவலை எடுத்துக்கொள்ளுகிறவர் என்பது கவனிப்பவர்களுக்கு விளங்காமல் போகாது. பார்ப்பனரல்லாதாரில் சிலரின் யோக்கியதையையோ சொல்ல வேண்டியதில்லை. எதை வேண்டுமானாலும் விற்று வயிறு வளர்க்கத் தயாராயிருக்கிறார்கள். என்றுதான் பார்ப்பனர் சூழ்ச்சி அறியவும் பார்ப்பனரல்லாதார் ஒற்றுமையாயிருக்கவும் யோக்கியதை வருமோ தெரியவில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 16.01.1927**



RangaRakes tamilnavarasam.com

## யாருக்கு புத்திவந்தது?

சில பார்ப்பனப் பத்திரிகைகளும் அவற்றை குருவாகக் கொண்ட சில பார்ப்பனரல்லாத பத்திரிகைகளும் பார்ப்பனரல்லாத கட்சிக்கு இப்பொழுது தான் புத்திவந்து கதரைத் தங்கள் திட்டத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எழுதுகின்றதுகள். இதுகளுக்கு உண்மையில் புத்தி இருந்தால் சுயராஜ்ஜியக் கட்சி காங்கிரசுக்கு இப்பொழுது தான் கொஞ்சம் புத்தி வந்தது என்று சொல்லியிருக்க வேண்டும். ஏனெனில் கதரைக் கட்டாயமாக உடுத்த வேண்டும் என்று முன்னெல்லாம் மகாத்மா கதறின காலத்தில் முடியாது. பாமர ஜனங்களை ஏமாற்றுவதற்காக மாத்திரம் ஓட்டு கேட்கும் போது கட்டிக் கொள்வோம் என்று சொன்ன யோக்கியர்கள் மதுரை மகாநாட்டில் கதரைப் பார்ப்பனரல்லாதார் கட்சியார் ஏற்றுக் கொண்டதும் இனி பார்ப்பனரல்லாதார் எல்லாரும் கதர் கட்டி விடுவார்களே என்கிற பயம் தோன்றி நாமும் அதன் பெருமை அடையலாம் என்கிற ஆத்திரத்தின் பேரில் இவ்விடத்திலிருந்து சில பார்ப்பனர்களின் தந்திகள் அஸ்ஸாம் காங்கிரசுக்குப் போனதும் உடனே காங்கிரசிலும் கதர் ஒப்புக் கொள்ளப்பட்டதாக வேஷம் போட நமது பார்ப்பனர்கள் ஒரு தீர் மானம் செய்து விட்டார்கள். இதிலிருந்து யாருக்கு புதிதாய் தந்திரபுத்தி வந்தது? காங்கிரஸ் பார்ப்பனருக்கா? பார்ப்பனரல்லாதாருக்கா? என்பதை நடுநிலைமையிலிருந்து யோசித்துப்பார்க்கவும்.

**குடி அரசு - கட்டுரை - 16.01.1927**



## மதுரைத் தீர்மானங்கள்

மதுரைத் தீர்மானத்தைப்பற்றி, நமது எதிரிகளும், பொறுப்பற்றவர்களும் என்னதான் பரிகாசமாகவும், அலட்சியமாகவும் பேசினாலும் பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதை, விடுதலை, செல்வநிலை ஆகிய எல்லாவற்றினது மார்க்கங்களும் அம்மதுரைத் தீர்மானங்களிலேயே அடங்கிக் கிடக்கின்றன என்பதை ஒவ்வொருவரும் மனதில் பதியவைத்துக் கொள்ள வேண்டும். பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதை முதலியவை மாத்திரமல்லாமல் நமது நாட்டின் கோடிக்கணக்கான மக்களின் சுயமரியாதையும், விடுதலையும், செல்வமும் அத்தீர்மானங்களிலேயே அடங்கிக் கிடக்கின்றன. அவை மாத்திரமல்லாமல் நமது அரசியல் முறையில் கட்டுண்டு அனுபவித்து வரும் கொடுமைகளுக்கும் நிவர்த்தி மார்க்கம் அவற்றிலேயே அடங்கியிருக்கின்றன. அன்றியும் நாம் நம் நாட்டு மக்கள் என்றே சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களால் மிதிக்கப்பட்டு அனுபவித்து வரும் இழிதகைமைகளிலிருந்து மீளும் நெறியும் அவற்றிலேயே அடங்கிக் கிடக்கின்றது. இன்னமும் இவை போன்ற மக்களின் நாட்டின் கோடிக்கணக்கான கொடுமைகள் என்னும் வறுமை முதலிய வியாதிகளுக்கும் ‘சஞ்சீவி’ என்று சொல்லத்தக்கதேதான் நமது மதுரை மகாநாட்டின் தீர்மானங்கள்.

காந்தியடிகள் இந்தியாவின் எல்லாக் குறைகளும் நீங்குவதற்காக கண்டுபிடித்த “பர்டோலி தீர்மான”மாக்கும் நமது மதுரை மகாநாட்டின் தீர்மானங்கள்! ஆதலால் அதை நிறைவேற்றுவதில் கவலை கொள்ளுதல்தான் மக்கள் சுயமரியாதைக்கும், விடுதலைக்கும், செல்வத்திற்கும் தொண்டு செய்வதாகும்.

### தீண்டாமை

தீண்டாமையை ஒழித்துவிட்டால் சுயமரியாதையின் எதிரிகளான நமது பார்ப்பனருக்கு நமது நாட்டில் இடமுண்டா? அவர்கள் “பூசுரராக” நமது நாட்டில் வாழ முடியுமா? தீண்டாமை, உயர்வு தாழ்வு என்கிற தத்துவம் ஒன்றி னாலல்லது நமது பார்ப்பனர்களுக்கு இந்நாட்டில் வேறு எதனாலாவது யோக்கியதை இருக்கிறதா? உலகத்திலுள்ள இழிவுகளெல்லாம் ஓருருவ மெடுத்தாற் போற் றோன்றும் ஒரு வகுப்பார் ஆதிக்கத்திலிருக்கக் காரணம்,



RangaRakes tamilnavarasam.com

இந்த உயர்வு - தாழ்வு என்கிற போலித் தத்துவமல்லாமல் வேறென்ன? “அரசியலிலோ”, “ஆன்மார்த்தத்திலோ” பார்ப்பனர்களின் வாழ்க்கையில் எவ்வித இழிகுணம் அவர்களிடமில்லையென்று சொல்லமுடியும்? எவ்வித மான உயர்குணம் அச் சமூகத்தாரிடத்தில் இருப்பதாகச் சொல்ல முடியும்? உண்மையில் சுருதிப்படி அவர்களுடைய உரிமையான தொழிலையே பிச்சையெடுப்பது என்பதாக ஏற்படுத்திக்கொண்டார்கள். அதற்கு மேன்மை கற்பித்துக்கொண்டு மானாபிமானமின்றி பணம் சம்பாதிக்க வழி செய்து கொண்டார்கள். உண்மையில், இந்த அடிமைத்தன்மையானதும், பிறரை ஏய்ப்பதால் மாத்திரம் வாழத்தக்கதுமான தொழிற்றுறைகளில் அநுபோகம் பெற்று வெகு சமர்த்தர்களாகி விட்டார்கள். அவர்களுடைய நாகரீகங்களோ சொல்லத் தேவையில்லை. சிறு குழந்தைகளைக் கல்யாணஞ் செய்து கொள் வார்கள். பதின்மூன்று வயதிலேயே பிள்ளை பெறும்படி செய்துவிடுவார்கள். அது தாலியறுத்துவிட்டால் தலை மொட்டையடித்து குரூரப்படுத்தி விடுவார் கள். தயவு, தாட்சண்ணியம், அன்பு என்கிற குணங்கள் பூதக் கண்ணாடி வைத்துத் தேடினாலும் கிடைக்காது. மற்றொருவனுக்குத் தாகத்துக்குத் தண்ணீர் கொடுத்தால் தங்கள் வீட்டிலுள்ள தண்ணீரெல்லாம் தோஷமாகி விடும் என்கிற கொள்கையுடைய கருணையாளர்கள். இன்னும் எத்தனையோ குற்றமுள்ளவர்களாயிருப்பதோடு இக்குற்றங்களை மற்றவர்களுக்குள்ளும் புகுத்துவதே தங்கள் ‘உலக சேவை’ யென்று நினைப்பவர்கள். இப்படிப் பட்டவர்கள் இன்று ஆதிக்கம் பெற்றிருப்பதன் காரணம் தீண்டாமை - உயர்வு - தாழ்வு என்கிற தந்திரங் களால்தானே அல்லாமல் வேறு என்ன? ஆதலால், இத்தந்திர சாதனங்கள் ஒழிக்கப்பட்டால் அன்றே மக்களுக்கு ‘சுயமரியாதை’ உதயமாகிவிடும். இதன் பயனாய் ‘பிராமணர்’, ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’ என்ப வர்கள் ஒழிவதோடு மக்களெல்லாரும் சகோதரர்களாகவும் காணப்படு வார்கள்.

## கதர்

அதுபோலவே ‘கதரும்’ நமது நாட்டு மக்களைப் பிடித்த வறுமையை அடியோடு ஓட்டி உண்மையான விடுதலையையும், மனச்சாட்சியையும் அளிக்கும். ‘கதர்த்திட்டம்’ என்பது வெறும் கதரையே முதன்மையாய் கொண்டதல்ல. நாட்டின் விடுதலைக்கு பெரும் விரோதியான வறுமையை வேரோடு அழிப்பதற்காதாரமானவை எவையென்றால் கைத்தொழிலும் அதன் மூலம் கிடைக்கும் பொருள் வருவாயுமேயாகும். இதுகாலை, அவ்விஷயத்தில் நமது நாட்டின் நிலைமையென்ன? நாளுக்கு நாள் நம் நாட்டுக் கைத்தொழில்கள் அருகிக்கொண்டே வருகின்றன. நம் நாட்டு மக்களில் பார்ப்பனர் நீங்கிய மற்றையோர் 100க்கு 99 பேர் கைத்தொழில் மூலமே வாழ்ந்து வந்தவர்கள். பழங்கால வாழ்வில் நாட்டின் செல்வமானது விவசாயம், கைத்தொழிலாகிய ரூபமாயிருந்ததேயன்றி பணம், காசு, வீடு



முதலிய சொத்துக்கள் ரூபமா யிருந்ததில்லை. இப்பொழுது அச்செல்வமான கைத்தொழில் அடியோடு ஒழிந்துவிட்டது. விவசாயமும் கூட வாழ்விற்காக வென்றல்லாமல் பணத்திற்காகவென்றாகிவிட்டது. இதன் மூலம் நம்நாட்டின் இயற்கைக்கு விரோதமான நிலையேற்பட்டதால் நமது நாட்டையே வறுமை முற்றுகை போட்டுக்கொண்டு விட்டது. முதலாவது கைத்தொழில்கள் எவ் வழிகளில் அருகிவிட்டன வென்பதைக் கவனித்துப் பாருங்கள்!

நம்நாட்டு மக்களின் கைத்தொழில் பஞ்சு அறைத்தல் (பஞ்சில் கொட்டை பிரித்தல்) நூல் நூற்றல், நெய்தல், சாயம் போடுதல், பூ வேலை செய்தல், துணி தைத்தல், உலோகங்களின் மூலம் விளக்கு, பாத்திரம் வகையறா செய்தல், ஆகாரப் பொருள் சுத்தம் செய்தல், அதாவது நெல் குத்து தல், மாவறைத்தல், கொல் தச்சு வேலை, மாட்டுவண்டி, குதிரை வண்டி செய் தல், லாடம் அடித்தல், இவற்றை ஓட்டுதல், இந்த மாடு, குதிரைகளுக்கு புல் பிடுங்கிக் கொண்டு வந்து போடுதல், குதிரை தேய்த்தல், மக்களுக்கு வைத் தியம் மருந்து செய்தல், மருந்து விற்றல் முதலிய அநேக காரியங்களில் மக் கள் ஈடுபட்டு யாவரும் தொழில் செய்து பிழைத்து வர முடிந்தது. உதார ணமாக ஆகாரத்தை எடுத்துக் கொள்ளுவோம். ஒரு வேளை 1-க்கு 500 பேர் சாப்பிடக்கூடிய ஒரு மூட்டை அரிசிக்கு கையால் குத்துவதானால் 2 மூட்டை நெல் குத்துவதன் மூலம் 4 பெண்கள் குத்தவும் நான்கு முக்கால் - மூன்று பட்டணம் படி அரிசி போகவும் செய்வதால் குறைந்தது அதில் 10 பேருக்குச் சாப்பாடு கிடைக்கும். இரண்டாவதாக உடையை எடுத்துக்கொள்ளுவோம்.

500 பேருக்கு 500 ஜதை வேஷ்டி என்பதாக குறைத்து வைத்துக் கொண்டாலும் ஜதை ஒன்றுக்கு 6 மாதத்துக்கு 180 நாள்களுக்கு வருவதாய் வைத்துக்கொள்ளுவோம். இது கதராயிருந்தால் 1 ஜதை வேஷ்டி 2 ராத்தல் பஞ்சு வீதம் 500 ஜனங்களுக்கு 1000 ராத்தல் பஞ்சு ஆகும். இப்பஞ்சை பருத்தியிலிருந்து பஞ்சு வேறாக கொட்டை வேறாகப் பிரிக்க அதாவது 2 பாரம் பஞ்சுக்கு அறை கூலி 20 ரூபாய் கிடைக்கும். இது கை மணையால் அறைக்கப்பட்டால் இந்த 20 ரூபாயுக்கு 200 பேர் ஒரு வேளை அரிசி சாதமாக நன்றாய் சாப்பிடலாம். இந்த பஞ்சை 1,000 ராத்தல் நூலாக நூற்பதில் ராத்தல் ஒன்றுக்கு ஐந்து அணா வீதம் 312 - 8-0 ரூபாய் கூலி கிடைக்கும். இந்த ரூபாயைக் கொண்டும் ஒரு நாளைக்கு 3125 பேர் நல்ல அரிசி சாதம் சாப்பிடலாம். இந்த 1,000 ராத்தல் நூலைக் கொண்டு 500 பேருக்குச் சராசரி 2000 கஜம் துணி வேஷ்டி நெய்வதில் கஜத்துக்கு 0- 2-6 வீதம் 2,000, 0-2-6 அணாவாகிய 312 - 8-0 ரூபாய் நெசவு கூலி கிடைக்கும். இதன் மூலமும் குறைந்தது 3125 பேர் நல்ல அரிசி சாதம் சாப்பிடக்கூடும். இவர்களில் பெண்களாயிருந்து சேலை கட்டல் சாயம் போடல் சட்டைக்கும் ரவுக்கைக்கும் முதலியவைகளில் அதிகமாகும் துணிகள் இதுகளுக்காக 4ல் 1 பாகம் அதிகப்படுத்தலாம். இந்த வகையில் 1500 பேருக்கு குறையாமல் தினம் சாப்பாடு கிடைக்கும். ஆகவே 500 பேர்களின் துணிக்கு ஏற்படும் கூலியில்



RangaRakes tamilnavarasam.com

மாத்திரம் 8000 பேருக்குச் சாப்பாடு கிடைக்கும். இதை 6 மாதமாகிய 180 ல் வகுத்தால் சராசரி தினம் 45 ஆகும். அதாவது ஆகாரத்திற்காக நெல் குத்துவதில் 100 -க்கு 2 பேர் வீதமும் துணிக்கட்டுவதில் தினம் 100 -க்கு 9 பேர் வீதமும் சாப்பிடக்கூடிய கூலி கிடைக்கும். ஆக இவ்விரண்டு காரியங்களை மாத்திரம் யந்திரத்தினாலல்லாமல் மக்களைக் கொண்டே கைத்தொழில் மூலமாக செய்விப்பதில் 100-க்கு 11 பேர் நல்ல சாப்பாடாக சாப்பிடத் தகுந்த மாதிரியும் 100-க்கு 20 பேர் கஞ்சியாகக் குடிக்கக் கூடிய மாதிரியும் வேலை கிடைக்கிறது என்றால் மற்றபடி நாம் மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு வேலை மற்றும் நம் நாட்டு வேலைகளைப் பற்றி சரிவரக் கணக்குப் போட்டு பார்ப்பதானால் ஏறக்குறைய 100 -க்கு 100 பேர் சாப்பிடக் கூடிய அளவு கூலி கிடைக்க வேண்டிய தொழில்கள் இருந்து வந்தன. இப்போது கொஞ்சம் கொஞ்சமாய் அழிந்து வருகின்றன. கண்ணாடி சாமான், பாத்திர பண்டங்கள் முதலியவைகளினால் எவ்வளவு தொழில்கள் கெட்டு மக்கள் ஜீவனம் செய்ய முடியாமல் போய்விட்டது.

ஆகவே, யந்திரங்களாலும், வெளிநாட்டிலிருந்து சாமான்கள் தருவிப்பதனாலுமே நாட்டில் பெரும்பான்மையான மக்கள் வறுமையால் அவஸ்தைப்பட்டு மனச்சாட்சி, மானம், கற்பு, ஒழுக்கம் முதலியவைகள் இழக்க நேரிட்டிருக்கின்றதேயல்லாமல் சட்ட சபையில் தோற்றதும் கவர்னர், நிர்வாக சபை மெம்பர், மந்திரி, ஐகோர்ட் ஜட்ஜு முதலிய வேலைகள் கிடைக்காமல் போவதினாலும் அல்லவென்பது உண்மையான தேசாபிமானமுள்ளவர்களுக்கு விளங்காமற்போகாது.

ஆகவே, கூடியவரையிலாவது ஏழைகளைக் காப்பாற்றி தரித்திரத்தை ஓட்டுவதுதான் கதரின் ரகஸியமேயொழிய முரட்டுத்துணி உடுத்துவது என்ற வேஷக் கொள்கையல்ல.

## மதுவிலக்கு

அதுபோலவே, மதுபான விஷயமும் நமது நாட்டின் அடிமைத்தனத்திற்கும், அந்நிய ஆட்சியின் வளர்ச்சிக்கும் ஆதாரமாயிருக்கிறது. மதுபானத்தினால் தான் நமது ஏழை மக்கள் அதாவது கொஞ்ச நஞ்சம் மீதியுள்ள தொழிலாளிகள் வேலை செய்து, கூலி பெற்றாலும் பட்டினி கிடக்கவும் மது வெறியினாலேற்படும் நஷ்டத்தால் பெருங்குடித்தனங்கள் அழியவும் அதனாலுண்டாகும் விவகாரங்களாலேயே பார்ப்பனர்கள் உத்தியோகம், லஞ்சம் முதலிய வழிகளில் நமது பொருளைக் கொள்ளை கொள்ளவும், இன்னும் எத்தனையோ வகைகளில் கஷ்ட நஷ்டப் படவும் ஏற்படுகிறது.

ஆகவே, மதுரைத் தீர்மான நிறைவேற்றத்தால் நமது நாட்டில் 100-க்கு 90 பேர்களுக்கு மேலாயிருக்கும் பார்ப்பனரல்லாதார்களுக்கே முக்கிய குறைகளான சுயமரியாதையற்றிருத்தல், மனச்சாட்சியின்றியிருத்தல், பட்டினி கிடத்தல் முதலிய எல்லாக் குறைகளும் நீங்கி அவர்களுக்கே எல்லா வழிகளிலும் மிகுதியும் அனுகூலமாக இருப்பதால் இத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டியது நம்முடைய கடமையாயிருக்கிறது. இத்திட்டங்களை காங்கிரசிலிருந்து மெல்ல மெல்ல வெளியாக்க வேண்டிய அவசியமும் இத்திட்டத்தை நடத்தக் காங்கிரஸைக் கட்டிக்கொண்டிருந்த மகாத்மாவை காங்கிரசை விட்டு வெளியாக்கச் சூழ்ச்சி செய்ய வேண்டிய அவசியமும் நமது பார்ப்பனருக்கு ஏற்பட்டதும் இந்தக் காரணங்களால்தான். சுருக்கமாகச் சொல்வதானால் இத்திட்டங்களால் பார்ப்பனரல்லாதாருக்கே அனுகூலமும் பார்ப்பனர்களுக்குப் பெருத்த ஆபத்தும்தான். ஆதலால், பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் உண்மையான கவலையுள்ளவர்களும் சுயமரியாதையில் லட்சியமுள்ளவர்களும் ஏழை மக்களிடத்திலும், தொழிலாளிகளிடத்திலும் கருணையுள்ளவர்களும் செய்ய வேண்டிய முக்கியமான வேலை மதுரை மகாநாட்டுத் தீர்மானங்களை நடத்திக்கொடுப்பதேயாகும் என்று மறுபடியும் சொல்லுவோம்.

மற்றபடி, அர்த்தமில்லாத வார்த்தைகளான ‘சுயராஜ்யம்’, ‘உரிமை’, ‘தேசீயம்’, ‘சர்க்காருக்கு முட்டுக்கட்டை போடுதல்’ ‘சிங்கத்தின் குகையில் போய் அதன் வாயைப் பிளத்தல்’, ‘பூரண சுயராஜ்யம்’ முதலிய அரசியல் பரிபாஷைப் பெயர்களைச் சொல்லிக் கொண்டு திரியும் வேலைகளை பார்ப்பனரைப் போலவே நம்மிலும் உள்ள சில வயிற்றுச்சோற்று தேசபக்தர்களுக்கு விட்டு விடலாம். பார்ப்பனரல்லாதாருக்குப் பார்ப்பனர் கோரும் “பார்ப்பன ஆதிக்க சுயராஜ்யம்” ஒரு சிறிதும் தேவையில்லை. அதில் எந்தப் பார்ப்பனரல்லாதார் கலந்து கொள்வதும் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு துரோகமேயாகும். பார்ப்பனரல்லாதாருக்கு வேண்டியதெல்லாம் மகாத்மா கோரும்படியான நிர்மாணத்திட்டத்தை நிறைவேற்றுதல் என்னும் சுயராஜ்யம்தான். அதுதான் மதுரைத் தீர்மானம்! அதுதான் மதுரைத் தீர்மானம்!! அது தான் மதுரைத் தீர்மானம்!!!

**குடி அரசு - தலையங்கம் - 23.01.1927**



RangaRakes
tamilnavarasam.com

# எங்கும் பார்ப்பன ஆதிக்கமே

கோயமுத்தூர் ஜில்லாவில் நான்கு டாக்டர்கள் புதிதாக சில தாலூக் காக்களுக்கு நியமிக்க வேண்டியிருந்ததாகத் தெரிகிறது. நமது ஜில்லா போர்டிலும் நமது ஜில்லாவிற்குட்பட்ட எல்லாத் தாலூகா போர்டிலும் பிராமண ரல்லாத கனவான்களே தலைவர்களாயிருந்து வருகின்றனர். நம் நாட்டிலோ எல்லா உத்தியோகங்களையும், பார்ப்பனர்களே வெகுகாலமாகக் கொள்ளை யடித்து வந்திருக்கின்றனர் என்ற கிளர்ச்சி பலமாக இருந்து வருகிறது. பார்ப்பனர்களின் உத்தியோக வேட்டையாலேயேதான் நம் நாட்டில் பார்ப் பனர் பார்ப்பனரல்லாதார் என்ற கட்சி உண்டானதென்பதில் சந்தேகமில்லை. பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற கிளர்ச்சி தோன்றியபின் பார்ப்பனருக்கு இனி அதிகம் உத்தியோகம் கொடுக்கக்கூடாது. பார்ப்பனரல்லாதார்களுக்கே கொடுத்து வரவேண்டும் என்ற அபிப்பிராயத்திற்கு சர்க்காரிலுங் கூட ஆதரவு காட்டிவந்திருப்பதாகத் தெரிகிறது. அப்படியிருக்க நமது ஜில்லா லோகல் போர்டு ஸ்தானங்களில் பார்ப்பனரல்லாதவர்களே தலைவர்களாயிருந்தும், இவ்விடம் நியமிக்க வேண்டிவந்த நான்கு டாக்டர் ஸ்தானங்களையும் பார்ப்பனர்களுக்கே கொடுத்ததானது பெரிய அநியாயமாகும். பார்ப்பனரல் லாத டாக்டர்கள் டாக்டர் வேலைக்கு லாயக்கில்லை யென்று போர்டார் நினைத்து விட்டார்களோ என்னவோ தெரியவில்லை. நமது ஜில்லாவில் அநேக பார்ப்பனரல்லாத டாக்டர்கள் பாஸ் செய்து விட்டு வேலையில்லாமல் காத்திருக்கும் போது, ஒரு ஸ்தானங்கூட பார்ப்பனரல்லாதாருக்குக் கொடுக் காமல் நான்கையும் பார்ப்பனர்களுக்கே கொடுத்ததற்கு பார்ப்பனரல்லாதார் மிகவும் வருந்தவேண்டியிருக்கிறது. போர்டு தலைவர்கள் இம்மாதிரி அநியாயம் செய்ய என்ன அவசியமேற்பட்டதோ தெரியவில்லை. என்ன வோ சில சிபார்சுகள் என்ற சிறிய காரணம் தவிர வேறு காரணம் சொல்ல முடியாதென்றே நினைக்கிறோம். உத்தியோக வேட்டையில் கை தேர்ந்த பார்ப்பனர்களுக்கு ஆளுக்குத் தகுந்த சிபார்சு பிடிக்க தெரியாமற்போகாது. கேவலம் சிபார்சுகளுக்காக தாலூகாபோர்டுதலைவர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை பார்ப்பனர்களுக்கு ஆதரவாகக் கொடுத்திருப் பார்களென்பதை எண்ணும்போது வருத்தப்படவேண்டியிருக்கிறது. ஆனால் தற்சமயம் தலைமை வகித்துவரும் போர்டு தலைவர்கள் பார்ப்பனரல் லாதாரின் க்ஷேமத்தில் அக்கரையில்லாதவர்களல்லர்! ஆனால் பார்ப்பன டாக்டர்கள் ஷை ஸ்தானத்தை அடைய செய்த சூழ்ச்சிகளுக்கு நாட்டின்



அபிப்பிராயத்தையும் பார்ப்பனரல்லாதார் க்ஷேமத்தில் போர்டு தலைவர் களுக்குள்ள அக்கரையையும் பலி கொடுத்துவிட்டதானது பார்ப்பனரல்லா தாரின் துர்பாக்கிய மென்றே சொல்லவேண்டும். எப்படியோ அந்தந்த தாலூகா போர்டு தலைவர்களைச் சரிப்படுத்தித் தங்கள் தங்களுக்கு ஆதரவு காட்டும் படி செய்து நான்கு டாக்டர் ஸ்தானங்களையும் பார்ப்பனர்கள் அடித்துக் கொண்டு போனதை நினைக்கும் போது நம்மவர்களுக்கு கண்ணிருந்தும் பார்க்க முடியவில்லை,காதிருந்தும் கேட்கமுடியவில்லை, வாயிருந்தும் பேச முடியவில்லை,மனமிருந்தும் அறியமுடியவில்லை என்று சொல்வதைத்தவிர நாமொன்றும் சொல்லக் கூடவில்லை. இனிமேலாவது போர்டு தலைவர்கள் இது விஷயத்தைக் கவனித்துச் செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 23.01.1927**



RangaRakes tamilnavarasam.com

# அதுவானாலும் கிடைக்கட்டும்

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் பார்ப்பனருக்கு ஒரு “வஜ்ஜிரக் கோடாரி”. அதாவது தைரியமாய் யாரையும் வைவார். அப்படி வையவும் அவருக்கு சில சௌகரியமுண்டு. என்ன வென்றால் ........... “சத்தியமூர்த்தி வைவதையெல்லாம் பொருட்படுத்துவதானால் உலகில் மனிதனுக்கு வேறு வேலை செய்ய நேரமே கிடைக்காது” என்று வசவு கேட்போர் ஒவ்வொரு வரும் நினைக்கும்படியாகவும், “சத்தியமூர்த்தி வைவதையெல்லாம் பொருட் படுத்தலாமா” என்று ஊரார் வையப்பட்டவரை கேட்கும்படியானதுமான ஒரு சௌகரியம் ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு உண்டு. இதனால் இன்னும் வைய முடியுமானால் ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு வாய்வலித்தால் மாத்திரம் வசவுத்தடை ஏற்படுமேயொழிய மற்றவர்களால் தடை ஏற்படுத்த முடியவே முடியாது. இந்த வசவைப் பார்த்து ஆனந்தப்படும் பாக்கியம் நமது பார்ப் பனர்களுக்கு யிருப்பதால் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியவர்கள் ஒரு வஜ்ஜிரக் கோடாரி என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஐயோ பாவம்! “அவ்வஜ் ஜிரக் கோடாரிக்கு” அவரால் வேலை வாங்கிக் கொண்ட சுயராஜ்ஜியக் கட்சியார் சட்டசபைத் தலைவர் ஸ்தானம் கொடுக்க மறுத்து விட்டார்கள். தொலைந்து போகட்டும் அதுதான் பார்ப்பனர் என்கிற காரணத்திற்காக கொடுக்கவில்லை என்று சிலரும் சத்தியமூர்த்தி சட்டசபைத் தலைவரானால் சட்டசபை மெம்பரை ராஜிநாமா கொடுத்து விடுவதாக மிரட்டியதால் கொடுக் கப்படவில்லையென்று சிலரும் (சில சர்க்கார் உத்தியோக மெம்பர்கள் கூட மிரட்டினார்களாம்) சிலர் தங்களுக்குக் கொடுக்காவிட்டால் கட்சியைவிட்டு வெளியேறி விடுவதாகப் பயமுறுத்தியதால் கொடுக்கப்படவில்லை என்று சிலரும் முன்னாலேயே மந்திரி வேலை கொடுப்பதாய் வாக்களித்ததால் மந்திரி வேலை ஒப்புக்கொள்ளாததால் அதற்கு பதிலாக 5500ரூ. இல்லா விட்டாலும் 2000 ரூபாயாவது வேண்டாமா என்று தலைவர் வேலையாவது கொடுக்க வேண்டுமே என்று ஏக தலைவர் நாணயத்தைக் காப்பாற்ற பார்த்தாலும் கிடைக்காமல் போய்விட்ட தென்றும் சிலர் சொல்லிக் கொள் வதால் ஏதாவதொன்றினாலோ எல்லாவற்றினாலோ கிடைக்காமல் போயிருக் கலாம். அதுதான் போகட்டும் என்றாலும் கட்சித் தலைவர் பதவியாவது கிடைக்க வேண்டாமோ என்று பார்த்தால் அதற்கும் ‘பார்ப்பனர் கூடாது’ என்று சிலர் சொன்னதாலும் “சத்தியமூர்த்தி கட்சித் தலைவரா அப்படியானால் எனக்கு கட்சியும் வேண்டாம் சுயராஜ்யம் கூட வேண்டாம்” என்று சிலர் சொன்னதாலும் “எனக்கும் வேண்டாம், சத்தியமூர்த்திக்கும் வேண்டாம், வேறு யாருக்குக் கொடுத்தாலும் சரி” என்று சிலர் சொன்னதாலும் ஆந்திரா, தமிழ்நாடு என்கிற நாட்டு வாதத்தாலும் ஏக தலைவரான ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய் யங்காருக்கே ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு தலைவர் பட்டங்கட்டுவதில் பயம் ஏற்பட்டதாலும் அதாவது வேறு கட்சியார் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை ஏமாற்றி விட்டால் பிறகு தம்முடைய ‘ஏக தலைவர்’ ஸ்திதிக்கு ஆபத்து வந்து விடுமோ என்று பயந்ததாலும் இன்னும் பல அய்யங்கார் பார்ப்பனர்களின் போட்டியிலும் கிடைக்காமல் போய்விட்டது. ஆகவே இந்த கோபத்தின் பலனாய் கட்சி உபதலைவர் பதவியைக் கூட காலால் உதைத்துத் தள்ளி விட்டார். கடைசியாக ஊர் ஜனங்கள் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை வெறும் சத்தியமூர்த்தி என்று எண்ணவும் கூப்பிடவும் ஏற்பட்டதால் இப்போது கோபம் - தெளிந்தவுடன் ஏதாவது இருக்கட்டும் என்கிற ஞானோதயமாகி ஏக தலைவரை உபதலைவர் பட்டமானாலும் இருக்கட்டும் என்று கேட்டுக் கொண்டதால் ஏக தலைவரும் “ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி” என்பது போல் பாவம் ஒரு நாயுடுவைப் பிடித்து ஏமாற்றி அவரிடம் ராஜினாமா வாங்கிவிட்டார். இந்தப் பட்டத்தை சீக்கிரத்தில் ஸ்ரீமான் சத்திய மூர்த்திக்கு சூட்டி விடுவார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்களும் அதுவா னாலும் கிடைக்கட்டும் என்கிற ஆசையின் பேரில் தலையை நீட்டிக்கொண்டி ருக்கிறார். வகுப்புவாதம் ஒழிந்த தன்மையும் உத்தியோக ஆசை வெறுத்த தன்மையும் அளவுக்கு மீறிய கட்டுப்பாட்டை உடைய தன்மையும் எவ்வளவு தூரம் சுயராஜ்யக் கட்சியில் துலங்குகிறது என்பதை இதிலிருந்தே எல்லோ ரும் அறிந்து கொள்ளலாம். “ஆத்மஸ்துதி, பரநிந்தை, திரவிய அபேக்ஷை ஆகிய மூன்று துர்க் குணங்களையும் வெறுத்து நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்து நான்கு கலைக்கியானம் தெரிந்த ஞானபண்டிதனான எனக்கும் இரண்டணா ஒன்றும் தெரியாத இந்த தற்குறிக்கும் இரண்ட ணாவா?” என்று ஒரு சாஸ்திரி கேட்டது போல் இருக்கிறது.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 23.01.1927**



RangaRakes

tamilnavarasam.com

# ஜென்மக்குணம் போகுமா?

சுயராஜ்யக் கட்சி பார்ப்பனக் கட்சி என்றும், அது பார்ப்பன ஆதிக்கத் திற்காகவே ஏற்பட்டதென்றும், பார்ப்பன ஆதிக்கத்திற்கு அனுகூலமாய் உழைக்கச் சம்மதப்படும் சில பார்ப்பனரல்லாதாரை மாத்திரம் கூலி கொடுத் தோ, ஆசை வார்த்தை காட்டியோ அதில் சேர்த்துக்கொள்ளப்படுகிறதென்றும் பலதடவைகளில் சொல்லியும் எழுதியும் வந்திருக்கிறோம். அது போலவே இப்போது சட்டசபைத் தேர்தல்கள் முடிந்ததும் தங்கள் காரியம் சாதித்துக் கொள்ளக்கூடிய மாதிரியில் தங்களுக்குப் பக்கபலம் இருக்கிறது என்பதாகக் கருதி இப்போது சட்டசபைக்கு பல தீர்மானங்கள் கொண்டு வருகிறார்கள். அதாவது - முதலாவதாக தேவஸ்தான சட்டத்தை ஒழிப்பதற்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. தேவஸ்தான விஷயம் சுயராஜ்யக் கட்சி விஷயமல்ல. இது தனித்தனி நபர்களுக்குச் சம்பந்தப்பட்டது என்று சொல்லி தேர்தலில் பாமர ஜனங்களை ஏமாற்றி ஓட்டுப் பெற்றுவிட்டு இப்போது தேவஸ்தான விஷயம் சுயராஜ்யக் கட்சி விஷயமானதோடு காங்கிரஸ் விஷயமாகச் செய்து விட்டார்கள். இத்தீர்மானம் கொண்டு வந்தது கோவை ஜில்லா பிரதிநிதி ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமண ஐயங்காரே ஆவார். கோவை ஜில்லாவில் ஸ்ரீமான் டி.ஏ. ராமலிங்கஞ் செட்டியார் அவர்களுக்கு விரோதமாய் ஓடி ஓடி ஓட்டு வாங்கிக் கொடுக்கிற சிகாமணிகள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்களோ தெரியவில்லை. ஸ்ரீமான் அய்யங்காரை இது யோக்கியமா? என்று இவர்கள் கேட்பார்களானால் அவர் உடனே சரியான பதில் சொல்லா திருப்பார் என்றே நினைக்கிறேன். அதாவது என் பணத்தினால் ஓட்டு சம்பாதித்தேனே ஒழிய யாருடைய தயவினாலும் எந்த வாக்குத் தத்தத்தி னாலும் ஓட்டுப் பெறவில்லை; என்னிடம் பணம் வாங்காமல் எனக்கு யார் வேலை செய்தார்கள்? ஓட்டுச் செய்தார்கள்? என்று கேட்பார்களாதலால் அய்யங்காருக்கு வேலை செய்தவர்கள் தலையைத் தொங்கப் போட்டுக் கொள்ள வேண்டியது தான். மற்றொரு தீர்மானம் மற்றொரு பார்ப்பனரால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதாவது பார்ப்பனரல்லாத கட்சி மந்திரி காலத்தில் அரசாங்கக் கல்லூரிகளில் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வதற்கு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருந்ததை இப்போது எடுத்து விடவேண்டு மென்று தீர்மானம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டி இருப்பதால் நாலு இரண்டு பார்ப்பனரல்லாதார் பிள்ளைகளை காலேஜில் சேர்த்துக்



கொள்ள அனுமதிக்கப்பட்டு வருகிறது. இந்த நாலோ இரண்டோ பிள்ளைகள் படிப்பது கூட நமது பார்ப்பனர்களாகிய சுயராஜ்யக் கட்சியாருக்கு கண்ணில் குத்துகிற படியால் அடியோடு காலேஜுகளை பார்ப்பன சத்திரங்களாக்க ஆரம்பித்து விட்டார்கள். இதெல்லாம் பார்ப்பனருடைய தப்பிதம் அல்ல. பின்னை யாருடையதென்றால் அவர்கள் பின் திரிந்த, திரியும், திரியப்போகும் பார்ப்பனரல்லாத வயிற்றுச் சோற்று தேச பக்தர்களின் தப்பிதமேயாகும் என்பதே நமது அபிப்பிராயம். இன்னமும் என்ன என்ன நடக்குமோ பார்ப்போம்.

**குடி அரசு - கட்டுரை - 23.01.1927**



RangaRakes tamilnavarasam.com

# தஞ்சை ஜில்லா பிரசாரம்

அக்கிராசனாதிபதியே! சகோதரி சகோதரர்களே!

நான் இதற்கு முன் இந்தப் பக்கங்களுக்கு எத்தனையோ தடவை வந்திருக்கிறேன். ஒரு காலத்திலும் இதுபோன்ற மக்கள் உணர்ச்சியும் எழுச்சியும் கூட்டமும் வரவேற்பு உபசாரம் முதலியதுகளும் நான் கண்டதே இல்லை. நம்முடைய எதிரிகள் "வகுப்பு இயக்கங்கள் மாண்டு விட்டன", "வகுப்புப் போராட்டங்கள் குழிதோண்டி புதைக்கப் பட்டன", "பார்ப்பன ரல்லாதார் கட்சி ஒழிந்து விட்டது", "இனி நம் இஷ்டம்போல் கொள்ளை அடிக்கலாம்" என்று சொல்லுகிற காலத்தில் எப்போதும் இருந்ததை விட எண் மடங்கு அதிகமாய் நமது கட்சியினுடையவும், இயக்கத்தினுடையவும் உணர்ச்சி வலுத்து வருகிறதுடன் நமது கொள்கையை ஒப்புக்கொள்ளுவதாக புதிது புதிதான இடங்களில் இருந்து ஆதரவுகள் கிடைத்து வருகின்றன.

இன்றைய தினம் எனக்குச் செய்யப்பட்ட வரவேற்புகளும், ஊர்வலங் களும், வரவேற்பு உபசாரப் பத்திரங்களும் அதன் மூலம் காட்டிய உணர்ச்சி களும், ஊக்கங்களும் கண்டிப்பாக எனக்காக அல்ல என்பதையும் அது களுக்கு நான் கொஞ்சமும் தகுதியுள்ளவன் அல்ல என்பதையும் எல்லோரை யும் விட நான் நன்றாய் அறிவேன். அதோடு நான் அதுகளுக்கு ஒரு சிறிதும் அருகனல்ல என்பதையும் உறுதியாயும், திரிகரண சுத்தியாயும் சொல்லுவேன். ஆனால், பின்னை எதற்கு நான் ஏற்றுக்கொண்டேன் என்று கேட்பீர்களா னால், நமது சுயமரியாதைக்காக நான் கைக்கொண்டுள்ள கொள்கைகளுக்கும், அதுகளை உங்களிடையே நிறைவேற்றி வைக்க ஏற்றுக்கொண்டிருக்கும் பொறுப்புக்கும் தொண்டிற்குமென்றே சொல்லுவேன். இதுகளிலிருந்தே எனது கொள்கையையும், தொண்டையும் நீங்கள் அடியோடு ஒப்புக்கொள்ளு கிறீர்கள் என்றும் அதற்கு ஆதரவளிக்கத் தயாராயிருக்கிறீர்கள் என்றும் நான் நினைப்பதோடு எனது கொள்கைகளில் எனக்கு முன்னிலும் அதிகமான திடமும், எனது தொண்டைச் செய்ய முன்னிலும் அதிகமான ஊக்கத்தையும் அடைகிறேன். இந்த நம்முடைய சுயமரியாதையைக் காப்பாற்ற வேண்டும் என்னும் விஷயத்தில் நான் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சியானது என்னால் ஏற்பட்டதல்லவென்பதும் இன்று நேற்று ஏற்பட்டதல்ல என்பதும் உங்களுக்கு நன்றாய்த் தெரியும். எந்தக் காலத்தில் நம்முடைய நாட்டில்



அன்னியர்கள் பிரவேசித்து நம்மை ஏமாற்றித் தாழ்ந்தவர்களாக்கி நம்மீது ஆதிக்கம் செலுத்தத் தலைப்பட்டார்களோ அந்தக் காலமாகிய ஆயிரக்கணக் கான வருடங்களாக நடந்து வருகிறது. ஆனாலும், நம்முடைய ஒற்றுமையும் கட்டுப்பாடும் இல்லாத தன்மையாலும் நம்மைப் பிரித்து வைத்து நமக்குள் கட்சிகளையும் துவேஷங்களையும் உண்டு பண்ணி வாழ்க்கை நடத்த நமது எதிரிகள் கைக்கொண்ட தந்திரங்களாலும், அவ்வப்போது அந்தந்த பிரயத் தனங்கள் அருகியே வந்துவிட்டன. இராமாயண பாரத கால முதற் கொண்டும் அதற்கு முன் வேதகாலம் என்று சொல்லப்படும் கால முதற் கொண்டும் இந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே எத்தனையோ போர்கள் நடந்து வந்திருக்கின்றன. வேதம் என்பதின் முக்கிய பாகமும் அதன் தத்துவமும் என்ன என்பதை நீங்கள் அறிய முற்படுவீர்களானால் நம்முடைய சுயமரியா தையையும், சுதந்திரத்தையும், வாழ்வையும், பெருமையையும் ஒழித்து எதிரிகள் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தும் சூழ்ச்சிகளையே அடிப்படை யாகக் கொண்டது என்பதை ஒவ்வொரு வரியிலும் ஒவ்வொரு பதத்திலும் ஒவ்வொரு எழுத்திலும் ஒவ்வொரு ஒலியிலும் காண்பீர்கள். இதை ஒழிக்க கங்கணம் கட்டிய மகாத்மாக்கள் எத்தனையோ பேர்களில் நமது மகாத்மா காந்தியும் ஒருவர். இதற்கு முன் ஏற்பட்ட மகான்கள் என்ன கதியை அடைந் தார்களோ அதே கதியை நமது மகாத்மாவும் அடையும்படியாகவே நமது சுயமரியாதை எதிரிகள் செய்துவிட்டார்கள் என்பதை நீங்கள் கண்கூடாகப் பார்க்கிறீர்கள் அல்லவா? ஆதலால் நமது காரியத்தில் நாம் வெற்றிபெறுவது என்பது சுலபமான காரியமல்லவாயினும் அதற்குத் தகுந்த மன உறுதியுடனும், தளரா முயற்சியுடனும் வேலை செய்ய வேண்டியது நமது கடமையாயிருக் கிறது. பல காலமாய் அடங்கிக் கிடந்த முயற்சியானது சமீப காலத்தில் அதாவது டாக்டர் நாயர், சர். தியாகராயர் காலத்தில் வெளிக்கிளப்பப்பட்டா லும் முளையளவிலேயே வெம்பிக் காயும்படி நமது எதிரிகள் செய்துவிட் டாலும், மகாத்மா காந்தி காலத்தில் காட்டுத் தீ போல் பரவி சுலபத்தில் அழிந்து விட முடியாதபடி மக்கள் மனதில் பதியும்படி செய்துவிட்டது. நான் இத் தொண்டில் ஈடுபடக் காரணமே மகாத்மா காந்தியால்தான். மக்கள் சுயமரியாதை அடையாமல் விடுதலையோ சுயராஜ்ஜியமோ அடைய முடியாது என்பதை அரசியல் முறையில் மகாத்மா காந்தி தான் முதல் முத லாகச் சொன்னதோடு சுயமரியாதை அடைந்து விட்டு, சுயராஜ்ஜியத்தை நினையென்றும் சொன்னார். அதாவது நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்று வதுதான் சுயராஜ்யம் என்றும், தீண்டாமை ஒழிந்து மக்கள் சமத்துவமடை வதுதான் விடுதலை என்றும் சொன்னதே இந்தக் கருத்தைக் கொண்டுதான். அதனால்தான் சுயமரியாதையின் எதிரிகளான பார்ப்பனர்களும் மகாத்மா வையும் காங்கிரசை விட்டு வெளியில் போகும்படி செய்ய வேண்டியதாயிற்று. அதனால்தான் மற்றும் பல பார்ப்பனரல்லாத அரசியல் தலைவர்கள் என் போரும் இக்கருத்தை தைரியமாய் வெளியில் எடுத்துச்சொல்ல பயப் படுகிறார்கள். அதனால்தான் பார்ப்பனர்களும் இக் கொள்கைகளைத் தேசத்



RangaRakes
tamilnavarasam.com

துரோகக் கொள்கைகள் என்றும், நாஸ்திகக் கொள்கைகள் என்றும், வகுப்புத் துவேஷக் கொள்கைகள் என்றும் விஷமப் பிரசாரம் செய்கிறார்கள். ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் மனப்பூர்வமாய் சரியென்று நினைப்பதை என்ன வரினும் அஞ்சாமல் காரியத்தில் நடத்தி வைக்க முயற்சிக்க வேண்டும். இந்தத் தடவையாவது நமது எதிரிகளின் சூழ்ச்சிகளுக்குப் பயந்து அரை குறையாய் விட்டு விட்டு ஓடிப்போகாமல் கடைசிவரை போராடி அதற்காகவே உயிரைக் கொடுத்து நமது சுயமரியாதையை அடைய வேண்டும். சுயமரியாதை அடைந்து விட்டால் சுயராஜ்யம் என்பது கண்மூடி கண் திறப்பதற்குள் தோன்றிவிடும். சுயமரியாதை அடைந்த நிலையே சுயராஜ்யம். சூரியன் உதயமான பிறகு ஒரு ஆள் வைத்து இருட்டைக் கழுத்தைப் பிடித்துத் தள்ள வேண்டுமா? அது போலவே சுயமரியாதையான சூரியன் உதயமாகி விட்டால் அடிமைத்தனம், அன்னிய ஆதிக்கம் ஆகிய இருட்டுகள் யாரும் கழுத்தைப் பிடித்துத் தள்ளாமலே தானே இருந்தவிடம் தெரியாமல் ஓடி விடும். ஆதலால், உண்மையான சுயராஜ்யம் அடைவதற்கு சுயமரியாதைதான் ஒரே ஒப்பற்ற மார்க்கம் என்றும், அதுவே மனிதரின் பிறப்புரிமை என்றும் உறுதி கொண்டே அதற்காக உழைக்கும்படி உங்களைப் பிரார்த்திக்கிறேன்.

*( தொடர்ச்சி குடி அரசு 06.02.1927 )*

*குறிப்பு : 24, 25, 26.01.1927 தேதிகளில் மாயவரம், திருபுவனம், தஞ்சாவூர் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய ஊர்களில் நடந்த பொதுக் கூட்டங்களில் ஆற்றிய சுயமரியாதைச் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 30.01.1927**



# பத்திரிகைகள்

நமது நாட்டுப் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கென்று வெகு காலமாகவே அதாவது ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே மதம், வேதம், கடவுள், மோக்ஷம் என்னும் பெயர்களால் பலவித ஆதாரங்களையும் ஏற்படுத்திக்கொண்டு அதன் மூலம் தாங்களே உயர்ந்தோர்களாயிருந்து கொண்டு நம்மை ஏய்த்துத் தாழ்த்தி வயிறு வளர்ப்பதல்லாமல், அரசியல், சுயராஜ்யம், தேசீயம், தேசீயப் பத்திரிகை, தேச சேவை என்கிற பெயர்களாலும் பலவித இயக்கங்களையும் பத்திரிகைகளையும் உண்டாக்கிக் கொண்டு அதன் மூலமும் நாங்களே தேசபக்தி உள்ளவர்கள் என்றும், தங்களுடைய பத்திரிகைகளே தேசீயப் பத்திரிகைகள் என்றும் நமது பணத்திலேயே விளம்பரப்படுத்திகொண்டு நம்மை தாழ்த்தி மிதித்து மேலேறி பல வழிகளிலும் வயிறு வளர்க்க ஆதிக்கம் தேடி வைத்துக்கொண்டு விட்டார்கள். இவைகளில் எல்லாவற்றையும் விட நமக்குப் பெரிய ஆபத்தாயிருப்பது பார்ப்பனப் பத்திரிகைகளே. அப்பத்திரிகைகளின் செல்வாக்கு நம் நாட்டை அடியோடு முற்றுகை போட்டுக்கொண்டிருக்கிறது. பாமர மக்கள் மாத்திரமல்லாமல் தங்களைப் போதிய அறிவுள்ள மக்கள் என்று சொல்லிக் கொள்ளும் பலரும் அப்பத்திரிகைகளின் மூலம் ஏமாறுவதும் அப்பத்திரிகைகளின் மூலம் பார்ப்பனர்களுக்கு அடிமைகளாவதும் வளர்ந்துகொண்டே வருகிறது. தமிழ் நாட்டு மக்கள் இப்பார்ப்பனக் கொடுமை முற்றுகையிலிருந்தும் அன்னிய ஆட்சிக்கொடுமை முறைகளிலிருந்தும் தப்ப வேண்டுமானால் இப்பார்ப்பனப் பத்திரிகைகளைப் பார்த்து ஏமாறுவதையும் அதுகளுக்கு அடிமைகளாவதையும் ஒழித்தாலல்லது கண்டிப்பாய் முடியவே முடியாத நிலைமையில் இருக்கிறோம். அவைகள் செய்யும் அக்கிரமங்களை நினைக்கும்போது நமது மக்கள் மனிதர்கள்தானா - மனிதப் பிறவிதானா - இப்பிறப்புக்கு மானம், வெட்கம் என்கிற தன்மைகள் இருக்கின்றனவா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. நமது கெடுதிக்காகவே இப்பார்ப்பனப் பத்திரிகைகள் நடந்து வருவதையும் பார்ப்பன ஆதிக்கப் பிரசாரமே அதன் கொள்கைகளாக இருப்பதையும் நாம் சந்தேகமற மனப்பூர்ணமாய்த் தெரிந்திருந்தும் இப்பிரசாரங்களுக்கு பணம் கொடுத்து நாம் நாசமாய்ப் போவதற்காக அப்பத்திரிகைகளையே வாங்கிப் படிப்பதென்றால் யாராவது நம்மை அறிவு, புத்தி, ஒழுக்கம், மானம், வெட்கம், சுயமரியாதை உள்ள சமூகம் என்று



RangaRakes
tamilnavarasam.com

சொல்லக்கூடுமா? என்பதை நன்றாய் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. பிறரைக் குற்றம் சொல்லும் போது மாத்திரம் "கள்ளு, சாராயம் குடிப்பது கெடுதி என்று தெரிந்திருந்தும் மறுபடியும் அதைக் குடிக்கிறார்களே என்ன புத்தி கெட்ட ஜனங்கள், மானங்கெட்ட ஜனங்கள்" என்கிறோம். ஆனால் அந்தப் புத்தியும் மானமும் நமக்கு இருக்கிறதா என்பதைப் பார்ப்பவர்கள் நம்மில் 1000க்கு ஒருவரைக் கூடக் காணோம். பார்ப்பனப் பத்திரிகைகள் பார்ப்பன ஆதிக்கத்திற்கு மாத்திர மில்லாமல் நம்முடைய இழிவுக்கும், தாழ்மைக்கும், அழிவுக்கும் நடத்தப்படுகிறது என்பதை அறிந்தி ருந்தும் அதைப் பணம் கொடுத்து வாங்கிப் படிப்பவர்களுக்கு புத்தியும், மானமும் இருக்கிறதா என்பதை கவனிப்பதில்லை. உதாரணத்திற்காக ஒரு பத்திரிகையை எடுத்துக்கொள்வோம்; சாதாரணமாக 'சுதேசமித்திரன்' என்னும் பத்திரிகை பெரும்பாலும் பார்ப்பனரல்லாதாருடைய பணத்தையே மூலதனமாகக் கொண்டது. அதன் பத்திராதிபர்கள், உப பத்திராதிபர்கள், மானேஜர்கள் முதலியவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள். அவர்கள் சம்பளமோ மாதம் 1500, 1000, 800, 600 இப்படி அனுபவிக்கிறார்கள். இப்பத்திராதிபர் பார்ப்பனரல்லாதாரை ஒழித்து பார்ப்பன ஆதிக்கம் தேடுகிற பிரசாரம் தவிர வேறு வேலை ஏதாவது செய்வதைப் பார்த்திருக்கிறீர்களா? நம்மை நாமே கெடுத்துக்கொள்ள நமது பணமே உதவ வேண்டுமா? அதற்கு விளம்பரம் கொடுப்பவர்கள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதார்களே! அதை வாங்கிப் படித்துக் கெடுகிறவர்கள் பார்ப்பனரல்லாதார்களே! இதில் ஏதாவது ரகசியம் இருக்கிறதா அல்லது இப்பார்ப்பனர்கள் எதையாவது ரகசியமாய்ச் செய்கிறார்களா? நேருக்கு நேராக நம்மைப் பார்த்து "நீங்கள் முட்டாள்கள் உங்களுக்கு மானம், வெட்கம், சுயமரியாதை, புத்தி, அறிவு இதுகள் கிடை யாது. ஆதலால் நாங்கள் உங்களை ஏமாற்றுகிறோம். உங்களால் என்ன செய்ய முடியும்! உங்களில் யாரோ சிலர் கத்தினால் கத்தட்டும் எங்களுக்கு கவலை இல்லை. இதற்காக நாங்கள் கொஞ்சமும் பயப்பட்டு எங்கள் கொள் கையை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. உங்களிலேயே சில அயோக்கியர் களையும் முட்டாள்களையும் நாங்கள் சுவாதீனம் செய்து கொண்டு உங்கள் கத்தல்களை ஒழிக்க எங்களுக்குத் தெரியும். ஒரு கை பார்க்கலாம் வாருங்கள்" என்று தைரியமாகச் சொல்லுகிறார்கள்; இதற்கொன்றும் மார்க்கமில்லையா என்றுதான் கேட்கிறோம். 'குடி அரசு' தோன்றிய பிறகு 'மித்திரன்' சுமார் 2000 சந்தாதாரர்களுக்கு மேலாகவே இழக்க நேரிட்டும் இன்னமும் பார்ப்பனரல்லாதாரிலேயே பல பங்குக்காரர்களை ரகசியமாக சேர்த்து பணம் சம்பாதிக்கப்பட்டு வருகிறது. நம்மவர்கள் முன்னேற்றத்திற்கென்றே நடத்தப் பட்டு வருகிற பத்திரிகைகளை கையில் தொடுவதற்கும் நமது மக்கள் அஞ்சு கிறார்கள் என்றால் நமது யோக்கியதையை என்னவென்று சொல்லுவது. சாதாரணமாக "திராவிடன்" பத்திரிகை எவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வருகிறது என்பதை யாராவது உணருகிறார்களா? அது யாருடைய நன்மைக்கு நடத்தப்படுகிறது என்பதை யாராவது அறிகிறார்களா? யாரையாவது போய் "ஐயா திராவிடன் பத்திரிகை தங்க ளுக்கு வருகிறதா? இல்லையானால் ஒன்று வரவழையுங்கள். அதைப் படித்து பார்ப்பனர்களின் சூழ்ச்சியையும் அதனால் நம்மவர்களுக்கு ஏற்படும் கஷ்டத் தையும் உணர்ந்து அதிலிருந்து தப்புவதற்கு வேண்டியது செய்யுங் கள்" என் றால் "திராவிடனா அதிலென்ன இருக்கிறது? அதைப் பார்த்தாலே என்னமோ போல இருக்கிறதே, அந்தப் பெயரே நமக்குப் பிடிக்கவில்லையே" என்று சொல்லிவிடுகிறார்கள். இதை தங்களுக்கு தோன்றுகிறபடி வாஸ்தவ மாகத்தான் சொல்லுகிறார்கள் என்றே வைத்துக்கொள்ளுவோம். கட்டின பெண் ஜாதியை விட்டு தாசி வீட்டுக்குப்போய் சொத்தைப் பாழாக்கி வியாதி கொள்ளுகிறவர்களைப் பார்த்து, "ஏனப்பா கட்டின பெண் ஜாதியை வீட்டில் வைத்து விட்டு தாசி வீட்டிற்குப் போய் சொத்தையும் பாழாக்கி வியாதியும் கொள்ளுகிறாய்" என்றால் மேல்கண்ட மாதிரிதான் பதில் சொல்லுகிறான். அதாவது, "வீட்டில் என்ன இருக்கிறது? அவளைப் பார்த்தாலே எனக்குப் பிடிப்பதில்லை. அவள் நடந்து கொள்ளுகிற மாதிரியே மனத்திற்கு அசிங்க மாகப்படுகிறது. கட்டிலுண்டா? மெத்தையுண்டா? வாசனை யுண்டா? கடிப்ப துண்டா? கிள்ளுவதுண்டா? சட்டி பானை கழுவுகிறவள் தானே" என்று ஆரம் பித்து விடுகிறானேயல்லாமல் இதெல்லாம் எதற்காகச் செய்யப்படுகிறது. பின்னால் நம்முடைய கதி என்னாகும் என்கிற கவலையே இல்லாமல் அறிவீனமாய் நடந்து கொள்ளுகிறான். அப்படிபோல் நம்மை மயக்கி, ஏய்த்து, நம்மைப் பாழாக்கி கொள்ளை கொள்ள நடக்கும் பத்திரிகைகள் ஏமாறத் தகுந்த மாதிரியாகத்தான் நடத்தப்படும். ஒருநாள் பூரா படிப்பதற்கும் விஷய மிருக்கலாம். ஆனால் அது பெரும்பாலும் என்ன விஷயம்? நம்மைக் கழுத்தறுக்கும் விஷயமும் பொழுது போக்கு விஷயமுமாகத் தானே இருக்கும். ஆதலால் மானமுள்ள மக்கள் தமது சொந்தப் பெண்டை அன்னி யன் குற்றம் சொல்லும்படியாகவும், கஞ்சிக்குத் திண்டாடும் படியாகவும் விடாமல் காப்பதை எப்படி தமது கடமையாய் நினைப்பார்களோ அதுபோல் 'திராவிடன்' பத்திரிகையை ஆதரிப்பதோடு கட்டின பெண்டை தெருவில் அலையவிட்டு தாசி வீடு காத்து திரிவதுபோல் 'திராவிடனை' விட்டுப் பார்ப்பனப் பத்திரிகைகளைக் கட்டி அலைவதை மறந்து நமது மானத்தைக் காப்பாற்ற உதவிசெய்ய வேண்டும் என்பதாக தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறோம். இந்த மார்க்கம் தான் பாமர மக்களைக் காப்பாற்றவும், நமது மக்கள் எல்லோருக்கும் சுயமரியாதை ஏற்படவும் சரியான மார்க்கமாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 30.01.1927**





RangaRakes

tamilnavarasam.com

# பார்ப்பனப் பத்திரிகைகளின் தொல்லை

ஸ்ரீமான் பன்னீர்செல்வம் தஞ்சை ஜில்லா போர்டு பிரசிடெண்டாக 3 -ல் 2 பங்கு மெம்பர்களுக்கு அதிகப் பேர்களாலேயே தெரிந்தெடுக்கப் பட்டும், அவரைப் பற்றியும் அத்தேர்தல் முறையைப் பற்றியும் பார்ப்பனப் பத்திரிகைகள் செய்யும் கொலை பாதகத்திற்குச் சமானமான கொடுமையும் பார்ப்பனர்கள் செய்யும் அக்கிரமங்களும் கேட்போர் மனதை பதைக்கும்படி யாகவே இருக்கும்.

ஸ்ரீமான் பன்னீர்செல்வத்திற்கு வரும் பிப்ரவரி மாத முதல் வாரத்தில் அவருடைய ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஸ்தானம் காலியாகும். ஆதலால் அவர் மறுபடியும் பிரசிடெண்டு தேர்தலுக்கு நிற்க யோக்கியதை உண்டாகும் படியாக லோகல் போர்டு இலாக்கா மந்திரியாகிய டாக்டர் சுப்பராயன் அவர் களை ஜில்லா போர்டு மெம்பராக நியமனம் செய்யும்படி கேட்டுக் கொண்டார். போர்டு வைஸ்பிரசிடெண்டும் போர்டின் மூலம் கவர்ன்மெண்டுக்கு சிபார்சு செய்தார். மந்திரி, பார்ப்பனர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டோ அல்லது பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளையாக நினைத்தோ நியமனம் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டாராம். அதன் மேல் ஜில்லா போர்டு மெம்பர் களில் 27 பேர்கள் சேர்ந்து ஸ்ரீமான் பன்னீர்செல்வத்தை ஜில்லா போர்டு மெம்பராய் நியமிக்காத வரையில் அவர் அடுத்த தேர்தலுக்கு நிற்க முடியா தென்றும் அவர் மறுபடியும் தலைவராக வர நாங்கள் விரும்புகிறோமென்றும், காரணமின்றி சட்ட நிர்பந்தத்தால் மாத்திரம் அவருக்கு ஏற்படும் தடையை விலக்குவதற்கு வேறு வழி இல்லையென்றும், மற்றும் அவருடைய நிர்வாகத்தைப் புகழ்ந்தும் ஒரு மகஜர் அனுப்பினார்களாம். அதன்பேரில் மந்திரி ஒன்றும் செய்ய முடியாமல் போனதால் ஸ்ரீமான் பன்னீர்செல்வம் மறுபடியும் ஜில்லா போர்டு தலைவர் பதவிக்கு நிற்பதில் சட்டபடிக்கான தடை ஒன்றும் இல்லையென்றும், ஆனால் தேர்தல் மாத்திரம் அவர் காலாவதி தீருவதற்கு முன்னாலேயே செய்து கொள்ள வேண்டும் என்றும் ஒரு G.O.(கவர்ன்மெண்டு உத்திரவு) அனுப்பிவிட்டார். அதன்படி காலாவதி தீர 10 நாளைக்கு முன்னால் ஜில்லா போர்டு தலைவர் பதவிக்கு ஒரு தேர்தல் போட்டு அந்தப்படியே தேர்தல் நடந்தது. ஆனால் நமது பார்ப்பனர்கள் தேர்தலை நிறுத்த மந்திரியைப் பிடித்து வேலை செய்யத் தங்களால் கூடுமான தெல்லாம் செய்து பார்த்தார்கள். மந்திரியால் முடியாமல் போய்விட்டது.



கடைசியாக தேர்தலுக்கு முதல்நாள் முனிசீப் கோர்ட்டில் தடை உத்திரவு கேட்டார்கள். அந்த முனிசீப்பு முதல் நாள் கேசை விசாரித்து விட்டு தேர்தல் தினத்தன்று 11 மணிக்கு தீர்ப்புக் கூறுவதாய் சொல்லிவிட்டார். தேர்தலுக்காக எல்லா மெம்பர்களும் வந்தும் விட்டார்கள். கடைசியாக 11 மணிக்கு முனிசீப்பு தடை உத்திரவு கொடுக்க முடியாது என்றும், தேர்தல் நடத்தலாம் என்றும் தீர்ப்புச் சொல்லிவிட்டார். இந்தப் பார்ப்பனர்கள் இதோடு விடாமல், 12 மணிக்கு ஜில்லா ஜட்ஜியிடம் அத்தீர்ப்பின் மேல் அப்பீல் செய்தார்கள். அதாவது தேர்தல் சரியாய் 2 மணிக்கு நடக்க வேண்டும்; ஆனால், இவர்கள் தேர்தலுக்காக பிரசாரம் கூட செய்ய வொட்டாமலும் தாங்கள் மாத்திரம் ஒரு ஓட்டருக்கு ஒரு பார்ப்பனர் வீதம் வேலை செய்து கொண்டும் உபத்திரவம் செய்தார்கள். ஜில்லா ஜட்ஜி 1 மணி வரை இரண்டு பக்கத்தில் ஆர்க்குமெண் டையும் கேட்டுவிட்டு கடைசியாக பார்ப்பனர்களின் அப்பீலை செலவுடன் தள்ளிவிட்டார். உடனே 2 மணிக்கு தேர்தல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் இன்னொரு வேடிக்கை அதாவது கும்பகோணம் தாலூகா போர்டு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு ஜில்லா போர்டு மெம்பர்களை ஓட்டுச் செய்யாமல் தடுப்பதற்காக அவர்கள் பெயரை கெஜட்டில் வர ஒட்டாமல் சூழ்ச்சி செய்தார்கள். இது விபரம் தெரிந்து அவர்கள் பெயரை உடனே கெஜட் செய்யும் படியாய் தந்தி கொடுத்ததும் பெயர் கெஜட் செய்ய உத்திரவாய் விட்டதாக தந்தி வந்தது. உடனே கும்பகோணம் மெம்பர்களை தேர்தல் தினத் தன்று தருவித்தாய் விட்டது. ஆனால் தேர்தல் நடத்த ஆரம்பிக்கும் சமயத் தில் பட்டணத்திலிருந்து அவ்விரு மெம்பர்கள் பெயரும் சேர்க்கப்பட வில்லை என்று ஒரு தந்தி வந்தது. அந்த இரண்டு மெம்பர்களையும் நிறுத்திவிட்டு தேர்தல் ஆரம்பிக்கப்பட்டது ஸ்ரீமான் பன்னீர்செல்வத்தின் பெயரை பிரேரேபித்தவுடன் ஒரு மகமதிய கனவானை விட்டு சட்டப்படி பன்னீர்செல்வம் நிற்பது ஒழுங்கல்ல என்று ஆக்ஷேபணை சொல்லச் செய்தார்கள். தேர்தலுக்கு அக்கிராசனம் வகித்த உப அக்கிராசனாபதி அவ்வாக்ஷேபணையைத் தள்ளிவிட்டார். உடனே வேறு ஒரு கனவான் பெயரை பிரேரேபிக்க ஆரம்பித்தார்கள். போட்டிப் பெயராக ஸ்ரீமான்கள் நாடிமுத்து பிள்ளையவர்கள் பெயரும் மருதவனம் பிள்ளை அவர்கள் பெயருமே அடிபட்டு வந்தமை நேயர்களுக்குத் தெரியும். ஆனால் தேர்தல் சமயம் வரை யார் நிற்பது என்பது உறுதிப்படாமல் ஒருவருக் கொருவர் நான் மாட்டேன், நான்மாட்டேன் என்று சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். ஆன தினால், இந்தப் பார்ப்பனர்களுக்கு இவ்விருவரிடத்திலும் யார் பேரில் அதிக நம்பிக்கையோ அதாவது வேண்டாமென்று சொல்ல மாட்டார்களோ அவர்களைப் பார்த்துக் கண்டுபிடித்து ஸ்ரீமான் மருதவனம் பிள்ளை பெயரை ஒரு அய்யங்கார் பார்ப்பனர் பிரேரேபித்தார். ஒரு அய்யர் பார்ப்பனர் ஆமோதித்தார். ஓட்டு போட்டவுடன் முடிவு தெரிவதற்கு முன்னாலேயே இக் கூட்டம் அநேகமாய் ஓடிப்போய் விட்டது. எண்ணிப்பார்க்க ஸ்ரீமான் பன்னீர்செல்வத்திற்கு 27 ஓட்டுகளும் ஸ்ரீமான் மருதவனம் பிள்ளைக்கு 10



RangaRakes tamilnavarasam.com

ஓட்டுகளும் கிடைத்தன. பட்டணத்திலிருந்து பொய்த் தந்தி கொடுக்கப் பட்டிருக்காவிட்டால் ஸ்ரீமான் பன்னீர்செல்வத்திற்கு 29 ஓட்டுகள் கிடைத் திருக்கும். அக்கிராசனார் ஸ்ரீமான் பன்னீர்செல்வம் 27 ஓட்டுகளால் தெரிந் தெடுக்கப்பட்டதாய் முடிவு சொன்னதும் ஜனங்களின் ஆரவாரத்திற்கள வில்லை. மற்ற விஷயம் மறுமுறை எழுதலாம். இப்போது எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு மறுபடியும் போகலாம். அதாவது தெரிந்தெடுக்கப்பட்ட பிறகும் இத்தேர்தல் சம்பந்தமாய் பனகால் ராஜாவின் மீது பழி சொல்லிப் பார்ப்பனப் பத்திரிகைகள் கண்டபடி எழுதி ஜனங்களுக்கும் தேர்தல் விஷய மாயும், பனகால் விஷயமாயும், ஸ்ரீமான் பன்னீர்செல்வம் விஷயமாயும் தப்பெண் ணம் கற்பிக்க பாடுபடும் காரணம் என்ன? உத்திரவு போட்டது டாக்டர் சுப்பராய மந்திரி; இதில் பனகால் மந்திரிக்கு சம்பந்தம் என்ன? அவரை எதற்கு திட்ட வேண்டும்? இதில் உள்ள சூழ்ச்சியை கொஞ்சம் கவன மாய் படிக்க வேண்டும். அதாவது பனகால் மந்திரி காலத்தில் ஒரு பார்ப்பன ஜில்லா போர்டு பிரசிடெண்டு தன் காலாவதி சீக்கிரத்தில் முடியப் போகிறப்படி யால் தான் மறுபடியும் தேர்தலுக்கு நிற்க யோக்கியதை உண்டாக்கிக் கொள்ளும்படியாக தன்னை மறு நியமனம் செய்யும்படி பனகாலை கேட்டுக் கொண்டார். பனகால் உடனே நியமனம் செய்யாமல் கொஞ்சம் தாமதம் செய்யவே பனகால் மீது இப்பார்ப்பன ஜில்லா போர்டு பிரசிடெண்டுக்கு சந்தேகம் ஏற்பட்டு சட்டத்தை திருப்பித் திருப்பிப் பார்த்து சென்னை சட்டம் வல்ல பார்ப்பனர்களையும் கண்டு யோசித்து தான் மறு நியமனம் பெறாமலே தனது காலாவதி முடிவதற்குள் தேர்தல் ஏற்படுத்தி அதில் நிற்கச் சட்டம் இடம் கொடுக்கிறது என்பதாகக் கண்டுபிடித்து உடனே தேர்தல் நடத்தி அதில் தான் தெரிந்தெடுத்ததாய் சர்க்காருக்கு அறிவித்து விட்டார். சர்க்கார் (பனகால்) இது சட்டப்படி செல்லாது என்பதாக அபிப்பிராயப்பட்டார். மற்றொரு பொறுப் புள்ள உத்தியோகஸ்தர் இது செல்லும் என்று அபிப்பிராயப்பட்டார். கடைசி யாக அட்வகேட் ஜெனரல் அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டது; அது செல்லும் என்று அட்வகேட் ஜெனரல் அபிப்பிராயம் சொல்லிவிட்டார். பிரசி டெண்டு ஸ்தானம் உறுதியாய் விட்டது. அந்தப் பார்ப்பனப் பிரசிடெண்ட் இப்போது இந்திரபோகம் அனுபவிக்கிறார். இதைப் பற்றி ஒரு பார்ப்பனப் பத்திரிகையும் மூச்சுக்கூட விடவில்லை. ஏன்? அந்த போர்டு பார்ப்பன அக்கிரஹாரமாகவும் அன்னசத்திரமாகவும் இருந்து வருகிறது. ஒரு பார்ப்பனர் ஆசைப்பட்டார், ஒரு பார்ப்பனர் யோசனை சொன்னார், ஒரு பார்ப்பனர் தேர்தல் நடத்தினார், ஒரு பார்ப்பனர் செல்லும் என்றார், ஒரு பார்ப்பனரல்லாதார் தான்(பனகால்) அப்போதே இது சட்டவிரோதமென்றார். இப்போது இந்த விஷயம் இதேமாதிரி ஒரு பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்பட்டுவிடவே அதே கூட்டத்துப் பார்ப்பனர்களுக்கு இது சமயம் இது சட்ட விரோதமாய்க் காணப்படுகிறது. அதாவது சட்டத்திற்குத் தாங்கள்தான் மனு என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஏன் என்று பார்த்தால் சட்டம் செய்வது பார்ப்பனர், சட்டத்திற்கு வியாக்கியானம் செய்வது பார்ப்பனர்,



சட்டவாதி பார்ப்பனர், சட்ட அதிபதி பார்ப்பனர். ஆகவே வக்கீல் குமாஸ்தா முதல் ஐகோர்ட் ஜட்ஜி, சட்டமெம்பர் வரையிலும் பார்ப்பன மயம். அப்படி இருக்கும்போது வேறு ஒருவர் எப்படி தங்களை சட்டத்தில் மீறக்கூடும் என்கிற ஆணவம்தான்.

நிற்க, இதே மாதிரி திருநெல்வேலி ஜில்லா போர்டு பிரசிடெண்ட் சென்ற வாரம் தெரிந்தெடுக்கப்பட்டார். அதைப்பற்றி ஒரு வார்த்தை கூட ஒரு பார்ப்பனராவது அவர்களுடைய பத்திரிகைகளாவது எழுதவும் இல்லை, பேசவும் இல்லை. தேர்தலிலும் ஆக்ஷேபணை இல்லை, சூட்டும் இல்லை, அப்பீலும் இல்லை. ஏனென்றால் ஸ்ரீமான் குமாரசாமி ரெட்டியார் அவர் களைப் பற்றி நமது பார்ப்பனர்களுக்கு அவ்வளவு விரோதமில்லை. காரணம் என்னவென்றால் அங்கு பார்ப்பனர்கள் சாப்பிட தர்ம சத்திரங்கள் இல்லை. சம்பளமில்லாத பள்ளிக்கூடங்கள் இல்லை. இதுதான் காரணம். அல்லாமலும் தஞ்சை ஜில்லா போர்டின் உத்தியோகஸ்தர்களில் 100 -க்கு 90 பேர் பார்ப்பன ரல்லாதாராக ஆகும் வரையில் பார்ப்பனருக்கு உத்தியோகம் கொடுக்கக் கூடாது என்பதாக ஒரு தீர்மானமும், பட்டுக்கோட்டை ஸ்ரீமான் வேணுகோ பால் நாயுடுகாரால் கொண்டு வரப்பட்டது நிறைவேற்றி வைக்கப்பட்டிருக் கிறது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் இப்பார்ப்பனர்கள் எவ்வளவு கொடுமை செய்தாலும் எப்பேர்பட்ட தீர்மானமிருந்தாலும் ஸ்ரீமான் பன்னீர் செல்வம் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் கொடுப்பதில் மாத்திரம் குறை வில்லை. இதற்கு ஒரு சிறு உதாரணம் -அதாவது தஞ்சை ஜில்லாவில் ஒத்துழையாமைப் பெயரையும், காங்கிரஸ் பெயரையும் வைத்துக்கொண்டு பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் ஜஸ்டிஸ் கட்சியை வைவதிலும் விஷமப் பிரசாரம் செய்வதிலும் பேர் போனவர் ஸ்ரீமான் சூரிய நாராயண அய்யர் அவர்கள். அவர் இத்தேர்தல்களிலும் இதற்கு முன் தேர்தல்களிலும் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதம் செய்தது இவ்வளவு அவ்வளவு அல்ல. அப்படிப்பட்ட ஸ்ரீமான் சூரிய நாராயண அய்யர் அவர்களுக்கே அவரு டைய மூன்று பிள்ளைகளுக்கும் ஜில்லா போர்டில் உத்தியோகம் கொடுத்தி ருக்கிறார் என்றால் மற்றபடி எத்தனை பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் கொடுத்திருப்பார் என்பதை வாசகர்களே உணரட்டும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 30.01.1927**



RangaRakes tamilnavarasam.com

# கீழேவிழுந்தும் மீசையில் மண்ணொட்டவில்லையாம்

நமது பார்ப்பனர்கள் எவ்வளவோ பாடுபட்டும் இந்துமத பரிபாலன மசோதாவானது சட்டசபையில் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக நிறைவேறி இரண்டு கவர்னர் பிரபுக்கள், இரண்டு வைசிராய் பிரபுக்கள் ஆகியவர்கள் சம்மதமும் அரசர் பெருமான் சம்மதமும் பெற்று சட்டமாகிவிட்டது. இனி மகந்துகள், மடாதிபதிகள் பணம் நமது பார்ப்பனர்களுக்கும் அவர்களது தேர்தலுக்கும் கிடைப்பது முடியாத காரியம். இதற்காக நமது பார்ப்பனர்கள் ஒரு தோது கண்டுபிடித்து இருக்கிறார்கள். அதாவது "கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை" என்பதுபோல் மறுபடியும் இதைப் பற்றி திருத்தவோ புகுத்தவோ செய்யலாம் என்பதாக மந்திரியைக் கொண்டு ஒரு வார்த்தை வாங்கி விட்டார்களாம். இது இன்னமும் ஏமாற்றி மடாதிபதிகளிடம் பணம் வாங்கவே அல்லாமல் வேறல்ல.

நமது ஊரில் ஒரு பார்ப்பனக் கிழ வக்கீலிருந்தார். அவர் மேஜிஸ்ட்ரேட் வீட்டிற்குப் போய் தனியாய் தன்னைப் பற்றி கொஞ்சம் கவனித்துக் கொள்ளும்படி கெஞ்சுவார். மேஜிஸ்ட்ரேட் என்னய்யா செய்யச் சொல்லுகிறீர் என்று கேட்டால் "எஜமானர் செய்கிறபடி செய்து கொள்ளுங்கள். ஆனால் என் கட்சிக்காரனிடம் தாங்கள் தீர்ப்பு சொல்லுகிறபோது இந்த கேசு இன்னமும் அதிகமாக தண்டிக்க வேண்டும். உங்கள் வக்கீலுக்காக இவ்வளவோடு விட்டேன்" என்று சொல்லி விடுங்கள். அதுவே போதும் நான் பிழைத்துக்கொள்வேன் என்று சொல்லுவார். அதுபோல் மந்திரி இடம் போய் கெஞ்சி இப் பார்ப்பனர்கள் பிழைக்க வழி தேடிக்கொண்டார்கள். மற்றபடி சட்டத்திற்கு ஒன்றும் ஆபத்து இல்லை. ஆனால் உண்மையான மத பரிபாலனத்திற்கு இந்த சட்டம் போதாது என்பதும் இன்னமும் பலமான சட்டம் செய்ய வேண்டும் என்பதும் நமது கோரிக்கை. இந்த மந்திரி சபை கலைந்தோ அல்லது இந்த சட்டசபை கலைக்கப் பட்டோ மறுபடி கூடும் சபைகளில் அதுவும் கண்டிப்பாய் நடைபெறுமென்றே நினைக்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 30.01.1927**



# சென்னிமலை செங்குந்தர் காமாட்சியம்மன் ஆலய பரிபாலன சபையின் 12 வது ஆண்டு நிறைவு விழா!

சபையோர்களே!

நீங்கள் எனக்கு வாசித்துக் கொடுத்த உபசாரப் பத்திரத்தில் குறிக்கப்பட்டிருக்கும் புகழ்ச்சிக்கு நான் பாத்திரனல்லன். நான் உங்களோடு சேர்ந்த ஓர் குடித்தனக்காரனாகவும், சகோதரனாகவும் பழகி வந்தவனாகையால் உங்கள் மத்தியில் நான் இவ்வளவு மதிக்கப்படுவதையும் புகழப்படுவதையும் கண்டு வெட்கம் அடைய வேண்டியவனாகவே யிருக்கிறேன். காரியதரிசியார் வாசித்த அறிக்கை ரிப்போர்டிலிருந்தே இச்சங்கம் தனது கடமையைச் சரிவர செய்து வந்திருக்கிறதென்று தெரிய வருகிறது. நம் நாட்டில் எத்தனையோ சங்கங்கள் தோன்றினாலும் உங்கள் சங்கங்கள் போல் 12, 14 வருடங்களாக உயிருடனிருக்கும் சங்கங்கள் வெகு சிலவேயாகும். ஆரம்பத்தில் ஊக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு சீக்கிரம் உயிர் போய் இருந்த இடமே தெரியாமல் போவது வழக்கமாயிருக்கின்றது. அது போலவே நம் நாட்டில் அநேகம் தோன்றி நின்று போயிருக்கின்றன. இச்சங்கத்தின் வளர்ச்சிக்குக் காரணம், இச்சமூகத்தினருக்கு தங்கள் சமூக முன்னேற்றத்திலிருக்கும் அக்கரையே காரணமாகும். நான் அநேக சங்கங்களுக்கு அழைக்கப்பட்டுப் போயிருக்கிறேன். எங்கெங்கு வியாபாரிகளால் சங்கங்கள் நடத்தப்படுகின்றனவோ அந்த சங்கங்கள் தான் நீடித்து நடந்து வருகின்றன. குடித்தனக்காரர்கள் சங்கத்திற்கும் வித்தியாசம் உண்டு. அதிலும் வக்கீல்கள் சங்கம் விபரீதமானது. அவர்கள் ஏதோ ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கு சுயநலத்தை நாடி ஒரு சங்கத்தைத் தோற்றுவிப்பார்கள். உடனே காரியம் தீர்ந்ததும் அச்சங்கம் இருந்த இடம் தெரியாமற் போய்விடும். கொஞ்ச நாளைக்கு முன் இவ்வூரில் நடந்த செங்குந்த மகாஜன சங்கமும், இந்த சங்கமும்தான் 12,14 வருஷங்களாக சரிவர நடந்து வந்திருக்கின்றன. நம் நாட்டில் இப்பொழுது ஒவ்வொரு மரபினர்களும் ஒவ்வொரு சங்கம் ஸ்தாபித்து தங்கள் தங்கள் சமூகத்தைச் சீர்திருத்தம் செய்து வருகின்றனர். கொங்கு வேளாள சங்கம், வன்னிகுல சங்கம், நாடார் குல சங்கம், அருந்ததியர் சங்கம், திராவிடர் சங்கம், குலாலர்



RangaRakes tamilnavarasam.com

சங்கம் இவ்வாறு பல சமூக சங்கங்கள் தோன்றி வேலை செய்து வருகின்றன. நாடார் மகாஜன சங்கம் தோன்றி 30 லக்ஷம் ரூபாய் மூலதனத்துடன் அச்சங்கம் நடந்து வருகிறது. வருஷம் 65 ஆயிரம் ரூபாய் அச்சங்கம் ஒரு ஹைஸ் கூலுக்கும், கோவிலுக்கும் பிரசாரத்திற்குமாக செலவு செய்து வருகிறது. நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் தங்களுக்கும் ஒரு சங்கம் ஏற்பாடு செய்து அதன் மூலமாகத்தான் தங்கள் சமூகத்தைப் பல வழியிலும் சீர்திருத்தம் செய்து கொண்டு வருகின்றனர். அவர்களுக்குள் சங்கம் தோன்றிய பின்தான் அநேக பழக்க வழக்கங்களை மாற்றிக்கொண்டார்கள். செங்குந்த மகாஜன சங்கத்தினர் அரிய வேலை செய்து முடித்திருக்கின்றனர். கொஞ்ச நாளைக்கு முன் கொங்கு வேளாள சங்கம் தோன்றினாலும் அது செய்ய வேண்டிய வேலை அநேகமிருக்கின்றன. இச்சங்கத்தாரும் பணம் வசூலிப்பதும் சேகரிப்பதும் மட்டும் தங்கள் வேலையாக நினைக்கக்கூடாது. மடங்களைக் கட்டிவிடுவதால் மட்டும் பலனில்லை. சபையார் தங்கள் சமூகத்தில் பல ஊர் களிலும் கிளைச் சங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டும். இச் சமூகத்திலுள்ள வாலி பர்கள், சமூக சீர்திருத்தத்திற்கு முன்வந்து பாடுபட வேண்டும். சங்கங்களா லேதான் உலகத்தில் அநேக காரியங்கள், அக் காலத்தில் செய்து முடித்திருக் கின்றனர். இவ்வூரில் எந்த சங்கம் தோன்றினாலும் நன்றாகவே நடந்து வரும். இங்குள்ள செல்வந்தர்கள் நன்கு பொது நலமுணர்ந்து தர்மம் செய்து வருகி றார்கள். அவர்கள் பொது விஷயத்திற்கு தாராள சிந்தையுடன் பொருளுதவி செய்து வருகின்றனர். இந்த ஜில்லாவிற்கே இவ்வூர்வாசிகள் பொது விஷயத் தில் செலவிடுவதில் பெயர் வாங்கியிருக்கிறார்கள்.

## ஒற்றுமை

எந்தச் சங்கம் மேன்மைக்கு வரவேண்டுமானாலும் ஒற்றுமை வேண் டும். ஒற்றுமை இல்லாத சங்கம் முன்னுக்கு வரப் போவதில்லை. சங்கத்திலுள் ளவர்களிடம் இன்னொரு முக்கியமான குணம் வேண்டும். அதாவது சமத்துவம் வேண்டும். ஒவ்வொரு சமூகத்தாரும் தங்களுக்கு மேலானவர்க ளில்லையென்று சொல்ல வருவதுபோல் தங்களுக்கு கீழானவர்களுமில்லை என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் ஒற்றுமையை நிலை நிறுத்த முடியும். ஒரு சமூகத்திலோ ஒரு சங்கத்திலோ தாழ்மை மேன்மை என்ற வித்தியாசங்கள் வரக்கூடாது. அதிலும் பணக்காரர்கள் இந்த விஷயத் தில் தாழ்மையாக நடந்து காட்ட வேண்டும். பணக்காரர்கள் ஆடம்பரமின்றி நடந்து காட்டினால் மற்றவர்களும் அதைப் பின்பற்றுவார்கள். சங்கங்களில் ஸ்தானங்களை விரும்புகிறவர்களுக்கு விட்டு விட வேண்டும். உண்மை யாகப் பொது நல ஊழியம் செய்கிறவனுக்கு பதவியோ ஸ்தானங்களோ வேண்டியதில்லை. ஒரு சமூகம் முன்னேற்றமடைவதென்றால் ஏதோ அச் சமூகத்தில் ஒரு சிலர் பணக்காரர்களாயிருந்தால் மட்டும் அச்சமூகம் முன் னேற்றம் அடைந்து விட்டதாகச் சொல்ல முடியாது. அச்சமூகத்தில்



ஏழைகளில்லாமல் செய்து விடவேண்டும். ஏழைப் பிள்ளைகளுக்கு கல்வி, கைத்தொழில் சொல்லிக்கொடுக்க வழி தேட வேண்டும். ஒரு சமூகத்தில் சிலர் கவுன்சிலராகவும், போர்டு மெம்பர்களாகவும் இருந்தால் அச்சமூகம் முன்னுக்கு வந்துவிடாது. ஒரு சமூகமென்றிருந்தால் அச்சமூகத்தில் ஏழை களில்லாமலும் மனச்சாட்சியை விற்று ஜீவிக்கிறவர்கள் இல்லாமலும் செய்வதுதான் சரியான சமூக சீர்திருத்த வேலையாகும். சமூக சீர்திருத்த மென்பது ஒரு சமூகத்திற்கு கல்வி, கைத்தொழில் முதலிய வழிகளை உண்டாக்கிக் கொடுத்து ஏழைகளை முன்னுக்கு கொண்டு வருவதுதான். பின்னும் சூது, குடி, வேசி முதலிய கெடுதிகளை சமூகத்தினரிடமிருந்து அகற்ற பிரசார மூலமாக வேலை செய்ய வேண்டும். ஒரு சமூகத்திற்கு சுயமரியாதை வேண்டுமானால் தொழிற் கல்விதான் மிக்க அவசியமானது. இத்தகைய காரியங்களை நீங்கள் செய்ய சங்கமும் ஒற்றுமையும் உங்களுக்கு பெரிய உதவியாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

## கதர்

உங்கள் சமூகத்திற்கு உற்ற தொழில் நெசவுத் தொழிலானதால் அது இன்னும் கொஞ்ச நாளையில் நமது நாட்டில் அடியோடு அழிந்துபோகாமல் இருப்பதற்கு கதர் முக்கியமானது. உங்கள் சமூக நன்மையையும் கிராமத்து ஏழைப் பெண் மக்களின் நன்மையையும் உத்தேசித்தே மகாத்மா கதர் திட்டத்தில் வேலை செய்கிறார். ஆதலால் நீங்கள் அவருக்கு நன்றியறித லுள்ளவர்களாயிருப்பதற்கு கதர் உடுத்துவதுடன் அத்திட்டம் நிறைவேற உதவி செய்யவேண்டும்.

*குறிப்பு: 16. 1. 27 இல் சென்னிமலையில் நடைபெற்ற செங்குந்தர் காமாட்சி யம்மன் ஆலய பரிபாலன சபை 12 ஆம் ஆண்டு நிறைவு விழா நிறைவுரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 30.01.1927**



RangaRakes
tamilnavarasam.com

# தஞ்சை ஜில்லா போர்டு தேர்தலும் பார்ப்பன பத்திரிகைகளும் நமது கோரிக்கையும்

தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் பதவிக்கு ஸ்ரீமான் பன்னீர்செல்வம் தெரிந்தெடுக்கப்பட்டது கொண்டு நமது பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிகைகளும் பொறாமை என்னும் போதையில் பட்டு கண்டபடி உளறு கிறார்கள். இத்தேர்தலில் நடந்த தப்பிதம் என்ன என்பதையும் இதனால் யாராவது பிரசிடெண்டு ஸ்தானத்திற்கு நிற்பது ஞாய விரோதமாய்த் தடைப் பட்டு விட்டதா என்பதையும் ஒருவராவது எழுதவேயில்லை. தலைவர் பதவி காலியாவதற்கு முன்னாலேயே தேர்தல் நடத்தி விட்டார் என்று ஒரே மூச்சாக சத்தம் போடுகிறார்கள். இது ஸ்ரீமான் பன்னீர்செல்வம் தானாகவே நடத்திய தேர்தலா கவர்ன்மெண்டாரே இந்தப்படி தேர்தல் போடும்படி உத்திரவு அனுப்பினார்களா என்பதை தெரிவிக்காமல் வீணாய்க் கத்துவதின் ரகசியம் என்ன? எப்படியாவது ஸ்ரீமான் பன்னீர்செல்வத்தின் பேரில் பாமர ஜனங் களுக்கு ஒரு கெட்ட அபிப்பிராயத்தை உண்டாக்க வேண்டும் என்கிற அயோக்கியத்தனமே அல்லாமல் இதில் வேறு ஏதாவது யோக்கியப் பொறுப்பு இருக்கிறதா? இம்மாதிரியே ஒரு பார்ப்பனப் பிரசிடெண்டும் கொஞ்ச காலத்திற்கு முன் செய்து கொண்டதைப் பற்றி இப்பார்ப்பனப் பத்திரிகைகள் ஏன் கேட்டிருக்கக்கூடாது? இதற்கு நியாயமிருக்கிறது என்று சொன்ன பார்ப்பன அட்வொகேட் ஜெனரலை ஏன் கண்டிக்கக்கூடாது? காலாவதிக்கு முன்னால் தேர்தல் நடத்தலாம் என்று தீர்ப்புக் கொடுத்த பார்ப்பன முனிசீபு, பார்ப்பன ஜட்ஜு ஆகியவர்களை ஏன் கண்டிக்கக்கூடாது? அன்றியும் இதனால் யாருக்கு என்ன நஷ்டம் வந்துவிட்டது. யார் வீட்டுப் பெரியவாள் தேடிய சொத்தை யார் எடுத்துக்கொண்டார்கள்? ஜில்லா போர்டு என்பது எல்லாருக்கும் பொதுவே ஒழிய பார்ப்பனர்களுக்கு பழைய காலத்திய முட்டாள் அரசர்கள் விட்டது போன்ற மானியமும் அல்ல, அக்கிரஹாரமு மல்ல. அப்படிக்கிருக்க ஸ்ரீமான் பன்னீர்செல்வம் மாத்திரம் வரக்கூடாது என்பதற்கு காரணம் என்ன? இதற்கு முன் பிரசிடெண்டாயிருந்த வி.கே. ராமா நுஜாச்சாரியார் யோக்கியதையை விட எந்த விதத்தில் பன்னீர்செல்வத்தின் யோக்கியதை கெட்டுப்போய்விட்டது? ஸ்ரீமான் ராமாநுஜாச்சாரியார் காலத்தில் சத்திரம், சாவடி, பள்ளிக்கூடம், உத்தியோகம் எல்லாம் பார்ப்பன மயமாயும், முக்கியமாய் அய்யங்கார்கள் சாப்பிடும் அன்ன சத்திரமாயும் இருந்து வந்தது யாருக்கும் தெரியாதா? இப்போது ஸ்ரீமான் பன்னீர்செல்வம் அந்த ஸ்தானத்துக்கு வந்ததும் ஸ்ரீமான் ராமாநுஜாச்சாரியாரைப் போல் இருந்திருப்பாரேயானால் பிராமணர்களை எல்லாம் வெளியில் துரத்திவிட்டு வெறும் கிறிஸ்துவமயமாகவே ஜில்லா போர்டை செய்திருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல், ஸ்ரீமான் பன்னீர்செல்வம் யோக்கியரானதால் அம்மாதிரி செய்யாமல் எல்லோரும் பொறுக்கித்தின்னும் படியாகவும், கணக்குப் பார்த் தால் பார்ப்பனர்களே தங்கள் அளவைவிட எண் மடங்கு அதிகமாய் பொறுக் கித் தின்னும் படியாகவும் வைத்துக்கொண்டிருக்கிறார். இதற்கு பிரதி உபகா ரம் தான் இப்பார்ப்பனர்கள் போடும் சத்தம் போலும். பாம்புக்கு பால் வார்த் தால் கடிக்காமல் இருக்கும் என்று நம்புவதுபோல் இருக்கிறது பார்ப்பனருக்கு உதவி செய்தால் அவர்கள் அதை அறிவார்கள் என்று எண்ணுவது! இனி, இது முதலாவது ஸ்ரீமான் பன்னீர்செல்வத்திற்கு நியாய உணர்ச்சி ஏற்பட்டு பார்ப்பனர்களுக்கு மாத்திரம் நல்ல பிள்ளையாய் நடக்க வேண்டும் என்கிற எண்ணத்தை மறந்து எல்லா சமூகத்தாருக்கும் அவரவர்கள் அளவுக்குத் தகுந்தபடி நியாயம் வழங்கி வருவார் என்று நினைக்கிறோம். எதில் செய்தா லும் செய்யாவிட்டாலும் முக்கியமாய் பள்ளிக்கூட உபாத்தியாயர் இலாகாவில் மாத்திரம் கண்டிப்பாய் 100 – க்கு 90 – க்கு குறையாத பார்ப்பனரல்லாத உபாத்தி யாயரையே நியமிக்க வேண்டும். யோக்கியதாம்சம் பெற்ற உபாத்தியாயர்கள் இல்லையானால் பார்ப்பனரல்லாதாரிலேயே உபாத்தியாயர் படிப்புக்காக பணம் கொடுத்து ஒரு வருஷம் உபாத்தியாயர் தொழிலுக்கு படிக்கச் செய்து அவர்களையே நியமிக்க வேண்டும். முக்கியமாய் பார்ப்பனரல்லாதார் பிள்ளைகள் படிப்பதில்லை என்று சொல்லப்படுவதற்கும் போதுமான படித்த பிள்ளைகள் கிடைக்காமல் போவதற்கும் அநேகமாய் பார்ப்பன உபாத்தி யாயர்களே காரணம் என்பதை அநேக வழிகளில் கண்டு பிடித்தாய்விட்டது. ஜில்லா தாலூகா போர்டுகளும் முனிசிபாலிட்டிகளும் படிப்புக்கு படிப்புக்கு என்பதாகச் செலவு செய்யும் பணங்கள் எல்லாம் ஒரு கூட்டத்தார் படிப்புக்கே பிரயோஜனப்படுகிறதே அல்லாமல் பொது மக்களுக்கு உதவுவதே கிடை யாது. ஆகையால் இவைகள் எல்லோருக்கும் உதவ வேண்டுமானால் பார்ப்பனரல்லாதாரைப் பிடித்து நூற்றுக் கணக்காக உபாத்தியாயர் வேலைக்கு அனுப்ப வேண்டும். அந்த ஸ்தாபனங்களில் நூற்றுக்கு இத்தனை உபாத்தியா யர்கள்தான் பார்ப்பனர்களாயிருக்கலாமென்றோ அல்லது நூற்றுக்கு இத்தனை உபாத்தியாயர்கள் பார்ப்பனரல்லாதார்களாயிருக்க வேண்டு மென் றோ தீர்மானம் செய்து கொண்டு அவற்றை நிறைவேற்றி வைக்க வேண்டும். இதனால் கொஞ்ச காலத்திற்கு படிப்பு பாதிக்கப்படும் என்பதாக பார்ப்பனர் கள் கூச்சல் போட்டாலும் பிறகு நமக்கு அபரிதமான லாபத்தைக் கொடுக்கும். கூடுமான வரையில் தலைமை உபாத்தியாயர்கள் வேலையில் பார்ப்பன ரல்லாதாரையே நியமிக்க வேண்டும். யோக்கியமான பார்ப்பன உபாத்தியாயர்



RangaRakes tamilnavarasam.com

என்று சொல்லப்படுபவரை விட அயோக்கியமான பார்ப்பனரல்லாத உபாத்தியாயர் என்று சொல்லப்படுபவரே பார்ப்பனரல்லாத பிள்ளைகளின் படிப்பு விஷயத்தில் லாபகரமுள்ளவராயிருப்பார். ஏனெனில் யோக்கியமான பார்ப்பனன் என்பவனின் இயற்கை குணமே பார்ப்பனரல்லாதாரை இழி வாயும் தாழ்மையாயும் கருதுவதுதான். பார்ப்பனனுக்கு பிறவியிலேயும் பழக்கத்திலேயும், வழக்கத்திலேயும் பார்ப்பனரல்லாதாரிடத்தில் அருவருப்பு ரத்தத்தில் ஊறி கலந்திருக்கிறது. இதை எவ்வழியிலும் அவர்கள் மறைக்க முடியாது. அநேகமாய் மறைப்பதுமில்லை. பள்ளியில் படிப்புச் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயரே தான் உயர்ந்த ஜாதியான் என்றும் படிப்பிக்கப் படும் பிள்ளை தாழ்ந்த ஜாதியான் என்றும் உணர்ச்சி உள்ளவராயிருந்தால் அவனிடம் படிக்கும் குழந்தைப் பிள்ளைகளுக்கு எப்படி சுயமரியாதை, ஆண்மை, சமத்துவம் இவைகள் உண்டாகும் என்பதை நன்றாய் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. பார்ப்பனப் பிள்ளைகளுக்கு பார்ப்பன உபாத்தியாயர்களே வேண்டும் என்று பார்ப்பனர்கள் சொல்லுவார்களே யானால் அவர்களுக்கென்று இவ்வளவு பணம் என்பதாக ஒதுக்கி வைத்து அதை அவர்களிடமே ஒப்புவித்து அவர்கள் இஷ்டம்போல் தனியாக பார்ப்பனப் பிள்ளைகளுக்கு என்பதாக பள்ளிக்கூடம் வைத்து நடத்திக் கொள்ளுவதானாலும் அதைப்பற்றி நமக்கு கவலை இல்லை. சுயமரியாதை இல்லாமல் செய்யும் மந்திரி உத்தியோகத்தை விட சுயமரியாதையுடன் செய்யும் தோட்டி உத்தியோகமே பெரிதானது. ஆதலால் நமது பிள்ளைகள் மந்திரி உத்தியோகப் படிப்பு படிப்பதை விட சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளும்படியான படிப்பு படிப்பதுதான் தேசத்திற்கும், சமூகத்திற்கும் முற்போக்கைக் கொடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 06.02.1927**



# பரோடாவுக்கு தமிழ்நாட்டுப் பார்ப்பன மந்திரி

நமது நாட்டுப் பண்டை அரசாங்கங்கள் ஒழுக்கவீனமாக நடந்ததற்கும் வேற்றரசர்களால் ஜயிக்கப்பட்டதற்கும் அன்னிய நாட்டரசுகள் ஆதிக்கம் பெற்றதற்கும் பார்ப்பன மந்திரித்துவம்தான் முக்கிய காரணமென்பது கர்ண பரம்பரையாகவும் சரித்திர வாயிலாகவும் அனுபோக பூர்த்தியாகவும் நாம் அறிந்த விஷயம்.

திருவாங்கூர் ராஜ்யம் சென்ற 100 ௵ காலத்திற்கு 22 மந்திரிகளில் 93 ௵ காலம் 20 மந்திரிகள் பார்ப்பன மந்திரிகளாகவே இருந்து துர் மந்திரித்துவ ஆதிக்கம் செலுத்தி வந்ததின் பலனாய் இப்போது அந்த ராஜ்யத்தில் 100 - க்கு 50 பங்கு ஜனங்கள் அன்னிய மதஸ்தர்களாவதற்கு இடம் கொடுத்து வந்திருக்கிறது. 40 லட்சம் ஜனத்தொகையில் 20 லட்சம் ஜனங்கள் அன்னிய மதஸ்தர்கள். எந்த பார்ப்பன மந்திரியாவது இதைப்பற்றி கவனித்தவரே அல்லர். அன்றியும் நமது மக்களைப் பறிகொடுத்து பாதிரிமார்களுக்கு நல்ல பிள்ளைகளாக நடந்து வெள்ளைக்கார கவர்னர்களது சிபார்சு பிடித்து பெரிய பட்டங்களும் உத்தியோகங்களும் சம்பாதித்துக் கொண்டு வந்திருக்கிறார் களே அல்லாமல் கொஞ்சமாவது மனிதாபிமானத்துடன் அதிகாரம் செலுத்த வேயில்லை. கொச்சியிலும் இதுபோலவேதான். அது போலவே 100 -க்கணக் கான வருஷங்களாய் பார்ப்பனர்களே மந்திரியாய் இருந்து வந்த - வரும் புதுக்கோட்டை அரசாங்கத்தை இன்னது தான் செய்திருக்கிறார்கள் என்று சொல்லவே முடியாது. அது இப்போது இருக்கும் யோக்கியதையைப் பார்த் தாலே தெரியவரும். ஐதராபாத், மைசூர் அரசாங்கங்களும் பார்ப்பன மந்திரித் துவத்தின் பலனாய் நாளுக்கு நாள் அதன் விஸ்தீரணங்கள் குறைந்து வந்திருப்பதும் வெள்ளைக்காரருக்கு உளவு சொல்லிக்கொடுத்து அந்நாடு களை ஒழிக்கப் பாடுபட்டு வந்ததும் இன்னமும் வெளி அரசாங்கங்களும் அதாவது இப்போது பட்டத்திலிருந்து விலகிய இந்தூர் அரசர், பட்டத்திலி ருந்து விலகுவதற்கு காரணமாயிருந்த சம்பவம் நடந்த காலத்திலும் பார்ப்பன மந்திரித்துவமும் ஆதிக்கமும் இருக்கும்போதுதான் அவ்வரசனுக்கு இந்த கதி ஏற்பட்டது. இனியும் இந்த தேசத்தில் இப்போது பிரத்தியக்ஷத்தில் கெட்டுப் போன அரசுகளும், ஜமீன்களும், பாளையப்பட்டுகளும் ஆகியவை களில் எதை எடுத்துக்கொண்டாலும் பார்ப்பன ஆதிக்கம் இல்லாததாக ஒன்று கூட கிடைப்பது கஷ்டமாகத்தானிருக்கும். இவற்றை உணர்ந்தே பெரிய



RangaRakes

tamilnavarasam.com

வர்கள் "ஆறு கெட நாணலிடு ஊரு கெட நூலை (பூணூலை) விடு" என்று சொல்லியிருப்பதும் அவ்வைப் பிராட்டியாரும் "ஒரு அரசன் மந்திரி வேலைக்குத் தகுந்தவர்கள் யார் என்று கேட்டபோது நூலாலே (பூணூலாலே) நாடு கெடும் என்று சொன்னதோடு, வேளாளர்கள் மந்திரியுமாவார்கள் வழித் துணையுமாவார்கள்" என்று ஒரு பாட்டில் சொல்லியிருக்கிறார்கள். இன்னமும் இதற்கு எத்தனையோ உதாரணங்களும் ஆதாரங்களுமிருக்கின்றன. இப்படி இருக்க இப்போது பரோடா சமஸ்தானத்திற்கும் ஒரு பார்ப்பனரையே திவானாக நியமித்திருப்பதாக தெரியவருகிறது. இந்தப் பார்ப்பனர் திவானாகப் போய் அந்நாட்டின் லக்ஷியத்தை கவனியாமல் வெள்ளைக் காரருக்கு அனுகூலம் செய்வதன் மூலம் அவர்களது திருப்தி பெற்று திவான் பகதூர், K.C.I., சர். முதலிய பட்டங்கள் பெற்று நிர்வாக சபை மெம்பராகி அவர்கள் வீட்டு நாய்க்குட்டிகள் முதல்கொண்டு டிப்டி கலெக்டர், முன்சீப், ஜட்ஜி, கலெக்டர், சூபரெண்டு முதலிய உத்தியோகங்கள் பெற்று நம் தலையில் கை வைக்கப் போகிறார்கள். ஆனால் பார்ப்பனரல்லாதாரை அனுப்புவதென்றாலோ வெள்ளைக்காரருக்கு பயம். பார்ப்பனரிடம் இருக்கும் நம்பிக்கை அவர்களுக்கு மற்றவர்களிடம் இருப்பதில்லை. இவர்களும் ராஜ்யம் எப்படியோ போகட்டு மெனக் கருதி வெள்ளைக்காரருக்கு நல்ல பிள்ளையாய் நடப்பதுமில்லை; அதனால்தான் வெள்ளைக்காரர்கள் பார்ப்பனர்களையே பார்த்து சிபார்சு செய்து அனுப்புகிறார்கள்.

**குடி அரசு - கட்டுரை - 06.02.1927**



## இன்னுமா நமக்கு சூத்திரப் பட்டம்?

நமது நாட்டில் ஆதியில் வருணாசிரம தர்மம் என்பது இல்லையென்றும் மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லையென்றும் இப்போது வருணாசிரம தர்மம் என்பதன் மூலமாய் வருணாசிரம முறையில் மிகவும் தாழ்ந்த நிலைமையில் நாம் அழைக்கப்படுகிறோம் என்றும் அதாவது பார்ப்பனர்களால் சூத்திரர்கள், பஞ்சமர்கள், மிலேச்சர்கள் என்று கருதப் படுகிறதும் 100-க்கு 97 பேருக்கும் மேலான எண்ணிக்கைக் கொண்ட நாம் இப்பெயரை வகிப்பது மிகவும் சுயமரியாதையற்ற தென்றும் சூத்திரன் என்கிற பதம் பார்ப்பனர்களின் அடிமை, பார்ப்பனர்களின் வேசி மக்கள் என்னும் கருத்தையே கொண்டது என்றும், பஞ்சமன் என்கிற பதம் ஜீவ வர்க்கத்தில் பூச்சி, புழு, பன்றி, நாய், கழுதை முதலியவைகளுக்கு இருக்கும் உரிமை கூட இல்லாததும் கண்களில் தென்படக் கூடாததும் தெருவில் நடக்கக்கூடாதது மான கொடுமை தத்துவத்தை கொண்டது என்றும் மிலேச்சர்கள் என்பது துலுக்கர், கிறிஸ்தவர், ஐரோப்பியர் முதலிய அன்னிய நாட்டுக்காரரை குறிப்பது என்றும், அவர்களைத் தொட்டால் தொட்ட பாகத்தை வெட்டி எறிந்துவிட வேண்டிய கருத்தைக் கொண்டதென்று உண்டாக்கி அந்தப் படியே பார்ப்பனர்களால் ஆதாரங்களும் ஏற்படுத்தி வைத்துக்கொள்ளப் பட்டு அது தான் இந்து மதத்திற்கு ஆதாரமென்று காட்டப்படுகிறதென்றும் அநேக தடவைகளில் ஆதாரபூர்வமாய் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். அதற்காக எவ்வளவோ கிளர்ச்சிகளும் செய்து வந்திருக்கிறோம். இவ்வளவும் நடந்து வரும் இந்தக் காலத்தில் இன்னமும் முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு, தாலூகா போர்டு முதலிய ஸ்தாபனங்கள் சூத்திரன், பஞ்சமன், பிராமணன் என்னும் பதங்களை உபயோகப்படுத்தி வருகிறதென்றால் இதன் தலைவர்களுக்கு மானம், வெட்கம், சுயமரியாதை உணர்ச்சி, சுத்த ரத்த ஓட்டம் ஆகியவைகள் இருக்கிறதா என்று கேட்கிறோம். சமீபத்தில் மதுரை யில் நடந்த பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் பொது ஜனங்களுக்கு ஏற்படுத் தப்பட்ட உணர்ச்சியே இதுதான். இப்படியிருக்க அம்மதுரைப் பட்டணத் திலே மங்கம்மாள் சத்திரங்களில் சூத்திரன் என்னும் வாசகங்கள் கொண்ட போர்டுகள் எழுதி தொங்க விடப்பட்டிருக்கின்றன; இது எவ்வளவு அநியாயம்? ஆதலால் மதுரை ஜில்லா போர்டாரோ முனிசிபாலிட்டியாரோ உடனே இதை கவனித்து இவ்வித இழி மொழிகள் கொண்ட போர்டுகளையும்



RangaRakes tamilnavarasam.com

வாசகங்களையும் அப்புறப்படுத்தி இவ்வித வித்தியாசங்களையும் ஒழித்து விடுவார்கள் என்றே நம்புகிறோம். இதுபோலவே இன்னும் மற்ற ஊர்களிலும் இம்மாதிரி வாசகங்களோ சொற்களோ காணப் பட்டால் அதை உடனே அடியோடு நிவர்த்திக்கவேண்டியது உண்மையான மக்களின் முதல் கடமை என்பதாக தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குடி அரசு - கட்டுரை - 06.02.1927



## பார்ப்பனரல்லாதார் ஜில்லா மகாநாடுகள்

மதுரை மகாநாட்டை அநுசரித்து அதன் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்காக ஜில்லா தாலுகா மகாநாடுகள் நடத்தப்பட வேண்டுமென்பதாக அந்தந்த ஜில்லாக்காரர்களை வேண்டிக் கொண்டிருந்தோம். அதற்கிணங்க கோயமுத்தூர், சேலம், வட ஆற்காடு, தஞ்சை ஆகிய ஜில்லா வாசிகள் வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்வதாக அறிவதோடு கோயமுத்தூர், வட ஆற்காடு ஜில்லாக் காரர்கள் ஜில்லா மகாநாடு நடத்த கமிட்டி முதலியதுகள் நியமித்து துரிதமாய் முயற்சி எடுத்து வருகிறார்கள். இம்மகாநாடுகள் அநேகமாய் இம்மாத முடிவிலோ மார்ச்சு மாத ஆரம்பத்திலோ நடக்கக் கூடும். மற்ற ஜில்லாக்காரர்களும் அதாவது செங்கற்பட்டு, தென் ஆற்காடு, திருச்சி, ராமனாதபுரம், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்காரர்கள் எதுவும் செய்த தாக நமக்குத் தகவலே இல்லாமலிருக்கிறது. ஆதலால் அவர்களும் சீக்கிரம் முயற்சி எடுத்து சீக்கிரத்தில் மகாநாடுகள் நடத்தி, திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய ஏற்பாடுகள் செய்து வரவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறோம். பார்ப்பனர்கள் பணம் சேர்க்கவோ தங்கள் ஆதிக்கத் திட்டங்களை நிறைவேற்றவோ எப்படியாவது தந்திரங்கள் செய்து அவர்கள் காரியத்தை சாதித்துக் கொள்ளுகிறார்கள். உதாரணமாக பார்ப்பனர்களின் சர்வ ஜீவநாடியும் செத்துப் போய் இருக்கும் இச்சமயத்தில் மகாத்மாவைத் தருவிக்கப் போகிறார்கள். அவர் பெயரால் ஆங்காங்கு நம்மவர்களிலேயே சில சோணகிரிகளைப் பிடித்துக் கூட்டம் கூட்டி நம்மையே நம்பச் செய்து அடுத்த தேர்தல் வரை தங்களுக்கு செல்வாக்கு இருக்கும் படியான ஏற்பாடுகளை செய்துகொள்ளப் போகிறார்கள். நாம் அதைப்பார்த்து பொறாமைப்படுவதிலோ அவர்கள் அப்படிச் செய்கிறார்கள் இப்படிச் செய்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருப்பதிலோ ஒரு பயனும் விளையப் போவதில்லை. உருப்படியான காரியத்தைச் செய்தாலல்லது நமது திட்டங்களை நிறைவேற்றி வைக்க முடியவே முடியாது. நமக்கு இருக்கும் பொறுப்புக்கும் பார்ப்பனர்களுக்கு இருக்கும் பொறுப்புக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. பார்ப்பனர்களின் காங்கிரஸூம் தேச சேவையும் அவர்கள் ஆதிக்கம் நிலை நிற்கவும் அவர்கள் பிள்ளை குட்டிகளுக்கு உத்தியோகம் சம்பாதிப்பதும் தவிர வேறில்லை. நாம் மகாத்மாவின் நிர்மாணத் திட்டம் முழுவதையும் நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்புடையவர்



RangaRakes tamilnavarasam.com

களாயிருக்கிறோம். பார்ப்பனர்கள் கூட்டம் கூடி பாமர ஜனங்கள் ஏமாறும்படி வாயில் பேசிவிட்டு சட்டசபை, ஜில்லா, தாலூகா, முனிசிபாலிட்டி போர்ட்டு களில் ஸ்தானம் பெற்று கூச்சல் போட்டுவிட்டால் அவர்கள் கடமையும் காங்கிரஸ் வேலையும் தீர்ந்துவிட்டது. நமது கடமையோ முதலாவது இப் பார்ப்பனர்கள் செய்யும் புரட்டுகளை வெளியிட வேண்டியதும் ஒவ்வொரு மனிதனுள்ளத்திலும் நமது நிலையை உணரும்படி செய்விப்பதும் நமது உண்மையான சுயமரியாதைக்கும் முன்னேற்றத்திற்கும் ஆன வழிகளை எடுத்துச் சொல்லி நடக்கச் செய்தலும் ஆகிய அநேக கஷ்டங்கள் இருக் கின்றன. இவ்வளவுடன் இதுகளுக்கு எதிரிடையாக வேலை செய்யும்படியாக நமது பார்ப்பனர்கள் நம்மவர்களிலேயே சிலரைப் பிடித்து கூலி கொடுத்து ஏவி விட்டு செய்யும் உபத்திரவங்களுக்கும் தலை கொடுக்க வேண்டியிருக் கிறது. ஆகையால் நமது பொறுப்பும் கடமையும் என்ன என்பதை யோசிப்ப வர்களுக்கு பயமாகவே இருக்கும். ஆனால் இவற்றை இது சமயம் கவனியா மல் அசார்சமாகவோ, சுயநலத்திற் கவலையாகவோ இருந்துவிடுவோமேயா னால் பின்னால் சுலபத்தில் மீளமுடியாது என்பதை ஒவ்வொரு பார்ப்பன ரல்லாதாரும் நன்றாய் கவனத்தில் வைக்க வேண்டும்.

தவிரவும் மதுரை மகாநாட்டிற்குப் பிறகு நாம் ஆசைபட்டது போலவே அநேகமாய் ஒவ்வொரு ஊர்களிலும் உள்ள பார்ப்பனரல்லாத மக்கள் பார்ப்பனரல்லாதார் சங்கங்களும் பார்ப்பனரல்லாதார் வாலிப சங்கங்களும் சுயமரியாதை சங்கங்களுமாக ஏற்படுத்துவதுகளில் இருந்தும் ஏற்படுத்த முன் வருவதிலிருந்தும் இவற்றின் பொருட்டு ஆங்காங்கு செல்லுமிடங்களில் காணப்படும் உற்சாகத்திலிருந்தும் ஒத்துழையாமையின் போது திரிகரண சுத்தியாய் காங்கிரசில் உழைத்து வந்த பார்ப்பனரல்லாத உண்மைத் தியாகிகள் பலர் ஆங்காங்கு இவற்றில் மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கலந்து உழைத்து வருவதினாலும் நமது பிற்கால வாழ்வில் கொஞ்சம் நம்பிக்கை கொள்ள இடமேற்படுகிறது. ஆனாலும், புராண வைராக்கியம் போல் இந்த சமயத்தில் மாத்திரம் ஏற்படும் எழுச்சியில் தலைகால் தெரியாமல் திரிந்துவிட்டு பின்னால் சோதனை ஏற்படுங் காலத்தில் அடியோடு படுத்துப் போய்விடுமோ என்று பயப்படவும் வேண்டி இருக்கிறது. ஆதலால் தொடர்ச்சியாய் இருந்து வேலை செய்ய பிரசாரங்களும் பத்திரிகைகளும் வேண்டியதற்கு ஆகவும் தக்க ஏற்பாடு களும் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே இவைகளுக்கெல்லாம் பூர்வாங்க வேலையாக முதலில் ஜில்லா மகாநாடுகளைக் கூட்டுவதிலும் அதன் மூலமாக தொகைகள் வசூலிப்பதிலும் ஆங்காங்குள்ளவர்கள் கவனம் செலுத்த வேண்டுமாய் மறுபடியும் மறுபடியும் வற்புறுத்துகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 06.02.1927**



# தஞ்சை ஜில்லா பிரசாரம்

அச்சுயமரியாதை அடையவே இப்போது நாம் ஆங்காங்கு பார்ப்பன ரல்லாதார் சங்கம் என்பதாகவும், பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம் என்ப தாகவும் ஏற்பாடு செய்து வருகிறோம். வகுப்புப் பெயரால் ஏன் சங்கத்தை நிறுவ வேண்டும்? என சிலர் கேட்கலாம். நமது நாட்டில் வகுப்புகள் இருந்து வருவதை யாவரும் மறைக்க முடியாது. ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் வகுப்புக்கு என சங்கங்கள் வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பாருக்கும் பொதுக் குறைகள் பலவும் மற்ற வகுப்பார்களால் சில குறைகளும் இருந்து கொண்டுதான் வருகிறது. அவற்றை நிவர்த்தித்துக் கொள்ள அந்தந்த வகுப்பார் தனித்தனியாய் முயற்சித்துத் தான் ஆக வேண்டும். நமது குறையை மற்றொரு வகுப்பார் நிவர்த்திப்பார்கள் என்று எண்ணுவதற்கு போதிய நிலைமை இன்னமும் ஏற்படவில்லை. நமது குறையை மற்ற வகுப்பார் நிவர்த்திப்பார்கள் என்று எண்ணுவதற்கு முன் அந்த மற்ற வகுப்பாரால் நாம் கொடுமை செய்யப்படாமலும் குறைகளுண்டு பண்ணப்படாமலும் இருக்கிறோமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். நமக்கு இருப்பதாய் சொல்லிக் கொள்ளும் குறைகளில் பெரும்பகுதி மற்ற வகுப்பார்களாலேயே இருந்து வருகிறதேயல்லாமல் இயற்கையானதல்ல. ஆதலால் அக் குறைகளை நிவர்த்தித்துக் கொள்ள ஏற்படுத்தும் இயக்கங்கள் வகுப்புப் பெயர்களுடன்தான் ஏற்படுத்தப்படும். இதில் "ஏன் பார்ப்பனர் களை மாத்திரம் விலக்க வேண்டும்" என்பதாக சிலர் கேட்கக்கூடும். நாம் அவர்களை ஒருபோதும் விலக்கவேயில்லை; அவர்களால் நாம் விலக்கப் பட்டிருக்கிறோம். அவர்கள் தங்களை மாத்திரம் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு தனியாகப் பிரிந்து மற்றவர்களை யெல்லாம் தாழ்ந்தவர் களென்று சொல்லி அநேக முறைகளில் சமத்துவம் அளிக்க மறுத்து நம்மை விலக்கி வைத்துக்கொண்டு வருகிறார்கள். நித்தியப்படி வாழ்வில் இதைப் பார்த்து வருகிறோம். ஆதலால் அக்குறைகளை நிவர்த்தித்துக் கொள்ள வேண்டுமானால் அவர்களை நீக்கித்தான் நாம் சங்கம் ஸ்தாபிக்க முடியும். நமக்கு சமத்துவமளிக்க அவர்கள் சம்மதிப்பார்களேயானால் நமக்கென்று தனியாக பார்ப்பனர் நீங்கிய ஒரு சங்கம் தேவையில்லை. உடனே இவற்றை மூடியும் விடலாம். அவ்வித சமத்துவம் ஏற்படும் வரை இப்படி ஒன்று இருந்துதான் தீரும். அது பார்ப்பனருக்கும் நமக்கும் மாத்திரம் அல்ல;



RangaRakes tamilnavarasam.com

இன்னும் நம்மால் யாருக்காவது சமத்துவமளிக்க இடையூறு ஏற்படுமானால் அவர்களும் நம்மை நீக்கித்தான் சங்கம் ஸ்தாபித்துக் கொள்வார்கள். இவ்வித குறைகள் உள்ளவரை ஒருவரையொருவர் நீக்கி சங்கம் ஸ்தாபித்து நடந்து கொண்டுதான் இருக்கும். இதனாலேயே ஒரு வகுப்பாரிடம்ஒருவகுப்பாருக்கு துவேஷம் என்று சொல்லிவிடமுடியாது. பஞ்சாப் அட்டூழியங்களைப் பற்றி மகாத்மா எடுத்துச்சொல்லி அதற்குப் பரிகாரம் தேடுவதற்காக அரசாங்கத்தாருடன் ஒத்துழையாமை செய்தது அரசாங்கத் துரோகமாகுமா? அல்லது வெள்ளைக்காரரிடம் துவேஷமாகுமா? ஒரு பார்ப்பனர் ஒத்துழை யாமையை அரசாங்கத் துரோகம் என்று சொல்லியும் கூட அரசாங்கத்தார் அதை ஒப்புக்கொள்ளாமல் பரிகாரம் தேடிக்கொள்ள நமக்கு உரிமை உண்டு என்று சொல்லிவிட்டார்கள். அப்படிக்கிருக்க நமது சமத்துவத்திற்காக அது வும் நமது சுயமரியாதையைப் பாதிக்கும் விஷயத்தை ஒழிப்பதற்காகச் செய்யும் பிரயத்தனங்கள் ஒருக்காலும் மற்றொரு வகுப்பாரிடம் துவேஷம் என்று சொல்லவே முடியாது. உதாரணமாக நமது வீட்டில் கொசுக்களின் உபத்திரவம் அதிகம் என்பதாக வைத்துக் கொள்ளுவோம். கொசுக்கடிக்கு பயந்துகொண்டு நாம் கொசுவலை போட்டுப் படுத்துக்கொண்டால் அது கொசு வுக்குத் துரோகம் செய்ததாகுமா? கொசுக்கள் எல்லாம் கூடிக்கொண்டு கொசு வாதம், கொசுத் துவேஷம் என்று சத்தம் போட ஆரம்பித்தால் கொசுவுக்குப் பயந்துகொண்டு கொசுவலையை எடுத்தெறிந்துவிட்டு கொசுக்கள் நமது ரத்தத்தை உறிஞ்சி நமக்கு வியாதியை உண்டாக்கும்படி நாம் தடிக் கட்டை யாய்ப் படுத்துக்கொள்ளுவதா? ஒருவர் தன் சொத்தைப் பாதுகாத்துக் கொள்ள நினைத்தால் அச்சொத்தைக் கொள்ளையடிக்க காத்திருப்பவனுக்கு கஷ்டமாகத்தான் தோன்றும். நமது வீட்டில் திருடலாம் என்று நினைத்திருப் பவனுக்கு நாம் கதவை தாழிட்டுக்கொண்டு பத்திரமாய்ப் படுத்திருப்பது துரோகமாய்க் கூட தோன்றலாம். ஒரு சமயம் இதனால் அத்திருடன் குடும்பம் பட்டினி கிடக்கவும் நேரிடலாம். அதற்காக நாம் பயந்துகொண்டோ, பரிதாபப் பட்டுக் கொண்டோ, கதவைத் திறந்து போட்டுக் கொண்டு படுத்துக் கொள்ள வேண்டுமா? கொஞ்ச காலத்திற்கு நாம் பந்தோபஸ்தாயிருந் தோமானால் திருடன் வந்து பார்த்துவிட்டு ஏமாற்றமடைந்து வீட்டுக்குப் போய் பட்டினி கிடப்பானானால் பிறகு தானாகவே இந்தத் தொழில் இனி நமக்கு பிரயோஜனப் படாது என்பதாகக் கருதி வேறு ஏதாவது ஒரு யோக்ய மான தொழிலில் ஈடுபட்டு யோக்யமாகப் பிழைக்கக் கற்றுக் கொள்வான். ஆதலால் நாம் ஜாக்கிரதையாய் இருப்பதன் மூலம் நமது சொத்து பாது காக்கப்படுவதன் மூலம், திருடனும் யோக்கியனாவதற்கு மார்க்கம் ஏற்படு கிறது. ஆகையால் இம்மாதிரி சங்கங்கள் ஏற்படுத்துவதையோ, நமது சுய மரியாதையையும் சமத்துவத்தையும் வேறு ஒருவனுக்கு பறிகொடுக்காமல் காப்பாற்ற முயலுவதினாலேயே எந்த விதத்திலும் யாருக்கும் துரோகம் செய்தவர்களாக மாட்டோம். யாரிடமும் துவேஷமுள்ளவர்களுமாக மாட் டோம். மற்றொருவர் அப்படிச் சொல்லுவார்களே என்று நாம் பயப்பட



RangaRakes

வேண்டியதில்லை. ஆதலால் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு கிராமத்திலும், இவ்வித சங்கங்கள் ஏற்பட்டு மும்முரமாக வேலை செய்ய வேண்டும். வாலி பர்களே பெரும்பாலும் இக் காரியங்களில் ஈடுபட்டு உழைக்க வேண்டும். சுயமரியாதையையும் சமத்துவத்தையும்விட நமக்கு வேறு பெரிய காரியம் வேண்டுவதில்லை. சுயமரியாதையும் சமத்துவமும் அற்ற ஜனசமூகம் அரசியலைப்பற்றி பேசுவதென்றால் அது வெறும் மடமையும், புரட்டும், வயிற்றுப் பிழைப்பு மல்லாமல் வேறல்ல. நமது வாலிபர்கள் அரசியல் என்னும் பெயரால் ஏமாந்து போகிறார்கள். அரசியல் என்கிற தொத்து வியா திக்கு பலியாகாமல் நமது வாலிபர்களைக் காப்பாற்ற வேண்டும். அரசியல் என்பது யோக்கியப் பொறுப்புள்ளதானால் மகாத்மா அரசியலை வெறுப்பாரா என்பதை யோசித்துப் பாருங்கள். மகாத்மாவுக்கு மிஞ்சின தேச பக்தி நமது அரசியல் புரட்டுக்காரர்களுக்கு இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? அரசி யல் ஸ்தாபனம் என்னும் காங்கிரசை மகாத்மா கைப்பற்றிப் பார்த்துத்தான் அதில் உண்மையான அரசியல் வாதம் இல்லையென்பதும், புரட்டானதும், ஒருவரை ஒருவர் ஏமாற்றி தன்னலம் பெறுவதும், தன் வயிற்றுப் பிழைப்பான துமான காரியமாயிருக்கிற தென்பதையும் உண்மையான அரசியல் விடுத லைக்கு ஒரு கூட்டத்தார் எதிரிகளாயிருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்து தான் தன் ஆதிக்கத்தை விலக்கிக் கொண்டார். அப்படி இருக்க யாரோ நாலு கத்துக்குட்டிகள் சப்தம் போடுவதற்காக நாம் ஏமாந்து போகக்கூடாது. நமது சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும், தற்கால காங்கிரசும் அரசியல் முறை களும் எமன் என்பதை மறந்துவிடாதீர்கள். அதோடு மாத்திரமல்ல, தேசத் திற்கே பெரிய ஆபத்தான மார்க்கம் என்பதையும் மறந்துவிடாதீர்கள். உண்மை யான அரசியல் விடுதலைக்கும், நமது சுயமரியாதைக்கும், சமத்துவத்திற்கும், கண்டிப்பாய் இப்போதைய காங்கிரசில் வழியில்லை. மகாத்மாவின் நிர்மாணத் திட்டத்தை காங்கிரஸ் மூலம் நிறைவேற் றிக்கொள்ள பார்ப்பனர்களும், அரசியலில் வயிறு வளர்ப்பவர்களும் ஒருக்காலும் சம்மதிக்கவே மாட்டார் கள். கவனித்துப் பார்ப்பீர்களானால் மகாத்மாவின் நிர்மாணத் திட்டம் பார்ப்பனர்களுக்கு பெருத்த எதிரியாக இருக்கும். அதாவது தீண்டாமை ஒழிந்துவிட்டால் பார்ப்பனர்களுக்கு நமது நாட்டில் இடம் இருக்குமா என்பதை நன்றாய் யோசித்துப் பாருங்கள். பார்ப்பனர்க ளுக்கு இப்போது நமது நாட்டில் இருக்கும் யோக்கியதை எதனால்? அவர்கள் ஒழுக்கத்தாலா? நல்லறிவினாலா? கஷ்டப்படும் தன்மையினாலா? இவை ஒன்றிலும் அல்ல. நம்மைத் தாழ்ந்தவர்களென்றும், தீண்டாதவர்களென்றும் சொல்லிக்கொண்டி ருப்பதும், தாங்கள் உயர்ந்த ஜாதியாரென்றும், மற்றவர்க ளுக்கு மோட்சம் கொடுக்க யோக்கியதை உள்ளவர்கள் என்றும் சொல்லிக் கொண்டிருக்கும் புரட்டுகளினாலும், தந்திரங்களினாலு மல்லாமல் வேறென்ன? இந்த தத்துவம் ஒழிந்து விட்டால் பார்ப்பனர் நமது நாட்டில் இப்போது இருப்பதுபோல் வாழ முடியுமா? ஆதலால் பார்ப்பனர்கள் தீண்டாமை ஒழியவும் சமத்துவத்திற்கும் கண்டிப்பாய் சம்மதிக்க மாட்டார்கள்.



tamilnavarasam.com

மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்று சொன்னவுடன் "பறையன் வீட்டிலும் சாப்பிடுவேன். நாயக்கர் வீட்டிலும் சாப்பிடுவேன்" என்று சொல்லிக்கொண்டிருந்த ஸ்ரீமான் ராஜ கோபாலாச்சாரியேதான் தனது சிஷ்ய கோடிகளுடன் ராஜினாமா கொடுத்து விட்டுப் போய்விட்டார்கள் என்றால் மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? "காங்கிரஸ் தலைவர்" ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காரே "தீண்டாமை அரசியலில் கலக்கக்கூடாது" என்று சொல்லும் போது மற்ற பார்ப்பனர்கள் அரசியல் சபையில் தீண்டாமை ஒழிக்க உடந்தையாயி ருப்பார்களா? தவிர மதுவிலக்கைப் பற்றியோ வென்றால் அதற்கும் நமது பார்ப்பனர்கள் சம்மதிக்க முடியாது. நமது நாட்டில் மதுபானம் ஒழிந்து விட்டால் பெரும்பாலும் படித்த பார்ப்பனர்கள் தங்கள் வீட்டின் முன்புறம் தொங்கவிட்டுக் கொண்டிருக்கும் வக்கீல் போர்டு பலகைகளைத் திருப்பி காப்பி ஓட்டல்கடை போர்டுகளாக மாற்றிக் கொண்டும், பிச்சையும் தூது போகும் வழிகளில் தான் வயிறு வளர்க்க வேண்டிவரும். சர்க்கார் உத்தி யோகத்திலுள்ள பார்ப்பனர்களுக்கும் அநேகமாய் இந்த கதியேதான் வரும். ஆதலால் குடியை ஒழிப்பதற்கு பார்ப்பனர்கள் மனதோடு கூடி சம்மதிக்க முடியாது. அப்படி மது விலக்குக்கு உண்மையாய்ப் பாடுபடுபவர்களா யிருந் தால் கள் உற்பத்தியில் பணம் சம்பாதிக்கும் ஸ்ரீமான் சி.வி. வெங்கட ரமணய் யங்காருக்கும் சாராயம் விற்று விளம்பரம் செய்யும் ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்காருக்கும் ஓட்டு வாங்கிக் கொடுக்க ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச் சாரியார் பிரசாரம் செய்வாரா? கள்ளை நிறுத்தப் பாடுபடுவதாய் பறை அடித்துக் கொண்டும் மகாத்மாவிடம் நற்சாட்சி பத்திரம் வாங்கி வைத்துக் கொண்டுமிருக்கும் ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியாரின் மதுவிலக்கு பிரசாரமே இப்படியிருக்குமானால் மற்ற பார்ப்பனர்களின் மதுவிலக்கு பிரசாரம் உண்மையாயிருக்குமா? கதர் விஷயமும் பார்ப்பனர் கவலை கொள்ள இடமே இல்லை. நாட்டில் தரித்திரத்தால் கஷ்டப்பட்டு பட்டினி கிடந்து சாவது பார்ப்பனரல்லாதாரே தவிர பார்ப்பனர்கள் ஒருவராவது பட்டினி கிடக்கிறார்கள் என்று சொல்லவே முடியாது. அவர்கள் ஒவ்வொரு வரும் தங்கள் யோக்கியதைக்கு மேல் வாழுவதோடு மற்றவன் பட்டினி கிடந்து கொண்டானாலும் தனக்கு கொடுத்து விடவேண்டும் என்பதாக பல வழிகளிலும் மார்க்கத்தைத் தேடி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பெண்கள் எந்த வகையிலும் குறைவில்லாமல் இருக்கும் படியான நிலைமை ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். முனிசீபு கோர்ட்டில் பியூனாக வோ சம்மன் சர்வு செய்பவனாகவோ இருந்தாலும் கூட அவன் மகள் ஆர்மோனியம் வாசிக்கும் படியான செல்வாக்கு பெற்றிருக்கிறாள். இப்ப டிக்கு எல்லாம் இல்லா விட்டாலும் பிச்சை எடுப்பதையும் குலத்தொழிலாகக் கொண்டிருப்பதாலும் அவனுக்கு கொடுப்பதே நமக்கு புண்ணியம் என்று கற்பித்து வைத்திருப்பதாலும் எவ்வழியிலும் அவர்களுக்கு பட்டினிக்கு மார்க்கமில்லை. ஆதலால் பட்டினி கிடப்பவர்கள் பார்ப்பனரல்லாதாரே தவிர வேறில்லை. பார்ப்பனரல்லாதார் பட்டினி கிடக்காமல் சுகமாய் வாழக் கூடிய



நிலைமை ஏற்பட்டால் பார்ப்பனருக்கு அது கஷ்டமாகக்கூடத்தான் இருக்கும். ஏனெனில் பார்ப்பனர்களுக்கு வேலை செய்யச் சூத்திரச்சி அகப்ப டமாட்டாள் என்கிற கவலை ஏற்படலாம். ஆகவே நிர்மாணத் திட்டம் காங்கிரஸ் மூலமாய் நிறைவேற கண்டிப்பாய் பார்ப்பனர்கள் ஒப்புக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். இவற்றை நான் 5 வருஷம் சந்தேகமற அனுபவத்தில் கண்ட பிறகே பார்ப்பனரல்லாதார்களைக் கொண்டே தான் நிர்மாணத் திட்டம் நிறைவேற்ற முடியும் என்கிற முடிவின்மேல் பார்ப்பன ரல்லாதார் சங்கத்தைப் பிடித்திருக்கிறேன். இந்நிர்மாணத் திட்டத்தில் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை, சமத்துவம், விடுதலை, உண்மையான சுயராஜ்யம் ஆகிய எல்லாம் அடங்கிக் கிடக்கிறது. இதை நிறைவேற்றச் செய்வதற்குத்தான் ஆங்காங்கு பார்ப்பனரல்லாதார் சங்கமும், பார்ப்பனரல் லாதார் வாலிபர் சங்கமும், பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைச் சங்கமும் ஆகியவைகள் ஏற்படுத்தப்படுவதே அல்லாமல் சில பார்ப்பனர்களும் வயிற்றுச் சோத்து தேச பக்தர்களும் அரசியல் பெயரைச் சொல்லாமல், வாழ யோக்கியதை இல்லாதவர்களும் சொல்லிக்கொண்டு திரிவது போன்ற உத்தியோக ஆசை பிடித்தோ குலாம் தனத்தில் ஆசை கொண்டோ சுயநல வாழ்க்கை நடத்தவோ அல்ல என்பதைக் கண்டிப்பாய் சொல்லுகிறேன். தவிரவும் உத்தியோக ஆசை யாருக்காவது இருக்குமானாலும் அரசியலின் மூலம் பிழைக்க வேண்டுமானாலும் அவர்கள் தாராளமாய் காங்கிரசுக்கு போங்கள். காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளைகளாகி அவர்கள் வாலைப் பிடித்துத்திரியுங்கள்! ஏதோ அவர்கள் தின்று மீதியான எச்சிலையை உங்களுக்கும் கொடுப்பார்கள், சில சமயத்தில் அவர்களுக்கு எட்டாததை உங்களுக்கு காட்டுவார்கள். ஆதலால் அந்த எண்ணத்தோடு இச்சங்கத்தில் யாரும் சேராதீர்களென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தவிரவும் இச்சங்கத்தில் உள்ள வாலிபர்கள் எல்லாவற்றிற்கும் துணிந்தவர்களாகத் தானிருக்க வேண்டும். சத்தியாக்கிரகமோ, சட்ட மறுப்போ, அடக்கு முறையோ ஏற்பட் டால் மார்பைக் கொடுக்கக் கூடியவர்களாகவே இருக்க வேண்டும். இக் காரியங்களுக்கு பெரியோர்கள் என்பவர்களை எதிர்பார்ப்பது வீணான காரியம் என்பது எனக்குத் தெரியும். ஆதலால்தான் வாலிபர்களாகிய உங்க ளைக் கேட்டுக் கொள்ளுகிறேன். பட்டாளம், பீரங்கி, துப்பாக்கி, ஆகாசக் கப்பல், வெடிகுண்டு இவைகளைக் கொண்ட சர்க்காரையே லட்சியம் செய்யா மல் நமது மனச்சாக்ஷியையே மதித்து நடந்த நாம் நமது சுயமரியாதைக்காக நமது மனச்சாக்ஷியை மதித்து நடப்பது முடியாத காரியமல்ல. ஆகையால் நமது வாலிபர் சங்கம் எப்போதும் தயாராயிருக்க வேண்டும். அழகுக்கும், பெருமைக்கும், சுயநலத்திற்கும் ஏற்பட்ட சங்கமல்லவென்பதையும், உயிரைக் கொடுத்தாகிலும் சுயமரியாதையை அடையத்தக்க சங்கமென்ப தையும் நன்றாய் உங்கள் மனதிலிருத்துங்கள். அப்படிப்பட்டவர்களே வாருங்கள்! நீங்கள் கொஞ்சமாக இருந்தாலும் நமக்கு கவலையில்லை. பெரிய சீர்திருத்தங்களோ கிளர்ச்சிகளோ ஏற்படுகிற காலத்தில் தைரியவான்களும்



RangaRakes tamilnavarasam.com

பொறுமையும் தியாககுணமும் உள்ளவர்களுமே நமக்கு வேண்டும். குடும்ப கவலை உள்ளவர்கள் இதில் அதிகமாய் கலந்து கொள்ளா தீர்கள். உங்கள் உண்மையான முன்னேற்றத்தையும் சுதந்திரத்தையும், ஆண்மையையும், திடத்தையும் குடும்பக் கவலைகளே கெடுத்து விடுகின்றன. சுதந்தர மனிதன் குடும்ப வாழ்க்கையில் பிரவேசித்தவுடன் குடும்பத்தைக் காப்பாற்றவே பிறந்ததாகவும் அதற்காகவே வாழவேண்டியவனாகவும் ஏற்பட்டு சுய மரியாதை, ஆண்மை, மனச்சாக்ஷி எல்லாவற்றை யும் இழந்துவிடுகிறான். அநேகமாகவே குடும்பி என்று சொல்வதற்கே ஆண்மை, சுயமரியாதை, மானம், மனச்சாக்ஷி அற்றவன் என்பதுதான் தத்து வார்த்தம். ஆதலால் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடாத வாலிபர்கள் நமது சுயமரியாதைக்கு மிகுதியும் வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் முதலில் ஒழுக்கத்தையே பயில வேண்டும்; பிறகு தன்னலத்தை மறுக்க வேண்டும்; சேவைக்காக இருப்ப தாய்க் கருதவேண்டும். இப்படிப்பட்ட இளைஞர்கள்தான் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு கலங்கரை விளக்கங் (லைட் அவுஸ்)களாவார்கள். இப்படிப் பட்ட உண்மையான வாலிபர்களைக் கொண்ட சமூகம் ஒரு வினாடி யாவது சுயமரியாதையும் சமத்துவமும் சுதந்திரமுமடையாமல் இருக்க முடியாது.

ஆதலால் வாலிபர்களே! உங்களையே பெரிதும் நம்பி இருப்பதால் நீங்கள் முன்வர வேண்டும். பெரியோர்களாயிருப்பவர்களும் பல காரணங் களால் தாங்கள் முன்வர யோக்கியதையற்றவர்களாயிருந்தாலும் வாலிபர் களையாவது தடுக்காமல் இருக்க வேண்டுகிறேன் என்றும் பேசியதோடு மற்றும் கதர் அணிய வேண்டியதின் அவசியத்தைப் பற்றியும் மதச்சடங்கு. கோவில் முதலிய காரியங்களில் பார்ப்பனரைக் கொண்டுதான் நடத்த வேண்டும் என்கிற மூடநம்பிக்கையை ஒழிக்க வேண்டும்.

*( தஞ்சை ஜில்லா பிரசாரம் 30.1.27 குடி அரசு இதழ் தொடர்ச்சி )*

**குடி அரசு - சொற்பொழிவு - 06.02.1927**



# நன்றி கெட்ட தன்மை

சென்னையில் வர்த்தகர்கள் சங்கம் வியாபாரச் சங்கம் என்பதாக இரண்டொரு சங்கங்கள் இருந்து வந்தாலும் அவைகள் முழுவதும் ஐரோப் பியர்கள் ஆதிக்கமாகவே இருந்து வருவதோடு இந்திய வியாபாரிகளுக்கு அவற்றில் போதிய செல்வாக்கும் சுதந்திரமும் இல்லை என்பதாகக் கண்டு காலஞ் சென்ற பெரியார் சர்.பி. தியாகராய செட்டியார் அவர்கள் பெரு முயற்சி செய்து தென் இந்திய வர்த்தக சங்கம் என்பதாக ஒன்றை ஏற்படுத்தி அது நிலைத்திருப்பதற்கு வேண்டிய சகல சௌகரியங்களும் செய்து கொடுத்து அதன் மூலம் ஐரோப்பிய சங்கங்களுக்கு இருப்பது போலவே சென்னை முனிசிபாலிடிக்கும், சென்னை சட்டசபைக்கும், இந்திய சட்டசபைக்கும் அங்கத்தினர்களை தெரிந்தெடுக்கும் உரிமைகள் முதலிய பெருமைகளையும் வாங்கிக் கொடுத்து அதற்கு ஒரு யோக்கியதையையும் உண்டாக்குவதற்கு எவ்வளவோ கஷ்டமும் பட்டார். இப்போதும் மற்ற எல்லா ஸ்தாபனங்களை யும் நமது பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்திற்காக சூழ்ச்சிகளாலும், தந்திரங் களாலும் சுவாதீனப்படுத்திக் கொண்டது போலவே இதையும் கைப்பற்றிக் கொண்டு இருப்பதோடு அச்சங்கத்திற்கு இவ்வளவு பெருமையும், யோக்கி யதையும் சம்பாதித்துக் கொடுத்த சர்.பி. தியாகராயரின் வார்சான ஸ்ரீமான் பி.டி. குமாரசாமி செட்டியார் அவர்களையே அச்சங்கத்தில் சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டார்கள். இக்கூட்டத்தாரின் கன்னெஞ்சத்தையும் நன்றி கெட்ட தன்மையையும் காட்ட இதைவிட வேறு ஏதாவது உதாரணம் வேண்டுமா? ஆகவே நமது பொது நன்மைக்காக என்று எந்த ஸ்தாபனங்களை ஏற்படுத்தி னாலும் மெள்ள மெள்ள அதில் வேலைக்காரராக வந்து சேர்ந்து குமாஸ்தா வாகி, மேனேஜராகி, எஜமான்களாகி நம்மை கூலிக்காரர்களாக செய்து விடு கிறார்கள். இக்காரணங்களால் தான் நாம் செய்யும் தியாகமோ, உழைக்கும் உழைப்போ, ஏற்படுத்தும் ஸ்தாபனங்களோ நமக்கே பலன் தர வேண்டுமா னால் கண்டிப்பாய் அவற்றில் பார்ப்பனர்களைச் சேர்க்கக்கூடாது என்று வாதாடி வருகிறோமே அல்லாமல் மற்றபடி அவ்வகுப்பார் மீது துவேஷம் கொண்டல்ல. இந்த விஷயத்தை அறியாமல் இருப்பவர்களும், பார்ப்பனர் களிடம் கூலி வாங்கிப் பிழைப்பவர்களும் பார்ப்பனர் விரோதம் கொண்டால் வாழ முடியாதவர்களும், தங்களை பெரிய தேச பக்தர்கள் போல காட்டிக் கொண்டு உபதேசம் செய்ய வந்துவிடுகிறார்கள். ஆனபோதிலும் பொது



RangaRakes
tamilnavarasam.com

ஜனங்கள் இதை ஏதோ அறியாமையாலும் வயிற்றுக் கொடுமையாலும் இப்படி உளறுகிறார்கள் என்பதாக மதித்து கூடிய வரையில் பார்ப்பன சம்பந்தமில்லாமலே முற்போக்கான வழி தேட வேண்டும் என்றும், அதற் கேற்ப ஸ்தாபனங்களையும் ஏற்படுத்த வேண்டுமென்றும் விரும்புகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 06.02.1927**



# காங்கிரசில் தீண்டாமை விலக்கு நிதி

தீண்டாமை விலக்கு என்பது ஒத்துழையாமை தத்துவத்தில் பட்ட நிர்மாணத் திட்டங்களுள் உச்ச ஸ்தானம் பெற்றிருந்தது. அதற்காக எவ்வளவோ பணங்களும் ஒதிக்கி வைத்து அத் திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது; ஆனால் அவைகள் என்ன கதி அடைந்தன என்பதை கவனிப்போம். தீண்டாமை விலக்கு நிதிக்காக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் ரூ. 20000 ஒதுக்கி வைத்து இருந்தார்கள். அந்தப் பணத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அந்த வேலைக்கு உபயோகப்படுத்த ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியார் ஒரு சிறிதும் இடம் கொடுக்காமல் தனது வசம் அந்த ரூபாயை ஒப்புவித்து விடும்படிக்கும் தான் அந்த வேலை செய்து கொள்வதாகவும் சொல்லிப் பணத்தை எடுத்து தன் பெயருக்கு பாங்கியில் போட்டுக் கொண்டார். கமிட்டியில் இருந்து தான் விலகும் வரையிலும் அந்தப் பணத்தை தான் சும்மா வைத்துக் கொண்டிருந்து விட்டு கடைசியாக அதை சீனிவாசய்யங்காருக்கு தேர்தல் செலவுக்கு ஏற்பட கமிட்டி வசம் அதை ஒப்புவித்தார். அவரும் தனக்கு பூரா அதிகாரம் வரும் வரை தீண்டா மையைப் பற்றி பேசாமலே இருந்து தான் முழு அதிகாரத்திற்கு வந்தவுடன் கொஞ்சம் நஞ்சம் செலவு செய்தது போக மீதி பெரும் பாகம் பணத்தை தேர்தல் வேலைக்கு எடுத்து தாராளமாய் செலவு செய்து கொண்டும், தன் பேச்சைக் கேட்கிற ஆதித்திராவிடர்களுக்கு மாதம் ரூ. 20, 30 கொடுத்து அவர்களைக் கொண்டே தீண்டாமை விலக்குக்கு விரோதமாய் பிரசாரம் செய்யவும் உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார். கடைசியாக தீண்டாமை விலக்கு காங்கிரசில் இருப்பது சரியில்லை கதரைப் போலவே அது வேறு ஸ்தாபனமாக இருக்க வேண்டும் என்றும் அக்கிராசனப் பிரசங்கத்தில் சொல்லிவிட்டார். இப்போது தீண்டாமை விலக்கு நிதி அய்யங்கார்களும், ஆச்சாரிகளும், அய்யன்மார்களும் தலைவர்களாவதற்கும், சட்டசபை மெம்பர், முனிசிபல் கவுன்சிலர்கள் ஆகி தீண்டாமை நிலை நிறுத்தவும் நமது மனம் பதறப்பதற தாராளமாய் உபயோகப்படுத்தப்பட்டாய் விட்டது.

**குடி அரசு - கட்டுரை - 06.02.1927**



RangaRakes tamilnavarasam.com

# திருவண்ணாமலை தாலூகா
# தென் இந்திய நல உரிமைச் சங்க மகாநாடு

அன்புள்ள சகோதர சகோதரிகளே!

இன்றைய தினம் உங்களால் அடியேனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பும் நீங்கள் வாசித்துக் கொடுத்த பத்திரங்களும் எனக்கு அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தன. எனினும் அத்தகைய குதூகலமான வரவேற்புக்கும் இத்தகைய பத்திரங்களுக்கும் நான் பொருத்தமுடையேன் அல்லேன் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் மனதாரப் பொறுத்துக் கொண்டிருப்பதுடன், என் தொண்டை நீங்களெல்லோரும் ஒப்புக் கொண்டு உங்களுடைய மனமார்ந்த ஆதரவளிப்பதற்கு என் மனப்பூர்த்தியான வந்தனத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். (கரகோஷம்). இக்கூட்டம் திருவண்ணாமலை தாலூகா தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் திறப்பு விழாவின் பொருட்டு கூட்டப்பட்டதாகச் சொல்லப்பட்ட போதிலும், இங்கு ஏற்கனவே சங்கம் நிறுவப் பட்டு வேலைகளும் செய்து வந்திருப்பதாகத் தெரிகின்றது. அன்றியும் இன்று இக்கூட்டம் என்னை வரவிடுத்து என் கடனாற்றச் செய்வதன் பொருட்டானதன்றி சில தீர்மானங்களையும் நிறைவேற்றுவதற்காகவும் கூட்டப்பட்டதென்பது நிகழ்ச்சிக் குறிப்பினாலறியப்படலாம். ஆதலால் இது ஒரு மகாநாட்டுக்குச் சமானமானதென்றே கருதுகின்றேன். கடைசியாக உங்களுடைய வரவேற்புப் பத்திரங்களில் குறிப்பிட்டுள்ள விஷயங்களுக்குத் தனித் தனியாகப் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகின்றேன். மேலும் எனக்குச் சில தினங்களாக தேக அசௌக்கியமாயிருப்பதால் அவ்வாறு பேசுவதற்கும் ஆற்றலில்லை. ஆயினும், முக்கியமாக ஒன்றை மட்டும் குறிப்பிட்டுக் கூற விரும்புகின்றேன். அதாவது நீங்கள் நம் சுயமரியாதையை நிலை நிறுத்தவும் நம் தேசத்தின் குறைகளையுணர்ந்து அவற்றை ஒழித்து நமது இலட்சியத்தை நிறைவேற்றப் பெரும் உறுதியுடன் உழைக்க முற்பட்டிருப்பதற்கு நான் அளவற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அதோடு கதர் விஷயத்தில் நீங்கள் மனப்பூர்த்தியான ஆதரவு அளிக்க முன் வந்திருப்பது எனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. நமது நிர்மாணத் திட்டத்தின் வேலைகளின் சம்பந்தமாக என்னாலான உதவியை அப்போதைக்கப்போது செய்து உங்களை ஊக்கமூட்ட எப்போதும் தயாராக விருக்கிறேன் (கரகோஷம்). மற்றபடி முடிவுரை ரூபமாகவோ அல்லது உபந்நியாச ரூபமாகவோ, எல்லா விஷயங்களையும் நடவடிக்கைகளின் முடிவில் கூறலாமென்று கருதி நிகழ்ச்சிக் குறிப்பிற் கண்ட விஷயங்களை கவனிக்க உத்தேசிக்கின்றேன். நிகழ்ச்சிக் குறிப்பில் இனி நடக்க வேண்டிய விஷயங்களில் முதலாவதாக பொங்கல் வசூல் உண்டி திறக்கப்படுமென்றும், பின் *தீர்மானங்களென்றும், அடுத்த படியாக இத்தகைய சங்கங்களினால் ஏற்படும் நற்பயன்கள் என்பது பொருளாக தேசபக்தர் ஸ்ரீ ஆரியா அவர்களும், திராவிடன் ஆசிரியர் திருவாளர் கண்ணப்பரவர்களும், திரு. புரிசை முருகேசனும், தண்டபாணி பிள்ளையும் சொற்பெருக்கிடுவார்களென்றும் காணக்கிடக்கின்றன. கடைசியாக அக்குறிப்பில் அக்கிராசனரின் முடிவையும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. கனவான்கள் கடைசி வரையில் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்து இம்மகாநாட்டை வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். (பெருத்த கரகோஷம்).

*குறிப்பு : திருவண்ணாமலையில் 6.2.27 இல் நடைபெற்ற தென்னிந்திய நல உரிமைச் சங்க மகாநாட்டில் தலைமை வகித்து முன்னுரையாக ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 13.02.1927**

*** மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:-

1. பொங்கல் உண்டி வசூலில் இருந்து ரூபாய் நூறு தியாகராயர் ஞாபக நிதிக்களித்து மிகுதியை இச்சங்க உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளும்படி அனுமதி கொடுக்க வேணுமாய்த் தீர்மானிக்கப்படுகிறது.

2. இச்சங்கம் மதுரைப் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் நிறைவேறிய எல்லாத் தீர்மானங்களையும் மனமுவந்து ஒப்புக் கொள்வதுடன் அவற்றை அனுபவத்தில் நடைபெறச் செய்வதற்குக் கீழ்க்கண்ட கனவான்கள் அடங்கிய நிர்வாக சபையை நியமிக்கிறது:-

**போஷகர்கள்:-**

ராவ்பகதூர் வீரப்ப செட்டியார், திருஞான சம்பந்த முதலியார்.

**உப பிரஸிடெண்டுகள் :-**

முத்துக் குமாரசாமி முதலியார், ராஜரத்தின முதலியார்.



RangaRakes tamilnavarasam.com

**காரியதரிசி:–** சாமி செட்டியார்.
**கூட்டுக்காரியதரிசி:–** முத்துச்சாமி நாயனார்.
**நிர்மாண கர்த்தாக்கள்:–** எம்.பி. ரங்கசாமி ரெட்டியார், ஆதி மூல உடையார்.

**பொக்கிஷதார் :–** ஆறுமுக முதலியார் மற்றும் பலர் நிர்வாக சபை மெம்பர்கள்.

3. தேவஸ்தான மசோதாவை சட்டமாக அங்கீகரித்ததற்காக மேன்மை தங்கிய ராஜப் பிரதிநிதி அவர்களையும் சென்னை கவர்னர் அவர்களையும் இக்கூட்டம் சந்தோஷத்துடன் பாராட்டுகின்றது. இந்தத் தீர்மானத்தை மேற்படியார்களுக்கு தந்தி மூலம் அனுப்பிவைக்கும்படி அக்கிராசனரைக் கேட்டுக்கொள்கின்றது.

4. நமது மாகாணத்தில் நமது சங்கத்தினர் பெயரால் கதர் போர்டு ஒன்றை ஏற்படுத்தியும் மற்றும் கூடுமான இடங்களிலும் இக்கதர் உற்பத்தி சாலையும் வியாபார சங்கத்தையும் ஏற்படுத்தி அத்தாக்ஷிப் பத்திரம் கொடுக்கவும், இதற்காக நிதி திரட்டவும் மகாத்மா காந்தி அவர்களின் வருகையை நாமும் கதரின் அபிவிருத்திக்காக வரவேற்கவும் தீர்மானிக்கிறது. இக்கதர் போர்டு தலைவராக இருக்கும்படி திரு.ஈ.வெ. ராமசாமி நாயக்கர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

5. பிராமணரல்லாதாரின் நன்மையைக் கோரி உழைத்து வரும் பத்திரிகைகளுள் முக்கியமான குடி அரசு, திராவிடன், ஜஸ்டிஸ் ஆகிய பத்திரிகைகளை அவசியம் ஒவ்வொருவரும் ஆதரித்து வரவேண்டுமென்றும், அப்படி மேற்படி பத்திரிகைகளை ஆதரிக்க சௌகரியமில்லாதவர்கள் பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதையை அழிக்கவென்றே கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கும் பார்ப்பன பத்திரிகைகளை நிராகரிக்கவாவது செய்ய வேணுமாயும் கேட்டுக் கொள்ளுகிறது.

6. தென் பெண்ணையாற்றில் அணைகட்டும் விஷயமாய் செங்கம் மகாநாட்டில் தீர்மானித்த இடத்திலும் இன்னும் சில இடங்களிலும் அதனை கட்டி கால்வாய் பிடித்து ஜலாதாரம் செய்து கொடுக்க வேணுமாயும் எல்லா காடுகளிலும் (விவசாயிகளுக்கு) இலவசமாய் தழை அறுத்துக்கொள்ள அனுமதி கொடுக்க வேணுமாயும், துண்டு கேதுகளுக்கு வஜா செய்து கொடுக்க வேண்டுமாயும் செங்கம் டிவிஷனைச் சேர்ந்த குடிகள் சுமார் முப்பது மைலுக்கு மேலாக வந்து திருவண்ணாமலை கஜானாவில் பணம் செலுத்த வேண்டி இருப்பதால் இந்தக் குறையை நீக்க செங்கம் டிப்டி தாசில்தார் ஆபிசிலேயே பணத்தைக் கட்ட ஏற்பாடு செய்யும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.



7. இவ்வூரில் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம் ஒன்றைத் திறந்து வைக்கும்படி ஸ்ரீமான் சுரேந்திரநாத் ஆரியா அவர்களை கேட்டுக் கொள்ளப் படுகிறது.

மதுரை கோயில் சுவாமிக்கு சுயமரியாதையுடன் ஆராதனை செய்த ஸ்ரீமான் ஜே.என். ராமநாதன் அவர்களையும், சேலம் ஜில்லா ஆத்தூர் தாலுகா ஏத்தாபூரில் பிராமணர்களின் அக்கிரமங்களைப் பகிஷ்கார மூலமாய் நிவர்த்தி செய்துகொண்ட அவ்வூர்வாசிகளையும் இம்மகாநாடு பாராட்டுகின்றது.



RangaRakes
tamilnavarasam.com

# வருணாச்சிரம தர்மம்

நமது பார்ப்பனர்கள் தங்களை உயர்த்திக் கொள்ளுவதற்காக வேண்டிச் செய்த சூழ்ச்சியில் "வருணாச்சிரம தருமம்"என்பதாக ஒரு பிரிவை உண்டு பண்ணி மக்களுக்கும் பிறவியிலேயே உயர்வு தாழ்வைக் கற்பித்துத் தாங்கள் கடவுள் முகத்திற் பிறந்தவர்கள் என்றும் உயர்ந்தவர்கள் என்றும், தங்களுக்கடுத்தவர்கள் சிலர் கடவுளின் தோளிற் பிறந்தவர்கள் க்ஷத்திரியர்களென்றும் மற்றும் சிலர் கடவுளின் தொடையிற் பிறந்தவர் வைசியர்களென்றும், ஆனால் கலியுகத்தில் க்ஷத்திரியரும் வைசியரும் இல்லை என்றும் தங்களைத் தவிர மீதியுள்ளவர்களெல்லாம் கடவுளின் பாதத்தில் பிறந்தவர்கள் 'சூத்திரர்கள்' என்றும், அச்சூத்திரர்கள் தங்களது வைப்பாட்டி மக்கள், தங்களது அடிமைகள், தங்களுக்குத் தொண்டு செய்வ தற்கென்றே கடவுளால் பிறப்பிக்கப்பட்டவர்கள் என்றும் சொல்லுவதோடு இந்த சூத்திரர்களுக்கு எந்தவித சுதந்திரமுமில்லை என்றும், அவர்கள் சொத்து, சுகம் வைத்துக்கொள்ளுவதற்குக் கூட பாத்தியதையில்லாதவர்க ளென்றும், அப்படி மீறி வைத்திருந்தால் அவர்களிடமிருந்து பிராமணர்கள் பலாத்காரத்தினால் பிடுங்கிக் கொள்ளலாமென்றும் இன்னும் நினைப்பதற்கே சகிக்க முடியாததான அநேக இழிவுகளை யெல்லாம் கற்பித்து இவைகளுக் காதாரம் வேதத்திலேயே இருக்கிறதென்றும், வேதம் கடவுளால் சொல்லப் பட்டதென்றும், அவ் வேதத்தை தாங்கள்தான் படிக்கவேண்டுமென்றும், மற்றவர்கள் படிக்கக்கூடாது கேட்கக்கூடாதென்றும், அப்படிப் படித்தால் படித்தவர்கள் நாக்கையறுப்பதோடு கேட்டவர்கள் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றி அவர்கள் மனதைப் பிளந்து கொன்றுவிட வேண்டுமென்பது வேதத்தின் கட்டளையென்றும் சொல்லுவதோடு அதற்கு வேண்டிய ஆதாரங் களையும் செய்து வைத்து நம்மைத் தாழ்த்தி, இழிவுபடுத்தி வருவதைப் பல தடவைகளில் பேசியும் எழுதியும் வந்திருக்கிறோம். ஆனால், சில பார்ப்பனர் கள் இப்படியெல்லாம் இல்லையென்றும் இது வேண்டுமென்றே பார்ப்பனர் கள் பேரில் துவேஷத்தைக் கற்பிக்க எடுத்துச் சொல்லப்பட்டு வருகிற தென்றும் உயர்வு தாழ்வு வித்தியாசங்கள் இல்லையென்றும் சொல்லுவதும், பார்ப்பனரல்லாதாரில் சிலர் தாங்கள் வருணாசிரம முறைப்படி சூத்திர ரல்லவென்றும், க்ஷத்திரியரென்றும் மற்றும் சிலர் வைசியர் என்றும் சொல்லிக் கொண்டு வருணாசிரம தர்மத்தை ஆதரிப்பதும், சிலர் தங்களுக்கு வர்மா, குப்தா என்று பெயர் வைத்துக்கொள்ளுவதும் பூணூல் போட்டுக் கொள்ள முக்கியமாய் வேளாளர்கள், தாங்கள் பூவைசியரென்றும் தாங்கள் சூத்திரரில் அப்படிப் பட்டவர்கள் அல்லரென்றும் சொல்லிக் கொள்ளுவதையும் பார்த்து வருகிறோம். இதுகள் நமது பார்ப்பனர்கள் அவரவர்களுக்குத் தக்கபடி சொல்லி ஏமாற்றுவதை நம்பி மோசம் போவதே அல்லாமல் வேறல்ல. இதோடு நம்மைப் பற்றி குற்றம் சொல்லுவதையும் கண்டு வருகிறோம். நமது கூற்றுக்கு ஆதாரமாக சமீபத்தில் சென்னையில் இரண்டு முக்கியப் பார்ப்பன பிரசங்கங்கள் நடந்திருக்கின்றன. அவற்றில் ஒன்று சென்ற மாதம் 22 ந்தேதி சனிக்கிழமை சங்கராச்சாரியார் மடத்தில் பிராமண சபையின் ஆதரவில் வேதம் என்பது பற்றிப் பிரசங்கிக்க ஒரு கூட்டம் கூட்டப்பட்டு இருக்கிறது. இதற்கு ஸ்ரீமான் டி. ஆர். ராமச்சந்திரய்யரே அக்கிராசனம் வகித்திருக்கிறார். அதில் வருணாச்சிரம தருமம் வேதத்திற்கு சொல்லப்பட்டிருக்கிறதென்றும் அதோடு சநாதன தர்மமும் அதில் சொல்லி இருக்கின்றதெனவும் இவைகளை நன்கறிந்து காப்பாற்ற வேண்டும் எனவும் பேசி இருக்கிறார். இது ஜனவரி 27-ந் தேதி மித்திரனில் பார்க்கலாம். மறுபடியும் பிப்ரவரி 7-ந்தேதி திங்கட் கிழமை கும்பகோணம் சங்கராச்சாரியார் மடத்து ஆஸ்தானம் ஸ்ரீமான் வெங்கிட்டராம சாஸ்திரியார் சநாதன தர்மப் பிரசாரமாக வருணாசிரம தர்மம் என்று ஒரு பிரசங்கம் செய்திருக்கிறார். அதில் இக் கலியுகத்தில் இரண்டே வருணங்கள்தான் இருக்கின்றன என்றும் அது பிராமணர், சூத்திரர் என்கிற இரண்டுதான் என்றும் ஷத்திரியர்களும், வைசியர்களும் கலியுகத்தில் இல்லையென்றும் வருணம் என்பது ஜாதி என்றும் தற்காலத்திற்கு பராசரஸ் மிருதிதான் ஆதாரமென்றும் பேசி இருக்கிறார். இது பிப்ரவரி மாதம் 8 ந் தேதி மித்திரனிலிருக்கிறது. ஆகவே பார்ப்பனர்கள் நம்மை இழிவு படுத்துவ தற்காக வைத்திருக்கும் சங்கங்கள் மோட்ச சாதனங்களாகப் போய் விடுகின் றன. நம்மைத் தாழ்த்திப் பேசும் பேச்சுக்கள் சநாதன தர்மமாகி விடுகின்றன. நாம் அவற்றிலிருந்து விடுபடுவதற்கு ஏற்படுத்தப்படும் சங்கங்கள் தேசத் துரோக சங்கங்களாகவும், அதில் பேசும் பேச்சுக்கள் பிராமணத் துவேஷமா கவும் போய்விடுகின்றன. இதிலிருந்தாவது வருணாசிரம தர்மப் பயித்தியம் பிடித்தவர்களுக்கும் பார்ப்பனர்களின் வால்பிடித்துத் திரிந்து ஷத்திரியர், வைசியர் ஆகிவிடலாம் என்று நினைக்கிறவர்களுக்கும் புத்தி வருவதோடு நம்மைப்பற்றி முட்டாள் தனமாய் நினைத்துக் கொண்டிருக்கும் தப்பெண்ணங் களும் மாறக்கூடுமென்றும், மற்றவர்களை தங்களிலும் தாழ்ந்தவர்களென்றும் நினைத்துக் கொண்டிருக்கும் மடமையும் மாறி மக்கள் எல்லோரும் சமமான வர்களென்று நினைக்கக் கூடும் என்றும் நாம் எதிர்பார்ப்பதோடு ஒரு வகுப் பாரைத் தங்களைவிட தாழ்ந்தவர்கள் என்று எண்ணும் கொள்கையை ஒப்புக் கொள்வதால் மற்றொரு வகுப்பாருக்கு தாங்கள் வைப்பாட்டி மக்களாக வேண்டியிருப்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 13.02.1927**



RangaRakes
tamilnavarasam.com

# கோவில்களின் பேரால் பார்ப்பனீயத் தொல்லை

நமது நாட்டில் இருக்கும் பார்ப்பனர்கள் அரசியலின் பெயராலும், மதத்தின் பெயராலும், மதச் சடங்கின் பெயராலும் நமக்கு இழைத்து வரும் கேடுகளுக்கும் தொல்லைகளுக்கும் அளவேயில்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வினாடியும் இக்கொடுமைகளிற் சிக்கி சீரழிந்து சுயமரியாதை, மானம், வெட்கமற்று அல்லற்படுகிறோம். இவைகளில் இருந்து வெளியேற நாம் பிரயத்தனப்படுமிக்காலத்திலேயே மேலும் மேலும் நமக்கு இழிவை உண்டாக்கித் தொல்லைப் படுத்துகிறார்களென்றால் மற்றபடி நாம் சும்மா இருந்தோமேயானால் நமது கதி என்னவாகும்? "அன்ன நடைக்கு ஆசைப்பட, உள்ள நடையும் போயிற்று" என்பதுபோல் கோவில்களில் நமக்கென்று தனி இடமும், பார்ப்பனர்களுக்கென்று தனி இடமும் கூடாது என்று நாம் சொல்ல ஆரம்பித்த பிறகு கோவிலுக்குள் நீ வரவே கூடாது என்று சொல்லவும், கோவிலை மூடிக் கதவைத் தாழ்போட்டுக்கொள்ளவும் ஆரம்பித்து விட்டார்கள். தெலுங்கில் ஒரு பழமொழி உண்டு. "காலானிக்கு வேஸ்தே மூலானிக்கி வஸ்த்துடு" என்பார்கள். அதன் அர்த்தம் 10-க்கு அடிபோட்டால் 5-க்கு வருவான் என்பது. அதுபோல் கோவிலுக்குள் வர வேண்டாம் என்பதாகவே சொல்லிவிட்டால் கும்பிட்டு விட்டாவது போய் விடுகிறேன் என்று சொல்ல வருவான்; இல்லாவிட்டால் சம உரிமை கேட்பான் என்று நினைத்து போகிற பட்சமெல்லாம் கதவைச் சாத்துகிறார்கள். கோவிலுக்குள் போக உரிமை கிடைத்தவருக்கு சுவாமி கும்பிட உரிமை உண்டா இல்லையா? சுவாமி கும்பிட உரிமை உள்ளவனுக்கு சுவாமிக்கு தேங்காய் பழம் உடைத்து வைக்க உரிமை உண்டா இல்லையா? இந்த உரிமைகளைக் கூட இப்பார்ப்பனர்கள் அபகரிப்பார்களேயானால் இவர்களை விட வெள்ளைக்காரர்கள் எந்த விதத்தில் கெட்டவர்கள்? நமது நாட்டுப் பார்ப்பனர்களைவிட தென் ஆப்பிரிக்கா வெள்ளைக்காரர்கள் ஆயிரமடங்கு யோக்கியர்கள் என்று சொல்லுவோம். இந்த பார்ப்பன ஆட்சியிலும், அடக்கு முறையிலும் இருப்பதை விட அந்த வெள்ளையர்கள் ஆட்சியே மேலென்பதாகக் கூடச் சொல்லி விடலாம். வர வர இந்தப் பார்ப்பனர்கள் எவ்வளவு அக்கிரமங்கள் செய்யத் துணிந்து விட்டார்கள் என்பதை நினைக்கும்போது நமது ரத்தம் கொதிக்கின்றது! குலை நடுங்குகின்றது! "பிச்சைக்கு வந்தவன்



பெண்டுக்கு மாப்பிள்ளை" என்பதுபோல் நாம் கட்டின கோவிலைக் காத்து வயிறு வளர்க்க ஏற்பட்டவர்கள் இப்போது நம்மை வெளியில் தள்ளி கதவு சாத்தவும் உள்ளே தள்ளி கதவு சாத்தவும் ஏற்பட்டு விட்டார்கள் என்றால் நமது மானங்கெட்ட தன்மைக்கு இதைவிட என்ன உதாரணம் வேண்டும்? சுவாமியைத் தொட்டுக் கும்பிடுவதும் சுவாமி பக்கத்தில் போய் கும்பிடுவதும், பார்ப்பனரும் தாமும் சரிசமமாய்க் கும்பிடுவதும் ஆகிய விஷயங்கள் இருக்கட்டும்; வெளியிலிருந்து தேங்காய் பழம் உடைத்து வைத்துக் கும்பிடுவதில் இந்தப் பார்ப்பனர்களுக்கிருக்கும் ஆட்சேபனை என்ன? இது பார்ப்பனர்களின் எந்த வேதம் சாஸ்திரம் ஆகமங்களுக்கு விரோதம் என்று சொல்லக் கூடும்? கை வலுத்தவன் காரியமாயிருக் கிறதேயல்லாமல் இதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா? நாம் தேங்காய் உடைப்பதால் கோவிலின் வரும்படி குறைவதாயிருந்தால் அவர்கள் கேட்பதைத் தரத் தயாராயிருக்கிறோம். பார்ப்பனர்களின் வரும்படி குறைந்து போகும் என்று சொல்வதானாலும் அவர்களுக்கும் கொடுக்க வேண்டியதை கொடுக்கத் தயாராயிருக்கிறோம். மற்றபடி இவர்கள் ஆட்சேபிக்கக் காரணம் என்ன? மதுரைக் கோவிலில் ஸ்ரீமான் இராமநாதனை உள்ளே வைத்தடைத்தலும் அவரைத் தேங்காய் உடைக்காமல் தடுத்ததும் எதைக் காட்டுகின்றன? திருவண்ணாமலைக் கோவிலில் ஸ்ரீமான் கண்ணப்பரையும் மற்றவர்களையும் உள்ளே விடாமல் கதவை மூடிய விஷயம் கோர்ட்டிலிருப்பதால் அது முடியட்டும். மற்றபடி மதுரை விஷயத்தைப் பற்றி நமக்கு ஏற்பட்ட அவமானம் பொறுக்கக் கூடியதல்ல. இதுபோலவே கொஞ்சநாளைக்கு முன் தென்காசி கோவிலிலும் தேவாரம் படித்த பிறகு பிரசாதம் வாங்குவது தங்களுக்கு அவமானம் என்பதாக கருதி அங்குள்ள பார்ப்பனர்கள் கோவிலை விட்டு போய்விட்டதுமல்லாமல் சுவாமி எழுந்தருளும் போது கதவை மூடிக்கொண்டார்களாம். தேவாரம் படிக்கக் கேட்பதும் அதற்குப் பிறகு பிரசாதம் வாங்குவதும் இந்தப் பார்ப்பனர்களுக்கு அவமானமாய்த் தோன்றினால் நம்மைத் தேங்காய் பழம் உடைத்து வைத்து சுவாமி கும்பிடவேண்டாம் என்றால் அது எவ்வளவு பெரிய இழிவு என்பதை அவர்களே சொல்லட்டும். ஒவ்வொரு அர்ச்சகனுக்கும் சுவாமி பூஜை செய்ய சம்பளம் உண்டு. அது கோவில் கட்டினவர்களே இத்தனை வேளை பூஜையென்றும் அதற்கு இன்ன சம்பளம் என்றும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். மற்றவர்கள் செய்யும் பூஜைக்கும் இவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அநேக இடங்களில் பக்தர்களே பூஜை செய்கிறது இன்னும் வழக்கமாகத்தான் இருக்கிறது. பிள்ளையார், மாரியம்மன், காளியம்மன் மற்றும் ரதோற்சவ காலங்களில் ரதத்தில் சுவாமி இருக்கும் போதும், கோவிலிலும் பக்தர்கள் தாங்களே தேங்காய் பழம் உடைத்து பூஜை செய்வதும் வழக்கமாகவே இருந்து வருகிறது. இதுவரையில் இவ்வித வழக்கத்தை யாவரும் ஆக்ஷேபித்ததே கிடையாது. இதை இப்படியேவிட்டு விட்டால் பம்பாயில் புரோகிதர் சட்டம் வந்ததுபோல் அதாவது பார்ப்பானுக்கு பணம் கொடுத்துத்தான் திதி செய்ய வேண்டும் என்று சொன்னது இங்கும்



RangaRakes tamilnavarasam.com

ஆகிவிடுமென்றே சொல்லலாம். அங்காவது பார்ப்பா னுக்குப் பணம் கொடுத்துவிட்டுத் தாங்களாகவே திதி செய்துகொள்வதில் ஆக்ஷேபமில்லை என்பதாக ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. இங்கு பார்ப்பானுக்கு பணம் கொடுத்தாலும் நாம் செய்துகொள்ள பாத்தியமில்லை என்கிற சட்டம் இருக்கிறது போல் இருக்கிறது. எந்தக் காரணத்தைக்கொண்டு மதுரைத் தலைவர் ஸ்ரீமான் M.T. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் மறு உத்திரவுவரை தேங்காய் உடைக்கக் கூடாது என்று பொது ஜனங்களுக்கு 144 உத்திரவு போட்டாரோ தெரியவில்லை. ஒரு சமயம் இதனால் கலகம் உண்டாகுமென்று நினைத்து மறு உத்திரவு வரை யாரும் கோவிலுக்குப் போகாதீர்கள் என்று உத்திரவு போட்டிருந்தால் அது சுயமரியாதையைக் காப்பாற்றப் போட்ட உத்திரவாகும். அதில்லாமல் பார்ப்பனருக்குப் பயந்து கொண்டு போட்ட உத்திரவானது நமது சுயமரியாதையை பாதிக்கத்தக்கதென்றே சொல்லுவோம். இதனால் என்ன கலகம் எப்படி நடந்துவிடக்கூடும். நாம் தேங்காய் உடைத்தால் மீனாக்ஷியம்மனும், சொக்கலிங்க சுவாமியும் கோவிலைவிட்டு ஓடி விடுவார்களா? அல்லது உலகம் முழுகிப் போகுமா? அல்லது பாவமூட்டை ஏற்பட்டு விடுமா? என்பது நமக்கு ஒன்றும் விளங்க வில்லை. எல்லா மக்களுக்கும் சமத்துவ உரிமை வேண்டுமென்றும் யாவரும் கோவிலுக்குள் போய் சுவாமி தரிசிக்கும் உரிமை வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்குமிக்காலத்தில் ஏற்கனவே உரிமையுள்ள காரியங்களையும் விட்டுக்கொடுப்பதானால் நாம் சம உரிமை அடைய யோக்கியமுடையவர் களாவோமா? தேங்காய் உடைப்பதால் என்ன தான் ஏற்பட்டுவிடும்? பார்ப்ப னர்கள் சர்க்காரிடம் போய்த்தான் 144 உத்திரவு வாங்கி வரட்டுமே அதையும் பார்த்து விட்டிருக்க வேண்டுமே அல்லாமல் அதைத் தடுத்தது நமக்குத் திருப்தியளிக்கவில்லை.

கலகம் நடக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு நாம் சொல்ல வரவில்லை; நாம் சரி என்று நமது மனப்பூர்வமாய் யோசித்து தீர்மானித்துச் செய்யுங் காரியங்களுக்கு ஒரு சிறு தடை ஏற்பட்டால் உடனே பின் வாங்கிக் கொள்ளுகிறதென்று ஆரம்பித்துவிட்டால் எப்படி முன்னேற முடியும்? நமக்குப் பின்னால் யாராவது பிரயத்தனப்படுபவர்களுக்கும் இது பெருத்த குந்தகமாய் வந்து முடியும் என்று தான் பயப்படுகிறோம். ஒரு காரியத்திற்கு போகக்கூடாது. கிரமம் என்று நினைத்து தலையிட்டுவிட்டால் அதைச் சுலபத் தில் விட்டு விட்டு ஓடவும் கூடாது. ஆதலால் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் யோசித்து சீக்கிரத்தில் ஏதாவது ஒரு வசதி செய்யக் கோருகிறோம். இன்னும் மற்ற ஊர்களிலும் இவ்விதமான தடைகள் இல்லாமல் அவரவர்கள் தங்கள் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள விரும்புகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 13.02.1927**



# பொது வாசக சாலைகளில் பார்ப்பன ஆதிக்கம்

எல்லா மக்களின் பொது நலத்திற்கென்று ஏறக்குறைய ஒவ்வொரு முக்கிய பட்டணங்களிலும் வாசக சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதார் பணத்தைக் கொண்டே நடப்பதாயிருந்தாலும் பார்ப்பன ஆதிக்கமே அதில் தலைசிறந்து விளங்கும். சிற்சில வாசக சாலைகளில் பார்ப்பனரல்லாதவர்களே காரியதரிசிகளாகக்கூட இருக்கலாம். ஆனாலும், அவ்வூர் முனிசீப்போ, டிப்டி கலெக்டரோ, மேஜிஸ் திரேட்டோ, சர்க்கிள் இன்ஸ்பெக்டரோ, ரிவினியூ இன்ஸ்பெக்டரோ பார்ப்ப னர்களாயிருந்து விட்டால் இந்தப் பார்ப்பனரல்லாத வக்கீல்களோ, பெரிய மனிதர்களோ அப்பார்ப்பன உத்தியோக மெம்பர்களுக்கு அடிமையாயிருப் பதுடன் அப்பார்ப்பன மெம்பர்கள் செய்யும் பார்ப்பனீயப் பிரசாரத்திற்கு செகரட்ரி என்கிற பெயரால் கையாட்களாகவும் இருந்து வருகிறார்கள். நமது நாட்டில் உள்ள ஒவ்வொரு வாசக சாலையிலும் “சுதேசமித்திரன்”, “இந்து” முதலிய பார்ப்பனீயப் பிரசார பார்ப்பனப் பத்திரிகைகள் வந்து கொண்டிருக் கும். “இந்து”, “சுதேசமித்திரன்” இல்லாத ரீடிங்குரூம் ஒரு ரீடிங்கு ரூமாகுமா என்று சொல்லிவிடுவார்கள். தங்கள் ரீடிங்கு ரூமுக்கு மெயில் பத்திரிகை வருகிறது என்று பெருமையும் பேசிக் கொள்வார்கள். ஆனால், “திராவிடன்”, “ஜஸ்டிஸ்”, “குடி அரசு” பத்திரிகைகளை தருவிக்கலாமா என்று சொல்லு வதற்குக்கூட நமது பார்ப்பனரல்லாத செகரட்டரிகளுக்கே தைரியம் இருக்காது. ஏனென்றால் பார்ப்பன அதிகாரிகளுக்கு அதிருப்தி ஏற்பட்டு விடும் என்கிற பயம்தான். அப்படி யாராவது ஒருவர் மீறி தன்னை தைரியம் செய்து கொண்டு தருவிக்க ஆரம்பித்துவிட்டால் அந்த ரீடிங் ரூமே நமது பார்ப்பனர்களுக்கு வகுப்பு துவேஷ ரீடிங் ரூமாய்விடும். பிறகு அந்த காரிய தரிசியை ஒழிக்க வழி தேடி விடுவார்கள். இதனாலேயே வாசக சாலைகளில் பெரும்பாலும் இப்பத்திரிகைகள் வரவழைக்கப் படுவதில்லை. அல்லாமலும் வரவழைத்து வந்த ஒன்று இரண்டு வாசக சாலைகளிலும் இப்பொழுது வர வர நிறுத்தப்பட்டு வருவதாய் தகவல்கள் எட்டுகின்றன. உதாரணமாக சேலம் “லிட்டரரி சொசைட்டி” என்கிற வாசக சாலையில் “தமிழ்நாடு” பத்திரிகை ஆரம்பம் முதல் வரவழைக்கப்பட்டு வந்தது. இப்பொழுது நிறுத்தப்பட்டாய் விட்டதாம். இவ்வாசக சாலையில் பார்ப்பனரல்லாத அங்கத்தினர்கள்



RangaRakes tamilnavarasam.com

அநேகர் உண்டு; ஒரு பார்ப்பனரல்லாதாருக்காவது இதில் அவமானம் தோன்றவே இல்லை. தங்களை எவ்வளவோ கேவலமாக பார்ப்பனர்கள் மதித்தாலும் சரி அவர்களுடன் அவர்கள் வால்பிடித்துத் திரிந்து ஏதாவது உத்தியோகம் பதவி முதலிய எச்சில் பொறுக்க அவர்கள் தயவை எதிர்பார்க் கலாமா என்கிற எண்ணமே அல்லாமல் தங்கள் சுயமரியாதையைப் பற்றி அநேகருக்கு கவலையே இல்லை. உண்மையாய் இப்பார்ப்பனரல்லாத மெம்பர்கள் சுயமரியாதை உடையவர்களாயிருந்திருந்தால் உடனே ராஜினாமாக் கொடுத்திருப்பார்கள். தவிர அந்த வாசக சாலையில் பார்ப்பன ருக்கு தண்ணீர் சாப்பிட வேறு பாத்திரமும் பார்ப்பனரல்லாதாருக்கு வேறு பாத்திரமும் வைக்கப்பட்டிருக்கிறதாம். சேலத்தில் படித்தவர்கள் பெரும் பாலும் ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியாரின் சிஷ்யர்கள் என்றும் அவரு டைய நண்பர்கள் என்றும் சொல்லிக் கொள்ளுகிறவர்கள். இவர்கள் யோக்கி யதையே இப்படி இருந்தால் மற்றவர்களின் யோக்கியதையைப் பற்றி சொல்லவும் வேண்டுமா? அதனால் இனி பொது வாசக சாலைகளில் உள்ள சுயமரியாதை உடைய பார்ப்பனரல்லாதார் அவசியம் இவற்றை கவனிக்க வேண்டும். அதாவது 'இந்து' 'மித்திரன்' 'மெயில்' பத்திரிகைகளை வரவழைக்கும் வாசக சாலைகள் கண்டிப்பாய் 'ஜஸ்டிஸ்', 'திராவிடன்', 'சைபுல் இஸ்லாம்' முதலிய பத்திரிகை வரவழைக்க வேண்டும். பணம் இல்லா விட்டால் பார்ப்பனப் பத்திரிகை ஒன்று பார்ப்பனரல்லாதார் பத்திரிகை ஒன்று மாக வரவழைக்க வேண்டும். 100 -க்கு 3 பார்ப்பனர்கள் இருந்து கொண்டு 100-க்கு 97 பேர் கொண்டவர்களால் நடத்தப்படும் பத்திரிகையை வரவழைக்க ஆக்ஷேபிப்பதை பொறுத்துக் கொள்ளுவதென்றால் இந்த பார்ப்பனரல்லா தாருக்கு மானம், வெட்கம், சுயமரியாதை இருக்கிறதா என்றுதான் கேட்கி றோம்? தவிரவும் பார்ப்பனருக்கு வேறு தண்ணீர் பாத்திரம் பார்ப்பனரல்லா தாருக்கு வேறு தண்ணீர் பாத்திரமானால் அதை ஒத்துக் கொள்ளுவதும் அவமானம் என்றே சொல்லுவோம். அப்படியானால் எல்லா வகுப்பாருக்கும் வைக்க வேண்டும்; மகமதியர், கிறிஸ்தவர், சைவர், அசைவர், ஆதி திராவிடர் மற்றும் சமபந்தியில்லாத சகல வகுப்புக்கும் வைக்க வேண்டும். அப்படிக் கில்லாமல் தன் ஜாதிக்கு 100-க்கு 3 பேருக்கு ஒன்று மற்ற 100-க்கு 97 பேருக்கும் ஒன்று என்பது நமது சமூகத்தை எவ்வளவு கேவலமும் அவ மானமும் படுத்தியதாகும். இது விஷயங்களில் படித்தவர்கள் என்பவர்கள் இவ்விழிவுக்கு கட்டுப்படுவதால் இந்த அவமானம் இது எல்லோர் தலையிலும் விடிகிறது. ஆதலால் இனியாவது வாசக சாலைகளில் உள்ள பார்ப்பனரல்லாத மெம்பர்கள் சுயமரியாதையுடனும் சுத்த ரத்தோட்ட முள்ளவர் களாகவும் நடந்து கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.02.1927**



# திருவண்ணாமலை தாலூகா தென்னிந்திய நலவுரிமைச் சங்கத் திறப்புவிழா

## காங்கிரசால் நேர்ந்த கஷ்டங்கள் சுயமரியாதை வாழ்வே சுதந்தர வாழ்வு

சகோதரர்களே! சகோதரிகளே!

நீங்கள் இன்று மாலை சில மணி நேரங்களாக இங்கு நடத்தப்பட்ட சொற்பொழிவுகளை அமைதியுடன் கேட்டிருந்தீர்கள். எனக்கு இரண்டொரு தினங்களாக தேக அசௌக்கியமாயிருக்கின்றது. ஆதலால் உங்களை நெடு நேரம் காக்க வைக்காமல் நான் சொல்ல வேண்டியவைகளைச் சுருக்கமாக விளக்கி விட உத்தேசித்திருக்கிறேன். இன்று கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நீங்களே நன்கறிவீர்கள். பின்னும் இத்தகைய சங்கங்களால் ஏற்படும் நற்பலன்களைக் குறித்து அறிவாளிகள் பலரும் நன்கெடுத்துப் பேசி னார்கள். ஆதலால் இன்னும் நான் புதிதாகச் சொல்ல வேண்டியது ஒன்று மில்லை. எனினும் நான் ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிவிட்டு கூட்ட நடவடிக்கைகளை முடித்துவிடுகிறேன். இதுகாறும் பேசியவர்கள் நம்மை பிராமணர்கள் மத சம்மந்தமான விஷயங்களிலும் அரசியலிலும் சமுதாயத் துறையிலும் ஏமாற்றி வருவதை அனுபவமாக எடுத்து நன்கு விளக்கினார்கள். அவர்கள் எடுத்துக் காட்டிய விஷயங்கள் குறித்து பலருக்கு பலவிதமான அபிப்பிராயங்கள் தோன்றலாம். சிலர் அவற்றை பிராமண துவேஷம் காரண மானதென்றும் சொல்லுவார்கள். மேலும் நம்மீது திருப்தியற்றவர்கள் இன்று மகாநாடு கூடி நாலு மணி நேரம் பார்ப்பன தூஷணையில்தான் காலங்கழிக் கப்பட்ட தென்றும் சொல்லுவார்கள். உண்மையைச் சொன்னால் துவேஷமும், தூஷணையுமாகத்தான் தோன்றும், நாம் நம்முடன் பிறந்த சகோதரர்களை வையக்கூடிய மூடர்களல்லோம். உடன் பிறந்தானாயினும் அவனுடைய தீச் செயல்களையும் குற்றங்களையும் எடுத்துக்காட்டி கண்டித்துத் திருத்துவது சகோதர உரிமையின் முதற் கடமையன்றோ. கொஞ்ச காலத்திற்கு முன் நாங்கள் சர்க்காரைக் குறை கூறித் திட்டியது கொஞ்சமல்ல. அது சர்க்கார்



RangaRakes tamilnavarasam.com

மீதிருந்த துவேஷத்தினாலா? பிசகைக் கண்டித்து ஆக்ஷேபிக்க வேண்டியது ஒவ்வொரு நகரவாசியின் கடமையாகும். சர்க்காரின் மீது விசேஷமாகப் பேசி னவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டு அடக்கப்பட்டதேயன்றி தென் னாட்டில் ராஜதுவேஷ குற்றங்கள் சாட்டப்பட்டவர்கள் வெகு சொற்பந்தான். பெரும்பாலும் சிறை சென்றவர்களெல்லாம் கள்ளுக்கடை மறியல் முதலான வற்றை முன்னிட்டுத்தானிருக்கும். நம் மனதில் குற்றமென்று தோன்றுவதை ஆக்ஷேபித்துக் கண்டிப்பது குற்றம் செய்தவர்களுக்கு தூஷணையாகவும் துவேஷமாகவும் கொள்ளுதல் அறிவுடைமையன்று. பஞ்சாபில் சர்க்கார் செய்த உபத்திரவம் அவர்களை எவ்வளவு கண்டித்தாலும் அவர்கள் வாயை மூடிக் கொண்டிருக்கச் செய்தது. இத்தனை நாளில்லாமல் பிராமணர்கள் பேரில் இப்போது துவேஷத்திற்கும் தூஷணைக்கும் காரணமாக விருப்ப தென்ன? நமக்குத் திடீரென்று துவேஷ உணர்ச்சி ஏற்பட்டுவிட்டதா? இது யாராவது நம்பத் தக்கதாயிருக்கின்றதா? பிராமணர்கள் இருக்க வேண்டிய நிலையை மீறி வந்து நமது சுதந்திரத்திலும் தலையிட்டு நம்மை மேன்மேலும் அமிழ்த்த முயலுவதனால்தான் நாம் அவர்களுடைய நிலையை யுணர்த்தி நம் சுயமரியாதைக்கு வழி தேடிக்கொள்ள வேண்டுமென்கிறோம். பிராமண ரல்லாத மக்களின் சுயமரியாதையைக் காத்துக்கொள்வதன் சம்பந்தமான உணர்ச்சி எனக்கு பாலிய முதற் கொண்டேயுண்டு. பத்துப் பதினைந்து வரு டங்களுக்கு முன்பிருந்தே நான் பிராமணரல்லாத கட்சியின் கொள்கையைப் பின்பற்றி வந்திருக்கின்றேன். (கரகோஷம்) நம் பிராமணர்களை அவர்க ளுடைய தீக்குணங்களுக்காகக் கண்டித்து வருவதைப் பட்சபாதமற்ற அன்னி யரும் பெரியோரும் இவர்கள் சொல்வது போலத்தான், பிராமணர்களுமிருக் கிறார்கள் என்று சொல்லக் கேட்டிருக்கின்றோம். அவர்கள் மரியாதையா யிருக்கக்கூடிய துறையைக் கடந்து தாங்கள் உயர்ந்தவர்களென்றும் நாம் தாழ்ந்தவர்களென்றும் சொல்லிக் கொள்வதுடனில்லாது, நமக்கு எஜமானர் களாயும் குருக்களாயும் ஆதிக்கமும் செலுத்த முற்பட்டதனால்தான் இதுகாறும் விட்டுக்கொடுத்துக் கொண்டிருந்த நம்மக்கள் இனி இவர்களுடைய கொடுமையையும் ஆதிக்கத்தையும் அடக்கி ஒழிக்க உறுதி செய்து கொண்டனர். இது இவர்களாகச் செய்து கொண்ட வினையின் பயனேயன்றி வேறல்ல. (கேளுங்கள்) அவர்களை நாம் ஒன்றுக்கும் குறை கூற முன்வரவில்லை. அவர்கள் இருக்க வேண்டிய நிலை கடந்துவிட்ட தனால் தான் இத்தகைய கிளர்ச்சி ஏற்பட்டது. இது எங்குபோய் முடியுமென் பதைக் குறித்து எனக்கே பயமாகத்தானிருக்கிறது. இத்தகைய கிளர்ச்சி ஏற்பட வேண்டுமா என்று கேட்கலாம். ஆம்! இத்தகைய கிளர்ச்சி அவசியமேயாகும். இக்கிளர்ச்சி ஒவ்வொர் யுகத்திலுமேற் பட்டுத்தானிருக்கிறது. கூடுமானால் இரண்டொருவரை அடக்கிவிடலாம். தேச மக்களுள் பிராமணரல்லாத சமூகத் திடை எங்கும் பரவி நிற்கும் இக்கிளர்ச்சியை அடக்க முடியுமென்பது ஒரு போதும் சாத்தியமெனத் தோன்றவில்லை. அதற்கு என்ன காரணமென்று



அவர்களும் யோசித்து சமரசமான முடிவுக்கு வந்தாலன்றி வேறுவகையில் இக்கிளர்ச்சியை அடக்குவது சாத்தியமன்று. ஆயிரக்கணக்கான வருடங்க ளாக மதத்தின்பெயராலும் பிறவழிகளிலும் மக்களை ஏமாற்றி வந்திருப்பதன் சம்பந்தமாக அப்போதைக்கப்போது இத்தகைய கிளர்ச்சி ஏற்பட்டு அத்தீமை களை ஒழிக்க முயற்சி செய்யப் பட்டிருக்கின்றது. ராமாயண பாரத யுத்தங்கூட பிராமணரல்லாதார் பிராமணர் சண்டை என்றே சொல்லப் போதிய ஆதார மிருக்கின்றது. ராமன் முதலானோரை பிராமணராகவும் அரக்கர்களை பிராமணரல்லாதாராகவும் கொண்டு ராமாயண யுத்தமும் இத்தகைய கிளர்ச்சி யின் பயனானதென்று கருதுகின்றனர். ராமாயண பாரதக் கொடுமைகளின் சம்பந்தமாக நமது அவமானங்களைக்கேட்க நாம் பணங்கொடுத்து காலட்சேபங்களை நடாத்தச் சொல்லுகின்றோம். சிறிது காலத்திற்குள்ளேயே இத்தகைய யோக்கியதைகளெல்லாம் வெளிப்பட்டு விடுமென்பதில் சந்தேகமில்லை. அரசியலிலும் மற்றைத் துறைகளிலும் அவர்களுடைய சூழ்ச்சிகளில் நாம் கீழ் நோக்கிப் போகின்றோம். இப்போது அத்தகைய சூழ்ச்சிகளும் ஏமாற்றங்களும் வெளிப்பட்டு வருகின்றன. அவர்கள் வெளி யில் பேசும் சமத்துவமும், சகோதரத்துவமும், ஜாதியில்லை குலமில்லை என்ற சமரசக் கொள்கையும், வீட்டுக்குப் போனால் கட்டி தெருவாயிற் படியில் வைக்கப்பட்டு விடுகிறதென்பது திண்ணம். அவர்களுக்கு பலவகைப்பட்ட உணர்ச்சிகளும் வேடமும் உண்டு. அவர்கள் உண்மையில் சொல்வது ஒன்று, செய்வது வேறு என்பது கடவுளுக்கும் தெரியும். பழக்க வழக்கங்களில் இன்னும் மூடநம்பிக்கைகொண்டிருப்பது சரியல்ல. அதனைக் குறித்து எது சரி எது தப்பு என்று நன்காராயவேண்டுவது ஒவ்வொருவருடைய கடமை யுமாகும் . அபிப்பிராயங்களில் பேதமிருந்தால் இங்கேயே தைரியத்துடன் வாதாடி முடிவு செய்து கொள்ளவேண்டும். நீங்கள் இங்கு கேட்ட விஷயங் களை எல்லாம் இங்கிருக்கும் வரையில் சரி எனத் தலையை அசைத்து விட்டு வீட்டுக்குச் சென்ற பின் மறந்து விடக்கூடாது. நாம் முக்கியமாகக் கஷ்டப்படு வது சுயராஜ்யத்திற்காக வல்ல. ஆனால் சுயமரியாதையைக் காத்துக்கொள்ள வேயாம். சுயராஜ்யமென்பதன் உண்மை பொருளை இன்னும் எவரும் நன் கறியவில்லை. சுயராஜ்யம் பார்சலில் வந்து சேருமா அன்றி நாமாக வுண்டாக்கிக்கொள்வதாவென்று யாரும் இன்னும் வாஸ்தவத்தையறிந்து கொள்ளவில்லை. சுயராஜ்யமின்ன தென்று மகாத்மா கூட இன்னும் சொல் லாமல் அதற்கு யோக்கியமாகப் பிரயத்தனப்படுங்களென்று தான் சொல்லு கின்றார். அத்தகைய சுயராஜ்யமென்னவென்றால் இன்று நீங்கள் இங்கு நிறைவேற்றிய தீர்மானங்களைக் கொண்டு அநுசரித்தடையும் பலனேயாகும். (கரகோஷம்) சுயராஜ்யமென்ற வார்த்தையைக் கொண்டு சாதித்துக் கொள்ளக் கூடிய விஷயங்கள் நிர்மாணத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தெரியாத விஷயத்தைக் குறித்துக் கூச்சலிடுவதினால் பயனில்லை. இதனால் ஏமாற்றமும் கஷ்டமும் தான். ஆனால் சூழ்ச்சிக்காரர்கள் சட்டசபைக்குள் நுழைந்து கொள்வதற்கும் வயிற்றுக்கில்லாதவர்கள் நாலு இரண்டு வாங்கி



RangaRakes tamilnavarasam.com

கோடாரிக் காம்புகளாக வயிறு வளர்த்து சமூகத் துரோகம் செய்வதற்குத்தான் வழியேற்படக்கூடும். உண்மையில் கஷ்டப்படுபவர்களுக்கு நன்மையில்லை.

நாங்களெல்லாம் காங்கிரசில் சேர்ந்துழைத்தது அங்கு அப்போது சுயமரியாதையைக் காத்துக் கொள்ளக்கூடிய தத்துவங்கள் பல அடங்கியதான கொள்கையிருந்ததனால்தான். அக்காலத்தில் காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கு உயர்ந்த உத்தியோகப் பதவிகள் சம்பாதிப்பதற்காகத் தானிருந்தது அப்போது காங்கிரஸ்காரர்களைத் திண்ணையிலும் உட்காரவைப்பார் யாருமில்லாதிருந் தனர். காங்கிரசை மகாத்மா கைப்பற்றி அதில் பல நிர்மாணத் திட்டங்களைச் சேர்த்து வேலை செய்ய முற்பட்ட பின்தான் அக்காங்கிரசுக்கு மதிப்பும் செல் வாக்கு மேற்பட்டது. அதன் கொள்கைகள் சமத்துவ பலனளிக்கும் தத்துவ முடைய தாயிருந்தமையினால் தான் நாங்களெல்லோரும் அக்காங்கிரசில் சேர்ந்துழைக்கச் சென்றோம். திடீரென்று அதன் போக்கில் வேறுபட்டு மகாத்மா காந்தியின் கொள்கைகள் ஒவ்வொன்றும் கை நழுவ விடப்பட்ட தனால் தான் நாங்களும் அதனை விட்டுப்பிரிந்து சுயமரியாதையை காத்து சமத்துவமான தத்துவத்திற்காகப் பாடுபடும் இச்சங்கத்தில் சேர்ந்துழைக்க முன்வந்துள்ளோம். (கரகோஷம்) தற்போதுள்ள காங்கிரசினால் நாட்டுக்கு ஆபத்தேற்படுமென்பது உறுதி. நாம் நிறைவேற்றும் கொள்கையை மீண்டும் காங்கிரஸ் மேற்கொண்டு வேலை செய்ய முற்படுமாயின் பின்னும் நாங்கள னைவரும் அக் காங்கிரசிலேயே சேர்ந்துழைக்கத் தயாராயிருக்கிறோம். காங்கிரசை தேசிய சபையென்றும் அதனை முன்னிட்டு அதில் எவ்வளவு குற்றமிருந்தாலும் அதனைக் குறை கூறுவது கூடாதென்பதும் முற்றுந் தவறு. புரட்டும், பித்தலாட்டத்தையும் வெளிப்படுத்தி அது காங்கிரசாயினும் மற்றெந்த சபையாயினும் அதனைக் கண்டிக்க வேண்டியதே உண்மை தேசாபிமானிகள் கடமை. காங்கிரஸ் சபையோ அன்றி மற்றெந்த சங்கமோ மக்களின் நன்மையை உத்தேசித்தே ஏற்படுத்தப்பட்டதேயன்றி வேறல்ல. ஒரு தீர்த்தத்தின் நீர்கெட்டு கிருமிகள் மிகுந்து அதில் குளித்தால் நோயுண் டாகுமென்று தெரிந்துகொண்டும், ஸ்தல புராணத்துக்குப் பயந்து அக்குளத்து நீரில் குளிப்பது கூடாது. (நகைப்பு) அதனை உடனே மண்ணைப்போட்டு மூடி விட்டு வேறு தீர்த்தமொன்றை வெட்டிக் கொள்ள வேண்டும் (கரகோ ஷம்). அதுபோலவே யோக்கிய மாயிருந்தால் காங்கிரசை மதிக்க வேண்டியது தான். இல்லாவிட்டால் அதனை ஒழிக்க வேண்டியதுதான் முறைமை. (கேளுங்கள்). ஒத்துழையாமை கைக் கொள்ளப்பட்டு நிர்மாணத் திட்டங்கள் பல ஊக்கத்துடன் அநுசரிக்கப்பட்டன. ஆனால் பின்னர் அத்தகைய நிர்மாணத் திட்டங்கள் கைவிடப்பட்டுவிட்டன.

காங்கிரசினால்தான் நமது தேசத்தில் இவ்வளவு கஷ்டங்களும் துவேஷமும் கூச்சலும் குழப்பமும் மேற்பட்டதென்பது தான் உண்மையான அபிப்பிராயம். மேலும் நம் தேசம் இக்கதியடைந்ததற்கும் பிராமண, பிராம ணரல்லாதார் சச்சரவுக்கும் இத்தகைய காங்கிரஸ்தான் காரணமானது. முப்பத்



RangaRakes

தாறு வருடங்களாக காங்கிரஸ் செய்ததை ஒழிக்கத்தான் மகாத்மா காந்தி பகிஷ்கார திட்டத்தைப் புகுத்தினார். சர்க்கார் பேரில் குற்றம் சொல்லும் விஷயங்களில் எல்லாம் இக்காங்கிரசுக்கும் பங்குண்டு. நடு நிலைமையில் நேர்மையாக ஆலோசிக்குமிடத்து காங்கிரசினால் ஏற்பட்டுள்ள பல கஷ்டங்களும் ஒருவருக்கும் நன்கு புலனாகாமல் போகாது. காங்கிரசுக்கு முன் கட்சிப்பிரதி கட்சி சச்சரவுகளும் துவேஷமும் இவ்வளவாக விருக்க வில்லை. காங்கிரசின் உழைப்பின் பலனாகத்தான் அதிக உத்தியோகங்களும் அதற்கேற்ற வரியுமேற்பட்டது. நாற்பது வருடங்களுக்கு முன் போலீஸில் சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கும், தாலூகாவில் தாசில்தாருக்கும் மேலில்லை. அப்போது அவர்களுக்கு சம்பளம் முறையே ரூபாய் 200ம் 150 ந்தான். அவ்வாறிருந்தும் அவர்களுக்குச் சட்ட மெம்பருக்குள்ள அதிகாரத்தைவிட நூறு மடங்கு அதிகாரமிருந்தது. இக்காலத்திலோ கலெக்டரின் குசினிக்கார னுக்கு மனங்கோணும்படி தாசில்தார் ஏதாவது செய்தாலும் அவர் தலையில் கை வைக்கப் பட்டு விடும் நிலைமைக்கு வந்துவிட்டது. (நகைப்பு) அந்தக் காலத்தில் அவர்களெல்லாம் சுயமதிப்புடனும் கௌரவத்துடனும் நடந்து கொண்டார்கள். அக்காலத்தில் உத்தியோகத்திற்கிருந்த கௌரவத்திற்கேற்ற கண்யவானுக்குத்தான் அவ்வுத்தியோகமும் கொடுக்கப்படும். மேலதிகாரி களுக்கும் அவர்களிடம் போதிய மதிப்பும் கௌரவமுமிருந்து வந்தது. காங்கி ரஸ் ஏற்பட்டதன் பின் உத்தியோகத்திற்கு யோக்கியதையே வேறாகிவிட்டது (கேளுங்கள்). அவ்வுத்தியோகங்கள் ஆங்கிலம் படித்தவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டு வந்ததால் பெரிய மனிதர்களும் யோக்கியப் பொறுப்பு டையவர்களும் பின் தள்ளப்பட்டு விட்டனர். இதனால் பிச்சை எடுத்தவனும் லாந்தர் விளக்கில் படித்தவனும் பஞ்சாங்கக் கட்டுக்காரன் மகனும் ஆதிக்கம் செலுத்த வந்து விட்டனர். இதன் பலனாய் உத்தியோகங்களின் மதிப்பும் கௌரவமும் இழிநிலையை யடைந்துவிட்டது. மேலும் இழிந்த நிலையிருந் தவர்களும் கண்டபடி இவ்வுத்தியோகங்களுக்கு வந்துவிட்டனர். அரசாங்கத் திற்கு உத்தியோகஸ்தர்கள்தான் முக்கியம். இதன் சம்பந்தமாக கண்யமும் மதிப்பும் போய் அவ்வுத்தியோகத்தின் நிலையே அடியோடு திரும்பி விட்டது. காங்கிரசுக்குப்பின் தான் ஓட்டுச் சுதந்திரமும் விரிவாக்கப்பட்டது. மேலும் பிரதிநிதித்துவத் திலும் தொகை அதிகமாக்கப்பட்டது. அக்காலத்தில் சட்டசபையில் மூன்று பிரதிநிதிகளிருந்தனர். அவர்களும் கூடுமான வரை யில் நல்ல வேலை செய்து வந்திருக்கின்றனர். காங்கிரஸ் ஏற்பட்டு ஓட்டுரி மையைக் கண்டபடி உபயோகிக்கப்பட்டது. யாருக்காவது ஓட்டுக்கேட்டு வாங்கிக்கொடுக்கப் படுகிறதேயொழிய வாங்கிக் கொடுக்கப்படுபவரின் யோக்கியதை என்னவென்ற கவலையே கிடையாது. நமது ஓட்டுரிமைகளை உண்மைப் பிரதிநிதித்துவத்திற்கு உபயோகப்படுத்தும் முறைகளில் நாம் கவனம் செலுத்துவதேயில்லை. தேர்தல் வியாபாரத்தின் போக்கையும் ஓட்டுக்கொடுக்கும் ஊழல்களும் எவ்வளவு கேவலமாகிவிட்டதென்பதை நான் விளக்க வேண்டுவதேயில்லை. இப்போதே இவ்வாறிருக்கையில்



tamilnavarasam.com

அதைவிட பெரிய சுதந்திரம் வந்து என்ன பயன். அப்போது மூன்று ஜில்லாவுக்கு ஒரு மெம்பராக விருந்தது, இப்போது ஒரு ஜில்லாவுக்கு மூன்று மெம்பராகிவிட்டது. அப்போது மூன்று ஜில்லாவுக்கு எழுநூறு ஓட்டர்களென்றால் இப்போது ஒரு ஜில்லாவுக்கு ஏழாயிரம் ஓட்டர்களுமாக்கப்பட்டுவிட்டது. மேலும் ஓட்டர்களை ஒரு அணாவுக்கும் ஒரு சொப்பு காப்பிக்கும் ஓட்டுச் செய்யும் தன்மைக்கும் கொண்டுவரப்பட்டது. எல்லோருக்கும் ஓட்டுரிமை இருக்கவேண்டுமென்பது மேலான காரியந்தான். ஆனால் ஓட்டுரிமையின் மேன்மையையும் அதன் தத்துவத்தையுமுணறாமல் ஒரு சொப்பு கள்ளுக்கும் ஓட்டுக்கொடுத்து விடுபவர்களுக்கும் இவ்வுரிமையளிக்கப்படுவதனால் பயன் யாது? (தொடரும்) - ( திராவிடன். )

*குறிப்பு : திருவண்ணாமலையில் 6.2.27 இல் நடைபெற்ற தென்னிந்திய நல உரிமைச் சங்க மாநாட்டில் தலைமையுரையின் முடிவுரையாக ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 13.02.1927**



# ஜஸ்டிஸ் திருநாள்

பிப்ரவரி *மீ* 26 தேதி சனிக்கிழமையை ஜஸ்டிஸ் 10 வது வருஷ நாளாகக் கொண்டாடும்படி தலைவர் பணகால் ராஜா அவர்கள் பார்ப்பனரல்லாத மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதற்காக ஒவ்வொரு ஊரிலும் உள்ள பார்ப்பனரல்லாத மக்கள் அந் நாளைக் கொண்டாட வேண்டியவிதம் என்னவென்றால் ஜஸ்டிஸ், திராவிடன், குடி அரசு பத்திரிகைகளுக்கு சந்தாதாரர்களை சேர்ப்பது தான். வாலிபர்கள் ஒவ்வொருவரும் கண்டிப்பாய் அன்றைய தினம் ஏதாவது ஒரு புது சந்தாதாரரையாவது சேர்த்து விட்டுத்தான் சாப்பிடுவதாக விரதமெடுத்துக் கொள்ள வேண்டும். ஜஸ்டிஸ் பத்திரிகையில் ராய்ட்டர் அசோசியேட் பிரஸ், பிரீ பிரஸ் ஆகிய தந்தி நிரூபங்கள் மாதம் 1-க்கு 1000 ரூபாய்க்கு மேற்பட்ட சிலவில் வாங்கி சென்ற மாதம் முதல் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. திராவிடனுக்கும் அசோசியேட் பிரஸ் நிரூபங்கள் வாங்கி பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, பிப்ரவரி *மீ* 26- தேதியை இவற்றிற்கு சந்தா சேர்க்கும் தினமாக கொண்டாட வேணுமாய் பார்ப்பனரல்லாத வாலிபர்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.

**ஈ.வெ.ராமசாமி**

**குடி அரசு - தலையங்கம் - 20.02.1927**



RangaRakes tamilnavarasam.com

# புதுக்கோட்டை முஸ்லீம் மகாநாடு

சமஸ்தான முஸ்லீம் பிரஜைகளின் முதலாவது மகாநாட்டில் சைபுல் இஸ்லாம் பத்திரிகை ஆசிரியரான மௌலானா மௌலி அஹமது சயிது சாஹிப் அவர்கள் 15. 2. 27 ல் அக்கிராசனம் வகித்து நிகழ்த்திய அக்கிராசனப் பிரசங்கம் மிகவும் நீண்டதாகையால் நமது பத்திரிகையில் முழுதும் பிரசுரிக்க முடியாததற்கு மிக வருந்துகிறோம். நாமறிந்த வரையில் மௌலானா அவர்கள் நமது நாட்டுப் பெரும்பான்மையான அரசியல்வாதிகளைப் போல் கீர்த்திக்கும், பெருமைக்கும், சுயநலத்திற்கும், குடும்ப வாழ்க்கைக்கும் ஆசை பட்டுக் கொண்டு தனது கொள்கைகளை மாற்றிக்கொண்டும், உள்ளொன்றும் புறமொன்றும் ஆகப் பேசியும், எழுதியும் காலங் கழிப்பவரல்ல. சரியோ, தப்போ தனது மனதிற்குட்பட்டதை ஒளிக்காமல் சொல்லும் சுபாவம் கொண்டவர். அவர் தனது அக்கிராசன பிரசங்கத்தில் கூறியிருக்கும் ஒற்றுமை, கதர் முதலிய சில முக்கிய விஷயங்களை மாத்திரம் பின்னால் குறிப்பிடுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 20.02.1927**



RangaRakes

# இன்னமுமா பார்ப்பனப் பத்திரிகைகளை ஆதரிக்கிறீர்கள்

நமது நாட்டுப் பார்ப்பனர்கள் தங்களது விஷங்களை பெரும்பாலும் பார்ப்பனப் பத்திரிகைகள் மூலமாகவே கக்கி பார்ப்பனரல்லாத மக்கள் அதுகளைப் படிப்பதாலேயே அவ்விஷம் ரத்தத்தில் ஊரிப் போகின்றது. இதை பல தடவைகள் சொல்லியும் எழுதியும் வந்திருக்கிறோம். இப்பொழுதும் நமது பார்ப்பனர்களின் பிழைப்புக்கான சகல ஆயுதங்களும் அதாவது தேசத்தின் பேரால் காங்கிரஸ் சுயராஜ்ஜியம் என்னும் ஆயுதமும் மதத்தின் பேரால் மோக்ஷம் என்னும் ஆயுதமும் ஏறக்குறைய அடியோடு மழுங்கிப் போய் வருகிறதென்றே சொல்லலாம். காங்கிரஸ் சுயராஜ்ஜியம் என்பதன் மூலம் அல்லாது வயிறு வளர்க்க மார்க்கமில்லாத சில வயிற்றுச் சோற்று கூலிகள் தவிர மற்றவர்கள் இதை மதித்திருந்த காலம் மலையேரிப் போய் விட்டது. அது போலவே - மதத்தின் பேரால் அல்லது வாழ முடியாத - வெளியில் தலைகாட்ட முடியாத - சில பாஷாண்டிகள் தவிர மற்றவர்கள் பார்ப்பனர் மூலம் அடையும் மோட்சத்தை மதிக்கும் காலமும் மலையேறிப் போய் விட்டது. ஆகவே இது சமயம் நமது பார்ப்பனர்களுக்கு மிஞ்சி இருப்பது அவர்கள் பத்திரிகை விஷமப்பிரசாரந்தான். அதன் மூலம் அவர்கள் பிரசாரம் செய்யும் யோக்கியதையை இரண்டொரு உதாரணத்தால் எடுத்துக் காட்டுவோம்.

சென்ற வாரம் திருவண்ணாமலையில் ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் முதலானவர்கள் பேசியதை பொதுஜனங்கள் ஆதரிக்கவில்லை என்றும் ஏதோ ஒரு சில ஆசாமிகள் மாத்திரம் தான் கேட்டதாகவும் வாத்தியமில்லாமலும் போலீஸ்காரர்கள் பந்தோபஸ்துடனும் வீடு சென்றதாகவும் அதே சமயத்தில் இதற்கு எதிரிடையாய் கூட்டப்பட்ட கூட்டத்தில் பெருந்திரளான ஜனங்கள் வந்திருந்ததாகவும் அதில் நாயக்கர் முதலானவர்கள் பதில் சொல்ல முடியாத அநேக கேள்விகள் கேட்கப்பட்டதாகவும் நாயக்கர் வாயை மூடிக் கொண்டு போய் விட்டதாகவும் இன்னும் சில பொய்யுரைகள் முன்னுக்குப் பின் சம்மந்தமில்லாமல் உளரிக் கொட்டிவிட்டு கடைசியாக எழுதியிருப்பது என்னவென்றால் "ஞாயிற்றுக்கிழமை நடத்திய திராவிட கூட்டத்தில் சுயநலக்காரரான நாயக்கர் முதலானவர்கள் கக்கிய விஷப்புகை



tamilnavarasam.com

திருவண்ணாமலை நகர முழுதும் பரவி எங்கும் பிராமணத்துவேஷம், பிராமணத்தூற்றல் தேசீய பத்திரிகை வெறுப்பு, காங்கிரஸ் மீது குறை கூறல், சுயராஜ்ஜிய கக்ஷியை வைதல் காங்கிரஸ் திட்டங்களை பரிகாசம் செய்தல், ஆலயம் செல்லல் வீண் சிலவெனல், கடவுளுக்கும் திராவிடருக்கும் இடையில் பார்ப்பனத் தரகர் வேண்டாம் எனல், அந்த மூட வழக்கத்தை ஒழிக்க வேண்டுமெனல், கண்ட கண்ட விடங்களில் பார்ப்பனரைப் பரிகசித் தல், காங்கிரசை விட்டு திராவிடக் கூட்டத்தில் சேரவேண்டுமெனல் ஆகிய இதுபோன்ற விஷயங்களே நகர முழுதும் சீறி நிற்கின்றன'' என்று தனது நிருபர் பேரால் 11. 2. 27 தேதி தமிழ் சுயராஜ்ஜியா பத்திரிகையில் குறிப்பிட் டிருப்பதாக ஒரு நண்பர் நமக்கு அனுப்பியிருக்கிறார். இது முன்னுக்குப் பின் எவ்வளவு முரணானதும் அயோக்கியத்தனமானதுமான பிரசாரம் என்பதை நேயர்கள் கவனிக்க வேண்டும். நாம் பேசிய கூட்டத்தில் யாரும் இல்லையென்றும் ஏதோ காங்கிரஸ் விரோதிகள் சிலபேர் இருந்தார்கள் என்றும் அதுவும் போலீஸ் பந்தோபஸ்துடன் நடந்தது என்றும் வாத்தியங்கள் கூட இல்லாமல் வீட்டிற்கு போனதாகவும் எழுதிவிட்டு தாங்கள் போட்ட கூட்டத்தில் ஏராளமான ஜனங்கள் வந்திருந்ததாகவும் எழுதிஇருக்கிறது. அப்படியானால் அவ்வளவு **"ரகசியத்தில் கக்கிய விஷப்புகை"** ஊர் முழுவதும் எப்படி பரவி மேல்கண்ட பலன்கள் ஏற்பட்டிருக்கும்? என்பதை வாசகர்கள் தான் உணரவேண்டும். இதுதவிர சுதேசமித்திரனோ " நாயக்கர் தனது வாய் வலிக்குமட்டும் இரண்டரை மணிநேரம் 3 மணி நேரம் 5 மணி நேரம் பார்ப்பனர்களையும் புரோகிதர்களையும் வைதுப் பேசினார்''என்று எழுதுகிறதே அல்லாமல் என்ன பேசினார் என்பதை இச்சந்தர்ப்பங்களில் குறிப்பிடுகிறதேயில்லை. இன்னும் இதுபோல் மீட்டிங் போட்டதாகவும் கூட்டம் கூடினதாகவும் என்ன என்னமோ பேசினதாகவும் எழுதிவிடுகிறது. இதைப்பற்றி எத்தனையோ தடவை எழுதியிருக்கிறோம். பேசியும் இருக் கிறோம். கொஞ்சமாவது மானம் வெட்கம், சுத்த ரத்த ஓட்டம் முதலியதுகள் இருக்குமானால் இனியும் 10 தலைமுறைக்கு இந்தக் கூட்டம் இவ்வித இழிவான காரியங்களில் தலையிடவே தலையிடாது. அப்படிக்கு இல்லாமல் "தாயாரை பெண்டாட்டி ஆக்கிக் கொண்டாலும் நாள் வந்து தானே சாக வேண்டும்" என்கிற தூர்த்த வாக்கியத்தை தனக்கு ஆதரவாய் வைத்துக் கொண்டு நாம் என்னதான் எழுதினாலும் நம்மை யார் என்ன செய்யக்கூடும் என்கிற தைரியத்தில் எல்லாவற்றையும் மறந்து இதே வேலையில் ஈடுபட்டிருக்கிறதுகள்.

இவைகளுக்கு இனி நாம் மறுப்பு எழுதுவதாலோ அல்லது கண்டிப் பதாலோ ஒருக்காலும் புத்தி வரும்படி செய்யமுடியவே முடியாது. மான முள்ள ஆயிரம் பேரையும் ஒருவன் எதிர்த்து போர் புரிய முடியும். மான மில்லாத ஒருவனை வெல்ல ஆயிரம் பேராலும் ஆகாது என்கிற முதுமொழிப் படி மானம், ஈனம், தைரியமற்ற கூட்டத்தை நாம் எப்படி சமாளிக்க முடியும்



என்று பார்ப்போமேயானால் அம்மாதிரிப் பத்திரிகைகளை பார்க்காமலி ருப்பதனால்தானே ஒழியும். மற்றபடி இதற்கு வேறு மார்க்கம் இல்லை என்றுதான் நாம் சொல்லுவோம். இதையே பல தடவைகள் சொல்லி யுமிருக்கின்றோம். அநேக ஜனங்கள் அப்பத்திரிகைகளுக்கு புத்தி வரும்படி செய்வதற்காக அதைப் பஹிஷ்கரித்திருப்பதாய் நமக்கு எழுதியும் வருகிறார் கள். ஆனபோதிலும் அது தகுந்த பலனை அளிக்கவில்லை என்றே தோன்றுகிறது. ஆதலால் இனியாவது இவ்வித பத்திரிகைகளை ஆதரிப்பதன் மூலம் நமது சமூகத்திற்கு கேடு வருவித்துக் கொள்ள கூடாது என்பதை தெரிவித்துக் கொள்வதோடு இவ்விதப் புரட்டுகளையும் விஷமப் பிரசாரத் தையும் ஒழித்து மக்களுக்கு உண்மையை விளக்கி சுயமரியாதையை உண்டாக்கவென்றே பாடுபட்டு வரும் "திராவிடனையே" ஒவ்வொரு தமிழ்மக்களும் அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்று வேண்டுகிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 20.02.1927**



RangaRakes tamilnavarasam.com

# செங்கல்பட்டில்
# கதர்ச் சாலை திறப்பு விழா

காங்கிரசின் பெயராலும், சுயராஜ்யமென்னும் பதத்தின் பெயராலும் மக்களை ஏய்த்து பல அக்கிரமங்கள் செய்யப்படுகிறது. சுயராஜ்யமின்னதென்று மகாத்மா காந்தியும் இன்னும் சொல்லாமல் அதனை அடைவதற்குத் தகுதியாகுங்கள் என்றுதான் சொல்லுகின்றார். மதுரையில் நிறைவேற்றப்பட்ட நிர்மாணத் திட்டங்களை நம் பிராமணரல்லாத மக்கள் கைக்கொண்டு மனப்பூர்வமாகப் பாடுபடுவார்களாயின், சுயராஜ்யம் தானாகவே தேடிக்கொண்டு வந்துவிடும். நாம் சுயராஜ்யமடையக் கருதுவதற்கு முன் சுயமரியாதையை நிலை நிறுத்த வேண்டுவது முதற்கடமை. சுயமரியாதையில்லாத சுயராஜ்யம் வந்தும் பயனில்லை. இச்சுயமரியாதையை அடைவதற்கு பாமர மக்களுக்குள் போதிய பிரசாரம் செய்ய வேண்டும். இதற்கு "ஜஸ்டிஸ்", "திராவிடன்" பத்திரிகைகளின் உழைப்பு அத்தியாவசியம். அப்பத்திரிகைகளின் வளர்ச்சி பிராமணரல்லாத சமூகத்தின் கதிமோட்சத்திற்கான வளர்ச்சி என்பதை மறக்கக் கூடாது. பிராமணரல்லாத சங்கமென்னும் பெயர் துவேஷம் காரணமெனச் சொல்லப்பட்ட போதிலும் சரி, அதற்குக் காரணமானவர்கள் அவர்கள்தான். அதில் துவேஷமெங்கிருக்கின்றதென விளங்கவில்லை. நமது சுயமரியாதைக்காக நாம்பாடுபட்டால் அதை துவேஷமென்று சொல்லுவதா? கொசுக்கள் கடிக்காமல் கொசுவலை போட்டுக்கொள்வது கொசுவின் மீது துவேஷமாகுமா? திருடன் வருவதற்குத் தடையாக நம் வீட்டுக் கதவை அடைத்து வைத்தால் திருடன் மனம் வருந்தி பட்டினி கிடக்கவும் நேருமே என்று யாராவது கதவைத் திறந்து வைப்பார்களா? நாம் கதவை மூடி வைத்தால் நாம் ஜாக்கிரதையாயிருப்பதையறிந்து அத்திருடனும் திருத்திக்கொள்ள முயல்வான். அதுபோன்றே நாம் இனி நமது சுயமரியாதையைக் காத்துக் கொள்வதற்கான முயற்சிகள் செய்து பிராமணீய ஆதிக்கத்தை ஒழிக்க முயல வேண்டும். பிராமண பிராமணரல்லாதார் வித்தியாசமும் இம்மாதிரி போராட்டமும் பண்டைக் கால முதற்கொண்டே நடந்து வந்திருக்கின்றது. இராமாயணம், பாரதம் யுத்தங்களிலும் இப்போர் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வேதங்களில் பிராமணர்கள் பிராமணரல்லாத மக்களைத் தங்களுக்கு அடிமையாக்கி வைக்கும்படியும் அவர்களை ஒழித்துவிடும்படிக்கும் இந்திரன் முதலான தெய்வங்களைப் பிரார்த்திப்பது தவிர வேறில்லை. இதனால்தான் வேதத்தை பிராமணரல்லாதார் படிக்கக் கூடாதென்று சூதும் வாதும் செய்தனர். புத்தர் காலத்திலும் பிராமணர்களின் அநீதியை ஒழித்துச் சமத்துவத்தை நிலை நாட்டுவதற்கான முயற்சி செய்யப்பட்டு, புத்தமதம் பிரசாரம் செய்யப்பட்டது. பிராமணர்கள், பண்டைக்கால முதற்கொண்டே பல சூழ்ச்சிகள் செய்து வருகின்றனர். ராமர் ஆட்சியில் பிராமணரல்லாத வாலிபன் ஒருவர் வேதம் படித்து தபசு செய்து வந்ததால் பிராமணச் சிறுவன் ஒருவர் இறந்துவிட்டதாகச் சொல்லி அப்பிராமணரல்லாத சிறுவனைக் கொன்ற பின்பு பிராமணச் சிறுவன் பிழைத்துக் கொண்டதாக இராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இத்தகைய மானக் கேடான விஷயங்களைக் கேட்கத்தான் நம் மக்கள் பெரும் பொருள் செலவு செய்கின்றனர். நாம் நமது சுயமரியாதையை காத்துக் கொண்டு நம் மக்களின் அபிவிருத்திக்காக பாடுபடுவோமானால் அது அவர்களுக்கு துவேஷமாகத் தான் இருக்கும். சுயமரியாதையைக் காத்துக் கொள்ளும் விஷயங்களில் பழைய மூட நம்பிக்கைகளில் ஆழ்ந்து கிடக்கும் பெரியவர்கள் சற்று தயங்கியபோதிலும் கூட நமது வாலிபர்கள் தான் ஒரே உறுதியுடன் நிற்க வேண்டும். பெரியவர்களும் அவர்களுக்கு தேவை யான உதவி புரியவேண்டும். சர்க்கார் வரியைவிட பிராமணர்களின் வரி அளவில்லாமலும் கேள்வி முறை இல்லாமலும் பல தலைமுறையாய்ப் போய்க் கொண்டிருக்கின்றது. கோவில்களின் இழிவான நிலைமைகளைச் சீர்திருத்தி அவற்றின் வருமானங்களைக் குறித்தும் செலவுகளைக் குறித்தும் கணக்கு வைக்கச் செய்வதன் பொருட்டு நமது தலைவர் பனகால் அரசர் தேவஸ்தானச் சட்டம் இயற்றியபோது பிராமணர்கள் மதத்திற்கே மோசம் வந்து விட்டதாயும், மத விஷயங்களிலும் சர்க்காரின் ஆதிக்கத்தைப் புகுத்து வதாயும் கூச்சலிட்டனர். கடவுளுக்கு இடும் நாமம் வடகலையென்றும் தென்கலையென்றும் மதம் பிடித்து சச்சரவிட்டுக்கொண்டு அதனைத் தீர்ப்புச் செய்வதற்கு சர்க்காரின் உதவியை நாடி வெள்ளைக்காரர்களின் தீர்மானப்படி செய்வது மாத்திரம் சர்க்கார் தலையிட்டதாக வில்லையா? மற்றும் ஜீயர் கொடி பிடிப்பது முதலானவற்றிலும் சர்க்கார் தலையிட்டு தீர்ப்புச்சொல்ல கேட்க வில்லையா? கணக்கு வைத்தால் தாங்கள் மோசம் செய்வதற்கு இடமில்லையே என்ற ஏக்கத்தால் கூச்சலிடுவதை உலகத்தார் நன்குணர்ந்து கொண்டனர். மேலும் இச்சட்டத்தால் இந்து மதத்திற்கு மோசம் வந்துவிட்டதெனக் கூச்சலிடும் இந்த ஜில்லா பிரதிநிதியான ஆச்சாரியாரும் எந்தத் தொகுதியின் பெயரால் நின்றார். மகமதியரல்லாத தொகுதியின் பெயராலல்லவா? சர்க்காரால் இந்து மதத்திற்கு என்று பிரதிநிதித்துவமளிக்கப்பட்டிருக்கின்றதா? மகமதிய கிறிஸ்துவ மதங்களுக்குப் பிரதிநிதித்துவமிருப்பது போல இந்து மதத்திற்கில்லாததைக் குறித்து இப்புலிகள் இதுவரையில் வாயையாவது திறந்திருக்கின்றனரா எனக்கூறி, முடிவில் மதுரை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அனுசரித்து சுயமரியாதையை நிலைநாட்டி நிர்மாணத் திட்டத்தின் கீழ் செவ்வனே வேலை நடத்தவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

*குறிப்பு: செங்கல்பட்டில் 12.02.1927 இல் தென்னிந்திய நல உரிமைச் சங்க திறப்பு விழாவில் கதர்ச் சாலையைத் திறந்து வைத்து ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 20.02.1927**



RangaRakes tamilnavarasam.com

# மந்திரி சபை

தற்கால மந்திரி கட்சி அரசியல் ரீதியில் ஒன்றும் பயனுள்ளதாய் இல்லா விட்டாலும் செய்யவும் முடியாது என்பதாகவே வைத்துக் கொண்டாலும், சமூக சம்மந்தமாகவாவது ஏதாவது பிரயோஜனமுண்டா என்பதாக பார்த்தால் அதிலும் பார்ப்பனரல்லாதாருக்கு நமக்கு ஒரு பிரயோஜனமில்லாததோடு எதிர்க்கட்சியார் சொல்லுகிறபடி அதாவது ஸ்ரீமான் சுப்பராயன், சி. இராஜ கோபாலாச்சாரியாரும், எஸ். சீனிவாசய்யங்காரும் சொல்லுகிறபடியும், ஸ்ரீமான் ஏ. ரங்கநாத முதலியார், சர்.சி.பி. இராமசாமி அய்யரும், பெசண்டம் மையும் சொல்லுகிறபடியும், ஸ்ரீமான் ஆரோக்கியசாமி முதலியார், சர்க்காரும் மற்றும் மேற்கண்ட ஆசாமிகளும் சொல்லுகிறபடியும் ஆடுகிறவர்களேயல் லாமல் வேறென்ன? எத்தனைக்கெத்தனை இந்த மந்திரிகளை நிலைக்க வைத்திருக்கிறோமோ அத்தனைக்கத்தனை பார்ப்பன ஆதிக்கத்தைப் பலப்படுத்திக்கொள்ளவும் நமது பார்ப்பனரல்லாதார் இதுவரை செய்து கொண்டிருந்ததையும் கெடுத்துக்கொள்ளவுமே உதவுமேயல்லாமல் மற்றபடி யாதொரு நன்மையும் உண்டாகாது. இம் மாதிரியாகப் பார்ப்பனர்கள் சொற்படி ஆடும் மந்திரிகளை வைத்துக் கொண்டிருப்பது பார்ப்பனரல்லாத சமூகத் திற்கே பெரிய அவமானமாகும். அதுமாத்திரமல்லாமல் 47 அங்கத்தினரைக் கொண்டதாக உள்ள ஒரு கட்சியானது தேசத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு சட்டசபையிலிருந்துகொண்டு 15 பேரைக் கொண்ட கட்சியானது மந்திரிசபை அமைத்து வாழ்ந்துவர விட்டுக் கொண்டிருப்பது புரட்டா அல்லவா? அரசியல் கொள்கைப்படி பார்த்தால் சுயராஜ்யக் கட்சிக்கு கொஞ்ச மாவது மானம், வெட்கம், யோக்கியப் பொறுப்பு இருந்திருக்குமானால் இம் மந்திரிசபை அரை நாழிகை கூட நிலைத்திருக்க முடியவே முடியாது. அவர் கள் தங்கள் சுயநலத்திற்காக திருட்டுத்தனமாகவும், அயோக்கியத்தனமாகவும் உதவி செய்து வருவதாக வைத்துக்கொண்டாலும் என்ன கொள்கையின் பேரில் ஜஸ்டிஸ் கட்சி வாய் மூடிக்கொண்டிருக்கிறது என்பது நமக்கு விளங்க வில்லை. மதுரை மகாநாட்டில் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் விளம்பரம் செய்தபடி ஏன் இன்னமும் மந்திரி கட்சியை உடைக்கப் பிரயத்தனப்பட வில்லை? ஒரு சமயம் காங்கிரசில் சுயராஜ்யக் கட்சி பிரமுகர்களில் ஒருவ ரான ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் இந்த மந்திரி கட்சியை உடைப்பதாய்ச் சொல்லியபடி உடைத்து விடுவார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம் என்பதாக சொல்லவருவார்களேயானாலும் அது கொஞ்சமும் ஒப்புக் கொள்ளக்கூடிய



சமாதானமல்ல. ஏனெனில் சுயராஜ்ஜியக் கட்சியார் நாணயமுள்ளவர்கள் அல்ல என்பதும், சொல்லுகிறபடி நடக்கும் வழக்கமில்லாதவர்கள் என்பதும் உலகமறிந்த விஷயம். அப்படியிருக்க அவர்களை எதிர்ப்பார்ப்பதாகச் சொல்லுவது சரியான சமாதானம் ஆகாது. தவிரவும், சுயராஜ்ஜியக் கட்சியார் தான் இரட்டை ஆட்சியை ஒழிப்பதாய் சொல்லுகிறவர்கள், முட்டுக் கட்டை போடுகிறவர்கள், உடைப்பதாய் சொல்லி ஓட்டுப் பெற்றவர்கள். ஆதலால் அவர்கள்தான் உடைக்கக் கட்டுப்பட்டவர்கள். நாங்கள் இரட்டை ஆட்சியை நடத்தி வைத்து மேற்கொண்டு சில திருத்தம் கேட்கிறவர்கள் என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்த்தால் அதுவும் ஒப்புக் கொள்ளக்கூடிய சமாதா னமல்ல. எப்படி யென்றால், ஜஸ்டிஸ் கட்சியார் அரசாங்கத்தையே எதிர்ப்ப தாகச் சொன்னவர்கள் மந்திரியை ஆதரிப்பது என்பது யோக்கியமான காரியமாகாது. அல்லாமலும் சுயராஜ்ஜியக் கட்சியார் ஜனங்களை ஏமாற்றி ஓட்டுப்பெற இப்படிச் சொன்னார்களே தவிர உண்மையாய் சொன்னவர்கள் அல்ல என்பது ஜஸ்டிஸ் கட்சியாருக்கே தெரியும். ஆதலால் அந்தச் சமாதானமும் சரியாகாது. தவிர, ஸ்ரீமான் சி.பி. ராமசாமி அய்யர் பம்பாயில் பேசிய போது ஜஸ்டிஸ் கட்சியார் வந்துவிடுவார்களே எனப் பயந்து இந்த மந்திரி சபைக்கு தேசத்தில் ஆதரவில்லாவிட்டாலும் நாங்கள் ஆதரிக் கிறோம் என்று சொன்ன பிறகு ஜஸ்டிஸ் கட்சியார் இம் மந்திரிசபையை வைத்துக் கொண்டிருப்பது பெரிய அரசியல் வெட்கக் கேடென்றே சொல்லு வோம். இம்மந்திரி சபையை உடைத்தெரியச் செய்யும் முயற்சியில் ஜஸ்டிஸ் கட்சியார் வெற்றிபெற்றாலும் பெறாவிட்டாலும் தமது கடமையைச் செய்துவிட்டதோடு சுயராஜ்ஜியக் கட்சியின் யோக்கியதையையும் வெளிக்கு காட்ட ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கினவர்கள் ஆவார்கள்.

ஆனால், ஜஸ்டிஸ் கட்சியார் இம்முயற்சியில் பிரவேசிக்கும் போது ஒரு விஷயத்தை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது சுயேச்சைக் கட்சி என்ற இந்த மந்திரிசபை உடைபட்டு விட்டால் பிறகு எந்தக் காரணத்தைக் கொண்டும் தாங்கள் இந்தத் தேர்தலில் ஏற்பட்ட சபையில் மந்திரி பதவியை ஒப்புக் கொள்வதில்லை என்ற பிரதிக்கினை செய்து கொள்ள வேண்டும். சுயராஜ்ஜியக் கட்சித் தலையிலேயே இதைக் கட்டி அடித்து அவர்கள் யோக்கியதையும் பார்த்துவிடவேண்டும். அவர்கள் போதுமான மெஜாரிட்டியாய் இருப்பதாகச் சொல்லிக்கொண்டும் மந்திரி பதவியை ஏற்க தைரியமில்லாமல் பயங்கொள்ளிகளாயிருப்பார்களானால் சர்க்காரே எடுத்துக் கொண்டு நடத்தட்டும் அல்லது சட்டசபையைக் கலைக்கட்டும் என்கிற எண்ணத்தோடு இருக்க வேண்டுமே அல்லாமல் சர்க்கார் தயவாலோ அல்லது மற்ற கட்சியார் தயவாலோ நடத்தக்கூடிய மந்திரி பதவியை ஒப்புக்கொள்ளக் கொஞ்சமாவது ஆசை வைப்பது சுயமரியாதை உள்ள எந்தக் கட்சிக்கும் யோக்கியமாகாது என்பதை வற்புறுத்துகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 27.02.1927**



RangaRakes tamilnavarasam.com

# சுயமரியாதைப் பிரசாரம்

கனவான்களே!

இந்த இடங்களில் இதற்கு முன் அநேக தடவைகளில் வந்து பேசியிருக்கின்றேன். அப்போது வந்த சமயங்களில் நான் எதைப்பற்றி பேசினேனோ அதே விஷயங்களைப்பற்றித்தான் இப்போதும் பேச வந்திருக்கின்றேன். ஆனால் அந்தக் காலங்களில் எனது பிரசங்கத்தைக் கேட்க வந்த ஜனங்களை விடவும் உற்சாகத்தைவிடவும் இப்போது எத்தனையோ மடங்கு அதிகமான ஜனங்களும் உற்சாகங்களும் காணப்படுவது எனக்கே ஆச்சரியமாய் இருக்கிறது. ஒரு சமயம் எனது கொள்கைகள் ஏதாவது மாற்றமடைந்துவிட்டதா என்பதாக நானே யோசித்துப் பார்ப்பதுண்டு. எவ்வளவு யோசித்தாலும் எனது பழைய கொள்கைகளிலிருந்து ஒரு சிறிதும் மாற்றிக் கொண்டதாக எனது மனச்சாக்ஷி சொல்லுவதே இல்லை.

மகாத்மா காங்கிரஸ் காலத்திலும், அதற்கு முன் நான் தனியே அபிப்பிராயம் கொண்டிருந்த சமயத்திலும் எந்தக் கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்தேனோ அவற்றில் ஒரு சிறிதும் மாற்ற மேற்பட்டதாக எனக்குத் தோன்றுவதே இல்லை. அதாவது மகாத்மாவின் ஒத்துழையாமை காங்கிரசுக்கு முன்னால் பார்ப்பனரல்லாதார் அரசியல் உரிமைகளுக்கும் சமூக உரிமைகளுக்குமாக காங்கிரஸ் சார்பாக ஏற்பட்டிருந்த சென்னை மாகாணச் சங்கம் என்னும் பார்ப்பனரல்லாதார் மக்களுக்காக மாத்திரம் ஏற்பட்டிருந்த சங்கத்தில் நானும் ஒரு முக்கியஸ்தனாக இருந்த காலத்தில் எனது கொள்கையும் அச்சங்கக் கொள்கையுமான வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திலும் மகாத்மா காங்கிரசில் நான் இருந்தபோது காங்கிரஸ் கொள்கையாகவும் எனது கொள்கையாகவும் இருந்த நிர்மாணத் திட்டம் அதாவது கதர், தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு ஆகிய கொள்கைகளிலும் ஒரு சிறிதும் மாறுபடாததோடு அவைகள் அப்பொழுதைவிட இன்னமும் பலமாக என் மனதில் பதிந்து கிடக்கின்றன. வகுப்புவாரி உரிமை இல்லாமல் நமது நாட்டிலுள்ள வகுப்புகள் ஒற்றுமைப்படாது என்பதும், நிர்மாணத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதல்லாமல் வேறொன்றும் சுயராஜ்யமடைய மார்க்கமல்ல என்பதும் எனது சரீரத்திலும், ரத்தத்திலும், மயிர்க்கால்களிலும் இரண்டறக் கலந்து ஊறிவிட்டதோடு இவ்விரண்டையும் பெறுவதன் முன்னம் மக்கள் சுயமரியாதை



அடைய வேண்டும் என்பதும் சித்திரவதை செய்தாலும் மாற முடியாதபடி பதிந்து ஊறிக் கிடக்கின்றது. ஆனால் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப் பற்றி என்னுடன் கூட அக்காலத்தில் ஒத்துழைத்த தலைவர்கள் என்போர் அரசியல் தந்திரம் என்னும் பேரால் சுயநலத்தைக் கொண்டோ பிற நலத்தைக் கொண்டோ குட்டிக் கரணங்கள் போட்டுக் கொண்டிருந்தாலும், எந்தக் காரணத்தை முன்னிட்டும் எனக்கு அதில் ஒரு சிறிதும் மாற்றமேற்படவில்லை. அதுபோலவே நிர்மாணத் திட்டங்களைப் பற்றியும் மகாத்மா காந்தி காங்கிரஸ் காலத்தில் என்னுடன் ஒத்துழைத்த தலைவர்களும் காங்கிரசு சபை என்பதும் சுயநலத்தை உத்தேசித்தோ சுயநலப்பட்டவர்கள் காங்கிரசை சுவாதீனப்படுத்திக்கொண்டு மகாத்மாவை வெளியேறச் செய்ததினாலோ முறையே மாறுபட்ட அபிப்பிராயங் கொண்டு விட்டாலும் காங்கிரசின் ஆதிக்கத்திலிருந்து இத்திட்டங்கள் மாறுபாடு அடைந்து விட்டாலும் கூட அதின் தத்துவங்களும், அவசியங்களும், எனது மனதிலும், வாக்கிலும், செய்கையிலும் ஒரு சிறிதும் மாறுபட மாட்டேன் என்கின்றன. ஆனால் சென்னை மாகாண சங்கத்தின் மூலம் செய்துவந்த வகுப்புவாரி உரிமை பெறும் தொண்டும் காங்கிரஸின் மூலம் செய்து வந்த நிர்மாணத் திட்டப் பிரசாரத்தொண்டும் இப்போது எந்த சமூகத்தாருக்கு அது முக்கியமாயும் உண்மையாயும் அது யாருக்கு ஏற்பட வேண்டுமோ அந்த சமூகத்தார் சங்க மூலமாக நிறைவேற்ற வந்திருக்கின்றேன். இதுதான் வித்தியாசம் என்று சொன்னால் சொல்லலாம். ஆனால் இச்சங்கத்தின் மூலம்தான் இவற்றை உண்மையாய் நிறைவேற்றி வைக்க முடியுமேயல்லாமல் இக்கொள்கைகளுக்கு பிறவி எதிரிகளாகிய பார்ப்பனர்கள் அவர்கள் சம்மந்தப்பட்டதும் அவர்கள் ஆதிக்கத்திலிருப்பதும் அவர்கள் சுயநலத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டதான சென்னை மாகாணச் சங்கத்தின் மூலமாகவோ காங்கிரசின் மூலமாகவோ நிறைவேற்றப் பாடுபட்டதைப்போல முட்டாள்தனமான காரியம் வேறில்லை என்பதை நான் இப்போது நன்றாய் உணர்ந்தேன். நான் மாத்திரமல்லாமல் மகாத்மா காந்தியும் உணர்ந்து தனியே இவற்றை நடத்தி வைக்கப் பாடுபட்டு வருகிறதையும் நீங்கள் பார்க்கிறீர்கள் அல்லவா? உதாரணமாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு பார்ப்பனர்கள் சம்மதிப்பார்களா? 100-க்கு மூன்று பேராயுள்ள சமூகத்தார் 100-க்கு 97 பங்கு உத்தியோகத்தையும் அரசியல் சுதந்திரங்களையும் அனுபவித்துக்கொண்டு 100 -க்கு 97 பேர்களாய் உள்ள நமக்கு 100க்கு மூன்று பங்கு வீதம் அதுவும் பிச்சைக் கொடுப்பது போல் கொடுத்து மீதியை ஏகபோகமாய் அனுபவித்துக்கொண்டு நம்மை அடக்கி ஆண்டு கொண்டிருப்பவர்கள் 100-க்கு 3 போக, பாக்கி 100-க்கு 97 இழக்கும் படியான வகுப்புவாரி உரிமையை ஒப்புக்கொள்ளுவார்களா? என்பதை யோசித்துப் பாருங்கள். அதுபோலவே நிர்மாணத் திட்டம் என்பதையும் பார்ப்பனர்களின் ஆதிக்கத்திலிருக்கும் இயக்கங்களே ஒப்புக்கொள்ள முடியுமா என்பதையும் யோசியுங்கள்.



RangaRakes tamilnavarasam.com

கதரினால் பார்ப்பனர்களுக்கு ஏதாவது லாபமுண்டா? அவர்கள் பெண்டு பிள்ளைகள் கூலியில்லாமலும் வயிற்றுக்கு ஆகாரமில்லாமலும் எங்காவது பாடுபடுகிறார்களா? அல்லது கதர் நிறைவேற்றப்படுவதால் அவர் களுக்கு ஒரு காசாவது ஆதாயமுண்டா? வேஷத்திற்கும் இத்திட்டம் நிறை வேற்றுவது என்கிற பேரால் நம்மை ஏமாற்றி நம்மிடம் பொருள் பறிக்கவும் ஓட்டுப் பெறவும் அந்தப் பேரைச் சொல்லிக்கொண்டு சில பார்ப்பனர்கள் நம்மை ஏமாற்றி வயிறு வளர்க்கவும் ஓட்டுப் பெறவுமே அல்லாமல் வேறு எதற்கு அவர்கள் பாடுபட அவசியமிருக்கிறது. அதுபோலவே தீண்டாமை விஷயத்திலும் பார்ப்பனர்களுக்கு ஏதாவது அக்கரை உண்டா? அவர்கள் நம் எல்லோரையும் தீண்டாதவர்கள், தாழ்ந்தவர்கள், இழிந்தவர்கள் தங்களது வைப்பாட்டி மக்கள் என்று சொல்லிக் கொண்டு ஆதிக்கம் செலுத்தி வாழுகிற வர்கள். நம்முடன் சமமானவர்கள் என்று சொல்லிக்கொள்ள சம்மதிப்பார் களா? தீண்டாமை ஒழிந்தால் இந்த நாட்டில் பார்ப்பனர்கள், பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ள இடமுண்டா? ஆதலால், அவர்களோ அவர்கள் ஆதிக்கத்தில் உள்ள சங்கங்களோ இதை நிறைவேற்றி வைக்க சம்மதிக்கும் என்று நினைப்பதைப் போன்ற பெரிய இளிச்சவாய்தனமான காரியம் வேறில்லை. ஏதோ சில பார்ப்பனர் தீண்டாமை ஒழிப்பதில் வெகு அக்கரை உள்ளவர்கள் போல் காட்டிக்கொண்டாலும், ‘பறையர்’, ‘சக்கிலியர்’, ‘நாயக்கர்’, ‘நாடார்’ என்று சொல்லப்படுகிறவர்கள் வீட்டில் சாப்பிட்டாலும் தீண்டாமை ஒழியவும் மக்கள் பிறவியில் வித்தியாசமில்லை என்று சொல்லவும் செய்யப்பட்ட தீர்மானங்களை எதிர்த்து ராஜினாமா கொடுத்து விட்டு ஓடி விட்டார்கள் என்பது பொய்யல்ல. அதுபோலவே மதுவிலக்கு செய்ய வேண்டிய அவசியமும் நமது பார்ப்பனருக்கு எப்படி ஏற்படும்? பார்ப்பனர்களா மதுவருந்திக் கெடுகிறார்கள்? அவர்களிலும் சிலர் மது வருந்துவதாக வைத்துக்கொண்டாலும் அது அவர்கள் குடும்பம் கெடும் மாதிரியோ ஒழுக்கம் கெடும் மாதிரியோ இல்லை. அவர்கள் மதுவருந்தி னாலும் லாபமடைகிறார்கள் என்றே சொல்லவேண்டும். அதனால் சமூகச் சீர்திருத்தக்காரார்கள் என்கிற பேரும் பெற்று பெரிய துரைகள் சிநேகமும் பெற்று பணமும், பதவியும், உத்தியோகமும் சம்பாதிக்க வழி செய்து கொள்ளு கிறார்களே அல்லாமல் நம்மைப்போல் ‘குடிகாரர்கள்’ ஆவதில்லை. உண்மை யாய் பார்ப்பனரல்லாதாராகிய நம் சமூகத்தில் அடியோடு குடி எடுபட்டுப் போகுமானால் பார்ப்பனர்கள் உத்தியோகத்தின் மூலமாகவும் வக்கீல் உத்தியோகத்தின் மூலமாகவும் இப்போதைப்போல் பிழைக்க முடியுமா? குடி நின்று விட்டால் பார்ப்பன உத்தியோகத்தில் பகுதி எடுபட்டுப்போகாதா? பார்ப்பன வக்கீல் போர்டுகள் எல்லாம் காபி ஓட்டல் போர்டுகளாகவும், பஞ்சாங்க போர்டுகளாகவும், பிச்சை எடுக்கும் தொழில் போர்டுகளாகவும் ஆகிவிடவேண்டாமா? ஆதலால் அவர்கள் மதுவிலக்குக்கு அனுகூலமாய் இருப்பார்கள் என்பது ஓநாய் ஆட்டுக்கு வைத்தியம் செய்வது போல்தான் இருக்கும். ஏதோ சில பார்ப்பனர் மதுவிலக்குக்குப் பாடுபடுவதாய்ச்



சொல்லுவது நம்மை ஏமாற்றவே அல்லாமல் வேறென்ன? உதாரணமாக ஒரு ஒத்துழையாமைப் பார்ப்பனர் ஒரு கள்ளு உற்பத்தி செய்து பணம் சம்பாதிக் கும் பார்ப்பனருக்கு மதுவிலக்குப் பேரால் ஓட்டு வாங்கிக் கொடுக்க வில்லையா? தவிர சுயராஜ்யக் கட்சியார் மது விலக்கு செய்ய ஒப்புக்கொண் டார்கள்; அவர்களுக்கு ஓட்டுக் கொடுங்களென்று குறள் எழுதவில்லையா? இப்பொழுது அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது அந்த ‘ஒத்துழை யாமை’ பார்ப்பனருக்குத் தெரியவில்லையா? ஆகவே, பார்ப்பனர்களோ பார்ப்பன ஆதிக்கமுள்ள சங்கமோ மதுவிலக்குச் செய்யும் என்று எண்ணுவ தைப் போன்ற ஏமாந்த தன்மை வேறில்லை.

ஆதலால்தான் அவர்கள் சம்பந்தமும் ஆதிக்கமும் உள்ள சங்கங் களை விட்டுவிட்டு உண்மையாய் அவசியமுள்ள சங்கத்திற்கு வந்து பிரசங் கம் செய்ய வந்திருக்கின்றேன். அதைவிட பலமடங்கு ஜனங்கள் இங்கு வந்திருப்பதின் மூலமும் நீங்கள் காட்டும் உணர்ச்சியின் மூலமும் உங்கள் கடமைகளை அறிந்திருக்கிறீர்கள் என்பதை உணருகிறேன். அதுவும் சென்ற மதுரை மகாநாட்டில் இத் தீர்மானங்களை ஏகமனதாய் ஒப்புக்கொண்டதி லிருந்தும் அதற்குப் பிறகு நாட்டில் எங்கு பார்த்தாலும் கதர் விருத்தியும் சுயமரியாதையில் கவலை கொண்டு அதற்கு பூர்வாங்கமான வேலையும் நடந்து வருவதைப் பார்க்கும் போது எனக்கு ஏற்படும் மனத் திருப்தியும் ஆனந்தமும் அளவிடக் கூடவில்லை. இவ்விஷயங்களை நடத்துவிப்ப தற்காகவே ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டிருந்தாலும் அது அரசியலில் செலவழித்த காலத்தை இதில் செலவழித்ததாக சொல்ல முடியவில்லை. ஜஸ்டிஸ் கட்சி யார் இத்திட்டங்களை நிறைவேற்றவும் நிறைவேற்றுகையில் இத்திட்டங் களின் எதிரிகளால் ஏற்படும் கொடுமைகளிலிருந்து தப்பவும் சிறு சிறு அரசியல் சுதந்திரங்களைப் பெறலாம் என்று நினைத்து அதில் கருத்தைச் செலுத்த ஆரம்பித்ததும் ஏற்கனவே அரசியல் சுதந்திரத்தை ஏகபோகமாய்க் கைப்பற்றிக் கொண்டிருந்த கூட்டத்தார் தங்களுக்கு ஆபத்து வந்து விட்ட தாகக் கருதி ஒன்று சேர்ந்துகொண்டு பல வழிகளின் மூலமாகவும் இக் கட்சியாருக்கு செய்துகொண்டு வந்த தொந்திரவுகளும், உபத்திரவங்களும், சூழ்ச்சிகளும், கொடுமைகளும் தாங்க முடியாததானதோடு இக்கூட்டத்தா ருடன் சமாளிக்கும் வேலைக்கே தங்கள் காலம் முழுவதும் செலவழிக்க ஏற்பட்டு விட்டதாலும் அதிகமாக உத்தேசித்த காரியங்களை நிறைவேற்ற முடியாமல் போயிற்று. ஆனாலும், நமது மக்கள் எவ் வழியிலும் மற்றொரு சமூகத்தாருக்கு தாழ்ந்தவர் அல்ல என்பதையும் பங்கா இழுத்தல், செடிக்கு தண்ணீர் ஊற்றல், தபால் ஆபீசுக்குப் போதல், வீதி கூட்டுதல், குழந்தை குட்டிகளை தூக்கிக் கொண்டு திரிந்து மார்க்கெட்டுக்குப் போய் காய்கறி வாங்குதல், ஜட்கா வண்டி ஓட்டுதல் முதலிய வேலைகள் அல்லாமல் வேறு வேலைக்கு லாயக்கில்லை என்று மற்ற நாட்டாரும் அரசாங்கத்தாரும் நினைக் கும் படி நமது பார்ப்பனர்கள் செய்து வைத்திருந்த மீளாத இழிவிலிருந்து



RangaRakes
tamilnavarasam.com

தப்பிக் கரையேறி அவர்களின் உண்மையான யோக்கியதைகளாகிய அரசாங்க நிர்வாகம் நடத்துதல் முதல் எல்லா உயர்ந்த பதவிகளையும் வகிக்கத் தகுந்தவர்கள் என்பதை நிலை நிறுத்தி உயர்தர நீதிமன்றம், மந்திரி பதவி முதலிய எல்லா ஸ்தானங்களிலும் நம்மவர்களையும் அமரச் செய்து மற்றெல்லோரையும் விட எவ்விதத்திலும் குறைவானவர்கள் அல்ல என்பதையும் உலகத்திற்கு மெய்ப்பித்து நம்மிலும் பலரை அந்த ஸ்தானங்களி லும் இருத்தி ஒரு வகையான சுயமரியாதையை உண்டாக்கி இருப்பதோடு நமது எதிரிகள் பிச்சைக்கு லாயக்குடையவர்கள் என்பதையும் உலகமறியச் செய்துவிட்டார்கள் என்றாலும் பாமர மக்களிடம் செய்ய வேண்டிய வேலை எவ்வளவோ அவ்வளவும் செய்தார்கள் என்று சொல்ல முடியாது. ஆதலால், அதை நிறைவேற்றவே இப்போது இக்கட்சியாருக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத் திருக்கின்றது. அதுவும் இரண்டு விதத்தில் என்றே சொல்லலாம். அதாவது (1) இக்கட்சியார் பதவியில் இருந்த காலத்தில் இவர்கள் பேரில் பலவித பழிகளை சுமத்தியும், பார்ப்பனரல்லாதாரிலும் சில ஆகாசங்களைப் பிடித்து கூலியும் விலையுங் கொடுத்து இழி மொழிகளால் பழி சுமத்தியும் பாமர ஜனங் களை ஏமாற்றிய அயோக்கியத் தனமானது வெளியாகவும், அரசியலிலும் நமது எதிரிகள் கூட்டத்தாரே பதவியும், ஆதிக்கமும் பெறத் தகுந்த நிலைமையை அடைந்திருப்பதன் மூலம் தாங்கள் இக்கட்சியாரைவிட என்ன சாதிக்க யோக்கியதை உள்ளவர்கள் என்பதை ஜனங்கள் அறிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதும் (2) தேர்தல் மூலம் ஜஸ்டிஸ் கட்சியார் பாமர மக்களிடம் இறங்கி வேலை செய்ய தாராளமான சௌகரியமும் மற்றொரு விதத்திலும் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சமயத்தைக் கைவிடாமல் பார்ப்பன ரல்லாத மக்கள் ஒன்று சேர்ந்து இதை உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்காக பிரசாரம் செய்வதற்குப் பத்திரிகைகளும் அவைகளை ஆதரிக்க உங்களுடைய ஆதரவுகளும் வேண்டும். நமது பாமர மக்களின் மனம் பெரும்பாலும் விஷத்தன்மை யானதற்குக் காரணம் நமது எதிரிகளின் பத்திரிகைகளும் அவர்கள் தயவில் நடக்கும் நம்மவர்கள் பத்திரிகைகளும் அவர்களிடம் கூலி பெற்று நம்மவர்கள் செய்த பிரசாரங்களுமே தவிற வேறில்லை. ஆதலால் அதை நாம் வெல்ல வேண்டுமானால் உறுதியும், தைரியமும், உண்மையுள்ள பத்திரிகைகளும், பிரசாரகர்களும் நமக்கு வேண்டும். அவைகள் இல்லாமல் நாம் எவ்வளவு யோக்கியமாய் நடந்தாலும் உண்மையான கொள்கைகளை வைத்துக் கொண்டிருந்தாலும் பிரயோஜனப் படாது. மகாத்மாவை ஜனங்கள் அறியவும், அவரது கொள்கையை மக்களிடம் பரப்பவும், ஒரு கோடி ரூபாய் இருந்தாலும் 20,000 "யங் இந்தியா" பிரதிகளும் 30,000 "நவஜீவன்" பிரதிகளும் உலவியதாலும் தானே ஒழிய வேறில்லை. இப்பொழுது மறுபடியும் ஒரு கோடி ரூபாய் கிடைக்குமானால் மறுபடியும் மகாத்மா காங்கிரசைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தி தனது கொள்கைகளைப் பரப்பக் கூடும். ஆதலால் பணமும், பத்திரிகையும் இல்லாமல் ஒரு காரியமும் செய்ய முடியாது. நம்மில் எத்தனை பேர்



லட்சாதிபதிகள், பத்து லட்சாதிபதிகள், கோடீஸ்வரர்கள் இருக்கிறார்கள்! ஆனாலும் அவர்கள் இந்த முக்கியமான விஷயங்களைக் கவனிப்பதில்லை. இவ்வளவு கோடி செல்வவான்களாயிருந்தாலும் அரசியலில் ஒரு சிறு ரெவனியூ இன்ஸ்பெக்டரைக் கண்டால் நடுங்க வேண்டியவர்களாகத்தானே இருக்கிறார்கள். சமூக இயலில் ஒரு தூது பார்ப்பானைக் கண்டால் சுவாமி என்று கூப்பிடவும், கையெடுக்கவும் யோக்கியதை உள்ளவர்களாகத்தானே இருக்கிறார்கள். இந்நாட்டுச் செல்வவான்கள் லட்சுமி புத்திரர்களென்று ஆணவமாய் நினைத்துக்கொண்டிருக்கும் பைத்தியக்கார பிரபுக்களுக்கு இது படுகிறதா? தாங்கள் தேடி வைக்கும் பொருள்கள் தங்கள் பின் சந்ததியர் களுக்கு உதவுமென்றாவது வைத்துக் காப்பாற்றுவார்களென்றாவது நினைக்க என்ன உறுதி இருக்கிறது. அப்படியே இன்னமும் 10 லட்சமும் பல பங்களாக் களும், ஜமீன்களும், உத்தியோகங்களும் சேர்த்து வைத்தாலும் அவர்கள் ஒரு சிறு பிச்சைக்கார பார்ப்பனப் பையனால் தன்னை விடத் தாழ்ந்தவன் என்று நினைக்க கூடியவர்கள் தானே.

இங்கே இருக்கும் ஸ்ரீமான் பனகால் ராஜா அவர்கள் எத்தனை தலை முறைகளாக ராஜ வம்சத்தைச் சேர்ந்தவரானாலும், எவ்வளவு சமஸ்கிருத பாண்டியத்தியமுடையவரானாலும் இன்னும் எவ்வளவு பெரிய பூணூல் போட்டிருந்தாலும், எவ்வளவு பெரிய பரம்பரை ராஜா பட்டம் பெற்றிருந் தாலும், இன்னும் 94 வருடங்களுக்கு மந்திரி பதவி வகித்தாலும் அவரும் "சூத்திரன்"; பார்ப்பனர்களின் வைப்பாட்டி மகன்; அடிமை; வேதம் படிக்கக் கூடாதவர்; சுவாமி அருகில் போய் சுவாமியைத் தொடக்கூடாதவர்; ஒரு இழிவான பார்ப்பனன் பக்கத்தில் கூட உட்கார்ந்து சாப்பிடக்கூடாதவர் என்று சொல்லப்படுவதை நன்றாய் உணருங்கள். இவ்வூரிலுள்ள பிரபுவான ஸ்ரீமான் தளவாய் முதலியார் அவர்கள் இன்னும் வருஷத்தில் 2,3 லட்சம் ரூபாய் அதிக மான வரும்படி வந்தாலும் இன்னும் 10 அரண்மனை, மாட மாளிகை, கூட கோபுரமிருந்தாலும் இன்னும் அநேக கோவில்கள் கட்டி கட்டளைகள் நடத்தி னாலும், அவர்களும் அவர்கள் பிள்ளை குட்டிகளும் சூத்திரர்களென்று தான் கருதப்படுகிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். இது ஒழிக்க வேண்டுமா? அல்லது இன்னும் மந்திரி உத்தியோகமும் வேண்டுமா? என்று தான் உங்க ளைக் கேட்கிறேன். ஆகையால் சகோதரர்களே! நமது பார்ப்பனர்கள் பதினா யிரக்கணக்கான வருஷங்களாக நம் தலையில் வைக்கப்பட்ட இழிவானது வெகு சுலபத்தில் வெகு சீக்கிரத்தில் மாறக்கூடிய காலம் வந்திருக்கின்றது. இதை இழந்துவிடாதீர்கள். இதுசமயம் தவறினால் பின்னால் விமோசனம் இல்லையென்றே சொல்வேன். நமது உணர்ச்சியை இதுசமயம் உலகம் ஒப்புக் கொண்டு விட்டது. பார்ப்பனர்களும் இதுவரை தங்கள் சூழ்ச்சியின் பெயரால் ஆணவம் அடைந்திருந்தவர்கள் இப்போது வெட்கப்படுகிறார்கள். நல்ல சமயத்தைக் கைவிட்டு விடாதீர்கள். பணங்கொடுக்கக் கூடியவர்கள் பணங் கொடுங்கள்! பத்திரிகை வாங்கிப் படிக்கக் கூடியவர்கள் வாங்கிப் படியுங்கள்;



RangaRakes tamilnavarasam.com

ஒன்றும் உதவ முடியாதவர்கள் பார்ப்பனர்களின் காலில் விழாதீர்கள்; அவன் காலைக் கழுவி தண்ணீர் சாப்பிடாதீர்கள்; அவனுக்குப் பணங் கொடுத்து விழுந்து கும்பிட்டால் உங்கள் பெற்றோர்களுக்கும் உங்களுக்கும் உங்கள் பிள்ளை குட்டிகளுக்கும் மோட்சம் உண்டு என்று நினைக்கும் முட்டாள் தனத்தை ஒழியுங்கள். பார்ப்பனர் மூலம்தான் சுவாமியை தரிசிக்க வேண்டும், அவன்தான் தரிசனை காட்ட வேண்டும், அவனைத்தான் தரகனாக்க வேண்டும் என்கிற அறியாமையையாவது விலக்குங்கள். சுயமரியாதை இல்லாத சுயராஜ்யம் காதொடிந்த ஊசிக்கும் சமானமாகாது - மனிதரின் பிறப்புரிமை சுயமரியாதை ! சுயமரியாதை !! சுயமரியாதை !!! என்பதை உணருங்கள்.

*குறிப்பு: 22.2.1927 இல் திருநெல்வேலி, பாளையங்கோட்டை முதலிய இடங்களில் ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 27.02.1927**



# வேண்டுகோள்

## "திராவிடன்"

சென்னையில் தென்னிந்திய மகாஜன சங்கம் லிமிடெட் கம்பெனி யாரால் பார்ப்பனரல்லாத மக்களின் முன்னேற்றத்திற்கு என்பதாக "ஜஸ்டிஸ்", "திராவிடன்" என்கிற இரு தினசரி பத்திரிகைகள் முறையே இங்கிலீசிலும் தமிழிலுமாக நடந்து வருகின்றன. அவைகள் ஜஸ்டிஸ் கட்சியானது அரசியல் அதிகாரத்தில் இருந்த காலமாகிய சென்ற ஆறு வருஷ காலமாக மந்திரிகளின் ஆயிரக்கணக்கான ரூபாய் நன்கொடைகளினாலும் அக்கட்சிப் பிரமுகர்களின் நன்கொடையாலும் நடைபெற்று வந்தன. இப்போது அக்கட்சி அதிகாரமும், ஆரவாரமும் அக்கட்சியார் பாமர மக்கள் இடையில் தங்களது கொள்கைகளைச் சரியாகப் பரப்பாததாலும் பாமர மக்களிடம் அளவுக்கு மீறின நம்பிக்கையால் சரியான பிரசாரம் செய்யாமல் அலட்சியமாக இருந்து விட்டதாலும் அவர்களின் எதிர்கட்சியராகிய பார்ப்பனர்கள் தங்களுக்கு அனுகூலமாய் இக்குறைகளை உபயோகித்துக்கொண்டு காங்கிரஸ், சுயராஜ்யம் என்னும் பல பாமர மக்கள் ஆசையால் ஏமாறத்தக்க பெயர்களால் விஷமப் பிரசாரம் செய்ததின் பலனாலும், அதிகாரப் பதவி இழக்க நேரிட்டதால் இப்பத்திரிகைகள் கஷ்டத்திலிருக்கின்றன. ஆனபோதிலும், இக்கட்சியார் இப்போது பார்ப்பனரல்லாதார் சமூகத்தின் முற்போக்குக்கு அவசியமானதும் உண்மையானதுமான காரியங்களைச் செய்ய நல்ல சமயமும் சாவகாசமும் பெற்றிருக்கிறார்கள். அதோடு கூடவே மகாத்மாவின் நிர்மாணத் திட்டத்தின் அவசியத்தையும், மேன்மையையும் அதனால்தான் பார்ப்பனரல்லாத மக்கள் முன்னேறக் கூடும் என்கிற ரகசியத்தையும் மனப்பூர்வமாய் முன்னிலும் அதிகமாய் உணர்ந்தும் இருக்கிறார்கள். இந்நிலையில் இப்போது செய்ய வேண்டிய வேலை பிரசாரமும் நிர்மாணத் திட்டம் நிறைவேற்றுதலுமே ஆகும். இக்காரியங்களுக்கு பத்திரிகைகள் அவசியம் என்பது நாம் சொல்லாமலே விளங்கும். ஆகவே பார்ப்பனரல்லாதார் கைவசம் இது சமயம் மிகக் கஷ்டத்திலிருக்கும் தினசரி பத்திரிகைகள் முன் சொன்ன "ஜஸ்டிஸ்", "திராவிடன்" என்கிற இரண்டே பத்திரிகைகள்தான். இவைகள் முன் மந்திரிமார்களும் மற்ற செல்வவான்களும் சேர்ந்து மாதம் 1-க்கு 3000 முதல் 5000 ரூபாய் வரை கொடுத்து வந்தும் நஷ்டத்திலும்



RangaRakes tamilnavarasam.com

கடனிலும் நடைபெற்றுவந்ததென்றால் இப்போது யாருடைய பண உதவியும் இல்லாத காலத்தில் எப்படி நடைபெறும் என்பதை வாசகர்களேதான் உணர வேண்டும். இவ்விரண்டு பத்திரிகைகளில் ஒரு பத்திரிகையை மாத்திரம் அதுவும் “ஜஸ்டிஸ்” என்கிற இங்கிலீஷ் பத்திரிகையை மாத்திரம் ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் இப்போது ஏற்றுக்கொண்டு அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கெல்லாம் தானே பொது ஜனங்கள் மூலமாகவோ அல்லது வேறு விதமாகவோ சரிசெய்து கொள்வது என்கிற உத்தேசத்தின் பேரிலும் தானும் எவ்வித ஊதியமில்லாமல் பத்திராபதிபராயிருப்பது என்கிற உறுதியின் பேரிலும் ஒப்புக்கொண்டு ஏற்று நடத்திவருவதாய்த் தெரிகிறது. இந்த நிலைமையில் தமிழ் பத்திரிகையான “திராவிடனை” கவனிப்பாரின்றி வாராந்திரமாக்க வேண்டியதோ அல்லது நிறுத்திவிட வேண்டியதோவான நிலைமையில் இருக்கிறது. அதன் தற்கால பத்திராதிபர்களும் மற்றும் காரியஸ்தர்களும் அதற்காக எவ்வளவோ கஷ்ட நஷ்டப்பட்டு உழைத்து வந்திருந்தாலும் இப்போது அதன் நிலைமை நெருக்கடியாகவே இருந்து வருகிறது. தமிழ்நாடு என்பதாக 10 ஜில்லாக்கள் கொண்ட ஒரு நாடு தமிழ்மக்கள் அதாவது பார்ப்பனரல்லாதார் என்பதாக 2 கோடி மக்களைக் கொண்ட ஒரு சமூகம் தங்கள் முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் விடுதலைக்கும் என்பதாக ஏற்பட்ட ஒரு தமிழ் தினசரி பத்திரிகையை நடத்த முடியாமல் விட்டு விடுவதென்றால் நமது சமூகத்தின் தாழ்ந்த நிலைமையைக் காட்ட இதைவிட வேறு ஆதாரம் வேண்டியதில்லை யென்றே சொல்லு வோம். ஒருக்கால் தமிழ் மக்கள் அப்பத்திரிகையின் கட்சிக் கொள்கையைப் பற்றி ஏதாவது வார்த்தைகளைச் சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம் என்பதாக நினைத்தாலும் அக்கட்சியின் கொள்கையைப் பற்றி யாரும் இது சமயம் குற்றம் சொல்லுவதற்கில்லாத நிலையில் ஏற்பட்டிருப்பதை நன்றாய் அறிவார்கள். சுயராஜ்யம் அடையும் விஷயத்திலும் மகாத்மாவின் நிர்மாணத் திட்ட விஷயத்திலும் இது சமயம் நமது நாட்டு அரசியல் திட்டம் என்று சொல்லுபவைகளில் எதிலும் பின் வாங்கியதல்ல. அன்றியும் நம் மக்கள் சுய மரியாதைக்கு மற்ற எல்லா திட்டங்களையும் விட அதிகமான பிரதானியத்தை இக்கட்சி கொடுத்திருக்கிறது. அன்றியும் அரசியல் முதலிய உரிமைகளில் ஒரு வகுப்பாரை மற்றொரு வகுப்பார் ஏமாற்றிச் சூழ்ச்சி செய்து ஆதிக்கம் பெற்று நசுக்கி விடுவார்களோ என்று எவ்வகுப்பாரும் பயப்படுவதற்கும் அவநம்பிக் கைப்படுவதற்கும் இடமில்லாமல் எவ்வித உரிமையும் அதிகாரமும் பதவியும் எல்லா வகுப்பாரும் அவரவர்கள் கூட்டத்திற்கு தகுந்தபடி பிரதிநிதித்துவம் பெறலாம் பெற வேண்டும் என்கிற வகுப்புவாரி உரிமையையும் பிரதிநிதித் துவத்தையும் வலியுறுத்துகிறது. இப்படியிருக்கும்போது கொள்கைகளைப் பற்றி யாரும் எந்த வகுப்பாரும் நல்ல எண்ணத்தோடு கொஞ்சமாவதும் குறை கூற இடமில்லை என்பதும் யாவரும் அறிந்ததே. உயர்ந்த கொள்கைகளை கொண்ட இம்மாதிரி யான ஒரு பெரிய சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்குமாக நடைபெற ஒரு பத்திரிகையை ஆதரிக்க வேண்டியது



நம் கடமை என்பது நாம் சொல்லாமலே விளங்கும். நம்மில் எத்தனையோ லக்ஷாதிபதிகள் வருஷம் 1 க்கு லக்ஷக்கணக்கான வரவு உள்ளவர்கள், தேசாபி மானமும் சமூகப் பற்றும் சுயமரியாதையில் கவலையுமுள்ளவர்கள் இருந்தும் கவனிக்காமல் இருப்பதென்றால் இச்செல்வங்கள் மற்றெதற்காகத்தான் இருப்பதாய்க் கருதுகிறார்களோ தெரியவில்லை.

நிற்க, சென்ற மாதக் கடைசியில் நாமும் ஸ்ரீமான்கள் பனகால் அரசரும், ராமசாமி முதலியாரவர்களும் திருநெல்வேலி சுற்றுப் பிரயாணத்தில் ஒன்றாய் பிரயாணம் செய்த காலத்தில் “திராவிடன்” பத்திரிகையை நடத்துவது தங்களுக்கு கஷ்டமாய் இருப்பதாகவும் நம்மையே ஏற்று நடத்த வேண்டும் என்பதாகவும், அப்பத்திரிகைக்கு அச்சு ஆலயமும், அச்சு யந்திரமும் அசோசியேட் பிரஸ் வர்த்தமானமும் தாங்கள் கொடுப்பதாகவும் நாம் அதன் நிர்வாகத்தையும் பத்திராதிபர் ஸ்தானமும் ஏற்று நடத்த வேண்டும் என்றும் மேற்காட்டியவைகள் தவிர மேற்கொண்டு அப்பத்திரிகை நடத்துவதால் ஏற்படும் நஷ்டங்களை பொது ஜனங்களின் நன்கொடையின் மூலமாக நம்மையே சரிசெய்து கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்கள். எவ்வள வுக் கெவ்வளவு சுருக்கமாகக் கணக்குப் போட்டுப் பார்த்தாலும் 8 பக்கத்திற் குக் குறையாமல் 12 பக்கங்களுக்கு அதிகப்படாமல் இப்போதிருக்குமளவில் குறைந்தது தினம் 2000 பிரதிகளாவது வெளியேறும் படியாவும், சுமார் மாதம் 1 -க்கு 1-4-0 ரூபாய் சந்தாவுக்கு மேல் போகாமலும் கூடுமானவரை பிரசார விஷயத்தோடு வர்த்தமான விஷயமும் தாராளமாய் பிரசுரிக்கப்பட்டு வெளியாவதாயிருந்தால் முதல் வருடத்திற்கு மாதம் 1-க்கு 750 ரூ. போல் நஷ்டம் வரக்கூடுமென்றும் அடுத்த அடுத்த வருஷங்களில் கொஞ்சங் கொஞ்சமாய் தனக்குத்தானே சரிகட்டிக் கொள்ளக்கூடிய நிலைமை வரலாம் என்றும் எதிர்பார்க்கிறோம். ஆகவே, இப்பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்வ தென்றால் பல வழிகளிலும் பயமாகவே இருக்கிறது. முதலாவது “குடி அரசு” பத்திரிகைப் பொறுப்புடன் இப்பத்திரிகைப் பொறுப்பையும் ஏற்பது என்பது சாத்தியமாகக் கூடியதா என்பதும் ஈரோட்டை விட்டு சென்னையில் அதிக நாள் தாமதிப்பது சாத்தியமாகுமா என்பதும் இப்போதைப்போல் வாரத்தில் 3,4 நாள் பிரசாரங்களுக்கு வெளியிடங்களுக்குப் போக சௌகரியம் ஏற்படு மா என்பதும் ஆகியவைகள் ஒரு புறமும் இவ்வளவு பெரிய நஷ்டத்தைப் பொதுஜனங்களின் நன்கொடைகளால் ஈடு செய்யக்கூடுமா என்பது ஒரு புறமும் யோசிக்க வேண்டிய விஷயமாயிருப்பதோடு இத்தொண்டை யாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாக பொதுமக்கள் விரும்புகிறார்களா என்பதும் எல்லாவற்றையும்விட முக்கியமாய் யோசிக்க வேண்டிய விஷயமாகவும் இருக்கிறது. சமீபத்தில் மதுரை ஜில்லா கனவான் ஒருவர் “குடி அரசு”க்காக வருஷம் 2000 ரூ. வீதம் 3 வருஷத்திற்குக் குறையாமல் கொடுத்து வருவதாக தானாகவே முன் வந்தார். அதுசமயம் நாம் இப்போது “குடி அரசு”க்கு இவ்வித உதவி தேவையில்லை என்றும், “திராவிடனு”க்கு



RangaRakes tamilnavarasam.com

உதவுங்கள் என்றும் சொல்லிக்கொண்டதில் உடனே அவர் "திராவிடன்" பத்திரிகையையும் நீங்கள் எடுத்துக்கொண்டு நடத்துவதானால் அதன்படியே கொடுத்து வருகிறேன் என்பதாக வாக்களித்தார். தஞ்சை ஜில்லாவிலும் இரண்டு செல்வம் பொருந்திய கனவான்கள் "திராவிடனை" எடுத்து நடத்துங்கள் என்றும் அதில் ஏற்படும் நஷ்டத்திற்கு ஏதாவது நாங்கள் உதவுகிறோம் என்றும் தாங்களாகவே வாக்களித்தார்கள். இந்த நிலைமையில் என்ன செய்வதென்பது எமக்குத் தோன்றவில்லை. ஆகையால் "குடி அரசு" அபிமானிகளும் மற்றுமுள்ள கனவான்களும் கூடுமான வரையில் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவித்தால் அந்தப்படி செய்ய அனுகூலமாயிருக்கும். அரை அணா கார்டு செலவை லட்சியம் செய்யாமல் தங்களுக்குத் தோன்றியதைத் தெரிவிக்கக் கோருகிறேன். அதாவது "திராவிடனை"யும் ஏற்றுக் கொண்டு "குடி அரசு" கொள்கைப்படி தினசரியாக நடத்தலாமா? அல்லது "குடி அரசை" நடத்துவதே போதுமானதா என்ற விஷயத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன். அடுத்த வாரத்தில் நமது முடிவை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆதலால் தயவு செய்து உடனே தெரிவிக்க வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 06.03.1927**



# நமது கோர்ட்டுகள்

## கோர்ட்டு என்பது சூதாடுமிடம்

நமது வகுப்பார் சீர்குலைந்து மானங்கெட்டு பார்ப்பனர்களின் அடிமைகளாகி அவர்களின் வாலைப் பிடித்துக்கொண்டு திரிவதற்கு முக்கியக் காரணம் நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் கோர்ட்டுகள் என்று சொல்லப்படும் சூதாடுமிடங்களும் அவைகளுக்கு ஜட்ஜுகள் என்று சொல்லப்படும் சூதாட்ட நிர்வாகிகளுமே ஆவார்கள்.

### சீட்டு மேஜை

அதாவது ஒருவர் ஒரு வீட்டை சூதாட்டத்திற்கு வாடகைக்கு கொடுத்திருந்தால் அவ்வீட்டில் சூதாடிகளை ஒன்று சேர்த்து அவ்வாட்டத்திற்கு அநுகுணமான சாமான்களையும் ஆட வசதியையும் செய்து கொடுத்து சீட்டு மேஜைக் காசு என்னும் கூலி வாங்குகிறவன் ஒருவனுண்டு. சூது ஆட வருகிறவர்கள் ஒவ்வொரு வெற்றிக்கும் இவ்வளவு என்று கொடுத்து வருவதுண்டு. சாதாரணமாக காலை முதல் மறுநாள் காலை வரையில் ஆளுக்கு இவ்வளவு என்பதாக கையில் பணம் வைத்துக் கொண்டு சூதாட ஆரம்பித்தால் கடைசியாய் எழுந்து போகும் போது நாலுபேர் தோல்வி அடைந்து கடன்காரராய் எழுந்து போவதும் இருவர் சம்பாதிப்பவர்களாகவும் இருவர் அசலோடு போவதாகவும் காணப்படும். சம்பாதித்தவர் என்பவர்களுக்கு அவரவர்கள் அசலும் மேல்கொண்டு கால் ரூபாயோ அரை ரூபாயோ லாபமிருப்பதாகத் தெரியும். அதுவும் தோற்றவர்கள்மேல் கடன் விட்டிருக்கும் தொகையாயிருக்கும். ஆனால் தோற்ற பணமும் கடன்காரராக்கிய பணமும் எங்கு போய் விட்டதென்று பார்ப்போமேயானால் வீட்டு வாடகைக்காரனுக்கும் சீட்டாட வசதி செய்து கொடுத்த சீட்டு மேஜைக் காரனுக்கும் அந்த இடம் தெரிந்து அங்கு வந்து மிரட்டிய போலீசுக்காரனுக்கும்தான் போயிருக்குமே ஒழிய ஆடினவர்களுக்கு லாபமிருக்காது. இப்படியே தினப்படி வந்து சூதாடுவதும் தினப்படி பலர் தோல்வியடைவதுமாயிருக்குமே ஒழிய ஜயித்தவர்களுக்கு தோற்றவர்கள் பணம் அவ்வளவும் வந்திருக்காது. அதுபோலவே கோர்ட்டு நீதி என்பது இடம் கொடுத்தவர்களுக்கு சமானமாகிய அரசாங்கத்திற்கும் ஆட வசதி செய்து கொடுத்து சீட்டு மேஜை வாங்கியவர்களுக்குச் சமான



RangaRakes tamilnavarasam.com

மாகிய வக்கீலுக்கும் மிரட்டி காசு வாங்கும் போலீசுகாரனுக்கு சமானமாகிய கோர்ட்டு சிப்பந்திகளுக்கும் தூணுகளுக்கும் போய்ச் சேர்ந்து விடுகிறதே தவிர உண்மையான விவகாரக்காரனுக்கு ஒன்றும் மீதியாவதில்லை.

## தோற்றாலும் கெடுதி ஜயித்தாலும் கெடுதி

விவகாரத்திற்கு வரும் வாதி தோற்றால் அனேகமாய் பாப்பராய் விடுகிறான். ஜயித்தால் செலவு செய்த தொகையை அடைந்தவனாகிறான். அது போலவே பிரதிவாதியும் ஜயித்தாலும் தோற்றாலும் அனியாயமாய் கெட்டுப் போகிறான். இதன் காரணம் என்னவென்று பார்ப்போமேயானால் பிரிட்டிஷ் கோர்ட்டுகள் என்று சொல்வது பலருக்கு உத்தியோகம் கிடைக்க வும் வக்கீல்கள் பிழைக்கவும் வசதிக்காக ஏற்பாடு செய்யப்பட்டனவே அன்றி குடிமக்கள் நீதி அடைய அல்லவே அல்ல என்பதுதான்.

## நியாயம் கிடைக்கும் தன்மை

வக்கீல்களின் புரட்டுகளாலும் தந்திரங்களாலும் விவகாரக்காரனுக்கு கையில் பணமிருக்கிறவரை "நியாயம்" கிடைக்கும் மாதிரி வசதி செய்யப் பட்டிருக்கிறது. சிற்சில சமயங்களில் சில விவகாரக்காரனுக்கு கைப்பணம் தீர்ந்துபோன பிறகு கூட கடன் கிடைப்பதாயிருந்தால் மறுபடியும் கூட "நியாயம்" கிடைக்க வழியிருக்கிறது. பெரிய விவகாரங்களில் நியாயம் என்பது சட்டத்தைப் பொருத்ததாகவே இல்லை. மாதிரி கேசுகளில் இதற்கு முன் உள்ள ஜட்ஜுகள் என்ன அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார். இன்ன ஊர் ஜட்ஜு எப்படி தீர்ப்பு சொல்லி இருக்கிறார் என்று பழைய ஜட்ஜுகளின் அபிப்பிராயமே சட்டமாயிருக்கிறது. சில கேசுகளில் அந்தந்த ஜட்ஜு கொள்ளும் அபிப்பிராயமே சட்டமாகும். நீதி ஸ்தலங்கள் என்பது வரிசைக் கிரமமாய் முன்சீப் கோர்ட், ஜில்லா ஜட்ஜு அல்லது சப் ஜட்ஜு அபீல், ஹைக்கோர்ட் அபீல், புல் பெஞ்சு அபீல், லட்டர்ஸ் பேட்டெண்ட் அபீல், ரிவிஷன் பிரிவு கவுன்சில் என படிப்படியாய் பல ஸ்தானங்கள் விவகாரக் காரன் அறிவீனத்திற்கும் ஆணவத்திற்கும் பணத்திமிருக்கும் தக்கபடி அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவுக்கும் தூண்டுகோலென வக்கீல் கூட்டங்களும் இவர்களை நத்திப் பிழைக்கும் இவர்களது புரோக்கர் களும் மலிந்து வருகின்றன. இவ்வித நியாய ஸ்தல முறையும் நியாயவாதி முறையும் நியாயங் கிடைக்குமுறையும் நீங்காமல் மக்கள் சுயராஜ்யமடைந்து விடலாம் என்பது சமுத்திர நீரை எல்லாம் குடித்து விடலாம் என்பது போலவே ஆகும். கோர்ட்டு ஏற்படுத்தினதின் கருத்து பொதுவாய் நோக்கு மிடத்து இம்முறைகள் நாட்டின் விடுதலைக்கு விரோதமாகவும் பார்ப்பன ஆதிக்கத் திற்கு அநுகூலமாகவும் சர்க்காரும், பார்ப்பனரும் கூடிச் செய்த சூழ்ச்சியே அல்லாமல் வேறல்ல.



தற்கால "தேசாபிமானி" என்பவருக்கும் "பொது நல சேவை செய்ப வர்" என்பாருக்கும் இம்மாதிரி கோர்ட்டுகளையும், நியாயம் கிடைக்கும் முறைகளையும் இன்னும் அதிகமாக உற்பத்தி பண்ணுவதே யோக்கியதாம் சமாயிருக்கிறது. சமீபத்தில் சட்டசபைக்கு நின்ற கனவான்களில் ஒருவர் தன்னுடைய யோக்கியதாம்சத்தை வெளிப்படுத்திய ஒரு அறிக்கையில் நான் இன்ன ஊருக்கு கோர்ட்டுகள் வைக்கும்படி செய்தேன் இன்ன ஊரில் எடு பட்டு விட இருந்த கோர்ட்டை நிலை நிறுத்தினேன். ஆதலால் எனக்கு ஓட்டுச் செய்யுங்கள் என்று வெளியிட்டிருந்தார். இதுபோலவே ஒரு ஓட்டர் ஒரு சட்ட சபை அபேக்ஷகருடைய யோக்கியதையைப் பரிசீலிக்கையில் அவ் வபேக்ஷ கரைப் பார்த்து "நீர் இந்த ஊரில் ஏற்பட இருந்த சப்கோர்ட்டை வேண்டாமென்று சொன்னீராம், ஆதலால் உமக்கு தேசபக்தி இல்லை நீர் பொது நல சேவைக்காரராகமாட்டீர், உமக்கு ஓட்டு செய்ய முடியாது" என்று சொன்னாராம். அதற்கு அந்த அபேக்ஷகர் நீர் தப்பாய் நினைத்துக் கொண்டீர்; நான் இந்த ஊருக்கு ஒரு ஜில்லா கோர்ட்டே வரவேண்டுமென்கிற ஆசை யினால் சப்கோர்ட் வேண்டா மென்று சொன்னேன். இந்த ஊர் நிலைமைக்கு இங்கொரு ஜில்லா கோர்ட்டு வேண்டாமா? அனேக ஜில்லாக்களில் இரண்டு ஜில்லா கோர்ட்டு இருப்பது போல் இந்த ஜில்லாவுக்கும் இரண்டு ஜில்லா கோர்ட்டு வேண்டும், அதற்கு இந்த ஊர்தான் தகுதி என்று சொன்னாராம். இதிலிருந்து இம்மாதிரி ஓட்டர்களுக்கும் அபேக்ஷகர்களுக்கும் எவ்வளவு தேச பக்தியும் பொது நல சேவையும் இருக்கிறது என்று யோசித்து பார்த்தால் தெரியும்.

## சட்டமெம்பரின் தேசபக்தி

அரசாங்கத்தாரின் மற்றபடி சட்ட சம்மந்தமான இலாகா சட்டமெம் பரின் வேலைதான் என்ன? இவ்வருஷம் சட்ட கலா சாலையில் (லா காலேஜில்) படித்துத் தேறிய பிள்ளைகள் தொகை எவ்வளவு? இறந்துபோன வக்கீல்கள் தொகை எவ்வளவு? அதுகளுக்கு பதில் செய்து சரிகட்டின பிள்ளைகள் போக மீதி தொகை எவ்வளவு? இவர்கள் பிழைப்புக்கு புதிதாய் உற்பத்தி பண்ணின உத்தியோக மெவ்வளவு? போக பாக்கியுள்ள பிள்ளை களின் வயிற்றுப் பிழைப்புக்கு எந்தெந்த ஊரில் நிரந்தர முன்சீப் கோர்ட்டு களை ஏற்படுத்தலாம், எந்தெந்த ஊரில் நிரந்தர சப்கோர்ட்டுகளை ஏற்படுத்த லாம், எந்தெந்த ஊரில் நிரந்தர ஜில்லா கோர்ட்டுகளை ஏற்படுத்தலாம், எந்தெந்த ஊரில் தற்கால சாந்தியாக முன்சீப் கோர்ட்டுகளை ஏற்படுத்தலாம், எந்தெந்த ஊரில் தற்கால சப் ஜட்ஜி கோர்ட்டுகளை ஏற்படுத்தலாம், எந்தெந்த ஜில்லாவுக்கு உதவி சப் ஜட்ஜிகளையோ குறிப்பிட்ட காரியங்களுக்கு என்கிற ஜட்ஜிகளையோ நியமிக்கலாம் என்கிற கவலையே தவிர வேறென்ன இருக்கிறது?



RangaRakes tamilnavarasam.com

## சட்ட மெம்பரும் வக்கீல் பேட்டியும்

சட்ட மெம்பரை வக்கீல்கள் கூட்டம் கூடி பேட்டி காணுவதிலும் என்ன வேண்டுகோள் இருக்கிறது. "அய்யா எங்களுக்கு பிழைப்பு குறைந்து போய்விட்டது. ஒரு கோர்ட்டிலேயே எல்லா வக்கீல்களும் வந்து முட்டிக் கொள்ளுகிறார்கள். இதனால் வக்கீல் பிழைப்புக்கும் மரியாதை குறைகிறது. ஆதலால் இக்கூட்டத்தைக் கொஞ்சம் குறையுங்கள் அல்லது இன்னம் ஒரு கோர்ட்டாவது ஏற்படுத்துங்கள். பார்ப்பனரல்லாத வக்கீல்கள் அதிகமாகி விடு கிறார். ஆதலால் வக்கீல் பரீக்ஷையை இன்னம் கொஞ்சம் அதிக செலவும் கஷ்டமும் ஆக்குங்கள். நம்மைபோல் பிச்சை எடுத்து அவர்கள் படிக்க முடியாது. வேறு வேலைக்குப் போய்விடுவார்கள். பார்ப்பனரல்லாத வக்கீல் கள் அதிகமாய் வரக்கூடாது என்கிற எண்ணத்தின் பேரில் 2-வது கிரேடு வக்கீல் பரீக்ஷைகளையும் 1-வது கிரேடு வக்கீல் பரீக்ஷைகளையும் எடுத்தும் கூட பி.ஏ. பி.எல்., வகுப்பிலும் பார்ப்பனரல்லாத பிள்ளைகள் படித்து வரு கிறார்களே இதை எப்படியாவது ஒழித்து இன்னம் கொஞ்சம் செலவும், அதிகமான கஷ்டமும் வைத்து அவர்களை இந்த இலாகாவில் தலையிடாமல் செய்ய முடியாதா" என்பதாகிற இதுகள்தான் வேண்டுகோளாயிருக்கிறதே தவிர வேறென்ன என்பது யோக்கியர்களுக்கு விளங்காமல் போகாது.

## கோர்ட்டுகள் அதிகமாவதினாலே வழக்குகள் அதிகமாகிறது

எத்தனைக்கெத்தனை கோர்ட்டுகள் அதிகமாய் வைக்கிறார்களோ அத்தனைக்கத்தனை வழக்குகள் உற்பத்தியாகிக்கொண்டேஇருக்கிறது. இதனால் வழக்குகளும் விவகாரங்களும் உற்பத்தியாவதற்கு கோர்ட்டுகளே காரணமல்லாமல் வேறென்ன? உதாரணம் வேண்டுமென்றால் கள்ளுக்கடை களையும் தாசி வீடுகளையும் மோட்டார் வசதிகளையும் பார்த்தால் நன்றாய் விளங்கும். நாம் ஏன் கள்ளுக்கடைகளை குறைக்கும்படி சர்க்காரை வேண்டு கிறோம்? கடை குறைந்தால் குடிகாரரின் எண்ணிக்கையும் குடிக்கும் அளவும் குறையும் என்றுதானே தவிர வேறென்ன? நாலு தாசிகள் இருக்கும் ஊரில் நடக்கும் விபசாரித்தனத்துக்கும் 40 தாசிகளிருக்கும் ஊரில் விபசாரித்தனத் துக்கும் கணக்குப் பார்த்தால் அதிக தாசிகள் உள்ள ஊர்களில் விபசாரித்தனம் செய்கிற ஆள்களின் எண்ணிக்கை அதிகமாகவே இருக்குமா அல்லவா? அது போலவே ஒரு ஊருக்கு ஒரு தரம் போய்வரும் போக்குவரத்து வசதிகளுக்குப் பதிலாக நான்கு தரம் போய் வரும்படி போக்குவரத்து வசதி ஏற்படுத்தினால் அதற்கேற்ற பிரயாணிகள் அதிகமாக ஏற்படுவார்களா இல்லையா? அது போலவே கோர்ட்டுகள் அதிகமாகவும், ஊர் ஊராகவும் ஏற்பாடு செய்தால் விவகாரம் வளர்ந்துகொண்டேதான் இருக்கும்.



## பழைய நிலைமையும் புதிய நிலைமையும்

ஆதியில் கோயமுத்தூர் ஜில்லாவுக்கு இரண்டு முன்சீப் கோர்ட்டு களும் ஒரு ஜட்ஜி கோர்ட்டும்தான் இருந்தன. இப்போது கொள்ளேகாலம் உள்பட 8 முன்சீப் கோர்ட்டுகளும் 3 சப் ஜட்ஜி கோர்ட்டுகளும் இருக்கின்றன. இரண்டு ஜில்லா கோர்ட்டும் இருக்கின்றன. இவ்வளவும் போதாமல் இனியும் ஒரு சப் ஜட்ஜி வேண்டுமென்று பலரும் இனியும் ஒரு ஜில்லா கோர்ட்டு வேண்டு மென்று பலரும் விரும்புகிறார்கள் (யாவர்? வக்கீல் கூட்டத்தார்.)

## கோர்ட்டுக்கு அவசியமுண்டா?

இதிலிருந்து நாம் அறிய வேண்டியதென்ன? இவ்வளவு நீதி ஸ்தலங்கள் ஏற்படும்படியான அளவுக்கு இந்த ஜில்லாவில் சென்ற 40,50 வருஷத்தில் ஜனத்தொகை பெருகிவிட்டதா? அல்லது இவ்வளவு கோர்ட்டு கள் ஏற்படும்படி ஜனங்கள் அவ்வளவு அயோக்கியர்களாகி விட்டார்களா? என்று பார்த்தால் ஜனத்தொகை ஏறக்குறைய முன் இருந்த அளவுக்கு 4 -ல் ஒரு பாகம்தான் அதிகமாகி இருக்கிறது. இந்த அளவுக்கு சுமார் $^1/_4$ (கால்) முன்சீப் கோர்ட்டு அதிகமாயிருந்தால் போதும். அதிகமானால் ஒரு முன்சீப் கோர்ட்டு அதிகமாகலாம் என்றே வைத்துக் கொண்டாலும் 5 அல்லது 6 முன்சீப் கோர்ட்டுகளும் ஜில்லா ஜட்ஜி அதிகாரமுள்ள ஒரு மேல்கண்ட ஜட்ஜியும் 2 சப் ஜட்ஜியும் அதிகமாகக் காரணமென்ன? இதைப் பார்க்கும் போது இவ்வளவு கோர்ட்டுகளுக்கும் வக்கீல்களுக்கும் வேலை உண்டாக் கத்தக்க மாதிரிக்கு ஜனங்களை அயோக்கியர்களாகவும், சர்க்காரும் பார்ப்ப னர்களும் பழக்கி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லாமல் வேறு என்ன வென்று சொல்லுவது. அல்லாமலும் முன் காலங்களில் முன்சீப்புகள் 5 மணி வரை வேலை செய்வார்கள்; சம்பளமும் அவர்களுக்கு 200, 300 தான். இப்போது 11 – 30 மணிக்கு கச்சேரிக்கு வந்தால் 2 அல்லது 3 மணிக்கு வீட்டுக்குப் போய் விடுகிறார்கள்; சம்பளம் 500, 600 வாங்குகிறார்கள்.

## இனியும் ஒரு கோர்ட்டு வேண்டுமாம்

இவ்வளவும் போதாமல் இனியும் ஒரு சப் ஜட்ஜி கோர்ட்டு வேண்டு மென்றால் இவ்வயோக்கியத்தனத்திற்கு எதைச் சமமாகச் சொல்லுவது ; இதையும் நமது ஜில்லாவில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஊருக்கு வரும்படி எதிர்பார்க்கிறார்களாம்.

## கோர்ட்டு வந்தால் வந்த ஊருக்கு ஏற்படும் கெடுதி

எந்த ஊரில் வைத்தாலும் வேலை ஏற்படும் என்கிற விஷயத்தில் நமக்கு சந்தேகமில்லை. அப்பீல் செய்ய இஷ்டமில்லாதவனுக்கெல்லாம்



RangaRakes tamilnavarasam.com

அப்பீல் செய்து பார்க்கலாம் என்கிற ஆசை வந்து விடும். விவகாரத்தில் ஆசை இல்லாமலும் அசலூருக்குப் போய் விவகாரம் செய்வதில் சௌகரிய மில்லாமல் தங்களுக்குள்ளாகவே பைசல் செய்து கொள்ளலாம் என்கிறவர் களுக்கெல்லாம் உள்ளூரில் கோர்ட்டு வந்துவிட்டால் பிராது செய்துவிடலாம் என்கிற எண்ணம் ஏற்பட்டுவிடும். அலக்ஷியமாகவும் அனாவசியமாகவும் மறதியில் இருந்த வழக்குகளுக்கெல்லாம் வக்கீல்கள் முதன்மை ஸ்தானம் கற்பித்துக்கொடுத்து வழக்கிலிழுத்துவிட்டுவிடுவார்கள். இன்னமும் எவ்வளவோ கஷ்டங்கள் அவ்வூரிலுள்ள ஏழைக்குடிமக்களுக்கு ஏற்பட்டு விடும். முதலாவது வீட்டு வாடகை உயர்ந்துவிடும். காய்,கறி, மோர், தயிர், பால், நெய், விறகு விலைகள் உயர்ந்துவிடும். கூலி ஆட்களின் கூலி அதிக மாய் விடும். ஜனங்களுக்குள் கட்டுப்பாடும் பெரியவர், சிறியவர் என்கிற மரியாதையும் மாறிவிடும். இவ்வளவு அக்கிரமங்களோடு நாணயமும் குறைந்துவிடும். இவ்வளவு கஷ்டங்கள் ஏற்படுவதாயிருந்தாலும் ஒருவகுப் பாரின் வயிற்று பிழைப்புக்கு கோர்ட்டுகளை அதிகப்படுத்துவதே தேச சேவையாயும், இதற்கனுகூலமாயிருக்கும் அதிகாரிகளே பூரண கும்பம் எடுக்கத்தக்க யோக்கியதை உள்ளவர்களாகவும் போய் விட்டது. இந்தக் கூட்டத்தார் தான் நமக்கு சுயராஜ்யம் வாங்கிக் கொடுக்கத்தக்க யோக்கியர் களாம்.

## விவகாரக்காரருக்கு ஏதாவது வசதி உண்டா?

இவ்வளவு அக்கிரமங்களுக்கிடையில் ஏற்படுத்தப்படும் கோர்ட்டு களில் விவகாரக்காரர்களுக்கு ஏதாவது கடுகளவு சௌகரியமோ, யோக்கிய தையோ அல்லது அவர்களையும் ஒரு மனிதர்களாய் கருதத் தக்க நிலைமை யோ இருக்கிறதா என்று பார்த்தால் அது கொஞ்சமாவது நினைக்கத்தக்க காரியமே அல்ல. நியாயாதிபதியாயிருக்கிறவர் பொது ஜனங்களின் பணத்திலிருந்து மாதம் 500, 1000, 2000, 3000 சம்பளம் வாங்கிக்கொண்டு மோட்டாரில் வந்து இறங்குவதும்; தனி அறையில் இளைப்பாறுவதும், பங்கா வீசுவதும், பக்கத்தில் சேவகர்கள் கை கட்டிக்கொண்டு நிற்பதும், தனி கக்கூசு, தனி சிற்றுண்டி அறை ஆகிய போக போக்கியமும் விவகாரக்காரரை ஏமாற்றி 50, 100, 1000, 2000 என்பதாக பீசு வாங்கும் வக்கீல்கள் குதிரை வண்டிகளிலும் , மோட்டார் கார்களிலும் வந்து இறங்குவதும், பங்காவின் கீழ் உட்காருவதும், தங்களுக்கென இளைப்பாறும் அறைகளுமான போக போக்கியங்களும் அடைவதுமாயிருக்கிறார்களே ஒழிய விவகாரக்காரரைப் பற்றியோ, விவகாரத்தின் பொருட்டு, சாட்சிக்கு வருகிறவர்களைப் பற்றியோ, கொஞ்சமாவது கவலையே இல்லை. கோர்ட்டுகளில் விவகாரக்காரருடைய பரிதாபம் அவர்கள் உட்கார சௌகரியமில்லை, தங்க இடமில்லை, ஒதுங்க மார்க்கமில்லை! வாய்ப்பேச மார்க்கமில்லை. கோர்ட்டு எல்லைக்குள் இருக்கும் வரை ஜெயிலில் கைதி இருப்பது போல் பயந்து ஒடுங்கி நிற்கவும்,



ஏதாவது ஒருவருக்கொருவர் வாயைத் திறந்தால் அங்குள்ள சேவகர்கள், “உஸ்”, “அஸ்” என்று இடையன் ஆடு மாடுகளை ஓட்டுவது போலவும், “பேசாதே” என்று மரியாதை இல்லாமல் கட்டளையிடுவதுமான ஹீனத் தன்மைக்கு ஆளாக வேண்டியதேயல்லாமல் அங்கு வாதியாகவோ பிரதி வாதியாகவோ சாட்சியாகவோ வருகிறவர்கள் மனிதர்கள் என்று எண்ணிய மாதிரியாய் ஏதாவது காணப்படுகிறதா? அல்லாமலும் கோர்ட்டுகள் மெத்தை மீது சிலதும் சந்துக்களில் சிலதும் இருப்பதால் கூப்பிட்டாலும் காது கேட்கத் தக்க அவ்வளவு தூரத்திலாவது நிற்கக்கூட இடமில்லாமல் இருப்பதோடு வக்கீலிடம் பேசவோ, ஏதாவது ஒரு விஷயத்தைச் சொல்லவோ இடமில்லை.

## வாய்தாக்கள்

இத்தனையும் போதாமல் ஒரு விவகாரத்தை 3 வருஷ 4 வருஷ நீட்டி 25 – வாய்தா, 30 – வாய்தா போடும் உபத்திரவங்கள் அல்லாமல் காலை 11 மணிக்கு கோர்ட்டுக்குள் நுழைந்தால் மாலை 5 மணி வரையில் நின்று கொண்டே காத்திருக்க வேண்டும். சிலசமயங்களில் இன்று கேஸ் நடக்காது என்று தெரிந்தாலும் 5 மணி வரை வாய்தா எப்பொழுது என்று தெரிவதற்குக் காத்திருக்கவேண்டும். எப்பொழுது நடக்கும்? இந்த வாய்தாவில் நடக்காதா? என்கிற விவரங்கள் கட்சிக்காரரோ சாட்சிக்காரரோ அறிய வசதியில்லை. இதனால் இவர்களுக்கு கட்டும் சாட்சிய படி போக வர செலவு, மெனக்கேடு எவ்வளவென்பதைப்பற்றி யாருக்கும் கவலையில்லை. ஜட்ஜி பெண்சாதிக் காலில் எறும்பு கடித்துவிட்டால் அன்றைய கேசுகள் முழுவதும் வாய்தா போட்டாய்விடும். வக்கீல் வீட்டில் அமாவாசை சமையலாக நேரமாய் விட் டால் குமாஸ்தா வாய்தா வாங்கிவிடுவான். வக்கீலுக்கு வேறு கோர்ட்டுக்குப் போக வேலையிருந்தால் கேசை மாலையில் எடுத்துக்கொள்ளும்படி ஜட்ஜைக் கேட்டு வாய்தா வாங்கி விடுவான். இப்படி எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படுகின்றன. நிற்க, சாட்சிக்கு உடம்பு சௌகரியமில்லாவிட்டால் டாக்டர் களுக்கு 20, 30 கொடுத்து சர்ட்டிபிகேட் வாங்கவேண்டும். வேறு அவசர வேலையிருந்தால் 20, 30 கொடுத்து வயிற்றுக் கடுப்பு என்று பொய் சர்ட்டி பிகேட் வாங்க வேண்டும். இப்படியாக எவ்வளவு கொடுமைகள் விவகாரக் காரருக்கு இருந்து வருகிறதென்பதும் வாய்தாக்கள் ஏற்படுவது கட்சிக் காரர்களாலா அல்லது வக்கீல்களாலா, ஜட்ஜிகளாலா என்பதைப் பார்த்தால் 100–க்கு 90 விவகாரங்களுக்கு ஜட்ஜிகளும் வக்கீல்களுமேயல்லாமல் வாதி பிரதிவாதி காரணமேயில்லை என்பதும் விளங்கும்.

## மேல் அதிகாரிகளோ?

இவற்றைப் பற்றி மேல் அதிகாரிகளுக்கு எழுதினால் “அசல் அநியா யம் அபீலில் அதுவே காயம்” என்பதுபோல் “இதெல்லாம் சகஜம் தான்” என்று சொல்லுவார்கள். காரணம் என்னவென்றால் முனிசீப்பு ஸ்தானம் முதல்



RangaRakes tamilnavarasam.com

ஹைக்கோர்ட்டு ஜட்ஜி, சட்ட மெம்பர் ஆகிய ஸ்தானம் வரையில் இந்த வக்கீல் கூட்டத்திலிருந்தும் இதனாலே வயிறு வளர்க்கக் கூடிய கூட்டத்திலிருந்துமே தான் ஆள்பிடிக்கிறார்களே தவிர வேறில்லை. வக்கீல் கூட்டத்திலிருந்து நியாயாதிபதிகளை நியமிப்பது என்கிற அக்கிரமம் ஒரு நாட்டில் இருக்கும் வரை பார்ப்பன ஆதிக்கமும் விவகாரமும் வலுக்கவும், குடியானவர்கள் நாசமாய்ப் போகவும், நாடு குட்டிச்சுவராகவும்தான் ஏற்படுமேயல்லாமல் ஒரு நாளும் நாம் உருப்படியாகி சுயராஜ்யம் பெறப் போவதில்லை என்பது உறுதி.

**குடி அரசு - கட்டுரை - 06.03.1927**



# பார்ப்பனப் புரோகிதம் ஒழிந்தது!

“பார்ப்பன குருமாருக்கு” கொடுத்து வந்த வரியும் ஒழிந்தது. மதுரை பிராமணரல்லாத மகாநாட்டில் தோன்றிய தீர்மானங்களை நம் சகோதரர்கள் செய்கையில் நடத்தி வருவதை நம் “திராவிடன்” “குடியரசு” பத்திரிகைகள் வாயிலான் அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். நிற்க நம் மகாநாட்டிற்கு உப காரியதரிசியாய் விளங்கி நமக்கு அல்லும் பகலும் உழைத்தவரும், உழைக் கின்றவருமான திருவாளர்.டி. கொண்டல் நாயுடு அவர்கள் அன்னையார் விண்ணவர்க்கு விருந்தாயது பற்றி 19. 2. 27 குண்ணத்தூரில் தமதில்லத்தில் சடங்குக் கிரியைகள் நடைபெற்றன. இக்கிரியைகளுக்கு மதுரையினின்று திருவாளர்கள் ஐகோர்ட்டு வக்கீல் பி. ரங்கசாமி நாயுடு அவர்கள் பி.ஏ.பி.எல்., எஸ். கூடலிங்கம் பிள்ளை அவர்கள், பெஞ்ச் கோர்ட்டு மாஜிஸ்திரேட் சின்ன சாமி ராஜா அவர்கள், பென்ஷன் பட்டாளம் சுபேதார் சுப்பா நாயுடு அவர்கள், ஜவுளி வியாபாரம் சின்னசாமி நாயுடு அவர்கள், ஆத்தூர் சின்னசாமி நாயுடு அவர்கள், நிலச்சுவான்தார்கள் அ.சு. சீனிவாசலு நாயுடு அவர்கள், அ.சு. அக்கையசாமி நாயுடு அவர்கள் மற்றும் கிராமங்களினின்று அநேக நில வளமுடையோர்களும் சுமார் 750 பேர்கள் வரை காணப்பட்டனர். திரு. கொண்டல் நாயுடு அவர்கள் பிறப்பிடம் திருமங்கலம் தாலூகா குண்ணத்தூர் பரம்பரையான பெருங்குடும்பத்தில் பிறந்தவர்; நிலச்சுவான்தார். இவருக்கு இந்நாட்டில் மிக்க செல்வாக்குண்டு. இச்சீரியருடன் பிறந்தார் இவருடன் நால்வர். அவர்கள் வைணவ மதத்தில் சாலவும் பற்றுடையவர்கள். அவர்களும் இவருடைய விருப்பத்திற்கிணங்கி பிராமணனைப் புறக்கணித்தும் தம் அன்னையாரின் கிரியைகளை செவ்வனே நடத்தியதுடன் வந்திருந்த ஏனையோரும் இதனையே பின் பற்றுவதாக வாக்குறுதி கொடுத்தார்கள். அத்துடன் ஸ்ரீரங்கம் அண்ணங்கார் சுவாமி குருக்களுக்கு வரி கொடுப்பதை நிறுத்துதல் செய்யவேண்டுமென தீர்மானித்தபின் வந்திருந்தோரனைவரும் உணவுண்டு தாம்பூலம் பெற்றுச் சென்றார்கள் என்று ஒரு நிருபர் வரைகிறார்.

குறிப்பு : மதுரை மஹாநாட்டின் தீர்மானத்தையொட்டி குண்ணத்தூர் ஸ்ரீமான் கொண்டல் நாயுடுகாரவர்கள் தமது அன்னையாரின் இறுதிக் கிரியைகளை பார்ப்பனிய சம்பந்தமின்றி சிறப்பாக நடத்தியது பாராட்டத்தக்கது. இதோடு மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தி யென்னவென்றால் தங்கள் மரபுக்கு பரம்பரை ஆச்சாரியர் என்று பேர் வைத்துக் கொண்டு வரும் வம்சவழி வந்த



RangaRakes tamilnavarasam.com

ஸ்ரீ ரங்கம் ஸ்ரீ அண்ணங்கார் ஸ்வாமிகளுக்கு குரு காணிக்கை கொடுத்தல் கூடாது என்று அன்று தீர்மானஞ் செய்து கொண்டமையேயாம். ஸ்ரீமான் அண்ணங்கார் சுவாமிகள் பிராமணர் ஆதலால் கொடுத்தல் கூடாது என்பதற்காக நாம் மகிழ்ச்சி கொள்ளவில்லை. ஆச்சாரியர்கள் என்று பேர் வைத்துக் கொண்டு அணுவளவேனும் நலன் இல்லாவிட்டாலும் பார்ப்பன ரல்லாதார் சுயமரியாதையையே வேரோடு அறுப்பதாகிய காரியங்களுக்கு அடிபணிந்து பொருள் கொடுக்கும் ஈனத்தனம் ஓட்டமெடுக்குங் காலம் ஆரம்பமாகிவிட்டதற்காகவே மகிழ்ச்சியடைகின்றோம். இந்தப் பார்ப்பனர் ஆண்டுதோறும் பிள்ளைக்குக் கலியாணம், பெண்ணுக்குச் சாந்தி முகூர்த்தம். வீடு இடிந்து விட்டது என்பதாக ஏதாவதொரு சாக்குச் சொல்லிக்கொண்டு கிராமங்களுக்கு வந்து பணங்கொடுக்காவிட்டால் சாபங் கொடுத்துவிடுவேன் என்று பாமர மக்களை மிரட்டி கொள்ளையடித்துக்கொண்டு போவதைத் தவிர இவர்கள் சாதிப்பதொன்றுமில்லை. பாங்கில் காரியம் பார்க்கும் ஒரு ஐய்யங் காரும் காபி கிளப் வைத்து எச்சில் பாத்திரம் கழுவும் ஒரு ஐய்யங்காரும் கோயமுத்தூர் ஜில்லாவில் கம்மவார் வசிக்கும் கிராமங்களில் துவாதச நாமத்தோடும் பாத குறட்டோடும் ஆசாரிய வேடம் பூண்டு வந்தமையாமறி வோம். ஆதலால் இத்தகையோர்களுக்கு நாம் ஏன் பொருள் கொடுத்து காலில் விழுந்து சுயமரியாதை கெட்ட அடிமைகளாக வேண்டும்? ஸ்ரீமான் கொண்டல் நாயுடுகாரவர்கள் செய்த இச்சுயமரியாதை தீர்மானத்தை மற்ற பார்ப்பனரல்லாதாரும் கடைபிடித்தொழுகுவாராக.

( ப - ர் )

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 06.03.1927**



# மதுரை அமெரிக்கன் காலேஜ் மாணவர்களுக்குள் சுயமரியாதை உதயம்

சென்ற வாரம் சென்னை பச்சையப்பா ஆஸ்ட்டலில் பார்ப்பன ரல்லாத வாலிபர்கள் தங்களுக்கு பார்ப்பனரல்லாத சமையல்காரரையே வைத்து சமையல் செய்து சாப்பிட்டு வருவதும் அதன் காரணங்களையும் எழுதி மற்ற காலேஜ் பார்ப்பனரல்லாத பிள்ளைகளும் இதை பின்பற்ற வேண்டும் என்று வேண்டிக் கொண்டோம். அதற்கிணங்க இவ்வாரம் மதுரை அமெரிக்கன் காலேஜிலுள்ள பார்ப்பனரல்லாத பிள்ளைகளும் தங்களுக்குள் பார்ப்பன சமையல்காரரைத் தள்ளிவிட்டு பார்ப்பனரல்லாத சமையல்காரரை வைத்து சமைத்து சாப்பிடுவதுடன் வகுப்பு வித்தியாசமில்லாமல் தங்களுடன் கூட உட்கார்ந்து சாப்பிட சம்மதிக்கும் மாணவர்களையெல்லாம் சேர்த்து ஒன்றாய் உட்கார்ந்து சாப்பிடத் தீர்மானித்து அந்தப்படி நடத்தி வருகிறார்கள் என்பதைக் கேட்க மிகவும் சந்தோஷமடைகிறோம்.

மதுரை காலேஜில் இப்படி நேர்ந்ததற்கு ஒரு தகுந்த காரணமும் சொல்லப்பட்டது. அதாவது அக்காலேஜ் மாணவர்களில் இரண்டொரு பார்ப் பன மாணவர்களுக்கும் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கும் மிகவும் நேச மாய் இருந்ததோடு மாமிச உணவு முதல் கொண்டு வித்தியாசமில்லாமல் ஒன்றாய் உட்கார்ந்து சாப்பிட்டு வருவது வழக்கமாய் இருந்து வந்தது. சமீபத்தில் ஒரு நாள் அக்காலேஜ் மாணவர்கள் சிலர் கூடி ஒரு சமபந்தி போஜனம் ஒன்று நடத்தினார்கள். இதற்கு முன்னே சொன்ன அதாவது மாமிசம் சாப்பிட்டுக் கொண்டிருந்த பார்ப்பன வாலிபர்களையும் அழைக்கப் பட்டதாம். அவர்கள் பார்ப்பனரல்லாதாருடன் கலந்து உட்கார்ந்து சாப்பிட மறுத்துவிட்டார்களாம். இதன் பேரில் மற்ற பார்ப்பனரல்லாத பிள்ளைகளுக் கும் சுயமரியாதை உதயமாகி இனி பார்ப்பன சமையல்காரர் சமைக்க சாப்பிடுவதில்லை என்றும் தங்களுக்குள் எல்லோரும் ஒன்றாய் இருந்து சாப்பிடுவதென்றும் தீர்மானித்துக்கொண்டார்களாம். ஆகவே எப்படியாவது மக்களுக்கு சுயமரியாதை உதயமாவதைப் பார்த்து சந்தோஷமடைகிறோம். இனி மற்ற ஹாஸ்ட்டல் மாணவர்கள் எப்போது பின்பற்றுவார்களோ?

**குடி அரசு - செய்தி விளக்க குறிப்பு - 06.03.1927**



RangaRakes tamilnavarasam.com

# மகாத்மா வரவேற்பு

கதரின் பேரால் நமது பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு இடையூறு அதாவது அரசியலின் பேரினாலும் கடவுள், மோக்ஷம், மதம், என்னும் பேரினாலும் எவ்வளவு கொடுமையும், சூழ்ச்சிகளும் செய்து வந்தார்களோ வருகிறார்களோ அதுபோலவே ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியார் முதலிய பார்ப்பனர்களும் அவருடைய பார்ப்பன சிஷ்யர்களும் பார்ப்பனரல்லாத சில கூலிகளும் சூழ்ச்சி செய்து வருவதாக நாம் நினைப்பதற்கு இடமேற்பட்டு வருவதற்கு தகுந்தாற்போல் பல இடங்களில் இருந்து சமாச்சாரங்களும் வந்து கொண்டிருக்கின்றன. இச்சூழ்ச்சிகளுக்கு பெரும்பாலும் மகாத்மா வரவை ஒரு ஆயுதமாக உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்றும் தெரியவருகிறது. "மகாத்மாவின் தென்னாட்டு விஜயம்" என்னும் பேரால் கதர் பண்டை செலவு செய்து ஆங்காங்கு போய் பார்ப்பனீய விஷங்களைப் பரப்ப உபயோகித்துக் கொள்ளுவதாகவும் தெரிகிறது. ஆன போதிலும் நமக்கு அதைப்பற்றிப் பயம் ஒரு சிறிதுமில்லை என்றே சொல்லுவோம். மகாத்மாவை நாம் எல்லோரும் சேர்ந்து வரவேற்க வேண்டியதுதான். நாம் எல்லோரும் அவரது வருகையின் கருத்துக்கு ஆதரவளிக்க வேண்டியதுதான். தாராளமாய்ப் பணமும் கொடுக்க வேண்டியதுதான். அதைப்பற்றி நாம் ஒரு சிறிதும் பின் வாங்கக்கூடாது என்பதே நமது கெட்டியான அபிப்பிராயம். அப்படி நம்முடைய பணமும் நம்முடைய ஆதரிப்பும் நமது கெடுதிக்கும் இழிவுக்கும் சுயமரியாதை அழிவுக்கும் உபயோகப்படுமானால் நாம் என்ன செய்யவேண்டியது என்பது நமக்குத் தெரியும். கதர் என்பதாக குருட்டு நம்பிக்கையில் விழுந்து உழன்று கொண்டு நமது சுயமரியாதை பறிபோவதைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம் என்பதாக உறுதி கூறுகிறோம்.

பார்ப்பனர்களின் அரசியல் புரட்டுகளையும் மதப் புரட்டுகளையும் கண்ட கண்ட விடங்களில் எல்லாம் நாம் அவற்றை தாராளமாய் கண்டிக்கவில்லையா? நமது எதிரிகளும், அறிவிலிகளும் நம்மை தேசத் துரோகி என்கிறார்கள் என்றோ மதத்துரோகி என்கிறார்கள் என்றோ நாஸ்திகர்கள் என்கிறார்கள் என்றோ பயந்து நமது மனச்சாக்ஷியை எங்காவது மாற்றிக் கொண்டோமா? அது போலவே கதர் இயக்கத்திலும் பார்ப்பனப் புரட்டுகளைக் கண்டோமானால் நம்மை கதர் துரோகி என்று பிறர் சொல்வார்களே எனப் பயந்துகொண்டு ஒருக்காலும் வாயை மூடிக்கொண்டிருக்க மாட்டோம்.



"தேசத் துரோகி, ராஜத் துரோகி, தெய்வத் துரோகி, மதத் துரோகி, பிராமணத் துவேஷி, காங்கிரஸ் துரோகி, சுயராஜ்யக் கட்சித் துரோகி" முதலிய எத்தனையோ "துரோகியும் துவேஷியும்" ஆகி ஜெயிலுக்கும் நரகத்திற்கும் போனாலும் சரி நமது சுயமரியாதையே நமது பிறப்புரிமை என்று நமக்குப் பட்டதைச் சொல்லி வரும் போது கதர்த் துரோகிப் பூச்சாண்டிக்கு ஒருக்காலமும் பயந்து விடமாட்டோம். இப்பொழுது தமிழ்நாடு கதர் ஸ்தாபனத்தில் 100 - க்கு 75 பேருக்கு மேலாகவே பார்ப்பனர்கள் மாதம் 30, 40, 50, 75, 100, 150 என்பதாக சம்பளம் பெற்றுக் கொள்ளை கொண்டு பார்ப்பன அக்கிரஹாரம் சத்திரம் போல் வாழ்ந்து வருவது நமக்குத் தெரியும். ஆனாலும் அதைப் பற்றி நமக்கு அவ்வளவு அதிகமான ஆத்திரமில்லை. ஆனால் அவர்கள் அதை நமக்கு கெடுதி செய்ய ஆதாரமாய் உபயோகித்துக் கொள்வதைத்தான் சகிக்க முடியவில்லை. "சுதேசமித்திரன்" எப்படி நமது பங்கு, நமது சந்தாப் பணம், நமது விளம்பரப் பணம் ஆகியதைக் கொண்டு நமது சமூகத்திற்குக் கேடு சூழும் காரியத்தையே "தேச சேவை", "தேசீயப் பத்திரிகை" என்னும் பேரால் பரப்பி வருகிறதோ அதுபோலவே நமது "ஏழை மக்களுக்கு சாப்பாடு" "குடியானவர்களுக்கு தொழில்" என்று சொல்லிக் கொண்டு செய்யும் கொடுமைகளை பார்த்துக் கொண்டும் நம்மை எவனாவது கதர் துரோகி என்று சொல்லி விடுவானே எனப்பயந்து வாயை மூடிக் கொண்டிருந்தால் அதைவிட பயங்காளித்தனமான காரியம் வேறில்லை என்பதே நமதபிப்பிராயம். ஆனால் மகாத்மா காந்தி அவர்கள் இவ்வியக்கத் தலைவராய் இருப்பதால் அப்படிச் சொல்லுவது மகாத்மாவை குற்றம் சொல்லுவதாகுமோ அவருக்கு துரோகம் செய்ததாகுமோ என்பதாக சில மூட நம்பிக்கைக்காரர் பயப்படவும் கூடும். இப்படிச் சொல்லி சில பார்ப்பனர்கள் பாமர மக்களை ஏமாற்றவும் கூடும். ஆனாலும் அதற்கும் நாம் பயப்படக் கூடாது என்பதுதான் நமது அபிப்பிராயம். பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தாரின் அக்கிரமங்களை எடுத்துச்சொல்வது ராஜத் துரோகமாகாது. "பஞ்சாபில் டையர் ராக்ஷதத் தன்மையாய் நடந்து கொண்டார். அவரைத் தண்டிக்க வேண்டும். அவரைத் தூக்கிலிட வேண்டும்" என்று நாம் சொன்னதும் "லார்ட் செம்ஸ்போர்டை விசாரணை செய்து தண்டிக்கவேண்டும்" என்று நாம் சொன்னதும் ஜார்ஜ் மன்னரை வைததாகுமா? ஜார்ஜ் மன்னரைத் துவேஷித்ததாகுமா? அல்லது இது ஜார்ஜ் மன்னருக்கு துவேஷமாகுமா என்பதை யோசித்துப் பாருங்கள். ஆகையால் நாம் ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை. மகாத்மா நம்மவர், அவர் கொள்கையாலல்லது நாட்டுக்கு சுயராஜ்யமோ சுயமரியாதையோ சமத்துவமோ விடுதலையோ கிடைப்பது என்பது முடியாத காரியம். மகாத்மா ஒரு வருஷத்தில் செய்த வேலை இந்த நாட்டில் இதுவரை தங்கள் தங்கள் ஆயுள் முழுவதும் செலவழித்தும் செய்தவர்களைக் காணோம். ஆதலால் அப்பேர்ப்பட்ட பெரியாரை வணங்குவதற்கும் வரவேற்பதற்கும் பின்பற்றுவதற்கும் இப்பார்ப்பனர்கள் சூழ்ச்சிக்கு பயந்து நாம் பின் வாங்கக் கூடாது.



RangaRakes
tamilnavarasam.com

தவிர மகாத்மா நமது பார்ப்பனர்களின் சூழ்ச்சியை அறியாதார் என்று நினைப்பதும் அறியாமையாகும். அவரிடத்தில் உள்ள தயவினாலும் தாக்ஷண்யத்தினாலும் கருணையினாலும் சிற்சில சமயங்களில் இப் பார்ப்பனர்களின் சூழ்ச்சிக்கு இடம் கொடுத்து விடப்படுகிறதே அல்லாமல் அவரை அவைகள் ஏய்த்து விட்டதாகவோ அல்லது அவர் அறியாமல் செய்து விடுகிறார் என்றோ ஒருக்காலும் சொல்ல முடியாது. அவருக்குச் சில பார்ப்பனர்களிடத்தில் இருக்கும் தாட்சண்ணியம் என்கிற பலஹீனத்தை சிலர் அதிகமாய் உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். அதனால் நமக்கு சில சமயங்களில் கெடுதி நேரிடுவதுண்டு. ஆனாலும் அதுவும் அளவுக்கு மீறுகிற போது நாம் அதையும் எதிர்க்கத் தயாராயிருந்து வருகிறோமேயல்லாமல் அதற்காக நாம் அடியோடு விட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கவில்லை. இருக்கவும் மாட்டோம். தவிர மகாத்மாவிற்கு இந்தப் பார்ப்பனர்களின் யோக்கியதை நன்றாய்த் தெரியும் என்பதற்கு நாம் ஒரு உதாரணம் சொல்லுவோம். பெல்காம் காங்கிரசின்போது மகாத்மாவிடம் நாம் பேசிக்கொண்டிருந்த சமயம் (அதாவது கதர் போர்டு சம்பந்தமாகவே அதிலுள்ள உத்தியோகங்கள் மிகுதியும் பார்ப்பனர்களுக்கே கொடுக்கப்பட்டு வருகிறது என்கிற காரணத்தால் கதர் போர்டு பிரசிடெண்டு என்கிற முறையில் நமக்கும் கதர் போர்டு காரியதரிசி என்கிற முறையில் ஸ்ரீமான் கே. சந்தானம் அவர்களுக்கும் அபிப்பிராய பேதமேற்பட்டு விட்டது. இதில் ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் ஸ்ரீமான் சந்தானத்திற்கு பக்கபலமாயிருந்தார். இது விஷயமாய் எங்களுக்குள் ஒரு முடிவும் ஏற்பட இடமில்லாமல் போகவே கடைசியாக காரியதரிசி ஸ்ரீமான் கே. சந்தானம் அவர்கள் ராஜீனாமாக் கொடுத்துவிட்டார். ராஜீனாமா கொடுத்து விட்டதோடு சும்மா இராமல் இந்த ராஜீனாமாவை மகாத்மா தகவலுக்கு கொண்டுபோய் ஸ்ரீமான் சந்தானத்தின் ராஜீனாமாவைப் பின் வாங்கிக் கொள்ளும்படி செய்ய மகாத்மாவையும் தூண்டப் பட்டது.) மகாத்மா நம்மை கூப்பிட்டு ஸ்ரீமான் சந்தானம் ஏன் ராஜீனாமாக் கொடுத்தார்? என்று கேட்டார்.

நான் கதர் போர்டு சம்பந்தமான உத்தியோகங்களை பெரிதும் பார்ப்பனர்களுக்கே அவர் கொடுப்பதால் அதன் தலைவர் என்கிற முறையில் பார்ப்பனரல்லாதாருக்குக் கொடுக்கவேண்டும் என்பதாகச் சொன்னதினால் அவருக்குத் திருப்தியில்லாமல் அவர் ராஜீனாமாக் கொடுத்து விட்டார் என்று சொன்னேன்.

**மகாத்மா:** இது ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாருக்குத் தெரியாதா ? என்றார்.

**நான் :** இது விஷயத்தில் அவர்கள் எல்லோரும் ஒன்றுதான் என்று சொன்னேன்.

**மகாத்மா:** அப்படியானால் உமக்கு ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரிடம் கூட நம்பிக்கை இல்லையா? என்றார்.

**நான் :** பார்ப்பனர்களுக்கு அவர்களிடம் இருக்கும் நம்பிக்கை அவ்வளவு எனக்கு அவரிடம் இல்லை என்று சொன்னேன்.

**மகாத்மா:** அப்படியானால் பார்ப்பனர்களிடத்திலேயே உனக்கு நம்பிக்கையில்லையா என்றார்.

**நான்:** இந்த விஷயத்தில் நம்பிக்கையே உண்டாவதில்லையே என்றேன்.

**மகாத்மா:** அப்படியானால் உலகத்திலேயே நல்ல பார்ப்பனர் இல்லை என்பது உமது அபிப்பிராயமா என்றார்.

**நான்:** என் கண்ணுக்குத் தென்படுவதில்லையே நான் என்ன செய்யட்டும் என்றேன்.

**மகாத்மா:** அப்படிச் சொல்லாதீர்கள் நான் ஒரு நல்ல பார்ப்பனரைக் கண்டிருக்கிறேன். அவர்தான் கோக்கலே. அவர் தன்னை பிராமணன் என்று சொல்லிக்கொண்டதே கிடையாது, யாராவது அவரை பிராமணன் என்று கூப்பிட்டாலும், மரியாதை செய்தாலும் ஒப்புக்கொள்ளாததோடு உடனே ஆட்சேபித்துத் தனக்கு அந்த யோக்கியதை இல்லை என்பதை எடுத்துக் காட்டுவார்.

**நான்:** மகாத்மா கண்ணுக்கே ஒரே ஒரு யோக்கியமான பிராமணன் மாத்திரம் தென்பட்டு இருக்கும்போது என் போன்றவர்கள் கண்ணுக்கு எப்படி தென்படக்கூடும் என்றேன்.

**மகாத்மா:** (வேடிக்கையாய் சிரித்து விட்டு) மறுபடியும் ஸ்ரீமான் சந்தானம் ராஜீனாமாவை வாபீசு பெற்றுக்கொண்டு காரிய தரிசி வேலை பார்க்கக்கூடாதா என்று என்னைக்கேட்டார்.

**நான்:** நன்றாய்ப் பார்க்கலாம் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் பார்ப்பனரல்லாதாருக்கு சரிபகுதி அதாவது 100-க்கு 50 உத்தியோகமாவது கொடுக்கப் படவேண்டும் என்றேன்.

**ஸ்ரீமான் பாங்கர் :** ஆச்சரியப்பட்டு 100-க்கு 50 வீதம் போதுமா? அது கூடவா இப்போது கொடுக்கப்படவில்லை என்கிறீர் என்று கேட்டார்.

**நான்:** ஆம், என்றேன்.

**சங்கர்லால் பாங்கர்:** ஸ்ரீமான் இராமசாமி நாயக்கர் 100-க்கு 50 போதுமென்கிறாரே இது என்ன அதிசயம் என்றார்.



RangaRakes
tamilnavarasam.com

**மகாத்மா:** நான் ஒருபோதும் சம்மதியேன். 100-க்கு 90 கொடுக்க வேண்டும்.

**நான் :** 100-க்கு 50 கொடுப்பதாய் தீர்மானம் போட ஒப்புக் கொள்ளமுடியாது என்கிறவர்கள் 100-க்கு 90 கொடுப்ப தெப்படி? என்றேன்.

**மகாத்மா:** தீர்மானம் போடவேண்டும் என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் 100-க்கு90 கொடுக்கவேண்டியது கிரமம் என்று சொல்லுவேன் என்று சொல்லிவிட்டு ஸ்ரீமான் சந்தானத்தைப் பார்த்து பார்ப்பனரல்லாதாருக்கு உத்தியோகம் கொடுப்பதில் உமக்கென்ன ஆட்சேபணை என்று கேட்டார்.

**சந்தானம்:** எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஒருவரும் வருவதில்லையே நான் என்ன செய்யட்டும் என்று சொன்னார்.

**மகாத்மா:** என்னைப் பார்த்து என்ன நாயக்கர் ஜீ? யாரும் வருவ தில்லை என்கிறாரே என்ன சொல்லுகிறீர்?

**நான்:** அது சரியல்ல. ஏன் வருவதில்லை என்பதற்கே காரணம் வேண்டும். முதலாவது வேலை கொடுக்க வேண்டும். வேலை கொடுத்து அவனை மரியாதையாக நடத்த வேண்டும். இந்த இரண்டு காரியம்இருந்தால் எவ்வளவோ பேர் வேண்டுமானாலும் கிடைப்பார்கள்.

**மகாத்மா:** அப்படியானால் இனிமேல் உத்தியோகஸ்தர்களை நியமிக் கும் அதிகாரம் நீங்கள் வைத்துக் கொள்ளுகிறீர்களா?

**நான்:** ஸ்ரீமான் சந்தானம் அவர்கள் தன்னால் முடியாதென்றால் நானே பார்த்துக் கொள்ளுகிறேன்.

**மகாத்மா:** ஸ்ரீமான் சந்தானத்தைப் பார்த்து இனி உத்தியோகஸ் தர்கள் நியமனம் நாயக்கரிடம் விட்டு விடுங்கள் என்றார்.

**சந்தானம்:** எனக்கு ஆட்சேபணையில்லை.

**சி. இராஜகோபா லாச்சாரியார் :** குறுக்கே தலையிட்டு அது முடியாத காரியம். ஏனென் றால் யார் வேலை வாங்குகிறார்களோ அவர்கள்தான் வேலைக்காரரை நியமிக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் ஒருவர் நியமிப்பது,ஒருவர் வேலை வாங்குவதுமாயு மிருந்தால் வேலை நடக்காது என்றார்.



**மகாத்மா:** உடனே சிரித்துக்கொண்டு நாயக்கர் சொல்லுவதில் ஏதோ உண்மை இருக்கும்போல் தோன்றுகிறது. இப்போது நான் காங்கிரஸ் பிரசிடெண்டு, ஸ்ரீமான் ஜவாரிலால் நேரு காரியதரிசி,நான் நியமித்த ஆளைக் கொண்டு ஜவாரிலால் வேலை வாங்க முடியாவிட்டால் நானாவது குற்ற வாளியாக வேண்டும். அல்லது ஜவாரிலாளாவது குற்ற வாளியாக வேண்டும். நியமிக்கப்பட்ட ஆளிடம் குற்றமி ருக்க நியாயமில்லை. சர்க்காரில் கூட நியமிப்பவர் ஒருவர், வேலை வாங்குபவர் ஒருவர். அப்படிக்கிருக்க அதில் எங்கேயாவது வேலை வாங்குபவர் நியமிக்காததால் வேலைக்காரர்கள் சரியாய் நடக்கவில்லை என்று ஏற்பட்டி ருக்கிறதா? என்று கேட்டார்.

**சி. ராஜகோபா லாச்சாரியார்:** வகுப்பு பிரிவினை பார்த்தால் போதுமா ? வேலை நடக்க வேண்டாமா? தகுதியும் கூட பார்க்க வேண்டாமா? என்றார்.

**மகாத்மா:** நாயக்கர் அதையும் பார்த்துக் கொள்வார் என்றே நினைக் கின்றேன். அப்படி பார்ப்பனரல்லாதாரை நியமித்ததன் மூலம் ஏதாவது வேலைகள் கொஞ்சம் கெட்டுப் போனாலும் குற்றமில்லை. இரண்டு காரியங்களும் நடக்க வேண்டியதுதான். அதாவது கதர் விஷயம் எப்படி முக்கிய மானதோ அதுபோல வகுப்பு அதிருப்திகளும் நீங்க வேண்டியதும் மிக முக்கியமானது. ஆதலால் கதர் போர்டு சம்பந்தமான உத்தியோக நியமனம் நாயக்கர் கையில் இருக்கட்டும் என்று சொன்னார்.

பிறகு எல்லோரும் சரி என்று ஒப்புக்கொண்டதாக அவருக்கு ஜாடை காட்டிவிட்டு வந்துவிட்டோம். பிறகு எப்படி எப்படியோ பாடுபட்டு கதர் ஆதிக்கம் முழுவதும் தங்கள் கைக்கே வரும்படியாக பார்ப்பனர்கள் செய்துகொண்டார்கள். அதைப்பற்றி நமக்கு கவலை இல்லை. நாமும் கொஞ்சமும் லக்ஷியம் செய்யாமல் கதருக்காக எவ்வளவு உழைக்க வேண்டுமோ அவ்வளவு உழைத்தோம்; உழைத்துக் கொண்டுமிருக்கிறோம்; இனியும் உழைக்கப் போகிறோம். எனவே மகாத்மா காந்தி இவர்களை சரியானபடி அறிந்து கொள்ளவில்லை என நாம் நினைப்பது தப்பு என்றே சொல்லுவோம். ஆதலால் மகாத்மாவை வரவேற்கும் விஷயத்திலும் பணம் கொடுக்கும் விஷயத்திலும் நம்முடைய பங்கை நாமும் சரியாக செலுத்தவேண்டும். சில இடங்களில் பார்ப்பனரல்லாதார் தனியாய் வசூல் செய்தோ தனியாய் வரவேற்றோ தங்கள் கடமையை செய்யலாம் என்பதாக சிலர் அபிப்பிராயப்படுவதாகவும் தெரிய வருகிறது. அது விஷயத்திலும்



RangaRakes tamilnavarasam.com

நமக்கு ஆக்ஷேபணை இல்லை. சென்னை, மதுரை, குடியேத்தம், வேலூர் முதலிய இடங்களில் நம்மை நேரிலும் கேட்டார்கள். நாம் அப்படியானாலும் சரி, எப்படியாவது நம் கடமையைச் செய்ய வேண்டும் என்றேதான் சொன் னோம். கடைசியாக சொல்லுவது என்ன வென்றால், மகாத்மா வரவு நாள் சமீபத்தில் இருப்பதால் ஆங்காங்கு உள்ளவர்கள் தனியாகவோ, கலந்தோ தங்களுக்கு தோன்றுகிறபடி ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டுமாய்க் கோருகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 06.03.1927**



# இதற்கு என்ன பெயர்

கோயமுத்தூர் நகர பரிபாலன சபையில் பார்ப்பன கவுன்சிலர்களின் துவேஷங்களும் உபத்திரவங்களும் கோயமுத்தூர் முனிசிபல் சேர்மனிடம் பொறாமைக் கொண்ட சில ஆசாமிகளின் விஷமங்களும் கோயமுத்தூர் விஷயங்களைப் பத்திரிகையில் கவனித்து வருகிறவர்களுக்கு நன்றாய் தெரிந்திருக்கும். இப்போது அது நாளுக்கு நாள் முற்றி வருவதுடன் அப் பார்ப்பனர்களுக்கு நாளுக்கு நாள் புத்திகூட மழுங்கிக்கொண்டு வருகிற தென்றே சொல்லவேண்டியிருக்கிறது. சென்ற வாரத்தில் கோயமுத்தூர் முனி சிபாலிட்டியில் ஒரு பார்ப்பனர் பார்ப்பனரல்லாத சேர்மெனைப் பற்றி ஒரு தீர்மானம் கொண்டு வந்த விஷயம், மற்றொரு இடத்தில் பிரசுரித்திருக் கிறோம். அதாவது சேர்மனுக்கு முனிசிபாலிட்டியில் அதிகமான வேலை இருப்பதால், அவர் தனக்குள்ள கௌரவ உத்தியோகங்களில் ஏதாவது ஒன்றை ராஜினாமா கொடுத்துவிடவேண்டும் என்ற பொருள் கொண்ட தீர்மானம் கொண்டு வந்தாராம். இத்தீர்மானத்தை ஈரோடு சேர்மன் ஸ்ரீமான் ஸ்ரீனிவாச முதலியார் அவர்களாயிருந்தால் காலடியில் போட்டு நசுக்கி இருப்பார். ஸ்ரீமான் ரத்தினசபாபதி முதலியாரோ அவ்விதம் செய்யாமல் வேண்டுமென்றே கண்ணியமாய் அதை ஏற்றுக்கொண்டு விவகாரத்திற்கு விட்டதோடு தானும் அக்கிராசன ஸ்தானத்திலிருந்து மாறி தாராளமாய் அங்கத்தினர்கள் பேசவும் தன்பேரில் குற்றம் இருந்தால் எடுத்துக் காட்டவும் இடம் கொடுத்தார். இதை கொண்டு வந்தவர்கள் மூன்று வித யோக்கியதை யுடையவர்கள் என்று சொல்லப்படுபவர்கள். அதாவது படித்தவர் என்பதோடு இரண்டாவது சட்டம் தெரிந்தவரென்றும் சொல்லிக்கொள்ள உரிமையுடையவர்கள். மூன்றாவது பிராமணர் என்றும் உயர்ந்த ஜாதியார் என்றும் சொல்லிக் கொள்ளும் ஆணவமும் படைத்தவர்கள். இத்தீர்மான மானது படித்த அறிவை ஆதாரமாகக் கொண்டதா? அல்லது சட்டத்தை ஆதாரமாகக் கொண்டதா? அல்லது பிராமணத் தன்மையை ஆதாரமாகக் கொண்டதா? என்று பார்த்தால் பார்ப்பனர் பிறவிக் குணம் என்று சொல்ல வேண்டியதல்லாமல் வேறென்ன சொல்லுவதென்று நமக்கு விளங்கவில்லை. இத்தீர்மானத்தை அங்கிருந்த பார்ப்பனரல்லாத கவுன்சிலர் 25 பேர்களில் ஒருவராவது ஆதரிக்கவில்லை. கடைசியாக ஸ்ரீமான் சி.எஸ். சாம்பமூர்த்தி அய்யர் என்கிற ஒரு பார்ப்பனர் ஆதரித்தாராம். ஸ்ரீமான் சி.எஸ். சாம்பமூர்த்தி



RangaRakes tamilnavarasam.com

அய்யர் என்பவர் கோயமுத்தூர் பார்ப்பனர்களுக்கும் கொஞ்சம் புத்திசாலி என்றும் மற்ற பார்ப்பனர்களைப்போல அவ்வளவு முட்டாள்தனமாய் சிக்கிக் கொள்வதோ காரியங்களைச் செய்வதோயில்லாமல் தந்திரமாய் நடந்து கொள்ளக்கூடிய சாமர்த்தியசாலி என்றும் பெயர் வாங்கினவர். அப்படிப்பட்ட வருக்கும் பார்ப்பனரல்லாதாரிடத்தில் ஏற்பட்ட துவேஷத்தின் போதையும் பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தை எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்கிற ஆத்திரமும் அவருடைய அறிவையும் கூட மளுங்கச் செய்து அத் தீர்மானத்தை ஆதரிக்கும்படி செய்துவிட்ட தென்றால் மற்ற பார்ப்பனர்களால் எவ்வளவு உபத்திரவம் நடந்து கொண்டிருக்கும் என்பதை வாசகர்களே கவனிக்க வேண்டும். அல்லாமலும் இந்த தீர்மானத்தில் வெறும் குறும்பு இல்லாமல் வேறு ஏதாவது கண்ணியமான கருத்து அடங்கி இருக்கிறதா? இதற்கு பார்ப்பனர்களின் துவேஷமும் உபத்திரவமுமென்று சொல்வதல் லாமல் வேறு என்ன பெயரிடுவது? ஸ்ரீமான் இரத்தினசபாபதி முதலியாருக்கு சட்டசபை மெம்பர் வேலையோ, ஜில்லா போர்டு தலைவர் வேலையோ வைத்து இருப்பதானால் முனிசிபல் சேர்மனுக்கு லாயக்கில்லை என்று சொல்வதனால் மற்றவர்களின் யோக்கியதையை அவரவர்களே யோசித்துப் பார்க்கட்டும். ஸ்ரீமான் இரத்தினசபாபதி முதலியாருக்காவது அவர் சாப்பாட் டுக்கு தாராளமாக அவருடைய பெரியவர்கள் சம்பாதித்து வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள். இம்மாதிரியான பொது காரியம் தவிர அவருக்கு வேறு ஒரு வேலையும் இது சமயம் இல்லை. அதாவது விவசாயமோ, வியாபாரமோ, வக்கீல் பிழைப்போ ஆகிய இதுகளில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்கிற ஒரு தொந்தரவும் கிடையாது. இவருக்கே இவ்வேலைகள் லாயக்கில்லை என்று சொல்வதானால் அன்றாடம் பலர் குடியைக் கெடுத்தாலொழிய ஜீவனமில்லை, சொக்காயில்லை, தலைப்பாகையில்லை, வீட்டு வாடகைக்கு மார்க்க மில்லை மற்றும் 12 மணி நேரமும் தங்கள் வயிற்றுப் பாட்டிற்கே நாணயமற்ற வழியில் உழைக்க வேண்டியவர்களும் தங்களது அறிவு, கல்வி, நேரம் முழுவதையும் அன்னியருக்கு விற்று ஜீவிக்கிறவர்களுக்கு லாயக் குண்டா? என்பதையும் அவர்கள் வசம் பொது காரியத்தை ஒப்புவிப்பது இதை விட நல்லதா? என்பதையும் வாசகர்களே யோசித்துப் பார்க்கட்டும். ஆனால் இவற்றையெல்லாம் கவுன்சில் விவாதத்தின் போதே மற்ற கவுன் சிலர்கள் நன்றாய் எடுத்துக்காட்டி புத்திவரும்படி செய்திருக்கிறதாக பத்திரிகையில் பார்த்தோம். ஆனாலும், பார்ப்பனரல்லாதாருக்கு எங்கே யாவது கொஞ்சம் ஆதிக்கமிருந்தால் அவ்விஷயத்தில் இவ்வளவு அக் கிரமமாகவும், யோக்கியப் பொறுப்பற்ற தனமாகவும் ஒவ்வொரு பார்ப்பனரும் நடந்துகொண்டு அதை ஒழிக்கப் பார்ப்பதும், இதை யாராவது கண்டித்தால் இது பார்ப்பன துவேஷமென்று சொல்லுவதுமானால் இதன் அர்த்தமென்ன? ஸ்ரீமான் சாம்பமூர்த்தி அய்யரைப்போல் பொறுப்பும், யோக்கியதையும், புத்தியும் உள்ளதாகக் கருதப்படும் பார்ப்பனர்கள் இவ்வித குறைவான காரியங்களில் தலையிடாமலும், தலையிடுபவர்களுக்கும் புத்தி சொல்லி இரு



சமூகத்திற்கு ஒற்றுமை ஏற்படுவதற்கு வேண்டிய காரியங்கள் செய்ய வேண்டியதிருக்க அதை மறந்து தானும் இதில் சரிபங்கு எடுத்துக் கொள்வ தானால், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் ஒற்றுமைக்கும் பரஸ்பர அன்புக்கும் இடம் எங்கே இருக்கிறது என்று கேட்கிறோம்? தஞ்சை ஜில்லா போர்டு பிரசிடெண்டும் ஒரு யோக்கியமான பார்ப்பனரல்லாதாராயிருப்பதால் அவரையும் அங்கு இரண்டு பார்ப்பனர்கள் இதுபோலவே கொடுமை செய்து வருகிறார்கள். பார்ப்பனப் பத்திரிகை ஆணவமானது இவற்றிற்கு உதவி யாயிருக்கிறது. சேர்மனின் அக்கிரமங்களைக் கண்டிக்க ஒவ்வொரு கவுன்சி லருக்கும் ஒவ்வொரு ஓட்டருக்கும் வரி கொடுப்போருக்கும் உரிமையுண்டு. அதை நாம் ஒரு சிறிதும் ஆக்ஷேபிக்கவில்லை. பார்ப்பனரல்லாதார் என்கிற காரணத்திற்காக விட்டு விடும் படியும் நாம் சொல்லவில்லை. நன்றாக யோக்கியமான வழியில் கண்டிக்கட்டும். ஆனால் சேர்மனுக்கு இத்தனை கவுரவம் கூடாதென்று சொல்லுவதும், இவர் கூடாது என்று சொல்லுவதும் எவ்வளவு அல்பத்தனமும் கெட்ட எண்ணமும் என்பதுதான் நமது கேள்வி.

ஈரோட்டில் இரவு பகலாக பணம் திருட்டுப் போகிறது. சாமான்கள் திருட்டுப் போகிறது. வரிகள் கொள்ளைப் போகிறது. வரிப்பணங்கள் நாசமா கிறது. அக்கிரம வரிகள் தலைவிரித்தாடுகிறது. இவ்வளவும் செய்யும் நாணய மற்ற சேர்மனும் இங்குள்ள பார்ப்பன கவுன்சிலரும் ஒரே படுக்கையில் படுத்துக்கொண்டு கொஞ்சுகிறார்கள். கவுன்சிலிலும் கேள்வி இல்லை, மந்திரி சபையிலும் கேள்வி இல்லை, சட்டசபையிலும் கேள்வி இல்லை. கோய முத்தூர் சேர்மன் மீது ஒரு கவுன்சிலராவது இவ்வளவு பொறாமையுடனும் கெட்ட எண்ணத்துடனும் தீர்மானம் கொண்டு வந்த கவுன்சிலராவது இம் மாதிரியாக ஒரு குற்றத்தையும் சொல்லாமல் மேலும் மேலும் சேர்மனைப் புகழ்ந்துகொண்டே இம்மாதிரி விஷமம் செய்வதானால் இச்சமூகத்தில் நல்ல எண்ணத்திலும் மானம் வெட்கத்திலும் இனியுமா சந்தேகம் என்றுதான் கேட்கிறோம். இது சமயம் பார்ப்பனர்களுக்கு தங்களைச் சேர்ந்தவர்கள் அதிகாரத்திலிருப்பதாலும் தங்களைப் பிறர் வந்து நத்தும்படியான தொழிலிலி ருப்பதாலும் செல்வாக்குள்ள பத்திரிகைகள் தங்களுடையதாக இருப்பதாலும் இதுவும் செய்யலாம் இன்னும் அநேகம் செய்யலாம். இதைப்பற்றி யாராவது பேசினால் அவர்களை ஒழித்து விடலாமென்கிற ஆணவம் கொண்டாலும் கூட மக்கள் உண்மை அறிந்து தங்கள் சுயமரியாதைக்கு சத்தியாக்கிரகம் செய் யும் உணர்ச்சி வந்தால் அப்போது இவர்கள் கதி என்ன ஆகும் என்பதை யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். ஸ்ரீமான் சாம்பமூர்த்தி அய்யர் அவர்கள் போன்றார்கள் இம் மாதிரி விஷயங்களில் தலையிட்டிருக் காவிட்டால் இதைப்பற்றி இவ்வளவு தூரம் எழுத முன்வந்திருக்க மாட்டோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.03.1927**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் யுத்தம் தொடங்கப்பட்டு விட்டது

கொஞ்ச காலமாக நம் நாட்டுப் பார்ப்பனரல்லாதார் மக்கள் தங்களது சுயமரியாதை உணர்ச்சி பெற்று பார்ப்பனீய அடிமைத் தன்மையில் இருந்து விடுபடவேண்டும் என்கிற உணர்ச்சி பெறுகிற காரணத்தால் இப்பார்ப்பனர்கள் இவ்வுணர்ச்சியை அடக்கி ஒழிக்க பல வழிகளிலும் முயற்சித்து வருவது பொது விஷயங்களில் கண்ணோட்டம் செலுத்திவரும் யாவரும் அறிந்ததே. அதாவது 10 வருஷங்களுக்கு முன்னால் டாக்டர் நாயர் பெருமானும் தியாகராய பெருமானும் அரசியல் துறையிலும் காங்கிரஸ் இயக்கத்திலும் எவ்வளவு தூரம் ஈடுபட்டிருந்தார்கள் என்பதும் அக்கால அரசியல் காங்கிரஸ் கான்பரன்சுகளில் தலைமை வகித்தல், அமிதவாதமான சொற்பொழிவு நிகழ்த்துதல், கமிட்டியில் சாட்சி சொல்லுதல், தேசீய அபிப்பிராயம் சொல்லுதல், இரகசிய போலீசாரின் கண்காணிப்புக்கு ஆளாகுதல் முதலிய காரியங்களில் தற்காலம் மிக பெரிய தேசபக்தர், தேசத் தொண்டர், தேசீய வீரர், தேசீயத் தலைவர் என்று சொல்லப்படுவார்கள். எவர்க்கும் இளைத்தவர்கள் அல்லாதாராயிருந்து வந்ததும் யாவரும் அறிந்ததே.

இப்பொழுதாவது பார்ப்பனரல்லாதார் "தேசபக்தர்" ஆவதென்றால் வெகுசுலபமான காரியம். ஏனெனில் பார்ப்பனர்களுக்கு விரோதம் என்றுபடும்படியாய் பார்ப்பனரல்லாதார் கட்சியென்று ஒன்றிருப்பதால் அக்கட்சியை வைவதற்கென்றோ அதற்கு விரோதமாய் பிரசாரம் செய்வதற்கென்றோ ஒரு பூனைக் குட்டியோ நாய்க்குட்டியோ வந்தாலும் நமது பார்ப்பனர்கள் அதற்கும் ஜே! போட்டு மாலை இட்டு வண்டியில் வைத்து இழுத்து பத்திரிகைகளின் மூலம் தலைவர் தலைவர் என்கிற பட்டமும் சூட்டி வயிற்றுப் பிழைப்புக்கும் கூட ஆதரவு தேடிக்கொடுப்பதும். தினக்கூலி மாதக்கூலி கொடுப்பதுமான சவுகரியம் இருப்பதால் யார் வேண்டுமானாலும் தேசபக்தரும் தலைவரும் ஆகிவிடலாம். இப்படிப்போல் இல்லாமல் பார்ப்பனரல்லாதார்களை முற்போக வொட்டாமல் தடுத்து சூழ்ச்சி செய்து அடக்கி ஆளும் வஞ்சக காலத்தில் தேசத் தலைவராகவும் தேசபக்தர்களாகவும் ஒரு பார்ப்பனரல்லாதார் விளங்கி இருந்தனரென்றால் அவர்கள் எவ்வளவு தீவிர தேச பக்தியும் தைரியமும் உடையவர்களாயிருந்திருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களே இப்பார்ப்பனர்களின் உபத்திரவத்தையும் சூழ்ச்சியையும் கொடுமையையும் வஞ்சகத்தையும் பொறுக்கமாட்டாமல் தேசத்தைவிட சுயமரியாதையே பெரிதென்றெண்ணி. பார்ப்பனர் ஆதிக்கம் பார்ப்பனர் கூட்டுறவு முதலிய பார்ப்பன சம்பந்தமுள்ள அரசியலை உதறித் தள்ளிவிட்டுவந்து தனியாக பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கும் முன்னேற்றத்திற்கும் சமத்துவத்திற்கும் ஆக ஒரு இயக்கத்தை ஆரம்பித்ததும் அதை ஒழிக்க பார்ப்பனர்கள் செய்த பிரயத்தனங்களும் அதற்காக பார்ப்பனரல்லாதாரை கை ஆயுதமாக உபயோகித்துக் கொண்டதும் அனுபவபூர்வமாயும் பிரத்தியக்ஷ பூர்வமாயும் யாரும் அறிந்ததே. அது போலவே இப்போதும் இப்பார்ப்பனர் சூழ்ச்சியில் சிக்கி முன் அனுபவப்பட்டவர்களைக் கண்டும் புத்திவராமல் தாங்கள் அவர்களைவிட அனுபவசாலிகள், புத்திசாலிகள், கெட்டிக்காரர்கள் என்பதாகவோ, அலட்சிய புத்தியாலோ பார்ப்பன மாய்கையில் ஏமாந்தோ சிலர் சிக்கி விழுந்து பார்ப்பனரல்லாதார் இயக்கத்தையும் கெடுத்து மக்களையும் சுயநலக்கார நயவஞ்சகர்கள் வசம் காட்டிக் கொடுத்து புதிதாக பார்ப்பன அனுபவம் பெற்று அவர்களின் யோக்கியத்தை தெரிந்து டாக்டர் நாயர் பெருமான், தியாகராயர் போன்று விலகி முன்னிலும் அதிகமாய் அவ்வியக்கத்தை பரவச் செய்து வருகிறார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே. ஆனால் நமது பார்ப்பனர்களுக்கு தாங்கள் முன் சொல்லப்பட்டவர் இயக்கங்களை ஒழிக்க பிரயத்தனப்பட்ட காலத்தில் சவுகரியமேற்பட்டது போல் இப்போது சவுகரிய மேற்படவில்லை. ஏனெனில் பாமர ஜனங்கள் கண் விழித்துக் கொள்ளத்தக்க நிலைமைக்கு வந்துவிட்டார்கள். தவிர பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை திட்டவும் அழிக்கவும் முன் ஆள்கள் கிடைத்த மாதிரி பார்ப்பனரல்லாதாரில் மரியாதையும் யோக்கியதையும் பாமர ஜனங்கள் நம்பத் தகுந்த நிலைமையும் உடைய ஏமாந்த சோனகிரிகளாக யாரும் கிடைக்கவில்லை. ஒவ்வொருவராக நழுவியும் விட்டார்கள். நழுவிக் கொண்டேயும் வருகிறார்கள். ஆதலால் வெறும் வயிற்றுச் சோற்று ஆசாமியும் தினக்கூலி மணிக்கூலி ஆசாமிகளும் தவிர வேறு யாரும் கிடைப்பது மில்லை. இதனால் பார்ப்பனர்கள் பாடு இந்தக் காரியத்திற்கு ஆள் கிடையாது. வெகு திண்டாட்ட மாய்ப் போய்விட்டதால் இப்போது அவர்கள் புதிய தந்திரம் ஒன்று கண்டு பிடித்திருக்கிறார்கள். அதாவது வெள்ளைக்காரர்கள் தயவை எதிர்பார்ப்பது சட்ட இலாக்காவிலும் நீதி இலாக்காவிலுமே தங்கள் இனத்தவர்கள் இப்போது ஆதிக்கம் பெற்றிருப்பதால் அதைக்கொண்டு சட்டத்தின் பேரால் இவ்வியக்கத்தை ஒழிக்க முயற்சித்து வருகிறார்கள். எப்படியெனில் பம்பாய் மாகாண பார்ப்பனரல்லாதார் மந்திரி ஸ்ரீமான் யாகவர் இங்கு வந்த காலத்தில் அவர் மீது சர்க்கார் சட்ட மெம்பர் ஸ்ரீமான் சர்.சி.பி. ராமசாமி அய்யர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டு அவரை இம்மாகாணத்தை விட்டு ஏன் வெளியேற்றியிருக்கக் கூடாது? என்று ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் சொன்னதும் அதற்கு பிறகு ஸ்ரீமான்கள் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் பேரிலும் ஆரியா அவர்கள் பேரிலும் சட்டமெம்பரும் அட்வகேட் ஜெனரலும்



RangaRakes tamilnavarasam.com

கவர்ன்மெண்டும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி ஸ்ரீமான் சீனிவாசய் யங்கார் அவர்கள் சர்க்காரைக் கெஞ்சினதும் சென்றவாரம் திருவண்ணா மலையில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் ஸ்ரீமான் நாயக்கர் முதலிய வர்கள் பேரில் சர்க்கார் 153 – A பிரிவுப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் சர்க்கார் எடுத்துக்கொள்ளாவிட்டால் சுயராஜ்யக் கட்சி யாராவது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னதும் ஸ்ரீமான் சி. ராஜ கோபாலாச்சாரியார் அவர்கள் தஞ்சைக்கு கதர் பிரசாரத்தின் பேரால் இவ் வாரம் போயிருந்த காலத்தில் “தமிழ்நாடு” பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பொதுக்கூட்டத்தில் பேசினதும் சர்க்கார் ஆதிக்கத் தில் உள்ள பார்ப்பன பெரிய அதிகாரிகள் சிலர் இவர்கள் வேண்டுகோளுக்கு அனுகூலமாய் ஆதாரங்கள் தேடிக் கொண்டும் ஏற்படுத்திக் கொண்டும் இருப் பதும் ஆகியவைகளே இதற்கு போதுமான ஆதாரங்கள். ஒத்துழையாமைக் காரரும் அரசாங்கத்திற்கு முட்டுக்கட்டை போடுபவர்களுமான பார்ப்பனர் களே இம்மாதிரி ஆசை கொள்ளுவார்களேயானால் மற்ற பார்ப்பனர்கள் எவ்வித ஆசைகொள்ளமாட்டார்கள் என்பதை வாசகர்களே யோசித்துக் கொள்ளட்டும். நமக்கு பல மொட்டைக் கடிதங்கள் கேவலமாகவும், வண்டத் தனமாகவும், மிரட்டுதலாகவும் எழுதிவருவதையும் பார்க்கும்போது அப் பார்ப்பனர்களின் ஆசையும் ஆத்திரமும் நன்றாய் விளங்குகிறது.

இதோடு கூட நாம் பிரசாரங்களுக்கு வெளியூர்களுக்குப் போகிற இடங்களில் எல்லாம் பார்ப்பனர்கள், மேல்கண்ட பார்ப்பனர்கள் ஆசைப் படுவதுபோல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளத்தக்க மாதிரியும் வேறு பல அதாவது திருவண்ணாமலை, மதுரை முதலிய இடங்களில் பார்ப்பனர்கள் மேல் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் முடிவு பெறாமலிருக்கும் பிராதுகளை எதிர்க்க ஆதாரமாகவும் சில ஆதாரங்களை ஏற்படுத்திக்கொண்டு வரு கிறார்கள். அவை யாதெனில், வேலூருக்குப் போயிருந்தபோது, “நாயக்கர் கோயிலுக்கும் ஆதித் திராவிடர்களை கூட்டிக்கொண்டு போகப் போகிறார். எல்லோரும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்” என்று துண்டுப் பிரசுரம் வழங்கப்பட்டதும், நாகையில் “நாயக்கர் ஆதி திராவிடர்களை கோவிலுக்குள் கூட்டிப் போகப் போகிறார்” என்று மேஜிஸ்ட்ரேட்டுக்கு அறிவித்து பந்தோ பஸ்துக்கு ஆள்களைக் கேட்டு கூட்டிப் போனதும், கோவிலை அனாவசி யமாய் பூட்டி வைத்து ஜனங்களுக்குள் ஒரு தப்பபிப்பிராயத்தை உண்டு பண்ணுவதுமான காரியங்களைச் செய்து வருகிறார்கள். சர்க்காருக்கு தப்பபிப்பிராயங்கள் உண்டு பண்ணுவதைப் பற்றி நமக்கு கவலையில்லை. ஆனாலும் இதிலிருந்து இவர்கள் எண்ணத்தையும் ஆசையையும் பொது ஜனங்களே உணர வேண்டும். தவிர, திருவண்ணாமலையில் அண்ணாமலை யார் கோவிலுக்கு சுவாமி தரிசனத்திற்கு சென்ற ஸ்ரீமான் கண்ணப்பர் முதலியவர்களைத் தடுத்து சுவாமி தரிசனம் செய்ய வொட்டாமல் கதவைப் பூட்டிக்கொண்டதாக ஸ்ரீமான் கண்ணப்பர் டிரஸ்டி பேரிலும் கோவில்



மேனேஜர் பேரிலும் குருக்கள் பேரிலும் திருவண்ணாமலை மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் பிராது கொடுத்திருக்கிறார். சரியோ தப்போ கோர்ட்டார் கிரமமாய் விசாரித்து நீதி செலுத்த விட்டுவிட வேண்டியது எல்லோருடைய கடமையுமாகும். அப்படிக்கில்லாமல் இந்தப் பிராதை பார்ப்பனர் – பார்ப்பன ரல்லாதார் கட்சி சண்டையாக எடுத்துக்கொண்டு பார்ப்பனர்கள் பெரிதும் இதில் கவலை வைத்து எவ்வளவோ காரியங்கள் செய்யப்பட்டு வருகிறது. முதலாவது அங்கிருந்து ஒரு பார்ப்பனரல்லாதார் மேஜிஸ்ட்ரேட் திடீரென்று விசாரணைக்கு இரண்டொருநாள் முன்பதாக மாற்றப்பட்டு ஒரு பார்ப்பன மேஜிஸ்ட்ரேட்டை அங்கு மாற்றப்பட்டிருக்கிறது. இது தானாக ஏற்பட்டதாகச் சொன்னாலும் சொல்லலாம். ஆனாலும், இந்த குறிப்பிட்ட பிராதை சர்க்காரும் ஒரு முக்கியமானதாகவும் ஜனங்களுக்குள் உணர்ச்சி உண்டாக்கக் கூடியதாகவும் உள்ள பிராது என்பதாக மதித்து கோர்ட்டுக்கு பந்தோபஸ்து முதலியவைகளை அனுப்பியிருக்கும்போது இம்மாதிரி உணர்ச்சியுள்ள கேள்வி விசாரணைக்கு தகுந்தமாதிரி பார்ப்பனரல்லாத மேஜிஸ்ட்ரேட் மாற்றப்பட்டு அதற்கு பதிலாய் ஒரு பார்ப்பன மேஜிஸ்ட்ரேட்டை போடுவ தென்றால் எப்படி ஜனங்கள் சந்தேகப்படாமலிருக்க முடியும்? தவிரவும் அந்த கேசுக்கு வக்கீலாய் வந்த ஸ்ரீமான் சத்தியமூர்த்தி, “இந்த இடத்தில் உள்ள மேஜிஸ்ட்ரேட்டுகளும் கோவாப்ரேட்டிவ் அதிகாரிகளும் அக் கிரமங்கள் செய்கிறார்கள்” என்றும் பொதுக்கூட்டத்திலும் சொன்னார் என்றால் ஷை மேஜிஸ்ட்ரேட் மாறுதலுக்கும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் சொன்னதற்கும் சம்பந்தமிருக்க வேண்டும் என்று நினைக்க ஹேது இருக்கிறதா? இல்லையா? தவிர இந்த வழக்கிற்கு ஸ்ரீமான் சத்தியமூர்த்தி வக்கீலாய் வரக் காரணமென்ன? இதிலிருந்தே இந்தக் கேசை பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார் என்கிற கட்சிப் பிரச்சினையாய்ப் பார்ப்பனர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதும், இதிலிருக்கும் இசகு பிசகுகளை கவனித்து இருவரையும் பிடித்து ஏதாவது ராஜி செய்துவிட்டுப் போகலாம் என்கிற சமாதான உணர்ச்சியில்லாமல் ஒரு கட்சிக்கு வக்காலத்து போட்டு தனது எதிர் கட்சிக்காரரை 153 பிரிவுப்படி நடவடிக்கை நடத்தவேண்டுமென்று உபந்நி யாசம் செய்துவிட்டு அந்த பிராது வாங்கின மாஜிஸ்ட்ரேட்டையும் பார்ப்பன ரல்லாதார் என்பதற்காக வைவதும் என்றால் இப்பார்ப்பனர்கள் எவ்வளவு தூரம் நம் சமூகத்தின் மீது யுத்தத்திற்குத் தயாராயிருக்கிறார்கள் என்பதை வாசகர்களே யோசித்துப் பார்க்க வேண்டியது தான். கேஸ் சரியா? தப்பா? என்பதை பற்றியும் நாம் ஒன்றும் சொல்ல வரவில்லை. ஆனாலும், பிராது கொடுத்திருக்கும் ஸ்ரீமான் கண்ணப்பர் பணக்காரரல்ல. இந்த பிராது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் முறையில் நடத்துவதாயிருந்தால் கண்ணப்பர் அவர்களால் தாக்குப்பிடிக்க முடியாது என்றே சொல்லுவோம். பல வாய்தாக் கள் ஏற்படலாம். ஒவ்வொரு வாய்தாவுக்கும் 30, 40 செலவாகலாம். இது தவிர ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்களைப் போலவே கட்சி உணர்ச்சியுடன் கேசை நடத்தக்கூடிய வக்கீல் ஒருவர் ஸ்ரீமான் கண்ணப்பர் அவர்களுக்கும்



RangaRakes tamilnavarasam.com

வேண்டும். அம்மாதிரி யாராவது ஒருவர் தயாராக முன்வர வேண்டும் இல்லாதவரை வக்கீலுக்கு பீசு என்று தடவை ஒன்றுக்கு 100 ரூபாயாவது வேண்டிவரும். ஆக சுயமரியாதையை உத்தேசித்து சாதாரண வழக்கமான உரிமைக்குப் போராட எண்ணிய ஸ்ரீமான் கண்ணப்பருக்கு இம்மாதிரி நெருக்கடியான சந்தர்ப்பம் ஏற்பட்டால் அவர் என்ன செய்யக் கூடும்? கோர்ட்களில் சத்திய தீர்ப்பு பெற்று விடக்கூடும் என்று சொல்ல நாம் தயாரா யில்லா விட்டாலும் இந்தப் பிராது கட்சி யுத்தமாக மாறிவிட்டதே என்கிற காரணத்திற்காக பயந்துகொண்டு திரும்ப வாங்கிக் கொள்வதோ அல்லது எதிரியை கெஞ்சிக் கொள்வதோவான காரியங்கள் ஏற்படுவதானால் நம் சமூகத்திற்கே இதைவிட வேறு அவமானமும் சுயமரியாதை அற்ற தன்மையும் இல்லை என்றே சொல்வதோடு "பிள்ளைவரத்திற்குப் போய் புருடனைப் பறிகொடுத்த" பழமொழிக்கே ஒப்பாகும். ஆதலால் இதுசமயம் பார்ப்பனரல்லாத பொதுமக்கள் பார்ப்பனர்களைப் போலவே இவ்வழக்கை பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் கட்சி வழக்கு என்பதாகக் கொண்டு ஒவ்வொரு பார்ப்பனரல்லாத வக்கீல்களும் தங்களால் கூடிய வக்கீல் உதவி செய்ய முன்வருவதுடன் மற்ற பார்ப்பனரல்லாத மக்களும் தங்களால் கூடிய பண உதவியும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். பார்ப்பனர்களுக்கோ பணத்திற்குக் குறைவில்லை. "ஒரு நல்ல கொழுத்த ஆடு அவர்களுக்கு கிடைத்திருக்கிறது". அதாவது இந்த திருவண்ணாமலை வழக்கில் ஒரு நாட்டுக் கோட்டை செட்டியார் கனவானும் எதிரியாய் இருப்பதால் நன்றாய் பணத்தைச் செலவு செய்யக்கூடும். ஜாதி அபிமான சலுகையையும் பணம் கொடுக்கத்தக்க செல்வவானையும் அடைந்திருக் கிறார்கள். ஆதலால் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் நமது மக்கள் கேசு என்னவாயிற்று என்று பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருப் பதில் பயனில்லை. அது என்ன ஆனாலும் நமக்கு கவலை இல்லை. விரோதமாகும் என்பதாகவே நினைத்துக் கொண்டு தைரியமாக நாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து நமது சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டியதுதான். அனுகூலமானால் அதிர்ஷ்டம் என்று சந்தோஷப் படலாம். ஆனாலும், பணமில்லாமல் வக்கீல் இல்லாமல், பொது மக்கள் ஆதரவில்லாமல், நமது சமூகத்திற்கு சுயமரியாதை இல்லாததால் கேசு கெட்டுப்போய் விட்டது என்று பலர் நம்மைப் பரிகாசம் சொல்வதிற்கில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பொது மக்கள் ஞாபகத்துக்கு கொண்டு வருகிறோம். இவ்வழக்கு கோர்ட்டில் வழக்காடுந் தன்மையையும் நியாயம் கிடைக்கும் என்கிற நம்பிக்கையையும் பிரதானமாய் கருதாமல் நமது சமூகத்தின் சுயமரியாதையை உத்தேசித்து ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் ரூ. 50 உதவித் தொகையாக கொடுத்திருக்கிறார். இனியும் இதற்கு யாராவது பணம் அனுப்புகிறவர்கள் **சென்னை பவழக்காரத் தெரு, 6 - 99 ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை** அவர்கள் பேருக்கு அனுப்ப வேண்டியது. இந்த தொகையை ஸ்ரீமான் கண்ணப்பர் அவர்கள் இந்தக் கேசைப் பொறுத்த வரையில் செலவு செய்து கொள்ளலாம். மற்றபடி மீதி இருந்தால் இதுபோன்ற காரியங்களுக்காவது "திராவிடன்" பத்திரிகையின் உதவிக்காவது உபயோ கித்துக் கொள்ளலாம். நெருக்கடியான சமயத்தை வேடிக்கையாய் கருதாமல் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சக்திக்கும் இஷ்டத்திற்கும் தகுந்தபடி ஏதாவது அனுப்பிக் கொடுக்க வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 13.03.1927**





RangaRakes

tamilnavarasam.com

# முனிசிபல் பொது ரோட்டுகளில் மக்களுக்கு உள்ள சுதந்திரம்

## பார்ப்பனரல்லாத ஜட்ஜிகளின் தீர்ப்பு

ஏழு எட்டு மாதங்களுக்கு முன்பு பாலக்காடு கல்பாத்தி ரோட்டில் ஒரு ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த ஈழவர் ஸ்ரீ சங்கரன் என்பவர் சர்க்கார் வேலையாக பைசைக்கிள் மீது சென்றதற்காக அவ்வீதியில் உள்ள ஒரு பார்ப்பனர் அவரைத் தடுத்து நிறுத்தி மிரட்டி ரோட்டிற்கு புண்ணியார்ச்சனையையும் கும்பாபிஷேகமும் செய்ய 15 ரூபாய் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தி வண்டியையும் மேல் வேஷ்டியையும் பிடுங்கி வைத்துக் கொண்டதற்காக, போலீசார் இவ்விஷயமறிந்து ஸ்தலத்திற்குப் போய் பைசைக்கிளையும் வேஷ்டியையும் பிடுங்கி கொடுத்துவிட்டு அந்தப் பார்ப்பனர் மீது கிரிமினல் நடவடிக்கை நடத்தினார்கள். அதில் பார்ப்பனருக்கு 30 ரூபாய் அபராதம் விழுந்தது. அதன் பேரில் பார்ப்பனர்கள் ஐகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்கள். அப்பீலில், பார்ப்பனரல்லாத இரண்டு ஐகோர்ட் ஜட்ஜிகள் பார்ப்பனர் செய்தது அக்கிரம மென்றும் ஜனங்கள் வரிப் பணத்தில் முனிசிபாலிட்டியாரால் பரிபாலிக்கப்படும் எந்த ரோட்டிலும் யாரும் நடக்கலாம் என்றும், பார்ப்பனர் 30 ரூபாய் அபராதம் கொடுக்க வேண்டியதுதான் என்றும் தீர்ப்புச் சொல்லி விட்டார்களாம். இது மிகவும் சந்தோஷப்படக்கூடிய விஷயம் என்பதில் சந்தேகமில்லை. இதே ஐகோர்ட் ஜட்ஜ் ஸ்தானத்தில் வர்ணாசிரமப் பார்ப்பனரோ அல்லது தன்னை உயர்ந்த ஜாதி என்று நினைத்துக் கொண்டிருக்கும் பார்ப்பனரோ அல்லது பார்ப்பனர் சொல்லுப்படி ஆடுகிற பார்ப்பனரல்லாதாரோ (நமது மந்திரிகளைப் போல்) ஜட்ஜிகளாய் இருந்திருந்தால் இந்த கேசின் முடிவு இப்படியிருக்குமென்று உறுதி கூற முடியுமா? ஜட்ஜிமெண்டு என்பது மிக பரிசுத்த ஜட்ஜிமெண்டு என்பதே அவரவர்கள் மனச்சாக்ஷியைப் பொறுத்ததாகத்தானே இருக்கும். மனச்சாக்ஷி என்பதே எல்லோருக்கும் ஒன்றுபோல் இருக்காது. ஐரோப்பியருக்கு மாடு சாப்பிடுவது மனச்சாக்ஷிக்கு விரோதமாகாது. பார்ப்பனரல்லாதாருக்கு ஆடு தின்பது மனச்சாட்சிக்கு விரோதமென்பதாகத் தோன்றாது. பார்ப்பனருக்கு இவர்கள் சாப்பிடுவதை கண்ணில் கூட பார்க்கக்கூடாது என்பது மனச்சாக்ஷிக்கு விரோதமாகத் தோன்றாது. ஆதலால் இதே ஐகோர்ட் ஜட்ஜி



ஸ்தானத்தில் ஒரு வருணாசிரம பார்ப்பனர் இருந்தால் அவர் கண்டிப்பாய் இந்த ரோட்டில் நடந்தது தப்பு என்றும் போட்ட அபராதம் வாப்பீஸ் செய்து நடந்தவனை தண்டிக்க வேண்டும் என்று சொன்னால் தான் அவர் மனச் சாக்ஷிப்படி நடந்தவராவர். அதனால்தான் நாமும் நமது சுயமதிப்பையும் மனச்சாக்ஷியையும் உத்தேசித்து ஐகோர்ட் ஜட்ஜ் முதல் எல்லா ஸ்தானங்களிலும் பார்ப்பனரல்லாதாரே இருக்கவேண்டுமென்று கோருகிறோமே அல்லாமல் வேறில்லை. இதுபோலவேதான் பார்ப்பனர்களுக்கு தங்களது ஆதிக்கத்தை உத்தேசித்து பார்ப்பன ஜட்ஜிகளே இருக்க வேண்டுமென்று கோருகிறார்கள். அவர்கள் கோருவதைப்பற்றி நாம் அவர்கள் பேரில் குற்றம் சொல்ல வரவில்லை. ஆனால் அது நிறைவேறினால் நமது சமூகத்திற்கும் நமது சுயமரியாதைக்கும் ஆபத்து என்றுதான் சொல்வதோடு நம்மால் கூடுமானவரை தடுக்க வேண்டியதும் நம்முடைய கடன் என்கிறோம். அவர்கள் 4000, 5000 சம்பளம் வாங்குவதாலும் அவர்கள் ஜாதி வக்கீல்களையே முன்னுக்கு கொண்டுவர ஏற்பாடு செய்து அவர்களுக்கு அனுகூலம் செய்து நம்ம ஜாதி வக்கீல்களை சிறுமைப்படுத்தி விரோதம் செய்வதினாலும் மற்றும் அவர்கள் ஜாதியாருக்கே முனிசீப்பு, சப் ஜட்ஜி, ஜட்ஜி முதலிய உத்தியோகங்கள் கொடுத்து நம்முடைய ஜாதியாரின் உரிமையை ஒழிப்பதினாலும் நமக்கு அவ்வளவு ஆபத்திருப்பதாய் நாம் நினைப்பதில்லை. ஆனால் கல்பாத்தி பொது ரோட்டு வழிநடை உரிமை போன்ற விஷயங்களில் பார்ப்பன ஜட்ஜிகளிடம் இருந்தும் பார்ப்பன சட்டமெம்பர்களிடமிருந்தும் நமது சுயமரியாதைக்கும் அனுகூலமான தீர்ப்பு பெற முடியுமா என்கிற விஷயத்தில்தான் பயமாயிருக்கிறது. உதாரணமாக கல்பாத்தி ரோட்டில் யாரும் நடக்கலாம் என்று சட்டசபையில் தீர்மானம் ஏற்பட்டும் சட்டமெம்பர் ஸ்ரீமான் சர்.சி.பி. பார்ப்பனர் வேலையிருந்தால்தான் போகலாம் என்று சொல்லி வியாக்கியானம் செய்யவில்லையா? அதுபோலவே இந்த வழக்கும் பார்ப்பன ஜட்ஜாயிருந்தால் ஈழவர் அந்த ரோட்டில் நடந்தது குற்றமானாலும் நடக்க உரிமையில்லை. ஆனாலும், அதற்கு வேறு மார்க்கம் செய்து நடக்கவிடாமல் செய்துவிட வேண்டுமே அல்லாமல் தடுத்தது குற்றம் என்றாவது சொல்லி அபராதத்தைக் காயம் செய்ய அவரது மனச்சாக்ஷி சொல்லுமே அல்லாமல் பார்ப்பனரல்லாத ஜட்ஜியைப் போல் சர்க்கார் பொது ரோட்டில் யாரும் தாராளமாய் போகலாம் என்று துணிந்து இயற்கை தர்மத்தை சொல்லியிருப்பார் என்று எண்ண நமக்கு தைரியமில்லை. இது எப்படியோ இருக்கட்டும். இனியாவது பாலக்காட்டு பார்ப்பனர்கள் கல்பாத்தி ரோட்டில் யாரும் நடக்க சுதந்திரம் கொடுப்பார்களா? அல்லது அந்த தீர்ப்பை வாங்கி பாலக்காட்டு முனிசீப்பு கோர்ட்டில் நிறைவேற்றி சர்க்கார் பந்தோபஸ்துடன் போய்க் கொண்டு இருக்க வேண்டுமா என்று தான் கேட்கிறோம். அது போலவே, திருநெல்வேலி சந்நியாசி அக்கிரஹாரப் பார்ப்பனர்களுக்கும் கும்பகோணம் அய்யங்கார் தெரு, வியாசராய மடத்தெரு, பட்டாச்சாரி தெரு பார்ப்பனர்களுக்கும் இந்த தீர்ப்பே போதுமா அல்லது அங்கும் பெரிய கிளர்ச்சி செய்து



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனர்களின் அட்டூழியங்களை மக்களுக்கு வெளிப்படுத்தி, சத்தியாக் கிரகம் செய்து ஜெயிலுக்குப் போய் ஐகோர்ட்டுக்குப் போய் "நீதி" பெற வேண்டுமா என்றுதான் கேட்கிறோம். அல்லது மகாத்மா இந்த ஊர்களுக்கு வந்த சமயம் பார்த்து இந்த தெருவுகளில் நுழைந்து இந்த பார்ப்பனர்களின் நிலைமையை அவர் அறியச் செய்ய வேண்டுமா என்றுதான் கேட்கிறோம். ஆனால், இந்தப் பார்ப்பனர்கள் எதற்கும் பயப்படமாட்டார்கள். ஏனெனில் ஐகோர்ட், கவர்ன்மெண்டு, சட்ட மெம்பர், சட்டசபை மற்றும் அதிகாரம் செல்வாக்கு முதலியவைகளில் அவர்கள் இருப்பதால் இதையெல்லாம் கால் தூசிக்கு சமானமாய்தான் நினைப்பார்கள். ஆனாலும், பாமர மக்கள் இவ்வாங்கில அரசாட்சியிலேயே தெருவில் நடக்க தெருவைத் தொடாமல் பைசைக்கிளின் மேல் போக உரிமை கொடுக்க மறுக்கும் இக் கல்நெஞ்சக் கூட்டங்கள் தங்களுக்கு சுய ஆட்சி வந்தால் எப்படி நடப்பார்கள்? நம்மை எவ்வித கொடுமை செய்வார்கள்? நம்மை மனு தர்ம சாஸ்திரமோ பராசரஸ் மிருதியோ அல்லது இதில் பட்ட ஆச்சாரிய சுவாமிகளோதான் ஆளுவார்கள். ஆனாலும் மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி வந்துவிட்டால் பிறகு என்ன ஆகும் என்பதுதான் நமது கவலை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.03.1927**



# பார்ப்பனீயப் பித்தலாட்டம் "சிரார்த்த சந்தேகம்"

ஸ்ரீ சங்கராச்சாரியர் மடம் ஆஸ்த்தான வித்துவான் ஸ்ரீ வெங்கிட்டராம சாஸ்திரியை சிரார்த்த விஷயமான பல சந்தேகங்களைப் பற்றி ஒரு நண்பர் எழுதிக் கேட்டிருந்தாராம். அதற்கு பதில் எழுத சாஸ்திரிக்கும் சாவகாசமில்லையாம். குடும்ப விஷயமாக கிராமத்திற்குப் போய்விட்டாராம். மித்திரனிலும் இடம் ஒதுக்க முடியாதாம். பத்திரிகைகள் மூலம் இம்மாதிரி சந்தேகங்களும் நீங்காதாம். ஜகத்குருசாமிகள் என்பவர் ஆரியதர்மம் என்று ஒரு பத்திரிகை போடுவாராம். அதை வாங்கிப் படித்தால் சந்தேகமெல்லாம் நிவர்த்தி ஆகி விடுமாம். இது ஸ்ரீ சோமதேவ சர்மா என்கிற ஒரு பார்ப்பனர் பேரால் 10. 3. 27 தேதி மித்திரனில் பிரசுரித்திருக்கிறது. இது என்ன புரட்டு? கள்ளு, சாராயம் விற்க பத்திரிகையில் இடமிருக்கிறது. வருணாசிரம தர்மம், ஆரியதர்மம், பிராமண தர்மம், சனாதன தர்மம், இந்து தர்மம் என்கிற பார்ப்பனர்கள் பிழைப்புக்கு ஏற்பட்ட மத விஷயங்களைப் பரப்ப மித்திரனில் இடமிருக்கிறது, சாஸ்திரிகளுக்கும் சர்மாக்களுக்கும் சாவகா முமிருக்கிறது. யாருக்காவது இதில் சந்தேகமேற்பட்டால் அதை விவரிக்க சாஸ்திரிகளுக்கும் சாவகாசமில்லை, பார்ப்பனப் பத்திரிகைகளுக்கும் இடமில்லை என்றால் பார்ப்பனப் புரட்டுகளுக்கு இதை விட வேறு என்ன சாக்ஷி வேண்டும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.03.1927**



RangaRakes tamilnavarasam.com

# சென்னை சட்டசபை வரவு செலவு திட்டம்

## (ஜஸ்டிஸ் கட்சி கொள்கை)

கனவான்களே! சென்னை சட்டசபையிலுள்ள வரவு செலவு திட்டத்தைப் பற்றி எனக்கு கொஞ்சமாவது கவலையில்லை. அதில் கவலை செலுத்துவதில் ஏதாவது பிரயோஜனம் உண்டாகுமா? என்கிற விஷயத்திலும் அதிகமான பிரயோஜனமிருக்காது என்கிற முடிவுக்கு வந்தவன். ஏழை மக்களிடம் வசூலித்த கோடி கோடியான வரிப் பணத்தை அம்மக்களுக்கு யாதொரு கிரமமான உபயோகமும் செய்யாமலேயே வெள்ளைக்காரரும் நமது படித்தக் கூட்டத்தாரும் எப்படி பங்கு போட்டுக்கொள்ளுவது என்பது தான் பட்ஜெட் (வரவு செலவு திட்ட) விவாதம் என்பது எனது முடிவான அபிப்பிராயம். சட்டசபை மாத்திரமல்ல இந்திய சட்டசபை அரசாங்க சபை ஆகிய எதுகளின் யோக்கியதையை பற்றியும் இம்மாதிரிதான் நினைக்கிறேன். பெரிய பெரிய திட்டம் என்பதெல்லாம் கூட இப்படியே ஜால வேடிக்கை யாகத்தான் முடிகிறது. உதாரணமாக மேட்டூர் திட்டம் முதலிய யானை விழுங்கி பிசாசு போன்ற திட்டங்களின் சூதுகளை கவனித்துப் பார்த்தால் மற்ற துகளைப்பற்றி யாருக்குமே சுலபமாய் விளங்கிவிடும். அத்திட்டங்களால் என்ன லாபம் என்பதை இப்பொழுதுதான் தஞ்சை ஜனங்கள் கூட உணர்ந்து வருகிறார்கள். இத் திட்டத்தின் பேரால் கோடி கோடியாய் நமது பணம் வெளிநாட்டிற்கு யந்திரங்களுக்காகவும், சிமெட்டு முதலிய வெளிநாட்டு சாமான்களுக்காகவும் லக்ஷ லக்ஷமாக வெளிநாட்டார் உத்தியோகத்தில் சம்பாதிக்கவும் கொள்ளை போகவும் நம்நாட்டு அதிகாரிகளுக்கும் லக்ஷ லக்ஷமாய் கொள்ளை போகவுமே உண்டாக்கப்பட்ட திட்டமாய் ஏற்பட்டு விட்டதே என்று எல்லோரும் சந்தேகப்படும்படியாய்விட்டது. இச் சந்தேகங் களுக்கு யாரும் இன்னமும் பதில் சொல்பவரே இல்லை. கோபம் மாத்திரம் வருகிறது. இந்தக் கொள்ளையை பற்றி ஜஸ்டிஸ் கட்சியார் பேரிலும் கூடத் தான் ஜனங்கள் குற்றம் சொல்லுகிறார்கள். இவர்கள் ஏன் அதிகாரத்தில் இருந்த காலங்களில் இவற்றை வெளியிட்டிருக்கக்கூடாது? என்பதற்கு தக்க சமாதானம் சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள். இப்படி கோடி கோடியாய் செலவாகும் பணத்தின் யோக்கியதையே இப்படி இருந்தால் ஆயிரம், பத்தாயிரம் ரூபாய் செலவுகளில் சண்டை பிடிப்பதில் பயன் என்ன? நமது



நாட்டு பட்ஜட் சண்டையே வெட்கக் கேடான காரியம். எப்படியாவது அரசாங்கத்தார் அவர்கள் பிடித்த காரியத்தை சாதித்துக் கொள்வார்கள். இதில் தலையிட்டு சத்தம் போடுவதின் மூலம் நமது படித்தவர்கள் தங்களுக்கு ஒரு பங்கு அதில் கிடைக்க வழி தேடுவதே அல்லாமல் ஜனங்களுக்கு நன்மை செய்வது என்பது பூஜ்ஜீயம்தான். பட்ஜட்டில் உண்மையான சண்டை போடுவ தென்றால் அரசாங்கச் செலவை குறைப்பதின் மூலம் மக்களின் வரியைக் குறைக்கக் கூடியதாய் இருக்க வேண்டும். அப்படிக்கு இல்லாமல் வரி வசூல் செய்த பிறகு செலவை குறைப்பதற்கு சண்டை போடுவதில் லாபம் என்ன? உதாரணமாக மந்திரி சம்பளம் குறைப்பது என்பதில் சிலர் சண்டை போட்டு விட்டால் பெரிய தேசப் பக்தர்களாகி விடுகிறார்கள். மந்திரிகள் சம்பளம் குறைவுப்பட்டால் யாருக்கு லாபம்? சம்பளம் குறைந்த விகிதத்திற்கு ஏதாவது வரி குறைக்கப்படுகிறதா? "சுடுகாட்டிற்கு போன பிணம் சுட்டுத்தான் ஆக வேண்டும், திரும்பி வரமுடியாது" என்பதுபோல் மந்திரிகள் சம்பளம் ஆளுக்கு மூவாயிரம், மூவாயிரம் குறைத்து விட்டாலும் அந்த மீதி பணத் திற்கும் இன்னும் இரண்டு உத்தியோகமோ, திட்டமோ போட்டு பார்ப்பனர் களுக்கும், படித்தவர்களுக்கும் அந்த பணம் போய் சேரும்படி செய்து விடுவார்களே தவிர வரி கொடுத்தவர்களுக்கு ஒரு லாபமும் கிடைக்காமல் போவதோடு அந்த உத்தியோகஸ்தர்களையும் திருப்தி செய்ய ஏழைகள் அதிகம் பணம் செலவு செய்ய வேண்டித்தான் வரும். மந்திரிகள் நிறைய சம்பளம் வாங்கினாலாவது சட்டசபையில் தங்களை உபத்திரவிக்கின்றவர் களுக்கு மாதம் 400, 500 கொடுக்கலாம்; அதனால் அவர்களும் பிழைக்கலாம். நான் நேற்றுகூட ஒரு விசேஷம் கேள்விப்பட்டேன். அதாவது, ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் தங்கள் அதிகாரத்தில் இருந்த காலத்தில் தங்கள் கட்சி பிரசாரங்க ளுக்காக, பத்திரிகைகளுக்காக மாதம் 3000 ரூபாய் கொடுத்து வந்தார்களே அதுபோல் சில மந்திரிகள் தங்களை சட்டசபையில் உபத்திரவிக்காமல் இருக்கும்படி செய்வதற்காக சில வாயாடி ஆசாமிகளுக்கு மீ 400,500 கொடுக்கலாமாஎன்று கூட நினைத்தார்களாம்! இது பொய்யோ நிஜமோ எனக்கு உண்மை தெரியாவிட்டாலும் வேடிக்கையாக பார்ப்போமேயானால் இதில் தப்பிதமில்லை என்றே சொல்லலாம். என்னவென்றால் ரூ 5533–5 – 4 வீதம் ஒவ்வொரு மந்திரி மீ சம்பளம் வாங்கி இவ்வளவையும் தானே சாப்பிடுவதற்கு என்ன பாத்தியம்? ஏன்? மற்றவர்களுக்கும் அதில் ஒரு பங்கு கொடுக்கட்டுமே; ஒரு கட்சி மந்திரிகள் தங்கள் பேரில் ஒரு கட்சியார் ஏற்படுத்தும் கெட்டப் பெயரை மாற்றுவதற்காக பத்திரிகை பிரசாரத்திற்கு ஆளுக்கு மாதம் 1000 ரூபாய் கொடுத்தால், மற்றொரு கட்சி மந்திரிகள் தங்கள்பெயரில் கெட்ட பெயர் ஏற்படுத்த எண்ணி உபத்திரவம் செய்ய வருபவர்களுக்கோ 500, 500 ரூபாயாக கொடுத்து அதை முளையிலேயே கிள்ளி விடுவது, பின்னும் லாபகரமான காரியமே அல்லாமல் வேறல்ல. தற்கால நாகரீக அரசியல்களில் இதெல்லாம் ஒரு அதிசயமும் அல்ல குற்றமும் அல்ல என்றே தோன்றும். ஆனால் இதுகள் ஒருவழியில் சிரமம்



RangaRakes

tamilnavarasam.com

என்றாலும் ஜஸ்டிஸ் கட்சியார் இந்த தர்ம நியாயத்தை நினைத்துக்கொண்டு சும்மா இருக்கக்கூடாது. ஜஸ்டிஸ் கட்சி அதிகார பதவியில் இருந்த காலத்தில் அதன் எதிரிகள் உருப்படியான யாதொரு காரியத்தையும் செய்யவில்லை. ஆனாலும், செய்பவர்களையும் கெடுத்துக்கொண்டு தேசம் எப்படி போனாலும் சரி என்று அதிகாரப் பதவிகளை மாத்திரம் கைப்பற்றச் செய்து வந்த பல சூழ்ச்சிகளில் சட்டசபையில் வெறும் கூப்பாடு போட்டு பாமர ஜனங்கள் ஏமாறும்படி பத்திரிகைகளில் விஷமப் பிரசாரங்கள் செய்து வந்ததும், அதற்கு அனுகூலமாக சில அரசியல் பிழைப்புக்காரர்கள் ஒத்தாசை புரிந்து வந்ததும், அதனால் பாமர மக்கள் உண்மை அறியமுடியாமல் போய் ஏமாற்றம் அடைந்ததும் நாம் எல்லோரும் நேரில் அறிந்த விஷயமே. அவ் விதப் பொய் பிரசாரத்தின் காரணமாகவே ஜஸ்டிஸ் கட்சியை சேர்ந்த பலர் தங்களைவிட எவ்விதத்திலும் யோக்கியதை, உயர்வு இல்லாதவர்களாலும், தாழ்ந்த சாதாரண மக்களாலும் தேர்தல்களில் தோற்கடிக்கப்பட்டதும் நாம் யாவரும் அறிந்த விஷயமே.

ஆதலால் ஜஸ்டிஸ் கட்சியாரும் இப்போது பதிலுக்கு பதிலாய் அந்த கொள்கையை எடுத்துக்கொள்ளக் கூடாதானாலும் பார்ப்பனக் கூட்டத்தார் செய்தது புரட்டான காரியங்களென்றும் அது தங்கள் தங்கள் சுயநலத்திற்காக செய்து வந்த ஆரவாரங்களேயல்லாமல் அதில் உண்மையான தேசபக்தியோ, நல்ல எண்ணமோ இல்லை என்றும், இவ்வித முயற்சிகள் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தைத் தடுக்க எண்ணங்கொண்டு செய்த சூழ்ச்சிகள் என்றும், இதை அறியாமல் பாமர மக்கள் ஏமாந்து போய்விட்டார்கள் என்றும், வெளிக்குக்காட்டக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் அதை விட்டுவிடாமல் எந்தெந்த கிரமமான வழிகளில் அவற்றை வெளிக்கு காட்டக்கூடுமோ, அந்தந்த வழிகளுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் விட்டுவிடக்கூடாது என்றே சொல்லுகிறேன். இவ்வித காரியங்களாலும் தேசத்திற்கு ஒரு நன்மையும் ஏற்படாதென்பது உறுதி. ஆனாலும் பொய்யர்களின் யோக்கியதையை வெளிப்படுத்துவதின் மூலமாய் தேசத்திற்கு நன்மைகள் ஏற்படலாம் என்பதை மறுக்க மாட்டீர்கள் என்றே நினைக்கிறேன். உதாரணமாக மந்திரிகளின் சம்பளத்தை குறைப்பதில் யாதொரு விதமான லாபம் இல்லையானாலும் நாம் குறைக்கத் தீர்மானம் கொண்டு வந்தாலும் அப்போது பார்ப்பன கட்சியாகிய சுயராஜ்ஜிய கட்சியாரின் யோக்கியதை என்ன என்பதை பாமர மக்கள் அறியச் செய்யலாமல்லவா? அன்றியும் ஸ்ரீமான் சி.வி. வெங்கடரமணய்யங்கார் என்கிற ஒரு அய்யங்கார் பார்ப்பனர் ஸ்ரீரங்கத்தில் சொன்னதாக "சுதேசமித்திரன்" பத்திரிகையில் வெளியாயிருக்கிறபடி பார்த்தாலே பார்ப்பன சூழ்ச்சிகள் இன்னது என்பது யாவருக்கும் விளங்கும். அதாவது:- தாங்கள் மந்திரிகளை எதிர்க்கப் போவதில்லை என்றும், ஏதாவது திட்டங்களை எதிர்த்து சட்டசபையில் வெற்றி பெற்றாலும் அவ்வெற்றியை நிராகரித்துவிட கவர்னருக்கு அதிகாரம் இருப்பதாகவும் ஆதலால் அநாவசியமாய்



எதிர்ப்பதில் பயனில்லை என்று கருதி மந்திரிகளுடன் ஒருவிதமான ராஜி செய்து கொண்டதாகவும் பேசியிருக்கிறதாக பத்திரிகைகளில் காணப் படுகின்றது. சட்டசபையில் தீர்மானங்களை நிறைவேற்றி வெற்றிபெற்றால் அதை கவர்னர் நிராகரித்துவிடலாம் என்கிற விஷயத்தை ஒரு மனிதன் உணருவதற்கு சட்டசபை தேர்தலுக்கு 30000,40000 செலவு செய்து பொய்யும் புளுகும் சொல்லி பாமர மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்கி சட்டசபைக்குப் போன பின்புதான் தெரிந்துகொள்வதென்பது யாராவது நம்ப முடியுமா? இந்த உண்மை ஒரு பங்கா இழுப்பவனுக்கும் கூடத் தெரிந்திருக்கும். அப்படியிருக்க ஸ்ரீமான் சி.வி. வெங்கடரமணய்யங்கார் அவர்கள் இப்போதுதான் தெரிந்துகொண்டவர் போல் பேசியிருப்பதிலுள்ள புரட்டு யாவருக்குமே எளிதில் விளங்கலாம். அல்லாமலும் மந்திரிகளிடம் பார்ப்பனர்கள் ராஜி செய்து கொண்டார்களாம். என்ன ராஜி என்று பார்ப்போமானால் **"பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு மந்திரிகள் இடையூறாய் இருக்க வேண்டும். ஜில்லா போர்டு முனிசிபாலிடி முதலிய ஸ்தானங்கள் பார்ப்பனர்கள் சொல்லுகிறபடி தாங்களும் தங்களுடைய நிபந்தனையில்லாத அடிமைகளுக்குமே விநியோகிக்க வேண்டும். மந்திரிகளின் ஆதிக்கத்திலுள்ள உத்தியோக போகங்கள் பார்ப்பனர்களுக்கும் அவர்களது அடிமைகளுக்குமே விநியோ கிக்க வேண்டும் - இதற்கு நன்றி காட்டுவதற்காக மந்திரிகளுக்கு எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் நடந்து கொள்ளுவதோடு மற்றவர்கள் யாராவது இடைஞ்சல் செய்தாலும் தாங்கள் முன்னின்று அதை நிவர்த்தித்துக் கொடுப்பது"** என்பது அல்லாமல் வேறு ராஜி என்னமாய் இருக்கக்கூடும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். உதாரணமாக மந்திரிமார்கள் போகிற பக்கங்களிலெல்லாம் சுயராஜ்ஜிய கட்சி, ஒத்துழையாமைக் கட்சி முதலிய கட்சி பார்ப்பனர்கள் வரவேற்பளிப்பதும், அவர்கள் வாலை பிடித்துக் கொண்டு பின்னால் திரிவதுமான காரியங்களிலிருந்தே பார்க்கலாம். முன் மந்திரிகளுக்கு எந்த முனிசிபாலிட்டியாராவது வரவேற்பு செய்தால் "இது யாருடைய பணம்" என்று கேட்பதும், முன் மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்தால் "எதற்காக இப்படி பொது மக்கள் பணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். இதற்கு செலவு என்ன ஆயிற்று" என்று கேட்பதுமாயிருந்தார்கள். முன் மந்திரிகளாவது தாங்கள் தனியாய் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். இப்போதைய மந்திரிகள் நியமனமான காலந்தொட்டு பெண்டு பிள்ளைகள், சம்சார சகிதமாய் (எத்தனை நாளைக்கு இந்த பதவி வாழப்போகிறதோ என்கிற கவலையின் பேரில்) மாமியார் வீட்டு விருந்து சாப்பிடுவது போல் ஊர் தவறாமல் சுற்றிக்கொண்டு தங்கள் பதவி நிலைப்பதற்கு ஆங்காங்குள்ள ஆள்களுக்கு நல்ல வார்த்தை சொல்லுவதும், ஸ்தல சுய ஆட்சி முதலிய பதவி உத்தியோகங்கள் கொடுப்பதுமான காரியத்தில் ஈடுபட்டிருப்பதை நீங்கள் யாருமே பார்த்திருக்கலாம். இதற்காக இந்த "தேசீய பார்ப்பனர்களும்", "முட்டுக்கட்டை பார்ப்பனர்களும்", "ஒத்துழையா பார்ப்பனர்களும்" ஏதாவது பேசுகிறார்களா? திருடனை தேள் கடித்தது போல்



RangaRakes tamilnavarasam.com

வாயை மூடிக் கொண்டிருப்பதுடன் இவர்களும் இதற்கு உதவி செய்து வருகிறார்கள். இதை பார்க்கிறபோது ஸ்ரீமான் சி.வி. வெங்கடரமணய்யங்கார், "மந்திரிகளிடம் ராஜி செய்து கொண்டோம்" என்று சொன்னதற்கு ஆதாரமில்லாமல் போகவில்லை. நாமும் இவற்றையெல்லாம் அடியோடு கூடாது என்று சொல்ல வரவில்லை. இப்போதைய அரசியல் முறையில் யார் மந்திரி வேலை பார்த்தாலும் இப்படித்தான் நடக்கச் செய்யும் என்பது நமக்குத் தெரியும். ஆனாலும் இந்த போக போக்கியம் பார்ப்பனர்களுக்குத்தான் சொந்தமா என்றுதான் கேட்கிறோம்? ஆதலால் ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்கள் இந்த பார்ப்பன புரட்டுகளை பாமர மக்களுக்கு சட்டசபையின் மூலம் எவ்வளவு தூரம் வெளிப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் வெளிப்படுத்த வேண்டுமென்றுதான் நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கேற்ற நல்ல சமயம் கிடைத்திருக்கிறது. இனி இம்மாதிரி சமயம் கிடைப்பது அரிது. மந்திரிகள் நமக்கு தனி முறையில் சிநேகிதர்கள் என்றோ வேண்டியவர்கள் என்றோ அல்லது பார்ப்பனர்களுக்கு பத்து எலும்பு போட்டால் நமக்கு ஒன்றாவது போடமாட்டார்களா என்றோ நினைத்து பார்ப்பன புரட்டுகளுக்கு நாம் அனுகூலமாய் இருப்பது மிக மிக கேவலமும் மானக்கேடும் ஆகும் என்றே சொல்லுகிறேன். இரண்டு, மூன்று வருஷ காலத்திற்குதான் நாம் உத்தியோகமில்லாமல் இருந்தால் செத்துப் போய்விடுவோமா? ஆயிரக்கணக்கான வருஷ காலமாய் பார்ப்பனர்களால் அழுத்தப்பட்டு கிடக்கும் நாம் நல்ல சந்தர்ப்பம் வந்து பாமர ஜனங்களும் கண் விழித்துக்கொள்ள தயாராயிருக்கும் இச்சமயத்தை சரியானபடி உபயோகித்துக்கொள்ள வேண்டுமென்றே கோருகிறேன். ஸ்ரீமான் பனகால் அரசருக்கும், P.T.ராஜனுக்கும் டாக்டர் சுப்பராய மந்திரிகளிடமும் அன்பும் சினேகிதமும் இருக்கலாம். அதுபோலவே நமக்கும் முதல் மந்திரி விஷயத்தில் அய்யோ பாவம் ஒரு கொங்கு வேளாள மந்திரியாவது கொஞ்ச காலத்திற்கு போக போக்கியமனுபவிக்கட்டுமே என்கிற ஆசை இருக்கலாம். ஆனால் அதை காட்ட இது சமயமல்ல. பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு மானக்கேட்டை உண்டாக்கும்படியான நிலைமையை விருத்தி செய்வதற்கு அனுகூலமாயிருக்கும் மந்திரிசபையிடம் இம்மாதிரி சொந்த சிநேகிதமும், அன்பும், ஆசையும், வைத்து அனுமதிப்பது மிகவும் முட்டாள்தனமான காரியமென்றே சொல்லுவேன். மந்திரிகளின் கொடுமைக்கும் அவர்கள் பார்ப்பன கொள்கையையே உடையவர்கள் என்பதற்கும் ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன். தமிழ்நாட்டில் ஒன்று இரண்டு தவிர ஏறக்குறைய எல்லா ஜில்லா போர்டு பிரசிடெண்டுகளும் பார்ப்பனரல்லாதாராயிருக்கிறார்கள். இதனால் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு எவ்வளவு நன்மை ஏற்பட்டிருக்கிறதென்பது அந்தந்த ஜில்லா போர்டுகளில் பார்ப்பனர்கள் பிரசிடெண்டாயிருந்த காலத்தில் எப்படி இருந்தது என்று பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். இப்போது பார்ப்பனரல்லாத பிள்ளைகள் படிக்கவும், பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்கள் உத்தியோகஸ்தர்கள் ஏற்படவும் எவ்வளவோ நன்மை ஏற்பட்டிருக்கிறது. இந்த



சம்பளமே பிரதானமாயில்லா விட்டாலும் பார்ப்பனரல்லாதாருக்கும் புத்தி உண்டு, மூளை உண்டு என்று ருஜு செய்யவாவது சந்தர்ப்பம் கிடைத்தது. இப்போது இதை ஒழிக்க பார்ப்பனர்கள் யோசனை சொன்னால் முதல் மந்திரி அதற்கு இடம் கொடுப்பதானால் இதைவிட மோசமாக பார்ப்பனரில்கூட ஒருவரை எதிர்பார்க்க முடியாது. என்னவெனில் திருநெல்வேலி, தஞ்சை, தென்னாற்காடு, சேலம், செங்கற்பட்டு ஆகிய ஜில்லாக்களின் ஜில்லா போர்டு பிரசிடெண்டுகளுக்கு உத்தியோகம் காலாவதியானால் மறுபடியும் அவர்கள் தேர்தலில் நிற்பதற்கு யோக்கியதை அளிக்கக்கூட மறுப்பதானால் இம்மந்திரியின் கொள்கையையும் பார்ப்பனரல்லாதார் அபிமானத்தையும் பற்றி சொல்ல வேறு என்ன ஆதாரம் வேண்டும்? பொள்ளாச்சி முனிசிபாலிட்டியில் வெகு காலமாய் கட்சிகள் இருந்து வருவதும் அங்குள்ள உத்தியோகஸ்தரல்லாத சேர்மனை எடுத்துவிட்டு உத்தியோகஸ்தர்களே சேர்மனாய் இருந்து வந்ததும் யாவருக்கும் தெரியும். இந்த ஊருக்கு உத்தியோகஸ்தரல்லாத சேர்மன் முறை வழங்கும்படி பொது ஜனங்கள் வெகு காலமாய் கேட்டு வந்தவர்களுக்கு தவளைகள் தங்களுக்கு ராஜாவாக இருக்க மரக்கட்டை வேண்டாமென்று கேட்டதற்கு பாம்பை கொடுத்ததைபோல் திடீரென்று ஒரு பார்ப்பன சேர்மனை நியமிப்பதென்றால் அதுவும் தனக்கு மீட்டிங்கு நடத்த கோரம்கூட சேர்த்துக்கொள்ள லாயக்கில்லாத அவ்வளவு "செல்வாக்கு" உள்ள ஒரு பார்ப்பனரை நியமிப்பதானால் மந்திரியின் கொள்கைக்கு இதைவிட வேறு பரீட்சை என்ன வேண்டும்? ஜமீன்தார் பிரதிநிதியான மந்திரி யோக்கியதையே இப்படி இருந்தால் மற்ற மந்திரிகளைச் சொல்லவேண்டுமா? மற்றபடி ஒரு கிருஸ்தவ பிரதிநிதியாய் வந்த மந்திரி வகுப்புவாரி திட்டத்தின் மூலமாய் பதவி அடைந்து விட்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தப்பு என்கிறார். "இது உண்ட கலத்தில் இரண்டுக்கு இருந்தது" போல் அல்லவா இருக்கிறது. இது மாத்திரமல்ல கள், சாராயம் குடிப்பது கெடுதியா என்று கூட இனிமேல் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டுமாம். இதை பள்ளிக்கூடத்திலேயே படித்துவிட்டு வராமல் ஏழை வரி செலுத்துவோர் பணத்திலா மாதம் 5500 வாங்கிக்கொண்டு மந்திரியாகித் தானா படிக்க வேண்டும்? கள், குடி நின்றால் சர்க்கார் நடக்காதாம். சர்க்காரை நடத்திக் கொடுக்கத்தான் இவர்களை சுயராஜ்ஜியக் கட்சியார் மந்திரிகளாக்கினார்கள் என்பது இப்போதாவது விளங்கவில்லையா? இன்னமும் இவர்கள் ஊருக்கு ஊர் முன்னுக்கு பின் புரண்டு பேசுவதைப் பற்றி வண்டி வண்டியாய் எடுத்துச் சொல்லலாம். இந்த மந்திரிகள் தங்கள் கட்சிக்கு 15 பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று சொல்லுவது சுத்த பொய் என்றே சொல்லுவேன். சுயராஜ்யக் கட்சி மெம்பர் 40 பேரும் சட்ட மெம்பர் தயவால் நியமனம் பெற்றவர்களும் ஒத்துழையா பார்ப்பனர் தயவால் சட்டசபைக்கு வந்தவர்களும் பின்பலமாயிருக்கிறார்கள். இதை வெளியாக்கக்கூட ஜஸ்டிஸ் கட்சிக்கு யோக்கியதை இல்லை என்பதானால் இதை விட நமது சமூகத்திற்கு வேறு அவமானம் வேண்டியதில்லை. ஆதலால், இந்த புரட்டுகளையும் சூழ்ச்சிகளையும் வெளிப்படுத்த எங்கெங்கு



RangaRakes
tamilnavarasam.com

சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றதோ அதை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறேன். இதற்காகத்தான் நீங்கள் சட்ட சபையில் இருந்தால் இருக்கலாம். ஒரு சமயம் சர்க்கார் நிஷ்டூரமோ மந்திரிகளின் சொந்த சிநேகிதத்திற்கு கெடுதியோ வரும் என்பதாக பயப்படுவதாய் இருந்தால் கவுன்சில் பதவியை ராஜினாமா கொடுத்துவிட்டு வெளியில் வந்துவிடுவது சுயமரியாதைக்கு அழகல்லாமல் சுயராஜ்யக் கட்சியாரின் சுயநலத் திட் டத்தை நடத்திக் கொடுக்கும் மந்திரிகளுடன் சரிசமமாய் உட்கார்ந்திருப்பது மிகவும் கேவலமானதாகும். மதுரை மகாநாட்டில் தலைவர் பனகால் அரசர் சட்டசபையில் மந்திரிகளையும் சர்க்காரையும் எதிர்க்க சந்தர்ப்பம் கிடைக்கிற காலத்தில் கொஞ்சமும் தயவு தாக்ஷண்யமில்லாமல் எதிர்ப்போம் என்றும், உத்தியோகம் ஏற்பதில்லை என்றும் சொன்னார். இதை பார்ப்பனர்கள் வாக்குத்தத்தம் போலும், பார்ப்பன காங்கிரஸ் வாக்குத்தத்தம் போலும் செய்து விடாமல் பார்ப்பனரல்லாதார் வாக்குத்தத்தம் போல் செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

*குறிப்பு: சென்னை தியாகராய மெமோரியல் கட்டிடத்தில் பி.டி. ராஜன் தலைமையில், பனகால் அரசர், பாத்ரோ ஆகியோர் முன்னிலையில் பேசியது.*

**குடி அரசு - சொற்பொழிவு - 20.03.1927**



# "சுதேசமித்திரனின்" உபத்திரவம்

"சுதேசமித்திரன்" என்னும் பத்திரிகையைப் பற்றி அதாவது அது பார்ப்பன பத்திரிகை என்றும், அது பார்ப்பனரல்லாதார் முற்போக்குக்கு இடைஞ்சலாகவும், பார்ப்பன ஆதிக்கத்துக்கு அனுகூலமாகவும் பார்ப்பன பிரசாரம் செய்யும் பத்திரிகை என்பதாகவும் பல தடவைகளில் நாமும் மற்றும் அநேக கனவான்களும் அவ்வப்போது ஆதார பூர்வமாய் வெளிப்படுத்திக் கொண்டே வந்திருக்கிறோம். அதன் நிருபர்களும் ஆங்காங்கு உண்மைக்கு மாறாகவும் விஷமத்தனமானதாகவும், பார்ப்பன முன்னேற்றத்திற்கு தகுந்தாப் போலும் பார்ப்பனரல்லாதார்க்கு இழிவும் கெட்ட பெயரும் வரும்படியாகவும் அறிக்கை செய்து கொண்டு வருவதைப் பற்றியும் நாம் மாத்திரமல்லாமல் மற்றும் அநேகர்கள் கண்டித்தெழுதி வந்திருப்பதோடு அதை பகிஷ்கரித்து வந்திருப்பதும் வாசகர்கள் உணர்ந்திருக்கக்கூடும். அது மாத்திரமல்லாமல் அநேக முனிசிபாலிட்டி, தாலூகா, ஜில்லா போர்டு தலைவர்கள் "மித்திரன்" நிருபரை உள்ளே அனுமதிக்க மறுத்ததும், பார்ப்பன அங்கத்தினர்கள் சிபார்சு செய்திருப்பதும் அதே பத்திரிகையில் பார்த்திருக்கக்கூடும். என்ன செய்தும் பத்திரிகையினுடையவும் பத்திரிகை நிருபருடையவும் ஜாதிப் புத்தி கொஞ்ச மாவது மாற்றமடைந்ததாகக் காணமுடியவில்லை.

கொஞ்ச நாளைக்கு முன் தஞ்சை ஜில்லா போர்டு பிரசிடெண்டு தேர்தலின் போது நாம் தஞ்சைக்கு போயிருந்த காலத்தில் தேர்தல் முடிந்ததும் தலைவர் ஸ்ரீமான் பன்னீர்செல்வம் அவர்கள் சில அங்கத்தினர்களுக்கு நன்றி கூறுகையில் தனியாக நிருபர்களை வெளியில் போகும்படி கேட்டுக் கொண் டும், யாரும் இதைக் குறித்துக் கொள்ளக்கூடாது இது பொது விஷயமல்ல என்பதாகவும் சொல்லி சில விஷயங்கள் சொன்னார். அதனால் ஒரு பார்ப்பன நிருபர் திருட்டுத்தனமாய் வேஷ்டியைப் போர்த்துக்கொண்டு உள்ளுக்குள்ளாக குதித்துக்கொண்டு வந்தார். இதை நாகை தொழிலாளர் ஸ்ரீமான் திருஞான சம்மந்தம் கண்டுபிடித்து தலைவருக்கு சொல்ல அவர் சேவகனை விட்டு பரிசோதிக்க விஷயம் திருட்டுத்தனமாய் குறித்துக் கொள்ளப்பட்டதும் தெரிந்தது. அதுவும் விஷமத்தனமாய் குறிக்கப் பட்டி ருந்தது. இதைப் பார்த்து அங்கு உள்ளவர்கள் அவரை இகழ்ந்து வெளி யாக்கிவிட்டார்கள். இது போலவே கொஞ்சமாவது மானம், வெட்கம், கண்ணியம் என்பது இல்லாமல் ஒவ்வொரு விஷயங்களிலும் இந்தக் கூட்டம்



RangaRakes tamilnavarasam.com

உபத்திரவம் செய்து வருவது மறுக்க முடியாது. சமீபத்தில் கோயமுத்தூர் முனிசிபாலிட்டியில் சேர்மனுக்கு பல கௌரவம் இருக்கிறது; இதில் எதையாவது விட்டுவிட வேண்டும் என்கிற தத்துவமடங்கிய ஒரு தீர்மானத்தை இரண்டு பார்ப்பனர்கள் கொண்டு வந்த சமயத்தில் நடந்த விவாதங்களை தப்பாய் பிரசுரித்தார்கள். அதாவது கவுன்சிலர்கள் சேர்மனைப் பற்றிப் புகழ்ந்து பேசுகையில் "என் முன்னிலையில் என்னைப் புகழ்வது எனக்கு வெட்கமாயிருக்கிறது என்றும் இனி யாரும் தயவு செய்து என் புகழ்ச்சியைப் பற்றி பேசாதீர்கள் என்றும், குற்றத்தை மாத்திரம் எடுத்துச் சொல்லுங்கள் திருந்துவதற்கு முயற்சிக்கிறேன்" என்று கண்ணியமாய் சொன்ன வார்த்தையை கண்ணிய அபிப்பிராயம் கொடுக்கும்படி எழுதாமல் என்னை இம்மாதிரி அவமானப்படுத்த வேண்டாம் என்று கெஞ்சினதுபோல் குறிப்பிட்டிருந்ததும், இன்னும் இப்படி பல விதங்களில் உண்மையில் அந்தக் கூட்டத்தில் நடந்த விவாதத்தில் ஸ்ரீமான் முதலியாரை யாரும் இகழ்ந்து பேசியதாகவும் அப்பத்திரிகையிலும் குறிக்கவில்லை.

இப்படியிருக்க இப்படி பொருள்படும்படி சொன்னார். அப்படி நினைக்கத்தகுந்த மாதிரி சொன்னார் என்பதாக இவர்களுக்கு மறுபடியும் சமாதானமும் எழுத வருகிறார்கள். ஆகவே நமது பாமர மக்கள் இம்மாதிரி விஷமப் பிரசாரங்களைப் படித்துவிட்டு தங்களுடைய பரிசுத்தமான மனதை விஷமாக்கிக் கொண்டு விடுகிறார்கள். இந்த விஷமங்கள் பெரும்பாலும் ஜில்லா, தாலூகா போர்டு விஷயங்களிலேயே செய்யப்படுகிற காரணம் பார்ப்பனரல்லாதார் செல்வாக்கை ஒழித்துப் பார்ப்பனர் ஆதிக்கத்தை நிலை நிறுத்தவே. ஆதலால் இனி இம்மாதிரி விஷயங்களை நிறுத்தச் செய்ய வேண்டுமானால் ஜில்லா, தாலூகா போர்டு, முனிசிபல் தலைவர்கள் ஒன்று கூடி இம்மாதிரி பார்ப்பன நிருபர்களின் இடைஞ்சல்களிலிருந்து தப்பவும், பார்ப்பன பத்திரிகைகளின் விஷமப் பிரசாரத்திலிருந்து தப்பவும் வேண்டிய ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். குறிப்பிட்ட நிபந்தனைக்குட்பட்டு யோக்கியமாய் நடந்துகொள்ளும் ஜவாப்புதாரிதனத்தின் மேல் இவர்களை உள்ளே அனுமதிக்கவும் கவுன்சில் இவர்கள் நடவடிக்கை ஒன்று, இரண்டு, மூன்று எச்சரிக்கைகளுக்குப் பிறகும் திருத்தப்படா விட்டால் அடியோடு உள்ளே விடப்படாமலிருக்கவும் முடிவு செய்து கொள்ள வேண்டும். நிருப பார்ப்பனருக்கு இருக்கும் பொது நன்மை நமக்கு இருக்காது என்று எழுத எந்த மனிதனும் நினைக்கமாட்டான். திருட்டுப் புரட்டு நடக்கும் பொது ஸ்தானங்களை இந்தப் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்திற்கு அனுகூலமாயிருந்தால் வெளியிடவுமாட்டார்கள். ஆதலால், இதற்கு யாரும் பயப்படாமல் நமது சமூகத்தின் நன்மையையும், நாட்டின் பொது க்ஷேமத்தையும் கருதி இதற்கு ஏதாவது ஒரு முறையை தைரியமாய் கை கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 20.03.1927**



# பார்ப்பனர்களின் முட்டுக்கட்டை பூனைக்குட்டி வெளியாகிவிட்டது

சென்னை மந்திரிகள் "சுயராஜ்யக் கட்சிப் பார்ப்பனர்களும்", "ஒத்துழையாமைப்" பார்ப்பனர்களும் தங்களுக்கு உள் உளவாய் இருக்கிறார்கள் என்கிற தைரியத்தினால் ஆளுக்கு ஒரு விதமாய் தலைவிரித்தான் கோலமாய் உளறிக்கொண்டு வருகிறார்கள். "கன்னா பின்னா காவரையே, கூவரையே உங்களப்பன் வீட்டுப் பெருச்சாளி" என்னும் உளறலை ஒரு விறகுத் தலையன் பாடம் செய்துகொண்டு ஒரு சமஸ்தானத்திற்குப் போய் இதை கவி என்று சொல்லி பரிசு கேட்டதாகவும், அங்கு இந்த விறகுத் தலையனுக்கு அனுகூலமாயிருந்த ஒரு வித்வான் இதற்கு வியாக்கியானம் செய்து பரிசு பெற உதவியாய் இருந்ததாகவும் தமிழ் இலக்கியத்தில் ஒரு கதை உண்டு. அதைப் போல் மந்திரிகள் உளறலுக்கு சுயராஜ்யக் கட்சியார் அதாவது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் வியாக்கியானம் செய்து அவர்கள் பதவி நிலைக்க மந்திரிகளை மெச்சி நற்சாக்ஷி பத்திரம் அளிக்கிறார்.

உதாரணமாக ஒரு மந்திரி ஒரு ஊரில் படிப்படியாகத்தான் குடியை ஒழிக்க முடியும் என்றும் மற்றொரு மந்திரி குடி தப்பா சரியா என்பதை பற்றியே தான் இன்னமும் ஒரு முடிவுக்கு வரவில்லை என்றும், மற்றொரு மந்திரி பணத்திற்கு என்ன செய்வ தென்றும் பேசியவைகள் எல்லாருக்கும் தெரிந்ததே. இதைப்பற்றி வரவு செலவு திட்ட விவாதத்தில் "ஜஸ்டிஸ்" கட்சியார் எடுத்து சொன்னபோது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் உடனே வக்காலத்து வாங்கிக்கொண்டு சமாதானம் சொல்ல வந்துவிட்டார்கள். அதாவது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் "கவர்ன்மெண்டின் முறையில் எங்களுக்குள்ள அதிருப்தியைக் காட்டிக் கொள்ளப் போகிறோமல்லாமல் (மந்திரி பேரில் நாங்கள் குற்றம் சொல்ல இடமில்லை)" "இப்பொழுது இருக்கும் மந்திரி சபை ஜஸ்டிஸ் கட்சியாருக்குப் பிடிக்காததால் அதை தோற்கடிக்கப் பார்க்கிறார்கள்." ஆனால் ( நாங்கள் அதற்கு இடங்கொடுக்காமல் அதை நிலை நிறுத்துவோம்).

"ஜஸ்டிஸ் கட்சியார் இந்த மந்திரி சபையைத் தோற்கடித்து விட்டுத் தாங்கள் மறுபடியும் அதிகாரமடையப் பார்க்கிறார்கள்." ஆதலால் (நாங்கள்



RangaRakes tamilnavarasam.com

இந்த மந்திரிகளை எதிர்க்க முடியாது உதவி செய்துதான் தீருவோம்). "இப் போதிருக்கும் மந்திரிகள் வெளியிட்டிருக்கும் கொள்கை முற்போக்கானதாக விருக்கிறது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். இப்போதைய மந்திரிகள் மதுவிலக்கு விஷயத்தில் கஷ்டமிருப்பதாக சொல்லுவது எங்களுக்கும் தெரிகிறது. பணத்திற்கு வழி தேடவேண்டும். திருட்டுத்தனமாக மது வியாபாரம் தடுக்க வழி தேட வேண்டும்." (இது இரண்டும் செய்யாமல் மதுவிலக்கு என்பது முடியாத காரியம்). "இந்த மந்திரிசபையை கவிழ்த்துவிட நாங்கள் இப்போது சம்மதிக்க மாட்டோம். அதற்கு தகுந்த காலம் எங்களுக் குத் தெரியும்" (அதாவது இம்மந்திரிசபை கவிழ்ந்ததும் நாங்கள் அதை அடையக்கூடிய சமயம் எதுவோ அதுதான்) என்று பேசியிருக்கிறார். இது "சுதேசமித்திரன்" பத்திரிகையிலேயே இருக்கிறது.

**குறிப்பு:**

"இவ்வடையாளமிட்டது ஸ்ரீமான் மூர்த்தி அவர்கள் பேசியது" (.) இவ் வடையாளமிட்டது அதில் தொக்கியிருப்பது. ஆகவே பார்ப்பனர்களின் முட்டுக்கட்டையும் இரட்டை ஆட்சியை ஒழிக்குந் தன்மையும் வகுப்பு துவேஷமில்லாமல் தேச நன்மைக்குச் சட்ட சபையில் இவர்கள் வேலை செய்யும் பொது சேவையும் இதிலிருந்தாவது விளங்கவில்லையா? இது போலத்தான் இவர்கள் இனி வரப்போகும் முனிசிபாலிட்டி, டிஸ்ட்ரிக்ட் போர்டு முதலிய தேர்தல்களிலும் மக்களை ஏமாற்றி ஆதிக்கம் பெறப் பார்ப்பார்கள் என்பதைப் பாமர ஜனங்கள் உணரவேண்டும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 20.03.1927**



# குடி நிறுத்தும் யோக்கியர்கள்

ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் குடி நிறுத்தும் பேரால் தன் இனத் தாராகிய ஸ்ரீமான் சி.வி. வெங்கடரமணய்யங்காருக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க பிரசாரம் செய்த காலத்தில் ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் குடியை அடியோடு உடனே நிறுத்திவிடப் போகிறாரென்றும், அவருக்கு ஓட்டுக் கொடுங்களென்றும் அவர் மரத்தில் முட்டி தொங்கினதைப் பார்த்த பிறகு கூட கிராமம் கிராமமாய்த் திரிந்து பிரசாரம் செய்ததும் இதற்காக மகாத்மா காந்தியின் சிபார்சு கூட வாங்கினதும் வாசகர்கள் இதற்குள் மறந்திருக்க முடியாது. ஆனால் இப்பொழுது ஸ்ரீமான் வெங்கடரமணய்யங்கார் சட்ட சபையில் என்ன செய்கிறார் என்று பாருங்கள். குடியை உடனே ஒழித்து விடுகிறேன் என்றவர் 10 வருஷத்தில் ஒழிய வேண்டும் என்று விரும்புவதாக வும், அதற்குத் தகுந்தபடி மந்திரிகள் வேலை செய்தால் போதுமென்றும், ஆனால் இதற்காக வேண்டி இப்போதிருக்கும் மந்திரியைத் தோற்கடிக்கவோ கலைக்கவோ விடமாட்டோமென்றும் பேசியிருக்கிறார். ஸ்ரீமான் ராஜகோபா லாச்சாரியார் ஓட்டு வாங்கிக்கொடுத்த பார்ப்பன கனவானின் யோக்கியதை யும் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியால் ஏமாற்றப்பட்ட மகாத்மா காந்தியின் சிபார்சு பெற்ற பார்ப்பன கனவானின் யோக்கியதையும் இப்படி இருக்கு மானால் மற்றபடி ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்கள் பணத்தாலும் பிரசாரத்தாலும் ஓட்டுப் பெற்ற கனவான்களின் யோக்கியதையை நாம் சொல்ல வேண்டுமா? இதை அறிந்த பிறகாவது இவர்களுக்கு சிபார்சு செய்த பார்ப்பனர்கள் ஏதாவது பேசுகிறார்களா? அல்லது இவர்களை திருத்தவாவது முயலுகிறார்களா? ஒன்றுமில்லாமல் "சந்தடி சாக்கில் கந்த பொடி கால் பணம்" என்பது போல் ஒன்றும் தெரியாத சாது வேஷம் போட்டுக்கொண்டு "காந்தி வருகிறார் பணம் கொடு, காந்தி வருகிறார் பணம் கொடு" என்று அலைவதைத் தவிர வேறு என்ன? ஆகவே இந்த பார்ப்பனர்களின் தேசப்பக்தி முட்டுக் கட்டை, குடி ஒழித்தல், பாவாயி கருப்பாயி சம்பாஷணை, கோடு கட்டிய குறள் ஆகியதுகள் எல்லாம் சுயமரியாதையும், சுதந்திர உணர்ச்சியுமுள்ள பார்ப்பனரல்லாதாரை ஒழித்து தாங்கள் ஆதிக்கம் பெறுவதும் முடியாவிட்டால் தங்களது அடிமைகளான சுயமரியாதையும், சுதந்திர புத்தியும் அற்ற அசடுகளைக்கொண்டு பந்து



RangaRakes tamilnavarasam.com

வைத்து தங்கள் காரியங்களையும் சாதித்துக்கொள்ள முயற்சிப்பதுமல்லாமல் வேறு என்ன என்பதை பார்ப்பனர்களில் சில பார்ப்பனர்களாவது யோக்கியர் கள் இருப்பார்கள் என்று நினைக்கும் பிரபுக்கள் உணர்வார்களாக.

**குடி அரசு - கட்டுரை - 20.03.1927**



# தொழிலாளர்கள் தற்கால காங்கிரஸ் தலைவர்களை நம்பக்கூடாது; அதில் சேரவும்கூடாது.

தொழிலாளர்கள் காங்கிரசில் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக் கிறவரை அவர்கள் உலகத்தாராலும், அதிகாரிகளாலும், முதலாளிகளாலும் மனிதர்களாகப் பாவிக்கப்பட மாட்டார்கள் என்பதுதான் நமது முடிவும். இதைப் பல இடங்களில் சொல்லியும், எழுதியும் வந்திருக்கிறோம். சமீபத்தில் சென்னை சட்டசபைக்கு ஒரு தொழிலாளியை நியமிக்க சர்க்கார் பிரயத் தினப்பட்டதில் அப்பதவிக்கு மூன்று பேர்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன. ஒருவர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் பணம் வாங்கிக்கொண்டு அவர் சொல்படி நடப்பாரோ, தொழிலாளிக்கு ஒரு நன்மையும் செய்ய மாட்டாரோ என்பதாக சந்தேகித்து சில தொழிலாளர்கள் ஆக்ஷேபித்ததினால் அவர் பெயர் அடிக்கப்பட்டது. மற்றவர் ஸ்ரீ பெசண்டம்மை கோஷ்டியைச் சேர்ந்தவர் என்று சிலர் ஆக்ஷேபித்ததால் அவர் பெயர் அடிக்கப்பட்டது. மற்றவர் பார்ப்பன அதிகாரிகளுக்கு திருப்தி இல்லாததால் அவர் பெயர் அடிக்கப் பட்டது. ஆதலால் இனியாவது தொழிலாளர்களுக்கு பிரதிநிதித்துவம் வேண்டுமானால் தொழிலாளருக்கு ஓட்டுக் கொடுத்து அவர்களால் தெரிந் தெடுக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமே அல்லாமல் பார்ப்பனர் தயவில் சட்டசபைக்குப் போகலாம் என்பது முடியாத காரியம். போனாலும் பார்ப்பனர் கள் சொல்படி ஆடத்தான் முடியும். ஆனால், பார்ப்பன காங்கிரசோ தொழிலாளிகளுக்கு தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க சம்மதிக்காது. ஏனெனில் தங்களுடைய நன்மைக்கு தொழிலாளர்களை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறவர்கள்; எனவே இவர்கள் உண்மையில் தொழிலாளர் பிழைக்க இடம் கொடுப்பார்களா ?

*14. 12 .1926 "சுதேசமித்திரன்" 14 அம் பக்கத்தில் தொழிலாளர் பிரதிநிதித்துவம் என்ற தலையங்கத்தின் கீழ் திரு.ஆர்.சபாபதி முதலியார் எழுதிய மடலுக்கு போத்த னூர் ஜனாப் சேக் ஷர்வர் அவர்கள் எழுதிய மறுப்பு மடலை ஒட்டிய குறிப்புரை*

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 20.03.1927**



RangaRakes tamilnavarasam.com

# மேட்டூர் திட்டம்

" மேட்டூர் அணை திட்டம்" விஷயமாய் அதிலுள்ள ஊழல்களையும் தனிப்பட்ட வகுப்பினர் நன்மைக்காக நமது பணம் எவ்வெவ் வழிகளில் வீணாவதாயிருக்கிறது என்பதுபற்றியும் " ஜஸ்டிஸ்" பத்திரிகை கொஞ்ச நாளைக்கு முன் பொதுவாக சில குறிப்பு எழுதி இருந்ததற்காக சட்ட மெம்பர் ஸ்ரீமான் சி.பி. ராமசாமி அய்யர் அவர்கள் சட்டசபையில் வெகு ஆத்திர மாகவும் ஆணவமாகவும் அலட்சியமாகவும் அப்பத்திரிகையை பேர் சொல்லாமல் மறைமுகமாய் அவமதித்துப் பேசியதும் " இதற்கெல்லாம் நான் பயப்படமாட்டேண்" என்று " வீர முழக்கம்" செய்ததும் வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அதன் பேரில் " ஜஸ்டிஸ்" பத்திரிகையானது அத் திட்டத் தின் உள் ரகசியங்களையும் புரட்டுகளையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் புட்டு புட்டு விளக்கி மேட்டூர் திட்டத்தின் புரட்டு என்கிற தலையங்கத்தில் 3, 4 வியாசங்கள் எழுதினதும், சர். சி.பி அவர்களை குற்றவாளியாக்கி விசாரணை வைக்க வேண்டுமென்று எழுதி வந்ததும் வாசகர்களுக்கு தெரிந் திருக்கும். அதின் பேரில் சர்.சி.பி. அவர்கள் பெட்டியில் பாம்பு அடங்கினது போல் அடங்கி விட்டதோடு தான் எந்த பத்திரிகையையும் லட்சியம் செய்யப் போவதில்லை எந்த பத்திரிகைக்கு பயப்படபோவதில்லை, என்றாரோ அப் பத்திரிகையையே லட்சியம் செய்து அரசாங்க தோரணையில் ஒரு விளம்பரம் செய்து மக்களுக்கு சமாதானம் சொல்ல வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டார். அவ்விளம்பரமானது "ஜஸ்டிஸ்" பத்திரிகையிலும் "திராவிடன்" பத்திரிகையிலும் சட்டமெம்பர் மீது சுமத்தப் பட்டிருந்த ஒரு குற்றத்துக்காக வாவது பதில் சொல்லுவதாயில்லாமல் பூசி மெழுகி பாமர மக்களை ஏமாற்றி பணத்தைப் பாழ்பண்ண செய்வதாயிருக்கிறதேயல்லாமல் இவ்வளவு பணம் கோடிக்கணக்காய் கொள்ளை போகிறதே என்று வேதனைப்பட்டுக் கொண்டி ருக்கிற மக்களை ஒரு கடுகளவாவது சமாதானப்படுத்துவதற்கு லாயக்கில்லாத தாகவே இருக்கிறது.

"ஜஸ்டிஸ்" பத்திரிகையானது மேட்டூர் திட்டத்தின் ஊழல்கள் விஷயமாய் எழுதியிருப்பதின் சாராம்சமென்னவென்றால், இத் திட்டத்தின் கருத்தானது பொது மக்களின் நன்மையை யுத்தேசித்ததல்ல வென்றும் பார்ப்பன அதிகாரிகளும் பார்ப்பன பென்ஷன் அதிகாரிகளும் மற்றும் பார்ப்பன மிராஸ்தார்களும் ஆகவே முன்கூட்டியே பட்டுக்கோட்டை தாலூக் காவில் முக்கியமாக அங்குள்ள புன்செய் நிலங்களையெல்லாம் மிகவும் சலீஸான விலையில் வாங்கி வைத்துக் கொண்டு காவேரி தண்ணீரைக் கொண்டுபோய் பாய்ச்சிக் கொள்ள ஷை பார்ப்பன அதிகாரிகள் செய்து கொண்ட ஏற்பாடுதான் மேட்டூர் திட்டமே அல்லாமல் மற்றபடி இத்திட்டத்தால் நம் நாட்டிலுள்ள எல்லா வகுப்பார்களும் சமமாய் ஒருவித பயனும் அநுபவிக்க முடியாதென்பதும்.

இத்திட்டத்திற்காக கடன் வாங்கிச் செலவு செய்யப்படும் பணத்திற்குத் தகுந்த வட்டி கூட இதில் கிடைக்க முடியாதென்பதும் இத்திட்டத்திற்காக செலவு செய்த பணத்திற்கு ஏற்படும் வட்டிக்குக்கூட மற்ற ஜனங்களால் செலுத்தப்படும் வரியிலிருந்து எடுத்து கொடுக்க வேண்டி வரும் என்பதும் இத் திட்ட தண்ணீரைப் பெரும்பாலும் அநுபவிக்கிறவர்களான ஷை பார்ப்பனர்கள் "நாங்கள் ஏக்கராவிற்கு விதிக்கப்பட்டிருக்கிற 15 ரூ. கந்தாயம் கொடுக்க மாட்டோம்; ஐந்து ரூபா வீதம் தான் கொடுப்போம் பெற்றுக்கொள்ள இஷ்டம் இல்லையானால் உங்கள் தண்ணீர் எங்களுக்கு வேண்டுவதில்லை; புன்செய் வேளாண்மை செய்து கொள்ளுவோம்" என்று சொல்லி விடுவார்களானால் சர்க்காரார் பேசாமல் ஒப்புக்கொண்டு அவர்கள் கொடுக் கிற பணத்தை ஒப்புக் கொள்ளவேண்டுமே தவிர மற்ற நீர்ப்பாசனங்களில் பலனையனுபவிக்கிறவர்கள் கிடைத்த தண்ணீரை அநுபவித்துக்கொண்டு விதித்த தீர்வையைக் கொடுத்துத்தான் தீரவேண்டுமென்று சட்டப்படி கட்டுப்பட்டிருப்பதுபோல் மேட்டூர் திட்டத்தின் தண்ணீர் அனுபவிக்கும் பார்ப்பனர்களுக்கு ஒரு வித கட்டுப்பாடாவது, சட்டமாவது ஒப்பந்தமாவ தில்லையென்பதும் இத்திட்டமானது சரியானபடி ஆராய்ச்சியுடன் நிறை வேற்றப்பட்டதல்லவென்பதும், அந்த இலாகா சம்பந்தமான நிபுணர் களுடைய அபிப்பிராயம் மாறுபட்டிருக்கிற தென்பதும் இத்திட்டத்திற்காக செலவிடும் பெரும் பகுதியான பணங்களை யெல்லாம் யந்திரங்களுக்காக வும் சாமான்களுக்காகவும் வெளிநாடுகளுக்குப் போகவும் பார்ப்பன அதிகாரிகளும் வெள்ளைக்கார அதிகாரிகளும் மாதம் ரூ.1000, 2000, 3000 கணக்காகச் சம்பளங்கள் பெறவும் அவர்களுடைய பிள்ளை குட்டிகளும் சுற்றத்தார்களும் சில்லறை உத்தியோகங்களை அநுபவிக்கவும் கண்ட்ராக்ட் பலனை அநுபவிக்கவும் உபயோகப்படும்படியாக இருக்கிறதே யல்லாமல் பொது ஜனங்களெல்லாரும் கிரமமாய் அநுபவிக்கும் மாதிரியா யில்லை என்பதும் ஆகிய இன்னும் பலவித கருத்துக்கள் கொண்ட குற்றங்களைச் சுமத்தியிருக்கிறது. இவற்றிற்கு ஒன்றிற்காவது சட்ட மெம்பர் சரியான பதில் சொல்லாமலும் இத்திட்டத்தை சட்டசபையில் நிறைவேற்றுவதற்குமுன் சட்ட மெம்பர் என்னென்ன பேசினாரோ அவைகளை எல்லாம் லட்சியம் செய்யா மல் இப்போது அதற்கு நேர் விரோதமாய் மாற்றிச் சொல்லியும் வருகிறார். சாதாரணமாக நமது சர்க்காரார் இம்மாதிரியான நீர்ப்பாசனங்களுக்கு திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பாகவே அது நஷ்டம் அடையாமலும் அதினால்


RangaRakes
tamilnavarasam.com

பின்னால் எவ்வித கஷ்டம் ஏற்படாமலும் இருப்பதற்கு ஒரு சட்டம் செய்து கொள்வது வழக்கம். இத்திட்ட விஷயத்தில் நமது சட்ட மெம்பர் சட்டம் செய்து கொள்ளாமல் காரியத்தை நடத்துகிறார் என்று "ஜஸ்டிஸ்" பத்திரிகை சாட்டிய குற்றத்திற்கு சட்ட மெம்பர் விளம்பர மூலமாய் பதிலளிக்கையில் என்ன சொல்லுகிறாரென்றால் அம் மாதிரியான சட்டம் இல்லாததினால் ஒன்றும் முழுகிப்போய் விடாதென்றும், பூமிக்குடையவர்கள் தங்களுடைய நன்மையை உத்தேசித்தே சர்க்கார் ஏற்படுத்துகின்ற வரியைக் கொடுத்துத் தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளுவார்களென்றும் சமாதானம் சொல்லுகிறா ரேயல்லாமல் ஏன் தான் சட்டம் செய்து கொள்ளவில்லையென்பதற்கு சரியான பதில் சொல்ல வில்லை. இதற்கு முன் ஒரு சந்தர்ப்பத்தில் இந்த சட்டமெம்பரே சட்டசபையில் பேசும்போது என்ன சொல்லியிருக்கிறாரென்றால் இத்திட்டம் நிறை வேறுவதற்கு முன்னால் ஒரு சட்டம் செய்து கொள்ள வேண்டு மென்றும், அப்படி ஒரு சட்டம் செய்து கொள்ளாவிட்டால் பூமிக்குடையவர் களால் சர்க்காரார் நஷ்டமடைய வேண்டி வந்துவிடுமென்றும், சட்டமில்லா மல் இத்திட்டத்தை நிறைவேற்ற இந்திய அரசாங்கத்தாரும் சீமை அரசாங்கத் தாரும் உத்தரவு கொடுக்கமாட்டார்கள் என்றும், ஆகையால் சட்ட மேற் பட்டால் தான் திட்டத்தை நிறைவேற்ற முடியுமென்றும் சொல்லியிருக்கிறார். முன்னுக்குப் பின் முரணானதும் கண்ணியத்திலேயே சந்தேகப்படத் தக்கதுமான இந்த விஷயமொரு புறமிருக்க மற்றொரு விஷயத்தைப் பற்றி கவனிப்போம். அதாவது இத்திட்டத்தில் பலனையடைய ஏற்கனவே பூமி வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர் களென்றும் அவர்களிற் பெரும்பாலும் பென்ஷன் உத்தியோகஸ்தர்களும் சட்டந்தெரிந்தவர்களுமென்றும் முன்பே சொல்லியிருக்கிறோம். ஆகவே ஷை பார்ப்பனர்கள் இப்பொழுது சட்டமெம்பர் செய்திருக்கும் குற்றத்தைத் தெரிந்தும் அதில் சர்க்காருக்குள்ள பலக் குறைவைத் தெரிந்து கொண்டும் தாங்களெந்த விதத்திலும் சர்க்காருக்கு இவ்வளவு வரிதான் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் அல்ல என்கிற தைரியத்தினால் "ஏக்கரா ஒன்றுக்கு 5 ரூ. வீதம் தான் நாங்கள் வரி கொடுக்க முடியும், அதற்கு மேல் கொடுக்க முடியாது. உங்களுக்கு இஷ்டமிருந்தால் தண்ணீர் விடுங்கள் இல்லாவிட்டால் எங்களுக்குத் தண்ணீர் வேண்டியதில்லை" என்று ஷை பார்ப்பனர்களெல் லோரும் ஒன்று சேர்ந்து கட்டுப்பாடாய் தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளுவ தில்லை என்று சொல்லி விட்டார்களானால் அவர்களிடத்தில் வரி வசூலிக்க சர்க்காருக்குச் சட்டமெங்கே இருக்கிறது? இத் திட்டத்திற்காக சர்க்காரார் வாங்கின கடனுக்கு வட்டி கட்டுவதற்காக இத்திட்டத்தில் சம்பந்தப்படாத வர்களும் சர்க்காரார் கேட்கிற வரியை கொஞ்சமும் ஆக்ஷேபிக்காமல் கொடுத்துத் தீரவேண்டியவர்களும் மற்ற வேறு திட்டங்களின் நீரைப் பாய்ச் சிக்கொள்ளுகிறவர்களுமான தஞ்சை ஜில்லா குடியானவர்களிடமிருந்து தானே வசூலிக்க வேண்டும். அதோடு மேட்டூர் திட்டத்தின் தண்ணீரைப் பாய்ச்சிக் கொள்ளுகிற பார்ப்பன மிராஸ்தார்களிடமிருந்து அவர்கள் கொடுக்கிற வரியை வாங்கிக்கொண்டு அவர்களுக்குத் தண்ணீர் விட்டுத் தானே ஆக வேண்டும். விடுவதில்லையென்று சர்க்கார் சொல்லி விடுமே யானால் அந்தத் தண்ணீரை என்னதான் செய்வது? வேறு புது வாய்க்கால் வெட்டி வேறெந்த ஊருக்காவது தண்ணீர் திருப்புவதானால் அந்தச் செலவுகளுக்குப் பிடிக்கும் கோடிக்கணக்கான ரூபாய்க்கு எங்கே போவது? ஆகவே மேட்டூர் திட்டத்திலுள்ள ஊழல்களும் சட்ட மெம்பரின் குற்றங் களும் பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளும் நம்முடைய பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு சட்டசபையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் மண்ணாங் கட்டி பொம்மைகளின் யோக்கியதைகளும் இவர்களுக்கு ஓட்டுக் கொடுத்த னுப்பிய ஓட்டர்களாகிய பாமர ஜனங்களின் பக்குவங்களும் தெரிந்துகொள்ள இந்த ஒரு விஷயமே போதுமானதென்று நினைக்கிறோம். மேட்டூர் திட்டத்திலுள்ள மற்ற புரட்டுகளை சாவகாசமுண்டானபோது விவரிக்கலாம்.

**குடி அரசு - கட்டுரை - 27.03.1927**



RangaRakes tamilnavarasam.com

# அரசியல் வாழ்வு

## என்பது அயோக்கியர்களின் வயிற்று பிழைப்பு என்பதற்கு உதாரணம் இது போதாதா?

மகாத்மா காங்கிரசில் தலையிட்டு ஒத்துழையாமை கொள்கையை நாட்டில் பகிஷ்காரத் திட்டத்தையும் நிர்மாணத் திட்டத்தையும் நிறைவேற்ற உழைத்து வந்த காலத்தில் நாமும் நம்போன்ற அநேகரும் யாதொரு நிபந்தனையுமில்லாது குருட்டு நம்பிக்கையுடன் மகாத்மாவை பின்பற்றி உழைத்து வந்தது தமிழ்நாட்டில் பெரும்பாலோருக்குத் தெரியாமலிருக்காது. மகாத்மா ஜெயிலுக்கு போனவுடன் மேற்கண்ட பகிஷ்காரத் திட்டத்திற்கும், நிர்மாணத் திட்டத்திற்கும் விரோதமாய் நமது நாட்டு பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்து வந்த காலத்திலும் அதுகளுக்கு இடம் கொடுக்காமல் காங்கிரஸ் கட்டளை என்றும், காங்கிரஸ் கமிட்டி கட்டளை என்றும் கூட பார்க்காமல் ஷை திட்டங்களை நிலைப்பிப்பதிலும், நிறைவேற்றுவதிலுமே வேலை செய்து வந்ததும் அநேகருக்கு தெரிந்திருக்கலாம். இந்த சந்தர்ப்பங்களில் நம்மை நமது எதிரிகளான அரசியல் பார்ப்பனர்களில் பலர் காங்கிரசுக்கு துரோகி என்றும், தேசத் துரோகி என்றும், காங்கிரசில் இருக்க யோக்கியதையற்றவன் என்றும், காங்கிரஸ் இருப்பதா இறப்பதா? என்றும் காங்கிரஸ் கமிட்டியை விட்டு நம்மை நீக்கிவிட வேண்டுமென்றும், நம்மை காங்கிரசிலிருந்து நீக்கவும், நமது நடவடிக்கையை கண்டிக்கவும் பல கூட்டங்களும் கூட்டினதும், காங்கிரஸ் விதிப்படி நாம் காங்கிரஸ் கமிட்டியிலிருக்க சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று சொல்லி நமது ஸ்தானத்தில் வேறு ஒருவரை நியமித்ததும் அநேகருக்கு தெரியாமலிருக்க நியாயமில்லை. அதோடு ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவந்த காலத்தில் அத்தீர்மானம் காங்கிரஸ் கட்டளைப்படி இல்லாததால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லி அவரையும் ராஜினாமாக் கொடுக்கச் செய்ததும் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் இஷ்டப்படி நடக்க காங்கிரஸ் இடம் கொடுக்க வில்லை என்கிற காரணத்தால் அவரும் ராஜினாமா கொடுத்து வெளியேறவும், ஆகவே இவ்வளவு பேர்கள் சம்பந்தமும் காங்கிரஸ் நிர்வாகத்திலிருந்து விலக நேரிட்ட போதிலும் லக்ஷியமில்லாமல் காங்கிரஸ் கட்டளை, காங்கிரஸ் திட்டம், காங்கிரஸ் கட்டுப்பாடு என்று சொல்லிக் கொண்டு சுவாதீன புத்தி உள்ளவர்கள் எல்லோரையும் வெளியாக்கிவிட்டு



குலாம்களையும், கூலிகளையும் கூட சேர்த்துக் கொண்டு பாமர ஜனங்களை ஏமாற்றி பதவி பெற்ற பார்ப்பனர்கள் எவ்வளவு தூரம் காங்கிரசை மதித்திருக்கிறார்கள்? எவ்வளவு தூரம் காங்கிரஸ் கட்டளைப்படி நடக்கிறார்கள்? எவ்வளவு தூரம் காங்கிரஸ் கட்டுப்பாடுகளுக்கு இணங்குகிறார்கள்? என்பது இவ்வாரம் சட்ட சபையில் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து முழு மூடர்களும் அறிந்திருக்கலாம் என்றே நினைக்கிறோம். உதாரணமாக கடைசி காங்கிரஸ், அதாவது கோகத்தி காங்கிரசின் கட்டளை என்ன என்பதை முதலில் ஆராய்வோம்.

“இந்திய சட்டசபையிலும் மாகாண சட்டசபையிலும் உண்டான காங்கிரஸ்காரர்கள் எல்லா விஷயங்களிலும் எதிர்ப்பையே முக்கிய கொள்கையாய் கொள்ள வேண்டியது”. தேசீய கோரிக்கைக்கு அரசாங்கத்தார் இணங்கிறவரை அரசாங்கத்தால் கொடுத்து பெறுவதற்குரிய உத்தியோகங்களை மறுத்துவிடவேண்டும். மற்ற கக்ஷியார்களால் மந்திரிசபை அமைக்கப் படுவதை எதிர்க்க வேண்டும். செலவுகளுக்கு அனுமதி மறுக்க வேண்டும். வரவு செலவு திட்டங்களை நிராகரிக்க வேண்டும்....” இதுகளைச் சொல்லிக் கொண்டுதான் பாமர மக்களிடம் ஓட்டு பெற்றார்கள். இதுகள் எல்லாம் பார்ப்பனீய புரட்டென்றும், மோசமென்றும், பார்ப்பனரல்லாதார் கக்ஷியை ஒழித்து பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்தச் செய்யும் சூழ்ச்சிகள் என்றும் அப்பொழுதே நாம் எழுதி இருந்தோம். அதாவது 2. 1. 27 “குடி அரசில்” காங்கிரஸ் தீர்மானத்தைப் பற்றி எழுதி இருப்பதாவது:-

“காங்கிரஸ் தீர்மானங்களில் முக்கியமாய் கவனிக்கவேண்டியது 4 வது தீர்மானமாகிய சட்டசபை தீர்மானமேயாகும். இத்தீர்மானம் எவ்வளவு தூரம் பாமர மக்களை ஏமாற்ற ஏற்பட்ட தீர்மானம் என்பதை அறியவேண்டுமானால் இத்தீர்மானம் விஷயாலோசனைக் கூட்டத்தில் பிரேரேபிக்க ஆரம்பித்தவுடன் அங்கு இருந்த மகாத்மா காந்தி உடனே எழுந்து வெளியேறிவிட்டதிலிருந்தே அறிந்து கொள்ளலாம்...... தங்களுக்கு மெஜாரிட்டி வரும்வரை சர்க்கார் இணங்கி வரவில்லை என்று சொல்லிக்கொண்டு காலம் தாட்டவே இத்தீர்மானம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அல்லாமலும் இப்போது சுயேச்சை கட்சி மந்திரி சபை அமைத்தது என்பது பேருக்கு மாத்திரம் ஸ்ரீமான் சுப்பராயனே ஒழிய உண்மையில், “சுயராஜ்யக்கட்சி”பார்ப்பனரும் “ஒத்துழைப்பு” பார்ப்பனரும், “ஒத்துழையா” பார்ப்பனரும் ஆகிய எல்லோரும் சேர்ந்தே தான் அமைத்திருக்கிறார்கள். உண்மையில் சுயராஜ்ய கட்சியார் திருட்டுத்தனமாய் ஒத்துழைப்பதாக வாக்களித்திராவிட்டால் ஸ்ரீமான் சுப்பராயன் மந்திரி சபை அமைக்க தைரியம் கொண்டிருப்பாரா என்பதை வாசகர்களே யோசிக்க வேண்டும்......... இது “ஓடு மீன் ஓட உரு மீன் வருமளவும் காத்திருப்பதே அல்லாமல் வேறல்ல” என்று எழுதி இருக்கிறோம். அப்போது நம்ம பேரில் பலர்



RangaRakes tamilnavarasam.com

வருத்தப்பட்டிருந்தாலும் இப்போது எண்ணமாய் நடந்து கொண்டிருக்கிறார் கள் என்பதை கவனிக்க வேண்டுகிறோம். மந்திரிகளின் அமைப்பையே எதிர்க்க வேண்டியவர்கள் அமைப்புக்கு திருட்டுத்தனமாய் உளவாய் இருந்த தோடு மந்திரிகளின் பெயரில் ஜஸ்டிஸ் கட்சியார் கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத தீர்மானங்களுக்கும் ஓட்டுக் கொடுக்காமல் துரோகம் செய்து விட்டதும், சம்பளத்தை குறைக்க ஜஸ்டிஸ் கட்சியார் கொண்டு வந்த தீர்மானத் திற்கும் ஓட்டு கொடுக்காமல் துரோகம் செய்ததும் வரவு செலவு திட்டங்களை நிராகரிக்காமல், நிராகரிப்பதற்கு ஜஸ்டிஸ் கட்சியார் கொண்டுவந்த தீர்மானங் களுக்கு விரோதமாய் காங்கிரஸ் கட்சியார், சுயராஜ்யக் கட்சியார் ஓட்டுக் கொடுத்து நிறைவேற்றி வந்ததும் சட்டசபையில் இவ்வார வரவு செலவு திட்ட வாதத்தை கவனித்தவர்கள் நன்றாய் அறிந்திருக்கலாம்.

இதிலிருந்து காங்கிரசுக்கு கண்ணியம் இருக்கிறதா? காங்கிரஸ் காரருக்கு கண்ணியம் இருக்கிறதா? காங்கிரசில் ஆதிக்கம் பெற்ற சுயராஜ்ய கட்சியினருக்கு கண்ணியம் இருக்கிறதா? காந்தி சிஷ்யர்கள் ஒத்துழையாமை காரர் என்பவர்களுக்கு கண்ணியம் இருக்கிறதா? என்பதை நடுநிலைமை யிலிருந்து யோசித்துப் பார்த்தால் தெரியாமல் போகாது. யாரோ நாலு பார்ப்ப னர்கள் காங்கிரஸ் என்றும், காந்தி என்றும், கதர் என்றும், சுயராஜ்யம் என்றும், மிதவாதம் என்றும் ஆளுக்கொரு கட்சி பெயரை சொல்லி ஒவ்வொரு கட்சியிலிருந்து அதைக் கைபற்றிக் கொண்டு தாங்களே தேச பக்தர்கள், தாங்களே மகாத்மா பக்தர்கள், தாங்களே கதர் பக்தர்கள், தாங்களே மது விலக்கு பக்தர்கள், தாங்களே மிதவாதிகள் என்பதாக வேஷம் போட்டுக் கொண்டு சுயநலக் காரரையும், சுயமரியாதை இல்லாதவர்களையும், வயிற்று சோற்று தேசப் பக்தர்களையும் கூலி கொடுத்து சேர்த்துக்கொண்டு பொய் பிரசாரம் செய்தும் மக்களுக்கு லஞ்சம், லாவணம், கள்ளு, சாராயம் வாங்கி கொடுத்து ஓட்டுப்பெற்று பதவிகள் அடைந்து தங்கள் ஆதிக்கத்தை பலப்படுத்திக் கொள்ளுவதோடு பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தை ஒழிக்க முயலுவதே இத்தனை கட்சிகளுடையவும் கொள்கைகளாக வைத்துக் கொண்டு நம்மை ஏமாற்றுவது இதிலிருந்தாவது தெரிகிறதா இல்லையா? என்றுதான் கேட்கிறோம்.

சர்க்காரையும், மந்திரிகளையும் ஜஸ்டிஸ் கட்சியார் எதிர்க்கவும் சுயராஜ்யக் கட்சியார் ஆதரிக்கவும் யாராவது சுயராஜ்யக் கட்சியாரை "ஏனையா நீங்கள் காங்கிரஸ் கட்டளைப்படி சர்க்காரையும், மந்திரிகளையும் எதிர்க்க வில்லை" என்று கேட்டால் அதற்கு கொஞ்சமாவது மானம், வெட்கம், ரோசம், சுயமரியாதை, நாணயம் ஒன்றுமில்லாமல் இந்த மந்திரிகள் போனால் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் வந்துவிடுவார்கள். அதனால்தான் எதிர்க்காமல் இருப்பதோடு சர்க்காருக்கும், மந்திரிக்கும் ஆதரவளிக்க வேண்டி இருக்கிறது என்று சொல்லுகிற ஒரு கூட்டம் இன்றைய தினம் நம் நாட்டு மக்களுக்கு அரசியல் சுயராஜ்யம் வாங்கிக் கொடுக்கிறவர்கள் என்று சொல்லப்படு



வார்களானால் இந்த நாட்டுக்கு இதைவிட வேறு என்ன அவமானமும் இழிவும் வேண்டியிருக்கிறது? என்றுதான் கேட்கிறோம். தற்கால அரசியல மைப்பில் யார் தலையிட்டாலும் இப்படித்தான் நடக்க முடியும் என்று சொல்லு வது இதற்கு சமாதானமானாலும் அதை பார்ப்பனர் கள் தான் அனுபவித்துக் கொண்டு நம்மை அழிக்க வேண்டுமேயல்லாமல் நம்மவர்கள் அனுபவித்துக் கொண்டு சுயமரியாதையும் சமத்துவமும் அடையக்கூடாது என்று நம்மவர் களிலேயே சொல்லுகிற சில அசடுகள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகி றார்கள்?

**குடி அரசு - தலையங்கம் - 27.03.1927**



RangaRakes
tamilnavarasam.com

# “ திராவிடன் ”

“திராவிடன்” பத்திரிகையை நாம் ஏற்று அதற்கு பத்திராதிபராயிருந்து “குடி அரசு” கொள்கையின்படி நடத்தலாமா என்கிற விஷயத்தில் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை அறிய “வேண்டுகோள்” என்று தலையங்க மிட்டு ஒரு விண்ணப்பம் 6.3.27 தேதி “குடி அரசின்” தலையங்கமாக எழுதி இருந்தோம். பொறுப்புள்ள நண்பர்களை நேரிலும் கலந்து பேசினோம். அதற்கு இதுவரை ஐந்நூற்றுச் சில்லரை கனவான்கள் தனி முறையிலும் 7, 8 சங்கங்களும் 3, 4 பொதுக் கூட்டங்களும் தீர்மான மூலமாகவும், தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை தெரிவித்திருக்கிறார்கள். அவற்றுள் 500 பேர் வரையிலும் மற்றும் சங்கங்களும் பொதுக்கூட்டங்களும் “திராவிடனை” ஏற்றுக் “குடி அரசு” கொள்கைப்படி நடத்தும்படியும் 20 பேர்கள் ஒவ்வொரு வர் ஒவ்வொரு விதமாக அதாவது நிபந்தனை பேரில்தான் நடத்த வேண்டும் என்றும், உடல் நலம் கெட்டு போகும் என்றும், “குடி அரசு” குன்றி விடும் என்றும், வேறு பெயர் மாற்ற வேண்டும் என்றும், பிரசாரத்திற்கு போதுமான காலம் இல்லாமல் போய் விடுமென்றும் “தமிழ்நாடு”, “திராவிடன்” ஆகிய இரண்டு தமிழ் தினசரிக்கு நமது நாடு இடங்கொடுக்குமா என்றும், “ஜஸ்டிஸ்” கட்சியாரை நம்பி இறங்கினால் அவர்கள் “குடி அரசு” கொள்கைக்கு மனப் பூர்வமாய் கட்டுப்பட்டு நடப்பார்களா என்றும், ஜஸ்டிஸ் கொள்கை ஏற்றுக் கொள்ள வேண்டி வந்துவிட்டால் நமது முயற்சிகள் பலனில்லாமல் போகு மென்றும் “குடி அரசு”, “திராவிடன்” ஆகிய இரண்டு பத்திரிகை நடத்தினால் பணக் கஷ்டத்திற்காக ஊர் ஊராய் பிச்சை கேட்டுக் கொண்டு திரிய வேண்டிவரும் அப்படி ஆனால் நமது பிரசாரத்திற்கு மதிப்பு குறைந்து போகுமென்றும் ஆகிய பல விஷயங்களைப் பற்றி எழுதி இருக்கிறார்கள். இவற்றில் நடத்தும்படி சம்மதம் கொடுத்தவர்கள் எழுதியிருப்பதைப் பற்றி அதிகம் எழுதவேண்டியதில்லை. ஏனெனில் அது அவ்வளவும் இந்திரனே சந்திரனே, கடவுளே, ராமனே, கிருஷ்ணனே.......... என்று பலவாறாக புகழ்ந்தும் உதவி புரிவதாகவும் சுமார் 400 சந்தாதாரர்கள் போல் சேர்த்துக்கொடுப்பதாக வாக்களித்தும் 4, 5 கனவான்கள் பிரதிபிரயோஜனமில்லாமல் பத்திரிகைக்கு உழைப்பதாகவும் தங்கள் தங்களால் கூடுமானவரை சந்தா சேர்த்து அனுப்பு வதாகவும் திரவிய சகாயம் செய்வதாகவும், திராவிடனை ஒப்புக் கொண்டால் ஒழிய வேறு மார்க்கமில்லை என்றும், இம்மாதிரியாக அளவுக்கு மீறி



புகழ்ந்தும் உற்சாகம் காட்டியும் எழுதி இருக்கிறார்கள். இவற்றில் எடுத்துக் கொள்ளும்படி எழுதிய 500 நண்பர்களின் அபிப்பிராயத்தைவிட நிபந்தனை யாகவும் விரோதமாகவும் எழுதின 20 கனவான்கள் அபிப்பிராயத்திற்கு அதிகம் மதிப்புக் கொடுத்து ஒரு வார காலம் இதே சிந்தனையாய் இருந்து யோசித்து பார்த்ததில் அவர்கள் எழுதியிருப்பதில் பெரும்பாகம் யோசிக்க வேண்டிய விஷயமே இருந்தாலும், வேறு பல கஷ்டங்கள் இருந்தாலும் இந்த சமயத்தில் நமது கொள்கைக்கு ஒரு தினசரி இல்லாதிருப்பது சரியல்ல என்கிற முடிவுக்கே வரவேண்டியதாகி விட்டது. பணக் கஷ்டத்தைக் கூட நாம் அவ்வளவு பெரிதாய் நினைக்கவில்லை; எப்படியாவது நடத்தலாம் என்றா லும் மற்றபடி உள்ள கஷ்டங்கள் உண்மையானதுதான் என்றாலும் வேறு என்ன செய்வது என்று யோசித்தே சில நிபந்தனையின் மேல் ஒப்புக்கொள்ள லாம் என்கிற முடிவுக்கே வந்து அந்நிபந்தனைகளையும் ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களுக்கு எழுதப் போகிறோம். அந்தப்படி அவர்கள் ஒப்புக் கொண்டார்களானால் ஏற்று கொஞ்ச காலத்திற்கு நடத்தலாம் என்றே இருக்கி றோம். மற்றபடி ஊக்கங்காட்டி எழுதிய நண்பர்கள் தயாராக சந்தாதாரர்களைச் சேர்த்து வைக்கும்படியாக வேண்டுகிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 27.03.1927**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பன ஏமாற்றலும் மடாதிபதிகளின் மடமையும்

நம்நாட்டு மடாதிபதிகளுக்கு வருஷம் 1000, 10000, 100000, 1000000 ரூபாய்கள் என்பதாக வருஷ வருமானம் வரும்படியான சொத்துக்களை நமது முன்னோர்கள் நம் மக்களின் அன்புக்கும் ஒழுக்கத்திற்கும் ஆத்மார்த்த விஷயங்களுக்குமாக உபயோகப்பட வேண்டும் என்பதாகக் கருதி பொது நலத்திற்கு விட்டு அதை நிர்வகிக்க அக்காலத்தில் உண்மையாயும், யோக்கிய மாயும் நடந்து வந்த சன்னியாசிகள் வசம் இப்பொறுப்பையும் விட்டு வந்தார்கள். ஆனால், இப்போது இப் பெரும் பொறுப்பேற்ற பொது நல ஸ்தாப னங்கள் எந்நிலையிலிருக்கிறது? என்பதும், இதை யார் அனுபவிக்கிறார் கள்? என்பதும், இதற்கு நிர்வாக கர்த்தாக்களாகிய சன்னியாசிகள் என்போரின் யோக்கி யதை எப்படி இருக்கிறது? என்பதும் நாம் சொல்லவேண்டியதில்லை. இம்மாதிரியான மடங்களையும் தேவஸ்தானங்களையும் தர்மத்திற்காகவும் பொது நலத்திற்காகவும் அக்காலத்தில் சொத்துக்கள் விட்ட தர்மவான்களின் இஷ்டப்படி யோக்கியமாய் நடந்து வருகிறதா? என்பதை கவனிக்க இந்துமத பரிபாலன சட்டம் என்பதாக ஒரு சட்டம் இயற்றியதற்கு இம் மடாதிபதிகள் தங்கள் சுயநலத்துக்கும் போக போக்கியத்திற்கும் குறைவு வந்துவிடும் என்பதாக கருதி பார்ப்பனர்களுக்கு வக்கீல் பீசாகவும், லஞ்சமாகவும், பிச்சை யாகவும் அழுத பணங்கள் கணக்கு வழக்கில் அடங்காது என்றே சொல்ல லாம். இவ்வளவு பணங்களை தொலைத்தும் தாங்கள் வெற்றி பெற வில்லையே என்கிற கவலையுடன் இன்னமும் ஏதாவது வழியுண்டா? என்று பார்ப்பதற்காக இரவும் பகலும் பார்ப்பனர்களின் பாதத்தில் விழுந்து அவர்கள் சொல்லுகிற படியெல்லாம் தோப்புக்கரணம் போட்டுக்கொண்டு வருகிறார்கள். சமீபத்தில் ஸ்ரீமான் டி. ரெங்காச்சாரியார் என்கிற ஒரு பார்ப்பனர் முப்பது லக்ஷம் ரூபாயில் ஒரு பெரிய தர்மம் செய்யப் போவதாகவும் அதாவது வடநாட்டில் ஒரு பெரிய சமஸ்கிருத பள்ளிக் கூடமும், கோவிலும் கட்டப் போவதாகவும் அதற்கு பணம் வேண்டுமென்றும், இம்மட அதிபதி களிடமிருந்து பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டு திருவாவடுதுறை பண்டார சன்னதி அவர்களை கேட்டதற்கு அவர் வருஷம் 6000 ரூபாய் வீதம் 10 வருஷத்திற்கு கொடுப்பதாய் ஒப்புக்கொண்டாராம். இவரைப் பார்த்து மற்ற மட அதிபதிகளும் கொடுப்பார்கள். பிறகு ராஜாக்கள், ஜமீன்தார்கள்,



மிராஸ்தார்களும் கொடுப்பார்கள். ஏதாவது ஒரு வழியில் பார்ப்பானுக்கு கட்டுப்படாத சுவாமியோ, பண்டார சன்னதியோ, ராஜாவோ, ஜமீன்தாரோ, மிராஸ்தாரோ, நாட்டுக் கோட்டையாரோ மற்று ஏதாவது செல்வமுள்ளவர் களோ நமது நாட்டில் மிக மிக அருமையானதால் இந்த பணம் கொடுத்துதான் தீர வேண்டி வரும். ஆனால் இப்பணம் எதற்கு உபயோகப்பட போகிறது? டேராடூனில் சமஸ்கிருத பள்ளிக்கூடமும் கோவிலும் கட்டத்தான் உபயோகப்படும். ஆனால், தமிழ் பள்ளிக்கூடம் கட்டுவதற்காகவும் என்று வாயில் சொல்லி ஏமாற்றலாம். ஆனாலும் அங்கு போய் படிப்பதற்கு ஆள் எங்கே கிடைக்கும்? ஆதலால் அங்கும் 500, 600 பார்ப்பன பிள்ளைகள் பிழைக்கவும், கோவில் பிரவேசத்தில் வித்தியாசமில்லாத ஊரில் கூட கோவில் கட்டி வித்தியாசங்களை உண்டு பண்ணி இந்தியா முழுவதிலும் “சூத்திரர்கள்” உள்ளே போகக்கூடாது என்பதாக ஒரு நிரந்தர இழிவை உலக மெல்லாம் நிலைக்கச் செய்யவும்தான் ஏற்படப் போகிறது. இச்சூழ்ச்சி தெரிந்தும் நமது மட அதிபதிகள் நமது பணத்தை அள்ளிக்கொடுத்து பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளைகள் ஆகிறார்கள் என்றால் நமது கதி என்னே! என்னே!! நமது மடாதிபதிகளின் மடமை என்னே! என்னே!!

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 27.03.1927**



RangaRakes tamilnavarasam.com

# பத்திரப்பதிவு இலாக்காக்களில் மக்களுக்கு சுயராஜ்ஜியக் கக்ஷியார் செய்த அக்கிரமம்

சென்ற வாரத்தில் சென்னை சட்டசபை வரவு செலவு விவாதத்தின் போது பத்திரப்பதிவு இலாக்கா சம்மந்தமாக ஜனங்களுக்கு இப்போது இருக்கும் கஷ்டத்தை நீக்கும்படி அதாவது அதிகமாயிருக்கும் கட்டண விகிதத்தை குறைக்கும் படிக்கும் முக்கியமாக வெளியில் வர சௌகரியப் படாத பெண்களின் சௌகரியத்தை ஒட்டியும் காயலா முதலியவைகளால் அவஸ்த்தைப் பட்டுக்கொண்டு படுத்தப் படுக்கையில் கிடக்கும் ஏழை குடியானவர்களுக்கும் பத்திரம் ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமானால் ரிஜிஸ்டர் கட்டணம் முன்னையை விட இப்போது சரிபங்கு அதிகமாய் விட்டதால் அதாவது சப் ரிஜிஸ்ட்ரார் வீட்டுக்கு வருவதற்கு முன்னால் 10 ரூ. கட்டண மாயிருந்தது. இப்போது 20 ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதை குறைத்து ஜனங்களுக்கு சவுகரியம் செய்யும்படி ஒரு தீர்மானம் ஜஸ்டிஸ் கக்ஷியாரால் கொண்டு வரப்பட்டது. இதை அறிந்து சுயராஜ்யக் கக்ஷியார் இப் பெருமை ஜஸ்டிஸ் கக்ஷிக்கு விடக்கூடாது என்பதாக தாங்களும் இந்த விஷயத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வந்ததாய் ஜனங்களுக்கு காட்டுவதற்காக வேஷத்திற்காக ஒரு தீர்மானம் அனுப்பி யிருந்தார்கள். அக்ராசனர் சுயராஜ்யக் கக்ஷியை சேர்ந்தவராயிருப்பதால் இம் மாதிரி தீர்மானங்கள் சுயராஜ்யக் கக்ஷியார் பேரில்தான் வெளிவரக் கூடும் என்பதில் யாருக்கும் சந்தேகமிருக்காது. ஆதலால் ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியார் பேரால் தீர்மானம் விவாதிக்கப்பட்டது.

ஜஸ்டிஸ் கக்ஷி அங்கத்தினர்கள் அதிக கட்டணத்திலுள்ள கஷ்டங்களை எல்லாம் நன்றாய் எடுத்துச்சொல்லி வாதாடினார்கள். ஆனால் கடைசியாய் ஓட்டு எடுக்கும்போது சுயராஜ்யக் கக்ஷியார் வெளியே ஓடி விட்டார்கள். இதன் பலனாய் அத்தீர்மானம் தோல்வி அடைந்துவிட்டது. ஏழைகளுக்கு நன்மை செய்யும் சுயராஜ்யக் கக்ஷியாரின் யோக்கியதையை உணர புத்திசாலிகளுக்கும் யோக்கியர்களுக்கும் இதைவிட வேறு சாக்ஷியம் தேவையில்லை என்றே சொல்லுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 27.03.1927**



# "வகுப்பு உரிமை" வேண்டாம் என்று சொல்லித்திரியும் போலி தேசாபிமானி, தேசீயவாதிகளுக்கு ஒரு விண்ணப்பம்

நமது சென்னை அரசாங்கத்தின் 1925, 26 -வது வருஷத்திய நிர்வாக அறிக்கைபடி உத்தியோக விஷயங்களில் கீழ்கண்ட கணக்குகள் குறிக்கப் பட்டிருக்கின்றன.

நமது சர்க்கார் உத்தியோகத்தை மூன்று பிரிவுகளாக பிரிக்கப் பட்டிருக்கின்றது. அதாவது (1) கெஜட்டட் ஆபீசர் என்று சொல்லுவது. இது குறைந்தது சுமார் 250 ரூபாய்க்கு மேல்பட்டு 5500 ரூபாய் சம்பளம் வரையில் வாங்கக் கூடியது. இரண்டாவது 100 ரூபாய்க்கு மேல்பட்டு 250 ரூபாய் வரை வாங்கக் கூடியது. மூன்றாவது 35 ரூபாய்க்கு மேல்பட்டு 100 ரூபாய் வரையில் உள்ளது. ஆகவே, இந்த மூன்று உத்தியோகத்திலும் பார்ப்பனர்கள் இவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்றும், பார்ப்பனரல்லாதார் இவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்றும் கணக்கு போட்டிருக்கிறார்கள். இவ்வுத்தியோகங்களிலும் பார்ப்பனர்களே ஏகபோகமாய் அனுபவித்து வரும் நீதி இலாகா அதாவது முனிசீப், சப்ஜட்ஜி, ஜட்ஜிகள் முதலிய உத்தியோகங்களைப் பற்றி குறிப்பிடவே இல்லை. அதில்லாமலே உள்ள உத்தியோகங்களுக்கு சர்க்கார் குறிப்புப்படி எப்படி இருக்கிறது என்று பார்த்தால் நம்மில் நம்மவர்களுக்கும் விகிதாச்சாரம் உத்தியோகம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்பவர்கள் வகுப்பு உரிமைக்காரரா? அல்லது வேண்டாம் என்று சொல்லுகிறவர்கள் வயிற்று சோற்று உரிமைக்காரரா? என்பது வெளிப்பட்டுவிடும். கணக்கு விபரம்:-

| | | |
|---|---|---|
| கெஜட்டட் ஆபீசர் | | |
| மாதம் 1க்கு | மாதம் 1க்கு | மாதம்1க்கு |
| உத்தியோகம் | 100 ரூபாய்க்கு | 35க்கு மேல் |
| மாதம் 1க்கு | மேல் சம்பளம் | சம்பளம் |
| 250 க்கு மேல்பட்டு | பெறக்கூடிய | பெறக்கூடிய |
| 5500 ரூபாய் வரை | வர்கள் | வர்கள் |
| சம்பளம் பெறக்கூடியவர்கள் | | |



RangaRakes
tamilnavarasam.com

| | | | |
|---|---|---|---|
| பார்ப்பனர் | 402 | 3409 | 8197 |
| பார்ப்பனரல்லாத இந்துக்கள் | 215 | 1901 | 5238 |
| தாழ்ந்த வகுப்பார் | - | 2 | 54 |
| முகமதியர்கள் | 53 | 323 | 1139 |
| கிறிஸ்தவர்கள் | 109 | 456 | 643 |

100-க்கு மூன்று வீதம் உள்ள பார்ப்பனர் மொத்தம் = 12008

100-க்கு 97 வீதம் உள்ள பார்ப்பனரல்லாதார் எல்லோரும் சேர்த்து = 10133

இவற்றுள் 100-க்கு 25 வீதம் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பார். = 56

இதோடு முனிசீப்பு ஜட்ஜிகளின் கணக்கு சேர்ந்தால் எப்படி இருக்கும் என்பதையும் இந்தக் கணக்கை வெளியிட்டவர்கள் அந்தக் கணக்கையும் வெளியிட ஏன் பயப்படுகிறார்கள் என்பதையும் சுயராஜ்யம் வந்தாலும் இந்த கணக்குதான் ஏற்படுமா அல்லது வேறு கணக்கு ஏற்பட வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்பதையும் யோசித்துப் பார்த்து வகுப்புரிமை வகுப்பு வாதம் வேண்டாம் என்று சொல்லும் "தேசீயவாதிகள்" வகுப்பு வாதம் அல்லது வகுப்பு உரிமை தவிர வேறு வழிகளால் முக்கியமாய் தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் சமத்துவமடைய முடியுமா? என்பதையும் உத்தியோகம் பார்ப்பதும் "சுயராஜ்ஜியத்தில்" ஒன்று அல்லவா என்பதையும் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 27.03.1927**



# தஞ்சை ஜில்லா போர்டு

தஞ்சை ஜில்லா போர்டு, போர்டின் ஆதரவில் நடைபெறும் பள்ளிக் கூடங்களில் 25 ஆதிதிராவிடர் பிள்ளைகளுக்கு உண்டி உடை கொடுத்து இலவசமாய்க் கல்வி போதிக்க ஏற்பாடு செய்திருப்பதாகக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். பார்ப்பனரல்லாத பிரசிடெண்டு வந்ததினால்தான் இவ்வித சௌகரியம் செய்ய முடிந்தது. இதற்காக ஷை போர்டாரைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

**குடி அரசு - பெட்டிச் செய்தி - 27.03.1927**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனீயப் புரோகிதப் பகிஷ்கார சங்கம்

## ஆரம்பப் பிரசங்கம்

சகோதரிகளே! சகோதரர்களே!

நான் இன்று பேசத் துணிந்த விஷயமாகிய பார்ப்பனீயப் புரோகித பகிஷ்கார விஷயம் சாமானியமானதல்ல. ஆயிரக்கணக்கான வருஷங்களாய் அநேக தலைமுறையாய் நம்மவர்கள் குருட்டு நம்பிக்கையில் ஈடுபட்டு மதத்தின் பேரால் ஆத்மார்த்தம் என்றும், மோக்ஷம் என்றும், தர்மம் என்றும், புண்ணியம் என்றும், கடமை என்றும் கருதி சுயமரியாதை இழந்து நடந்து வந்திருக்கும் அர்த்தமற்ற ஒரு காரியத்தைப் பற்றி உங்கள் முன் பேசுவதென்பது சுலபமான காரியமென்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஏனெனில் இம்மூட நம்பிக்கையும் அர்த்தமற்ற நடவடிக்கைகளும் நமது மக்கள் ரத்தத்திலேயே கலந்து விட்டது. இதுகளைப் பற்றி யோசிப்பதுவே மிகப்பாவம் என்பதாக கருதப்படுகிறது.

கொஞ்ச காலத்திற்கு முன் இம்மாதிரி விஷயங்களுக்கு ஒரு கூட்டம் கூட்டுவது என்றால் கூட்டத்திற்கு வந்து என்ன பேசுகிறார்கள் என்று கேட்பதற்கு கூட மனிதர்களுக்கு பொறுமை இருக்காது. ஒரே அடியாய் "காலம் கெட்டுவிட்டது, கலியின் வக்கிரம் இம்மாதிரி நாஸ்திகம் வளருகிறது" என்று எவ்வளவோ வெறுப்பார்கள். ஆனால் இப்போது இதைப்பற்றி என்ன சொல்லுகிறான் என்று கேட்பதற்காவது இத்தனை பேர்கள் வந்திருப்பதே அதிலும் மதம், சமயம் முதலிய விஷயங்களிலும், சரித்திர ஆராய்ச்சி முதலிய விஷயங்களிலும் நிபுணர்கள் உள்பட அநேக மேதாவிகளும், அறிவாளிகளும் இவ்விடம் வந்திருப்பது எனக்கே ஒரு ஆச்சரியத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கிறது. ஆனால் ஒரு விஷயத்தை முதலிலேயே சொல்லிவிடுகிறேன். நான் படித்தவன் என்று சொல்லிக்கொள்ளும் கூட்டத்தில் சேர்ந்தவன் அல்ல. என்னுடைய 10 - வது வயதுக்கு மேல் நான் ஒரு பள்ளிக்கூடத்திற்கும் அனுப்பப்பட்டவனே அல்ல. ஏனெனில் எனது 10-வது வயதிலேயே எனக்கு படிப்பு வராதென்றும் பள்ளியில் ஒழுங்காய் போய் படிக்கமாட்டேன் என்றும், மிகவும் துஷ்டப்பிள்ளை என்றும் எனது பெற்றோர்களால் கண்டு பிடிக்கப்பட்டு என்னை என் தகப்பனார் பள்ளிக்கு



அனுப்புவதை நிறுத்தி தனது வியாபாரத்திற்கு அனுகூலமாயிருக்கும்படி கடையிலேயே வைத்துக் கொண்டார். இப்போது எடுத்துக்கொண்ட விஷயமாய் எனக்கு உள்ள எண்ணம் ஏறக்குறைய அந்த வயது முதற்கொண்டே இருந்து வந்தாலும் பள்ளியில் படித்ததினாலேயோ ஆராய்ச்சியினாலேயோ அல்லாமல் பெரியோர்களிடம் பேசி பேசி அறிந்ததினாலும் உலக அனுபவத்தினாலும் ஆலோசனைகளுக்கும், பகுத்தறிவுகளுக்கும் மதிப்புக் கொடுத்ததாலுமே தோன்றி இம்மாதிரி காரியங்களில் வெறுப்பு காட்டுவதும் இகழ்ந்து பேசுவதும் உண்டு. இம்மாதிரி நான் பேசும் காலத்தில் எனது வீட்டார்கள் உள்பட அநேகர் என்னை அக்காலம் முதல்கொண்டே பலமாய் நாஸ்திகம் என்றும், மததுவேஷம் என்றும் வெறுப்பார்கள். என்ன வெறுத்தாலும் எனது எண்ணங்கள் இம்மாதிரி விஷயங்களில் ஆலோசிக்க ஆலோசிக்க ஒரு சிறிதும் மாறுபடாமல் இருந்து வந்ததோடு இப்போதுதான் அவற்றை இவ்வளவு தாராளமாய் வெளியில் எடுத்துச் சொல்லவும் பலர் கூடி கேட்கவும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. பார்ப்பனீயப் புரோகிதப் பகிஷ்காரம் என்னும் இவ்விஷயம் இதன் பெயரைப் பார்க்கும் போதே பார்ப்பன புரோகிதத்தை மாத்திரம் விளக்கிவிட்டு அந்த இடத்தில் பார்ப்பனரல்லாத புரோகிதரை வைத்து அச்சடங்குகளைச் செய்வது என்பதாக பலருக்குத் தோன்றலாம். இச்சங்கத்தின் கருத்து அதுவல்லவென்றே நினைத்தே நான் இதில் பேச ஒப்புக்கொண்டிருக்கிறேன். அப்படி இல்லை யானால் இச்சங்கமே அவசியமில்லை. இவ் விஷயத்தின் கருத்தே மூட நம்பிக்கைகள் ஒழிய வேண்டும் என்பதும் மனிதன் தனக்குள்ளாகவே தான் மற்றவனை விட பிறவியில் தாழ்ந்தவன் என்கிற உயர்வு தாழ்வு உணர்ச்சி போய் தன்னம்பிக்கையும் சுயமரியாதையும் ஏற்படவேண்டும் என்பதும்தானே அல்லாமல் வேறல்ல. ஆனால் பார்ப்பனீயப் புரோகித பகிஷ்காரம் என்பதில் அவ்வித அர்த்தம் காண்கிறதே என்று கேட்பார்களானால் அதற்கு நான் சொல்லும் பதில்.

### புரோகிதம்

புரோகிதம் என்று சொல்லுகிற வார்த்தையும் அதில் பிறக்கும் அச்சடங்கு அதாவது திவசம், திதி, சிரார்த்தம், பிண்டம், புண்ணியாவர்ச்சனம், சாந்தி, கருமம், சங்கல்ப்பம், தானம், பிதுர் தேவதை, பிதுர்லோகம் முதலியதுகள் பார்ப்பனர்களாலேயே ஏற்பட்டதாலும், இதுகளும் இது போன்ற பல சடங்குகளும் பார்ப்பனீயத்திலிருந்தே தோன்றியதாலும் பார்ப்பனீயம்தான் இம்மாதிரி மூட நம்பிக்கைகளுக்கு தாயகமாகவும் மக்கள் உயர்வு தாழ்வு முதலிய கற்பனைகளுக்கும், ஆதாரமாகவும் இருப்பதால் பார்ப்பனீயமே முதலில் ஒழிய வேண்டும் என்கிற கருத்தைக் கொண்டு அப்பெயர் இடப்பட்டிருக்கிறதென்றே சொல்லுகிறேன். குருட்டு நம்பிக்கைகளும் மூடவழக்கங்களும் ஒழிய வேண்டுமானால் முதலாவது பார்ப்பனீயத்தை ஒழித்தாக வேண்டும். பார்ப்பனீயம் ஒழிய வேண்டுமானால் பார்ப்பனன் உயர்ந்தவன்,



RangaRakes tamilnavarasam.com

நாம் அவனை விட தாழ்ந்தவன் என்கிற உணர்ச்சி ஒழிய வேண்டும். ஆதலால்தான் முதல்படியாக பார்ப்பனன் உயர்ந்தவன் என்று எண்ணுவ தற்கும் ஆதாரமாயிருப்பதற்கும் அனுகூலமான பார்ப்பனனைக் கொண்டு தான் புரோகிதம் முதலிய சடங்குகள் செய்வது என்கிற வழக்கமும் உணர்ச்சி யும் ஒழிந்து விட்டால் அடுத்தப்படியில் அப்புரோகிதம் என்கிற மூட வழக்கங் களின் தத்துவத்தை எடுத்துச் சொல்லி அதிலிருக்கும் அர்த்தமற்றத் தன்மை யையும் எடுத்துக்காட்டி அவற்றை ஒழிப்பதற்கும் அனுகூலமாயிருக்கும். இல்லாதவரை பாமர ஜனங்களுக்குள் ஏதோ ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத் துவது போல் நினைத்து பயப்பட இடமுண்டாய்விடும். ஏனெனில் அம் மாதிரியான விஷயத்தை நான் முன் சொன்னது போல் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே நமது மக்களுக்குள் புகுத்தப் பட்டிருக்கிறது. அவ் விஷயத்தைப் படிப்படியாகத்தான் இறக்க வேண்டும். அவசரப்படுவதும் விதண்டாவாதம் பேசுவதும் காரியத்திற்கு உபயோகப் படாததாய்ப் போய் விடும். எனவே உயர்ந்த ஜாதி என்று எண்ணுகிற உணர்ச்சி ஒழிந்தவுடன் அதனால் ஏற்பட்ட மற்ற அசம்பாவிதங்களை ஒழிப்பது வெகு சுலபமாகி விடும் என்கிற எண்ணந்தானேயல்லாமல் பார்ப்பனர் வரும்படியைக் கெடுத்து அதை மற்றொருவருக்குக் கொடுக்க வேண்டுமென்பதல்ல. தவிர மேற் சொன்ன புரோகிதம் என்கிற சடங்குகள் நமக்கு எதன் மூலமாய் புகுத்தப் பட்டது என்று பார்த்தால் மதம் என்பதை ஆதாரமாய் வைத்து புகுத்தப் பட்டிருக்கிறது.

## இந்து மதம்

அம்மதம் இந்து மதம் என்று சொல்லப்படுவது. அவ்விந்து மதம் என்பது என்ன என்று பார்க்கப்போனாலோ அது "பிடிக்கப் பிடிக்க நம சிவாயா" என்பது போல் கொஞ்சங் கூடப் பொருள் இல்லாததும் முழுப் புரட்டானதும் என்றேதான் சொல்ல வேண்டும். இந்த இந்து மதம் என்கிற வார்த்தை எதில் இருக்கிறது? எப்போது ஏற்பட்டது? அதன் கொள்கைகள் என்ன? என்கிற விஷயங்களை விசாரிக்கப் போனால் ஒன்றுக்குமே சமா தானம் கிடைக்காது. உலகத்தில் இந்த இந்து மதத்தைத் தவிர வேறு எந்த மதமும் இம்மாதிரி புரட்டுகளையும் மோசத்தையும் கொண்டிருக்க வில்லை. வேறு எந்த மதஸ்த்தர்களும் தங்கள் மதத்தைப் பற்றி இவ்வளவு காட்டு மிராண்டித்தனமான மூடர்களாயிருக்கவில்லை.

## மற்ற மதங்கள்

முகமதிய மதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இன்ன காலத்தில் இன்னாரால் ஏற்பட்டது. அதன் கொள்கை இன்னது. அதற்கு மூல ஆதாரம் "குரான்." அதை யாரும் படிக்க வேண்டியது என்கிற குறிப்புகள் உண்டு. அது போலவே கிறிஸ்துவ மதத்தை எடுத்துக் கொள்ளுங்கள்; இது இன்ன



காலத்தில் இன்னாரால் ஏற்படுத்தப்பட்டது. அதன் கொள்கை இன்னது. அதற்கு மூல ஆதாரம் "பைபிள்". அதை யாரும் படிக்க வேண்டியது என்கிற குறிப்புகள் உண்டு. அது போலவே புத்தமதம், சமணமதம், சீக்கியர் மதம் என்பன முதலிய எத்தனையோ மதங்களுக்கு இது போன்ற காலமும் கர்த்தாக்களும், கொள்கைகளும், ஆதாரங்களும் அவற்றை எல்லா மக்களும் அறியவும் சுதந்திரங்களும் உண்டு. நாம் சொல்லும் இந்து மதத்திற்கு இவைகளில் ஏதாவது எள்ளளவாவது இருக்கிறதாவென்று பார்த்தால் ஊற்றுக்கு நிற்கும்படியான ஒரு காரியத்தையும் காணோம். **இந்து மதம் என்கிற பெயரே** பூர்வ சரித்திரங்கள், சங்க இலக்கியங்கள், புராணங்கள், இதிகாசங்கள், ஆகமங்கள், தர்ம சாஸ்திரங்கள், ஸ்மிருதிகள், வேதங்கள் முதலான எந்த புஸ்தகங்களிலும் இருப்பதாகத் தெரியவில்லை. நான்தான் முன்னமேயே அதிகமாய் படிக்கவில்லை என்று சொல்லிவிட்டேன். ஆனாலும் படித்தவர்கள் என்று சொல்லக்கூடிய அனேகரையும் கேட்டதில் ஒருவராவது இந்துமதம் என்ற பெயர் இன்ன ஆதாரத்தில் இருக்கிறது என்பதாக சொல்லவே இல்லை. இங்கும் யாராவது சொன்னாலும் சரி என்றே சொல்லுகிறேன்.

பொதுவாக இந்துமதம் என்றால் மக்கள் பிறவியில் உயர்வு, தாழ்வு என்பதை கற்பிப்பது. நெற்றியில் ஏதாவது குறி வைத்துக் கொள்வதும், பல சாமிகள் இருப்பதாக வணங்குவதும், "என் சாமி பெரியது", "உன் சாமி சிறியது" என்று சண்டை போடுவதும், சாமிக்கு பெண்டு பிள்ளைகள் கூத்தியா முதலியவைகள் கற்பிப்பதும் ஆகியவைகளைத் தவிர வேறொன்றும் இல்லை. இவைகளைப் பற்றி ஆராய்வோமென்றால், இவைகள், "வேதத்தில் உள்ளது" என்றும், "வேதம்தான் இந்துமதம்" என்று சிலர் சொல்லி விடு கிறார்கள். சரி அந்த வேதத்தையாவது பார்க்கலாம் என்றால் "அதை நீ கண்ணால் பார்த்தால் கண்ணை குத்த வேண்டும்," "காதால் கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றிவிட வேண்டும்" என்றும் சொல்லி விடுகிறார்கள்.

வேதத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்று தெரிந்து கொள்ளு வதற்கு கூட நமக்கு இடமில்லையானால் நாம் அதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? எவனாவது நம்மிடம் வந்து "உனக்கு கொஞ்சம் ரூபாய் தருகிறேன். பெற்றுக் கொண்டதற்காக இந்த கடிதத்தில் கையெழுத்துப் போடு" என்று சொன்னால் அக்கடிதத்தில் என்ன எழுதி இருக்கிறது என்று பார்த்துதானே கையொப்பம் இடுவோம். "அதை நீ பார்க்கக் கூடாது; நான் காட்டுகிற இடத்தில் கையெழுத்துப் போட வேண்டியதுதான் பணம் பெற்றுக் கொள் பவன் கடமை" என்று யாராவது சொன்னால் பேசாமல் கையொப்பம் போட்டு விடுவோமா? அதில் என்ன எழுதி இருக்கிறது, எத்தனை ரூபாய்க்கு எழுதி இருக்கிறது என்பவைகளை தெரிந்து கொள்ளாமல் கையெழுத்துப் போடுவது முட்டாள்தனம் என்று உணரமாட்டோமா? நம்மை பார்த்து "நீ இந்து மதஸ்த் தன். இந்து மதம் என்பது வேதத்தை ஒப்புக் கொள்வது. அதில் உள்ள சடங்கு



RangaRakes tamilnavarasam.com

களை நீ ஒப்புக் கொள்ள வேண்டும். ஒப்புக் கொள்வது என்பது பார்ப்பன னுக்கு பணம் கொடுப்பதும் அவர்கள் காலில் விழுவதும்தான். ஆதலால் எனக்கு பணம் கொடு. என் காலில் விழுந்து கும்பிடு. என் காலை கழுவின தண்ணீரை குடிப்பது உனக்கு மோக்ஷம் கிடைக்கச் செய்யும்" என்று ஒரு பார்ப்பனன் சொல்லுவானானால் நாம் சரி அப்படியே செய்யலாம் ஆக்ஷே பணை இல்லை. ஆனால் அந்த வேதத்தைக் கொஞ்சம் காட்டுங்களே. அதில் அப்படி எழுதி இருக்கிறதா என்பதை கொஞ்சம் கண்ணினால் பார்ப்போம் என்றால் "நீ அதைப் பார்க்கக் கூடாது. பார்த்தால் பாவம்" என்று சொல்லும் போது நாம் எப்படி அம்மதத்தை ஒப்புக் கொள்ள முடியும். முன் சொன்னது போல் படித்துப் பார்க்காமல் கையெழுத்துப் போடக் கூடிய அவ்வளவு மூடர்களாய் நாம் இருந்தால்தானே படித்துப் பார்க்காமல் இந்து மதத்தை ஒப்புக் கொள்ளுவதோ அல்லது அதில் இருக்கிறதாக சொல்லுகிறபடி நடப்ப தோ முடியும்.

இந்த இந்து மதம் என்கிற ஒரு மதம் தவிர வேறு மதக்காரர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் மதங்களையும் கொள்கைகளையும் தங்கள் மதக்காரர்கள் எல்லோரையும் படிக்கச் செய்வதுடன் வேறு மதக்காரர்களும் படிக்கும்படியாக அந்தந்த பாஷைகளில் தங்கள் சொந்த சிலவில் அச்சிட்டு இலவசமாக வழங்குகிறார்கள். பெண்களுக்கும், பெண்கள் மூலமாக வீட்டுக்கு கொண்டு வந்து கொடுக்கிறார்கள். சம்பளம் கொடுத்து பாதிரி மாரையும் உபதேசியாரையும் நியமித்து பிரசாரமும் செய்விக்கிறார்கள். இவர்கள் பெரும் கூட்டங்கள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று சாணி உருண்டை அடியும் கல்லடியும் பட்டுக்கொண்டு எல்லா ஜனங்களுக்கும் போதிக்கிறார்கள். ஆனால் நம்முடைய மதம் என்கிற இந்து மத சம்பந்தமான வேதம் என்பதையோ பார்ப்பனர்கள் தவிர மற்றவர்கள் கண்ணில் கூட பார்க்கக் கூடாது, காதால் கூட கேட்கக் கூடாது, நெஞ்சினால் கூட நினைக்கக் கூடாது என்கிறார்கள். மற்ற மதக்காரர்களுக்கு அதாவது கிறிஸ்தவர், மகமதி யர்களுக்கு கடவுளை வழிபடவும் தொழவும் நாள்களும் காலமும் முறை களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஞாயிறு, வெள்ளி ஆகிய கிழமைகள் முறையே அவர்களுக்கு முக்கிய நாளாகும். நமக்கோ ஒருவர் சனி, ஒருவர் ஞாயிறு, ஒருவர் திங்கள், ஒருவர் செவ்வாய் முதலிய ஏழு நாள்களைப் பற்றியும் ஒருவருக்கொருவர் சண்டையிடுவதல்லாமல் குறிப்புமில்லை. சர்க்காரிலும் நமது நாள்களுக்கு மரியாதை கொடுப்பதுமில்லை. அவர்கள் ஒப்புக்கொள்வது மில்லை. நமது இந்து மதம் என்பதையாவது சர்க்காரார் ஒப்புக் கொண்டு இருக்கிறார்களா அல்லது ஒப்புக் கொள்ளும்படி செய்திருக் கிறோமா என்று பார்த்தால் அதுவும் இல்லை. எப்படி என்றால், அரசியலில் சீர்திருத்தம் என்பதின் பேரால் பல மதங்களுக்கும் தனி பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது சட்டசபை ஸ்தானங்களுக்கு கிறிஸ்தவ மதத்தின் பேரால் கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்தவ தொகுதி என்று சில



ஸ்தானங்களும் மகமதிய மதத்தின் பேரால் மகமதியர்களுக்கு மகமதிய தொகுதி என்று பல ஸ்தானங்களும் ஒதுக்கி வைத்து கொடுக்கப்பட்டிருக் கின்றது. அப்படி இருக்க இந்து மதம் என்கிற ஒரு மதம் இருக்குமானால் அதற்கும் ஏதாவது சில ஸ்தானங்களை இந்து தொகுதி என்பதாக ஒதுக்கி இருப்பார்களா இல்லையா? அப்படி ஏதாவது ஒதுக்கப்பட்டிருக்கிறதா? என்பதை யோசித்து பாருங்கள். அல்லாமலும் இந்துக்கள் என்கிற நாம் சட்டசபைக்கு நிற்க வேண்டுமானால் எந்த பேரால் நிற்கிறோம் என்பதை சற்று கவனித்துப் பாருங்கள். மகமதியர் அல்லாதார் தொகுதி என்கிற பெயரால் தானே நிற்கிறோம். **மகமதியர் அல்லாதார்** என்றால் என்ன அர்த்தம் என்று உங்களுக்குத் தெரியுமா? மகமதிய மக்கள் கோட்பாடுப்படி 'காபா' என்றும் அல்லது 'மதம் இல்லாதவன்' என்றும்தான் பொருள்படும். நாம் மதமற்றவர்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?. இந்த பெயரை வேறு ஒருவரும் நமக்கு சூட்டவில்லை. நாமேதான் சூட்டிக்கொண்டு "மகமதியரல்லாதார் தொகுதிக்கு நான் நிற்கிறேன்" என்கி றோம். நமது சட்டசபை மெம்பர்கள் எல்லாம் மகமதியரல்லாதாரே தவிர இந்துக்கள் அல்ல.

இந்துமத பரிபாலன சட்டம் ஏற்படுத்தியதை பார்த்து சத்தம் போட்ட பெரிய பெரிய "இந்துமத வர்ணாசிரம தருமிகளும், இந்துமத தலைவர்களும், இந்து மதத்தைக் காப்பாற்ற பிரசாரம் செய்த பத்திராதிபர்களும்" இன்றைய தினம் இந்திய சட்டசபையில் மகமதியரல்லாதாராகத்தான் அங்கம் பெற்றிருக் கிறார்கள். காரணம் என்ன? மகமதியரல்லாதார் ஆக வேண்டுமென்றா? அல்லவே அல்ல. பின் என்னவென்றால் இந்துமதம் என்று ஒரு மதம் இருக்கிறதையும் அதன் கொள்கைகள் என்ன என்பதையும் ருஜூபிக்க முடியாததாலேயே அல்லாமல் வேறல்ல. இப்படிப்பட்டவர்கள் இந்துமத பரிபாலன சட்டத்தைப் பார்த்து "மதம் போச்சுது" "மதம் போச்சுது" என்று சத்தம் போட்டார்கள் என்றால் நமது பணத்தை தின்று கொளுப்பதால் அவர்களுக்கு ஏற்படும் மதம் போய்விடுமே என்கிற பயத்தினாலே தானே யல்லாமல் வேறல்ல. மற்றபடி அந்த சட்டத்தினால் இப்பொழுது இருப்பதாய் பாசாங்கு பண்ணும் மதத்திற்கு என்ன குறைவு எந்த பிரிவினால் ஏற்பட்டு விட்டது?

தவிரவும் மதத்தில் "சர்க்கார் புகுந்து விட்டார்கள். சர்க்கார் புக நம்ம மந்திரிகள் இடம் கொடுத்துவிட்டார்கள்" என்று சத்தம் போட்டார்களே. சர்க்கார் எதில் புகுந்து விட்டார்கள்? எப்பொழுது புகுந்து விட்டார்கள்? இதற்கு முன்பு புகவில்லையா? என்பதற்கு இவர்கள் பதில் சொல்ல முடியுமா? இந்துமத சாமியின் நெற்றியில் வைக்கும் நாமம் (குறி) வடகலையா, தென்கலையா என்பதை கண்டுபிடிக்க நமது மத ஆதாரங்களான வேத சாஸ்திர நூல்களில் நமக்கு முடிவதில்லை. வெள்ளைக்கார ஜட்ஜ் சொன்னால் தான் நாமும் ஒப்புக் கொள்கிறோம். நமது கோவிலில் தேவார பாராயணம்



RangaRakes tamilnavarasam.com

செய்யலாமா வேண்டாமா? என்பதற்கு வெள்ளைக்கார கோர்ட்டில் தான் முடிவு பெற வேண்டி இருக்கிறது. இப்படி இருக்கும் போது நமது மதத்திற்கு ஏதாவது பொது கொள்கை உண்டா? சுயமரியாதை உண்டா? ஆகவே நமது மத அஸ்திவாரமே, அதன் தத்துவமே நமக்கு இன்னது என்று சொல்ல முடியா மலிருக்கும்போது அதிலிருந்து ஏற்பட்ட ஆபாச கட்டுப்பாடுகளைப் பற்றியும் அர்த்தமற்ற சடங்குகளைப் பற்றியும் கவலை செலுத்துவது எவ்வளவு முட்டாள்தனமான காரியம் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். மதச் சடங்குகளின் யோக்கியதையே இப்படி இருக்கும் போது சடங்குகளை பார்ப்பனரைக் கொண்டு செய்வதா? பார்ப்பனரல்லாதாரைக் கொண்டு செய்வதா? என்கிற கேள்விக்கு ஏதாவது அர்த்தமிருக்கிறதா? ஒருவனை "பந்தியிலேயே உட்கார வேண்டாமென்றால் இலை கிழிந்திருக்கிறது என்று சொல்லுவதில் பிரயோஜனமென்ன" என்கிற பழமொழி போல் இருக்கிறது யாரைக்கொண்டு புரோகிதம் செய்விக்கிறது என்கிற விஷயம்.

## மதச் சடங்கு

இம்மாதிரி முழுதும் மோசமான மதத்தின் பேரால் நமக்கு ஏற்பட்டிருக்கும் சடங்குகளும் அதனால் நமக்கு ஏற்படும் வரி (செலவு)களும் அதனால் நமது சுயமரியாதை எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறது என்பதும் சற்று யோசித்துப் பாருங்கள். நாம் ஒரு இந்து என்று சொல்லிக்கொள்வதனால் பார்ப்பனர்களுக்கு எவ்வளவு வரி கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதை சற்று கவனியுங்கள். சர்க்கார் நம்மிடம் வாங்கும் வரியைப்பற்றி நமது அரசியல் பிழைப்புக்காரரான இதே பார்ப்பனர்கள் அதுவும் அந்த வரி பணங்களை எல்லாம் இவர்களே அனுபவித்துக் கொண்டு எவ்வளவு சத்தம் போடுகிறார்கள். சர்க்காராவது வாங்கும் வரிக்கு ஒரு திட்டம் கணக்கு வரவு செலவு முதலியவைகளை காட்டுகிறார்கள். வீடு, பூமி, கடை, தொழில், வியாபாரம், விவகாரம் முதலியவைகள் உள்ளவர்களிடம்தான் வரி வசூலிக்கிறார்கள். அதை சரியாகவோ, தப்பாகவோ எல்லோருக்கும் உபயோகப்படுத்துவதாக சொல்லுகிறார்கள். மதத்தின் பேரால் இப்பார்ப்பனர்கள் நம்மிடமிருந்து வாங்கும் வரிப்பணத்துக்கு ஏதாவது ஒழுங்குண்டா? முறையுண்டா? வரவு செலவு கணக்கு சொல்லுவதுண்டா? ஒன்றுமில்லாமல் ஒவ்வொரு மனிதனையும் விடாமல் அதுவும் அவன் கர்ப்பத்தில் தரிக்கும் முன்பே கர்ப்பதான முகூர்த்தம் என்பதாகவும், கர்ப்பம் தரித்தால் சீமந்த முகூர்த்தம் என்பதாகவும் பிறந்துவிட்டால் ஜாதகரணம், நாமகரணம், தொட்டிலில் போடுதல், பாலூட்டுதல், ஆயிசு ஓமம், முடி வாங்குதல், காது குத்துதல், பள்ளியில் வைத்தல், காயலா முதலியதுகளுக்கு சாந்தி பிறகு அவனுக்கு கல்யாணம் என்றால் பெண் பார்த்தல், ஜாதகம் பார்த்தல், பொருத்தம் பார்த்தல், நாள் பார்த்தல், விவாகம் ஆன பின் ஷ சடங்கு அவன் பிள்ளைக்குட்டி பெற்றால் அதற்கும் அவன் காயலாவுக்கு கிரக தோஷம், சாந்தி, கோவில், குளம், யாத்திரை



ஆகியதுகள், இவ்வளவும் தவிர கடைசி காலத்தில் சாவதாயிருந்தால் சாக அதாவது உயிர்விட பத்து நிமிஷமிருக்கும்போதே சுங்கக் காரனுக்கு சுங்கம் கொடுத்துவிட்டுதான் ஒரு ஊருக்குள் நுழைய வேண்டும் என்பது போல பார்ப்பானுக்கு மாடு வாங்கி கொடுத்தால்தான் (கோ தானம்) இந்த ஜீவன் அந்த மாட்டின் வாலைப் பிடித்துக் கொண்டு மோட்சத்திற்குப் போக முடியும். இல்லாவிட்டால் மேலோகத்திலுள்ள நெருப்பாறு மயிர்ப் பாலம் தாண்ட முடியாது என்று சொல்லி மாடு கொடுக்க வேண்டி இருக்கிறது. மாடு கொடுத்து செத்து விட்டாலாவது விடுகிறானா? அப்போதும் வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு இழவுக்கு வந்தவர்களைக் கூட விசாரிக்க நேரமில்லாமல் உபத்திரவித்து வரிசையாக ஷ முழுவதும் பிச்சி புடுங்கிதின்கிறார்கள். இவ்வளவுடன் தீர்ந்து விடுகிறதா? இல்லவே இல்லை. ஒரு ஷ ஆனதும் " உன் தகப்பனார் இன்ன வருடம், இன்ன மாதம், இன்ன தினம், இன்ன திதியில் செத்துப்போனார். வை பணம், அரிசி, பருப்பு, உப்பு, புளி வகையறா சாமான்கள்" என்று கேட்பதோடு சாப்பிட்டு அஜீரணம் ஏற்பட்டால் அதற்கும் இஞ்சியும், சுக்கும் வை என்றும் கேட்டு வாங்கி இவ்வளவும் கொடுத்தும் "நீயும் உன் பெண்ஜாதியும் என் காலில் விழுந்து கும்பிட்டு கால் கழுவின தண்ணீரைக் குடியுங்கள்" என்றும் சொல்லி மூட்டைக் கட்டிக்கொண்டு போய் விடுகிறான். அம்மூட்டைகள் அநேகமாக தாசிகள் வீட்டிற்கே போய்ச் சேருகிறது.

## மடாதிபதிகள்

மதச் சடங்குகள் யோக்கியதைதான் இப்படி இருக்கிற தென்றால் மதாச்சாரியார்கள் யோக்கியதையை கொஞ்சம் பாருங்கள். மதத்தை காப்பதற்காக என்றோ மதப் பிரசாரம் செய்வதற்காக என்றோ அல்லது சமயத்தை பரப்ப என்றோ நமது முன்னோர்கள் விட்ட சொத்துக்கள் இன்றைய தினமும் 100, 200, 500, 1000க்கணக்கான வேலி பூமிகளும் 10000, 20000, 50000க்கணக்கான விராகன் பொன்களும், ராஜ்யம், ஜமீன், மிட்டா என்ற ஆட்சிகளும் தானமாகவும் மானியமாகவும் விட்டிருக்கிறார்கள். இவற்றை நிர்வகிக்கும் மடாதிபதிகளின் யோக்கியதை எப்படி இருக்கிறது? அவர்களின் ஒழுக்க வழக்கங்கள் எப்படி இருக்கிறது? இவ்வளவு சொத்துக்களின் வரும்படிகள் மதத்திற்கோ சமயத்திற்கோ என்ன பிரயோஜனப்படுகிறது?

## மத ஆச்சாரியர்கள்

இது போலவே ஆச்சாரியர்களும், லோக குருக்களும் என்ன செய்கிறார்கள் என்று பாருங்கள். யானை, குதிரை, வண்டி, மாடு, தங்கம், வெள்ளி, தந்தம் ஆகிய பல்லாக்குகள் முதலிய 500 உருப்படிகளுடன் ஊர் ஊராய் திரிவதும் அங்குள்ள பார்ப்பன அதிகாரிகள் செல்வாக்கால் மக்களை மிரட்டியும், ஏமாற்றியும் 100, 200, 1000, 2000, 5000 என்பதாகத் தெண்டத் தீர்வை



RangaRakes tamilnavarasam.com

போல் வசூலிப்பதும் பொங்கிப் பொங்கி தங்கள் இனத்தாரிலேயே பொறுக்கி, சோம்பேறிகளுக்கும், தடியர்களுக்கும் படைப்பதும் மீதியை மூட்டைக் கட்டிக் கொண்டு பகல் கொள்ளைக்காரன் போல் மற்றொரு ஊருக்கு போய் டேரா அடிப்பதுந் தவிர என்ன மத உபதேசமோ ஆத்மார்த்த உபதேசமோ செய்கிறார்கள்? ஷை ஆச்சாரியர்கள் நம்மிடம் பேசினாலே பாவம். சூத்திர சம்பாஷணை என்று அதற்காக பிராயச்சித்தம் செய்து கொள்ளுவதுதான் நம்மை அவர்கள் உபதேசம் செய்வதும் மரியாதை செய்வதுமான விதமாயிருக்கிறது.

## கடவுள்

மத ஆச்சாரியார்கள் யோக்கியதைத்தான் இப்படி என்றால் இம்மதத்தில் ஏற்பட்ட கடவுள்களின் யோக்கியதைகளோ சொல்லவே வெட்கக் கேடாய் இருக்கிறது.

ஆளுக்கு ஒரு கடவுளும் "என் கடவுள் பெரிது; உன் கடவுள் சிறிது" என்கிற சண்டையும், ஊருக்கு ஒருவிதமான கடவுளும், ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொருவிதமான கடவுளும், தத்துவமும் அதாவது ஒருவன் கடவுள் கிட்டப் போனால் சாமி செத்துப் போவதும், ஒருவன் கடவுள் இருக்கும் கோவிலுக்குள் போனால் சாமி செத்துப்போவதும், ஒருவன் கோவில் மதிலுக்குப் பக்கத்தில் போனால் சாமி செத்துப்போவதும், ஒருவன் சாமியைப் பார்த்து விட்டால் சாமி செத்துப்போவதும், இப்படி செத்துப்போன சாமிகளுக்கு பார்ப்பானுக்கு பணம் கொடுத்தால் உயிர் வந்துவிடுவதும், ஜகநாதத்திலும், பண்டரிபுரத்திலும், காசியிலுமிருக்கும் சாமி யார் தொட்டாலும், யார் தொட்டு கும்பிட்டாலும் சாகாமலிருப்பதும் நம்ம நாட்டிலுள்ள சாமி நாம் கட்டினதாயிருந்தாலும் நாம் சிலவு கொடுத்து பூஜை செய்விப்பதாயிருந்தாலும் நாம் கிட்டத்தில் போன உடனே செத்துப் போவதும், ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சி, சிதம்பரம் முதலிய ஊர் சாமிகள் நாடார் கனவான்கள் கோயிலுக்குள் போய் நம்மைப்போல் கும்பிட்டால் சாகாமலிருப்பதும், மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய ஜில்லா சாமிகள் நாடார்கள் கோயிலுக்குள் வந்து கும்பிட்டால் செத்துப் போவதும், நாடார்கள் வீட்டிற்கு சாமி போய் வந்தால் சாகாமலிருப்பதுமாக எத்தனையோ வித்தியாசமான சாமிகளும் எவ்வளவோ பலக் குறைவான சாமிகளும் நமது மதத்தில் கும்பிடப்படுகிறது.

## மோக்ஷம்

சாமியின் யோக்கியதைத்தான் இப்படி என்றால் மோக்ஷம், புண்ணியம் என்பதோ இதைவிட ஆபாசமானதென்றே சொல்ல வேண்டி இருக்கிறது. அதாவது மனிதனுடைய யோக்கியமான எண்ணத்தினாலும் வார்த்தையினாலும் நடவடிக்கையினாலும் இல்லாமல் பார்ப்பானுக்கு கொடுப்பதினாலேயே



புண்ணியமும் மோக்ஷமும் ஏற்பட்டு விடுகிறது. எவ்வளவு அயோக்கியத் தனமும் கொலை பாதகமும் கொடுமையும் நம்பிக்கை துரோகமும் செய்து விட்டாலும் பார்ப்பானுக்கு பணம் கொடுத்தால் எல்லாப் பாவமும் ஓடிப்போய் மோக்ஷம் கிடைத்து விடுகிறதாம். பார்ப்பானுக்கு கொடுப்பதாலேயே நமது இஷ்டம் சித்தியாவதும் நமது பிள்ளை குட்டிகள் சந்ததி விளங்குவதும் ஆகக்கூடியதாயிருக்கிறது. நமது நாட்டுப் பழய காலத்து அரசர்கள் இந்த பார்ப்பனர்களுக்கு அழுதது கொஞ்ச நஞ்சமல்ல. எத்தனை மானியம்? எத்தனை அக்கிரமம்? எத்தனை அன்ன சத்திரம்? எத்தனை கன்னிகாதானம்? முதலிய 32 தர்மங்கள் செய்திருக்கிறார்கள். இப்போது அந்த அரசாங்கமெல்லாம் எங்கே? கடைசியான தஞ்சாவூர் அரசாங்கம் பார்ப்பனருக்கு கொடுத்து அழுததுபோல ஒரு அரசாங்கமும் கொடுத்ததை நாம் பார்த்ததில்லை. இப்பொழுதும் அதை அநுபவிக்கிற பார்ப்பனர்கள் கணக்கு வழக்கில்லை. அப்பேர்பட்ட தஞ்சை அரசாங்கம் இன்றைய தினம் பேர் சொல்லக் கூட சந்ததி இல்லாமலும் ராஜா க்ஷத்திரியன் அல்ல, சூத்திரன் என்று அவரிடம் வாங்கித் தின்கிறவர்கள் சாக்ஷி சொல்லவுமாய் இருக்கிறார்கள். பார்ப்பனருக்கு கொடுப்பவர்களின் குடும்பம் நாசமாய் போய் விட்டது, விடுகிறது, விடும் என்பதற்கு இதை விட வேறு உதாரணம் வேண்டியதில்லை. ஆகவே வேதம், சடங்கு, ஆச்சாரியர்கள், சாமி, மோக்ஷம், புண்ணியம் என்கிற விஷயங்களில் நமது மதம் என்பதின் யோக்கியதை எப்படி இருக்கிறது என்பதையும் இதை பிரதானமான நினைத்துக் கொண்டு நமது ஜனங்கள் ஏழைகள் முதல் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை எப்படி நாசம் செய்து நம்மை போன்ற மனிதனுக்கு நம்மிலும் ஒழுக்கத்திலும் யோக்கியதையிலும் இழிந்தவனுக்கு முட்டாள்தனமாய் கொடுத்து சுயமரியாதையில்லாமல் அவன் காலில் விழுந்து கால் கழுவின தண்ணீரைக் குடிக்கிறோம் என்பதையும் நீங்களே நன்றாய் யோசித்துப் பாருங்கள். நான் பேசுவதைப் பார்த்து கைத்தட்டினீர்கள், சிரித்தீர்கள், ஆச்சரியப்பட்டீர்கள், இப்பொழுது தான் இந்த விஷயங்களைக் கேட்டு உங்கள் பைத்தியக் காரத்தனத்திற்கு விசனப் படுகிறவர்கள் போல் ஜாடை காட்டினீர்கள். இதில் என்ன பிரயோசனம். நீங்கள் எழுந்து வீட்டுக்குப் போகும் போது நாடகம் பார்த்தவர்கள் போல் நன்றாய் பேசினார் நன்றாய் பேசவில்லை என்பதாக எனக்கு நற்சாக்ஷி பத்திரம் கொடுப்பதில் உங்கள் புத்தியை சிலவிடாமல் நான் பேசியவைகளில் எது சரி எது தப்பு என்பதாக நன்றாய்த் திருப்பி திருப்பி யோசித்துப் பார்த்து உங்கள் மனதுக்கு சரியென்று பட்டதை உடனே அமுலுக்கு கொண்டு வருவதனால்தான் நீங்கள் இது கேட்டதற்கு யோக்கியமாய் நடந்து கொண்டவர்களாவீர்கள். நமக்கு யாரிடமும் சண்டை இல்லை, துவேஷமில்லை. நமது சுயமரியாதையைக் காப்பாற்ற நாம் நமது மூடநம்பிக்கைகளுடன் போர் செய்து ஜெயம் பெற்று சுயமரியாதை அடையவேண்டும் என்றுதான் சொல்லுகிறோம். இப்பொழுது எல்லாம் சரி என்று ஒப்புக்கொண்டு வீட்டிற்கு போய் படுத்து தூங்கி எழுந்தவுடன் "அய்யரை கூட்டிக்கொண்டு வா, தர்ப்பணம் பண்ண வேண்டும்" என்று சொல்லுவதும் பக்கத்தில் யாராவது



RangaRakes tamilnavarasam.com

இருந்து "என்னையா நேற்று எவ்வளவோ கேட்டுவிட்டு இன்றைக்கு மறுபடியும் அந்த முட்டாள்தனத்திலேயே முழுகியிருக்கிறீர்களே" என்று கேட்டால் "என்னால் ஒன்றுமில்லை, வீட்டில் பெண்டுகள் உபத்திரவம். அதனால் இப்படி செய்ய வேண்டி இருக்கிறது" என்று சொல்லி நமது சகோதரிகள் மீது பழியைப் போட்டு அவர்களை முட்டாள்களாக்கு வதுமாயில்லாமல் உறுதியுடன் நின்று உங்கள் பெண்டுகளுக்கும் சமாதானம் சொல்லி உங்கள் மனத்திற்கு சரியென்று பட்டதை தைரியமாய் செய்யுங்கள். மற்ற வழிகளில் உங்கள் பெண்டுகளுக்கு விரோதமாய் எத்தனை காரியங்கள் செய்கிறீர்கள் என்பதையும் ஞாபகப் படுத்திப் பாருங்கள். எனக்கு ரயிலுக்குப் போக நேரமாகி விட்டதால் மற்றொரு சமயம் மீதி விஷயங்களைப் பற்றி பேச இருக்கிறேன்.

*குறிப்பு: சென்னை சௌந்திரிய மஹாலில் ஸ்ரீமான் சிங்காரவேலு செட்டியார் தலைமையில் பேசியது.*

**குடி அரசு - சொற்பொழிவு - 03. 04. 1927**



# காங்கிரஸ்

காங்கிரஸ் என்னும் பதத்திற்கு கூட்டம் என்பது பொருள். நமது நாட்டில் இது அரசியல் சம்பந்தமான கூட்டமென்பதற்கே குறிக்கப்படுகிறது. அரசியல் என்பதற்கு பொருள் அரசாட்சி, ராஜரீக முறை என்று இருந்தாலும் அது அரசாங்கத்துடன் ராஜரீக முறை விஷயமாய் செய்யும் கிளர்ச்சி என்ப தற்கே சொல்லப்படுகிறது. காங்கிரஸ் என்பதும் அரசியல் கிளர்ச்சி என்பதும் நமது நாட்டு வார்த்தையும் தத்துவமும் அல்ல. அது மேல் நாடுகளில் பாமர மக்களின் பேரில் யார் ஆதிக்கம் செலுத்துவது என்கிற விஷயமாய் ஏற்படும் கிளர்ச்சிகளுக்காக ஏற்படுத்தப்பட்டதே அல்லாமல் இங்கே சொல்லிக் கொள்ளப்படுகிற சுயராஜ்யம், சுதந்திரம் என்கிற போலி வார்த்தைகளுக்கும் அதன் தத்துவத்திற்கும் ஏற்பட்டதல்ல. மேல் நாடுகளில் சுய ஆட்சி, சுயராஜ்யம் என்பதற்கு சரியான பொருளே ஒரு தேசம் அனேகமாய் அரசன் என்பவனால் ஆளப்படாமல் அந்தந்த நாட்டு மக்களாலேயே நிர்வகிக் கப்படுவது. நமது நாட்டில் முதல் முதல் அதாவது காங்கிரஸ் ஆரம்பித்த காலத்தில் சுய ஆட்சி, சுயராஜ்யம் என்பதற்கே இன்ன பொருள் என்று கூட தெரியாததுமாய் நினைக்காததுமாய் படித்தவர்கள் என்று சொல்லப்பட்ட ஒரு சிலர், பாமர மக்களின் மேல் யார் ஆதிக்கம் செலுத்துவது என்கிற கொள்கை யைக் கொண்ட அரசியலையே குறியாக வைத்து மேல் நாட்டு முறைப்படி காங்கிரஸ் என்பதாக ஒரு கூட்டம் கூட்டி அரசாங்கத்தின் தயவை எதிர்பார்த்து அரசாங்கத்தார் செலுத்தும் ஆதிக்கத்தில் தங்களுக்கும் ஏதாவது ஒரு பங்கு கொடுக்க வேண்டும் என்று கெஞ்சி வந்தார்கள். அரசாங்கத்தாரும் இது தங்களது ஆதிக்கம் இன்னமும் பலப்படுவதற்கு புதிதாக மேல் கொண்டு தங்களுக்கு ஆதரவு கிடைக்கிறது அதாவது யார் பேரில் தங்கள் ஆதிக் கத்தை செலுத்தி யாருடைய செல்வத்தை கொள்ளை கொண்டு வாழ வேண்டுமோ அந்தக் கூட்டத்தில் உள்ளவர்களே தங்களுக்கும் ஒரு பங்கு கொடுத்தால் தாங்களும் அவ்வாதிக்கத்திற்கும் அக்கொள்ளைக்கும் உளவாக இருந்து உதவி செய்வதாய் சொல்லுவது எவ்வளவோ அனுகூலம் என்ப தாகக் கருதி அவர்களும் இந்த மாதிரி காங்கிரசையும் அரசியல் கிளர்ச்சி யையும் மதித்தது போல் நடித்து தங்கள் ஆதிக்கத்திலும் தங்களது அனுபவத் திலும் கொள்ளையிலும் ஒரு சிறிதும் விட்டுக் கொடுக்காமல் தங்களுக்கு மேலும் மேலும் பலமும் ஆதரவும் உண்டாக்கிக் கொள்ள பாமர மக்களின்



RangaRakes tamilnavarasam.com

மேல் புதிய ஆதிக்கங்களையும் புதிய அநுபவங்களையும் ஏற்படுத்தி அதில் ஒரு பங்கு இவர்களுக்கும் கொடுத்து வந்தார்கள். சிறியதாய் இருந்த இக்கூட்டம் நாளுக்கு நாள் பெருக நமது நாட்டு படித்த மக்களின் கூட்டம் என்பதும் இம்மாதிரி நமது பாமர மக்களின் மேல் ஆதிக்கம் செலுத்துவது என்கிற பேரால் அரசாங்கத்திற்கு உள் உளவாயிருந்து வாழ்வதே தங்களது வாழ்க்கைக்கு உரிய சாதனமென்றும் அதைத் தவிர வேறு பிழைக்கும் வழி இல்லை என்றும் தீர்மானித்துக் கொண்டபடியால் இக்கூட்டம் நாளுக்கு நாள் வலுக்கவும் ஒருவருக்கு ஒருவர் காங்கிரஸ், சுயராஜ்யம், உரிமை, தேசியம், சர்க்காரோடு சண்டை என்கிற போலி வார்த்தைகளின் பெயர்களால் போட்டி ஏற்பட்டு அது பலமான போட்டியாகவும் செல்வாக்கு பெற்ற போட்டி யாகவுமே மாறி அப்போட்டிக்கு தயாராவதே மக்களின் படிப்பு என்றும் ஏற்பட்டு பிழைப்பு வேண்டிய மக்கள் இப்போட்டியில் ஈடுபடக் கருதி படிப்பு என்பதன் மூலமாய் தயாராவதே நோக்கமாய் போய் விட்டது. இப்போட் டியில் வெற்றி பெற வேண்டியவர்கள் அரசாங்கத்திற்கு திருப்தி அளிக்க வேண்டியதற்கு எவ்வளவு தூரம் நமது மக்களை ஏமாற்ற தேசத்தைக் காட்டிக் கொடுத்தும் மக்களுக்குத் துரோகம் செய்தும் அரசாங்கத்திற்கு திருப்தி அளிக்கவேண்டுமோ, அவ்வளவு தூரம் துரோகம் செய்யவும் அதற்காக ஏமாற்றவும் போட்டி போட வேண்டி வந்து விட்டது. அதன் பயனால் நமது நாடு நாளுக்கு நாள் அன்னிய ஆதிக்கத் தன்மையும், செல்வம் கொள்ளை போகும் தன்மையும் பலப்பட்டு வருவதோடு தேசத்திற்கும் மக்களுக்கும் காங்கிரஸ் இல்லாத காலத்தில் இல்லாததான பல இடைஞ்சல்களும், இன்னல் களும் ஏற்பட்டு வருகிறது. உதாரணமாக காங்கிரஸ் இல்லாத காலத்தில் மக்களுக்கு இருந்த வரிகளை விட இப்போது ஒன்றுக்கு நான்கு பங்கு வரிகளும், காங்கிரஸ் இல்லாத காலத்தில் மக்களுக்குள் இருந்த மதுபான அளவை விட ஒன்றுக்கு பதினாறு பங்கு மதுவருந்துவதும், காங்கிரஸ் இல்லாத காலத்தில் மக்களுக்குள் இருந்த விவகாரங்களை விட ஒன்றுக்கு 2 பங்கும் விவகாரங்களும் கோர்ட்டுகளும் வளர்வதும் , காங்கிரஸ் இல்லாத காலத்தில் இல்லாத அடக்கு முறைகள் எல்லாம் ஒன்றுக்கு 10 ஆக ஏற்படுத்தவும், காங்கிரஸ் இல்லாத காலத்தில் இருந்த சுதந்திரங்கள் எல்லாம் பறிபோய்க் கொண்டிருப்பதும், காங்கிரஸ் இல்லாத காலத்தில் மக்களுக்குள் இருந்த ஒற்றுமையும், நாணயமும், ஒழுக்கங்களும் அடியோடு மறைந்து அதற்கு விரோதமாக விரோதங்களும், நாணயக் குறைவுகளும், ஒழுக்கக் கேடுகளும் வளர்ந்து வருவதும், காங்கிரஸ் இல்லாத காலத்தில் இருந்த யோக்கியதைக்கும், யோக்கியர்களுக்கும், பணக்காரருக்கும், சாதுக்களுக்கும், பார்ப்பனரல்லாத மக்களுக்கும் இருந்து வந்த மதிப்பெல்லாம் போய், அயோக்கியத்தனத்திற்கும், அயோக்கியர்களுக்கும், சுயநலக்காரருக்கும், துரோகிகளுக்கும், வஞ்சகர்களுக்கும், சூக்ஷிக்காரர்களுக்கும் மதிப்பு ஏற்படவுமாய் நிலைமை மாறிக்கொண்டே வருகிறது. தேசத்திற்கும், மக்களுக்கும் இவ்வளவு துரோகமும், கொடுமையும் செய்ததற்கு ஆதாரமான



காங்கிரஸ் அரசியல் கிளர்ச்சி என்பதன் மூலம் நமது படித்த கூட்டத்தார்கள் செய்து வந்ததற்கு நமது அரசாங்கத்தார் அவர்களுக்குக் கொடுத்து வந்த கூலிதான் இப்போது பெரும்பான்மையாய் நமது பார்ப்பனர்கள் அனுபவிக்கும் உத்தியோகம், ஆதிக்கம், போகம், போக்கியங்கள் முதலியது களே அல்லாமல் மற்றபடி வேறுவிதமாய் இவர்களுக்கு கிடைக்க எந்த விதத்திலும் மார்க்கமில்லை என்பது சரித்திர பூர்வமாயும் அனுபவ பூர்வ மாயும் யாவரும் அறிந்ததேதான். இதில் ஒன்றும் ரகசியமும் இல்லை. அரசியல் என்பது இக் கொள்கைகளைக் கொண்டதுதானே அல்லாமல் வேறில்லை என்பதற்கு ஆதாரமாக ஒரு மேல்நாட்டு அறிஞர் சொல்லி இருப்பது என்னவென்றால் “அரசியல் என்பதும் அரசியல் கிளர்ச்சி என்பதும் அயோக்கியர்கள் தங்களுக்கு வேறு எந்த அயோக்கியத்தனமான வழிகளிலும் பிழைக்க மார்க்கமில்லை என்று கண்டு தங்களது பிழைப்புக்கு கடைசி அயோக்கியத் தனமான பிழைப்பு மார்க்கம் அதாவது இனி இதைத் தவிர வேறு மார்க்கத்தில் பிழைக்க முடியாது என்பதாகக் கருதி ஏற்படுத்திக் கொண்டதான பிழைப்புக்குத்தான் அரசியல், அரசியல் கிளர்ச்சி, என்று சொல்லுவது” என்பதாக சொல்லியிருக்கிறார். நாம் முன் சொல்லி வந்தவைகளுக்கும் மேல் நாட்டு அறிஞர் சொல்லியிருப்பதற்கும் தற்கால அரசியல் வாழ்வுகளையும் கிளர்ச்சிகளையும் கவனித்து வருகிற அறிவாளி களுக்கு நாம் ஆதாரங்கள் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. பாமர மக்களுக்கு தெரிய வேண்டுமானால், நாம் சுருக்கமாக ஒரே வழியைச் சொல்லிவிடுகிறோம். அதாவது காங்கிரஸ் ஏற்பட்ட நாள் முதல் நாளது வரையில் அரசியல் கிளர்ச்சியில் கலந்து இருக்கிற தேசபக்தர்கள், தேசாபி மானிகள், அரசியல் சுதந்தரக்காரர்கள் என்கிற நபர்களை தனித்தனியாகப் பிரித்து எடுத்து அவர்களின் பிறப்பு, வளர்ப்பு, முற்கால நிலை, தற்கால நிலை ஆகியவைகளைப் பற்றி குறிப்பு எடுத்து மிகப் பெரும்பான்மையா யிருக்கிறவர்களின் யோக்கியதையை கவனித்தால் வெகு சுலபத்தில் விளங்கிவிடும். அதோடு அரசியல் கக்ஷிகளை எடுத்து அதன் கொள்கைகள், முற்கால கொள்கைகள், தற்கால கொள்கைகள், அதன் தலைவர்கள், பின்பற்று வோர்கள், பிரசாரகர்கள், தொண்டர்கள் என்பவைகளையும் கவனித்து குறித்து வைத்து அதில் பெரும்பாகம் எப்படி இருக்கிறது என்று பார்த்தால் உடனே விளங்கிவிடும். அதிலும் சரியானபடி விளங்கவில்லை என்றால் பிரத்தியக்ஷப் பிரமாணமாகத் தெரியவேண்டுமானால் சுயராஜ்யக் கக்ஷி என்னும் ஒரு கக்ஷியின் தத்துவத்தையும் அதன் கொள்கைகளையும், தேசத்திற்கு ஏற்பட்ட நன்மைகளையும், தேச மக்களின் ஒற்றுமையையும் ஒழுக்கங்களையும் ஒழித்து வயிறு வளர்க்க அடிக்கடி மாறி மாறி எடுத்துவந்த அவதாரங்களையும், அதன் தலைவர்கள் முதல் வாலர்களையும் அதன் அபிமானிகளையும் அதற்காதரவளித்தவர்களையும் அவர்களின் யோக்கிய தையையும் அறிந்து வைத்துப் பார்க்கிறவர்களுக்கு வெகு சுலபத்தில் விளங்கும். அதிலும் முழுதும் விளங்காதவர்களுக்கு சென்னை சட்டசபை



RangaRakes tamilnavarasam.com

யில் தேசத்தின் பேரால் “கௌஹத்தி காங்கிரசின் கட்டளையை நிறைவேற்றி வைத்த” சுயராஜ்யக் கக்ஷி பான்மையையும் அதன் நடவடிக்கைகளையும் அவர்கள் சொல்லும் பதிலையும் பார்த்தால் எப்படிப்பட்டவர்களுக்கும் விளங்காமல் போகாது. யாரோ ஒருவர் இருவரின் நிலைமையை இதற்கு மாறுபட ஏற்பட்டாலும் அதனாலேயே இதன் முடிவு மாறுபட்டுவிடாது.

**குடி அரசு - தலையங்கம் - 03. 04. 1927**



# தேசத்தின் தற்கால நிலையும் பார்ப்பனரல்லாதார் கடமையும்

இன்றைக்கு 40, 50 வருடங்களுக்கு முன்னிருந்த நிலையை விட தற்பொழுது தேசம் மிகக் கேவல நிலையடைந்திருக்கிறது என்றும், காங்கிரஸ் மகாசபை, ராஜீயத் தலைவர்கள்,முட்டுக்கட்டைத் திட்டம், சர்க்காருடன் யுத்தம் முதலியவை ஏற்பட்டதின் பலன் சர்க்காரின் வரியும் குடிகளின் வறுமையும் அதிகரித்ததேயொழிய வேறு நாட்டின் நலத்திற்கானவை ஒன்றும் ஏற்பட வில்லையென்றும், தேசத்தின் பெயரையும் மகாஜனங்களின் பெயரையும் சொல்லிக் கொண்டு படித்தவர்களில் ஒரு வகுப்பார் தங்கள் சுயநலத்துக்கான சவுகரியங்களை ஏற்படுத்திக் கொள்ளவே ராஜீயக் கிளர்ச்சி செய்து வந்தார் கள் என்றும், நாடு வறுமையினின்றும் விடுபட அவர்கள் ஒன்றும் செய்யவே யில்லையென்றும், இந்நிலையில் ராஜீய சுதந்திரம் கிடைக்கினும் தேசம் விடுதலை பெற்று விட்டதாகக் கருதப்படமுடியாதென்றும், சுயராஜ்யம் ஏழை களுக்கே மிக அவசியமானதென்றும், தனவந்தர்களுக்கும் உயர்ந்த அந்தஸ் திலிருப்பவருக்கும் சுயஆட்சியினால் இப்பொழுதுள்ளதை விட அதிகமான அநுகூலங்கள் ஏற்பட இடமில்லையாதலால் அவர்களுக்கு தேசவிடுதலை யைப் பற்றிய கவலை ஏற்படாதென்றும், ஏழை மக்களின் நிலைமை மேன்மை படுத்துவதே சுயராஜ்யத்துக்கான வேலை செய்வதாகும் என்றும், காங்கிரஸ் இவ்விஷயத்தில் தலையிடாமல் படித்தவர்களின் ஸ்திதியையே உயர்த்தும் விஷயத்தில் பாடுபட்டு வந்ததாய் அறிந்த தீவிர காங்கிரஸ்வாதிகளும் சுயநலத்தியாகிகளுமான டாக்டர் நாயர் பெருமானும் தியாகராய பெருமானும் காங்கிரஸினின்றும் விலகி, நம்மவர்களின் முன்னேற்றத்தைக் கருதி, பார்ப்பனரல்லாதாரியக்கத்தை ஆரம்பித்தனர் என்றும், மகாத்மா அவர்களும் தேசம் க்ஷேமமடைவதற்கான திட்டங்கள் காங்கிரஸில் இல்லாதது கண்டு கதர், மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு என்னும் உயரிய திட்டங்களைப் புகுத்தினார் என்றும், ஆயினும் காங்கிரஸ் தலைவர்கள் இவற்றில் கவலை கொள்ளாது சட்ட சபையே தங்கள் வேலைக்கான இடம் என்று இவற்றை அலட்சியம் செய்துவிட்டார்கள் என்றும் சொல்லியபின் இந்நிலையில் பிராமணரல்லாதார் செய்ய வேண்டிய கடமைகளைப் பேசியதாவது:-



RangaRakes tamilnavarasam.com

100 – க்கு 97 உள்ள ஜன சமூகமாயிருந்தும் நம்மைக் குறிக்கச் சொந்தமான பெயரில்லாது, அற்ப எண்ணிக்கையுள்ள ஒரு வகுப்பினரின் பெயரால் "பார்ப்பனரல்லாதார்" என்று நம்மைப் பெயரிட்டுக் கொள்வது நம்மில் சிலருக்குப் பிடிக்கவில்லை. ஆம், கேவலம்தான். நம்மில் பல பிரிவுகளையும் வித்தியாசங்களையும் பார்ப்பனர்கள் தங்கள் சுயநலத்தை உத்தேசித்து உண்டாக்கி நமக்கு ஒரு பொதுப் பெயரில்லாது செய்து விட்டனர். மேலும் இப்பெயரிட்டதற்கு வேறு காரணமுமுண்டு. கொடிய நோய்களைப் போக்கும் மருந்துகளுக்கு அந்த நோயின் பெயராலேயே பெயரிடுவது வழக்கமும் பொருத்தமுமாயிருக்கிறது. அது போன்றே நமக்கு ஏற்பட்ட கஷ்டங்களைப் போக்கிக் கொள்ள ஏற்பட்ட இயக்கத்திற்கு இக்கஷ்டங்க ளுக்குப் பெரிதும் காரணமாயிருக்கும் வகுப்பினரின் பெயரைக் கொண்டு பெயரிட்டது மிகவும் பொருத்தமானதுதான்.

நிற்க, நம் கடமைகள் எவை என்பதை மதுரை மகாநாடு முடிவு செய்திருக்கிறது. அவை காந்தி அடிகளின் நிர்மாணத் திட்டம் ஆகும். முதலாவதாக கதர் உற்பத்தியை ஆதரிப்பதோடு நாம் கதர் துணிகளையே உபயோகிக்க வேண்டும். இது தேசத்தின் வறுமை மிகுதியும் போக்குவது என்று எடுத்துக் காட்டியதோடு நாயக்கரவர்கள் பல திருஷ்டாந்தங்களின் மூல மாய் அதன் பொருளாதார லாபத்தை விளக்கினார்கள். இரண்டாவதாக 'தீண்டாமை' என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசுகையில், திரு நாயக்க ரவர்கள், நாட்டின் தற்கால நிலைமைக்கு இதுவே முக்கிய காரணம் என்றும், மக்கள் யாவருக்கும் சம அந்தஸ்தும் சம உரிமைகளும் ஏற்பட வேண்டியது நியாயமும் அவசியமும் ஆகும் என்றும், தீண்டாமை ஏற்பட பார்ப்பனர்தான் காரணஸ்தர்கள் என்றும் ஆயினும் தற்சமயம் இது சகல வகுப்பாருக்குள்ளு முண்டென்றும் நாட்டின் நலங் கருதி யாவரும் ஏகோபித்துத் தீண்டாமையை ஒழிக்க வேண்டியது பிராமணரல்லாதாரின் முக்கிய கடமையாகுமென்றும் சொன்னார்கள். மூன்றாவதாக, மதுவிலக்கு என்னும் விஷயமாய் பேசுவதால், குடியினால் விளையும் கேடுகள் பலவென்றும் அவை யாவரும் அறிந்ததே யென்றும் குடியை முற்றிலும் ஒழிப்பதற்கான முறைகளை அநுசரிக்க வேண்டியது நம்மவர்களின் கடமை என்றும் சொன்னார்கள். கடைசியாக புரோகிதர்களின் பகிஷ்கார விஷயமாய் நம்மைத் தங்களை விடத் தாழ்ந் தோர் என்று கருதும் பார்ப்பனப் புரோகிதர்கள் நம் வீடுகளில் நடக்கும் சுபா சுப காரியங்களுக்கு அழைத்தல் கூடாது என்றும் தங்கள் தங்கள் வகுப்பின ருக்குள்ளேயே புரோகிதர்களை மேம்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் கூறினார்.

*குறிப்பு: 27-03-27 ஆம் நாள் விருதுப்பட்டியில் ஆற்றிய பொதுக்கூட்டச் சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 03. 04. 1927**



# சுயராஜ்யக் கட்சியாரின் சமாதானம்

சுயராஜ்யக் கட்சியார் என்கிற தமிழ் நாட்டுப் பார்ப்பனக் கட்சியாரின் பூளவாக்கு சென்ற மாதம் சட்டசபை வரவு செலவு திட்டத்தின் போது வெளியாய் விட்டதால், அதை மறைக்க என்னென்னமோ தந்திரங்களும் மந்திரங்களும் செய்கிறார்கள். என்ன செய்தும் அதை மறைக்க மறைக்க நாற்றம் அதிகமாகிறதே தவிர குறைந்தபாடில்லை. இவர்களின் நடவடிக்கையைப் பற்றி இவர்களுக்கு உதவி செய்து வந்த தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தேசிய பத்திரிகைகள் என்று சொல்லப்படும் "தமிழ்நாடு" "நவசக்தி" "தேசபந்து" முதலிய பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகளும் "சுயராஜ்யா" "ஹிந்து" முதலிய பார்ப்பன பத்திரிகைகளும், "வசுமதி" "மராட்டா" முதலிய வெளி மாகாண பத்திரிகைகளும் கண்டித்திருக்கும் சாராம்சத்தை மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். இதுகளிலிருந்து "சுதேசமித்திரன்" என்கிற ஒரு பார்ப்பனப் பத்திரிகை போக, மற்றபடி பார்ப்பனர் தயவில் நடக்கும் பத்திரிகைகள் கூட வேஷத்திற்கானாலும் கண்டிக்காமல் விடவேயில்லை. ஆகவே இப்பார்ப்பனர்களின் நடத்தை மோசமான தென்பதும் வஞ்சகமான தென்பதற்கும் இனி யாரும் சந்தேகப்பட இடமேயில்லை. ஆனால் இக்கூட்டத்தார் கொஞ்சமும் தங்கள் காரியத்திற்கு வெட்கப்படாமல், இதற்கு சமாதானம் சொல்லப் புறப்பட்டிருக்கும் யோக்கிய தையைப் பார்க்கும் போது ஜனங்களை இவர்கள் எவ்வளவு தூரம் முட்டாள் கள் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை யோசிக்க வேண்டு வதற்காக இதை எழுதுகிறோமேயொழிய வேறில்லை. அதாவது, சென்ற சனிக்கிழமை மாலை சௌந்தர்ய மகாலில் "மந்திரிகளின் சம்பளத்திற்கு ஆதரவளித்ததற்கு காரணம்" சொல்லுவதற்கு என்று ஒரு கூட்டம் கூட்டி அதில் பேசிய பேச்சுகளின் யோக்கியதையைப் பொது ஜனங்களின் கவனிப் புக்கு கொண்டு வருகிறோம். ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியார் தலைமை வகித்து பேசியதில், அவர் மந்திரிகளை ஆதரிப்பதற்கு சொல்லும் காரணங்களாவன:–

"இருக்கும் மந்திரியை துலைத்துவிட்டால், ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் வந்து விடுவார்கள். ஜஸ்டிஸ் கட்சியாரை தேசத்தார் விரும்பவில்லை." ஜஸ்டிஸ் கட்சியார் செய்த குற்றம் என்னவென்றால் " அவர்கள் வகுப்புவாதம் பேசுகிறார்கள்." சுற்றி சுற்றி இந்த விஷயங்களைத் தான் தங்கள் நடவடிக்கை



RangaRakes tamilnavarasam.com

களுக்கு சமாதானம் சொல்லுகிறார்கள். இதிலிருந்தே இவர்கள் செய்து வந்த தந்திரமும், சூழ்ச்சியும், போட்டுக் கொண்ட வேஷமும் எப்படியாவது ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க வேண்டும் என்கிற கருத்துக் கொண்டேயல்லாமல் வேறு ஏதாவது இருக்கிறதாகத் தெரிகிறதா?

"இரட்டை ஆட்சியை ஒழிப்பதும்," "சட்டசபையில் ஒத்துழையாமை செய்வதும்," "அரசாங்கம் நடைபெறாமல் முட்டுக்கட்டை போடுவதும்" இப்போது என்னவாயிற்று? இவைகளை ஆதரித்த "தேசீயவாதிகள்" "உரிமைக்காரர்கள்" நாம் இந்த விஷயத்தை அந்தக் காலத்திலேயே எடுத்துச் சொன்னபோது, " நாயக்கர் தேசத்துக்கு விரோதமாய்ப் போய் விட்டார். காங்கிரசுக்கு விரோதமாய்ப் போய்விட்டார், காங்கிரஸ் ஏற்றுக்கொண்ட சுயராஜ்யக் கட்சிக்கு விரோதமாய்ப் போய்விட்டார்" என்று சொல்லிக் கொண்டு திரிந்து விட்டு, இப்போது நாம் சொன்னதெல்லாம் நிஜமானவுடன் நம்முடன் கூடவே கோவிந்தா போட்டுக் கொண்டு "சுயராஜ்யக் கட்சி அயோக்கியக் கட்சி, பார்ப்பனக் கட்சி என்று அப்போதே சொன்னேன், இப் போதே சொன்னேன் " என்று நாட்டுக்கு நல்ல பிள்ளைகளாகப் பார்க்கிறார் கள். சுயராஜ்யக் கட்சியார் அயோக்கியர்களா அல்லது அவர்களுக்கு ஆதிக்கம் தேடிக்கொடுத்து, பாமர மக்களையும் அவர்களை நம்பும்படி செய்து, சதி செய்து தேசத்தையும் சமூகத்தையும் பாழாக்கினவர்கள் அயோக் கியர்களா? என்பதை யோசிக்க விரும்புகிறோம். சுயராஜ்யக் கட்சியாரிடம் அந்தக் காலத்திலும் ஜனங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றே சொல்லு வோம். அவர்களை ஜனங்கள் எவ்வளவு வெறுக்க வேண்டுமோ அவ்வளவு கயா காங்கிரஸ் முதல் வெறுத்துக் கொண்டுதான் வந்தார்கள். ஆனால் எப்படியோ தந்திரத்தாலும் வேஷத்தாலும் பாமர ஜனங்களிடம் செல்வாக்குப் பெற்ற பலர் அவர்களை ஆதரித்ததாலும் பல கிளி பிள்ளை பத்திரிகைகள் சுயபுத்தி இல்லாமல் பிதற்றினதாலும், சுயராஜ்யக் கட்சியார் தங்கள் விஷயங் களை நாட்டில் பரப்ப முடிந்ததே தவிர வேறில்லை.

ஆனாலும் இப்பொழுதும் கேட்கிறோம். ஜஸ்டிஸ் கட்சியார் செய்த தப்பிதமென்ன? " அதிகாரங்களைக் கைப்பற்ற முயற்சித்தார்கள்" என்றே வைத்துக் கொள்ளுவோம். வேறு எந்தக் கட்சி முயற்சிக்கவில்லை?

" தங்கள் இனத்தாருக்கு உத்தியோகம் கொடுத்ததாகவே"வைத்துக் கொள்ளுவோம். எந்த கட்சி அப்படிச் செய்ய வில்லை?

"ஒத்துழையாமையின் போது அதற்கு விரோதமா யிருந்தார்கள்" என்றே வைத்துக் கொள்ளுவோம்.

இந்த சுயராஜ்யக் கட்சியார் ஒத்துழையாமைக்கு அநுகூலமாயிருந் தார்களா? ஜஸ்டிஸ் கட்சியாராவது வெளியில் இருந்து கொண்டு மனதில்



பட்டதை ஒளிக்காமல் சொன்னார்கள், செய்தார்கள். சுயராஜ்யக் கட்சியார் கூட இருந்தே குடியை கெடுத்தார்கள்.

மற்றபடி "ஜஸ்டிஸ் கட்சியார் சர்க்காருக்கு அநுகூலமாயிருந்தார்கள்" என்றே வைத்துக் கொள்ளுவோம்.

வேறு எந்தக் கட்சி சர்க்காரை எதிர்த்தது, எந்தக் கட்சி சர்க்காருக்கு ஆதரவில்லாமலிருக்கிறது?

சந்தர்ப்பமில்லாத காலத்தில் சீ அந்தப் பழம் புளிக்கும் என்று சொன்னதே அல்லாமல் சர்க்கார் சம்பளம் பெறாமலும் அவர்களது பட்டம் பதவி பெறாமலும் எந்தக் கட்சி இருக்கிறது?

"ஜஸ்டிஸ் கட்சி தலைவர்கள் தேசபக்தர் என்பவர்களை வைத தாகவே" வைத்துக் கொள்ளுவோம்.

காங்கிரஸ், சுயராஜ்யக் கட்சி தலைவர், காரியதரிசிகள் முதலியவர்கள் தேசபக்தர்கள் என்பவர்களை ஜெயிலில் வைக்கும்படியும் அவர்கள் பேரில் நடவடிக்கை நடத்தும்படியும் சர்க்காரையும் சட்ட மெம்பரையும், அட்வகேட் ஜனரலையும் கெஞ்ச வில்லையா? ஊர் ஊராகப் போய் தேசியப் பத்திரிகை என்பவைகளின் பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி ஒத்துழை யாமைக் கட்சித் தலைவர்கள் முதல் எல்லோரும் சொல்லவில்லையா?

"ஜஸ்டிஸ் கட்சியார் சட்டசபையில் அக்கிரமம் செய்ததாகவே" வைத்துக் கொள்ளுவோம். காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியார் சட்ட சபையில் தேவஸ்தான சட்டம் போன்ற அவசியமும் முக்கியமான சட்டங்களை எதிர்க்கவில்லையா?

"ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள தனிப்பட்ட நபர்களில் சிலர் யோக்கியர் கள் அல்லவென்றே" வைத்துக் கொள்ளுவோம்.

சுயராஜ்யக் கட்சியிலும் ஒத்துழையாமைக் கட்சியிலும் உள்ளவர்கள் எல்லாம் யோக்கியர்கள்தானா? ஒருவர் கூட அயோக்கியர்கள் இல்லையா? என்று கேட்கிறோம்.

"ஜஸ்டிஸ் கட்சியில் சிலர் வயிற்றுப் பிழைப்புக் காரர்கள் இருக்கிறார் களென்றே" வைத்துக் கொள்ளுவோம்.

சுயராஜ்யக் கட்சியில் உள்ளவர்கள் எல்லோருமே தேச பக்தர்கள் தானா? ஒருவராவது வயிற்றுப்பிழைப்புக்காரர் இல்லையா? வென்றுதான் கேட்கிறோம்.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே, எந்த வழியிலும் "சுயராஜ்யக் கட்சியாரை" விட "ஜஸ்டிஸ் கட்சியார்" எந்த வகையில் குற்றமானவர்கள்?

கொள்கையைப் பற்றிப் பேசுவதானாலும் "ஜஸ்டிஸ்" கட்சிக் கொள்கையானது வேறு எந்தக் கட்சிக் கொள்கைக்கு இளைத்ததாயிருக்கிறது?

யோக்கியமான பொது மனிதன் கிடைப்பானானால் எல்லா கட்சி கொள்கைகளையும் விட ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளையே உயர்ந்தது என்று சொல்லுவான். உயர்ந்ததாக இல்லாவிட்டாலும் எந்த கொள்கைக்கு மட்டம் என்று சொல்லக்கூடும்?

ஆகவே கிளர்ச்சியும், வேஷமும், யோக்கியப் பொறுப்பில்லாதவர்களின் புரட்டுகளையும் நம்பி பாமர மக்கள் ஏமாந்து "கங்காதரா மாண்டாயே" என்று கத்துவதுமல்லாமல், வேறு என்ன காரியத்தைக் கண்டு குற்றம் சொல்லக்கூடும்?

ஒருசமயம் பார்ப்பனர்களை "ஜஸ்டிஸ்" கட்சியில் சேர்த்துக் கொள்வதில்லை. இது ஒரு வகுப்பாரைத் தள்ளி வைக்கும் கட்சியாய் இருக்கிறது. ஆதலால் அது சரியான கட்சி ஆகாது என்று சிலர் சொல்லக் கூடும்.

முஸ்லீம் லீக் எல்லோரையும் சேர்த்துக் கொள்ளுகிறதா ? அந்த காரணத்திற்காக அதை யாராவது வெறுக்கப் பிரயத்தனப் படுகிறார்களா? அதை யாராவது குற்றம் சொல்லுகிறார்களா? அந்த மந்திரி சபையை அழிக்க யாராவது பிரயத்தனப் படுகிறார்களா? அதை அழிக்கப் பிரயத்தனப்படுகிறவர்களுடன் எந்த முஸ்லீமாவது சேருகிறார்களா?

எனவே, அந்த வழியிலும் பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ளாததால் ஒரு கட்சியையோ, சங்கத்தையோ அழிக்க வேண்டு மென்பது ஞாயமில்லை என்பதும் யோக்கியர்களுக்கு விளங்காமல் போகாது.

ஆகவே, ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரியாய் வந்து விட்டால் என்ன முழுகிப் போய்விடும்? அவர்கள் மந்திரித்துவத்தை எந்த ஜனங்கள் வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள்.

பின்னை எந்தக் கட்சியின் மந்திரித்துவத்தை ஜனங்கள் விரும்பி அவர்களையே மந்திரிக்கு லாயக்காகும்படி தெரிந்தெடுத்திருக்கிறார்கள். 30 பேர்கள் உள்ள ஒரு கூட்டத்தின் மந்திரித்துவத்தையே ஜனங்கள் வேண்டாம் என்று சொல்லி விட்டதாகக் கருதப் படுமானால் ஏழுபேர் கூட இல்லாததான கூட்டத்தின் மந்திரித்துவத்தையா ஜனங்கள் விரும்பினதாகக் கருதுவது?



ஜஸ்டிஸ் கட்சியார் இந்த மந்திரி சபை கலைந்தால், மறுபடியும் இந்த சபைக்கு மந்திரிகளாய் வருவதில்லை என்று சொன்னால், "இந்த சபை கலைந்து மறு தேர்தல் ஏற்பட்டு மறு தேர்தலில் வந்து விடுவார்கள். ஆதலால் இந்த சபையை கலைக்க விட மாட்டோம்" என்று சொல்வதில் எவ்வளவு பேடித் தனமும், ஆண்மையற்றதனமும், அயோக்கியத்தனமும் இருக்கிறது என்று யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

மறு தேர்தல் வந்தால், மறு தேர்தலில் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டால்தானே. அதுவும் மந்திரிகளாக இவர்களே வர வேண்டும் என்று ஜனங்கள் விரும்பினால்தானே இவர்கள் வரக்கூடும்.

ஆதலால் சுயராஜ்யக் கட்சியார் என்கிற பார்ப்பனர்கள் இப்படிச் சொல்லுவதிலிருந்தே மக்கள் சுயராஜ்யக் கட்சியாரின் அயோக்கியத்தனத்தைத் தெரிந்து கொண்டார்கள் என்பதும், ஜஸ்டிஸ் கட்சியாரை இன்னும் அதிகமாகத் தெரிந்தெடுக்காமல் போன முட்டாள் தனத்திற்காக வருந்துகிறார்கள் என்பதும், முன் தேர்தலில் சுயராஜ்யக் கட்சியாருக்குத் தேசீயக் கட்சி என்றும், அரசியல் கட்சி என்றும் நினைத்து ஆதரவு காட்டியவர்களும், உதவி செய்தவர்களும், பிரசாரம் செய்தவர்களுமான ஆசாமிகள் இப்போது வெட்கப்படுகிறார்கள் என்பதும், இவர்கள் உதவி அடுத்த தேர்தலுக்கு கிடைக்காது என்று சுயராஜ்யக் கட்சியார் முடிவு செய்து கொண்டார்கள் என்பதும் இதிலிருந்தே விளங்கவில்லையா? என்று கேட்கிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 10. 04. 1927**



RangaRakes tamilnavarasam.com

# வேண்டுகோள்

தஞ்சை ஜில்லாவில் சுற்று பிரயாணம் செய்யும் நண்பர் சிற்சில இடங்களில் சிலர் படங்களை நெருப்பிற்கிரையாக்கியதாக 'திராவிடன்' பத்திரிகையில் காணப்படுகிறது. இதை நாம் பலமாய் ஆக்ஷேபிப்பதற்காக மன்னிக்க வேண்டுகிறோம். இம்மாதிரியான காரியம் நமக்கு ஒரு பலனையும் தராததோடு மனித சமூகத்திற்கு திருப்தி அளிக்காது என்றும் வணக்கமாய் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அக்குறிப்பிட்ட கனவான்களிடம் நமக்கு எவ்வித குரோதமும் இருக்க நியாயமில்லை. அவர்கள் மோசங்களையும் தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும்தான் நாம் வெளிப்படுத்தி அதுகளுக்கு யோக்கியதை இல்லாமல் செய்ய வேண்டுமேயொழிய அந்த நபர்களிடம் விரோதம் கொள்வது நியாயமல்ல. ஆதலால் இனி அம் மாதிரியான சம்பவங்கள் நடைபெறக்கூடாது என்று எதிர்பார்க்கிறோம். தவிர கூட்டங்களில் கலவரம் செய்விப்பதும் ஒழுங்கல்ல வென்றே நினைக்கிறோம். யார் வந்து எதை வேண்டுமானாலும் பேச நாம் இடங்கொடுக்க வேண்டும். நமக்கு ஆண்மையிருந்தால் அக்கூட்டத்திற்கு இடைஞ்சல் இல்லாமலும், கூட்ட முறைக்கு விரோதமில்லாமலும் கேள்வி கேட்கவோ, அக்கூட்டத்திலேயே பேச அனுமதி கேட்டு பேசவோ செய்யலாம். கேள்வி கேட்கவும் பேசவும் அனுமதி கிடைக்காவிட்டால் கண்ணியமாயிருந்து மறுநாள் கூட்டம் கூட்டி இதைப்பற்றி பேசலாம், கண்டிக்கலாம், சமாதானம் சொல்லலாம். இதுகள் தான் யோக்கியர்களுக்கு அழகு. அப்படிக்கில்லாமல் கூட்டத்தில் கலவரம் செய்வதென்பது கலவரம் செய்பவர்களையும் அவர்களது கொள்கைகளையும் பலகுறைவாக்கி விடுகிறதோடு பேசுபவர்களுக்கு யோக்கியதையை உண்டாக்கிவிடுகிறது. நாம் போன இடங்களிலும் இரண்டொரு இடங்களில் இம்மாதிரி சிலர் முயற்சித்தும் நாம் சௌகரியப்பட்ட இடங்களில் எல்லாவற்றிற்கும் இடங் கொடுத்து சமாதானம் சொன்னதில் கேட்க வந்தவர்கள் நமது கொள்கையை ஏற்றுக்கொள்ள நேர்ந்ததோடு நமது கொள்கைகளுக்கு முன்னிலும் அதிகமான பொது ஜன ஆதரவு கிடைத்ததேயல்லாமல் நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. கேள்விக்கு சமாதானம் சொல்லமுடியாதவர்கள் வெளியில் போய் பேசுவது என்பது கேவலமான காரியம் என்றுதான் சொல்ல வேண்டும். நமது கொள்கைகளும் தீர்மானங்களும் நம் மனதிற்கு உறுதி உள்ளதானால் யாருடைய கேள்விக்கும் பதில் சொல்லலாம்.



நமக்கே உறுதியில்லாமல் மற்றோரை ஏமாற்றுவதனால் மாத்திரம் பதில் சொல்லுவது கஷ்டம்தான். ஆகையால் மற்றவர்களைப் பற்றி கவலையில்லாமல் நமது கட்சியைப் பொறுத்த வரையிலாவது ஒழுங்காய் நடந்து கொள்ள வேண்டும். யார் வந்தாலும் தாராளமாய் பேச இடந்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - வேண்டுகோள் - 10.04.1927**



RangaRakes

tamilnavarasam.com

# வகுப்புவாரி உரிமையை விட்டுவிட சென்னை முஸ்லீம்கள் ஒப்புவதில்லை

புதிய சீர்திருத்தத்தின்படி அரசியலில் மகமதியர்களுக்கு கொடுத்திருக்கும் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தை ஒழிப்பதற்காக சென்னை பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்து வருவதும் தங்கள் பணச் செலவில் சில மகமதியர்களை தங்களுக்கு அடிமையாக்கிக் கொண்டு அவர்களுக்கு தேர்தல்களில் தாங்கள் உதவி செய்து மகமதிய சமூகத்திற்கு அனுகூலமில்லாமல் தங்களது சுயநலத்திற்காக அவர்களை உபயோகித்து வருவதும் யாவரும் அறிந்ததே. சமீபத்தில் டில்லியில் இது விஷயமாய்க் கூட்டம் கூடியதில் தங்களுக்கு வகுப்புவாரித் தொகுதி வேண்டாம் என்றும், கலப்புத் தொகுதியில் தங்களுக்கு என்று சில ஸ்தானங்கள் ஒத்தி வைத்தால் போதுமென்றும், சில மகமதியர்கள் ஒப்புக்கொண்டதாக விஷயங்கள் வெளியாயிருக்கின்றன. ஆனால் பல நிபந்தனைகளின் மேல் அம்மாதிரி ஒப்புக்கொண்டதாக பின்னால் விஷயங்கள் வெளிவருகின்றன. ஆனால் பல சுவாதீன முஸ்லீம்களும் சமூக விஷயத்திலும் மார்க்க விஷயத்திலும் அபிமானமும் பொறுப்பும் உள்ள முஸ்லீம்களும், இந்த விஷயத்தை ஆக்ஷேபித்து தங்களுக்கு இப்போதுள்ள வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அதாவது முஸ்லீம்களாலேயே தெரிந்தெடுக்கும் பாத்தியமே வேண்டுமென்று சொல்லி வருவதோடு மேல்படி ஒதிக்கி வைக்கும் கொள்கையை ஆட்க்ஷேபித்தும் கண்டித்தும் வருகிறார்கள். சமூகத்தையும் மார்க்கத்தையும் கவனிக்காமல் அரசியல் மூலம் உத்தியோகமும் பதவியும் சுயநலமும் பெறலாம், வயிறு வளர்க்கலாம் என்கிற ஆசாமிகளுக்கு இந்த தனித்தொகுதி உரிமை பிடிக்காது தான். ஏனெனில் தங்கள் சமூகத்தாரால் தெரிந்தெடுக்கப்பட வேண்டுமானால் அவன் யோக்கியமாய் நடந்து கொள்ள வேண்டும். யோக்கியமாய் நடந்து கொள்ளுபவனுக்கு சுயநலம் பலிக்காது. தங்கள் சமூகத்தார் தயவில்லாமல் வேறு சமூகத்தார் தயவில் பதவியும் பிரதிநிதித்துவமும் பெறுவதென்றால் அயோக்கியர்களுக்கு அது எப்பொழுதும் தயாராயிருக்கும். ஏனெனில் தனது சமூகத்தையும் மார்க்கத்தையும் வேறு சமூகத்தின் நன்மைக்கு விட்டுக்கொடுப்பதால் வேறு சமூகத்தாரால் ஆனந்தத்துடன் வரவேற்பார்கள். அதனாலேயேதான் பலருக்கு இதுவே ஜீவனமாகவும் நடந்து வருகிறது. ஒருவன் தங்கள் சமூகத்திற்கு தனி



உரிமை வேண்டுமென்றால் அவன் மற்ற சமூகத்தாரால் அழிக்கப்பட வேண்டியவனாய் விடுவான்.

அதினாலேயே இந்துக்கள் என்பவர்களிலும் சிலர் தங்களுக்கு வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் வேண்டும் என்று சொன்னவர்களாயிருந்தாலும் இப்போது பார்ப்பனர்களுக்கு பயந்து கொண்டு எங்கு அவர்கள் தங்கள் பிழைப்பில் மண்ணைப் போட்டுவிடுவார்களோ என்கிற நடுக்கத்தின் பேரில் இப்போது பார்ப்பனருடன் சேர்ந்து கொண்டு "வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கூடாது, அது தேசத்திற்கு கெடுதி" என்று சொல்லுகிறார்கள். ஆனால் நமது சென்னை மாகாண மகமதிய கனவான்களில் பலர் அப்படி இல்லாமல் அதாவது பார்ப்பனருக்கு பயப்படாமல் அவர்கள் சூட்சியில் சிக்காமல் தைரியமாய் வெளிவந்து முஸ்லீம்களுக்குள் தனித்தொகுதியை எடுத்து விட்டுக் கலப்புத் தொகுதி ஏற்படுத்தினால் முஸ்லீம்களுக்கு மிகுந்த தீங்கை விளைவிக்கும் என்றும், இதனால் இந்து முஸ்லீம்களுக்குள் தற்காலம் இருக்கும் ஒற்றுமை கெட்டுவிடும் என்றும் தாராளமாய் எடுத்துகாட்டியிருக்கிறார்கள், அவர்களில் முக்கியமானவர்கள் ஜனாப்கள் கே.பி.வி.எஸ். முகமது மீரா ராவுத்தர், டி.கே. தாஜூடீன், டி.கே.சையத் இப்ராகீம் ராவுத்தர், முகமத்ஷபனாத், எஸ்.கே. அப்துல் ரஜாக், அப்துல் வஹாப், என். காதர் மைய்தீன், டி.எம்.மொய்டு, உப்பிசாஹிப், அப்துல் ஹெய் முதலிய சட்டசபை மெம்பர்களாவார்கள். சென்னை அய்யங்கார் பார்ப்பனர்கள் தயவில் சட்டசபைக்கு வந்த ஜனாப்களின் கையெழுத்துக்கள் இதில் இல்லாதது நமது மகமதிய சகோதரர்களுக்கு ஒன்றும் ஆச்சரியமாயிருக்காது. ஆதலால் அதைப்பற்றி ஒன்றும் குறிப்பு எழுதவில்லை. 1929ல் வரப்போகும் கமிஷனுக்குள் நமது சென்னைப் பார்ப்பனர்கள் செய்யும் முக்கிய வேலைகள் எல்லாம் இந்த வகுப்பு வாரி உரிமையை ஒழிக்கப் பிரயத்தனப்படுவதல்லாமல் வேறில்லை. வகுப்புவாரி உரிமை வந்துவிட்டால் பிழைக்க முடியாத சில பார்ப்பனரல்லாதாருக்கும் இதைத் தவிர இப்போது வேறு வேலைகள் இல்லை. ஆகையால் இது சமயம் இந்து முஸ்லீம்கள் மிகுந்த ஜாக்கிறதையுடன் இருக்க வேண்டும்.

**குடி அரசு – கட்டுரை – 10.04.1927**



RangaRakes tamilnavarasam.com

# மேட்டூர் திட்டப் புரட்டு

**சட்டசபையில் கோவை ஸ்ரீமான்கள் ராவ் பகதூர் சி.எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்கள் கேள்வியும், சர். சி.பி. ராமசாமி அய்யர் அவர்கள் பதிலும்,**

**சி.எஸ். ஆர். முதலியார்:-** மேட்டூர் அணைக்கு அஸ்திவாரம் வெட்ட வாங் கப் போகும் குறிப்பிட்ட மாதிரி இயந்திரம் தாங்கள் வாங்க உத்தேசித் திருக்கும் கம்பெனியில் மாத்திரம் தான் கிடைக்கக் கூடியதா? அல்லது வேறு கம்பெனிகளிலும் கிடைக்குமா?

**சர்.சி.பி. அய்யர் :-** அது ஒரு குறிப்பிட மாதிரி என்று நான் நினைக்கவில்லை. இந்த குழிதோண்டும் இயந்திரம் மிகவும் பேர்போனது, சுக்கூர் பம்பாய் முதலிய இடங்களில் குழி வெட்ட இதையே உபயோகிக் கிறார்கள். ( மற்ற இடத்தில் இது போன்றது கிடைக்குமா கிடைக்காதா என்று முதலியார் கேட்டதற்கு பதில் இல்லை.)

**சி.எஸ்.ஆர். முதலியார் :-** அது ஒரு குறிப்பிட்ட மாதிரியாய் இல்லா மல் சாதாரணமானதாயிருந்தால் தாங்கள் ஏன் மற்ற கம்பெனிகளிலிருந்தும் அதன் விலையை தெரிந்து விலை குறைவாய்க் கிடைக்கும் இடத்தில் வாங்க ஏற்பாடு செய்யக்கூடாது?

**சர்.சி.பி. அய்யர் :-** இதற்கு பதில் சொல்ல நோட்டீஸ் வேண்டும்.

**சி.எஸ்.ஆர். முதலியார் :-** குழி வெட்டும் இயந்திரம் இல்லாமல் இயந்திரத்தில் செய்தால் எத்தனை நாளில் முடியுமோ அதைவிட சீக்கிரத்தில் கூலி ஆள்களை விட்டு வெட்டி சரிசெய்து கொடுப்பதாக தக்க கண்டிறாக் டர்கள் முன் வந்தால் இயந்திரம் வாங்கும் எண்ணத்தை விட்டு கூலி ஆள்களை விட்டுக்கொண்டு வேலை வாங்க முடியுமா?

**சர்.சி.பி. அய்யர் :-** முடியாது

**சி.எஸ்.ஆர். முதலியார் :-** தண்ணீரை விவசாயிகள் எடுத்துக்கொள்ள ஒப்பியிருப்பதாகக் கனம் சட்ட மெம்பர் சொன்னார். வாய்க்கால் வெட்டு



RangaRakes

வதற்கு முன்னர் குடிகளிடமிருந்து விதிக்கப்பட்டிருக்கும் தண்ணீர் வரிக்கு கட்டுப்படுத்த முச்சலிக்கா வாங்குவதில் ஏதேனும் கஷ்டமுண்டா?

**சர்.சி.பி.அய்யர் :-** கனம் மெம்பர் அவர்கள் சொன்ன பிரகாரமே செய்ய யோஜிக்கப்படுவதுடன் அவரது யோசனைக்கு வந்தனமளிக்கிறேன்.

**சி.எஸ்.ஆர். முதலியார் :-** கனம் கிருஷ்ணன் நாயர் அவர்களது கேள்விக்கு விடை அளிக்கும் போது குறிப்பிட்ட ரெவின்யூ போர்டார் ரிபோர்ட்டை கனம் சட்ட மெம்பர் ஆஜர்படுத்துவாரா?

**சர்.சி.பி. அய்யர்:-** அது இதர ரிபோர்ட்டுகளுடன் முன்னரே சபையில் ஆஜர் செய்யப்பட்டிருக்குமென்று நினைக்கிறேன்.

**சி.எஸ்.ஆர். முதலியார் :-** மேட்டூர் அணை வேலைக்குத் தன்னை நியமிக்கும்படி ஸ்டோனி துரை அவர்களே கேட்டுக்கொண்டாரா?

**சர்.சி.பி. அய்யர்:-** நான் அக்கேள்விக்கு விடை கொடுக்க மறுக்கிறேன்.

**சி.எஸ்.ஆர். முதலியார்:-** ஸ்டோனி துரை அவர்கள் எந்த அணை கட்டுவதிலாவது அனுபவம் பெற்றிருக்கிறாரா?

**சர்.சி.பி. அய்யர்:-** இரண்டு மூன்று உத்தியோகஸ்தர்களைத் தவிர வேறு யாருக்கும் இம்மாகாணத்தில் இம்மாதிரி பெரிய திட்டங்களில் அனுபவ மில்லை: அரசாங்கத்தாரும் சமீப காலம் வரை இப்படி பெரிய திட்டங்கள் ஆரம்பித்ததில்லை.

**சி.எஸ்.ஆர் . முதலியார்;-** மேற்குறிப்பிட்ட அம்மூன்று உத்தியோக ஸ்தர்களை இத்திட்டத்திற்கு நியமிக்கப்படலாகாதா?

**சர்.சி.பி.அய்யர்:-** இவ்விஷயம் ஆலோசிக்கப்படும்.

**சி.எஸ்.ஆர். முதலியார்:-** சீதகாரி, ( குளிர்ச்சி தரும் இயந்திரம்,) ஆஸ்பத்திரிக்கு மட்டும் உபயோகிக்கப்படுவதா அல்லது கிளப் சங்கத்துக்கும் பிரயோஜனப்படுவதா?

**சர்.சி.பி.அய்யர்:-** அது சங்கத்தின் பிரயோஜனத்திற்காக ஏற்படுத்தப் பட்டதன்று.

**சி.எஸ்.ஆர். முதலியார்:-** ஆஸ்பத்திரியும் சங்கமும் இன்னும் ஆரம் பிக்கப்படவில்லை என்று கனம் சட்டமெம்பர் அவர்கள் சொல்லியிருக்க



tamilnavarasam.com

அவ்வியந்திரம் எப்படி அதற்குள் கெட்டுப்போய்விட்டது.

**சர்.சி.பி. அய்யர்;-** கனம் கோயமுத்தூர் மெம்பர் அவர்கள் மற்றொரு கனம் கோயமுத்தூர் மெம்பர் அவர்கள் கொடுத்த தகவலிலிருந்தும் கேள்வி கேட்கிறார். அவ்வியந்திரம் கெட்டுப்போனது எனக்குத் தெரியாது. ஆனால் மற்றொரு கனம் மெம்பர் அவர்கள் கொடுத்த தகவலிலிருந்து அரசாங்கத்தார் இவ்விஷயத்தில் விசாரணை செய்வார்கள். ஒரு மெம்பர் கொடுக்கும் தகவலை ஆதாரமாகக் கொண்ட கேள்விகளுக்கு பதிலிறுப்பது கஷ்டமானது.

ஸ்ரீமான் ரத்தினசபாபதி முதலியார் அவர்களின் இந்தக் கேள்வி களையும் இதற்கு கனம் சர்.சி.பி.அய்யர் அவர்கள் கொடுத்திருக்கும் பதில் களையும் பார்த்தால் மேட்டூர் திட்டம் புரட்டு, ஹம்பக், ரசாபாசம் என்று "ஜஸ்டிஸ்" பத்திரிக்கை எழுதியது சரியென்று யாவருக்கும் எளிதில் விளங் கும். ஒரேமாதிரி இயந்திரம் மற்றொரு இடத்தில் சல்லீசாய் கிடைக்கிறதை ஏன் வாங்கக்கூடாது என்று கேட்டால் அதற்கு நோடடீஸ் வேண்டுமென்று சொல்லுவதும் வாங்க சம்மதிக்காததும் பார்த்தால் அதில் சந்தேகப்பட இட மிருக்கிறதா? இல்லையா?

இயந்திரம் செய்யும் வேலையை மனிதர்கள் செய்ய தயாராயிருக்கும் போதும் இயந்திரத்தினால் எவ்வளவு நாளில் செய்துவிடலாமோ அவ்வளவு நாளில் முடித்துக் கொடுக்கத்தக்க கண்டிராக்டர்கள் ஒப்புக் கொண்டால் அவர்கள் மூலம் வேலை நடத்தக்கூடாதா என்றால் கூடாது என்று சொல்லுகிற பதிலிலிருந்து இயந்திரத்திற்கும் சர் அய்யர் அவர்களுக்கும் ஏதோ சம்மந்தம் இருக்க வேண்டும் என்கிற சந்தேகம் ஏற்படுகிறதா இல்லையா? தவிர இவ்வளவு பத்து லட்சக் கணக்கான ரூபாயை நமது நாட்டு மக்கள் கூலியாக அடையக் கூடாது, வெள்ளைக்காரர்கள் தான் அடைய வேண்டும் என்ற பிடிவாதமிருக்கிறது என்பதும் எப்படியாவது வெள்ளைக்காரருக்கு நல்ல பிள்ளையாகவேண்டுமென்று பார்க்கிறார்களே யல்லாமல் நாட்டுக்கு துரோகியாவதைப் பற்றி கொஞ்சமாவது கவலைப்படுவதில்லை என்று எண்ண இடமிருக்கிறதா இல்லையா?

தவிர, மேட்டூர் திட்டம் நிர்வாகத்திற்கு ஏற்படுத்தியிருக்கிற பெரிய உத்தியோகஸ்தர்கள் இம்மாதிரி விஷயத்தில் அனுபோகமுள்ளவரா என்று கேட்டால் இம்மாதிரி அனுபோகமுள்ளவரே இந்த மாகாணத்தில் இரண்டு மூன்று பேர்கள் தான் உண்டு, ஆதலால் அனுபோகபட்டவர்களை நியமிக்க முடியாது என்கிற மாதிரியில் பதில் சொல்லுவதும். அந்த அனுபோகப்பட்ட இரண்டு மூன்று பெயரையாவது ஏன் நியமிக்கவில்லை என்றால் யோசிக்கலாம் என்று சொல்லுவதினால் இந்த உத்தியோகஸ்தருக்கும் சட்ட மெம்பருக்கும் ஏதாவது கட்டுப்பாடு இருக்கவேண்டும் என்று அதாவது "நான் உங்களுக்கு அனுபோகமில்லாவிட்டாலும் உங்களை *மீ*3000, 4000ரூ. சம்பளத்தில் நியமித்து விடுகிறேன், நீங்கள் எங்கள் பார்ப்பனர்கள் அனுபோக மில்லாவிட்டாலும் அவர்களை 500, 1000, 2000 ரூ.*மீ* சம்பளமுள்ள உத்தி யோகத்திற்கு நியமிக்க வேண்டும். பணம் ஊரார் வீட்டுதுதானே. உங்கள் பெரியவர்கள் சம்பாதித்ததுமல்ல எங்கள் பெரியவர்கள் சம்பாதித்ததுமல்ல" என்கிற ஒப்பந்தமாயிருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறதா இல்லையா?

தவிர, இவ்வளவு பணச் செலவு செய்து ஏற்படுத்தும் திட்டத்தின் தண்ணீரை உபயோகித்துக் கொள்ளுபவர்களிடம், இன்ன விகிதம், வரி ஏன் வசூல் செய்வதாக ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை என்றால், இவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்து விட்டு இனிமேல் யோசிக்கிறேன் என்று சொல்லுவதானால் தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளும் மிராசுதாரர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள் ஆனதால் சர். அய்யர் வேண்டுமென்றே அவர்களைக் கட்டுப்படுத்தாமல் விட்டு விட்டார் என்று சொல்ல இடமிருக் கிறதா இல்லையா?ஆகவே நமது நாட்டாரின் பணம் சுமார் 15 கோடி அதாவது 1500 லட்சம் ரூபாய்களில் பெரும்பாகம் இயந்திர சாமான் முதலியவை களுக்காக சீமைக்கும் பெரும்பாகம் வெள்ளைக்கார உத்தியோகத்திற்காக சீமைக்கும் பெரும்பாகம் பார்ப்பனர்கள் உத்தியோகஸ்தர்களுக்கென்றும் சம்பளமாக நமது நாட்டு பார்ப்பனருக்கும் இதன் பலன் கொஞ்ச நஞ்சம் உள்ளதை நிலத்திற்கு உடையவர்கள் என்கிற முறையில் பார்ப்பன பென்ஷன் தார்கள், பார்ப்பன உத்தியோகஸ்தர்கள், பண மிராசுதாரர்களுக்குமே போகிறது என்பதில் என்ன ஆட்சேபணை இருக்கிறது. ஏதோ சில பாகம் கண்டிராக்டர்களுக்குப் போகலாம். ஆனாலும் "தோசைக்காரியிடம் மாவு விலைக்கு வாங்கினது போல" உத்தியோகஸ்தர்களுக்கு மூன்று பாகமும் கண்டிராக்டர்களுக்கு ஒரு பாகமும் இருக்கலாமேயொழிய அதுவும் வயிறாரச் சாப்பிடக்கூட கிடைக்காது. இம்மாதிரியான வேலைகளில் அனுபோக முள்ளவர்களும் நிபுணர்களும் இல்லையென்கிறதினாலும், கிடைக்கிறவர் களையும் வேலை வாங்க இஷ்டப்படாததினாலும் இந்த திட்டம் ஒழுங்காய் நடைபெறுமோ நடுத்தூக்கில் ஏதாவது மோசம் செய்து விடுமோ என்று பயப் படாமல் இருக்கவும் இடமில்லை. இவைகளெல்லாம் எதைக் காட்டுகிற தென்றால் "நமது பைத்தியக்காரத்தனத்தை" வெள்ளைக்காரரும் பார்ப்பனர் களும் ஒன்று சேர்ந்து கொண்டால் மேட்டூர் திட்டம் பகற் கொள்ளை மாத்திரமல்ல நம்மையெல்லாம் மேல் லோகத்திற்கு அனுப்புகிற திட்டம் கூட சுலபத்தில் நடத்திவிடலாம் என்று கூட சொல்லலாம்.

**குடி அரசு - கட்டுரை - 10.04.1927**



RangaRakes
tamilnavarasam.com

# வெட்கப்படுகிறார்கள்

சென்னை சுயராஜ்யக் கட்சியில் உள்ள பல பார்ப்பனரல்லாதார் அக்கட்சி யில் இருப்பதற்காக இப்போது வெட்கப்படுகிறார்கள் என்று நன்றாய்த் தெரிகிறது. அவர்கள் யார் என்று பொது ஜனங்கள் அறிய ஆசைப்படுவது சகஜம் தான். நாம் அதை தெரிய ஒறே ஒரு சூசனை காட்டு கிறோம். அதாவது சுயராஜ்யக் கட்சியில் உள்ள பார்ப்பனரல்லாதார்களில் யார் யார் உள்ளதற்குள் யோக்கியர்கள் என்று பெரும்பான்மையோர்களால் நினைக்கப்பட்டார்களோ, அவர்களில் பெரும்பான்மையோரும், இனி அந்தக் கட்சியில் இருந்தால் அடுத்த தேர்தலில் தங்களுக்கு ஸ்தானம் கிடைக்காமல் போய்விடுமோ என்பவர்களில் சிறுபான்மையோரும் சேர்ந்து இப்போது தனிக்கட்சி ஏற்படுத்தலாமா அல்லது ஜஸ்டிஸ் கட்சியையே சுவாதீனப் படுத்திக் கொள்ளலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த சமயத்தில் ஜஸ்டிஸ் கட்சியார் புத்திசாலிகளாகவும் உண்மையாய் பார்ப்பன ரல்லாதாருக்கும் உழைப்பவர்களாயிருந்தால் ராஜீய அபிப்பிராய பேதத்தை யும், சுயநலத்தையும், சொந்த விரோதத்தையும் மூட்டைக்கட்டி வைத்துவிட்டு வருகிறவர்களை மனப்பூர்வமாக வரவேற்பார்களாக.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 10.04.1927**



# ஒரு விசேஷம்

சென்னை சட்ட சபையில் மந்திரிகளின் மீது நம்பிக்கை இல்லாத தீர்மானம் வந்து விவாதம் நடந்த காலத்தில் ஜனாப் அப்பாசலி பேசும் போது “இண்டிபெண்டண்ட் கட்சியார்களும் மந்திரிகளும் யாதொரு முக்கியமான வேலை செய்யாவிட்டாலும் வேட்டை நாய்கள் போன்ற சுயராஜ்யக் கட்சி யாரை பெட்டிக்குள் பாம்பு அடங்கினது போல் செய்து அவர்களின் தடை வேலைகளையும் தேசீய வேஷங்களையும் மூட்டை கட்டி வைக்கச் செய்து விட்டோமே, இதைவிட வேறு என்ன செய்யவேண்டு”மென்று பேசிக் கொண்டே வரும்போது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி மந்திரி கணம் சுப்பராயனைப் பார்த்து உங்களுக்கு உள் உளவாயிருந்ததற்கு இப்படித்தானா சபையில் எங்கள் மானத்தைக் கெடுப்பது என்று ரகசியமாய் கெஞ்சினாராம். கனம் சுப்பராயன் உடனே ஜனாப் அப்பாசலிக்கு ஜாடைகாட்டி, கண்ணைச்சிமிட்டி உட்காரச்சொன்னாராம். இந்த காட்சியைப்பார்த்து சட்ட சபையிலுள்ள மந்திரிகளுள்பட எல்லாக் கட்சியாரும் சிரித்தார்களாம். ஐயோ பாவம். சுயராஜ்யக் கட்சியின் நிலைமை இப்படி ஆகிவிட்டது.!

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 10.04.1927**



RangaRakes tamilnavarasam.com

# மகாத்மாவின் தேக அசௌக்கியம்

மகாத்மா காந்தி அசௌக்கியமாக இருப்பதாகவும் அவருடைய தென்னாட்டுச் சுற்றுப் பிரயாணம் பாதிக்கப்படும் என்பதாகவும் பொதுவாய் தெரிய வருகிறது. ஆனாலும் அவருடைய சிஷ்ய கோடிகள், அதாவது அவரைக் கொண்டு வந்து ஆட்டி வைத்து யோக்கியதையும் பணமும் சம்பாதித்துக் கொள்ள நினைத்திருப்பவர்கள் அந்த விபரத்தைப் பற்றி ஜனங்கள் சரியாய் உணருவதற்கு இடமில்லாமல் குழப்பமடையும்படி யாகவும், முன்னுக்கு பின் முரணாகவும் ஏமாற்றுத் தந்திகள் அடித்தவண்ண மாயிருக்கின்றார்கள். காயலாவினுடைய உண்மையையும் சரியாய்த் தெரியப் படுத்தாமல் ஏதேதோ தந்திரமாயும் மூடு மந்திரமாயும் தெரிவித்து வரு கிறார்கள்.

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரி தந்தியை விட்டு விட்டு, ஸ்ரீமான் தேசாய், நியானியிலிருந்து கொடுத்திருக்கும் தந்தியை பார்க்கும் பக்ஷத்தில் மகாத்மாவுக்கு மூளைக்கொதிப்பும், ரத்தோட்டக் குரைவும், கைக்கால் சரியான சுவாதீனமற்ற தன்மையும் காட்டுகிறதாகவும், தக்க ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று டாக்டர்கள் அபிப்பிராயம் கொடுத்திருப்பதாகவும் குறைந் தது இனியும் இரண்டு மூன்று மாதத்திற்கு அதாவது கோடைகால முழுவதற்கும் ஓய்வு எடுத்துக் கொண்டு சுற்றுப்பிரயாணத்தை நிருத்த வேண்டுமென்று சொன்னதாகவும் தெரிய வருகிறது. கடைசியாய் பார்க்கும் போது தற்காலம் மகாத்மா சுற்றுப்பிரயாணம் நிருத்தப்பட்டதாகவே முடிந்து விட்டது. எனினும், இனியும் சுமார் இரண்டு மூன்று மாதம் பொருத்தானாலும் மகாத்மா நமது நாட்டுக்கு வரும்போது நாம் நமது கடமையைச் செய்து வரவேற்கத் தயாராயிருக்க வேண்டும்.

**குடி அரசு - கட்டுரை - 10.04.1927**



# வாலாஜாபாத் சொற்பொழிவு

ஸ்ரீமான் ரெட்டியார் அவர்கள் இதுவரை செய்த வேலைகளையும் செய்யப்போகும் வேலைகளையும் பற்றி சொன்னது தமக்கு மிகுந்த திருப்தி அளிக்கின்றதெனவும் இவ்வளவு வேலைகள் அவர் செய்திருந்தாலும் தற்கால பார்ப்பன அகராதிப்படி அவர் பெரிய தேசத்துரோக ஜாப்தாவில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்றும் தமிழ்நாட்டில் உள்ள சுமார் 9 பார்ப்பன ரல்லாத ஜில்லா போர்டு மெம்பர்களில் இரண்டு ஜில்லா போர்டு மெம்பர்கள் தான் “ தேசத்துரோகிகள்” என்று சொல்லப்படுகிறார்கள் என்றும், அவர்கள் செங்கல்பட்டு போர்டு ஸ்ரீமான் ரெட்டியாரும் தஞ்சாவூர் போர்டு ஸ்ரீமான் பன்னீர் செல்வமுமே யாவார்கள் என்றும், ஸ்ரீமான் பன்னீர் செல்வத்தைவிட ஸ்ரீமான் எம்.கே. ரெட்டியாரே அதிகமான அதாவது பிராயசித்தமே இல்லாத “ தேசத்துரோகி” என்றும் ஸ்ரீமான் பன்னீர் செல்வம் தன்னுடைய ஆட்சியில் பல பார்ப்பனருக்கு உத்தியோகம் சோறு, படிப்பு முதலியவைகள் கொடுக்கிறார் என்றும், இவர் அடியோடு மறுக்கிறார் ஆதலால் தான் பெரிய “ தேசத்துரோகியாகி”விட்டார் என்றும் அப்பேர்பட்ட தேசத்துரோகியை பாராட்டும் கூட்டத்திற்கு தேசத்துரோகிகளுக்கு உபாத்தியாயரான ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியார் பேசப்போவதும் மிகவும் பொறுத்தமான தென்றும் இப்படியான “ தேசத்துரோக கூட்டத்திற்கு ” சமீபகாலம் வரை “ தேச பக்தனாக பார்ப்பனர்களாலும்” “ தியாக மூர்த்தியாகவும்” “தேசாபிமானச் சிங்கமாகவும்” அழைக்கப்பட்டுவிட்டு திடீரென்று தேசத்துரோகியாகி விட்ட தான் அக்கிராசனம் வகிப்பதை மிகப் பெருமையாக நினைக்கிறேன் என்றும், தான் ஸ்ரீமான் ரெட்டியாரவர்கள் இடம் எதிர்பார்ப்பதெல்லாம் இந்த பதவியும் அவருக்குள்ள ராவ்பகதூர் பட்டமும் போவதாயிருந்தாலும், அன்றி நரகமே கிடைப்பதாயிருந்தாலும், இப்பொழுது அவர் பார்ப்பனர்களால் தேசத் துரோகப் பட்டம் வாங்கியிருப்பதை மாற்றி, பார்பனர்களால் தேசப்பக்த பட்டம் வாங்க முயற்சிக்கக்கூடாது என்றும் உண்மையாய் தேசத்துக்கும் சமூகத்துக்கும் உழைக்கும் மனிதர்களைக் கண்டுபிடிக்க ஒரே ஒரு மார்க்கத் தைத் தான் கையாடி வருவதாகவும் அது என்னவென்றால் நமது நாட்டில் யார் யார் பார்ப்பனர்களால் தேசபக்தர் தேசபக்த சிகாமணி என்று அதாவது விபீஷணனைப் போல பார்ப்பனர்களால் கொண்டாடப்படுகிறார்களோ அவர்கள் எல்லோரும் ஒருவர்கூட பாக்கியில்லாமல் தெரிந்தோ, தெரியா மலோ தேசத்திற்கும் தமது சமூகத்திற்கும் கெடுதி செய்த பெரிய துரோகிகள்



RangaRakes
tamilnavarasam.com

என்றும் யார் யார் பார்ப்பனர்களால் தேசத்துரோகி என்றும் வகுப்புவாதிகள் என்றும், வகுப்புத்துவேஷகாரர் என்றும், காங்கிரஸ் விரோதி என்றும் சொல்லப்படுகிறார்களோ அவர்கள் கூடுமானவரை உபயோக முள்ளவர்கள் என்றும் தான் முடிவு செய்வதற்காகவும் சொன்னதோடு ஸ்ரீமான் ரெட்டியார் அவர்களிடம் போர்டு பிரசிடெண்டு முறையில் தான் இனியும் எதிர்பார்ப்பது என்னவென்றால், ரெட்டியார் ஆக்ஷிக்கு உள்பட்ட பள்ளிக்கூடங்களில் பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்களையே வைக்க ஏற்பாடு செய்ய வேண்டு மென்றும் அதனால் கொஞ்சம் அதிகப் பணம் சிலவாவதானாலும் கல்வி கற்பிப்பது தாமதப்பட்டாலும் அதைப்பற்றி கவலைப்படாமல் பார்ப்பன ரல்லாத உபாத்தியாயர்களைக் கொண்டே நமது பிள்ளைகளுக்கு கல்வி போதிக்கப்பட வேண்டுமென்றும் பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்களை தற்பித்து செய்ய ஒரு பள்ளிக்கூடம் ஒவ்வொரு ஜில்லா போர்டும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் அதற்காகத் தகுந்தபடி பணம் ஒதுக்க வேண்டும் என்றும் பேசினார்.

*குறிப்பு : வாலாஜாபாத் மகாஜனங்களால் அளிக்கப்பட்ட உபசாரத்தில் தலைமை ஏற்று 10. 4. 27 ல் ஆற்றிய சொற்பொழிவின் முன்னுரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 17. 04. 1927**



# காங்கிரஸ் பைத்தியம்

மகாத்மா காந்தி அவர்களாலும், அவர் பேச்சைக் கேட்டு சிறைக்கு சென்ற பதினாயிரக்கணக்கான தேசபக்தர்களாலும் ஒரு கோடி ரூபாய் செலவு செய்து பிரசாரம் செய்ததின் பலனாலும் பாமர மக்களிடையே காங்கிரஸ் என்கிற பதத்திற்கு நமது நாட்டில் ஒருவித மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்ட தோடு படித்த வகுப்பார்களுக்கு அதன் மூலம் உத்யோகம், பதவி, பட்டம், அதிகாரம் முதலியதுகள் கிடைப்பதற்கு இடமிருப்பதால், அதனிடத்தில் ஒருவித பைத்தியமும் ஏற்பட்டிருக்கிறது. அதனாலேயே ஒரு கூட்டத்தார் காங்கிரசின் பெயரை சொல்லிக் கொண்டு பிழைப்பதையும் மறைக்க முடியாது. ஆகவே, காங்கிரசின் பேரில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் குருட்டு நம்பிக்கையில், அதனால் தேசத்திற்கும், தேசத்தின் பெரும்பான்மை மக்களான குடியானவர்கள், தொழிலாளிகள், ஏழை மக்கள் முதலியவர்களுக் கும் ஏற்பட்ட கெடுதியையும், சர்க்காருக்கு அதனால் ஏற்படும் ஆதிக்கத் தையும் பலத்தையும் வெளியில் எடுத்துச் சொல்லக்கூட பயப்படுகிறார்கள். யாராவது துணிந்து வெளியில் எடுத்துச் சொல்ல வந்தாலும் அது மிகக் கஷ்டமாக இருக்கிறது. அதாவது மத சம்மந்தமான புரட்டுகளை வெளியில் எடுத்துச் சொல்வது எப்படி மதத் துரோகமும் நாஸ்திகமும் ஆய்விடுகிறதோ அதுபோல் காங்கிரஸ் புரட்டுகளை எடுத்துச் சொல்வது தேசத் துரோகமும், தேசாபிமானமற்ற தன்மையுமாக ஆய்விடுகிறது.

அதற்கு பாமர மக்களிடையே இருக்கும் செல்வாக்கை பார்த்தே காங்கிரஸ் யோக்கியதை அறிந்தவர்களும் மக்களை ஏமாற்ற காங்கிரசில் சேர ஆசைப்படுவதும், காங்கிரஸ் பெயரை சொல்லிக்கொள்ள ஆசைப்படுவதும் சகஜமாக நடந்து வருகிறது. ஏதோ சிலர் உண்மையிலேயே காங்கிரஸ் ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்பதாக எண்ணி அதனிடத்தில் பக்தி செலுத்த ஆரம்பிப்பதும் சகஜமாக இருக்கிறது. உதாரணமாக மதுரை மகாநாட்டில் கூட ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரசில் சேர்ந்துவிட வேண்டும் என்பதாக ஒரு தீர்மா னம் வந்ததும், பலர் அதை எதிர்த்ததும், சிலர் அதை ஆதரித்ததும் விஷயா லோசனைக் கமிட்டியில் கலந்திருந்தவர்களுக்குத் தெரியும். எதிர்த்தவர் களில் யாரும் தங்களுக்கு சுயராஜ்யம் வேண்டாமென்றாவது அல்லது அன்னியர்களின் கொடுமையான ஆட்சியிலேயே இருக்க வேண்டுமென்பது அல்லது அவ்வித கொடுமையான ஆட்சிக்கு உதவி செய்ய வேண்டு



RangaRakes tamilnavarasam.com

மென்கிற எண்ணமாவது இல்லாமல் காங்கிரசினால் தேசத்திற்கு எவ்வித பலனுமில்லாமல் இருப்பதோடு பலவித கெடுதி ஏற்படுவதையும் உத்தே சித்தும், பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்திற்காகவே அதை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், காங்கிரஸ் ஏதாவது பலன் அளிக்கக் கூடியதா யிருந்தால் அது பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஆக்கமளிக்கக்கூடியதுதான் என்றும் மனப்பூர்த்தியாய் உணர்ந்தே எதிர்த்தார்களே ஒழிய வேறில்லை. ஆதரித்தவர்களும் சிலர் உண்மையாய் அதனால் சுயராஜ்யம் அடையலாம் என்றும், சிலர் அதனால் ஏதாவது பாமர மக்களின் ஆதரவும் அரசியலில் அதிகாரமோ பதவியோ அடையலாம் என்றவர்களுமே தவிர வேறில்லை.

ஆனாலும், அக்கூட்டத்தில் அத்தீர்மானம் தோல்வியே அடைந்து விட்டால் கட்சி கட்டுப்பாட்டுக்கு அடங்கி யாவரும் அத்தீர்மானத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

இப்போதும் ஜஸ்டிஸ் கட்சியிலுள்ள அனேகருக்கு காங்கிரசினி டத்தில் ஒரு பைத்தியம் இருப்பதாகவே தெரிய வருகிறது. அதாவது சமீபத்தில் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் பேசியிருக்கும் பேச்சிலிருந்து அறி கிறோம். இது அவரவர்கள் தனி அபிப்பிராயமாய் இருக்கலாமே தவிர கட்சி அபிப்பிராயமா யிருக்கும் என்று உறுதியாய் சொல்ல முடியாது. இதுபோலவே சுயராஜ்யக் கட்சியில் இருக்கும் பார்ப்பனரல்லாதார் பலருக்கும் ஜஸ்டிஸ் கட்சியினிடத்தில் பக்தியிருக்கிறது. ஆனாலும் ஏதோ சில குறிப்பிட்ட தடைகள் இருப்பதாக கனவு காண்கிறார்கள்.

காங்கிரசில் சேர வேண்டுமென்கிற ஜஸ்டிஸ் கட்சியை சார்ந்த சிலருக்கும், ஜஸ்டிஸ் கட்சியில் சேர வேண்டும் என்கிற காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியார் சிலருக்கும், மத்தியில் நாம் தடைக் கல்லாய் இருக்க பிரியப்பட வில்லை. காங்கிரசில் சேருவதென்பது உபயோகமற்ற காரியம் என்பதாக மாத்திரம் சொல்லுகிறோமேயொழிய காங்கிரசில் சேருவதானால் ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமென்றாவது காங்கிரஸ்காரர்களை ஜஸ்டிஸ் கட்சியில் சேருவது தப்பிதம் என்றாவது நாம் சொல்ல வரவில்லை. இரண்டிற்கும் இப்போது உள்ள கொள்கைகளின் படி இவர்கள் அதில் சேருவதானாலும், அவர்கள் இதில் சேருவதானாலும் ஒருவருக்கும் ஒருவித பலனும் உண்டாகி விடாது என்பதே நமது அபிப்பிராயம். என்னவெனில் காங்கிரசிலிருக் கிறவர்கள் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்தால் அவர்களை காங்கிரசுக்கு வார்சு தாரர்களான பார்ப்பனர்கள் தேர்தல்களுக்கு நிறுத்த மாட்டார்கள். "காங்கிரஸ் கமிட்டியும்" அவர்களை நிறுத்தாது. அதுபோலவே ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து காங்கிரசில் சேருகிறவர்களையும் தேர்தலில் நிறுத்த காங்கிரஸ் தலைவர் களான பார்ப்பனர்கள் சம்மதிக்க மாட்டார்கள். காரணம் கேட்கப் போனால் "வகுப்பு சம்பந்தமான கட்சியில் நீ மெம்பராய் இருக்கிறாய். அது தேச முன் னேற்றத்திற்கு விரோதம். ஆதலால் கூடாது" என்று சொல்லிவிடுவார்கள்.



இதைச் சொல்ல பார்ப்பனர்கள் கூட தேவையில்லை. ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடுகார், கல்யாணசுந்திர முதலியார் முதலிய பார்ப்பனரல் லாதார்களாலேயே சொல்லப்பட்டுவிடும். ஏனென்றால் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு என்று ஏற்பட்டிருக்கும் கக்ஷிகள் எல்லாம், எல்லா வகுப்புகளுக்கும் சம சுதந்திரமும் வகுப்புவாரி உரிமையும் கேட்கிறது. இப்போதைய காங்கிரசோ இதை தேசத் துரோகமென முடிவு செய்கிறது. ஆகவே தேர்தல்களுக்கு நிற்க முடியாது. இப்போது காங்கிரசினிடத்தில் ஒரு சிலருக்கு (பெரும்பான்மையாய்ப் படித்தக் கூட்டத்தாருக்கு) மோகம் இருப்பதெல்லாம் தேர்தலுக்கு நிற்கத் தானே அல்லாமல் வேறல்ல. அத் தேர்தலில் காங்கிரஸ் பேரால் நிற்க அனுமதி கிடைக்க வில்லையானால் பிறகு காங்கிரசில் சேருவதிலென்ன லாபம் இருக்கிறது? ஒரு சமயம் பார்ப்பன ரல்லாதார் மொத்தமாய் சேர்ந்து காங்கிரசைக் கைப்பற்றி விடலாம் என்பதாக வைத்துக் கொண்டாலும் "வகுப்புவாரி உரிமையும், சம சுதந்திரமும் தேசத் துரோகம்" என்று சொல்லும் பார்ப்பனரல்லாதாரும் அதற்குள் இருந்து கொண்டுதானே இருப்பார்கள். பார்ப்பனர்கள் வழக்கம்போல் இக் கூட்டத் தாரையும் அரசியலை வாழ்வுக்குக் கொண்டவர்களையும் உபயோகித்துக் கொண்டு கலகம் செய்வித்துக் கொண்டுதானே இருப்பார்கள்?

சரி, இந்த கஷ்டங்களை எப்படியாவது சரிப்படுத்திக் கொள்ளலாம் என்பதாகவே வைத்துக் கொண்டாலும் காங்கிரசில் சேராத ஜஸ்டிஸ் கட்சிக்காரர் ஒருவர் தேர்தலுக்கு நின்றால் ஜஸ்டிஸ் கட்சியார் யாரை ஆதரிப் பது? காங்கிரசைச் சேர்ந்த ஜஸ்டிஸ் ஆசாமியையா? அல்லது சேராத ஜஸ்டிஸ் ஆசாமியையா?

இப்பொழுது முஸ்லீம் லீக்கென்று மகமதியச் சகோதரருக்குத் தனியாய் ஒன்று இருந்தாலும் அவர்களுக்கு தனித்தொகுதி வகுப்புவாரி உரிமை இருப்பதால், காங்கிரசில் இருப்பதால் அவர்களுக்கு கஷ்டமில்லை. அவர்களும் கலப்புத் தொகுதியில் நிற்பதாயிருந்தால் முஸ்லீம் லீகுக்கும் பெரிய ஆபத்தாய்த்தான் இருக்கும். ஆகவே,எவ்வித தந்திரம் செய்தாலும் பார்ப்பனர்களை ஏமாற்ற முடியாது. உண்மையான நல்லெண்ணத்தோடு காங்கிரசில் சேரவேண்டு மென்கிற ஜஸ்டிஸ் கட்சியாருக்கும், ஜஸ்டிசில் சேர வேண்டுமென்கிற காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியாருக்கும் நாம் ஒன்று சொல்லு வோம். அதாவது, எவ்விதமான அரசியல் அபிப்பிராயமுள்ளவர்களும் அதாவது, அராஜகக்காரனென்று சொல்லப்படுபவன் முதல், அரசாங்க சிப்பந்திகள் வரை சேரும்படியாக ஜஸ்டிஸ் கட்சியில் அதிலுள்ள அரசியல் திட்டத்தை எடுத்துவிட வேண்டும். ஜஸ்டிஸ் கட்சிக்கு ஒரே நோக்கம்தான் இருக்க வேண்டும். சமத்துவம், சுயமரியாதை, சகல வகுப்பார்களும் அவரவர் கள் உரிமையையும் பிரதிநிதித்துவத்தையும் அடைய வேண்டியது என்கிற கொள்கை மாத்திரம் இருக்க வேண்டும். ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் தேர்தல் களுக்கு அபேக்ஷகர்களை நிறுத்தக்கூடாது என்கிற நிபந்தனையும் இருக்க



RangaRakes tamilnavarasam.com

வேண்டும். வேண்டுமானால் காங்கிரசுக்குள் உள்ள பார்ப்பனரல்லாதார் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு கட்சியை ஏற்பாடு செய்து கொண்டு பார்ப்பனரல் லாதாருக்காக பிரதிநிதிகளை நிறுத்திக் கொள்ளட்டும். அப்போது இரண் டொருவர் போக மற்ற பார்ப்பனரல்லாதார் எல்லாருக்கும் ஜஸ்டிஸ் கட்சியில் சேருவதில் ஆக்ஷேபணை இருக்காது. நமது கட்சிக்கு விரோதம் செய்யவும் சக்தி இருக்காது. அப்படிக்கில்லாமல் அதிலொருகால், இதிலொருகால் வைத்துக்கொண்டு தங்கள் காரியத்தையும் கெடுத்துக்கொண்டு பொது காரியத்தையும் கெடுத்து "தினம் ஒரு கட்சி மாறுகிறவர்" என்கிற கெட்ட பெயரை வாங்கி மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போவதில் ஒரு பிரயோ ஜனமும் இல்லை என்றே சொல்லுவோம். வேறு ஒன்றும் வேண்டியதில்லை. தேசத்திற்கு உண்மையான விடுதலை வேண்டும். அதற்காக என்ன வேண்டுமானாலும் தியாகம் செய்ய தயாராயிருக்கிறோம் என்று சொல்லு கிறவர்கள் யாராயிருந்தாலும் சரி அவர்களுக்கு காங்கிரசும், ஜஸ்டிஸ் கட்சியும் எல்லாம் ஒன்றுதான். ஒன்றிலும் பிரயோஜனம் உண்டாகாது. ஒரே அடியாய் ஒத்துழையாமையை ஆரம்பிக்க வேண்டியதுதான். ஒத்துழை யாமைக்குத் தேசமும் தானும் லாயக்கில்லை என்று நினைப்பதனால் மக்கள் சுயமரி யாதைக்கு உழைக்க வேண்டியதுதான். இரண்டையும் விட்டு விட்டு தேசம், தேசீயம் என்று மக்களை ஏமாற்றுவதில் தாங்கள் மாத்திரம் பிழைக் கலாமே ஒழிய மக்களுக்கு யாதொரு பிரயோஜனமும் உண்டாகாது.

**குடி அரசு - கட்டுரை - 17.04.1927**



## பார்ப்பனக் கொடுமைக்காக உயிர்விட்ட சுத்த வீரன்

பார்ப்பன எஜமானன் கீழ் இருந்து வேலை பார்த்து வயிறு பிழைப் பதை விட சாவதே மேல் என்பதாகக் கருதி ஒரு சுத்த வீரன் பாஷாணத்தைச் சாப்பிட்டு உயிர்விட்டுத் தனது சுயமரியாதையைக் காத்துக் கொண்ட செய்தியை வேறு பக்கம் பிரசுரித்திருக்கிறோம். இவ்வீரனை நாம் உண்மை யான சுத்த ரத்தோட்டமுள்ள சுத்தவீரனென்றே சொல்லுவதோடு, மனமாரப் பாராட்டுகிறோம். இவ்வீரனின் தியாகமானது பார்ப்பனரல்லாத சமூகத்திற்காக இதுவரை பாடுபட்ட எல்லாப் பெரியார்களின் தியாகத்தை விட மிகப்பெரிய தியாகமென்றும், மற்றவர்கள் செய்த வேலைகளையெல்லாம் விட மிகப் பெரிய பலனை அளிக்கக்கூடியது என்றும் சொல்லுவோம்.

நாயர் பெருமானின் பிராமணத் தியாகமும், தியாகராய பெருமானின் தன்னலமற்ற சேவையும் மற்றும் பலரின் சிறைவாசமும் இவ்வீரனின் தியாகத் திற்கு ஒரு விதத்திலும் சமானமாகாதென்றே சொல்லுவோம்.

இதைப்பற்றி எழுதும் போது நமது உடம்பு சிலிர்த்துக் கொண்டே இருக்கிறது. பார்ப்பனரல்லாத மக்கள் இவ்வீரனைக் கொண்டாட வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் கூட்டங்கள் போட்டு அவனைப் பாராட்டித் தீர்மானங் கள் செய்தனுப்ப வேண்டும். பார்ப்பனரல்லாதார் முன்னேற்றச் சம்பந்தமான ஒவ்வொரு சங்கத்திலும் இவ்வீரனின் உருவப் படத்தை வைக்க வேண்டும். உண்மையான பார்ப்பனரல்லாதார் ஒவ்வொருவர் வீட்டிலும் இப்படங்கள் துலங்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் குழந்தைகளுக்கெல்லாம் இவ் வீரனின் சுத்த வீரத்தன்மையை எடுத்துச் சொல்ல வேண்டும். ஒன்றா பார்ப்ப னீயக் கொடுமையில் இருந்து விலக வேண்டும், விலக முடியாவிட்டால் உயிர் துறக்க வேண்டும் என்கிற மந்திரம் பார்ப்பனரல்லாத சமூகத்திற்குள் எங்கு பார்த்தாலும் முழங்க வேண்டும். உயிரை விட சுயமரியாதையே பெரிது என்ப தை யாவரும் உணரும்படி செய்ய வேண்டும்.

இதுசமயம் எத்தனை பேர்கள் நமது சுத்த வீரனைப் போல் உயிர் விட சம்மதமில்லாமலும் வெளியேறிப் பிழைக்க முடியாமலும் பார்ப்பனர்களின் கீழ் கொடுமை படுத்தப்படுகிறார்கள் என்பதை கணக்கிலடக்கக் கூடுமா? நாம்



RangaRakes tamilnavarasam.com

ஏறக்குறைய வாரத்தில் 3 அல்லது நான்கு நாள் வெளி ஊர்களில் சுற்றுப் பிரயாணம் போய்க் கொண்டு இருக்கிறோம். போகிற ஊர்களிலெல்லாம் பார்ப்பனர்களால், பார்ப்பனீயக் கொடுமைகளால் நமது மக்கள் படும் கஷ்டங்கள் சகிக்க முடியாதபடி கேள்விப்படுகிறோம். பார்ப்பனர்களும் வரவர அதிகமான தைரியம் பெற்று விட்டார்கள். ஏனென்றால் எல்லாத் துறைகளிலும் பார்ப்பனர்களே ஆதிக்கம் பெற்றுவிட்டதாலும் நிர்வாக சபையில் பொறுப்புள்ள ஸ்தானத்தில் பார்ப்பனரே இருக்கிற படியாலும் மந்திரிகளும் பார்ப்பனர்கள் தாளத்திற்குத் தகுந்தபடி ஆடுகிறவர்களாயிருப்பதாலும், நம்மவரிலும் சிலரைத் தங்களுக்கு அடிமையாக்கிக் கொண்டதாலும், பயமின்றியும், ஈவு இரக்கமின்றியும் தங்கள் ஆதிக்கத்தைப் பலப் படுத்திக் கொள்ள நம்மவர்களை சித்திரவதை செய்து வருகிறார்கள். இதற்கு உதாரணமாக நாம் சமீபத்தில் கேள்விப்பட்ட ஒரு விஷயத்தைப் பொது ஜனங்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறோம்.

அதாவது, சென்னையில் வித்தியா இலாக்கா சம்பந்தப்பட்ட ஸ்தாபனமொன்றில் சமஸ்கிருத இலாக்காவில் ஒரு பார்ப்பனரல்லாதார் சுமார் 9 வருஷமாக புரொபசராக இருந்து வருகிறார். அவர் சமஸ்கிருதத்தில் மிக்க பாண்டித்தய முடையவர். அப்படிப்பட்டவர் ஒரு பரீட்சகராய் நியமிக்கப் பட்டார். தலைமை பரீட்சகரான ஒரு பார்ப்பனர் அவருடைய நியமனத்தை அடித்துவிட்டு வேறு ஒரு பார்ப்பனரை நியமித்துக் கொண்டார். சிண்டிகேட் சபையார் என்கிற மேல் அதிகாரிகள் தலைமைப் பரீட்சகரின் உத்திரவை நிராகரித்துவிட்டு மறுபடியும் அந்த பார்ப்பனரல்லாதாரையே நியமித்தார்கள். அதன் பேரில் தலைமை பரீட்சகரான பார்ப்பனருக்குக் கோபம் வந்து ௸ 9 வருஷ காலம் சமஸ்கிருத புரொபசராயிருந்த ஒரு பார்ப்பனரல்லாதாரை ஒரே அடியாய் அவர் புரொபசர் வேலைக்கே லாயக்கில்லை என்பதாகச் சொல்லி வீட்டுக்கு அனுப்பி விட்டார்களாம். அல்லது அனுப்பப் போகிறார்களாம். பார்ப்பனீயக் கொடுமைக்கு இதைவிட இன்னும் என்ன ருஜு வேண்டும்? இம்மாதிரி நூற்றுக்கணக்கான சம்பவங்கள் தினமும் நடைபெறுகின்றன. தவிர சென்னை முனிசிபல் கார்ப்பரேஷனில் ஒரு பார்ப்பனரல்லாதார் கமிஷனராயிருப்பதினால் அங்கு உள்ள பார்ப்பன கவுன்சிலர்கள் எவ்வளவு அக்கிரமமாகவும் அயோக்கியத்தனமாகவும் நடந்து கொள்ளுகிறார்கள் என்பது பத்திரிகை பார்ப்பவர்களுக்குத் தெரியாமல் இருக்காது. இதுவரை யாராவது ஒரு கவுன்சிலர் அவர் பேரில் நாணயக் குறைவு என்று சொல்லவே இல்லை. கார்ப்பரேஷனுக்கும் வருஷத்தில் 2, 3 லட்ச ரூபாயிக்கு மேலாகவே லாபம் செய்தும் வைத்திருக்கிறார். கார்ப்பரேஷன் உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவதை வெகுசாய் நிறுத்திவிட்டார். கவுன்சிலர்கள் கண்டிராக்டர்களிடம் லஞ்சம் வாங்குவதையும் நிறுத்தி குறைந்த விலைக்கு நல்ல சாமான்கள் கிடைக்கும் படியாகவும் டோல் முதலிய குத்தகைகள் முதலியவைகளில் உள்ள புரட்டுகளை நீக்கி அதிகத்தொகைக்கு அடைபடும்படியாகவும் செய்திருக்கிறார். இன்னமும் அவர் முனிசிபாலிட்டிக்கு செய்துள்ள சீர்திருத்தங்கள் சொல்லி முடியாது. அவ்வளவு நன்மைகள் செய்திருந்தும், அந்த ஸ்தானம் இரண்டாயிர ரூபாய் சம்பளமுள்ள தாயிருப்பதால் அவரை ௸ முனிசிபாலிட்டியை விட்டு விலக்கி அந்த ஸ்தானத்தில் ஒரு பார்ப்பனரைக் கொண்டுவந்து வைக்கப் பார்ப்பனர்கள் செய்யும் முயற்சி இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாததாயிருக்கிறது. மந்திரி பார்ப்பனர்களின் அடிமையாயிருப்பதால் அவர் மூலம் என்ன வேண்டுமானாலும் செய்யத் துணிந்து வெற்றி பெறுகிறார்கள். கமிஷனரும் மூட்டைக் கட்டித் தயாராய் வைத்துக் கொண்டே இருக்கிறார். மற்றபடி வெளி தாலூக்கா, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டிகளிலும் பார்ப்பனாதிக்கத்திற்கு அளவே இல்லை. மதுரை முனிசிபல் சேர்மெனுக்கு மதுரை கவுன்சிலர்களால் பாசான தொகை, கிரமப்படி சம்மதம் கொடுக்க விடாமல் அதை ஆக்ஷேபிக்கும்படி மந்திரியை பிடித்து உபத்திரவம் செய்து வருகிறார்கள். மந்திரியும் ஸ்திர புத்தி இல்லாமல் எழுதி எழுதி, அடித்து அடித்து உத்திரவு போட்டு வருகிறார். சேலம் ஜில்லா போர்டு தேர்தல் நடக்கும் தினத்தன்று அதை நடக்க விடாமல் செய்யக் கருதி மந்திரியைக் கொண்டு நிபந்தனைகள் காட்டி எலக்ஷனை தடை செய்தார்கள். போர்டு பிரசிடெண்டு நிபந்தனையின்படி எலெக்ஷன் நடத்திய பிறகு கூட அந்தத் தேர்தலை ஒப்புக் கொள்ளச் செய்யாமல் அதை நிராகரிக்கும்படி மந்திரி வீட்டில் போய் பார்ப்பனர்கள் உட்கார்ந்து கொண்டு அவர் கையைப் பிடித்து எழுதச் சொல்லுகிறார்கள். மற்றும் பல விஷயங்களில் ஹைகோர்ட்டு ஜட்ஜிகளை கலெக்டர்கள் முதலான பெரியவர்களிலும் சிலரை ஏமாற்றிப் பார்ப்பனரல்லாதாருக்கு என்னென்ன கெடுதிகளும் முட்டுக் கட்டையும் போட வேண்டுமோ அவ்வளவும் செய்து வருகிறார்கள். எப்படியாவது பார்ப்பனர்களின் மாய்கையில் சிக்க முடியாத யோக்கியதை நம்மில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பேருக்கு இல்லை என்றே சொல்லலாம். இந்த பலக் குறைவையே நமது பார்ப்பனர்கள் மிகுதியும் உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். இவைகளையெல்லாம் யோசிக்கும் போது சுயமரியாதை உள்ளவர்களுக்கு மேல் கண்ட சுத்தவீரனின்* உணர்ச்சிதான் தோன்றுமே அல்லாமல் வேறு ஒன்றும் தோன்றுவதற்கு இடமே இல்லை. ஆதலால் அவ்வீரனைப் பாராட்டி ஆங்காங்கு தீர்மானங்கள் செய்யவும் அவனது உருவப் படத்தை ஒவ்வொரு சங்கங்களிலும் வீட்டிலும் தொங்கவிடவும் மறுபடியும் வேண்டிக் கொள்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 17.04.1927**

*** உண்மையான சுத்தவீரன் " பார்ப்பனர் கீழ் வேலை செய்வதைக் காட்டிலும் சாவதே மேல்"**

செங்கல்பட்டு ஜில்லா பொன்னேரியில் காஞ்சீபுரம் ரிடயர்ட் சால்ட் சப்இன்ஸ்பெக்டருடைய குமாரரான பி. சுப்பரமணிய முதலியார் என்கிற 22- வயதுள்ள ஒரு வாலிபர் ஒரு பார்ப்பனருக்குக் கீழ் இருந்து வேலை



RangaRakes tamilnavarasam.com

செய்வதைப் பார்க்கிலும் செத்துப்போவதே மேல் என்பதாகக் கருதி தன்னுடைய நண்பர் ஒருவருக்கு கீழ்க்கண்ட விதமாக ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுப் பாஷாண சம்பந்தமான மருந்தைச் சாப்பிட்டு விட்டு, உயிர் துறந்தார். அக்கடிதமாவது;–

பொன்னேரி லோகல் பண்டு ஆஸ்பத்திரி,
7–4–27.

அன்புமிக்க மாணிக்கம்!

இந்தமாதம் 8– தேதி எனக்கு குறிப்பிடத்தக்க ஒரு அதிர்ஷ்டவசமான நாளாகும். அது என்னவென்றால் நான் இந்த உலகத்தையும், உன்னையும், எனது பந்துக்களையும் விட்டு சந்தோஷமாகவும், திருப்தியாகவும் பிரியும் நாளாகும்.

ஒரு பார்ப்பன எஜமானன் கீழ் இருந்து வேலை செய்ய இனி என்னால் முடியாது. பார்ப்பன எஜமானன் கீழ் வேலைசெய்து ஜீவிப்பதைக் காட்டிலும், செத்துப்போவது மேலானதெனவும், புத்திசாலித்தனமான தெனவும் நான் தெரிந்து கொண்டேன்.

என்னுடைய பார்ப்பன எஜமானனுடைய பெயர் உனக்கு தெரிந்தது தானே. அந்த சீனிவாசப்பிரபு என்பவர், என்னையும் மற்றும் உள்ள சிப்பந்திகளையும், பார்ப்பன ஆதிக்கத்திற்காக உழைக்கிற தேவநேச சாமி என்கிற ஒரு பார்ப்பனரின் இஷ்டப்படியும், அவர் சொல்லுகிறபடியும் நடத்துகிறவராயிருக்கிறார். இதுவரை டாக்டர் நாயர், சர். தியாகராய செட்டியார், எ. ராமசாமி முதலியார், சி. நடேச முதலியார் முதலியவர்கள் பார்ப்பனர் கொடுமைகளை அடியோடு துலைப்பதற்காக செய்து வரும் பிரயத்தனங்களைத் தப்பிதமென்று நினைத்திருந்தேன். ஆனால், இப்போது அத்தலைவர்கள் வார்த்தைகள் ஒவ்வொன்றும் சத்தியமானது என்பது என் விஷயத்தில் மிகவும் ருஜுவாகி விட்டது. பார்ப்பனர்களை வெறுப்பதாலாவது " பார்ப்பனர்களின் கீழ் வேலை செய்யக்கூடாது என்று நினைத்து என்வேலையை ராஜீனாமா செய்து விடுவதினாலாவது வேறு வழியில் இந்த நாட்டில் பிழைக்கமுடியாதவனாயிருக்கிறபடியால் ஒரு கோப்பை பாலில் ஒரு அவுன்சு சியானிக் ஆசிடைக் ( Hydro - Cyanic Acid ) கலந்து சாப்பிட்டு உயிரை மாய்த்துக்கொள்வதையே விரும்புகிறேன். ஆதலால் நான் ஒரு உண்மையான பார்ப்பனரல்லாத உணர்ச்சி உடையவனாகவும் எனது பார்ப்பனரல்லாதார் சகோதர சகோதரிகள் பார்ப்பனக் கொடுமையிலிருந்து நீங்குவதற்காக அப்பார்ப்பனக் கொடுமையை அழிக்க வேண்டியும், நான் பிராணனை விடுகிறேன். நான் செய்யும் இந்தக்காரியம் சரிதானே? இந்த விஷயத்தை மெயில் பத்திரிகையிலும் ஜஸ்டிஸ் பத்திரிகையிலும் பிரசுரிக்கச் செய்வதால்



RangaRakes

நமது சகோதரிகளையும் சகோதரர்களையும் பார்ப்பன சூழ்ச்சியில் சிக்கி ஏமாராமலிருப்பதற்காக இருந்து தப்புவிக்க உதவும் என நினைக்கிறேன். உன்னிடத்திலும் என் அன்பு நிறைந்த சிநேகதர் ஸ்ரீமான் சி.சி. மல்லி நாத் ஜெயின் இடத்திலும், எம்.எஸ்.எம். ரயில்வே பாக்காலா ஜில்லா இஞ்சினீர் ஆபிசு டைப் அடிப்பவரிடத்திலும் விடைபெற்றுக் கொள்ளுங்காலம் நெருங்கிவிட்டது. இதோடு நான் நல் விடைபெற்றுக்கொள்ளுகிறேன். இனி நீ பார்க்க முடியாததான என்னுடைய கடைசி கையெழுத்து இதுதான், என்னுடைய பிரேதத்தை பார்ப்பன தெருவுக்கு முன்னால் ஓடும் ஆரணி நதி மணலில் பார்க்கலாம்.

என்னுடைய சம்பள பாக்கியை நீ எனக்காக வாங்கி ஓட்டல்காரருக்கும் மற்றும் நான் கொடுக்கவேண்டிய கடன் காரருக்கும் கொடுத்து விடு

**( ஓம். ) பி. சுப்பிரமணியன்.**



tamilnavarasam.com

# பழய கருப்பனே கருப்பன்

சென்னையில் இருந்து டாக்டர் வரதராஜுலு நாயுடுவால் வெளியிடப் போகும் "தமிழ்நாடு" தினசரிப் பத்திரிகை வெளியாக வேண்டும், வெளியாக வேண்டும் என்று எதிர்பார்த்தவர்களில் யானும் ஒருவன். அதனால் நமது சமூகத்திற்கோ, நாட்டிற்கோ, பெருத்த அனுகூலம் ஒன்றும் ஏற்பட்டு விடாது என்ற முடிவு ஏற்கெனவே இருந்தாலும், சுதேசமித்திரனால் நாட்டுக்கும் நமது சமூகத்திற்கும் ஏற்படும் கெடுதியையாவது கொஞ்சம் குறைக்காதா என்று எதிர்பார்த்தோம். கடைசியாக வெளிவந்தது. வெகு ஆவலாய்ப் படித்துப் பார்த்தோம். பழய கருப்பனே கருப்பனல்லாமல் வேறு ஒரு சங்கதியையும் காணோம். மறுபடியும் பார்ப்பனர்கள் காலுக்குள் நுழையும் தந்திரங்களே நிறைந்திருப்பதும் சுதேசமித்திரன் காலில் விழுந்து அதை ஆதரித்து அதனால் தான் வாழப் பார்ப்பதும் அல்லாமல் வேறு ஒன்றையுங் கண்டு பிடிக்கமுடியவில்லை. அதோடு வழக்கம் போல் ஜஸ்டிஸ் கட்சியை வைவ தின் மூலம் பார்ப்பனர்களின் தயவைச் சம்பாதிப்பதில் கண்ணுங் கருத்துமாய் காணப்படுகிறது. உதாரணமாக இரண்டொரு விஷயங்களை மாத்திரம் எடுத்துக் காட்டுகிறோம். ஏனென்றால், கோயமுத்தூரில் நாயுடு கான்பரன் சிலிருந்து இந்த விஷயம் எழுதியதால் வரி வரியாய் எடுத்துக் கொண்டு விவகரிக்க எழுத நேரமில்லாமல் சுருக்கமாக எழுதுகிறோம்.

அதாவது, ஸ்ரீமான் நாயுடுகாருக்கு விளம்பரக்காரர்களால் தங்கக் கிண்ணம் இனாமாக அளிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட கூட்டத்தில் ஸ்ரீமான் நாயுடுகார் பேசியதாக "தமிழ்நாடு" பத்திரிகையில் எழுதி இருக்கும் விஷயத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:-

"சென்ற ஒரு வருஷ காலமாக நான் இருந்தவிடம் தெரியாமல் ஒதுங்கி இருக்கிறேன்."

"ராஜீய விஷயத்தில் எனக்கும் மற்ற தலைவர்களுக்கும் அபிப்பிராய பேதமிருந்ததால் நான் விலகி இருக்கிறேன்".

"ராஜீய விஷயத்தில் அபிப்பிராய பேதமிருந்தால்............. அபிப்பிராய பேத முள்ளவர்கள் சக்தி இல்லாவிட்டால் விலகி இருப்பதே நலம்".



"ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகள் எனக்குப் பிடிக்க வில்லை. ஆதலால் ஜஸ்டிஸ் கட்சியை நான் ஆதரிப்பதில்லை".

"திராவிடன் கொள்கைக்கும் எனது கொள்கைக்கும் அதிக வித்தியாச முண்டு".

"சுதேசமித்திரன் பத்திரிக்கைக்கும் எனக்கும் ராஜீய விஷயத்தில் யாதொரு அபிப்பிராய பேதங்களும், கொள்கையில் வித்தியாசங்களும் கிடையாது. ஆனால், அவர்கள் என்னுடைய செய்திகளை வெளியிடாது அமுக்கி விடுகிறார்கள்."

" ஹிந்து பத்திரிக்கை மாத்திரம் என்னுடைய செய்திகளைச் சரிவர பிரசுரித்தது. மற்ற பத்திரிகைகளை விட ஹிந்து பத்திரிகைதான் அக்காலத்தில் உண்மைப் பத்திரிகையாய் இருந்தது."

"தமிழ்நாடு ஆரம்பித்தது முதல்................................ ஜஸ்டிஸ் கட்சியோடு போர் புரிந்து வந்தது."

"சுதேசமித்திரன் பத்திரிக்கைக்கு போட்டியாக நான் தமிழ்நாடு பத்திரிகையை ஆரம்பிக்கவில்லை."

என்பதாக எழுதியிருக்கிறது. ஷை பிரசங்கத்தைப் பற்றி வரி வரியாக எடுத்துக் கொண்டு விவரிக்கலாமானாலும் அவசரத்தில் இரண்டை மாத்திரம் எடுத்தெழுதி விவரிக்கிறோம். தலையங்கத்தைப் பற்றியும் அதிலுள்ள நோக்கத்தைப் பற்றியும் பிறகு எழுதலாம். "சுதேசமித்திரன்" ராஜீய விஷய மும் அதன் கொள்கைகளும் என்ன என்பதைப் பற்றி இதுவரைத் "தமிழ் நாடு" பத்திரிகை என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தது ? அதுதானா இப் போது தமிழ்நாடு பத்திரிகையின் கொள்கை? அப்படியானால் "தமிழ்நாடு" தினசரி எதற்கு? நாட்டிற்கு ஒரு உபத்திரவம் போதாதா? அதே கொள்கை யைப் பார்ப்பனரல்லாத பத்திரிகையும் பிரசாரம் செய்ய வேண்டுமா? "சுதேசமித்திரன்" செய்யும் உபத்திரவத்திற்காவது ஜனங்கள் ஏமாறா திருக்கவும் கெடாமல் இருக்கவும் கொஞ்சம் காரணம் உண்டு. என்ன வென்றால், அது பார்ப்பனப் பத்திரிகை என்று சொல்லி விடலாம். அதே கெடுதியை பார்ப்பனரல்லாதார் பத்திரிகை என்று பேர் வைத்துக் கொண்டு "சுதேசமித்திரன்" கொள்கையை நடத்தி வந்தால் தேசத்திற்கும் சமூகத்திற்கும் எவ்வளவு கெடுதி ஏற்படும் என்பதை பொது ஜனங்கள் யோசித்துப் பார்க்கட்டும். டாக்டர் நாயுடுகாரு தன் சங்கதியைப் பிரசுரிக்காத காரணத்தால் மாத்திரம் சுதேசமித்திரன் நடவடிக்கை நாயுடுகாருக்குப் பிடிக்கவில்லை என்றால் என்ன அருத்தம்? இவர் நடவடிக்கையை விளம்பரப்படுத்திக் கொண்டு வந்துவிட்டால் "மித்திரன்" யோக்கியன் என்றுதானே கருதுகின்றார்.



RangaRakes tamilnavarasam.com

என்று ஏற்படுகிறதா? இல்லையா? ஆகவே "தமிழ்நாடு" பத்திரிகை நாயுடு காரின் விளம்பரத்திற்கு மாத்திரம் வேண்டி ஏற்பட்டு விட்டதே தவிர, புதிதாய் எந்தக் கொள்கையையும் பரப்ப அல்ல வென்பதும் விளங்கவில்லையா? இந்த ஒரு காரியத்திற்காக எத்தனை பேர் அந்த பத்திரிகை நடத்தப் பணம் கொடுப்பது? எத்தனை பேர் அதை பணம் கொடுத்து வாங்குவது? என்பதை யோசித்துப் பாருங்கள்.

தவிர, ஜஸ்டிஸ் கக்ஷியும், திராவிடன் பத்திரிகையும் இவருக்கு என்ன கெடுதி செய்தது?

ஜஸ்டிஸ் கக்ஷி கொள்கையை விட சுயராஜ்யக் கக்ஷி கொள்கையும், "நாயுடுகாரின் தேசீயக் கக்ஷி" கொள்கையும் என்ன விசேஷமானது

அநியாயமாய் நாயுடுகார் ஒருவரின் சவுகரியத்திற்காக ஒரு பெரிய சமூக முன்னேற்றக் கக்ஷியை பலிகொடுப்பானேன்? அல்லது நாயுடுகார் சொன்ன எந்தக் கொள்கையை ஜஸ்டிஸ் கக்ஷி ஏற்றுக் கொள்ள மறுத்தது? அனாவசியமாய் ஜஸ்டிஸ் கக்ஷியை வைவதால் பார்ப்பனர்கள் மதிப்பார்கள் என்கிற காரணத்திற்காக முன்பின் யோசிக்காமலும் பகுத்தறிவை உபயோகிக் காமலும் வைதுவிடுவது தானா தேசீய வீரர்கள் என்பவர்களின் கொள்கை?

சுதேசமித்திரனைப் பற்றியும், அதன் ராஜீய விஷயங்களைப் பற்றியும், அதன் இதர கொள்கைகளைப் பற்றியும், ஜஸ்டிஸ் கக்ஷியைப் பற்றியும், அதன் கொள்கைகளைப் பற்றியும், திட்டங்களைப் பற்றியும், டாக்டர் நாயுடுகாரு இதற்கு முன் பத்திரிகையிலும் பிரசங்கத்திலும் எழுதியும் சொல்லியும் வந்ததெல்லாம் உலகத்தை விட்டு மறைந்து விட்டதா? பார்ப்பன ரல்லாதார் கக்ஷியை வையாமல் அதற்குக் கெடுதி செய்யாமல் நாயுடுகாரு தனக்காக என்ன செய்து கொண்டாலும் எந்தப் பார்ப்பனப் பத்திரிகையைப் புகழ்ந்தாலும், எந்தப் பார்ப்பனர் இடம் மன்னிப்பு கேட்டாலும், எவனைக் கெஞ்சி, எவன் காலுக்குள் நுழைந்தாலும் நமக்கு அதைப்பற்றி கவலையே இல்லை. இதை பல தடவைகள் சொல்லியும், எழுதியும் இருக்கிறோம். ஆகையால் நாம் நமது கடமையைச் செய்யாமலிருக்க முடியவில்லை. இதை எழுதுவதற்கு நமக்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. நமது சொந்த கஷ்டத்திற்கு பயந்து கொண்டு சும்மா இருப்பது பயங்காளித்தனமாகுமென்று கருதியே இதை வருத்தத்துடன் எழுதுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 17.04.1927**



# எது பொய்ப் பிரசாரம் ?

## 19-4-27 தேதி "தமிழ்நாடு" தலையங்கத்திற்கு பதில்

"தமிழ்நாடு" தனது ஏப்ரல் மீ 19 உ பத்திரிக்கையில் "பொய் பிரசாரம்" என்பதாக பேரிட்டு ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. அதில் தமிழ்நாட்டைப் பற்றி "சுதேசமித்திரனும்" "குடி அரசும்" "தமிழ்நாடு" யோக்கியதைக் குறித்து எழுதிய குறிப்புகளுக்கு பதில் எழுதியதாக ஜனங்கள் நினைக்கும்படி என்ன என்னமோ உளறிக் கொட்டி இருக்கிறது. அவற்றுள் மித்திரனைப் பற்றி எழுதியிருப்பவைகளை நாம் கவனிக்க வேண்டியதில்லை. ஏனெனில் ஸ்ரீமான்கள் அய்யங்காரும், நாயுடுகாரும் நினைத்தால் சண்டை போட்டுக் கொள்வார்கள், நினைத்தால் ராஜியாகி விடுவார்கள். ஏனென்றால், மித்திரன் ராஜீய அபிப்பிராயத்திற்கும் கொள்கைக்கும் "தமிழ்நாடு" வுக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லை என்று "தமிழ்நாடு"வே எழுதியிருக் கிறபடியால் நாம் அதை கவனிக்க வேண்டியதில்லை. தவிர "தமிழ்நாடு" "குடிஅரசு"வைப் பற்றி எழுதியதை மாத்திரம் எடுத்து கொள்ளுவோம்.

உண்மையும் யோக்கியதையும் பெருமையும் உள்ள பத்திரிகை களாயிருந்தால் தன்னைப்பற்றி ஏதாவது ஒரு பத்திரிகை எழுதினால் அதுகளை எடுத்து சரியாய் போட்டு அதற்கு சமாதானம் சொல்ல வேண்டியது கிரமம். அப்படிக் கில்லாமல் வெறும் வீணான வார்த்தையை உபயோகித்து மக்களை ஏமாற்ற நினைப்பது மிகுதியும் இழி குணமென்றே சொல்லுவோம். "குடிஅரசா"னது "தமிழ்நாடு" முதல் இதழ் வெளியானதும் அதில் உள்ள வாசகங்களில் சிலதை எடுத்து எழுதி பிறகு அதை குற்றம் சொல்லி இருக்கிறதே அல்லாமல் திருட்டுத்தனமாகவோ யோக்கிய பொறுப்பில்லா மலோ ஒரு வரியும் எழுத வில்லை. அதற்குத் "தமிழ்நாடு" இப்பவும் என்ன சமாதானம் சொல்லுகிறது என்றுதான் கேட்கிறோம். "சுதேசமித்திரன்" ராஜீய அபிப்பிராயமும் "சுதேசமித்திரன்" கொள்கையும் ஸ்ரீ வரதராஜுலு நாயுடு ராஜீய அபிப்பிராயமும் கொள்கையும் ஒன்றாயிருக்குமானால் "தமிழ்நாடு" பத்திரிகை தேசாபிமானத்தை முன்னிட்டு நடத்தப்படுவதாக எப்படி கருதக் கூடும்? அதோடு பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திலும் தனக்கு கவலை இருப்பதாய் காட்டிக் கொள்வதை எப்படி நம்பக்கூடும் என்றுதான் கேட்கி



RangaRakes tamilnavarasam.com

றோம். சுதேசமித்திரனுடைய தேசாபிமானத்தைப் பற்றியும், பார்ப்பனரல்லா தார் விஷயத்தில் சுதேசமித்திரனுக்குள்ள கொள்கையைப் பற்றியும், ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு இதற்கு முன் சொன்னதும், எழுதினதும் இப்போது என்னவாயிற்று என்று கேட்டதற்கு மறுமொழி சொல்வதல்லவா யோக்கிய மான காரியமாகும்? அதை விட்டுவிட்டு ஸ்ரீமான் ராமசாமி நாயக்கரின் நோக்கத்தைப்பற்றி ஏதோ தெரிந்துவிட்ட மேதாவிபோல் பேசிவிட்டால் ஜனங்கள் ஒப்புக்கொள்வார்களாவென்று கேட்கிறோம்? மற்றவர்களுக்குள்ள தேசாபிமானமும், வகுப்பு அபிமானமும், ஸ்ரீ வரதராஜுலு நாயுடுவுக்கும், தமிழ்நாடு பத்திரிகைக்கும் இருப்பதாக வாயிலும் எழுத்திலும் காட்டினால் போதுமா? செய்கையில் கடுகளவாவது காட்ட வேண்டாமா? பாமர மக்களை வெரும் தேசீயப் பேச்சால் ஏமாற்ற வந்த பழய யோகத்தை மூட்டை கட்டி வைத்து விடும்படி வேண்டிக் கொள்ளுகிறோம். பெசண்டை எதிர்த்ததும் "குரு குல கிளர்ச்சியையும்" ஆயிரக்கணக்கான தடவை சொல்லிக் கொள்வ தால் நாட்டுக்கோ, சமூகத்திற்கோ காதறுந்த ஊசியளவு பயனும் விளையாது. பெசண்டம்மையை அய்யங்கார் பார்ப்பனர்கள் கவிழ்க்க சூட்சி செய்த காலத் தில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவையும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியையும் ஆயுதமாக உபயோகித்துக் கொண்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான்.

பார்ப்பனர்கள் இப்போது பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு அநுகூலமான ஆசாமிகளையும், இயக்கங்களையும் வைகிற ஆசாமிகளை எப்படி தலைவர்களாக்கி தூக்கி விடுகிறார்களோ அது போல அந்தக் காலத்தில் பெசண்டம்மையாரை வைத ஆசாமிகளையும் தலைவர்களாக்கி தூக்கிவிட்டுக் கொண்டு கூலி கொடுத்துதான் வந்தார்கள். அதுசமயம் எத்த னையோ பேர்கள் ஸ்ரீமான் நாயுடுவைப் போல் தாக்கி பயன் பெற்றிருக் கிறார்கள். குருகுல கிளர்ச்சியின் பெருமையும் யாரும் அறியாததல்ல. அக் கிளர்ச்சி எப்படி ஏற்பட்டதென்பது பற்றி இனியும் யாருக்காவது தெரிய வேண்டுமானால் 12. 7. 25 ந் தேதி "குடி அரசைப்" பார்த்தால் தெரியும். கடைசியாக அது என்ன வாயிற்று என்கிற இரகசியமும் அதில் கலந்திருந்த வர்களைக் கேட்டால் தெரியும். ஆகவே இந்த இரண்டின் பெருமையை எவ்வளவு நாளைக்கு எத்தனை தடவை எதெதற்குச் சமாதானமாக சொல்லிக் கொண்டு வாழ்வது என்பது நமக்கு விளங்கவில்லை.

**இப்பொழுதும் கேட்கிறோம் : சுயராஜ்யத்திற்கு ஸ்ரீ வரதராஜுலு நாயுடுவின் கொள்கை என்ன? திட்டம் என்ன? காரியத்தில் அமுல் என்ன? பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவின் கொள்கை என்ன? திட்டமென்ன? காரியத்தில் அமுல் என்ன? அவைகள் எந்த தேதி முதல் எந்த தேதி வரை அமுலுக்கு வரத்தக்கனது அல்லது வந்து கொண்டு இருந்தது என்று சொல்லட்டும் என்றுதான் கேட்கிறோம்.** மத சம்பந்தமான சில பாஷாண்டிகள் பக்தி



சம்மந்தமான சில பரிபாஷை சொற்களை சொல்லிக் கொண்டு காலங் கழிப்பது போல் ராஜீய சம்பந்தமான சில சொற்களை மாத்திரம் உபயோகப் படுத்தி வருவது மாத்திரம் தேசாபிமானம் சமூகாபிமானம் என்று இனியும் சொல்லி ஏமாற்றப் பார்த்தால் யார் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? அப்படி ஒரு மனிதன் பொறுத்துக் கொண்டு இருப்பதின் மூலம் தேசமும் சமூகமும் பாழ்படுவதை கண்ணால் பார்த்துக் கொண்டும் தனது சுய நன்மைக்காகவோ பிறர் தாட்சிண்ணியத்திற்காகவோ சும்மாவிருப்பதும் மனிதத் தன்மை அல்லவென்பதே நமது அபிப்பிராயம். அதனாலேயே தான் இவற்றை எழுதுகிறோமே தவிர வேறு காரணமில்லை என்பதை ஸ்ரீமான் பி. வரதராஜுலு நாயுடு நம்ப வேண்டும் என்று வேண்டுகிறோம். நம்பவில்லை யானால் நமக்கு அதைப்பற்றி கடுகளவு கவலையுமில்லை.

தவிர, "தம்மை தவிர வேறு யாருக்கும் பார்ப்பனரல்லாத இயக்கத் திலோ முன்னேற்றத்திலோ அக்கறை கிடையாது என்று ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் சொல்லுவதை நாம் லட்சியம் செய்யவில்லை. நாயக்கர் இம்மாதிரி பிரசாரம் செய்வார் என்று நாம் முன்னமே எதிர்பார்த்தோம். இதற்கு காரணம் வேறு இருக்கிறது." என்று எழுதுகிறார். அதிலிருந்து ஏதோ பூனைக்குட்டி வெளியாகப்போகிறது. அக்காரணத்தை வெகு ஆசையோடு வரவேற்கி றோம். இம்மாதிரி ஒரு முக்கியமான காரணத்தை மூடி வைத்திருப்பது போன்ற கெட்ட குணம் வேறு ஒன்றும் இல்லை என்றே சொல்லுவோம். ராமசாமி நாயக்கர் எப்பொழுது தன்னை தவிர வேறு யாருக்கும் பார்ப்பனரல் லாதார் இயக்கத்தில், முன்னேற்றத்தில் அக்கறை இல்லை என்று சொன்னார் என்பதை இனியாவது சொன்னாரானால் நன்மையாயிருக்கும். நாயக்கர் இம்மாதிரி பொய் பிரசாரம் செய்வார் என்று எத்தனை வருஷமாக அல்லது எத்தனை நிமிஷமாக ஸ்ரீமான் நாயுடுக்கு தெரியும் என்பதையும் உலகுக்குத் தெரிவிப்பாரா?

தவிர, "நியாய வழியில் இதற்கு எல்லாம் நாம் என்ன பதில் சொன் னாலும் பொய் பிரசாரங்கள் நிற்கப் போவதில்லை. நமது கொள்கையை மறுபடியும் தெரிவிக்கும் பொருட்டு இவைகளுக்கு பதில் எழுதலாமென்று இருக்கிறோம். இம்மாதிரி பொய் பிரசாரத்தின் நோக்கத்தை நண்பர்கள் அறிவார்கள். ஆதலால் இனிமேல் ஷை பத்திரிகை எது எழுதிய போதிலும் அவைகளை நாம் கவனிக்கப் போவதில்லை" என்று எழுதுகிறார். இதிலி ருந்து, பதில் எழுதுவதாகவும் எழுதாமல் இருக்கப் போகிறதாகவும் அர்த்தம் படும்படி சமயம் போல் நடந்துகொள்ள இடமிருக்கும்படி வைத்துக் கொண்டார். ஆனாலும் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கரை பதில் எழுதுவதற்குத் தகுதி இல்லாத மாதிரி அவ்வளவு சாதாரண மனிதர் என்பதாக ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு மதித்திருப்பாரானால் பார்ப்பனர்களைப் போல, வாயை மூடிக்கொண்டு தன் காரியத்தில் கண்ணாயிருக்கட்டும். பதில் சொல்லித் தீரவேண்டிய யோக்கியதை உடைய மனிதன் என்று நினைப்பாரானால்



RangaRakes tamilnavarasam.com

கண்டிப்பாய் பதில் சொல்லட்டும். இரண்டு மில்லாமல் சுவற்று மேல் பூனை வியாபாரம் மாத்திரம் இனிக் கூடாது என்று கண்டிப்பாய் சொல்லுவோம். ஏனெனில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்கும் ராமசாமி நாயக்கருக்கும் உள்ள "தகராறோ" "பொறாமையோ" "பொய்ப் பிரசாரமோ" மற்றும் எதுவோ அவரவர்கள் சொந்த காரியத்தைப் பொறுத்ததா? பொது காரியத்தைப் பொறுத்ததா? என்பது வெளிப்படையாகி விட்டால் பிறகு அதைப்பற்றி கவலை இல்லை. தேசத்தின் பெயராலும், சமூகத்தின் பெயராலும் என்று சொல்லிக் கொண்டு ஏற்படுகிற போது அதை அலட்சியமாய் மூடி வைத்து விடுவது தேசத்திற்கும், சமூகத்திற்குமே கேடு சூழ்வதல்லாமல் துரோகம் செய்ததுமாகும் என்று வற்புறுத்துகிறோம்."சுதேசமித்திரன் எழுதியதிலிருந்து அது பிராமணீயத்தை ஆதரிப்பதாகவே தெரிகிறது............ சுதேசமித்திரன் கொள்கை இதுவாயிருந்தால் மித்திரன் மாத்திரமல்ல அக்கொள்கையை ஆதரிக்கிற எல்லோரையும் நாம் எதிர்த்தே தீருவோம்" என்று எழுதி இருக்கிறது. இந்த எழுத்துகளில் ஒரு எழுத்திலாவது ஏதாவது யோக்கியப் பொறுப்பு இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறோம். சுதேசமித்திரன் எழுத்து, கொள்கை ஆகியவைகள் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்கு இன்றுதான் தெரிய வந்ததா? அதுவும் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு "சந்து வழியில் புகாமல் ராஜபாட்டையில் நடக்கட்டும்" என்று எழுதிய பிறகுதானா? இது எழுதாமல் வேறு மாதிரியாய் ஸ்ரீமான் நாயுடுவைப் புகழ்ந்து எழுதி யிருந்தால் இப்போது கண்டுபிடித்த கொள்கை என்னவாயிருக்கும் என்பதைப் பற்றி நாம் எழுத வேண்டுமா?

தவிர, "ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் அற்பத்தனமாக எழுதியுள்ள வார்த்தைகளைப் பற்றி நாம் ஒன்றும் கவனிக்கப் போவதில்லை" என்று எழுதியிருக்கிறார். அற்பத்தனத்தை கவனிக்காத – லட்சியம் செய்யாத பெருந் தன்மைக்காக யாவரும் சந்தோஷமடைய வேண்டியதுதான். ஆனால் அற்பத்தனத்தின் சத்தை எடுத்துக் கொண்டதாக ஒப்புக் கொண்டு அதற்கு சமாதானம் எழுதுகிறார்.

அதாவது, அந்த அற்பத்தனத்தின் சாராம்சம் என்னவென்றால் "ஜஸ்டிஸ் கட்சி ஒன்றுதான் பிராமணரல்லாதாருக்குப் பிரதிநிதியாய் விளங் குவது. அதன் கொள்கைகளையே பிராமணரல்லாதார் ஆதரிக்கிறார்கள். அதை தாக்குவது பிராமணரல்லாதாருக்கு கெடுதி செய்வதாகும்" என்று நாம் சொல்லுவதாக எழுதியிருக்கிறார்.

ஆகவே, இந்த சாராம்சத்தைக் கொண்ட வார்த்தைகள் அற்பத் தனமாய்ப் போய் விட்டதற்காக நாம் கொஞ்சமும் வெட்கப்படவில்லை, வெட்கப்படப் போவதுமில்லை. மற்றபடி அதன் கீழ் "ஜஸ்டிஸ் கட்சி ஒன்று தான் பிராமணரல்லாதாருக்கு பிரதிநிதி என்று சொல்லுவதை நாம் ஒரு நாளும் ஒப்புக்கொண்டது இல்லை, ஒப்புக் கொள்ளப் போவதுமில்லை .............



அதனுடைய ராஜீயக் கொள்கைகளை எப்பொழுதும் கண்டித்து வந்திருப்பது போலவே நாம் இப்பொழுதும் கண்டிக்கிறோம்" என்று எழுதி இருக்கிறார். ஸ்ரீ வரதராஜுலு நாயுடுவுக்குப் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காக வேறு என்ன கட்சி இருக்கிறது? எந்த கட்சியின் மூலம் இவர் என்ன செய்திருக்கிறார்? "ஜஸ்டிஸ்" கட்சி ஏற்பட்ட காலம் முதற் கொண்டே அதை ஒழிக்க பார்ப்பனர் செய்த சூழ்ச்சியில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவும் கலந்து சென்னை மாகாண சங்கம் ஆரம்பித்தாரே அது என்னவாயிற்று? அந்தக் கொள்கைகள் இப்போது எங்கே போய் விட்டது?

அன்றியும், "ஜஸ்டிஸ்" கட்சியில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்குப் பிடிக்காத கொள்கை அல்லது திட்டம் என்ன இருக்கிறது?

"பார்ப்பனரல்லாதார் நன்மையை உத்தேசித்து நான் ஜஸ்டிஸ் கட்சியில் சேருவேன்" என்று ஒரு காலத்தில் சொன்னாரே அப்பொழுது பார்ப்பன ரல்லாதார் நன்மைக்கு வேறு கட்சிகள் இருப்பதாய் இவர் ஒப்புக் கொண்டிருப் பாரானால், ஏன் அதன் பெயர்களைச் சொல்லி அதில் சேருவதாகச் சொல்லி இருக்கக் கூடாது? சொல்லா விட்டாலும் பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் அக்கறை இருந்தால் ஏன் அவைகளில் எதிலாவது சேர்ந்திருக்கக் கூடாது?

இவ்வளவும் இல்லாமல் வேறு ஒருவர் செய்வதையும் தடுக்கும் படியான சூழ்ச்சியிலும் கலந்து இருந்து விட்டு தன்னாலான கெடுதிகள் எல்லாம் செய்து பார்த்தும் ஒன்றுக்கும் சளைக்காமல் "ஜஸ்டிஸ்" கட்சி செல்வாக்காயிருக்கும் போது மேற்கண்டபடி அதில் சேருவதாகவும் சொல்லி "ஜஸ்டிஸ்" கட்சியார் யாரும் இவரை நம்பி கூப்பிடாமலும், சேர்க்காமலும் இருப்பதற்காக அதை வைது கொண்டிருப்பதென்றால் யார் பொறுத்துக் கொள்ளுவார்கள்? தவிரவும் "ஜஸ்டிஸ் கட்சியின் ராஜீயக் கொள்கை பிடிக்கா ததால் கண்டிக்கிறோம்" என்று எழுதுகிறார். ஜஸ்டிஸ் கட்சியின் ராஜீயக் கொள்கை என்ன என்பதை இவரால் சொல்ல முடியுமா? ராஜீயக் கொள்கை தவிர மற்றதையாவது ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு ஆதரித்திருக்கிறாரா? ஆதரிக்கிறாரா? ஆதரிக்கப் போகிறாரா? பார்ப்பனர்கள் வைதால் ஜஸ்டிஸ் கட்சியில் சேருவேன் என்று மிரட்டுவதும், "ஜஸ்டிஸ்" கட்சியார் வைதால் சுயராஜ்யக் கட்சிதான் தேசத்தில் யோக்கியமான கட்சி என்று சொல்லுவதும், இரண்டு பேரும் சட்டை செய்யாவிட்டால் இரண்டும் உபயோகமில்லை, தேசீயக் கட்சி ஸ்தாபிக்கப் போகிறேன் என்பதும், மறுபடியும் "கொஞ்ச நாளையிலேயே கொள்கைகளை வைதேனே யொழிய ஆசாமிகளை வைய வில்லை" என்பதும், மறுபடியும் கொஞ்ச நாளையிலேயே "ஆசாமிகளை வைகிறேனே ஒழிய கொள்கைகளைப் பற்றி குற்றம் சொல்லவில்லை" என்பதும், " ஏதோ ஒரு சமயம் அப்படி வைது இருந்தாலும் இப்பொழுது அவற்றை எல்லாம் மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்பதும் ஆகிய மாதிரியில் இருக்கிறதே அல்லாமல் 10 நாளைக்கு சேர்ந்தாப்போல்



RangaRakes tamilnavarasam.com

ஒரு குறிப்பிட்ட கொள்கையோ, அபிப்பிராயமோ, திட்டமோ, அமுலோ ஏதாவது தன்னிடம் இருப்பதாய்த் தைரியமாய் சொல்லக் கூடுமா? "தமிழ் நாடு" தினசரி முதல் இதழுக்கும், பின் வந்த 4, 5 இதழ்களுக்கும் உள்ள வித்தியாசங்களைப் படித்தாலே இந்த விபரங்கள் யாருக்கும் புலப்பட்டு விடும். தவிர,

"ஸ்ரீமான் ராமசாமி நாயக்கரே தமது "குடி அரசி"ல் மற்றொரு பக்கத்தில் ஜஸ்டிஸ் கட்சியார் ராஜீயத் திட்டங்களை விட்டு விட வேண்டும் என்றும் சமூகத் திட்டங்களை மாத்திரம் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், அப்படியானால் மாத்திரம் எல்லாப் பார்ப்பனரல்லாதாரும் ஜஸ்டிஸ் கட்சியில் வந்து சேர முடியும் என்றும் எழுதியிருக்கிறார். இது ஒன்றே அவர் நம்மை பற்றி எழுதினது தவறு என்பதை ரூபிக்கப் போதுமானது" என்று ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு எழுதி இருக்கிறார்.

"குடி அரசு" எங்கு இப்படி எழுதியிருக்கிறது என்பதை தயவு செய்து காட்டும்படி கேட்கிறோம். நாம் எழுதி இருப்பதை தப்பர்த்தம் படும்படியாய் திரித்துக்கூறுகிறார் என்றே சொல்லுவோம். நாம் எழுதி இருப்பது என்ன வென்றால் "ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரசில் சேருவதானால் தேர்தல்களின் போது சங்கடமேற்படும். ஏனெனில் தேர்தலை உத்தேசித்துத்தான் காங்கிரசில் சேர வேண்டுமே ஒழிய வேறில்லை. அப்படி சேர்ந்த பிறகு காங்கிரசும் ஜஸ்டிஸ் கட்சியும் அபேக்ஷகர்களை நிறுத்தினால் காங்கிரசில் சேர்ந்த பார்ப்பனரல்லாதாருக்கு ஓட்டு செய்யும் விஷயத்தில் கஷ்டம் ஏற்படும், கட்சி ஏற்படும்" என்பதையே முக்கியமாய் காட்டி தேர்தலுக்கு ஆசைப்படுகிறவர் களுக்கு ஏதாவது ஒரு ஸ்தாபனமிருக்கட்டும், ஜஸ்டிஸ் கட்சியை அரசாங்க உத்தியோகஸ்தர்களும் வந்து சேரும்படி சமூக இயக்கமாக்கி விடுங்கள் என்று சொன்னோமே அல்லாமல் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்காவது வேறு அரசியல்காரருக்காவது பிடிக்காத அரசியல் திட்டம் ஜஸ்டிஸ் கட்சியில் இருக்கிறது அதை எடுத்து விடுங்கள் என்று நாம் சொல்லவேயில்லை. "குடி அரசில்" "இரண்டொருவர் தவிர மற்றவர்கள் வந்து சேருவார்கள்" என்று எழுதியதில் கூட அந்த இரண்டொருவரில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு வையும் ஒருவராக கருதிதான் எழுதினோம். ஏனெனில் ஜஸ்டிஸ் கட்சியை வைதா லொழிய தனக்கு வேறு மார்க்கமில்லாத மாதிரியில் கொள்கைகளை வைத்துக் கொள்ள வேண்டியவராகி விட்டார் என்பதை உணர்ந்து தான். ஆதலால் குடி அரசு எழுதியதை ஸ்ரீமான் நாயுடு உபயோகித்து கொண்ட மாதிரி சரியா என்பது யாவருக்கும் விளங்காமல் போகாது.

தவிர,"ஜஸ்டிஸ் கட்சி ராஜீயத் திட்டத்தை விட்டு விட்டால் சமூக வேலை சம்பந்தப்பட்ட வரை எல்லா பார்ப்பனரல்லாதாரும் அதில் சேருவார் கள் என்பதில் சந்தேகமில்லை" என்று எழுதுகிறார். மற்றவர்கள் சேருகிறார் களா சேர்ந்திருக்கிறார்களா என்கிற விஷயம் பிறகு பேசலாம். ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு சேருவதற்கு ஆக்ஷேபணை இல்லையா என்று கேட் கிறோம்.



அப்படியானால் காஞ்சிபுரம் மகாநாட்டின் போது கூட்டப்பட்ட கூட் டத்தில் ஏன் இவர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு நல்ல பிள்ளையாக, ஸ்ரீமான் முதலியாருடன் ஏன் போட்டி போட்டார் என்று கேட்கிறோம். காங் கிரஸ் ராஜீய அபிப்பிராயத்தோடுதானே. அங்கு பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு என்று சில தீர்மானங்கள் வந்தது. அதில் உள்ள ராஜீய அபிப்பிராயம் இவருக்கு ஆக்ஷேபணை இல்லையே. சமூக அபிப்பிராயந் தானே வித்தியாசமாயிருந்தது என்று சொல்லக்கூடும். அதாவது வகுப்புவாரி உரிமை. அது போலவே ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள ராஜீய அபிப்பிராயம் எடுத்துவிட்டால் அதில் மீதி என்ன இருக்கும். வகுப்புவாரி உரிமைதானே இருக்கும். வகுப்புவாரி உரிமையைப் பற்றியோ வென்றால் ஸ்ரீமான் வரதரா ஜுலு நாயுடு தினம் ஒரு அபிப்பிராயம் தானே சொல்லி வருகிறார். அப்படி இருக்கும் போது இவர் சேர்ந்து ஒரே கொள்கையாயிருப்பார் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது? அதுதான் போகட்டும், மதுரையில் நடந்த பார்ப்பனரல்லாதார் மகாநாட்டின் போது எல்லா பார்ப்பனரல்லாதாரையும் அவர்கள், அதாவது பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் அக்கறை உள்ளவர்கள் ஒவ்வொருவரும் வந்து தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லும்படி கேட்டுக் கொண்டார்களே அப்பொழுது ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு என்ன அபிப்பிராயம் கொடுத்தார் அல்லது தான் வராததிற்கு என்ன காரணம் சொன்னார் என்றுதான் கேட்கிறோம். தனக்கு ஏதாவது ஒரு அபிப்பிராயம் இருந்திருக்குமானால் சொல்லி இருக்கலாமா இல்லையா? பின்னும் அந்த மகாநாடு நன்றாய் நடைபெறாதிருக்கவும் சில பார்ப்பனரல்லாதாரையாவது மகாநாட்டுக்குப் போகாமல் இருக்கும்படி தடுக்கவும் பிரயத்தனப்பட்டு அதே தேதியில் தானும் ஒரு மகாநாடு கூட்டுவதாய் வெளிப்படுத்தினாரே ஒழிய அப்படியாவது கூட்டி ஏதாவது ஒரு ஏற்பாடு செய்தாரா என்று கேட்கிறோம். தவிர முடிவாக ஒரு வார்த்தை என்று, "பிராமணீயத்தை ஒழித்து சமத்துவத் தையும் அடிமைத் தனத்தையும் ஒழித்து சுயராஜ்யத்தையும் ஸ்தாபிப்பதில் யார் குறுக்கே நின்றாலும் தான் பயப்படப் போவதில்லை" என்று எழுதுகிறார். இந்த இரண்டும் வாயில் சொல்லிக் கொண்டிருப்பதை விட காரியத்தில் செய்ய இவருடைய கொள்கை என்ன? திட்டம் என்ன? அமுல் என்ன? என்று மறுபடியும் கேட்கிறோம். வெறும் பரிபாஷையால் எத்தனை நாளைக்கு ஏமாற்றுவது என்றும் கேட்கிறோம். அந்தப்படி யாருக்கும் பயப்படாத வீரர் ஏன் சென்ற ஒன்று இரண்டு வருஷமாக தலை காட்டாமல் இருந்தேன் என்று சொல்லிக் கொள்ள வேண்டும். கடைசியாய்,

"சத்தியம் வெல்லுமா பொய் பிரசாரம் வெல்லுமா என்பதை ஒரு கை பார்க்கப் போகிறதாக" எழுதி இருக்கிறார்.



RangaRakes tamilnavarasam.com

இதை மாத்திரம் நாம் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு அதன் முடிவையும் எதிர்பார்க்கிறோம். ஏனெனில் சத்தியம் இன்னது பொய் பிரசாரம் இன்னது என்பதை அறிய முடியாத ஜனங்கள் இனி நமது நாட்டில் அதிகமாக இல்லை என்கிற தைரியத்தினாலும் ஏற்கனவே ஜனங்கள் ஏறக் குறைய எது பொய், எது புரட்டு, எது சத்தியம் என்பதை அறிந்துவிட்டார்கள் என்கிற நம்பிக்கையாலும்தான் நாம் அந்த வார்த்தைகளை மாத்திரம் ஒப்புக்கொண்டு வெகு ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 24.04.1927**



## ஒரு சிறு குறிப்பு

சென்னையில் உள்ள முக்கிய வைத்தியர்களில் அனுபவம் பெற்ற இரண்டு கனவான்கள் நமது உடல் நிலையைப் பற்றி கவனித்து சரீரத்தில் ரத்த ஓட்ட வேகம் ( Blood Pressure) அதிகமாயிருப்பதாகவும், சுமார் 150 டிக்கிரி பிரஷர் இருக்க வேண்டியது 200 டிக்கிரி போல் இருப்பதாகவும், இது போலவே கூடுதலாகிக் கொண்டு வருமாகில் ரத்தக் குழாய்கள் வெடித்து ரத்த ஓட்டம் நின்று கால் கை அல்லது மூளை முதலியதுகள் ஸ்தம்பித்துப் போகுமென்றும் அபிப்பிராயம் சொல்லி, அதற்கு சிகிச்சையாக குறைந்தது இரண்டு தடவை மூன்று மூன்று நாள்கள் முழுப்பட்டினி இருக்க வேண்டும் என்றும், இராத்திரி சாப்பாட்டை குறைத்துவிட வேண்டுமென்றும், மாமிச ஆகாரத்தை அறவே நீக்கி விட வேண்டும் என்றும், கண்டிப்பான சிகிச்சை சொல்லி இருக்கிறார்கள். ஸ்ரீலஸ்ரீ கைவல்ய சுவாமிகளுமிதற்கு முன்பே இதே அபிப்பிராயத்தை இரண்டு மூன்று தடவைகளில் சொல்லி இருக்கிறார். அன்றியும் நமக்கு சரீரத்தில் முன்னை விட எடை அதிகமாயிருந்தாலும், அதிகமான பலக்குறைவும் மூச்சு வாங்குதலும் அரை மணி நேரம் சேர்ந்தாப் போல எழுத முடியாதபடி அடிக்கடி சோம்பலும் கை வலியும் பேசப் பேச மறதியும் முதலிய குணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வைத்தியரிடம் பட்டினி இருப்பதாய் ஒப்புக் கொண்டு வந்திருந்தாலும், தற்சமயம் ஏற்பட்டிருக்கும் இரண்டொரு சம்பவங்களை முன்னிட்டு கொஞ்ச நாளைக்கு பட்டினி விரதமெடுத்துக் கொள்ள சௌகரியமில்லாமலிருப்பதால் வைத்தியருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத நிலைமையிலிருக்கிறோம். ஆனாலும், ஆகார விஷயத்தில் வைத்தியர் கட்டளைப்படி நடக்க முடிவு செய்து கொண்டிருப்பதால் மாமிச ஆகாரம் சாப்பிடுவதை நிறுத்தியிருக் கிறோம். ஆகையால் வெளிகளில் நம்மைக் கூப்பிடும் கனவான்கள் தயவு செய்து இந்த விஷயங்களை மாத்திரம் கவனித்துக்கொள்ள வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

**குடி அரசு - வேண்டுகோள் - 24.04.1927**



RangaRakes tamilnavarasam.com

# வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

இந்தியாவில் தற்காலமிருக்கும் பல்வேறு மதங்கள், பல்வேறு ஜாதிகள் முதலியவைகளை உத்தேசித்து ஒருவருக்கொருவர் நம்பிக்கை உண்டாக்கவும் ஒற்றுமை உண்டாக்கவும் என்பதாகக் கருதி சென்ற சீர்திருத்தத்தின் போது தகுந்தபடி விசாரணை செய்து சில வகுப்புகளுக்கு பிரதிநிதித்துவ ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்தும் சில வகுப்பார்களுக்கே தனித்தொகுதிகள் மூலம் பிரதிநிதித்துவங்கள் ஏற்படுத்தியும் வைத்திருப்பது யாவரும் அறிந்த விஷயமே. இதிலிருந்து சமீபத்தில் வரப்போகும் சீர்திருத்த விசாரணைக் கமிஷன் போது முன்பு பொது தொகுதியில் ஒதுக்கி வைத்த வகுப்பாரும் இனித் தங்களுக்குத் தனித் தொகுதி மூலம் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சியைப் பார்த்து சிறு தொகையினரான நம் நாட்டுப் பார்ப்பனர்கள் இம்முறை அமுலுக்கு வந்து விட்டால் தாங்கள் இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிற ஏகபோக மிராசு போய் விடுமென்றும், தங்கள் சமூகத்துக்குத் தகுந்தபடி வீதாச்சாரம் கிடைப்பதாயிருந்தால் இப்பொழுது கிடைத்துக் கொண்டிருப்பதில் 10ல் ஒரு பாகங்கூட கிடைக்காமல் போய் விடுமே என்று பயந்து இக்கிளர்ச்சியை யொழிக்க பல வழிகளிலும் சூழ்ச்சி செய்து வருவது யாவரும் அறிந்த விஷயமே. இச்சூழ்ச்சிகளில் தலைமையான சூழ்ச்சியாக சில மகமதிய சகோதரர்களைப் பிடித்து தங்கள் சமூகத்துக்கு இனி தனித் தொகுதி வேண்டாமென்று சொன்னதாக ஏற்பாடு செய்து ஒரு பெரிய விளம்பரம் செய்து விட்டார்கள். இப்பொழுது அது "பிடிக்கப் பிடிக்க நமச்சிவாயம்" போல் வந்து முடிந்து விட்டது, அதாவது இந்து மகா சபையின் நடவடிக்கைகளிலிருந்தும், மகமதிய சமூகத்தார்களின் பிரமுகர்களிடமிருந்தும் தனித் தொகுதியே நிலைத்திருக்க வேண்டும் என்கிற மாதிரியாகவே விஷயங்கள் வெளியாகிக் கொண்டு வருகின்றன. இதிலிருந்து தென்னாட்டுப் பார்ப்பனர்களின் சூழ்ச்சி பலிக்கவில்லை என்றே தெரிகிறது.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 24.04.1927**



# தொழிலாளர்

சென்னைப் பார்ப்பனத் "தலைவர்கள்" தாங்கள்தான் தொழிலாளர்கள் விஷயத்தில் அதிக அக்கரையுள்ளவர்கள் என்றும், தொழிலாளர்களுக்கு வேண்டிய சகல சவுகரியங்களும் தங்களால்தான் செய்யக் கூடுமென்றும், தொழிலாளர்களுக்கு வேண்டிய பிரதிநிதித்துவங்களெல்லாம் தங்களால்தான் வாங்கிக் கொடுக்கக்கூடும் என்றும், சொல்லி இது காலபரியந்தம், தொழிலாளர்களை ஏமாற்றி அவர்களுடைய ஓட்டுக்களைப் பெற்று பதவி பெற்று வந்தது யாவருக்கும் தெரிந்த விஷயமே. சென்ற வருஷத்திய முனிசிபல் தேர்தல்களிலும், சட்டசபை தேர்தல்களிலும், அதற்கு முன் நடந்த தேர்தல்களிலும் இப்பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளை அறியாமல் ஏமாந்து, தொழிலாளர்கள் தங்களுடைய ஓட்டுக்களை எல்லாம் பார்ப்பன அபேட்சகர்களுக்கே கொடுத்து பார்ப்பனரல்லாதாரை தோற்கடிக்க செய்ததும் யாவருக்கும் தெரிந்த விஷயமே. இப்படி இருக்க, இப்போது ஷை தொழிலாள சகோதரர்களில் தங்களுக்கு தாங்களே பிரதிநிதியாய் இருக்கலாம் என்பதாக கருதி, வரப்போகும் சென்னை முனிசிபல் தேர்தலுக்கு தங்கள் சகோதரர்களிலேயே இரண்டொருவரை அபேட்சர்களாய் நிறுத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். இதை அறிந்த ஷை பார்ப்பனர்கள் தொழிலாளர்களை ஏமாற்ற புதிதாய் ஒரு வழி கண்டு பிடித்து இருக்கிறார்கள். அது என்னவென்றால் தொழிலாளர்களுக்கு பிரதி நிதித்துவம் வேண்டும் என்றால் அவர்கள் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியில் சேரவேண்டுமாம். இல்லாவிட்டால் அவர்கள் நிற்கக் கூடாதாம். இது எவ்வளவு வஞ்சகமானதென்பதை வாசகர்களே யோசிக்க வேண்டும். என்னவெனில், காங்கிரஸிலோ சுயராஜ்யக் கட்சியிலோ, தொழிலாளர்கள் சேருவதானால் தொழிலாளிகளின் முதலாளிமார்கள் அவர்களை எப்படி யாவது கெடுத்துவிடக் கூடும். அதனால் தொழிலாளிகள் காங்கிரஸில் சேர முடியாமல் போய் விடலாம். இந்த சாக்கை வைத்துக் கொண்டு தொழிலாளிகளை சுலபமாக தள்ளிவிடலாம் என்பதுதான். தொழிலாளிகளுடைய ஓட்டுபெறும் போது மாத்திரம் யாரையாவது பிடித்து அவர்களை ஏமாற்றி அவர்களுடைய ஓட்டுக்களை பெற்றுவிடலாம் என்கிற தந்திரத்தின் பேரில்தான் பார்ப்பனர்களின் "தொழிலாளர் அனுதாபம்" நிற்கிறது. நமது தொழிலாள நண்பர்களோ இந்த சூழ்ச்சிகளை அறியாமல் "எடுப்பார் கை குழந்தை"களாய் இருக்கிறார்கள். இவைகளை எல்லாவற்றையும் அறிந்தே



RangaRakes tamilnavarasam.com

தான் நாம் தொழிலாளிகள் அரசியல் சம்மந்தமான எந்த கட்சியிலும் சேரக் கூடாது என்றும், அவர்கள் தங்கள் கால்களிலேயே நிற்கக் கூடிய சக்தியை பெறவேண்டும் என்றும், அது கொஞ்ச காலம் தாமதமானாலும் குற்றமில்லை என்றும், பேசியும் எழுதியும் வந்தோம், நாம் இப்படி பேசி எழுதி வந்ததைப் பற்றி பல "தொழிலாளர்கள் தலைவர்களுக்கும்" நம் மீது மனஸ்தாபம் ஏற்பட்டதும் நமக்குத் தெரியும். ஈரோட்டில் கூடிய தொழிலாளர் மகாநாட்டு உபசரணை தலைவர் முறையிலும் இதையே சொன்னோம். "மித்திரன்" அதைப்பற்றி மிகுதியும் கோபம் கொண்டது. ஆனபோதிலும் இன்னமும் நாம் அதே கொள்கையுடன்தான் இருக்கிறோம். இப்போது சென்னை காங்கிரஸ் கமிட்டியில் முனிசிபல் தேர்தலுக்கு அபேட்சகர்கள் நிறுத்தும் விஷயத்தில் ஸ்ரீமான்கள் சிங்காரவேலு செட்டியாருக்கும், சத்தியமூர்த்தி, ரெங்கசாமி அய்யங்கார், சீனிவாச அய்யங் கார் முதலியவர்களுக்கும் நடந்த சம்பா ஷணை, அடிதடி சண்டை முதலிய வைகள் நடந்து இருப்பதையும் தொழி லாளர் கூட்டத்தில் ஸ்ரீமான்கள் சிவ ராவு, கல்யாணசுந்தர முதலியார் முதலிய வர்கள் பேசிய பேச்சுகளில் இருந்தும் பார்ப்பன தந்திரங்கள் நன்றாய் விளங்கு கின்றன. இனியாவது நமது தொழிலாள சகோதரர்கள் இவ்வரசியல் புரட்டு களின் மாய்கையில் இருந்து விலகுவார்களா? என்பதுதான் நமது கோரிக்கை. அப்படி அவர்கள் விலகி தனிப்பட்ட ஓதாவில் தொழிலாளி என்கிற முறையில் தேர்தலுக்கு நிற்பார் களானால் நாமும் நம்மால் ஆனதை செய்ய தயாராய் இருக்கிறோம் என்றும், எந்த கட்சி எதிர்த்தாலும் அதை ஒரு கை பார்த்து விடலாம் என்றும், நமது தொழிலாளர் சகோதரர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 24.04.1927**



# ஜில்லா போர்டு பிரசிடெண்டு தேர்தல்கள்

## வகுப்பு துவேஷம் ஒழித்ததற்கு இது ஒரு சாக்ஷி

தமிழ் நாட்டிலுள்ள பதினொரு ஜில்லாக்களின் ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஸ்தானங்களில் இது சமயம் திருச்சி நீங்கலாக (அங்கு மாத்திரம் பார்ப்பன பிரசிடெண்டு) மற்ற 10 ஜில்லாக்களில் பார்ப்பனரல்லாத பிரசிடெண் டுகளே இருந்து வருகிறார்கள். அதாவது ஸ்ரீமான்கள் செங்கல்பட்டுக்கு M.K.ரெட்டியும், தென்னாற்காட்டுக்கு சீத்தாராம ரெட்டியும், வடஆற்காட்டுக்கு கிருஷ்ணசாமி நாயுடுவும், சித்தூருக்கு முனிசாமி நாயுடுவும், சேலத்திற்கு எல்லப்ப செட்டியாரும், கோயமுத்தூருக்கு ரத்தினசபாபதி முதலியாரும், தஞ்சைக்கு பன்னீர்செல்வமும், மதுரைக்கு போக்ஸ் துரையும், இராமநாத புரத்திற்கு இராமநாதபுர ராஜாவும், திருநெல்வேலிக்கு குமாரசாமி ரெட்டி யாருமாக இருக்கிறார்கள். இது ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டதால் இம்மாதிரி பார்ப்பனரல்லாத கனவான்கள் வரமுடிந்தது என்பதும், அதனாலேயே பார்ப்பனர்கள் நமது ஜஸ்டிஸ் கட்சியையும் அதன் தலைவரான பனக்கால் ராஜாவையும் வெட்டிப் புதைக்க வேண்டு மென்று சொல்லுவதும், இப்பொழுது ஏற்பட்ட அரைப் பார்ப்பனரான சுப்பராய மந்திரிசபையின் மூலம் இதை மாற்றி இத்தனை ஜில்லா போர்டுகளையும் பார்ப்பன மயமாக வும், பார்ப்பன அக்கிரகாரமாகவும், பார்ப்பன அன்ன சத்திரமாகவும்,பார்ப்பன வேத பாட சாலையாகவும் ஆக்கிக் கொள்ள பார்ப்பனர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து "பகீரத பிரயதனப்" படுகிறார்கள் என்பதும் யாவரும் அறிந் ததே. இது காரணமாகவே நமது அரைப் பார்ப்பன மந்திரி ஒரு ஜில்லா போர்டு பிரசிடெண்டுக்காவது அவர்கள் மறுபடியும் தேர்தலுக்கு நிற்பதற்கு லாயக்கில்லாமல் படிக்கு மெம்பர் ஸ்தானமே நாமினேசன் செய்யாமல் ஒரே அடியாய் அடித்து விட்டார். ஆன போதிலும் ஏதோ ஒரு சட்டப்படி ஏற்பட் டிருந்த சட்ட சம்மந்தமான ஆதாரத்தைக் கொண்டு செங்கற்பட்டு, தென்னாற் காடு, சேலம், தஞ்சை, திருநெல்வேலி முதலிய ஜில்லா போர்டு பிரசிடெண் டுகள் மறுபடியும் நின்று ஏகமனதாகவும், 4-ல் 3 பங்கு பேர்களாலும், 3-ல் 2 பங்கு பேர்களாலும், அதிக மெஜாரிட்டியாய் தெரிந்தெடுக்கப்பட்டு விட்டார் கள். ஆனாலும் பார்ப்பனர் கள் சும்மாவிராமல் நீதி இலாக்காவில் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கு ஆணவத்தால் இத்தனை தேர்தல்கள் பேரிலும்



RangaRakes
tamilnavarasam.com

அந்தந்த ஜில்லா கோர்ட்டு களில் தேர்தல்களை ரத்து செய்ய வேண்டுமென்று வியாஜ்ஜியம் தொடுத் திருக்கிறார்கள். இவ்வியாஜியங்களில் முக்கியமான வியாஜ்ஜியமாகிய தஞ்சா வூர் ஸ்ரீமான் பன்னீர்செல்வம் தேர்தலைக் குறித்த தானதும் காங்கிரஸ் தலைவர், சுயராஜ்யக் கட்சித் தலைவர், பார்ப்பனத் தலைவர், மாஜி அட்வ கேட் ஜெனரல், "அவதார புருஷர்", "ஜஸ்டிஸ் கட்சியை வெட்டி புதைத்தவர்", "வகுப்புத் துவேஷத்தை ஒரேயடியாய் துலைத்தவர்" ஆகிய பெருமைகள் பெற்ற ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் அவர்களே வக்கீலாக வாதித்ததுமான வியாஜ்ஜியத்தை வெள்ளிக்கிழமை மாலையில் செலவுத் தொகையுடன் தள்ளி எலக்ஷனை உறுதிபடுத்தி இருப்பதாக தந்தி வந்திருக்கிறது. ஆனால் ஸ்ரீமான் பன்னீர் செல்வத்தின் வக்கீலோ "மூளை இல்லாத வகுப்பு" என்கிற பார்ப்பனரல்லாதார் வகுப்பைச் சேர்ந்த ஸ்ரீமான் வெங்கிட்டரமணராவ் நாயுடு என்பதையும் குறிப்பிடுகிறோம். இது தவிர, சேலம் ஸ்ரீமான் எல்லப்ப செட்டியார் தேர்தல் விஷயத்தில் தேர்தல் நடக்காமலிருக்கச் செய்ய சேலத்து பார்ப்பனர்கள், முக்கியமாய் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் முதல் கொண்டு, மந்திரியின் கையைப் பிடித்து எழுதி வைத்தும் மந்திரியின் நிபந்தனைப்படி தேர்தல் நடந்து அதில் ஏறக்குறைய ஏகமனதாய் செட்டியார் வெற்றி பெற்றும், மறுபடியும் அதை தள்ளுபடி செய்யும்படி ஜட்ஜு கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்ததல்லாமல் மந்திரியை பிடித்தும் கெஜட்டு பிரசுரம் செய்யாமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். இத்தேர்தலை மந்திரி அடியோடு நிராகரித்து விட வேண்டிய ஏற்பாடுகள் செய்தாய் விட்டது என்றும் ஒரு பார்ப்பன கனவான் அதற்கு மந்திரிக்காக தக்க காரணங்கள் காட்டி ஜட்ஜ் மெண்ட் முதலியதுகள் கூட எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றும், மந்திரி இலாக்காவிலுள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இதை ஆக்ஷேபிக்கிறார்கள் என்றும் கேள்விப்படு கிறோம். வகுப்பு துவேஷம் ஒழிந்த தன்மைக்கு இது ஒரு சாக்ஷி.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 24.04.1927**



# யாரிடம் வகுப்புத் துவேஷம் இருக்கிறது?

## ஸ்ரீமான்கள் பார்ப்பன ரங்காச்சாரியும் பார்ப்பனரல்லாத சண்முகம் செட்டியாரும்

சமீப காலத்திற்குள், அதாவது சுமார் 6 மாதத்திற்குள், நமது மாகாணத்திலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு இரண்டு கனவான்கள் இந்தியாவின் பிரதிநிதி என்கிற முறையில் போயிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் பார்ப்பன ரல்லாத வகுப்பைச் சேர்ந்த, கோவை ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள், எம். எல். ஏ. ஆவார். மற்றவர் பார்ப்பன வகுப்பைச் சேர்ந்த மைலாப்பூர் அய்யங்கார் ஸ்ரீமான் டி. ரங்காச்சாரியார் ஆவார். ஸ்ரீமான் செட்டியார் ஜனப் பிரதிநிதியாய் கவர்ன்மெண்ட்டாருடைய பணச் செலவில்லாமல் பொது அரசியல் விஷயமாய் சென்று வந்தவர். ஸ்ரீமான் ரங்காச்சாரியார் கவர்ன்மெண்ட் பிரதிநிதியாய் சர்க்கார் செலவில் ஏதோ ஒரு ஊரின் திறப்பு விழாவிற்காக "இந்திய பிரதிநிதியும் வந்திருந்தார்" என்று கணக்கு காட்டுவதற்காக போகிறவர். இந்த லட்சணத்தில் தனக்கு ஒரு உத்தியோக காரிய தரிசியாம். அதாவது தனது மகனையே காரியதரிசியாக்கிக் கொண்டார். சௌகரியத்திற்கு ஒரு ஆளாம். அதற்கு மற்றொரு மகனை நியமித்துக் கொண்டார். ஆகவே அப்பன் மக்கள் மூவரும் போகிறார்கள். திரும்பி வருவதற்குள் இந்த பிள்ளைகளுக்கு ஏதாவது மாதம் 300, 400 ரூபாய்களில் உத்தியோகங்களும் கிடைத்து விடலாம். ஸ்ரீமான் ரெங்காச் சாரியாருக்கும் கூடிய சீக்கிரத்தில் மாதம் 4000, 5000 கிடைக்கும். ஏதாவது கமிஷனில் மெம்பர் ஸ்தானமோ அல்லது நிர்வாக சபைகளில் மெம்பர் ஸ்தானங்களோ கிடைத்துவிடலாம். சர்க்கார் தயவை எதிர்பார்த்து சர்க்கார் பிரதிநிதியாய் சர்க்கார் செலவில் போன ஸ்ரீமான் ரங்காச்சாரிக்குப் பார்ப்பன பத்திரிகைகளும் பார்ப்பனர்களும் செய்த ஆரவாரமென்ன? விருந்துஎன்ன? வழியனுப்பு உபச்சாரமென்ன? என்பதையும், ஜனப் பிரதிநிதியாய் தன்னு டைய எலெக்ஷனையும் கவனியாமல் சர்க்கார் செலவில்லாமல் தனியே போனவருக்கு இப்பார்ப்பனர்கள் செய்த விஷயம் என்ன? என்பதையும் யோசித்துப் பார்த்தால் நமது பார்ப்பனர்களுக்கு வகுப்புத் துவேஷமில்லையா என்பது விளங்காமல் போகாது.



RangaRakes tamilnavarasam.com

தவிர, செட்டியாருக்கு கொஞ்சம் பொதுஜனங்களிடம் செல்வாக்கு வந்துவிட்டதாய் தெரிந்தவுடன் அவரை ஒழிக்க ஆரம்பித்தும், செட்டியாரைக் கூட்டிக் கொண்டு திருச்சி, திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் ஊர் ஊராய் திரிந்து தாங்கள் யோக்கியதை சம்பாதித்துக் கொண்டு, தங்களுக்கு ஜயம் கிடைத்தப் பிறகு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்து விலக்கி விட்டதும், இப்பொழுதும் இந்தியா சட்டசபையில் நன்றாய் பேசக்கூடிய நபர் ஸ்ரீமான் செட்டியார் தான் என்று இந்தியா பத்திரிக்கைகள் பூறாவும் கூச்சல் போட்டாலும், சென்னை பார்ப்பனப் பத்திரிக்கைகள் இப்பேச்சுகளைப் பற்றி ஒரு வரி கூட எழுதாமல், ஆர். கே. ஷண்முகம் செட்டியார் என்பதற்கு பதிலாக, எஸ். செட்டியார் என்று, அதாவது முன் ஸ்ரீமான் சம்மந்த முதலியார் இந்தியா சட்டசபையில் இருந்த காலத்தில் அவர் பெயர் யாருக்கும் தெரியக் கூடாது என்கிற எண்ணத்தின் பேரில், எஸ். முதலியார் என்று எழுதிவந்தது போலவே, எஸ். செட்டியார் என்று ஆரம்பித்து விட்டார்கள். இதிலிருந்து யாரிடம் வகுப்பு துவேஷம் இருக்கிறது என்பதை இனியாவது உணரும்படி வேண்டுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 24.04.1927**



# ஒரு வெளிப்படையான ரகசியம்

அடுத்த 5-5-27 தேதியில் பம்பாயில் கூடப்போகும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் ஒரு தீர்மானம் கொண்டு போகப் போகிறாராம். அதாவது :-

மாகாண சட்ட சபைகளில் காங்கிரஸ்காரர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்கிற விஷயத்தில் அந்தந்த மாகாணத்திற்கு தகுந்தபடி நடந்து கொள்ள மாகாணச் சுதந்திரம் கொடுத்துவிட வேண்டும் என்பதே.

அந்தத் தீர்மானம் நிறைவேறியவுடன், சென்னை மாகாணக் காங்கிரஸ் கமிட்டியில் சில தீர்மானங்கள் கொண்டுவரப் போகிறாராம். அதாவது :-

மந்திரிப் பதவியை ஒப்புக் கொள்ளலாம் என்றும், இப்போதுள்ள மந்திரி சபையை கலைத்துவிடவேண்டுமென்றும், மறு மந்திரிசபை அமைப்பதில் ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியார் முதல் மந்திரியாகவும், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கல்வி, தேவஸ்தானம் மந்திரியாகவும், ஸ்ரீமான் சுப்பராயன் கலால் மந்திரியாகவும் அமைப்பது என்றும் முடிவாய் இருப்பதாகத் தெரிகிறது. மற்ற மந்திரிகளுக்கு வேறு சில உத்தியோகங்கள் கொடுக்கும் விஷயத்தில் யோசனை செய்து கொண்டு வரப்படுகிறது. ஆனால் ஸ்ரீமான் சுப்பராயன் முதல் மந்திரி பதவியை விட இஷ்டப்படவில்லை என்றும் எந்த இலாக்காவை யார் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லுவதாகவும் சொல்லிக் கொள்ளப்படுகிறது.

இதிலுள்ள கஷ்டங்களை சரி செய்ய ஒரு யோசனை சொல்லும்படி ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியாரைக் கேட்டிருப்பதாகவும், அவர் ஸ்ரீமான் சுப்பராயனுக்குத்தான் முதல் மந்திரியும், ஸ்தல ஸ்தாபன இலாக்காவும் இருக்க வேண்டும் என்றும் சொல்லுவதாகவும் சொல்லிக் கொள்ளப்படுகிறது. யார் எப்படி போனாலும் ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு கல்வி மெம்பர் ஸ்தானம் கிடைக்குமா என்று பார்ப்பனர்கள் ஆசைப்படுகிறார்கள் என்றும் தெரிய வருகிறது.



RangaRakes tamilnavarasam.com

ஸ்ரீமான் சி.வி. வெங்கிடரமண அய்யங்காருக்கு சட்டசபைத் தலைவர் வேலை தீர்மானமாகிவிட்டதாகவும் தெரியவருகிறது. இந்த அபிப்பிராயங்கள் நிறைவேறினாலுங்கூட இப்போது இருப்பதை விட நிலைமைகள் ஒன்றும் மாறிவிடாது என்பதும், பார்ப்பனரல்லாதாரை பொறுத்த வரையிலும் இன்னம் கொஞ்சம் கண்விழிப்பும் அநுகூலமும் ஏற்படும் என்றே நம்புகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 24.04.1927**








RangaRakes
tamilnavarasam.com

# போளூர் ஆரம்பாசிரியர் மகாநாடு

சகோதரிகளே! சகோதரர்களே!

இன்று நீங்கள் எனக்குச் செய்த வரவேற்பு, ஆடம்பரம், உபசாரம், வரவேற்புப் பத்திரம் முதலியவைகளைக் கண்டு எனது மனம் மிகவும் வெட்கப்படுகிறது. இவ்வித ஆடம்பரங்களுக்கு நான் எந்த விதத்தில் தகுந்தவனென்பது எனக்கே தெரியவில்லை. கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் என்று சொல்லப்பட்ட பெருத்த கல்விமான்களாகிய உங்களது மகாநாட்டுக்கு அக்கல்வியை ஒரு சிறிதும் பயிலாத நான் எவ்விதத்தில் தகுதியுடையவனா வேன். உங்களின் அன்பான வேண்டுகோளை மறுக்கப் போதிய தைரியமில் லாத காரணத்தாலேயே ஒருவாறு இப்பதவியை ஏற்க வேண்டியவனாயிருக் கிறேன். என்னுடைய வாழ்நாளில் சுமார் 2 வருஷ காலந்தான் நான் பள்ளியில் படித்திருப்பேன். அவ்விரண்டு வருஷமாகிய எனது 8 வயதுக்கு மேல்பட்டு 11 வயதுக்குள்பட்ட காலத்தில் நான் பாடம் படித்த காலத்தை விட உபாத்தியா யரிடம் அடிபட்ட காலந்தான் அதிகமாயிருக்கும். இதையறிந்த என் பெற்றோர்கள், இவன் படிப்புக்கு லாயக்கில்லை என்பதாகக் கருதித் தாங்கள் செய்து வந்த தொழிலாகிய வர்த்தகத்தில் என்னுடைய 11 - வது வயதிலேயே ஈடுபடுத்தி விட்டார்கள். இந்த 2 வருஷ கெடுவிலேயும் என் கையெழுத்துப் போடத்தான் கற்றுக் கொண்டேன் என்று சொல்லலாம். ஆகவே கல்வி முறையிலும் உங்கள் குறைகளைப் பற்றியும் நான் உங்களுக்கு எந்த விஷயத் தையும் சொல்லக் கூடிய சக்தி என்னிடத்தில் இல்லை. ஏதோ என் புத்தி அனுபவத்திற் கெட்டிய வரையில் சில வார்த்தைகளைச் சொல்லுகிறேன்.

தற்கால ஆசிரியர்கள் தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் ஆசிரியர் தொழிலை ஒரு புனிதமான கடமையென்பதாகக் கருதிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தாலும் அத்தொழிலுக்குரிய கடமைகளைச் சரியானபடி உணர்ந்து நடப்பதிற்கில்லாத நிலையில் இருந்துகொண்டு அத்தொழிலை தங்கள் வயிற்றுப் பாட்டிற்கு நடத்தி வருவதே வழக்கமாயிருக்கிறது. ஆசிரியர்கள் இம்மாதிரி மகாநாடுகள் கூடிப் பேசுவதும், தீர்மானிப்பதும் தங்களுக்கு சில சவுகரியத்தை உண்டாக்கிக் கொள்ளவும் தங்கள் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொள்ளவுமேயல்லாமல் தங்களால் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளவோ, தேசம் முன்னேற்



றத்திற்கு அநுகூலமான கல்வியைப் போதிக்கும் சக்தியையடையவோ ஒரு பிரயத்தனமும் செய்ததாக நான் அறியவே இல்லை. முதலாவது நீங்கள் படித்த கல்வியும் நீங்கள் கற்றுக் கொடுக்கப்போகும் கல்வியும் வயிற்றுப் பிழைப்புக்கு ஒரு ஆதாரமாகக் கருதிக் கற்கவும் கற்பிக்கப்படவும் ஏற்பட்டி ருக்கிறதேயல்லாமல் மக்கள் அறிவுத் தத்துவத்திற்கோ, தேசத்திற்கோ, ஒழுக்கத்திற்கோ ஒரு பலனையும் அளிக்க முடியாததாயிருக்கிறதென்பது நீங்கள் அறிந்த விஷயமேதான். ஆரம்பக் கல்வி முதல் உயர்தரக் கல்வி, சகலகலா கல்வி என்பது வரையிலும் கவனித்தால் தற்காலம் அடிமைத் தன்மையையும் சுயமரியாதையற்ற தன்மையையும் உண்டாக்கிக், கொடுமை யான ஆட்சிமுறை கொண்ட ஒரு அரசாங்கத்திற்கு உதவி செய்து வயிறு வளர்க்கும் தேசத் துரோகிகளை உற்பத்தி செய்யும் இயந்திரங்களாகத் தானே இருக்கிறதேயல்லாமல் வேறென்ன இருக்கிறது?

சாதாரணமாக ஆரம்பாசிரியர்கள் என்கிற பெயரையே யாருக்கு உபயோகப் படுத்தலாமென்றால் முதலில் நமது பெண் மக்களுக்குத்தான் உபயோகப்படுத்தலாம். ஏனெனில் நமது குழந்தைகளுக்கு ஆரம்பாசிரி யர்கள் அவர்களுடைய தாய்மார்களாகிய நமது பெண்களே ஆவார்கள். அக்குழந்தைகளுக்கு 6, 7 வயது வரையிலும் தாய்மார்களேதான் உபாத்தி யாயர்களாக இருக்கிறார்கள். மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களிலும் இவை தான் காணப்படுகிறது.எனவே,

இரண்டாவதாகத்தான் நீங்கள் ஆசிரியர்கள் ஆவீர்கள். நீங்களிரு வரும் எப்படிப் பிள்ளைகளைப் படிப்பிக்கின்றீர்களோ அப்படியே அவர்கள் தேசத்திற்கும், தேச நன்மைக்கும், ஒழுக்கத்திற்கும் உரிய மக்களாய் வாழக்கூடும். எனவே தேசம் மக்களாலும், மக்கள் ஆசிரியர்களாலும் உருப் பட வேண்டியிருக்கிறது. ஆனால் அப்போ்ப்பட்ட ஆரம்பாசிரியர்களாகிய பெண்களோ நமது நாட்டில் பிள்ளைபெறும் இயந்திரங்களாக இருக்கின் றார்கள். அவர்களுக்கு ஏதாவது அறிவுண்டாக நாம் இடங்கொடுத்தாலல் லவா பிள்ளைகளுக்கு அறிவுண்டாக்க அவர்களால் முடியும். ஆகவே, அந்த முதலாவது ஆரம்பாசிரியர்களின் யோக்கியதை இப்படியாய் விட்டது. அடுத்தாற்போலுள்ள இரண்டாவது ஆரம்பாசிரியர்களாகிய உங்கள் யோக் கியதையோ, உங்கள் வயிற்றுப்பாட்டுக்கே கான்பரன்ஸ் கூட்ட வேண்டிய தாகப் போய்விட்டது. உங்கள் இருவர்களாலும் கற்பிக்கப்படப் போகிற பிள்ளைகள் எப்படித் தக்க யோக்கியதை அடைய முடியும். கல்வி என்பது வயிற்றுப் பிழைப்புக்காக மாத்திரமல்ல, அது அறிவுக்காகவும் ஏற்பட்டது என்பதாக நாம் எடுத்துக் கொண்டால் மக்கள் சுயமரியாதையோடும், சுதந்திரத் தோடும், மற்ற மக்களுக்கு இன்னல் விளைவிக்காமலும், அன்பு, பரோபகாரம் முதலியவைகளோடு கண்ணியமாய் உலக வாழ்க்கையை நடத்தத் தகுந்த ஞானமும் உண்டாகத் தகுந்ததாக இருக்க வேண்டும். இவைகளையறிந்தே வள்ளுவரும் “உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும், கல்லாதார்



RangaRakes tamilnavarasam.com

அறிவில்லாதார்” என்றும், “தாம் இன்புறுவது உலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்” என்றும், “ஒத்ததறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்” என்றும் சொல்லி இருக்கிறார். இதற்கேற்ற கல்விக்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள். நாய்க்கு நாலுகால், பூனைக்கு வாலுண்டு, கண்ணில்லாதவன் குருடன், திருடாதே, அடிக்காதே என்று சொல்லிக் கொடுப்பதனால் என்ன பலன் ஏற்பட்டுவிடக்கூடும். இவைகள் எல்லாம் குழந்தைகள் தானாகவே படித்துக் கொள்ளும். ஒருவனை அடித்தால் அவன் திரும்பி அடித்துவிடுவான். ஒருவனை வைதால் அவன் திரும்பி வைதுவிடுவான். திருடினால் பிடித்து நன்றாக உதைத்து விடுவார்கள், என்பதும் நாயும் பூனையும் கண்ணில் பார்க்கும்போதே கால் எவ்வள வென்பதும் வாலுண்டென்பதும் தெரிந்து கொள்வான். இதற்காக இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டமும், பணச் செலவும், மெனக்கேடும் வேண்டியதில்லை என்பதே நமது அபிப்பிராயம். நீங்கள் முதலில் மக்களுக்கு சுயமரியாதை இன்னதென்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். மானம், ஆண்மை இன்னதென்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். சமத்துவத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும். மக்களிடத்தில் அன்பு இருக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். தேசாபிமானத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இவைகளில் ஏதாவது உங்களால் கற்பித்துக் கொடுக்கப்படுகிறதா வென்பதை உங்கள் மனதையே கையை வைத்துக் கேட்டுப் பாருங்கள். நீங்கள் மாத்திரமல்ல, உங்களைவிடப் பெரிய சகலகலா வல்லபர்களிடத்தில் படித்து எம்.ஏ., டாக்டர் முதலிய பட்டங்கள் பெற்ற பையன்களும், ஒரு காபிக்கடைக்குப் போனால் தனது சுயமரியாதையற்று அங்கு எச்சில் கிண்ணம் தூக்குபவனைக் கண்டு “சாமி ஒரு கப் காப்பி கொண்டு வா” என்று கூப்பிடுகிறான். தான் மோட்சத்திற்குப் போவதற்கு மற்றொருவன் கையில் பணத்தைக் கொடுத்து அவன் காலில் விழுந்து கும்பிடுகிறான். தன் தேசத்தையும், மக்களையுங் காட்டிக் கொடுத்து வயிறு வளர்ப்பதில் போட்டி போடுகிறான். இந்தப் பட்டம் எல்லாம் கல்வியாகுமா? இதைப் பெற்றவர்களெல்லாம் படித்தவர்களா வார்களா? வண்ணான், அம்பட்டன், தச்சன், கொல்லன், சக்கிலி முதலியோர் எப்படித் தங்கள் தங்கள் தொழிலைக் கற்றுத் தேர்ந்திருக்கிறார்களோ அப்படியே தற்காலம் பி.ஏ., எம்.ஏ., என்ற படித்தவர்கள் என்போர்களும் அந்தப் பாடத்தைக் கற்றவர்களாவார்கள். வண்ணானுக்கு எப்படி சரித்திரப் பாடம் தெரியாதோ அப்படியே பி.ஏ. படித்தவர்களுக்கு வெளுக்குந் தொழில் தெரியாது. அம்பட்டனுக்கு எப்படி பூகோளம் தெரியாதோ அப்படியே எம்.ஏ. படித்தவனுக்கு பிறருக்கு க்ஷவரம் செய்யத் தெரியாது. சக்கிலிக்கு எப்படி இலக்கண இலக்கியங்களும், வேத வியாக்கியானங்களும் தெரியாதோ அப்படியே வித்வான்களுக்கும், சாஸ்திரிகளுக்கும், செருப்புத் தைக்கத் தெரியாது. ஆகவே வண்ணான், அம்பட்டன், சக்கிலி முதலியோர்களை விட பி.ஏ., எம்.ஏ., சாஸ்திரி, வித்வான் முதலிய பட்டம் பெற்றவர்கள் ஒரு விதத்தி லும் உயர்ந்தவர்களுமல்லர், அறிவாளிகளுமல்லர், உலகத்திற்கு அநுகூலமா



னவர்களுமல்லர். இவைகளெல்லாம் ஒரு வித்தை அல்லது தொழில்தானே தவிர அறிவாகாது. இவ்வளவும் படித்தவர்கள் முட்டாள்களாகவும், சுயநலக் காரர்களாகவும், சுயமரியாதையற்றவர்களாகவும் இருக்கலாம். இவ்வளவும் படியாதவர்கள் பரோபகாரியாகவும், அறிவாளிகளாகவும், சுயமரியாதையுள் ளவர்களாகவும் இருக்கலாம். எனவே இதுகளல்ல கல்வியென்பது நமக்கு விளங்கவில்லையா? நமது நாட்டின் கேட்டிற்கும், நிலைமைக்கும் முதல் காரணம் தற்காலக் கல்விமுறை யென்பதே எனது அபிப்ராயம். முற்காலத்தில் பனை ஓலையில் எழுதித் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் உட்கார்ந்து படித்த படிப்பை விட தற்காலப் படிப்பு மக்களுக்கு என்ன நன்மை செய்துவிட்டது? ஓலைச் சுவடியும், எழுத்தாணியும், ஆற்று மணலும் போய்க் காகிதக் குப்பை களுக்கும் பெரும் பெரும் புத்தகங்களுக்கும், இங்கிப் பெட்டி, பேனா, பென்சில்களுக்குமாக நமது பணங்கள் சீமைக்குப் போக ஏற்பட்டிருக்கிற தேயல்லாமல் வேறு பலனுண்டா? படிப்பில்லாத என்கிற முற்காலத்து மக்களை விட படிப்புள்ள என்கிற தற்காலத்து மக்கள் ஒழுக்கத்தில் எவ்விதம் உயர்ந்திருக்கிறார்கள்? படிப்பில்லாத காலத்தைவிட அன்பில், அன்னியோன் யத்தில், நம்பிக்கையில், படிப்புள்ள மக்கள் என்ன ஓத்திருக்கிறார்கள்? முன் காலத்தில் ஒருவன் வாங்கின கடனைக் கொடுக்காவிட்டால் அவன் வீட்டு வாயிலில் ஒரு பசுவையும் அதன் கன்றையும் தீனி போடாமல் கட்டிவிடுவது வழக்கம். இந்தப் பட்டினியின் பாவத்திற்கஞ்சி பெண்ஜாதியின் தாலியை விற்றாவது கடனைக் கொடுத்துவிட்டுத்தான் வீதிப்புரம் நடப்பான் என்று எனது தகப்பனார் சொல்லியிருக்கிறார். கல்வி ஏற்பட்ட காலமாகிய இப்பொழுது அம்மாதிரி செய்தால் படித்தவர்கள் என்கிற வக்கீல்கள் பாலைக் கரந்து நமக்குக் கொண்டுவந்து கொடுத்துவிடு பாவம் வந்து உன்னை என்ன செய்துவிடும் பார்க்கலாம் என்று தைரியம் சொல்லி ஏமாற்றி வழிகாட்டி வருவார்கள். இதனாலேயே தற்காலம் எத்தனை மேஜிஸ்ட்ரேட் கச்சேரி, எத்தனை முனிசீப் கோர்ட்டு, எத்தனை செஷன் ஹைகோர்ட், எத்தனை போலீஸ் கச்சேரி ஏற்பட்டிருக்கிறது பாருங்கள். இவைகளெல்லாம் படிப்பில் லாத என்கிற முற்காலத்தில் இருந்தனவா? படிப்பு என்னும் தற்காலக் கல்வி முறையல்லவா மக்களை இவ்வளவு ஒழுக்கஹீனமாக நடக்கத் தூண்டி அல்லல்படுத்தி நாட்டையும், சமூகத்தையும் பாழ்படுத்தி வருகிறது.

## தொழிற்கல்வி

சகோதரர்களே!

அறிவு கல்வியின் யோக்கியதை இப்படியானால், தொழிற் கல்வியின் யோக்கியதை இதைவிட மோசமாக விருக்கிறது. தொழிற்கல்வி என்னும் பெயரால் தற்காலம் நமது பணமும், நேரமும், மக்களின் அறிவும் வீணாவ தல்லாமல் வேறென்ன பலனைக் கண்டோம். தற்காலப் பள்ளிக்கூடங்களில் தொழிற்கல்வி என்ற பெயருடன் கற்றுக் கொடுக்கும் தொழிற்கல்வி முறையும்,



RangaRakes
tamilnavarasam.com

கொஞ்சமும் சரியானதல்ல. கொஞ்சகாலமாகத் "தேசீயக் கிளர்ச்சி" ஏற்பட்டதின் பலனாய் ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் தொழிற்கல்வி என்பதாகச் சொல்லி, தச்சு வேலையும், விவசாயமும், ராட்டினம் சுற்றுதலும், நெசவு நெய்தலும் முதலிய வேலைகளுக்கென்று அனாவசியமாய்ப் பணத்தையும், நேரத்தையும் பாழ்படுத்தப்படுகின்றன. வக்கீல் மகனுக்கும், ஜட்ஜ் மகனுக்கும், மிட்டாதார் மகனுக்கும், வியாபாரி மகனுக்கும், பெரிய நிலச்சுவான்தார்கள் மகனுக்கும் ஒருங்கே உட்கார வைத்து சில மணி நேரம் தச்சுவேலை கற்றுக் கொடுப்பதாலும், ராட்டினத்தைச் சுற்றச் சொல்வதாலும் என்ன பயன் விளையக் கூடும்? எல்லாத் தொழிலும் கற்றிருக்கட்டும் என்பதற்காகவே சொல்வோமானால் இந்த இரண்டு மூன்று தொழிலாலேயே உலகத்தொழில் எல்லாம் தெரிந்து விடுமா? ஜீவனோபாயத்துக்கு என்று சொல்வோமானால் மேற்கண்ட பிள்ளைகளெல்லாம் இந்தத் தொழிலை ஜீவனோபாயத்திற்காக ஏற்று ஜீவிக்க முடியுமா? ஆகவே, அறிவுக்காவது, ஜீவனத்திற்காவது இந்தத் தொழில்கள் இப்பிள்ளைகளுக்கு உபயோகப்படுகிறதா? உயர்தரப் பாடசாலை என்பவைகளில் சயன்ஸ் என்றும், சரித்திரம் என்றும் எதை எதையோ பணத்தையும், காலத்தையும் செலவழித்துச் சொல்லிக்கொடுத்து உருப் போடச் செய்து கற்றுத் தேர்ந்த பிறகு 30 ரூபாயுக்கு ஏவின வேலை செய்து படிப்பினுடைய சக்தியையும், அறிவையும் கொண்டல்லாமல் மேலெஜமானனுக்கு மானத்தையும், மனச்சாட்சியையும் விற்று நல்ல பிள்ளையாவதன் மூலம் சம்பளத்தை உயர்த்தி, வாங்கிய சம்பளத்தில் வாழ்ந்து தன் காரியத்தைப் பார்த்துக் கொண்டதோடு சாவதல்லாமல் வேறு ஏதாவது பல் குத்துகிற துரும்புக்காவது உதவப்படுகிறதா? அல்லது அந்தத் தொழிலுக்காவது இந்தப் படிப்புகள் உபயோகப்படுகிறதா? அது போலவே இக் கைத்தொழில்களும் வாழ்விற்கோ பிழைப்பிற்கோ உபயோகப்படாமல் போகிறது. கைத்தொழில் கற்றுக் கொடுப்பதென்றால் கூடுமானவரையில் பிள்ளைகளின் இயற்கை அறிவிற்கும், வாழ்க்கைக்கும் , தக்கபடி தரந்தரமாகப் பிரித்து அததுகளுக்குத் தகுந்த தொழில்களைச் சொல்லிக் கொடுத்து அதை அவர்களுக்கு உபயோகப்படும்படிச் செய்ய வேண்டும். பெண்களுக்கு ராட்டினம் சொல்லிக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஆண் பிள்ளைகளுக்கு கதரைக் கட்டச் செய்வதும் கதரை ஆதரிக்க வேண்டிய அவசியத்தைச் சொல்லிக் கொடுப்பதும் ராட்டினத்தை விட முக்கியமானதாகும். அதை விட்டு விட்டு உபாத்தியாயரும் கதர் கட்டாமல், பிள்ளைகளையும் கதர் கட்டச் செய்யாமல் இவர்களின் எஜமானர்களாகிய தாலுகா போர்டு, ஜில்லா போர்டு முதலிய தலைவர்களும் அங்கத்தினர்களும் கதரைக் கட்டாமல் பொது ஜனங்களின் வரிப்பணத்தை அள்ளி வெறும் ராட்டினத்தை வாங்கி பிள்ளைகளின் நேரத்தையும், பஞ்சையும் வீணாக்கி நூலைக் குப்பையில் போடுவதில் லாபமென்ன? கதர் கட்டுவதன் அவசியத்தை அறியாத ஒரு பையன் ராட்டினம் சுற்றுவதில் பிரயோஜனமென்ன? கதரைக் கட்டாத உபாத்தியாயர்கள் கதரைக் கட்டும்படி உபதேசம் செய்வதில் பிரயோஜனமென்ன?



1000 பொய் ராட்டினம் சுற்றி நூல்களைக் குப்பையில் போடுவதை விட 100 பிள்ளைகள் கதர் கட்டுவது மேலான தர்மம். ஆகவே இம்முறைகள் காரியத்துக்கு உதவாததாகவும், உண்மைத் தொழில் தத்துவமற்றதாகவும் நடைபெறுகின்றது.

## குருபக்தி

அறிவும், தொழிலும் இப்படியானால் உபாத்தியாயர்களுக்கும், பிள்ளைகளுக்கும் இருக்கிற பொறுப்பும், பற்றுதலும், பக்தியும் இதைவிட மோசமானதென்றே சொல்ல வேண்டும். சாதாரணமாய் ஒரு உபாத்தியாயருக்கும், ஒரு மாணாக்கனுக்கும் உள்ள பற்றுதலையும், பக்தியையும் விட ஒரு தாசிக்கும் அவளுடைய அன்றன்றைய நாயகனுக்கும் உள்ள பக்தியும், பற்றுதலும் மேலானதென்றே சொல்லலாம். எப்படியெனில் ஒரு தாசிக்கு ஒரு இரவு முழுவதாவது ஒரு நாயகன் இருக்கக்கூடும்.நமது மாணாக்கர்களுக்கோ மணிக்கு இரண்டு உபாத்தியாயர்கள் வருகிறார்கள். ஒரு நிலையான உபாத்தியாயரிடமிருந்து ஒரு பொறுப்பான விஷயங்களை உணரக்கூடிய சந்தர்ப்பங்களே கிடையாது. உபாத்தியாயர்களும் சம்பளம் உயர்ந்த பள்ளிக்கூடங்களுக்குப் போவதும், மாணாக்கர்களும் தங்களுக்குச் சௌகரியப்பட்ட பள்ளிக்கூடத்திற்குப் போவதும் சுயேச்சையாகிவிட்டது. பிள்ளை படிக்க வேண்டியதும் உபாத்தியாயர் அவனைத் தேறச்செய்ய வேண்டியதும் அவரவர்கள் இஷ்டத்தைப் பொருத்ததாகவே போய்விட்டதேயல்லாமல் பொறுப்பும் கவலையும் ஒருவருக்கும் கட்டுப்பட்டதல்லதாகவே இருந்து வருகிறது.

## காலக்ஷேபம்

கல்வி, அறிவு, தொழில் முறை, குருபக்தி ஆகியவற்றின் யோக்கியதை இப்படியென்றால் உபாத்தியாயர்களின் காலக்ஷேபமோ நினைப்பதற்கே பரிதாபமாயிருக்கிறது. முன்காலத்திய உபாத்தியாயர்களுக்கு காலக்ஷேபத்தைப் பற்றிய கவலையே இருந்ததில்லை. உபாத்தியாயர்களுக்கு ஒரு சிறு குடிசை இருந்தால் போதும். பிள்ளைகளுக்கு அக்குடிசைகளுக்கு முன்னால் ஒரு பந்தலோ, கொட்டகையோ இருந்தால் போதும். பிள்ளைகள் படிப்பதற்கு ஐந்தாறு மட்டை பனை ஓலையும் அரை வண்டி மணலும் இருந்தால் போதும். எழுதுகோலாக ஒரு கூர்மையான ஆணி இருந்தால் போதும். மற்றபடி உபாத்தியாயர்களுடைய காலக்ஷேபத்தைப் பற்றி உபாத்தியாயர்களுக்கு கவலையே இருந்தது கிடையாது. வெள்ளாமை காலத்தில் பையன்களிடம் சொல்லிவிட்டால் கூடை கூடையாய் தானியங்கள் வந்து குவிந்துவிடும். உபாத்தியாயரே போட்டு வைக்க இடமில்லாததால் போதும் என்று சொல்லி விடுவார். எண்ணெய், விறகு முதலியதுகள் மாதத்துக்கு ஒரு தடவையும், காய்கறி பதார்த்தங்கள் தினமும் தானாகவே பிள்ளைகள் மூலம் வீட்டுக்கு வந்து சேர்ந்து விடும். பண்டிகைகளுக்கு வேஷ்டி துணிகளும், மேற்செல



RangaRakes tamilnavarasam.com

வுக்கு இனாம் பணங்களும் தானாகவே வந்து சேர்ந்துவிடும். உபாத்தியாயர் வீட்டில் நடக்கும் கல்யாணம், கார்த்திகை, நன்மை, தீமை முதலிய சடங்குகளுக்கு அவ்வப்போது பெற்றோர்களும் பையன்களுடைய சுற்றத்தார்களும் தாராளமாகக் கொடுத்து நடத்தி விடுவார்கள். பையனுடைய படிப்புக்கு உபாத்தியாயர் ஜவாப்தாரியாகவும், உபாத்தியாயர்களுடைய காலக்ஷேபத்திற்கு பிள்ளைகளின் பெற்றோர்கள் ஜவாப்தாரிகளாகவும் பரஸ்பரம் பொறுப்பை ஏற்றுக் கொள்வார்கள். ஒரு பையன் வீட்டில் ஏதாவது குற்றஞ் செய்து விட்டாலும் அவன் படித்ததாகச் சொல்லும் பாடங்களில் கேட்ட கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லாவிட்டாலும் உபாத்தியாயருக்குக் கொடுப்பதில் குறைத்து விடுவார்கள். உபாத்தியாயர்கள் பெயரைச் சொன்னால் பையன்கள் நடுங்குவார்கள். சாப்பாட்டுக் கவலையென்பதே உபாத்தியாயர்களுக்குத் தெரியவே தெரியாது. உபாத்தியாயர் வீட்டுப் பெண்களோடு குடும்பக் கவலை நின்றுவிடும். எவ்விதத்திலும் அவைகள் உபாத்தியாயர் காதுக்கு எட்டவே எட்டாது. அக்காலத்தியப் படிப்புச் செலவு இப்போதைய செலவுகளில் பதினாறில் ஒரு பங்கு கூட இருக்காது. இப்பொழுதோ பிள்ளைகள் கொடுக்கிற பணம் கணக்கு வழக்கில்லை. புத்தகம், காகிதம், பேனா, பென்சில், சித்திர சாமான், விளையாட்டுக் கருவி, ரஸாயன சாமான், பெஞ்சு, நாற்காலி, மேசை, கட்டடங்கள் இவைகளுக்காகும் செலவுகளே மக்கள் தாங்க முடியாததாகப் போய் விடுகிறது. இதன் மேல் உபாத்தியாயர்களுக்குக் கொடுப்பதும் தாங்க முடியாததாகவே ஏற்பட்டு விடுகிறது. சாதாரணமாக ஆரம்பாசிரியர்கள் என்போருக்கு கொடுக்கப்படும் சம்பளம் சில ஆபீஸ்களில் பியூன்களுக்கும், போலீஸ்காரர்களுக்கும் கொடுக்கப்படுவதை விட குறைவாகத்தானே இருக்கிறது. குழந்தை குட்டிகளோடு வாழ்கிற ஒரு குடும்பத்திற்கு 30 ரூபாயாவது இருந்தால் தான் கவலையில்லாமல் தன் காரியத்தைக் கவனிக்கக்கூடும். அது கூட இல்லாமல் கஷ்டப்படுகிறதைப் பார்க்கும்பொழுது நமக்கு மிகவும் பரிதாபமாகத்தானிருக்கிறது.

## கல்விக்கு ஒதுக்கப்பட்ட பணம்

பசுவைக் கொன்று செருப்புத் தானம் செய்வது போல் நமது அரசாங்கத்தார் கள்ளு, சாராயத்தை விற்று அதில் வரும் லாபத்தை எடுத்து கல்விக்காக செலவு செய்கிறார்கள். இன்னும் கொஞ்சம் கல்வி சவுகரியமும், சம்பள சவுகரியமும் வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கள்ளு, சாராயம் குடித்து, அதனால் அதிக வரும்படியையுண்டாக்கும் பொறுப்பை நம்ம தலையில் வைத்திருக்கிறார்கள். நமது மக்கள் கற்ற கல்வி பெரிதும் தேசத் துரோகத்திற்கே உபயோகப்பட்டு வரும் காரணமே வெகு குடும்பங்கள் கெட்டதன் பலனாய் ஏற்பட்ட கள்ளு சாராயப் பணத்திலிருந்து படித்ததினால் தான். இம்மாதிரி குடியில் வரும் லாபத்தினால் தான் படிப்புக்குச் செலவு



செய்ய வேண்டும் என்று ஏற்படுமானால் மக்கள் படிக்காமல் தற்குரியாக இருந்தாவது உபாத்தியாயர்களெல்லாம் தெருவில் கல்லுடைத்து ஜீவனம் செய்துக் கொண்டாவது கட்குடியை நிறுத்துவதே மேலானதென்பது என் அபிப்பிராயம்.

## படிப்பின் பலன்

இம்மாதிரிப் படிப்பு வலுத்ததின் பலனாய் படிப்பின் அவசியமில்லாமல் வேறு வழியில் வாழக்கூடிய பெருத்த குடும்பங்களெல்லாம் பாழாகிப் போய்க்கொண்டே வருகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு உயர்தரப் பள்ளிக்கூடங்களென்பது அதிகமாய்க் கொண்டு வருகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அதில் படித்த பெரும்பான்மைப் பிள்ளைகளின் குடும்பங்கள் கெட்டுக் கொண்டே வருகின்றன. உதாரணமாக பூமிகளின் சொந்தக்காரர்களின் பெயர்களைக் காட்டும் செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் என்னும் பதிவு புஸ்தகத்தை வாங்கிப் பார்த்தீர்களானால் அதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். 40, 50 வருஷங்களுக்கு முந்திய செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரிலுள்ள பூமிக்குச் சொந்தக்காரரின் பெயர்களை 10 வருஷத்துக்கு முன்னுள்ள புஸ்தகத்தைப் பார்ப்பீர்களேயானால் 100 – க்கு 75 பாகம் மாறிப்போய்த்தானிருக்கும். அக்காலத்தில் கவுண்டர், நாயக்கர், பிள்ளை, படையாச்சி, ரெட்டி, நாயுடு என்றிருப்பது போய் இப்பொழுது அய்யர், அய்யங்கார், ஆச்சாரியார், செட்டியார் முதலிய உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், வியாபாரிகளாகியவர்கள் பேருக்கே மாறியிருக்கும். காரணமென்னவென்றால், உயர்தரப் பள்ளிக்கூடம் வந்தவுடனே எல்லாப் பிள்ளைகளும் அதில் படிக்கச் சேர்ந்து விடுகின்றார்கள். குடியானவர்களும் தங்கள் பிள்ளைகளை அதிலேயே சேர்த்து விடுகிறார்கள். அந்தப் பிள்ளைகளுக்குப் படித்துத்தான் ஜீவனம் செய்ய வேண்டுமென்கிற அவசியமில்லாததாலும், "இந்தக் கூட்டங்களும் படித்து விட்டால் உத்தியோகங் கொண்டே வாழவேண்டியவர்களாகிய நம்ம கூட்டத்தார் வாயில் மண் விழுந்து விடுமே" என்கிற பயங்கொண்ட உபாத்தியாயர்களாலும் இப்பிள்ளைகள் சரியாகப் படிக்க முடியாமல் 5, 6 வருஷம் பெஞ்சுக்கு வாடகைக் கொடுத்ததோடு தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டும், சிகரெட், பீடி குடித்துக் கொண்டும், வேடிக்கை உடைகளை தரித்துக் கொண்டும், பொறுப்பும் ஒழுக்கமுமற்ற சம்பாஷணைகள் பழகிக் கொண்டும், உல்லாசமாய்த் திரிந்து 2, 3 தடவை பரீட்சையில் தோல்வியுற்று கடைசியாய் இனி படிப்பு வராது என்கிற முடிவுடன் வீடுபோய்ச் சேருகின்றதுகள். இந்தப் பட்டணவாசல் பள்ளிப் பழக்கமானது பட்டிக்காட்டு வாசத்துக்குச் சௌகரியமில்லாமல், வீடு வாசல்களும், விவசாயப் பண்ணைகளும் தங்களுக்குப் பிடித்தமில்லாததாகி நோக்கமெல்லாம் பட்டணங்களிலேயே கொண்டுபோய் விடுகிறது. அல்லது சிலருக்கு பட்டிக் காட்டிலேயே பட்டணங்கள் போல் வீடுவாசல் கட்டி சுகமனுபவிக்க ஆசை ஏற்பட்டு விடுகிறது. இதன் மூலம்



RangaRakes tamilnavarasam.com

தங்கள் விவசாயம் கெடுவதோடும் தங்களுக்கு கிரமமாய் வரும் பொருள் வருவாயும் கெடுவதோடு அதிக செலவும் ஏற்பட்டு அதன் மூலம் கடன் காரர்களாகி வீண் விவகாரங்களில் ஈடுபட்டு கடைசியாய் இக்குடும்பச் சொத் தானது விவகாரத்தில் அதிகாரிகளுக்கு லஞ்சத்தின் மூலமாகவும், வக்கீல் களுக்குப் பீசின் மூலமாகவும், லேவா தேவிக்காரர்களுக்கு வட்டியின் மூல மாகவும் போய்ச் சேர்ந்து விடுகிறது. இந்தக் காரணங்களால் இவர்கள் பூமிகள் அவர்கள் பேருக்குப் பட்டா மாறுவதும் அல்லது அவர்கள் விலைக்கு வாங்குவதுமாய் முடிந்து விடுகிறது. இனியும் ஒரு 50 வருஷத்திற்கு இக்கல்வி முறை இப்படியே இருக்குமானால் நமது பூமிகளெல்லாம் உத்தியோக வக்கீல் கூட்டத்தாருக்கும் லேவாதேவி கூட்டத்தாருக்குமே போய்ச் சேர்ந்து விடும். இப்பொழுதுள்ள மிராஸ்தார்களின் பிள்ளைகளெல்லாம் அந்தக் கூட்டத்தார் களிடம் பண்ணையாளாகவும், குடிவாரக்காரர்களாகவும் போய்ச் சேர வேண்டியதுதான்.

## அரசியல் புரட்டு

அரசாங்கத்தாரும், கல்விக்காகக் கோடிக் கணக்கான ரூபாயைச் செலவு பண்ணுகிறார்கள். அவ்வளவும் உபாத்தியாயர்களுக்குப் போவதா யிருந்தால் உபாத்தியாயர்களுக்குக் கஷ்டமே இருக்காது. பணத்தையெல் லாம் கல்வியின் பேரால் மேற்சொன்னபடி சாமான்களுக்கும், கட்டடங் களுக்கும் மற்றும் பாதிரிமார்களுக்கும் உயர்ந்த சம்பளம் பெறும் உபாத்தியா யர்களுக்கும் இவற்றை மேற்பார்வை பார்ப்பது என்பதாகப் பல பெரிய பெரிய சம்பளமுள்ள உத்தியோகஸ்தர்களுக்குமே போய்விடுகிறது. இவ்வளவு செலவுகளையும் அனாவசியமாய்ச் செய்துவிட்டு ஆரம்பாசிரியர்களையும் பட்டினி போட்டுவிட்டு இந்த ஆசிரியர்களை ஆடு மாடுகளை விட கேவல மாக மதிக்கிறார்கள்.

ஜனப் பிரதிநிதிகள் என்கிற சட்டசபை அங்கத்தினர்கள் முதலிய அரசியல் வாழ்வுக்காரர்களோ உங்களிடம் வரும்போது உங்களிடத்தில் ரொம்பவும் அனுதாபம் உள்ளவர்கள் போல் காட்டிக் கொண்டு “உங்களுக்கு சம்பளம் 40 ரூபாய் வேண்டும், 50 ரூபாய் வேண்டும்” என்ற ஆசை வார்த்தை சொல்லி உங்களைத் திருப்தி செய்து உங்களால் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய ஓட்டுக்களைப் பெற்றுக்கொண்டு போய்விடுகிறார்கள். பொது ஜனங்களிடம் போகும் போது அவர்களைப் பார்த்து “சர்க்காரார் உங்களிடம் அதிக வரி வசூல் பண்ணுகிறார்கள். அனாவசியமாய் அதிகமான ஆள் அம்புகள் வைத்து அரசாங்கச் செலவை பெருக்கிவிட்டார்கள். நாங்கள் போய் சம்பளத்தையும் செலவையும் குறைத்து உங்களுக்கு வரியைக் குறைக்கிறோம்” என்று மேடை மேல் நின்று பேசிவிடுகிறார்கள். உங்களிரு வரையும் ஏமாற்றி சட்டசபையில் போயிருந்து கொண்டு சட்டசபையில் உட்கார்ந்து கொண்டு உங்களுக்கும் அவர்களுக்கும் திருப்தி ஏற்படும்



படியாக ஏதோ இரண்டு கேள்வி கேட்டதாகப் பாவனை காட்டிவிட்டு உங்களையும் பொது ஜனங்களையும் வஞ்சிக்கிற காரியங்களுக்காக சர்க்கா ருக்கு உள் உளவாயிருந்து தங்களுக்குப் பெருமையும், உத்தியோகங்களும், பதவியும் கிடைப்பதற்கும், தங்கள் சொந்தக் காரியங்கள் ஏதாவது சாதித்துக் கொள்ளுவதற்கும் ஆளாகி விடுகிறார்கள். வரி குறைப்பதும் சம்பளம் கூட்டுவதும் ஒன்றுக்கொன்று பொருந்தாத விஷயம். வரியையும் குறைத்து உங்கள் சம்பளத்தையும் உயர்த்த வேண்டுமானால் பெரிய உத்தியோகஸ் தர்களுடைய சம்பளத்தையும் நான் மேலே சொன்ன வீண் செலவுகளையும் குறைக்கும்படிச் சொல்லுவதற்கு இவர்களுக்கு தைரியம் வேண்டும். இவர் களே மாதம் 2000, 3000, 4000, 5000 ரூபாய்கள் சம்பளம் வாங்கிக்கொண்டு மந்திரி, தலைவர் முதலிய பதவிகளுக்கு ஆசைப்பட்டுக் கொண்டும், இவர்களே இப்பேர்பட்ட பதவிகளை மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்து, அவர்களை ஆதரித்து அதன் மூலம் தாங்கள் பிழைக்கப் பிரயத்தனப்பட்டுக் கொண்டும் இவர்களுடைய செலவுக்கே தினம் 10, 15, 40, 50 வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொண்டும் இவர்கள் போக்குவரத்துக்கே முதலாவது இரண்டாவது வகுப்பு இரட்டைப் படிகள் வாங்கிக் கொண்டும், இவர்கள் நடவடிக்கை நடத்தும் கட்டடங்களுக்கே 2 லக்ஷம், 3 லக்ஷம், 2 கோடி, 4 கோடி அனுமதித்துக் கொண்டு ராஜபோகமனுபவிப்பவர்கள் வேறு யாருடைய எந்தச் செலவைக் குறைத்து வரி உயர்த்தாமல் உங்களுக்கு சம்பளத்தை அதிகப்படுத்தக்கூடும் என்பதை யோசித்துப் பாருங்கள். ஆகவே, இவ்வித அரசியல் புரட்டுகள் நமது நாட்டில் உள்ள வரையிலும் உங்களைப் போன்ற வர்கள் இவர்களை ஆதரித்து இப்புரட்டர்களை மரியாதை செய்கிறவரை யிலும் உங்களுக்கு மாத்திரமல்ல இந்த நாட்டுக்கே விமோசனம் இல்லை யென்பதுதான் என் அபிப்ராயம். இனியாவது இந்த அரசியல் புரட்டர்களின் சூழ்ச்சிகளிலிருந்து தப்புவீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

## முடிவுரை

எனவே, இவை ஒவ்வொன்றையும், இன்னமும் கிளரக் கிளர மிகவும் மோசமாகவேதான் வந்து கொண்டிருக்கும். இம்மகாநாட்டைப் பொறுத்த வரையிலும் இதிலேற்பட்டிருக்கிற சில தீர்மானங்களைப் பொறுத்தவரை யிலும் உங்களுக்கிருக்கும் கஷ்டங்களையும் குறைகளையுமறிந்து நான் மிகவும் அனுதாபப்படுகிறேன். உங்களுக்கு இன்னும் சம்பளம் மரியாதை முதலியன உயரவேண்டு மென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதற் காக நீங்கள் செய்யும் கிளர்ச்சிகளில் கலந்துகொள்ள எனக்கும் ஆசையிருக் கிறது. ஆனால் அந்நோக்கங்களையும், கிளர்ச்சிகளையும் உங்கள் சுய நன்மைக்கு மாத்திர மென்றில்லாமல் நமது மக்களின் உண்மையான ஆரம்பாசிரியராய் இருக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். கல்வி விஷயத்தில் நமது நாட்டுக்கு ஏற்பட வேண்டிய திருத்தத்தில், உங்களு



RangaRakes tamilnavarasam.com

டைய உதவியும், தாலூகா, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி முதலியவற்றின் உதவியும் ரொம்பவும் வேண்டியிருக்கிறது. உண்மையான தேசாபிமானக் கண்ணோடு பார்ப்பீர்களானால் உங்களுக்கு இவைகளெல்லாம் விளங்காமற் போகாது. இங்கு விஜயம் செய்திருக்கும் தாலூகா, ஜில்லா, போர்டு அங்கத்தினர்களையும், தலைவர்களையும் இவ்விஷயங்களையெல்லாம் கவனித்து உங்களுக்கு அநுகூலமாயிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். என்னை நீங்கள் ஒரு பொருட்டாய் மதித்துத் தலைவனாகத் தேர்ந்தெடுத்ததற்கு என் மனதில் சரியென்று பட்டதை உங்கள் முன் கொஞ்சமும் ஒளிக்காமல் பேசியிருக்கிறேன். இவற்றுள் கொள்ளத்தக்கதும் தள்ளத்தக்கதும் இருக்கலாமென்று நினைக்கிறேன். ஆதலால் உங்களுடைய அறிவையும் ஆற்றலையும் இவைகளுள் செலுத்தி தள்ளத் தக்கதைத் தள்ளி, கொள்ளத்தக்கதைக் கொண்டு அமுலில் கொண்டுவர வேண்டுகிறேன்.

*குறிப்பு : 24.4.27 போளூர் ஆரம்பாசிரியர் மாநாடு தலைமையுரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 01.05.1927**



# நமது பத்திரிகை

சகோதர வாசகர்களே !

நமது "குடி அரசு" ஆரம்பமாகி இரண்டு வருஷம் முடிந்து மூன்றாவது வருஷத்தின் முதல் இதழ் இன்று வெளியாகிறது. "குடி அரசு" ஆரம்ப இதழில் "குடி அரசு" என்று ஒரு தலையங்கமும், ஆறு மாதம் கழிந்து "நமது பத்திரிகை" என்று ஒரு தலையங்கமும் ஒரு வருஷம் முடிந்து இரண்டாவது வருஷ ஆரம்பத்தில் "நமது பத்திரிகை" என்று ஒரு தலையங்கமும் எழுதி இருக்கிறோம்.

இப்போது இரண்டு வருஷம் முடிந்து மூன்றாவது வருஷ ஆரம்ப முதல் இதழிலும் அவ்வாறே "நமது பத்திரிகை" என்று தலையங்கமிட்டு ஒரு குறிப்பு எழுத ஆசைப்படுகிறோம்.

நமது நாட்டு மக்களுக்குள் சுயமரியாதையும் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் உண்டாக்கக் "குடி அரசு" என்னும் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும் என்பதாக முதல் முதல் நானும் எனது நண்பர் ஸ்ரீமான் தங்கபெருமாள் பிள்ளையும் 1922ல் கோயமுத்தூர் ஜெயிலில் சிறைவாசம் செய்யும் போதே நினைத்தோம். அதுபோலவே வெளியில் வந்த கொஞ்ச நாட்களுக்குள் "குடி அரசு" என்று ஒரு வாரப் பத்திரிகையும், "கொங்கு நாடு" என்று ஒரு மாதாந்திரமும் நடத்தப் போவதாய் 19.1.23 தேதியில் சர்க்காரில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

இவ்விஷயத்தை முதலில் ஸ்ரீமான் திரு.வி.கல்யாணசுந்தர முதலியார் அவர்களிடம் சொன்னேன். அவர் எனது கொள்கையை கேட்டவுடன் சந்தோஷப்பட்டு "இப்படி ஒரு பத்திரிகை வேண்டியது தான். அதற்கு நீயே சரியானவன். நீ ஆரம்பித்தால் தமிழ் நாட்டிலேயே பதினாயிரக்கணக்கான சந்தாதாரர்கள் சேருவார்கள். ஆனால் அதிக நாள் நிலைக்காது. ஒரு கூட்டத்தார் எப்படியாவது அதை ஒழித்து விடுவார்கள். ஆனாலும், நடந்த வரை லாபம், நடத்துங்கள்" என்றார். பிறகு ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களிடம் சொன்னேன். அவரும் மிகச் சந்தோஷப்பட்டு "சீக்கிரத்தில் வெளியாக்க வேண்டுமென்று விரும்புவதாகவும், வெளியாகத் தாமத



RangaRakes tamilnavarasam.com

மேற்பட்டால் அதுவரை தனது பத்திரிகையில் வேண்டுமானாலும் எழுதி வரும் படியும் சொன்னார்." பிறகு ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களிடம் சொன்னேன். அவர் "இந்தச் சமயம் இப்படிப்பட்ட பத்திரிகை கூடாது. அல்லாமலும் மகாத்மா ஜெயிலில் இருக்கும்போது இதை விட்டு விட்டு நீ பத்திரிகை நடத்தப் போவது சரியல்ல. உன்னுடைய சேவை இது சமயம் மிகவும் அவசியமானது ஆனதால் கண்டிப்பாய்ப் போகக் கூடாது" என்று சொல்லி விட்டார். அதன் பேரில் அந்த எண்ணத்தை ஒத்தி வைத்து விட்டு மறுபடியும் ஒத்துழையாமைக்காகவே உழைத்தேன். தற்செயலாய் வைக்கம் சத்தியாக்கிரகம் ஏற்பட்டது. ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப் அவர்களும் வைக்கத்திலிருந்து "என்னை பிடிக்கப் போகிறார்கள். நான் இதோ ஜெயிலுக்குப் போகிறேன். வேறு யாரும் இல்லை. நீ வந்து ஒப்புக்கொள்" என்று எழுதின கடிதமும் தந்தியும் என்னைக் குடும்பத்துடன் வைக்கத்திற்குப் போகும்படி செய்து விட்டது. அங்கு ஜெயிலில் இருக்கும்போதும் இதே எண்ணம்தான். அதாவது வெளியில் போனதும் பத்திரிகை நடத்த வேண்டும் என்கிற ஆவல் அதிகமாயிற்று. அதுபோலவே வெளியில் வந்ததும் பத்திரிகை ஆரம்பிக்கத் தீர்மானித்து விட்டேன். அதற்கேற்றாற்போல் திருப் பாப்புலியூர் ஞானியார் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக மெய்ஞான சிவாச் சார்ய சுவாமிகளும் கோயம்புத்தூருக்கு வந்திருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டு அவர்களை இங்கு அழைத்து அவர்களைக் கொண்டே ஆரம்ப விழா நடத்திவிடலாம் என நினைத்து, கோயம்புத்தூர் சென்று அழைத்ததும், யாதொரு ஆக்ஷேபணையும் சொல்லாமல் அவர்கள் ஒப்புக்கொண்டு ஈரோட்டிற்கு வந்து, ஆரம்ப விழா நடத்திக் கொடுத்தார்கள். அது சமயம் பத்திரிகாலயத்தைத் திறந்து வைக்கும்படி ஞானியார் சுவாமிகளை கேட்டுக்கொண்ட போது, "அநேக பத்திரிகைகள் நமது நாட்டிடை இருந்தா லும் அவைகள் தங்கள் மனச்சாக்ஷிக்கு உண்மை என்று பட்டதை தெரிவிக்க அஞ்சுகின்றன. அதனால்தான் நான் இப்பத்திரிகை ஆரம்பிக்கிறேன். மற்றப் பத்திரிகை போலல்லாமல் மனதில் பட்டதைத் தைரியமாய் பொது ஜனங்க ளுக்கு உள்ளது உள்ளபடி தெரிவிக்க வேண்டுமென்பது எமது நோக்கம்" என்று சொல்லி இருக்கிறேன். ஞானியார் சுவாமிகளும் பத்திரிகாலயத்தைத் திறக்கும்போது, நமது நாட்டில் பல பத்திரிகை இருந்தும் இப்பத்திரிகை போன்ற கருத்துடைய பத்திரிகை வேறொன்றுமில்லை.

"உயர்வு தாழ்வு என்கிற ஆணவம் மிகுந்திருக்கிறது." "சமத்துவம் என்ற உணர்ச்சி எங்கும் பரவ வேண்டும்." "குடி அரசின்" கருத்து இதுவே என நான் அறிந்துகொண்டேன்.

"சமயத்திலிருக்கும் கேட்டை முதலில் ஒழிக்க வேண்டும்." "இவை குடி அரசின் முதல் கொள்கையாய் விளங்க வேண்டும்." இப் பத்திரிகையில் ஸ்ரீமான் நாயக்கருக்கு எவ்வளவு சிரத்தை உண்டோ அவ்வளவு எனக்கும்



உண்டு" என்று ஆசிர்வதித்திருக்கிறார். முதல் இதழ் தலையங்கத்திலும் நமது நோக்கத்தை வெளியிட்ட தலையங்கத்திலும் நாம் குறிப்பிட்டிருப்பதாவது,

"ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும்". "இதை அறவே விடுத்து வெறும் தேசம், தேசம் என்று கூக்குரல் இடுவது எமது பத்திரிகையின் நோக்கமன்று."

"மக்களுக்குள் சுயமரியாதையும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டும்."

"உயர்வு தாழ்வு என்ற உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாக இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்றெண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்." ................இன்னோறென்ன பிற நறுங்குணங்கள் நம் மக்கள் அடையப்பாடுபடுவது நமது நோக்கமாகும்."

"எவர் எனக்கு இனியர் இவர் எனக்கு இன்னார் என்ற விருப்பு வெறுப்பின்றி,"

**"நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக் கண்மேச் சென்றிடித்தற் பொருட்டு"** என்ற வாக்கைக் கடைபிடித்து நண்பரே யாயினுமாகுக. அவர்தம் சொல்லும் செயலும் கேடு சூழ்வதாயின் அஞ்சாது கண்டித்தொதுக் கப்படும்........" என்று எழுதி இருக்கிறோம். இவையாவும் 2-5-25 தேதி குடி அரசில் காணலாம்.

அடுத்தபடி ஆறு மாதம் முடிந்த இதழில் 'நமது பத்திரிகை' என்னும் தலையங்கத்திலும்,

"குடி அரசு" குறிப்பிட்ட கருத்தைப் பிரசாரம் செய்யும் பத்திரிகையே அல்லாமல் வெறும் வர்த்தமானப் பத்திரிகை அல்லவாதலால் .........பிரதி வாரமும் 'குடி அரசு' தனது ஆத்மாவை வெளிப்படுத்தும் (தத்துவத்தை விளக்கும்) போது கண்ணீர் கொட்டாமலிருக்க முடிவதே இல்லை. இதன் பலனால் உயர்ந்தோர் என்று சொல்லிக் கொள்வோராகிய பிராமணர் முதலிய சமூகத்தாருக்கும், ராஜீயத் தலைவர் என்று சொல்வோராகிய பல ராஜ தந்திரி களுக்கும் விரோதியாகவும் அவர்களுடைய சூழ்ச்சிகளுக்கும் நமது 'குடி அரசு' ஆளாக வேண்டியிருப்பதால் இது சீக்கிரத்தில் பாமர ஜனங்களின் செல்வாக்கைப் பெற முடியாமலிருப்பது ஆச்சரியமல்ல என்றும்,

"உண்மையில் 'குடி அரசுக்கு' எந்த பிராமணனிடத்தும் குரோதமோ வெறுப்போ கிடையாது. ஆனால் பிராமணன் உயர்ந்தவன் என்றும்,



RangaRakes tamilnavarasam.com

மற்றவர்கள் தீண்டாதவர்கள், தெருவில் நடக்கக் கூடாதவர்கள் என்பன போன்ற இழிவான மிருக உரிமைக்கும் பாத்திரமில்லாதவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணத்தினிடத்திலும், தங்கள் வகுப்பார் தான் முன்னணியில் இருக்க வேண்டும், மேன்மையுடன் பிழைக்க வேண்டும், மற்றவர்கள் என்றென்றைக்கும் தங்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டு அதற்காகச் செய்யும் சூழ்ச்சிகளிடத்திலும் தான் குடி அரசுக்குக் குரோதமும் வெறுப்பும் இருப்பதுடன், அதை அடியோடே களைந் தெறிய வேண்டும் என்ற ஆவல் கொண்டு உழைத்து வருகிறது" என்றும்,

"குடி அரசு" ஏற்பட்டு ஆறுமாத காலமாகியும், அது வரை ஆயிரத்துச் சில்லரை சந்தாதாரர்களே சேர்ந்திருக்கிறார்கள், அதனைப் படிக்க வேண்டிய அளவு ஜனங்கள் படிக்கவில்லை என்றும், பாமர ஜனங்கள் சரியானபடி குடி அரசை ஆதரிக்கவில்லையானால் அது தானாகவே மறைந்து போகவேண்டியதுதான் அதன் கடமையே அல்லாமல் வியாபார தோரணையாய் நடந்து வராது" என்றும் எழுதியிருந்தது, (இதை 1-11-25 தேதி இதழிற் பார்க்கலாம்).

பிறகு ஒரு வருஷம் முடிந்து, இரண்டாவது வருஷ ஆரம்ப இதழில் "நமது பத்திரிகை" என்ற தலையங்கத்திலும், "இதுவரை நமக்குள்ள 2000 சந்தாதாரர் களில் நால்வர் அதிருப்திக்கே ஆளாகிறோம் என்று எழுதிவிட்டு, "குடி அரசு" எவருடைய தயவுக்கோ, முகஸ்துதிக்கோ, சுயநல வாழ்வுக்கோ, கீர்த்திக்கோ, நடைபெற வில்லை. யோக்கியமாய் உண்மையாய் நடக்கக் கூடிய காலம் வரை நடக்கும். அவ்விதம் நடக்க அதற்கு யோக்கியதை இல்லையானால், அது தானே மறைந்து விடுமே யல்லாமல், மானங்கெட்டு விலங்குகளைப் போல் வாழாது, "குடி அரசு" தோன்றிய பிறகு அது ராஜீய உலகத்திலும், சமூக உலகத்திலும், பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது, என்று பலர் நமக்கு எழுதியிருப்பதை நாமும் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோம், என்றும் எழுதி இருக்கிறோம்.

ஆகவே, இப்போது இரண்டு வருடங்கள் முடிந்து மூன்றாவது வருடம் ஆரம்ப இதழில் அதே தலையங்கத்துடன் ஒரு குறிப்பு எழுத ஆசைப்படுகிறோம். முதலாவதாக, ஒரு விஷயத்தைத் தெரியப்படுத்துகிறோம். அதாவது "குடி அரசு"க்கு ஆறு மாதத்தில் ஆயிரம் சந்தாதாரர்களும், ஒரு வருஷத்தில் இரண்டாயிரம் சந்தாதாரர்களும் இப்போது இரண்டு வருஷத்தில் நாலாயிரத்து ஐந்நூறு சந்தாதாரர்களும் இருப்பதால் கூடுமான வரையில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று இருக்கிறது என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

"ஆரம்பத்திலிருந்து இதுவரை முன்னாற் குறிப்பிட்ட கொள்கைகளில், அது ஒரு சிறிதும் தவறாமல் ஏற்றுக் கொண்டபடி நடந்து வந்திருக்கிறது என்பதையும் மெய்ப்பித்து விட்டோம். ஆகவே, "குடி அரசு" குறைந்தது ஒரு பதினாயிரம் பிரதிகளாவது அச்சிட்டு வெளியாக வேண்டும் என்கிற ஆசை நமக்கு இருந்தாலும் இந்நாலாயிரத்து ஐந்நூறைக் கொண்டு நான் சந்தோஷமடைகிறேனே தவிர, ஒரு சிறிதும் அதிருப்தி அடையவில்லை. அன்றியும், எமது விருப்பத்தை நிறைவேற்ற அநேக நண்பர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். 250 சந்தாதாரர்களை ஏற்படுத்திக் கொடுத்தும் இனியும் இருநூற்றைம்பது சந்தாதாரர்களை ஒரு மாதத்தில் சேர்ப்பதாய் வாக்களித்த சிங்கப்பூர் நண்பர்களுக்கும், மற்றும் 250 சந்தாதாரர்களை எதிர்பார்க்கும் மலேயா நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். தமிழ்நாட்டிலும், ஊர்கள் தோறும் "குடி அரசின்" வளர்ச்சியையும் பரவுதலையும் எம்மைவிட அதிக கவலை கொண்டு எதிர்பார்க்கும் நண்பர்கள் பலர் இருக்கிறார்கள், என்பதும் எனக்குத் தெரியும். அவர்கள் "குடி அரசு"க்காக உழைத்து வந்ததற்கும், சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்ததற்காகவும் "குடி அரசு"க் கொள்கைகளைப் பரப்பப் பாடுபட்டதற்கும், நான் மனப்பூர்வமாய் நன்றி செலுத்துகிறேன். "குடி அரசு"க்கு இரண்டாவது வருடத்தில் நஷ்டமில்லை. முதல் வருடத்தின் நஷ்டம் அடைபட வேண்டும். ஆனால் இன்னமும் கொஞ்சம் நல்ல இதழில் இன்னும் நாலு பக்கம் அதிகப்படுத்த வேண்டும் என்கிற ஆவல் இருந்து வருகிறது. இக் காரியங்களுக்கு இப்போது ஆகும் செலவை விட இன்னமும் வருஷம் ஒன்றுக்கு 2000 ரூ. அதிகமாகச் செலவு பிடிக்கும். இனியும் கொஞ்சம் சந்தாதாரர்கள் அதிகமானால் இவைகளைச் செய்ய சௌகரியமாயிருக்கும்.இவ்வருஷம் புதிதாகச் சொல்வதற்கு ஒன்றும் அதிகமாய் இல்லை என்றே நினைக்கிறேன்.

பொதுவாக நமது பிரசங்கத்தினாலும் "குடி அரசி"னாலும் நான் செய்து வந்த பிரசாரத்தில் அரசியல் இயக்கங்கள் என்பவைகளைக் கண்டித்தேன், அரசியல் தலைவர்கள் என்பவர்களைக் கண்டித்தேன், மதம் என்பதைக் கண்டித்தேன், மதத் தலைவர்கள் என்பவர்களைக் கண்டித்தேன், மதச்சடங்கு என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன்; குருக்கள் என்பவர்களைக் கண்டித்திருக்கிறேன்; கோவில் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; சாமி என்பதைக் கண்டித்திருக்கிறேன்; வேதம் என்று சொல்வதைக் கண்டித்திருக்கிறேன்; சாஸ்திரம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; புராணம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; பார்ப்பனீயம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; ஜாதி என்பதைக் கண்டித்திருக்கிறேன்; அரசாங்கம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; உத்தியோகம் என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன்; நீதி ஸ்தலம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; நியாயாதிபதி என்பவர்களைக் கண்டித்திருக்கிறேன்; நிர்வாக ஸ்தலங்கள் என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன்; ஜனப் பிரதிநிதித்துவம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; பிரதிநிதிகள் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; தேர்தல் என்பதைக் கண்டித்திருக்கிறேன்;


RangaRakes
tamilnavarasam.com

கல்வி என்பதைக் கண்டித்திருக்கிறேன்; சுயராஜ்யம் என்பதைக் கண்டித்திருக் கிறேன்; ஸ்ரீமான்கள் கல்யாணசுந்தர முதலியார், வரதராஜுலு நாயுடு, சி. ராஜகோபாலாச்சாரியார் முதலிய ஒரே துறையில் வேலை செய்து வந்த நண்பர்களைக் கண்டித்திருக்கிறேன்; இன்னும் என்னென்னவற்றை யோ யார் யாரையோ கண்டித்திருக்கிறேன், கோபம் வரும்படி வைதும் இருக்கிறேன்; எதைக் கண்டித்திருக்கிறேன், எதைக்கண்டிக்கவில்லை என்பது எனக்கு ஞாபகத்திற்கு வரமாட்டேன் என்கிறது. இன்னமும் ஏதாவது எழுதலாம் என்று பேனாவை எடுத்தாலும், பேசலாம் என்று வாயைத் திறந்தாலும் கண்டிக்கவும் வையவும் துக்கப்படவுமான நிலைமை ஏற்படுகிறதே ஒழிய வேறில்லை. கண்டிக்கத்தகாத, வையத்தகாத இயக்கமோ, திட்டமோ, அபிப்பிராயமோ என் கண்களுக்குப் படமாட்டேன் என்கிறது. இவைகளன்றி எனது வார்த்தை களும், எழுத்துகளும், செய்கைகளும் தேசத் துரோகமென்றும், வகுப்புத் துவேஷமென்றும், பிராமணத் துவேசமென்றும், மான நஷ்டமென்றும், அவ தூறு என்றும், ராஜதுரோகம் என்றும், ராஜத் துவேஷமென்றும், நாஸ்திக மென்றும், மத தூஷணை என்றும், சிலர் சொல்லவும் ஆத்திரப் படவும் ஆளானேன். அரசியல் தலைவர்கள், தேசாபிமானிகள், தேசபக்தர்கள் என்பவர்கள் என்னை வையவும் என்னை தண்டித்து ஜெயிலில் வைக்கும்படி அரசாங்கத்தைக் கெஞ்சவும் ஆளானேன். இந்த இன்பமற்ற காரியங்களை நான் ஏன் செய்ய வேண்டும்? சிலருக்காவது மன வருத்தத்தையும், அதிருப்தி யையும் கொடுக்கத்தக்க காரியத்தை ஏன் செய்ய வேண்டும்? என்று நானே யோசிப்பதுண்டு. சிற்சில சமயங்களில் யாரோ எப்படியோ போகட்டும், நாம் ஏன் இக்கவலையும் இவ்வளவு தொல்லையும் அடையவேண்டும்? நமக்கென்ன இதனால் ஜீவனமா? பணம், புகழ், கீர்த்தி, சம்பாதனையா? ஏன் நமக்கு இத்தனை எதிரிகள்? ஒரு பத்திரிகையாவது உதவியுண்டா? ஒரு தலைவராவது உதவியுண்டா? ஒரு தேச பக்தராவது உதவியுண்டா? இமயமலை வெய்யிலில் காய்கிறது என்று குடை பிடிப்பது போல் இருக்கிறது என்பதாக நினைத்து விலகி விடலாமா என்று யோசிப்பதுமுண்டு. ஆனால் விலகுவதில் தான் என்ன லாபம்? ஏறக்குறைய நமது ஆயுள் காலமும் தீர்ந்துவிட்டது. இனி நாலோ அய்ந்தோ அல்லது அதிகமாயிருந்தால் பத்து வயது காலமோ இருக்கலாம். இந்த கொஞ்ச காலத்தை ஏன் நமது மனச் சாட்சிக்கு விட்டு விடக் கூடாது? விலகித்தான் என்ன பெரிய காரியம் செய்யப் போகிறோம்? என்பதாக கருதி மறுபடியும் இதிலேயே உழன்று கொண்டிருக்கிறோமே அல்லாமல் வேறில்லை. உண்மையில் நாம் முன் சொன்ன அரசியல் மத விஷயம் முதலியதுகளைக் கண்டிக்க நேரிட்டபோது உண்மையான அரசியல் மத இயல் இவைகளை நாம் கண்டிக் கவே இல்லை. எதைப் பார்த்தாலும் புரட்டும், பித்தலாட்டமும் பெயரைப் பார்த்து ஏமாறத் தகுந்ததாயிருக்கிறதே அல்லாமல் தத்துவங்கள் எல்லாம் நமக்கும் நமது நாட்டுக்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகவும் கொஞ்சங் கூட ரிபேர் செய்வதற்கில்லாமல் அடியோடு அழித்து மறுபடியும் புதிதாய் உண்டாக்க



வேண்டியதாகவே இருக்கிறது. நமது காலத்தில் இவை திருத்தப்பாடடையும் என்கின்ற நம்பிக்கை கொஞ்சமும் இல்லா விட்டாலும் வேறு யாராவது மகாத்மாவைப் போன்ற மகான்கள் வந்தால் அவர்களுக்கு பக்குவம் செய்து வைத்திருக்கக் கூடாதா என்றும், அதுவும் முடியாவிட்டால் பலன் எப்படி யானாலும் கடமையைச் செய்ய வேண்டியதுதானே என்கிற முடிவும் கிடைக்கிறது. ஆகவே, இக்கஷ்டமானதும், மனதுக்கு இன்பத்தைக் கொடுக் கக்கூடுமானதுமான இக்காரியத்தில் இறங்கிவிட்டோம். உலகம் ஒப்புக் கொண்டாலும் சரி தள்ளிவிட்டாலும் சரி நமக்கு அதைப்பற்றி கவலை யில்லை. நமது கடமையை எப்படி நாம் பிரதானமாய்க் கருதி இறங்கி இருக்கி றோமோ அது போலவே பொது ஜனங்களும், அதாவது இக்கடமையைச் சரி என்று எண்ணியவர்கள் தங்கள் தங்களது கடமையையும் எண்ணி அக் கடமையைச் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 01.05.1927**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ் புரட்டு

காங்கிரஸ் என்கிற புரட்டு என்றைக்கு நம்ம நாட்டை விட்டு ஒழியு மோ, அன்றுதான் நம்ம நாடு ஒரு சமயம் ஏழைகள் கஷ்ட மொழிந்து மக்கள் சமத்துவமடைந்து ஒற்றுமை ஏற்பட்டு தரித்திரம் நீங்கி விடுதலை அடைவ தானால் அடையக்கூடும் என்றும், எதுவரை இக்காங்கிரஸ் புரட்டு நமது நாட்டில் இருக்குமோ அதுவரை நமது நாட்டில் தற்காலமிருந்துவரும் கஷ்டங் கள் கொஞ்சமும் நீங்க இடமில்லாமல் மேலும் மேலும் ஊர்ந்து கொண்டே வருவதுடன் படித்த கூட்டமும், பணக்காரக் கூட்டமும் மாத்திரம் சில நாளைக்கு இனியும் கொஞ்சம் மேன்மையாய் வாழ்ந்துவிட்டு பிறகு எல்லோ ருமே நீங்கினவர் போலவும் வாலில்லாத குரங்கு போலவும் வாழவேண்டியது தானே ஒழிய வேறில்லை என்பது நமது அபிப்ராயம் என்பதாகப் பல தடவைகளில் எடுத்துக் காட்டியிருக்கிறோம். எவ்வளவு தூரம் நாம் எடுத்துக் காட்டியும் இன்னமும் மக்களை காங்கிரஸ் பெயரைச் சொல்லி ஏமாற்றும் கூட்டத்தார் கொஞ்சமும் இதை லக்ஷியம் செய்யாமல் மக்களின் அறியாமை யை உபயோகப்படுத்திக் கொண்டு எடுத்ததற்கு எல்லாம் காங்கிரசு காங்கிரசு என்று பேசி பாமர மக்களைக் குட்டிச் சுவராக்கி வருகிறார்கள். ஏனெனில் இந்த காங்கிரஸ் மந்திரத்தை பார்ப்பனரும் அவர்கள் கொள்கை கொண்ட பார்ப்பனரல்லாதாரும் மற்றும் பல பொறுப்பற்ற ஆசாமிகளும் தாங்கள் தங்கள் சுயநலத்திற்கு ஒரு பெரிய சாதனமாகக் கொண்டுவிட்டார்கள். இதை மாற்றும்படிச் செய்வதென்றால் பெரிய கஷ்டப்படவேண்டிய நிலைமையில் இருக்கிறது. தூங்குபவர்களை எழுப்புவதென்றால் சாதாரணமாய் ஒரு சப்தத் திலோ இரண்டு அல்லது மூன்று சப்தத்திலோ எழுப்பி விடலாம். தூக்கம் இல்லாமல் தூங்குவது போல வேஷம் போடுகிறவர்களை எப்படி எழுப்ப முடியும். கைகால் ஒடியும்படி தட்டினால் ஒழிய ஒருக்காலமும் எழுந்திருக்க மாட்டார்கள் என்பதே நமது அபிப்பிராயம். நாம் காங்கிரஸின் புரட்டுக்களை கண்டிக்கும் போதும் அதை ஒழிக்க வேண்டும் என்று சொல்லும்போதும் விளக்கமாகவும், விபரமாகவும் ஒவ்வொரு விஷயமாய் எடுத்து பிரித்துப் பிரித்துச் சொல்லி அது ஏற்பட்டது முதல் அது ஏற்படாததற்கு முன் முதல் உள்ள நிலைமையும் அதனால் நமது நாட்டிற்கும் குறிப்பாய் ஏழை மக்க ளுக்கும் தொழிலாளிகளுக்கும் குடியானவர்களுக்கும் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்களுக்கும் ஏற்பட்ட கஷ்டங்களையும் நாட்டின் செல்வ நிலைமை, கைத்தொழில் நிலைமை, வியாபார நிலைமை, விவசாய நிலைமை,



நாணய நிலைமை, ஒழுக்க நிலைமை, நீதி நிர்வாக நிலைமை முதலியது களையும் ஒவ்வொன்றாய் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். நன்றாய் எழுதியும் வந்திருக்கிறோம். அநேகரிடம் நேரில் பேசி அவர்களை ஒப்புக் கொள்ளும்படி செய்தும் வந்திருக்கிறோம். இவ்வளவையும் தெரிந்த பலரும் பல பத்திரிகைக்காரர்களும் இவைகளுக்குக் கொஞ்சமாவது சமாதானம் சொல்லாமல் ஒன்றும் தெரியாதவர்களைப் போல் மறுபடியும் பேச்சு பேச்சுக்கு காங்கிரஸ் காங்கிரஸ் என்று பேசியும் எழுதியும் வருகிறார்கள். சிலர் தாங்களாகப் பார்ப்பனரைத் திட்ட வேண்டிய சமயம் வந்தால் மாத்திரம் அந்த சமயம் 2 வார்த்தை ஜாடை மாடையாகக் காங்கிரசைக் கண்டித்து விட்டு அதுவும் தாங்கள் மறுபடியும் புரண்டு கொள்வதற்கு இடமிருக்கும்படியாக வைதுவிட்டு தங்களுக்கு அவசியமிருக்கும் போது திரும்பவும் காங்கிரஸ் காங்கிரஸ் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். இது சமயம் சென்னை மாகாணத்திலாவது தமிழ் நாட்டிலாவது காங்கிரஸ் பேரைச் சொல்லாமல் நமது பத்திரிகை 'குடி அரசைத்' தவிர ஒன்று கூட இல்லை என்றே சொல்ல லாம். ஏறக்குறைய எல்லாத் தலைவர்கள் என்போர்களும், தேசாபிமானிகள் என்போரும், தேசபக்தர்கள் என்போரும் இதே மந்திரமாகத்தான் இருக் கிறார்கள். சென்ற தேர்தலில் காங்கிரஸ் புரட்டுக்குக் கொஞ்சம் வெற்றி ஏற் பட்டு விட்டதாக ஏற்பட்ட பிறகு ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த சிலரும், ஜஸ்டிஸ் கட்சிப் பத்திரிகைகளுக்கும் கூட அந்த மயக்கம் கொஞ்சம் ஏற்பட்டிருப்பதாக நமக்குத் தெரியவருகிறது. ஆகவே, இவற்றை இப்படியே விட்டுக் கொண்டு வந்தால் சில படித்தவர்களும், சில பத்திரிகைக்காரரும், சில தேசீயத் தலைவர்கள், தேசபக்தர்கள், தேசாபிமானிகள் என்போர்களும் ஏதோ ஒரு விதத்தில் பதவி, பட்டம், உத்தியோகம், வயிர்பிழைப்பு முதலியதுகள் பெற்று காலம் கழித்து வரலாமே அல்லாமல் ஒருக் காலமும் நமது நாடு முன் சொன்ன கேடுகள் நீங்கி முன்னேற்றமடையும் என்கிற எண்ணமே கடுகளவாவது நமக்கு இல்லை. அதோடும் முன் சொன்னது போலவே பாழாகிவிடுமென்றே சொல்லு வோம்.

மகாத்மா ஆதிக்கத்திலிருந்த காங்கிரசை நீக்கி இப்போதிய காங் கிரசை நாம் பேசுகிறோம். காங்கிரஸ் என்றால் என்ன? அது கொள்கைக்காக மதிக்கப்படுவதா? அதன் பெயருக்காக மதிக்கப்படுவதா? அதனால் ஏற்படும் பலனுக்காக மதிக்கப்படுவதா? இந்தியா அரசியலில் முன்னேற்றம டைய சுயராஜ்யம் பெற இந்தியர்களால் ஏற்படுத்திக் கொண்ட ஒரு மகாசபை அல்லது ஒரு இயக்கம் அல்லது ஒரு ஸ்தாபனம் என்பதானால் சுயராஜ்யம் என்றால் என்ன? இந்த சுயராஜ்யத்திற்கு காங்கிரஸ் திட்டமென்ன? இந்தியர் கள் என்றால் யார்? அவர்களில் யார் யார் காங்கிரஸில் சேர்ந்திருக்கிறார்கள்?

பெரும்பான்மையான இந்திய மக்கள் வாழவும் பெரும்பான்மை யான இந்தியக் குறைகள் நீங்கவும் காங்கிரசில் என்ன திட்டம் இருக்கிறது. இது நிற்க, காங்கிரஸ் ஏற்பட்ட பிறகு இந்திய மக்களுக்கு அது எந்தத் துறை யில்



RangaRakes tamilnavarasam.com

அனுகூலம் செய்து இருக்கிறது? அது ஏற்படாததற்கு முன் அத்துறைகள் எப்படி இருந்தது? அதனால் நமக்கு ஏற்பட்ட லாபம் என்ன? காங்கிரசுக்கு முன்னால் அரசியலில் நமது சுதந்திரம் என்ன? இப்போது என்ன ? காங்கி ரசுக்கு முன்னால் நமது அரசியல் செலவு என்ன? காங்கிரசுக்கு முன்னால் நாம் செலுத்திய வரி என்ன? இப்போது என்ன? காங்கிரசுக்கு முன்னால் நமக்குள் இருந்த ஒற்றுமை என்ன? இப்போது என்ன? காங்கிரசுக்கு முன் னால் பார்ப்பனரல்லாதார் நிலைமை என்ன? இப்போது என்ன? காங்கிரசுக்கு முன் பார்ப்பனர் நிலைமை என்ன? இப்போது என்ன? காங்கிரசுக்கு முன் னால் அரசாங்கத்தார் நம்மிடம் வைத்து இருந்த மதிப்பு என்ன? இப்போது என்ன? காங்கிரசுக்கு முன்னால் நீதி வழங்கும் முறை என்ன? இப்போது என்ன? காங்கிரசுக்கு முன்னால் மக்கள் அறிவு, ஒழுக்கம், நாணையம் இதுகள் எப்படி இருந்தது. இப்போது எப்படி இருக்கிறது ?

காங்கிரஸ் ஒரு கூட்டத்தினர்க்கே நலனை அளித்து மற்றொரு கூட்டத்திற்கு இழிவை அளிப்பதானால் அது பொது இயக்கமாகுமா? இந்தியாவில் உள்ள பல வகுப்பார் அதாவது மகம்மதியர், கிறித்தவர், மகமதிய ரல்லாதார், தீண்டாதார், சீக்கியர், புத்தர், பார்சி, யூதர் முதலிய பல வகுப் பாரிலும் உள்ள பெரும்பான்மையான மக்கள் காங்கிரஸை ஒப்புக் கொள்ளு கிறார்களா அல்லது அந்தந்த சமூக வகுப்பு மகாநாடுகள் காங்கிரசை ஒப்புக் கொள்ளுகிறதா?

ஏழரை கோடி மக்களுள்ள முஸ்லீம்களின் சங்கங்கள் காங்கிரசை ஒப்புக்கொள்ளுகின்றதா? 6 கோடி உள்ள தீண்டாதார் அல்லது தாழ்த்தப் பட்டவர்கள் என்பவர்கள் காங்கிரசை ஒப்புக் கொள்ளுகிறார்களா? புத்த சமூகமும் சீக்கிய சமூகமும் காங்கிரசை ஒப்புக் கொள்ளுகின்றதா? சுமார் 12 கோடிக்கு மேல்பட்ட மகமதியரல்லாதாராகிய இந்துக்கள் என்று சொல்லிக் கொள்வோர் தங்களுக்கு உள்ள இந்து மகாசபை மூலமாகவோ, பார்ப்பன சபை மூலமாகவோ, ஆரிய சபை மூலமாகவோ, பார்ப்பனரல்லாதார் சபை மூலமாகவோ மற்றும் பல வகுப்பு சமூக மூலமாகவோ காங்கிரசு ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறதா? இச்சபைகளை அரசாங்கமாவது ஒப்புக் கொண்டிருக்கிறதா?

அல்லது அரசியலுக்கு காங்கிரஸ் ஒன்றுதான்; அதைவிட வேறு ஸ்தானம் இல்லை என்பதையாவது காங்கிரஸ் சொல்ல முடியுமா? மிதவாதக் கட்சி, ஓம் ரூல் கட்சி, சுயேச்சை கட்சி, ஜஸ்டிஸ் கட்சி ஆகியதுகளைவிட சர்க்காரில் காங்கிரசுக்கு என்ன அதிகமான மரியாதை இருக்கிறது? நாட்டி லாவது என்ன மரியாதை இருக்கிறது? காங்கிரசுக்கு நிலையான ஒரு குறிப் பிட்ட கொள்கை என்ன இருக்கிறது? அதற்கெனக் குறிப்பிட்ட நாணயம் என்ன இருக்கிறது? சுமார் நாற்பது வருஷத்துக்குள்ளாக காங்கிரஸ் எந்தெந்த கட்சியார் கைக்குப் போய் வந்திருக்கிறது? காங்கிரசைக் கைப்பற்றுபவர் தன்



இஷ்டம் போல் காங்கிரசை நடத்தக்கூடியதாய் இருக்கிறதே அல்லாமல், காங்கிரசில் சேருகிறவர்கள் காங்கிரஸ் சொல்கிறபடி நடக்க வேண்டும் என்கிறதாக ஏதாவது நிபந்தனை இருக்கிறதா?

அது ஏதாவது ஒரு சட்டப்படி கட்டுப்பட்ட சபையா? அதற்கு ஏதாவது கொள்கை, விதி முதலியதுகள் ஏற்படுத்தி மக்கள் கட்டுப்படத் தகுந்த மாதிரி சட்டப்படிப் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா? அல்லது கட்டுப்பட வேண்டிய அவசியமிருக்கிறதா? அல்லது யோக்கியர்கள் நாணயக்காரர்கள் ஒழுக்கமுள் ளவர்கள் ஆகியவர்கள் தவிர மற்றவர்களை அதில் சேர்க்க முடியாதபடி அதற்கு ஏதாவது பந்தோபஸ்து ஏற்படுத்தி இருக்கிறதா? நாளைக்கு வேறு ஒரு மனிதன் 10 லக்ஷமோ, 20 லக்ஷமோ, 1 கோடியோ ரூபாய் சிலவு செய்தால் காங்கிரசைத் தன் இஷ்டப்படியெல்லாம் திருப்ப முடியுமா முடியாதா? சர்க்காருக்கு உள் உளவாயிருந்து அரசாங்கத்திற்கும் ஏதோ ஒரு வகுப்புக்கும் அநுகூலமாகவும் தேசத்திற்கும் மற்ற வகுப்பாருக்கும் ஆபத்தாகவும் காங்கி ரசில் தீர்மானங்கள் நிறைவேற்ற முடியுமா முடியாதா? அப்படி இதுவரை நடக்கவில்லை என்பதாக யாராவது உறுதி கூறமுடியுமா?

இம்மாதிரி பொருப்பில்லாததும், எடுப்பார் கைக்குழந்தையாகவும் கைப் பிடித்தவனுக்கெல்லாம் பெண்டாகவும் உள்ளதும் அயோக்கியர் களுக்கும் துரோகிகளுக்கும் தங்கள் தங்கள் இஷ்டம் போல் காரியத்தைச் சாதித்துக் கொள்ளக்கூடியதுமான ஒரு ஸ்தாபனத்தை இதெல்லாம் தெரிந்தும் தேசப் பொது ஸ்தாபனமென்று யாராவது சொல்வார்களானால் அவர்கள் அறிவாளிகளா? யோக்கியர்களா? ஸ்ரீமான்கள் ஸ்ரீனிவாசய்யங்காரும் எ.ரங்கசாமி ஐயங்காரும் உண்மையிலேயே நமது நாட்டு பொது அரசியல் ஸ்தாபனம் என்பதற்கு முறையே தலைவராகவும், காரியதரிசியாகவும் இருக்க யோக்கியதை உள்ளவர்களா? இவர்களைத் தெரிந்தெடுக்கும் ஜனங்களும் ஸ்தாபனங்களும் ஜனப் பிரதிநிதியாவார்களா? ஜனப் பிரதிநிதியாக யோக்கி யதை உடையவர்களா? அல்லாமலும் இவற்றைச் சொல்லுவதினாலேயே நம்மை காங்கிரஸ் காங்கிரஸ் என்று கத்துகிறவர்களை விட தேசாபிமானத் தில் குறைந்தவன் என்று யாராவது சொல்லக்கூடுமா? இதைத்தவிர தேசாபி மானி என்று காட்டிக் கொள்வதற்கு உள்ள பரீக்ஷை எதிலாவது மற்றவர் களைவிட நாம் குறைந்திருக்கிறோமா? அல்லது நமக்கு தேசாபிமானம் இருக்க நியாயமில்லை என்று சொல்லுவதற்கு ஏதாவது இரகசியமோ ஆதாரமோ இருக்கிறதா?

"காங்கிரஸ் பிரசாரம் செய்கிறவர்கள் அதிகமான கஷ்டமும் தியாக மும் அடையவும், செய்யவும் வேண்டியிருக்கிறது. அதற்கு எதிர்பிரசாரம் செய்கிற நமக்கு சுகமும் லாபமும் இருக்கிறது" என்று யாராவது சொல்ல முடியுமா? காங்கிரசிலிருப்பவர்களுக்கு இன்னமும் பதவியும், பட்டமும், உத்தியோகமும், அவர்கள் பிள்ளை குட்டிகளுக்கு உத்தியோகமும் சர்க்கார்



RangaRakes tamilnavarasam.com

சிநேகமும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. காங்கிரசின் புரட்டுகளை எடுத்துக்காட்டி கண்டிக்கிற நமக்கு இன்னமும் எங்கு போனாலும் ரகசியப் போலீசு துடர்ந்து கொண்டும் போகிற இடங்களிலெல்லாம் வந்து துப்பு விசாரிப்பதும் சில இடங்களில் பேசுவதை எழுதிக்கொண்டு போவதுமாகத் தான் இருந்து வருகின்றது. அன்றியும் காங்கிரஸ் பெயரை சொல்லிக் கொண்டு காங்கிரஸ் பிரசாரம் செய்கிற ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், ரங்கசாமி ஐயங்கார், சத்தியமூர்த்தி, எம்.கே. ஆச்சாரி, பி. வரதராஜுலு நாயுடு, திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஆகிய தலைவர்களானாலும் சரி அவர்கள் எவ்வளவு தூரம் சர்க்கார் உத்திரவையோ சட்டத்தையோ மீறக்கூடிய தைரியமோ அல்லது ஜெயிலுக்குப் போகக்கூடிய துணிவோ அல்லது சர்க்கார் நடத்தையைக் கண்டிக்கக் கூடிய பான்மையோ ஆகியவற்றை விட நம் போன்றவர்கள் ஏதாவது பயந்தோ பின்வாங்கியோ அலக்ஷியமாக இருக்கிறோம் என்பதாக யாராவது சொல்லக் கூடுமா? காங்கிரஸ் தலைவர்கள், பக்தர்கள், பிரசாரகர்கள் இவர்கள் காங்கிரசின் பேர் சொல்வதன் மூலம் அடையும் நஷ்டத்தை விட கொஞ்சமாவது அல்லது லாபத்தை விட அதிகமாகவாவது காங்கிரசை கண்டிப்பதன் மூலம் நாம் அடைகிறோமா? இவைகளை பொதுஜனங்கள் யோசிக்க வேண்டும். வெறும் குருட்டு பக்தியாலும் மூட நம்பிக்கையாலும் தேசம் பாழாகப் போகவிடக் கூடாது. நாம் இப்படி எழுதுவதைப் பார்த்து சில மூடபக்தியும் குருட்டு நம்பிக்கையுமுள்ள நண்பர்கள் உண்மையிலேயே நம்மீது கோபம் கொள்ளுவார்கள்.

இக்காங்கிரஸ் புரட்டைப் போலவே மதப் புரட்டையும் வெளியிலெடுத்துச் சொல்லும்போது "நீ, வேறு எதை வேண்டுமானாலும் வைது கொள். மதத்தைப் பற்றி மாத்திரம் ஒன்றும் பேசாதே. அதன் முறைகளை வேண்டுமானால் திருத்தப் பாடுபடு. அடியோடு மதத்தையே குற்றம் சொன்னால் அது மகாபாதகமாகும்" என்று சொல்ல வருகிறார்கள். ஆனால் மதம் என்றால் என்ன? என்று கேட்டால் "இதெல்லாம் விதண்டாவாதம்" என்கிறார்கள். இதுபோலவே காங்கிரசும் இருக்கிறது. இதில் ஒரு விசேஷம் மத சம்மந்தமானவர்கள் "நீ காங்கிரசைப் பற்றி சொல்வது சரி மதம் அப்படியல்ல" என்கிறார்கள். காங்கிரஸ் சம்மந்தமானவர்கள் "நீ மதத்தைப் பற்றி சொல்வது சரி காங்கிரஸ் அப்படியல்ல" என்கிறார்கள். ஆகவே, இவ்விரண்டும் சிலர் வாழப் பலரைப் பலிகொடுக்கும் ஸாதனங்களே அல்லாமல் வேறல்ல. ஆன போதிலும் காங்கிரஸ் என்பதைப்பற்றி சில விஷயங்கள் கவனிக்கும்படி வேண்டுகிறோம்.

அன்புள்ள வாசகர்களே!

காங்கிரசினால் தேசம் இதுவரை பாழானது போதும். பார்ப்பனர்கள் பதவியும், உத்தியோகமும் பெற்றது போதும். பார்ப்பனரல்லாதார் கீழ்நிலைக்கு வந்தது போதும். காங்கிரஸ் பேரைச் சொல்லிக்கொண்டு பலர்



வயிறு வளர்ப்பது போதும். இனியாவது கொஞ்சம் ஏழை மக்களையும் தொழிலாளர்களையும் குடியானவர்களையும் திரும்பிப் பாருங்கள். மகாத்மா காந்தியை விட இந்த காங்கிரஸ் பக்தர்கள் பெரிய தேசாபிமானிகள் என்று எண்ணி ஏமாறாதீர்கள்.

மகாத்மா காங்கிரசில் இருந்த காரணமே 36 வருஷ காங்கிரஸ், நாட்டுக்கும் பல சமூகங்களுக்கும், ஏழைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் செய்த கொடுமையை விலக்கத்தானேயல்லாமல் வேறல்ல. அது முடியாது என்று தெரிந்த உடனேதான், தான் வேறு ஒரு இயக்கத்தை ஆரம்பித்துக் கொண்டு மெல்ல நழுவி விட்டார். மகாத்மாவைப் பூஜிக்கிறவர்கள் அவரது கொள்கைக்கு காங்கிரசில் இடம் வைத்திருக்கிறார்களா?

இக்காங்கிரஸ் கொள்கையை மகாத்மா ஒப்புக் கொள்ளுகிறாரா? போறாக் குறைக்கு தொழிலாளர்களை காங்கிரசில் சேரும்படி சில காங்கிரசின் தலைவர்கள் அதாவது ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடுவும், கலியாணசுந்தர முதலியாரும் சொல்ல ஆரம்பித்திருப்பதைப் பார்க்கும்போது நமக்கு வயிறு பற்றி எரிகிறது. தொழிலாளர்கள் கெடவேண்டுமானால் இப்போதிருப்பதை விட இன்னமும் கேவலமான நிலைமைக்கு வந்து மிருக நிலை அடைய வேண்டுமானால் தொழிலாளர் காங்கிரசில் சேரட்டும். தொழிலாளர்கள் உண்மையான தொழிலாளர்களாகி தொழிலாளர்களாலேயே உலகம் முன்னுக்கு வரத்தக்க யோக்யதை ஏற்பட்டு தொழிலாளர்களே இந்நாட்டில் ஆட்சி செலுத்தத்தக்க யோக்யதை ஏற்பட வேண்டுமானால் அவர்கள் காங்கிரசை விட்டு விலகி இருப்பதோடு காங்கிரசு என்று சொல்லுகிறவர்களையும் தங்கள் கூட்டத்தில் சேர்க்காமல் இருக்கட்டும் என்று வற்புறுத்திக் கூறுகிறோம். தொழிலாளிகள் முதலாளிகளிடம் சிக்கிக்கொண்டு படுகிற பாடு போராமல் எரியும் நெருப்புக்கு எண்ணை ஊற்றுவது போல் காங்கிரசுக்காரரிடமும் சிக்கிக்கொண்டு சீரழிய வைப்பது பெரிய பாவம் என்றே சொல்லுவோம். முதலாளிகளின் கொள்கைகளை விட காங்கிரஸ்காரர்களின் கொள்கை ஒரு விதத்திலும் யோக்கியமானதல்ல. காங்கிரஸ்காரர்கள் தொழிலாளிகளுக்குப் பொறி வைப்பது "அங்கேண்டி மகளே ஆலாய் பறக்கிறாய் இங்கே வா காற்றாய்ப் பறக்கலாம்" என்பது போலிருக்கிறது அல்லாமல் வேறில்லை. காங்கிரசினால் வரப்போகும் சீர்திருத்தம், சுயராஜ்யம் இவைகளை விட வெள்ளைக்காரர் தானாகவே செய்யும் சீர்திருத்தம் மேலான தென்றே சொல்லலாம். அவன் ஒன்றும் செய்யாவிட்டாலும் இவ்வளவு மோசம் ஏற்படாமலாவதிருக்கும்.

காங்கிரஸ் என்ற பெயர் வைத்து அதிலிருந்த தலைவர்கள் என்பவர்கள் பொதுமக்களின் பணத்தில் ஆளுக்கு 1000, 2000, 3000, 5000, 7000 சம்பளமுள்ள உத்தியோகங்களை ஏதோ சிலர் பார்த்து வருவதால் நாட்டிற்கு



RangaRakes tamilnavarasam.com

வந்த லாபமென்ன இந்த உத்தியோகம் இவர்களுக்கு இல்லாத காலத்தில் அனுபவித்த நாட்டுக் கெடுதி என்ன.

சட்டசபையில் 128 பிரதிநிதிகள் ஏற்பட்டதால் நாட்டுக்கு ஏற்பட்ட நன்மை என்ன இவர்கள் இல்லாததால் நாட்டிற்கு என்ன கெடுதி ஏற்படக் கூடும்.

வாசகர்களே! தொழிலாளர்களை விட குடியானவர்கள் அதாவது விவசாயக்காரர்கள் காங்கிரசில் சேருவது அவர்களுக்கு மிகவும் ஆபத்தானது என்று சொல்லுவோம். எந்த சீர்திருத்தம் வந்தாலும் எந்த உத்தியோகம் ஏற்பட்டாலும் அது நாள் முதல் குடியானவர்களின் தலையில்தான் கை வைக்கும். ஏனென்றால் இத்தனை புது உத்தியோகத்திற்கும் இத்தனை புது பிரதிநிதித்துவத்திற்கும் ஏற்படும் செலவு சுற்றிச் சுற்றி எப்படிப் பார்த்தாலும் குடியானவன் தலையில் தான் கையை வைத்து ஆகவேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது. காங்கிரசினால் ஏற்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் கொடுக்கவே அனேகமாய் தபால், கார்டு, கவர், ரயில் சார்ஜ் முதல் சகல வரியும் உயர்த்தப்பட்டதே அல்லாமல் வேறில்லை. வெள்ளைக் காரருக்கு மாத்திரம் சம்பளம் கொடுக்க வேண்டுமானால் நாம் இப்போது கொடுத்துவரும் வரியில் பகுதி வரி கொடுத்தால் போதுமானது. சர்க்காருக்கு எந்தவிதமான வரி யார் கொடுத்தாலும் அது கடைசியாக குடியான வனைத்தான் பிடிக்கும் என்பதை குடியானவர்கள் மறந்துவிடக்கூடாது. ஆதலால்தான் காங்கிரஸ் குடியானவர்களுக்கு எமனாகத் தோன்றி இருக்கிறது என்று சொல்லுகிறோம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கோ காங்கிரஸ் என்பது பெரிய ஆபத்தான சாதனமாகும். அவர்களுக்கு இதுவரையில் காங்கிரசினால் ஒரு பயனும் ஏற்பட்டதில்லை என்பதும், அவர்களுக்கு இருக்கும் கஷ்டத்தைப் போக்கி மனிதத் தன்மையை உண்டாக்க காங்கிரசினிடத்தில் ஒரு கொள்கையும் இல்லையென்பதும், அவர்களுடைய முன்னேற்றமெல்லாம் கூடியவரையில் சர்க்காராலேயே செய்ததாய் ஏற்பட்டிருக்கிறது என்பதும், தாழ்த்தப்பட்ட மக்கள் பேரையும் சொல்லிக்கொண்டு சிலர் காங்கிரசின் பெயரால் பெற்ற பலன்களில் ஒரு சிறிதும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவவே இல்லை என்பதும் யாரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். அதோடு அச் சமூகத்தார்களும் இதை நன்றாய் அறிந்திருக்கிறார்கள். ஆனதால் அவர்களைப்பற்றி நாம் அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

வியாபாரிகளைப் பற்றி நமக்கு அதிக கவலை இல்லை. ஏனெனில் அவர்கள் உத்தியோகஸ்தர்களுக்கு அடுத்தவர்கள். சர்க்காரால் என்ன வரி ஏற்படுத்தினாலும் அதற்கு மேல் லாபம் வைத்து விற்பவர்கள். தவிரவும் இன்னமும் கொஞ்சகாலத்தில் கடலைப்பொரி, சுருட்டு, சிகரெட்டு, வெத்திலை,



பாக்கு வியாபாரம் போக மற்ற வியாபார மெல்லாம் இனிமேல் நமது நாட்டில் வெள்ளைக்காரர்களாலேயே நடைபெறப் போகிறது. ஏனெனில் வெள்ளைக் காரர்கள் சீமை முதலிய இடங்களில் இருந்துகொண்டு இந்தியாவில் வியாபாரம் செய்வதை விட இங்கு வந்து இருந்துகொண்டு வியாபாரம் செய்வது அவர்களுக்கு அதிகமான லாபத்தை கொடுக்கக்கூடியதாகும். முதலாவது சாமான் போக்குவரத்து செலவு குறையும். இரண்டாவது அங்கிருந்து இங்கு வரவும் இங்கிருந்து அங்கு போகவும் சாமான்களின் மீது ஏற்படும் வரி குறையும், மூன்றாவது கூலி ஆள்களும் குமாஸ்தாக்களும் சீமையில் கிடைப்பதை விட அரைக் கூலி கால் கூலியில் கிடைக்கும். அம் முதலாளி களுக்கு வேண்டிய சவுகரியம் செய்து கொடுப்பதற்கு நமது நாட்டில் படித்த வகுப்பார் என்கிற பார்ப்பனக் கூட்டமும் தயாராயிருக்கிறது. அல்லாமலும் இப்போது ஆங்கிலேயர் மற்ற நாட்டாருடன் வியாபாரத்தில் போட்டி போட முடியாமலிருப்பதாலும் சுங்க உபத்திரவத்தாலும் இங்கேயே தொழில் செய்ய வேண்டியது அவர்களுக்கு அவசியமாய் போய்விட்டது. அல்லாமலும் இப்போதைய வியாபார முறையும் குடியானவர்களைப் பாழாக்குவதாக இருக்கிறதே அல்லாமல் வேறில்லை. ஆதலால்தான் வியாபாரிகளைப் பற்றி நமக்கு அதிக கவலையில்லை என்கிறோம்.

படித்தவர்கள் விஷயமோ காங்கிரசை நம்பித்தான் படிக்கிறார்கள். ஆதலால் அவர்கள் காங்கிரசில் சேர்ந்தால்தான் உத்தியோகம் பெருத்த சம்பளம் முதலியதுகள் கிடைக்கும். மற்றபடி வெறும் ஆசாமிகளைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. இப்பொழுது வர வர வயிற்றுப் பாட்டிற்கு அதுவும் சோம்பேறி வயிற்றுப் பாட்டிற்கு காங்கிரசு ஒரு சரியான துறையாய் ஏற்பட்டு விட்டது. மகாத்மாவின் 2,3 வருஷத்திய வேலையின் பலனாகவும், ஒரு கோடி ரூபாய் செலவின் பலனாகவும், பல ஆயிரம் பேர் ஜெயிலுக்குப் போனதின் பலனாகவும் காங்கிரசிற்கு பாமர மக்களிடையே கொஞ்சம் நல்ல பெயர் வந்துவிட்டதால் அதன் பெயரைச் சொல்லிக் கொண்டு பிழைப்பதற்கு வெகுபேருக்கு சவுகரியம் ஏற்பட்டு விட்டது. ஆதலால் வெறும் ஆசாமிகளைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டிய தில்லை. ஆகவே தொழிலாளி, விவசாயி, தாழ்த்தப்பட்டவர்கள் ஆகிய மூன்று பேர் விஷயத்தில் நாம் அதிகமாக எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 08.05.1927**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பன நிருபர்களின் சக்தி

இந்திய சட்டசபையில், சட்டசபை நடந்து கொண்டிருந்த காலத்தில் சென்னையில் உள்ள "இந்து பத்திரிகை"க்கும் "மெயில் பத்திரிகை"க்கும் ஒரே நிருபர் இருந்து கொண்டு இரண்டு பத்திரிகைக்கும் இரண்டுவிதமான சமாச்சாரத்தை அனுப்பி வந்தாராம். 'இந்து' வுக்கு எழுதும்போது ஒரே கையில், ஒரே பேனாவில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரைப் பற்றி எழுதும் போது ஸ்ரீமான் அய்யங்கார் வந்தவுடன் எல்லோரும் கரகோஷம் செய் தார்கள், அற்புதமாய் பேசினார். வெள்ளைக்காரர்கள் வாயை அடக்கி திக்கு முக்காட வைத்து விட்டார், புது புது யோசனைகள் வெகு யுக்தி யுக்தியாகப் பேசினாராம், அவரே தலைவர் பதவிக்குத் தகுந்தவர் என்று பேசிக் கொண்டார்கள் என்று எழுதுவதும், அதே கை அதே பேனாவில் "மெயி" லுக்கு எழுதும் போது ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் "குரங்கு" குல்லாயுடன் உள்ளே நுழையும் போது எல்லோரும் பரிகாசம் செய்து சிரித்தார்கள் என்றும் இவர்தானா சீனிவாசய்யங்கார்? கொஞ்சமாவது புத்தியில்லையே! சட்டசபை விதிகள் கூட தெரியவில்லையே, இவர் தலைமை வகித்ததற்குத் தானா காங்கிரஸ் என்று பெயர். இவரை எப்படி காங்கிரசுக்கு தலைவராக்கினார்கள். சீனிவாசய்யங்கார் இந்திய சட்டசபைக்கு வராமலிருந்தாலே அவருக்குக் கொஞ்சம் பெருமை மீதியாயிருக்கலாம் என்றும், இவர் பேசும் போதெல்லாம் சட்டசபை இவரை பரிகாசம் செய்வதே வேலை யென்றும் - எழுதுவதும், அதே கையில் அதே பேனாவில் அசோசியேட்பிரசுக்கு எழுதும்போது அதற்குத் தகுந்த மாதிரி எழுதுவதும் ஆகியவைகளை ஒருவரே செய்வ தானால் அது எவ்வளவு ஆச்சரியம்?

**குடி அரசு - கட்டுரை - 08.05.1927**



# பொதுப் பணம் போகும் வழி

வங்காளத்தில் கிராம சீர்திருத்தம் என்பதாக தேசபந்து தாஸ் பேரைச் சொல்லி பொது ஜனங்களிடம் நிறைய பணம் வசூலித்து கடைசியாக அந்தப் பணத்தை சுயராஜ்ஜியக் கக்ஷி தேர்தலுக்கு உபயோகப்படுத்திக் கொண்டதாக கோர்ட்டில் விவகாரம் நடக்கிறது. இங்கும் அதுபோலவே குறிப்பிட்ட காரியங்களுக்கென்று ஒதுக்கி வைத்த ரூபாய்களும் வசூலித்த ரூபாய்களும் தேர்தல்களுக்கே சிலவாகி வருகிறது. ஆனாலும் இங்கு கோர்ட்டில் வியாஜ் ஜியம் போட ஆளில்லை. பின்னையோ மேலும் மேலும் பணம் கொடுக்கத் தான் ஏராளமான சோணகிரிகள் இருக்கிறார்கள்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 08.05.1927**



RangaRakes tamilnavarasam.com





# பார்ப்பனரல்லாதார் மகாநாடு

மதுரை பார்ப்பனரல்லாதார் மகாநாட்டிற்குப் பிறகு அம்மகாநாட்டின் தீர்மானங்களைத் தமிழ்நாட்டில் அமுலில் கொண்டு வருவதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஜில்லா மகாநாடு கூட்டவேண்டுமென்று 3, 4 மாதங்களாகவே எழுதி வந்திருப்பது வாசகர்களுக்குத் தெரியும். ஆனால் சில ஜில்லாக்கள் இதைப்பற்றி எவ்விதக் கவலையும் எடுத்துக் கொண்டதாக தெரியவேயில்லை. தஞ்சை, கோயமுத்தூர், சேலம், வடஆற்காடு ஆகிய ஜில்லாக்கள் மாத்திரம் மகாநாடு கூட்டும் விஷயத்தில் முயற்சி எடுத்துக் கொண்டிருப்பது வெளிப்படையாய் தெரியவருகிறது. மற்றும் இரண்டொரு ஜில்லாக்கள் நமக்கு மாத்திரம் தனித்த முறையில் தெரியப்படுத்தி இருக்கிறதே அல்லாமல் காரியத்தில் எவ்வித முயற்சியும் எடுத்துக் கொண்டதாய் தெரியவில்லை. கோயமுத்தூர் ஜில்லாவில் இம்மாத மத்தியில் மகாநாட்டை நடத்துவதாயிருந்ததானது சிலரின் சௌகரியத்தை உத்தேசித்து அடுத்த மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டு விட்டது. ஆனபோதிலும் மகாநாட்டிற்காக ஆக வேண்டிய விஷயங்களை கோயமுத்தூர் பிரமுகர்களான ஸ்ரீமான்கள் வெரிவாட செட்டியார், சம்மந்த முதலியார், இரத்தினசபாபதி முதலியார், சாத்தப்ப செட்டியார், இரத்தினசபாபதி கவுண்டர், PSG.வெங்கிடுசாமி நாயுடு, அருணாசலம் செட்டியார் முதலிய கனவான்கள் வெகு ஊக்கமாகக் கவனித்து வருகிறார்கள். இதுவரை ஏரக்குறைய 2500 ரூபாய் வரை வசூலும் செய்து விட்டார்கள். மற்றபடி வட ஆற்காடு ஜில்லாக்காரரும் கூடுமானவரை ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். பல காரணங்களால் ஒத்தி வைக்க நேரிட்டாலும் சீக்கிரம் நடைபெறும். சேலம் மகாநாடும் சீக்கிரத்தில் நடைபெறலாம். ஆனால் அந்த ஜில்லா பிரமுகர்கள் இது சமயம் ஜில்லாபோர்டு தேர்தல்களில் ஈடுபட்டிருப்பதால் இது முடிந்த பிறகு தான் கவனிக்கக்கூடும் என்றும் நினைக்க வேண்டி இருக்கிறது.

மற்றபடி தஞ்சை ஜில்லா மகாநாடோ, நேற்றும் இன்றுமாய் மாயவரத்தில் மயூரமணி ஸ்ரீமான் R. சின்னையாபிள்ளை அவர்கள் முயற்சியிலும் மற்றும் பல கனவான்கள் முயற்சியாலும் மலையாளம் ஸ்ரீமான் திவான்பகதூர் M. கிருஷ்ணன் நாயர் B.A.B.L., M.L.C. அவர்கள் தலைமையின் கீழ் சிறப்பாக நடைபெறுகிறது. வரவேற்புத் தலைவரான மயூரமணி சின்னையாபிள்ளை அவர்களின் வரவேற்புப் பிரசங்கம் இனியும் நமது கைக்கு கிடைக்கவில்லை.



RangaRakes
tamilnavarasam.com

மகாநாட்டின் அக்கிராசனரான திவான் பகதூர் கிருஷ்ணன் நாயரின் அக்கிராசனப் பிரசங்கத்தை இன்று மற்றோரிடத்தில் பிரசுரித்திருக்கிறோம். அதை ஒவ்வொருவரும் தயவு செய்து ஊன்றிப் படிக்க வேண்டுமாய் கோரு கிறோம். திவான் பகதூர் நாயர் அவர்கள் தனது பிரசங்கத்தில் முதலாவது பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் தத்துவத்தைப் பற்றியும் கொள்கைகளைப் பற்றியும் அது ஜனநாயகத்திற்கு பாடுபடுவதாகும் என்பதைப் பற்றியும் வெகு விளக்கமாக எடுத்துச் சொல்லியிருப்பதோடு சுயநலக்காரர் இவ்வியக்கத்தின் மீது கூறப்படும் பழிகளுக்குச் சரியான ஆணித்தரமான பதில்களும் சொல்லி யிருக்கிறார். அவற்றுள் உத்தியோக வேட்டை என்பதைப்பற்றி சொல்லி யிருக்கும் விஷயத்தை நடுநிலைமைக்காரர் எவர் படித்துப் பார்த்தாலும், எவ்வளவு அறியாதவராயிருந்தாலும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் தத்துவம் இன்னது என்பது விளங்கிவிடும்.

பிறகு தேசத்தின் பெரும்பகுதியினரான விவசாயிகளின் விஷயமாய் சாச்வத நிலத்தீர்வையின் அவஸ்யத்தைப் பற்றியும் அதற்காக அவர்கள் வெகுநாளாக பாடுபட்டு வந்திருப்பதைப் பற்றியும் சொல்லியிருக்கிறார். அதன்பிறகு நமது மாகாண அரசியல் நிலையைப் பற்றியதாக தற்கால மந்திரி சபையைப் பற்றியும் அதன் ஊழல்களைப் பற்றியும் அதனால் நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஏற்படும் கெடுதியைப் பற்றியும் உள்ளது உள்ள படி எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதன்பிறகு நமது நாட்டுக் காங்கிரசின் யோக்கியதையையும் காங்கிரஸ் பக்தர்களான சுயராஜ்யக் கக்ஷியாரின் யோக்கியதையையும் அவர்கள் மக்களை ஏமாற்றி துரோகம் செய்த விஷயத் தையும் எடுத்துச் சொல்லியிருப்பதோடு அப்பேரை வைத்துக்கொண்டு பார்ப்பனரல்லாதாருக்குச் செய்துவரும் கெடுதிகளையும் சொல்லியிருக்கிறார். இதில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி என்கிற பார்ப்பனர் கொண்டுவந்த யூனிவர்சிடி அமெண்ட்மெண்ட் பில் என்கிற சர்வகலாசாலை சட்டத்திருத்த மசோதா என்பதையும் அதன் சூழ்ச்சியையும் விளக்கி அதை உதாரணமாகக் காட்டி இருக்கிறார். பிறகு லார்ட் பர்க்கன் ஷெட்டின் பேச்சைப் பற்றியும், இனி அடுத்த நிலைமை என்ன என்பதைப் பற்றியும், வங்காள அடக்குமுறையைப் பற்றியும், தென் ஆப்பிரிக்கா இந்தியர்களைப் பற்றியும் இந்த இயக்கப் பிரசாரத்தைப் பற்றியும் விவாதித்து விவரமாகச் சொல்லியிருக்கிறார். ஆகவே திவான் பகதூர் கிருஷ்ணன் நாயர் சொல்லியிருப்பதுகள் எல்லாம் அநேகமாய் மிகவும் சரியானது என்றே நாம் ஒப்புக்கொள்ளுகிறோமாயினும், இனியும் சொல்லி யிருக்க வேண்டிய இரண்டொரு முக்கிய விஷயங்களைச் சரியாகச் சொல்ல விட்டுவிட்டார் என்றே சொல்லுவோம். அதாவது மதுரை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட நிர்மாணத் திட்டம் என்பதைப் பற்றித்தான். ஏனெனில் எவ்வளவு அரசியல் தத்துவத்தைப் பற்றிப் பேசினாலும் கடைசியில் நாம் செய்யவேண்டிய காரியத்தைப் பற்றியும் பேசினால்தான் அப்பேச்சு முடிவு பெற்றதாகும். அரசியல் திட்டங்கள் என்பதுகளினாலும், அரசியல் இயக்கங்கள் என்பதுகளினாலுமே நமது நாடு இக்கெடுதிக்கு ஆளாயிருக்கிறது என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதிலிருந்து விடுபடவேண்டுமானால் நிர்மாணத் திட்டத்தைத் தவிர வேறு எவ்வழிகளினாலும் முடியவே முடியாது என்பது நமது அபிப்ராயம். மேலே சொல்லியுள்ள குற்றமுள்ளதும் நாணயக் குறைவுள்ளதுமான மந்திரி மார்களின் ஆக்ஷி முறையும், காங்கிரஸ் சுயராஜ்யக்கக்ஷி ஆகியதுகளும் அடியோடு ஒழிந்து போவதாகவோ அல்லது ஜஸ்டிஸ் கக்ஷியார் கைக்கே வந்துவிடுவதாகவோ வைத்துக் கொண்டாலும் இவர்கள் செய்ததைத்தான் ஜஸ்டிஸ் கட்சியாரும் செய்யமுடியுமே அல்லாமல் அதுகளினால் வேறொன் றுமே பிரமாதமாகச் செய்துவிட முடியாது. உதாரணமாக ஜஸ்டிஸ் கட்சியார் ஆதிக்கத்தில் உள்ள காலத்தில் என்ன செய்தார்களோ அதையே தான் என்னென்னமோ கட்சியார் என்று பெயர் சொல்லிக்கொள்ளுகிறவர்களும் செய்கிறார்கள். அதற்கும் இதற்கும் உள்ள ஒரே ஒரு வித்தியாசம் மாத்திரம் என்னவென்றால் ஜஸ்டிஸ் கட்சியார் இதே காரியத்தை நாணயமாகவும், யோக்கியமாகவும், வெளிப்படையாகவும் செய்துவந்தார்கள். மக்களிடத்தில் உண்மையைச் சொல்லி சொன்னது போல் உண்மையாய் நடந்து கொண் டார்கள், காங்கிரஸ் முதலிய கட்சிக்காரர்கள் என்பவர்களோ நாணயக் குறை வாகவும், யோக்கியப் பொருப்பற்ற தனமாகவும், மக்களை ஏமாற்றியதோடு தனித் தனி சுயநலக்காரராயும் நடந்துகொண்டார்கள். ஆனால் இது அவர்கள் குற்றமல்ல. அவ்வியக்கங்களின் தத்துவங்களே அது தான். ஆகவே, நடந்து கொண்ட மாதிரிதான் வித்தியாசமே அல்லாமல் செய்யக்கூடியதில் எல்லாம் ஒன்றே தான். ஆதலால் இவற்றைப்பற்றி நமக்கு அதிகமான கவலை இல்லை. நாட்டுக்கும் மக்களுக்கும் உண்மையான நல்ல பலனை அளிக்கக்கூடிய நிர்மாணத் திட்டத்தினிடம்தான் மக்களின் கவனத்தை இழுக்கும்படிச் செய்ய வேண்டும். அதுவேதான் நமது மகாநாடுகளுக்கு அமுலில் கொண்டுவர வேண்டிய முக்கிய திட்டங்களாகும். இக்காரியங்களைப்பற்றி ஸ்ரீமான் நாடார் முன்னுரை பிரசாரத்தில் சொல்லாவிட்டாலும் அவர் தலைமையில் கூடியுள்ள மகாநாடு செய்து தீருமென்று உறுதியாக நம்பியிருக்கிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 08.05.1927**



RangaRakes
tamilnavarasam.com

# மாயவரம் மகாநாட்டின் எதிரிகளின் சூக்ஷியும் திரு. வி.கலியாணசுந்தர முதலியாரின் விஜயமும்

ஸ்ரீமான் முதலியார் அவர்கள் மாயவரம் மகாநாட்டுக்கு வந்ததும் மகாநாட்டில் அதுசமயம் கூடியிருந்த சுமார் 3000 பேருக்கு மேல்பட்டுள்ள மகாஜனங்கள் செய்த ஆரவாரத்திற்கும் அடைந்த சந்தோஷத்திற்கும் அளவு சொல்ல யாராலும் முடியாது என்றே சொல்லுவோம். ஸ்ரீமான் முதலியார் அவர்களை மாயவரம் மகாநாட்டுக்குப் போகவிடக்கூடாது என்று செய்த சூட்சிகள் கொஞ்சமும் பலிக்கவே இல்லை. உண்மையான தேசபக்தர்கள் மாயவரம் மகாநாட்டுக்குப் போகக்கூடாது என்று ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு தனது 'தமிழ்நாடு' பத்திரிகையில் எழுதி இருந்தது யாவருக்கும் தெரியும். அதோடு 'தமிழ்நாடு' பத்திரிகை ஏஜண்டு ஒருவர் ஸ்ரீமான் முதலியார் அவர்களுக்கு ஒரு பயமுருத்தல் கடிதம் எழுதி அதில் மாயவரத்திற்கு வரக்கூடாது என்றும், வந்தால் கலகம், அடிதடி, மரியாதைக் குறைவு முதலியதுகள் நடக்குமென்றும் குறிப்பிட்டிருந்தார்.

இது சங்கதி ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கருக்குத் தெரிந்ததும் முதலியார் அவர்களுக்கு எப்படியாவது வர வேண்டும் என்றும், மாயவரத் தில் கலகமும் அடிதடியும் நடக்குமானாலும் அதற்குத் தான் ஜவாப்புதாரி என்றும், முதல் அடியைத் தான் பட்டுக்கொள்ளத் தயாராயிருப்பதாகவும், முதலியார் விளம்பரப்படுத்திய பிறகு வராவிட்டால் எதிரிகள் குற்றம் சொல்ல இடமேற்பட்டுவிடும் என்றும் கேட்டுக் கொண்டு வற்புறுத்தி எழுதியதின் பேரில் முதலியார் அவர்கள் தைரியமாய் வர நேரிட்டது. கலகம் செய்வதாய்ப் பயமுறுத்தி முதலியாருக்குக் கடிதம் எழுதியவர்கள் ஸ்ரீமான் பி.வரதராஜுலு நாயுடுக்கு எவ்வளவு வேண்டியவர்களோ அதைவிட கொஞ்சம் அதிக மாகவே நாயக்கருக்கும் வேண்டியவர்களாயிருந்தபடியாலும் அவர்களுக்கு உண்மையான பார்ப்பனரல்லாத சுத்த ரத்தம் சரீரம் முழுவதும் ஓடிக்கொண் டும் கொதித்துக் கொண்டும் இருந்ததாலும் கலகம் என்கிற எண்ணத்தையே மறந்துவிட்டு ஸ்ரீமான் முதலியார் அவர்கள் அக்கிராசனத்திலேயே தீர்மா னங்களைப் பிரேரேபித்து அற்புதமாய்ப் பேசினார்கள். மற்றும் மகா



நாட்டுக்குப் போகக் கூடாது என்று ஜாடை மாடையாகத் தடுக்கப்பட்ட சில பார்ப்பனரல்லாத தேச பக்தர்களும் அதை லட்சியம் செய்யாமல் தாராளமாக மகாநாட்டில் கலந்து உதவி செய்ததும் மிகவும் போற்றத்தக்கது.

மகாநாட்டில் கலவரம் நடக்கும் என்கிற தீர்மானத்தின் பேரில் கலவரத்தைப் பெரிது செய்து பத்திரிகைகளில் எழுதத் தகுந்த மாதிரி அதற்குத் தகுந்த சில நிருபர்களை அனுப்பியும் கூட மகாநாட்டில் ஒரு சிறு கலவரம்கூட நடக்காததால் அனுப்பியவர் ஏமாற்றமடைந்து விட்டார் என்றே சொல்ல வேண்டும். மற்றும் ஜஸ்டிஸ் கட்சியிடமும் மாயவரம் மகா நாட்டினிடமும் பாமர ஜனங்களுக்குக் கெட்ட எண்ணம் ஏற்படும் படி இதில் எழுதுவதற்குத் தகாத எத்தனையோ சூட்சிகள் நடந்தன. ஆனால் அவைகள் ஒன்றும் பயன்பெறாமல் போய் விட்டது. ஆனபோதிலும் மகாநாட்டிற்கு வந்தவர் களில் பெரும்பாலோர் இவைகளை நன்றாய் அறிந்து கொண்டார்கள் என்றே சொல்ல வேண்டும். எப்படி எனில் பிரதிநிதிகள் நாலுபேர் ஐந்து பேர் கூடின இடத்தில் எல்லாம் இதே பேச்சுகள்தானே தவிர வேறில்லை. எனவே நமக்கும் நமது சமூகத்திற்கும் இருக்கும் கஷ்டத்தை இதிலிருந்து கொள்ளும் படி வேண்டுகிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 15.05.1927**



RangaRakes tamilnavarasam.com

# மாயவரம் மகாநாடு

மாயவரத்தில் பார்ப்பனரல்லாதார் மகாநாடும் சமரச சன்மார்க்க மகா நாடும் இளைஞர் மகாநாடும் கூடிக் கலைந்து விட்டது. அதற்குச் சரியென்றும் அவசியமென்றும் தோன்றிய பல தீர்மானங்களும் நிறைவேற்றியிருக்கிறது. இம்மகாநாடு நடந்த சிறப்பும் வந்திருந்த பிரதிநிதிகளும் தமிழ்நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் வந்திருந்த பெரியோர்களும் அவர்கள் ஒவ்வொரு தீர்மானத்தின் மீது பேசிய பேச்சுக்களும் மக்களுக்குப் பிறந்த உற்சாகங் களும் நேரில் பார்த்தவர்களே அறியக்கூடுமேயல்லாமல் மற்றபடி எவ் விதத்திலும் அதை அப்படியே தெரியப் படுத்துவதென்பது மிகவும் கஷ்ட மான காரியமென்றே சொல்லுவோம். இம்மகாநாட்டை நடத்த தஞ்சை ஜில்லா தேசபக்தர்களும் பிரமுகர்களும் உழைத்த உழைப்பு மிகவும் பாராட்டத்தக்க தென்றே சொல்லுவோம். இந்நிலையில் பார்ப்பனரல்லாதார் இயக்கத் தினிடத்தில் பொறாமையும் துவேஷமும் கொண்டு "தமிழ்நாடு" பத்திரிகை செய்த எவ்வளவோ சூழ்ச்சிகளையும் தாண்டி எவ்வளவோ தூரம் சிறப்பாய் நடந்துவிட்டதென்று சொன்னால் யாரும் ஆச்சரியப்பட வேண்டியதுதான். மதுரையில் நடந்த மகாநாட்டின் போதும் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் காங்கிரசில் உழைத்து வந்த சில தேச பக்தர்கள் மதுரை மகா நாட்டுக்குப் போகாமலிருக்கச் செய்வதற்காக மதுரை மகாநாடு நடந்த தேதி யிலேயே தேசீய மகாநாடு என்பதாக ஒரு மகாநாட்டை சென்னையில் நடத்தப் போவதாகத் தெரியப்படுத்தியிருந்ததும், இதன் மூலம் யாரையும் அதிகமாகத் தடுக்க முடியாதென்பதாகத் தெரிந்த பிறகு தனது மகாநாட்டை ஒத்திப் போட்டுவிட்டதாகத் தெரியப்படுத்திவிட்டதையும் இதற்குமுன் நாம் தெரியப்படுத்தியிருக்கிறோம். மாயவரம் மகாநாட்டிலேயும் அது போலவே சில இடையூறுகள் ஏற்பட முயற்சித்திருப்பதையும் வேறு பத்தியில் காணலாம். அப்படியிருந்தும் யாதொரு விக்கினமுமின்றி மகாநாடு செவ்வனே நடைபெற்று விட்டதானாலும் மகாநாடு நடந்த பிறகாவது சும்மா இருந்து விடா மல் மறுபடியும் மகாநாட்டைப் பற்றி 'தமிழ்நாடு' குறைகூறி தனது இயற்கை யைக் காட்டியிருக்கிறது. மே *மீ* 9 -ந் தேதி 'தமிழ்நாடு' பத்திரிகையில் "மாயவரம் மகாநாடு" என்ற தலைப்பின் கீழ் எழுதியிருப்பதாவது:-



1. "மாயவரத்தில் நடந்த ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு முக்கிய விஷயங் களைப்பற்றி யாதொரு தீர்மானமும் செய்யாமல் கலைந்து போய் விட்டது; தஞ்சை ஜில்லாவிலேயே தற்கால முக்கிய விஷயம் தஞ்சை ஜில்லா போர்டு ரயில்வே ஆகும். அது சர்க்காருக்குக் கொடுத்து விடுவதா அல்லது போர்ட் டாரே வைத்துக் கொள்வதா என்பது பற்றி பெரிய வாதம் நடந்து கொண்டி ருக்கும் போது மாயவரம் மகாநாடு அதை கண்ணெடுத்துக் கூடப் பார்க்க வில்லை" யென்று ஒரு குற்றம் சாட்டியிருக்கிறது.

இதன் யோக்கியதையைக் கவனிப்போம். தஞ்சாவூர் ஜில்லா போர்டு ரயில்வே சர்க்காருக்குக் கொடுப்பதில்லை என்பதாக ஏறக்குறைய முன்னமே தீர்மானமாகிவிட்டது. அதன் பேரில் மகாநாடு செய்ய வேண்டிய வேலை ஒன்றுமே அதிகமாக பாக்கியும் இல்லை. அப்படியிருக்க இதை ஒரு பெரிய குற்றமாகக் காட்டி மகாநாட்டைக் கண்டிப்பதன் ரகஸியம் வாசகர்களே உணர்ந்து கொள்ளலாம்.

2. "ஜஸ்டிஸ் கட்சி தேசீயக் கொள்கைகளை ஆதரிக்கப் போகிறதா? இல்லையா? என்பது அதன் தீர்மானங்களிலிருந்து தெரியவில்லை" என்பதாக மற்றொரு குற்றம் சாட்டியிருக்கிறது.

தேசீயக் கொள்கைகள் என்பதைப் பற்றி நாம் பல தடவை எழுதி யிருக்கிறோம். ஆயினும் பல பத்திரிகைகளும் பல தலைவர்களும் தேசீயம் என்கிற வார்த்தையை சுயநலத்துக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் உபயோகப் படுத்திக் கொண்டு வருகிறார்களென்பதை இந்தக் காலத்தில் பெரும்பான்மை யான ஜனங்கள் அறிந்துவிட்டதால் நாம் அதைப்பற்றி மறுபடியும் அதிகம் இதுசமயம் எழுதவில்லை. ஆனாலும், ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு இந்தக் குற்றத்திலிருந்து தப்புவதற்கு மார்க்கமில்லாமல் நடந்துகொண்டது என்று சொல்லுவதற்கு இடமில்லை. அதாவது அதன் கீழாகவே "மாகாண சுயாட்சி" வேண்டுமென்றும், "இந்தியா முழுதிற்கும் பூரண பொறுப்பாட்சி" வேண்டு மென்றும் அதற்காக இந்தியாவிலுள்ள சர்வ கட்சிகளையும் கூட்டிக் கலந்து என்ன செய்ய வேண்டுமென்று யோசிக்க வேண்டும் என்பதாகவும் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருப்பதாகவும் ஒப்புக் கொள்ளு கிறது. இப்படிக்கிருக்க எந்த விதத்தில் 'தமிழ்நாடு' பத்திரிகைக்கு ஜஸ்டிஸ் கட்சியின் தீர்மானங்களிலிருந்து அது தேசீயக் கொள்கைகளை ஒப்புக் கொள்ளுகிறதா இல்லையா என்பது தெரியவில்லையோ அது நமக்கு விளங்கவில்லை.

3. "ஸ்ரீமான் கிருஷ்ணன் நாயர் நிலவரி விஷயமாக எவ்வளவோ பேசினார். அதைப்பற்றி ஒரு தீர்மானத்தையுங் காணோம்" என்று ஒரு குற்றஞ்சாட்டி இருக்கிறது. இது மிகவும் மோசமான காரியம் என்பதோடு "தமிழ்நாடு" பத்திரிகையின் தன்மை எப்படிப்பட்ட



RangaRakes tamilnavarasam.com

தென்பதை இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். "தமிழ்நாடு" பத்திரிகையானது மகாநாட்டில் நடந்த தீர்மானங்களைக் கூட கிரமமாகப் போடாமல் ஜனங்களுக்கு மகாநாட்டின் பேரில் அதிருப்தி ஏற்படும்படி விஷமப் பிரசாரம் செய்யவும் தைரியம் கொண்டுவிட்டது.

இந்த மகாநாட்டில் ரெவின்யூ செட்டில்மெண்டைப் பற்றி ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது ரெவின்யூ செட்டில்மெண்ட் கொள்கைகள் கொண்ட ஒரு மசோதா சட்டசபையில் கொண்டுவர வேண்டுமென்றும், மற்றும் பலவிதமாக வாசகங்கள் கண்டு நிலவரியைப் பற்றி ஒரு தீர் மானம் கொண்டு வந்திருக்கிறது. இப்படியிருக்க அடியோடு தீர்மானமே கொண்டுவரவில்லையென்று குற்றங் கூறுகிறது. "சுயராஜ்யக் கட்சியார் நடத்தையைப் பற்றி ஜஸ்டிஸ் கட்சியார் இனி சட்டசபையில் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப் பற்றி ஒன்றும் தீர்மானம் செய்யவில்லை" யென்று ஒரு குற்றம் சாட்டியிருக்கிறது. அதற்கு நாலு வரிக்கு மேலேயே "மகாநாடு மேட்டூர் தேக்கத்தையும் சர்வகலாசாலை சீர்திருத்த மசோதாவையும் மட்டும் கண்டிக்கத் தவறவில்லை. இதிலிருந்து ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் தங்களுடைய சட்டசபைப் போராட்டத்திற்கு மட்டும் வேண்டியவைகளை கவனித்துக் கொண்டார்கள்" என்று எழுதியிருக்கிறது. இப்படியிருக்க எவ்விதத்தில் ஜஸ்டிஸ் கட்சியார் இனி என்ன செய்யப் போகிறார்கள் என்பதைத் தெரியப்படுத்தவில்லை என்று "தமிழ்நாடு" சொல்வதற்கு நியாயமிருக்கிறது?

5. "ஜஸ்டிஸ் கட்சியாருக்கு மந்திரிப் பதவியில் ஆசை உண்டா? கிடைத்தால் எம்மாதிரி நடந்துகொள்ளப் போகிறார்கள் என்று ஒரு தீர்மான மும் செய்யவில்லை" என்று ஒரு குற்றம் சாட்டியிருக்கிறது. இது எவ்வளவு தூரம் வேண்டுமென்றே அக்கிரமமாகச் சாட்டிய குற்றமென்பதை ஒரு மூடன் கூட சுலபமாக அறிந்து கொள்ளக் கூடுமென்றே நினைக்கிறோம். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் என்போர்கள் மதுரை மகாநாட்டிலேயே இந்த சட்ட சபையில் தாங்கள் மந்திரிப் பதவியை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்ப தாகத் தெரியப் படுத்தி விட்டார்கள். அப்படிக்கிருக்க மாயவரம் மகாநாட்டில் மந்திரிப் பதவியில் ஆசையுண்டா என்பதைப் பற்றியும் கிடைத்தால் எம்மாதிரி நடந்து கொள்ளுவோம் என்பதைப் பற்றியும் தெரிவிக்கவோ தீர்மானம் செய்யவோ இடமெங்கேயிருக்கிறது? என்பதை வாசகர்கள்தான் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

6. "மாகாண சுயாட்சி கேட்பதும் இந்தியாவுக்கு பொறுப்பாட்சி வேண்டுமென்பதும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாயிருக்கிறது" என்பதாக ஒரு குற்றம் சாட்டியிருக்கிறது. நமது மாகாணத்துக்குப் பூரணப் பொறுப்பாட்சி கேட்பதும், இந்தியா ஒட்டுக்கும் பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தைப் பெற திட்டங்களை வகுப்பதற்கு நாட்டிலுள்ள எல்லா அரசியல்வாதிகளுடையவும் மகாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டியதற்கான முயற்சியை சென்னை தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று செய்யப்பட்ட தீர்மானமானது எப்படி ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகும் என்பது நமக்கு விளங்கவில்லை. இதையும் வாசகர்களேதான் யோசித்துக் கொள்ள வேண்டும். தவிர,

7. "ஜஸ்டிஸ் கட்சியார் கேட்பது மாகாண சுயாட்சியா? அல்லது பூரண சுயராஜ்யமா? என்று தெரியவில்லை" என்பதாக ஒரு குற்றம் சாட்டியிருக்கிறது. மாகாணத்துக்குப் பூறா பொறுப்பாட்சியும் கேட்டுவிட்டு, இந்தியா முழுவதுக்கும் பொறுப்பாட்சித் திட்டங்களை வகுக்க எல்லா கட்சியார்களையும் ஒன்று கூட்டி யோசிக்க வேண்டுமென்று சொல்லும் போது "தமிழ் நாடு" பத்திரிகைக்கு எப்படி சந்தேகமேற்பட்டிருக்கிறதென்பது நமக்கு விளங்கவில்லை. தவிர,

8. "பூரண சுயராஜ்யத்திற்கு வேலை செய்ய சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்றால், மாகாண சுயாட்சி பெற ஒரு வேலையும் செய்ய வேண்டாமென்பது அவர்கள் நினைப்பா?" என்று ஒரு கேள்வி கேட்பதன் மூலம் ஒரு குற்றத்தைச் சுமத்தி இருக்கிறது. இந்தக் கேள்வி "தமிழ்நாட்"டிற்கு எப்படி உண்டாயிற்றென்பதே தெரியவில்லை.

9. இவ்வளவையும் எழுதிவிட்டு "இவையெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியாரின் மனக் குழப்பத்தையே காட்டுகின்றன. தேர்தலில் தோற்ற வேகத்தினால் மதுரையில் கூடிப் பல ஆச்சரியமான தீர்மானங்கள் செய்தார்கள். இப்பொழுது கொஞ்சம் காலம் கடந்துவிட்ட போதிலும் அவர்கள் குழப்ப நிலை இன்னும் தெளிவடையவில்லையென்பதையே மாயவர மகாநாட்டுத் தீர்மானங்கள் காட்டுகின்றன" என்று எழுதி கேவலப்படுத்தியிருக்கிறது. எந்தத் தீர்மானத்தின் மூலம் குழப்பமிருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறது? என்பது நமக்கு விளங்கவில்லை.

10. "ஜஸ்டிஸ் கட்சியார் கதர் கட்டிக் கொள்வதும், தீண்டாமை ஒழிக்க வேண்டும், சுயராஜ்யம் வேண்டும் என்று கேட்கத் துணிந்ததும் சென்ற தேர்தலின் பாடம் என்று சொல்லப்படுகிறது" என எழுதியிருக்கிறது. யாரால் சொல்லப் படுகிறதென்பதை எழுதவில்லை. தீண்டாமை ஒழியக்கூடாதென் றாவது, சுயராஜ்யம் வேண்டாமென்றாவது ஜஸ்டிஸ் கட்சியார் எப்போதாவது, எங்காவது சொல்லியிருக்கிறார்களா என்பதை யோசித்துப்பார்க்கும்படி வாசகர்களையே கேட்டுக்கொள்கிறோம்.


RangaRakes
tamilnavarasam.com

11. “ஜஸ்டிஸ் கட்சியாருக்கு இந்த நல்ல புத்தி ஏற்பட்டிருப்பதைக் கண்டு நாம் சந்தோஷிக்கிறோம்” என்று எழுதியிருக்கிறது. “தமிழ்நாடு” பத்திரிகை உண்மையாகச் சந்தோஷப் படுவதாயிருந்தால் “தமிழ் நாடு” பத்திரிகைக்கு இம் மாதிரி விஷமப் பிரசாரம் செய்ய மனம் வருமா? என்பதை வாசகர்களே யோசித்துப் பார்க்கட்டும்.

12. “ராஜீய விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்கு இன்னும் பழய பின் புத்தி போகவில்லை” என்று எழுதியிருக்கிறது. ராஜீய விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் பின் புத்தி என்ன? “தமிழ்நாடு”வினுடையவோ, காங்கிரசி னுடையவோ, சுயராஜ்யக் கட்சியினுடையவோ, ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு வினுடையவோ ராஜீய விஷயத்திலுள்ள “முன் புத்தி” இன்ன தென்று தெரியப்படுத்தினால் யோக்கியமாயிருக்கும். இன்னும் என்னென்னமோ படிப்பதற்கே புரியாமல் உளறிக் கொட்டியிருக்கிறது. இதை எல்லாம் பார்க்கும்பொழுது “தமிழ்நாடு” பத்திரிகையானது தன்னுடைய ஜாண் வயிறு வளர்ப்பதற்காக எவ்வளவு இழிவான காரியத்தைச் செய்யத் துணிந்திருக்கிறதென்பதையும், எவ்வளவு பெரிய சமூகத்தையும் பலிகொடுக்கத் துணிந்திருக்கிறதென்ப தையும் அப்பத்திரிகைக்குக் கடுகளவாவது மனச்சாட்சியோ, இருதய சுத்தமோ, மனிதத் தன்மையோ இருக்கிறதா? என்பதை அறியும் விஷயத்தை வாசகர்களுக்கே விட்டுவிடுகிறோம்.

மாயவரத்தில் கூடிய 2, 3 மகாநாடுகளிலும் சுமார் 20, 30 தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளில் 5, 6 தீர்மானங்களை மாத்திரம் அந்தப் பத்திரிகையில் போட்டிருக்கிறது. சாதாரண வாரப் பத்திரிகைகள் கூட சிலது முழுத்தீர்மானங்களையும் போட்டிருக்கிறது. பார்ப்பனரல்லாதார் நன்மைக் கென்று ஏற்பட்டிருக்கிற இக்கட்சி விஷயத்தில் இப் பத்திரிகைக்கு இவ்வளவு துவேஷம் ஏன் உண்டாகவேண்டும்? பார்ப்பனர் செய்யும் உபத்திரவம் போதாதென்று கருதியா, இது வொன்று முளைத்திருக்கிறது? என்று நினைக்க வேண்டியதிருக்கிறது. பார்ப்பனப் பத்திரிகைகள் கூட இவ்வளவு மோசமாக நடக்கத் துணியவே இல்லை. “தமிழ்நாடு” பத்திரிகையானது பார்ப்பனரல் லாதார் சமூகத்துக்கு உடன்பிறந்தே சொல்லும் வியாதியாய்த் தோன்றி விட்டதைக் குறித்து நாம் வருத்தப்படாமலிருக்க முடியவில்லை. இது தவிர இன்னும் ஒரு உபத்திரவம் முளைத்திருக்கிறதையும் வருத்தத்துடன் தெரிவிக்கிறோம். அதாவது நாட்டுகோட்டை செட்டிமார்கள் நாட்டில் தோன்றி யிருக்கும் ‘ஊழியன்’ என்கிற ஒரு பத்திரிகை “தமிழ்நாடு” பத்திரிகைக்குத் தம்பியாகத் தோன்றியிருக்கிறது. அது வரவரப் பச்சைப் பார்ப்பனப் பத்திரிகையாகப் போய்க் கொண்டிருக்கிறது. அது எதற்காக இவ்வளவு பணத்தை சிலவு செய்து கொண்டு நடைபெற வேண்டுமோ நமக்குத் தெரிய வில்லை. ஒரு வருஷ காலமாகவே அதன் பேச்சு மிகவும் கேவலமாகவே



போய்க்கொண்டிருக்கிறது. அப்பத்திரிகையை ஒரு கொடும் பார்ப்பனர் நடத்துகிறாரோ? அல்லது பார்ப்பனரல்லாதார் நடத்துகிறாரோ? என்பது நாம் கண்டுபிடிக்க முடியாததாகவே இருக்கிறது. கொஞ்ச காலமாகப் பொருத்துப் பொருத்து பார்த்தே முடிவில் இதை எழுத வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டோம். என்செய்வது நடப்பது நடக்கட்டும் என்றே எழுதத் துணிந்தோம். இவ்வாரம் நமக்கு சாவகாசமில்லாததால் அதைப் பற்றி விரிவாக எழுத முடியாமல் போய்விட்டது. ஆயினும் இது விஷயத்தில் நாம் மிகுதியும் வருத்தம் அடைகிறோம் என்பதை மாத்திரம் இதுசமயம் எழுதி இதை முடிக்கிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 15.05.1927**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரசின் பேரால் பார்ப்பனர்களின் தேசத்துரோகமும் சுயநலமும்

பம்பாயில் இம் மாதம் 15, 16, 17, 18 தேதிகளில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் நாடகம் கவனித்தவர்களுக்கு வேடிக்கையாகத் தோன்றாமல் இருக்காது.

ஒரு ஸ்ரீயின் விபசாரத் தனத்திற்காக அவளது நடத்தையை கண்டிக்கக்கூடிய கூட்டத்தில் அந்த ஸ்ரீயின் விபசாரத்தனத்தினால் அனேகம் மக்கள் திருப்தி அடைகிறார்கள். ஆதலால் அந்த ஸ்ரீயின் பரோபகாரத்தைப் பாராட்டுகிறோம் என்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது போல், அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் சென்னை சுயராஜ்யக்கட்சியார் காங்கிரஸ் தீர்மானத்துக்குத் துரோகம் செய்த விஷயம் முடிவு பெற்றுவிட்டது. ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் ஒரு மாத காலமாக வடநாடு சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்த கருத்தே இதுதான். அனேகமாக காங்கிரஸ் கமிட்டியில் மாகாண சுதந்திரம் பெற்று இம்மந்திரிகளை தோற்கடித்து தாங்களே மந்திரியாக வேண்டிய பிரயத்தனம் செய்தார். ஆனால் மற்ற மாகாணங்களில் உள்ள "காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி தேசபக்தர்களுக்கு" இம்மாதிரி வேட்டை கிடைக்க மார்க்கமில்லாததால் அவர்களின் யோக்கியதை அந்தந்த மாகாணங்களில் கெட்டுப்போய்விடும் என்கிற பயத்தின் பேரில் அதற்கு ஒருவரும் ஒப்புக் கொள்ளவில்லை. சென்னை அய்யங்கார் கூட்டத்தார் தங்கள் செல்வாக்கால் மந்திரி ஸ்தானம் ஒப்புக் கொள்ளலாம் என்பதாகத் தீர்மானம் செய்வதற்கு மற்றொரு சிறிய தடையும் தோன்றிவிட்டது. அதாவது சென்னையில் ஒரு பார்ப்பனர்தான் மந்திரியாக வரக்கூடும். அந்த ஒரு ஸ்தானத்திற்கும் இரண்டு வகுப்பு சண்டையிடுகிறது. ஒன்று அய்யங்கார் வகுப்பு மற்றொன்று ஸ்மார்த்த வகுப்பு. அய்யங்கார் வகுப்புக்கு ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார் நாக்கில் 6 வருஷ காலமாக நீர் வடிந்து கொண்டிருக்கிறது. ஏறக்குறைய மூன்று தேர்தலுக்கும் சுமார் லட்சம் ரூபாய் வரை செலவு செய்தவர். அவருக்குக் கிடைக்க வேண்டியது நியாயம். அல்லாமலும் அவருக்குப் பணமும் உண்டு. ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்காருக்கும் சம்மந்தி. ஸ்மார்த்த பார்ப்பன வகுப்புக்கோ ஸ்ரீமான் சத்திய மூர்த்திக்கு 7, 8 வருஷமாகவே ஏதாவது ஒரு வேலைக்கு நாக்கில் நீர் ஒழுகிக் கொண்டே இருக்கிறது. ஒரு காலத்தில் ஸ்மார்த்த "குருவான" ஸ்ரீமதி பெசண்டம்மையாரை அய்யங்கார் கூட்டங்கள் எதிர்த்த காலமாகிய காஞ்சீபுரம் மகாநாடு முதலே ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யங்கார் கூட்டத்திற்கு உழைத்து வந்திருக்கிறார். அதற்காக அவ்வப்போது அய்யங்கார் கூட்டம் ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்குப் பணப்பை உதவி வந்தாலும் அதுகள் ஸ்ரீமான் மூர்த்தியின் குடும்பச் செலவுக்குத்தான் ஆயிற்றே ஒழிய மிச்சப்படுத்த உதவவேயில்லை. அய்யங்கார் கூட்டம் தங்களது பத்திரிகையில் தூக்கிவிட்டார்கள் என்றாலும் அதுகள் தங்கள் சுயநலத்துக்கே அல்லாமல் ஸ்ரீமான் மூர்த்தி பிழைப்புக்கு இவர்கள் உதவிய பணம் தவிர பத்திரிகை விளம்பரத்தால் ஒரு காசும் லாபம் இல்லை. சப் ஜட்ஜ் முதலிய வேலைகள் கிடைத்திருக்குமானாலும் ஸ்ரீமான் சி. பி. அய்யர் பழைய விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு "உன் யோக்கியதைக்கு சப் ஜட்ஜி வேலைக்கு போவது மிகவும் குறைவானது. மந்திரி, பிரசிடெண்ட், கமிட்டி மெம்பர் முதலியதுகள்தான் தக்கது" என்று சொல்லிவிட்டாராம். ஆகவே அவருக்குக் கண்டிப்பாய் ஒரு மந்திரி வேலை கொடுத்துத்தான் தீர வேண்டும். அப்படியே கொடுக்க வேண்டும் என்று ஆரம்ப முதலே ஸ்மார்த்த பிராமணர்கள் சிபார்சு செய்தும் வருகிறார்கள். ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு மந்திரி வேலை கொடுப்பதில் அய்யங்கார்கள் கூட்டத்தாருக்கு மற்றொரு பயமும் இருக்கிறது. என்ன வென்றால் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியிடம் அய்யங்கார்களுக்கு உள்ளுக்குள் நம்பிக்கையுமில்லை. யாரையும் நன்றாய் திட்டுகிறார் என்பதும் யார் திரும்பித் திட்டினாலும் கொஞ்சமும் சலிக்காமல் அவ்வளவையும் வாங்கி மூட்டை கட்டிக் கொள் கிறார் என்கிறதினாலும் அவரை உசுப்படித்திவிட்டு மற்றவர்களைத் திட்டச் சொல்கிறவரையில்தான் அய்யங்கார்களுக்கு அவரிடம் நம்பிக்கையே அல்லாமல் வேறு வழியில் அய்யங்கார்களுக்கு அவரிடம் நம்பிக்கை யில்லை. அன்றியும் ஒரு சமயம் தங்கள் மீதும் ஏதாவது திரும்பிவிடுமோ என்கிற பயமும் எப்போதும் அய்யங்கார் கூட்டத்திற்கு உண்டு. அதினால் தான் அவரை லீடராக்காமல் ஸ்ரீமான் சாமி வெங்கிடசலத்தை லீடராக் கினதும் காங்கிரசுக்கு காரியதரிசி ஆக்காமல் சுயராஜ்யக் கட்சியோடு நிறுத்தி விட்டதுமே தவிர வேறில்லை. இக்காரணங்களாலேயே சுயராஜ்யக் கட்சிக்கு மந்திரி பதவி இப்பொழுது அழுவாரற்ற பிணங்களாக நாறிக் கொண்டிருக் கிறதே அல்லாமல் வேறில்லை.

நிற்க, சென்னை சுயராஜ்யக் கட்சியார் செய்த காங்கிரஸ் துரோகத்தைப் பற்றிய கண்டனத் தீர்மானம் வந்த சமயம் தலைமைப் பதவியில் இருந்த ஸ்ரீமான் நேரு "11 மணிக்கு 10 நிமிஷம் இருக்கிறது. இந்த விஷயம் 10 நிமிஷத்துக்குள் முடிந்துவிட வேண்டும். இத்தீர்மானத்தின் மேல் யாரும் அதிகமாய் பேசக்கூடாது" என்று அடக்குமுறை உத்திரவிட்டாராம், இதன் பேரில் கூட்டத்தில் பெரிய குழப்பமும் கூச்சலும் உண்டாயிற்றாம். இந்தியா விலுள்ள எல்லா பத்திரிகைகளும் ஏறக்குறைய பார்ப்பன சம்பந்த முடையதாகவே யிருப்பதால் ஒன்றாவது இக்குழப்பத்தின் விவரத்தையும்


RangaRakes

tamilnavarasam.com

அங்கு நடந்த வாக்குவாதத்தையும் சரியாய் போடவேயில்லை. பார்ப்பனர்களுக்கு விரோதமாக ஏதாவது ஒரு காரியம் நடைபெறுவதானால் சட்டம் என்பதின் மூலமாகவோ குழப்பத்தின் மூலமாகவோ தப்பித்துக் கொள்கிற வழக்கமானதால் இதிலும் அப்படியே குழப்பம் செய்து மெல்ல தீர்மானத்தை காரியக் கமிட்டிக்குத் தள்ளிவிட்டார்கள். அக்கிராசனாதிபதி பார்ப்பனர், குற்றம் செய்தவர் பார்ப்பனர், தீர்மானம் கொண்டு வந்தவர் அரைப் பார்ப்பனர், கலகம் செய்தவர் பார்ப்பனர். இந்நிலைமையில் இத்தீர்மானம் என்ன ஆகும் என்று யாரும் யோசிக்க வேண்டியதே இல்லை. கடைசியாகக் காரியக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. அங்கு என்ன முடிந்தது என்றால் "சென்னை சுயராஜ்யக் கட்சியார் காங்கிரசுக்கோ கௌகத்தி தீர்மானத்திற்கோ விரோதமாக ஒன்றும் செய்துவிடவில்லை. தவிரவும் அவர்கள் சென்னை மந்திரி விஷயத்தில் நடந்து கொண்டதைப்பற்றி இந்த சபை பாராட்டுகிறது" என்கிற மாதிரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது எப்பேர்ப்பட்ட அயோக்கியத்தனமான பித்தலாட்டம் என்பதை வாசகர்கள்தான் உணர வேண்டும்.

இதை ஆந்திர தேசத்து பார்ப்பனரும் ஒப்புக் கொண்டார்கள் என்றால் அவர்களின் அயோக்கியத்திற்கும் இதைவிட வேறு சாட்சி என்ன வேண்டியிருக்கிறது. "நான் நோகாமல் அடிக்கிறேன் நீ ஓயாமல் அழு" என்கிற மாதிரி தமிழ்நாடு பார்ப்பனரும் ஆந்திர நாட்டுப் பார்ப்பனரும் சேர்ந்து பாமர ஜனங்களை ஏமாற்றும் பித்தலாட்டமே அல்லாமல் மற்றபடி வேறென்ன? என்று கேட்கிறோம்.

## இந்து முஸ்லீம் ஒற்றுமை

தவிர, இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட்டுவிட்டதாக ஒரு வேஷம் புதிதாகக் கட்டிவிட்டிருக்கிறார்கள். ஏதோ ஆங்கிலம் படித்த நான்கு மகமதியர்கள் உத்தியோகத்திற்கு ஆசைப்பட்டு "நாங்கள் ராஜியாய் விட்டோம்" என்று சொன்னால் அது 7 கோடி முஸ்லீம்களைக் கட்டுப்படுத்தி விட்டதாக அர்த்தமா? என்று கேட்கிறோம். சென்னையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு கிடைத்துள்ள மகமதிய ஜனாப் பிரதிநிதிகளைப் போலவே வடநாட்டிலும் உத்தியோகம், பதவி முதலிய ஆசை கொண்ட சில ஜனாப்புகள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு எப்படி மந்திரி, பிரசிடெண்ட், நிர்வாக சபை மெம்பர் முதலியதுகள் கிடைக்கும் என்கிறதைத் தவிர வேறு நிலையான சமூகாபிமானம் இல்லை. அவர்களுடைய அறிவும், ஆராய்ச்சி ஆற்றலும் பொது ஜனங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அதற்கு ஒரு உதாரணம் காட்டுகிறோம். அதாவது ஒரு மகமதிய கனவான் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரைப் புகழ்ந்த போது ஸ்ரீ அய்யங்கார் "தமிழ் நாட்டில் பிராமணர் - பிராமணரல்லாதார் சண்டையை அடியோடு ஒழித்துவிட்ட வீரர்" என்று சொன்னாராம். இது எப்படி இருக்கிறது என்றால்



"பஞ்சபாண்டவர்களை எனக்குத் தெரியாதா? கட்டில் குத்துக்கால்கள் போன்று மூன்று பேர்கள் என்று சொல்லி இரண்டு விரலைக் காட்டினானாம்." அது போல் சீனிவாசய்யங்காரையாவது தமிழ் நாட்டையாவது பிராமணர் - பிராமணரல்லாதார் சண்டையையாவது அது எது பற்றியது என்பதையாவது சரிவரத் தெரிந்திருந்தால் இம்மாதிரிப் பேசி இருக்கவே மாட்டார். தமிழ்நாட்டில் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் சண்டை ராஜியாய் விட்டதா? அல்லது ஒழிந்துவிட்டதா? ஜஸ்டிஸ் கட்சி மறைந்துவிட்டதா? இவற்றை எந்த யோக்கியராவது சீனிவாசய்யங்கார் செய்துவிட்டார் என்று சொல்லக்கூடுமா? வேறு வழியில் மனிதனாக முடியாதவர்களையும் வேறு வழியில் ஜீவிக்க முடியாதவர்களையும் கூலி கொடுத்து சுவாதீனம் பண்ணிக் கொண்டு அவர்களை உசுப்படுத்தி பார்ப்பனரல்லாதாரையும் அவர்களது இயக்கத்தையும் வையும் படி சொல்லி விட்டதினாலும் ஏதோ சில கஞ்சிக்கு வழியில்லாமல் வயிற்றுக்கொடுமையால் அவதிப்படும் ஆள்கள் ஊரூராய்த் திரிந்து பலரை வைதே வயிறு வளர்க்கவேண்டி ஏற்பட்டுவிட்டதினாலேயும் அவர்களைப் பிடித்துப் பாமர ஜனங்களிடம் பொய்யும் புளுகும் சொல்லி காசு பணம் செலவு செய்து ஏமாற்றி ஒன்று இரண்டு தடவை ஓட்டு வாங்கிவிட்டதினாலேயும் மூன்றரை கோடி மக்களுடைய உணர்ச்சியை அடக்கிவிட்டதாகுமா? அல்லது ஜெயித்து விட்டதாகுமா? என்பதை யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

"இந்து முஸ்லீம் சமாதானம்" என்பது என்னவென்றால் முஸ்லீம்களுக்கென்று பிரித்துவிட்டிருக்கும் வகுப்புவாரித் தொகுதியை ஒழித்து கலப்புத் தொகுதியை ஏற்படுத்திக் கொள்ள மகமதியர்கள் சம்மதித்து விட்டார்களாம். இந்த தந்திரம் செய்த தமிழ்நாட்டு பார்ப்பனர்கள் உத்தேசமென்னவென்றால் நமது மாகாணத்தில் வகுப்புவாரி உரிமை அதாவது பார்ப்பனர்களுக்கும் நமக்கும் தனித்தொகுதி வேண்டுமென்று நாம் கேட்பதை ஒழிப்பதற்காக "மகமதியர் கூட வேண்டாம் என்கிறார்கள்" என்று சொல்லவே இந்த தந்திரம் செய்கிறார்கள்.

இதை ஆங்கிலம் படித்து உத்தியோகத்திற்கு நத்திக் கொண்டிருக்கும் ஏதோ சிலர் தவிர மற்ற மகம்மதியர் கண்டிப்பாய் ஒத்துக்கொள்ளப் போவதில்லை என்பது நமக்கு நன்றாய் தெரியும். ஏனெனில் இதற்கு முன் ஒரு தடவை இவ்வகுப்புவாரி உரிமையை ஒழிக்கும் சூழ்ச்சியாக "தேசீய ஒப்பந்தம்" தயாரிக்கும்படி டாக்டர் அன்சாரி, லாலாஜி ஆகியவர்களை ஒரு கமிட்டியாகப் போட்டதில் அவர்கள் முனிசிபாலிடி, தாலூகா போர்டுக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று ரிப்போர்ட் செய்தார்கள். தனித் தொகுதியை எடுத்து கலப்புத் தொகுதி ஏற்படுத்தலாம் என்று ஷை இருவர் சொன்ன அபிப்பிராயத்தை மற்ற மகமதியர்கள் அப்போதே நிராகரித்து விட்டார்கள். இவ்வகுப்புவாரி உரிமை மகமதியர்களுக்கு கிடைத்த பிறகுதான் அவர்கள் மனிதர்களாக பார்ப்பனர்களால் மதிக்கப்படுகிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

அதற்கு முன் மகமதியரைத் தொட்டால் தொட்ட விரலை வெட்டிவிட வேண்டும் என்றும், மிலேச்சர் என்றும் எழுதி வைத்துக் கொண்டிருந்தவர்கள் என்பதற்கு இன்னமும் ஆதாரமிருக்கிறது. ஆதலால் சுயமரியாதை உள்ள எந்த மகமதியரும் இந்தப் பார்ப்பனர்களின் இப்போதைய சில நல்ல வார்த்தைக்கும் இரண்டொருவருக்குப் பணம் சிலவு செய்து முனிசிபாலிடி, சட்டசபை முதலியதுகளுக்கு ஸ்தானம் சம்பாதித்துக் கொடுத்திருப்பதையும் நிரந்தர நன்மையாய் நினைத்துக் கொண்டு ஏமாந்து விடமாட்டார்கள் என்றே உறுதி கூறுவோம். சமீபத்தில் கூட்டப்போகும் திருச்சி மஜிலிஸ் உலமா கான்பரன்சு இந்த விஷயத்திற்காக கூட்டப் படுகிறதென்றே கேள்விப்படு கிறோம். தவிரவும், சென்னை ஐகோர்ட் ஜட்ஜி பதவிக்கு ஒரு மகமதிய கனவானையும் நியமிக்க வேண்டு மென்று தமிழ்நாட்டு பிரபல மகம்மதிய கனவான்கள் கூடி ஒரு தீர்மானம் செய்ததை வாங்கிக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு "பிர்மாவின் முகத்தில் பிறந்த பிராமணோத்தமர்களாகவே" போட்டிருப்பதையும் மகமதிய கனவான்கள் பார்க்காமலில்லை. ஆதலால் மகமதியர்களுக்கு அளித்திருக்கும் வகுப்புவாரி உரிமையை அவ்வளவு சீக்கிரத்தில் பார்ப்பனர்கள் அழித்துவிடும்படி விட்டுவிட நமது முஸ்லீம் சகோதரர்கள் அவ்வளவு ஏமாளிகள் என்று நாம் நினைக்கவில்லை.

## சுயராஜ்ஜியத் திட்டம்

சுயராஜ்ஜியத்திற்குத் திட்டம் போட மறுபடியும் ஒரு கமிட்டி நியமித் திருக்கிறார்களாம். இது எல்லாவற்றையும் விட பெரிய பித்தலாட்டம் என்றே சொல்லுவோம். இதற்கு முன் ஒரு தடவை ஸ்ரீமான் நேரு முதலியவர்கள் மிதவாதிகளுடனும் சுயேச்சைக் கட்சிக்காரருடனும் ராஜி செய்து கொண்டு குறைந்த அளவு சுயராஜ்யத் திட்டம் (நேஷனல் டிமாண்டு) என்னும் பேரால் ஒரு திட்டம் தயாரித்து 1924 ஆம் பிப்ரவரி மீ 18 உ இந்தியா சட்டசபையில் வைத்து நிறைவேற்றியது இப்போது என்ன ஆயிற்று என்று கேட்கிறோம்? "சர்க்காரார் தங்கள் மனப்பான்மையை மாற்றிக் கொள்ளாவிட்டால் அல்லது மாற்றிக் கொண்டதாகக் காட்டிக் கொள்ளாவிட்டால் சட்ட மறுப்பு, முட்டுக் கட்டை, வெளியேற்றம் முதலிய காரியங்கள் செய்வது" என்ற வீரமொழிகள் என்னவாயிற்று? சர்க்கார் இத் திட்டங்களை ஏற்றுக்கொள்ளாததாலும் யாதொரு பதிலும் தெரிவிக்காமல் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்ட தாலும் மனமாற்றத்தைக் காட்டாததாலும் வெளியே போகிறோம் என்று சொல்லி சட்ட சபையை விட்டு ஒரு தரம் வெளியேறி மறுபடியும் கொஞ்ச மாவது மானயீனமின்றி உள்ளே போய் இதுகாலவரையில் இருந்தும் விட்டு இப்போது மறுபடியும் ஒரு புதுத்திட்டம் தயாரிக்கத் திட்டம் என்றால் இது யாரை ஏமாற்றுவதற்கு என்றுதான் கேட்கிறோம்? முன் திட்டமே குறைந்த அளவுத் திட்டமாய் இருந்தும் அது குப்பைத் தொட்டியில் இருக்கும்போது இத்திட்டம் இனி அதைவிடக் குறைவாய்த்தானே இருக்க வேண்டி வரும்.



ஆகவே சுயராஜ்யக் கட்சி ஏற்பட்டது முதல் ஒத்துழையாமையை ஒழித்ததோ டல்லாமல் மகாத்மாவையும் மூலையில் உட்கார வைத்ததோடல்லாமல் சர்க்காரோடு திருட்டுத்தனமாய் ஒத்துழைப்பதோடல்லாமல் இனியும் திட்டம் திட்டம் என்று சொல்லிக் கொண்டு தேசத்தைப் பாழாக்குகிறார்கள் என்பதைப் பற்றி யாருக்காவது கவலை இருக்கிறதா? இவர்களுடைய திட்டம் எல்லாம் இனியும் கொஞ்சம் உத்தியோகமும் அதிகாரமும் அல்லாமல் வேறு என்ன? இம்மாதிரி மானம், வெட்கம், நாணயம், யோக்கியம் ஒன்றுமில்லாத கடைந் தெடுத்த அயோக்கியர்களாக சேர்ந்து தேசத்தைக் காட்டிக்கொடுத்து பாழாக்கி அதிகாரம் பெற்று பணம் சம்பாதித்துத் தான் வாழ ஆதாரமாய் ஒரு கட்சியை யும், சபையையும் ஏற்படுத்திக்கொண்டு அதை தேசத்தின் பிரதிநிதித்துவ சபை என்றும் அதில் உள்ளவர்கள் தேசாபிமானிகள் தேசப் பிரதிநிதிகள் என்றும் சொல்வதானால் இதுகளை உடைய நாடு சுயமரியாதை உடைய நாடு என்றாவது சுதந்திரம் பெற யோக்கியதை உடைய நாடு என்றாவது சுயபுத்தி உள்ள நாடு என்றாவது எந்த முட்டாளாவது சொல்லக் கூடுமா? சொல்லக் கூடுமா? சொல்லக் கூடுமா? என்று மும்முறை கேட்கிறோம். இம்மாதிரி சபைக்கு ஆள் பிடிக்க இனியும் நமது நாட்டில் வயிற்றுச் சோற்றுக் கங்காணி கள் ஏற்பட்டுக் காங்கிரஸ் காங்கிரஸ் என்று சொல்லிக் கொண்டே வந்தால் மற்றவர்கள் பேசாமல் பார்த்துக் கொண்டு தேசத்தையும் மக்களையும் பலி கொடுப்பதா என்று யோசித்துப் பாருங்கள். சென்ற தேர்தலில் காங்கிரஸ் புரட்டுக்குக் கொஞ்சம் வெற்றிகள் ஏற்பட்டு விட்டதால் "தினமும் நெய்ச் சோற்றுப் பிச்சை கிடைக்கும்" என்பது போல் உத்தியோகத்திலும், சட்ட சபையிலும், தாலுகா, ஜில்லாபோர்டு, முனிசிபாலிட்டியிலும் ஆசை உள்ள கூட்டங்களுக்கு இப்போது காங்கிரசிடம் கொஞ்சம் இழுப்பு அதிகமாய் இருந்துகொண்டு வருகிறது. ஜஸ்டிஸ் கட்சிக்கும் இதில் கொஞ்சம் மயக்கம் இருக்கிறது போல் தெரிகிறது. இந்தக் காங்கிரசும் இந்தக் காங்கிரசில் உள்ள சிகாமணிகளும் இந்த காங்கிரசால் ஏற்பட்ட உத்தியோகங்களும் பதவிகளு மேதான் நமது நாட்டின் ஒற்றுமையைக் குலைத்ததற்கும் தரித்திரத்தை உண்டாக்கியதற்கும் ஏழைக் குடியானவர்களுக்கு வரியை அதிக மாக்கியதற் கும் மக்களுக்கு தேசாபிமானம், பரோபகாரம் முதலிய குணங்கள் போய் தேசத்துரோகம், சுயநலம் முதலிய கெட்ட குணங்கள் உண்டாகியதற்கும் அடிப்படையான ஜவாப்பு தாரித் தத்துவங்கள் என்பதை தைரியமாய் சொல்லுகிறோம். பல தடவை சொல்லியும் இருக்கிறோம். அதுகளுக்கு இதுவரை எந்த "தேசபக்தராவது," "தேசத் தொண்டராவது" "தேசியப் பத்திரிகையாவது," "சுயராஜ்ஜிய வீரராவது" பதில் சொல்லவே இல்லை. கங்காணி வேலையை விட்டுவிடவும் இல்லை. ஆனாலும் ஜனங்கள் முட்டாள்களாயிருக்கும் வரை நாட்டில் இதுகளுக்கு யோக்கியதை இருந்து கொண்டுதானிருக்கும். புத்திவரும் நாள் என்னாளோ?

**குடி அரசு – தலையங்கம் – 22.05.1927**



RangaRakes tamilnavarasam.com

# ஸ்ரீ வரதராஜுலுவின் வண்டவாளம் - I

மாயவரம் மகாநாட்டைப் பற்றி ஸ்ரீ வரதராஜுலு நாயுடு செய்த சூழ்ச்சி களைப் பற்றியும், அதுகள் பலிக்காமல் மகாநாடு செவ்வனே நடந்தேறிய பிறகும் அம்மகாநாட்டைப் பற்றியும், அதில் நிறைவேறிய தீர்மானங்களைப் பற்றியும் பொறாமை கொண்டு குரோத புத்தியோடு கண்டித்து எழுதிய பான் மையைப் பற்றியும் சென்ற வாரம் விபரமாக ஒவ்வொரு விஷயமாய் பிரித்து பிரித்து எடுத்துக் காட்டி பொது மக்களுக்கு விளங்கும்படி தக்க சமாதானமும் எழுதியிருந்தோம். அதற்கு பதில் என்கிற முறையில் "தமிழ்நாடு" பத்திரி கையில் ஸ்ரீ வரதராஜுலு நாயுடு நாம் எழுதியதில் ஒரு வரியாவது எடுத்துப் போட்டு அதற்கு சரியான சமாதானமாக ஒரு வரியாவது எழுதுவதற்கு யோக்கியதை இல்லாமல் போனதோடு பயங்கொள்ளித்தனமாய், "நய வஞ்சகம்," "கடைசி வார்த்தை" என்ற தலைப்புகளின் கீழ் "பழைய விரோதம்," "வெகுநாளைய கெட்ட எண்ணம்" என்கிற வார்த்தைகளைப் போய்க் கட்டிப் பிடித்துக் கொண்டு, அதுகளை சரணாகதி அடைந்து தப்பிக்கப் பார்க்கிறார்.

"நாயக்கரின் நயவஞ்சகம்," "பழைய விரோதம்," "வெகு நாளைய பொறாமை" இதுகளைப் பற்றிப் பின்னால் தக்க ஆதாரங்களுடன் விவரிக்கின்றோம். இப்போது நாம் 15-5-27 உ "குடி அரசில்" எழுதியது களுக்கு என்ன பதில் சொல்கிறார் என்றே கேட்கிறோம். அதோடு "எது பொய்ப் பிரசாரம்" என்று 24-4-27 தேதியில் எழுதியதற்கும் என்ன பதில் சொல்லுகிறார் என்றே கேட்கிறோம்.

ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு இதுகளையெல்லாம் லக்ஷியம் செய்து இதற்குப் பதில் எழுதிக் கொண்டிருப்பதில் தனது காலத்தை சிலவழிக்க இஷ்டப்படவில்லை என்று எழுதித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கலாம், அது நடவாது. முன் ஒரு தரம் அதாவது 'பொய்ப் பிரசாரம்' என்ற தலைப்பின் கீழ் எழுதியதிலும் இப்படித்தான் எழுதினார். ஆனால் மறுபடியும் கடைசி வார்த்தை என்ற தலைப்பு வந்துவிட்டதா இல்லையா? அல்லாமலும் கொஞ்சம் தனக்கு இடம் கிடைத்தும் உடனே பதில் எழுதினாரா இல்லையா? அதாவது "முதலியாருக்கு பயமுறுத்தல் கடிதம் எழுதியவர் ஜஸ்டிஸ் கட்சியார்" என்றும் அதற்கு ஸ்ரீமான் ஓ. கே. ராமசாமி செட்டியார் கடிதத்தையும் தருவித்துப் பிரசுரித்தாரா இல்லையா? ஆகவே இப்போதும் கடைசி வார்த்தை என்று எழுதிவிட்டாலும் ஆதாரம் இருந்தால் கண்டிப்பாய் பதில் வருமென்றே நினைக்கிறோம். பதிலெழுத யோக்கியதை இல்லா விட்டால் அதுவே கடைசி வார்த்தையாய் இருக்கட்டும். ஆனால் பார்ப்பனரல்லாதார் கக்ஷியை வைது கொண்டு வாழும் வரை வரதராஜுலுவின் வண்டவாளம் வந்து கொண்டே இருக்கும்.

## நமது கேள்விகள்

1. தேச பக்தர்கள் மாயவரம் மகாநாட்டிற்கு (போகக்கூடாது என்கிற எண்ணத்துடன்) போக மாட்டார்கள் என்று எழுதினாரா இல்லையா?

2. பிறகு தானே "உடம்பு சௌகியமில்லாததால் ஷை மகாநாட்டுக்கு வரமுடியவில்லை" என்று எழுதினாரா இல்லையா?

3. மகாநாட்டு விஷயங்களைப் பற்றி ரிப்போர்ட் செய்வதற்கு தமது ஆபீஸ் மானேஜர் ஒரு பார்ப்பனரல்லாத ரிப்போர்ட்டரை அனுப்ப ஏற்பாடு செய்திருந்தும் அவர் போனால் மகாநாட்டுக்கு விரோதமாய் ரிப்போர்ட் செய்யமாட்டார் என்று ஒரு பார்ப்பன ரிப்போர்ட்டரை அனுப்ப வேண்டு மென்று உத்திரவு போட்டாரா இல்லையா?

4. மகாநாட்டுத் தீர்மானங்களில் 4, 5 மாத்திரம் தனது பத்திரிகையில் போட்டு விட்டு மற்றதைப் போடாமலே மறைத்து விட்டதோடல்லாமல், சில தீர்மானம் மகாநாட்டில் செய்திருந்தும் அவைகளைச் செய்யவில்லை என்பதாக ஒரு போலிக் குற்றம் சாட்டித் தன் குரோத புத்தியைக் காட்டிக் கொண்டாரா இல்லையா?

5. மதுரை மகாநாடு கூட்டும் தேதியில் தானும் ஒரு மகாநாடு கூட்டுவதாக வெளிப்படுத்தி இதற்கு இடைஞ்சல் செய்ய சூழ்ச்சி செய்தாரா இல்லையா?

6. இவரது சூழ்ச்சியை லக்ஷியம் செய்யாமல் அது செவ்வனே நடக்கப்போகிற சங்கதி தெரிந்து அதை ஒத்திபோட்டதாக எழுதிவிட்டாரா இல்லையா?

7. ஸ்ரீமான் முதலியாருக்கு பயமுறுத்தல் கடிதம் எழுதினவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவரானாலும் நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. அக்கடிதம் எழுதினவர் "தமிழ்நாடு" பத்திரிகைக்கு ஒரு ஏஜண்டா இல்லையா? என்பதுதான் நமது கேள்வி.



RangaRakes tamilnavarasam.com

8. அக்கடிதம் எழுதினவர் மகாநாட்டின் போது "தமிழ்நாடு" பத்திரிகை களை கையில் வைத்து விற்றுக் கொண்டும் சந்தா சேர்த்துக் கொண்டும், இருந்தாரா இல்லையா?

9. இதை ஸ்ரீமான் ஒ.கே. ராமசாமி செட்டியார் பார்த்தாரா இல்லையா?

10. அன்றியும் ஸ்ரீ வரதராஜுலு நாயுடு "குடி அரசு" எழுதிய மற்ற சங்கதிகளுக்கு எல்லாம் பதில் எழுதாமல் விட்டு விட்டு இதற்கு மாத்திரம் பதில் எழுதப் புறப்பட்டவர் "ஸ்ரீமான் முதலியாருக்கு பயமுறுத்தக் கடிதம் எழுதியவர் ஜஸ்டிஸ் கட்சியார்" என்று எழுதினாரே அல்லாமல் அவர் 'தமிழ்நாடு' ஏஜண்டா இல்லையா என்று ஏன் தானே தைரியமாய் எழுதி யிருக்கக் கூடாது? இதற்கு "முதலியார் சொன்னார்" "செட்டியார் எழுது கிறார்" என்று ஏன் எழுத வேண்டுமென்று இப்பொழுதும் கேட்கிறோம். "குடி அரசு"ம் இதைப் பற்றி எழுதுகையில் "தமிழ்நாடு பத்திரிகையின் ஏஜண்டு ஒருவர் ஸ்ரீமான் முதலியாரவர்களுக்கு ஒரு பயமுறுத்தல் கடிதம் எழுதினார்" என்று தான் எழுதிருக்கிறதே அல்லாமல் இன்ன கட்சி என்று எழுதிற்றா? இந்தச் சமாதானம் கொல்லத் தெருவில் ஊசி விற்றது போல் இருக்கிறதே அல்லாமல் வேறென்ன?

11. தவிர நாகப்பட்டணம் ஸ்ரீமான் பக்கிரிசாமி பிள்ளை குமாரர் ஸ்ரீமான் V. P. காயாரோகணம் பிள்ளை அவர்களும் மற்றும் 63 கனவான்களும் தன்னை மகாநாட்டுக்கு வரும்படி அழைத்ததாக ஒரு போலிக் கடிதத்தைத் தன் பத்திரிகையில் போட்டு விளம்பரம் செய்துகொண்டு அதன் மூலம் ஜஸ்டிஸ் கட்சியையும் வைது பெருமை பாராட்டிக் கொண்டாரா இல்லையா? அக்கடிதம் முற்றிலும் பொய் என்றும் தான் எழுதவில்லை என்றும் "ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு தனது அரசியல் கொள்கை இன்னது என்று யாரும் கண்டுபிடிக்காத மாதிரியில் இருப்பதாலும் அவரது கொள்கைகளும் திட்டங்களும் தினம் இருமுறை மாறி வருவதாலும், நான் அவரது வரவை அவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்க நியாயமில்லை" என்று பகிரங்கமாக எழுதி இருக்கிறாரே, அதற்கு இதுவரை ஸ்ரீமான் நாயுடு ஏதாவது பதில் எழுதினாரா? ஸ்ரீமான் காயாரோகணம் பிள்ளைக்கும் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்கும் வெகுநாள் விரோதமா பொறாமையா? அல்லது நயவஞ்சகமா? என்று கேட்கிறோம்.

13. இதுவும் தவிர மன்னார்குடியில் இருந்து சமரச ஞான சபையார் பேரால் 48 கனவான்கள் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவை மகாநாட்டுக்கு அழைத்ததாக மற்றும் ஒரு பொய்க் கடிதத்தைத் தனது பத்திரிகையில் பிரசுரித்துத் தன்னை பெருமைப்படுத்திக் கொண்டதோடு அதற்கு வர முடியாது என்பதாக எழுதியதில் ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனர்களைத் தாக்கு வதால் வரமுடியாது என்று பார்ப்பனருக்கு வக்காலத்து வாங்கி எழுதினாரா





இல்லையா? தவிர மன்னார்குடி சமரச ஞானசபை காரியதரிசியார் இம்மாதிரி கடிதம் தாங்கள் எழுதவில்லை என்று எழுதி இந்தப் பித்தலாட்டத்தை வெளியாக்கினார்களே அதற்கு ஏதாவது ஸ்ரீமான் நாயுடு பதில் எழுதினாரா? சமரச ஞான சங்கக் காரியதரிசியாருக்கும் ஸ்ரீ வரதராஜுலுக்கும் வெகுநாள் விரோதமா பொறாமையா அல்லது நயவஞ்சகமா? தவிர ஷை மன்னார்குடி கடிதத்தில் காணும் 48 பெயர்களையும் தலைப்பு எழுத்துக்கள் இல்லாமல் மொட்டை மொட்டையாய் பத்திரிகையில் போட்டுக் கொண்டதிலிருந்தே இக்கடிதம் இக்காரியத்திற்கென்றே சிருஷ்டிக்கப்பட்டதும் அனாமதேயக் கடிதம் என்பதும் உறுதியாகிறதா இல்லையா?

இத்தனைப் புரட்டும் பித்தலாட்டமும் நாணயக் குறைவும் தன்னிடம் பிறர் கண்டுபிடிக்க இடம் ஏற்படுகிறதே என்பதற்கு கொஞ்சமாவது வருந் தாமலும் வெட்கப்படாமலும் பொது நன்மையை உத்தேசித்து தனக்கு சரியென்று தோன்றியதை யாராவது நியாய வழியில் செய்தால் அதனிடம் பொறாமையும் துவேஷமும் கொள்ளுவதும் அதைக் கெடுக்க சூழ்ச்சி செய்வதும் அதை யாராவது கண்டித்தால் அது பழய விரோதம், பொறாமை, நயவஞ்சகம் என்று எழுதுவதும் எவ்வளவு இழிகுணம் என்பதை வாசகர் கள்தான் உணர வேண்டும்.

ஸ்ரீமான் நாயக்கர் எழுதியவைகளுக்கு தலைப்புப் பேர் கொடுத்த நயவஞ்சகம் என்கிற வார்த்தையையே தான் ஸ்ரீமான் நாயுடு மே மாதம் 4 – ந் தேதி "தமிழ்நாடு" பத்திரிகையில் சுதேசமித்திரனுக்கும் கொடுத்து இருக்கிறார். அதாவது "சுதேசமித்திரனின் நயவஞ்சகம்" என்று தலையங் கமிட்டு ஒரு வியாசம் இதுபோலவே எழுதியிருக்கிறார்.

ஸ்ரீமான் நாயுடுவின் வண்டவாளத்தை வெளிப்படுத்துகிற ஒவ்வொரு வருக்கும் ஸ்ரீமான் நாயுடு இந்தப் பெயரையே கொடுத்து தான் தப்பித்துக் கொள்ளலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார் போலிருக்கிறது. அது கண்டிப்பாய் இனி நடவாது என்றும் ஸ்ரீமான் நாயுடுவிடம் "நயவஞ்சகம்" என்கிற பெயர் வாங்க இனியும் 1000க்கணக்கான பெயர்கள் நமக்குப் பின்னால் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் ஸ்ரீமான் நாயுடு மேல்கண்ட தனது குணங்களை மாற்றிக் கொண்டாலொழிய "நயவஞ்சகம்" தமிழ்நாட்டு மக்களிடம் நிற்கப் போவதில்லை என்றும் வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

மற்றபடி "நாயக்கரின் நயவஞ்சகம்" என்ற தலைப்பின் கீழ் கண்ட கடிதங்களுக்கும் கடைசி வார்த்தைக்கும் அடுத்த வாரம் விபரமாய் பதில் எழுதுவோம். ஏனெனில் அக்கடிதங்கள் சம்பந்தமாக சில ஆராய்ச்சிகள் வேண்டியிருப்பதாலும் அதுகளுக்கு பதில் எழுதிய பல கடிதங்களைத் தேடி எடுக்க வேண்டியிருப்பதாலும் நாம் கோவை, கள்ளிக்கோட்டை முதலிய

RangaRakes tamilnavarasam.com

இடங்களில் இந்த வாரம் முழுவதும் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டு விட்டதாலும் சாவகாசமும் இடமும் இல்லை. ஆனாலும் அடுத்த வாரம் நாலு பக்கம் இதற்காகவே அதிகமாய்ப் போட்டு விபரமாய் எழுதுகிறோம்.

**குறிப்பு** :-

பார்ப்பனரல்லாதாருக்குள்ளாகவே நாயக்கரின் நயவஞ்சகமும் வரத ராஜுலுவின் வண்டவாளமுமான மனவருத்தத்திற்கிடமான சங்கதிகள் எழுத நேரிடுவது பற்றி சில உண்மையான பெரியோர்களின் மனம் சங்கடப் படக்கூடும் என்பது நமக்குத் தெரியும். ஆனாலும் இதனால் ஒன்றும் முழுகிப் போய்விடாது. உலகத்திற்கோ சமூகத்திற்கோ இதனால் நன்மையே தான் ஏற்படும் என்பதே நமது உறுதியாகும். ஏனெனில் நம்முடைய வேலையோ ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களுடைய வேலையோ அவரவர்கள் சொந்த நன்மை தீமைகளை பொருத்த வேலையல்ல என்பதும் பெரிய ஒரு சமூகத்தின் பேராலும் ஒரு தேசத்தின் பேராலும் நடைபெறுகின்றது என்பதும் முதலில் பொது ஜனங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வளவு பெரிய பொறுப்புள்ள வேலைகளை மேற்கொண்டு அதற்காக உழைப்பதாகச் சொல்லிக் கொள்ளுபவர்களின் யோக்கியதை களும் நாணயங்களும் பொதுமக்கள் அறியும்படி வெளியாக்க வேண்டியது அவசியமா இல்லையா? என்பதை யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. மகாத்மா காந்தி அவர்களுக்கு நாட்டில் உள்ள பெருமை முதலியது கள் எல்லாம் அவருடைய யோக்கியதையைப் பற்றியும் நாணயத்தைப் பற்றியும் ஜனங்கள் அறிய நேர்ந்தமைதானே தவிர வேறில்லை. இவ்விவ காரங்கள் எத்தனைக் கெத்தனை யார் யாருடன் ஏற்படுகிறதோ அத்தனைக் கத்தனை அவரவர்கள் தொண்டுக்கு தக்க பலனை அளிக்கும் என்பது நமது எண்ணம்.

**குடி அரசு - கட்டுரை - 22.05.1927**



# கும்பாபிஷேகத்தின் ரகசியம்

## குருக்கள் பார்ப்பனர்கள் சம்பாஷணை

**- சித்திரபுத்திரன்**

**நடேச குருக்கள் :** ஏண்டா சுப்பா! இந்த 4, 5 மாதமாய் நம்ம கோயி லுக்கு அபிஷேகம் வற்றதில்லே பிரார்த்தனை வற்றதில்லை முன்னைப் போல் அதிக சனங்கள் அர்ச்சனை செய்ய வற்றதில்லையே என்ன சங்கதி?

**சுப்புக் குருக்கள் :** சங்கதியா! சங்கதி. ஈரோட்டில் ராமசாமி நாயக்கன் இருக்கான் அல்ல. அவன் "குடி அரசு" என்னும் ஒரு பேப்பர் போட்றான். அதில் சும்மா இதையே எழுதுறான். பார்ப்பானுக்குப் பணம் கொடுக்காதே, பார்ப்பான் காலில் விழாதே, பார்ப்பானைக் கொண்டு சடங்கு செய்யாதே, கோயிலுக்குப் போனால் நீயாகவே சாமி கும்பிட்டு விட்டு வந்துவிடு, பார்ப்பானைத் தேங்காய் பழம் ஒடைக்கச் சொல்லாதே, அவன் தீபார்த்தனை காட்ட நீ கும்பிடாதே, அவன் கிட்ட பிரசாதம் வாங்காதே என்று இப்படி யெல்லாம் எழுதியும் போற பக்கம் எல்லாம் பேசியும் நம்ம தலையில் கை வெச்சுகிட்டு வற்றான். அவன் பேச்சைக் கேட்டுக்கிட்டு இந்த சூத்திரன்கள் தானே வற்றது. தானே கும்பிடரது. பேசாமல் போயிடரது. இப்படி பண்ணு ராங்கடான்னா.

**நடேச குருக்கள் :** அப்படியா! அடடா அவனுக்கு என்ன கேடு வந்தது. அவப்பா ரொம்ப பிராமண விசுவாசியாச்சுதே. எத்தனை சமாரா தனை எத்தனை கோயில் எத்தனை சத்திரம் சாவடி தண்ணிப்பந்தல் உச்சவம் உபநயனம் கல்யாணம் இதெல்லாம் செய்திருக்க அப்படிப்பட்ட வயிற்றில் இப்படிப் பிள்ளையா பிறக்கணும். அய்யய்யோ கர்மம் உடுமா. அவன் இன்னம் கொஞ்ச நாளில் என்ன கெதி ஆகப் போறான் எண்ணு பாரு. முன்னே மூனு நாலு தரம் ஜெயிலுக்குப் போயும் அவனுக்கு புத்தி வல்ல. சீக்கிரத்தில் ஜெயிலுக்குப் போகப் போறானா இல்லையா? எண்ணு பாத்து கிட்டு இரு ராஜ துவேஷம் பிராமண துவேஷம் யாரை சும்மா விட்டது. இவனை விடுரதுக்கு? ஆனாலும் இதனாலெ இப்ப நமக்கு இந்த 2, 3 மாச மாய் சுத்தமாய் வரும்படி இல்லையே. அதுக்கென்ன பண்ணரது? இப்ப வர வர தெவசத்துக்குக் கூட எந்த சூத்திரனும் நம்மை கூப்பிடறது இல்லை.



RangaRakes tamilnavarasam.com

நமக்கு முன்னையெல்லாம் ஒரு இடை இழுத்துவிட்டு அரிசி பருப்பு காசு எவ்வளவு தாராளமாகக் குடுப்பாங்கோ. இப்ப அதுகூட இல்லையே. இதென்ன சங்கதி, இந்த வருஷம் பிராமணன் மேலே சங்கராந்தி வந்துட்டதா என்ன ஒண்ணும் தெரியவில்லையே?

**சுப்புக் குருக்கள் :** வரும்படியைப் பத்திக் கவலைப்படாதே, நான் ஒரு வழி சொல்லுறேன். அப்படிக் கேக்கரையா?

**நடேசக் குருக்கள்:** சொல்லித் தொலைய்யா. சோத்துக்கில்லாத பாப்பான். சொன்னபடியெல்லாம் கேப்பான் எண்ணு நீ கேட்டதில்லையா, சொல்லு, சொல்லு.

**சுப்புக் குருக்கள் :** சொல்லுகிறேன், வெளியில் சொல்லாதே.

**நடேச குருக்கள் :** இது வேறே கர்மமா, நான் தான் சுத்த சுத்தமா சோத்துக்கு சாகறேன். இன்ன இதை வெளியில் சொல்றது வேறையா, கொஞ்சம் சொல்லப்பா சட்டுண்ணு.

**சுப்புக் குருக்கள் :** சுத்தியுமுத்தியும் பார்த்துக்கோ, ஆராவது வந்துடப் போறாங்க.

**நடேசக் குருக்கள் :** ஒருத்தரும் இல்லை, சொல்லித் தொலை.

**சுப்புக் குருக்கள் :** அது என்னான்னாக்கா? கோயிலில் சாமி இருக்குதல்ல. அதை ஆட்டிப் புடிங்கி கீழே தள்ளி படுக்க வெச்சிடு, காத்தாலெ கோயிலைப் போய் நீ பாத்ததாகவும் "கோயில் கதவு ஒடச்சி எவனோ உள்ளே போயி சாமியை ஆட்டிக் கீழே தள்ளிப்போட்டு அதிலெ இருந்த தங்கம் வெள்ளி நவரத்தினமெல்லாம் எவனோ எடுத்துக்கிட்டுப் போயிட்டான். கும்பாபிசேகம் பண்ண வேணும், இல்லாவிட்டால் ஊருக்கு ஆகாது. தர்ம கர்த்தாவுக்கு தோஷம், கமிட்டியாருக்கு பாவம்." அப்படின்னு சொல்லிப் போடு. கமிட்டியார் கும்பாபிசேகம் பண்ர வரைக்கும் சாமிக்கு கீழே போட்டு இருந்த தங்கம், வெள்ளிகாசு, நவரத்தினம் இதை வித்து சாப்பிட்டுகிட்டு இரு. இது தெரியாதா உனக்கு.

**நடேசக் குருக்கள் :** இது நல்ல யோசனை தான். நானும் இதற்கு முன்னாலேயே சாமியை ஆட்டி தள்ளி அதுக்கு கீழே இருந்ததை எடுத்துக்கிட்டு சாமியை சும்மாதான் நிக்கவெச்சி இருக்கிறே. அர்ச்சனை பண்ற பூ பெலமா சாமி மேலெ பட்டாலே சாமி ஆடும். அது மாத்தரமா எங்க கோயிலில் இருக்கிற எந்த சாமியைத் தொட்டாலும் சட்டுண்ணு படுத்துக்கும் எல்லாம் ஆட்டி பிடுங்கி அதிலிருந்ததை முன்னையே எடுத்துத் திண்ணு போட்டோம். ஆனதினாலே சாமியை பாடுபட்டு ஆட்டி கீழே தள்ள வேண்டியதில்லை. தொட்டா போதும். தானே கீழே விழுந்து விடும்.

**சுப்புக் குருக்கள் :** அப்படியானாக்கா, இன்னைக்கி ராத்திரியே சாமியைத் தள்ளிப் போடு, இருட்டு காலம் தானே, யாரு பாப்பாங்கோ, கும்பாபிசேகம் பண்ணினாக்கா உனக்கும் கிடைக்கும், எனக்கும் கிடைக்கும். இன்னம் மத்த பிராமணர்களுக்கும் தச்சனை, வேட்டி, சமாராதனை இதெல்லாம் கிடைக்கும். ஒரு வாரம் எப்படியும் தாட்டிக்கிலாம். தச்சனை,வேட்டி, குடம், சொம்பு முதலானதும் மாசக்கணக்காக வரும். அப்புரம் இதே மாதிரி ஒவ்வொரு ஊரிலேயும் பண்ணச் சொன்னாக்க இந்த வருசத்து சங்கதி முடிஞ்சு போகும். மேலைக்கு பாத்துக்கலாம். அதுக்குள்ளே அவனும் ஜெயிலுக்குப் போயிட்டாக்க மத்தவனுங்க இந்தப் புத்திவுட்டுடுவானுங்கோ.

**நடேசக் குருக்கள் :** சரி சரி, ராத்திரிக்குப் போய் தள்ளிப் போட்டே வந்துடுறேன், நீ எங்கயும் போயிடாதே. தருமகர்த்தாகிட்ட சொன்ன உடனே அவன் ஒரு முட்டாளு ஆனதினாலே கும்பாபிசேகம் உடனே பண்ண வேணும் எண்ணு சொல்ற தர்மகர்த்தா. அவன் உடனே ஏற்பாடு பண்ண ராப்லெ இருந்தா உடனே உன்னை வந்து கூப்புடுறேன் தெரியுமா?

**சுப்புக் குருக்கள் :** ஆமா ஆமா, உங்க தர்மகர்த்தாகூட ஒரு பயித்தியக்காரன்தான். அவனுக்கு சும்மா மேலும் கீழும் சாம்பலைப் பூசத்தா தெரியும். அரகரா, சிவசிவ எங்கத்தா தெரியும். மத்தபடி நீ சொன்னதுதான் வேதவாக்கு. உடனே செய்வான். நானும் சத்திரத்திலேயே படுத்திருக்கிறேன். காலமே நேரத்திலேயே வந்து சொல்லு தெரியுமா?

**நடேசக் குருக்கள் :** சரி, போய்ட்டு வா. நீ நல்லா இருக்கணும். நல்ல கஷ்டகாலத்திலே சரியான யோசனை சொன்னே. சரி, சரி.

**குடி அரசு - உரையாடல் - 29.05.1927**





RangaRakes tamilnavarasam.com

# “உருண்டைக்கு நீளம் புளிப்புக்கு அவளப்பன்”

“உருண்டைக்கு நீளம் புளிப்புக்கு அவளப்பன்” என்பதாக ஒரு பழமொழி உண்டு. அதாவது ஒரு ராஜாவைப் பார்க்க எல்லோரும் எலுமிச்சம் பழம் கொண்டுபோனார்களாம். திருவாழ்தான் என்பவன் ஒரு புளியம்பழம் கொண்டுபோய் கொடுத்துப் பார்த்தானாம். ராஜா திருவாழ்தானைப் பார்த்து இது என்ன என்று கேட்டாராம். அதற்குத் திருவாழ்தான் “உருண்டைக்கு நீளம் புளிப்புக்கு அவளப்பன்” என்றானாம். என்னவெனில் எலுமிச்சம்பழம் உருண்டை, புளியம்பழம் நீளம். புளிப்பு விஷயத்தில் இது அதைவிட அதிகமான புளிப்பு என்று சொன்னானாம்.

அதைப் போலவே ஜஸ்டிஸ் கட்சி மந்திரி காலம் மிகக் கொடுமையாகவும், தேசத் துரோகமாகவும் இருந்ததாகப் பார்ப்பனர்களால் கூறப்பட்டு வந்தது. நமது நற்காலமாகவே ஜஸ்டிஸ் மந்திரி ஆட்சியும் மறைந்தது. இரட்டை ஆட்சியை வெட்டிப் புதைப்போம், மந்திரிகளை எதிர்த்தே தீருவோம் என்ற நமது அய்யங்கார்கள் சுப்பராய மந்திரிக்கட்சியை அமைத்தார்கள். இது உருண்டைக்கு நீளமாகவும் புளிப்புக்கு அதனப்பனாகவும் ஏற்பட்டு விட்டது. நாம் இந்த ரகசியத்தை முன்னமேயே வெளியிட்ட பொழுது நேற்று வரை மந்திரி கட்சிக்கும் எங்களுக்கும் சம்பந்தமேயில்லை, நாஸ்திகரும் பார்ப்பன துவேஷியானவருமான நாயக்கர் சொல்வதை நம்பாதீர்களென்று பார்ப்பனர்களும், பார்ப்பனப் பத்திரிகைகளும் கத்தி வந்தன. ஸ்ரீமான் எஸ். முத்தைய முதலியார் போன்றார்கள் எக்காரணத்தினாலோ பார்ப்பனர்களை..... அ. இ. கா. கூட்டத்தில் தாக்க ஆரம்பித்ததும் உண்மை விஷயம் பார்ப்பனர்கள் வாயிலிருந்தே கக்கப்பட்டு விட்டது. அதாவது :–

“தற்காலமிருந்துவரும் மந்திரி ஆட்சியில் தேசீய மணம் கமழ்கின்றதும் காங்கிரஸ் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்ற இம்மந்திரிகள்தான் லாயக்குள்ளவர்கள். அதற்காகவே இம்மந்திரிகளை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோம். வகுப்புவாதக்காரர்களான ஜஸ்டிஸ் கட்சியார் தேசத் துரோகிகள் அவர்கள் மந்திரியாய் வராமல் பார்த்துக் கொள்ளவும் சுப்பராய



மந்திரி சபையை ஆதரிக்க நேர்ந்தது. மறுதேர்தலை உண்டாக்க ஜஸ்டிஸ் கட்சி இன்னமும் முயற்சிப்பதால் தான் இனியும் சுப்பராய மந்திரி ஆட்சியை எப்படியாவது ஆதரிக்கப் போகிறோம்” என்பதாகச் சொல்லி பார்ப்பனர்கள் தங்களது அயோக்கியத்தனத்தைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுவிட்டார்கள். எப்படியாவது உண்மை வெளிவந்தமை குறித்து நாம் மகிழ்ச்சி அடைய வேண்டியதே. ஆனால் தேசீய மணம் கமழும் சுப்பராயன் மந்திரி ஆட்சியின் யோக்கியதை என்ன? என்பதைப் பொது ஜனங்கள் அறிய வேண்டாமா? பார்ப்பனர்களுக்கு வலது கை கொண்டு கால் அலம்பி விடும் எந்த பார்ப்பனரல்லாதாரும் இன்றைய அய்யங்கார் ஆட்சியில் சிறிது இன்ப மனுபவிக்கலாம் என்பது மட்டும் உண்மைதான். நம் நாட்டு வேளாள குலத்தில் ஜனித்தவர்களே பெரும்பாலும் நமது அரசாங்க பெரிய உத்தியோகங்களில் வர வேண்டுமென்பது நமது நீண்டகால அவாவாகும். ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன் ஸ்ரீமதி அவ்வைப் பிராட்டியாரும் அப்படியே சொல்லியிருக்கிறார். ஆனால் இவ்வளவு தூரம் மோசமான ஒரு வேளாளர் மந்திரியாக வருவதால் நமது நாட்டுக்காவது சமூகத்திற்காவது யாதொரு நன்மையும் ஏற்படாதென்றே சொல்லுவோம். இப்போது கனம் சுப்பராயன் மந்திரியாக இருக்கிறார் என்பது உண்மை. ஆனால் எந்த யோக்கியதையுடன் மந்திரியாக இருக்கிறார்? இயற்கையாக அவருக்குள்ள குலம், கல்வி, செல்வம், சக்தி ஆகிய இதுகளின் வன்மையால் இருக்கிறாரா என்று பார்த்தால் ஒருக்காலும் இல்லவே இல்லை. பின் எப்படியென்றாலோ பார்ப்பனர்களின் தயவில் அவர்களால் ஆட்டி வைக்கப்படும் பொம்மையாய் இருப்பதினாலேயே மந்திரியாய் இருக்கிறார். நாடு சிரிக்கவும், சமூகம் வெட்கப்படவும் மந்திரி வேலை பார்ப்பது நண்பர் சுப்பராயன். அதன் பலனை அடைந்து உத்தியோகம் பதவி பெற்று தின்று கொழுப்பது பார்ப்பனர்கள். இதை எண்ணும் போதும் நாம் மிக வருத்தப்படுவதுடன் அவ்வேளாள சமூகத்திற்கே இம்மாதிரியான ஒருவரை அடைந்த துர்பாக்கியத்திற்கும் நாம் அனுதாபப்படாமலிருக்க முடியவில்லை.

## இதுவா தேசீய மணம்?

மந்திரியாக வந்த கதை இதுவென்றால் நடந்த கதைதான் என்ன? என்று பார்த்தால், திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம் முதலிய முனிசிபாலிட்டிகளிலும், கோபிசெட்டிபாளையம் தாலூகா போர்டிலும், மகாத்மா காந்தியடிகளுக்கு வரவேற்புப் பத்திரமளிப்பதென்று தீர்மானித்தார்கள். இதை சுப்பராய மந்திரியார் தடுத்துவிட்டு ஓர் சுற்று உத்திரவையும் சகல ஸ்தாபனங்கட்கும் அனுப்பியிருக்கிறார். இவ்வுத்திரவைப் பார்ப்பன மித்திரன் மந்திரி உத்திரவு என்று சொல்லாமல், திருட்டுத்தனமாய் “சர்க்கார் உத்திரவு” என்கிறான். இதே உத்திரவு பனக்கால் காலத்தில் ஏற்பட்டதற்கு “பனக்காலின் தேசத் துரோகம்,” “பனக்காலின் ராஜ்யம் பாழ்” “மகாத்மாவுக்கே உபசாரம் கூடாதாம்” என்று கூறினான். ஏனென்றால் பனக்கால் மந்திரி பார்ப்பன அடிமையல்ல.



RangaRakes tamilnavarasam.com

பெல்காம் மகாநாட்டின் பொழுது மகாத்மாவுக்கு பத்திரமளிக்க 100 ரூபாய் செலவுடன் ஒரு கலெக்டர் (I.C.S. ஆங்கிலேயர்) தலைவராய் உள்ள முனிசிபாலிட்டியில் தீர்மானித்தார்கள். ஆனால் அ. இ. தலைவர் அய்யங்காரின் ஆதரவு பெற்ற நமது கனம் மந்திரியின் செய்கையோ ஓர் ஆங்கிலேயரின் செய்கை அளவு கூட யோக்கியமாய் நடந்து கொள்ள முடியவில்லை. உண்மையில் பனக்கால் காலத்திலாவது மகாத்மா காந்தி ஆங்கிலேய ஆட்சிக்கு ஒரு ஆபத்தான மனிதராய் விளங்கினார் என்று சொல்லிக் கொண்டார்கள். ஆகவே "சர்க்கார் விரோதிக்கு" "சர்க்காரை ஆதரித்த" கட்சியார் ஆதரவு அளிக்காதது ஒரு விதத்தில் பொருந்தும். இன்றைய மகாத்மா காந்தியோ மிக சாதுவாய் விட்டார். சர்க்கார் மனிதர்களும், மன்னர்களும், திவான்களும் விருந்தாளியாக அழைக்கும் அவ்வளவு தூரம் சாதுவாகிவிட்டார். இப்படிப்பட்ட சாது காந்திக்கு "தேசீய மணம்" கமழும் மந்திரி பொதுஜனங்கள் பணத்தில் உபசாரம் அளிக்கக் கூடாது என்பாரானால் அம்மணம் தேசீய மணமா? தேசத் துரோக மணமா? "தேசீய மணமான" சுயமரியாதையற்ற மணமா? என்று தான் மகாஜனங்களைக் கேட்கிறோம்.

## சேலம் தேர்தல்

சேலம் ஜில்லா போர்டு தேர்தல் விஷயமாக மந்திரி நடந்து கொண்டதென்ன? அந்நடத்தைக்குப் பார்ப்பனப் பத்திரிகைகள் செய்யும் வியாக்யானம் என்ன? நியாயமாக நடந்த ஜில்லாபோர்டு தேர்தல் தடை செய்யப்பட்டது. இதற்குத் திருநெல்வேலியிலும் தஞ்சையிலும் அகப்பட்டது போல் ஏமாந்தவர்கள் சேலத்தில் கிடைக்காததினால் முழுவதும் மோசமானதான தாறுமாறான விளையாட்டுப்பிள்ளை உத்திரவுகளை பிறப்பிக்கும்படி மந்திரி கையைப் பார்ப்பனர்கள் பிடித்து எழுதி தந்தி கொடுத்து வருகிறார்கள். இந்த மந்திரி ஆட்சியை மந்திரி ஆட்சி என்பதா? "ரி" யை தள்ளி 'மந்தி' ஆட்சி என்பதா? முதல் முதல் சேலம் ஜில்லாபோர்டு தலைவர் தேர்தல் நடத்த மந்திரியே தான் உத்திரவிட்டார். அதாவது தற்கால பிரசிடெண்டு ராஜினாமாவை போர்டு ஒப்புக்கொண்டு, பிறகு தேர்தல் நடத்தலாம் என்று உத்திரவு செய்தார். அந்தப்படியே நடந்த தேர்தலை பார்ப்பனர்கள் வார்த்தையைக் கேட்டுக் கொண்டு ரத்து செய்துவிட்டார். மறுபடியும் மே மீ 23 - ந் தேதி நடத்தும்படி உத்திரவு செய்தார். அந்தப்படியே 23 - ந்தேதி தேர்தல் நடக்கும் சமயம் பார்த்து அந்தத் தேதியிலும் நடக்கக் கூடாது என்று உத்திரவு அனுப்பிவிட்டார். பிறகு ஜுன் மாதம் 4 - ந் தேதி நடத்த வேண்டுமென்று தந்தி கொடுத்திருக்கிறாராம். இத்தகைய சிறுபிள்ளைத்தனமான உத்திரவைப் பிறப்பித்துப் பார்ப்பனரல்லாதார் சமூகத்தை அவமானப்படுத்தவே நமது கனம் சுப்பராயன் பார்ப்பனர்களுக்கு ஓர் அடிமையாய் விளங்குகிறார் என்பதை நினைக்கும் போது இதை உடனே ஒழிக்காமல் வேறு என்ன செய்வது? இவ்வளவு அக்கிரமங்களையும் ஸ்ரீமான் சுப்பராயனை செய்யச் சொல்லி அவரையும் கெடுத்து நமது சமூகத்தையும் ஒழிக்கப் பாடுபட்டுவிட்டு நாளைய தினம் வெள்ளைக்காரர்கள் முன்னால் இவ்விஷயங்கள் பிரஸ்தாபிக்கப்படும் போது இதே பார்ப்பனர்கள் என்ன சொல்வார்கள் என்றால் "பார்ப்பனரல்லாதார் உயர்ந்த வேலைகள் பார்க்க யோக்கியதை உடையவர்கள் அல்ல. வெறும் ஆசைப்படுவதும் பார்ப்பனர்களின் மீது பொறாமைப் படுவதுமாய் இருக்கிறார்களே ஒழிய வேலை கொடுத்தால் இம்மாதிரி சுப்பராய மந்திரியைப் போல்தான் நடந்துவிடுகிறார்கள். ஆதலால் கொடுப்பதாயிருந்தால் பார்ப்பனர்களாகிய எங்களுக்குக் கொடுங்கள், இல்லாவிட்டால் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்று பச்சையாய் சாட்சி சொல்லப் போகிறார்கள். இதை நினைக்கும் போது வேளாளசமூகத்திற்கு மாத்திரமல்ல பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே ஒரு சொத்தை ஏற்படும்படியாக ஏற்பட்டுவிட்டதே என்கிற மன வருத்தம் நம்மை மிகுதியும் வாட்டுகிறது.

இவ்வளவு கெட்ட பெயரும் ஊரார் சிரிப்பும் அவமானமும் அடைந்தும் சமூகத் துரோகமும் செய்தும் தானாவது ஒரு லாபத்தை அடைகிறாரா என்று பார்ப்போமானால் அய்யோ பாவம் அதுவுமில்லை என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் பார்ப்பன சட்ட சபை மெம்பர்களும் கனம் சுப்பராயன் மந்திரி ஆவதற்கு உதவிய சில பார்ப்பனர்களும் வரும் சம்பளத்தில் பகுதிக்கு மேல் பிடுங்கிக் கொள்ளுகிறார்களாம். கதருக்கென்றும், காங்கிரசுக்கென்றும், கட்சிப் பிரசாரத்திற்கு என்றும், வாயாடி வம்பருக்கென்றும், கோவிலுக்கென்றும், உபநயனமென்றும், இன்னமும் எத்தனையோ இழவுக்கு என்றும் பிடுங்கித் தின்று விடுகிறார்களே அல்லாமல் ஒரு காசாவது வீடு வந்து சேருவதற்கும் வழியில்லை. போராக்குறைக்கு சிபார்சு ஆள்களும் வீதிவீதியாய்த் திரிகிறார்கள். அதாவது உனக்கு என்ன வேண்டும் கனம் சுப்பராயனால் ஏதாவது வேலை ஆகவேண்டுமா சொல் உடனே செய்து வைக்கிறேன். சுப்பராயன் என்ன நம்ம தம்பி கைக்குள்ளாகத்தானே, நம்ம அத்தான் சட்டப் பயில்தானே, நமது சத்தியமூர்த்தி டிக்கெட் பாக்கெட்டில் தானே இருக்கிறார். இப்பொழுது சொல் நாளை கெஜட்டில் பார்த்துக் கொள். சாயந்திரம் 3 மணிக்கு தந்தி வருகிறதா இல்லையா பார். ஆனால் எனக்கு என்ன தருகிறாய் என்கிற வியாபாரம் அக்கிரகாரத் தெருவுகளில் தூண்கள், பந்தக் கால்கள், எச்சைத் தொட்டிகள் எல்லாம் பேசுகின்றதுகள். கூடிய சீக்கிரத்தில் கனம் சுப்பராயன் பெயர் இதை விட இனி மேல் கெடுவதற்கு ஒன்றுமில்லை என்கிற மாதிரிக் கெட்டுப் போய்விடும் என்பதில் சந்தேகம் தோன்ற இடமில்லைபோல் தெரிகிறது. ஆனாலும் இதற்கு யார் என்ன செய்யக்கூடும். பார்ப்பனர்கள் பேச்சைக் கேட்டவர்கள் யாராவது முன்னுக்கு வந்திருந்தால் நமது கனம் சுப்பராயன் முன்னுக்கு வராததைப் பற்றி வருத்தப்படலாம். உலகம் பிறப்பதற்கு முன் உண்டான சட்டம் சுப்பராயன் விஷயத்தில் மாத்திரம் எப்படி மாறக்கூடும்.? ஆதலால் அனுபவிக்க வேண்டியதுதான்.

**குடி அரசு - கட்டுரை - 29.05.1927**


RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ் பைத்தியமும் பொய்மான் வேட்டையும்

கோயமுத்தூரில் நடக்கப் போகும் கோயமுத்தூர் ஜில்லா பார்ப்பன ரல்லாதார் மகாநாட்டை தென் இந்திய பார்ப்பனரல்லாதார் மகாநாடாக நடத்த வேண்டும் என்பதாக சில ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் விரும்பியதால் கோய முத்தூர் ஜில்லா மகாநாட்டு வரவேற்பு சபையினரும் அதற்கு இசைந்து 25 தேதி ஒரு மீட்டிங்கு கூட்டித் தென் இந்திய பார்ப்பனரல்லாதார் சங்க நிர்வாக சபை அம்மாதிரியே தீர்மானித்து வேண்டிக் கொண்டால் அந்தப் படிக்கே தங்களது மகாநாட்டை மாகாண பார்ப்பனரல்லாதார் மகாநாடாக நடத்துவதாகத் தீர்மானமும் செய்தாய் விட்டது. இதன் பலனாக ஜுன் 11, 12 தேதிகளில் கூட்டுவதாயிருந்த மகாநாடு மறுபடியும் தேதி மாறினாலும் மாறலாம்.

ஜில்லா மகாநாட்டை மாகாண மகாநாடாக மாற்ற வேண்டிய அவசியம் என்ன என்பதைப் பற்றி நண்பர்கள் ஐயுறலாம். அதற்கு நாம் ஒரே பதில் அளிக்கிறோம். காங்கிரஸ் பைத்தியமும் பொய்மான் வேட்டையுமே தான் காரணம். அதாவது,

ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த சில கனவான்களுக்கு காங்கிரஸினி டத்தில் பைத்தியம் ஏற்பட்டிருப்பதும் காங்கிரசிலுள்ள பல கனவான்களுக்கு ஜஸ்டிஸ் கட்சியில் சேரவேண்டும் என்கிற எண்ணமும்தான் இச் ஜில்லா மகாநாட்டை மாகாணமாக நடத்தப் போகிறது.

நிற்க, காங்கிரசிலுள்ள கனவான்கள் ஜஸ்டிஸ் கட்சியில் சேருவது நமது இயக்கத்திற்கு இன்னும் நல்ல காலமென்றே சொல்லுவோம். அவர்களை மனப்பூர்வமாய் வரவேற்போம். அப்படி அவர்கள் வந்து சேருவதற்கு இடையூறாக நம்மிடம் என்னென்ன குற்றங்கள் இருக்கின்றதாகச் சொல்லு கிறார்களோ அவைகளையெல்லாம் விலக்க நம்மாலான வரை முயற்சி செய் வோம். இன்னமும் நம்மீது யாருக்காவது மனவருத்தமிருந்தாலும் மன்னிப்புக் கேட்கவும் பின்வாங்கோம். ஏனெனில் பார்ப்பனரல்லாதார் முன்னேற்ற மடைவதற்கும் அவர்கள் சுயமரியாதை அடைவதற்கும் எந்த விதத்தினாலும் எல்லாப் பார்ப்பனரல்லாதாரும் ஒன்று கூடினால்தான் எதிர்பார்க்கும் பலன்



முழுவதும் அடையமுடியும் என்கிற முடிவான கருத்தை நாமுடையவ ராதலால் இந்த நிலையில் நாம் வலிய அழைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் காங்கிரசில் ஜஸ்டிஸ் கட்சியார் எல்லோரும் போய்ச் சேரவேண்டு மென்பதையோ பார்ப்பனரல்லாதார் எல்லோரும் போய்ச் சேர வேண்டு மென்பதையோ நாம் ஆதரிக்க முடியாததற்கு வருந்துகிறோம். ஏனெனில் காங்கிரசைப் பற்றி இதற்கு முன் பல தடவைகளில் "குடி அரசில்" எழுதியும், அனேகக் கூட்டங்களில் பேசியும் வந்திருக்கிறோம். அதற்கு நாளதுவரை யாரும் பதில் சொல்லவேயில்லை.

காங்கிரசினால்தான் வெள்ளைக்கார ஆட்சியோ, அதிகார வர்க்க ஆட்சியோ, அன்னிய ஆட்சியோ எதுவோ அதாவது நமது நாட்டிற்கு அனுகூலமில்லாத ஆட்சி பலப்பட்டு நடைபெற்று வருகிறதென்பதும், காங்கிரசினாலேயேதான் மக்கள் ஒற்றுமை இழந்து டீ அரசாட்சியைத் தாங்கள் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதும், காங்கிரசினா லேதான் நம் நாட்டுத் தொழில்கள் கெட்டு தொழிலாளிகள் கஷ்டப்படுகிறார் கள் என்பதும், வருஷம் ஒன்றுக்கு 10 லட்சக்கணக்கான தொழிலாளர்கள் நம் நாட்டைவிட்டு வெளியில் கூலிகளாக போய்க்கொண்டிருக்கிறார்களென் பதும், காங்கிரசினாலே தான் உத்தியோகங்கள் பெருத்ததென்பதும், காங்கிரசி னாலேதான் அவ்வுத்தியோகங்களுக்கு உலகத்தில் எங்குமே இல்லாத கொள்ளைச் சம்பளம் அதாவது மாதம் 1000, 2000, 5000, 6000, 10000 போல ஏற்பட்டதும் வக்கீல்கள் பெருத்து மாதம் 1000, 10000, 20000, 50000 வீதம் ஏழை மக்கள் பணத்தை கொள்ளையடிக்க ஏற்பட்டதும், ஏழைக் குடிகள் தலையிலும், வியாபாரிகள் தலையிலும் தாங்க முடியாத வரிகள் ஏற்பட்டதும், பணக்காரர்கள் மேல் மேல் பணக்காரர்களாகவும், ஏழைகள் மேல் மேல் ஏழைகளாகவும், தேசத்தின் பெரும்பான்மையான மக்கள் தரித்திரத்தினால் மானம், கற்பு, சுயமரியாதை, மனச்சாட்சி இவைகளை விற்று வாழும்படி ஏற்பட்டதும் காங்கிரசினால்தான் என்பது நமது உறுதியான அபிப்பிராயம். இதை எங்கு வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் சொல்லவும் மெய்ப்பிக்கவும் தயாராயிருக்கிறோம். இப்படிப்பட்ட இன்னல்கள் விளைவிக்கும் ஒரு ஸ்தாபனத்தை தேசாபி விருத்தியில் கவலையுள்ள வர்களும் ஏழை மக்களிடத்தில் அன்புள்ளவர்களும் ஒழித்து நன்மை பயக்கத்தக்க இயக்கத்தில் சேர்ந்து உழைக்க வேண்டுமே அல்லாது அதில் தாங்களும் போய்ச் சேருகிறோம் என்பதும், நீங்களும் வாருங்கள் என்று மற்றவர்களைக் கூப்பிடுவதும் கொலை பாதகமென்பதே நமது கருத்து. என்றாலும், அரசியலை வாழ்வாய் கொண்டவர்களும் ஆங்கிலம் படித்தவர் களும் எவ்வளவு தான் பரிசுத்தமான எண்ணமுடையவர்களாயிருந்த போதிலும் காங்கிரஸ் படுகுழியில் விழாமல் தப்புவிக்க முடியவே முடியாது. ஏனெனில் அரசியல் வாழ்வுக் காரர்கள் பாமர மக்களை ஏமாற்ற சர்க்காரை வைய வேண்டும். ஆங்கிலம் படித்தவர்கள் பெரும் பெரும் பதவி,



RangaRakes tamilnavarasam.com

உத்தியோகம் முதலியதுகளைப் பெற வேண்டும். இவ் விரண்டுக்கும் இது சமயம் நமது நாட்டில் காங்கிரசை விட வேறு இயக்கம் கிடையாது. ஆதலால் அவர்கள் காங்கிரசை விடமுடியாது என்பதை யாவரும் ஒப்புக்கொண்டு தானாக வேண்டும்.

இதுசமயம் காங்கிரசுக்கு நமது நாட்டில் இழிவு ஏற்பட்டு விட்டதாலும், காங்கிரஸ் நாம் மேற்கூறிய இவ்வளவு இன்னல்களுக்கும் காரணமாயிருப் பதையும் சமீபத்தில் பம்பாய் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நடவடிக்கை களைப் பார்த்த பிறகு காங்கிரஸ் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமானதும், பார்ப்பன ஆதிக்கத்திற்கு அநுகூலமான ஸ்தாபனம் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டி ஏற்பட்டதாலும், காங்கிரசானது பார்ப்பன ரல்லாதாரை நசுக்கவே பார்ப்பனர்கள் உபயோகித்துக் கொண்டிருக்கும் ஆயுதம் என்பது யாவருக்கும் தெரிந்து விட்டதாலும், அதிலிருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கு ஏதாவது ஒரு சமாதானம் கண்டுபிடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அதனாலேயே அவர்கள் “பார்ப்பனரல்லா தாரில் முக்கியமாயுள்ளவர்கள் காங்கிரசை விட்டுவிட்டதால் ஒரு சிறிய கூட்டத்தார் பெரும்பான்மையராகி அதில் ஆதிக்கம் பெற்று பார்ப்பன ரல்லாதாருக்கு விரோதம் செய்கிறார்கள். ஆதலில் பார்ப்பனரல்லாதார் பெரும்பான்மையாகிவிட்டதால் அவர்களது ஆதிக்கம் காங்கிரசில் குறைந்து விடும். பிறகு நமக்கு சுயராஜ்யம் வந்து விடும்” என்கிறார்கள். இது வாலறுந்த நரி கதையே தவிர வேறல்ல. ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள சில ஆங்கிலங் கற்ற பிரமுகர்களோ “நாம் நமது மாகாணத்துக்குள் எவ்வளவுதான் செல் வாக்கு பெற்றிருந்தாலும் காங்கிரசின் மூலம் நமது நாட்டுப் பார்ப்பனர்கள் வெளி மாகாணங்களின் மூலமாக தங்களுக்கு அனுகூலம் தேடிக் கொள் கிறார்கள். இப்போது பார்ப்பனர்களால் நமக்கு ஏற்படும் உபத்திரவங் களில் பெரும்பாகம் காங்கிரசினால்தான் ஏற்படுகிறது. ஆதலால் அதை நாம் கைப்பற்றிக் கொண்டால் அதாவது அவர்களிடமிருந்து நாம் பிடுங்கிக் கொண்டால் நமக்கும் உபத்திரவம் செய்ய அவர்களுக்கு வேறு ஆயுதம் இல்லாமல் போய்விடும்” என்பதாகச் சொல்லுவதோடு “இப்பார்ப்பனர்களின் யோக்கியதையை வெளி மாகாணங்களிலும் போய்ச் சொல்ல சௌகரிய மாயிருக்கும்” என்றும் சொல்லுகிறார்கள். இது “கொக்கு தலையில் வெண்ணை வைத்து அது உருகி கண்ணுக்கு வந்து கண் தெரியாமல் போகும் போது பிடித்துக் கொள்ளலாம்” என்பது போல் இருக்கிறது.

மற்றொரு கூட்டத்தார் அதாவது காங்கிரசில் ஒரு காலும் ஜஸ்டிஸ் கட்சியில் ஒரு காலும் வைத்திருக்கிறவர்கள். “இப்போது தானே இந்தக் காங்கிரஸ் இப்படி தேசத்துக்கும் சமூகத்திற்கும் துரோகம் செய்கிற ஸ்தாபனமாகிவிட்டது. இதுவரையில் தேசத்திற்கு எத்தனையோ நன்மை செய்திருக்கிறது. ஆதலால் அதைக் கைப்பற்றி முன் போல செய்யவேண்டும் என்கிறார்கள்.” இது முழு மோசமான தென்றே சொல்லலாம். ஆகவே இம்மூன்று வாதங்களும் கொஞ்சமும் பொருத்தமானதல்ல.

முதலாவது, காங்கிரசை எந்த காரணம் கொண்டும் நம்மால் கைப்பற்ற முடியவே முடியாது. மகாத்மா காலத்திலும் காங்கிரஸ் பார்ப்பனர்கள் வசம்தான் இருந்தது. ஆனால் நம்மை முன்னால் இருத்தி வேலை வாங்கிக் கொண்டு வந்தார்கள். இப்போதும் காங்கிரஸ் நம்ம கைக்கு வரவேண்டு மானால் பார்ப்பனர்கள் சொல்படி நடந்தால் உடனே வந்துவிடும். மற்றபடி அவர்கள் நன்மைக்கல்லாமல் நாம் கைப்பற்றுவதானால் முடியவே முடியாத காரியம் என்பது நமது அபிப்ராயம். ஏனெனில் காங்கிரசைக் கைப்பற்ற நமக்கு பார்ப்பனர்களுக்கு ஆள்கள் கிடைப்பதைப் போல நாமும் விசேஷ பணம் செலவு செய்து ஆள்களைச் சேர்த்துக் கொண்டு காலித்தனத்திற்குத் தயாராயிருக்க வேண்டும். பார்ப்பனர்கள் செலவு செய்யும் பணமும் அவர் கள் பேச்சைக் கேட்டு காலித்தனம் செய்யும் ஆள்களும் அவர்களுடையது அல்ல. நம்ம பணங்கள்தான், நம்ம ஆள்கள்தான். அதாவது நமது பண்டாரச் சன்னதிகள், ஜமீன்தாரர்கள், பெரிய பெரிய மிராசுதாரர்கள் முதலியவர் களைத் தங்கள் அதிகார பலத்தால் மிரட்டிப் பணம் பெற்று விடுகிறார்கள். அதைக்கொண்டு நம்மவர்களுக்கே கொடுத்து நம்மவர்களையே பிடித்து நம்மை வையச் சொல்லவும், காலித்தனம் செய்து அடிக்கச் சொல்லவும், அடிபடவும், வசவு கேட்கவும் செய்து விடுகிறார்கள். அன்றியும் இம்மாதிரி நம்மில் பலர் காங்கிரசைக் கைப்பற்ற வேண்டும் என்று பேசிக் கொண்டிருப் பதைக் கேள்விப்பட்டவுடன் காங்கிரஸ் வரவேற்பு கமிட்டி அக்கிராசனர் வேலையை 45000 ரூபாய்க்கு ஒரு அய்யங்கார் பார்ப்பனருக்கு விற்று விட்டதாகவும் அந்த அய்யங்கார் பார்ப்பனர் அந்த 45 ஆயிரம் ரூபாயையும் 2, 3 மடாதிபதிகளிடமும் இரண்டொரு மகந்துக்களிடமும் வாங்கிக் கொடுக்கத் தீர்மானித்து விட்டதாகவும் சென்னையில் பலமான வதந்தி உலாவுகிறது. இதற்கு நாம் செலவு செய்ய பணம் யாரிடமிருக்கிறது. நமக்கு எந்த மடாதிபதி கொடுக்க முடியும். தவிர நம்மவர்களையே பிடித்து நம்முடன் கலகம் செய்யத் தூண்டிவிட்டால் நாம் அவர்களுக்கு பணம் கொடுத்து சரி செய்ய நம்மால் முடியுமா? தவிர ஸ்ரீமான்களான ஒரு ஓ. கே. செட்டி யாரையும், ஒரு நாயுடுவையும், ஒரு முதலியாரையும், ஒரு நாயக்கரையும், ஒரு பிள்ளையையும், ஒரு குழந்தையையும், ஒரு பாவலரையும், ஒரு சாயபு வையும் நாம் வசப்படுத்திக் கொண்டால் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு வேறு நாயுடு, முதலியார், செட்டியார், நாயக்கர், பிள்ளை, பாவலர், சாயபு கிடைக்கமாட்டார்களா? இப்படி எத்தனை பேரை வசப்படுத்த எவ்வளவு ரூபாய் செலவு செய்து எத்தனை காலித்தனங்களுக்கு நாம் தலை கொடுப்பது? இவ்வளவும் செய்தாலும் இந்த விஷயங்கள் தெரிந்தே சமீபத்தில் கூடிய எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஒரு தீர்மானம் போட்டுக் கொண்டிருக்கிறார்களே அதற்கு என்ன செய்வது? அதாவது “ஒரு ஊரில்



RangaRakes tamilnavarasam.com

இரண்டு காங்கிரஸ் கமிட்டி ஏற்பட்டு விட்டால் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் எதை ஒப்புக் கொள்ளுகிறார்களோ அதுதான் செல்லுபடி உள்ளது. மற்றது தள்ளிவிடத் தக்கது" என்று செய்து கொண்டிருக்கிறார்களே. அதற்கு நாம் என்ன செய்ய முடியும். ஏதோ ஒரு அன்னக்காவடியைப் பிடித்து ஒரு அய்யர் பிரசிடெண்டு ஒரு அய்யங்கார் காரியதரிசி 2, 3 சோணகிரிகள் நிர்வாக மெம்பர்கள் என்று கடிதத்தில் எழுதிக்கொண்டால் அதைத்தான் காரியக் கமிட்டி ஏற்றுக்கொள்ளுமே தவிர இங்கு நாம் எவ்வளவுதான் ஒழுங்காய் வேலை செய்து ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு பிரசிடெண்டு, ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் காரியதரிசி, பனகால் ராஜா, கலியாணசுந்திர முதலியார், ராமசாமி நாயக்கர் நிர்வாக சபை மெம்பர்கள் என்று சொன்னாலும் அதை ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்காரோ சத்தியமூர்த்தியோ பார்த்துக் காரியக்கமிட்டியால் குப்பைத் தொட்டியில் போடச் செய்ய வேண்டுமானால் அரை க்ஷண நேரத்தில் முடியும். அப்படித்தான் ஜயித்தாலும் காங்கிரசிலும் அகில இந்தியக் காங்கிரஸ் காரியக்கமிட்டி இதுகளிலும் நம்மால் என்ன செய்துவிட முடியும்? பம்பாயில் ஸ்ரீமான் முத்தையா முதலியார் கொஞ்சம் பேசுவதற்குத் தன்னாலானவரை பாடுபட்டும் கடன் வாங்கிப் பார்த்தும் முடியாமல் முக்காடு போட்டுக்கொண்டு சென்னை வந்து சேர்ந்தார். அதற்குமேல் யார் என்ன செய்து விட முடியும்? எப்படியும் எல்லா இந்தியத் தலைவர் பார்ப்பனராகவோ அல்லது ஸ்ரீமான் தாஸ் போன்ற விபீஷணர்களாகவோதான் இருக்க முடியும். அப்படியெல்லாம் கஷ்டப்பட்டும் அதைப் பிடித்துவிட்டாலும் அதனுடன் மாரடிக்கவும் அதை மறுபடியும் பார்ப்பனர்கள் கைப்பற்றாதிருக்க பாடுபடவும் அதே வேலை நமக்கு சரியாய் இருக்குமே ஒழிய அரை நிமிடமாவது நமக்கு நாட்டிற்கோ சமூகத்திற்கோ வேலை செய்யக் கொஞ்சமும் ஓய்வு இருக்காது. அப்படித்தான் ஓய்வு இருந்தாலும் நமக்கு வேண்டிய திட்டங்களை யெல்லாம் இந்தியக் காங்கிரசில் புகுத்த முடியாது. ஆகவே இவ்வளவு கஷ்டங்கள் காங்கிரசிலிருப்பதை யோசித்துப் பார்த்தால் யாருக்கும் விளங்காமல் போகாது.

ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு எல்லோரும் வாருங்கள் காங்கிரசில் சேருங்கள் என்று பார்ப்பனரல்லாதாரைக் கூவியழைத்ததும் பார்ப்பன மித்திரனுக்கும் பார்ப்பன சுயராஜ்யாவுக்கும் எவ்வளவு ஆத்திரம் வந்து விட்டது என்பதைப் பாருங்கள். மித்திரன் "ஸ்ரீ வரதராஜுலு நாயுடு பேச்சைக் கேட்டு பார்ப்பனரல்லாதார்களே கெட்டுப் போய்விடாதீர்கள்" என்று புத்தி சொல்லுகிறான். மற்றொருவன் காங்கிரசுக்கு ஆபத்து வந்து விட்டது போல் ஆத்திரப் படுகிறான். ஆகவே காங்கிரசு பார்ப்பனர்கள் வீட்டுச் சொத்தாய் இருந்து அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து வந்திருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லையா? நாம் ஏன் அங்கு போக வேண்டும். நமக்கு ஒரு சொத்து தேடிக் கொள்ள முடியாதா? இப்பொழுது காங்கிரசின் பூரா யோக்கியதையும் வெளியாகி அது உலகத்தாரால் அவமதிக்



கப்பட்டு கூடிய சீக்கிரத்தில் சாகப்போகும் ஒரு ஸ்தாபனத்திற்கு நாம் போய் உயிர்கொடுத்து அதற்கு யோக்கியதை உண்டாக்கிப் பார்ப்பனர்கள் கையில் ஒப்படைத்து விட்டு வர வேண்டுமா? ஸ்ரீமான் நாயக்கர் சொம்பையும் மூட்டையையும் தூக்கிக் கொண்டு காலை ஒரு ஊர், பகல் ஒரு ஊர், மாலை ஒரு ஊர், படுக்கை ஒரு ஊராகத் திரிந்து காங்கிரசுக்கு உழைத்த உழைப்பு இன்று என்ன ஆச்சுது. ஸ்ரீமான் முதலியார் தொண்டைக் கிழியக் கத்திக் காங்கிரசுக்கு உழைத்தது இன்று என்ன ஆச்சுது. ஸ்ரீமான் நாயுடு ஜஸ்டிஸ் கட்சியைக் கொலை செய்து காங்கிரசுக்கு வீரகண்டாமணி சூட்டியது இன்று என்ன ஆச்சுது?

"தென்னாட்டுத் திலகரை (ஸ்ரீ நாயுடுவை) காங்கிரசை விட்டுத் துரத்த வேண்டும், மாரீசனை (ஸ்ரீ முதலியாரை) காங்கிரசை விட்டு வெளியாக்க வேண்டும், நாயக்கரை ஜெயிலில் பிடித்து அடைக்க வேண்டும்" என்று சொன்னவரைத் தானே காங்கிரசு தனக்கு தலைவராக ஏற்றுக் கொண்டது வேறு அதனிடத்தில் நாட்டுக்கோ மக்களுக்கோ சமூகத்திற்கோ இருக்கும் நன்மையோ, நாணயமோ இன்னது என்பது நமக்கு விளங்கவில்லை. ஆனபோதிலும் ஜஸ்டிஸ் கட்சியில் வந்து சேருவதற்கு காங்கிரசில் இருக்கும் பார்ப்பனரல்லாதாருக்குத் தடையாக ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு 25 - தேதி தந்தியில் கண்ட காரணமாகிய இரண்டு மாத்திரமே அதாவது "ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் காங்கிரஸ் விவகாரங்களை எதிர்க்கக்கூடாது" என்பதும் "பார்ப்பனரல்லாதார்கள் தங்கள் சொந்த ஹோதாவில் காங்கிரசில் சேர அனுமதி அளிக்க வேண்டும்" என்பதுகளே ஆக்ஷேபணைகளா யிருக்குமானால் அதைப்பற்றி நமக்குத் தோன்றியதைச் சொல்லுகிறோம். இரண்டாவது விஷயத்தைப் பற்றி நமக்கு ஆக்ஷேபணை இல்லை. சொந்த ஹோதாவில் காங்கிரசில் சேருகிறவர்கள் சேர்ந்து கொள்ளட்டும். முதலாவது விஷயமாகிய அதாவது "காங்கிரஸ் விவகாரங்களை ஜஸ்டிஸ்காரர்கள் எதிர்க்கக்கூடாது" என்று சொல்லுவது நியாயமாகுமா? நேற்று பம்பாயில் கூடிய கூட்டத்தின் நடவடிக்கைகளை இப்போது ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு முதல் உலகமே எதிர்க்கிறதே. கயா தீர்மானங்களை தேசபந்து தாஸ் எதிர்க்கவில்லையா? காங்கிரசு சூழ்ச்சிகளை ஜனங்களுக்கு வெளிப்படுத்த வேண்டாமா? காங்கிரசு தேவஸ்தான ஆக்டை எதிர்த்தால் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் சும்மா இருக்க வேண்டியதா? காங்கிரசு சர்க்காரை ஆதரித்தால் ஜஸ்டிஸ்காரர்கள் சும்மா இருக்க வேண்டியதா? காங்கிரஸ் இப்போதைய மந்திரிகளை ஆதரிக்க அ. இ. கா. கமிட்டி உத்திரவு பெற்று வந்து விட்டதால் ஜஸ்டிஸ் கட்சியும் ஸ்ரீமான் சுப்பராய மந்திரியை எதிர்க்கக்கூடாதா? ஆதரிக்க வேண்டியதுதானா? என்பதுகளை யோசித்துப் பார்த்தால் இது எவ்வளவு கொடுமையான அடக்குமுறை என்பது விளங்காமல் போகாது. இதுவரை காங்கிரஸ் எத்தினை குட்டிக்கரணங்கள் போட்டு வந்திருக்கிறது என்பது யாருக்கும் தெரியாதா? ஆதலால் முதலாவது நிபந்தனை நீக்கி இரண்டாவது



RangaRakes tamilnavarasam.com

நிபந்தனையை ஒப்புக்கொள்ள ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆக்ஷேபணை இருக்காது என்றே எண்ணுகிறோம். மற்றபடி நமக்கு சொந்தத்தில் எதைப்பற்றியும் அதிகமான கவலை கிடையாது. ஏனெனில் நாம் காங்கிரஸ் அரசியல் விவகாரங்களைப் பற்றியும் ஜஸ்டிஸ் அரசியல் விவகாரங்களைப் பற்றியும் நம்பிக்கையே கிடையாது. இரண்டின் அரசியல் விவகாரங்களையும் புரட்டு என்றும் பாமர ஜனங்களையும் ஏமாற்றி உத்தியோகம் சம்பாதிக்கும் வழி என்கிறோம். நமது தேசாபிமானம் நிர்மாணத் திட்டம்தான். நமது அரசியல் விவகாரம் எல்லா மக்களுக்கும் சரிசமமாய் அரசாங்கப் பதவி உத்தியோகத்தில் உரிமை கிடைக்க வேண்டும் என்பதுதான். நமது ஜீவகாருண்ணியமும் பரோபகாரமும் சுயமரியாதைதான். ஆதலால் மற்றவைகளைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. நம்மால் ராஜி கெட்டு போய் விட்டது என்கிற பெயர் வேண்டியதில்லை. ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவின் நிபந்தனைகளைப் பற்றி யோசிப்பவர்கள் நம்மைப்பற்றி யாரும் நினைக்க வேண்டியதில்லை. யார் எப்படி தீர்மானம் செய்து கொண்டாலும் மேற்குறித்த நமது கொள்கைகளை நிறைவேற்றும் விஷயத்தில் யார் யார் உதவி செய்யக் கூடும் என்று தோன்றினாலும் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் அவர்களுடன் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம்.

நமது மேற்கண்ட கொள்கைகளுக்கு யார் யார் எதிராயிருந்தாலும் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் அவர்களை எதிர்க்கத் தயாராக இருக்கிறோம் என்பதைப் பொது மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 29.05.1927**



RangaRakes

## ஒரு சமாதானம்

சென்ற வாரம் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு தமது பத்திரிகையில் "நாயக்கரின் நயவஞ்சகம்" என்று எழுதிய விஷயங்களுக்குப் பதிலாக "ஸ்ரீவரதராஜுலுவின் வண்டவாளம்" என்னும் தலைப்பின் கீழ் சில விஷயங்களை அதாவது, அதில் பல கனவான்கள் எழுதியதாக எழுதப் பட்டிருந்தக் கடிதங்களுக்குச் சமாதான காகிதம் ஸ்ரீமான் நாயுடுவாலேயே நாயக்கருக்குக் கொஞ்ச காலத்திற்கு முன் எழுதியதாகக் காட்டப்பட்டிருந்த கடிதத்திற்கும் சமாதானமாகவும், அடுத்த வாரம் எழுதுவதாகப் பதில் எழுதியிருந்தோம். அதை உத்தேசித்து அநேகக் கனவான்கள் நமக்குப் பலவிதமான கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அதாவது நாம் எழுதப் போகும் பதிலுக்கு மேலும் மேலும் தக்க ஆதாரங்களாக சிற்சில விஷயங்களைக் குறித்து அனுப்பி இருப்பதும், பலர் நாயுடுவைத் தங்கள் தங்கள் இஷ்டப்படிக் கண்டித்து நாயுடுவுக்குப் பதில் என்கிற முறையில் எழுதி பல கடிதங்களும்; இவ்விதம் இருவர் சண்டைபோட்டுக் கொள்வது ஒழுங்கல்லவென்கிற முறையில் சிற்சில கடிதங்களும்; இந்த விஷயத்தைப் பற்றி நாம் சென்ற வாரம் எழுதினதுபோல் இவ்வாரம் எழுதிப் பிரசுரிக்கப் போகும் பத்திரிகையில் சுமார் 250 பத்திரிகை வரையில் அதிகமாக அனுப்பிக் கொடுக்கும்படி பல கடிதங்களும் வந்திருக்கின்றன. இவ்வளவும் நாம் இவ்வாரத்தில் பிரசுரிக்கப் போகும் பதில்களுடன் சேர்த்து பிரசுரிக்கவே வந்திருக்கின்றன. நாமும் சென்ற வாரம் எழுதியது போலவே நமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களைக் கொண்டும் மனப்பூர்வமாய் நாம் சரி என்று எண்ணுவதையும் கொண்டு ஒரு விரிவான வியாசம் எழுதலாமென்றுதான் இருந்தோம். ஆனால் நமது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவரும் உண்மையான நண்பர் என்று எண்ணிக் கொண்டிருப்பவருமான ஒரு கனவான் இவ்விஷயத்தில் மிகுதியும் சிரமம் எடுத்துக் கொண்டு சில நிபந்தனைகளின் பேரில் விவாதத்தை இத்துடன் நிறுத்தி விட வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார். ஏறக்குறைய அவர் உறுதி கொடுத்த நிபந்தனைகளானது நமது பிற்கால பிரயத்தனங்களுக்குக் கெடுதியில்லாததாகவும் அனுகூலத்தைக் கொடுக்கக்கூடியதாகவும் இருந்ததோடு அந்நிபந்தனைகள் நிறைவேற்ற அவரே பொறுப்பேற்றுக் கொண்டதினாலும் ஸ்ரீலஸ்ரீ கைவல்ய சாமிகள் முதல் பல பெரியார்கள் இது விஷயமாக நமக்கு எழுதியிருப்



tamilnavarasam.com

பவைகளுக்கிசைந்து ஒருவாறு நிறுத்திக் கொண்டு இருக்கிறோம். இம்மாதிரி நாம் எழுதியிருப்பதானது அனேகருக்கு ஏமாற்றத்தைக் கொடுக்குமென்பது நமக்குத் தெரியும். ஆனாலும் ஏமாற்றமடைந்தவர்களில் பலருக்கும் நமக்கும் ஒரு குறிப்பிட்ட லட்சியத்தினிடத்திலேதான் அதிக கவலையும் மதிப்புமே தவிர சண்டையும் அவசியமில்லா வீரியமும் பெரிதல்ல. இது விஷயமாக வந்த பல கடிதங்களை இதுசமயம் போடாததற்கு நிரூப நேயர்கள் மன்னிக்க வேண்டும். இதற்குமேல் விரிவான சமாதானத்தை விரும்புகின்ற வர்களுக்கு கோயம்புத்தூர் மகாநாட்டுக்குப் பிறகு தெளிவாகக் கூறுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 29.05.1927**



# எஸ்.சி. போசின் விடுதலை

## நமது நாட்டிற்கு ஒரு வெட்கக்கேடு

சுயசாதி போஸ் (சுபாச் சந்திர போஸ்) விடுதலையானது பற்றி ஏறக் குறைய எல்லோரும் கொண்டாடுகிறார்கள். இதிலிருந்து இந்திய மக்களின் சுரணை (மானம்) கெட்டதன்மை நன்றாய் வெளியாகிறது.

சுபாச் சந்திரபோஸ் சர்க்காரால் காரணம் சொல்லாமல் விசாரணை செய்யாமல் சுமார் 2 $^1/_2$ வருஷ காலம் ஜெயிலில் அடைத்து வைக்கப் பட்டிருந்தார். மகாத்மா காந்தியும் இந்த அக்கிரமத்தை அறிந்து ஸ்ரீமான் தாசும் அடைபட்டு விடுவாரோ என பயந்து ஒத்துழையாமையையும் அதனால் மக்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களையும் பலிகொடுத்து ஸ்ரீ தாசுக்கு ஏதோ பெரிய ராஜி செய்து கொண்டதாய் பாவனை காட்டி சர்க்கார் ஸ்ரீமான் தாசைப் பிடித்தடைக்காமல் செய்தார். இதன் பலனாக தேசம் குட்டிச்சுவர் ஆகி அயோக்கியர்கள் முன்னுக்கு வந்தார்கள். பதவிக்குப் போட்டி போட்டார்கள். பதவி பெற்றார்கள். அதிலேயே மகிழ்ந்திருந்தார்கள். தங்களுக்குப் பதவி வேண்டிய போதெல்லாம் பதவி வேட்டைக்கு சுபாச் சந்திரபோஸ் பெயரை சொல்லிக் கொண்டார்கள். இவ்வளவுதானே அல்லாமல் அவரை விடுதலை செய்ய வெறும் மேடைப் பேச்சும் காகிதத் தீர்மானமும் செய்தார்களே அல்லாமல் காரியத்தில் ஒரு வேலையும் செய்தவர்கள் அல்ல. சட்ட மறுப்பு செய்திருக்கலாம். சத்தியாக்கிரகம் செய்திருக்கலாம். சட்டசபையை விட்டு வெளி வந்திருக்கலாம். இன்னமும் ஏதாவது ஒரு நாள் வேலை நிறுத்தம் (ஏற்பட்டால்) முதலியதுகளாவது செய்திருக்கலாம். ஒன்றுமில்லாமல் வேகமாய் போய்க் கொண்டிருக்கும் மோட்டார் கார் வண்டியைப் பார்த்து பட்டிக்காட்டு நாய்கள் கொஞ்ச தூரம் உரத்த சப்தத்துடன் குலைத்துக் கொண்டு போய் வாயும் காலும் ஓய்ந்தவுடன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டு திரும்பி வருவது போல் இருந்தார்களே தவிர வேறு என்ன நடந்தது? கடைசியாய் ஸ்ரீமான் போஸ் செத்து விடுவாரோ? என்னமோ? என்கிறதாகப் பயந்து சர்க்காரார் அந்தப் பழியில் இருந்து தப்பித்துக் கொள்ள திருச்சி ஜெயிலில் மகாவீரர் வாஜ்பாயி என்பவரைக் கொண்டு வந்து வெளியில் தள்ளிவிட்டது போல், வெளியில் கொண்டுவந்து விட்டால்



RangaRakes tamilnavarasam.com

இதற்காக சந்தோஷம், வாழ்த்து, சர்க்கார் புத்திசாலித்தனத்திற்கு நற்சாட்சிப் பத்திரம், நன்றியறிதல் போன்ற இழிதன்மைகளே எங்கு பார்த்தாலும் மலிகின்றன. இந்த மனப்பான்மைதான் இந்தியாவில் உள்ள கஷ்டங்களுக்கு ஆதாரமே தவிர வேறில்லை. இதில் சந்தோஷப்படக்கூடிய விஷயம் இருக்கிறதா? வெட்கப்படக்கூடிய விஷயம் இருக்கிறதா? என்பதை யோசித்துப் பாருங்கள். தவிர பங்களா அரசியல் வாழ்வுக்காரர்கள் அனேகமாய் நமது தமிழ்நாட்டு அரசியல் வாழ்வு பார்ப்பனர்களை விட மிகவும் சுயநலக்காரர் வெட்கங்கெட்டவர் என்பதற்கு ஸ்ரீமான் போசின் 2 வருஷம் சிறைவாசமும் அவர் சிறையில் இருக்கும் போது சுயராஜ்யக் கட்சி முதலிய அரசியல் கட்சி பேரால் சட்டசபை மந்திரி, பிரசிடெண்ட், மேயர், கார்ப்பரேஷன் மெம்பர், காங்கிரஸ் கமிட்டி தேர்தல் முதலியவைகளில் நடந்த போட்டியும் சூழ்ச்சிகளுமே போருமான சாட்சியாகும். தானாகவே விடுதலை செய்யப்பட்ட ஸ்ரீமான் போசின் விடுதலையைப் பற்றி இவ்வளவு தூரம் சந்தோஷப்பட ஒன்றும் காரணமில்லை என்பதைத் தெரிவிக்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 29.05.1927**



# பைத்தியக்காரனுக்கும் உஷார்காரனுக்கும் சம்பாஷணை

**- சித்திரபுத்திரன்**

**பைத்தியக்காரன் :** ஸ்ரீமான்கள் பிரகாசமும், சாம்பமூர்த்தியும் இப்போது ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார் சத்தியமூர்த்தி முதலியவர்களுடன் சண்டை போட்டுக் கொண்டு ஒருவருக்கொருவர் பார்ப்பனக் குட்டுகளை வெளியாக்கி வருகிறார்களே, இந்த சமயத்தில் நாம் காங்கிரசைப் பிடித்துக் கொள்ளலாமே?

**உஷார்காரன் :** அட போடா! பைத்தியக்காரப் பயலே. பார்ப்பனர்கள் சங்கதி உனக்குத் தெரியாதா? சுயராஜ்யப் பத்திரிகைக்கு ஏதாவது கொஞ்சம் பணம் வேண்டியிருக்கும். இல்லாவிட்டால் ஆந்திர தேசத்தில் சுயராஜ்யக் கட்சியையும் சீனிவாசய்யங்கார் கோஷ்டியையும் திட்டினால்தான் மதிப்புக் கிடைக்கிறதாகவிருக்கும். அதற்காக ஸ்ரீமான்கள் பிரகாசமும் சாம்பமூர்த்தியும் போட்ட புது வேஷமேயல்லாமல் இதில் நமக்கொன்றும் லாபமில்லை. மேற்படி இரண்டு யோக்கியர்களும் சட்டசபைத் தேர்தலின் போது செய்த உபத்திரவம் உனக்குத் தெரியாதா? இவர்கள் ஜஸ்டிஸ் கக்ஷியை வைதது உனக்குத் தெரியாதா? இதே ஸ்ரீமான் சாம்பமூர்த்தி முழங்காலுக்கு மேல் வேட்டியைக் கட்டிக்கொண்டு காந்தியைப் போல் வேஷம் போட்டுக்கொண்டு பார்ப்பனரல்லாதாரை திட்டவில்லையா? பார்ப்பனரல்லாதார் என்கிற சண்டை வரும் போது திடீரென்று எல்லாப் பார்ப்பனரும் ஸ்ரீமான்கள் பிரகாசம் சாம்பமூர்த்தி உள்பட நிமிஷ நேரத்தில் ஒன்று சேர்ந்து விடுவார்கள். அவர்களை நம்பி விடாதே.

**பைத்தியக்காரன் :** அப்படியானால் பார்ப்பனரல்லாதார் எல்லோரும் ஏன் ஒன்று சேருவதில்லை?

**உஷார்காரன் :** அதற்குக் காரணம் அனேகமுண்டு. என்னவென்றால் பார்ப்பானுக்கு வயிற்றுச் சோற்றுப் பஞ்சமே இல்லை. எப்படியாவது கஷ்டப் படாமல் பிழைக்கலாம்.



RangaRakes tamilnavarasam.com

**பைத்தியக்காரன் :** அதென்ன பார்ப்பனனுக்கு மாத்திரம் சோத்துக்குக் கஷ்டமில்லை என்கிறாய்.

**உஷார்காரன் :** அப்படிக் கேள். சந்தேகத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் சில பேர் மகா மேதாவிகள் போல் நினைத்துக் கொண்டு "பார்ப்பனர் புத்திசாலி அவர்களுக்குள் சண்டை இல்லை. பார்ப்பனரல்லாதார் முட்டாள்கள். அதனால்தான் சண்டை பிடித்துக் கொள்ளுகிறார்கள்" என்று சொல்லிவிடுவதுண்டு. அது என்ன காரணம் என்றால் அது நமது அடிமை மனப்பான்மையே தவிர வேறில்லை. யோசித்துப் பார்த்தால் நாம் அவர்களை விட புத்திசாலி என்பது நன்றாய் விளங்கும். பார்ப்பானுக்கு ஏன் சாப்பாட்டுக் குப் பஞ்சமில்லை என்றால்:

முதலாவது, பார்ப்பான் உயர்ந்த ஜாதி என்பதாலும் மற்றவர்கள் தாழ்ந்த ஜாதி என்பதாலும் பார்ப்பனரல்லாதார் ஒவ்வொருவரும் தாங்கள் உண்மையாய் எந்தத் தகப்பனுக்குப் பிறந்தார்களோ அதை விட்டுவிட்டு "நான் வைசியனுக்குப் பிறந்தேன்; நான் க்ஷத்திரியனுக்குப் பிறந்தேன்; நான் பூ வைசியனுக்குப் பிறந்தேன்; நான் அக்னி குல க்ஷத்திரியனுக்குப் பிறந்தேன்; நான் யாக க்ஷத்திரியனுக்குப் பிறந்தேன்; நான் விஸ்வப் பிராமணனுக்குப் பிறந்தேன்; நான் சௌராஷ்ட்டிரப் பிராமணனுக்குப் பிறந்தேன்" என்று இந்த நாட்டில் இல்லாத ஒரு ஜாதித் தகப்பன் பேரைச் சொல்லிக் கொண்டும் எல்லோரும் சகோதரர் என்பதை மறந்தும் ஒருவனுக்கு ஒருவன் உயர்ந்த ஜாதி என்றும் ஒருவனை ஒருவன் மற்றவனை விட தாழ்ந்த ஜாதி என்றும் சொல்லிக் கொண்டு பார்ப்பனனைப் பார்த்து காப்பியடித்து ஒருவன் வீட்டில் ஒருவன் சாப்பிடுவதில்லை; ஒருவன் தொட்டதை ஒருவன் சாப்பிடுவதில்லை; ஒருவன் பார்க்க ஒருவன் சாப்பிடுவதில்லை என்று முட்டாள்தனமாக சொல்லிக் கொள்வதாலும் இவர்கள் எல்லோரும் பார்ப்பனனை விட தாழ்ந்தவர்கள் என்பதை ஒப்புக்கொண்டு அவனை உயர்வாகக் கருதிக் கொண்டிருப்பதாலும், பார்ப்பனரல்லாதார் எல்லோரும் பார்ப்பனர்கள் தொட்டதை பார்ப்பனர் வீட்டில் பார்ப்பனர் முன்னால் சாப்பிடுவது குற்றமற்றதென்றும் விசேஷ மென்றும் நினைத்துக்கொண்டு இருப்பதாலும் பார்ப்பனர் ஓட்டல், பலகாரக் கடை, காப்பிக் கடை முதலியதுகள் வைத்து கொள்ளையடிக்க சவுகரியமாயும் கோவிலில் பூசை செய்ய சௌகரியமாயும், சமையல் வேலையில் சேர்ந்துக் கொள்ள சௌகரியமாயும் ஆகிய இந்த வேலைகளை உலகத்தில் உள்ள 3 -ல் ஒரு பங்கு பார்ப்பனருக்கு தாராளமாய் கிடைக்கிறது. இதனாலேயே ஒரு சமையல் பார்ப்பானுக்கு மாதம் 30 முதல் 50 ரூபாய் வரை சம்பளம் நடக்கிறது. ஒரு காப்பிக்கடைக்காரன் மாதம் 1-க்கு 100, 150 ரூ. வாடகை கொடுத்து 50, 60 ரூபாயிக்கு சாராயம் குடித்து, மாம்சம் சாப்பிட்டு மாதம் 75 முதல் தேவடியாளுக்கும் கொடுத்து தான் குடும்பத்திற்கு *மீ* 100 ரூ. சிலவும் செய்யத்தக்க வரும்படி சம்பாதிக்கிறான். பக்கத்துக் கடைக்காரன் பார்ப்பனரல்லாதானாயிருந்தால் அதே வியாபாரம் செய்வதில் *மீ* 15 ரூபாய் வாடகை கொடுக்கமாட்டாமலும் தன் வீட்டு ஜனங்கள் வயிறு நிறைய சாதாரண சாப்பாடு கூட சாப்பிட முடியாமலும் பட்டினி கிடக்கிறார்கள். இரண்டாவது பார்ப்பார் உயர்ந்த ஜாதி, கடவுள் முகத்தில் பிறந்தவன் என்கிற நமது அறியாமையால் நமது பாவங்களைப் போக்கவும் புண்ணியம் சம்பாதிக்கவும் நமது பெற்றோர்களுக்கும் பண்ணை குடிகளுக்கும் நன்மையை உண்டாக்கவும் நாம் அவனுக்குப் பணம் கொடுத்து அவன் காலில் விழுந்து அவன் காலைக் கழுவி தண்ணீர் குடித்து மோக்ஷத்திற்கு போக எண்ணுவதாலும் அவர்களுக்கு தினப்படி தாராளமாய் சம்பாதனை ஏற்பட்டு விடுகிறது. இதன் மூலம் ஒவ்வொரு புரோகிதனும், பண்டாரங்களும், பஞ்சாங்கக்காரனும் தாங்கள் வயிறு நிறைய சாப்பிட சம்பாதிப்பதுடன் தங்கள் பிள்ளை குட்டிகளையும் B.A., M.A., படிக்க வைத்து ஐகோர்ட் ஜட்ஜி, சட்ட மெம்பர், அட்வொகேட் ஜனரல் முதல் உத்தியோகம் பெற்று வாழவும், லக்ஷக்கணக்காய் சம்பாதிக்கவும், காசி இராமேஸ்வரம் கன்னியாகுமரி வரையில் பார்க்கிறோம்.

தவிர, காங்கிரசின் பலனாய் சர்க்கார் உத்தியோகங்களில் பார்ப்பனர்கள் ஏராளமாய் அமைய ஏற்பட்டுவிட்டதாலும் அவர்களே கோர்ட் குமாஸ்தா, ஜட்ஜிகள் வரையில் ஏற்பட்டு விட்டதால் அவர்கள் கோர்ட்டுக்கு பார்ப்பன வக்கீல்களும், பார்ப்பன வக்கீல் குமாஸ்தாக்களும் என்கிற வகையில் ஒரு மாசம் பார்ப்பனர்களுக்கு பிழைப்பு ஏற்பட்டு விடுகிறது.

இது தவிர பிச்சை எடுப்பது தங்கள் குலத்தின் மேலான தர்மம் என்பதாக ஏற்படுத்திக் கொண்டிருந்தாலும் நம்மிடவர்களில் கடைந்தெடுத்த முட்டாள்கள் அவர்களுக்கு பிச்சை கொடுப்பது தங்களுக்கு மோக்ஷக் கதவு திறக்கக்கூடிய சாவி என்று நினைப்பதாலும் இவ்வளவு வழியிலும் பிழைக்க முடியாத பார்ப்பான்களுக்கு கோவென்றால் கெட்டுப்போன நம்முடைய முன்னோர்களும், நம் பழய ராஜாக்களும், கெடப்போகும் நம்மிடப் பெரியவர்களும் இப்போதிருக்கும் சில இஸ்பேட் ராஜாக்களும் 100 – க்கு 5 வட்டி சம்பாதித்த பாவத்தைத் தொலைப்பதற்கு பார்ப்பனனுக்கு சோறு போட்டால் போதும் என்று நினைக்கிற லேவா தேவி செட்டிப் பிள்ளைகளும், பார்ப்பன ஆண் – பெண், பெண்டில்லாதவன், புருஷனுடன் வாழாதவள், புருஷனிழந்தவள், குழந்தை குட்டி சகலத்துடன் தினம் சாப்பிட சத்திரங்களும், காம விகாரத்தால் தப்புக் குழந்தைகள் உண்டாகிவிட்டால் பிரசவிப்பதற்கு பிரசவ ஆஸ்பத்திரிகளும், பிரசவித்த அக்குழந்தையை எடுத்து வளர்த்து தங்கள் ஜனசங்கையை அதிகப்படுத்திக் கொள்ள கிறிஸ்து பாதிரிமாரும் போர்டிங்குகளும் தாராளமாய் இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு எந்த வழியில் வயிற்றுப் பிழைப்புக்குக் கஷ்டம் இருக்கிறது என்பதை சொல்லு பார்ப்போம்.

தவிர பார்ப்பான் பிழைப்பு என்றும் கெடவில்லை. அன்றும் கெடவில்லை. இன்றும் கெடவில்லை. நமது முட்டாள்தனத்தால் பிழைப்பவ





RangaRakes
tamilnavarasam.com

னானதால் நம்மிடம் எதுவரை முட்டாள்தனம் இருக்கிறதோ அதுவரை அவன் பிழைப்புக்கு ஆக்ஷேபணையில்லை. நம்மவர் பிழைப்போ அப்படியில்லை.

**பைத்தியக்காரன் :** அதென்ன அப்படிச் சொல்லுகிறாய்?

**உஷார்காரன் :** என்னவென்றால் நம்மவர்கள் முன்காலத்தில் எப்படிப் பிழைத்தார்கள் தெரியுமா? எல்லோருக்கும் விவசாயமும் கைத்தொழிலும் தான். விவசாயத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. வரி கட்டுவதே கஷ்டமாய் விட்டது. பூமி எல்லாம் பார்ப்பனனிடமும் பார்ப்பனர்கள் காலில் விழுந்து அவர்களுக்கு அழுகும் சில பணக்காரனிடமுமே சேர்ந்து விட்டது. போராக் குறைக்கு பருவ மழையுமில்லை. கைத்தொழிலைப் பற்றி நினைக்கவே வேண்டியதில்லை. இந்தப் பார்ப்பனர்கள் அரசாங்கத்திற்கு உள் உளவாய் இருந்து வருவதின் மூலம் வெளி அரசாங்கத்தார் நமது தொழில்களையே பாழ்பண்ணி விட்டார்கள். எனவே கோடிக் கணக்கான பார்ப்பனரல்லாதாருக்கு தன் தன் குடும்ப ஜீவனத்திற்கு மார்க்கமில்லாமல் இருப்பதுடன் மேல் கண்ட பார்ப்பனர்களுக்கு அழுகவும் சம்பாதிக்க வேண்டிய கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அல்லாமலும் காங்கிரசின் பயனாய் "அரசியல் பார்ப்பனர்களுக்கு செல்வாக்கு ஏற்பட்டு விட்டபடியால் பார்ப்பனரல்லாதார்களில் அரசியலின் மூலம்" பணம் சம்பாதிக்கவோ பதவி பெறவோ ஆசைப்பட்டவர்களும் பார்ப்பனர்கள் காலை சுற்றிக் கொண்டு அவர்கள் வாலைப் பிடித்துத் திரிய வேண்டி ஏற்பட்டு விட்டது.

**பைத்தியக்காரன் :** இதுதானா காரணம். வேறொன்றுமில்லையா?

**உஷார்காரன் :** வேறு என்ன. நீ தான் சொல்லு பார்ப்போம். எத்தனை பார்ப்பனரல்லாதார், மகமதியர், கிறிஸ்தவர், பஞ்சமர் என்று சொல்லக் கூடியவர்கள் உள்பட பார்ப்பனரிடம் பணம் வாங்கிக் கொண்டு பார்ப்பனரல்லாதாரைத் திட்டுகிறார்கள். பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை வைகிறார்கள். பார்ப்பனர்கள் எவ்வளவு அயோக்கியர்களாயிருந்தாலும் அவர்களை நமது பார்ப்பனரல்லாதார்கள் "தலைவர்," "தென்னாட்டு மகான்," "பெரியார்," "தியாகி," "விவேகி," "குரு" எனப் பலவிதமாய் புகழுகிறார்கள். ஏன்?

நம்மவர்களில் உண்மையான தியாகி இல்லையா? மகான் இல்லையா? தலைவர் இல்லையா? பெரியார் இல்லையா? விவேகி இல்லையா? எந்தப் பார்ப்பனரல்லாதாராவது நம்மவர்களைப் பற்றிச் சொல்லுகிறார்களா? என்று யோசித்துப் பார். அதோடு நம்மவர்களை வையாமலாவது இருக்கிறார்களா? ஏன்? பார்ப்பனர்களிடம் கொடுக்கப் பணம் இருக்கிறது. பார்ப்பனரல்லாதாரிடம் வாங்க தரித்திரமிருக்கிறது. அப்படிக்கில்லாதிருந்தால் ஓட்டமுள்ளவனுக்கு ஒரு கடுகளவு மூளையுள்ளவனுமான எந்தப் பார்ப்பனரல்லாதாராவது



நமது சமூகத்தையும், நமது இயக்கத்தையும் பாழாக்க கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காரை அவரது பொய், புரட்டு, புளுகு, வஞ்சகம், மானம் கெட்டத்தன்மை எல்லாம் வெளியான பிறகு கூட தலைவன் என்று கூப்பிட மனம் வருமா? ஸ்ரீனிவாசய்யங்காரிடம் உதை வாங்கிக் கொண்டு அவர் காலை முத்தமிட மனம் வருமா? அதோடு அனேக பார்ப்பனரல்லாதாருடைய உழைப்பையும், பரிசுத்த எண்ணத்தையும், தியாகத்தையும் மனதாரப் பார்த்துக்கொண்டு அவர்களை வைய மனம் வருமா? காட்டிக் கொடுக்க வருமா? என்பதை நீயே யோசித்துப் பார். தவிரவும் நமக்கு இருக்கிற தரித்திரம் பார்ப்பனருக்கில்லை என்பதற்கு இன்னமும் ஒரு சாட்சி காட்டுகிறேன். அதாவது எந்தப் பார்ப்பனனாவது பார்ப்பனரல்லாதாரிடம் பணம் வாங்கிக்கொண்டு எந்தப் பார்ப்பனனையாவது வைவதைப் பார்த்திருக்கிறாயா? வைவதற்குப் பத்திரிகை நடத்துவதைப் பார்த்திருக்கிறாயா? கொடுப்பதற்குப் பார்ப்பனரல்லாதாரிடம் பணமும் இல்லை. ஒரு சமயம் இருந்தாலும் தனது சமூகத்தை விற்றாவது வாழ வேண்டும் என்று சொல்லத் தகுந்த தரித்திரமும் பார்ப்பனர்களிடத்தில் இல்லை. இதுதான் வித்தியாசமே ஒழிய பார்ப்பனர் மகா புத்திசாலி என்பதாவது பார்ப்பனரல்லாதார்கள் முட்டாள்கள் என்பதாவது இதன் பொருள் அல்ல. உதாரணமாக ஒத்தக்காசு செட்டியாரான ஸ்ரீமான் ஓ. கந்தசாமி செட்டியாருக்குப் புத்தியில்லை என்கிறாயா? அல்லது அய்யங்காரின் புரட்டுகளையும், பித்தலாட்டங்களையும், கெட்ட எண்ணத்தையும், சின்னப் புத்தியையும் அறிய சக்தி இல்லை என்கிறாயா? அல்லது அய்யங்காரை மகா பெரிய மனிதர் என்று மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறார் என்கிறாயா? செட்டியாரின் புத்திசாலித்தனம் அவருடைய பழைய வீரம், அவர் கொஞ்ச நாளைக்கு முன்பு பார்ப்பனர்களுடைய அயோக்கியத் தனத்தை புட்டுப்புட்டு விளக்கியிருக்கும் தன்மை, அவருடைய கல்வி, பார்ப்பனருடன் சேருவதற்கு முன் இருந்த ராவ்சாஹிப் பட்டம் முதலியதுகள் எனக்கு நன்றாகத் தெரியும். கஷ்டகாலம் வந்தால் யார்தான் என்ன செய்வார்கள். அரிச்சந்திரன் சத்தியத்திற்கு ஆக பெண்டாட்டியை விற்றதாகக் கதை இல்லையா? அது போல் நம்முடைய சகோதரர்கள் பலர் தரித்திரத்திற்கு ஆக சமூகத்தை விற்கிறார்கள் என்பதில் அதிசயமென்ன இருக்கிறது. அதற்கு யார்தான் என்ன செய்வது. கடவுளைத்தான் கேழ்க்க வேண்டும். கடவுளோரிடமில்லாதவர் ஆனதினால் குட்டிச் சுவற்றில்தான் முட்டிக் கொள்ள வேண்டும். போ! எனக்கு நேரமாய் விட்டது.

**குடி அரசு – உரையாடல் – 05.06.1927**



RangaRakes tamilnavarasam.com

# “வரதராஜுலு அறிக்கை” க்கு ராமசாமியின் அபிப்பிராயம்

“தமிழ்நாடு” பத்திரிகையின் ஜுன் மீ 3 - ம் தேதி தலையங்கமாகிய “வரதராஜுலு அறிக்கை” என்னும் விஷயத்திற்கு நான் ஏதாவது சமாதானம் சொல்ல வேண்டும் என்பதாக நமது வாசகர்கள் எதிர் பார்க்கக் கூடுமென்பதாக நினைத்தே அதே தலையங்கமிட்டு இவ்வியாசத்தைத் துடங்குகிறேன். ஸ்ரீ வரதராஜுலு அறிக்கையின் முதல் வாக்கிய ஆரம்பத்தில் “காங்கிரஸ் மகாசபையே தேசத்தில் பிரதானமானது” என்பதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது எந்த விஷயத்தில் யாருக்குப் பிரதானமானது? எந்த தேசத்திற்குப் பிரதானமானது? தேசத்தில் உள்ள 33 கோடி மக்களில் எந்த வகுப்பாருக்கு எந்தக் கூட்டத்தாருக்கு பிரதானமானது? தென்னாட்டில் படித்த வகுப்பாரான பார்ப்பனருக்கும், வடநாட்டில் படித்த கூட்டத்தாரான சிலருக்கும் உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பதற்கும், அவர்களை வாழ வைக்கவும் பிரதானமானதே அல்லாமல் வேறு யாருக்கு? எதற்கு? அதனால் என்ன பிரயோஜனமுண்டென்றும் கேழ்க்கிறேன்? காங்கிரஸ் ஏற்பட்டு 40 வருஷத்திற்கு மேலாகியும் தேசமக்களின் பெரும்பாலோரான விவசாயி, தொழிலாளி, குடியானவன் ஆகிய கூட்டத்தாருக்கு என்ன நன்மை செய்திருக்கிறது? காங்கிரசுக்கு முன் விவசாயிகளுக்கு ஏற்பட்ட வரி எவ்வளவு? காங்கிரசுக்கு முன் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருந்த கடன் எவ்வளவு? காங்கிரசுக்குப் பின் விவசாயிகளுக்கு ஏற்பட்ட வரி எவ்வளவு? கடன் எவ்வளவு? காங்கிரசுக்கு முன் தொழிலாளிகளின் நிலைமை சம்பாத்தியம் முதலியதுகள் சவுகரியம் எப்படியிருந்தது? காங்கிரசுக்குப் பின் தொழிலாளிகளின் நிலைமை, தொழில் சம்பாத்தியம் சவுகரியம் எப்படி ஆய்விட்டது? என்று கேட்கிறேன். இனி வகுப்புகள் வாரியாய் கவனிப்போம். காங்கிரசுக்கு முன் பார்ப்பனரல்லாதார் நிலைமை, செல்வம், செல்வாக்கு எப்படி யிருந்தது? காங்கிரசுக்குப் பின் அவர்களது நிலைமை எப்படி இருக்கிறது? காங்கிரசுக்கு முன் பார்ப்பனர்கள் நிலைமை எப்படி இருந்தது? பின் அவர்கள் நிலைமை எப்படி இருக்கிறது? ஜஸ்டிஸ் கட்சியும் முஸ்லீம்லீக்கும் ஏற்படாமல் காங்கிரசை நம்பியிருந்தால் ‘பஞ்சமர்கள்,’ ‘மகமதியர்கள்’ முதலிய சகோதரர்கள் நிலைமை என்னவா யிருக்கும்? இவைகளை எல்லாம் தனது மனதில் கையை வைத்து யோசித்துப் பார்க்கும்படி ஸ்ரீமான் வரதராஜுலு அவர்களை வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன். அன்றியும் “சகல ஜாதியாருக்கும் பொதுவான காங்கிரஸ் சென்னையில் உள்ள இரண்டொரு பார்ப்பனர்களிடம் அகப்பட்டு விட்டதால் பார்ப்பன காங்கிரசு என்று பெயரெடுத்து விட்டது” என்று “தமிழ்நாடு” எழுதியிருக்கிறது. எந்த விதத்தில் அது சகல ஜாதியாருக்கும் பொதுவானதாகும் என்று கேட்கிறேன்.



கிருஸ்தவரில் எத்தனை பேர் காங்கிரசில் இருக்கிறார்கள்? மகமதியரில் எத்தனை பேர் காங்கிரசிலிருக்கிறார்கள்? பஞ்சமரில் எத்தனை பேர் காங்கிரசிலிருக்கிறார்கள்? இன்னமும் இந்துக்கள் என்போர்களில் எத்தனை பேர் காங்கிரசில் இருக்கிறார்கள்? இந்தக் கூட்டங்களில் பெரும்பான்மையோர் காங்கிரசிலிருக்கிறார்களா? விலகி இருக்கிறார்களா? எந்தக் காலத்திலாவது பார்ப்பனரல்லாத மற்றவர்களிடத்தில் காங்கிரசு இருந்து வந்ததா? எந்தக் காலத்திலாவது அது பார்ப்பனக் காங்கிரசல்லாததாயிருந்ததா?

தவிர “ஐயங்கார் கோஷ்டியாரிடமிருந்து காங்கிரசை மீட்க வேண்டும் என்கிற உணர்ச்சி பரவி விட்டது” என்கிறது. ஐயங்கார் பாதார விந்தங் களில் மறுபடியும் மறுபடியும் காங்கிரசையும், தலைமைப் பதவியையும் காணிக்கையாய் வைத்து போட்டி போட்டு தண்டம் சமர்ப்பிவித்தது யார்? பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா? அம்மாதிரி ஆசாமிகள் இப்போது ஒழிந்துபோய் விட்டார்களா? இனி அம்மாதிரி ஆசாமிகளை சிருஷ்டிக்க ஐயங்கார் சுவாமிகளால் முடியாதா? என்று கேட்கிறேன். தவிர, “ராஜீய அபிவிருத்தி இந்தியாவுக்கு ஏற்படும் போது அது ஒரு ஜாதியாருக்கென்று தனியாக இருக்க முடியாது. ஆதலால் எல்லா ஜாதியாரும் காங்கிரசில் சேரவேண்டும்” என்று “தமிழ்நாடு” குறிப்பிடுகிறது. ராஜீய அபிவிருத்தி என்பது என்ன என்று கேட்கிறோம்? 1000, 2000, 5000, 10000 சம்பளமுள்ள உத்தியோகங்களும் பதவிகளும் அல்லாமல் வேறு ஏதாவது உண்டா? அந்த உரிமையையும் நமது நாட்டில் பார்ப்பனர்களான ஒரே ஜாதியார் ஏகபோகமாய் அனுபவிக்காமல் வேறு எல்லா ஜாதியாரும் கிரமமாய் அனுபவிக்கிறார்களா? என்று கேட்கிறேன். தவிர “பார்ப்பனரல்லாதார் நசுக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கு இருக்குமானால் அதற்கு காங்கிரசை விட வேறு பலம் உள்ள ஸ்தாபனம் கிடையாது” என்று “தமிழ்நாடு” எழுதுகிறது. இதுவரை அதாவது இந்த 10 வருஷ காலமாக பார்ப்பனரல்லாதாரின் நிலைமையும் உரிமையும் ஜஸ்டிஸ் கக்ஷியினால் உயர்ந்ததாக்கப்பட்டதா? அல்லது காங்கிரசினாலா? மகமதிய ஹைக்கோர்ட்டு ஜட்ஜி, நிர்வாக சபை மெம்பர், வைசிராய் பிரபு சபை மெம்பர், மைசூர் திவான், கிருஸ்தவ ஹைக்கோர்ட் ஜட்ஜி, மந்திரி, சட்டசபை பிரசிடெண்ட், திருவாங்கூர் திவான், பார்ப்பனரல்லாத ஹைக்கோர்ட்டு ஜட்ஜி, மந்திரி, பஞ்சம ஹைகோர்ட் ஜட்ஜி, சட்டசபை மெம்பர், இந்தியா கவுன்சில் மெம்பர் இன்னும் இது போன்ற எத்தனையோ “அரசியல் உரிமைகள்” காங்கிரசினால் இவர்களுக்கு கிடைத்ததா? காங்கிரசில் சேராமல் வெளியில் இருந்ததி னாலும் ஜஸ்டிஸ் கக்ஷியாலும் இவர்களுக்கு கிடைத்ததா? என்று கேழ்க்கிறேன். இது



RangaRakes
tamilnavarasam.com

போன்ற இன்னும் பல விஷயங்கள் எழுதியிருக்கிறதுகளுக்கும் இது போலவே பதில் சொல்லலாம். "தமிழ்நாடு" காங்கிரசில் சேரும்படி எழுதியவற்றில் பார்ப்பனரல்லாதார் நன்மையைப் பொறுத்தவரை ஒன்றாவது சரியான காரணம் அல்ல என்பது நமது பொது அபிப்ராயம். இன்னமும் சொல்லப்போனால், இந்தியாவுக்கு விடுதலை வாங்கித்தர வேண்டும் என்று நினைப்பதற்கு தென்னாட்டுப் பார்ப்பனரல்லாதாராகிய நாம் ஒரு விதத்திலும் யோக்கியதை உடையவர்கள் அல்ல. நமது யோக்கியதையையே சரிப்படுத்திக் கொள்ள நமக்கு யோக்கியதை இல்லை. நாம் தாழ்ந்த ஜாதியார் என்று நமது நாட்டில் வேதப்படி, சாஸ்திரப்படி, சட்டப்படி, வழக்கப்படி மதிக்கப்படு கிறோமா இல்லையா? என்பதை ஸ்ரீமான் நாயுடுவை முதலாவதாக யோசித்துப் பார்க்கும்படி விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன். அதற்கு ஸ்ரீ நாயுடு என்ன செய்யப் போகிறார் என்று வினயத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன். 40 வருஷத்திய காங்கிரசினால் "சகல ஜாதிக்கும் பொதுவான காங்கிரசினால்" மற்றும் என்ன என்னவோ "பொறாமை" கொண்ட காங்கிர சினால் நமக்குள்ள இக்குறைவுகளை நீக்க ஏதாவது முடிந்ததா? அதனால் கிடைத்து வந்த பலன் அல்லது "ராஜீய உரிமைகளா"லாவது முடிந்ததா? என்று கேட்கிறேன். "பார்ப்பனரல்லாதாருக்கு தேசாபிமானம் உண்டு, ராஜீய ஞானம் உண்டு என்று மற்றவர் அறிய வேண்டுமானால் அவர்கள் காங்கிரசில் சேர வேண்டியது அவசியமாகும்" என்று கூட அப்பத்திரிகை எழுதி இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை தேசாபிமானமும் ராஜீய ஞானமும் எனக்கு உண்டு என்பதை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டியது அனாவசியம். என்னுடைய சொந்த சுயமரியாதைக்கும் சுதந்திரத்திற்கும் தேசாபிமானத் தையும் ராஜீய ஞானத்தையும் கூட விற்கத் தயாராயிருக்கிறேன். என்னுடைய சுய மரியாதையையும் உரிமையையும் ஒப்புக்கொள்ளாத ஒரு ஸ்தாபனம் அது காங்கிரசாயிருந்தாலும் சரி, அது தேசாபிமானமாயிருந்தாலும் சரி, மோக்ஷ லோகமாயிருந்தாலும் சரி அதில் இருக்க நேரும் ஒவ்வொரு விநாடியையும் நரகத்திலிருப்பதாகத்தான் எண்ணுவேன். நமது உரிமையை ஏற்றுக் கொள்ளும் படி ஒரு சங்கத்தைப் போய்க் கெஞ்சுவது நமது சுயமரியாதைக்கு அழகல்ல வென்பதே எனது அபிப்பிராயம். வெள்ளைக்காரனை சுயராஜ்யம் கேட்பதும் காங்கிரசை நமது உரிமை ஒப்புக்கொள்ள நாம் கெஞ்சுவதும் நமக்கு சுயமரியாதை இல்லை என்பதற்கு சரியான உதாரணங்களாகும். காங்கிரசை எவனொருவன் அது நம்மைப் போன்ற ஒரு பத்து பேர் சேர்ந்த கூட்டம் என்று நினைக்கிறானோ எவனொருவன் காங்கிரஸ் அபிப்பிராயத்தை நம்மைப் போன்ற ஒரு பத்து மனிதனின் அபிப்பிராயமென்று நினைக்கிறானோ, அவனே சுதந்திர புத்தி உள்ளவனாவான். அதைவிட்டுக் கண்மூடித்தனமாய் பின்பற்றுபவன் உரிமைக்கும் சுதந்திரத்திற்கும் யோக்கியதை அற்றவனே ஆவான் என்பது எனது தாத்பிரியமான முடிவு.

அதே பத்திரிகை "காங்கிரசில் ஜஸ்டிஸ் கொடியை நாட்ட வேண்டு



மென்று சிலர் சொல்லுகிறார்கள். ... ... ... அதில் தனிப்பட்டவர்கள் வகுப்பு வாதத்தை புகுத்துவது நியாயமல்ல"என்றும் எழுதியிருக்கிறது. அப்படியானால் கீழ் வகுப்பார் தாழ்த்தப்பட்ட வகுப்பார் முதலியவர்களின் கதி என்னாவது என்று கேழ்க்கிறேன். காங்கிரசில் எல்லோருக்காகவுமே உத்தியோகம் வருகிறது என்று வைத்துக் கொண்டால் "எங்கள் வகுப்புக்கு ஒன்று கொடுங்கள்" என்று கேழ்க்கக் கூடாது என்று காங்கிரசு சொல்லு மானால் அல்லது நாயுடுகார் சொல்வதானால் மற்றபடி காங்கிரசினால் லாபம்தான் என்ன? என்று கேட்கிறேன். காங்கிரசில் கேழ்ப்பது உத்தியோகம் அதிகாரம் பதவி சம்பளம் இவற்றைத் தவிர வேறில்லை என்பது யாவரும் அறிந்த விஷயம். அக் காங்கிரசில் உள்ளவர்களோ அனேக வகுப்பார்களாயிருக் கிறார்கள் என்பதும் தெரிந்த விஷயம். எல்லா வகுப்பார்களுக்கும் அது கிடைக்க வேண்டுமென்பதோ காங்கிரசுக்குள் வகுப்புவாதத்தைப் புகுத்துவதாகி விடுகிறது. அப்படியானால் அதன் இரகசியம் என்ன என்பதை வாசகர்கள் யோசிக்க வேண்டுகிறேன். தவிர காங்கிரசின் சட்ட மறுப்பையாவது சத்தியாக்கிரகத்தையாவது கண்டு "ஜஸ்டிஸ்" கட்சியாரோ அல்லது எந்தப் பார்ப்பனரல்லாதாரோ பயப்பட வேண்டியதில்லை என்று 'தமிழ்நாடு' பத்திரிகை எழுதியிருக்கிறது. இவ் விஷயத்தில் இப்போது "காங்கிரஸ்" தலைவர்களாகிய ஸ்ரீமான்கள் ஸ்ரீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார், சாமி வெங்கிடாசலம், வெங்கிட்ட ரமணய்யங்கார், ஓ. கந்தசாமி செட்டியார், எம். கே. ஆச்சாரியார், ஆதிநாராயண செட்டியார் முதலியவர்களை விட எவ்விதத்திலும் இளைத்த ஆசாமிகள் "ஜஸ்டிஸ்" கட்சி பார்ப்பனரல்லாதார் கூட்டத்திலேயே இல்லை என்று உறுதியாய்ச் சொல்லுவேன்.

ஆகவே, "ஜஸ்டிஸ்" கட்சியின் நன்மையை உத்தேசித்தும், பார்ப்பனரல்லாதாரின் நன்மையை உத்தேசித்தும், அக்கட்சி காங்கிரசில் சேருவது என்பது புத்திசாலித்தனமான யோசனை அல்ல என்பதோடு ஜஸ்டிஸ் கட்சிக்கு சாவு மணி என்றுகூட சொல்ல வேண்டியிருக்கிறதே என்று வருத்தப்படுகிறேன். ஜஸ்டிஸ் கட்சிக்கு இது சமயம் நாட்டில் கொஞ்சம் மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. முக்கிய காரணம் என்னவென்றால் காங்கிரசின் யோக்கியதை அதன் கசுமாலம் முதலியன வெளியாக்கப்பட்டதினால்தான்.

கூடிய சீக்கிரத்தில் காங்கிரஸ் பார்ப்பனர்களே பார்ப்பனரல்லாதாரை காங்கிரசில் வந்து சேரும்படி கெஞ்சப் போகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அதாவது பார்ப்பனரல்லாதார்கள் கட்டுப்பாடாகவும் ஒற்றுமையாகவும் இருந்து ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பித்த காலத்தில் பார்ப்பனர்கள் பயந்து கொண்டு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கும் சம்மதித்து தங்கள் சொந்தப் பணமும் செலவு செய்து கூட காங்கிரஸ் பார்ப்பனரல்லாதார் சங்கம் (சென்னை மாகாணச் சங்கம்) என்பதாக ஒன்று ஏற்படுத்தி நம்மில் சிலருக்குத் தந்து அவர்கள் வேலை முடிந்ததும் அழித்து விட்டது போல் செய்யப் போகிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

முக்கியக் காரணமென்னவென்றால் இது சமயம் பார்ப்பனரல்லாதார் கொஞ்சம் கட்டுப்பாடாக இருப்பதுடன் தங்கள் இழிந்த தன்மையை தான். ஆகவே இக்கட்டுப்பாடு குலையாமல் யார் வேண்டுமானாலும் எந்தக் கட்சிக்கு வேண்டுமானாலும் ஸ்ரீமான் நாயுடுகார் சொல்வது போல் அவரவர்கள் தனித்த ஓதாவில் போய்க் கொள்ளுவதில் நமக்கு ஆக்ஷேபணை இல்லை. ஆனால் கட்சியே சேருவதானால் தலைவர் யார், உப தலைவர் யார், மந்திரி யார், பிரசிடெண்டு யார் என்பன போன்ற விஷயங்களின் சண்டையும் அதைக் காப்பாற்ற பல அயோக்கியத் தனங்களைச் செய்து கொண்டு அக்கப் போரில் காலம் கழிப்பதிலும் நேரம் சரியாய்ப் போய் விடுமே யொழிய உண்மையான வேலை செய்ய நேரமும் காலமும் இருக்கவே இருக்காது. ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவும் ஜஸ்டிஸ் கட்சியில் சேரும் பார்ப்பனரல்லாதார்களுக்கு தங்கள் சொந்த ஓதாவில் காங்கிரசில் சேர சுதந்திரமிருக்க வேண்டுமென்றுதான் கேட்கிறார். நாமும் அதினால் அதிக நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டு விடாது என்றே சொல்லுகிறோம். ஜஸ்டிஸ் கட்சியாலும் கூட நிர்மாணத் திட்டமாகிய கதரில் நம்பிக்கையில்லாதவர்களும், தீண்டாமை ஒழிவதில் சம்மதம் இல்லாதவர்களும் மதுவிலக்கில் லட்சியம் இல்லாதவர்களும் இரண்டொருவர் இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆன போதிலும் அக்கட்சி நிர்மாணத் திட்டத்தை ஒப்புக் கொண்டதால் நாம் நம்மால் கூடிய ஆதரவை அளிக்கிறோமேயல்லாமல் இரண்டொருவருக்கு நம்பிக்கையில்லை என்கிற காரணத்துக்காக கட்சியையே குற்றம் சொல்ல முன்வரவில்லை. அதுபோலவே இஷ்டப்பட்டவர்கள் தங்களது மனச்சாட்சியை கட்சிக் கட்டுப்பாட்டின் பேரால் விட்டுக் கொடுக்க வேண்டியதில்லை என்று ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

கட்சியில் "ராமசாமி நாயக்கரும் அவருடைய சகாக்களும் எதிர்கால நிலைமையை கவனித்து மறுபடியும் தீர யோசித்து ஒரு முடிவுக்கு வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்" என்று "தமிழ்நாடு" எழுதியிருக்கிறது. உண்மையில் அரசியலில் இது சமயம் எனக்கு சகா யாரும் இல்லை. அன்றியும் எனக்கு என்று இது சமயம் யாதொரு கட்சியுமில்லை. எனக்கும் சில தனிப்பட்ட நபர்களுக்கும் சில விஷயங்களில் மாத்திரம் அபிப்பிராய ஒற்றுமை ஏற்பட்டி ருப்பதை ஆதாரமாக வைத்துக்கொண்டு தனித்த முறையில் எனது தொண்டை செய்து வருகிறேனே தவிர வேறில்லை. அதுபோலவே ஜஸ்டிஸ் கட்சியிலும் எனது அபிப்பிராயத்தை ஒப்புக் கொள்ளுகிற அளவு வரையில் நான் அக் கட்சிக்கும் தொண்டராயிருந்து எனது கொள்கைக்கு அதை உபயோகித்துக் கொள்ளுகிறேனே தவிர வேறில்லை. ஆகவே ஸ்ரீ வரதராஜுலு நாயுடு அவர்கள் இவ்விஷயத்தில் ஒவ்வொருவருக்கும் தனி சுதந்திரம் கொடுத்திருக்கிறது போலவே நமக்கும் கொடுப்பாரென்று நம்புகிறேன்.

**குடி அரசு - தலையங்கம் - 05.06.1927**



RangaRakes

## ஐயங்காருக்கு அமெரிக்கா மாதின் நற்சாக்ஷி பத்திரம்

ஸ்ரீ.S.சீனிவாசஐயங்காருடையவும் அவர்தம் சிஷ்ய கோஷ்டிகளுடையவும், மோசத்தைப் பற்றியும் அவர்களது தேசத்துரோகம் நாணயமற்றதனம் பார்ப்பனரல்லாதாரிடம் துவேஷம் திறமையின்மை ஆகியதுகளைப் பற்றியும் நாம் பன்முரை எடுத்துக் காட்டி இருக்கிறோம். அதற்கு அனுசரனையாக அநேக சாக்ஷிகளும் குவிய ஆரம்பித்த இக்காலத்தில் ஐயங்கார் கூறும் ஒரே பதில் யாதெனில் " நான் பலர்களுக்கு கொடுத்து வந்த பணத்தை நிருத்தி விட்டேன் அதற்குத்தான் இவ்விதம் கூருகிறார்கள். அதை நம்பாதீர்கள்" என்கிறார். ஆனால் இன்று ஐயங்கார் யோக்கியதையைப் பற்றி, ஓர் அமெரிக்கா மாது சொல்வதற்கென்ன சொல்கிறார். மிஸ். கிரேஸ் ஹட்சின்ஸ் என்ற அமெரிக்கா மாது எழுதுவதாவது, "மகாத்மா காந்தி அரசியல் விஷயங்களிலே தலையிடுவதில்லை. அவர் சமய இயக்கத்தையே நடத்திவருகிறார். இந்தியா உயர்ந்த வாழ்வை பெறவேண்டுமானால் அது அங்குள்ள 7000 கிராமங்களின் வாயிலாகவே முடியும்" .................................................. " இந்தியன் நேஷனல் காங்கிரஸுக்குத் தலைமை வகித்தவர் S. சீனிவாச ஐயங்கார் என்பவர், நடுத்தரமான யோக்கியதை உடை யவர். அரசியல் கக்ஷிகளை ஒழித்து ஒற்றுமை படுத்த போதுமான ஆற்றல் இல்லாதவர்"

ஒரு சமயம் இந்த அம்மையாரும் பணம் கேட்டு ஐயங்கார் கொடுக்கவில்லையோ?

**குடி அரசு - செய்தி விமர்சனம் - 05.06.1927**



tamilnavarasam.com

# குட்டு வெளியாய் விட்டது

பார்ப்பன சுயராஜ்யக் கட்சியின் மோசத்தை வெளியிட உடனே சம்பள பிரேரணையை எதிர்க்க வேண்டும் என்று நமது “ குடி அரசு” கூறிற்று, சட்டசபையில் மைனாரடி கட்சியார் எதிர்க்கக்கூடாதென்கிறார்கள். மந்திரி சம்பள விஷயத்தைப் பற்றி ஆலோசித்த அநேக கூட்டங்கள் சீனிவாசய்யங் கார் பங்களாவில் கூடியது யாவும் அந்தரங்கம் வெளியிட முடியாது என்றார்கள். முடிவில் சம்பளப் பிரேரபணையின் பொழுது வெளியே போய் விட்டார்கள். இவையாவும் சுத்த புரட்டென்றும் மந்திரி கட்சியை கைவிட்டு விடாதீர்கள் என்று நேருவும், சீனிவாசய்யங்காரும் தந்தி கொடுத்தார் களென்பதையும், அண்டப்புளுகர் திரு. சத்தியமூர்த்திக்கு மாதா மாதம் சம்பளம் மந்திரிகளால் கொடுக்கபடுகிறதென்றும் “குடி அரசு” அக்காலத் திலேயே கூறியிருக்கிறது. இவைகளை யாரும் மருக்கவில்லை. இச்சம் பவத்தை யொட்டி எண்ணற்ற, அர்த்தமற்ற அறிக்கைகள் வெளிவந்தது. நேற்றைய ஐயங்கார், ஐயர் சண்டையில் குட்டு வெளியாயின.

சத்தியமூர்த்தியிடமிருந்து டெல்லியில் கிடைத்த தந்தியை சினிவாசய் யங்கார் எனக்கு காட்டி அதன்படி நடக்கவேண்டுமென்றும் கூறினார். எங்கள் மாகாணக் கமிட்டி தடுத்திருப்பதால் சம்பள பிரேரபணையை ஆதரிக்குமாறு ஆந்திர அங்கத்தினர்களுக்கு தந்தி கொடுக்க நான் மருத்துவிட்டேன். பின், நேருவும் சீனிவாசய்யங்காரும் சென்னை சட்டசபை சுயராஜ்யக்கட்சி அங்கத் தினர்களுக்குத் தந்தி கொடுத்தார்களென்று திரு பிரகாசம் நேற்று ஒப்புக் கொண்டுவிட்டார். அடுத்தாற்போல் சத்தியமூர்த்தி, சீனிவாசய்யங்காரிடம் சம்பளம் பெற்று வருவதை ஐயங்காரே சொல்லிவிட்டார். இனி மந்திரிகளிடம் சத்தியமூர்த்தி பெறும் சம்பளவிகிதம் வெளியாக வேண்டியது. பாக்கி அதுவும் வெகு சீக்கிறத்தில் வெளியாகிவிடும் என்றே எதிர்பார்க்கின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 05.06.1927**



# பாரதத் தாயின் துயரம்

**- சித்திரபுத்திரன்**

ஏ காங்கிரசே! நீ என்று ஒழிகிறாயோ அன்றுதான் நான் விடுதலை அடைவேன். நீ இப்போது பாரதத் தாயாகிய என்னை மீளா நரகத்திலாழ்த்தி விட்டாய். என் மக்களில் பெரும்பாலோரை அயோக்கியர்களாக்கி விட்டாய். யோக்கியமான மக்களை குறைத்து விட்டாய். நீ இல்லாமலிருந்தால் இப் போது தலைவர்கள் தேசபக்தர்கள் என்று சொல்லிக் கொள்ளும் அனேக அயோக்கியர்கள் என் சார்பாய் பேசி வயிறு வளர்க்க முடியுமா? நீ இல்லா விட்டால் எனது அருமைப் புத்திரனான காந்தி மகான் எனக்காகச் செய்த தவமும் தியாகமும் ஆத்ம சக்திப் பிரயோகமும் பலனற்றுப் போகுமா? நீ இல்லா விட்டால் உன்னுடைய உபத்திரவம் இல்லாவிட்டால் எனது அருமை மகன் மகாத்மா மூலையில் உட்காரமுடியுமா? நீ இல்லாவிட்டால் பம்பாயில் கூடிப் பேசிய அயோக்கியர்களும் சுயநலக்காரரும் துரோகிகளும் “ஜனப் பிரதிநிதிகள்” ஆவார்களா? என் பெயரைச் சொல்லி என்னைக் காட்டி கொடுத்து மாதம் 1 - க்கு 1000, 2000, 3000, 4000, 5000, 6000 வீதம் எனது ஏழைகளின் பணத்தை பணமாகக் கொள்ளை கொள்ளுவார்களா? என்னை மானபங்கப்படுத்த இத்தனை வக்கீல்கள் வருவார்களா? எனது கற்பை அழிக்க இத்தனை கோர்ட்டுகள் ஏற்படுமா? இவற்றிற்கு எல்லாம் யார் பொறுப்பாளி? காங்கிரஸ் பாவியாகிய அரக்கி நீ அல்லவா எனக்கு எமனாய் தோன்றி இருக்கிறாய்? என்று நீ ஒழிவாய்? அன்று நான் நரகத்தில் இருந்து எழுவேன், விடுதலை பெறுவேன், சுயமரியாதை அடைவேன். இது சத்தியம்.

## பாரதத் தாய் தனது மக்களுக்குச் சொல்வது

ஏ மக்களே! உங்கள் மூடபுத்தி என்று ஒழியும்? உங்கள் மூட புத்தி யாலல்லவா நாட்டில் பிளேக்கு, காலரா, வைசூரி முதலிய தொத்து வியாதிகள் இருப்பது போல் காங்கிரஸ், சுயராஜ்யம், தேசியம் முதலிய தொத்து வியாதி கள் பரவி என்னை பாழாக்குகிறது. காலரா, பிளேக்கு, வைசூரி ஒவ்வொன்றும் மனிதனின் சரீரத்தையும் உயிரையும் மாத்திரம் பற்றி கொள்ளை கொள்ளக் கூடியது. ஆனால் “காங்கிரஸ்” “சுயராஜ்யம்” “தேசியம்” என்னும் வியாதிகளோ எனது முப்பத்து முக்கோடி மக்களையும் அவர்கள் வாழும்



RangaRakes tamilnavarasam.com

தேசமாகிய என்னையும் அவர்களது அறிவையும், செல்வங்களையும், ஒழுக்கங்களையும், என் உயிர் போன்ற சுயமரியாதையையும் கொள்ளை கொண்டு பாழ் பண்ணிக் கொண்டு வருகிறதே இதை கவனிப்பதில்லையா? மக்களே! நீங்கள் மாக்கள் அல்ல என்பதற்கு இதுதானா அடையாளம். இவ் வியாதிகளின் பேரால் “வைத்த பாரமெல்லாம் சுமக்கிறேன். இன்னும் வை, இன்னும் வை” என்று உங்கள் முதுகைக் குனிந்து கொடுக்கிறீர்களே, இதுதான் உங்கள் மக்கள் தன்மையா?

எவனாவது ஒரு காங்கிரஸ்காரன் இந்த ஊருக்கு ஒரு கோர்ட்டு வேணுமென்று விண்ணப்பம் எழுதிக் கொண்டு வந்தால் உடனே நீங்கள் அப்பன் மக்கள் எல்லோரும் கையெழுத்துப் போட்டு விடுகிறீர்கள். கோர்ட்டு வைத்த மறுநாளே நீங்களே அப்பன், மக்கள், அண்ணன், தம்பி, எஜமான், குமாஸ்தா, குடியானவன், மிராஸ்தார் முதலிய என்கிற முறையில் கோர்ட் டுக்குப் போக வேண்டியவர்களாகிறீர்கள்.

பிராமணீயம், பிரிட்டானீயம் இந்த இரண்டை விட தேசியமே பெரிய ஆபத்தானது. பிரிட்டானீயத்தைக் கடுகளவாவது அசைக்க வேண்டுமானால் முதலில் இந்த தேசீயமும் இரண்டாவதாக பிராமணீயத்தையும் துலைக்க வேண்டும். பிராமணீயத்தை நிதானமாகக் கூட ஒழிக்கலாம். அவசரமாக தேசீயத்தை ஒழிக்க வேண்டும். ஏனெனில் தேசீயமே பிரிட்டானீயத்திற்கு அஸ்திவாரமாயிருக்கிறது. தேசீயத்தை இடித்துவிட்டால் பிரிட்டானீயம் ஆடிப்போகும். தேசீயமில்லாதிருக்குமானால் வெகு நாளைக்கு முன்பே பிரிட்டானீயம் உண்மையான சுதேசீயமாய் விட்டிருக்கும்.

**குடி அரசு - கட்டுரை - 05.06.1927**



## மித்திரன் நிரூபரின் அயோக்கியத்தனம்

நமது பத்திரிகாலயத்தில் ஒரு பார்ப்பனர் சூழ்ச்சியால் இரண்டு அச்சுக் கோர்ப்போர்கள் திடீரென்று சொல்லாமல் நின்று விட்டதற்குக் காரணமாக கோவையில் இருந்து மித்திரன் நிரூபர் ஒருவர் மிகவும் அயோக் கியத்தனமான ஒரு நிரூபத்தை மித்திரனுக்கு அனுப்பி இருக்கிறார். அதாவது ஒரு விஷயத்தை நாம் அச்சுக் கோர்க்கும்படி சொன்னதாகவும் அதை அச்சுக் கோர்ப்போர் கோர்க்க மறுத்து வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள் என்றும் எழுதியிருக்கிறார். இது மிகவும் அல்ப ஜாதித்தனம் என்றே சொல்லுவோம். எல்லா பத்திரிகை நிரூபர்களுக்கும் மானம், வெட்கம், சுத்த ரத்தோட்டம் முதலிய தன்மைகள் குறைந்தது கொஞ்சமாவது இருப்பதாகக் காண்கிறோம். நமது சுதேசமித்திரன் நிரூபர்களுக்கு மாத்திரம் பெரும்பாலும் இக்குணங்கள் காணப்படுவதே இல்லை. இதன் காரணமும் நமக்குத் தெரிவதில்லை. மித்திரனுக்காவது மனிதத் தன்மையும் யோக்கியப் பொறுப்பும் இருந்தால் அச்சுக் கோர்ப்போர் கோர்க்க மறுத்தது என்ன விஷயம் என்றாவது அல்லது வேறு சமாதானமாவது எழுதுவான் என்று நினைக்கிறோம்.

நமது பத்திரிகை பதிப்பகத்தில் உள்ள அச்சுக் கோர்ப்போரை கலைக்க சூழ்ச்சி செய்தது காரைக்குடியில் உள்ள ஒரு பத்திரிகை காரியாலயத்தில் இருக்கும் ஒரு பார்ப்பனர் என்று தெரிவிக்கிறோம். ஆனாலும் அதனால் பத்திரிகை வேலை குந்தகப்படாமல் நடந்தேற உதவிய நண்பருக்கு நமது வந்தனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 12.06.1927**



RangaRakes tamilnavarasam.com

# ஈரோடு முனிசிபாலிட்டி

ஈரோடு முனிசிபல் சேர்மென் ஸ்ரீமான் சீனிவாச முதலியார் அவர்கள் மீட்டிங்கு கூட்டிய விதத்தைப் பற்றி சென்ற வாரம் எழுதி இருந்தோம். அதாவது சில கவுன்சிலர்கள் முனிசிபாலிடியில் இருப்பதால் ஸ்ரீமான் முதலியாரின் நன்மைக்கும் மற்றும் சில காரியங்கள் செய்வதற்கும் தடையாய் இருப்பதாகக் கருதி அவர்களை நீக்கிவிட வேண்டி ஒரு மீட்டிங்கை ஒரு நாள் 5 1/2 மணிக்குக் கூட்டி 5 மணிக்கே தான் ஆபீசுக்கு வந்து கோரம் இல்லை என்பதாக மீட்டிங்கை ஒத்தி வைத்துவிட்டு வேறு யாரும் வந்து மீட்டிங்கு நடத்தாமல் இருக்கும் பொருட்டு காவலாக தாம் வெளியில் வந்து நின்று கொண்டு இருந்ததும் கவுன்சிலர்கள் வந்து சண்டை போட்டதுமான விஷயங்களைப் பற்றி ஒரு நிருபர் எழுதியதை சென்ற வாரம் எழுதி ஒரு குறிப்பும் போட்டிருந்தோம். இப்போது அதற்கேற்றாற்போலவே இவ்வாரம் ஒரு அவசர மீட்டிங்கு போட்டு ஒரு கவுன்சிலரை மூன்று மீட்டிங்குகளுக்கு வராததால் அவர் நீக்கப்பட்டு விட்டதாக தானே ஏற்பாடு செய்து கொண்டு அவருக்கு நோட்டீசு தராமல் மீட்டிங் கூட்டிவிட்டார். அதற்குள் அக்கவுன்சிலர் விஷயம் தெரிந்து தானாகவே போய் உட்கார்ந்து கொண்டிருக்கையில் அவரை வெளியே போகும்படி கட்டாயப்படுத்தி வெளியாக்கிவிட்டு தனது சவுகரியத்திற் கேற்றபடி இரண்டொரு தீர்மானத்தையும் செய்து பலனடைந்து கொண்டார். அது எப்படியோ இருக்கட்டும். வெளிப்படுத்தப்பட்ட கவுன்சிலர் உடனே சென்னைக்குச் சென்று ஐக்கோர்ட்டில் விண்ணப்பம் போட்டு சேர்மென் நடவடிக்கை சரி இல்லை என்பதாக வாதாடி தாம் கவுன்சிலராக இருக்கலாம் என்பதாக உத்திரவு பெற்று வந்துவிட்டார். இது மற்ற பத்திரிகைகளில் வந்திருக்கிறது. இந்தியர்கள் சுய ஆக்ஷிக்கு அருகதை உள்ளவர்கள் என்பதும் வெள்ளைக்காரர்கள் நமது நிர்வாகத்தை மேற்பார்வை பார்க்க யோக்கியதை உள்ள தர்மக்கர்த்தர்கள் என்பதும் ருஜுவு செய்ய நமது மந்திரி கனம் சுப்பராயன் அவர்கள், நமது சேர்மென் ஸ்ரீமான் சீனிவாச முதலியார் அவர்கள், நமது ஈரோடு முனிசிபாலிட்டியில் உள்ள கவுன்சிலர்கள், பாதிரியார் உள்பட அவரது நண்பர்கள் அந்த ஆபீசிலுள்ள சிப்பந்திகள், நமது ஜில்லா கலெக்டர் ஸ்ரீமான் காக்சு துரை அவர்கள் ஆகிய இவர்களே போதுமான அத்தாக்ஷி ஆவார்கள். இந்தியாவின் மானக் கேட்டுக்கும் இந்தியர்களின் இழி தன்மைக்கும் வெள்ளைக்காரர்கள் யோக்கியதைக்கும் இதைவிட வேறு என்ன சாக்ஷி வேண்டும்?

**குடி அரசு - கட்டுரை - 12.06.1927**



# "சத்தியாக்கிரகம்"

## ஜாக்கிரதை ! ஜாக்கிரதை !! ஜாக்கிரதை !!!

நமது நாட்டில் இப்போது சில தொண்டர்களுக்கு வயிற்றுப் பாட்டிற்கு வேறு மார்க்கமில்லாததால் ஊராரை ஏமாற்றவேண்டி "சத்தியாக்கிரகம்", "சத்தியாக்கிரகம்" என்று சொல்லி அவர்கள் வயிறு வளர்க்கப் பார்க்கிறார்கள். சத்தியாக்கிரகம் என்பதை விளையாட்டுப் பிள்ளைகள் மண்ணுக் கொழிக்கும் வேலை போல நினைத்துக் கொண்டு அதன் யோக்கியதையைக் கெடுக்கும் விஷயத்தில் நம் நாட்டுத் தொண்டர் என்போர்களில் சிலருக்கு வெகு துணிவு ஏற்பட்டு விட்டது. சத்தியாக்கிரகம் செய்யும் முன் சத்தியாக்கிரகம் செய்யவேண்டிய அவசியம் இன்னது என்பதையும் வெளிப்படுத்தி அதற்கு நாட்டினரின் சம்மதி பெற்று சத்தியாக்கிரக விஷயத்திற்கு செல்வாக்கு உண்டாக்கி அதற்குத் தக்க யோக்கியதை உள்ளவர்களால் துவங்கப் படவேண்டிய காரியம். சத்தியாக்கிரகம் செய்வது பெட்ரோல் எண்ணைக்குப் பக்கத்தில் நெருப்பு புழங்கப்படுவதில் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமோ அதுபோல சத்தியாக்கிரகமெனும் நெருப்பை உபயோகிக்க வேண்டியது. தவறினால் தோல்வி ஏற்படுவது மாத்திரம் அல்லாமல் குறிப்பிட்ட லக்ஷியத்திற்கு அழிவு ஏற்படும் என்றே சொல்லுவோம். சத்தியாக்கிரகம் செய்யத் தகுந்தவர்கள் வயிற்றுச் சோற்று வீரர்கள் அல்ல. மற்றவர்களை வைவதற்காக அய்யங்காரிடம் பணம் வாங்கி, வயிறு வளர்த்துக் கொண்டிருக்கும் வீரர்களுக்கு உரியதும் அல்ல என்பதை மக்கள் ஜாக்கிரதையாய் உணர வேண்டும். நாகபுரி சத்தியாக்கிரகத்திற்கு மகாத்மாவின் ஆசி இல்லை என்று தெரிந்தவுடன் ஸ்ரீமான் அவாரிக்கு 4 வருஷம் கடுங்காவல் தண்டனை ஏற்பட்டு விட்டது. தமிழ்நாட்டு சத்தியாக்கிரக வீரர்களில் சிலரின் யோக்கியதை நமக்குத் தெரிந்ததே. அவர்கள் ஜெயிலில் நடந்து கொண்ட மாதிரியும், நாகபுரியில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வந்த மாதிரியும், இவைகளின் மூலம் தமிழ்நாட்டுக்கு ஏற்பட்ட அவமானமும் நாம் நேரில் அறிந்ததே. ஆதலால் வாசகர்களே! போலி ஆசாமிகள் வேறு வழியில் சுயநலத்திற்கும் பணம் வசூல் செய்வதற்கும் விளம்பரம் செய்து கொள்ளுவதற்கும் கூலிக்கு மாரடிப்பதற்கும் ஆசைப்படுகிறவர்களான ஆசாமிகள் விஷயத்தில் ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! ஜாக்கிரதை!!!

**குடி அரசு - கட்டுரை - 12.06.1927**



RangaRakes tamilnavarasam.com

# "வரதராஜுலுவின் அறிக்கை" ராமசாமியின் சமாதானம் - II

மேல்கண்ட தலையங்கமிட்டு சென்ற வாரம் நான் எழுதிய விஷயங்களுக்கு மறுபடியும் 6-6-27 தேதி "தமிழ்நாடு" பத்திரிகையில் பதில் எழுதுமுகத்தான் சில விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அப்பதிலின் தன்மையைப் பற்றி விவகரிக்கு முன்பாக அப்பத்திரிகை ஏதாவது ஒரு சமாதானம் எழுத முன்வந்ததற்காக அதைப் பாராட்டுவதுடன் மிகுதியும் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் இதுவரை ஒரு பத்திரிகையாவது காங்கிரசைப் பற்றி இவ்வளவு நாளாக நான் எழுதிக்கொண்டு வந்த விஷயங்களுக்கு பதில் என்பதாக ஒரு வரி கூட எழுத முன்வராமல் வழக்கம் போல் தங்கள் தங்கள் "தேசாபிமானப் பிரசாரத்தை" நடத்திக்கொண்டும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை வைது கொண்டுமே வந்திருக்கின்றன. ஆனால் காரைக்குடி "ஊழியன்" பத்திரிகை கூட ஒரு சமயத்தில் நம்மைப்பற்றி "சுயமரியாதைப் பிரசாரம் செய்வது தேசத்திற்கு ஆபத்து" என்று மாத்திரம் எழுதிற்றே அல்லாமல் காங்கிரசைப் பற்றி நாம் எழுதியதற்கு பதில் ஒன்றும் எழுதவில்லை. "தமிழ்நாடு" துணிந்து எழுத முன் வந்து விட்டதால் இனி ஒரு சமயம் எல்லாப் பத்திரிகைகளும் எழுத முன்வந்தாலும் வரலாம். ஆனாலும் இம்மாதிரி யாராவது சமாதானம் சொல்ல வருவதன் மூலமாகத்தான் அவ்விஷயங்களை இன்னமும் பாமர மக்கள் நன்றாய் அறியும்படி செய்ய சவுகரியங்கள் ஏற்படும். இல்லாவிட்டால் ஒருதலைபக்ஷமாக நான் எழுதுவதாய் பிறர் நினைக்க ஏது உண்டாகலாம். அதனால் தான் மகிழ்ச்சி அடைவதாக குறிப்பிட்டேன்.

பதில் எழுத முன் வந்த "தமிழ்நாடு" பத்திரிகையானது நான் எழுதிய சமாதானங்களை தனது பத்திரிகையில் எடுத்துப் போட்டு முறையே நான் எழுதி வருவது போல் எழுதியிருந்தால் அது இன்னமும் கொஞ்சம் பாராட்டத் தக்கதாக இருந்திருக்கும் என்பதுடன் எனது சமாதானத்திற்கும் நியாயம் செய்ததாகும். அப்படிக்கில்லாமல் "குடிஅரசு சமாதானத்தைப் பார்த்து எந்த தேசீயவாதியும் வருந்தாமலிருக்க முடியாது" என்றும் "இம்மாதிரி ஒரு தேசத்திற்குரிய பெரிய தேசீய ஸ்தாபனத்தை முறை தவறிப் பழித்து விட விரும்பினால் இதை யார்தான் சகித்துக் கொண்டிருக்க முடியும்" என்றும் வீர கர்ஜனை செய்து எழுதியிருக்கிறது. "சாப்பாட்டுக்கு பந்தியிலே உட்காரக் கூடாது என்று தடைப்படுத்தப்பட்ட ஒருவன் இலை ஓட்டையாயிருக்கிறது" என்று சொல்லுவதில் என்ன பிரயோஜனம். அது போலவே "தேசீயம்" என்பதும் "தேசீய ஸ்தாபனம்" என்பதும் அஸ்திவாரத்திலிருந்தே புரட்டு என்றும் சிலர் வயிற்றுப் பிழைப்புக்கும் உத்தியோகத்திற்குமென்றே ஏற்பட்டதென்றும் நமது நாட்டு பெரும்பான்மை மக்களான அதாவது 100-க்கு 90 பேர்களுக்கு மேற்பட்ட ஜன சமூகத்திற்கு கொஞ்சமும் நன்மை தரத்தக்கதல்லாததோடு பெருங் கெடுதி தரத்தக்கதென்றும் நான் கணக்குப் புள்ளிகளுடன் விளக்கி எழுதி வரும் போது அவைகளுக்கு முதலில் கொஞ்சமாவது விபரமாகச் சமாதானம் சொல்லாமல், எவ்விதம் பார்ப்பனர்கள் அவர்களின் புரட்டுகளை எடுத்துச் சொன்னால் "மதம் போச்சுது," "மத ஸ்தாபனம் போச்சுது," "நாஸ்திகத்தனம் ஆச்சுது" என்று சொல்லுகிறார்களோ அதுபோல் படித்த கூட்டத்தார், பணக்காரக் கூட்டத்தார் ஆகியவர்களின் புரட்டுகளை எடுத்துச் சொன்னால் "தேசம் போச்சுது", "தேசீய ஸ்தாபனம் போச்சுது", "தேசத் துரோகம் ஆச்சுது" என்று சொல்லுவதால் அதற்குப் பயந்து கொண்டு உண்மையை வெளிப்படுத்தாமல் இருக்க முடியுமா என்பதை யோசிக்க வேண்டுகிறேன்.

"சமூக சமத்துவத்தையும், சுயமரியாதையையும், சுதந்திரத்தையும் காங்கிரசின் மூலம் அடையாதபடி தென்னாட்டுப் பார்ப்பனர் செய்கிற கொடுமையை சகிக்க முடியாமல் நாயக்கர் இம்மாதிரி எழுதுகிறாரே அன்றி தாமே முன்னின்று பிரசாரம் செய்து சிறைச் சென்று கவுரவப்படுத்திய காங்கிரஸ் மகாசபையை வேண்டுமென்று தூஷிப்பதாக நாம் நினைக்கவில்லை" என்று "தமிழ்நாடு" பத்திரிகை எழுதி இருக்கிறது.

இந்த இடத்தில்தான் பொதுஜனங்கள் கொஞ்சம் நன்றாய் கவனம் செலுத்திப் பார்க்க வேண்டும். என்னவென்றால் நான் இப்போது காங்கிரசைக் கைப்பற்றியிருக்கும் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் செய்கையை மாத்திரம் கண்டிக்கவில்லை. மற்றும் காங்கிரசின் நடைமுறைகளை மாத்திரம் நான் கண்டிக்கவில்லை. நான் கண்டிப்பது காங்கிரசின் அஸ்திவாரத்தையே - அதன் அடிப்படை தத்துவத்தையே கண்டிக்கிறேன். காங்கிரசை உண்டாக்கினவர்களே அவர்கள் யாராயிருந்தாலும் வெள்ளைக்காரர்கள் உள்பட உத்தியோகமும் அதிகாரமும் சம்பாதனையும் பெறவேண்டிய கூட்டத்தார்கள் என்றும், பெரிதும் அதே நோக்கத்தோடு ஏற்படுத்தி அது ஏற்பட்ட நாள் தொட்டு நாளதுவரையும் அவர்கள் அதே காரியத்தில் வெற்றி பெற்றும் வந்திருக்கிறார்களே ஒழிய தென்னாட்டுப் பார்ப்பனர்கள் மாத்திரம் இந்த காரியத்திற்கு முழுப் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் யாவரும் உணர வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த 40 வருஷங்களாக காங்கிரஸ் பிரதிநிதிகள் யார் என்பதைக் கணக்குப் போட்டு பாருங்கள். அதன் தலைவர்கள் யார் என்பதைக் குறிப்பிட்டுப் பாருங்கள். அதன் நிர்வாகி





RangaRakes
tamilnavarasam.com

யாராயிருந்து வந்திருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்திப் பாருங்கள். இவர்களில் யாராவது இந்திய நாட்டின் 100 - க்கு 95 வீதம் உள்ள மக்கள் கூட்டத்திற்கு சம்பந்தப்பட்டவர்களா? என்று யோசித்துப் பாருங்கள். இது மாத்திரமல்ல இதுவரை காங்கிரசில் செய்து வந்த தீர்மானங்களையும் அத் தீர்மானங்களின் பலனாய் ஏற்பட்ட சீர்திருத்தங்களையும் அதன் அனுபவங் களையும் ஒவ்வொன்றாய் உங்கள் சொந்தப் பகுத்தறிவைக் கொண்டு யோசித்துப் பாருங்கள். தேசத்தைக் காட்டிக் கொடுத்து வாழவேண்டியதான ஆங்கிலக் கல்வி கற்றவர்களும், தேசத்தைப் பாழாக்கி வாழ வேண்டியவர் களான வக்கீல்களும், கூலிக்காரர்களையும், தொழிலாளிகளையும், குடியான வர்களையும், விவசாயிகளையும் வதைத்து வாழவேண்டியவர்களான முதலாளிகளும், நிலச்சுவான்தாரர்களுமே பிரதிநிதிகளாயுள்ள ஒரு கூட்டம் அல்லது அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனம் 100-க்கு 90 பேர்களா யுள்ள அவர்களல்லாத மேல்கண்ட மக்களுக்கு எவ்விதத்தில் பிரதிநிதி சபையாகும்? பிரதிநிதி ஸ்தாபனமாகும்? என்று கேழ்க்கிறேன். இப்போது "இந்துக்கள்" எல்லோருக்கும் பொதுவானது என்று சொல்லப்படும் வர்ணா ஸ்ரம தர்மபரிபாலன சபை, எனக்கும் ஸ்ரீ வரதராஜுலுவுக்கும் ஸ்ரீ கல்யாண சுந்திர முதலியாருக்கும் பிரதிநிதி சபையாகுமா? அதைக் கூட்டி நடத்தும் ஒரு சிலர்கள் அந்த ஸ்தாபனத்தை இந்தியாவில் உள்ள 24 கோடி "இந்துக் களுக்கு" பிரதிநிதி என்று சொல்லிக்கொண்டும் இந்து வேதம், சாஸ்திரம், புராணம் என்பதுகளை ஆதாரமாய் வைத்துக் கொண்டும் நடத்துவதாக வேதான் சொல்லிக் கொள்ளுகிறார்கள். வழக்கமும் சட்டமும் கூட அதை ஒப்புக் கொள்ளுகிறது. ஸ்ரீமான்கள் ஜயவேலு, முத்துரங்க முதலியார், ஆதி நாராயண செட்டியார், ஓ. கந்தசாமி செட்டியார் போன்ற சில கனவான்கள் அதை இந்துக்களின் பிரதிநிதி சபை என்றும் ஒப்புக்கொள்கிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம். அதனாலேயே ஸ்ரீமான்கள் வரதராஜுலு, வீரய்யன், எம். சி. ராஜா, நான் முதலியவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியதுதானா? ஒரு சபையின் பெயர் பிரதானமா? அல்லது கொள்கையும், நடவடிக்கையும், நடத்தும் ஆசாமிகளும் பிரதானமா? என்பதை நன்றாய் யோசித்துப் பார்க்க வேண்டும். நமது மாகாணத்தில் காங்கிரஸ் தலைவர்கள் எனக்குத் தெரிந்த வரையில் 4 கனவான்கள் பெயர் ஞாபகத்திற்கு வருகிறது. ஸ்ரீமான்கள் சங்கர் நாயர், மணி அய்யர், விஜயராகவாச்சாரியார், சீனிவாசய்யங்கார். இவர்களின் யோக்கியதை என்ன? நான்கு பேர்களும் எந்த விதத்தில் தேச மக்களுக்கு பிரதிநிதியானவர்கள். இவர்களின் தொழில் என்ன? இவர்களின் காலக்ஷேபம் என்ன? ஏழை மக்களை வஞ்சித்து பாமர மக்களை ஏமாற்றி தாங்கள் மாதம் 1000, 5000, 10000, 20000 என்பதாகக் கொள்ளையடித்து எந்த சர்க்காரைக் கண்டிப்பது போலும், வைவது போலும், ஒழிப்பது போலும் வேஷம் போட்டு நம்மை ஏமாற்றுகிறார்களோ அந்த சர்க்காருக்கு அபிமான புத்திரர்களாக இருந்து நம்மைக் காட்டிக் கொடுத்து வாழ்ந்தவர்கள் - வாழ்பவர்கள் தானே அல்லாமல் வேறுண்டா? இவர்கள் பிள்ளைகுட்டி, மறுமக்கள், அண்ணன்



தம்பி, மாமன் மைத்துனன் முதலியவர்களையும் சர்க்கார் தெய்வத்துக்கு ஒப்படைத்து அவர்களைக் கொண்டு நம்மைக் காட்டிக்கொடுத்து அச்சர்க் காரை வாழவைக்கும் முறையில் வயிறு வளர்க்கச் செய்திருக்கிறார்களே தவிர வேறு ஏதாவது நன்மையுண்டா? ஸ்ரீமான்கள் மணி அய்யர் தலைவரானார். அய்யர் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார். சங்கர நாயர் தலைவரானார். மலையாளிகளுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார். விஜயராகவாச்சாரியார் சீனிவாசய்யங்கார் தலைவர்களானார்கள். அனேக அய்யங்கார் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார்கள். சர். சி. பி. ராமசாமி அய்யர் காங்கிரஸ் காரியதரிசி ஆனார். இன்று அவரும் 5500 ரூ. சம்பளம் வாங்கிக் கொண்டு சமையல்காரப் பார்ப்பனர் மக்கள், பஞ்சாங்கப் பார்ப்பான் மக்கள், தூதுவப் பார்ப்பனர் மக்கள் வரையில் ஐகோர்ட் ஜட்ஜி, ஜில்லா ஜட்ஜி, சப் ஜட்ஜி, சூப்பிரென்டெண்ட் முதலிய பணம் கொழிக்கும் உத்தியோகங்கள் கொடுத்தார். ஸ்ரீ ரங்கசாமி அய்யங்கார் காங்கிரஸ் காரியதரிசி ஆனார். அவர் தம்பி மீ 2000 ரூபாய் வாங்குகிறார். அவர் சுற்றத்தார்கள் அதுபோலவே வாழ்கிறார்கள். ஸ்ரீமான் ராஜ கோபாலாச்சாரியார் காரியதரிசியானார். இப்போது அவர் பேரால் அவர் சிபார் சால் எந்தெந்த உருப்படிகளோ அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவதும், கதர் இலாகாவில் வயிறு வளர்ப்பதுமாய் நடைபெற்று வருகிறது. இனியும் ஸ்ரீ நாயுடுவும், ஸ்ரீ கல்யாணசுந்திர முதலியாரும் பார்ப்பனரல்லாதாரைக் காங்கிரசில் சேர்த்து காங்கிரஸ் தலைமைப் பதவி பெற்று காங்கிரசை நடத்தினால் இதைவிட வேறு என்ன செய்துவிட முடியும்? எல்லாவற்றையும் விட ஒன்று கேழ்க்கிறேன். மகாத்மா காந்தி காங்கிரசில் சேர்ந்து நானும் என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான பைத்தியக்காரர்களும் அவருக்கு சிஷ்யர்களாக இருந்தும் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்தும் சிறை சென்றும் அதற்குத் தகுந்த என்ன காரியத்தைச் சாதிக்க முடிந்தது? இதற்கு பதில் யாராவது சொல்லட்டும். பல கெடுதிகள் ஏற்பட்ட தென்று சொல்லக் கூடியவர்களை தடுக்கக்கூட நமக்கு யோக்யதை இல்லை. மேலும் அப் பத்திரிகை "நாயக்கரே காங்கிரசில் சேர்ந்து உழைத்து பிரசாரம் செய்து ஜெயிலுக்கும் போய் வந்துவிட்டு அதே காங்கிரசை தூஷிக்கிறார்" என்று எழுதுகிறது. இது வாஸ்தவம். காங்கிரசைப் பற்றிய எனது பரீக்ஷை முடிந்து விட்டது. மக்கள் தனது நாட்டிற்கு ஆக என்னென்ன செய்ய வேண்டுமென்று மகாத்மா சொன்னாரோ அவற்றை என்னால் கூடியவரை செய்து காட்டினேன். மகாத்மாவும் செய்து பார்த்து விட்டார். எங்களது கொள்கைக்கு காங்கிரசை உபயோகப்படுத்திப் பார்த்தோம். கண்ணியமாகவும் அதை நடத்தினோம். அதைக்கொண்டு நம் நாட்டை விடுதலை செய்விக்க முடியாது. அது விடுதலைக்கான ஸ்தாபனமல்ல. அடிமைத்தன்மைக்கு ஆன ஸ்தாபனம்தான் என்பதாக தீர்மானித்தாய் விட்டது. ஆதலால் அதை ஒழிக்க வேண்டியது நாட்டின் விடுதலையை எதிர்பார்ப்பவன் கடமை என்கிற முடிவுக்கு வந்து விட்டேன். காங்கிரஸ் ஒழிந்த மறுதினமே மகாத்மாவை சத்யாக்கிரக



RangaRakes
tamilnavarasam.com

உலகத்தில் காணலாம், தியாக உலகத்தில் காணலாம், விடுதலை உலகத்தில் காணலாம். இது உறுதி என்று சொல்லுவேன். மகாத்மா காங்கிரசை விட்டு விலகும் போது என்ன சொன்னார்? என்பதைக் கவனியுங்கள். எனது நாட்டின் விடுதலைக்கு ஏற்ற கொள்கைகளைப் படித்த வகுப்பாரை ஒப்புக் கொள்ளும்படிச் செய்வதற்கு ஏற்ற ஆற்றலை கடவுள் எனக்குக் கொடுக்க வில்லை. ஆதலால் எனது கொள்கைகளை காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து விலக்கிக் கொள்ளுகிறேன். என்னாலானதை நான் வெளியில் செய்து பார்க்கிறேன் என்று சொன்னதை ஸ்ரீமான்கள் நாயுடுவும் முதலியாரும் ஒப்புக்கொள்ளுகிறார்களா? ஆக்ஷேபிக்கிறார்களா? என்று கேழ்க்கிறேன்.

மகாத்மாவினால் திருப்தி செய்விக்க முடியாத படித்தவர்களது ஸ்தாபனமான பணம் சம்பாதிக்கும் காங்கிரசை ஸ்ரீமான்கள் நாயுடுகாரும், முதலியாரும் கைப்பற்றி மகாத்மா கொள்கைகளை அப்படிப் படித்தவர் களுக்குள் புகுத்தி காங்கிரசின் மூலம் விடுதலை சம்பாதித்துக் கொடுக்கப் போகிறார்களா? என்று கேழ்க்கிறேன். ஒருக்கால் ஸ்ரீமான் நாயுடுவும் முதலி யாரும் ஒப்புக்கொள்வதானாலும் வாசகர்களே! நீங்கள் முடியும் என்று நம்பு கிறீர்களா? என்று கேழ்க்கிறேன். தவிரவும் அப்பத்திரிகை எழுதுவதாவது சரித்திர ஆராய்ச்சியும் பிரதேச சுதந்திரக் கிளர்ச்சியின் அனுபோகமும் எனக்கு இல்லாததால் நான் இப்படி சொல்லுவதாய் மிகவும் தாக்ஷண்ணி யமான பாஷையில் எழுதியிருக்கிறது. பாஷையில் தாக்ஷண்ணியம் காட்டியதைப் பொருத்தவரை நான் நன்றியறிதலுள்ளவனாக இருக்கிறேன்.

கருத்தைப் பொருத்தவரையிலும் மாறுபடுவதற்கு மன்னிக்க வேண்டு கிறேன். இதற்கு ஆக ஒரு சிறுகதை சொல்லுகிறேன். ஒரு ஊரில் ஒருவன் வீட்டில் அவனது தாயார் இறந்துவிட்டாள். அதற்குத் துக்கம் விசாரிக்கப் போனவர்கள் அச்சிறுவனைப் பார்த்து "உன் தாயார் இறந்து போனதைப்பற்றி எங்களுக்கு மிகவும் துக்கமாக இருக்கிறது. அந்தம்மாள் உனக்கு மாத்திரம் தாயல்ல. எனக்கும் தாயாராயிருந்தாள். இந்த வீதிக்கே மற்றும் இந்த ஊருக்கே தாயாராயிருந்தாள். அப்பேர்பட்ட புண்ணியவதி போய் விட்டாளே என்று மிகவும் வருத்தப்படுகிறோம்" என்று ஆறுதல் சொன்னார்கள். அடுத்த வாரத்தில் பக்கத்து வீட்டிலுள்ள ஒருவரின் மனைவி இறந்து விட்டாள். இந்த வாலிபன் அந்நண்பர் வீட்டிற்கு துக்கத்தை விசாரிப்பதற்குச் சென்றவன், துக்கம் விசாரிக்கும் முறை இப்படித் தானாக்கும் என்று நினைத்துக் கொண்டு வீட்டுக்காரரைப் பார்த்து "அய்யோ உன் மனைவி இறந்து விட்டதைப் பற்றி நான் மிகவும் துக்கப் படுகிறேன். அப்புண்ணியவதி உனக்கு மாத்திரமா மனைவி என்று இருக்கிறாயா? எனக்கும் மனைவியாய் இருந்தாள், இந்த வீதியிலுள்ள எல்லாருக்கும் மனைவியாயிருந்தாள், இந்த ஊராரிலும் யாருக்கு வேண்டுமானாலும் மனைவியாயிருந்தாள். அப்பேர்பட்ட தர்மவதி இறந்து போனதற்கு நான் மாத்திரமல்ல இந்த ஊரார் எல்லோரும் துக்கப்படு கிறார்கள்" என்று சொன்னானாம். அது போல இருக்கிறது உலகத்தில் உள்ள



மற்ற தேசக் கிளர்ச்சியை நமது இந்திய நாட்டுக்கு ஒப்பிட்டு அச்சரித்திரங்க ளின் படிப்பும், கிளர்ச்சிகளின் படிப்பும் இந் நாட்டில் நடத்த எத்தனிப்பது. உலகத்திலுள்ள மற்ற தேசமெல்லாம் வேறு, இந்தியா வேறு. அதனாலேதான் "தமிழ்நாடு" பத்திரிகை சொல்வது போன்ற அயல்நாட்டு சரித்திரங்களையும் கிளர்ச்சியையும் மற்றவர்கள் யாருக்கும் பின்வாங்காத அளவுக்கு படித்தறிந்த மகாத்மா காந்தி இந்நாட்டு விடுதலைக்கு அவைகள் எதையும் உபயோகித்துக் கொள்ளாமல் தன் சொந்த முறையில் ஒரு தத்துவத்தைப் புகுத்தினார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் அயல்நாட்டு விடுதலை சரித்திரமும் கிளர்ச்சி மாதிரியும் நமது நாட்டுக்கு உதவாது என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும் அப்பத்திரிகை எழுதி இருப்பதாவது "நாயக்கர், வரி உயர்ந்ததும், பார்ப்பனரல்லாதார் நன்மை கெட்டு பார்ப்பனர் ஆதிக்கம் வலுத்ததும், தொழிலாளர் நிலைமை கேவலப்பட்டதும், இன்னும் பல குறை களுக்கும் காங்கிரசே காரணம் என்று சொல்லுகிறார். இது சரியல்ல. மற்ற தேசங்கள் காங்கிரஸ் என்கிற ஸ்தாபனத்தின் மூலம் தான் வெற்றிபெற்று இருக்கிறது. காலத்திற்கு ஏற்றபடியும் தேவைக்குத் தக்கபடியும் எல்லா தேசத்திலும்தான் உயர்ந்திருக்கிறது. ஆதலால் இவற்றிற்கு காங்கிரஸ் காரணமல்ல" என்று எழுதி இருக்கிறது. இதற்கும் முன் சொன்ன துக்கம் விசாரிப்புக் கதையையே சமாதானமாகச் சொல்லவேண்டி இருப்பதற்கு வருந்துவதுடன் மேலும் இரண்டொரு சமாதானம் சொல்லுகிறேன்.

நமது அரசாங்கத்தார் உயர்த்தியிருக்கும் வரி கால தேச வர்த்தமான அதிகச் செலவை உத்தேசித்தா? அல்லது காங்கிரசுக்கு அழுக வேண்டிய சில உத்தியோகங்களை உத்தேசித்தா? என்பதையும் நமது நாட்டு அரசாட்சிக்கு இவ்வளவு உத்தியோகம் வேண்டுமா? என்பதையும் மற்ற தேச உத்தியோகங் களுக்கு இவ்வளவு சம்பளமிருக்கிறதா? என்பதையும் யோசித்துப் பாருங்கள்.

ஒரு கவர்னரும், இரண்டு நிர்வாக சபை மெம்பர்களும், இரண்டு காரியதரிசியும் அரசாட்சி புரிந்த சென்னை அரசாங்கத்திற்கு ஒரு கவர்னரும், 7 நிர்வாக அங்கத்தினர்களும், 7 காரியதரிசிகளும் எதற்காக? இது கால தேச வர்த்தமானத்தை உத்தேசித்தா? காங்கிரசின் தேசத் துரோகத்தை உத்தே சித்தா? என்பதை கண்ணியமாய் சொல்லட்டும். 5 ஐகோர்ட்டு ஜட்ஜிகள் இருந்து நியாயம் விளங்கின சென்னை உயர்தர நீதிமன்றத்திற்கு 15 ஐகோர்ட் ஜட்ஜிகள் இருப்பது கால தேச வர்த்தமானத்தை உத்தேசித்தா? காங்கிரசின் தேசத்துரோகத்தை உத்தேசித்தா?

ஸ்ரீமான்கள் சர். சி. பி. ராமசாமிக்கும் சர். சிவஞானத்திற்கும் டாக்டர் சுப்பராயனுக்கும் மற்றும் இவர்கள் போன்றாருக்கும் மாதம் 5500 ரூ. கொடுப்பதும் காரியதரிசிகளுக்கும் ஜட்ஜுகளுக்கும் 2500, 3000 கொடுப்பதும்



RangaRakes tamilnavarasam.com

காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்தா? காங்கிரசின் தேசத் துரோகத்தை உத்தேசித்தா? இதுபோன்ற ஆயிரக்கணக்கான உத்தியோகங்கள் அதிகமானதும் அதுகளுக்கு சம்பளங்கள் கொடுக்க வேண்டியதும் நாட்டின் உண்மையின் அவசியத்தை முன்னிட்டா? காங்கிரசின் தேசத் துரோகத்தை முன்னிட்டா? இவர்களுக்கும் இவர்களைப் போலவே வெள்ளைக்காரருக்கும் அதிக சம்பளம் கொடுக்க வேண்டியதற்காகவே 40 கோடி ரூ. வரி செலுத்தி வந்த நமது நாட்டு குடியானவர்கள், வியாபாரிகள், தொழிலாளிகள், கள்ளு சாராயம் குடிக்க வேண்டியவர்களை அதிகப்படுத்த அவசியங்கள் ஆகிய வரிகள் கார்ட், கவர், ரயில் சார்ஜ், உப்பு வரி, வருமான வரி, சாமான்கள் மீது வரி முதலியதுகளை அதிகமாக்க ஏற்பட்டதா? அல்லது தேசத்தின் காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்து ஏற்பட்டதா? என்று கேழ்க்கின்றேன்.

தூங்குபவர்களைத் தட்டி எழுப்பலாம் "தமிழ்நாடு" போன்று எல்லா விபரமும் தெரிந்து வேண்டுமென்றே கண்ணைக் கெட்டியாய் மூடிப் படுத்துக் கொண்டிருப்பவர்களை எப்படி எழுப்புவது? மற்றும் அப்பத்திரிகை எழுதுவதாவது "காங்கிரஸ் தோன்றிய பிறகுதான் மக்களுக்கு தேசாபிமானம் இன்னது என்று தெரிந்தது. சீர்திருத்தங்களைப் படிப்படியாய் அடைய முடிந்தது. அடைந்ததை ஆள முடிந்தது. தேச சமூக சமய வேத புராண புரோகித விடுதலைகளில் உணர்ச்சி ஏற்பட்டது" என்று எழுதுகிறது.

இதில் மருந்துக்குக் கூட உண்மை இல்லை. காங்கிரஸ் ஏற்பட்ட பிறகுதான் மக்களுக்குத் தேசத் துரோகம் செய்யும் ஆசை கற்பிக்கப்பட்டது. தேசத் துரோகம் செய்து வாழ வேண்டிய அவசியமே மக்களுக்கு ஏற்பட்டது. காங்கிரசுக்கு முன் உத்தியோகஸ்தர்கள் மாத்திரம் அதுவும் மிகுதியாக பார்ப்பன உத்தியோகஸ்தர் மாத்திரம் செய்ய முடிந்தது. இப்போது மக்கள் ஒவ்வொரு வரும் வாழ வேண்டுமானாலும் சிறப்பாக அயோக்கியர்கள் வாழ வேண்டுமானாலும் உத்தியோகங்களை விட காங்கிரசுதான் தக்க இடமாக இருந்து வருகிறது. சமய சமூகவாரிகள் விடுதலைக்கு நமது நாடு ஆயிரக் கணக்கான வருஷங்களாய் போராடுகிறது. அது வெற்றி பெறும் நாளையில் காங்கிரசின் பலனாய் பார்ப்பன ஆதிக்கம் வளர்ந்து அவ்விடுதலைகளுக்கு இடையூறாய் நிற்கிறது. இன்றும் இவ்விடுதலைக்கு காங்கிரசின் பேரால் உழைக்க இடமிருக்கிறதா? என்று கேழ்க்கிறேன். காங்கிரசால் வந்த சீர்திருத் தத்தைதானே நம்ம நாட்டுக்கு ஆபத்து என்று சொல்லுகிறேன். அது வந்த தால் கெடுதிதானே ஆயிற்று. சீர்திருத்தத்தை நடத்திக்காட்ட முடிந்தது என்கிறது. எதை நடத்திக் காட்டியதாக அப்பத்திரிகை சொல்லுகிறது என்பது நமக்கு விளங்கவில்லை. மந்திரிப் பதவிகளில் டாக்டர் சுப்பராயன், பனகால் ராஜா முதலியவர்கள் நடத்திக் காட்டியதையா? தேர்தல்களில் சீனிவாசய் யங்கார் நடத்திக் காட்டியதையா? இந்தியருக்கு உயர் பதவி கொடுத்ததில் சர். சி.பி. நடத்திக் காட்டியதையா? ஸ்தல ஸ்தாபனங்களில் ஸ்ரீமான் ஈரோடு டி. ஸ்ரீனிவாச முதலியார் நடத்திக் காட்டியதா? கூட்டுத்தொகுதியில் இந்திய சட்ட



சபைக்கு தென்னாட்டில் அய்யங்கார்களே போக முடிந்ததையா? எதைச் சொல்லுகிறது? என்று கேட்கிறேன். இது போலவே அதன் மற்ற வரிகளும் இருக்கின்றன. மற்றவைகளுக்குப் பதில் விரும்பினால் வரிவரியாய்ப் பிரித்து எழுதத் தயாராய் இருக்கிறேன்.

ஒற்றுமையை உத்தேசித்து கொள்கைகளை விட்டுக் கொடுத்த பலன்தான் மகாத்மா முக்காடிட்டு சங்கராச்சாரி போல் மூலையில் உட்கார நேர்ந்ததும் அவரது நடவடிக்கைகள் இப்போது ஒரு மடாதிபதிகள் சம்பிரதாயம் போல் ஆனதும் மடங்களில் பலர் ஆஷாடப் பூதித்தனம் செய்து பெருமை அடைவது போல் காந்தி மடத்திலும் பல "சாஸ்திரிகள்" போய் அமர்ந்து முகஸ்துதி செய்து பெருமை பெற்று வாழ்வதுமான காரியங்கள் நடந்தது. காந்தி கொள்கைக்கு இருந்த மதிப்புகள் அடியோடு போய் காந்தி மடமேற் பட்டுவிட்டதற்கு காரணமே கொள்கையை விட்டுக்கொடுத்து ஒற்றுமையை நாடின பயித்தியக்காரத்தனம் தான். மகான்கள் செயலில் பயித்தியக்காரத்தனமும் ஒன்றாதலால் மகாத்மா காந்திக்கு அது தகும். ஒரு சமயம் அதை மாற்றிக்கொள்ள அவருக்கு நம்பிக்கை பிறந்தாலும் பிறக்கும். நமக்கு அது தகாது. நமக்கு அந்நம்பிக்கை இல்லை. கொள்கை விட்டு ராஜியான ஒரு ஸ்தாபனமும், ஒரு மனிதனும், ஒருநாடும் உருப்படியாகாது என்பது எனது புத்திக்கு எட்டிய உறுதியான முடிவு.

ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார் அவர்களுக்கும் "காங்கிரஸ்" பயித்தியம் இருப்பது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஸ்ரீ முதலியாருக்கு அரசியல் விளம்பரம் தேவை இல்லை. ஆங்கிலம் படித்த பயனாக தேசத் துரோகத்தன்மை தோன்றவும் இடமில்லை. வேறு விதத்தில் அவர் ஒரு பெரிய ராஜதந்திரியாக வேண்டியதவசியமும் இல்லை. ஆதலால் அவருக்கு "காங்கிரஸ்" பைத்தியம் ஏனோ தெரியவில்லை. எப்படியானாலும் "காங்கி ரஸ்" தேசத்துரோக ஸ்தாபனமென்பதையும், ஏழைகளை வதைக்கும் ஸ்தா பன மென்பதையும் நாம் கோபுரத்தின் மேலிருந்து கூவுவோம். ஆனால் கடசி யாக ஒரு வார்த்தை அதாவது யாவறொருவர் "காங்கிரசைப்" பற்றி என்னைப் போல் நினைக்கிறார்களோ, என்னைப் போன்ற முடிவை உறுதியாகக் கொண் டிருக்கிறார்களோ அவர்கள் மாத்திரம் "காங்கிரசி"ல் சேர வேண்டியதில்லை. ஸ்ரீமான் நாயுடுவைப் போலவும், முதலியாரைப் போலவும், மற்றும் 'ஜஸ்டிஸ்' கட்சியில் உள்ள சிலர்கள் போலவும் 'காங் கிரஸ்' ஒரு தேசீய சபை, அதனால் தேசத்திற்கு நன்மை செய்யலாம் என்று யாராவது நினைப்பார்களேயானால், அவர்கள் அவசியம் தங்கள் மன சாட்சிப்படியே நடக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆனால் மனதில் உண்மை தெரிந்து சுயநலத்திற்காகவோ, வாழ்வுக்காகவோ போய் சேர்ந்து தேசத்தையும், ஏழை மக்களையும் கெடுக்காதீர்கள் என்று பிரார்த் திக்கிறேன்.

**குடி அரசு – தலையங்கம் – 12.06.1927**



RangaRakes
tamilnavarasam.com

# நாகையில் வெறுக்கத்தக்க சேதி

நாகையில் நமது சகோதரர்களில் சிலர் அதாவது ஜனாப் அப்துல் அமீத்கான், ஜனாப் தங்க மீரான் சாயபு, ஸ்ரீமான் கிருபாநிதி முதலியவர்கள் பிரசாரம் செய்ய வந்த காலையில் கூட்டத்தில் சிலர் மிக இழி தன்மையாய் நடந்து கொண்டதாக பத்திரிகையில் காணப்படுகிறது. (அதாவது கூட்டத்தில் பாதரக்ஷை எறியப்பட்டதாம்). அது வாஸ்தவமானால் நாகையில் உள்ள எனதன்பான தொழிலாளர் சகோதரர்களும், நாகையில் உள்ள பார்ப்பன ரல்லாத பிரமுகர்களுக்கும் கூட அவமானகரமான காரியமென்றே சொல்லுவோம். இவ்விழித் தகைமை ஆன காரியத்தினால் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு வந்த நன்மை என்ன? பொது வாழ்வில் யாவருடைய குற்றத் தையும் ஆண்மையுடன் கண்டிக்க யாவருக்கும் உரிமை உண்டு. இம் மாதிரியான காரியங்களினால் மிகவும் சமூகத்திற்கே அவமானத்தை விளைவிக்கத் தக்கதாகவும் நடந்து கொண்டதற்கும் அக்கூட்டத்தில் நமது பெயரும் நமது பத்திரிகையின் பெயரும் அடிபட்டுக் கொண்டு இம்மாதிரி நடந்ததற்கும் நாம் மிகுதியும் வெட்கமடைகிறோம். பார்ப்பன சூழ்ச்சியின் பயன் என்னவாய் முடிகிறது. பார்ப்பன வஞ்சக புரோசீஜர் கோட் ஆகிய ராமாயணமென்னும் புத்தகத்தில் என்ன சொல்லி யிருக்கிறது? எதிரியை ஜெயிக்க முடியாவிட்டால் எதிரியின் கூட்டத்தில் உள்ள ஒரு ஆசாமிக்கு ஆசை வார்த்தை சொல்லி லஞ்சம் கொடுத்து நமது சுவாதீனப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களுக்குள்ளாக விவகாரம் இருந்தால் ஒரு கக்ஷியில் (பீசில்லாமல்) சேர்ந்து கொண்டு ஒருவனுக்கு கெடுதி செய்ய வேண்டும். அதாவது விபூஷணருக்குப் பட்டம் கட்டுவதாகச் சொல்லி அவன் தமையனுக்கு விரோதமாய் தன் கட்சியில் சேர்த்துக் கொண்டதும், வாலி சுக்ரீவன் சண்டையில் சுக்ரீவனுடன் சேர்ந்து கொண்டு வாலி மேல் சுக்ரீவ னைத் தூண்டிவிட்டு தான் உள்ளுக்குள் இருந்து கொண்டு திருட்டுத்தனமாய் வாலியைக் கெடுத்ததும் போலவும். கூட்டம் அதிகமாய் ஏற்பட்டு தங்களால் சமாளிக்க முடியாத காலத்தில் மூல பல சைன்னியங்களுக்குள்ளாகவே ஒருவரை ஒருவர் அடித்துக் கொன்று கொள்ளும்படியாக செய்வித்தது போலவுமாய் இப்போது பார்ப்பனர் செய்யும் சூழ்ச்சியை அறியாமல் நாம் நம்மவர்களை இம்மாதிரி நடத்துவது அறியாமையேயாகும். எந்தக் கூட்டத்திலாவது எந்தப் பார்ப்பனராவது இம்மாதிரி சபையில் மாட்டிக் கொள்ளுகிறானா என்பதை நன்றாய் யோசித்துப் பார்க்கும்படி வேண்டு கிறோம். பார்ப்பனரல்லாதார் மீது பழி சொல்ல ஒரு சமயம் இக்காரியம் ஒரு பார்ப்பனராலேயே ஏற்பட்டு இருந்தாலும் இருக்கலாம். ஆனாலும் அதற்கும் இடம் கொடுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பார்ப்பனரல்லாதார் கடமையென்று சொல்லுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 12.06.1927**





RangaRakes tamilnavarasam.com

# ஸ்ரீனிவாசய்யங்கார் பணத்தின் மகிமை

சென்ற வாரம் தூத்துக்குடியில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் சிஷ்யர்களில் ஒருவரான ஒரு குப்புசாமி முதலியார் அவர்கள் தூத்துக்குடியில் “காங்கிரஸ்” (பார்ப்பன) பிரசாரம் செய்யும் போது ஒரு கூட்டத்தில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் தானும் ஒரே கள்ளுக்கடையில் கள்ளுக்குடித்தோம் என்றும் தனக்கு சீனிவாசய்யங்கார் சிலவுக்குக் கொடுக்கிறார் என்றும் மற்றும் பலவிதமாய் பெண்டு பிள்ளைகளைக் குறித்தும் வேடிக்கையாகப் பிரசங்கம் செய்தார் என்றும் அக்கூட்டத்தில் உள்ள பார்ப்பனர்கள் குலுங்கி குலுங்கி நகைத்தார்கள் என்றும் ஸ்ரீனிவாசய்யங்கார் கக்ஷியாரை ஆதரிப்பதாக சொல்லிக்கொள்ளும் சில பார்ப்பனரல்லாதார்கள் கூட இதைப்பற்றி வருத்தப்பட்டார்கள் என்றும் ஸ்ரீமான் வெ. நாராயணன் என்பவர் தூத்துக்குடியில் சில கனவான்கள் முன்னிலையில் நமக்குச் சொன்னார். இது உண்மையானால் ஸ்ரீ. ஸ்ரீனிவாசய்யங்காரின் பணத்தின் மகிமையே மகிமை.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 12.06.1927**



# கோவையில் பார்ப்பனரல்லாதார் மகாநாடு

கோவையில் சென்னை மாகாண பார்ப்பனரல்லாதார் விசேஷ மகாநாடு ஜூலை மாதம் 2, 3 தேதிகளில் அதாவது ஆனி மாதம் 18, 19 தேதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்துவதாய் முடிவாகத் தீர்மானிக்கப்பட்டு விட்டது. கோவை ஜில்லா மகாநாடாக கூட்டுவதாயிருந்த இந்த மகாநாடு காங்கிரசில் உள்ள சில பார்ப்பனரல்லாதாரின் உணர்ச்சியை அனுசரித்து மாகாண விசேஷ மகாநாடாகக் கூட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதோடு கூட, காங்கிரஸ் பார்ப்பனர்கள் தேசத்தின் பெயரால், காங்கிரஸ் என்கிற ஸ்தாபனத்தைக் கைக்கொண்டு அதன் மூலம் பார்ப்பனரல்லாதார்க்கு செய்து வரும் கெடுதியையும், தேசத்தின் விடுதலையைக் காட்டிக்கொடுத்து தேசத் துரோகம் செய்து பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ள செய்துவரும் சூக்ஷியையும் அறிந்து ஒன்றா காங்கிரசினது யோக்கியதையை வெளியிலெடுத்துச் சொல்லி பாமர மக்களை அக்காங்கிரஸ் படுகுழி மோசத்தில் இருந்து தப்புவிக்க வழிதேட வேண்டும். அல்லது காங்கிரசைக் கைப்பற்றி அதிலுள்ள அயோக்கியர்களையும், சுயநலக்காரரையும் வெளியாக்கி காங்கிரசின் மூலம் தேசத்திற்கு உண்மையான விடுதலையும், சுயமரியாதையும் உண்டாகும்படி செய்ய வேண்டும் என்கிற ஆசையானது ஜஸ்டிஸ் கக்ஷியைச் சேர்ந்த சில தலைவர்களுக்கு உண்டானதினாலும் மாகாண பொது மகாநாடாக கூட்டி பார்ப்பனரல்லாத கனவான்களில் அரசியல் விஷயத்திலும் மற்றும் பல விஷயங்களிலும் அபிப்பிராய பேதப்பட்ட எல்லா கனவான்களையும் அழைத்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்ற நோக்கத்துடனும் அம்மகாநாடு கூட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றும் சொல்லலாம். எனவே, இம்மாகாண பார்ப்பனரல்லாத பொதுமக்களுக்கு இதுசமயம் பெரிய பொறுப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை ஞாபகப் படுத்துகிறோம்.

சுயராஜ்யக் கக்ஷியையும் ஜஸ்டிஸ் கட்சியையும் வைது கொண்டு தேசியக் கட்சியின் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கும் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்கும் அதே மாதிரி சுயராஜ்ஜியக் கட்சியை அக்கிரமக் கட்சி என்று சொல்லிக் கொண்டும் ஜஸ்டிஸ் கட்சியை பார்ப்பனரல்லாதார் எல்லாருக்கும் பிரதிநிதியான கட்சி அல்லவென்று சொல்லிக் கொண்டும் சன்மார்க்க சங்கத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு இருக்கும் ஸ்ரீமான் கல்யாணசுந்திர முதலியார் அவர்களுக்கும் மற்றும் இதுபோலவே காங்கிரஸ்



RangaRakes

tamilnavarasam.com

கொள்கையும் தப்பு, சுயராஜ்ஜியக் கக்ஷியார் நடவடிக்கையும் பிடிக்கவில்லை, ஜஸ்டிஸ் கக்ஷித் தலைவர்களிடத்திலும் நம்பிக்கை இல்லை என்று சொல்லிக் கொண்டு மந்திரிகளை ஆதரிக்க வேண்டியது தனது கடமை என்றும் சொல்லிக் கொண்டிருக்கும் ஸ்ரீமான் டி. ஏ. ராமலிங்க செட்டியாருக்கும் மற்றும் காங்கிரஸ் நல்லது, அதை நடத்துகிறவர்கள் அயோக்கியர்கள், அவர்களை வெளியாக்கி காங்கிரஸைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். ஜஸ்டிஸ் கக்ஷியின் சமூக சம்பந்தமான கொள்கைகள் சரியானதுதான். ஆனால், அதன் அரசியல் கொள்கை காங்கிரஸ் கொள்கையாக இருக்க வேண்டும் என்று சொல்கிற ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியாருக்கும் மற்றும் யாதொரு கொள்கையும் இல்லாமல் மாதம் 30 நாள் நடந்தேற வேண்டியதும் 5500 ரூபாய் சம்பளம் பெறுவதும் தவிர அது நிரந்தரமாய் கிடைத்துக் கொண்டிருக்க வேண்டியதற்கு என்ன வேண்டுமானாலும் செய்யத் தயார் என்கிற கொள்கை யுடைய மந்திரிமார்களுக்கும் இவர்கள் இத்தனைப் பெயருடைய கோஷ்டி யாருக்கும் பின்பற்றுவோர்க்கும் இம் மகாநாடு தாராளமாய் வழி திறந்திருப் பதுடன் இவர்கள் இத்தனை பேரும் சொல்லும் யோசனையை வணக்கத் துடனும் சகிப்புத் தன்மையுடனும் காது கொடுக்கவும் அவற்றிற்கு சரியான நியாயம் வழங்கவும் தயாராக காத்துக் கொண்டிருக்கிறது.

மதுரை மகாநாடும் இப்படியேதான் எல்லோரையும் வரவேற்க காத்திருந்தது. ஆனால், சிலருக்கு அதுசமயம் பலவித சந்தேகங்களும், அசௌகரியங்களும் ஏற்பட்டிருக்கலாம். இப்போது மதுரை மகாநாடு நடந்த பிறகும் காங்கிரஸ் நடைமுறையைக் கண்ட பிறகும் அவரவர்களுக்கு ஏற்பட் டிருந்த சந்தேகங்களும் அசவுகரியங்களும் அநேகமாக ஒழிந்திருக்கு மென்றே எண்ணுகிறோம். எப்படியெனில் மகாத்மாவின் நிர்ணயமான திட்டத்தை காங்கிரஸ் உதைத்துத் தள்ளியிருந்துங் கூட ஜஸ்டிஸ் கட்சி அதை ஏற்றுக் கொண்டதும், "இரட்டையாட்சியை ஒழிக்க வேண்டும், மந்திரி சபையை ஒழிக்க வேண்டும்" என்று காங்கிரஸ் செய்த தீர்மானத்தைக் காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்களே உதைத்துத் தள்ளிவிட்டு இரகசியமாய் இரட்டை ஆட்சியையும் வெளிப்படையாய் மந்திரிகளையும் சர்க்காரையும் ஆதரித்து வந்தும், ஜஸ்டிஸ் கட்சி தைரியமாய் மந்திரி சபையையும் சர்க்காரையும் எதிர்த்து வருவதும் இதன் பலனாக மந்திரி பதவிகளை வலிய தங்களுக்குக் கொடுத்தாலும் எடுத்துக் கொள்ளுவதில்லை என்று உறுதியாய் இருப்பதும் யாவரும் அறிந்த விஷயமேதான்.

ஆதலால் ஜஸ்டிஸ் கட்சியின் அரசியல் கொள்கைகளிலோ சமூகக் கொள்கைகளிலோ நிர்மாணத் திட்டத்திலோ இனி யாரும் குறை கூறிக் கொண்டு சாக்குப் போக்குச் சொல்ல முடியாது. "நடத்துகிறவர்கள் ஒழுங்கா யில்லை, தலைவர்கள் சரியாயில்லை" என்று சொல்லவோ "அடிப்படைத் தத்துவம் சரியாயில்லை" என்று சொல்லவோ இனி யாருக்கும் இடமும் இல்லை. ஏனெனில் யாவர்களும் வந்து அவரவர்கள் அபிப்பிராயங்களைச்



சொல்லி அவற்றை ஒப்புக் கொள்ளாததினாலோ அல்லது "மற்றவர்களை உள் சேர்க்கக் கூடாது. ஒரு சிலரிடமே ஆதிக்கம் இருக்க வேண்டும்" என்று சூக்ஷியைக் கண்ட பிறகோ, யாராவது அதன் பேரில் குற்றம் சொன்னால் சொல்லலாம்.

அப்படிக்கு ஒன்றும் இல்லாமல் எல்லோரையும் வரவேற்க தயாராய் இருப்பதுடன் எல்லோருடைய அபிப்பிராயத்திற்கும் மதிப்புக்கொடுக்கத் தயாராயிருக்கும் போது வருவதற்கு இசையாதவர்களை பார்ப்பன பயம் காரணமில்லாமல் வேறு சாக்குச்சொல்லவே முடியாது என்றே சொல்லு வோம்.

தவிர, மகாநாட்டின் அக்கிராசனர் ஸ்ரீமான் திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்கள். அவரைப்பற்றி நமது மாகாணத்தில் தெரி யாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். அவர்கள் 1907 - ம் வருஷத்தில் ஏற்பட்ட வங்காளப் பிரிவினைக் கிளர்ச்சியின் போதே தேசீய விஷயத்தில் ஈடுபட்டவர். தூத்துக்குடி சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்கு முக்கியஸ் தராயிருந்து கிராமம் கிராமமாகச் சுற்றி 10 லட்சக்கணக்காக பொருள் வசூல் செய்து கப்பல்கள் வாங்கி நடத்தியும் மற்றும் எவ்வளவோ பிரயாசைப் பட்டவரும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்காக பத்து ௵ காலத்திற்கு அதிகமாகவே ஒரே கொள்கையுடன் கட்டுப்பாடாய் இருந்து நாணயமாக நடந்து வருபவரும் திருநெல்வேலி ஜில்லா கவர்மெண்ட் வக்கீலாய் இருந்தவரும் ஜில்லா போர்டு பிரசிடெண்ட்டாக இரண்டு முறை இருக்கிற வரும், சென்னை சட்டசபையில் முக்கிய அங்கத்தினராகவும் இருந்தும் வருகிறவர். எனவே, அவரது தலைமைப் பதவி "காங்கிரஸ் தலைவர்கள்" தலைமைப் பதவியைப் போலல்லாமல் கண்ணியத்துடனும் சாமர்த்தியத்து டனும் நடைபெறும் என்பது நமது உறுதி. இப்பேர்ப்பட்ட தலைவர் இந்த நெருக்கடியான சமயத்தில் கிடைத்ததே மகாநாட்டின் பாக்கியம் என்று சொல்ல வேண்டும். அதுபோலவே, வரவேற்புத் தலைவராகிய ஸ்ரீமான் பி. இரத்தினசபாபதி கவுண்டர் அவர்களைப் பற்றியும் நாம் அதிகம் சொல்ல வேண்டிய தில்லை. அவர், இந்த ஜில்லாவின் பெரும் பாகமான சமூகமாகிய கொங்கு வேளாளர் சமூகப் பிரமுகர்களில் ஒருவர். கொங்கு வேளாளர் சங்கத்திற்கு ஆதி முதல் காரியதரிசியாகவும் கடைசியாக நடந்த மகா நாட்டிற்கு வரவேற்புத் தலைவராகவும் கோயம்புத்தூர் ஜில்லா பஞ்சு வர்த்த கர்களில் முக்கியஸ்தராகவும் செல்வந்தராகவும் பொதுநலச் சேவையில் உண்மையான பற்றுக் கொண்டவராகவும் உள்ள கனவான். இந்த ஜில்லாவில் அவருக்குத் தமது சமூகத்திலும் மற்றும் வியாபார சமூகத்திலும் பாமர மக்களிடத்திலும் விசேஷ செல்வாக்குண்டு. எனவே, அவரது வரவேற்புத் தலைமையானது யாவருக்கும் திருப்தியைத் தரத்தக்கதாகவே இருக்கும்.

அதன் காரியதரிசிகளோ மிகவும் விசேஷப்பட்டவர்கள்:- ஒன்று, ராவ்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், எம். எல். சி. ஜில்லாபோர்டு பிரசிடெண்ட், முனிசிபல் சேர்மன். இரண்டு, ஸ்ரீமான் பி. எஸ். சாத்தப்ப



RangaRakes tamilnavarasam.com

செட்டியார், காளீஸ்வரர் மில் முதலிய பல மில்லுகளின் ஏஜண்ட். அவரது முயற்சி எல்லோரையும் விட மிகச் சிறந்தது. மூன்று, ஸ்ரீமான் சி. வி. நஞ்சய கவுண்டர், கோயம்புத்தூர் ஜில்லா போர்டு வைஸ் பிரசிடெண்ட்டு ஸ்ரீமான் வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களின் மருமான். நான்கு, பி.எஸ்.ஜி சன்ஸ் வெங்கட சாமி நாயுடு. ரங்கவிலாஸ் மில் ஏஜண்ட், கம்ம நாயுடு சமூகப் பிரமுகர், அநேகப் பெரிய தர்மங்கள் செய்தவரும், ஜில்லாவில் மிக்க செல் வாக்குடையவரும் ஆவார். 5. ஸ்ரீமான் அருணாசலம் செட்டியார். கோயம்புத்தூர் முனிசிபல் வைஸ் சேர்மன், தேவாங்க குல பிரமுகர், பொதுக் காரியங்களில் மிகவும் ஊக்கமாகவும் உழைத்து வருபவர். ஆறு, ஸ்ரீமான் நஞ்சுண்ட கவுண்டர். முனிசிபல் கவுன்சிலர், ஒரு பெரிய பாங்க்கின் காரிய தரிசி, ஒக்கிலிகர் சமூகப் பிரமுகர். இன்னமும் இது போன்ற நிர்வாக சபை அங்கத்தினர்கள் ஆகிய அநேக பெரியோர்களையும், முக்கியஸ்தர்களையும் கொண்ட இம்மகாநாட்டை விசேஷ மகாநாட்டில் மிக விசேஷமானது என்று சொல்வது மிகையாகாது.

ஆதலால் மாகாணத்தில் பல பாகங்களிலும் சிறப்பாக தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஜில்லா, தாலூகா, கிராமங்களில் இருந்தும் தவறாமல் பிரதிநிதி கள் ஆயிரக்கணக்காக வந்து சேரவேண்டியது ஒவ்வொரு உண்மையான பார்ப்பன ரல்லாதாரின் கடமையாகும். முக்கிய விசேஷம் என்னவென்றால் ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு, கல்யாணசுந்திர முதலியார், ஆர். கே. சண்முகம் செட்டி யார், வி. ஓ. சிதம்பரம்பிள்ளை ஆகிய அநேக கனவான்கள் இம்மகாநாட்டிற்கு வரக்கூடும். அவர்கள் யாவரும் வருவதற்குத் தகுந்த அழைப்புகளும் ஏற்பாடுகளும் நடந்து வருகிறது.

இம்மகாநாட்டின் மூலமும் அநேக கனவான்களின் விஜயம் மூலமும் பார்ப்பனரல்லாத சமூகத்திற்குள் ஒரு புது கட்டுப்பாடும், ஒற்றுமையும், பொது வேலைத் திட்டமும் ஏற்படக் கூடும் என்பதற்கு அநேக ஆதாரங்கள் இருக் கின்றன. யாவரும் தவறாமல் வந்து மகாநாட்டின் உத்தேசத்தை நிறைவேற்றி வைக்க வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 19.06.1927**



# பார்ப்பன அயோக்கியத்தனம்

'அகில இந்திய பிராமண சம்மேளனம்' என்பதாகப் பேர் கொண்டு தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள ஒரு மூலைக் கிராமத்தில் வக்கீல் பார்ப்பனர், உத்தியோகப் பார்ப்பனர், பஞ்சாங்கப் பார்ப்பனர், காப்பிக்கடைப் பார்ப்பனர், தூதுவப் பார்ப்பனர் ஆகிய பலதிறப்பட்ட சுமார் 100 உருப்படிகள் கூட்டம் கூடி ஒன்று சேர்ந்து **"அகில இந்தியப் பிராமண சம்மேளனம்"** என்பதாகப் பேர் வைத்துக் கொண்டு பல தீர்மானங்கள் செய்து இதை இந்தியாவில் உள்ள இந்துக்கள் என்று சொல்லப்படும் இருபத்தைந்து கோடி மக்களுக்குக் கட்டுப்பட்டதாக கருதும்படி சூழ்ச்சி செய்திருக்கிறார்கள். அங்கு நடந்த தீர்மானங்களையும் மகாநாட்டின் வரவேற்பு அக்கிராசனர் மகாநாட்டின் தலைவர் ஆகியவர்கள் பிரசங்கங்களும் படித்துப் பார்த்தால் உண்மையான கலப்பற்ற பார்ப்பனரல்லாதார்களின் இரத்தம் கொதிக்காமல் இருக்கவே முடியாது. அவ்விருவர் பிரசங்கத்திலும் ஒற்றுமையாகக் காணப்படும் விஷயங்கள் பல இருந்தாலும் அவற்றில் முக்கியமானது இத் தேசத்தில் இந்துக்களில் பார்ப்பனர்கள் தவிர மற்றவர்கள் எல்லாம் சூத்திரர்கள் என்றும், க்ஷத்திரியரும், வைசியரும் கிடையாது என்றும் பேசியிருக்கிறார்கள். க்ஷத்திரி யரும், வைசியரும் இந்நாட்டில் இல்லை என்பதைப் பொறுத்த வரையில் நமக்குச் சந்தோஷமே. நாமும் அப்படித்தான் தீர்மானித்திருக்கிறோம். மற்றபடி யார் யார் தங்களை க்ஷத்திரியர்கள் என்றும், வைசியர்கள் என்றும் எண்ணிக் கொண்டு பார்ப்பனர்களைப் போல் பூணூல் போட்டுக் கொண்டு திரிகிறார்களோ அவர்கள் பார்ப்பனர்களிடம் போய் கெஞ்சி தங்கள் க்ஷத்திரிய, வைசிய உரிமைகளைக் காப்பாற்றி பார்ப்பனர்களின் க்ஷத்திரியர் மக்களல்ல என்பதை நிரூபித்துக் கொள்ளட்டும். நமக்கு அதைப்பற்றி கவலையில்லை. ஆனால் பார்ப்பனர்கள் தவிர மற்றவர்கள் சூத்திரர்கள் என்று சொன்னதுதான் நமக்கு மிகுதி ரத்தத் துடிப்பை உண்டாக்குகிறது.

பார்ப்பனர்கள் இந்த நாட்டிற்கு பிழைக்க வந்தவர்கள் என்பதில் யாருக்கும் ஆக்ஷேபணை இருக்காது என்றே நினைக்கிறோம். அவர்கள் ஒரு இழிந்த ஜாதியார் என்பதிலும் யாருக்கும் ஆக்ஷேபணை இருக்க நியாய மில்லை. நமது அகராதிகளிலேயே ஆரியர் என்றால் மிலேச்சர் என்று குறிப்பிடப்பட்டிருப்பதும், அதுவும் அவர்களால் ஒப்புக்கொண்ட அகராதி களில் காணப்படுவதும், அவர்களது நாகரிகமோ அவர்களால் எழுதி



RangaRakes tamilnavarasam.com

வைத்திருக்கும் வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, புராணம் இதுகளால் அவர்கள் தமிழ் மக்களாகிய நமது நாகரிகத்திற்கு எவ்வளவு கீழ்ப்பட்டது என்பதும், அருவருக்கத்தக்கது என்பதும் ஆராய்ச்சி உள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும். "அதாவது பார்ப்பன ஸ்திரீகள் விபசாரம் செய்து விட்டால், கர்ப்பம் தரிக்காமலிருந்தால் வீட்டிற்கு தூரம் ஆனவுடன் அந்த தோஷம் தீர்ந்து விடுகிறது" என்று பராசர ஸ்மிருதி பிராயச் சித்த காண்டம் 4 – வது அத்தி யாயம் 2 – வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதே சுலோகத்திற்கு விரிவுரை எழுதுகையில் "பிராமண ஸ்திரீ சூத்திரனைப் புணர்ந்து விட்டால் மாத்திரம் பிராயச் சித்தம் செய்ய வேண்டும் என்றும், அதுவும் தினமும் ஒரு கவள அன்னம் வீதம் 15 நாளைக்கு குறைத்துக் கொண்டு வந்து 16 – ம் நாள் முதல் தினம் ஒரு கவளம் அன்னம் வீதம் உயர்த்திக் கொண்டு வந்து விட்டால் போதுமானது" என்று இருக்கிறது. இதுதான் பிராமண ஸ்திரீகளின் விபசாரத் திற்குப் பிராயச்சித்தம். மற்றபடி கர்ப்பம் தரித்து விட்டால் மாத்திரம் மிகவும் தோஷமானதென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே ஸ்மிருதி பிராயச் சித்த காண்டம் ஏழாவது அத்தியாயம் 23 – வது சுலோகத்தில் "பூமியானது எப்படியோ அப்படியே ஸ்திரீகளுமாகையால் அவர்கள் தூஷிக்கத் தக்க வர்கள் அல்லகள்" என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இதன் விரிவுரையில் பூமியை யார் தொட்டாலும் உபயோகப்படுத்தினாலும் எப்படிச் சுத்திச் செய்வதன் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே ஸ்திரீகளும் சண்டாள சங்கமம் செய்த ஸ்திரீகளும் பிராயச் சித்தம் செய்து அங்கீகரித்துக் கொள்ளலாம் என்று எழுதியிருக்கிறது.

அன்றியும் "எருமை, கழுதை, ஒட்டகம் இவைகளையும் புணரும் பிராமணன் ஒரு நாள் உபவாசம் இருப்பதால் சுத்தனாகிறான்" என்று அதே ஸ்மிருதி அதே அத்தியாயம் 14 – வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறது. இது போலவே தனது தாயையும், குமாரத்தியையும், சகோதரி முதலியவர்களையும் புணரும்படியானதிலும் அறிந்தும் அறியாமலும் நிலையாகவும் நடந்து கொள்ளும் விஷயத்திலும் பிராயச் சித்தங்கள் சொல்லியிருக்கிறது. இப் பிராயச் சித்தங்களில் பெரும்பாலும் பிராமணருக்குக் கொடுக்க வேண்டிய தும், பட்டினி முதலியதுகள் இருக்க வேண்டியதுமான சாதாரண பிராயச் சித்தங்களேதான். இன்னும் அதுகளில் உள்ள ஆபாசங்கள் அநேகம். இவற்றை நாம் எடுத்துச் சொன்னதன் கருத்து என்னவென்றால் எப்படிப்பட்ட யோக்கியர்கள் நம்மை சூத்திரர்கள் – அதாவது பார்ப்பனர்களுடைய வைப் பாட்டி மக்கள், பார்ப்பனர்க்குத் தொண்டு செய்ய கடவுளால் பிறப்பிக்கப்பட்ட வர்கள் என்று சொல்லுகிறார்கள் என்பதைக் காட்டவும் நமது ராஜரீகங்க ளுக்கும் அவர்களது நாகரீகங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்டி யார் உயர்ந்தவர்கள், யார் தாழ்ந்தவர்கள் என்பதைக் காட்டவுமேதான் எடுத்துக் காட்டியிருக்கிறோம். தற்காலம் நமது நாட்டில் உள்ள மக்களின் உணர்ச்சியும் அதனால் ஏற்பட்டிருக்கும் உணர்ச்சியையும் நன்றாகப் பார்த்துக்





கொண்டிருக்கிற பார்ப்பனர்கள் "பார்ப்பன மகாநாடு" கூட்டி "நாம் பிராமணர் கள்தான், மற்றவர்கள் நமது வைப்பாட்டி மக்கள்தான், சண்டாளர்கள்தான்" என்பதாக தீர்மானம் செய்திருப்பதாக வெளிப் படுத்துவர்களானால் அவர்களின் தைரியத்தையும் அயோக்கியத் தனத்தையும் என்னவென்று சொல்வது? இன்னமும் அம்மகாநாட்டில் தீர்மானித்து இருக்கும் தீர்மானப் பிரகாரம் ஒவ்வொரு கிராமத்திலும் பார்ப்பனீய சபைகளும் பிரசாரங்களும் நடைபெற வேண்டும் என்றும், பார்ப்பனரல்லாதார் கோரும் சீர்திருத்தங்களை யெல்லாம் கண்டித்தும் தீர்மானங்கள் செய்யப்பட்டிருப்பதுடன் மகாத்மாவின் சமூகத் திருத்தக் கொள்கைகளையும் கண்டித்துப் பேசப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டத்திற்கு அரசாங்க உத்தியோகஸ்தர்களும், நீதி நிர்வாக இலாக்காக்களின் தீர்ப்பு சொல்லக்கூடிய அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருக் கிறார்கள் என்றால் நமது சுயமரியாதையைப் பொறுத்த அல்லது சுயமரியாதை விஷயம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் இவர்களுடைய தீர்ப்புகளில் எப்படியிருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா? என்று கேழ்க்கிறோம். இந்தக் கூட்டத்தார்தானே அரசியலிலும் நமக்கு சுயராஜ்ஜியம் வாங்கிக் கொடுக்கிறவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் வாங்கிக் கொடுக்கும் சுயராஜ்ஜியமும் நமது பெண்கள் மலையாளம் போல் அவர்களுக்கு வைப் பாட்டிகளாய் இருக்கத்தானே அல்லாமல் வேறு என்ன விதமான சுயராஜ்ஜி யம் இவர்களால் வரக்கூடும்? என்பது நமக்கு விளங்கவில்லை. மகாத்மா கேழ்க்கும் சுயராஜ்ஜியமே இந்தப் பார்ப்பனர்களுக்கு தேசத் துரோகமாய், பார்ப்பனத் துரோகமாய், இந்து மத துவேஷமாய் போய் விட்டது. இப்படி யிருக்க நம்மவர்கள் இதைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் இனியும் வயிற்றுப் பிழைப்புச் சண்டையே அதாவது பார்ப்பனர் கோரும் சுயராஜ்ஜியச் சண்டையே பலமாகக் கிளப்பி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பாழும் சுயராஜ்ஜியத்தினால் யாருக்கும் என்ன பலன் கிடைக்கப் போகிறது என்பது இன்னமும் பாமர மக்கள் அறியாததே நமது நாட்டின் துர் அதிஷ்டமாய் இருக்கிறது. அறிந்திருந்தால் இந்தப் பார்ப்பன சம்மேளனக் கொடுமை இன்னும் நமது நாட்டில் உயிர் வைத்துக் கொண்டிருக்க நியாயமே இல்லை. ஆதலால், பார்ப்பனரல்லாத மக்களே! இந்தப் பார்ப்பனக் கொடுமை யில் இருந்தும் அவர்களது வைப்பாட்டி மக்கள் என்கிற இழிகையில் இருந்தும் தப்ப என்ன ஏற்பாடுகள் செய்யப் போகிறீர்கள்? கிராமங்கள் தோறும் சுயமரியாதைச் சங்கங்கள் ஏற்படுத்தி, பார்ப்பனக் கொடுமையை ஒழிப்பது தவிர நமக்கு வேறு கதி இல்லை. சுயராஜ்ஜியப் பேச்சு பேசிக் கொண்டு பார்ப்பனர்கள் காலுக்கு முத்தமிட்டு தேசத்தின் பெயரால் பிழைப்ப வர்கள் பிழைக்கட்டும். சுயமரியாதையில் கவலையுள்ளவர்கள் இந்த வேலை பார்த்தால் போதும்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 19.06.1927**

RangaRakes
tamilnavarasam.com

# அரசியல் பார்ப்பனர்களின் யோக்கியதை

## சத்தியம் என்பது அவர்கள் பெரியோர் தேடிவைத்த சொத்து

சென்ற வாரம் தூத்துக்குடியில் நடந்த பார்ப்பனப்பிரசாரத்தில் ஸ்ரீமான்கள் M.K. ஆச்சாரியார் பல உபன்யாசங்கள் செய்தாராம். அவர்கள் (ஷை ஆச்சாரியார்) பேசும்போது வரதராஜுலு நாயுடு ஒரு போக்கிரி என்றும் தான் ஒருநாளும் பார்ப்பனப்பிள்ளை சாப்பிடுவதை பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்துவிட்டால் பல நாள் பட்டினி கிடப்பேன் என்று சொல்ல வில்லை என்றும் உறுதி கூறினாராம். பார்ப்பனர்களுக்கு பொய் சொல்வ தென்றால் அது அவர்களுடைய வேதபாராயணம் செய்வதுபோலும். "ஏக தலைவர்" ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பொய்யிக்கு அளவே இல்லை என்பதற்கு ஆதாரமாக சென்ற தேர்தலுக்கு ஆள்கள் சேர்க்கும் முறையில் ஸ்ரீமான்கள் நரசிம்மராஜு ராமலிங்கம் செட்டியார் இன்னும் மற்றவர்களும் ஆந்திர தேசத்துப் பத்திரிக்கைகளும் வண்டி வண்டியாய் ருஜு செய்தன.

ஆனால் ஸ்ரீமான் அய்யங்காரோ தோள் மேல் தொண்ணூரு அடி அடித்தாலும் துடைத்துவிட்டால் ஒன்றும் சோதிக்காது என்று சொல்வதுபோல் அத்தனையும் ஜீரணம் செய்துகொண்டு இனியும் "தலைவராகவே" விளங்குகிறார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகளின் பொய்யை நிரூபிக்க யாவரும் பிரயத்தனப்பட வேண்டியதே இல்லை என்று ஆய்விட்டது. ஏனெனில் "ஜஸ்டிஸ் திராவிடன்" பத்திரிகைகள் சாஸ்திரிகளின் கோக்கலே ஹால் பிரசங்கத்தின் பேரிலேயே முதலில் அண்டப்புளுகர் என்கிற பேரைக் கொடுத்தது. ஸ்ரீமான் சாஸ்திரிகள் அது போராது என்று சொல்லி அப்பீல் செய்துகொண்டதின் பேரில் மிகுந்த தாராள நோக்கத்துடன் அப் பத்திரிக் கைகள் ஆகாயப் புளுகர் என்கிற பெயர் கொடுத்திருக்கிறது. அதை சாஸ்திரி வாளும் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு சுகமாகவே இருந்துவருகிறார்.

நமது ஸ்ரீமான் யம். கே. ஆச்சாரியர் அவர்களோ இப்போது ஸ்ரீ சத்தியமூர்த்தி பேரில் பொறாமை கொண்டு பொய்யில் போட்டிபோட வந்து விட்டார். அதாவது தான் திருச்சி தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில்



ஸ்ரீமான்கள் ராஜகோபாலாச்சாரியார், ராஜன், சந்தானம் முதலிய பார்ப்பன "தேச பக்தர்கள்" "தியாக மூர்த்திகள்" முன்னிலையிலும் மற்றும் பல பார்ப் பனரல்லாதார் முன்னிலையிலும் "ஒரு பிராமணக் குழந்தை சாப்பிடுவதை ஒரு சூத்திரக் குழந்தை பார்த்துவிட்டால் ஒரு மாதம் பட்டினி கிடப்பேன்" என்று சொல்லிவிட்டு இப்போது சொல்லவே இல்லை என்கிறார். முக்கியமாக நமது நாட்டு அரசியல் பார்ப்பனர்களுக்கு பொய்சொல்லுவது என்ற குணம் தான் சிறந்த யோக்கிதையாக விளங்குகிறது. இம்மாதிரி பொய்பேசும் ஆசாமி களுக்குத்தான் தேசபக்தர் என்கிற பெயர் பெரிதும் பொருத்தம்போலும். ஸ்ரீமான் யம். கே. ஆச்சாரியார் இவ் விஷயத்தில் உண்மை சொல்லும் வரையிலும் அல்லது அவர் அரசியல்பேரால் பிழைப்பதை விட்டு விட்டு வேறு வழியில் பிழைப்புத் தேடிக்கொள்ளுகிறவரையிலும் பொய்யர் என்கிற அடைமொழியை நமக்கு ஞாபகமிருக்கும்போதெல்லாம் சேர்த்தே அவர் பெயரை வழங்குவோம் என்பதாக தெரிவித்துக்கொள்ளுகிறோம். "தமிழ் நாடு" பத்திரிக்கையும் இதை பின்பற்றுவது நியாயம் என்பதையும் தெரிவித் துக் கொள்ளுகிறோம். ஏனெனில் அப்பத்திரிகை தலைவரைப் பற்றித்தான் தான் சொன்ன வார்த்தையை இல்லை என்று மனமறிந்த பொய் சொல்வதுடன் குரும்பர் என்றும் சொல்லுகிறது. ஒரு சமயம் ஸ்ரீமான் நாயுடுகார் பல காரணங் களால் மன்னித்தாலும் மன்னிக்ககூடும்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 19.06.1927**



RangaRakes tamilnavarasam.com

# சேலம் ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்

## முதன் மந்திரியால் மூன்று முறை நிறுத்தப்பட்டது

சேலம் ஜில்லா போர்டு மெம்பர் திரு. ராஜமாணிக்கம் பண்டாரம் முதல் பேர் சென்னை கவர்னரின் அந்தரங்க காரியதரிசிக்கு அனுப்பிய தந்திச் செய்தி ,

ஜில்லா போர்டு தலைவராயிருந்த திரு போல்க்ஸ் தலைவர் பதவியை ராஜிநாமா செய்யப் போவதாக அறிவித்தவுடனே லோக்கல் போர்டு ஆக்டு 17-வது பிரிவின்படி மார்ச் 31 உ வேறு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க ஒரு கூட்டம் கூட்டும்படி தீமானிக்கப்பட்டது. திருபோல்ஸின் ராஜிநாமாவை ஒப்புக்கொண்ட பிறகு அந்தக் கூட்டத்தில் தானே மறு தலைவர் தேர்தலையும் நடத்தவேண்டுமென்று மந்திரி உத்தரவு கொடுத்தார். அந்த உத்தரவுபடி திரு போல்சின் ராஜிநாமாவை ஒப்புக்கொண்ட கூட்டத்திலேயே ராவ்பகதூர் எல்லப்பசெட்டியார் ஏகமனதாக எல்லோராலும் தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

ஆனால் தேர்தல் முடிவை 6-வாரம் வரை கெஜட்டில் பிரசுரம் செய்யாமல் மந்திரி நிறுத்தி வைத்தார். மே15 தேதி திரு எல்லப்ப செட்டியார் தேர்தலை ரத்து செய்து உடனே வேறு தேர்தல் நடத்தவேண்டுமென மந்திரி உத்தரவிட்டார். இரண்டாம் முறையும் அவர் உத்தரவுப்படி நடத்தப்பட்டது. மே 23 தேர்தல் நடத்துவதாக ஒரு வாரத்துக்கு முன்னதாகவே நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. மே 22 தேதி மந்திரி மீண்டும் தேர்தல் நோட்டீஸை ரத்து செய்து நோட்டீஸின் போக்குவரத்துக்கு 2 நாளும் சட்டப்படி கூட்டத்துக்கு முன் 7 நாளும் ஆக 9 நாள்களுக்கு முன்னாலேயே தேர்தல் நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். மூன்றாம் முறையும் அவரது உத்தரவு அனுசரிக்கப்பட்டது. ஜூன் 4 தேதி தேர்தல் நடத்துவதாக குறிப்பிட்டு 11 நாளைக்கு முன்னாலேயே நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. ஜூன் 3 தேதி தேர்தலையும் மந்திரி ரத்துசெய்து, போர்டு மெம்பர்களில் ஐந்துபேர் போர்டு கண்றாக்டில் சம்மந்தப்பட்டிருப்பதாக எதிர் கக்ஷியார் அனுப்பி யிருக்கும் மனுவை விசாரித்து முடிவு செய்த பிறகு தேர்தல் நடத்தினால் போதுமென்று ஒரு உத்தரவு அனுப்பினார். வைஸ் பிரஸிடெண்டு அந்த உத்திரவை போர்டு மீட்டிங்கில் ஆஜராக்கினார். ஏதோ தப்பெண்ணத்தின் பேரில் அந்த உத்திரவு அனுப்பப்பட்டிருக்க வேண்டுமென்றும், அதைப் புனராலோசனை செய்ய ஸர்க்காரிடம் விண்ணப் பம் செய்து கொண்டு தேர்தலை அன்று நடத்த வேண்டுமென்று போர்டு கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டபடி தேர்தல் நடந்தது. ராவ்பகதூர் எல்லப்ப செட்டியார். எம்.எல்.ஸி. மீண்டும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்விஷயங்களை விளக்கி ஜூன் 5 தேதி கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. மீண்டும் மந்திரி இவ் விஷயத்தில் குறுக்கிடக் கூடுமென்று வதந்தி உலாவுகிறது. நான்கு தாலூகா போர்டு மெம்பர்களும் 6 டிஸ்ட்டிரிக்டு போர்டு மெம்பர்களும் உள்பட பத்துபேர் கவர்னர்களைப் பேட்டிகாண உத்திரவு வாங்கித் தானாக வேண்டு மென்று பிரார்த்திக்கிறோம் .

குடி அரசு - கட்டுரை - 19.06.1927





RangaRakes
tamilnavarasam.com

# ஸ்ரீமான் ஜோசப்பின் குட்டிக்கரணம்

சென்னை அரசாங்கத்தில் கிருஸ்தவர் என்கிற சலுகையின் பேரில் ஸ்ரீமான் ஆரோக்கியசாமி முதலியாருக்கு மந்திரிப் பதவி கிடைத்ததிலிருந்து ஸ்ரீமான் நமது ஜோசப்புக்கு நாக்கில் தண்ணீர் சொட்ட ஆரம்பித்து விட்டது. அதோடு மாத்திரமல்லாமல் அந்த மந்திரிப் பதவி பார்ப்பனர்கள் மூலமாகத் தான் விற்கப்படுகிறதென்கிற தீர்மானமும் ஏற்பட்டு விட்டது. அதோடு கூட அம்மந்திரிப் பதவிக்கு பார்ப்பனர்களுக்குக் கொடுக்க வேண்டிய விலை "ஜஸ்டிஸ்" கட்சியைத் திட்டி பார்ப்பனரல்லாதாரைக் காட்டிக் கொடுக்க வேண்டியதுதான் என்கிற முடிவும் அவருக்கு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

சமீபத்தில் மதுரையில் பேசினதும் ஸ்ரீ சத்தியமூர்த்தியைப் புகழ்ந்ததும் மற்றும் அவர் தெரிவித்த அபிப்பிராயமும், ஸ்ரீமான் ஜோசப்பின் புதிய பிறப்பைக் காட்டுகிறது. ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை ஒரு மனிதர் புகழ் வாரானால் அம்மனிதருடைய யோக்கியதை இன்னதென்று நாம் சொல்லிக் காட்ட வேண்டியதில்லை. உதாரணமாக "மலம் நல்ல வாசனையாயிருக்கிறது என்று ஒருவர் சொல்லுவாரானால் அவர் மூக்கின் யோக்கியதையைப் பற்றி சொல்லவும் வேண்டுமா?" என்ற பழமொழி ஒன்றுண்டு. அதுபோலவே ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் யோக்கியப் பொறுப்பும் நாணயமும் நன்றாக அறிந்த ஸ்ரீமான் ஜோசப்பு அவர்கள் அவரைப் புகழ்வதும் சுயராஜ்யக் கட்சியின் யோக்கியதையையும், தென்னாட்டுப் பார்ப்பனர்களின் யோக்கிய தையையும் நன்றாக அறிந்த ஸ்ரீமான் ஜோசப்பு இவைகளுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசுவதுமானால் பீசு இல்லாமல் பேசுகிறார் என்று யாராவது நினைக்க முடியுமா? இதன் பயனாகக் கிறிஸ்தவர் என்கிற முறையில் ஸ்ரீமான் ஜோசப்புக்கு ஒரு சமயம் மந்திரி உத்தியோகம் அல்லது அதற்கு சமானமான பதவி கிடைப்பதாயிருந்தாலும் ஸ்ரீமான் ஜோசப்பின் வாழ்க்கையின் பெருமை அடியோடு ஒழிந்து போகுமென்றே பயப் படுகின்றோம்.

இந்து மதம் என்கிற புரட்டை வைத்துக் கொண்டு பார்ப்பனர்கள், தாங்கள் பெரிய ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டும் அம்மதத்தினர் என்பவர்களுக்குள்ளாகவே தாங்களொழிந்த மற்றவர்களைத் தாழ்ந்த ஜாதியா ராக்கி நிரந்தரமாய்ப் பிழைக்க ஏற்படுத்திக் கொண்டிருக்கும் "அரசியல்"



RangaRakes

இயக்கம் என்பவைகளிலுள்ள சூழ்ச்சியை வெளிப்படுத்தப் பார்ப்பனரல்லா தார் பார்ப்பனருடன் சண்டை இடும் போது ஸ்ரீமான் ஜோசப் போன்றவர்கள் இரு (ஆட்டுக்குட்டி)வர் சண்டையிலிருந்து ஒழுகும் இரத்தத்தைக் குடிக்கும் (குள்ள நரியாக) வீரராகத் தோன்றியது மிகவும் பழி சொல்லத்தக்க காரியம். தேசாபிமானம் என்பதற்கு ஸ்ரீமான் ஜோசப் என்ன பொருள் கொண்டிருக் கிறார் என்பது விளங்கவில்லை. தென்னாட்டுப் பார்ப்பனர்களின் அயோக் கியத் தனத்தைத்தான் ஸ்ரீமான் ஜோசப் அவர்கள் தேசாபிமானம் என்று கொள்வாரானால் அவரையும் பார்ப்பனக் கூட்டத்தில் சேர்த்துத்தான் கணக் குப் பார்க்கவேண்டும். ஏனெனில் ஸ்ரீமான் ஜோசப்புக்கும் பார்ப்பனருடன் சேருவதற்கு உரிமை உண்டு. என்னவென்றால் "இந்துக்" களில் பார்ப்பன ரல்லாதார் அதிகமானவர்கள். பார்ப்பனர்கள் மிகுந்த குறைந்த எண்ணிக்கை உள்ளவர்கள். குறைந்த எண்ணிக்கையுள்ளவர்கள் அதிக எண்ணிக்கையுள்ள வர்களை எய்தி ஆதிக்கம் பெற வேண்டுமானால் ஏதாவது ஒரு சூழ்ச்சியின் மூலம் தான் முடியும் என்பது பார்ப்பனர்களின் முடிவு. அது போலவே ஸ்ரீ மான் ஜோசப் அவர்களும் தங்கள் குறைந்த எண்ணிக்கையை உத்தேசிக் கும்போது தாங்களாகத் தனித்த ஒரு தந்திரமோ அல்லது பார்ப்பனர்களின் தந்திரத்தில் கூட்டு வியாபாரமோ செய்ய வேண்டியதுதான் கிரமமானது என்கிற முடிவுக்கு வரவேண்டியவர்தான். ஆனால் யோக்கிய மான முறை யில் கிடைக்காத எந்த ஆதிக்கமும் நிலைக்காது என்பதும் நிலைத்தாலும் வாசனையுள்ளதாயிருக்காது என்பதும் எமது துணிவு.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 19.06.1927**



tamilnavarasam.com

# மலையைக் கெல்லி எலியைப் பிடித்தார்கள்

சேலம் ஜில்லா போர்டு தலைமைப் பதவிக்கு திருவாளர் எல்லப்ப செட்டியார் அவர்கள் வரக்கூடாதென்பதாக சேலத்திலுள்ள சில பார்ப்பனர்களும், அவர்களது தயவில் முன்னுக்கு வரலாமென்று கருதி அவர்களது வாலைப் பிடித்துக் கொண்டு திரியும் சில பார்ப்பனரல்லாதார்களும் ஒன்று கூடி சுயமரியாதைக்கு பங்கமுண்டுபண்ணும் கூட்டத்திற்கு அனுதாபம் காட்டி வருகிற மந்திரியைப் பிடித்துக் கசக்கி என்னென்னமோ சூழ்ச்சிகளெல்லாம் செய்து பார்த்தும் வேண்டும் என்றே மனச்சாட்சிக்கு விரோதமான எத்தனையோ அக்கிரமமான உத்திரவுகளைப் போடச் செய்தும் கடைசியாக கனம் மந்திரி சுப்பராயனுடைய அக்கிரமங்களையும் ஜெயித்து திருவாளர் எல்லப்ப செட்டியாருடைய (தலைவர்) தேர்தல் சர்க்காரால் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது. பார்ப்பனர்களால் செய்யப்பட்ட இவ்வளவு சூழ்ச்சிகளாலும் கனம் சுப்பராயனின் மந்திரி தன்மை, மானங்கெட்டு நாடு சிரிக்க ஏற்பட்டதுதானே தவிர பார்ப்பனர்களுக்காவது திரு எல்லப்ப செட்டியாருக்காவது ஒரு வித நஷ்டமும் ஏற்பட்டுவிடவில்லை.

நமது நாட்டு சரித்திரத்தில் ஆயிரக்கணக்கான வருடங்கள் தொட்டு நாளது வரையில் யாராவது ஒரு பார்ப்பனரல்லாதார் எந்தப் பார்ப்பனருடைய பேச்சையாவது கேட்டு யோக்கியமடைந்ததாகவாவது முன்னுக்கு வந்ததாகவாவது, எந்த ஆதாரத்தைக் கொண்டாவது ருஜூப்பிக்க முடியுமா? பார்ப்பனரல்லாதாரை ஒழிப்பதற்காக பார்ப்பனர்களுக்குக் கை ஆயுதமாக இருந்த பார்ப்பனரல்லாதார்களில் யாராவது ஒருவர் பார்ப்பனர்களால் சபிக்கப் படாமலும், தூஷிக்கப்படாமலும் தப்பித்துக் கொண்டவர்கள் ஒருவராவது இருக்கிறார்களா? இன்றைய தினம் பார்ப்பனர்களாலும் அவர்கள் பத்திரிகைகளாலும் வசை கேட்டுக் கொண்டு இருக்கும் தேசீய வீரர்கள், தேசபக்தர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களெல்லாம் ஒரு காலத்தில் பார்ப்பனர்களின் கை ஆயுதங்களாக இருந்து கொண்டு "தேசபக்தர்கள்", "தேசாபிமானிகள்," "தலைவர்கள்," பிரமரிஷி", "ராஜரிஷி" என்கிற பெருமையை அடைந்து கொண்டு இருந்தவர்கள்தான். ஆயினும் பார்ப்பனர்கள் தங்கள் வேலை முடிந்த உடனே திடீரென்று கீழே தூக்கிப் போட்டு மிதித்து விடுகிறார்கள். உதாரணமாக இப்பொழுது நமது நாட்டிலுள்ள பார்ப்பனர்களெல்லாம் ஒரே அடியாய் ஸ்ரீமான்கள் ஷண்முகம் செட்டியார், வரதராஜுலு நாயுடு, எஸ். முத்தையா முதலியார் ஆகியவர்களை வைத வண்ணமாக இருக்கிறார்கள். இவர்களை இதே பார்ப்பனர்கள் எவ்வளவு தூரம் தூக்கி வைத்து கவி பாடிக் கொண்டு பின்னால் திரிந்தார்கள் என்பது ஜனங்கட்குத் தெரியும். பார்ப்பனர்கள் தனியாக எங்கேயாவது போனால் பொது ஜனங்களால் கல்லடி, சாணி உருண்டை முதலிய மரியாதைகள் கிடைக்கும் என்று தோன்றுகிற இடங்களுக்கெல்லாம் ஷை கனவான்களைக் கூட்டிக் கொண்டு போவதும், அவர்களை வண்டியில் வைத்து இழுப்பதும், ஜே! போடுவதும், அவர்கள் படங்களைப் பள்ளி அறையில் வைத்து பூஜித்துவிட்டும் கொஞ்சம் ஏதாவது இவர்களது அக்கிரமங்களை எடுத்துச் சொல்ல ஆரம்பித்து விட்டால் உடனே அவர்கள் மேல் கத்தி தீட்டுவதுமான செய்கைகளை நாம் பார்த்துக்கொண்டே வருகிறோம். அல்லாமலும் சுயமரியாதையுள்ள எந்தப் பார்ப்பனரல்லாதாரையாவது தங்களுடன் சேர்த்துக் கொண்டோ அல்லது வையாமலாவது இருக்கிறார்களா என்பதைப் பார்த்தால் இது அனுபவத்தில் தெரியவரும். இவற்றை எதற்காகச் சொல்லுகிறோமென்றால் இதே ஸ்ரீமான் சுப்பராயன் அவர்களுக்கும் சேலத்தில் உள்ள அவரது கோஷ்டிக்கும் கொஞ்சம் சுயமரியாதை உதயமான உடனே இவர்கள் பேரிலும் இதே பார்ப்பனர்கள் கத்தி தீட்டுவார்களென்பதை அறிவுறுத்துவதற்காகவேயன்றி வேறல்ல.

திரு. எல்லப்ப செட்டியாரின் வெற்றியானது பார்ப்பன சூழ்ச்சியின் தன்மையை வெளிப்படுத்தவும், பார்ப்பன சூழ்ச்சியினின்று தப்புவதானால் எவ்வளவு பிரயாசை இருக்கிறதென்பதை வெளிக்காட்டவும் ஒரு அறிகுறியாகக் கொள்ளலாமேயல்லாமல் மற்றபடி பிரமாதமாய் பாராட்டத் தகுந்த விஷயம் அதில் ஒன்றுமில்லை என்பதே எமது அபிப்ராயம்.

**குடி அரசு - கட்டுரை - 19.06.1927**



RangaRakes tamilnavarasam.com

# மந்திரிகளின் நியமனம்

ஜஸ்டிஸ் கக்ஷி மந்திரி பதவியில் இருந்த காலத்தில் யாருக்காவது ஸ்தல ஸ்தாபனங்களில் நியமனம் செய்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் நமது பார்ப்பனர்கள் ஒவ்வொரு பொய்க் கதையைக் கட்டி பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைத் தூஷித்துக் கொண்டு பாமர மக்களுக்கு அவ்வியக்கத்தினிடம் அருவருப்புண்டாகும்படி எவ்வளவோ சூழ்ச்சிகளெல்லாம் செய்து கொண்டு வந்தது பொது ஜனங்களுக்குத் தெரிந்ததுதான். ஆனால் அம்மாதிரி நியமனங்கள் பார்ப்பனர்களுக்காவது அக்கோஷ்டியைச் சேர்ந்த பார்ப்பன ரல்லாதாருக்காவது கிடைத்துவிட்டால் அதைப்பற்றி வெளியிலே பேசாமல் ரகசியமாக அனுபவித்துக் கொண்டு வந்ததும் யாவரும் அறிந்தது. உதாரணமாக ஸ்ரீமான் ஸி.வி. வெங்கட்டரமண ஐயங்காருக்கு கோயம் புத்தூர் ஜில்லா போர்டுக்கு நியமனம் செய்த காலத்தில் இந்தப் பார்ப்பனர்கள் ஒரு வார்த்தையாவது பேசவே இல்லை. அதே சமயத்தில் சென்னை முனிசிபாலி டிக்கு ஸ்ரீமான் தணிகாசலம் செட்டியாரை அதே மந்திரிகள் நியமனம் செய்த காலத்தில் கொல்லை வழிப் பிரவேசமென்று எழுதியிருந்தார்கள். அதற்குச் சமாதானமாகத் தேர்தலில் தோற்றவர்களை நியமனம் செய்வதுதான் கொல்லை வழிப் பிரவேசமே யொழிய தேர்தலுக்கு நின்று வெற்றிபெறத்தக்க யோக்கியதை இல்லாதவர்களை நியமிப்பது கொல்லை வழிப் பிரவேசமல்ல வென்று சொல்லி விட்டார்கள். ஆனால் கீழே குறிப்பிடப் போகும் சம்ப வத்தை நமது பார்ப்பனர்கள் என்னவென்று சொல்லுவார்களோ? தெரிய வில்லை. கோயமுத்தூர் ஜில்லா கல்விச் சபைக்கு சமீபத்தில் நியமனம் செய்யப் பெற்றிருக்கும் மாதிரியும் அப்பொழுது சத்தம் போட்ட பார்ப்பனப் பத்திரிகைகளுக்கு இப்பொழுது கண்ணே இல்லையா? புத்திதான் இல் லையா? என்பதும் வாசகர்களால்தான் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதாவது ஷை சபைக்கு சமீபத்தில் சர்க்காரால் நியமனம் செய்யப் பட்ட ஸ்ரீமான் டி. எம். ராமச்சந்திரன் செட்டியார் என்பவர் ஜில்லா ஸ்தல ஸ்தாபன மூலியமாய் செனட்டிற்கு நின்று வெகு வித்தியாசமான ஓட்டுகளால் தோல்வியுற்றவர். அதாவது இவர் பட்டதாரி என்கிற பெருமையுடையவராக இருந்து கோயமுத்தூர் டவுன் முனிசிபல் கவுன்ஸிலிலேயே 30 ஓட்டுக்களுக்கு மேல் இருந்தும் இவருக்குப் போட்டியாக நின்றவர் பட்டதாரி அல்லாதவராக இருந்தும் வெளியூர்க்காரராக இருந்தும் அவருக்கு சுமார் 60 ஓட்டுக்கள் கிடைத்தது மல்லாமல் திரு செட்டியார் 10 ஓட்டுக்கள்தான் பெற்று தோல்வியடைந்தார். எஜுகேஷன் கவுன்சிலுக்கும் கோயமுத்தூர் முனிசிபா லிடி மூலியமாக நின்று வேறொரு பட்டதாரி அல்லாதவர் இவருக்குப் போட்டி யாக நிற்க இவர் வெற்றிபெறமுடியாமல் பின் வாங்கிக் கொள்ள வேண்டிய தாகப் போய்விட்டது. தவிர திரு செட்டியார் அவர்களுடைய வகுப்பில் யாருக்கும் அந்த ஸ்தானமில்லை. ஆதலால் அவ்வகுப்பாருக்காக செட்டியா ருக்குக் கொடுக்கப்பட்டதென்று சொல்லுவதாக இருந்தாலோ அதுவும் இல்லை. ஏனெனில் அதே வகுப்பில் ஸ்ரீமான் செட்டியார் குடும்பத்திலேயே ஸ்ரீமான் செட்டியாரின் தமயனாருடைய குமாரரின் மனைவியாரும் தமது சின்ன மாமனாரின் குமாரத்தியும் ஆகிய ஸ்ரீமதி லலிதாம்பாள் அவர்கள் ஏற்கெனவே அப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார். அப்படி யிருக்க தோல்வியுற்றவரும், அதே வகுப்பில் மற்ற ஒரு நியமனம் பெற்ற வகுப்பினரும் ஆகிய கனவானை எதற்காக மந்திரி நியமித்தார். அந்த சபைக்கு லாயக்குள்ள வேறு கனவான்களாவது அல்லது அச்சபையில் பிரதிநிதித்துவமடையாத வேறு வகுப்பாராவது இல்லை என்கிற காரணத் தினாலா? அல்லது மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கட்கு நியமனம் பெற்ற ஸ்ரீமான் செட்டியார் விருந்து முதலானது செய்து மரியாதை செய்தார் என்பதற்காகவா? இதைப்பற்றி எந்தப் பார்ப்பன பத்திரிகையாவது இதை அவர்களது நிருபர்களாவது பிரஸ்தாபித்தார்களா? எந்த சட்டசபை வாயாடி களாவது வெளிப்படுத்தினார்களா என்று கேழ்க்கின்றோம்?

இது எப்படியோ இருக்கட்டும். இந்த நியமனத்தினால் பெரிய தீமை யோ நன்மையோ ஏற்பட்டதாக நாம் சிறிதும் கவலைப்படவில்லை. அல்லது ஸ்ரீமான் செட்டியார் அந்த ஸ்தானத்திற்கு லாயக்கில்லாதவர் என்றும் சொல்வ தற்கு வரவில்லை. நமது நாட்டுப் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் கட்சி மந்திரிகளின் பேரில் சொல்லிக் கொண்டு வந்த குற்றங்களும் அவர்களுக்கு விரோதமாகச் செய்து கொண்டுவந்த பிரசுரங்களும் யோக்கியமானதா? அயோக்கியமானதா? என்பதையும் இவைகள் தேசத்திற்காகச் செய்யப் பட்டனவா? அல்லது பார்ப்பனர் ஆதிக்கத்திற்காகச் செய்யப்பட்டனவா? என்பதைப் பொது ஜனங்கள் அறிவதற்காகவே இதைக் குறிப்பிடுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 19.06.1927**



RangaRakes
tamilnavarasam.com

# திராவிடர் கழகம் கோவிற்பட்டி

## 18 - வது ஆண்டு நிறைவு விழா

### தலைமை முன்னுரை

அன்பர்களே!

நமது நண்பரும் அரசியல் தலைவருமான திருவாளர் வி.ஓ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் என்னைப்பற்றி சொல்லியவைகள் யாவும் என்னிடம் உள்ள அன்பினால் அல்லாது அவ்வளவு உண்மை யென்று தாங்கள் நம்பிவிடக்கூடாதென்று தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். என்னை அவர் தலைவர் என்று சொன்னதற்கு ஆக நான் மிகுதியும் வெட்கப்படு கிறேன். அவர் வங்காளப் பிரிவினையின் போது தமிழ்நாட்டில் சிறப்பாக இந்த ஜில்லாவில் அரும்பெரும் தலைவராயிருந்து நடத்திய பெரும் கிளர்ச்சி யின் போது நான் உல்லாசத்துடன் விடலைப் புருஷனாய் விளையாடிக் கொண்டிருந்தேன். அவரையும் அவர் போன்றாரையும் கண்டே பொதுத் தொண்டில் இறங்கினேன். அன்றியும் நான் சிவஞான யோகிகள் வாசித்துக் கொடுத்த உபசாரப் பத்திர வாக்கியங்களுக்கும் நான் ஒரு சிறிதும் பொருத்த முடையவன் அல்லன். ஆகிலும் அப்பத்திரத்தில் எனது கொள்கைகளை புகழ்ந் திருக்கும் விஷயங்களைப் பொருத்தவரை அக்கொள்கைக்கு அதை ஒரு நற்சாக்ஷிப் பத்திரமாக எடுத்துக் கொண்டு அதற்காக எனது நன்றியை செலுத்துகின்றேன்.

இத்திராவிட சங்கம் 18-வது ஆண்டுவிழா என்று சொல்லப் படுவதால் இதற்கு 18 ஆண்டு முடிந்திருக்கிறது. நமது நாட்டில் திராவிடர் முன்னேற்ற சம்பந்தமாய் ஏதாவது இயக்கங்களின் மூலம் பேசுவதாயிருந்தால் நமது எதிரிகள் உத்தியோகத்திற்கு ஆசைப்பட்ட யாரோ சில பார்ப்பனரல்லாதாரால் சமீபத்தில் திராவிடர்கள் பெயரை சொல்லிக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு சுயநல இயக்கமென்று சொல்லி வருவது உங்களுக்குத் தெரியும். ஆனால் இக்கழகம் அப்பேர்ப்பட்டவர்களால் ஆக்கப்பட்டதா என்பதும் சுவாமி சிவஞான யோகிகள் ஏதாவது உத்தியோகம் ஆக்கப்பட்டு கிடைக்காமல் போனதற்காக ஆரம்பித்தாரா என்பதையும் அவருக்கு ஏதாவது உத்தியோகம் வேண்டியிருக்கிறதா என்பதையும் திருவள்ளுவருக்கு உத்தியோகம் வேண்டியிருந்ததா, புத்தருக்கு உத்தியோகம் வேண்டியிருந் ததா, கபிலருக்கு உத்தியோகம் வேண்டியிருந்ததா, அவ்வைக்கு உத்தியோகம் வேண்டியிருந்ததா என்பதையும் யோசித்துப் பாருங்கள். அன்றியும் சுவாமி சிவஞ்ஞான யோகிகள் காலத்தில் மாத்திரம், இம்மாதிரி முயற்சிகள் தோன்றிற்று என்பதாக நினைக்கிறீர்களா? என்று இந்த நாட்டில் ஆரியர்கள் கால் வைத்தார்களோ அன்று முதலே ஆரியர், திராவிடர் என்கிற வேற்றுமையும் ஆரியர் சங்கம், திராவிடர் சங்கம் என்கிற இயக்கங்களும் சுயமரியாதைக் கிளர்ச்சி களும் நாட்டில் ஏற்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. இதுகளை எவ்வளவோ பாடுபட்டு நமது எதிரிகள் மறைக்க முயன்றாலும் இயற்கைத் தத்துவம் மறைக்க முடியாமல் செய்து வருகிறது. எதுவரையில் ஆரியர் வேதம் என்பது நமது நாட்டில் இருக்குமோ எதுவரை ஆரியர் ஆதிக்கம், ஆரிய தர்ம பிரசாரச் சபை, வருணாஸ்ரம தர்ம பிரசார சபை நமது நாட்டில் இருக்குமோ அதுவரை நமது இயக்கம் அதாவது திராவிடர் முன்னேற்ற இயக்கம், சுயமரியாதை இயக்கம், சமரச இயக்கம் இருந்து தீர வேண்டியது தான். சமீப காலத்தில் ஆரியர்கள் தஞ்சை ஜில்லா தூவார் என்கிற கிராமத்தில் கூட்டப்பட்ட "பிராமண சம்மேளனம்" என்னும் கூட்டத்தையும் அதன் நடவடிக்கைகளையும் பார்த்தவர்களுக்கு இம்மாதிரி இருக்கப்பட்ட சங்கங் கள் அவசியமா இல்லையா என்பது யாவருக்கும் தெரிந்திருக்கும். மேலும் நமது நாட்டில் மத மடங்கிய வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, ஆகமம், புராணம் முதலியவைகளின் பேரால் ஆரியப் பிரசாரம் செய்து வரும் வரையில் நாம் இம்மாதிரி முயற்சிகளில் ஈடுபட்டு இருந்து தீர வேண்டியது தான். எனவே இம்முயற்சிகள் வெற்றி பெற வேண்டுமென்று பிரார்த்திப்பதுடன் எனது முகவுரையை நிறுத்திவிட்டு மற்றும் நான் ஏதாவது சொல்லிக் கொள்ள வேண்டிய விஷயங்கள் ஏற்பட்டால் அவற்றை எனது முடிவுரையில் சொல்லிக் கொள்கிறேன்.

### நிறைவுரை :

சகோதரர்களே!

தேசத்தின் பேரால் முன் தொண்டு செய்ய வந்த நான் இப்போது சமயத்தின் பேராலும், சடங்குகள் பேராலும் தொண்டு செய்ய வந்ததைப் பார்க்க உங்களில் சிலருக்கு ஆச்சரியம் வரலாம். ஆனால் உண்மையில் இது ஆச்சர்யப்படத்தக்கதல்ல. முன்னமேயுள்ள என் கொள்கைகளும் இப்போ துள்ள என் கொள்கைகளும் ஒன்றே தான். இரண்டும் நம் மக்களை அடிமைத்தனங்களிலிருந்து விடுவிக்க வேண்டிய விடுதலை தான். நம் மக்களுடைய சுதந்திரத்திற்கும் சுயமரியாதைக்கும் இடையூறாயிருப்பது சர்க் கார் மாத்திரமல்லாமல் நம் சமயமும் சடங்குகளுமாம். தேசத்திற்கு ஒத்தில் லாத ராஜியத்தில் கஷ்டப்பட்டு இவ்வளவு காலம் அடிமையாயிருந்த நாடு



RangaRakes tamilnavarasam.com

நம் நாட்டைப் போல் வேறெந்த நாடும் இல்லை. காரணம் குருட்டு நம்பிக்கை, மூட பக்தி, சுயமரியாதையற்ற நிலைமை இவைகளால் நிறைந்து நம் சமயம் போல் அடிமைப்படுத்தி இருக்கும் சமயமும் வேறு எதுவுமில்லை. முன் ஒரு காலத்தில் கிறிஸ்து மதமும் இந்த அடிமைத்தனத்தில் அகப்பட்டிருந்தது. குருக்கள் பாவமன்னிப்பு சீட்டுக்கள் விற்று ஜனசமூகத்தை அடிமைகளாக்கி வந்தனர். ஆனால் சீக்கிரம் சீர்திருத்தக்காரர்கள் ஏற்பட்டு தங்களுக்குச் செய்த கொடுமைகட்கும் பயப்படாமல் இம்மூடக்கொள்கைகளை உடைத்தனர். ஜனசமூகம் விடுதலை அடைந்தது, நாடு மேம்பட்டது. அது பற்றி இப் போதுள்ள கிறிஸ்துவ நாடுகளின் பெருமை இந்த சீர்திருத்தக்காரர்களுக்கே சேரும்.

இனி நம்முடைய சமயத்தில் எடுத்துக் கொள்வோம். மற்ற சமயங் களின் ஆதாரமான குரான், பைபிள் முதலிய புஸ்தகங்களை எல்லோரும் படிக்கலாம். நம்முடைய சமய ஆதாரமான வேதங்களையோ ஒரு வகுப்பார் தவிர மற்றவர் படிக்கக்கூடாது, கேட்கக் கூடாது. படித்தால் நாக்கை அறுக்க வேண்டும். கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும். ஏன் அய்யா இப்படிச் செய்யலாமா என்று கேட்டால் அது மதத் துவேஷம், ஜாதித் துவேஷம் ஆகி விடுகிறது.

கடவுள் வழிபாடோ, தரகர் இல்லாமல் செய்ய முடியாது. நம் சாமிக்குப் பக்கத்தில் நாம் போனால் சாமி செத்துப்போவார். சில வகுப்பார் 10 முழத்தில் சில வகுப்பார் 100 முழத்தில் நிற்க வேண்டும். சில வகுப்பார் கண்களுக்கே தென்படக்கூடாது சில வகுப்பார் மதிலைக் கூட பார்க்கக் கூடாது. இல்லா விட்டால் அவருக்குத் துன்பம். நம் பாஷை சாமிக்குத் தெரியாது. தரகர் இல்லாமல் காரியம் நடக்காது. தரகர் பாஷைதான் அவருக்குத் தெரியும். சர்க்கார் செய்கைகளுக்கோ நல்லதாயினும் கெட்டதாயினும் ஒரு சட்டம் உண்டு. சர்க்கார் வரிகள் எல்லாவற்றிற்கும் ஒரு சட்டம் உண்டு. ஆனால் நம் மதத்தின் பேரால் ஏற்படுத்தி வசூல் செய்யும் வரிக்குச் சட்டம் இல்லை.

சர்க்கார் வசூலிக்கும் வரிக்குக் கணக்கு உண்டு. மதத்தின் பேரால் வசூலிக்கும் வரிக்கு கணக்கு இல்லை. ஒவ்வொரு கோவில்களிலும் செலுத்தப்படும் வரி லட்சக்கணக்காய் முடிகிறது. பலன் ஒன்றுமில்லை. மகம்மதியர் கிறிஸ்தவர் கோவிலில் மதப் பிரசாரம் உண்டு. நம் கோவில் களில் வரி கொடுப்பவருக்கு மதப் பிரசாரமேனும் கிடையாது.

இனி மடாதிபதிகளோ கேட்க வேண்டியதில்லை. அவர்களுக்கு முன் விடப்பட்ட சொத்துக்கள் மதப் பிரசாரத்திற்காக. இப்போது அவற்றின் வரும் படி போவதோ கூடா ஒழுக்கங்கட்கும் ஒரு வகுப்பைச் சேர்ந்த வாயாடி வக்கீல்கட்கும். அவர்கள்தான் போகட்டும். சமய ஆச்சாரியார்களோ, லோக குருக்களோ அவர்கள் ஊர் ஊராய்த் திரிந்து 'அந்தப் பதி' 'இந்தப் பதி' என்று



பட்டங்கள் விற்று நூறு, ஆயிரக்கணக்காய் பணம் தட்டி ஒரு வகுப்பாருக்கே சமாராதனை செய்ய வேண்டியது. அவர்கள் தான் போகட்டும். குலகுருக் களோ அவர்களுடைய ஜோலி தட்சனை வசூல் ஒன்றுதான்.

நம்முடைய சமயம் இவ்வளவு சீர் கேட்டில் இருக்க இவைகள் ஒன்றையும் பற்றிக் கேட்கவில்லை. வரவிற்கு கணக்கு மாத்திரம் கொடு என்று கேட்க ஒரு இந்துமத தேவஸ்தான சட்டத்தை ஏற்படுத்தினால் அது பொல்லாப்பு. "ஜஸ்டிஸ் கட்சியார் நம் மதத்தையே கெடுத்து விட்டார்கள்" என்று ஊரெல்லாம் தூற்றுகிறது. ஜன சமூகத்தில் அவர்கள் மேல் வெறுப்பை உண்டாக்குகிறது. ஒரு ஆற்று வெள்ளத்தில் பட்டு போன நரி ஐயோ உலகமே போய்விட்டது உலகமே போய்விட்டது என்றதாம். ஒருவன் இது என்ன ஆச்சர்யம் என்று எண்ணி அதை எடுத்துக் கரையில் விட்டு என்ன உலகமே போய்விட்டது என்கிறாய்? என நரி "ஆம் நீ என்னை வெள்ளத்திலிருந்து விடுவிக்காவிட்டால் எனக்கு உலகமே போய்விட்டதல்லவா?" என்று சொல்லி ஓடிப் போயிற்றாம். அது போல் ஒரு வகுப்பாருக்கு வரும்படி குறைந்து விடுமானால் ஆம் அவருக்கு மதம் கெட்டுப் போய்விட்டதுதான்.

சமயம் இம்மட்டில் இனி சடங்குகளை எடுத்துக் கொள்வோம். அவைகளினுடைய பலன் ஒரு கூட்டத்தார் வயிர் வளர்க்க மற்றவர்கள் எல்லாம் உயிர் போகும்படி உழைக்க வேண்டியதுதான்.

நாம் பிறந்தது முதல் ஒவ்வொரு சுபகாரியத்திற்கும், ஒவ்வொரு அசுப காரியத்திற்கும் ஒரு கூட்டத்தாரைக் கூப்பிட்டு, அவர்களுக்கு வரி கொடுத்து அவரை வணங்க வேண்டும். அவர்களுக்கு அப்படி செய்யாவிட்டால் நமக்கு கடவுள் நன்மை கிடையாது. அவர்கள் மாத்திரம் இல்லாமல் ஒன்றும் நடக்காது. கல்யாண வீட்டில் அவர் சாவு மந்திரத்தைச் சொன்னாலும் அது நமக்கு அக்கரையல்ல. அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதை நாம் அவர்களுக்குக் கொடுத்தே தீரவேண்டுமாம். நம் காசால் அவர்கள் வயிறு வளர்த்து படித்து, வேலைக்கு வந்து, நம்மை மிதிக்க வேண்டும். இதுதான் சடங்காம்.

தானங் கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் வறியவர்க்குக் கொடுக்க வேண்டும். யோக்கியர்க்குக் கொடுக்க வேண்டும். "அப்படிக்கில்லாமல் ஒரு கூட்டத்தாருக்கே கொடுக்க வேண்டும். அவர்கள் எவ்வளவு அயோக்கியர்களாக இருந்தாலும் சரி" என்பது மூடத்தனம். நாம் அவர்களுக்கு கொடுக்காவிட்டாலும் அவர்கள் பட்டினி இருந்து கெட்டுப் போய் விடமாட்டார்கள். நமக்குப் பாவம் ஒன்றும் வந்து விடாது. அப்படிச் செய்தால் அவர்களும் சீக்கிரம் சீர்திருந்தி சோம்பலை விடுத்து தேகத்தை உழைத்துச் சம்பாதிக்கப் பழகிக் கொள்வார்கள். கிழிந்த பஞ்சாங்கத்தையும் காய்ந்த தெர்ப்பைப் புல்லையும் ஜெயிக்க முடியாத நமக்கு எப்போது



RangaRakes
tamilnavarasam.com

விடுதலை! இந்தக் கட்டுப்பாடுகளிலிருந்து நாம் நம் மக்களை விடுவிக்க வேண்டும். ராஜரீய முயற்சிகளால் சிறுபாலோருக்கும் உத்தியோகம் கிடைக்குமானால் பெரும்பாலோரான ஜன சமூகத்திற்கு வரிகள் அதிகமாகும். இது நாம் கண்டறிந்த விஷயம். காங்கிரஸ் சபை வரு முன் இரண்டு மெம்பர்களால் நடந்த ராஜரீய காரியங்களையே இப்போது நான்கு மெம்பர்களும் மூன்று மந்திரிகளும் நிர்வாகித்து வருகிறார்கள். அதனால் செலவு மாத்திரம் அதிகம், வரி அதிகம். காங்கிரஸ் முயற்சியால் வரும் நன்மை, உத்தியோகங்கள் அந்த நன்மை சிலருக்கே அதனால் பலருக்கும் கிடைப்பது வரி அதிகம் என்பது தான். ஆதலால் "சமயச் சடங்குகள்" இவைகளிலுள்ள மூட விசுவாசங்களிலிருந்தும், குருட்டு நம்பிக்கைகளிலிருந்தும், கட்டுப்பாடுகளிலிருந்தும், ஜன சமூகத்தை விடுவித்து நம் மக்களை சுதந்தரத்திற்கும் சுயமரியாதைக்கும் அருகராக்குவதே உண்மையில் மேன்மையான முயற்சியாகும். அதுவே சுய ஆட்சியைக் கொடுப்பதும் ஆகும்.

*குறிப்பு : கோவில்பட்டி போர்டு ஹைஸ்கூல் கட்டிடத்தில் 19. 6. 27 அன்று நடை பெற்ற திராவிடர் கழக 18 - வது ஆண்டு நிறைவு விழா சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 26.06.1927**



# கோவை மகாநாடும் பார்ப்பனரல்லாதார் கடமையும்

கோவையில் அடுத்த வாரம் கூடப்போகும் பார்ப்பனரல்லாதார் விசேஷ மகாநாட்டைப்பற்றி இதுவரை குடி அரசு 4, 5 தலையங்கம் எழுதி ஆகிவிட்டது. மாயவரம் மகாநாடு நடந்தது முதல் விசேஷமாய் கோவை மகாநாட்டைப் பற்றியே எங்கும் பேச்சாய் இருக்கிறது. இம்மகாநாட்டில் தமிழ்நாட்டுக்கு ஒரு புது உணர்ச்சி ஏற்படக்கூடும் என்பது நமது அபிப்பிராயம். ஆன போதிலும் இம் மகாநாடு சம்பந்தமாய் தலைவர்கள் என்போருக்கு பெருத்த பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் யாரும் மறந்து விடக் கூடாது. ஏனெனில் பொது மக்களின் கவனத்தை இம்மகாநாடு பெரிதும் இழுத்துக் கொண்டிருப்பதுடன் இம்மகாநாட்டின் முடிவை பார்ப்பனரல்லாதார் மாத்திரம் அல்லாமல் பார்ப்பனரும் சர்க்காரும் வெகு ஆவலாய் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இம்மகாநாட்டில் ஒரு கட்டுப்பாடானதும் எல்லோரையும் கட்டுப்படுத்தக் கூடியதுமான ஒரு திட்டத்தை ஏற்படுத்த முடிய வில்லையானால் பிறகு பார்ப்பனரல்லாதார் அரசியலிலும் சமூக இயலிலும் முன்னேறும் காலம் சமீபத்தில் இல்லையென்றே தீர்மானித்துவிட வேண்டியதுதான்.

பார்ப்பனரல்லாத சமூகப் பிரமுகர்கள் என்போர் இவ்விஷயமாய் இனி புதிதாகக் கற்றுக் கொள்ள வேண்டியதோ திருத்தப்பாடு அடைய வேண்டியதோ அல்லது இனி ஒருவர் மனதை திருப்பக் கூடியதோ ஒன்று இருப்பதாக நாம் நினைப்பதற்கில்லை. ஏனெனில் இவ்வியக்கம் ஏற்பட்டு பத்து வருஷத்திற்கு மேலாகியும் இதன் குண தோஷங்களை இயக்கத்தில் கலந்திருந்தும், இயக்கத்திற்கு வெளியில் இருந்து கொண்டு எதிர்த்து நின்றும், சிலர் உள்ளிருந்து வெளிவந்தும் மறுபடியும் உட்புகுந்தும், வெளியிலிருந்து எதிர்த்தவர்கள் இப்போது உட்புகுந்து ஆதரித்தும், உள்ளிருந்து ஆதரித்தவர் இப்போது வெளியேறி எதிர்த்தும் ஆகிய பலவித அனுபவங்களை அனேகமாய்ப் பெற்றாகிவிட்டது. மேற்கண்ட இவ்வித நடவடிக்கைகளின் தன்மைகளையும் இவ்வித நடவடிக்கைகளின் காரண காரியங்களையும் யாவரும் தெரிந்து கொண்டும் ஆகிவிட்டது. அதோடு கூட கொள்கைகள் எவ்வளவு தூரம் ஒத்துக் கொள்ள முடியவில்லை என்பதும் அவரவர்



RangaRakes
tamilnavarasam.com

சவுகரியங்கள் எவ்வளவு தூரம் இவ்வித காரியங்களுக்குக் காரணமாய் இருந்தது - இருக்கிறது - இருக்கப் போகிறது என்பதும் ஏறக்குறைய எல்லோருக்கும் தெரியக்கூடியதாகிவிட்டது.

ஆகையால் இனி வேண்டியதெல்லாம் அவரவர் இஷ்டமும் சகிப்புத் தன்மையுமேயல்லாமல் மற்றபடி வேறு பெரிய மாறுதல்கள் எதுவும் தேவையிருப்பதாக நமக்குத் தெரியவில்லை. எனவே, மகாநாட்டிற்கு வருவோர்களின் கடமையெல்லாம் எவ்வெவ் விஷயங்களில் கொள்கை மாறுபாடில்லையோ அவ்வவ்விஷயங்களில் தாராளமாய் மிகுதி வைத்துக் கொள்ளாமல் ஒன்றுபட ஒத்துப்போக வேண்டும் என்பதும், கொள்கை மாறுதலும், நம்பிக்கையின்மையும், ஏற்பட்ட விஷயங்களில் சகிப்புத் தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான். இந்த இரண்டு குணமும் மகாநாட்டிற்கு வரும் கனவான்களிடம் குடிகொண்டிருக்கும் பட்சத்தில் மகாநாட்டில் அபிப்பிராயபேதம் என்பதையே காணமுடியாது. ஒரு கூட்டமென்றாலே பலதிறப்பட்ட அபிப்பிராயமுடையவர்களைக் கொண்டதாகத்தானிருக்கும். கண்ணியமான கூட்டமென்பது பலதிறப்பட்ட அபிப்பிராயமுடையவர்கள் வந்தாலும் அவரவர்கள் அபிப்பிராயத்தை மதித்து நமது அபிப்பிராயம் ஒருவருக்குப் பிடிக்காவிட்டால் அவரை எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோமோ அதுபோலத்தான் பிறர் அபிப்பிராயம் நமக்குப் பிடிக்காவிட்டால் நாமும் நடந்துகொள்ள வேண்டும். அன்றியும் ஒருவர் அபிப்பிராயத்தில் நமக்கு சந்தேகம் தோன்றுமானால் அதாவது "இது அவரின் கண்ணியமான அபிப்ராயமல்ல. தங்களது சுயநலத்திற்கான அபிப்பிராயம்" என்பதாக யாரிடமாவது நமக்கு சந்தேகம் தோன்றுமானால் அவற்றையும் மரியாதையுடன் பொறுத்துக்கொண்டு சந்தேகத்தின் பிரயோசனத்தை அவருக்கே கொடுத்து கண்ணியப்படுத்த வேண்டுமேயல்லாமல் அதை நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. ஏனென்றால் "உங்களுக்குத் தோன்றியதை சொல்லுங்கள்" என்பதாக நாமாக அழைத்து ஒருவர் வந்திருக்கும் போது அவர் சொல்லுவதைப் பொறுமையுடன் கேழ்க்க வேண்டியதுதான். மற்றபடி ஒருவர் அவராக வந்து நமக்குச் சொல்லும்போது அதைத் தட்டி நமது மனதில் தோன்றியதைச் சொல்ல நமக்கு உரிமை வைத்துக் கொள்வதில் குற்றமில்லை.

நாமாக வருந்தி அழைத்து குற்றம் சொல்லுவதானது பெருந்தன்மையான புத்தியாகாது. இதைப்பற்றி ஏன் இவ்வளவு தூரம் எழுதுகிறோமென்றால் நமக்கு வந்துள்ள கடிதங்களும் நிரூபங்களும் பெரிதும் இம்மாதிரி பொறுமையற்ற தன்மை உடையதுகளாகவே இருக்கிறது. அன்றியும் இவ்வார "நவசக்தி" தலையங்க முடிவில்,

> "கோவை மகாநாட்டிற்கு போதருமாறு ஜஸ்டிஸ் கட்சியிற் சேர்ந்த பல பார்ப்பனரல்லாத தலைவர்கள் அழைக்கப் படுவார்கள்



> என்று நாம் அறிகிறோம். ஒருவேளை அவர்களும் மேடை மீது வாதப் போரில் தலையிட நேரலாம். அது போழ்து அமைதி, பெருந்தகைமை முதலியன பாதுகாக்கப் பட வேண்டுமென்று நாம் சொல்லவேண்டுவதில்லை. அழைக்கப்படுவோர் மரியாதையாக நடத்தப்படுவாரென எதிர்பார்க்கிறோம்"

என்பதாக எழுதியிருக்கிறது. இவ்விஷயங்களைப் பார்த்தாலும் நமது எதிரிகள் பலர் இம் மகாநாட்டில் எப்படியாவது கலவரமுண்டாக்கி நமது கட்டைக் கலைக்கக் காத்திருப்பது அதிசயமல்லவானதினாலுமே இவ்வளவு தூரம் எழுதுகிறோம்.

நிற்க, இவ்வார 'நவசக்தி' தலையங்கத்தில் கோவை மகாநாட்டைப் பற்றி எழுதியிருப்பதில் நம்மைப்பற்றி சில வார்த்தைகள் பொரித்திருக்கிறது. அவற்றை மாத்திரம் இங்கு எடுத்து எழுதி நமது கருத்தை வெளியிடுவோம். நவசக்தி எழுதியிருப்பது போலவே நாமும் வாதப்போருக்கு ஆக இதை எழுதவில்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நவசக்தியில் காணும் செய்தியாவது:-

1. ஸ்ரீமான் நாயக்கரும் அவர் உள்ளிட்டாரும் ஜஸ்ட்டிஸ் கக்ஷி காங்கிரசுடன் ஒன்றலாகாது என்று தம் மதம் நிறுவியே தீர்வர். " ஸ்ரீமான் நாயக்கரும் அவர் கூட்டத்தாரும் விட்டுக்கொடுத்தாலன்றி ஜஸ்ட்டிஸ் கக்ஷித் தலைவர் களின் கருத்து நிறைவேறல் அரிது" என்றும்,

2. "ஜஸ்ட்டிஸ் கக்ஷியார் அரசியல் கூறு காங்கிரசோடு ஒன்றிவிடின் ஸ்ரீமான் நாயக்கர் தனது சமூக சீர்திருத்தத் தொண்டை இன்னும் பதின் மடங்கு ஊக்கமாக நிகழ்த்தலாம்" என்றும்,

3. "ஜஸ்ட்டிஸ் கக்ஷியில் தனிப்பட்ட அரசியல் ஜீவநாடி ஓடினாலன்றி சமூகச் சீர்திருத்தத் தொண்டை திறம்பட ஆற்ற இயலாது. அதற்கு இடமும் நேராது என்று நாயக்கர் சொல்லுகிறார். இக்கூற்றில் ஒரு வித உண்மையுண்டு என்பதை நாம் மறுக்கவில்லை" என்றும்,

4. "ஜஸ்ட்டிஸ் கக்ஷியார் அரசியல் கூறு தேசிய வளர்ச்சிக்குத் தடையாயிருப்பது ஈண்டு பெரிதும் கவனிக்கப்பாலது" என்றும்,

5. "ஆதலால் நாயக்கர் விட்டுக்கொடுக்கும் பேரறத்தைக் கடைபிடித்தல் வேண்டுமென்று நாம் கூறுகிறோம்" என்றும் எழுதியிருக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

நவசக்தி 22-6-27 தேதி தலையங்கத்தில் இவற்றையே முக்கியமாய்க் கருதி இவற்றிற்கு நமது கருத்தை வெளியிட கடமைப்பட்டுள்ளோம்.

1. நாம் நமது அபிப்பிராயத்தை வலியுறுத்தப் போவதில்லை. விஷயத்தை விளக்கிவிட்டு அவரவர்கள் மனச்சாட்சியின்படி நடக்கவிட்டு விடுவோமே அல்லாமல் ஒரு சிறிதும் கட்டாயப்படுத்தவோ ஓட்டு சேகரிக் கவோ மாட்டோம் என்பதை உறுதி கூறுகிறோம். விட்டுக் கொடுத் தலைப் பற்றி மற்றொரு இடத்திலும் வருவதால் கடைசியாக எழுதுவோம்.

2. இரண்டாவது விஷயத்திற்கு நவசக்தியின் மூன்றாவது விஷயமே பதில் சொல்லிவிட்டபடியால் நாம் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. ஆனாலும் சிறிது சொல்லுவோம். பார்ப்பனப் பிரசாரம் நமது நாட்டில் பலப் பட்டிருப்பதற்குக் காரணம் இது சமயம் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாக இருக்கும் அரசியல் ஜீவநாடியின் வலுவா அல்லவா? அது போலவே ஜஸ்டிஸ் கட்சிக்கும் ஒரு சிறிதாவது தனி அரசியல் ஜீவநாடி இல்லாதிருக்கு மானால் இது சமயம் நமது நிலை என்னவாயிருக்கும் என்பதை மனதில் கையை வைத்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

ஜஸ்டிஸ் கட்சிக்கு தனி அரசியல் கொள்கை இல்லாதிருக்குமானால் ஜனாப் மகமது உஸ்மான் நிர்வாக சபை மெம்பராயிருக்க முடியுமா? ஜனாப் மகமது உஸ்மானும் ஸ்ரீமான் மார்ஷபேங்கும் நிர்வாக சபையின் மெம்பரா இல்லாதிருக்குமானால் ஸ்ரீமான்கள் கல்யாணசுந்திர முதலியாரும், வரதராஜுலு நாயுடுகாரும், ராமசாமி நாயக்கரும் ஜெயிலுக்கு வெளியில் இருந்து கொண்டு தொழிலாளர் பிரசாரமோ தேசீயப் பிரசாரமோ சமூகச் சீர்திருத்தப் பிரசாரமோ செய்ய முடியுமா என்று பந்தயம் கட்டி கேழ்க்கிறோம். இந்த ரகசியம் அனேகருக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் ஸ்ரீமான்கள் முதலியாருக்கும் நாயுடுவுக்கும் நாயக்கருக்கும் தெரியாமல் இருக்க நியாயம் இல்லை. எந்தப் பிரசாரத்தையாவது அடக்க பார்ப்பன அரசியல் திட்டத்திற்கு சக்தி இல்லையென்று யாராவது சொல்ல முடியுமா? இந்த இரகசியங்களை அறிந்தேதான் நவசக்தி "நாயக்கர் சொல்வதில் ஒருவித உண்மையுண்டு" என்பதாக தானே ஒப்புக் கொண்டிருப்பதால் இதைப்பற்றி நாம் அதிகம் வளர்த்தவில்லை.

4-வது விஷயம் "ஜஸ்டிஸ் கட்சியின் அரசியல் கூறு தேசிய வளர்ச் சிக்கும் இடையூறு" என்பது. இந்த இடத்தில்தான் நாம் நவசக்தியிடமும் மற்றும் பலரிடத்திலும் பலமான அபிப்பிராய பேதம் கொள்வதாயிருக்கிறது.

நவசக்தியைப் போலவே பாமர மக்களில் அனேகர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி நாம் பலமுறை எழுதியிருக்கிறோம். இதுவரை யாரும் அதுகளுக்கு சமாதானம் எழுதவே இல்லை. ஜஸ்டிஸ் கட்சி



அரசியல் கூறு என்னவென்பது தெரிந்தால் இந்தப் பிரச்சினை பிறக்கவே இடமிருக்காது.

"தேசிய" அரசியல் கூறால் தேசம் கஷ்டப்படுவதும் இன்றைய தேசிய சபை நாடு சிரிப்பதும் அறியாதார் யார்? இதை எல்லோரையும் விட நவசக்தி அதிகம் அறிந்திருக்கிறது என்பதே நமது அபிப்ராயம். ஏனெனில் நவசக்தி யின் கண்டனங்களை நாம் கவனித்து வாசித்து வந்திருக்கிறோம். எனினும் கீழே சில விஷயங்களைப் பாமர மக்களுக்காக எழுதுகிறோம்.

தேசியக் கொள்கைகளுக்கு நமது நாட்டில் செல்வாக்கு ஏற்பட்டது சமூக சீர்திருத்தக் கொள்கைகளான மகாத்மாவின் நிர்மாணத் திட்டமும், நாணயமான தேசிய திட்டமாகிய ஒத்துழையாமையும் காங்கிரசில் இருக்கிறது என்றதினாலல்லாமல் வேறு காரணம் உண்டா? ஸ்ரீமான்கள் முதலியாரும் நாயுடுவும் இன்னும் சிலரும் மதிக்கும் காங்கிரசில் இத்திட்டங்கள் இருக் கிறதா? இருக்க வைக்க முடியுமா? மகாத்மாவுக்கு மேல் இனி யாராவது முயற்சிக்க முடியுமா? முடியுமானால் அப்போது அதில் நாம் போய் சேர்ந்து தொண்டாற்ற முடியாதா? காங்கிரசு முன்னால் ஒத்துழைப்பாயிருந்தது என்பதையும் ஒப்புக்கொண்டு பழயபடி இப்போதும் ஒத்துழைப்புக்கு வந்து விட்டது என்பதையும் ஒப்புக்கொண்ட ஒருவர் ஜஸ்டிஸ் கட்சியின் அரசியல் கூறு தேசிய வளர்ச்சிக்கு இடையூறாய் இருக்கிறதென்று சொல்லுவதானால் நாம் அதற்கு என்ன பதில் சொல்ல முடியும். தேசியத் திட்டத்தில் முதலாவதாக ஒத்துழையாமை நிறுத்தப்பட்டு விட்டது. பிறகு மதுவிலக்கு நிறுத்தப்பட்டது. பிறகு தீண்டாமை நிறுத்தப்பட்டது. இப்போது கதரும் நீக்கப்பட மகாத்மாவின் சம்மதம் பெற்றாகிவிட்டது. ஒத்துழைப்புத் திட்டங்களையும் ஒப்புக்கொண்டு சட்டசபைக்குப் போய் இரட்டையாட்சிக்கும் ஆசி கூறி ஆக்கமளித்து வருவதையும் காங்கிரஸ் ஒப்புக்கொண்டாகிவிட்டது. இனி என்ன செய்வது பாக்கியிருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை. ஜஸ்டிஸ் கட்சியோ மகாத்மாவின் நிர்மாணத் திட்டத்தை ஒப்புக்கொண்டாய் விட்டது. அரசிய லில் "முட்டுக்கட்டையைக்" கைக் கொண்டிருக்கிறது. இப்படியிருக்க எந்த விதத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் திட்டத்தில் அரசியல் கூறு காங்கிரசுக்கு பிற்பட்டதாயிருக்கிறதென்பது நமக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் "நாளைய தினம் மாறிவிடுமோ என்னமோ" என்று பயப்படுவதானாலோ யார் மாறாதவர்களா யிருந்தார்கள்? எந்த அரசியல் சமூகஇயல் இயக்கங்களின் திட்டம் மாறாததாயிருந்தது? எந்தத் தலைவர் மாறாதவராயிருக்கிறார்? ஸ்ரீமான் பண்டித மாளவியா மேடை மீது ஏறிக்கொண்டு தீண்டாதவர் களுக்காக கண்ணீர்விட்டு மக்களை ஏமாற்றுகிறார். தனது குடும்பத்தில் தன் மகனுக்கு பெண் கொடுத்த சம்பந்தி ஒருவர் வேறு வகையில் ஒரு பார்ப்பானுக்குப் பெண் கொடுத்ததற்காகவும் மற்றொருவனைப் பார்ப்பான் பந்தியில் உட்கார்ந்து சாப்பிட்டதற்காகவும் அவரை ஜாதியை விட்டுத் தள்ளி விட்டதோடு தனது மருமகளின் தாயார் சாகக்கிடக்கும் போது மருமகள்



RangaRakes tamilnavarasam.com

எவ்வளவு கெஞ்சி அழுதும் தனது தாயாரைப் பார்க்க அனுப்பிக் கொடுக்காத புண்ணிய ஆத்துமா, இன்றைய தினம் தென்னாட்டில் வந்து காசிப் பார்ப்பனப் பள்ளிக்கூடத்திற்கு பணம் பறிக்க பிராமண- பிராமணரல்லாதார் - ஒற்றுமைப் பிரசாரம் செய்கிறார்.

இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக 21 நாள் பட்டினி இருந்த மகாத்மா காந்தி "இந்து முஸ்லீம் கலவரம் இப்படி இருக்கும் போது எனக்கு ஓய்வு வேறு வேண்டுமா" என்று சொன்ன மகாத்மா காந்தி இன்றைய தினம் "அவரவர்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள அவரவர்கள் கையா லானதைப் பாருங்கள்" என்று சொல்லி விட்டு ஓய்விலிருக்கிறார். இப்படியே இனியும் பல உதாரணங்கள் கூறலாம். எனவே "எந்த இயக்கத்தை நம்புவது? யார் பேச்சையும் நடவடிக்கையும் நம்புவது? யார் அபிப்பிராயம் மாற்றிக் கொள்ள முடியாதது? என்று சொல்லுவது" என்பதை யோசித்துப் பார்த்தால் இம்மாதிரி சந்தேகத்திற்கு இடமிருக்காது. "மணமுண்டானால் வழி உண்டு" என்கிற சமாதானம்தான் சொல்லி ஆக வேண்டும். இனி "நாயக்கர் விட்டுக் கொடுக்கும் பேறத்தை கைக்கொள்ள வேண்டும்" என்று சொல்வதற்கு நாம் பதில் சொல்லி ஆக வேண்டும். இது விஷயத்தில் விட்டுக்கொடுப்பது என்பதின் கருத்து கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதுதான். கொள்கைகளை மாற்றிக்கொள்ளுவது என்பது மதத்தை விட்டு மாறு என்று கட்டாயப்படுத்துவதற் கொப்பானது. ஒரு மகமதியனை நீ விக்கிரகத்தை வைத்து வணங்கு என்று சொல்லுவது எப்படி அநியாயமோ அது போல் ஒருவனை காங்கிரசில் சேரு என்று சொல்லுவது என்பது நமது அபிப் பிராயம். இன்னம் யோசித்துப் பார்த்தால் அதைவிட கடினமானக் கட்டளை என்று கூட சொல்லலாம்- விக்கிரகத்தை வணங்குவது பாவம் என்பது ஒரு மகமதியருடைய நம்பிக்கையே ஒழிய அது பிரத்தியட்சமல்ல. ஆனால், காங்கிரசு தேசத்திற்கு கெடுதி யானது என்பது பிரத்தியட்ச பிராமணத்தால் ஏற்பட்ட அனுபவ முடிவு. அதை மாற்றிக் கொள்வது என்பது உண்மை யுள்ளவனுக்கு சாத்தியப்படக் கூடியது அல்ல என்பது நமது அபிப்பிராயம். உண்மையில் பலன் தரத்தக்க மகாத்மாவின் அரசியல் திட்டங்களைப் பாழாக்கினதும், அதில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலோரின் கண்ணியத்தை கொள்ளை கொண்டதும், இந்த விதமான விட்டுக் கொடுக்கும் தன்மையும் இதை அநுசரித்த "ஒற்றுமை"ப் பிசாசும்தானே அல்லாமல் வேறல்ல. மகாத்மா காந்தி தனது கொள்கையில் இருந்து ஒரு சிறிதும் விட்டுக் கொடுக்காமலிருந்தவரை தேசத்தின் நிலை கொள்கையின், தத்துவத்தின் தன்மை, தேசிய அனுகூலம், அரசாங்கத்தின் மனம் எப்படியிருந்தது? விட்டுக் கொடுத்து ஒற்றுமைப் பிசாசுக்கு ஆளாகி ராஜி ஒப்பந்தத்தில் இறங்கிய பின் தேச நிலை முதலியதுகள் என்ன ஆச்சுது? உண்மையானதும் உறுதியானதுமான கொள்கைகளை எப்படி ஆனாலும் சரிபடுத்திக் கொள்ளக்கூடிய மகாத்மா போன்றவர்கள் விட்டுக் கொடுத்தே இக்கெதி



ஆனால் இனி சாதாரண மனிதன் விட்டுக் கொடுத்தால் அதன் கதி என்ன ஆகும் என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது.

யோக்கியமாய் பேசுவோமானால் "விட்டுக்கொடுத்தாலொழிய காரியம் நடவாது" என்கிற நிலை வரும்போது சுத்தமான கர்மவீரன் அந்தக் காரியத்தில் இருந்து விலகி விடுவது அறமாகுமே அல்லாமல் விட்டுக் கொடுத்து கருமத்தை ஆற்றலாம் என்பது தோல்வியை ஒப்புக்கொண்டதே ஆகும். (தன் தன் சொந்தக் காரியங்களுக்கு, இவ்வளவு கடினமான தத்துவம் பொருந்தாதெனினும் அதன் இரகசியமும் இதுதான். இதில் விட்டுக் கொடுப்பதால் தன் காரியம் தான் கெட்டுப் போகலாமே அல்லாமல் வேறல்ல) முடிவாக ஒரு வார்த்தை "என்னையே எண்ணி இப்பெரும்பழி ஏற்றேன்" என்று இராவணன் சொன்னது போல் காங்கிரசை எதிர்ப்பது என்கிற கொள்கையை நாம் முடிவு காட்டிய காலத்தில் நமக்கு உதவியாக யாரையும் நாம் எதிர்பார்த்து இத்தொண்டில் இறங்கவில்லை. (இதைப் பார்த்தவுடன் சிலருக்காவது "இராவணனைப் போல் இவனும் அழிந்து போவான்"என்று சொல்லத் தோன்றும். இராவணன் தனது கொள்கையிலாவது தனது பலக் குறைவாலாவது அழிந்து போகவே இல்லை. எதிரிகளின் சூக்ஷியாலும் இராவணனது வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்கள் சுயநலத்திற்காக எதிரி களுடன் சேர்ந்து கொண்டு காட்டிக் கொடுத்ததினாலும் அவர் அபஜய மடைய நேரிட்டது எனலாம். எனினும் அவரது புகழும் சாமார்த்தியமும் நீதியும் இனியும் அடியோடு மறைந்து போகவில்லை. அக்கதையின் இரகசியம் வேறு. அதுவும் மக்களுக்குப் பகுத்தறிவு ஏற்படும் காலத்தில் தானாகவே பிரகாசிக்கும். அதற்கு காலம் வரும்.) ஜஸ்டிஸ் கட்சி கொள் கையே முழுதும் நமது கொள்கையல்ல. பரஸ்பர சகாய எதிர்ப்பார்ப்பதே தவிர வேறில்லை. ஜஸ்டிஸ் கட்சியும் ஒரு காலத்திலும் காங்கிரசின் உண்மையான கொள்கைகளை எதிர்க்க வேயில்லை. "அரசியல் விஷயத்தில் காங்கிரஸ் செய்கிற புரட்டுகளை நாங்களும் செய்து எங்கள் வீதாச்சாரம் அந்தப் பலனை அடைவோம்" என்று சொல்லி வருகிறதே தவிர வேறில்லை. ஆதலால் நாம் காங்கிரசைப் பற்றி கொண்ட கொள்கைக்கு ஜஸ்டிஸ் கட்சியின் உதவி எப்போதும் நமக்கில்லை. இதனால் மற்றவர்களை நாம் கட்டாயப் படுத்தவில்லை - கட்டாயப்படுத்தப் போவதுமில்லை. ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் யோக்கியதையும் நமக்குத் தெரியும். அவர்களின் இலட்சியமும் நமக்குத் தெரியும். ஆனால், அவர்கள் பார்ப்பன அரசியல்வாதிகளின் கங்காணிகளைவிட ஆயிரம் மடங்கு யோக்கியர்கள் என்பதும் பார்ப்பன அரசியல்வாதிகளால் பார்ப்பனர்களுக்கு எவ்வளவு பலன் உண்டோ அதுபோலவே பார்ப்பனரல்லாத அரசியல்வாதிகள் எண்ணம் நிறைவேறு வதிலும் கொஞ்சம் குறைவாகவாவது ஏற்படும் என்கிறது மாத்திரம் நமக் குண்டு. எனவே, எல்லோரும் மகாநாட்டிற்கு வரவேண்டும் என்றும் ஒருவருக் கொருவர் கண்ணியமான அவரவர்கள் அபிப்பிராயங்களை பரிமாறிக்



RangaRakes tamilnavarasam.com

கொள்ள வேண்டும் என்றும் ஒத்து வருகிறதைப் பொருத்த வரையில் கண்ணியமாய் ஒத்துழைக்க வேண்டும் என்றும் மகாநாட்டில் பரஸ்பர சகிப்புத் தன்மையும் மரியாதையும் இருக்க வேண்டும் என்றும் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 26.06.1927**



# அய்யங்காரின் பார்ப்பனப் பிரசாரம்

ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார், ஸ்ரீமான்கள் முத்துரங்க முதலியார், ஓ. கந்தசாமி செட்டியார் ஆகிய இருவரையும் பார்ப்பனரல்லாதார் என்கிற பெயருக்காக கூட இழுத்துக் கொண்டு தென்னாட்டில் பார்ப்பனப் பிரசாரம் செய்து வருவதும், அவ்விரு கனவான்களை ஏவிவிட்டு பார்ப்பனரல் லாதாருக்கு விரோதமாகப் பேசும்படி செய்து வருவதும் பத்திரிகையில் பார்த்திருக்கலாம்.

ஆனாலும் அவர்கள் போகிற இடங்களில் ஜனங்கள் கேள்விகள் கேட்க ஆசைப்படுவது இந்தக் காலத்தில் மிகவும் சகஜமானது என்பதும் யாவருக்கும் தெரியும். பிரசாரத்திற்குப் போகிறவர்கள் கூடுமானவரையிலா வது நியாயமான கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டியது நியாயமான பிரசாரர்களின் கடமை. அப்படிக்கில்லாமல் கேள்வி கேட்கிறவர்களை அடக்கி விடவும், அவர்களைத் தொந்தரவு செய்ய ஆள்களைத் தயார் செய்து ஏவி விடுவதும், அந்தச் சமயத்தில் மாத்திரம் தப்பித்துக் கொள்ள முடியுமேயல்லாமல் பிரசாரம் கோரிய பலனைத் தருவது கஷ்டமான காரியம் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. இதுவரையில் பார்ப்பன பத்திரிகைகளில் வந்த சேதிகளைக் கொண்டே பார்ப்போமானால் ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார் கோஷ்டிகளான ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, எம். கே. ஆச் சாரியார், குப்புசாமி முதலியார், அமீத்கான் சாயுபு, கந்தசாமி செட்டியார் முதலிய எல்லா கனவான்கள் சென்று பிரசங்கம் செய்த கூட்டங்கள் எல்லா வற்றிலும் ஏறக்குறைய ஏதாவது ஒரு கலவரம் நடந்ததாகவே காணப் படுகின்றது. அய்யங்காரின் பிரசாரத் தன்மை எப்படியிருந்தாலும் சமூகத் திற்கோ, தேசத்திற்கோ அது எவ்வளவு கெடுதியைத் தரத்தக்கதாய் இருந் தாலும் நியாயத்தையும், மரியாதையையும், யோக்கியத்தையும் உத்தேசித்து நாம் சொல்லுவது என்னவென்றால் கூட்டங்களில் கலவரம் நடந்ததாக ஏற்படுவதானது அதற்கு காரணமாய் இருக்கிறவர்களின் இழிதகைமை என்றே சொல்லுவோம். ஸ்ரீமான் அய்யங்கார் மாத்திரம் அல்ல, இன்னமும் வேறு யாரானாலும் அவரவர் இஷ்டத்தின் பிரகாரம் பிரசாரம் செய்ய உரிமை உடையவர்களே ஆவார்கள். அவ்வித பிரசாரத்தை எதிர்க்கிறவர்கள் ஆண் பிள்ளைகளானால் தாராளமாய் பேச இடம் கொடுத்து விட்டு அவர்கள் சொல்ல வேண்டியவைகளை எல்லாம் சொன்ன பிறகு ஏதாவது கேள்வி



RangaRakes tamilnavarasam.com

இருக்குமானால் அதுவும் அவர்கள் அந்தச் சமயம் பேசிய பேச்சுக்களில் கேள்வி பிறக்குமானால் மாத்திரம் கேள்வி கேட்க வேண்டும். அவற்றிற்கும் அவர்கள் பதில் சொல்ல வில்லையானால் மறுநாள் கூட்டம் கூட்டி தாராளமாக மறுத்துப்பேச வேண்டும். அப்படிக்கில்லாமல் இடையில் கேள்வி கேட்பதும் பதில் சொல்ல இஷ்டம் இல்லாவிட்டால் கட்டாயப் படுத்துவதும் மனிதத் தன்மைக்கு ஏற்ற காரியம் அல்ல என்றே சொல்லுவோம். கண்ணியமான முறையில் துண்டுப் பிரசுரங்களை வழங்கலாம். அதுவும் அக்கூட்டத்திற்கு இடைஞ்சல் உண்டாக்க கூடியதாக இருக்கக்கூடாது என்றே சொல்லுவோம். தனியாகவும் ஜனங்களைக் கூட்டி வைத்து விஷயங்களை எடுத்துச் சொல்ல யோக்கியதை இல்லாதவர்கள்தான் வேறு ஒருவர் கூட்டிய கூட்டத்தில் போய் கலவரம் செய்வார்களேயொழிய ஆண்மையுள்ளவர்கள் ஒருக்காலும் கலவரம் செய்ய போக மாட்டார்கள் என்பது நமது அபிப்பிராயம். சமீபத்தில் நாகப்பட்டணத்தில் நடந்த விஷயத்தைப் பற்றி நாம் சென்ற வாரம் கண்டித்து எழுதியிருந்தது நேயர்கள் கவனித்திருக்கலாம். அதற்குப் பிறகும் திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களிலும் குழப்பத்திற்கு முயற்சித்ததாகவும், குழப்பம் நடந்ததாகவும் பார்க்க மிகுதியும் வருத்தம் அடைகிறோம். மதுரையின் கூட்டத்தில் ஒரு கல் விழுந்ததாகக் காணப் படுகிறது. இது ஒரு கோழையின் செய்கையே அல்லாமல் ஆண்மகன் செய்கை அல்ல. அந்தக் கல்லை ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரே, ஸ்ரீமான் கந்தசாமி செட்டியாரை விட்டு ரூ. 5 க்கு ஏலத்தில் எடுத்துக் கொண்டதாக பாவனை உண்டாக்கி விட்டாராம். இதுவும் ஒரு தந்திரமான காரியம் என்றே சொல்லலாம். ஆனாலும் பார்ப்பனக் கட்சிக்குப் பணம் சேர வேண்டும் என்கிற ஆசை உள்ளவர்களை இம்மாதிரியே கூட்டத்தில் கல் எறியத் தூண்டும். ஏனெனில் ஒரு கல் விழுந்தால் 5 ரூபாய் வருமானமானால் 100 கல் விழுந்தால் நூத்தைந்து 500 ரூபாய் இலாபமாச்சு என்று எண்ணிக் கொண்டு பார்ப்பன பிள்ளைகளே தம் கட்சிக்கு பணம் சேர்க்க கல்லு போட முன்வர வேண்டி வரும். ஆதலால் இந்த தந்திரமும் அவ்வளவு புத்திசாலித்தனமல்ல என்றே சொல்லுகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 26.06.1927**

# அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அசார்சமாக | - | அசட்டையாக, அக்கறையில்லாமல், ஈடுபாடின்றி |
| அபஜயமடைய | - | தோல்வியடைய |
| ஆத்ம ஸ்துதி | - | தற்புகழ்ச்சி |
| உபத்ரவித்து | - | தொல்லை கொடுத்து |
| கர்ண பரம்பரை | - | செவி வழி ( செய்தி ) |
| கால பரியந்தம் | - | காலம் வரை |
| குசினிக்காரன் | - | சமையல்காரன் |
| குதிரை தேய்தல் | - | குதிரை உடலைத் தேய்த்து அழுக்கு அகற்றி பளபளப்பாக்குதல் |
| சமராதனை | - | பார்ப்பனர்க்கு விருந்திடல், பிராமண போஜனம் |
| சலீஸாக | - | மலிவாக |
| சாச்வத | - | நிரந்தரமான, நித்தியம், திடம், மோட்சம் |
| சைன்யம் | - | படை |
| தற்பித்து | - | பயிற்சி |
| தாத்பிரியமான | - | விளக்கம், நோக்கம், பாராட்டு |
| திரவிய சகாயம் | - | பொருள் உதவி |
| திரவிய அபேக்ஷை | - | பண ஆசை , பொருள் ஆசை |
| திரிகரண சுத்தியாக | - | மனம், மொழி, மெய் ( மனோ வாக்கு காயம்) ஆகிய மூன்று பொறிகளுக்கு உண்மை யாக, தூய்மையாக |
| திருஷ்டாந்தம் | - | எடுத்துக்காட்டு |
| தூஷணை | - | பழிப்பு, இகழ்ச்சியுறுத்தல் |
| நிஷ்டூரம் | - | கொடுமை, வெறுப்பு |
| பட்சபாதம் | - | ஒரு சார்பு, ஓர வஞ்சனை |
| பரநிந்தை | - | பிறரை இகழ்தல் |

# குடி அரசு

# 1927-2

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 5

**பெரியார் திராவிடர் கழகம்**

29 இதழியலாளர் குடியிருப்பு

திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்

சென்னை - 600 041

## நமக்கு மாறுதல் ஏன்?

இந்தியாவிலுள்ள மற்றெல்லாக் கட்சிகளைக் காட்டிலும் ஜஸ்டிஸ் கட்சி தான் தேசீயக் கொள்கைகளை அதிகமாகக் கொண்டுள்ளதென்பதே எனது நீண்ட கால அபிப்பிராயம்.

இத்தகைய பரந்த நோக்கமில்லாததும் குறுகிய நோக்கமுடையதுமான வேறெந்த ஒரு கட்சியுடனாவது ஜஸ்டிஸ் கட்சி சேருவதானது, ஆறானது கடலில் பாய வேண்டியது போய் கடலானது ஆற்றில் பாய்வதை ஒத்திருக் கிறது.

காங்கிரஸால் மக்களுக்கு ஒரு பயனும் விளையப்போவதில்லை யென்று கண்ட பிறகுதான் காலஞ் சென்ற நம் தலைவர்கள் ஜஸ்டிஸ் இயக்கத் தைக் கண்டார்கள். சமய சமுதாய அரசியல் விஷயங்களில், காங்கிரசானது கடந்த ஐம்பது வருஷங்களாய்ச் செய்து முடிக்காத காரியங்களை யெல்லாம் நமது ஜஸ்டிஸ் இயக்கமானது நடந்த பத்தாண்டுகளில் எவ்வளவோ முன்னேற்றத்தைச் செய்து காட்டி யிருக்கிறது. அப்படியிருக்க இப்பொழுது காங்கிரசில் சேருவதாய் நம்மியக்கக் கர்த்தாக்களில் ஆணையை காங்கிரசில் எப்பொழுது சேர்ந்தோமோ அப்பொழுதே நம் கட்சியும் மறையத் தலைப்பட்டு விடுமென்று நான் பயப்படுகிறேன்.

இந்நாட்டில் உண்மையான சுயராஜ்யம் நிலவுமென்றும், ஆகிய இத்தகைய உத்தமக் கொள்கைகளையுடைய ஜஸ்டிஸ் இயக்கத்தில் வந்து சேர்ந்து கொள்ளப்படுமென்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன்.

எத்தகைய சீர்திருத்தம் வேண்டுமென்பதை ராயல் கமிஷனுக்கு முன்னால் வற்புறுத்துவதற்காக வேண்டி ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியம். இதை முன்னிட்டு பல்வேறு கட்சிகளிலுமுள்ள தலைவர்கள் தங்கள் சுயநலத்தை ஒழித்து பொதுக் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

**குடி அரசு - கட்டுரை - 03.07.1927**

RangaRakes

tamilnavarasam.com

# கோவை மகாநாடு

## ( ஈ.வெ.கி )

நமது மாகாண பார்ப்பனரல்லாதாரின் விசேஷ மகாநாடு இன்று கோவையில் கூடுகிறது. நீண்ட காலமாக நம்முள் சிதரிக் கிடந்த அபிப்பிராய பேதமுடைய ராஜீய பார்ப்பனரல்லாதார்களான கனவான்கள் யாவரும் விஜயம் செய்திருக்கிறார்கள். இதில் ஒரு நன்முடிவுக்கு நாம் வராவிட்டால் நமது நிலை என்ன ஆகுமென்பதை முன்பே எழுதி இருக்கிறோம். “ சுயமரியாதை” வேண்டுமென்றும் அதற்கு நமக்கென ஒரு தனி இயக்கம் வேண்டுவது அவசியமென்றும், காலம்சென்ற நமது தலைவர்களான திரு. நாயர் பெருமானாலும், தியாகராயர் பெருமானாலும் முதன் முதல் எந்த இடத்தில் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டதோ அதே இடத்தில்தான் அவ்வியக் கத்தின் நெருக்கடியான காலத்தில் ஒரு முடிவு காணவும் இன்று கூடி இருக்கிறோம். மாகாண பார்ப்பனரல்லாதார் மகாநாடும், ஜில்லா இளைஞர்கள் மகாநாடும் ஒரே இடத்தில் கூடி இருக்கிறது. இவ்விரு மகாநாடுகளின் வரவேற்புக் கழகத் தலைவர் பிரசங்கமும், மகாநாட்டுத் தலைவர் பிரசங்கமும், நமது பார்வைக்கு வந்து விட்டது.

திருவாளர் ரெத்தின சபாபதிக் கவுண்டர் மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவரவர்கள் பார்ப்பனர் கொடுமையையும், பார்ப்பன சூழ்ச்சிகளையும், தாராளமாக எடுத்துக் காட்டி கண்டித்திருப்பதோடு காங்கிரஸில் சேர வேண்டு மென்ற அபிப்பிராயத்தையே முக்கியமாகக் காட்டி இருக்கிறார். அதற்கு பல காரணங்களைச் சொல்லி இருக்கிறார் எனினும் காங்கிரஸைப் பற்றி இதுவரையில் நாம் சொல்லி வந்த விஷயங்களில் ஒன்றுக்காவது சரியான பதிலில்லை. மகாநாட்டுத் தலைவர் திவான்பஹதூர் எஸ். குமாரசாமி ரெட்டி யார் எம்.எல்.ஸி அவர்கள் தமது தலைமை உபன்யாசத்தில், நமது கட்சியின் இன்றைய நிலையைப் பற்றியும், காங்கிரஸை பார்ப்பனர்கள் தங்கள் நன் மைக்கு எப்படி உபயோகப்படுத்தி வருகிறார்கள் என்பதைப்பற்றியும், காங்கிரஸின் மூலியமாகப் பார்ப்பனர்கள் தங்கள் வகுப்பு நலன் ஒன்றை மட்டும் கோரி எவ்விதம் நடந்து கொள்ளுகிறார்களென்பதை பற்றியும் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் சீனிவாச ஐயங்கார் தன்னுடைய வகுப்பு நலனுக் காக இதுவரையில் செய்து வந்த சூழ்ச்சிகளைப் பற்றியும், மந்திரிகளைத் தங்களின் நலத்துக்கென்றே சிருஷ்டித்து அவர்களை எப்படி ஆட்டி வருகிறார் என்பதைப் பற்றியும் விஸ்தாரமாகச் சொல்லியிருப்பதோடு, கிராம



RangaRakes

அபிவிருத்தி, நிர்மாணத்திட்டம், எதிர்காலத்தில் நமக்குள்ள பெரும் பொறுப்பு, கல்வி, சுகாதாரம், கைத்தொழிலபிவிருத்தி, விவசாயம், நீர்ப்பாசனம் முதலிய விஷயங்களைப் பற்றியும் உத்தியோகம் முதலிய விஷயங்களில் அரசாங் கத்தின் மனப்பான்மையை விளக்கிக் காட்டிக் கண்டித்தும் இருப்பதோடு, காங்கிரஸ் பிரவேசத்தைப் பற்றி பிரவேசத்துக்கு அனுகூலமாகச் சொல்லப் படுவதில் சிலதையும், பிரதிகூலமாகச் சொல்லப்படும் விஷயங்களில் சில தையும் எடுத்துக் காட்டி இருப்பதோடு அதன் முடிவைப் பொதுஜனங்கட்கே விட்டு விட்டதாகவும் எழுதி இருக்கிறார்.

இளைஞர் மகாநாட்டின் வரவேற்புத் தலைவர் திருவாளர் சி.வி.வி. சுப்பைய்ய செட்டியார் அவர்கள் தமது உரையில் இதுவரையில் இளைஞர்கள் சமுதாய விஷயம் ஒன்றிலேயே இருந்து வந்ததாகவும், இன்று நமது தலைவர்களின் செய்கை இளைஞர்களை அரசியலிலும் தலையிடத் தூண்டிவிடுமோவென்று ஐயுறுவதாகவும் கூறிவிட்டு காங்கிரஸ் பிரவேசம் கூடாதென்றும் அது மாய்கை என்றும், இன்றுள்ள சிறு ஐக்கிய பாவம் கூட பிரவேசத்தால் நமது தலைவர்களுக்கு இராதென்றும், அரசியலும், சமூக இயலும் உடலும், உயிரும் போன்றதென்றும், இவ்விரண்டையும் அனுஷ் டிக்கும் காலங்களிலெல்லாம் நமது இயக்கத்திற்குச் செல்வாக்கிருந்ததாகவும், அரசியல் ஒன்றையே கவனித்ததால்தான் தேர்தலில் நமது கட்சி தோற்ற தென்றும், நியாயக் கட்சியான நமது திட்டத்தை நமது மாகாணமின்றி மற்ற மாகாணவாசிகளும் பின்பற்றி வருகிறார்கள் என்றும், அவர்களின் சம்மத மின்றி காங்கிரஸ் பிரவேசத்தைப் பற்றிச் சிந்திப்பதே பொறுத்தமற்றதென்றும் ராயல் கமிஷனிடம் சாக்ஷி கொடுத்து அதன் பயனைக் கொண்டு சமூக நன்மைகளைச் செய்ய அகில இந்திய இயக்கமாக வேண்டுமானால் அதற்கு காங்கிரஸை விட நமது கக்ஷியின் பெயரையே அகில இந்திய இயக்கமாக்க வேண்டுமென்றும் சென்ற லார்ட் செம்ஸ் போர்டு சீர்திருத்தக் கமிஷன் முன் நாம் சாக்ஷியம் கொடுத்த காலத்தில் காங்கிரசுடன் சேர்ந்திருக்கவில்லை என்றும் பொதுவாக காங்கிரஸ் பிரவேசத்தைக் கண்டித்து, பார்ப்பன புரோகித பகிஷ்காரமான சுயமரியாதை இயக்கத்திற்குச் சகலரும் ஆதரவளிக்க வேண்டுமென்றும் கூறி இருக்கிறார். இளைஞர் மகாநாட்டின் தலைவரான திருச்சி, திரு. T.A.G. இரத்தினம் B.A.,L.L.B, அவர்களின் அக்கிராசன உரை நமக்கு இன்னம் கிட்டவில்லை.

பின் அதைப் பற்றி விவரிப்போம். நமது ஆசிரியர் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் திரேக அசௌக்கிய மடைந்து கோவையிலேயே இருப் பதால் மகாநாட்டைப் பற்றிய அபிப்பிராயத்தை நாம் வெளியிடுவதற்கில்லை யெனினும் மகாநாட்டுப் பிரதிநிதிகளில் தங்களை அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிற தனிப்பட்ட கனவான்களும், அவர்களின் சிஷ்யர்கள் சிலரும் தவிர, மற்றவர்களெல்லோரும் காங்கிரஸ் சம்பந்தமானது தேசத்திற்கும் சிறப்பாக பார்ப்பனரல்லாதாருக்கும் கெடுதி என்றே நினைக்



tamilnavarasam.com

கிறார்கள். ஆயினும் நம்முள் பிரிவினையில்லாதிருப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யலாம் என்ற ஆவலுமிருக்கிறதாக உணர்கிறோம். ஜஸ்டிஸ் கட்சியை சில அரசியல் தலைவர்கள் தங்களுடைய நன்மைக்கு உபயோகப் படுத்திக் கொள்ள இது சூழ்ச்சியா? என்ற பயமுள்ளவர்களும், ஜஸ்டிஸ், காங்கிரஸ் இரு கட்சிகளையும் இதன் இஷ்டம் போல் விட்டு விட்டுச் சமுதாய முற்போக்கிற்கென்று சுயமரியாதை இயக்கத்தை தனியாக ஏர்ப்படுத்தலாமா? என்ற எண்ணமுள்ளவர்களும் இருக்கிறார்களென அறிகிறோம். எப்படி யானாலும் சரி மகாநாட்டில் பொது உணர்ச்சியும், முன்னேற்றத்திற்கு கெம்பீரமான தோற்றத்துடன் கூடிய ஆசையும் தான் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. நாயக்கரை பொறுத்தவரையில் எந்த விஷயத்தையும் வலியுறுத்தப் போவதில்லையென்றும் காங்கிரஸின் பொறுப்பையோ; ஜஸ்டிஸ் கட்சியின் பொறுப்பையோ தான் மேல் எடுத்துப் போட்டுக் கொள்ள போவதில்லை என்றும் எவருடைய முயர்ச்சிக்கும் தாம் முட்டுக்கட்டையாக இருக்கப் போவதில்லை என்றும் முன்னமேயே தெரிவித்து விட்டதாக அறிகிறோம். டாக்டர்கள் கண்டிப்பாய் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கட்டாயப் படுத்தியிருப்பதால் மகாநாட்டின் நடவடிக்கைகளில் அதிகம் பங்கெடுத்துக் கொள்ள முடியவில்லை.

சிறப்புற்ற நமது ஜில்லாவின் தலைநகரான கோவையம்பதி மகா நாட்டுக்கு விஜயம் செய்துள்ள மாகாண பார்ப்பனரல்லாதாரர்களை மீண்டும் நல்வரவேற்கிறோம். தங்களின் மகத்தான கடமையையும், பொறுப்பையும் உணர்ந்து மகாநாட்டை பொதுநல நோக்கத்துடன் பொறுப்பெடுத்து வெற்றி பெறுமாறு இனிது நிறைவேற்றுவார்களென்று நம்புகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 03.07.1927**



# கோவை மகாநாட்டின் முடிவு

சிறிது காலமாய் நமது மக்கள் இடையில் பிரஸ்த்தாபப்படுத்திக் கொண்டிருந்த கோவை மகாநாடு முடிவு பெற்றுவிட்டது.

இதனால் நமது நாட்டுக்காவது சமூகத்திற்காவது ஏற்பட்ட பலன் என்ன என்று யோசிப்போமானால், ஒன்றுமில்லை என்றுதான் சொல்லி ஆக வேண்டும்.

தீர்மானத்தின் வாசகங்கள் சர்வ ஜாக்கிரதையாக அமைக்கப் பட்டிருந் தாலும் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு சொல்லப்பட்ட காரணங்கள் எவ்வளவு சாமார்த்தியமுள்ளதாயிருந்தாலும் தீர்மானத்தின் பலன் நமது முன்னேற்றத்தை தடுத்து விட்டதென்றே சொல்லுவேன். தீர்மானத்திற்குப் பிறகு இந்த ஒரு வாரத்திற்குள் மக்கள் நிலைமையும் மனப்பான்மையையும் பார்க்கும் போது பொது ஜனங்களுக்குள்ளாக ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரசில் சேர்ந்து விட்டார்கள் என்கிற உணர்ச்சி பரவுவதற்கு ஆதாரங்கள் ஏற்பட்டு விட்டன. இந்த உணர்ச்சிக்கு நமது பார்ப்பனர்களின் விஷமப் பிரசாரம் ஒரு புறமிருந்தாலும், இப்போது நம்முடன் வந்து புதிதாக சேர்ந்தவர்கள் தங்களது நிலைமையைக் காப்பாற்றிக் கொள்ள இம்மாதிரி திரித்து கூற வேண்டிய தவசியமாயிருந்தாலும், ஜஸ்டிஸ் கட்சியில் உள்ளவர்களின் மனப்பான்மையும் நடத்தையுமே முக்கிய காரணமாயிருக்கிறது என்பதையும் நான் ஒளிக்க முடியவில்லை.

இத்தீர்மானம் நிறைவேறுவதற்கு நான் தடையாய் இல்லாமல் இருந்ததற்கு காரணம் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் சிலருக்கு காங்கிரசின் மூலம் பார்ப்பனர்களின் யோக்கியதையை வெளியாக்க தங்கள் பிரசாரங்களைச் செய்யலாம் என்கிற ஆசை உண்டாய்விட்டது என்பது எனக்கு நன்றாய்த் தெரிந்து விட்டது. ஜஸ்டிஸ் கட்சிக்காக ஆதியில் நான் எவ்வித உதவியும் செய்தவனுமல்ல. அது மாத்திரமல்லாமல் அதற்கு ஒரு சிறு கெடுதியாவது செய்யாமல் இருந்தவனுமல்ல. இப்படிப்பட்ட ஒருவன் அக்கட்சியில் உள்ள முக்கிய தலைவர்கள் விருப்பத்திற்கு ஏன் முட்டுக்கட்டையாய் இருக்க வேண்டும் என்பதும் அவர்கள் என்னைவிட பொறுப்பும் எல்லா விஷயங் களும் நன்கு அறிந்தவர்கள் என்பதும் இக்கட்சியை எதிர்த்து வந்த சில



RangaRakes tamilnavarasam.com

கனவான்கள் கூட ஜஸ்டிஸ் கட்சியின் நேர்மையை உணர்ந்தோ அல்லது அதனுடைய தற்கால நிலையைக் கருதியோ அதனுடன் சேர்ந்து அதற்கு உதவி செய்வதாய் சொல்லுவதையும் நான் ஏன் எதிர்க்க வேண்டும் என்பதும், இப்படி எதிர்ப்பதின் மூலமாய் ஏற்படும் பலனை நானே ஏற்றுக்கொள்ள வேண்டி வந்துவிட்டால் முழுப் பொறுப்பும் எனது தலையில் விழுவதானால் அதைச் சுமக்க எனக்கு அது சமயம் தைரியம் இல்லை என்பதும் முக்கியமாக எனது பலவீனத்தின் தன்மையான தாக்ஷண்ணியமுமே அத்தீர்மானம் நிறைவேற்ற உதவியாயிருந்ததே அல்லாமல் பல தலைவர்களும் சில பத்திரிகைகளும் கூறுவது போல் பெருந்தன்மையை உத்தேசித்தோ ஒற்றுமையை உத்தேசித்தோ நான் விட்டுக்கொடுக்கவில்லையாதலால் அவர்களது பாராட்டுதலுக்கும் புகழுரைகளுக்கும் நான் ஒரு சிறிதும் அருகனல்ல.

காங்கிரசைப் பற்றிய எனது அபிப்பிராயம் ஏற்கனவே நான் தெரிவித்து வந்திருக்கிறேன். அதாவது அது திருத்த முடியாததும் பாமர மக்களை பலி கொடுத்து வாழவேண்டிய படித்த வகுப்பினர்கள் சுயநலத்திற்காக ஏற்படுத்திய இயக்கம் என்பதுதான். ஆனால் கோவை மகாநாட்டுத் தீர்மானத்திற்கு மூல புருஷர்களாயுள்ளவர்கள் காங்கிரசை அப்படிப்பட்ட சுயநலக்காரர்கள் கைவசமிருந்து கைப்பற்றி திருத்தி பாமர மக்களுக்கு உபயோகப்படும்படி செய்யலாம் என்கிறார்கள். இந்தக்காரியம் மகாத்மா காந்தி செய்து பார்த்து தனது தோல்வியை கண்ணியமாய் ஒப்புக்கொண்டு அதாவது “படித்த வகுப்பாரை என் வழிக்குக் கொண்டுவரக்கூடிய சக்தி கடவுள் எனக்கு கொடுக்கவில்லை. எனது தோல்வியை நான் கண்ணியமாய் ஒப்புக் கொள்ளுகிறேன்” என்று சொல்லியிருப்பதுடன் தனக்கு தோன்றிய முறையில் தேசத்தொண்டு செய்ய தன்னிஷ்டப்படி ஒரு இயக்கத்தை ஆரம்பித்து விட்டார். அந்த இயக்கமும் படித்த வகுப்பார் ஆதிக்கத்திற்கு இடம் கொடுத்து விட்டதால் “புளிப்புக்கு நீளம் உருண்டைக்கு அதனப்பன்” என்பதுபோல் அவரது அகில இந்திய சர்க்கா சங்கமும் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் பார்ப்பனரல்லாத வகுப்பை நசுக்க பார்ப்பன சூழ்ச்சிக்கும் ஆளாகி விட்டது. இனி அதன் கொடுமையில் இருந்து தப்புவதற்காகவும் பாடுபட வேண்டிய பளுவும் நமக்கு ஏற்பட்டு இருக்கிறது.

எனினும் இப்போது நம்முடன் வந்து சேர்ந்து ஜஸ்டிஸ் கட்சியாரையும் காங்கிரசுக்கு அழைக்கிறவர்கள் ஒரு சமாதானம் சொல்லி இருக்கிறார்கள். அதாவது, “காங்கிரசானது பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு விரோதமாயிருப்பது உண்மைதான். அதற்கு காரணம் உண்மையான பார்ப்பனரல்லாதார் காங்கிரசில் இல்லாத காரணத்தாலேயல்லாமல் வேறல்ல. அந்தப்படி காங்கிரசில் மற்றும் சிலர் சேர்ந்து உழைத்துப்பார்த்து முடியாவிட்டால் அதை விட்டுவிட்டு வந்து நீங்கள் சொல்வது போல செய்கிறோம்” என்கிறார்கள். அவர்கள் சொல்லுவது ஒப்புக் கொள்ளக்கூடியதல்ல என்பதும் இதற்காக செலவிடுங்காலம் வீண் என்பதும் எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால்



RangaRakes

ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து காங்கிரசுக்கு போக அனுமதி கேள்க்கும் சில கனவான்கள் இந்த காரணம் சொல்லுவதில்லை. மற்றபடி அவர்கள் சொல்லுவதென்னவென்றால் “பார்ப்பனரல்லாதார்களை நசுக்குவதற்காகவும் பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காகவும் பார்ப்பனர்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் அநேக ஆயுதங்களில் இந்தக் காங்கிரசும் ஒரு ஆயுதமாயிருக்கிறது. அதை எப்படியாவது அவர்கள் கையிலிருந்து பிடுங்கி விட வேண்டும். அதாவது, அதன் மூலம் பார்ப்பனரல்லாதாருக்குக் கெடுதி ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்காகவே அங்கு போக இஷ்டப்பட்டவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும்” என்கிறார்கள். இவையெல்லாம் ஸ்ரீமான் .சி.ஆர். தாசைக் கொண்டு பார்ப்பனர்கள் சட்டசபைக்குப் போக காங்கிரசை அனுமதி கேட்டதற்கு சமானமாயிருந்தாலும் இந்த வாதங்கள் பாமர மக்களில் பலரை ஏமாற்றி அவர்களுக்கு இவைகளில் ஒரு மோகம் உண்டாகச் செய்துவிட்டதால் நமது முன்னேற்றத்திற்கு நமது தனி இயக்கத்தை விட வேறு கதி இல்லை என்று எண்ணி இருந்த மக்களின் கருத்து இப்போது இரண்டு காரியங்களில் பிரவேசிக்க நேர்ந்துவிட்டதானது நமக்கு பலக் குறைவேயாகும்.

ஆனாலும் ஒன்றும் விசேஷமாய் முழுகிப்போய்விடவில்லை. ஆயிரக்கணக்கான வருஷங்களாய் ஏமாற்றப்பட்டு அழுத்தப்பட்டு கிடக்கிற மக்களுக்கு இந்த ஒரு சிறு தடையானது பிரமாதமான கெடுதி ஒன்றும் செய்துவிடாது. ஆனாலும் இவைகளுக்கு எல்லாம் காரணமாய் தேசத்தின் நிலை மிகுதியும் நாணயக் குறைவுள்ளதாகவும் பிறரை ஏமாற்றுவதன் மூலமே மற்றொருவர் வாழக்கூடியதாகவும் பொது வாழ்க்கை ஏற்பட்டுவிட்டது. பொய்யும் ஏமாற்றலுமே மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்களாயிருக்கும்போது யார்தான் என்ன செய்ய முடியும். உண்மை பேசுகிறவன் வாழ முடிவதில்லை. வாழ்க்கையை தியாகம் செய்யத் தயாராயிருந்து உண்மை பேசத் துணிகிறவர்கள் வெகு வெகு சொற்பமாயிருக்கிறார்கள். இவ்வியற்கைக்கு மகாத்மா காந்தி கூட சிற்சில சமயங்களில் தப்ப முடியாமல் திக்குமுக்காடி வருகிறார் என்றால் மற்றவர்களைச் சொல்லுவதில் பயனில்லை. எனவே பொறுமையையும் நம்பிக்கையையும் கைவிடாமல் 3,4 மாதங்களுக்கு விட்டுப் பார்ப்பதற்கு வேண்டிய தைரியத்தை ஆண்டவன் நமக்கு அருளட்டும். தலைவர்கள் என்போர்கள் தங்கள் சுயநலத்திற்காக நம்மை ஏமாற்றி இத்தீர்மானங்கள் செய்து கொண்டார்கள் என்று நினைக்கும்படி நடந்து கொண்டார்களானால் பின்னால் என்ன செய்வது என்பது எமக்குத் தெரியும். பின்னால் இன்னும் பலமாய் வேலை செய்ய இப்பொறுமை எமக்கு உதவும் என்றே நம்பி இருக்கிறேன். ஆதலால் காங்கிரசில் ஈடுபட்ட ஈடுபடுகிற மக்கள் நீங்கலாக ஆங்காங்குள்ள மற்றவர்கள் அவ்வவ் விடங்களில் உள்ள சுயமரியாதைச் சங்கங்களையும் பார்ப்பனரல்லாத வாலிப சங்கங்களையும் பலப்படுத்தி வைப்பதுடன் அவை இல்லாத இடங்களில் உடனே



tamilnavarasam.com

இவைகளை ஸ்தாபிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்காக இரண்டு மூன்று உழைப்பாளிகளையும் நியமித்து வெளியில் அனுப்பிக் கொடுக்கலாம் என்று தீர்மானித்திருக்கிறேன். எனது கூட்டு உழைப்பாளிகள் நம்பிக்கை இழந்துவிடாமல் தொடர்ந்து வேலை செய்து கொண்டிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது ஒரு சோதனை காலம் என்பதில் சந்தேகமில்லை. இச்சோதனைக்கு நாம் தப்பிப் பிழைக்க வேண்டுமே அல்லாமல் அதைரியம் கொள்ளக் கூடாது. உண்மைக்கு யோக்கியதை உண்டு என்பதை நம்ப வேண்டும். இன்னமும் எனது உடல் நலிவு முழுவதும் குணப்படவில்லை. ஆதலால் விரிவாய் எழுத இயலாததற்கு வருந்தி இதை முடிக்கிறேன்.

**ஈ.வெ.ரா.**

**குடி அரசு - தலையங்கம் - 10.07.1927**



# கோயமுத்தூர் டவுன் ஹாலில் மாபெருங்கூட்டம்

சகோதரர்களே!

என்னைப்பற்றி ஸ்ரீமான் ராமசாமி முதலியார் அதிகமாக கூறிவிட்டார். என்னை தங்களது இயக்கத்தின் தலைவர் என்றும் நான் சொல்லுகிறபடியே நடக்கப் போவதாகவும் சொன்னார். இவ்விஷயம் எனக்கு மிகவும் வெட்கத்தையும் பயத்தையும் கொடுக்கிறது. ஒரு காலத்திலாவது நான் தலைவனாய் இருந்ததே கிடையாது. தலைமைத்தனமும் எனக்குத் தெரியாது. அதற்குண்டான குணங்களும் என்னிடத்தில் இல்லை. நான் ஒரு தொண்டனாகவே இருந்து வர பிரியப்படுகிறேன். எனக்கு தொண்டு செய்வதில் அதிக ஆசை இருக்கிறது. ஆதலால் என்னை ஒழுங்கான வழியில் நடத்தி என்னிடம் சரியானபடி வேலை வாங்கிக்கொள்ளுங்கள். நேற்றைய மகாநாட்டில் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தார்களில் இஷ்டப்பட்டவர்கள் காங்கிரசில் சேரலாமென்பதாக ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. இவ்வித தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டிய அவசியமே நமக்கு ஏற்பட்டிருக்கவில்லை. தெ. இ. ந. உ. சங்கத்தாரில் தனிப்பட்ட நபர்கள் காங்கிரசில் சேர்வதை இச்சங்கத்தின் எந்த விதியும் தடுப்பதில்லை. காங்கிரசில் சேர்ந்தவர்களும் ஏற்கனவே இதிலிருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனபோதிலும் நம்முடன் சேர்ந்து உழைப்பதற்காக காங்கிரசிலிருந்து வருகிற சிலரைத் திருப்தி செய்யவும் இங்கிருந்து காங்கிரசுக்கு போகிற சிலருக்கு பயத்தை தெளிய வைக்கவும் இத்தீர்மானம் செய்யப்பட்டு இருக்கிறது. காங்கிரசின் யோக்கிதையே கெட்டுப்போயிருக்கும்-இந்தக் காலத்தில் காங்கிரஸ்காரன் என்று சொல்லிக் கொள்வதற்கே ஜனங்கள் வெட்கப்படும்-இந்தக்காலத்தில் நம்மவர்கள் காங்கிரசில் சேர்கிறேன் என்பது பரிகசிக்கத் தகுந்ததென்பதும் அதில் போய் ஒன்றும் செய்ய முடியாதென்பதும் எனது அபிப்பிராயமாதலால்தான், நான் அந்தத் தீர்மானத்திற்கு அனுகூலமாய் இல்லை என்று கூறினேன். பிராமணர்களுக்கு பயந்து கொண்டாவது காங்கிரஸ் பிராமண ஆதிக்கம் என்பதற்காகவாவது நான் அவ்விதம் சொல்லவில்லை. காங்கிரசின் அடிப்படை தத்துவமே பாமர மக்களுக்கு பயன்படாததும், விரோதமானதும் என்பது எனது முடிவு.



RangaRakes tamilnavarasam.com

மகாத்மா காந்தி காங்கிரசில் நான் இருந்ததற்கு காரணமெல்லாம் காங்கிரசின் பழய தத்துவங்களை எடுத்து எறிந்துவிட்டு அதனால் யேற்பட்ட கெடுதிகளையும் உடனே அழிக்க திட்டங்கள் போட்டுக் கொண்டு பாமர மக்களுக்கும் சிறப்பாக பார்ப்பனரல்லாதாருக்கும் நன்மை தரக்கூடிய திட்டங்களை மகாத்மா அதில் புகுத்தியதாலும் அவற்றால் நமக்கு நன்மை உண்டென்று நம்பியதாலும் நான் அதில் ஈடுபட்டு உழைத்து வந்தேன். கடைசியாக பார்ப்பன சூழ்ச்சியே வெற்றி பெற்று காங்கிரசின் பொய் வேஷம் வெளியாய் விட்டது.

இப்பொழுது மறுபடியும் மகாத்மாவினால் செய்ய முடியாத காரியத்தை நாங்கள் செய்து விடுகிறோம் எங்களுக்கு நீங்கள் கொஞ்சம் உதவியாக மட்டில் இருங்கள் என்று ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார், வரதராஜுலு நாயுடு, கலியாணசுந்தர முதலியார் முதலியவர்கள் உங்களை அழைக்கிறார் கள். அதற்கு தடையாக இருப்பதற்கு எனக்கு இஷ்டமில்லை. உங்கள் புத்தியைக் கொண்டே நீங்கள் யோசித்துப் பாருங்கள். நான் கொஞ்ச காலத் திற்கு யாரையும் தடுக்காமல் விட்டு விடப்போகிறேன். காங்கிரசின் யோக்கிய தையை தெரிந்துகொண்டு பிறகு வெளியே வரட்டும், காங்கிரசினால் உத்தி யோகம் பெற்று விடலாம் என்பதினாலேயே தேசத்துக்கு ஒரு நன்மையும் விளைந்துவிடாது.

யார் மந்திரி வேலை பார்ப்பதாய் இருந்தாலும் நமது லெக்ஷியம் நிறைவேறிவிடாது. பனகால் ராஜாவும் ஆறு வருடம் மந்திரி வேலை பார்த் தார். அதன் பயனாய் அரிசி விலை ஒரு தம்படியாவது குறைந்து போக வில்லை. அதுபோலவே டாக்டர் சுப்பராயனும் மந்திரி வேலை பார்க்கிறார். அரிசிவிலையொன்றும் யேறிப் போகவுமில்லை. பனகால் ராஜா செய்த வேலையைத்தான் சுப்பராயனும் செய்துவருகிறார். ஆனால் பனகால் ராஜா பார்ப்பனரல்லாதாருக்கு உத்தியோகம் கொடுத்தார். டாக்டர் சுப்பராயனோ பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் கொடுத்து வருகிறார். இதற்கு காரணம் பனகால் ராஜாவை பார்ப்பனரல்லாதவர்கள் மந்திரியாக்கினார்கள் அவருடைய மந்திரி ஸ்தானம் நிலைக்க பார்ப்பனரல்லாதார்கள் உதவி செய்து வந்தார்கள். அதனால் பார்ப்பனரல்லாதவர்கட்கு அவர் உத்தியோகம் கொடுத்து வந்தார். டாக்டர் சுப்பராயனோ பார்ப்பனர்கள் தயவால் மந்திரி யானார். அவருடைய மந்திரி ஸ்தானம் நிலைக்க பார்ப்பனர்கள் இரவும் பகலும் பாடுபட்டு வருகிறார்கள். அதனால் பார்ப்பனர்களுக்கே உத்தி யோகம் கொடுக்க வேண்டியது டாக்டர். சுப்பராயனின் கடமையாய் போய் விட்டது. இம்மாதிரி கொள்கையுள்ள மந்திரி ஸ்தானத்திற்கு யார் வந்தாலும் இப்படித்தான் செய்ய முடியும். மகாத்மா காந்தி வந்தாலும் இப்படித்தான் முடியும். எனவே மந்திரி பதவியே நமது லக்ஷியமல்ல. நமது மக்களுக்கு சுயமரியாதைதான் பிரதானம். அதற்காக பாடுபடுவதற்கு யார் ஒப்புக்கொண்ட போதிலும் அவர்களுடைய மற்ற அபிப்பிராய பேதங்களை பாராட்டாமல்



நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். சுயமரியாதைதான் சுயராஜ்யத்திற்கு வழியே அல்லாமல் மந்திரி முதலிய பதவிகள் அல்ல. நமக்குள்ளிருக்கும் சுயமரியாதை அற்ற தன்மையை சற்று யோசித்துப் பாருங்கள். நம்மில் சுயராஜ்யமென்று பேசிக் கொண்டிருக்கிற பெரிய பெரிய மிராசுதாரர்கள் எல்லாம் பிரபுக்கள் எல்லாம் பார்ப்பனர்களின் காலில் விழுந்து கும்பிட்டு அவர்கள் கால்விரலுக்கு முத்தம் கொடுக்கிறவர்களாகவே இருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியும் நானும் பார்ப்பன விஷயங்களைப் பற்றி மிகைப்படுத்தி சொல்லுகிறோமென்று எங்கள் மீது பழிசுமத்துகிறவர்கள் கூட பார்ப்பனர் காலில் விழுந்துகொண்டுதான் இருக்கிறார்கள். பார்ப்பனர் தவிர வேறு வீட்டில் சாப்பிடுவதில்லை என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நேற்றய தினம் இந்த ஊருக்கு வந்த சங்கராச்சாரி என்ற பார்ப்பனருக்கு எத்தனையோ பிரபுகள் அவர் காலில் விழுந்து 1000, 2000 என்று பணத்தை அவர் காலில் கொட்டி அவர் காலைக் கழுவிய தண்ணீரை பாத தீர்த்தம் என்பதாக வணக்கத்துடன் வாங்கி தலையில் தெளித்துக் கொண்டதுமல்லாமல் வாயிலும் ஊற்றிக் கொண்டார்கள். இந்த முட்டாள் தனமானது 500 வருடங்களுக்கு முன்னால் கிருஸ்தவ சமூகத்தில் இருந்த அதாவது "பாவ மன்னிப்பு டிக்கட்டு விற்கிறதான" அவரவர்கள் பாபத்திற்கு தகுந்தபடி விலைபோட்டு பணம் வாங்கிக்கொண்டு விற்று வந்த மூட நம்பிக்கையை விட முட்டாள்தனமாக இருக்கிறது. இந்த முட்டாள்தனமும், மூட நம்பிக்கை யும் போன பிறகுதான் கிருஸ்தவ நாட்டிற்கும் ஆட்சிபுரியும் சக்தி வந்தது. அதன் பிறகுதான் அது பெரும்பான்மையான தேசத்தை ஆளத்தலைப் பட்டது.

அதுபோலவே நமது மூட நம்பிக்கையும் முட்டாள்தனமும் நம்மை விட்டு விலகி சுயமரியாதையை அடைந்த பிறகுதான் நாம் ஆட்சி புரிவதற்கு உரியவர்களாவோம். நமது நாட்டில் உயர்ந்த ஜாதி என்கிற கொள்கை ஒழிந்து, தாழ்ந்த ஜாதி என்கிற கொள்கை அழிந்துபட்டபின்தான் "சுயமரியாதையை" நினைப்பதற்கு யோக்கியதை உண்டு. ஒரு மனிதனைப் பார்த்து பிராமணன் என்று சொல்வதினாலேயே நாம் தாழ்ந்த ஜாதி என்பதும் சூத்திரன் என்பதும் பிராமணனது வைப்பாட்டி மக்கள் என்பதையும் நாமே ஒப்புக் கொண்டவர் களாகிறோம். இதைப் பற்றிக் கவலையில்லாத ஜனங்களுக்கு சுயராஜ்யம் எதற்காக, காங்கிரஸ் எதற்காக, சங்கங்கள் எதற்காக, பொது நலச்சேவை என்கிற வேஷங்கள் எதற்காக, பொய்யான உத்தியோக சண்டையின் பயனாய் இப்பேர்ப்பட்ட இழிவான தத்துவங்கள் எல்லாம் நிலைபெற இடமேற்பட்டு விடுகிறது. மற்ற மதஸ்தர்களைப் பார்த்தாவது நமக்கு புத்திவர வேண்டாமா? உலகத்தில் உள்ள எந்த மதத்திலாவது பிறவியின் காரணமாக ஒருவன் காலில் ஒருவன் விழுகிறானா? ஒருவனுக்கொருவன் வைப்பாட்டி மகன் என்று ஒப்புக்கொள்ளுகிறானா? இம்மாதிரி கொடுமைகள் எல்லாம் தீர்வதற்குக் காங்கிரசில் இடமிருக்கிறதா? அல்லது நமது சங்கத்தில் இடமிருக்கிறதா



RangaRakes
tamilnavarasam.com

என்பதைப்பற்றி யோசித்துப்பாருங்கள். உண்மையான இடத்தை விட்டு விட்டு நமது குறைகள் நீங்குவதற்கு காங்கிரஸ் போன்ற கற்சுவற்றில் முட்டிக் கொள்வதில் யாதொரு பயனுமில்லை.

*குறிப்பு:- கோயமுத்தூர் டவுன்ஹாலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு. முனுசாமி நாயுடு தலைமையில் ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 10.07.1927**



RangaRakes

# சத்தியாக்கிரகம்

சத்தியாகிரகம் என்பது பற்றி 3, 4 வாரங்களுக்கு முன் ஒரு சிறு குறிப்பு எழுதி இருந்தோம். அதைப் பார்த்து பலர் வருத்தப்பட்டார்கள். மற்ற பத்திரிகைகாரர்கள் யாரும் அதை கொஞ்சமும் கவனிக்காமல் சத்தியாக்கிரகம் சத்தியாக்கிரகம் என்பதாக பெரும் தலைப்பு இட்டு எழுதிவந்தார்கள். நாகபுரி ஆயுத சத்தியாக்கிரகம் ஸ்ரீ அவாரி ஜயிலுக்கு போனதும் நிறுத்தப்பட்டுப் போய்விட்டது. அதன் பலனாய் நமது நாட்டு சத்தியாக்கிரகப் பேச்சும் நிறுத்தப்பட்டுப் போய் விட்டது. இம்மாதிரி பொறுப்பில்லாமல் நடக்கும் காரியங்களால் நமது நாட்டுக்கு வரும் கெடுதிகளை பலர் உணர்வதில்லை. தொண்டர்கள் என்போர்களின் நிலைதான் இப்படி என்றாலும் பத்திராதிபர்களின் யோக்கியதை இதைவிட மோசமானதாயிருப்பதோடு இப்பேர்பட்ட பொறுப்பற்ற சங்கதியை அனுமதிப்பதற்கு அனுகூலமாகவே இருந்து வருகிறது. இனியாவது தங்கள் கடனை உணர்வார்களாக.

**குடி அரசு - குறிப்புரை - 10.07.1927**



tamilnavarasam.com

# கோவை மகாநாடு

தலைவருக்கு :- கோவை மகாநாடு ஜில்லா மகாநாடாக கூட்டுவதா யிருந்த காலத்தில் முதல் முதல்ஸ்ரீமான் குமாரசாமிரெட்டியாரவர்கள் பெயரை வரவேற்புக் கமிட்டிக்கு சொன்னவுடன் வெகு குதூகலமாக ஏற்றுக்கொண் டார்கள் என்றும், ஸ்ரீமான்கள் ரெட்டியாரவர்களுக்கு எழுதினவுடன் தேசத் திற்கு ஒரு மனிதன் செய்ய வேண்டிய கடனைச்செய்யும்படி கூப்பிடும் போது தான் எவ்விதத்திலும் ஆக்ஷேபனை சொல்லுவதில்லை என்று சொல்லி ஒப்புக்கொண்டார்கள். மறுபடி இது மாகாண மகாநாடாய் மாறினவுடன் ஸ்ரீமான் ரெட்டியாரவர்கள்தான் ஜில்லா மகாநாடென்று ஒப்புக் கொண்டதா கவும் இப்போது மாகாண மகாநாடாய்விட்டதால் வேறு யாரையாவது தெரிந்தெடுத்துக்கொள்ளும்படி எழுதிவிட்டாறென்றும் மறுபடி சென்னை தென்னிந்திய நலஉரிமைச்சங்கமும் வரவேற்புக் கமிட்டியும் ஸ்ரீமான் ரெட்டி யாரவர்களையே வேண்டிக்கொண்டதாகவும், அவர் யாதொரு தடையும் சொல்லாமல் ஒப்புக் கொண்டாறென்றும் சட்டசபையில் ஸ்ரீமான் ரெட்டியார் அவர்கள் பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளை வெட்டவெளியாக்கிவிட்ட வீரர் என்றும் மற்றவர்களைப் போல் அவர் படாடோபம் செய்து கொள்ளாமல் அடக்கத்திலிருப்பவர் என்றும் இம்மகாநாடு நடத்தும் விஷயத்தில் யாதொரு பிரயாசையும் எடுத்துக் கொள்ளாமல் தனது புன்னகையைக் கொண்டே எல்லாக் காரியங்களையும் சாதித்து விட்டார் என்றும், அவர் இளமை யிலிருந்தே பொது நன்மையில் ஈடுபட்டு வந்தவர் என்றும், உதாரணமாக பங்காள பிரிவினை கிளர்ச்சி காலத்தில் தூத்துக்குடி ஸ்டீம் நாவிகேசன் கம்பெனிக்கு எவ்வளவோ பாடுபட்டு லக்ஷக்கணக்கான திரவியம் சேர்த்துக் கொடுத்து அழைத்து வந்தவர்கள் என்றும் மகாநாட்டில் யாருக்கும் எவ்வித குறையுமின்றி எவ்வித அபிப்பிராயபேதமும்இன்றி தானும் யாருக்கும் அதிர்ப்தியாக நடந்து கொண்டதாயில்லாமல் நடத்தியது மிகவும் குறிப்பிடத் தக்கது என்றும், எவ்வளவோ தடபுடல் வாதப்பிரதிவாதம் நடக்கும் என்று எண்ணியிருந்த மகாநாடானது ஒரு மணி சப்தம் கூட இல்லாமல் நிறைவேற் றிக் கொடுத்தார் என்றும் சொல்லி முடித்து வரவேற்பு கமிட்டியார் எடுத்துக் கொண்ட சிரமம் மிகவும் பாராட்டத்தக்கதென்றும்,காரியத்தரிசிகள் ஒவ்வொரு வரும் பெரிய பெரிய பிரபுக்களும் மிராசுதார்களும் தக்க பொறுப் புள்ளவர்களுமானவர்கள் என்றும், அவர்களில் ஸ்ரீமான் சி.எஸ். இரத்தின சபாபதி முதலியார் தன்னுடைய உடல் நலிவோடு ஊர் ஊராய்



அலைந்ததல்லாமல் தனது வீட்டையும் காலி செய்து விட்டு விட்டு அவர் எடுத்துக் கொண்ட சிரமம் மிகவும் அதிகமானதென்றும் ராஜீத் தீர்மானத் திற்காகவேண்டி ஒவ்வொரு தலைவர்கள் வீட்டுக்கும் ஒவ்வொரு உழைப்பா ளிகள் ஜாகைக்கும் தூது நடந்தது கணக்கு வழக்கு இல்லை என்றும், தீர்மான வாசகங்கள் எல்லாம் அவர் கைப்படவே சுமார் 20, 30 தடவை எழுதி திருத்தினார் என்றும் அவர் பெரிய ராஜதந்திரி என்றும், அடுத்த காரியதரிசி ஸ்ரீமான் பி.எஸ்.ஜி. நாயுடு அண்டு சன்ஸ் வெங்கிடசாமி நாயிடு அவர்கள் ஒரு பெரிய மில் சொந்தக்காரர் என்றும் பெரிய பெரிய தர்மங்கள் எல்லாம் செய்தவர் என்றும் அவர் மகாநாடு விஷயத்தில் சகோதரர்களுடன் எவ்வ ளவோ கஷ்டப்பட்டார் என்றும் எவ்வளவோ ஆசாரங்களாய் இருந்தவர்கள் இப்பொழுது பெரிய சீர்திருத்தக்காரரானதோடு இப்பேர்ப்பட்ட பொதுக் காரியங்களுக்கு உழைக் கும் விஷயத்தில் யாரையும் விட முன்னுக்கு தானா கவே வந்து தாராளமாய் உழைக்கிறார் என்றும், மற்றொரு காரியதரிசியான ஸ்ரீமான் பி.எஸ். சாத்தப்ப செட்டியார் அவர்கள் அனேக மில்லுக்கு சொந்தக் காரர் என்றும் அவரது தகப்பனார் ஸ்ரீமான் எஸ். ராவ் பகதூர் பி. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் மிகுந்த தெய்வபக்தியும் பிராமண விசுவாசமும் எல்லோருக்கும் நல்லவர் களாய் இருக்க வேண்டும் என்கின்ற தாட்சியண்ய சுபாவமும் உடையவர். இம்மகாநாடு நடைபெறுவதால் பார்ப்பனர்களுக்கு வருத்தம் வருமோ என்பதாக நினைத்து தனது குமாரரை இதில் அதிகமாக பிரவேசிக்கக் கூடாது என்று கருதி மகாநாடு விஷயத்தில் அதிக முயற்சி எடுத்துக் கொள்ளாதிருக்கச் செய்தும் ஸ்ரீமான் சாத்தப்ப செட்டியாரவர்கள் தனது அருமைத் தகப்பனாருக்கு தக்க சமாதானமும் சொல்லி மகாநாட்டுப் பண வசூலுக்கு தானே முக்கிய காரணஸ்தராயிருந்ததல்லாமல் முக்கிய தலைவர்களான ஸ்ரீமான்கள் பணக்கால் ராஜா, சர்.பாத்ரோ, முனிசாமி நாயுடு, ராமசாமி முதலி யார் முதலிய கனவான்களுக்கும் தனவைசிய நாட்டிலிருந்து வந்த எல்லா பிரதிநிதிகளுக்கும் தனது வீட்டிலேயே ஜாகை வைத்துக் கொடுத்து அவர்களுக்கு வேண்டிய சப்ளை முதலியவை செய்ததோடு மகாநாடு ராஜி தீர்மானத்திலும் தான் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டு அதாவது ஒருக்கால் தீர்மானத்தை யாராவது எதிர்ப்பதாயிருந்தாலும் அதற் கும் தயாராய் காங்கிரஸ் பிரவேச அனுமதித் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு மெஜாரிட்டி சேர்த்துக் கொண்டும் ஒரு வார காலமாய் மகாநாட்டு வேலை யைத் தவிர வேறு ஒரு வேலையையும் கவனிக்காமல் வேலை செய்ததானது மகாநாட்டுக்கு எவ்வளவோ உதவியா யிருந்தது. அவரது தகப்பனார் ஸ்ரீமான் பி.சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் மகாநாட்டுக்கு வர சவுகரியப்படா விட்டாலும் ஒவ்வொரு விஷயமும் ஒழுக்கமாய் நடைபெற வேண்டுமென்று எடுத்துக் கொண்ட கவலையும் முயற்சியும் மிகவும் குறிப்பிடத்தக்கது. மற்றொரு காரியதரிசி ஸ்ரீமான் வி. அருணாசலம் செட்டியார் அவர்கள் பிரபல வியாபாரியும் முனிசிபல் வைஸ் சேர்மேனுமாவார். அவர் தானும் தனது சகோதரர்களும் பணவசூலுக்கு ஊர் ஊராய் திரிந்ததல்லாமல் தங்களது வீடு,



RangaRakes
tamilnavarasam.com

கடை மற்ற கட்டடம் முதலியவை களையும் ஒழித்துக் கொடுத்து கடிதப் போக்குவரத்து, மகாநாட்டுக் காரியா லயப் பொறுப்பு, அச்சு விஷயம் மற்றும் சகல காரியங்களையும் அவர் குடும்பமே மேற்போட்டுக் கொண்டு செய்தது. மற்றொரு காரியதரிசியான ஸ்ரீமான் செட்டிபாளையம் நஞ்சப்ப கவுண்டர் ஒரு பெரிய மிராசுதாரரும் கோயமுத்தூர் ஜில்லா போர்ட் வைஸ் பிரசிடெண்டு மாவார். இவர் எடுத்துக் கொண்ட பொறுப்பு மிகவும் குறிப்பிடத்தக்கது. பாத்திரம் வகைகள் சேகரிப்பதும் சமையல் ஒழுங்குகளை கவனிப்பதுமான வேலைகளை மிகுதியும் கவனித்து வந்தார். மற்றொரு காரியதரிசி ஸ்ரீமான் நஞ்சப்ப கவுண் டர் அவர்கள் முனிசிபல் கவுன்சிலரும் பாங்கரும் ஆவர். இவரும் மகாநாட்டு பிரதிநிதிகளை ஜாகை ஜாகையாய் கவனிப்பதும் புகார்கள் இல்லாமல் வேலை நடக்கத்தக்க மாதிரியுமாய் ஆங்காங்கு மேற்பார்வைக்கு பார்த்ததும் மிகவும் குறிப்பிடத்தக்கது. கோவைத் தலைவர் ஸ்ரீமான் வேரிவாட செட்டியார் அவர்களும் ஒவ்வொரு காரியத்தையும் மேற்பார்வை பார்த்து வந்தார்கள். ஸ்ரீமான்கள் பரமேஸ்வரம் செட்டியார் பீமைய செட்டியார், பழனிசாமி நாயுடு சி.வி. சுப்ப செட்டியார், செங்கோட்டய்யா, கிருஷ்ணசாமி பிள்ளை முதலிய அனேக வரவேற்புக் கமிட்டி கனவான்கள் எடுத்துக் கொண்ட முயற்சி, மகாநாட்டு வெற்றிக்கு ஜீவாதாரமானது என்றே சொல்ல வேண்டும் என்றும் சொல்லி முடித்துவிட்டு மகாநாடு தொண்டர் தலைவர் ஸ்ரீமான் பொன்னைய கவுடர் அவர்களைப்பற்றியும் சொல்லும் போது அவர் ஒரு பெரிய செல்வந்த ரென்றும் மிகப்பொறுமையுள்ள வரென்றும் தனது புன்னகையாலேயே எல்லாக்காரியத்தையும் சாதிக்கக் கூடியவர் என்றும் அவரே கேப்டனாயில் லாதவரை வாலண்டியர்கள் இவ்வளவு சந்தோஷமாகவும் குதூகலத்துடனும் வேலை செய்திருக்க மாட்டார்கள் என்றும் சொல்லிவிட்டு மகாநாட்டுக்கு 3 நாளாய் கொட்டகை உதவிய ஸ்ரீமான் வின்செண்டு துரை அவர்களுக்கு நன்றிசெலுத்தும்போது ஸ்ரீமான் நாயக்கர் சொன்னதாவது,

இந்த மகாநாட்டுக்கு உதவி செய்தவர்களில் பேருதவி செய்தவர்கள் இந்தக்கொட்டகை உதவின ஸ்ரீமான் வின்செண்டு துரையே ஆகும் என்றும் இந்த கொட்டகையை மகாநாட்டுக்காக கேள்ப்பதற்கு நானும் ஸ்ரீமான் ரத்தின சபாபதி முதலியாரும் போய் கேட்டதும் யாதொரு பதிலும் சொல்லாமல் உடனே ஒப்புக்கொண்டார் என்றும், ஆனால் நாம் கேள்ப்பதற்கு முன்னா லேயே ஒரு நாடகக் கம்பெனியாருக்கு தருவதாய் பேசி இருந்தும் அக்கம் பினியாரும் இந்த தேதிகளில் நாடகம் நடத்துவதாய் சுவர் விளம்பரங்கள் ஒட்டி இருந்தும் அவர்களுக்கு சமாதானம் சொல்லிக்கொள்ளலாம் என்கிற தைரியத்தின் மேல் கொடுத்ததாகவும், கொட்டகை கொடுத்ததோடல்லாமல் நம்மிஷ்டப்படியெல்லாம் இதன் இணைப்புகளை மாற்றிக்கொள்ள சம்மதித்த தோடு கொட்டகை அலங்காரம் முழுவதும் அவர்களே செய்து கொடுத்து வின்செண்ட்துரை சகோதரர்கள் இருவரும் தொண்டர்கள் போலவே



RangaRakes

வேண்டிய உதவி செய்தார்கள் என்றும், இந்த கொட்டகை கிடைக்காவிட்டால் 500 ரூ. செலவழித்தாலும் இவ்வளவு சவுகரியம் கிடைக்காதென்றும் அது மாத்திரமல்லாமல் மகாநாடு உபசரணைத் தலைவர் வாலிப சங்க உபசரணை தலைவர் முதலியவர்கள் பிரசங்கங்களும் சுவர் விளம்பரம் துண்டு விளம் பரம் மகாநாட்டு நடவடிக்கைகள் முதலிய பலவித அச்சு வேலைகளையும் இரவும் பகலாய் கஷ்டப்பட்டு உடனுக்குடன் செய்து கொடுத்தார்கள் என்றும் அவர்களது அன்பான வார்த்தைகளும் அவசரத்திற்கேற்றப்படி நடந்து கொண்ட உதவியும் மிகவும் மதிக்கத்தக்கது என்றும் பேசினார்.

*குறிப்பு : கோவையில் 2, 3-07-1927 இரு நாள்களில் நடைபெற்ற மாகாண பார்ப்பனரல்லாதார் மகாநாடு-சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 17.07.1927**



tamilnavarasam.com

# ஈரோட்டில் புதிய ஹைஸ்கூல்

**– சித்திரபுத்திரன்**

ஈரோட்டில் மகாஜன ஹைஸ்கூல் என்பதாக ஒரு பள்ளிக்கூடம் பல பெயர்களுடன் சுமார் 40 வருஷங்களுக்கு மேலாகவே இருந்து வருகிறது. இது இருக்கும் போதே லண்டன் மிஷின் என்கிற ஒரு கிருஸ்தவ மத ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் மேல்கொண்டு ஒரு ஹைஸ்கூலை சுமார் 20 வருஷங்களுக்கு முன்பாக ஆரம்பித்தர்கள். அந்த மிஷின்காரர் தங்களது செல்வாக்கால் கல்வி இலாக அதிகாரிகளையும் நீதிநிர்வாக இலாகா அதிகாரி களையும் கொண்டு தங்களாலான உபத்திரவமெல்லாம் செய்து பார்த்தும் மேற் படி மகாஜன ஹைஸ்கூலை அசைக்க முடியவே இல்லை. சில பையன் களுக்கு சம்பளத்தைக் குறைத்தார்கள். பையன்கள் பெற்றோர்களுக்கு அரசாங்கத்தில் சிபார்சு செய்து உத்தியோகம் வாங்கிக்கொடுப்பதும் கௌரவ உத்தியோகம் செய்வித்துக் கொடுப்பதும், ஆண்பிள்ளைகள் வகுப்புக்கு பெண்களை உபாத்தியாயர்களாக வைப்பதும், உள்ளூர்கட்சி பிரதிகட்சிகளில் கலந்து கொண்டு கட்சிக்கு விரோதமாய் மற்றொரு கட்சிக்கு அனுகூலமாக உண்மையற்ற விஷயங்களை கோர்டில் சாட்சி சொல்லுவதும் இன்னும் எவ்வளவோ கூடா ஒழுக்கமான காரியங்களை எல்லாம் செய்து பார்த்தார்கள்.

எவ்வளவு செய்தும் மகாஜன ஸ்கூலை ஒழிக்க முடியாமல் போன தோடு கடைசியாய் நஷ்டம் தாங்கமுடியாமல் லண்டன் மிஷன்காரர்களே தங்களது ஹைஸ்கூலை எடுத்துவிட நேர்ந்தது. இதன் பலனாக அவர்கள் கட்டடம் பள்ளிக்கூட சாமான் இவைகள் உபயோகமில்லாமல் போனதோடு சில ஆசாமிகளுக்கும் வேலையில்லாமல் போக நேர்ந்து விட்டது. இதற்காக வேண்டி அந்த லண்டன் மிஷன் நிர்வாகிகள் ஒரு தோது கண்டு பிடித்தார்கள். அது என்னவென்றால் ஈரோடு முனிசிபாலிட்டி தலையில் இதைப் போட்டு விட்டால் தங்கள் கட்டடத்திற்கும் வாடகை வரும், தங்கள் சாமானுக்கும் நல்ல விலை கிடைக்கும். தங்கள் மதத்தில் சேர்ந்து கொண்ட ஆசாமிகளுக்கும் வேலை கொடுக்கலாம் என்பதாக எண்ணி மெல்ல முனிசிபல் சேர்மெனைப் பிடித்தார்கள். ஈரோடு முனிசிபல் சேர்மென் சங்கதியைப் பற்றி "குடி அரசு" இதற்கு முன் எத்தனையோ தடவை எழுதி எழுதி பேனாவெல்லாம் துர்நாற் றம் வீசும்படியாயிருக்கிறது என்பது உலகமே அறியும். அப்பேர்ப்பட்ட ஒரு



RangaRakes

பெரிய செல்வாக்குள்ள மிஷனரி கிடைத்து விட்டால் பிறகு அவர்க்கென்ன குறைவு. அச்சேர்மெனின் சகல அக்கிரமங் களும் தான் அடிக்கடி கலெக்டர், ஸ்தல ஸ்தாபன இலாகா நிர்வாகிகள் காரியஸ் தர்கள் முதலியவர்களுக்கு சிபார்சு செய்து வந்ததோடல்லாமல் கவுன்சிலில் நடந்த நாணயக் குறைவான காரியங்களுக்கும் உதவியாயிருந்து நியாய ஸ்தலங்களில் கூட உண்மைக்கு மாறாக சாட்சி முதலியவைகளும் சொல்ல அவருடைய விஷயங்களை நிவர்த்தித்து இவ்வளவுக்கும் பிரதிப் பிரயோ ஜனமாகப் பள்ளிக்கூடத்தை முனிசிபாலிட்டியார் நடத்தும்படி செய்து கொண்டு கட்டடத்தையும் சாமான் களையும் முனிசிபாலிட்டியார் தலையி லேயே கட்டி தனது ஆசாமிகளுக்கும் உத்தியோகம் வாங்கிக் கொடுத்து விட்டார். இதன் மூலம் சேர்மெனுக்கு நஷ்டம் உண்டா? ஒரு தம்படியும் கிடையாது. பின்னும் அதிலும் கொஞ்சம் உத்தியோகம் நியமனமேற் பட்டிருக்கிறது. அதனால் லாபம் கிடைக்குமே யல்லாமல் நஷ்டமில்லை. நஷ்டம் ஏற்படுவதெல்லாம் ஊரார் வரிபணமே தவிர வேறில்லை. ஆதலால் இந்த விஷயம் முனிசிபல் கவுன்சிலில் பாசானதற்கு காரணம் பொது ஜனங்களுக்கு சொல்லவேண்டியதில்லை. மொத்தம் 20 கவுன்சிலர்களில் 12 கவுன்சிலர்கள் இந்த சேர்மென் அக் கிரமத்தையும் மிஷினரி கவுன்சிலர் அக்கிரமத்தையும் அவர் சிபார்சால் கலெக்டர் முதலிய அதிகாரிகளின் அக்கிரமத்தையும் சகிக்க மாட்டாமல் தங்கள் சுயமரியாதையை உத்தேசித்து கவுன்சிலர் பதவியை ராஜீனாமா செய்துவிட்டு வந்துவிட்டார்கள். அதற்காக நடந்த மறு தேர்தல்களில் சேர்மென் இஷ்டப்படி அவரால் அழைக்கப்பட்டவர்களே வந்து சேர்ந் தார்கள்.

மெஜாரிட்டியாராகிய 12 கவுன்சிலர்கள் இருக்கும்போதே நாணயக் குறைவுகள் அக்கிரமங்கள் முதலியன நடக்கும்போது, சேர்மனின் கைகள், கால்கள், வால்கள் போன்ற கவுன்சிலர்கள் இருக்கும்போது இந்த தீர்மானம் நிறைவேறுவது அதிசயமாகுமா? ஒருக் காலும் அதிசயமாகாது.

பிறகு, இத்தீர்மானம் எஜுகேசன் கவுன்சிலில் தோற்றுப்போயும் அதற்கு மேல் மிஷினரி துரை சிபார்சு பிடித்துவிட்டார்கள். மகாஜன ஹை ஸ்கூல் நிர்வாகிகள் படிப்பு மந்திரியாகிய டாக்டர். சுப்பராயன் அவர்களை தனி முறையில் பேட்டி கண்டார்கள். அவர் ஆகட்டும் சாதித்துவிடுகிறேன், வேறு பள்ளிக்கூடத்திற்கு அனுமதி கொடுப்பதில்லையென்று சொன்னதாக திருப்தியுடன் திரும்பி வந்துவிட்டார்கள். கடைசியாக துரை சிபார்சுப்படி 4-வது 5-வது 6-வது பாரங்கள் ஒரே அடியாய் துவக்கும்படி மந்திரி உத்தரவு செய்து விட்டார். அவர் என்ன செய்வார்; பாவம்! சேர்மென் அதற்குத்தகுந்த ஆளை சிபார்சாகப் பிடித்துகொண்டு போனால் மந்திரி பேசாமல் உத்தரவு போட்டுத் தானே ஆக வேண்டும். அதுபோல் உத்தரவு வந்ததும் பள்ளிக் கூடத்தில் பிள்ளைகளை சேர்ப்பதில் சேர்மென் பிள்ளைகள் வேட்டையாட ஆரம்பித்தார். சம்பளம் குறைப்பதாய் சொன்னார். பூரா சம்பளம் தள்ளி



tamilnavarasam.com

விடுவதாகச் சொன்னார். சாப்பாடு போடுவதாக சொன்னார். நாய் அடிப்ப தற்கு ஒரு நாய்க்கு இவ்வளவு என்று கூலி கொடுப்பதுபோல் ஒரு பிள்ளை யைக் கொண்டுவந்து சேர்த்தால் இவ்வளவு கூலி என்று சொன்னார்; பிள்ளை கொண்டு வருபவருக்கு வாத்தியார் வேலை கொடுப்பதாகச் சொன்னார். தானும் இரவில் மோட்டார் போட்டுக் கொண்டு கிராமம் கிராமமாகச் சுற்றினார். கடைசியாக வகுப்பு ஒன்றுக்கு ஒன்று, இரண்டு, மூன்று பெஞ்சுகள் நிறையும்படி பிள்ளைகள் சேர்க்கப்பட்டார்கள். இந்த வேட்டையைப் பார்த்து சகிக்க மாட்டாமல் மகாஜன ஹைஸ்கூல் நிர்வாகத் தலைவர் கவர்மெண்டுக்கு ரிப்போர்ட் செய்து சர்க்காரின் கல்வி இலாக்கா சட்டங்களை எடுத்துக்காட்டிய பின்பு 4-வது, 5-வது பாரங்களை எடுத்துவிடும்படி சேர்மெனுக்கு உத்தரவு வந்திருப்பதாகத் தெரிகிறது. ஒரு சேர்மெனும் ஒரு மிஷினும் லாப மடைவ தற்கு ஊரார் பணம் எவ்வளவு நஷ்டமாவது? ஒழுங்காக நடைபெறும் பள்ளிக்கூடம் எவ்வளவு கஷ்டப்படுவது என்பது யோசித்துப் பார்ப்ப வர்களுக்கு விளங்காமல் போகாது.

மகாஜன ஹைஸ்கூல் நிர்வாகம் சரியாயில்லை. ஆதலால், இன்னும் ஒரு பள்ளிக்கூடம் வேண்டுமென்று சேர்மெனும், மிஷின் துரையும் பல இடங் களில் சொன்னதாகப் பிரஸ்தாபம். அப்படி சொல்லியிருந்தால் அது சுத்தப் புரட்டு என்றே சொல்ல வேண்டும்.

மகாஜன ஹைஸ்கூல் நிர்வாகம் சரியல்ல என்பது உண்மையானால் மேலே சொன்ன முறைப்படி எவ்வளவோ சௌகரியங்களுடன் லண்டன் மிஷன்காரர்கள் 20 ௵ காலம் பள்ளிக்கூடம் நடத்தினார்களே அப் பொழுது ஏன் பிள்ளைகள் அதில் போதுமானபடி போய் சேர்ந்திருக்கக் கூடாது? அதை ஏன் மிஷன்காரர்கள் எடுக்க நேரிட்டது? இவர்கள் இதற்கு என்ன பதில் சொல்லுவார்கள்? இனிமேலாவது ஊர் மகாஜனங்களுக்கு நல்லுணர்ச்சி ஏற்பட்டு இப்பேர்ப்பட்ட அக்கிரமங்களும், நஷ்டங்களும் நடக்காமல் பார்த்துக் கொள்வார்களா?

**குடி அரசு - கட்டுரை - 17.07.1927**



# நமது வேலை

“குடி அரசு” பத்திரிகை தோன்றி 27 மாதங்கள் ஆகின்ற தெனினும் அதன் மூலம் தேசத்திற்கும் சமூகத்திற்கும் நமக்கு சரி என்று தோன்றிய வழியில் நம்மால் கூடிய தொண்டை ஆற்றி வந்திருக்கிறோம் எனினும் செய்யவேண்டிய வேலை எவ்வளவோ பாக்கி இருக்கிறது. முன் ஒரு சமயம் நாம் எழுதியதுபோல் “குடி அரசு” பத்திரிகை வேலை மாத்திரம் அல்லாமல் அதன் கொள்கையைப் பரப்ப மக்கள் மனதில் பதியச் செய்ய ஊர் ஊராய் திரிந்து பிரசாரமும் செய்ய வேண்டிய பொறுப்பு இனியும் எவ்வளவோ மடங்கு அதிகமாயிருந்து வருகிறது. கோவை மகாநாட்டுத் தீர்மானங்களின் மூலம் பார்ப்பனரல்லாதாருக்குள் இனி அபிப்பிராய பேதம் இருக்காது என்றும், பார்ப்பனரல்லாத தலைவர்கள் என்போர்களும் பார்ப்பனரல்லாத பத்திரிகைகளும் நமது கொள்கைகளை பிரசாரம் செய்யும் என்றும், நமக்கும் போதிய ஓய்வு கிடைக்கும் என்றும், பல நண்பர்கள் கருதினார்கள். இப்போது அவைகள் ஒரு வினாடி கனவு போலவே முடிந்து விட்டது. பார்ப்பன ரல்லாதார் கக்ஷியிலேயே யார் யாரை நமது சமூக முன்னேற்றத்திற்கும் உண்மையான தேச முன்னேற்றத்திற்கும் உதவி செய்வார்கள் என்று எண்ணி இருந்தோமோ அவர்கள் எல்லோரும் இப்போது காங்கிரஸ் பேரில் நாட்டம் கொண்டவர்களாக ஆகி விட்டார்கள். அரசியல் புரட்டும், தேர்தல் பைத்திய மும் மக்களை அவ்வழி இழுக்கிறது. கோவைத் தீர்மானமானது யாரோ இரண்டொருவர் ‘காங்கிரசில் சேர இஷ்டப்படுகிறவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும்’ என்று இருந்தாலும் ஏறக்குறைய பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் யாவருமே அதில் போய்ச் சேர தீர்மானித்துக் கொண்டதாகவே தெரியவருகிறது.

இது நிற்க, காங்கிரசிலிருந்து புதிதாக சிலர் பார்ப்பனரல்லாத கக்ஷியில் வந்து சேர்ந்து இக்கக்ஷிக்கு உதவிபுரிவார்கள் என்று எண்ணி இருந்தவர்கள் மகாநாட்டின் போது மாத்திரம் பொது மக்கள் மனம் திருப்தியடையும்படி பேசினார்களேயொழிய அவரவர்கள் ஊர் போய்ச் சேர்ந்தவுடன் “வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது” என்பது போல் பழைய படியே பார்ப்பனரல்லாத கக்ஷியை வைவதன் மூலம் பலனடைவதும் நமது எதிரியைப் புகழ்வதும் “நான் இன்னமும் பார்ப்பனரல்லாதார் கக்ஷியில் சேர வில்லை” என்று சொல்லிக் கொள்ளுவதுமாயிருக்கிறார்கள். பார்ப்பனரல்லா



RangaRakes tamilnavarasam.com

தார் பத்திரிகைகளும் இக்கக்ஷியை வைதால் தான் நாட்டில் தமக்கு செல்வாக் குண்டு என்று எண்ணும்படி ஆகி விட்டதாகவே அறியக்கிடக்கின்றது. இவற்றை பார்க்கும்போது நாம் இது வரை என்னதான் மகாநாடுகள் கூட்டி இருந்தாலும் எவ்வளவுதான் பிரசாரங்கள் செய்திருந்தாலும் பொதுவாகவே பார்ப்பனரல்லாதாரில் பல பிரபுக்களுக்கும் பொது வாழ்க்கையில் இறங்கி இருப்பவர்களுக்கும் பத்திரிகைகாரர்களுக்கும் பார்ப்பனர்களிடம் உள்ள பயம் இனியும் நீங்க வில்லை என்றேதான் சொல்ல வேண்டியிருக்கிறது. உதாரணமாக "தமிழ் நாடு" பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் கோவை மகாநாட்டிற்கு வந்து தனது அபிப்பிராயத்தைச் சொல்லிப் பார்ப்பன ரல்லாதாருக்கு உழைக்கும் கக்ஷி இது தான் என்பதை ஒப்புக்கொண்டு தானும் இதில் சேர்ந்து விட்டதாக எல்லாரையும் நம்பும்படியாகச் செய்து இவ்வளவும் ஆனபின் மறுபடியும் "தமிழ்நாடு" பத்திரிகையில் இன்னமும் பார்ப்பன ரல்லாதார் கக்ஷியை ஜஸ்டிஸ் என்னும் பேரால் வைவதற்கு இடம் வைத்துக் கொண்டும் அதற்கு ஏதேதோ வியாக்கியானம் செய்து கொண்டும் "ஜஸ்டிஸ் கக்ஷியாரோடு தேசியவாதிகள் ஒருநாளும் ஒத்துழைக்க முடியாது" என்றும் ஒரே அடியாய் எழுதிவிட்டார். இவற்றைக் கவனிக்கும்போது இது வரையிலும் பார்ப்பனரல்லாதார் கக்ஷியைப் பற்றி எப்படி தூற்றி வந்தாரோ அதே மாதிரிதான் இப்போதும் தூற்ற ஆரம்பித்திருக்கிறாரே அல்லாமல் கோவை மகாநாட்டால் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களின் நிலைமையில் ஒன்றும் மாற்றமில்லை என்றே நினைக்கும்படி இருக்கிறது. ஜஸ்டிஸ் அரசியல் கொள்கையில் இவருக்குள்ள வித்தியாசம் என்ன என்பதை எழுதி இருந்தால் அது நன்றா யிருந்திருக்கும். ஜஸ்டிஸ் கக்ஷியாரானாலும் சரி, தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தாரானாலும் சரி அவர்கள் உத்தியோகம் ஏற்றுக்கொண்டிருந்த காலத்திலும் ஸ்ரீவரதராஜுலு நாயுடுவுக்கு அக் கக்ஷியினது அரசியல் திட்டம் பிடிக்கவில்லை. கவர்னருடன் சிநேகமா யிருந்த காலத்திலும் அரசியல் திட்டம் பிடிக்கவில்லை.

இப்போது உத்தியோகம் பெற்றுக்கொள்ளுவதில்லை என்று தீர்மானித் திருப்பதும் பிடிக்கவில்லை. கவர்னரிடம் நம்பிக்கையில்லை என்று தீர்மானித் திருப்பதும் பிடிக்கவில்லை. இனி இக்கக்ஷி எப்படி நடந்து கொண்டால் ஸ்ரீமான் வரதராஜுலுக்கு பிடிக்குமோ நமக்கு தெரியவில்லை.

தவிரவும் மேட்டூர் புரட்டுகளைப் பற்றி மகாநாட்டில் பேசும்போதும், தீர்மானிக்கும் போதும் அதன் ஆபாசங்களைப்பற்றி 'ஜஸ்டிஸ்', 'திராவிடன்', 'குடி அரசு' ஆகியவைகள் கலம் கலமாய் எழுதிவரும்போதும், பார்த்துக் கொண்டு சும்மாயிருந்த ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு திடீரென்று ஸ்ரீமான் சர்.சி.பி. அய்யருக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டார் என்றால் இதற்கு நாம் என்னதான் செய்து அவருக்கு உண்மை அறியும்படி செய்ய முடியும் என்பது நமக்குப் புரியவில்லை.



ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் அவர்களும் இதே மனப்போக் கையே காட்டி இருக்கிறார் என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

"வகுப்பு வாதமிட்டுக்கொண்டிருந்த ஜஸ்டிஸ் கக்ஷியார் காங்கிரசில் நுழைய முன் வந்துள்ளனர்" என்றும், "ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்கள் நேரிய நெஞ்சுடன் காங்கிரசில் சேர வேண்டும்" என்றும், "சமுதாய சீர்திருத்தத்தில் பற்றுடைய ஜஸ்டிஸ் கக்ஷியார் நாட்டிலெழும் அரசியல் கக்ஷிக்கு இடையூறு செய்யாமல் தன்னந்தனியராய் தமது தொண்டை நிகழ்த்துவாராக" என்றும் எழுதி இருப்பதிலிருந்தே அன்னாருடைய மனப்பான்மை வெளியாகிறது. ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியாருடைய விளக்க உரையை ஸ்ரீமான் முதலியார் நன்றாய் கேட்டுக்கொண்டிருந்தார் என்பது அவரே ஒப்புக் கொள்ளக் கூடிய விசயம். ஸ்ரீ செட்டியாரவர்களது சொற்பொழிவில் காங்கிர சுக்கும் ஜஸ்டிஸ் கக்ஷிக்கும் கொள்கையில் வித்தியாசம் இல்லை என்றும், ஜஸ்டிஸ் கக்ஷி கேள்க்கும் சுயராஜ்யம் தான் காங்கிரஸ் கேள்கிறது என்றும், காங்கிரஸ் மற்ற வகுப்பாருக்கு (அதாவது மகமதியர், கிருஸ்தவர்களுக்கு) கொடுத்திருக்கும் வகுப்புவாரி உரிமையைத்தான் ஜஸ்டிஸ் கட்சி கேள்கிறது என்றும், இதற்குப் பார்ப்பனர்களே முட்டுக்கட்டையாயிருக்கிறார்கள் என்றும் நன்றாய் எடுத்துரைத்தார். இவைகளை நன்றாய் அறிந்தும் தெரிந்தும் மனப்பூர்வமாக தானும் ஒப்புக்கொண்டும், தனது வாக்காலேயே இன்னமும் என்ன என்னமோ பேசியும் ஆனபின் ஊர்போய்ச் சேர்ந்தவுடன் ஜஸ்டிஸ் கட்சி 'வகுப்புவாதக் கட்சி' அரசியல் கிளர்ச்சிக்கு இடையூறு செய்யக்கூடாது, என்கிற பழைய பல்லவியைப் பாடிக்கொண்டு இருப்பாரானால் இதற்கு நாம் என்ன சமாதானம் சொல்லக்கூடும். தேசிய அரசியல் கிளர்ச்சிக்கோ அல்லது காங்கிரஸ் அரசியல் கிளர்ச்சிக்கோ ஸ்ரீமான் முதலியார் போற்றும் மகாத்மா வின் அரசியல் கிளர்ச்சிக்கோ ஜஸ்டிஸ் கக்ஷி எந்த விதத்தில் மற்ற கட்சி களைவிட இடையூறு செய்யக்கூடியதாயிருக்கிறது. இடையூறு செய்த கட்சிகளுக்கெல்லாம் தான் ஆக்கமளித்ததை அடியோடு மறந்துவிட்டு இப்படி பேசவும் எழுதவும் ஆரம்பித்து விட்டால் நாம் என்ன செய்யலாம்- நம்முடைய கால வித்தியாசம் என்றுதான் சொல்ல வேண்டும். இதுபோலவே ஸ்ரீமான் ஜோசப்பு போன்ற சில காங்கிரஸ்காரர்கள் என்பவர்களும் இதே பாடத்தைப் படிக்கிறார்கள். முன் எழுதியது போலவே பல பார்ப்பனர் அல்லாத பத்திரிகைகளும் அப்படியே நடக்கிறார்கள். ஆகவே, இக்கட்சிக்கு உள்ள கஷ்டம் "காங்கிரஸ் பார்ப்பனரல்லாதார்" களுக்குள்ளாகவே எவ்வளவு ஏற்படுகிறது என்பதும், இக்கட்சிக்காரர் பலர் காங்கிரஸ் அரசியல் வேஷம் போட்டுக்கொண்டதின் பயனாய் ஏற்படக்கூடிய கஷ்டம் எவ்வளவு என்பதும் நாம் எடுத்துக்கூற வேண்டியதில்லை. ஆகவே கோவை மகாநாட்டால் நமக்கு நன்மை ஏற்பட்டதா? தீமை ஏற்பட்டதா? என்பதை ஒருவாறு இதன் மூலம் ஊகித்துக் கொள்ளலாம். இது எப்படியோ இருக்கட்டும் இனிச் செய்ய வேண்டியது என்ன? தலைவர்கள் என்போர்களை நம்புவதில் பயனில்லை.



RangaRakes tamilnavarasam.com

பாமர மக்களுக்கு பகுத்தறிவு வரும் வரை தலைவர்கள் யோக்கியமாய் நடந்து கொள்வார்களென்று எண்ணுவது பைத்தியக்காரத்தனமே ஆகும். எனவே, நாம் இனி பாமர மக்களை கண் விழிக்கச் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டியதுதான் உண்மையான தொண்டு. இதற்காகப் பிரயாசைப்பட போதிய பத்திரிகை இல்லை, ஆள்கள் இல்லை, பணமும் இல்லை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். நமது நாட்டில் உள்ள பத்திரிகைகள், ஆள் கள், பணம் ஆகியவை எல்லாம் போலி தேசீயத்திற்கும், போலி சுயராஜ்யத் திற்கும் உபயோகப்படுத்தும் முறையில் வாழ்வும், கீர்த்தியும் அடையக் கூடிய தாய் இருக்கிறதே ஒழிய உண்மைக்கு உதவக்கூடியதாக ஒன்றும் தென்படுவ தில்லை. புதிதாக நமக்கு ஆள்களும் பத்திரிகை உதவிகளும் சேர்க்கத்தக்க காலம் இன்னும் வரவில்லையானாலும் இருப்பவைகளையாவது நழுவ விடாமல் வைத்திருக்க வேண்டிய தாயிருக்கிறது. சுமார் நான்கு மாதத்திற்கு முன் 'குடி அரசில்' 'வேண்டுகோள்' என்னும் தலைப்பின் கீழ் திராவிடன் பத்திரிகையை ஒப்புக் கொள்ளலாமா என்பதைப் பற்றி ஒரு தலையங்கம் எழுதி இருந்ததும், அதற்கு 500 கனவான்கள் வரை பதில் எழுதியிருந்ததும் அவர்களுள் 20 கனவான்கள் தவிர மற்றவர்கள் ஒப்புக்கொள்ளும்படி எழுதி யிருந்ததும் அதன் பேரில் சில நிபந்தனைகளின்படியானால் ஒப்புக் கொள்ளக் கூடும் என்று தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தாருக்கு நாம் எழுதியிப்பதாக எழுதியிருந்ததும், வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்நிபந்தனை களுக்கு இப்போதுதான் பதில் வந்திருக்கிறது. நமது நிபந்தனைகளில் முக்கியமானது என்னவென்றால் 'குடி அரசு' கொள்கைப்படிதான் 'திராவி டனை'யும் நடத்த முடியும் என்றும், தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தையோ ஜஸ்டிஸ் கட்சியையோ அதன் கொள்கைகளையோ அதில் சம்மந்தப்பட்ட தனிப்பட்ட நபர்களையோ கண்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் கண்டிக்கத் தகுந்த உரிமை நமக்கு இருக்க வேண்டும் என்றும் எழுதி இருந் தோம். நாம் ஏன் அப்படி எழுத நேர்ந்தது என்றால் 'தேசீயம்', 'சுயராஜ்யம்' என்கிற அரசியல்புரட்டுப் பதங்கள் அக்கட்சிக் கொள்கையிலும் கலந்திருப் பதால் அதன் மூலம் அக்கட்சியார்களும் காங்கிரஸ்காரர்களைப் போல் பாமர மக்களை ஏமாற்றும் வழியில் செல்ல நேரிட்டால் அம்மோசத்திலிருந்து பாமர மக்களை தப்புவிக்க யார் யாரை அல்லது எந்த எந்த கட்சியை கண்டிக்க வேண்டுமானாலும் கண்டிப்பதற்கு பாத்தியமிருக்கவும் மற்றும் சர்க்கார் அதின் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களை கண்டிக்கும் விஷயத்தில் எவ்வித தடையும் இருக்கக்கூடாது என்பதற்காகவுமே அந்நிபந்தனை எழுதி இருந்தோம். அதற்கு பதில் எழுத ஏறக்குறைய 2 மாதத்திற்கு மேலாகி விட்டது.

இப்போது பதில் வந்திருக்கிறது. அதாவது நம்மிஷ்டம் போல் நடத்த ஒப்புக்கொண்டதாகவும், காலவரையரை கட்டியும் ஒரு தீர்மானம் நிறை வேற்றி அனுப்பி இருக்கிறார்கள். ஆகஸ்டு முதல் தேதி முதலே ஒப்புக் கொள்ளும் படியாகவும் அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அநேக நண்பர்கள்



ஒப்புக்கொள்ளும் படியும் எழுதியிருக்கிறார்கள். இரண்டொரு கனவான்கள் மாதம் ஒன்றுக்கு 100, 200 ரூபாய்வீதம் நஷ்டத்திற்கு உதவுவதாகவும் வாக்களிக்கிறார்கள் சில நண்பர்கள் ஊதியம் எதிர்பாராமல் தொண்டு செய்வதாகவும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகவே, இந்நிலையில் சிறிது காலத்திற்காவது நாமும் அதை ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதாகவே கருதுகிறோம்.

ஆனால், முக்கிய நண்பர்களில் பலர் உடல் நிலையை கவனிக்கும் படிக்கும், ஓய்வெடுத்துக்கொள்ளும்படிக்கும் எழுதி வருகிறார்கள். ஓய்வெ டுத்துக்கொள்ள வேண்டிய சமயம் நமக்குத்தெரியும். அதாவது நமது தொண்டு நாட்டிற்கு உதவாது என்றாவது நமது தொண்டை நாட்டார் ஏற்பதில்லை என்றாவது நமக்கு தெரிந்தால் யாரிடமும் சொல்லாமல் நாமே ஓய்வெடுத்துக் கொள்ளுவோம்.

அதுவரை எடுத்துக்கொள்ளும் ஓய்வு உண்மையான ஓய்வாகாது. அப்படி கடுமையாக ஓய்வு எடுத்துக்கொண்டுதான் ஆக வேண்டும் என்கிற முறையில் நமது உடலில் கோளாறு ஒன்றும் இது சமயம் இல்லை என்றே நினைக்கிறோம்.

தனவைசிய நாட்டுச் சுற்றுப்பிரயாணம் முடிந்தவுடன் ஒரு வாரத்தில் "திராவிடன்" சம்மந்தமான ஏற்பாடுகளைப் பற்றி முடிவு செய்ய சென் னைக்குச் செல்ல வேண்டி இருக்கும். இது விஷயத்தில் நண்பர்கள் தங்கள் தங்கள் கடமையைச் செய்ய தவற மாட்டார்கள் என்றே முடிவு செய்து கொண்டு இம்முயற்சியில் ஈடுபடலாமெனக் கருதுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 17.07.1927**



RangaRakes
tamilnavarasam.com

# மந்திரிகளின் நிலை

கோவை மகாநாட்டில் இரட்டை ஆட்சி அழியும் வரை மந்திரி முதலிய உத்தியோகம் ஒப்புக்கொள்ளுகிறதில்லை என்கிற தீர்மானம் செய்யப்பட்ட வுடன் காங்கிரஸ்காரர்கள் என்பவர்களின் நிலை கொஞ்சம் கஷ்டமாகி விட்டது. எதனாலென்றால் மதுரை மகாநாட்டிலேயே "இந்த சட்டசபை உள்ள வரை மந்திரி பதவி ஒப்புக்கொள்ளுவதில்லை" என்று தீர்மானித்திருந்தும் காங்கிரஸ்காரர்கள் மந்திரிகளை ஆதரித்து வந்தார்கள். அதற்கு உண்மை யான காரணம் "இந்த மந்திரி சபையை ஆதரிப்பதின் மூலம் பார்ப்பனரல்லா தார்களுக்கு பார்ப்பனரல்லாதார் கட்சி மந்திரிகளால் சென்ற 6 வருட காலமாய் ஏற்பட்ட நன்மைகளையும், முற்போக்குகளையும் ஒழித்து பழையபடியே அரசாங்க பதவிகளையும், மற்றுமுள்ள ஸ்தாபனங்களையும், பார்ப்பன அக் கிரகாரத்திற்கே சுவாதீனமாக்கிக்கொள்ளலாம் என்கிற எண்ணத்தின் மேல் அதை ஆதரித்து வந்ததோடல்லாமல்" "ஜஸ்டிஸ் கட்சியார் இந்த கவுன்சிலில் மந்திரி உத்தியோகம் பெற்றுக்கொள்ளாவிட்டாலும், அடுத்த கவுன்சிலிலாவது உத்தியோகம் பெற்றுக் கொள்வார்களாதலால் நாங்கள் தற்கால மந்திரிகளை ஆதரிக்கிறோம்" என்று (ஓனாய் ஆட்டுக்குட்டி கதைபோல்) சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்படிச் சொல்லுவதன் மூலம் இன்னும் ஒரு கவுன்சில் தேர்தல் நடக்குமானால் அதில் தாங்கள் வெற்றிபெற முடியாதென்று உறுதி கொண்டதையும் தங்களது மோசங்களையும் அயோக்கியத்தனங்களை யும் பாமர மக்கள் உணர்ந்து கொண்டார்கள் என்பதையும், பார்ப்பனரல்லாதார் கட்சியின் உண்மைத் தத்துவத்தையும் பாமர மக்கள் அறியும்படி ஏற்பட்டு விட்ட தென்பதையும் தாங்களே ஒப்புக்கொண்டதுபோல் ஆகிற தென்பதைக் கூட கவனியாமலும், காங்கிரஸ் திட்டத்திற்கு விரோதமாய் நடந்தாலும் காங்கிரசின் மூலமே தங்களது நடவடிக்கையை காங்கிரசே சரி என்று ஒப்புக் கொள்ளச் செய்துவிடலாமென்று எண்ணி அப்படியே செய்துவிட்டதின் மூலம் காங்கிரஸ் பார்ப்பன சூழ்ச்சி ஸ்தாபனமென்று ஜனங்கள் நினைப்பது சரியென்று ஏற்பட்டாலும் தங்களுக்கு அதைப் பற்றிப் பயமில்லை என்று நினைத்திருப்பதை காட்டிக் கொள்வதாகிறது என்பதையும், கவனிக்காமலும் தங்கள் காரியத்தை சாதித்துக்கொண்டு வந்தார்கள். இப்போது அந்த சமாதானத்தைச் சொல்லி பாமர மக்களை ஏமாற்றுதற்கில்லாமலும், இனி ஒரு தேர்தல் நடக்கக்கூட இடமில்லாமல், அதாவது இரட்டையாட்சி மாறுகிறவரை



உத்தியோகம் ஒப்புக்கொள்ளுவதில்லை என்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றிவிட்டு இனி இந்த காங்கிரஸ்காரர்கள் என்கிற பார்ப்பனர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்றறிய பார்ப்பனரல்லாத கட்சியை சேர்ந்த ஒரு சட்டசபை அங்கத்தினர் மந்திரிகளின் மீது நம்பிக்கையில்லாத தீர்மான மும் கொண்டு வந்தவுடன் பார்ப்பனர்களுக்கு நிலைமை கஷ்டமாகிவிட்டது இதன்பேரில் பழயபடி பாமர மக்களை ஏமாற்றுவதற்கென்றே தாங்களும் ஒரு நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதுபோல் பாசாங்கு செய்ய உத்தேசித்து அவர்களும் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்போவதாக வெளியிட்டிருக்கிறார்கள் என்றாலும்,

இது மந்திரிகளைக் கலந்து யோசனை செய்தபிறகுதான், அதாவது மந்திரிகளுக்கு தைரியம் சொல்லிவிட்டு இத்தீர்மானம் கொண்டு வந்திருக் கிறார்கள். ஏனென்றால் மந்திரிகளிடம் அவர்களைக் காப்பாற்றுவதாக வாக்க ளித்து மாதம் 1–க்கு 400, 500 வாங்கிக்கொண்டு அவர்களை காப்பாற்றி வரும் காங்கிரஸ் பார்ப்பனர்களை யாவரும் தெரிந்திருக்கக்கூடும். இப்பொழுது திடீரென்று நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்து அவர்களை ஒழிப்ப தனால் மாதம் 400,500 கிடைக்குமா? தவிர ஸ்தல ஸ்தாபனங்களிலும் இந்த மந்திரிகளை மிரட்டி பார்ப்பனர்களுக்கும் அவர்களது அடிமைகளுக்கும் உத்தியோகம்செய்து வைப்பதாக ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் போன்றவர் கள் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு ஒப்பந்தம் செய்து கொள்ள முடியுமா? இனி யாருக்காவது செய்து வைப்பதாக வியாபாரம் பேசமுடியுமா? இந்த மந்திரிகளின் அதிகாரம் ஒழிந்து பார்ப்பனரல்லாத கட்சி மந்திரிகளுக்கு போகாமல் வெள்ளைக்காரருக்கு இந்த அதிகாரம் போவதாயிருந்தாலும் கூட இப்போதைய மந்திரிகளால் தங்களுக்கு நடக்கும் சவுகரியத்தில் பத்தில் ஒரு பங்காவது செய்துகொள்ள முடியும்? என்பவைகளை யோசித்துப் பார்த்ததில் முடியாது என்பதாக அறிந்து வேஷத்திற்காக கொண்டு வந்திருக்கிறார்களே அல்லாமல் வேறல்ல.

இதன் முடிவை இப்போதே சொல்லிவிடலாம். அதாவது இந்த தீர்மானம் சட்டசபைக்கு வரும் என்பதில் சந்தேகமில்லை. காங்கிரஸ்காரர்கள் என்போர்கள் சிலர் "நான் நோகாமல் அடிக்கிறேன், நீ ஓயாமல்அழு" என்பது போல் வெகு உக்கிரமாக மந்திரிகளை வைவதுபோல் ஜனங்கள் நினைக்கும் படி சர்க்காரைத் தாக்கி பேசவும் பேசுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. கடைசியாக ஓட்டு எடுக்கும்போது இத்தீர்மானம் தோற்றுப் போகும்படி செய்துவிட்டு மந்திரிகளிடமும் இரட்டை கூலி வாங்கி கொள்ளக்கூடும். இதுதான் அனேகமாய் முடியப்போகிறது. எப்படி எனில், இப்போது உள்ள சட்ட சபை மெம்பர்கள் மொத்தம் 128 இருக்கலாம். இதில் சுயராஜ்யகக்ஷியார் 42, ஜஸ்டிஸ் கக்ஷியார் 22, சுயேச்சை எதிர்ப்பு கட்சியார் 4 பேர் ஆக ஓட்டு மொத்தம் எதிர்ப்புக்காரர்கள் சுமார் 68 பேர்கள் இருக்கலாம். போனால் மீதி சுமார் 60 பேர் மந்திரியை ஆதரிக்கிறவர்களாக இருக்கக்கூடும். எதிர்ப்புக்கு



RangaRakes tamilnavarasam.com

அதிகமாயுள்ள எண்ணிக்கை 8 தான் ஏற்படுகிறது. இந்த 8 பேர்களுக்கும் அத்தீர்மானத்தன்று "காயலாவாகவும்" "வேறு ஊருக்குப் போகவும்" அவர்கள் வீட்டில் ஏதாவது ஒரு 'பாட்டி சாகவும்', "பாட்டனுக்கு திதி வரவும்" "வேறு அவசரமான காரியம் ஏற்படவும்" "ரயில் தப்பி போகவும்" வேண்டிய முயற்சிகள் இப்போது இருந்தே நடைபெற்று வருகிறது. இந்தவேலையில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி, எ.ரங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார், முதலியவர்கள் வெகு தீவிரமாய் இருக்கிறார்கள். ஸ்ரீமான். சி. ராஜகோபாலாச் சாரியாரின் உதவிகூட வேண்டப்படுகிறது. ஸ்ரீமான் சர். சி.பி. அய்யர் அவர்களின் செல்வாக்கு சந்து பொந்துகள் எல்லாம் உலாவுகிறது. முனிசீபு வேலை முதலானவைகள் கூட மாற்றுப் பண்டங்களாக விலை கூறப்படுகிறது. இவைகள் ஒரு புறமிருக்க மந்திரிமார்களின் பிரயத்தனங்களைப் பற்றி சொல்லவும் வேண்டுமா? அவை ஆகாயத்திற்கும், பூமிக்கும் தாண்டவ மாடுகிறது. மந்திரிகள் ஊர் ஊராய் பிரசாரம் செய்யப் போவதாய் சொல்லியி ருப்பதே இதுதான் என்பது யாவருக்கும் முன்னமேயே விளங்கிவிட்டது. ஸ்ரீமான் சுப்பராய மந்திரி இலாகா, ஸ்தல ஸ்தாபன நியமனங்கள் முதலியவை சட்டசபை அங்கத்தினர்கள் மீட்டிங்குக்கு வராமல் இருப்பதற்கு மாற்றுப் பண்டங்களாக ஏலம் கூறப்படுகிறது. அங்கத்தினர்களின் சுற்றத்தாருக்கு உத்தியோக சிபார்சுகள் பறக்கிறது. மற்ற மந்திரிகளின் முயற்சிகளும் பண்ட மாற்றுகளும் அதுபோலவே வர்ஜ்ஜா வர்ஜ்ஜம் பாத்திரம், அபாத்திரம் என்கிற பேச்சில்லாமல் தாண்டவமாடுகிறது. இவ்வளவுக்கும் மேலாக பார்ப்பனர் களுக்கு வேண்டிய கொள்ளைக்கார அதிகாரிகளின் மிரட்டல்களும், சிபார்சு களும் ஒரு புறம் ஊடுருவி பாய்ந்துகொண்டு இருக்கின்றன.

இவைகள் தவிர யாராவது ஒரு மந்திரி ராஜினாமா கொடுத்து வேறு ஒரு கோயம்புத்தூர் கனவானுக்கு மந்திரி வேலை செய்து வைப்பதாகவும், அக்கனவான் சட்டசபை மெம்பராவதற்காக இப்போதிருக்கும் ஒரு சட்டசபை மெம்பரை ராஜினாமா கொடுக்கும்படியும் ஏற்பாடுகள் நடப்பதாகவும், அந்த கனவான் முழு பிரயத்தனத்துடன் மந்திரிகளின்மேல் வரும் நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை தோற்கடிக்க வேலை செய்வதாகவும் சொல்லிக் கொள்ளப்படுகிறது. இத்தனை தத்துக்களையும் தப்பி நம்பிக்கை இல்லை தீர்மானம் நிறைவேறும் என்பதும் இம்மந்திரிகள் போய்விடுவார்கள் என்ப தும் சுலபமாய் முடிவுகட்டக்கூடிய காரியமல்ல என்பதே நமது அபிப்பிராயம். அப்படித்தான் அவர்கள் போய் விடுவதாலேயே பார்ப்பனர்கள் ஆதிக்கம் குறையும் என்று சொல்லிவிடவும் முடியாது. அதற்கு தகுந்தவர்களை பிடித்து அவர்களுக்கு வேண்டியதை செய்து தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தவே பாடுபட்டு வெற்றியடைய பார்ப்பார்கள்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 17.07.1927**



# காங்கிரஸ் தலைவர் பதவி வினியோகம்

இவ்வருடக் கோடியில் சென்னையில் கூடும் காங்கிரஸ் என்னும் கூட் டத்திற்கு தலைவராக நமது பார்ப்பனர்கள் டாக்டர் அன்சாரி அவர்களை தெரிந்தெடுத்திருக்கிறார்கள் என அறிகிறோம்.

சென்ற வருடக் காங்கிரசுக்கு தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான். சீனி வாசய்யங்கார் அப்பதவி பெறுவதற்கு செலவு செய்தது போல் பணம் கொடுக்காவிட்டாலும் டாக்டர். அன்சாரி அவர்களிடம் அதற்கும் மேற்பட்ட தான பெரிய மதிப்புள்ள விலை பெற்றுக்கொண்ட பிறகுதான் நமது பார்ப்பன "தேச பக்தர்கள்" என்போர்கள் டாக்டரை தெரிந்தெடுத்திருக்கிறார்கள்.

அந்த விலை எது என்றால் அதுதான் "மகமதியர்களுக்கு தனித் தொகுதி வேண்டியதில்லை" என்று சொன்னதாகும். டாக்டர். அன்சாரி அவர் கள் மகமதிய சமூகத்திற்காக ஒப்புக்கொண்டதாக சொல்வதை மற்ற மகமதி யர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்களா இல்லையா என்பதைப் பற்றி நமது பார்ப் பனர்களுக்கு அவசியமில்லை. எப்படியாவது அவர் காரியத்தை சாதித்துக் கொள்ள ஒரு சந்து கிடைத்தால் போதும். இப்போது ஸ்ரீமான்கள் ஒரு கந்தசாமி செட்டியாரையும், ஒரு முத்துரங்க முதலியாரையும், ஒரு குப்புசாமி முதலியா ரையும் பிடித்துக் கொண்டு அவர்களையே பார்ப்பனரல்லாதார் பிரதிநிதிகள் என்பதாக ஊர் ஊராய் கூட்டிக் கொண்டு போய் காட்டி எப்படி தங்கள் காரியத்தை சாதிக்கிறார்களோ அதுபோல் டாக்டர் அன்சாரி அவர்கள் மகமதியர்களுக்கு தனித் தொகுதி வேண்டாம் என்றால் அதுவே மகமதிய சமூக பிரதிநிதித்துவம் என்பதாகச் சொல்லி வரப்போகும் கமிஷனில் சரிபடுத்திக் கொள்ளலாம் என்கிற எண்ணத்தின் பேரிலேயே இந்தப் பதவி கொடுத்திருக்கிறார்கள். பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு விரோதமாய் பேசின தினாலும் பார்ப்பனரல்லாதார் சமூகத்தை வைததினாலுமே ஸ்ரீமான் முத்து ரங்க முதலியாருக்கு சட்டசபை வேலை சம்பாதித்துக்கொடுத்ததும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு உபதலைவராக்கினதும் வரப்போகும் காங்கிரசுக்கு தற்கால வரவேற்புக்கமிட்டி தலைவராக்கினதும் யாவரும் அறிவார்கள்.



RangaRakes tamilnavarasam.com

டாக்டர் அன்சாரி அவர்களை காங்கிரஸ் தலைமையில் இருந்து கொண்டு மகமதிய சமூகத்திற்கு தனித்தொகுதி வேண்டியதில்லை என்று சொல்லும்படி செய்தாலும்கூட நமது மகமதிய சகோதரர்கள் ஏமாந்து விட மாட்டார்கள் என்பதே நமது உறுதி. இப்பொழுதிருந்தே அதற்கு வேண்டிய வேலைகள் செய்துகொண்டு வருவதையும் நாம் அறிவோம். ஆனாலும் இப்பதவிகள் பார்ப்பனர்கள் தங்களுக்கு எப்படி அனுகூலப்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பதற்கே இதைக் குறிப்பிட்டோம்.

**குடி அரசு - கட்டுரை - 24.07.1927**



# செங்கல்பட்டு ஜில்லா பார்ப்பனீய மகாநாடு

நம்நாட்டு பார்ப்பனர்கள் தங்களது ஆதிக்கத்தை இந்நாட்டில் நிலை நிறுத்த ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஆயுதங்களான மதத்தின் பேரால் வேதம், சாஸ்திரம், புராணம், சடங்கு, கோயில், தீர்த்தம், யாத்திரை, மடாதிபதி, குருக்கள், புரோகிதன் என்பவை போன்ற புரட்டுகளைப்போலவே, அரசியல் பெயரால் காங்கிரஸ், சுயராஜ்யம், ஒற்றுமை,தேசீயம், உரிமை அதிகாரத்தில் பங்கு, ஆங்கிலப்பள்ளிக் கூடம், வக்கீல்வேலை, நியாயஸ்தலங்கள் முதலிய புரட்டுகளையும் உற்பத்தி செய்துகொண்டு அதன் மூலமாகவும் நம்மையே ஏமாற்றி அடிமைப்படுத்தி ஆதிக்கம் பெற்று வாழ்ந்து வருகிறார்கள் என்பதைப்பற்றி இதற்கு முன் பல தடவைகளில் எழுதி வந்திருக்கிறோம். நமது மக்களை ஏமாற்றுவதற்காக இந்த ஆயுதங்களை உபயோகப்படுத்தும்போது நமது பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாதாரான நமது சமூகத்தாரையே அடிமைகளாக்கி அவர்களைக் கொண்டே அவர்கள் மூலியமாகவே நம்மீது பிரயோகித்து வருகிறார்கள் என்பதைப் பற்றியும் பல தடவைகளில் எழுதி வந்திருக்கிறோம்.

அந்த விஷயங்களை வாசகர்கள் அனுபவத்தில் உணர்வதற்கு அடிக்கடி நிகழும் பல சம்பவங்களை எடுத்துக்காட்டியும் வந்திருக்கின்றோம். அப்பேர்ப்பட்ட அனுபவ நிகழ்ச்சிக்கு உதாரணத்தை மற்றுமொரு முறை எடுத்துக் காட்ட "செங்கல்பட்டு ஜில்லா அரசியல் மகாநாடு" என்கிற பித்தலாட்டத்தைப் பற்றி சில விபரங்களை குறிப்பிடலாமென்று இத்தலையங்கத்தை பார்ப்பனீய மகாநாடு என்கிற பெயர் கொண்ட தலையங்கத்தில் எழுதுகிறோம். இதைப்பற்றி ஏன் எழுதுகிறோமென்றால் இம்மாதிரியான அயோக்கியத்தனத்தினாலும், புரட்டுகளினாலும், பித்தலாட்டங்களினாலும், நமது மக்களை இந்தப் பார்ப்பனர்கள் ஆயிரக்கணக்கான வருடங்களாக ஏமாற்றி நம்மை முட்டாள்களாக்கி, நமக்கு மத விஷயங்களில் குருவாகவும், ஆச்சாரியர்களாகவும், மடாதிபதிகளாகவும், லோககுருக்களாகவும், சடங்கு விஷயத்தில், நமக்கு தகப்பன்களாகவும், ஜாதி விஷயத்தில் நாம் பார்ப்பனர்களுக்கு வைப்பாட்டி மக்களாகவும், தெய்வங்கள் விஷயத்தில் நமக்கும் தெய்வத்திற்கும் மத்தியிலுள்ள துவி பாஷிகளாகவும், மோட்ச சம்பிரதாய விஷயத்தில் அவர்கள் காலில் விழுவதாலும், அவர்கள் கால் கழுவின தண்ணீரை நாம் சாப்பிடுவதால் பாவம் மன்னிக்கப்பட்டு விடுவதாகவும்



RangaRakes tamilnavarasam.com

ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதுடன் அரசியல் விஷயத்தில் நமக்குத் தலைவர்களாகவும், கல்வி விஷயத்தில் நமக்கு உபாத்தியாயர் களாகவும், உத்தியோக விஷயத்தில் நமக்கு எஜமானர்களாகவும் இருக்க தக்கபடியாக அநேக அயோக்கியத்தனங்களைச் செய்து யோக்கியதையை சம்பாதித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதில் எவருக்கும் அபிப்பிராய பேதமேயில்லை.

இவ்வித அக்கிரமங்களை ஒழிக்க நம் தலைவர்கள் பல நாளாக முயற்சித்து, அதற்கேற்ப இயக்கங்களை ஏற்படுத்தி அதற்காக உழைத்து வருவதும், அதை ஒழிக்க பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரிலேயே சில இனத் துரோகிகளைப் பிடித்து பலவித கூலி கொடுத்து நமது இயக்கங்களை ஒழிக்கவும், நமது இழிவும், குறைவும் தீர வேலை செய்பவர்களை வையச் செய்வதும், நமது முன்னேற்றத்திற்கென்று நமது மக்கள் தனி மனிதர்களை நம்பி அவர்கள் மூலம் அவர்களுக்கேற்ற பிரசாரங்கள் செய்ய ஏற்படுத்தியிருக்கும் ஸ்தாபனங்களிலும் ஏமாற்றி வஞ்சகமாய் உள் நுழைந்து கொண்டு அவற்றை பாழ்படுத்தி அந்த ஸ்தாபனங்களை தங்களுக்கனுகூலமாய் திருப்பிக்கொண்டு அதன் மூலம் நமக்கே கேடாகும்படி செய்ய செய்வதுமே அவர்கள் தொழிலாய் இருப்பதையும் பார்த்து வருகிறோம். இத்தொழில்களில் ஒன்றாகவே செங்கல்பட்டு அரசியல் மகாநாடு நடைபெற்று முடிந்திருக்கிறது. ஷை மகாநாடு நடத்தியதின் கருத்து என்ன? அதன் வரவேற்பு அக்கிராசனர், மகாநாட்டுத் தலைவரென்பவர், இவர்கள் யார்? அவர்களுக்கு செலவுக்கு கொடுத்து வருபவர் யார்? அவர்கள் யோக்கியதை என்ன? அவர்கள் பேசிய பேச்சின் தத்துவம் என்ன? அவைகளை பிரேரேபணை செய்த, ஆமோதித்த ஆட்கள் யார்? என்கிற விபரங்களை ஒரு நடு நிலைமையிலுள்ள மனிதன் சற்று கவனமாய் யோசித்துப் பார்ப்பானானாலும் கூட விளங்காமல் போகாது. அதன் உபசரணைத் தலைவர் என்பவர் யார்? அவர் எப்பொழுது பொது வாழ்வில் வந்தவர்? அவரது கொள்கை என்ன? அரசியலில் மகாத்மா காந்தியடிகள் தலையிட்டு உலக மக்களையே கலக்கி தேசபக்தர்களை கூவியழைத்த காலத்தில் இவரெங்கிருந்தார்? ஆகிய சங்கதிகள் ஒன்றும் யாரும் அறிய முடியாதபடி இருக்கிறது. இவரது வரவேற்பு அக்கிராசனப் பிரசங்கம் பார்ப்பனரல்லாதார் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஏற்பட்டு உழைத்து வரும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை ஒழித்த பார்ப்பனர்கள் சொல்லிக் கொடுத்ததைச் சொல்லும் கிளிப் பிள்ளையின் சத்தமாய் இருக்கிறது. அச்சத்தத்தின் தத்துவங்கள் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுத் தீர்மானத்தைப் பற்றி மக்களுக்குத் திரித்துக்கூறி, பார்ப்பனரல்லாதார்களை வைது, பார்ப்பனர்களை சரணாகதி அடைய பார்ப்பனரல்லாதார் தத்துவத்தையும், பாமர மக்களையும் பலிகொடுக்கப் பிரயத்தனப்படுவதாயும், பார்ப்பனர்களுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசுவதாயுமிருக்கிறது. இதற்கு உதாரணமாக இரண்டொன்றைக் குறிப்பிடுவோம்.

"சமயத்திற்கு ஒரு அபிப்பிராயத்தைத் தெரிவித்து தலைவ



ராகப் பார்க்கும் ஸ்ரீ வரதராஜுலு நாயுடுவும், ஜாதீய உணர்ச்சியும் பொறாமை யும்கொண்டு சுயமதிப்பை விட்டு பனகால் ராஜாவைத் தலைவர் என்று மானமில்லாமல் சொன்ன ஒத்துழையா ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும், பார்ப்பனரல்லாதாரையும் வாய்கூசாமல் திட்டிவரும் ஸ்ரீ ராம சாமி நாயக்கரும், ஆர்.கே. ஷண்முகம் செட்டியாரும் பார்ப்பனரல்லாதார் சங்கத்தில் இருக்கும் பொழுது பார்ப்பனர்களை மாத்திரம் நாம் எப்படி தூஷிக்கலாம்?" என்று பேசியிருக்கிறார்.

"உடல், பொருள், ஆவி இம் மூன்றையும் நமக்காகவே அர்ப்பணம் செய்து, தேசத்துரோகிகளின் வசவுகளை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் உழைத்துவரும் நம் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான். சீனிவாச ஐயங்காரு டையவும், மற்ற பார்ப்பன தேசப்பக்தர்களுடையவும் தேச சேவை நமக்கு வேண்டாமென்று எந்த தேச பக்தர் சொல்லக்கூடும்?"

என்று பேசியிருக்கிறார். இதிலிருந்தே இவருடைய யோக்கியதையை அறிந்து கொள்ளலாம்.

ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு, கலியாணசுந்தர முதலியார், ராமசாமி நாயக்கர், ஷண்முகம் செட்டியார், பனகால் ராஜா இந்த ஐவர்களைவிட ஸ்ரீமான் சீனிவாச ஐயங்கார் எந்த விதத்தில் மேலானவர் என்று இந்த வரவேற்பு தலைவர் ஸ்ரீ ரெட்டியார் கருதுகிறார் என்பதற்கு காரணம் சொல்லி இருந்தால் அது யோக்கியமாய் இருந்திருக்கும். ஸ்ரீ சீனிவாச ஐயங்கார் தேசத்தைப் பாழாக்கும் வக்கீல் பிழைப்புக்காரர், சர்க்காருக்கு நல்ல பிள்ளையாயிருந்து பட்டம் பதவி பெற்றவர், பெரிய உத்தியோகத்திற்கு ஆசைப்பட்டு, காந்தியடிகளின் ஒத்துழையாத்திட்டம் சட்ட விரோதமானது என்று சொன்னார். மகாத்மா காந்தியை "மகாத்மா" என்று கூறுவது தகாது என்று சொன்னார். காந்திக்கு மூளை இல்லை என்று சொன்னார். தீண்டாமை, மதுவிலக்கு, கதர் முதலியவைகள் காங்கிரஸில் இருக்கக்கூடாது என்று சொன்னவர்?

"ராமசாமி நாயக்கர், கலியாணசுந்தர முதலியார் ஆகியவர்களை காங்கிரசை விட்டு வெளியாக்க வேண்டும்" என்று சொன்னவர். "ராமசாமி நாயக்கரையும் ஆரியாவையும் இன்னமும் யேன் சர்க்கார் பிடித்து ஜெயிலில் அடைக்காமல் வெளியில் விட்டுக்கொண்டிருக்கிறார்கள்" என்று கேட்டவர்.

"அட்வகேட் ஜெனரலாவது இவர்களை ஜெயிலில் அடைக்க யோசனை சொல்லக்கூடாதா?" என்று சொன்னவர்.

இப்படி பேசியிருப்பதோடல்லாமல் ஒத்துழையாமையை ஒழிப்பதற்கு கக்ஷி சேர்த்து ஒழித்தவர். அன்னக்காவடிகளுக்கு பணம்கொடுத்து பார்ப்பன



RangaRakes tamilnavarasam.com

ரல்லாதாரை வையும்படி சொல்லி வருகிறவர். இன்னமும் மாதம் ஒன்றுக்கு பத்தாயிரம், பதினையாயிரம் என்று வக்கீல் உத்தியோகத்தில் சம்பாதித்துக் கொண்டு இருப்பவர். நிமிஷத்திற்கு நிமிஷம் தவறாது நூறு பொய் பேசுகி றவர் என்ற பெயரை வாங்கியவர். இப்படி இருக்க, ஸ்ரீமான் ஐயங்கார் அவர் கள் எந்த விதத்தில் மற்றவர்களைவிட யோக்கியதாம்சம் பொருந்தியவர் என்பதையும், எந்தவிதத்தில் தேசத்திற்கு உடல், பொருள், ஆவி இம் மூன்றையும் தத்தம் செய்தவர் என்பதையும், ஏதாவது நஷ்டப்பட்டாரா? கஷ்டப்பட்டாரா? சிறைக்கு சென்றாரா? வக்கீல் வேலையை விட்டாரா? என்பவைகளையும் எழுதி இருந்தால் நன்றாயிருக்கும்.

மற்றபடி மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான் ஒத்தகாசு கந்தசாமி செட்டி யாரைப் பற்றி நாம் ஒன்றும் புதிதாய் சொல்ல வேண்டியதில்லை. அவர் பார்ப்பனரல்லாதார் கக்ஷியில் இருந்தவர். அக்கக்ஷியார் இவருக்கு செலவுக்கு பணம்கொடுக்காததால், பார்ப்பனர்களுடன் சேர்ந்துகொண்டதாக அதாவது 'கூலி'க்கு மாரடிக்கிறவர் என்று பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவரால் சொல்லப்பட்டு கோர்ட்டிலும் விவகாரம் நடந்தது. பெரும்பாலும் விஷயம் நம்பும்படி ஏற்பட்டு இவருடைய யோக்கியதை "ஒரு காசுக்கும் சின்ன நாணயம் தான் பெறும்" என்ற தீர்ப்பும் பெற்றவர். இந்த யோக்கியர் ஒரு மகாநாட்டுக்கு தலைவர் என்கிற பெயரை பார்ப்பனர்கள் தயவால் பெற்று,

"ஜஸ்டிஸ் கட்சியானது ஒற்றுமையை பாழாக்கிவருகிறது" என்றும் "பார்ப்பனரல்லாதார் பெயர்" பொருளற்றதென்றும், "ஒருவரை மாத்திரம் துவேஷித்து பேசுவது சரியல்ல" வென்றும் இன்னும் பலவாறாக பார்ப்பனர் களுக்கு வக்காலத்து வாங்கி பேசியிருக்கிறார்.

ஜஸ்டிஸ் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி என்கிற பெயர் சொல்லிக் கொண்டு பார்ப்பனரல்லாதாரை வைது கொண்டு பெருமை சம்பாதித்துக் கொண்டும் கூலி வாங்கிக்கொண்டும் வாழ்கிறவர்களில் இவரும் ஒருவர் என்பதை இவர் கதை அறிந்தவர்கள் எல்லோரும் நன்றாய்த் தெரிந்தேயிருப்பார்கள்.

"ஜஸ்டிஸ் கட்சி" என்பதாக ஒரு தனிக் கட்சி எங்கேயாவது இருக்கி றதா? அதற்கு கொள்கையுண்டா? அதற்கு சந்தா உண்டா? என்பதை அதை வையும் இந்த யோக்கியர்கள் ருஜு செய்தால் நன்றாயிருக்கும். "ஜஸ்டிஸ்" என்பது ஒரு பத்திரிகையினுடைய பெயரேயல்லாமல் ஒரு கட்சியின் பெய ரல்ல. தென் இந்திய நலவுரிமைச்சங்கம் என்பதாக ஒரு சங்கம் இருக்கிறது. அதன் கொள்கையை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் ஒரு கட்சியாக இருக்கிறார் களேயல்லாமல் வேறில்லை. இந்த ஸ்ரீமான் ஒத்தகாசு செட்டியார் இருக்கும் போது ஏற்பட்டிருந்த கொள்கைகள் இன்னமும் அக்கட்சியில் மாறாமல் இருக் கின்றன. அவ்வப்போது அக்கொள்கைகளுக்கு ஏற்ற திட்டங்கள் ஏற்படுத்தி நடத்தி வரப்படுகிறது. நிற்க! "பார்ப்பனரல்லாதார்" பெயர் பொருளற்றது



என்று சொல்லு கிறது. இவரே அக்கட்சியிலிருந்து வைத்துவிட்டு வந்த பெயர். இந்த பெயர் இவருக்கு பிடிக்கவில்லை என்று சொல்வதானது ஸ்ரீமான் சீனிவாச ஐயங்காரின் பணத்தின் மகிமையேயல்லாமல் வேறல்ல. இவரைப் போலவே இன்னும் சில பார்ப்பன அடிமைகளும் பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளையாக வேண்டுமென்கிற ஏனையோர்களும் இதைச் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஒரு கூட்டத்தார் நமக்குவிரோதி, நமது சுயமரியாதையை கெடுத்தவர் கள் என்று நாம் உறுதியாக கண்டுவிட்டோமானால் நமது சுயமரியாதை இயக்கத்திற்கு அவர்கள் சகவாசமே கூடாது என்று தீர்மானித்து விட்டோ மானால், அம்மாதிரி இயக்கத்திற்கு என்ன பெயர் வைப்பது என்று அவரவர் ஆராய்ந்து சொன்னால் யோக்கியமானதாக இருக்கும். அந்த இயக்கத்தில் அங்கத்தினர்களாக சேர்ந்து கொள்ள உரிமையுள்ளவர்கள் அநேக பெயரையு டைவர்களாக இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது நாம் அந்த பெயரை உபயோகப் படுத்துவதானால் அது நமது சுயமரியாதைக்கு பங்கமானதாக இருக்கிறது. உதாரணமாக 'சூத்திரன்" என்று வைத்து கொள்வதா? அல்லது பஞ்சமன் என்று வைத்துக்கொள்ளுவதா? என்று சுயமரியாதையோடு யோசித்துப் பார்த்தால் அதன் யோக்கியதை விளங்காமல் போகாது. தெரிந்து பேசுகிறவர்களுக்கு யாரால் பதில் சொல்ல முடியும். இதை மற்றொரு சமயம் விவரிப்போம்.

தவிர, பார்ப்பனர்களை நாம் பகிஷ்கரிப்பதாய் சொல்லுகிறார். நாம் அவர்களை பகிஷ்கரிக்கின்றோமா? அவர்கள் நம்மை பகிஷ்கரித்து இருக் கின்றார்களா? என்ற விபரம் கடுகளவு புத்தியுள்ளவனுக்கும் தெரியாமல் போகாது. பார்ப்பனர் பகிஷ்காரத்தால் நமக்கு ஏற்பட்டிருக்கும் கெடுதிகளை நீக்கிக் கொள்ள நாம் முயற்சிக்கிறோமே யல்லாமல் நாம் அவர்களை பகிஷ்கரிக்கவில்லை. அவனுக்கு உள்ளதை அவன் எடுத்துக்கொள்வதிலும் நாமாகக் கொடுப்பதிலும் நமக்கு எப்போதும் ஆஷேபனையில்லை. ஆத லால் நாம் அவர்களை பகிஷ்கரிக்கிறோம் என்று சொல்வதும் ஒழிக்கப் பார்க்கிறோம் என்று சொல்வதும், துவேஷம் கொள்ளுகிறோம் என்று சொல் வதும் புரட்டுப் பார்ப்பனர்களுக்கு தாங்கள் மாத்திரம் நல்ல பிள்ளைகளாகி பொறுக்கித் தின்பதற்கும், ஏமாற்றுவதற்கும் போடும் வேஷமேயல்லாமல் வேறல்ல. ஆனால் நமது இயக்கத்திற்கு ஏன் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று கேட்கிறார்கள். அப்படி கேட்பது அறிவில்லாமை யும், அனுபவமில்லாமையும் ஆகும். ஏனெனில் பார்ப்பனன் நம்மை செய்த, செய்து கொண்டிருக்கும் கொடுமையிலிருந்தும், இழிவிலிருந்தும் மீளவே நாம் இவ்வியக்கத்தை ஆரம்பித்துக் கொண்டு இருக்கிறோம். அவ்வித இயக்கத்தில் அவனைக்கொண்டு வந்து உள்ளே நுழைத்துக் கொண்டால் அந்த இயக்கம் வாழுமா? அவர்களுடைய சூழ்ச்சியும், தந்திரமும், நமக்குள் கலகம் செய்வித்து நம்மை பிரித்து வைக்கும் விஷமத்தனமும் நமக்குத்



RangaRakes tamilnavarasam.com

தெரியாதா? அவர்களை சேர்த்த எந்த இயக்கம் உலகத்தில் யோக்கியமாய் நடந்தது அல்லது நடைபெறுகிறது?.

மகாத்மா காந்தியின் அற்புதமான இயக்கம் அழிந்து, அவரது புனிதமான தத்துவங்கள் பயன்படாமல் அவரையும் ஒரு சங்கராச்சாரியார் போல ஆக்கிவிட்டது, பார்ப்பனர்களை அவரது இயக்கத்தில் சேர்த்ததினா லல்லவா? தனவைசிய நாட்டில் பார்ப்பனீயத்தை ஒழித்து, மக்களுக்கு சமத் துவமும், சுதந்திரமும் அளித்து, மூட வழக்கத்தை ஒழித்து, சுயமரியாதையை உண்டாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு பதினாயிரக்கணக்கான ரூபாய் களை செலவு செய்து பல அறிஞர்கள் கூடி ஆரம்பித்த ஒரு பத்திரிகை இன் றைய தினம் சுயமரியாதைப் பிரசாரம் செய்வது நாட்டிற்கு கெடுதி என்றதாக எழுதிக்கொண்டு சுயமரியாதைப் பிரசாரத்திற்கு எதிர் பிரசாரம் செய்வதற்கு காரணமென்ன? ஒரு பார்ப்பனனை அந்த பத்திரிகை ஆபிஸில் நுழைய விட்டதினாலல்லவா? இப்பேர்பட்ட சொந்த உறுதியுள்ள மக்களும், தத்துவங் களும், பார்ப்பனர்களை உள்ளே சேர்த்ததின் பலனாக பாழ்பட நேரிடுகிறது என்றால் மற்ற சாதாரண கூட்டங்களில் புகவிட்டால் என்ன கதியாகு மென்பதை யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. விதண்டா வாத முறையில் வக்கீல் தத்துவம் பேசுவதின் மூலம் வாயாடிகள் பாமர மக்களை எந்த கொள்கைக்கு வேண்டுமானாலும் இழுத்து விடலாம். வாதத்தில் பாமர மக்களை வென்று விடலாம். இவைகளாலேயே சரிக்கண்ட நியாயமேற் பட்டுவிடுமா? பாமர மக்களுக்கு பகுத்தறிவு உணர்ச்சி வரும்வரை இம்மாதிரி ஒரு கூட்டத்தார் யேமாற்றி வயிறு வளர்த்துக்கொண்டு பெருமையும், கீர்த்தியும் சம்பாதிக்கலாமே ஒழிய உலகத்திற்கு இவர்களால் ஒருபயனும் யேற்படாததோடு நாளுக்குநாள் பாழ்பட்டுக் கொண்டே வரும். எனவே செங்கல்பட்டு ஜில்லா மகாநாடு என்னும் பார்ப்பனீய மகாநாட்டில் நடைபெற்ற நடவடிக்கைகளும் அதில் சம்பந்தப்பட்டவர்களும் பார்ப்பனர்களால் ஏமாந்த வர்களும், பார்ப்பனர்களின் தயவு பெற்று வாழ்பவர்களுமானவர்களின் நடவ டிக்கையேயல்லாமல் இது ஒரு பொதுத்தொண்டு அல்லவென்று சொல்வ தோடு இம்மாதிரி சூழ்ச்சிகளைக் கண்டு மக்கள் யேமாறும் காலம் மலையே றிப்போய்விட்டது என்றும் சொல்வோம். மற்றபடி அதன் தீர்மானங்களைப் பற்றி பின்பு ஆராய்வோம்.

**குடி அரசு - தலையங்கம் - 24.07.1927**



RangaRakes

# வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் பார்ப்பனத் தலைவர்களும்

காஞ்சீபுரம் மகாநாட்டிலிருந்து ஸ்ரீமான்கள் ஈ.வெ.ராமசாமி நாயக்கர், எஸ். ராமநாதன், தண்டபாணி பிள்ளை, ஆரியா முதலியவர்கள் வெளியேறின காரணம் இன்னதென்பதும் அது முதல் வேறு தனிப்பிரசாரம் செய்து வருவதின் நோக்கம் இன்னதென்பதும் நமது நேயர்கள் அனேகருக்குத் தெரியும்.

அதாவது மகாநாட்டிற்கு நாயக்கரும் ராமனாதனும் அனுப்பிய வகுப்புவாரி பிரதிநிதித்துவ தீர்மானத்தை காஞ்சீபுரம் மகாநாட்டுத் தலைவர் மகாநாட்டில் பிரேரேபிக்கக் கூட அனுமதிக்காமல் சட்டத்தின் பெயரைச் சொல்லி தள்ளிவிட்டதினாலேயே மேற்கூறியவர்கள் வெளியேறினார்கள் என்பது ஷை மகாநாட்டிற்குப்பிறகும், ஸ்ரீமான்கள் கல்யாணசுந்தர முதலியார், வரதராஜுலு நாயுடு ஆகியவர்கள் அவ்வகுப்புவாரி உரிமைக்கு விரோதமாய் பிரசாரம் செய்ததும் சில இடங்களில் ஆதரித்ததும் ஆகிய காரியங்களும் நேயர்களுக்குத் தெரியும். கடைசியாக கோவை மகாநாட்டில் வகுப்புவாரி உரிமையை அடிப்படையாகக் கொண்ட காங்கிரசுக்கு நம்மை அழைத்ததும் தென் இந்திய நலஉரிமைச் சங்கத்தை ஏற்றுக்கொண்டதும் வாசகர்களுக்குத் தெரிந்ததே.

இப்போது வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு ஒரு புது ஆதரவு. அதாவது நமது நாட்டிற்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டால் எந்த வகுப்பார் தங்களுக்கு ஆபத்து என்பதாகக் கருதி இவ்வளவு திருவிளை யாடல்களைச் செய்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறார்களோ, அந்த வகுப்பில் முக்கியமானவரும், ஒரு ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு தலைவரா னவரும், சுயராஜ்யக்கட்சி உபதலைவரும், ஸ்ரீமான் ஏ.ரங்கசாமி அய்யங்கார் சம்மந்தியுமான ஸ்ரீமான் கோவை சி.வி. வெங்கிட்டரமணய்யங்கார் அந்த கொள்கையை ஒப்புக்கொண்டு "வகுப்பு வாதத்தை ஒழிப்பதற்கு யோசனை" என்கிற தலைப்பில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ திட்டம் கூட ஏற்பாடு செய்துவிட்டார். அதாவது ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமணய்யங்கார் 16-7-27 தேதி "சுதேசமித்திரன்" பத்திரிகையில் ஒரு நிருபருக்கு பேட்டி



tamilnavarasam.com

கொடுத்தார் என்கிற முறையில் இந்த ஜில்லா வாசிகளுடைய அபிப்பிராயங் களையும், அபிலாஷைகளையும் நான் அறிவேன். அவர்கள் அபிப்பிராயங் களை நான் தெரிந்துகொண்டிருக்கிறேன் என்று சொல்லிவிட்டு அதை ஒருவாறு சுறுக்கிகூறுகிறார்.

“சட்டசபை போன்ற பொது ஸ்தாபனங்கள் விஷயத்திலும் உத்தியோக விஷயத்திலும்தான் சங்கடம் இருந்து வருகிறது” என்று சொல்லிவிட்டு அதற்கு மார்க்கம் சொல்லுகிறார். அதாவது சட்டசபை முதலிய சம்பளம் இல்லாத கௌரவ ஸ்தானங்களில் 100க்கு 16 $^1/_2$ ஸ்தானங்கள் பார்ப்பனர் களுக்கும் மீதி 83 $^1/_2$ யில் கிறிஸ்தவர்களுக்கு16 $^1/_2$ யும் மகமதியர்களுக்கு16 $^1/_2$ யும் தாழ்ந்த வகுப்பு பிரதிநிதிகளுக்கு 16 $^1/_2$ யும் பார்ப்பனரல்லாதவர்களுக்கு 33ம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

உத்தியோக விஷயத்தில் புதிதாக செய்யப்படும் உத்தியோக நியமனங்களில் 100க்கு 40 பார்ப்பனரல்லாத இந்து மக்களுக்கு என்றும் 100க்கு 20 பார்ப்பனர்களுக்கு என்றும், 100க்கு 20 முகம்மதியர்களுக்கும், 100க்கு 10 கிருஸ்தவர்களுக்கும், 100க்கு 10 ஆதிதிராவிடர்களுக்கு என்றும் எழுதி இருக்கிறார். வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டுமென்று சொன்னவர் களுக்கு இதன் பரிமாற்றத்தில் திட்டத்தில் ஏதாவது வித்தியாசமிருந்தாலும் முக்கிய கொள்கையில் யாதொரு மாறுபாட்டையும் காணோம் எனவே பார்ப்பனர்களும் ஒருவாறு வகுப்பு வாரி திட்டம் ஏற்படுத்த ஒப்புக்கொண்டு வருகிறார்கள் என்பது இப்போது வெளிப்படை இன்னமும் எத்தனையோ பார்ப்பனர்களும் பார்ப்பன வாலிபர்களும் நம்முடன் நேரிலேயே சொல்லி இருக்கிறார்கள். அதாவது “பார்ப்பனர் பிறவிகாரணமாய் ஜாதியில் மற்ற எவரையும்விட உயர்ந்தவனல்ல என்பதையும், இந்திய மக்களின் ஒற்றுமைக் கும் கதி மோக்ஷத்திற்கும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவமே சிறந்த சாதனம் என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறோம். எங்களையும் தங்கள் சுயமரியாதை சங்கத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்” என்று கேட்டிருக்கிறார்கள். நமக்கு இன்னமும் அவர்களிடம் நம்பிக்கை வராததால் நாம் நமது காலிலேயே நின்று நமது தேவையை அடைய வேண்டும் என்கிற ஆசையாலும், இதற்கு முன் பல தடவைகளில் கிளம்பிய இது போன்ற பிரயத்தனங்களை இதே பார்ப்பனக் கூட்டத்தார் கூட இருந்தே கெடுத்திருக்கிறதை பார்த்து இருப்பதினாலேயும், நமக்கு அவர்களிடம் நம்பிக்கை உண்டாவது கஷ்டமாயிருக்கிறதே ஒழிய வேறில்லை, எப்படியும் இதிலிருந்து வகுப்புவாரி பிரதிநிதித்துவ கொள்கை யுடைய பார்ப்பன எதிரிகள் குறைந்து வருகிறார்கள் என்கிற விஷயத்தில் நமக்கு சந்தோஷம். ஆனால் பார்ப்பனர்கள் யோக்கியர்கள் என்பதை காட்டிக் கொள்ள இப்படிச் சொல்லிவிட்டு பார்ப்பனரல்லாதாரில் மறுபடியும் சிலரை சிருஷ்டித்து கலகம் செய்யச் செய்வார்கள் என்கிற பயமும் நமக்கு உண்டு. ஆனாலும் அதையும் ஒரு கைபார்க்க எல்லாம் வல்ல இறைவன் நமக்கு வலிமை அளிப்பாராக. கடைசியாய் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப்பற்றி



RangaRakes

பச்சைப்பார்ப்பனப் பத்திரிகையாகிய “இந்துப்” பத்திரிகை சொல்லியிருப்ப தையும் குறிப் பிட்டுவிட்டு இதை முடித்துவிடுகிறோம்.

“இந்து” பத்திரிகை எழுதியதாவது:–

“வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஜனங்களிடை சுயமதிப்பை உண்டுபண்ணியிருக்கிறதென்பதையும், சமுதாய முன்னேற்றத்துக்குக் காரண மாயிருக்கின்ற தென்பதையும், ராஜீயவாழ்வில் அலட்சியமாயிருந்த வகுப்பி னருக்கு ராஜீய அறிவு புகட்டுவதற்கான வசதிகளை அது உண்டுபண்ணி யிருக்கிற தென்பதையும் யாவரும் மறுக்கமுடியாது” என்று எழுதியிருக்கிறது. இதைப்பார்த்த பின்பாவது பார்ப்பனரல்லாதாருக்குள் வகுப்புவாரி பிரதிநிதித் துவத்திற்கு கண்ணியமான எதிரிகள் இருக்கமாட்டார்களென்று நினைக் கிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 31.07.1927**



tamilnavarasam.com

# சிறா வயல்

சகோதரர்களே!

உங்கள் வரவேற்பு பத்திரத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாதானாலும், என்னைப்பற்றிய புகழுரைகள் போக மீதி உள்ள வாசகங்கள் எனது கொள் கையை தாங்கள் மனப்பூர்வமாய் ஒப்புக் கொண்டு அதன்படி நடப்பதோடு அதை மற்று அனுபவத்திலும் கொண்டு வர தங்களுடைய சம்மதத்தை தெரிவிக்கின்றன. ஆதலால் அதைப்பொருத்தவரை வந்தனத்துடன் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

நான் ஏதோ பிரமாதமான காரியங்கள் செய்துவிட்டதாகவும், பெரும் தியாகம் செய்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறீர்கள், அவ்விதமாகச் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை. ஜெயில் வாசத்தைப் பற்றி சொல்லியிருப் பது மிகவும் வேடிக்கையானது. ஜெயிலுக்குப் போவதனால் பெரிய கஷ்ட நஷ்டம் ஒன்று மில்லை. சந்தோஷமாகவும், சாந்தியுடனும் ஓய்வெடுத்துக் கொள்ள மனிதனுக்கு ஜெயிலை விட வேறு இடம் இல்லை. ஜெயிலில் இருக் கிற காலம் வரை வெளியில் தொண்டு செய்வதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறதே என்கிற ஒரு கவலை தவிர மற்றபடி வேறு ஒன்றும் இல்லை. ஆனால் வெளியில் வந்தால் முன்னிலும் அதிகமாக வேலை செய்யக்கூடிய ஆற்றலும் எழுச்சியும் உண்டாய்விடுகிறது. ஆதலால் அது ஒரு குறிப்பிடத் தக்க விஷயமே அல்ல. உலகத்தில் உள்ள மக்களும் மற்றும் ஜீவன்களும் அதனதன் உயிர் உள்ளவரை யாதாவது ஒரு தொழில் செய்து கொண்டுதான் இருக்க வேண்டியது ஜீவ சுபாபம். தொழிலில்லாமல் இருக்கவே முடியாது. சும்மா இருப்பது என்பதும் ஒரு தொழிலேயாகும், அன்றியும் அது மற்ற எல்லாத் தொழிலையும் விட மிகவும் கஷ்டமானது. கிரமமாய்ச் சொல்வ தானால் செத்தால் தான் சும்மா இருக்க முடியும். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தொழிலில் ஈடுபட்டு இருப்பது போல் அதாவது ஒருவன் வியாபாரம், ஒருவன் உத்தியோகம், ஒருவன் சாமியார், ஒருவன் பத்திரிகை ஆசிரியன், ஒருவன் தேசத் தலைவன், ஒருவன் பூசாரி, ஒருவன் தாசி வியாபாரம், ஒருவன் கள்ளு வியாபாரி என்பதாக பலர் பல தொழில் செய்வதுபோல் நானும் ஏதேதோ தொழில் செய்து இப்போது இந்த தொழில் செய்கிறேன். இவைகள் செயற்கை வாசனை, தற்செயல் முதலிய பல காரணங்களால் இது ஏற்பட்டனவே தவிர இதற்குப் பிரமாதமான யோக்கி யதை ஒன்றும் கொடுக்க வேண்டியது இல்லை என்பதே எனது அபிப்பிராயம். மனித வாழ்வில் ஒவ்வொருவனுக்கும் இம்மாதிரி ஏதாவது ஒரு தொழில் இருந்துதான் தீரும். எந்த தொழிலை யார் செய்தாலும் அவனவன் ஜீவ சுபாவத்தைக் காட்டுவதிலொன்றாகுமே ஒழிய அதற்கு யோக்கியதை கொடுக்க வேண்டியதில்லை. இவைகள் உலக வாழ்க்கையில் மாறிமாறி வரவும் கூடும். இந்நிலையில் ஒரு மாற்றம் மக்களுக்கு அனுகூலம் இருப்பது போலவும், ஒரு சமயம் அவருக்கு மாத்திரம் சுயநலம் இருப்பதுபோலவும், மற்றொரு சமயம் ஒன்றுக்கும் உதவாமல் மக்களையும் கெடுத்து தானும் கெடுவதாகவும் காணப்படும். இவ்வித ஜீவ சுபாவமான தோற்றங்களைக் காணுவதினாலேயே ஆச்சரியப்படத்தக்கதும், புகழத்தக்கதும் ஒன்று மில்லை. தவிர எனது தொண்டாகிய சுயமரியாதை இயக்கத்திற்கு பொது மக்களின் எதிர்ப்பு இருக்குமோ என எண்ணிப் பயந்துகொண்டு வந்த உங்கள் ஊரில் நீங்கள் ஆதரித்திருப்பதானது எனக்கு மேலும் மேலும் மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அடக்க முடியாத மன உறுதியையும் கொடுக்கிறது. சுய மரியாதை தத்துவமும், இயக்கமும் நமக்கு புதிதல்ல, அது இன்று நேற்று ஏற் பட்டதல்ல. அது மனிதன் எந்தக் காலத்தில் ஏற்பட்டானோ, எந்தக்காலத்தில் மனிதத் தன்மையும், பகுத்தறிவு உணர்வும் அவனுக்கு ஏற்பட்டதோ, அன்று முதலே சுயமரியாதை உணர்ச்சி மக்களுக்கு ஏற்பட்டுத்தான் வருகிறது. ஆனால் அதன் எதிரிகள் அதாவது ஒரு மனிதனுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படுவதால் மற்றொரு மனிதனுடைய சுய வாழ்க்கைக்கும், உயர்வுக்கும் தடை ஏற்படுமானால், அந்த தடைக்கு ஆளாகிறவன் மற்றவனின் சுய மரியாதைக்கு விரோதமாயிருந்து அதனை ஒழிக்க வேண்டியது அவனது கடமையாகிற காலத்தில் கொஞ்சம் கொஞ்சம் மறைபடுகிறதுண்டு. ஆனால் அது ஒரே அடியாய் ஒரு நாளும் மறைந்து போகக்கூடியதல்ல.

## ஆதிதிராவிடர்

தவிர, ஆதிதிராவிடர்கள் என்கிற பெயரால் எனக்கு ஒரு வரவேற்பு பத்திரம் அளித்துக் கொடுத்திருப்பதற்கு இரண்டொரு வார்த்தை சொல்லு கிறேன். நீங்கள் ஆதி திராவிடர்கள் என்று ஒரு பெயர் பெற்று இருப்பது உங்கள் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட இழிவை மாற்றிக் கொள்வதற்கு அனு கூலமான தென்று நினைத்திருக்கிறீர்கள். உங்களை கொஞ்ச காலத்திற்கு முன்பு பறையர்கள், சக்கிலியர்கள், பள்ளர்கள் என்று சொல்லிக்கொண்டிருந்த காலத்தில் அவ்வார்த்தைகளுக்கு என்ன பொருளும் தத்துவமும் இருந்ததோ அதே பொருளும் தத்துவமும் தான் “ஆதிதிராவிடர்” என்ற வார்த்தையிலும் இருக்கிறதேயல்லாமல் எந்த விதத்திலாவது அது மறைவுபட்டதாக காணவில்லை.


RangaRakes
tamilnavarasam.com

"பெருமாள்" என்பதாக பெயரையுடைய ஒரு 'பறையன்' ஒரு பார்ப்பனனிடம் அடிமையாய் இருந்த காலத்தில் அந்த பார்ப்பனன் அந்த பறையனை பெருமாள் என்று கூப்பிடுவது தனது பார்ப்பனீய கௌரவத்திற்கு குறைவாய் இருப்பதாக எண்ணி போய் வேறு பெயர் மாற்றிக் கொண்டு வரும்படி, கொஞ்சம் பொருள் கொடுத்து கேட்டுக்கொண்டதாகவும் அந்த பறையன் பெருமாள் என்ற பெயரை மாற்றி, பெரிய பெருமாள் என்று வைத்துக்கொண்டு வந்ததாகவும், அதன் பேரில் இந்த பார்ப்பனன் பழைய பெயரைவிட புதுப்பெயர் ரொம்பவும் மோசமாக போய்விட்டதாக கருதின தாகவும் ஒரு கதை சொல்வதுண்டு. அதுபோலவே பறையர் என்கிற பெயர் மாறி ஆதிதிராவிடர் என்கிற பெயர் வந்ததினால் "பறையருக்குண்டான" இழிவு தத்துவம் ஒரு சிறிதும் மாறாமல் ஆதிதிராவிடன் என்றால் பறையன் இழிந்த மகன் என்ற அர்த்தத்தைக் கொடுப்பதோடு, தேசத்தின் யோக்கியதை யையும் இழிவுபடுத்தத்தக்கதான பொருளும் அதில் அடங்கி இருக்கிறது. இதை விட பழய பெயரே மேலானதென்பது எனது அபிப்பிராயம்.

சமூகத்திற்கோ, சங்கத்திற்கோ ஒரு பெயர் வைக்க வேண்டுமானால் எந்த குற்றத்தை நீக்குவதற்காகவோ, அல்லது எவ்வித இழிவை விலக்குவதற் காகவோ எம்மாதிரி முன்னேற்றத்தை அடைய வேண்டுமென்பதற்காகவோ நாம் கருதி இருக்கிறோமோ அந்தக் கருத்தை கொண்டதான பெயரை ஒரு பிரசாரத்திற்கோ, இயக்கத்திற்கோ இடுவதுதான் அறிவுடைமையாகும். உதார ணமாக நமது நாட்டில் பார்ப்பனர் தவிர ஏனைய மக்கள் பார்ப்பனர்களால் இழிவு படுத்தப்பட்டும், கொடுமைப்படுத்தப்பட்டும் இருப்பதை உணர்ந்து அவ்விழிவிலும் கொடுமையிலுமிருந்து மீள்வதற்காக ஏற்படுத்திக் கொண் டிருக்கும் சங்கத்திற்கும் வைத்துக்கொண்டிருக்கும் பெயர்களை பார்த்தால் உங்களுக்கு விளங்காமல் போகாது. பார்ப்பனர்களுடைய கொடுமையி லிருந்தே மீளுவதற்காக ஏற்படுத்திக்கொண்ட கூட்டமாதலால் "பார்ப்பனரல் லாதார்" என்கிற பெயரோடும் அக் கொடுமையால் தாழ்த்தப்பட்டதிலிருந்து விலகி பார்ப்பனரல்லாதார் உரிமையை அடைவதற்காக ஏற்படுத்திய சங்கமா தலால் அதே கருத்து தொனிக்க தெ.இ.ந.உ. சங்கமென்பதாகவும் பெயர் கொடுக்கப்பட்டிருப்பதை நீங்கள் உணரலாம். மற்றபடி வேறு எந்த பெயர் வைத்தாலும் இழிவு மறையவோ, இழிவுபடுத்தினவர்களுடைய சூழ்ச்சிகளி லிருந்து தப்பவோ, முன்னேற்றமடையவோ, பெயர் மூலியமாய் அடையக் கூடி நன்மையை அடையவோ முடியாது. எத்தனையோ சமூகத்தார் தங்களை மற்றவர்கள் இழிவு படுத்துவதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாமென்று கருதி எவ்வளவோ பெயர்களை மாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இதனால் அவர்கள் எந்த இழிவை மறைக்க நினைத்தார்களோ அது ஒரு சிறிதும் மறை படாமலும் அந்தப் பெயர் ஏற்படுத்துவதற்கு முன் எப்படி இருந்தார்களோ அது போலவே தான் இருந்து வருகின்றார்களே தவிர புது மாதிரியான மாறுதல் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. உதாரணமாக ஆசாரிமார்கள்



தேவாங்க சமூகத்தார்கள் முதலிய வர்கள் தங்களுக்கு விஸ்வ பிராமணர்கள், தேவாங்க பிராமணர்கள் என்பதாக பெயர் வைத்துக்கொண்டதாலும் நாயக்கர் மார்கள், படையாச்சி மார்கள், நாடார்மார்கள், தங்களுக்கு பல்ஜிய க்ஷத்திரியர் கள், வன்னிய க்ஷத்திரியர்கள், அக்கினி குல க்ஷத்திரியர்கள் என்பதாக பெயர் வைத்துக் கொண்டாலும் நாட்டு கோட்டை நகரத்து செட்டியார், கோமுட்டி செட்டியார், வாணிகச் செட்டியார், வேளாளர் முதலியோர் தங்களுக்கு முறையே தன வைசியர், நகரத்து வைசியர், ஆரிய வைசியர், வாணிப வைசியர், பூ வைசியர் என்பதாக பெயர் வைத்துக் கொண்டாலும் புராணங்கள் மூலியமாக இதற்கு ஆதாரம் கண்டு பிடித்தாலும் மற்ற எத்தனையோ வகுப்பார் மற்ற எத்தனையோ பெயர்களை வைத்துக் கொண்டு இருந்தாலும் இந்த பெயர்கள் அல்லாத "சூத்திரர்கள்" என்கிற பெயருக்கு உண்டான பொருளும், தத்துவமும் அனுபவ உண்மையும் கிரகிக்கப்படுகிறதே யல்லாமல் ஒரு சிறிதாவது மாற்றம் ஏற்படாததோடு எந்த கொள்கையை உத்தேசித்து இந்த பெயரை வைத்துக்கொள்ளுகிறோமோ, அந்த கொள்கை களின் மூலியமாகவே நாம் நம்மைவிட மற்றொரு கூட்டத்தார் உயர்வு என்பதையும் மற்றொரு கூட்டத்தாரை விட நாம் தாழ்ந்தவர்கள் என்பதையும் ஒப்புக்கொண்டதோடு அதை நிலை நிறுத்தவும் பாடுபட்டவர்களாகிறோம்.

ஆகவே, இம்மாதிரி பெயர்களை வைத்துக்கொள்வது "சப்தம்" மாத்திரத்தில் உயர்வாக தோன்றினாலும் தத்துவத்தின் மூலியமாக அதில் தாழ்மையே இருக்கிறது. ஆதிதிராவிடர் என்று சொல்லிக்கொள்பவர்களாகிய நீங்கள் உங்களை யார் தாழ்ந்தவர்கள் என்று சொல்லுகிறார்களோ, யார் கொடுமைப்படுத்துகிறார்களோ, யார் அதற்கு ஆதாரமாய் இருக்கிறார்களோ "அவர்கள் பெயரை வைத்து "அவர்கள் அல்லாதார்" என்பதாக வைத்துக் கொண்டால் அந்தப் பெயரும் கொடுமையும் ஞாபகத்தில் இருப்பதோடு அதி லிருந்து விலகுவதற்கு உண்டான அறிவும் சக்தியும் அதிலிருந்து ஏற்படும். இந்த கூட்டத்திலேயே ஒரு கனவான் உங்களை 'ஒடுக்கப்பட்டார்' என்றழைக் கலாம் என்பதாக சொல்லுகிறார். எனக்கு அது கூட அவ்வளவு சரியான பெயர் என்பதாகத் தோன்றவில்லை வேண்டுமானால் ஒடுக்கினவர்கள் அல்லாதார்" "கொடுமைக்காரர்களல்லாதார்," "அயோக்கியர்கள் அல்லாதார்" என்று பெயர் வைத்துக்கொண்டால் அவர்களையும் உங்கள் கூட்டத்தில் சேர்க்காமல் சீக்கிரத்தில் இக்கொடுமை நீங்கவும் மார்க்கம் ஏற்படும். அப்படி ஏற்பட்டதுடன் இப்பெயர் மறைந்து விடுவதற்கும் அநுகூலம் ஏற்படும். அப்படிக்கில்லாமல் க்ஷத்திரியர், வைசியர், அருந்ததியர், ஆதிதிராவிடர், இந்திரகுலத்தார், நீலகண்டனார், பார்க்கவனார் என்று அம்மாதிரி பெயர் வைத்துக்கொள்வதால் நமக்கு நாமே சொல்லிக்கொண்டு கர்ப்பகோடி காலம், இந்த இழிவிலேயே இருக்க வேண்டியதுதானே ஒழிய நாம் கோரும் பலன் ஒருசிறிதும் அதனால் உண்டாகாது. சிலர், இந்த கொள்கையோடு பேர் வைப் பதின் மூலம் பெருத்த ஆக்ஷேபனை இருப்பதாக காட்டிக் கொள்ளுகிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

அது ஒரு சிறிதும் உண்மையான தென்றாவது மனப் பூர்த்தியாய் சொல்லு கிறார்கள் என்றாவது ஒரு சிறிதும் எண்ணுவதற்கு இடம் இருப்பதாக எனக்கு தோன்றவில்லை. அதாவது "பார்ப்பனரல்லாதார்" என்று சொல்வதால் பார்ப்பனர் என்று ஒரு ஜாதி இருப்பதாக ஒப்புக்கொள்வதாகவும் அந்தப் பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் என்கிற தத்துவத்தை ஒப்புக்கொள்வதாகவும் ஜாதி வித்தியாசம் ஒழிய வேண்டும் என்கிற எண்ணத்தோடு ஏற்படுத்தின இயக்கம் அதை நிலை நிறுத்துவதற்கு வேலை செய்வதாக ஆகும் என்றும் சொல்லுகிறார்கள். இந்த வார்த்தைகளில் ஏதாவது கடுகளவு சத்து இருக்கிறதா? பார்ப்பனர்கள் என்ற ஒரு கூட்டத்தாரை நாம் தினம் கண்ணில் பார்த்துக் கொண்டு வருகிறோம். அவ்வொரு கூட்டத்தார் இந்த நாட்டில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். அதை யாரும் திரை போட்டு மறைத்து விட முடியாது. ஆனதினால் அப்படி ஒருவர் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்வதாகுமென்பது அர்த்தமேயில்லை. அடுத்தாற்போல் இப்படிச் சொல்வதன் மூலம் பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் என்பதை ஒப்புக் கொள்வ தாகின்றது என்பது நமக்கு அதிசயமாக இருக்கிறது. பார்ப்பனர் என்று சொன்னால் பார்ப்பனன் உயர்ந்தவன் என்று ஒப்புக்கொள்வது ஆகிறது என்று எந்த அகராதியில் எழுதியிருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை. அல்லது பார்ப்பனன் என்று சொல்லும்போது அவன் உயர்ந்தவன் என்று எண்ணிக் கொண்டு சொல்லுகிறோமா? என்று பார்த்தால் அதுவும் இல்லை. 'ஆதிதிராவிடர்' என்று சொல்லும்போது அவர்கள் மிகத் தாழ்ந்தவர்கள் என்ற உணர்ச்சி தோன்றி விடுகிறது பார்ப்பனர்கள் என்று சொல்லும்போது நமக்கு பலவித கொடுமைகள் செய்தவர்கள் என்றுதான் தோன்றுகிறதே யல்லாமல் பலரும் அம்மாதிரியே நினைக்கும்படியாக கொடுமைகளை ஞாபகபடுத்தக் கூடியதாக இருக்கிறதேயல்லாமல் வேறு ஏதாவது உயர்வு அதில் இருக்கிறதா? ஏற்படுகிறதா? ஆகவே பார்ப்பனன் உயர்ந்தவன் என்பதை நிலைநிறுத்துவதாக அந்த பதம் இருக்கிறது என்று சொல்லுவது தர்மம் ஆகுமா? அதில் ஏதாவது, யோக்கிய பொறுப்பிருக்கிறதா? தவிர இந்த பெயர் இருப்பதினாலேயே எந்த விதத்தில் வித்தியாசம் நிலைத்து விடும் என்பதும் நமக்கு விளங்கவில்லை. நமது நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான வகுப்பு வித்தியாசங்களை ஒழிப்பதற்காகவே அவ்வித்தியாசங்களுக்கு மூலாதாரமானவர்களை அந்த வித்தியாசத்தை விட்டு விட்டு நம்மோடு வந்து சேரும்படி அழைக்கும் தத்துவத்தோடு கூட அந்த பெயர் வைக்கப்பட்டி ருக்கிறதே அல்லாமல் அதை நிலைநிறுத்தும் தத்துவம் அதனிடத்திலில்லை. அதற்கு உதாரணமாகவே பல பார்ப்பனர்கள் இந்த இயக்கத்தில் வந்து சேரப் பிரியப்படுவதும், நாம் இது சமயம் பலகாரணங்களால் அவர்களிடம் நம்பிக்கையில்லாமலும், சேர்ந்து கொள்வதற்கு இல்லாமலும் இருப்பதால் வேண்டாம் என்று சொல்வதாகவும் இருக்கிறதே யல்லாமல் வேறல்ல. நிற்க,



## ஆதிதிராவிடர்களுக்கு தனி ஸ்தாபனம்

ஆதி திராவிடர்களுக்கு என்று தனியாக கிணறு, கோவில், பள்ளிக் கூடம் முதலியவைகள் ஏற்படுத்துவது புண்ணியம் என்று சிலர் கருதுகி றார்கள். நான் அதை ஒப்புக் கொள்ள முடியாததோடு வெறுக்க வேண்டிய வனாகவும் இருக்கிறேன். சென்ற வருடம் இதே ஊருக்கு வந்திருந்த சமயம் காந்தி கிணறு என்ற ஒரு கிணற்றை ஆதி திராவிடர்களுக்கு மாத்திரம் என்று வெட்டி அதைத் திறந்து வைக்கும்படி கேட்டு கொண்டபோது நான் இதே அபிப் பிராயத்தை தான் தெரிவித்தேன் காரணம் என்னவென்றால் அவர்கள் படிக்கக் கூடாது என்பதற்காகவாவது அவர்களுக்கு தனி சௌகரியம் ஏற் படுத்தி கொடுக்கக்கூடாது என்பதற்காகவாவது அல்லவே அல்ல. இம்மாதிரி ஒரு வகுப்பாருக்கு தனி சௌகரியம் ஏற்படுத்தி கொடுத்து நம்மோடு கலந்து வாழும்படி செய்யாததின் பயனாய் நிரந்தரமாய் இவர்கள் இழிந்தவர்கள் என்பதை நிலைநிறுத்தி அவர்களை மீளவிடாமல் செய்தவர்களாகின்றோம். அதுபோலவே பார்ப்பனர்களுக்கும் சிறுதனி உரிமைகள் செய்துகொடுத்து நம்மோடு கலர விட்டு விடாமல் செய்து வருவதின் பயனாகவே அவர்கள் உயர்ந்தவர்கள் என்பதையும் நாம் தாழ்ந்தவர்கள் என்பதையும் நிலை நிறுத்தினவர்களாகின்றோம். இன்னும் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு கோடிக்கணக்கான தொகைகளைச் செலவு செய்து தர்மம்,புண்ணியம், மோட்சம் என்பதின் பெயரால் பார்ப்பனர்களுக்கு தனிப்பள்ளிக்கூடங்களும் சத்திரங்களிலும் கோவில்களிலும் ஏனையஇடங்களிலும் தனி உரிமைகளும் "பறையர்களுக்கு" தனிகிணறும், தனி பள்ளிக்கூடம் முதலியவைகளும் செய்து கொண்டு வருவதானாலும் ஒருக்காலும் நமது மக்கள் சுயமரியாதை அடைந்து நாடு விடுதலை அடையும் என்று எண்ணுவதற்கு கொஞ்சம் கூட இடமேயில்லை. தாழ்த்தப்பட்ட மக்களை முன்னுக்கு கொண்டு வருவதற்கும் சமத்துவம் அடையச்செய்வதற்கும் பாடுபடும் பெரியோர்கள் அந்த சமூகத் திற்கென்று தனியாக கிணறும், கோவிலும் பள்ளிக்கூடமும், வெட்டவும், கட்டவும் ஏற்படுத்தவும் நினைப்பதானது அச்சமூகத்தாரை நிரந்தரமாய் இழிவுபடுத்தி வைப்பதற்கு ஆதாரங்களையும், அவசியங்களையும், கற் சிலைகளையும், சிலாசாசனங்களையும் உண்டாக்கி வைத்தவர்களே ஆவார் கள்( இப்படிச் சொல்லிக்கொண்டு வரும்போது திரு. ஏ.வி. தியாகராஜ் அவர் கள் ஒன்று மில்லாமல் இருப்பதற்கு இது மேலல்லவா? என்று கேட்டார்கள்) ஒன்றுமில் லாமல் இருப்பதை விட இது எந்தவிதத்திலும் மேலாகாதென்றும், கிணறும், பள்ளிக் கூடமும், கோயிலும் இல்லாமல்போனால் குடிக்கவும், படிக்கவும், கும்பிடவும் இல்லாமல் போகலாமே தவிர தாழ்ந்தவன் என்பதை நிரந்தரமாய் நிலை நிறுத்தாது என்பதை கவனியுங்கள். நமது நாட்டில் அதைபோல அநேக பெரியார்கள் எவ்வளவோ காலமாக இதைவிட மிகப் பெரும் பெரும் தருமங்களை அக்கூட்டத்தாருக்கு செய்து வந்திருந்தும் இதுவரையில் ஒரு சிறிதாவது அவர்கள் நிலைமை முன்னேறியிருப்பதாக



RangaRakes tamilnavarasam.com

சொல்வதற்கில்லை. உதாரணமாக தஞ்சாவூர் ராஜாவின் தர்மசாசனத்தை நான் பார்க்க நேர்ந்த பொழுது இந்த பறையர்களுக்கு என்பதாக பள்ளிக்கூடம், சத்திரம் மற்றும் பல தர்மங்கள் முதலியவைகளுக்கு பெரும்பாகமான பணத்தை ஒதுக்கி வைத்ததோடு, செய்து வந்ததாகவும் தெரிகிறது. ஆனால் அந்த ஜில்லாவில்தான் இந்த பறையர்கள் எல்லாரைவிட அதிகமாக அடிமைகளாக விற்கவும், வாங்கவும் படுகிறார்கள். எனவே அந்த வகுப்பாருக்கு யாராவது நன்மை செய்ய வேண்டுமானால் மலையளவு செய்யக்கூடிய தன்மையானது கடுகளவு செய்யக் கூடியதாக ஏற்பட்டாலும் அவர்களும் நாமும் கலந்து பழகுவதற்கு தகுந்தபடி ஏற்படுத்துவதுதான் அவர்களை முன்னேற்றத்திற்கு கொண்டு வருவதற்கு தக்க விதமாக ஏற்படுத்தியதாகுமே தவிர அவர்களுக்கு வேறு நமக்கு வேறு என்பதாகவும் அவர்களும் நாமும் சேர்ந்து புழங்குவதற்கு சந்தர்ப்பம் இல்லாததாகவும் செய்வதானது, செய்தவர்க்கு தர்மம் செய்தார் என்று சொல்லிக்கொள்ள உதவலாமே அல்லாமல் ஒருக்காலும் அந்த கொடுமை செய்யப்பட்ட சமூகத்திற்கு நன்மை செய்வதாக ஆகாது. அதோடு தீமை செய்ததாகவும் ஆகலாம். நமது பெரியோர்கள் பார்ப்பனர்களுக்கு வேறு நமக்கு வேறு என்று பல காரியங்கள் செய்து வந்ததின் பயனாகவே அவைகள் பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் அவர்களை விட நாம் இழிந்தவர்கள் என்பதற்கு சிலாசாசன ஆதாரமாக இருந்துவருகிறது.

*குறிப்பு : 20.7.27-ல் சிறாவயல் காந்தி ஆசிரமத்தாரும், ஆதிதிராவிடர் சமூகத்தார்களும் அளித்த வரவேற்பில் ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 31.07.1927**



RangaRakes

# சமூகத்தொண்டும் அரசியல் தொண்டும்

சமூகத் தொண்டிற்கும் "அரசியல்" தொண்டிற்கும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் வைத்துக்கொள்வதானது சமூகத் தொண்டிற்கு பெருத்த கேடு சூழ்வதேயாகும்.

அரசியல் தொண்டு என்பதாக ஒரு தொண்டே இல்லை என்பதும், அது அவ்வளவும் புரட்டு என்பதுமே நமது அபிப்பிராயம். அப்படி ஒன்று இருப்பதாக யாராவது வாதத்தில் வெல்லலாமானாலும் அது கண்டிப்பாய் இது சமயம் நமது நாட்டிற்குத் தேவையில்லாதது என்றே சொல்லுவோம்.

நம்மைப் பொருத்தவரை அரசியலின் பேரால் கூடுமானவரை உழைத்தாகி விட்டது. கண்டது ஒன்றும் இல்லை. அயோக்கியர்களை உற்பத்தி செய்து அவர்கள் மூலம் பாமர மக்களை வஞ்சிக்கச் செய்ததே அல்லாமல் வேறில்லை. அதைவிட்டுத் தொலைத்து சமூகத் தொண்டையே பிரமாதமாய்க் கருதி அதற்கென உழைத்தாலும் அடிக்கடி சறுக்கி, அரசியல் சேற்றில் விழ வேண்டியதாக நேரிட்டு விடுகிறது. இது சகவாச தோஷமே அல்லாமல் வேறல்ல.

இனி அடியோடு அரசியலை உதறித்தள்ளி வைத்துவிட்டு, மக்களுக்கும் அதிலிருக்கும் மூட நம்பிக்கையை ஒழிப்பதை ஒரு திட்டமாக சமூகத் தொண்டில் சேர்த்து, எல்லா மக்களையும் சமூகத் தொண்டையே பிரதானமாய்க் கருதும்படி செய்வதை முக்கிய தொண்டாக வைத்துக் கொள்வதே நலமெனத் தோன்றுகிறது.

அரசியலில் உழல்வதென்பது என்றைக்கு இருந்தாலும் ஒரு நாளைக்காவது மனிதன் தன்னை அயோக்கியனாக்கிக் கொள்ளாமலும் தேசத்தையும் சமூகத்தையும் காட்டிக் கொடுக்காமலும் வாழும்படி செய்யவே முடியாது. இது நமது அனுபோகத்திற்கு சந்தேகமறத் தோன்றிவிட்டது.

சமூகத் தொண்டில் ஈடுபட விருப்பமுள்ளவர்களிடம், அரசியலில் அதைக் கண்டிப்பதைத் தவிர, மற்றபடி தான் நேரில் கலப்பதில்லை என்பதாக உறுதி பெற்றே அவர்களை சேர்த்துக் கொள்ளும் நிபந்தனைகளை ஏற்படுத்



tamilnavarasam.com

தினால்தான் சமூகத்தொண்டு இயக்கம் நடைபெறவும், வெற்றி பெறவும் முடியுமென்றே இப்போதே நினைக்க வேண்டியிருக்கிறது.

பார்ப்பனரல்லாதார் இயக்கமாகிய தென் இந்திய நலவுரிமைச் சங்க இயக்கம் கூட இரண்டு பாகமாய் பிரிக்கப்பட்டால் நன்மை என்றே கருது கிறோம். தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்பதாக உள்ளதில், அரசியல் கலந்த சமூக இயல், தனி சமூக இயல் ஆகிய இரண்டு பேருக்கும் இடமுள்ள தாக்கி தனி சமூக இயல்காரரும் அதனுள் ஒரு உள்பிரிவாக ஒன்றை ஏற் படுத்திவிடுவது நலமென்றே தோன்றுகிறது. ஏனெனில் அரசியல் கலந்தால் எப்பேர்ப்பட்டவர்களும் நாணயக் குறைவுள்ளவர்களாகப் போய் விடு கிறார்கள்.

மகாத்மா இயக்கம் கூட எவ்வளவு புனிதமானதாகக் கருதப்பட்டும், அரசியலில் பஹிஷ்காரத்தை மாற்றி சட்டசபையில் உள்நுழைவை அது என்று ஏற்றதோ அன்றே விதி விலக்கு இல்லாமல் எல்லோரிடமும் நாணயக் குறைவு தோன்ற வழி ஏற்பட்டுவிட்டது. ஆதலால் அதைப்பற்றி இனி சந்தேகப்பட வேண்டியதில்லை. தனி சமூகத் தொண்டில் ஈடுபட்டவர்கள் தங்களுக்கு இஷ்டமான ஒரு அரசியல்காரரை ஆதரிக்கலாம். ஆதரிக்க சிபார்சு செய்யலாம் என்பதாக ஒரு கொள்கை மாத்திரம் வைத்துக் கொள்வதா னால் ( அதுவும் அவசியமானால் அதாவது நமது சமூகத்தொண்டுக்கு அரசியலால் தடை ஏற்படாமலிருக்கும் அளவுக்கு அனுகூலம் கிடைக்கும் போல் இருந்தால் மாத்திரம் ) வைத்துக்கொள்ளலாம். நமது அபிப்பிராயத்தில் அந்த அளவு கூட மனிதனை அயோக்கியனாக்கி விடும் என்றே பயப்பட வேண்டியிருக்கிறது.

இந்த அடுத்து வரும் ஆகஸ்ட் மாதத்திய சட்டசபைக் கூட்டம் முடிந்தவுடன், வட ஆற்காடு ஜில்லாவில் கூடப்போகும் பார்ப்பனரல்லாதார் ஜில்லா மகாநாட்டில் இதைப்பற்றி தொண்டர்கள் ஒன்றுகூடி யோசிக்க வேண்டும் என்றே நினைக்கிறோம். அதாவது, எந்த விதத்திலாவது சர்க்கார் சம்மந்தமான உத்தியோகம், கவுரவ உத்தியோகம், பட்டம், பதவி முதலியவை கள் எதுவும் இல்லாதவர்களும், இனி பெற்றுக்கொள்ளுவதில்லை என்கிற உறுதி உள்ளவர்கள் மட்டுமடங்கியதாகவே ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதே தான். அந்தப்படி இல்லாமல் என்னதான் வேலை செய் தாலும் பயன் பெற முடியாது. தாடி நெருப்பு பற்றி எரிகிறபோது அதில் சுருட்டு பற்றவைக்க நெருப்பு கேள்பதுபோல், நமது மக்களின் நிலை தாழ்ந்து கிடப்பதையும், சிறுமைப் படுவதையும், அயோக்கியர்களால் கொடுமைப் படுத்துவதையும் பற்றி கொஞ்சமும் கவலை எடுத்துக்கொள்ளாமல் இருப்ப தோடு, மற்றவர்கள் யாராவது கவலை எடுத்துக்கொண்டாலும் அதையும் கெடுத்து அதன் பலனையும் தங்கள் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளப் பார்க்கிற மக்களை வைத்துக்கொண்டு என்னதான் செய்யமுடியும்



என்பது நமக்குத் தோன்றவில்லை.

ஆகையால் உண்மைத் தொண்டர்கள் இது விஷயத்தில் போதிய கவலை எடுத்து, யோசித்து இது சமயம் ஒரு முடிவுக்கு வரவேண்டியது மிகவும் அவசியம் என்பதை இப்போதே தெரியப் படுத்திக் கொள்ளுகிறோம். இதில் சேர வருகிறவர்கள் கூடுமான வரை கஷ்டம் அனுபவிக்க நேர்ந்தால் அனுபவிக்கவும், தியாகம் செய்யவும், தன்னலத்தை அடியோடு மறுக்கவும் தயாராயிருக்க வேண்டும் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு யோசிக்க வேண்டும் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 31.07.1927**



RangaRakes
tamilnavarasam.com

# காங்கிரஸ் பைத்தியமும் பார்ப்பனர்களின் அக்கிரமங்களும்

கோவை மகாநாட்டில் பார்ப்பனரல்லாதாரில் சிலர், காங்கிரசில் சேர்ந்து அதைக் கைப்பற்றி காங்கிரசின் மூலம் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு செய்து வரும் கொடுமைகளையாவது செய்யாமல் தடுக்கலாம் என்பதாக பேசின காலத்திலும் எழுதின காலத்திலும் நாம் அதை ஒப்புக்கொள்ளாமல் ஆக்ஷேபித்து வந்தது யாவருக்கும் தெரிந்திருக்கலாம். நாம் ஆக்ஷேபித்த தாவது, காங்கிரசின் மூலம் பார்ப்பனர்கள் செய்யும் கொடுமையை நிறுத்த வேண்டியதில்லை என்கிற எண்ணங்கொண்டல்ல, மற்றென்ன வென்றால், காங்கிரசை நாம் கைப்பற்ற முடியாது என்றும், காங்கிரசுக்கு நம்மில் யாராவது போனால், பார்ப்பனர்களுக்கே அதிக பலம் ஏற்படும் என்றும், எப்படியாவது அதற்குள்ள செல்வாக்கை ஒழிக்க அதிலுள்ள அயோக்கியத்தனத்தையும், அக்கிரமத்தையும் வெளியில் இருந்து கொண்டு வெளியாக்குவது தான் மேல் என்றும் சொன்னோம். பாமர மக்கள் எல்லாரும் இதை ஒப்புக் கொண்டார் களாயினும், படித்த கூட்டத்தாரில் பலரும் அரசியல் வாழ்வுக்காரரும் இதை ஒப்புக் கொள்ளவே இல்லை. அதற்காகவே நாம் வேண்டுமென்றே நடு நிலைமை வகித்ததோடு, நாம் சொன்னது சரியா தப்பா என்று அறிய ஒரு சந்தர்ப்பமும் கொடுக்க வேண்டுமென்று கருதியே அத்தீர்மானம் நிறைவேற வும் சம்மதித்தோம். இப்போது அதுபோலவே நடந்து வருகிறது. என்ன வெனில், பார்ப்பனரல்லாதார் காங்கிரசில் சேர விடாமல் தடுக்கப் பார்ப்பனர் கள் பல சூழ்ச்சிகள் செய்து வருகிறார்கள். அதாவது, திருச்சி தாலூக்கா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஸ்ரீமான் துரைசாமி உடையார் “காங்கிரசில் அங்கத்தினர்களைச் சேர்க்கும் இரசீது இல்லை உடனே அனுப்புங்கள். அல்லது இரசீது தானாவது அச்சடித்துக் கொள்ள அனுமதியுங்கள்” என்று சென்னை காங்கிரஸ் கமிட்டிக்கு எழுதியிருந்தாராம். அதற்கு ‘நாங்களும் உமக்கு இரசீது புஸ்தகம் அனுப்ப மாட்டோம், நீயும் அச்சடித்துக் கொள்ளக் கூடாது. ஒரு கமிட்டி நியமித்திருக்கிறோம். அவர்களிடம் தேவைக்குத் தக்கபடி வாங்கிக்கொள்’ என்று ஸ்ரீமான் சத்தியமூர்த்தி பதில் எழுதியிருக் கிறாராம். இதன் கருத்து என்ன? இது வரையில் இருந்து வந்த வழக்கம் பார்ப்பனரல்லாதார் காங்கிரசில் சேர உத்தேசித்தவுடன் மாறுபடுவானேன்? தவிர கமிட்டி மெம்பர்களின் யோக்கியதையைப் பற்றி சொல்லவே வேண்டிய



RangaRakes

தில்லை. ஒருவர் ஸ்ரீமான் கே.வி. ரங்கசாமி அய்யங்கார் எம்.எல்.ஏ, ஒருவர் ஸ்ரீமான்.என். சுப்பரமணிய ஐயர் எம்.எல்.சி, மற்றொருவர் சனாப் சைது முர்த்துசா சாயபு எம்.எல்.ஏ மற்றொருவர் ஸ்ரீமான் வீரப்பன், மற்றொருவர் ஸ்ரீமான் நரசு பிள்ளை ஆகிய இவர்களில், ஸ்ரீமான் வீரப்பன் ஊரில் இல்லாதவர். ஸ்ரீமான் நரசு பிள்ளை இதைப்பற்றியே கவலையே இல்லாதவர். ஜனாப் சைதுமுர்த்துசா சாயபு பார்ப்பனர்களையே நம்பி அவர்கள் இஷ்டப் படி விட்டு வருபவர். மீதியுள்ளவர்கள் ஒரு ஐயங்கார், ஒரு ஐயர் கனவன் களேயாவார்கள். இவர்களுடைய தயவு பெற்றுத்தான், அதாவது இவர்க ளிடம் தேவையைச் சொல்லி என்பதின் இரகசியம் என்ன வென்றால் யார் யார் சேருகிறார்கள் அவர்கள் பெயர் என்ன? எத்தனைப் பேர்? என்பதாகக் கேட்டு அவர்கள் இஷ்டப்பட்டால் எண்ணிக்கை அளவு இரசீது கொடுப்பது இல்லாவிடில் இல்லை என்கிற கருத்துதான். நாம் எத்தனை அங்கத்தி னர்களை சேர்த்தோமோ அத்தனை அங்கத்தினர்களை அவர்களும் சேர்த்த தாக பெயர் பண்ணி தாங்களே மெஜாரிட்டியாக இருக்க வேண்டும் என்கிற எண்ணத்தின் பேரிலேயே நிர்வாகம் செய்யத் துணிந்து விட்டார்கள். இந்த நிலையில் எப்படி நாம் கைப்பற்ற முடியுமென்பது வாசகர்களுக்கு விளங்கா மல் போகாது. இது ஒருபுறமிருக்க, காங்கிரசு என்பது பார்ப்பனர்கள் வாழ்வுக்கு அவர்கள் இஷ்டப்படி நடத்தத் தேசத்தின் பேராலும் தேச மக்களின் முட்டாள்களின் பேராலும் ஏற்படுத்திக் கொண்ட ஒரு சுயநல ஸ்தாப னம் என்பது இப்பொழுதாவது விளங்குகிறதா? இல்லையா? என்று கேட்கிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 31.07.1927**



tamilnavarasam.com

# கோவைத் தீர்மானமும் மந்திரிகளின் பிரசாரமும்

கோவை மகாநாட்டுத் தீர்மானங்களின் பலன் என்னவானாலும் அதனால் நாட்டில் ஒரு பெரிய தடபுடல் ஏற்பட்டுவிட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதாவது பஞ்சாப் படுகொலையின் போது இராஜப் பிரதிநிதி அவர்களை திருப்பி அழைக்க வேண்டும், திரு ஒட்வியரைத் திருப்பி அழைத்து விட வேண்டும். திரு. டயரை தண்டிக்க வேண்டும் என்பதாக நாட்டாரெல்லோரும் ஒன்று கூடி காங்கிரசில், கான்பரசில் சந்து பொந்துகளில் எல்லாம் தீர்மானித்த காலங்களில், திரு ராஜப் பிரதிநிதிக்காவது, திரு ஒட்வியருக்காவது, திரு, டயருக்காவது ஒரு சிறு கலக்கமும் கவலையும் இல்லாமல் இத்தீர்மானங்களைப் பார்த்து சிரித்துக்கொண்டே இருந்தார்கள். ஆனால் கோயமுத்தூர் மகாநாட்டில் "உத்தியோகம் கிடைக்காமல் ஏமாந்து போன யாரோ சிலர்" கூடி செய்தார்கள் என்று சொல்லும்படியான ஒரு திரு. கவர்னர் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கவர்னரை தலையெடுக்க வொட்டாமல் இன்னம் படுக்க வைத்து விட்டது. யார் என்ன செய்தாலும் பயப்பட மாட்டோம் என்றுசொல்லிக்கொண்டு இருந்த மந்திரிகளை ஊர் ஊராய் சுற்றி தங்கள் சொந்த செலவில் பிரசாரம் செய்யவும், மந்திரி உத்தியோகத்திற்கு எப்போது சாவு வரப்போகிறதோ என்று பயந்து அதிகாரங்களை இப்பொழுதே இன்ஷூர் செய்துவிட்டு ஓயில்சாசனம் எழுத ஆரம்பித்து விட்டார்கள். ஒன்றுக்கும் அஞ்சோம் என்ற பார்ப்பனர்களே, காங்கிரஸ் வாசற்படியில் வேட்டை நாய்கள் போல் காவல் காத்துக் கொண்டு வேறு யாரையும் உள்ளே விடக்கூடாது, விட்டால் நமக்கு ஆபத்து என்பதாக இரவும் பகலும் கண் விழித்துக் காவல் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கொரு கால் அங்கொரு கால் வைத்துக் கொண்டு ஏமாற்றிப் பிழைக்கலாம் என்று எண்ணியிருந்த அரசியல் மேதாவிகளுக்கு உள்ளதும்போய்விடும் போலிருக்கிறதே என்கிற நடுக்கம் ஏற்பட்டு விட்டது. பார்ப்பனர்கள் காங்கிரசில் பல பொய்த் தீர்மானங்களைப் போட்டு ஜனங்களையும் சர்க்காரையும் ஏமாற்றிப் பிழைக்கிறார்களே அது போல் நாமும் பொய்த் தீர்மானங்களைப் போட்டு ஜனங்களையும் சர்க்காரையும் ஏமாற்றி உத்தியோகம் சம்பாதிக்கலாம் என்று இருந்த சில பார்ப்பனரல்லாதார்களுக்கும் இத்தீர்மானம் ஒரு பரீக்ஷைகாலமாய் ஏற்பட்டு விட்டது. மற்றபடி சர்.சி.பி போன்ற உத்தியோகப் பார்ப்பனர்களுக்கும் ஒரு



RangaRakes

பெரிய கலக்கத்தை உண்டாக்கி விட்டது. இந்த நிலையில், அய்யோபாவம்! ஆகாச மந்திரிகள் பயந்து தங்கள் உத்தியோகங்களை நிலை நிறுத்த ஊர் ஊராய் போய் பிரசாரம் செய்வது ஒரு அதிசயமாகுமா? ஆகாதென்றே சொல்லுவோம். அவர்கள் தங்கள் நடவடிக்கை நியாயமானது என்று நிரூபிக்க பல இடங்களில் பிரசங்கம் செய்யப் போகிறார்கள். இந்தச் சமயங்களில் நமது மக்கள் யாதொரு கலகமும் தடையும் இன்றி அமைதியாக அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்க வேண்டும். அவர் யோக்கியதையை நிரூபிக்க நாம் சந்தர்ப்பம் கொடுத்தோம் என்கிற கவுரவம் நமக்கு இருக்கும் படி பார்த்துக்கொள்ள வேண்டுமே அல்லாமல் அவர்களை பேச விடாமல் தடுத்தோம் என்கிற பெயர் ஏற்படும்படி நடந்து கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறோம். இதுவிஷயம் நாம் பலதடவை எழுதி வந்திருக்கிறோம். ஏனெனில் இது சமயம் நமது நாட்டு வாலிபர்களின் நடவடிக்கைகள் பெரும்பான்மைக்கும் நம்மையே பொறுப்பாளியாக்குகிறார்கள். ஆனதால் நாம் இதை எழுத நேர்ந்தது. தவிர, எப்படியும் இந்த மந்திரிமார்கள் நிலைத்து விடுவார்கள் போலவே தோன்றுகிறது. எப்படி என்றால், சென்ற வாரம் மந்திரிகளின் நிலையென்பதாக நாம் எழுதியிருந்த வியாசத்தின் பின் பாகம் அவ்வளவும் ஏறக்குறைய உண்மையாகவே நடந்து வருகிறது. பார்ப்பனரல்லாதார் கக்ஷி உட்பட ஒவ்வொரு கக்ஷியிலிருந்தும் பலரை மந்திரிகளும், சர்க்காரும் காங்கிரஸ் சுயராஜ்யக் கக்ஷி முதலியதுகளைச் சேர்ந்த பார்ப்பனர்களும் சரி செய்து கொண்டார்கள் என்பதாகவே தெரிகிறது. தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியும், சட்டசபை காங்கிரஸ் கக்ஷி உபதலைவரும், சுயராஜ்யக் கக்ஷி காரியதரிசியும், இன்னமும் என்னென்னவோ பெருமை உடையவருமான ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயர் அவர்களும் 4 நாளைக்கு முன் மேன்மை தங்கிய கவர்னர் வீட்டுக்கே நேராகப் போய் கவர்னருக்கு, "நீங்கள் பயப்படவேண்டாம், மந்திரிகள் கலையாமலிருப்பதற்கு வேண்டிய வேலை செய்தாய் விட்டது," என்பதாக தைரியம் சொல்லிவிட்டு வந்தாய் விட்டதாகவே தெரியவருகிறது. ஆதலால் அதைப் பற்றி யாருக்கும் இனி சந்தேகம் வேண்டியதில்லை என்பதே எமது அபிப்பிராயம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 31.07.1927**



tamilnavarasam.com

## இனியும் எத்தனை நாளைக்கு ஏமாறுவது?

## தொழிலாளர்களும் மக்கள் கடமையும்

நமது நாட்டுத் தொழிலாள சகோதரர்கள் விஷயத்தில் நாம் ஏதாவது அபிப்பிராயம் தெரிவிக்க நேர்ந்த சமயமெல்லாம் ஒரே ஒரு விஷயத்தை விடாமல் வற்புறுத்தி வந்திருக்கிறோம். அதாவது **தொழிலாளிகள் என்போர்கள் அரசியல் கட்சிகளில் சேரக்கூடாது என்றும், அரசியலில் உழைக்கிறவர்கள் என்பவர்களை தொழிலாளர் சங்கத்தில் தலைவர் களாக்கிக் கொள்ளக்கூடாது என்பதைப் பற்றியும் தொழிலாளர்களுக்கு தனியாக தொழிற்கட்சி என்பதாக ஒரு கட்சி அரசியல் தத்துவத்தோடு இருக்க வேண்டும் என்றும் எவ்வளவோ தடவை வெகு அழுத்தமாக வற்புறுத்தி வந்திருக்கிறோம்.** இவ் வலியுறுத்தலுக்கு நாகைத் தொழிலாளர் சங்கத்தாரே கொஞ்சம் காது கொடுத்து வந்தனர். மற்றபடி மற்றத் தொழிலாளர் களும் தொழிலாளர்களுக்குத் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பல அரசியல் வாழ்வுக்காரர்களும் நம்மீது பாய்ந்து வந்தனர். ஆனால் இப்போது தொழிலாளர்கள் விஷயத்தில் மிகுதியும் அறிவுள்ளவர் என்று சொல்லும் ஸ்ரீமான் ஜோஷி முதல் கொண்டு அதையே சொல்ல ஆரம்பித்து விட்டனர். அதாவது சென்னையில் கூடின தொழிலாளர் மகாநாட்டுத் தலைவரான ஸ்ரீ ஜோஷி "ஒரு அரசியல் கக்ஷியிலும் தொழிலாளர் சேரக்கூடாது" என்றார். தொழிலாள சகோதரர்களுக்கும் ஏறக்குறைய இந்த உணர்ச்சித் தோன்றி வருகிறதையும் பார்க்கிறோம். தவிர, அரசியல் வாழ்வுக் காரரை நம்பக்கூடாது என்று நாம் அதே வேலையாகச் சொல்லி வருவதற்கு தக்க சான்று இவ் வருஷத்திய சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில் தொழிலாளர்கள் விஷயத் திலும், அரசியல் புரட்டர்கள் காட்டி விட்டார்கள். தொழிலாளர்கள் காங்கிரசில் சேர வேண்டும். தொழிலாளர்களுக்காக காங்கிரசு தான் உழைத்து வருகிறது என்று சொல்லி இதுவரை தொழிலாளர்களை ஏமாற்றி ஓட்டு வாங்கி பதவி பெற்று வந்த ஆசாமிகள் இன்றையதினம் தொழிலாளர்களுக்கு ஒரு தொழிலா ளரே பிரதிநிதியாக இருக்கிறோம் என்பதாக எண்ணி கார்ப்பரேசன் கவுன் சிலர் ஸ்தானத்திற்கு ஒரு தொழிலாளி நின்றவுடன் அவரை ஒழிக்க காங்கிரஸ் காரர்கள் என்போர்கள் என்ன என்னவோ புரட்டுகள் எல்லாம் செய்து தொழிலாளர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் இல்லாமல் செய்ய பார்க்கி றார்கள். ஏன்? தொழிலாளர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு இனிப் பிழைக்க முடியாமல் போய்விடுமே முதலாளிகளை ஏமாற்றி வயிறு வளர்க்க முடியாமல் போய்விடுமே என்கிற பயம்தான். எவ்வளவுதான் அரசியல் வாழ்வுக் காரர்களின் அயோக்கியத்தனங்களை தொழிலாளர்கள் பார்த்து அறிந்து வந்தாலும் அப்பொழுதும் சில தொழிலாளர்களுக்கு புத்தி ஏமாந்து போவதையும் நாம் பார்த்து வந்திருக்கிறோம். இதுவரை எப்படி நடந்து வந்திருந்தாலும், இந்தத் தடவையாவது கண்டிப்பாய் அரசியல் அயோக்கியர் கள் வலையில் மாய்கையில் சிக்கி ஏமாந்துபோகாமல், தொழிலாளிகளிடம் அனுதாபமுள்ள மக்கள் ஒவ்வொருவரும் தொழிலாளர்களால் நிறுத்தப்பட்ட தொழிலாள அபேக்ஷசகருக்கே ஓட்டுக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம். இனியும் எத்தனை நாளைக்கு ஏமாறுவது?

**குடி அரசு - கட்டுரை - 31.07.1927**



RangaRakes
tamilnavarasam.com

# ஓர் மறுப்பு

## "நாயக்கர் முதல் மந்திரிக்கு உபசாரம் செய்தது"

'தமிழ்நாடு' பத்திரிகையில் "ஈரோடு ரயில்வே ஸ்டேஷனில் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் முதலானவர்கள் கனம் முதல் மந்திரியை வந்து சந்தித்து உபசரித்தார்கள்" என்றும் 'சுதேசமித்திரனி'ல் "ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர், ஈரோடு ரயில்வே ஸ்டேசனில் டாக்டர். சுப்பராயனைக் கண்டு பேசினார்" என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு பத்திரிகைகளும் முறையே 'மந்திரிக்கு உபசாரம்' 'மந்திரிகளின் பிரசாரம்' என்ற தலைப்பு களின் கீழ் இதை எழுதி இருக்கின்றன. எனவே இதைப் படிக்கிறவர்கள் சந்தேகப் படக்கூடும். என்ன வெனில் மந்திரி சுப்பராயன் முதலியவர்களின் அக்கிரமமான நடத்தைகளை ஆதரிப்பதற்காகவும், மேன்மை தங்கிய கவர்னர், கவர்னர் பதவிக்கு லாயக்கில்லை, ஆதலால் அவரை திருப்பி அழைத்துக்கொள்ள வேண்டுமென்று கோவை மகாநாட்டில் தீர்மானம் கொண்டு வந்த ஒருவன் அதே மந்திரிக்கு ரயிலில் உபசாரம் செய்தார் என்ப தாக ஏற்படுமானால் அவருக்கு (தீர்மானம் கொண்டு வந்தவருக்கு) எவ்வளவு யோக்கியப் பொறுப்பு இருக்கும் என்பதாக ஜனங்கள் நினைக்கக்கூடும் என்பதற்காகவும், மந்திரி தனது வேலையை காப்பாற்றிக் கொள்ளும் முறை யில் அவர் செய்யும் பிரசாரத்தில் நமக்கு பங்கு இருந்தது என்று பலர் நினைக்க இடமுண்டாகும் என்கிற எண்ணத்தின் பேரிலும், அந்த இரண்டு பத்திரிகைகளின் கூற்றையும் மறுக்கக்கடமைப்பட்டவனாக இருக்கிறேன். எனது நண்பர் ஸ்ரீமான் பி.டி. ராஜன் அவர்கள் தான் 26 -ந்தேதி மெயிலில் நீலகிரியிலிருந்து வருவதாக தந்தி கொடுத்திருந்ததால் அவரை வரவேற்க நான் ரயிலுக்குப் போயிருந்தேன். அப்போது ஸ்ரீமான் ராஜன் அவர்களும், டாக்டர். சுப்பராயன் அவர்களும் ஒரே வண்டியில் இருந்ததால் ஒருவருக் கொருவர் வந்தனம் செய்து கொண்டோம். "நீலகிரி மலையில் மழை உண்டா" என்று கேட்டேன். மந்திரி 'ஆம்' என்றார். இதே மாதிரி மந்திரி கேட்ட ஒரு கேள்விக்கு நான் 'ஆம்' என்றேன். இதற்குள் ஸ்ரீமான் ராஜனவர் களின் சாமான்கள் வண்டியிலிருந்து இறக்கப்பட்டு விட்டதால் இருவரும் டாக்டர். சுப்பராயனிடம் பயணம் சொல்லிக்கொண்டு புறப்பட்டு விட்டோம். மந்திரி இலாகா நியமனத்திற்காகவும், அவ்விலாக்காவிலுள்ள ஆவலாதி களுக்காவும், பலர் அங்கு வண்டிக்குள்ளாகவே கூடி விட்டார்கள். இதுதான் நடந்த விஷயம். இவற்றை திரித்து நிருபர்கள் பத்திரிகைகளுக்கு எழுதி இருப்பது சரியல்லவென்றே கண்டிக்கிறேன்.

மந்திரிகளை நான் பார்ப்பது எனது நிலைக்கு உயர்வு தாழ்வு என்றா வது கருதி நான் இம்மறுப்பை எழுதவில்லை. அவசியம் நேர்ந்தால், அல்லது நண்பர்கள் என்கிற முறையில், ஒருவரை ஒருவர் காணவும், அளவளாவவும் கடமைப்பட்டவர்களேயாவோம். ஆனால், இந்த சந்தர்ப்பத்தில் விஷமத் தனமான தலையங்கமிட்டு ஜனங்கள் தப்பர்த்தம் கொள்ளும்படி எழுதியிருப் பதால் மறுக்க நேரிட்டதற்கு வருந்துகிறேன்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 31.07.1927**





RangaRakes

tamilnavarasam.com

# நமது நாட்டுக்கோட்டை நகரத்து சுற்றுப்பிரயாணம்

இம்மாதம் 15 தேதி இரவு ஈரோட்டிலிருந்து நாட்டுக்கோட்டை நகரத்துக்கு சுற்றுப் பிரயாணம் புறப்பட்ட நாம் 25 தேதி பகல் ஈரோடு வந்து சேர்ந்தோம். 16 தேதி காரைக்குடி, 17 தேதி சிவகங்கை, 18 தேதி தேவகோட்டை, 18 தேதி இரவு பள்ளத்தூர், 19 தேதி காலை புதுவயல், 19 தேதி மாலை கண்டனூர், 20 தேதி காலை சிறாவயல், திருப்பத்தூர் 20 தேதி மாலை, 21 தேதி காலை வடக்கூர், 21 தேதி மாலை நெற்குப்பம், 22 தேதி அமராவதிப் புதூர், 23 தேதி தஞ்சை, 24 தேதி திருச்சிக்கும் சென்றுவிட்டு 25 தேதி ஈரோடு சேர்ந்தோம். சுற்றுப் பிரயாணம் சரீரத்திற்கும், மனதிற்கும் மிகவும் திருப்தியளித்து வந்ததென்றே சொல்ல வேண்டும். போகுமிடங்களிலெல்லாம் அன்று மலர்ந்த சுயமரியாதை புஷ்பங்களான தனவணிக வாலிபர்களின் உற்சாகமும் ஆவலும், எழுச்சியும் இதற்கு முன் எங்கும் கண்டதில்லை என்றே சொல்லுவோம். சுருக்கமாகக் கூற வேண்டுமானால் தன வணிகநாடு மாத்திரமல்ல, தமிழ்நாடு மாத்திரமல்ல, சென்னை மாகாண மாத்திரமல்ல, இந்திய தேசமாத்திரமல்ல உலகத்திற்கே சுயமரியாதையைத் தவிர அல்லது சுயமரியாதைக்கு தவிர வேறுமதம் இல்லை வேறு கடவுள் இல்லை என்கிற தத்துவத்தை பரப்பி சுயமரியாதை தெய்வத்தை நிலை நாட்டப் போதிய ஆற்றலும், அறிவும், செல்வமும் படைத்தவர்களாக்கும் நமது தனவணிக நாட்டு வாலிபக் காளைகள் என்றே சொல்லவேண்டும். அந்நாட்டு சுற்று பிரயாணத்திற்கு ஆதியில் நாம் அழைக்கப்பட்ட பொழுது நமக்கு மிகுதியும் கலக்கம் ஏற்பட்டது. என்னவெனில் நமது சுயமரியாதைக்கு எதிரிகளாயுள்ள கூட்டத்தாரை பொன்னே போல் போற்றிவரும் ஒரு.........நாட்டிற்கு நாம் சுயமரியாதை பிரசாரம் செய்யப் போகிறோமே பலமான எதிர்ப்புகளுக்குத் தலை கொடுக்கத் தயாராயிருக்க வேண்டுமல்லவா என்கிற கவலையுடனேயே ஒப்புக் கொண்டேன். ஆனால்அங்கு சென்று அவ்விளங்காளையர்களை கண்டவுடன் சுயமரியாதைத் தத்துவம் இன்னது என்பதை நமக்கு விளக்கித் தரும் ஆற்றலுடைய காளைகளாகக் கண்டனன் என்றால் அது போழ்து நமது மகிழ்ச்சி எவ்வாறாயிருந்திருக்கும் என்பதை வாசகர்களேதான் உணர்ந்து கொள்ள வேண்டும். தனவணிக நாட்டில் சுயமரியாதைக்குச் சிறப்புதராத நகரம் இல்லை. கிராமம் இல்லை, தெரு இல்லை, வீடு இல்லை என்பதோடு



அங்குள்ள மரம் செடிகளெல்லாம் சுயமரியாதைக் காற்றை வீசிக் கொண்டிருந்தன. என்றாலும் பார்ப்பன சூழ்ச்சி வாடை காட்டாத இடமில்லை என்பதையும் சொல்லித் தானாக வேண்டும். அது விபரங்களை மற்ற பத்திரிகைகள் வாயிலாகப் பார்த்திருக்கலாம். ஆனால் அவ்வளவு சூழ்ச்சிகளும் அந்நாட்டு மக்களுக்கு சுயமரியாதையின் அவசியத்தை நன்றாய் விளக்க உதவியதோடு சுயமரியாதைக்கு உண்மையான பாரம்பரியமான எதிரிகள் யார் என்பதை யும், சுயமரியாதை பரவாவிட்டால் உள்ளுக்குள்ளாகவே இருந்து எதிர் பிரசாரம் செய்கிறவர்கள் யார் என்பதையும் விளக்க ஒரு தக்க சந்தர்ப்பத்தையுமளித்தது. இந்த சுயமரியாதை பிரசாரத்திற்கு உதவியளித்து நம்முடன் கலந்துழைத்த கனவான்கள் பலராயினும் அவர்களில் முக்கியமானவர்கள் திருவாளர்கள் பள்ளத்தூர் திவான் பஹதூர் அ. முருகப்ப செட்டியார், எம்.எல்.சி. குமரன் பத்திராதிபர், ஸ்ரீமான் சொ. முருகப்ப செட்டியார், கரு. முத்து சிவலிங்க செட்டியார், அமராவதி புதூர் ஸ்ரீமான் பி.ச. சுப்பிரமணிய செட்டியார், ஸ்ரீமான் சிறாவயல் காசிநாதன் செட்டியார், காரைக்குடி ஸ்ரீமான் அரு. சோம சுந்தரம் செட்டியார், ஸ்ரீமான் தெ.லெ. அருணாசலம் செட்டியார், தேவகோட்டை ஸ்ரீமான் டி.வி. அருணாசலம் செட்டியார், ஸ்ரீமான் கிருத்திவாசகர், சிவகங்கை ஸ்ரீமான் ராமச்சந்திர படையாச்சி, திருப்பத்தூர் ஜனாப் சுல்தான் பாக்தாத், சிறாவயல் காந்தி ஆச்சிரமத்தார் முதலியோர்கள் ஆவார்கள். அந் நாட்டுக்கும் மற்றும் அந்நாட்டில் நமது பிரசாரத்திற்கு உதவி செய்த கனவான்களுக்கும் மக்களின் சுயமரியாதையின் சார்பாக நமது நன்றியறிதலைக் காட்டுகிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 31.07.1927**



RangaRakes tamilnavarasam.com

# பொய்க்கால் மந்திரிகளை நிலைக்க வைக்க
# திருப்பூரில் மகாநாடு

பொய்க்கால் மந்திரிகளை நிலைக்க வைப்பதற்காக ஸ்ரீமான் டி.ஏ. ராமலிங்கம் செட்டியார் ஆகாயத்திற்கும் பூமிக்குமாக பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார். அப்பிரயத்தனத்தின் முதல் பாகம் ஸ்ரீமான் சுப்பராயன் அவர்கள் வேளாளர் என்பதாகவும், அந்த வேளாளரைக் காப்பாற்ற வேண்டியது வேளாள கனவான்களின் கடமை என்பதாகவும் கிளப்பி விட்டு சில வேளாள கனவான்கள் பெயரால் திருப்பூரில் ஒரு மகாநாடு என்பதாக விளம்பரப்படுத்தி வருகிறார்.

இந்த மந்திரிகளை ஆதரிக்க வேண்டிய அவசியம் நமது செட்டியாருக்கு என்ன வந்தது என்பதை பொது ஜனங்கள் நன்றாய் யோசித்து பார்க்க வேண்டும். ஸ்ரீமான் செட்டியாரின் கொள்கை என்ன என்பதை பொது ஜனங்கள் முதலில் சிந்தித்தால் மற்றது விளங்கும். "உன் பிறப்போ பத்து என் பிறப்போ எண்ணத் துலையாது" என்பதாக மகா விஷ்ணுவைப் பார்த்து ஒரு புலவன் பாடினான் என்கிற கதைபோல் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் அரசியலில் தலையிட்ட பிறகு அவரது அரசியல் பிறப்பு எண்ணத் துலையாது என்றே சொல்லவேண்டும்.

சமீபகாலமாக அவரது அரசியல் தொண்டு என்பது சர்.சி.பி. ராமசாமி அய்யர் அவர்களுக்கு பரமானந்த சிஷ்யனாயிருப்பதிலும் ஸ்ரீமான்களாக பட்டக்காரர் வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் ஆகிய கனவான்களை சுவாதீனப் படுத்திக் கொள்ளுவதில் பாடுபடுவதிலுமே முடிந்துவிட்டது.

ஏனென்றால் சர்க்காரை சிபார்சு பிடித்து உத்தியோகம் பெற சர்.சி.பி. அவர்களும், பொது ஜனங்களிடம் சிபார்சு பிடித்து ஓட்டு பெற மேற்கண்ட வேளாள பிரமுகர்களும் இருந்தால் போதும் என்பதே அவரது துணிபாய் விட்டது. இம்மாதிரி சுருக்க வழியில் சம்பாதிக்கும் பலன் ஒருக்காலும் மணமுள்ளதாயிருக்காது என்பது நமது உறுதி.

ஸ்ரீமான் செட்டியாரிடத்தில் நமக்கு எப்போதும் சிறிது அனுதாபம் உண்டு. அதாவது சுயமரியாதையை விட்டு பாமர மக்களையும் குடியானவர்களையும் அரசாங்கத்திற்கு காட்டிக்கொடுத்து அரசாங்கம் அடிக்கும் கொள்ளையில் தாங்களும் ஒரு பாகம் பெறுவது என்பதையே குறியாகக் கொண்டு சுயநலத்திற்கு பாடுபடுவதான கொள்கையுடைய தற்கால அரசியலின் பேரால் நாட்டுக்கும் மக்களுக்கும் துரோகம் செய்து வாழும் கூட்டத்தில் ஸ்ரீமான் டி.ஏ. ராமலிங்க செட்டியாரும் ஒரு முக்கியஸ்தராயிருந்தாலும், அக்கூட்டத்தில் சேர்ந்த மற்றவர்களைப்போல் ஸ்ரீமான் செட்டியாருக்கும் ஏன் ஒரு பங்கு வரக்கூடாது என்பதும், அவருக்கு வந்திருக்க வேண்டிய முறை கூட அவசரத்தினாலும் அகம்பாவத்தினாலும் தவறி விட்டதே என்பதும் தான்.

ஆனால் மேல்கண்ட அரசியல் சூதில் வெற்றி பெற்று பலனடைந்தவர்கள் பெரும்பாலும் கூடுமானவரை ஒரே கொள்கையில் இருந்து வந்தவர்கள் தானே அல்லாமல் ஸ்ரீமான் செட்டியாரைப் போல் அடிக்கடி மாறி வந்ததால்ல. ஸ்ரீமான் செட்டியார் இம்மாறுதல்களை தன்னோடு மாத்திரம் வைத்துக் கொள்ளாமல் ஸ்ரீமான் வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களையும் கூட இழுத்து அடிக்கடி வழுக்கலில் சறுக்கி விழும்படி செய்து விடுகிறார்கள். ஸ்ரீமான் செட்டியார் நம்நாட்டு வேளாள சமூகத்தின் நாடியை சரிவர உணர்ந்திருப்பாரானால் இத்தந்திரத்திலிறங்கி இருக்க மாட்டார். காலசக்கிர சுழலினால் நாட்டில் உள்ள ஒவ்வொரு சமூகத்திற்கும் பகுத்தறிவும் சுதந்திர உணர்ச்சியும் ஏற்பட்டிருப்பது போலவே நமது வேளாள சமூகத்திற்கும் சுதந்திர உணர்ச்சி ஏற்பட்டிருப்பதை ஸ்ரீமான் செட்டியார் அறியவில்லை போலும். பகுத்தறிவில்லாமல் பெரும் விளம்பரத்தையும் சிபார்சையும் கண்டு மக்கள் ஏமாந்து ஓட்டுக் கொடுத்து வந்த காலம் மலையேறி விட்டது. இப்போது ஒன்று பணம் கொடுக்க வேண்டும் அல்லது யோக்கியமாகவாவது நடந்து கொள்ள வேண்டும். அல்லது தங்கள் சமூக நன்மைக்காவது உதவ வேண்டும் என்கிற அளவுக்கு நாடு வேகமாய் மாறிவருகிறது. சிபார்சு செலாவணியாகும் காலம் மலையேறிவிட்டது. இதை அறியாதவர்கள் கண்டிப்பாய் ஏமாற்றப்படுவார்கள்.

நமது செட்டியார் இந்த பொய்க்கால் மாதிரி மந்திரிகளை ஆதரிப்பதற்காக போடப்பட்ட கூட்டத்தை திருப்பூரில் போடுவானேன்? கோயமுத்தூரில் உள்ள அறிவாளிகளைவிட திருப்பூரில் மேம்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதாலா? அல்லது கோயம்புத்தூரை விட திருப்பூர் பெரிய பட்டணம் என்பதாலா? அல்லது அந்த ஊரார் கேட்டுக் கொண்டார்கள் என்பதாகவா? என்பது ஒன்றும் விளங்கவில்லை. திருப்பூர் பஞ்சு வியாபாரிகளுக்கு மிகவும் அவசியமாயிருக்கிற ஒரு காரியத்தின் பெயரை அதாவது பருத்தி சட்டத்தில் சில மாறுதல்கள் செய்வதாக ஆசைக்காட்டி அதன் மூலம் கூட்டத்தைச் சேர்க்க ஏற்பாடு செய்து கொண்டு, பொது ஜனங்கள் மந்திரிகளை ஆதரிக்கிறார்கள் என்று ஒரு பொய்க் கதையை உண்டாக்கச் செய்த





RangaRakes tamilnavarasam.com

சூழ்ச்சியே அல்லாமல் மற்றபடி வேறு என்ன நாணயம் இதில் இருக்கிறது. ஸ்ரீமான் ராமலிங்க செட்டியார் இந்த மந்திரிகளை ஆதரிக்க இதுவரையில் வெளிப்படையாய்ச் சொல்லியிருக்கும் காரணம் ஒன்றே ஒன்றுதான். அதாவது "பார்ப்பனரல்லாதாருடைய முன்னேற்றத்திற்கு உழைத்து வருவ தாகச் சொல்லும் ஒரு கக்ஷியார் பார்ப்பனரல்லாத மந்திரிகளை அதிகாரத் திலிருந்து நீக்குவது சரியல்ல" என்கிறார்.

இந்த வார்த்தை சொல்ல நமது ஸ்ரீமான் ராமலிங்கம் செட்டியாருக்கு உரிமை உண்டா என்றுதான் கேழ்கிறோம். இதே பார்ப்பனரல்லாதார் முன் னேற்றத்திற்கு உழைப்பதாய் சொல்லிக் கொண்டு இதே பார்ப்பனரல்லாதார் கக்ஷியில் இருந்த இதே ஸ்ரீமான் ராமலிங்கம்செட்டியார் மூன்று ஷ த்துக்கு முன்பு பார்ப்பனரல்லாத மந்திரிகளை அதிகாரத்திலிருந்து நீக்க முயற்சி செய்து கக்ஷி சேர்த்து பார்ப்பனரல்லாத மந்திரிகளின் மேல் நம்பிக்கை யில்லாத தீர்மானம் கொண்டு வந்து ஓட்டுக் கொடுத்தவரா அல்லவா? அப்படி யிருக்க இவர் இந்த மாதிரி கேழ்பதில் ஏதாவது பொருள் இருக்கிறதா என்ப தை யோசித்தால், இது பொய்க்காரணம் என்பது விளங்காமல் போகாது. ஸ்ரீமான் செட்டியார் இப்போது காங்கிரஸ்காரரா? அல்லது பார்ப்பனரல்லாதார் கக்ஷிக்காரரா? அல்லது மந்திரி கக்ஷியார் என்கிற இண்டிபெண்டெண்ட் கக்ஷி யாரா? ஒரு கக்ஷியிலும் சேராமல் தன் இஷ்டப்படி நடப்பவரா? இவரது அரசியல் கொள்கை என்ன? சமூக இயல் கொள்கை என்ன? அக் கொள்கை களுக்கு தக்கபடி இதுவரை நடவடிக்கையில் என்ன செய்து வந்திருக்கிறார்? இவைகள் ஒன்றும் இல்லாமல் ஊரில் இருக்கிறவர்கள் எல்லாம் பயித்தியக் காரர்கள், தான் மாத்திரம் ஒரு தனிப்பட்ட அவதாரம் என்று வெறும் பேச்சைப் பேசிக்கொண்டு எல்லா கொள்கைகளையும் பரிகாசம் பண்ணிக் கொண்டிருப் பதால் என்னபயன் அடையமுடியும். மற்றும் ஸ்ரீமான் செட்டியாரின் சொந்த அபிப்பிராயங்கள் பலவற்றை இதுசமயம் வெளியில் சொல்ல இஷ்டமில்லை யானாலும் திருப்பூர் கூட்டத்தின் முடிவுக்குப் பின் வெளியாக்கலாம் என்றே இருக்கிறோம். பொதுவாய் திருப்பூர் கனவான்களுக்கும் மற்றும் பலருக்கும் நாம் எச்சரிக்கை செய்வது என்னவென்றால், நமது சமூக முன்னேற்றத்திற்கு இடையூறான காரியங்களுக்கு இடம்கொடுத்து விடாதீர்கள். இவர்களது சொந்த காரியம் நடந்த பின்பு மறுபடியும் உங்களை எந்த ஊர் என்று கேழ்பார் கள். வீணாக நாடு சுயமரியாதை அடையும் சமயத்தை இரண்டொரு சுயநலக் காரர் வார்த்தையில் ஏமாந்து பாழாக்காதீர்கள். சில சுய நலக்காரர்களுக்காக ஒரு சமூகத்தையோ நாட்டையோ பலிகொடுத்து விடாதீர்கள் என்பதுதான். மற்றவை பின்னால்.

**குடி அரசு - கட்டுரை - 07.08.1927**



# சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க பார்ப்பனர்களின் சூழ்ச்சி

ஆரியர்கள் என்னும் பார்ப்பனர்கள் தமிழ் மக்களுக்கு இழைத்துள்ள கொடுமைகளையும் வஞ்சகங்களையும் ஒழிப்பதற்கு நமது நாட்டில் ஆயிரக் கணக்கான வருஷங்களாக பல பெரியார்களும் பல இயக்கங்களும் அவ்வப் போது தோன்றி மக்களுக்கு உணர்ச்சி அளித்து வந்த சமயங்களிலெல்லாம் பார்ப்பன சூழ்ச்சிகளால் அவைகள் ஒழிக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வந்திருப்பதற்கு எத்தனையோ கதைகளும் சரித்திரக் குறிப்புகளுமிருக் கின்றன. அது போலவே தற்காலம் நமது நாட்டில் தோன்றியிருக்கும் சுய மரியாதை உணர்ச்சியையும் அழிப்பதற்கு பார்ப்பனர்கள் பல சூழ்ச்சிகள் செய்து வருகிறார்கள். அச்சூழ்ச்சிகளில் சர். சிவசாமி அய்யர் என்கிற ஒரு வக்கீல் பார்ப்பனர் கண்டு பிடித்து இருக்கிற சூழ்ச்சி மிகப்பெரிய சூழ்ச்சி யாகும். இந்த மாதிரி சூழ்ச்சிகளேதான் இப்பார்ப்பனர்களின் பெரியோர்களான வேதகாலம், மனுதர்ம சாஸ்திர காலம் முதலிய காலத்துப் பார்ப்பனர்களும் செய்து வந்திருக்கிறதாக அந்த வேதங்களும், சாஸ்திரங்களுமே ருஜூப்பிக் கின்றன. இது போலவே தற்கால மனுக்களில் ஒரு பழம் பெருச்சாளி மனுவாகிய மேல்கண்ட சர்.பி. சிவசாமி அய்யர் என்பவர் ஒரு மனுதர்ம சாஸ்திரத்தை உண்டாக்க சர்க்காரை வேண்டிக்கொள்ளுகிறார். அதாவது இந்தியன் பீனல் கோடில் மத சம்மந்தமான குற்றம் செய்பவர்களை தண்டிப்ப தற்கு என்று ஏற்படுத்தப்பட்ட 295, 297, 298 - வது பிரிவுகளில் மத ஸ்தாபகரை தூஷிப்பவர்களை தண்டிக்க இடமில்லை. ஆதலால் 203 -வது பிரிவுக்குப் பிறகு புதிதாக ஒரு பிரிவைச் சேர்க்க வேண்டும் என்றும், அதாவது,

'எந்த வகுப்பாரின் மனதையாவது புண்படுத்தும் வண்ணம் ஒரு மத ஸ்தாபகரையோ தெய்வத்தையோ குருமார்களையோ அவதார புருஷர் களையோ தூஷித்தாலும் அல்லது பத்திரிகையில் எழுதினாலும் அப்படிப் பட்டவருக்கு 2 வருஷ தண்டனை விதிக்க வேண்டும்.'

என்பதாக ஒரு புதிய சட்டம் இயற்ற வேண்டும் என்று யோசனை சொல்லுகிறார். இம்மாதிரி ஒரு சட்டம் ஏற்பட்டு விட்டால் மதத்தின் பேரால் பார்ப்பனர்கள் செய்யும் அக்கிரமங்களை யாரும் அசைக்க முடியாது என்பது



RangaRakes tamilnavarasam.com

அவர்களது சூழ்ச்சியின் கருத்து என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

இந்தக் கருத்தை ‘சுதேசமித்திரன்’ பத்திரிகையும் ஜாடையாக அநேக தடவை எழுதி வந்திருக்கிறது. ஆனாலும் இப்போதுதான் ஒரு சட்ட ஞான முள்ள பொறுப்பான மனிதரால் சட்டம் செய்ய வேண்டிய வாசகங்களுடன் வெளியாயிருக்கிறது. சர். சிவசாமி அய்யர் சட்டம் கற்று, சுமார் 35 வருஷம் ஆகியும், சட்டத்திற்கு வியாக்யானம் செய்து ஜீவிப்பதிலேயே காலங்கடத்தி வந்தும், இதுவரை இக்குறையைப் பற்றி ஞாபகம் வராமல், இப்போது சுயமரியாதைக் கிளர்ச்சி ஏற்பட்ட பிறகு இவை ஞாபகத்திற்கு வந்திருப்பதின் பொருள் என்ன என்பது இவை வாசிப்பவர்களுக்கு விளங்காமல்போகாது.

இதே சர். சிவசாமி அய்யரின் கருத்தைத்தான் சென்ற வருடம் ஸ்ரீமான். எஸ். சீனிவாசய்யங்கார் தெரிவித்தார். அதாவது:– “வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பும் ஈ.வெ. ராமசாமி நாயக்கரை இன்னம் ஜெயிலில் போடாமல் வெளி யில் விட்டுக்கொண்டிருப்பதற்கு சர்க்காருக்கு கண்ணில்லையா? அட்வொ கெட் ஜனரல் இதை கவனியாமல் என்ன செய்கிறார்” என்று கேட்டார். இதே கருத்தைத் தான் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி மற்றொரு வழியில் வெளியிட்டார். அதாவது:– “பம்பாய் மாகாணத்து கல்வி மந்திரி ஸ்ரீமான் யாதவர் சென்னை மாகாணத்திற்கு வந்து வகுப்பு துவேஷத்தை உண்டாக்கி விட்டு போவதை சட்ட மெம்பர் சர்.சி.பி. ராமசாமி அய்யர் எப்படி பார்த்துக் கொண்டிருந்தார். தனக்கு யாதவரை தண்டிக்க தைரியமில்லாவிட்டால் தான் ராஜீனாமா கொடுத்து விட்டு வேறு ஒருவரைக் கொண்டாவது ஏன் செய்திருக்கக்கூடாது” என்று கேட்டார். “சுயராஜ்ஜியா”, “சுதேசமித்திரன்”, “பிராமணன்” முதலிய பார்ப்பனப் பத்திரிகைகளும் “கேள்வி முறை இல்லையா? இப்படி அக் கிரமங்களை சகித்துக் கொண்டிருக்கலாமா? பிராமணத் தலைவர்கள் இதைப் பற்றி கவனிப்பதில்லையா” என்று மாரடித்துக்கொண்டன. இவைகள் எல்லாம் கவனிக்கப்படா விட்டாலும் சர். சிவசாமி அய்யரின் அழுகை கட்டாயம் கவனிக்கப்பட்டு அந்தப்படி ஒரு சட்டம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். நமக்கு அதைப்பற்றி கவலை இல்லை.

நாம் அவைகளுக்குப் பயந்து கொண்டு அயோக்கியர்களின் செய்கை களையும், சூழ்ச்சிகளையும், அக்கிரமங்களையும், மனிதப் பிறப்புரிமைக்கும், மனிதத்தத்துவத்திற்கும், சுயமரியாதைக்கும் இடையூறு விளைவிக்கும் காரியங்களையும் வெளிப்படுத்தாமலிருக்கப் போவதில்லை. பிறப்புரிமை யான சுயமரியாதையானது சூழ்ச்சிக்காரர்களால், வஞ்சகர்களால் செய்யப் படும் சட்டங்களுக்கு அடங்கிவிடும் என்று எதிர்ப்பார்ப்பது மடமையே யாகும்.

சாதாரணமாக, இந்து மதம் என்பது ஒரு குறிப்பிட்ட கொள்கை யுடையது அல்ல என்பதையும், அது ஒரு பழமையான மதம் அல்ல



RangaRakes

என்பதையும், பல பெரியோர்களும் அறிஞர்களும், ஆராய்ச்சிக்காரர்களும் ஒப்புக்கொண்டாய் விட்டது. இனி சட்டம் என்ன செய்து விட முடியும்.

எவ்வளவோ பிரத்தியக்ஷ ஆதாரங்களுடனும் அநேக நன்மையான கொள்கையுடனும் விளங்கும் கிருஸ்தவ மதத்தைப் பற்றியே பேசும்போது, கிருஸ்துநாதர் என்பதாக ஒருவர் பிறக்கவே இல்லையென்று ஒருவர் புஸ்தகமே எழுதியிருப்பது குற்றமில்லாமல் இருக்கும்போது, அஸ்திவாரத் திலிருந்தே அண்டப்புளுகையுடையதான இந்து மதத்தைப் பற்றி பேசுவதும், கள்ளு, சாராயம், மாம்சம், பெண் கூத்தி முதலியவைகளை வைத்துப் படைக்க வேண்டிய தெய்வங்களையும், தன்னைத் தவிர வேறு தெய்வமில்லை என்கிற மத ஸ்தாபகரையும், ஊரைக் கொள்ளையடித்து ஒரு கூட்டத்தாருக்கே வயிறு புடைக்கத் தின்னும்படி பொங்கிப் போட்டுவிட்டு தான் பஞ்சு மெத்தையில் உறங்கிக்கொண்டும், தங்கப் பல்லக்கில் உலவிக் கொண்டும், தன்னை சன்னியாசி என்றும் துறவி என்றும் சொல்லிக் கொண்டும் திரியும் போலி குருமார்கள் என்போர்களையும் வெளிப்படுத்தினால் அது எப்படி குற்றமாகு மென்பது நமக்கு விளங்கவில்லை. இந்த மாதிரி ஆசாமிகளை வெளிப்ப டுத்துவதன் மூலம் இவர்களால் வயிறு வளர்க்கும் ஆசாமிகளுக்கு மனம் புண்ணாவதோடு வயிறு கூட பட்டினியால் வருந்த நேரிடலாம். அதற்கு யார் என்ன செய்யக்கூடும். சோம்பேறித் தனத்தையும் ஊரார் உழைப்பில் வயிறு வளர்ப்பதையும் விட்டு விட்டு யோக்கியமாய் பாடுபட்டு சம்பாதித்து தின்னும் படி மக்களை பழக்குவதுதான் இதற்கு பரிகாரமாகுமே தவிர சட்டத்தின் மூலம் இதை வெளிப்படுத்துகிறவரை 2 ௵ தண்டிக்க வேண்டும் என்பது ஒருக்காலும் பரிகாரமாகாது. வேதம் கூட கடவுளால் சொல்லப்பட்டதென்று தான் சொல்லப்படுகிறது. வேதத்தைக் கண்டிப்பது தெய்வதூஷணை என்றுதான் சொல்லப்படுகிறது. இதற்காக அதன் அக்கிரமங்களை ஒரு சுயமரியாதை உள்ள மனிதன் வெளியிடாமலிருக்க முடியுமா? உதாரணமாக அதர்வண வேதத்தில் “ஒரு கிராமத்தில் ஒரு பிராமணன் ஒரு இரவு பெண் இல்லாமல் தனியாய் படுத்திருப்பானானால் அந்த கிராமத்திற்கே கேடு” என்பதாக எழுதப்பட்டிருக்கிறதாம். இதற்காக பயந்து கொண்டு எந்த திண்ணையில் எந்தப் பிராமணன் பக்கத்தில் பெண் இல்லாமல் தனியாய்ப் படுத்திருக்கிறான் என்று தேடிப் பார்த்து அவனிடம் ஒரு பெண்ணைக் கொண்டுபோய் படுக்க வைப்பதா? அல்லது சட்டத்திற்குப் பயப்படாமல் இது சுயநலக்கார வஞ்சகர்களால் எழுதி வைத்துக் கொள்ளப்பட்டது என்பதை வெளிப்படுத்துவதா என்பதை யோசித்தால் இச்சட்டத்தின் கதி என்ன ஆகும் என்பது விளங்காமல் போகாது.

எந்த மதஸ்தனானாலும் யாரானாலும் ஏதாவது ஒன்று தனக்கு மாத்திரம் தெய்வம் தனக்கு மாத்திரம் குரு என்று ஒன்றைச் சொல்லிக் கொள்வானானால் அதைப் பற்றி நமக்கு கவலை இல்லை. அவன் முட்டாள்தனத்துக்கு பரிதாபப்படுவதோடு அவ்விஷயம் தீர்ந்துவிடும்.



tamilnavarasam.com

அப்படிக்கில்லாமல் தங்கள் நன்மைக்கு மாத்திரம் என்று ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு அதை மற்றவர்கள் பிடரியின் பேரில் யேற்றுவதானால் அதை கண்டிக்காமலும் ஒழிக்காமலும் இருக்க முடியவே முடியாது என்பதை ஸ்ரீமான் சர்.சிவசாமி அய்யருக்கும் இதை வாசிப்பவருக்கும் சத்தியமூர்த்தி அய்யருக்கும் மித்திரன் கூட்டத்திற்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 07.08.1927**



## ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு வந்த புதுவாழ்வு

கொஞ்ச நாளைக்கு முன்பு ‘சுதேசமித்திரன்’ ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கரைப் பற்றி விஷமப் பிரசாரம் செய்து எழுதுகையில்,

“ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் நடந்து கொண்டுவரும் நடவடிக் கையையும் பேசிவரும் பேச்சையும் பார்த்தால் வெகு சீக்கிரத்தில் ஸ்ரீமான் நாயக்கர் சென்னை கவர்னர் வீட்டுக்கு கட்டித் தூக்கிக் கொண்டு போகப்படு வார் என்று தோன்றுகிறது” என்று எழுதி இருந்தது, அதாவது ஸ்ரீமான் நாயக்கர் சர்க்காருக்கு அவ்வளவு தூரம் நல்ல பிள்ளையாய் போய்விட்ட தாகவும், சர்க்காருடன் சேர்ந்து விட்டதாகவும், இனி சர்க்காரையே ஆதரிப் பார் என்றும் ஜனங்கள் நினைக்கும்படியாக எழுதியிருந்தது. அது எழுதிய திலிருந்து நாயக்கரும் தனக்கு ஏதாவது சர்க்கார் “சன்மானம்” வரும் என்றே எதிர்பார்த்தார். கடசியாக அவர் பேரில் போடப்பட்டிருந்த இரகசியப் போலீசு கூட எடுபடாமல் இன்னமும் தொடருவதுடன் கலக்ட்டரும் போலீசாரும் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். இது எப்படியோ இருக்கட்டும் ஆனால் சதா சர்வ காலம் சர்க்காரை தாக்குவதாக வேஷம் போட்டு பார்ப்பனரல் லாதாரை தாக்குவதாலேயே பார்ப்பனர்களால் தேசீயவீரர் என்று பெயர் பெற்று வயிறு வளர்க்கும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களை இப்போது சர்க்காரார் கவர்னர் வீட்டுக்கு ஒரே தூக்காக தூக்கிக் கொண்டே போய்விட்டார்கள். அது மாத்திரமல்ல, கவர்னர் பிரபு வீட்டு வாசல் படியை காக்கும் படியும் செய்துவிட்டார்கள். கவர்னர் பிரபு வீடு மாத்திரமல்ல கவர்னர் ஜனரல் பிரபு வாயில் காக்கும் படியும் செய்தாய்விட்டது. காரணம் என்ன? ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் இந்த கவர்னர் பிரபுவின் ஆக்ஷி யோக்கியமானதாக இல்லை. பார்ப்பனர்களின் கைக்குழந்தையாய் இருக் கிறார், இவர் ஆக்ஷியில் நடைபெறாத அக்கிரமமே இல்லை என்றும், நாணை யக் குறைவு என்பது இந்த கவர்னர் ஆக்ஷியில் தாண்டவம் ஆடுவதுபோல் வேறு எந்த ஆக்ஷியிலும் இல்லை என்றும் சொல்லி இவரை திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டும் என்பதாக கோவை மகாநாட்டில் ஒரு பிரேரேபணை பிரேரேபித்ததும், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி போன்றாரின் உதவியாலல்லாமல் கவர்னர் நிர்வாகம் நடைபெறமுடியாமல் போய்விட்ட தால் கவர்னர் பிரபு வீட்டிற்கு ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை மந்திரிமார்களும் சர்.சி.பி.யும் கட்டித்தூக்கிக்கொண்டு போக வேண்டியதாய் ஏற்பட்டுப்



RangaRakes tamilnavarasam.com

போய்விட்டது. பிறகு கவர்னர் பிரபு தன் வீட்டிலிருந்து ஸ்ரீமான் சத்திய மூர்த்தியை கவர்னர் ஜனரல் வீட்டுக்கு தூக்கிக்கொண்டு போய் போட வேண்டியதாய் ஏற்பட்டுவிட்டது, அல்லாமலும்

தற்காலம் நமது கவர்னரின் நல்ல நடவடிக்கைக்கு ஸ்ரீமான் சத்திய மூர்த்தி தான் நற்சாக்ஷி பத்திரமளிக்க வேண்டியதாய் விட்டது, அதற்காகவே வைசிராய் பிரபுவின் தரிசனமும் சத்தியமூர்த்திக்கு கிடைக்கும்படி செய்ய வேண்டியதாய்விட்டது, ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு வந்த புது வாழ்வேவாழ்வு! இதைக்கண்டு யாரும் பொறாமைப்படாமலும் இருக்க முடியாது, ஆனால்ஒரு விஷயம் :- சர்க்கார் வாசனையே கூடாது என்று வேஷம் போட்ட மைலாப்பூர் கோஷ்டிக்கு, சர்க்கார் சம்மந்தமான விருந்துகளுக்கு கூப்பிட்டாலும் போகக்கூடாது என்று கடும் பத்தியம் வைத்த சுயராஜ்ஜியக் கக்ஷிக்கு யேதோ ஒரு வெள்ளைக்கார சீமாட்டி விருந்துக்கு ஸ்ரீமான் ஆர்.கே.ஷண்முகம் செட்டியார் போய்விட்டுவந்ததால் " ஷண்முகம் செட்டியார் பத்தியம் தவறிவிட்டார்" என்று கத்தின சுயராஜ்ஜியக் கக்ஷி தலைவர்களுக்கு,ஆகிய இத்தனைக்கும் ஜீவாதாரமான ஸ்ரீமான் சத்தியமூர்த்தி - தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியும் காங்கிரஸ் முட்டுக்கட்டை பிரிவு கக்ஷி உப தலைவ ரான சத்தியமூர்த்தி - கவர்னர் பிரபுவையும் வைசிராய் பிரபுவையும் பார்க்கப் போனதின் இரகசியம் தான் நமக்கு விளங்கவில்லை. பார்ப்பனர்கள் தங்கள் காரியம் ஆவதற்கு எதை வேண்டுமானாலும் செய்வார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம் என்பதை மாத்திரம் வாசகர்களுக்கு தெரிவிக்க இதை உபயோகித்து கொண்டோமே அல்லாமல் இதனால் தேசத்திற்கு நன்மையோ தீமையோ இருக்கிறதை காட்டுவதற்கு ஆக அல்ல. அன்றியும் கவர்னர் பிரபு வீட்டு வாசல்படி மிதித்தஉடன் ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு பூர்வஞானம் வந்து விட்டதற்கும் ஒரு சிறு உதாரணம் காட்டிவிட்டு இதை முடிக்கிறோம்.

ஆதாவது, நீலகிரிமலையில் கவர்னர் பிரபுவை பார்த்துவிட்டு திரும்பினவுடன், மலையாளக் குடிவார மசோதா விஷயமாய் ஏற்படுத்திய சர்க்கார் கமிட்டியை பகிஷ்கரிக்க வேண்டும் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கையில், தானும் கூட இருந்து நிறைவேற்றிய மலையாளக் குடிவார மசோதாவை சர்.சி.பி. அய்யர் கவர்னரைக்கொண்டு நிராகரிக்கச் செய்து விட்டாரே என்கிற சொரணை இல்லாமல், "சர் சி.பி. மலையாள ஜன்மிகளுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகிற விஷயத்தில் கவலை எடுத்துக் கொண்டு அக்கமிட்டியை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று சொல்லுவதும், "தக்க மெஜாரிட்டி இருந்தால் மந்திரி வேலைகளை ஒப்புக் கொண்டு இரட்டை ஆக்ஷியை நடத்திப்பார்க்கலாம்" என்று சொல்லுவதும் முதலான எவ்வளவு புதிய ஞானம் உண்டாயிருக்கிறது என்பதை வாசகர்கள் தான் அறிந்து கொள்ள வேண்டும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 07.08.1927**



# மகாத்மாவும் வருணாசிரமும்

## I

மகாத்மா காந்தி "தீண்டாமை ஒழிய வேண்டும், மதத்திலும், சமுதாயத் திலும் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும்" என்கிற கொள்கை உடையவர் என்று ஜனங்கள் நம்பி வந்தாலும், அவரது எண்ணத்திலும் பேச்சிலும் அதற்கு நேர் விரோதமான கொள்கையை உடையவராகவே காணப்படுகிறார். இம்மாதிரி எண்ணத்தோடும் பேச்சுகளோடும் மகாத்மா காந்தியின் பிரசாரம் நடைபெற நடைபெற தீண்டாமையும் மூடக் கொள்கைகளும் நாட்டில் வலிமையோடு நிலைபெற இடம் ஏற்படுமே அல்லாமல் ஒருக்காலும் இவை ஒழிக்கப்படவே முடியாது. எந்த தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று வெளிப்படையாய் பேசுகிறாரோ அதே தீண்டாமையை நிலை நிறுத்த அதே பேச்சை வியாக்கி யானம் செய்வதில் பாடுபடுகிறார்.

இதைப்பற்றி முன் ஒரு தடவை கூட எழுதி இருக்கிறோம். உண்மை யான தீண்டாமையை நமது நாட்டை விட்டு வெளிப்படுத்த வேண்டுமானால் மகாத்மா காந்தியையும் எதிர்த்து போராடித்தான் தீர வேண்டியிருக்கிறது.

தீண்டாமை இன்னது என்பது மகாத்மாவுக்கு இன்னமும் சரியாய் புலப்பட இல்லை என்பதே நமது அபிப்பிராயம். அவர் மதத்தின் பெயரைச் சொல்லிக் கொள்வதனால் பொது ஜனங்களிடம் உண்டாக்க கூடிய செல்வாக் கையும் உபயோகப் படுத்திக்கொள்ள நினைப்பதால் உண்மைத் தீண்டாமை தத்துவம், அவருக்கு புலப்பட மார்க்கமில்லாமல் போய்விடுகிறது. ஆதலால் மகாத்மாவினது தீண்டாமை விலக்கு கொள்கையைப் பின்பற்றுவோமானால் மறு படி தீண்டாமை சேற்றிலே சறுக்கி விழுக வேண்டிவரும் என்றே நாம் பயப்படுகிறோம். வெகு காலம் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தும், மூடி மூடி வைத்தும் கூட உண்மையான தீண்டாமை விலக்கையும், சுயமரியாதையையும் உத்தேசித்து வெளிப்படையாய் இப்போது அவரை தாக்கித் தீர வேண்டியதாய் ஏற்பட்டு விட்டதற்கு வருந்துகிறோம்.

ஏனென்றால் சமீபத்தில் தமிழ்நாட்டிற்கு மகாத்மா காந்தி வரப்போகி றார். தீண்டாமையைப் பற்றி பேசும்போது அவரது வழக்கப்படியே தான் பேசித் தீருவார். அதன் மூலம் நமது எதிரிகளுக்கு அதிகமான பலம் ஏற்பட்டு



RangaRakes tamilnavarasam.com

நமது முயற்சியை ஒழிக்க அதை அவர்கள் உபயோகித்துக் கொள்ளுவார்கள். ஆதலால் அதை இப்போதே நாம் வெளிப்படுத்திவிடுவது மேலானதென்றே கருதுகிறோம். அதாவது மகாத்மா காந்தி நமது பார்ப்பனர்கள் சொல்லுவது போலவே நமது சமூக வாழ்வில் வருணாசிரம தர்மம் உண்டு என்றும் அது பிறவியிலேயே ஏற்பட்டது என்றும் அடிக்கடி சொல்லிவருகிறார். சமீபத்தில் மைசூரில் ஒரு கூட்டத்தில் தீண்டாமையைப் பற்றி பேசும் போதும் இந்து சமூகத்தில் வருணாச்சிரம தர்மம் உண்டு என்றும், அது நமது சமூகத்திற்கு அவசியம் என்றும், ஒவ்வொரு வர்ணத்தாருக்கு ஒவ்வொரு தர்மம் விதிக்கப் பட்டிருக்கிறதென்றும், அந்தந்த வர்ணத்தார் அந்தந்த தர்மத்தை செய்யும் போது அவரவர்கள் அம்மட்டி லுயர்ந்தவர்கள் என்றும், பிராமணன் அவன் தர்மத்தைச் செய்யும் போது உயர்ந்தவனாகிறதுபோலவே மற்ற வர்ணத் தானும் அவனவன் தர்மத்தைச் செய்யும்போது தான் உயர்ந்தவனாகிறான் என்பதாகவும் பேசியிருக்கிறார். இதைத்தான் பார்ப்பனர்களும் தாங்கள் பிறவியிலேயே உயர்ந்தவர்கள் என்பதற்கு காரணங்களாக சொல்லிவரு கிறார்கள்.

வருணாசிரம தர்மத்தின் மூலமாகத்தான் நமது நாட்டில் தீண்டாமை கொள்கை அமுலில் இருந்து வருகிறதே ஒழிய வருணாசிரமம் இல்லா விட்டால் தீண்டாமை கொள்கை பரவ மார்க்கமே கிடையாது. வருணாச்சிரம தர்மம் என்கிற ஒரு உடல் இல்லா விட்டால் தீண்டாமை என்கிற உயிருக்கு ஆட்டம் இல்லை. யோசித்துப்பார்த்தால் இந்த கொள்கைத் தத்துவம் எவருக்கும் விளங்காமல் போகாது. அந்தந்த வருணத்தானுக்கு ஏற்பட்ட தர்மப்படி அவனவன் நடக்க வேண்டும் என்று மகாத்மா சொல்லுவதைத்தான் தூவார் மகாநாட்டு "பிராமண சம்மேளன"மும் ஏகமனதாய் தீர்மானம் செய் திருக்கிறது.

மகாத்மா சொல்லும் வருணாச்சிரம தர்மம் அதுவல்ல என்பதற்கு வேறு ஆதாரம் என்ன? மகாத்மாவும் வருணாச்சிரமம் நான்கு என்று சொல்லு கிறார். அதாவது பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிறார். தூவார் பிராமணச் சம்மேளனத்தாரும் மகாத்மா சொல்லும் ஆதாரத்தைக் கொண்டே க்ஷத்திரியனும், வைசியனும் உலகத்தில் இப்போது காணப் படவில்லை. ஆதலால் பிராமணன், சூத்திரன் ஆகிய இரண்டு வருணத்தார் மாத்திரம்தான் இருக்கிறார்கள் என்கிறார்கள். மறைந்துவிட்ட இரண்டு வருணத்தாரைப் பற்றி நமக்கு கவலை இல்லை. இருக்கிற இரண்டு வருணத் தாரைப் பற்றிய வரையிலாவது இவர்களுக்கு 'மகாத்மா' கற்பிக்கும் தர்மங்கள் என்ன? என்பதுதான் நமது கேள்வி. வருணாசிரமத்தையும், அதன் தர்மத்தை யும் ஒப்புக்கொள்ளுகிற ஒருவர் - அதுவும் வருணாசிரமமும், அதனதன் தர்ம மும் மக்களுக்கு பிறவியிலேயே உண்டு என்று ஒப்புக்கொள்ளுகிற ஒருவர் - தீண்டாமை இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும். மகாத்மா கூறும் வருணாசிரமத்திற்கு பார்ப்பனர் கூறும் தர்மத்தைவிட வேறு ஏதாவது தர்மம் கற்பிக்க ஆதாரம் இருக்கிறதா? என்று பார்த்தால் நாளது வரை மகாத்மா அது வேறு என்று சொன்னதாகவே தெரியவில்லை. மைசூர் உபந்நியாசத்தில் ஜன சேவையே பிராமணர்களுடைய தர்மம் என்று சொல்லியிருக்கிறார். அது போலவே பிராமண சேவையே சூத்திரனுடைய தர்மம் என்றுதான் அவர் சொல்லி ஆக வேண்டும். பொது ஜன சேவைதான் பிராமண தர்மம் என்று சொன்ன சாஸ்திரங்களில்தான் "பிராமண சேவையே சூத்திர தர்மம்" என்று சொல்லப் பட்டிருக்கிறது.

பிராமணருக்குப் பொது ஜன சேவை செய்வதினால் மாத்திரம் உயர்வு உண்டாகுமானால் சூத்திரனுக்கு பிராமணசேவை செய்வதினால் மாத்திரம் தான் உயர்வு உண்டாகுமேயன்றி அதை விட்டு வேறு வேலை செய்வா னானால் சூத்திரன் கண்டிப்பாய் தாழ்ந்தவனாகிறான் என்றுதான் மகாத்மாவின் தத்துவத்திற்குப் பொருள் ஏற்படுகிறது. இந்தப்படியானால் எந்த விதத்தில் பிராமணனுக்கு சம அந்தஸ்தாக சூத்திரன் இருக்க முடியும் என்று மகாத்மா கருதுகிறார் என்பது நமக்கு விளங்கவில்லை.

அன்றியும் "அந்தந்த வருணத்தார் அந்தந்த தருமத்தைச் செய்து வருகையில் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு சொல்லிக் கொள்ள இடமேது" என்றும் பேசியிருக்கிறார். அப்படியானால், அந்தந்த வருணத் தாருக்குத் தனித்தனி தர்மம் ஏற்பட வேண்டிய அவசியம் என்ன என்பதைப் பற்றியாவது ஒரு வருணத்தான் மற்ற வருணத்தானுடைய தர்மத்தைச் செய்வதானால் கெடுதி என்ன என்பதைப் பற்றியாவது ஒரு வார்த்தையாவது இதுவரை மகாத்மா சொன்னதேயில்லை. "பொது ஜன சேவை என்பது பிராம ணர்களுக்கு மாத்திரம் சொந்தமானது, அதற்காகவே அவர்கள் பிறந்திருக் கிறார்கள்" என்றும் மகாத்மா சொல்லுவாரானால் மகாத்மா அவர்கள் நான்கு வருணத்தில், தான் எந்த வருணத்தைச் சேர்ந்தவர் என்று சொல்ல முடியும்? மகாத்மா சொல்லுகிற கொள்கைப்படி பார்த்தால் அவர் பிறவியில் ஒன்று சூத்திரராயிருக்க வேண்டும் அல்லது வைசியராயிருக்க வேண்டும். எனவே சூத்திரனுக்கும் வைசியனுக்கும் ஏற்பட்ட தர்மத்தைச் செய்வதை விட்டுவிட்டு பிராமணனுக்கு ஏற்பட்ட தர்மமாகிய பொது ஜன சேவையை செய்வதற்கு மகாத்மாவுக்கு உரிமையேது? தன்னாலேயே நடத்திக் காண்பிக்க முடியாத வருணாசிரம தர்மத்தை மற்றவர்களை ஏற்று நடத்தும்படி சொல்வதில் ஏதாவது பொருளுண்டா? இவைகளைப் பற்றி இவ்வளவு தூரம் எழுதினது தீண்டாமை விஷயத்தில் மகாத்மாவுக்கு உள்ள குழப்பத்தை காண்பிக்கவும், அவரும் குருட்டு நம்பிக்கையில் ஈடுபட்டவரே அல்லாமல் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுப்பவராகப் புலப்படவில்லை என்பதையும் காட்டுவதற்குமே எழுதுகிறோமே அல்லாமல் அவர் மீது குறை கூறுவதற்காக அல்ல. அன்றி யும் மகாத்மா நாட்டிற்கும், மக்களுக்கும் செய்திருக்கும் அநேக நன்மை களைப் பற்றி நமக்கும் மகாத்மாவின் அந்தரங்க சிஷியர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கட்கும் யாதொரு வித்தியாசமும் இல்லை. எனினும் இத்


RangaRakes
tamilnavarasam.com

தீண்டாமை விஷயத்திலும், வருணாசிரம விஷயத்திலும் மகாத்மாவுக்கு தெளிவு ஏற்பட்டிருக்குமானால் நமது சமூகத்திற்கு எவ்வளவோ நன்மை உண்டாகும் என்கிற ஆசையே இதைப் பற்றி மேலும் மேலும் எழுதி வரவும் தூண்டுகிறது.

**குடி அரசு - தலையங்கம் - 07.08.1927**



# மந்திரிகளைக் காப்பாற்ற மற்றொரு கட்சி வேண்டுமாம்

யாதாவது ஒரு காரியத்துக்கு ஆசைப்பட்டு ஏமாந்து போனவர்களும், தனக்கென தனிமரியாதை இல்லாமல் போய் விட்டதே என்று விசனப்பட்டுக் கொண்டு இருப்பவர்களும், தனக்கென ஒரு தனிக்கட்சி சேர்க்க முயலுவது பெரும்பாலும் இயற்கை. யோக்கியமான முறையில் சமாதானம் சொல்லி எதிரிகளை வெல்ல முடியாத கூட்டத்தார்களும் தங்களது ஆதிக்கத்திற்கு ஆபத்து வந்து விட்டதாகக் கருதுகிறவர்களும், ஏதாவது சில சோணகிரி களையும் பேராசைக்காரரையும் பிடித்து தனிக்கட்சி உண்டாக்கி, அவர்களைக் கொண்டு தங்கள் காரியம் சாதித்துக் கொள்ளுவதற்காக மற்ற யோக்கியமான கட்சியுடன் போராடுவதும், போராடச் செய்வதும் இயல்பு. இக்காரியங்களை அடிக்கடி நாம் அனுபோகத்தில் பார்த்து வருகிறோம். பார்ப்பனரல்லாதார் கட்சி என்பதாக ஒரு கட்சி தோன்றியது முதல் அக்கட்சிக்கு இடையூறாக நமது நாட்டில் இதுவரை எத்தனை கட்சிகள் தோன்றி மறைந்தன? அதற்கு எதிரிடையாக எத்தனை எத்தனை எதிரிகள் தோன்றி மறைந்தார்கள்? இனியும் எத்தனை தோன்றித் தோன்றி மறையப்போகிறார்கள்? என்பதை யோசித்துப் பார்ப்பவர்களுக்கு இதனுண்மை விளங்காமல் போகாது. இவ்வ ளவு எதிரிடைகள் தோன்றி மறைந்து வந்ததிலும் ஒரு விசேஷம் என்ன வென்றால் பார்ப்பனரல்லாதாரின் கட்சியின் முக்கிய கொள்கைகளை தப்பு என்று சொல்லி வேறு கட்சி ஏற்படுத்தினவர்கள் இதுவரை கிடையவே கிடையாது. இப்போது இன்னமும் ஒரு புதுக்கட்சி ஏற்படுத்த உள்ளுக்குள் ளாகப் பாடுபடும் ஸ்ரீமான் டி.எ. ராமலிங்கம் செட்டியார் கம்பெனியார் உள்பட, இதற்கு முன்னால் பார்ப்பனரல்லாதார் கட்சி ஏற்படுத்திய காலத்தில் சென்னை மாகாணச் சங்க கட்சி என்கிற ஒரு கட்சி ஏற்படுத்திய பார்ப்பனர்களுக்கு உதவியாயிருந்த ஸ்ரீமான் கேசவ பிள்ளை, ஸ்ரீமான் பி. வரதராஜுலு நாயுடு கம்பெனியார் உள்பட, மற்றும் சென்ற தேர்தலுக்கு முந்தி தேர்தலின் போது ஏற்பட்ட மந்திரி பதவி சண்டைகளின் பலனாய் ஸ்ரீமான் டி.எ. ராமலிங்கம் செட்டியாரால் அப்போது ஏற்படுத்தப்பட்ட கட்சியாருள்பட, ஒவ்வொருவரும் பார்ப்பனரல்லாதார் கட்சி கொள்கையை ஒப்புக் கொண்டுதான் கட்சி ஏற்ப டுத்தி இருக்கிறார்களேதவிர வேறில்லை. ஆனால் அதற்கு உள்காரணங்கள் தான் அடிக்கடி மாற்றி மாற்றி சொல்லப்பட்டு வருகிறதே ஒழிய வேறில்லை.



RangaRakes tamilnavarasam.com

அதாவது கோவை மகாநாட்டுக்கு முன் பார்ப்பனரல்லாதார் கட்சியின் மீது சொல்லிக்கொண்டு வந்த குற்றமெல்லாம் "அரசாங்கத்தோடு அக்கட்சியார் ஒத்துழைக்கிறார்கள். இரட்டை ஆட்சியை நடத்திக் கொடுக்கிறார்கள்" என்கிற இரண்டு பெரிய குற்றங்களே சுமத்தப்பட்டன. கோவை மகா நாட்டுக்கு பிறகு, அரசாங்கத்தை எதிர்க்கவும் இரட்டை ஆட்சியை உதறித் தள்ளவும் திட்டம்போட்ட பின்பு "அனாவசியமாய் அரசாங்கத்தை எதிர்க் கிறார்கள். திடீரென்று இரட்டை ஆட்சியை உடைக்கப் பார்க்கிறார்கள்" என்கிற குற்றம் சாட்டப்படுகிறது. இது யாரால் என்று பார்ப்போமானால் உத்தி யோகத்திற்கும், பார்ப்பனர்களுக்கும் அடிமைப்பட்ட ஆசாமிகளாலேயே அல்லாமல் இவைகளுக்கு அடிமையாகாத பொது மக்களாலல்ல, "தேசீய வீரர்களாலல்ல", சர்க்காரையும் பார்ப்பனரல்லாதார் கட்சியையும் வைவதன் மூலமும், பார்ப்பனருக்கு நல்ல பிள்ளையாயிருப்பதன் மூலமும் வாழ்ந்து வந்த சிலருக்கு பார்ப்பனரல்லாதார் கட்சி மீது மேல்கண்ட குற்றம் சுமத்து வதற்கு யோக்கியதை இல்லாமல் போனதால் அப்படிப்பட்டவர்கள் இப்போது வேறு விஷயத்தில் அக்கரை உள்ளவர்கள்போல வேஷம்போட ஆரம்பித் திருக்கிறார்கள். அதாவது, பார்ப்பனரல்லாதார் கட்சி கொள்கையை ஒப்புக் கொள்ளும் பார்ப்பனர்களையும் பார்ப்பனரல்லாதார் கட்சியில் சேர்த்துக் கொள்ளுவதில்லையாம். இப்படிச் சொல்வதன் மூலம் பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளை ஆகி பார்ப்பனர்களை ஏமாற்றிவிடலாம் என்பது இவர்களின் கூற்று. ஆனால், இவர்கள் பார்ப்பனர்களால் ஏமாற்றப்படுவார்களே ஒழிய வேறு ஒன்றும் ஆய்விடப்போகிறதில்லை. ஸ்ரீமான்கள் ராமலிங்கம் செட்டி யாரும், மார்த்தாண்டம் பிள்ளையும் பார்ப்பனரல்லாதார் கட்சியில் இருந்து 6, 7 வருஷங்கள் பார்த்து தங்கள் சுயநலம் ஈடேறாமல் வெளியேறினவர்களே ஒழிய கொள்கை மாற்றத்தால் அல்ல என்பது இப்போதும் அவர்கள் வெளியிட்டிருக்கும் கொள்கையைப் பார்த்தால் தெரியவரும். ஸ்ரீமான் மார்த்தாண்டம் சொல்வது என்னவென்றால்,

"பிராமணரல்லாதார் இயக்கம்..............பல வேறு வகுப்பினரின் உரிமை கள் கவனிக்கப்படல் வேண்டும் என்ற உணர்ச்சியையும், தேவையையும் பொது ஜனங்களுக்கு இடையே நன்றாய் வலியுறுத்தி விட்டன" என்று அவர்கள் சொல்லி இருப்பதிலிருந்தே இம்மாதிரி ஒரு இயக்கம் வேண்டுவது தான் என்கிற கொள்கையை அவர் ஒப்புக்கொள்கிறார் என்பதும் மற்றும்,

"ஸ்ரீமான் சி.வி. வெங்கிட்டரமணய்யங்கார் குறிப்பிட்ட முறையில் ஏதேனும் ஒரு ராஜிக்கு வந்து இந்தப் போராட்டத்தை நாம் முடிப்போமானால் அதுவே நமது வகுப்புத் தொல்லைக்கு ஏற்ற நல்ல முடிவாகும்" என்று சொல்வதனால்வகுப்பு தத்துவத்தையும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கைத் தத்துவத்தையும் ஒப்புக்கொள்கிறார் என்பதும் நன்றாய் விளங்க வில்லையா? பார்ப்பனரல்லாதார் கட்சி செய்து வருகிற வேலையையும் பாராட்டிவிட்டு அதன் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையையும்



ஒப்புக்கொள்ளுகிற ஒருவருக்கு வேறு கட்சி எதற்கு என்பதை வாசகர்கள் தான் யோசித்தறிய வேண்டும்.

தவிர மற்றும் சிலருக்கு, பார்ப்பனர்களையும் பார்ப்பனரல்லாதார் கட்சியில் சேர்த்துக் கொள்ளாததால் வேறு கட்சி வேண்டுமாம். இவர்களுக்கு வேறு கட்சி எதற்காக வேண்டும். இவர்கள் கோருகிறபடியே காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சி, மிதவாதக் கட்சி, ஓம்ரூல் கட்சி, சுயேச்சை கட்சி என்பதாக பல கட்சிகள் பார்ப்பனர்களையும் சேர்த்துக்கொள்ளக்கூடிய ஸ்தாபனங்களாக இருக்கும் போது வேறு ஒரு கட்சி எதற்காக வேண்டும் என்பதை யோசித்தால் பார்ப்பனரல்லாதார் கட்சியைக் கொண்டு பார்ப்பனர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற கெட்ட எண்ணமல்லாமல் வேறில்லை என்பது எந்த யோக்கியனுக்கும் படாமல் போகாது.

தவிர, பார்ப்பனரல்லாதார் கட்சியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்கு பார்ப்பனர்களை சேர்த்துக்கொள்ளக் கூடாது என்கிற கொள்கை யோடு இது ஏற்பட்டு பத்து வருஷம் ஆன பின்பு இப்போது இவர்களுக்கு இந்த ஞானம் தோன்றுவானேன்.

பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு தேசத்தில் செல்வாக்கு வந்துவிட்டது. அதை அழிக்க பார்ப்பனர்களும், அவர்களது அடிமைகளும் செய்த முயற்சிகளின் யோக்கியதைகளை எல்லாம் மக்கள் அறிந்து விட்டார்கள் என்கிற எண்ணம் பார்ப்பனர்களுக்குப் பட்டவுடன், பல பார்ப்பனரல்லாத கட்சியில் உள்ள ஆசாமிகளை ஏமாற்றி உள்ளே வந்து நுழைந்து அதைக் கெடுக்க முயல்வதில் பலனாக இந்த எண்ணம் சில மேதாவிகளுக்கு உண்டாக்கப்பட்டு வருகிறதே அல்லாமல் வேறென்ன? தவிர பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்திற்கு என்று ஏற்படுத்திக்கொண்டிருக்கும் இயக்கங்களில் பார்ப்பனரல்லாதாரை சேர்த்துக் கொள்ளுகிறார்களா? "பிராமண தர்ம பரிபாலன சபை" என்கிற பார்ப்பன சபைகளில் எத்தனை பார்ப்பனரல் லாதாரை பார்ப்பனர்கள் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற இவர்கள் சொல்ல முடியுமா?

டாக்டர். சுப்பராயன் அவர்களுக்கு மந்திரி பதவி முதல் பிரைஸ் விழுந்த உடனே ஸ்ரீமான் டி.ஏ. ராமலிங்கம் செட்டியார் நாக்கில்தண்ணீர் ஊற ஆரம்பித்து விட்டது. அன்று முதல் இன்றுவரை இனியும் தனக்கு மந்திரி பிரைஸ் விழுக என்ன தந்திரம் செய்யலாம் என்பதே அவருடைய கருத்தாகி விட்டது. அதற்கு ஏற்றாப்போல் சர்.சி.பி. என்கிற ஒரு பார்ப்பனர் ஸ்ரீமான் ராமலிங்கம் செட்டியாருக்கு சினேகிதர் போல வேஷம் போட்டதும் குரங் குக்கு கள்ளு வார்த்தது போல் ஸ்ரீமான் செட்டியார் தன்னைப் பற்றி மகா பிரமாதமாய் எண்ணிக்கொள்ள நேர்ந்து விட்டது.



RangaRakes tamilnavarasam.com

போதாக்குறைக்கு இந்த சர்.சி.பி. சினேகத்தை நிஜம் என்று எண்ணிய பல ஆங்கில நாகரீக குடியானவர்களுக்கும் செட்டியாரிடம் ஒரு மோகமுண்டாய் விட்டது. இவைகளின் பலனாய் ஸ்ரீமான் செட்டியார் ஒரு தனிக்கக்ஷி ஏற்படுத்த அநேகருக்கு தனிக்கடிதம் எழுதிவிட்டார். ஸ்ரீமான் கேசவ பிள்ளைக்கு எழுதினாராம். சர். சங்கரநாயருக்கு எழுதினாராம். இன்னும் பலருக்கும் எழுதினாராம். ஆனால் அநேகர் அதை ஒப்புக் கொள்ளவில்லை என்பதாகவே தெரிகிறது. சிலர் சுவற்றின் மேல் பூனை போல் இருக்கிறார்கள். முடிவு என்ன ஆகும் என்பது இப்போதே நமக்குத் தெரியும். அதாவது பார்ப்பனர்களில் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் ஒரு காரியத்தில் பிரவேசித்தால் என்ன பலன் அடைவாரோ அதே மாதிரிதான் பார்ப்பனர் அல்லாதாரில் நமது ஸ்ரீமான் ராமலிங்கம் செட்டியார் அவர்களின் கைராசியும் என்பது நமது தீர்மானம். ஆன போதிலும் ஒரு சிலருடைய சுயநலத்திற்கு ஆக வேண்டி யாரை வேண்டுமானாலும் எந்தக் கொள்கையை வேண்டுமானாலும் பலிகொடுக்கவும் எவ்வளவு பொறுப்புள்ள இயக்கத்தையும் அதன் பலனையும் ஒழிக்கவும் மக்கள் எவ்வளவு சுலபத்தில் துணிந்துவிடுகிறார்கள் என்பதை பொது ஜனங்கள் அறிவதற்கு இதை எழுதினோமே ஒழிய வேறில்லை.

**குடி அரசு - கட்டுரை - 07.08.1927**



# பொழுது புலர்ந்தது

## பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்

## (சென்னை தேர்தல்)

தேர்தல்களைப் பற்றி அடிக்கடி நாம் எழுதி வந்திருக்கிறோம். அதாவது தேசத்தின் பெயரையும் காங்கிரசின் பேரையும் சொல்லிக்கொண்டு பார்ப்பனர்கள் பதவி பெறுவதற்காகவும், அவர்களுக்கு கிடைக்காது என்று தோன்றும் சமயங்களில் உண்மை சூத்திரர்களான, அவர்கள் அடிமைகளுக்காவது கிடைக்கும்படி பார்க்கவுமே இதுவரை வேஷம் போட்டுக்கொண்டு வந்தார்கள் இப்போதும் போடுகிறார்கள், இனியும் போடப்போகிறார்கள்.

இதைப்பற்றி சுமார், 5, 6 வருஷ காலமாகவே நாங்கள் வாதாடி வருகிறோம். நாம் காங்கிரசிலிருந்த காலத்திலும் ஒவ்வொரு சமயத்திலும் காங்கிரசின் பேரால் யாரும் தேர்தலுக்கு நிற்கக் கூடாது என்றும் சொல்லி ஒவ்வொரு தீர்மானத்தையும் எதிர்த்து அனேகமாக வெற்றி பெற்றுக்கொண்டே வந்தோம். கடைசியாக ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடும், கல்யாணசுந்தர முதலியாரும் பார்ப்பனர்களுக்கு உடந்தையாகி காஞ்சீபுரம் மகாநாட்டில் இதை நிறைவேற்ற அனுமதித்து விட்டார்கள். அந்த சமயத்தில் கூட நமக்கு அதை எதிர்த்துப் பேச சவுகரியம் கொடுக்காமல் நாம் தண்ணீர் சாப்பிடுவதற்குள் இந்த தீர்மானத்தை பிரேரேபித்து ஆமோதித்து முடித்து விட்டார்கள் என்றும் நாம் தண்ணீர் சாப்பிட்டு திரும்பி பார்த்ததும் நம்மை எல்லோரும் பார்த்து ஏமாந்து போய் விட்டாயே என்று சிரித்தார்கள் என்றும் அப்போதே "குடி அரசில்" எழுதி இருக்கிறோம். அது முதல் காங்கிரசின் பேரால் தேர்தலுக்கு நிற்பது என்பதும், அதுவும் பார்ப்பனர்களுக்கு வேண்டியவர்களைத்தான் நிறுத்துவது என்பதும், வழக்கமாய் வந்து கொண்டே இருக்கிறது. அதற்கு முன்னால் கூட காங்கிரசின் பேரால் பார்ப்பனர்கள் தேர்தல் நடத்துவதை நாம் ஆங்காங்கு போய் கண்டித்தும் வந்திருக்கிறோம். நமக்கு விரோதமாக பார்ப்பனரல்லாத பத்திரிகைகளும் கூட நம்மை கண்டித்து காங்கிரசுக்காரருக்கே ஓட்டு கொடுக்கவேண்டும் என்று எழுதி வந்தன. இந்த கொடுமைகளே நம்மை வகுப்புவாரி தத்துவத்தை இன்னும் அதிகமாக வலியுறுத்தவும்



RangaRakes
tamilnavarasam.com

செய்தன. அதற்கும் விரோதமாக அனேக பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகளும் கூட எழுதியும் வந்தன. இவ்வளவும் இந்த 2, 3 ௵ திய 'குடி அரசி'னால் வெளியாகி பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகளும், தலைவர்களும் உண்மையுணர்ந்து இப்போதுதான் காங்கிரசுக்கு விரோதமாகக்கூட தேர்தல் பிரசாரம் செய்யவும் காங்கிரசுக்கு விரோதமாய் வெற்றி பெற்ற வர்களை ஆதரிக்கவும் முன் வரக்கூடிய நிலைமை வந்திருப்பதோடு காங்கிரசுக்கும் காங்கிரசுக்காரர் என்போர்கள் செலவு செய்யும் பணத்திற்கும் விரோதமாய் பொது ஜனங்கள் ஓட்டு செய்யவும் முன் வந்து விட்டார்கள். இது ஒரு பெரிய கண் விழிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

அதோடு கூட தொழிலாளர்கள் அரசியல் கட்சிகளில் சேரக்கூடாது, தொழிலாளர்களுக்கென்று தனிக்கட்சி இருக்க வேண்டும், தொழிலாளர்கள் தங்கள் தொழிலாளர் கட்சியின் பேராலேயே தேர்தலில் நிற்கத் தகுந்த யோக்கியதை அடையவேண்டும், அரசியல்காரர்களை நம்பக்கூடாது. அவர்கள் அயோக்கியர்கள். முதலாளிகளுக்கு திருட்டுத்தனமாய் உதவி செய்து தங்கள் சுயநலம் பெறுவதற்காக தொழிலாளர்களை ஏமாற்றுகிறவர்கள் என்றும் இந்த 4, 5 வருஷமாய் நாம் சொல்லிக் கொண்டும் எழுதிக்கொண்டும் வருவது யாவருக்கும் தெரிந்திருக்கலாம். உதாரணமாக ஒரு காலத்தில் நாம் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாயிருக்கும் போது கோயமுத்தூரில் ஒரு தொழிலாளர் கூட்டத்தில் இம்மாதிரி பேசினதற்காக நம்முடைய வழிப் பயணச் செலவை அதாவது காங்கிரஸ் சம்மந்தமாய் நாம் சுற்றுப் பிரயாணம் செய்த பிரயாணச் செலவை ஒப்புக்கொள்ள முடியாது என்பதாக ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்காரும் வரதராஜுலு நாயுடுவும் ஒரு கமிட்டி மீட்டிங்கில் சொன்னார்கள் அப்போதும் நாம் இதையே தான் சொன்னோம்.

இன்றைய தினம்தான் அது தொழிலாளருக்கும் மற்றும் தொழிலாள நண்பர்களுக்கும் நிஜமான நாளாயிற்று இப்போது எங்கு பார்த்தாலும் வரிசையாக காங்கிரசு அபேக்ஷகர்கள் என்போர்கள் தோல்வி அடைந்து வருவதும், காங்கிரஸ் அபேக்ஷகர்கள் அல்லாதவர்கள் மற்ற எந்த கட்சியாரானாலும் ஒரு கட்சியிலும் சேராதவர்களானாலும் வெற்றி பெறுவதும் பத்திரிகைகளில் பார்த்து வருகிறோம். இந்நிலைமை நமது நாட்டில் ஏற்பட்டிருப்பதற்கு உண்மையாளர்கள் சந்தோஷப்படாமல் இருக்கவே முடியாது. நாட்டில் கொஞ்சமாவது கண் விழிப்பு ஏற்பட்டிருக்கிறதென்பதை யாவரும் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். இந்த விழிப்பை பாழாக்காமல் மக்களை மேலும் மேலும் கண் விழிக்கச் செய்தால் நாட்டையும், மக்களையும் வஞ்சகர்கள், அயோக்கியர்கள், சுயநலக் காரார்கள் கையிலிருந்து தப்புவித்த பலனை அடையலாம் என்பது நமது ஆசை.

உண்மையிலேயே சென்னைத் தொழிலாளர் சார்பாக வெற்றி பெற்ற ஸ்ரீமான் செல்வபதி செட்டியார் தேர்தலின் மூலம் நமக்கு புதிய ஊக்கம்



உண்டாகிறது. நாம் செல்வபதி செட்டியார் வெற்றி பெறமாட்டார் என்றும் வீணாக தொழிலாளர்களுக்கு முதல் முதல் தோல்வி உண்டாகக்கூடாது என்றும் கருதி ஸ்ரீ செல்வபதி செட்டியாருக்கும் ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியாருக்கும் பின் வாங்கிக்கொள்ளும்படி கடிதம் எழுதினோம். ஏனென்றால் நாம் சென்னைக்கு சென்ற வாரம் போயிருந்த பொழுது தொழிலாளர் தேர்தலைப்பற்றித் தான் சில கனவான்களையும் அதில் ஈடுபட்டு உழைத்துக் கொண்டிருந்தவர்களையும் விசாரித்தோம். அவ்விசாரணையில் தொழிலாளர் பிரதிநிதி வெற்றி பெற முடியாதென்றும் எதிராளிகளால் ஓட்டர்களுக்கு தாராளமாய் பணம் வினியோகிக்கப்படுகிறதென்றும் இது வரையில் ஆயிரக் கணக்காய் சிலவாகிவிட்ட தென்றும், இனியும் செய்யக் காத்திருக்கிறார்கள் என்றும் தெரிந்தோம். அதிலிருந்து நமக்கு நம்பிக்கை இல்லாததால் இம்மாதிரி யோசனை சொன்னோம். அப்படி இருந்தும் இன்றையதினம் தொழிலாளருக்கு வெற்றி என்று பார்த்ததும் நாம் எவ்வளவு தூரம் மகிழ்ச்சி அடைந்திருப்போம் என்பது யோசிப்பவர்களுக்கு விளங்கும்.

ஸ்ரீமான் சக்கரைச் செட்டியார் வெற்றியில் மகிழ்ச்சி கொள்ளத் தக்க புதிய விஷயம் ஒன்றும் இல்லை. ஸ்ரீமான் 'டூடல்' முதலியார் இதற்காக எவ்வளவோ தூரம் பார்ப்பனரல்லாதாரை பொம்மை போட்டு வைதும் வீணாய் போய் விட்டதே என்று பரிதாபப்படாமல் இருக்க முடியாது. மற்றபடி ஜனாப் அமீத்கான் தோல்வியிலும் அதிசயத்தக்க விஷயம் ஒன்றுமில்லை. மற்ற தேர்தல்களும் சூதாடுவது போலவே இரண்டில் ஒன்று என்பதாக முடிந்திருக்கின்றன. எனினும் "காங்கிரஸ்", "தேசீயம்", என்பவைகளின் புரட்டு வெளியாய் வருகிறது என்பதைத் தவிர வேறு விசேஷமில்லை. ஸ்ரீமான் செல்வபதி செட்டியார் முதலியவர்கள் வெற்றியினால் கார்ப்பொரேஷனுக்கு பிரமாதமான தன்மை வந்துவிடும் என்பதாகவும் நாம் மகிழ்ச்சியடையவில்லை. நாட்டிற்கு உண்மையான நன்மையாய் தொழிலாளர் நன்மைக்காக அவர்களது ஆதிக்கம் வளர அஸ்திவாரக்கல் பிரம்பூர் தேர்தலில் போடப்பட்டிருக்கிறது என்பதைப் பொறுத்தவரை மகிழ்ச்சி அடைகிறோம். அய்யோ பாவம் அய்யங்கார்களே! அவர்களது கோஷ்டியார்களே!! தினமும் அமாவாசை இருட்டு ஏற்படாது. தினமும் திருட்டு கிடையாது. "பலநாள் திருடன் ஒருநாள் அகப்பட்டுப் போவான்" என்பது உங்கள் விஷயத்தில் மாத்திரம் ஏன் பலிக்காமல் போகும் என்று எண்ணி ஏமாறுகிறார்கள் என்று உங்களுக்கும் சாமாதானம் சொல்லி விட்டு, சென்னை தவிர வெளியிடங்களில் உள்ள உங்களைப் பின்பற்றுகிறவர்களையும் இனியாவது யோக்கியமாய் நடந்து கொள்ளுங்கள் என்றும் சொல்லி இதை முடிக்கிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 14.08.1927**



RangaRakes tamilnavarasam.com

# 'மகாத்மாவும் வருணாச்சிரமமும்' என்ற தலைப்பில் சென்ற வாரம் எழுதினதிற்கு ஆதாரமான மகாத்மாவின் பிரசங்கக்குறிப்பு

மகாத்மா காந்தி வருணாசிரமத்தைப் பற்றி மைசூரில் பேசியதாக சென்ற வாரம் குடியரசில் குறிப்பிட்ட விஷயத்தின் விபரமாவது.

"........................தீண்டாமை என்னும் கொடிய வழக்கம் இந்து சமூகத்திலிருந்து விலகுவதற்கு முன்னால் சுயராஜ்யம் சித்திக்குமென்கின்ற நம்பிக்கை எனக்கில்லை. இந்து மதத்தில் நான் அறிந்த மட்டில் வருணாசிரம தர்மம் ஒரு வருணத்தைச் சேர்ந்தவர்கள் மற்றொரு வருணத்தாரைவிட உயர்ந்தவர்கள் என்று நினைக்க இடமில்லை.

ஒவ்வொரு வருணாத்தாருக்கும் ஒவ்வொரு தருமம் விதிக்கப்பட்டிருக்கிறது. அவரவருக்கு விதிக்கப்பட்ட தர்மத்தை அந்தந்த வருணத்தார் செய்யும் போது அவர்கள் உயர்ந்தவர்களாகிறார்கள். பிராமணனுக்கு சில தர்மங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை அவன் சரிவர நிறைவேற்றும்போது அவன் உயர்ந்தவனாகிறான். ஜனசேவையே பிராமணனுடைய முக்கிய தர்மம். எளியவர்களை பாதுகாப்பது க்ஷத்திரியனுடைய தர்மம். அந்த தர்மத்தை அவன் செய்யும் போது மற்ற எல்லோரிலும் மேம்பட்டவனாகிறான். இம்மாதிரியே இதர வர்ணத்தினர்களும் தத்தம் தர்மங்களை கடமைகளைச் செய்கையில் அவர்கள் உயர்ந்தவர்களாகிறார்கள். (இந்த இடத்தில் வைசியர், சூத்திரர் என்கிற வார்த்தை மகாத்மாவே சொல்லவில்லையோ, அல்லது "சுதேசமித்திரன்" பிரசுரிக்கவில்லையோ தெரியவில்லை.)

இப்படியிருக்கையில் உயர்வு தாழ்வு எங்கிருந்து வருகிறது. வருணாசிரம தர்மமானது சமுதாய நலத்தை ரசிப்பதற்காகவே ஏற்பட்டது. மற்றபடி ஒரு சமூகத்தார் மற்றொரு சமூகத்தாரை ரசிப்பதற்கு ஏற்பட்டதல்ல." இந்த வாக்கியங்கள் சுதேசமித்திரன் பத்திரிகையில் காணப்படுகின்றன.

**குடி அரசு - குறிப்புரை - 14.08.1927**



RangaRakes

# அரசியல் புரட்டு

இதுகாலை இந்திய நாட்டை சுயமரியாதை அடைய முடியாமலும் விடுதலை பெறமுடியாமலும் உண்மையாய் தடுத்துக்கொண்டிருப்பவை எவை என்பதாக ஒரு அறிஞன் யோசித்துப் பார்ப்பானேயாகில் இந்துமத இயக்கமும் இந்திய அரசியல் இயக்கமுந்தான் என்பதாகவே முடிவு செய்வான்.

நம் மக்களின் சுயமரியாதைக்கு இடையூறாயிருப்பது இந்து மதம் என்பதை அநேக தடவைகளில் பேசியும் எழுதியும் வந்திருக்கிறோம். இது போலவே இந்திய அரசியல் இயக்கத்தால் நமது விடுதலை தடைப்பட்டு அடிமைத்தன்மை பலப்பட்டு வருவதையும் பலதடவை பேசியும் எழுதியும் வந்திருப்பதுடன், இவ்விரண்டும் பார்ப்பனர்களின் ஆதிக்கத்திற்கும் சுயநலத்திற்கும் பார்ப்பனர்களால் நமது நாட்டில் ஏற்படுத்தப்பட்டதென்பதையும் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். எனினும், இதுசமயம் அரசியல் புரட்டைப் பற்றியே இத்தலையங்கம் எழுதுகிறோம். உதாரணமாக அரசியல் இயக்கம் தோற்றுவித்த காலத்திலேயே இதை தோற்றுவித்தவர்கள் கருத்தென்னவென்பதை யோசித்தால் விளங்கும். அதாவது அரசாங்க உத்தியோகத்தில் இந்தியர்கள் சமஉரிமை பெறவும், அரசாங்க அதிகாரத்தில் பங்கு பெறவும், அரசாங்கத்தையே நடத்திக்கொடுப்பதற்கு கட்டுப்பட்டு அரசாங்க சேவை செய்யவுமே தான் கருத்துக்கொண்டு நமது மக்கள் பேரால் சில படித்தவர்கள் என்னும் பார்ப்பனர்கள் அரசியல் இயக்கங்களை ஆரம்பித்தார்களே ஒழிய வேறில்லை.

இவ்வியக்கம் தோன்றிய நாள் தொட்டு அதன் உத்தேசப்படியே உத்தியோகங்களும் அதிகாரங்களும் ஏராளமாக பெருகவும், அவைகள் அவ்வளவும் பார்ப்பனர்கள் அடையவும் ஏற்பாடு ஆகி வருகிறதை யார் மறுக்கக்கூடும், பார்ப்பனரல்லாதார் யாராவது இவ்வுத்தியோகங்களிலோ, அதிகாரங்களிலோ பங்கு பெற ஆசைப்பட்டு விட்டால், அந்த க்ஷணமே பார்ப்பன அரசியல் மாற்றமடைந்து விடுகிறது. பார்ப்பனரல்லாதாருக்குள் கக்ஷி உண்டாக்கி விடப்படுகிறது. பார்ப்பனரல்லாதார் மீது தேசத்துரோகமும், வகுப்பு துவேஷமும் கற்பிக்கப்பட்டு விடுகிறது. பார்ப்பனரல்லாதாரும் தங்கள் தங்கள் சமூகத்துக்கு துரோகம் செய்து, சமூகத்தை காட்டிக்கொடுத்து,



tamilnavarasam.com

சமூகத் தலைவர்களையும் கொள்கைகளையும் கொலை செய்தாலொழிய உத்தியோகம் சம்பாதிக்க முடியாத நிலையில் பார்ப்பனர்கள் ஆக்கி விட்டார் கள். யாராவது பார்ப்பனர்களை லக்ஷியம் செய்யாமல் பார்ப்பனரல்லாதார் சமூக நலத்தைக் கோரி உழைப்பதின் மூலம் ஏதாவது உத்தியோகம் பெற்று விட்டால் அந்த உத்தியோகத்தை அழிப்பதற்கு எவ்வளவு பிரயத்தனங்கள் வேண்டுமானாலும் செய்து அதை அழித்துவிடுகிறார்கள்.

சாதாரணமாய் யோசித்துப் பார்ப்போமானால் பார்ப்பனர்கள் என்ன அக்கிரமங்கள் செய்தாலும் அவர்கள் எப்படியாவது உத்தியோகம் பெற்று தங்கள் வகுப்பு நலத்தை பெருக்க அதை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார் கள். பார்ப்பனரல்லாதார் எவ்வளவு நியாயமாய் நடந்தாலும் அவர்களுக்கு உத்தியோகம் கிடைப்பதில்லை; கிடைத்தாலும் அதை தங்கள் வகுப்பு நலத் துக்கு நடத்த விடுகிறதில்லை.

இதற்கு உதாரணம் "மகாத்மா காந்தியால் தேசம் பாழாகி விடுகிறது அராஜகம் வலுத்து விடுகிறது. அவரை ஜெயிலில் பிடித்துப்போட வேண்டும்" என்பதாக மகாகனம் சீனிவாச சாஸ்திரியும், சர்.சங்கர நாயரும் ஆகிய இருவருமே சொன்னார்கள்.

ஆனால் கனம் சீனிவாச சாஸ்திரிக்கு மீ 4000 ரூபா சம்பளமுள்ள உத்தியோகம் கிடைத்தது. அடுத்த சீர்திருத்தத்தில் கவர்னர் வேலையும் கிடைக்கப் போகிறது. சர். சங்கர நாயருக்கோ கேசு ஏற்பட்டு 2 லட்ச ரூபா கையிலிருந்த பணம் செலவாயிற்று; யாதொரு உத்தியோகத்திற்கும் லாயக் கில்லாமலும் போய்விட்டார்.

தவிர, பிரிட்டிஷாருக்கும், ஜர்மானியருக்கும் யுத்தம் நடந்து கொண்டி ருக்கும் போது அமெரிக்கா கவர்மெண்டாருக்கு, இங்கிலீஸ் கவர்ன்மெண் டுக்கு விரோதமாய் கடிதம் எழுதின கூட்டத்தைச் சேர்ந்தவர் சர்.சி.பி. ராம சாமி அய்யர். ஆனால் அவருக்கு மாதம் 2000 ரூபா சம்பளமுள்ள அட்வொ கெட் ஜனரல் வேலையும் பிறகு மாதம் 5500 ரூபா சம்பளமுள்ள நிர்வாக சபைசட்ட மெம்பர் வேலையும், இரண்டு தடவை ஜினீவாவுக்கு இந்தியப் பிரதிநிதியாய் போகும் பதவியும், திரும்பி வந்து சட்ட மெம்பர் வேலை காலாவதியானதும், இந்திய கவுன்சில் சட்ட மெம்பர் வேலைகூட கிடைக்கக் கூடிய யோகமும் இருந்து வருகிறது. பஞ்சாப் படுகொலையை ஆதரித்த, கனம் நரசிம்மேஸ்வர சர்மாவுக்கு மாதம் 6500 ரூபா சம்பளமுள்ள இந்திய கவுன்சில் வேலையும் கொடுக்கப்பட்டது.

ஒத்துழையாமையை வைத ஸ்ரீமான் டி. ரங்காச்சாரியாரின் பிள்ளை குட்டிகளுக்கெல்லாம் 1000, 500 சம்பளமுள்ள உத்தியோகங்களும் கொடுக்கப் பட்டது. அவருக்கு இந்தியப் பிரதிநிதியாய் வெளி நாடுகளுக்குப் போகத்



தகுந்த பாக்கியமும் கிடைத்தது. அடுத்த சட்ட மெம்பர் வேலைக்கு அஸ்திவாரக் கல்லும் நாட்ட முயற்சி நடந்து வருகிறது.

"ஒத்துழையாமை சட்ட விரோதம், காந்திக்கு மூளை இல்லை, தேசத் திற்கு சிறைக்கு போய்விட்டு வந்தவர்களை வகுப்புத் துவேஷத்திற்காக சிறைக்கு அனுப்ப வேண்டும்" என்று சொன்ன ஸ்ரீமான் சீனிவாசயங்கார் காங்கிரஸ் தலைவர், இந்திய அரசியல் தலைவர் முதலிய பெருமைகளோடு விளங்குகிறார்.

ரிஷி மூலம், நதிமூலம் கேழ்கக்கூடாது என்பதுபோல் நமது ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு இவைகள் யாருக்கும் தெரிய முடியாதவர், யாரும் கேட்கவும் கூடாது என்கிற பெருமை படைத்த ஸ்ரீமான் சத்தியமூர்த்தியவர்கள் எவ்வளவு தூரம் தேசத்துக்காக ஊதியம் இல்லாமல் பாடுபட்டவர் எவ்வளவு தூரம் சொந்தமான அபிப்பிராயமுடையவர் எவ்வளவு தூரம் நாணையமானவர் என்பது அறியாதார் ஒருவருமிருக்க மாட்டார்கள். அப்பேர்பட்டவர் இன்று சென்னை மாகாண அரசியல் தலைவ ராய் விளங்குவதோடு சர்க்காரை எதிர்க்கும் கட்சி தலைவராயும் இருப்பதோடு கவர்னர் பிரபுவையும், கவர்னர் ஜனரல் பிரபுவையும் நேரில் பார்த்துப் பேசக் கூடியவராயும், அடுத்த காங்கிரசுக்கு அரசியல் திட்டம் ஏற்படுத்துபவராகவும் இருக்கிறார். இவர்களெல்லாம் அரசியலின் பேரால் பெரிய மனிதர் களானவர்கள் அல்லவா?

இது தவிர, "உத்தியோகம் கூடாது" என்று வேஷம் போடுகிற நம்நாட்டு அரசியல் பார்ப்பனர்களின் குடும்பத்தார்களாகிய ஒரு அய்யங்கார் இன்ஸ்பெக்டர் ஜனரல் ஆப் பஞ்சாயத்து என்பதாக ஸ்ரீமான் என்.கோபால் சாமி அய்யங்கார் மீ 2000 ரூ. வாங்கிக் கொண்டிருக்கிறார் மற்றொரு அய்யங்கார் ஸ்ரீமான் வி.டி. கிருஷ்ணமாச்சாரியார் பரோடா திவானாக மீ 3000 ரூ வாங்கிக் கொண்டிருக்கிறார், மற்றொரு அய்யங்கார் ஸ்ரீமான் டி. விஜயராகவாச்சாரியார் மீ 3000 ரூ. சம்பளம் வாங்கிக்கொண்டு டில்லியில் இருக்கிறார். மற்றொரு பார்ப்பனர் ஸ்ரீ.டி. ராகவய்யர் என்பவர் மீ 2000 ரூ. வாங்கிக் கொண்டு ரிவினியூ போர்டு மெம்பர் கூட்டப்பார்க்கிறார். மற்றொரு பார்ப்பனர் ஸ்ரீமான் பி. சீதாராமய்யர் என்பவர் மீ 2000 ரூ. வாங்கிக் கொண்டு கவர்மென்ட் காரியதிரிசியாய் இருக்கிறார். இன்னம் எத்தனையோ பார்ப்பனர், கலெக்டர், ஐகோர்ட் ஜட்ஜி முதலிய பெரிய உத்தியோகங்களில் மீ 1000, 2000, 3000 வீதம் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இவர்களில் ஒருவராவது இந்த உத்தியோகங்கள் பெறுதற்குப் பார்ப்பன சமூகத்தைக் காட்டிக் கொடுத்தாவது பார்ப்பன சமூகங்களின் அக்கிரமமான கொள்கை களைக் கண்டித்தாவது தங்கள் சகோதரர்களான பார்ப்பனர்களை வைதாவது ஒரு சிறு உத்தியோகமும் பெறவேயில்லை. ஆனால், நம்மவர்கள் ஒரு சிறு முனிசிபல் கவுன்சிலர் வேலை பெறவேண்டுமானால் என்ன செய்தால்



RangaRakes tamilnavarasam.com

கிடைக்கிறது என்பது நேயர்களுக்குத் தெரியும். பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டு பார்ப்பனரல்லாதாரை வைதால் தான் கிடைக்கிறது. உதாரணமாக இப்போதைய மந்திரிகள் தங்கள் வேலையைக் காப்பாற்றிக் கொள்ள எவ்வளவு தூரம் பார்ப்பனர்களுக்கு கையாளாக இருந்தால் முடிகிறது என்பதைப் பார்த்தால் தெரியும். அன்றியும் ஸ்ரீமான்கள் டி.ஏ. ராமலிங்கம் செட்டியாரும் வெள்ளியங்கிரிக் கவுண்டரும் முறையே எவ்வளவு எவ்வளவு படித்தவர்கள் எவ்வளவு பெரிய குடும்பத்தார்கள் கவர்ன்மெண்டுக்கு எவ்வளவு தூரம் நல்ல பிள்ளைகளாய் இருந்தவர்கள் இப்படியெல்லாம் இருந்தும் ஒரு *மீ* 2000 ரூபாய் உத்தியோகத்திற்கும் ஒரு சட்டசபை முதலிய சிறு பதவிகளுக்கும் எவ்வளவு பெரிய கொலை பாதகம் செய்ய வேண்டியதாய் இருக்கிறது. தங்கள் சமூகத்தார் கூடி ஒரு ஒழுங்குபடியான சபையின் மூலம் விதிப்படியான பிரதிநிதிகள் கூடி செய்த தீர்மானத்தை அழிப்பதற்கு எவ்வளவு பிரயத்தனங்கள் செய்கிறார்கள். இன்னும் ஒவ்வொரு ஊரிலும் ஏதாவது ஒரு பதவியோ உத்தியோகமோ வேண்டியிருந்தால் இன்னமும் என்ன என்ன செய்யும்படி ஏற்பட்டு விடுகிறது என்பவை களைப் பார்ப்பவர்களுக்கு விளங்காமல் போகாது. இதுகளுக்கெல்லாம் காரணம் அரசியல் புரட்டுத்தானா அல்லவா? இந்த உத்தியோகங்கள் அரசியல் புரட்டுகளினால் உண்டானதுகளா அல்லவா? இதுகள் பார்ப்பனரல்லாதார் கழுத்தைத் திருகுகிறதா இல்லையா? இவற்றை எதற்காக சொல்லுகிறோம் என்றால் நமது நாட்டு அரசியல்இயக்கம் வெறும் புரட்டும் அயோக்கியத் தனமும் கொண்டது என்பதையும் அது பார்ப்பனர்கள் பிழைக்கவும் பார்ப்பனரல்லாதாரை அழிக்கவுமான நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டு அந்தப் படியே நடந்து வருகிறது என்பதையும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் யோக்கியமான பார்ப்பனரல்லாதார் அரசியல் மூலம் தேசத்திற்கோ, சமூகத்திற்கோ நன்மை செய்யமுடியாது என்பதையும் வெளியாக்கச் செய்யவும் எப்படியாவது இம் மாதிரியான அரசியல் இயக்கங்களை ஒழித்தாலல்லது நாட்டிற்கு விடுதலையோ நமது சமூகத்திற்கு சுயமரியாதையோ கிடைக்க மார்க்கமில்லை என்பதை ஜனங்கள் அறியவும் இதை எழுதுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 14.08.1927**



RangaRakes

# திராவிடன்

'திராவிடன்' பத்திரிகை விஷயமாய் இதற்கு முன் இரண்டொரு தடவை எழுதி வந்தபடி அதாவது திராவிடன் பத்திரிகையின் ஆசிரியத் தொழிலையும் நிர்வாகத்தையும் ஏற்றுக் கொள்வது என்பதாக முடிவு ஏற்பட்டு விட்டதால் அநேகமாக இம்மாத முடிவுக்குள்ளாகவே ஏற்றுக்கொள்ளக்கூடும்.

தன வணிக நாட்டு சுற்றுப் பிரயாணத்திற்குப் பிறகு உடல்நிலை சற்று கெட்டுப்போய் இருக்கிறது. ஆதலால் ஒரு வாரம் குற்றாலம் போய் அங்கிருந்து கொண்டே சென்னை போக வேண்டிய விஷயங்களைப் பற்றி ஏற்பாடு செய்யலாமென்பதாக நினைத்திருக்கிறோம். அநேகமாக 17 தேதி அல்லது 18 தேதி இவ்விடமிருந்து குற்றாலத்திற்கு புறப்படுவதாயிருக்கலாம். அங்கிருந்து இம்மாத முடிவுக்குள்ளாகவே சென்னை செல்ல உத்தேசம்.

ஆங்காங்குள்ள நண்பர்கள் அதற்குள்ளாக ஒரு 500 சந்தாதாரர்களையாவது சேர்த்து அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். திராவிடனை ஒப்புக் கொள்ளும்படி நமக்கு கட்டளை இட்ட சுமார் 500க்கு மேற்பட்ட நண்பர்களில் அநேகர் அதாவது ஒருவர் நாம் ஒப்புக்கொண்ட அன்றே 100 சந்தா சேர்த்துக் கொடுப்பதாகவும் மற்றவர் 50 சந்தா சேர்த்துக் கொடுப்பதாகவும் பலர் 20, 30 வீதம் சேர்த்துக் கொடுப்பதாகவும், மற்றும் பலர் வேறு என்ன என்னமோ உதவி செய்வதாகவும் வாக்களித்திருக்கிறார்கள். தஞ்சை, மதுரை, ஜில்லா நண்பர்கள் மாத்திரம் 1000 சந்தாதாரர்களை சேர்த்துக் கொடுப்பதாய் வாக்களித்திருக்கிறார்கள். எல்லா கனவான்களுக்கும் இது சமயம் வாக்குகளை நிறைவேற்றி நமக்கும் குற்றாலத்திற்கு எழுதும் படியாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

இதை நண்பர்கள் அஸ்வார்சமாய் கவனிக்கக்கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தற்காலம் உலகத்தை புரட்டி வருவதே பத்திரிகைகள் தான் என்பதையும் அந்தவிஷயத்தில் நாம் அஸ்வார்சமாய் இருந்து வந்ததால்தான் நமது சமூகத்துக்கு இவ்வளவு சுலபமாய் ஒரு கைக்குள் அடங்கக்கூடிய கூட்டத்தார் இவ்வளவு கொடுமைகள் செய்ய இடமேற்பட்டு வந்தது என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.



tamilnavarasam.com

"குடி அரசு" என்கிற குட்டிப் பத்திரிகையால் பாமர மக்கள் எவ்வளவு தூரம் விழிப்படைய முடிந்தது என்பதையும் எவ்வளவு தூரம் சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அதுபோல் "திராவிடன்" என்கிற தினப் பத்திரிகையால் நமது முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் எவ்வளவு தூரம் எதிரிகளாயுள்ளவர்களின் கொடுமையை எடுத்துக்காட்டக் கூடும் என்பதையும் கவனித்துப் பாருங்கள். பார்ப்பனரல்லாத கட்சியைச் சேர்ந்தவர்கள் 6 வருஷம் அதிகாரத்திலிருந்தும், நியாயம், ஒழுங்கு, மனச்சாக்ஷி என்கிற பூச்சாண்டிகளுக்கு பயந்துகொண்டு கேவலம் தங்கள் கக்ஷி பத்திரிகையின் நன்மைக்கு கூட ஒரு காரியமும் செய்யாமல் காலத்தை கடத்தி வந்தார்கள்.

நமது விரோதிகளால் சிருஷ்டிக்கப்பட்ட மந்திரிகளைக் கொண்டு இந்த 6, 7 மாதத்தில் நமது விரோதிகள், அவர்கள் ஆதிக்கத்திற்கு எவ்வளவு காரியத்தை சாதித்துக் கொண்டார்கள் என்பதை யோசிப்பார்களானால் தங்களது இளிச்சவாய்த்தனம் விளங்காமல் போகாது. காலை ஒரு உத்திரவு, மாலை ஒரு உத்திரவு, இரண்டையும் அடித்துவிட்டு மறுநாள் ஒரு உத்தரவு வீதம் மந்திரிகளின் கையைப் பிடித்துப் போடச் செய்கிறார்களா இல்லையா? இதில் ஏதாவது இரகசியம் உண்டா?

வெளிப்படையாய் இன்ன காரியம் எனக்கு செய்தால் உனக்கு இன்ன காரியம் செய்வேன் என்று கடை வைத்து விற்பது போல் ஸ்தல ஸ்தாபன பதவிகளையும் உத்தியோகங்களையும் விற்கிறார்களா இல்லையா? இம்மாதிரி என்ன என்ன வழிகளில் நமது எதிரிகள் நமக்கு தீங்கு செய்து வருகிறார்கள். இக்கொடுமையில் இருந்து தப்ப நமக்கு இப்பத்திரிகைகள் இல்லாமல் வேறு என்ன ஆயுதம் இருக்கிறது.

ஆகவே நண்பர்களே தயவு செய்து இந்த இரண்டு வாரத்தை வீணாக்காதீர்கள். கண்டிப்பாய் சந்தாதாரர்களைச் சேர்த்துங்கள். செப்டம்பர் முதல் தேதிக்கு 'திராவிடன்' 3000 காப்பிகள் தமிழ் மக்களிடை உலாவ வேண்டும். இதற்குள் விளம்பரங்கள் சேர்ப்பவர்களும் விளம்பரம் சேர்த்துக் கொடுங்கள். குறைந்தது 2500 காப்பிக்கு உத்திரவாதமேற்று விளம்பரம் சம்பாதியுங்கள். வீணாய் காலத்தைக் கடத்தாதீர்கள். 'திராவிடனை' நாம் ஏற்றுக்கொள்வதானால் 'குடி அரசு' குறைந்து விடும் என்று சிலர் ஐயுறுகின்றார்கள். அதைப் பற்றி யாரும் கவலைப் பட வேண்டியதில்லை. அது எப்படியும் உங்கள் தயவால் தமிழ் மக்களிடம் 3000 பிரதிகள் பிரதி வாரமும் உலாவிக் கொண்டுதான் இருக்கும். எனவே, தமிழ் நாட்டில் உள்ளவர்களும் வெளிநாட்டில் உள்ளவர்களும் சற்று கவனம் வைக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 14.08.1927**



RangaRakes

# ஈரோட்டில் முதல் மந்திரி திருவிழா

ஈரோடு முனிசிபாலிட்டியாரால் ஒரு ஹைஸ்கூல் திடீரென்று ஏற்படுத்தினதின் கருத்தையும், அதன் பேரில் மஹாஜன ஸ்கூல்காரர்கள் முதன் மந்திரிக்கு எழுதியதின் பேரில் டி ஹைஸ்கூலில் 4 வது 5 வது பாரங்களை எடுத்துவிட வேண்டுமென்று மந்திரி உத்திரவு போட்டார் என்பதையும், 2,3 வாரங்களுக்கு முன்பு 'குடி அரசில்' எழுதியிருந்தோம். முதன் மந்திரியின் இந்த உத்திரவின் பேரில் ஈரோடு சேர்மென் சில பலமான சிபார்சுகளைப் பிடித்துக் கொண்டு போய் அதாவது நம்பிக்கையில்லாத தீர்மானத்திற்கு எதிரிடையாய் கக்ஷி சேர்ப்பதாய்ச் சொல்லி, அந்த உத்திரவை மாற்றி மறுபடியும் ஒரே அடியாய் 4வது, 5வது, 6 வது பாரங்கள் வைத்துக்கொள்ள உத்திரவு போடும்படி கேட்க, நமது மந்திரியார் அதே மாதிரி உத்திரவு போட்டார். தவிரவும் இந்தப் பள்ளிக்கூடத்தை திறந்து வைக்க இதே மந்திரியை ஆரம்பத்தில் முனிசிபல் சேர்மன் சீமான் சீனிவாச முதலியார் கேட்டுக் கொண்ட பொழுது, வருவதாய் வாக்களித்து விட்டு மறுபடி, யார் யாரோ முதல் மந்திரியிடம் சேர்மெனின் யோக்கியதைகளைச் சொன்ன பிறகு, அப்படியானால் நான் அங்கு வருவதில்லையென்று சொல்லி வராமல் நின்று கொண்டார். சேர்மென் எத்தனையோ தந்தி அடித்தும் எத்தனையோ சிபார்சு பிடித்தும்ஒரே அடியாய் மாட்டேன் என்று சொல்லிவிட்டார். பிறகு நம்பிக்கையில்லாத தீர்மானம் வருவதை அறிந்ததும் யார் என்ன சொன்னாலும் கேழ்க்க வேண்டியவராய் விட்டதோடு ஸ்ரீமான் ராமலிங்கம் செட்டியார் சொல்படி நடக்க வேண்டியவரானதினாலும் மறுபடியும் அதே பள்ளிக்கூடத்திறப்பு விழாவுக்கு பள்ளிக்கூடம் திறந்து ஒரு மாசத்திற்கு மேலான பிறகு வந்து சேர்ந்தார்.

முனிசிபல் பள்ளிக் கூடத்திற்கு 'பிரப்' பள்ளிக்கூடம் என்று பெயர் வைக்கப்பட்டது. முனிசிபல் ரீடிங் ரூமுக்கு 'காக்ஸ்' ரீடிங் ரூமென்று பெயர் வைக்கப்பட்டது. இந்தப் பெயர்களுடன் பள்ளிக் கூடத்தையும் ரீடிங் ரூமையும் திறந்து வைத்தார்.

இந்தப் பெயர்கள் முனிசிபல் பணங்களை சேர்மென் அடித்த கொள்ளைக்கு உதவியாக விருந்த கனவான்களுக்கு லஞ்சமாகக் கொடுப்பதாய் எண்ணிக்கொண்டு இட்ட பெயராக விளங்கிற்று. இந்தபெயர் வைக்கும்



tamilnavarasam.com

சடங்குக்கு குறைந்தது 500 ரூபாயாவது முனிசிபாலிட்டி கணக்கில் செலவு எழுதக் கூடும். பகுதியாவது பாடுபட்டவருக்கும் ஆகும். இந்த மந்திரி முதலில் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டு வந்ததும், முதலில் பள்ளிக் கூடம் ஒரே அடியாய் 4,5,6 வது பாரங்கள் வைக்க உத்திரவு கொடுத்துவிட்டு மறுபடி அதை கேன்சல் செய்ததும், மறுபடி அதை 5 வது 6 வது பாரங்கள் வைக்க உத்திரவு கொடுத்ததும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து வேலை செய்வதற்கு லஞ்சமாகக் காணப்பட்டது.

இவ்வளவோடு போகவில்லை "குதிரை கீழே தள்ளினதோடு குழியும் பறித்தது" என்பது போல் முதல் மந்திரியார் மகாஜன இஸ்கூலையும் வந்து பார்ப்பதாக தானாகவே சொல்லி அனுப்பி வந்து பார்த்து பள்ளிக் கூடத்தில் பிள்ளைகள் இவ்வளவு கூட்டமாயிருந்தால் வாத்தியார்களுக்கு கஷ்டமல்லவா, ஆதலால் வேறு பள்ளிக்கூடம் ஏற்பட்டதால், எட்மாஸ்டருக்கு நன்மை தானே என்று சொன்னாராம். அய்யோ பாவம் மகாஜன ஹைஸ்கூல் பேரிலும், எட்மாஸ்டர் பேரிலும் மந்திரிக்கு எவ்வளவு பரிதாபம். அதிகமாக பிள்ளை களை பெறுவது கூட தாயிக்கும் தகப்பனுக்கும் கஷ்டம்தான். சிலவற்றை வேறு ஒருவன் ஒப்புக்கொள்வது தாய் தகப்பனுக்கு நன்மைதானே என்று கூட மந்திரிக்கு தோன்றலாம். நமது மந்திரிகளின் தர்பார் அந்தக் காலத்தில் கதைகளாக எழுதி வைத்த நவாபுகள் தர்பாரிலும் இப்படி நடந்ததாக எழுத அவர்களுக்கு தோன்றவில்லை.

இந்த மாதிரி நடந்தால் திருப்பூரில் மாத்திரம்தானா மந்திரிகளை ஆதரிக்கக் கூட்டம் போடுவார்கள். இன்னம் சந்து பொந்து மூலை முடுக்கு எல்லா இடங்களிலும் நமது சேர்மன் சீனிவாச முதலியார் ஸ்ரீமான்கள் ராம லிங்க செட்டியார் கம்பெனியார் மாத்திரமல்லாமல் இன்னும் எத்தனையோ கம்பெனியாரும் போடுவார்கள். நடக்கிற வரையில் நடக்கட்டும். இந்த மந்திரிகளோடேயே உலகம் முடியப் போவதில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம்- 14.08.1927**



RangaRakes

# ஓர் மறுப்பு

திருப்பூரில் பார்ப்பனரல்லாதார் நபரால் கூட்டப்போகும் ஒரு போலி மகாநாட்டிற்கு எதிரிடையாய் ஒரு மகாநாடு கூட்டப் போவதாகவும் அதற்கு ஸ்ரீமான்கள் ஷண்முகம் செட்டியார், ரத்தினசபாபதி முதலியார், வரதராஜுலு நாயுடு, ராமசாமி நாயக்கர் முதலியோர்கள் வரப்போவதாகவும், பார்ப்பன பத்திரிகைகளில் வெளியாய் இருக்கிறது. இது கொஞ்சமும் ஆதாரமற்றது. இதற்கு மறுப்பு அசோசியேட் பிரஸ் பிரதிநிதியிடம் நேரில் தெரிவித்தும் பத்திரிகைகளில் வெளியாகவில்லை. நம்மை பொருத்தவரை அப்போபட்ட மகாநாடு கூட்டுவதைப் பற்றி கொஞ்சம் கூடக் கருதவில்லை என்றும் கூட்டலாமா என்று பலர் யோசனை கேட்பதற்குங்கூட அவசியமில்லை என்று தெரிவித்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**குடி அரசு - மறுப்புரை - 14.08.1927**



tamilnavarasam.com

# பாவி டயர்

பஞ்சாப்பில் நடந்த படுகொலைக்கு காரணஸ்தர்களில் ஒருவரான ஜனரல் டயர் துரை செத்துப்போனதற்கு அநேக பத்திரிகைகள் சந்தோஷம் கொண்டாடுவதன் மூலமாய் டயரை பலவாராக கண்டபடி வைது எழுதி வருகின்றன.

செத்துப்போன ஜனரல் டயர் துரையை விட கொடுமையானவர்கள் நம் நாட்டில் உயிரோடு இருந்து கொண்டு பிள்ளை குட்டிகள் பெற்றுக் கொண்டு சுகமாய் வாழுகிறார்கள். இந்த டயர்களைப் பற்றி எந்தப் பத்திரிகையாவது எழுதுகின்றார்களா? ஒன்றுமேயில்லை. காரணம் என்ன. நமது பத்திரிகைகளுக்கு பெரும்பாலும் சுயபுத்தி கிடையாது. ஒரு பார்ப்பனப் பத்திரிகை வழி காட்டினால் அதை குரங்குப்பிடியாய் பிடித்துக் கொண்டு "கங்காதரா மாண்டாயோ கங்காதரா மாண்டாயோ" என்று கத்த வேண்டியது தான்.

பாவி டயராவது அவரது வகுப்பு பெண்மீது கல்லுப் போட்டார்கள் என்கிற காரணத்தைச் சொல்லி அந்த வீதியில் வயிற்றினால் ஊர்ந்து கொண்டுபோ மூக்கினால் உரைத்துக் கொண்டுபோ என்பதான நிபந்தனை போட்டாவது அவர்களுக்கு இஷ்டமான தெருவில் போகும்படி இடம் கொடுத்தார். நமது நாட்டிலிருக்கும் படுபாவி டயர்கள் நாம் ஒரு குற்றமும் செய்யாமல் ஒருவன் மீதும் கல்லுப்போடாமல் இருப்பதுடன் அவர் கூட்டத்திற்கும் நாம் நன்றாக சோறு போட்டும் பணம் கொடுத்தும் வரும்போதே, அடியோடு தெருவிலேயே போகக்கூடாது, கிட்டத்திலேயே வரக்கூடாது என்கிறார்களே இதைப் பற்றி யாருக்காவது உறைக்கிறதா. இதனால் நமக்கு அவமானமாயிருக்கிறதே என்று படுகிறதா? எந்தப் பத்திரிக்கையாவது இம்மாதிரி நடவடிக்கைகள் படுபாவி டயர்தான் என்று எழுதுகிறதா என்று பார்த்தால் இல்லவேயில்லை. "பாவி டயர்" தன்னுடைய பிறந்த நாட்டுக்காக நன்மை செய்கிறோம் என்கிற எண்ணத்தின் பேரில் நம்மை கொடுமை செய்தான். நம்முடைய நாட்டுப் பாவி டயர்கள் தங்கள் நாட்டையும் காட்டிக்கொடுத்து தங்கள் நாட்டாரையும் வயிற்றுப் பிழைப்புக்கு மாத்திரம் கொடுமை செய்கிறார்கள்.



அதோடு நம் நாட்டுப் படுபாவி டயர் கூட்டத்தார் பாவி டையர் செய்த காரியத்தையும் தாங்கிப் பேசி பெரிய பெரிய உத்தியோகமும் பெறுகிறார்கள். அதைப்பற்றியும் பேசுவாரைக் காணோம். எழுதுவாரைக் காணோம். தவிர வும் ஒருவர் செத்துப்போனதற்கு பிறகு "பாவி செத்தான்" என்பது அவ்வளவு மனிதத்தன்மையாகாது. அதிலும் உயிருடன் இருந்து கொண்டு அதைவிட எத்தனையோ மடங்கு அதிகமான கொடுமை களை செய்கிறவர்களை மூடிவைத்துக் கொண்டிருக்கிறவர்கள் இப்படிச் சொல்லுவது மிக மிக அக்கிரமமானது என்றே சொல்லுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 21.08.1927**



RangaRakes tamilnavarasam.com

# அறிவை அடக்க புதிய சட்டம்

மத ஸ்தாபகர்களைக் குற்றம் சொல்வதைப்பற்றி தண்டிக்க என்னும் பேரால் ஒரு புதிய சட்டம் வேண்டுமென்றும் இப்போது எங்கும் ஒரே கூச்சலா யிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை நமது நாட்டுப் பார்ப்பனர்கள் தங்களுக்கு அனுகூலமாய் உபயோகப்படுத்திக்கொண்டு தங்களுடைய அக்கிரமங்களை நிலைக்க வைத்துக்கொள்ள எண்ணி அவர்களும் கூடவே கோவிந்தா போடுகிறார்கள்.

இம்மாதிரி ஒரு சட்டம் ஏற்படுத்துவதானது மனித உரிமையை அடக்குவதாகுமேயல்லாமல், மனித தர்மத்திற்கு நீதி செய்ததாகாது என்பதாக நாம் வலியுறுத்துவோம். மதம் என்று சொல்வது ஒரு மனிதனுடைய கொள்கை அல்லது அபிப்பிராயமாகுமே யல்லாமல், அது உலகத்திலுள்ள மனித கோடிகள் அத்தனை பேரும் கட்டுப்பட்டு நடந்துதான் ஆகவேண்டுமென்று கட்டாயப்படுத்தக் கூடியதல்ல. அப்படி எல்லோரையும் கட்டாயப் படுத்தப் பட்ட விஷயம் இந்த உலகத்தில் ஒன்றுகூட இல்லையென்பதே நமது அபிப்பி ராயம். உலக மனிதர்களில் 100 – க்கு 99 $^{3}/_{4}$ பேர்களால் ஒப்புக்கொள்ளுவ தாகச் சொல்லப்படும் கடவுளையும் அவரது தத்துவங்கள் என்பதையும் மறுப்ப தற்கே எல்லா மனிதனுக்கும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

கடவுள் செய்ததாகச் சொல்லுவதையும், சொன்னதாகச் சொல்லுவதை யும் பற்றிய தர்க்கங்களும் மறுப்புகளும் அறிவு உலகத்தில் தினமும் தாண்டவ மாடிக்கொண்டிருக்க உலகம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றை எதிர் பார்த்து அடையாமல் போனவர்களில் பலர் கடவுளையுங்கூட தூஷிப்பதை யும் உலகம் பார்த்துக்கொண்டும் அனுமதித்துக் கொண்டுந்தான் வருகிறது. கடவுளைப்பற்றியே இவ்வளவு அனுமதிக்கப்பட்டவர் கடவுள் பக்தர்கள் என்று சொல்லுபவர்களைப்பற்றி, கடவுளை அடைய வழிகாட்டிகள் என்று சொல்லுபவர்களைப் பற்றி கேட்கவும் வேண்டுமா?

எனவே இவ்விஷயங்கள் ஒருவனுடைய அபிப்பிராயமாகுமே யல்லாமல் அதுவே சத்தியமாய் விடாது. உலகத்தில் எதாவது சீர்திருத்தம் என்பது ஏற்பட வேண்டுமானால் ஒருவர் அபிப்பிராயத்தை ஒருவர் கண்டிப்பதும் மறுப்பதும், ஒருவர் கொள்கையை ஒருவர் கண்டிப்பதும்



RangaRakes

மறுப்பதும் அனுமதிக்கப் பட்டுத்தான் ஆகவேண்டும். அதற்குச் சட்டம் போட்டு தடுத்துவிட்டால் அது மனிதனின் அறிவு வளர்ச்சியை தடுத்ததா குமே யொழிய மற்றபடி அது எந்த விதமான நன்மையையும் செய்ததாக ஆகாது. அன்றியும் இம்மாதிரியாக ஒரு சட்டமியற்றுவது அநாகரீகமும் காட்டுமிராண்டித் தனமுமே யாகும். இப்பேர்பட்ட விஷயங்களில்தான் மக்களுக்கு விசாரணை செய்ய தாராளமாக இடம் கொடுக்கப்படவேண்டும். அதற்கு இடையூறாய் உள்ளவைகளை யெல்லாம் களைந்தெறியவேண்டும். ஒவ்வொரு காலத்திலுள்ள மக்கள் அறிவுநிலைக் கேற்றவாறு ஒவ்வொரு கொள்கைகள் பரப்பப்படுவதும், அது நிலைபெறுவதும், அதற்கு கோடிக் கணக்கான மக்கள் பின்பற்ற ஏற்படுவதும் சகஜமானதேயல்லாமல் அதில் ஒன்றும் அதிசயமில்லை. அதுபோலவே தற்காலம் உள்ள மக்கள் அறிவு நிலைக்குத் தக்கபடி மாறிக்கொண்டே வருவதும் இயற்கையே ஒழிய அதிலும் ஒன்றும் அதிசயமில்லை. எனவே மக்கள் வெறும் அரசியல் சமூக இயலில் மாத்திரம் முற்போக்கடைய வேண்டியது பாக்கியாயில்லை. அறிவிலும் ஆத்மார்த்த விஷயத்திலும் மனிதனுக்குள் இன்னமும் என்ன என்ன சக்தி இருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதிலும் முற்போக்கடையவேண்டிய விஷயங்கள் எவ்வளவோ பாக்கியிருக்கிறது. அவைகளை கவனிக்கும் போது இந்த அரசியலும் சமூக இயலும் வெகு சிறியதேயாகும். ஆனால் அப்பேர்ப்பட்ட முயற்சிகளுக்கு சமூக இயல் முதலியவைகள் அடிகோலிகள் என்பதை மாத்திரம் ஒப்புக்கொள்ளலாம். ஆதலால் இம்மாதிரி அறிவு வளர்ச்சிக்கு ஏதுவாகிய பிறப்புரிமையான சுதந்திர உணர்ச்சிகள் சட்டத்தின் மூலமாய் அழிக்கப்பட்டால் உலகம் காட்டுமிராண்டித் தனத்திற்கு ஆளாக நேரிடும் என்பதை அறிவாளிகளுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 21.08.1927**



tamilnavarasam.com

# பயப்படுகிறோம்

## மகாத்மா காந்தியின் தமிழ்நாட்டு விஜயம்

**இது ஒரு சங்கராச்சாரி விஜயமாகிவிடும் என்பதாகவே பயப் படுகிறோம்.**

மகாத்மா காந்தியவர்கள் உலகம் போற்றும் பெரியார் என்பதிலும், பரிசுத்தமான எண்ணமுடையவர் என்பதிலும், மக்களுக்கு நன்மை செய்வதில் உண்மையான ஆசை உள்ளவர் என்பதிலும், அதே கருத்துக்கொண்டு உழைக்கிறார் என்பதிலும் யாருக்கும் எவ்வித அபிப்பிராய பேதமுமிருக்க நியாயமில்லை. ஆனபோதிலும் அதோடுகூடவே மகாத்மா காந்தியவர்கள் நம் நாட்டுப் பார்ப்பனர்கள் கையில் சிக்கி இருப்பவர் என்பதையும், நம் நாட்டு விஷயங்களைப் பார்ப்பனர்கள் மூலம் அறிந்து பார்ப்பனக் கண்ணாடியினால் தான் பார்த்தறியக் கூடிய நிலைமையில் இருக்கிறார் என்பதையும், நாம் மறைப்பதில் பிரயோஜனமில்லை. சாதாரணமாக இந்துமுஸ்லீம் அபிப்பிராய பேதங்கள் விஷயமாக மகாத்மா காந்தியவர்கள் எவ்வளவு பேசினார், எவ்வளவு எழுதினார், எவ்வளவு பட்டினி கிடந்தார், எவ்வளவு வருத்தப்பட்டார் என்பதைப் பற்றி வாசகர்களுக்கு நாம் எடுத்துக்காட்டவேண்டியதே இல்லை. அப்பேர்ப்பட்ட மகாத்மா பிராமணர் பிராமணரல்லாதார் அபிப்பிராய பேதம் என்பதைப்பற்றி நாளிதுவரை என்ன பேசினார், என்ன எழுதினார், என்ன பட்டினி இருந்தார், என்ன வருத்தப்பட்டார் என்று கேள்ப்பதுடன், குருகுல கிளர்ச்சியான கவனிக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் வந்தபோதுங்கூட ஜாக்கிரதையாய் இரண்டுபேருக்கும் நல்ல பிள்ளை ஆவதுபோல் தப்பித்துக் கொண்டாரே யொழிய இப்படித்தான் நடக்கவேண்டும் என்று கண்டிப்பாய் சென்னாரா, எழுதினாரா, என்பதை யோசியுங்கள். குரு குல அக்கிரமத்தைப் பற்றி காங்கிரஸ் மகா சபையில் வெளிப்படையாய் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் எடுத்துச்சொன்ன காலத்தில் மகாத்மா கேட்டுக்கொண்டுதான் இருந்தார். தமிழ் நாட்டில் அதைப்பற்றித் தீர்மானங்களும், அதற்காக ஸ்ரீமான்கள் ராஜ கோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன் போன்ற பார்ப்பனத் தலைவர்கள் ராஜீனாமாக்களும், ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரி போன்ற வர்ணாசிரமிகளின் வாய்க் கொழுப்புகளும் மகாத்மா காந்திக்கு தெரியாமல் இருக்குமென்று யாரும் நம்பிவிடமுடியாது. இப்பேர்ப்பட்ட விஷயங்களுக்கு எதாவது ஒரு சிறு



சமாதானம் எழுதினாரா என்பதை யோசித்துப்பாருங்கள். இவைகள் நாட்டு நலனுக்கு அவ்வளவு முக்கியமானதல்ல என்று சொல்லிவிட முடியுமா?

ஒத்துழையாதாரரான ஸ்ரீமான் சி.ராஜகோபாலாச்சாரியார் திருப்பதி கோர்ட்டில் போய் வக்கீலாக வழக்காடி கேஸ் ஜயித்ததற்கு வாழ்த்துக் கூறினார். ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார், தமது தோப்பில் கள்ளிறக்க மரம் கொடுத்த ஸ்ரீமான் வெங்கிட்டரமண அய்யங்காருக்கு கிராமம் கிராமமாய் சுற்றி ஓட்டு வாங்கிக் கொடுத்ததை மிக நல்ல காரியமென்று ஆதரித்தார். "சுயராஜ்யக்கக்ஷியார்கள் சட்டசபையில் கள்ளை நிறுத்துவதாக ஒப்புக் கொண்டது மிகவும் நல்லது, ஆதலால் அவர்களுக்கு ஓட்டுக்கொடுங்கள்" என்கிற மாதிரியாகவும் எழுதினார். இதன்மூலம் சட்டசபையினால் கள்ளை நிருத்தமுடியும் என்று மகாத்மா நம்புகிறார் என்று ஜனங்கள் நினைக்கும் படியும் நடந்து கொண்டார். ஒரு கடவுள், தனது பக்தனுக்காக- என்னென்ன காரியத்தில்- கடவுள் தன்மைக்கு விறோதமாகக்கூட நடந்ததாக நமது புராணங்களில் சொல்லப்படுகிறதோ அவைகளுக்கு மேலாகவெல்லாம் நமது நாட்டுப்பார்ப்பன பக்தர்களுக்காக மகாத்மா அவர்கள் நடந்து வந்தார். அவ்வளவு தூரம் பிரயத்தினம் எடுத்துக்கொண்ட மகாத்மாவுக்கு ஏன் நமது நாட்டுப்பார்ப்பனர் பார்ப்பனரல்லார் அபிப்பிராய பேதத்தைப்பற்றி ஒரு வார்த்தையாவது பேச எழுதமுடியாமல் போய்விட்டது என்று யோசிக் கும்போது நமக்கு மகாத்மாவைப்பற்றி குழப்பம் ஏற்படுகிறதா இல்லையா? தென்னாட்டிலிருக்கும் இவ்வபிப்பிராயபேதம் மகாத்மாவுக்கு தெரியாது என்று சொல்வதானால் மகாத்மாவைச் சுற்றியிருக்கும் பார்ப்பன பக்தர்கள் அவ்வளவு தூரம் மகாத்மாவை காது கண்ணில்லாமல் செய்து விடுகிறார்கள். என்றாவது ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறதா இல்லையா ? இங்கு நடக்கிற இவ்வளவு அபிப்பிராய பேதங்களையும் கொடுமைகளையும் பற்றி ஒரு சிறிதும் கவலைப்படுவதற்கு விடாமல் அவரைக்கொண்டு கதரின் பேரால் பார்ப்பன பிரசாரத்திற்கு பணம் சம்பாதிக்க நமது பார்ப்பனர்கள் நமது நாட்டிற்கு மகாத்மாவை கூடக் கொண்டு வருகிறார்கள்.

ஆனால் கதர் பண்டு என்பதாக அதற்குப் பெயர் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். எப்படி "மதச் சங்கராச்சாரியார்களை"மோக்ஷ பண்டுக்காக நமது வைதீகப்பார்ப்பனர்கள் கூட்டிக்கொண்டு வருகிறார்களோ அதுபோலவே மகாத்மாவை நமது அரசியல் பார்ப்பனர்கள் அரசியல் சங்கராச்சாரியாக நமது நாட்டுக்கு கூட்டிக்கொண்டு வருகிறார்கள். இங்கு வரும் வேலையைப்பற்றி மகாத்மாவைக் கொண்டே " நான் பணத்திற்காக வருகிறேனே அல்லாமல் வேறு காரியத்திற்காக அல்ல" என்பதாக வெளிப்படையாகவும் சொல்லச் செய்து விட்டார்கள். சங்கராச்சாரியாருக்கு மோட்சத்தின் பேரால் கொடுக்கும் பணம் எப்படி பார்ப்பனர்களுக்கே போய்ச்சேரவும் நம்மை இழிவுபடுத்தவும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறதோ அதுபோலவே மகாத்மாவாகிய அரசியல் சங்கராச்சாரியார்களுக்கும் கதர் பேரால் கொடுக்கப்படும் பணம்



RangaRakes tamilnavarasam.com

கண்டிப்பாய் பார்ப்பனர்களுக்கும் நமது இழிவுக்குமே போய்ச்சேர உபயோகிக்கப்படப் போகிறது என்பதே நமது அபிப்பிராயம். என்னவெனில், கதர் இலாக்காவில் நமக்கு சிறிது அனுபோகம் உண்டு. கதர் ஸ்தாபனத்தில் நமக்கும் சிறிது தகவலுண்டு. இப்பொழுது வசூல் செய்யப்படும் பணம் பூராவும் அந்த ஸ்தாபனத்தை நடத்துவதற்குத்தானே அல்லாமல் கதர் வியாபாரத்திற்கு அல்ல. அந்த ஸ்தாபனம் பெரும்பாலும் இப்போது பார்ப்பன அக்கிரகாரமாகவே இருந்து வருகிறது. அதன் நிர்வாகத்தில் இரண்டொரு பார்ப்பனரல்லாதாரும் தலைமைப் பதவியில் இருக்கிறார்கள் என்று பார்ப்பனர்கள் சமாதானம் சொல்லக்கூடுமானாலும், இது ஏறக்குறைய, ஸ்ரீமான்கள் சுப்பராயன், ஆரோக்கியசாமி முதலியார் ஆகியவர்கள் பார்க்கும் மந்திரிபதவி பார்ப்பனரல்லாதார் பதவி என்று சொல்லுவதுபோல் தானே ஒழிய வேறு அதிக வித்தியாசமில்லை. சாதாரணமாக திருப்பூர் வஸ்திராலய நிர்வாகத்தை எடுத்துக்கொன்டால் அதில் கதர் வேலையைவிட வர்ணாஸ்ரம பிரசாரமே தாண்டவமாடுவதை பார்க்கலாம். வாஸ்தவத்தில் மகாத்மாவின் நோக்கத்தை அனுசரித்த அல்லது மக்கள் நோக்கத்தை அனுசரித்த பொது ஸ்தாபனமாக கதர் ஸ்தாபனம் இருக்குமானால் கண்டிப்பாய் அவைகளில் வருணாஸ்ரமிகளுக்கு இடமிருக்கவே நியாயமிருக்காது. கதரும், தீண்டாமை விலக்கும், மது விலக்கும் ஒன்றுக்கொன்று சகோதரக்கொள்கையுடையதே ஒழிய வேறுபட்டதல்ல. கதரில் நம்பிக்கையில்லாதவனுக்கு கதர் ஸ்தாபனத்தில் வேலை கொடுக்கக்கூடாது என்பது எவ்வளவு நியாயமானதோ, குடிகாரனுக்கு கதர் ஸ்டோரில் வேலை கொடுக்கக்கூடாது என்பது எவ்வளவு நியாயமானதோ, அதுபோலவே வர்ணாசிரமம் பிறவியில் உயர்வு தாழ்வு உண்டு என்று நினைத்துக்கொண்டிருப்பவனுக்கு கதர் இலாக்காவில் வேலை கொடுக்கக் கூடாது என்பதே நமது அபிப்பிராயம். குடிகாரனையும் கதரில் நம்பிக்கை இல்லாதவனையும் கதர் இலாக்காவில் வேலைக்கு வைப்பதால் கூட அவ்வளவு மோசம் வந்து விடாது ஆனால் ஒரு வர்ணாசிரமக்காரனை ஒரு இலாக்காவுக்கு நிர்வாகத் தலைவனாய் நேமிப்பதில் யெல்லாவற்றையும் விட அதிகமான கெடுதி இருக்கிறதென்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில் பிறவியில் தன்னை உயர்ந்தவ னென்று நினைத்துக்கொண்டு இருக்கிறவன், பிறவியில் வித்யாசமில்லை என்று நினைத்துக் கொண்டிருப்பவனிடம் எப்படி அன்னியோன்னியமாயும் நல்ல எண்ணத்துடனும் சமத்துவமாய் இருக்க முடியும் என்பது நமது கேள்வி.

## கொடுமை

திருப்பூர் கதர் வஸ்திராலயம் ஒரு கண்டிப்பான வருணாசிரம பார்ப்பனர் தலைமையில் இருப்பதால் இதுவரையில் அதற்கு எதிர் அபிப்பிராய முள்ளவர்கள் எல்லாம் அதாவது சுமார் 8 பேருக்கு மேலாக வேலையிலிருந்து தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 3 பேர்கள் தாழ்ந்த வகுப்பார் என்பவர்கள். மற்றவர்கள் சமபந்தி போஜனத்தில் சம்மந்தமுடையவர்களும் உயர்வு தாழ்வை ஒப்புக்கொள்ளாதவர்களுமே யாவார்கள். இந்த கொடுமையை மற்ற பார்ப்பனரல்லாத நிர்வாகிகள் அனுமதித்துக் கொண்டுதான் வருகிறார்கள். குற்றம் கண்டு நீக்குவதைப்பற்றி யாருக்கும் ஆக்ஷேபனை இருக்காது. ஆனால் அக்குற்றம் அங்குள்ள யாரும் செய்யாதபடி திட்டப்படுத்திய குற்றமாக இருக்கவேண்டும். ஒரு கூட்டத்தார் செய்தால் – அதுவும் இரட்டிப்பாய்ச் செய்தால் – குற்றமாகக் கருதக்கூடாததை மற்றொரு கூட்டத்தார் செய்தால் ஒரே அடியாய் வேலையில் இருந்து நீக்கி விடுவது என்பது அக்கிரமமா இல்லையா என்றுதான் கேட்கிறோம். குறிப்பாக “தீண்டாதவர்கள்” விஷயத்தில் இவ்வளவு கொடுமை செய்யப்படுவது யோக்கியமானதா? கேள்விமுறை இல்லையா? இதற்காக நமது பணம் உபயோகப் படலாமா? என்பது தான் நமது முக்கிய கேள்வி. தவிரவும் தமிழ் நாட்டு கதர் ஸ்தாபன தற்கால நிர்வாகம், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் அதுவும் அளவுக்குத் தக்கபடி வேண்டும் என்கிறவர் கைவசத்திலிருப்பதாக பெயர் செய்து கொண்டு இம்மாதிரி கொடுமைகள் நடப்பதானால் யெப்படி நாம் அனுமதிக்க முடியும்? ஒட்டு மொத்தத்தில் உத்தியோகங்கள் ஏறக்குறைய 100 – க்கு 80 பங்கு பார்ப்பனர்களுக்கே கொடுக்கப்பட்டு வருகிறது. பார்ப்பன பிரசாரமே முக்கியமாய் கருதப்படுகிறது. இந்தப் பணம் பார்ப்பனர்கள் சாப்பிடுகிறார்களே என்பதில் நமக்கு பெரிய கவலை இல்லையானாலும் இந்தப் பணம் பார்ப்பன பிரசாரத்திற்கு, வருணாச்சிரமத்திற்கு ஆதரவு கொடுப் பதற்கு, பார்ப்பனரல்லாதாருக்கு நேர் விரோதமாய் எதிர்ப்பிரசாரம் செய்வதற்கு உபயோகப்படுகிறது என்பதை தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. “மக்கள் மக்களை தாழ்த்துவதைப் பற்றி, இழிவுபடுத்துவதைப் பற்றி நமக்கு கவலை இல்லை, கதர்தான் பிரதானம்” என்று மகாத்மா சொல்லுவாரானால், மக்களுக்கு மக்கள் தாழ்த்தப் படுவதை ஒழிப்பது கதரைவிட முக்கியமானது என்பது நமது கவலை என்பதை நாம் வலியுறுத்தித்தான் ஆக வேண்டியிருக்கிறது.

மகாத்மாவுக்கு பணம் கொடுக்கும் விஷயத்தில் கண்டிப்பாய் நமக்கு ஒரு நிபந்தனை இருக்கவேண்டும். “ இந்தப் பணம் பார்ப்பன ஆதிக்கத்துக்கு போகாது, இது பர்ப்பனரல்லாதாரது பங்கை பாதிக்கப்படவும் உபயோகப் படுத்தப்படாது, இனி வருனாச்சிரம காரரிடம் இதன் அதிகாரம் கொடுக்கப் படாது” என்கிற உறுதி இருக்கவேண்டும். அந்த உறுதி இல்லாமல் கொடுக்கப் படும் பணம் சங்கராச்சாரியாருக்கு கொடுக்கும் பணம் போல் மூடநம்பிக்கைக் காரரால் கொடுக்கப்படும் பணமாக போகுமேயல்லாமல் ஒருக்காலும் அது ஒரு நாணயமான பணமாகாது என்றே சொல்லுவோம் – அன்றியும், மத சங்கராச்சாரிக்கு எப்படி ஒரு பார்ப்பனர் “ சர்வாதிகாரி” யாய் இருந்து “லோக குருவை” ஆட்டுகிறாரோ அதுபோலவேதான் மகாத்மாவுக்கும் ஸ்ரீமான் C. ராஜகோபாலாச்சாரியார் சர்வாதிகாரியாய் இருந்துகொண்டு மகாத்மாவை ஆட்டுகிறார். சர்வாதிகாரி சொன்னபடிதான் மகாத்மா ஆடி ஆகவேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

தமிழ்நாட்டில் ராமசாமி நாயக்கன் யோக்கியனா அயோக்கியனா என்று மகாத்மாவுக்கு தெரியவேண்டுமானால் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார்தான் நற்சாக்ஷிப்பத்திர மளிக்கவேண்டும். " குருகுல ஆச்சாரியார்" ஸ்ரீமான் மகாதேவய்யர் யோக்கியரா அயோக்கியரா என்று தெரியவேண்டுமானால் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார்தான் நற்சாக்ஷிப் பத்திரம் கொடுத்தாக வேண்டும். ஸ்ரீமான் மகாதேவய்யர் மகாத்மாவிடம் பக்கத்திலேயே இருந்து கொண்டு சதா பேசிக் கொண்டிருக்கிறாராம். பார்ப்பதற்கு நல்லவராகவே மகாத்மாவுக்குக் காணப்படுகிறாராம். எனவே மகாத்மாவுக்கு யோக்கியன் அயோக்கியனைக் கண்டுபிடிக்க எவ்வளவு சவுகரியமிருக்கிறது என்பது இதனாலேயே நமக்கு விளங்கவில்லையா? இவ்வளவும் மகாத்மாவைக் குற்றம் சொல்லுவதற்கு எழுதினதல்ல. ஆனால் மகாத்மாவும் எவ்வளவு தூரம் தொண்டருக்குள் அடக்கமாக இருக்கவேண்டியிருக்கிறது என்பதைக் காட்டவும், நம்மைப்பற்றியோ நமது நாட்டைப்பற்றியோ நமது சுயமரியாதையைப் பற்றியோ மகாத்மாவுக்கு உண்மை தெரிய ஏதாவது சந்தர்ப்பமிருக்கிறதா என்பதை பொது மக்களுக்கு தெரிவிக்கவும் இதை எழுதுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 21.08.1927**



# திருப்பூர் மகாநாடு

திருப்பூரில் மகாநாடு கூடிக்கலைந்தாகி விட்டது. தீர்மானங்கள் கவர்னருக்கு அனுப்பியாய் விட்டது. மற்ற விஷயங்கள் எப்படிப் போனாலும் இதனால் கவர்னர் தயவு இரண்டொரு ஆசாமிகளுக்கு கிடைத்தாய் விட்டது. அதன் மூலம் சிலருக்கு உத்தியோகமும் சிலருக்குப் பட்டமும் வந்துவிடப் போகிறது. இதைப் பொறுத்தவரையில் உறுதி தான்.

மற்றபடி உபசரணைத் தலைவர் மகாநாட்டுத் தலைவர் பிரசங்கங்கள் ஸ்ரீமான் முத்துரங்க முதலியார், ஓ.கந்தசாமிசெட்டியார் முதலிய கனவான்களின் பிரசங்கங்களைப்போல் என்றே சொல்லவேண்டும். பெரும்பாலும் சர்க்காரையும் மந்திரிகளையும் புகழ்ந்து பார்ப்பனரல்லாதார் கட்சியை ஆசை தீர எழுதிக்கொடுத்தபடி வைததுதான் முக்கிய அம்சமாகும்.

மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான் சர். முத்தையய செட்டியாரைப் பற்றி நாம் விசேஷமாக சொல்ல வேண்டியதில்லை. அவரது கொள்கையைப் பற்றியும் சொல்ல வேண்டியதில்லை. சுருக்கமாக சொல்வதானால் பச்சயப்ப முதலியார் தர்ம ஸ்தாபன தர்மகர்த்தாக்களில் இவர் ஒருவராயிருப்பதில் அப் பள்ளிக்கூடத்திற்கு ஒடுக்கப்பட்ட வகுப்புப் பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று கட்சி கட்டிக் கொண்டிருப்பவர். ஆனால் ஒடுக்கப்பட்டவர்கள் உபாத்தியாயர்களாக இருப்பதில் ஆக்ஷேபணை இல்லை என்பவர். ஆகவே இவரது கொள்கையும் பகுத்தறிவும் பொது ஜனங்களே தீர்மானித்துக் கொள்ளலாம். இம்மகாநாட்டு சூத்திரதாரராய் இருந்த மற்றொரு செட்டியாரான ஸ்ரீமான் ராமலிங்கம் செட்டியார் அவர்களோ சொல்ல வேண்டியதில்லை.

அவர் அரசியல் பிறப்பைப் பற்றி சிறுகதை எழுதலாம். 1915ல் பம்பாய் லிபரல் லீக்கில் ஒரு மெம்பராய்ச் சேர்ந்து சென்னை மகாணத்திற்கு லிபரல் லீக் நிர்மாணியாயிருந்தவர். பிறகு அடுத்த வருஷம் ஜஸ்டிஸ் கட்சியில் முக்கியஸ்தரில் ஒருவராய் இருந்தவர். அடுத்தாப் போல் தமக்கு மந்திரி பதவி கிடைக்காததால் யுனைட்டெட் நேஷனலிஸ்ட்டு கட்சி உண்டாக்கி தலைவரானவர். அதோடு மந்திரிகள் பேரில் நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டு வந்தவர். அடுத்தாப் போல் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்தவர்.



RangaRakes tamilnavarasam.com

அதற்கடுத்தாப் போல் சுயராஜ்யக்கட்சி மெம்பர்களுடன் "சட்ட சபையில் ஒரு பிரயோஜனமும் இல்லை நம்பிக்கையுமில்லை வெளியில் போய் சர்க்காருக்கு புத்தி கற்பிக்கிறேன்" என்று சொல்லி வெளியில் வந்தவர்.

வெளியில் வந்து மறுபடியும் சுயராஜ்யக் கட்சி சார்பாய் சட்டசபைக்கு போக தெரிந்தெடுத்து சென்னை பார்ப்பனர்கள் நிபந்தனைப்படி 500 ரூபாயும் காணிக்கை கொடுத்தவர். மறுபடியும் 15 நாளில் "சுயராஜ்யக்கட்சி தலைவர் உத்தியோகம் கிடைக்கும்படி செய்கிறேன்" என்று சொன்னதை நம்பி நான் காங்கிரஸில் சேர்ந்தேன், சுயராஜ்யக்கட்சியில் சேர்ந்தேன்; சட்டசபை விட்டு வெளியிலும் வந்தேன்; 500 ரூபாய் காணிக்கையும் கொடுத்தேன். இப்போது பார்த்தால் அதில் உத்தியோகம் கிடைக்காது போல் தோன்றுகிறது. ஆத லால் நான் சுயராஜ்யக் கட்சி முதலியவைகளில் ராஜினாமா கொடுக்கிறேன்" என்று ராஜினாமா கொடுத்தவர். மறுபடி தானாக சட்டசபைக்கு நின்று எவ் வளவோ பிரயத்தனப்பட்டும் ஸ்ரீமான் வெள்ளியங்கிரிக் கவுண்டர் பட்டக்காரர் அனேக பார்ப்பனர்கள் இராமசாமி நாயக்கர் முதலியோர் பாடுபட்டும் தோற்றுப் போனார்.

"கதரில் கொஞ்சமும் நம்பிக்கையில்லை. கதரை ஒரு நாளும் ஆதரிக்க முடியாது" என்று கண்டிப்பாய் சொல்லிவிட்டார். தீண்டாமை விலக்கைப் பற்றி சொல்லவே வேண்டியதில்லை. பார்ப்பனரைத்தான் வீட்டில் சமையல் காரராய் வைத்திருப்பவர். மதுவிலக்கிலோ ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங் காருக்கு இளைத்தவரல்ல. மந்திரிக் கட்சி 3 மந்திரிகளையும் நடத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு தன் தலையில் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டி ருப்பவர்.

இவ்வளவும் அல்லாமல் திருப்பூர் மகாநாட்டில் மதுவிலக்கு முதலிய தீர்மானங்களையும் எழுதிக்கொடுத்து நிறைவேற்றி இருக்கிறவர். இம் மாதிரியாக இருப்பதில் அரசாங்கத்தாராவது பொது ஜனங்களாவது எப்படி மதிக்கக் கூடும். இவர்கள் போன்றார்கள் தீர்மானத்திற்கு தேசத்தில் எவ்வித யோக்கியதை இருக்கும். இவைகளை யோசியாமல் பார்ப்பனரல்லாதார் மகா நாடு என்பதாக மாகாணத்திற்கே பொதுவாய் கூட்டப்பட்டது என்பதையும் அது ஒரு சட்டம், விதி, கட்டு திட்டத்திற்கு அடங்கி நடந்து வருகிறது என்ப தையும், அதற்கு நாட்டில் உள்ள செல்வாக்கையும் அதனால் பார்ப்பனரல் லாதார் சமூகத்திற்கு எவ்வளவு மரியாதை உண்டாயிருக்கிறது என்பதையும் ஒரு சிறிதும் கவனியாது எதிர் மகாநாடு என்பதாக கூட்டுவதென்றால் அம்மாதிரியான குணத்திற்கு என்ன பெயரிடுகிறது.

கோட்டை மாரியம்மன் கோவிலில் ஒரு எருமைக்கிடா வெட்டுவ தானால் எவ்வளவோ பேர் வேடிக்கை பார்க்க வந்துவிடுகிறார்கள். அது போல் கூட்டம் இருந்ததாலேயே பிரதிநிதித்துவ மகாநாடு ஆகிவிடுமா?



RangaRakes

அப்படியாவது எத்தனை பிரதிநிதிகள் வந்தார்கள்? என்ன கொள்கையை ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்களா? பிரதிநிதிகளுக்கு என்ன குறிப்பு இருந்தது என்பவைகளை மற்றவர்களை கவனிக்க மாட்டார்களா என்கின்ற எண்ணமின்றி இந்த இருபதாவது நூற்றாண்டில் கொம்பு தம்பட்டம் தட்டி கூட்டம் சேர்த்து அதற்கு மகாநாடு என்று பெயர் வைத்து தீர்மானங்கள் தீர்மானிப்பது என்ற வேஷம் போட்டு அவன் பல ஜாதி, இவன் இடை வெட்டு, அவன் முட்டாள், இவன் மடையன் என்று மேடையில் பேசி நிறை வேற்றிய தீர்மானத்தை பொது ஜனங்கள் தீர்மானம் என்றால் நம்புவதற்கு ஆள் எங்கே என்று தான் கேள்க்கிறோம்? இந்த வார்த்தைகளைக் கொண்ட சபையை மக்கள் எப்படிப்பட்ட சபையென்று நினைப்பார்கள் என்கிற ஞானமே இல்லாமல் காரியங்கள் நடைபெற்று விட்டதனாலும் இதனால் ஸ்ரீமான் செட்டியாருக்கு உத்தியோகம் மற்றவர்களுக்கு "பெப்பெப்பே" அல்லாமல் மற்றபடி யார் என்ன பயன் அடையக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை. பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கும் இதனால் ஒன்றும் முழுகிப் போகவில்லை யானாலும் நமது எதிரிகளான சர்க்காரும் பார்ப்பனர் களும் நம்மைப் பார்த்து சிரிக்கவும் அதாவது பார்ப்பனரல்லாதார் கூட்டத்தில் எதற்கு வேண்டுமானாலும் ஆள்கள் கிடைக்கும், என்ன வேண்டுமானாலும் அவர்களைக் கொண்டு செய்துகொள்ளலாம், அதற்கு சுயமரியாதை இல்லை யென்று பேசிக் கொள்ளவும் இம்மாதிரி கூட்டம் கோயமுத்தூரில் இருக்கிறது என்று மற்ற ஜில்லாக்காரர் கேவலமாய் நினைக்கவுமல்லாமல் வேறொன்றும் முழுகிப்போய்விடவில்லை. மற்றபடி இத்தீர்மானத்தினால் மந்திரிகளுக்கு பதவி ஆயுசு வளரப் போவதும் இல்லை, குறையப்போவதும் இல்லை. ஜில்லாவுக்கும் ஜில்லாவின் பெரிய சமூகங்களுக்கும் கெட்ட பெயர் தான் மிச்சம்

திருப்பூர் மகாநாட்டைப் பற்றி முழு விபரங்களும் போட போதிய சாவகாசம் இல்லை. ஆனாலும் சவுகரியப்பட்டால் மறு தடவையும் இதைப் பற்றி எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 21.08.1927**



tamilnavarasam.com

# பார்ப்பனர் அக்கிரமம்

பார்ப்பனர்கள் உத்தியோகத்திலும் சட்ட சபைகளிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும், பெரிய ஜமீன்களிலும், குடித்தனங்களிலும், இந்திய அரசாங்கங்களிலும் போய் அமர்ந்து கொண்டு இருப்பதின் முக்கிய நோக்கங்கள் இன்னவை என்பது நமது மக்களுக்கு சரிவர விளங்குவதேயில்லை. ஏதோ அவர்கள் படித்தார்கள். அதனால் உத்தியோகம் பார்க்கிறார்கள். யார் உத்தியோகம் பார்த்தால் தான் என்ன, யார் சட்டசபைக்கு போனால் தான் என்ன, யார் கவுன்சிலர் ஆனால் தான் என்ன என்பதாக தர்ம நியாயம் பேசி விட்டு பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளைகளாக வாழ்ந்தால் போதும் என்று நினைத்து விடுகிறார்கள். இந்த ஏமாளித்தனத்தைப் பார்த்தே பார்ப்பனர்களும் நம்மவர்களை சுலபமாய் ஏமாற்றி பதவி பெற்று நம்மையே அழிக்கப் பாடுபடுகின்றார்கள். எந்தப் பதவியில் பார்ப்பனர் இருந்தாலும் அதன் மூலம் நமது கழுத்தை அறுக்க அதை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பதை நமது ஜனங்கள் உணர்வதே இல்லை. அல்லாமலும் நம்மில் அநேகர் கொஞ்சமாவது சகோதர அபிமானமின்றி மானம் வெட்கம் எல்லாவற்றையும் துறந்து பார்ப்பனர்களுக்கு அடிமைகளாகி பார்ப்பனர்கள் நமக்குச் செய்யும் கொடுமைக்கும் கையாயுதமாக இருந்து நமக்கு கெடுதி செய்தும் வாழ்கிறார்கள்.

நமது நிலை, நமது நாட்டு பார்ப்பனரல்லாத மக்கள் நிலை மிகு மிகு இழிவான தன்மையில் இருக்கிறதற்கு இதுவே போதுமான உதாரணமாகும். நிற்க, சென்னை கார்ப்பரேஷனில் சில காலமாக பார்ப்பனரல்லாதார் கவுன்சிலராகவும் அக்கிராசனராகவும் கமீஷனராகவும் இருந்து பார்ப்பனரல்லாத மக்களுக்கு நன்மை புரிந்து வருவதைக் கண்ட பார்ப்பனர்கள் இவற்றை ஒழிக்க வேண்டும் என்கிற எண்ணத்துடன் தேசத்தின் பேரால் காங்கிரசின் பேரால், சுயராஜ்யத்தின் பேரால் ஆள்களிலும் சில அயோக்கியர்களையும் பைத்தியக்காரர்களையும் சேர்த்துக் கொண்டு, நமது மக்களுக்கும் நமது இயக்கத்துக்கும் விரோதமாக பிரசாரங்கள் செய்து மக்களை ஏமாற்றி ஓட்டுப் பெற்று கார்ப்பரேஷனுக்கு வந்து அவர்கள் செய்த அக்கிரமங்களும் அயோக்கியத்தனங்களும் கொஞ்சமல்ல வென்பது கவனித்து வந்தவர்களுக்கு விளங்காமல் போகாது. ஸ்ரீமான் தணிகாசலம் செட்டியார் தலைவராயிருந்தபோது அவர் ஒரு பார்ப்பனரல்லாதாராகவும், பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் கவலை செலுத்துபவராகவும் இருந்ததற்காக அவருக்கு பார்ப்பனர்கள் எவ்வளவு கொடுமைகள் செய்தார்கள் என்பதும், அதற்கடுத்தாற்போல் ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியார் பாப்பன சிஷ்யராகவும் பார்ப்பனர்கள் "போடு கரணம்" என்றால் "இதோ போடுகிறேன் எண்ணிக் கொள்" என்று எவ்வளவோ பொய்யும் புரட்டும் பேசி வந்தும் கொஞ்சமும் சுயமரியாதை இல்லாமல் நடந்து வந்ததால் அவரை ஆதரித்ததும், அதற்கு பிறகு ஸ்ரீமான் ஜி. நாராயணசாமி செட்டியார் பிரசிடெண்டாய் வந்தவுடன் அவர் பார்ப்பனர்கள் சொற்படி கேள்க்காததால் அவர் மீது பலரை ஏவிவிட்டு கார்ப்பரேஷன் யோக்கியதையையே கெடுத்து கள்ளுக்கடை, சாராயக் கடைகள் போல் சதா சர்வ கால கூச்சலும் குழப்பமுமாகவே இருக்கும்படி நடந்து வந்ததும் யாவருக்கும் தெரிந்ததுதான். தவிர சென்னை கார்ப்பரேஷனில் கமிஷனராயிருக்கும் ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணா அவர்கள் பார்ப்பனரல்லாதாராய் இருக்கிறார் என்கிற காரணத்திற்காக அவரை இந்த பார்ப்பனர்கள் எவ்வளவு கொடுமை செய்கிறார்கள் என்பது கவனித்து வருபவர்களுக்கு விளங்கியிருக்கும். ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணா அவர்கள் ஒரு ஜில்லா கலக்டர் உத்தியோகஸ்தர், அவர் இன்ஸ்பெக்டர் ஆப் ரிஜிஸ்டரார் என்கிற பத்திரப் பதிவு இலாக்காவுக்கு இந்த மாகாணத்திற்கே தலைவராக இருந்தவர். அவருடைய யோக்கியப் பொறுப்பைப் பற்றியாவது நாணய குறைவைப் பற்றியாவது இதுவரை அவருடைய பார்ப்பன எதிரிகள் ஒரு வார்த்தையாவது சொன்னது கிடையாது. அவர் கார்ப்பரேஷனுக்கு கமீஷனரானபிறகு வருஷத்தில் லக்ஷக்கணக்கான ரூபாய் சென்னை முனிசிபாலிட்டிக்கு லாபம் வருகிறது. ஆபீஸ் சிப்பந்திகளின் அக்கிரமங்கள் எல்லாம் ஒழிக்கப்பட்டு யோக்கியமாய் நடைபெற்று வருகிறது. லஞ்சம் வாங்கின உத்தியோகஸ்தர்களை மிக தயவாகவும் நிதானமாகவுமே தண்டித்து வருவார். அப்படியிருந்தும் ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணா மிகவும் கடுமையாய் தண்டிக்கிறார் என்றும் பார்ப்பனரைக் கொடுமைப்படுத்துகிறார் என்றும் அவர் பேரில் பார்ப்பனர்கள் குற்றம் சுமத்தினதின் பேரில் சில குற்றங்களை கோர்ட்டுக்கு இழுத்துவிட்டதில் மேஜிஸ்ரேட் கோர்ட்டில் மாதக்கணக்காய் கடுங்காவல் தண்டனை தண்டிக்கப்பட்டுவிட்டார்கள். இவ்வளவு கிரமமாய் வேலை பார்த்து வருபவரை அவமானப்படுத்துவதும் அற்பத்தனமாய் பேசுவதும் வேண்டுமென்றே குறைவுபடுத்துவதுமாய் குறும்பு செய்து வருகிறார்கள். இந்த விஷயம் வரவர முத்திப் போய்விட்டதால் பார்ப்பனர்களின் வால் பிடித்து திரிந்து கொண்டிருந்த சில பார்ப்பனரல்லாதார்களுக்கும் கூட இந்த கொடுமை சகிக்காமல் இப்போது புத்தி வந்து அவர்களே ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணா அவர்கள் விஷயத்தில் தாராளமாய் தங்களது அபிப்பிராயங்களை வெளியிட்டு விட்டார்கள். சுத்தமான பார்ப்பனரல்லாத ரத்தம் கடுகளவு எந்த பார்ப்பனரல்லாதார் சரீரத்தில் ஓடுவதாயிருந்தாலும் அவர்களுக்கு எப்போதாவது பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி வந்தே தீரும் என்பதற்கு இது ஒரு பெரிய உதாரணம் ஆகும். பார்ப்பனர்களின் கக்ஷியைச் சேர்ந்த ஸ்ரீமான்கள்



RangaRakes tamilnavarasam.com

சிங்காரவேலு செட்டியாரும் கெததே ரங்கய்ய நாயுடுவும் ஜி.வெங்கிட்ட நாராயண விஷயமாய் பார்ப்பனர்களின் கூற்றைப்பற்றி பேசியிருக்கும் விஷயமாவது நான் காங்கிரஸ் கக்ஷியைச் சேர்ந்தவன் ஆனபோதும் என் கடிதங்களுக்கு கமிஷனர் ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணா அவர்கள் 6 மணி நேரத்திற்குள்ளாகவே பதில் எழுதிவிட்டு அப்போதைக்கப்போது நான் எழுதும் குறைகளையும் நிவர்த்தி செய்து எனது வேண்டுகோளை நிறை வேற்றியிருக்கிறார். அவர் யாரிடத்திலும் பக்ஷபாதமாக நடந்தது கிடையாது.

ஸ்ரீமான் கெத்தா ரங்கயநாயுடு பேசியதாவது "நான் இச்சபைக்கு மெம்பராக வந்ததிலிருந்து எவ்விஷயத்தை குறித்தறிவித்தாலும் கமிஷனர் உடனே அதைக் கவனித்து நிறைவேற்றி வருகிறார். அவ்வாறிருக்க அவர் பக்ஷபாதமாக நடந்து வருவதாய்ச் சொல்வது முற்றும் தவறு" என்பதாக பேசியிருக்கிறார்கள்.

மற்ற ஸ்தல ஸ்தாபனங்களிலுள்ள நிர்வாகத் தலைவர்கள் இந்த இரட்டை ஆக்ஷியில் அதிலும் தற்கால சுப்பராய மந்திரி ஆக்ஷியில் நடக்கும் அக்கிரமங்களுக்கு கணக்கு வழக்கு இல்லை. அவைகளைப் பற்றி ஒரு பார்ப் பனராவது கவனிப்பது இல்லை. பார்ப்பனர்களுக்கு அடிமையாய் இருந்து விட்டால் அந்த நிர்வாகஸ்தர் என்ன அக்கிரமம் செய்தாலும் கேள்வி கிடையாது. பார்ப்பனருக்கு அடிமையாகாவிட்டால் அவர் எப்படிப்பட்ட வராயிருந்தாலும் அவர்களை ஒழிக்க எவ்வித இழிதொழிலையும் செய்கிறார் கள் என்பதற்கு இதை ஒரு உதாரணமாகவே எழுதினோம்.

**குடி அரசு - கட்டுரை - 21.08.1927**



RangaRakes

# தற்கால நிலை

## அரசியலும் சமூகஇயலும்

கனவான்களே!

அரசியலும், சமூக இயலும் என்பது பற்றி எனது அபிப்பிராயங்களை பத்திரிகை மூலம் தெரிந்திருப்பீர்கள். அதாவது, அரசியல்வேறு சமூக இயல் வேறு என்பதாக இரண்டுமே தனித்தனி இயல்கள் கிடையாது. இவ்விரண்டும் வேறு வேறாகத் தனிப்படுத்தக்கூடிய விஷயமல்ல. அரசியல் என்றாலும் சமூக இயல் என்றாலும் இரண்டும் ஒரு நாட்டின் ஒரு சமூகத்தின் முன்னேற் றத்திற்குத்தானே யல்லாமல் வேறு காரியத்திற்கல்ல. எனவே ஒரு நாட்டின் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு என்று வைத்துக்கொண்டு அரசியல் என்றால் அதில் சமூக முன்னேற்றம் இல்லாமலிருக்க முடியாது. அது போலவே சமூக இயல் என்றாலும் அரசியல் முன்னேற்றம் அதில் இல்லாமலிருக்க முடியாது. இரண்டும் தனித்தனி பிரிக்கப்படாத தன்மை யுடையது. நமது நாட்டில் இப்போது இவ்விரண்டும் வேறு வேறாக காணப்படுவதின் காரணம் உண்மை யான அரசியல் தொண்டும் உண்மையான சமூக இயல் தொண்டும் இல்லாமல் வெறும் வேஷத்தில் பாமர மக்களை ஏய்த்து, சிலர் தங்கள் சுயநலத்தை வளர்க்கவும் பாடுபடுவதினால், அதாவது நம் நாட்டு பெரும்பாலும் படித்தவர் கள் என்போர்களான பார்ப்பனர்கள் ஆங்கிலம் படித்துவிட்டு உத்தியோகம் சம்பாதிக்கப் பாடுபடுவது அரசியலாகவும், ஆங்கிலம் படிக்காமல் ஆரியம் படித்து விட்டு வயிறு வளர்க்க புரோகிதத் தொழிலை பரப்புவது சமூக இயலாகவும் மதிக்கப்பட்டு வருகிறது. எனவே இவ்விரண்டு காரியங்களும் நாட்டு முன்னேற்றத்திற்கான அரசியலும் ஆகாது, சமூக இயலும் ஆய்விடாது.

உதாரணமாக, மகாத்மா காந்தி அரசியலில் அதாவது காங்கிரசில் ஈடுபட்டிருந்த காலத்தில் அரசியல் என்பதின் பேரால் அவர் ஏற்படுத்தின திட்டமாகிய நிர்மாணத்திட்டத்தையும் பஹிஷ்கார திட்டத்தையும் கவனித்துப் பார்த்தால் என்ன என்ன விஷயம் சேர்ந்தால் அரசியல் ஆகும் என்பது புலப்படும்.



tamilnavarasam.com

அதாவது நிர்மாணத் திட்டத்தில் எல்லா மக்கள் வயிற்றுக்கும், பிழைப்பும், பணமும் சம்பாதிக்க "பொருளியல்" ஆன கதரும் எல்லோரும் சமத்துவமடைய தீண்டாமை விலக்கு என்னும் "சமத்துவஇயலும்" மனிதர்களின் ஒழுக்கம் சீர்படுவதற்காக, மது விலக்கு என்னும் "ஒழுக்க இயலும்" எல்லா மதஸ்தர்களும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாகவும் சகிப்புத் தன்மையாகவும் இருக்க வேண்டும் என்பதாக 'இந்து முஸ்லீம் ஒற்றுமை' என்னும் பரஸ்பர "அன்பு இயலும்" ஆகிய இவைகள் சேர்ந்ததை நிர்மாணத் திட்டமாகவும், ஆட்சி சம்பந்தப்பட்டவரை, அதை ஒழுங்குபடுத்தி அதை மேற்கண்ட நிர்மாணத் திட்டத்திற்கு அனுகூலமாய் ஆட்சி புரியும்படி செய்வதற்காக மட்டும் அனுகூலமாய் இருக்கும்படி செய்ய, அதுவரையில் அதனோடு கூடுமான வழிகளிலெல்லாம் ஒற்றுழைக்காமலிருக்க வேண்டும் என்பதாகக்கொண்டு அரசாங்கத்துள் நமக்குள்ள ஒவ்வொரு சம்பந்தத்தி லிருந்தும் விலகுவதற்காக பஹிஷ்கார திட்டம் என்பதாகவும் ஏற்பாடு செய்திருந்ததே ஒழிய வேறில்லை.

மற்றபடி நமது நாட்டு பழய கால சரித்திரத்தில் இம்மாதிரி அரசியல் என்பதாக ஒன்று இருந்ததாகவே காணமுடியாது. மக்களுக்கும் அரசர் களுக்கும் அபிப்பிராயபேதமோ, அரசாங்க சுதந்திரத்திற்கு என்பதாக மக்கள் அரசாங்கத்துடன் போராடியதாகவோ, அதற்காக ஒரு இயக்கம் இருந்ததா கவோ எந்த இடத்திலும் காணமுடியாது. சரித்திரத்தில் பார்க்கும், அரச தர்பாரில் அரசன் மக்களுக்காக வாழ்ந்து வந்ததும், மக்கள் அரசருக்கு முடி சூட்டினதுமாக காணப்படுமே ஒழிய வேறில்லை. அது ஒரு தனி ஜாதியாக வோ அல்லது ஒரு தனி வகுப்பாகவோ இருந்ததாகக் கூட காணமுடியாது. ஏதாவது ஒரு இடத்தில் குடிகள் அரசனிடம் முறையிட்டதாக பார்ப்போ மானால், அது காட்டு மிருகங்கள் வந்து வேளாண்மைகளை அழித்ததற் காகவும், வேறு ஏதோ திருடர்களோ, ராக்ஷதர்களோ வந்து குடிகளை இம்சித்த தாகவும் காணப்படுமே ஒழிய வேறு ஆக்ஷி முறையைப் பற்றி குற்றம் காணவே முடியாது. இப்பொழுது நமது கண்களுக்கு நமது நாடு ஆக்ஷி முறை குற்றம் சொல்லப்படுவதாய்க் காண்பதெல்லாம் மேல்காட்டிய நிர்மாணத் திட்டத்தில் நமக்குள்ள குற்றங்களே ஒழிய ஆக்ஷிக் குற்றமே அல்ல. ஒரு நாடோ அல்லது ஒரு சமூகமோ தங்களுக்குள் ஒற்றுமையில் லாமல் பரஸ்பர அன்பும் இல்லாமல் ஒருவரை ஒருவர் கொடுமைப்படுத்தி மனிதத் தன்மைக்கு விரோதமாய் வாழும்போது, எப்படியானாலும் அன்னி யன் யாராவது ஒருவன் உள்ளே பிரவேசித்து ஆதிக்கம் பெற்றுக் கொள்ளத் தான் முடியுமே ஒழிய வீணாய்க் கிடக்க முடியவே முடியாது. இந்த நிலையில் வந்த கொடுமையான ஆட்சிமுறையானது இந்நிலைகள் சரிப்படுத்தப் பட்டாலொழிய ஒழிக்கப்படவே முடியாது என்பதை கண்டிப்பாய் கவனத்தில் வைக்க வேண்டும். ஏதாவது ஒரு கொடுமையை ஒழிக்க வேண்டுமானால் அக்கொடுமைக்கு உள்ளஆஸ்பதமான காரியம் எதுவோ அதை ஒழித்



தால்தான் அக்கொடுமை வளராமலிருக்க முடியுமேயல்லாமல் மேலுக்கு மேலாகப் பார்ப்பதால் அது அடியோடு ஒழிக்கப்படவே மாட்டாது. உதாரண மாக நமக்கு தலைவலி ஏற்பட்டிருக்குமானால், அத் தலைவலி வருவதற்கு நமது சரீரத்தில் ஏற்பட்டிருக்கும் கோளாறு என்ன? அதற்கு நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? எந்த மாதிரி பத்தியமாயிருக்க வேண்டும்? என்ன மாதிரி மருந்து சாப்பிட வேண்டும்? என்பதாக கவனித்து கண்டு பிடித்து அந்தப்படி நடந்து வர வேண்டுமேயல்லாமல் அப்போதைக் கப்போது ஒரு பத்துப் போடவோ அல்லது ஒரு தைலத்தைப் பூசவோ செய்தால் எப்படி வியாதி போகும் என்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டும். அரசியல் என்கிற பேரால் இதுசமயம் நமது நாட்டில் ஒரு கூட்டத்தாரால் நடத்தப்பட்டு வரும் ஒருவித கிளர்ச்சி சிலரின் வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதே தவிர நாட்டுக்கோ நாட்டிலுள்ள மக்க ளுக்கோ பொதுவாக அதில் ஒருவித நன்மையும் இல்லாததோடு நாட்டுக்கும் மக்களுக்கும் பெரிய தீவினையை உண்டாக்கி வருவதாகவே இருக்கிறது.

முதலாவது நமக்குள் ஒருவித ஒற்றுமை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். அதற்காகவே பாடுபட வேண்டும். உண்மையான ஒற்றுமை ஏற்பட வேண்டுமானால் அதற்கு இடையூறாய் உள்ளவைகளையெல்லாம் ஒழிக்க வேண்டும். நமது நாட்டில் ஒற்றுமைக் குறைவு என்பதை ஒரு தேசத் தாருக்கு ஒரு தேசத்தார் என்கிற முறையில் மாத்திரம் இல்லை. ஒரு மதஸ்தருக்கு மற்றொரு மதஸ்தர் என்கிற முறையில் மாத்திரம் இல்லை. நம்மைப் பொருத்தவரை அதாவது இங்கு கூடியுள்ள பெரும்பான்மை மக்க ளைப் பொருத்தவரை ஒரு மதஸ்தர் (இந்துக்கள்) என்பவர்களுக்குள்ளாகவே அநேக விதமான கொடுமையும் ஒற்றுமைக்குறைவும் இருந்து வருகிறது. இந்து மத தத்துவமே நமது நாட்டை இந்த தாழ்ந்த கதிக்கு கொண்டு வந்தது என்பதே நமது கெட்டியான அபிப்பிராயம். மக்கள் அறிவையும் ஆற்ற லையும் அன்பையும் மனித தர்மத்தையும் நமது மதம் என்று சொல்லுவதே அழித்துக் கொண்டு வருகிறது.

முதலாவதாக நமது நாட்டில் மக்களை பிறவியிலேயே உயர்வு தாழ்வு கற்பித்து, ஒன்றுக்கொன்று சேர விடாமல் தடுத்து, எவ்வளவு அயோக்கியனா யிருந்தாலும் ஒரு வகுப்பு தாய் வயிற்றில் பிறந்ததற்காக மாத்திரம் உயர்ந்தவன் என்றும், மற்றெல்லோரும் அவனைத் தொழ வேண்டியவர்கள் என்றும் ஆக்கி வைத்திருக்கிறது. அதுபோலவே மற்றொருவன் எவ்வளவு யோக்கியனாயிருந்தாலும் வேறு ஒரு வகுப்பு தாய் தகப்பனுக்குப் பிறந்த தினாலேயே அவன் தாழ்ந்தவனென்றும், தொடக்கூடாதவன், பார்க்கக் கூடாத வன், கிட்டவரக் கூடாதவன், அவனவன் பக்தி செலுத்தும் தெய்வத்தைக் கூட பார்க்கக் கூடாதவன் என்றும், பொது தெருவில் நடக்கக் கூடாதவன் என்றும் தடுக்கிறது. இந்தக் கொடுமையும் முட்டாள்தனமும் கொண்ட ஆணவம் நமது நாட்டில் தான் இருக்கிறதே தவிர வேறு நாட்டில் கண்டிப்பாய் இம்மாதிரி



RangaRakes tamilnavarasam.com

பிறவி தோஷம் கற்பிக்கிறதே கிடையாது. இது மனிதனோடு மாத்திரமல்லாமல் கடவுள்கள் என்று சொல்லப்படுபவைகளுக்கும் இத்தோஷம் கற்பிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நாட்டு பழந்தமிழ் சரித்திரங்களில் இம்மாதிரி கொடுமையும் மூடத்தனமும் கொண்ட விஷயங்கள் மருந்துக்கு கூட காணப்படுவதில்லை. நமது நாட்டுக்கு அயல் நாடுகளில் இருந்து வந்து குடியேறின ஒரு கூட்டத்தாரால் கொண்டு வந்து புகுத்தப்பட்ட இந்த மதம் நம்மை இந்த இழி நிலைக்கு கொண்டு வந்துவிட்டது. பிறப்பினால் உயர்வு தாழ்வு வகுக்கும் தன்மையான வருணம், ஆச்சிரமம், தர்மம், ஜாதி, பிராமணன், க்ஷத்திரியன், சூத்திரன், பஞ்சமன், சண்டாளன் முதலியன வார்த்தைகள் தமிழ் மொழிகளே அல்ல. தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட பாகுபாடு இருந்ததும் இல்லை, தமிழ்நாட்டிற்கு இப்போ்ப்பட்ட பாகுபாடுகள் எந்த விதத்திலும் வேண்டியதும் இல்லை. அது எந்த விதத்திலும் நடக்கக் கூடிய காரியமும் அல்ல. இந்த இடத்தில் மகாத்மா காந்தியின் அபிப்பிராயம் கூட மறுக்க வேண்டியதாகவே இருக்கிறது. பிராமணன் என்பதாக ஒரு ஜாதியோ, ஒரு வகுப்போ, ஒரு மனிதனோ தனியே இருக்க வேண்டும் என்பதின் அவசியம் என்ன. ஜன சேவை செய்வது பிராமணர்களுடைய தர்மம் என்றும் அதற்காகவே அவர்கள் பிறவியிலேயே பிராமணர்களாகப் பிறந்திருக்கிறார்கள் என்றும் மகாத்மா சொல்லுகிறார். ஜன சேவை என்பது ஒரு ஜாதிக்கோ ஒரு மனிதனுக்கோ சொந்தமானதல்ல. உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் ஒருவனுக்கொருவன் உதவி உபகாரம், சேவை முதலியவைகள் செய்ய வேண்டியது கடமையாகும். ஒவ்வொரு மனிதனும் அவனுடைய வாழ்நாளில் பரோபகாரத்திற்கு ஒதுக்கி வைத்த நேரங்களிலெல்லாம் ஜனசேவை செய்தவனாகிறான். ஒரு மனிதன் ஒரு பொதுக்கிணறு வெட்டினால்,வெட்டி வைத்தால், ஒரு பாதை துப்புரவு செய்தால், செய்வித்தால், சுகாதார விஷயத்தில் வீதி கூட்டினால், கூட்டுவித்தால், இன்னும் இதுபோன்ற காரியங்கள் செய்தால், ஜனசேவை செய்தவனாகிறான். இது ஒரே வர்ணத்திற்கு அல்லது ஜாதிக்கு வகுப்புக்கு என்பதாக ஏன் பிரித்து வைக்க வேண்டும். எப்படி பிரித்து வைக்க முடியும் மற்றவர்களுக்கு ஏன் அந்த பாத்தியம் அவரவர் சவுகரியப்படி செய்ய விடக் கூடாது. தவிர, நாட்டையாள்வது க்ஷத்திரியனுக்கு உரிய தர்மம் என்று சொல்லுவோமானால் ஒரு நாட்டை ஒரு மனிதன்தான் ஆளமுடியும். ஒரு வருணமோ ஒரு ஜாதியோ ஒரு வகுப்போ ஆளமுடியாது. அப்படிப் பார்த்தால் ஒரு நாட்டிற்கு ஒரே ஒரு க்ஷத்திரியன் தான் இருக்க முடியும். நாட்டை ஆளுகிறவனுடைய ஜாதியெல்லாம் க்ஷத்திரிய ஜாதி ஆகிவிட்டால் உலகத்தில் ஆக்ஷி புரியாத ஜாதியே கிடையாது. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு ஜாதியோ வகுப்போ உலகம் பூராவையோ அல்லது ஓர் பாகத்தையோ ஏதாவது ஒரு காலத்தில் ஆண்டுதான் இருக்கின்றது. ஆகவே, எல்லோரையுமே க்ஷத்திரியர் வர்ணத்தில் தான் சேர்க்க வேண்டும். அப்படிக்கில்லாமல் ஒரு சமயம் மகாத்மா மைசூரில் சொன்னதுபோல் "எளியவர்களைப் பாதுகாப்பது க்ஷத்திரியனுடைய தர்மம்"



என்பதாகப் பார்த்தாலும் எளியவர்களைப் பாதுகாப்பதற்கு ஒரு தனி வருணமோ ஜாதியோ எதற்காக வேண்டும். எப்படி இருக்க முடியும். பிறவி க்ஷத்திரிய வர்ணத்தில் எளியவர்கள் இருக்க மாட்டார்கள், அன்றியும் மற்றவர்கள் எளியவர்களைக் காக்கக்கூடாதா. மனிதனானவன் அவனவன் வாழ்வில் எளியவர்களைக் காப்பதற்கு ஏதாவது ஒரு நேரமோ செய்கையோ ஒதுக்கி வைத்துக்கொண்டு செய்தால் அது எளியவர்களைக் காத்ததாகாதா. இப்படியே பிறவி வைசிய வருணத்திற்கு என்ன தர்மம் கட்டுப்பட்டது என்றால், வைசியர்கள் வியாபாரம் செய்தல், வைசியர்கள் தர்மம் என்ற ஒரு பக்கமும், மாடு மேய்த்தல் வைசியர் தர்மம் என்ற மற்றொரு பக்கத்திலும், உழவு செய்தல் வைசிய தர்மம் என்று மற்றொரு பக்கத்திலுமாக ஆரிய நூல்களில் உளறிக் கொட்டி இருக்கிறது. இதில் எதை மகாத்மா ஒப்புக் கொள்ளுகிறாரோ அதைப் பற்றி நமக்கு கவலையில்லாவிட்டாலும் இந்த தொழிலுக்கு ஒரு தனி பிறப்பு வருணம் எதற்காக ஒதுக்கி வைக்க வேண்டும். இவைகளை எப்படி ஒதுக்கி வைக்க முடியும் மற்றவர் ஏன் செய்யக்கூடாது. அதுபோலவே சூத்திரர் என்பவர்களுக்கும் என்ன என்னமோ தர்மம் சொல்லுவதானாலும் குறிப்பாய் அடிமைத்தனத்தையும், பிராமண வர்ணத்தானுக்கு வைப்பாட்டி மகன் என்கிற தத்துவத்தையும் தான் சொல்லுகிறது. இதில் எதை மகாத்மா ஒப்புக் கொள்வதானாலும், இந்தக் காரியத்திற்கும் ஒரு தனி வருணம் எதற்கு என்றும், இந்த காரியங்கள் மற்றவர்கள் ஏன் செய்யக்கூடாது என்றும் மற்றவர் செய்யாமல் இருக்க முடியுமா என்றும் தான் கேட்கிறோம். இப்படிப்பட்ட ஆபாசங்களை நம்ம தலையில் சுமத்தி யோக்கியன், அயோக்கியன் அடையாளம் தெரிவதற்கில்லாமல் மக்களைப் பிரித்துப் பாழ்படுத்தி இருக்கிற மதக்கொடுமையாலே தான் நமது நாட்டிற்கு சுபாவமாகவே விடுதலை கெட்டிருக்கிறதே அல்லாமல் வேறு அல்ல என்று பொருள்படும் படிக்கும் மற்றும் இதுபோலவே கடவுள், பக்தி, கோயில், சடங்கு முதலிய விஷயங்களில் நம்முடைய மூட கொள்கைகளையும், பார்ப்பனர்கள் கொடுமையையும் விரிவாக எடுத்துச் சொல்லி இவைகள் ஒழிவதுதான் சுயராஜ்யம் அளிக்க வல்லது என்றும் இதுவே அரசியல் என்பது என்றும், இதைத்தவிர வேறு விஷயங்களை அரசியல் என்றும், சுயராஜ்யம் என்றும் உரிமை என்றும், தேசீயமென்றும், பேசுவதல்லாம் வீண்புரட்டு என்றும் குறிப்புக் காட்டினார்.

*குறிப்பு: ஸ்ரீமான் ராமசாமி நாடார் அவர்கள் தலைமையில் விருதுபட்டி பாண்டியன் மைதானத்தில் தற்கால நிலை என்னும் தலைப்பில் அரசியலும் சமூக இயலும் என்பது பற்றி ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 28.08.1927**



RangaRakes tamilnavarasam.com

# மகாத்மா காந்தியும் வருணாசிரமமும்

## II

"மகாத்மா காந்தியும் வருணாசிரமமும்" என்னும் விஷயமாய் இரண்டு வாரங்களுக்கு முன் "குடி அரசி"ல் மகாத்மாவின் வருணாசிரம அபிப்பிராயத்தை கண்டித்தெழுதியது நேயர்கள் பார்த்திருக்கக்கூடும். அதன் பிறகு பலர் பல பல விதமாக நமக்கு கடிதம் மூலமாய், மகாத்மாவை தாக்குவது தர்மமல்லவென்றும், அபிப்பிராய பேதத்தை மகாத்மாவிடம் நேரில் தெரிந்து கொள்ளலாம் என்றும், நேரில் சொன்னால் நமது அபிப்பிராயத்தை மகாத்மா ஒப்புக் கொள்வார்கள் என்றும், எப்படி இருந்தாலும் மகாத்மாவைப் பற்றி ஒரு வார்த்தையாவது வித்தியாசமாய் எழுதினால் நமது செல்வாக்கே அடியோடு போய்விடும் என்றும், நமது பத்திரிகை ஆகிய "குடி அரசு" கூட ஜனங்களால் மதிக்கப்படாது போய் விடுமென்றும், மகாத்மா பார்ப்பனரல்லாதார் ஆதலால் அவர் பேரில் குற்றம் சொல்லக்கூடாது என்றும் இப்படியாக பல பேர் பல விதத்தில் கடித மூலமாயும் நேரிலும் நமக்கு தெரிவிக்கிறார்கள்.

மற்றும் சிலர், பல பத்திரிகைகளிலும் ஜாடை ஜாடையாய் நமது அபிப்பிராயத்தை கண்டித்தும், மகாத்மாவை ஆதரித்தும் எழுதி வருகிறார்கள். மற்றும் சிலர், எல்லாவற்றையும் குற்றம் சொல்லிவிட்டு நீர் என்னதான் செய்யப் போகிறீர், எதைத்தான் ஆதரிக்கிறீர்கள், உமது கொள்கைதான் என்ன என்று எழுதுகிறார்கள். ஆகவே, இவைகளுக்கு தனித்தனி பதிலும், சமாதானமும் சொல்லிக் கொண்டிருப்பது மிகவும் கஷ்டமான காரியமானதால் இவற்றிற்கு பொதுவாக இந்த வாரம் சில விஷயங்களை எழுதுகிறோம்.

ஆரம்பத்தில் ஒரு விஷயத்தை பொது ஜனங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்ள ஆசைபடுகிறோம். அதென்னவெனில், நாமும் நமது பத்திரிகையும் வயிற்றுப் பிழைப்புக்கோ, பொது ஜனங்களின் செல்வாக்குப் பெறுவதற்கோ, பொது நன்மையின் பேரால் தொண்டு செய்ய வரவில்லை என்பதே. உண்மையை உண்மை என்றும், சரி என்று பட்டதை வெளிப்படுத்துவதற்கும், பொய்யென்றும் தப்பென்றும் பட்டதை கண்டிப்பதற்குமே நடைபெற்று வருகிறது என்பதாகவும், பத்திரிகையின் கொள்கையே அதுதான் என்பதாகவும் ஆதி முதற்கொண்டே பல தடவைகளில் வெளிப்படுத்தி இருக்கிறோம்.



இரண்டாவதாக, மகாத்மா காந்தியவர்களிடத்தில் மற்றவர்களுக்கு இருக்கும் அபிமானத்திலும், பக்தியிலும் நமது பக்தி எள்ளளவும் குறைந்ததல்ல என்பதையும் தெரிவிப்பதோடு, மகாத்மாவை தமிழ்நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தின அனேகருள் நாமும் ஒருவரென்றும் மகாத்மாவை பின்பற்றி வந்த விஷயத்திலும் இப்போது சிபார்சுக்கு வருகிற எல்லோரையும் விட நாம் பின்பட்டவரல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்

நிற்க, மகாத்மாவை குருட்டுத் தனமாய் ஆதரிக்கும் மூலமாய் வரும் செல்வாக்கு நமக்கு அவசியமில்லை என்றும், மகாத்மாவைப் பற்றி நாம் கண்டிக்கும் விஷயம் சரியா தப்பா என்று விசாரணை செய்து பார்த்து ஒரு முடிவுக்கு வர யோக்கியதை இல்லாமல் குருட்டு பக்தியாய் அபிப்பிராயம் கொள்ளுபவரது கண்டனத்தைப் பற்றி நமக்கு கவலை இல்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிற்க, இதுவரையில் கடிதமூலமாயும் பத்திரிகை மூலமாயும் நேரிலும் நமது கண்டனத்தை மறுத்தவர்களில் ஒருவராவது பிறவியில் வருணாசிரம தர்மமும் ஜாதி வித்தியாசமும் இல்லை என்ற மகாத்மா சொன்னதாகவாவது, பிறவியில் வருணாசிரம தர்மமும் ஜாதிப் பிரிவுகளும் உண்டு என்று அவர் சொல்லவில்லை என்றாவது ஒருவரும் சொல்லவே இல்லை. இனியும் யாராவது மகாத்மாவுக்கு பிறவியில் வருணாசிரம தர்மமும் ஜாதியும் இல்லை என்று சொல்வார்களேயானால், அல்லது இல்லை என்று மகாத்மா இன்ன இடத்தில் சொல்லியிருக்கிறார் என்று காட்டுவார்களேயானால் உடனே நான் எழுதியவைகளையும் மறுத்து எழுதிவிட்டு மகாத்மா விஷயமாய் நான் கொண்ட அபிப்பிராயத்தையும் மாற்றிக் கொண்டு எனது வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

அப்படிக்கில்லாமல் "அவர் அப்படி எண்ணி இருக்கமாட்டார் இப்படி எண்ணி இருக்க மாட்டார், மகாத்மா சொல்வதற்கு அதுவல்ல அர்த் தம், இதுவல்ல பொருள்" என்பதான வெறும் உத்தேசமும் வியாக்கியானமும் நமது அபிப்பிராயத்தை ஒரு சிறிதும் மாற்றிக் கொள்ளும்படி செய்யவே முடியாது என்பதை வணக்கமாய் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நிற்க, நமது கருத்தையும், மகாத்மா கருத்துக்கும் நமது கருத்துக்கும் மாறுபட்ட கருத்துக்களைப் பற்றியும் சென்றமாதம் மகாத்மா அவர்களிடம் நேரில் கலந்து பேசி நம்மைப் பொருத்த வரையிலும் ஒரு முடிவு கட்டிக் கொண்டே வந்து விட்டோம் "மகாத்மாவிடம் நான் கலந்து பேசினேன்" என்று சொல்லிக் கொள்வதும் எழுதிக் கொள்வதும் இக்காலத்தில் பெரிதும் தற்பெருமைக்கே உபயோகித்துக் கொள்ளக் கூடியதாய் விட்டபடியால் அந்த தற்பெருமை நமக்கு வேண்டாம் என்பதாகக் கருதியே நாம் அது சமயம் அதை வெளிப்படுத்திக்கொள்ளவில்லை.



RangaRakes tamilnavarasam.com

தவிரவும் அது சமயம் நமக்கும் மகாத்மாவுக்கும் நடந்த சம்பாஷணைகளின் விபரத்தை மகாத்மாவின் சம்மதம் பெற்றே வெளிப்படுத்த வேண்டியதான ஒரு நிபந்தனைக்கும் நாம் சம்மதம் கொடுத்து வந்ததால் அதையும் வெளியிட முடியாத நிலையில் இருக்கிறோம்.

முக்கியமாய் மூன்று விஷயத்தைப் பற்றியே தான் மகாத்மாவினிடம் நாமும் நமது நண்பரான ஸ்ரீமான் .எஸ். ராமநாதனும் சம்பாஷித்தோம். அதாவது என்னுடைய அபிப்பிராயமாக மகாத்மாவுக்கு எடுத்துச் சொன்னதெல்லாம் இந்தியாவின் விடுதலைக்கும், சுயமரியாதைக்கும் மூன்று முக்கிய காரியங்கள் செய்து முடிக்க வேண்டும் என்றும், அது முடிவு பெறாமல் நமது நாட்டுக்கு விடுதலை இல்லை என்றும் நாம் முடிவு செய்திருக்கிறோம் என்பதாகச் சொன்னோம்.

அதாவது, ஒன்று, காங்கிரசு என்பதை ஒழிக்க வேண்டியது. இரண்டாவது, இந்து மதம் என்பதை ஒழிக்க வேண்டியது, மூன்றாவது, பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டியது என்பவைகளாகும்.

முதல் இரண்டை ஒழித்தாலே பார்ப்பன ஆதிக்கம் ஒழிந்து விடுமானாலும், இவ்விரண்டின் மூலமாய் ஒழிந்தது போக பாக்கி கொஞ்ச நஞ்சம் இருந்தாலும் அதையும் ஒழிப்பது என்கிற கொள்கையும் அதில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தையே காட்டினோம்.

இது விஷயமாய் நடந்த தர்க்கங்கள் முன் சொன்ன காரணத்தால் வெளியிடக்கூடியதல்ல. ஆதலால் இனி இதைப் பற்றி மகாத்மாவிடம் மறுபடியும் கலந்துபேசித்தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்றும் இல்லை என்பதையும் மகாத்மாவினிடம் நேரிலேயே இம்மூன்று விஷயங்களைப் பற்றியும் மகாத்மா சொன்ன சமாதானங்கள் எம்முடைய அபிப்பிராயத்தை மாற்றக் கூடியதாயில்லை என்றும் சொல்லி மகாத்மாவினிடம் உத்திரவு பெற்றுக் கொண்டு வந்து விட்டோம். மகாத்மாவும் தான் சொன்ன சமாதானத்தால் நாம் திருப்தி அடையவில்லை என்பதை தெரிந்துகொண்டதாகவும், இன்னம் இரண்டொரு தடவை அதைப்பற்றி பேசவேண்டும் என்றும் சொன்னார். எனது நண்பர் ஸ்ரீமான் ராமநாதன் அவர்கள் கூட மகாத்மா சொன்னது போலவே மறுபடியும் இரண்டொரு தடவை மகாத்மாவிடம் பேசலாம் என்று கூட சொன்னார். இதற்கு உடனே நாம் மகாத்மா நம்முடைய அபிப்பிராயத்தை மாற்றும்படி திருப்தி செய்வார்கள் என்று நம்புகிறீர்களா அல்லது மகாத்மா அபிப்பிராயத்தை நாம் மாற்றக்கூடும் என்பதாக கருதுகிறீர்களா என்று கேட்டதில், மகாத்மா சொல்வதைக் கொண்டு நம்முடைய அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ள கூடியதாய் ஏற்படாது என்றும் ஒருக்கால் நமது அபிப்பிராயத்துக்கு மகாத்மா இணங்கக்கூடியதானால் நமது பிரசாரத்திற்கு



இன்னம் உதவியாக இருக்காதா என்றும் சொன்னார். உடனே நாம் அந்தப்படி எதிர்பார்ப்பது தப்பு என்றும் மகாத்மாவை திருத்தும் படியாக நாம் சொல்லி சரி செய்ய முடியாது என்றும், நம்ம அபிப்பிராயத்தை நாம் வெளிப்படுத்த வேண்டியது தான் நமது கடமை என்றும் சொல்லிவிட்டோம். இன்ன இன்ன விஷயங்களைப் பற்றி மகாத்மா அவர்களுடன் சம்பாஷித்ததாக திரு.சி. ராஜ கோபாலாச்சாரியார் அவர்களிடம் தெரிவித்து விட்டே உத்திரவு பெற்றுக் கொண்டு வந்து விட்டோம்.

எனவே இது சம்மந்தமாக இனி மகாத்மாவின் அபிப்பிராயம் எப்படி என்பதைப் பற்றி நாம் மறுபடியும் அவரைக் கண்டு கேட்கவேண்டியதில்லை என்பதைப் பற்றியும், அதைப்பற்றி நாம் கொண்டுள்ள அபிப்பிராயத்தில் நமக்கு கொஞ்சமும் சந்தேகமில்லையென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். வருணாசிரம விஷயமாய் மகாத்மாவுடன் சம்பாஷித்ததை ஆதாரமாய் வைத்துக் கொள்ளாமலேயே மகாத்மாவே மைசூரில் பேசினதைக் கொண்டும், அதற்கும் அவர் எழுதினதைக் கொண்டும் தான் அந்த மறுப்பு எழுதப்பட்டது. தவிர மகாத்மாவின் வருணாசிரம தர்ம நியமனமும் ஜாதி வித்தியாச நியமனமும் பிறப்பை ஒட்டியது என்பதாக இதற்கு முன் எத்தனையோ தடவைகளில் மகாத்மாவின் பேச்சினாலும் எழுத்துக்களினாலும் நாம் தெரிந்தே இருக்கிறோம்.

மகாத்மா பார்ப்பன மதமான ஆரியரின் மதத்தைத்தான் இந்து மதம் என்று சொல்லிக்கொண்டு தன்னையும் அதே இந்து இந்து என்று அடிக்கடி சொல்லிவருகிறார். தன்னுடைய பிரசங்கங்களுக்கும் அடிக்கடி ஆரியக் கதைகளான புராணங்களைத்தான் அதாவது ராமாயணம், பாரதம், பாகவதம் முதலியவைகளையே தனக்கு ஒரு படிப்பினைகளாகவும் மேற்கோள்களாவும் காட்டிக் கொண்டும் வருகிறார். இந்த மாதிரி புராண வழுக்கலானது எப்படியாவது மகாத்மாவை சேற்றில் கொண்டு போய் அழுத்தியே தீரும் என்பதே நமது துணிபு.

தமிழ்நாட்டின் நாகரீகமும், தமிழ்நாட்டின் பழய பழக்க வழக்கங்களும் மகாத்மாவுக்கு தெரிவதற்கு சந்தர்ப்பமேயில்லை. மகாத்மா தென்னாப்பிரிக்காவில் இருந்த காலத்தில் வள்ளியம்மை, நாகப்பன் என்பது போன்ற சில தமிழ் மக்கள் மூலம் தமிழரின் வீரத்தை அறிந்திருக்கலாமே தவிர தமிழ் நாட்டைப்பற்றியும், தமிழ் மக்களைப் பற்றியும் பார்ப்பனர்களின் மூலமாகத் தவிர வேறொன்றும் அவர் அறிந்திருக்க முடியாது என்பதாக உறுதி கூறலாம்.

ஆரியக் கொள்கையான பார்ப்பன மதத்திற்கும் தமிழர் நாகரீக பழக்க வழக்கத்திற்கும் ஏறக்குறைய 2000,3000 வருஷங்களாகவே யுத்தங்கள் நடந்து வரும் விஷயங்களை மகாத்மாவுக்கு எடுத்துச் சொல்ல கூடியவர்கள் யார்? மகாத்மா மடத்தில் இருக்கிறார்கள். ஆதலால் தமிழ்நாட்டிற்கு ஆரியக் கொள்



RangaRakes tamilnavarasam.com

கைகள் கூடாது என்பதாக நாம் பிரசாரம் செய்வதானால் அதைப் பொருத்த வரை மகாத்மா கொள்கை கூடாது என்றுதான் நாம் சொல்லி ஆக வேண்டும். தொழிலின் மூலமாகக்கூட மக்களைப் பிரிக்கக் கூடாது. பிரிக்க முடியாது, பிரிப்பதும் உலகியற்கைக்கும் மனிதத் தன்மைக்கும் சரியல்லவென்று வாதாடுகிற நாம் "பிறவியில் ஜாதி உண்டு, தொழில் உண்டு இது பெரியோர் களால் ஏற்படுத்தப்பட்டது. கடவுளால் ஏற்படுத்தப்பட்டது, ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டது" என்றால் எப்படி ஒப்புக்கொள்ள முடியும். ரிஷிகள், கிருஷ்ணன் முதலானவர்கள் காலமல்ல இது என்பதும், நாம் அந்தக்காலத்தில் இல்லை என்பதும், இந்தக் காலத்தில் அவர்கள் இல்லை என்பதும் அது சரியா தப்பா, நிஜமா பொய்யா என்பதற்கு சரியான ஆதாரமும், அவசியமும் சாத்தியமும் இல்லை என்பதும் ஒவ்வொரு பகுத்தறிவுள்ள மனிதனுக்கும் தானாக விளங்கும்போது 'பாட்டி கதைக்கு' எப்படி மரியாதை கிடைக்கும் என்பது நமக்கே விளங்கவில்லை.

மகாத்மாவும் வருணாசிரமமும் என்னும் வியாசத்தை மகாத்மா வுக்கும் அனுப்பித்தான் இருக்கிறோம். மற்றொன்றை அவரது அந்தரங்க சிஷ்ய கோடிகளுக்கும் அனுப்பி மகாத்மா தகவலுக்கு கொண்டுபோகும்படி கேட்டுக் கொண்டும் இருக்கிறோமேயல்லாமல் மகாத்மாவுக்குத் தெரியாமல் ஒன்றும் செய்துவிடவில்லை. ஆனால் அவரது பரமானந்த சிஷ்யர்கள் இம் மாதிரி விஷயங்களை லக்ஷியம் செய்யாதீர்கள். லக்ஷியம் செய்தால் மறுப் புக்கு அதிக யோக்கியதை உண்டாகிவிடும், மறுப்பவனுக்கும் அந்தப் பத்திரிகைக்கும் யோக்கியதை அதிகமாகிவிடும். ஆதலால் குப்பையில் போட்டு விடுங்கள் என்றுதான் சொல்லிக்கொடுப்பார்கள். அதை மீறுவதற்கு மகாத்மாவுக்கு இது சமயம் சக்தியில்லை என்பதே நமது அபிப்பிராயம். ஆகவே, இந்த விஷயம் முக்கியமானதாலும் நமது நாட்டின் விடுதலைக்கும், நமது சுயமரியாதைக்கும், வருணாசிரமம் என்கிற தத்துவமே அதிலும் பிறவியில் வருணாசிரமமும் ஜாதியும் உண்டு என்கிற தத்துவமே எமனாய் இருக்கிறது என்பதான கண்ணியமான முடிவுக்கு வந்திருப்பதாலும் அதை யொழிக்கப் பாடுபடுவதே நாட்டில் விடுதலையும் சுயமரியாதையும் கோரும் மனிதனின் கடமையென்று நாம் களங்கமற உணருவதாலும் கண்டிக்க வேண்டியதாயிருக்கிறதே என்பதாக வருத்தத்துடன் இதை எழுதுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 28.08.1927**



# "திராவிடன்" வேண்டுமா? வேண்டாமா?

சகோதரர்களே!

பார்ப்பன ஆட்சியாலும், பார்ப்பன சூழ்ச்சியாலும், பார்ப்பன மதத் தாலும், பார்ப்பன பத்திரிகை பிரசாரத்தாலும் நீங்கள் இழந்து கிடக்கும் சுய மரியாதையும், சுதந்திரத்தையும், ஒற்றுமையையும் திரும்பவும் அடைய வேண்டுமா? வேண்டாமா? **வேண்டுமானால்** அதற்கென்றே உங்கள் தொண்டர்களால், பலவித கஷ்ட நஷ்டங்களுக்கும் பழிகளுக்கும் ஆளாகி நடத்தப்பட்டு வரும் **'திராவிடனை'** வாங்கிப் படியுங்கள். 'திராவிடன்' தான் போலி தேசீயத்தையும் சுயராஜ்யப் புரட்டையும் தைரியமாய் வெளியாக்கி சுயமரியாதைக்கென்றே உழைப்பவன். எனவே, 'திராவிடன'ன்றிக் கண்டிப்பாய் உங்களுக்கு கதி மோட்சமில்லை; இதை நம்புங்கள்.

**குடி அரசு - அறிவிப்பு - 28.08.1927**



RangaRakes
tamilnavarasam.com

# இது சத்தியாக்கிரகமாகுமா?

சென்ற வாரம் சென்னை மவுண்ட் ரோட்டில் உள்ள நீல் துரை உருவச் சிலையை இரண்டு தொண்டர்கள் உடைத்ததற்காக அவர்கள் ஒவ்வொரு வருக்கும் மூன்று மூன்று மாதம் கடுங்காவலும், முன்னூறு ரூபாய் அபராத மும், அது செலுத்தப்படாவிட்டால், மேல்கொண்டு 3 *மீ*, தண்டனையும் அனுபவிக்கத்தக்கது என்பதாக தண்டிக்கப் பெற்றிருக்கிறார்கள். ஒரு சிலையின் கையை ஒடிப்பது சத்தியாக்கிரகமாகுமா? தொண்டர்களின் மன உறுதியையும் அவர்களது தேசாபிமான வெறியையும் மெச்சிக் கொள்வதா னாலும் இச்செய்கைக்கு சத்தியாக்கிரகம் என்ற பெயர் ஒரு சிறிதும் பொருந் தாது என்பதே நமது அபிப்பிராயம்.

அக்கிரமத்தை ஒழிக்க எவ்வித கஷ்டத்தையும், அனுபவிக்கத் தயாரா யிருக்கும் இம்மாதிரி ஊக்கமுள்ள தொண்டர்களை தலைவர்கள் என்ப வர்கள் சரியான வழியில்நடத்தி பயன் உண்டாகும்படியாக உபயோகப்படுத் திக் கொள்ள வேண்டுமேயல்லாது இம்மாதிரி ஒழுங்கல்லாத காரியங்களைச் செய்வதற்கு உதவியாயிருக்கக் கூடாதென்பதே நமது அபிப்பிராயம்.

ஒரு சிலையின் கையை உடைப்பது துர்ராக்கிரகமென்பதே நமது அபிப்பிராயம். சிலையை எடுக்கும்படி போராடலாம். அதற்காக சத்தியாக் கிரகம் செய்யலாம். அதைப்பற்றி நமக்கு ஆட்சேபணை இல்லை. ஒரு சிலை யை விகாரமாக்குவது மகாத்மாவின் தத்துவப்படி பார்த்தால் எல்லை கடந்த பலாத்காரமாகும் என்றே நமக்குப் புலப்படுகிறது. நல்ல விஷயங்களுக்கு ஏற்பட்ட பொருளை இம்மாதிரி விஷயங்களுக்கு செலவு செய்வதை நாம் பாராட்ட முடியாததற்கு வருந்துகிறோம். நீல்துரை அக்கிரமக்காரர் என்ப தாகவே வைத்துக் கொள்வோம். அவர் செய்த அக்கிரமத்தை விட அதிக மான அக்கிரமங்களும் கொடுமைகளும் செய்துவருகிறவர்களையெல்லாம் நாம் என்ன செய்துவிட்டோம்? அப்பேர்ப்பட்டவர்களை எல்லாம் பலாத்கார மில்லாமல் மனமாற்றமடையும்படி நாம் அவர்களை வேண்டிக்கொள்ளு கிறோமேயல்லாமல் அவர்களுடைய கையையும், காலையும் ஒடிக்கப் போகி றோமா? அல்லது ஒடிக்க எண்ணுகிறோமா? அந்தப்படியே இதிலும் நாம் நடந்துகொள்ள வேண்டியதிருக்க இம்மாதிரி நடக்க துணிந்ததானது வருத்தப் படத்தக்கதேயாகும். இம்மாதிரியே ஒவ்வொரு காரியத்திற்கும் செய்ய



RangaRakes

ஆரம்பிப் போமானால் கடைசியாக அது எங்குபோய் நிற்கும் என்கிற ஒரு முடிவு கட்டவும் முடியாது. அன்றியும் நாம் நினைக்கிற காரியமும் கை கூடாததுடன் அது முறை அல்லவென்றே சொல்லுவோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 28.08.1927**



tamilnavarasam.com

# 'ஏல விவசாயி'

'ஏல விவசாயி' என்னும் பெயர் பெற்ற ஒரு தமிழ் மாதாந்த சஞ்சிகை எமது பார்வைக்கு வந்தது. இது எழுபது எண்பதாயிரம் ஏக்கர் ஏல விவசாய பூமிகளில் சுமார் 40 லட்சம், 50 லட்சம் ரூபாய் பெறுமான மகசூல்களை உண்டாக்கும் 2 ஆயிரத்துக்கதிகமான ஏல விவசாயிகளை அங்கத்தினராகக் கொண்ட திருவாங்கூர் ஏல விவசாய சங்கத்தினின்றும் வெளியிடப்பட்டு வருவது பல துறைகளிலும் ஆராய்ச்சியுள்ள திரு ஆர். நாராயணசாமி அவர் களை ஆசிரியராகக் கொண்டது.

விவசாயமே எல்லாத் தொழில்களிலும் சிறந்ததாயிருந்தும் நம் நாடு விவசாயத்தையே ஆதாரமாகக் கொண்டிருந்தும் விவசாய வளர்ச்சிக்குரிய புதுவிதமான கருவிகளைக் குறித்தும் புது முறைகளைப் பற்றியும் ஐக்ய இயக்கம், கூட்டுறவு இயக்கம், விவசாய சங்கம் ஆகியவைகளைப் பற்றியும் விவசாயப் பொருள்களைச் சேகரம் செய்து செலவழிக்கும் முறைகளைக் குறித்தும் நமது நாட்டில் தாய்ப் பாஷையில் உலவும் பத்திரிகைகள் மிகச் சிலவே. ஆகவே இவ்விஷயங்களைக் குறித்தும் மிளகு, இஞ்சி, லவங்கம், எலுமிச்சை, ஆரஞ்சு, காபி, சணல் ஆகியவைகளைக் குறித்தும் விசேஷமாக ஏல விவசாயத்தைக் குறித்தும் முதலாளி , தொழிலாளிகளைக் குறித்தும் தமிழ் மொழி, தமிழ்நாடு திருவாங்கூர் சரித்திரம் அரசியல் ஆகியவைகளைப் பற்றியும் இந்த ஏல விவசாயி என்னும் பத்திரிகை எழுதி வரும். ஆதலால் இப்பத்திரிகையை விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளிகள், முதலாளிகள், தமிழ்நாட்டார், தாய்நாட்டார் ஆகிய அனைவரும் ஆதரிக்கக் கடமைப்பட் டுள்ளார்கள். இதன் வருஷ சந்தா ரூ.2 . வேண்டுவோர் "மானேஜர், ஏல விவசாயி, உத்தமபாளையம், மதுரை ஜில்லா" என்ற விலாசத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

( ப - ர். )

குடி அரசு - மதிப்புரை - 28.08.1927



# டெல்லி கிருஷ்ணனும் தமிழ்நாட்டு கிருஷ்ணனும்

– சித்திரபுத்திரன்

டெல்லியில் உள்ள பாலகிருஷ்ண சுவாமி கோவிலில் கிருஷ்ண ஜயந்தி என்கிற பண்டிகையின் போது தீண்டாதவர்கள் என்கிறவர்களை எல்லாம் கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தமிழ்நாடு பத்திரிகை யில் காணப்படுகிறது. புராணங்களின்படி கிருஷ்ணன் என்பதாக ஒரு சுவாமி யோ ஆசாமியோ இருந்ததாக நாம் ஒப்புக்கொள்வதானால் அது ஒரே சாமி யாகத் தான் இருந்திருக்கலாமே தவிர, டெல்லிக்கு ஒரு கிருஷ்ணனும் தமிழ்நாட்டுக்கு ஒரு கிருஷ்ணனும் இருந்திருக்க முடியாது. அப்படியிருக்க டெல்லி கிருஷ்ணன் "தீண்டாதவர்கள்" கோவிலுக்குள் போனால் ஓடிப் போகாமல் கோவிலுக்குள்ளாகவே தைரியமாய் உயிருடன் இருக்கும்போது, நமது தமிழ்நாட்டு கோவில்களில் உள்ள கிருஷ்ணன் மாத்திரம் தீண்டாத வர்கள் உள்ளே போனால் கோவிலை விட்டு ஓடிப் போவதோ அல்லது ஒரே அடியாய் செத்துப் போவதோ ஆனால் இந்த மாதிரி கிருஷ்ணனை வைத்து பூஜை செய்வதால் நமக்கு என்ன பலன் அவரால் உண்டாகக் கூடும். ஒரு மனிதன் உள்ளே வந்தால் தாக்குப் பிடிக்காத கிருஷ்ணன் யாருக்கு என்ன செய்யமுடியும். ஆதலால் நாம் தமிழ் நாட்டு கிருஷ்ணனை துரத்திவிட்டு இனிமேல் டெல்லி கிருஷ்ணனைத் தான் தருவித்துக் கொள்ள வேண்டு மேயல்லாமல் இந்த மாதிரி சக்தியல்லாத, கிட்டப் போனால் ஓடிப்போகிற கிருஷ்ணன் இனி நமக்கு அரை நிமிஷங்கூட கண்டிப்பாய் உதவவே உதவாது.

குடி அரசு - கட்டுரை - 28.08.1927



RangaRakes tamilnavarasam.com

# சமூக முன்னேற்றம்

அரசியலின் பேரால் தொண்டு செய்து வந்த ஒருவன் அரசியலை வெறுத்து அதன் பேரில் குற்றம் சொல்லிக் கொண்டு சமூக முன்னேற்றமே பிரதானமானது என்பதாக இன்று உங்கள் முன் பேச வேண்டிய காரணம் என்ன என்பதைப் பற்றியும், மத சம்பந்தமாக தற்காலம் உள்ள விஷயங் களையும் ஏன் குற்றம் சொல்லுகிறேன் என்கிற விஷயத்தைப் பற்றியும், சமூக முன்னேற்றத்திற்கு உழைப்பதை அரசியலிலும் மத இயலிலும் உழைப்பது என்று ஏன் சொல்லுகிறேன் என்பதைப் பற்றியும் நீங்கள் பொறுமையோடு கவனிக்க வேண்டும். அரசியல் என்பதும் மத இயல் என்பதும் ஒரு சமூகத் தின் முன்னேற்றத்துக்கு ஏற்பட்டதே தவிர அரசியலுக்கும் மதத்துக்குமாக சமூகம் ஏற்பட்டதல்ல. ஆகவே அரசியல் என்பதும், மதம் என்பதும் சமூக முன்னேற்றத்திற்கு அனுகூலமாயிருப்பதாயிருந்தால் மாத்திரம் அவற்றில் ஈடுபட்டு ஒரு மனிதன் உழைக்க வேண்டுமேயல்லாமல் மனிதனுக்கு ஒரு வேலை வேண்டுமே என்கிற காரணத்திற்காக வீணானதும், சமூகத்திற்கும் நாட்டிற்கும் கேடு சூழ்வதுமான காரியங்களைக் கட்டிக் கொண்டு அழுது மக்களைப் பாழாக்க கூடாது. முக்கியமாக மனித சமூகத்தின் நன்மையை உத்தேசித்துதான் நாட்டின் நிலைமையைக் கவனிக்க வேண்டியதேயல்லாமல் வேறு காரியத்திற்காக அல்ல. அன்றியும் தேசீயம் (நேஷனலிசம்) என்பது கூட ஒரு நாட்டு மக்கள் சமுதாயத்தைப் பொறுத்ததுதான். ஆகவே சமூகத்தின் நன்மையை பார்க்கிற போது நமது மக்கள் இப்போது பேசிக்கொள்ளும் அரசியலையும் மத இயலையும் அடியோடு அழித்து புதுப்பிக்க வேண்டியதே தவிர அதை வைத்துக் கொண்டு எந்த விதத்திலும் திருத்தவோ, பழுது பார்க்கவோ முடியாது (இர்ரிபேரபிள்) என்பதே எனதபிப்பிராயம். முக்கிய மாய் நம் தமிழ் நாட்டையோ தமிழ் மக்களையோ உத்தேசித்தால் இந்த இரண்டு காரியமும் செய்தாலொழிய கண்டிப்பாய் தமிழ் மக்களுக்கு விடுதலை என்பதே கிடையாது என்றே சொல்லுவேன். எனவே இதற்காக யாரும் மனம் விட்டுவிடக் கூடாது. இந்த காரியமும் நமது மக்களுக்கு அவசி யம் என்று மனதார தோன்றும்படி ஏற்பட்டுவிட்டால் தானாகவே இது அமுலுக்கு கொண்டுவரக் கூடியதாகிவிடும். ஆனால் அப்படி ஏற்படுகிற காலத்தில் அதற்கு அநேக எதிரிகள் ஏற்படக்கூடும். இதுபோலவே அக் காலமாகவே இவ்வித முயற்சிகளுக்கு எதிரிகள் ஏற்பட்டு அவ்வப்போது அதைக் கெடுத்துக் கொண்டே வந்திருக்கிறார்கள். அதற்கு எத்தனையோ



சரித்திரமும், கதையும், புராணமும் இருந்தாலும் நாம் நேருக்கு நேராய் பார்க்கக் கூடியதாய் ஏற்பட்டது, நமது மகாத்மாவினால் தொடங்கப்பட்ட காரியமாகிய அரசியல் என்னும் பேரால் நடத்திய ஒத்துழையாமை என்னும் முயற்சியையும், அதற்குள் அழிக்கத்தக்கது, ஆக்கத்தக்கது ஆகிய பகிஷ்கார நிர்மாணத் திட்டங்களை அவ்வெதிரிகள் அழிப்பதற்காக மக்களின் நம்பிக்கையையும் ஊக்கத்தையும் முயற்சியையும் வேறு வழியில் ஈர்த்து அவைகளை அடியோடு பாழ்படுத்தினதையும் நாம் நேரிலேயே பார்த்திருக்கிறோம். ஆதலால் இனியாவது நாம் இது விஷயமாய் செய்யும் முயற்சிகளை இம்மாதிரி எதிரிகளால் அழிக்க முடியாதபடி இவ்வளவு காலத்திய அனுபவத்தையும் கொண்டு தக்க பந்தோபஸ்துடன் உழைக்க வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும். அதற்கு அரசியல் என்றாவது மத இயல் என்றாவது பெயர் கொடுக்காமல் மனிதஇயல் அதாவது மனிதத் தன்மை என்பதான சுயமரியாதை இயல் என்பதாகவே பெயர் கொடுத்து அதற்காக பாடுபட வேண்டும். அப்படிக் கில்லாமல் வேறு எவ்வளவு பாடுபட் டாலும் வீணாய் ஏமாந்து கீழே போய்க் கொண்டே இருப்போமே தவிர ஒரு விதத்திலும் முன்னுக்குவர மாட்டோம் என்பதை உணருங்கள்.

முதலில் அரசியல் என்பதைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லிவிட்டு பிறகு மத இயலைப்பற்றி பேசுகிறேன்.

அரசியல் என்பது பித்தலாட்டமானது. அது மக்களுக்கு பொதுவாக எல்லோருக்குமாக ஏற்பட்டதல்ல. இப்போது இருக்கும் அரசியல் நிலையைப் பார்த்து ஏதோ நான் சொல்லுவதாக நீங்கள் நினைத்துவிடக்கூடாது. நமது நாட்டில் அரசியல் என்பதாக ஒரு இயக்கம் ஆரம்பித்த காலத்திலேயே இதே கருத்துடனும், இதே கொள்கையுடனும்தான் ஆரம்பிக்கப்பட்டதே தவிர வேறில்லை. நமது நாட்டில் நடைபெற்று வரும் அரசியல் இயக்கமானது நமது நாட்டு பழக்க வழக்கங்களையும் நன்மையையும் ஆதாரமாய்க் கொண்டு ஆரம்பித்ததல்ல. இது மேல் நாட்டு முறையைப் பார்த்து ஆரம்பிக்கப் பட்டதேயாகும். பெரும்பாலும் உலகத்திலுள்ள அரசியல் என்பவைகளே யார் ஆட்சி புரிவது, யார் அதிகாரம் செய்வது, ஆட்சி புரிவதாலும், அதிகாரம் செலுத்துவதாலும் ஏற்படும் பயனை யார் அனுபவிப்பது, யார் ஆதிக்கம் பெறு வது என்பதைத்தான் கவலையாகக் கொண்டதேயொழிய, யார் பொது மக்களுக்கு பாமரமக்களுக்கு உபகாரம் செய்வது என்கிற கவலையே ஒரு சிறிதும் கொண்டதல்ல என்பதை தயவு செய்து கருத்தில் இருத்துங்கள். இம் மாதிரி ஆக்கமும், பலனும் அடைய வேண்டியவர்கள் அதற்கு ஒரு ஆயுத மாக பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காக, பொது ஜனங்களுக்கு உபகாரம் செய்வதாகச் சொல்லுவது உண்டு. இதை பாமர மக்கள் நம்பி அடிக்கடி ஏமாறுவதுண்டு. இதுதான் மேல் நாட்டு அரசியல் என்பது. நமது நாட்டு ஆங்கிலம் படித்தவர்கள் இதைப் பார்த்து தான் நமது நாட்டிலும் அதே மாதிரி அரசியல் இயக்கங்கள் ஆரம்பித்தார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இதில் ஆரம்பித்தவர்கள் அநேகமாக வெற்றியும் பெற்றார்கள். அவர்கள் வெற்றி பெற்றதின் பலனாய் நாட்டு மக்களுக்கு பெரிய இடையூறும் ஆபத்தும் கொடுமையும் வளர்ந்து கொண்டே வந்தன. இனியும் வரப் போகின்றன.

இக்கூட்டத்திலுள்ளவர்களையே நான் துணிந்து கேட்கிறேன். தயவு செய்து யாராவது பதில் சொல்லுங்கள். இந்த 42 வருஷத்திய அரசியல் இயக்கத்தால் அரசியல் கிளர்ச்சியில் நமது நாட்டிற்கு நமது பாமர மக்களுக்கு, விவசாயிகளுக்கு, தொழிலாளிகளுக்கு, வர்த்தகர்களுக்கு, கூலிக்காரர்களுக்கு ஏழைமக்களுக்கு ஏதாவது ஒரு காதொடிந்த ஊசியளவு பிரயோஜனம் ஏற்பட்டதாகச்சொல்லுங்கள் பார்க்கிறேன்.

இரண்டு பெரிய சீர்திருத்தங்கள் வந்தன. பெரிய பெரிய அதிகாரங்களும், சம்பளங்களும் நமக்கு கிடைத்தது என்று சொல்லுவீர்கள். இதைத் தவிர வேறு ஏதாவது சொல்லப் போகிறீர்களா? ஒன்றுமில்லை. இந்த உத்தியோகமும் சம்பளமும் யாருக்குக் கிடைத்தது. இதனால் யாருக்கு என்ன லாபம். இது இல்லாத காலத்தைவிட இது ஏற்பட்ட காலத்தில் உண்டான நன்மை என்ன? வெறும் ஏமாற்றலும், சிலரின் சுயநல சித்தியும் அல்லாமல் வேறு ஏதாவது ஏற்பட்டதாகச் சொல்ல முடியுமா? ஜனங்களுக்குள் கக்ஷியுண்டாக்கப்பட்ட தல்லாமல் வேறு ஏதாவது அவர்களுக்கு லாப முண்டா? சர்க்காரை உத்தியோகங்கள் கேட்பதும், அது கிடைத்தவுடன் யார் அதை அடைவது என்பதற்காக சண்டைப் போட்டுக் கொள்வதும் அதற்காகக் கக்ஷி ஏற்படுத்துவதும், மக்களை பிரிப்பதும் இதன் சுபாவமாய்ப் போய்விட்டது. அரசியல் கக்ஷிகள் என்பதின் உத்தேசம் தான் என்ன? ஒருவரிடமிருக்கும் உத்தியோகத்தை ஒருவன் பிடிங்கிக் கொள்ளச் செய்யும் தந்திரமேயல்லாமல் வேறு அதில் ஏதாவது நாணயமான எண்ணமுண்டா? பார்ப்பனரல்லாதார் கக்ஷியான ஜஸ்டிஸ் கக்ஷியின் பேரில் பார்ப்பனர்கள் குற்றம் சொல்லி வந்ததின் கருத்து என்ன? அவர்களிடமுள்ள அதிகாரத்தை பிடிங்கிக் கொள்வதற்கேயல்லாமல் வேறு என்ன? இன்றையதினம் பார்ப்பனர்களுக்கு இஷ்டமாயிருக்கும் தற்கால மந்திரிகள் பேரில் மற்றவர்கள் குற்றம் சொல்லும் கருத்து என்ன? இதை இப்படியே விட்டுவிட்டால் பார்ப்பன ஆதிக்கம் பெருகிவிடும் என்கிற எண்ணமேயல்லாமல் வேறு என்ன? ஆகவே இப்போதைய மந்திரியாவது முன் இருந்த மந்திரிகளாவது உத்தியோகத்தில் செய்த குற்றமென்ன? அவரவர்கள் ஆதிக்கத்திற்குத் தக்கப்படி உத்தியோகம் நடத்தும்போது மற்ற கக்ஷியாருக்கு விரோதமாயிருப்பதும் அவர்கள் அதை ஒழிக்க கிளர்ச்சி செய்வதும் தவிர வேறு என்ன அங்கிருக்கிறது.......... இதைத் தவிர வேறு வேலைதான் ஏதாவது அரசியல்காரருக்கு இருந்ததாகவோ, இருக்கிறதாகவோ சொல்லமுடியுமா? இந்த லக்ஷணத்தில் இந்த மாதிரி இரண்டு சீர்திருத்தங்களையும் நடத்திக் காட்டி விட்டதாகவும் இனி மூன்றாவது சீர்திருத்தம் வேண்டுமென்றும் கேட்கப்படுகின்றது. சர்க்காரும்



விசாரணை செய்து பார்த்து கொடுக்கப் போவதாக வேஷம் போட்டு கடைசியாக மூன்றாவது சீர்திருத்தம் என்பதாக ஒன்றை வழங்கப் போகிறார்கள். அது என்ன என்று கேட்பீர்களானால் இதை விட இன்னம் கொஞ்சம் பெரிய உத்தியோகங்கள். அதாவது இப்போது நிர்வாக சபை மெம்பர், மந்திரி ஆகியவை இதுவரை கொடுக்கப் பட்டது. இனி மாகாண கவர்னர் வேலைக் கொடுக்கப்படும். அப்படி கொடுப்பதால் வெள்ளைக் காரருக்கு இப்போது இருந்து வரும் அதிகாரமும் உத்தியோகமும் ஒரு சிறிதும் குறைந்து விடும் என்பதாக நினைத்து விடாதீர்கள். அதை உத்தேசித்து இப்போது முதலே அஸ்திவாரம் போட்டு வரப்படுகிறது.என்னவென்றால்:–

சென்னை மாகாணத்தை பாஷைவாரி மாகாணமாக பிரிக்க வேண்டுமென்று நமது அரசியல்காரர்கள் இப்போதே காங்கிரஸ் மூலம் தீர்மானம் செய்துவிட்டார்கள். அதாவது சென்னை மாகாணம் பாஷைகளை உத்தேசித்து 4 மாகாணமாகப் பிரிக்க வேண்டுமாம்.

தமிழ் மாகாணம், ஆந்திர மாகாணம், கேரள மாகாணம் என்பதாக நான்காய்ப் பிரித்தால் நாலு மாகாணத்திற்கு நாலு கவர்னர்கள் வேண்டிவரும். லார்ட் கோஷனுக்கோ தமிழ்நாடு என்பது இப்போது இருப்பது போலவே இருந்துவிடும். மற்ற மூன்றில் ஆந்திராவை ஸ்ரீமான் சீனிவாச சாஸ்திரி போன்றவருக்கு அதாவது “மகாத்மாவை ஜெயிலில் பிடித்து போடு” என்று யோசனை சொன்னவருக்கும், மற்ற இரண்டில் ஒன்று நமது டாக்டர் சுப்பராயன் போன்று சர்க்காருக்கு நல்ல பிள்ளையாய் இருப்பவருக்கும் கொடுத்து விட்டு ஒன்றை இன்னும் யாராவது ஒரு வெள்ளைக்காரருக்கும் கொடுத்து விடுவார்கள். பெயருக்கு இந்தியர்களுக்கு இரண்டு கவர்னர் வேலை கொடுத்ததாகவும் சீர்திருத்த சரித்திரத்தில் எழுத இடம் கிடைத்தது. அரசியல்காரருக்கும் அரசாங்கத்தாரோடு சண்டைபோட்டு கிளர்ச்சி செய்து கவர்னர் உத்தியோகம் வாங்கிக் கொடுத்துவிட்டோம் என்று சொல்லி பாமர மக்களை இன்னமும் ஏமாற்றவும் இடம் ஏற்படலாம். இவை ஆதாரமாகக் கொண்டு இன்னமும் சில உத்தியோகமும் ஏற்படலாம். ஆனால் இவைகளினால் நமது நாட்டுக்கு என்ன லாபம்? பாமர மக்களுக்கு என்ன லாபம்? வரி செலுத்துவோர்களுக்கு என்ன லாபம்? ஏழைகளுக்கு என்ன லாபம் என்பதை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இந்த அதிக சம்பளமுள்ள உத்தியோகங்கள் ஏற்படுத்தப்பட்டதற்கு ஏற்படும் செலவுக்கு யார் தலை யில் கை வைக்க வேண்டிவரும் என்பதை சற்று கவனித்துப் பாருங்கள். இந்தியர்களுக்கு உத்தியோகமும் பெருத்த சம்பளமும் கொடுப்பதன் மூலமாய் வெள்ளைக்காரர்கள் அனுபவிக்கும் உத்தியோகமும் சம்பளமும் குறைவுபடுவதாயிருந்தால் ஒரு விதத்திலாவது நமக்கு அது லாபம் என்று சொல்லலாம். அப்படியில்லாமல் எவ்வளவு சீர்திருத்தம் வந்தாலும் வெள்ளைக்காரர் அனுபவிக்கும் உத்தியோகம், சம்பளம் முதலியவைகள் குறையாமல், மேலும் அவர்களுக்கு அதிகமும் ஆகிக்கொண்டு அதை



RangaRakes
tamilnavarasam.com

அனுமதிப்பதற்கு லஞ்சம் கொடுப்பது போல நமக்கும் சில உத்தியோகங் களைக் கொடுத்து அந்த செலவுக்கு நமது குடியானவர்கள் , வியாபாரிகள் , பாமர மக்கள் முதலியவர்கள் தலையில் வரிப்பளுவை அதிகப்படுத்தி வருவதில் என்ன நன்மை இருக்கிறது? இவ்வளவு துன்பத்தோடு போவதல் லாமல் இந்த உத்தியோகத்தை நம்மில் யார் அனுபவிப்பது என்பதில் "எச்சில் இலைக்கு நாய்கள் சண்டைப் போட்டுக் கொள்வது போல்", நமக்கும் ஒருவருக்குக் கொருவர் கக்ஷி, ஜாதிபிளவு, மதப்பிளவு, கிராமப்பிளவு, குடும்பப் பிளவு, சகோதரப்பிளவு முதலிய ஒற்றுமை குறைவுகள் எவ்வள வென்பதையும் கவனித்துப் பாருங்கள் . இதோடு தேர்தல் சுதந்திரம் என்பதாக நமக்குக் கிடைத்திருக்கும் சுதந்திரத்தைப் போல் மோசமான காரியம் வேறு ஒன்று இருப்பதாகவே சொல்ல முடியவில்லை. ஓட்டர்கள் அதிகமானார்களே யொழிய ஓட்டுகளை எப்படி உபயோகிப்பது என்கிற அறிவு 100 - க்கு 5 ஓட்டர்களுக்குக் கூட கற்பிக்கப்படவே இல்லை. ஆராய்ச்சி இல்லாமலே ஓட் செய்யக் கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள் . அதோடு மனிதன் நாணயக் குறைவு கற்பதற்கு முதல் பள்ளிக்கூடம் ஓட்டராவதாய் இருக்கிறது. 4 அணா 2 அணாவுக்கு கள்ளு சாப்பிடும் ஓட்டுகள் விலை கூறப்படுகிறதை தினம் பார்த்து வருகிறேன். தேர்தலில் வெற்றி பெறுவது என்பது பணம் செலவு செய்வதை பொருத்தும், பொய்ப்பித்தலாட்டம் பேசுவதற்கு சக்தி இருப்பதைப் பொருத்தும் முடிவாகிறதே தவிர மனிதனின் யோக்கியதையையோ, பரோபகார குணத்தைப் பொருத்தோ ஏற்படுகிறதா என்பதை யோசித்துப் பாருங்கள் . 1000, 10000, 50000 என்பதாக செலவு செய்து ஓட்டுகளுக்கு லஞ்சம் கொடுத்து சட்டசபை முதலிய ஸ்தானங்கள் பெறுகிறவன் யோக்கியனாக யிருப்பானா? இருக்க முடியுமா? ஆகவே இம்மாதிரி ஆபாசங்களும் அயோக்கியத்தனங்களும் தேசத்துக்கு துரோகம் செய்து பாமர மக்களையும் வஞ்சித்து பாழ்படுத்தும் பலனை அரசியல் பலன் என்று எந்த மூடனாவது ஒத்துக் கொள்ள முடியுமா? என்பதை தயவு செய்து யோசியுங்கள் . நான் தேசத் துரோகியல்ல. நானும் தேசத்துக்காக என்று கொஞ்சமாவது உழைத் தவன். அதற்குள் புகுந்து அதன் வண்டவாளங்களைத் தெரிந்து வந்து உங்க ளிடம் சொல்லுகிறேனேயல்லாமல் சர்க்காருக்கு உள்ளாள் என்று நினைக்கா தீர்கள் . நான் போகிறவிடமெல்லாம் போலீஸ்காரன் என்னைத் தொடர்ந்து கொண்டுதான் வருகிறான். வீணாய் அரசியல், அரசியல் என்று கருதி நாட்டையும், ஏழை மக்களையும் குழியில் வீழ்த்தாதீர்கள் என்று சொல்லி விட்டு மதப் புரட்டைப் பற்றிச் சில வார்த்தை சொல்லுகிறேன். ( தொடர்ச்சி 11.09.27 இதழில் )

*குறிப்பு : குற்றாலத்தில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 04.09.1927**



# சுசீந்திரம் சத்தியாக்கிரகம்

திருவாங்கூர் சமஸ்தானத்தில் பொது ஜனங்கள் அதாவது ஈழவர் முதலானவர்களை சில பொதுத் தெருக்களில் நடக்க விடாமல் கொடுமைப் படுத்தி வந்ததின் காரணமாக வைக்கத்தில் சத்தியாக்கிரகம் செய்ததும், அது ஒருவாறு அனுகூலமாய் முடிவடைந்ததும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதன் பிறகும் அதே ராஜ்ஜியத்தில் மற்றும் பல பொதுத் தெருக்களில் நடக்க உரிமை கொடுக்காமல் ஜனங்களை உபத்திரவப் படுத்துவதும், சிற்சில இடங்களை அந்த சர்க்கார் அனுமதித்து வருவதும் நேயர்கள் அறிந்திருக் கலாம். ஆனால் நாகர்கோவிலுக்கு அடுத்த சுசீந்திரம் என்னும் ஒரு ஊரிலும் இதே மாதிரி ஈழவர் முதலான ஜனங்களை நடக்க விடாமல் கொடுமைப் படுத்தி வந்ததை உத்தேசித்து அதில் சத்தியாக்கிரகம் சென்ற ௵ ஆரம்பிக் கப்பட்டது. ஆனால் அதிகாரிகளும் சில அதிகாரிகளுக்கு நல்ல பிள்ளை ஆக வேண்டு மென்று நினைத்தவர்களும், அந்த சத்தியாக்கிரகம் நடத்தின தலைவர்களை ஏமாற்றி, சீக்கிரத்தில் யெல்லோருக்கும் வழி திறந்து விடப் படும் என்றும், சத்தியாக்கிரகத்தை நிறுத்திவிடும்படியும் சொல்லி வஞ்சித்து சத்தியாக்கிரகத்தை திடீரென்று நிறுத்தும்படி செய்து விட்டார்கள் . இம்மாதிரி ௸ சத்தியாக்கிரகம் நிறுத்தி சுமார் ஒன்றரை வருஷமாகியும் நாளதுவரை யாதொரு முடிவும் ஏற்படாமல் இருந்து வருவதோடு, இப்போது சர்க்கார் வேறு ரோட்டு போட்டுக் கொடுப்பதாகவும் அதற்கு ரூபா பத்தாயிரம் வரை அரசாங்கத்தாரால் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இம் மாதிரி செய்வதற்கு அந்த ஊர்க்காரர்களும் மற்றும் அந்த சத்தியாக்கிரகத்தில் சம்மந்தப்பட்டவர்களும் அனுமதிப்பார்களேயானால் அதைவிட மானக் கேடான காரியம் வேறில்லை என்பதே நமது அபிப்பிராயம். ஆதலால் சத்தி யாக்கிரகத் தலைவர்கள் ஊர் ஜனங்களுடனும் சுற்றுப்பக்கத்து பிரமுகர் களுடனும் தொண்டர்களுடனும் கலந்து சர்க்காருக்கு ஒரு மாத வாய்தா கண்டு ஒரு இருதிக் கடிதத்தை அனுப்பி விட்டு அதற்குள் தேவையான பிரசாரம் செய்து தக்க ஆதரவு தேடிக் கொண்டு உடனே சத்தியாக்கிரகத்தை தொடங்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

தமிழ்நாட்டில் உற்சாகம் உள்ள பல தொண்டர்கள் பார்ப்பனர்களால் ஏமாற்றப்பட்டு வீண் காரியத்தில் பிரவேசித்து அனாவசியமாய் சிறை சென்று



RangaRakes
tamilnavarasam.com

வருகிறார்கள். இப்படி ஒரு காரியம் ஆரம்பித்தால் பலர் இவ்விடமிருந்து கூட வந்தாலும் வருவார்கள். இதை தக்கப்படி யோசிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

குடி அரசு - கட்டுரை - 04.09.1927



# கோயமுத்தூர் தொழிலாளர் வேலை நிறுத்தம்

கோயமுத்தூரில் நூலாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஏற்பட்டதைப் பற்றி நாம் மிகவும் மன வருத்தமடைகிறோம். தொழிலாளர்கள் பால் நமக்குண்டான அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நிற்க, இம்மாதிரியான ஒரு சம்பவம் ஏற்பட்டதானது பார்ப்பனரல்லாத ஏழை மக்களி னது துரதிஷ்டவசமென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. தொழிலாள சகோதரர்கள் தங்களை ஒழுங்காய் நடத்தித் தரத்தக்க ஒரு தலைவரை தங்க ளுக்குள் அடைய யோக்கியதையற்ற காரணத்தினாலேயே இம்மாதிரியான துரதிர்ஷ்ட்ட வசமான சம்பவம் ஏற்பட நேரிட்டதென்பதே நமதபிப்பிராயம். அல்லாமலும் கோவை தொழிலாளர்களின் தலைவரான ஸ்ரீமான் என்.எஸ். ராமசாமி அய்யங்காரவர்கள் தொழிலாளர்களுக்குத் தலைவராயிருந்து நடத்த எந்த விதத்தில் உரிமையுடையவர் அல்லது யோக்கியதை உடையவர் என்பது நமக்கு விளங்கவில்லை. தொழிலாளரைத் தவிர மற்ற யாரும் தொழிலாள ருக்குத் தலைவராயிருக்கக் கூடாதென்று அநேகத் தடவைகளில் நாம் எழுதியும் தொழிலாளர் கூட்டங்களில் பேசியும் வந்திருப்பது நேயர்க ளுக்கு ஞாபகமிருக்கலாம். அல்லாமலும் இம்மாதிரி வேலை நிறுத்தம் செய்வதைப் பற்றியும் நாம் பலமாகக் கண்டித்து எழுதியும் பேசியும் வந்தி ருப்பது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஸ்ரீமான் ராமசாமி அய்யங்கார் எந்த விதத்தில் என்ன மாதிரியான தொழிலாளராவார். அல்லாமலும் அவருக்கும் தொழிலாளர்களுக்கும் எந்த விதத்தில் சம்மந்தம் உண்டு. அவர் தேசத்தை பாழ் பண்ணியும், பாமர மக்களை வஞ்சித்தும், நாணயக் குறை வினாலேயே காலத்தை கழிக்க வேண்டியதான வக்கீல் உத்தியோகம் செய்பவர். அன்றியும் மக்களை சமமான கண்ணில் பார்க்காமல் 100 - க்கு 99 பேர்களான தொழிலாளிகளையே அதாவது தங்கள் சரீரத்தால் உழைத்துச் சாப்பிடும் கண்ணியமானத் தொழில் மக்களைத் தாழ்ந்த பிறவி என்றும், மக்களை ஏமாற்றி ஊரார் உழைப்பால் பிழைக்கும் தன்னைப் போன்றார்களை உயர்ந்த பிறவி யென்றும் எண்ணி அந்தப்படிக்கே நடந்து வருகிற சாதியை சேர்ந்தவர். அதுமாத்திரமல்லாமல் இப்போது அவர் செல்ல ஏற்பட்ட ஜெயிலிலேயும் அங்குள்ள ஆயிரக்கணக்கான சகோதரர்களைவிட தனக்கு அதிகமான வேறு சௌகரியமும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் வேறு ஒருவன்



RangaRakes tamilnavarasam.com

அதாவது உயர்ந்த ஜாதியானென்று சொல்லிக் கொள்ளுகிற தன் ஜாதிக்காரன் ஒருவனே சமையல் செய்து போட வேண்டுமென்றதுமான தனி உரிமை கொண்டாடுபவர். மற்றும் அவரது தைரியம், சுயமரியாதை, நாணயம் இவைகளைப் பற்றி நாம் எழுதித் தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற அவசியமில்லாமலே தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாய்த் தெரியக்கூடும். அன்றியும், தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து கஷ்டப்படுவதில் அவருக்குள்ள கவலை என்ன என்பதை அவர் தன்னை ஜாமீனில் விடும்படிக் கேட்டுக் கொண்ட விண்ணப்பத்தைப் பார்த்தால் சுலபமாய் அறியலாம். அதாவது தன்னை சிறையில் வைத்திருப்பதால்தான் பீஸ் வாங்கிக் கொண்ட கேஸ்களுக்கு கெடுதி வந்து விடுமென்றும் அதற்காக வேண்டி வெளியில் விட வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. தவிர அவரைக் கைது செய்ததைப் பாராட்டுவதற்காக பாராட்டுக் கூட்டமும் இவர் போன்ற பார்ப்பனர்களாலே முக்கியஸ்தர்களாக இருந்து நடத்தப்பட்டிருக்கிறது. இவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் எந்த விதம் சம்மந்தமிருக்க முடியும். பார்ப்பனரல்லாதார்களுக்கு ஏதாவது ஒரு இடத்தில் கொஞ்சம் செல்வாக்கிருக்குமானால் அந்த செல்வாக்கை யொழித்து பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்த தொழிலாளர் கிளர்ச்சியென்றும், வரி செலுத்து வோர் கிளர்ச்சியென்றும், ரயில்வே பிரயாணிகள் கிளர்ச்சி என்றும், குழாய் தண்ணீர் குடிக்கிறவர்கள் கிளர்ச்சியென்றும், தெருவில் நடக்கிறவர்கள் கிளர்ச்சி யென்றும் மற்றும் ஏதாவதொரு கிளர்ச்சியின் பெயரையோ, சங்கத் தின் பெயரையோ, சொல்லிக் கொண்டு அதில் தங்களைத் தலைவர்களாகவும், காரியதரிசிகளாகவும் தங்களைத்தாங்களே தெரிந்தெடுத்துக்கொண்டு அதன் மூலம் பார்ப்பனரல்லாத பாமர மக்களையும், வாயில்லாப் பூச்சிகளையும் வசப் படுத்திக் கொண்டு ஆங்காங்கு பார்ப்பனரல்லாதார் நன்மைக்காகப் பாடுபடுப வர்கள் யாராவதிருந்தால் அவர்களை வையவும் அவர்களுக்கிருக்கும் செல்வாக்கை ஒழிக்கவும் இவர்களை ஏவிவிட்டு அந்த ஸ்தானத்தில் தாங்கள் அமர்வதையே முக்கியக் கருத்தாகக் கொண்டு இம்மாதிரி காரியங்கள் நடத்தி வரப்படுகிறது. இதற்கு உதாரணமாக பார்ப்பனரல்லாதார்களில் 100-க்கு 99 பேர்களால் போற்றப்பட்டும் மரியாதை செய்யப்பட்டும் வந்த, வருகிற பெரியாரான சர். தியாகராயப் பெருமானவர்களின் வீட்டுக்கு இது போன்ற தொழிலாளர் கூட்டங்களை ஒருகாலத்தில் ஏவிவிட்டு, அவரை அடிக்கச் செய்ததும், அவர் வீட்டு ஜன்னல், கதவு, கண்ணாடிகளை உடைக்கச் செய்த தும், அவரது அருமை மனைவியார் இந்த தொழிலாளர்களிடம் தனக்கு மாங்கல்யப் பிச்சை கொடுக்க வேண்டுமென்று தனது முந்தானையைப் போட்டுக் கும்பிட்டுக் கெஞ்சினதும் யாரும் அதற்குள் மறந்திருக்க முடியாது. சென்றமாதத்தில் அதே தொழிலாளர் கூட்ட நண்பரில் ஒருவர் முனிசிபல் ஸ்தானத்துக்கு நின்றபோது அவருக்கு எதிரிடையாய் அவர்களை ஏவிவிட்ட கூட்டத்தாரே வேலை செய்து அவரைத் தோற்கடிக்கப் பார்த்ததும் ஜன்னலும் கதவும் உடைக்கக் கொடுத்து, மாங்கல்யப் பிச்சை கேட்ட கூட்டத்தாரே



அத்தொழிலாளர்களுக்கு உதவி செய்ததும் யாவரும் அறிந்திருக்கக்கூடும். நிற்க,

ஸ்ரீமான் சி. வி. வெங்கட்டரமணய்யங்கார் என்கிற மற்றொரு பார்ப்பனர் கோவைத் தொழிலாளர் விஷயத்தில் மிக்க அநுதாபமுள்ளவர் போல சந்தடி சாக்கில் தலையை நீட்டிக் கொள்ளுகிறார். இவருக்குத் தொழிலாளர் விஷயத்தில் எப்படி அனுதாபமிருக்க முடியும். எந்தெந்த மில் தொழிலாளர்கள் இப்பொழுது வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்களோ அந்தந்த மில்களிலெல்லாம் ஸ்ரீமான் வெங்கட்டரமணய்யங்காருக்கு பங்கு இருப்பதோடு தானும் சிலவற்றிற்கு நிர்வாகஸ்தராகவும் இருக்கிறார். ஆகவே இவர் தொழிலாளரை விட உயர்ந்த ஜாதியாரென்று சொல்லிக் கொள்வதோடு முதலாளி கூட்டத்திலும் சேர்ந்து கொண்டு 100 -க்கு வருஷம் 1 -க்கு 30, 40, 50 வீதம் லாபமும் பெற்றுக் கொண்டு நிர்வாகத்தையும் நடத்திக் கொண்டு இருக்கிற இவர் உண்மையில் எப்படித்தொழிலாளர்களிடம் அனுதாபம் காட்ட முடியும். இவருக்குத் தொழிலாளர்களிடம் உண்மையாகவே அனுதாபமி ருக்குமானால், தான் நடந்து கொள்ள வேண்டிய மாதிரி என்ன? தன்னோடு சேர்ந்த முதலாளிகளிடம் போய், ஒன்று இத்தொழிலாளர்களுக்கு இன்னின்ன சௌகரியம் செய்து கொடுக்க வேண்டும், இல்லாவிட்டால் என்னுடைய டைரக்டர் ஸ்தானத்தை ராஜினாமா செய்து விடுகிறேன் என்று சொல்ல வேண்டும். அல்லது இம்மாதிரி ஏழைகளைக் கஷ்டப்படுத்தி சம்பாதித்த லாபம் எனக்கு வேண்டாம். என்னுடைய பணத்தைக் கொடுத்து விடுங்கள் என்று சொல்ல வேண்டும். அப்படிக்கில்லாமல் முதலாளி கூட்டத்தில் சேர்ந்து கொண்டு தன்னுடைய பணத்துக்கு வருஷம் 1 - க்கு 30, 40, 50 வீதம் லாபம் சம்பாதித்து மூட்டைக் கட்டிக் கொண்டு தொழிலாளர்களிடம் வந்து "நான் உங்களுக்காக பாடுபடுகிறேன். முதலாளிகள் செய்வது அக்கிரமம். சர்க்கார் செய்வது அக்கிரமம்" என்று பேசி பாமர மக்களின் ஓட்டைப் பெற பார்ப்ப தினால் தொழிலாளர்களுக்கு என்ன லாபம் வந்து விடும். இவர்களுடைய முயற்சிகள் எந்த விதத்தில் யோக்கியமான பலனைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும் என்பதை நேயர்கள் யோசிக்க வேண்டும். தவிர ஸ்ரீமான் ராமசாமி அய்யங்காருக்காக கோர்ட்டில் பேசும் வக்கீலோ ஸ்ரீமான் சி. விஜயராகவாச் சாரியார் என்னும் பெரியார். அவர் பீஸுக்காக இந்த கேசில் பேச வந்தால் அவரைப் பற்றி இங்கு ஒன்றும் சொல்ல வரமாட்டோம். அப்படிக்கில்லாமல், மாட்டிக் கொண்டவர் அய்யங்கார் பிராமணராதலால் அவரை தப்பிவித்து விட வேண்டுமென்கிற ஆசையல்லாமல் வேறில்லை. ஆகவே இந்தக் கூட்டத்தார் இது விஷயமாய்ச் செய்யும் ஆர்பாட்டத்தின் கருத்து என்ன என்பதை நாம் யோசித்தால் விளங்காமல் போகாது. வரப் போகும் தேர்தல் களில் தாங்கள் ஏழை மக்களின் நண்பர்கள் என்று காட்டி, பாமர மக்களை ஏமாற்றி ஓட்டு பெறுவதற்கும், தங்களுக்கு கிடைக்காது என்று தெரிகிற சந்தர்ப்பங்களில் தங்களது அடிமைகளைக் கொண்டு வந்து அந்த ஸ்தானங்



RangaRakes tamilnavarasam.com

களில் வைக்கவுமேயல்லாமல் வேறு எந்த விதமாகவும் தொழிலாளர்களிடம் காருண்யம் இருக்க நியாயமில்லை என்பது விளங்காமல் போகாது. எனவே இந்த கூட்டாத்தார் இம்மாதிரியான சம்பவங்களின் மூலம் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்கும், அந்த விளம்பரத்தின் செல்வாக்கைப் பார்ப்பனரல்லாதார்களுக்கு விரோதமாய் உபயோகித்துப் பார்ப்பன ஆதிக் கத்தை நிலை நிறுத்தவுமே வாயில்லா பூச்சிகளான பதினாயிரக்கணக்கான தொழிலாளர்களை பட்டினிக் கிடக்கும்படி கொடுமை செய்து விட்டார்களென் பதே இக்கிளர்ச்சியைப் பற்றின நமது முடிவான அபிப்பிராயம். அடுத்த தேர்தலுக்கு ஆசைப்பட்ட பார்ப்பனரல்லாத இரண்டொருவரும் தங்களுக்கு கிடைக்க வேண்டிய ஓட்டுகளை உத்தேசித்து இச் சந்தர்ப்பத்தில் தங்களு டைய பேர்களையும் கொடுத்திருக்கிறார்கள் . இவைகளினால் தொழிலாளர் இயக்கம் என்பது எவ்வளவு புரட்டும் மோசடியுமானதென்பதும், இத் ‘தலைவர்’களின் யோக்கியதையும் எண்ணமும் எப்படிப்பட்ட தென்பதும் முதலாளிமார்களுக்கோ சர்க்காருக்கோ தெரியாமல் போக இடமுண்டா? இந்தக் காரணங்களால் தான் அநேகமாக முதலாளிமார்களும் கடின சித்தத் தோடிருக்கவும், சர்க்காரும் யோக்கிய பொறுப்பற்ற வழியில் இக்கிளர்ச்சி களை அடக்க முயற்சிப்பதும் நமக்கு அதிசயமல்ல வென்றே தோன்றுகிறது.

நிற்க, பிறவியினாலேயே உயர்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனீயத்தையும், அதன் ஆதிக்கத்தையும் வேரோடு அழிக்க வேண்டு மென்பது எவ்வளவு முக்கியமானதோ அது போலவே பணமுடையவன் உயர்ந்தவன் என்கிற தத்துவத்தையும் பணக்கார ஆதிக்கத்தையும் அடியோடு அழிக்க வேண்டியது என்பதும் அவ்வளவு முக்கியமானதென்பதே நமதபிப்பிராயம். ஆனால் பிறவியின் காரணமாக ஒரு பிச்சைக்காரனும் அயோக்கியனும் கூட தன்னை பெரியவனென்று சொல்லிக் கொள்ளும் உரிமையை நம்மால் அழிக்க முடியாமல் இருக்கும் போது பெரும் பணம் வைத்துக் கொண்டு அப்பணத்தால் பல வழிகளிலும் செல்வாக்குப் பெற்றுக் கொண்டு அப்பணத்தை மக்களுக்குக் கொடுத்து வசப்படுத்திக் கொள்ளும் சக்தி இருப்பவனை எப்படி அழிக்க முடியும். அல்லாமலும், அதைவிட இதற்கென்ன அவசரம் என்றும் பார்க்க வேண்டியிருக்கிறதே யல்லாமல் வேறல்ல. தவிரவும் பிறவியில் உயர்வு என்கிற கொடுமை ஒழிந்தவுடன் பணத்தால் உயர்வு என்கிற கொடுமையை ஒழிக்கும்வேலைதான் பொதுநல சேவையாக ஏற்பட வேண்டும் என்பதுதான் நமது அபிப்பிராயம். அதுதான் இயற்கையுமாகும். ஆகவே இந்த இரண்டு காரியமும் முடிந்த பிறகுதான் சர்க்காரின் கொடுமையும் ஆதிக்கமும் தானாகவே ஒழிந்துவிடும். முன் சொன்ன இரண்டையும் வைத்துக் கொண்டு சர்க்கார் ஆதிக்கத்தை ஒழிப்பது என்பது உயர்ந்த ஜாதியான் என்பவன் இன்னும் கொஞ்சம் உயர்வதற்கும், பணக்காரன் என்பவன் இன்னும் கொஞ்சம் பணக்காரனாவதற்கும் உபயோகப்படுவதோடு உயர்ந்த ஜாதியான் என்பவன் ஜாதித் திமிரோடு



பணத்திமிரும் அடையவும், பணக்காரனென்பவன் பணத் திமிரோடு ஜாதித் திமிரடையவும் ஏற்பட்டு விடும். உதாரணமாக உயர்ந்த ஜாதியார் என்பவர் பணக்காரர்களாகி வருவதும் பணக்காரராயிருப்பவர் உயர்ந்த ஜாதிக் காரர்களாகி வருவதும் அநுபவத்தில் பார்க்கலாம்.

முடிவாக, முதலாளிகளுக்கும் நாம் சொல்லுவதென்னவென்றால் தொழிலாளர் கிளர்ச்சி என்கிற இம்மாதிரி கிளர்ச்சிகளெல்லாம் பார்ப்பனர்கள் தங்களுடைய சுயநலத்திற்காக ஆரம்பித்தார்களென்பது பெரும்பாலும் மறுக்க முடியாத உண்மையென்று வைத்துக் கொண்டாலும் அந்தக் காரணத்தை வைத்துக் கொண்டு வாயில்லா பூச்சிகளான தொழிலாளர்களின் நன்மையைப் புறக்கணிப்பது கொடுமையும் மனித தன்மையற்ற செய்கை யுமாகும். தொழிலாளர்கள் தங்களுடைய வயிற்று பசிக்காக எவ்வளவு கொடுமைக்கும் உட்படுவதாயிருந்தாலும் அந்தக் காரணத்தை வைத்துக் கொண்டே அவர்களை கொடுமைப்படுத்துவது மிகவும் இழிவானதென்பதே மறுபடியும் சொல்லுகிறோம். தொழிலாளர் என்கிற ஒரு கூட்டமும், அவர்களு டைய உழைப்பும் இல்லாவிட்டால் முதலாளிகள் எப்படி பணம் சம்பாதிக் கக்கூடும்? இந்த சமயம் தொழிலாளிகளை முதலாளிகளாயிருப்பவர்கள் தோற்கடித்து விட்டாலும், அதன் பலனை எந்த விதத்திலும் முதலாளிகள் அடைந்துதான் தீரவேண்டும். வெறும் கோவில் கட்டுவதிலும், குளங்கள் வெட்டுவதிலும், பார்ப்பனர் காலில் பணம் கொட்டுவதிலும், மோட்சமடைந்து விடலாமென்பது வடிகட்டின முட்டாள் தனமேயாகும். மோட்சமென்பதாக ஒன்று இருக்கிறதென்று யாராவது நம்புவார்களேயானால் அவர்கள் ஏழை களை கொடுமைப் படுத்தாமலும் கூலிக்காரர்கள் வாயில் மண்ணைப் போடாமலும் இருப்பது தான் அம்மோட்சத்திற்கு வழி என்பதை உணர வேண்டும். அன்றியும் நமது நாட்டில் வெகு சீக்கிரத்தில் உண்மையான தொழி லாளர் கிளர்ச்சி ஏற்படப் போகிறதென்பதை முதலாளிமார்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அந்தக் கிளர்ச்சியை பார்ப்பனர்களாவது சர்க்காரைக் கொண்டு முதலாளிமார்களாவது ஒருக்காலும் ஏமாற்ற முடியாது என்பதையும் முதலாளிமார்களுக்கு அவர்களிடத்தில் நமக்குள்ள பற்றுதலினால் எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 04.09.1927**



RangaRakes
tamilnavarasam.com

# மகாத்மா காந்தியும் பார்ப்பனப் பிரசாரமும்

மகாத்மா காந்தியும் வர்ணாசிரமமும் என்பதாக இரண்டொரு தலையங்கங்கள் எழுதி வந்ததை நேயர்கள் படித்திருப்பார்கள் . இப்பொழுது மகாத்மா காந்தியும் பார்ப்பனீய பிரசாரமும் என்பது பற்றி எழுத நேர்ந்ததற்கு மிகவும் வருத்தப்படுகிறோமாகினும் எழுதாமலிருப்பதற்கு முடியவில்லை. இதற்கு முன் எழுதிய தலையங்கத்தில் நாம் கண்டிக்க நேர்ந்த விஷயமானது மகாத்மா அவர்கள் வர்ணாசிரம தர்மம் என்கிற ஜாதிப் பிளவுகள் உண்டு என்றும், அதுவும் மக்களுக்கு பிறவியிலேயே உண்டு என்றும் அவனவன் பிறவி ஜாதிக் கேற்ற தர்மத்தையே (தொழிலையே) செய்து தீர வேண்டுமென்றும் அந்தப்படி செய்யாமல் தவறுவானேயானால் அவன் தாழ்ந்த ஜாதியான் ஆகிவிடுவான் என்றும் மகாத்மா சொல்லியும் எழுதியும் வந்த விஷயத்தைத்தான் நாம் தமிழ் நாட்டின் நிலைமையையும், நாகரீகத்தையும், தமிழ் மக்களின் முன்னேற்றத்தையும், அவர்களது உரிமையையும் சுயமரியாதையையும் உத்தேசித்து கண்டிக்க நேர்ந்தது. இப்பொழுது "குதிரை கீழே தள்ளினதல்லாமல் புதைக்குழியும் தோண்டிற்று" என்கிற பழமொழிபோல் பழய புராணப் பிரசாரம் என்கிற பார்ப்பனப் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டதைப் பார்க்க நமது மனம் பதறுகிறது. பார்ப்பனரல்லாதாரியக்கத்தின் வேலையின் பயனாகவும் 'குடி அரசி'னுடையும் மற்றும் சில தமிழ் பத்திரிகையினுடையவும் வேலையின் பயனாகவும் பிடிவாதக்காரர்களும் கொஞ்சம் கொஞ்சம் மூட நம்பிக்கைகளையும் புராண புரட்டுகளையும் உதறித் தள்ளி பகுத்தறிவை உபயோகிக்கலாமா என்கிற அளவுக்கு வந்திருக்கிறார்கள். நமது நாட்டுப் பார்ப்பனர்களிலும் ஒரு சாரார் இவற்றிற்கு சம்மதம் கொடுப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லாமல் தாங்களும் குருட்டு நம்பிக்கைகளிலிருந்தும் புராணப் புரட்டுகளிலிருந்தும் விலக வேண்டியது நாட்டின் முன்னேற்றத்தை உத்தேசித்து அவசியமானதென்று சிற்சிலர் பேசியும் வருகிறார்கள் . சமீபத்தில் திருவாரூரில் கூடிய வைஷ்ணவ சித்தாந்த சபை என்கிற ஒரு பார்ப்பன ஆதிக்க சபையின் 10 - வது வருஷக் கூட்டத்தில் அக்கிராசனம் வகித்த ஒரு பார்ப்பனர் தமது முகவுரையில் "நமது பழய அனாவசியமான குருட்டு பழக்க வழக்கங்களையும் மூடநம்பிக்கை களையும் விட்டுவிட வேண்டும். அப்படிச் செய்தால் தான் நம்முடைய மதம் நிலை பெற்று நிற்கும். அதன் மூலமாக இந்துக்களாகிய நாம் கடைத்தேறலாம்" என்பதாக பேசியிருக்கிறார்.



சமீபத்தில் பம்பாயிலுள்ள யாங்சாம்பூ என்ற ஒரு பிரபல சீனப் பெரியார் இந்தியர்கள் விடுதலை பெறாமலிருப்பதற்கு காரணம் அவர்களுடைய மூடநம்பிக்கையும் அவர்களது மத சம்மந்தமான புராணக் கதைகளுமே காரணமென்றும், இந்திய சமூகத்துக்கு இன்றியமையாத சாதனங்களென்று கருதப்படும் புராணங்களையும் கதைகளையும் பிறவற்றையும், தூர ஒதுக்கித் தள்ளி சுயமரியாதை அடையுங்கள் . அப்பொழுதுதான் விடுதலை அடைய முடியும் என்றும் சொல்லியிருக்கிறார். நாமும் இப்புராண புரட்டுகளையும் மூடநம்பிக்கைகளையும் ஒழித்து சுயமரியாதை அடைந்துதான் விடுதலை பெறவேண்டுமென்பதாக இவ்விரண்டு வருஷங்களாக சலிப்பின்றி உழைத்து வருவதும் நேயர்கள் அறிந்திருக்கலாம். இம்மாதிரியான ஒரு நல்ல சந்தர்ப்பத்தில், அதாவது ஜனங்கள் விழிப்படையக்கூடிய சமயத்தில் நமது நாட்டுப் பார்ப்பனர்கள் இவைகளுக்கு விரோதமாய் மறுபடியும் பாட்டிக் கதைகளான புராண பிரசங்கங்கள் செய்து மக்களை அறியாமை என்னும் மூட நம்பிக்கைகளில் அழுத்த மகாத்மாவைக் கதரின் பேரால் தமிழ் நாட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்து பார்ப்பன பிரசாரம் செய்விக்கிறார்கள் . உதாரணமாக சமீபத்தில் வேலூரில் வாலிபர்களுக்கு உபதேசம் செய்த ஒரு பிரசங்கத்தில் வாலிபர்களைப் பார்த்து "நீங்கள் ரிஷிகளும் ஆச்சாரியர்களும், பெரியோர்களும் சொன்ன அவர்களுடைய உபதேசத்தை திடீரென்று தள்ளிவிடாமல் அவைகளுக்கு பணிந்து நடக்கும் தன்மையை உங்களிடம் உண்டாக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்று பேசியிருக்கிறார். பரிசுத்தத் தன்மையுள்ள வாலிபர்களிடத்தில் போய் இம்மாதிரியாக அவர்களுக்கு உபதேசம் செய்தால் அவர்களுடைய பிற்கால வாழ்வு மூடநம்பிக்கையில் அழுத்தப்பட்டுப் போகுமா அல்லவா என்பதை வாசகர்களே உணர வேண்டும். அன்றியும் வேலூரில் ஒரு பெண்கள் கூட்டத்தில் பிரசங்கம் செய்யும்போது ராமாயணக் கதையை அவர்களுக்கு உபதேசித்திருக்கிறார். இவைகளை எல்லாம் மகாத்மா அவர்களிடம் உள்ள பக்தியினால் உண்மை என்று நம்பும் அவர்கள் தங்கள் குழந்தை குட்டிகளுக்கும் இதே பாட்டிக் கதையை போதிக்கவும் அதனால் நமது சமூகம் இழிவடையவும் ஏற்படுகிறதா இல்லையா? இம்மாதிரி கதைகளை ஒரு நல்ல உதாரணத்துக்காக எடுத்து கையாளுவதாகச் சொல்லிக் கொள்வதாயிருந்தாலும் அதிலுள்ள தீங்கு எந்த நன்மைக்காக எடுத்துச் சொல்லப்படுகிறதோ அந்த நன்மையைவிட ஆயிர மடங்கதிகமானதாயிருப்பதால் இதை பற்றி நாம் கண்டனம் எழுதுகிறோமே தவிர வேறல்ல.

இதை படிக்கிறவர்களுக்குக்கூட ஒருக்கால் நம் மீது வெறுப்பேற்பட்டாலும் படலாம். அதாவது இதென்ன! ராமாயணத்தைப் பற்றிக் கூட குற்றம் சொல்ல ஆரம்பித்துவிட்டது. வரவர ரொம்ப மோசமாய் போய்விட்டதென்று எண்ணினாலும் எண்ணலாம். தமிழ் மக்கள் சுயமரியாதை அடைய வேண்டுமானால் இவற்றையெல்லாம் குப்பையில் தள்ளினால் ஒழிய ஒரு



RangaRakes tamilnavarasam.com

வழியிலும் விமோசனம் கிடையாது. ஏதோ ஒரு காரியம் காதுக்கினிமையாய் இருக்கிற தென்பதற்காகவோ, பக்திக்காகவோ, பயத்துக்காகவோ ராமாய ணத்தை உண்மையில் நடந்த விஷயமென்றும் அதிலுள்ள கொள்கையின்படி நடக்க வேண்டியதென்றும் ஒப்புக் கொள்வோமானால் அதன் மூலம் மற்ற விஷயங்கள் நம்மை என்ன நிலைமைக்கு கொண்டு வந்து விட்டு விடுகிற தென்பதை சற்று யோசித்துப் பார்த்து பிறகு ஒரு முடிவுக்கு வரும்படியாய் கேட்டுக் கொள்ளுகிறேன். அதே ராமாயணத்தில் மற்றொரு இடத்தில் ஒரு விஷயம் இருக்கிறது. அதாவது ஒரு நாள் வயோதிகப் பிராமணன் இறந்து போன தன்னுடைய வாலிப குமாரனை தூக்கிக் கொண்டு வந்து ராமன் முன்பாக போட்டு ராமனைப் பார்த்து உன்னுடைய நீதியான அரசாங்கத்தில் என்னுடைய இளவயது மகன் எப்படி சாகக்கூடும் என்று கேட்டதாகவும் உடனே அரசனாகிய ராமன் தன்னுடைய நாட்டில் இந்த பிராமணக் குழந்தை சாகும்படியான அவ்வளவு பெரிய அக்கிரமம் என்ன நடந்து விட்டது என்று சுற்றிப் பார்த்ததாகவும் அப்பொழுது தென்பாகத்தில் ஏதோ ஒரு நாட்டில் ஒரு சூத்திரன் கடவுளை நோக்கி தோத்திரம் பண்ணிக் கொண்டிருந்ததாகவும் தன்னுடைய நீதியான ராஜ்யத்தில் சூத்திரன் கடவுளை வணங்கினதினால் பிராமணக் குழந்தை செத்துப் போய்விட்டது. இந்த சூத்திரனைக் கொன்று விட்டால் பிராமணக் குழந்தை பிழைத்துக் கொள்ளும் என்பதாக முடிவு செய்து ராமன் ஒரே வெட்டாக அந்த சூத்திரனை வெட்டி விட்டதாகவும் அதே வால்மீகி ராமாயணத்தில் உத்தர காண்டத்தில் எழுதி இருக்கிறது. இவைகளை எல்லாம் நாம் ஒப்புக் கொள்ள வேண்டுமா? என்றுதான் ராமாயண பக்தர்களை கேட்கிறோம். இந்தக் கதை இந்த நாட்டிலிருக்கும் வரை யிலும் தமிழ் மக்களுக்கு சுயமரியாதை ஏற்பட முடியுமா? ராமராஜ்யம், ராம ராஜ்யம் என்று பார்ப்பனர்கள் எழுதிவைத்திருப்பதும் மகாத்மாவும் அதை படித்துவிட்டு வந்து நமக்கு உபதேசம் செய்வதும் நாமும் இந்த ராஜாங்கம் போய் ராமராஜ்யம் வந்துவிட்டால் மிகவும் நல்லது என்று நினைப்பதும், எவ்வளவு பைத்தியக்காரத்தனமான காரியமென்பதையும் ராமராஜ்யம் வந்தால் நமது கதி என்னாகும் என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும். சூத்திரன் கடவுளை ஸ்தோத்திரம் செய்யக் கூடாதென்று ஒரு கதை எழுதப்பட்டிருக்குமானால் அதை உண்டாக்கினவர்கள் எவ்வளவு கொடூர புத்தியுடனும் கெட்ட எண்ணத்துடனும் எழுதி இருக்க வேண்டும் என்றுதான் கேட்கிறோம்.

தவிரவும் தமிழ் நாட்டு மாணவர்களை பகவத்கீதை படிக்க வேண்டு மென்கிறார். பகவத்கீதை பார்ப்பன பாஷை. அதன் தமிழ் வியாக்கியானத்தில் 1000 அபிப்பிராய பேதம் அன்றியும் அது பார்ப்பன மதத்தை போதிப்ப தல்லாமல் தற்காலத்தில் நடக்க முடியாததும், நம்ப முடியாததும், விவகாரத் துக்கு இடமுள்ளதுமான விஷயங்களே 100 –க்கு 90 அதில் புதைந்து கிடக்கிறது. தமிழ்நாட்டில் ஏற்பட்ட தமிழ் பாஷையில் உண்டாக்கின தமிழர் மதத்தையே பிரதானமாகக் கொண்ட குறளை ஏன் தமிழ் மக்களைப் படிக்கச் சொல்லக்கூடாது.

குறளைவிட கீதையில் என்ன அதிகமான நீதியும் சுயமரியாதையும் அடங்கிக்கிடக்கின்றதென்பது நமக்கு விளங்கவில்லை. ஆகவே மகாத்மா பார்ப்பனப் பிரசாரம் செய்கிறார் என்பதற்கு இதையும் ஒரு உதாரணமாகக் காட்டுகிறோம்.

நிற்க, மகாத்மா காந்தியவர்கள் தமிழ்நாட்டில் கதர் பிரசாரம் பண்ணு வதை பற்றியாவது தமிழ் மக்களுடைய பணம் லட்சக் கணக்காக வசூலித்துப் பார்ப்பனர்களிடம் கொடுத்து விட்டுப் போவதைப் பற்றியாவது முறையே நமக்கு கடுகளவு ஆக்ஷேபணையும் கவலையும் இல்லை. ஆனால் கதர் பேரைச் சொல்லிக் கொண்டு மூடநம்பிக்கைகளையும் பார்ப்பன மதப் புராணங்களையும் பிரசாரம் பண்ணுவதைப் பற்றிதான் நாம் கவலைப் படுகிறோம்.

அதாவது இதுகாரும் நாம் செய்து வந்த வேலைகளை அடியோடு கவிழ்ப்பதற்காக வேண்டுமென்றே பார்ப்பனர்கள் இந்த பிரசாரம் செய்விக் கிறார்கள் என்பதாக முன்னமேயே நாம் குறிப்புக் காட்டி இருக்கிறோம். அது இப்பொழுது பிரத்யக்ஷமாகவே நடந்தாய் விட்டது. தமிழ் மக்களுக்கு இது ஒரு நெருக்கடியான சமயமென்பதே நமதபிப்ராயம். இவற்றிற்கு பரிகாரமாக மறுபடியும் ஒரு மட்டம் தமிழ் நாட்டில் எதிர் பிரசாரம் நடைபெற வேண்டிய தாய் தானிருக்கும். எதற்கென்றுதான் நமது மக்கள் வேலை செய்ய முடியும். மகாத்மா அவர்களால் இம்மாதிரியான காரியங்கள் நடைபெறுமென்று நாம் கனவிலும் நினைத்திருந்ததே இல்லை. இது ஒரு எதிர்பாராத ஆபத்தாய் வந்து சேர்ந்து விட்டது.

தவிர இந்து முஸ்லீம் ஒற்றுமையைப் பற்றியும் பிரமாதமாகப் பேசியி ருக்கிறார். ஆனால் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் விஷயத்தைப் பற்றி ஒருவார்த்தைக்கூடப் பேசுவதற்கு மகாத்மாவுக்கு மனம் வரவில்லை. பிராமணர் – பிராமணரல்லாதார் விஷயத்தை மகாத்மா அவர்கள் அவ்வளவு அலக்ஷியமாக கருதும் படியாகச் செய்யப்பட்டிருக்கிறது என்று மாத்திரந் தான் நாம் சொல்லலாமே யொழிய நாம் வேறென்ன சொல்லக்கூடும்.

**குடி அரசு – கட்டுரை – 04.09.1927**


RangaRakes

tamilnavarasam.com

# சுவாமிகளும் தேவடியாள்களும்

**– சித்திரபுத்திரன்**

நமது நாட்டில் உள்ள எல்லா கெட்ட காரியங்களுக்கும் "நமது நாட்டு கடவுள்"களே வழிகாட்டிகளாகயிருக்கிறார்கள் . அதாவது சூது வாது, வஞ்சகம், பொய், புரட்டு, திருட்டு, விபசாரம், குடி, கூத்தி, கொலை, ஜீவ இம்சை முதலிய எந்த கெட்ட தொழிலை எடுத்துக் கொண்டாலும் சில கடவுள் களிடத்தில் இவையாவும் மொத்தமாகவும், சில சில கடவுள்களிடத்தில் தனித் தனியாகவும் சில்லரையாகவும் ஏற்படுத்தப்பட்டிருப்பதைப் பார்த்து வரு கிறோம். இதே குணங்கள் நமது கடவுள்களுக்கு இருப்பதாக நாமே தினப்படி யும், மாதப் படியும், வருஷப்படியும் காலக்ஷேப மூலமாகவும், நடிப்பு மூலமாக வும், பூஜை மூலமாகவும், பஜனை மூலமாகவும், திருவிழாக்கள் மூலமாகவும் நடத்திக் காட்டிக் கொண்டும் வருகிறோம். இவைகளுக்காகவே நமது பெரியவர்களும் ஏராளமான சொத்துக்களையும் விட்டு இவைகள் தவறாமல் நடந்து வரச் செய்திருக்கிறார்கள் . தற்கால தர்ம பரிபாலனம் என்பதும் பெரும்பாலும் இக்காரியங்களைப் பரிபாலனம் பண்ணுகிறவைகளாகவே இருக்கின்றன.

இந்த நிலையில் ஏற்படுத்திய கடவுளை வணங்கும் மக்களுக்கு ஒழுக்கம் எப்படி உண்டாகக் கூடும்? இம்மாதிரியான தர்மங்களை பரிபாலனம் செய்யும் மக்கள் எப்படி ஒழுக்கமாக இருக்க முடியும்? கடவுள்களும் கடவுள் களைப் பற்றிய கதைகளும் புராணங்களும் மற்றும் அது சம்மந்தமான நடவடிக்கைகளும் மக்களுக்கு அறிவையும் ஒழுக்கத்தையும் உண்டாக்கு வதற்கு உண்டாக்கப்பட்டனவேயன்றி இம்மாதிரி பலன்களுக்கு உண்டாக்கப் பட்டதாக யாரும் ஒப்புக் கொள்ள முடியாது.

மேற்கண்ட அனேக விதமான ஒழுக்கக் குறைவுகள் கடவுள் பெய ரால் நடப்பவைகளும் இது சமயம் சுவாமியின் பெயரால் பெண்களுக்கு விபசாரித்தனத்திற்கு அனுமதிச் சீட்டு (பொட்டுக் கட்டுதல்) என்னும் லைசென்ஸ் கொடுக்கப்படுவதைப் பற்றி மாத்திரம் இவ்வியாசத்தில் எடுத்துக் கொள்ளுவோம். கோயில்களுக்கு தாசிகள் என்னும் விலைமாதர்கள் எதற்காக வேண்டும்? மேளமடித்தல், மணியடித்தல் முதலிய காரியங்கள்



RangaRakes

எதற்காக பூஜைக்கு உபயோகப்படுகிறது என்று யாராவது கேட்டால் சுவா மிக்கு தீபாராதனை ஆகும் போது வேறு சப்தங்கள் காதில் விழாமல் இருக்கும் பொருட்டு மணிச் சப்தங்களும், மேள வாத்தியங்களும் செய்யப் படுகிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. இது சரியோ தப்போ அதைப்பற்றி நாம் இப்போது விவரிக்க வரவில்லை. வேறு சப்தங்கள் காதில் படாமல் இருப்பதற்கு மணியும், மேளமும் வைத்திருப்பதானால் விலைமாதர்களான விபசார ஸ்தீரிகளை கோவிலில் நிறுத்தி இருப்பதன் காரணம் என்ன? என்று இந்த முறையில் யோசிப்போமானால் சுவாமி தீபாராதனையின் போது பக்தர்களுக்கு வேறு சாமான் கண்களில் படாமல் இருப்பதற்கு இந்த சாமான் களை (விபசாரிகளை) நிறுத்தி வைத்திருப்பதாகத்தான் கொள்ள வேண்டும். இதை யாராவது அறிவாளிகளின் வேலையென்று சொல்லக் கூடுமா?

நமது நாட்டில் விபசாரத்திற்காக பொட்டுக்கட்டிக் கொள்ளும் தாசிகள் எல்லோரும் ஒவ்வொரு சுவாமியின் பெயரால்தான் தங்களைப் பொது மக்கள் என்று முடிவுகட்டி விளம்பரப்படுத்திக் கொள்ளுகிறார்களேயல்லாமல், வயிற்றுப் பிழைப்புக்கு வேறு வழியில்லாததால் இந்த வியாபாரத்திற்கு போகிறேன் என்று யாரும் சொல்வதே இல்லை. இந்தமாதிரி அனுமதிச்சீட்டு கொடுக்கும் கடவுள் வேறு எந்த மதத்திலாவது இருக்கிறதாவென்பதை யோசித்துப் பார்த்தால் நமது அறியாமையும் நமது கடவுள்களுக்கு நாம் செய்யும் இழிவும் புலப்படாமல் போகாது.

தவிர, வேறு விவகார முறையில் பேசுவதானாலும், அதாவது கடவுளுக்கு பணி செய்ய இவர்கள் கோயிலில் நியமிக்கப்படுகிறார்கள் என்று சொல்வதானாலும் இருந்திருந்து கடவுளுக்கு பணி செய்ய இந்த வியாபாரத்தில் ஈடுபட்டவர்களைத்தானா நியமிக்க வேண்டும்? வேறு யோக்கியமான தொழிலில் உள்ள பெண் மக்கள் உங்கள் சமூகத்தில் இல்லையா என்று யாராவது கேட்டால் அதற்கு இவர்கள் என்ன பதில் சொல்லக்கூடும்? இம்மாதிரி ஒவ்வொரு முக்கிய கோயிலிலும் பூஜை காலத்தில் 10, 20, 30 சில கோயில்களில் 100, 150 வீதம் விபசாரப் பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொண்டு கோயிலுக்கு தரிசனத்திற்காக வரும் பக்தர்கள் முன்னிலையில் நடனமாடினால் அந்த பக்தர்களின் கதி என்ன ஆவது? கிராமாந்தரங்களில் எந்த கோயிலில் பார்த்தாலும் உள்ளதுக்கும் நன்றாய் கொஞ்சம் அழகாய் இருக்கிற தாசிகள் , முதலாவது தர்மகர்தாவுக்கு அல்லது அவர்கள் மக்களுக்கு. அதற்கடுத்தது தான் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு என்பதாகவே வழக்கமாயிருக்கிறது.

கிராமாந்தரங்களில் உள்ள கோயில்களின் கதி இப்படி யென்றால் சில பெரிய பட்டணங்களிலும், முக்கிய ஸ்தலங்களிலும் உள்ள கோயில்களின் சங்கதி கேட்க வேண்டியதில்லை. விசேஷ ஸ்தலங்களில் உள்ள கோயில் களின் தாசிக்கு பெரும்பான்மையும் அந்தந்த கோயில் அர்ச்சகர்கள்



tamilnavarasam.com

முதலியவர்களே தரகர்களாகி விடுகிறார்கள். அவர்கள் சுவாமிக்கும் நமக்கும் இடையில் எப்படி தரகர்களாயிருக்கின்றார்களோ அது போலவே இந்த 'அம்மன்'களுக்கும் நமக்கும் தரகர்களாயிருந்து கொண்டு யாத்திரைக்கார வாலிபர்களைப் பாழாக்கி விடுகிறார்கள். சுவாமி பக்திக்காக கோயில்களுக்குப் போகும் பக்தர்கள் நாளா வட்டமாய் பழகி தாசி பக்தர்களாகிவிடுவதை நாம் எத்தனையோ பார்த்திருக்கிறோம். இந்த அநாகரீகமும் கெடுதி யுமான காரியங்கள் மதத்தின் பெயராலும் சுவாமியின் பெயராலும் நடை பெறுவதானது நமது சமூகத்திற்கே இழிவு என்று சொல்லாமலிருக்க முடிய வில்லை. "சாஸ்திரங்களிலிருக்கிறது. அதற்கு நாம் என்ன செய்வது" என்று சிலர் சொல்லலாம். "வெகு காலமாய் வழக்கத்தில் வந்து விட்டது, அதற்கு நாம் என்ன செய்வது" என்று சிலர் சொல்லலாம். இதெல்லாம் முட்டாள்தனமான சமாதானமாகுமே தவிர அறிவுள்ள சமாதானமாகாது. நம்முடைய சாஸ்திரத்தில் இல்லாத அயோக்கியத்தனம் உலகத்தில் ஒன்று கூட இல்லை என்பதாக நம்மால் மெய்ப்பிக்கலாம். அதையெல்லாம் இன்றைய தினம் நாம் செய்வதென்றால் நம்மைப் போல் மூடர்கள் உலகத்திலிருக்கவே முடியாது. அந்த சாஸ்திரங்கள் என்பவைகளை எழுதினவர்கள் யார்? அவர்களுக்கும் நமக்கும் என்ன சம்மந்தம்? எதற்காக இப்படியெல்லாம் எழுதினார்கள்? இம்மாதிரி வேறு தேசத்தில் வேறு மதத்தில் வேறு சாஸ்திரத்தில் எங்கேயாவது இருக்கிறதா? என்பவைகளை யோசித்துப் பார்த்து பிறகு இவற்றை கவனிக்க வேண்டுமேயல்லாமல், எவனோ தனக்கு தொழில் வேண்டும், வயிற்றுப் பிழைப்பு நடக்க வேண்டும் என்பதாக ஏதாவது ஒன்றை எழுதிவைத்து நமக்குக் காட்டினால் அதுவே நமக்கு கடவுள் வாக்காகி விடுமா அல்லது ஆதாரமாகி விடுமா? மனிதனுக்கு பகுத்தறிவு எதற்காக இருக்கிறது? இப்பொழுது வரவர அனேக கோயில்களில் இந்த தாசி வழக்கத்தை எடுத்தாகி விட்டது. உதார ணமாக மைசூர் கவர்ன்மெண்டார் தங்கள் ஆட்சிக்குள்பட்ட கோயில்களுக்கு எங்கும் தாசி உத்தியோகம் இருக்கக்கூடாது என்பதாக ஒரு உத்திரவு போட்டு தங்கள் சாமிகளை விபசாரத்தனத்திலிருந்து மீட்டு விட்டார்கள் . அதன் மூலம் அந்த சமஸ்தானத்து கோயில் தாசிகள் எல்லாம் நீக்கப்பட்டாய் விட்டது. மைசூர் சமஸ்தானத்து சுவாமிகளுக்கு வெட்கம் வந்து தங்களுக்கு இனிமேல் தாசிகள் வேண்டியதில்லை என்று அந்த கவர்ன் மெண்டுக்கு சொல்லி விட்டது போல் நமது நாட்டு சுவாமிகளுக்கும் என்றைக்காவது வெட்கம் வந்தோ அல்லது கிழப் பருவம் வந்தோ இனிமேல் தங்களுக்கு தாசிகள் வேண்டியதில்லை என்று தேவஸ்தான போர்டாரிடமாவது, கமிட்டியாரிடமாவது, தர்ம கர்த்தாக்களிடமாவது சொல்லிவிட கூடாதா? என்பதாக நமது நாட்டு சாமிகளைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 04.09.1927**



# மதப்புரட்டு

அரசியலின் பெயரால் அரசியல்காரர்கள் தேசீயக்காரர்கள் என்போர்கள் தங்கள் சுயநலத்திற்கு மக்களை எவ்வளவு தூரம் ஏமாற்றி பாழ்படுத்தி வருகிறார்கள் என்று சொல்லி வந்தேனோ அதைவிடக் கொஞ்சமாவது குறைந்ததல்ல இந்த புரோகிதர்கள் அல்லது பார்ப்பனர்கள் என்கிற ஒரு கூட்டத்தார் மதத்தின் பேரால் நம்மை ஏமாற்றி நமது ஒற்றுமையைக் குலைத்து நாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த நமது பொருளையும் கொள்ளை கொண்டு நமது நாட்டையும் சமூகத்தையும் பாழாக்கி நம்மை சுயமரியாதையற்ற மனிதர்களாக நடைப்பிணமாய் வாழும்படி செய்து வருவது. இதன் ரகசியத்தை நாம் கொஞ்சமும் உணராமல் இம்மாதிரியான வஞ்சகச் செயலுக்கும் நாமே உதவியாயும் இருந்து நீடூழி காலம் நம்மையும் நமது பின் சந்ததியையும் நிரந்தர அடிமையாக வேண்டியதான ஆதாரங்களையும் சிருஷ்டித்து வருகிறோம். இதை விளக்குகிறபோது உங்கள் மனம் ஒரு சமயம் பதைத்தாலும் பதைக்கும். தயவு செய்து கொஞ்சம் பொறுமையோடு கவனித்து கேட்ட பிறகு உங்கள் பகுத்தறிவையும் நடுநிலைமையில் இருந்து உபயோகப்படுத்தி பார்ப்பீர்களானால் அதன் உண்மை அதாவது "நான் சொல்லுவது சரியா தப்பா என்பது உங்களுக்கு விளங்காமல் போகாது. அல்லாமலும் நான் சொல்லுவதை நீங்கள் நம்புங்கள், நான் சொல்லுவது கடவுள் வாக்கு, நம்பாவிட்டால் நரகம் வரும், நாஸ்தீகர்கள் ஆகிவிடுவீர்கள்" என்ற வேதம், சாஸ்திரம், புராணம் போல நான் உங்களை அடக்கு முறைக்குள் ஆளாக்க வில்லை. நான் சொல்லுவது உங்களுடைய அறிவு, ஆராய்ச்சி, யுக்தி, அனுபவம் இதுகளுக்கு ஒத்து வராவிட்டால் தள்ளிவிடுங்கள் . ஒத்து வந்தால் காரியத்தில் கொஞ்சமாவது செய்ய முற்படுங்கள். உங்கள் சகோதரர்களுக்கும் இதைச் சொல்லி அவர்களையும் ஈடேற்றுங்கள் என்றுதான் நான் சொல்லுகிறேன். இப்படிச் சொல்லுவதனால் எனக்கு இதில் ஒரு சுயநல பலனும் இல்லை என்பதையும் அறியுங்கள். நான் எந்த மதக் காரனுக்காவது ஏஜண்டு அல்ல, அல்லது நானும் எந்த மதத்துக்காரனுக்காவது அடிமையும் அல்ல. அன்பு, அறிவு என்கிற இரண்டு தத்துவத்திற்குள் மாத்திரம் ஆட்பட்டவன். ஆதலால் எனக்குப் பட்டதை உங்கள் முன் சொல்வதில் எனக்கு ஒரு கடமையும், ஆசையும், மகிழ்ச்சியும் இருப்பதால் சொல்லுகிறேன். மற்றபடி அதைப் பற்றிய உங்கள் கடமைகளை உங்கள் சுதந்திரத்திற்கே அதாவது உங்கள் பகுத்தறிவுக்கே விட்டு விடுகிறேன்.



RangaRakes tamilnavarasam.com

மதம் என்பது நாட்டிற்கோ ஒரு சமூகத்திற்கோ ஒரு தனி மனிதனுக்கோ எதற்காக இருக்க வேண்டியது? ஒரு தேசத்தையோ, சமூகத்தையோ கட்டுப்படுத்தி ஒற்றுமைப்படுத்துவதற்காகவா, பிரித்து வைப்பதற்காகவா? அது ஒரு மனிதனின் மனச்சாக்ஷிக்கு கட்டுப்பட்டதா? அல்லது ஒரு மனிதனின் மனச்சாக்ஷியை கட்டுப்படுத்தக் கூடியதா? மனிதனுக்காக மதமா அல்லது மதத்துக்காக மனிதனா? என்பவைகளை தயவு செய்து யோசித்துப் பாருங்கள்.

இந்த முறையில் நமது மதம் என்பதின் யோக்கியதையை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் . முதலாது நமது மதமாகிய இந்து மதம் என்பது என்ன என்பது இங்குள்ள எத்தனை பேருக்கு தெரியும்? இந்து மதஸ்தர்கள் என் போர்களில் எத்தனை பேர்கள் அதன் தத்துவத்தை அறிந்திருப்பார்கள் ? இந்து மதம் என்பதாக ஒரு மதம் உண்டு என்று எத்தனை பேர் ஒப்புக் கொள்ளுகிறார்கள் ?

முதலாவது, இந்து என்பது எந்த பாஷை வார்த்தை? உலகத்திலுள்ள எந்த பாஷையிலாவது இந்து என்கிற ஒரு வார்த்தை இருக்கிறதாக யாராவது சொல்லக்கூடுமா? நமது நாட்டிற்கு இந்த வார்த்தை எப்பொழுது வந்தது? என்று பார்ப்பதானால் நம்முடைய தமிழ் இலக்கண இலக்கியங்களிலாகட்டும் அல்லது சங்ககால பழய தமிழ் ஆதாரங்களிலாகட்டும் அல்லது ஆரிய பாஷை, ஆரிய நாகரீக பழக்க வழக்கங்களைக் கொண்ட வேதம், சாஸ்திரம், ஆகமம், சுருதி, ஸ்மிருதி, புராணம், சரித்திரம்,கதை முதலிய எவைகளிலாவது இந்து அல்லது இந்துமதம் என்கிற வார்த்தை இருக்கிறதா? அல்லது ஆழ்வாராதிகள், நாயன்மார்கள் என்ற பெரியோர்களது பாடல்களிலாவது, சரித்திரங்களிலாவது இந்த வார்த்தை காணப்படுகிறதா? அல்லது சித்தர்கள் , முனிவர்கள் , ரிஷிகள் என்று சொல்லப்பட்டவர்களாவது இம்மாதிரி வார்த்தை உச்சரித்ததாகவோ வழங்கினதாகவோ எங்காவது காணக்கிடக்கின்றதா?

மதம் என்பதற்கு நாம் உத்தேசிக்கும் பொருள் தான் என்ன? என்று பார்த்தால் ஆராய்ச்சிக்காரர்கள் மதம் என்பது கொள்கை என்று சொல்லுகிறார்கள் . அப்படியே வைத்துக் கொள்வதானாலும் இந்து மதம் என்பதற்கு என்ன பொருள் ?

இந்து கொள்கை என்று வைத்துக் கொள்ளலாம் என்றால், இந்து என்பதற்கு பொருள் என்ன? இந்து மதம் என்பதைத் தவிர மற்ற மதங்கள் என்பவைகள் இம்மாதிரி இல்லாமல் மதம் என்பதற்கு முன்னால் ஒரு தனிப்பட்ட மனிதனின் பெயரை வைத்து பின்னால் மதம் என்பதைக் கூட்டி கிருஸ்து மதம், மகமதிய மதம், புத்தமதம், இராமானுஜ மதம், சங்கராச்சாரிய மதம் என்பது போல சொல்லப்படுகிறது. இம்முறையில் இந்து மதம் என்பது



எந்த ஆசாமியை உடையது? யாருடைய கொள்கை என்று பெயர் கொண்டது? ஒன்றுமே இல்லாமல் வெறும் உச்சரிப்பைத் தவிர யாதொரு பொருளுமற்றதான சப்தம் கொண்ட வார்த்தையை நமது மதத்திற்கு பெயராக வைத்துக் கொண்டிருக்கிறோமா இல்லையா என்பதை யோசித்துப் பாருங்கள்.

இரண்டாவது, மற்ற மதங்களைப் போல இந்து மதத்திற்கு யார் கர்த்தா? அதற்கு என்ன வயசு? அதற்கு என்ன கொள்கை? இதற்கு என்ன ஆதாரம் என்பவைகளையாவது யோசித்துப் பாருங்கள் “இந்து மதம் என்பது வேத மதம். வேதம் என்பது கடவுளால் சொல்லப்பட்டது” என்று சிலர் சொல்லுவது உண்டு. அந்த ஆபாசத்தையும் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். கடவுளால் சொல்லப்பட்ட வேதமானால் உலகத்தில் உள்ளவர்கள் எல்லோருக்கும் ஒரே வேதமாயிருக்கக் கூடுமே தவிர ஒருவர் ஒப்புக்கொள்ளவும் மற்றொருவர் மறுக்கவும், மற்றொருவருக்கு தென்படக்கூடாததாயும் ஒரு எல்லைக்குள்ளாகவே அடங்கக் கூடியதாகவும் இருக்க முடியுமா? கடவுளால் சொல்லப்பட்டதானால் அது ஒரு பாஷையில்தானா சொல்லப்பட்டிருக்க வேண்டும்? நமக்கு சொல்லப்பட்ட வேதமானால் நம்முடைய பாஷையில் சொல்லப்பட்டிருக்காதா? வேத பாஷைக்கும் நமக்கும் ஏதாவது சம்மந்தமுண்டா? அன்றியும் நமக்காக கடவுளால் சொல்லப்பட்டதாயிருந்தால் நாம் அதை கேட்கவும், பார்க்கவும், படிக்கவும், அறியவும் கூடாததாயிருக்க முடியுமா? அது ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு வேதம் என்பதாகக் கணக்குக்காரருக்கு கட்டுப்பட்டதாக இருக்குமா? தவிர “பிடித்தவனுக்கெல்லாம் பெண்டாட்டி” என்பது போல் அதற்கு ஆளுக்கு ஒருவிதமாக அவரவர் இஷ்டப்படி வியாக்கியானம் செய்யவும் ஒவ்வொரு வியாக்கியானத்திற்கு ஒரு கக்ஷி சேர்க்கவும் தக்கதாக இருக்கக்கூடுமா? ஆகிய இது போன்ற அநேக விஷயங்களை யோசித்தால் வேதம் என்று ஒன்று உண்டா? உண்டாயிருந்தாலும் அது உண்மையானதா? உண்மையானாலும் நம்மை அது கட்டுப்படுத்தத்தக்கதா என்பவைகளை சற்று யோசியுங்கள். தவிர இம் மாதிரியான மத வேத கடவுளைப் பற்றியும் இது போலவே யோசியுங்கள் .

உலகத்திற்கு எத்தனை கடவுள்? அதிலுள்ள எத்தனையோ மதங்களில் ஒரு மதமாகிய இந்து மதம் என்பதற்கு எத்தனை வேதங்கள்! அவைகளுக்கு எத்தனை கடவுள்கள்! இந்த கடவுள்களை ஆராதிக்கிற வணங்குகிற மக்களுக்கு எத்தனை கக்ஷிகள்! ஒவ்வொரு கடவுள்களின் குறிகளுக்கு எத்தனை அடையாளங்கள்! அவைகளுக்காக எத்தனை சண்டைகள்! இந்த கடவுள்களுக்கு எத்தனை கோயில்கள்! எத்தனை ஆதாரங்கள்! எத்தனை கலியாணங்கள்! எத்தனை பெண்டு பிள்ளைகள்! எத்தனை அக்கிரமமான நடவடிக்கைகள்! என்பது போன்றதையும் கவனியுங்கள் . இந்த கடவுள்களின் பக்தர்களுக்குள் எத்தனை வித்தியாசங்கள்! எத்தனை ஜாதிகள்! எத்தனை உயர்வு தாழ்வுகள்! இவைகளிலெல்லாம் ஒரே ஒரு வகுப்பார் மாத்திரம்,



RangaRakes tamilnavarasam.com

அதுவும் விரல் விட்டு எண்ணிவிடத்தகுந்த வெகு சிலர் மாத்திரம் எல்லா வற்றிற்கும் பெரியவர்கள், உயர்ந்தவர்கள், உரிமையுள்ளவர்கள் என்கிற நியாயம் ஏன்?

கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர், அவர் எங்கும் உள்ளவர் என்கிற தத்துவம் நம்முடைய மதத்து கடவுளுக்கும் உண்டானால், நாம் கடவுள் கிட்டப் போகக் கூடாது, மற்றவர்கள் கோயில்களுக்குள் வரக்கூடாது, மற்றொருவர் மாத்திரம்தான் கடவுளைத் தொடலாம், கழுவலாம், வேஷ்டி துணி கட்டலாம் என்கிற கொடுமைகள் அதற்கு ஏற்படுத்த முடியுமா?

நாம் இந்த மதத்தை ஒப்புக் கொண்டு, அதில் கண்ட சாமிகளையும் ஏற்றுக் கொண்டு அதற்காக கோயிலும் கட்டி சொத்தும் விட்டு, நாம் வணங் கவும் தினம் போய் வருவதினால் நமக்கு ஏற்படுகிற பலன் என்ன என்பதைப் பற்றி சற்று யோசித்துப் பாருங்கள் .

ஒரு லக்ஷம், ஐந்து லக்ஷம், பத்து லக்ஷம் ரூபாய்கள் என்பதாக செலவு செய்து கோயில் கட்டி அந்த கோயில் 100 வருஷம், 1000 வருஷம், 10000 வருஷம், 100000 வருஷம் என்கிற காலம் நிலைத்திருக்கச் செய்வதில் என்ன நிலைத்திருக்கச் செய்கிறோம் என்பதை சற்று பொறுமையாய் யோசித்துப் பாருங்கள். “இந்த கோயிலிலுள்ள சுவாமியிடம் போகக்கூடாத ஒரு நீச்சன் நான், அந்த சாமிக்கு நேரே பூஜை செய்யக் கூடாத ஒரு இழிந்த வன் நான், என்னை விட ஒரு பெரிய ஜாதி இருக்கிறது, அவர்களைவிட தாழ்ந்த ஜாதியாகிய நான் நிற்பதற்கு இந்த இடம்” என்று பல பல விதமாக நம்மை நாமே இழிவுபடுத்திப் பிரித்து அதை ஒப்புக் கொண்டு “அந்த கல்லும், கோயிலும், கோயிலுக்குள் இருக்கும் சுவாமியும் உள்ளவரை என்னுடைய இழிவும் நீச்சத்தனமும் தாழ்வும் நிலைத்திருக்கத்தக்கது. இதற்கு என் பின் சந்ததிகளும் கட்டுப்பட்டிருக்க வேண்டும். இத்தனை லட்சம் செலவு செய்து கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்தது மாத்திரமன்றி என்னைவிட இன் னொரு ஜாதியான் உயர்ந்தவன் என்பதை நிலை நிறுத்தவும், அவன் பசியினால் சாகாமல் இருக்கவும் அவனுக்கு உபயோகப்படும் படியாக அந்த சாமியின் பெயரால் இத்தனை லட்சம் ரூபாய் சொத்துக்களை எழுதி வைக் கிறேன். இதை அவன் கூட்டத்தார் மாத்திரம் சாப்பிட்டுக் கொண்டு பிள்ளை பிள்ளை தலைமுறையாய் கற்பகோடி காலத்திற்கு கல்லும், காவேரியும், புல்லும், பூண்டும் உள் ளவரைக்கும் மேல் ஜாதியாயிருந்து வர வேண்டியது” என்று செய்வ தாகிறதேயல்லாமல் வேறு என்ன என்பதையும் கவனித்துப் பாருங்கள். இது தவிர இந்த மாதிரி கோயில்களுக்கு மற்றவர்களையும் எவ்வளவு செலவுகள் செய்யச் சொல்லுகிறோம். அதனால் மக்களுக்கு ஏற்படுகிற செலவுகள் எவ்வளவு என்பதை பாருங்கள். “சர்க்கார் நம்மிடம் வரி வாங்குகிறார்கள். கொள்ளை அடிக்கிறார்கள் . அது செய்யவில்லை. இது



செய்யவில்லை. வீண்செலவு செய்கிறார்கள் . மக்களுக்கு படிப்பு இல்லை, ஒழுக்கம் இல்லை என்று சத்தம் போடுகிறோமே அப்படிப்பட்ட நாம் இந்த சாமிகளால் அடிக்கப்படும் கொள்ளைகளை கொஞ்சமாவது கவனிக்கி றோமா? அல்லது அவைகளை நிறுத்தவாவது பாடுபடுகிறோமா? என்பதை யோசிக்க வேண்டாமா?

திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள ஒரு 45 கோயில் களை மாத்திரம் கணக்குப் போட்டுப் பாருங்கள் . திருநெல்வேலி கோயிலுக்கு வருஷம் ஒன்றுக்கு 70 ஆயிரம் ரூபாய் வரும்படி சங்கரன் கோயிலுக்கு ரூ 50,000ம் ரூ. வரும்படி. குற்றாலம் கோயிலுக்கு வருஷம் 40,000 ரூ. திருச்செந்தூர் கோயிலுக்கு $1\frac{1}{2}$ லட்சம் ரூ. வரும்படி. ஆக நான்கு கோயிலுக்கு மாத்திரம் சுமார் மூன்று லட்சம் ரூபாயிக்குக் குறையாமல் வரும்படி வருகிறதாக இந்த தேவஸ்தான நிர்வாகிகளால் கேள்விப்பட்டேன். இது தவிர இந்த கோயிலுக்கு வருகிற பக்தர்கள் போக்குவரவு, தேங்காய்ப் பழம், நெய், தயிர், பஞ்சாமிர்த அபிஷேகம், மேளம் தாளம், தாசி சதிர், பாட்டுக் கச்சேரி, உத்சவம் முதலியவைகளில் செலவு செய்யும் பணம் எவ்வளவு? இவைகளெல்லாம் எதற்காக உபயோகப்படுகிறது? என்பதையும் யோசியுங்கள் . நீங்கள் கீழ்ஜாதி, பூஜை பண்ணுகிறவனும் சிலரும் மாத்திரம் உயர்ந்த ஜாதி, ஆதலால் நீங்கள் கொடுக்க வேண் டியது. மற்றவன் சாப்பிட வேண்டியது என்பதல்லாமல் வேறு எதற்கு உபயோகப்படுகிறது என்பதை நன்றாய் கவனியுங்கள். இந்தமாதிரி செய்யும்படி உங்களை எந்த சாமி கேட்கிறது. அல்லது கட்டளை இடுகிறது.

சில வயிற்றுச் சோற்றுச் சாமி உங்களை ஏமாற்றுவதும், நீங்கள் ஏமாறு வதும் நிஜமாலும் உள்ள சாமிகள் “நமக்கு இப்படியும் முட்டாள் பக்தர்கள் உண்டா?” என்று பல்லைக் காட்டிக் கொண்டு சிரிப்பதும் அல்லாமல் வேறு என்ன பலன் கிடைக்கிறது.

*( 4.9.1927 குடி அரசு - சமூக முன்னேற்றம் சொற்பொழிவு தொடர்ச்சி )*

**குடி அரசு - சொற்பொழிவு - 11.09.1927**



RangaRakes tamilnavarasam.com

# சுயமரியாதைக்கு லாபம் இல்லை

## ஜார்ஜ் ஜோசப்பிற்கு ஏற்பட்ட ஏமாற்றம்

காங்கிரஸ் என்பது ஒரு பெரிய தேசத் துரோகமான சபை என்றும், அது பார்ப்பனர்களும் படித்தவர்களுமான சிலர் தேசத்தைக் காட்டிக் கொடுத்து பிழைப்பதற்காக ஏற்படுத்திக் கொண்ட சபை என்றும், நாட்டில் எத்தனைக் கெத்தனை காங்கிரசுக்கு செல்வாக்கிருக்கிறதோ அத்தனைக்கத்தனை தேசத் துக்கும் குறிப்பாய் பார்ப்பனரல்லாதாருக்கும், ஏழை மக்களுக்கும் துரோகமும் கஷ்டமும் ஆபத்துமே அதிகரிக்குமென்றும், எவ்வளவோ ஆதாரங்களுடன் முழு மூடர்களுக்கும் புரியும்படியாக புள்ளி விபரங்களுடனும் உண்மை சம்பவங்களுடனும் எழுதியும் பேசியும் வந்திருக்கிறோம். இது இன்று நேற் றல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆதார மூலமாய் அறிய வேண்டுமென்கிற ஆவலுள்ளவர்களுக்கு ஒரு விஷயத்தை ஞாபக மூட்டு கிறோம். சுமார் நான்கு வருஷங்களுக்கு முன்பாக சென்னை மைலாப்பூர் மந்தைத் தெருவில் நாம் ஒரு பிரசங்கம் செய்ததற்காக சர்க்கார் ராஜ துவேஷத் திற்காகவும், வகுப்புத் துவேஷத்திற்காகவும் நம்மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அந்தப் பிரசங்கத்திலேயே இந்த விஷயமாய் யோசிப்பது ஆதாரத்தில் இருக்கிறது. ஆதாரத்தில் இன்றும் இருக்கிறது. ஆனாலும் நமது நாட்டில் வெகு பேருக்கு இது சமயம் காங்கிரசே நிவர்த்திக்கும் உத்தியோகத்திற்கும், பிழைப்புக்கும் ஆஸ்பதமான ஸ்தாப னமாய் விட்டதால் இந்தக் கூட்டத்தாருக்கு புத்திவரும்படி செய்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவது பெருத்த கஷ்டமான காரியமாயிருந்து வருகிறது. நம் நாட்டு பத்திரிகைகளும், பெரும்பாலும் வேறு தொழிலில் பிழைப்பதை மிக கஷ்டமாய் கருதுபவர்களாலேயே நடத்த ஏற்பட்டுப் போய் விட்டதால் தேசத்தையாவது பாமர மக்களையாவது சத்தியத்தையாவது தங்களது மனதில் தோன்றும் உண்மையையாவது ஒரு சிறிதும் கவனிக்காமலும் இம்மாதிரியான தங்கள் தொழிலுக்கு வெட்கப்படாமலும் ஒருவரைப் பார்த்து ஒருவர் அவருக்கில்லாத வெட்கம் நமக்கு ஏன் என்பதாக ஆடுகள் போல ஒரே அடியாய் எல்லாம் தலை குனிந்து கொண்டு ஒன்றன் பின் ஒன்றாய் 'காங்கிரஸ்' 'சுயராஜ்யம்', 'தேசீயம்', 'உரிமை', 'விடுதலை' என்கிற பெயர் களை வைத்துக் கொண்டு நாட்டைப் பாழ்படுத்தி வாழ்ந்து வருகின்றன.



RangaRakes

ராஜாங்கம் என்பதும் இந்த மாதிரி 'தேசீய'வாதிகளினுடையவும், அரசியல்காரர்களினுடையவும், பத்திரிகை காரர்களினுடையவும், நாணயத் திற்கும், யோக்கியதைக்கும் ஒரு சிறிதும் குறைந்ததல்ல. ஆனதால் ஏறக்கு றைய இருகூட்டத்தாரும் அந்தரங்கத்தில் ஒன்று சேர்ந்தே இக்கொடுமை களைச் செய்து வருகிறார்கள் என்று சொல்லத் தக்க மாதிரியே நடந்து வருகிறார்கள் . இந்தக் கொடுமையிலிருந்து மக்களை தப்புவிக்கலாமென்று யாராவது வேலை செய்து, அது ஏதாவது சிறிது பலன் தரக்கூடிய நிலைமைக்கு வந்து விட்டால் அதையும் ஒழிப்பதற்கு அதன் விரோதிகளான முன் சொல்லப்பட்டவர்கள் ஏதாவது ஒரு தந்திரம் செய்து மக்களை ஏமாற்றி விடு கிறார்கள் . இந்த மாதிரி தந்திரத்தின் ஒரு பகுதிதான் இப்போது மகாத்மாவை கூட்டி வந்து, "எல்லோரும் காங்கிரசில் சேருங்கள் . காங்கிரசில் சேருங்கள்" என்று சொல்லச் செய்ததான பார்ப்பன பிரசாரமும் என்பதே நமது அபிப் ராயம். இந்த காங்கிரசில் உள்ள 'தலைவர்கள்' 'தேசாபிமானிகள்' என்பவர் களைப்பற்றி எழுதுவ தென்பது கொஞ்ச இடத்தில் அடங்கக்கூடிய காரியமல்ல. அன்றியும் இந்த வியாசம் அதற்காக எழுதத் தொடங்கினதுமல்ல. ஆதலால் ஒரே ஒரு முக்கிய தலைவரின் பெயரையும், கொடி வழியையும் சொல்லி விட்டால் மற்றத் தலைவர்களைப் பற்றி அவரவர்களே ஞாபகப் படுத்திப் பார்த்துக் கொள்ளலாம்.

அதாவது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி என்பவர் இதுசமயம், சட்டசபை, காங்கிரஸ், சுயராஜ்யக்கக்ஷி முதலியவைகளில் முக்கியஸ்தராயிருப்பதுடன் "நாட்டின் அபிப்ராயத்திற்கு"ம் பிரதிநிதியானவர். கவர்னர், வைசிராய், மகாத்மா காந்தி முதலிய பிரபுக்களிடம் நமக்காகப் பேசுபவர். நாளைக்கு நமக்கு என்ன வேண்டும் என்பதற்கும் திட்டம் போடுபவர்.

நிற்க, இந்த மாதிரியான பெரிய பொறுப்பு வாய்ந்த இந்த நமது 'தலைவருக்கு'சாப்பாட்டிற்கு கொடுத்துக் கொண்டுவருபவர் யார்? அவர் யோக்கியதை என்ன? இவர்களை தலைவர்களாக்குகிற பத்திரிகைகள் எவை? அவைகளின் யோக்கிய பொறுப்பு எவ்வளவு? இவைகளை எல்லாம் நாட்டு மக்களிடம் அறிமுகப்படுத்தி பின்பற்றுவோர்களையும் சம்பாதித்துக் கொடுக்கும் ஆசாமிகள் யார்? அவர்கள் யோக்கியதை என்ன? அவர்க ளுக்கு மாதச் சம்பளம், மொத்தக் கூலி எவ்வளவு? கொடுப்பவர் யார்? அவர் யோக்கியதை என்ன? இவைகள் எல்லாம் மகாத்மாவுக்கு தெரியுமா? ஏதாவது சில தெரிந்திருந்தாலும் அவற்றை வெளியிலெடுத்துச் சொல்லவோ, நடவடிக் கைகளில் காட்டவோ, மகாத்மாவுக்கு தைரியம் உண்டா? இந்த மாதிரியான கூட்டத்தாரைத் தவிர வேறு யாருக்காவது மகாத்மாவை அறிமுகப்படுத்தக் கூடிய நிலைமை ஏற்பட முடிந்ததா? என்பதான விஷயங்களை ஒரு மனிதன் நடுநிலைமையில் இருந்து யோசித்துப் பார்ப்பானானால் நாட்டுக்கு ஏற்பட்ட கஷ்டகாலத்தை உணர முடியாமல் போக நியாயமில்லை.



tamilnavarasam.com

தவிர, இந்த மாதிரியான காங்கிரசையும் அரசியலையும் ஏற்றுக் கொள் ளாதவர்களை(பார்ப்பனரல்லாத கக்ஷியாரை) நமது நாட்டில் இந்த காங்கிரஸ் கூட்டத்தார் (பெரும்பாலும் பிராமணர்கள்) தேசத் துரோகிகள் என்றும், ஏழைமக்களின் விரோதிகள் என்றும், சுயராஜ்ய விரோதிகள் என்றும், பேசினதும், எழுதினதும் பிரசாரம் செய்ததும், இனியும் செய்து கொண்டிருப் பதும் யாரும் அறியாததல்ல. இம் மாதிரியான கூட்டத்திலும் நமது நாட்டு பெரும்பான்மை மக்களான பார்ப்பனரல்லாதார் சிலரும் சேர்ந்து கொண்டு கூத்தாடியதும் யாவரும் அறிந்ததே. அக்கூட்டத்தில் ஒருவரான ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப்பு அவர்களின் விஷயமாகவே இந்த வியாசம் எழுத முன்வந்தோம்.

அதாவது ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப்பு அவர்கள், நமது நாட்டு பார்ப்பன ரல்லாதார் இயக்கத்திற்கு விரோதமாய் பார்ப்பனர்களால் சென்னை மாகாண சங்கம் என்பதாக பத்து வருஷங்களுக்கு முன் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் தனது பெயரை பார்ப்பனர்களுக்கு கொடுத்தவர். அன்றியும் இவர் மாத்திரமல்லாமல் இவரோடு கூடவே ஸ்ரீமான்கள் வரதராஜுலுநாயுடு, கலியாணசுந்திர முதலியார், சர்க்கரை செட்டியார், ஆரியா, தண்டபாணி பிள்ளை முதலிய மற்றும் சில கனவான்களும் இக்கூட்டத்தில் சேர்ந்தவர்கள். இவர்களில் ஸ்ரீமான் ஜோசப்பு தவிர ஏறக்குறைய மற்றெல்லோரும் பார்ப் பனர்களின் சூழ்ச்சியையும் தங்களது அறியாமையையும் உணர்ந்து ஒவ்வொ ருவராக பார்ப்பனர்களைவிட்டு வெளிவந்து பார்ப்பனர்களின் யோக்கியதை யையும் வெளியாக்கி விட்டார்கள் . சிலர் மறுபடியும் மறுபடியும் அங்கொரு கால் இங்கொரு காலுமாகவும் இருக்க வேண்டி இருந்தாலும் உண்மையை அறிந்து கொண்டதாகவும் தங்கள் குற்றத்தை உணர்ந்து கொண்டதாகவும் தாராளமாய் வெளிப்படுத்தி விட்டார்கள் . எனினும் சிலர் இம்மாதிரி அங் கொருகாலும், இங் கொரு காலுமாய் இல்லாமல் வாழ முடியாத நிலைமையில் தங்களது வாழ்க்கையை சிக்க வைத்துக் கொண்டார்களானதால் அதிகமான கெடுதி அவர்களால் ஏற்படாதிருக்கும் வரையில் இடம் கொடுத்துக் கொண்டு வர வேண்டியதுதான் என்பதே நமது அபிப்பிராயம்.

ஆனால் ஸ்ரீமான் ஜோசப்புக்கு மாத்திரம் பார்ப்பனர்களின் யோக்கி யதை தெரிந்திருந்தாலும் தன்னால் பார்ப்பனர்களை ஏமாற்ற முடியாது என்ப தையும், தன்னை விட பார்ப்பனர்கள் கெட்டிக் காரர்கள் என்பதையும் அறிந்து கொள்ள இதுவரை சந்தர்ப்பமே கிடைக்காமல் போய்விட்டது.

நல்ல வேளையாய் இப்போது அவருக்கு கிடைத்துவிட்டது. அவர் அசோஸியேட்டட் பிரஸ் இடம் சொன்னதாவது:-

> "காங்கிரஸ்காரர் என்று சொல்லிக்கொண்டு காங்கிரசிடம் விசுவாசம் காட்டாதவர்களும் எனக்கு நேர் விரோதமாய் வேலை செய்தவர்களும் பார்ப்பனர்கள் தான்.
>
> மதுரைப் பார்ப்பனர்கள் தாங்கள் வகுப்புவாதி களல்ல என்று சொல்லுவது சரியல்ல.
>
> காங்கிரஸ் கமிட்டியார் ஒரு பார்ப்பனரைத் தள்ளிவிட்டு என்னை தெரிந்தெடுத்ததால் காங்கிரஸ் பார்ப்பனர் எனக்கு ஓட்டு செய்யவில்லை"

இந்த மூன்று வாக்கியங்களிலிருந்தே அவரது அபிப்பிராயம் என்ன என்பது வெளிப்படை. அதாவது பார்ப்பனர்கள் காங்கிரசிடம் பக்தி இருப்ப தாய் காட்டிக் கொள்வதெல்லாம் மோசடி என்றும், பார்ப்பனர்கள் தங்கள் சுயநல வகுப்புவாதிகள் என்றும் பார்ப்பனர்களுக்கு ஓட்டு கிடைப்ப தற்காகத்தான் காங்கிரசை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறதே தவிர வேறு காரியத்திற்கல்ல என்றும் தாராளமாய் அபிப்பிராயப்பட்டு இருக்கிறார் என்பதுதான்.

ஆனால் இதோடாவது பார்ப்பனர்களை விட்டு விலகுவார் என்று பார்த்தால் ஒருக்காலும் விலகமாட்டாரென்றே சொல்லுவோம். ஏனென்றால் இதற்கு சமாதானமாக வேறு ஏதாவது தனக்கு செய்து வைப்பார்களா இல் லையா? என்று கொஞ்சம் தாமதித்துப் பார்ப்பார் போல் தோன்றுகிறது. எப்படி என்றால் தான் இனி என்ன செய்யப் போகிறார் என்கிற முடிவு சொல்ல இன்னும் கொஞ்சம் சமயம் வேண்டுமாம்.

"நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நல்ல பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை" என்பதாக ஒரு பழமொழியுண்டு. அதுபோல் ஸ்ரீமான் ஜோசப்பு அவர்க ளுக்கு யோக்கியமான முறையில் இரண்டு வழிதான் உண்டு. ஒன்று வகுப்பு வாதிகளையே விட்டு விலகவேண்டும். அந்தப்படி வகுப்புவாதிகளை விட்டு விலக முடியாவிட்டால் உலகத்திலுள்ள எல்லா வகுப்புக்காரர்கள் கண் களிலும் மிளகாய் தூளை தூவி விட்டு தங்கள் வகுப்பாரே வாழ வேண்டும் என்கிற - தான் கண்டுபிடித்த - பார்ப்பன வகுப்பு வாதிகளை விட்டு விட்டு எல்லா வகுப்புக் காரர்களும் வாழ வேண்டும். ஒரே வகுப்பாரே ஏகபோகமாய் வாழக் கூடாது என்கிற கூட்டத்தாருடன் சேர வேண்டும். அப்படிக்கு மில்லா மல் இப்படிக்குமில்லாமல், இனியும் பார்க்கலாம், இனியும் பார்க்கலாம் என்று சொல்லிக் கொண்டு பார்ப்பனர் தின்ற மீதி எச்சைக்கு காத்துக் கொண்டி ருப்பது மனிதத் தன்மை ஆகாது என்பதே நமது அபிப்பிராயம்.

ஆனால் ஸ்ரீமான் ஜோசப்பு அவர்கள் அப்படிச் செய்ய மாட்டார் என்றே நினைக்கிறோம். ஏனென்றால் ஸ்ரீமான் ஜோசப்பு போன்ற மனப்பான்மையுடையவர்களுக்கு நமது நாட்டில் பார்ப்பனர்களைத் தவிர





RangaRakes tamilnavarasam.com

வேறு புகலிடம் கிடையாது. பார்ப்பனரல்லாதார் கூட்டத்திற்கு வந்தால் இவருக்கு திடீரென்று ஒரு நன்மையும் ஏற்பட்டுவிட முடியாது. இவருக்கு முன்னால் எத்தனையோ பேர்கள் வெகு நாளாய் காத்துக் கொண்டிருக்கிறார்கள் . அவர்களுக்கெல்லாம் வந்த பிறகுதான் இவருடைய பங்குக்கு சமயம் வரும். ஆதலால் ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியாரைப் போல் மன்னிப்பு கேட்டுக் கொண்டோ அல்லது மற்றவர்களைப் போல் தாங்கள் பேசியவைகளை மறுத்துவிட்டோ அல்லது வேறு வியாக்கியானம் செய்தோ மறுபடியும் பார்ப்பனர்கள் காலில் நுழைந்துதான் தீரவேண்டும்.

எனவே ஸ்ரீமான் ஜோசப்பவர்களுக்கு ஏற்பட்ட இந்த அனுபவத்தால் மனிதத் தன்மைக்கோ சுயமரியாதைக்கோ ஒரு வித லாபமும் ஏற்பட்டு விடாது என்பதே நமது அபிப்ராயம்.

**குடி அரசு - கட்டுரை - 11.09.1927**



RangaRakes

# சென்னையில் காலராவைத் தடுக்க கார்போரேஷன் கமிஷனர் அவர்கள் திட்டம்

சென்னையில் பரவி வரும் காலரா, வைசூரி முதலிய தொத்து வியாதிகளைத் தடுப்பதற்காக சென்னை நகர சபைக் கமிஷனர் ஸ்ரீமான் ச. வெங்கிட்டநாராயணா அவர்கள் செய்த ஏற்பாடுகளைப் பற்றிய குறிப்பு ஒன்று வரப்பெற்றோம். அதில் வைத்திய இலாகா தலைமை அதிகாரிகள் அபிப்பிராயப்படியே தண்ணீரை சுத்தப்படுத்துவதற்காகவும் வைசூரி, காலரா பரவிய பாகங்களை சுத்தம் செய்வதற்காகவும், ஷை வியாதிகளால் பீடிக்கப் பட்டவர்களுக்கு சிகிச்சை செய்வதற்காகவும், வியாதி வராமல் தடுக்கவும் நகர சபைக் கமிஷனர் எடுத்துக் கொண்ட முயற்சியும், அநுசரிக்கும் முறைகளும் மிகவும் பாராட்டத்தக்கவைகளாகவே இருக்கின்றன. நகர சபை அங்கத்தினர்கள் நகரத்தின் க்ஷேமத்தில் உண்மையில் அக்கரையுள்ளவர்களாயிருந்தால் நகர க்ஷேமத்தைக் கருதி கமிஷனர் செய்திருக்கும் ஏற்பாடுகளை ஆதரித்து அவ்வேற்பாடுகள் அமுலில் கிரமமாய் நடைபெறுவதற்கும் உதவியாயிருக்க வேண்டியவர்கள் என்பதே நமது அபிப்பிராயம்.

ஆனால் நகர சபையில் உள்ள ஜனப்பிரதிநிதிகள் என்பவர்களில் சிலர் நகரத்தின் க்ஷேமங்களில் ஒரு சிறிதும் கவலையில்லாமல் கார்ப்பரேஷன் ஸ்தாபனம் பார்ப்பன அக்கிராரமாகவும், பார்ப்பனர்களுக்கு உணவளிக்கும் அன்ன சத்திரமாகவும் இருக்க வேண்டுமென்கிற ஒரே கவலையைக் கொண்டு இதற்கு விரோதமாயிருக்கும் கமிஷனர் ஸ்ரீமான் நாயுடு அவர்களை சதா சர்வகாலமும் அற்பத்தனமான முறைகளில் தாக்கிக் கொண்டும். சில்லரை விஷமங்கள் செய்து கொண்டும், எப்படியாவது அவரை அந்த ஸ்தானத்திலிருந்து மாற்றி ஒரு பார்ப்பனரை அந்த ஸ்தானத்தில் வைத்து தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்ள வேண்டும் என்கிற கவலையிலேயே கார்பரேஷன் நேரத்தையும் நிர்வாகத்தையும் பாழாக்கி வருகிறார்கள். இவ்வளவும் ஏற்படுவதற்கு காரணம் ஜனப்பிரதிநிதிகள் என்று சொல்லப்பட்ட கவுன்சிலர்களைத் தெரிந்தெடுக்கும்படியான ஓட்டர்களுக்கு ஓட்டைப் பற்றி போதுமான ஞானமும் கவலையும் ஏற்படாததுதானே ஒழிய வேறில்லை என்றே சொல்வோம். ஆதலால் இனிமேலாவது ஓட்டர்களாகிறவர்கள் தங்களுடைய ஓட்டுகளை உபயோகிப்பதில் பார்ப்பனர்களின் வஞ்சத்திற்கும்,



tamilnavarasam.com

ஏமாற்றலுக்கும் காது கொடுக்காமல் யோக்கியமான முறையில் தங்கள் ஓட்டுகளை உபயோகித்து, யோக்கியர்களைத் தெரிந்தெடுத்து முனிசிபல் நிர்வாகம் நாணயமாகவும், யோக்கியமாகவும் நடைபெறுவதற்கு உதவி செய்யும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமாய் விரும்புகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 11.09.1927**



# மகாத்மாவும் காங்கிரசும்

காங்கிரஸ் ஏற்பட்டது முதல் நாளது வரை பொது மக்களுக்கு எந்த விதமான நன்மையும் ஏற்படவில்லை என்பதையும் பல கெடுதிகள் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் மகாத்மா மனதார அறிந்திருந்தும், அக்கெடுதிகளை ஒழிக்க தன்னால் கூடியவரை பாடுபட்டுப் பார்த்தும் முடியவில்லை என்று ஒப்புக்கொண்டும், காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொண்டு ஒரு கூட்டத்தார் பாமர மக்களை ஏமாற்றிப் பிழைக்கிறார்கள் என்பதையும் ஒப்புக் கொண்ட பிறகும், மகாத்மா எல்லோரையும் காங்கிரசில் சேருங்கள் என்பதும் பம்பாய் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுக்கு மகாநாட்டார் மகாத்மாவை அழைத்தால் அதற்கு பதிலாக "நல்ல எண்ணத்தோடு எல்லோரும் காங்கிரசில் சேருங்கள்" என்று தந்தி அடிப்பதும் நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. மகாத்மா காந்தி போன்றவர்களே காங்கிரஸ் முத்திரை (லேபிள்) இல்லாமல் மகாத்மாவாக இருக்க முடியவில்லை என்றால் மற்றவர்கள் காங்கிரஸ் முத்திரையைப் போட்டுக் கொண்டு வாழ்வதில் நமக்கு அதிசயம் எப்படி தோன்றும்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 11.09.1927**



RangaRakes tamilnavarasam.com

# இந்திய சட்டசபையில் மூட நம்பிக்கைக்கு தீர்க்காயுசு

## அறிவின் வளர்ச்சிக்கு ஆபத்து

"மதாச்சாரியார்களை தூஷிப்பதை தடுக்க வேண்டியதற்காக" என்னும் பெயரால் இந்திய சட்டசபையில் ஒரு சட்டம் நிறைவேற வேண்டிய சடங்குகள் எல்லாம் செய்தாய் விட்டது. இனி, "சட்டமாய் விட்டது" என்று சொல்ல வேண்டியதுதான் பாக்கி.

இந்த சட்டத்தைப் போல் ஒரு முட்டாள் தனமானதும் மனித சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கு ஆபத்தானதுமான சட்டம் உலகத்தில் எந்த சட்ட புஸ்தகத்திலுமே இருக்காது என்பது நமது அபிப்பிராயம். இதைப்பற்றி முன்னமே ஒரு தடவை எழுதியுமிருக்கிறோம்.

மகமது நபிகளை எவனோ ஒருவன் கண்டித்து விட்டான் என்கிற காரணத்திற்காக உலகத்தையே குருடர்களும் செவிடர்களுமாக்க ஒரு சட்டம் கொண்டு வருவது எவ்வளவு கொடுமையானது என்பதை யாரும் யோசிக்காமல் இம்மாதிரியான அவிவேகமான காரியத்தில் இறங்குவது நமக்கு மிகவும் வருத்தமாய் இருக்கிறது. ஒரு யோக்கியனை ஒரு அயோக்கியன் கண்டித்து விட்டதற்காக உலகத்திலுள்ள அயோக்கியர்களை எல்லாம் எந்த யோக்கியனும் கண்டிக்கக் கூடாது என்று சட்டமியற்றுவது பிசாசுகள் அரசாங்கத்தில் கூட நடைபெற முடியாத காரியம் என்பதே நமது அபிப்பிராயம். மதத் தலைவர்கள் என்பவர்கள் யார் என்று யார் முடிவு செய்வது? ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்காரும் சத்தியமூர்த்தியும் நாளைக்கு மதத் தலைவர்கள் ஆகிவிடலாம். ஒவ்வொரு மதத்தை (கொள்கையை) உபதேசிப்பவனும் தனக்கு சில சிஷ்யர்களை பணம் கொடுத்து சேர்த்துக் கொண்டு புராணம் எழுதி வைத்துக் கொள்ளுபவனும் அந்த மதத் தலைவன்தான். எத்தனை மதங்கள் இருக்கிறதென்று யாரால் நிர்ணயிக்க முடியும்? இனி மதங்கள் ஏற்பட முடியாது என்பதற்கு என்ன உறுதி? யார் யார் மதத் தலைவர்கள் என்பதற்கு என்ன ஆதாரம்? கடவுள் என்பவரே ஒவ்வொருவனுக்கு



ஒவ்வொரு விதமாய் அதாவது ரூபமாயும், குணமாயும், அரூபமாயும், நிர்குணமாயும் இருக்கிறார் என்கிறார்கள் .

ஒவ்வொருவன் கொள்கைக்கு ஒவ்வொருவன் கொள்கை விரோதமாய் இருப்பதாக காணும்போது அவனது கருத்தையும் அறிவீனத்தையும் எடுத்துச் சொல்லாமல் இருக்க வேண்டுமென்பது தானே சட்டத்தின் கருத்து. இது முறையா? இது தகுமா? இது தர்மம்தானா? "குசுவு விட்டதற்காக குண்டியை அறுத்து விடுவதா" என்பதாக ஒரு பழமொழி உண்டு. அது போல சர்க்காரும் இந்திய சட்டசபை மெம்பர்களும் நடக்கிறார்கள் .

இச்சட்டத்தால் பெரிதும் பார்ப்பனர்களுக்கும், சர்க்காருக்கும், பார்ப்பன வக்கீல்களுக்கும் லாபமேயல்லாமல் முஸ்லீம்களுக்கு யாதொரு லாபமும் இல்லாததோடு பின்னால் கண்டிப்பாய் தொந்திரவுகளும் ஏற்படும் என்பதே நமது அபிப்பிராயம்.

**குடி அரசு – கட்டுரை – 11.09.1927**



RangaRakes tamilnavarasam.com

# மறுபடியும் பெசண்டம்மையார்

ஒரு விதத்தில் மறைந்து போன ஸ்ரீமதி பெசண்டம்மையாரின் அரசியல் செல்வாக்கை மறுபடியும் உயிர்ப்பிக்க கொஞ்ச நாளாகவே அந்தரங்கத்தில் பல ஏற்பாடுகள் நடந்து வருகின்றதை நாம் அறிவோம். அதற்காக பல பத்திரிகைகளையும் வசப்படுத்த செய்துவரும் முயற்சியையும் நாம் அறிந்துவருகிறோம்.

பெசண்டம்மையாரின் ஆதிக்கம் அல்லது தலைமை என்பது பெரிதும் விபூதி பூசும் அய்யர்களான பார்ப்பனர்களின் ஆதிக்கம்தான். மகாத்மா காந்தியின் ஆதிக்கமென்பது பெரிதும் நாமம் போடும் அய்யங்கார்களான பார்ப்பனர்களின் ஆதிக்கம்தான். “நாட்டுக்கு எந்த துரை வந்தாலும் தோட்டிக்கு புல் சுமக்கும் வேலை போகாது” என்பது போல் பார்ப்பன சூழ்ச்சியால் எந்த தலைவர் போய் எந்த தலைவர் வந்தாலும் பார்ப்பனர்களுக்கு யோகமே தவிர நமது கதி இவர்கள் காலை நக்கிக் கொண்டு திரிய வேண்டிய தாய்தான் இருக்குமேயல்லாமல் ஒருக்காலும் சுயமரியாதையுடன் வாழ முடியாது. இதற்கு சாட்சி மகாத்மா ஆதிக்கத்தால் ஏற்பட்ட பலனே போதுமானது. இனி நமக்கு மகாத்மாக்களும் வேண்டாம், உலக ரக்ஷகிகளும் வேண்டாம். நம்ம காலிலேயே நாம் நிற்கும்படியான யோக்கியதை நமக்கு வரும் வரை அனாவசியமாய் இவைகளிலெல்லாம் கவனம் செலுத்தாமலிருப்பதே மேலானது.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 11.09.1927**



RangaRakes

# நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே

சுவாமி வேதாசலம் அவர்கள் அருமைக் குமாரத்திக்கும் நமது நண்பர் திருவரங்கம்பிள்ளை அவர்களுக்கும் நடந்தேறிய திருமணச் சடங்கானது தமிழ்மக்களையே குழப்பத்தில் கொண்டு வந்து விட்டு விட்டது.

சுவாமி வேதாசலம் அவர்களும் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் தமிழ் நாட்டிலேயே தமிழ் மக்களின் பழய நாகரிக விஷயமாய் தக்க ஆராய்ச்சி உள்ளவர்கள் . ஏனையவர்களை இவர்களுக்கு சமமானவர்கள் அல்லது இவர்களுக்கு அடுத்தவர்கள் என்று சொல்ல வேண்டுமேயல்லாமல் இவர்களுக்கு மீறினவர்கள் என்று சொல்ல முடியாது என்பது நமது அபிப்பிராயம். அப்படிப்பட்ட இரு ஞான பாஸ்கரர்கள் கூடிச் செய்த திருமணம் பார்ப்பனீயத் திருமணமாய் நடந்தேறிற்றென்றால் மற்றவர்கள் எவ்வளவு தூரம் பார்ப்பனீயத்திற்கு உயர்வு கொடுக்க மாட்டார்கள்! உயர்வு கொடுக்க விரும்பார்களா என்பதை யோசிக்கும்படி அவர்களுக்கே விட்டு விடுகிறேன். இதற்கு ஏதாவது தகுந்த சமாதானம் இவர்கள் சொல்லாத வரையில் திருத்த முடியாத குற்றமாவதோடு மக்களுக்கு குழப்பமும் நமது முயற்சிக்கு இடையூறும் ஏற்படும் என்பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - குறிப்புரை - 11.09.1927**



tamilnavarasam.com

# சென்னைக்கு செல்கிறோம்

சுமார் ஐந்து ஆறு மாதங்களாய் நாம் தெரிவித்து கொண்டு வந்த படிக்கு 'திராவிடன்' பத்திரிகை விஷயமாய் சென்னைக்குச் செல்லுகிறோம்.

பார்ப்பனரல்லாதார் நன்மையையும் சுயமரியாதையையும் முன்னிட்டு 'திராவிடன்' பத்திரிகையையும் ஏற்று நடத்த வேண்டும் என்று நம்மை பலர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பார்ப்பனரல்லாதார் இயக்கமாகிய தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் சில முக்கிய தலைவர்களுக்கும் தோன்றிற்று. இதன் பயனாக நாம் மகா ஜனங்களையும் அபிப்பிராயம் கேட்டதில் அவர்களும் பெரும்பான்மையோர்கள் அந்தப்படியே கட்டளை இட்டார்கள் . அன்றியும் பல பிரபுக்களும் வேண்டிய சகாயம் செய்வதாக வாக்களித்து ஏற்றுக் கொள்ளும்படியாகவே வற்புறுத்தினார்கள் . எனவே சென்னைக்கு செல்லுகின்றோம்.

இதைப்பற்றி இந்த சமயத்தில் இரண்டொரு வார்த்தைகள் தெரியப் படுத்த வேண்டியது அவசியமெனக் கருதி வெளியிடுகிறோம். முதலாவது ஏற்கனவே தமிழ் நாட்டில் 2, 3 தமிழ் தினசரிகள் இருக்கும் போது 'திராவிடன்' என்கிற தினசரி பத்திரிகை ஒன்று நமக்கு வேண்டுமா? தமிழ் மக்கள் இவ்வளவு பத்திரிகைகளையும் ஆதரிப்பார்களா? என்பது முக்கிய மானது.

தமிழ் நாட்டில் எத்தனையோ தினசரி பத்திரிகைகள் இருந்தாலும் மற்ற சமூகத்தாருக்கு இருப்பது போல பார்ப்பனரல்லாதாராகிய 3 $^1/_2$ கோடி மக்களின் நலத்தையே பிரதானமாய் கருதி உழைக்கும் தினசரி பத்திரிகை நமக்கு 'திராவிடனை' விட வேறு இல்லை என்றே சொல்லவேண்டி இருக்கிறது. அதாவது பார்ப்பனர்களால் நடத்தப்படும் இரண்டு தினசரிகள் கண்டிப்பாய் பார்ப்பன நன்மைக்காகவே, பார்ப்பனர்கள் நன்மைக்கான கொள்கைகளுடனேயே நடைபெற்று வருகிறதுமல்லாமல் அதுவே தமிழ் நாட்டுமக்களின் அபிப்பிராயமென்று ஜனங்கள் ஏமாறும்படி நடத்தப்படு கின்றன என்பதும் யாவரும் அறிந்ததே. பார்ப்பனரல்லாதாரால் நடத்தப்படும் ஒரு தினசரியும் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தில் கருத்தும் கவலையும் இருப்பதாக கண்டாலும் பார்ப்பனக் கொடுமைகளைத் தாராளமாய் கண்டிப்ப



RangaRakes

தானாலும் அதன் அரசியல் கொள்கை பார்ப்பனரல்லாதாரை ஒரு நாளும் தலையெடுக்க ஒட்டாததாகவும் பார்ப்பனர்களிடமிருந்து தப்ப முடியாததாக வுமே இருக்கிறது.

இந்த விஷயத்தில் பார்ப்பன பத்திரிகைகளுக்கும் மற்றும் அநேக பார்ப்பனரல்லாத வாரப் பத்திரிகைகளுக்கும் ஒரு சிறிதும் வித்தியாசமில்லை. தவிர தமிழ் மக்கள் இவ்வளவு பத்திரிகைகள் இருக்கும் போது இதையும் ஆதரிப்பார்களா என்றால் ஆதரித்துதான் ஆக வேண்டும். ஒரு சமயம் ஆதரிக்காவிட்டாலும் தமிழ் மக்களுக்கு இதை ஆதரிக்கும் புத்தி வரும்வரை எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும் நடத்திதான் தீரவேண்டிய நிலையிலிருக்கிறோம். இல்லாதவரை தமிழ் மக்கள் மீளுவதற்கு வேறு மார்க்கம் இல்லை என்றே சொல்லுவோம்.

ஆனால் இது கஷ்டமான வேலை என்பது நமக்கு நன்றாய் தெரிகிறது.

ஒரு வேலையும் செய்யாமல் "வருக, வருக, மகாத்மா வருக, மகாத்மா வுக்கு ஜே!" என்று சொல்லிவிட்டு மகாத்மாவின் பார்ப்பன பிரசாரத்தையும் போட்டு விட்டு சும்மா இருந்தாலே ஓட்டு கிடைத்து விடும், பத்திரிகையும் தாராளமாய் செலவாகும், மேடைகளிலும் பேச இடமும் கிடைக்கும். அதோடு மகாத்மா பேட்டியுடன் 'யங் இந்தியா'விலும் 'நவஜீவனி'லும் கூட இடமும் கிடைத்து விடும். இது மிகவும் சுலபமான வேலைதான். இவைகளில் நமது மக்களுக்கு என்ன பலன் உண்டாகும் என்பதுதான் நமது கேள்வி. ஆகை யினாலேதான் இது சமயம் சற்று நஷ்டமாயிருந்தாலும் பலனுள்ள வேலையை செய்யவேண்டியிருக்கிறது.

## கொள்கைகள்

"திராவிடன்" கொள்கைகள் "குடி அரசு"க் கொள்கைப்படியே தானிருக்கும். 'குடி அரசி'ன் கொள்கைகள் யாவரும் அறிந்திருப்பார் களென்றே நினைக்கிறோம். அதாவது: **பார்ப்பனரல்லாதாரை அழுத்தி பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்த பார்ப்பனர்களுக்கு நமது நாட்டில் ஆயுதங்களாக இருக்கும் அரசியல் புரட்டையும் மதப் புரட்டையும் அடியோடு அழிப்பதுடன் பார்ப்பனீயத்தை ஒழித்து மக்களுக்கு சுய மரியாதை உண்டாகும்படி செய்வது** என்பது தான். இதற்குத் 'திராவிடன்' சொந்தக்காரர்கள் சம்மதிக்காதபோது நாம் விலகி விடுவோம் என்பது உறுதி. இது சமயம் இந்தக் கொள்கையை ஒப்புக்கொள் ளவோ ஆதரிக்கவோ நமது நாட்டில் ஒரு குட்டித் தலைவராவது இல்லை. ஒரு குட்டிப் பத்திரிகையாவது இல்லை. ஆனாலும் நாம் அதற்காக பயப்படவில்லை. ஏனெனில் இக் காரியங்கள் நடைபெறாமல் போனால் நமது பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கு மாத்திரமல்லாமல் இந்தியாவுக்கே சுயமரியாதையும் விடுதலையும் ஒருக்



tamilnavarasam.com

காலும் ஏற்படப் போவதில்லை என்பதே நமது முடிவு. பார்ப்பனரல்லாதார் இயக்கமாகிய தென் இந்திய நல உரிமைச் சங்கத்தாரும் அவர்களது பத்திரிகைகளாகிய 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைகளுங் கூட இக் கொள்கைகளைப் பொறுத்தவரையில் நம்மிடம் சிறிது அபிப்பிராயபேதம் கொண்டிருப்பதும் நமக்குத் தெரியும். நம்மிடம் 'திராவிடன்' ஒப்புவிக்கப் பட்டால் இக்கொள்கைகளுடன் தான் அது நடத்தப்பெறும் என்பதாக அவர் களுக்கும் இப்போதே சொல்லி விடுகிறோம். அரை நூற்றாண்டாக அநேக இந்திய மேதாவிகளால் உண்டாக்கப்பட்டதாகச் சொல்லப்படும் அரசியலை, குற்றம் சொல்வதும் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் ரிஷிகளாலும், முனிவர்களாலும், கடவுள் அவதாரங்களாலும் உண்டாக்கப்பட்டதாய்ச் சொல்லப்படும் - மகாத்மா காந்தியாலும் கூட சொல்லப் படும் - மத இயலைக் குற்றம் சொல்வதும் இரத்தத்திலும், நரம்புகளிலும், எலும்புகளிலும், சதையிலும் ஊறிக் கலந்து இருக்கும் இவ்விஷயங்களைக் குற்றம் சொல்லி மக்களை திருப்புவது என்பது ஒருக்காலும் சுலபமான காரியமென்று சொல்ல முடியாது. அன்றியும் தற்போது எல்லாத் துறைகளின் ஆதிக்கத்திலும் அதி காரத்திலும் இருக்கும் பார்ப்பனீயத்தை ஒழிப்பது என்பது இவற்றையெல்லாம் விட அதிகமான கஷ்டமென்பதும் நாம் சொல்லாமலே விளங்கும். இதற்கு ஆதாரமாக மகாத்மா காந்தியினாலேயே 'பார்ப்பனீயமில்லாதவர்' என்று மதிக்கப்பட்ட ஒரு பார்ப்பனர் ஒருசமயம் சொன்ன வார்த்தைகளைக் குறிப்பிடுகிறோம்.

"பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க இந்த நாட்டில் ஆயிரக் கணக்கான வருஷங்களாக அநேக பெரியவர்களாலும், சித்தர்களாலும், சமணர்களாலும், புத்தர்களாலும் எவ்வளவோ பாடு பட்டாய் விட்டது. மற்றும் மகமதிய அரசாங் கத்தாராலும் எவ்வளவோ பாடுபட்டு பார்த்தாய் விட்டது. இதனால் இவ்வளவு பேரும் தோற்றார்களேயொழிய ஒருவரும் வெற்றிபெறவில்லை. இந்த நிலையில் ஒருவனுடைய முயற்சி எம்மாத்திரம்?" என்று சொல்லி பரிகாசம் செய்தார்.

இந்த வார்த்தைகள் வாஸ்தவமாக இருந்தாலும் இருக்கலாம். அது போலவே நமது முயற்சியும் வெற்றிபெறாமல் தோல்வியும் உறலாம். ஆனாலும் ஒன்று மாத்திரம் சொல்லுவோம். என்னவெனில் இம்முயற்சிகள் வெற்றி பெறாமல் நமது நாட்டுக்கும் சமூகத்துக்கும் விடுதலை இல்லை என்பதை மாத்திரம் மறுபடியும் உறுதியாய்ச் சொல்லுகிறோம். எனவே நமக்குச் சரி என்று பட்ட வழியில் உழைக்க வேண்டியது நமது கடமையே யல்லாமல் வெற்றி, தோல்வி என்பவைகளைப் பற்றி முடிவு செய்து கொள்ள வேண்டியது நமது கடமையல்ல.

தற்சமயம் திராவிடனுக்கு பத்திராதிபராயிருக்கும் ஸ்ரீ கண்ணப்பர்



RangaRakes

இதே கொள்கைகளை உடையவர் என்பதே நமது அபிப்ராயம். அவர் பல வருஷங்களாக எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையில் நமது சமூக முன்னேற் றத்தையே பிரதானமாகக் கொண்டு அல்லும் பகலும் உழைத்து வந்திருக் கிறார். இனியும் அவரேதான் பத்திரிகை விஷயத்தில் நமது முக்கிய துணை வராயிருந்து நம்மை நடத்துவிக்கப் போகிறார். ஆதலால் அவரது தொடர்பு பத்திரிகையின் பிரதான ஸ்தானத்தில் இருந்து கொண்டுதானிருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நாம் 'திராவிடனு'க்குப் போவதால் 'குடி அரசு' என்ன ஆகுமோ என்பதைப்பற்றி அநேகருக்கு பெருங் கவலை ஏற்பட்டிருக்கிறது. 'திராவிடனை' விட 'குடி அரசையே' நாம் பிரதானமாகக் கருதுகிறோம் என்பதை நண்பர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம். அதைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை.

கோயமுத்தூர் மகாநாட்டுத் தீர்மானத்தின் பலனாய் நமது இயக்கத் திற்கு சற்று ஆட்டம் கொடுத்து விட்டதுடன் இது விஷயத்தில் மக்களுக்கு சிறிது ஊக்கமும் குறைந்து இருக்கிறது என்பதும் நமக்கு நன்றாய் தெரிகிறது. நல்ல சமயத்தை கோயமுத்தூர் தீர்மானங்கள் பாழ்படுத்தி விட்டது என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். அப்பொழுதே நமது இயக்கத்தில் உண்மையான அன்புள்ளவர்களெல்லாம் இந்த விஷயத்தை தீர்க்கதரிசிகள் போலவே எடுத்துச் சொன்னார்கள் . சொல்லியும் சிலருடைய சுய நலமும், அவர்களிடத்தில் நமக்கு ஏற்பட்ட பரிதாபமும், நமது பலக் குறைவும் அதுசமயம் நம்மை சும்மா இருக்கச் செய்து விட்டது.

மூன்று மாதத்தில் எவ்வளவோ காரியத்தை சாதித்து விடுவதாக வீரப்பிரதாபம் பேசியவர்கள் இன்று இருக்குமிடம்தெரியாமல் இருந்து வருகி றார்கள் . இவர்கள் எந்த ஊர்களுக்குப் போனார்கள்? எத்தனை மெம்பர் களைக் காங்கிரசுக்கு சேர்த்தார்கள்? காங்கிரசில் எந்தவிதமான ஆதிக்கத்தை பெற்றார்கள்? அல்லது யாருடைய ஆதிக்கத்தை குறைத்தார்கள்? என்ப தாகப் பார்த்தால் ஒன்றுமே காணோம். தானாக காங்கிரசில் ஒருவன் சேர வேண்டு மென்று வந்தாலும் அவனைச் சேர்க்க மாட்டேன் என்று சொல்லுகிறவர் களின் அயோக்கியத்தனத்தைக்கூட ஏன் என்று கேட்பதற்கு யோக்கியதை இல்லாத நிலையில் இந்த வீரர்கள் இருக்கிறார்கள் .

கோவைத் தீர்மானத்திற்கு அனுகூலமாயிருந்தவர்களில் முக்கியஸ் தரான பனக்கால் ராஜாவின் மேல்விலாசமே இப்பொழுது தெரிய முடிய வில்லை. ஸ்ரீமான் ராமசாமி முதலியார் அவர்கள் பம்பாயில் போய் அங்குள் ளவர்களையும் கெடுத்துவிட்டு வந்து சேர்ந்தாரேயல்லாமல் வேறொன்றும் செய்ததாய் காணவில்லை. ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார் அவர்கள் டெல்லிக்குப் போய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ஸ்ரீமான் கலியாண சுந்திர முதலியாரவர்களுக்கு இப்படி ஒரு சம்பவம் நடந்ததாகவே இப்போது ஞாபகமில்லை. ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் சங்கதியோ நாம்



tamilnavarasam.com

சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் ஒருவரும் இல்லை.

அன்றியும் இதன் பலனாக "பார்ப்பனரல்லாதாருக்கு இப்பொழுது தான் புத்தி வந்தது. காங்கிரசின் பெருமையை ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்கள் இப்பொழுது தான் உணர்ந்தார்கள்" என்று நமது எதிரிகளான பார்ப்பனர்கள் சொல்லிக் கொள்ளவும் நமது பாமர மக்கள் மறுபடியும் ஏமாந்து போய் பார்ப்பனர்கள் சூழ்ச்சிக்கு ஆளாகவும் நேர்ந்தது.

அல்லாமலும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் அவர்களுக்கு காங்கிரசின் பேரால் செலவு செய்ய இன்னமும் கொஞ்சம் நம்முடைய பணம் போய்ச் சேரவும் தாராளமாய் இடமேற்பட்டதேயல்லாமல் மற்றபடி வேறு என்ன காரியம் நடந்தது? என்ன பலன் ஏற்பட்டது? என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது. இவற்றை எதற்காக இதுசமயம் எழுதுகிறோமென்றால் மறுபடியும் நமது மக்களை "மதுரை மகாநாட்டிற்கு"திருப்பிக் கொண்டு போக வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை அறிவுறுத்தவும் அதற்காக எவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருக்கிறது என்பதை யோசிக்கச் செய்யவுமே அல்லாமல் வேறில்லை.

எனவே நமது நாட்டிலுள்ள பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் இவ் விஷயங்களை நன்றாய் கவனிப்பதோடு மற்றொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். அதாவது 'திராவிடனும்' 'குடி அரசும்' பார்ப்பனர்கள் கையில் இருக்கும் உத்தியோகங்களையும் பதவிகளையும் பிடிங்கி பார்ப்பனரல்லாத ஜமீன்தார்களும், மிராஸ்தார்களும், வியாபாரிகளும், லேவாதேவிக்காரருமான பணக்காரர்களுக்கும் ஆங்கிலம் படித்த வக்கீல்களுக்கும் கொடுப்பதற்காக நடத்தப்படுகிறது என்று நினைப்பார்களானால் அவர்கள் கண்டிப்பாய் ஏமாந்து போவார்கள் . ஏனெனில் அரசியல் விஷயத்தில் பார்ப்பன ஆதிக்கத்தை விட, பணக்கார ஆதிக்கத்தைவிட, வக்கீல் ஆதிக்கத்தை விட வெள்ளைக்கார ஆதிக்கமே ஒடுக்கப்பட்டவர்களுக்கும் ஏழைகளுக்கும் குடியானவர்களுக்கும் யோக்கியர்களுக்கும் அதிகமான கெடுதி இல்லாதது என்பதே நமது அபிப்பிராயம். வெள்ளைக்கார ஆதிக்கம் ஒழிவதாயிருந்தால் நேரே அது ஏழை மக்களான தொழிலாளர்கள் கைக்கு வருவதுதான் நன்மையேயல்லாமல் ஏழை மக்களுக்கு பார்ப்பனர்களும், பணக்காரர்களும், வக்கீல்களும் தர்மகர்த்தாக்களாகவும், தரகர்களாகவும் இருக்கக்கூடாது என்றே சொல்லுவோம். இந்த கொள்கையின் பேரில்தான் பணக்காரர்கள் இப்பத்திரிகைக்கு உதவி செய்ய வேண்டும் என்பதாகவும் இப்போதே வெளிப்படையாய் சொல்லி விடுகிறோம்.

அது போலவே மத இயலில் நமக்கு உதவி செய்பவர்களும் இந்து மதம் என்பதான பார்ப்பன மதத்துடன் போர் புரிந்து வெற்றி ஏற்படுமானால் "சைவ சமயத்திற்கு அனுகூலமாகும்" என்றோ "வைணவ சமயத்திற்கு



அனுகூலமாகு" மென்றோ "கிறிஸ்தவ மதத்துக்கு அனுகூலம் ஆகும்" என்றோ "மகமதிய மதத்திற்கு அனுகூலமாகு" மென்றோ "மாத்துவ மதத்திற்கு அனுகூலமாகு" மென்றோ ஒவ்வொருவரும் தன் தன் சுய மத நலத்திற்கு என்று நினைத்துக் கொண்டார்களானால் அவர்களும் ஏமாற்ற மடைவார்கள் என்பதையும் இப்போதே சொல்லிவிடுகிறோம். பார்ப்பன மதம் ஒழிந்தால் உண்மையான சமரசமும், சன்மார்க்கமும் உடையதான மதம் ஏற்பட வேண்டும். எல்லா மக்களுக்கும் சுயமரியாதை அளிக்கத்தக்கதாய் இருக்க வேண்டும். அது எதுவானாலும் நாம் கவலைப்படமாட்டோம் என்பதையும் தெரிவித்து விடுகிறோம்.

கடைசியாக சில கனவான்களை நாம் கேட்டுக் கொள்ளுவது என்னவென்றால் இம்முயற்சியில் நமக்கு உதவி செய்யாவிட்டாலும் நம்மை ஏமாற்றாமலாவது இருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 11.09.1927**



RangaRakes tamilnavarasam.com

# மதத்தைப் பற்றிய விபரீதம்

மத சம்மந்தமான புரட்டுகளை நாம் வெளியாக்கி கண்டித்து வருவதில் வைதீகக் கொள்கையுடைய பார்ப்பனரல்லாதாரிலே அனேகருக்கு மன வருத்தம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அதற்கேற்றாப் போல் மதத்தின் பேரால் வயிறு வளர்க்கும் பார்ப்பனர்களும் நம்மைப் பற்றி இம் மாதிரி ஆசாமிகளிடம் விஷமப் பிரசாரமும் செய்து வருவதினால் அவசரப் பட்டு மிகவும் விபரீத கொள்கைக்கும் மூட வழக்கங்களுக்கும் கட்டுப் பட்டவர்களும் "பழக்கம்" "பெரியோர் போன வழி" என்கிற வியாதிக்கும் ஆளானவர்களும் இம்மாதிரி விபரீதமாக கருதி வருத்தப்படுவதில் நமக்கு ஆச்சரியம் ஒன்றும் தோன்றவில்லை.

தன வைசிய நாடு என்கிற நாட்டுக் கோட்டை செட்டியார்கள் நாட்டில் நாம் பிரசாரத்திற்கு சென்றிருந்த காலையிலும்கூட நெற்குப்பை என்ற ஒரு ஊரிலுள்ள வைதீகச் செட்டியார்மார்களை இப்படித்தான் ஒரு பார்ப்பனன் சொல்லி ஏமாற்றிவிட்டான். அதாவது ராமசாமி நாயக்கர் என்கிற ஒருவன் வந்து நாட்டையே பாழாக்குகிறான், கலி அவனால்தான் வெளியாகிறது, நாஸ்திகம் பேசுகிறான், அவன் பேச்சைக் கேட்டால் சிறுபிள் ளைகள் எல்லாம் கெட்டுப் போவார்கள் . பிறகு கோயில் போய்விடும், மடம் போய்விடும், விபூதி போய் விடும் என்பதான பல விஷயங்களைச் சொல்லி ஏய்த்து விட்டான். இந்த வார்த்தைகளை நம்பி அங்குள்ள சில கனவான்கள் கூட்டம் கூட்ட இடம் கொடுக்காமலும் கூட்டம் சேர்ப்பதற்காக செய்து வைத்து இருந்த சில ஆடம்பரங்களையெல்லாம் விரட்டி அடித்தும் கூட்டத்திற்கு யாரையும் வர வொட்டாமலும் செய்து விட்டார். பிறகு நாமும் நம்முடன் கூட வந்திருந்த சில நண்பர்களும் கடைத்தெருவில் யாரையும் எதிர்பாராமல் ஒரு காப்பிக் கடையில் போட்டிருந்த பெஞ்சு பலகையை எடுத்து வந்து வீதியில் போட்டு அதன் பேரில் நின்று பேச ஆரம்பித்தோம். முதலில் தெருவில் போகிறவர் வருகிறவர்கள் சற்று நின்று என்ன என்பதாக கேட்க ஆரம்பித்தார்கள் . பிறகு அப்படியே உட்கார்ந்தார்கள் . இரண்டொரு விஷயங்களைக் கேட்டு அவர் கள் , கை தட்டி சிரிக்கவும் அடிக்கடி இம்மாதிரி செய்யவும்,மறைவில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த கனவான்கள் ஒவ்வொருவராய் வந்தார்கள் . பிறகு பெண்களும் தாராளமாய் வந்தார்கள் . கூட்டம் யாரையும் அறியாமல் தானா கவே பெரிய கூட்டமாய் விட்டது. பிறகு எங்களுக்குத் தெரியாமலே ஒருவர் விளக்குத் தருவித்து விட்டார். இரவு 9 $^1/_2$ மணி வரையில் கூட்டம் நடந்தது. கூட்டம் முடிந்து நாங்கள் திரும்பி ஊருக்குப் புறப்படுகையில் ஒரு செட்டியார் பெரியவர் நல்ல வைதீகத் தோற்றத்துடன் இருந்தவர் எங்கள் மோட்டார் வண்டிக்கு பக்கத்தில் வந்து நின்று கொண்டு அய்யா பெரியவரே சில பார்ப்பனர்கள் எங்களிடம் தங்களைப் பற்றி தப்பும் தவறும் சொல்லி ஏமாற்றி விட்டார்கள் . நாங்கள் தங்களைத் தப்பாய் நினைத்து விட்டோம். அதற்காக வருந்துகிறோம். இன்று இரவு இங்கேயே இருந்து நாளைக்கும் ஒரு உபன்யாசம் செய்து விட்டுப் போக வேண்டும். நானே எல்லா ஏற்பாடும் செய்கிறேன். இன்னும் பல பேர்கள் வந்து கேட்க வேண்டும் என்று எவ்வள வோ தூரம் வேண்டிக் கொண்டார். எங்களுக்கு மறுநாள் வேறிடம் ஏற்பாடா யிருந்ததால் அவர் விருப்பத்திற்கு இணங்க முடியாமல் போய்விட்டோம். புதுவயலிலும் இம்மாதிரியாகவே செய்தார்கள் . பிறகு அவர்களும் இப்படியே கூட்ட முடிவில் வந்தனோபசாரம் செய்யும் போது எடுத்துச் சொன்னார். கடையூரிலும் இது போலவே நடந்தது. கடைசியாக வாலிபர் களிடம் மாத்திரமல்லாமல் பெரியோர்களிடமும் மிகவும் திருப்தியுடன் வந்து சேர்ந்தோம். எனவே விஷயங்களை பகுத்தறிய சோம்பல் பட்டுக் கொண்டு தகுந்த அளவு மூளையை செலவு செய்வதில் சிக்கனம் காட்டியும் அவசரப்பட்டு ஏதாவது ஒரு முடிவுக்கு வந்து விடுகிறார்களே அல்லாமல் உண்மையை அறியமாட்டேன் என்கிறார்கள் . இதற்காக நாம் இவர்கள் விஷயத்தில் பரிதாபப் படுவதல்லாமல் வேறு ஒன்றும் செய்ய முடியாததற்கு வருந்துகிறோம். இம்மாதிரி கூட்டத்திற்குள் இது சமயமும் வைதீகக் கூட்டத்தில் மிகுதியும் எங்கு பார்த்தாலும் 'கலிவந்து விட்டான்,' 'மதம் போச்சுது,' 'கடவுள் போச்சுது' 'புராணங்கள் போச்சுது' 'நாஸ்திக மாச்சுது' என்கிற வார்த்தைகளே அடிபடுகிறதாக சேதிகள் வந்து கொண்டிருக்கிறது. இது மாத்திரமல்லாமல் பார்ப்பனரல்லாதார் கட்சியில் பாரம்பரியமாக இருந்து வருவதாக பெருமை பாராட்டிக் கொள்பவர்களும் இப்படியே தான் பேசுவதாக தெரிகிறது. அதாவது "பார்ப்பனர்கள் அக்கிரமத்தை எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துச் சொல்லட்டும், சர்க்கார் விஷயத்திலும் காங்கிரஸ் விஷயத்திலும் உள்ள புரட்டுகளையும் சொல்லட்டும். நமக்கு அதைப்பற்றி நல்லது தான். ஆனால் மதத்தில் கைவைக்க வேண்டாம் என்று சொல்லுங்கள்" என்கிறதாகவே பேசுகிறார்களாம். மற்றொரு கூட்டத்தினிடையிலோ வென்றால் பார்ப்பனர் மதம் புராணம் இந்த மாதிரி புரட்டுகளைக் கண்டிக்க வேண்டியது தான். ஆனால் காங்கிரசைக் கண்டித்துதேசீயத்தைக்கெடுக்க வேண்டாம் என்று சொல்லுங்கள் என்று பேசிக் கொள்ளப்படுகிறது. இதற்கெல்லாம் நாம் என்ன செய்யக்கூடும். அவரவர்கள் சபலமும் மூட பக்தியும் சுயநலமும் நம்மீது குற்றம் கூறச் செய்கிறதேயல்லாமல் வேறல்ல. எப்படிச் சில பேர்வழிகள் தங்கள் சுய நலத்திற்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் தேசத்தின் பேரால் 'காங்கிரசையும்' 'தேசீயத்தையும்' உண்டாக்கி உபயோகித்துக் கொண்டார்களோ அது போலவே தான் சிலர் சுயநலத்திற்கும்


RangaRakes
tamilnavarasam.com

வயிற்றுப் பிழைப்புக்கும் கடவுள் பேரால் மதத்தையும் புராணங்களையும் உபயோகித்துக் கொள்ளுகிறார்கள் . மனிதனுக்கு கடவுளும் மதமும் புராணமும் எதற்காக இருக்க வேண்டியது என்பதே நமது மக்களுக்கு ஏறக் குறைய முழுதுமே தெரியாது என்றே சொல்ல வேண்டியதாயிருக்கிறது.

மனிதன் ஜீவன்களிடத்தில் கூடுமானவரை அன்பாகவும் மனித சமூகம் வாழ்க்கையில் ஒழுக்கமாகவும் நடந்து கொள்ளுவதற்காகவே கடவுளை மனிதன் உணர வேண்டியவனாக இருக்கிறான். அது போலவே அவ்வன்புக்கும் ஒழுக்கத்திற்கும் ஏற்ற முறைகளைக் கற்பிக்கவே மதம் என்பதை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறான். அப்படிக்கு இருக்க கடவுளுக்காகவும் மதத்திற்காகவும் மனிதன் இருக்கிறான் என்பதாக மக்களுக்கு உணர்த்தப்பட்டு மக்கள் எல்லோரும் கடவுளையும் மதத்தையும் காப்பாற்ற முயன்று விடுகிறார்கள் . இதனால் கடவுளைக் காப்பாற்றுவதற்கு நாம் ஏன் கவலைப்பட வேண்டும். கடவுள் நம்மால் காப்பாற்றக் கூடிய வராயிருந்தால் அவருக்கு கடவுள் தன்மையேது என்பதாக யாராவது உணருகிறார்களா? நாம் கடவுளைக் காப்பாற்றுவது என்பது எவ்வளவு பைத்தியக்காரத்தனமானது! எவனோ தான் பிழைப்பதற்காக கடவுளைக் காப்பாற்றுங்கள், கடவுளைக் காப்பாற்றுவது என்பது எனக்கு கொடுத்து என்னையும் என் பிள்ளை குட்டிகளையும் காப்பாற்றுவதுதான் என்று சொல்லு வானானால் அதை நாம் நம்பிக் கொள்ளுவதா என்றுதான் கேட்கின்றோம். நம்மைக் கடவுள் காப்பாற்றுவதா நாம் கடவுளைக் காப்பாற்றுவதா என்பதே நமக்குப் புரியவில்லை. வேண்டுமானால் ஒவ்வொரு மனிதனும் கடவுளுக்கு பயப்பட வேண்டுமே அல்லாமல் கடவுளைக் காப்பாற்றுவது, அதற்கு சோறு போடுவது, கல்யாணம் செய்வது, பிள்ளைக்குட்டிகளை பெறச் செய்வது என்பது போன்றவைகளெல்லாம் செய்வது எதற்கு? என்றுதான் கேட்கிறோம். இம்மாதிரி செய்பவர்கள் கடவுளுக்கு பயப்படுகிறார்களா என்பதையும் கவனித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம். திருடுகிறவன், கொள்ளையடிக் கிறவன், கொலை செய்கிறவன், மற்றும் வாழ்க்கையில் எத்தனையோ அக்கிரமங்கள் கூடா ஒழுக்கங்கள் செய்கிறவர் ஆகிய எல்லோரும் கடவுளைக் காப்பாற்றுவதாக, அபிஷேகம் செய்வதாக, திருடி, பதில் அக்கிரமம் செய்து தப்பு வழிகளில் சம்பாதித்த திரவியத்தில் பங்கு தருவதாக, கோயில் கட்டுவதாக, மேளம் சதிர் கச்சேரி வைப்பதாக, தாசிகள் 10 பேரை நியமிப்பதாக சொல்லி அப்படியே செய்கிறான் என்றே வைத்துக் கொள்ளு வோம். இதனால் செய்தவனுக்காவது உலகத்துக்காவது என்ன பிரயோஜனம் என்று தான் கேட்கிறோம்.

கடவுள் என்பதையே மக்களுக்கு சரியானபடி உணர்த்தாமல் சில சுயநலக்காரர்கள் போலி பக்தியை உண்டாக்கி எல்லோரையும் நாஸ்திகர் களாக்கி விட்டார்கள் . கடவுள் தன்மையின் உண்மையையும் கடவுளிடத்தில் பயத்தையும் மக்களுக்கு உண்டாக்கி இருந்தால் நமது நாட்டில் இவ்வளவு



அக்கிரமம் நடைபெறுமா? என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இம் மாதிரியான பொய் பக்தி, புரட்டு பக்தி, வேஷ பக்தி, மூட பக்தி ஆகிய நாஸ்திகத் தன்மைகள் நமது நாட்டை விட்டு ஒழிந்தாலொழிய நாட்டில் அன்பும் சமத்துவமும் ஒழுக்கமும் ஏற்படப் போவதில்லை என்பதே நமது அபிப்பிராயம்.

இது போலவே மதம் என்கிற விஷயங்களும் நமக்கு பெரிய ஆபத்தாகவே இருக்கிறது. மதம் என்பதை ஒழுக்கத்திற்கான கொள்கைகள் என்பதாக எண்ணாமல் சில சடங்குகள் என்பதாகவே கற்பிக்கப்பட்டிருக் கிறது. மதத்தில் தீவிரப் பற்றுள்ள எவனாவது பொய் சொல்லாமலிருக்கிறானா, அக்கிரமம் செய்யாமலிருக்கிறானா என்பதைக் கவனித்தால் பெரிய பெரிய வைதீக வேஷக்காரர்களின் யோக்கியதை எல்லாம் விளங்கிவிடும். நமக்கு நேரில் அனேக சாஸ்திரியார்களின் யோக்கியதையும், பாகவதர்களின் யோக் கியதையும், சன்னியாசிகளின் யோக்கியதையும், தினமும் மூன்று வேளை குளித்து ஆறு வேளை கோயிலுக்கு போய் வாரத்தில் 7 நாள் விரதமிருக்கும் பெரியோர்கள் , ஆசாரக்காரர்கள் , பக்திவான்கள் என்கிறவர்கள் யோக்கிய தையும் நன்றாகத் தெரியும். கடவுள் பக்தியும் மதமும் ஏன் இவர்களை இப்படி நடத்துகிறது என்று ஒவ்வொருவரும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

பொதுவாக இவைகள் ஒரு புறமிருந்தாலும் நமக்கு கற்பிக்கப்பட்ட கடவுள்கள் எல்லாம் யாராய் இருக்கிறார்கள் . பிறப்பு, இறப்பு முதலியவை களில் ஈடுபடுத்தி மனித வாழ்க்கையில் உள்ள எல்லா காரியங்களும் ஒன்றுகூட விலக்கில்லாமல் அதற்கு கற்பித்து நம்ம தலையில் போடப்பட்டி ருக்கிறதேயல்லாமல் உண்மைத் தத்துவத்துடன் கூடிய கடவுள் நமக்கு கற்பிக்கப்பட்டிருக்கிறதா என்பதை யோசிக்க வேண்டும். வயோதிகர்கள் இதற்கு இடங் கொடுக்க மாட்டார்களானாலும் வாலிபர்கள் இதை உணர்ந்து பரிசுத்த வாழ்க்கையில் ஈடுபட வேண்டும்.

அதுபோலவே நமது மதம் என்பது என்னமாயிருக்கிறது. இதைப்பற்றி பலதடவை எழுதி இருக்கிறோம். மறுசமயம் எழுதுவோம்.

**குடி அரசு – தலையங்கம் – 18.09.1927**



RangaRakes
tamilnavarasam.com

# நீல் சத்தியாக்கிரகமும் "தலைவர்களும்"

நீல் சத்தியாக்கிரகத்தை நடத்துவதற்கு ஆதாரமாயிருந்த சென்னைத் 'தலைவர்'களில் ஒருவரான திரு. குழந்தை திரு. சாமிநாத முதலியாரைப் பிடித்தவுடன் ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருக்கிறார். அதில் தான் சத்தியாக்கிரகத்திற்கு தலைவனல்லவென்றும் சத்தியாக்கிரகி அல்லவென்றும், ஸ்ரீமான் சாமிநாத முதலியாரே அதன் தலைவரென்றும் எழுதி இருக்கிறார்.

சத்தியாக்கிரகக் கூட்டங்களுக்கெல்லாம் தலைமை வகித்து, சத்தியாக் கிரகங்களுக்கு உற்சாகத்தையும் கொடுத்து பேசி விட்டு, தன்னுடையப் பெய ரையும் பரப்பிக் கொண்டு, இப்போது தலைவர் என்பவரை சர்க்கார் பிடித்த வுடன் 'நான் தலைவனல்ல,' 'சத்தியாக்கிரகியல்ல' என்று எழுதி வேறு ஆசாமியை காட்டிக் கொடுத்து விட்டு தப்பித்துக் கொள்ளப் பார்ப்பது எவ்வளவு பயங்காளித் தனம் என்பதை நேயர்களே கவனிக்க வேண்டும். சென்னைத் தலைவர்களின் யோக்கியதை வெளியாவதற்கு திரு குழந்தை உதவி செய்தது நமக்கு மகிழ்ச்சியே. ஆனால் முதலிலேயே சத்தியாக்கிரக கூட்டமொன்றில் திரு. தண்டபாணி பிள்ளை அவர்கள் பேசும்போது இந்த மாதிரி கனவான்களின் யோக்கியதைகளை எடுத்துச் சொல்லி "தக்க சமயத்தில் இவர்கள் ஏமாற்றி விட்டுப் போய் விடுவார்கள். ஆதலால் இவர் களை நம்பி இறங்காதீர்கள்" என்று சொன்னார்.

அங்கிருந்த பார்ப்பனர்கள் கலகம் செய்து அவரை பேச விடாது தடுக்க முயற்சித்தார்கள் . எப்படி இப்போது இவர்கள் யோக்கியதை வெளி யாய் விட்டது! ஸ்ரீமான் சாமிநாத முதலியாரை சர்க்கார் பிடித்ததும் ஸ்ரீமான் குழந்தையின் சினேகிதரான மற்றொரு தலைவர் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரை இப்போது பூதக் கண்ணாடி போட்டுத் தேடினாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. பேச்சு மூச்சு ஒன்றையும் காணோம். என்ன சத்தியாக்கிரகம்? என்ன தலைவர்? எவ்வளவு அபிமானம்? எதற்காக நடைபெறுகிறது? யார் நடத்துகிறார்கள்? என்கிற விஷயங்களை வாசகர்களே உணர்ந்து கொள்ளக் கோருவதுடன் இனியாவது நமது பார்ப்பனரல்லாத வாலிபர்களுக்கு புத்தி வருமா என்று ஆசைப்படுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 18.09.1927**



RangaRakes

# மகாத்மாவுக்கு முதலியாரின் நற்சாக்ஷி பத்திரம்

ஸ்ரீமான் கல்யாணசுந்திர முதலியார் அவர்கள் மகாத்மா காந்திக்கு ஒரு நற்சாக்ஷி பத்திரம் வழங்கினார். அதாவது மகாத்மா தன்னைப் பற்றி ஞாபகம் வைத்திருக்கிறாராம். 5, 6 வருஷத்துக்கு முன் தான் மகாத்மாவின் பிரசங் கத்தை மொழிபெயர்த்தது மகாத்மாவுக்கு இன்னம் ஞாபகத்திலிருக்கிறதாம். அதனாலேயே மகாத்மாவுக்கு நல்ல ஞாபகக் குறிப்பு இருக்கிறதாம்.

ஆனால் அதே மகாத்மா ஒருசமயம் சென்னைக்கு வந்த காலத்தில் ஸ்ரீமான் சர். தியாகராயர் வீட்டில் இறங்கி கொஞ்சநாள் தங்கியும் இருந்து விட்டு போனபிறகு ஒரு விஷயத்தில் சர். தியாகராயரைப் பற்றி மகாத்மாவை கேட்ட போது தமக்கு அவரைப் பற்றி தெரியாது என்று சொல்லி விட்டாராம், கொஞ்சநேரம் பிரசங்கம் மொழிபெயர்த்ததைப்பற்றி ஞாபகத்தில் வைத் திருந்த மகாத்மாவுக்கு தாம் இறங்கி கொஞ்சநாள் இருந்தவர் ஞாபகத்திற்கு வராமல் போனது என்ன காரணமோ என்பதை ஸ்ரீமான் முதலியார்தான் சொல்லவேண்டும், மகாத்மாவுக்கு ஞாபக சக்தி அதிகம் என்று தீர்மானிப் பதானால் பார்ப்பனரின் அடக்குமுறை சக்தி அதைவிட அதிகமென்றுதான் தீர்மானிக்கவேண்டும். இல்லாவிட்டால் ஸ்ரீமான் முதலியாரிடம் மாத்திரம் அதிக ஞாபகம் என்று சொல்ல வேண்டும்.

**குடி அரசு - கட்டுரை - 18.09.1927**



tamilnavarasam.com

# காந்தியைக் காட்டி காசு பரித்தல்

நமது நாட்டுப் பார்ப்பனர்கள் மகாத்மாவைக் காட்டி காசு பரிக்கிறார்கள் என்று பொதுவாய் எழுதி வந்தோம். இப்போது அது வாஸ்தவமாகவே நடைபெற்றுவிட்டது. அதாவது திருச்சியில் ஒரு கொட்டகையில் மகாத்மாவைக் கொண்டுபோய் வைத்து பார்க்க வருகிறவர்களிடம் டிக்கட்டு போட்டு பணம் வசூல் செய்கிறதாக சங்கதி எட்டுகிறது.

மேடை ரூ. 25-க்கு மேல் ரிசர்வெட் ரூ.15 முதல் 25 வரை, முதல் வகுப்பு ரூ. 10 முதல் 15 வரை, இரண்டாவது வகுப்பு ரூ. 5 முதல் 10வரை, மூன்றாம் வகுப்பு ரூ. 2 முதல் 5 வரை என்பதாகவும்,

டிக்கட்டுகள் சாஸ்திரி & கம்பெனியிலும் வைத்தியா & கம்பெனியிலும் கிடைக்கும் என்பதாகவும் திருச்சி டாக்டர் ராஜனால் துண்டு நோட்டீசு வினியோகிக்கப்பட்டது நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மகாத்மாவின் பிரசங்கமும் அவர் தரிசனமும் அவர் தாமதிப்பதும் சங்கராச்சாரி போடும் வரிக்கு மேல் போய் விட்டது. அது செலவாவதும் சங்கராச்சாரி செலவு செய்வது போலவே பார்ப்பனர்களுக்கே ஏகபோகமாகப் போய்விட்டது. நாம் மூடர்களாயிருக்கும் வரை நமக்கு சுயமரியாதை வரும் வரை இது நடந்து கொண்டு தான் இருக்கும். இதற்கு யார் என்ன செய்வது?

**குடி அரசு - கட்டுரை - 18.09 1927**



# குருக்களின் புரட்டு

சகோதரர்களே!

இதுவரை அரசியல் புரட்டையும், மதப் புரட்டையும் பற்றிச் சொல்லி வந்தேன். இனி ஆச்சாரியார், குரு, மகந்து, சங்கராச்சாரியார்கள், மடாதிபதிகள் என்பவர்களின் பேரால் நடக்கும் புரட்டுகளையும் சற்று கவனித்துப் பாருங்கள் .

எந்த தனிப்பட்ட நபர் மீதிலும் எனக்கு எவ்விதமான மன வருத்தமும், துவேஷமும் இல்லை. இவர்களுக்கு கொடுக்கும் பணம் நின்றுவிட்டால் எனக்கு ஒன்றும் லாபம் கிடையாது. நான் சொல்லுவதெல்லாம் நம்முடைய பணம் எவ்வளவு அக்கிரம வழியிலும், அவிவிவேக வழியிலும் செலவாகிறது என்பதையும் இதன் மூலம் நமது சுயமரியாதைகள் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுவதோடு நாம் எந்தெந்த வழிகளில் ஏமாற்றப்படுகிறோம் என்பதையும் உங்கள் அறிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்கிற எண்ணமே அல்லாமல் வேறல்ல.

ஆசாரியார், மகந்து, மடாதிபதி, சிஷ்யன், குரு என்று சொல்லும் வார்த்தைகள் தமிழ் வார்த்தைகள் அல்ல. அவை ஆரியர்கள் நாட்டு வார்த்தைகள் . அவர்கள் இங்கு வந்தபிறகு அவ்வார்த்தைகளை நம்முள் புகுத்தி அவர்களே அவர்களை அவ்வார்த்தைக்கு அருகர்களாக்கிக் கொண்டு, நம்மை அவர்களது சிஷ்யர்களாக்கிக் கொண்டு, நம்மை அவர்களது சிஷ்யர்கள் என்பதாகச் சொல்லி, அந்த மாதிரியான குரு சிஷ்ய பாவத்திற்கு என்னென்னமோ நிபந்தனைகள் ஏற்படுத்தி, அவைகளுக்கு நம்மை கட்டுப்படுத்தி, அவர்களை நாம் கடவுளை விட சிறந்தவர்களாக மதிக்கும்படியாகச் செய்து ஏமாற்றியிருக்கிறார்கள்.

முக்கியமான கோயிலாகிய திருப்பதியில் மகந்து என்பதாக ஒருவர் எதற்காக இருக்கிறார்? அவருக்கு ஏற்பட்ட வேலை என்ன? அவரால் அக்கோயிலுக்கோ அங்கு செல்பவருக்கோ உண்டாகும் லாபம் என்ன? அவர் கோயிலுக்கு தர்மகர்த்தாவென்று சொல்லுவதானால் மற்ற தர்மகர்த்தாக்களுக்கு இல்லாத தனி மரியாதை அவருக்கு ஏன் செய்ய வேண்டும்?



RangaRakes tamilnavarasam.com

அவர் ஒரு அரசனின் போகபோக்கியம் அனுபவிக்க எந்த விதத்தில் உரிமை உள்ளவர்? மற்ற பெரும்பான்மையான கோவில்களுக்கில்லாத முறை திருப்பதி கோயிலுக்கு மாத்திரம் ஏன் ஏற்பட வேண்டும்? அல்லாமலும், அவர் எந்த பரம்பரையில் வந்தவர்? அவர் ஜாதி, குலம், தாய், தகப்பன் முதலியவர்களின் தொழில், யோக்கியதை முதலியவைகள் என்ன? இந்த மகந்து வேலையில் இதுவரை இருந்து வந்தவர்களின் யோக்கியதை என்ன? எத்தனை மகந்துகள் கிரிமினல் குற்றத்திற்கு தண்டனை அடைந்தவர்கள்? எத்தனை மகந்துகள் லட்சக்கணக்காக சுவாமியின் சொத்தை குடி, இழிவான காரியம், மதுபானம், மாம்சம் உண்ணல், விபசாரம் முதலியவைகளில் செலவு செய்து குற்றங்கள் சாட்டப்பட்டனர் என்பவைகளை யோசித்துப் பார்த்தால் இவர்களது வழக்கமான யோக்கியதை இன்னதென்பதும், எந்த விதத்தில் இவர்கள் மதிக்கத் தகுந்தவர்கள் என்பதும் விளங்காமல் போகாது. மற்றும் இம்மகந்துகள் என்போர் சுவாமிக்கு வேண்டுதலை என்பதாக மக்கள் கொண்டுவரும் பொருள்களில் எவ்வளவு பாகம் கணக்குக்கு போகவிடாமல் திருடிக் கொள்ளுகிறார்கள் என்பதும் போய் வந்தவர்களை விசாரித்தால் யாவருக்கும் சுலபமாய் விளங்கும். ஒவ்வொரு யாத்திரைக் காரனிடமிருந்தும் வழிபறிக் கொள்ளை போல் வழி மறித்து பிடுங்கிக் கொள்ளப்படுகிறது எவ்வளவு?

அடுத்தப்படியாக லோககுரு என்னும் சங்கராச்சாரியார் என்பவர் களின் புரட்டு எவ்வளவு என்று யோசியுங்கள் . லோககுரு என்று அவருக்கு எப்படி பெயர் தகும்? அவர் யார்? யாருக்கு குரு? என்று பார்ப்போமானால் அவர் இந்தியாவுக்கு குரு அல்ல. இந்தியாவில் உள்ள இந்துக்கள் என்பவர் களில் பார்ப்பனர்கள் எல்லோருக்குங் கூட குருஅல்ல. பார்ப்பனர்களில் உள்ள பல பிரிவுகளில் ஸ்மார்த்தர்கள் என்கிற ஒரு சிறு கூட்டத்தாருக்கு இவர் குரு என்ற பாத்தியமுடையவர் அச்சிறு கூட்டத்தாருக்கும் இவரைப்போல் இன்னமும் நான்கு ஐந்து சங்கராச்சாரியார்கள் என்போர்கள் உண்டு. ஆகவே ஒரு சிறு கூட்டத்தின் – அதாவது நமது நாட்டிலுள்ள சில ஆயிரக்கணக்கான மக்களில் 5 அல்லது 6 ல் ஒரு பாகத்தாருக்கு – குரு என்று ஏற்பட்ட ஒருவர் அக் கூட்டத்தினரின் செல்வாக்காலும், தந்திரத்தினாலும், ஏமாற்றுதலாலும், நம்மவர்களின் அறிவீனத்தினாலும், ஏமாந்த தனத்தினாலும் லோககுரு என்ப தாக அழைக்கப்பட்டு இந்துக்கள் என்கிற எல்லா மக்களுக்கும் குருவாகி கோடிக்கணக்கான ரூபாய்களை கொள்ளையடித்து வெறும் பார்ப்பனர் களுக்கே பொங்கிப் போட்டு பார்ப்பனப் பிரசாரம் செய்து வருகிறார்.

ஒரு சங்கராச்சாரி என்பவர் ஒரு ஊருக்கு வருவாரானால் அந்த ஊரிலுள்ள பார்ப்பன உத்தியோகஸ்தர், பார்ப்பன மிராசுதார், பார்ப்பன வக்கீல் முதலிய செல்வாக்குள்ள ஆசாமிகளின் மூலம் அந்நாட்டிலுள்ள செல்வ வந்தர்களை எல்லாம் ஏமாற்றி 100, 200, 1000, 2000, 5000, 10000 என்பதாக



வசூலிப்பதும், தீர்த்தபதி, க்ஷேத்திரபதி, தர்ம பூஷணம் முதலிய பட்டங்கள் கொடுப்பதாகச் சொல்லி அறிவில்லாத செல்வவந்தர்களை ஏமாற்றி 1000,2000 வாங்குவதும், பாத பூஜைக்கு இத்தனை ரூபாய் என்றும், பாத தீர்த்தத்திற்கு இத்தனை ரூபாய் என்றும், தங்கப் பல்லக்கில் ஊர்கோலம் செய்ய இத்தனை ரூபாய் என்றும், வீட்டிற்கு வர இத்தனை ரூபாய் என்றும், வீட்டில் பூஜை செய்ய இத்தனை ரூபாய் என்றும், நமக்கு சொந்தமான குளத்தில் குளிக்க இத்தனை ரூபாய் என்றும், பிருதுகளுடன் வர இத்தனை ரூபாய் என்றும், வெறும் தீர்த்தத்திற்கு இத்தனை ரூபாய் என்றும், பாத தீர்த்தத்திற்கு இத்தனை ரூபாய் என்றும், வியாபார முறையில் பேசி கொள்ளை அடிக்கிறார்கள் . எந்த ஊருக்கு வந்தாலும் அந்த ஊர்களில் பிரபலமாயுள்ள கோயில்களிலேயே வந்து தங்குவதும், அக்கோயிலுக்குள்ளாகவே சங்கராச்சாரியாருக்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் அதாவது கக்கூசு, ஸ்நானம், சமையல் முதலியவைகள் வைத்துக் கொள்வதோடு காலிலுள்ள மிதியடியுடனேயே சுவாமியின் மூலஸ்தானம் வரையில் போய் சாமி கும்பிடுவதுமான காரியங்களையும் செய்கிறார்கள். இம்மாதிரி உலகத்திற்கே குரு என்று சொல்லிக் கொண்டும் பாடல் பெற்ற கோயில்களில் கக்கூசு கட்டிக் கொண்டும், மிதியடியுடனும் சாமி கும்பிடவும் உரிமையுள்ளவரான இந்த சங்கராச் சாரியார்களின் கொள்கை என்ன என்று பார்ப்பீர்களானால், அவர்கள் ஒரு விதத்தில் கடவுள் இல்லை என்று சொல்லுகிற நாஸ்திக மதத்தைச் சேர்ந்த வர்கள் . அதாவது தன்னைத் தவிர கடவுள் என்கிற வேறொரு பொருளோ தன்மையோ கிடையாது. தாங்களே தான் கடவுள் என்கிற கொள்கை யையுடையவர்கள் . அதனால்தான் கோயிலில் கக்கூசு கட்டிக் கொள்வதிலும், மிதியடியுடன் மூலஸ்தானத்திற்கு போவதிலும் ஆட்சேபணையில்லா தவர்களாயிருக்கிறார்கள் . இந்த கொள்கையுடையதற்கு ஸ்மார்த்தம் என்று பெயர். இது சைவ மதத்திற்காவது வைணவ மதத்திற்காவது கொஞ்சமும் சம்பந்தமில்லாதது. கிறிஸ்தவ மதத்திற்கும் மகமதிய மதத்திற்கும் ஒன்றுக் கொன்று எவ்வளவு வித்தியாசம் உண்டோ அதைவிட அதிகமாக சைவ மதத்திற்கும் வித்தியாசம் உண்டு. ஸ்மார்த்தாளுக்கும் சைவ கோயில்கள் கிடையாது. தன்னையே கடவுள் என்று சொல்லிக் கொள்ளும் இவர் வேறு கோயில்களை கும்பிடுவது ஏமாற்றுவதற்கேயல்லாமல் வேறல்ல. இன்னும் இவர் சன்னியாசி வேஷம் போட்டுக் கொண்டு தன்னை சன்னியாசி என்று சொல்லிக் கொண்டும் அரசபோகம் அனுபவிப்பார். தனக்கெனவே யானை, குதிரை, ஒட்டகம், சிப்பாய் முதலிய படைகளும் போகிற இடங்களுக் கெல்லாம் கொண்டு போகிறார்கள் . தன்னுடைய சிஷ்யர்கள் என்போர்களா கிய நம்மவர்களிடமே இவைகளுக்கு செலவுக்கு வேண்டிய பண்டங்க ளையும் சம்பாதித்து வருகிறார்கள். இவ்வளவும் செய்தும் அவரிடமுள்ள மத சம்பந்தமான நாணயமோ மிகவும் மோசமானது. தான் மனதில் மாத்திரம் ஸ்மார்த்தராயிருந்து கொண்டு வெளியில் சைவ வேடம் போட்டுக் கொண்டு ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத நடவடிக்கைகளை உடையவராயிருக் கிறார்கள் .



RangaRakes
tamilnavarasam.com

மகந்துகள் சங்கதியும் உலக குருக்கள் சங்கதியும் இப்படியானால் மற்ற குட்டி சாமியார்கள் , ஜீயர்கள் முதலிய வைணவ மடாதிபதிகள் சங்கதி எவ்வளவு மோசமாக இருக்கும் என்பதை நீங்களே யோசித்துக் கொள்ளுங் கள். இது தவிர இந்த ஆச்சாரியார்களுக்கு கட்டுப்பட்ட மக்களுக்குள்ளாகவே அநேகருக்கு இந்த குருமார்கள் தவிர குலகுரு என்பதாகவும் தங்கள் ஜாதி குரு என்பதாகவும் அநேகருண்டு. அவர்களும் இது போலவே சஞ்சாரம் என்கிற பெயரை வைத்துக் கொண்டு வருஷத்திற்கு ஒரு முறை பிரயாணம் செய்து குரு காணிக்கை யென்பதாக வரி வசூலிப்பதும், வரி அல்லாமல் மடத்திற்கு கடன் அதிகமாய் விட்டது, மழை இல்லை, சாமியார் விலைக்கு வாங்க, பட்டத்தை நிலைநிறுத்த, செய்த வியாஜ்ஜியத்தில் கடன் ஏற்பட்டு விட்டது, இரண்டு பெண்டாட்டி கட்டியும் பிள்ளையில்லை, மூன்றாவது கல்யாணத்துக்கு தங்கப் பல்லக்கு செய்யப் பணம் வேண்டும், வெள்ளிப் பாத்திரம், பிறாது இவைகளுக்கு பணம் வேண்டும் என்பவைகளான பெயரினால் வசூலிக்கும் பணம் கணக்கு வழக்கில்லை. இம்மாதிரி சாமியார் வரிகள் தினம் ஒன்றுக்கு 4 அணா சம்பாதிக்கும் ஏழைக் கூலியைக்கூட விடுவதில்லை. சாமியார் இல்லாவிட்டால் தங்களுக்கு அவமானம் என்று நினைக்கும்படியாய் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த சாமியார்களின் சொந்த யோக்கியதை ஒழுக்கங்கள் என்ன என்பதைப்பற்றி சிஷ்யர்கள் யாராவது கவனிக்கிறார்களா? ஒரு சாமியாருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தால் அந்த இரண்டு பிள்ளைகளும் உள்ள சிஷ்யர்களை மாடு கன்றுகளைப் பிரித்துக் கொள்வது போல் ஆளுக்குப் பகுதியாகப் பிரித்துக் கொள்ளுகிறார்கள். மேல், கடை சங்கராச்சாரியார்களும் இம் மாதிரியே ஒருவருக்கொருவர் எல்லை பிரித்துக் கொண்டிருக்கிறார்கள் . ஒருவர் எல்லை யில் ஒருவர் வந்ததற்காக கோர்ட்டுகளில் விவகாரமும் நடந்து வருகிறது.

இது போலவே சிறு கிராமங்களும் குடும்பங்களும் சாமியார்களுக்கு பிரிவினையாக்கப்படுகிறது. இந்த சாமியார்களில் அநேகம் பேர் தங்களு டைய சஞ்சாரத்தில் தாசிகளைக் கூட்டிக் கொண்டு போகிறார்கள் . சில சாமி யார்கள் சஞ்சாரத்திற்கு தாங்கள் போக சவுகரியப்படாமல் தங்களுடைய தாசிகளை அனுப்பி விடுகிறார்கள் .

அந்த அம்மா சாமியார்களும் சால்வையைப் போர்த்துக் கொண்டு சிஷ்ய கோடிகளைத் தங்கள் காலில் விழச் செய்து பிரசாதம் கொடுத்து காணிக்கை வாங்கி வருகிறார்கள் . சில சாமியார்கள் வாரண்டு சேவகர்களு டன் காணிக்கை வசூல் செய்யவும், வாரண்டு கடன் தீர்க்கவும் சஞ்சாரம் செய்கிறார்கள் . எனது மைத்துனரின் சாமியார் தாசி வைத்திருப்பதால் அடிக் கடி வாரண்டில் பிடிபடுவதுண்டு. எங்கள் குலகுரு என்பவர் வருவதற்கு சாவகாசமில்லை என்கிற காரணத்தால் கண் தெரியாத தன்னுடைய 80 வயது தாயாரான விதவைக் கிழவியை அனுப்பிக் காணிக்கை வசூல் செய்யச் செய்வதும், எங்கள் குடும்பமும் அந்த குருட்டுக் கிழவிக் காலில் விழுந்து காணிக்கை கொடுப்பதும் இன்னமும் நடந்து வருகிறது. என் தகப்பனாருக்கும் தாயாருக்கும் இந்த குருடி காலில் விழுவதற்கு வெட்கப்பட்டு வேறொரு சாமியாரை ஏற்படுத்திக் கொண்டார்கள் . வேறு சாமியாரும் நல்லாஞ் சக்கிர வர்த்திகள் என்கிற ஒரே பரம்பரை என்று சொல்லிக் கொள்வதானாலும் அதற்கு வேறு இதற்கு வேறு என்பதாக இரண்டு வரி கொடுக்கப்பட்டு வருகிறது. புது சாமியார் வைத்துக் கொண்டதாக கேள்விப்பட்ட பழய சாமியார் குடும்பத்தோடு வீட்டிற்கு வந்து “ஹரி இரண்டானாலும் குரு இரண்டாகலாமா” என்பதாக கோபித்து சாபமிடுவதாகப் பயமுறுத்தி அதிகப் பணமும் வாங்கிக் கொண்டார்கள் . அந்த சாபத்தால்தான் எனக்கு குழந்தை இல்லை என்றும் நான் குருத் துரோகியாகவும் மதத் துரோகியாகவும் போய் விட்டதாகவும் குருட்டு நம்பிக்கைக் கொண்ட கிழங்கள் பேசிக் கொள்ளு கின்றன. ‘திராவிடன்’ பத்திராதிபரான ஸ்ரீமான் கண்ணப்பர் அவர்கள் குடும்பத்துக்கு குரு என்கிற ஒரு ஸ்ரீவில்லிபுத்தூர் அய்யங்கார் பார்ப்பனர் ரிவினியூ போர்டாபீசில் மாதம் 75 ரூபாய் சம்பளத்திலிருக்கிறார். வருஷத் துக்கு ஒரு மாதம் சர்க்காரால் கொடுக்கப்படும் பிரிவிலேஜ் லீவு என்கிற சம்பளத்துடன் உள்ள லீவை உபயோகித்துக் கொண்டு கிராமங்களுக்கு பஞ்சகச்சம் கட்டி ஒரு கிழிந்த சால்வையைப் போர்த்துக் கொண்டு வந்து திண்ணையில் உட்கார்ந்து காணிக்கை வரி வசூலித்துக் கொண்டு மறுபடியும் உத்தியோகத்திற்கு போய் விடுகிறார்.

இவ்வளவு அழிம்பும் அக்கிரமமும் புரட்டும் பித்தலாட்டமும் ஏமாற்றமும் அயோக்கியத்தனமும் செய்து கொள்ளையடித்துக் கொண்டு போகிற இந்த ஆச்சாரியார், மடாதிபதி, லோககுரு, குலகுரு, சாமியார் இவர் களால் மக்களுக்கு ஏதாவது லாபம் உண்டா என்பதை கவனித்துப் பாருங்கள். இவர்களைப் பற்றி நமது தமிழ் ஆதாரங்களில் ஏதாவது எழுதப்பட்டி ருக்கிறதா என்று பார்த்தால் எங்கும் கிடையவே கிடையாது. ஆனால் ஆரிய நூல்களில் இருந்தாலும், அது எவ்வளவு ஆபாசமாய் காணப்படுகிறது என்று பார்ப்பீர்களானால் அதன் உண்மை விளங்கும். குருபத்தினி சிஷ்யன் மேல் ஆசைப்பட்டு அவனைக் கெடுத்ததும் அதற்காக சிஷ்யன் சபிக்கப்பட்டதும் காணப்படுவதும், குருக்கள் ஒருவருக்கொருவர் பொறாமையால் சண்டைப் போட்டுக் கொள்ளுவதும், குருபத்தினி சம்பந்தம் செய்தால் அது இன்ன பாவம் என்றும் அதற்கு இன்ன பிராயச்சித்தமென்றும், சிஷ்யனாக ஆசைப் பட்டிருந்தால் இன்ன பிராயச்சித்தமென்றும், அந்தம்மாளாக ஆசைப்பட்டி ருந்தால் இன்ன பிராயச்சித்தம் என்றும் புராணங்களும் ஸ்மிருதிகளும் எழுதப்பட்டிருக்கிறதும் அனுபவத்திலும் இம்மாதிரி அக்கிரமங்கள் நடந்து பலர் பாவத்திற்கு ஆளாவது பிராயச்சித்தத்தின் மூலம் பார்ப்பனர்களுக்கு பணம் கொடுப்பதுமல்லாமல் வேறு என்ன லாபம் உண்டாகிறது? ஆத்மார்த் தத்திற்காவது வாழ்க்கைக்காவது ஏதாவது பலன் உண்டா? ஏதாவது உபதேசம்


RangaRakes
tamilnavarasam.com

உண்டா? லோக குரு சங்கராச்சாரியார் முதலிய பணக்கார குருக்கள் மார்கள், நாம் சூத்திரனானதால் நம்மைப் பார்த்தது குற்றம், நம்முடன் பேசியது தோஷம், நமது பாஷையாகிய தமிழை உச்சரித்தது மகா பாவம் என்பதாகக் கருதுவதும் அதற்காக நம்ம பணத்தைக் கொண்டே பிராயச்சித்தம் செய்வதும், அதன் மூலம் பார்ப்பனர்களுக்குத் தானம் கொடுப்பதும் தவிர வேறு பலன் உண்டா? குலகுரு என்கிறவனும் நமது வீட்டிற்கு வந்தால் நமது பாயின் மேல் உட்காரக் கூட அசுசிப்பட்டுக் கொண்டு தாவிக் குதித்து கீழே உட்காருகிறான். ஆனால் அதே குரு அசுசியான வீதியில் நடந்து வரும் போது காலில் என்னென்னவோ மிதித்துக் கொண்டு நடந்து வருகிறான். அவன் நடந்து வந்த அசுசியான தெருவை விட நம்ம வீட்டுப் பாய் அசுசி என்பதாக கருதுகிறான். இப்படிப் பட்டவன் காலில்தான் நாம் விட்டம் போல் விழுந்து கும்பிட்டு பணம் கொடுக்கிறோம். இந்த சமயத்தில் குரு நமக்கு உபதேசம் செய்வதென்ன, நம்முடன் பேசுவதென்ன என்பதை கவனித் தீர்களா?

**குரு** : சவுக்கியமா?
**சிஷ்யன்** : தேவரீர் அனுக்கிரகத்தால் நாயேன் சவுக்கியம்.

**குரு** : உனக்கு எத்தனை குழந்தைகள் ?
**சிஷ்யன்** : நான்கு குழந்தைகள் .

**குரு** : பெண் எத்தனை ஆண் எத்தனை?
**சிஷ்யன்** : ஒரு பெண் மூன்று ஆண்.

**குரு** : ஆண்களுக்கு கல்யாணம் ஆய்விட்டதா?
**சிஷ்யன்** : இரண்டு ஆண்களுக்கு கல்யாணமாகிவிட்டது.

**குரு** :அப்படியா, இரண்டு ஆண்களுக்கு கல்யாணமாகி விட்டதா? அப்படியானால் அது இரண்டு குடும்பம், நீ ஒரு குடும்பம் ஆக மூன்று குடும்பமாகி விட்டது. ஆகவே மூன்று தலைக்கட்டுக்கு தலைக் கட்டு ஒன்றுக்கு ஒன்றே கால் ரூபாய் வீதம் மூன்றோன் மூன்று, மூக்கால் முக்கால் ஆக மூன்றே முக்கால் ரூபாய் அல்லவா காணிக்கை கொடுக்க வேண்டும். நீ ஒன்றேகால் ரூபாய் தானே வைத்திருக்கின்றாய் இது தர்மமா?
**சிஷ்யன்** :சுவாமி தேவரீர் என்னை மன்னிக்க வேண்டும். குடும்பம் இன்னும் பிரிக்கப்படவில்லையாதலாலும் அதுகளால் இன்னமும் ஒரு சம்பாதனையும் இல்லை யாதலாலும் ஒரே குடும்பமாய் பாவித்து விட்டேன்.

**குரு** : நீ குடும்பம் பிரித்தால் என்ன, பிரிக்காவிட்டால் என்ன. அவர்கள் சம்பாதித்தால் என்ன. சம்பாதிக்காவிட்டால் என்ன. பெரிய சுவாமிகள் காலத்திலேயே உன் பெரியோர்களால் தலைக்கட்டுக்கு ஒன்றேகால் ரூபாய் கொடுப்பதாக பட்டயமிருக்கிறது. அல்லாமலும் சாஸ்திரத்திலும் தலைக்கட்டுக்குத் தனித் தனியாய் வாங்கும்படி ரிஷிகள் சொல்லி இருக்கிறார்கள் . அந்தப்படி கொடுக்க வேண்டும் என்றும் தர்ம சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.
**சிஷ்யன்** : சுவாமி! நாயேன் தெரியாத்தனத்தினால் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும். மூன்றே முக்கால் ரூபா காணிக்கையும் இந்த அபசாரத்திற்காக அபராதம் ஒன்றே கால் ரூபாயும் சேர்த்து ஐந்து ரூபாயாக வைத்திருக்கிறேன். பெரிய மனது செய்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

**குரு** : நிரம்ப திருப்தி. மடம் ரொம்பவும் பழுதாயிருக்கிறது. சிஷ்யர்கள் எல்லாம் ஒரு நாளைக்கு வந்து பார்த்து அது எப்படி செய்ய வேண்டுமோ அந்தப்படி செய்யுங்கள் . (தன்னைத்தானே) சுவாமிகள் ரம்பவும் அதனால் அசவுக்கியப்படுகிறார்கள் .
**சிஷ்யன்** : ஆ ஆகா. இதோ 10 நாளில் நாங்கள் எல்லோரும் மடத் திற்கு வந்து ரிபேர் செய்துவிட்டு வருகிறோம்.

இவ்வளவுதான் குருவுக்கும் சிஷ்யர்களுக்கும் சம்பாஷணை. இதைத் தவிர வேறு ஏதாவது நடந்ததை நான் பார்த்ததே இல்லை.

இப்படி இருந்தால் இது ஒரு பகற் கொள்ளையா அல்லவா என்று தான் கேட்கிறோம். இம்மாதிரி குருவையுடைய நாடாவது மக்களாவது சுய மரியாதை, அறிவு, விடுதலை முதலியவைகள் அடைய முடியுமா? எனவே ஒரு கூட்டத்தார் அதாவது பார்ப்பனர்கள் பிழைக்கவே அரசியல், கடவுள் , மதம், ஆச்சாரியார்கள் ஆகியவைகள் இருக்கின்றனவே அன்றி இவை களால் ஏதாவது பலன் உண்டாகிறதா?

இம்மாதிரியான ஏமாற்றத்திலிருந்து விலகி அன்பு என்கிற உண்மை யான கடவுளை அடைய சமத்துவம் என்கிற கொள்கைகளான மதத்தையும் சுயமரியாதை என்கிற குருவையும் அடைந்தால்தான் விடுதலையோ இன்பமோ மோட்சமோ அடைய முடியுமேயல்லாமல் வேறு ஒன்றினாலும் முடியாது என்பதை உணருங்கள் .

( குற்றாலத்தில் சொற்பொழிவு தொடர்ச்சி 4.9.27 குடிஅரசு, 11.9.27 குடிஅரசு. )

**குடி அரசு - சொற்பொழிவு - 25.09.1927**


RangaRakes

tamilnavarasam.com

# சுயமரியாதைக்கு சத்தியாக்கிரகம்

## வாலிபர்களுக்கு விண்ணப்பம்

பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதைக்காக சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என்பதாக பார்ப்பனரல்லாத வாலிபர் பலர் உள்ளத்தில் ஆத்திரம் பொங்கித் ததும்பிக் கொண்டிருக்கிறது. இவ்விதமான உணர்ச்சியைக் கண்டு நாம் மிகுதியும் மகிழ்ச்சி உறுகிறோம். ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையும் மதுரை அருணாசலமும் விண்ணப்பமும் வேண்டுகோளும் விடுத்த பிறகு பல வாலிபர்கள் தங்கள் தங்கள் பெயர்களைக் கொடுத்து சத்தியாக்கிரகத்தை சடுதியில் ஆரம்பிக்கும் படியாகச் சொல்லி தங்கள் உற்சாகத்தைக் காட்டி வருகிறார்கள். தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு பயனுள்ள வேலை செய்யவேண்டு மானால் அது சத்தியாக்கிரகத்தைத் தவிர வேறில்லை என்பதை நாம் மனப்பூர்த்தியாக ஒப்புக் கொள்கிறோம். நமது நாட்டில் ஆசாரச் சீர்திருத்தமும் அரசியல் சீர்திருத்தமும் ஆரம்பித்து எவ்வளவு காலமாய் நடைபெற்று வருகிறது? இவ்விரண்டிற்காக நமது மக்கள் சிலவழித்த காலம், பொருள் எவ்வளவு? இவ்வளவு ஆகியும் இதன் பெயரைச் சொல்லிக் கொண்டு ஒவ்வொரு தலைவர் என்போரும் மக்களை ஏமாற்றி தன் தன் சுயநலத்திற்கு வழி தேடிக் கொண்டார்களேயல்லது நாடு அடைந்த பலன் என்ன? நாட்டில் மதிக்கத்தகுந்த ஒவ்வொரு பெரியாரும் ஆசாரத்திருத்தம் ஏற்பட வேண்டும், தீண்டாமை ஒழிய வேண்டும், யாவருக்கும் சம உரிமை அளிக்கப்பட வேண்டும், வைதீகப் பிடிவாதங்கள் ஒழிய வேண்டும், அதில்லாவிட்டால் விடுதலையில்லை, சுயராஜ்யமில்லை என்பதாகப் பேசியும் எழுதியும் இருக்கிறார்கள். இதை நாடு ஒப்புக்கொண்டிருப்பதாகவும் குறிப்பு காட்டி இருக்கிறார்கள். அநேக மகாநாடுகளில் இதைப்பற்றிய தீர்மானங்களை ஏகமனதாய் நிறைவேற்றியும் இருக்கிறார்கள். இவற்றைச் செய்த பெரியார்கள் மக்களால் மதிக்கப்பட்டும் வருகிறார்கள். ஆனால் அனுபவத்தில் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது? இன்று வரை ஒரு காரியமும் இல்லையே. இக்குற்றங்கள் நீங்க முன்னோர்கள் பாடுபட்டது இன்றா நேற்றா? ஆயிரக்கணக்கான வருஷங்களாய் பாடுபட்டு வந்திருப்பதற்கு எத்தனையோ ஆதாரங்கள் இருந்து வருகிறது. அவ்வாதாரங்கள் எல்லாம் மதிக்கப்படுகிறது, பூஜிக்கப்படுகிறது. ஆனால் பலன் என்ன? என்று மறுபடியும் கேட்கிறோம்.



ராமாயணத்தில் குகனுடன் ராமர் சரிசமமாய் உட்கார்ந்திருந்தார் என்கிறார்கள்.

பாரதத்தில் விதுரன் வீட்டில் கிருஷ்ணன் சாப்பிட்டார் என்கிறார்கள். பாகவதத்தில் திருப்பாணர் ஆழ்வாரானார் என்கிறார்கள்.

திருவிளையாடல் புராணத்தில் நந்தனார் அறுபத்து மூவரில் ஒருவராகி நாயனாராயிருக்கிறார் என்கிறார்கள். இவ்விருவரும் கோயில்களில் பூஜிக்கப் படுகிறார்கள் என்கிறார்கள். பெரிய புராணத்தில் ஜாதியில்லை என்று சொல்லி இருக்கிறது என்கிறார்கள்.

உமாபதி சிவம், பெத்தான் சாம்பானுக்கு முத்தி கொடுத்ததாய் சொல்லு கிறார்கள். கபிலர் பார்ப்பனனுக்கும் பரையனுக்கும் வித்தியாசமில்லை என்று சொன்னதாக சொல்லுகிறார்கள். அவ்வை "ஜாதியிரண்டொழிய வேறில்லை" என்று சொன்னாள் என்கிறார்கள்.

திருவள்ளுவர் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று சொன்ன தாக சொல்லுகிறார்கள்.

இராமலிங்க சுவாமிகள் "ஜாதி குலம் பேசும் சகடர்கள்" என்று பாடிய தாகச் சொல்லுகிறார்கள்.

திருநாவுக்கரசு நாயனார் "சாத்திரம் பல பேசும் சளாக்கார்காள் கோத்திரமுங்குலமுங் கொண்டென் செய்வீர்கள்" என்று கேட்டதாகச் சொல்லு கிறார்கள். இவைகளுக்கெல்லாம் ஆதாரமுங் காட்டுகிறார்கள்.

மதாச்சாரியார்கள் என்போர்களான ராமானுஜர், ஜாதி வித்தியாசமில்லை என்று சொல்லி பரையர்களையெல்லாம் பிடித்து, நாமம் போட்டு, பூணூல் போட்டு, பஞ்சகச்சம் கட்டச் செய்து, அய்யங்காராக்கினதாகச் சொல்லுகிறார்கள். சங்கராச்சாரியார் தீண்டாமை இல்லை என்று சொன்னதோடு பறையனது காலில் விழுந்து மன்னிப்பு கேட்டுக் கொண்டதாக சொல்லு கிறார்கள். இந்து மதத்திலேயே தீண்டாமை இல்லை என்கிறார்கள்.

மகமதியம், கிறிஸ்தவம், பௌத்தம், சமணம், பாரசீகம், சீக்கியம், ஆரிய சமாஜம், பிரம சமாஜம் முதலிய மதங்களிலெல்லாம் தீண்டாமை இல்லை என்கிறார்கள். அறிவாளிகளான தயானந்த சரஸ்வதி, ராஜாராம் மோகன்ராய், விவேகானந்தர், ராமதீர்த்தர், ராமகிருஷ்ண பரம அம்சர், ஜோதி ராம்பூலே, ரபீந்ரநாத் டாகூர், காந்தி முதலிய மகாத்மாக்கள் தீண்டாமை இல்லை என்று சொன்னதாக சொல்லுகிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இவைகள் தவிர, வேதத்தில் தீண்டாமை இல்லை, கீதையில் தீண்டாமை இல்லை, சைவத்தில் தீண்டாமை இல்லை, வைணவத்தில் தீண்டாமை இல்லை என்றும் சொல்லுகிறார்கள் . இவ்வளவு மதங்களும் இவ்வளவு மதாச்சாரியார்களும் இவ்வளவு பெரியார்களும் இவ்வளவு ஆதாரங் களும் தீண்டாமை இல்லை என்று சொல்லியும் எழுதியுமிருந்தும் நமது நாட்டில் மாத்திரம் பிரத்தியக்ஷத்தில் தீண்டாமைப் பேய் இருக்கிறதா இல்லையா? என்று பாருங்கள் . தீண்டாமை மாத்திரம் என்று சொல்ல முடியுமா? தீண்டாமை, பேசாமை, நடக்காமை, நிழல் மேலே படாமை கண்ணில் தென் படாமை முதலியவைகள் இருக்கிறதா இல்லையா? அதுவும் கோவில், குளம், பள்ளிக் கூடம், தெருவு முதலிய இடங்களிலும், பூச்சி, புழு, நாய், கழுதை, பன்றி, மலம், மூத்திரம் முதலியவைகள் இருப்பதற்கு நடப்பதற்கு மலஜலம் கழிப்பதற்கு ஆட்சேபணையில்லாததுமான இடங்களில் எல்லாங்கூட தீண்டாமைப் பேய் இருக்கிறதா இல்லையா? சோத்துக்கடை, காப்பிக்கடை, ரயில் வண்டி முதலிய இடங்களில் இருக்கிறதா இல்லையா? இதற்காக எத்தனையோ காலமாய் எத்தனையோ பேர் பாடு பட்டும் முடியாமலிருக்கிறதா இல்லையா?

ஏன் இப்படி இருக்கிறது? என்பவைகளை யோசித்துப் பாருங்கள். வாலிபர்களே! உங்களைத்தான் கேட்கிறோம். தயவு செய்து யோசித்துப் பாருங்கள். இவற்றைப் போக்கடிக்க யோக்கியமான முறையில் சரியான விலை கொடுக்க முன் வந்து நீங்கள் யாரும் இதுவரை முயற்சிக்கவேயில்லை என்பதும், அதனால்தான் அது (தீண்டாமை) இன்னமும் நமது நாட்டில் நமது உருவமாகவே விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரிய வரும். எனவே இதைப் போக்கடிக்க வேண்டாமா? வேண்டுமென்பீர்களா னால் உங்கள் கையில் புஸ்தகம் கூடாது. நீங்கள் இது முடியும் பரியந்தம் படிக்கக்கூடாது. பள்ளிக்குப் போகக்கூடாது. கோவிலுக்குப் போகக்கூடாது. ஏன் என்று கேட்பீர்களானால் நீங்கள் எவ்வளவு படித்து எவ்வளவு உத்தியோகம் பார்த்து எவ்வளவு பெரிய மனிதனாகி எவ்வளவு பக்திமானாகி கடவுளோடு கடவுளாய் உரைந்து கொண்டிருந்தாலும் தீண்டாமை யென்பது ஒருக்காலும் உங்களை விட்டுப் போய் விடாது. ஜஸ்டிஸ் கிருஷ்ணன், ஐகோர்ட் ஜட்ஜ் வேலைபார்த்தும் தீண்டாதவராய்த்தான் செத்தார். அவர் பிள்ளை குட்டிகள் இன்னமும் தீண்டாதவராய்த்தான் இருக்கிறார்கள் . மந்திரி முதலிய பெரிய உத்தியோகம் பார்த்தவர்கள் எல்லாம் இப்பொழுது தீண்டா தார்களாகிய சூத்திரர்களாய்த்தானிருக்கிறார்கள் . பார்ப்பனரல்லாத மடாதிபதி கள் தம்பிரான்கள் எல்லாம் என்னதான் ஸ்ரீலஸ்ரீ பட்டமிருந்தாலும் சூத்திரர் களாகத்தான் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள் . மைசூர், புதுக் கோட்டை மகாராஜாக்களெல்லாம் சூத்திரர்களாய்தான் இருக்கிறார்கள் . மகாத்மா காந்தியை உலகமெல்லாம் போற்றினாலும் அவரும் தீண்டாதார் என்பதை மறந்து விடாதீர்கள் . இந்த நிலையில் நீங்கள் படித்து என்ன



செய்யப் போகிறீர்கள்? யாரை காப்பாற்றப் போகிறீர்கள்? நீங்கள் பாசான தாகவே வைத்துக் கொள்ளுங்கள்; பெரிய உத்தியோகம் பார்த்துப் பணம் சம்பாதித்து அரசபோகம் அனுபவித்தாகவே வைத்து கொள்ளுங்கள் ; சாகும் போது யாராய்ச் சாவீர்கள் என்பதை சற்று யோசித்துப் பாருங்கள் . குற்றமற்ற மனிதனாய்ப் பிறந்து இருந்தும் சூத்திரர்களாய், தீண்டாதவர்களாய், பார்ப்பனர்கள் வைப்பாட்டி மக்களாய், மிருகத்திலும் தாழ்ந்தவர்களாய், மனிதத்தன்மை அற்றவர்களாய், சுயமரியாதை இல்லாமல்தான் சாவீர்களா? அல்லது வேறுவிதமாய் சாவீர்களா? என்பதை நினைப்புக்கு கொண்டு வாருங்கள் . நீங்கள் எவ்வளவு பணந் தேடி வைத்திருந்தாலும் உங்கள் பிள் ளைகளும் குட்டிகளும் அப்படித்தான் சாகுமா? வேறு விதமாய்ச் சாகுமா? என்பதையும் யோசித்துப் பாருங்கள். எனவே உங்கள் போக போக்கியமும் வாழ்வும் பணமும் பதவியும் பட்டமும் என்ன செய்வதற்கு? ஒரு நாய்க்கு இருக்கிற யோக்கியதை உங்களுக்கு இல்லை யென்று ஒப்புக் கொள்ளுகிற நீங்கள் ஒரு பன்றிக்கிருக்கிற யோக்கியதை உங்களுக்கில்லையென்று ஒப்புக் கொள்ளுகிற நீங்கள் இதைப் பெறாமல் எதற்காக இருக்கிறீர்கள் என்பதற் காகத்தான் படிப்பை விட இதை முக்கியமாய் கவனியுங்கள் என்கிறோமே யொழிய வேறில்லை. முதலில் தீண்டாமையை விட இழிவான சூத்திரத் தன்மையை ஒழிக்க முயலுங்கள். அதற்குத் தக்க விலை கொடுங்கள் . ஆயிரக் கணக்கான வருஷங்களாக இருந்துவரும் அக்கிரமத்தை மேடைப் பேச்சி னாலும் பத்திரிகைப் பிரசுரத்தினாலும் புராண உபதேசத்திலும் தீர்த்து விடலாம் என்று எண்ணுவது அறியாமையேயாகும். அதனால்தான் மேற் கண்ட இத்தனை பெரியோர்களின் உபதேசமும் கட்டளையும் பாடல்களும் படிப்பினைகளும் ஆதாரமும் ஒரு கூட்டத்தாரின் வயிறு வளர்ப்புக்கு உதவுகிறதேயல்லாமல் தீண்டாமையை அசைக்கக்கூட முடியவில்லை. தீண்டாமையிலிருந்து விலகுவதேதான் சுயராஜ்யம். அதுவேதான் விடுதலை, அதுவேதான் உரிமை, அதுவே தான் சுயமரியாதை என்பதை உணருங்கள் . விடுதலை சும்மா கிடைக்காது. உயிரை விட வேண்டும், இரத்தம் சிந்த வேண்டும், வெட்டுப்பட வேண்டும், குத்துப்பட வேண்டும், சுட்டுக் கொல்லப் பட வேண்டும், ஜெயிலில் சாக வேண்டும். இம் மாதிரி காரியமில்லாமல் உண்மையில் விடுதலை பெற்ற நாடு எது? ஜாதி எது? சுயமரியாதை பெற்ற சமூகம் எது? என்பதை யோசியுங்கள் இதற்குத் தயாராயிருக்கிறீர்களா? இருக்க முடியுமா? என்று உங்கள் வீரமுள்ள பரிசுத்தமான மனத்தைக் கேளுங்கள் . அது சம்மதங்கொடுத்தால் உடனே உங்கள் புஸ்தகத்தை மூட்டை கட்டி வைத்து விட்டு சத்தியாக்கிரகத்தை நடத்த வாருங்கள் நாங்கள் வரத் தயாராயிருக்கிறோம் என்று எழுதுங்கள் . இப்படிச் செய்வீர்களானால் இங்கு மாத்திரமல்லாமல் எங்குமே தீண்டாமை என்கிற வார்த்தையே இல்லாமல் செய்து விடுவீர்கள் . சூத்திரத் தன்மை ஒழித்தவர்களாவீர்கள். வாலிபர்களாகிய உங்களால் தான் இந்தப் பெரிய காரியம் செய்ய முடியும். வாலிபர்களாகிய நீங்கள் தான் கோடிக்கணக்கான மக்களுக்கு மனிதத்



RangaRakes
tamilnavarasam.com

தன்மையையும் சுயமரியாதையையும் விடுதலையையும் சம்பாதித்துக் கொடுக்க யோக்கியதை உடையவர்கள் . எனவே தியாகத்திற்கு, அஹிம்சையும் குரோதமும் துவேஷமுமற்ற தியாகத்திற்கு தயாராகுங்கள் .

**குடி அரசு - தலையங்கம் - 25.09.1927**



# 'நீலாம்பிகை திருமணம்'

சுவாமி வேதாசலம் அவர்களின் அருமைப்புதல்வி திரு.செல்வி நீலாம்பிகையம்மைக்கும் நமது நண்பரான திருவாளர் திருவரங்கம் பிள்ளை அவர்களுக்கும் நடந்த திருமணச் சடங்கு சம்பந்தமாக சில விபரங்கள் பொது மக்கள் கவனத்தை இழுக்கும்படி நேர்ந்தது பற்றி வருந்துகிறோம். ஆயினும் இச்சடங்கானது இது சமயம் தமிழ்நாட்டில் வெகு மும்மரமாய் நடந்துவரும் தமிழ் மக்களின் மனிதத்தன்மை உணர்ச்சியின் எழுச்சிக்கு இடையூறாய் நிற்குமோவென்னும் ஐயத்தால் அவற்றை வெளியிட்டாக வேண்டிய நிலைமை ஏற்பட்டது பற்றி வெளியிடலாயிற்று. அதற்கு சமாதானமாக பண்டிதர் ஆனந்தம் அவர்கள் எழுதிய கட்டுரையானது குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொண்டது போல் செய்து விட்டாலும் “கண்டு களித்தோன்” என்னும் நண்பர் எழுதிய மற்றொரு கட்டுரையும் அதை ஒருவாறு திருவாளர் கா.சுப்பிரமணியபிள்ளை அவர்கள் சரி என்று ஒப்புக்கொண்ட தாக்கலும் மக்களுக்கு திருப்தி அளிக்கும் எனக் கருதி அவ்விஷயத்தை அத்துடன் நிறுத்திவிடலாம் என்பதாக முடிவு செய்து “இவ்விஷயம் இத்துடன் முடிவு பெற்றது” என்பதாக குறிப்பும் எழுதி முடித்துவிட்டோம்.

ஆனால் மறுபடியும் சுவாமி வேதாசலம் அவர்களின் சிஷ்யர் என்று சொல்லப்படுபவரான திருவாளர் பாலசுந்தரம் அவர்களால் ஒரு நீண்ட வியாசம் வெளிவந்தபிறகு இவ்விஷயம் மறுபடியும் தலையெடுக்க வேண்டியதாகி விட்டது. இதைப்பற்றி பலருக்குப் பலவிதமாய் தோன்றினாலும் நம்மைப் பொருத்தவரை கோயிலில் சுவாமிகளுக்கு பூசை செய்யும் குருக்கள் என்பவர்களை தமிழ் மக்கள் சடங்குகளில் சேர்த்துக் கொள்வதானது தமிழ் மக்கள் சுயமரியாதைக்கு குறைவு என்பதே நமது அபிப்பிராயம். ஆதாரங்களையும் ஆராய்ச்சிகளையும் கொண்டு குருக்கள்மார்களை ஆதி சைவர்கள் என்றோ, தமிழர் என்றோ, வேளாளர் என்றோ ருஜு செய்து விடலாமானாலும், அக்குருக்கள் ஒப்புக்கொள்ளாதவரையில், அதாவது அக்குருக்கள் நமக்கு சமமானவரென்றும், நம்மை விட உயர்ந்தவரல்லவென்றும், நம்முடன் இருத்தல் உடனுண்ணல் முதலிய காரியங்களை ஒப்புக் கொள்ளாமல் இருக்கும் போது அவர் யாராயிருந்தாலும் நமக்கு என்ன பிரயோஜனம். சாதாரணமாக 100 - க்கு 75 வைணவ பார்ப்பனர்கள் ஆதியில் இன்னார் என்பது நமக்குத் தெரியும். ஸ்ரீ ராமானுஜர் காலத்தில் பார்ப்பனர்கள்



RangaRakes tamilnavarasam.com

ஆனவர்கள் என்பது ஆராய்ச்சி வல்லோரின் ஆராய்ச்சியின் முடிவு என்றே வைத்து கொள்வோம். அதனால் நமக்கு என்ன லாபம். நம்மிலும் உயர்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளும் ஒருவனை, அதிலும் பிறவியிலேயே உயர்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளும் ஒருவனை உயர்ந்த தன்மையைக் காட்டுவதற்கு ஆதாரமாக பழக்கத்தில் வந்து கொண்டிருக்கிற சடங்குகளை நடத்திக் கொடுப்போனாக சேர்த்துக் கொள்ளுவதால் நாமே அவ்வுயர்வுக்கு ஆதரவு கொடுத்தவர்கள் ஆகிறோமா யில்லையா என்பதுதான் நமது கவலை. ஆனால் விஸ்வகர்மாள், தேவாங்கர்கள் முதலானவர்கள் தங்களை பிராமணர்களென்றும், மற்றும் கோமட்டி செட்டியார்கள் வாணிப செட்டியார் கள் முதலானவர்கள் தங்களை வைசியர்கள் என்றும் சொல்லிக் கொள்ளு கிறார்களே, பூணூலும் போட்டுக் கொள்ளுகி றார்களே. அவர்களையெல்லாம் நாம் பிராமண வைசிய கூட்டத்தில் சேர்த்து விடாமல் ஏன் பார்ப்பன ரல்லாதாருடன் சேர்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதாக கேட்கலாம். இவர்களை நாம் பார்ப்பனரல்லாதாருடன் சேர்த்துக் கொண்டிருப்பதை இவர்கள் ஆக்ஷேபிக்காமல் ஒப்புக் கொள்ளுகிறார்கள் . ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் நமது சடங்குகளுக்கு நாம் இவர்களை நடத்தி வைக்கக் கூப்பிடுவதுமில்லை. ஆகவே இந்த சமாதானம் இவ்விஷயத்திற்கு பொருத்தமில்லை என்பதோடு இதைப்பற்றி நாம் அதிகமாக விவாதிப்பதும் சரியல்ல. அல்லாமலும் இவர்களெல்லாம் அரசாங்கக் குறிப்பிலும் பார்ப்பனரல்லாதார் வகுப்பிலேயே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் . அதை அவர்கள் ஒப்புக்கொண்டுமிருக்கிறார்கள் . குருக்களோ பார்ப்பன வகுப்பில் சேர்க்கப்பட்டு இருப்பதுடன் தங்களையும் பார்ப்பனர்களாகவே மதித்துக் கொண்டும் இருக்கிறார்கள் . அத்தோடு பார்ப்பனர்களும் குருக்கள்களை தங்களைவிட சற்று தாழ்ந்தவர்கள் என்பதாக மாத்திரம் எண்ணிக் கொண்டு பார்ப்பனர்களுக்குள்ள உரிமைகளில் குருக்கள் பிரவேசிப்பதை தடுப்பது மில்லை. அன்றியும் பண்டிதராயுள்ள சிலர்கள் தவிர மற்றையோர் இக் குருக்கள்களைப் பார்ப்பனர்கள் என்றே எண்ணிக் கொண்டும் தங்களைவிட உயர்ந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டுமிருக்கிறார்கள் . இப்போது நமது மனிதத் தன்மை பிரசாரத்தில் முக்கியமானதெல்லாம் எவன் தன்னை உயர்ந் தவன் என்று எண்ணிக் கொண்டிருக்கிறானோ அவனை நமது சமூகச் சடங்கு களை நடத்துவிப்பதற்கு ஏற்றுக் கொள்ளக்கூடாதென்பதுதானே ஒழிய பார்ப்பனர் மாத்திரம் கூடாது என்பதல்ல. இத்தீர்மானம் திருவாளர் திரு.வி. கலியாணசுந்திர முதலியார் தலைமை வகித்த மாயவரம் சன்மார்க்க சங்க மகாநாட்டிலும் மற்றும் பார்ப்பனரல்லாதார் மகா நாடுகளிலும் ஏகமனதாய் தமிழ் மக்களால் செய்யப்பட்டிருக்கிறது. பார்ப்பனர்களுக்கும் நமக்கும் இருக்கும் தகாராரின் முக்கியமே நம்மைவிட தான் உயர்ந்தவன் என்று எண்ணிக் கொண்டு இருப்பது தானே தவிர வேறில்லை; தவிரவும் நமது பிரசாரத்தின் கருத்து எல்லாம் எல்லா சுயமரியாதையும், சமத்துவமும் வேண்டும் என்பது தானே ஒழிய இந்த மதம் வேண்டும், இந்த மதம்



வேண்டாம் என்கிற மதப்பிரசாரமல்ல. அதோடு இந்த நமது கொள்கையை ஒப்புக் கொள்ளும் எந்த மதத்தையும், எந்த சமயத்தையும், எந்த சங்கத்தையும் நாம் உபயோகப்படுத்திக் கொள்ளத்தயாராயிருப்பதுடன் அவைகளை மதிக்கவும் தயாராயிருக்கிறோம்.

இம்முறையில் பார்க்கும் போது திருச்செல்வி நீலாம்பிகை அம்மை யாரின் மணச்சடங்கு சமத்துவத்திற்கு ஒத்ததல்லவென்பதுதான் நமது தாழ்மை யான அபிப்பிராயம். சுவாமி வேதாசலம் அவர்களும் திருவாளர்களான கா.சுப்பிரமணிய பிள்ளை, திரு.வி.கல்யாணசுந்திர முதலியார் நம்முடைய சுயமரியாதை, சமத்துவம், மனிதத் தன்மை ஆகிய கொள்கைகளுக்கு உடன்பட்டவர்கள் என்றும், மத சமய ஆராய்ச்சி விஷயமாய் யாராவது நமக்கு இடையூறு செய்ய வந்தால் நாம் அவைகளையும் லட்சியம் செய்யப் போவதில்லையானாலும், அப்போப்பட்ட இடையூறுகளுக்கும் அம் முறையிலும் கூட நமக்கு இப்பெரியார்கள் பின் பலமாய் இருக்கிறார்கள் என்கிற தைரியத்திலேயே அவர்களை மலை போல் நம்பி வருகிறோம். சைவத்தின் பெயராலும், வைணவத்தின் பெயராலும் அனேக பண்டிதர்கள் என்பவர்கள் நமக்கு இடையூறு செய்யக் காத்திருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். சில பார்ப்பனர்கள் இவற்றிற்கு உள் உளவாயிருந்து சில பண்டிதர்கள் என்னும் சமயவாதிகளைக் கிளப்பிவிட்டுக் கொண்டிருப்பதும் நமக்குத் தெரியும். இதற்கெல்லாம் இவர்கள் பதில் சொல்லுவார்கள் என்கிற தைரியத்தோடே இருக்கிறோம். பண்டிதத் தன்மை வேறு, அறிவு வேறு, சமயம் வேறு என்பது நமது அபிப்பிராயம். இவை நமது நாட்டில் பிரிக்கப் படவேயில்லை. சரியானபடி உணரப்படவும் இல்லை. எந்தப் பண்டிதரைப் பார்த்தாலும் எந்த அறிவாளியைப் பார்த்தாலும் அவரவர்கள் சமயத்தை ஒட்டி பண்டிதர்களாக இருக்கிறார்களே ஒழிய அதை தனக்குள் கட்டி வைத்து விட்டு பண்டிதத் தன்மையையும், அறிவையும் பிரித்துக் கொள்வதில்லை. சமயம் என்பது அவரவர் சொந்த விஷயம். பாண்டித்தியம், அறிவு என்பது பொது விஷயம். இது யெல்லாரும் ஒப்புக்கொள்ளத் தக்கதுடன் எல் லோருக்கும் பயன்படத் தக்கது. எனவே நமது நாட்டு பண்டிதர்கள் எவ் வளவோ சிறந்தவர்களாயிருந்தாலும் பொது மக்கள் எல்லோராலும் மதிக்கப் படாமல் ஒரு கூட்டத்தாரால் மாத்திரம் மதிக்கப்படுபவர்களாக ஆகி விடுவதற்குக் காரணம் இதுதானே ஒழிய வேறில்லை. அன்றியும் பண்டிதத் தன்மை வேறு அறிவு வேறு என்று கூட நாம் வெகுநாளாய் சொல்லி வருகிறோம். மகாத்மா காந்தியும் தன்னுடைய அறிவையும் பாண்டித்தியத் தையும் இதுசமயம் ஒரு சமயத்திற்கு அடிமையாக்கிவிட்டதினால் தான் அந்த சமயக்காரரால் மாத்திரம் இப்போது மதிக்க வேண்டியவர்களாகி விட்டார். எனவே சுயமரியாதைக்கும் மனிதத் தன்மைக்கும் ஒரு காரியம் ஒப்புக் கொள்ளப்பட வேண்டுமானால் சடங்கு செய்பவர்களுக்கும் செய்வித்துக் கொள்பவர்களுக்கும் எவ்வித வித்தியாசமும், உயர்வு தாழ்வும் இல்லை



RangaRakes tamilnavarasam.com

என்பதாய் இருவரும் ஒப்புக் கொண்டதாக இருந்தாலொழிய அது சுய மரியாதைச் சடங்கு அறிவுச் சடங்கு என்பதாக ஒப்புக் கொள்ளத்தக் கினதில்லை என்பதையும், இனியும் இம்மாதிரி நடைபெறும் சடங்குகள் எல்லாம் பார்ப்பனீயச் சடங்குகள் என்பதாகத்தான் முடிவு பெறும் என்ப தையும், சமத்துவத் திலும் சுயமரியாதையிலும் கவலையுள்ள மக்கள் திருச் செல்வி நீலாம்பிகை திருமணச் சடங்கை பின்பற்றக் கூடாதென்பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 02.10.1927**



# பார்ப்பனரும் அரசியலும்

அரசியல் விஷயத்தில் நாம் பார்ப்பனர்களை நம்பக்கூடாது என்றும், அவர்களது அரசியல் நோக்கம் என்பதெல்லாம் பார்ப்பனரல்லாதாரை மிதித்து பார்ப்பனர்கள் எப்படியாவது அதிகாரத்திற்கும் பதவிக்கும் உத்தியோ கத்திற்கும் வர வேண்டும் என்பதைத்தவிர வேறில்லை என்றும், பார்ப்பனர் கள் தங்களுக்கு உத்தியோகம் பதவி முதலியவைகள் கிடைக்கக்கூடும் என்று எண்ணுகிற விஷயங்களில் அதற்கு விலையாக தேசத்தையோ மானத்தையோ நாணயத்தையோ கூட விடப் பின்வாங்க மாட்டார்கள் என்றும், இந்தப்படி செய்தே நமது நாட்டை ஆயிரக்கணக்கான வருஷங் களாய் அன்னிய ஆக்ஷிக்கு அதாவது மனிதத்தன்மை அற்ற ஆக்ஷிக்கு அடிமைப்படுத்தி நமது நாட்டிற்கு அடியோடு சுயமரியாதை இல்லாமற் செய்து விட்டார்களென்றும், இக்குணங்களான பார்ப்பனீயம் நமது நாட்டை விட்டு ஒழிந்தாலல்லது நமக்கு என்றென்றைக்கும் விடுதலையோ சுயமரியாதையோ ஏற்படாதென்றும் அனேக தடவைகளில் எழுதியும் பேசியும் வந்திருப் பதுடன் அதே வேலையிலேயே நமது வாழ்நாளைக் கடத்தியும் வருகிறோம்.

ஆனால் நம்மில் ஒருசாராருக்கே, அதாவது பார்ப்பனர்களை பின்பற்றினாலொழிய வாழ முடியாது என்கிற கூட்டத்தாருக்கு இந்த உண்மை கள் எல்லாம் தெரிந்திருந்தாலும் அவைகளை வெளியிடுவது அவர்கள் வாழ்க்கைக்கு அசவுகரியமாய்த் தோன்றுவதோடு அதற்கு எதிர்ப்பிரசாரமும் செய்ய வேண்டிய அவசியமும் ஏற்படலாம். அந்தப் படி செய்து நாம் செய்து வருவதையும் அழித்துக் கொண்டும் வரலாம். ஆனாலும் நமது நாட்டிற்கு இப்படி உண்மைகளை வெளிப்படுத்துவதைவிட வேறு முன்னேற்ற மார்க்கம் இல்லை என்பதே நமது முடிவு என்பதோடு இந்தப்படி நாம் சொல்லுவதற்கும் சில உதாரணங்கள் காட்டுவோம்.

நமது நாட்டுக்கு புதிய சீர்திருத்தம் என்பதாக ஒன்று அரசாங்கத்தாரால் வழங்கப்பட்டவுடன் அதை ஏற்றுக் கொள்ளலாமா வேண்டாமா என்கிற விஷயத்தில் காங்கிரசுக்காரர்கள் என்பவர்களுக்கே அபிப்பிராய பேதம் ஏற் பட்ட தானது சாதாரண மனிதர்களுக்குள் ஏற்பட்டதாகவும் சொல்ல முடியாது. லோகமான்யர் என்கிற திலகருக்கும், மகாத்மா என்கிற காந்திக்கும், லோக நாயகி என்கிற பெசண்டம்மாளுக்கும், மகாக்கனம் என்கிற சீனிவாச



RangaRakes tamilnavarasam.com

சாஸ்திரிக்கும் மற்றும் இது போன்ற தலைமையும், பெருமையும், பிரக்யாதியும், செல்வாக்கும் உள்ளவர்கள் என்று சொல்லுபவருக்குமே அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. இவற்றுள் ஒரு கூட்டத்தார் சீர்திருத்தத்தை நிராகரித்து விட வேண்டுமென்றார்கள் . ஒரு கூட்டத்தார் நடத்திக் காட்டி அதிலுள்ள குற்றத்தை எடுத்துச் சொல்லி திருத்தப்பாடு செய்து மேல் கொண்டு சீர்திருத்தம் கேழ்க்கலாம் என்றார்கள் . இதில் ஒப்புக் கொண்டு நடத்திக் காட்டலாம் என்று அப்போது சொன்ன கூட்டத்தில் சேர்ந்தவர்கள் தான் சென்னை வாசிகளில் மைலாப்பூர் அய்யங்கார் கோஷ்டியான ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, கஸ்தூரி ரங்கய்யங்கார் முதலியவர்களும், அய்யர் கோஷ்டியை சேர்ந்தவர்களும் மிதவாதக் கட்சியாருமான ஸ்ரீமான் சிவசாமி அய்யர், சி.பி.ராமசாமி அய்யர், சீனிவாச சாஸ்திரி, பி.என்.சர்மா முதலியவர்களும், பார்ப்பனரல்லாதார் கோஷ்டியாரான ஸ்ரீமான் தியாகராய செட்டியார், டி.எம்.நாயர், பனகால் ராஜா முதலியவர்களுமே ஆவார்கள் .

இவர்களில் அய்யங்கார் கோஷ்டியாரை, அய்யர் கோஷ்டியார்கள் கட்டி சேர்க்காமல் விரட்டிவிட்டதால் அவர்களுக்கு தனி இடம் இல்லாமல் போனதும் "சீ இந்தப் பழம் புளிக்கும்" என்று சொல்லிக் கொண்டு ஒத்துழையாமையில் வந்து சேர்ந்தார்கள் . மற்ற இரு கூட்டத்தாரும் சீர்திருத்தத்தை நடத்திக் கொடுக்க முயற்சித்ததில், பார்ப்பனரல்லாதார் கட்சியார் ஜனங்களிடை செல்வாக்குப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்றார்கள் . தோல்வியுற்ற அய்யர் கட்சி சர்க்காரிடம் செல்வாக்குப் பெற்று உத்தியோக வெற்றி பெற்றார்கள். அதன் பலன்தான் இப்போது ஸ்ரீமான்கள் சீனிவாச சாஸ்திரி மாதம் 4000ரூ. சம்பாதிக்கும் தென்னாப்பிரிக்கா கமிஷனரானதும், சி.பி. ராமசாமி அய்யர் மாதம் 5500ரூ. சம்பாதிக்கும் சட்ட மெம்பர் ஆனதும், பி.என். சர்மா மாதம் 6500 சம்பாதிக்கும் இம்பீரியல் கவுன்சில் மெம்பர் ஆனதும், டி.ரங்காச்சாரி மாதம் 3000 சம்பாதிக்கும் பையாஸ்கோப் கமிஷனரானதும், இவர்கள் பிள்ளைக்குட்டி அண்ணன் தம்பி, மாமன், மைத்துனன் முதலானவர்கள் உத்தியோகங்களில் இருப்பதுமாய் ஏற்பட்டது. அதுபோலவேதான் ஸ்ரீமான் பனகால் ராஜா, பாத்ரோ, சிவஞ்ஞானம் பிள்ளை முதலியவர்களும் மாதம் 4000 சம்பாதிக்கும் மந்திரிகளானதும் என்றும் சொல்லலாம். இப்படி இருந்தாலும் ஒத்துழையாமைப் பார்ப்பன பத்திரிகைகளும் காங்கிரஸ் தலைவர்களும் இவர்களைப் பின்பற்றும் பார்ப்பனரல்லாத சில கூலி பத்திரிகைகளும், போலித் தலைவர்களும் வயிற்றுச் சோற்று தேச பக்தர்களும், பார்ப்பனரல்லாதார் கட்சியை வைது அவர்களை அந்த ஸ்தானத்திலிருந்து விரட்டி, பார்ப்பனர்களையாவது அவர்களது அடிமைகளையாவது அந்த ஸ்தானத்தில் வைக்க அநுகூலமாயிருக்கும்படி பாடுபட்டார்களே ஒழிய உண்மையான ஒத்துழையாமையையாவது உண்மையான காங்கிரஸ் கட்டளையையாவது பிரசாரம் செய்தவர்களே அல்ல. அன்றியும்



RangaRakes

சட்டசபையும், சட்ட மெம்பரும், சர்க்காரும் நடத்திவரும் நடவடிக்கையை அறிய முடியாத அவ்வளவு அறிவிலிகள் அரசியலிலாவது, பொது நலவாழ்விலாவது இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அப்படி இருந்தாலும் இப்பொழுது இவர்களை ஆதரிப்பதுதான் அக்கூட்டத்தாருக்கு தேசீய வேலையாக நடந்து வருகிறதே அல்லாமல் வேறில்லை. எனவே இவற்றை பார்ப்பனரல்லாத பாமர மக்கள் உணரமுடியாமல் போனதினால் பாமர மக்களுக்கு இந்தப் பார்ப்பனர்களின் அரசியல் புரட்டை வெளிக்காட்டுவதற்காக பார்ப்பனரல்லாதார் கட்சியார் தங்களுக்கு உத்தியோகம் வேண்டியதில்லை என்றும், கவர்ன்மெண்ட்டாரை நாங்களும் திட்ட தயாராயிருக்கிறோமென்றும் சொல்லி இரட்டை ஆட்சி ஒழியுமட்டும் மந்திரி உத்தியோக மேற்பதில்லை என்றும், கவர்னரிடம் நம்பிக்கையில்லை என்றும் தீர்மானம் செய்து, சர்க்காரையும் பலமாகத் தாக்கி பேசியும் எழுதியும் வருகிறார்கள் . இதன் பலன் என்ன ஆச்சுது என்று பார்த்தால் இங்குதான் பார்ப்பனப் புரட்டை அறியும் இடம் இருக்கிறது. உடனே பார்ப்பன அரசியல் தலைவர்களில் மிக்க பிரக்தியாதி பெற்ற ஸ்ரீ சத்தியமூர்த்தி கவர்னரையும், கவர்னர் ஜனரலையும் பேட்டி கண்டு பார்ப்பனரல்லாதார் உங்களைத் தாங்காவிட்டால் அக்கரையில்லை. நாங்கள் உங்கள் சர்க்காரை தாங்குகிறோம் என்று வாக்களித்தார். மற்றொரு காங்கிரஸ் தலைவரும் காங்கிரஸ் காரியதரிசியுமான ஸ்ரீமான் ஏ.ரங்கசாமி அய்யங்கார் காங்கிரஸ் முதலிய அரசியல் சங்க உத்தியோகங்களை ராஜீநாமா செய்து விட்டு சர்க்காரை தாங்கி உத்தியோகம் பெறுவதில் வெகு பரபரப்பா யிருக்கிறார். சீக்கிரத்தில் ஒரு உயர்ந்த பதவிக்கு வந்து விடவும் கூடும். தேசீயப் பத்திரிகைகள் சர்க்காரையும் மந்திரிகளையும் தாங்கி எழுதி வருகின்றன. காங்கிரஸ் சங்க தலைவரான ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரோ அடக்குமுறை சட்டத்திற்கு ஆதரவாய் பேசி காங்கிரஸ் கட்சியை ஓட்டுக் கொடுக்கச் செய்து நிறைவேற்றி வைத்தார். இவ்வளவும் போதாக் குறைக்கு காங்கிரசுக்கும், கவர்னருக்கும் சிநேகம் செய்து வைத்து சர்க்காருக்கு காங்கிரசிடம் "அன்பு" உண்டாக்கி கவர்னரிடமே காங்கிரசுக்கு செலவுக்காக 500 ரூபாய் சன்மானமும் வாங்கி வந்து விட்டார். இவ்வளவும் செய்ததல்லாமல் ராமநாதபுரம் மகா நாட்டில் தலைமை வகிக்கிற ஸ்ரீமான் சத்தியமூர்த்தி மெஜாரிட்டி இருந்தால் மந்திரி வேலையை ஒப்புக் கொண்டு நடத்திக் காண்பிக்கலாம் என்றும் பேசி விட்டார். இதை 'சுதேசமித்திரனும்' ஜனங்களுக்கு நன்றாய் ஆசை ஏற்படும் படி தலையங்கம் எழுதி ஜாடையாய் ஆதரித்து விட்டது. இவைகள் எல்லாம் தாராளமாய் தேசத்தின் பேரால் விடுதலையின் பேரால் சுயராஜ்யத்தின் பேரால் வெளிப்படையாய் நடைபெறுகிறதே யொழிய ரகசியமாய் அல்ல. இவைகள் இப்படி இருக்க இந்த கொள்கைகளுடனிருந்த அய்யர் கூட்டமான மிதவாத கோஷ்டியைப் பற்றி இந்த தேசீயவாதிகள் ஒரு வார்த்தையாவது கண்டித்து பேசினவர்கள் அல்லவென்பதும் சட்டசபையில் மிதவாதத்தால் பதவி பெற்ற அய்யர்களைப் பற்றி



tamilnavarasam.com

ஒரு வார்த்தையாவது கண்டித்துப் பேசினவர்களும் அல்லவென்பதும் கவனித்து வந்தவர்களுக்குத் தெரியும். ஆனால் பார்ப்பனரல்லாத கட்சியைப் பற்றியோவென்றால், பேசின வார்த்தைகளும் எழுதின எழுத்துக்களும் அளவில. ‘குலாம் கட்சி’, ‘நக்கிப் பொறுக்கி’, ‘அடிமை மக்கள்’, ‘சர்க்கார் பூசாரி’, ‘சர்க்கார் தத்துப்பிள்ளை’, ‘பனகால் ஆட்சி ஒழிக’, ‘பனகாலை வெட்டிப் புதைக்க’, ‘ராட்சசக் கட்சி’, ‘தியாகராயர் ஒரு சென்னை டையர்’ என்பதாகவும் இன்னமும் எத்தனையோ விதம் அதாவது பார்ப்பனரல்லாதார் தலைவர்கள் பேரில் தொழிலாளர்களை ஏவிவிட்டு அடிக்கவும் உதைக்கவும் செய்வது முதலான காரியங்களும் செய்தார்கள் .

இப்படியெல்லாம் செய்ததினுடையவும், எழுதினதினுடையவும் கருத்துக்கள் இன்னதென்று இப்பொழுதாவது நமது மக்களுக்கு விளங்கி யிருக்கிறதா என்று கேட்கத்தான் இதை எழுதுகிறோம்.

எனவே பார்ப்பனர்களின் அரசியல் என்பதெல்லாம் பார்ப்பனரல் லாதாரை அடக்கி மிதித்து பார்ப்பனர் ஆக்ஷி பெற வேண்டுமென்பது தவிர வேறில்லை என்பதும், பார்ப்பனரல்லாதாரில் சிலர் அவர்களைப் பின்பற்று வது என்பதையும் அப்பார்ப்பனர் சாப்பிட்டுக் கழித்த எச்சிலுக் காசைப்பட்டு திரிவது தவிர வேறில்லை என்பதையும் மக்கள் உணர்வார்களாக. இந்த ரகசியத்தை அறியாமல் பாமர மக்கள் காங்கிரசு, தேசீயம் என்று கண்ணை மூடிக் கொண்டு பார்ப்பன அரசியலைப் பின்பற்றுவதும், பணங்காசுகளை அள்ளிக் கொடுப்பதும் நமது சுயமரியாதை உதயத்தை மறைப்பதே அல்லாமல் வேறல்ல என்று சொல்லி இதை முடிக்கின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 02.10.1927**



# மதுரையில் ராஜியும் ஒற்றுமை மகாநாடும்

மகாத்மா காந்தி பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற விஷயத்தைப் பற்றி ராஜிபேசி ஏதாவது ஒரு முடிவு செய்ய பார்ப்பனரல்லாதார் தலைவர் என்கிற முறையில் உங்களை கூப்பிட்டால் வருவீர்களா என்பதாக சில பத்திராதிபர்களும் சமாச்சார வியாபார பிரதிநிதிகளும் வந்து நம்மைக் கேட்கிறார்கள்.

தவிர, மதுரையில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஒற்றுமை மகாநாடு என்பதாக ஒன்றைக் கூட்டி மகாத்மாவைத் தலைமையாக வைத்து பேசு வதானால் வரத் தயாராயிருக்கின்றீர்களா என்று பார்ப்பனரல்லாத பிரமுகர் களில் சிலரும் கேட்கிறார்கள். இவற்றிற்கு பதில் சொல்லவேண்டியது அவசி யமாகின்றது. முதலில் மகாத்மா கூப்பிட்டால் என்பதற்கு பதில் சொல்லிவிட்டு மகாநாட்டுக்கு பதில் சொல்லுவோம்.

மகாத்மா கூப்பிடுகிறாரா இல்லையா என்பது தெரியாமல் கூப்பிட்டால் வரத் தயாராயிருக்கிறேன் என்று சொல்ல நாம் தயாராயில்லை.

அல்லாமலும் எதற்காக கூப்பிடுகிறார் என்பதும், பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் ஒற்றுமைக் குறைவாயிருக்கும் விஷயங்களில் மகாத்மா அவர்களின் சொந்த கொள்கை என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளாமலும், மகாத்மா அழைப்புக்கு வரும் பார்ப்பனர்கள் மகாத்மா சொல்லும் முடிவை ஒப்புக் கொள்ளத் தயாராயிருக்கிறார்களா என்பதை அறிந்து கொள்ளாமலும் அந்தப் பார்ப்பனர்கள் ஒப்புக்கொள்ளுவதை பார்ப்பன சமூகம் ஒப்புக் கொள்ளுகிறதா என்பதை அறியாமலும் திடீரென்று மகாத்மா கூப்பிட்டால் வருகிறேன், மகாத்மா சொல்வதை ஒப்புக் கொள்ளு கிறேன் என்று சொல்லுவது ஒருக்காலும் பொறுப்பை உணர்ந்தவர்கள் சொல்லும் வார்த்தை ஆகாது என்பதே நமது அபிப்பிராயம். அல்லாமலும் குருகுல விஷயத்தில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்பட்ட தகராறைப் பற்றி மகாத்மாவால் ஒருவித பைசலும் செய்ய முடியாததோடு “இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும். இது தான் சரி”என்பதாக தமது அபிப்பி ராயத்தைக் கூட தைரியமாய் சொல்ல முடியாமல் வழ வழ என்று பேசிவிட்டுப் போய்விட்டார். தவிர இங்கு பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும்



RangaRakes
tamilnavarasam.com

ஏற்பட்டுள்ள பிரிவினைக்கு ஆதாரமானது என்ன என்று பார்ப்போமானால் முக்கியமாய் மூன்று விஷயங்கள் என்று கருதுகிறோம், அவைகள் மத இயல், சமூக இயல், அரசியல் என்பவைகளாகும்.

மத இயலில் பார்ப்பனர்களுக்கும் மகாத்மாவுக்கும் எந்த நிலை யிலும் வித்தியாசம் ஒன்றுமில்லை என்பதே நமது அபிப்பிராயம்.

சமூக இயலில் மகாத்மா அபிப்பிராயத்தைப் பார்ப்பனர்கள், சாஸ்திரிகள், பண்டிதர்கள் முதலியவர்கள் மகாத்மாவின் நேரிலேயே ஒப்புக் கொள்ள முடியாது என்றும், மகாத்மாவை "உனக்கு ஒன்றும் தெரியாது நீ சொல்லுகிறபடி செய்விக்க உன்னாலும் முடியாது உங்கள் பாட்டனாலும் முடியாது" என்றும் சொல்லி விட்டார்கள். அதோடு மகாத்மாவின் பகுத்தறி விற்கும் சத்தியத்திற்கும் வேத சாஸ்த்திரங்கள் இடம் கொடுக்கவில்லை என்றும் சொல்லிவிட்டார்கள். அன்றியும் தகப்பன் குணம் மகனுக்கு பிறவி யில் வருகிறது என்று முடிவு கட்டிக்கொண்டிருக்கிற மகாத்மாவானவர் சமூக நிலையில் எல்லோரும் சமம் என்று சொல்வதென்றால் அவ்வளவு சாதாரணமான காரியமல்ல. தவிர, குருகுலத்தில் தைரியமாய் முடிவு சொல்ல மகாத்மாவுக்கு முடியாமல் போனதின் காரணமே இதுதான்.

மற்றபடி மூன்றாவதான அரசியலைப்பற்றியோ வென்றால் " நான் ஒத்துழையாமைக்காரன் ஆனதால் எனக்கு உத்தியோகம், பதவி, அரசாங்க நிர்வாகத்தில் பங்கு ஆகியவைகள் எல்லாம் மிகக் கேவலம். ஆகையால் அதைப்பற்றி நான் ஒன்றும் பேச முடியாது" என்கிறார். ஆகவே "முள்ளு முனையில் மூன்று குளம்வெட்டினேன் அவற்றில் இரண்டில் தண்ணீரில்லை ஒன்று வற்றிப்போய்விட்டது" என்று சொல்வதுபோல் மூன்றும் மூன்றாய்ப் போய்விட்டது. இனி அந்த விஷயத்தில் மகாத்மாவின் அபிப்பிராயம் நமக்கு தெரிய வேண்டியிருக்கிறது. எந்த விதத்தில் அவரது பைசல் நமக்கு செல்லுபடி உள்ளதாகும் என்பதை யோசித்தால் நாம் போகலாமா போக வேண்டாமா என்பது விளங்காமல் போகாது. மகாத்மா பெரியவர் என்கிற முறையில் மகாத்மாவை மதிப்பதைப் பற்றி நமக்கு பிரமாதமான ஆட்சே பனை ஒன்றும் இல்லை. அவருக்கு வேண்டிய சவுகரியம் உபசாரம் செய்வ திலும் ஆக்ஷேபனை இல்லை. ஆனால் இப்போழுதோ மகாத்மாவுக்கு எங்கு பார்த்தாலும் சங்கராச்சாரிக்கும் கவர்னருக்கும் இருக்கிற கவுரவம் போல் எங்கள் வீட்டுக்கு வாருங்கள், எங்கள் வீட்டுக்கு வாருங்கள் என்பதாக 1000, 500 கொடுத்து கூப்பிட்டு மரியாதை செய்ய ஆள்கள் மலிந்து இருக்கும் போது, நாம் மேலே விழுந்து அவருக்குச் செய்து கொடுக்க வேண்டிய சவுகரியங் களாவது உபசாரங்களாவது பாக்கி இருக்கிறதா என்பது நமக்குப் புலப்பட வில்லை. நிற்க,





நாமும் மகாத்மாவுடன் பேசியதாக இருக்கட்டும் என்பதாக கருதி எதா வது காரணத்தின் பேரில் மகாத்மாவைக் காணப்போவதானது மகாத்மாவுக்கு மிகுதியும் தொந்திரவு கொடுப்பதாகும். ஏனென்றால் இது சமயம் யாரோ இரண்டு பேரிடம் தன்னை ஒப்படைத்து, அவர்களது திருப்திக்காக எவ் வளவோ காயாலாவுக்கு யிடையில் நமது நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்யும் போதும் அழைத்து வந்தவர்களும் சர்வ ஜாக்கிரதையாய் தங்கள் விஷயம் தவிர வேறு விஷயம் அவருக்கு தெரியப்படுத்தப்படாது என்ற பிரயத்தனத் தில் இருக்கும் போதும், வேறு யாரையும் தனியாய் பேச விடாமல் எப்போதும் காவல் காத்து வரும்போதும், நாம் ஏன் அனாவசியமாய் உள்ளே புகுந்து மகாத்மா பதில் சொல்ல கஷ்டப்படும் படியான பிரசினைகளை கேட்பதும், அவர் நமக்கு அனுகூலமாய்ச் சொல்லுவதா அல்லது அவர்களுக்கு அனு கூலமாய் சொல்லுவதா என்று தாக்ஷண்ணியத்திற்கு அடிமைப்பட்டு விழிப்பதும், கஷ்டப்படுவதுமான காரியங்களை நாம் ஏன் அவருக்கு உண்டாக்க வேண்டும்? இவற்றையெல்லாம் பார்க்கும்போது மகாத்மாவை பேசாமல் அவர் இஷ்டப்படி விட்டு அவரைக் கூட்டிவந்தவர்களாவது திருப்தி அடையும்படி விடுவதுதான் சகல விதத்திலும் நன்மை என்று தோன்றுகிறது. ஒற்றுமை மகாநாடு விஷயமும் இதுபோலத்தான், அதாவது மகாத்மா ஒரு இடத்தில் பேசும்போது, "பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார் விஷயமாய் ஸ்ரீமான்கள் இராமசாமி நாயக்கர் ஒருவிதமாய்ச் சொன்னார், வரதராஜுலு நாயுடு வேறுவிதமாய் கொன்னார். இன்னொருவர் இந்த இரண்டுக்கும் விரோதமாய் சொன்னார், நான் எதை நம்பட்டும்" என்று பேசியிருக்கிறார். மகாத்மாவுக்கு அவரது பாரிஸ்டர் படிப்பு இதைச்சொல்ல உதவி செய்திருந்தாலும் கூட, நம்மவர்களிலும் மதம், சமுதாயம், அரசியல் ஆகிய விஷயங்களில் எல்லோரும் ஒரே அபிப்பிராயமாய் இருக்கிறார்கள் என்று சொல்லி விடவும் முடியுமா?

கோயமுத்தூர் மகாநாட்டுக்குபிறகு திருப்பூரில் ஒரு மகாநாடு கூட்டி பார்ப்பனரல்லாதார் பேரால் அபிப்பிராயம் வெளியானது போலும், கோய முத்தூர் மகாநாட்டில் இருந்து பேசி விட்டு வந்த கனவான்கள் வெளியில் வந்து பார்ப்பனரல்லாதார் தலைவர் என்கிற முறையில் அவற்றை அடியோடு திருத்தியும், மறுத்தும் மறந்தும் நேர் விரோதமாய் நடந்துகொண்டது போலும், ஜஸ்டிஸ் கட்சியாருக்குள்ளாகவே "அது நமக்கு பிடிக்கவில்லை" "நான் அதற்கு கட்டுபடவில்லை" என்று சொன்னது போலும், " ஆரம்பத்திலிருந்தே எனக்கு பேர் பிடிக்கவில்லை, பார்ப்பானை நீக்குவது பிடிக்கவில்லை. இது சமயம் நமது நாட்டுக்கு சுயமரியாதை அவசியம் இல்லை" என்பதாக பலவித மாய் பேசுவதுபோலும் உள்ள எத்தனை வித அபிப்பிராய பேதப்பட்டவர்கள் நம்மிலும் இருக்கிறார்கள். இவ்வளவு பேரையும் நம்மால் ஒன்று சேர்க்கத்தக்க அளவுக்கு நாம் நாட்டில் செல்வாக்கு பெற்றுவிட்டோமா? இம்மாதிரி ஆள்களுக்கு நாட்டில் மதிப்பில்லாமல் செய்து விட்டோமா? அப்படி

RangaRakes

tamilnavarasam.com

ஒன்றுமில்லாமல் ஒரு மகாநாடு கூட்டி ராஜி பேசுவதென்பது இது சமயம் அவ்வளவு பொருத்தமான காரியம் என்று சொல்லிவிட முடியாது,

அல்லாமலும் இந்த பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் பார்ப்பனரும் பார்ப்பனரல்லாதாரும் ராஜி செய்து கொள்ளவேண்டும் என்கிற எண்ணம் நிறைவேறக் காலம் வரும்போது இருசமூகத்திற்கும் இது சமயம் தலைவர்களாயிருப்பவர்கள் சர்க்காரே ஒழிய வேறில்லை. அவர்கள் சொல்லும் தீர்ப்புத்தான் அமுலுக்குவரக்கூடும் அன்றியும் அத்தீர்ப்பை ஒப்புக் கொள்ளாவிட்டால், நிபந்தனையும் போடுவதற்கு அவர்களால் முடியும். அந்த தீர்ப்பு இல்லாமல் ராஜியாகக்கூடிய யோக்கியதை இது சமயம் நமது நாட்டிற்கு இல்லையென்பதே நமது அபிப்பிராயம். ஆதலால் வீணாக இம்மாதிரி காரியங்களில் காலத்தை கடத்தி, நமது லட்சியத்திற்கும் அடிக்கடி தடங்கல் ஏற்படுத்திக் கொள்ளுவதை அடியோடு மறந்துவிட்டு முன் சொன்னது போல ஜனங்களுக்கு தைரியமாய் உண்மையை எடுத்துச் சொல்லி தாங்கள் அனுபவித்து வரும் இழிவிலிருந்து மீளுவதற்கு ஆசையையும் ஆற்றலையும் உண்டாக்க வேண்டியதே நமது முக்கிய கடமை.

**குடி அரசு - கட்டுரை - 02.10.1927**



# அடுத்த வாரம்

27-9-27 தேதி ஊழியன் என்னும் ஒரு பத்திரிகையின் முதல் கலத்தில் “ வீணான அவதூறு” என்ற தலைப்பில் ஸ்ரீமான் காசி விஸ்வநாதன் செட்டியார் அவர்களுக்கும், ஸ்ரீமான். எஸ். ராமனாதன் அவர்களுக்கும் நடந்ததாக ஒரு சம்பாஷணை காணப்படுகின்றது. இதற்கு சமாதானம் எழுத வேண்டிய பொறுப்பு ‘திராவிடனுக்கும்’ ‘குடி அரசுக்கும்’ ஏற்பட்டதோடு ராமசாமி நாயக்கருக்கும் ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரியான ஒரு சந்தர்ப்பம் அளிக்கப் பட்டதற்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

எனினும் இந்த சம்பாஷணைகளில் கண்ட வர்த்தமானங்கள் முழுதும் ஸ்ரீமான் ராமநாதன் அவர்களால் சொல்லப்பட்டது தானா என்பதை நாம் மற்றுமொரு முறை கேட்டுத் தெரிந்து கொண்டு பதில் எழுத வேண்டிய நிலைமையில் அச்சம்பாஷணையில் சில பாகம் இருக்கின்றது.

ஆகவே அது முழுவதும் உண்மைதான் என்றாவது, உண்மையல்லவென்றாவது தெரிந்துகொண்டு அடுத்தவார ஆரம்பத்தில் எழுதுகிறோம். இதற்கு இரண்டில் ஒன்று பதில் இல்லாத பட்சம் சம்பாஷணை நடந்தது வாஸ்தவம் என்றும் அதில் கண்டது முழுவதும் உண்மை என்றும் வைத்துக் கொள்வோம். ஏனெனில் ஸ்ரீமான் ராமநாதன் அவர்கள் வாக்குமூலத்திற்கு சமாதானம் சொல்லுவதில் நமக்கு சில பொறுப்பு இருக்கிறபடியால் தாமதிக்க வேண்டி இருக்கிறது. இது போலவே இரண்டொரு பெரியாரும் நமக்கு யோசனை சொல்லியிருக்கிறார்கள்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 02.10.1927**



RangaRakes

tamilnavarasam.com

# பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை

இதன் ஆசிரியர் திருவாளர் வி.கல்யாணசுந்தர முதலியாரைப் பற்றி தமிழுலகிற்கு அறிமுகஞ் செய்ய வேண்டிய அவசியமின்று. அன்னார் இதுகாலை எழுதி வெளிப்படுத்தியுள்ள பெண்ணின் பெருமை என்னும் புத்தகத்தைக் கண்டு மகிழ்ந்தேன். தேனினுமினிய செந்தமிழ் நடையில் வாழ்க்கையில் பெண்ணுக்குள்ள இடத்தையும், உரிமையையும், ஆண் பெண் மாறுபாடுகளையும் பெண்பாலாரின் பெருமைகளையும், அவைகட்கேற்ப பெண் தெய்வங்களை ஆண்கள் நடத்த வேண்டிய முறையும், மற்றும் இல்லறம் துறவறம் இரண்டின் விளக்கமும், பெண் ஆண்கள் தங்கள் வாழ்க்கையில் அறிந்து கொள்ள வேண்டிய பல நுட்பங்களையும், எல்லாவற் றிற்கு மேல் பெண்ணின் பால் உள்ள இறையொளியையும் மிகத் தெளிவாக எடுத்து விளக்கி மற்றப் பதிப்புகளைப் போலன்றி நல்ல தாளில் நல்ல கட்டடத் துடன் கண்ணைக் கவரும் வகையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பெண்களின் விடுதலை வேண்டு மென்று பாடுபடும் இக்காலத்து இத்தகைய புத்தகங்கள் பல கட்டாயம் வெளிவர வேண்டும்.

விலை ரூ 2.

கிடைக்குமிடம்:-
முருகவேள் புத்தக சாலை
ராயப்பேட்டை
சென்னை.

**குடி அரசு - நூல் மதிப்புரை - 02.10.1927**



# நாடார் மஹாஜன சங்க 11 - வது மகாநாடு

இம்மாதிரியான வகுப்பு மகாநாடுகள் நமது நாட்டில் நடந்து வருவது நாட்டின் முற்போக்குக்கு ஏற்றதா இல்லையா என்பது கேள்வி. பலர் இது கெடுதல் எனச் சொல்லுகிறார்கள். எனினும் வகுப்பு மகாநாடு அல்லாத (வகுப்பு வாதமல்லாத) மகாநாடுகளே இந்நாட்டில் இல்லை என்பதே எனது அபிப்பிராயம். ஒவ்வொரு வகுப்பாரும் தங்களுடைய உரிமைகளைக் கேட்கவே மகாநாடுகள் நடத்துகிறார்கள் . மற்றொரு வகுப்பார் தலையெடுக் காமல் அடிக்கவும், மற்ற வகுப்பார் உரிமைகள் பெறாமலிருக்கவுமே பலர் பல மகாநாடுகளை நடத்துகிறார்கள் . ஆனால் நமது நாடார் மகாநாடோ அப்படி இல்லை. பிறருக்கு கெடுதல் செய்யாமல் நாடார் மகாஜனங்களின் நன்மையை நாடியும், உரிமைகளைப் பெறவுமே இம்மகாநாடு நடைபெறு கின்றது. வகுப்பு மகாநாடுகளும், வகுப்பு வாதங்களும் மேல் ஜாதியாராலும் அவர்களுடைய கொடுமைகளாலும் தான் ஏற்பட்டவை. துவேஷத்தை உண் டாக்க நாம் மகாநாடுகள் கூட்டுவதில்லை. துவேஷம் வேண்டாம், எல்லோ ரும் சமம் என்று சொல்லுங்கள் என்று சொல்லவே நாம் இம்மகாநாடு கூட்டியிருக்கிறோம். நம் நாட்டில் அடிக்கடி சொல்லப்பட்டு வரும் ‘ஒற்றுமை’ என்ற வார்த்தைகளும், பிரச்சனைகளும் வெளி வேஷமே. தங்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய நிலைமை ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட பின்னரே உண்மை ஒற்றுமை ஏற்படும். ஒருவருக்கொருவர் ஒற்றுமையும் நம்பிக்கையும் ஏற்பட வேண்டியது அவசியம். அதற்கான வேலைகளைச் செய்ய சுதந்திரம் ஒவ்வொரு சமூகத்திற்கும் இருக்க வேண்டும். ஒவ்வொரு வகுப்புக்கும் சுயமரியாதை, சமத்துவம், சுயமதிப்பு ஏற்பட வேண்டும். அதன்மூலந்தான் தேச முன்னேற்றமடையும். உண்மையான தேசீயமென்பது சுயமரியாதை ஒன்றே. சுயமரியாதையைப் பொறுத்தேதான் சுயராஜ்யமிருக் கிறது. சகலரும் ஒன்று. மேலோர் கீழோர் என்ற உணர்ச்சி இருக்கவே கூடாது.

*குறிப்பு : 01.10.1927 ஆம் நாள் கும்பகோணத்தில் நடைபெற்ற நாடார் மகாஜன சங்கத்தின் 11 ஆவது மாநாட்டில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 09.10.1927**



RangaRakes tamilnavarasam.com

# எது வீணான அவதூறு ?

ஸ்ரீமான் எஸ்.ராமநாதன் காரைக்குடியில் சொன்னதாகக் காணப்படும் கதர் இயக்க சம்மந்தமான விஷயங்களுக்கு பதில் அடுத்த வாரம் எழுது வதாய் குறிப்பிட்டிருந்தோம். காரணம் என்னவென்றால் அவ்வார்த்தைகள் உண்மையாய் ஸ்ரீமான் ராமநாதன் அவர்களால் வெளியிடப்பட்டதுதானா என்றறிவதற்காக வேண்டியே அப்படி எழுதியிருந்தோம். ஆயினும் இதுவரை அவற்றை மறுக்கத்தக்க விஷயம் ஒன்றும் நமக்கு எட்டவில்லை. ஆதலால் அவற்றிற்கு நம்முடைய சமாதானத்தை எழுதிவிட வேண்டியவர் களாகிறோம். ஏனெனில் மக்களை ஏமாற்றி சிலர் பிழைப்பதற்காக செய்யப் படும் சூழ்ச்சிகளை நாம் கண்டிக்கப் புறப்படும் போதெல்லாம், இதுவரை நமது கண்டனத்தை கண்டிக்க வந்தவர்கள் ஒருவராவது நாம் என்ன சொன்னோம், அதற்கு அவர்கள் சொல்லுகிற பதில் என்ன? என்பதைக்காட்டாமல், வகுப்புத் துவேஷம், வகுப்பு உணர்ச்சி, பொறாமை, குரோதம் என்கிற வார்த்தைகளைச் சொல்லி தப்பிக்கவோ, மழுப்பவோ, ஏமாற்றவோ, பார்க்கிறார்களேயல்லாமல் யோக்கியப் பொறுப்புடன் நடந்து கொள்பவர்களை காண்பது அரியதாய் விட்டது. அப்படிப்பட்ட சமயத்தில் ஸ்ரீமான்கள் ராமநாதன், காசி விஸ்வ நாதஞ் செட்டியார் சம்பாஷணையானது, நாம் பொறாமை, வகுப்புத் துவேஷம், குரோதம் காரணமாக செய்து வருகிறோமா அல்லது உண்மையை மக்களுக்கு அறிவித்து பாமர மக்களை ஏமாற்றத்திலிருந்து தப்புவிக்கச் செய்து வருகிறோமா என்பதை வெளிக்காட்ட ஒரு நல்ல சந்தர்ப்பமாய் கிடைத்திருக்கிறபடியால், நாம் இவ்விருவருக்கும் நன்றி செலுத்த கடமைப் பட்டதோடு இந்த சந்தர்ப்பத்தை விட்டுவிடவும் நமக்கு மனம் வரவில்லை. தவிர, அவற்றுள் இரண்டு அம்சம் அடங்கிக் கிடக்கின்றது. ஒன்று, பொது விஷயம். அதாவது கதர் இயக்க சம்பந்தமானது.

மற்றொன்று தனிப்பட்ட விஷயம். அதாவது ராமசாமி நாயக்கரையும் “குடிஅரசை”யும் “திராவிடனை”யும் தாக்குவது. இவற்றுள் முதல் விஷயத் தைப்பற்றியே இப்போது இதில் சமாதானம் சொல்லுகிறோம். தனிப்பட்டதைப் பற்றி பின்னால் சொல்லுவோம். ‘ஊழியனில்’ கண்ட சம்பாஷணையில் முக்கியமானவைகளில் சிலவற்றை இங்கு குறித்து சமாதானம் சொல்லுவோம்.



“கதர் இலாகாவில் உள்ள சிப்பந்திகளில் பிராமணர்கள் எத்தனைபேர், பிராமணரல்லாதார் எத்தனைபேர்” என்ற ஸ்ரீ காசி விஸ்வநாதஞ் செட்டியார் கேள்விக்கு சுமார் சரிபகுதி பிராமணர்களும், சரிபகுதி மற்றவர்களும் இருக்கலாம் என்பதாக பதில் கூறியிருக்கிறார். ஜனத்தொகையில் அதிகமா யிருக்கும் பிராமணரல்லாதார்களை அவர்கள் தொகைக்குத் தக்கப்படி நியமிக்காததின் காரணம் என்ன?

இதற்கு ஸ்ரீமான் ராமநாதனின் பதில், சர்க்கா சங்கத்தின் சிப்பந்திகள் , நிர்வாகிகள் சம்பந்தப்பட்ட வரையில் பிராமணர்களைக் காட்டிலும் தகுதி பெற்று கதர் வேலை செய்யும் தொண்டர்களைத் தான் வழக்கமாகவும் முறை யாகவும் வைத்து கொண்டிருக்கிறேன்.

பிராமணரல்லாத தொண்டர்கள் அகப்படாவிட்டால்தான் பிராமணர் களை ஏற்றுக் கொண்டு வந்திருக்கிறேன். இதில் முதல் கேள்விக்கு பதில் சொன்ன விஷயத்தைப் பற்றி இது உண்மைக்கு மாறுபட்டது என்று வருத்தத் துடன் கூறுகிறோம். அதற்கு புள்ளி விபரமும் தருகிறோம். கீழ்க்கண்ட புள் ளி விபரத்தை நேயர்கள் பொறுமையுடன் கவனிக்க வேண்டும்.

கதர் இலாகாவை மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை நிர்வாகம், உற்பத்தி, விற்பனை ஆகியவைகள் . இம்மூன்று பிரிவுகளிலும் உள்ள பார்ப்பனரல்லாதார் கணக்கைக் குறிப்பிடுகிறோம். இக்குறிப்புகள் தான் நம்மை முதல் முதல் கதர் நிர்வாகத்தைப் பற்றி எழுதச் செய்தது. இவற்றில் ஏதாவது சிறு பிழைகள் இருந்தாலும் இருக்கலாம். அதுவும் ஏற்பட நியாயமில்லை.

(1.) நிர்வாகத்தில் அதாவது ஈரோட்டில் உள்ள அகில பாரத சர்க்கா சங்க நிர்வாக காரிய ஸ்தலத்தில் 16 பெயர்கள் இருக்கிறார்கள் . அவர்களுள் 13 பேர் பார்ப்பனர், மூன்றே மூன்று பார்ப்பனரல்லாதார்தான் இருக்கிறார்கள் .

## அவர்களது பெயர்களும் சம்பளமும்

### பார்ப்பனர்கள்

| ஸ்ரீமான்கள் | உத்தியோகம் | சம்பளம் |
|---|---|---|
| 1. V. சுப்பரமணியய்யர் | கணக்கர் | 45 |
| 2. P.S.சீனிவாசய்யர் | தபால் | 35 |
| 3. ஸ்ரீ கண்டய்யர் | கணக்கர் | 30 |
| 4. அனந்தய்யர் | தபால் | 20 |
| 5. நரசய்யர் | கணக்கர் | 25 |
| 6. கோவிந்தராவ் | கணக்கர் | 20 |



RangaRakes tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| 7. V.ராமசந்திரன் | தபால் | 25 |
| 8. V.R. ராமசாமி அய்யர் | ஸ்டோர் மானேஜர் | 30 |
| 9. S.D.சுப்பரமணியய்யர் | குடி நூல் உதவி | |
| ஆசிரியர் | 25 or 30 | |
| 10. N.S.வரதாச்சாரி | இன்ஸ்பெக்டர் | 30 |
| 11. பார்த்தசாரதி அய்யங்கார் | இன்ஸ்பெக்டர் | 35 |
| 12. T.ரங்கசாமி அய்யங்கார் | இன்ஸ்பெக்டர் | 30 |
| 13. பாஷ்க்கர அய்யர் | ஷை | 30 |

**பார்ப்பனரல்லாதார்**

**ஸ்ரீமான்கள்**

| | | |
|---|---|---|
| 1. W.P. இக்னேஷியஸ் | மானேஜர் | 115 |
| 2. வீராசாமி | இன்ஸ்பெக்டர் | 35 |
| 3. ஈஸ்வரன் | இன்ஸ்பெக்டர் | 35 |

கதர் இயக்கத்தில் இந்த இலாகாவானது சர்க்காரில் சிக்ரெட்ரியேட் என்று சொல்லுவதற்கு சமானமான அவ்வளவு அதிகார பலமும் சூழ்ச்சித் தன்மை காட்ட சவுகரியமுமானது. எனவே இந்த ஸ்தாபனத்தில் 16-க்கு 13 பார்ப்பனர்களும் மூன்றே மூன்று பார்ப்பனரல்லாதாரும் இருந்தால் இது ஸ்ரீமான் ராமநாதன் சொல்லுகிறபடி சுமார் 'சரிபகுதியா' என்பதை யோசிப்பதுடன் இந்த பார்ப்பனக் கணக்கர், கரஸ்பான்டெண்ட் என்னும் தபால் இலாகாகாரர், இன்ஸ்பெக்டர்கள் ஆகியவர்களிடம் பார்ப்பனரல்லாத சிப்பந்திகள் எவ்வளவு பாடுபடுவார்கள் என்பதையும், அவர்கள் எவ்வளவு தூரம் தங்களது சுயமரியாதையை விற்றுப் பிழைக்கச் சம்மதமிருப்பதால் மாத்திரம் இந்த இலாகாவிற்கு வர சம்மதிப்பார்கள் என்பதையும், நேயர்கள் யோசித்துப் பார்க்க விரும்புகிறோம்.

இரண்டாவதான உற்பத்திலாகாவில், உற்பத்திலாகா நிர்வாக காரியாலயம், உற்பத்திலாகா கீழ்ப்பட்ட காரியாலயங்கள் என இருவகைப் படுத்தலாம்.

(2) இவற்றுள் உற்பத்திலாகா நிர்வாக காரியாலயம் என்பது திருப்பூரில் உள்ளது. இந்த காரியாலயத்தில் ஒட்டு மொத்தம் 10 உத்யோகஸ்தர்கள். அவர்களில் 8 பேர் பார்ப்பனர் 2 பேர் பார்ப்பனரல்லாதார். அதாவது:-

**பார்ப்பனர்**

| **ஸ்ரீமான்கள்** | | ரூ |
|---|---|---|
| 1. திருநாராயணய்யங்கர் | மானேஜர் | 75 |
| 2. ஆர்.வி.சர்மா | சாய மானேஜர் | 50 |
| 3. என்.ராமய்யங்கார் | கணக்கர் | 40 |
| 4. சாமிநாதய்யர் | நூல் இலாகா | 30 |
| 5. பத்மநாப ராவ் | தபால் இலாகா | 30 |
| 6. என்.எஸ்.சுப்பிரமணி யய்யர் | ஸ்டாக் இலாகா | 30 |
| 7. என்.எஸ்.கலியாண சுந்திரம் அய்யர் | ஸ்டாக் இலாகா | 25 |
| 8. ராமய்யர் | ஷை | தெரியாது |

**பார்ப்பனரல்லாதார்**

ஸ்ரீமான்கள்

| | | |
|---|---|---|
| 1. நாராயணசாமி | பொக்கிஷதார் | 45 |
| 2. பஞ்சரத்தினம் | சாய இலாகா | 30 |

இந்த மானேஜர் கடின வருணாசிரமக்காரரும், கொடிய ஆசாரக் காரருமாவார். இவருக்குத் தீண்டாமை மாத்திரமல்ல பார்க்காமையும் உண்டு. இவரைப்பற்றி முன்னமே எழுதி இருந்தோம். அவரும் ஒப்புக் கொண்டு ராஜினாமா கொடுத்தார். ஆனால் கதர் இலாக்கா தலைவர் ஸ்ரீமான் எஸ்.ராம னாதன் அவர்கள் "இந்த காரணத்திற்காக ராஜினாமா கொடுத்தால் கதர் இலாகாவின் மீது குற்றம் சொன்னவர்கள் வெற்றியடைந்தவர்களாகி விடுவார்கள், ஆதலால் போகக்கூடாது" என்று கேட்டுக் கொண்டு, வருணாசிரமத்திற்கும், தீண்டாமைக்கும், பார்க்காமைக்கும், ஆசாரத்திற்கும், கதர் இலாகாவுக்கும் சம்மந்தமில்லை என்பதாக தீர்ப்புக்கூறி மறுபடியும் அவரை இழுத்து வைத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் மகாத்மா பணம் வசூல் செய்வதற்காக செய்யும் பிரசங்கத்தில் தீண்டாமைக்கும் கதருக்கும் சம்மந்தமுண்டு என்று சொல்லி பணம் வசூலிக்கிறார். இது வேறு விஷயமானதால் இதை இவ்வளவுடன் விட்டு விடுவோம். இம்மாதிரியான ஒரு பார்ப்பன அக்கிராரத்தின் கீழ் எப்பேர்ப்பட்ட பார்ப்பனரல்லாதாராயிருந்தால் வேலை பார்க்க முடியும் என்பதை நேயர்களே யோசித்துப் பார்த்துக் கொள்ள வேண்டியது. இனி உற்பத்தி இலாகா கீழ்த்தர காரியாலயங்களைப் பற்றி கவனிப்போம்.

**2** B.) இந்த இலாகாவில் இருபது சிப்பந்திகள் இருக்கிறார்கள் . இவர்களில் 10 பேர்கள் தான் பார்ப்பனர்கள். 10 பேர் பார்ப்பனரல்லாதார். ஏன் இதில் சரி சமமாக இருக்கிறது என்பதற்கு ஒருசமாதானம் வேண்டியிருக்கும். அதையும் வெளியிடுகிறோம். அதாவது இந்த வேலை மிகக் கடினமானது. எப்படியெனில் இந்த காரியாலயங்கள் ஏறக்குறைய பெரும் பகுதி கிராமம். ரயிலுக்கு 30, 40, 50 மைல் தூரமுள்ளது. வண்டி சவுகரியங்கள் கஷ்டமானது. தன் கையாலேயே பொங்கி சாப்பிட வேண்டியது. வேலை கடினமானது. அதாவது பஞ்சு கொடுக்கவும், நூல் வாங்கவும், நூல் கொடுக்கவும், துணி


RangaRakes
tamilnavarasam.com

வாங்கவும், கணக்கு எழுதவும் ஆனவேலையோடு பார்ப்பனர்கள் சில இடங்களில் இருக்கவும் முடியாதது. எல்லாவற்றையும் விட கொஞ்சம் பணப் பொறுப்பும் வேண்டும். எனவே இதில் சரிபகுதி இருக்க நேர்ந்ததே அல்லாமல் வகுப்பு பார்த்து உத்தியோகம் கொடுத்ததாலல்ல வென்றே சொல்லுவோம். ஆதலால் இதில் பெயர் சம்பளம் குறிக்கவில்லை.

(3) விற்பனை இலாகா தமிழ்நாட்டில் 15 இடங்களில் கதர் கடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒட்டு மொத்தச் சிப்பந்திகளில் 11 பார்ப்பனரல்லாதாரும் 10 பார்ப்பனர்களும் இருக்கிறார்கள் . இதிலும், பார்ப்பனரல்லாதார் அதிகமாயிருப்பதற்குக் காரணம் இதுவும் உற்பத்திலாகா போலவே சற்று கஷ்டமான வேலை. ஏனெனில் சரக்கு விற்பனை செய்ய வேண்டும், கடையில் காத்திருக்க வேண்டும், டிபாசிட்டு கட்ட வேண்டும், பணம் பொறுப்பு வேண்டும். ஆகிய விஷயங்களால் பார்ப்பனரல்லாதார் சரி சமமாய் நியமிக்க நேர்ந்ததே தவிர பார்ப்பனரல்லாதார் என்கிற காரணத்தால் அல்ல. அன்றியும் டிப்போ மானேஜர்களில் பார்ப்பனரல்லாதாரிடமேதான் அதிகமாக டிபாசிட்டு வாங்கப்பட்டிருக்கின்றது.

தவிர, ஸ்ரீமான் ராமநாதன் அவர்களே, "பிராமணர்களைக் காட்டிலும் தகுதி பெற்று கதர் வேலை செய்ய முன்வரும் பிராமணரல்லாத தொண்டர்களைத்தான் ஏற்றுக் கொள்ளுவதை முறையாகவும் வழக்கமாகவும் வைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று அச்சம்பாஷணையில் சொல்லியிருக்கிறார். இதன் கருத்து என்ன? பிராமணர்களைவிட கெட்டிக்காரனாய் இருக்கிற பிராமணரல்லாதாரை சேர்த்துக் கொள்ளுவேன் என்பதிலேயே பிராமணர்களைச் சேர்த்துக் கொள்ளுவது சாதாரணம் என்றும், அவனை விட கெட்டிக்காரன் கிடைத்தால் தான் பிராமணரல்லாதாரை சேர்க்க முடியுமென்றும் ஏன் சொல்ல வேண்டும். பிராமணரல்லாதாருக்கு மாத்திரம் அவ்வளவு கடுமையான நிபந்தனை எதற்கு. அல்லாமலும், இதுவரை கதர் போர்டில் பார்ப்பனரல்லாதாரை அதிகமாக சேர்க்காததற்கு காரணமும் பிராமணர்களை விட அதிகமான யோக்கியதை உள்ளவன் கிடைக்காததுதான் என்று தானே ஏற்படுகிறது. இந்த அபிப்பிராயம் கொண்டிருப்பவரிடம் யோக்கியமான பார்ப்பனரல்லாதான் எப்படி வேலை செய்ய முடியும்? பார்ப்பனரல்லாதாரைப் பற்றி சென்னையில் ஸ்ரீமான் ஓ.கந்தசாமி செட்டியார் பேசிய பேச்சுக்கும், ஸ்ரீமான் ராமநாதன் பேச்சுக்கும் வித்தியாசம் என்ன? இந்தக் கொள்கைப்படி பார்த்தால் ஸ்ரீமான் ராமநாதன் மாத்திரம் எப்படி கதர் இயக்கத்தில் இருக்கத் தகுதி உடையவர் என்று கேட்கிறோம். ஏனெனில் இவர் எல்லாப் பார்ப்பனர்களைக் காட்டிலும் அதிக தகுதி உடையவராக இருந்திருக்க வேண்டும். அந்தத் தகுதி என்ன என்பது நமக்குத் தெரியவில்லை. சர்க்கார் சொல்லும் தகுதிக்கும் பார்ப்பனர் சொல்லும் தகுதிக்கும் ஸ்ரீமான் ராமநாதன் சொல்லும் தகுதிக்கும் வித்தியாசம் என்ன என்றுகேட்கிறோம்.



இதிலிருந்து, கதர் இலாகாவைப் பற்றி அது பார்ப்பன அக்கிரகாரம் என்று நாம் எழுதினவைகளுக்கு ஆதாரம் இருக்கின்றதா இல்லையா என்பதையும், அதன் அதிகார ஸ்தானம் முழுவதும் பார்ப்பனர்கள் கையில் இருக்கிறதா இல்லையா என்பதையும் கவனித்துப் பாருங்கள். காரிய ஸ்தலத்தில் 100 – க்கு 80 பார்ப்பனர்கள், உற்பத்தி ஸ்தலத்தில் 100 – க்கு 80 பார்ப்பனர்கள் இன்ஸ்பக்ஷன் ஸ்தலத்தில் 100 – க்கு 66 பேர் பார்ப்பனர்கள். மற்றது கஷ்டப்படுவது, மூட்டை தூக்குவது, பொறுப்பு ஏற்றுக் கொள்வது, செடிக்குத் தண்ணீர் ஊற்றுவது, ஆபீசு கூட்டுவது முதலிய ஆட்கள் பார்ப்பனரல்லாதார் என்றால் இது நியாயமான சமாதானமா?

மற்றபடி, சம்பாஷணையின் மற்ற பாகங்களுக்கு அடுத்த வாரம் எழுதுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 09.10.1927**



RangaRakes tamilnavarasam.com

# துர் ஆக்கிரகம்

சென்னையில் சிலர் சத்தியாக்கிரகம் என்னும் பேரால் நீல் துரை உருவச் சிலையை உடைத்தெறிய வேண்டுமென்று சொல்லிக் கொள்வதை ஒரு பெரும் தேசாபிமானமெனக் கருதி சில வாலிபர்கள் மூலம் போலிக் கிளர்ச்சி ஆரம்பித்து அதற்காக பல வாலிபர்களையும் சிறைக்கு அனுப்பி யாய் விட்டது. சில பெண்மணிகளையும் சிறைக்கு அனுப்பியாய் விட்டது. மகாத்மா காந்தியும் இச் சத்தியாக்கிரகத்தை ஆதரித்து ஆசிர்வதித்ததாகவும் வெளிப்படுத்தியாகி விட்டது. வரப் போகும் காங்கிரசிலும் இதை ஒரு பெரிய அகில இந்திய விஷயமாக்கவும் வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றது. தவிரவும் இதற்குச் சிலர் ரகசியமாய்ப் பணம் கொடுத்தது, மகாத்மா கொடுத்ததாகப் பெயர் செய்ய முயற்சிப்பதாகவும் கேள்விப் படுகிறோம்.

இவ்வளவும் உண்மையாகவே நடந்ததாயிருந்தாலும் இதை ஒழுங் கான காரியமென்று ஒருக்காலும் நம்மால் சொல்ல முடியாது. ஒரு சமயம் மகாத்மாவே ஒரு சத்தியாக்கிரகி ஆக வந்து தன் கையால் சம்மட்டி கொண்டு நீல் சிலையை உடைக்க முன் வந்தாலும்கூட இவற்றைத் துராக்கிரக மென்றுதான் சொல்லுவோமே தவிர மகாத்மா செய்கிறார் என்பதற்காக ஒரு காலமும் நாம் இதை சத்தியாக்கிரகமென்று சொல்ல மாட்டோம். தற்சமயம் மகாத்மாவின் கொள்கைகள் எப்படி குழப்பமாய் விட்டதோ, அவற்றுள் எப்படி மகாத்மா தன்மையில்லாமல் ராஜதந்திர தன்மை நிறைந்துவிட்டதோ, அதுபோலவே தான் நீல் சத்தியாக்கிரமென்னும் விஷயத்திலும் மகாத்மா வினுடைய கொள்கை என்பது ஆளுக்குத் தகுந்தபடி வழவழவென்று சொல்ல வேண்டியதாகிவிட்டது. இதே காரியத்தை பார்ப்பனர்களல்லாமல் நம் போன்றவர்கள் யாராவது ஆரம்பித்திருந்தால் கண்டிப்பாய் அதை துராக் கிரகமென்றே மகாத்மாவும் சொல்லியிருப்பார்.

நாகப்பூரில் தெருவில் வாளேந்திக் கொண்டு போனதையே துராக்கிரக மென்று வியாக்கியானம் செய்த மகாத்மாவுக்கு, சம்மட்டியெடுத்து ஒரு சிலையை உடைப்பது துராக்கிரகமல்லவென்று தோன்றிவிடுமானால் அதற்கு அப்பீல் எங்கே என்றுதான் நமக்குத் தெரியவில்லை. நீல் துரை அக்கிரமம் செய்தவரா? அயோக்கியரா? என்பதைப் பற்றி நமக்குள் சண்டை வேண்டிய



தில்லை. அதற்காக அவரது உருவச் சிலையை உடைப்பதில் என்ன அர்த்த மிருக்கின்றது? அயோக்கியர் என்று தோன்றும்படியான மனிதனையெல்லாம் கொன்று விடுவதில் ஆக்ஷேபனை இல்லையா என்று கேட்பதுடன் அப்படிக் கொல்லுவது சத்தியாக்கிரகமாகுமா என்றும் கேட்கின்றோம். உதாரணமாக வட இந்தியாவில் மகமதிய சகோதரர்கள் ஸ்வாமி சிரத்தா னந்தர் முதல் பலரை சுட்டும் குத்தியும் கொல்ல முயற்சித்து இருவர் செத்தாய் விட்டது. இருவர் குற்றுயிராய்க் கிடக்கின்றனர், மற்றும் பலர் காயப்பட்டுக் கிடக்கின்றனர். ஸ்வாமி சிரத்தானந்தரையும் மற்றவர்களையும் நாம் தலைவர்களாயும், மகான் களாயும் கருதுகின்றோம். ஆனாலும் இவர்களைக் கொலை செய்ய முன்வந்த கொலை பாதகர்களும் அவர்களுக்குப் பின்னாலிருந்து கொண்டு இக் காரியத்திற்கு ஆதரவு கொடுத்து வருபவர்களும், இம்மகான்களை நாம் நீல் துரையைக் கருதுவதை விட மோசமாகவே கருதுகிறார்கள். ஆனதினால் அவர்கள் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுத்து அவைகளையெல்லாம் சத்தியாக்கிரகம் என்று சொல்லி விடுவதா என்று கேட்கின்றோம். இம்மாதிரி காரியங்களையெல்லாம் சத்தியாக்கிரகம், தேசாபிமானம், மதாபிமானம் என்று கற்பித்துக் கொண்டே போவோமேயானால் இதன் முடிவு எங்கு போய் நிற்கு மென்றும் கேட்கின்றோம். இம்முறையில் பார்த்தால் ஸ்வாமி சிரத்தானந் தருக்கு நாம் ஒரு சிலை செய்து வைத்தால் மகமதியர்கள் அதை உடைக்க முன்வந்தால் அது சத்தியாக்கிரகமா அல்லவா என்றும் கேட்கிறோம். நமக்கு "சுயராஜ்யம் கொடுக்க மாட்டேன்" என்று சொல்லுகிறவர்களும், நம்மைக் கொடுமைப் படுத்தி அடக்கி நமது ரத்தத்தை உறுஞ்சிக் கொண்டிருக்கிற வர்களும், தென்னாப்பிரிக்காவில் நம்மவர்களைத் தெருவில் நடக்க விட மாட்டேன் என்று சொல்லுகிறவர்களுமான வெள்ளைக்காரர்கள் சிலை ஒவ்வொன்றையும் உடைக்க வேண்டியது சத்தியாக்கிரகமாகத்தானே முடிய வேண்டியதாகிவிடும். அன்றியும் ஒரு பெரிய சமூகமாகிய நம் தமிழ் மக்களை ஒரு சிறு கூட்டத்தாரான பார்ப்பனர்கள், சூத்திரர்களென்றும், தங்கள் வைப் பாட்டி மக்களென்றும், தீண்டக்கூடாதவர்கள், பேசக் கூடாதவர்கள், தெருவில் நடக்கக்கூடாதவர்கள் என்றும், சூத்திரன் பொருள் வைத்திருக்க அருகனல்ல வென்றும், அப்படி மீறி வைத்துக் கொண்டிருந்தால் உதைத்தும் பிடுங்கிக் கொள்ளலாமென்றும், அறிவுக்காக அவன் படித்தால் அவன் நாக்கையறுத்து விட வேண்டுமென்றும் இன்னும் எவ்வளவோ இழிவாகவும், எழுதிவைத்துக் கொண்டும், சிலவற்றை சட்டத்தின் மூலமாயும் அமுலிலும் வைத்துக் கொண்டிருப்பதை எல்லாம் ஒழிப்பதற்காகச் செய்யும் முயற்சியில் அக் கொடுமைக்கு ஆதாரமானவர்கள் ஒவ்வொருவரையும் சம்மட்டி கொண்ட டிப்பதையும் அவ்வாதாரங்கள் இருக்குமிடங்களை எல்லாம் நெருப்பு வைப்பதையும் சத்தியாக்கிரகமென்று தானே சொல்லியாக வேண்டும். இவ் வழக்கத்தை நிஜமென்று நம்பியோ, அல்லது இந்த முறையால் பிழைக்கலாமென்று கருதியோ இருந்து கொண்டிருக்கிற பார்ப்பனர்கள் மேற்கண்ட மாதிரி தங்கள் வாழ்வுக்கே கெடுதி ஏற்படும்படி அழிக்கப்



RangaRakes tamilnavarasam.com

பாடுபடுகின்றவர்களை கடப்பாறை கொண்டு அடிப்பதையும் சத்தியாக் கிரகமென்றுதானே சொல்லியாக வேண்டும். க்ஷத்திரிய வம்சத்தையே கூட்டோடு அழித்து விட்டதாக சொல்லப்படும் பரசுராமன் சிலை எங்கிருந் தாலும் க்ஷத்திரியர் என்று சொல்லிக் கொள்பவர்கள் அதைச் சம்மட்டி கொண்டு உடைத்துத்தானேயாக வேண்டும். நீல் துரையை விட அதிகமான கொடுமைகள் மகமதியருக்குச் செய்ததாகச் சொல்லப்படும் கதைப்படி சிவாஜி மகாராஜாவின் சிலையை மகமதியர்கள் சம்மட்டியும் கடப்பாறையும் கொண்டு உடைத்துத்தானேயாக வேண்டும். ஒரு சூத்திரன் தபசு செய்ததற்காக அவனை ஒரே பாணத்தில் கொன்று விட்ட ஸ்ரீராமன் சிலையை சூத்திரர்கள் எனப்படுபவர்கள் எங்கு கண்டாலும் உடைத்துத்தானே யாகவேண்டும். மதுரையில் 8000 சமணர்களை உயிருடன் கழுவேற்றிய திருஞானசம்மந்த மூர்த்தியென்னும் பிராமண பக்தரை நாளைக்கும் சைவ மக்கள் கொண்டாடி உற்சவம் செய்கின்றார்களே, இதைப் பார்த்த சமணர்கள் சம்மந்தமூர்த்தி நாயனார் சிலை எங்கிருந்தாலும் அதை உடைத்துத் தானேயாக வேண்டும். இக்குற்றங்களுக்கும் நீல் துரை குற்றங்களுக்கும் எவ்வளவு வித்தியாசம் நாம் கற்பித்து விட முடியும். இப்படியே பார்ப்போமானால் சத்தியாக்கிரகம் செய்து உடைக்க வேண்டியதற்கு உட்படாமல் எது மீதியாகும் என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்தப்படி பார்த்தால் சமீபத்தில் சென்னையில் ஸ்ரீ. வி. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களின் சிலையின் மூக்கை உடைத்து விட்டதையும், கழுத்தை வெட்ட முயற்சித்ததையும், குற்றம் என்று சொல்ல முடியாமல்தானே போய் விடும். இன்னமும் வைப்பதற்காக செய்து தயாராயிருக்கும் சர்.பி.தியாகராய செட்டியார், சர்.மணி அய்யர், சர். பாஷ்யம் அய்யங்கார் மற்றும் எத்தனையோ சிலைகளை உடைப்பதற்கோ பின்னப்படுவதற்கோ இஷ்டப்படும் ஒவ்வொரு வர்களுக்கும் காரணம் கிடைத்துக் கொண்டுதானே இருக்கும். ஸ்ரீமான் வி.கிருஷ்ணசாமி அய்யரின் சிலையை பின்னப்படுத்தியவர்கள் யார் என்பதைப் பற்றி முதல் முதலாக சென்னையில் ஒரு பிரஸ்தாபம் ஏற்பட்ட தாகவும், அதாவது யாராவது ஒரு வெள்ளைக்காரர் இம்மாதிரி செய்யப் படுவதற்கு காரணமாய் இருக்கலாம் என்று சொல்லப் பட்டதாய் தெரிகிறது. இது வாஸ்தவமாய் இருந்தால் அதில் யார் என்ன குற்றம் சொல்லக்கூடும். சட்டப்படி குற்றம் ஏற்படலாமே தவிர நீல் சிலை நீதிப்படி குற்றம் சொல்ல இடமெங்கே இருக்கிறது?

ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் கொடுத்த அபிப்பிராயத்தைப் பார்த்தால் "பார்ப்பனர்களை பெரிதும் துவேஷிக்கின்ற பார்ப்பனரல்லாத தலைவர்களும் உற்சாக மிகுதியாயுள்ள தங்கள் சிஷ்யர்களை அளவுக்கு மீறிய காரியம் செய்ய வொட்டாமல் அடக்குவார்கள் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்" என்று சொல்லி இருக்கிறார். இதைப் போல யோக்கியப் பொறுப்பற்ற வார்த்தைக் கடுகளவு அறிவிருக்கின்ற வேறு எந்த மனிதனும்



சொல்லி இருக்க முடியாது. ஏனெனில் பார்ப்பனரல்லாத வாலிபர்களே செய்து விட்டார்கள் என்பதாக குறிப்புக்காட்டி பேசி இருக்கிறார். ஆனாலும் நாம் அதைப் பற்றி கவலைப்பட வில்லை. ஏனெனில் அவருடைய சகாவும் தலைவருமான ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் அதற்கு நேர்மாறாய் பேசி இருக்கிறார். அதாவது ஸ்ரீமான் கிருஷ்ணசாமி அய்யர் சிலையை பின்னப்படுத்தினதினாலேயே நீல் துரை சிலையை உடைக்கும் சத்தியாக் கிரகத்தை நிறுத்தப்போகிறதில்லை என்று குறிப்பு காட்டி பேசியிருக்கிறார்.

இதிலிருந்து ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர், நீல் துரை சிலையின் சொந்தகாரர்களையே குறி வைத்துப் பேசி இருக்கிறார் என்பதும் யாவரும் உணரக்கூடியதாயிருக்கிறது. மற்றொரு அய்யங்கார் ஸ்ரீ.வி.கிருஷ்ணசாமி அய்யர் காலத்தில் அய்யங்காரை தலையெடுக்கவொட்டாமல் செய்த காரியம் கொஞ்சமல்லவென்று சொன்னார்.

இம் மாதிரி செய்தவன் வெள்ளைக்காரனாயிருந்தாலும் சரி, பார்ப்பன ரல்லாதாரராயிருந்தாலும் சரி, அய்யங்காராயிருந்தாலும் சரி, வேறு யாராயிருந் தாலும் சரி, நீல் சத்தியாக்கிரக முறைப்படி பார்த்தால் அவன் பயங்காளித் தனமாகவும் திருட்டுத் தனமாகவும், யாருக்கும் தெரியாமல் செய்ததுதான் இப்போது பெருங்குற்றமாக கருதப்பட்டு விட்டதே அல்லாமல், ஒருவன் தனக்கோ, தங்களது சமூகத்திற்கோ கெடுதி இழைத்தவன் என்றோ, தங்களது சுயமரியாதைக்கு விரோதி என்றோ, தங்கள் வகையாரின் சிலையை காப்பதற் கென்றோ கருதிக் கொண்டு வெளிப்படையாய் செய்திருப்பானானால் சட்டப்படி குற்றமாகி ஒரு வருஷமோ இரண்டு வருஷமோ அதற்கு மேற்பட் டோ தண்டனை அடைந்திருந்தாலும் அச்செய்கையை சத்தியாக்கிரக மென்றும் தேசாபிமானம் என்றும் செய்தவனை வீரனென்றும் சொல்லப்பட்டு விடுமா அல்லவா? என்று கேட்கின்றோம். அதற்காக ஒரு சத்தியாக்கிரகம் ஆரம்பித்து ஒரு 500ரூ. சிலவு செய்தால் 50 பேரை ஜெயிலுக்கும் அனுப்ப முடியுமா முடியாதா? என்று கேட்கிறோம். தவிர, இம்மாதிரி ஒவ்வொரு காரியத்தையும் பார்த்து அது சட்டப்படி சரியானாலும் தப்பானாலும் நியாயப் படி தப்பானாலும் சரியானாலும் அந்த விசாரமேயில்லாமல் பொதுவாய் காதில் கேட்ட மாத்திரத்தில் சந்தோஷப் படவும் துக்கப்படவும் ஆதரிக்கவும் கண்டிக் கவும் ஆள்கள் இருந்து கொண்டு தான் இருக்கும். அதனாலேயே ஒரு காரியம் சரியா தப்பா என்று மதித்து விடக்கூடாதென்பதே நமதபிப்பிராயம். இம்மாதிரி துராக்கிரக காரியங்களில் மக்களுக்கு அதிலும் பாமர மக்களுக்கு உணர்ச்சி போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பொறுப்புள்ள தலைவர் களுடையவும் பொது மக்களுடையவும் கடமை என்றே சொல்லுவோம். ஒரு மனிதனின் சிலையை அதிலும் ஒரு கூட்டாத்தாரோ பொது ஜனங்களோ அன்பாலும் பக்தி விஸ்வாசத்தினாலும் வைக்கப்பட்ட சிலையை இம்மாதிரி செய்வது என்பது எவ்வளவு மெதுவாக பொன் சம்மட்டியைக் கொண்டு பின்னம் செய்வதானாலும் அது பலாத்காரமும், துராக்கிரகமும் என்பதே நமது



RangaRakes
tamilnavarasam.com

தீர்மானம். அதிலும் ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யர் சிலையை பின்னமாக்கினது வெள்ளைக்காரராயிருந்தாலும் பார்ப்பனரல்லாதாராயிருந்தாலும் பார்ப்பனரா யிருந்தாலும் வேறு யாராயிருந்தாலும் அது மிகவும் இழிவானதும், முட்டாள் தனமானதும், கோழைத்தனமானதும், மனிதத் தன்மையற்றதுமான காரியம் என்றே சொல்லுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 16.10.1927**



# தமிழ் நாட்டில் சத்தியாக்கிரகம்

தமிழ்நாட்டில் சுயமரியாதை சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப் போவதாய் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை முதலியோர்கள் தெரிவித்துக் கொண்டதற்கு இணங்கவும், நாமும் விண்ணப்பித்துக் கொண்டதற்கு இணங்கவும் இதுவரை அநேக ஆதரவுகள் கிடைத்து வந்திருக்கின்றன. அதாவது பல இடங்களில் 'சூத்திராள்' என்று போடப்பட்டிருந்த விளம்பரங்கள் எடுபட்டு விட்ட தாகவும், பல மகாநாடுகளில் சுயமரியாதை சத்தியாக்கிரகத்தை ஆதரித்தும் அதற்கு உதவி செய்வதாகவும் தீர்மானங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. பல தனிப்பட்ட வாலிபர்களும் பெரியோர்களும் தங்களை சத்தியாக்கிரகி களாய்ப் பதிந்து கொள்ளும்படி வேண்டிக்கொண்டும் தெரிவித்துமிருக் கிறார்கள். சில பிரபுக்கள் தங்களால் கூடிய உதவி செய்யத் தயாராக இருப்ப தாகவும் தெரிவித்து இருக்கின்றார்கள். எனவே தக்கபடி பொறுப்புள்ள மக்கள் கூடி யோசித்து அதை எப்பொழுது எங்கு ஆரம்பிப்பது என்பதே இப்பொ ழுது கேள்வி யாயிருக்கின்றது. சமீபத்தில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களும் சென்னையில் இதைப்பற்றி சில கனவான்களிடத்தில் கலந்து பேசப் போவதாகவும் சமீபத்தில் அதாவது 22, 23 தேதிகளில் சென்னையில் நடக்கும் பார்ப்பனரல்லாத வாலிப மகாநாட்டில் யோசிப்பதாகவும் ஒரு கனவானால் கேள்விப்பட்டு மிகுதியும் சந்தோஷப்படுகின்றோம். ஆதலால் அப்படி ஏதாவது ஆலோசித்து முடிவு செய்ய ஒரு ஆலோசனைக் கூட்டம் கூட்டப்படுமானால் மற்ற வெளியூர்களில் உள்ள பிரமுகர்களும் தொண்டர் களும் அவசியம் வந்து இதற்கு வேண்டிய ஆலோசனை சொல்லி உதவி செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். ஒரு படகோட்டி தன்னை தாழ்ந்த ஜாதி யென்று நினைக்கின்ற ஒருவனுக்கு தனது படகை ஓட்டமாட்டே னென்று சொல்லி பட்டினியிருக்கத் தயாராய் இருக்கும் போது மற்றபடி பெரியோர்கள், பிரபுக்கள், சுயமரியாதை நமது பிறப்புரிமை என்று சொல்லிக் கொள்ளுபவர்களுக்கு பட்டினி கிடக்க வேண்டிய அவசியம் இல்லாம லிருக்கும் போதே இதற்குத் தக்க முயற்சி செய்யத் தகுந்த உணர்ச்சி இல்லையா? என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 16.10.1927**



RangaRakes tamilnavarasam.com

# திருவார்ப்பு சத்தியாக்கிரகம்

திருவாங்கூர் ராஜ்ஜியத்தில் திருவார்ப்பு என்கிற இடத்தில் தாழ்ந்த ஜாதியார் என்பவர்கள் தெருவில் நடக்க சத்தியாக்கிரகம் ஆரம்பித்ததாக கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைந்தோம், அம்மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்ளுமுன் அச்சத்தியாக்கிரகத்தை மகாத்மா நிறுத்துமாறு உத்திரவிட்டிருப் பதாய் தெரிகிறது. நீல் சத்தியாக்கிரகத்தை விட திருவார்ப்பு சத்தியாக்கிரகம் அவ்வளவு மோசமானதா என்பது நமக்கு விளங்கவில்லை. மகாராணியும், போலீஸ் கமிஷனரும் நன்மை செய்வார்கள் என்று தாம் அறிந்ததாக மகாத்மா தெரிவித்திருக்கிறார். இதை நாம் ஒப்புக் கொள்ள முடியாத நிலைமையில் இருக்கின்றோம். சுசீந்திரம் சத்தியாக்கிரகத்தில் சர்க்கார் நாணயம் இன்னது என்று தெரிந்து போய் விட்டது. வைக்கம் சத்தியாக்கிரகத்தின் போதும் மகாத்மா ராணியிடமும், திவானிடமும், போலீஸ் கமிஷனரிடமும் பேசி விட்டுத்தான் போனார். கடைசியாக அது வைக்கத்திற்கு மாத்திரம் முடிவதே பெரிய கஷ்டமாய் போய்விட்டது. மற்ற இடங்கள் எல்லாம் அப்படியேதான் இருக்கிறது. இதனால் லாபம் என்ன. ஜனங்களுடைய முயற்சியையும் உணர்ச்சியையும் கட்டுப்பாடாய் எழுந்த ஆசையையும் இம்மாதிரி தடங் கல்கள் அழித்து விடுகின்றன. மறுபடியும் ஆரம்பிப்பதென்றால் இலேசான காரியமல்ல. ஆகவே ஏதாவது ஒரு இடத்தில் யோக்கியமான உரிமைக்கு சத்தியாக்கிரகம் நடந்து கொண்டிருக்க வேண்டுமே ஒழிய ஆரம்பித்த காரியங்களை நிறுத்துவது நன்மை பயக்காது என்பதே நமதபிப்பிராயம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 16.10.1927**



# சமாதானம்

சென்ற வாரம் 'எது வீணான அவதூறு' என்னும் தலையங்க முடிவில், 'மற்ற விஷயங்களைப்பற்றி அடுத்த வாரம் எழுதுகிறோம்' என்று எழுதி யிருந்தோம்.

ஸ்ரீமான் ராமநாதன் அவர்கள் கடிதம் கிடைத்து. அவர்களை நேரிலும் பார்த்து பேச நேர்ந்தது. அவைகளில் சம்பாஷணைகளின் தோற்றம் எப்படி இருந்தாலும் அதைப்பார்த்தவுடன் மற்றவர்களுக்கு எப்படி படக்கூடுமோ அந்த உணர்ச்சியோடு கூடி அந்த சம்பாஷணை நடைபெறவில்லை என்று சொன்னார். உதாரணமாக 'ஊழியன்' பத்திரிகையில் கண்ட சம்பாஷணையில் ' பிராமணர்களைக் காட்டிலும் தகுதிபெற்று கதர்வேலை செய்ய முன்வரும் பிராமணரல்லாத தொண்டர்களைத்தான் ஏற்றுக் கொள்ளுவதை முறையாக வைத்திருக்கிறேன்' என்று காணும் வாசகம் அம்மாதிரி கருத்தோடு நான் சொல்லவில்லையென்றும் பிராமணர்களைவிட பிராமணரல்லாத தொண்டர் களைத்தான் ஏற்றுக்கொண்டு வந்திருப்பதாகச் சொன்னதாகவும், இனியும் அம்மாதிரி வழக்கத்தையே கையாளப்போவதாகவும் சொன்னார் என இம் மாதிரி இன்னும் சில விஷயங்களையும் குறிப்பிட்டார்.

அன்றியும் முக்கியமான விஷயங்களில் நமது கொள்கைக்கு அவரது உள்ளத்தில் எவ்வித மாறுபாடும் இருப்பதாய்க் காணப்படவில்லையாத லாலும் அதை அவ்வளவோடு நிறுத்திவிட்டோம்.

**குடி அரசு - குறிப்புரை - 16.10.1927**



RangaRakes tamilnavarasam.com

## வகுப்பு வாதம் ஒழிந்ததா?

சென்னையில் பார்ப்பனர் கையாளாக இருந்து வந்த ஸ்ரீமான் பக்தவத்சலு நாயுடுவைப்பற்றி பலரும் அறிந்திருக்கக்கூடும். அவர் கார்பரேஷனில் இருக்கும் வரையும் பார்ப்பனர்கள் இஷ்டப்படி கமிஷனரை வைவதையே தொழிலாகக் கொண்டவர். அவருடைய புத்திசாலித்தனம் அறிய வேண்டுமானால் ஒரு விஷயத்தில் பார்க்கலாம். அதாவது கமிஷனர் முனிசிபல் பள்ளிக்கூடங்களுக்கு புஸ்தகங்கள் வாங்குவதில் ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு வெள்ளைக்காரர் கம்பெனியிலும் பார்ப்பனர் கம்பெனியிலும் வாங்கி வருவதைத் தெரிந்தும், ஒரு நாயுடு கம்பெனியில் நூறு ரூபாய் சில்லரைக்கு புஸ்தகம் வாங்க நேரிட்டதற்காக ஸ்ரீ பக்தவத்சலு நாயுடு அவர்கள், புஸ்தகக் கடைக்காரரும் கம்மீஷனரும் நாயுடுவாய் இருப்பதால் தானே இந்த பள்ளிக்கூடப் புஸ்தகங்கள் நாயுடு கம்பெனியாரிடம் வாங்கப் பட்டது என்பதாய் ஒரு கேள்வி கேட்டார். இந்த கேழ்வி கேட்ட ஸ்ரீ பக்தவத்சலமும் ஒரு நாயுடுதான் என்பதை வாசகர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் இந்தக் கேள்வியில் எவ்வளவு புத்திசாலித்தனமிருக்கும் என்பதை அறியலாம். அவ்வளவு தூரம் பார்ப்பன மயக்கத்தில் ஆழ்ந்து கிடந்த ஸ்ரீ நாயுடு அவர்கள் சென்னை கார்ப்பரேஷனில் தொழிலாளர் பிரதிநிதியால் அதிகமான ஓட்டுக்களால் தோற்கடிக்கப்பட்டார்.

இப்போது தாலூகா போர்டிலும் ஸ்ரீ நாயுடு பார்ப்பனர்கள் ஆயுதம் என்பதற்காகவே அதிகமான ஓட்டுகளால் தோற்கடிக்கப்பட்டார். அதாவது ஸ்ரீ பக்தவத்சலத்திற்கு 26 ஓட்டுகளும் அவருக்கு எதிரியாய் நின்றவருக்கு 443 ஓட்டுகளும் கிடைத்தன. 417 அதிகமான ஓட்டுகளால் தோற்கடிக்கப்பட்டிருந்தால் வகுப்புவாதம் வளருகின்றதா செத்துவிட்டதா என்பதை யோசித்தால் தெரியாமல் போகாது. ஒவ்வொருவூரிலும் இதே மாதிரி நடந்து கொண்டுதான் வருகின்றது. இதை மாற்றத்தான் சென்னையில் காங்கிரசு நடத்துவதும், மகாத்மாவைக் கொண்டு பிரசாரம் செய்விப்பதும் பார்ப்பனர்களுக்கு இதுசமயம் மெத்த அவசியமாய் போய்விட்டது. இதனால் நமதுமக்கள் ஏமாறவுங்கூடும். அன்றி இந்த வெற்றி அடைந்ததினாலேயே பார்ப்பனரல்லாத இயக்கத்தாரும் மெய்மறந்து அக்கிரமங்கள் செய்து, நன்மை செய்யவேண்டிய சந்தர்பங்களை சரியானபடி உபயோகப்படுத்திக் கொள்ளாமல், சுய நலத்தையே பிரதானமாகக் கருதி வந்து, அடுத்த தேர்தலில் பார்ப்பனர்கள் இப்பொழுது அடையும்



RangaRakes

பலனை அடையவும் கூடும். எப்படி முடியுமோ என்பது நமக்கு கவலையாகத்தான் இருக்கிறது. ஏனெனில் சென்னை முனிசிபல் பிரசிடென்டு தேர்தலிலேயே இந்த யோக்கியதை விளங்கிவிடும் போலவே காணப்படுகின்றது.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 16.10.1927**



tamilnavarasam.com

# சமய சீர்திருத்தம்

சகோதரர்களே!

"சமய சீர்த்திருத்தம்" என்பது பற்றி பேசுவது என்பது என்னைப் போன்ற ஒருவருக்கு இலேசான காரியமல்ல. அதற்குத் தக்க ஆராய்ச்சி வேண்டும். சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசவும் எனக்குப் போதுமான திறமையில்லை. நான் சமய ஆராய்ச்சி செய்யவில்லை. கடந்த ஆறேழாண்டுகளாக அரசியலில் மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் நடைபெற்று வந்த காங்கிரசில் நான் உழைத்து வந்தது அன்பர் பலர் அறிவர். அரசியலின் மூலம் நாட்டின் சீர்திருத்தத்திற்கு அரும்பாடு பட்டும் யாதொரு பலனும் அடைய இயலாமல் போனதாலும், அதற்கு காரணம் சமய சம்மந்தமான கொள்கைகளே தடை என்று உணர்ந்ததாலும் அக்குறைகளை நீக்க உழைப்பதுதான் அவசியமெனத் தோன்றிய பின்னர் அவ்வழியில் உழைத்துப் பார்க்கலாமென முற்பட்டேன். சமயத்தின் பேரால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களையும் விடுதலைக்கு விரோதமானவைகளையும் மக்கள் சுயமரியாதையற்ற வாழ்க்கையில் துன்புறுவதையும் ஒழிக்கவே முதலில் பாடுபட வேண்டும். அப்பொழுதுதான் நாம் விடுதலை அடைய முடியும். நம் நாடு விடுதலையடைய முடியாததற்கும் சுயமரியாதையற்ற தன்மையில் வாழ்வதற்கும் நமது சமயக் கொள்கைகள்தான் இடையூறாக இருக்கின்றன. நான் இப்பொழுது பேசினால் கேட்போர்களில் சிலருக்கு மன வருத்தமாய்த்தான் தோன்றும். ஏனெனில் நம் மக்களுக்கு சமயப் பற்று என்கிற மூட நம்பிக்கையை சுயநலக்காரர்கள் அதிகமாய் ஊட்டிவிட்டார்கள். அது நமது இரத்தத்திலும் நன்றாய்க் கலந்து விட்டது. சுலபமாய், கேட்போருக்கு சமாதானம் சொல்லி சரிப்படுத்த முடியாத அளவு பதிந்திருக்கின்றது. நாட்டின் சீர்திருத்தம் என்ற தலைப்பின் கீழ் நான் பேசும் விஷயங்களை உறுதியாய் நம்புகிறேன். நம் நாட்டிற்கு என்றுமே விடுதலை இல்லாத வழியில் காரியங்கள் சமயத்தின் பேரால் நடைபெற்று வருவதைத் தெரிவித்தால் சிலர் மனம் வருந்தும். அதற்குப் பயந்து வெளிப்படுத்தாமல் போனால் நான் சுயநலம் கருதுபவனாவேன்; அல்லது பயங்காளித்தனம் கொண்டவனாவேன். பகுத்தறிவைக் கொண்டு பொது நிலையில் இருந்து ஆராய்ச்சி செய்தால் நான் சொல்லுவதில் குற்றம் சொல்ல அவசியமிராது. சமய விடயம் பேசும் பொழுது அதன் பயனாய் அரசியலிலும் ஏற்பட்ட குற்றங் குறைகளை கூறவேண்டி இருக்கிறது.



அரசியலில் நான் தீவிர வேலை செய்தேன் என்பது இங்குள்ள பலர் அறிவர். பின்பு அவ்வனுபவத்தைக் கொண்டு அஃதல்ல விடுதலை அடைய பாடுபடும் வழியெனக் கருதியே அதை விட்டு வெளியேறினேனேயன்றி, மற்றபடி யாராலாவது வெளியேற்றப்பட்டோ, அல்லது சிறு அபிப்பிராய பேதம் ஏற்பட்டோ வெளிவந்தவனல்ல. நான் சாதாரண நிலையிலிருந்து வெளிவரவில்லை. அரசியலில் ஒரு பொறுப்புள்ள பதவியிலும் உத்தியோகத்திலுமிருந்தே நான் வெளி வந்தேன். நமது நாட்டுக்கு இவ்வரசியல் இயக்க மூலம் ஒன்றும் ஆகாது எனக் கருதியே வெளிவந்தேன். காஞ்சிபுரம் மகாநாட்டில் தான் இவ்வுணர்ச்சிகள் பலப்பட்டு வெளிவந்தேன். அரசியலில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும், தமிழ்நாட்டுக் காரியதரிசியாகவும் பல ஆண்டுகள் இருந்தேன். அப்பொழுதுதான் நான் ஆற்றும் தொண்டு வீண் தொண்டெனவும், நமது எதிரிகளுக்கு அனுகூலமாய் இருந்து கொண்டு நாட்டையும் சமூகத்தையும் பாழாக்குகின்றோம் எனவும் கருதி நான் விலகினேன்.

மத சம்பந்தமாகவும் எனது நிலையை நீங்கள் அறிய வேண்டுமானால் 1904 ஆம் வருடம் முதல் 1927 ஆம் வருடம் சூன் மாதம் வரையில் சுமார் 23 வருட காலமாக எனது தாலூகாவாகிய ஈரோடு சர்க்கில் தேவஸ்தான கமிட்டிக்கு காரியதரிசியாகவும் தலைவனாகவுமிருந்தேன். இந்துமத பரிபாலன போர்டாரும் எனது நிர்வாகத்தைப் பற்றி பெருமை பாராட்டியே பேசியும், எழுதியும் வந்திருக்கிறார்கள். தற்பொழுது உண்டாகிய புதிய போர்டார் புதிய கமிட்டியை நியமிக்கவே, அவர்கள் நான்கு தாலூகாவிற்கு ஒரு கமிட்டியாக ஏற்படுத்தி அதில் என்னையும் தேவஸ்தானக் கமிட்டி அங்கத்தினராக நியமித்திருக்கிறார்கள். தற்கால மந்திரி சபைக்கும் எனக்குமுள்ள சம்மந்தம் நீங்கள் அறிந்த விடயமே. அவர்கள் செய்யும் குற்றங்களைப் பளிங்கு போல் எடுத்துக்காட்டி வருகின்றவர்களில் நான் ஒருவன். அப்படி இருந்தும் அவர்கள் என்னை நியமித்தார்கள். என்னைப் பற்றிய பிராதுகள் பல அவர்களுக்குப் பார்ப்பனர்கள் அனுப்பி என்னை நியமிக்கக்கூடாது என்று கேட்டுக் கொண்டார்கள். அவைகளில் முதல் பிராது நான் குற்றவாளி என்றும், சிறை சென்றவனென்றும், இரண்டு முறை சிறையில் அடைக்கப்பட்டவனென்றும் எழுதி அனுப்பினார்கள். அந்த பிராது எனக்கே என் பார்வைக்கு வந்தது. நான் அவர்கள் எழுதியதெல்லாம் உண்மை தான். ஆனால் மூன்று தடவை சிறை சென்றேன் என்பதற்கு பதிலாக இரண்டு தடவை என்று எழுதியதுதான் பிழை என்று திருத்தி அனுப்பி விட்டேன். மறுபடியும் பல பார்ப்பனரல்லாதாரிடமும், பல பார்ப்பனர்களிடத்திலும் கையொப்பம் வாங்கி "இவன் மதத்தை நிந்திக்கிறான். எப்பொழுதும் பார்ப்பனரையே வைகிறான். வேண்டுமானால் சி.ஐ.டி. ரிப்போர்ட்டர்களின் ரிப்போர்ட்டுகளைப் பாருங்கள்" என்று ஒரு விண்ணப்பம் சர்க்காருக்கு அனுப்பினார்கள். அதைப் பற்றியும் சர்க்கார் என்னைக் கேட்டார்கள். நான் அதற்கு பதில் எழுதியதில் நான் ஒரு வகுப்பாரை மாத்திரம்



RangaRakes tamilnavarasam.com

வையவில்லை. எல்லோரையும் வைகிறேன். என் தொண்டுக்கு எந்தெந்த வகுப்பார் கொள்கை எதிரிடையாக இருக்கிறதோ அவர்களைக் கண்டியாமல் இருக்க என்னால் முடியாதென்றும், எல்லாருக்கும் சம உரிமை வழங்கப் படுவதற்காக உழைக்கிறேனேயல்லாமல் வேறு அல்ல வென்றும் அறிவித் தேன். மறுபடியும் என்னை நியமித்தார்கள். சென்னைக்கு வருவதாலும் மற்றும் வெளியூர்களுக்கு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதனாலும் எனது தலைமைப் பதவியைப் பொறுப்பு வாய்ந்த ஒருவருக்குக் கொடுத்து நான் இன்று வரையில் உபதலைவராகயிருந்து வருகிறேன். என்னை சிலர், நான் செய்யும் உபந்நியாசங்களைக் கேட்டு 'நாஸ்திகன்' 'மதத்தை நிந்திக்கிறவன்' என்றும் 'சுயராஜ்ய விரோதி' என்றும் 'சர்க்கார் நேசன்' என்றும் குறைகூறி வருவார்கள். சர்க்காருக்கு வேண்டியவன் என்பதற்கு அறிகுறி ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை. சர்க்கார் அன்று என்னை எப்படி பாவித்து நடத்தி வந்தார்களோ அதுபோலவே இன்றும் என்னை நடத்தி வருகிறார்கள். இன்னும் எனக்குப் பின்னால் போலீஸ்காரர்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

நான் உங்கள் முன்னிலையில் சொல்ல வந்தது சமய சீர்திருத்தம். நான் சொல்லுவதையெல்லாம் ஒப்புக் கொண்டுதான் தீரவேண்டுமென்றும், அதன்படி நடக்காவிட்டால் பாவம் வரும் என்றும் சொல்லி பார்ப்பனர் களைப்போல் நான் உங்களை ஏமாற்ற வரவில்லை. நான் சொல்வதைப் பொறுமையுடன் கேட்டு பிறகு உங்கள் பிரியம்போல் நடவுங்கள் என்று சொல்லிய பின்பே நான் இன்று பேச எடுத்து கொண்ட சமய சீர்திருத்தம் என்னும் விஷயத்தைப் பற்றி பேச ஆரம்பிக்கிறேன்.

## சமய சீர்திருத்தம்

சமயம் என்பதும், மதம் என்பதும் ஒன்றுதான். சமய சீர்திருத்தம் என்றால் மதத்தை சீர்திருத்த வேண்டுமென்பதுதான் பொருள். சமயம் அல்லது மதம் என்றால் பொருள் என்ன? மதம் வேண்டுமென்கிற உணர்ச்சி எப்போது உண்டாயிற்று? மதம் எதற்காக வேண்டும்? என்பவைகளை உணர வேண்டும். மதம் என்பது என் சிற்றறிவுக்கு எட்டியவரையில் எந்த முறையில் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றால் மக்கள் கூடி கூட்டமாக வசிக்க ஏற்பட்ட வுடன் அவர்களுடைய நித்திய வாழ்க்கையில் ஒரு கட்டுப்பாடு இருக்கவும் மற்றவர்களுக்கு மனிதன் துன்புறுத்தாமல் உபயோகப்படுகின்ற முறையில் தான் ஏற்படுத்தப்பட்டது. அந்த முறையில் ஏற்படுத்தின காலத்தில் அக்கால மக்களுக்குள்ள அறிவு, ஆற்றல், நிலைமை, சீதோஸ்ண ஸ்திதி முதலியவை களுக்கு ஏற்றவாறு ஒரு சிறு கொள்கைகளை அமைத்து உண்டாக்கி இருக்க வேண்டும்; நாளைடைவில் அது வளர்ந்து கொண்டும் தனி மனிதன் பெருமைக்கும், அவன் ஆசைக்கும் பிறகு அரசியலுக்கும் ஆக சிறிது சிறிதாய் மாறி இப்போதுள்ளவைகள் போல் சமயம் ஏற்பட்டிருத்தல்



வேண்டும். நமது நாட்டில் ஆதியில் சமயம் ஏற்பட்ட காலத்தில் சமயத்திற்கும் அரசியலுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அக்காலத்தில் அரசியலில் நம் மக்களுக்குள்ள உணர்ச்சி இல்லை. உணர்ச்சி உண்டாக வேண்டிய அவசிய முமில்லை. ஏன்? பதினாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்புள்ள சரித்திரங்களை ஆராயுங்கள். அக்காலத்தில் வேளாண்மை மிகுதியுமிருந்தது. ஒவ்வொருவனுக்கும் வேண்டிய பொருள்கள் அனைத்தும் இருந்து வந்த தோடு மிகுதியும் பட்டது.

நெல் வைத்திருப்பவன் பருத்தி வைத்திருப்பவனுக்கு நெல்லைக் கொடுத்து பருத்தியோ அல்லது துணியோ பெறுவான். இதுபோல் எல்லா சௌகரியமும் உண்டு. இதுதான் பண்டமாற்றுதல் என்று பெயர். நம்மவர்கள் ஓய்வு நேரங்களில் சிந்தித்ததிலேயே சில சட்டங்களும் மற்ற சமய கட்டுப் பாடுகளும் ஏற்பட்டது. ஆனால் இதுதான் பின்னால் நம் நாட்டிற்கு வந்த பார்ப்பனர்கள் கவலையற்று இருந்த நம் மக்களை ஏமாற்றி தங்கள் நன்மைக் குத் தகுந்தபடி திருப்பி தங்களுக்கு இவைகள் எல்லாவற்றையும் அடிமை யாக்கிக் கொண்டு இவைகளுக்குத் தாங்களே கர்த்தாவாகவும் எஜமானர் களாகவும் ஆகிவிட்டார்கள். கொள்கையொன்றும் ஏற்படவில்லை. அவரவர் இஷ்டம் போல் அனுபவித்தார்கள். மகமதிய மதமும், கிருஸ்துவ மதமும் வெறும் கடவுளை வணங்குதல் என்பதோடல்லாமல் வர வர அரசியல் கருத்தைக் கொண்டும், தங்கள் தங்கள் மதத்தை பொறுத்த வேலை செய்தும், செய்து கொண்டும் வருகிறார்கள். ஆனால் நாம் கட்டுப்பட்டுக் கிடக்கும் சமயத்தையோ அந்த காலத்திலிருந்த நிலையிலே இருக்க வேண்டுமே யல்லாமல் ஒரு சிறிதும் மாற்றக்கூடாது என்கிறார்கள். இதை நம்புகிறவர்களும் பிடிவாதக்காரராய் இருக்கிறார்கள். இங்குதான் அபிப்பிராய பேதம் ஏற்படு கிறது. நமக்கு அவசியமானபடி நாம் மாற்றிக் கொள்ளல் வேண்டும். அப்படி மாற்றுவதில் அடியோடு மாறவும் ஏற்படலாம். நம் மதம் கட்டுப்பாடு உடைய தல்ல. ஒரு குறிப்புக்கு ஒத்ததல்ல. இக்காரணமே நம்மை அடிமையாக்கிற்று. ஆனால் இதனை நம் மக்கள் அறியார். இப்படி இருந்தால் நாம் எப்பொழுது முன்னேற்ற மடைய முடியும்? நாம் எப்படி அடிமை வாழ்வினின்று நீங்கி சுயமரியாதையுடன் வாழமுடியும். ஆகையால் ஒரு நாடோ, ஒரு தேசமோ சுயமரியாதையுடன் வாழ தடுக்கின்றவர்களை அழிக்க உடனே முற்படல் வேண்டும். பிடிவாதக் குணத்தை விட்டொழித்து மக்கள் நிலைமைக்கும் அறிவுக்கும் ஏற்றவாறு காரியங்களை முடித்து தடைகளை அகற்றி சுயமரியாதை அடைந்து விடுதலை பெற வேண்டும்.

## இந்து மதம்

சிலர் தங்களை இந்து என்கிறார்கள். ஆனால் அவர்களை இந்து என்றால் என்ன என்றால் 100 -க்கு 90 பேருக்கு தெரியாமல் இருக்கிறது. அப்படி இருந்தும் நம் மக்கள் மூட நம்பிக்கையால் மதத்தின் பேரால்



RangaRakes tamilnavarasam.com

கொண்டுள்ள அன்பு செப்பத்தரமல்ல. மற்ற மதக்காரர்கள் அவைகளை அறிவது போல் நம் மதம் நாம் அறியக் கூடாதவர்களாயிருக்கிறோம். மகம்மதியர்களில் 100 –க்கு 90 பேர் தங்கள் மதத்தைப் பற்றி தெரிந்தவர் களாயிருக்கிறார்கள். நம் மக்களை யாராவது உங்கள் மதம் என்ன? யார் ஏற்படுத்தியது? அதன் காலம் என்ன? இது போன்ற வினா வெழுப்பினால் பதில் சொல்லுவாரில்லை. மகமதியரையோ அல்லது கிறிஸ்தவர்களையோ அல்லது புத்தர்களையோ வேறு யாரையோ கேட்டால் உடனே பதில் சொல்லத் தயாராயிருக்கிறார்கள். இந்து மதத்தில் இவர்கள் கற்பிக்கப்படும் வயது இலேசானதல்ல. அதாவது கடையில் உள்ள காகிதங்களையெல்லாம் வாங்கி அதில் ஒன்று போட்டு அதன் பின் எத்தனை முட்டை வடிவம் போட்டாலும் அதற்கு மேல் போகுமேயன்றி குறையாது. தலைவர் யார் என்றால் சொல்லும் நிலைமையிலில்லை. கடவுளால் ஏற்பட்டது என்பர் சிலர். ஆதாரம் என்ன வென்றால் வேதம் என்பார்கள். அது என்ன சொல்லுகிறது என்றால் நீ பார்க்கக் கூடாது, நீ கேட்கக் கூடாது, படிக்கக் கூடாது என்பார்கள். அதை கடவுள் எழுதியிருப்பார் என்று யாராவது நம்ப முடியுமா? என்று பாருங்கள். ஒரு பொழுதும் முடியாது. ஏனெனில் கடவுள் சொன்ன வேதமானால் உலகத்தார் எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டும். யாரும் பார்க்க வேண்டும். அப்படி இருக்க நாம் எப்படி அந்த வேதத்தை நம்புவது அதன்படி நடப்பது? மற்ற மதக்காரர்கள் தங்கள் வேத நூல்களை பல மொழிகளில் மொழி பெயர்த்து அச்சிட்டு தங்கள் மதஸ்தர்கள் அல்லாத ஒவ்வொருவர் கையிலும்கூட கிடைக்கும் வண்ணம் தங்கள் வேதத்தையும் மதத்தையும் பரப்பி வருகிறார்கள். முகமதியர்களும் கிறிஸ்தவர்களும் இத்தகைய முயற்சி எடுத்து தங்கள் மதங்களையும் வேதங்களையும் மற்ற மக்களிடம் பரப்பினதால்தான் ஏழரைக்கோடி முகமதிய சகோதரர்களும் ஒரு கோடி கிறிஸ்தவர்களும் நமது நாட்டில் உண்டாக நேரிட்டது. இந்த ஏழரைக் கோடி முகமதியரும் அரபி அல்லது துருக்கி முதலிய தேசத்திலிருந்து வந்தவர்களென்று யாராவது சொல்ல முடியுமா? முடியாது. அப்படி வந்தவர் களும் ஒரு கோடிக்கு மேலிருக்க முடியவே முடியாது. மற்ற மக்கள் நம் 'இந்து' மதத்திலிருந்து பிரிந்து சேர்ந்தவர்களேயாவார்கள். கிறிஸ்துவ சமயத்திலும் வெளியிலிருந்து வந்தவர்கள் 2 அல்லது 3 இலட்சம் பேரே இருப்பார்கள். மற்ற 97 இலட்சம் பேரும் நம் மக்கள்தான். திருவனந்த புரத்திலே 40 இலட்ச மக்களுள் பதினாறரை லக்ஷம் கிறிஸ்தவர்களும் மூன்றரை லக்ஷம் முகமதியர்களும் உண்டாகி இருப்பார்களானால் எத்துணை மக்கள் நம் சமயம் விட்டு பிற சமயம் புகுந்தார்கள் என்பது இதில் காணக்கிடக்கின்றது. வாரம் ஒன்றுக்கு இந்துக்கள் என்போர்களில் 4000 பேர் அன்னிய மதம் புகுகின்றார்கள். காரணம்? அவர்கள் மத பிரசாரம் செய்கிறார்கள். மத பிரசாரம் செய்து ஏற்றுக் கொண்ட மக்களுக்கு முதலில் மதத்தைப் பற்றியும் கல்வியிலும் பயிற்சியடையச் செய்கிறார்கள். பின்பு அவன் வாழ்க்கையை செவ்வனே கழிக்க ஒரு தொழில் ஏற்படுத்தி பின்பு



தங்கள் மதமே உலகத்தை ஆளவேண்டு மென்ற உணர்ச்சியை உண்டாக்கு கின்றார்கள். இவ்வளவு காரியத்திற்கும் அவர்கள் வெகு குறைந்த பணத்தைத் தான் மதத்தின் பெயரால் செலவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் நாம் மதத்தின் பேரால் செலவிடுவதில் 100–ல் ஒரு பங்கு கூட செலவு செய்ததில்லை. நம்மைப் போல் மற்றெந்த மதக்காரர்களும் செலவிட மாட்டார்கள். கிறிஸ்தவர்கள் நம் நாட்டிற்கு வந்து சொற்ப நாள்களுக்குள் நம்மக்களைச் சேர்த்து கல்வி கற்பித்து அவர்களை நமக்கு எஜமானர்களாக்கி யிருக்கிறார்கள். உயரிய நிலைக்கும் கொண்டு வருகிறார்கள். 100 –க்கு 90 பேர் படிக்கும்படி செய்து வருகிறார்கள். ஆனால் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட தென்றும் கோடிகோடி வருஷங்களானதென்றும் சொல்லும் நமது மதத் தையோ பெரும்பான்மையான மக்கள் படிக்கக்கூடாது. அப்படி மீறி படித்தால் நாக்கை அறுக்கவும், கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவும், படித்து விட்டால் நெஞ்சை அறுக்கவும் மற்றும் பலவிதமான தண்டனைகள் உண்டு. இதன் பலனாய் வெள்ளைக்கார அரசாங்கம் நமது நாட்டிற்கு வந்து இப்போது கூட 100 –க்கு 5 பேர்தான் படிக்க முடிகின்றது. அதிலும் 100 –க்கு 90 பேர் பார்ப்பனர்கள். ஆனால் இப்போது சிலர் "நாங்கள் படிப்பதை தடுப்பதில்லை. வேதத்தைதான் படிக்கக் கூடாதென்கிறோமேயன்றி வேறில்லை" என்கிறார் கள். வேதகாலக் கல்வி இக்காலத்தைப் போன்று இங்கிலாந்து, ஐரோப்பா, அரேபியா முதலிய சரித்திரங்களல்ல. மற்றும் சேக்ஸ்பியர், மெக்காலே முதலியவர்களால் எழுதின நூல்களுமல்ல. ஆனால் அக்காலத்திய கல்வியென்பது நீதிகளை உணர்வது. நீதிகளோ வேதமாய் விட்டது. வேதமோ நாம் படிக்கக் கூடாதது. இம்முறையில் நாம் 1000 – க்கு ஒருவராவது படிக்க முடியுமா? வெள்ளைக்கார ராஜாங்கம் வராதிருந்தால் நம்மில் ஆயிரத்துக் கொருவராவது படிக்க நமது மதம் இடம் தந்திருக்குமா? வேதம்தான் படிக்கக் கூடாதென்றாலும் வட மொழியாவது கற்றல் கூடாதா வென்றால் அதுவும் கூடாது என்பார்கள். ஏன் என்றால் அது வாயில் நுழையாது என்பார்கள். இல்லை நான் முயற்சி செய்கிறேன் என்று சொன்னால் வேதத்திலுள்ள நீதிகள் அதில் இடை இடையே வருமாதலால் அதைப்படிக்கக் கூடா தென்பார்கள். இம் மாதிரியாகவே மதத்தின் பெயரால் நாம் படும்பாடும் அடையும் இழிவும் செப்பத்தரமன்று. ஆனால் செலவாகும் ரூபாயோ கணக்கிலடங்காது. இவ் வளவு ரூபாய் மற்றெந்த சமயக்காரர்களும் சமயத்தின் பெயரால் செலவிடு வதே இல்லை. மற்ற மதத்துக்கு யாரோ ஒருவர் இருவர் 1000 பவுன் 4 ஆயிரம் பவுன் கொடுப்பார்கள். அது சமயத்தை பரப்புவதற்கு பயன்படும். சமயம் பரப்புவது என்பது மக்கள் கல்வி அறிவு, மக்கள் நோய் தீரல், அற்புதம் கண்டு பிடித்தல் முதலியவை. ஆனால் நம் சமயத்திலோ ஒவ்வொருவரும் மத வரி கொடுத்து தான் ஆக வேண்டுமென்ற கட்டாயமிருக்கிறது. நம் மாகாணம் மட்டும் சர்க்கார் கணக்குப்படி ஒருவருஷத்திற்கு 2 கோடி ரூபாய் மதத்தின் பெயரால் கோவிலுக்கும் மடத்திற்கும் மாத்திரம் வரும்படி வருகிறது. இஃதன்றி தனிமடம் கோவில்களின் வரும்படிகளைக் கணக்கு பார்த்தால்



RangaRakes
tamilnavarasam.com

இப்படி எத்தனையோ பங்கு அதிகமாக முடியும். திருப்பதி கோவிலை மாத்திரம் எடுத்துக் கொண்டால் வருட வருமானம் 20 லட்சமாகும். திருநெல் வேலி ஜில்லாவிலுள்ள மூன்று அல்லது நான்கு கோவில்களில் மாத்திரம் வருடத்திற்கு 2, 3 லட்சம் வரும்படி ஆகும்.

இன்னும் சிதம்பரம், இராமேஸ்வரம், ஸ்ரீரங்கம் முதலிய பெருமை பெற்றதென்னும் கோவில்களில் கணக்கைப் பார்த்தால் அதிகமாகவே முடியும். இவைகள் தவிர கணக்குக்கு வராத ரூபாய்கள் எவ்வளவு? உதாரண மாக இங்கிருந்து ஒருவர் திருப்பதிக்கு 2 ஆயிரம் ரூபாய் காணிக்கையாக செலுத்த புறப்படுகிறார் என்றால் அது தவிர அவனுக்கு நேரிடும் செலவு எவ்வளவு? அவன் தன் சுற்றத்தாரை அழைத்துப்போக வேண்டியிருக்கிறது. மஞ்சள் ஆடை தரிக்க வேண்டியிருக்கிறது. மேள வாத்தியங்களுடன் ஊர்வலம் வர வேண்டி யிருக்கிறது. வீதிகளில் கோவிந்தா சப்தம் போட்டு பிச்சை வாங்க வேண்டி இருக்கிறது. இவ்வளவு செய்து 2 ஆயிரம் ரூபாய் காணிக்கை செலுத்துவது எதற்கு என்றால் அது அவரே செய்து கொண்ட பிரார்த்தனையாம். என்ன பிரார்த்தனை என்றால் அவர் முன்பு காயலா வாயிருந்த பொழுதோ வேறு கஷ்டமாயிருந்த பொழுதோ கடவுளை வேண்டிக்கொண்டாராம். கடவுளும் அவர் வேண்டுகோளுக்கிணங்கி அவரை நோய்வாயினின்றும் நீக்கினாராம்! அவர் நினைத்ததை அனுகூலம் செய்தாராம்! அதற்காகப் பிரார்த்தனை ரூபாயில் ஒரு காசுகூட குறையாமல் கொண்டுபோய் கொட்ட வேண்டுமாம். எனவே இதற்கு மற்ற செலவுகளிருக் கின்றன. இவைகளுக்கெல்லாம் எவ்வளவு ரூபாய் செலவாகுமென்று சற்று யோசியுங்கள். இதைப்போன்ற எத்தனை மக்கள் இமய மலையிலிருந்து கன்னியாகுமரி வரையிலுள்ளவர்கள் செல்வார்கள். உற்சவத்திற்காகவும் காணிக்கை வேண்டுதலை இல்லாமல் பல மக்கள் செல்லுகிறார்கள். அந்த முறையில் செலவிடும் செலவு எவ்வளவு? எனவே இவ்வித நம்பிக்கையைப் பற்றி நான் இங்கு சொல்ல வரவில்லை. இப்படி செலவு செய்யும் பணத்தின் பலன் என்ன? இது என்ன ஆகின்றது? என்பதற்கே இந்த கணக்குச் சொல்லு கின்றேன். இதனால் யார் பலன் அனுபவிக்கிறார்கள் என்பதை பாருங்கள். பச்சரிசி, பாசிப்பயறு, நெய்,பாதாமி, சக்கரை இவைகள் வாங்க உதவுகின்றது. இதை யார் சாப்பிடுகின்றார்கள்? (கைதட்டல்) இது தவிர மதத்தின் பெயரால் சடங்குகளுக்கென்று எவ்வளவு வரி கொடுக்கின்றோம்? குழந்தை உற்பத்தி முதல் கடைசி வரையில் கொடுத்துதான் தீரவேண்டியமாதிரியாய் அமைக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் இவைகளினால் நாம் அடையும் பலன் என்ன என்று பார்ப்போமானால் நம்மை மிருகத்திலும் கேவலமாய் ஒரு வகுப்பார் மதிக்கும்படி, நாமே நம்மை இழிவுப்படுத்திக் கொள்ளுகிறோம் என்பதல்லாமல் வேறு ஒன்றுமில்லை. ஒருவன் தனது பிரார்த்தனைக்காகவோ, தனது பாவம் தொலையவோ என்று ஒரு கோவிலைக் கட்டுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதனால் அவன் அடைந்த பலன் என்ன? அவனே



உள்ளே புக யோக்கியதை யின்றி தனக்கென ஒரு இடம் வெளியிலே ஏற்படுத் திக் கொள்ள வேண்டி இருக்கிறது. நாம் மனிதனாகப் பிறந்தும் மனிதனாக மடிவதற்கில்லையே! நம் சமயக் கொடுமைகளைப் பற்றி பல பெரியோர்கள் நமக்கு முன்னும் கண்டித்திருக்கிறார்கள்; சீர்திருத்த முறையிலும் இருந்திருக் கிறார்கள். அதனால் ஒருபலனும் உண்டாக வில்லை. ஆனால் அவர்களெல் லாம் இப்பொழுது ஒரு சிலையாக இருந்து பூஜை பெற்று வருகிறார்கள். கடைசியாக நம்மவர்கள் “பெரியோர்கள் போன வழியே நாமும் பின்பற்று வோம். நமக்கென்ன” என்பார் பலர். அவர் பெரியோர்கள் போன வழியில் மற்றவைகளில் நடக்கிறார்களா வென்றால் இல்லவே இல்லை. இந்து மத பரிபாலனத்திற்கு என்று ஏற்பட்ட சட்டத்தில் கூட வெறும் கணக்குப் பார்க்கத் தான் சுதந்திரம் உண்டேயன்றி வரவை யோக்கியமான முறையில் செலவழிக்க அதிகாரமிருப்பதாக ஒருவரிகூட இல்லை. (கைதட்டல்) முன்சொன்னப்படி ஒருவர் 2 ஆயிரம் ரூபாய் காணிக்கையாக திருப்பதிக்குச் செலுத்தப்போகிறார் என்று தெரிந்த உடனே மகந்து என்கிற ஒருவர் தனது ஆளை ரயிலுக்கு அனுப்பி அவனை அழைத்து வரச் செய்து “நீங்கள் சென்னையிலிருந்து வருகிறீர்கள். நீங்கள் 2 ஆயிரம் ரூபாய் காணிக்கையாக கொண்டு வந்திருக் கிறீர்கள் அல்லவா” என்றவுடன் இவனுக்கு இஃது எப்படி இவருக்கு தெரிந் தது? எல்லாம் உள்ளது உள்ளபடி உரைக்கின்றாரே என்று நம்பி அவரிடம் அதிக பக்தி செலுத்தி விடுகிறான். இதைப் பார்த்து மகந்து “நீங்கள் கொண்டு வந்த ரூபாயை இங்கே என்னிடத்தில் கொடுங்கள். அங்கு கொண்டுபோய் கொடாரத்தில் கொட்டினால் சர்க்கார் எடுத்து ஜர்மனி யுத்தத்தில் பட்ட கடனுக்கு வட்டியாக உபயோகித்துக் கொள்வார்கள். என்னிடத்தில் கொடுத் தால் நான் நேரிலே கடவுளுக்குச் சேரும்படி செய்வேன்” என்பார். சம்மதித் துக் கொடுத்தால் வாங்கிக் கொள்ளுவார். சந்தேகப்பட்டால் இதோ பார் இந்த படத்தை என்று ஒரு படத்தை சுட்டிக் காண்பித்து ஒரு காலத்தில் வெங்கடாசல பதிசாமி மகந்துவிடம் சதுரங்கமாடி தோற்றதாகவும் அதற்கு நிபந்தனையாக கடவுள் முதலில் மகந்துவை தரிசித்த பிறகுதான் தன்னை தரிசிக்க வேண்டு மென்று உத்தரவு பிறப்பித்தாரென்றும் அங்குள்ள மகந்து ஆள்கள் சொல்லு வார்கள். இதை நம்பிதான் ஆக வேண்டும் நம்பாவிட்டால் “கங்கை ஆற்றங் கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாபத்திற் காளாவாய், தாயைக் கொன்ற பாவத்திற்காளாவாய்” என்று சொல்லுவான் பிறகு பேசாமல் கலகலவென்று ரூபாயை கொட்டி விடுவான். இந்த பணங்களெல்லாம் மேல் கண்ட 2 லட்சத் தில் சேராது. இதை அடக்க தேவஸ்தான மசோதாவில் சட்டம் இல்லை. இது தவிர அபிஷேகம் 1000 ரூபாய் அல்லது 5000 ரூபாயில் செய்து வைக்கிறார்கள். அல்லது வெள்ளியால் கலசம், பொன் வெள்ளி ரதம், வாகனம் செய்கிறார்கள். பட்டு பீதாம்பரம் சாற்றுகிறார்கள். 50 அல்லது 60 குடம் பால் ஊற்றுகிறார்கள். இதனால் என்ன பலன் என்று அறிய தேவஸ்தான பரிபாலன சட்டத்திலோ மதபரிபாலன சட்டத்திலோ இடமில்லை. 5000 வருடங்களுக்கு முன்பு கோவில்கள் கட்டப்பட்டன என்கிறார்கள். சில கோயில்கள் அதற்கு



RangaRakes
tamilnavarasam.com

முன்பிருந்ததாகவும் சொல்லுகிறார்கள். இம்மாதிரியாக நம் தமிழ் அரசர்களாலும் மற்றும் பெரியோர்களாலும் கட்டப்பட்டு செலவழிக்கப்பட்ட செல்வம் எவ்வளவு? அவர்கள் செய்த மற்ற தர்மங்கள் எவ்வளவு? அவர்களுடைய குடும்பங்கள் இப்போது எங்கே? யாராவது ஒருவரைக் காண முடியுமா? உதாரணமாக தஞ்சாவூர் அரசரை எடுத்துக் கொள்ளுவோம். அவர் கட்டி வைத்த பள்ளிக்கூடங்களும் அக்ரகாரங்களும் மற்றும் பல தர்மங்களும் இன்னும் இருக்கின்றன. அப்படிச் செய்த அந்த அரசாங்கம் இன்று எங்கே! வெள்ளைக்காரன் கையில் போய் சேர்ந்து விட்டது. மீதியுள்ள சொத்துக்களுக்கும் சண்டை உண்டாயிற்று. ஒரு காலத்தில் அம் மன்னவனை க்ஷத்திரியன் என்று வானமளாவப் புகழ்ந்து அவரிடம் பிச்சை வாங்கி வயிறு வளர்த்த அன்னக்காவடிகளெல்லாம் நேற்று கலியுகத்தில் பிராமணன், சூத்திரன் என இரண்டு ஜாதிதான் உண்டு என்று கோர்ட்டில் சாட்சியம் கொடுத்திருக்கிறார்கள். நம் மக்கள் இன்னமும் இவைகளெல்லாம் செய்தால்தான் புண்ணியமும் மோக்ஷமும் கடவுள் தயவும் உண்டு என நினைக்கிறார்கள்.

இதைப்பற்றி யாராவது, சொன்னால் "பார்ப்பனர்களை வைகிறார்கள். நாஸ்திகம் பேசுகிறார்கள்" என்று நீலிக்கண்ணீர் விடுகிறார்கள். இனி சடங்குகளைப்பற்றி சற்று கவனிப்போம். சடங்குக்காக நாம் செலவிடும் பணம் எவ்வளவு? சடங்குக்காக மனிதனென்று நம் மக்கள் கருதுகிறார்கள். பிறப்பதற்கு முன்பே நம்மை சடங்குச் சனி பிடித்துக் கொள்ளுகிறது. கரு தரிப்பதற்கு முன்பே சடங்கு செய்ய ஆரம்பிக்கிறோம். அதற்கு புரோகிதன் வேண்டும் என்கின்றோம். அவன் வந்து விறகை கொளுத்தி புகைத்துக் கரியாக்க வேண்டும். அவன் நல்ல பிள்ளை பிறக்கும் என்றால்தான் நமக்கு நல்ல பிள்ளை பிறக்குமென்று நினைக்கின்றோம். கர்பத்திலேயே உபதேசம் செய்தால்தான் ஞானம் வரும் என்று நினைக்கின்றோம். அக்குழந்தை கீழே விழுந்ததும் சடங்கு செய்ய வேண்டி இருக்கிறது. சாதகம் பார்ப்பதற்கும், தொட்டிலில் போடுவதற்கும், பாலூட்டுவதற்கும், கோவணம் கட்டுவதற்கும், சவரம் செய்வதற்கும், காது குத்துவதற்கும், பள்ளிக்கூடம் வைப்பதற்கும் சடங்குகள் செய்து தீர வேண்டி யிருக்கிறது. குழந்தைக்கு காய்ச்சல் வந்த தென்றால் சடங்குதான். இவைகள் எல்லாவற்றிற்கும் பார்ப்பானையே கூப்பிட வேண்டியது தான். அவனுக்கு பணம் கொடுத்தாக வேண்டியிருக்கிறது. காயலா வந்தாலும் "சனியை சுக்கிரன் பார்க்கிறான் சாந்தி கழிக்க வேண்டும்" என்கிறான். பணம் கொடுப்பது தான் சாந்தி. கலியாண சடங்கோ பொருத்தம் பார்க்க வேண்டியிருக்கிறது. மரத்திற்கு மரம், பாலுக்குப் பால், கயிறுக்குக் கயிறு, பட்சிக்கு பட்சி, எழுத்துக்கு எழுத்து என சிலேட்டுப் பொருத்தம் பார்க்கிறான் (கைதட்டல்). இதற்கும் பணம் வேறு. ஒருவன் அந்தப் பெண்ணை அடைய ஆசைபட்டால் அந்த புரோகிதனுக்கு சாடை செய்து 1000, 500 ரூபாய் தருகிறேன் என்றால் பொருத்தம் இருந்தாலும் இல்லை என்றே சொல்லி விடுவான். அவன் இஷ்டம்போல் அநேகமாக நாளும் நேரமும்



வைத்துக்கொடுக்கின்றான். கல்யாண மந்திரமென்று, கருமாந்திர மந்திரமோ ஏதோ சொல்லி காசு வாங்கி போகிறான். சில 10 நாளைக்குள்ளும் அந்தப் பெண் தாலி அறுத்துப் போகிறது. மாமியார் படுத்தும் துன்பமோ சொல்லி முடியாது. புருஷன் படுத்தும் உபத்திரவமோ தரித்திரமோ கணக்கு இல்லை. இதனை அந்த புரோகிதனை அடுத்து இவ்வளவு பொருத்தம் பார்த்தும் ஏனையா இப்படி ஆச்சுது என்றால் "அதன் கர்மம் அப்படி இருக்கிறது. இதற்கு யார் என்ன செய்ய முடியும்" என்று சொல்லி விடுகிறான். அதற்கு ஏன் இவ்வளவு பொருத்தமும் சடங்கும் செய்து பணம் பெற்றாய் என்றால் அது உன்னுடைய முட்டாள்தனம் என்கின்றான். பிறகு பிள்ளை பெறா விட்டால் "எப்படியாவது பிள்ளை பெற்று தீர வேண்டும். காசிக்குப்போ இராமேஸ்வரத்திற்குப் போ, தருமம் செய், சாந்தி கழி, ஓமம் பண்ணு, இல்லையேல் புத் என்னும் நரகத்திற்குப் போய் சேருவாய்" என்கிறான். பிள்ளை இல்லா வீட்டில் சாப்பிட்டால் பெரிய பாவம் என்கிறான்.

உன் பெண்ஜாதியை உன் அண்ணன் தம்பிக்காவது விட்டு பிள்ளை பெற்றுத்தான் ஆக வேண்டுமென்கிறான். இதன் இரகசியம் என்ன? ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது பின் சந்ததி இருந்தால்தான் இப் பார்ப்பனர்கள் சடங்கு செய்து வாங்கி தின்பதற்கு வழி உண்டு. இல்லையேல் கொடுப்பாரில்லாமல் அந்தச் சந்ததி போய்விடுமே என்பதுதான். கடைசியாக சாகும் போதாவது நம்மை விட்டு விடுகின்றானா. சுங்கச் சாவடிகளில் எப்படி சுங்கம் வாங்கின பிறகு வண்டி போக அனுமதியளிக்கின்றானோ, அதைப் போல் இறந்து போகிறவன் இங்குள்ள பார்ப்பானுக்கு சுங்கம் கொடுத்துத்தான் ஆக வேண்டியிருக்கிறது. என்னவென்றால், இறந்தவன் மோட்சமடைய வேண்டுமானால் இங்குள்ள பார்ப்பானுக்கு ஒரு பசு வாங்கிக் கொடுக்க வேண்டுமாம். ஏனெனில் இந்த இறந்த ஜீவன் நெருப்பு ஆற்றை மயிர் பாலத்தின் மீது கடந்து மோக்ஷத்திற்குச் செல்ல வேண்டியிருக்கின்றதாம். இறந்த ஜீவன் பாரமான ஜீவன், நடக்கும் பொழுது மயிர்பாலம் அறுந்து விழுந்துவிட்டால் நெருப்பு ஆற்றில் விழுந்து பிசாசாக உலாவ வேண்டி வருமாம். ஆகையால் புரோகிதனுக்கு ஒரு மாடு கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறான். ஜீவன் போகும் போதே அறுந்து போகும். அந்த மயிரானது பெரிய மாடு நடந்தால் தாங்குமா? அதோடு நம் தந்தையும் அம்மாட்டு வால்பற்றி தொங்கினால் அந்த மயிர் இரண்டு பேரையும் தாங்குமா என்பதாக கொஞ்சமாவது சிந்திக்கிறோமில்லை. யாராவது சிந்தித்தாலே அதைப் பாவம் என்று சொல்லி விடுகிறான். மதத்தைப் பற்றியும் சடங்கைப்பற்றியும் நமக்கு கொஞ்சமும் புத்தி இல்லை. எவ்வளவு தூரம் நாம் ஏமாற்றப்படுகின்றோம் என்பதை நாம் கொஞ்சமாவது உணர்ந்தோமில்லை. செத்தபிறகும் அவன் சொல்லும் வண்ணம் காலை மடக்கவும், முழங்காலிடவும், மண்டிபோடவும், பணங்கொடுக்கவும், பூணூலை மாற்றி போடவும், அவன் சொல்லுகிற படியெல்லாம் குரங்குபோல் ஆடவும் வேண்டியிருக்கின்றதேயன்றி,



RangaRakes tamilnavarasam.com

இழவுக்கு வந்தவர்களிடத்தில் பேசவுங்கூட ஓய்வில்லை. இறந்து 3 – ம் நாள், 4 – ம் நாள், 5 – ம் நாள், 6 – ம் நாள், 16 –ம் நாள் கிரியைகள் என்று பணம் பறிப்பதும் மாதம் மாதம் கொடுப்பதோடல்லாமல் காத்துக் கொண்டேயிருந்து, வரும் மாதம் தேதி ஆனவுடன் ஒரு வாரம் முன்பே "உங்கள் அய்யாவுக்கு வருகிற வாரம் திதி. சாமான் சேகரம் செய்துவை" என்கிறான். நாம் அதற்காக எல்லா சமையல் சாமான்களும் சாப்பாடு அதிகமாய் விட்டால் அஜீரணத் திற்குச் சுக்கும் மிளகும் கூட வைத்து, மிதியடி, குடை, பாத்திரம் முதலியவை களுடன் கொடுப்பதோடு அல்லாமல், அவன் அழுக்குப்படிந்த காலில் நாம் மாத்திரமன்றி நம் அருமை பத்தினியையும் விழும்படி தூண்டி, பிறகு அந்தச் சாமான்களை ஆள்வசம் மூட்டைக் கட்டிக் கொடுத்து வீட்டில் சேர்க்கும்படி சொல்லி அனுப்புகிறோம். இந்தச் சாமான்களை விற்று சீட்டாடுவதுமாகிய இழி தொழிலுக்குப் பயன்படுகிறது. சில, வேசி வீட்டிற்குப் போய்ச் சேருகின்றது. செம்பு, பஞ்ச பாத்திரம், குடை, செருப்பு, வேஷ்டி இவைகள் தனக்கு வேண்டி யது போக மீதியை ஒன்றுக்குப் பகுதியாய் விற்கிறான். விற்ற பணத்தில் சூதாடு கிறார்கள். 7 ரூபாய்க்கு வாங்கின குடத்தை இரண்டரை ரூபாய்க்கு விற்பான். ஒரு பார்ப்பான் நிலம் வாங்கினால் ஒரு தானியம்தான் அவன் பயிரிட முடியும். ஆனால் நம் வீட்டுத் திதிக்கு வந்தால் எல்லாத் தானியமும் அவனுக்கு விளைந்தால் போன்று எடுத்துக் கொடுக்கிறோம். எனவே நம் வீட்டில் ஒருவர் செத்தால் பார்ப்பானுக்கு சகல சாமானும் விளைகிற ஒரு பூமி வாங்கினது போல் ஆகிவிடுகின்றது. குறிப்பிட்ட ஒரு இடத்தில் செய்தால் மறுபடியும் அவன் திதியே செய்ய வேண்டியதில்லையென்பான். அப்படி செய்து விட் டால் பிறகு உனக்குத்தான் சக்தி இருக்கிறதே, சக்தி இல்லாமல் போனால்தான் அந்த சட்டம் பொருந்தும் என்பான். தனக்கே பிண்டம் போட்டுக் கொள்ளவும் செய்வான். செத்தவுடன் மக்களையும் பிண்டம் போடும்படி உயிரை வாங்கி விடுவான். சடங்கு இப்படி.

இனி மத ஆச்சாரியார்களையும், மத குருக்க ளையும் சற்று கவனிபோம். இவர்களால் மக்களுக்குப் பயன் ஒரு சிறிதும் இல்லை. இந்து மதத்தின் பேரால் சங்கராச்சாரியார், சைவ மடாதிபதி, வைணவ மடாதிபதி முதலிய பலர் இருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் யானைகளிலும், ஒட்டகங்களிலும் தன் இனத்தாருடன் வருவதும் ஓரிடத்தில் தங்குவதும், அவ்வூரிலுள்ள தங்களினத்தாரைக் கொண்டே சாமியாருக்குப் பாத பூசை பிச்சையென்று விளம்பரம் செய்வதும், ஒரு ரூபாய் ஒரு பவுன் கொடுத்து அவன் காலைக் கழுவின நீரை வாங்கி அருந்துவதும், அந்த ஊரில் கறக்கிற வரையில் அங்கே இருந்த பிறகு வேறு வேறு ஊர்களில் தங்குவதும், நம்மிடம் வாங்கின பணத்தைக் கொண்டே சாமியார் சூத்திரனைப் பார்த்ததற்கு ஒரு பிராயசித்தமும் ஒரு முழுக்கும், நிழல் மேல் பட்டதற்கு ஒரு பிராயசித்தமும் ஒரு முழுக்கும், நீச்ச மொழியாகிய தமிழில் பேசினதற்காக ஒரு பிராய சித்தமும் ஒரு முழுக்கும் போட வேண்டியவனாகி விடுகிறான். இம்மாதிரி



ஆள்களில் சிலர் உலக குரு என்கிறார்கள். சிலர் குலகுரு என்கிறார்கள். குலகுரு என்பவர் ஓரிடத்திலிருந்து தனது ஆட்களில் ஒரு ஆளை அனுப்பி தான் வந்திருப்பதாக தெரிவிப்பார். சிஷ்யர்கள் மக்களோடும் மனைவி யோடும் ஓடோடியும் சென்று அவர் காலில் விழும்படி அவனது மக்களுக்கும் மனைவிக்கும் கட்டளையிட்டு தானும் காலில் விழுவான்.

**குலகுரு:** உனக்கு எத்தனை குழந்தை என்பான்.

**சிஷ்யன் :** மூன்று குழந்தைகள். இரண்டிற்கு விவாகம் ஆயிற்று.

**குலகுரு:** உன் இரு குமாரன் இருதலைக்கட்டு, நீ ஒரு தலைக்கட்டு ஆக மூன்று தலைக்கட்டு. மூன்றோன் மூன்று, மூகால் முக் கால், ஆக மூன்றே முக்காலுக்கு ஒன்றேகால் வைத்திருக் கின்றாய் என்ன?

**சிஷ்யன் :** சாமி அடியேனை மன்னிக்க வேண்டும். என் அறியா மைக்கு அபராதம் $1^1/_4$ காணிக்கையும் சேர்த்து வைத்திருக் கிறேன். ஏனென்றால் என் மக்கள் இருவரும் உத்தியோகம் செய்யவில்லையே.

**குரு :** உங்கள் தந்தை தானே தலைகட்டுக்கு $1^1/_4$ கட்டளை என்று எழுதி தந்திருக்கின்றார். இதோ பட்டயம் பார், என்று சொல்லி பணம் வாங்கிக் கொண்டு சாமிகள் வீடு சிறிது பழுது பார்க்க வேண்டி இருப்பதால் நீங்கள் வந்து அவை களை சீக்கிரம் முடித்துக் கொடுங்கள். சாமிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று சொல்லி வேறு ஊருக்கு கொள்ளையடிக்கப் போய் விடுவான். இவன் போன பிறகு யாராவது வந்து சிஷ்யனை உன்னுடைய மதம் என்ன அப்பா, நீ பெரிய நாமம் போட்டுக் கொண்டி ருக்கிறாயே என்றால் ஒன்றுமே பதில் சொல்லத் தெரியாமல் விழிப்பான்.

## புராணக்கொடுமை

இராமாயணத்தில் இராமருக்கும் சீதைக்கும் ஒருமுறை கலியாணம் செய்திருந்தால், நாம் ஒவ்வொரு வீட்டுத் திண்ணையிலும் வாரத்திற் கொருமுறை நடத்துகிறோம். வீட்டில் வைத்தால், எவ்வளவு பாவம் செய் திருந்தாலும் எல்லாம் பறந்து போய்விடுவதோடு நமக்கு மோட்சமும் கொடுக்கும் என்று கருதியே, சீதா கலியாணம் செய்ய சாஸ்திரி காலில் விழுந்து இரண்டு ஜதை வேட்டியும் தருகிறோம். இராமாயணம், இராம பட்டா பிஷேகம், உற்சவம் செய்வதில் கேட்க கேட்க இன்பமாகத்தானிருக்கிறது. ஆனால் கடைசியில் படித்தால் நம்மை அடிமைகள் என்று சொல்லுவதற்கு ஆதாரம் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. இராமர் அரசாளும் காலத்தில் ஒரு பிராமணக் குழந்தை செத்துப் போனதாகவும் அக்குழந்தையின் தந்தை



RangaRakes tamilnavarasam.com

இராமனை அணுகி “இராமா நீ ஆட்சி புரியும் இன்னாளில் என் குழந்தை எப்படி சாகலாம்” என்று கேட்டதாகவும், இதற்கு காரணம் கண்டுபிடிக்க இராமர் மாறு வேடம் பூண்டு நகர் சோதனை செய்ததாகவும், அப்போது ஓரிடத்தில் ஒரு சூத்திரன் சாமியைக் கும்பிட்டுக் கொண்டிருந்ததாகவும், அதைக் கண்ட இராமன், சூத்திரன் சாமியை வணங்கினதால்தான் அப் பார்ப்பனபிள்ளை மாண்டதாக கருதி அவனை பாணத்தால் எய்து வீழ்த்தி யதும் அப்பார்ப்பன பிள்ளை மீண்டும் உயிர் பெற்றதாகவும் எழுதப்பட்டி ருக்கின்றது. எனவே இராமாயணப்படி நாம் கடவுளைக் கூட வணங்க உரிமையில்லாதவர்களா யிருக்கிறோம். சுயராஜ்யக் கட்சி பார்ப்பனர்கூட உங்களுக்கு இராம ராஜ்யம் சம்பாதித்து தருகிறோம் என்று பேசியிருக் கிறார்கள். அப்படி இராம ராஜ்யம் வந்தால் நமது நிலைமை என்ன? சுவாமி கூட கும்பிடாமல் பார்ப்பானுக்கு அடிமையாயிருப்பதுதான் நமது கடமை யென்பது விளங்கவில்லையா? தவிர பெரியோர்கள் போன வழியே நாமும் பின்பற்றுவோம் என்கிறவர்கள் மற்ற காரணங்களுக்கு மாத்திரம் ஏன் பெரி யோர்கள் போன வழியே நடப்பதில்லை என்றால் பதிலில்லை.

ஒரு காலத்தில் ஆற்றங்கரை ஓரத்திலிருந்து மீன்,பாம்பு முதலியவை களைப் பிடித்து அதைச் சரியாக சுட்டும் சுடாமலும் தின்ற வெள்ளைக்காரர்கள் தற்பொழுது எந்த நிலையிலிருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது ஆணைப் பெண்ணாக்கவும், பெண்ணை ஆணாக்கவும் செய்கிறார்கள். எங்கேயோ இருந்த ஒரு பொத்தானை அழுத்தினால் எல்லா விளக்குகள் எரிகிறதும், மறுபடியும் அந்த பொத்தானை தட்டினால் விளக்குகள் நின்று விடுகின்றதும், மணிக்கு 500 மைல் ஆகாயக் கப்பல் பறக்கின்றதும் போன்ற பல தெய்வச் செயல்களையும் செய்து கொண்டு வருகிறார்கள். ஆங்கிலேயரும் பெரியோர் போன வழியே நாமும் போவோம் என்று போயிருந்தால் அவர்கள் இப்பொ ழுதுள்ள உன்னத நிலைமையிலிருக்க முடியுமா? பாவம் செய்பவன் புரோகித னுக்கு பணம் கொடுத்தால் அந்த பாவம் அவனைவிட்டு நீங்கிவிடும் என்று நினைப்போமானால் மக்களுக்கு மேலும் மேலும் பாவம் செய்ய வழியேற் படும். பாவத்தை விலைக்கு விற்கும் மூடவழக்கத்தை மூட்டைக் கட்டி வைத் ததால் அவர்கள் சீரும் சிறப்புற்று விளங்குகின்றார்கள். நாமும் அப்படியே விளங்க வேண்டுமானால் போலிச் சமயமும், மூட வழக்கமும், குருட்டு நம்பிக்கையும் ஒழிய வேண்டும்.

இப்போது நீங்கள் இதையெல்லாம் கேட்டீர்கள். நாளைக்கு ஏதோ சடங்கு செய்ய வேண்டியதாயிருந்தால் புரோகிதனை அழைத்துத் தான் செய்ய முற்படுவீர்கள். காரணம் கேட்டால் பெண்கள் மீது பழிசுமத்துவீர்கள். அதோடு உம்பெண்களையும் அவன் காலில் விழும்படி தூண்டுவீர்கள். இப்புரோகிதக் கொடுமைகளைப் பற்றி நம் பெண்கள் உணர்வார்களாயின் “அய்யோ நீதான் மதியின்றி காலில் விழுந்ததுமல்லாமல் என்னை விழச் சொன்னாயே” என்று நம்மை இழிவுபடுத்துவார்கள். இவற்றையெல்லாம் பெரியோர்களுக்கு என்ன சொல்லியும் பயனில்லை. அவர்களுக்கு சில நொண்டிச் சமாதானங்கள் இருந்து கொண்டேயிருக்கும். இனிமேல் அவர் களை நம்புவதில் பயனில்லை. நான் வாலிபர்களைக் கேட்டுக் கொள்வ தெல்லாம் இதுதான். நீங்கள்தான் எதிர்காலத்தில் நாட்டை அடிமையிலிருந்து விலக்கப் போகின்றீர்கள். உங்க காலத்தில்தான் சுயமரியாதை உதயமாக வேண்டும். நான் உண்மையாய் நினைக்கிறேன். நீங்கள் நினைத்தால் புரோகிதக் கொடுமை தலைகாட்டா தொழியும், நீங்கள் ஆண் பிள்ளைகளா னால் அடிமைத்தனத்தையும் மூட நம்பிக்கையையும் ஒழியுங்கள். புரோகிதக் கொடுமைகளுக்கு வழி கொடாதீர்கள். அதுதான் உங்களை அடிமையாக்கி இருக்கிறது. ஆகையால் இப்பொழுது நடக்கப் போகும் பார்ப்பனரல்லாத வாலிபர் மகாநாட்டிற்கு பெருவாரியாய் வந்து உங்கள் சுயமரியாதைக்கு போராட உடனே இடுப்பைக்கட்டி முன் வாருங்கள்.

*குறிப்பு: சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் கூடிய கூட்டத்தில் சமய சீர்திருத்தம் என்ற தலைப்பில் 21.10..1927 அன்று ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 23.10.1927**


RangaRakes
tamilnavarasam.com

# ஸ்ரீ ஜோசப் கற்ற பாடம்

ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப் மதுரையில் ஓர் பிரபல பாரிஸ்டர். நல்ல குடும்பத்தில் பிறந்து நல்லொழுக்கத்தில் சிறந்து அதிக வருமானமும் வக்கீல் தொழிலும் உடையவராய் மதுரைக்கு ஓர் மாமணியாய் விளங்கி வந்தவர். சேலம் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவின் மேல் மதுரையில் கேசு ஏற்பட்ட போது, பொது வாழ்வில் உணர்ச்சி மேலிட்டு தீவிரமாய் ஜார்ஜ் ஜோசப் இறங்கி இடைவிடாத ஊழியம் புரிந்து வந்திருக்கிறார். மதுரை மில்களிலுள்ள தொழி லாளர்களின் கஷ்ட நஷ்ட காலங்களிலும், வேலை நிறுத்த காலங்களிலும் அவர்களுடன் கலந்து அதில் ஈடுபட்டு தம்மாலான சகல உதவிகளையும் தியாகத்துடன் செய்து வந்திருக்கிறார். மதுரை ஜில்லா கள்ள ஜன சமூகத்தா ருக்கு ஏற்பட்ட கொடுமையான சட்டதிட்டங்களுக்கு அனாவசியமாய் அவர் கள் இரையாகாதிருக்கும்படி சாக்கிரதையாய் கவனித்து வந்தார். அவர்க ளுடைய சத்தியாக்கிரகத்தின் போதும், அவர்களுடைய சில கிராமங்களைப் போலீசார் கொளுத்தி பலரை சுட்டுக் கொன்று பலரைக் கைது செய்து பெண்டு பிள்ளைகளையும் இம்சித்து வந்த அந்தக் காலத்தில் ஸ்ரீமான் ஜோசப் தம் காலத்தை யெல்லாம் கள்ளர்களுக்காகவே செலவிட்டு உதவி புரிந்து வந்ததை இன்றும் அந்த கள்ள மகாஜனங்கள் மறந்துவிடவில்லை. ஜார்ஜ் ஜோசப் (ரோஜாப்பூ துரை) என்று சொன்னால் கள்ளர் நாட்டில் கடவுளுக்குரிய மரியா தையும் பயபத்தியும் காட்டப்படும். ஒத்துழையாமைக் காலத்தில் தமது தொழிலை விட்டு காந்தி வழி நின்று சிறந்த தொண்டாற்றினார். வங்கத்தில் தாசைப்போல் தமிழகத்தில் ஜோசப் தியாகத்தில் முன்னின்றார். மனைவி மக்களுடன் வைக்கம் சென்று சத்தியாக்கிரகம் செய்து தீண்டாமைக்காகச் சிறை சென்றார். இவர் இல்லாத காலத்து மிக்க கஷ்ட நஷ்டத்தில் இவரில்லக் கிழத்தியார் அந்த சத்தியாக்கிரகத்தில் முன்னின்று வேலை செய்து வந்தார். பின்னர் அலகாபாத் சென்று “இண்டிபெண்டண்டு” என்ற தேசீய ஆங்கில தினசரிக்கு ஆசிரியராய் அமர்ந்து அரிய ஊழியம் புரிந்து வந்தார். அதன் பயனாய் ராஜ துவேஷத்திற்காக இரண்டு வருஷம் வட இந்தியாவில் கடுங்காவல் தண்டனையை அனுபவித்தார். மகாத்மா காந்தியடிகள் சிறை யிலுள்ள போது சில காலம் ஸ்ரீமான் ஜோசப் வெளியிலிருக்க நேர்ந்தது. அப்போது காந்தியடிகளுக்கு பதிலாக அவர் ஸ்தானத்தில் அமர்ந்து காந்தியடிகள் பத்திரிகையாகிய “யங் இந்தியா”வை ஆசிரியராக இருந்து



நடத்தி வந்தார். காந்தி விடுதலை பெற்றதும் வட இந்தியாவிலிருந்து தமிழ்நாடு வந்து மதுரையம்பதியை அடைந்தார். அடிகளின் பர்டோலி தீர்மானமும், ஒத்துழையாமையைக் கொன்ற சுயராஜ்யக் கட்சியாரின் சட்டசபை நுழை வையும், பகிஷ்கார நிறுத்தத்தையும் காந்தி ஆதரிக்க முற்பட்டதின் பலனாய் அனேக உண்மைத் தொண்டர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்தைப் போலவே ஸ்ரீமான் ஜோசப்புக்கு மிகுந்த மன வருத்தமும், வெறுப்பும் உண்டாகி விட்டது. தியாகமும் செய்து, காரியமும் கெட்டு, நாட்டில் ஆதரவும் இல்லாத போது வறுமைவாய்ப்பட்டு சுயமரியாதையை இழப்பதற்குச் சம்மதியாமல் மறு படியும் மதுரையில் தம்முடைய வக்கீல் தொழிலை ஸ்ரீமான் ஜோசப் ஆரம்பித்தார். சிறிது காலத்திற்குள் ௱ ஆயிரத்திற்கு குறையாத வரும் படியையும் செல்வாக்கையும் பெற்று விட்டார். இவரிடம் தமிழ்நாட்டார் தங்களுக்குரிய மதிப்பையும் அன்பையும் காட்டுவதற்கறிகுறியாகவே இவர் தமிழ் மாகாண மகாநாடு சேலத்தில் கூடிய போது ஏகமனதாய் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இவ்வளவு செல்வாக்கும், பெரும் புகழும், கீர்த்தியும் வாய்ந்த திரு ஜோசப் திடீரென்று பிராமணர்களின் மாயவலைக்குள் சிக்கி சுயராஜ்யக் கட்சியை ஆதரிக்க முன் வந்தார். ஜஸ்டிஸ் கட்சியை மிகவும் பலமாய் தாக்கி பனகால் மந்திரி சபையையும் உடைப்பதற்காக அரும்பாடு பட்டார். சுயராஜ்யக் கட்சியாரைவிட இன்னும் ஒருபடி அதிகமாய் போய் ஸ்ரீமான் நாயுடு சொன்னது போலவே சட்டசபையில் மந்திரி உத்தியோகம் முதலானவைகளையும் கூட ஒப்புக் கொள்ள வேண்டுமென்றார். உண்மை யான ஒத்துழையாமைக்கும் மாறுபட்ட அபிப்பிராயங்கொண்டு பிராமணர் களுக்கும் சுயராஜ்யக் கக்ஷியாருக்கும் ஆபத்தில் உற்றத் துணையாக விளங்கினார். டாக்டர் சுப்பராயன் மந்திரி சபையை ஆதரித்து சுயராஜ்யக் கக்ஷியாரின் மறைவான வேண்டுகோளை நிறைவேற்றி வைக்க மதுரையில் அக்கிராசனம் வகித்து பேசியும் பல ஆதரவுக் கடிதங்கள் எழுதியும் வந்தார். மதுரையில் நடந்த பிராமணரல்லாதார் மகாநாட்டின் நடவடிக்கைகளில் கூட கலந்து கொள்ளாமல் பிராமணர்களுக்கு பயந்து கொண்டு சும்மா இருந்து விட்டார். கோவை மகாநாட்டில் பிராமணர், பிராமணரல்லாதாருக்கு ஒற்றுமை ஏற்படப் போவதை அறிந்து பிராமணர்களின் கட்டளை பெற்று அந்த மகாநாட்டை தாக்கி எழுதியபோது தானும் அதில் கலந்து கொள்ளாமல் தனித்து நின்று விட்டார். இம்மாதிரி மதுரையில் ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப் தனது உழைப்பு, தியாகம், தீவிரக் கொள்கை இவற்றை யெல்லாம் விட்டு பிராமணர்களுக்கு அடிமையாயிருந்து வந்ததால் பிராமண பத்திரிகைகளான ஹிந்துவும், மித்திரனும், சுயராஜ்யாவும் ஸ்ரீமான் ஜோசப் தும்மினாலும், இருமினாலும், மூச்சு விட்டாலும், பேசினாலும், எழுதினாலும், தந்தியில் அவைகளை வரவழைத்து பெரிய எழுத்தில் பிரபலமான இடத்தில் பிரசுரித்து அவசியமாயின் அதன் பேரில் தலையங்கங்களையும் எழுதி வந்தன. அசோசியேட் பிரசும், பிரீ பிரசும், ஜோசப் வீட்டு வாயிற்படியை காத்துக் கொண்டிருந்தன.



RangaRakes tamilnavarasam.com

இப்படி எல்லாம் இருந்த ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப் அவர்களுக்கு இப்போது பிராமணர்களும் சுயராஜ்யக் கட்சியாரும், பிராமணர்கள் ஆதிக்கம் நிறைந்த காங்கிரஸ் கட்சியாரும் பிராமணப் பத்திரிகைகளாகிய ஹிந்து, மித்திரன், சுயராஜ்யாவும் என்ன சன்மானம் செய்தன என்பதை யோசித்துப் பாருங்கள். கேவலம் ஒருசிறு முனிசிபாலிட்டியில் உள்ள ஒரு முனிசிபல் கவுன்சிலர் ஸ்தானத்தைக்கூட அவர் அடைய முடியாமல் செய்து கைவிட்டு விட்டனர். ஸ்ரீ ஜோசப்பின் உதவியைக் கொஞ்சமும் நினையாமல் அவர் செய்த பனை அளவு நன்றிக்கு பதிலாக பிராமணர்கள் தினையளவு நன்றி கூடக் காட்டத் தயாராயில்லாமல் ஒரே அடியாய் தங்கள் இனத்தாரையே ஆதரித்து விட்டார்கள்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற பொய்யா மொழி வாக்கை பொய்யாக்க வந்த பிராமணர்களுக்கு நான் மனமாற நன்றி செலுத்துகின்றேன். மதுரையில் இவ்வாறு பிராமணர்கள் செய்திராவிடில் சேலத்தில் ஸ்ரீ. பி. சுப்பராவ் மூன்று ஓட்டுகள் மட்டும் பெற்று நம்மை கௌரவித்திருப்பாரா? ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமான் கே.வி. ரங்கசாமி அய்யங்கார் எம்.எல்.ஏ யும், அவர் தம்பி ஸ்ரீமான் கே.வி. ஸ்ரீனிவாசய்யங்காரும், சென்னையில் காமத்தும், மற்றும் ஆங்காங்கு பார்ப்பன அபேக்ஷகர்களும் வரிசையாய் தோல்வி அடைந்து இருக்க முடியுமா? மதுரையில் ஸ்ரீஜோசப் முனிசிபல் கவுன்சிலின் ஒரு ஸ்தானத்திற்கு அபேக்ஷகராய் காங்கிரஸ் சுயராஜ்யப் பிராமண கட்சியாராலேயே நிறுத்தப்பட்டார். உள்ளே பகையும் உதட்டில் உறவும் வைத்துள்ள பிராமண காங்கிரஸ் ஓட்டர்கள் மறைவாய் ஸ்ரீ ராமனாதய்யரை எதேச்சைவாதியாய் நிற்கும்படி செய்து ஓட்டுக் கொடுத்து வெற்றியை உண்டாக்கி ஸ்ரீ. ஜோசப்பை தோல்வியுறும்படி செய்து அவமானப்படுத்திவிட்டார்கள். "குதிரை கொன்றதுமல்லாமல் குழியையும் தோண்டுவது" போல ஸ்ரீ ராமனாதய்யர் தாம் தான் ஓட்டர்களால் விரும்பப்பட்ட உண்மையான காங்கிரஸ்வாதி என்றும் ஸ்ரீ ஜோசப் மகா ஜனங்களால் வெறுக்கப்பட்ட படியால் தோல்வியுற்றார் என்றும் சொல்ல முன்வந்து விட்டார். அந்த டிவிஷனில் உள்ள பிராமண ஓட்டர்களும், ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப் 30 ௨ தங்களை பயமுறுத்தி ஓட்டை அடைய முயற்சித்ததால் 31 ௨ ஸ்ரீராமனா தய்யருக்கே தங்கள் ஓட்டுகளை எல்லாம் கொடுத்த தாகவும்கையெழுத்திட்டு மித்திரனில் பிரசுரித்திருக்கிறார்கள். ஸ்ரீ ஜோசப் தோல்வியிலிருந்து அவரு டைய பெரிய பிரசங்கங்களும் அறிக்கைகளும் பிராமண பத்திரிகைகளில் இடம்பெற முடியவில்லை. அவரை ஏமாற்றி ஜெயித்து விட்டதாகக் கூறி ஆகாயத்தில் பறக்கும் குப்பை கூளம் பதர்களின் பல கடிதங்கள், தந்தி மூலம் இடம் பெற்று பிராமணப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. காங்கிரசினிடமிருந்து ஸ்ரீமான்கள் பி.வரதராஜுலு நாயுடு, ஈ.வெ.ராமசாமி நாயக்கர், திரு.வி. கலியாணசுந்தர முதலியார் போன்றவர்களை நீக்கி விட்டு காங்கிரசை பரிசுத்தப்படுத்த எண்ணிப் பேசிய ஸ்ரீ.சீனிவாசய்யங்காரைப் பின்பற்றி மதுரைப் பிராமணர்களும் ஸ்ரீ.ஜோசப்பை காங்கிரசினின்றும் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்காமல் விலக்கி மதுரையையும், மதுரைக் காங்கிரஸ் கமிட்டியையும் பரிசுத்தப்படுத்தி புண்ணியாவாஹம் செய்து விட்டார்கள். இதை மறைப்பதற்காக ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் மகாத்மா காந்தியை ஜோசப் வீட்டில் இறக்கி அவரைக் கொண்டு ஸ்ரீ ஜோசப்புக்கு ஆறுதல் சொல்ல செய்திருக்கிறார். இவற்றையெல்லாம் பார்க்கும் போது இவ்வளவு காலம் தாழ்ந்தும் இவ்வளவு அனுபோகம் பிறந்தும் ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப்பிற்கு இன்னும் சரியான புத்தி வந்ததாகத் தெரியவில்லை. இன்னும் பிராமண மயக்கமும், சூழ்ச்சியும் தம்மை விழுங்கிவிட்டதிலிருந்து மீள முடியாமல் தவிக்கிறார். பார்ப்பனரை விட்டுப் பிரிந்தால் வாழ முடியாது என்று நினைக்கிறார். எப்படியெனில் இத் தோல்வியை ஆதாரமாகக் கொண்டு தாம் பிராமணர்களிடத்தில் போய் பிரசாரம் செய்து அவர்களை நல்வழியில் திருத்தப் போகிறாராம். எத்தனையோ காலமாய் எத்தனையோ பெரியார்களால் திருத்தமுடியாத பிராமணர்களை ஸ்ரீ ஜோசப் திருத்துவது நரியைப் பரியாக்குவது போல்தான் முடியும். எப்படியாவது போகட்டும் கெட்டவர்களுக்குப் பட்டது பிரீதி; எனினும் அவருக்கு ஒன்று சொல்லுவோம். அதாவது இப்பொழுதாவது பிராமணரல்லாதவர்களுடன் ஒன்று கூடி பிராமணர்களின் வகுப்பு வாதத்தைப் பற்றி எச்சரிக்கை செய்து சாக்கிரதையாய் இருக்கும்படி நாட்டிற்கு பிரசாரம் செய்தால் ஸ்ரீ.ஜோசப், தமக்கும் தம்முடைய வகுப்பிற்கும் நன்மை செய்தவராகக் கருதப்படுவார். இதை செய்யாமல் மறுபடியும் விரோதிகளுக்கே உடந்தையாயிருந்து உதைத்தக் காலுக்கு முத்தம் கொடுத்துக் கொண்டிருந்தால், அவர் மற்றொரு தோல்வி பெற்று நமக்கிடையில் வந்து சேரும் வரை பிராமணரல்லாத சமூகம் ஸ்ரீ ஜோசப்புக்காகக் காத்திருக்க முடியாதென்பதை அவருக்கு பணிவுடன் அறிவிக்கிறோம். பிராமணரல்லாத சகோதரர்களே! நீங்கள் மதுரையில் நடந்ததை ஸ்ரீ ஜோசப்புக்கென்று நினைத்து பாராமுகமாயிருக்க வேண்டாம். அது பிராமணரல்லாதார் ஒவ்வொருவருக்கும் பிராமணர்களால் வழக்கம் போல் ஏற்படுத்தப்பட்டு வருகிற அநீதி, அக்கிரமம், சூழ்ச்சி என்று உணர்ந்து ஒற்றுமைப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள எல்லா பிராமணரல்லாதாரும் ஸ்ரீ ஜோசப் கற்ற பாடத்தால் எச்சரிக்கையாயிருந்து பிராமணர்களிடமிருந்து தப்பி, சுயமரியாதையையும், சுயராஜ்ய ஸ்தாபனங்களையும் அடைந்து ஜெயக்கொடி நாட்டும்படியாய் வேண்டிக் கொள்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 23.10.1927**



RangaRakes tamilnavarasam.com

# சூத்திரன்

“தோலைக் கடித்து, துருத்தியைக் கடித்து, மெள்ள மெள்ள வேட்டை நாய் ஆகிவிட்டது” என்பதாக தமிழ் நாட்டுப் பழமொழி ஒன்று உண்டு. அதுபோல் தற்காலத்திய நமது அரசாங்க நிருவாகம் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை விஷயத்தில் வேண்டுமென்றே கொடுமை செய்து கொண்டு வரத் துணிந்து விட்டதென்றே நினைக்க வேண்டியிருக்கிறது. அதிலும் இது சமயம் தமிழ் மக்கள் பெரும்பாலும் அரசியல் முதலியவைகளைக் கூட லக்ஷியம் செய்யாமல் தங்கள் சுயமரியாதையைப் பெருக்குவதே முக்கிய நோக்கமாகக் கொண்டு உயிரைக் கொடுத்து வேலை செய்து கொண்டிருக்கும் சமயத்தில் அரசாங்கம் இவ்வளவு யோக்கியப் பொறுப்பற்ற தன்மையாய் நடக்க கூடியதாய் இருந்தால், சாதாரண காலங்களில் எப்படி நடக்க மாட்டாது என்பதைப் பொதுமக்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தத் தடவை கூட்டப்பட்ட சென்னை சட்டசபைக் கூட்டத்தில், ஸ்ரீமான் சல்டானா என்கிற ஒரு சட்டசபை அங்கத்தினர் ஸ்தல ஸ்தாபன இலாக்காவில் சென்ற ஆறு மாதங்களில் எத்தனை ஸ்தானங்கள் சர்க்காரால் நியமனம் செய்யப்பட்ட தென்றும், நியமனம் செய்யப்பட்டவர்கள் எந்த எந்த வகுப்பைச் சேர்ந்த வர்கள் என்றும் ஒரு கேள்வி கேட்டிருந்தார். அதற்குப் பதில் சொல்லும் முகத்தான் வகுப்புகளைப் பிரித்துக் காட்டியதில் சென்னை அரசாங்கம் ஒரு புது முறையைக் கையாண்டிருக்கிறது. அதாவது :

ஜாதி அல்லது வகுப்பு என்ற தலையங்கத்தில், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், இந்திய கிறிஸ்தவர், மகமதியர், ஆதிதிராவிடர், ஆதி ஆந்திரர் என்று பிரித்துவிட்டுப் பார்ப்பனரல்லாதார் என்பதாக ஒரு உபதலையங்கம் கொடுத்து, விஸ்வ கர்மா, விஸ்வபிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், ஒடுக்கப்பட்ட வகுப்பார், பிற்பட்ட வகுப்பார் என்பதாக பிரித்துக் காட்டி அதற்கு நேராக எண்ணிக்கைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவற்றுள் யார் யாரை எந்த எந்த வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் சூத்திரன் என்பதாக ஒரு வகுப்பு பிரித்துக் காண்பித்திருப்பதானது, சென்னை கவர்ன்மெண்டு, பார்ப்பன ஆதிக்கத்தில் மனுதர்ம சாஸ்திர முறைப்படி நடக்கின்றதென்றே கருத வேண்டி இருக்கிறது. இதை நாம் கண்டிக்காமலும் திருத்தாமலும் இருக்க முடியாது. சூத்திரன் என்றால் என்ன என்பதை அரசாங்கம் இன்னும் அறியவில்லை என்று



சொல்லுமானால், அதற்கு நமது நாட்டில் ஒரு மாத்திரை நேரமும் இங்கு வேலையில்லை என்றே சொல்லுவோம். அன்றியும் அந்தக் கணக்குகளைப் பிரித்துக் காண்பித்த இலாக்காவாகிய ஸ்தல ஸ்தாபன நிருவாகம் ஒரு தமிழ் மகன் கையிலிருக்கும் போதே, இந்நாட்டு தமிழ் மக்களைச் “சூத்திரன்” எனப் பெயர் கொடுத்து அதில் சேர்ந்திருப்பதானது கொஞ்சங்கூட பொறுத்துக் கொள்ளக்கூடிய செய்கை அல்ல வென்று சொல்லுவதோடு, அவ்விலாக்காத் தலைவருக்கும், சுயமரியாதையில் ஒரு சிறிதும் கவலையில்லாமல் மான மரியாதையை விற்றானாலும் சம்பளம் பெற்றால் போதும் என்கிற கொள்கை உடையார் என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

பார்ப்பனரல்லாதார் கட்சி ஆதிக்கத்தின் கீழ் இவ்வுத்தியோகங்கள் நடைபெற்று வந்த காலங்களில் இச்சூத்திரன் என்னும் பதம் இருக்குமிடம் தெரியாமல் மறைந்து கிடந்தது. பார்ப்பனரல்லாதார் யோக்கியதையைக் கெடுக்கக் காத்திருக்கும் பார்ப்பனர்களின் கைக் குழந்தைகளாகிய சில அடிமைப் பார்ப்பனரல்லாதார் கைக்கு இவ் வுத்தியோகங்கள் போனவுடன் ‘சூத்திரன்’ என்கிற பெயர் சட்டசபை மேஜையின் பேரில் தைரியமாய் தாண்டவமாட நேரிட்டதுடன் அப்பார்ப்பன அடிமைகளான பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர்களாலேயே அத்தாண்டவம் ஏற்பட்டதென்றே சொல்ல வேண்டியிருக்கின்றது. இதைப் பார்த்துக் கொண்டு சட்டசபையில் உட்கார்ந்து காற்று வாங்கிக் கொண்டிருந்த பார்ப்பனரல்லாத மற்ற சட்டசபை அங்கத்தினர்களுக்கும் அவர்களது சுயமரியாதை எங்கேபோய் ஒளிந்து கொண்டிருந்தது என்பது நமக்கு விளங்கவில்லை. எனவே தமிழ் மக்கள் மானமும் சுயமரியாதையும் எவ்வளவு அற்ப காரியத்திற்கு விற்கப்படுகின்றது என்பதும், அப்படி விற்ற பார்ப்பனரல்லாதார்களிலும் எப்படிப்பட்டவர்கள் எந்த நிலையிலிருப்பவர்கள் யாராயிருக்கின்றார்கள் என்பதும் இதிலிருந்தே அறிந்து கொள்ளலாம். இம்மாதிரி இழிவான பொருள் கொண்ட வார்த்தையால் ஒரு மகமதியரையோ ஒரு ஐரோப்பியரையோ அழைத்திருந்தால் இதுவரை அந்த சட்டசபையின் கதி என்னவாயிருக்கும் என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது. மகமதியரும் அய்ரோப்பியரும் மாத்திரம் ஏன் உலகத்தை ஆளுகிறார்கள் என்பதற்கும், தமிழ் மக்கள் ஏன் இவர்களுக்கெல்லாம் எங்கும் அடிமைகளாயிருக்கின்றார்கள் என்பதற்கும் காரணம் கண்டு பிடிக்க இதைவிட வேறு எங்காவது போக வேண்டுமா என்று கேட்கின்றோம். அதிலும் சூத்திரன் என்கிற பதம் மிக இழிவானதாக இருக்கின்றது என்றும் இது எங்கும் காணப்படாமல் இருக்க சத்தியாக்கிரகம் முதலியவைகள் கூட செய்ய வேண்டும் என்றும் ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கும் காலத்தில், இச்சத்தியாக்கிரகத்திற்கே ஒரு வெடிகுண்டு புறப்பட்டது போல் “சூத்திரன்” என்று சர்க்காராலேயே அழைக்கப் படுவதாக ஒரு அறிக்கை சட்டசபையிலிருந்தே வெளிவருவதானால் இச் சூழ்ச்சியின் தன்மையைப் பற்றி என்ன வென்று சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை.



RangaRakes tamilnavarasam.com

"சூத்திரன்" என்றால் என்ன பொருள் என்பதைப் பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆனாலும் பாமர மக்களுக்காவது இப் பெரியார்களின் யோக்கியதை விளங்கட்டும் என்கிற எண்ணத்தின் பேரில் சில குறிப்பிடு கின்றோம். வேதத்திலும் மனுதர்ம சாஸ்திரத்திலும் உள்ளது போலவே குறிக்கின்றோம்.

"அதாவது 'சூத்திரன்' என்றால் பக்தியினால் பார்ப்பனனுக்கு வேலை செய்கிறவன், யுத்தத்தில் தோற்று அடிமையானவன், பார்ப்பனனின் வைப்பாட்டி மகன், விலைக்கு வாங்கப்பட்டவன், பாரம்பரியமாய் பார்ப்பன னுக்குத் தொண்டு செய்து வருபவன்" மனு ( 8 - 415)

"இப்படிப் பட்டவனான சூத்திரனுக்கு யோக்கியதை என்ன வென்றால், சூத்திரன் பிராமணனுக்கு தொண்டு செய்தாலல்லது மோக்ஷமில்லை. சூத்திரன் பொருள் சம்பாதிக்கக் கூடாது. மீறி சம்பாதித்து வைத்திருந்தால் பிராமணன் அதை உதைத்துப் பிடுங்கிக் கொள்ளலாம்." மனு ( 10 - 129) (8- 417 )

"பிராமணனுடன் சரிசமமாய் சூத்திரன் உட்கார்ந்தால் அவன் குண்டியை அறுத்து ஊரைவிட்டு துரத்திவிட வேண்டியது" மனு (8 - 281 )

"சூத்திரன் காக்கப்படாத (அதாவது தன்னிச்சையாய் திரிகிற, தானா கவே சம்மதித்த) பிராமண, க்ஷத்திரிய, வைசிய ஜாதி ஸ்திரியைப் புணர்ந்தால் பீஜம் ஆண்குறி முதலியவைகளை அடியோடு அறுத்துவிட வேண்டும். காக்கப்பட்ட ஸ்திரியைப் புணர்ந்தால் தேக முழுவதும் சித்திரவதை செய்து வெட்டி விடுவதுடன் அவனுடைய எல்லாப் பொருள்களையும் பிடுங்கி கொள்ள வேண்டும்" மனு ( 8 - 374 )

"ஆனால் காக்கப்பட்ட சூத்திர கற்புடைய ஸ்திரியைப் பிராமணர் (வலுவில்) புணர்ந்தால் ஆயிரம் பணம் மாத்திரம் அபராதம் போடவேண்டும்"

மனு ( 8 - 333 )

என்பவை போன்றவைகள் 'இந்து' மத வேதத்திலும், மனு தர்ம சாஸ்திரத்திலும் பராசர் முதலிய ரிஷிகள் ஸ்மிருதியிலும், புராணங்களிலும் காணப்படும் 'அநீதிகள்' கணக்கு வழக்கு இல்லை. இப்படிப்பட்ட பொரு ளையே மத சம்பரதாயத்தில் 'சூத்திரன்' என்கிற பெயரைக் கொண்டு நம்மை அழைப்பதென்றால், அதை எப்படி சகிக்க முடியும்? அடுத்த சட்டசபை யிலாவது இப்பெயர்கள் அரசாங்க சம்பந்தமான எந்த காரியங்களிலும் உபயோகப்படுத்தக் கூடாதென்றும் இப்பெயர்களையும், இதற்கு ஆதாரமான வேத சாஸ்திர புராண முதலிய கதைகளையும் பள்ளிக் கூடங்களில் பிள்ளை களுக்குப் பாடப் புத்தகமாக வைக்கக்கூடாது என்றும் ஒரு மசோதா கொண்டு



RangaRakes

போய் நிறைவேற்றிச் சட்ட மாக்கி அமுலில் வரும்படி செய்ய வேண்டும். அந்தப்படி செய்ய நமது சட்டசபை அங்கத்தினர்களுக்கு யோக்கியதை இல்லையானால், அவர்கள் அங்கிருப்பதில் பயனென்ன என்று கேட்கிறோம்?

சட்டசபை ஸ்தானம் நமது சுயமரியாதையைக் காப்பாற்றுவதற்காகவா, அல்லது நமது சுயமரியாதையை விற்று தாலூகா, ஜில்லா போர்டு, முனிசிபா லிட்டி முதலியவைகளுக்கு அங்கத்தினராகவும் தலைவர்களாகவும் இருந்து வயிறு வளர்ப்பதற்காகவா என்று கேட்கின்றோம். சட்டசபையில் நமக்குக் கடுகளவாவது மரியாதை இருக்குமானால், அதுவும் நமது சுயமரியாதைக்குக் கொஞ்சமாவது உதவாதா என்கிற எண்ணத்தின் பேரில்தான் இருக்கலாமே ஒழிய மற்றபடி பதவிக்கும் சுகத்துக்கும் அல்ல என்றே சொல்லுவோம். எனவே மகாத்மா காந்தியையும் நாம் வெறுத்துத் தள்ளிய காரணமும் இதுவே அல்லாமல் வேறல்ல. அவர் வருணாசிரமத்திற்கு எவ்வளவு பெரிய தந்திர வியாக்கியானம் செய்தாலும் வருணம் என்பதையும், அது பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் எனப்பெயர் கொண்டது என்பதையும், அவர்களுக்குத் தனித்தனி தர்மம் உண்டு என்பதையும் அவரவர் களுக்குண்டான தர்மப்படி அவரவர்கள் நடக்க வேண்டுமென்பதையும், மாற்றி வேறு வியாக்யானம் செய்ய முடியவில்லை என்பதையும் நன்கு உணர்ந்தாய் விட்டது. இனி மகாத்மா இந்தக் கொள்கையுடன் கதரின் மூலமாகவோ வேறு எதன் மூலமாகவோ நம் நாட்டுக்குத் தெருவெல்லாம் பொன் காய்க்கின்ற மரம் உண்டாகும்படி செய்தாலும் கூட அது வெறும் வயிற்றுச் சோற்று பிரசாரமாகுமே தவிர ஒரு கடுகளவும் சுயமரியாதைப் பிரசா ரமாகாதென்பதே நமது முடிவு. இந்தக் கொடுமையைப் பற்றிச் சர்க்காருக்கும், மந்திரிக்கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் தெரியப் படுத்துவதுடன், நமது நாட்டில் உள்ள ஒவ்வொரு பட்டணங்களிலும் ஒவ்வொரு கிராமங் களிலும் இருக்கும் சுத்த இரத்த ஓட்டமுள்ள அதாவது ஒவ்வொரு உண்மை யான சூத்திரரல்லாதவர்களுக்கும் ஒரு கூட்டம் போட்டு சூத்திரத் தன்மை என்பது என்ன என்பதை நன்றாய் பொது ஜனங்களுக்கு விளக்கிக் காட்டி ஒரு கண்டனத் தீர்மானம் செய்து சர்க்காருக்கும் சட்டசபை மெம்பர்களுக் கும் உடனே அனுப்புவதுடன் இக்கொடுமையை ஒழிக்கச் செய்யும் சுயமரி யாதை சத்தியாக்கிரகத்திற்குத் தொண்டர்களையும் பதிவு செய்து அனுப்பிக் கொடுக்க வேணுமாய்க் கோருகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 23.10.1927**



tamilnavarasam.com

# புரசைவாக்கம் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம்

அன்புள்ள வாலிபர்களே!

அவைத் தலைவர் என்னைப்பற்றி பெருமைபடுத்தி பேசிய தெல்லாம் அவர்கள் என்மீது கொண்ட அன்பேயன்றி வேறல்ல. அவர்கள் சொல்லிய வற்றிற்கு நான் சிறிதும் பொருத்தமுடையவனன்று. ஆனால் எனது கொள்கை களையும் தொண்டுகளையும் ஆதரித்து பேசியிருக்கின்றதிலிருந்து என் கொள்கைக்கு சிறிதாவது நாட்டில் மதிப்பிருக்கிறதென்றும் மக்கள் ஆதரிக் கிறார்களென்றும் ஏற்படுவதோடு, இதனால் என் தொண்டுக்குப் பின் பல மிருக்கிற தென்றும் நான் உணர்கிறேன்.

## வாலிபர்கள்

எனது எண்ணமெல்லாம் எப்பொழுதும் வாலிபர்கள்ளாகிய உங்கள் மீதுதான் போய்க் கொண்டிருக்கிறது. ஏனெனில் மோட்ச லோகத்தில் ஒரு காலும் பூலோகத்தில் ஒரு காலும் வைத்துக் கொண்டு வீண் வேதாந்தம் பேசிக் கொண்டிருக்கிற பெரியோர்களைப் பற்றி எனக்கு அதிக கவலை இல்லை. ஆகையால் வாலிபர்களாகிய உங்கள் முன் பேச எனக்கு அளவில்லா ஆசை யுண்டாகின்றது. சமீபத்தில் இரண்டு வாலிப மகாநாடுகள் கூடப் போகின்றன. அவைகளில் ஒன்று அகில இந்திய வாலிபர் மகாநாடென்றும், மற்றொன்று பார்ப்பனரல்லாதார் வாலிபர் மாகாண மகாநாடு என்றும் சொல்லப்படும். அகில இந்திய வாலிபர் மகாநாட்டுக்குத்தான் நமது திரு.ஏ.இராமசாமி முதலியார் அவர்கள் சென்றிருக்கிறார்கள். சமீபத்திலே அதாவது இம்மாதம் 22, 23 -ம் தேதிகளில் பார்ப்பனரல்லாதார் வாலிபர் மகாநாடு இங்கு கூடும். அதற்காக தமிழ்நாட்டிலிருந்தும், ஆந்திர நாட்டிலிருந்தும், பார்ப்பனரல்லாத வாலிபர் பலர் வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டிற்குத் தொண்டு செய்வதற்கும் தலைமைப் பதவி பெறுவதற்கும், வாலிபர்கள் தான் சிறந்தவர் கள் என்பது எனதபிப்பிராயம். அதிலும் தலைவர் பதவிக்குப் பெரியோர்கள் என்பவர்கள் பயனில்லை. அவர்களை உலக வாழ்க்கையும் சுயநலமும் சுற்றிக்கொள்ளுகின்றது. பொதுவாழ்க்கைக்கும் தலைமைப் பதவிக்கும் சுயநலமென்பது கண்டிப்பாய் இல்லாதவர்களாகவே இருக்கவேண்டும். அநேக பெரியோர்கள் தாங்கள் முதலில் எந்த எண்ணம் கொண்டு பொது நல சேவையை ஆரம்பித்தார்களோ அதையே மறந்து விடுகிறார்கள். உலக வாழ்க்கையில் சம்மந்தம் ஏற்பட்ட பிறகு சுயநலமில்லாமல் பொது நலவேலை செய்வது என்பது அவர்களுக்கு இலேசான காரியமல்ல. எனவே பரிசுத்த மான வாலிபர்களால்தான் என் தொண்டு முற்றும் பயன்படுமென்று எண்ணி யிருக்கின்றேன். ஏனென்றால் அவர்கள் உலக வாழ்க்கையில் ஈடுபடும் முன் மனது பரிசுத்தமாயிருக்கும். பரிசுத்தமான மனதையுடைய இவ்வாலிப காலத்தில் ஒரு காரியத்தை ஆரம்பித்து நடத்தினால் நாம் மேற்கொண்ட காரியம் பலன்பெறும். வாலிபர்கள் காரியங்களை சீரும் சிறப்பும் உண்டாகு மாறு நடத்திக் காட்டுவார்களானால் பெரியோர் நம் தொண்டைப்பற்றி கொண்டாடி அவர்களும் ஒத்துழைக்க நம்மிடம் வருவார்கள். என்னைப் பொருத்த வரையில் நான் எண்ணும் ஒவ்வொரு எண்ணத்திற்கும் வாலிபர்கள் கிடைத்தால்தான் பலன் பெறலாமே அல்லாது பெரியவர்கள் கிடைத்தால் பயன் எதிர்பார்க்க முடியாதென்றே எண்ணி வருகின்றேன். வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையை மிகுதியும் பொது வாழ்விற்கு உபயோகப்படுமாறு சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## பார்ப்பனரல்லாதார் வாலிபர் மகாநாடு

சிலர் பார்ப்பனரல்லாதார் என்று ஒரு பிரிவு காட்டத்தக்க பெயர் ஏன் என்கிறார்கள். சிலர் இம்மாதிரி பிரித்துக்கொண்டே போனால் உலக நிலை என்னவாகும் என்கிறார்கள். மற்றும் சிலர் பார்ப்பனரல்லாதார் என்கிற பிரிவு உணர்ச்சி வாலிபருக்கு உண்டாகக் கூடாது என்கிறார்கள். இவர்கள் சொல்வ தெல்லாம் நமது நாட்டின் உண்மையான நிலைமையைக் கவனியாதவர் களுக்கு வேண்டுமானால் ஒரு சமயம் நியாயமாய்த் தோன்றலாம். நமது நாட்டின் நிலைமையைக் கவனிக்கின்ற காலத்தில் இந்தப் பிரிவு ஏற்படுத்தியது யார்? இது எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது? என்பதைக் கவனிக்க வேண்டும். யோசித்துப் பார்த்தால் 1000 கணக்கான வருடங்களுக்கு முன்பே ஏற்படுத்தப் பட்டதென்பது விளங்காமல் போகாது. நமது நாட்டை ஆயிரக்கணக்கான பிரிவுகளாக நாம் பிரிக்கவில்லை. 1000 கணக்கான வருடங்களுக்கு முன்பி ருந்தே ஒரு வகுப்பார் நம்மைப் பிரித்து வைத்து தங்களை உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு நம்மை கொடுமையாய் நடத்தி வருகின்றார்கள். ஒரு கூட்டத்தாரை மாத்திரம் அதாவது நம்மை பார்ப்பனர்கள் என்பவர்களை நீக்கி மற்றவர்களை பார்ப்பனரல்லாதார்கள் என்று பிரித்தது இன்றல்ல நேற்றல்ல. ஆதலால் அதற்கு நாம் பொறுப்பாளிகளல்ல. தவிர சிலர் பார்ப்பன ரல்லாதார் என்கிற பெயர் கூடாது என்கிறார்கள். அதாவது பார்ப்பனரல்லாதார் என்கிற பெயரைத் தவிர்த்து வேறு பெயரிடக்கூடாதா வென்கிறார்கள். கிரமமாக எல்லா மக்களும் ஒப்புக் கொள்ளும்படியாக நமக்கு வேறு ஒரு


RangaRakes tamilnavarasam.com

பெயர் என்ன கொடுக்க முடியும்? கிரமமாக யோசித்தால் ஆதாரப்படி பார்த்தால் சூத்திரன் என்கிற பெயரைத்தான் கொடுத்தாக வேண்டும். அதை நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா? ஏனெனில் மதக் கொள்கைப்படி இந்தப் பார்ப்பனர்கள் நம் நாட்டு மக்களுக்கு பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர், மிலேச்சர் என்ற பிரிவுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பிராமணர்கள் என்கிற பெயரை பொருத்தவரையில் ஒருவிதமான தகரா ரில்லை. ஏனென்றால் பார்ப்பனர்கள் தங்களை பிராமணரென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

## க்ஷத்திரியர்கள்

க்ஷத்திரியர்கள் என்பதில் அநேக தகரார் ஏற்படுகிறது. யார் யாரை க்ஷத்திரியனென்று கூப்பிடுவது? க்ஷத்திரியன் என்கிற பெயர் யாருக்கு உரிமை உண்டென்று சொல்லமுடியும். க்ஷத்திரியனென்றால் நாட்டை ஆளுபவன், போர்வீரன், காப்பாளன், கத்திவாளுடன் அமர்களத்தில் போர் புரிபவன் என்பதாக பொருள் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறைப்படி எல்லோரும் க்ஷத்திரியர்கள்தான். ஏதாவது ஒரு காலத்திலாவது நாட்டை ஆளாதார் யாரிருக்கிறார்கள்? பட்டாளத்தில் போர் வீரனல்லாதார் யார் இருக்கிறார்கள்? ஒருகாலத்தில் வேளாளர், நாயுடு, வன்னியர், ராஜுக்கள், நாடார்கள், செட்டியார்கள், குயவர்கள், மறவர்கள், தொட்டியர்கள், பார்ப்பனர் கள், ஒட்டர்கள், முகம்மதியர்கள் முதலியவர்கள் அரசாண்டிருக்கிறார்கள். இப்பொழுதும் நம் நாட்டை ஆங்கிலேயர்கள்தான் ஆள்கின்றார்கள். அந்த முறைப்படி யாரை க்ஷத்திரியர் என்று கூப்பிடுவது?

ஒரு காலத்தில் அரசாண்டவர்களை க்ஷத்திரியர் என்பதா? அல்லது இப்போது அரசாளுகின்றவர்களை க்ஷத்திரியரென்பதா? ஆளுகிறவனை மாத்திரம் க்ஷத்திரியன் என்பதா, அல்லது அவன் குடும்பத்தை மாத்திரம் க்ஷத்திரியரென்பதா? அல்லது ஆளுகின்ற ஜாதியையே க்ஷத்திரியரென்பதா? இப்படிப் பார்ப்போமானால் ஒன்றா உலகத்தில் உள்ள மக்கள் பூராவையும் க்ஷத்திரியர்கள் என்று சொல்ல வேண்டும். அல்லது ஜார்ஜ் சக்கிரவர்த்தியை மாத்திரம் க்ஷத்திரியன் என்று சொல்ல வேண்டும். ஏனெனில் நாம் காணும் ஒவ்வொரு ஜாதியார் என்போர்களும் ஒரு காலத்தில் அரசாண்டுதானிருக் கிறார்கள். ஒவ்வொரு வகுப்பாரும் யுத்தத்தில் சேவை செய்துதானிருக் கிறார்கள்.

## வைசியர்

அடுத்தாப்போல் வைசியர் என்றாலோ, வியாபாரம் செய்வோர் வைசியர். ஆகையால் வியாபாரம் செய்வோர் அனைவரும் வைசியர். இக் காலத் தில் எல்லா வகுப்பாரும் வியாபாரம் செய்வதால் யாரை வைசியரென்று



RangaRakes

சொல்லுவது? இன்னும் விவசாயம் செய்பவர் வைசியர், மாடு மேய்ப்பவர் வைசியர் என்று சொல்லப்படுகிறது. இத்தொழில் எல்லாருமே செய்திருக் கின்றார்கள் செய்கிறார்கள். எனவே யாரை வைசியரென்பது?

## பார்ப்பனர் ஒப்புவார்களா?

தவிரவும், க்ஷத்திரியர், வைசியர் என்கிற பிரிவினையைப் பார்ப்பனர் கள் ஒப்புக் கொண்டால் அவர்கள் ஏகபோகமாக அனுபவித்து வருகின்ற உரிமைகளை மூன்று பிரிவாகப் பிரித்து அதில் அவர்கள் ஒன்று எடுத்துக் கொண்டு பாக்கியை க்ஷத்திரியருக்கு ஒன்றும் – வைசியருக்கு ஒன்றுமாக பிரிக்க நேரிட்டு விடும். ஆதலால் இதற்குப் பயந்து கொண்டே வெகு தந்திர மாய் கலியுகத்தில் உலகத்தில் பிராமணர்கள் சூத்திரர்கள் என்கிற இருபிரிவு தவிர வேறில்லை என்று சொல்லி விட்டார்கள்.

எனவே மதக் கொள்கைப்படி யார் சூத்திரன் என்று பார்த்தால், பிராம ணன் வைப்பாட்டி மகன், பரம்பரையாக மேல் சாதியாருக்குத் தொண்டு செய்வதைவிட வேறு தொழில் இல்லாதவன் முதலிய யோக்கியதை உடைய வன், இந்தப் பெயரை ஏற்றுக்கொள்ள நம் மனம் பொறுக்குமா? தவிர மற்றொரு வகுப்பார்களென்ற பஞ்சமர்களை தீண்டப்படாதவர்கள், சண்டாளர் களென்று பிரித்திருப்பதோடு, வேறு மதத்தினர் என்கின்றவர்களான கிறிஸ்தவர்களையும், முகம்மதியர்களையுமாகச் சேர்த்து மிலேச்சர்களென்று பிரித்திருக்கிறார்கள். இவைகளை எல்லாம் நான் ஏன் சொல்ல நேரிட்ட தென்றால் பார்ப்பனரல்லாதார் என்ற பெயர் தவிர வேறு பெயர் வைக்க முடியாமலிருப்பதற்கு நேரிட்ட காரணத்தை விளக்குவதற்காகத்தான் என்றும் இவ்வித இழிவான பெயர்களையும், கொடுமைகளையும் ஒழிக்கத்தான் அப்பெயர் கொடுக்கப்பட்டது என்றும் காட்டத்தான். தவிர சிலர் ஏன் இவ் வியக்கத்தில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்கிறார்கள். பார்ப்பனர்களை எப்போதும் நம்முடன் சேர்க்கக் கூடாதென்ற கொள்கை இதிலில்லை. அவர்கள் இவ்வித வித்தியாசங்களையும் சூழ்ச்சிகளையும் ஒழித்து சமத்துவத்தை ஒப்புக் கொண்டு நல்ல எண்ணத்துடன் செய்கையில் நடந்துவரும் வரையில் அவர்களை விலக்கி வைக்க வேண்டியது அவசிய மாயிருக்கின்றது. அன்றியும் பார்ப்பனருக்கு என்று மாத்திரம்தான் எங்குப் பார்த்தாலும் ஒரு தனியிட மேற்படுத்திக் கொண்டு அதில் அவர்கள் ஆதிக் கத்தை உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். மற்றவர்களுக்கு அவ்வித வித்தியாசம் வேண்டும் என்கிற ஆசை இல்லை. அதோடு பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் மற்றவர்கள் இழிந்தவர்கள் என்பதை நமது மக்களின் ரத்தத்தி லேயே பாய்ச்சிவிட்டார்கள். எனவே ஒரு சிறு கூட்டத்தாரின் கொடுமையால் பெரிய சமூகம் சுயமரியாதையிழந்து பல கஷ்ட, நஷ்டங்களுக்காளா கியிருப்பதற்குப் பார்ப்பனரல்லாதாராகிய நாம் காரணஸ்தர்கள் அல்ல. தவிர சிலர் நம்மைப் பார்த்து பார்ப்பனரிடம் துவேஷம் வேண்டாம், பார்ப்பனரும்



tamilnavarasam.com

பார்ப்பனரல்லாதாரும் கூடி ஒன்று சேர்ந்து இக்கொடுமையை நிவர்த்திக்க வழி பாருங்கள் என்று நல்ல பிள்ளைகள் போல பேசுகிறார்கள்.

நாம் அவர்களைத் தொடுவதற்கும், ஒன்றாய் இருப்பதற்கும், உண்பதற்கும், ஒன்று சேர்ந்து கடவுளை வணங்குவதற்கும், தெருவில் நடப்ப தற்கும் கூட உரிமை கொடாத அவர்களா அல்லது நடப்பதற்கு வழி விடுங்கள் என்று கெஞ்சிக்கேட்கின்ற நாமா துவேஷத்தை உண்டாக்குகிறவர்கள் என்பது சற்று யோசிப்பவர்களுக்குத் தோன்றாமல் போகாது. அன்றியும் ஒற்றுமை யாயிருந்து துவேஷத்தை ஒழித்துக் கொள்ளக்கூடாதா என்று சிலர் சொல்லு கின்றார்கள்? துவேஷம் ஒழிய வேண்டுமானால் துவேஷத்திற்கு காரணமா யிருப்பவர்களிடம் ஒற்றுமையாயிருக்க முடியவே முடியாது. இன்றைய தினம் நான் மாத்திரமல்ல இக்குற்றங்களை எடுத்துக் கண்டிப்பது, ஏறக்குறைய 5000, 6000 வருடங்களுக்கு முன்புள்ள தேச சரித்திரத்தைப் பார்த்தால் நமது முன்னோர் காலத்திலிருந்தே மனிதத் தன்மைக்கு விரோதமானதும், இயற்கைக்கும் சத்தியத்திற்கும் விரோதமானதுமான கொடுமைகளை ஒழித்து சமத்துவத்தையும் அன்பையும் உலகின்கண் நிலைநிறுத்த நம்மவர்கள் பாடுபட்டிருப்பது விளங்காமலிராது. 5000 வருடமாக பாடுபட்டும், அதுவும் அன்புடனும் ஒற்றுமையுடனும் பாடுபட்டும் இன்னும் அப்பேய் தாண்டவ மாடுமானால் இனியும் எப்படி அன்பாயும், ஒற்றுமையாயுமிருந்து இப் பொல்லாப் பிரிவினைகளை நீக்க முடியும் என்பதை யோசியுங்கள். இவை களை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால் நம் வாலிபர்களிலும் சிலர் “எதற்கு இந்த வித்தியாசம்? பாபம் பார்ப்பனர்கள் நம்மிடம் வருகிறார்கள். பிச்சை யெடுக்கிறார்கள், பிறகு போய் விடுகிறார்கள். அவர்கள் மீது நமக்கேன் வெறுப்பு” என்று தர்மசாஸ்திரம் பேசி நம் இயக்கத்திற்கே முட்டுக் கட்டை யாய் நின்று விடுகிறார்கள். அவர்களுக்கு நான் மேலே சொல்லி இருக்கும் சமாதானத்தையே சொல்லிக் கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள். நம் சொந்த விடங்களில் எங்கேயாவது இது பார்ப்பனருக்கு இது பார்ப்பனரல் லாதார் என்கிற சூத்திரருக்கு என்று நாம் எழுதி வைத்திருக்கிறோமா? எந்த பொது ஸ்தலத்திலும் எந்த உயர்ந்தவிடத்திலும் எந்த புண்ணிய பூமியிலும் இது பார்ப்பனருக்கு இது சூத்திரருக்கு என்று எழுதி வைத்துக் கொண்டிருப்ப தோடல்லாமல் அதை அமுலில் வைத்துக் கொண்டிருப்பது பார்ப்பனர்களா அல்லது நாமா? அன்றியும் இப்போதும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு காப்பி ஓட்டல்களிலும் வெட்டி வைத்த குளக்கரையிலும் இது பார்ப்பனர்களுக்கு இது சூத்திரருக்கு என்று எழுதி வைத்திருக்கிறார்கள். இப்படி எழுதியது தப்பு, இவ்வித வித்தியாசம் இருக்கக் கூடாதென்றால் அது ஒற்றுமைப் பிளவாகுமா? அல்லது ஒற்றுமைக்கான முயற்சி ஆகுமா? ஒற்றுமையை எப்படி உண்டாக்குவது? “நீங்களெல்லாம் ஒற்றுமையாயி ருங்கள், இருக்கிற வித்தியாசங்கள் அப்படியே இருக்கட்டும், அது கடவுளால் உண்டாக்கப்பட்டது” என்றால் எப்படி ஒற்றுமை நிலவும்? இதனால் கடவுளே



பிரித்து வைத்திருக்கின்றார் என்றல்லவா ஏற்படும். உண்மையாய் ஒருவருக் கொருவர் ஒற்றுமையாயிருக்க வேண்டுமானால் ஒவ்வொருவர் எண்ணமும் ஒரே மாதிரியாகவும் ஒவ்வொருவரும் மற்றவரால் சமத்துவமாக மதிக்கப் பட்டும், ஒவ்வொருவருக்கும், அன்னியோன்யமும், அன்பும், நம்பிக்கையும் ஏற்பட்டாலன்றி உண்மையான ஒற்றுமையாய் எப்படி வாழ முடியும்? ஒரு புலியினிடத்தில் ஒரு ஆட்டுக் குட்டியை விட்டு நீங்களிருவரும் ஒற்றுமை யாயிருங்கள் என்றால் அவைகள் எப்படி ஒற்றுமையாயிருக்க முடியும்? புலி ஆட்டைக் கொன்று தின்னாமலிருக்க முடியுமா? எலிகளிலிருக்குமிடத்து பூனையைக் கொண்டுவந்து விட்டு எலிகளைக் கூப்பிட்டு நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாயிருங்களென்றால் அவைகள் எப்படி ஒற்றுமையாய் சேர்ந்து வாழ முடியும்? கொஞ்ச காலத்திற்குள் எலிகளே காணப்படா தொழியுமா அல்லவா? இரண்டுக்கும் நம்பிக்கையுண்டாக்கி ஒன்றைக் கொன்று ஒன்று வயிறு வளர்க்க வேண்டியிருக்கிற நிலையை மாற்றாமல், அவைகளை எப்படி ஒற்றுமையாயிருக்கச் செய்ய முடியும்? ஆனால் சிலர் வெகு சுலபமாக நீங்க ளெல்லாம் ஒற்றுமையாயிருங்கள் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிடுவார்கள். அவர்கள் பொறுப்பை, உணராதவர்களே என்றே சொல்லுவேன். பூச்சி, புழுக்கள், பன்றி, நாய்களைவிட கேவலமாய் நடத்தப் படுவது நாமா? அவர்களா? இப்படி செல்லுகிறவர்கள் நிமிர்ந்து போட்ட தென்ன? குனிந்து எடுத்ததென்ன? வெறும் வாய்வேதாந்தம் பேசுகிறவர்கள் தானே? சுயமரியாதை உணர்ச்சி இல்லாதவர்களுக்கு இதன் கஷ்டம் தோன்றாது.( சிரிப்பு) நித்திய வாழ்வில் நாம் படும் துயர் யாரே அறிவர்? தவிர வேறு சிலர் “வேளாளருக்குள்ளும் மற்றும், பல வகுப்பார்க்குள்ளும் இம்மாதிரி ஒருவரை ஒருவர் தொடக்கூடாதென்றும், உண்ணக்கூடாதென்றும், கலியாணம் செய்யக்கூடாதென்றும் சொல்லுகிறார்கள். அதை முதலில் ஒழியுங்கள். கீழிருந்து ஒழித்துக் கொண்டு வந்த பிறகு மேலுள்ளவைகளை ஒழிக்க முயலுங்கள்” என்று சொல்லக்கூடும். கீழே காணப்படும் பிரிவினை கள் உண்மையானதல்ல, இது பார்ப்பானைப் பார்த்து அவன் போல் நடக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு அறியாமையால் நடித்து வருகிற வினை யின்றி சூழ்ச்சிக்காக வேண்டுமென்றே ஏற்படுத்திக் கொண்டதல்ல. (கை தட்டல்) பார்ப்பனருக்கு முன் நம் நாட்டில் இந்தக் கொடுமைகளும் கூடா ஒழுக்கங்களுமிருந்ததாக சொல்ல முடியாது. நான் சிறந்த ஆராய்ச்சிக்காரனு மில்லை. குறைந்த ஆராய்ச்சிக்காரனுமல்ல, அடியோடு ஆராய்ச்சி இல்லா தவன். ஆனாலும் பல ஆராய்ச்சிக்காரர்களை அடுத்து கேட்டதின் பயன் அறிந்தவனேயன்றி வேறல்ல. முதலாவது இந்த சாதி என்னும் சொல்லே தமிழ்ச் சொல்லல்ல. சாதிக்கு ஆதாரம் இந்து மதம் என்று சொல்லுவது அந்த இந்துமதம் என்ற சொல்லும் தமிழ்ச் சொல்லல்ல. அதற்கு ஆதாரமாக உள்ள வேதமும் மனுதர்மமும் நமக்கு சம்மந்தப்பட்டவையுமல்ல. அவைகள் நம் பாஷையில் உள்ளவையுமல்ல. நம் மக்களால் எழுதியவையுமல்ல. இந்து



RangaRakes tamilnavarasam.com

என்ற சொல் எந்த மொழியிலுமில்லை, எப்படியோ அது நம் தலைக்கு வினையாக வந்து சேர்ந்திருக்கின்றது. ஆராய்ச்சிக்காரர்கள் அதை ஒரு நதியின் பெயர் என்கிறார்கள். சிலர் ஒரு இடத்தில் வாழும் குறிப்பிட்ட மனிதர்களைக் குறிப்பது என்கிறார்கள். சிலர் பார்சிய பாஷையில் திருடர்களைக் குறிப்பது என்கிறார்கள். மருவி வந்ததென்பார்கள் சிலர். மற்றபடி வருணாசிரம தர்மமென்னும் சொல்கூட தமிழ்ச்சொல் அல்ல. நம்நாட்டில் அந்நியமம் இருந்திருந்தால் நம் மொழியில் அதற்கு வார்த்தை இருந்திருக்கும். சோளம் நம் நாட்டில் விளைகிறது. அதை சோளம் என்று சொல்லுகிறோம். ஆங்கிலேயரும் அதை சோளமென்றே சொல்லுவார்கள். ஏன்? அவர்கள் நாட்டில் அது இருந்ததில்லை. அது போலவே காப்பியை நம் தமிழ் மக்கள் ஆங்கிலேயர் வருவதற்கு முன்பு ஒரு பானமாக உபயோகிக்கவில்லை. அதனால் நம் தமிழ் மொழியில் அதற்கு ஒரு பெயரிடுவதற்கு இல்லாமல் போயிற்று. ஆதலால் நாமும் அதை அன்னிய நாட்டுப் பெயரால் காப்பி என்றே அழைக்கின்றோம். வர்ணாசிரமதர்ம சாதி பாகுபாடு நம் தமிழ்நாட்டில் ஆரியர்கள் வருவதற்கு முன்பேயிருந்திருந்தால் நம் மொழியில் அவைகளுக்குத் தனிப் பெயரிருந்து தானிருக்கும். அன்றியும் இப்பெயர்களையும் இவ்வித்தியாசங்களையும் நாம் ஆதியில் இருந்தே கண்டித்து வந்திருக்கின்றோம் என்பதற்கு அறிகுறிதான் ஆரியர்களை நாம் மிலேச்சர்கள் என்று சொல்லுவது. எனவே இவைகள் ஒழிய வேண்டுமானால் இவ்வாரியத்தன்மை ஒழிய வேண்டும்; ஆரியமதம் ஒழிய வேண்டும்; ஆரியக் கொள்கை ஒழிய வேண்டும்.

அப்படிக்கின்றி அவைகளை ஒழிக்காமல் அவைகளுக்கு மகாத்மாவைப் போல் சவுகரியத்திற்கும் சமயத்திற்கும் தகுந்த படி வியாக்கியானங்கள் செய்து கொண்டிருப்பதினால் ஒரு அணுவளவு பயனும் உண்டாகாது. அடிக்கடி சருக்கி விட்டு ஆரிய மாய்கையில் விழவேண்டியதாய்தான் விடும். அதனால்தான் இவ்வளவு ஆயிர வருஷம் பாடுபட்டும் இன்னமும் அதே அடிமைநிலையில் நமதுநாடு இருந்து வருகின்றது. தவிர சிலர் சொல்லுவது போல் கீழே இருந்து இவ்வித்தியாசங்களைப் போக்கிக் கொண்டு போக வேண்டு மென்பது ஒரு காலத்திலும் முடியும்படியான காரியமல்ல. அதற்கு ஆதாரமானதாகிய வேரிலிருந்து பறித்து வெட்டியிருந்தால்தான் மறுபடி முளைக்காமலிருக்கும். அப்படிக்கில்லாமல் அதிலிருந்து முளைத்த கிளைகளை, மாத்திரம் வெட்டினால் மறுபடியும் அது நன்றாய் துளிர்த்து தழைத்து கொண்டுதானிருக்கும். எனவே உற்பத்தி ஸ்தானமான பார்ப்பனர்களிடமிருந்து அதை ஒழிக்க வேண்டும். அவர்களால்தான் இவ்வித்தியாசங்கள் பரவுகின்றன. உதாரணமாக, எங்கள் வீட்டிற்குமுன் ஒரு குழாய் இருக்கிறது. அதில் தண்ணீர் பிடிக்க ஒரு பார்ப்பன சகோதரி வரும் போது ஒரு சுண்டக்காய் பிரமாணம் புளியும் பஞ்ச பாத்திரத்தில் தண்ணீரும் கொண்டு வந்து குழாயை புளியால் விளக்கி கழுவி பின்பு தண்ணீர் பிடித்துக் கொண்டு போக ஆரம்பிக்கிறாள். இதைப் பார்த்த நம் சகோதரிகள் நெல்லிக்காய் அளவு புளியும் ஒரு தோண்டி தண்ணீரும் கொண்டு வந்து புளியால் விளக்கி கழுவித் தண்ணீர் எடுத்துக் கொண்டு போக பழகுகிறார்கள். இதைக் கண்ணுற்ற நம் முகம்மதிய சகோதரிகளும் கொளுமிச்சங்காய் அளவு புளியும் முக்கால் குடம் தண்ணீரும் கொண்டு வந்து புளியால் குழாயை விளக்கி கழுவி தண்ணீர்ப் பிடித்து எடுத்துக் கொண்டு போகப் பழகுகிறார்கள். அந்த முகம்மதிய சகோதரியை அடுத்து "உங்கள் மதத்திற்கு வித்தியாசம் இல்லையே, நீங்கள் கூட ஏன் இப்படி கழுவி தண்ணீர் பிடிக்கிறீர்கள்" என்றால் "எனக்கு என்ன தெரியும் இப்படித்தான் தண்ணீர் பிடிப்பது வழக்கமோ என்னமோ என்று கருதி நான் செய்து வருகிறேன்" என்கிறாள். இவ்வளவுக்கும் காரணமாயிருந்தவர்கள் யார் என்று பாருங்கள். பார்ப்பனர்கள் இப்படிச் செய்யாதிருந்தால் இவ்வித வழக்கங்கள் பரவ வழியில்லை.

அவர்கள் போட்ட முடிச்சு அவர்களால்தான் அவிழ்க்க வேண்டும். என்று விவேகானந்த சுவாமி சொல்லியிருக்கின்றார். நம் மக்களில் சிலர் "அல்லாதார்" என்ற பெயர் ஏன் என்பார்கள். அதற்கும் சமாதானம் சொல்ல வேண்டி இருக்கிறது. ஆன்டி காலரா மருந்தென்றால் அம்மருந்து எப்படி காலரா வந்த உடன் நினைவுக்கு வருமோ, "ஆன்டி பிளேக்" மருந்தென்றால் பிளேக்கு வந்தவுடன் நினைவுக்கு வருமோ, மூட்டை பூச்சிக்கு "எமன்" என்றால் எப்படி மூட்டைப் பூச்சி கடித்தவுடன் அம்மருந்து நினைவிருக்குமோ அதுபோல் சமத்துவமில்லாமல் கொடுமையில் பட்டு இழிவை அனுபவித்து வரும் மக்களுக்கு அது ஒழிய வேண்டுமானால் அதற்கு ஆதாரமானவர்கள் பெயரும் அவர்களைக் கண்ட அளவில் நினைவிருக்க வேண்டும். கொடுமை செய்த விதமும் ஞாபகத்திற்கு உடனே வரவேண்டுமெனக் கருதியே பார்ப்பனரல்லாதார் இயக்கம் எனப் பெயர் கொடுக்கப்பட்டதேயன்றி வேறல்ல. இவ்வித இழிவும் கொடுமையும் ஒழிந்து எல்லா மக்களும் சமத்துவம் அடைந்து நாம் ஒற்றுமையானால் இவ் "அல்லாதார்" என்ற பெயர் தானாக இல்லாமலே போகும். அரசியலிலும் கூட அல்லாதாரென்கிற பெயரை நீக்கி நாம் வாழ முடியவில்லை. அது அவமானமில்லை என்றுதான் கருதி இருக்கிறோம். அரசியல் சீர்திருத்த மென்பதில் தேர்தல்களுக்குக் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் தொகுதியில் நிற்கிறார்கள். ஆனால் நாம் மாத்திரம் முகமதியர் அல்லாதாரென்ற தொகுதிக்கு மாத்திரம், முகமதியர் அல்லாதார் என்ற தொகுதிக்கு நின்றுதான் இப்பொழுதும் சட்டசபை அங்கத்தினராகவும் நாம் முகமதியர் அல்லாதார் தொகுதியில் ஓட்டர்களாகவும் இருந்து வருகிறோம். அரசாங்கத்தாருக்கும் இதைத் தவிர வேறு பெயர் கிடைக்கவில்லை. நமக்கும் சொல்லத் தெரியவில்லை.

இந்து மத பரிபாலன சட்டம் கொண்டு வந்த காலத்தில் இந்த பார்ப்பனர்கள் இந்து மதம் போயிற்றென்று சொன்னார்களே ஒழிய தங்களுக்கும் மகமதியரல்லாதார் என்கிற பெயர் வேண்டாம் என்று சொல்லவே இல்லை. ஏன் என்றால் வேறு பெயர் சொல்வதற்கு இல்லை. இருந்திருந்தால் வாதாடிப்



RangaRakes tamilnavarasam.com

பார்த்திருப்பார்கள். இவைகளெல்லாம் எதற்காக சொல்லுகிறேனென்றால் நமது எதிரிகள் நம் இயக்கத்தைக் கெடுக்க சில்லரை விஷயத்தைச் சொல்லி மக்களை எவ்வளவு தூரம் ஏமாற்றுகிறார்களென்பதை தெளிவுப்படுத்தவே யன்றி வேறல்ல. எந்தப் புராணத்திலும் எந்தச் சரித்திரத்திலும் இந்து மதம் என்பதைப் பற்றி எங்கும் ஒரு வரி கூட சொல்லவில்லை. ஆங்கில அரசாங்க முள்ள இந்த நாளில்தான் இந்து என்ற பெயர் ரயில்வே பிளாட்பாரத்திலுள்ள ஓட்டல்களில் இந்து பிரயாணிகளென்றும், வெளிக்குப் போக உள்ள இடங்களில் இந்து புருஷர்கள், இந்து பெண்கள் என்றும் எழுதியதைக் காணலாமேயன்றி வேறு எங்கும் காணமுடியாது. ஆகையால் இச்சங்கத் திற்குப் பார்ப்பனரல்லாத வாலிப சங்கமென்று பெயர் வைத்துக் கொண்டதில் சிறிதும் பிழை இல்லை. அநேகர் குற்றம் கூறினாலும், சமாதானம் சொல்லுவ தற்கு வேண்டிய சாதனங்களிருப்பதால் நாம் ஒரு சிறிதும் அதற்காக பயப்படாது நம் காரியத்தைச் செவ்வனே செய்து வரல் வேண்டும்.

## பார்ப்பனரல்லாத வாலிபர்கள் செய்ய வேண்டுவன

நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி சிறிது சொல்லு கிறேன். நாம் சத்தியத்தின் பெயரால் படும் இடையூறுகளை வேருடன் களைந் தெறியும் வரை பார்ப்பனரல்லாத வாலிபர்கள் கண்டிப்பாய் அரசியலில் ஒருபோதும் தலையிடுதல் கூடாது. அரசியலில் தலையிட ஒரு பக்குவமுண்டு. அந்த பக்குவம் உங்களுக்கும் இந்த நாட்டுக்கும் வந்த பின்பு அரசியலில் தலையிட்டால் பயன்படும். நமக்கும் அரசியலுக்கும் தற்பொழுது பொருத்த மும் கவனமும் வைக்கக் கூடாது. நாம் அனைவரும் பொதுவாழ்வில் சம சுதந்திரமும் பிறவியில் நமது வாழ்வும் துக்கமும் அனைவருடைய வாழ்வும் துக்கமுமாகும் என்றும் பிறவியில் உயர்ந்தவருமில்லை இழிந்தவருமில்லை என்றும் உணர்ச்சி உண்டாகும் வரையில் அரசியலில் தலையிடுதல் கூடாது. அப்படி தலையிட்டால் அது தற்கொலையாகவே முடியும்.

## அன்னியர்

மக்களுக்கு அன்னியர் ஆளுவது என்பது கஷ்டமாகத் தானிருக்கும். அந்த ஆட்சியை வாங்கி நாம் ஆளவேண்டுமென்ற எண்ணங்கள் சாதாரண மாக உண்டாவது இயல்புதான். அன்னியர் என்பவர் யார்? நாம் என்று சொல்லிக் கொள்பவர் யார்? என்று ஆராயப் புகின் அன்னியர் வெள்ளைக் காரரென்றும், நாமென்பது பிராமணர், சூத்திரர், பஞ்சமர், கிறிஸ்தவர், முகமதியர் மற்றும் பல சாதியாரும் என்று எண்ணியிருக்கின்றோம். பிராமண னை நம்மவர்கள் என்பதில் சேர்க்கும் போது வெள்ளைக்காரர்களை மாத்திரம் எப்படி அன்னியர் என்று சொல்லக்கூடும்? பார்ப்பனனை விட வெள்ளைக்காரன் நமக்கென்ன கொடுமை செய்கிறான்? வெள்ளைக்காரன் நமக்கு செய்துவரும் கொடுமைகள் என்பதெல்லாம் பார்ப்பனன் யோசனை



கேட்டுப் பார்ப்பனன் சொல்லுகிறபடி பார்ப்பனன் உதவியால் அவன் சம்மதத்தின் பேரில் செய்கிறானா, தானாகவே செய்கிறானா? தவிர வெள்ளைக்காரன் நீங்கிய மற்றவர்கள் எல்லாம் ஒன்று என்றும், ஒன்றாய்ச் சேர்ந்து சுயராஜ்யம் கேட்கின்றார்கள் என்றும் எப்படி சொல்ல முடியும்? லார்டு ஈர்வின் துரை இங்கு வந்து “நாங்கள் ஊருக்குப் போகிறோம். இந்த கஜானா சாவி இந்த முத்திரை இந்த பட்டம் ஆகிய மூன்றை எடுத்துக் கொள்ளுங்கள்” என்று சொல்வதாகவே வைத்துக் கொள்ளுவோம். அதை யார் வாங்கிக் கொள்வது? முதலில் அய்யர் வருவார் “நான் தான் படித்திருக்கின்றேன் எனக்கு அரசாளும் திறமை வெள்ளைக்காரர்களை அடுத்து கற்றுக் கொண்டி ருக்கிறேன்” என்று நம்மிடத்தில் சொல்லி வெள்ளையரிடம் சென்று “ நீங்கள் இவ்வளவு நாள் இங்கிருப்பதற்கு நாங்களல்லவா உதவி யாயிருந்தோம். உங்களை எங்கள் நாட்டாருக்கு காண்பித்துக் கொடுக்காமல், எங்கள் நாட் டாரை உங்களுக்கு காண்பித்துக் கொடுத்தோமே, நீங்கள் நன்றியுடையவர் என்கிறீர்களே, அப்படியானால் எங்களிடம் கொடு” என்பார்கள். நாம் சம்மதிக்காததாயிருக்கின்றோமா? “வெள்ளைக்கார அரசாங்கமிருக்கும் போதே, எங்களை சூத்திரர்கள் என்று கொடுமைப்படுத்தும் நீங்கள் வெள்ளைக்காரர்கள் போய் விட்டால் என்ன செய்ய மாட்டீர்கள்” என்று கேட்டு தடுப்போமா இல்லையா? இதைக்கேட்ட லார்ட் ஈர்வின் “நீங்கள் தான் பெருவாரியாயிருக்கிறீர்களே, நீங்களாவது வைத்துக் கொள்ளுங்கள்” என்று நம்மிடம் கொடுத்தால் பார்ப்பனர்கள் சம்மதிப்பார்களா? “வெள்ளைக்காரர் இருக்கும் போதே பார்ப்பன துவேஷம் நிறைந்திருக்கின்றது. நீங்கள் போய் விட்டால், நம் கதி என்ன” என்று சொல்லுவார்களா இல்லையா? இப்பொழுதே எத்தனையோ உத்தியோகங்கள் தங்களுக்கு இல்லை என்றால் வெள்ளைக் காரர்களுக்குப் போகப் பார்க்கின்றார்களேயன்றி நமக்குக் கிடைக்க சம்மதிக் கின்றார்களா? அதன் ரகசியம்தானே இரட்டை ஆட்சி ஒழிய வேண்டு மென்பது. அன்றியும் நாம் இருவரும் சம்மதித்து ராஜியாவதா யிருந்தாலும், மகமதியர்கள் சும்மாயிருப்பார்களா? “நாங்கள் இப்போது 7 $^{1}/_{2}$ கோடி இருக் கின்றோம். இன்னும் நான்கைந்து வருடத்திற்கும் நாங்களே பெரும்வாரியாக 12 கோடிக்கு வந்து விடுவோம். அப்பொழுது உங்களையே துரத்திவிட எங்க ளுக்குத் தெரியும். அதுவரை நீங்கள் போகாதீர்” என்பார்களா இல்லையா? அவர்களும் சம்மதித்தார்களென்றே வைத்துக் கொள்ளுவோம். கிறிஸ்தவர் கள் சும்மாயிருப்பார்களா நாங்கள் சில பேர் உங்களை நம்பி இப்பொழுதுதான் கிறிஸ்தவர்களானோம். அப்படியிருக்க நீங்கள் போவதனால் எங்களுக் காகவும் ஒரு கப்பல் அதிகமாக ஏற்பாடு செய்யுங்கள், நாங்களும் உங்கள் கூடவே வந்துவிடுகின்றோம் என்பார்கள். அவர்களும் ஒப்புக் கொண்ட தாகவே வைத்துக் கொள்வோம். எம்.சி. இராஜா சும்மாயிருப்பாரா? “ஐயா எங்களுக்காகத்தானே கடவுள் உங்களை இங்கு அனுப்பினார். உங்களால் தானே நாங்கள் மனிதர்களாக இருக்கிறோம். அப்படி இருந்தும் நீங்கள் இருக்கும் பொழுதே எங்களை வீதியில் நடக்கக் கூடாதென்கிற இவர்கள்



RangaRakes tamilnavarasam.com

நீங்கள் போய்விட்டால் என்ன செய்வார்கள். வண்டியில் கட்டி ஓட்ட மாட்டார்களா என்பதை யோசித்துப் பாருங்கள்" என்று சொல்லி காலைப் பிடித்தாவது குறுக்காட்டிக் கொள்வார்களா இல்லையா? இந்த நிலையில் நாம் என்பது யார் என்பதை யோசித்துப் பாருங்கள். ஒன்றும் இல்லை. ஒரு மந்திரி என்கின்ற, ஒரு பொறுப்புமில்லாத, உத்தியோகம் நமக்குக் கொடுத்திருக்கும் போதே நமது யோக்கியதை இப்படி இருக்கின்றது? வெளியில் சொல்ல வெட்கக்கேடு. அன்றியும் அதற்கு பார்ப்பன சூழ்ச்சியும் அதற்கு மற்ற சூழ்ச்சியும் எப்படி இருந்து கொண்டு நாடு சிரித்து நம்மை மானக் கேடாக்குகின்றது. இனி அரசாக்ஷியே வந்தால் என்ன கதியாகும் என்பதை நீங்களே யோசியுங்கள். நான் வேண்டுமென்றாவது, வெள்ளைக்காரரென்கிற கொள்ளைக்காரருக்கு அனுகூலமாகவாவது, பார்ப்பனருக்கு இடையூறாகவாவது சொல்லவில்லை. நாட்டின் உயிர்நாடியைப் பார்த்து உணர்ந்து சொல்லுகின்றேன். எனவே நம்மில் ஒரு கூட்டத்தாரே ஏகபோகமாய் வகிக்கும் ஆதிக்கம் ஒழிந்தால், ஒருவரிடம் ஒருவருக்கு அன்பும் நம்பிக்கையும் ஏற்பட்டால், வெளிச்சத்தைக் கண்ட இருள் ஓடுவது போல் அன்னிய ஆக்ஷி நம்மை விட்டு ஓடி விடும். இதனால்தான் நான் அதுவரையில் குறிப்பாக நம் வாலிபர்களுக்கு அரசியல் உணர்ச்சி ஏற்படவே கூடாது என்கிறேன். அதனால் என்ன கெடுதி நேரிட்டாலும் நம் வாலிபர்கள் அரசியலினின்று முற்றும் விலகியிருத்தல் வேண்டும். உத்தியோகத்தால் தான் நமது பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு பிளவேற்பட்டது. நம் பார்ப்பனரல்லாதார் இயக்கம் உண்மையாக உத்தியோகப் பற்றின்றி ஆரம்பித்திருக்கலாம் அதை ஏற்படுத்திய தலைவர்களும் அதே எண்ணத்துடனிருந்து இறந்திருக்கலாம். இப்பொழுதும் பலர் உத்தியோக வெறிபிடியாதவர்களுமிருக்கிறார்களென்பதையும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் கொஞ்சமிருந்தாலும் பிளவு உண்டாக்குகின்றது. நம் வாலிபர் கருத்தெல்லாம் நாம் எப்படி சுயமரியாதையடைவது? நாம் எப்படி விடுதலையடைவது என்பதையே கொண்டிருத்தல் வேண்டும். அதை விடுத்து உத்தியோகம் எப்படி பெறுவதென்ற எண்ணம் வாலிபர்களுக்குத் தோன்றாமலிருக்குமாறு செய்து கொள்ள வேண்டும். உத்தியோகங்களெல்லாம் வெள்ளைக்காரன் கையில்தானிருக்க வேண்டும். ஏனெனில் நாம் கஷ்டப்பட்டுக் கொண்டும் ஒருவரை ஒருவர் வைது கொண்டும் உத்தியோக வேலை பார்ப்பதில் நமது காலத்தை செலவு செய்து கொண்டுமிருப்பதால் அவன் மேலிருந்து நோகாமல் பணத்தைக் கொள்ளை கொண்டு போகிறான். உத்தியோக மூலம் அரசாங்க குற்றமும் பழியும் நம்மீது வீழ்ந்து, நாம் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டதுதான் மிச்சம். வெள்ளைக்காரன் அரசியலின் பேரால் நாம் கேட்பதெல்லாம் கொடுத்துக் கொண்டுதான் வருகிறான். நாம் ஒரு காலத்திலும் கனவிலும் நினையாத உத்தியோகங்களெல்லாம் நமக்குக் கொடுத்திருக்கிறான். அவைகளினால் நாமடைந்த பலனென்ன? ஒன்றுமில்லை. சீர்திருத்தங்களின் பயன்தானென்ன? ஒன்றுமில்லை. முன்பு மூன்று வெள்ளைக்காரர்கள் பார்த்த வேலையை இப்பொழுது



எட்டுப்பேர் பார்க்கிறார்கள். இதற்குச் சம்பளம் ஏழைகள் தலையில் கை வைக்கிறார்கள். இரண்டு சீர்த்திருத்தம் கொடுத்தாயிற்று. மூன்றாவது சீர்திருத்தம் தலைகாட்டுகிறது. அந்த சீர்திருத்தத்தில் கவர்னர் உத்தியோகம் கொடுத்தாலும் கொடுக்கலாம். அதைவிட வேறு உத்தியோக மென்னயிருக்கிறது? ஒன்றுமில்லை. ஆனால் அதன் மூலம் வெள்ளைக்காரனுக்குப் பூட்சு துடைக்க நாம் போட்டி போடப் போகின்றோம். நேற்றோ அல்லது முந்தைய நாளோ நண்பர் திரு.ஏ.இராமசாமி முதலியார் ஒரு கூட்டத்தில் பேசும் போது ஒன்று சொன்னார்கள். அதாவது பார்லிமெண்ட் முதலிய சபைகள் ஏற்படுவதற்கு முன்பு நமக்கு எவ்வளவோ சவுகரியமாய் இருந்தது. இப்போது சவுகரிய குறைவாக இருக்கிறது. என்னவென்றால் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் நம் நாட்டை ஆளும் போது யாராவது 4 பேர் சேர்ந்து நம் குறையைத் தெரிவித்தால் அப்பொழுதே கடிதமெடுத்து எழுதி ஒரு உத்திரவு பிறப்பிப்பார்கள். அதில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமிருந்ததாகவும் சொல்லுகிறார்கள். எல்லோருக்கும் சமஉரிமை சமசந்தர்ப்பம் இருந்ததாகவும் சொல்லுகிறார்கள். இந்த சீர்திருத்தத்தின் பெயரால் நம்மை யார் உதைக்கிறார்களென்று கூட நம்மால் கண்டு அறிய முடியவில்லை. உண்மையான விடுதலை ஒரு காலத்தில் நம் நாடு அடையுமானால் நம் மக்கள் உத்தியோகத்திலில்லாத காலத்தில் தான் முடியும் என்று நினைக்கிறேன். நான் வரப்போகும் பார்ப்பனரல்லாத வாலிபர் மகாநாட்டிற்கு வந்தால் வாலிபர்கள் அரசியலில் தலையிடக் கூடாது என்று ஒரு தீர்மானம் கொண்டு வருவேன். என் கொள்கை உங்களுக்குத் தெரியும். என்னைப் பொறுத்தவரையில் காங்கிரசு ஒழிய வேண்டும். இந்து மதம் தொலைய வேண்டும். பார்ப்பன ஆதிக்கம் அழிய வேண்டும். இம்மூன்றுமழிந்தாலொழிய இந்தியாவுக்கு விடுதலை இல்லை, இல்லை, இல்லவே இல்லை. இதை மகாத்மா இடமும் சொன்னேன். என்னை நன்றாய் விசாரித்தார். நான் சொன்னதில் உள்ள தத்துவத்தையும் ஒப்புக் கொண்டார். நீ சொல்வதெல்லாம் சரி, அப்படியாவதினால் உலகம் கெட்டு விடுமென்றார். அப்படியானால் நீங்களே இவற்றைக் கட்டிக் கொண்டு அழுங்கள் என்று சொல்லி விட்டு வெளிவந்தேன். 40 வருடமாக காங்கிரஸ் தோன்றியது முதல் அது நிறைவேற்றிய தீர்மானங்களெல்லாம் அனேகமாய் நிறைவேறியது. அதற்கு மேலும் சில வந்திருக்கின்றன. வெள்ளைக்காரர்களும் காங்கிரசு சொன்னபடி எல்லாம் நடந்து வந்திருக்கிறார்கள். பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் கிடைத்ததல்லாமல் பாமர ஜனங்களுக்கு லாபம் என்ன? கோர்ட்டுகள், கச்சேரிகள், வக்கீல்கள், நீதிபதிகள் அதிகமானார்கள். இதற்கு வரி அதிகமாயிற்று. நாட்டு மக்களுக்கு சர்க்கார் உத்தியோகமின்றி வேறு வழியில் பிழைக்க மார்க்கமில்லாமல் போய் விட்டது. நம் நாட்டை விட்டு வாரம் ஒன்றுக்கு லட்சக் கணக்கான மக்கள் பிழைப்பதற்கு வேறு நாட்டிற்கு ஓடுகின்றார்கள். சீர்திருத்தத்திற்கு முன் 40 கோடி ரூபாயாக இருந்த வரி இப்பொழுது 165 கோடி ரூபாயாக பெருகியிருக்கின்றது. இது தான் சீர்திருத்ததின் பலன். யோக்கியமான சீர்திருத்தமானால் நமக்கு நீதியில், வாழ்க்கையில்,



RangaRakes
tamilnavarasam.com

உரிமையில், வரியில் பலனிருக்க வேண்டும். வீதி விளக்கில் படித்தவர்களும், அன்னசத்திரத்தில் சாப்பிட்டவர்களும், பிச்சையெடுத்து பள்ளிக்கூடச் சம்பளம் கொடுத்தவர்களும், இன்று நாட்டையே காட்டிக் கொடுத்து பதவி பெற்று அதிகாரம் செய்கிறார்கள். அவன் நான்தான் அந்த உத்தியோகங்கள் பெற பொறுப்புள்ளவன் என்கிறான். ஒரு காலத்தில் நிறைந்த செல்வந்தர் களாயும் நாட்டிற்கு பொறுப்புள்ளவர்களாயும், யோக்கியர்களாயும், நீதி துரந்தரர்களாயுமிருந்தவர்கள் இப்போது கையில் அடப்பம் போல் காகிதக் கட்டு ஒன்றெடுத்துக் கொண்டு பார்ப்பனர்கள் வீடுகளில் ஏறி இறங்க வேண்டி யிருக்கின்றது. ஒரு கவர்னரும், இரு நிர்வாக அங்கத்தினரும் மேற்சொன்ன மூவருக்கும் மூன்று காரியதரிசிகளுமேயிருந்தார்கள். இப்பொழுது அவர் களுடன் ஐவர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு காரியதரிசியும் அதிகமாக ஏற்படுத்தப்பட்டது. வெள்ளைக்காரர்கள் முன்பு வாங்கியதில் ஒரு காசும் குறையாது வாங்குகிறார்கள். மற்ற ஐவருக்கும் 5000 ரூபாய் வீதம் எப்படி கொடுக்க முடியும்? இவ்வருஷம் நடக்கப் போகும் காங்கிரசுதான் ஆகட்டும். அதனால் நாட்டுக்கு என்ன பலனுண்டாகக் கூடும்? அதிகமான சீர்திருத்தம் என்று கவர்னர் பதவி கேட்பார்கள். வெள்ளைக்காரரும் கொடுப் பார்கள். அதற்காக நம் மகாணத்தை மூன்று பிரிவாகப் பிரித்து ஒன்று சீனிவாச சாஸ்திரிக்கும், ஒன்று கோஷன் பிரபுவுக்கும், மற்றொன்று இன்னொரு வெள்ளைக்காரனுக்குமாக பங்கிட்டுக் கொள்ளுவார்கள். அப்பொழுது ஒவ்வொருவருக்கும் 10,000 ரூபாய்தான் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று காங்கிரசு தீர்மானிக்கும். ஏனென்றால் உத்தியோகத்திற்குத் தகுந்த சம்பளம் வேண்டாமா என்பார்கள். அப்போதும் வெள்ளைக்காரன் தான் வாங்கும் சம்பளம் வாங்கித்தான் தீருவான். மேற்கொண்டும் ஒரு கவர்னராவான். சம்பளத்திற்காக அதிகமான இரு கவர்னர் கார்டின் விலை உயர்த்தியோ, குடி வரியை உயர்த்தியோ, சாமான் வரி உயர்த்தியோ, நிலவரி உயர்த்தியோ, வருமானவரியை உயர்த்தியோதான் தீர வேண்டி வரும். இவ்வரிச் சுமை களை சுமப்பவன் கதி என்ன? இதைப்பற்றி மகாத்மாவைக் கேட்டதில் தந்திரக் காரர்கள் நாட்டை ஆட்சி புரிவது சுபாவம்தானென சொன்னார். அப்படியே இருக்கட்டும். அதில் நமக்கும் உங்களுக்கும் ஏன் பங்கு இருக்க வேண்டும் என்றேன். தக்க மகான்கள் அந்த இடத்திற்கு வந்தால் எல்லாம் சரியாகும். அதுவரை அந்த ஸ்தாபனங்களை அழிக்காமல் வைத்திருக்க வேண்டு மென்றார். உங்களை விட வேறொரு மகான் எப்பொழுது வருவார்? அவர் யார்? ஒரு கோடி ரூபாய் கேட்டீர்கள். 15 நாளில் கொண்டு வந்து கொடுத்தார் கள். 1000பேர் சிறைக்குச் செல்லுங்களென்றால் முப்பதினாயிரக் கணக்காக சிறைக்குச் சென்றார்கள். சிறைச்சாலைகளிலே இடமில்லாதவாறு செய் தார்களே. இதை விட மகான் யார் என்றேன். ஒருவர் மீது கொண்டுள்ள வெறுப்பால் அப்படிப் பேசுகிறாய் என்றார். எனக்கு யார் மீதும் கோபமில்லை. காங்கிரசு ஒழிய வேண்டும். அதை ஆரம்பித்தவர்கள் உத்தியோகத்திற்கு ஆசைப்பட்டு ஆரம்பித்தார்கள் என்று சொன்னேன். அதற்கு அவர்,



அப்படியானால் தாதாபாய் நவரோஜி, கோகலே முதலிய இவர்களும் அப்படிப்பட்டவர்களா என்றார். தாதாபாய் நவுரோஜி, கோகலே, மகாத்மா காந்தி என்ற 3 பேர் யோக்கியர்கள் அதிலிருந்தால் பாக்கி 97 பேர் யோக்கியதையைப் பார்க்க வேண்டாமா என்று சொன்னேன். அன்றியும் பார்ப்பனர்கள் நாட்டிற்கு ஏதாவது நன்மை செய்திருக்கிறார்களா என்று யோசித்து ஒன்று சொல்லுங்கள் என்றேன். சொல்ல முடியாது. ஆனாலும் தள்ள முடியாதென்றார். கடைசியாக உத்திரவு பெற்றுக் கொண்டு திரும்பி விட்டேன். குருட்டு நம்பிக்கைகள் நன்றாய் நம் இரத்தத்துடன் கலந்து வேரூன்றி விட்டது. இதனால் என்ன ஆனாலும் வாலிபர்கள் முனைந்து நின்று வேலை செய்ய முற்படல் வேண்டும். வாலிபர்களென்றால் 18 வயதிலிருந்து 26 வயதிற்குட்பட்டவர்கள்தான் என்பது என் எண்ணமல்ல. என் எண்ணப்படி சாகும் தருவாயிலிருக்கும் முதியோனும் அவன் மனதில் மக்களுக்காக பாடுபட வேண்டும். அதற்காக உயிரையும் விடத் தயார் என்று எண்ணினால் அம் முதியோனும் வாலிபனே. ஆனால் வயதில் வாலிப பர்வத்திலிருந்தும் நமக்கென்ன இதைப்பற்றி என்று சுயமரியாதையைக் கவனிக்காமலிருப்பவன் ஒரு காலமும் வாலிபனாகான். ஆகவே, நீங்கள் தைரியமாக உணர்ச்சியோடு உழைத்துப் பெரியோர்களையும் சுயநலக்காரர்களையும் உங்கள் வசம் திருப்ப முயற்சி செய்தல் வேண்டும். இப்பொழுது நாம் சமத்துவத்திற்காக பாடுபட்டு வெற்றி பெற்றுவிட்டால் பிறகு அரசாங்கக் கொடுமைகளை மெள்ள ஒழித்து விடலாம். மற்றும் சுயமரியாதை சத்தியாக் கிரகத்தையும் கவனியுங்கள்.

எனக்குத் தெரிந்தவைகளையும் என் மனதிற்கு தோன்றியவைக ளையும் பழிபாபங்களுக்காக சிறிதும் அஞ்சாது உங்கள் முன்னிலையில் பகர்ந்தேன். அதில் எது சரியென்று உங்களுக்குத் தோன்றுகிறதோ அதைக் கடைப்பிடித்து ஒழுகுமாறு வேண்டி முடித்துக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு: 19.10.27- ல் சென்னை புரசைவாக்கம் அன்னதான சமாஜத்தில் நடை பெற்ற பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கக் கூட்டத்தில் திரு. சொக்கலிங்க முதலியார் பி.ஏ., பி.எல். அவர்கள் தலைமையில் ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 30.10.1927**



RangaRakes tamilnavarasam.com

# வருணாசிரம மகாநாடு

காங்கிரசின்போது காங்கிரசுப் பந்தலில் வருணாசிரம மகாநாடு என்பதாக ஒரு மகாநாடு நடக்கப்போவதாய் பல பத்திரிகைகளில் தெரிய வருகின்றது.

வருணாசிரம மகாநாடு என்பது என்ன என்று நாம் மக்களுக்கு விளக்க வேண்டியதில்லை. ஆனாலும் சிறிது குறிப்பிடுவோம். என்னவெனில் உலகத்திலுள்ள மக்கள் எல்லாம் 6 வருணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அதாவது:- 1. பிராமணன் 2. க்ஷத்திரியன் 3. வைசியன் 4. சூத்திரன் 5. பஞ்சமன் 6. மிலேச்சன் என்பதாக பிரிக்கப்பட்டிருக்கின்றது என்றும், அதில் பிராமணன் உயர்ந்தவன் குருவாயிருக்கத்தக்கவன், க்ஷத்திரியன் அதைவிடத் தாழ்ந்தவன் அரசனாயிருக்கத்தக்கவன், வைசியன் அதைவிடத் தாழ்ந்தவன் வியாபாரியாய் இருக்கத்தகுந்தவன், சூத்திரன் அதைவிடத் தாழ்ந்தவன் மேல்கண்ட மூவருக்கும் அடிமையாய் இருக்க வேண்டியதோடு சிறப்பாக பிராமணர்களுக்கு அடிமையாகவும் இருப்பதுடன் சூத்திரனது பெண்களும் பொருள்களும் பிராமணர்களுக்கே உரியது என்றும், கொடுக்காவிட்டால் பலாத்காரத்தினால் பிடுங்கிக் கொள்ளலாம் என்றும், அவர் படிக்கவும் கடவுளை நெருங்கி வணங்கவும் உரிமையற்றவன் என்கின்றதுமான கொள் கையை கொண்டது. ஆதிதிராவிடர், ஆதிசூத்திரர், அவர்ணஸ்தர் நாம் சூத்திரர் என்பதான கோடிக் கணக்கான மக்கள் பஞ்சமர், அதாவது காணவும், நெருங்கவும், நிழல் மேலே படவும், பேசவும், வழியில் நடக்கவும், கோயில் என்பதில் நுழையவும், கடவுள் என்பதை தரிசிக்கவும் உரிமை இல்லாததான கொள்கையைக் கொண்டது.

மிலேச்சர்கள் என்பது மகமதியர், கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்கள் என்போரகளல்லாதவர்களையும், சமஸ்கிருதம் தவிர மற்ற பாஷை பேசுகின்றவர்களையும் குறியாய் கொண்டது. இந்து சாஸ்திரங்கள் மதத் தத்துவங்கள் என்பவைகளின்படி பஞ்சமர், மிலேச்சர் என்பதற்கு ஆதாரம் இல்லாவிட்டாலும் பார்ப்பன செல்வாக்காலும் அவர்களினது அவசியத்தா லும் இவ்விரண்டு வகுப்புகளும் ஏற்பட்டு பழக்கத்திற்கும் எப்படியோ ஆதியில் கொண்டு வந்து விடப்பட்டு விட்டது. ஆனால் இப்போது இவைகளுக்கு பல தகராருகள் ஏற்படுவதால் ஆறு வருணத்தையும் இரண்டு வருணமாக்கி, அதாவது கலியுகத்தில் பிராமணன், சூத்திரன் என்னும் இரண்டைத்தவிர வேறு வருணம் இல்லை என்பதாக முடிவுகட்டி அதையே மதத் தத்துவமாகவும் ஆக்கி விட்டார்கள். ஆனாலும் இப்பார்ப்பனர் பேச்சை நம்பி ஆதியில் பூணூல் போட்டுக் கொண்ட பலர் தங்களை பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் என்று கொண்டிருந்தவர்கள், இப்போது தகரார் செய்ய வருவதால் அதற்கு அவர்கள் ஏமாறும்படி சமயத்திற்கு ஏற்ற தந்திரங்கள் செய்து நமது பார்ப்ப னர்கள் தப்பித்து வருகிறார்கள். இது எப்படி இருந்தாலும் ஸ்ரீமான் காந்தி அவர்களாலேயே இந்த வருணாசிரம அடிப்படைத் தத்துவமும் கொள்கை யும் ஒப்புக் கொண்டாய் விட்டது. அதாவது பார்ப்பனர்களுக்கும், ஸ்ரீ காந்திக்கும் வர்ணம் நான்கு என்பதிலும், அவைகளுக்கு பார்ப்பனர்கள் சொல்லுகின்றபடியே நான்கு தொழில்கள் உண்டு என்பதிலும், அதுவும் பார்ப்பனர்கள் சொல்லுகின்றபடியே பிறவியில் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் ஏற்படுகிறான் என்பதிலும் யாதொரு அபிப்பிராய வித்தியாச மு மில்லை. ஆனால் வருணம் ஆறா அல்லது நான்கா அல்லது இரண்டா என்பதுதான் இப்போது ஸ்ரீ காந்திக்கும் பார்ப்பனருக்கும் சண்டை. பார்ப்பனர் கள் இரண்டு வருணம்தான், அதாவது பிராமணன், சூத்திரன் என்பதாக சொல்லுகிறார்கள். ஸ்ரீ காந்தி நாலு என்கின்றார். இந்த வாதில் நமக்கு எவ்வித லாபமும் இல்லை. ஏனெனில் பார்ப் பனர்கள் கொள்கைப்படியும் ஸ்ரீ காந்தி அவர்கள் கொள்கைப்படியும் நாம் சூத்திரர்களில்தான் சேர்க்கப்படுகின்றோமே ஒழிய வேறில்லை. சூத்திரனின் தருமம் பார்ப்பானுக்கு வேலை செய்ய வேண்டியது. இது பிறப்புரிமை என்று இருவரும் சொல்லுகின்றார்கள். ஆதலால் இம்மாதிரி கொடுமையுள்ளதும் அயோக்கியத் தனமானதுமான ஒரு கொள்கை கொண்ட வருணா சிரமதர்மம் என்பதாக ஒரு மகாநாடு நடப்பதை எப்படிப் பொதுமக்கள் பொறுத்துக் கொண்டிருப்பார்கள் என்று பார்ப்பனர்கள் நினைத்திருக்கின்றார் கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

உலகத்தில் இதுசமயம் எழுந்திருக்கும் சுயமரியாதை உணர்ச்சியைப் பார்த்த பிறகும் சர்க்கார் எப்படி இவ்வித போக்கிரித் தனங்களுக்கு இடம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதும் நமக்கு விளங்கவில்லை. சாதாரணமாக ரங்கிலாரசூல் என்ற மகமதிய மத தலைவராகிய ஸ்ரீமான் மகமது நபி அவர்கள் விபசாரம் செய்தார் என்கிற தத்துவம் கொண்ட துண்டு விளம்பரம் போட்டதற்காக பல விவகாரங்களும் பல கொலைகளும் கூட நடந்து வருவதுடன், ஏதோஒரு பெரிய சதியாலோசனைக் கூட்டமும் பின்னால் இருந்து கொண்டு இனியும் வெகு பேரை கொலை செய்யக் காத்திருப்பதாகவும் சந்தேகப்படும்படியான காரியங்கள் நடந்து வருகின்ற இக்காலத்தில் ஒரு பெரிய சமூகத்தையே ஒரு சிறு கூட்டத்தாராகிய சோம் பேறிகள், தங்களுக்கு பிறவி அடிமைகள் என்றும், அவர்களது பெண்கள்





RangaRakes tamilnavarasam.com

எல்லாம் தங்களுக்கு வைப்பாட்டிகள் என்றும், அவர்கள் பேசுவது மிலேச்ச பாஷை என்றும், அவர்களது சொத்துக்கள் எல்லாம் தாங்கள் பலாத்காரத் தினால் பிடுங்கிக் கொள்ளலாமென்றும், இனியும் என்ன என்னமோ இழிவுக் கொள்கைகள் கொண்டதான ஒரு விஷயத்தை நிலை நிறுத்த ஒரு மகாநாடு கூட்டினால் மக்கள் எந்த விதத்தில் பொறுமையோடு இருப்பார்கள் என்று நமது சர்க்காரார் நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பது நமக்கு விளங்க வில்லை. எப்படியாவது கலகத்திற்கும் அடிதடி சண்டைக்கும் இடம் கொடுத்து கொலைகள் நடக்கின்ற தருணம் வந்தால்தான் தங்கள் அக்கிரம ஆட்சி நடைபெற சவுகரியம் ஏற்படும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார் கள் என்றுதான் நினைக்க வேண்டி இருக்கிறது.

**குடி அரசு - தலையங்கம் - 30.10.1927**



RangaRakes

# தேவதாசி விண்ணப்பம்

நமது நாட்டில் தெய்வத்தின் பேராலும் மதத்தின் பேராலும் விபசாரித் தனத்திற்கு இடமாயிருக்கிற தேவதாசிகள் என்கிற தத்துவம் எடுபட வேண்டு மென்பதாக பலர் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக சென்னை சட்ட சபை அங்கத்தினரும், உபத் தலைவருமான ஸ்ரீமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்களால் சென்னை சட்டசபையில் ஒரு சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கின்றது. அதன் தத்துவம் என்னவென்றால் விபசாரத்திற்காக மதத்தின் பேரால் கோவிலில் பெண்களுக்கு பொட்டுக் கட்டி (முத்திரை போட்டு) விடும் வழக்கம் கூடாதென்றும் அப்படி செய்தால் அதற்கு இன்ன தண்டனை என்று ஏற்படுத்த வேண்டுமென்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்த சட்டம் கூடாது என்பதாக இரண்டு தேவதாசிப் பெண்கள் அதாவது ஸ்ரீமதிகள் துரைக்கண்ணு, பார்வதி என்கிற இரு சகோதரிகளால் சட்டசபை மெம்பர்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனவாம். இதைப் பற்றி நமக்கு யாதொரு ஆச்சரியமும் இல்லை. ஏனெனில் இந்த விண்ணப்பம் அச்சகோதரிகளால் அனுப்பப்பட்டிருக்காது என்பதும் அதற்குப் பின்புறம் சிலரிருந்துக்கொண்டு வேலை செய்திருப்பார்கள் என்பதும் நாம் மனப்பூர்வ மாய் தீர்மானிக்கக் கூடியதாயிருக்கிறது. ஏனெனில் அப்பெண்மணிகளுக்கு அவ்வேலை நின்று போனால் பிழைக்க முடியாது என்றாவது அப்பெண் மணிகளால்தான் உலகத்திலுள்ள மற்ற பெண்களுக்கு கற்பு கெடாம லிருக்கின்றது என்றாவது, இச்சட்டத்தால் உலகம் முழுகிப் போகுமென்றாவது நாம் நினைக்க முடியாது. ஆனால் அப் பெண்களுக்கு தரகர்களாயிருந்து நோகாமல் ஒரு சொட்டு வேர்வை கூட நிலத்தில் விழாமல் மேலாமினுக்காய் இருந்து வாழ்ந்து வரும் மாமாக்கள் என்று சொல்லுகின்றவர்களின் வேலை யில்லாத் திண்டாட்டத்திற்கொரு வழி கிடைப்பது சற்று கஷ்டமாயிருக்கும். ஆதலால் அவர்கள் இந்த விண்ணப்பத்திற்கு மூலக்கர்த்தாக்களாயிருப்பதில் நமக்கு ஆச்சரியமில்லை. எனினும் இக் கூட்டத்தார் பிழைப்பதற்காக நமது சகோதரிகள் நாட்டுக்கும் சமூகத்திற்கும் இழிவான வேலைகள் செய்து கொண்டிருக்க மதத்தின் பேரால் இடம் கொடுப்பதை விட அதர்மமானதும் கொடுமையானதுமான காரியம் வேறில்லை.

தவிர மற்றும் சில பெரியோர்கள் நாட்டின் நற்பெயரையும் நமது மற்றப் பெண்களின் கற்பையும் காப்பதை உத்தேசித்து இம்மாதிரி ஒரு கூட்டம்



tamilnavarasam.com

பெண்கள் விபசாரத்திற்கென்றே தனியாயிருக்க வேண்டுமென்று சொல்லு கின்றார்களாம். இந்தக் கொடுமையைப் பற்றி நாம் விவகாரம் பின்னால் செய்து கொள்ள நினைக்கின்றோம். ஆனால் அப்படி ஒரு கூட்டம் பெண்கள் வேண்டும் என்கிற கக்ஷியை நியாயம் என்று கொள்வதாகவே வைத்துக் கொண்டாலும் அதற்காக ஒரு வகுப்பாரே தலைமுறை தலைமுறையாக தங்கள் பெண்களை உதவி வர வேண்டும் என்பதற்கு என்ன ஆதாரம் இருக் கின்றது? என்று கேட்பதுடன் அந்த தேசாபிமானமும் நாட்டின் கற்பு அபிமா னமும் கொண்டதான இந்தப் பரோபகாரம், எல்லா வகுப்புக்கும் பங்கு முறைப்படி வரட்டும் என்பதாக தாராள நோக்கத்துடன் பார்த்து, அதை மற்ற வகுப்புக்கும் பிரித்து விடுவதில் என்ன ஆக்ஷேபனை. அல்லது நாட்டு கற்பில் கவலையுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு பெண்ணை இந்த தேசாபிமானத்திற்கும் கற்பு அபிமானத்திற்கும் விட ஒரு சட்டம் செய்வதற்கு என்ன ஆக்ஷேபனை என்று கேழ்கின்றோம். இப்படிப்பட்ட தர்ம நியாயங்கள் சொல்லி ஏமாற்றித் தானே ஆதியில் ஒரு வகுப்பார் தலையில் இவ்விழிவு காரியங்கள் போய் விழுந்துவிட்டன.

தவிரவும், இவர்கள் இப்படிச் சொல்லுவதிலிருந்து மற்ற பெண்கள் கற்பு தவறுவதற்கு ஆண்களே காரணம் என்றும் அந்த ஆண்களுக்கு வேறு பெண்கள் தயாராயிருந்து விட்டால் மற்ற பெண்கள் கற்பு கெடாது என்றும் கருதுவதாகவும் தெரிகின்றது. இப்படி சொல்லுவதானது ஆண் சமூகத்திற்கே கொடுமை செய்ததாகும். சட்டமும், சாஸ்திரமும், மதமும் எப்படி இருந்தாலும் இயற்கைத் தத்துவமும், கடவுள் சித்தமும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இவ் விஷயத்தில் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்பது நமது அபிப் பிராயம். ஆனாலும் பெண்களுக்கு காவலும் கட்டுப்பாடும் நிபந்தனையும் அதிகமாயிருப்பதால் அவர்கள் விஷயத்தில் நாம் அதிக யோக்கியதை கொடுத்துவிட நேருகின்றது. கட்டுப்பாட்டால் காப்பாற்றப்படும் கற்பை கற்பு என்று நாம் ஒரு போதும் ஒப்புக் கொள்ள முடியாது. இவ்விஷயத்தில் உலகத் திலுள்ள எல்லா மதமும் பழக்கத்தில் அநியாயமாகத்தான் நடந்து கொள்ளு கின்றது. ஆனால் இம்முறைகள் இனி அதிக காலத்திற்கு நிலைக்காது என்பதும் நிலைக்கும் வரை ஆண் பெண் இருபாலருக்கும் சரிசமானமான சுதந்திரமில்லை என்பதுமே நமது அபிப்பிராயம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 30.10.1927**



## சென்னையில்
# பார்ப்பனரல்லாத வாலிபர் மகாநாடு

சென்ற வாரம் 22, 23 - ம் தேதிகளாகிய சனி ஞாயிற்று கிழமைகளில் சென்னை பீபிள்ஸ் பார்க் என்கிற மைதானத்தில் அமைக்கப்பட்ட நாயர் பந்தல் என்கின்ற ஒரு அழகிய பெருங் கொட்டகையில் பார்ப்பனரல்லாத வாலிபர்களின் முதலாவது மாகாண மகாநாடு பெங்களூர் சட்டசபை மெம் பரும் முனிசிபல் சேர்மனுமான ஜனாப் மகமத் அப்பாஸ்கான் சஹேப் அவர்கள் தலைமையில் நடந்தது. சுமார் ஆண், பெண் உட்பட 5000 ஜனங்கள் வரை விஜயம் செய்திருந்தார்கள். அவ்வாலிப சங்கத் தலைவரும் மகா நாட்டின் வரவேற்புத் தலைவருமான ஸ்ரீமான் ஆரியா அவர்கள் வரவேற்பு உபன்யாசமும், தலைவரின் அக்கிராசன உபந்யாசமும், வாலிப சங்கத்தின் ஆரம்பத்தைப் பற்றியும் அதன் அவசியத்தைப் பற்றியும், பார்ப்பனரல்லாத வாலிபர்களும் பெரியோர்களும் இனி நடந்து கொள்ள வேண்டியதைப் பற்றியும் தெளிவாய் எடுத்துச் சொல்லி இருக்கின்றன. அவற்றை ஒவ்வொரு வரும் கவனித்துப் படிக்க வேண்டியது அவசியம். தவிர இம்மகாநாடானது அளவுக்கு மேல் வெகு விமர்சையாகவும் அதி ஊக்கமாக வும், மிக தாராள நோக்கத்துடனும் நடைபெற்றதானது நமது நாடு விழித்துக் கொண்ட தென்பதையே காட்டுகிறது. அதில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மா னங்கள் உலகத்தையே மூடநம்பிக்கையிலிருந்தும் அடிமைத் தனத்தி லிருந்தும் விடுதலை செய்யத் தகுந்த அவ்வளவு சக்தி அடங்கியவைகளா கவே இருந்தன. உதாரணமாக மனுதர்ம சாஸ்திரத்தையும் அதை ஆதாரமாகக் கொண்ட புராணங்களையும் அரசாங்கத்தார் பறிமுதல் செய்ய வேண்டு மென்று செய்த தீர்மானமும், சூத்திரன் என்று கூப்பிட்டால் பினல் கோட் சட்டப்படி கடுங்காவல் தண்டனையும் கசையடியும் கொடுக்க வேண்டும் என்று பேசிய பேச்சும், பார்ப்பனர்களின் சூழ்ச்சியை எல்லோரும் அறிந்து விட்டார்கள் என்பதையே வெளியாக்குகிறது. அன்றியும் குடும்பச் சொத்துக் களில் ஆண்களுக்கு உள்ளது போலவே பெண்களுக்கும் சம உரிமை இருக்க வேண்டுமென்று செய்த தீர்மானமும், விதவைகளான பெண்களுக்கும் குடும்பசொத்தில் தங்கள் புருஷர்கள் இருக்கும் போது அனுபவித்து வந்த வாழ்க்கையையே அளிக்க வேண்டுமே அல்லாமல் ஜீவனாம்சம் என்பதாகச் சொல்லிக் கொண்டு வக்கீல் வீடுகளிலும் கோர்ட்களிலும் அலையா திருக்கச்



RangaRakes tamilnavarasam.com

செய்ய வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்பவைகளாகிய பல தீர்மானங்களும், சுயமரியாதைக்காகச் செய்யப்படும் சத்தியாக்கிரகங்களிலும் அதை ஆதரிப்பதுடன் அதில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்று செய்த தீர்மானமும் இவைகளில் காட்டிய உற்சாகமும் தமிழ் நாட்டின் சுயமரியாதை உணர்ச்சிக்கு வீரம் எழுந்து விட்டதென்பதையே காட்டுகின் றன. இவ்வாலிப சங்கமானது இத்தீர்மானங்களுடன் திருப்தி அடைந்து விடாமல் இவை அமுலுக்கு வரத்தகுந்த அளவு வேலை செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகின்றோம். இரண்டு மாதங்களுக்கு முன் பம்பாய் வாலிப மகாநாட்டிலும் ஏறக்குறைய இது போன்ற தீர்மானங்களே நிறைவேறி இருக்கின்றன. ஒரு நாடு விடுதலை அடைய வேண்டுமானால் அந்நாட்டு வாலிபர்களுக்கு விடுதலை உணர்ச்சி வர வேண்டும் என்கின்ற ஆப்த வாக்கின்படியே நமது நாட்டுக்கு இப்போது விடுதலை அறிகுறிகள் காணப் படுகின்றதும், அத்துடன் பால்யைகளும் முனைந்து முன் இருக்கின்றதானது இம்மகாநாட்டால் அறியலாம். ஸ்ரீமதிகள் கிருஷ்ணாபாய் B.A,L.T., C.V.நாயகம்,B.A., பாரிஜாதம் B.A, இந்திராணி பாலசுப்ரமணியம், ஸ்கவுட் மாஸ்டர், அலமேலு மங்கைத்தாயாரம்மாள் முதலிய ஸ்திரி ரத்தினங்களின் சொற்பொழிவுகள் முன் காலத்தில் தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் காணப்படும் வீரத் தாய்மார்களை எல்லாம் உறுதிபடுத்தியது. எனவே வாலிப சங்கத்தையும் இம் மகாநாட்டையும் அதன் நிர்வாகிகளையும் அதற்கு ஆதரவளித்த பெரி யோர்களையும் நாம் மனப்பூர்வமாய் பாராட்டுவதுடன் நமது கொள்கைக்குப் பின்பலமாயிருப்பதற்கு நமது நன்றியறிதலையும் தெரிவித்து கொள்ளு கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 30.10.1927**



# சூத்திரன்

சூத்திரன் என்கிற வார்த்தையானது இழிவான அர்த்தத்தைப் புகட்டி வஞ்சனையாக ஏற்படுத்தப்பட்டதென்றும், அது பார்ப்பனர்களின் சூழ்ச்சி யால் பார்ப்பன ஆதிக்கத்திற்காக உண்டாக்கப்பட்ட தென்றும், அவ்வார்த்தை நமது நாட்டில் எந்த விதத்திலும் நம்ம தலையில் இருக்கக் கூடாதென்றும், கிளர்ச்சி செய்து அதில் ஒரு விதமான வெற்றிக்குறி காணப்படுகிற காலத்தில் சர்க்காராரே சூத்திரன் என்கின்ற பதத்தை உபயோகித்து வருகின்றார்கள் என்றால் இந்த சர்க்காருக்கு கடுகளவாவது மக்களின் யோக்கியமான உணர்ச்சியில் கவலை இருப்பதாக யாராவது எண்ணக்கூடுமா? பார்ப்பனர் களே இப்போது சூத்திரன் என்று சொல்ல பயப்படுகிறார்கள். அவர்கள் எழுதி கட்டித் தொங்க விட்டிருந்த போர்டு பலகைகளையெல்லாம் அவிழ்த்தெறி கின்றார்கள். வாழ்க்கையில் இப்போது சூத்திரன் என்கின்ற சப்தம் பார்ப்பனப் பெண்களிடையும் கோமட்டி செட்டியார்கள் என்கின்ற ஒரு வகுப்புப் பெண்களிடையும் தான் இப்போது உச்சரிக்கப்பட்டு வருகின்றது. மற்ற இடங்களில் நாளுக்குநாள் மறைந்து கொண்டே போகின்றது. அப்படி இருக்க சர்க்காரில் அதுவும் ஒரு பார்ப்பனரல்லாதாராகிய ஒருவரின் ஆதிக்கத்தில் உள்ள இலாகாவில் அதுவும் நமக்கே முழு அதிகாரமும் கொடுத்திருப்பதாக பிரித்து விடப்பட்டதான மாற்றப்பட்ட இலாகாவாகிய ஸ்தல ஸ்தாபன இலாக்காவில் அதுவும் ஜாதி வித்தியாசமில்லை பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்கிற கொள்கையை உடையவரும் அதை அமுலில் காட்டும் முகத்தால் ஒரு பார்ப்பன பெண் மணியை மணந்தவருமான ஸ்ரீமான் டாக்டர் சுப்பராயக் கவுண்டர் அவர்களின் ஏகபோக ஆக்ஷியில் உள்ள இலாகாவில் பிராமணன், க்ஷத்திரியன், விஸ்வ பிராமணன், சவுராஷ்டிர பிராமணன், வைசியன், சூத்திரன், ஆதிதிராவிடன், ஒடுக்கப்பட்டவன், பிற்பட்டவன் என்று கலம் போட்டு பிரித்து சட்டசபைக்குத் தெரிவிப் பாரானால் அவரது புத்திக் கூர்மையை என்னவென்று சொல்லக்கூடும். நமக்கு இதைப்பற்றி அதிகமாக எழுத பல ஆதாரங்களும் ஆத்திரங்களும் இருந்தாலும் அடுத்தாப் போல் கூடும் சட்டசபை கூட்டத்தில் இக்குற்றத்தை உணர்ந்து சூத்திரன் என்ற வார்த்தை உபயோகித்ததற்கு வருந்தி அவ்வார்த்தையை தாம் உபயோகித் திருக்கிற அரசாங்க ஆதரவிலிருந்து எடுத்து விட நமது டாக்டர் சுப்பராய



RangaRakes tamilnavarasam.com

கவுண்டருக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்து அதில் அந்தபடி நடக்காவிட்டால் பிறகு மற்ற விவரங்கள் எழுதலாம் என்கிற எண்ணத்துடன் இதை இத்துடன் முடிக்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 30.10.1927**



# ஸ்ரீமான் காந்தி

ஸ்ரீமான் காந்தி அவர்களுக்கு இப்போது அழைப்புமேல் அழைப்பு வரத்தொடங்கி விட்டது. ஒவ்வொரு ஊர் ராஜாக்களும் வரவேற்கிறார்கள். ரயில்வே வியாபாரிகள் போன்று ஐரோப்பியர்கள் எல்லோரும் வரவேற்கிறார்கள். சர்க்கார் அதிகாரிகள் வரவேற்கிறார்கள். ராஜப் பிரதிநிதி வரவேற்கிறார், அழைக்கிறார். நமது நாட்டுப் பார்ப்பனர்களும் தாசானுதாசராய் இருக்கிறார்கள். ஆகவே அவர் அவ்வளவு தூரம் ஐரோப்பிய அரசாங்கத்திற்கும், ஐரோப்பிய வியாபாரிகளுக்கும், பார்ப்பனர்களுக்கும் பரமானந்த சாதுவாக ஆகிவிட்டார் என்பது நன்றாய் விளங்குகின்றது. இப்படி ஐரோப்பியருக்கும், பார்ப்பனருக்கும் பரமானந்த சாதுவாயும் வரவேற்றுக்கொண்டாடத்தக்க வராகவும் ஒருவர் இருந்தால் அவரால் நாட்டுக்கு என்னவிதமான நன்மை விளையக்கூடும்? மேல் கொண்டு இக்கூட்டத்தாரால் நசுக்குண்டு வாழும் கோடிக்கணக்கான ஐரோப்பியரல்லாத - பார்ப்பனரல்லாத ஏழை மக்களுக்கு என்ன பலன் உண்டாகக்கூடும்? ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு அரிசி பதம் பார்த்தால் போதும் அல்லவா?

**குடி அரசு - கட்டுரை - 30.10.1927**



RangaRakes tamilnavarasam.com

# ஆதித்திராவிட மகாநாடு

காட்பாடிக்கடுத்த பிரம்மாபுரம் என்கிற ஊரில் ஸ்ரீமான் ராவ்பகதூர் M. C. ராஜா M.L.A. அவர்கள் அக்கிராசனத்தின் மீது கூட்டப்பட்ட ஆதிதிராவிட மகாநாட்டில் தலைவர் செய்த உபந்யாசத்தின் முக்கிய நோக்கத்தை வேறு இடத்தில் பிரசுரித்திருக்கிறோம். அதில் மனுதர்ம சாஸ்திரத்தை கொளுத்தி சாம்பலாக்க வேண்டும் என்பதாகப் பேசியிருப்பதுடன் அதை பறிமுதல் செய்யவேண்டும் என்று தீர்மானமும் செய்திருப்பதானது அச்சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள சுயமரியாதையை விளக்குகிறது. தவிர வீதியில் நடக்க உரிமை வேண்டும் என்று வேண்டிக்கொண்டிருக்கும் தீர்மானமும் அது போன்ற மற்றும் மனித உரிமை கேட்கும் தீர்மானமும் இந்த நாட்டில் மக்கள் சுய மரியாதையடைவதற்கு தகுந்த யோக்கியதை இல்லையென்று காட்டுவதற்கு உதவியாயிருக்கின்றது. எனவே சுயமரியாதை பெற்ற பிறகுதான் சுயராஜ்யம் என்பதைப்பற்றி யோசிக்க இடமுண்டு என்பதற்கு இந்த ஆதிதிராவிட மகாநாடே போதுமான அத்தாக்ஷியாகும் என்பது நமது அபிப்பிராயம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 30.10.1927**



# எங்கும் சுயமரியாதை சத்தியாக்கிரகம்

தென்னாட்டில் மாத்திரமல்லாமல் இந்தியநாடு முழுவதிலுமே இது சமயம் சுயமரியாதை உணர்ச்சி பெருகி வருகின்றதை பார்க்க ஒரு சிறு கூட்டத்தாரான பார்ப்பனர்களைத் தவிர மற்ற எல்லோருக்கும் ஆனந்தத்தை விளைவிக்கும் என்றே எண்ணுகிறோம். கொஞ்ச நாளைக்கு முன்பு வடதேசத்தில் உள்ள படகு ஓட்டும் கூட்டத்தாரான செம்படவர்கள் ஒன்று சேர்ந்து, தங்களை தீண்டுவதில்லை என்கின்ற வகுப்பாருக்கு படகு ஓட்டுவதில்லை என்று கட்டுப்பாடு செய்து கொண்டது யாவருக்கும் ஞாபகமிருக்கலாம். மறுபடியும் திருவாங்கூர் ராஜ்ஜியத்தில் சத்தியாக்கிரஹம் ஆரம்பித்ததும், அதற்கு ஸ்ரீமான் காந்தி மத்தியஸ்தராயிருந்து அரசாங்கத்தார் சீக்கிரம் அனுகூலம் செய்வார்கள் என்று ஒப்புக்கொண்டு இருப்பதும், புராணம், சாஸ்திரம் முதலிய குப்பைகளை எரிப்பதுடன் மதாச்சாரியார்கள் என்பவர்களையும் பஹிஷ்கரிக்க வேண்டுமென்று பம்பாய் மாணவர்கள் ஒன்றுகூடி தீர்மானித்ததும், சென்னையிலும் அதுபோலவே பார்ப்பனரல்லாத வாலிப மகாநாட்டில், மனிதனின் சுயமரியாதைக்கு விரோதமான மனுதர்ம சாஸ்திரம், புராணம் இவைகளை சர்க்காரார் பறிமுதல் செய்ய வேண்டுமென்று தீர்மானம் செய்ததும், தாழ்ந்த ஜாதி, தீண்டாத ஜாதி, சூத்திரன் ஆகிய வார்த்தைகளை உபயோகித்தால் அவர்களை கிரிமினல் சட்டப்படி தண்டிக்க சட்டம் ஏற்படுத்த வேண்டு மென்று சொன்னதும், ஆதிதிராவிடர்கள் என்கிற கூட்டத்தார் மகாநாட்டிலும் வர்ணாசிரம தர்மத்தை போதிக்கும் ஆதாரங்களையெல்லாம் பறிமுதல் செய்யவேண்டுமென்று பேசியதும் தீர்மானித்ததும் மற்றும் பார்ப்பனரல்லாத வாலிபர் மகாநாட்டிலும் கும்பகோணம் நாடார் சமூக மகாநாட்டிலும் சுயமரியாதை சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவளித்ததும், பம்பாயிலுள்ள பல மக்களும் கோயிலுக்குள் போக சத்தியாக்கிரகம் ஆரம்பித்திருப்பதும் மற்றும் அங்குள்ள தமிழ் மக்கள் பம்பாயிலுள்ள சென்னைப் பார்ப்பனர்கள் ஓட்டல்களில் உள்ள வித்தியாசத்தை ஒழிக்க, ஜாதி சம்ஹார சக்கிர சங்கத்தார் சத்தியாக்கிரகம் செய்ய முன்வந்திருப்பதும், மற்றும் பம்பாயிலுள்ள பனஸ்வதி என்கின்ற ஆலயத்தில் தரிசனம் செய்ய ஆவலுள்ள யாரையும் உள்ளே விடாததற்காக அக்கோவிலையே பகிஷ்கரிக்க வேண்டுமென்று முடிவு செய்ததும், மகத் என்கின்ற இடத்தில் உள்ள பொது குளத்தில் ஒரு கூட்டத்தாரை ஸ்நானம் செய்ய வொட்டாமல் தடுப்பதை ஒழிக்க டிசம்பர்



RangaRakes tamilnavarasam.com

மாதம் 25 உ முதல் சத்தியாக்கிரகம் செய்யப் போவதாய் ஏற்பாடு செய்து 500 ரூ. வசூலாயிருப்பதாயும், பல தொண்டர்களும் சேர்ந்திருப்பதாகவும் தினப்படி பத்திரிகைகளில் காணப்படுகின்றன. இது மாத்திரமல்லாமல் சமூகங்களி லுள்ள சில கொடுமைகளையும் விலக்குவதற்காக பெண்களைத் தயாரிப்ப தான பொட்டுக்கட்டும் வழக்கத்தை ஒழிக்க செங்குந்த சங்கங்களும், சட்ட சபை மசோதாக்களும் பறந்து கொண்டு மிருக்கின்றன. மது விலக்குக்கும் எங்கும் முயற்சிகளும் நடந்து வருகின்றன. ஆகவே, நாட்டின் சுயமரியாதைக் கும் ஒழுக்கத்திற்குமான வேலைகள் தீவிரமாய் நடை பெறுவதுடன் இன்ன மும் ஒவ்வொருவருடைய கவனமும் உணர்ச்சியும் இதிலேயே செல்லும் குறிகளும் காணப்படுகின்றன.

இப்படி உலகம் முன்னேறிக் கொண்டிருக்கும் நாளையில் நம்நாட்டுப் பார்ப்பனர்களின் யோக்கியதை எப்படி இருக்கின்றதென்று பார்ப்போமானால் இவைகள் ஒவ்வொன்றுக்கும் முட்டுக்கட்டையாய் இருந்துகொண்டு மதம் போச்சு, கடவுள் போச்சு, கோவில் போச்சு, குளம் போச்சு, நாஸ்திகமாச்சுது என்பதாக ஓலமிட்டுக்கொண்டு மக்களை ஏமாற்றிப் பிழைக்கப் பார்க்கின் றார்கள். மக்களின் சுயமரியாதைக்கும் ஒழுக்கத்திற்கும் ஏற்படுத்துகிற இயக் கங்களை வைதுகொண்டு, அதை அழிப்பதற்கும் முயற்சி செய்து கொண்டு, முட்டாள்களையும், அயோக்கியர்களையும், வயிற்றுச் சோற்றுக் கூலி களையும் பொறுக்கி எடுத்துத் தங்களுடன் சேர்த்துக்கொண்டு, அவர்க ளுக்குக் காசு, பணம், பட்டம், பதவி மற்றும் என்னென்னவோ முதலியவை களை உதவி, இவற்றின் மீது ஏவிவிட்டு நாட்டில் கலகம் விளைவிப்பதும், மக்களுடைய கவனத்தை தப்பு வழியில் இழுத்து விடுவதுமான கொடுமைகள் ஒரு பக்கம் செய்து கொண்டு மற்றொரு பக்கம் காங்கிரஸ் என்றும், சுயராஜ்யம் என்றும் பித்தலாட்டப் பெயர்களை வைத்துக் கொண்டு திருட்டுத்தனமாய் சர்க்காருக்கு உள் ஆளாய் இருந்து உத்தியோகங்கள் பெற்று, மாதம் 1000, 2000, 5000 சம்பளம் பெறுவதில் கவனம் செலுத்திக்கொண்டு ஈன வாழ்வு வாழ்வ தையே பொதுநல சேவையாய் காட்டிக் கொண்டுமிருக்கிறார்கள். அத்தோடு அவர்கள் இழிதொழில் நிற்கின்றதா என்று பார்த்தால் இல்லவே இல்லை.

இவ்வளவு அக்கிரமங்களையும் செய்துகொண்டு இருப்பதல்லாமல் இதை யாராவது வெளியில் எடுத்துச் சொன்னால், அவர்களை வகுப்பு துவேஷக்காரர்கள் என்றும், அசுரனென்றும், ராக்கதனென்றும் சொல்லி விஷமப் பிரசாரம் செய்வதுமாயிருக்கின்றார்கள். இந்த விஷயங்களை உணருவதற்கு நமது நாட்டு மக்களுக்கு புத்தி இல்லாமல் இனியும் அப் பார்ப்பனர்களை நத்திக்கொண்டு பிழைக்கவே ஆசைப்படுகின்றார்கள். இந்த மக்களைப் பார்க்கும் போது ஒரு வேசி வீட்டில் உள்ள வாலிபன் ஒருவன் வேசியான தன் தாயா ருக்கோ தமக்கைக்கோ ஆட்களைக் கூட்டிக்கொண்டு போவதையும், தூதுக் கடிதங்கள் கொண்டு போய்க்கொடுத்துப் பதில் வாங்கி வருவதையும் பார்ப் பது நமக்கு ஆச்சரியமாய்த் தோன்றவில்லை.



ஏனெனில் ஒரு பெரும் சமுகத்திற்கே இவ்வளவு பெரிய இழிவு செய்து கொண்டிருக்கும் பார்ப்பனனிடம் கூடிக்கொண்டு அவ்விழிவுகள் தொலைய ஏற்படுத்தப்படும் இயக்கங்களுக்கு விரோதமாய் இருக்க மனம் சம்மதித்த ஒருவனுக்கு மேற்சொன்ன தூதுக்கடிதம் பெற்று போய்வருவது கஷ்டமான காரியமாயிருக்குமென்று நமக்குத் தோன்றவில்லை.

நிற்க, நமது ஒழுக்க முன்னேற்றத்திற்கு பார்ப்பன முட்டுக்கட்டை எவ்வளவு தூரம் துணிவு பெற்று இருக்கின்றது என்பதைக் காட்ட ஒரு சிறு உதாரணத்தைச் சொல்லுகிறோம். அதாவது ஸ்ரீமதி முத்துலக்ஷிமி அம்மாள் விபசாரத்திற்கு பெண்களை விடும் – கோவில் பேரால் பொட்டுக்கட்டும் – வழக்கத்தை ஒழிக்கக் கொண்டுவந்த மசோதாவுக்கு எதிர் பிரசாரம் செய்யப் புறப்பட்ட சுயராஜ்யக் கட்சியும் அதன் உயிர் நாடியுமான ஸ்ரீமான் சத்திய மூர்த்தி அய்யர் அவர்கள் இதைப்பற்றி பேசும்போது என்ன சொல்லுகிறார் என்றால் **“பொட்டுக்கட்டுதல் என்பது மத ஆட்சாரமும் குல தரும முமாயிருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. கோவிலில் நாட்டியம் முதலிய பணிகள் செய்வதற்கு தேவதாசிகள் ஏற்பட்டிருக்கிறார்கள், எனவே இது மத சம்மந்தமான விஷமாய் இருக்கின்றது. இம்மாதிரி மத சம்பந்தமான விஷயங்களில் பிரவேசித்து இன்று பொட்டுக்கட்டுவதை ஒழிக்கவேண்டுமென்று சொல்ல முன் வருவோமானால், மற்றொருபுறம் ஈ.வெ.ராமசாமி நாயக்கரும் வரதராஜுலு நாயுடுவும் கோவிலுக்குள் குருக்கள் ஒழிக்கப்படவேண்டுமென்று சொல்லுகின்றார்கள். ஆதலால் இம்மாதிரி விஷயங்களில் நாம் தலையிட்டுக்கொள்ளக்கூடாது”** என்று பேசினாராம். இதிலிருந்து பார்ப்பனர்கள் நமது நாட்டு ஒழுக்கத்திற்கும் சுயமரியாதைக்கும் எவ்வளவு தூரம் எதிரிகளாயிருக்கின்றார்கள் என்பது விளங்காமல் போகாது. விபசாரம் கூடாது என்றால் அதை ஒழிப்பது மதத்துக்கு விரோதம் என்று சொல்லுவார்களானால், அம்மாதிரி மதத்திற்கு நமது நாட்டில் என்ன வேலை என்று கேட்கின்றோம். அவ்விபசார ஸ்திரீகளை வேண்டி இருக்கின்ற கோவிலும் சாமிகளும் நமது நாட்டில் எப்படி வைத்துக் கொண்டிருக்கத் தக்கனவாகும் ?

பார்ப்பனப் புரட்டுப்படி நமது மதத்திற்கும் சாமிகளுக்கும் வேண்டாத இழிவான காரியங்கள் எது நமது நாட்டில் இருக்கின்றது ? தினம் ஆயிரக் கணக்கான ஆடுகளும், மாடுகளும், எருமைக் கிடாக்களும், கோழிகளும் பன்றிகளும் வெட்டப்படுவது இந்து மதக் கடவுள்களின் பேரினாலல்லவா என்று கேட்கின்றோம். தினம் ஆயிரக்கணக்கான கல்லுக்குடங்களும் சாராயப் புட்டிகளும் கஞ்சா அபின் உருண்டைகளும் படைப்பது இந்துமதக் கடவுள் கள் பேராலா அல்லவா என்று கேட்கின்றோம்.

சிவநேயச் செல்வர்கள் ஒரு புறம் ஜீவகா ருண்ணியப் பிரசாரம் செய்து வருவதும் சக்தி (காளி) நேயச் செல்வர்கள் ஒரு புறம் கள்ளும், மாம்சமும்



RangaRakes tamilnavarasam.com

வைத்துப் படைப்பதும் இந்து மதக் கடவுள்கள் பேராலல்லவா என்று கேட்கின்றோம்.

கோவில்களுக்குள் சாமிக்கு நாட்டியமாட என்பதாக அலங்கரித்துக் கொண்டு வந்து, சாமி கும்பிட வந்த பக்தனுக்கு பாதி கொங்கையைக் காட்டி கண்சிமிட்டி ஜாடை செய்து வீட்டிற்கு கூட்டிப்போய் அவனுக்கு மேக நோயைக் கொடுத்து மடியிலிருக்கும் பணத்தைப் பிடிங்கிக் கொண்டு வெளியில் தள்ளுவது இந்து மத சாமியின் பேராலா அல்லவா என்று கேட்கின்றோம்.

மக்களுடைய வீடு வாசல்களில் நடக்கும் கல்யாணங்களிலேயே நாட்டியம் கூடாது, அது ஒழுக்கயீனம் ஆவதுடன் மக்களை தப்பு வழியில் நடக்கச் செய்கின்றது என்று நாட்டில் பிரசாரம் நடந்து கொண்டிருக்கும் போது, கோவிலில் சாமிக்கு நாட்டியம் வேண்டும். அது மத சம்பிரதாயம் என்று சொல்லுவதானால் அதில் எவ்வளவு போக்கிரித்தனம் நிறைந்திருக்க வேண்டும் என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது. மதத்திற்கும் சாமிக்கும் பெண்கள் நாட்டியமும், பெண்கள் பணிவிடையும் வேண்டியது அவசியமானால், அந்தச் சாமியைக் கும்பிடும் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டிலுள்ள பரிசுத்தமான பெண்களை விட்டு ஆடவும், பாடவும், பணி விடைகள் செய்யவும் ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது என்று கேட்கிறோம்.

கடவுள், பல புருஷர்களைக் கணவனாய்க் கொண்டே பிழைக்க வேண்டிய ஸ்திரீகளைவிட, ஒரு புருஷனையே கணவனாய்க் கொண்டு பிழைக்க வேண்டிய ஸ்திரீயின் ஆட்ட பாட்ட பணிவிடைகளை ஏற்க மாட்டாரா என்று கேட்கின்றோம்.

எந்த வழியில் பார்த்தாலும் நமது நாட்டுக்கு ஒழுக்கமும், சுயமரியாதை யும் ஏதாவது ஒரு காலத்திலாவது ஏற்பட வேண்டுமானால் பார்ப்பனர்கள் வயிற்றுப் பிழைப்புக்காகவே அவர்களால் சிருஷ்டித்துக் கொண்ட கூட்டுக் கொள்ளைத் தந்திரமாகிய இந்து மதம் என்னும் மாயத்தை ஒழித்தேதான் தீர வேண்டும் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் காட்ட முடியாது.

**குடி அரசு - கட்டுரை - 06.11.1927**



# ராயல் கமீஷன் ஒரு கூட்டுக் கொள்ளை

## I

இந்தியாவுக்கு இன்னமும் ஒருமுறை சீர்திருத்தமளிப்பதற்காக, நாட்டின் நிலையை விசாரிக்க என்பதாக, ஒரு கமீஷனை சர்க்காரார் நியமிக்கப் போகிறார்களாம். இந்தக் கமீஷனில் பலர், தாங்கள் தாங்கள் அங்கத்தினர் களாக வேண்டுமென்கின்ற ஆசையின் பேரில் “அரண்மனை நெல்லுக்கு பெருச்சாளிகள் சண்டை போட்டுக்கொள்வதுபோல்” தலைவர்கள் ஆளுக் காள் முந்துகின்றார்கள். சர்க்காரும், யாரை நியமிப்பது யாரை விட்டு விடுவது என்கிற கவலையில் மிகுதியும் ஆழ்ந்திருக்கின்றார்கள். ஏனெனில் யாராவது செல்வாக்குள்ள மனிதர் பெயர் அதில் விடுபடுமானால் அவர் மற்றவர்களை சேர்த்துக் கொண்டு கமீஷனை பஹிஷ்கரிப்பதாகவோ சீர்திருத்தத்தை பஹிஷ்கரிப்பதாகவோ கலகம் செய்தால் என்ன செய்வது என்கின்ற பயம் ஒரு புறமும், ஜனங்களிடம் செல்வாக்கில்லாதவரை நியமிக்க நேரிட்டு விட்டால் கமிட்டிக்கு மரியாதை இல்லாமல் போகுமே என்கின்ற பயம் மற்றொரு பக்கமாகவும் இருந்து கொண்டு ஊஞ்சலாடுகிறார்கள். இந்த நிலை யில் தலைவர்களும், தேசீயச் சங்கங்கள் என்கின்றவர்களும் கமீஷனைப் பற்றி முடிவாக யாதொரு அபிப்பிராயமும் சொல்வதற்கில்லாமல் சுவற்றுமேல் பூனை போலிருக்கிறார்கள்.

ஆகவே, இந்தக் கமீஷன் என்பது தலைவர்கள் என்போர்களுக்கும், சர்க்காருக்கும் ஒரு சூதாட்டம்போல் நடைபெறுவதாயிருக்கின்றதே தவிர மற்றபடி நாட்டிற்கோ மக்களுக்கோ எவ்வித நன்மையான பலனும் அளிக்கப் போவதில்லை என்பதோடு அநேக கெடுதிகளையும் உண்டாக்கப் போகின்றது என்பது மாத்திரம் உறுதி.

என்னவென்றால் ஷை கமீஷன்படி மற்றொரு புதிய சீர்திருத்தம் என்ப தாகச் சொல்லிக் கொண்டு நமது அரசாங்க அமைப்பு என்பது சிறிது மாறுதல் அடையக் கூடும் என்பதில் சந்தேகமில்லை. அந்த மாறுதல் என்னமா யிருக்குமென்று யோசிப்போமானால் இன்னம் கொஞ்சம் சட்டசபை அங்கத்தி னர்கள் அதிகமாவார்கள். அதாவது நமது மாகாணத்திற்கு இப்போது இருக்கும் 125 சட்டசபை மெம்பர்கள் குறைந்தது 250 மெம்பர்களாகவாவது



RangaRakes
tamilnavarasam.com

பெருகுவார்கள். இப்போது இருக்கும் 3 மந்திரிமார்கள் 5 அல்லது 6 மந்திரியாகவாவது பெருகுவார்கள். அல்லது இப்போது ஒரு மாகாணமாயிருக்கும் சென்னையும் அதிலுள்ள ஒரு கவர்னரும் குறைந்தது 2 மாகாணமாகவாகிலும் ஆக்கப்பட்டு இரண்டு கவர்னர்களுக்கு குறையாமல் ஏற்படுவார்கள். மற்ற மாறுதலும் இது போலவே இருக்கும். ஆனால், சம்பளங்கள் மாத்திரம் சுலபத்தில் குறையாது. அல்லாமலும் வெள்ளைக்காரர்கள் அநுபவிக்கும் உத்தியோக எண்ணிக்கையிலும், சம்பள அளவிலும் ஒரு சிறிதும் குறையாது என்பதோடு சீர்திருத்தத்தின் பலனாய் அவர்களுக்கு இன்னமும் பல உத்தியோகங்கள் ஏற்படும். தவிர, ஒன்று இரண்டு பங்காய் பெருகி சட்டசபை மெம்பர்கள் மந்திரிகளை நியமிக்க ஓட்டர்களாயிருப்பதும், அந்த ஓட்டு கொடுத்த பிறகு அதற்கு விலையாகத் தங்கள் சுயநலம் தேடிக் கொள்வதல் லாமல் வேறு என்ன தேசத்துக்கோ மக்களுக்கோ இவர்களால் செய்ய முடிகின்றது. எனவே, இதைத்தான் சீர்திருத்தத்தின் முடிவு என்று இப்போதே ஒருவாறு சொல்லி விடலாம்.

மற்றபடி நமக்கு இன்னும் சில அதிகாரங்கள் கொடுப்ப தென்பது ஒரு முக்கியமாக மக்களுக்குத் தோன்றலாம். நம்முடைய யோக்கியதையை அறிந்த சர்க்கார் நமக்கு எவ்வளவு அதிகாரத்தை வேண்டுமானாலும் நமக்குக் கொடுக்கக் கூடும். அதினால் ஒன்றும் சர்க்காருக்கு கஷ்டம் ஏற்பட்டுவிடாது. நமக்கும் அதனால் யாதொரு லாபமும் இருக்கும் என்று ஒப்புக்கொள்ளவும் முடியாது. ஏனெனில் கொடுத்துள்ள அதிகாரத்தைப் பொறுத்த வரையில் நமது நிலை என்ன? அது சர்க்காருக்கு என்ன நஷ்டத்தை உண்டாக்கிற்று? நமக்கு எப்படி அது உபயோகப்பட்டிருக்கின்றது? என்று பார்த்தால் இனி வரக் கூடிய அதிகாரத்தின் யோக்கியதை நன்றாய் விளங்கும்.

மந்திரிகளின் அதிகாரங்களை முதலில் எடுத்துக்கொள்வோம். ஸ்தல ஸ்தாபன அதிகாரங்கள், மந்திரிகளுக்கு அதாவது ஜனப்பிரதிநிதிகளுக்கு கொடுத்ததால் ஏற்பட்ட லாபம் என்ன என்று பார்த்தால் மாகாணத்தில் உள்ள முனிசிபாலிட்டிகள், ஜில்லா போர்டுகள், தாலுகா போர்டுகள் எல்லாம் அவ் வவைகளுக்கு வரும், வர முயலும் தலைவர்களை எல்லாம் அயோக்கியர் களாகவும், நாணயக் குறைவுள்ளவர்களாகவும் செய்ததல்லாமல் ஒரு மனிதனையாவது யோக்கியனாயிருக்கும்படி செய்ய முடிந்ததா என்று கேட்கிறோம். இதை மேல் பார்க்கும் மந்திரிகளின் யோக்கியதை என்ன என்று பார்த்தால் இந்த தலைவர்கள் செய்யும் அயோக்கியத்தனத்தையும், நாணயக் குறைவுகளையும் அடக்கா விட்டாலும், அவர்கள் அடிக்கும் கொள்ளைகளில் பங்கு வாங்காமல் இருக்கிறார் என்றாவது ஜனங்கள் சந்தேகப்படுவதற் கில்லாமலிருந்தால் அதுவே போதுமானது என்று நினைக்கும் படியாகத்தான் நடந்து வருகிறது.

நியமன ஊழல்களைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. எங்கு



பார்த்தாலும் அவன் மந்திரிக்கு பணம்கொடுத்து நியமனம் பெற்றான், இவன் மந்திரிக்கு கடன் கொடுத்து நியமனம் பெற்றான். அவன் மந்திரிக்கு வேண்டி யவனான இன்னொருவனுக்கு பணம் கொடுத்து நியமனம் பெற்றான், அவன் இன்ன பெண் தயவு பிடித்து நியமனம் சம்பாதித்தான் என்று கடைத்தெருவில் ரொட்டி, பிஸ்கோத்து விற்பதுபோல விஷயங்கள் அடிபடுகின்றதே அல்லா மல் கவுரவம் கொடுத்து யாராவது பேசுகின்றார்களா? அல்லது ரகசியமாயா வது பேசுகின்றார்களா? என்றாவது பார்ப்போமானால் இல்லவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அன்றியும் இச்சீர்திருத்தத்தின் பலனாய் திருடுகிறவர்கள் எல்லோரும் அயோக்கியர்களெல்லோரும், ஜனங்களால் மதிக்கப்படுகின்றார்களேயல்லாமல் அவர்களைப் பழிப்பவர்கள் ஒருவர்கூட இல்லை. எங்காவது அத்தி பூத்தது போல் அந்த இலாக்காவில் ஒரு யோக்கியர் இருந்துவிட்டால் அவர் இந்த சர்க்காராலும், மந்திரியாலும் மிகுதியும் அவமானப்படுத்தப்படுகின்றாரேயல்லாமல் அவரை மதிப்பவர்களே இல்லை. இனியும் இதைப்பற்றி பொது ஜனங்களால் சொல்லிக்கொள்ளப்படும் அசிங்கியங்களை பாக்கி வைத்துக் கொண்டு மற்றதை கவனிப்போம். அடுத்த படியாக நமக்கு கல்வி சம்பந்தமாக கொடுத்திருக்கும் அதிகாரங்களிலும் யாதொரு பிரயோஜனமில்லை.

உதாரணமாக எந்தக் கல்வி படித்தாலும் படித்துவிட்டு எவன் காலை யாவது கட்டி மானம், மனச்சாட்சி, சத்தியம், தேசம் அவனது பெண்டு பிள்ளை, கற்பு ஆகிய எதையும் விற்கத் தயாராயிருந்தாவது வயிறு வளர்க்க வேண் டுமே, உத்தியோகம் சம்பாதிக்க வேண்டுமே, பதவி பெற வேண்டுமே, மேலே போக வேண்டுமே என்கின்ற கவலையோடு சதா சர்வகாலம் வாழத்தக்க தாயிருக்கின்றதே தவிர சுயமரியாதையுடன் யோக்கியமான வழியில் பிழைப் பதற்கு ஒரு கடுகளவாவது இக்கல்வி பிரயோஜனப்படும்படி மாறி இருக் கின்றதா, மாற்றப்பட முடிகின்றதா என்று பார்ப்பதானால் அதன் உண்மை யாருக்கும் விளங்காமல் போகாது.

இனி மது சம்மந்தமான அதிகாரம் நமக்கு கொடுத்திருக்கிறார்கள் என்கின்றோம். இதனால் என்ன மாறுதல் நமது நாட்டில் இதுவரை ஏற்பட்டி ருக்கின்றது என்று இந்த அதிகாரம் நமது கைக்கு வருமுன் குடித்துக் கொண் டிருந்த ஜனங்களைவிட ஒரு குழந்தை கூட குடிப்பவர்கள் எண்ணிக்கையில் குறையவே இல்லை. பின்னும் அதிகமாயிருப்பதாகக் கூட சொல்லலாம். அது வருமானத்தைப் பார்த்தாலே தெரியவரும். கடைகளின் எண்ணிக்கையும் பெருகி சந்து பொந்து முதலிய இடங்களிலெல்லாம் லைசென்சு இல்லாமலே விற்கப்படுகிறது. கள்ளுக்கு மரங்களும் கட்டப்படுகிறது. அந்த இலாக்கா மந்திரிகளாவது குடிக்காமலிருக்கிறார்களா? குடிப்பது தப்பு என்று எண்ணு கிறார்களா என்பதே சந்தேகப்பட வேண்டியதாயிருக்கின்றது. ஏனென்றால் மதுவைப் பற்றி அந்த மந்திரிகள் பேசுவதைப் பார்த்து அந்த மாதிரி சந்தேகப் பட வேண்டியிருக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

மற்றபடி நமது நாட்டுக்கு மிகுதியும் முக்கியமானதாகியது கைத் தொழில் விஷயம். அந்த இலாகாவும் நமது கைக்கு வந்திருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். இதனால் என்ன லாபம் ஏற்பட்டிருக்கின்றது? என்ன விதமான கைத்தொழில் நமது நாட்டில் வளர்ந்திருக்கின்றது? முன் இருந்ததை விட இப்போது குறைந்து வந்திருக்கின்றதேயல்லாமல் கடுகளவாவது விர்த்தியாகி இருக்கின்றதா? அந்த இலாகா மந்திரியாவது கைத்தொழில் என்றால் எதை நினைத்துக்கொண்டிருக்கிறார் என்பதே ஜனங்கள் அறிந்து கொள்ள முடியவில்லை. யந்திரங்கள் வளர்ந்து கொண்டேதான் போய்க் கொண்டிருக்கின்றது. வாரம் லட்சம் கூலிகளுக்கு மேல் நம் நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்குப் போய்க் கொண்டிருக்கின்றனர். இதை அறிந்த நமது பிரதிநிதிகள் என்பவர்களும் யந்திரங்களையே ஆதரிக்கின்றார்கள்.

அடுத்தபடி மதவிஷயம். அதுவும் நமது கைக்கு வந்திருக்கின்றது என்கின்றார்கள். இதில் என்ன மாறுதல் நடந்திருக்கின்றது. அந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் அந்த மதக் கோயில்களில் போய் கடவுளைத் தரிசிக்க உரிமை இல்லை. தெருவில் நடப்பதற்கு உரிமை இல்லை. இன்னும் மதத்தின் பெயரால் நடக்கும் விபசாரம் முதலிய கொடுமைகளைக் கூட நீக்க யோக்கியதை இல்லை. அதைப் பற்றி பேசக்கூட அந்த இலாகா மந்திரி என்பவருக்குத் தைரியமில்லை.

மற்றபடி, சீர்திருத்தங்களின்படி இந்தியர்களுக்கு நிர்வாக சபையில் உத்தியோகம் கிடைத்த பலன் என்ன என்று பார்ப்போம்.

சட்ட சம்மந்தமான அதிகாரம் இந்திய நிர்வாக சபை மெம்பருக்கு கிடைத்ததின் பலன் சட்ட சம்மந்தமான இடத்திலெல்லாம் மற்றும் அவர் ஆதிக்கத்தில் உள்ள இடத்திலெல்லாம் பார்ப்பனர்களை கொண்டுபோய் நிரப்புவதும், பார்ப்பனர்களுக்கு வேலை புதிதாக உண்டாக்கிக் கொடுப்பதும், அவ்வேலையின் கருத்தாக முடிந்ததேயல்லாமல் வேறு என்ன என்று யாராவது சொல்ல முடியுமா? அன்றியும் பார்ப்பனரல்லாத மக்களை இழிவுபடுத்தவும் கொடுமைப்படுத்தவும், எவ்வளவு தூரம் சர்க்காருக்கு இந்த நாட்டைக் காட்டிக்கொடுத்து இந்த நாட்டின் செல்வத்தை வெளிநாட்டிற்கு அனுப்பி ஒற்றறாக இருக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் இருக்கத் துணிவது என்பதைத் தவிர வேறு ஏதாவது உணர்ச்சி அந்த உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உண்டாகின்றது என்று யாராவது சொல்லக்கூடுமா? அல்லது சட்ட உத்தியோகம் இந்தியர்களுக்கு கிடைத்ததின் பலனாய் மக்கள் நாணயமான முறையில் நீதி அடைய முடிகின்றதா? ஒரு வாழைக்காய் பாக்கி வரவேண்டுமென்று பிராது போட்டால் இரண்டு கத்திரிக்காய் லஞ்சம் கொடுக்கத் தயாராயிருந்தாலொழிய நியாயம் கிடைக்க மார்க்கமில்லை.



அன்றியும் இந்திய நிர்வாகசபை மெம்பர்களுக்கு இந்தியப் பண விஷயத்தில் எவ்வளவு அக்கரை உண்டு என்று யோசிப்போமானால், தன்னுடைய அதிகாரம் இன்னும் கொஞ்ச நாளைக்கு நீடிக்கவும் தான் செய்கின்ற அயோக்கியத்தனமான காரியங்கள் செல்லு படியாகவும் வேண்டி வெள்ளைக்காரர்களுக்கு மேலும் மேலும் நல்லப் பிள்ளையாக வேண்டுமென்கின்ற கருத்துக் கொண்டே நமது பணம் நம்ம தொழிலாளிகளுக்கும், கூலிக்காரர்களுக்கும், நமது நாட்டு சாமான்களுக்கும், உபயோகப்பட முடியாமல் செய்து கோடிக்கணக்கான ரூபாய்களை ஏழைகள் மனம் பதறப் பதற வெளிநாட்டிற்கு அதுவும் வெள்ளைக்காரருக்கே போய்ச் சேரும்படி செய்யத் துணிவு கொண்டு, உள்நாட்டுச் சுண்ணாம்புக்கு பதிலாக வெளிநாட்டு சுண்ணாம்பும் கூலிக்காரர்கள் கையால் வேலை செய்யச் செய்து அவர்கள் ஜீவனத்திற்கு கூலி உதவுவதைவிட யந்திரங்களை தருவித்து அதன் மூலம் வெள்ளைக்காரருக்கு அளவில்லாத லாபம் கொடுத்து, கூலிகள் வயிற்றில் மண்ணைப் போடுவதும் தவிர வேறு என்ன செய்ய முடிகின்றது. வாரம் ஒன்றுக்கு லட்சக்கணக்கான கூலி ஆட்கள் நம் நாட்டை விட்டு வேலையில்லாமல் வெளிநாட்டிற்குப் போவது இவர்களுக்குத் தெரியாததென்று சொல்ல முடியுமா? அன்றியும் இதன் மூலம் அவ்வதிகாரிகளுக்கு ஏற்படும் எந்த பழிப்புக்காவது இழிவுக்காவது பயப்பட இடம் கொடுக்கின்றதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. இனி மற்றவைகளைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை.

சீர்திருத்தத்தால் ஏற்பட்ட இவ்வளவு கெடுதிகளும் அல்லாமல் மக்களுக்கு பொதுவில் ஏதாவது பலன் உண்டா என்று பார்த்தால், சீர்திருத்தம் பெருக பெருக வரியும், வழக்கும், ஒழுக்கக் குறைவும், ஒற்றுமைக் கேடும், பஞ்சமும், நாட்டின் மீது அதிகமான கடனும் மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டு வருகிறதேயல்லாமல் வேறு ஏதாவது நன்மை செய்ய முடிகிறதா என்றால் ஒன்றுமே இல்லை. சர்க்காருக்கு இதனால் ஏற்படும் அனுகூலம் இன்னது என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. எனவே, இந்த சீர்திருத்தங்களின் பலன் இன்ன குறிப்பிட்ட மனிதரின் சொந்த குறிப்பிட்ட குணங்களால் தான் இந்த ஸ்திதிக்கு வந்தது என்று சொல்லுவதற்கில்லாமல், யார் இச்சீர்திருத்தத்தை ஏற்று நடத்துவதாயிருந்தாலும் ஒவ்வொருவரும் அப்படித் தான் செய்ய முடியும், செய்யத்தூண்டும் என்கிற மாதிரியிலிருக்கின்றது என்பதற்காகவே இவற்றை விளக்கினோமேயல்லாமல் தனிப்பட்ட மனிதனின் குற்றம் என்பதை விளக்கவல்லது என்பதையும் ஒவ்வொருவரும் ஞாபகத் தில் வைத்துக்கொண்டு சீர்திருத்தத்தின் யோக்கியத்தைப் பற்றி நினைக்க வேண்டும்.

எனவே, வெள்ளைக்காரருடைய எந்த அதிகாரம் பதவி நமது கைக்கு வந்தாலும் அதனால் சர்க்காருக்கும், வெள்ளைக்கார அரசாங்கத்திற்கும் ஒரு வெள்ளைக்கார உத்தியோகஸ்த்தர் அந்த பதவியில் இருந்தால் ஏற்படும்



RangaRakes
tamilnavarasam.com

நன்மையைவிட, அதிகமான நன்மை ஏற்படுவதோடு மக்களிடத்திலும் வெள்ளைக்காரர்கள் நடந்துகொள்ளும் நாணயக் குறைவைவிட அதிக மாகவே நடக்க ஏற்பட வேண்டிய நிலைமைகள்தான் சீர்திருத்தங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

முடிவாக சீர்திருத்தம் என்பதே குடிகளையும் பாமர மக்களையும் ஏமாற்ற சர்க்காரும் ஜனத் தலைவர்கள் என்பவர்களும் வேண்டுமென்றே அயோக்கியத்தனமான எண்ணத்துடன் செய்யும் சூழ்ச்சியும் கூட்டுக் கொள்ளையுமே தவிர வேறில்லை என்று கோபுரத்தின் மீது இருந்தும் கூவு வோம். இதைப்பற்றி இனியும் பின்னால் விபரம் எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 06.11.1927**



RangaRakes

# ஒரு விண்ணப்பம்

திருவண்ணாமலை கோவில் பிரவேச தடுப்பு வழக்கு அநேக வாய்தாக்கள் ஏற்பட்டு இதுவரை 500 ரூபாயுக்கு மேலாகவே சிலவாகி இருக்கின்றது. ஆனால் வாதி தரப்பு மாத்திரம் தான் முடிவாயிருக்கிறது. இனி எதிரி தரப்பில் சுமார் 2, 3 சாக்ஷிகள் போடப்பட்டிருக்கின்றது. தினம் ஒன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு சாக்ஷிகள் மேல் விசாரணை ஆவதற்கில்லாமல் வளருகின்றது. ஆதலால் இனியும் குறைந்து 10 வாய்தாக்களாவது ஏற்படலாம். வக்கீல்கள் பீஸ் இல்லாமல் நமக்காகப் பேசியும் அவர்களுக்கு வழிச்சிலவும் சாக்ஷிகளுக்கு வழிச்சிலவுமாகவே மேல்கண்ட ரூபாய்கள் சிலவாகி இருக்கும் போது பாக்கி விசாரணைக்கு 500 ரூபாயாவது பிடிக்கும் என்பதில் சந்தேக மில்லை. ஆதலால் நண்பர்கள் தங்களால் கூடியதை சேர்த்து சீக்கிரம் அனுப்ப வேண்டுமாய் சிபார்சு செய்கின்றோம். ஏனெனில் இப்பேர்ப்பட்ட உண்மைச் சுயமரியாதைக்காக தொடரப்பட்டிருக்கும் வழக்கு நாட்டில் மக்கள் ஆதரவில்லையானால் மற்றபடி பின்னால் நடக்க வேண்டிய காரியங்களுக்கு எப்படி பொதுமக்களை நம்ப இடமுண்டாகும். ஆதலால் வெளிநாட்டு நண்பர்களும் உள்நாட்டு நண்பர்களும் கூடிய சீக்கிரம் இந்த தேவையை பூர்த்தி செய்து தைரியமும் ஊக்கமும் அளிப்பார்களாக.

**குடி அரசு - வேண்டுகோள் - 06.11.1927**



tamilnavarasam.com

# புதிய கட்சிகள்
# பெசன்ட் அம்மையாராட்சி

சாதாரணமாய் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு மாதிரி வேலைகள் மும்முரமாய் நடப்பது இயற்கை. உதாரணமாக ஒரு காலத்தில் எங்கும் பஜனைக் கூடங்கள் ஏற்படும். மற்றொரு சமயம் எங்கும் ரீடிங்ரூம் ஏற் படும். மற்றொரு காலத்தில் எங்கும் சங்கீத சபைகள் ஏற்படும். இம்மாதிரியே ஓரோர் சமயத்தில் ஓரோர் காரியம் செல்வாக்குப் பெறுவதுண்டு. அதுபோலவே நமது நாட்டில் புதுப் புது கட்சிகள் ஏற்படுவது இக்காலத்திய சம்பவமாக இருக்கின்றது.

சமீப காலத்திற்குள் அரசியலின் பெயரால் அநேக கட்சிகள் ஏற் பட்டாய்விட்டது. இனியும் பல கட்சிகள் ஏற்படும் போலவும் இருக்கிறது. அதாவது தென்இந்திய நலஉரிமைச் சங்க மாகாண மகாநாடு கோயமுத்தூரில் நடந்த பின்பு, திருப்பூர் பார்ப்பனரல்லாதார் சுயேச்சை கட்சி என்பதாக ஒரு கட்சி உண்டுபண்ணி ஸ்ரீமான் திருப்பூர் ராலிங்கம் செட்டியார் முயன்று ஒன்றும் முடியாமல் கடைசியாக ஒரு மகாநாடு கூட்டி கோயமுத்தூர் தீர்மானத்தை ஆட்சேபித்து கவர்னரையும் மந்திரிகளையும் ஆதரித்து ஒரு தீர்மானம் செய்து சர்க்காருக்கு அனுப்பி, தற்கால சாந்தியாய் ஒரு உத்தி யோகமும் பெற்று இருக்கிறார். அவரைப் பார்த்து மனம் பொறாத ஸ்ரீமான் டாக்டர் சி. நடேச முதலியார் அவர்களும் சர்.கே.வி. ரெட்டி நாயுடு அவர் களும் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தார் என்கின்ற முறையில் கோய முத்தூர் தீர்மானத்தை ஒப்புக் கொள்ளாதவர்கள் கட்சி என்பதாக ஒரு கட்சி ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு மேற்கண்ட இரு கனவான் களுமே இரட்டைத் தலைவர்கள் ஆவார்கள். இவர்களுக்கு இன்னமும் இன்ன இன்ன உத்தியோகம் கொடுப்பது என்பது சர்க்காரார் இன்னமும் தீர்மானம் செய்யவில்லை. ஏனெனில் சர்.சி.பி. அய்யர் மேல் நாட்டுக்குப் போனவர். இப்போதுதான் வந்திருக்கிறார். தவிர இனி காங்கிரசு என்பதைப் பற்றி யோசிப்போம். அதற்குள் ஏற்கனவே சுயராஜ்ஜியக் கட்சி என்பதாக ஒரு கட்சி இருந்தாலும் அதை ஆதரித்துக் கொண்டு அதற்குள் இருந்தவர் களுக்குள்ளாகவே ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் தேசீய கட்சி என்று ஒன்று ஆரம்பித்தார். அது முளைத்த மூன்று நாளிலேயே அதற்குப் பச்சை



வாதம் வந்து கிணற்றில் விழுந்த கல்லுப்போல் தூங்கிக்கொண்டிருக்கிறது. பிறகு ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார் அவர்களால் சும்மா இருக்கும் கட்சி என்பதாக ஒன்று ஏற்பட்டது. எல்லா கட்சிகளைவிட அதற்குதான் தொந்தரவு அதிகம். ஏனென்றால் சும்மா இருப்பதே சுகம் என்று வாயில் சொல்ல லாமானாலும் சும்மாயிருப்பதைப் போல் கஷ்டமான வேலை உலகத்தில் வேறொன்றுமேயில்லை. ஏனெனில் ஐம்பொறிகளுக்கும் உணர்ச்சியிருக்கும் வரை எந்த ஜீவனும் சும்மாயிருக்க முடியாது. இது தவிர சுயராஜ்யக் கட்சியில் ஒரு குட்டிக் கட்சி ஸ்ரீமான் எஸ். முத்தையா முதலியாரை தலைவராகக் கொண்டு அதாவது பார்ப்பனர்களை நீக்கி காங்கிரஸ் தேசீயக் கட்சி என்பதாக எட்டு பேர் சேர்ந்து ஒரு கட்சி இந்த வாரத்தில் ஒரு ஏற்பாடாயிருக்கின்றது. இது நாளடைவில் வழுக்கும் போல் தெரிகிறது. ஏனெனில் சுயராஜ்ய கட்சியில் இருந்த பார்ப்பனரல்லாதார்கள் எல்லாம் ஒவ்வொருவராய் பார்ப் பனர்களின் சூழ்ச்சி இன்னது என்பதாக அறிந்து விலக்கு கின்றார்களாதலால் அப்படி விலகுகின்றவர்களுக்கு இது சமயம் தேசீயப் போர்வையுடன் ஒரு கட்சி வேண்டுமானால் இதுதான் தயாராய் இருக்கின்றது.

இது தவிர மந்திரி கக்ஷி என்று ஒன்று கொள்கையில்லாதது என்கின்ற அர்த்தத்தில் ஒரு கக்ஷி உண்டு. ஒவ்வொரு மந்திரிக்கும் தனித்தனியாய் ஒரு கக்ஷியும் அதற்கு 2, 3 பின்பற்றுபவர்களும் உண்டு. மந்திரி உத்தியோகம் சாகும்போது இந்தக் கக்ஷியும் அழுவாரற்று தானாகவே செத்துப்போகும். இது தவிர மிதவாதக் கக்ஷி என்று ஒன்றுண்டு. இது தனியாக சாஸ்திரி, சர்மா, அய்யர் என்கின்ற இரண்டு மூன்றுவித பட்டப்பெயரையேகொண்டது.இந்த கூட்டத்தார் தான் நமது சர்க்காரை நடத்திக் கொடுக்கவேண்டிய பொறுப்புடன் அடுப்புக் கல்லைப் போல் சர்க்காரைத் தாங்குவதற்கென்றே பிறந்தவர்க ளென்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள்.

போதாதக் குறைக்கு அம்மையார் பெசண்டம்மையார் இந்த வாரத்தில் நமது நாட்டில் "லோககுரு" கிருஷ்ணமூர்த்தியுடனும் லட்சக்கணக் கான ரூபாயுடனும் அடிவைத்திருக்கின்றார்கள். இந்தம்மாளைப் பிடித்துக் கொண்டுகரையேறலாமென்று வெகுபேர் நாக்கில் தண்ணீர் சொட்டிக் கொண்டு காத்திருக்கின்றார்கள். இந்த அம்மையாரும் காங்கிரசுக்கு யோக்கியதை கெட்டுப் போயிருக்கின்ற இக்காலத்தில் சுலபத்தில் தான் ஆதிக்கம் பெற்று விடலாம் என்று ஆசைப்படுவதில் அதிசயம் ஒன்றும் இல்லை. "அம்மையாருக்கும்" "லோக குருவுக்கும்" இனி புது புது சிஷ்யர் கள் சேருவார்கள். "மகாத்மாக்களுடன்" அடிக்கடி பேசுவார்கள். சர்.சி.பி. அய்யருக்கு இனி அபார யோக்கியதைகள் வளரும். ஏனெனில் அம்மையார் சீமையிலிருந்து பெரிய பெரிய வெள்ளைக்காரரிடம் கோஷன் பிரபுவுக்கு சிபார்சுக் கடிதம் வாங்கி வந்திருக்கலாம். அதில் சர்.சி.பி. அய்யருக்குத்தான் இரட்டை பங்கு கிடைக்கும். ஆதலால் இனி அம்மையார் ஒரு பெரிய கக்ஷியாக புறப்படப்படக்கூடும். சுயராஜ்யக் கக்ஷியும் அம்மையார்



RangaRakes tamilnavarasam.com

கக்ஷியுடன் இரண்டர கலந்தாலும் கலந்து விடும். ஏனெனில் சுயராஜ்ய கக்ஷி இப்போது வடிகட்டி ஆய்விட்டதால் அம்மையார் கக்ஷிக்கு வேண்டிய ஆட்களே மீதி தங்கி நிற்கின்றது. ஒரு காலத்தில் அய்யர் கூட்டத்தோடு மாத்திரம் இருந்து கொண்டு ஆதிக்கம் பெற்ற அம்மையாருக்கு இப்போது அய்யங்கார் கூட்டமும் சேர்ந்து ஒரு மந்திரி உத்தியோகமும் தனது சிஷ்யருக்கு இருந்து, சட்ட மெம்பர் உத்தியோகமும் அவரது 'மகன்' என்பவருக்கு இருக்கும் போது அம்மைக்கு என்னதான் நடக்காது. பருத்திச்செடி புடவையாய் காய்த்தது என்பது போல் ஆகிவிடும் அல்லவா? அதற்கு ஆதாரமாகவே நாளது 7 ௳ நடைபெறும் அம்மையார் வரவேற்புக்கு சுயராஜ்யக் கக்ஷிக்கு ஜீவ நாடியாகிய ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரே பேசப் போகிறாராம்.

காஞ்சீபுரம், திருநெல்வேலி முதலிய மகாநாடுகளில் அம்மையாரைப்பற்றி ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் பேசிய பேச்சுக்களும் எழுதிய எழுத்துக்களும் கல்லின் மேல் எழுத்துக்கு நேராய் விளங்குவது யாவருக்கும் தெரியும். ஆனால் அப்பொழுது ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை விலைக்கு வாங்கி அம்மையார் மீது ஏவிவிட்ட ஆள்களேதான் இப்போதும் அம்மையாரைப் புகழ அனுப்பி இருக்கின்றார்கள். ஆகவே இவ்வளவு செல்வமும் பாக்கியமும் யோகமும் பொருந்திய அம்மையார் இந்த செல்வாக்குடன் தென்னிந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்யப் போகிறார்களாம்.

இதன் பலன் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதாருக்கு ஆபத்தாகவே முடியும். ஆனாலும் நாம் அதைப்பற்றி சிறிதும் கவலைப் படவில்லை. ஏனெனில் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை பெறத்தக்க அளவு இன்னமும் போதிய உணர்ச்சி பெறவில்லை. அல்லாமலும் அதற்குத் தகுந்த தியாகமும் செய்யவில்லை. ஆதலால் அதற்குத் தகுந்த விலை கொடுக்காமல் எந்தப் பண்டமும் கிடைக்காது என்பது உலகமறிந்த விஷயம்.

இதை எழுதி முடித்த பின்பு நாம் நினைத்தது போலவே அம்மையாரால் விஷம் கக்கப்பட்டு இருக்கின்றது. அதாவது பார்ப்பன ஆதிக்கத்திற்கு மத விஷயத்தில் பிரசாரம் செய்ய ஒரு மகாத்மா கிடைத்தது போல் இப்போது அரசியலிலும் பிரசாரம் செய்ய அம்மையாராகிய "லோகநாயகி" கிடைத்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். என்னவென்றால் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாமென்று சொல்லித்தான் பிரசாரம் செய்யப் போகிறார்களாம். அதற்கு காரணம் பார்ப்பனர்கள் சொல்வது போலவே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வந்த பின்புதான் இந்தியாவில் கலகம் அதிகமாய் இருக்கின்றதாம். அய்யோ பாவம் இது எவ்வளவு கஷ்டப்பட்டு கண்டுபிடித்த காரியமாயிருக்க வேண்டும்.

வருணாசிரமமும் பிறப்பில் குணம் வருவதும் இல்லாவிட்டால்



RangaRakes

ஸ்ரீமான் காந்தி அவர்களிடத்தில் பார்ப்பனருக்கு யாதொரு வேலையுமில்லை. அவரை மகாத்மா என்று கூப்பிடவுமாட்டார்கள். அப்படி ஒருவர் இருக்கின்றார் என்று கூட உலகத்திற்கு தெரியாமல் செய்துவிடுவார்கள். அது போலவே வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டாமென்று சொன்னால் ஒழிய அம்மையாரிடத்தில் பார்ப்பனர்களுக்கு யாதொரு சிநேகமும் இல்லை. அம்மையாருக்கும் நமது நாட்டில் யோக்கியதையும் இருக்காது. பூரண கும்பங்களும் லோகநாயகி பட்டமும் இருக்காது. உள்ளதையும் மூன்று நாளில் கவிழ்த்து விடுவார்கள். இந்த விஷயமும் அம்மையாருக்கு நன்றாய் தெரிந்தே தான் வரும்போதே இந்த மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு ஐய்யங்கார் கூட்டத்தையும் தன் கைக்குள் போட்டுக் கொண்டு விட்டார். ஆனால் மகாத்மா என்பவர்களின் உபதேசத்திற்கே ஏமாறாத தமிழ் மக்கள் அம்மையார் சங்கதி நன்றாய் அறிந்த பின்பும் ஏமாந்து போவார்கள் என்று சுலபமாய் சொல்லிவிட முடியாது. ஆனாலும் அம்மையார் இடத்தில் இருக்கும் பணமும் உத்யோகமும் அளிக்கக்கூடிய செல்வாக்கும் யாரைத் தான் சுவாதீனம் செய்ய முடியாது என்று யோசிக்கும்போது சற்று பயமாய்த் தான் இருக்கின்றது.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 06.11.1927**



tamilnavarasam.com

# இந்திய தேசீயம்

## காங்கிரசுக்கு பணம் சேர்க்கும் முறை

யானைக்கவுக்களிக்கடுத்த கிருஷ்ணா தியேட்டர் என்னும் நாடகக் கொட்டகையில் ஸ்ரீமதி கமலம் என்கின்ற நடனப் பெண்ணைக் கொண்டு வள்ளிபர்ணியம் அதாவது வள்ளி என்கின்ற குறப்பெண்ணை பரமசிவன் என்கிற இந்து மதக் கடவுளுடைய மகனான சுப்பிரமணியக்கடவுள் என்கிற மற்றொரு இந்து மதக் கடவுள் நரசோரம் செய்த (அதாவதுதிருட்டுத்தனமாய் அடித்துக்கொண்டு போன) கதையை நாடகமாக நவம்பர் மாதம் 3 -தேதி ஆடிக்காட்டி அதன் டிக்கெட் விற்பனையின் மூலம் காங்கிரசுக்கு பணம் சம்பாதிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். தேசீயப் பத்திரிகைகள் என்பவை நாடகத்தைப்பற்றி விளம்பரம் செய்வது கூட தப்பு என்று ஒரு காலத்தில் மகாத்மாவாயிருந்த ஸ்ரீமான் காந்தி எழுதியிருந்தார். இப்போது தேசீய சபையின் தலையெழுத்து நாடகமாடி பணம் சம்பாதிக்க வேண்டியதாய்ப் போய் விட்டது. அதிலும் என்ன நாடகம் என்றால் ஒருவன் பெண்ணை ஒருவன் திருடிக்கொண்டு போகின்ற நாடகம். அதுவும் எதன் பேரால் என்றால் இந்து மதத்தின் பெயராலும், இந்துமதக்கடவுள் பெயராலும் அதுவும் யாரால் என்றால் ஸ்ரீமதி கமலம் என்கின்ற நடனப் பெண்மணியால், அதுவும் டிக்கெட் யாரால் விற்கப்படுகிறது என்றால் சென்னை மகாஜன சபை கட்டிடத்தில் காங்கிரஸ் தரகர்களால். எனவே நமது மதத்திற்கும் நமது கடவுளுக்கும் நமது ஒழுக்கத்திற்கும் நமது தேசீயத்திற்கும் நமது காங்கிரஸ் தரகர்களின் யோக்கியதைக்கும் நற்சாட்சி பத்திரம் வாங்க மிஸ் மேயோவிடம் போக வேண்டுமா அல்லது மைலாப்பூர் காங்கிரஸ்காரரிடம் போகவேண்டுமா என்பதை பொதுஜனங்களே யோசியுங்கள்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.11.1927**



RangaRakes

# ஈரோடு முனிசிபாலிட்டி

ஈரோடு முனிசிபாலிட்டி சேர்மென் தேர்தலானது முன் வைஸ்சேர்மென் அவர்கள் குறித்தது போலவே நவம்பர் மாதம் 1 -ந்தேதி மாலை 4 மணிக்கு ஆரம்பமாயிற்று. ஆனால் மாஜி சேர்மென் ஸ்ரீமான் சீனிவாச முதலியார் அவர்கள் இந்த தேர்தலையும் நிறுத்துவதற்காக சர்க்காருக்கு எழுதியதில், சர்க்காரும் எலக்ஷனை நிறுத்த அனுமதி கொடுத்துவிட்டார்கள். ஆனாலும் சேலம் ஜில்லா போர்டு எலக்ஷனை நடத்தக்கூடாது என்று சர்க்கார் உத்தரவு வந்தும் சேலம் ஜில்லா போர்டார் அதை லக்ஷியம் செய்யாமல் தைரியமாய் நடத்தினத் தேர்தல் நிலைத்து விட்டதைக் கண்ட ஈரோடு முனிசிபாலிட்டியாரும் சர்க்கார் உத்தரவை லக்ஷியம் செய்யாமல் தைரியமாய் நடத்தி விட்டார்கள். ஏனெனில் ஸ்ரீமான் சீனிவாச முதலியார் அன்று பகல் 12 மணிக்கு மேல் முனிசிபல் ஆபிசுக்கு வரக்கூட யோக்கியதை இல்லாது போய்விட்டதால், மற்றபடி முதலியார் கக்ஷியைச் சேர்ந்த ஆள்களில் சிலர் தேர்தலை நடத்தக்கூடாது என்று மீட்டிங்கில் ஆக்ஷேபித்தும் அது யாராலும் லக்ஷியம் செய்யப்படாமல் போய் விட்டது. தவிரவும் முதலியாருக்கு அனுகூலமாயிருந்து, அனுகூலம் பெற்று வந்த சில கவுன்சிலர்களும் முதலியாருக்கு வேலை போனவுடனே அவரை கைவிட்டு விட்டுவிடவேண்டியதாகவும் ஏற்பட்டு விட்டது. இந்நிலையில் சேர்மென் தேர்தல் நடத்தலாமென்று கவுன்சில் மெஜாரிட்டியார் அபிப்பிராயப்படுவதை அறிந்த முதலியாரின் அத்தியந்த கூட்டாளிகளான நண்பர்களில் முக்கியமானவர்களில் சிலர் கவுன்சிலை விட்டு வெளியேறிவிட்டார்கள். உடனே தேர்தல் துவக்கமானதும் முதலியார் கக்ஷியைச் சேர்ந்தவரும், முதலியாரின் முக்கிய பாதுகாப்பாளராயிருந்தவருமான ஸ்ரீமான் பிரப் துரை அவர்கள் தனது கேண்டிடேட்டாக ஸ்ரீ டேவிட் என்பவரை பிரேரேபித்தார். கிறிஸ்தவ கவுன்சிலர்கள் எல்லோரும் ஸ்ரீமான் டேவிட்டுக்கே ஓட்டுக் கொடுத்தார்கள்.

கருங்கல்பாளையம் ஸ்ரீமான் பாலசுப்பராயலு நாயுடுகார் என்கிற ஒரு கனவானை மற்றொரு கவுன்சிலர் பிரேரேபிக்க, கிறிஸ்தவ நியமன கவுன்சிலர்கள் தவிர ஏறக்குறைய மற்றக் கவுன்சிலர்கள் எல்லாம் அவரை ஆதரித்து ஓட்டுக் கொடுத்ததால் மெஜாரிட்டி ஓட்டினால் ஸ்ரீமான் நாயுடு அவர்களே தெரிந்தெடுக்கப்பட்டார். ஆகவே இந்த தேர்தலின் மூலம் ஸ்ரீமான் நாயுடுகார் தெரிந்தெடுக்கப்பட்டார் என்கிற சந்தோஷத்தைவிட ‘ஸ்ரீமான் முதலியார்



tamilnavarasam.com

வருவதற்கில்லாமல் போய் விட்டாரே அதுவே போதும்' என்கின்ற சந்தோஷமே அதிக மென்றுதான் சொல்ல வேண்டும். இந்த தேர்தல் பலனில் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தான் வருவதற்கில்லாமல் போய்விட்டதே என்பதாக அடைந்த விசனத்தைவிட ஸ்ரீமான் பிரப் என்கின்ற பாதிரி துரைக்குத்தான் அதிக விசனம் என்று சொல்ல வேண்டும். ஏனெனில் ஸ்ரீமான் முதலியாரை கொள்ளையடிக்க அனுமதிப்பதால் பாதிரி துரைக்கு தன் காரியம் எவ்வளவோ சாதகமாய்க் கொண்டு வந்தது. இப்போது அவ்வளவு எதிர் பார்க்க முடியாது. ஆதலால் தன் மனுஷர் போய்விட்டாரே என்கின்ற விசனம் அவருக்கு இருப்பது அதிசயமல்ல. கடைசியாய் ஈரோடு முனிசிபாலிட்டியில் ஸ்ரீமான் முதலியார் ஆக்ஷியில் இதுவரை நடந்து வந்த ஊழல்களுக்கெல்லாம் இந்த பாதிரி துரை அவர்களே 100 -க்கு 75 பங்கு காரணஸ்தர் என்று சொல்லுவது மிகையாகாது. அவர் தனது மிஷின் காரியத் திற்காகவே ஸ்ரீமான் முதலியார் செய்து வந்த நாணயக்குறைவான காரியங்க ளுக்கெல்லாம் உதவியளித்து வந்ததுதான் இப்படிச் சொல்வதற்கு முக்கிய ஆதாரம். அல்லாமலும் ஸ்ரீமான். முதலியாருக்கு அண்ணனாகிய ஸ்ரீமான் டேவிட் அவர்களை பிரேரேபித்தது இரண்டாவது ஆதாரம்.

நிற்க, இனிமேலாவது முன் நடந்தது போன்ற காரியங்கள் நடவாமல் இருக்கும் என்று தைரியமாய் இருப்பதற்கு போதிய ஆதாரம் இருப்பதாகவும் சொல்லுவதற்கில்லை. ஏனெனில் முதலியார் சூழ்ச்சி மறைமுகமாக இன்ன மும் கொஞ்ச காலத்திற்கு இருக்கும் என்று சந்தேகப்பட அநேக அறிகுறிகள் காணப்படுகின்றன. ஏனெனில் இந்த சேர்மென் தேர்தலையும் பலர் ஆக்ஷே பிக்க ஆசைக் கொண்டிருக்கிறார்கள். இதற்கும் ஸ்ரீமான் பிரப் துரை சிபார்சு வெகுதூரம் பாயும். சர்க்காருடைய யோக்கியதையும் அதற்கேற்றது போல் தான் இருக்கிறது. எனவே யார் யார் சிபார்சு யார் யாரை என்னென்ன செய்ய சொல்லுமோ என்கின்ற பயம் ஜனங்களுக்கு இனியும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆதலால் முன்னின்று வேலை செய்தவர்களுக்கு மூக்கு நிலைக் குமா என்கின்ற சங்கதி போகப் போகத்தான் தெரிய வேண்டும்.

**குடி அரசு - கட்டுரை - 06.11.1927**



RangaRakes

# சுப்பராய பிரம்மா

டாக்டர் சுப்பராயன் ஜாதிகளை சிருஷ்டிக்கும் வேலையில் மிகுதியும் ஈடுபட்டு வருகிறார்போல் தெரியவருகின்றது.

சென்ற வாரம் பார்ப்பனரல்லாதார் என்பதாக பிரித்து விஸ்வப் பிராம ணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், தீண்டாதார், தாழ்த்தப்பட்டவர் என்பதாக பல ஜாதிகளை சிருஷ்டித்தார் என்பதாக எழுதி அவற்றைக் கண்டித்து ஒரு இறுதிக் கடிதமும் எழுதினோம்.

இந்த வாரம் கிருஸ்தவ ஆதித் திராவிடர் என்று ஒரு புதிய ஜாதியை சிருஷ்டித்திருக்கின்றார். இந்து என்கிற ஒரு இல்லாத மதக்காரர்களைப் பிடித்த சனியன் கிருஸ்தவ மதக்காரரையும் தொத்திக் கொண்டுவிட்டதாகக் காண் கின்றது. இனி இந்த பாழும் இந்துமதம் என்னும் பொய் மான் இனியும் எந்த எந்த மக்களைப் பிடித்து ஆட்டுமோ தெரியவில்லை.

கொஞ்சமும் தாக்ஷண்யம் பாராமல் இந்து மதம் என்னும் பேதமையை அடியோடு வெட்டிப் புதைத்தாலொழிய நமது நாட்டில் வைப்பாட்டி மக்க ளையும் தீண்டாதார்களையும் கீழ் ஜாதியார்களையும் உற்பத்தி பண்ணிக் கொண்டே போகும் வேலை நிற்கவே நிற்காது என்றே நினைக்கின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 06.11.1927**



tamilnavarasam.com



# குடி அரசு.

## ராயல் கமிஷன் ஒரு கூட்டுக் கொள்ளை

II

# ராயல் கமிஷன் ஒரு கூட்டுக் கொள்ளை

## II

சென்ற வாரம் மேல்கண்ட தலைப்புடன் ஒன்று இலக்கமிட்டு ஒரு தலையங்கம் எழுதி இருந்தோம். இவ்வாரம் அதே தலைப்புடன் இரண்டாவது வியாசம் எழுதுகின்றோம்.

சென்ற வாரம் ராயல் கமீஷன் என்பது சர்க்காரும் அரசியலின் பேரால் வாழும் சில தலைவர்கள் என்னும் படித்தக் கூட்டத்தாரும் சேர்ந்து இந்திய ஏழை மக்களை வஞ்சித்து கொடுமைக்குள்ளாக்கி வாழச் செய்யும் சூழ்ச்சி என்கின்ற கருத்துக்கொண்டே அதைக் கூட்டுக் கொள்ளை என்று சொன்னோம். அந்தப்படி சொல்லியவைகளையெல்லாம் இவ்வாரத்திய சம்பவங்கள் உறுதிப்படுத்தியதோடு இந்தியத் தலைவர்கள் என்று சொல்லப்படும் கூட்டம் எவ்வளவு தூரம் உண்மையும் யோக்கிய பொறுப்பும் அற்றவர்களென்பதும் எவ்வளவு தூரம் நாணயக் குறைவுகளுமுடையவர்கள் என்பதையும் விளக்கி விட்டது.

காங்கிரஸ் என்பதும் மற்றும் அதுபோன்ற அரசியல் இயக்கங்கள் என்பதும் அடியோடு ஏழை மக்களை சில அறிவாளிகள் ஏமாற்றவும் கொடுமைப்படுத்தவும் ஏற்பட்டன என்றும் அவைகளின் பலன் அவைகள் ஏற்பட்ட நாள் தொட்டு இந்திய நாட்டையே அடியோடு பல வழிகளிலும் பாழ்படுத்தி மீளாத அடிமைத்தனத்தில் ஆழ்த்தி வருகின்றதென்றும் பன்முறை எழுதியும் பேசியும் வந்திருக்கின்றோம். பொது வாழ்வு என்பதானது யோக்கியன் என்பவன் எவனும் பொது நன்மைக்கு உழைக்க முடியாத அளவு நாட்டை பாழ்படுத்தி விட்டது என்றும் சொல்லி வந்திருக்கின்றோம். ஆனாலும் பாமர மக்கள் சுலபத்தில் இவ்வேமாற்றத்திலிருந்தும், கொடுமைகளிலிருந்தும் தப்புவதாகக் காணப்படவில்லை. ஆதலால் அவர்களுக்கு உண்மை உணர்ச்சி ஏற்படும் வரையில் நாடு முழுவதும் கஷ்டமும் நஷ்டமும் அடைந்து வருவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

இவ்விஷயங்களை ஸ்ரீமான் காந்தி அவர்களிடமும் தெரிவித்த போது அவர் அதை அப்படியே ஒப்புக்கொண்டு “பொதுவாக எல்லாமக்களுக்கும்





RangaRakes tamilnavarasam.com

புத்தி வருகின்றவரை புத்திசாதுர்யமுள்ள ஒரு கூட்டத்தார்தான். ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்க முடியும்; ஆதலால் அது ஜனங்களின் அறிவீன மேயொழிய மற்றவர்கள் தப்பிதமல்ல" என்று சொல்லி மழுப்பிவிட்டார். மற்றும் அநேக பெரியாரும் இம்மாதிரியேதான் சொல்லிக் கொண்டே ஏமாற் றும் கூட்டத்திலே சேர்ந்துகொண்டு மக்கள் ஏமாற்றப்படுவதற்கு அனுகூல மாகவே இருக்கிறார்கள்.

ஆங்கிலேய அரசாக்ஷியானது இந்திய நாட்டிற்கு அனேக காரியங் களில் பார்ப்பன ஆக்ஷியை விட அதிகமான கொடுமைகளை உண்டாக்கி விடவில்லை என்பது ஒருபுறம் ஒப்புக் கொள்ளக்கூடியதானாலும் இந்திய பொருளாதார விஷயத்தில் இந்தியாவை சுரண்டிக் கொண்டு போகும் காரியத் தில் இதுவரை எந்த ஆக்ஷியும் இவ்வளவு மோசமாக நடந்து கொண்டதாக யாரும் சொல்லமுடியாது என்றே சொல்லுவோம். ஆனாலும், இவ்வாங்கி லேயருக்கு இவ்விஷயத்தில் பெரிதும் உதவியாயிருந்து வருவது நம்நாட்டு அரசியல் இயக்கங்கள்தான் என்பதையும் அரசியல் தலைவர்கள்தான் என்பதையும் தைரியமாய்ச் சொல்லுவோம். ஏனெனில் அரசியல் இயக்கம் என்பதாக ஒரு மாய்கையை ஏற்படுத்தி மக்களை அதிலேயே மயங்கச் செய்து விட்டு அதன் மூலமாய் ஆங்கிலேயரிடம் உத்தியோகம் பெறுவதற்காகப் பலர் எடுத்துக் கொண்ட முயற்சியில் வெற்றிபெற போட்டி போட்டுக்கொண்டு வெள்ளையரின் கொள்ளைக்கு உள் உளவாகவும் உடந்தையாகவும் இருக்க வேண்டியதாகி விட்டதுதான் என்போம். இதன் மூலமாய் வெள்ளையர்களுக் கும் தங்கள் கொள்ளைகளை தாராளமாய் நடத்த சவுகரியம் ஏற்பட்டதுடன் ஏன் என்று கேழ்பதற்கும் ஆள் இல்லாமல் போய்விட்டது. இன்றைய தினமும் எந்த ஒரு அரசியல் தலைவர் என்பவருக்காவது ஒரு அரசியல் இயக்கம் என்பதிற்காவது இக்கொள்ளையைப் பற்றிய கவலை ஒரு சிறிதாவது இருக்கின்றதா என்று பார்த்தால் இவ்வுண்மை விளங்காமல் போகாது.

## கமிஷன்

தற்போது சர்க்காரார் ராயல் கமீஷன் என்பதாக ஒரு கமிட்டி நியமித் திருப்பதைப் பற்றி அரசியல் தலைவர்கள் என்போர்கள் எல்லோரும் ஒரே மூச்சாக கூப்பாடு போடுகின்றார்கள். தேசீயப் பத்திரிகைகள் என்பவைகளும் மற்றும் சமூகப் பத்திரிகைகளும் ஒரு வண்ணானின் கழுதை செத்துப் போன தற்காக ஊரெல்லாம் சேர்ந்து "கங்காதரா மாண்டாயோ, கங்காதரா மாண் டாயோ" என்று அழுத கதைபோல் கொஞ்சமும் யோசனை இல்லாமல் "கமிட்டியை பகிஷ்காரம் செய்ய வேண்டும், பகிஷ்காரம் செய்ய வேண்டும்" என்று ஓலமிடுகின்றன. இதனால் இந்திய தேசீயம் என்ன என்பதும் தேசீயவாதிகள் யோக்கியதையும் தேசீயப் பத்திரிகைகளின் யோக்கியதையும் என்ன என்பதும் விளங்குகின்றது.



இந்தியா சுயராஜ்யமடைய கமீஷனே வேண்டியதில்லை என்றாவது கமீஷன் வைத்து பரிக்ஷை பார்த்து பிச்சை கொடுப் பதுபோல சுயராஜ்யம் வெள்ளையர் கொடுக்க இந்தியர் வாங்குவது என்கின்ற தத்துவம் கூடாது என்பதாகவாவது வாதாடுவதாயிருந்தால் அது ஆண்மையும் சுயமரியாதை யுமான காரியமாயிருக்கும்.

அப்படிக்கு ஒரு சிறிதும் இல்லாமல் கெஞ்சிக் கெஞ்சி பிச்சை கேழ்ப்பதாகக் காட்டிக் கொள்ளும் இந்தியர்களுக்கு பிச்சை போடும் நிலை யில் இருப்பதாக நினைத்து இருக்கும் வெள்ளைக்காரர்கள், இந்தியர்கள் அதிகமான சீர்திருத்தத்திற்கு அருகர்களா இல்லையா என்று பார்ப்பதற் காகவும் கொடுத்த சீர்திருத்தங்களை ஒழுங்காய் நடத்தி இருக்கின்றார்களா இல்லையா என்று பார்ப்பதற்காகவும், இதற்கு முன்னால் வழங்கப்பட்டிருக் கும் சீர்திருத்தங்களில் ஏதாவது நடைபெற முடியாத குற்றங்கள் இருக்கின்றதா என்பதற்காகவும் சீர்திருத்தம் வழங்க அதிகாரமுள்ளவர்கள் என்று இந்தியா தேசீயவாதிகளென்போர்களாலேயே ஒப்புக் கொள்ளப்பட்ட பிரிட்டிஷ் பார்லிமெண்டார் என்கின்றவர்கள் ஒரு கமிட்டி நியமித்தால் அதில் அங்கம் பெற இந்தியர்களுக்கு உரிமை எப்படி உண்டாகும்?

இந்தியர் அருகர்களா இல்லையா என்கின்ற கமிட்டிக்கு இந்தியர் அங்கம் பெறுவது என்பது தனது யோக்கியதையைப் பரீக்ஷிக்க தானே நீதிபதி யாய் இருக்கின்றது என்கின்றது போலவா அல்லவா என்று கேட்கின்றோம். இந்தியர்கள் சீர்திருத்தம் அடைய யோக்கியதையுடையவர்கள் என்பதைக் காட்டிக்கொள்ள ஆசை இருந்தால் அந்தக் கமிட்டியின் கேள்விகளுக் கெல்லாம் பதில் சொல்லும் நிலையிலிருந்து தங்களது பெருமையையும் சாமர்த்தியத்தையும் காட்டுவதுதான் யோக்கியமும் நியாயமுமானதாகும்.

மிண்டோ மார்லி சீர்திருத்தத்தில் எத்தனை இந்தியர்கள் நியமிக்கப் பட்டார்கள் என்றாவது, மாண்டேகு செம்ஸ் போர்ட் சீர்திருத்தத்தில் எத்தனை இந்தியர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்றாவது யாராவது சொல்லக் கூடுமா. அப்படி இருக்க இப்பொழுது மாத்திரம் இந்தியர்களும் இம்மாதிரி கமிட்டி யில் உட்காரும்படியான யோக்கியதை என்ன வந்து விட்டது. திடீரென்று முன் சீர்திருத்தங்களின் போது இந்தியர்களுக்கும் ஒற்றுமைக் குறைவும் வகுப்புப் பிரிவினையும் இருந்து இப்போது எல்லோரும் ஒன்றாகிவிட்டார்களா? முன் கேட்கப்படாத ஒரு புது உரிமையை இப்போது கேட்பதற்கு ஒரு புதிய யோக்கியதை இருக்க வேண்டும் அல்லது முன்னையைவிட இப்போது நல்ல புத்தி வந்திருக்க வேண்டும். இரண்டில் இப்போது எதைச் சொல்ல முடியும்.

இது ஒருபுறம் நிற்க கமிஷனில் இந்தியர்களில் யாரை நியமிப்பது என்றாவது, யாரை நியமித்தால் யார் ஒப்புக்கொள்ளத் தயாராயிருக்கின்றார்கள் என்றாவது யாராவது சொல்ல முடியுமா? ரௌலட் கமிட்டியில் ஸ்ரீமான்



RangaRakes tamilnavarasam.com

குமாரசாமி சாஸ்திரிகளை இந்தியர் என்கிற முறையில் நியமித்து அவரும் விசாரணை செய்து திருப்தியடைந்து கையெழுத்துப் போட்டதின் பலனாய் அவர் குடும்பம் பூராவும் ஜில்லா ஜட்ஜ், ஹைகோர்ட் ஜட்ஜ் ஆக முடிந்த தல்லாமல் கமிட்டியின் ரிப்போர்ட்படி ஏற்பட்ட சட்டம் இந்தியர்கள் ஒப்புக் கொள்ள முடிந்ததா என்று கேட்கின்றோம்.

சர். சிவசாமி அய்யரும், மகாகனம் சீனிவாச சாஸ்திரியும் மற்றும் பண்டிதர்கள் நேரு, மாளவியா போன்ற அநேக இந்தியர்களும் பல பல கமிட்டிகளில் இருந்து விசாரணை செய்து தயாரித்த ரிப்போர்ட்டுகளை எல்லாம் இந்தியர்கள் ஒப்புக்கொள்ளக் கூடியதாயிருந்ததா என்று கேட்கின் றோம். இந்தியாவிலுள்ள பெரும்பான்மையரான இந்தியரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஏதாவது ஒரு இந்தியர் இதுசமயம் நமது நாட்டில் இருக் கின்றார்கள் என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

ஒத்துழையாமையை ஒழிக்க வென்றே நினைத்து இந்திய தேசீய காங்கிரஸ் என்கின்ற ஸ்தாபனம் சட்ட மறுப்புக் கமிட்டி என்பதாக தேசீயத் தலைவர்கள் என்பவர்களையே ஒரு கமிட்டியாக நியமித்து அநேக ஆயிரம் ரூபாய்களை செலவு செய்தது யாருக்கும் தெரிந்த விஷயம்தானே. அந்தக் கமிட்டி மெம்பர்கள் யோக்கியமாய் நடந்து கொண்டார்கள் என்பதாகவாவது அல்லது அவர்கள் செய்த ரிப்போர்ட்டு யோக்கியமானதென்றாவது இந்திய மக்கள் ஒப்புக் கொண்டார்களா? அக்கமிட்டி விசாரணையில் இந்திய பிரமுகர்கள் எல்லாம் கலந்துகொண்டார்களா? என்றும் கேட்கின்றோம்.

கமிட்டி என்று சொல்லுவதே பித்தலாட்டம் என்றுதானே இந்தத் தலைவர்கள் எல்லாம் ஒருகாலத்தில் கத்திக்கொண்டிருந்தார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு இப்போது எப்படி திடீரென்று கமிட்டியில் அதுவும் வெள்ளைக்காரரையே அதிகமாகக் கொண்ட கமிட்டியில் நம்பிக்கை வந்து விட்டது என்று கேட்கின்றோம்.

வெள்ளைக்காரர்கள் இந்தியர்களை இந்தக் கமிட்டியில் நியமிப்பதா னால் யோக்கியமாய் நடு நிலைமையில் இருந்து பார்த்தால் குறைந்த பக்ஷம் தேசீய சபை என்னும் காங்கிரசுக்காக ஒருவரையும் மிதவாதிகள் என்பதற்காக ஒருவரையும், ஜஸ்டிஸ் கக்ஷி என்பதற்காக ஒருவரையும், மகமதியர்களுக்காக ஒருவரையும், ஒடுக்கப்பட்ட வகுப்பார்கள் என்பதற்காக ஒருவரையுமாவது நியமித்து ஆகவேண்டும்.

வெள்ளையர்கள் இதை ஒப்புக் கொள்ளுவார்களா அல்லது இந்தியர் களாவது இதை ஒப்புக் கொள்ளுவார்களா? நாட்டில் ஒவ்வொன்றும் யோக்கி யமாகவோ அயோக்கியமாகவோ கோடிக்கணக்கான ஜனங்களைக் கொண்ட தென்று சொல்லிக்கொண்டு பல்வேறு ராஜீய அபிப்பிராயம் பலவேறு மதம்,



உயர்ந்தது, தாழ்ந்தது, தீண்டத்தகாதது என்பன போன்ற பலவேறு வகுப்புகள் ஆகியவைகளாய் இருப்பதோடு ஒன்றுக்கொன்று கெட்ட எண்ணமும் நம்பிக்கையின்மையும் துவேஷமும் கொண்டிருக்கின்றபோது இந்தியர்களை கமிட்டியில் நியமிப்பது என்கின்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன என்று கேழ்க்கின்றோம். பொதுவாக இந்த கமிட்டியைப் பற்றி அடியோடு நமக்கு இஷ்டமில்லை என்பதும் கமிட்டி நியமித்ததுவே பித்தலாட்ட மெனவும் இந்தியர்கள் அதில் அங்கத்தினர்களாக வேண்டும் என்றுகேட்பது அதை விடப் பித்தலாட்டமெனவும் இருவரும் அதாவது சர்க்காரும் இந்தியத் தலைவர்கள் என்போர்களும் கூடிக்கொண்டு குடியானவர்களையும் தொழிலா ளர்களையும் மொட்டை அடிப்பதற்கு ஏற்பாடு செய்த சூழ்ச்சியே இது என்பதும் நமது வெகுநாளைய அபிப்பிராயம் என்பது யாவருக்குமே தெரிந்திருக்குமென்றே நம்புகின்றோம்.

பொதுவாக இந்த கமீஷனைப் பற்றி இந்து மதத் தலைவர்கள் என்ப வர்கள் பல அபிப்பிராயம் கொடுத்திருந்தாலும் அவை இரண்டு தத்துவங் களுக்குள்ளாகதான் வரும்.

அதாவது, இந்திய மக்கள் எல்லோருக்கும் பணக்காரன், ஏழை, தொழிலாளி, முதலாளி, ஆங்கிலம் படித்தவர்கள், ஆங்கிலம் படிக்காதவர்கள், உயர்ந்த ஜாதியார் என்பவன், தாழ்ந்த ஜாதியார் என்பவன் என்கின்ற வித்தியாசமில்லாமல் எல்லோருக்கும் அரசியல் முறையில் வேறு கூட்டத்தார் தயவு இல்லாமல் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் உண்டாகும்படி செய்வதா அல்லது கையில் வலுத்தவனுக்கு ஏகபோக உரிமையாக இப்போதையதைப் போலவே இருப்பதா என்பதுதான் முக்கியத் தத்துவங்களாகுமேயல்லாமல் பிரிட்டிஷாருக்கும் இந்தியர்களுக்கும் அதிகாரம், பதவி, தொழில், விவசாயம், வியாபாரம் முதலியவைகளில் அனுகூலம் முதலியவைகள் செய்யும் விஷயங்களில் தகராறுகள் அதிகமாயிருக்கும் என்று யாரும் சொல்ல முடியாது என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில் அதைப் பற்றி எந்த இந்தியத் தலைவருக்கும் கவலையே இல்லை. சுருக்கமாய் சொல்ல வேண்டு மானால் புதிய சீர்திருத்தத்தில் இப்போது இருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம் என்பதை எடுத்து விடுவதா அல்லது இன்னம் கொஞ்சம் விரிவுபடுத் துவதா என்பதே முக்கியமானதாகும். அதென்னவெனில் மகமதியர்களுக்கு விரோதமான சில வடநாட்டு இந்துக்கள் என்போர்களும் பார்ப்பனரல்லா தாருக்கு விரோதமான பல தென்னாட்டுப் பார்ப்பனர்களும் செய்து வரும் பிரசாரமும் தேசசேவையும் என்பதெல்லாம் இந்த வகுப்புவாரிப் பிரதிநிதி தத்துவத்தை எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்கின்ற கருத்துக் கொண்டே அல்லாமல் வேறு அல்ல. ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரவர்கள் வடக்குக்கும், தெற்குக்கும் ஓடி ஓடிப் பிரசாரம் செய்த இந்து முஸ்லீம் ஒற்றுமை என்கின்ற புரட்டெல்லாம் மகமதியர்களின் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தில் மண்ணைப் போடவே அல்லாமல் வேறல்ல.



RangaRakes tamilnavarasam.com

தென்னாட்டிலும் காங்கிரசுக்குள் சுவாதீனப் புத்தியுள்ள பார்ப்பனரல்லாதார்களை அண்டவிடாமல் மேல் விசாரணைக் கமிட்டி என்பதாக ஒன்றை நியமித்துத்தடுத்ததுடன் இரண்டுக்குமாக பதினாயிரக்கணக்கான ரூபாய்களை வாரி லஞ்சமாகவும் கூலியாகவும் கொடுத்து “கோடாலிக் காம்பு களாவும்”, “வயிற்றுச் சோற்று கூலிகளாகவும்” உள்ள பார்ப்பனரல்லாதாரை மாத்திரம் வைத்துக்கொண்டு காங்கிரஸ் நடத்துவதின் அவசியமே இதற் காகத்தான்.

இவைகள் எல்லாம் ஒருபுறம் இருக்க காங்கிரசை விட்டு ஓட வேண்டும் என்றே விரட்டி அடித்த பெசண்டம்மையை இப்போது மறு படியும் காங்கிரசுக்கு கூப்பிடுவதும் அவருக்கு காங்கிரஸ் தலைவர் பட்டம் கட்ட ஸ்ரீமான்கள் மித்திரன் ரங்கசாமி அய்யங்காரும், சத்தியமூர்த்தி அய் யரும் மற்றும் அவர்களது வால்களும் மேல் விழுந்து ஆத்திரப்படுவதும் அதற்காகத் தான். ஏனெனில் சென்னைப் பார்ப்பனர்களின் யோக்கியதையால் காங்கிரசின் யோக்கியதை ஜனங்களுக்கு நன்றாய் வெளியாய்விட்டதுடன் இந்நாட்டில் பார்ப்பனர்களுக்கு பாமர மக்களிடம் சுத்த சுத்தமாய் யோக்கிய தையும் போய் விட்டது. ஆதலால் இவர்களுக்கு ஏதாவது ஒருஉதவி வேண்டி யிருப்பதாலும், அம்மையாரும் இந்த பார்ப்பனர்களின் தயவால் மறுபடியும் தலைவியாகி விடலாம் என்கிற ஆசை கொண்டே இப்பார்ப்பனர்களுக்கு மிகுதியும் கவலையுள்ளதாகிய வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவ விஷயத்தில் அதற்கு விரோதமாய் இருப்பதாக உறுதி கொடுத்துவிட்டதாலும் இனி அம்மைக்குப் பட்டம் கட்டப்படுவது நிச்சயம். பார்ப்பனரல்லாதாரிலும் நிற்க நிலையில்லாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் சில மாஜி தலைவர்களும் தங்களுக்கும் மறுபடியும் தலைவர்களாக ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதற்கு அனுகூலமாய் எவ்வளவு தூரம் அம்மையாரை பின்பற்றலாமோ அவ்வளவு தூரமும் பின்பற்றி இந்த பட்டாபிஷேகத்திற்கு அனுகூலமாகவும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் நம்மைப் பொறுத்த வரையில் ராயல் கமீஷன் வந்தாலும் வரா விட்டாலும் அதில் சில இந்தியர்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கமீஷன் பேரால் அதிக சுதந்திரம் என்பதாக சில உரிமைகள் கொடுத்தாலும் கொடுக்கா விட்டாலும் நமக்குக் கவலையில்லை. ஆனால் அவற்றுள் மறுபடியும் நமக்குள் கலகத்திற்கு வழியில்லாமல் மேற் சொன்ன மாதிரி எல்லா வகுப்பும் சமமாய் அனுபவிக்கத்தகுந்த சம உரிமையும் சம சந்தர்ப்பமும் இருக்கின்றதா இல்லையா என்பது தான் முக்கிய கவலை. இந்தத் தத்துவம் மாத்திரம் சரியாக நடக்க இடம் ஏற்பட்டு விட்டால் சுயராஜ்யம் என்பதாக யாரையும் பிச்சை கேட்க வேண்டிய அவசியமே நேராதென்றே சொல்லு வோம்.

**குடி அரசு - தலையங்கம் - 13.11.1927**



RangaRakes

# ஜஸ்டிஸ் கட்சியாருக்கு ஒரு வார்த்தை

ராயல் கமீஷனைப்பற்றி ஜஸ்டிஸ் கக்ஷியார்கள் ஒருவித அபிப் பிராயமும் இதுசமயம் தெரிவிக்கக்கூடாது என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். பார்ப்பன அரசியல் தந்திரத்தை நாம் பின் பற்றுவதும் அவர்களது இயக்கங்களை நாம் பின்பற்றுவதும் பார்ப்பனரல்லாத சமூகத்தின் தற்கொலையேயாகும்.

நம் நாட்டில் பார்ப்பனர்கள் சம்மந்தப்பட்ட அரசியல் இயக்கங்கள் என்பது எதுவும் கொஞ்சமும் நாணயமுடையதல்ல. அக்கூட்டத்திற்கே இவ்விஷயங்களில் மானம், வெட்கம், நாணயம் முதலியவைகள் கடுகளவும் கிடையாது என்றே சொல்லுவோம். ஏனெனில் இன்று பஹிஷ்காரம் என்பார் கள் நாளை ஏற்றுக்கொள்ளுவது என்பார்கள் இன்று ஒத்துழையாமை என்பார் கள் நாளை ஒத்துழைப்பு என்பார்கள். இன்று முட்டுக் கட்டை என்பார்கள் நாளை சன்னைக் கட்டைப்போட்டு நடத்திக் கொடுப்பது என்பார்கள், இன்று நம்பிக்கை இல்லை என்பார்கள். நாளை சம்மந்தம் செய்து கொள்ளுவது என்பார்கள். இன்று காங்கிரஸ் கட்டளை என்பார்கள் நாளை காற்றில் பறக்க விடுவார்கள். இன்று வைவார்கள். நாளைக்கு பல்லைக் காட்டுவார்கள். இவ்வளவும் தங்கள் சுயநலத்திற்காகவே செய்வார்கள். எனவே, இம்மாதிரி கூட்டத்தில் சேர்ந்தால்தான் வாழ முடியும் என்கின்ற பார்ப்பனரல்லாதார் யாராவது இருப்பாரானால் அவர்களின் நிலை பெரும்பாலும் இதை விட்டால் நாளைக்கு ஜீவனத்திற்கு மார்க்கமில்லை என்கின்றவர்களாகத்தான் இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களை மாத்திரம் ஒரு நிபந்தனையின் மேல் பார்ப்பனர்களிடம் செல்ல அனுமதிக்கின்றோம். அதாவது பார்ப்பனர்களைப் போல் எந்த சமயத்திலும் தனது சமூகத்தை காட்டிக்கொடுத்து வாழாமல் பார்ப்பனர்களைப் பற்றி கவிபாடிக் கொண்டோ பார்ப்பனரல்லாதார் சிலரை மாத்திரம் வைதுகொண்டோ வயிறுவளர்ப்பதில் நமக்கு ஆக்ஷேபணை இல்லை.

தவிர, இதுசமயம் பார்ப்பனரல்லாதாருக்கு ஒரு பெரிய ஆபத்து இருக்கின்றதை முன்னமேயே தெரிவித்திருக்கின்றோம். அதாவது, பெசண்ட் அம்மையின் புதிய உபத்திரவம் என்னவெனில், நம் நாட்டு பார்ப்பனர்கள் இப்போது தங்களுக்குள்ள சகல நாடிகளும் விழுந்து விட்டப்பிறகு, அம்மை



tamilnavarasam.com

யை பற்றி இருக்கின்றார்கள். இனி அது ஒரு ஆட்டம் ஆடித்தான் தன் நிலைக்கு வந்து சேரும். யாரும் அதில் ஏமாந்துபோய் விழுந்து விடக்கூடாது என்று எச்சரிக்கை செய்கின்றோம். கோயமுத்தூர் தீர்மானத்தால் ஏற்பட்ட ஆபத்திலிருந்தே இன்னமும் சரியானபடி நாம் மீளவில்லை. இதே சமயத்தில் மற்றொரு ஏமாற்றம் என்னும் பெசண்ட் அம்மை ஆபத்திலும் யாருடைய சூழ்ச்சியின் பலனாகவாவது மாட்டிக் கொள்வோமானால் பிறகு சுலபத்தில் நமக்கு விடுதலை கிடைப்பது என்பது மிகவும் கஷ்டமாகிவிடும். இது சமயம் நமக்கு யாருடைய தயவும் வேண்டியதில்லை. நம்முடைய சுயமரியாதை இன்னது என்பது நமக்கு ஞாபகத்திற்கு வந்தால் அதுவே போதுமானதாகும். “நாட்டிற்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்கு புல் சுமக்கும் தொழில் போகாது” என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல் இந்நாட்டில் பார்ப்பன ரல்லாத மக்கள் பெரும்பான்மையும், தோட்டி நிலையிலேயே இருக்கின் றார்கள். அத்தோட்டி நிலைமாற ஏதாவது மார்க்க முண்டானால் மாத்திரம், எந்தத் துரையையும் எந்தக் கமீஷனையும் வரவேற்கவும் செய்யலாம், பஹிஷ்கரிக்கவும் செய்யலாம். அதில்லாத பக்ஷம் நாமாக தனித்து நின்று ஒரு கை பார்த்து, நமது நிலையை மற்றவர்களுக்குச் சமமாக உயர்த்திக்கொள்ள வேண்டிவரும். ஆதலால் அவசரப்பட்டுக் கொண்டு இப்போது எவ்வித அபிப்பிராயத்தையும் தெரிவித்து விடக்கூடாது என்பதுடன் எந்த அரசியல் கட்சியிலும் சேரக்கூடாது என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.11.1927**



# பார்ப்பன சூழ்ச்சி

நீல் சத்தியாக்கிரக விஷயமாய் பார்ப்பனர்கள் நாட்டில் தங்களுக்கும் இக்காரியத்திற்கும் ஆதரவில்லை என்று தெரிந்தே ஸ்ரீமான் காந்தியவர்களின் பெயரை வைத்துக்கொண்டு, வெறும் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றார்கள். இது காங்கிரசின்போது வெளிநாட்டிலிருந்து வரும் ஜனங்களை ஏமாற்றுவதற் காகச் செய்யும் சூழ்ச்சியென்பதோடு, இம்மாதிரி அனாவசியமான காரியங் களில் சத்தியாக்கிரகம் செய்து சத்தியாக்கிரகம் என்பதின் யோக்கியதையைக் கெடுத்து விட்டால் நாளைக்கு பார்ப்பன கொடுமைகள் நீங்கச் செய்யப்படும் சுயமரியாதை சத்தியாக்கிரகத்திற்கும் ஜனங்களின் ஆதரவு இல்லாமல் போகட்டும் என்கின்ற கெட்ட எண்ணத்தின் பேரில் செய்யும் காரிய மென்றுமே சொல்லுவோம். இனியும் எத்தனை நாளைக்குத்தான் இப்படி இவர்கள் சூழ்ச்சியும் ஏமாற்றமும் செய்யக்கூடும் என்பதையும் இக்கூட்டத் திற்கு எத்தனை நாளைக்குத்தான் ஸ்ரீமான் காந்தி உதவிசெய்து வருவார் என்பதையும் பொறுமையோடு பார்த்து வருவோமாக.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.11.1927**



RangaRakes tamilnavarasam.com

# சந்தேகம் உறுதியாய் விட்டது

ஸ்ரீமதிகள் துரைகண்ணு அம்மாள், பார்வதியம்மாள் ஆகிய இரு பெண்கள் பெயரால் பொட்டுக்கட்டும் வழக்கத்தை நிறுத்துவதால் தங்கள் சமூகத்திற்கு கேடு வரும் என்று ஸ்ரீமதி முத்துலக்ஷிமி அம்மாள் அவர்களது மசோதாவுக்கு எதிர்பிரசாரமும் செய்ய வந்த காரியங்களை நாம் பார்த்தவு டனேயே இக்காரியங்கள் அவர்களால் நடைபெறுவதல்ல என்றும் இதற்கு பின்னால் ஏதோ ஒரு கூட்டம் ஆண்கள் இருந்து செய்திருக்க வேண்டும் என்றும் சந்தேகப்பட்டோம். அப்படி சந்தேகப்பட்டது சரியென்று மெய்ப் பிக்க இப்போது ஆதாரங்கள் கிடைத்துவிட்டன. என்னவென்றால் சுயராஜ்ஜி யக் கக்ஷி உயிர்நிலையான ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் சுயராஜ்ஜியக் கக்ஷித் தலைவர் வீட்டில் பேசியபோது குறிப்பிட்ட வாசகங்களிலிருந்தே ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கூட்டத்தாருடைய தூண்டுதலாகத்தான் இருக்க வேண்டும் என்று நம்ப இடமேற்படுகிறது. ஆதலால் இம்மாதிரி ஆக்ஷேபங் களை பொது ஜனங்கள் லக்ஷ்யம் செய்யமாட்டார்கள் என்றே எண்ணுகின் றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.11.1927**



# சென்னை கார்ப்பரேஷனும் வகுப்பு வாதமும்

சென்னை கார்ப்பரேஷனுக்குத் தலைவர் தெரிந்தெடுக்க வேண்டிய சடங்கு இம்மாதத்தில் நடக்க வேண்டும்.

சென்னை முனிசிபாலிட்டியில் இதுசமயமுள்ள 50 கவுன்சிலர்களில் பார்ப்பன கக்ஷியில் சுயராஜ்யக் கக்ஷிக்கும் சுயேச்சை கக்ஷிக்குமாக சுமார் 20 கவுன்சிலர்கள் இருக்கின்றார்கள். பார்ப்பனரல்லாதார் கக்ஷிக்கும் சுமார் 20 கவுன்சிலர்கள் இருக்கின்றார்கள். மீதி வெள்ளைக்காரர்களாக இருக்கின் றார்கள். ஆகவே, எந்த கக்ஷியாரும் வெள்ளைக்காரர்கள் தயவு இருந்தால் தான் வெற்றி பெற முடியும். இந்த நிலையில் வெள்ளைக்கார கவுன்சிலர்கள் இரண்டுக் கக்ஷித் தலைவர்களையும் தங்கள் முன் வந்து அவரவர்கள் கொள்கைகளை உபந்நியாசம் செய்யும்படிக்கும் அதில் யார் வெள்ளைக் காரர்களுக்கு அனுகூலமாயிருக்கிறார்களோ அவர்களுக்குத் தங்கள் ஓட்டை கொடுப்பதாகவும் சொன்னார்கள். அவர்கள் பேச்சை நம்பி இரண்டு கக்ஷிக் காரர்களும் அதாவது பார்ப்பனரல்லாத கக்ஷிக்காக முக்கியமாய் பனகால் ராஜாவும் பார்ப்பன கக்ஷிக்காக ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரும் பேசினார் கள். மற்றும் ஸ்ரீமான்கள் பாத்ரோவும், சாமி வெங்கிடாசலம் செட்டியாரும் முறையே பேசி இருந்தாலும் முன்சொன்ன இருவர்கள் பேசினதையே பிரதானமாய் வைத்துப் பார்த்ததில் ஒருவரைவிட ஒருவர் பேசினது ஜாக்கிர தையாகவும் இரண்டர்த்தம் கொடுக்கக் கூடியதாகவும் வெள்ளைக்காரரையும் ஜனங்களையும் ஏமாற்றக் கூடியதாகவும் இருந்ததே தவிர ஒன்றும் வெள்ளைக்காரரால் மதிக்கப்படவில்லை. காரணம் என்னவெனில் இந்த இரண்டு கக்ஷிக்கும் ஓட்டுக்கொடுப்பதற்கு வெள்ளைக்காரருக்கு இஷ்ட மில்லை. என்னவென்றால் கோயமுத்தூர் மகாநாட்டில் கவர்னர் பிரபு பேரில் நம்பிக்கை இல்லாத தீர்மானம் நிறைவேற்றியதால் பார்ப்பனரல்லாதார் கக்ஷி மேல் இருந்த நம்பிக்கை வெள்ளைக்காரருக்கு விட்டு போய் விட்டது. சுயராஜ்யக் கக்ஷி கவுன்சிலர்கள் மானம், மரியாதை இல்லாமல் இழிமொழிகள் பரிமாறிக்கொண்டு மீன்கடை, கள்ளுக் கடைபோல் கலகம் செய்வதால் அவர்களுக்குஓட்டுக்கொடுக்கவும் இஷ்டமில்லை. இதுவும் தவிர சுயராஜ்ய கக்ஷியார் வெள்ளைக்காரர் ஓட்டுப் பெறுவதாயிருந்தாலும் அது ஒரு பார்ப்பனருக்கு வருவதற்கு இல்லாமல் இந்த தடவையும் ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம்செட்டியாருக்கே போக வேண்டியிருக்கு மாதலால் சுயராஜ்யக்



RangaRakes
tamilnavarasam.com

கக்ஷியிலுள்ள பார்ப்பன கவுன்சிலர்களுக்கு தங்கள் கக்ஷியார் பேரால் ஆளை நிறுத்தவும் மனம் இல்லாமல் சூழ்ச்சி செய்து எப்படியாவது அது இந்த தடவை ஒரு பார்ப்பனருக்கு போகும்படி செய்ய வேண்டும் என்பது அவர்களுடைய கருத்து. இந்த நிலையில் ஜி.எ. நடேசய்யர் என்கிற ஒரு பார்ப்பனரை சுயராஜ்யக் கக்ஷி பார்ப்பனர்கள் ரகசியமாய் தூண்டி விட்டு அவரைக் கொண்டு வெள்ளைக்காரர் ஓட்டுகளை சரி செய்யச் செய்து தாங்களும் உதவி செய்வதாய் வாக்களித்து (ஏனென்றால் ஸ்ரீமான் நடேசய்யருக்கு ஓட்டு செய்யாவிட்டால் ஜஸ்டிஸ்காரர்கள் வந்து விடுவார்கள். ஆதலால் ஜஸ்டிஸ்காரர்கள் வராமலிருப்பதற்கு வேறு ஒரு கக்ஷிகாரருக்கு ஓட்டு செய்தோம் என்று சொல்லிக்கொள்ளலாம் என்கிற சாக்கின் பேரில்) அவரையேத் தலைவராக்க வெகு பிரயத்தனங்கள் செய்கின்றார்கள். இந்த சூழ்ச்சி அறிந்த ஜஸ்டிஸ் கக்ஷியார் தங்கள் ஓட்டுகளை தாங்கள் வருவதற்கு இல்லாவிட்டால் ஒரு பார்ப்பான் வருவதைவிட பார்ப்பனரல்லாதாராவது வரட்டும் என்கின்ற எண்ணத்தின் பேரில் ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியாருக்கு ஓட்டு செய்வதாய் ஒப்புக் கொண்டு அவருக்கு வலுவில் சொல்லியும் அனுப்பி விட்டார்கள். இது தெரிந்த வெள்ளைக்காரர்களும், பார்ப்பனர்களும் இஞ்சி தின்றக் குரங்கை போல் விழிக்கிறார்கள். எப்படியாவது பார்ப்பானை இந்த தடவை தலைவராக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தின் பேரில் பார்ப்பனர்கள் ஒரு புது யோசனை கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது ஜஸ்டிஸ் கக்ஷியார் நல்ல எண்ணத்தின் பேரில் தங்கள் கக்ஷிக்கு ஓட்டுசெய்ய வரவில்லை. வகுப்பு துவேஷத்துடன் பார்ப்பான் வரக்கூடாது என்கின்ற எண்ணத்தின்மேல் சாமி வெங்கிடாசலம் செட்டியாருக்கு ஒரு பார்ப்பனரல்லாதார் என்கின்ற முறையில் ஓட்டு செய்ய வருகின்றார்கள். ஆதலால் அம்மாதிரி ஓட்டுகளை பெறுவதின் மூலம் வகுப்பு துவேஷத்தை வளர்ப்பதற்கு இடம் தரக்கூடாது. எப்படியாவது பாடுபட்டு வகுப்பு துவேஷம் ஒழிவதற்கு அனுகூலமாய் இந்த தடவை ஒரு பார்ப்பனருக்கேத் தலைவர் பதவி செய்து வைக்க வேண்டுமென்று தர்ம நியாயம் பேசுகிறார்கள். பார்ப்பனர்கள் தயவினாலும், பணத்தினாலும் ஸ்தானம் பெற்ற பார்ப்பனரல்லாத கவுன்சிலர்கள் சிலரும் இதற்கு ஆமா ஆமா போடுகிறார்கள்.

என்ன சொன்னாலும் ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியாரை சுலபத்தில் ஏமாற்ற முடியாது. ஆதலால் முடிவு எப்படி ஆகுமோ சொல்ல முடியாது. என்ன ஆவதானாலும் ஜஸ்டிஸ் கக்ஷிக்கு தலைவர் ஸ்தானம் கிடைப்பது கஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் வெள்ளைக்காரர்கள் சுயராஜ்யக் கட்சிக்காவது ஓட்டுச் செய்து கவுன்சில் மீட்டிங்கின்போது காதையும் கண்ணையும் மூடிக்கொள்ளவோ எழுந்து ஓடிவிடவோ செய்வார்களேயல்லாமல் கவர்னர் பேரில் நம்பிக்கை இல்லாத தீர்மானம் செய்து இரட்டை ஆட்சியை ஒழிக்கின்றவரை உத்தியோகம் ஒப்புக்கொள்ளுவதில்லை என்று சொன்னவர்களுக்கு ஓட்டுச் செய்யவே மாட்டார்கள் என்று தோன்றுகிறது.

எது எப்படியானாலும் அதில் நாம் போற்றுவது ஒன்று. அதாவது கக்ஷிபேதம் பாராட்டாமல் எதிர் கக்ஷியாய் இருந்தாலும் அதை லக்ஷியம் செய்யாமல் பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சியின் பேரில் ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியாருக்கு ஓட்டுக் கொடுப்பதாய் வலுவில் சொல்ல தைரியமாய் முன் வந்த பார்ப்பனரல்லாதார் கக்ஷியின் உணர்ச்சியை நாம் மனதாரப் பாராட்டுகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 13.11.1927**


RangaRakes
tamilnavarasam.com

# சேலம் மகாநாடு

சேலம் மகாநாடு சென்ற வாரம் வெகு விமரிசையாக நடைபெற்றது. அதற்கு விரோதமாக பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சி கொஞ்சமல்ல. இது விஷயத்தில் ஸ்ரீமான்கள் பி.வரதராஜுலு நாயுடுவும் ஜி. ராமசந்திர நாயுடுவும் எடுத்துக் கொண்ட முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது.

பார்ப்பனர்கள் இவர்கள் முயற்சிக்கு செய்த கொடுமைகளையும் இடையூறுகளையும் பார்த்து மனம் பொறுக்காமலேயே பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் அநேகர் சேலம் மகாநாட்டிற்கு வந்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் ஒரு விஷயம் மாத்திரம் சேலம் மகாநாட்டால் வெளியாயிற்று. அதென்னவெனில் காங்கிரசை பார்ப்பனர்களிடமிருந்து பார்ப்பனரல்லாதார் லேசில் கைப்பற்றிவிடலாம் என்று வெகு சுலபமாக சிலர் வாயில் பேசிக் கொண்டிருந்தது தப்பு என்பதும் அது சுலபத்தில் முடியக்கூடிய காரியம் அல்ல என்பதும் நன்றாய் வெளியாய்விட்டது. பார்ப்பனரல்லாதார் சேலம் ஜில்லா மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியைக் கைப்பற்ற மாத்திரம் 1000ரூ. சிலவு செய்ய வேண்டியிருந்தது. அப்படிக் கைப்பற்றியும் கூட அநேகமாய் எல்லா பார்ப்பனர்களும் வெளியேறியதுடன் சில கோடரிக் காம்புகளையும் பிடித்து இது சரியான கமிட்டி அல்ல, இது சரியான தேர்தல் அல்ல என்று பலவித குற்றங்களைச் சொல்லித்தள்ளிவிட்டார்கள். தற்கால ஏற்பாடாய் நடக்கும் மகாநாட்டுக் கமிட்டியை கைப்பற்றவே 1000ரூ செலவு செய்தும் கமிட்டி சரியானதல்லவென்று சொல்லப்பட்டுவிடுமானால் இனி வருஷமெல்லாம் நிரந்தரமாயிருக்கும் காங்கிரஸ் கமிட்டியை கைப்பற்றுவதென்பது சுலபத்தில் முடியக்கூடிய காரியமாகுமா? அந்தப்படி முடிந்த இரண்டொரு இடங்களில் கூட அவை தப்பான கமிட்டிகள் என்று சொல்லி அவைகளை செல்லாததாக்கிவிட்டு வேறு கமிட்டிகள் ஏற்படுத்திக் கொண்டதாகச் சொல்லி தங்களுக்கே ஏகபோகமாக்கிக் கொண்டார்கள். சேலம் ஜில்லா காங்கிரசையும் கூட இப்படியேதான் செய்துவிட்டார்கள்.

எங்காவது தேச ஊழியம் செய்ய வேண்டும் என்கிற ஒருவன் இந்த மாதிரி அயோக்கிய பார்ப்பனர்களுடன் சண்டை போட்டுக் கொண்டிருக்க முடியுமா என்பதை யோசித்தால் காங்கிரசில் இருக்கும் பார்ப்பனரல்லாதார் சங்கதி விளங்காமல் போகாது.



நிற்க. இவ்வளவு கஷ்டப்பட்டு நடத்திய சேலம் மகாநாட்டால் என்ன பலன் உண்டாயிற்று என்று பார்த்தால் பார்ப்பன ஆதிக்க காங்கிரசு ஒரு ரூபாயானால் சேலத்தில் பார்ப்பனரல்லாதார் 1000ரூ செலவு செய்து கைப்பற்றி நடத்திய பார்ப்பனரல்லாதார் காங்கிரசு 16 அணா என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும் வகுப்புவாரி உரிமைக்கும் ஏற்றதான சில தீர்மானங்கள் அதில் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் மக்களை ஏமாற்றும் தீர்மானங்களும் அரசியலின் பேரால் தாராளமாய் நிறைவேற்றப்பட்டிருக்கிறதென்றே சொல்லவேண்டும்.

அதாவது ராயல் கமிஷனில் சரியான பிரதிநிதித்துவம் இல்லாமல் இருந்தால் அதை பகிஷ்கரிக்க வேண்டும் என்கின்ற தீர்மானமும் பெசண்டம்மையாரின் காமன் வெல்த்து பில் என்னும் மசோதாவை ஒப்புக் கொள்வதான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டதையுமே முக்கியமாய்ச் சொல்லலாம். ராயல் கமிஷனை பகிஷ்கரிப்பதென்பதும் அதற்கு நிபந்தனை சரியான இந்தியப் பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால் என்பதும் எவ்வளவு மோசமானது என்பதும் விளங்காமல் போகாது. இதை அங்கு பலர் ஆக்ஷேபித்து அவ்வாக்ஷேபனை எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டும் சிலருடைய சொந்த மரியாதையைக் காப்பாற்ற வேண்டி இத்தீர்மானம் தாக்ஷண்ணியத்தின் பேரில் நிறைவேற்றப்பட வேண்டியதாகி விட்டது. அதற்கு ஓட்டுக் கொடுத்த பலர் இத்தீர்மானத்தை நிறைவேற்றினால் ஸ்ரீமான்கள் பி.வரதராஜுலு நாயுடுவுக்கும் ஆர்.கே.ஷண்முகம் செட்டியாருக்கும் ராயல் கமிஷனில் இடம் கிடைக்கக்கூடும் என்கின்ற ஆசையுடனேயே ஓட்டு கொடுத்தார்கள் என்று நினைக்கத்தக்கதாகவே இருந்தது. யார் சரியானவர்கள் என்பதும் யாரை நியமித்தால் பலனளிக்கக்கூடியதாயிருக்குமென்பதும் இவ்விருகனவான்களுக்கே அர்த்தமாகாமல் ராயல் கமிஷனைப் பற்றி அபிப்பிராயம் கொடுத்து பாமர மக்களைப் பைத்தியக்காரர்களாக்கி கெட்ட பெயர் சம்பாதித்துக் கொடுத்து விட்டார்கள்.

இரண்டாவதாக பெசன்டம்மையார் காமன் வெல்த் மசோதா தீர்மான விஷயத்தையும் அது இன்னது என்றும் அதில் இன்னது இருக்கின்றது என்றும் அங்குள்ள மக்களுக்கு தெரிவிக்காமலேயே அதை ஒப்புக் கொள்வதாக தீர்மானித்துக் கொண்டார்கள். பார்ப்பனர்கள் எப்படி வேதத்தை படிக்க இடங்கொடுக்காமலேயே எல்லோரையும் ஒப்புக் கொண்டதாகச் சொல்லும்படி ஏமாற்றி வருகின்றார்களோ அதுபோலவே இவ்விஷயத்திலும் செய்திருக்கின்றார்கள். இதுபோல மோசமான காரியம் வேறொன்றைச் சொல்லவே முடியாது.

பார்ப்பனரல்லாத மக்கள் காங்கிரசில் சேர்ந்தால் எப்படி ஏமாற்றப் படுவார்கள் என்பதையும் எப்படி பாமர மக்களை மற்றவர்கள் தங்கள் சுயநலத்துக்கு உபயோகித்துக் கொள்வார்கள் என்பதையும் சேலம் ஜில்லா மகாநாடு காட்டிவிட்டது.



RangaRakes tamilnavarasam.com

ராயல் கமிஷனைப் பற்றியாவது, பெசன்டம்மை காமன் வெல்த் மசோதாவைப்பற்றியாவது, அதனால் நமது நாட்டு மக்களுக்கோ அல்லது அம்மகாநாட்டில் அநேகமாய் முழுதுமாயிருந்த பார்ப்பனரல்லாத மக்களுக்காவது ஒரு காதொடிந்த ஊசியளவு பயனாவது உண்டு என்று யாராவது சொல்லக்கூடுமாயென்று கேட்கிறோம். நாளைக்கு யாராவது சொல்வதானாலும் கேட்டுக் கொள்ளத்தயாராயிருக்கின்றோம். ஆகவே காங்கிரசைப் பார்ப்பனரல்லாதார் கைப்பற்றியதால் பலன் என்ன என்பதும் சேலம் மகாநாட்டால் தெரிந்து போயிற்று என்றே சொல்லலாம். மற்றபடி மகாநாடு ஏற்பாடுகளும் வந்த பிரதிநிதிகளுக்கும் மற்றும் அழைப்புக்காரர்களுக்கும் வேண்டிய சவுகரியங்களும் போஜன வசதிகளும் மிகவும் சிறப்பாகவே நடைபெற்றது.

**குடி அரசு - கட்டுரை - 13.11.1927**



# ஞானசூரியன்

ஸ்ரீலஸ்ரீ சிவாநந்த சரஸ்வதி ஸ்வாமிகளால் எழுதப்பட்டு ஸ்ரீமான் கானாடுகாத்தான் வயிசு ஷண்முகம் செட்டியார் அவர்களால் பொது நன்மையை உத்தேசித்து அச்சிடப்பட்ட "ஞானசூரியன்" என்னும் புத்தகம் நமது பார்வைக்கு வந்தது. அப்புத்தகம் தமிழ்நாட்டு மக்கள் அவசியம் படித்துப் பார்க்க வேண்டியவைகளில் ஒன்று என்றே சொல்லுவோம்.

இதைப் படித்து பார்த்தால் வேதம் என்று சொல்லுவதில் உள்ள ஆபாசங்கள் வெளியாவதுடன் வேதத்தை ஏன் ஒரு வகுப்பார் தவிர மற்றவர்கள் படிக்கக் கூடாதென்று ஆதியிலிருந்தே பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்து வந்திருக்கிறார்கள் என்பதும் நன்றாய் விளங்கும். ஸ்ரீலஸ்ரீ சுவாமி அவர்கள் இதில் பெரும்பாகம் வேதத்தில் உள்ள சுலோகங்களையும் மற்றும் வேதத்தை ஆதாரமாய் கொண்ட சமஸ்கிருத நீதிநூல்கள் என்பவைகளில் உள்ள சுலோகங்களையும் எடுத்து எழுதி அதற்கு அர்த்தம் எழுதியிருப்பதுடன் ஆரியர்களான பார்ப்பனர்களின் அநாகரிகத்தையும் அவர்களது காட்டுமிராண்டித்தனத்தையும் சுயநலத்தையும் நன்றாய் விளக்கி இருக்கின்றார். இதை ஒரு தடவை வாசித்துப் பார்த்தவன் நேருக்கு நேராக விமானம் வந்து தன்னை கூட்டோடு மோட்ச லோகத்திற்கு அழைத்துக்கொண்டு போவதானாலும், தான் இந்து என்றோ வேதத்தையும் ஸ்மிருதிகளையும் நம்புபவன் என்றோ சொல்லிக் கொள்ள ஒரு கடுகளவும் சம்மதிக்க மாட்டான். எனவே உண்மையான தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இப்புஸ்தகத்தை ஒரு தடவை படித்துப் பார்க்கவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகின்றோம். விலை ரூ1. கிடைக்குமிடம்:-ஸ்ரீமான் வயிசு ஷண்முகம் செட்டியார், கானாடுகாத்தான், (ராமநாதபுரம் ஜில்லா)

**குடி அரசு - மதிப்புரை - 13.11.1927**



RangaRakes tamilnavarasam.com


பதிவு நெம் 2041

குடி அரசு

[வாரப்பதிப்பு]

(20—11—27)

கணித சோதிடம்

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்டக் கற்றுக் கொள்ளலாம்

கதர்ப் பத்திரிகைக்கு

8000 சதுரம் நூல்.

திருப்பூர் கதர் பனியன்கள்.



# பட்டுக்கோட்டையில் சுயமரியாதைப் பிரசாரம்

நான் இவ்வூருக்கு இதற்கு முன் இரண்டு தடவை வந்திருக்கின்றேன். இது மூன்றாம் தடவை. தலைவர் சொல்லியபடி நான் இச்சுயமரியாதை இயக்கத்தைக் குறித்து பல இடங்களில் பேசி வருகிறேன். நாம் உண்மையில் விடுதலை பெற்று வாழ விரும்புவோமானால் சுயமரியாதை உணர்ச்சி நமக்கு வேண்டும். மற்ற நாடுகளில் விடுதலைப் பெற்று வாழும் மக்களிடம் சுயமரி யாதை உணர்ச்சியே மிகுந்திருக்கிறதென்பதைச் சரித்திர வாயிலாகக் காணலாம். மற்ற நாடுகள் 300 அல்லது 400 வருஷங்களுக்கு மேல் அடிமைப் பட்டு சுயமரியாதை கெட்டு வாழ்ந்து வந்ததாகத் தெரியவில்லை. ஆனால் நாம் பல ஆயிரம் வருஷங்களாக விடுதலையின்றி அடிமைகளாகத்தான் இருந்து வந்திருக்கிறோம் என்பது நன்கு விளங்கும். முன்னர் சுமார் 500 வருஷங்களுக்கு முன் வெள்ளையர்கள் இருந்த நிலைமையையும், இப்போது அவர்கள் இருக்கும் நிலைமையையும் கவனிக்கையில் அவர்கள் எங்ஙனம் மாறுதலடைந்து வந்திருக்கிறார்கள் என்பது விளங்கும். இவர்கள் அக்காலத் தில் நம்மைவிட பக்தி, மூடக் கொள்கை முதலிய படுகுழிகளில் ஆழ்ந்து கிடந்தார்கள். நாம் நம் நாட்டில் நாகரிகம் படைத்திருந்த காலத்தில் அவர்கள் காட்டுமிராண்டிகளாக, மீன், நண்டு, புழு,பூச்சி முதலியவைகளைப் புசித்துக் கொண்டு அநாகரீகர்களாகத் திரிந்து கொண்டிருந்தார்கள். அத்தகைய ஜாதி யார்கள்தான் நம்மை அநாகரீகமுள்ளவர்கள், மிலேச்சர்கள் என்று பலவகை மொழிகளை நம்மீது சாற்றி இழிவுபடுத்தி, அடிமைகளாக்கி ஆண்டு வருகி றார்கள். பல நூற்றாண்டுகளாக நாம் அடிமைக் குழியிலேயே இருந்தும், நாம் விழித்தெழுந்து நமது குறைகளை தீர்த்துக்கொள்ள முன்வரவில்லை. சுயராஜ் யம், விடுதலை என்றுதான் கத்திக் கொண்டிருக்கிறோம். இப்படியெல்லாம் நாளுக்கு நாள் பலமாகக் கிளர்ச்சி செய்து கொண்டும் கூக்குரல் செய்து கொண்டு வந்தும் நாளுக்கு நாள் நாம் பின்னோக்கியே செல்கின்றோம். இத்தகைய கூக்குரல்களைக் கேட்டுக்கேட்டு எதிரிகள் விழித்துக்கொண்டு விட்டார்கள்.

இதற்கெல்லாம் காரணம் நமது மதந்தான். மத சம்மந்தமான மூடக் கொள்கைகள், அசட்டுத்தன்மை, குருட்டுத்தனம் முதலியவைகளால் நாம் இவ்வளவு கேவல ஸ்திதிக்கு வந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மதஸ் தர்களையும் எடுத்துக்கொண்டால், அந்தந்த மதஸ்தர்களுக்கு தங்களுக்கென



RangaRakes

tamilnavarasam.com

ஆள தேசமிருப்பதல்லாமல், சில மதஸ்தர்கள் பிறநாட்டையும் ஆண்டு வருகிறார்கள். நாம் நம்முடைய நாட்டையாவது ஆள சக்தி இல்லா விட்டாலும் அடிமைகளாகவாவது இல்லாமல் இருக்கின்றோமா என்று பாருங்கள்! நேற்று தோன்றிய மதங்களெல்லாம், தங்களுடைய மதஸ்தர்களை ஆண்டு வரும் பொழுது நம்முடைய மதஸ்தர்கள்தான் நம்மை ஆண்டு கொள்ள முடியாமல் அடிமைகளாயிருக்கின்றனர். நமது மதம் எத்தனையோ கோடி வருஷங்களுக்கு முன் கடவுளால் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது. நம்முடைய மதத்திலுள்ள கொள்கைகளும், குருட்டுத் தனங்களும், நாம் அக்கொள்கைகளைப் படிக்கக் கூடாது என்பன போன்ற நிபந்தனை களும்தான் நம்மை இக்கதிக்கு கொண்டு வந்து விட்டு விட்டன என்று சொல்வேன். நம் ‘ஹிந்து மதம்’ என்று சொல்லும் மதத்தை சற்று ஆராய் வோம். முதலில் ‘ஹிந்து’ என்கிற வார்த்தையே நம்முடைய வார்த்தையல்ல. அவ்வார்த்தை நம்முடைய புராண ஆகமம் முதலியவைகளில் எங்கேனும் சொல்லப்பட் டிருக்கின்றதா என்று பார்த்தால் இல்லவே இல்லை. எங்கி ருந்தோ அந்த ஹிந்து என்ற வார்த்தை நம்முடைய மதத்துக்கு பெயராக புகுந்துவிட்டது. நம் நாட்டு மதத்துக்கும் பழக்க வழக்கங்களுக்கும் பெயர் நம்முடைய பாஷையில் அன்றோ இருக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் ‘ஹிந்து’ என்னும் வார்த்தையே நம்முடைய பாஷையில் கிடையாது. ‘ஹிந்து’ என்னும் பதத்துக்கு என்ன பொருள் என்று கேட்டால் ஒருவருக் குமே தெரியாது. இப்படிப்பட்ட மதத்தை கடவுளால் ஏற்படுத்தப்பட்ட மதம், பெருகைளையும் அற்புதங்களையும் உடையது என்று நம்மவர்கள் பெருமை பேசிக்கொள்கின்றனர். நேற்றைக்குப் போய் மற்றொரு மதத்தில் சேர்ந்த ஒருவனைக் கேட்டால் தன்னுடைய மதம், கொள்கை, தத்துவம் முதலியவை கள் இன்னின்ன வென்பதை உடனே கூறிவிடுவான். அவன் தீண்டாதவனா யிருந்தாலும் அம் மதத்தில் மற்றவர்களுக்குரிய சமத்துவம் சகோதரத்துவம் முதலிய சகல உரிமைகளும் தாராளமாய் வழங்கப்படுகின்றன. அவர்களு டைய வேத புஸ்தகங்கள் பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு இலவசமாய் மக்களுக்கு மூலை முடுக்குகளிலும் கொண்டுவந்து கொடுக்கப் படுகின்றன. ஆனால் நம்முடைய மதத்துக்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா வென்று ஒருவரைக் கேட்டால் அவருக்கு ஒரு ஆதாரமே கிடையாது என்று தான் சொல்வார். ஏனென்றால் ஹிந்து மதத்திற்கு ஆதாரம் என்று சொல்லப் படும் ஆகமம், புராணம், வேதம் முதலியவைகளை ஒரு சாரார் தவிர மற்றவர்கள் படிக்கக் கூடாது, கேட்கக்கூடாது, மீறிச்செய்தால் நாக்கை அறுத்து விடவேண்டும், காதில் ஈயத்தை காய்ச்சிவிட வேண்டுமென்று பல நிபந்த னைகளை நம் மதத்தில் ஏற்படுத்தி இருக்கின்றனர். இம்மாதிரியான மதத்தை ஒப்புக் கொள்கிறவன் அனுஷ்டிக்கிறவனை அறிவாளி என்றாவது, யோக் கியன் என்றாவது சொல்லக் கூடுமா? இனி வேதங்களை ஒப்புக் கொள்ளு கிறவர்கள் என்றே வைத்துக் கொள்வோம். அப்படியானால் எத்தனையோ கொள்கைகளையும், பெருமைகளையுமுடைய ஒரு மதம் மக்களுக்கு எவ்வளவு தூரம் கல்வி, அறிவு முதலிய துறைகளில் எவ்வளவு நன்மை



செய்திருக்கிற தென்பதைப் பாருங்கள். இவ்வளவு காலமாக இருந்து வந்த ஒரு மதத்திலுள்ள மக்களில் 100 –க்கு 5 பேருக்குக்கூட கையெழுத்துப் போடத் தெரியாது. இன்னும் மற்ற மதஸ்தர்கள் தங்களுடைய மதத்தைப் பற்றி எவ்வளவு தூரம் பிரசாரம் செய்து வந்திருக்கிறார்கள். நாம் எவ்வளவு தூரம் பிரசாரம் செய்து வந்திருக்கிறோமென்றும் கவனியுங்கள்! மற்ற மதஸ்தர்கள் தங்களுடைய மதத்தின் பேரால் எவ்வளவு செலவு செய்து வருகிறார்க ளென்று பார்த்தால் நாம் செலவு செய்வதில் 20 –ல் ஒரு பங்கு கூட அவர்கள் செய்வதில்லை. நம் முடைய ஹிந்து கோவில்களுக்கு வருஷத்தில் எவ்வளவு வருமானம் வருகிறதென்று பார்த்தால் அக்கோவில்களின் கணக்குகளிலி ருந்தே விளங்கும். லக்ஷம் லக்ஷமாக வந்து குவிகின்றன. நமது சென்னை மாகாணத்தில் மட்டும் கோவில்களின் வருமானம் இரண்டு கோடி ரூபாய் என்று சர்க்கார் கணக்கு வைத்திருக்கிறார்கள். இன்னும் ஸ்தல யாத்திரைக் காரர்களின் செலவுதான் என்ன! கோவில் கணக்குகளைப் பார்த்தால் அரிசி, உப்பு, புளி, பாதாம்பருப்பு, திராக்ஷை முதலியவைகள்தான் இவ்வளவு இவ்வளவு என்று எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் சமையல் பண்ணி சாப்பிடுகிறவர்கள் யார் என்று பாருங்கள். இவ்விதம் ஒரு வழியில் வீண் செலவு நடந்து கொண்டிருக்கையில் நம் நாட்டில் விவசாயம் கைத் தொழில் முதலியவைகளை விருத்தி செய்வதற்கு பணமில்லையென்று அழுதுகொண்டிருக்கிறோம். இவ்விதம் கோவில்களில் செலவாகும் செலவு களை யாராவது கவனித்தார்களா? இதை கவனிக்கத்தான் இந்து மத பரிபாலன போர்டார் சட்டம் செய்தார்கள். மற்ற மதஸ்தர்கள் இங்ஙனம் கோவில்களில் வீண் செலவு செய்யாமல் மக்களின் கஷ்ட நிவர்த்திக்கும் அறிவை விருத்தி செய்யப் பள்ளிக் கூடங்களும் ஏற்படுத்தி மக்களை மேன் மேலும் அபிவிருத்தியடைய செய்கின்றார்கள்.

இனி நம் மதத்தின் பெயரால் நம்மை அடிமைப்படுத்துவதும் விடுதலையடையத் தடையாயிருப்பதுமான நமது மதச்சடங்குகளை கவனிப் போம். கருத்தரித்த நாள் முதல் கொண்டு கட்டையில் வைத்ததற்குப் பின்னும் கற்பகோடி வருஷங்கள் வரை சடங்குகள் தோன்றி விடுகின்றன. அர்த்தமற்ற, நிபந்தனையற்ற சடங்குகளின் பேரால் புரோகிதப் பார்ப்பானும், பஞ்சாங்கப் பார்ப்பானும் பொய்யும் சூதுகளையும் சொல்லி பணம் பறித்துச் செல்கின்றார் கள். கலியாண காலங்களிலும், கருமாதி காலங்களிலும் புரோகித பார்ப்பானும் அரிசி, பருப்பு, இலை முதலியவைகள் மூட்டை மூட்டைகளாக பறித்துக் கொண்டு செல்கின்றார்கள், ஒருவனுடைய மரணத்திற்கு பின்னும், அவனை மோட்ச லோகத்துக்கு தான் அனுப்பி விடுவதாக அவனுடைய குடும்பத்தார் களிடம் பொய் வார்த்தைகள் கூறி வருஷா வருஷம் பணம் பறித்துக் கொண்டு செல்கின்றனர். இதெல்லாம் நமது மூடக் கொள்கையும் மூடத் தன்மையுமன்றோ! ஆகையால் இப்புரோகித மதத்தை ஒழித்தாலன்றி நாம் ஒரு நாளும் முன்னேற முடியாது. மற்ற நாடுகளில் பிற மதஸ்தர்களும் தங்களுடைய புரோகித மதத்தை ஒழித்த பின்புதான் அந்நாட்டு மக்கள்



RangaRakes tamilnavarasam.com

விடுதலை அடைந்திருக்கின்றனர்.

இனி மதாச்சாரியர்கள், குருமார்கள் முதலியவர்களைக் கவனிப்போம், இவர்கள் குதிரைப் பல்லக்கு முதலியவைகளைப் போட்டுக் கொண்டு கொள்ளைக்காரர்களைப் போல ஊர் ஊராய் வந்திறங்கி, அங்குள்ள உத்தியோகஸ்தர்கள், மிராசுதார்களின் செல்வாக்கை அனுகூலமாகக் கொண்டு மூட்டை மூட்டையாக பணத்தைப் பலரிடமிருந்து பறித்துக்கொண்டு செல்கின்றனர். இவர்கள் சொல்லிவாங்கும் வகைகளுக்காவது அப்பணத்தை செலவு செய்கின்றார்களா பாருங்கள். இல்லையே. அத்தகைய மடாதிபதிகள், குருமார்கள் பணத்தைக் கொண்டு போய் என்ன செய்கிறார்கள்? அவர்கள் யோக்கியதை என்ன? அவர்கள் நமக்கு என்ன உபதேசம் செய்கின்றார்கள்? என்பதையே நாம் கவனிப்பதில்லை. இவர்களெல்லாம் குலகுருக்களென ஆடம்பரத்துடன் எவ்வித யோக்கியதையும் இலட்சணங்களுமின்றி ஊர் ஊராய் கம்பீரமாய் வருகின்றனர். இவர்களிடம் அயோக்கியத்தனமே நிறைந்திருக்கிறது.

இனி, நாம் வணங்கும் தெய்வங்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். சில்லரைத் தேவதைகளெனப் பெயர்பெற்ற மாடன், கருப்பன் முதலிய சாமிகளுக்கு கள், சாராயம் முதலியவைகளை வைத்து ஆராதனை செய்து வருகிறோம். இனி பெரிய தெய்வங்களையுடைய கோவில்களுக்குப் போய்ப் பார்த்தால் அங்கு தாசிகளை நடனமாடச் செய்திருப்பது முதலிய ஆபாசமான பழக்கங்களை உண்டு பண்ணி ஆடம்பரமான வகைகளில் வீணாக விரையம் செய்யப்படுகிறது.

இனி நம் ஹிந்து மதஸ்தர்கள் அணிந்து கொள்ளும் சின்னங்களின் அர்த்தமென்ன என்று கேட்டால் ஒருவருக்கும் ஒன்றுமே தெரியாது. இதையெல்லாம் பொது ஜனங்களுக்கு உணர்த்த எவரேனுமிருக்கின்றனரா? இம்மாதிரியான அர்த்தமற்ற சடங்குகள் மூடக் கொள்கைகள் முதலிய ஊழல்களால் எத்தனை ஆயிரம் ஜனங்களை நாம் பிற மதங்களுக்கு பலி கொடுத்திருக்கின்றோம் என்று கவனியுங்கள். ஒரு ஹிந்து அரசரால் ஆளப்படும் திருவாங்கூர் ராஜ்ஜியத்தில் சுமார் 35 வருஷங்களுக்கு முன் இருந்த மூன்று லக்ஷம் கிறிஸ்தவர்கள் இப்போது 15 லக்ஷமாகப் பெருகிவிட்டனர். இப்படி நாம் நமது மதத்தின் பேரால் பலரை அன்னிய மதங்களுக்கு அனுப்புவதல்லாமல் ஆயிரக்கணக்கான நமது சகோதரர்களை உயிருடனேயே “சனீஸ்வரர்களாகிய பிராமண எமன்களுக்கு” ஆளாகும்படி செய்து வருகிறோம்.

இனி மதத்தின் பெயரால் சிறு பெண்களைக் கோவில்களில் பொட்டுக் கட்டி விபசாரத்துக்கு விட்டு வைப்பதை தடுக்கும் பொருட்டு சென்னை சட்டசபையிலும் வெளியிலும் பலத்த கிளர்ச்சி செய்யப்பட்டது. இதைப் பெரும்பாலோரான பிராமணரல்லாதார் ஆதரித்தும் சத்தியமூர்த்தி போன்ற பிராமண அரசியல் தலைவர்கள் தேவதாசிகளைக் கோவில்களில் பொட்டுக்



கட்டி வைப்பது மத சம்மந்தம் என்று அதை எதிர்த்து பிரசங்கங்கள் செய்தனர். இவர்களெல்லாம் போலிகளென்றும், வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு பணம் பறித்துத் தின்று திரிபவர்கள் என்றுந்தான் சொல்லுவேன். இதனால்தான் ஸ்ரீ மேயோ போன்ற பிற நாட்டார்கள் நம்மை இழிவுபடுத்தி புஸ்தகம் எழுத இடமேற்படுகிறது. அதனால் நாம் இப்போது அனுஷ்டித்து வரும் மதம், மூடக் கொள்கை ஆகியவைகள் ஒழிந்தால்தான் நாம் க்ஷேமமடைவோம். இத்தகைய சடங்குகளும், கிரியைகளும் செய்து பணத்தைச் செலவிட்டும் நம் மதஸ்தர்களுக்குள் ஒருவருக்கொருவர் கட்டுப்பாடு சிறிதேனும் உண்டா? இல்லையே கட்டுப்பாடு இல்லாமற் போய்விட்டதுடன் ஒருவருக்கொருவர் உயர்வு, தாழ்வும் நமது மதம் கற்பிக்கிறது. உண்மையான ஒற்றுமையும், கட்டுப்பாடும் இல்லாமல் மக்களை ஏமாற்ற நம் நாட்டில் போலி ஒற்றுமைப் பிரசங்கங்கள் காங்கிரஸ் பெயராலும் மற்றும் ஸ்தாபனங்கள் பெயராலும் எங்கு பார்த்தாலும் ஆகாயம் அளாவும்படி ஒலிக்கின்றன.

இனி போலி பிராமணர்கள் ஊளையிடும் சுயராஜ்யத்தைப் பற்றி சிறிது ஆராய்வோம். சுயராஜ்யம் என்றால் என்ன? அதை நாம் அடைய யோக்கியதை உள்ளவர்களா? நமக்குள் ஒருவருக்கொருவர் ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம் முதலிய சகல உரிமைகளையும் அன்னியோன்யமாய் அனுபவிக்கிறோமா என்று பார்த்தால் நம்மை ஆளும் வெள்ளைக்காரர்கள் இந் நாட்டில் இருந்தால் போதும் என்றுதான் சொல்ல வேண்டிவரும். இத்தகைய நிலையில் நாம் இருக்கும்போது இதற்கு முன் இரண்டு சுயராஜ்யம் வந்து விட்டு போய்விட்டது. மூன்றாவது சுயராஜ்யமும் 3 மாதக் கர்பமாக இருக்கிறது. இதற்கு முன் வந்த சுயராஜ்யத்தால் 3 மந்திரிகளும் 3 நிர்வாக உத்தியோகஸ்தர்களும் 5 ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றனர். இவர்களுடைய சம்பளச் செலவுகளுக்கெல்லாம் குடியானவர்கள், மிராசுதார்கள், ஜமீன்தார்களின் தலைகள்தான் மொட்டையடிக்கப்படுகின்றன. நமக்குக் கிடைத்த இரண்டு சுயராஜ்யத்திற்குப் பிறகு ஹைகோர்ட் ஜட்ஜ்களும் உத்தியோகஸ்தர்களும்தான் அதிகப்பட்டன. இவ்விதம் சிப்பந்திகள் அதிகப்பட்டும் நிர்வாகமும் ஒழுங்காக நடைபெறுவதாகக்காணோம். ஆகையால் சுயராஜ்யம் சுயராஜ்யம் என்று கத்துவதெல்லாம் வெள்ளைக்காரர்களும், பணக்காரர்களும், படித்தவர்களும் லாபம் பெறவேயொழிய நாட்டுக்கு எத்தகைய நன்மையும் ஏற்படப் போவதில்லை. ஆகையால் நாம் சுயமரியாதையடைந்து ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டு உண்மையான சுயராஜ்யம் பெற வேண்டுமானால் நம் மதத்தின் பேரால் ஏற்பட்டுள்ள மூடக் கொள்கைகளையும், புரட்டுகளையும் அறவே ஒழிக்க வேண்டியது அவசியமாகும்.

*குறிப்பு : 7.11.27-ல் பட்டுக்கோட்டையில் சுயமரியாதைப் பிரசார சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 20.11.1927**



RangaRakes tamilnavarasam.com

# ராயல் கமிஷனை பஹிஷ்கரிப்பது எதற்காக?

அடங்கிக் கிடந்த அரசியல் உலகத்திற்கு இரண்டு விஷயங்கள் கிடைத்து விட்டன. ஒன்று மறுபடியும் பெசண்டம்மை ஆதிக்கம். இரண்டு ராயல் கமிஷனை பஹிஷ்கரிப்பது.

இந்த வியாசத்தில் இரண்டாவதான ராயல் கமிஷன் பஹிஷ்காரத் தைப் பற்றியே பேசுவோம்.

எதற்காக ராயல் கமிஷனை பஹிஷ்கரிப்பது?

1. ராயல் கமிஷனில் இந்தியர்கள் நியமிக்கப்படவில்லை என்பதற் காகவா?
2. அல்லது இது சமயமல்ல என்பதற்காகவா?
3. அல்லது கமிஷன் நியமித்து பரீக்ஷை செய்து சீர்திருத்தம் கொடுப்பது இந்தியருக்கவமானம் என்பதற்காகவா?
4. கமிஷனில் நியமிக்கப்பட்ட கனவான்கள் நம்பிக்கைக்கு பாத்திர மானவர்கள் அல்ல என்பதற்காகவா?

என்று பார்ப்போமானால் ஒவ்வொரு தலைவர்கள் என்போர்கள் ஒவ்வொருவிதம் சொல்லுகிறார்கள். தலைவர்கள் அறிக்கை என்பதில்,

வெள்ளைக்காரர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்றும், இந்தியர்களின் யோக்கியதையை ஆராயப் பார்லிமெண்ட் கமிஷன் நியமித்தது இந்தியாவின் சுயமரியாதைக்கு விரோதமென்றும்,

ராயல் கமிஷன் என்பதே இப்போது மாத்திரமல்ல எப்போதுமே வேண்டாம் என்றும், இக்கமிஷனில் இந்தியர்களுக்கு இடமளிக்காததால் இந்தியர் கமிஷனை பஹிஷ்கரிக்க வேண்டும் என்றும் எழுதி, ஸ்ரீமதி பெசண்ட் கூட்டத்தாராகிய ஸ்ரீமான்கள் பி. சிவராவ், எம்.எஸ். மாதவராவயன், ஸ்ரீராம் டிலாங்கு, ஜீனராஜதாசர், ஸ்ரீமதி ஜீனராஜ தாசர் ஆகியவர்களும், பார்ப் பனர்க் கூட்டத்தாராகிய ஸ்ரீமான்கள் எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார், எ. ரங்கசாமி அய்யங்கார், எஸ். சத்தியமூர்த்தி, எம்.கே. ஆசாரியார், சி.வி. வெங்கிட்டரமண அய்யங்கார், வி.எஸ். ராமசாமி சாஸ்திரி, கே. சீனிவாசய்யங்கார், வி. ராமதாஸ், கே.ஆர். வெங்கிட்டராமய்யங்கார், கி.ஆர். பார்த்தசாரதி அய்யங்கார் ஆகியவர்களும்,

பார்ப்பனரல்லாதார்களில் ஸ்ரீமான்கள் ஷாபி மகமது சாயபு, சாமி வெங்கிடாசலம் செட்டியார், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, அப்துல் அமீத்கான், சி.எம். முத்துரங்க முதலியார், சி.எஸ். கோவிந்தராஜுலு முதலியார், சாவடி சுப்பிரமணிய பிள்ளை ஆகியவர்களுமேயாவார்கள்.

இதில் கண்ட கனவான்களிடத்தில் யாரிடத்திலாவது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலாவது தமிழ் மக்களுக்கு இவர்களது அரசியல் கொள்கையில் யாருக்காவது நம்பிக்கையுண்டா?

அல்லது கையொப்பம் போட்ட தலைவர்கள் என்பவர்களில் யாருக் காவது அரசியலில் ஒரு குறிப்பிட்ட கொள்கையுண்டா? அல்லது இவர்களில் யாராவது கொஞ்ச நாளைக்காவது மாறுதல் இல்லாமல் ஏதாவது ஒரு கொள்கையைப் பிடித்து நடப்பதுண்டா?

இந்தக் கூட்டத்தில் எத்தனை பேருக்கு அரசியலில் சொந்த புத்தி உண்டு?

எத்தனை பேர் ஜீவனத்திற்காக அரசியலில் இருக்கின்றவர்கள்?

எத்தனை பேர் இனியும் கூலி பொங்கிக் கொண்டு அரசியலில் கலந்திருக்கின்றவர்கள்?

இந்தக் கூட்டத்தாரை நம்பி பஹிஷ்கார இயக்கத்தில் மக்கள் சேருவ தென்றால் அவர்கள் எவ்வளவு அறிவிலிகளாக இருக்க வேண்டும்? நாளைய தினம் ஸ்ரீமதி பெசண்டம்மையையாவது, சீனிவாசய்யங்காரையாவது, சாப்ருவையாவது, சிவசாமி அய்யரையாவது கமிஷனில் சேர்த்துக் கொள்ளப் பட்டாய் விட்டது என்கின்ற ஒரு அறிக்கை வெளியானால் இந்த பஹிஷ்கார அறிக்கைக்கு கையெழுத்து போட்டவர்கள் எவ்வளவு மதிப்பு கொடுப் பார்கள்.

சேலம் மகாநாட்டில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு பிரதி நிதித்துவம் உள்ள இந்தியர்களை கமிட்டிகளில் சேர்க்க வேண்டு மென்று ஒரு தீர்மா னத்தை நிறைவேற்றிக் கொண்டார். ஆகவே, அவருக்கு கமிஷன் நியமிப்பது சம்மதம் என்றும் அதன் ரிப்போர்ட்களை ஒப்புக்கொள்ளத் தயார் என்றும் தானே அருத்தம். நிபந்தனை யெல்லாம் ஒரு சரியான இந்தியப் பிரதிநிதியை சேர்த்துக்கொள்ள வேண்டியதுதானே தவிர வேறு ஏதாவது உண்டா? இப்பொழுது பார்லிமெண்டார் ஒரு சரியான பிரதிநிதியின் பெயரை சொல்லு



RangaRakes
tamilnavarasam.com

என்று கேட்டால் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு பெயரைச் சொல்லத் தயாராயி ருக்கிறாரா? சரியான பிரதிநிதி யார் என்பது ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக் காவது தெரியுமா என்று கேட்கிறோம். ஸ்ரீமான். சீனிவாசய்யங்காரை நியமித்து விட்டால், ஸ்ரீமான்கள் ஷாபி மகமது, எ.ரங்கசாமி அய்யங்கார், சத்தியமூர்த்தி, பார்த்தசாரதி அய்யங்கார், முத்துரங்க முதலியார், கோவிந்த ராஜுலு முதலியார், சி.வி. வெங்கிட்டரமண அய்யங்கார், ராமதாஸ் முதலிய அய்யங்கார் சிஷ்யர்கள் எல்லோருக்கும் திருப்தியாகி கமிஷனுடன் ஒத்துழைக்க ஆரம்பித்து விடுவார்களா? இல்லையா? ஸ்ரீமதி பெசண்ட் அம்மையை கமிஷனில் நியமித்து விட்டால் ஸ்ரீமான்கள் திலாங், சிவராவ், ஜீனராஜ தாசர், மாதவராவ், ஸ்ரீராம், ஸ்ரீமதி ஜீனராஜதாசர் முதலியவர் அம்மை யார் இஷ்டப்பட்டால் எல்லோருக்கும் திருப்தி ஏற்பட்டு கமிஷனுடன் ஒத்துழைக்க ஆரம்பித்து விடுவார்களா? இல்லையா? ஆகவே இப்போது பஹிஷ்காரத்தின் தத்துவம் என்ன என்பதைப் பற்றி வாசகர்களையே யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

இந்திய அரசியலை ஒரு பித்தலாட்டக் கூட்டம் தங்கள் கையில் வைத்துக்கொண்டு பாமர மக்களை களிமண் உருண்டைகளைப் போல் ஆட்டுகின்றது.

நாட்டில் மக்கள் இடையில் நடத்தப்பட வேண்டிய காரியங்கள் எவ்வ ளவோ பாக்கி இருக்கும்போது அதை சற்றும் கவனியாமல் இம்மாதிரி ஜால வித்தைகளில் தலைவர்கள் என்போர் காலத்தைக் கழிக்கிறார்கள். ஒத்துழை யாமையை அழிப்பதற்கு இதே பார்ப்பனர்கள் எவ்வளவு பித்தலாட்டங்களும் சூழ்ச்சிகளும் செய்தார்கள் என்பதை யோக்கியர்கள் அதற்குள் மறந்து இவர்களை நம்பி விடுவார்களா?

சட்டசபையில் போய் முட்டுக்கட்டை போடுவது என்றும், அங்கு ஒத்துழையாமை செய்வது என்றும், சட்டசபை படிச்சிலவையும் கூட வாங்கு வதில்லை என்றும், வெள்ளைக்காரர்கள், அதிகாரிகள், வீட்டு விசேஷங்க ளுக்குக் கூட போவதில்லை என்றும், எந்ததீர்மானத்தையும் எதிர்ப்பதென்றும் எவ்வளவு பேசினார்கள். இந்த புரட்டர்கள் அடங்கின சுயராஜ்யக் கட்சியை இந்த ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடும், கலியாணசுந்தர முதலியாரும் எவ்வளவு ஆதரித்தும் அவர்களுக்கு ஆக்கம் தேடியும் கொடுத்தார்களே. இப்போது அதெல்லாம் என்ன ஆச்சுது "கோழி திருட்டுக் கொடுத்தவன் அழுகிற கூட்டத்தில் கோழி திருடினவனும் சேர்ந்து கொண்டு அழுவது போல்" இப்போது நம்முடன் சேர்ந்து கொண்டு சுயராஜ்யக் கட்சி அயோக் கியக் கட்சி என்று சொல்லிக்கொண்டு திரிகிறார்களே ஒழிய கடுகளவாவது தாங்கள் செய்த குற்றத்திற்கு வெட்கப்படுகின்றார்களா? எனவே இக் கூட்டத்தை நம்பி இவர்களைப் பின்பற்றலாமா என்றுதான் கேட்கின்றோம்.



புத்தியுள்ள ஒவ்வொருவருக்குமே ராயல் கமிஷனை என்ன செய்வது என்பது தெரியும். பெரும்பான்மையான மக்களுக்கும் யாரைப் பின்பற்றுவது என்பதும் நன்றாய் தெரிந்து வருகின்றது. ஆகவே பாமர மக்கள் இக் கூட்டத்தை நம்பி ஏமாந்து போகக்கூடாதென்பதை மாத்திரம் இது சமயம் கவலையுடன் எச்சரிக்கின்றோம்.

**குடி அரசு – கட்டுரை – 20.11.1927**



RangaRakes
tamilnavarasam.com

# கார்ப்பரேஷனும் வகுப்பு வாதமும்

சென்னையில் 16.11.27 தேதி நடந்த கார்ப்பரேஷன் (முனிசிபல் சபை) தலைவர் தேர்தலில் வகுப்பு வாதம் என்ன என்பதும் அது யாரிடத்தில் இருக்கின்றது என்பதும் நன்றாய் விளங்கிவிட்டது. இனிமேல் கடுகளவு அறிவுள்ளவருக்கும் கூட அதைப்பற்றி எவ்வித சந்தேகமும் இருக்க நியாயம் இல்லை என்றே எண்ணுகின்றோம். சென்னை கார்ப்பரேஷன் தலைவர் தேர்தலை நினைத்த உடனே இந்த வருஷம் பார்ப்பனரல்லாதார் கக்ஷி யாராகிய ஜஸ்டிஸ் கக்ஷிக்கும் மெஜாரிட்டி இல்லை என்றும், பார்ப்பனக் கக்ஷியாகிய சுயராஜ்ஜியக் கக்ஷிக்கும் மெஜாரிட்டி இல்லை என்றும் கருதியே வெள்ளைக்கார கவுன்சிலருடைய தயவு இருந்தால்தான் எந்தக் கக்ஷியாரும் வெற்றி பெறமுடியும் என்கின்ற எண்ணத்தின் பேரில் இருக்கக்ஷியாரும் வெள்ளைக்கார கவுன்சிலரை அணுகி கெஞ்சிப் பார்த்தார்கள். வெள்ளைக் காரார், இவர்கள் இவருடைய யோக்கியதையும் பார்த்து தனித்தனியே இரு கக்ஷித்தலைவரையும் தங்கள் தங்கள் அரசியல் கொள்கையைப் பற்றி தங்கள் முன் பிரசங்கம் செய்யச் சொன்னார்கள். அதற்கும் உடன்பட்டு பார்ப்பன ரல்லாதார் கக்ஷிக்காக பனகால் ராஜாவும், பார்ப்பன கக்ஷிக்கு ஸ்ரீமான்கள் சாமி வெங்கடாசலமும் சத்தியமூர்த்தியும் போய் ஐரோப்பியர்கள் முன்னிலையில் தங்கள் தங்கள் கொள்கையைப் பற்றி பேசினார்கள். பேசியதில் இவ்விரு கக்ஷி யாரும் ஒருவருக் கொருவர் பயந்து கொண்டு ஒருவர் பேரில் ஒருவர் குற்றம் சொல்ல இடம் ஏற்பட்டதே ஒழிய ஒருவர் காரியமும் பலிக்கவில்லை. கடைசியாக வெள்ளைக்காரர்கள் சட்ட மெம்பர் சர். ராமசாமி அய்யர் பேச்சையும், மகாகனம் சீனிவாச சாஸ்திரி பேச்சையும், அட்வகேட் ஜெனரல் ஸ்ரீ வெங்கிட்டராம சாஸ்திரி பேச்சையுமே கேட்டுக்கொண்டு மிதவாதிகள் என்கின்ற கலப்படமில்லாத பிராமண கக்ஷி காரியதரிசி ஸ்ரீமான் ஜி.எ. நடேசய்யருக்கே ஓட்டுக் கொடுப்பது என்று தீர்மானித்துக் கொண்டார்கள். இந்த விஷயமறிந்த ஜஸ்டிஸ் கக்ஷியார் சுயராஜ்யக் கக்ஷியாருக்கு இடம் கொடுத்தாவது வெள்ளைக்காரருக்கு புத்தி கற்பிக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீது சுயராஜ்யக் கக்ஷித் தலைவரான ஸ்ரீமான் சாமி வெங்கடா சலத்திடம் வலுவில் சென்று வெள்ளைக்காரர்களுக்கு வெற்றி உண்டாவதை விட சுயராஜ்யக் கட்சிக்கு வெற்றி உண்டாவதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என்றும் அதிலும் சுயராஜ்யக் கட்சித் தலைவர் பார்ப்பன ரல்லாதவராய் இருப்பதால் அத்தலைவருக்கு தங்கள் கட்சியார் ஓட்டுக்கொடுப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும், ஆதலால், சாமி வெங்கிடாசலம் செட்டியார் நிற்பதில் தாங்கள் மனப்பூர்வமாய் ஆதரிக்கத் தயாராயிருப்பதாகவும் அதற்காக சுயராஜ்யக் கட்சியிடமாவது ஸ்ரீ சாமி வெங்கிடாசலம் செட்டியாரிடமாவது எவ்வித பிரதி பிரயோஜனமும் எதிர்பாராமல் எவ்வித நிபந்தனையுமின்றி தாங்கள் வலுவில் வந்திருப்ப தாகவும் தெரிவித்துக் கொண்டார்கள். அப்படி இருந்தும் பார்ப்பனர்கள் இதை ஒப்புக் கொள்ளாமல் கட்சித் தத்துவத்தையும் எதிர்பாராமல் வெள்ளைக் காரர்களின் அகம்பாவத்தையும் லக்ஷியம் செய்யாமல் எப்படியாவது ஒரு பார்ப்பனர் கார்ப்பரேஷனுக்கு தலைவரானால் போதும் என்கின்ற எண்ணத் தின் பேரில் ஜஸ்டிஸ் கட்சியார் வலிய வந்ததையும் உதைத்து தள்ளிவிட்டு பார்ப்பனர்களுக்கு எவ்வளவோ அடிமையாயிருந்து பழிபாவங்களுக்கு அஞ்சாமல் பார்ப்பனர்களையே நம்பி அவர்கள் வாலைப் பிடித்துக் கொண்டே திரிந்த ஸ்ரீமான் சாமிவெங்கிடாசலம் செட்டியாரையும் தங்கள் கக்ஷி அபேட்சகராய் நிறுத்தாமல் ஒரே அடியாய் வகுப்புவாதிகளாய் நின்று விட்டார்கள். இதன் பலனாய் பார்ப்பனக் கக்ஷியில் இருந்த சில பார்ப்பனரல் லாதாருக்கு கண் விழிப்பு ஏற்பட்டு சுயராஜ்யக் கட்சியிலுள்ள பார்ப்பனருக்கு எப்படி கக்ஷி கொள்கையைவிட பார்ப்பனருக்கே ஓட்டுக் கொடுப்பது முக்கியம் என்பதாகத் தோன்றுகிறதோ, அதுபோலவே அக்கக்ஷியிலுள்ள பார்ப்பனரல்லாதார்க்கும் அவரவர் இஷ்டப்படி ஓட்டு செய்யும் சுதந்திரம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இந்த சுதந்திரம் கொடுக்க மறுத்தால் சில பார்ப்பனரல்லாதார் சுயராஜ்யக் கட்சியை விட்டு ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்து விடுவார்கள் என்கிற பயத்தால் அம்மாதிரி அவரவர்கள் இஷ்டப்படி ஓட்டுக்கொடுக்க அனுமதி கொடுத்து விட்டார்கள். இதன் பலனாய் ஜஸ்டிஸ் கக்ஷியிலிருந்தே தலைவர் பதவிக்கு ஒரு கனவானை நிறுத்த வேண்டிய அவசியம் சுயராஜ்யக் கக்ஷி பார்ப்பனரல்லாதாருக்கும் ஏற்பட்டுவிட்டது.

இவர்களை நம்பி ஜஸ்டிஸ் கக்ஷியாரும் தங்கள் கக்ஷியிலிருந்து ஸ்ரீமான் திவான்பகதூர் ஸ்ரீ நாராயணசாமி செட்டியாரை நிறுத்தினார்கள். அவ்வளவும் தெரிந்து பார்ப்பனர்கள் வெள்ளைக்கார தயவுக்கும் சட்ட மெம்பர், அட்வகேட் ஜெனரல், சில ஹைகோர்ட் ஜட்ஜ்கள் முதலியவர்கள் சிபார்சுக்கும் கட்டுப்பட்டு பல பார்ப்பனரல்லாதார் தங்களுக்கு ஓட்டுச் செய் வார்கள் என்கின்ற தைரியத்தின் பேரில் ஸ்ரீமான் G.A நடேசய்யர் அவர்களை நிறுத்தினார்கள். கடைசியில் ஓட்டு எடுக்கும்போது பார்ப்பனரல்லாதார் கவுன்சிலர்கள் 32 பேர்களில் 28 பேர்கள் ஒரே அடியாய் பார்ப்பன ரல்லாதாருக்கே அதாவது திவான்பகதூர் நாராயணசாமி செட்டியாருக்கே ஓட்டுக் கொடுத்தார்கள். இதில் சுயராஜ்யக் கக்ஷியை சேர்ந்த பார்ப்பன ரல்லாதாரிலும் சுமார் 8 பேர்கள் இருந்தார்கள் என்றே சொல்ல வேண்டும்.


RangaRakes

tamilnavarasam.com

ஆனால் பார்ப்பன அபேட்சகருக்கு கவுன்சிலிலுள்ள 6 பார்ப்பனர்களும் கவுன்சிலில் உள்ள 8 வெள்ளைக்காரர்களும் ஒரே அடியாய் ஓட்டுச் செய்தார்கள். மேல் கொண்டு 4 பேர் யார் என்று பார்ப்போமானால் அவர்களில் இரண்டு மகமதியர்களும், மற்றும் ஒரு நாட்டுக்கோட்டை செட்டியாரும், ஒரு கிறிஸ்தவருமாகவும் இருக்கக்கூடும் என்றே அனுமானிக்கப்படுகிறது. எனவே வகுப்பு வாதம் என்பது பார்ப்பனர்களிடமும் வெள்ளைக்காரர்களிடமும் இருப்பது போன்று பார்ப்பனரல்லாதாரிடமாவது அதற்குட்பட்ட மகமதியரிடமாவது, கிறிஸ்தவர்களிடமாவது அவ்வளவு பலமாய் இருக்கின்றதா என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது. தவிர சுயராஜ்யக் கட்சியை இதுவரையில் பார்ப்பன கக்ஷி என்று சொல்லி வந்ததில் ஏதாவது ஆக்ஷேபனை உண்டா என்பதும், வெள்ளைக்காரரும் பார்ப்பனர்களும் சேர்ந்து நமது நாட்டை கொள்ளை அடிப்பது தான் அரசாங்கமாகவும் அரசியல் இயக்கமாகவும் இருக்கின்றது என்று சொல்ல வந்ததில் ஏதாவது தப்பு இருக்கின்றதா என்றும் கேட்கின்றோம்.

ஸ்ரீமான் G.A. நடேசய்யருக்கு ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, E.L அய்யர், புர்ரா, சத்திய நாராயண அய்யர், K. பாஷ்ஷியம் அய்யரவர்கள், டாக்டர் மல்லையா, டாக்டர் நாராயணராவ் ஆகிய ஆறு பார்ப்பனர்களும் ஒருங்கே ஓட்டு செய்ய வேண்டிய அவசியம் என்ன என்று கேட்கின்றோம்..

ஜி.எ. நடேசய்யரின் அரசியல் கொள்கை என்ன என்று பார்த்தால் ஜஸ்டிஸ் கட்சியைவிட எந்த விதத்தில் தீவிரமானவர். சுமார் 10 வருஷத்துக்கு முன் வரையில் ஸ்ரீமான் ஜி.எ. நடேசய்யரை கவர்மெண்டு ஒற்றர் என்று இந்த பார்ப்பனர்களே சொல்லிக்கொண்டு திரிந்தது என்ன ஆச்சுது? தவிர வெள்ளைக்காரருக்கு ஸ்ரீ நடேசய்யர் எந்த விதத்தில் இப்போது மேலானவர் என்று சொல்லக்கூடும்? சென்ற வாரத்தில் தானே ஸ்ரீமான் ஜி.எ. நடேசய்யர் ராயல் கமிஷனைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று பேசியதும், பகிஷ்காரக் கட்சியில் சேர்ந்திருக்கின்றார். ஆகவே, இதில் வகுப்புவாதமில்லாமல் வேறு என்ன தத்துவம் இருக்கின்றது? ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் வெள்ளைக்காரர் கூட்டத்தில் பேசும்போது சுயராஜ்யக் கக்ஷியார் யோக்கியர்கள் என்றும் ஜஸ்டிஸ் கக்ஷியார் சுயராஜ்யக் கக்ஷியைவிட அமிதவாதிகள் என்றும் உதாரணமாக கோயமுத்தூர் மகாநாட்டில் எல்லாக் கக்ஷியைவிட அமிதவாத கொள்கையை உடையதான இரட்டை ஆட்சி ஒழியும் வரை பதவி ஏற்பதில்லை என்று தீர்மானம் செய்திருக்கின்றார்கள் என்றும் சாடி சொல்லிக் காட்டிக் கொடுத்ததிலிருந்தே ஜஸ்டிஸ் கக்ஷி ராஜீய அபிப்பிராயம் வெள்ளைக்காரர்களுக்கு தத்துப் பிள்ளைகள் அல்ல என்பதை காட்டும். இப்படியெல்லாம் இருப்பதை ஜனங்கள் தெரிந்து கொள்ளச் சக்தி இல்லை என்கின்ற எண்ணத்தின் பேரில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி என்ன என்னமோ நொண்டி சமாதானம் சொல்லுகிறார். சுயராஜ்யக் கட்சி தங்கள் கட்சியிலிருந்து தலைவர் ஸ்தானத்திற்கு அபேட்சகர் நிறுத்தாததற்கு காரணம் அடுத்த வருஷம் வரி அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக கெட்ட பெயர் வந்து விடுமோ என்று பயந்து விட்டார்களாம். இது யோக்கியமான காரியமாகுமா? அப்படி அதிகமாக்க வேண்டிய அவசியமிருந்தால் அதிகப்படுத்துவதில் ஆக்ஷேபனை என்ன? ஆகவே இந்த தைரியமும் பகுத்தறிவும் இல்லாத கட்சி வேறு என்ன காரியம் செய்யமுடியும்? எனவே ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் பார்ப்பனரல்லாததால் நிறுத்தப்படவில்லை என்று சொல்லிவிட்டால் விவகாரம் ஒரு வழியில் தீர்ந்துவிடும். அப்படி இல்லா விட்டால் பார்ப்பன வண்டவாளம் மேன்மேலும் வெளியாகுமே யல்லாமல் நன்மை ஒன்று உண்டாகாது. இதுவரை இப்பார்ப்பனர்கள் எத்தனை பார்ப்பனரல்லாதாரை இம்மாதிரி செய்தார்கள் என்பதற்கு எவ்வளவு சாக்ஷி வேண்டும்.

பழய சங்கதிகளை விட்டு விட்டாலும் சமீப சம்பவங்களை கவனித்தால் அதுவே போதும் என்று நினைக்கின்றோம்.

காங்கிரசிலிருந்து ஸ்ரீமான்கள் ஈ.வெ. ராமசாமி நாயக்கர், பி.வரதராஜுலு நாயுடு, திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் ஆகியோர்களை காங்கிரசை விட்டு வெளியாக்கி காங்கிரசை சுத்தப்படுத்த வேண்டும் என்று சொன்னதும், ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் காங்கிரஸ் கமிட்டியில் இருக்க யோக்கியதை இல்லை என்று சொல்லி விட்டதும், ஸ்ரீமான் வி. சக்கரை செட்டியாரை விரட்டி விட்டதும், ஸ்ரீமான் ஆரியாவை விரட்டி விட்டதும், ஸ்ரீமான்கள் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் அவர்களையும், ஆரியாவையும் சிறையில் வைக்கவேண்டும் என்று சர்க்காரை வேண்டிக்கொண்டதும் ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப்பை மதுரை தேர்தலில் நடத்தியதும் ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியாரை நடத்தியதும் ஸ்ரீமான் முத்தையா முதலியாரை நடத்தியதும் இப்போது திரு.சாமி வெங்கிடாசலம் செட்டியாரை நடத்தியதும் யோசித்தால் விளங்காமல் போகாதா என்று கேழ்க்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 20.11.1927**


RangaRakes

tamilnavarasam.com

# ஸ்ரீமதி பெசன்டம்மையார்

ஸ்ரீமதி பெசன்டம்மையார் நாம் முன் நினைத்தது போலவே திக் விஜயம் செய்யப் புறப்பட்டு விட்டார்கள். அவர் செல்லுமிடங்களிலெல்லாம் பார்ப்பன சூழ்ச்சியின் வரவேற்புகளும், உபசாரங்களும் தடபுடலாக நடைபெறுவதாக விளம்பரமாகி வருகின்றது. இந்த சமயத்தில் எதற்காக பெசண்டம்மையாரை பார்ப்பனர்கள் விளம்பரப்படுத்துகிறார்கள் என் பதை கடுகளவு புத்தியுள்ள பார்ப்பனரல்லாதாரும் உணரக்கூடும். ஆனால் பார்ப்பனரல்லாதார்களில் முனிசிபாலிட்டி, தாலூகா போர்டு முதலிய ஸ்தானங்களில் பதவி வகிக்கும் சுயமரியாதை அற்ற பலர் இப்பார்ப்பன சூழ்ச்சிக்கு அனுகூலமாய் இருப்பது நமக்கு மிகவும் அவமானமாக இருக் கின்றது. அநேக பார்ப்பனரல்லாதார்கள் கொள்கையே இல்லாமல் இரண்டு பக்கமும் வாயை வைத்துக் கொண்டு தம்முடைய வாழ்வையே பிரதானமாகக் கருதி திரியும் இழிதன்மை மாறினாலொழிய பார்ப்பனரல்லாதாருக்கு சுய மரியாதை ஏற்படுவதென்பது கனவேயாகும். ஒவ்வொரு பார்ப்பனரல்லா தாரும் பதவி கிடைக்கும்வரை தான் பார்ப்பனரல்லாதார் என்றும், பார்ப்பன ரல்லாதார் நன்மைக்கு பாடுபடுகின்றவனென்றும், பார்ப்பன அக்கிரமங்களை அடக்கவே இப்பதவிகளுக்கு ஆசைபடுகிறேன் என்றும் சொல்லிக் கொண்டு பல்லைக் காட்டி பதவி பெற்றதும், பெற்ற தாயை துரோகம் செய்வது போல் தன்னையும் பரிசுத்த பார்ப்பான் என்று நினைத்துக் கொண்டு பார்ப் பனக் கூட்டத்துக்கு வால் பிடிப்பதில் பந்தயம் போட்டு முந்த ஆரம்பித்து விடுகிறார்கள். இதைப்போல் சிறுமை குணம் வேறு கூட்டத்தில் இருப்பதாக நாம் சொல்ல முடியாது. என்ன காரியத்திற்காக முனிசிபாலிட்டிகளும், போர்டுகளும் பெசண்டம்மையாருக்கு உபசாரபத்திரம் வாசித்துக் கொடுக்க வேண்டும்? அவ்வம்மையார் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு செய்த நன்மை என்ன? அவ்வம்மையாரின் நாணயம் என்ன? அபிப்பிராயம் என்ன? இனியும் அவ்வம்மையார் செய்யப் போகும் காரியமென்ன? ஒன்றையுமே கருதாமல் இம்மாதிரி காரியங்கள் செய்வதால் இம்மாதிரி பார்ப்பனரல்லாதார் தங்களுக்கு சுய புத்தியும், சுயமரியாதையும், பகுத்தறிவும் இருப்பதாக எப்படி சொல்லிக்கொள்ள முடியும்? ஒரு சிறு பார்ப்பனப் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு லோககுரு வந்துவிட்டார், லோக குரு வந்து விட்டார் என்று பார்ப்பனர்களைவிட மோசமாய் ஏமாற்றுவதும், தினம் பரமாத்மாக்களுடனும், மகாத்மாக்களுடனும் பேசுவதாக வேஷம் போடுவது மாகிய வழிகளில், பார்ப்பன மதத்தை பிரசாரம் செய்வதும் இவ்வளவும் அல்லாமல் அரசியலிலும் மிகவும் மோசமாக நடந்து ஒத்துழையாமையின் போது எதிர் பிரசாரம் செய்ததும், பஞ்சாப் அக்கிரமங்களைப்பற்றி பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாய் வெள்ளைக்காரருடன் சேர்ந்துகொண்டு "பஞ்சாப்காரர்கள் வெள்ளைக்காரர் மேல் செங்கல்லை எறிந்ததற்கு வெள்ளைக்காரர்கள் பீரங்கி மூலமாகவும், ஆகாச கப்பல் மூல மாகவும் ஈயக்குண்டையும் வெடி குண்டையும் எறிந்தது மிகவும் சரி" என்றும் சொல்லி, வெள்ளைக்காரர்களை ஆதரித்ததுடன் இன்னமும் தன் கோஷ்டி முழுவதையும் விட்டு வெள்ளைக்காரருக்கு உதவியும் செய்ய சொல்லி இருக்க இப்போது திடீரென்று எவ்விதத்தில் அம்மையாருக்கு தேசா பிமானமும், இந்தியாபிமானமும் வந்துவிட்டதென்று கேட்கின்றோம்.

இந்தம்மையாரை இப்போது நடத்துகின்றவர்கள் யார் என்பதும் அம்மையார் பிரசாரம் இன்னதுதான் என்பதும் யாருக்குத்தான் தெரியாது என்று சொல்ல முடியுமா?

ஸ்ரீமான்கள் எ. ரங்கசாமி அய்யங்காரும், சத்தியமூர்த்தி அய்யரும் மறைமுகமாயிருந்துகொண்டு நடத்துகின்றார்கள். அம்மையின் பிரசாரமெல் லாம் பார்ப்பனமதப் பிரசாரமும் பார்ப்பனரல்லாதாரை ஏமாற்றுவதுமேயாகும். அதோடுகூடவே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி ஆக்ஷேபிப்பது மாகும். இந்த நிலைமையில் உள்ளவர்களை பார்ப்பனர்கள் வரவேற்கவும், பூர்ண கும்பமெடுக்கவும் மற்றும் படம் வைத்து பூஜிக்கவும் கடமைப்பட்டிருக் கிறார்கள். ஆனால் பார்ப்பனரல்லாதார் எதற்காக இதில் சேருகின்றார்கள் என்பதுதான் நமது கேள்வி.

ஆதலால் இனியாவது ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாதார் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து நடந்து கொள்வார்கள் என்று நினைக்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 20.11.1927**





RangaRakes

tamilnavarasam.com

# தமிழ்நாடு

தமிழ்நாடு பத்திரிகையானது மறுபடியும் சென்னை பார்ப்பன தெய்வங்களுக்குள் இரண்டறக் கலரத் தீர்மானித்து விட்டதாக நினைக்க வேண்டி இருக்கிறது. அதின் முழு கவனம் ராயல் கமிஷனை பகிஷ்கரிப்பதில் மாத்திரமில்லாமல் பெசன்டம்மையை தலைவியாக்குவதிலும் அரசியல் பார்ப்பனர்களை காப்பாற்றுவதிலும் கவலை எடுத்துக் கொண்டிருக்கின்றதாகத் தெரிகின்றது. கமிஷன் பஹிஷ்காரத்தைப் பற்றி அவரவர்கள் அரசியல் அபிப்பிராயம் என்று சமாதானம் செய்து கொண்டு வாதாடலாமாயினும், பெசன்ட் அம்மையாரை தலைவியாக்க ஆசைப்படுவதில் பார்ப்பனர்களுடன் போட்டிப் போடுவதான இரகசியம் நமக்கு விளங்கவில்லை. அது ஒருபுறம் இருக்கட்டும் என்று தள்ளிவிடுவதானாலும் பார்ப்பனரல்லாதார்களுக்கு கடுந்துரோகிகளாகிய அரசியல் பார்ப்பனர்களுடன் குலாவுவதும் அவர்களை காப்பாற்றுவதும் பற்றி காரணம் அறியாமலிருக்க முடியவில்லை. சென்னை கார்ப்பரேஷன் தேர்தல் விஷயத்தில் அரசியல் பார்ப்பனர்கள் நடந்து கொண்ட விஷயத்தைப் பற்றி தமிழ்நாடு பத்திரிகை தனது அபிப்பிராயமாக ஒரு வரி கூட எழுத முடியாத நிர்பந்தம் இப்போது திடீரென்று அதற்கு ஏற்பட்ட காரணம் என்ன என்று கேட்கின்றோம்.

பார்ப்பன அரசியல்வாதிகள் தமிழ்நாடு பத்திரிகை ஆபீசுக்கு வந்து எவ்வளவு தூரம் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகின்றார்களோ அவ்வளவுதூரம் அவர்கள் மற்றும் எல்லா பத்திரிகை ஆபீசுகளுக்கும்தான் போய் கெஞ்சுகின்றார்கள். பார்ப்பன பத்திரிகைகளாகிய 'இந்து', 'சுதேசமித்திரன்', 'சுயராஜ்யா' முதலியவைகளும் பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகளாகிய 'ஜஸ்டிஸ்', 'திராவிடன்' ஐரோப்பிய பத்திரிகைகளாகிய 'மெயில்' முதலியவைகளும் தைரியமாய் தமது அபிப்பிராயத்தை எழுதி இருக்கும் போது 'தமிழ்நாடுக்கு' மாத்திரம் ஏற்பட்ட தட்ட முடியாத தாக்ஷண்யம் என்ன என்று கேட்கின்றோம். பார்ப்பன தயவை எதிர்பார்க்கும் நிலை, ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியாரை விட தமிழ்நாடுக்கு அதிகமாய் ஏற்பட்டு விட்டதா?

ஸ்ரீமான் வெங்கிடாசலம் செட்டியாரே எலக்ஷன் விஷயத்தில் தைரியமாய் பார்ப்பன சூழ்ச்சியை வெளிப்படுத்தி இருக்கும் போது 'தமிழ்நாடு' மாத்திரம் ஏன் பயப்படவேண்டும்.



பார்ப்பன சூழ்ச்சிக்கும் பார்ப்பன வகுப்பு வாதத்திற்கும் சென்னை தேர்தலைவிட சரித்திரத்தில் எழுதத் தகுந்ததான வேறு ஆதாரம் என்ன வேண்டும். திடீர் திடீர் என்று இம்மாதிரி துப்பாக்கியை கீழே போட்டு எதிரிகளுக்கு இடம் கொடுத்து விடுவதால் எவ்வளவு காரியம் கெட்டுப்போய் விடுகிறது. முதலாவது பார்ப்பனர்கள்கூட இப்பத்திரிகைக்கு பயப்படமாட்டார்கள், மதிக்கவும் மாட்டார்கள். ஏனெனில் நேரில் போய் சரிபடுத்திக்கொள்ளலாம் என்கின்ற ஒரு தைரியம் அவர்களுக்கு உண்டாய் விடும். இரண்டாவதாக அடிக்கடி இம்மாதிரி அயர்ந்து விடுவதால் மக்களுக்கும் அதனிடத்தில் அதிக மதிப்பு இருக்காது என்கின்ற தைரியமும் அவர்களுக்கு ஏற்பட்டு விடும்.

இதை 'தமிழ்நாடு' பத்திரிகை உணராதது நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 20.11.1927**



RangaRakes tamilnavarasam.com

## யார் பொய்யர்

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியார் வீட்டில், ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாளின் தேவதாசிகளின் தீர்மானம் விஷயமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது கிறிஸ்துவ கன்னியா ஸ்திரிகளைப் பற்றியும் மற்றும் பல விஷயங்களைப் பற்றியும் பேசிய பேச்சுக் களை இல்லை என்று மறுத்து ஒரு அறிக்கை வெளியிட்டார். 'தமிழ்நாடு', பத்திரிகை அய்யர் சொன்னதாக குறிப்பிட்ட விஷயங்களை ருஜுபடுத்து வதாக பந்தயம் கூறிற்று. அய்யர் அடங்கிவிட்டார். ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாளும், அய்யர் கிறிஸ்தவ கன்னியாஸ்திரிகளை பற்றி பேசியதும் மற்றும் 'தமிழ்நாடு' பத்திரிகையில் கண்ட விஷயங்களும் உண்மை என்று ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அதற்கு ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் அவர் களும் மேலொப்ப மிட்டிருக்கிறார். இந்நிலையில் 'தமிழ்நாடு' நிருபர், ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாள், ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியார் ஆகிய இம்மூவர்கள் சொல்வது பொய்யா அல்லது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் சொல்வது பொய்யா என்பதை உணர பொது ஜனங்கள் ஆவலாயிருப்பார்கள். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் இதற்கு முன் எத்தனையோ தடவைகளில் பொய்யர் பட்டம் வாங்கி வாங்கி தேறியிருக்கின்றார். அல்லாமலும் 'தமிழ் நாடு' பந்தயம் கூறின பிறகும் ஸ்ரீமதி. முத்துலட்சுமி அம்மாள் அய்யரின் யோக்கியதையை வெளிப் படுத்திய பிறகும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி "உலர்ந்த மாம்சம் திருட்டுக் கொடுத்த பார்ப்பனத்தி போல்" பேசாமல் இருப்பதால் அய்யர் தான் பேசிவிட்டு இப்போது இல்லை என்று சொல்லு கின்றார் என்பதில் யாருக்கும் சந்தேகமிருக்க நியாயமில்லை. இம்மாதிரி அடிக்கடி பேசிவிட்டு பேசிவிட்டு இல்லை என்று சொல்லிக்கொண்டே வருவதைவிட கண்ணியமாய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தால் அது மிகுதியும் நன்மையாயிருந்திருக்கும். இப்போது பேசிய குற்ற மொன்று, அதை மறுத்து இல்லையென்று பொய் சொல்லும் குற்ற மொன்று ஆக இரண்டு குற்றத்தை சுமந்திருக்கிறார். இவர்தான் இந்திய அரசியல் கட்சியின் தலைவருள் பிரதானமானவராம். கவர்னருக்கும் சட்ட மெம்பருக்கும் மந்திரிக்கும் அந்தரங்க விசுவாசியாம்.

**குடி அரசு - கட்டுரை - 20.11.1927**



## கோவை சேர்மென் C.S.இரத்தினசபாபதி முதலியாரின் துணிபு

கோயமுத்தூர் டவுன் எக்சைஸ் லைசென்சிங் போர்டுக்கு சென்ற வாரத் தில் தலைவரை தெரிந்தெடுப்பதற்காக கோவை கலெக்டர் ஆபீசில் மேற்படி போர்டு மெம்பர்களால் ஒரு மீட்டிங்கு கூட்டப்பட்டது. அம்மீட்டிங்குக்கு ஏழு மெம்பர்களே ஆஜரானார்கள்.

அவர்கள், ஸ்ரீமான்கள் கலெக்டர் காக்ஸ் துரை, சேர்மென் சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார் எம்.எல்.சி., வைஸ்சேர்மென் அருணாசலம் செட்டியார்,தேவசகாயம், சால்ட் சர்க்கிள் இன்பெக்டர், போலீஸ்டிஸ்ட்ரிக்ட் சூப்ரண்டெண்ட், போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆகியவர்களே. இந்த எழு வரில் ஸ்ரீமான் கலெக்டர் காக்ஸ் துரை அவர்களை போலீஸ் சூப்பிரண்டு துரை அந்த போர்டுக்கு தலைவராக பிரேரேபிக்க சால்டு சர்க்கில் இன்ஸ் பெக்டர் ஆதரித்தார் . உடனே ஸ்ரீமான் சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார் எழுந்து உத்தியோகப்பற்றில்லாதவர் தலைவராக இருக்கவேண்டும் என் கின்ற கொள்கையின் பேரில் ஸ்ரீமான் தேவசகாயம் அவர்களை பிரேரேபிக்க ஸ்ரீமான் அருணாசலம் செட்டியார் ஆதரித்தார்.

ஓட்டுக்கு விட்டதில் ஸ்ரீமான்கள் காக்ஸ் துரையவர்களுக்கு மூன்று ஓட்டுகளும் தேவசகாயம் அவர்களுக்கு மூன்று ஓட்டுகளும் கிடைத்தன. இந்த சமயத்தில் ஸ்ரீமான் சி.எஸ். ரத்தினசபாபதி முதலியார் எழுந்து இம்மாதிரி போர்டுகளுக்கு உத்தியோகப் பற்றில்லாதவர்கள் தலைவர்களாயிருந்தால் ஜனங்களுக்கு போர்டிடம் நம்பிக்கையுண்டாகும் என்றும், போர்டு ஏற்படுத் தியதின் பலன் கொஞ்சமாவது ஏற்படக்கூடுமென்றும், இல்லாவிட்டால் போர்டு இருந்தும் சர்க்கார் அபிப்பிராயமே போர்டு அபிப்பிராயமாகிவிட நேருமென்றும், போர்டு ஏற்படுத்தியதின் கருத்து நிறைவேறாமல் போய் விடக்கூடும் என்றும் சொன்னார். உடனே கலெக்டர் துரை, ஸ்ரீமான் முதலியார் சொன்னதை அனுசரித்து, தான் அபேக்ஷக ஸ்தானத்தில் இருந்து விலகிக் கொள்வதாய் சொல்லி விலகிக் கொண்டார். எனவே, ஸ்ரீமான் தேவ சகாயம் அவர்கள் ஏகமனதாய் தெரிந்தெடுக்கப்பட்டார்.



RangaRakes tamilnavarasam.com

இதில் மற்றொரு விசேஷம் என்னவென்றால் ஆஜராகியிருந்த ஏழு மெம்பர்களில் ஸ்ரீமான்கள் முதலியாரும் செட்டியாரும் தவிர கலெக்டர் துரையும் ஓட்டு கொடுத்ததால்தான் ஸ்ரீமான் தேவசகாயத்திற்கு மூன்று ஓட்டுகள் கிடைத்தன. ஸ்ரீமான் தேவசகாயம் நடுநிலைமை வகித்திருந்தார், கலெக்டர் துரைக்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்களாகிய ஜில்லா சூப்பிரண்டு போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சால்ட் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆகிய மூன்று பேரும் கலெக்டருக்கே ஓட்டு செய்தார்கள்.

ஆகவே கலெக்டர் அவர்கள் எதிர் அபேக்ஷகருக்கு ஓட்டுக் கொடுத்ததோடு தான் விலகிக்கொண்டதான இரண்டு வகையிலும் நடந்து கொண்டதானது மிக்க பெருந்தன்மை என்றே சொல்லவேண்டும். அதோடு ஸ்ரீமான் இரத்தினசபாபதி முதலியார் அவர்களும் உத்தியோகஸ்தர்கள் மெஜாரிட்டியாயிருந்தும் கலெக்டரே அபேக்ஷகராய் இருக்கிறார் என்று தெரிந்தும் தைரியமாய் வேறு அபேக்ஷகரை நிறுத்தியதுடன் கலெக்டர வர்களை பின்வாங்கிக்கொள்ளும்படி சொன்னதும் மிகவும் தீரச்செய்கை என்றே சொல்லவேண்டும்.

எக்சைஸ் லைசென்ஸ் போர்டு கமிட்டிகளுக்கு உத்தியோகப் பற்றில் லாத தலைவர் முதல் முதல் தெரிந்தெடுக்க ஏற்பாடு செய்த பெருமை ஸ்ரீமான் முதலியாருக்கே உரியதாகும். சென்னை சட்ட சபைக்கு ஒருபெண் உப பிரசிடெண்டாக இருக்க காரியம் ஆரம்பித்த பெருமையும் ஸ்ரீமான் முதலி யாருக்கே உரியது, இன்னமும் இது போன்ற பல நன்மையான விஷயங்கள் முதலியார் அவர்களால் செய்யப்பட்டிருக்கின்றது. ஸ்ரீமான் முதலியார் ஸ்தானத்தில் ஒரு பார்ப்பனர் இருந்திருந்தால் கலெக்டரையே பிரேரேபித்து தலைவராக்கி, கலெக்டரின் வெற்றியைப் பற்றி ஒரு கவியும் பாடி விட்டு, கலெக்டர் வீட்டுக்கும் போய் கூலியும் வாங்கிக் கொண்டிருப்பார். ஸ்ரீமான் முதலியார் தன்னைப் பற்றி விளம்பரம் செய்து கொள்ளும் குணமில்லாத வரானதினாலும், அவைகளில் அவர் மிகுதியும் அருவருப்பு உடையவரான தினாலும் அவர் செய்யும் அருமையான நற்காரியங்கள் மக்கள் அறியக் கூடுவதில்லை. ஆனால் முதலியாரின் எதிரிகளால் சில சமயங்களில் வெளி யாகிவிடுகின்றன. எவ்வளவோ எதிர்ப்புக்கும் முதலியாருடைய எதிரிகளின் எவ்வளவோ சூழ்ச்சிக்கும் இடையில் கோயமுத்தூர் ஜலசப்ளை வேலை மும்முரமாக நடந்து வருவதின் பெருமை முதலியாரையே சேர்ந்ததாகும். அதுபோலவே கோபி தாலூக்காவில் பவானி ஆற்றுக்கு இரண்டு பெரிய பாலங்கள் கட்டுவதற்கு பிரயத்தனப்பட்ட காரியத்திலும் எவ்வளவோ தடைக ளை நீக்கி வெற்றிபெற்று அப்பாலங்கள் சமீபத்தில் வேலை தொடங்கப்படும் நிலைக்கு வந்திருக்கும் பெருமையும் ஸ்ரீமான் முதலியாருக்கே சேர்ந்ததாகும். இவ்விரண்டு காரியங்களும் நிறைவேறியபின் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தனது பொதுநல சேவையை சற்று குறைத்துக் கொண்டு தன் சொந்தக் காரியத்தையும் சற்று கவனிப்பது அறிவுடைமையாகும். ஸ்ரீமான் முதலியார்



ஸ்தானத்தில் வேறு பார்ப்பனர்கள் யாராவது இருந்திருந்தால் அவர்கள் சொந்த காரியங்கள் எவ்வளவோ முன்னுக்கு வந்திருக்கும், அவர்கள் சொந்தக் காரர்களையும் வெகுபேரை பணக்காரராக்கியிருப்பார்கள். ஆனால் இவ்வளவு நன்மை செய்யும் முதலியாருக்கு நன்றி செலுத்த ஆளில்லா விட்டாலும் தரித்துக்கூறும் எதிரிகளுக்கு குறைவில்லை.

**குடி அரசு – கட்டுரை – 20.11.1927**



RangaRakes tamilnavarasam.com

# கும்பகோணம் தாலுகா பார்ப்பனரல்லாதார் மகாநாடு

இவ்வுலகத்தில் வேறு எந்த மதத்திடத்திலும் மனிதர்கள் பிறவியில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்னும் வழக்கம் கிடையாது. ஆனால் நம்முடைய தேசத்திலோ ஒருவன் எவ்வளவு கேவலமான நடத்தை யுடையவனாயினும் ஒரு குறிப்பிட்ட ஜாதியில் பிறந்துவிட்டால் அவன் உயர்ந்த ஜாதியென்றும் எவ்வளவு நல்ல நடத்தை யுடையவனாயிருந்தாலும் அவன் 'தாழ்ந்த ஜாதி' யில் பிறந்து விட்டானானால் அவன் கேவலமாகவும் கருதப்பட்டு வருகிறான். இதற்கு காரணம் மதந்தான். இம்மாதிரி ஒரு மதத்தை அனுஷ்டித்து வரும் வரையில், நாம் அவற்றை யெல்லாம் கண்டிக்காமல் மௌனமாய் யிருக்கும் வரையில் நாம் நூற்றுக்கணக்கான மக்களை நமது சமூகத்திலிருந்து பிற மதங்களுக்கு பலி கொடுத்துக்கொண்டு தான் வரவேண்டும். இந்துமத பரிபாலன போர்டு தலைவர் ஸ்ரீ சதாசிவய்யர், இந்துக்கள் என்பதற்கு வேதத்தை எவன் நம்புகிறானோ அவன் தான் இந்து என்று கூறியிருக்கிறார். அப்படியானால் ஆதி திராவிடர்கள் பஞ்சமர்கள் இவர்களெல்லாம் இந்துக்கள், இந்தியா ஒரு காலத்தில் உன்னத நாகரீகம் படைத்திருந்த காலத்தில் மற்ற மேல் நாடுகளெல்லாம் நாகரிகமற்று அந்நாட்டு மக்கள் காட்டுமிராண்டிகளாக புழு பூச்சிகள் முதலிய வஸ்துக்களைத் தின்று கொண்டு வனாந்தரங்களிலும் கடற்கரையோரங்களிலும் திரிந்துகொண்டிருந்தார்கள். அவர்களெல்லாம் இப்போது நம் நாட்டை ஆண்டுவருகின்றனர். நாம் பிற நாட்டை ஆள முடியாவிட்டாலும் நமது நாட்டையாவது ஆண்டு கொள்ளக்கூடாதா? ஏன் நாம் ஆண்டுகொள்ள முடியவில்லை. ஏனென்றால் நாம் மதத்தின் பேராலும் மூடக்கொள்கைகளின் பேராலும் நாம் அடிமைப்பட்டிருப்பதுதான். மற்ற நாடுகளெல்லாம் இம்மாதிரி மூடக் கொள்கைகளையும், அர்த்தமற்ற உயர்வு தாழ்வு கற்பிக்கும் மதத்தையும் அடியுடன் ஒழித்துவிட்டதால்தான் அவர்கள் தங்களுடைய தேசத்தை ஆளுவதுடன் பிற நாட்டாரையும் அடக்கி ஆண்டு வருகிறார்கள். இப்படி இருக்க நமது நாட்டையும் நம் மக்களையும் கெடுத்து வருவது பிராமணர்கள் பேசும் வருணாசிரமமும் அவர்கள் வயிற்றுப் பிழைப்புக்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இந்து மதம் என்பதும் தான். வர்ணாசிரமத்தைப் பற்றி பலர் பலவிதமாய் பேசுகிறார்கள். எவ்வித வியாக்கியானம் செய்த போதிலும் அது உயர்வு தாழ்வு கற்பிக்கிறது. ஆதி



RangaRakes

தமிழர்களிடத்தில் வருணாசிரமம் இருந்திருக்குமானால் வருணாசிரமம் என்னும் சமஸ்கிருத பதத்திற்குப் பதிலாக தமிழ் மொழியில் இருந்திருக்க வேண்டும். இன்னும் வருணாசிரம பிராமணர்கள் ஒரு தமிழனுடன் பேசிவிட்டால் அதற்காக ஒரு பிராயச்சித்தமும், அவனுடைய பாஷையை பேசினால் அதற்கொரு பிராயச் சித்தமும், அவன் நிழல் பட்டால் அதற்கொரு பிராயச்சித்தமும் செய்வதை நீங்கள் பார்க்கலாம். உதாரணமாக சங்கராசாரி போன்றவர்கள் நம்மிடம் பணம் வாங்கிக் கொண்டு போவதல்லாமல் இவ்வாறு நம்மை இழிவுபடுத்தியும் வருகின்றார்கள். ஆகையால் நாம் இனி இத்தகைய இழிவுகளை ஒரு நாளும் சகித்திருக்க முடியாது.

இனி சடங்குகள் என்று பெயர் வைத்துக் கொண்டு நம்மிடமிருந்து பணம் பறிப்பதுமல்லாமல் நம்மை ஒரு ஜாதியாருக்கு அடிமையுமாக்குவதை ஒழிக்க வேண்டுமென்பதைத் தவிர புரோகிதர்களின் வாயில் மண்ணைப் போட வேண்டுமென்னும் கெட்ட எண்ணத்துடன் நான் கூறவே இல்லை. ஒரு கூட்டத்தாருக்குக் கொடுப்பதே புண்ணியமென்று நினைப்போமானால் நாம் சுயராஜ்யமடைவதற்கே தகுதியுடையவர்களல்ல. நமது முன்னோர்கள் தர்மம், புண்ணியம் என்று வாரி வாரி இப்பிராமணர்களுக்கு கொடுத்தும் அவர்களும் அவர்களுடைய குடும்பமிருக்கிற நிலைமையையும் பாருங்கள். நமது சுயராஜ்யமும் போய், பரராஜ்யமும் அடிமைத்தனமும்தான் மீதி. இன்னும் தஞ்சாவூர் ராஜா காசிமுதல் கன்னியாகுமரிவரை தான தர்மங்களும், சத்திரங்களும் கட்டி வைத்திருந்தும் அவருடைய பெயர் சொல்ல இன்று ஒரு சந்ததி கிடையாது. இன்னும் எத்தனை குடும்பங்கள் கெட்டுப்போய்விட்டது என்று கவனியுங்கள். ஏழைகளுக்கும், கூன், குருடு, வேலைசெய்ய இயலாதவர்களுக்கே நாம் தர்மங்கள் செய்ய வேண்டுமேயொழிய, வேலை செய்யவோ, பணம் சம்பாதிக்கவோ, திறமையுள்ள பிராமணக் கூட்டத்தாருக்கு மதங்களின் பெயராலும் வீணாக நாம் ஒரு நாளும் கொடுக்கவே கூடாது. ஒரு குழந்தை ஜனனமானது முதல் அதன் ஆயுள் பரியந்தம் நாம் சடங்குகள் பெயரால் பணம் கொடுப்பதல்லாமல் இறந்த பின்னும் நாம் செலவு செய்கிறோம். இத்தகைய மனப்பான்மையுள்ள நாம் சுயராஜ்யமடையத் தகுதியுடையவர்கள்தானா? மக்களுக்கும் உயர்வு, தாழ்வு, தீண்டாமை முதலியவைகள் நாட்டிலிருந்து வரும்வரை நம் நாடு சுயராஜ்யம் அடையப் போவதில்லை. ஆகையால் நீங்கள் இப்புரோகித மதத்தை ஒழித்து சுயமரியாதை இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

*குறிப்பு: 20.11.27 இல் திருப்புவனத்தில் நடைபெற்ற கும்பகோணம் தாலூகா பார்ப்பனரல்லாதார் மாநாட்டில் மாநாட்டுத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய உரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 27.11.1927**



tamilnavarasam.com

# ராயல் கமிஷனும் சுயமரியாதையும்

## ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கு ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கரின் செய்தி

"ஜஸ்டிஸ்" கட்சித் தலைவர்களுக்கு ராயல் கமிஷன் விஷயத்தில் அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய தன்மையைப் பற்றி ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர், தனது அபிப்பிராயமாகத் தெரிவித்துக் கொண்டிருக்கும் செய்தியாவது:-

பிரிட்டிஷாரின் ஏகபோக ஆதிக்கத்தை இந்தியர்கள் ஒப்புக் கொண்டு இருக்கின்ற வரையில் இம்மாதிரியான ராயல் கமிஷன்களில் இந்தியர்களுக்கு பதவி அளிக்காதது நம்மவர்களின் சுயமரியாதையை பாதிக்கக் கூடியதாய் இருக்கின்றது என்று எண்ணுவதில் கொஞ்சமாவது அர்த்தமில்லை.

பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் ஒரு அம்சமாகவே இந்த கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கின்றது. இந்தியரின் சுயமரியாதையை அடியோடு அழித்ததான பஞ்சாப் அநீதி போன்ற காரியங்களில், ஒன்று சேர்ந்து பரிகாரம் தேட சம்மதிக்காத ஒரு கூட்டத்தார் இப்போது பகிஷ்காரத்தைப் பற்றி வீண் கூப்பாடு போடுவது கேலிக்கிடமானதென்றே சொல்ல வேண்டும்.

உண்மையில் ராயல் கமிஷனை பகிஷ்கரிப்பதென்பது எந்த அரசாங் கத்தாரால் இந்த ராயல் கமிஷன் ஏற்படுத்தப்பட்டதோ அதே அரசாங்கத்தின் அம்சங்களான சட்டசபைகளையும், மந்திரி முதலிய பதவிகளையும் உத்தியோகங்களையும் பகிஷ்கரிக்கத்தக்க கொள்கையுடையதாயிருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் ஒரு விதமான தியாகத்திற்கும் கட்டுப்பட வேண்டிய அவசியமில்லாததான வெறும் வார்த்தை அளவில் பகிஷ்காரம் என்று கூச்சல் போடுவதானது சுயமரியாதையுள்ள தேசத்தார் என்பவர் களுக்கு கொஞ்சமும் அழகாகாது. உண்மையிலேயே முழு விடுதலைக்கும் நம்முடைய நாட்டார் தயாராயிருக்கின்றார்கள் என்கின்ற நிலைமை ஏற்பட்டு விடுமானால் அந்த காலத்தில் பார்ப்பனரல்லாதாரே முன்னிலையில் நின்று விடுதலைப்போர் புரிவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகப்பட வேண்டிய தில்லை.





ராஜீய விஷயங்களில் சாத்தியமானதும், காரியத்தில் நடக்கக் கூடியது மான துறையில் பாடுபடும் 'ஜஸ்டிஸ்' கட்சிக்காரர்கள் வேண்டுமென்றே பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காக மற்ற கட்சியார் செய்யும் சூழ்ச்சிகளில் கலந்து கொள்வது என்பது அறிவுடைமை ஆகாது.

கோயமுத்தூரில் கூடிய தென்னிந்திய நல உரிமைச் சங்க மகாநாட்டில் மாகாண சுயாட்சி கிடைக்கும் வரையிலும் பதவிகளை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

ஆதலால் முழு சுதந்திரமும் கேட்கக் கூடிய காலம் வரும் வரை 'ஜஸ்டிஸ்' கட்சிக்காரர்கள் மாகாண சுயாட்சிக்காகவும், நம்முடைய நாட்டிலுள்ள எல்லா வகுப்பார்களுக்கும் சமமான நீதியும் பங்கும் கிடைக்கும் படியாகவும், ஒரு வகுப்பார் மற்ற வகுப்பாரைவிட உயர்ந்தவர்கள் என்று கொண்டாடும் பாத்தியதையை நிராகரிக்கவும், ஒரே நிலையாக இருந்து பாடுபட்டு வர வேண்டியவர்களாவார்கள். 'ஜஸ்டிஸ்' கட்சியாரின் வெளிப்படையான இந்த கொள்கையை நம்முடைய தேச மக்களிடமும் மற்றும் அந்நிய நாட்டாரிடமும், அவர்களால் ஏற்படுத்தப்படும் சபைகளின் முன்னிலையிலும் ஸ்தாபிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

கமிஷன் அங்கத்தினர்களில் இந்திய அங்கத்தினர்கள் ஒருவரும் இல்லாதது ஒரு கெடுதியாகக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. கவர்ன் மெண்டார் ஒரு சமயம் இந்தியர்களில் யாரையாவது நியமிப்பதானால் இப்போதைய நிலைமையில் நியமனம் பெறக்கூடிய இந்தியர்கள் பொதுவாக பிராமணரல்லாதாருக்கு தீங்கிழைக்கக் கூடியவர்களாகத்தான் இருக்க முடியும்.

தவிர, ஆதியில் ரௌலட் கமிட்டியில், இந்தியர் ஒரு அங்கத்தினராய் இருந்தும்கூட, அக்கமிட்டியின் சிபார்சானது இந்திய மக்களை அரசாங்கத் தோடு ஒத்துழையாமை செய்ய வேண்டிய அளவுக்கு கொண்டுவந்து விட்டது. பொதுவாக யோசிக்குமிடத்து கமிஷனில் அங்கம் பெறக்கூடியவர்கள் ஏகபோக உரிமையாளர்களான பார்ப்பனர்களாகவே இருந்துவிடக்கூடும் என்கிறதை நினைக்கும்போது அக்கமிஷனில் இந்தியர்களை நியமிக்காதது ஒரு பாக்கியம் என்றே சொல்ல வேண்டும்.

**குடி அரசு – கட்டுரை – 27.11.1927**

RangaRakes tamilnavarasam.com

# ராயல் கமிஷன்

ராயல் கமிஷன் பகிஷ்காரக் கூச்சல் சுயநல அரசியல்வாதிகளிடை எவ்வளவுக் கெவ்வளவு பலமாகக் கிளம்புகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு நாட்டிலுள்ள மக்களிடை அதன் புரட்டுகளும் வெட்ட வெளிச்சமாய்க் கொண்டு வருகின்றது.

தவிர, பகிஷ்காரத்திற்கு எதிர் பிரசாரமும் பலமாய் ஏற்பட்டு வரு கின்றது.பகிஷ்கார காரணங்களும் அடிக்கடி மாற்றப்பட்டு வருகின்றன. எனவே கூடிய சீக்கிரத்தில் பகிஷ்கார கூச்சலுக்கு சாவுமணி அடித்துவிடும் என்பது திண்ணம்.

ராயல் கமிஷனில் இந்தியர்களை சேர்க்கவில்லை என்ற கருத்துடன் தான் ஆதியில் பகிஷ்காரம் ஆரம்பிக்கப்பட்டது. தேசத்திலிருக்கும் கட்சி பிளவுகளையும், ஒருவரை ஒருவர் ஏமாற்றி பிழைக்கும் சூழ்ச்சிகளையும் வெளியாக்கி, யாரை நியமிப்பது என்ற கேள்வி பிறந்தபின் அதற்கு பதில் சொல்ல முடியாமல், இப்போது கமிஷனை பகிஷ்கரிப்பதற்கு அது காரணம் அல்ல என்று சொல்ல முன்வந்து விட்டார்கள். ‘காங்கிரஸ்’ சுயராஜ்யக் கட்சி முதலியவற்றிற்கு தலைவரான பண்டித மோதிலால் நேரு அவர்கள் கமிஷனில் இந்தியரை சேர்க்காதது மிகவும் நல்லதென்றே சொல்லிவிட்டார்.

ஆகவே, பகிஷ்காரத்தின் வேருக்கு சாவுமணி அடித்தாய் விட்டது. இனி தப்புத் தவறுகளைப் பற்றி நாம் அதிகக் கவலைப்பட வேண்டியதில்லை.

## சுயமரியாதை

பகிஷ்காரத்திற்கு இப்போது முக்கியமாய்ச் சொல்லிக் கொள்ளப்படும் காரணமெல்லாம் இந்தியாவின் சுயமரியாதையை உத்தேசித்து பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்பதாகக் கூச்சலிடப்படுகின்றது. கமிஷன் நியமனத் தினால் இந்தியாவின் சுயமரியாதை இந்தக் கூட்டத்தாருக்கு எந்த விதத்தில் பாதிக்கப்பட்டு விட்டது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்த ராயல் கமிஷன் நியமிக்கப்படும் என்கிற விஷயம் இன்றல்ல, நேற்றல்ல, இன்றைக்கு



8, 9 வருஷத்திற்கு முன்பாகவே நமக்கு வழங்கியதாய் சொல்லப்பட்ட சீர்திருத்த நிபந்தனையிலேயே கண்டிருக்கின்றது. அதாவது இந்த சீர்திருத்தத்தை இந்தியர்கள் நன்றாய் நடத்திக் காட்டி விட்டார்களா என்கின்ற பரிட்சை பார்க்க இனி பத்து ஷ கழித்து ஒரு கமிஷன் வைத்து விசாரணை செய்யப்படும் என்கின்ற தத்துவம் கொண்ட வியாசங்கள் அதில் காணப் பட்டிருக்கின்றன. 1920- ம் வருஷத்திய சீர்திருத்தம் போதாது, அது அதிருப் தியும், ஏமாற்றமும் அளிக்கிறதாயிருக்கிறது. ஆதலால் இதை பகிஷ்கரிக்க வேண்டும் என்று காங்கிரஸ் சொன்ன காலத்தில் அதை எதிர்த்து இந்த சீர்திருத்தமானது சுயராஜ்யத்திற்கு முதற்படியானது. இதை நடத்திக் காட்டி மேலால் சீர்திருத்தம் கேட்க வேண்டுமேயல்லாமல் பகிஷ்கரிப்பது சரியல்ல என்றும், இத்தீர்மானத்தை நிறைவேற்றியதாலேயே காங்கிரஸ் செத்துப் போய்விட்டது என்றும் சொல்லியதுடன் சீர்திருத்தத்தை நடத்த தனது சிஷ்ய கோடிகளை ஏவிவிட்டு ஆள் ஒன்றுக்கு மாதம் 5000, 6000 ரூ. வீதம் சம்பளம் வாங்கிக் கொடுத்தது இதே பெசண்டம்மையார்தான். அப்படிப்பட்ட அம்மைக்கு மறுபடியும் கமிஷன் நியமித்ததால் இப்போது திடீரென்று சுயமரியாதை ஞானம் எப்படி வந்தது என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்தியாவின் சுயமரியாதைக்கு ஒரு வெள்ளைக்கார சீமாட்டி அழுவதென்றால் “ஆடு நனைகிறதென்று ஓணாய் ஓலமிட்டழுத கதை யையே ஒக்கும்” என்பதே நமது அபிப்பிராயம். அதிலும் பெசண்டம்மையார் அழுவதென்பது “ஆடு நனைகின்றதென்று சிறுத்தைப் புலி அழுவதையே ஒக்கும்” என்றும் சொல்லுவோம்.

இந்தம்மையார் இந்தியாவின் சுயமரியாதைக்காக கவலைப்படுவதின் யோக்கியதையைப் பொது மக்கள் அறிய உதாரணம் பஞ்சாப் படுகொலையை ஆதரித்து பிரசாரம் செய்தார்களே அது ஒன்றே போதும் என்றே நினைக் கிறோம். அதாவது “பஞ்சாபியர்கள் செங்கல் போட்டதற்கும் ஜனரல் டயர் பீரங்கி குண்டு போட்டதற்கும் சரியாய் போய்விட்டது. இதுதான் அரச தர்மம்” என்று சொன்னார்கள்.

இவ்வம்மையார் சுயமரியாதை லக்ஷணம் இப்படியானால் அய்யர்மார், அய்யங்கார்மார்கள் சுயமரியாதை உணர்ச்சிக்கு ஏதாவது உதாரணம் வேண்டு மானால் அதே பஞ்சாப் அக்கிரமத்தின் போதும் அதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒத்துழையாமையின் போதும் இவர்கள் என்ன செய்தார்கள் என்பதை சற்று யோசித்தால் விளங்காமல் போகாது. ஒத்துழையாமைதீர்மானம் நிறைவேறி யதும் ஸ்ரீமான்கள் ‘சுதேசமித்திரன்’ ஆசிரியரும் இப்போதைய காங்கிரஸ் காரியதரிசியுமான எம்.ரங்கசாமி அய்யங்காரும் ‘இந்து’ ஆசிரியரும் தமிழ்நாட்டு தலைவராயுமிருந்த கஸ்தூரி ரங்கய்யங்காரும், பரிசுத்தத் தேசீயவான் என்று சொல்லப்படுபவரும் சுயராஜ்யக் கக்ஷி காரியதரிசியும் சட்ட சபையில் காங்கிரஸ் கக்ஷி உபதலைவரும் தமிழ்நாடு காங்கிரஸ்



RangaRakes tamilnavarasam.com

கமிட்டி காரியதரிசியுமான சத்தியமூர்த்தி அய்யரும் ராஜீனாமா கொடுத்துவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். இந்திய தேசீயத் தலைவரும், எல்லா இந்திய காங்கிரஸ் தலைவரும் டிக்டேடர் என்று சொல்லுவதான ஏகத்தலைவருமான ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்கள் (ஒத்துழையாமை) பகிஷ்காரங்கள் என்பது சட்ட விரோதம் என்று சொன்னார்.

ஆகவே, பஞ்சாபில் குழந்தை குட்டிகளுடன் கூடியிருந்த ஆயிரக் கணக்கான மக்களைக் கொண்ட ஒரு பெருங்கூட்டத்தில் முன்பின் எச்சரிக்கை இல்லாமல் பின்புறமாய் வந்து ஓடவிடாமல் தடுத்து மிஷின் பீரங்கி வைத்து பட்டாஸ் சுடுவது போல் சடபுட, சடபுட என்று குண்டுகளைப் பொழிந்து மக்களைக் கொன்றதும், தண்ணீர் குழாய்களையும் காந்த விளக்கு களையும் நிறுத்தி தெருவில் மக்கள் வயிற்றினால் ஊர்ந்து போகும்படி சொன்னதும், மக்களை மூக்கை நிலத்தில் தேய்த்ததும், முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி குத்தினதும், நொண்டி அடித்து நடக்கும்படி கட்டளை இட்டதும், பெண்கள் கற்பை அழித்ததும், சகோதரிகளை நிர்வாணமாக்கி மர்ம ஸ்தானத்தில் கோலை குத்தினதும் ஆகிய காரியங்களை இந்தியாவின் சுயமரியாதைக்கு பங்கம் என்று நினைக்காமலும் வேறு சிலர் அப்படி நினைத்தும் அதற்கு பரிகாரம் செய்ய ஏற்படுத்திய பகிஷ்காரங்களுக்கு கட்டுப்படாமலும்,எதிரிகளுக்கு உளவாயிருந்து கூலி வாங்கினதுமான இந்த துரோகிகள், வஞ்சகர்கள், காட்டிக் கொடுப்பவர்கள், அயோக்கியர்கள் இப்போது தங்களுக்கு திடீரென்று சுயமரியாதை ஞானம் வந்துவிட்டதென்று சொன்னால் கடுகளவு மூளையுள்ளவனாவது அவ்வளவு யோக்கியனாவது இவற்றை நம்ப முடியுமா என்றுதான் கேட்கின்றோம். குறிப்பாக பேசுமிடத் தில் இந்த பகிஷ்காரத்தை கிளப்பியதில் நம் நாட்டு பார்ப்பனர்கள் தங்களது வயிற்று பிழைப்பிற்காக எந்த எந்த வழியில் தங்கள் சுயமரியாதையை விற்று பிழைக்கின்றார்கள் என்பதும் தங்கள் சுயநலங்களுக்காக எந்த எந்த விதத்தில் மதத்தின் பேராலும் அரசியலின் பேராலும் எத்தனைக் கோடி மக்களின் சுயமரியாதையை கெடுத்து வாழ்கின்றார்கள் என்பதும் இந்திய நாட்டுக்கு வந்த எந்த அன்னிய ஆட்சியாவது இந்த பகிஷ்கார பார்ப்பனக் கூட்டத்தின் உள்உளவும் காட்டிக் கொடுக்கும் தன்மையும் இல்லாமல் வர முடிந்ததா என்பதும் அறியாதார்கள் யார் என்றே கேட்கின்றோம். ராயல் கமிஷன் நியமிக்கப்பட்டதானது எந்த விதத்திலாவது இந்தியாவின் சுயமரியாதைக்கு விரோதமானது என்று இந்த பார்ப்பனக் கூட்டத்தாராவது பெசண்டம்மை கூட்டத்தாராவது மற்றும் வேறு எந்த யோக்கியராவது உண்மையில் நினைப்பார்களானால் அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய யோக்கியதை என்ன என்பதையாவது சற்று யோசித்து பாருங்கள் என்று வேண்டிக் கொள்ளுகிறோம்.

ராயல் கமீஷன் யாரால் ஏற்படுத்தப்பட்டது? பிரிட்டிஷ் பார்லி மெண்டாரால். பிரிட்டிஷ் பார்லிமெண்டார் என்பவர்கள் யார் என்றால் நம்



RangaRakes

நாட்டை ஆளுவதற்கு ஏற்பட்ட பிரிட்டிஷ் ஜனங்களின் பிரதிநிதிகள். ஆகவே அவர்களுடைய நடவடிக்கையை நாம் ஒப்புக் கொள்ள வில்லையானால் அல்லது அவர்களது நடவடிக்கை நமக்கு சுயமரியாதைக்கு விரோத மென்பதானால் நாம் செய்ய வேண்டிய காரியம் என்ன? அவர்கள் ஏற்படுத்திய சட்டசபையில் அரை க்ஷணம் உட்கார்ந்திருக்கலாமா? அவர்கள் ஏற்படுத்திய உத்தியோகத்தில் அரை வினாடி இருக்கலாமா? அதற்காக அவர்கள் கொடுக்கும் காசில் ஒரு சின்ன காசு பெறலாமா? அவர்களின் இம்மாதிரியான நமது சுயமரியாதைக்கு விரோதமான ஆட்சியை நடத்த நாம் அடிமையாப் பதிவு செய்து கொள்ளலாமா? அவர்கள் ஏற்படுத்திய கோர்ட்களில் அந்த கூட்டத்தாரால் ஏற்படுத்திய அதிகாரிகளிடத்தில் போய் நின்று கொண்டு, கடவுளே! பிரபுவே! கன்னியவான்களே! என்று கும்பிடு போட்டுக் கெஞ்சும் வக்கீல் உத்தியோகத்தில் ஒரு இமைநேரமாவது இருக்கலாமா? ஆகவே இது போன்றவைகளை யோசித்துப் பார்த்தால் இப்போது பகிஷ்காரத்தை ஒரு வாயில் பேசிக் கொண்டு மற்றொரு வாயில் மேற்படி காரியங்களை செய்து கொண்டு இருக்கும் கூட்டத்தார் யோக்கியர் கள் என்று யாராவது நம்ப முடியுமா? என்றும் அப்படி நம்புகிறவர்களும் அவர்களை பின்பற்றுகின்றவர்களும் அறிவாளிகளாகவும் யோக்கியர்களாக வும் இருக்கக் கூடுமா? என்றும் கேட்கின்றோம்.

பார்ப்பனர்களின் சுயமரியாதை, யோக்கியம், நாணயம் ஆகிய இவைகளின் தத்துவம், கௌகத்தி காங்கிரஸ் தீர்மானத்திற்கு கொடுத்த மதிப் பையும், பார்ப்பனரல்லாதார் சிலர் காங்கிரசில் சேர எண்ணி வந்தவர்களை நடத்திய மாதிரியையும், சென்னை முனிசிபல் தலைவர் தேர்தலையும் கவனித்த களிமண் உருண்டைக்கும் விளங்காமல் போகாது.

சென்னையில், உண்மையை தைரியமாய் எடுத்துச்சொல்லவோ பகுத்தறிவுடன் நடந்து கொள்ளவோ பார்ப்பனரல்லாத பத்திரிகைக் கூடப் பயப்படுகின்றன. ஆனபோதிலும் இது விஷயத்தில் 'சைபுல்இஸ்லாமும்', 'நவசக்தியும்' தைரியமாய் தங்கள் கருத்தை வெளிப்படுத்தி இருப்பதற்கு நாம் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். 'சைபுல் இஸ்லாம்' எழுதி இருப்பதை வேறு இடத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம். நவசக்தி எழுதுவதாவது:–

"பஹிஷ்காரம் பஹிஷ்காரம் என்று கூச்சலிடுவது சூழ்ச்சியின் பாற் பட்டதாகும். முன்னே உருக்கொண்ட பல கமிஷன்களில் இந்தியர் சிலர் அங்கம் பெற்றதின் பயன் என்னவாயிற்று?"

"பஹிஷ்காரம் என்னும் சொல்லைக் கேட்டு சகோதரர்கள் ஏமாற லாகாது என்று எச்சரிக்கை வழங்குகிறோம்" என்று குறிப்பிட்டிருக்கின்றது. 'நவசக்தி' எழுதி இருக்கும் முழு விவரமும் அடுத்த வாரம் பிரசுரிக்கப்படும்.



tamilnavarasam.com

எனவே, நம் நாட்டிடை இது சமயம் தோன்றியிருக்கும் பஹிஷ்கார இயக்கமானது பார்ப்பனர்களின் மற்றொரு சூழ்ச்சி என்பதையும் இதில் கலப்பது மக்களுக்கும் குறிப்பாக பார்ப்பனரல்லாதாருக்கும் தற்கொலை யாயிருக்கும் என்பதையும் தெரிவிப்பதுடன் பார்ப்பனரல்லாதாரிலும் சிலர் பார்ப்பனர் ஓலமிடும் பகிஷ்காரத்திற்கு ஆதரவளிக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமான முத்துரங்கங்கள், கந்தசாமிகள், வரதராஜுலுகள் போன்றார்களை நம்பி குழியில் விழுந்து விடக்கூடாது என்றும் எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 27.11.1927**



# சுயமரியாதைப் பிரசாரத்தின் வெற்றிக்குறி

பார்ப்பனரல்லாதாராகிய தமிழ் மக்கள் தென்னாட்டில் சுயமரியாதைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்ததும், அதற்கு நாட்டில் சிறிது செல்வாக்கு ஆரம்பித்தாலும் பார்ப்பனர்களுக்கு பார்ப்பனப் பிரசாரம் மிகுதியும் பலமாய் செய்ய வேண்டிய அவசியம் வந்து விட்டது. கொஞ்ச காலத்திற்கு முன்னால் எங்காவது மடாதிபதிகளும், லோக குருக்களும், சங்கராச்சாரிகளும், பண்டிதர் களும், சாஸ்திரிகளும், பாகவதர்களும், சஞ்சாரம் என்கின்ற பெயராலும் காலக்ஷேபமென்கின்ற பெயராலும் இந்துமதம் என்கின்ற பெயராலும் வருணாசிரமம் என்கின்ற பெயராலும், ஆரிய தர்மம் என்கின்ற பெயராலும் இந்து தர்மம் என்கின்ற பெயராலும், புராணப் பிரசங்கம் என்கின்ற பெயராலும், வேதம், ஸ்மிருதி ஆகமம் என்கின்ற பெயராலும், ரிஷிகள் பெயராலும், மகாத்மாக்கள் பெயராலும் பலவிதசூழ்ச்சி பிரசாரமும் மற்றும் பல பேர்வழிகளின் பெயரால் பார்ப்பனப் பத்திரிகைகளிலும் அவர்கள் தயவால் வாழும் பத்திரிகைகளிலும் அவர்களது கூலிப்பத்திரிகைகளிலும் பிரசுரிப்ப தின் மூலமாகவும் பிரசாரம் செய்து வந்தார்கள்.

சுயமரியாதைப் பிரசாரத்தின் பலமானது இவைகளையெல்லாம் தாண்டிச்செல்லும்படியான நிலைமைக்கு வந்து பாமர மக்களையும் பகுத்தறிவில்லாத மூடநம்பிக்கைக்காரரையும் தட்டி எழுப்பத்தக்க யோக்கிய தைக்கு வந்து விட்டதால், உதாரணமாக மகாத்மா என்கின்ற பெருமையைக் கொடுத்து எவ்வளவோ தூரம் மக்கள் பின்பற்றி வந்த பெருமையையும் அடைந்த பெரியார் என்பவரான ஸ்ரீமான் காந்தியையே இவ்விஷயத்தில் எதிர்த்ததுடன் அவரிடம் வைத்திருந்த நம்பிக்கைகளையும் மாற்றிக் கொள் ளும்படியான நிலைமை ஏற்படும்படியான அளவுக்கு ஜனங்கள் விழித்துக் கொண்டதாலும் பல பார்ப்பனரை குலகுரு என்று பல தலை முறையாய் வணங்கி கப்பம் செலுத்தி வந்ததையெல்லாம் நிறுத்தி விடத்தகுந்த அறிவும் துணிவும் ஏற்பட்டு விட்டதாலும் இனி வைதீகப் பெயரால் செய்யும் பிரசாரத் திற்கும் செல்வாக்கில்லை எனக்கருதி இப்போது உத்தியோகப் பார்ப்பனர்கள் இந்திய நாகரீகம் என்னும் பெயரால் பார்ப்பனப் பிரசாரத்திற்கு ஆரம்பித்து விட்டார்கள். அதாவது சட்ட மெம்பர் சர்.சி.பி. ராமசாமி அய்யர் என்கின்ற பார்ப்பனரின் தலைமையில் கோர்ட் ஜட்ஜி வி.வி.சீனிவாசய்யங்கார் என்கின்ற மற்றொரு பார்ப்பனர் அட்வோகேட் ஜனரல் ஸ்ரீமான் T.R.வெங்கிட்ட ராம



RangaRakes tamilnavarasam.com

சாஸ்திரி என்கின்ற பார்ப்பனரின் உதவியையும் மற்றும் ஸ்ரீமான்கள் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், T.R. ராமச்சந்திரய்யர், T.M.கிருஷ்ணசாமி அய்யர், சந்திரசேகரய்யர் முதலிய செல்வாக்குள்ள வக்கீல் பார்ப்பனர்கள் உதவியை யும் கொண்டு பிரசாரத்திற்கு வெளிக் கிளம்பிவிட்டார்கள்.

தென்னாட்டில் சுயமரியாதைப் பிரசாரம் ஏற்பட்டதின் பலனாய் 'பாம்பும் கீரியும்' போல் இருந்த அய்யர் அய்யங்கார்களும், 'நாயும் பூனை யும்' போல் இருந்த சுயராஜ்யக் கட்சியும் மிதவாதக் கட்சியும் கொஞ்சிக் குலாவிக் கொண்டு நம்மீது பாய்கின்றன. எனவே இக்குறிகள் தமிழ்நாட்டில் சுயமரியாதைப் பிரசாரமானது ஒரு அளவுக்கு மதிப்புப் பெற்று வருகின்றது என்பதையாவது ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கின்றது. ஏதாவது ஒரு இயக்கம் புதிதாக ஆரம்பமானால் அதற்கு அதன் எதிரிகளால் 5 தத்துக்கள் உண்டு. அதாவது:-

1. ஆரம்பிக்கப்பட்ட இயக்கத்தை அதன் எதிரிகள் அலட்சியமாய் கருதுவது போல் வேஷம் போட்டு யாரையும் அதனால் லட்சியம் செய்யா மலிருக்கச் செய்து அதை ஒழித்துவிட முயற்சிப்பது.

2. அவ்வியக்கத்தைப் பற்றி ஜனங்கள் தப்பாய் நினைக்கும்படி இழிவாய்பேசி அதன் பேரில் பலவித தப்பர்த்தங்களையும் பழியையும் சுமத்தி ஒழித்துவிட முயற்சிப்பது.

3. அதன் தலைவர்களைப் பற்றி குற்றம் சொல்லி துர் எண்ணம் கற்பித்து யாரையும் பின்பற்றச் செய்யாமலும், மதிப்புக்கொடாமலும் இருக்கும்படி செய்து ஒழித்துவிட முயற்சிப்பது.

4. பிறகு தங்களுக்குள்ள சகலவித செல்வாக்குகளையும் உபயோ கித்து பலவித எதிர்பிரசாரம் செய்து ஒழித்துவிட முயற்சிப்பது.

5. கடைசி மார்க்கமாக பலாத்காரத்தாலும், சட்டங்களினாலும் ஒழித்துவிட முயற்சிப்பது.

இவ்வளவையும் தாண்டிவிட்டால் இயக்கம் வேரூன்றி விட்டதென்றே சொல்லலாம்.

எனவே நமது சுயமரியாதை இயக்கம் அதன் எதிரிகளால் செய்யப் படும் மேல் கண்ட எல்லாவிதமான தத்துக்களையும் அனுபவித்துக் கொண்டு வருகின்றதுடன் அவைகளில் இருந்து கொஞ்சங்கொஞ்சமாய் தப்புவித்துக் கொண்டு வருகின்றதென்றே சொல்லவேண்டும்.



மாதம் 1க்கு4000ரூ சம்பளம் வாங்கும் ஒரு ஹைகோர்டு ஜட்ஜும் 5500 சம்பளம் வாங்கும் சட்ட மெம்பரும் 2000ரூ சம்பளமும் 5000ரூ வரும்படியும் சம்பாதிக்கும் அட்வகேட் ஜனரலும், மற்றும் மாதம் 10000, 20000 சம்பாதிக்கும் முக்கியமான வக்கீல்களும் ஒன்று சேர்ந்து எதிர் பிரசார யுத்தத்திற்கு வர நேர்ந்துவிட்டதென்றால் இப்பேர்ப்பட்டவர்களை நாம் வெளிப்படையாய் எதிரிகளாய் அடைந்ததின் மூலம் சிறிதாவது நாம் வெற்றியடைந்திருக் கின்றோமென்பதில் சந்தேகம் இல்லை. அதோடு எதிரிகள் நிலைமையும் இதுசமயம் சற்று கஷ்டமான நிலையில் இருக்கின்றது என்பதற்கும் இவ்வளவு பெரிய உத்தியோகஸ்தர்கள் பிரசாரத்திற்கு கிளம்பியிருப்பதே போதுமான ஆதாரமாகும். இந்த சமயத்தைக் கைவிட்டு விடாமல் ஜாக்கிரதையாய் இருந்து முன்னேறப் பார்க்க வேண்டியது நமது கடமையாகும்.

ஐகோர்ட் ஜட்ஜாகிய ஸ்ரீமான் வி.வி.சீனிவாசய்யங்கார் சென்னையில் செய்த எதிர் பிரசாரத்தில் பேசிய பேச்செல்லாம் புரோகிதர்களால் செய்யப் பட்டு வரும் ஒவ்வொரு சடங்கையும் செய்து தீரவேண்டும் என்பதே. அவைகள் ஒவ்வொன்றிற்கும் சமாதானம் சொல்லுவதற்கு ஒரே விஷயத் தைத்தான் எடுத்துக் கொண்டார். அதாவது:- "இவ்வளவு சடங்கை ஏற்படுத் தின நம் முன்னோர்கள் பயித்தியக்காரர்களா" என்று கேட்கின்றார். இரண்டா வதாக சடங்கின் பெருமைகளை வெள்ளைக்காரர்கள் கூட உணர ஆரம்பித்து விட்டார்கள் என்கின்றார். தவிர பாலிய விவாகத்தைப் பற்றி சமாதானம் சொல்லும்போது, அந்தப் பொறுப்பை பெற்றோர்களுக்கு விட்டு விட வேண்டுமே ஒழிய மற்றவர்கள் அதில் பிரவேசிக்கக்கூடாது என்கின்றார்.

தீண்டாமையைப் பற்றி பேசும்போது, பிறவியிலேயே மக்களுக்கு ஒருவித வசீகரமும் ஆத்ம ஞானமும் வருகின்ற தென்றும் தீண்டாதவர் களுக்கு அவ்வித வசீகரமும் ஞானமும் இல்லை என்றும் சொல்லுகின்றார். அம்மாதிரி வசீகரமும் ஆத்மஞானமும் இருந்த நந்தனார் முதலிய பல பார்ப் பனரல்லாதாரை பார்ப்பனர்கள் வழி படுவதற்கு ஏதாவது ஆக்ஷேபிக்கின்றார் களா என்கிறார். எனவே ஒரு ஐகோர்ட் ஜட்ஜியின் பகுத்தறிவும் பாரபக்ஷமற்ற நீதிவழங்கும் தன்மையும் இதிலிருந்தே அறிந்து கொள்ளலாம். இவரால் இது சம்மந்தமான விஷயங்களில் மக்க ளுக்கு சரியான நியாயம் கிடைக்குமென்று யாராவது எதிர்பார்க்க முடியுமா? இவருக்கு துணைவரான சர்.சி.பி. ராமசாமி அய்யர் அவர்கள் அக்கிராசன முடிவுரையாகப் பேசும்போது நாட்டில் தற் காலம் ஏற்பட்டுள்ள நெருக்கடி யான நிலைமையானது ஜஸ்டிஸ் சீனிவாசய் யங்காரை இம்மாதிரி பேசச் செய்தது என்று ஆரம்பித்து. வருணாசிரமத்தைப் பற்றி பேசும் போது இந்து நாகரீகம் புராதனமானதென்றும் இந்தியாவில் இருக்கும் வருணாசிரம தர்ம அற்புதம் வேறு எந்த நாட்டிலும் இல்லை என்றும் அதுவே இந்திய நாகரீகத் திற்கு ஒரு உயர்வு என்றும் ஏழ்மையும் தெய்வ ஞானமும் பொருந்தியவரை முதலில் வைத்து, போர்த்திறமுள்ளவரை இரண்டாவதாக வைத்து செல்வந்தர்களை மூன்றாவதாக வைத்து, தொழில்



RangaRakes tamilnavarasam.com

செய்பவர்களை நான் காவதாக வைத்து இருப்பதானது உலக நன்மையை முன்னிட்டு நம் முன்னோர்களின் ஆழ்ந்த சிந்தனையின் பலனாகவும் முதிர்ந்த அனுபவத் தின் பலனாகவும் ஏற்படுத்தப்பட்டது என்றும் மெச்சிக் கொள்ளுகின்றார். ஆகவே 5500 ரூபாய் வாங்கும் நமது சட்டமெம்பரின் ஞானத்தைப் பற்றி அறிந்து கொள்ள நமக்கு இதைவிட வேறு என்ன சந்தர்ப்பம் வேண்டும்.

இந்து மதத்தைப்பற்றியும் இந்திய நாகரீகத்தைப் பற்றியும் வருணா சிரமத்தைப் பற்றியும் பேசப் புகுந்த இந்த ஆசாமிகளின் யோக்கியதையை உலகமறியாதா என்றும் கேட்கின்றோம். அக்கிராசனர் சர்.சி.பி.ராமசாமி ஐயர் என்கின்றவர் எங்கும் போவார், எதையும் சாப்பிடுவார், எதையும் குடிப்பார், யாரையும் சுகிப்பார், என்னமும் செய்வார். பிரசங்கியாராகிய ஐகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் வி.வி. சீனிவாசய்யங்கார் என்பவர் சர்.சி.பி.க்கு அண்ணன் என்று சொல்ல வேண்டியதுடன் எதுவும் செய்து உத்தியோகம், சம்பாதிப்பார்.எனவே இம்மாதிரியான சுத்தர்கள் நமக்கு இந்து மதத்தையும் இந்திய நாகரீகத்தையும் வருணாசிரமத்தையும் பெரியோர்களின் புத்திசாலித் தனத்தையும் போதிக்க வருகிறார்கள் என்றால் நமது நிலைமை என்னவென்று சொல்லிக் கொள் ளுவது என்பது நமக்கு விளங்கவில்லை. இவர்கள் இப்போது பார்த்து வரும் பொறுப்புள்ள உத்தியோகத்தில் இனி அரை நாழிகை உட்கார்ந்திருக்க யோக்கியதை உண்டா என்பதை வாசகர்களே யோசித்துப் பார்க்க வேண்டும். குதிரை கீழே தூக்கிப்போட்டதல்லாமல் புதைக் குழியும் பறித்தது என்பது போல் சாஸ்திர ஞானத்தோடு இவ்வளவு நாள் பேசியதல்லாமல் இப்போது சட்ட ஞானத்தோடும் பேச முன் வந்து விட்டார்கள். இனித்தான் நாம் விழிப் பாய் இருக்க வேண்டும். மதம் என்றும் வருணம் என்றும் ஆச் சிரமமென்றும் தர்மம் என்றும் பெரியோர்கள் ஏற்படுத்தியது என்றும் வேதம் என்றும் புராணமென்றும் இந்திய நாகரீகமென்றும் சொல்லிக்கொண்டுவரும் எந்த ஆசாமிகளையும் கண்டிப்பாய் நம்பக்கூடாது என்றும் வேண்டிக் கொள்ளு கின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 27.11.1927**



# பச்சையப்பன் கலாசாலையும் பார்ப்பனர்களும்

பச்சையப்பன் கலாசாலையில் ஆதிதிராவிடர்கள் என்று சொல்லப் படுபவர்கள் இந்துக்கள்தான் என்று ஐகோர்ட்டார் தீர்ப்பு சொன்னதின் பலனாக சேர்த்துக் கொள்ள அப்பள்ளி தர்மகர்த்தாக்களில் பெரும்பாலோர் ஒப்புக் கொண்டார்களாம். இந்துக்கள் என்பவர்களுக்கும் இந்து மதம் என்ப தற்கும் இதைப்போல் முட்டாள்தனமானதும் அவமானமானதுமான சம்பவம் என்பதாக மற்றொன்றை குறிப்பிட முடியவேமுடியாது. ஒரு மனிதன் இந்துவா அல்லவா என்பதற்கு கூட வெள்ளைக்காரர்கள் ஏற்படுத்திய சட்ட மும் கோர்ட்டுகளும் தான் தீர்மானிக்க யோக்கியதை யுடையவைகளாக இருக்கின்றதேயொழிய தர்மகர்த்தாக்களுக்கோ இந்து மதம் ஆதாரம் என்பவைகளுக்கோ இந்துமத தலைவர்கள் என்பவர்களுக்கோ கொஞ்சமும் யோக்கியதை இல்லை என்றும் வெள்ளைக்கார கோர்ட்டார் சொன்னால் தான் தர்மகர்த்தாக்கள் ஒப்புக் கொள்ளக்கூடியவர்களே ஒழிய தங்களுக்கு என்ப தாக ஒரு சுயபுத்தியும் சுயமரியாதையும் இல்லையென்பதும் இதனால் நன் றாய் விளங்கிவிட்டது.

தவிர தர்மகர்த்தாக்கள் சிலரின் யோக்கியதையை பார்க்கின்றபொழுது இந்த விஷயத்தில் அபிப்பிராயம் சொல்ல நேர்ந்த ஐகோர்ட் ஜட்ஜு நல்ல வேளையாக ஒரு வெள்ளைக்காரராய் இருந்ததினாலேயே ஆதிதிராவிடர் களும் இந்துக்கள்தான் என்று சொல்ல நேர்ந்தது. அல்லாமல் மற்றபடி ஒரு பார்ப்பனனாகவோ அல்லது பார்ப்பன கொள்கையை பின்பற்றும் அவரது அடிமையாகவோ இருந்திருந்தால் இம்மாதிரி சொல்லியிருக்க மாட்டார் என்றே நினைக்கத்தக்கதாவும் ஏற்பட்டுவிட்டது. அதாவது பச்சையப்பன் டிரஸ்டி கூட்டத்தில் ஆஜரான 6 டிரஸ்டிகளில் ஒரு பார்ப்பனர் இருந்திருக் கிறதாக தெரிய வருவதுடன் அந்த ஒரு பார்ப்பனரும் ஆதிதிராவிடர் இந்துக் களானாலும் கூட அவர்களை கலாசாலையில் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று அபிப்பிராயங்கூறி இருக்கிறதாகவும் காணப்படுகிறது.

விபசாரத்திற்காக சாமிபோராலும் மதத்தின் பேராலும் பொட்டுக்கட்டி விடுவதை தடுக்க வேண்டுமென்று சொன்னால் அது வேண்டாம் என்று



RangaRakes tamilnavarasam.com

சொல்ல தேசீயத் தலைவர்கள் என்று சொல்லும் பார்ப்பனர்களிலேயே பலர் இருக்கும் போது வெறும் பார்ப்பனர்களில் ஒருவர் இதைச் சொல்லுவதில் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

**குடி அரசு - செய்தி விளக்கக் குறிப்பு - 27.11.1927**



RangaRakes

# ஸ்ரீ காந்தியின் தந்திரம்

ராயல் கமிஷனைப் பற்றி ஸ்ரீமான் காந்தி அபிப்பிராயம் சொல்லியிருப்பது மிகவும் தந்திரமானதாய் இருக்கின்றதே தவிர நேர்மையானதாக காணவில்லை.

அதாவது அசோசியேட் பிரசுக்கு சொன்னதாக காணப்படுவது என்னவென்றால்.

தனது மனச்சாக்ஷி காங்கிரஸ் தலைவரிடத்தும் காங்கிரசிடமும் இருப்பதாகவும் சொல்லியிருப்பதோடு பஹிஷ்காரத்தை ஆதரிக்கிறீர்களா என்று கேட்டதற்கு ஆதரிக்கிறேன் அல்லது இல்லை என்று சொல்லாமல் தந்திரமாய் பேசியிருக்கிறார். அதாவது காங்கிரஸ்காரர் சொல்லுவதற்கு மேல் நான் ஒன்றும் சொல்லுவதற்கில்லை என்று சொல்லி விட்டார். காங்கிரஸ்காரர்களின் தீர்மானத்தையாவது ஒப்புக்கொள்ளுவீர்களா என்று கேட்டதற்கு அதை ஒப்புக் கொள்ளமுடியாது ஆயினும் எதிர்க்கமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார். எனவே இவ்வார்த்தைகள் ஒரு பெரிய மகாத்மா என்றோ தலைவர் என்றோ பெரியவர் என்றோ சொல்லப்படுபவர் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகளா அல்லது ஒரு தந்திரக்காரர் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகளா என்று யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டுகிறோம். எப்படி அவர் பேசியிருப்பதை பார்ப்பனப் பத்திரிகைகள் மகாத்மா காந்தியும் ராயல் கமிஷனை பஹிஷ்கரிக்கிறார் என்று தலையங்கமிட்டு எழுதி மக்களை ஏமாற்றுகின்றன, இதை ஸ்ரீமான் காந்தியவர்கள் அறிந்தே சும்மா இருக்கிறார்.

எனவே பாமர மக்களுக்கு எவ்வளவு ஆபத்து இருக்கின்றது என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

**குடி அரசு - கட்டுரை - 27.11.1927**



tamilnavarasam.com

# மாஜி ஜட்ஜி சர்.டி. சதாசிவய்யர்

சர். டி. சதாசிவய்யர் இறந்ததைக் கேட்டு மனவருத்தம் அடைகின்றோம். மனிதனுடைய சராசரி யோக்கியதைக்கும் நாணயத்திற்கும் மேற்பட்ட அந்தஸ்தும் ஒழுக்கமும் உள்ளவர். தென்னாட்டுப் பார்ப்பனர்களுக்குள் எந்த ஒரு பெரிய அதிகாரியாவது கூடிய வரையிலும் கண்ணியமாயும், நாணயமாயும் தனது அதிகாரத்தை செலுத்தியவர் உண்டா என்கின்ற ஒரு கேள்வி பிறக்குமானால் அதற்கு சர். சதாசிவம் என்றே சொல்லுவோம்.

ஜன சமூக சமத்துவத்திற்கு, எந்த ஒரு பார்ப்பனராவது கூடிய வரையில் சம்மதித்தவர் உண்டா? என்கின்ற கேள்வி பிறக்குமானால் அதற்கு சர். சதாசிவம்தான் என்கின்ற விடையே பகர்வோம்.

எனவே, இப்பேர்ப்பட்ட ஒரு பெரியார் இம்மண்ணுலகில் மறைந்தது பற்றி யாரும் துயருறாமல் இருக்க முடியாது என்பதோடு சர். சதாசிவத்தினிடமும் அவரது குடும்பத்தாரிடமும் மிகுதியும் அன்பும் மரியாதையும் விசுவாசமும் கொண்டுள்ள ஸ்ரீமான் திரு.வி.கல்யாணசுந்தர முதலியார் அவர்களுக்கும் நமது ஆறுதலை சமர்ப்பிக்கின்றோம்.

**குடி அரசு - இரங்கலுரை - 27.11.1927**

# சேலம் தென்ஆற்காடு ஜில்லாக்கள்

சேலம் ஜில்லாவிலும் தென்னாற்காடு ஜில்லாவிலும் மகாநாடு விஷயமாக எவ்வித பிரஸ்தாபமும் காணப்படுவதில்லை. பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுப் பேச்சை ஆரம்பித்தால் ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாத பிரமுகர்களின் பதவி போய்விடுமோ என்னமோ என்று பயப்படுவதாகக் காணப்படுகின்றது. தமிழ்நாடுகளில் இப்படி பயந்து கொண்டு மதில் மேல் பூனையாய் இருந்த காரணத்திற்காகவே பல பிரமுகர்களுக்கு இருந்த பதவி கூட போய்விட்டதாக நாம் அனுபவத்தில் அறிந்து வருகின்றோம். ஆதலால் பதவியை சதா சர்வகாலம் கட்டிக்கொண்டு அழாமல் தாங்கள் எந்த முத்திரையில் இந்த பதவிகளுக்கு வந்தோம் என்பதைக் கவனித்து சற்று கண் விழித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 27.11.1927**



RangaRakes

tamilnavarasam.com

# சுயமரியாதை பிரசாரத்தின் வெற்றி

எவ்வளவோ காலமாய் பார்ப்பனர்களால் கொடுமைப் படுத்தப் பட்டிருந்ததான பாலக்காடு கல்பாத்தி பொது ரோடுகளில், மலையாளத்து ஈழவ சகோதரர்களும் தீயர் சகோதரர்களும் நடக்கக் கூடாது என்று இருந்த தடைகள் இவ்வருஷம் நீக்கப்பட்டுவிட்டது. அதுவும் ஐகோர்ட்டாரால் நீக்கப்பட்டதே ஒழிய பார்ப்பனர்களுக்குப் புத்தியும் சமரச ஞானமும் உதயமாகி நீக்கப்பட்டது என்று சொல்லவே முடியாது என்றே சொல்லுவோம். இன்னமும் இது போல மலையாளத்திலும் தமிழ்நாட்டிலும் நடக்கக்கூடாததும், கிட்டே அணுகக் கூடாததுமான எத்தனையோ தெருக்கள் இருந்து கொண்டு வருகின்றன. அவைகள் ஒவ்வொன்றுக்கும் வெள்ளைக்காரர்கள் வாய் மூலமாய் தீர்ப்பை எதிர்பார்க்கின்றார்களே ஒழிய ஒரு பார்ப்பனருக்காவது புத்தி வந்து தாங்களாகவே அனுமதித்தார்களென்று சொல்லிக் கொள்ள முடியாமலேயே இருக்கின்றது. இனியாவது சுசீந்திரம் சத்தியாக்கிரகம் ஆரம்பித்த தலைவர்களுக்காவது திருவாங்கூர் அரசாங்கத்திற்காவது புத்தி வருமோ என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 27.11.1927**



# ஒரு சந்தேகம்

## ஆதி திராவிடர் விபசாரி மக்களைவிட இழிந்தவர்களா?

ஆதி திராவிடர் விபசாரி மக்களைவிட இழிந்தவர்களா? மகமதியருக்கும் இந்து விபசாரிக்கும் பிறந்த குழந்தைகள் கோவிலுக்குள் போகலாம். பச்சையப்பன் கல்லூரியில் படிக்கலாம் என்றும், கிறிஸ்தவர்களுக்கும் இந்து விபசாரிகளுக்கும் பிறந்த குழந்தைகளும் கோவிலுக்குள் போகலாம் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கலாம் என்றும், வெள்ளைக்காரனுக்கும் இந்து விபசாரிக்கும் பிறந்த குழந்தை கோயிலுக்குள் போகலாம், பச்சையப்பன் கல்லூரியில் படிக்கலாம் என்றும், தமிழ்நாடு அல்லாத அந்நிய நாட்டு தீண்டாதார் என்போருக்கும் இந்து விபசாரிக்கும் பிறந்த குழந்தை கோயிலுக்குள் போகலாம் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கலாம் என்றும், மலையாள தீண்டாதார் என்போர்கள் இங்கு கோவிலுக்குள் போகலாம் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கலாம் என்றும், பச்சையப்பன் கல்லூரியில் இத்தனை பேர்களும் உபாத்தியாயராக இருக்கலாம் என்றும் பழக்கமும் வழக்கமும் இருக்கின்றது. ஆனால் தமிழ்நாட்டின் பூர்வீகமான குடியாய் இருந்து தமிழ் நாட்டில் பிறந்து, தமிழ் நாட்டில் வளர்ந்து, இந்துக்கள் என்று மதிக்கப்பட்டு வாழ்ந்து வரும் ஆதிதிராவிடர்கள் என்னும் தமிழ் மக்கள் மாத்திரம் இந்து கோவிலுக்குள் போகக் கூடாது என்றும் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கக் கூடாது என்றும் சொல்லுவது யோக்கியமாகுமா? இம்மாதிரி கோவில்களையும் (டைனாமெட்டு) வெடி குண்டு போட்டு உடைத் தெரிந்தால் மனிதனால் உண்டாக்கப்பட்ட சட்டப்படி குற்றம் என்பதாக சொல்லப்பட்டாலும் கடவுளால் உண்டாக்கப்பட்ட சட்டப்படி குற்றமாகுமா? என்று கேட்பதுடன் நம் நாட்டு ஆதிதிராவிடர்கள் என்போர்கள் விபசாரி மக்களை விட இழிந்தவர்களா? என்று அறிய விரும்புகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 27.11.1927**



RangaRakes
tamilnavarasam.com

# ராயல் கமிஷன்
# பஹிஷ்காரப் புரட்டு

ராயல் கமிஷனை பகிஷ்காரம் செய்ய வேண்டும் என்கின்ற கூச்சல் பத்திரிகைகளில் வரவர பெரிய எழுத்துக்களால் எழுதப்படுகின்றதே தவிர காரியத்தில் குறைந்துகொண்டே போகின்றது. பொதுவாக கூறுமிடத்து மகமதிய பொது ஜனங்கள் சற்றேறக்குறைய யாவரும் பகிஷ்காரத்திற்கு விரோதமாகவே இருக்கின்றார்கள்.

உத்தியோகப் பேய் பிடித்தவர்களும் அரசியல் வாழ்வுக்காரர்களுமான ஒரு கை விரலுக்குள் அடங்கின சில பேர்கள் மாத்திரம் தான் பகிஷ்காரப் புரட்டில் சேர்ந்திருக்கிறார்கள். மற்ற மகமதிய தலைவர்கள் எல்லோரும் பகிஷ்காரத்தை வெறுக்கிறார்கள். அதுபோலவே கிறிஸ்தவர்களிலும் மேல் கண்ட கூட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப்பு தவிர வேறு பெயர்கள் பகிஷ்கரிக்க காணப்படுவதாய் சொல்வதற்கில்லை.

இவ்விரு சமூக பொதுக் கூட்டங்களும் எல்லா பத்திரிகைகளும் பகிஷ்காரத்தை பலமாய் கண்டிக்கின்றன. இது தவிர இந்தியா முழுவதிலுமுள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பார்களாகிய ஆதிதிராவிடர்கள் ஆதி இந்துக்கள் முதலிய சமூகம் அடியோடு பகிஷ்காரத்தை வெறுக்கின்றது.

தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் பார்த்தாலும் எத்தனை பேர்கள் பகிஷ்காரத்தை ஆதரிக்கிறார்கள் என்பதும் எத்தனைபேர் அதில் சேரவில்லை என்பதும் தெரியவரும்.

இப்படியிருக்க அரசியலின் பேரால் பிழைக்கும் தலைவர்கள் என்போரும் பத்திரிகைகளும் உலகமே பகிஷ்காரத்தை ஆதரிக்கின்றது என்று மனதறிந்த பொய்யை பரப்புகின்றார்கள். இவர்களில் பார்ப்பனர்களைப் பற்றியும் பார்ப்பனப் பத்திரிகைகளைப் பற்றியும் நமக்கு கவலையில்லை. பார்ப்பனரல்லாத பத்திரிகைகளிலும் சில இக் கூட்டத்தில் கோவிந்தாப் போட்டு வருவது மிகவும் பரிகசிக்கத் தகுந்த காரியமாகும். உதாரணமாக 'தமிழ்நாடு' பத்திரிகை முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கிறது.



காங்கிரஸ் என்பது பார்ப்பனர்களின் சூழ்ச்சி இயக்கம் என்றும் அவர்கள் அதை வசப்படுத்திக்கொண்டு தங்கள் இஷ்டப்படி மக்களை ஆட்டி வருகின்றார்கள் என்றும் ஒப்புக்கொண்டவர்கள். காங்கிரஸ் அபிப்பிராயத்தைப் பொதுஜன அபிப்பிராயம் என்று சொல்ல முன்வரமாட்டார்கள் என்றே நினைக்கின்றோம். தவிர மிதவாதிகள் என்போர்கள் நமது நாட்டில் மூன்றே முக்கால்பேர்வழிகள்தான். அவர்களும் தேசத்தைக் காட்டிக் கொடுத்த விபீஷணாழ்வானுக்குச் சமானமானவர்கள் என்று சொல்லப் பட்டவர்கள். மிதவாதிகள் அபிப்பிராயத்தை பொது ஜன அபிப்பிராயமென்று சொல்ல முன்வர மாட்டார்கள் என்று நினைக்கின்றோம். மற்றபடி வேறு யார் யார் பகிஷ்காரத்தை ஆதரிக்கின்றார்கள் என்று பார்த்தால் "மூன்றில் ஒருவர் மாத்திரம் ஆதரிக்கவில்லை பாக்கி இரண்டுபேர் ஒப்புக் கொள்ளவில்லை" என்று சொல்லும் பழமொழி போல்தான் இருக்கின்றது. இந்த நிலையில் இந்தியா ஒட்டுக்கும் பகிஷ்காரப் பிரசாரம் செய்ய கமிட்டி நியமிக்கப் பட்டிருக்கின்றது என்று சில ஆசாமிகள் பெயர் விளம்பரமாயிருக்கின்றது. அதில் மொத்தம் ஆசாமிகள் 10; இதில் 6 பேர்கள் சென்னைவாசிகள்; அதில் மூன்று பேர் பார்ப்பனர்கள்; அதிலும் ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், ஏ.ரங்கசாமி அய்யங்கார், இவர்கள் யோக்கியதை வெளியாக்கவும் அவர்கள் எவ்வளவு நாணயமும் தேசபக்தியும் பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் எப்படிப்பட்டவர்கள் என்று அறிய காகிதத்தையும் இங்கியையும் சிலவழிக்காமலே ஜனங்களுக்குத் தெரியக்கூடும் என்று நினைக்கின்றோம். மற்றொரு பார்ப்பனரான ஸ்ரீ சிவராவோ ஸ்ரீமதி பெசண்டம்மையாருடைய சிஷ்ய கோஷ்டியில் சேர்ந்தவர். அவருக்கு எவ்வளவு சுவாதீன புத்தி இருந்து வந்திருக்கின்றது என்பதை விளக்க வேண்டியதில்லை. மற்ற மூன்று பேர் என்பவர்கள் ஸ்ரீமதி பெசண்டம்மையார், ஸ்ரீமதி ஜீனராஜதாச, ஸ்ரீமதி கசின்ஸ் ஆகிய பெண்மணிகள். இவர்கள் மூவரும் சரீரம் மூன்றாயிருந்தாலும் பிரம்மஞான சங்க வைபவத்தில் மனம் ஒன்று என்றே சொல்லவேண்டும். ஆக கமிட்டி மெம்பர் 10 பேரில் சென்னைக்காரர்களே மெஜாரிட்டியான ஆறுபேர் ஆவார்கள். அம் மெஜாரிட்டியும் ஐயங்கார் பிரதிநிதியும் ஐயர் பிரதிநிதியுமான பெசண்ட்டம்மையும் ஆகிய இருவர் அபிப்பிராயமே இந்தியா ஒட்டுக்கும் ஏற்படுத்தின கமிட்டிக்கு மெஜாரிட்டி ஆகி விட்டது. மீதி நால்வர்களில் நால்வர்களும் வெளிநாட்டு மகமதியர்கள் அந் நால்வர்களும் மகமதிய சமூக இயக்கங்களுக்கும் மகமதிய சமூக பத்திரிகைகளுக்கும் விரோதமான கொள்கைக்காரர்கள். இதில் சிலர் அவரவர்களுக்கு அவரவர்கள் பிரதிநிதிகள் என்று கூட சொல்ல முடியாது.

மகமதிய சமூகம் இவர்களை எவ்வளவு தூரம் பின்பற்றுகின்றது என்பதும் இவர்களது அபிப்பிராயத்திற்கு எவ்வளவு தூரம் மகமதிய சமூகம் மதிப்பு கொடுத்து வந்திருக்கின்றது என்பதும் அவரவர்களுக்கே தெரியும்.

எனவே இந்த கமிட்டி முன்னே பகிஷ்கரிக்க வேண்டும் என விடுத்த



RangaRakes tamilnavarasam.com

சுற்றறிக்கையில் கையெழுத்து போட்ட கனவான்களுக்கு எந்த விதத்திலும் வித்தியாசப்பட்டவர்களே அல்ல. இவர்கள் போடும் சத்தத்தை நம்பி இந்தியாவே பகிஷ்காரத்திற்கு ஆதரவளிப்பதாக நினைப்பது எவ்வளவு பயித்திய காரத்தனமாகும் என்பது நாம் சொல்லாமலே விளங்கிவிடும்.

இப்படியிருக்க சென்னையில் நடைபெறும் 'லோகோபகாரி' என்னும் ஒரு வாரப்பத்திரிகை இந்த புரட்டுக் கூட்டத்தில் தன்னையும் சேர்த்து கொண்டதின் கருத்து நமக்கு விளங்கவில்லை. இவ்வளவு மோசமான நிலைமைக்கு அப்பத்திரிகை இதுவரை வந்ததாக நமக்கு ஞாபகமில்லை. அது சோதனை என்ற தலைப்பின் கீழ் எழுதுவதாவது:-

"மிதவாதிகளும் அமிதவாதிகளும், இந்துக்களும், முஸ்லீம்களும் பகிஷ்காரத்தில் ஒன்றுபட்டு வருகிறார்கள். ஒரு சில சுயநலவாதிகளும் உத்தியோக வேட்டைக்காரர்களும் மட்டும் இதில் வேறுபட்டிருக்கின்றார்கள்" என்று எழுதியிருக்கின்றது.

இது யார் யாரை மிதவாதி, அமிதவாதி என்று நினைத்துக் கொண்டிருக் கின்றதென்றும் யார் யாரை சுயநலவாதி உத்தியோக வேட்டைவாதி என்று நினைத்துக் கொண்டிருக்கின்றதென்றும் நமக்கு விளங்கவில்லை.

லோகோபகாரிக்கு ஸ்ரீ சீனிவாச அய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார், சிவசாமி அய்யர், சிந்தாமணி அய்யர் முதலானவர்கள் சுயநலமற்றவர் களாகவும் உத்தியோக வேட்டைக்காரர்கள் அல்லாதவர்களாகவும் ஆகி விட்டதோடு பகிஷ்கரிக்கக்கூடாது என்று சொல்லுபவர்கள் ஒரு சிலராகவும் சுயநலவாதிகளாகவும், உத்தியோக வேட்டைக்காரர்களாகவும் ஆகிவிடும் படியான அவ்வளவு பெரிய மாறுதல் ஏற்பட்ட ரகசியம் நமக்கு தெரிய வில்லை. 'லோகோபகாரி' யோக்கியப் பொறுப்புள்ள பத்திரிகையாயிருக்கு மானால் பகிஷ்கரிக்கக் கூடாது என்கின்றவர்களை உத்தியோக வேட்டையும் சுயநலமும் உள்ள ஒரு சிலரின் பெயரைக் குறிக்குமென்று எதிர்பார்க் கின்றோம்.

இந்த நிலைக்கு 'லோகோபகாரி' வர நேர்த்ததற்கு நாம் மிகுதியும் இரங்குகின்றோம். 'லோகோபகாரி'யின் தற்கால நிலை 'தமிழ்நாடு' பத்திரிகையை எவ்வளவு நல்லதாக்கி விட்டது.

'தமிழ்நாடு' பத்திரிகைக்கும் ஒரு சகோதரன் இருக்கின்றது என்பதை காட்டிவிட்டது. பெசண்டம்மையார் ஆதிக்கம் வலுக்க வலுக்க இன்னமும் யார் யார் நிலைமை எப்படி ஆகும் என்பது முடிவுகட்ட முடியாததுதான்.

நமது நாடு எவ்வளவு பைத்தியகாரத்தனத்தில் இருக்கின்றது என்பதும், யார் வேண்டுமானாலும் பாமர மக்களை ஏமாற்றக்கூடும் என்ற நிலையில் இருக்கின்றது என்பதையும் அறிய இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டுமென்று கேட்கின்றோம்.



ஒத்துழையாமையை வஞ்சித்த ஆள்களிடம், அதை ஒழித்த ஆள் களிடம், நல்ல சமயத்தில் மோசம் செய்த ஆள்களிடம், ஒரு சமூகத்தாரின் ஆதிக்கத்தை அழித்து அடிமைப்படுத்துவது தான் எங்கள் கொள்கை என்று சொல்லுகின்ற ஆள்களிடம், அதையே காங்கிரஸ் கொள்கை என்கின்ற ஆள்களிடம் அபிமானம் ஏற்பட்டு அவர்களை பின்பற்ற வேண்டிய அவசியம் சிலருக்கு வருமானால் அவர்களைப் பின்பற்றி நாடு வர வேண்டுமா என்று கேட்கின்றோம்.

ஒரே ஒரு விஷயத்தை மாத்திரம் சொல்லி இதை இப்போது முடிக்கின்றோம்.

இப்போதைய பகிஷ்கார இயக்கம் மகமதியர்களுக்கும் தென்னாட்டு பார்ப்பனரல்லாதார்க்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் விரோதமான பலனை தரத்தக்கது என்று அந்த கருத்தைக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டது என்றும் உறுதியாய்ச் சொல்லுவோம். இந்த கமிஷனால் மேல்கண்ட கூட்டத்தாரின் சுயமரியாதைக்கு ஏதாவது அனுகூலம் ஏற்படுமானால் அந்த சந்தர்ப்பத்தை யாரும் இழந்து விடக்கூடாது. அரசியல் சம்பந்தமான உரிமைகள் என்பது நமக்கு வருவதைவிட வராதொழிவதே மேலானதாகும். ஏனெனில் எது வந்தாலும் அது உத்தியோகமாகத்தான் இருக்கும். பார்ப்பனர்களுக்கும் ஆங்கிலம் படித்த கூட்டத்தார் என்கின்ற சிலரின் சுயநலத்திற்குந்தான் உதவும். பாமர மக்களுக்கு யாதொரு பலனும் கண்டிப்பாய் உண்டாகாது என்பது உறுதி. நரகம் வரினும் சரி, தேசத்துரோக பாவம் சுற்றினாலும் சரி, சுயநலப்பழி வரினும் சரி ஒன்றுக்கும் அஞ்சாமல் சுயமரியாதை அடைய முயல்வதே முக்கிய கடமையாகும்.

**குடி அரசு – தலையங்கம் – 04.12.1927**



RangaRakes tamilnavarasam.com

# மனுதர்ம சாஸ்திரம்

சுயமரியாதை இயக்கம் ஏற்பட்ட பிறகு மக்களுக்கு எங்கு பார்த்தாலும் மனிதரின் சுயமரியாதைக்கு விரோதமான ஆதாரங்களை ஒழிப்பதில் கவலையும் ஊக்கமும் அதிகமாகி வருகின்றது. சென்னை, வடஆற்காடு, சேலம், தஞ்சை, திருநெல்வேலி, மதுரை முதலிய இடங்களில் கூடிய பல மகாநாடுகளில் வர்ணாசிரம தர்மம் என்பதை கண்டித்திருப்பதுடன் அதற்கு ஆதாரமான புஸ்தகங்களையும் பகிஷ்கரிக்கத் தீர்மானங்களும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. சில மகாநாடுகள் மனுதர்ம சாஸ்தி ரத்தை நெருப்பில் கொளுத்தி சாம்பலைக் கரைத்தும் வந்திருக்கின்றன.

அரசாங்கமும் சட்டசபை மெம்பர்களும் இதைக் கவனிக்கப் போகி றார்களா என்று தீர்மானிக்க முடியவில்லை. பழைய காலமாயிருந்திருக் குமானால் இம்மாதிரி பெரும்பான்மையான மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் உணர்ச்சியை மதித்து அரசாங்கமானது வருணாசிரமத்தை அழித்து சட்டம் செய்திருக்கும் என்பதோடு வருணாசிரமக் கொள்கைக்காரர்களை கழுவி லேற்றி இருக்கும் என்றும் கூட சொல்லலாம். ஏனெனில், நிரபராதிகளான 8000 சமணர்கள் கழுவேற்றப்பட்டதாக சொல்லும் சரித்திரத்தைப் பார்க்கும்போது இவ்வளவு அக்கிரமமும் ஜீவகாருண்யமும் அறிவும் அற்றத் தன்மையான கொடுமையை சகித்துக் கொண்டிருக்கும் என்றும் யாரும் சொல்ல முடியாது. நமது அரசாங்கங்கள் பழய கால அரசாங்கங்களைப் பின் பற்றிக் கழு வேற்றா விட்டாலும் சட்ட மூலம் கொடுமைகளை ஒழிக்கவாவது உதவ வேண்டாமா என்று கேட்கின்றோம்.

ஒருக்கால் மத விஷயத்தில் தலையிட முடியாது என்று சொல் வார்களானால் மத விஷயங்களையாவது கவனித்து மதத்தில் எப்படி சொல்லி யிருக்கின்றதோ யார் யாருக்கு என்ன என்ன வேலை இடப்பட்டிருக்கின்ற தோ, யார் யாரின் நடத்தை எப்படி இருக்க வேண்டு மென்று குறிப்பிடப் பட்டிருக்கின்றதோ அப்படியாவது நடக்கும்படி பார்க்க வேண்டும். அப்படி யும் இல்லாமல் இப்படியுமில்லாமல் பார்ப்பானும், வெள்ளைக்காரனும் மாத்திரம் பிழைக்க என்ன என்ன மாதிரி நடக்க வேண்டுமோ எப்படி எப்படி சீர்திருத்தம் செய்ய வேண்டுமோ அப்படியெல்லாம் சூழ்ச்சிகள் செய்துக் கொண்டு மதவிஷயத்தில் பிரவேசிக்க மாட்டோம் என்று சொல்வது



RangaRakes

வடிகட்டின அயோக்கியத்தனமாகுமென்றே சொல்லுவோம்.

இச்சூழ்ச்சிகளைப் பார்க்கும்போது இதுசமயம் மகமதிய அரசாங் கத்தில் வாழும் யோக்கியதையாவது நமக்குக் கிடைக்காதா என்று ஆசைப்பட வேண்டியதாயிருக்கின்றது. காரணமென்ன வென்றால், வீரர் கமால்பாஷா அவர்கள் ஒரு அரச விசாரணைக்கு கொரானை ஆதரவாக காட்டிய போது "அது அக்காலத்து சங்கதி இக்காலத்திற்கு செல்லாது" என்று அதைப் பிடுங்கி வீசி எறிந்தாராம். குரான் வாக்கியம் செதுக்கப்பட்ட இடங்களை யெல்லாம் அழித்து சுயமரியாதையையும் கைத்தொழிலையும் கவனியுங்கள் என்று எழுதி வருகிறாராம். மகமதியரைவிட வெள்ளைக்காரருக்கும், பார்ப்பனர் களுக்கும் மதபக்தியிருக்கின்றது என்று சொன்னால் எந்த பைத்தியக் காரராவது நம்ப முடியுமா என்று கேட்கின்றோம்.

எனவே மதம் என்கிற புரட்டுகளையும், மதாச்சாரியார்கள் என்கின்ற அயோக்கியர்களையும், சாஸ்திரம், வேதம், புராணம் என்பவைகளாகிய அதர்ம அக்கிரம ஆதாரங்களையும் குருட்டுத் தனமாய் பின்பற்றாமல் அன்பு, ஜீவகாருண்யம், அறிவு, சத்தியம் என்பவைகளை ஆதாரமாய் வைத்து அவற்றிற்கு விரோதமாய் உள்ளவைகளையெல்லாம் அடியோடு ஒழிப்பதற்கு முற்பட வேண்டியதுதான் பகுத்தறிவுள்ள மனிதன் கடமை. ஆதலால் அதற்கு ஒவ்வொருவரும் முற்பட வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு – கட்டுரை – 04.12.1927**



tamilnavarasam.com

# சர்.பி. ராஜகோபாலாச்சாரியார்

சர்.பி. ராஜகோபாலாச்சாரியார் பெங்களூரில் காலமானதாகக் கேட்டு வருத்தமடைகிறோம்.

அவர் வித்தியாசம் பாராட்டாதவர். மூடக் கொள்கைகளில் நம்பிக்கை யில்லாதவர். உத்தியோகத்திலும் கூடுமானவரை யோக்கியமாய் நடந்து கொண்டவர். பார்ப்பனரல்லாதார் அநேகரின் அன்புக்கும் விஸ்வாசத்திற்கும் பாத்திரமாயிருந்தவர். உத்தியோக முறையில் பார்ப்பனரல்லாதாருக்கு சிறிதாவது நன்மை செய்த பார்ப்பனர் இருப்பாரானால் அதில் ஸ்ரீமான் சர். பி. ராஜகோபாலாச்சாரியாரே முதன்மையானவர். அவரது குடும்பத்திற்கு நமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - இரங்கலுரை - 04.12.1927**



# மானமற்ற ஜாதி

மதுரையில் 29-11-27 -ல் ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் செய்த பிரசங்கத்தில் யாரோ ஒரு காங்கிரஸ் தொண்டர் ஸ்ரீ நாயக்கரை பல கேள்விகள் கேட்டதாகவும் அதனால் குழப்பமுண்டானதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். இது உண்மையல்ல. நாயக்கரை யாரும் எவ்வித கேள்வியும் கேட்கவில்லை. ஒருவர் பண்டிதர், பண்டிதர் என்று சத்தம் போட்டார். அதற்கு அங்கு இருந்தவர் அவரை கலகம் செய்ய வந்திருக்கிறார் என்று சந்தேகப்பட்டு கண்டித்து மேடையில் கொண்டு வந்து உட்கார வைத்தார்கள். கூட்டம் கலையும் வரை பேசாமல் உட்கார்ந்திருந்துவிட்டு போய்விட்டார்.

அதுசமயம் நாயக்கரும் சத்தம் போட்டவரையும், அவரைக் கண்டித்தவர்களையும், அவரை கூட்டி வந்து உட்கார வைத்தவர்களையும் தக்கபடி கண்டித்துவிட்டு இம்மாதிரி சிறு விஷயங்களை நாளையதினம் சில அயோக்கிய பத்திரிகைகளும் அயோக்கிய நிருபர்களும் கூட்டத்தில் குழப்பம் என்றும் கேள்விகளென்றும் எழுதி இக்கூட்டத்தின் பெருமையைக் கெடுக்க சூழ்ச்சி செய்வார்கள் என்றும் சொன்னார். பார்ப்பனப் பத்திரிகைகளும் பத்திரிகை நிருபர்களும் பெரும்பாலும் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் என்ன பேசினார் என்பதை எழுதுவதற்கு தைரியம் இல்லாமல் ஈனத்தனமாய் நடந்து கொண்டதோடு கூட்டத்தைப் பற்றி குறை கூற பிரயத்தனப்படுவதில் கொஞ்சமாவது வெட்கப்பட்டு பின் வாங்குவதில்லை.

இதைப் பற்றி எவ்வளவு கண்டித்தாலும் வைதாலும் அந்த ஈன ஜாதிகளுக்கு ரோஷம் மானம் வெட்கம் என்பது இல்லாமல் இத்தொழிலை விடாமல் செய்து வருகின்றனர். இவ்வளவு காலம் இவ்வளவு பெரிய அக்கிரமங்கள் செய்து கொண்டு இன்னமும் இச்சாதி உயிர் வாழ ஏற்பட்ட காரணமே அடியோடு மானத்தையும் வெட்கத்தையும் விட்டு விட்டதாலும் உலகத்திலுள்ள ஈனத்தையெல்லாம் தங்களுக்கே சொந்தமாக்கிக் கொண்டதாலுமே அல்லாமல் வேறில்லை. ஒன்றா இந்த ஜாதி ஒழிய வேண்டும். அல்லது இந்த ஜாதிக்கு மானம் ஏற்படும்படி செய்ய வேண்டும். இவற்றுள் இரண்டில் ஒன்று ஏற்படாதவரை இவர்கள் உள்ள நாட்டிற்கு விடுதலை இல்லை என்பது உறுதி.

**குடி அரசு - கட்டுரை - 04.12.1927**



RangaRakes tamilnavarasam.com

# இந்திய சட்டசபை மெம்பருக்கு ஒரு வேண்டுகோள்

இந்திய சட்டசபையில் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையை உத்தே சித்து சட்ட சம்மந்தமாக பல வேலைகளை செய்ய வேண்டியிருக்கிறது.

குறிப்பாக இந்து லாவில் பிராமணன் சூத்திரன் என்கிற பாகுபாடு களும் அதற்கு தக்கபடி பிராமணன் என்பவனுக்கு ஒரு விதமாகவும் சூத்திரன் என்பவனுக்கு ஒரு விதமாகவும் சட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவை களை சட்டத்தில் வைத்துக் கொண்டிருப்பது நியாயமா என்று கேட்கின்றோம்.

ஒரு பார்ப்பன இந்திய சட்டசபை மெம்பர்கூட இம்மாதிரி பிராமணன் சூத்திரன் என்கின்ற வித்தியாசம் சட்டத்தில் இருக்கக்கூடாது என்று சொல்லி ஒப்புக்கொண்டாலும் கூட பார்ப்பனரல்லாத மெம்பருக்கு உணர்ச்சி வரவேண் டாமா என்று கேட்கின்றோம். ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார் அவர்களுக்கு உபயோக மற்றதும் வேஷமானதுமான ராயல் கமிஷன் பஹிஷ்காரத்தில் இருக்கும் சுறுசுறுப்பில் ஏதாவது ஒரு பகுதியாவது இந்த சூத்திர பட்டமும் பாரபக்ஷமும் ஒழிவதில் கவலை இருக்க வேண்டாமா என்று கேட்கின்றோம். இனி உள்ள நாள்களையும் இது போல் வீணே கழிக்காமல் காரிய வழியில் கழிக்கும்படியாய் மிகவும் வணக்கமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - வேண்டுகோள் - 04.12.1927**



# திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதை சங்க மகாநாடு வைபவம்

## ஊர்வலமும் கூட்டத்தில் குதூகலமும்

இவ்வாண்டுவிழாவுக்கு நான் தலைமை வகிக்க வேண்டுமென்று கட்டளை இட்ட கனவான்கள் எல்லாம் என்னைப்பற்றி அதிகம் கூறினார்கள். அது என்னை மிகுதியும் வெட்கப்படும்படி செய்துவிட்டது. அதனால் நான் என்ன பேசவெண்டுமென்று எண்ணினேனோ அதை மறக்கச் செய்தது. அவர்களுக்கு என்னிடமும் எனது இயக்கத்திடமும் உள்ள பற்றும், அவர்களின் இயற்கையான பெருந்தன்மையும், அளவுக்கு மீறி என்னை புகழச் செய்தது. அப் புகழுரைகளுக்கு நான் சிறிதும் அருகனல்ல. ஆனாலும் (இல்லை இல்லை முழுதும் பொருந்தும். இன்னமும் அதிகமாயும் பொருந்தும் என்கின்ற கூச்சல்) அதற்கு வந்தனம் செலுத்துகின்றேன்.

இயக்கம் ஆரம்பித்த காலத்தில் எதிர்ப்புகள் பலமாய் இருந்தது. இன்னும் யாவரும் ஏகமனதாய் ஆதரிப்பதாகவும் எண்ண இடமில்லை. இன்னும் அதிக எதிர்ப்பு இருக்கிறது. ஆயினும் இத்தகைய மகான்கள் எல்லாம் ஆதரவு அளித்துவருவதை கண்டு மிக தைரியங்கொண்டு அந்த ஆசையின் மீது அவர்கள் உரையை நான் சகித்துக் கொண்டிருக்கிறேன். ‘குடி அரசை’ப் பற்றி மிக அதிகமாகக் கூறினார்கள். அதில் உள்ள குற்றமெல்லாம் எனக்குத் தெரியும் அதில் உள்ள மெல்லின வல்லினம் போன்ற பல இலக்கணப் பிழைகளும் மற்றும் பல பிழைகளும் எனக்குத் தெரியும். இதற்காக நான் இலக்கணம் கற்கப் போவதில்லை. இவ்வாண்டுவிழாவுக்கு எனக்கு கடிதம் அனுப்பாவிட்டாலும் எங்கிருந்தாலும் ஓடி வந்துவிடுவேன். இந்த நிலையில் உள்ள என்னையே தலைமை வகிக்க வேண்டுமென்று கூறியது எனது பாக்கியமேயாகும். சிறந்த கல்வியாளர்களும் பெரியார்களும் நிறைந்த இந்த ஜில்லாவாசிகளான நீங்கள் இவ்வியக்கத்துக்கு இவ்வளவு ஆதரவு காட்டி வருவதைக் கண்டு நான் பெருமை அடைவது மட்டுமல்ல, மற்ற ஜில்லாவாசிகளும் உங்களுடன் போட்டியிட்டு தங்கள் சுயமரியாதையை நிலை நிறுத்துவதில் கண்ணுங்கருத்துமாய் இருக்கவேண்டுமென்று மீண்டும் அறிவித்துக் கொள்ளுகிறேன்.



RangaRakes tamilnavarasam.com

சுயமரியாதை இயக்கமென்றோரியக்கம் தோன்றிய காலத்தில் பலர் பல பல விதமாகப் பேசியதுண்டு. ஆனால் இப்பொழுதோவெனில் இவ் வியக்கம் பலரால் ஒப்புக் கொள்ளக்கூடியதாயும் மனிதனுடைய வாழ்விற்கும் உலக முற்போக்குக்கும் இன்றியமையாததென நம்மக்கள் உணர ஆரம்பித்து விட்டார்கள். உணர்ந்தும் வருகிறார்கள். இப்பொழுது எங்கு பார்த்தாலும் சுயமரியாதைப் பேச்சாகத்தானிருக்கிறது. நம்நாடு வெளிநாடு தேசீய வாதிகளுங்கூட இச்சுயமரியாதையென்னும் வார்த்தையை உபயோகிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஸ்ரீ காந்தியும் சுயமரியாதையைப் பற்றி பேசுகிறார். ஒத்துழையாமையே சுயமரியாதைக்காக ஆரம்பித்ததே ஒழிய சுயராஜ்யத் திற்காக அல்ல. இப்பொழுது கொஞ்ச காலமாய் நமது நாட்டில் நடந்து வரும் ராயல் கமிஷன் பகிஷ்காரம் என்கின்ற கூச்சல் கூட சுயமரியாதைக்காகத்தான் என்று சொல்லுகிறார்கள்.

**இச்சுயமரியாதைச் சங்கத்தின் கொள்கைகள் என்னவெனிலோ, பிறப்பில் உயர்வு தாழ்வில்லை என்பதும், மேல் கீழ் இல்லையென்பதும் தானேயல்லாமல் எந்தத் தனி வகுப்பாரையும் இழிவுபடுத்த வில்லை யென்பதையும் உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன்.** ஆனால் நம்நாட்டுப் பார்ப்பனர் கள் தங்களை ஏதோ துவேஷிப்பதாகக் கூறி வருகின்ற னர். இது அக்கூட்டத் தாரின் யோசனையின்மையாலும் பேராசையாலுமே ஏற்படுகிறது. ஆனால் தாழ்த்தப்பட்டவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற வர்களுக்கும் நமக்கும் சுயமரியாதை தத்துவம் எவ்வளவு பயன்படுகிறதோ அதைவிட அதிகமாக பார்ப்பனர்களுக்கும் பயனுண்டு.

பார்ப்பனரல்லாதாராகிய நாம் எவ்வளவு தூரம் இழிவுப் படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றோமோ அந்த அளவுக்கு பார்ப்பனர்கள் சுகம் அனுபவித்து வருகிறார்கள். நாம் எவ்வளவுக் கெவ்வளவு கொடுமையுடன் நடத்தப்படுகின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களுக்கு நன்மை யாகவே இருக்கிறது. இவ்வியக்கத்தின் பயனால் நாம் மாத்திரம் சுகப்படுவதல்லாமல் பார்ப்பனர்களும் இதன் மூலமாய் தங்கள் இழிவைப் போக்கிக் கொள்ளுகிறவர்களாகிறார்கள். உண்மையாக கடைசியாக இவ் வியக்கத்தால் யாருக்காவது கடுகளவாவது துன்பம் நேரிடுமா என்றால் இல்லவே இல்லை. ஆனால் அரசாங்கத்தாருக்கு மாத்திரம் கொஞ்ச காலத் திற்கு கஷ்டமாகத்தானிருக்கும். ஏனெனில் நாம் எவ்வளவு தூரம் சுய மரியாதையற்றிருக்கின்றோமோ அவ்வளவு தூரம் நம்மை இழிவுபடுத்தி நம்மிடமிருந்து அவர்கள் கொள்ளையடித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களுக்குங்கூட கொஞ்ச நாளைக்குள் புத்தி வந்துவிடும். எத்தனை நாளைக்குத்தான் தூங்குகிறவன் தொடையில் கயிறு திரிப்பதென்று சொல்லி விலகி விடுவார்கள். பின்னர் யாரும் சுதந்திரத்துடன் வாழலாம். ஆகையால், வாழ்க்கையின் பரிசுத்தத்திற்கும் சுயமரியாதையே அடிப்படை யானது. இதைப் பற்றி எத்தனையோ பெரியார்கள் கூறியிருக்கின்றனர். “கவரிமான்



RangaRakes

ஒரு மயிரிழப்பின் உயிர் வாழாது” என்பதுபோல் மனிதனும் மானமழிந்து வாழவிரும்பான். ஆகவே, நம் மானத்தை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், மனிதத் தன்மையோடிசைந்து வாழ்க்கை நடத்த வேண்டுமென்றால் சுயமரியாதைத்தான் வேண்டற் பாலது. இப்பொழுது மணி 12 ஆகிவிட்டது. மீண்டும் மாலையில் இம்மகாநாடு கூட வேண்டியிருப்பதால் இத்துடன் எனது பிரசங்கத்தை முடித்துக் கொள்வதுடன் எனக்கு அன்புடன் இவ்வக்கிராசனப் பதவியை அளித்த அன்பர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்திக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு : 28.11.27 திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதை மகாநாடு- தலைமைஉரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 04.12.1927**



tamilnavarasam.com

# ஸ்ரீ வரதராஜுலு ஐயங்கார்

ஸ்ரீமான் பி. வரதராஜுலு நாயுடுவுக்கு மறுபடியும் மைலாப்பூர் பார்ப்பனர்கள் உபநயனம் என்னும் பூணூல் கல்யாணம் செய்து தங்கள் ஜாதியில் சேர்த்துக் கொண்டார்கள். ஆதலால் அவரை இனி வரதராஜலு அய்யங்கார் என்றுதான் அழைக்க வேண்டும். இந்த கோஷ்டியார் சுவீகரிக்கத்தக்க ஒரு சந்தர்ப்பம் வருவதற்கு ஸ்ரீமான் வரதராஜலு பட்ட பாடு இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. முன்பு ஸ்ரீ காந்தியையும், ஒத்துழையாமையையும்கூடத் தாக்கி, சுயராஜ்ஜியக் கக்ஷியுடன் கூடிக் குலாவி எவ்வளவோ கூத்தாடியும், அதைப்பற்றி தனது பத்திரிகையில் எவ்வளவோ பிரசாரம் செய்து பார்த்தும் அதற்கு செல்வாக்கு இருக்கின்றவரை கூடவே இருந்தும் பார்ப்பனர்களின் புகழ் விளம்பர சாகரத்தில் ஆழ்ந்திருந்துவிட்டு அக்கக்ஷிக்கு சாவு மணியடிக்கப் போகின்றதென்று தெரிந்தவுடன் தனக்கும் அதற்கும் சம்மந்தமில்லை என்று சொல்லி அதைவிட்டு ஒரே தாவாகத் தாவி வெளியில் வந்து விட்டதும், பிறகு அது அடியோடு செத்து குழியில் போட்டு புதைக்கப்படும்போது தானும் ஒருகை மண்ணை அள்ளிப் போட்டு விட்டு நல்ல பிள்ளை போல் இரவும் பகலும் அதை வைவதன் மூலம் அதற்கு கருமாதி செய்வதிலேயே தனது கிரியை ஆற்றி வந்தார். பிறகு இவர்களால் காங்கிரசுக்கும் ஆபத்து வந்துவிட்டதாக தெரிந்தவுடன் தனக்கு ஏதாவது ஒரு இடம் வேண்டுமே என்கின்ற எண்ணத்தின் பேரில் பார்ப்பனரல்லாதார் கக்ஷியாகிய ஜஸ்டிஸ் கக்ஷி என்கின்ற மரத்தின் கிளையையும் ஒரு கையில் பிடித்துக் கொண்டிருந்தார். இது தெரிந்த பார்ப்பனர்கள் இவரை அடியோடு காங்கிரசை விட்டு வெளியாக்க தீர்மானித்துவிட்டார்கள்.

ஆனாலும் பார்ப்பனரல்லாதார் கக்ஷியில் இவர் பேரில் உள்ள சந்தேகத்தினால் தனக்குள்ள ஆதரவற்ற தன்மையை அறிந்ததும் சென்ற தேர்தலின் பொழுது எக்கக்ஷி வலுக்கின்றதோ அக்கக்ஷியில் சேர்ந்து கொள்ளலாம் என்கின்ற எண்ணத்தில் பேரில், ஜஸ்டிஸ் கக்ஷிக்கும் ஓட்டு கொடுக்காதீர்கள், காங்கிரஸ் கக்ஷிக்கும் ஓட்டு கொடுக்காதீர்கள் என்று சொல்லி பிரசாரமும் செய்து பார்த்து கடைசியில் காங்கிரஸ் கக்ஷிக்கு ஜெயம் என்று தெரிந்த உடனே ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை தலைவராய் ஏற்று மந்திரி வேலை ஒப்புக்கொள்ளும்படி தந்தி கொடுத்து கேட்டுக் கொண்டும், அக்கூட்டத்தார் இவரை லக்ஷியம் செய்யாமல் போகவே, மறுபடியும் அவர்களை வைதுக் கொண்டு கோவை மகாநாடு மூலமாய் ஜஸ்டிஸ் கக்ஷியுடன் உறவாட முயற்சித்து மறுபடியும் அதை விட்டு காங்கிரஸ் சத்தம் போட்டு ஒன்றும் முடியாமல் போகவே கடைசியாக பார்ப்பனர்கள் தங்களை எவ்வளவு அவமானப்படுத்திய போதிலும் அதிலிருந்தால்தான் ரதம் ஓட்ட முடியும் என்று நினைத்து தக்க சமயம் எதிர்பார்த்துக் கொண்டே இருக்கும் போது திடீரென்று கடவுள் அனுப்பியது என்பதுபோல் ராயல் கமிஷன் சாக்கு ஒன்று வந்தது. அதற்கேற்றாப் போல் அய்யங்காரின் ஒற்றுமை அறிக்கை ஒன்றும் வந்தது. மற்றெல்லோரும் அவ்வறிக்கையை தலையில் அடித்து அதை நசுக்கிக் கொண்டிருக்கும் போது அய்யங்காருக்கு நல்ல பிள்ளையாக எண்ணி இவர் அதை கட்டி முத்தமிட்டு வரவேற்று உபதலையங்கம் எழுதினார்.

இவர் எவ்வளவு வரவேற்றும் எவ்வளவு எழுதியும் அது தோன்றிய அன்றே செத்துவிட்டது. அல்லாமலும் காங்கிரஸ் மகாநாடுகள் நடத்தியாவது பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளையாகலாமா என்று பார்த்தார். அந்தப்படியே மிக்க முயற்சியும் தக்க செலவும் செய்து சேலம் மகாநாட்டை நடத்தினார். அந்த மகாநாட்டையும் பார்ப்பனர்கள் அடியோடு பகிஷ்கரித்து அது வகுப்பு மகாநாடென்று மண்டையில் அடித்தார்கள். பிறகு தென்னாற்காடு மகாநாட்டைப் பிடித்தார். அதையும் பார்ப்பனர்கள் பகிஷ்கரித்து அதன் வரவேற்புக் கமிட்டியையே கலைக்க போலீஸ் பந்தோபஸ்தெல்லாம் கொண்டு வந்தார்கள். கடைசியாக ராஜியாயிற்று. எப்படி ராஜியாற்று என்று சொல்ல வேண்டுமானால் இன்னின்ன மாதிரி எழுதிப் படிக்கின்றேனென்றோ அல்லது எழுதிக்கொடுத்தபடி படிக்கின்றேன் என்றோ ஒப்புக் கொண்டிருந் தாலொழிய பார்ப்பனர்கள் சுலபத்தில் இந்த ராஜிக்கு வந்திருக்க மாட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் ஸ்ரீ அய்யங்கார், ஸ்ரீ ராமசாமி முதலியாருக்கு கார்ப்பரேஷன் தலைவர் வேலை கொடுப்பதற்காக இந்த நிபந்தனைதான் பனகால் ராஜாவை கேட்டார். ஆதலால் இந்த நிபந்தனை எதிர்பார்க்கக் கூடியதுதான். இப்படியெல்லாம் இருந்தும் பார்ப்பனர்கள் முழுதும் நம்மால் மகாநாட்டுக்கும் சரியாய் வராமல் குற்றஞ்சொல்லக் காத்திருந்தார்கள். கடைசியாக மற்ற கிளைகளையெல்லாம் அடியோடு விட்டு விட்டு பார்ப்பன அடி மரத்தையே பிடித்திருப்பதையும், அதைத் தவிர தமக்கு வேறு கதியே இல்லையென்றும் பரிசுத்தமாய்க் காட்டிக் கொண்ட பிறகுதான் கிடைத்தவரையில் லாபமென்று அபயம் கொடுத்து தென்னாற்காடு உபந்நியாசத்தைப் பற்றி தலையங்கங்கள் எழுதி புகழ ஆரம்பித்தார்கள். இவரும் ஆசையோடு அதை ஏற்று திருப்பித் திருப்பி தமது பத்திரிகையிலும் தமது தலையங்கத்திற்குப் பக்கத்தில் பிரசுரித்தார். பிறகு அவர்களோடு இரண்டறக் கலந்தார். பிறகுதான் அவர்கள் உபநயனம் செய்து விட்டார்கள். ஆகவே இவ்வளவுதான் அவர்கள் செய்யக் கூடும்.


RangaRakes tamilnavarasam.com

இனி மற்றவர்கள்தான் அவருக்கு நாமகரணம் செய்ய வேண்டும். ஆதலால் வரதராஜுலு அய்யங்கார் என்ற நாமத்தை சாற்றுகின்றோம். இவ்வளவு பெருமைகள் ஒத்துழையா இயக்கம் ஆரம்பித்த காலம் தொட்டு ஸ்ரீ வரதராஜுலுக்கு கிடைத்திருக்காதென்றே சொல்லலாம். இது போலவே பெசண்டம்மையாருக்கும் அப்போதே ஒரு பார்ப்பனரல்லாத தலைவர் தேவையாயிருந்தது. ஸ்ரீ வரதராஜுலு இரண்டுக்கும் விண்ணப்பம் போட்டதில் இரண்டிடத்திலும் பிரைஸ் விழுந்துவிட்டதால் இப்போது எதை ஒப்புக் கொள்வது என்ற மயக்கம் வந்துவிட்டது. அம்மையார் சட்டத்திற்கு உட்பட்டு சத்தம் போட வேண்டும் என்கின்றார். அய்யங்கார் சட்டத்திற்கு மீறிச் சத்தம் போட வேண்டுமென்கின்றார். இரண்டு பேரும் எதிர்பார்க்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ எதிர்பிரசாரத்திற்கு இவர் தயாராயிருந்தாலும் எதைப் பின்பற்றுவ தென்பது தெரியாமல் ஸ்ரீ வரதராஜுலு விழிக்கின்றார். இரண்டு பேரையும் விட மனம் வரவில்லை போல் தெரிகின்றது. ஸ்ரீ வரத ராஜுலுவின் சொந்த நிலைமை இன்ன தென்பதை தென்னாற்காடு மகாநாடே அவருக்கு நன்றாய்க் காட்டி விட்டது. அதாவது இவர் தலைமை வகித்த மகாநாட்டுக்கு உள்ளூர் பார்ப்பனர்கள் யாவரும் வரவில்லையென்றும், வெளித்தாலூகாக்களிலிருந்து யாருமே வரவில்லை என்றும் 'சுதேசமித்திரன்' தெரிவிக்கிறது. மற்றபடி இந்தத் தலைவரைச் சுற்றி இருந்த பெரும்பான்மை யான கோஷ்டிகளும் இதை உறுதிப் படுத்துகிறது. எது எப்படியானாலும் நல்ல சமயத்தில் கிடைத்த ஆதாரத்தைப் பிடித்துக்கொண்டு இனி கரையேற வேண்டிய வேலையே அவருக்குச் சரியாய் போய்விட்டது. என்னவெனில் பகிஷ்காரப் பிரசாரந்தான். தவிர பார்ப்பனர்களும், பார்ப்பனப் பத்திரிகை களும் கூட இவரைப் போலவும் இவரது பத்திரிகையைப் போலவும் அவ்வளவு அதிகமாய் பகிஷ்காரப் பிரசாரம் செய்வதில்லை. ஏனென்றால் புதிதாக ஒருவர் ஒரு மதத்தில் சேருவாரானால் அதே மதத்தில் பிறந்து வளர்ந்தவர்களைப் பார்க்கிலும் அதிகமான வேஷம் போடுவது சகஜம்.எதுபோல வென்றால் "புதிய சைவனுக்கு பூச்சும், ருத்திராட்சமும் அதிகமாயிருக்கும்" என்பது போல், அப்படிச் செய்தால்தான் மற்றவர்களும் நம்புவார்கள். ஆதலால் ஸ்ரீமான் வரதராஜுலுவும் அவரது பத்திரிகையும் பகிஷ்காரப் பிரசாரம் சரியாகவோ, தப்பாகவோ முழக்குவதில் நமக்கு அதிசயம் ஒன்றும் இல்லை. இதை நம்பிக் கெட்டுப் போக எத்தனைபேர் காத்திருக்கிறார்கள் என்பதுதான் கேள்வி.

பார்ப்பனருக்கு நல்ல பிள்ளையாவதற்கு ஸ்ரீ வரதராஜுலுவுடன் போட்டி போட்டு வரும் மற்றொரு பார்ப்பனரல்லாத தலைவர் ஒருவர் இருக் கின்றார். அவர் ஸ்ரீ வரதராஜுலு பார்ப்பனர் பக்கம் போய் விட்டாரானால் அரை நிமிஷம் கூட தனித்திருக்க சகிக்க மாட்டாதவர். எனவே அவர் இனி பகிஷ்காரம் என்னும் அரசியலின் பெயரால் வெளியில் வருவாரோ, அல்லது புராணம், மதம் என்னும் அழுக்கு மூட்டைகளுடன் வெளியாவாரோ தெரிய



RangaRakes

வில்லை. எப்படியானாலும் இவர் அய்யங்காராக வராவிட்டாலும், அய்யரா கவாவது வெளியாகித்தான் தீருவர். ஆதலால் அதையும் வரவேற்கக் காத்திருக்கிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 11.12.1927**



tamilnavarasam.com

# ஐந்துக்கு இரண்டு பழுதில்லை

**– சித்திரபுத்திரன்**

நான் கொஞ்ச காலமாக மறைந்திருந்தேன். இனி அடிக்கடி தோன்றுவேன். அன்பர்கள் வரவேற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். ஏதாவது விஷயத்தைப் பற்றி பேசுகிற போது முழுதும் உண்மையா யிருக்காது என்று சந்தேகப்படுகிற காலத்தில் "ஐந்துக்கு இரண்டு பழுதில்லை" என்கிற பழமொழி சொல்வதுண்டு. அது எப்பொழுது ஏற்பட்டது, எதற்காக ஏற்பட்டது என்கிற விபரம் அநேகமாய் நமது தமிழ் மக்களுக்குத் தெரியாதென்றே நினைக்கிறேன். தெரியாதென்று நினைப்பதால் அதைப்பற்றி நான் கண்டு பிடித்த முடிவை சொல்லுகிறேன்.

"ஐந்துக்கிரண்டு பழுதில்லை" யென்பதானது ஐந்து விஷயம் சொன்னால் அதில் இரண்டாவது பொருத்தமாயிருக்கும். அப்படி இருந்தாலே போதும் என்கிற கருத்துக்கொண்டே இப்பழமொழி வழங்கப்பட்டிருக்கிறது. அது எப்பொழுது என்று பார்ப்போமானால் ஆரியர்கள் நமது நாட்டில் வந்து பொய்யும் புரட்டும் புளுக ஆரம்பித்த காலத்தில் அப்புரட்டுகளை யாராவது கண்டுபிடித்து கேழ்க்க ஆரம்பித்தால் "ஐந்துக்கு இரண்டு பழுதில்லாமல்" அதாவது முன் சொன்னது போல் ஐந்தில் இரண்டு விஷயங்கள் நிஜமா யிருந்தாலே போதுமென்று அதை நம்ப வேண்டியதுதான் என்று சொல்லி ஏமாற்றுவதற்கு உபயோகப்படுத்தினார்கள். அந்தப் பழமொழியின் ஆதாரத்தைக் கொண்டுதான் ஜனங்கள் இப்பொழுதும் சாஸ்திரம், புராணம், ஜாதகம், ஆரூடம், சகுனம், சாந்தி, ஓமம், யாகம், சாமியாடி வேண்டுதலை அல்லது பிரார்த்தனை, அருள்வாக்கு என்பவை போன்ற மூட கொள்கைகளெல்லாம் நாட்டில் பரவலாயின. ஏனெனில் இவைகளில் எவ்வளவு பொய்யாய் போய் விட்டாலும் அதை நம்பிக் கெட்ட மூடர்கள் பார்ப்பனர்களை சமாதானம் கேழ்க்க ஆரம்பித்தால், அதனால் பிழைக்கும் அயோக்கியக் கூட்டத்தார் "ஐந்துக்கு இரண்டு பழுதில்லாமல் இருக்கிறதா இல்லையா என்று பார்க்க வேண்டுமெயொழிய ஒவ்வொன்றையும் பரிசோதிப்பது நாஸ்திகத் தன்மையாகி விடும்" கடவுளிடத்தில் நம்பிக்கையற்றதன்மையாகிவிடும் என்று சொல்லி ஏமாற்றி விடுவார்கள்.



ஆனால் அவற்றுள் ஐந்து என்ற எண்ணிக்கையும் இரண்டு என்கிறஎண்ணிக்கையும் எப்படி குறிப்பாய் வந்தது, வேறு எண்களை சொல்லக் கூடாதா என்று சிலர் கேட்கக் கூடும். இம்மாதிரி கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லுவது அனாவஸ்யமாகும். ஏனெனில் ஏதாவது இரண்டு எண்களைச் சொல்லித்தானாக வேண்டும். அப்படி சொல்லும் போது இந்த இரண்டு எண்களை மட்டும் சொல்லக்கூடாது என்பதற்கு யாதொரு நிபந்தனையும் இல்லை. ஆனாலும் இந்த இரண்டு எண்களுக்கு குறிப்பான சமாதானம் இல்லாமல் போகவுமில்லை. அதைச் சொல்லுகிறேன் கவனமாய் கேளுங்கள். ஆனால் அதை நம்பியே தீர வேண்டுமென்று நான் உங்களைக் கட்டாயப் படுத்தவில்லை. உங்களுக்கு சரியென்று தோன்றினால் ஒப்புக் கொள்ளுங்கள். இல்லா விட்டால் வேறு சமாதானம் கிடைக்கும் வரை இதை அனாமத்தில் வைத்திருங்கள்.

அதாவது பார்ப்பன பாஷையில் ஒரு தோத்திர ஸ்லோகமுண்டு. என்னவென்றால் **"அகல்யா, துரோபதி, சீதா, தாரா, மண்டோதரி, ஸ்மிருதா, பஞ்சகன்யாஸ்மரே நித்தயம் மாஹபாதக் நாசனம்."** இதன் கருத்து அகல்யை, துரோபதை, சீதை, தாரை, மண்டோதரி ஆகிய ஐந்து கன்னிகைகளை தினம் நினைத்தால் மஹாபாதகமெல்லாம் நாசமாய்விடும் என்பதே. இதில் ஏற்பட்ட விவகாரத்திற்காகத்தான் "ஐந்துக்கு இரண்டு பழுதில்லை" என்கிற பழமொழி உண்டாக்கப் பட்டது. விவகாரத்தின் தன்மை யாவது:–

கோபமில்லாமல் பகுத்தறிவோடு கேட்கவேண்டும். ஏனென்றால் கோபம் வந்தால் பார்ப்பான் ஏமாற்றி விடுவான். கோபமில்லாவிட்டால்தான் அதிலிருக்கும் ரகசியம் விளங்கும். நான் கிளப்பப் போகும் விவாதம் இந்த ஸ்லோகத்தை எந்தப் பார்ப்பான் எழுதினானோ அந்தப் பார்ப்பான் எழுதி வைத்த சங்கதியைத்தான் சொல்லப் போகிறேன். ஆதலால் நான் என் உத்தேசப்படி சொல்லப் போவதாக நினைத்து ஏமாந்து போகாதீர்கள். இதில் கண்டிருப்பது வாஸ்தவமா இல்லையா என்று ஒவ்வொரு பார்ப்பானையும் கேளுங்கள். வாஸ்தவமல்ல என்று சொன்னால் என்னைக் கேளுங்கள். முதலாவது அந்த ஸ்லோகத்தில் மேல்கண்ட ஐந்து பெண்களையும் கன்னிகைகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கன்னிகை என்றால் கலவி அறியாதவள். அதாவது புருஷர்கள் சாவகாசம் தொடங்காதவள், கல்யாணமில்லாதவள் என்பது பொருள். ஆகையால் அந்த ஸ்லோகம் முன்னுக்குப் பின் முரணானது என்று சொல்லுவேன்.

ஒரு சமயம் பார்ப்பனர்கள் இதற்கு இந்த ஸ்லோகத்தில் ஷை பெண்களை குறிப்பிட்டு நினைக்கும்படி சொன்னதின் கருத்து கன்னித் தன்மையை உத்தேசித்தல்ல. அவர்களுடைய கற்புத்தன்மையைப் பற்றி என்று சமாதானமாக சொல்ல வருவார்களானால் அதையும் பற்றி சற்று யோசிப்போம்.



RangaRakes tamilnavarasam.com

இந்த ஐந்து பெண்களையும் நான் 1.தாரை 2. அகலியை, 3.துரோபதை 4.சீதை 5. மண்டோதரி என்கிற வரிசையில் எடுத்துக் கொள்ளுகிறேன்.

முதலாவது தாரை. தாரை என்பவள் தேவகுருவாகிய பிரகஸ்பதி யினுடைய பெண்சாதி. இந்தம்மாளைப் பற்றிய விஷயம் அறிவதற்கு கட்டுச்சாதம் கட்டிக்கொண்டு காதம் காதமாய் ஊர்ப் பயணம் போகவேண்டிய தில்லை. இன்றைக்கும் தெருதெருவாய் தாரையும் சந்திரனும் படுத்து உருளுவதும் நிர்வாணமாய் நின்று கொண்டு சந்திரனுக்கு எண்ணை தேய்ப்பதுமான சத்காலட்சேபத்தை தினம் தினம் பார்த்து வருகிறோம். தாரையம்மன் புருஷனே சங்கதி தெரிந்து இரண்டு பேருக்கும் சாபமிட்டதும், இவர்கள் இரண்டு பேருக்குமாக பிறந்த குழந்தை புதன் என்பவன் இருப்பதுவும் மேல்படி பார்ப்பனர்கள் சாஸ்திரங்களிலேயே இருக்கிறது.

ஆகவே, குருவின் யோக்கியதை, குரு பத்தினியின் யோக்கியதை, சிஷ்யனின் யோக்கியதை, ஆஸ்ரமத்தின் யோக்கியதை, ஆரிய நாகரீகத்தின் யோக்கியதை ஆகிய இவ்வளவுக்கும் தாரையம்மாள் உதாரணமாக விளங்கு கிறாள். இதையெல்லாம்விட கற்பின் லக்ஷணத்திற்கும் இது ஓர் அரிய இலக்கி யமாய் விளங்குகின்றது.

இரண்டாவதான அகலியை அம்மாள் விஷயம். அகல்யை அம்மாள் என்பவள் கௌதம முனிவர் என்கிற ஒரு இருஷியின் பெண்டாட்டி. தெய்வராஜனான இந்திரன் இந்த அம்மாள் மேல் ஆசைப்பட்டு மாறுவேஷம் பூண்டு வீட்டிற்குள் நுழைந்ததாகவும் பிறகு ஒருவருக் கொருவர் இன்னார் என்று தெரிந்து கொண்டு இரண்டு பேரும் சுகித்ததாகவும் ரிஷி இந்த விஷயம் தெரிந்து இருவரையும் தண்டித்ததாகவும் அத்தண்டனையில் இந்திரனுக்கு சரீரமெல்லாம் பெண் குறியாகவும், அகலிகையை கல்லாகவும் ஆய் விட்ட தாகவும் பார்ப்பன சாஸ்திரங்கள் என்பவைகளே சொல்லுகின்றன. அதுவும் தெருவில் போகின்ற சாஸ்திரங்கள் சொல்லவில்லை. ஐந்தாம் வேதம் என்று சொல்லப்படுவதாகிய இராமாயணம், பாரதம் முதலியவைகளில்தான் இந்த உண்மைகள் சொல்லப் பட்டிருக்கின்றன. இதனால் தேவர்களின் அரசனின் யோக்கியதையும், ரிஷிபத்தினிகளின் யோக்கியதையும் விளங்குகின்றது.

மூன்றாவது, துரௌபதையம்மாள் சங்கதி. இந்த அம்மாள் முதலில் ஒரு புருஷனை மாத்திரம் கட்டிக்கொண்டு பிறகு மாமியார் இஷ்டப்படி மற்றும் நால்வருக்கும் பெண்டாட்டியாக இருந்து வந்திருக்கிறாள். ஐந்து பேரிருந்தும் ஆசை தீராமல் இன்னொரு புருஷனையும் மனதில் நினைத்து நினைத்து வருந்தியிருக்கின்றாள் என்பதை தானே ஒப்புக் கொண்டதல்லாமல் உலகத்தில் பெண்கள் பதி விரதைகளாக இருக்க வேண்டுமானால் ஆண் மக்களே இருக்கக் கூடாது என்று தீர்ப்பும் கூறி விட்டாள். இதனால் அக்காலக் கற்புக்கு இலக்ஷணம் புருஷனும் மாமியாரும் யாரிடம் போகும்படி சொன்னா



லும் போய்த்தான் ஆக வேண்டும் என்பதும், அதுவும் கற்பில் சேர்ந்ததுதான் என்பதும் பிறகு தன்னிஷ்டப்படி யாரை ஆசைப்பட்டாலும் அதுவும் கற்புடன் சேர்ந்தது தான் என்பதும் அக்கால வழக்கத்தில் இருந்ததாய் விளங்குகின்றது. ஆகவே, ஐந்து கன்னிகைகளில் மூன்றுபேர் சங்கதி இப்படியிருக்கின்றதே என்று கேட்கப்படும் கேள்விகளுக்குத்தான் பார்ப்பனர்கள் ஐந்துக்கு இரண்டு பழுதில்லை என்று சொல்ல அதிலிருந்து இந்தப் பழமொழி ஏற்பட்டது.

இந்த இரண்டில் ஒன்றும் குற்றமில்லையா என்று பார்த்தால் அதிலும் ஒன்றை கழிக்க வேண்டியதாகத்தான் இருக்கின்றது அடியோடு கழிக்கா விட்டாலும் சந்தேகத்திலாவது வைத்துத் தீரவேண்டிய தாகத்தானிருக்கின்றது.

நாலாவதான சீதையம்மாள் சங்கதி பார்த்தால் முன் சொன்ன கதைகளின் படிக்கு அவ்வளவு இல்லாவிட்டாலும் உத்தம ஸ்திரீ என்றோ முழுதும் பரிசுத்தமானவளென்றோ கற்புக்கரசி என்றோ சொல்வதற்கில்லை. குண விசேஷத்தைப் பற்றியோவென்றால் மாய மானைத் துரத்திக்கொண்டு ராமன் போன காலத்தில் வெகுநேரம் வரை திரும்பி வராதது கண்டு புருஷ னைப் போய்ப் பார்த்து வரும்படி சீதை லக்ஷீமணனுக்குச் சொல்ல லக்ஷீம ணன் போக வேண்டிய அவசியமில்லை ராமர் எப்படியும் திரும்பி வருவார் என்று சொன்னதற்கு அண்ணன் செத்தால் என்னைக் கைப்பற்றலாம் என்று பார்க்கின்றாயா என்று சொன்னதிலிருந்தே லட்சுமணனிடம் பழகிய சீதைக்கு போதிய அறிவும் உயர் குணமும் விஷயத்தை அறியும் சக்தியும் இல்லை யென்கின்ற தத்துவமும் நன்றாய் விளங்குகின்றது. தவிர சீதையிடம் வெகு காலம் நன்றாய்ப் பழகிய அவன் புருஷனாகிய ராமனும் பலதடவை சீதையின் கற்பில் சந்தேகப் பட்டிருக்கிறான். அதாவது ராவணனைக் கொன்றபின் முதல் முதல் சீதையை ஒரு தடவை சந்தேகப்பட்டபோது சீதையிடம் என்ன சொல்லுகிறான் என்றால் “ஏ சீதை! நான் உன்மேல் ஆசைப்பட்டு உன்னை மீட்டுக் கொண்டு போவதற்காக ராவணனிடம் யுத்தம் செய்யவில்லை. பின் என்னவென்று கேட்பாயானால் ஒருவன் பெண்சாதியை மற்றொருவன் அடித்துக் கொண்டுபோய் விட்டால் அவனைச் சும்மா விட்டு விடுவது வீரனுக்கு அழகாகுமா என்கின்ற ரோசத்தின் மேல்தான் சண்டைப் போட்டு அவனைக் கொன்றேன். மற்றபடி ஒரு துஷ்டன் வீட்டில்அதுவும் அவனுடைய அதிகாரத்திற்கும் பெலத்திற்கும் கட்டுப்பட்டு 10 மாதம் வசித்த தன் பெண்சாதியை சுயமரியாதையுள்ள எவனாவது மறுபடியும் சேர்த்துக் கொள்வானா? என்று சொன்னதோடல்லாமல் சகல வசத்திலும் அவனுடைய சுவாதீனத்திலிருந்த நீ அவனுக்கு வசப்படாமலிருந்திருக்க முடியுமா? ஆதலால் நீ எங்கே வேண்டுமானாலும் உன்னிஷ்டப்படி போகலாம். உன்னை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். கோபத்தால் சொல்ல வில்லை. நெடுநேரம் ஆலோசித்து செய்த முடிவு இது” என்று சொன்னான். (இந்த இடத்தில் ராமன் உலக அபவாதத்திற்குக் கட்டுப்பட்டு இப்படி சொல்லவில்லை. தானே



RangaRakes tamilnavarasam.com

சந்தேகப்பட்டு ஒருவித முடிவு செய்து கொண்டு சொல்லுகிறான் என்றுதான் அர்த்தம்) அதோடு 10 மாதம் எதிரி வீட்டில் வசித்த நீ என்பதால் இதுவரை உயிர் வைத்திருந்தாயே என்கின்ற கருத்தும் தொக்கியிருக்கின்றது.

இதற்கு சீதை சொல்லும் பதில் என்னவென்றால், "ஏ ராமா நீ சொல்லுவது உண்மை! அதற்கு நான் என்ன செய்யப்படும். நானோ ஒரு பெண், ஒண்டியாயும், அனாதையாயும் இருந்தவள். ராவணனோ ராக்ஷசன், அளவற்ற பலசாலி. என்னால் கூடியவரை தடுத்துப் பார்த்தேன். எனக்கு எள்ளளவாவது அவனுடன் போகவேண்டும் என்கின்ற ஆசை இருந்ததா? விதியை நோக வேண்டியதே தவிர என்னைக் குற்றஞ் சொல்லக்கூடாது. என் தேகம்தான் பிறருக்கு வயப்பட்டதே ஒழிய என் ஹிருதயம் அப்பொழுதும் இப்பொழுதும் எப்பொழுதும் உன்னிடத்திலேயே இருக்கின்றது. சுதந்திரமற்ற நான் என்ன செய்ய முடியும். அனுமானை அனுப்பி நான் இருக்குமிடத் தையும் ஸ்திதியையும் அறிந்து வரச் சொன்னதின் மூலம் நான் லங்கையில் ராவணனுடைய வீட்டில் இருப்பதாக தெரிந்த உடனே என்னை ஏன் தள்ளி விடவில்லை" என்றுதான் சொன்னாள். (இது வால்மீகி ராமாயணம் யுத்தக் காண்டம், 117, 118 வது சர்க்கத்தில் காணப்படுவது) இந்த இடத்தில் ராமன் சீதையைப் பார்த்து "நீ கற்பழிந்து விட்டாய் என்று நான் தீர்மானித்து விட்டேன்" என்று வெளிப்படையாய் சொல்லி காட்டியதற்கு சீதை ஏன் அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று தைரியமாய் சொல்லியிருக்க கூடாது என்கின்ற கேள்விக்கு பதில் இல்லை. அதோடு என் சரீரம் அவன் வயப்பட்டுவிட்டது. ஆனால் அப்போதும் மனம் உன்னிடம்தான் இருந்தது. விதியை நோக வேண்டுமேயொழிய என்னை நோகக் கூடாது. ராவணன் வீட்டில் இருந்ததையும் என் ஸ்திதியையும் அனுமான் பார்த்து விட்டு வந்து சொல்லி இருப்பானே. அப்போதே ஏன் என்னை தள்ளிவிட்டதாக சொல்லி அனுப்பவில்லை என்பதாக வெல்லாம் சொல்லுவதினால் விஷயம் சந்தேகத் திற்காவது இடமுண்டாகின்றதா இல்லையா ? என்பதை யோசித்துப் பாருங் கள். ஒரு சமயம் இராவணன் மீது அதிகமான பழியை சுமத்த வால்மீகி வேண்டுமென்றே இப்படி எழுதி இருக்கக்கூடும் என்று சொல்வதானால் அது வேறு விஷயம். என்னவென்றால் அது ராவணன் சங்கதியைப் பற்றி பேசும் போது கவனிக்கவேண்டிய விஷயம்.

இந்த இடத்தில் கற்பைப் பற்றி பரீக்ஷிப்பதால் வால்மீகி வார்த்தையில் இருந்தும் சாத்தியத்தில் இருந்தும்தான் பேச வேண்டும்.

தவிர, மற்றொரு தடவை வண்ணான் வார்த்தையைக் கேட்டுக் கொண்டு கொஞ்சமும் கூட முன்பின் யோசிக்காமல் திடீரென்று லக்ஷ்மண னை விட்டு சீதையை நடுக்காட்டில் கொண்டுபோய் விட்டு வந்ததும் அங்கு சீதை தன் கற்பைப் பற்றி யார் என்ன சொல்லி விடப்போகிறார்களோ எனப் பயந்து "லக்ஷ்மணா இதோ பார் நான் இப்பொழுது கர்ப்பமாயிருக்கின்றேன்"



என்று சொன்னதும் காட்டில் இரட்டைப் பிள்ளை பெற்றதாக ஒரு ராமாயணத்திலும், தர்ப்பை கிள்ளிப் போட்டு வால்மீகி ஒரு பிள்ளையை உண்டாக்கினார் என்று மற்றொரு ராமாயணத்திலும் சொல்லப்பட்டாலும் இந்த பிள்ளைகளை ராமன் ஒப்புக் கொள்ளாமல் வால்மீகி முதலிய எவ்வளவோ பெரிய தவ சிரேஷ்டர்கள் என்போர்கள் பிரமாணம் செய்தும் ஒப்புக் கொள்ளாமல் மறுபடியும் நெருப்பில் இறங்கும்படி சொன்னதும் அதற்கு சீதை கட்டுப்படாமல் உலக அபவாதத்தையோ அல்லது ராமனுடைய சந்தேகத் தையோ நிவர்த்தி செய்ய வேண்டாமா என்கின்ற கவலையில்லாமல் பூமியை பிளக்கச் செய்து பூமியில் இறங்கி மறைந்துவிட்டாள் என்றும் எழுதப் பட்டிருக்கின்றது. இன்னமும் என்னென்னவோ இருந்தாலும் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு இதுவே போதும்.

எனவே சீதையின் விஷயமானது சந்தேகப்படுவதற்கில்லாமல் போகவில்லை என்பதோடு சீதையின் லக்ஷ்மித் தன்மையும், ராமனின் விஷ்ணுத்தன்மையும் எப்படிப்பட்டதென்று விளக்கவும் ஆரியர் பழக்க வழக்கங்களும் அக்காலத்திய ஆண் பெண்கள் வாழ்க்கை நிலையும் வெளி யாக்கவும் உதவுகின்றது.

கடைசியாக மீதி இருப்பது ஐந்தாவதான மண்டோதரி அம்மாள். இந்தம்மாள் விஷயத்தில் ஒரு தகராரையும் காணோம். கம்பராமாயணத்தில் புருஷன் பிரிந்தவுடன் செத்து விட்டான் என்கின்ற சங்கதி தெரிந்து அழுது உயிர் விட்டு விட்டதாகக் காணப்படுகின்றது. தவிரவும் செத்துப்போன ராவணனைப் பார்த்து அழும்போது சீதை குலத்திலாவது, ரூபத்திலாவது, குணத்திலாவது, சாமார்த்தியத்திலாவது என்னைவிட சிறந்தவளா என்று மாத்திரம் கேட்டிருக்கின்றாள். இது சீதையின் குணத்தை 10 மாதம் நேரிலிருந்து பார்த்தவள் கேட்டிருப்பதால் இதில் மண்டோதரி பேரில் குற்றம் சொல்வதற்கில்லை. ஆனால் சீதையின் குணம்தான் வெளியாக்கப்பட்டதாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆதலால் மண்டோதரியின்பால் மாத்திரம் குற்றம் சொல்ல இட மில்லை. கற்புள்ள பெண் என்றே சொல்லலாம். ஆனால் இது திராவிட நாகரீகத்திற்கும் திராவிடச் சிறப்புக்கும் இலக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.

பொதுவாக பஞ்ச கன்னிகைகளின் யோக்கியதையைப் பார்க்கின்ற போதும், கற்பு இலக்கணங்களைப் பார்க்கின்றபோதும், குரு, அரசன், ரிஷி, கடவுள் என்கின்றதைப் பார்க்கும்போதும் நன்றாய் கவனித்தால் இதன் ஆபாசங்கள் விளங்குவதோடு ஐந்துக்கு இரண்டாவது சுத்தமாய் தேர்கின்றதா என்பது வெளியாகும்.

முதலாவது விஷயம், குரு பத்தினியின் சங்கதியையும் சிஷ்யனின் யோக்கியதையையும் வெளியாக்கிற்று. இரண்டாவது விஷயம், தேவர்களுக்



RangaRakes tamilnavarasam.com

கெல்லாம் அரசனாயிருப்பவன் யோக்கியதையையும் ரிஷிபத்தினியின் யோக்கியதையையும் வெளியாக்கிற்று. இந்த இரண்டு விஷயமும் புருஷர்களால் ஒப்புக்கொள்ளப்பட வில்லை என்பதையாவது காட்டிற்று. மூன்றாவது விஷயமோ புருஷனும் ஒப்புக் கொண்டான், மாமியும் ஒப்புக் கொண்டாள். சகோதரர்களும் ஒப்புக்கொண்டார்கள். உலகமும் ஒப்புக் கொண்டது என்பதை காட்டிற்று. நாலாவது விஷயம் அவதாரங்கள் என்பதின் யோக்கியதையையும் வெளியாக்கிற்று.

மிஞ்சியது இராக்ஷதர்கள் என்றும் இராக்ஷச ஸ்திரிகள் என்றும், ஆரியர்கள் எப்பேர்ப்பட்டவர்களை சொல்லுகின்றார்கள், சொல்லி வந்திருக்கின்றார்கள் என்பதையும் ஒரு திராவிடப் பெண்ணின் கற்பின் நிழலுக்குள் ஆரியர்கள் எப்படி வந்து கலந்து கொள்ளுகின்றார்கள் என்பதையும் வெளியாக்கிற்று. இந்தப் பழமொழி ஒன்றா உலகத்தை ஏமாற்றிச் செய்திருக்க வேண்டும். அல்லது இது அவர்களின் பழக்கவழக்கமாய் இருக்கவேண்டும். ஆகவே ஐந்துக்கு இரண்டு கூட அவர்கள் சொற்களில் உண்மை இல்லை என்பதும் ஏதாவது உண்மையிருந்தால் அதுவும் நம்முடைய விஷயங்களில் தான் என்பதும் இந்த விஷயத்தினால் வெளிப்படுத்துகின்றேன்.

இப்பொழுது எப்படி அவர்கள் அக்கிரமங்களை மறைத்துக் கொண்டும், பெருமையாய் பிரசாரம் செய்துகொண்டும், நம்முடைய யோக்கியமான காரியங்களைக் குற்றம் சொல்லிக்கொண்டும், அதற்கு நம்மவர்களையே கூலிக்கமர்த்திக்கொண்டும் வேலை செய்து வருகிறார்களோ இதுபோல்தான் இந்தப் பார்ப்பனர்கள் என்னும் ஆரியர்கள் முன்காலத்திலும் செய்து வந்திருக்கிறார்கள் என்பதோடு நம்முடைய பாமர ஜனங்கள் இவர்களை அப்போதும் இப்போதும் நம்பி ஏமாந்து வருகிறார்கள் என்பதும் “ ஐந்துக்கு இரண்டு பழுதில்லை” என்னும் வியாசத்தால் வெளியாக்கப்பட்டது.

**குடி அரசு - கட்டுரை - 11.12.1927**



RangaRakes

# ராயல் கமிஷன் பஹிஷ்காரத்தின் யோக்கியதை

ராயல் கமிஷன் பஹிஷ்காரத்திற்கு இந்தியா முழுவதற்கும் இப்போது இரண்டு தலைவர்கள்தான் முக்கியமானவர்கள்.

அவர்களில் காங்கிரஸ் தலைவர் என்கின்ற முறையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் ஒருவர். மற்றப்படி சட்ட ஒழுங்குக்கு கட்டுப்பட்ட கக்ஷிக்காரர்கள் தலைவர் என்று ஸ்ரீமதி பெசண்டம்மையார் இரண்டாமவர் ஆவார்.

மற்றவர்கள் எல்லோரும் இவர்கள் இருவர்களில் கட்டுப்பட்டவர்கள். எனவே, இந்த இருவருக்குள்ளாகவும் பலமான அபிப்பிராய பேதம் ஏற்பட்டு விட்டது. ஆனால் புரட்டுக்கார பத்திரிகைகள் இதை ஜனங்கள் அறியாதபடி சந்திலும் பொந்திலும் போட்டு மறைத்து வைத்து வருகின்றன. ஆனாலும் சமீபத்தில் வெளியாகித்தான் தீரும்.

என்னவெனில் பஹிஷ்காரப் பேச்சு பேசும் தலைவர்கள் அநேகமாய் புரட்டர்கள் என்றும் தங்களுக்கு மானம் போய் விட்டதாக வேஷம் போடுகிறார்கள் என்றும் உண்மையிலேயே பார்லிமெண்டார் இந்தியரை கமிஷனில் நியமிக்காததானது இவர்களது சுயமரியாதைக்கு பங்கமாயிருப்பதாக கருதுவார்களானால் அதே பார்லிமெண்டாரால் நியமிக்கப்பட்ட மற்ற பதவிகளில் இருக்கலாமா என்றும் அதாவது சட்டசபை, ராஜாங்க சபை மற்றும் அது சம்மந்தமான பதவி உத்தியோகங்களில் இருக்கலாமா என்றும் ஒரு கேள்வி கேட்டிருந்தோம். அதன்பின் சில ஆசாமிகள் சமயம் வந்தால் அதையும்தான் பஹிஷ்கரிப்போம் என்று சத்தம் போட்டார்கள். இதையறிந்த பெசண்டம்மையார் பஹிஷ்காரம், பஹிஷ்காரம் என்று வாயில் சொல்லிக் கொண்டு மாத்திரம்தான் இருக்க வேண்டுமே ஒழிய ஒரு வேலையையும் பஹிஷ்கரிக்கக் கூடாது என்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்கள். இதில் ஸ்ரீமான் அய்யங்கார் கையெழுத்துமிருக்கிறது.

நாட்டின் நிலைமையைப் பார்த்த ஸ்ரீ அய்யங்கார் இப்போது திடீரென்று கரணம் போட்டு பெசண்டம்மையின் அந்தக் கொள்கைக்கு நான் கட்டுப்பட்டவனல்ல. ஒரு சமயம் எல்லா வேலைகளையும் பஹிஷ்கரிக்க



tamilnavarasam.com

வேண்டி வந்தாலும் வரும் என்று வீரர் போல் மற்றொரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

இதற்கு மத்தியில் மற்றொரு 'வீரர்' ஸ்ரீ பண்டித மாளவியா வரிகொடா இயக்கம் ஆரம்பிக்க வேண்டும் என்கின்றார். மூன்றும் மூன்று விதமாய் இருக்கின்றது. ஆனால் மூவரும் பார்ப்பனர்களே. "பசுவை நம்பினாலும் பார்ப்பானை நம்பாதே" என்று பழமொழி உண்டு. இது கண்டிப்பாய் மாளவியா விஷயத்தில் உபயோகிக்கப்பட வேண்டியதுதான்.

ஏனெனில் பஞ்சாப் அட்டூழியத்திற்காக கொஞ்சம்கூட சுயமரியாதையைப் பற்றிக் கவனிக்காத மகான், ரௌலட் பில்லுக்காக சட்டசபை ஸ்தானத்தை ராஜீநாமா கொடுத்து விட்டு மறுபடியும் திருப்பி வாங்கி கொண்ட வீரர். ஏதோ ஒரு உப்புப் புளியில்லாத சப்பைக் காரியமான பஹிஷ்காரமென்ற போலிக்கு வரிகொடுக்காத இயக்கமும் ஆரம்பிக்கின்றேன் என்றால் அதை யார் நம்புவார்கள். இதில் ஏதாவது புரட்டு இருக்குமா இருக்காதா என்று பார்த்தால் வெளியாகாமல் போகாது. அதுதான் மகமதியர் தலையிலும் பார்ப்பனரல்லாதார் தலையிலும் கையை வைக்கும் புரட்டு. என்னவென்றால் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஒழித்து விட்டு பார்ப்பன ஆதிக்கமே நிலைத்திருக்கச் செய்வதாகும்.

இது இப்படி மூன்றும் மூன்று விதமாய் இருக்க மற்றொரு விஷயமென்ன வென்றால் எல்லோரும் ஒன்று சேர்ந்து விட்டார்கள் என்று பொய்ச் சங்கூதுவது. யார் யார் ஒன்று சேர்ந்தார்கள், எது எதெதெற்கு ஒன்று சேர்ந்தார்கள் என்று சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம். 8 கோடி பேர் கொண்ட சமூகமாகிய மகமதியர்கள் 100 -க்கு கால் பேர் கூட பகிஷ்காரத்துக்கு சேரவில்லை. மகமதிய சமூகத்தின் ஸ்தாபனமும் சேரவில்லை.

தவிர, லாகூர் பிரபல மகமதியர்கள் பலர் அதாவது சர். சல்பீகர் அலிகான், சர். அப்துல் காசிம், சர். அப்துல்ஹை, ஜனாப் ரஜான் பக்ஷ், ஜனாப் முகம்மது, சர். இக்பால் முதலியோர்கள் கையெழுத்திட்டு பகிஷ்காரத்தில் சேரக்கூடாது என்று கண்டித்து தங்கள் சமூகத்திற்கு அறிவுறுத்தி இருப்பதுடன் வகுப்பு கலவரத்தினால் அடையும் சுயமரியாதைக் குறைவைவிட ராயல் கமிஷனால் சுயமரியாதைக்கு அதிகக் குறைவு கிடையாது என்று சொல்லி ஜனாப் ஜின்னாவையும் கண்டித்திருக்கின்றார்கள்.

பங்காளத்தில் மகமதியர்கள் பெரும்பான்மையோர் பகிஷ்காரத்தில் கலரக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அலகாபாத்திலும் ராயல் கமிஷனை பகிஷ்கரித்தால் முஸ்லீம்களுக்கு அதிக பாதகம் ஏற்படும் என்று எச்சரிக்கை செய்திருக்கின்றார்கள்.



சென்னையிலும் முஸ்லீம்கள் ஏறக்குறைய யாவரும் எதிரிடையாகவே இருக்கின்றார்கள். மொத்தத்தில் முஸ்லீம் பத்திரிகைகள் எல்லாம் பகிஷ்காரத்திற்கு விரோதமாயிருக்கின்றன. முக்கிய பத்திரிகையாகிய 'சைபுல் இஸ்லாம்' பகிஷ்காரத்தின் புரட்டை புட்டுப் புட்டுக் காட்டுகின்றது.

கிறிஸ்தவர்களிலும் நூற்றுக்கு அரைக்கால்வாசிப் பேர் கூட சேர்ந்ததாக தெரியவில்லை. அவர்களது சமூக இயக்கம் எதுவும் சேர்ந்ததாக தெரியவில்லை. சுற்றி சுற்றிப் பார்த்தால் பார்ப்பன பொக்கிஷத்தில் எப்போதும் தயாராயிருக்கும் ஸ்ரீமான்களான குழந்தை, ஜோசப் ஆகிய இருவர்கள்தான். அதிலும் ஸ்ரீமான் குழந்தையின் அழுகுரலைக் கூட கொஞ்ச நாளாய் காண முடியவில்லை. இந்துக்கள் என்பவர்களிலும் இந்து மகாசபை என்பது பகிஷ்காரத்தை ஒப்புக்கொள்ளவில்லை.

மற்றும் 8 கோடி சமூகமாகிய தாழ்த்தப்பட்ட வகுப்பார் என்பவர்களில், இந்த 8 கோடிக்கும் ஒரு ஆசாமியாவது சேர்ந்ததாக தெரியவில்லை. அவர்களது சமூக இயக்கம் எதுவும் சேர்ந்ததாக தெரியவில்லை. அய்யங்கார் சுவாதீனத்தில் இருக்கும் ஸ்ரீமான் ஜெயவேலு அவர்கள் பெயர் ஏதாவது ஒரு சமயம் அடிபடலாமோ என்னமோ அவ்வளவுதான். மற்றபடி இம் மாகாணத்தில் மீதியுள்ள இரண்டரைக் கோடி ஜனங்களான பார்ப்பனரல்லாதார் சமூகத்தில் எத்தனை பெயர்கள் சேர்ந்திருக்கிறார்கள்? அவர்களது சமூக இயக்கமும் என்ன சொல்லிற்று. ஸ்ரீமான்கள் வரதராஜுலு, குப்புசாமி முதலியார், அண்ணாமலை பிள்ளை, தேவ நாயக்கர் முதலிய சிலர்கள் சேர்ந்தாலே எல்லோரும் சேர்ந்ததாக ஆகிவிடுமா? என்று கேட்கின்றோம். அவரவர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை பிரசாரம் பண்ணுவதை பற்றி யாருக்கும் ஆக்ஷேபணை இல்லை மனதறிந்து வேண்டுமென்றே பொய் பேச வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டு, "உலகமே ஒன்று சேர்ந்து விட்டது, உத்தியோக ஆசை பிடித்தவர்களும், சர்க்கார் தாசரும் தவிர மற்ற யோக்கியர்களும், சத்திய கீர்த்திகளும், நாணயக்காரரும், தியாகிகளும், பொறுப்பாளிகளும், சுயநலமற்றவர்களும், பிரபுக்களும், தொழிலாளிகளும், மற்றும் எல்லோரும் சேர்ந்து விட்டார்கள்" என்று சொல்வதில் கண்ணியமிருக்கிறதா? என்றுதான் கேட்கின்றோம். தப்பட்டை அடித்து கூட்டம் கூட்டி அதில் கூப்பாடு போட முடியும். தலைகால், பகுத்தறிவு, அறிவு, பொறுப்பு இல்லாமல் சர்க்காரை வைவதாக வேஷம் போடக்கூடும். திருட்டுத் தனமாய் சர்க்காரை மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவும் கூடும். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக பத்திரிகையில் எழுதவும் கூடும். காரியம் என்ன நடக்கும் என்றுதான் கேட்கின்றோம். அதிகமான பிரயத்தனமெடுத்துக் கொண்டால் பாமர மக்களை ஏமாற்ற முடியும். அதைத் தவிர ஒரு அணுவளவாவது சத்தியத்திற்கோ, நாட்டிற்கோ, மக்களுக்கோ, நன்மை உண்டாகுமா என்றுதான்



RangaRakes tamilnavarasam.com

கேட்கின்றோம். இனியும் இந்தக் கூட்டத்திற்குத்தானா நாட்டில் மதிப்பு இருப்பதாக ஏற்பட வேண்டும்?

பெசண்டம்மை, ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார், ஜோசப்பு, வரதராஜுலு, சத்தியமூர்த்தி, அண்ணாமலை முதலியார், குப்புசாமி முதலியார் ஆகிய இவர்களுடன் இந்திய பிரதிநிதித்துவம் தீர்ந்து விட்டதாம். மற்றவர்கள் சர்க்கார் தாசராம், உத்தியோகப் பேய் பிடித்தவர்களாம். இப்படிப்பட்ட சிலர் எப்போதும் இருந்துதான் தீருவார்களாம். தலைவரை நம்புவதா? வாலரை நம்புவதா? இந்த நிலையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரே மற்றொரு புறம் பகிஷ்காரத்தில் "ஒற்றுமை இல்லையே, ஒற்றுமை இல்லையே" என்று கதறுகிறார்.

**குடி அரசு - தலையங்கம் - 11.12.1927**



# பஹிஷ்காரமும் ஜஸ்டிஸ் கக்ஷியும்

பஹிஷ்காரக் கூட்டத்தில் ஜஸ்டிஸ் கட்சியாரும் சேர்ந்து கொண்டால் தேவலாம் போல அக் கட்சி பிரமுகர்களுக்கு தோன்றுவதாய்த் தெரிகின்றது. ஏனெனில் பாமர ஜனங்களிடம் தங்களுக்குச் செல்வாக்கில்லை என்று நினைப்பதுடன் அரசாங்கத்தாரும் தங்களைக் கண்டால் பயப்படுவதில்லை என்றும் நினைப்பதாய்க் காணப்படுகிறது. அவர்கள் அப்படி நினைத்திருப்பது தப்பு என்பது நமது கெட்டியான அபிப்பிராயம். பாமர மக்கள் எப்போதும் பாமர மக்களாகவே இருக்க முடியாது. இப்பொழுது சற்று கண்விழித்துக் கொண்டு வருகின்றார்கள். பாமர மக்களிடம் செல்வாக்குப் பெற்று ஏதாவது நன்மை செய்ய வேண்டுமானால் பாமர மக்கள் மனம் மகிழும்படியான மாதிரியிலேயே போய்க் கொண்டிருப்பதினால் ஒருபலனும் ஏற்படாது. அவர்கள் உண்மையை உணர்ந்து நன்மையைக் கடைபிடிக்கும்படி செய்ய வேண்டும். அதற்காக காத்திருந்தாலும் குற்றமில்லை. இரண்டொரு தடவை தோல்வி ஏற்பட்டாலும் குற்றமில்லை. இல்லாவிட்டால் முக்கியமான சமயத்தில் ஆபத்து வந்துவிடும். பிறகு சுலபமாய் திருத்த முடியாமலும் போய் விடும். ஆதலால் தக்க அஸ்திவாரத்துடனும் நிலையான கொள்கைகளுடனும் வேலை செய்ய வேண்டியதுதான் பொறுப்பாகுமே தவிர கூட்டத்தில் கோவிந்தா போடுவது பொறுப்பாகாது என்று நினைக்கிறோம்.

தவிர, சர்க்கார் பயப்பட மாட்டார்கள் என்று எண்ணுவதும் தப்பு என்று நினைக்கின்றோம். சர்க்காரை பயப்படுத்துவதாய் நினைப்பதைப் போல முட்டாள்தனமான காரியம் வேறில்லை. வெறும் உத்தியோகம் மாத்திரம் நமது கவலையானால் சர்க்காரை மிரட்டுவது பயன்படும். அது நமது முக்கிய நோக்கமல்ல. ஒருக்கால் அப்படியே வைத்துக்கொண்டாலும் நாமாக ஒரு காரியம் செய்து அதன் மூலம் சர்க்காரை மிரட்டலாம். அந்த யோக்கியதை வரும் வரை காத்திருக்கலாம். அப்படிக்கில்லாமல் பார்ப்பனர்களோடு சேர்ந்து நாமும் கூப்பாடு போடுவதின் மூலம் சர்க்காரை மிரட்டினால் ஒரு சமயம் சர்க்காரும் பயப்படுவதானால் அதன் பலன் முன்னின்று சத்தம்போட்ட பார்ப்பனர்களுக்குத்தான் ஏற்படுமே தவிர மற்றவர்களுக்கு ஒன்றும் ஏற்படப் போவதில்லை. பார்ப்பனர்கள் அவ்வளவு பயித்தியக்காரரல்ல. மிஞ்சி ஏதாவது கிடைத்தால் அவர்கள் தின்றது போக மீதி எச்சில்தான் கிடைக்கும். ஒரு சமயம் நமக்கு ஏதாவது பெரிய பலன் கிடைப்பதாயிருந்தால் அப்போது



RangaRakes tamilnavarasam.com

வேறு வழியை அனுஷ்டிக்க பார்ப்பனர்களுக்குத் தெரியும். தவிரவும் ஒரு பெரிய சமூகத்தின் நிரந்தரமான முன்னேற்றத்திற்கு பாடுபடும் இயக்கம் இம்மாதிரி அடிக்கடி மாறும் கொள்கைகளை பார்ப்பன அரசியல்காரருக்கும் வயிற்றுச் சோற்று தேச பக்தர்களுக்கும் பயந்துகொண்டு மாற்றி வந்தார்களா? பார்ப்பனரல்லாதார் என்கின்ற இவ்வளவு பெரிய சமூகத்தின் பேரால் ஏற்பட்ட இயக்கம் தனக்கென ஒரு மனத்துணிவும் நிலையும் இல்லாமல் கூச்சலுக்கும் கும்பலுக்கும் பயந்து கொண்டிருக்கின்றது என்று பிறர் சொல்லும்படி நடந்தார்களா? சர்க்காரையாவது உதறித்தள்ளிவிட வேண்டும். யோக்கியமான நிலையான கொள்கைகளை கட்டிக்கொண்டு சாகவேண்டும். அப்பொழுது தான் நமது பின் சந்ததிக்காவது பலனுண்டு. இம்மாதிரி மனக்கிலேசங்கள் வரும்போது உண்மைத் தலைவர்களான டாக்டர் நாயர் பெருமானையும், சர். தியாகராயரையும் நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்கள் ஏதாவது அடிக்கடி மாறினார்களா? பாமர மக்களுக்காவது பயந்தார்களா என்பது ஞாபகப்படுத்தும் என்று நினைக்கின்றோம். முடிவாக நாம் சொல்லுவது என்னவென்றால் பார்ப்பனரல்லாத சமூக இயக்கத் தலைவர்கள் தங்களை காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்களைப் போல் தாங்கள் தங்கள் பெண்டு பிள்ளை குடும்பங்களுக்கு மாத்திரம் தலைவர்கள் என்று எண்ணாமல், பார்ப்பனர்களாலும், அரசாங்கத்தாராலும் எவ்வளவோ கொடுமைகள் செய்யப்பட்டு வாயில்லாப் பூச்சிகளாய் கிடக்கின்ற பாமர மக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் தலைவர்கள் பிரதிநிதிகள் என்பதை நினைத்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 11.12.1927**



# பார்ப்பனர் சொல்லுகிறபடி பணம் கொடுக்காவிட்டால் அதற்கு பெயர் காங்கிரஸ் துவேஷமாம்

சென்னைக் கார்ப்பரேஷன்காரர் காங்கிரஸ் பொருட்காட்சிக்கு ரூபாய் கொடுக்கக் கூடாதென்று ஜஸ்டிஸ் கட்சியார் ஆட்சேபித்ததற்காக அவர்களை காங்கிரஸ் துவேஷிகள் என்று பார்ப்பனப் பத்திரிக்கைகள் விஷமப் பிரசாரம் செய்கின்றன. காங்கிரஸ் பொருள்காட்சி என்ற பெயர் வைத்துக்கொண்டு காங்கிரஸ் பெயரால் வெள்ளைக்காரர்கள் பொருள்களை காட்சி சாலை வைப்பதாக வெள்ளைக்கார கம்பெனியிடம் ரகசியமாய் ஒப்பந்தம் பேசி லஞ்சம் வாங்கிக் கொண்டு இவர்கள் நடத்தும் பொருட்காட்சிக்கு பணம் கொடுக்கா விட்டால் அதற்கு பெயர் காங்கிரஸ் துவேஷம் என்றால் அதற்கு நாம் பயப்படுவதா என்கின்றோம்.

பட்டாஸ் வெடி விற்றுத் தருவதாகவும் கல்பூரம் விற்றுத் தருவதாகவும் சைனாக்காரரிடம் ஒப்பந்தம் பேசி கூலி வாங்கிக் கொண்டு பண்டிகையும் பூசையும் பார்ப்பனர் ஏற்படுத்தி இருந்தால் பட்டாசு வாங்காதீர்கள் கல்பூரம் கொளுத்தி புகையாக்காதீர்கள் என்று நாம் சொன்னால் அது மத துவேஷமும் சாமி துவேஷமும் ஆகுமா என்று கேட்கின்றோம். இந்தப் பார்ப்பனர்கள் இப்படியே நம்மை மிரட்டி மிரட்டி கை கண்டு விட்டாலும் நம்மில் சில கேனங்களும் வயிற்று சோற்று ஆசாமிகளும் அவர்களுடன் சேர்ந்து திரிவதாலும் பார்ப்பனர் சொல்வதெல்லாம் செலாவணியாகி வருகிறது. இன்னும் அப்படி நடக்கப் பார்த்துக் கொண்டிருக்கப் போகின்றீர்களா? சுயமரியாதைக்காக உயிர் விடப் போகிறீர்களா? என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 11.12.1927**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனரல்லாதார் கக்ஷி சட்டசபை மெம்பர்களுக்கு ஓர் எச்சரிக்கை

புதிய சட்டசபை கூடி சுமார் ஒரு வருஷமாகின்றது. இந்த ஒரு வருஷ காலத்தில் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு சட்ட சபையின் மூலம் நிகழ்ந்த நன்மைகள் என்ன வென்று பார்ப்போமானால் ஒன்றும் இல்லையென்று சொல்ல வேண்டியதுடன் பல கெடுதிகள் நடந்திருப்பதாகவும் சொல்லாம லிருக்க முடியாது.

புது சட்டசபை கூடிய உடன் முதன் முதல் நடந்த சங்கதி பார்ப்பன ரல்லாதார் ஆதிக்கத்தில் இருந்த தாலூக்கா ஜில்லா போர்டுகளை பார்ப்பன ஆதிக்கத்திற்கு கொண்டு வர முயற்சிக்கப் பட்டது. அதிலும் பார்ப்பனர்களே சிறிது வெற்றி பெற்றார்கள்.

அடுத்தபடியாக ‘ஜஸ்டிஸ்’ மந்திரிகள் காலத்தில் ஏற்படுத்தப்பட்டி ருந்த சர்வகலாசாலை - யுனிவர்சிட்டி சட்டத்தை திருத்தி அந்த இலாக்கா முழுவதும் பார்ப்பன மயமாக்க ஸ்ரீ சத்தியமூர்த்தியால் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு சட்டசபையில் இருக்கிறது.

மூன்றாவதாக, பார்ப்பனரல்லாதாரை ஒழிக்க பெரிதும் போராடி பாடுபட்டு வருவதாகிய வருணாசிரம தர்மத்திற்கு சட்டசபை ஆதரவளித்து வருவதற்கு அறிகுறியாகப் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கின்ற பாகு பாடுகளுக்கு ஆதாரம் கற்பிக்கப்பட்டது. இன்னும் இதுபோன்ற மற்றும் பல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவைகள் அவ்வளவும் பார்ப்பனர்களுக்கு அனுகூலமானதும் பார்ப்பனரல்லாதார் களுக்கு பிரதிகூலமும் கொடுமையும் இழிவுமானது என்பதில் சுயமரியாதை யுள்ள பார்ப்பனரல்லாதார் யாருக்கும் சந்தேகமிருக்காது.

இது நிற்க! பார்ப்பனரல்லாதார்களுக்கு அனுகூலமாய் ஸ்ரீமதி முத்து லக்ஷிமி அம்மாளால் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதாவது கோவில்களின் பேரால் சில பெண்களுக்கு பொட்டுக்கட்டி விபசாரத்திற்கு விடும் வழக்கத்தை நிறுத்த ஒரு சட்டம் கொண்டு வரும்படி சர்க்காரை



கேட்டுக் கொள்ளுகின்றது என்கின்ற தீர்மானம். இது நிறைவேறி இருந்தாலும் காரியத்தில் ஒரு பலனையும் கொடுக்கத் தக்கதல்ல என்றே சொல்லுவோம். சர்க்காரைக் கேட்டுக் கொள்ளும் காரியம் என்ன பலனடையும் என்பது யாவருக்கும் தெரிந்ததுதான். அதுவும் பார்ப்பனர் சட்ட மெம்பராய் இருக்கும் காலத்தில் என்ன காரியம் நடைபெறக்கூடும் என்பதும் நன்றாய் தெரிந்த விஷயம்தான். இத்தீர்மானம் கூடாது என்பதற்கு பார்ப்பன சூழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. இதைத் தவிர வேறு எவ்வித முக்கிய தீர்மானமும் கொண்டு வரப்பட்டதாகவும் தெரியவில்லை. 4, 5 தடவை சட்டசபை கூடியாய்விட்டது. இதற்குள் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட நன்மை பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்படவில்லை. பார்ப்பனர்கள் சுமார் 15 பேர் தான் சட்டசபையில் உண்டு. பார்ப்பனரல்லாதார் புற்றீசல் போல் பலபேர் இருக்கின்றார்கள். இவர்கள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதாரின் நன்மைக்காவே சட்டசபைக்கு போவதாக பறை சாற்றி பெரிய கிளர்ச்சி செய்து பார்ப்பனரல்லாதாரின் ஓட்டுகளைப் பெற்றுப் போனவர்கள். இதுவரை என்ன செய்தார்கள்? எத்தனை தீர்மானங்கள் கொண்டு போனார்கள் என்று கேட்கின்றோம். மந்திரி வேலைக்கு பிரயத்தனப்பட்டதும், முடியாமல்போன பிறகு மந்திரிகளுடன் சண்டைப் போட்டதும் மந்திரிகளை மிரட்டி நியமனங் கள் பெற்றதும் அல்லாமல் வேறு என்ன காரியம் செய்ய முடிந்தது என்று பாமர மக்கள் நினைக்கும்படியாகத்தானே இருக்கின்றது. அதே காரியங் களைத்தானே பார்ப்பனர்களும் செய்து வருகின்றார்கள். பார்ப்பன சூழ்ச்சி களை எதிர்த்து வருவதை ஒரு வெற்றியாக சொல்லிக் கொள்ளலாம். ஆனாலும் இதுவேதானா நமது லக்ஷியம் என்று கேட்கின்றோம்.

எத்தனை மகாநாடுகளில் நமது நலத்தைக் குறித்து எவ்வளவு தீர்மா னங்கள் செய்யப்பட்டிருக்கின்றன? அத்தீர்மானங்கள் அமுலில் வருவதற்கு சட்ட சம்மந்தமான ஆதரவுகள் வேண்டியவைகளுக்கு சட்டசபை மெம்பர் கள் ஆதரவு பெற முயற்சித்தார்களா? ஸ்தல ஸ்தாபனங்களில் நடக்கும் அக் கிரமங்களை ஒழிக்க ஏதாவது முயற்சித்தார்களா? பார்ப்பனரல்லாதார் களுக்கு சரியான பிரதிநிதித்துவமில்லாத இலாக்காக்களில் பிரதிநிதித்துவம் கிடைக்க முயற்சித்தார்களா என்று கேட்கின்றோம். ஒரு சமூகத்திற்கே பிரதிநிதிகளாகப் போய் தங்கள் காரியங்களை மாத்திரம் பார்த்துக் கொண் டார்கள் என்று சொல்லும்படி நடந்து கொள்வது யோக்கிய பொறுப்பாகுமா? பார்ப்பன மெம்பர்கள் வெகு சொற்பமாயிருந்தாலும் அவர்களது சமூக முன்னேற்றத்திற்கும் நமது சமூகத்தின் முன்னேற்றத்தை தடுத்து இழிவு படுத்தவும் எவ்வளவு முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகின்றார்கள்? அந்த உணர்ச்சி ஏன் பார்ப்பனரல்லாதாருக்கும் இருக்கக் கூடாதென்று கேட்கின் றோம். ‘காங்கிரஸ்’, ‘தேசீயம்’ என்பவைகள் எப்படி பார்ப்பனர்கள் உத்தி யோகம் சம்பாதிக்கும் ஸ்தாபனங்களாக இருக்கின்றதோ பார்ப்பன ஆதிக்கத் திற்கு உபயோகப் படுத்திக்கொள்ளும் ஸ்தாபனங்களாக இருக்கின்றதோ அது



RangaRakes
tamilnavarasam.com

போலவே பார்ப்பனர்களிடம் இருக்கும் உத்தியோகங்களை பார்ப்பன ரல்லாதார்களில் யாரோ சிலர் கைப்பற்ற கூடியதாக மாத்திரம் இருக்கின்றது என்று நமது எதிரிகள் கருதும்படியாகவே நடந்து கொண்டு வந்திருக்கிறார் களே அல்லாமல் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் பாடுபடும் கருத்தும் வரவர மறைந்து வருகிறது. எவ்வளவோ ஊக்கமும், எழுச்சியும் உள்ள இந்தக் காலத்தில் கூட ஒரு காரியமும் செய்ய முடிய வில்லையானால் இனி எப்போதுதான் சாதிக்க முடியும். ஆதலால் பார்ப்பன ரல்லாத சட்டசபை மெம்பர்கள் ஒரு கூட்டம் கூட்டி மீதி உள்ள காலத்திற்குள் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காக என்னென்ன மசோதா கொண்டு போக வேண்டியதென்று ஒரு முடிவுக்கு வந்து அவைகளை நிறை வேற்றுவ தற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இதுவரை செய்த வேலைகள் கண்டிப்பாய் திருப்தியற்றதென்றும் அடுத்த தேர்தலில் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக் கொள்வது மாத்திரம் ஓட்டுப் பெறக்கூடிய யோக்கியதாபத்திரமாகாதென்றும் செய்த வேலையை காட்ட வேண்டிய நிலைமை முதலியவைகள் கண்டிப்பாய் நேரிடும் என்றும் இப்போதே எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 11.12.1927**



RangaRakes

# ஸ்ரீநிவாசய்யங்காரும் மிரட்டலும்

ராயல் கமிஷனில் மகமதிய சமூகம் அதாவது எந்த எந்த மாகாணத்தில் அச்சமூகம் அதிகமாய் இருக்கின்றதோ அங்கெல்லாம் அதாவது பஞ்சாப், அலஹாபாத், கல்கத்தா முதலிய இடங்களிலுள்ள பிரபலஸ்தர்களும் மகமதிய பிரதிநிதிகளும் பஹிஷ்காரக் கூட்டத்தில் மகமதியர் சேரக் கூடாது என்று தீர்மானித்துவிட்டதையறிந்த ஸ்ரீ சீனிவாசய்யங்கார் அம்மகமதியர்களை மிரட்ட ஆரம்பித்திருக்கிறார். அதாவது பஹிஷ்கார இயக்கத்தில் மகமதி யர்கள் சேராவிட்டால் சர்க்காருடன் தாங்கள் சேர்ந்து கொண்டு மகமதியர் களை துன்புறுத்த நேரிடும் என்று சொல்லுகின்றார். இது ஸ்ரீசீனிவாசய்யங்கார் சொல்லுவதல்ல. அந்த ஜாதி சொல்வதென்றுதான் சொல்லவேண்டும். அக்கூட்டம் இதுவரை அப்படியேதான் செய்து வந்திருக்கின்றது. இந்து அரசாங்கத்தை ஒழித்து மகமதிய அரசாங்கத்தை கொண்டு வந்ததும் இந்த கொள்கைதான். மகமதிய அரசாங்கத்தை ஒழித்து வெள்ளைக்கார அரசாங் கத்தைக் கொண்டு வந்ததும் இந்த கொள்கைதான். இப்போது அந்த வெள்ளைக்கார அரசாங்கத்தை மிரட்டி தங்கள் ஆதிக்கத்தை பலப்படுத்திக் கொண்டுவருவதும் இந்தகொள்கைதான். ஆகவே சுயமரியாதை உள்ள மகமதியர்கள் இதற்குச் சரியான பதில் கடாவுவார்களே அல்லாமல் பயந்துகொண்டு ஸ்ரீ அய்யங்காருக்கு வால் பிடித்துக்கொண்டு திரிய மாட்டார்கள் என்று நினைக்கின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 11.12.1927**



tamilnavarasam.com

## பட்டுக்கோட்டை தாலுக்கா பேராவூரணியில்

## சுயமரியாதை மகாநாடு

நானும் எனது சகாக்களும் எதைச் சரி என்று உணர்ந்தோமோ, அதையே எல்லோரும் அனுஷ்டிக்க வேண்டுமென்ற கருத்துடனேயே இயன்ற தொண்டு செய்து வருகிறோம். எங்களுக்கு இத்தொண்டு வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்பட்டதல்லவென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். நாம் இந்நாட்டில் பிறந்து இந்நாட்டில் வளர்ந்து வீரத்துடனும் கீர்த்தியுடனும் வாழ்ந்து வந்து இன்று அன்னியர்கள் ஏமாற்றத்தில் அகப்பட்டு சுயமரியாதை அற்று மிருகங்களைப் போல் நடத்தப்பட்டு வரும் கொடுமைகளைக் கண்டே அதை நிவர்த்திக்க உழைத்து வருகின்றோம். ஏனெனில் நமது மக்களில் 100-க்கு 90 பேர் இப்போது கிணற்றுத் தவளையாகவே இருந்து வருகின்றனர். உலகத்தின் இதர தேசங்களையும் அத்தேசத்தாரின் நிலைமையையும் அவர்களது பழக்க வழக்கங்களையும் மற்ற காரியங்களையும் நம்மில் அநேகர் தெரிந்து கொண்டிருக்கவில்லை. இது விஷயங்களையறிந்து நமது நிலைமையையும் கவனித்து எங்கள் புத்திக்குச் சரியென்று பட்டதைச் சொல்லவே முன் வந்திருக்கின்றோம். அதை நீங்கள் செம்மையாய் கவனித்து யோசனை செய்து பார்த்து உங்கள் புத்திக்குச் சரியென்று பட்டால் அதைச் செய்ய வேண்டுமென்றே உங்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் இப்போது எங்களை வரவேற்ற முழக்கத்தையும் பாராட்டுதலையும் ஊக்கங் களையும் ஆவேசங்களையும் பார்க்கும் போது எங்கள் ஊழியத்தை தாங்கள் ஆதரித்து வருகின்றீர்களென்று தெரிவதுடன் அதனால் எங்களுக்கும் நாங்கள் மேற்கொண்டுள்ள காரியத்தில் ஊக்கத்தை அளிக்கின்றது. முக்கிய மாய் நம்மவர்கள் என்று சொல்லி நம்மை ஏமாற்றும் பார்ப்பனீயக் கொடுமை யிலிருந்து விடுபட்டு சுயமரியாதையடையவே நாம் இம்முயற்சியிலீடு படுகின்றோம். பார்ப்பனரல்லாதார் என்று நாம் நம்மை கூறுவதால் நாம் பிராமணர்களை விலக்கி வைத்திருக்கின்றதாக நீங்கள் நினைக்கக் கூடும். நம்மைத்தான் அவர்கள் ஒதுக்கி வைத்திருக்கின்றார்களே தவிர, நாம் அவர்களை விலக்கவில்லை. உதாரணமாக சாப்பாட்டுக் கடைகளிலும், காபி ஓட்டல்களிலும், குளங்களிலும், குட்டைகளிலும், ஆலயங்களிலும், பள்ளிக் கூடங்களிலும், வேத சாஸ்திரங்கள் என்பவைகளை படிப்பதிலும் வெகு காலமாகவே நம்மை பார்ப்பனர்கள் விலக்கி வைத்து தங்களுக்கு தனி



RangaRakes

இடமும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர், மிலேச்சர் என்பதாக அநேக வகுப்புகளையுண்டு பண்ணி மக்களைப் பிரித்து வைத்து எல்லோருக்கும் தாங்கள் மேலென்றும் ஏனையோர் தாழ்வென்றும் திட்டப்படுத்தி அதற்கு ஆதாரமாக கடவுள் சொன்னார் கடவுள் செய்தார் என்று சாஸ்திரங்களையும் ஏற்படுத்தி வைத்திருக்கின்றார்கள். வெள்ளைக்கார அரசாங்கத்தில் கூட இந்து லா என்று சொல்லப்பட்ட சட்டத்திலும், நீதி இலாகாத் தீர்மானங்களிலும் கூட பிராமணர்களுக்கும், மற்றவர்களுக்கும் தனியாக சட்டமிருப்பதைக் காணலாம். இது கிரிமினல் சிவில் இருதரப்பிலும் இப்படி இருக்கிறது. பார்ப்பனத் தலைவராகிய ஸ்ரீ சீனிவாசய்யங்கார் கூட இதை ஒப்புக் கொண்டு இனி இந்த வித்தியாசம் இருக்கக் கூடாது என்று சொல்லி இருக்கிறார். இதையெல்லாம் எதை ஆதாரமாக வைத்துக் கொண்டு பார்ப்பனர்கள் நடத்தி வருகின்றார்களென்றால் இந்து மதம் என்ற பெயரால்தான். இந்துக்கள் என்று சொல்லிக் கொள்வதானால் ஆயிரக்கணக்கான வருஷங்களாக நாம் அவர்களுக்கு அடிமையாகவிருந்து வருகின்றோம். இதைப் போக்கத்தான் நாம் இந்தக் கிளர்ச்சியை ஆரம்பித்தோம், பிராமணருக்கென்றும், மற்றவர் களுக்கென்றுமாக நீதிகளில்லாமல் வித்தியாசங்களில்லாமல் செய்யவே நாம் இப்போராட்டம் செய்கின்றோம். இதுவே தவிர அவர்களிடம் துவேஷம் கிடையாது. நமது நாட்டுக்கும் நமது மக்களுக்கும் விடுதலையும், நல்வாழ்வும் கிடைக்க வேண்டுமானால் ஒருவருக்கொருவர், வித்தியாசங்களை விட்டொழித்து பரஸ்பரம் நல்லெண்ணத்துடன் நடந்து கொண்டு ஒற்றுமை அடைய வேண்டும். இன்றேல் முடியாது. உயர்வு தாழ்வு என்ற தத்துவம் போனாலொழிய அது சாத்தியமில்லை. இத்தத்துவம் நமது மதத்தின் அஸ்திவாரத்திலேயே பதிந்து கிடக்கின்றது. நமது மத வேதங்களும், ஸ்மிரு திகளும், புராணங்களும்தான் இந்தப் பாழும் தத்துவத்திற்கு ஆதாரம். இம்மாதிரி வித்தியாசம் கற்பித்து மக்களை சுயமரியாதை இல்லாமல் செய்து மிருகங்களாக்கி நாய் பன்றிகளை விட இழிவாய் நடத்த ஆதாரமாய் இருக் கும் மதம் எதுவானாலும் அதை அழித்தாக வேண்டும். நான் இவ்வாறு சொல்வது உங்களில் சிலருக்கு வருத்தமாகத் தோன்றலாம். நான் சொல்வதை பார்ப்பனர்கள் சொல்வதுபோல் அப்படியே நம்ப வேண்டுமென்று உங்களை கட்டாயப்படுத்தவில்லை. நான் நம்புவதை எனக்குத் தோன்றியதை நான் கண்டதைச் சொல்லுகிறேன். உங்கள் பகுத்தறிவைக் கொண்டு பார்த்து நான் சொல்லுவது நியாயமாயிருந்தால் அதைக் கைக்கொள்ளுங்கள். குற்றமானால் தள்ளுங்கள். அல்லாமல் இம்மாதிரி குருட்டுத் தனமாக நம்பிக்கை கொண்டு இன்னமும் மிருகப் பிராயத்திலிருந்தால் நாம் முன்னுக்கு வர முடியாது. அநேகமாய் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து உண்மைகளை கண்டுபிடித்து அவற்றை செய்கையில் நடத்தியதானால்தான் இதர நாட்டினர் கள் முன்னுக்கு வந்திருக்கின்றார்கள். நாம் வெகு புத்திசாலிகளாவும், ஞானிகளாவும், நாகரீகர்களாகவும் இருந்ததாகச் சொல்லப்பட்ட காலத்தில்



tamilnavarasam.com

மேல் நாட்டினர் காட்டுமிராண்டிகளாக இருந்தனர். இன்றைக்கு சுமார் 1000 வருஷங்களுக்கு முன் இவ்வாறிருந்ததாக மேல்நாட்டார்களே சரித்திரம் எழுதி வைத்திருக்கின்றனர். இப்பொழுது காலத்திற்கேற்றவாறு நாகரீக மடைந்து பகுத்தறிவின் மேன்மையினால் அக்குறைகளை நீக்கி தெய்வத் தன்மை என்பதை அடைந்து உலகில் பெரும்பாகத்தை ஆளும் ஸ்தானத் திலிருக்கிறார்கள். ஆனால் எவ்வளவோ மேன்மையாக இருந்ததாகக் கதைகள் எழுதி வைத்துக் கொண்டிருக்கும் நாமோ அவர்களுக்கு அடிமைப் பட்டு இழிவான நிலையிலிருந்து வருகின்றோம். குருட்டுக் கொள்கைகளை அவர்கள் விட்டொழித்ததாலேயே அவர்கள் நல்ல வாழ்வடைந்தார்கள். நாம் இன்னும் மூட நம்பிக்கைகளில் ஆழ்ந்து கிடப்பதால் பார்ப்பான் நம்மை வேசிமகன், அடிமை, சண்டாளன், தீண்டாதவன் என்கின்றான். வெள்ளையன் நம்மை அஞ்ஞானி, கூலி, காட்டுமிராண்டி என்கின்றான். புரோகிதக் கொடுமையால் ஏற்பட்ட மூட நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்ததாலேயே மேல் நாட்டினர் இன்று இந்நிலையிலிருக்கின்றார்கள். நம்நாட்டுப் புரோகிதக் கூட்டத்தைப் போலவே மேல் நாட்டிலும் 500 வருஷத்திற்கு முன் இருந்த புரோகித வகுப்பார் பாவமன்னிப்பு டிக்கட்டு என்று மக்களுக்கு விற்பனை செய்து பணங்களை கொள்ளையடித்து வந்ததாக சரித்திரம் இருக்கின்றது. அக்கொடுமையை அவர்களில் சில சீர்திருத்தக்காரர்கள் தோன்றியொழித் ததால்தான் அநேக அற்புதங்களைக் கண்டுபிடித்து ஆண்மையுடன் மேன்மையடைய முடிந்தது. பாவ மன்னிப்புச் சீட்டு வாங்கும் பயித்தியக் காரர்களாயிருந்தவர்கள் இன்று எவ்வளவோ தெய்வீகச் செயல்களைப் புரிகின்றார்கள். இது எதனால்? காலப் போக்கையறிந்து அறிவை உபயோ கித்து மூடவாழ்விலிருந்து விலகியதால்தான் என்று மறுபடியும் சொல்லு கின்றேன். நாமோ பழைய வழக்கமென்ற கயிற்றால் தலையெடுக்க விடாதபடி கட்டுப்பட்டுக் கிடக்கின்றோம். பழைய வழக்கம், பழைய வழக்கம் என்று சொல்லிக் கொண்டுதான் இருக்க வேண்டுமா அல்லது இந்நிலையிலிருந்து திருந்தக் கூடாதா. நம் முன்னோர்கள் செய்துவந்த எத்தனையோ நல்ல பழக்கங்களை நாம் கைவிட்டு விடவில்லையா? அதே போல காலத்திற்கேற்ற பழக்க வழக்கங்களையடைந்து சீர்திருத்தி மேம்பாடடையக் கூடாதா என்பதை யோசித்துப் பாருங்கள். முன்னாட்களில் நாம் ஏமாறுவதற்குத் தகுந்தபடியிருந்த வசதிகளில் அதாவது நாம் படிக்கவே கூடாது என்று பார்ப்பனர்கள் ஏற்படுத்திய கொடுமைகளால் குருட்டுப் பழக்கத்திலீடு பட்டிருந்து வந்திருந்தாலும், இக்கால உலக நிலையையுணர்ந்தாயினும் நாம் நம்மை சீர்திருத்திக் கொள்ள கூடாதாவென்றுதான் நான் கேட்கிறேன். எனவே, நாம் அடிமைப்பட்டிருப்பது முக்கியமாய் மதத்தின் பெயரால்தான். ஆகையால் அதைப் பற்றியும் நாம் ஆராய வேண்டும். மதம் என்பது மக்களின் வாழ்விற்கும் அன்புக்கும் பரோபகாரத்திற்கும் காலத்தின் நிலைமைக்கும் அறிவுக்கும் சீதோஷ்ண ஸ்திதிக்கும் தக்கதான கொள்கைகள். அக்கொள்கைகளைப் பற்றி வாழ்க்கையில் இன்பம் என்னும் முக்தியடைய



ஏற்பட்டதேயல்லாமல் வேறல்ல. நமது மதம் என்பது அனுஷ்டானத்தில் இவ்வாறிருக்கின்றதா? இன்னும் முக்கியமாக உள்ள கிறிஸ்தவ மதம், முகமதிய மதம், புத்த மதம், இந்து மதம் ஆகிய நான்கில் இந்து மதம் என்பதைத் தவிர வேறெதுவும் கீழான நிலையில் இல்லை. நம்மைத் தவிர மற்ற மதஸ்தரெல்லாம் தங்கள் தேசத்தை ஆளுவதுடன் பிற தேசங்களையும் ஆண்டு வருகின்றார்கள். அப்படிக்கிருக்க நாமோ ஆயிரக்கணக்கான வருஷங்களாக அநேகருக்கு அடிமையாயிருக்கின்றோம் ஏன்? நமது மதமென்பது நம்மை அடிமையாக்க உதவி புரிகிறது காரணம், அது பொய்யாகவும், புரட்டாகவும், அர்த்தமற்றதாகவும் இருக்கிறது. நமது மதத்திற்கு பெயராக உள்ள இந்து என்ற வார்த்தை நமது தேச பாஷைகள் எதிலும் இல்லவே இல்லை. ஆராய்ச்சிக்காரர்கள் இந்து என்ற வார்த்தை பாரசீக பாஷையில் திருடர்கள் என்று பொருள்படுவதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். சிலர் சிந்து என்ற பதம் இந்து என்பதாக மாறிற்று என்றும், அது நாட்டைக் குறித்து என்றும் மதத்தைக் குறித்ததல்ல வென்றும் கூறுகின்றார்கள். அதுவேதான் நம்நாட்டுக்கு இந்தியா என்ற பெயரைக் கொடுத்தது. இந்து என்பது ஒரு இடத்தைக் குறிப்பதேயல்லாமல் கொள்கை கள் கொண்ட எந்த மதத்தையும் குறிக்காது. இது சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் முடிவாகும். தவிரவும் இலக்கண இலக்கிய சாத்திரங்கள் முதலானவைகளிலும் இந்து என்கின்ற வார்த்தை காணப்படவே இல்லை. பின் இது என்னவென்று பார்த்தால் ஆதாரமற்றதாகவே காணப்படுகிறது. தவிர எந்த இந்துவும் தன் மதம் என்று காட்டப்படும் இந்து மதத்தின் காலம், தலைவர், கொள்கை ஆகிய எதுவும் கூற முடியவே முடியாது. சமீப காலத்தில் ஏற்பட்டதான கிறிஸ்துவ மதம், மகமதிய மதம், புத்தமதம் ஆகிய மதங்களைச் சேர்ந்தவர்கள், தங்கள் மதத்தைப் பற்றிய சகல விபரங்களையும் தாராளமாக சொல்லக்கூடிய நிலைமையிலிருக்கின்றார்கள். நமது மதம் கோடிக்கணக்கான வருஷங் களுக்கு மேம்பட்டதாகக் கூறுகின்றோம். ஆனால் விவரம் ஒன்றும் தெரியாது. நமக்கு எவ்வளவோ பின்பு ஏற்பட்டதாக நம்மால் கூறப்படும் எல்லா மதத்தினரும் கல்வி, ஆராய்ச்சி, பொருளாதார நிலைமை முதலிய பலவற்றிலும் முற்போக்குடன் உன்னத நிலையில் இருக்கிறார்கள். நமது மதத்தில் 100 –க்கு 5 க்கு மேல் படித்தவர்களில்லை. பிற மதங்களில் 100 –க்கு 90 பேர் இருக்கின்றார்கள். மதத்திற்காக இதர மதஸ்தார்கள் தங்கள் தங்கள் மதப்பிரசாரம் செய்யும் பொழுது நம் மதத் தலைவர்கள் நம் பணங்களைக் கோடிக்கணக்காய் வாங்கி தின்று கொண்டு எத்தகைய பிரசாரமும் இல்லாமல் சாப்பிட்டுக் கொண்டு இருப்பதுடன் நமது மதத்தவர்களை கோடிக்கணக்காக இதர மதங்களில் சேர இடங்கொடுத்து வருகின்றார்கள். நம் மத நூல்களை நம் மதத்தை சேர்ந்தவர்கள் படிக்கக் கூடாதென்று கட்டுப்படுத்தி வைத் திருக்கின்றார்கள். இதர மதக்காரர்கள் தங்கள் மதச் சங்கதிகளை தாராளமாக அச்சிட்டு வழங்குகின்றார்கள். பிற மதஸ்தார்கள் ஏழைகளுக்கு உபகாரங் களைச் செய்யும் பொழுது, நாம் தீண்டாதார்களென்று கோடிக்கணக்கான



RangaRakes
tamilnavarasam.com

ஏழை மக்களை ஒதுக்கி வைத்து கஷ்டப்படுத்துகின்றோம். மத வழிபாட்டிலும் நாம் வீணாக குருக்களுக்கும், புரோகிதர்களுக்கும் கொடுத்து வறுமைப் படுகின்றோம். பிற மதங்களில் அவ்வாறில்லை. மதத்தின் பெயரால் நாம் செய்யும் சகல செலவுகளும் ஒரு வகுப்பாருக்கு ஜீவாதாரமாக முடிவதல் லாமல் அதைக் கொண்டு அவர்கள் நம்மை இழிவாக நடத்தி வரவும் இடங் கொடுத்து வருகின்றது. இதர மதக்காரர்கள் சகல சுதந்திரங்களும் மக்களுக்கு கொடுக்கும் பொழுது நாம் ஒருவர் உயர்வு என்றும், மற்றவர்கள் தாழ்வு என்றும், ஒருவரைப் பார்க்கக் கூடாதென்றும், ஒருவரைத் தீண்டக் கூடாதென்றும் சொல்லுகிறோம். இதுதான் இந்து மதமாக இருக்கிறது. ஒரு வகுப்புக்கு உயர்வையும் மற்றவர்களுக்கு அடிமைத் தனத்தையும் கொடுப்பதுதான் நமது மதமாக வழங்கப்படுகின்றது. முஸ்லீம், கிறிஸ்தவர், பௌத்தர் போன்றவர்களைப் போல நமக்கு ஒற்றுமையிருக்கின்றதா? அத்தகைய ஒற்றுமை நமது மதம் கற்பிக்கின்றதா? ஒரு மதத்திற்குள்ளாகவே ஆயிரம் ஜாதி, பதினாயிரம் வகுப்பு, லட்சம் தெய்வம் என்பதாக மேலும் மேலும் பிரிவினையாகவே ஏற்பட்டிருக்கின்றது. தமிழ் நூல்களாகிய நமது சாத்திரங்களில் இந்த வித்தியாசங்களுக்கு ஏதேனும் ஆதாரமுண்டா? இடையில் புகுத்தப்பட்ட இந்த பேத வழக்கத்தை நாம் ஏன் அனுஷ்டிக்க வேண்டும்? பிராமணர் உயர்வு என்றும் மற்றவர் தாழ்வு என்றும் நாம் ஏன் கொள்ள வேண்டும்? சகல அக்கிரமங்களைச் செய்தாலும் ஒரு பிராமணன் உயர்வு என்றும் எவ்வளவு தூய வழக்கமும் அறிவுமுள்ளவனாக இருந்தாலும் ஏனையோர் தாழ்வு என்றும் கொள்வதுதானா நியாயம்? தீண்டாதவர்கள் என்று ஒதுக்கி வைத்துக் கட்டுப்பாடு செய்துவிட்டு அவர்கள் சுசீலமாக இல்லையென்று சொல்வதில் என்ன அர்த்தம்? அவர்கள் மாடுதின்கிறார்கள் என்று சொல்வதும் விந்தைதான்? மாடுதின்னும் வெள்ளைக்காரர்களுக்கு அடிமையாய் இருக்கும் பொழுது நமது தேசத்தில் பிறந்த இவர்களை அதற்காக நாம் ஏன் இவ்வளவு கொடுமையாக நடத்த வேண்டும். இது நமது மதம் என்பதின் குற்றமல்லவா? இப்படி யெல்லாம் செய்வதால்தானே நமது மக்கள் எல்லோரும் இதர மதங்களில் சேர்ந்துகொண்டு வருகின்றார்கள். திருவாங்கூர் ராஜ்யத்தில் சுமார் 40 லட்சம் ஜனங்களென்று கணக்கிருக்கும் பொழுது இப்பொழுதுள்ள ஜனக்கணிதக் கணக்குப்படி 16 லட்சம் கிறிஸ்தவர்களும், சுமார் 4 லட்சம் முகமதியர்களுமாக சுமார் 20 லட்சம் ஜனங் கள் அன்னிய மதத்திலிறங்கி இருக்கின்றனர். பாக்கியுள்ள 20 லட்சத்திலும் சுமார் 12 லட்சம் ஜனங்கள் தீண்டாதவர்களாக இருக்கின்றனர். இவ்வாறு நிலைமையானதற்கு நம் மதக் கொடுமைதான் காரணம். ஆகவே, அவை களை அடியுடன் ஒழித்தால்தான் நாம் சுகப்படுவோம். பிராமணர்களைப் போல் மதக் கட்டுப்பாடுகளை வற்புறுத்தும் பெயர் வழிகளிலும், இதர ஜாதி களும் இல்லாமலில்லை. அவர்களையும் நாம் கண்டிக்க வேண்டியதுதான். ஆனால் பார்ப்பனர்கள்தான் இவைகளுக்கு காரணமாகையாலும் அவர்கள் நம் நாட்டுக்கு வந்த பின்புதான் இவ்வாறான மூடப்பழக்கங்களெல்லாம்



அவர்களால் ஏற்பட்டதாகையாலும் அவர்களைத்தான் முதலில் குறை கூற வேண்டியிருக்கின்றது. இவர்கள் நிலைக்க வைத்த மதம் ஆசாரம் முதலிய வைகளை நாம் முதலில் ஒழித்தால்தான் நமக்கு சுயமரியாதையும் அதன் மூலம் சுயராஜ்யமும் கிடைக்கும். இன்னும் சடங்குகளின் பேரால் நாம் பிராமணருக்குக் கொடுப்பதுதான் மோட்சம் என்று நினைத்து ஏராளமான பணத்தைச் செலவிடுகிறோம். நாம் கஷ்டப்பட்டு சம்பாதிப்பதை ஏழை கட்கும் அங்கஹீனர்களுக்கும் கஷ்டப்பட முடியாதவர்களுக்கும் உதவாமல் சோம்பேரிகளாகிய இவர்களுக்கா தர்மம் செய்வது. சற்று யோசித்து இதில் ஏதேனும் புண்ணியம் இருப்பதாகப் படுகின்றதா என்று பாருங்கள். இதெல் லாம் அறிவீனத்தையும் நமது சுயமரியாதை இன்மையையுமே காட்டுகின்றது தர்மம் செய்ய வேண்டியது அவசியம்தான். ஆனால் தகுதியை கருதி நாம் அதை நடத்த வேண்டும். அவ்வகையில் நாம் நடந்து வந்தால்தான் நமக்கு கதி மோட்சம் உண்டு. ஆகவே, சகோதரர்களே! இந்த மூட நம்பிக்கைகளை எல்லாம் உதறித்தள்ளி நீங்கள் சுயமரியாதைக்குப் பாடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

*குறிப்பு : 22.11.27 பேராவூரணியில் நடைபெற்ற சுயமரியாதை மாநாடு – தலைமை உரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 18.12.1927**



RangaRakes tamilnavarasam.com

# எதிர்பார்த்த எதிர்ப்புகள்

## I

நாம் சில காலமாக எதிர்பார்த்திருந்தபடியே நமது தொண்டிற்கு ஸ்ரீமான்கள் வரதராஜுலுவும், கல்யாணசுந்தர முதலியாரும் வெளிப்படையாய் வந்து எதிர்க்க நின்று விட்டார்கள். இனி இதில் ரகசியம் ஒன்றும் இல்லை. இவர்களை மூடி மூடி வைத்து எவ்வளவு தூரம் சரிப்படுத்த பார்க்கலாம் என்று நினைத்தோமோ அவ்வளவுக்கவ்வளவு அஸ்திவாரத்துடன் எதிர்க்க சவுகரியம் செய்து கொண்டு ஆரம்பித்துவிட்டார்கள்.

ஸ்ரீ வரதராஜுலு வழக்கம்போல் ஒரு கொள்கையும் இல்லாமல் வாயில் வந்த வார்த்தைகளை உளறிக் கொண்டு தேசீயம் என்கின்ற ஆயுதத்தின் மூலமாய் மறுபடியும் வெளியாய்விட்டார். ஸ்ரீ முதலியார், அவருக்கு அண்ணனாய் சமயம் சீர்திருத்தம் என்னும் ஆயுதத்தைக் கொண்டு வெளியாய்விட்டார். எனவே இவைகளுக்கு பதில் சொல்லித் தீரவேண்டியது நமது கடமையாய் போய்விட்டது. இருவரும் தாங்கள் ஆத்திரப்படும் விஷயம் இன்னது என்பதைக் குறிப்பிடாமலும் நமது பெயரையும் நமது பத்திரிகையின் பெயரையும் நாம் என்ன சொல்கின்றோம் என்பதையும் குறிப்பிடாமலும் நமக்கும் நாம் எழுதினவைகளுக்கும் தாங்கள் என்ன சமாதானம் சொல்லுகிறார்கள் என்பதைக் குறிப்பிடாமலும் ஜாடை பேசும் குணத்தை மாத்திரம் கையாண்டு வருகிறார்கள். வரதராஜுலுவின் குட்டிக்கரண விஷயமாயும் அவர் அய்யங்காரானதையும் வெளிப்படையாய் சென்ற வாரம் விவரமாய் குறிப்பிட்டோம். அதில் ஒன்றுக்காவது ஒழுங்கான பதில் இல்லை. மறுக்கவும் இல்லை. அன்றியும் அவர் இப்போது விளம்பரமடையப் பிடித்திருக்கும் ராயல் கமிஷன் பகிஷ்காரப் புரட்டையும் புட்டுப்புட்டு வெளியாக்கினோம்.

அவைகளிலும் ஒன்றுக்காவது பதில் இல்லை. ஆனால் என்ன பதில் என்றால் வெகு பயங்காளித் தனத்துடன் சந்துகளிலும் பொந்துகளிலும் முட்டாள்கள் என்றும், இழி குணத்தவர்கள் என்றும் எழுதுவதுடன் தனக்கு உள்ள ஆத்திரத்தை மாத்திரம் கொட்டிவிட்டு அய்யங்கார் அடிமையாகப் பார்க்கிறார். ஸ்ரீ முதலியாரோ தனது கல்வி, பழக்கம், ஒழுக்கம், ஆராய்ச்சி என்பவைகள் இவ்வளவையும் அடியோடு மறந்துவிட்டு 'கயமை', 'இழிதுறை' என்கின்ற பேச்சைக் கட்டிக்கொண்டு பார்ப்பனர்களை அபயம் கொள்ளுகிறார். இவ்விருவரின் நிலைமைக்கும் இரங்குகின்றோம்! இரங்குகின்றோம்! இருவரும் நம்மை குற்றம் கூறும் தத்துவம் முடிவில் ஒன்றேதான். அதாவது "ஜாதி மத வேற்றுமைகளை கிளப்பிவிட்டு தலைவர் பட்டம் சூட்டி தாண்டவமாடும் முட்டாள்கள்" என்று ஒருவரும், "இயற்கை நோக்கை உணரும் அறிவாற்றல் வாய்க்கப்பெறாத .......சிலரால் நிகழ்த்தப் பெறும் சீர்திருத்தத்தால் உலகில் அமைதி இன்மையும் பிறவும் ஏற்படும்" என்று மற்றொருவரும் எழுதுவதின் மூலம் எதிரிகளுக்கு நம்மைக் காட்டிக் கொடுக்க வேண்டும் என்பதுதான். இப்படி இவர்கள் நம்மைக் காட்டிக் கொடுப் பதன் மூலம் பார்ப்பனர்களை தஞ்சமடைய கருதுவதுதான் இவர்களது தற்கால தொண்டின் தன்மையாய் முடிந்துவிட்டது. மற்றபடி இவர்கள் உண்மை யிலேயே பொது நலத்தில் கவலை கொண்டவர்களானால் இன்னார் இன்னது சொல்கின்றார். இன்ன பத்திரிகை இன்னபடி எழுதுகின்றது. அதனால் இன்னது நடந்துவிட்டது என்று சொல்லி இவ்வளவு ஆத்திரப் பட்டார்களானால் அதில் மனிதத்தன்மை உண்டு. பெயரையும் பத்திரிகையையும் வெளியிடுவதிலும் கூட பயந்துகொண்டு இவர்களை குற்றம் சொல்லும் பத்திரிகையையும் ஆசாமியையும் அறிந்தால் அதன் மூலம் தங்கள் யோக்கிய தையின் உண்மை வெளியாகி விடுமோ என அஞ்சி பொதுவாக யாரையோ பேசுவதுபோல் பேசுகின்றார்கள். இதிலிருந்தே இவர்களது நிலைமை விளங்கலாம்.

நிற்க, 'தமிழ்நாடு' டிசம்பர் 14 –ந்தேதி பத்திரிகையில் "சர்க்கார் தயவை சம்பாதிக்கவோ வயிற்றுப் பாட்டிற்காகவோ ஜாதி மத வேற்றுமைகளை கிளப்பி விட்டு தாண்டவமாடும் முட்டாள்களுக்கு அமீர் உபதேசம் ஆலகால விஷம் போல் தோன்றலாம்" என்று எழுதி இருக்கின்றார். அதிலேயே பிறிதோர் இடத்தில் "தென்னாட்டில் இரண்டொரு பிராமணரல்லாதார் தேசீயத்தையும் தேசபக்தர்களையும் தாக்கி என்னதான் வசை புராணம் பாடினாலும் காட்டிலிட்ட கூச்சலாகவே முடியும்" என்கின்றார்.

இதில் "ஜாதி மத வேற்றுமைகளை கிளப்பிவிட்டு தாண்டவமாடும் முட்டாள்கள் "யார்" என்றும், எதனால் முட்டாள்கள் ஆனார்கள் என்றும் நாம் கேட்கின்றோம். ஜாதி மத வித்தியாசத்தை ஏற்படுத்தினவர்களா அல்லது அதை அழிக்க வேண்டுமென்று மண்டையை உடைத்துக் கொள்ளுகின்றவர்களா? அல்லது திருத்தத்திற்கு குறுக்கே நிற்பவர்களா? அன்றியும் அவைகள் ஒழிய வேண்டுமா? வேண்டாமா? என்று கேட்கின்றோம். ஜாதி, மத, பேதம் கிளப்புவதாகவும் இதனால் வயிறு பிழைப்பதாகவும் இவர் யாருடைய எந்த வாக்கியத்தில் கண்டார். அப்படி கண்டதற்கு என்ன சமாதானம் சொல்லி இந்த புத்திசாலி அவர்களை கண்டிக்கிறார் என்று கேட்கின்





RangaRakes tamilnavarasam.com

றோம். ஆகவே அவைகளை குறிப்பிடாமலும் சமாதானம் சொல்லாமலும் பாமர மக்களை ஏமாற்ற இம்மாதிரி விஷமம் செய்து காரியத்தைக் கெடுத்து எதிரியின் காலுக்குள் நுழைவது யோக்கியமானதா அயோக்கியமானதா என்று கேட்கின்றோம். மூடத்தனம் என்பது அநேகமாய் மன்னிக்கக்கூடியதாகி விடும். அயோக்கியத்தனத்தை மன்னிக்க முடியுமா? தேசீயத்தையும், தேச பக்தர்களையும் இரண்டொரு பிராமணரல்லாதார் வைகிறார்கள் என்பதில் எந்த தேசீயத்தை, எந்த தேசபக்தரை, எந்த பிராமணரல்லாதார் எப்படி வைதார் என்பதை இப்போதாவது சொல்லட்டும். அதைச் சொல்ல தைரிய மில்லாதவர்கள் முக்காடிட்டு மூலையில் உட்கார்ந்து கொண்டு ஒப்பாரியிட்டு அழுவதில் பயன் என்ன? யோக்கியமும் தைரியமும் மனிதத் தன்மையும் இருந்தால் தைரியமாய் வெளியில் வந்து விஷயங்களை சொல்லி வாதாடி மக்களிடை மெய்ப்பிக்கட்டும். அப்போது நாம் சந்தோஷமாக பின்பற்றத் தயாராயிருக்கின்றோம். அஃதில்லாமல் இம்மாதிரி விஷமத்தனம் செய்யும் காரியங்களை ஒருக்காலும் விட்டு வைக்க முடியாததற்கு வருந்துகின்றோம்.

பஹிஷ்காரத்தைப் பற்றி 'குடி அரசில்' நாம் சுமார் 5, 6 தலையங்கங் கள் எழுதியும், பலவிடங்கள் 10,12 உபந்நியாசங்களில் செய்துமிருக்கிறோம். அவற்றுள் எதற்காகவாவது எந்த பத்திரிகையாவது எந்த தலைவர்களாவது பதில் சொன்னார்களா? என்று கேட்கின்றோம். நாமும் நமது பத்திரிகையும் பதில் சொல்லக்கூடிய யோக்கியதை உடையவைகள் அல்ல என்று கருதியதாக சொல்லப்படுமானால் அலக்ஷியம் செய்துவிட்டு பேசாமல் வாயை மூடிக் கொண்டு வேறு வேலை பார்க்க வேண்டுமேயல்லாமல் ஜாடை யாக நம்மைப் பற்றி வயிற்றுச் சோற்றுக்காரர், சுயநலக்காரர், உத்தியோக ஆசை பிடித்தவர்கள், சர்க்கார் மனுஷர்கள் என்பதான அற்பத்தனமான வார்த்தைகளை ஏன் உப யோகப்படுத்த வேண்டும் என்று கேட்கின்றோம். இம்மாதிரி நடந்து தீர வேண்டிய ஒரு அவசியம் வந்தவர்கள் வயிற்றுச் சோற்றுக்காரர்கள் முதலியவர்களாயிருக்கக் கூடுமா அல்லது உண்மை என்று பட்டதை எழுதுகிறவர்களும், பேசுகிறவர்களும் வயிற்றுச் சோற்றுக் காரர்களாயிருக்க முடியுமா? என்பதை பொது மக்களே யோசித்துப் பார்க் கட்டும். தற்கால நிலையில் சுயமரியாதைக்கென்றோ தேசத்தின் நன்மைக் கென்றோ ராயல் கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமென்று சொல்லுகின்ற வர்கள் யோக்கியர்கள் என்றும் அவர்களை பின்பற்ற வேண்டுமென்றும் கடவுள் சொல்வதானாலும் அதை ஒன்று முட்டாள்தனமென்றோ இல்லா விட்டால் அயோக்கியத் தனமென்றோதான் சொல்லத் தயாராயிருக்கின்றோம். கல்லிலும் எழுதத் தயாராயிருக்கின்றோம். காரணங்கள் 'குடி அரசில்' ஒன்றரை மாதகாலமாய் காட்டி வந்திருக்கின்றோம். இனியும் கேட்டால் சொல்லத் தயாராயிருக்கின்றோம். சுயமரியாதையும் தேசாபிமானமும் ராயல் கமிஷன்பகிஷ்காரத்தில் இல்லை. இருப்பதாக சொல்ல வருவார்களானால் இதைவிட அதிகமாகவும் கவனிக்க வேண்டியதாயுமிருக்கின்ற இடத்தை



இக்கூட்டத்தார் கவனிக்காமல் மறைத்து வைத்துக் கொண்டு பித்தலாட்டங்கள் செய்து வேண்டுமென்றே மக்களை ஏமாற்றிப் பிழைக்கின்றார்கள். அந்த பித்தலாட்டங்கள்தான் இதைக் கொண்டுவந்து விட்டிருக்கின்றது. ராயல் கமிஷன் நியமனத்தினால் தங்கள் சுயமரியாதையை இழந்து விட்டதாகக் கருதிக் கொள்ளும் மக்கள் தேசத்தில் மிகச் சிலரேயாவர். பல ஆண்டுகளாக வேறு பல வழிகளில் சுயமரியாதையை இழந்து தவிக்கும் ஜனங்கள் கோடிக்கணக்காக இருக்கிறார்கள். எனவே இக்கோடிக்கணக்கான மக்களுக்கு சுயமரியாதையைத் தேடிக் கொடுப்பதுதான் உண்மை தேசீயமாகும்.

இனி சீர்திருத்தத்தைப் பற்றி உபதேசம் செய்யும் ஸ்ரீ முதலியாரைப் பற்றி யோசிப்போம். இதுவும் அதே டிசம்பர் 14 ந்தேதி 'நவசக்தி'யில் கண்டதையே குறித்து சமாதானம் சொல்லுகின்றோம். இருவரும் ஒருமித்து இக்கருமம் ஏற்றார்களோ என்று சந்தேகப்பட வேண்டியதானாலும் நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. சீர்திருத்தத்தைப் பற்றி உபதேசம் செய்ய முன் வந்தவர்கள் தங்களது சீர்திருத்தம் இன்னது என்றும், அதற்காகத்தான் இன்னது செய்து வந்திருக்கின்றேன் என்று குறிப்பிட்டு விட்டு மற்றவர்களைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ முன்வரட்டும். அதில்லாமல் எவராவது ஏதாவது செய்தால் அதைக் குறிக்கிட வருவது எப்படி யோக்கியமாகும். தவிர மேற்படி தேதி 'நவசக்தி' தலையங்கத்தின் இறுதியில் "இன்று பொது முறைபற்றி எழுதலானோம். சிறப்பு முறைபற்றி சமயம் நேர்ந்துழி எழுதுவோம்" என்று குறிப்பிட்டிருக்கின்றது. ஆதலால் அதை விரைவில் எதிர்பார்க்கின்றோம். இப்பொழுது எழுதி இருப்பது வழ வழவென்று "வெண்டைக்காய் குழம்பு" போல் இருக்கின்றதேயல்லாமல் குறிப்பு இல்லை. ஆனாலும் அதற்கும் சமாதானம் சொல்லுவோம். பொதுவாக மக்கள் சீர்திருத்தம் சமய சீர்திருத்தம் என்பவற்றுள் நாம் தற்காலம் ஆசைப்படுவது மக்கள் சீர்திருத்தமேயொழிய எவ்வித சமய சீர்திருத்தமுமல்ல வென்பதையும் இம்மக்கள் சீர்திருத்தத்திற்கு இடையூறாயிருக்கும் எந்த சமயமோ சமூகமோ திருந்தவோ, அழியவோ நேரிடக்கூடுமானால் அதைப் பற்றியாம் கொஞ்சமும் பின்வாங்கப் போவதில்லை என்பதையும் நம்மை எதிர்ப்போர்கள் உணர வேண்டுகின்றோம். மக்களுக்காக சமயமேயொழிய சமயத்திற்காக மக்களல்ல என்பதே நமது முடிவு. ஆகவே, நம்முடைய இம் முயற்சிக்கு பாமர மக்களின் அறியாமையால் ஏற்படும் எவ்வித இடையூறை யும் பொறுமையுடன் ஏற்று சமாளிக்க எப்போதுமே தயாராயிருக்கின்றோம். ஆனால் சமயங்களின் பேரால் என்று சொல்லிக் கொண்டு பண்டிதர்கள் என்றும், ஆராய்ச்சிக்காரர்கள் என்றும், சமயவாதிகள் என்றும், சமய ஆச்சாரியார்கள் என்றும் சொல்லிக் கொண்டு வரும் எதிர்ப்பு களுக்கு ஒரு சிறிதும் பொறுமை காட்ட இணங்கோம் என்பதை அவரவர்கள் உணரட்டும். ஏனெனில் காலம் போதாது. அன்றியும் இந்தக் கூட்டங்களேதான் இப்போது நமது நாட்டு மக்களின் உண்மை விடுதலைக்கு எமனாய் இருப்ப வைகள்,



RangaRakes tamilnavarasam.com

இருந்தும் வந்தவைகள் என்பது நமது அபிப்பிராயம். உண்மையான சீர்திருத் தங்கள் தோன்றும்போது இக்கூட்டத்திற்குத்தான் முதல் முதல் ஆபத்து வரும். ஏனெனில் அப்படிச் செய்த நாடுதான் இன்று பரிபூர்ண விடுதலை அடையும் வழியில் போய்க் கொண்டிருக்கின்றது. ருசியாவில் பாதிரிகளைத் தூக்கில் போட்ட பிறகே அந்நாடு இன்று உயர்வு, தாழ்வு, முதலாளி, தொழிலாளி என்ற வித்தியாசம் இல்லாத நிலைக்கு போய்க்கொண்டிருக்கின்றது. சீர்திருத்தக்காரனுக்கு முக்கியமாய் அறிவு வேண்டுமே ஒழிய ஆராய்ச்சி வேண்டியதில்லை. சமயம் என்பதை எந்த அர்த்தத்தில் 'நவசக்தி' உபயோகப்படுத்துகின்றது என்பது நமக்கு விளங்காமையால் நாம் இப்போது அதைப்பற்றி எழுத முடியவில்லை. ஆனால் நம்மிடம் கோபமும் வெறுப்பும் இருப்பதாகவும் இதனால் கேடு வரும் என்றும் அது எச்சரிக்கை செய்கின்றது. இதை நாம் ஒரு சிறிதும் லக்ஷியம் செய்யவில்லை. ஏனெனில் உலக மக்களுக்கு கோபமும் வெறுப்பும் மனித இயற்கை என்பதை முதலியார் அறியட்டும். அஃதில்லாதவன் மனிதனல்ல என்பதையும் மனிதனுக்கு அது அவசியம் வேண்டும் என்பதையும் ஸ்ரீ முதலியார் உணரட்டும். அன்றியும் தான் உள்பட இன்ன மனிதனிடத்தில் கோபமும் வெறுப்பும் இருந்ததில்லை என்றாவது அல்லது முதலியாரின் சமயத்தின் பேரால் காணும் இன்ன தெய்வத்தினிடம் கோபமும் வெறுப்பும் இருந்ததில்லை என்றாவது ஸ்ரீமான் முதலியார் எடுத்துக் காட்டட்டும். அஃதின்றி வீணே நம்மை காட்டிக் கொடுப்பதற்கும் சில பார்ப்பனர்களுக்கு தான் நல்ல பிள்ளை ஆவதற்கும் மாத்திரம் இதைச் சொல்லி குற்றம் சுமத்தப் பார்ப்பது நேர்மையல்ல வென்றே சொல்லுவோம். மனிதத் தன்மையும் பகுத்தறிவும் உடையவன் அன்புகாட்ட வேண்டிய இடத்தில் அன்பும், கோபம் காட்ட வேண்டிய இடத்தில் கோபமும், விருப்பு காட்ட வேண்டிய இடத்தில் விருப்பும், வெறுப்பு காட்ட வேண்டிய இடத்தில் வெறுப்பும் காட்டித்தான் தீரவேண்டும். இது இயற்கை. உதாரணமாக எவ்வளவு பசியோடிருப்பவனானாலும் அவனுக்கு சகலவித பலகார பக்ஷணங்களை இலையில் பரிமாறி உட்கார வைத்து அவ்விலையின் ஒரு மூலையில் கழற்சிக் காயளவு மலம் வைத்தால் வைத்தவனிடம், கோபமும், மலத்தினிடம் வெறுப்பும் உண்டாகாதா என்று கேட்கின்றோம். மனிதனுடைய ஒவ்வொரு அவயவங்களுக்கும் கோபமும் வெறுப்பும் இருப்பது ஸ்ரீ முதலியார் அறியாரா என்று கேட்கின்றோம். மூக்கு நல்ல வாசனையை எப்படி முகர்கின்றது துர்வாசனையை எப்படி வெறுக்கின்றது. இதுபோல் ஒவ்வொரு அவயவத்தையும் கவனித்துப் பார்க்கட்டும் என்று வேண்டு கின்றோம்.

ஸ்ரீமான் முதலியார் நாம் இன்ன இடத்தில் உபயோகித்த கோபமும் வெறுப்பும் கூடாது என்று சொல்ல முன்வராமல் அவ்வார்த்தையைச் சொல்வதால் உலகத்தை ஏமாற்றலாம் என்கின்ற கருத்துக்கொண்டு பழிசுமத்த வந்தது யோக்கியமா என்று மறுபடியும் கேட்கின்றோம். அன்றியும் ஸ்ரீ முதலியாரும் யோக்கியமான எண்ணத்துடன் கண்டிக்கப் புறப்பட்டால் அவர் கண்டனங்களுக்கு நாம் சொல்லும் குறிப்புகளை தனது பத்திரிகையில் போட முன்வரட்டும். அப்படிக்கில்லாமல் அன்னியருக்கு கையாளாய் இருந்து கொண்டு வெறும் எதிர்ப்பு வேலைகளை மாத்திரம் முறை தவறிய வழியில் ஆற்ற முன்னிற்பது அழகாகுமா? என்று கேட்கின்றோம். நியாயமான எதிர்ப்புகளை மனப்பூர்வமாய் வரவேற்கின்றோம்.

குரானையும் ஒதுக்கி உண்மையைக் கடைபிடிக்கும் கமால் பாஷா வீரனையும், முல்லாக்களையும் ஒதுக்கி சமத்துவத்தை காண விரும்பும் அமீர் வீரனையும், பாதிரிகளை தூக்கிலிட்டு சுதந்திரமளிக்கும் ருஷிய வீரனையும் கண்டபிறகு அழுக்கு மூட்டைகளுக்கு பேச வாயேது என்று கேட்கின்றோம்.

காந்தியடிகள் என்றும், மகாத்மா என்றும் இவர்களால் தற்காப்புக்காகக் கொண்டாடப்பட்ட ஸ்ரீமான் காந்தி அவர்களே ஒரு சமயம் என்ன சொன்னார் என்றால் ஒரு சமயம் ஒரு இந்து என்பவன் தன்னுடைய மனைவியை ஒரு மகமதியன் தன் எதிரில் கற்பழித்து விட்டதாக வேதனைப்பட்டு வந்து தன்னிடம் பிராது சொல்லும்போது அவர் அளித்த பதில் என்னவென்றால், "அட பாவி! இங்கு வந்து சொல்லும்வரை உனக்கு உயிர் வைத்திருக்க இஷ்டம் இருந்ததா?" என்றுதான் கேட்டாராம். இதன் கருத்து என்ன? தற் கொலை செய்து கொள்ள சொன்னாரா என்றால் இல்லவே இல்லை. மற் றென்னவென்றால் அங்கேயே உன் மனைவியை கற்பழித்த கொடியவன் மீது ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அவனைக் கொன்றிருக்க வேண்டும். அப்படிக் கில்லாத பட்சம் அம் முயற்சியில் உன் உயிரை இழந்திருக்க வேண்டும் என்பதுதான் அதன் அர்த்தம். இந்நிலையில் காய்தல், உவத்தல், முனைதல், எறிதல் ஆகியவைகள் கூடாது என்பது போன்றதெல்லாம் எங்கே போயிற்றென்று கேட்கின்றோம்.

முடிவாய் ஒன்று சொல்லுகின்றோம். உண்மைச் சீர்திருத்தமும் சமத்து வமும் ஏற்பட்டு மக்கள் ஒன்றுபட வேண்டுமானால் மதம்,சமயம், வேதம், புராணம் என்கின்ற அழுக்கு மூட்டைகள் ஒழிய வேண்டும். அவைகளை தூக்கி திரிந்து கொண்டிருக்கும் வரை ஒருக்காலமும் வெற்றியடைய முடியாது.

எப்படியோ பல மதங்கள், பல சமயங்கள், பல வேதங்கள், பல தெய்வங்கள் கற்பிக்கப்பட்டாய்விட்டது. அவைகள் ஒவ்வொன் றினாலும் மக்களை அடிமைப்படுத்தியாய்விட்டது. குரங்கு பிடியாய் இவற்றைப் பிடித்துக்கொண்டு சமய ஞானம் பேசுகிறவர்களிடம் காலத்தை கழிப்பது வீண் வேலையேயாகும். மக்கள் மிருகப் பிராயத்திற்குப் போய்க் கொண்டே இருக்கின்றார்கள். மண்ணையும் சாம்பலையும் குழைத்து பூசிக் கொள்வதே சமயமாய்விட்டது.



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பானுக்கும் பாஷாண்டிக்கும் அழுவதே தர்மமாகிவிட்டது.

கூடா ஒழுக்கங்களும், அண்டப் புரட்டுகளும், ஆகாயப் புரட்டுகளும் நிறைந்த புராணக் குப்பைகளை திருப்பித் திருப்பிப் படிப்பதே காலட்சே பமாய்விட்டது.

அன்புமயமான உண்மைக் கடவுளை அடியோடு மறந்தாய் விட்டது.

ஒழுக்கத்தினிடத்திலும் சத்தியத்தினிடத்திலும் மக்களுக்குள்ள கவலையே அடியோடு நீங்கிவிட்டது.

வலிவுள்ளவன் வலிவில்லாதவனை இம்சிப்பதே தர்மமாய் விட்டது.

பணக்காரன் ஏழைகளை அடிமைப்படுத்துவதே முறையாய் விட்டது.

தந்திரசாலிகள் சாதுக்களை ஏய்ப்பதே வழக்கமாய்விட்டது.

அயோக்கியர்கள் யோக்கியர்களை உபத்திரவப்படுத்துவதே நீதியாகிவிட்டது.

வலிவுள்ளவனாகவோ, பணக்காரனாகவோ, தந்திரசாலியாகவோ, அயோக்கியனாகவோ இல்லாதவன் வாழ்வதற்கு உலகத்தில் இடமே இல்லாமல் போய்விட்டது.

இவைகளைச் சீர்திருத்த காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா? இதனால் கலகம் உண்டாவதானால் அதற்கு பின் வாங்க வேண்டுமா? யாராவது மதம், சமயம், புராணம், சாஸ்திரம், தேவாரம், திரு வாசகம், பிரபந்தம் என்கிற நிழலில் போய் ஒளிந்து கொண்டு எதிர்ப்பாரானால் அதற்காகப் பயந்துகொண்டு ஓட வேண்டுமா என்று கேட்கிறோம். அக்காலம் மலையேறிவிட்டது என்பதை ஸ்ரீ முதலியார் நன்றாய் உணரட்டும். பாட்டி கதை இனி பலிக்காது என்பதை முதலியார் கூட்டங்கள் நன்றாய் அறியட்டும். திருந்தினால் திருந்தட்டும் இல்லாவிட்டால் அழியட்டும் என்கின்ற இரண்டி லொரு கொள்கையிலேதான் இறங்கி இருக்கின்றோம். மானங்கெட்ட மத்திய வாழ்வு இனி வேண்டியதில்லை. ராஜி பேசுவதற்கும் இனி இடமில்லை, கண்ணியமாய் குறிப்பாக வரும் எதிர்ப்புகளை ஆவலோடும், பணிவோடும் வரவேற்று சமாதானம் சொல்ல முயலுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 18.12.1927**



# முடியுமா?

இவ்வருஷம் நடைபெறப்போகும் காங்கிரஸ் மகாநாட்டில் காங்கிரஸ் கொள்கையில் ஒரு திருத்தம் செய்ய வேண்டும் என்பதாக சேலம் மகா நாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது நேயர்களுக்கு நினைவிருக் கலாம். அதன் கருத்தாவது:-

“இந்திய சமூக வளர்ச்சிக்கும் சுயராஜ்யம் விரைவில் பெருதற்கும் ஜாதி வித்தியாசம் முதலிய சமூக ஊழல்கள் விரோதமாயிருப்பதால் அவற்றையும் ஒழிப்பது காங்கிரசின் முக்கிய கொள்கையாக இருக்க வேண்டும். இது அடுத்த காங்கிரசில் திருத்தப்படவேண்டும்” என்பதே.

ஆகையால் இத்தீர்மானங்களை பிரேரேபிக்கவேண்டும் என்பதாக ஸ்ரீ ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் அவர்களை பலர் கேட்டுக் கொண்டுமிருக் கிறார்கள். அவரும் ஆகட்டும் என்று வாக்களித்திருக்கின்றார். ஆனால் அவர் இவ்வருஷம் எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு தெரிந்தெடுக் கப்பட்டால் தான் இதை பிரேரேபிக்க முடியும். இந்த உளவு தெரிந்த பார்ப்ப னர்கள் கண்டிப்பாய் இவ்விஷயத்தில் சூழ்ச்சி செய்வதாயிருந்தாலும் பார்ப் பனரல்லாத மாகாணக் கமிட்டி மெம்பர்களாவது அவரை தெரிந்தெடுத்து இந்த விஷயத்தைப் பற்றி பேசவாவது சந்தர்ப்பம் அளிப்பார்களா என்பது உறுதி சொல்லமுடியாததாகவே இருக்கின்றது.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 18.12.1927**



RangaRakes
tamilnavarasam.com



பதிவு எண் 2041

குடி அரசு

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

“தாருல் இஸ்லாம்”
வாரப்பத்திரிகை.

Sri Siddhartha Book Depot
Champion Reefs P.O.
Kolar Gold Field S. I.

# தூத்துக்குடி திரு. சோமசுந்தரம் பிள்ளை “நவசக்தி” யில் எழுதிய “இந்து மதமும் வைக்கம் வீரரும்” என்ற கட்டுரைக்குச் சமாதானம்

ஸ்ரீமான் தூத்துக்குடி கா. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் ‘இந்து மதமும் வைக்கம் வீரரும்’ என்பதாக ஒரு வியாசம் 7-12-27 தேதி ‘நவசக்தி’யில் எழுதி இருக்கிறார். அதற்கு சமாதானமாக பல கனவான்கள் ஆராய்ச்சி மூலமாகவும் மற்றும் பொதுவாகவும் வியாசங்கள் எழுதி பிரசுரிக்க நமக்கு அனுப்பி இருக்கின்றார்கள். நாம் அவற்றை அவ்வியாசம் தோன்றிய பத்திரிகைகளுக்கு அனுப்பும்படி எழுதி விட்டோம். நம்மையும் பிரசுரிக்கும் படி வற்புறுத்தினால் ஒருக்கால் பிரசுரிக்கலாம். ஆனாலும் அவைகள் பிரசுரமாகும் முன்பு நமது சமாதானத்தை தெரிவிக்க விரும்புகிறோம். அவ்வியாசத்தின் சாராம்சத்தை முதலில் சுருக்கமாக குறிப்பிடுவோம்.

1. “நாயக்கர் பேச்சிலும் எழுத்திலும் இந்து மதத்தை மனம் போனவாறு இழிந்து கண்டித்து வருகிறார்.....

2. பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்கு என்று கூறும் முறையில் அவரது கூற்றால் அச்சமூகத்தாருக்கு எவ்வித மதஉணர்ச்சியும் அற்றுப்போகும்......

3. மதவுணர்ச்சியற்று நாஸ்திகம் பரவும்படி செய்வதே இவரது தொண்டாயிருக்கின்றது...........

4. இத்தொண்டின் பயனாய் தேசாபிமானிகள், மதாபிமானிகள் ஆகியவர்கள் மனம் புண்படுகின்றது................

5. a இவர் ஆராய்ச்சி செய்து பேசுகிறாரா? .
(b)அல்லது மக்களை வேறு மதத்திற்காவது விரட்டியடிக்கப் பேசு





RangaRakes
tamilnavarasam.com

கிறாரா? என்று எண்ண வேண்டியிருக்கிறது............

6. a. பக்தி மூட நம்பிக்கை என்கின்ற படுகுழியில் என்கின்றார்.
   b. அப்படியானால் பற்பல அற்புதங்களைச் செய்து உலகத்தை வாழ்விக்க வந்த திருஞான சம்மந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், பன்னிரு ஆழ்வார் முதலியோர்கள் எல்லாம் இந்த படுகுழியில் வீழ்ந்தோர்கள் போலும்.........

7. சைவம், வைணவம், சமணம், பௌத்தம், துவைதம், அத்வைதம், விசிட்டாத்வைதம், வீர சைவம் முதலியன இந்து சமயம் என்ற விரிந்த மதத்தின் பாற்படும் என்பது யாவரும் அறிவர். இது நாயக்கருக்கு தெரிந்தும் தெரியாததுபோல் பேசி மக்களை மயக்கு கிறார். 'இந்துமதம்' என்கின்ற பெயர் எப்படி வந்ததென்பது சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறார்.....

8. மத சம்மந்தமான எந்த நூலையும் பார்க்க யாருக்கும் தடையில்லை. எல்லாம் கடையில் விற்கின்றது. யாரும் நாக்கை அறுக்க மாட் டார்கள்......

9. கோவிலை நாயக்கர் கூத்துச்சாலைபோல் நினைக்கின்றார்.....

10. கல் மனதையும் கரைக்கும்படியான சக்தி சில ஆலயங்களில் இருப்பதை நாயக்கர் அறிவாரா...............

11. இக்கலிகாலத்திலும் பல இடங்களில் எத்தனையோ அற்புதங்கள் நடக்கின்றன.

12. விசேஷ காலங்களில் லட்சக்கணக்கான ஜனங்கள் கால்வலி மெய்வலி பார்க்காமல் நடந்துபோய் சுவாமி தரிசனம் செய்து ஆனந்த பரவசமாகின்றதை பார்க்கின்றோம்......

13. அதை நிவர்த்திக்காமல் இந்து மதம், பக்தி, கோயில் முதலிய எல்லாவற்றையும் அழித்துவிட முயல்வது அறிவுடமையாகாது..........

14. கௌதமர் இந்து மதத்திலுள்ள சில குறைகளை உணர்ந்து சில சீர்திருத்தங்கள் செய்து போதித்தார். அதுதான் பௌத்தமதம்.

15. அதுபோல் நாயக்கர் தமக்குத் தெரிந்த சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து ஜனங்கள் நம்பத்தக்கது இன்னது, அனுசரிக்க வேண்டியது இன்னது என்று தெளிவாகச் சொல்லி ஒரு மதத்தை ஸ்தாபிக் கட்டும்...................." என்று எழுதுகிறார்.



## நமது சமாதானம்

அவற்றுள் (1) **"நாயக்கர் இந்து மதத்தை கண்டிக்கிறார்"** என்பது,

ஆம், கண்டிக்கிறோம். இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்றும் இந்து என்கின்ற வார்த்தையே நமது பாஷை அல்லவென்றும், வட சொல்லிலோ மற்ற எந்த சொல்லிலோ இந்து என்கின்ற சொல் இல்லை யென்றும்( இதை ஒப்பாமலும் போதிய ஆதாரம் காட்டாமலும் இந்து என்கின்ற ஒரு வார்த்தை இருப்பதாக யாராவது வாதாடுவதானாலும்) அது இந்தியாவிலிருக்கும் மனிதரைக் குறிப்பதென்றும், உதாரணமாக, பங்காளத் தில் இருப்பவன் பங்காளி, குஜராத்தில் இருப்பவன் குஜராத்தி, மலையாளத் தில் இருப்பவன் மலையாளி என்பதுபோலவும், பிரான்சு தேசத்தவனை பிரன்சு என்றும், துருக்கி தேசத்தவனை டர்க் என்றும், ஜப்பான்காரனை ஜப்பானி என்றும், ஜர்மன் காரனை ஜெர்மன் என்றும் அழைப்பதுபோல் இந்து என்பது இந்நாட்டு மனிதனைக் குறிக்கும் சொல்லாகும் என்றும், இந்தியா தேசத்தவன் இந்து என்றும் இந்தியன் என்று அழைக்கப்படுவதோடு இந்தியா தேசத்திற்கும் ஆரிய பாஷையில் இந்துஸ்தானம் என்றே வழங்கப்படுகின்றது என்றும் எனவே இந்து என்கின்ற சொல்லானது இந்தியா நாட்டில் வகிக்கின்ற எல்லா மக்களையே குறிப்பிடுவதேயல்லாமல் அது ஒரு குறிப்பிட்ட ஜாதியையோ அல்லது மதக்காரரையோ குறிப்பதல்ல என்றும் அல்லாமலும் தேசத்தின் பேரால் மதமே இருப்பதாக நாம் அறியவில்லை என்றும் ('இவற்றையும் ஒப்புக் கொள்ளாமலும் ஆதாரம் காட்டாமலும் இதையும் மறுப்பதானாலும்') இந்தி என்கின்ற பாஷையை பார்த்தாலும் அது ஆரிய பாஷையாகவே இருப்பதாலும், அது தமிழ்நாட்டு உச்சரிப்புக்கே பொறுத்த மற்றதாகவும் இருப்பதால் அது நமது மக்களுக்கு எவ்வகையிலும் சம்மந்தப் பட்ட சொல்லுமல்ல என்றும், அநேக தடவைகளில் சொல்லியும் எழுதியும் வந்திருப்பதை ஸ்ரீமான் பிள்ளை அறியாரா என்று கேட்கின்றோம். இதையும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் ஆங்கில அகராதிகளில் அதாவது ஆரியர்கள் ஒப்புக்கொண்டு பழக்கத்தில் வைத்திருக்கிற - ஆரியர்களாலேயே எழுதப்பட்ட அகராதிகளிலும் இந்து என்கிற பதத்திற்கு அர்த்தமாக இந்தியன், இந்தியாவில் வசிப்பவன் ஆரியன், ஆரியக் கொள்கை, ஆரியமதம், ஆரியரை பின்பற்றுவோன், பார்ப்பனீயத்தில் நம்பிக்கையுள்ளவன், மகமதி யனல்லாதவன் அதாவது மகமதியர்களுக்கு எதிரானது என்பது போன்ற பொருள்களே குறிக்கப்பட்டிருக்கின்றனவே யல்லாமல் நம்மெல்லோரையும் கட்டுப்படுத்தத்தக்க ஒரு மதம் என்கிற பொருளில் அல்ல.



RangaRakes tamilnavarasam.com

தவிர இந்து மதம் என்கின்ற வார்த்தையானது ஆரியர்களின் சமயம் பழக்கம் வழக்கம் என்பது முதலியவைகளைக் குறிப்பிடும் வேதம், சாஸ்திரம், புராணம், கதை என்பவைகள் முதலிய எவைகளிலாவது அல்லது தமிழ் மக்களின் பழக்க வழக்கமென்பது முதலியவைகளைக் குறிப்பிடும் பழந் தமிழ் ஆதாரங்கள் என்பவைகள் எவைகளிலாவது இருந்ததாகவோ இருக் கின்றதாகவோ யாராவது சொல்லக் கூடுமா? என்று கேட்கின்றோம். ஆகவே பொருளற்றதான ஒரு வார்த்தையை ஒரு சமயம் என்பதாக ஏற்றுக் கொண்டு அதற்கு அநாகரீகமானதும், மனித இயற்கைக்கும் நேர்மைக்கும் பொருத்த மில்லாததுமான விஷயங்கள் நிறைத்து வைத்திருக்கும் புத்தகங்களை ஆதாரங்கள் என்பதாக வைத்துக் கொண்டு அதைக் கடவுள் சொன்னார் என்பதாக அதனிடம் குருட்டு விஸ்வாசத்தைக் காட்டிக்கொண்டு இருப்ப தோடு அதை நமது தலையிலும் சுமத்த வந்தால் அதற்கு நாம் எப்படி சம்மதிக்க முடியும்?

( 2 ) **தவிர இப்படிச் செய்வதால் பார்ப்பனரல்லாத மக்களுக்கு எவ்வித உணர்ச்சியும் அற்றுப்போகும் என்பது.**

அற்றுப்போனால் குற்றமில்லை. சகல மத உணர்ச்சியும் அற்று மனிதத் தன்மையான சுயமரியாதை உணர்ச்சி மாத்திரம் வந்தால் போதுமானது. எந்தவிதமான மத உணர்ச்சிக்கும் மனிதன் அடிமையல்ல. மதம் என்பது அவனவன் இஷ்டத்தைப் பொறுத்தது. மனிதத் தன்மை உணர்ச்சி வந்து விட்டால் அல்லது அதற்கு விரோதமாயிருப்பவைகளை அழித்துவிட்டால் அவசியமான உணர்ச்சி வந்தேதீரும். இதற்கு யாரும் கவலைப்பட வேண்டியதில்லை.

( 3 ) **நாஸ்தீகம் பரவிவிடுமே என்று பயப்படுவது.**

இந்த இடத்தில் நாஸ்தீகம் என்றால் என்ன என்று கேட்கிறோம். கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்று சொல்வது நாஸ்தீகமானால் அதைப் பற்றி யாவரும் கவலைப்பட வேண்டியதில்லை. கடவுள் என்பதாக ஒன்று இருக்குமானால் அதை இல்லாமல் செய்து விடவோ இல்லை என்று எண்ணும் படி செய்துவிடவோ எந்த மனிதனாலும் முடியாது. அப்படி ஒரு சமயம் ஏதாவது ஒரு மனிதன் கடவுள் என்பதாக ஒன்று இல்லாமலோ இல்லைஎன்று எண்ணும்படியோ செய்து விடுவானானால் அப்பொழுது உண்மையிலேயே கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்றுதான் அர்த்தமேயொழிய, ஒரு மனிதனது செய்கையினால் கடவுள் இல்லாமல் போய்விட்டது என்பது அசம்பாவிதமானதாகும்.

தவிர கடவுள் உணர்ச்சியை ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்குப் புகட்ட வேண்டும் என்று சொல்வதானால் அப்படிச் சொல்லுபவர் உண்மைக்



கடவுளை அறியாதவர் என்றுதான் அர்த்தம் கொள்ள வேண்டும்.

தவிரவும் சூரியன் இல்லை சந்திரன் இல்லை என்று ஒரு மனிதன் சொல்லிக் கொண்டு திரிவானானால் அதன் மூலம் மக்களுக்கு சூரியன் சந்திரன் என்கின்ற உணர்ச்சியற்றுப் போகுமா என்று கேட்கின்றோம். எத்தனையோ கோடி வஸ்துகளில் இரண்டு வஸ்துகளை எப்படி ஒரு மனிதன் இல்லாமல் செய்யமுடியாதோ அது போலவே கடவுள் என்பதாக ஒன்று இருப்பதாய் ஸ்ரீமான் சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் உண்மையில் உணர்வாரானால் கண்டிப்பாய் அதை மற்றொருவன் அழித்து விடுவா னென்றோ, மக்களுக்கு அவ்வுணர்ச்சியில்லாமல் செய்துவிடுவான் என்றோ அவர் பயப்படுவதாகச் சொல்வது கேலிக் கூத்தேயாகும்.

( 4 ) **நாயக்கர் இப்பிரசாரத்தால் தேச மத அபிமானிகள் மனம் புண்படுகின்றது என்பது.**

இதற்கு நாம் என்ன செய்யமுடியும்? இமயமலைப் பனியால் மூடப் பட்டு குளிரால் அவஸ்த்தைப் படுகின்றது என்று அதற்கு யார் கம்பளிப் போர்வையைப் போற்றி குப்பை செத்தைகளை அரித்துப்போட்டு நெருப்பு வைத்து குளிர்காய வைக்க முடியும்? எரிமலை நெருப்பு ஜுவாலையில் கஷ்டப்படுகின்றது என்று அதற்கு யார் தண்ணீர் ஊற்றி குளிர்ச்சி செய்ய முடியும்? அது போல அவரவர்கள் தன்மைக்கு ஏற்ற பலனை அவரவர் அடையவேண்டியதுதானே ஒழிய வேறில்லை.

பேசாமல் உட்கார்ந்து கொண்டிருக்கும் தேச மத அபிமானியையும் யோக்கியமாய் நடந்துகொள்ளும் எந்த தேச மதஅபிமானியையும் நாம் கனவிலும் நினைப்பதற்கே நம்மால் அவர்கள் மனம் புண்பட நியாயமில்லை. அப்படிக்கில்லாமல் மக்களை ஏமாற்றவென்றே வெளிவரும்போது தாம் நாம் சும்மாயிருக்க முடியவில்லையே ஒழிய மற்றபடி நமக்கு யார் மனதையும் புண்படுத்த நினைத்து இத்தொண்டை ஆரம்பிக்கவில்லை என்பது உறுதி.

( 5 ) a. **நாயக்கர் ஆராய்ச்சி செய்து பேசுகின்றாரா என்பது.**

நாம் 10 –வது வயதிற்குமேல் எந்த பள்ளிக்கூடத்திலும் படிக்க வில்லை. நமக்கு புத்தக ஆராய்ச்சி இல்லை. நம் சக்திக்குள்ள அறிவு என்பதைக் கொண்டு நடுநிலை என்பதிலிருந்து ஆராய்வதின் மூலம் அறிவதும், ஆராய்ச்சிக்காரர்கள் என்பவர்களை சந்திக்க நேர்ந்தபோது கேட்டு அறிவது தானே ஒழியவேறில்லை என்பதைக் கண்ணியமாய் ஒப்புக்கொள்ளுகிறோம்.

( 5 ) b**. இவர் வேறு மதங்களுக்கு மக்களை அனுப்ப முயற்சிக் கின்றார் என்பது.**



RangaRakes
tamilnavarasam.com

மதம் என்பதாக ஒன்றை நித்திய பொருளென்றோ, தத்துவப் பொருளென்றோ நாம் கருதுவதில்லை. மதம் என்பது எதுவும் ஒரு மனிதன் அல்லது சில, பல மனிதரின் அபிப்பிராயம் என்பதாகவே கருதுகிறோம்.

தவிர, அது எவ்வளவு வேண்டுமானாலும் தோன்றவும் மறையவும் கூடியதே தவிர நிலைத்ததல்ல. அது ஒரே மனிதனின் அடிக்கடி மாறுப்பட்ட அபிப்பிராயங்களாகவும், பல மனிதர்களின் ஒன்றுபட்ட அபிப்பிராயங்களாகவும் பல காலங்களில் பல மனிதர்களின் பலமாதிரியான அபிப்பிராயங்களாகவும் இருக்கலாம். மதமானது எந்த மனிதனையும் தனக்கு அடிமைப்படுத்தத்தக்கினதல்ல. ஒரு மனிதன் அவன் வாழ்நாளில் பல மதத்தை தழுவலாம். பல மதத்தை உண்டுபண்ணலாம். பல மதத்தை சீர்திருத்தலாம். பல மதத்தை அழிக்கலாம். இதனாலெல்லாம் ஒரு மனிதன் பாவியாகிவிட முடியாது. கெட்டவனும் ஆகிவிட முடியாது. ஆகவே எந்த மனிதனை எந்த மதத்திற்கு போகும்படி யார் சொன்னாலும் அதில் ஒரு குற்றமும் இல்லை. அன்றியும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு மதம் இருக்க வேண்டியதோ கற்பிக்க வேண்டியதோ அவசியம் என்பதாக நாம் நினைக்கவில்லை.

ஏனெனில் அறிவுள்ள மனிதனுக்குத் தனது வாழ்க்கைக்கேற்ப கொள்கைகளை ஏற்படுத்திக் கொள்ளத்தெரியும், தெரிந்துதான் வருகிறது.

அறிவில்லாத மனிதனுக்கு இன்ன மதம்தான் சொந்தம் என்று சொல்லவோ அவன் இன்ன மதத்தில்தான் இருக்க வேண்டுமென்று சொல்லவோ யாருக்காவது அதிகாரமிருப்பதாகச் சொல்லுவதானது "கோழிக் குஞ்சைத் தூக்கிக் கொண்டு போக கருடனுக்கு பாத்தியமா, கழுகுக்கு பாத்தியமா, இராஜாளிக்குப் பாத்தியமா" என்று முடிவு செய்யும் நியாயத்தைப் போன்றதுதான் என்பதே நமது அபிப்பிராயம்.

மதமோ, சமயமோ அவ்வக் காலங்களில் ஏற்பட்ட மனிதர்களால் அவ்வக் காலங்களின் நிலைமைக்குத் தக்கபடி அவ்வவ்விடத்திய சீதோஷ்ண முதலிய காலநிலைக்கு ஏற்றாற்போல் நிர்ணயமாக்கப்பட்டதே ஒழிய எக்காலத்திற்கும் எல்லா மனிதர்களுக்கும் எல்லா இடத்திற்கும் எல்லா நிலைக்கும் இதுவேதான் ஏற்றது என்பதாக ஏற்பட்டதல்ல என்பதே நமது அபிப்பிராயம். ஆகவே காலம், இடம்,மக்களின் அறிவுநிலை இவைகளுக்குத் தக்கதுபோல் தானாகவே மாறிக்கொண்டுதான் வரும். இதைப்பற்றி யாரும் சிந்திக்க வேண்டியதில்லை.

( 6 ) **மூடபக்தி, மூடநம்பிக்கை என்கின்ற படுகுழி என்பது.**

இதில் மூடபக்தி, மூட நம்பிக்கை என்று சொல்வதைப் பற்றி யாரும் கஷ்டப்படவேண்டியதில்லை. மூடபக்தி, மூடநம்பிக்கை என்பதின் கருத்து



என்ன? ஒரு மனிதன் தன்னுடைய நடவடிக்கைகளைப் பற்றி கவலை எடுத்துக்கொள்ளாமல், தனக்கு இன்ன இன்ன காரியங்கள் ஆகவேண்டும் என்று நினைத்துக்கொண்டு ஒரு கடவுளை வணங்குவதும், அதன் பெயர், உருவம், குணம், சக்தி இவைகளை கட்டுப்படுத்துவதும் மூட பக்தி என்பதே நமது அபிப்பிராயம். அதோடு நாம் கடவுளுக்கு இன்னது செய்தால் நமக்கு இன்னது கிடைக்கும் என்கின்ற வியாபார நோக்கத்துடன் செய்யும் காரியங்கள் எதுவும் மூட நம்பிக்கை என்பதே நமது அபிப்பிராயம்.

அதுவும் தவிர சுவாமி காரியம் நடக்க வேண்டும். சுவாமியைப் பற்றி மக்களுக்கு அறிவிக்க வேண்டும், சுவாமிக்கு இன்னது இன்னது செய்ய வேண்டும், சுவாமியை தோத்திரம் பண்ண இன்ன இன்ன மாதிரி இருக்க வேண்டும் என்பவைகள் போன்றதெல்லாம் மூடபக்தி மூடநம்பிக்கையில் பட்டது என்பதே நமதபிப்பிராயம்.

அன்றியும் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் காரியத்தின் தன்மையை கவனிக்காமல், சுவாமி காப்பாற்றுவார், சுவாமி கொடுத்துவிடுவார், சுவாமிக்கு பொருத்தமாக இருக்க வேண்டும், சுவாமி அறிய சொல்லுகிறேன், சுவாமி தலையில் பாரத்தைப் போட்டு செய்கின்றேன் என்பதுபோல் ஒவ்வொன்றையும் சுவாமி தலையில் போடுவது ஆகிய விஷயங்கள் எல்லாம் மூடபக்தி, மூட நம்பிக்கை என்பதே நமதபிப்பிராயம்.

b ) **அப்படியானால் பல அற்புதங்கள் செய்து உலகத்தை வாழ்வித்த அப்பர் சுந்தரர் முதலிய நால்வர்களும், ஆழ்வாராதிகளும் மூட பக்தி படு குழியில் விழுந்தோர்களா என்பது.**

அவர்கள் எப்படி இருந்தாலும் நமக்கு என்ன. முதலாவது அவர்களைப் பற்றிய கதை நமக்குத் தெரியாது. தவிர அவர்கள் நடவடிக்கைகள் சாதாரண மனிதத் தன்மைக்கு மீறினதாகச் சொல்லப்படுகிறது. அதை நாம் நம்புவதால் பயன் என்ன? நம்பாததால் நஷ்டம் என்ன? யார் இருந்து அந்த சமயம் பார்த்தவர்கள்? அந்தகால மக்கள் அறிவு, மூளை, சக்தி ஆகியவைகள் எப்படி இருந்தது? இவைகள் எல்லாம் விவகாரத்திற்கு இடமில்லாமல் சொல்லக்கூடியதாயிருந்தால் நம்புகின்றவர்கள் நம்பட்டும். மலை சமுத்திரமாக மாறியிருக்கின்றது. சமுத்திரம் மலையாக மாறியிருக்கின்றது. நாடு காடாயிருக்கின்றது. காடு நாடாயிருக்கின்றது என்கின்றார்கள்? அப்படி இருக்கையில் இவைகள் எங்கு எப்போது நடந்தது என்பதும் எப்படி தெரிந்ததென்பதும் சுலபத்தில் முடிவு செய்யக்கூடிய காரியமல்ல. உதாரணமாக,

முதலையுண்ட பாலனை வரவழைத்தக் கதை சொல்லும்போது அந்தக் காலத்து முதலை எப்படிப்பட்டது. குழந்தை எப்படிப்பட்டது என்பதை யார் நிர்ணயிப்பது. நரி குதிரையான கதை சொல்லும்போது அக்காலத்திய நரிக்கும்



RangaRakes
tamilnavarasam.com

குதிரைக்கும் உள்ள வித்தியாசம் அக்காலத்திய மக்கள் கண்ணின் நிலைமையும் அறிவின் நிலைமையும் யார் அறிந்தவர்கள்.

சமுத்திரத்தில் கல்லைக் கட்டிப் போடப்பட்டவர் தண்ணீரில் மிதந்தார் என்கின்ற கதையும், ஓலை எழுதி ஆற்றில் போட அது எதிர்த்து வந்தது என்பதுமான கதைகளும் அப்படியேதான்.

இதுபோலவே ஆழ்வாராதிகள் சங்கதியும் வைத்துக் கொள்ளலாம். இதை எல்லோரையும் நம்பும்படி கட்டாயப்படுத்த யாருக்கு அதிகாரமிருக்கின்றது. இன்னமும் இராமாயணம், பாரதம் முதலிய கதைகளையும் எடுத்துக்கொண்டு விவகாரம் பேசப் புறப்பட்டால் அவைகளுக்கு முடிவு எது?

அராபியன் நைட் என்கின்ற கதையையும் FAIRY TALES என்கின்ற மோகினிக் கதைகளையும் வேறு ஒருவர் நம்முன் தோன்றி அவர்களும் சில நாயன்மார்கள், ஆழ்வாராதிகள், கடவுள்கள் அவதாரங்கள் என்கின்றவைகளின் பெயரால் சொல்ல வந்தால் யாருக்கு அவைகளை மறுக்க அதிகாரம் இருக்கின்றது. எனவே "ஒரு காலத்தில் நடந்தது என்கின்ற விஷயம்" இப்போது யாருக்கு என்ன பலனைக் கொடுக்கும். அது பொய்யா, மெய்யா என்று வாதாடுவதில் செலவாகும் நேரம் கடவுளுக்கோ, மதத்திற்கோ, மக்களுக்கோ என்னப் பலனைக் கொடுக்கும் என்பதுதான் இங்கு கேள்வியே ஒழிய அதன் உண்மையைப் பற்றியே முழு விவகாரமும் அல்ல. எவ்வளவோ கஷ்டப்பட்டு உண்மை கண்டுபிடிக்க முயற்சித்தால் பிறகு திடீரென்று தத்துவார்த்தம் வேறே வந்து குறுக்கே விழுந்து எல்லாவற்றையும் கெடுத்து விடுகின்றது. ஆதலால் நம்முடைய எண்ணத்தால், வார்த்தைகளால், நடவடிக்கைகளால் நாம் அன்னியருக்கு உதவுவது எப்படி, அன்னியர் கஷ்டத்தை நிவர்த்திப்பது எப்படி என்கின்ற காரியத்தில் காலத்தை செலவழிக்க வேண்டுமென்று எண்ணியே மூடபக்தி, மூடநம்பிக்கை என்பதோடு ஏட்டில் உள்ள அற்புதங்களைப் பற்றியும் கவலைவேண்டாம் என்கின்றோம்.

**( 7 ) சைவம், வைணவம், சமணம், பௌத்தம், துவைதம், அத்வைதம், விசிஸ்டாத்வைதம், வீரசைவம் முதலியன எல்லாம் இந்து மதத்தில் பட்டது என்பது.**

அப்படியானால் கிறிஸ்துவம், மகமதியம், ஆரிய சமாஜம், சீக்கியம், பிரம்ம சமாஜம், பார்சீகம் முதலியவைகளான மற்றும் சில மதங்கள் இதில் ஏன் ஸ்ரீமான் பிள்ளையவர்களால் சேர்க்கப்படவில்லையோ நமக்கு தெரியவில்லை.



தவிர, சைவ மதம் ஏன் சமணர்களை கழுவேற்றிற்று என்பது நமக்கு விளங்கவில்லை. பௌத்த மதத்தை ஏன் பார்ப்பனர்கள் விரட்டி அடித்தார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

சங்கராச்சாரி மதமான ஸ்மார்த்த மதத்திற்கும் சைவ மதத்திற்கும் ஏன் சண்டை நிகழ்கின்றதென்பது நமக்குத் தெரியவில்லை. வைணவத்திற்கும் சைவத்திற்கும் பரத்துவத் தகரார் ஏன் நடைபெறுகின்றது என்பது நமக்குப் புலப்படவில்லை. ஆளுக்கு ஒருவிதமான குறிகள் ஏன் என்பதும் தெரியவில்லை. பௌத்தர் ஏன் கடவுளைப் பற்றி பேசவில்லை என்பதும் தெரியவில்லை. ஒரு மதக் கடவுள் மற்றொரு மதக் கடவுளை ஏன் பூசித்தார் என்பதும் தெரியவில்லை. இன்னும் இவற்றின் உட்பிரிவும், கடவுள்களும் அவைகளின் நடவடிக்கைகளும் எப்படி ஒரே மதமாகுமென்பது நமக்கு படவில்லை. ஆதலால் இந்து மதத்திற்கு இவைகள் மாத்திரம் உட்பிரிவு என்பதையோ, இவைகளெல்லாம் ஒரே மதம் என்பதையோ ஒப்புக் கொள்ள முடியாது. ஒப்புக்கொள்வதானால் நாம் சொல்வதெல்லாம் மேல்கண்ட மதத்தில் பட்டவர்களே. ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொருவர் சொன்னதாக அந்தந்த மதக்காரர்களே சொல்ல நாம் கேட்டிருக்கின்றோம். ஆகையால் நாம் சொல்லுவதைப் பற்றி இது என்ன மதமோ என்று யாரும் கவலைப்பட வேண்டியதில்லை.

**இந்து மதம் என்கின்ற பெயர் எப்படி வந்தது என்று விவேகானந்தர் சொல்லியிருக்கிறார் என்பது.**

அவர் எதையோ சொல்லி இருக்கலாம். எந்த அர்த்தத்திலோ சொல்லியிருக்கலாம். இப்பொழுது நமக்குத் தெரியவேண்டாமா? என்பது தான் கேள்வி. ஸ்ரீமான் பிள்ளை அவர்களுக்குத் தெரிந்தால் சொல்லட்டும் பதில் சொல்ல முயலுகிறோம்.

**( 8 ) மத சம்மந்தமான எந்த நூலையும் பார்க்க யாருக்கும் தடையில்லை என்பது.**

பார்க்கவேண்டும் என்கிற ஆசை ஒன்றும் நமக்கில்லை. நாம் சொல்வதென்னவென்றால் மதப்படி நடப்பதாக ஒருவன் ஒப்புக் கொண்டால் வேதத்தைப் பார்க்க முடியுமா என்பதுதான் கேள்வி. பார்க்க மதம் இடம் கொடுக்கின்றதா என்பதுதான் கேள்வி. அப்படி இடம் கொடுக்குமானால் எவ்வளவோ பழய மதம் என்று சொல்லப்படுவதான இந்துக்கள் என்போர்கள் என்ன காரணத்தினால் இதுவரை 100 –க்கு 5 பேருக்கு மேல் படிக்க முடியவில்லை என்பதையும், அப்படி படித்திருப்பதும் இந்து அரசாங்கமல்லாத வெள்ளைக்கார அரசாங்கத்தினாலா அல்லது மதத்தின் உதவியினாலா என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டுகின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

**( 9 ) கோயில்களைக் கூத்துச்சாலை என்று நாயக்கர் சொல்லுகின்றார் என்பது.**

ஆம், அப்படித்தான் சொல்லுகிறோம். ஏனெனில் கோயிலுக்குள் மாத்திரம்தான் இருக்கின்றது என்பதாக ஒரு விசேஷமும் இல்லை என்றும், ஏதாவது இருப்பதாகச் சொன்னால் பொய்யும், புரட்டும், கூடா ஒழுக்கங்களுக்கு சௌகரியமும் மாத்திரம் இருக்கின்றதெனவும் சொல்லுகின்றோம். இது நம்முடைய 30 வருஷத்திய கோயில் நிர்வாக அனுபவம்.

**( 10 ) கல் மனதையும் கரைக்கும்படியான சக்தி சில ஆலயங்களுக்கு இருக்கின்றது என்பது.**

அது எந்த ஆலயத்தில் என்று ஸ்ரீமான் பிள்ளையவர்கள் சொல்வார்களானால் மெத்த உபகாரம். தவிரவும் ஏன் மற்ற ஆலயங்களுக்கும் அச்சக்தி இல்லாது போயிற்றென்பதையும் எடுத்துச் சொன்னாரானால் அதைவிட உபகாரமாயிருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**( 11 ) இக்காலத்தில் பல இடங்களில் எத்தனையோ அற்புதங்கள் நடக்கின்றன என்பது.**

நம் நாட்டில் எங்கே என்ன விதமான அற்புதங்கள் நடக்கின்றன என்பதை காட்டி ருஜுப்பிப்பாரானால் அதற்கு ஏற்படும் செலவு முழுவதையும் கொடுத்து ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கின்றோம். அப்படி இல்லாவிட்டால் குருட்டு நம்பிக்கைக்கும், மூட பக்திக்கும் ஸ்ரீமான் பிள்ளை அவர்களே சாட்சியாவார்கள்.

**( 12 ) பல ஸ்தலங்களுக்கு விசேஷ காலங்களில் லட்சக் கணக்கான ஜனங்கள் நடந்துபோய் ஆனந்த பரவசர்களாகிறார்கள் என்பது.**

லட்சக்கணக்கான ஜனங்கள் நடந்து போவதாலேயே ஒரு ஸ்தலம் உயர்ந்ததாய் விடாது. சந்திரனுக்குத் தாரை நிர்வாணமாய் எண்ணெய்த் தேய்ப்பதாக விளம்பரம் போட்டால் தாரை வேஷக்காரன் ஆணாயிருந்தாலும் கொட்டகை நிறைய ஆட்கள் கூடி விடுகிறார்கள். வெகுதூரத்திலிருந்து பணம் கொடுத்து பார்த்து விட்டுப் போகின்றார்கள்.

இன்னக் கள்ளுக்கடையில் நல்ல போதையுள்ள கள்ளு விற்கிறதாக பறையடித்தால் நிற்கக் கூட இடமில்லாமல் ஆள்கள் பல இடங்களில் இருந்து வந்து குடித்து மெய்மறந்து தெருவெல்லாம் புரண்டு கொண்டிருக்கிறார்கள். வண்டிமேல ஏறுவது கூட தெரிவதில்லை. அதுபோலவே பீபிள்ஸ் பார்க் வேடிக்கைக்கு எத்தனையோ பேர் போகின்றார்கள். அதுபோலவே காங்கிரஸ் என்றும், கண்காட்சி சபை என்றும், காந்தி என்றும், சங்கராச்சாரி என்றும், மாமாங்கமென்றும், மேளா என்றும் எத்தனையோ பேர் போகின்றார்கள். இதனாலெல்லாம் இடத்திற்கு மகத்துவமா? அந்த ஆள்களுக்கு மகத்துவமா? என்னவென்று ஸ்ரீமான் பிள்ளை சொல்வாரோ தெரியவில்லை.

**( 13 ) மதம், கோவில், பக்தி முதலியவற்றை அழித்துவிட நாயக்கர் முயலுவது அறிவுடைமையாகாது என்பது.**

யோக்கியமாக மனிதன் உலகத்தில் வாழ்வதற்கு இவைகள் வேண்டுமென்றே அவசியமில்லை. இப்போதைய மதம், கோயில், பக்தி முதலியவைகள் மக்களுக்கு எவ்வித பலனையும் ஒழுக்கத்தையும் கொடுப்பது மில்லை, கெடுதியும் செய்கின்றது. எனவே ஏதாவது ஒரு காலத்திலாவது அவைகள் அழிய நேரிட்டால் யாரும் கவலைப்பட வேண்டியதுமில்லை. தவிர கோவில்கள் இல்லாத காலத்தில் மக்கள் இவ்வளவு அயோக்கியர்களாக இருந்தார்கள் என்றும் மக்களை மக்கள் இவ்வளவு கொடுமைப்படுத்தினார்கள் என்றும் ஆராய்ச்சிக்காரர்கள் சொல்வதில்லை.

**( 14 ) கௌதமர் இந்து மதத்திலிருந்தே சீர்திருத்தம் செய்திருக்கிறார். அதுபோல் நாயக்கர் செய்யட்டுமே என்பது.**

கௌதமர் கொள்கைகளை ஒப்புக்கொண்டு அதன்படி நடப்பவர்களிடம் அதிக தகராரில்லை.

அவர் எந்த மதத்தைச் சொன்னார். எந்த கடவுளைச் சொன்னார். எந்தக் கோவிலைச் சொன்னார், எந்த உற்சவத்தைச் சொன்னார், எந்த ஜாதியைச் சொன்னார், எந்த பக்தியைச் சொன்னார் என்பதை பிள்ளையவர்கள் சற்று யோசித்துப் பார்ப்பாரானால் இவ்வளவு தூரம் கவலைப்பட்டிருக்க மாட்டார் என்றே சொல்லுவோம்.

அவர் ஜீவன்களிடத்தில் எப்படி நடந்துகொள்வது என்பதைத்தான் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறோம்.

**( 15 ) நாயக்கர் புதுக் கொள்கைகளைக் கொண்டு வந்து சீர்திருத்தம் செய்யட்டுமே என்பது.**

நாம் எவ்வித புதுக் கொள்கைகளையும் கொண்டு வரவேண்டு மென்கின்ற எண்ணமில்லை. இப்போது இருக்கும் ஆபாசக் கொள்கைகள் ஒழிந்தாலே தானாக ஷ நல்ல கொள்கைகள் ஏற்பட்டு விடுமென்கின்ற நம்பிக்கை நமக்கு உண்டு. சுருக்கிச் சொன்னால் மனிதனை மனிதன் இழிவு படுத்துவதும், பலத்தினால் அடக்கி ஆளுவதும் ஒழிய வேண்டும். இதுபோல பல


RangaRakes

tamilnavarasam.com

ஒழிவதற்கு இடையூராயிருக்கும் எது ஒழிவதானாலும் நமக்குக் கவலை இல்லை. நமது கவலை சுயமரியாதையும் அன்புந்தான்.

மற்றும் அவர் வியாசத்தில் உள்ளவைகளுக்கும் இவற்றில் சமாதானம் இருக்குமென்று சிந்திக்கின்றோம். எவ்வளவு சுருக்கியும் வியாசம் அதிகமாக நீண்டுவிட்டதால் இதுசமயம் இத்துடன் நிறுத்தி விட்டோம்.

**குடி அரசு - கட்டுரை - 25.12.1927**



# சென்னையில் ஏமாற்றுந் திருவிழா

இவ்வாரத்தில் சென்னையில் மக்களை ஏமாற்றுந் திருவிழாக்கள் பல நடக்கப் போவதாக விளம்பரங்கள் எங்கு பார்த்தாலும் பறக்கின்றன. இதைக் கண்டு அநேக ஆயிரமக்கள் வெளியூர்களிலிருந்து சென்னைக்கு போகவும் கூடும். சர்க்கார் காரியாலயங்களுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் விடுமுறை நாளானதாலும் வக்கீல்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் ஓய்வு காலமான தாலும் விவசாயக்காரருக்கும் வேலை ஒழிந்த காலமானதாலும் வியாபாரி களுக்கும் வேலையில்லாத காலமானதாலும் ரயில் சத்தமும் இதை உத்தே சித்து குறைக்கப்பட்டிருக்கிறதாலும் இம்மக்களை அவ்விளம்பரங்கள் சுலபமாக கவர்ந்து விடுவதில் அதிசயம் ஒன்றுமில்லை. இம்மக்களல்லாத பிரபுகளுக்கும் சுகவாசிகளுக்கும் இம்மாதிரி ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதே அரிதானதால் அவர்களும் இதில் கலந்து இக்கூட்டத்தில் காணப்படுவதில் ஆச்சரியமுமில்லை. ஆனால் இவ்வேமாற்றுந்திருவிழாக்களில் நிர்வாகிகள் யார்? கொள்கைகள் என்ன? அதனால் மக்களுக்கு ஏற்படும் பலன் என்ன? என்பவைகள் தான் இங்கு கவனிக்கத்தக்கது.

இத்திருவிழாவின் விளம்பரத்திற்கு பங்கு எடுத்துக்கொள்ளாத பத்திரிகைகளே நமது நாட்டில் மிக மிக சொற்பம். ஏனெனில் மனிதன் இது சமயம் நம்நாட்டில் வாழவும் பத்திரிகைகள் நடைபெறவும் இத்திருவிழாக் களின் தத்துவமே ஜீவாதாரமாய்ப் போய்விட்டதால் இவ்விளம்பரத் தொழிலில் இருந்து விலகுவது அநேக பத்திரிகைகளுக்கும், பத்திராதிபர் களுக்கும் சுலபமான காரியமல்ல. ஆதலால் அதன் பலனாக குறைந்த அளவு 10 அல்லது 15 ஆயிரம் மக்களுக்கு குறையாமலாவது வெளிநாடு களிலிருந்தும் வெளி ஊர்களிலிருந்தும் சென்னைக்குப் போவார்கள் என்பது உறுதி. இவர்களுக்கு ஏற்படும் ரயில் சார்ஜ் போக்குவரத்து சிப்பந்தி சில்லரை சாமான் வேடிக்கை பார்த்தல் முதலிய செலவுகள் குறைந்தது 15, 20 லக்ஷம் ரூபாய்க்கு குறையாது என்றே சொல்லலாம். இத்திருவிழாக்களின் நிர்வாகி களோ படித்தவர்களும் முதலாளிகளும் என்றுதான் சொல்லவேண்டும். இவர்களது கருத்தோ உத்தியோகம் சம்பாதிப்பதும் பணம் சம்பாதிப்பது மேயல்லாமல் வேறொன்றிருக்க நியாயமில்லை.



RangaRakes tamilnavarasam.com

நாட்டில் எப்படி வியாபாரம் விர்த்தியாகி தக்க லாபம் கிடைப்பதற்கென்று வியாபார சங்கங்கள் இருக்கின்றனவோ விவசாயம் பெருகி நல்ல பலன் உண்டாவதற்காக எப்படி விவசாய சங்கங்கள் இருக்கின்றனவோ மற்றும் ஒவ்வொரு தொழிலுக்கும் உத்தேசத்திற்கும் எப்படி ஒவ்வொரு சங்கங்கள் இருக்கின்றனவோ அதுபோல் ஆங்கிலம் படித்தவர்களுக்கு உத்தியோகங்கள் பெருகவும் அதனால் நல்ல பணம் சம்பாதிக்கவும் கருதி படித்தவர்களால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சங்கமே காங்கிரசாகும். இதை அறியாத அறிவாளி நமது நாட்டில் இருப்பான் என்று சொல்லவே முடியாது. ஆனால் மற்ற சங்கங்களுக்கு பொது ஜனங்கள் சம்மந்தமில்லாமல் இருக்கும்போது காங்கிரஸ் என்கின்ற உத்தியோகம் சம்பாதிக்கும் சங்கத்திற்கு மாத்திரம் ஏன் பொது ஜனங்கள் சம்மந்தம் ஏற்பட்டது என்கின்ற கேள்வி பிறக்கலாம். அப்படியானால் அது சரியான கேள்விதான். மற்ற சங்கங்களுக்கு பலன் ஏற்படுவது அந்தந்த சங்கங்களின் முயற்சியினாலேயே அல்லாமல் மற்றொருவர் கொடுப்பதாலல்ல. ஆனால் உத்தியோக விஷயமோ அப்படியல்ல. உத்தியோகம் வேண்டுமென்று கேட்பது மாத்திரம் போதாது. சர்க்காரையும் உத்தியோகங்கள் உற்பத்தி பண்ணும்படிக்கும் தங்களுக்கு கொடுக்கும்படிக்கும் செய்ய வேண்டும். அதற்கு ஏற்படும் செலவை பொது மக்கள் பொருக்க வேண்டியிருக்கிறபடியால் பொது ஜனங்கள் தகராறுக்கு வராமலும் இருக்க வேண்டும். ஆதலால் பொது ஜனங்கள் கேட்பதுபோல கேட்பதற்கும் பொது ஜனங்களின் பிரதிநிதிகள் என்பதுபோல அடைவதற்கும் வழி ஏற்படுத்த வேண்டியது அவசியமாயிருக்கின்றபடியால் பொது ஜனங்களை இதில் கலரும்படி செய்யத்தக்க சூழ்ச்சிகளை செய்ய வேண்டிய அவசியமும் இக்கூட்டத்தாருக்கு ஏற்பட்டு விட்டது. அதற்கு ஏற்றாற்போல் படித்த கூட்டத்தாரிடையே அதிகாரமும் செல்வாக்கும் இருக்கிறபடியால் இதற்கு எதிர்ப்பு இல்லாமல் செய்வதும் சுலபமாய் விட்டது. அதோடு படிப்பு இல்லாதவர்கள் என்கின்ற கூட்டத்திலும் சிலருக்கு இதனால் ஜீவனம் கிடைக்க இப்பொழுது வழி ஏற்பட்டு விட்டதால் அவர்களில் சிலரும் இதில் கலர நேர்ந்ததால் பொது ஜனங்களும் நம்பி கலந்துகொள்ள இடமுண்டாய்விட்டது. இவ்வளவுதானே தவிர இதனால் தேசத்திற்கோ மக்களுக்கோ எவ்வித பலனும் ஏற்பட்டதுமில்லை. ஏற்படப் போவதுமில்லை என்று தைரியமாய்ச் சொல்வோம். ஆகவே இம் மாதிரி உத்தியோகம் சம்பாதிக்கும் சங்கமாகிய காங்கிரசின் பலனால் படித்த கூட்டத்தாருக்கு அரசாங்க உத்தியோகங்களும் அரசாங்க நீதி நிர்வாகங்களால் பிழைக்கும் வழிகளும் அதிகப்படவேண்டியிருந்ததால் படித்தக் கூட்டத்தார் மற்ற மக்களின் பிழைப்பைப் பற்றியோ தொழிலைப் பற்றியோ ஒரு சிறிதும் கவனியாமல் பொது மக்களையும் சேர்த்துக்கொண்டு தங்கள் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருந்ததால் மற்ற தொழில் பிழைப்புகள் எல்லாம் அடியோடு மறைந்து போகவும் நேரிட்டு இது சமயம் மனிதனின் வாழ்க்கைக்கு உத்தியோகம் என்கின்ற ஒரே மார்க்கம் தவிர வேறு மார்க்கம் இல்லாமல்



RangaRakes

போய்விட்டது. வேறு ஏதாவது இருப்பதாய் கருதினால் முதலாளிகள் மேலும் மேலும் முதலாளி ஆகத் தகுந்த வியாபாரமும் ஒரு மார்க்கமாய் இருப்பதாகச் சொல்லலாம். அதுவும் பணக்காரனுக்கு ஏற்றதாய்ப் போய்விட்டதால் யந்திரமயமாய் விட்டதால் வியாபாரத்தின் பலனாய் சாதாரண மனிதனுக்கு ஒரு பலனும் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

விவசாயமும் அதுபோலவே உணவு பொருள்களாக விவசாயம் செய்யப்படுவது பெரிதும் மாறி மேல்நாட்டுத் தொழில் திறத்திற்கு உதவும் படியான மூலப் பொருள்களாய்ப் போய்விட்டதால் விவசாயக்காரனுக்கு உணவுப்பொருள் கிடைப்பதற்கு மார்க்கமில்லாமல் பணமாய் கிடைக்க நேரவும் அதை அவன் பாழாக்கத்தகுந்த பல வழிகளும் நிலைமைகளும் தாராளமாய் ஏற்படவும் அதின் மூலம் அப்பணத்தை சீக்கிரத்தில் இழந்து விட்டுத் தவிக்கவும் இவைகளிலும் இடமில்லாதவர்களுக்கு அடியோடு வேறு மார்க்கங்கள் இல்லாமல் மக்கள் கூட்டங் கூட்டமாய் நாட்டை விட்டு வேறு நாட்டுக்கு வயிற்று பிழைப்புக்காக கூலிகளாய் போகவுமே ஏற்பட்டு விட்டது. ஆகவே இதுதான் இந்திய காங்கிரசின் பலன். இதை ஒருவராவது சிந்தித்துப் பார்த்து இக்கொடுமைகளை ஒழிக்க முயலுவதையே காணோம். அன்றியும் இப் படித்தக் கூட்டத்தார் மக்களையும் நாட்டையும் ஏமாற்றி இப்படி பாழ் பண்ணுகிறார்களே என்கின்ற கவலையும் யாருக்குமே கிடையாது. மகாத்மா என்னும் ஸ்ரீ காந்தி அவர்களே இப்புரட்டுக்கு உதவி செய்து வாழவேண்டிய அவசியத்தில் விழுந்துவிட்ட பிறகு இனி யாரை நாம் குற்றம் சொல்லுவது என்பது விளங்கவில்லை.

கொஞ்ச காலத்திற்கு முன் மாயவரத்தில் முன்சீப்பு வேலை பார்த்த ஸ்ரீ வேதநாயகம் பிள்ளை அவர்கள் ஒரு உபமானம் சொல்லி இருக்கிறார். அதாவது, "நாயானது சதை இல்லாத வெறும் எலும்பை கடித்துக்கொண்டிருக்கும் பொழுது அவ்வெலும்பின் முனைகள் அந்நாயின் பல் எகிர்களில் பட்டு அதனால் வரும் ரத்தத்தை எலும்பிலிருந்து வரும் சாரமாக நினைத்துக் கொண்டு விடாமல் எலும்பைக் கடித்துக் கொண்டேயிருந்து கடைசியாய் வலி பொறுக்க மாட்டாத நிலைமை ஏற்பட்டப் பிறகுதான் அதைவிட்டு விலகும்" என்று சொல்லியிருக்கிறார்.

அதுபோலவே காங்கிரஸ் என்கின்ற சதையில்லாத எலும்பைக் கடிப்பதால் செலவாகும் பொதுமக்களின் ரத்தமாகிய செல்வங்களை தங்களுக்கு கிடைத்த காங்கிரசின் பலன் என்று எண்ணிக் கொண்டு மேலும் மேலும் அதனிடத்தில் மக்களுக்கு பற்றுதல் உண்டாகும்படி படித்தக் கூட்டத்தார் செய்வதை மக்கள் என்றைக்கு உணருகின்றார்களோ அன்றுதான் நாட்டிற்கு க்ஷேமமுண்டாகுமே தவிர வேறில்லை என்றே சொல்லுவோம்.



tamilnavarasam.com

அதுபோலவே பொருள்காக்ஷி என்பதும் எவ்வளவு மோசமான ஏமாற்றுந் தொழில் என்பதை யாராவது உணருகின்றார்களா என்றுதான் கேட்கின்றோம்.

பல தாசிகளும் இன்ன உற்சவத்திற்கு வருவார்கள் என்று எண்ணிக் கொண்டு உற்சவத்திற்கு போகிறவன் எப்படி ஏதாவதொன்றில் விழுந்து கெட்டுப்போக இடமுண்டாகின்றதோ அதுபோல் காங்கிரசின் பேரால் அந்நிய நாட்டுச் சாமான்களின் பொருள்காக்ஷி நடைபெற ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இந்த ஒரு ஆதாரமே போதாதா? காங்கிரசும் கண்காக்ஷியும் படித்தவனும், பணக்காரனும் சேர்ந்து செய்கின்ற ஏமாற்றுந் திருவிழா என்பதற்கு உதாரணம்? என்று கேட்கின்றோம்.

இக்காங்கிரசினால் இன்னும் எவ்வளவு வரி உயரப் போகின்ற தென்றும் இவ்வன்னிய நாட்டுப் பொருள்காக்ஷியினால் இன்னும் எத்தனை தொழிலாளருக்கு தொழில் அற்றுப் போகப் போகின்றதென்றும் யாராவது கவனிக்கிறார்களா? விளக்கில் பூச்சிகள் போய் மடிகின்றதைப் போல் எல்லா மக்களும் அதில் போய்விழுந்து அம்மாய்கையில் சிக்கி விடுகின்றார்களே ஒழிய இதை வெளியிட யாருக்காவது கவலையிருக்கின்றதா? தைரியமி ருக்கின்றதா? போதாக்குறைக்கு ஒவ்வொரு பத்திரிகையும் மக்களை சென் னைக்கு போகும்படியும் காங்கிரசுக்கு போகும்படியும் சொல்லுகின்றதே என்னே வெட்கக் கேடு! வெட்கக் கேடு!! வெட்கக் கேடு!!!

**குடி அரசு - தலையங்கம் - 25.12.1927**



# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டம்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் கூட்டமும் அதில் நடந்த விஷயங் களும் 'தமிழ்நாடு' பத்திரிகையில் பார்த்தால் விளங்கும்.

எவ்வளவு தந்திரமாகவும், ஒழுங்கீனமாகவும் தேர்தல்களை நடத்தி இருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது காங்கிரஸ் தலைவர் என்பவ ரான ஸ்ரீ சீனிவாசய்யங்காரின் யோக்கியதையைவிட அதில் கலந்து கொண்டவர்களின் யோக்கியதையே பெரிதும் கவனிக்கத்தக்கது.

கோவையில் கூடிய பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் காங்கிரசில் சேரப் பிரியமுள்ளவர்கள் காங்கிரசில் சேரலாம் என்பதாக ஒரு தீர்மானம் நிறைவேறியவுடன் பார்ப்பனர்கள் தங்களது அடிமைகளல்லாத வேறு யாரும் காங்கிரசிற்குள் நுழைந்துவிடாதபடி எவ்வளவு நிர்பந்தங்கள் ஏற்படுத்தினார் கள் என்பதை பொது வாழ்வில் கலந்துள்ள யாரும் அறியாமல் இருக்க முடியாது. காங்கிரசில் சேர்க்கும் இரசீதுகளை தாங்களே தங்களுக்கு வேண்டிய வர்களுக்கே வினியோகித்து தங்கள் சொற்படி கேட்பவனை மாத்திரம் சேர்க்கும்படி கட்டளையிட்டதை யாராவது மறுக்க முடியுமா? அப்படி யிருந்தும் தங்களுக்கு வேண்டாதவர்கள் யாராவது எந்த நிர்வாக கமிட்டி யிலாவது சேர்ந்துவிட்டால் அவர்களை ஒழிக்க வேறு கமிட்டிகளை ஏற்படுத்தச் செய்து ஏற்கனவே ஏற்பட்ட கமிட்டிகளை செல்லுபடியற்ற தாக்கினது யாருக்காவது தெரியாது என்று சொல்ல முடியுமா? அநேகமாய் ஒவ்வொரு ஊரிலும் இரண்டு கமிட்டி ஏற்பட்டதும் தங்களுக்கு வேண்டியதை வைத்துக் கொண்டு, மற்றதை நீக்கியதும் யாருக்காவது தெரியாது என்று சொல்ல முடியுமா? இந்தியா முழுவதையும் எடுத்துக் கொண்டாலும் தமிழ் நாட்டில் காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்கள் செய்தது போன்ற அயோக்கியத் தனங்களும் அக்கிரமங்களும் வேறு எங்காவது நடந்தாகக் காட்ட முடியுமா? அல்லது தமிழ்நாட்டிலாவது இந்த 5, 6 வருஷ காலத்தில் இப்படி நடந்ததாக யாராவது காட்ட முடியுமா? இதை யாராவது கவனித்தார்களா? இதனால் ஏற்பட்ட மானக்கேட்டைப்பற்றி யாராவது சிந்தித்தார்களா? கொஞ்சமும் மானமும் ஈனமும் இல்லாமல் இவ்வயோக்கியர்களுடன் கூடி குலாவ ஒவ்வொருவரும் முயற்சித்தார்களே ஒழிய நேர்மையையாவது சுய மரியாதையையாவது யாராவது கவனித்தார்களா? என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

ஸ்ரீவரதராஜுலு சென்ற வருஷத்திற்கு முன் வருஷம் காங்கிரஸ்கமிட்டி நிர்வாக ஸ்தானத்திலிருந்து ராஜீனாமா கொடுத்து விலகினது எதற்காக? இப்போது மறுபடியும் அக்கூட்டத்திற்குள் புகுந்து குலாவி மறுபடியும் நிர்வாக சபை அங்கத்தினரானது எதற்காக என்றே கேட்பதுடன் முன் தான் ராஜீனாமா கொடுத்த காலத்தில் அக்கமிட்டியிலிருந்த அயோக்கியத்தனங்கள் இப்போது மாறிவிட்டனவா அல்லது தான் கமிட்டிக்குத் தக்கவராகி விட்டாரா? என்று கேட்கின்றோம். இந்த ஆறுமாத காலமாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி யையும் அதன் நிர்வாகத்தின் யோக்கியதையையும் மக்கள் விடாமல் குற்றம் சொல்லிக் கொண்டே இருந்ததை பார்த்துவிட்டு தானும் சில சமயங்களில் சொல்லிக் கொண்டும் இருந்து விட்டு இப்போது திடீர் என்று அதற்குட் புகுந்த காரணம் என்ன என்பதை சொல்லுவாரா? திரு.வி. கலியாண சுந்தர முதலியாரவர்கள் இவரோடு கூட இவரை நம்பி ராஜீநாமா கொடுத்து வெளியேறி இருக்க அவரைப் பற்றி கொஞ்சமாவது நினைத்தாரா? ஒன்றும் இல்லாமல் தனக்கு இடம் கிடைத்ததே போதும் என்று எல்லாவற்றையும் மறந்துவிட்டு சகலத்தையும் உதிர்த்து விட்டு கமிட்டி நிர்வாகத்திலும் எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும் இடம் சம்பாதித்துக் கொண்டதின் அர்த்தம் என்ன என்றுதான் கேட்கின்றோம். ஸ்ரீமான் அண்ணாமலை பிள்ளையும், குப்புசாமி முதலியாரும், தெய்வனாயக அய்யரும், தங்கமீரான் சாயபுவும், தீர்த்தகிரி முதலியாரும் இந்த அயோக்கியக் கூட்டத்திற்காக எவ்வளவு பாடுபட்டார்கள் என்பதை யாராவது வர்ணிக்க முடியுமா? அப்பேர்பட்டவர் களே அக் கூட்டத்தில் கலந்து கொண்டு இருப்பது தங்கள் சுயமரியாதைக்கு லாயக்கில்லை என்று தைரியமாய் எழுந்து வெளி வந்திருக்கும்போது,ஒரு வேலையும் செய்யாமல் சும்மா வைதுக் கொண்டிருந்த ஸ்ரீமான் வரதராஜுலு அங்கு இருந்தே தீர வேண்டியதின் ரகசியம் என்ன என்பது நமக்கு விளங்கவில்லை. அல்லாமலும் அங்கு ஏற்பட்ட தகராறுகளை சமரசம் செய்ய முயற்சித்ததாகவும் ‘தமிழ்நாடு’ பத்திரிகையிலேயே காணப்படுகின்றது. ஆகவே அரசியல் வாழ்வு என்பதில் எவ்வளவு தூரம் நாணயமும் யோக்கியப் பொறுப்பும் இருக்கின்றது என்பது இதனாலேயே மக்களுக்கு விளங்க வில்லையா என்று கேட்கின்றோம். சென்னை பார்ப்பனர்கள் வெளி நாட்டிலிருந்து வரும் ஆசாமிகளிடம் ஸ்ரீமான்களான வரதராஜுலுவையும், ஜார்ஜ் ஜோசப்பையும், ஷாபி மகமது சாயபுவையும், ஸ்ரீ ஜயவேலுவையும் கூட்டிக் கொண்டு போய் இதோ பார் தமிழ்நாடு மக்களின் பிரதிநிதிகள் என்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவராக அதாவது பார்ப்பனரல்லாத இந்து என்பதற்கு ஸ்ரீ வரதராஜுலுவையும், கிருஸ்தவர் என்பதற்கு ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப்பையும், மகமதியர் என்பதற்கு ஜனாப் ஷாபி மகமது சாயபுவையும், ஒடுக்கப்பட்ட வகுப்பார் என்பதற்கு ஸ்ரீஜயவேலுவையும் காட்ட ஏற்பாடு செய்து கொண்டார்கள். அதற்கு இந்த கனவான்களும் உதவி செய்து விட்டார் கள். இவர்களுக்கும் பார்ப்பனர்கள் ஏதாவது பிரதி உபகாரம் செய்வார்கள் என்பதல்லாமல் இந்த பிரதிநிதிகளால் இந்த சமூகங்களுக்காவது நாட்டிற்கா



RangaRakes

வது காதொடிந்த ஊசி அளவு பலனுண்டா என்பதை யோசித்துப் பார்க்கும்படி பொது ஜனங்களை வேண்டிக்கொள்ளுகின்றோம். எவ்வளவு காலத்திற்குத் தான் இம் மாதிரி நடவடிக்கைகளை நமது நாட்டில் ஆதிக்கம் பெற்றிருக்க விடுவது என்று பொது ஜனங்கள் நினைத்துக் கொண்டிருக் கிறார்கள் என்பதும் நாம் கொஞ்சமும் அறியக்கூடாத நிலையில் இருந்து வருகின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 25.12.1927**



tamilnavarasam.com

# மகாத்மாவைப் பற்றி "தமிழ்நாடு" வின் கவலை

"தமிழ்நாடு" பத்திரிகையானது 16-12-27 தேதி உபதலையங்கத்தில் கண்ணோட்டம் என்னும் தலைப்பின் கீழ் ஒரு வியாசம் எழுதி இருக்கின்றது. அதில் ஸ்ரீமான் காந்தி அவர்களை மகாத்மா என்று சொல்லாமல் வெறும் காந்தி என்று சொல்வதால் தனக்குப் பெரிய கவலை ஏற்பட்டு விட்டதாகக் காட்ட வெளிவந்து, உலகம் போற்றும் உத்தமர்களில் மகாத்மா காந்தி ஒருவர் என்றும், அதை மறுப்பவர் ஒன்று இழிகுணம் படைத்தவராக இருக்க வேண்டும் அல்லது மதியற்றவர்களாக இருக்கவேண்டுமென்றும் எழுதியிருக் கிறது.

மகாத்மா காந்தி என்பவரை ஸ்ரீமான் காந்தி என்று சொல்வதால் இழி குணப் பட்டமும், மதியற்ற பட்டமும் வந்தாலும் வரட்டும் நமக்கு அதைப் பற்றி கவலையில்லை.

ஸ்ரீமான் காந்தி என்றைய தினம் மக்களுக்குள் வருணம் நான்கு உண்டு. அதுவும் அவைகள் பிறவியில் ஏற்படுகின்றன. அந்தந்த வருணத் தானுக்கும் ஒவ்வொரு தர்மம் உண்டு. அதைத்தான் அவனவன் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார் என்பதாக நாம் உணர்ந்தோமோ அன்றே அவரிடம் மகாத்மா தன்மை அங்கு இல்லை என்று தீர்மானித்து விட்டோம். அதிலும் சூத்திரன் என்பவன் அடுத்த ஜென்மத்தில்தான் பிராமணனாய் பிறக்கலாம் என்கின்ற அவருடைய தீர்ப்பு சுத்த சுத்தமாய் நம்மை மாற்றியது. மகாத்மா பட்டம் ஒருவரின் அபிப்பிராயத்தையும் நடவடிக்கையையும் பொறுத்துத்தான் வழங்கப்படுவதே தவிர வெறும் உருவத்திற்காக வழங்கப் படுவதல்ல என்பதை உணர்ந்தவர்களுக்கு இவ்விஷயத்தில் கவலை ஏற்பட நியாயமில்லை. மகாத்மா என்கின்ற பட்டத்தை நீக்கி நாம் எழுத ஆரம்பித்து இன்றைக்கு சுமார் இரண்டு மாதம் ஆகின்றது. இது வரையும் சகித்துக் கொண்டிருந்த "தமிழ்நாட்டிற்கு" இந்த வாரம் திடீரென்று கவலை தோன்றி நமது "இழி குணத்தையும்", "மதியின்மையையும்" கண்டு பிடித்து எழுதி இருப்பதற்கு இரகசியமான காரணமில்லாமல் போகவில்லை. அதை தக்க சமயம் வெளியிடுவோம்.

ஒவ்வொரு பட்டமும் அவரவர்கள் அபிப்பிராயத்தாலோ, நடவடிக் கைகளாலோ ஏற்படுவதும் அவைகள் மாறும்போது மறைபடுவதும் வழக்கமாகவே இருந்து வந்திருக்கின்றது. மற்றும் சிலருக்கு பட்டம் மக்களின் அறியாமையினால் ஏற்படுவதும், விஷயம் தெரிந்தவுடன் மறைந்துபோவதும் வழக்கமாக இருக்கின்றது. இது வரையில் எத்தனை பேர்கள் தலைவர்களாகி மறுபடியும் நினைப்பதற்கே அருகர்களல்லாதார்களாய்ப் போயிருக்கின் றார்கள் என்பதை யோசித்துப் பார்த்திருந்தால் 'தமிழ்நாடு' வுக்கு இவ்விஷ யத்தில் இவ்வளவு கவலை ஏற்பட்டிருக்க நியாயமே இருந்திருக்காது.

தவிர கடவுளின் அவதாரமாகவும் மகாத்மாவாகவும் தோன்றினதாகச் சொல்லப்பட்ட கிருஷ்ணன் என்பவன் கடைசி காலத்தில் ஒரு காட்டில் ஒரு வேடனால் கொல்லப்பட்டு அழுவாரற்று செத்து நாறிக் கிடந்ததாகவுள்ள விஷயங்களை அறிந்திருந்தால் இம்மாதிரி காரியத்திற்காக ஒருவரை இழிகுணம் என்றும், மதியீனம் என்றும் எழுத நியாயம் கிடைத்திருக்காது என்போம். ஆனாலும் நம்முடைய இந்த சமாதானமெல்லாம் 'தமிழ்நாடு' பத்திரிகைக்கல்ல. ஏனெனில் அது பழய குப்பையை தேடிப்பார்த்து குற்றங் கள் கண்டுபிடிக்கின்ற வேலையில் முனைந்து இருக்கின்றது. ஆதலால் அதற்கு இச்சமாதானங்கள் ஒரு உணர்ச்சியையும் கொடுக்காது என்பது நமக்குத் தெரியும். ஆனால் அதை கண்ணுற்றவர்கள் ஏமாறாதிருக்கவே இதை எழுதுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 25.12.1927**



RangaRakes tamilnavarasam.com

## ஸ்ரீ R.K. ஷண்முகம் செட்டியார் கவனிப்பாரா?

காங்கிரஸ் கிரீட் என்னும் முக்கிய கொள்கையில் ஜாதி வித்தியாசத்தை ஒழிப்பதையும் ஒரு கொள்கையாகத் திருத்த வேண்டு மென்று காங்கிரசுக்கு சிபார்சு செய்வதாக சேலம் மகாநாட்டில் தீர்மானித்த தீர்மானத்தை காங்கிரசில் பிரேரேபிப்பதாய் ஸ்ரீமான் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் ஒப்புக் கொண்ட படி காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் அவர் பிரேரேபணை கொண்டு வருவாரா? என்று கேட்கின்றோம்.

இப்பிரேரேபணை காங்கிரசில் நிறைவேறாது என்பது நமக்குத் தெரிந்திருந்தாலும், நிறைவேறினாலும் அதனாலேயே பிரமாதமான பலன் ஏற்பட்டுவிடாது என்பது உறுதியானாலும் மக்களுக்குள் சமத்துவம் ஏற்பட வேண்டியது காங்கிரசின் நோக்கமல்ல என்பதையும், சுயராஜ்யம், சுயராஜ்யம் என்று சொல்லி படித்தவர்கள் உத்தியோகம் பெறவேண்டியதுதான் அதன் நோக்கம் என்பதையும் ருஜுவாக்க இதுவும் ஒரு சந்தர்ப்பமாகுமே என்கின்ற ஆசையால்தான் இதை ஸ்ரீமான் செட்டியார் அவர்களுக்கு ஞாபகமூட்டி கவனிக்கும்படி வேண்டுகின்றோம்.

**குடி அரசு - வேண்டுகோள் - 25.12.1927**

## அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அதைரியம் | - | பயம் |
| அத்தியந்த | - | நம்பகமான |
| அவிவேகம் | - | அறிவற்று, பகுத்தறிவு இன்றி |
| அனாமத்து | - | தனி, தனி நிலை, வேறு நிலை |
| அஸ்வார்சமாய் | - | ஈடுபாடின்றி |
| ஆவலாதி | - | குறை கூறுகை |
| ஆஸ்பதமான | - | இடமான, பற்றுக்கோடான |
| கலர | - | கலந்துகொள்ள, கலந்து வாழ |
| கொம்பு தம்பட்டம் | - | தாரை தப்பட்டை |
| சிலாசாசனம் | - | கல்வெட்டு |
| சுசீலமாக | - | நற்பண்புடன் |
| தத்துக்கள் | - | தடைகள் |
| துராக்கிரகம் துர்ராக்கிரகம் | - | வீண்பகை, வீணாசை, பேராசை |
| துரந்தரர்கள் | - | பொறுப்பாளர்கள், தாளாளர்கள் |
| நியமம் | - | சமயக் கடைமை, நன்னெறி |
| பரியந்தம் | - | அதுவரை, எல்லை |
| பால்யை | - | இளம்பெண் |
| பிரக்யாதி | - | நன்கு அறியப்படுதல், கீர்த்தி, |
| பிரீதி | - | விருப்பம், விழைவு |
| மனக்கிலேசம் | - | மனக்கலக்கம், துயரம் |
| ஜன்மிகள் | - | நிலக்கிழார்கள், ஜமீன்தார்கள் |

# குடி அரசு

# 1928-1

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 6


## பெரியார் திராவிடர் கழகம்

29 இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்
சென்னை - 600 041


# காங்கிரஸ் என்னும் ஏமாற்றுந் திருவிழாவின் முடிவு

சென்ற வாரம் சென்னையில் ஏமாற்றுந் திருவிழா என்பதாகப் பெயரிட்டு, தலையங்க மெழுதியிருந்தோம். இவ்வாரம் அத்திருவிழா முடிந்து விட்டதால் அதைப்பற்றி சிலவார்த்தைகள் கூறுவோம்.

நாம் சென்ற வாரம் கூறியபடியே காங்கிரஸ் என்பது பாமர மக்களை படித்த கூட்டத்தார் ஏமாற்றுவதற்கென்று ஏற்படுத்திக் கொண்ட ஸ்தாபனம் என்றும், அதிலும் அப்படித்த கூட்டத்தார் என்பதில் முக்கியமானவர்கள் நமது தென்னாட்டுப் பார்ப்பனர்களே என்றும் அவர்கள் இஷ்டப்படி யெல்லாம் ஏறக்குறைய காங்கிரஸ் ஆரம்பமான காலம் முதற் கொண்டு ஆட்டப்பட்டு வந்திருக்கின்றது என்றும், காங்கிரஸ் என்பதாக ஒன்று நமது நாட்டில் ஏற்பட்ட பிறகே, மக்களின் ஒற்றுமை குலையவும், ஒழுக்கங் கெடவும், ஏழை மக்களுக்குப் பலவழிகளிலும் கஷ்டம் ஏற்படவுமான காரியங்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்ற தென்றும் எழுதி வந்திருக் கின்றோம்.

நிற்க, இவ்வருஷம் சென்னையில் நடந்த காங்கிரசானது, காங்கிர சையும், பார்ப்பனர்களையும் பற்றி நாம் இவ்வளவு காலம் எழுதி வந்ததை யும், பேசி வந்ததையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் மெய்ப்பித்து விட்டது என்றே சொல்லுவோம்.

இக்காங்கிரசில் நிறைவேற்றி இருக்கும் தீர்மானங்கள் முக்கியமானது என்று சொல்லத்தக்கது என்பவைகள் நான்கே என்று சொல்லலாம்.அதாவது ஒன்று, ராயல் கமிஷன் பகிஷ்காரம். இரண்டு நமது நாடு வெள்ளைக்காரர்கள் சம்மந்தமில்லாமல் பூரண சுதந்திரம் அடைய வேண்டும் என்பது, மூன்றா வது பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்காரம் செய்ய வேண்டும் என்பது. நான்காவது இந்து முஸ்லீம் ஒற்றுமை ஆகியவைகளாம். இவற்றில் முதல் இரண்டு தீர்மானங்களின் புரட்டுக்களைப் பற்றியும், திராவிடன் பத்திரிகையில் வரிசையாக காணப்பட்ட இரண்டு தலையங்கங்களையும் காங்கிரஸ் தீர்மானங்கள் என்னும் தலைப்பில் இதில் பிரசுரித்திருக்கின்றோம். ஆதலால்


RangaRakes
tamilnavarasam.com

நேயர்கள் தயவு செய்து அவற்றைக் கவனமாய் படித்துப் பார்க்கும் படி வேண்டுகின்றோம். மற்ற இரண்டு தீர்மானங்களைப் பற்றிய புரட்டுகளை அடுத்த வாரம் வெளியிடுவோம்.

தமிழ்நாட்டில் உள்ள அநேகப் பத்திரிகைகளில் 'திராவிடன்', 'குடி அரசு' என்கின்ற இரண்டு பத்திரிகைகள் நீங்கலாக, அநேகமாய் மற்ற பத்திரிகைகள் எல்லாம் ஒரே மாதிரியாகக் காங்கிரசைப் புகழ்ந்தும், தீர்மா னங்களைப் பாராட்டியும் எழுதி வந்திருக்கின்றனவே அல்லாமல், ஒன்றா வது உண்மையை வெளியிடவில்லை என்பதைத் தைரியமாய்ச் சொல்லு வோம். ஏனிப்படிச் சொல்லுகிறோமென்றால் அநேக பத்திரிகைகள் உண்மையை அறிந்திருந்தும், வேண்டுமென்றே மறைத்து வைத்து தங்கள் தங்கள் சுய நலத்தையே பிரதானமாகக் கொண்டு பார்ப்பனர்களைப் பின் பற்றுகின்றன என்கிற முடிவினாலேயே எழுதுகின்றோம்.

தவிர, எவ்வளவு தான் தமிழ்நாட்டுப் பத்திராதிபர்கள் உண்மை களை மறைத்து மறைத்துப் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாய் எழுதி வந்தி ருந்தாலும், இவ்வருஷம் நடந்த காங்கிரசின் மூலமாகத் தமிழ் நாட்டின் எல்லா பக்கங்களிலிருந்தும் சென்னைக்கு வந்திருந்த பிரதிநிதிகளில் அனேகர் உண்மையை உணர்ந்து கொண்டார்கள் என்றே சொல்லுவோம்.

எல்லா பத்திரிகைகளையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டு விட் டோம் என்கின்ற தைரியத்தாலோ, அல்லது நமக்கு விரோதமாய் எந்தப் பத்திரிக்கைகாரனும் எழுதிவிட்டுப் பிழைத்திருக்க முடியாது என்கின்ற ஆணவத் தினாலோ தலைகால் தெரியாமல் ஆடினதினால் உண்மை வெளி யாக நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

காங்கிரசில் நிறைவேற்றப்பட்டதாய் சொல்லப்பட்ட மேற்படி தீர்மா னங்களில் ஒன்றாவது யோக்கியமாய் நிறைவேற்றப்படவில்லை என்றும், எல்லாம் தீர்மானமாக்கப்பட்டதாகக் குறித்துக் கொள்ளப்பட்ட தென்றும், ஆக்ஷேபணைகளையும், ஆக்ஷேபிப்பவர்களையும் சூழ்ச்சியினாலும், தந்திரத்தினாலும், ஒழுக்கமற்ற நடவடிக்கையினாலும் நிராகரித்தும், மறைத்து விட்டார்கள் என்றும் தெரிந்து விட்டது.

இவ்வருஷத்திய காங்கிரஸ் டெலிகேட்டுகள் எல்லாம் கணக்குப் பார்த்தால் 100-க்கு 76 பேர்கள் சென்னை மாகாணத்துக்காரர்களேயாவார்கள். பஞ்சாப்புக்கும், பர்மாவுக்கும் மற்ற மாகாணங்களுக்குமாக சென்னைப் பார்ப்பனர்களே நியமனம் செய்யப்பட்டார்கள். எந்தெந்த மாகாணங்க ளிலிருந்து பிரதிநிதிகள் வரவில்லையோ அவற்றிற்கெல்லாம் அநேகமாய் சென்னைக்காரர்களே பர்த்தி செய்யப்பட்டார்கள். அவ்வளவு தூரம் பர்த்தி செய்ய எப்படி சவுகரியம் கிடைத்ததென்றால் பிரதிநிதிக் கட்டணம் ஒரே ரூபா யாகப் போய்விட்டதாலும் ஒருவர் ஒரு ரூபாய் கொடுத்து பிரதி நிதியாகப் பதிவு செய்து கொண்டு டிக்கட் பெற்றுவிட்டால் அதை 10 அல்லது 15 ரூபாய்க்கு விற்க சௌகரியமிருந்ததாலும் ஏறக்குறைய எல்லா ஸ்தாப னங்களையும் பூர்த்தி செய்ய சௌகரியமேற்பட்டது. இதனால் காங்கிரஸ் பிரதிநிதிகள் என்பவர்கள் ஒரு ரூபாய்க்கு வாங்கின டிக்கட்டை 10 ரூபாய்க்கு விற்கலாம் என்கின்ற யோகசாலிகளாகவே இருக்கவும் இந்த டிக்கட்டை வாங்கிக் கொண்டு உள்ளே போனவர்கள் பேசாமல் வேடிக்கை பார்த்து விட்டும் வந்ததல்லாமல் தீர்மானங்களைப்பற்றி யாதொரு காரியமும் செய்ய யோக்கியதை அற்றவர்களாகவுமே போய்விட்டார்கள்.

தவிர, காங்கிரசில் தீர்மானிக்க என்று அநேகர் அநேக தீர்மானங்கள் அனுப்பியிருந்தார்கள். அத்தீர்மானங்களை வெளியில் கொண்டுவராமல் இருப்பதற்காக எவ்வளவு தூரம் அக்கிரமங்கள் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து தங்களுக்கு வேண்டாத தீர்மானங்களையெல்லாம் அடியோடு மறைத்து விட்டார்கள்.

ஸ்ரீமான் R.K. ஷண்முகம் செட்டியார் அவர்கள் ஒரு தீர்மானம் அனுப்பியிருந்தார். அது காங்கிரசின் லக்ஷியத்தில் மக்கள் சமத்துவமும் ஒன்றாய் இருக்க வேண்டும் என்கிற தத்துவம் கொண்டது. அதை எத்தனையோ பேர் எத்தனையோ கஷ்டப்பட்டுப் பார்த்தும் வெளிக்குக் கொண்டுவரவே முடியவே இல்லை. தீர்மானம் அனுப்பிய ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார் இந்திய சட்டசபை மெம்பர். காங்கிரஸ் கக்ஷிக்கு கொறடா என்று சொல்லும் முக்கிய பதவி பெற்றவர். அவர் வடநாட்டுத் தலைவர்களையெல்லாம் நன்றாய் அறிந்தவர். இவ்வளவும் அல்லாமல் பார்ப்பனர் அல்லாதார்களுக்கு விரோதமாக பார்ப்பனர்களுடன் கூடிக் கொண்டு ஊர் ஊராய்த் திரிந்து, பார்ப்பனர்களுக்கு அனுகூலமாய் ஓட்டு வாங்கிக் கொடுத்தவர் தமிழ் நாட்டு காங்கிரஸ் கமிட்டிக்கு காரியதரிசியாய் இருந்தவர்.

இவ்வளவு யோக்கியதை உள்ளவர் எவ்வளவோ முக்கியமான தீர் மானம் அனுப்பி அது வெளியில் வரவில்லையானால் வேறு யாரால் என்ன காரியம் நடத்த முடியும்? ஸ்ரீ ஷண்முகம் செட்டியார் இத்தீர்மானத்தை வெளிக்குக் கொண்டுவர டாக்டர் அன்சாரியிடமும் ஸ்ரீமான் கோஸ்வாமி யிடமும் மற்றும் பல தலைவர்களிடமும் சிபார்சு பிடித்தும் பார்த்தார். மற்றும் பலர் சிபார்சு செய்தும் பார்த்தார்கள். ஒரு பலனும் ஏற்படாமல் நரி தின்ற கோழி கூவ முடியுமா என்பது போல் மறைந்து விட்டது.

மற்ற தீர்மானங்கள் ஒழுங்கு முறைகளைக் கூட கவனியாமல் நிறை வேற்றப்பட்டிருக்கின்றன. எனவே இந்த காங்கிரசு யாருடைய காங்கிரசு என்பதில் இனியும் அறிவாளிகளுக்கு சந்தேகமிருக்க நியாயமிருக்காது.


RangaRakes tamilnavarasam.com

தவிர நிர்மாண திட்டங்களைப் பற்றியாவது மற்றும் வேறு அவசிய மான காரியங்களைப் பற்றியாவது ஒரு வார்த்தைகூடப் பந்தலில் நிகழவே நேரமில்லை!

உபசரணைத் தலைவர் உபன்யாசத்திலும் வகுப்பு வேற்றுமை, பிராமணர் - பிராமணரல்லாதார் பிரச்சனை என்பவைகளைப் பற்றி பேசினவர்கள் அதை ஒழிக்கும் விஷயத்தில் கடுகளவு முயற்சியும் எடுத்துக் கொள்ளவேயில்லை. காங்கிரஸ் என்பதை வருணாசிரம மகாநாடு என்பது போலவே நினைத்து எல்லா இடங்களிலும் உள்ள காங்கிரஸ் ஸ்தாபனங் களையும் அக்கிரமமான வழிகளில் தங்கள் அடிமையாக்கி எல்லா ஊர்க ளிலும் உள்ள பார்ப்பனர்களையே பிரதிநிதிகளாக்கி அவர்களையே கொட்ட கைக்குள் நிரப்பி தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொண்டார்கள் என்பதை மறைக்க முடியாது.

பார்ப்பனரல்லாதார்களில் காங்கிரசுக்குப் போன முக்கியஸ்தர்கள் யார் என்றோ, அல்லது அங்கு யாருக்கு செல்வாக்கு இருந்தது என்றோ பார்ப்போமானால் ஸ்ரீமான்கள் முத்துரங்க முதலியார், ஒ. கந்தசாமி செட்டி யார், வரதராஜுலு நாயுடு, குப்புசாமி முதலியார், அண்ணாமலைப் பிள்ளை முதலிய வெகு சிலரே என்றே சொல்லவேண்டும். அதுவும் காங்கிரசுக்கு வேண்டிய கூட்டம் வந்துவிட்டது என்கின்ற எண்ணம் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்டவுடன் ஸ்ரீமான்கள் வரதராஜுலுவையும், குப்புசாமி முதலியார், அண்ணாமலைப் பிள்ளை போன்றவர்களையும் கொஞ்சம் கூட லக்ஷியம் செய்யவே இல்லை. அவர்கள் பந்தலுக்கு வெளியில் கூட்டம் போட்டு இந்த பார்ப்பனத் தலைவர்களை மானங்கெடப் பேசிக் கொண்டே இருந்தார்கள். வட நாட்டிலிருந்து வந்தவர்களுக்குத் தமிழ் தெரியாது என்கின்ற தைரியத் தால் இதைப்பற்றி பார்ப்பனர்கள் ஒரு சிறிதுகூட கவலை செலுத்தவே இல்லை.

ஆகவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டில் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு விரோதமாக எவ்வளவு தூரம் வேலை செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் வேலை செய்யவே போகின் றார்கள். அதற்கு அனுகூலமாக இக்காங்கிரசின் பலனாய் பதினாயிரக் கணக்கான ரூபாய் மீதியாகும் என்பதாகச் சொல்லிக்கொள்ளப் படுகின்றது.

இந்தப் பணங்களை வழக்கம்போல் பல காலிகளுக்குக் கொடுத்து எவ்வளவு தூரம் நம்மீது அவர்களை உசுப்படுத்திவிட முடியுமோ அவ்வளவு தூரம் உசுப்படுத்திவிட்டு பெருத்த ஆர்ப்பாட்டம் செய்யப் போகிறார்கள் என்பது மாத்திரம் உறுதி. அதற்குச் சாக்காக சொல்லிக் கொள்ள ராயல் கமிஷன் பஹிஷ்காரப் பிரசாரம் என்பதாக ஒன்றைத் தீர்மானித்துக் கொண்டாய் விட்டது.



இதையெல்லாம் விட பார்ப்பனர்களுக்கு மற்றொரு சவுகரியமும் என்னவென்றால் பார்ப்பனர்களின் கால் பெருவிரலடியில் கிடக்கின்றது என்று சொல்லத்தக்கதான தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும் அதன் நிர்வாகக் கமிட்டியுமே ஆகும்.

நிர்வாகக் கமிட்டியைப்பற்றி நாம் சொல்லவே வேண்டியதில்லை. உதைத்த காலுக்கு முத்தம் கொடுக்கும் பெருந்தன்மை வாய்ந்த ஸ்ரீமான்கள் கந்தசாமி செட்டியார், ஜார்ஜ் ஜோசப், வரதராஜுலு போன்ற மணிகள் பார்ப்பனர்கள் இஷ்டம் போல் நடக்க வேண்டுமென்கின்ற அவசியத்தோடு பார்ப்பனரல்லாதார் கட்சியை வைவதன் மூலமாகவே பெருமை பெற வேண்டும், வாழ வேண்டும் என்கின்ற தத்துவத்தை அடிப்படையாய் கொண்டவர்கள். அது மாத்திரமல்லாமல் தாங்கள் ஒதுங்குவதற்கு இதைத் தவிர வேறு இடமில்லை என்றும் முடிவு செய்துகொண்டும் இருக்கின்றவர் கள். ஆகவே காங்கிரசும் காங்கிரசில் மிஞ்சிய பணமும் காங்கிரசில் சேர்ந்த கனவான்களும் பார்ப்பனரல்லாதார்களின் கக்ஷிக்கும் முன்னேற்றத்திற்கும் அவர்கள் சுயமரியாதைக்கும் எமன்களாகத் தோன்றியிருக்கின்றது என்று சொல்லி இதை முடிப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று சொல்லு வோம்.

**குடி அரசு - தலையங்கம் - 01.01.1928**



RangaRakes tamilnavarasam.com

# மற்ற மகாநாடுகள்

## ஆசாரத் திருத்த மகாநாடு

இதற்கு ஸ்ரீமான் கே. நடராஜன் அக்கிராசனாதிபதி – இவர் வாயால் வெகு வேகமாகப் பேசிவிட்டு காரியத்தில் ஒன்றும் செய்யக் கூடாது என்பதையே கருத்தில் வைத்துத் தலைமை உபன்யாசம் செய்தார். இம்மகா நாட்டுக்கு காரியதரிசி ஸ்ரீ கந்தசாமி செட்டியார். இவர் ஜஸ்டிஸ் கட்சியையும் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கத்தையும் சேர்ந்தவர்கள் ஆசாரத் திருத்த மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளாக வரக்கூடாது என்றும், மீறி வந்தால் அவர்களுக்குப் பிரதிநிதிச் சீட்டு கொடுக்கமுடியாது என்றும் காரிய தரிசி ஹோதாவில் எழுதிவிட்டார். அக்கடிதம் சமீபத்தில் பிரசுரமாகும்.

மகாநாட்டுக்குச் சென்ற ஸ்ரீமான் ஆரியா அவர்களை பார்ப்பனர்கள் அவமானப்படுத்தினார்கள் – இதை கண்டிக்க அக்கிராசனாதிபதிக்கு சக்தியோ சௌகரியமோ சம்மதமோ இல்லாமல் போனதோடு தந்திரமாக சமாதானம் சொல்ல முன்வந்தார்.

## சமஸ்தானப் பிரஜைகள் மகாநாடு

இதற்கு ஸ்ரீ. சீனிவாசய்யங்கார் தலைவர். ஸ்ரீமான். சத்தியமூர்த்தி உபசரணைத் தலைவர். இவர்கள் தீர்மானம் எழுதி ஓட்டு எண்ணாமலே நிறைவேறி விட்டதாக தீர்மானம் செய்தவர்கள் – ஒரு மாதத்திற்குமுன் ஒரு மகாநாடு கூடி இருக்க இப்போது மேற்படி இரண்டு பேர் சேர்ந்து மகாநாடாக்கித் தீர்மானம் செய்ததாக பேர் செய்துவிட்டார்கள் – இதனால், சுதேச சமஸ்தானங்களிலும் பணம் கொள்ளை அடிக்கலாம், தங்கள் இனத்தாருக்கு உத்தியோகம் சம்பாதித்துக் கொடுக்கலாம் என்பதுதான் மகாநாட்டின் முக்கிய நோக்கம் என்று சொல்ல வேண்டும்.

## பத்திராதிபர்கள் மகாநாடு

இது ஸ்ரீமான் வரதராஜுலு பத்திரிகை விற்க வாடகைக்கு வாங்கிய ஒரு கை அகல இடத்தில் திடீரென்று கூட்டப்பட்டது. இதில் என்ன நடந்தது, எத்தனை பேருக்கு அங்கு இடமிருந்தது, யார் யார் வந்தார்கள் என்பவைகளைப் பற்றி பேசாமல் இருப்பதே எல்லோருக்கும் நன்மையாகும், இல்லாவிட்டால் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, சீனிவாச அய்யங்கார் மகாநாடுகளுக்கு யோக்கியதை வந்துவிடும்.

இதுபோல இன்னும் எத்தனையோ மகாநாடுகள் ஒவ்வொன்றும் கேட்கக் கேட்க அற்புதமாகத்தான் இருக்கும். இவர்களையெல்லாம் குற்றம் சொல்ல நாம் இவைகளை எழுத முன்வரவில்லை; நமது நிலையை விளக்கவே எழுதினோம்.

## ஜஸ்டிஸ் கக்ஷி

வடநாட்டில் இருந்து வந்த முக்கிய தலைவர்கள் என்போர்கள் எல்லோரும் கக்ஷித் தலைவர் பனகால் ராஜா அவர்களைப் பார்த்து பேசினார்கள். பேசினதின் முக்கிய தத்துவம் என்னமாய் இருக்கலாம் என்றால், பஹிஷ்கார வியாபாரத்தில் நீங்களும் ஒரு கூட்டாகச் சேர்ந்து கொள்ளுங்கள். வருகிற லாபத்தில் உங்களுக்கும் ஒரு பங்கு கொடுக்கின்றோம் என்றுதான் சொல்லி இருப்பார்கள். இதைவிட வேறு பேசத்தகுந்த காரியம் எதுவுமிருப்பதாக நாம் நினைக்கவில்லை. இதை நம்பி பனகால் ராஜாவும் காங்கிரசுக்கு போய் இருந்தார்; கொட்டகையில் இருந்த ஜனங்கள் இவரைப் பார்த்து செய்த ஆராவாரம் அந்த கொட்டகையில் ஸ்ரீ காந்தி முதல் யாருக்கும் செய்யவில்லை என்று அநேகர் சொன்னார்கள். இதைப் பார்த்த ராஜா சாயபுக்கு காங்கிரசில் சேர்ந்தால் தேவலாம் என்று தோன்றுவதில் அதிசயமில்லை.

## காங்கிரஸ் வரவேற்புத் தலைவர்

வரவேற்புத் தலைவரை, வடநாட்டு தலைவர்களில் யாருக்குமே யாரும் அறிமுகப்படுத்தி வைக்கவில்லையாம். இதில் ஒன்றும் அதிசயமிருப்பதாக நினைக்க இடமில்லை.

## காங்கிரஸ் சாப்பாடு

வேளை ஒன்றுக்கு எட்டணா, பத்து அணா என்பதாக வாங்கிக் கொண்டு நாலணா பெறக் கூடிய சாப்பாடு கூடப் போடவில்லை என்று எல்லோரும் புகார் சொன்னார்கள்.

## பத்திராதிபர்களுக்கு சௌகரியம்

'இந்து,' 'சுதேசமித்திரன்' இரண்டு போக மற்றவர்களைப் பற்றி யாரும் கவலைப்படவில்லையென்றும் அவர்களுக்கு போதிய சௌகரியம் செய்யவில்லை என்றுமே புகார்.



RangaRakes
tamilnavarasam.com

## தீர்மானங்களைப் பற்றி பேசியவர்கள்

பிரிட்டிஷ் சாமான்களை பஹீஷ்கரிக்க வேண்டும் என்கின்ற தீர்மானத் தைப்பற்றி பேசியவர்களில் முக்கியமானவர் ஒரு பத்திரிகைக்கு பிரிட்டிஷ் சாமான்களுக்கு விளம்பரம் சம்பாதித்துக் கொடுக்கும் கனவானாம் - ஆகவே தீர்மானங்களுக்கு எவ்வளவு தூரம் எதிரிகள் மதிப்பு கொடுப்பார்கள் என்பது இதிலிருந்தே விளங்கும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 01.01.1928**



# கற்பு

**- சித்திரபுத்திரன்**

கற்பு என்கின்ற வார்த்தையானது மனித சமூகத்தில் சரிபகுதியான எண்ணிக்கையுள்ள பெண்களை அடிமைப்படுத்தி வைப்பதற்காக மாத்திரமே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது என்கின்ற தத்துவத்தின் மேல் இதை எழுதுகின்றேன்.

கற்பு என்கின்ற வார்த்தையை பகுபதமாக்கி பார்ப்போமானால் கல் என்பதிலிருந்து வந்ததாகவும் அதாவது படி - படிப்பு என்பது போல் கல் - கற்பு என்கின்ற இலக்கணம் சொல்லப்படுகிறது. அன்றியும் "கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை" என்கின்ற வாக்கியப்படி பார்த்தால் கற்பு என்பது சொல் தவறாமை. அதாவது நாணயம், சத்தியம் என்கின்ற கருத்து கொண்டதாக இருக்கின்றது.

அதை பகாப்பதமாக வைத்துப் பார்த்தால் 'மகளிர் நிறை' என்று காணப்படுகின்றது. இந்த இடத்தில் மகளிர் என்கின்ற பெண்களையே குறிக்கும் பதம் எப்படி சம்மந்தப்பட்டது என்பது விளங்கவில்லை. நிறை என்கின்ற சொல்லுக்கு பொருள் பார்த்தால் அழிவின்மை, உறுதிப்பாடு, கற்பு என்கின்ற வார்த்தைகள் காணப்படுகின்றது. ஆகவே கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்மந்தப்பட்டது என்பதற்கு ஆதாரம் கிடைக்கா விட்டாலும் அழிவில்லாதது, உறுதி உடையது என்கின்ற பொருள் கிடைக்கின்றது.

அழிவில்லாதது என்கின்ற வார்த்தைக்கு கிரமமான கருத்துப் பார்க்கும்போது இந்த இடத்தில் சுத்தம் அதாவது கெடாதது என்பதாகத்தான் கொள்ளலாம். இந்த சுத்தம் என்கின்ற வார்த்தையும் கெடாதது என்கின்ற கருத்தில்தான் ஆங்கிலத்திலும் காணப்படுகிறபடி அதாவது சேஸ்டிடி (Chastity) என்கின்ற வார்த்தைப்படி பார்த்தால் வர்ஜினிட்டி (Verginity) என்ற பொருள் என்பதும் அதை அந்த உணர்ச்சிப்படியும் பார்த்தால் இது ஆணுக்கென்றோ பெண்ணுக்கு என்றோ சொல்லாமல் பொதுவாக மனித சமூகத்திற்கே, எவ்வித ஆண் பெண் புணர்ச்சி சம்மந்தமே சிறிதும் இல்லாத தன்மைக்கே உபயோகப்படுத்தி இருக்கின்றது. ஆகவே கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்மந்தப்பட்டதல்ல என்பதும் அதுவும் ஆணோ



RangaRakes tamilnavarasam.com

பெண்ணோ ஒரு தடவை கலந்த பிறகு எவ்வளவு சுத்தமாயிருந்தாலும் கற்பு அல்ல என்கின்ற கருத்து கொள்ளக் கூடியதாகின்றது. ஆனால் ஆரிய பாஷையில் பார்க்கும்போது மாத்திரம் கற்பு என்கின்ற பதத்திற்கு 'பதிவிரதை' என்கின்ற பொருள் கொள்ளப்படுகின்றது. இந்த இடத்தில்தான் கற்பு என்கின்ற வார்த்தைக்கு அடிமைக் கருத்து நுழைக்கப்படுகின்றது என்பது எனதபிப்பிராயம். அதாவது பதியை கடவுளாகக் கொண்டவள், பதிக்கு அடிமையாய் இருப்பதையே விரதமாகக் கொண்டவள் எனப் பொருள் கொடுத்திருப்பதுடன் பதி என்கின்ற வார்த்தைக்கு அதிகாரி, எஜமான், தலைவன் என்கின்ற பொருள்கள் இருப்பதால் அடிமைத் தன்மையை இவ்வார்த்தைகள் பலப்படுத்துகின்றன. ஆனால் தலைவி என்ற பதத்திற்கும் நாயகி என்ற பதத்திற்கும் மனைவி என்ற பொருள் குறிக்கப்பட்டிருந்தாலும் அது காதல் கொண்ட நிலையில் மாத்திரம் ஆணையும் பெண்ணையும் குறிக்கின்றதேயொழிய வாழ்க்கையில் கட்டுப்பட்ட பெண்களுக்கு தலைவி என்கின்ற வார்த்தை அதன் உண்மைக் கருத்துடன் வழங்கப்படுவதில்லை. நாயகன் நாயகி என்கின்ற சமத்துவ முள்ள பதங்களும், கதைகளிலும் புராணங்களிலும் காதல்களை உணர்த்தும் நிலைகளுக்கே மிகுதியும் வழங்கப்படுகின்றது. ஆகவே காமத்தையும் காதலையும் குறிக்குங் காலங்களில் சமத்துவப் பொருள் கொண்ட நாயகர் நாயகி, தலைவர் தலைவி என்கின்ற வார்த்தைகளை உபயோகித்துவிட்டு, கற்பு என்கின்ற நிலைக்கு வரும்போது அதை பெண்களுக்கு மாத்திரம் சம்மந்தப்படுத்தி, பதி ஆகிய எஜமானனையே கடவுளாகக் கொள்ள வேண்டுமென்கின்ற கருத்து கொண்டிருக்கின்றது. இந்த இடத்தில் நமது திருவள்ளுவரின் நிலைமையும் எனக்கு சற்று மயக்கத்தைத் தருகின்றது.

அதாவது, குறளில் வாழ்க்கைத் துணைநலத்தைப் பற்றி சொல்ல வந்த 6-ஆம் அத்தியாயத்திலும் பெண் வழிச் சேரல் என்பதைப்பற்றி சொல்ல வந்த 91-வது அத்தியாயத்திலும் மற்றும் சில தனி இடங்களிலும் பெண்கள் விஷயத்தில் மிக்க அடிமைத் தன்மையையும் தாழ்ந்த தன்மையையும் புகுத்தப்பட்டிருப்பதாகவே எண்ணக்கிடக்கின்றது. தெய்வத்தைத் தொழாமல் தன் கொழுநனாகிய தன் தலைவனைத் தொழுகின்றவள் மழையைப் பெய்யென்றால் பெய்யும் என்றும், தன்னைக் கொண்டவன் என்றும் இம் மாதிரியான பல தாழ்த்தத் தகுந்த கருத்து கொண்ட வாசகங்கள் காணப் படுகின்றன. இது விஷயத்தில் மாறுபட்ட அபிப்பிராயம் கொள்ளுவோர், மேல் கண்ட இரண்டு அத்தியாயங்களையும் 20 குறள்களையும் உரைகளைக் கவனியாமல் மூலத்தை மாத்திரம் கவனிக்கும்படி வேண்டுகிறேன். அப்படிப் பார்த்து பிறகு இந்த இரண்டு அதிகாரங்கள் அதாவது வாழ்க்கைத் துணை நல அதிகாரமும், பெண்வழிச் சேரல் அதிகாரமும் குற்றமற்றது என்பதாக யார் வந்து எவ்வளவு தூரம் வாதிப்பதானாலும் கடைசியாக, திருவள்ளுவர் ஒரு ஆணாயில்லாமல் பெண்ணாயிருந்து இக்குறள்களை எழுதியிருப்



பாரானால் இம்மாதிரி கருத்துக்களை காட்டியிருப்பாரா? என்பதையாவது கவனிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். அது போலவே பெண்களைப் பற்றிய தர்ம சாஸ்திரங்கள் என்பதும் பெண்களைப் பற்றிய நீதி நூல்கள் என்பதும், பெண்களால் எழுதப்பட்டிருக்குமானாலும் அல்லது கற்பு என் கின்ற வார்த்தைக்குப் பெண்கள் வியாக்கியானம் எழுத ஏற்பட்டிருந்தாலும் கற்பு என்பதற்கு பதிவிரதம் என்கின்ற கருத்தை எழுதியிருப்பார்களா என்பதையும் யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கற்பு என்பதற்கு பதிவிரதம் என்று எழுதிவிட்டதின் பலனாலும் பெண்களை விட ஆண்கள் உடல் வலி கொண்டவர்களானதினாலும் பெண்கள் அடிமையாவதற்கும் புருஷர்கள் மூர்க்கர்களாகி கற்பு என்பது தங்களுக்கு இல்லையென்று நினைப்பதற்கும் அனுகூலம் ஏற்பட்டதே தவிர வேறில்லை.

தவிர, புருஷர்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க நமது பாஷை களில் தனி வார்த்தைகளே காணாமல் மறைபட்டுக் கிடப்பதற்கும் காரணம் ஆண்களின் ஆதிக்கமே தவிர வேறில்லை.

இந்த விஷயத்தில் உலகத்தில் இன்ன நாடோ, இன்ன மதமோ, இன்ன சமூகமோ யோக்கியமாய் நடந்து கொண்டிருப்பதாகச் சொல்ல முடியாது. உதாரணமாக ஐரோப்பிய தேசத்திலும் பெண்களுக்கு பலவித சுதந் திரங்கள் இருப்பதுபோல் காணப்பட்டாலும் புருஷன் பெண்சாதி என்பதற் காக ஏற்பட்ட பதங்களிலேயே உயர்வு தாழ்வு கருத்துகள் நுழைக்கப்பட்டி ருப்பதுடன் சட்டங்களும் புருஷனுக்கு அடங்கி நடக்க வேண்டியதாகவே ஏற்பட்டிருக்கிறது.

துருக்கி நாட்டிலும் மகமதிய சமூகத்திலும் படுதா என்றும், கோஷா என்றும் அதாவது பெண்கள் அறைக்குள் இருக்க வேண்டியவர்கள் என்றும், முகத்தை மூடிக் கொண்டு வெளியில் போக வேண்டியவர்கள் என்றும் ஏற்படுத்தப்பட்ட கொள்கையும், புருஷன் பல பெண்களை மணக்கலாம், பெண்கள் ஏக காலத்தில் ஒரு புருஷனுக்கு மேல் கட்டிக் கொண்டு வாழக் கூடாது என்ற கொள்கையும், நம்நாட்டில் ஒருதடவை புருஷன் பெண் சாதி என்கின்ற சொந்தம் ஏற்பட்டுவிட்டால் அந்தப் பெண்ணுக்கு சாகும் வரைக்கும் வேறு எவ்வித சுதந்திரமும் இல்லை என்றும், புருஷன் பல பெண்களை கட்டிக் கொண்டு அப்பெண்ணின் முன்பாகவே ஒவ்வொரு பெண்ணுடனும் கூடி வாழலாம் என்றும், புருடன் தான் கொண்ட பெண் ணைத் தன்னுடன் இருத்தி வாழவிடாமலும் கூட புருடனை சாப்பாட்டிற்கு மாத்திரம் கேட்கலாமே யொழிய இன்பத்திற்கோ, காதலுக்கோ கட்டுப்படுத்த உரிமை இல்லை என்றும் கட்டுப்பாடு வழங்கப்பட்டு வருகின்றது.



RangaRakes tamilnavarasam.com

இன்னிலை சட்டத்தாலும், மதத்தாலும் மாத்திரம் ஏற்பட்டதென்று சொல்வதிற்கில்லாமல் சமூகமும் ஒப்புக் கொண்டு இந்நிலைக்கு உதவி ஸ்திரீ புரிந்து வருவதினாலும் இது உறம் பெற்று வருகின்றதென்றே சொல்ல வேண்டும். அநேக வருட பழக்க வழக்கங்களால் தாழ்ந்த ஜாதியார் எனப் படுவோர் எப்படி தாங்கள் தாழ்ந்த வகுப்பார் என்பதை ஒப்புக்கொண்டு தாமாகவே கீழ்ப்படியவும், ஒடுங்கவும், விலகவும் முந்துகின்றார்களோ அதுபோலவே பெண்மக்களும் தாங்கள் ஆண்மக்களின் சொத்துக் களென்றும், ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்றும், அவர்களது கோபத்திற்கு ஆளாகக் கூடாதவர்கள் என்றும் நினைத்துக்கொண்டு சுதந் திரத்தில் கவலையற்று இருக்கின்றார்கள். உண்மையான பெண்கள் விடு தலை வேண்டுமானால் ஒருபிறப்புக் கொரு நீதி வழங்கும் நிர்ப்பந்தக் கற்பு முறை ஒழிந்து இரு பிறப்புக்கும் சமமான சுயேச்சைக் கற்பு முறை ஏற்பட வேண்டும். கற்புக்காக காதலற்ற இடத்தைக் கட்டி அழுது கொண்டிருக்கச் செய்யும்படியான நிர்ப்பந்தக் கல்யாணங்கள் ஒழிய வேண்டும்.

கற்புக்காக புருடனின் மிருகச் செயலை பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்கின்ற கொடுமை ஒழிய வேண்டும்.

கற்புக்காக மனத்துள் தோன்றும் உண்மைக் காதலை மறைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்கின்ற கொடுமை ஒழிய வேண்டும்.

எனவே இக்கொடுமைகள் நீங்கின இடத்தில் மாத்திரமே மக்கள் பிறவியில் உண்மைக் கற்பை, இயற்கை கற்பைக் காணலாமே ஒழிய நிர்ப்பந் தங்களாலும் ஒருபிறப்புக் கொரு நீதியாலும், வலிமை கொண்டவன் வலிமை யற்றவனுக்கு எழுதி வைத்த தர்மத்தாலும் ஒருக்காலும் காணமுடியாததுடன் அடிமைக் கற்பைத்தான் காணலாம். அன்றியும் இம்மாதிரியான கொடு மையை விட வெறுக்கத்தக்க காரியம் உலகத்தில் மனித சமூகத்தில் வேறு ஒன்று இருப்பதாக நான் சொல்ல முடியாது.

**குடி அரசு - கட்டுரை - 08.01.1928**



# மூடநம்பிக்கை

## வெள்ளிக்கிழமை விளக்குவைத்த நேரம்

**- சித்திரபுத்திரன்**

**நகை வியாபாரி:-** அய்யா! தாங்கள் என்னிடம் காலையில் காசுமாலை வாங்கி வந்தீர்களே அது தங்களுக்குத் தேவையா? இல்லையா? என்பதை தெரிவித்துவிட்டால் வேறு ஒருவர் வேண்டும் என்று சொல்லி மத்தியானமிருந்து கடையில் காத்துக் கொண்டிருக்கிறார் அவருக்காவது கொடுத்துவிடலாம் என்று வந்திருக்கின்றேன். எனக்குப் பணத்துக்கு மிகவும் அவசரமாயிருப்பதால் தயவு செய்து உடனே தெரிவித்து விடுங்கள்.

**வைதீகர்:-** செட்டியாரே அந்த நகை தேவையில்லை. வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வரும்போது பூனை குறுக்கே போச்சுது, அப்பொழுதே வேண்டியதில்லை என்று தீர்மானித்துவிட்டேன். வீட்டில் பெண்டுகள் பார்த்து மிகவும் ஆசைப்பட்டு மாலையிலுள்ள காசை எண்ணிப் பார்த்தார்கள். அதில் 68 காசுகள் இருந்தது. எட்டு எண்ணிக்கை கொண்டது எதுவும் எங்கள் குடும்பத்திற்கு ஆயி வருவதில்லை. அதனால் அவர்களும் உடனே கீழே போட்டுவிட்டார்கள். ஆனதினால் அது எங்களுக்கு வேண்டியதில்லை.

**நகை வியாபாரி:-** அப்படியானால், தயவு செய்து கொடுத்து விடுங்கள். வேறு ஒருவர் காத்துக் கொண்டிருக்கின்றார்.

**வைதீகர்:-** ஆஹா, கொடுத்துவிடுவதில் எனக்கு ஆக்ஷேபனை யில்லை. காலமே நேரத்தில் வாருங்கள், கொடுத்துவிடுகின்றேன்.

**நகை வியாபாரி:-** அவர் இன்று ராத்திரிக்கு ஊருக்குப் போகின்றவர். ஆனதால் தயவு செய்து இப்பொழுது கொடுத்துவிடுங்கள்.

**வைதீகர்:-** செட்டியாரே, தாங்கள் என்ன நாஸ்தீகராய் இருக்கின் றீர்கள். வெள்ளிக்கிழமை, அதுவும் விளக்கு வைத்த நேரம், இந்த சமயத்தில் நிறைந்த வீட்டிலிருந்து பொன் நகையை வெளியில் கொடுக்கலாமா? அது லக்ஷிமி அல்லவா?



RangaRakes
tamilnavarasam.com

**நகை வியாபாரி:-** என்ன அய்யா! வியாபாரத்திற்காக பெண்டு களுக்கு காட்டிவிட்டு கொண்டுவருகிறேன் என்று எடுத்துக் கொண்டு வந்த நகையை வேறு ஒருவர் அவசரமாகக் கேட்கின்றார்கள் என்று வந்து கேட்டால் வெள்ளிக்கிழமை, விளக்கு வைத்த நேரம் என்கின்றீர்களே, இது என்ன ஒழுங்கு! ஊரார் நகைக்கு நாள் என்ன, நேரம் என்ன என்பது எனக்கு விளங்கவில்லையே.

**வைதீகர்:-** (தனக்குள்ளாகவே 'இந்த இழவு நகையை நாம் ஏன் இந்த மனிதனிடம் வாங்கி வந்தோம்' என்று நினைத்துக் கொண்டு) என் புத்தியை விளக்கு மாற்றால் புடைக்க வேண்டும், உம்ம கடைக்கு வந்ததே பிசகு. தவிரவும் உம்மிடம் நகையை எடுக்கும் போதே மணி பத்தரை இருக்கும், நல்ல ராகு காலத்தில் எடுத்து வந்தேன். அது எப்படியானாலும் கலகமாய்த் தான் தீரும், எனக்கு புத்தி வந்தது. இனி இந்த மாதிரி செய்யமாட்டேன். தயவு செய்து நாளைக்கு வாருங்கள்.

**நகை வியாபாரி:-** இது என்ன அய்யா தமாஷ் செய்கின்றீர்களா என்ன? உங்கள் நகையை யாராவது கேட்டால் நாள் கோள் எல்லாம் பார்த்துக் கொள்ளுங்கள். ஊரார் நகைக்கு இதையெல்லாம் பார்க்கச் சொல்லி உங்க ளுக்கு எவன் புத்தி சொல்லிக் கொடுத்தான். அவனைக் கூட்டிக் கொண்டு வாருங்கள். அவனுக்கு நல்ல புத்தி கற்பிக்கின்றேன். மரியாதையாய் நகையை கொடுங்கள் நேரமாகுது.

**வைதீகர்:-** நீங்கள் 'குடி அரசு' பத்திரிகை கட்சியை சேர்ந்தவர்களா என்ன? நாளையும் கோளையும் சாஸ்திரங்களையும் கேலி செய்கின்றீர்களே, அந்தக் கூட்டத்திற்குத்தான் நல்லது இல்லை, கெட்டது இல்லை. மேல் இல்லை, கீழ் இல்லை, கோவில் இல்லை, குளம் இல்லை, சாஸ்திரம் இல்லை, புராணம் இல்லை, பரையனும் பார்ப்பானும் ஒண்ணு என்று ஆணவம் பிடித்து நாஸ்திகம் பேசிக் கொண்டு திரிகிறார்கள். நீங்களும் அதுபோல பேசுகின்றீர் களே.

**நகைக்காரர்:-** நீரே ரொம்பவும் ஆஸ்திகராயிருந்து கொள்ளும், அதைப் பற்றி நமக்கு கவலையில்லை. மரியாதையாய் நகையைக் கொடுத்து விடும் பவுன்விலை இறங்கப் போகிறது. இன்றைக்கு விற்காவிட்டால் எனக்கு நஷ்டம் வந்துவிடும். வேறு ஒரு ஆசாமியும் மிகவும் ஆசையாய் காத்திருக்கின்றார். இனி தாமதம் செய்யாதீர் இருட்டு ஆகப் போகிறது, சீக்கிரம் எடுத்துக் கொண்டு வாரும்.

**வைதீகர்:-** (வீட்டிற்குள் போய் சம்சாரத்துடன் யோசிக்கின்றார்) என்ன, செட்டியார் நகை கேழ்க்கின்றார்.



**அம்மா:** இன்றைக்கு வெள்ளிக்கிழமை, விளக்கு வைத்த நேரம், லக்ஷிமியை வீட்டைவிட்டு வெளியில் கொடுக்கலாமா?

**புருஷன்:-** எல்லாம் நான் சொல்லிப் பார்த்தாய்விட்டது. செட்டியார் ஒரே பிடியாய் இப்போதே கொடுத்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்திக் கொண்டு வெளியில் காத்துக் கொண்டிருக்கின்றார்.

**அம்மா:-** (பலமாய் சத்தம் போட்டுக் கொண்டு வெளியில் வருகிற போது பேசிக் கொண்டு வருவதாவது) செட்டியாருக்கு புத்தியில்லை. அவர் என்ன செட்டியா? மட்டியா? வீடுவாசல் வைத்து பிழைத்த மனிதனா? நாடோடி தடம் போக்கியா? நிறைந்த வீட்டில் விளக்கு வைத்த நேரத்தில் கலகம் பண்ண வந்திருக்கிறான், நான் போய் கேட்கிறேன். என்ன செட்டி யாரே உமக்கு புத்தியில்லை, இப்பொழுது தான் ஏதோ கொஞ்சம் ஓகோ என்று எங்கள் குடும்பம் தலை எடுக்கின்றது. அதுக்குள் நீர் எமனாய் வந்துவிட்டீர். நாளைக்கு காலமே வாருமே. அதற்குள் என்ன நீர் கொள்ளையில் போய்விடு வீரா அல்லது வேறு ஒரு மனிதன் நகை வாங்க வந்தவன் என்கிறீரே, அவன் கொள்ளையில் போய் விடுவானா? உமக்குத்தான் புத்தி இல்லா விட்டாலும் அவனுக்காவது புத்தியிருக்க வேண்டாமா? வெள்ளிக்கிழமை நகையைப் போய் கேட்கச் சொல்லலாமா என்கின்ற அறிவில்லாமல் உம்மை இங்கே அனுப்பி ரகளை பண்ணச் சொல்லி இருக்கிறானே, அத்தனை அவசரம் என்ன?

இந்த சமயத்தில் மகன் வந்து விட்டான்.

**மகன்:-** என்ன அம்மா கூச்சல் போடுகிறாய்? இவர் யார்?

**தாயார்:** இவரா? இவர் ஒரு நகை வியாபாரியாம். இவர் தலையில் நெருப்பைக் கொட்ட! வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரத்தில் காசு மாலையைக் கொண்டு வந்து கொடுக்க வேண்டுமாம். ரகளைக்கு நிற்கிறார்.

**மகன்:-** அதெல்லாம் இருக்கட்டும். ஜாஸ்தி பேசாதே? நமக்கு காசு மாலையேது? நம் வீட்டில் காசு மாலை இல்லையே. அப்பாதான் வாங்க வேண்டும் என்று நேத்து மத்தியானம் பேசிக் கொண்டிருந்தார். அதற் குள்ளாகவா வந்துவிட்டது?

**தாயார்:** உங்கப்பா யார் முகத்தில் முழித்தாரோ! காலையில் கடைக்குப் போனார், இந்த செட்டியாரிடம் மாலை ஒன்று இருந்தது, அதை எனக்குக் காட்டுவதற்காக வாங்கிவந்தார். நேற்று நினைக்கும்போதே ராகு காலம், இன்று செட்டியார் கடையில் நகை வாங்கும்போது ராகு காலமே - வழியில் வரும் போது பூனை குறுக்க போச்சுதாம்; அப்பொழுதே உங்கப்பா வேண்டா



RangaRakes tamilnavarasam.com

மென்று தலையை சுத்தியெறிந்துவிட்டு வரவேண்டாமா? அப்படிச் செய்யாமல் என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார். அது கொஞ்சம் நன்றாய் இருந்தது. நானும் ஆசைப்பட்டு வாங்கலாம் என்று முடிவுகட்டி எண்ணிப் பார்த்தேன். காசு அறுபத்தி எட்டாயிருந்தது. உடனே தலையைச்சுற்றி எறிந்து விட்டேன். உங்கப்பா பெட்டியில் வைத்துவிட்டார். இப்ப வந்து செட்டியார் அவசரப்படறார்; யாரோ வேறே கிராக்கி காத்துக் கொண்டிருக்கின்றதாம்; வெள்ளிக்கிழமை, விளக்கு வைத்த நேரம், முதலாவது பெட்டியைத் திறக்கலாமா? நீயே சொல்லு பார்ப்போம்.

**மகன்:** ஐயய்யோ! இதென்ன பெரிய அழுக்கு மூட்டையாய் இருக்குது. குருட்டு நம்பிக்கைப் பிடுங்கலாயிருக்கின்றது; வெள்ளியாவது, சனியாவது, ராகாவது, கேதாவது! ஊரார் வீட்டு நகையை வாங்கிக் கொண்டு வந்து பெட்டியில் வைத்து பூட்டிக் கொண்டு வெள்ளியுஞ் சனியும் பேசுவது வெகு ஒழுங்காய் இருக்கின்றது. பேசாமல் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்துவிடு; இல்லாவிட்டால் பெட்டியை உடைத்து விடுவேன் தெரியுமா?

அதற்குள் அப்பா வந்துவிட்டார்.

**அப்பா:-** என்னடா பயலே பலே அதிகப் பிரசங்கியாய்ப் போய் விட்டே. நான் அப்போதே உன்னை - 'குடி அரசு' பத்திரிகையைப் படிக்க வேண்டாம், கெட்டுப்போவாய் என்று சொன்னேனா இல்லையா? அது போலவே படித்து கெட்டு குட்டிச்சுவராய் போய் விட்டாயல்லவா? கர்மம்! கர்மம்! இந்த இழவு பத்திரிகை ஒன்று முளைத்து ஊரிலுள்ள சிறு பிள்ளைகளையெல்லாம் நாஸ்திகனாக்கி விட்டது.

**மகன்:-** 'வெகு நன்றாயிருக்கிறது' என்று சொல்லிக் கொண்டு உடனே அம்மாள் இடுப்பில் சொருகி இருந்த சாவியை பிடுங்கிக் கொண்டு போய் பெட்டியைத் திறந்து நகையை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்து செட்டியாரை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான்.

பிறகு புருஷனும் பெண்ஜாதியும் ராகுகாலத்தில் அந்த செட்டி இடம் நகை வாங்கிவந்ததே பிசகான காரியம். இதுவும் வரும், இன்னமும் எவ்வளவோ கெடுதியும் வரும். என்னை அடிக்க வேண்டு................லே.

**குடி அரசு - உரையாடல் - 08.01.1928**



# காங்கிரசும் ராயல் கமிஷன் பஹிஷ்காரப் புரட்டும்

ராயல் கமிஷனை பஹிஷ்கரிக்கும் விஷயமாய் அரசியல்வாதிகள் இடும் கூச்சல்கள் எல்லாம் புரட்டு என்றும் அது பெரிதும் வகுப்பு உரிமைக்கு விரோதமாய் போடும் கூச்சல்கள் என்றும் ஆதிமுதல் கொண்டே எழுதி வந்திருக்கின்றோம்.

உதாரணமாக, வகுப்பு உரிமை வேண்டுமென்று கேட்கப்படும் எந்தக் கூட்டத்தாராலாவது பஹிஷ்காரம் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றதா என்பதைப் பார்த்தால் தெரியவரும். அத்துடன் கமிஷனை பஹிஷ்கரிக்கும் ஒவ்வொரு கூட்டமும் வகுப்புரிமை கூடாதென்பதையும் வற்புறுத்திக் கொண்டே வருகின்றது. எனவே கமீஷனை அடியோடு பஹிஷ்கரிக்க வேண்டும் என்று சொல்லும் தத்துவம் கமீஷனில் எல்லா வகுப்புகளுக்கும் சம உரிமை கிடைக்கும்படியான நிலைமை ஏதாவது ஏற்பட்டு விடுமோ என்கின்ற பயத்தாலேயே ஒழிய கமீஷனால் இந்திய அரசியல் சுதந்திரத்திற்கு ஏதாவது கெடுதி வந்து விடுமோ என்கின்ற காரணத்தாலல்லவென்றே சொல்லுவோம்.

மிதவாதிகள்கூட பஹிஷ்காரத்திற்கு ஆதரவளிக்கின்றார்கள் என்பது சிலருக்கு அதிசயமாகத் தோன்றலாம். மிதவாதிகள் பஹிஷ்கரிக்கும் காரணம் தியாக புத்தியுடனோ அல்லது அரசாங்கத்துடன் விரோதித்துக் கொள்ளத்தக்க வீரத்துடனோ அல்லவென்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

முக்கியமாக மிதவாதிகள் என்பவர்கள் பெரிதும் யார் என்று பார்த்தால் இந்த உண்மை விளங்கும். அதாவது,

ஸ்ரீமான்கள் சிவசாமி அய்யர், சிந்தாமணி பந்துலு, சாப்ரூ அய்யர், மாளவியா அய்யர், சீனிவாச சாஸ்திரி, ரங்காச்சாரி, நரசிம்ம சர்மா முதலிய அய்யர், சாஸ்திரி, சர்மா, பந்துலு, ஆச்சாரி ஆகிய பார்ப்பனர்களே அல்லாமல் வேறல்ல. இந்த கூட்டங்களில் ஒவ்வொருவரும் சர்க்காருடன் ஒத்துழைத்தவரும் சர்க்காரில் மாதம் ஒன்றுக்கு 5000, 7000 சம்பளம் வாங்கின



RangaRakes tamilnavarasam.com

வரும் சர்க்காருக்கு விரோதமாக ஜனங்கள் கிளம்பிய காலத்திலெல்லாம் சர்க்காருக்கு ஆதரவளித்து கூலி பெற்றவருமேயல்லாமல் தேசத்திற்காக ஒரு காதொடிந்த ஊசியாவது நஷ்டப்பட்டவரல்லர். அப்படியிருக்க இந்த பார்ப்பனர்கள் இப்போது கமிஷனைப் பஹிஷ்கரிக்க ஒப்புக்கொண்ட காரணம் இதுவரை தாங்கள் ஏகபோகமாய் அனுபவித்துவந்த உத்தி யோகங்கள் இனி ஏற்படப்போகும் சீர்திருத்தத்தின் பலனாய் எல்லோருக் கும் கிடைக்கும் படியாய் போய்விடுமோ என்கின்ற பயத்தால் அல்லாமல் வேறு என்ன காரணம் சொல்ல முடியும்?

இனி ஏற்படப் போகும் சீர்திருத்தத்தின் பலனாயும் பாமர மக்களுக்கு ஒரு பலனும் உண்டாகாது என்பது உறுதியேயானாலும் இதனால் ஏற்படும் உத்தியோகங்களாவது எல்லா சமூகத்தாருக்கும் சற்றேறக் குறைய சமமாகக் கிடைக்கும்படியாக இருக்கும் என்பதற்கு சில அடையாளங்கள் காணப் படுகின்றன. என்னவெனில் கமிஷனில் இந்தியர்களில் யாரையும் நியமிக்கா ததே ஒரு அடையாளம் என்று கொள்ள வேண்டும். நியமிப்பதானால் பார்ப்பனர்களைத் தவிர வேறு யாரையும் நியமித்திருக்க முடியாது. அப்படி மீறி நியமித்திருந்தாலும் இப்பார்ப்பனர்கள் இதே மாதிரி கூச்சல்தான் போடுவார்கள். இரண்டாவதான அடையாளம் என்னவென்றால், செக்ரிடெரி ஆப் ஸ்டேட் என்னும் இந்தியா மந்திரியாகிய லார்ட் பர்க்கன் ஹேட் பேசியிருக்கும் பேச்சில், இந்தியாவிலுள்ள வகுப்புப் பிரிவுகளையும் வகுப்புக் கொடுமைகளையும் உணர்ந்திருப்பதாகக் காட்டிக்கொண்டார். இது பார்ப்பனர்களுக்கு வயிற்றில் இடி விழுந்ததுபோல் தோன்றியிருக்கும். ஏனெனில் ஒரு பொறுப்புள்ள அதிகாரியாகிய இந்தியா மந்திரி இந்தியாவில் பல வகுப்பும் வகுப்புக் கொடுமையும் இருக்கின்றதாக ஒப்புக் கொண்ட பிறகு அதற்கு பரிகாரம் செய்யாமல் இருப்பாரானால் அவரைப் பற்றிப் பொது ஜனங்கள் குற்றமாய் நினைப்பார்கள். அதாவது சாக்குச் சொல்லி சுதந்திரம் கொடுக்காமல் தப்பித்துக் கொள்வதற்கு மாத்திரம் இம்மாதிரி வகுப்புப் பிரிவினைகளை காட்டிக் கொண்டாரேயொழிய அதற்குப் பரிகாரம் செய்ய முன் வரவில்லை. ஆதலால், இது கெட்ட எண்ணத்தின் பேரில் சொல்லப்பட்ட வார்த்தை என்று சுலபத்தில் சொல்லி விடுவார்கள் என்பது அவருக்கு தெரிந்த காரியமாதலால் அதற்கு தகுந்த பரிகாரம் கொஞ்சமாவது செய்யத் தீர்மானித்துக் கொண்டுதான் இப்படி சொல்லியிருப்பார் என்பது பார்ப்பவர் களுக்குத் தெரியும். அன்றியும் சதா காலமும் இந்து முஸ்லீம் கலவரங்களும், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் தகரார்களும் நடைபெற்று வருவதும் அவர் கள் அறிந்ததே. தவிரவும் தென்னிந்தியாவைப் பொறுத்தவரை அதிகமான பதவிகள் கொடுக்க அரசாங்கத்தார் கட்டுப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில் எவ்வளவோ சூழ்ச்சிகளுக்கு இடையில் எவ்வளவோ கஷ்டங்களை பொறுத்துக் கொண்டு சீர்திருத்தத்தை நடத்திக்காட்டி இருக்கின்றார்கள். அப்படி ஏதாவது அதிக மான சுதந்திரம் என்பது கொடுக்கப்பட்டால்



அதனால் ஏற்படும் உத்தியோக முதலிய பலன் முழுதும் பார்ப்பனர்களே அனுபவிக்க முடியாமல் போகுமோ என்கின்ற பயம் பார்ப்பனர்களுக்கு ஏற்படுவது இயற்கைதான்.

உதாரணமாக, காங்கிரசின் காரியதரிசியாய் ஹோம்ரூல் சங்கத்தின் தலைவர்களில் ஒருவராய், பெரிய தேசாபிமானியாய் இருந்த சர்.சி.பி. ராமசாமி அய்யர் இனி அதிகமான சீர்திருத்தங்கள் வேண்டியதில்லை என்று அரசாங்கத்தாருக்குச் சொன்னதும், பனகால் ராஜா இனியும் அதிகமான சீர்திருத்தம் வேண்டுமென்று சொன்னதுமே இந்த பயத்திற்கு போதுமான சாக்ஷியாகும்.

தவிர, பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் இரட்டை ஆட்சி ஒழிந்து மாகாண சுயாக்ஷி ஏற்பட்டால்தான் உத்தியோகங்களை ஏற்றுக் கொள்ள அதாவது சர்க்காருடன் ஒத்துழைக்க முடியும் என்று சொன்னதும் காங்கிரஸ் மகாசபை என்பது அரசாங்கத்தாரின் மனப்பான்மை மாற்றமடைந்ததாக ஜாடை காட்டினால் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம் என்று சொன்னதும் இவ்வருஷக் காங்கிரசில் அதைப்பற்றி ஒரு வார்த்தைக்கூட பேசாமல் சமயம் போல் நடந்து கொள்ள சவுகரியமிருக்கும்படி இடம் ஏற்படுத்தி வைத்துக் கொண்டதும் மற்றொரு சாக்ஷியாகும்.

தவிர, ராயல் கமிஷன் பகிஷ்காரத்திற்கும் எவ்வளவு தூரம் தயாரா யிருக்கிறார்கள் என்பதற்கும் அதில் எவ்வளவு தூரம் நாணயம் இருக் கின்றது என்பதற்கும் தலைவர்கள் என்பவர்களின் நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் கவனித்தால் விளங்காமல் போகாது.

ராயல் கமிஷன் என்பது இந்தியர்களுக்கு என்ன வேண்டும் என் பதையும் எவ்வளவு தூரம் அதை அனுபவிக்க யோக்கியதை உடையவர் களாயிருக்கின்றார்கள் என்பதையும் கொடுத்தவைகளை எப்படி உப யோகித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் அறிவதற்காக பார்லி மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு விசாரணை கமிட்டி என்பது தான் தாற்ப் பரியம். இதை பகிஷ்கரிப்பது என்பது என்னவென்று பார்ப்போ மானால் இந்த விசாரணைக்கு எந்த விதமான உண்மைகளும் போய்ச் சேர வொட்டாமல் செய்வது என்பதுதான் கருத்தாயிருக்க வேண்டும்.

இன்னிலையில் பகிஷ்காரத் தீர்மானத்தினுடையவும் பகிஷ்காரக் காரருடையவும் யோக்கியதையைப் பார்ப்போம்.

பகிஷ்காரகாரர்கள் இதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் “யாரும் போய் சாக்ஷி சொல்லக்கூடாது, சட்ட சபையில் ஏற்படுத்தும் கமிட்டியில் யாரும் மெம்பராயிருக்கக் கூடாது, கமிட்டி மெம்பர்களுக்கு மரியாதை செய்யக்



RangaRakes tamilnavarasam.com

கூடாது'' என்று மாத்திரம் தீர்மானங்கள் செய்துவிட்டார்களே ஒழிய அவர்கள் கோரிவரும் காரியம் தடைப்படுவதற்கு எவ்வித முயற்சியும் செய்யாமல் இருப்பதுடன் உதவியும் செய்ய ஆள் மேல் ஆள் முந்திக் கொண்டுதான் இருக்கின்றார்கள். அதாவது பகிஷ்காரத்தில் தீவிர முயற்சி உடைய பெசண் டம்மையார் இந்தியாவுக்கு வேண்டியது இன்னது என்பதாக ஒரு திட்டம் போட்டு பார்லிமெண்டில் முன்னமேயே ஒப்புவித்து விட்டதோடு அல்லா மல் இப்போதும் ஊர் ஊராய் மாகாணம் மாகாணமாய் போய் கூட்டம் கூட்டி அதை பொது ஜனங்கள் ஒப்புக் கொண்டதாகப் பெயர் செய்து கொண்டு அதை சீமைக்கு தந்தி அடிக்கச் செய்து கொண்டு வருகின்றார். மாஜி காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஸ்ரீமான் சி. விஜயராகவாச்சாரி தான் ஒரு திட்டம் போட்டு பார்லிமெண்டிலுள்ள தனது சிநேகிதருக்கும் மற்றும் பத்திரிகைகளுக்கும் அனுப்பி தெரியப்படுத்தி விட்டார்.

மற்றொருவர் அதாவது சமீபத்தில் மாஜீயான காங்கிரஸ் தலைவ ராகிய ஸ்ரீமான் எஸ்.சீனிவாசய்யங்கார் ஒரு திட்டம் போட்டு புஸ்தக ரூபமாக்கி ஆயிரக்கணக்கான பிரதிகளை எல்லாருக்கும் வினியோகித்துக் கொண்டு வருகின்றார். காங்கிரஸ் தீர்மானத்திலும் 'வகுப்பு உரிமை கூடாது; தனித் தொகுதி கூடாது' என்பது போன்ற விஷயங்களை தீர்மான ரூபமாகச் செய்து வெள்ளைக்காரர்களும் கமிட்டி மெம்பர்களும் அறியும்படியும் செய்தாய்விட்டது. அதில் இந்தியத் தேசியத் தலைவர் என்ற பண்டிதர் நேரு அவர்களும் சமீபத்தில் பிரான்சில் பேசியபோது இந்தியாவின் கோரிக்கை களை கமிட்டி முன்னால் சமர்ப்பித்து விடுவதைத்தவிர மற்றவைகளை பகிஷ்கரித்து விடவேண்டும் என்று சொல்லிவிட்டார். காங்கிரஸ் மகாசபை தலைவரான டாக்டர் அன்சாரி அவர்களும் 'எல்லா வகுப்பார்களும் எல்லாவித அரசியல் கட்சிக்காரரும் ஒன்று சேர்ந்து ஒரு திட்டம் தயாரிக்க வேண்டும்' என்று சொல்லி இருக்கின்றார்.

மிதவாதிகள் என்பவர்களும் ஒரு திட்டம் போட்டும் சிலர் பெசண்ட் அம்மையின் திட்டத்தை ஆதரித்தும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை காட்டியாகி விட்டது.

இவ்வளவும் அல்லாமல் பகிஷ்காரத்தின் அறிகுறியாய் சட்ட சபையை விட்டு விலகவோ கமிஷன் வந்து போகும் வரையிலாவது சட்டசபைக்கு போகாமலிருக்கவோ கூட முடியாது என்று தீர்மானித்தாய் விட்டது. ஆகவே பகிஷ்காரம் என்பதை எந்த முறையில் மீதி வைத்திருக் கின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. ஆகவே கூலிப் பிழைப்புக் காரரான ஜட்கா வண்டிக்காரரும் ஒற்றைமாட்டு வண்டிக்காரரும் ரிக்ஷா வண்டிக்காரரும் வேலை நிறுத்தம் செய்வதிலும் வெற்றிலை பாக்கு சிகரெட் பீடி கடைக்காரர் கடைகளை மூடுவதிலும் கமிஷனில் வரப்பட்ட கமிட்டி மெம்பர்களுக்கு நடத்தப்படும் தேயிலைப் பானத்திற்கு போகாமலும்



காலிகளுக்கு கூலி கொடுத்து தெருவில் போகின்றவர்கள் மீது கல்லெறி வதிலும் மாத்திரம் பகிஷ்காரம் இருப்பதானால் யோக்கியர்கள் இதை ஒப்புக் கொள்ள முடியுமா என்றுதான் கேட்கின்றோம்.

மற்ற கூட்டத்தை சேர்ந்தவர்கள் தங்களுக்கு வேண்டியதை கமிஷ னுக்கோ வெள்ளைக்காரருக்கோ தெரியப்படுத்த வேண்டுமானால் அவர் களும் இந்தமாதிரி திட்டம் போட்டு கமிஷன் முன்னால் சமர்ப்பிப்பதை விட நேரில் போய் சொல்லி விடுவதால் ஏற்படும் நஷ்டம் என்ன என்று தான் கேட்கின்றோம். அவராடி இவராடி எப்படி பாமர மக்களை ஏமாற்றி ஒரு வகுப்பாரே ஆதிக்கம் பெறுவதெப்படி? உயர்ந்த பதவிகளையும் உத்தியோ கங்களையும் அடைவதெப்படி? பெரும் பெரும் சம்பளம் பெறுவதெப்படி? என்பதல்லாமல் இந்தப் புரட்டுகளால் தேசத்துக்கோ, பாமரமக்களுக்கோ ஏற்படும் பயன் என்ன என்று கேட்கின்றோம்.

பகிஷ்கார பிரசாரம் செய்யும் 'தமிழ்நாடு' கமிஷன் மெம்பர்களின் படத்தை விளம்பரம் செய்திருப்பது என்னே !

**குடி அரசு – கட்டுரை – 08.01.1928**



RangaRakes tamilnavarasam.com

# புது வருஷ விண்ணப்பம்

புது வருஷ விஷயமாய் நாம் எழுதுவதில் அரசியல் விஷயத்திற்கு பிரதானம் கொடுத்து எழுத வரவில்லை; ஏனெனில் அரசியல் விஷயத்தை மிகுதியும் அலட்சியமாய்க் கருதுவதே ‘குடி அரசின்’ கொள்கை என்று பொதுஜனங்கள் எண்ணும்படி இருக்கவேண்டும் என்பதே நமது கவலை. ஆனாலும் அரசியலின் பேரால் மக்கள் ஏமாற்றப்படும் நிலைமை ஏற்படும்போது அலட்சியமாய் இருப்பதற்கில்லாமல் அதன் புரட்டுகளை வெளியாக்கவேண்டிய நிலையில் அரசியலைப் பற்றியும் எழுத நேரிடுகின்றது. மற்றப்படி தேசீயம் அரசியல் என்கின்றவைகள் எவ்வளவுக்கெவ்வளவு மக்களால் மறக்கப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரத்தில் விடுதலை உண்டு என்பது நமதபிப்பிராயம். நிற்க, இந்த தலையங்கத்தில் நாம் எழுத புகுந்ததெல்லாம் புது வருஷத்தின் நிலை நமது முயற்சிக்கு எவ்வளவு பயனளிக்கக் கூடியதாயிருக்க வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்ளவேதான். எனவே நாம் யோசித்து பார்க்கும் அளவில் புது வருஷத்தில் நமக்கு பல இடையூறுகள் தோன்றலாம் என்பதாகவே அறிகின்றோம். அவ்விடையூறுகளை லட்சியம் செய்யாதவரை பலனுண்டாகும் என்றும் லட்சியம் செய்து அதற்காக ஏதாவது இணங்க இடம் தந்தால் காரியம் கெடக்கூடும் என்றும் அறிகின்றோம்.

இந்த சமயம் நமது முயற்சிக்கு எவ்வித உதவியும் ஆதரவும் அனுதாபமாவது இருப்பதாகக் காண முடியவில்லை. ஆனாலும் எதிர்ப்புக்காரர்களுக்கும் போதிய பலமோ ஆதரவோ இருப்பதாகவும் தெரியவில்லை. ஆரம்பத்தில் நாம் வெள்ளைக்காரருடன் வாதாடி மக்களின் இடுக்கண்களை விடுவிக்கக் கிளம்பினோம். அதில் இறங்கியதன் பலனாய் வெள்ளைக்காரரைவிட பார்ப்பனர்களிடமே மிகுதியும் வாதாட வேண்டியிருக்கின்றது என்று கருதினோம். அதில் இறங்கியதன் பயனாய் பார்ப்பனர்களைவிட நம்மவர்களிடமே வாதாடவேண்டியதாய் பல விஷயங்கள் காணப்படுகின்றன. இதை ஒரு உதாரணமாக விளக்க வேண்டுமானால், நமது விடுதலையை வெள்ளைக்காரர்கள் பறித்துக் கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள் என்று உணர்ந்து, அவர்களிடம் இருந்து அதைப் பிடுங்கி வர முயற்சித்ததில் நமது விடுதலையை அவர்கள் தங்கள் வீட்டில் வைத்துப் பூட்டிக் கொண்டு அதற்கு காவலாக நமது பார்ப்பனர்களையே காவல் காக்க



வைத்திருக்கின்றார்கள் என்பதும் நமது பார்ப்பனர்களும் மிக்க எஜமான விஸ்வாசத்துடன் வெள்ளைக்காரர்களுக்கு காவல் காத்து வருகிறார்கள் என்பதும் நன்றாய் உணர்ந்து விட்டோம்.

எனவே நமது விடுதலை என்பதை நாம் கைப்பற்ற வேண்டுமானால் காவல்காரர்களை விரட்டி அடிக்காமல் முடியவே முடியாது என்பது கண்டுதான் எதிரியின் காவல்காரர்களான பார்ப்பனர்களை அக்காவலிலிருந்து விரட்டத் துணிந்தோம்.

இந்த முயற்சியில் தீவிரமாய் ஈடுபட்டதின் பலனால் ஷை காவல்காரர்களை உண்டாக்கவும் போஷிக்கவும் நம்மவர்களே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நம்மவர்களே அவர்களுக்கு ஆகாரம் கொடுத்து வளர்த்து வலுவுண்டாக்கி நமது விடுதலையைக் கைப்பற்றி இருக்கும் வெள்ளைக்காரர்களின் காவலுக்கு அனுப்பி வருகிறார்கள். ஆகவே நமது போஷணையை நிறுத்திக் கொண்டால் பார்ப்பனர்கள் வெள்ளைக்காரனுக்குக் காவலனாய் இருக்க முடியாது என்பதும், பார்ப்பனர்களின் காவல் ஒழிந்தால் வெள்ளைக்காரர்கள் நமது விடுதலைக்கு விரோதமாய் இருக்க முடியாது என்பதும் நமது முடிவு. எனவே அப்பார்ப்பனர்களுக்கு எவ்வெவ் வழியில் நியாயமற்ற போஷணை கிடைக்கின்றதோ அவ்வவ் வழிகளையெல்லாம் அடைத்துத் தீரவேண்டும் என்கின்ற முயற்சியில் இறங்கி இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இம் முயற்சி தான் சிலருக்கு நாம் நம்மவர்களுடன் போரிடுவதாகக் காணப்படுகின்றது.

மத விஷயத்திலும் சாஸ்திர புராண விஷயத்திலும்கூட ‘குடி அரசு’ கை வைத்துவிட்டது என்று மதபக்தர்கள் என்போர்கள் சத்தம் போட நேரிட்டதும், தேசீய விஷயத்தில் கூட கையை வைத்து விட்டது என்று தேசபக்தர்கள் என்போர்கள் சத்தம் போட ஏற்பட்டதும் இதனால்தானேயல்லாமல் வேறல்ல.

இந்து மதம் என்பதும் அதன் பெயரால் உள்ள சாமிகள், கோவில்கள், பூஜைகள், திருவிழாக்கள் முதலியவைகளும் அதற்காக ஏற்பட்ட வேதங்கள், சாஸ்திரங்கள் புராணங்கள் இதிகாசங்கள் என்பவைகளும் பார்ப்பான் பிழைக்கவும், பார்ப்பான் உயர்ந்தவன் என்கின்ற ஆதிக்கம் பெறவுமே ஏற்பட்டதேயல்லாமல் உலகத்திற்கோ அல்லது பார்ப்பனர்களைத் தவிர வேறு எந்த ஜனசமூகத்திற்கோ ஒரு சிறு துரும்பளவு பிரயோஜனமும் உண்டாக்குவதற்கல்லவென்று உறுதியாய் நம்புகிறோம். நித்திய வாழ்க்கையாலும் இதை பிரதி தினமும் அனுபவத்தில் உணர்ந்தும் வருகிறோம்.

இதை நாம் வெளியிடும்போதும் மாற்றும்படி மக்களை வேண்டிக் கொள்ளுகின்றபோதும் மதக்காரர், சாஸ்திரக்காரர், புராணக்காரர் என்பவர்கள் நம்மீது பாய்கின்றார்கள். அப்படிப் பாய்கின்றபோது மதத்தைப் பற்றியும்,



RangaRakes tamilnavarasam.com

சாஸ்திரத்தைப் பற்றியும், புராணத்தைப் பற்றியும் இவைகளின் மூலம் தானாகவே ஏற்படும் பார்ப்பன ஆதிக்கத்தைப் பற்றியும் நாம் சொல்லும் விஷயங்களுக்கு ஒரு சிறிதும் சமாதானம் சொல்லாமலும், பதிலளிக்கக் கருதாமலும், வேண்டுமென்றே அவைகளை மறைத்துவிட்டுக் கடவுள் போச்சே என்று துக்கப்படுகிறவர்கள் போலவும், கடவுளைக் காப்பாற்றப் பிறந்திருக்கிறவர்கள் போலவும் வேஷம் போட்டுக் கொண்டு வெளியாகி 'குடி அரசு' நாஸ்திகம் போதிக்கின்றது என்ற ஆயுதத்தை எடுத்துக் கொண்டு மனமறிந்த பித்தலாட்டம் என்கின்ற பூமியின் மீது நின்று கொண்டு நம்முடன் போர் தொடுக்க வருகின்றார்கள். இக்கூட்டமும் இப்போரும் இப்புது வருஷத்தில் பலப்படும் என்பதே நமதபிப்பிராயம். இக்கூட்டத்தாருக்கு உண்மையில் கடவுளிடத்தில் நம்பிக்கை இருக்குமானால் 'குடி அரசு' கடவுளை ஒழித்துவிடமுடியும் என்கின்ற பயமும் தங்களால் தான் கடவுளைக் காப்பாற்ற முடியும் என்கின்ற எண்ணமும் ஒருக்காலமும் ஏற்பட நியாயமே இருக்காது என்றாவது அல்லது இவர்கள் போருக்கு கிளப்பியிருக்கும் கருத்து கடவுள் மறைந்து போவார் என்று இல்லாமல், இவர்களது மதமும், சாஸ்திரமும் புராணமும் என்பவைகள் மறைந்து போகுமோ என்பதான பயமாய்த்தான் இருக்க வேண்டும் என்றாவது பொதுமக்கள் நினைப்ப தில்லை. ஆகவே சாஸ்திரத்தையும் புராணத்தையும் காப்பாற்ற ஆசைப் பட்டுக் கடவுள் பேரில் சாக்கிட்டுக் கொண்டு வெளிக்கிளம்பும் கோழை போரை லட்சியம் செய்யாமல் இருந்தாலொழிய நமக்கு வெற்றி மார்க்கம் ஏற்படுவது அரிது என்பது நமது அபிப்பிராயம். ஏனெனில் மதம் சாஸ்திரம் புராணம் என்பவைகளைப்பற்றி இப்போது எங்கு பார்த்தாலும் ஜனங் களுக்குள் அதிருப்தியும், அவநம்பிக்கையும், எதிர்ப்பிரசாரங்களும் ஏற்பட்டிருப்பதை இக்கூட்டத்தார்கள் உணர்ந்து பார்க்கட்டும்.

மேல்நாடுகளில் மனித சுதந்திரத்திற்காக எவ்வளவு பெரிய மாறுதல் கள் ஏற்பட்டு வருகின்றது என்பதும், வெளி மாகாணங்களில் எவ்வளவு தூரம் இவைகளை எல்லாம் அலட்சியம் செய்துவிட்டு உண்மை விடுதலை அடை யும் முயற்சிக்குக் கூட்டம் கூட்டமாய் மக்கள் கிளம்பி இருக்கின்றார்கள் என்றும் உணர்ந்து பார்க்கட்டும்.

அரசியல் தலைவர் என்பவரும் வடநாட்டு ஆரியருமான மோதிலால் நேரு என்பவர் சமீபத்தில் பிரான்சு தேசத்தில் இந்திய வாலிபர்களிடம் பேசும்போது **"வகுப்பு வித்தியாசங்கள் அடியோடு அழியத்தக்க உணர்ச்சிகளை வளர்க்க வேண்டும் என்றும் அதற்காக மதத்தையும் மறக்கத் தயாராயிருக்க வேண்டும்"** என்றும் பேசியிருக்கின்றார்.

சுருக்கமாய்ச் சொன்னால் நமது முயற்சியின் கருத்தும் இதுவேயாகும். எனவே வகுப்புப்பிரிவு உணர்ச்சி மறைய வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும் என்று பார்க்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் தான் இன்ன



வகுப்பு, இன்ன மதம், இன்ன கொள்கையை உடையவன் என்று ஒருவருக்கொருவர் பிரிந்து நிற்கத் தகுந்த நிலைமைக்கு ஆதாரங்கள் என்னென்ன உண்டோ அவைகள் எல்லாம் அழிந்து மறைபடவேண்டும். நாம் எல்லோரும் ஒரு நாட்டினர் என்றும் நாம் எல்லோரும் சமம் என்றும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பாயிருக்க கடமைப்பட்டவர்கள் என்றும் கருதக்கூடிய உணர்ச்சிகள் பெருகவேண்டும். இதுதான் நமது முயற்சியின் தத்துவம் என்று மறுபடியும் கூறுகிறோம். தற்காலம் நமது நாட்டில் விளங்கும் மதம், புராணம், சாஸ்திரம் என்பவைகள் எல்லாம் பெரும்பாலும் இம் முயற்சிக்கு, இத்தத்துவத்திற்கு இடையூறாகியிருக்கின்றது என்று கருது வதால்தான் அவைகளை மக்கள் மறந்துவிடவேண்டுமென்று வேண்டிக் கொள்கின்றோம். அது சரியா தப்பா என்பதைப்பற்றி சமாதானம் சொல்லா மலும் இடையூறாயிருக்கும் பாகத்தை எடுத்துக்காட்டும் போது அதற்கு சமாதானம் சொல்லாமலும் 'நாஸ்திகம் நாஸ்திகம்' என்கின்ற பூச்சாண்டி யையே விட்டு மிரட்டுவதால் என்ன பயன் விளைந்து விடக்கூடும்?

## நாஸ்திகம்

நாஸ்திகம் என்றால் என்ன என்பதையும் மக்களுக்கு வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்:–

முதலாவது நாஸ்திகம் என்கின்ற சொல் எந்த பாஷையில் உள்ளது? அதற்குச் சரியான தமிழ்ச் சொல் என்ன? நாஸ்திகம் என்கின்ற சொல் எந்த பாஷையிலுள்ளதோ அந்த பாஷையில் நாஸ்திகம் என்பதற்கு என்ன பொருள் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பவைகளை யெல்லாம் யோசித்துப் பார்த்தால் அறிவாளிகள் இந்த நாஸ்திகம் என்கின்ற பூச்சாண்டிக்குப் பயப்படமாட்டார்கள்.

நாஸ்திகம் என்பது ஆரிய பாஷைச் சொல். தமிழில் அக்குறிப்பை உணர்த்தத்தக்க சொல் ஒன்று இருப்பதாக நாம் அறிந்ததில்லை. நாஸ்தி என்றால் 'இன்மை' என்றும் 'ஆஸ்தி' என்றால் உடைமை என்றுந்தான் பொருள் உண்டு. நாஸ்திகன் – இல்லாதவன், ஆஸ்திகன் – உடையவன். எனவே இந்தப் பதங்கள் எப்படி கடவுளை சம்மந்தப்படுத்திக் கொண்டன என்பதை யாராவது சொல்லக்கூடுமா? என்று கேட்பதுடன் தமிழ் மொழியில் இந்தக் கருத்தையு டைய சொல்லோ வளமையோ இருப்பதாக சொல்லக் கூடுமா? என்றும் கேட்கின்றோம். ஆரிய பாஷையிலும் ஆஸ்திகன் நாஸ்திகன் என்கின்ற பதங்கள் கடவுளைக் குறிக்காமல் வேதத்தைக் குறித்துதான் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அதாவது ஆரிய பாஷையில் நாஸ்திகன் என்கின்ற பதத் திற்கு வேதத்தில் நம்பிக்கை இல்லாதவன் என்றுதான் பொருள் கொடுக்கப்பட் டிருக்கின்றதே ஒழிய இவ்வார்த்தைக்கு கடவுளை எந்த இடத்திலும் சம்மந்தப்படுத்தப்பட்டிருப்பதாக காணமுடியவில்லை.



RangaRakes tamilnavarasam.com

நிற்க, கடவுளை நம்புகிறவன் நம்பாதவன் என்கின்ற கேள்வி பிறக்குமானால், அந்தக் கேள்வியானது கடவுள்தன்மை இன்னது என்று அறியாதவர்களிடமிருந்துதான் புறப்பட வேண்டும். ஆதலால் அதைப் பற்றி நமக்கு ஒரு சிறிதும் கவலையில்லை என்று சொல்வதோடு சைவம் என்றும், வைணவம் என்றும், ஸ்மார்த்தம் என்றும் மற்றும் பலப்பல வித மாகவும் பல பேராகவும் மதங்களைப் பிரித்துக் கொண்டு உயர்வு தாழ்வு களைக் கற்பித்துத் தன்தன் மதமே பெரிது அதனதன் ஆதாரங்களே சத்தியமானது என்று பிடிவாதம் கொண்டு என்றென்றைக்கும் ஒத்துப்போக மார்க்கமில்லாமல் வாதங்களைக் கிளப்பிக் கொண்டிருக்கும் அனாவ சியமான பொழுது போக்குகளும் நேரக்கேடுகளும் ஒழிய வேண்டும்.

ஆதலால் நமது உண்மையான லக்ஷியம் இன்னது என்று உணர்ந்து கொண்டவர்களும் அதை மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டவர்களும் ஒருபோதும் இம்மாதிரி விகல்பத்திற்கு ஏதுவான மதத் தொல்லைகளில் கவனத்தைச் செலுத்தமாட்டார்கள் என்றே நினைக்கின்றோம்.

முடிவாக நாம் புது வருஷத்தின் பேரால் பொது மக்களைக் கேட்டுக் கொள்வதென்னவென்றால் வெள்ளைக்காரரின் தற்காலத்திய ராஜீய பாரம் நமக்கு - நமது நாட்டுக்கு - நமது நாட்டு ஏழை மக்களுக்குப் பெரிய ஆபத் தாய் இருக்கின்றது. இவ்விபத்தான ராஜ்ஜிய பாரத்தை நமது நாட்டுப் பார்ப்பனர்கள் நடத்திக் கொடுத்து பங்கு வாங்கிப் பிழைத்து வருகிறார்கள். அப்பார்ப்பனர்க்கு நமது மக்கள் மதத்தின்பேரால் சாஸ்திரத்தின் பேரால் புராணத்தின் பேரால் புராணச் சாமிகளின் பேரால் அடிமைப்பட்டு ஆக்கம் தேடிக்கொடுத்து வருகின்றார்கள். எனவே இவைகளை சரிப்படுத்த அஸ்தி வாரத்திலிருந்து வெட்டி எறிய வேலை செய்ய வேண்டியது நமது கடமை. அஸ்திவாரத்தில் கொஞ்சம் தாக்ஷணியம் பார்த்து ஒரு சிறு வேரை விட்டு விட்டாலும் மறுபடியும் அது படர்ந்துவிடும். ஆதலால் தயவு செய்து ஒவ்வொருவரும் ஒரே மூச்சாய் கொஞ்சமும் தாக்ஷண்ணியமோ குருட்டு நம்பிக்கையோ பிடிவாதமோ இல்லாமல் உரத்து நின்று உதவி செய்ய வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகின்றோம். இது வெற்றி பெற்றால் தான் நமது நாட்டுக்கு மாத்திரமல்லாமல் மனித சமூகம் முழுவதுமே சாந்தி உண்டாகும் என்று விண்ணப்பித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 08.01.1928**



# காங்கிரசுக்கு ஸ்ரீமான் காந்தியின் யோக்கியதா பத்திரம்

## விளையாட்டுப் பிள்ளைகள் மண் கொழிக்கும் சங்கம்

சென்ற காங்கிரசைப்பற்றி ஸ்ரீமான் காந்தி தமது 'யங் இந்தியா' பத்திரிகையில் ஜனவரி 5 தேதி எழுதியதாவது,

"நான் விஷயாலோசனைக் கமிட்டியின் கூட்டங்களொன்றுக்கும் செல்ல முடியவில்லையெனினும், மிகவும் பொறுப்பற்ற வகையில் பேச்சும், வேலையும் நடந்தது என்றும் ஒழுங்கீனமாய் அங்கத்தினர்கள் நடந்து கொண்டார்களென்றும் தெரிந்து கொண்டேன். இன்னது விளையும் என்று சிந்திக்காமலே முன்பின் யோசனை இல்லாமல் மிகவும் உபயோகமற்ற தீர்மானங்களை திடீரென விஷயாலோசனைக் கமிட்டியில் பிரேரேபித்து அவைகளை அக்கமிட்டியாரும் யோசனையின்றி ஏற்றுக் கொண்டு விட்டார்கள். சென்ற வருஷம் நிராகரிக்கப்பட்ட பூரண சுயேச்சைத் தீர்மானம் நிறைவேறிவிட்டது. அது யோசனையில்லாமலே நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்கரிக்க வேண்டும் என்று செய்த தீர் மானமும் அதேமாதிரி சிறிதும் கவலையற்ற தன்மையில் நிறைவேற்றப் பட்டது. காரியத்தில் நடத்த முடியாது என்று அறிந்தும் இத்தகைய தீர்மானங் களை வருஷா வருஷம் காங்கிரஸ் நிறைவேற்றுவதால்தான் அது தன் கௌரவத்தை இழந்து கொண்டு வருகிறது. இப்படிப்பட்ட தீர்மானங்கள் செய்வதால் நமது பலஹீனத்தை வெளிப்படுத்துவதுடன் ஊராரெல்லாம் நம்மை நகைத்து, நமது எதிரி நம்மைக் கண்டு ஏளனஞ் செய்யுமாறு நாம் செய்து கொள்ளுகின்றோம். காங்கிரசுக்கு பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ் கரிக்கப் பூரண உரிமையுண்டு. ஆனால், இந்திய ஜனங்களின் பிரதி நிதித்துவம் வாய்ந்த பிரதம சபையாகிய அது வீண் மிரட்டல்களினால் அவ மானத்திற்கு ஆளாகக் கூடாது. இங்ஙனம் தீர ஆலோசியாமல் தீர்மானங் களை வெறும் காகித அளவில் செய்து பொதுமக்களின் தேவையையும் அபிலாஷைகளையும் கருதாமல் காங்கிரஸ் போய்க் கொண்டிருந்தால்



RangaRakes tamilnavarasam.com

முன்னிருந்த செல்வாக்கும் பலமும் அதற்கு மீண்டும் வராது. திரும்பவும் காங்கிரஸ் அந்த உன்னத ஸ்திதிக்கு வரவேண்டுமாகில், அதன் அங்கத் தினர்கள் தேசத்தின் ஊழியர்களாய்த் தங்களைப் பாவித்துக் கொண்டு ஒழுக்கத்தையும், நேர்மையையும் கடைப்பிடித்து நடந்து கொள்ள வேண்டும். ஆனால் தற்போது வெறும் பள்ளிக்கூடப் பையன்களைப் போல்தான் அவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள். அவ்வளவு தாழ்ந்த நிலைக்கு காங்கிர சும் வந்துவிட்டது.

காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டியார் தங்கள் ஆதரவில் அகில இந்திய தேசீய கண்காட்சி என்ற பெயருடன் பிரிட்டிஷ் சாமான்களையும் அன்னிய நாட்டுச் சரக்குகளையும் விளம்பரப்படுத்த இடங்கொடுத்தது பெருந்தவ றாகும். அதில் சுதேசி சாமான்கள் வெகு குறைவாகவேயிருந்தன. இந்தக் கூத்து பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்கரிக்க வேண்டும் என்று திட்டஞ் செய்து சுதேசியத்தை வளர்க்கும் காங்கிரசின் ஆதரவிலேயே நடக்கிறது. காங்கிரசின் அடிப்படையான நோக்கத்திற்கே அது விரோதமாகும். யோச னையின்மையும், சிரத்தைக் குறைவும், பொறுப்பற்ற தன்மையும் தான் இதற் குக் காரணங்கள் என்று சொல்லுவேன். இது மிகவும் வெட்கக் கேடானது என்று கூறாமலிருக்க முடியவில்லை.

**குறிப்பு**:- அதற்கு ஏற்றாற்போல் ஸ்ரீ எஸ். சீனிவாசய்யங்கார் அவர் களும் காங்கிரஸ் தீர்மானமெல்லாம் வியாபாரத் தீர்மானமே ஒழிய உண்மை யான தீர்மானம் அல்ல என்று சொல்லிவிட்டார். இப்பொழுதாவது காங்கிர சைப் பற்றியும் காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்களைப் பற்றியும் ‘குடி அரசு’ எழுதிக் கொண்டுவரும் விஷயங்கள் உண்மை என்பது விளங்கவில்லையா? என்று பொதுமக்களை கேட்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 08.01.1928**



# இனியும் சந்தேகமா?

மனுதர்ம சாஸ்திரத்தை கொளுத்துவதை பற்றி ஆசாரச்சீர்திருத்தப் போர்வையை போர்த்துக்கொண்டிருக்கும் ஸ்ரீமான் பம்பாய் கே.நடராஜர் என்கின்ற பார்ப்பனரே வெகுதூரம் துக்கப்பட்டார் என்றால் மற்ற பிராமணர் கள் வருணாசிரம மகாநாடு கூட்டுவதில் நாம் ஒன்றும் அதிசயப்படவில்லை. ஆனால் இன்னமும் பார்ப்பனர்கள் வருணாசிரமப் பிரசாரமும் மகாநாடும் நடத்த தைரியமுடையவர்களாயிருக்கிறார்கள் என்பது தெரிந்த பின்னும், பார்ப்பனர்களும் நாமும் சகோதரர்கள் என்று சொல்லிக் கொள்ள உரிமை உண்டா என்றுதான் கேட்கிறோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 08.01.1928**



RangaRakes
tamilnavarasam.com

# விளங்கவில்லை

ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப்பு அவர்கள் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் விஷயம் ஒருவாரு முடிவு பெறவேண்டும் என்று பார்ப்பனத் தலைவர்களுக்கு எழுதியிருக்கின்றார். இதற்கு பார்ப்பனர்கள் ஒரே பதில் சொல்லி விட்டார்கள். அதாவது "தேசம் பெரியதே ஒழிய பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற விஷயம் பெரிதல்ல, ஆதலால் இந்த சமயத்தில் இதை எல்லாம் பேசுவது தப்பு'' என்று சொல்லிவிட்டார்கள். ஸ்ரீ ஜோசப் அவர்களுக்கு இதை எழுதுவதற்கு முன்பே பார்ப்பனர்கள் இப்படித்தான் சொல்வார்கள் என்பது தெரியாமல் போய்விட்டதா? அல்லது தெரிந் திருந்தாலும் பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் தனக்கும் அக்கரை இருப்பதாய் காட்டிக் கொள்ளலாம் என்றா என்பது நமக்கு விளங்கவில்லை.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 08.01.1928**



# பதவிப் போட்டி சுயமரியாதை அளிக்காது

சமீபத்தில் சட்ட மெம்பர் வேலை காலியாகப் போகின்றது.

ஏனென்றால் சர்.சி.பி. ராமசாமி அய்யர் அவர்களின் 5 வருஷ காலாவதி இனி 2 , 3 மாதத்தில் முடிவடையப் போகின்றபடியால் அந்த ஸ்தானம் காலியாக வேண்டியது கிரமமாகும். ஆனால் சர்.சி.பி. ராமசாமி அய்யர் அவர்கள் சட்டமெம்பர் வேலைபார்த்த காலத்தில் தனது உத்தியோகம் இனியும் கொஞ்சகாலம் நீடிக்க வேண்டும் என்கின்ற உத்தேசம் கொண்டே வெள்ளைக்காரருக்கு அனேக உதவி செய்திருக்கின்றார். கையினால் செய்வதானால் பதினாயிரக்கணக்கான மனிதர்க்குக் கூலி கொடுக்கதக்க வேலைகளை ஒரு சிறிது தயவு தாக்ஷண்ணியம் பாராமலும் இந்தியாவில் மாதம் 1-க்கு லக்ஷக்கணக்கான மக்கள் வேலையில்லாமல் வேறு நாடுகளுக்குக் கூலிகளாகப் போகிறார்கள் என்பதைக் கருதாமலும் இந்திய நாட்டுப் பணம் இந்தியர்களால் வரியாகக் கொடுத்த பணம் ஒரு சிறிதும் இந்தியாவில் தங்காமல் வெளிநாட்டிற்குப் போகின்றதே என்கின்ற கவலையில்லாமலும் கையினால் செய்வதற்குப் பதிலாக பத்து லக்ஷம் இருபது லக்ஷம் என்பதாகப் பணம் கொடுத்து வெள்ளைக்காரர்கள் நாட்டு யந்திரங்களுக்காகப் பணம் கொடுத்ததும், நம்ம நாட்டில் உற்பத்தியாகும் சுண்ணாம்பு போட்டு வேலை செய்வதனால் கோடிக்கணக்கான ரூபாய் நமது நாட்டில் தங்குமே என்றாவது அதனால் லக்ஷக்கணக்கான குடும்பங்கள் பிழைக்குமே என்றாவது ஒரு சிறிதும் கவலையில்லாமலும் கல்மனப் பார்ப்பார் என்பது போல் கல் நெஞ்சத்துடன் பணங்களை வாரி வெளிநாட்டு சிமெண்டு சுண்ணாம்புக்குக் கொடுத்தும், இந்திய வரி கொடுப்போர்களின் பணத்தை சிக்கனமாகச் செலவு செய்யவேண்டுமே என்கின்ற பொறுப்பு ஒருசிறிதும் இல்லாமல் மேட்டூர் தேக்க வேலைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 1000, 2000, 3000 சம்பளமுள்ள வேலைகளை தேவைக்கும் அளவுக்கும் மிஞ்சி சிருஷ்டித்ததுடன் அவைகளை இந்தியர்களுக்கு கொடுக்கலாம் என்கின்ற கவலையுமில்லாமல் வெள்ளைக்காரர்களுக்கே கொடுத்தும் அவர்கள் தயவு சம்பாதித்தும் சட்டசபைகளில் இதைப்பற்றி கேட்ட கேள்விகளுக்கு ஏறுமாறாய் பதில் சொல்லியும் கைப்பிடியாய்ப்



RangaRakes tamilnavarasam.com

பிடித்துக் கொண்ட சமயங்களில் ஊமைபோல் பேசாமலிருந்தும் ஜனங்கள் இவரது நாணயப் பொறுப்பில் சந்தேகமும் தீர்மானமும் கொண்டதைப் பற்றிக் கூட லக்ஷியமில்லாமலும் இருந்து அரசாங்கத்திற்கு உதவி செய்து இன்னமும் கொஞ்சகாலம் அப்பதவியில் இருக்க பிரயத்தனப்பட்டு வருகிறார் – ஆதலால் அது காலியாவது சற்று கஷ்டமானாலும் ஆகலாம். அல்லது அவருக்கு இதை விட பெரிய உத்தியோகம் கொடுப்பதாலோ அல்லது இவ்வளவு கேவலமாக அவரது ஆட்சியானது பழிக்கப்பட்டு விட்டது என்கின்ற காரணத்தாலோ காலி ஆனாலும் ஆகலாம். அனேகமாய் காலியாகுமென்றே எண்ணுகின்றோம்.

அப்படி காலியாவதனால் அதற்கு இப்போதிருந்தே போட்டி வந்து நிற்கின்றது.

முதலாவது பார்ப்பனர் பார்ப்பனரால்லாதார் போட்டி. அதாவது பார்ப்பனர்களில் ஸ்ரீமான்கள் டி. ரங்காச்சாரியார், ஜட்ஜி வி.வி. சீனிவாச யங்கார், சர். தேசிகாச்சாரியார், டி.ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியார் ஆகிய நால்வர்கள். பார்ப்பனரல்லாதார்களில் சர். K.V. ரெட்டி நாயுடு, சர். A.P.பாத்ரோ, டாக்டர் P. சுப்பராயன், ஸ்ரீமான்கள் T.A. ராமலிங்கம் செட்டியார், வெங்கிட்டபதி ராஜு ஆகியவர்கள் – இதில் பார்ப்பனர்களிலும் அய்யர், அய்யங்கார் என்கின்ற கக்ஷிகள் இருக்கின்றன. அதாவது அந்த வேலை ஏற்பட்டது முதல் ஒரு அய்யர் ஒரு அய்யங்கார் என்று மாறி மாறி வந்திருப்பதால் இப்போது அய்யருக்கடுத்தது அய்யங்காருக்குத்தான் கொடுக்க வேண்டுமென்றும் ஏற்கெனவே மூன்று அய்யர்கள் அதாவது ஸ்ரீமான்கள் V. கிருஷ்ணசாமி அய்யர், P.S. சிவசாமி அய்யர், C.P. ராமசாமி அய்யர் ஆகிய மூன்று அய்யர்கள் ஆகிவிட்டதாலும் அய்யங்கார்களில் P. ராஜ கோபாலாச்சாரியார், K. சீனிவாசய்யங்கார் ஆகிய இரண்டே அய்யங்கார்கள் மாத்திரம் ஆகி இருப்பதாலும் இது சமயம் ஒரு அய்யங்காருக்கே கொடுக்கப்பட வேண்டுமென்கின்ற உரிமை பாராட்டப்படுகின்றது.

அதுபோலவே பார்ப்பனரல்லாதார்களாலும் அந்த உத்தியோகம் ஏற்பட்டு இதுவரை அதாவது சுமார் 18 வருஷ காலமாக அது பார்ப்பனர்களுக்கே கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. அதனால் நீதி இலாக்கா முழுவதும் பார்ப்பன மயமாகிவிட்டது. இந்தத் தடவை எப்படியாவது அதை ஒரு பார்ப்பனரல்லாதாருக்கே கொடுக்க வேண்டும் என்கின்றதாக உரிமை பாராட்டப்படுகின்றது.

இதில் சர்.கே.வி. ரெட்டி நாயுடு அவர்கள் பார்ப்பனரல்லாதாரின் உண்மை பிரதிநிதி என்றும் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுத் தீர்மானத்திற்கு விரோதமாய் சர்க்காருக்கு அனுகூலம் செய்திருப்பதாகவும் உரிமை கொண்டாடுகின்றார்.



சர்.பாத்ரோ அவர்கள் பார்ப்பனரல்லாதவர் பிரதிநிதி என்பதோடு மிதவாதி என்கின்ற முறையில் சுவற்றின் மேல் பூனையாய் இருந்தேன் என உரிமை கொண்டாடுகின்றார்.

டாக்டர் சுப்பராயன் – நான் ஜஸ்டிஸ் கட்சியில் இல்லை என்பதுடன் முதல் மந்திரியாயிருந்து சர்க்காருக்கு உதவி செய்து வருகின்றேன், சுயராஜ்ய கட்சியைக் கொன்று விட்டேன், காங்கிரசின் அயோக்கியத் தனத்தை வெளியாக்கி விட்டேன், மந்திரி பதவியின் உபத்திரவம் பொறுக்க முடியவில்லை ஆதலால் அது எனக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று உரிமை பாராட்டுகிறார்.

ஸ்ரீமான் டி.எ. ராமலிங்கம் செட்டியார் – ஆதிமுதல் கொண்டு சர்க்காருக்கு நல்ல பிள்ளையாயிருப்பதுடன் ஜஸ்டிஸ் கட்சி அதிக பலம் பெற்றுச் சர்க்காருக்கு உபத்திரவம் விளைவிக்காமல் இருக்கத்தக்கப்படி அதில் கட்சியை உண்டாக்கி அதை தோற்றுப்போகும்படிச் செய்தேன், அதோடு பார்ப்பனர்களுக்கு தாசனாகவும் இருந்து வந்திருக்கின்றேன், சர்.சி.பி. அய்யர் சொன்னபடி எல்லாம் ஆடினேன். அதனால் பார்ப்பன ரல்லாத சமூகத்தில் உள்ள செல்வாக்கையும் இழந்தேன். கோயமுத்தூர் மகாநாட்டில் சர்க்காரையும் கவர்னர் பிரபுவையும், சர்.சி.பி. அய்யரையும் கண்டித்தும் வைதும் செய்யப்பட்ட தீர்மானங்களுக்கு விரோதமாய் வேறு ஒரு மகாநாடு கூட்டி அவைகளை மறுத்து தீர்மானம் செய்யச் செய்தேன். அதோடு இனியும் பார்ப்பனரல்லாத கட்சி அழிய என்ன என்ன வேலை செய்யவேண்டுமோ அதெல்லாம் செய்து வருகிறேன். ஆதலால் எனக்குத் தான் அவ்வுத்தியோகம் கொடுக்கப்பட வேண்டும் – என்று உரிமை பாராட்டுகிறார்.

ஸ்ரீ நரசிம்மராஜுலு அவர்களோ – சுயராஜ்யக் கட்சி செத்துப் போய்விட்டது. காங்கிரசும் வேரற்றுவிட்டது, வேறு உத்தியோகம் கிடைத் தால் இதை விட்டுவிடுவதில் தடையில்லை. அன்றியும் ஜஸ்டிஸ் கட்சியில் பிளவுண்டாக்கினதற்கு ஒரு காரணஸ்தன், ஆகையால் எனக்கே கொடுக்க உரிமை உண்டு என்கின்றார்.

இவற்றை அனுசரித்து பார்ப்பனரல்லாதார்களுக்குள்ளும் ஸ்ரீமான் கள் சர். ரெட்டி நாயுடுகாரும் டி.எ. செட்டியாரும் இன்னும் பலரும் சேர்ந்து ஒரு கட்சி ஏற்படுத்த வேலை செய்து வருகின்றார்கள். அதாவது (நான் பிராமின் கான்ஸ்ட்டியூஷனலிஷ்டு) பார்ப்பனரல்லாத ஒழுங்கு முறைக் காரர்கள் என்கின்ற பெயருடன் ஒரு கட்சி முயற்சித்து வருகின்றார்கள்.

இதற்காக ஒரு ஆங்கில பத்திரிகையும் ஏற்படுத்த கருதியிருப்ப தோடு ஆட்களை சேர்க்கவும் முயற்சிகள் நடந்து வருகின்றது. பிரசாரம்



RangaRakes tamilnavarasam.com

செய்ய சில பிரசாரகர்களையும் உத்தேசித்தாய் விட்டது. இதற்கு பணம் பெரும் பகுதியும் சூணாம்பேட்டை ஜமீன்தார் தலையில் கை வைப்ப தாகவும் தீர்மானித்தாய் விட்டது. ஸ்ரீ டி.எ.ரா. செட்டியார் கையிலிருந்தும் கொஞ்சம் செலவாகித்தான் தீரும்.

இந்த நிலையில் உத்தியோகப் போட்டி காரணமாய் பார்ப்பன ரல்லாதாருக்கு விரோதமாக இப்படி ஒரு பிரசாரமும் நடக்கப் போகின்றது. ஆனால் இது அநேகமாய் 2 மாதத்திற்குள் வேகம் குறைந்துவிடும். ஏனெனில் 2,3 மாதத்தில் இந்த உத்தியோகம் யாருக்கு ஆகும் என்பது முடிந்துவிடும். இது நிற்க,

ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள தலைவர்களின் பொறுப்பும் நாளுக்கு நாள் தளர்ந்து கொண்டுதான் வருகின்றது. ‘ஜஸ்டிஸ்’ பத்திரிகை ஆசிரியரான ஸ்ரீமான் ராமசாமி முதலியாருக்கு காங்கிரஸ் ஆசை அதாவது தேசீய ஆசை பிடித்துவிட்டது. அந்த மேடையில் எப்படியாவது இடம் கிடைத்து விட்டால் பார்ப்பனர்களின் யோக்கியதையை வெளியாக்கி இந்தியாவில் உள்ள பேச்சுக்காரர்கள் எல்லோரையும்விட நன்றாய் தனக்கும் தனது கட்சியாருக்கும் பேசி விளம்பரம் சம்பாதிக்கலாமே என்கின்ற ஆசையே முக்கியமானதாக இருக்கின்றது. இது பார்ப்பனர்களுக்குத் தெரிந்துதான் பார்ப்பனரல்லதாரைக் கொண்டே இவருக்கு இடம் கிடைக்காமல் செய்து விட்டார்கள். ஆனாலும் எப்பொழுது ஒரு தடவை காங்கிரசு ஆசை வந்து விட்டதோ இனி அவரும் அவரைப்போல் காங்கிரஸ் ஆசை பிடித்த ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களும் சரியானபடி பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு உதவ மாட்டார்கள் என்பதே நமது அபிப்பிராயம். ஆகவே ஜஸ்டிஸ் கட்சிக்குள் ( பார்ப்னரல்லாதாருக்குள் ) இப்படி ஒரு கூட்டம் சீக்கிரத்தில் வலுப்படக்கூடும் என்றே நினைக்கின்றோம். பனகால் ராஜாவுக்கு இன்னது செய்வதென்பது விளங்காமல் விழிக்கிறார் என்று தான் தெரிய வேண்டியிருக்கிறது. எப்படி யாவது இதை விட்டுவிட்டு ஓடிப் போனால் தேவலாம் என்று அவருக்குத் தோன்றுவதாகக் காணப்படுகிறது. தலைவர் என்கிற முறையில் எல்லோருக் கும் நல்ல பிள்ளையாக நடக்க முயல்கிறார். இக் கொள்கை பெரும்பாலும் தோல்வியைத்தான் கொடுக்கின்றது வழக்கம் என அஞ்சுகின்றோம். ஆகவே இதைப்பார்த்து யாரும் பயப்பட வேண்டியதில்லை. இப்பொழுது பார்ப் போமானாலும் சரி யார் மாறினாலும் சரி நமக்கு அதைப்பற்றி கவலை யில்லை.

எப்போதும் ஆங்கிலம் படித்தவன் உத்தியோகம் பெறுவதிலும் பணக்காரன் பதவியும் பெருமையும் பெறுவதிலும் கண்ணாயிருப்பார்களே தவிர பாமர மக்களையும், ஏழை மக்களையும் கவனிக்க மாட்டார்கள் என்பது சத்தியம்.



ஆகவே, அவர்கள் நம்முடன் இருந்தாலும் ஒன்றுதான் நம்மை விட்டு போனாலும் ஒன்றுதான். கூர்மையாய் பார்த்தால் இவர்கள் நம்மை விட்டு ஒழிந்து போவதே நல்லது. ஏனெனில் இவர்கள் நமக்குள்ளாக இருந்தே இவர்கள் தங்களது சுய நலத்திற்காக ஏமாற்றி நம்மை உபயோகித்து கொள்வ தைவிட அவர்களும் வெளிப்படையான எதிரிகளாகிவிடுவதே. மேலானது. பார்ப்பனனின் உயர்ந்த ஜாதித் தன்மையும் ஆங்கிலம் படித்த உத்யோ கஸ்தனின் அதிகாரத் தன்மையும், பணக்காரனின் செல்வச்செருக்குத் தன்மை யும் ஒரே தத்துவம் கொண்டதுதான். உண்மை விடுதலைக்கு இம்மூன்றும் சமமான எதிரியேயாகும். ஆதலால் இவற்றையெல்லாம் சேர்த்து எதிர்த்து நிற்கும் நிலை எவ்வளவு சீக்கிரத்தில் நமக்கு ஏற்படுகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு நமக்கு பல விதத்திலும் விடுதலைப் போர் சீக்கிரமாக முடியு மென்பதே நமது அபிப்பிராயம். ஆதலால் இவ்வருடத்திய உழைப்பில் யாரும் மனம் தளர்ந்துவிடவேண்டியதில்லை. ஒற்றுமையாய் முனைந்து நின்று வேலை செய்தால் நமது முடிவான லட்சியம் கைகூடும் என்று தைரிய மாய்ச் சொல்லுவோம். நமது லட்சியம் நியாயமானதும், சத்தியமானது மாயிருந்தால் எதிர்ப்புகள் ஏற்படுவதெல்லாம் நன்மைக்கனுகூலமாகவே இருக்கும் என்கின்ற விஷயத்தில் யாவருக்கும் நம்பிக்கை இருக்க வேண்டும். உத்தியோக சண்டையை விடுதலைப் போராக நினைத்து ஏமாந்ததில் வெகுகாலம் வீணாய்விட்டது. ஆதலால் பொதுஜனங்கள் தேச நன்மைக்கும் மக்கள் சுய மரியாதைக்கும் சமத்துவத்திற்கும் உத்தியோக சண்டையையே பிரதானமாய் கருதாமல் சுயமரியாதைச் சண்டை என்பதாகவே தனிச்சண்டை நடத்தத் தயாராயிருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 15.01.1928**



RangaRakes
tamilnavarasam.com

# புது வருஷத்தின் பார்ப்பன ஆதிக்க நிலை

சென்னையில் காங்கிரஸ் கூட்டப்பட்டதின் பயனாக பார்ப்பனர்களின் யோக்கியதையும் அவர்களின் ஆயுதமாகிய தேசீயத்தின் யோக்கியதையும் யாவருக்கும் விளங்கியிருந்தாலும், பார்ப்பனர்கள் இன்னமும் நம்பிக்கை இழக்காமல் தைரியமாய் இருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும், ஏனெனில் பல விதத்திலும் அவர்களுக்கு பார்ப்பனரல்லாதார் உதவி இருப்ப தாகத்தான் சொல்ல வேண்டும்.

உதாரணமாக இப்போது பார்ப்பனர்களுக்குத் தமிழ்நாட்டில் பார்ப்பன ஆதிக்க பிரசாரத்திற்கு முக்கிய உதவியாயிருக்கும் பார்ப்பனரல்லாதார்களில் முக்கியமானவர்கள் ஸ்ரீமான்கள் முத்துரங்க முதலியார், ஓ. கந்தசாமி செட்டியார், வரதராஜுலு நாயுடு, ஜார்ஜ் ஜோசப், குழந்தை, அண்ணாமலை பிள்ளை, குப்புசாமி முதலியார், கோவிந்தராஜு முதலியார், ஐயவேலு ஆகி யோர்களே ஆவார்கள். மற்றபடி ஸ்ரீமான்கள் சாமி வெங்கடாசலம் செட்டி யார். சாமி நாயுடு, ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் முதலியோர்களிடத்தில் நம்பிக்கையில்லாத தன்மையைத் தெரிவித்து விட்டார்கள்.

ஸ்ரீமான் முத்துரங்க முதலியாரின் யோக்கியதையைப் பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை. பெரிய வருணாசிரம தர்மி. பார்ப்பனர்களைப் பூலோக தேவதைகளாகக் கொண்டவர். அவர் எழுதிக் கொடுத்ததைப் படிப்ப தும் சொல்லிக் கொடுத்ததைச் சொல்லுவதும் தவிர வேறு எது படித்தாலும் சொன்னாலும் குரு அபசாரமென்றும் வேத நிந்தனை என்றும் நினைப்பவர். அவருக்கு மேலான பார்ப்பன பக்தன் இனி எந்த பிரம்மாவினாலும் சிருஷ்டிக்கப்பட முடியாது.

ஸ்ரீமான் ஓ.கந்தசாமி செட்டியாரோ தனது அறிவையும் உயிரையும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பாதத்தில் சமர்ப்பித்து விட்டவர். தனக்கு கந்த சாமி செட்டியார் என்கிற பெயர் கூட இருப்பது கூட கஷ்டம் என்று நினைத் துக் கொண்டிருக்கின்றவர். ஏனெனில் பெயர் மாத்திரத்தினால் கூட அய்யங் கார் வேறு, செட்டியார் வேறு என்று ஏற்படுகின்றதே என்று விசனப்பட்டு ராமருக்கு அனுமான் என்பது போல் சீனிவாசருக்கு கந்தசாமி என்கின்ற நிலை வேண்டுமென்று நடந்து கொண்டு வருபவர்.



இவர் ஆதியில் பார்ப்பனரல்லாதார் கக்ஷியில் இருக்கும்போதே பேசின பேச்சும் எழுதி வந்த எழுத்துக்களும் இனியும் இருந்து கொண்டுதான் இருக்கின்றது.

பண விஷயமான தகலாறுகள் ஏற்பட்டதும், அய்யங்கார் தாராளமாய் செட்டியாருக்கு உதவிபுரிய முன்வந்ததும், செட்டியாரின் பழைய நிலைமை எல்லாவற்றையும் மாற்றி புது ஜன்மம் எடுத்தவர் போல் நடந்து கொள்ள வேண்டியவராகிவிட்டார்.

செட்டியாரின் யோக்கியதைக்கு ஒரே ஒரு உதாரணம் போதும். அதா வது ஆசார சீர்திருத்த மகாநாட்டுக்கு காரியதரிசி என்கின்ற முறையில் பார்ப்ப னரல்லாதார் வாலிபர் சங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அது என்ன வென்றால் பார்ப்பனரல்லாதார் வாலிப சங்கத்திலிருந்து ஆசார சீர்திருத்த மகாநாட்டுக்கு பிரதிநிதிகளை ஒப்புக்கொள்ளமுடியாது என்று எழுதி யிருக்கிறார். இந்த எழுத்து செட்டியாரின் நிலைமை எவ்வளவு தூரம் மாறியிருக்கின்றது என்பதை காட்டும்.

"மானம், குலம், கல்வி, வன்மை அறிவுடைமை முதலியவை பத்தும் பசிவந்திடப் பறந்து போம்" என்கின்ற ஆப்த வாக்கியத்திற்கு செட்டியார் நடத்தையைவிட வேறு உதாரணம் கிடைப்பதரிது.

இனி ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு விஷயமோ சொல்லவேண்டிய தில்லை. அவர் பத்திரிகையையும் பிரசங்கத்தையும் நடவடிக்கையையும் பார்த்து வருகின்றவர்களுக்கு புதிதாக ஒன்றும் சொல்லி தெரியப்படுத்த வேண்டிய தில்லை. அவருக்கு இரண்டே இரண்டு மந்திரம் தான். அதாவது "சமூக இயலில் பார்ப்பனர்கள் அயோக்கியர்கள்." "அரசியலில் பார்ப்பனர் கள் குருவும் தலைவர்களுமானவர்கள்" என்பதைக் கொண்டு சமயம் போல் திரும்ப வசம் வைத்துக் கொண்டிருப்பவர்.

ஸ்ரீமான் சீனிவாச அய்யங்காரருக்கு முழு விரோதியாக ஏற்பட்டு விட்டால் குடிமுழுகிப் போகுமே என்று பயந்து கொண்டு உள் உளவில் அவ ருக்கு நல்ல பிள்ளையாக இருந்து வருவதாக வாக்கு கொடுத்திருப்பவர். அவ்வாக்கை நிறைவேற்றவே ஸ்ரீமான் சண்முகம் செட்டியாரை நீக்கவும், ஜார்ஜ் ஜோசப் அவர்களுக்கு கிடைக்க இருந்த தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையை அய்யங்காருக்கு சூட்டவும் ஏற்பட்டது.

ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப் அவர்கள் விஷயம் இவ்வளவு மோசமாக இல்லா விட்டாலும் பார்ப்பனர்களிடத்தில் உள்ள பயம் ஒரு சிறிதும் நீங்கவில்லை. என்பதும் வாழ்க்கைக்காக பார்ப்பனர்கள் தயவு சற்றும் வேண்டியில்லா



RangaRakes tamilnavarasam.com

விட்டாலும் உத்தியோகம் பதவி முதலியவைகளை அவர்கள் தயவால் சம்பாதிக்கலாம் என்கின்ற ஆசை நீங்காதவர்.

மற்றபடி ஸ்ரீமான்கள் குழந்தை, கோவிந்தராஜு முதலியார், அண்ணா மலை பிள்ளை, குப்புசாமி முதலியார், ஜயவேலு ஆகிய கனவான்களைப் பற்றி யாராவது ஒருவர் கூட தெரியாமலிருக்க மாட்டார்கள் என்கின்ற முடிவினால் விட்டுவிட்டோம்.

எனவே இத் தமிழ்நாடு முழுவதையும் நமது பார்ப்பனர்கள் இந்த பக்தர்களைக் கொண்டே ஆண்டு விடலாம், ஆதிக்கம் பெற்று விடலாம் என்கின்ற தைரியத்துடன் சுயேட்சைத் தீர்மானத்தையும், ராயல் கமிஷன் பஹிஷ்காரத் தீர்மானத்தையும் மகமதியர்களின் வகுப்புவாரித் தீர்மானத்தை ஒழிக்கும் தீர்மானத்தையும் பிரசாரம் செய்வதற்கும் அதன் மூலம் தாலூகா, ஜில்லா, முனிசிபாலிட்டி, சட்டசபை, இந்திய சட்டசபை முதலியவைகளின் தேர்தல்களில் பார்ப்பனர்களையும் பார்ப்பன தாசர்களையும் வெற்றிபெறச் செய்து அமர்த்தவும், துணிந்து பிரசாரத்தில் இறங்கி விட்டார்கள். அதற்கு ஏற்றார்போல் பத்திரிகைகளும், அதாவது ‘இந்து’ ‘சுயராஜ்யா’ ‘டெய்லி எக்ஸ்பிரஸ்’ போன்ற ஆங்கில பத்திரிகைகளும், ‘சுதேசமித்ரன்’ ‘தமிழ்நாடு’ ‘சுயராஜ்யா’ ‘தேசபந்து’ ‘தென்னாடு’ ‘ஊழியன்’ ‘ஜனமித்திரன்’ போன்ற தமிழ் தினசரி வாரப்பதிப்பு ஆகிய பல பத்திரிகைகளும் இருக்கின்றன.. இதற்கு அனுகூலமாக பல இடங்களில் பார்ப்பனரல்லாதவர்களுக்குள்ளா கவே தலைவர் தகலாறுகளும், எலக்சன் தகலாறுகளும், உத்தியோகத் தகலாறு களும், பத்திரிகை தகலாறுகளும் கொண்ட பல கட்சிகள் இருக்கின்றது. அதற்கு ஏற்றாப்போலவே இவ்வளவு தகலாறுகளிலும் ஸ்தல ஸதாபனங்க ளிலும் பார்ப்பனர்களின் ஆதிக்கமும் தாண்டவமாடுகின்றது. ஆகவே புது வருஷத்தில் பார்ப்பன ஆதிக்கத்திற்கு பலக்குறைவு இருப்பதாக யாரும் சொல்லிவிடமுடியாது. ஆதலால் பார்ப்பனரல்லாதார் கட்சியார்கள் ஜாக்கிரதையாகவும் சுயநலமில்லாமலும், யோக்கியமாகவும் நடந்து கொண்டா லொழிய நிவர்த்தியில்லை என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்..

**குடி அரசு - கட்டுரை - 15.01.1928**



# நீல்சிலையைப் பற்றி காங்கிரஸ் வேடிக்கை பார்க்க வந்த இரு சகோதரர்களுக்குள் நடந்த சம்பாஷணை.

**தம்பி :** நீல் சத்தியாக்கிரகம் என்று சொல்லிக்கொண்டிருந்தார்களே, அது என்ன ஆச்சுது?

**அண்ணன் :** அது உனக்குத்தெரியாதா. “தென்னை மரத்தில் தேள் கொட்ட பனை மரத்தில் நெறி ஏறினது” போல் நீல் சிலையை உடைக்கப் போய் கிருஷ்ணசாமி அய்யர் சிலையின் மூக்கு போய் விட்டது.

**தம்பி :** அப்படிச் சொன்னால் எனக்கு விளங்கவில்லை, நடந்த சங்கதியைத் தெளிவாய்ச் சொல்லு,

**அண்ணன்:** நீல் துரை சிலையை சத்தியாக்கிரகக்காரர்கள் சம்மட்டி யால் அடிக்கப் போனார்கள், அதைப் பலாத்காரம் என்று ‘குடி அரசு’ எழுதுச்சு. ஆனால் ஸ்ரீமான் காந்தி அதைப் பலாத்காரம் அல்ல சம்மட்டியால் உடைக்கலாம் என்று சொன்னார். அப்பவும் ‘குடி அரசு’ அது பலாத்காரம் தான் என்று சொல்லிற்று. அப்புறம் ஸ்ரீமான் காந்திக்கு புத்தி வந்து சம்மட்டி யால் அடிக்காதே களிமண் உருண்டையால் அடி என்று சொல்லிவிட்டு போய் விட்டார். இப்பொழுது சாமிக்கு புஷ்பத்தால் அர்ச்சனை செய்வது போல் தொண்டர்கள் நீல் சிலையை களிமண் உருண்டையால் அர்ச்சனை செய் கிறார்கள். சத்தியாக்கிரகம் நடத்த வந்த தலைவர்களுக்கெல்லாம் வரவு செலவு கணக்கு வைக்கத்தெரியாததால் வசூலான பணங்களை எலி தின்ன ஆரம்பித்து விட்டது. இதனால் ஒருவருக்கொருவர் சண்டையுண்டாச்சு. புதுப்புதுத் தலைவர்கள் வந்தவண்ணமாயிருக்கிறார்கள். தொண்டர்களை விட தலைவர்களின் எண்ணிக்கை அதிகமாய்விட்டதுடன் வரவர நீல் சத்தியாக்கிரகம் அய்யர், அய்யங்கார், அம்மங்கார், பந்தலு ஆகியவர் களுக்கே சொந்தமாகிவிட்டது. “தேசீயத் தலைவர்கள்” எல்லாம் சர்க்காருக்கு பயந்து கொண்டு ஓடிவிட்டாலும், தேசீயத் தொண்டர்களுக்கு பயந்து



RangaRakes tamilnavarasam.com

கொண்டு. அதாவது நாளைக்கு இத்தொண்டர்கள் ஜெயிலுக்குப் போய் தேசபக்தர்களாய் வந்து தங்கள் மேல் பாய்ந்தார்களானால் ஆபத்து வருமே என்று நினைத்து இரகசியமாய்ப் பணம் கொடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள். என்னசெய்தும் எண்ணைச் செலவேயொழிய பிள்ளை பிழைக்கும் வழியைக் காணோம்.

இது இப்படியிருக்க பாவம்! சிவனே என்று சமுத்திரத்தைப் பாாத்து நின்று கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யருடைய சிலையின் மூக்கை எவனோ திருட்டுத்தனமாய் அறுத்துவிட்டுப் போய்விட்டான். அந்தச் சங்கதி அப்படியே மறைபட்டுப் போய்விட்டது. அதைப்பற்றி யாரும் கவலையெடுத்துக் கொள்ளவில்லை. பார்ப்பனர்களின் கையாளான ஸ்ரீ முத்துரங்க முதலியாரும் மற்றும் சிலரும் பார்ப்பனரல்லாத வாலிபர்கள்தான் இப்படிச் செய்திருக்கவேண்டும் என்று நினைக்கும்படி சாடி சொல்லியும் கூட மூக்கறுத்த சிலைக்கு மூக்கு ஒட்ட வைக்காமல் அப்படியே கிடக்கின்றது.

**தம்பி :** அப்படியானால் இந்த சத்தியாக்கிரகம் எப்படித்தான் முடியும்?

**அண்ணன்:** அடுத்த முனிசிபல் எலக்ஷன் வரைக்கும் வீதிவீதியாய் மீட்டிங் போட்டு பார்ப்பனருக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க இதை ஒரு சாக்காக நடத்திப் பார்ப்பார்கள். அது முடிந்து அதன் பலன் என்ன ஆச்சுது என்று தெரிந்து பிறகுதான் சொல்லக்கூடும். இப்பொழுது முடிவு கட்ட முடியாது.

**தம்பி :** சட்டசபை எலக்ஷனுக்குக்கூட இது உபயோகப்படுமா?

**அண்ணன்:** அது முனிசிபல் எலக்ஷனைப் பொறுத்திருக்கின்றது. ஏனென்றால் இதில் ஜெயம் கிடைத்தால் நீட்டி வைப்பார்கள். இதில் தோல்வி கிடைத்தால் நிறுத்தி விடுவார்கள்.

**தம்பி:** இந்தப் புரட்டுக்காக எத்தனை பேர் ஜெயிலுக்குப் போவது? கேள்வி கேப்பாடு இல்லையா?

**அண்ணன் :** கேள்வி என்ன, கேப்பாடு என்ன? அவர்கள் ஜெயிலில் இருந்தால் நஷ்டம் என்ன, வெளியில் இருந்தால் லாபமென்ன? எல்லாவற்றையும் கடந்து உள்ளும் புறமும் ஒன்று என்று நினைக்கும் கடந்த ஞானிகள் தானே இப்போது ஜெயிலுக்குப் போயிருப்பவர்கள்.

**தம்பி:** ஐயோ பாவம்! அவர்கள் தாய் தகப்பன்மார்கள் வருத்தப்படமாட்டார்களா?



**அண்ணன்:** சிலரின் தாய் தகப்பன்மாருக்கு தங்களைப் பிடித்த தொல்லை ஏதோ ஒரு வழியில் ஒழிந்ததே என்ற சந்தோஷமுண்டு. சிலருக்கு அவரவர்களே தாய் தகப்பன்மார்கள். சில விஷயத்தில் வருத்தப்பட்டாலும் படலாம். ஆனாலும் இவற்றை அவ்வளவு பிரதானமாய்க் கருதுவதில்லை. ஏனென்றால் தங்கள் குழந்தைகள் உள்ளே போகும்போது தேசத்தொண்டர்களாகப் போய் ஜெயிலிலிருந்து வரும்போது தேச பக்தர், தேசத் தலைவர், தேசீயத் தலைவர் முதலிய பட்டங்களோடு வரக்கூடும் என்கின்ற தைரியத்தினால் பொறுத்துக் கொள்வார்கள்.

**தம்பி:** இந்த மாதிரி கணக்கு வழக்கு இல்லாமல் அதிகமான தேசபக்தர்கள் ஏற்பட்டுவிட்டால் இவ்வளவு பேர்களுக்கும் வேலை வேண்டாமா?

**அண்ணன் :** அதைப்பற்றி உனக்கென்ன கவலை? தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, சட்டசபை முதலிய எத்தனையோ எலக்ஷன் கள் வரப்போகிறது. எத்தனையோ பேர் அகில இந்திய தலைவர்களாகப் போகிறார்கள். இன்னும் எத்தனைபேர் வாழ்வுக்கு இம்மாதிரி குட்டித்தலைவர் களும் மூட்டை முடிச்சுகளைத் தூக்குவதற்குத் தேசபக்தர்களும் தேவை யிருக்கிறது. இன்னும் எத்தனையோ ஊர்களில் கக்ஷிப் பிரதி கக்ஷிகள் இருக்கின்றது. இதில் ஒவ்வொரு கக்ஷிக்கும் தேச பக்தர்கள் வேண்டும். இவைகளையெல்லாம் பார்த்தால் இன்னும் குட்டித் தலைவர்களும் தேச பக்தர்களும் வேண்டுமே ஒழிய இப்போதிருப்பது அதிகமென்று சொல்ல முடியாது. ஆனதினால் தேசபக்தர்களை உண்டாக்க இந்த சிலை ஒரு காரண மாயிருப்பதால் அவ்வளவு சீக்கிரத்தில் முடிந்துவிடும் என்று சொல்ல முடியாது.

**தம்பி :** அப்படியா? நேரமாச்சுது மற்ற சங்கதிகளை சாவகாசமாய் பேசிக் கொள்ளலாம். நேரமாச்சுது இதோ தெரிகிறதே காங்கிரஸ் பொருள் காக்ஷி கொட்டகை அதற்குள் நுழைந்து அதைப் பார்க்கலாம் வா.

சரி இருவரும் பொருள்காக்ஷி சாலைக்குள் நுழைந்து விட்டார்கள், அவர்கள் பேசிக் கொள்வதைக் கேட்டுவரும்படி வேறு ஆளை அனுப்பி விட்டு நான் வந்து விட்டேன்.

**குடி அரசு – உரையாடல் – 15.01.1928**



RangaRakes tamilnavarasam.com

# இதுவா ராஜிக்கு சமயம்

10-01-28 தேதி சென்னை கோகலே ஹாலில் ராயன் கமிஷன் பகிஷ்கார விஷயமாய் பெசண்டம்மை, ஸ்ரீமான்கள் பி.சிவராவ், எல்.கோவிந் தராகவய் யர், எம். ராமச்சந்திர ராவ். சி. விஜயராகவாச்சாரியார், கே.ஆர். வெங் கிடராமய்யர் ஆகிய பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாத கட்சித் தலைவர்களில் ஸ்ரீமான் கள் பணகால் ராஜா, சர் பாத்ரோ, கிருஷ்ண நாயர் ஆகியவர்களைக் கூப்பிட்டு ராஜி பேச ஏற்பாடு செய்ததாகத் தெரிகின்றது.

இக்கூட்டத்தில் பெரிதும் அரசியல் திட்டத்தைக் குறித்தும், கமிஷன் பகிஷ்காரத்தைக் குறித்தும் பேசினார்களாம். நமது சுயமரியாதையையும் சமத்துவத்தையும், இப்பார்ப்பனர்கள் ஒப்புக்கொள்ளாமல் இருக்கும் வரை அவர்களுடன் கலந்து ராஜீயத்திட்டம் போடுவதோ அல்லது அவர் களுடன் கலந்து அரசியல் கிளர்ச்சி நடத்துவதோ பகிஷ்காரத்தில் இறங்கு வதோ போன்ற அறியாமை வேறில்லை என்பதே நமது அபிப்பிராயம்.

சுயராஜ்யமும், அரசியல் கிளர்ச்சியும், பகிஷ்கார கூச்சலும் படித்த வர்கள் உத்தியோகம் பெறுவதற்காகவா? அல்லது ஏழைக் குடிகளைக் காப்பாற் றுவதற்காகவா? என்பதை ஒவ்வொருவரும் நெஞ்சில் கையை வைத்துப் பார்க்கட்டும். அவ்வுத்தியோகம் எல்லா வகுப்பாருக்கும் சரிசமான மாய் கிடைப்பதற்கு ஒப்புக் கொள்ளாதவர்களிடம் ராஜிப் பேச்சு பேசுவதில் என்ன பலன் கிடைக்கும்? அவ்வுத்தியோகத்தின் மூலமோ அதனால் ஏற்படும் பிரதிநிதித்துவத்தின் மூலமோ சகல ஜனங்களுக்கும் சமத்துவமும், சமூக விஷயத்தில் சம உரிமையும் கிடைக்கும்படி செய்வதற்கு உபயோகிக்க சம்மதிக்காதவர்களிடத்தில் ராஜிப் பேச்சு பேசுவதில் என்ன பலன்? ஆகவே ஒரு பெரிய சமூகமாகிய பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்ளுபவர்கள் இவ்விஷயங்களைக் கவனிக்காமல் தங்களுக்கு மாத்திரமோ தங்கள் கோஷ்டிக்கு மாத்திரமோ ஏதோ சில சிறு சிறு பலன்கள் கிடைக்கக்கூடும் என்கின்ற எண்ணத்தின் பேரிலோ அல்லது கிடைக்க செய்வதாய் சில பார்ப்பனர்கள் வாக்களிக்கின்றார்கள் என்கின்ற நம்பிக்கை யின் பேரிலோ ராஜிப் பேச்சு பேச உட்காருவதால் மற்ற பொது ஜனங்கள் எல்லோரும் கண்மூடித்தனமாய் ஒப்புக் கொள்ளுவார்கள் என்று எதிர்பார்ப் பது ஏமாற்றமாய் முடியும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.



தவிரவும் பார்ப்பனர்கள் போட்ட பகிஷ்கார கூச்சல்களுக்கும் அவர் களது போலித் தீர்மானங்களுக்கும் நாட்டில் மதிப்பு இல்லாமல் போனதை கண்ட வாலறுந்த நரிகள் மற்ற எல்லா நரிகளின் வாலும் அறுந்து போகும்படி செய்து விட்டால் தமக்கு மாத்திரம் தனி அவமானம் இருக்காது என்பது போன்ற எண்ணத்துடன் ஜஸ்டிஸ் கட்சியாரின் ஆதரவைப் பெற வந்திருக் கிறார்கள் என்பதை உணர்ந்து அப்பார்ப்பனர்களின் சூழ்ச்சியில் சிக்கி தாங்களும் வாலறுந்த கூட்டத்தில் சேராமல் இருக்கவேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு – கட்டுரை – 15.01.1928**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ் தீர்மானங்களும் ஸ்ரீ காந்தியும்

காங்கிரசின் யோக்கியதையைப் பற்றி ஸ்ரீ காந்தி அவர்கள் தமது அபிப்பிராயம் வெளியிட்ட பிறகுதான் தமிழ்நாட்டு மக்களில் பலருக்கு 'குடி அரசு' இதுவரையில் உண்மையைத் தான் சொல்லி வந்திருக்கின்றது என்று புலப்பட்டு இருக்கின்றது. உண்மையை ஒழிக்காமல் பேசவேண்டுமானால் நமது நாட்டில் காங்கிரஸ் என்கின்ற ஒரு கொடிய யமன் போன்ற இந்த ஸ்தாபனம் இருக்கும் வரையில் ஏழை மக்கள் விடுதலை என்பதைக் கனவிலும் நினைக்க வேண்டியதில்லை என்றே கல்லிலும் எழுதி விடுவோம்.

வெள்ளைக்காரனின் கொடுமையான ஆக்ஷிமுறை ஏதாவது ஒரு காலத்திலாவது நமது நாட்டை விட்டு ஒழிய வேண்டுமானால் முதலாவது காங்கிரஸ் ஒழிந்து தீரவேண்டும். பிறகு தான் இந்து மதமும் பார்ப்பன ஆதிக்கமும் ஒழியவேண்டுமென்று சொல்லுவோம்.

ஏனெனில் இந்து மதத்தின் பேரால் பார்ப்பனர்கள் மாத்திரம்தான் மக்களை ஏமாற்றி பாழ்படுத்த முடியும் காங்கிரசோ அப்படியில்லை. காங்கிரசின் பேரால் எல்லா வகுப்பு அயோக்கியர்களும் அன்னக்காவடி களும் அநாமதேயங்களும் காலிகளும் மக்களை ஏமாற்ற வசதியிருக்கின்றது. இந்து மதம் ஒரு மனிதன் செத்தபிறகு மோக்ஷம் ( விடுதலை) கொடுப்பது என்கின்ற புரட்டான தத்துவத்தின் மீது கட்டப்பட்ட பொய்க் கோட்டையாகும். காங்கிரசோ உயிருடன் இருக்கும்போதே விடுதலை ( மோக்ஷம்) கொடுப்பது என்கின்ற புரட்டான தத்துவத்தின் மீது கட்டப்பட்ட பொய்க் கோட்டையாகும். பாமர மக்களும் ஏழை மக்களும் இதை வெகு சுலபத்தில் நம்பி ஏமாந்து போக தக்கபடி தந்திரங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

அதற்குத் தக்கபடி அரசாங்கத்தின் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்படும்படி பிரசாரங்கள் செய்ய வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே ஜனங்கள் ஏமாந்து போவதில் அதிசயம் இல்லை. சென்னை காங்கிரசைப் பற்றியும், தமிழ்நாட்டு காங்கிரஸ் ஸ்தாபனங்களைப் பற்றியும் அதை நம்பிக் கொண்டு வாழும் தலைவர்களைப் பற்றியும் 'குடி அரசு' ஒரு வருஷத்திற்கு மேலாக எவ்வளவோ தூரம் பிட்டுப் பிட்டு விளக்கி எழுதி வந்தும் எத்தனை பேர் அதை லக்ஷியம் செய்தார்கள் என்று பார்த்தால் மிகக் கொஞ்சம் பேர்



என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் சமீப காங்கிரசுக்கு தேர்திருவிழா என்கின்ற வேடிக்கைப் பார்ப்பவர்கள் போல திரள்திரளாக ஜனங்கள் ஓடி வந்தார்கள். காங்கிரஸ் முடிந்தபிறகு சத்தியகீர்த்தியென்று பெயர்வாங்க ஆசைப்பட்ட மகாத்மா காந்தி என்பவரும் "காங்கிரசுக்குப் போகும்போது வழியிலேயே நான் செத்துப் போவேன் என்று டாக்டர்கள் சொல்லுவதானாலும், காங்கிரசுக்கு போய்த்தான் தீருவேன்" என்று சொன்னார். அதற்கு 15 நாளைக்கு முன்பு தான் "எனது மனச்சாக்ஷியை காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் சீனிவாச அய்யங்காரருக்கு ஒப்படைத்து விட்டேன்" என்று சொன்னார். இந்த இரண்டு வேத வாக்குகளும் எத்தனை பயித்தியக்காரர்களை மோசம் பண்ணியிருக்கும் என்று யோசித்துப் பார்த்தால் யோக்கியர்களின் மனம் பதறாமல் இருக்காது.

இவ்வளவு பணச் செலவையும் இவ்வளவு ஏமாற்றத்தையும் கொடுத்து விட்டு தானும் இருந்து காங்கிரசை நடத்தியதாக மக்கள் நினைக்கத்தகுந்த மாதிரி நடந்து கொண்ட பிறகு பொது ஜனங்கள் தாங்களாகவே காங்கிரசின் யோக்கியதையையும், தலைவர்களின் யோக்கியதையையும், தீர்மானங்களின் யோக்கியதையையும் தெரிந்து கொண்டார்கள் என்று ஏற்பட்டபிறகு, அதுவும் ஸ்ரீ சீனிவாசய்யங்காரே இது ஒரு விளையாட்டுத் தீர்மானம் என்று ஒப்புக் கொண்டபிறகு "காங்கிரஸ் விளையாட்டுப் பிள்ளைகள் கூட்டம்", "பொறுப் பற்றவர்கள் கூட்டம்", "யோசனையற்றவர்கள் கூட்டம்", "முட்டாள் தனமான தீர்மானம்", "உலகத்தார் பார்த்து சிரிக்கத் தகுந்தது", "நேர்மையற்றது", "நாணயமில்லாதது", "மக்களை ஏமாற்றச் செய்தது", "அவமானத்திற்கு இடம் தரக்கூடியது" என்று எழுதி விடுவதால் ஏற்பட்ட பயன் என்ன என்று கேட்கின்றோம்.

இனியாவது ஸ்ரீமான் காந்தி யோக்கியமாய் உண்மையை ஒப்புக் கொண்டு தைரியமாய் பொதுஜனங்களுக்கு விளங்கும்படியாக ஏதாவது சொல்ல வருகின்றாரா என்று பார்த்தால் அங்கும் சாமர்த்தியமாகவும் தந்திரமாகவும் நடந்து கொள்ளுகிறாரே ஒழிய அவர் வாக்குகளில் சத்தியம் தாண்டவமாடுகின்றதா என்று கேட்கின்றோம். ஏன் இவர் தைரியமாய் "இந்த காங்கிரசினாலும் இதன் கொள்கைகளினாலும் இதற்கு ஏற்படக்கூடும் தலைவர்கள், அபிமானிகள் ஆகியவர்களாலும் நாட்டுக்குநலன் விளையாது. கேடுதான் விளையும்" என்று சொல்லிவிடக்கூடாதுயென்று கேட்கின்றோம்.

தவிரவும் பூரண சுயேச்சைத் தீர்மானத்தையும் பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரத் தீர்மானத்தையும், இந்து முஸ்லீம் ஒற்றுமைத் தீர்மானத்தையும் பற்றி தமது அபிப்பிராயத்தை தெரிவித்த ஸ்ரீமான் காந்தி சைமன் கமீஷன் பகிஷ்காரத் தீர்மானத்தைப்பற்றி ஏன் தனது அபிப்பிராயத்தை தெளிவாய் தெரிவித்துவிடக்கூடாது என்றும் கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

இவ்வருஷ காங்கிரஸ் திட்டத்தில் இந்து முஸ்லீம் ஒற்றுமைத் தீர்மானத்தின் மீதும் அதுபோலவே பூரண சுயேச்சைத் தீர்மானத்தின் மீதும் பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரத் தீர்மானத்தின் மீதும் இப்போது செய்ய வேண்டிய வேலை ஒன்றும் இல்லை. எனவே இப்போது காங்கிரஸ் தீர்மானப் படி காரியத்தில் செய்யப் போகும் வேலையெல்லாம் கமிஷன் பகிஷ்காரத் தீர்மானத்தின்படி தான், ஆகவே இந்த சமயம் ஸ்ரீமான் காந்தி மக்களுக்கு ஏதாவது அபிப்பிராயம் சொல்லவேண்டுமானால் இதைப்பற்றிதான் சொல்லி யாகவேண்டும். இதுதான் பிரயோஜனப்படக்கூடியதாகும். இப்படிக்கிருக்க இத்தீர்மானத்தைப் பற்றி ஒன்றுமே பேசாமல் இருந்தால் இதன் பொருள் என்ன என்று பொதுஜனங்கள் நினைப்பது என்பது நமக்கு விளங்கவில்லை.

நம்மைப் பொருத்தவரை இதற்கு காரணம் என்னமாயிருக்கும் என்று யோசிப்போமானால் பொதுஜனங்களுக்கு தான் நல்ல பிள்ளையாவதற்கு காங்கிரசையும் தீர்மானங்களையும் தலைவர்களையும் வைவதற்கும், வைவ தற்கு வேண்டி பார்ப்பனர்கள் வாயை மூடிக்கொண்டு தன்னை திருப்பி வையாமலிருப்பதற்கு லஞ்சம் கொடுத்ததற்கு ஒப்பாகும் என்றுதான் காணக் கூடியதாயிருக்கின்றது. இது எப்படியோ இருக்கட்டும், இனி கமிஷன் பகிஷ்காரத்தைப் பற்றி கவனிப்போம்.

## பகிஷ்காரம்

பகிஷ்காரம் என்பது கமிஷன் மெம்பர்களுக்கு நமது அபிப்பிரா யத்தை அல்லது நமது தேவையை அல்லது நமது நிலையை தெரியப் படுத்தக் கூடாது என்பதா? அல்லது கமிஷன் முன்னால் போய் நின்று அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லக்கூடாது என்பதா? என்பது நமது கேள்வி.

முதலாவது விஷயமானால் கமிஷன் தீர்மானத்தில் ஏதாவது சிறிது பொருள் இருப்பதாக சொல்லிக் கொள்ளலாம். இரண்டாவதானால் இத் தீர்மானம் சுத்தசுத்தமாக ஏமாற்று தீர்மானம் என்று தான் சொல்லிவிட வேண்டும். முதலாவது சொல்வார்களானால் ஸ்ரீ மோதிலால் நேருவும், ஸ்ரீமான்கள் சீனிவாச அய்யங்கார் கூட்டமும் விஜயராகவாச்சாரியாரும் முறையே அரசியல் திட்டம் தயாரித்து கமிஷன் முன் சமர்ப்பித்து விட வேண்டும் என்பதிலும் திடடம் தயாரித்து ஏற்கனவே அனுப்பியிருப்பதிலும் பகிஷ்கார வாசனை ஏதாவது இருக்கின்றதா?

தவிர இந்தியாவின் சுயமரியாதைக்காக கமிஷனைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று சொல்லுகின்ற பெசண்ட்டம்மைக்கும் உண்மையில் சுய மரியாதை உணர்ச்சி இருக்குமானால் தாம் இது சமயம் பார்லிமெண்டில் தாக்கல் செய்து இருக்கும் 'காமன்வெல்த்' என்கின்ற இந்திய சுயாட்சி மசோதாவை வாபீசு வாங்கிக்கொண்டு விடவேண்டாமா?

இந்த கமிஷனை நியமித்த பார்லிமெண்ட்டினிடம் இந்தியாவின் பெய ரால் தனது சுயாக்ஷித்திட்டத்தை சமர்ப்பித்து பல்லைக்கெஞ்சிக் கொண்டிருப் பது சுயமரியாதை ஆகிவிடுமா? தவிர பார்லிமெண்டில் எந்த தொழிலாளர் கட்சியார் இந்த பில்லுக்கு சாதகமாய் இருப்பதாக சொல்லப்படுகின்றதோ அந்த தொழிலாளர் கக்ஷியாளர்களால் தானே இக்கமிஷன் ஆதரிக்கப் படுகின்றது?

தவிர காங்கிரசாவது வேறு எந்த இந்திய அரசியல் இயக்கங்களாவது இந்த கமிஷன் இந்தியாவிற்கு வந்துவிட்டு போய் தனது முடிவைத் தெரிவிக்கின்ற வரையிலும் எவ்வித அரசியல் திட்டமும் போடக்கூடாது என்பதாகவாவது. காத்திருக்கின்றனவா? அப்படிக்கில்லாமல் காங்கிரஸ் ஒருத் திட்டம், மிதவாதி ஒரு திட்டம், எல்லாக் கட்சியாரும் சேர்ந்து ஒரு திட்டம், ஒவ் வொரு தலைவரும் தனித்தனியாக ஒரு திட்டம் தயாரிக்க தீர்மானங்களும் ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கும்போது இந்தியாவின் சுயமரியாதை இந்த போலி பகிஷ்காரத் தீர்மானத்தால் மாத்திரம் எப்படி காப்பாற்றப் பட்டுவிட்டது என்பது நமக்கு விளங்கவில்லை.

தவிர இதே பாலிமென்டினால் ஏற்பட்ட பழய சீர்திருத்தத்தை அமுல் நடத்துவதில் இவர்களும் பங்காளியாய் இருந்துகொண்டு அதில் *மீ* 4000, 5000, 7000, பணம் பெற்றுக் கொண்டு சட்டசபை மெம்பர், இந்திய சட்டசபை மெம்பர், ராஜாங்க சபை மெம்பர், சட்டசபை தலைவர், மந்திரி என்கின்ற உத்தியோகங்களில் இருந்து கொண்டு இந்தியாவின் சுயமரியாதை யைக் காப்பாற்ற பார்லிமெண்டால் நியமிக்கப்பட்ட கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்வதில் நாணயம் இருக்கும் என்று யார் நம்பக்கூடும்.

இந்நிலையில் பகிஷ்காரத்தின் பேயரால் பிரசாரம் தொடங்கியாகி விட்டது. அப்பிரசாரங்கள் ஸ்ரீமான்கள் ஓ.கந்தசாமி செட்டியார், குழந்தை, மையிலை ரத்தினசபாபதி முதலியார், பஷீர் அகமது, சீனிவாச அய்யங்காரர். பி.வரதராஜுலு, கோவிந்தராஜு முதலியார், குப்புசாமி முதலியார், முத்துரங்க முதலியார், அண்ணாமலை பிள்ளை முதலியவர்களே ஆவார்கள். இவர்கள் செய்யும் பகிஷ்கார பிரசாரத்தின் புரட்டை வெளியாக்கவும் ஒரு தக்க கமிட்டி ஏற்படுத்த வேண்டியது பொது மக்கள் கடமையாயிருக்கின்றது. அநேகர் அதில் சேர பிரியப்பட்டு தெரியப்படுத்தியும் இருக்கின்றார்கள்.

எனவே பொதுஜனங்கள் ஆங்காங்கு வரும் இரு கூட்டத்தினர் சொல்வதையும் பொறுமையாக கேட்க வேண்டும். கூட்டங்களில் கலவரம் முதலியவைகள் செய்வதால் ஒரு நன்மையும் விளைந்துவிடாது. பிரசாரக்


RangaRakes tamilnavarasam.com

காரர்களை தாராளமாக பேசவிட்டால் தான் மறுப்புகள் பிரயோஜனப்படும். பாமர ஜனங்கள் கண்விழிக்கவும் நன்மை தீமை இன்னது என்று உணர்ந்து கொள்ளவும் இதை ஒரு தக்க சந்தர்ப்பமாய் உபயோகித்துக் கொள்ள வேண்டியது புத்திசாலித்தனமாகும்.

### நமது கடமை

தவிர மற்ற எல்லா கட்சியார் என்பவர்களும் தங்கள் தங்கள் தேவைகளையும் அபிப்பிராயங்களையும் கமிஷனுக்கும் பார்லிமெண்டுக்கும் போய்ச் சேரும்படி செய்து விட்டதாலும் இனியும் செய்யப்போவதாலும் கமிஷன் மூலம் அவர்கள் அடைய வேண்டிய பலன் அடைய அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய வேலை முழுதும் முடிந்து விட்டது. அது போலவே பார்ப்பனரல்லாத மக்களாகிய நாம் நம்முடைய நிலையை எடுத்துச் சொல்ல வும் நமக்கு வேண்டியது இன்னது என்பதை தெரிவிக்கவும் அதை கமிஷன் முன்னால் தெரிவித்துக் கொள்வதோ அல்லது மற்ற கூட்டத்தாரைப் போல் திட்டம் தீர்மானித்து அனுப்பிவிடுவதோ இரண்டில் ஒன்று செய்ய வேண்டியது அவசியம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். நம்முடைய திட்டங்களெல்லாம் எல்லாமக்களுக்கும் எந்த மதம் எந்த வகுப்பானாலும் சமூக வாழ்விலும் அரசியல் வாழ்விலும் சரிசமத்துவம் இருக்க வேண்டும் என்பதும் பாமர மக்களை பார்ப்பனர்களும் படித்த கூட்டங்களும் ஏமாற்றி வாழத்தக்க தாயிருக்கும் அரசியல் முறைகளை அடியோடு திருத்த வேண்டியதென்பதும் பொதுமக்களுக்குள் ஒற்றுமையைக் கெடுத்து கட்சிகளையும் பிரிவுகளையும் வளர்த்துக் கொண்டு நாட்டைப் பாழ்படுத்துவதற்கனுகூலமாய் இருக்கத்தக்கதாகச் செய்யும் அரசியல் பிரதிநிதி தத்துவமுறை அடியோடு ஒழிந்து மக்கள் ஒற்றுமைக்கும் நன்மைக்கும் ஆதாரமான பிரதிநிதி தத்துவமுறை ஏற்படுத்து வதற்கும் சாதுக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் உண்மையான சுதந்திரமும் மேன்மையும் உண்டாக்கத்தக்க கொள்கை ஏற்படுத்துவதற்கும் அனுகூலமான காரியங்கள் முதலியதுகளையே அடிப்படையாகக் கொண்டு ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்யவேண்டியது என்பது தான். ஆகையால் பார்ப்பனரல்லா தார்கள் கூடுமானவரை ஒன்று சேர்ந்து சீக்கிரத்தில் இதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியது அவசரமாயிருக்கின்றது. படித்த பார்ப்பனரல்லாதாரும் பணக்காரப் பார்ப்பனரல்லாதாரும் இதற்கு பெரும்பாலும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பது நமக்கு தெரிந்தது தான். ஆனாலும் பார்ப்பனரல்லாதார் இயக்கம் கட்சி என்பவைகளில் இவர்கள் சேர்ந்தவர்கள் அல்ல என்பதையாவது பொது ஜனங்கள் அறியும்படி செய்து விடவேண்டியது நமது கடமையாகும். ஆதலால் அதற்காகவும் ஏதாவது ஒரு மகாநாடு கூட்ட ஏற்பட்டால் எல்லோரும் தயாராயிருக்க வேண்டிக்கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 15.01.1928**



## சீர்திருத்தப் புரட்டு

நமது நாட்டுப் பார்ப்பனர்களின் பொதுநலச்சேவை, சீர்திருத்தம் என்பவைகள் அதாவது காங்கிரஸ் என்றும், சமூக சீர்திருத்தம் என்றும், ஆசாரச் சீர்திருத்தம் என்றும் இப்பார்ப்பனர்கள் பேசுவதெல்லாம் சுத்தப் புரட்டு என்றும் இவைகளை வேறொருவர் செய்வதற்கில்லாமல் ஏமாற்றி தாங்களே செய்பவர்கள் போல காட்டி மக்களை ஏமாற்றி வெறுந் தீர்மானங்களை ஏட்டில் எழுதிவிட்டு காரியத்தில் நடவடிக்கையில் வரும் போது குறுக்கே படுத்துக் கொண்டு விதண்டாவாதம் பேசுவதே வழக்கம் என்றும் எழுதி வந்திருக்கின்றோம்.

உதாரணமாக, ஆசார திருத்தத்தின் பேரால் பம்பாயில் போய் வயிறு பிழைக்கும் ஸ்ரீ K. நடராஜன் என்கின்ற ஒரு பார்ப்பனர் இந்தியா முழுமைக்கும் தான் ஒரு ஆசாரத்திருத்தக்காரர் என்ற விளம்பரம் பெற்றவர்.. அவரது ஆசாரத் திருத்தமானது ஸ்ரீமான்கள் M.K.ஆச்சாரி. T.R.ராமச்சந்திர ராவ். S.சத்தியமூர்த்தி முதலிய வருணாசிரம பிரசாரக்காரர்களைவிட மோச மான திருத்தம் என்றே சொல்லுவோம். உண்மையாய் பேசவேண்டுமானால் அவர் ஆசாரத்திருத்தம் என்கின்ற பெயரால் வருணாசிரமத்தை பரப்ப வந்த சூழ்ச்சிக்கார பார்ப்பனர் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் சுயமரியாதை இயக்கம் என்று ஒன்று தோன்றியிருப்பதும் மனுதர்ம சாஸ்திரத்தைக் குற்றம் சொல்லி கொளுத்தியதும் இவருக்கு வெகு கஷ்டமாக போய்விட்டதாம். “மனுதர்மத்தைக் கொளுத்தியதாலேயே இந்தியாவின் பழைய தர்மம் என்பதை அழித்துவிட முடியாது” என்று பந்தயங்கூறி மக்களை ஏய்ப்பதினா லும் சுயமரியாதை மகாநாடு என்பது கற்பனை மகாநாடு என்பதாக ஒன்று ஏற்படுத்துவதுபோல் அவ்வளவு கேவலமானது என்கிறார். கற்பில் லக்ஷியம் இல்லாத ஜாதிக்கும் சுயமரியாதையில் லக்ஷியம் இல்லாத ஜாதிக்கும் இப்படித் தோன்றுவதில் அதிசயம் ஒன்றுமில்லை. சன்மார்க்க சங்கம் என்றோ சன் மார்க்க மகாநாடு என்றோ ஒன்று கூட்டுவதானால் அவர்கள் சன்மார்க்க மற்றவர்கள் என்பதைக் காட்டத் தான் கூட்டுவார்கள் என்பது ஸ்ரீ நடராஜனின் கருத்துப்போலும். தவிர வைக்கம் சத்தியாக்கிரகத்தின்போது கூட இந்த பிரபு “ஆட்க்ஷேபிக்கப்பட்ட வீதியில் நடக்காமல் இருப்பதே ஆக்ஷேபித்தவர்களுக்கு தக்க தண்டனையாகும்” என்று உபதேசம் செய்தவர்.



RangaRakes tamilnavarasam.com

தவிர, சமீபத்தில் கூடிய சென்னை ஆசாரத்திருத்த மகாநாட்டில் இவர் பேசிய பேச்சு பார்ப்பனர்களுக்கு அனுகூலமாகவே சர்க்கரை பூசிய விஷம் போல் தந்திரமாய்ப் பேசினார். இதைப் போலவே மற்றும் பலர் பல சமயங்களில் பேசியிருக்கின்றார்கள்.

1912ம் வருஷம் மே மாதத்தில் திருச்சியில் கூடிய மாகாண அரசியல் மகாநாட்டில் மதசம்மந்தமான தர்ம சொத்தைக் குறித்து சட்டம் செய்ய வேண்டும் என்று ஸ்ரீமான்கள் எல்.ஏ. கோவிந்தராகவைய்யரும், சேஷகிரி ஐயரும் கொண்டுவந்த மசோதாவுக்கு கவர்மெண்டார் அனுமதி கொடுக்காதது தப்பு என்றும் கண்டன தீர்மானங்கள் ஸ்ரீமான்கள் சீனிவாச அய்யங்காரால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன.

ஆனால் அத்தீர்மானத்தை அமுலுக்கு கொண்டு வரும்போது இந்த ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார், சேஷகிரி அய்யர் உள்பட பார்ப்பனர்கள் ஒரே கூட்டாக "சர்க்கார் மதத்தில் பிரவேசித்து விட்டார்கள். மதம் போச்சுது நாஸ்திகமாச்சுது" என்று சத்தம் போட்டார்கள்.

தவிர, அதே சமயத்தில் திருச்சியில் கூடிய ஆசாரதிருத்த மகாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீமான் K.B ராமநாத அய்யர் என்கின்ற ஒரு பார்ப்பனர் "ஜன சமூகம் கெட்டுப் போகாமல் இருக்க வேண்டுமானால் கோவில்களில் தேவதாசிகள் இருக்கும் ஏற்பாட்டை முற்றிலும் நீக்கிவிட வேண்டும்" என்று பேசி இருப்பதுடன் தேவதாசிகள் கோவிலில் உற்சவங்களிலும் பூஜைகளிலும் வேலை செய்ய விடுவதினால் ௸ உற்சவங்கள் பூஜைகள் இவைகளின் மகிமைகள் குறைந்து போகிறதால் அவர்கள் கோவிலில் வேலை செய்ய விடாதபடி சட்டத்தாலோ அல்லது வேறுவிதத்தாலோ தடுக்கப்படவேண்டுமென்கின்ற தீர்மானமும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. (1913 ௵ மே. ௴ திய "பிழைக்கும் வழி" 236, 238 பக்கம் பார்க்க)

ஆகவே இத்தீர்மானத்தை அமுலில் கொண்டுவர ஸ்ரீமதி முத்து லெக்ஷ்மி அம்மாளவர்கள் ஒரு மசோதா கொண்டுவர சர்க்காரை வேண்டிக் கொண்டதற்காக எத்தனை சாஸ்திரிகள், சர்மாக்கள், ஆச்சாரியார்கள், சத்திய மூர்த்திகள் இதற்கு விரோதமாய் "மதம் போச்சு நாஸ்திகமாச்சு" என்றுசப்தம் போட்டு எதிர்பிரசாரம் செய்கிறார்களென்று பார்த்தால் இப்பார்ப்பனர்களும் காங்கிரசும் சீர்த்திருத்தம் செய்வதின் உண்மை விளங்கும். ஆகவே பார்ப்பனர்கள் எந்த காலத்திலும் மக்கள் சமத்துவத்திற்கோ ஒழுக்கத்திற்கோ சீர்திருத்தத்திற்கோ அனுகூலமாயிருப்பார்களென்று நினைப்பது வேப்பங்காய் இனிக்கும் என்று நினைக்கும் மடமைக்கு சமானம் என்றே சொல்லுவோம்.



மூன்று மாதத்தில் ஆகக்கூடிய வேலை மூன்று வருஷத்தில் ஆவதாயிருந்தாலும் பார்ப்பனப் பூண்டை ஒதுக்கி வைத்து வேலைபார்ப்பதே உண்மையான காரியசித்திக்கு மார்க்கமாகும்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 15.01.1928**



RangaRakes tamilnavarasam.com

# தொழிலாளர் இயக்கம் வெற்றி பெறாத காரணம் என்ன?

சென்னையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் தொழிலாளர் இயக்கம் உருப்பெறாது என்பதே நமதபிப்பிராயம். ஏனெனில் பார்ப்பனர்களும் அரசியல் பிழைப்புக்காரர்களும் அதைக் கைப்பற்றி தங்கள் சுயநலத்திற்கு உபயோகித்துக் கொள்ளுகின்றார்கள். தொழிலாளர்கள் இயக்கம் சென்னையில் தோன்றிய காலம் தொட்டே நாம் இந்த அபிப்பிராயம் சொல்லி வருகின்றோம். ஸ்ரீமதி பெசண்டம்மைக்கும், ஸ்ரீ சீனிவாசய்யங்காருக்கும், சிவராவுக்கும், சத்தியமூர்த்திக்கும், வரதராஜுலுக்கும் மற்றும் இவர்கள் போன்றோருக்கும் தொழிலாளர் சம்மந்தமோ தலைமை ஸ்தானமோ இருக்க வேண்டிய அவசியமென்ன என்று கேட்கின்றோம் இவர்கள் தொழிலாளர்களா? அல்லது தொழில்திரம் அறிந்தவர்களா? அல்லது தொழிலாளி போன்ற ஏழ்மை வாழ்க்கை வாழ்கின்றவர்களா? தேச மக்களை ஏமாற்றி தங்கள் தங்கள் யோக்கியதைக்குமேல் சம்பாதித்துக் கொண்டும் தங்கள் தேவைக்கும் அனுபோகத்திற்கும் மேலான வாழ்க்கை வாழ்ந்து கொண்டும் பாமர மக்களை பலிகொடுத்து வாழும் இழிதுறையான அரசியல் வாழ்வில் இருந்து கொண்டிருக்கும் மனிதர்கள் எப்படி ஏழைகளும் வாயில்லாப் பூச்சிகளுமான தொழிலாளர்களின் கஷ்டத்தை அறியக் கூடியவர்களாவார்கள்? எனவே இவர்களைத் தலைமையாகக் கொண்டு நடைபெற்றுவரும் தொழிலாளர் இயக்கங்களில் கலந்துள்ள தொழிலாள சகோதரர்கள் ஒன்று அறியாதவர்களாயிருக்க வேண்டும் அல்லது யோக் கியப் பொறுப்பற்றவர்களாயிருக்க வேண்டும் என்பதே நமதபிப்பிராயம். எம்.எஸ்.எம். தொழிலாளர் சங்கத்தின் தலைவராக ஸ்ரீமான் எஸ். சீனிவாசய் யங்காரை அத்தொழிலாள சங்கத்தார் ஏற்றுக்கொண்டதாக பத்திரிகைகளில் பார்த்தோம். அவரைப் பொதுத் தலைவராகக் கொண்ட தொழிலாளர் சங்கம் யோக்கியமானதாக இருக்க முடியுமா? என்று கேட்கின்றோம். ஸ்ரீ சீனிவாசய்யங்காருக்கும் எம். எஸ். எம். தொழிலாளர் சங்கத்திற்கும் என்ன சம்மந்தம் அல்லது என்ன கவலை என்பதை பொதுமக்கள் யோசித்துப் பார்த்தால் தொழிலாளர்களின் சக்தியும் யோக்கியதையும் யாருக்கும் விளங்காமல் போகாது.

வேலையில்லாத் தொழிலாளர் மகாநாடு என்பதாக ஒரு மகாநாடு கூட்டி அம்மகாநாட்டுக்கு ஸ்ரீமான் வரதராஜுலு தலைமை வகித்தாராம். வேலையில்லாதவர்களுக்கும் ஸ்ரீ வரதராஜுலுக்கும் என்ன சம்மந்தம். வேலையில்லாத மக்கள் பெரும்பான்மையும் பார்ப்பனரல்லாதாராகவே இருக்கிறார்கள். ஆனால் ஸ்ரீவரதராஜுலுவின் ஆதிக்கத்தில் உள்ள தமிழ் நாடு பத்திரிகை ஆபீசிலோ ஒருவன் இடறி விழுந்தால் பார்ப்பனர் மீதுதான் விழவேண்டும் என்கின்ற மாதிரியில் அவ்வளவு அதிகமாகப் பார்ப்பனர்களாகவே நியமித்து வைத்துக் கொண்டிருக்கிறார். ஸ்ரீமதி பெசண்டம்மைக்கும் தொழிலாளர்களுக்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது? நாட்டில் நூற்றுக்கு தொண்ணூறு பெயர்கள் தொழிலாளர்களாயிருக்கின்றார்கள். ஸ்ரீமதி பெசண்டம்மையார் தயாரித்து இருக்கும் சுயராஜ்யத் திட்டத்தில் பொறுப்புள்ள ஸ்தானங்களுக்கெல்லாம் மிகுந்த பணக்காரருக்கும் பெரிய படிப்பாளிகளுக்கும் ஓட்டு இருக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறார்களே ஒழிய தொழிலாளிக்கு ஓட்டோ பிரதிநிதித்துவமோ இருக்கும்படி எழுதவே இல்லை. தவிர ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார், சீனிவா சய்யங்கார் ஆகியவர்கள் தயாரித்த சுயராஜ்ஜியத் திட்டத்திலும் படிப்பாளி களுக்கு ஓட்டுரிமை அதிகமாயிருக்கின்றதே தவிர வரி செலுத்துவோருக்கு ஓட்டுரிமை சரியானபடி இல்லவே இல்லை. அதிலும் தொழிலாளிகளுக்கு பிரதிநிதித்துவமும் இல்லை. இவற்றை அவரவர்கள் வெளியாக்கி இருக்கும் மசோதா புஸ்தகத்தைப் பார்த்தால் தெரியவரும். இவைகளையெல்லாம் அனேக தொழிலாள பிரமுகர்கள் அறிந்திருந்தும் வேண்டுமென்றே சில தனிப்பட்ட தொழிலாள நபரின் சுயநலத்திற்காக இம்மாதிரி ஆசாமிகளிடம் தங்கள் தங்கள் இயக்கங்களையும் ஸ்தாபனங்களையும் அடிமைப்படுத்தி விட்டால் இம்மாதிரி தொழிலாளர் பொதுஜனங்களின் அனுதாபத்தை எப்படி எதிர்பார்க்க முடியும் என்று கேட்கின்றோம்.

எனவே தொழிலாள சகோதரர்கள் இனியாவது இம்மாதிரி பொறுப்பற்ற தலைவர்கள் கையில் சிக்கிக் கொண்டு பொதுஜனங்கள் அனுதாபத்தை இழக்காமலும் முதலாளிகள் தொழிலாளர்களைக் கொடுமைப்படுத்த இப்பொறுப்பற்ற தலைவர்களின் நடவடிக்கைகளை ஒரு சாக்காகச் சொல்லுவதற்கில்லாமலும் இருக்கத்தக்க வண்ணம் நடக்க முயற்சித்து தொழிலாளர்கள் இயக்கம் வெற்றிபெறச் செய்வார்களா?

**குடி அரசு - கட்டுரை - 15.01.1928**



RangaRakes
tamilnavarasam.com

# கமீஷன் பகிஷ்கார நாடகம்

## அகில இந்திய வேலை நிறுத்தம்

ராயல் கமிஷன் பஹிஷ்கார நாடகமானது இதுவரையில் தீர்மான ரூபங்களாகவும் தட்டிப்பேச ஆள் இல்லாத இடங்களில் மேடைப் பேச்சாகவும் இருந்து வந்ததானது இப்போது அதாவது பிப்பரவரி மீ மூன்றாம் தேதியில் காரியத்தில் காட்டப்படப் போவதாக தெரிய வருகின்றது. அதாவது இம்மாதம் 15 தேதியில் காசியில் சர்வகக்ஷி பகிஷ்கார மகாநாடு என்பதாக ஒன்றுகூடி அகில இந்திய ஹர்ட்டால் (வேலை நிறுத்தம்) செய்வது என்பதாக தீர்மானங்கள் செய்திருப்பதாய் பத்திரிகைகளில் வெளியாகி இருக்கின்றது. அதை அனுசரித்து நாடெங்கும் வேலைநிறுத்தங்கள் செய்வதற்கு வேண்டிய பிரசாரங்களும் ஆங்காங்கு நடத்த முயற்சிகளும் செய்யப்படுவதாய் காணப்படுகின்றது.

பகிஷ்கார விஷயமாய் ஒவ்வொரு கக்ஷிக்காரர்களும் ஒவ்வொரு தலைவர்கள் என்பவர்களும் சொல்லிவந்த விஷயங்களை மறுத்து அதில் உள்ள புரட்டுகளை வெளியாக்கியும் எத்தனையோ கட்டுரைகள் எழுதியும் சொற்பெருக்குகள் பொழிந்தும் வந்திருந்தும் இதுவரை அவற்றில் ஒன்றுக்காவது சமாதானமோ பதிலோ இல்லாமல் தங்கள் வழக்கபடி புரட்டுகளையே பாமர மக்கள் ஏமாறும்படி எழுதிக் கொண்டும் பேசிக் கொண்டும் வருகிறார்களே ஒழிய மக்கள் உண்மையை அறிய இவர்கள் ஒரு சிறிதும் கவலை எடுத்துக் கொள்ளவில்லை.

ஆனாலும் பகிஷ்காரத்திற்கு அறிகுறியாக செய்யப்போகும் வேலை நிறுத்தத்தில் என்ன செய்யப்போகிறார்களென்று கவனிப்போம்.

பகிஷ்கார இயக்கங்களில் சேர்ந்த மந்திரி யாராவது அன்று சர்க்கார் வேலை பார்க்காமல் இருக்கப் போகிறார்களா? சட்டசபை மெம்பர்கள் சட்ட சபை நடந்தால் போகாமல் இருக்கப் போகிறார்களா? வக்கீல்கள் கோர்ட்டுக்குப் போகாமல் இருக்கப் போகிறார்களா? இதைப்பற்றி ஒரு தீர்மானத்தையும் காணோம். பின்னையோவென்றால் ஜட்கா வண்டிக்காரர்கள் வண்டிக் கட்டக் கூடாது என்பதும், வெற்றிலை பாக்கு பல சரக்குக் கடைக்காரர்கள் கடைதிறக்கக் கூடாது என்பதும் பலகார கடைக்காரர்கள் கடை வைக்கக் கூடாது என்பது போன்றவைகள்தான் பகிஷ்காரத்தை காட்ட வேலை நிறுத்தமாகப் போகின்றது. ஜட்கா வண்டிகள் நடைபெறாவிட்டால் ஜட்கா வண்டிக்காரனுக்கு நஷ்டமே யல்லாமல் தலைவர்களுக்கு என்ன நஷ்டம் ஏற்படக் கூடும்? தலைவர்கள் அவரவர்கள் வீட்டில் உள்ள மோட்டார் வண்டிகளில் உல்லாசமாய் ஊர் கோலம் வருவது தப்பாது. தவிர வெற்றிலை பாக்குக் கடை மூடப்பட்டால் தலைவர்களுக்கு என்ன நஷ்டம் வரக்கூடும்? நாளைக்கு கடை திறக்க மாட்டார்கள் என்று சொல்லி முதல் நாளே வாங்கிக் கொண்டு போய் வீட்டில் வைத்துக் கொள்ளுவார்களே ஒழிய அன்று முழுவதும் வெற்றிலை பாக்கு பொடி முதலியவைகளைப் போடாமலாவது இருப்பார்களா? அதுபோலவே ஒரு சமயம் கோர்ட்டுக்குப் போகா விட்டாலும், ஒன்றா வாய்தா வாங்கிக் கொள்வார்கள் அல்லது வேறு ஒரு வனை ஆஜராகச் சொல்வார்கள். ஒன்றுக்கும் முடியாவிட்டால் கக்ஷிக் காரர்கள் கேசு கெட்டுப்போகும். மற்றபடி இவர்களுக்கு அதனால் நஷ்ட மென்ன ஏற்படக் கூடும் என்பதைக் கவனித்தால் வேலை நிறுத்தத்தில் இவர்களது தியாகம் விளங்காமல் போகாது.

இது தவிர கமிஷன் மெம்பர்களை மற்றவர்கள் பார்க்கவிடாமல் அதாவது இளவரசர் வரவை பகிஷ்கரித்தது போல் சில காலிகளைவிட்டு மறியல் செய்யக்கூடும். இதனால் இப்பெரிய மனிதர்கள் அதாவது சர். தியாகராயர் வீட்டில் ஜன்னல் கதவுகளை உடைத்தது போலும் அவரை அடிக்க வந்தது போலும் உபத்திரவப்படலாம். மற்றபடி இவர்களுக்கு ஏற்படும் கஷ்டமென்ன? ஆதலால் இந்த வேலை நிறுத்தமென்பது ஏழைகளை நஷ்டப்படுத்தும் மற்றொரு கெடுதியே அல்லாமல் வேறல்ல.

அல்லாமலும் இவ்வேலை நிறுத்தம் வெற்றி பெற்று கமீஷனும் இத்தலைவர்களுக்கு வணங்கி இந்தியர்கள் யாரையாவது கமீஷனில் சேர்த்துக் கொள்ளவோ அல்லது இந்திய சுயராஜ்ஜிய நிர்ணயம் செய்ய இவர் களுக்கு பூரண அதிகாரமும் கொடுக்கவோ வசப்பட்டால் அதன் மூலம் இந்த வேலை நிறுத்தம் செய்த ஏழை மக்களுக்கு என்ன நன்மையுண்டாகும்படி இத்தலைவர்கள் திட்டம் போடக் கூடும் என்பதை யோசித்தால் இதன் புரட்டு வெளியாகாமல் போகாது.

இந்த நாட்டின் பாமர மக்களின் உண்மையான பாமரத் தன்மையை விளக்கவும் இப்பாமர மக்களின் பேரால் வயிறு பிழைக்கக் கருதியிருக்கும் அரசியல் வாழ்வுக்காரர்களின் வன்நெஞ்சத்தை விளக்கவும் இந்த பகிஷ் காரப் புரட்டு ஒன்றே போதுமானது என்பது நமது முடிவு.

இதுவரையில் பகிஷ்காரத்திற்குக் காரணம் எல்லாம் மூன்று விஷயங் கள்தான் முக்கிய தலைவர்கள் என்பவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்


RangaRakes
tamilnavarasam.com

என்பதை முன்னும் எழுதியிருக்கிறோம்.

1. இந்தியர்களை கமிஷனில் சேர்க்கவில்லை என்பது.

2. இந்தியாவின் சுதந்திரத்தை நிர்ணயிக்க இந்தியர்களுக்கு அதிகாரமேயொழிய பார்லிமெண்டுக்கு இல்லை என்பது.

3. ஆகையினால் இக் கமிஷன் நியமித்தது இந்தியாவின் சுய மரியாதைக்குப் பங்கம் என்பது.

இம்மூன்றையும் கூர்ந்து பார்த்தால் ஒன்றுக்கொன்று முரண்படக் கூடியது என்பது விளங்கும்.

தவிர இந்தியர்களில் யாரை நியமிப்பது என்பதும் பார்லிமெண்டாரால் இதுவரை இந்தியாவுக்கு நிர்ணயித்து வந்த சுதந்திரங்களை நாம் பகிஷ்கரித் தோமா? அல்லது இந்த சமயத்திலாவது பகிஷ்கரிக்க தயாராயிருக்கின் றோமா? என்பதும் முதல் இரண்டு விஷயங்களுக்குத் தக்க சமாதானமாகும்.

மூன்றாவதான சுயமரியாதை விஷயம் நித்திய அரசு முறை வாழ்க்கையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நமக்கு சுயமரியாதை வழங்கப் பட்டு வருகின்றதா? என்பதையும் பஞ்சாப் அட்டூழியத்தைவிட கமிஷனால் நமக்கு அதிகமான சுயமரியாதை பங்கம் வந்துவிட்டதாவென்பதையும் வங்காளத் தலைவர்களை காரணமில்லாமல் சிறையில் அடைத்து வைக்கிறார் களே அதைவிட இந்த கமிஷன் நியமனத்தால் அதிகமான சுயமரியாதைப் பங்கம் வந்துவிட்டதா? என்பதையும் யோசித்துப் பார்த்தால் மூன்றாவதான நமது சுயமரியாதையின் தத்துவம் விளங்காமல் போகாது. அன்றியும் சமூக வாழ்க்கையில் 100-க்கு 3 வீதம் உள்ள பார்ப்பனர்கள் நம்மை நித்திய வாழ்க்கையில் இகபர சாதனம் என்பவைகளில் நம்மை நடத்திவரும் - நாமும் ஏற்று நடந்து வரும் தத்துவங்களைவிட இந்த கமிஷன் நியமனம் சுய மரியாதைப் பங்கமானதா? என்பதை யோசித்தால் இந்த கூச்சல் யோக்கிய மானதா? என்பது விளங்கி விடும். ஆதலால் சமூக முன்னேற்றத்திற்கும் உண்மையான சுயமரியாதை தத்துவத்திற்கும் அனுகூலமான இந்த சந்தர்ப்பத்தை வேறு வழியில் திருப்பி விடுவதற்காகவும் கமிஷன் மூலமாய் நமது எதிரிகள் ஒன்று சேர்ந்து கட்டுப்பாடாய் செய்யும் இச் சூழ்ச்சிக்கு நமது மக்கள் இணங்கி ஏமாறக் கூடாது என்றே சொல்லுகின்றோம்.

## பகிஷ்கார தினத்தன்று தொண்டர்கள் கடமை

வேலைநிறுத்தம் காரியத்தில் நடைபெற ஏதாவது ஏற்பாடுகள் செய்வார்களானால் உத்தியோகப் பார்ப்பனர்கள் ஒவ்வொருவரும் இந்த வேலை நிறுத்தத்திற்கு அனுகூலமாக ஆங்காங்குள்ள பாமர மக்களை மிரட்டி வேலை நிறுத்தத்திற்கு உதவி செய்யக் கூடும் என்பதும் நமக்குத் தெரியும்.

ஆனாலும் ஆங்காங்குள்ள சுயமரியாதைத் தொண்டர்கள் இவ் வதிகாரிகளுக்குப் பயப்படாமல் ஒன்று சேர்ந்து முதல் நாளே ஒவ்வொரு கடைக்காரரிடமும், வண்டிக் காரரிடமும் போய் உண்மையைச் சொல்லி ஏமாறாமலிருக்கச் செய்ய வேண்டும். ‘குடி அரசு’ ‘நவசக்தி’ ‘திராவிடன்’ ‘குமரன்’ முதலிய பத்திரிகையிலும் இது விஷயமாய் வந்த வியாசங்களைப் பெயர்த்து துண்டு விளம்பரங்கள் அச்சிட்டு வழங்க வேண்டும். ஆங்காங் குள்ள முக்கிய தொண்டர்கள் தங்களது விலாசத்தை உடனே தெரிவித்தால் துண்டு விளம்பரங்கள் அனுப்பிக் கொடுக்கப்படும்.

தவிர ‘திராவிடன்’ ‘குடிஅரசு’ ‘குமரன்’ ‘நவசக்தி’ போன்ற பத்திரி கைகளுக்கு சந்தா சேர்க்க வேண்டும், பார்ப்பனப் பத்திரிகை களையும் பார்ப்பனர்களுக்கு உள் உளவாயோ அல்லது அவர்களுக்கு பயந்து கொண்டோ பகிஷ்காரக் கூச்சலில் கலந்து கூட்டத்தில் கூப்பாடு போடும் பகிஷ்காரப் புரட்டுப் பத்திரிகைகளையும் பகிஷ்கரிக்கும்படி அறி வுறுத்த வேண்டும்.

**குடி அரசு - தலையங்கம் - 22.01.1928**



RangaRakes
tamilnavarasam.com

# ஆதிதிராவிட மகாநாடு

சென்னையில் சமீபத்தில் கூடிய ஆதிதிராவிட மகாநாட்டைப்பற்றி பார்ப்பன பத்திரிகைகளும் அவற்றைப் பின்பற்றி வாழும் பார்ப்பன ரல்லாத சில பத்திரிகைகளும் அம்மகாநாட்டையும் மகாநாட்டு தீர்மானங் களையும் நசுக்க எண்ணங்கொண்டு அதைப் பற்றி வெகுகேவலமாக எழுதியும் பேசியும் வருகின்றார்கள். இதைப்போன்ற ஒரு கொடுமையான காரியம் வேறு ஒன்று இருப்பதாகச் சொல்லமுடியாது.

ஆதிதிராவிட சகோதரர்கள் இந்தியாவின் ஜனத்தொகையில் சுமார் நாலில் ஒன்று அல்லது ஐந்தில் ஒன்று என்பதாக 6, 7 கோடி மக்கள் இருந்தாலும் அதைப்பற்றி ஒரு சிறிதும் லட்சியம் இல்லாமல் அப்படி ஒரு கூட்டம் இருப்பதாகக் கூட வெளியார்கள் அறிவதற்கும் இல்லாமல் சூழ்ச்சி செய்து மறைத்து வைத்து விட்டு அவர்களது சுதந்திரத்திற்காக இப்பார்ப் பனர்களும் அவர்களது அடிமைகளான பார்ப்பனரல்லாதாரும் அவர்களது பத்திரிகைகளும் எவ்வித உதவியும் செய்யாமலிருப்பதோடு ஆதி திராவிடர்களாக ஏதாவது முயற்சித்தாலும் அதையும் கொலை செய்யப் பார்க்கின்றார்கள். என்ன கொடுமை! என்ன கொடுமை!! அதாவது சமீபத்தில் சென்னையில் கூடிய ஆதிதிராவிட மகாநாட்டு நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் பற்றி ஒரு சிறிதும் அனுதாபம் கொள்ளாமல் அது “சர்க் கார் தாசர்கள் மகாநாடு” என்றும் “சுயநலக்காரர்கள் மகாநாடு” என்றும் ‘முப்பது பேர்களே’ அம்மகாநாட்டில் கூடி இருந்தார்கள் என்றும் எழுதி அதன் மதிப்பைக் கெடுத்துப் பொதுமக்களுக்கு அதனிடம் துவேஷமும் வெறுப்பும் வரும்படி பிரசாரங்கள் செய்து வருகின்றன.

எனவே காங்கிரசுக்கும் இந்திய அரசியல் தலைவர்கள் என் போருக்கும் ஆதிதிராவிடர்களிடம் இருக்கும் அபிமானத்திற்கும் முன் னேற்றக் கவலைக்கும் இதுதான் அடையாளம் போலும்.

காங்கிரஸ் ஏற்பட்டு 42 வருடங்களாகி, சீர்திருத்தம் ஏற்பட்டு 20 வருடங்களாகியும், ஏழு கோடி ஆதிதிராவிடர்களில் ஏதாவது ஒரு ஆதி திராவிடர் ஸ்டேட் கவுன்சில் முதல் கிராம பஞ்சாயத்து வரையில் ஏதாவ



தொன்றில் பொதுப் பிரதிநிதியாய் சர்க்கார் தயவில்லாமல் உட்கார இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றதா? என்று கேட்கின்றோம்.

இனிமேல் வரப்போகும் சீர்திருத்தங்கள் என்பதிலாவது ஸ்ரீமதி பெசண்ட் முதல் மற்றும் அநேக தலைவர்கள் என்போர்கள் ஏற்படுத்திய சுயராஜ்ய திட்டத்திலாவது ஏதாவது ஏற்பாடு செய்தார்களா? என்று கேட்கின் றோம். நமது கொடுமையால் வண்ணான் இல்லாமல் நாவிதன் இல்லாமல் அழுக்கு உடைகளுடனும் வளர்ந்து கவிந்த மயிருடனும் பிசாசுகள் என்பவைகளைப்போல் திரியும் ஏழை பாவங்களுக்கு ஏதாவது ஒரு வழி காட்டினார்களா? என்று கேட்கின்றோம்.

சில இடங்களில் தெருவில் நடக்கக்கூட உரிமையில்லாமலும் சில இடங்களில் மனிதன் கண்களில் தென்படக் கூட உரிமை இல்லாமலும் நரி போலவும், முயல் போலவும் வெளியில் பதுங்கித் திரிகின்றார்கள். இவற்றை நீக்க ஏதாவது ஏற்பாடு செய்தார்களா? என்று கேட்கின்றோம். கோவில்களில் உள்ள தெய்வங்கள் என்பவைகளைப் பார்க்கவோ வணங்கவோ ஏதாவது வழி செய்தார்களா? என்று கேட்கின்றோம். குடிக்கவோ பல் விளக்கவோ தண்ணீர் இல்லாமல் திண்டாடுகின்றார்களே இதற்கு ஏதாவது வழி செய்திருக் கின்றார்களா என்று கேட்கின்றோம். அன்னிய நாட்டிலிருந்து வயிற்றுப் பிழைப்புக்காக பிச்சைக்காரர்களாய் நமது நாட்டுக்கு வந்தவர்களான ஆரியர்களின் சந்ததியார்கள், பஞ்சாங்கம் சொல்லி பிச்சையெடுத்து புஸ்தகம் வாங்கி முனிசிபல் விளக்கு வெளிச்சத்தில் படித்துவிட்டு, இந்தியாவை காட்டிக் கொடுத்து இந்திய மக்களுக்கு துரோகம் செய்து மாதம் 1-க்கு 5000, 10000 ரூபாய் வீதம் சம்பளமுள்ள உத்தியோகமும் சம்பாதனையும் ஏற்படும் படியாக காங்கிரசின் மூலம் சீர்திருத்தம் சம்பாதித்துக் கொண்ட இவர்கள், இந்த ஏழை ஆதிதிராவிடர்கள் தெருவில் நடந்து மூட்டை தூக்கிப் பிழைக்க வாவது வழிசெய்தார்களா என்று கேட்கின்றோம்.

இந்நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் சர்க்கார் தாசர்களாய் இருக்காமல் வேறு அய்யங்கார் தாசர்களாய் இருக்க முடியுமா? மற்றும் அய்யர்கள் தாசர்களாய் இருக்க முடியுமா? அவர்களது அடிமைகள் தாசர்களாய் இருக்க முடியுமா? அல்லது யார் தாசர்களாய் இருக்க வேண்டு மென்றுதான் இந்த அரசியல் வாழ்வுக்காரர்கள் விரும்புகின்றார்கள்? அல்லது எந்த இயக்கத்தின் தாசர்களாய் இருக்கும்படி விரும்புகின்றார்கள்? அந்த இயக்கம் இவர்களுக்கு இதுவரை செய்த நன்மை இன்னது என்றாவது சொல்லட்டும் என்று கேட்கின்றோம்.

நிற்க ஆதிதிராவிடர் மகாநாடானது இந்த மாகாண ஆதிதிராவிட சமூகத்திற்கு சரியான பிரதிநிதித்துவம் கொண்டதல்லவென்றும், முப்பது



RangaRakes tamilnavarasam.com

பெயர்களே இந்த மகாநாட்டுக்கு வந்திருக்கின்றார்கள் என்றும், அரசியல் பிழைப்புக்காரர்கள் எழுதி அம்மகாநாட்டை கேவலப்படுத்தி இருக்கின் றார்கள். இதைவிட அயோக்கியத்தனமான காரியம் வேறொன்றும் இல்லை என்றே சொல்லலாம். இந்த மகாநாடு ஆதிதிராவிடர் மகாநாடு அல்ல என்று சொல்வதற்கு இவர்களுக்கு என்ன சுதந்திரமுண்டு என்று கேட்கின்றோம். 'மித்திரன்' கூட்டத்தாரும் 'தமிழ்நாடு' பத்திரிகை கூட்டத்தாரும் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களா? அல்லது வேறு ஆதிதிராவிடர்கள்: மகாநாட்டை நடத்தியவர்களைவிட அதிகமான எண்ணிக்கைப் பிரதி நிதிகள் இவர்களுக்கு எழுதினார்களா? அல்லது ஆதி திராவிட சகோதரர் களுக்குள் ஏதாவது இம்மகாநாடு விஷயத்தில் தகராறு ஏற்பட்டதா? அப்படிக்கில்லாமல் அந்த சமூகத்திற்கு சம்மந்தப்படாத ஒருவர் அதுசரியான பிரதிநிதித்துவம் அல்ல என்று சொல்லுவது குறும்புத்தனமா? அல்லவா? என்று கேட்கின்றோம். சுமார் 500 பிரதிநிதிகளுக்கு மேல் இவ்வாதித்திராவிட மகாநாட்டுக்கு வந்திருந்ததாக ஸ்ரீமான் சின்னையா தமது மறுப்பில் எழுதியிருக்கிறார். அதை இதுவரை யாரும் மறுக்கவில்லை. இவர்கள் சொல்லுகிறபடியே 30 பெயர்கள்தான் என்பது உண்மையாயிருந்தாலும் இவர்கள் கூட்டங்களைவிட ஆதிதிராவிடக் கூட்டம் எந்த விதத்தில் குறைவுபட்டுவிட்டது? எல்லா இந்திய மிதவாதிகள் மகாநாட்டுக்கு 33 கோடி மக்களுக்கு பிரதிநிதிகளாய் வந்தவர்கள் எத்தனை பேர் என்று கேட் கின்றோம். எல்லா இந்தியர் அல்லது சென்னை மாகாண பத்திராதிபர்கள் மகாநாட்டிற்கு வந்த பெயர் வழிகள் எத்தனை பெயர்கள் என்று கேட்கின் றோம். 8 கோடி முஸ்லீம்களுக்கு பிரதிநிதிகளாக காங்கிரசுக்கு வந்த முஸ்லீம்கள் எத்தனை பேர்கள் என்று கேட்கின்றோம். 7 கோடி தீண்டாதார் எனப்பட்ட சமூகத்தின் பிரதிநிதியாக காங்கிரசுக்கு வந்த எண்ணிக்கை எவ்வளவு என்று கேட்கின்றோம். அகில இந்திய வருணாசிரம மகாநாட்டுக்கு வந்த பிரதிநிதிகள் எவ்வளவு என்று கேட்கின்றோம்? வேலை நிறுத்தம் செய்யக்கூடிய அகில இந்திய எல்லா கட்சி மகாநாடு கூட்டத்திற்கு வந்தவர்கள் எத்தனை பெயர் என்று கேட்கின்றோம்? 'தமிழ்நாடு' பத்திரிகை ஆபீசின் அறையில் அடிக்கடி கூடும் மாகாண தேசீய மகாநாட்டுக்கு வந்து கொண்டிருக்கும் பிரதிநிதிகள் எத்தனைபேர் என்று கேட்கின்றோம். பார்ப்பனரல்லாதாருக்குள் ஒழுங்கு முறைக்கட்சி என்று ஸ்ரீமான்கள் டி.எ. ராமலிங்கம் செட்டியார் கே.வி. ரெட்டியார் முதலியோர் கூட்டின மகாநாடு களுக்கு அவ்வப்போது வந்த பிரதிநிதிகள் எத்தனை பேர் என்று கேட் கின்றோம். இவைகளின் பிரதிநிதித்துவங்களைப் பற்றி ஒரு சிறிதும் எண்ணிக்கைகளைக் குறிப்பிடாமல் ஆதிதிராவிடர்கள் மகாநாட்டைப்பற்றி மாத்திரம் இந்தத் தலைவர்களுக்கும் தேசப்பக்தர்களுக்கும் எண்ணிக்கை யைக் குறைத்து கேவலப்படுத்த வேண்டிய கட்டாயம் என்ன வந்து விட்டது என்பதை யோசித்துப் பார்ப்பதோடு இதிலிருந்தே ஆதிதிராவிடர்கள் விஷயத்தில் இத்தேசபக்தர், தேசிய பக்தர், தலைவர் முதலானவர்களின் கவலை என்ன என்பதையும் ஆதி திராவிடர்களுக்கு இவர்கள் பிரதிநிதிகள் ஆவார்களா? என்பதையும் பொதுமக்கள் உணர்ந்து பார்க்கும்படிவேண்டிக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 22.01.1928**



RangaRakes



tamilnavarasam.com

# நெருக்கடியான சமயம்

பார்ப்பனரல்லாதார்களைப் பொருத்தவரையில் அரசியல் நிலைமையிலும் சமூகயியல் நிலைமையிலும் தற்சமயத்தை பொறுப்புடன் நன்றாய் கவனித்து பார்ப்போமானால் இதை ஒரு நெருக்கடியான சமயம் என்றே சொல்ல வேண்டும். என்னவெனில் காந்தியடிகளின் தலைமையில் ஒத்துழையாமையின் போது பல ஆயிரக்கணக்கான தொண்டர்கள் செய்த தியாகத்தின் பலனாய் மாய்ந்து மறையக் கிடந்த பார்ப்பனீயமானது பல பார்ப்பனர்களின் சூழ்ச்சியில் ஒருவாறு சமாளித்துக் கொண்டதுடன் ஒத்துழையாமையும் ஒழிக்கப்பட்டு அதன் பலன் முழுவதும் பார்ப்பன ஆதிக்கத்திற்கு அனுகூலமாய் உபயோகப்படுத்தப்பட்டு வந்ததை அறிந்தே ஏறக்குறைய இரண்டு மூன்று வருடங்களாக சில தொண்டர்கள் எவ்வித எதிர்ப்புக்கும் பழிப்புக்கும் அஞ்சாது முனைந்து நின்று பார்ப்பன சூழ்ச்சியையும் அவர்களைப் பற்றி பிழைப்புக்கும் சில பார்ப்பனரல்லாத புல்லுருவிகளின் சுயநல சூழ்ச்சியையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் பாமர மக்களுக்கு விளக்கிக் காட்டியதின் பலனாய் பார்ப்பனரல்லாதார் சமூகம் அரசியல் தலைவர்கள் என்போர்களின் புரட்டையும் தேசாபிமானம் என்னும் வயிற்றுப் பிழைப்பு ஏமாற்றலின் தன்மையையும் ஒருவாறு அறிந்து கொள்ள இடமேற்பட்டதுடன் சமூக வாழ்விலும் தங்களது தாழ்ந்த நிலை இன்னது என்று உணர்ந்து சுயமரியாதையில் கவலை கொண்டு முற்போக்கடையும் முயற்சியில் மக்களின் கவனம் திருப்பப்பட்டிருப்பதும் யாவரும் அறிந்த விஷயமாகும்.

இந்நிலையில் அரசியல் வாழ்வுக்காரர்களுக்கு யோக்கியதை யற்றதுடன் அவர்கள் பொதுமக்கள் முன்னிலையில் தலைகாட்டவும் வெட்கப்பட்டவர்களாகி மூலையில் ஒடுங்கிக் கிடந்ததுடன் தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்ள முயற்சித்துக் கொண்டிருந்ததும் யாவரும் அறிந்த விஷயமாகும். பொய்யும் புரட்டிற்கும் பித்தலாட்டதிற்கும் நமது நாட்டில் இனியும் கொஞ்ச காலத்திற்கு ஆயுள் இருக்கின்றது என்பதை காட்டுவதற்கு அறிகுறி ஏற்பட்டதுபோல் சைமன் கமிஷன் வருகின்றது என்கின்ற ஒரு சாக்கை வைத்துக் கொண்டு மூலையில் கிடந்தவர்கள் மறுபடியும் வெளிக்கிளம்ப ஆரம்பித்துவிட்டார்கள்.



உதாரணமாக சைமன் என்கின்ற பேச்சு கிளம்புவதற்கு முன் சமீப காலமாக ஸ்ரீமான்கள் வரதராஜுலுவுக்காவது அவரது நண்பர் சத்திய மூர்த்திக்காவது தமிழ்நாட்டில் வெளியில் தலைகாட்ட யோக்கியதை இருந்ததா என்பதை யோசித்துப் பார்த்தால் அரசியல் புரட்டும் அரசியல் வாழ்வும் எவ்வளவு ஆழத்தில் புதைபடக்கூடிய நிலையில் இருந்தது என்பது விளங்கும். ஸ்ரீவரதராஜுலு எந்தக் கூட்டத்திலும் தலைகாட்டாமல் தப்பித்துக் கொள்வதும் மிஞ்சி ஏதாவது ஒரு கூட்டத்தில் தலைகாட்டித் தீரவேண்டிய அவசியம் வந்தால் முன் ஜாக்கிரதையுடன் 100, 200 ரூ. செலவுகள் செய்து துணைக்கு ஆள்களை வைத்துக் கொண்டு தலைகாட்டுவதும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி தலை தூக்கினால் "உட்கார் உட்கார்!" "மானமில்லையா வெட்க மில்லையா" என்று மானங்கெடப் பேசி அமிழ்த்தி வைப்பதும் யாவரும் தினமும் தெரிந்து வந்த விஷயமாகும். பொதுஜனங்களும் இவர்களுடைய உபத்திரவம் ஒருவாறு ஒழிந்தது என்று நினைத்துக் கொண்டும் இருந்தார்கள். ஸ்ரீமான் எ. ரங்கசாமி ஐயங்காரோ சுதேசமித்திரனையே விட்டு ஓட வேண்டிய நிலைமை வந்துவிட்டதுடன் அப்பத்திரிகையும் படிப்பதற்கு முன்பாகவே சக்கரை கட்டவேண்டிய நிலைமைக்கு வந்து விட்டது. ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் தற்கொலை செய்து கொள்ள வேண்டிய நிலைமைக்கு அல்லது "நான் இனிமேல் பொதுவாழ்க்கையில் இருந்து விலகி காயத்திரி மந்திரம் ஜெபிக்க மூக்கைப் பிடித்துக் கொள்ளப் போகின்றேன்" என்று சொல்லும் நிலைமைக்கு வந்து விட்டார்.

எனவே அரசியல் வாழ்வுப் புரட்டில் அம்மியும் குழவியும் போல் இருந்தவர்கள் இப்படி ஆகாயத்தில் பறக்கும் நிலைமை ஏற்பட்டுவிட்ட பிறகு மற்றவர்களான பழங் கூடையும் முறமும் குப்பையும் செத்தையும் என்ன கதிக்காளாயிருக்கும் என்பவைகளை நாம் எழுதவேண்டியதில்லை. அதில் சேர்ந்த அநேகர்கள் கூட்டம் கூட்டி ஸ்ரீமான்கள் அய்யங்காரையும் வரத ராஜுலுவையும் ரங்கசாமி அய்யங்காரையும் வைததும் இவர்கள் அவர்களுக்கு மறுபடியும் பணம் கொடுத்து தப்பித்துக் கொண்டதும் யாவரும் அறிந்ததாகும். தமிழ்நாடு பத்திரிகையும் அடியோடு மறையும் நிலைக்கு வரப்போவதைத் தெரிந்து அதுவும் காங்கிரசை மறைமுகமாய் அதாவது பார்ப்பனரல்லாதாரை ஏமாற்ற சுயராஜ்யக்கக்ஷி என்கின்ற பேரால் பித்த லாட்டக் கருத்துடன் அதன் அரசியல் கொள்கைகளை வைதுகொண்டும், மற்றொருபுறம் பார்ப்பனர்களை ஏமாற்ற காங்கிரசைப் புகழ்ந்து கொண்டும், தனது தைரியத்தைக் காட்ட ஒரு நாளைக்கு ஒருவரை வைது கொண்டும் மறுநாளைக்கு மன்னிப்பு கேட்டு கொண்டும் இம்மாதிரி நித்தியகண்டமாயிருந்து வந்ததும் யாவருக்கும் தெரியும்.

மற்றொரு பார்ப்பனக் கூட்டம் தங்களுக்கு சமூக ஆதிக்க வாழ்விலும் ஆபத்து வந்துவிட்டதென்று பயந்து ஸ்ரீமான் காந்தியை அழைத்து வந்து வருணாசிரம பிரசாரம் செய்வித்ததும் அதுவும் பலிக்காமல் போனதும்



RangaRakes tamilnavarasam.com

யாவருக்கும் தெரியும். இந்நிலையில் அதாவது சுற்றிலும் பற்றி எரிந்து கொண்டிருக்கின்ற கானல் நெருப்புக்கு மத்தியில் சிக்கின மனிதர்கள் போல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு திடீரென்று பெருமழை வந்ததுபோல் சைமன் கமிஷன் வரவும் அதைப் பிடித்துக் கொண்டு பாமர மக்களை ஏய்க்க வெளியில் வந்துவிட்டார்கள். சைமன் கமிஷனால் நன்மை வரப்போகின்றதா தீமை வரப் போகின்றதா? அல்லது அதனுடன் ஒத்து ழைக்க வேண்டுமா? அல்லது பகிஷ்கரிக்க வேண்டுமா? என்பது இந்த வியாசத்தின் முக்கிய கருத்தல்ல. மற்றென்ன வென்றால் தங்களின் யோக்கி யதை பாமர மக்களுக்கு வெளியாக்கப்பட்டு பாமர மக்கள் தங்களிடமிருந்து பிரித்து ஒதுக்கப்பட்டு வெளியில் தலை காட்டுவதற்கு தங்களுக்கு மார்க்க மில்லாமல் செய்யப்பட்ட ஒரு கூட்டத்தார்கள் இன்றையத் தினம் சைமன் கமிஷன் என்னும் ஒரு போலி ஆயுதத்தைக் கொண்டு மறுபடியும் வெளியில் வந்து பாமர மக்களுடன் கலரவும் மறுபடியும் அவர்களை ஏமாற்றி பாழாக்கி வாழவும் தக்கதான சந்தர்ப்பம் கிடைக்கப் போகின்றதே என்பதைப் பற்றிய கவலைதான் முக்கிய கருத்தாகும்.

இதில் உள்ள புரட்டுகளைப்பற்றி சுமார் 10, 12 வியாசங்கள் குடி அரசிலும் 5, 6 வியாசங்கள் திராவிடனிலும், 2, 3, வியாசம் குமரன், நவசக்தி, நாடார்குல மித்திரன் முதலிய பத்திரிகைகளிலும் வெளி வந்ததுடன் சுமார் 10, 15 உபந்நியாசங்களும் நடைபெற்றிருக்கின்றன.

“வெற்றிமேல் வெற்றி” “முழக்கத்திற்கு மேல் முழக்கம்” என்று கொட்டைத் தலையங்கமிட்டு எழுதி வந்த சுதேசமித்திரனும் அவரது சிஷ்யனாகிய தமிழ்நாடும் அதன் வால்களாகிய மற்றும் சிலவும் ஏதாவது ஒரு விஷயத்திற்காவது சமாதானம் சொல்லி வெற்றியைக் காட்டிற்றா? அல்லது முழக்கத்தைக் காட்டிற்றா? என்று பார்த்தால் உலகத்தில் எவ்வளவு தைரிய மாய் அயோக்கியத்தனம் செய்கின்றார்கள் என்பதும் அதை நம்புவதற்கு எவ்வளவு மூடர்கள் இருக்கின்றார்கள் என்பதும் இவைகளை வேண்டு மென்றே மறைத்து வைக்க எவ்வளவு துரோகிகள் இருக்கின்றார்கள் என்பதும் வெளியாகிவிடும். இப்படி எல்லாம் இருந்தாலும் இந்த நிலைமை யும் கூட நமது பார்ப்பனர்களுக்கு திருப்தியை கொடுக்காமல் பயத்தை கொடுத்திருக்கின்றது என்பது நமக்குத் தெரிகின்றது. அதாவது எவ்வளவு தூரம் பார்ப்பனரல்லாதார்களிலும் சிலர் தங்கள் கூட இருப்பதாக காட்டிக் கொள்ளக்கூட சவுகரியம் இருந்தாலும் அதாவது ஸ்ரீமான்கள் முத்துரங்க முதலியார், குழந்தை, ஷாபிமகமது சாயபு, பஷீர் ஆமது சாயபு, அமீத்கான் சாயபு, அண்ணாமலைப் பிள்ளை, வரதராஜுலு நாயுடு, குப்புசாமி முதலியார், ஓ. கந்தசாமி செட்டியார் போன்றவர்கள் தங்கள் கூட இருப்பதாகக் காட்டிக் கொள்ள சரிப்படுத்தி வைத்துக் கொண்டிருந்தாலும் இவர்கள் ஒருவரிடமும் பார்ப்பனரல்லாத பாமர மக்களுக்கு நம்பிக்கையும் மரியாதையும் இல்லை என்பதை அவர்கள் நன்றாய் உணர்ந்து விட்டார்களானதால் வேறு சிலரைத்



தங்களுடன் சேர்க்கவோ அல்லது பார்ப்பனரல்லாதாருக்குள் மற்றும் சில கக்ஷிகளை உண்டாக்கவோ இதுசமயம் முயற்சி எடுத்துக் கொண்டிருக் கின்றார்கள். இதைத்தான் மிக்க நெருக்கடியான சமயம் என்று சொல்லு கின்றோம்.

அதாவது சென்ற 10, 12, வருடங்களுக்கு முன் பார்ப்பனரல்லாதார் கட்சி ஏற்பட்டு இப்போதைப் போலவே பார்ப்பனர்களின் சூழ்ச்சியை டாக்டர் நாயர், சர்.தியாகராயர், சர்.சங்கரன் நாயர் போன்றோர்கள் வெளியாக்கி பாமர ஜனங்களுக்கு பார்ப்பனர்களிடம் மதிப்பில்லாமல் செய்து விட்ட காலத்தில் எப்படி பார்ப்பனர்கள் அதாவது ஸ்ரீமான்கள் சர்.சி.பி. இராமசாமி அய்யர், எ. ரங்கசாமி ஐயங்கார், டாக்டர் ராஜன், சி. ராஜகோபாலாச்சாரி, சி. விஜய ராகவாச்சாரி முதலியோர்கள் ஸ்ரீமதி பெசண்டம்மையையும் சேர்த்துக் கொள்ள முயற்சித்து இதே ஸ்ரீமான் வரதராஜுலு போன்றோர்களை வசமாக்கிக் கொண்டு அவர்கள் மூலமாய் மக்களை ஏமாற்றி பார்ப்பனரல்லா தாருக்குள் பிளவை உண்டு பண்ணியதோடு அப்போதும் இந்த சைமன் கமிஷன் போல் அதாவது இதுபோலவே இல்லாவிட்டாலும் இந்திய நிலைமையை விசாரிக்க பிரிட்டிஷார் முயற்சித்த காலத்தில் பார்ப்பனர் களுக்கு அனுகூலமாய் பார்ப்பனரல்லாதார்களிலே சிலரைப்பிடித்து இங்கு சொல்லுவித்ததல்லாமல் சில பார்ப்பனரல்லாதாருக்கு பணம் கொடுத்து சீமைக்கும் அனுப்பி தங்களுக்கு அனுகூலமாய் வேலைசெய்து கொண்டதுபோல் இப்போது ஆரம்பித்துவிட்டார்கள். அதுதான் கோகலே ஹாலில் சில நாளைக்கு முன்பாக ஸ்ரீமதி பெசண்டும் மற்றும் சில அய்யர் களும் கூடி பனகால் ராஜா போன்றோரைக் கூப்பிட்டு ராஜி பேச முயற்சித் ததும் அதில் நம்பிக்கையில்லாது போகவே ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார், எம்.ஆர். ஆச்சாரியார் போன்ற அய்யங்கார், கொல்லங்கோடு ராஜா, சர்.கே.வி. ரெட்டி நாயுடு, டாக்டர் நடேசன், சிவஞானம் பிள்ளை முதலியவர்களை அதாவது பார்ப்பனரல்லாதார் கட்சியுடன் முரண் பாடு கொண்டிருப்பவர்களாகப் பார்த்து கூப்பிட்டு பேசி அவர்களுக்கு குல்லாயிட்டு ஒரு கட்சியையும் ஏற்படுத்திவிட்டார்கள். அக்கட்சியில் உள்ளவர்களின் நிலைமையைப்பற்றி ‘திராவிடன்’ 26-1-28 – தி வியாழக் கிழமை தலையங்கத்தில் குறிப்பிட்டு இருக்கும் விஷயத்தை மற்றொரு இடத்தில் பிரசுரித்திருக்கின்றோம். அவர்களில் பெரும்பாலோர் பார்ப்பன சாவகாசமே கூடாது என்றவர்களும் பார்ப்பனர்கள் சமீபத்தில் வீற்றிருப்பது சுயமரியாதைக்குக் கேடு என்பவர் களும் பார்ப்பனர்களின் அட்டூழியங் களை அதிகார மதிகாரமாய் பேசினவர் களும் அவர்கள் வலையில் சிக்கி ஏமாந்தவர்களும் ஆவார்கள். அப்பார்ப் பனர்களை அதுவும் ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார் சத்தியமூர்த்தி போன்றார்களை வானமளாவத் துதிக்கவும் புகழவும் ஏற்பட்டதானது எப்பேர்ப்பட்டவர்களுக்கும் சந்தேகத்தை கொடுப்பதாகவே இருக்கின்றது. பாமர மக்களுக்குள் இவர்களைப் போற்றிப்



RangaRakes tamilnavarasam.com

புகழ்ந்து இவர்கள் விஷயத்தில் நல்ல அபிப்பிராயம் கொண்டவர்கள் பலர் இருக்கின்றார்களானாலும் நேரே சரியான எதிரியிடம் அதுவும் மானம் ஈனம் இல்லாத எதிரியிடம் சரண் புகுந்ததானது பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே பெருத்த மானக்கேட்டை விளைவிப்பதாகவும் பெருத்த ஆபத்தை உண்டாக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. இதில் சிலர் ஏமாந்து போய்விழுந்து விடக் கூடும் என்றே நாம் பயப்படுகின்றோம்.

சர்.கே.வி. ரெட்டி நாயுடு அவர்களும் டாக்டர். நடேசன் அவர்களும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரை புகழ்ந்து பேசி பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பிணக்கை தீர்த்து வைக்கும்படி அவருக்கு விண்ணப்பம் போட்டுக் கொண்டது வாஸ்தவமானால் அந்த இழிவு பல தலைமுறைக்கு மாறாதென்பதே நமது அபிப்பிராயம்.

ஏற்கனவே சுயநலத்தின் மூலமாகவும் அதிகாரப் பேராசையின் மூலமாகவும் சரியான காரணமில்லாமல் பிளவுபட்டுக் கிடக்கும் பார்ப்பனரல்லாதார்களுக்குள் பார்ப்பன சூழ்ச்சி இப்படி ஒரு கூட்டத்தை தன் வயப்படுத்திக் கொண்டது. 10 வருடங்களுக்கு முன் ஸ்ரீமான் வரதராஜுலு போன்றோரை தன் வயப்படுத்திக் கொண்டு செய்த உபத்திரவத்தைவிட இது அதிகமான உபத்திரவத்தைக் கொடுக்கும் என்றே பயப்படுகின்றோம். ஏனெனில் அந்தக் காலத்தில் வயப்படுத்திக் கொண்ட ஆசாமிகள் பெரும்பாலும் வெறும் ஆசாமிகளாக இருந்ததோடு பார்ப்பனர்களாலேயே அவர்களை மனிதர்களாக்கி பிறகு அவர்களைக் கொண்டு பார்ப்பனரல்லாதாருக்கு உபத்திரவத்தை விளைவித்தார்கள். இப்போது அப்படிக்கில்லாமல் ஏற்கனவே பலவிதத்திலும் யோக்கியதையும் அந்தஸ்தும் சற்று செல்வாக்கும் பெற்றவர்களாயிருப்பதால் இவர்களால் முன்னையைவிட அதிகமான தொல்லை விளையும் என்றே மறுபடியும் சொல்லுகின்றோம்.

இந்நாட்டு மக்களாகிய பார்ப்பனரல்லாதார் சமூகமானது ஆயிரக்கணக்கான வருஷமாக பார்ப்பனர்களாலும் அவர்களது கொள்கைகளாலும் மிருகத்திலும் கேவலமாய் மதிக்கப்பட்டு மனிதத் தன்மை இழந்து அன்னிய நாட்டார்களால் மிகக் கேவலமாக மதிக்கப்படுவதை எந்த மனிதனும் மறக்க முடியாது என்று துணிந்து கூறுகின்றோம். இப்படிப்பட்ட சமூகம் தலையெடுக்கும்போதெல்லாம் "உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்பது போல் எமன்கள் என்று சொல்லப்பட்ட பார்ப்பனர்களுக்கு அனுகூலமாய் நம்மைக் கொல்வதற்கு வியாதிகளாக நம்மவர்களிலேயே சிலரிப்படி ஆளாவது நமது சமூகத்தின் இழிநிலையைக் காட்டும் அறிகுறியென்று கூட சொல்லுவோம்.

இந்நிலையை நாம் யாரிடம் முறையிட்டுக் கொள்வது என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. எனவே பார்ப்பனர்களைப் போலாவது அதாவது காங்கிரசைப் போலாவது பார்ப்பனரல்லாதார் எல்லோரும் ஒன்றுகூடி



RangaRakes

நமக்குள்ள குறைகளை இன்னது என்று வெளியார்களுக்கோ தெரிவிக்கக் கூட யோக்யதை இல்லாத நிலையில் இருக்கின்றோம். ஆதலால் இன்னிலைமையை உணர்ந்து பார்ப்பனரல்லாத பாமர மக்களாவது ஒன்று சேர்ந்து ஏதாவது ஒரு ஏற்பாடு செய்து நமது குறைகளையும் தேவைகளையும் குறித்து ஒரு திட்டத்தை ஏற்படுத்தலாமா? என்றும் அல்லது நமது நிலைமையைப் பற்றி மிஸ்.மேயோ அம்மையார் தயாரித்து உலகத்தாருக்கே சமர்ப்பித்திருக்கும் "இந்தியத் தாய்" என்கின்ற புஸ்தகத்தையே நமக்கு பிரதிநிதித்துவம் என்று சொல்லி அதற்கு பரிகாரம் செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்ளலாமா? என்றும் கேட்கின்றோம்.

இனி நாம் சும்மா இருப்பது மிகவும் வெட்கக் கேடானதும் பொறுப்பற்றதுமான காரியமாகும். அன்றியும் விடிய விடிய விழித்துக் கொண்டிருந்துவிட்டுத் திருடன் வரும்போது தூங்கிவிட்ட அவ்வளவு முட்டாள்தனமானதுமாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 29.01.1928**



tamilnavarasam.com

# எதிர்பார்த்தபடியே

## கமிஷன் பகிஷ்காரம் கூலிக்கு மாரடிப்பவர்களின் காலித்தனத்தில் முடிந்தது

"காங்கிரஸ்", "தேசீயம்" என்பவைகளின் புரட்டுகள் வெளியாகி தலைவர்கள், தேசபக்தர்கள் என்கின்றவர்களின் சுயநலத்தையும் அயோக்கியத்தனங்களையும் பாமர மக்கள் அறிய நேர்ந்து விட்ட பிறகு வேறு வேஷத்தின் மூலம் வெளியாகலாம் என்று காத்திருந்த பல தலைவர்கள் சைமன் கமிஷன் பகிஷ்காரம் என்கின்ற ஒரு புதிய வேஷம் போட்டுக் கொண்டு வெளியில் தலைநீட்ட முயற்சித்து வந்ததைப்பற்றி பலமுறை எழுதிவிட்டு, கடைசியாக கமிஷன் பகிஷ்காரம் காலித்தனத்தில் முடியும் என்பதையும் எடுத்துக்காட்டியிருந்தோம். அது போலவே சென்னை மீட்டிங்குகளும் வேலை நிறுத்தங்களும் காலித்தனத்திலேயே முடிந்து விட்டது. நேற்று சென்னையில் நடந்த சம்பவங்களைப்பற்றி சென்னைப் பத்திரிகையில் உள்ள விஷயங்களை வேறு இடத்தில் பிரசுரித்திருக்கின்றோம். அதைப் பார்த்தால் ஆரம்பமுதல் முடிவுவரை காலித்தனத்திலே முடிந்திருப்பது யாவருக்கும் நன்றாய் விளங்கும். சில்லரைக்கடை வியாபாரிகளை தடி கொண்டு விரட்டி அடித்து மூடச் செய்தும், கடை அடைக்க ஒப்பாதவர்களின் கடைக்குள் நுழைந்து சாமான்களுக்கு சேதம் விளைவித்தும், சாமான்களை கொள்ளை அடித்தும், தொந்திரை செய்தும், வண்டியில் போய்க் கொண்டிருந்த வழிப்பிரயாணிகளை கல்லெறிந்தும், காரி உமிழ்ந்தும், துர்ப்பாஷைகளால் வைதும், வருத்தியும், மோட்டாரில் போன கனவான்களை அடித்து துரத்தியும், வண்டியை கொளுத்தியும், நியாயஸ் தலங்கள் மீது கற்களை எறிந்தும், பொது ஜனங்களுக்குத் தொல்லைகள் விளைவித்திருப்பதுடன் பலருக்கு உயிர்ச்சேதமும் உண்டாக்கத்தக்க அளவு முயற்சி எடுத்து போலீஸ் அதிகாரிகள் காலிகளின் தொல்லையை அடக்க வேண்டியும், வந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

காங்கிரஸ் நாடகத்தில் மீதியான ரூபாய்களை காலிகளுக்கு கண்மூடி வாரி இறைத்து வெறியுண்டாக்கி பாமர மக்களின் மேல் ஏவி விடுவதன் மூலம் ஏற்பட்ட பலன்களே இச்சென்னைக் காலித்தனமாக முடிந்தது



என்பதை யாரும் உணராமலிருக்க முடியாது.

முகமதிய சமூகமும், ஆதி இந்து சமூகம் என்று சொல்லப்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகமும் இக்கமிஷன் பகிஷ்காரத்தில் ஒரு சிறிதும் கலந்து கொள்ளாமல் பகிஷ்காரத்திற்கு சம்மதமற்ற தங்கள் கருத்தையும் முதலில் இருந்தே காட்டி வந்திருக்கின்றார்கள். மற்றும் பொது மக்களில் பலரும் பகிஷ்காரத்தையும் வேலை நிறுத்தத்தையும் கண்டித்து வந்திருக்கின்றார்கள். எனவே பார்ப்பனக் கூட்டமும், படித்துவிட்டு உத்தியோகத்திற்கு அலையும் ஒரு சிறு அல்லாதார் கூட்டமும், பிழைக்க வேறு வழியில்லாமல் அரசியலையே பிழைப்புக்கு மார்க்கமாய் வைத்துக் கொண்டிருக்கும் ஒரு சிறு வயிற்றுச் சோற்று தேசபக்த கூட்டமும், கூடிக் கொண்டு சர்க்காரையும் பாமர மக்களையும் ஏமாற்றுவதற்காக செய்த காரியம்தான் இந்தப் புரட்டு என்பதையும் அவ்வப்போது தெரிவித்தும் வந்திருக்கின்றோம்.

இத்தனை ரூபாய் செலவும் இவ்வாறு சுயநலமிகளுடையவும், காலிகளினுடையவும் கூட்டுறவும் சூழ்ச்சியும் தந்திரமும் காலித்தனமும் ஒரு மனிதனையாவது ஒரு கடைக்காரனையாவது இவர்களது காரியத்தை சரி என்று ஒப்புக் கொள்ளச் செய்து தானாகவே வேலை நிறுத்தம் செய்யவோ கடை அடைக்கச் செய்யவோ முடியாமல் போய்விட்டது என்கின்ற விஷயம் இந்த வேலைநிறுத்தத் தோல்வியாலும் அளவுக்கு மீறிய காலித்தனம் செய்ய வேண்டி நேர்ந்ததாலும் நன்றாய் விளங்கிவிட்டது! நன்றாய் விளங்கிவிட்டது!!

இதைப் போல் இதற்கு விரோதமாக எண்ணமுள்ளவர்களும் ஒரு சிறிதாவது முயற்சி எடுத்திருப்பார்களானால் இச்சுயநலமிகளும் காலிகளும் இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போயிருக்க முடியும். ஆனால் எவரும் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. ஒவ்வொருவரும் 'நமக்கென்ன' 'நமக்கென்ன' என்று கவலையீனமாகவே இருந்து விட்டார்கள். இம்மாதிரி குணம்தான் நம் இந்திய நாட்டை அடிமையாக்கி ஆங்கில அரசாங்க முறையை அசுரத்தனமாக்கி தேசத்தையும் மக்களையும் காட்டிக் கொடுத்து வாழும் துரோகிக் கூட்டங்களாகிய பார்ப்பனக் கூட்டத்தையும் வயிறு வளர்ப்பு தேசீயக் கூட்டத்தையும் வாழச் செய்து வருவதுடன் பாமர மக்களையும் தொழிலாளர்களையும் ஏழைகளாக்கி கஞ்சிக்கு வழியில்லாமல் நாட்டை விட்டு கூலிக்கு ஓடச் செய்து வருகின்றது. எனினும் பாமர மக்களுக்கு இது சமயம் சற்று உணர்ச்சி ததும்பியிருப்பது மாத்திரம் நன்றாய்த் தெரிகின்றது. எப்படியெனில் பகிஷ்காரத்துக்கும் கடை அடைப்புக்கும் எதிரிடையாகவும் பகிஷ்காரப் புரட்டை வெளியாக்கவும் 'குடி அரசு' என்கின்ற ஒரே ஒரு பத்திரிகைதான் முனைந்து வேலை செய்தது. சுமார் ஒரு லக்ஷம் துண்டுப் பிரசுரமும் 5000 சுவர் விளம்பரமும்தான் வெளியாக்கப்பட்டது. இவைகளில் பகுதி சரிவர வினியோகிக்கப்பட்டிருக்காது என்று கூடத்தெரிய வருகிறது. 15 அல்லது 20 இடங்களில் தான் உபந்நியாசம் செய்திருக்கக்கூடும். இவை



RangaRakes tamilnavarasam.com

களுக்கு ஏற்பட்ட செலவு 500 ரூபாய் கூட இருக்காது. சமீபகாலத்தில் ஆதி இந்து சகோதரர்களில் சிலரும் முகம்மதிய சகோதரர்களில் சிலரும் வெளிவந்து சற்று முயற்சித்தார்கள். ஆனால் அதையும் தேசீயக் காலிகள் உபத்திரவித்தார்கள். எனவே காங்கிரசு பத்திரிகைகள் முழுதும், காங்கிரஸ் ஸ்தாபனங்கள் முழுவதும், அதில் சேர்ந்த ஆட்கள் முழுவதும், மற்றும் வக்கீல் அதிகாரமும், சட்டமெம்பர் அதிகாரமும், பார்ப்பன மாணவர் கூட்டமும், திருட்டுத்தனமாய் பல பார்ப்பன அதிகாரிகளும் சேர்ந்து வேலை செய்தும் 5000, 6000 ரூபாய் செலவும் ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் பணம் அனுப்பச் செய்தும் பகிஷ்கார வேலை நிறுத்த யோக்கியதை இவ்வளவு தோல்வியிலும் காலித்தனத்திலும் முடிந்ததைப் பார்க்கும் போது பொது ஜனங்களும் பாமர ஜனங்களும் எவ்வளவோ விழிப்புடனும் சுய அறிவுடனும் இருக்கின்றார்கள் என்றே சொல்ல வேண்டும்.

இந்த முடிவினால் நமக்கு பெருத்த நன்மையோ தீமையோ ஒன்றும் ஏற்பட்டு விட்டதாகக் கருதி எதையும் இங்கு சொல்ல வரவில்லை. தேசீயத்தின் பெயரால் வாழும் சுயநலக்காரர்களின் சூழ்ச்சியை மக்கள் அறியத் தகுந்த நிலை ஏற்பட்டு வருகின்றது என்பதற்கு அறிகுறிகள் காண்கின்றன என்கின்ற சந்தோஷத்தையே தெரிவிக்க விரும்புகிறோம். தவிர நமது உண்மையான சுயமரியாதைக்கு நாம் செய்ய வேண்டிய பகிஷ்காரங்களும் வேலை நிறுத்தங்களும், சத்தியாக்கிரகங்களும் நமது நாட்டில் அநேகம் இருக்கின்றன. அதை நடத்த சர்க்காரும் ஒப்பார்கள். ஏனென்றால் நமக்கு உண்மை சுயமரியாதை வந்து விட்டால் நாம் (இந்திய மக்கள்) எல்லோரும் ஒன்று சேர்ந்துவிடுவோம். அப்போது இங்கு ஆங்கிலேயர்களின் ஆட்சி முறைக்கு சாவுமணி அடித்துவிடும் - ஆதலால் அவர்கள் நமக்கு எவ்விதத்திலும் உதவமாட்டார்கள். பின்னையோ பார்ப்பனர்களும் நமக்கு உதவாததோடு எதிரிகளாகவும் இருப்பார்கள். ஏனென்றால் நமது சுயமரியாதை என்பது பார்ப்பனீயம் சாவதில்தான் இருக்கின்றது. அப்பார்ப்பனீயம் ஒழிந்தால் பார்ப்பனர்கள் ஒன்றா பிச்சை எடுக்க வேண்டும், அல்லது நம்மைப் போல் உடல் வேலை செய்து ஜீவிக்க வேண்டுமேயல்லாமல் இம்மாதிரி மக்களை பிரித்து வைத்து ஏமாற்றிப் பிழைக்க முடியாது.

நிற்க, நமது சுயமரியாதைக்கு மற்றொரு வகை எதிரிகள் யார் என்றால் இப்போது தேசீயத்தின் பெயரால் வாழ்கின்ற வயிற்றுப் பிழைப்பு தேச பக்தர்கள் என்பவர்கள். அவர்களும் நமது உண்மை சுயமரியாதைக்கு உதவி செய்ய முடியாதவர்கள்.

ஏனெனில், நமக்கு உண்மை சுயமரியாதை வந்துவிட்டால் போலி தேசீயத்திற்கு இந்த நாட்டில் வேலை இருக்காது. அது சமயம், இப்பொழுது இந்த தேசீயத்தின் பெயரால் பிழைத்துக் கொண்டிருக்கும் கூலி பக்தர்களுக்கு தேசீய பிழைப்பு கிடைக்காது. அவர்கள் ஒன்றா பாடுபட்டுப் பிழைக்க



வேண்டும் அல்லது கொள்ளைக்காரர்கள், திருடர்கள் முதலியவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டும். ஆகையால் நமது நாட்டு சுயமரியாதைக்கு மேற்கண்ட அரசாங்கமும், பார்ப்பனர்களும், தேசீய வாழ்வுக்காரர்களும் எதிரிகள் என்பதை நன்றாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

உண்மை சுயமரியாதைக்காக எங்கு நாம் பகிஷ்காரமும் வேலை நிறுத்தமும் சத்தியாக்கிரகமும் ஆரம்பித்து விடப்போகிறோமோ என்ற பயத்தாலேயே இந்தப் பார்ப்பனர்களும் தேசீய வாழ்வுக்காரர்களும் கூடி யோசித்த சூழ்ச்சியே இந்த கமிஷன் பகிஷ்கார வேலை நிறுத்தம் என்பவைகளுக்கு மற்றொரு காரணம் என்பதை உணர வேண்டுகின்றோம்.

ஆதலால் சூழ்ச்சிகளாலும் இந்த உபத்திரவங்களினாலெல்லாம் நாம் ஏமாறாமலும் நமது முயற்சியை தளரவிடாமலும் தைரியமாய் இருந்து நமது சுயமரியாதைக் கிளர்ச்சியை தொடர்ந்து செய்து கொண்டுபோக வேண்டும் என்பதே நமது விண்ணப்பம்.

அன்றியும் இச்சுயமரியாதைக்கு அனுகூலமாய் இருந்தால் எந்தக் கமிஷனையும் வரவேற்போம். எந்த சாத்தானையும் வரவேற்போம். விரோதமாயிருந்தால் கடவுளையும் பகிஷ்கரிப்போம், தேசீயத்தையும் குழி தோண்டிப் புதைப்போம், உயிரையும் துறக்க முந்துவோம் என்கின்ற துணிவு ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டுமென்கின்ற கவலைதான் பகிஷ்காரப் புரட்டையும் வேலை நிறுத்த காலித்தனத்தையும் வெளியாக்க முயற்சி எடுத்துக் கொள்ளச் செய்ததே ஒழிய வேறில்லை.

**குடி அரசு - தலையங்கம் - 05.02.1928**



RangaRakes
tamilnavarasam.com

# காலித்தனமும் வட்டி சம்பாதிக்கின்றது

சென்னை கடற்கரையில் பார்ப்பனரல்லாதாரால் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் கதர் இலாகா காரியதரிசி ஸ்ரீ எஸ். ராமநாதன் அவர்கள் பகிஷ்காரப் புரட்டைப்பற்றி பேசிக் கொண்டிருக்கையில் காங்கிரசு வீரப் புலிகள் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்கள் திருட்டுத்தனமாக கூட்டத்தின் மத்தியில் இரண்டு செருப்புகளை வீசி எறிந்துவிட்டு ஓடிப் போய் விட்டார்கள் என்றும் அந்தச் செருப்புகள் ஏலம்போடப்பட்டன வென்றும் கேள்விப்பட்டோம். ஆனால் அடுத்த சில தினத்தில் அதே கடற்கரையில் பார்ப்பனர்களால் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் பல பார்ப்பன ரல்லாதார்களை கூலிக்குப் பிடித்துக் கொண்டு போயிருந்துங்கூட கல்லும் செருப்பும் பறந்ததோடு கலகமும் அடிதடியும் காயமும் ஏற்பட்டு விட்டதாம் காங்கிரசுகாரர்கள் தாங்கள்தான் மிக புத்திசாலிகள் என்பதாக கருதி காலித் தனத்தை ஆரம்பித்து விடுகிறார்கள். இதனால் அந்த சமயம் வெற்றி கிடைத்ததுபோல் காணப்பட்டாலும் வட்டியுடன் திரும்பவும் அனுபவித்து விடுகின்றார்களேயொழிய இதுவரை ஒரு இடத்திலாவது தப்பித்துக் கொண்டதாகச் சொல்வதற்கே இல்லை.

பஹிஷ்கார இயக்கப் பிரசாரத்திற்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி தலைவராகி விட்டார், ஸ்ரீ வரதராஜுலு வாலராகிவிட்டார். மற்றபடி ஸ்ரீமான்கள் குழந்தை, ஓ. கந்தசாமி செட்டியார், பஷீர் அகமது முதலியவர்களுக்குள்ளாகவே தேசபக்தி அடங்கிவிட்டது. இவர்கள் போகும் கூட்டங்கள் முழுவதும் இந்த கதியையே அடைந்து வருகின்றன.

பிரசாரத்திற்கு என்று காங்கிரஸ் நாடகத்தில் மீதியான ரூபாயில் 5000, 6000 ரூபாய்களை எடுத்து வீசி எறிகின்றார்கள். இந்த ரூபாய்களுக்காக எப்போதும் கூட்டங்கள் கூடிக் கொண்டே இருக்கின்றன. இது எங்குபோய் முடியும் என்பது மாத்திரம் விளங்கவில்லை.

ஸ்ரீமான் வரதராஜுலு பேச ஆரம்பித்தவுடன் கலகம் ஏற்பட்ட தென்றும், அடிதடிகள் நடந்ததென்றும் பொதுஜனங்கள் அவரைப் பேச விடாமல் உட்காரச் செய்து விட்டார்கள் என்றும் பத்திரிகைகளில் காணப் படுகின்றன. பொது ஜனங்களால் இந்த யோக்கியதை பெற்ற ஸ்ரீ வரதராஜுலு



RangaRakes

அவர்கள், ராமசாமி நாயக்கர் சர்க்கார் பிரசாரம் செய்கின்றார் என்று எழுது கின்றார், பேசுகின்றார், வாசகர்களை சுத்த முட்டாள்கள் என்றும் எதையும் நம்பிவிடுவார்கள் என்றும் எண்ணிக் கொண்டு இம்மாதிரி தந்திரங்களைச் செய்கின்றார்.

அப்படியே நாயக்கர் சர்க்கார் பிரசாரம் செய்வதாக வைத்துக் கொண் டாலும், பார்ப்பனப் பிரசாரத்தைவிட சர்க்கார் பிரசாரம் எத்தனையோ மேலானதென்பதை இவரே பலதடவை உணர்ந்திருந்தும் பேசியிருந்தும் இன்று மாத்திரம் ஸ்ரீ வரதராஜுலுக்கு பார்ப்பனப் பிரசாரம் இவ்வளவு பயனளிக்கக் கூடியதாகி விட்டதின் இரகசியமென்ன?

ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார் தலைமையும் இரங்கசாமி அய்யங்கார் காரியதரிசித் தன்மையும் ஒழிந்த பிறகு ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி அய்யரின் தலைமையும் வரதராஜுலுவின் காரியதரிசித் தன்மையும் இவ்வருஷம் முழுவதும் தாண்டவமாடக்கூடும். இனி, இவர் தலைமையில் அவர் பிரசங்க மும் அவர் தலைமையில் இவர் பிரசங்கமும் மாறி மாறி நடந்ததாக பத்திரிகை கலங்கள் நிறையக் கூடும். ஆனாலும் நம்புவதற்கு தான் இனி தமிழ் நாட்டில் ஆட்கள் கிடையாது என்பதும் அவர்களுக்கே தெரிந்துவிட்டது.

ஆனாலும் ஜனங்களின் முட்டாள் தனத்தில் அவர்களுக்கு இன்ன மும் நம்பிக்கை இருக்கின்றது. பொது ஜனங்கள் சீக்கிரம் இவர்களுக்கு புத்தி கற்பிப்பார்களாக.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 05.02.1928**



tamilnavarasam.com


பதிவு நம்பர் 2041

KUDI ARASU.

# குடி அரசு

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

கணித சோதிடம்

ஆதிதிராவிட காவலன்



# அரசியல் நாணயம்

சைமன் கமிஷன் பகிஷ்கார வேலை நிறுத்தத்தைப்பற்றி சென்ற வாரம் எழுதியிருந்தோம். இந்த ஒரு வாரமாய் அதைப்பற்றி தேசீயப் பத்திரிகைகள் என்று சொல்லப்படும் வயிறு வளர்ப்புப் பத்திரிகைகளும், பார்ப்பனப் பத்திரிகைகளும் சற்றும் மானம் ஈனம் என்பது இல்லாமல் சரமாரியாய் பொய்யையும் புளுகுகளையும் மனங் கொண்டவரையில் எழுதி பத்திரிகைகளை நிரப்பி வருகின்றன.

பொய் எழுதுபவைகளுக்கு எவ்வித தண்டனையும் இல்லை என்கிற காரணத்தாலும் பாமர ஜனங்களுக்கு உண்மையை எடுத்துக் கூறும் பத்திரிகைகள் அதிகமாக இல்லாததினாலும் தங்கள் அக்கிரமங்களை சுலபத்தில் யாரும் கண்டு பிடித்துக் கொள்ள முடியாது என்கின்ற எண்ணம் மேலும் மேலும் இவ்விழி தொழிலில் இறங்கி வாழத் தைரியம் கொடுத்து வருகின்றது.

ஆனபோதிலும் சென்னை அரசியல் பத்திரிகைகள் என்பவைகளிலேயே சில தம்மையும் அறியாமல் எழுதிவிட்ட சில குறிப்புகளை மாத்திரம் முதலில் இங்கு குறிப்பிடுகின்றோம். அதாவது,

'சுதேசமித்திரனின்' 4ம் தேதி தலையங்கத்தில் குறிப்பிடுவதாவது, "..............இதுவரையில் நமக்கெட்டியிருக்கும் செய்திகளில் சென்னை ஒன்றில் தான் துர் அதிர்ஷ்டவசத்தினால் அர்த்தாலின் மகிமையைக் குறைக்கக்கூடிய சம்பவங்கள் நடந்திருப்பதாகத் தெரிகிறது....... திறந்திருந்த கடைகளில் மறியல் செய்யவும் (அதாவது மூடும்படி. ப-ர்) ஓடிக் கொண்டிருந்த போக்குவரத்து சாதனங்களைத் தடைப்படுத்தவும் எத்தனித்த பிறகே தொல்லை விளைய ஆரம்பித்தது யார்? காங்கிரஸ் தலைவர்கள் தொண்டர்கள் (ப-ர்)............ "அர்த்தாலின் கவுரவத்திற்கு குறைவு ஏற்பட்டு விட்டது. போலிஸ் கமிஷனரும் அவரது சகாக்களும் சீப் பிரசிடென்சி மேஜிஸ்ட்ரேட்டும் அடக்கத்துடனும் பொறுமையுடனும் நடந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. அவர்கள் நிலைமை தவறி இருந்தால் அதிக மரணங்கள் ஏற்பட்டிருக்கும்" (அதாவது இதனால் சர்க்கார் யோக்கியமாகவே நடந்து கொண்டார்கள் என்று விளங்குகின்றது. (ப-ர்) மற்றொரு பார்ப்பன பத்திரிகையாகிய "இந்து" பத்திரிகையும் தலைவர்கள் தோற்றுவிட்டார்கள் என்றும் சரியானபடி ஏற்பாடு செய்யவில்லை யென்றும் தங்கள் யோக்கியத்துக்கு மீறின காரியத்தைச் செய்தார்கள்



RangaRakes
tamilnavarasam.com

என்றும் இனி வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்றும் பொருள்பட தைரியமாய் எழுதிவிட்டது. (அதாவது சர்க்கார் யோக்கியமாகவே நடந்து கொண்டார்கள் என்று விளங்குகின்றது. ப-ர்) மற்றபடி பொதுவான - பத்திரிகைகளாகிய நவசக்தி 8 தேதி பத்திரிகைகளில் குறிப்பிட்டிருக் கிறதாவது................ "வெள்ளிக்கிழமை காலையில் (அதாவது அர்ட்டால் தினத்தன்று. ப-ர்) வழக்கம் போல் டிராம் வண்டிகள் ஓடின. மற்ற வண்டிகள் அங்கும் இங்கும் ஓடின தொழில் சாலைகளில் வழக்கம் போல வேலை துவங்கப்பட்டது. பல பெரிய வாணிபக் கூடங்கள் (அதாவது வியாபாரக் கடைகள். ப-ர்) திறக்கப்பட்டன.................. நீதி மன்றங்களில் வழக்கு வாதம் வழக்கம் போல் நடத்தப்பட்டன பச்சையப்பன் கல்லூரி தவிர மற்ற கல்லூரிகள் எல்லாம் திறக்கப்பட்டன....... அன்று பத்து மணிவரை சென்னையின் காட்சி இதுவாகும்" என்று எழுதியிருக்கின்றது.

மற்றபடி 'சைபுல் இஸ்லாம்' 'தாருல் இஸ்லாம்' என்கின்ற மகமதிய சமூக பத்திரிகைகள் அர்த்தால் பெரிதும் காலித்தனத்தின் உதவியைக் கொண்டே நடத்த முயற்சிக்கப்பட்டதென்றும் அப்படி இருந்தும் பெரிய தோல்வி அடைந்ததென்றும் காட்டியிருக்கின்றது. இவைகள் தவிர பல முக்கியஸ்தர்களும் காங்கிரசின் நடவடிக்கையை கண்டித்து எழுதி வருகிறார்கள். தவிர கல்கத்தாவில் நடந்த காலித்தனத்திற்கும் அளவில்லை என்பதும் பார்ப்பனப் பத்திரிகைகளிலேயே விளங்குகின்றது. வெளியூர் களில் நடந்ததாகச் சொல்வது அவ்வளவும் 100-க்கு 99 முழுப் பொய்யாகவே இருக்கின்றது.

உதாரணமாக கோயமுத்தூர் டவுனில் வேலை நிறுத்தம் நடந்ததாக சில அரசியல் பிழைப்பு பத்திரிகைகளில் காணப்படுகின்றன. ஆனால் அங்கு ஒரு சின்ன பார்ப்பனக் கடைகூட மூடப்படவில்லை என்றும் ஸ்ரீமான் ரத்ன சபாபதி முதலியாரை வைவதற்காக அன்று மாலையில் மாத்திரம் சில பார்ப்பனக் காலிகள் ஒரு இடத்தில் கூடி வெகு சீக்கிரத்தில் கலைந்து விட்டார்கள் என்றும் சரியான தகவல் கிடைத்திருக்கின்றது. மற்றும் பல இடங்களில் இது போலவே கூட்டங்கூடி கத்தினதல்லாமல் யாரும் லக்ஷியம் செய்யவில்லை என்றும் பல இடங்களில் காங்கிரஸ் என்ற பெயரைக்கூட வாயில் உச்சரிப்பதற்கு மனமில்லாமல் இருந்ததென்றும் சிலவிடங்களில் சில காங்கிரஸ் காலிகளுக்குத் தக்கபடி புத்தி கற்பிக்கப்பட்டதென்றும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. பம்பாயைப் பொறுத்தவரையில் விசேஷ கலவரம் இல்லை. ஆனாலும் பகிஷ்காரத்தைவிட வரவேற்பு ஆடம்பரமே பலமாய் இருந்ததாக பார்ப்பனப் பத்திரிகைகளிலேயே தெரிய வருகின்றது. ஆகவே இவைகளினால் எந்த விதத்தில் வேலை நிறுத்தம் வெற்றி என்று சொல்ல இடமிருக்கின்றதோ தெரியவில்லை. புதியதாக மதம் மாறியவர் களுக்கு மதவேஷம் அதிகம் என்பதுபோல் "தமிழ்நாடு" பத்திரிகையும் அதன் ஆசிரியர் ஸ்ரீவரதராஜுலுவும் மாத்திரம் இவ்வளவையும் லக்ஷியம்



செய்யாமல் ஒரே அடியாய் புளுகுவதுடன் உண்மையை மறந்தாப் போல் வெளியிட்ட மித்திரன் மீதும் காய்ந்து விழுகின்றது. ஸ்ரீ வரதராஜுலுவின் பத்திரிகைப்படிக்கும் அவரது பேச்சுப்படிக்கும் பார்த்தாலே காலிகள் என்பவர்கள் வேலை நிறுத்தத்திற்கு அனுகூலமாய் வேலை செய்தவர்களா பிரதிகூலமாய் வேலை செய்தவர்களா என்பது நன்றாய் விளங்கும். மோட்டார் பஸ்கள் மீதிலும் டிராம் வண்டிகள் மீதும் தெருவில் மோட்டார் வண்டியில் போனவர்கள் மீதும் கோர்ட்டுக்குப் போன வக்கீல்கள் மீதும் திறந்து வைக்கப்பட்டிருந்த கடைக்காரர்கள் மீதும் கல் எறியப்பட்டதாகவும் காரி உமிழ்ந்ததாகவும் வாயில் வந்தபடி இழிமொழிகளால் பேசியதாகவும் ஸ்ரீவரதராஜுலு பத்திரிகை உள்பட எல்லா பத்திரிகையிலும் காணப் படுகின்றது. குறிப்பாய் வேண்டுமானால் ஆரிசன் கம்பெனி கொள்ளை யிடப்பட்டதும் சர்க்கார் வக்கீலின் மோட்டார் வண்டி கொளுத்தப்பட்டதுமே போதுமானதாகும். மற்றும் ஐகோர்ட்டில் கலகம் செய்ததும் கோர்ட்டுக்கு போன வக்கீல்களை துன்புறுத்தியதும் இன்னும் மேலான சாட்சியமாகும். இந்த நிலையில் காலிகள் காங்கிரஸ்காரர்களா அல்லது பகிஷ்காரத்திற்கு எதிரிடையானவர்களா என்பதை யோசித்தால் முழுமூடனுக்கும் விளங்காமல் போகாது. தவிர ஸ்ரீவரதராஜுலு மோட்டார் மூலம் வேலை நிறுத்தத்தை நடத்த சென்னை முழுதும் சுற்றினதாகவும் அடிக்கடி தன் வண்டியை பலர் வந்து மறித்ததாகவும் தான் வரதராஜுலு என்று தெரிவித்தவுடன் தன்னை காலிகள் விட்டு விட்டு போய் விட்டதாகவும் தானே பல இடங்களில் எழுதிக் கொண்டிருக்கின்றார். இதனால் ஸ்ரீ வரதராஜுலுக்கு ஒரு மோட்டார் இருப்பதாக பொது ஜனங்களுக்கு தெரியப்படுத்த இடமேற்பட்டாலும் இவரை வழிமறித்த காலிகள் வேலை நிறுத்தத்திற்கு எதிரிடையானவர் களாயிருந்திருந்தால் ஸ்ரீ வரதராஜுலுவை சும்மா விட்டிருப்பார்களா என்பது யாருக்கும் விளங்காமல் போகாது. ஆகவே வரதராஜுலு என்று தெரிந்த உடன் சும்மா விட்டு விட்டார்கள் என்பதாலேயே அக்காலிகள் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் என்பது விளங்கவில்லையா என்று கேட்கின்றோம்.

எந்த இடத்திலாவது மூடியிருந்த கடைக்காரனையாவது நிறுத்தி விட்ட எந்த வண்டிக்காரனையாவது திறக்கும்படியோ ஓட்டும்படியோ யாராவது தொந்திரவு செய்ததாக ஏற்பட்டால் அது மாத்திரம் வேலை நிறுத்தத்திற்கு விரோதமான கூட்டத்தாரின் செய்கை என்று சொல்லலாம். அப்படிக்கில்லாமல் தங்களை 'தலைவர்கள்' 'தலைவர்கள்' என்று தாங்களே ஒருவருக்கொருவர் மரியாதை செய்து கொண்டு பட்டம் சூட்டிக் கொண்டு காசு பணத்தை செலவு செய்து காலித்தனத்தை வளர்த்துவிட்டு அவமானமும் தோல்வியும் ஏற்பட்ட பிறகு மேலும் மேலும் அவமானம் அடையத்தக்க மாதிரி முட்டாள்தனமாக ஊர் அறிந்த உண்மையை மறைத்து மறைத்து கீழே விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது தலைமைத் தனத்துக்கு அழகா? அல்லது மனுஷத்தனத்திற்கு அழகா என்று கேட்கின்றோம். யோக்கியமானவர்களாயிருந்தால் ஆண்மையுள்ளவர்களாயிருந்தால் கடுகள



RangaRakes tamilnavarasam.com

வாவது சுயமரியாதையில் கவலை உடையவர்களாயிருந்தால் உண்மையை ஒப்புக் கொண்டு தவறிப் போனதற்கு உண்மையான காரணத் தைக் காட்டி விட்டு மேலால் நடக்க வேண்டியதற்கு முயற்சி செய்ய வேண்டும். அப்படிக் கில்லாமல் நடந்த தப்பிதங்களை மறைத்து விட்டு மேலால் நடக்க வேண்டிய காரியங்களையும் பயந்து கொண்டு நழுவ விட்டுவிட்டு 'அது அவன் தப்பு இது இவன் தப்பு' என்று ஜவாப் தாரித்தனத்தை எதிரிகளின் மீது போடுவது பேடித்தனமும் கடைந் தெடுத்த மானங்கெட்டதனமும் ஆகுமா அல்லவா? என்று கேட்கின்றோம்.

காங்கிரஸ்காரர்களோ வேலை நிறுத்தம் ஆரம்பித்த வீரப்புலிகளோ ஆண்பிள்ளைகளாய் இருந்தால் "போலீசார் வேலை நிறுத்தத்தை ஒழுங்காய் நடத்திக் கொடுக்கவில்லை" என்று சொல்வதற்கு கொஞ்சமாவது வெட்கப் பட்டிருக்கமாட்டார்களா என்று கேட்கின்றோம். "போலீசார் யோக்கியமாய் பொறுமையாய் புத்திசாலித்தனமாய் நடந்து கொண்டார்கள்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் போலீசார் தக்க பந்தோபஸ்து எடுத்துக் கொள்ள வில்லை என்று சொல்லுவது அறிவுடைமையாகுமா என்று யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. தவிர '17-தேதி வேலை நிறுத்தத்திற்காக ஊர்வலத்தையும் மீட்டிங்குகளையும் விளம்பரங்களையும் நாங்களாகவே நிறுத்தி விட்டோம் என்று ஸ்ரீவரதராஜுலு சொல்லுகிறார், எழுதுகிறார். ஏன் நிறுத்திவிட்டார் என்று கேட்கின்றோம். ஒன்றா சர்க்கார் 144 போடப்போகும் விஷயம் தெரிந்து பயந்து கொண்டு பயங்காளித்தனமாய் நிறுத்தி இருக்க வேண்டும் அல்லது இவைகளால் தான் கலவரங்கள் ஏற்பட்டது என்று முடிவு செய்து நிறுத்தி இருக்க வேண்டும். அல்லது வெளியில் தலைகாட்டுவதற்கும் மீட்டிங்கு போடுவதற்கும் தங்களுக்கு யோக்கியதையும் செல்வாக்கும் அற்றுப் போய் விட்டது என்பதை நன்றாய் அறிந்து நிறுத்தி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் வேறு காரணம் என்னவாயிருக்கக்கூடும்? என்று கேட்கின்றோம்.

ஒரு சமயம் ஜனங்களுக்கு போதுமான உணர்ச்சி வந்துவிட்டது. யாருடைய முயற்சியும் இல்லாமல் தாமாகவே கடை மூடிவிடுவார்கள் என்கின்ற நம்பிக்கை இருக்குமானால் "கடை அடைத்தவர்கள் மீதும், அடைக்கும்படி கட்டாயப்படுத்துகிறவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்" என்று சென்னையில் தண்டோரா அடித்ததை பார்த்துக் கொண்டும் 144 உத்திரவு போட்டதை வாங்கிக் கொண்டும் ஜனங்களுக்கு தைரியம் சொல்லாமலும் உத்திரவுக்கு பயப்படாமலும் வெளியில் வந்து வேலை செய்யாமல் "நாங்கள் 144-க்கு விரோதமாய் யாதொரு வேலையும் செய்வதில்லை என்று முன்னமேயே தீர்மானித்து விட்டோம்" என்று சொல்லுவதில் எவ்வளவு நாணயப் பொறுப்பும் ஆண்மையும் இருக்கின்றது என்பதைப் பாருங்கள். இது எது போல் இருக்கின்றதென்றால் ஒரு திருடன் தென்னை மரத்தில் தேங்காய் திருட ஏறியபோது, மரக்காரன் பார்த்துக்





கொண்டதை உணர்ந்து திருடன் கீழே இறங்கி வரும்போது, மரக்காரன் திருடனைப் பார்த்து எதற்காக மரத்தின் மீது ஏறினாய் என்று கேட்டதற்கு திருடன் கன்றுகுட்டிக்குப் புல்லுப் பிடுங்க ஏறியதாய்ச் சொல்ல மரக்காரன் தென்னை மரத்தில் புல் ஏதென்று கேட்க, திருடன் அதனால்தான் பார்த்து விட்டு சும்மா இறங்கி வந்துவிட்டேன் என்று சொல்லி தப்பித்துக் கொள்ள முயற்சித்தது போல் இருக்கின்றது.

எப்படி இருந்தாலும் சைமன் கமிஷன் பகிஷ்காரமும் வேலை நிறுத்தமும் பார்ப்பனர்களின் சூழ்ச்சி என்பதை மக்கள் உணர்ந்து விட்டார்கள் என்பது மாத்திரம் இந்த வேலை நிறுத்தத்தினால் வெளியாய் விட்டதற்கு நாம் மிகுதியும் சந்தோஷமடைகின்றோம். அதாவது (1) ஸ்ரீமான். சத்தியமூர்த்தியே இந்த விஷயமறிந்து அன்று பார்ப்பனர்கள் யாரும் வெளியில் போகக் கூடாது என்று உத்திரவு போட்டு விட்டு தான் மாத்திரம் செக்ரிடரியேட் ஆபிசீல் போய் ஒளிந்து கொண்டதும் (2) போலீஸ் உதவி கமிஷனராகிய ஒரு பார்ப்பனருடன் ஸ்ரீ சத்தியமூர்த்தி கலந்து பேசியதில் அவர் தன்னை வெளி யில் வரவேண்டியதில்லை என்று சொன்னதாக ஸ்ரீ சத்தியமூர்த்தி தன்னுடைய சமாதானத்தில் குறித்திருப்பதும் (3) இதற்கு விரோதமாய் ஸ்ரீ வரதராஜுலு தான் பார்ப்பனரல்லாதார் என்கின்ற காரணத்தால் வெளியில் தாராளமாய் உலவினதும் (4) தன்னை வழிமறித்தவர்களிடம் தான் வரதராஜுலு என்று சொல்லி தப்பித்துக் கொண்டதாக எழுதியிருப்பதும், (5) காங்கிரஸ் காலிகளே கோர்ட்டுக்குப் போய் பார்ப்பன வக்கீல்களைப் பார்த்து 'பார்ப்பனரல்லாதார் களாகிய எங்களை மாத்திரம் வேலை நிறுத்தம் செய் யும்படி சொல்லி விட்டு பார்ப்பனர்கள் நீங்கள் மாத்திரம் கோர்ட்டுக்கு போக லாமா' என்று கேட்டதாக பார்ப்பனப் பத்திரிகைகளில் காண்பதும் (6) சிற்சில இடங்களில் அதாவது திருவல்லிக்கேணி இரும்ப வாராவதி முதலிய இடங்களில் மீசை இல்லாதவர் களையும் பூணூல் போட்டவர்களையும் மறித்து உபத்திரவம் செய்ததாக பார்ப்பனப் பத்திரிகைகளிலேயே காண்பதாலும் (7) பார்ப்பன அட்வகேட் ஜனராலாகிய ஸ்ரீ டி.ஆர்.வெங்கிட்டராமய்யர் போன்றார்கள் ஸ்ரீ சத்திய மூர்த்தியின் அட்டகாசத்தில்தான் இம்மாதிரி கலகங்கள் நடந்தது என்று வருத்தப்பட்டுக் கொண்டதும் அவரும் தாக்கப்பட்டதாய் சொல்லப்படுவதும், மற்றும் பல காரியங்களும் வெளிப்பட்டு விட்டது. நிற்க (8) சர்.சி. பி. ராமசாமி ஐயரின் குமாரர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் அதிக முயற்சி எடுத்துக் கொண்டதும் (9) கதர் வேலையைத் தவிர வேறு வேலை பார்ப்பதில்லை என்று சொல்லி வடக்கத்திய பிரபுக்களிடம் லக்ஷக்கணக்காய் பணம் வாங்கி வந்து வைத்துக் கொண்டு ஆசிரமம் என்னும் பேரால் ஆதிக்கம் செலுத்தி வரும் சி.ராஜகோபாலாச்சாரியாரும் பத்திரிகைகளில் வேலை நிறுத்தம் செய்யும்படி கோடுகட்டிய குறள் எழுதிவந்ததும் (10) அவரே கதர் கடைகளை யெல்லாம் 3-ம் தேதி மூடும்படி கடிதம் எழுதச் செய்ததும் ஆகிய இவ்வளவு காரியங்கள் வெளிப்படையாய் நடந்ததோடு (11) பார்ப்பன அதிகாரிகள் அதாவது சட்டமெம்பர் ஐகோர்ட்டு ஜட்ஜி முதலானவர் களின் செல்வாக்



tamilnavarasam.com

குகள் வேலை நிறுத்தத்திற்கு உபயோகப்பட்டது என்று சொல்லத்தக்க பல ரகசிய காரியங்களும் போதுமானதாகும்.

தவிர இவ்வேலை நிறுத்தத்திற்கு விரோதமாய் வேலை செய்தவர்கள் இன்னார் என்று ஒரு வார்த்தையாவது இது வரை எந்த பத்திரிகையும் சொல்லவே இல்லை. கலகங்கள் நடந்ததாகவும் சொல்லத்தக்க ஆதரவுகளும் இல்லை. மாலை 5 மணி வரை வேலை நிறுத்தத்திற்கு அனுகூலமாய் கலவரங்கள் நடந்திருப்பது மாத்திரம் விளங்குகின்றதேயல்லாமல் விரோத மாய் இன்ன காரியம் நடந்தது என்று ஒரு பத்திரிகையும் எழுதவில்லை. ஆனால் மாலையில் கூட்டத்திலும் பார்ப்பனத் தெருக்களிலும் பார்ப்பனரைக் கண்ட விடங்களிலும் கலகமானதாக எல்லாப் பத்திரிகைகளிலும் காணப்படு கின்றது. இது வாஸ்தவமாக இருக்க அநேக காரணங்கள் உண்டு. என்ன வென்றால் பார்ப்பனரல்லாதார்களை மாத்திரம் வேலை நிறுத்தம் செய்யச் செய்து நஷ்டமடையும்படியும் கஷ்டமடையும்படியும் செய்து விட்டு பார்ப்பனர்கள் ஒரு நஷ்டமும் அடையாமல் ஒரு குஞ்சுகூட வெளியில் வராமல் தங்கள் அலுவல்களைச் செய்து கொண்டிருப்பதை பார்த்த வேலை நிறுத்தத்திற்கு அனுகூலமாய் இருந்த பார்ப்பனரல்லாத மக்கள் சாதாரணமாய் பார்ப்பனர்கள் மீது ஆத்திரப்படுவதில் ஆச்சரியமொன்றுமில்லை, அவர் களுக்கு புத்தி கற்பிக்க வேண்டுமென்று நினைப்பதிலும் ஆச்சரியமில்லை. தேசத்தில் தேசீய விஷயத்தில் அஹிம்சையை முக்கியமாக வைத்து ஸ்ரீமான் காந்தி 5, 6 வருஷம் எவ்வளவோ வேலை செய்து வந்தும் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, குப்புசாமி முதலியார், அண்ணாமலை முதலியார், வரத ராஜுலு, ஷாபி மகம்மது, அமீத்கான் இவர்களால் ஹிம்சையே தாண்டவ மாடும் படியான நிலைமை ஏற்பட்டு வருகின்றது. இதற்கு உதாரணமாக ஸ்ரீமான். சத்தியமூர்த்தி அய்யர் போன்றார் ‘கிளப்பி விடத்தான் முடியும். சர்க் கார்தான் அதை அடக்க வேண்டும்’ என்று பொருள்படச் சொல்லுவது ஒன்றே போதுமானதாகும். நாம் கடைசியாக பார்ப்பனர்களுக்குச் சொல்லுவ தென்னவென்றால் சென்னைக் காலித்தனம் மற்ற இடங்களில் பரவாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் அந்தபடி லக்ஷியம் செய்யாமல் தங்கள் தந்திரங்களினாலும் பணத்திமிரினாலும் பார்ப்பனரல்லாதாரை சரிப்படுத்திக் கொண்டு பார்ப்பனரல்லாதார் மீது ஏவிவிடுவதன் மூலம் தங்கள் காரியங் களைச் செய்து கொள்ளலாம் என்று இன்னும் நினைப்பார்களானால் மாலை 5 மணி வரையில்தான் பார்ப்பன ரல்லாதார் மீது பாய்ந்து சிலருக்கு கெடுதி விளைவிக்கக்கூடுமே யொழிய உண்மை விளங்கியவுடன் இருட்டில் அவர்கள் மீதே திரும்பிப்பாயும் என்கிற எண்ணத்தை இனியாவது கருத்தில் கொண்டு ஜாக்கிரதையாய் இருக்கும்படி எச்சரிக்கை செய்வதோடு, முடத் தெங்குகளை நம்பி மோசம் போய் விடாதீர்கள் என்று சினேக முறையில் தெரிவித்துக் கொள்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 12.02.1928**



# கமிஷன் பகிஷ்காரம்

இதுவரை நடந்த சம்பவங்களால் கமிஷன் பகிஷ்காரமென்பது அர்த்தமற்றதாய் விளங்குகின்றது என்பதும், சென்னை பம்பாய் முதலிய மாகாண பார்ப்பனரல்லாதார் இயக்கங்கள் முழுதும் கமிஷனிடம் ஒத்து ழைக்க தயாராயிருக்கின்றன என்பதும் விளங்கிவிட்டது. அதாவது ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களில் ஸ்ரீமான் கிருஷ்ணநாயர் அவர்கள் ஸ்டேட்மெண்டும் பம்பாய் பார்ப்பனரல்லாதார் தீர்மானமும் பார்த்தவர்களுக்கு இனிது விளங்கும். மற்றபடி மகமதியத் தலைவர்களின் பெரும்பான்மை அபிப்பி ராயமும் பத்திரிகைகளின் அபிப்பிராயமும் முழு ஒத்துழைப்பில் இருக் கின்றது. ஆதி இந்துக்களின் அபிப்பிராயமும் அதைவிட மீறி நிற்கின்றது. மற்றபடி பார்ப்பனர்களின் இயக்கம் என்று கருதப்பட்ட காங்கிரசின் பேரால் மாத்திரம் சிலர் பகிஷ்காரப் பேச்சு பேசினாலும் காரியத்தில் கமிஷனுக்கு அனுகூலமாய் நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. தவிர, பார்ப்பனர்களின் முக்கியமான பகிஷ்கார எண்ணமெல்லாம் இந்தியாவிலிருக்கும் ஜாதித் திமிரும் பார்ப்பன ஆதிக்கமும் வெள்ளைக்காரருக்குத் தெரியக் கூடாது என்பது ஒன்று மாத்திரமேயல்லாமல் வேறு கவலை ஒன்றும் பார்ப்பனர்க ளுக்கு இல்லை என்பது உறுதியாய் விட்டது. இனி யாரும் அதைக் கேட்ப தில்லை என்பது மாத்திரம் உறுதி.

தவிர இங்கிலாந்திலும் உள்ள வெள்ளைக்காரர்களுக்கு மிகுதியும் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தத்தான் இந்த பகிஷ்காரப் புரட்டு ஆரம்பித்திருக்கின்றார்கள் என்பதும் விளங்கி விட்டது. இதை அறிந்தே நமது பார்ப்பனர்கள் வெளிநாட்டுப் பிரசாரம் செய்ய வேண்டும் என்று இப்போதே ஆரம்பித்துவிட்டார்கள். இந்தியாவின் சுயநிர்ணயத்தை நிர்ணயிப்பதற்கு வெள்ளைக்காரர்களுக்கு பாத்தியமில்லை என்றும் அப்படி பாத்தியமிருப்பதாய்ச் சொல்லுவது நமது சுயமரியாதைக்கு குறைவு என்றும் சொல்லிக் கொண்டு திரியும் பார்ப்பனர்கள் இப்போது வெள்ளைக்காரர் நாட்டில் நமது பிரசாரம் செய்ய வேண்டுமென்பதின் இரகசியம் என்ன என்பதை கவனித்துப் பார்க்கும்படி பொது மக்களை வேண்டுகிறோம்.

எது எப்படியானாலும், மகமதியர்கள் இப்போதுள்ள தங்கள்



RangaRakes tamilnavarasam.com

தனித்தொகுதி பிரதிநிதித்துவத்தை இழந்துவிடாமல் தாலூக்கா போர்டு ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி பஞ்சாயத்து முதலியவைகளிலும் தனித் தொகுதி பிரதிநிதித்துவம் பெற இந்த சமயத்தை உபயோகித்துக் கொள்ளும் படி உஷாராயிருக்க வேண்டும் என்று சொல்லுவதோடு ஆதிதிராவிடர்கள் என்பவர்களுக்கும் இந்த சமயம் தவறினால் மற்றபடி அவர்களுக்கு இனி வெகு நாளைக்கு விமோசனமில்லையென்றும் உறுதியாய்ச் சொல்லு கின்றோம். இந்த கமிஷனால் ஏதாவது வேண்டுமா என்று கேட்கப்படு மானால் முதலாவது தீண்டாதார் எனப்படுவோர்க்கு மனிதத் தன்மை உண்டாக்கினால் அதுவே நமக்கு போதுமானது என்று சொல்லுவோம். ஆதலால் அவர்கள் இந்த சமயத்தில் கொஞ்சமும் ஏமாந்து விடாமல் உஷாராயிருக்க வேண்டும். பார்ப்பனரல்லாதாரும் தலைவர்களை நம்பிக் கொண்டு ஏமாந்து விடாமல் தாராளமாய் தங்கள் குறைகளை கமிஷனுக்கு எட்டும்படி நடந்து கொள்ள வேண்டும். இதனால் அதிகமான லாபம் கிடைத்துவிடாது என்று நாம் நம்பினாலும் பின்னால் நாம் செய்யப்போகும் கிளர்ச்சிக்கு நமது குறைகளை நாம் சர்க்காருக்கு தெரிவித்து விட்டுத்தான் கடைசி ஆயுதத்தை எடுக்க நேர்ந்தது என்பதையாவது உலகம் அறிய இது ஒரு சந்தர்ப்பமாகும். தவிரவும் நமது நிலை சில வெள்ளைக்காரருக்குத் தெரியாது என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளவும் வேண்டும், உதாரணமாக கல்கத்தாவில் உள்ள காங்கிரஸ் தலைவரான கோஸ்வாமி என்பவரிடம் சென்ற மாதம் நமது நிலையைச் சொன்ன காலத்தில் “அப்படியா” “வாஸ்தவமா” என்று இரண்டு மூன்று முறை கேட்டார். பக்கத்து மாகாணத் துக்காரருக்கு தெரியாத விஷயம் சீமையில் இருப்பவனுக்கு தெரியும் என்று சொல்லுவது சரியாகாது.

டாக்டர். நாயர் சீமையில் இருக்கும் பொழுது பார்ப்பனரல்லா தாருக்கு பெரிய உத்தியோகங்கள் இல்லையென்று ஒரு வெள்ளைக்கார பார்லிமெண்ட் மெம்பரிடம் நாயர் சொன்னபோது, மிஸ்டர் B.N. சர்மா “இந்தியா நிர்வாக சபையில் இருக்கிறாரே அது போதாதா” என்று கேட்டா ராம். எனவே ஸ்ரீமான் B.N. சர்மா பார்ப்பனரா அல்லவா என்பது அவர் களுக்குத் தெரியவில்லை என்றாவது அல்லது நமது நாட்டு பார்ப்பனர்கள் அவரைப் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லி வைத்து ஏமாற்றி இருக்க வேண்டுமென்றாவதுதான் நாம் நினைத்தாக வேண்டும். ஆதலால் பார்ப்பனர் களின் அக்கிரமங்களை தாராளமாய் இந்த சமயம் சொல்லி விடுவதோடு மனுதர்ம சாஸ்திரத்தையும் சமர்ப்பித்து விட வேண்டும்.

இதனால் நமது சுயமரியாதைக்கு யாதொரு கெடுதியும் வந்துவிடாது என்பது மாத்திரம் ஞாபகத்தில் வைக்கத்தக்கது.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 12.02.1928**



# கற்பு

**- சித்திரபுத்திரன்**

## ஸ்ரீமான் P.R. பரமசிவ முதலியார் எழுதியதற்கு பதில்

இந்த வியாசத்தின் காரணமான ஆதி வியாசம் 8-1-28 தேதி ‘குடி அரசில்’ வரையப்பட்டிருக்கிறது. அதற்கு ஸ்ரீ பரமசிவ முதலியாரின் மறுப்பு 22-1-28 ௳ ‘குடி அரசில்’ பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் இதைப் படிக்கும் நண்பர்கள் மேல்கண்ட இரண்டு வியாசங்களையும் வைத்துக் கொண்டு வாசிப்பது நலமென தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நாம் “வள்ளுவர் ஒரு பெண்ணாக இருந்து குறள் எழுதியிருந்தால் இக்கருத்துக்களை கூறியிருக்க மாட்டார்” என்று குறிப்பிட்டிருந்ததற்கு ஸ்ரீ முதலியார் அதை ஒருவாறு ஒப்புக் கொண்டு “தன்னலங்கொண்ட ஒரு கூட்டத்தார் ஏற்றுக் கொள்ளவில்லையானால் நீதியானது அநீதியாகி விடுமோ” என்று பதிலிருத்தியிருக்கிறார்.

இங்கு ஸ்ரீ முதலியார் பெண்களை தந்நலங்கொண்ட கூட்டத்தார் என்று குறிப்பிட்டது பெண்களுக்கு நீதி வழங்கியதாகுமா? என்பதை யோசிப்பதோடு பெண்கள் தர்மம் எழுதுவதில் ஆண்கள் இம்முறை கொண்டு பிரவேசிப்பது தன்னலங்கொண்டதாகாதா? என்பதையும் சிந்திக்க வேண்டுகின்றோம்.

(இந்த இடத்தில் ‘கருத்து’ இன்னது என்பதை முடிவு கட்டா விட்டாலும்) “தமிழ்நாட்டில் வாழ்ந்த வாழுகின்ற பெண்ணரசிகளும் அக் கருத்துக்களை ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள்” என்று எழுதியிருக் கின்றார். எந்தப் பெண்ணரசியாகிலும் தன்னை ஆண்பிறவிக்கடிமையென் றாவது தாம் அப்பிறவிக்கு கீழ்பட்டவர்கள் என்றாவது ஆண் தன்மையைவிட பெண் தன்மை ஒரு கடுகளவாவது தாழ்ந்தது என்றாவது - எண்ணிக் கொண்டிருப்பார்களானால் அவர்கள் யாராயிருந்தாலும் அவர் களை பெண்ணரசியென்று சொல்ல நாம் ஒருக்காலும் ஒப்போம்.

‘பல தலைமுறைப்பழக்கத்தால் பெண்கள் அக்கருத்துகளை ஏற்றுக் கொள்கின்றனர்’ என்று சித்திரபுத்திரன் எழுதியிருப்பதும் அதை தாழ்த்தப் பட்டவர்கள் தங்கள் தாழ்ந்த நிலையை ஏற்றுக் கொள்வது போலாகும்



RangaRakes tamilnavarasam.com

என்பதற்கு ஒப்பிட்டு சித்திரபுத்திரன் எழுதி இருப்பதும் "தாய்மார்களைப் பழித்து கூறியதாகும்" என்று ஸ்ரீ முதலியார் கூறுகின்றார்.

அதற்கு காரணம் காட்டுவதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அறிவு வளர்ச்சிக்குரிய சாதனங்கள் கிடைக்க வொட்டாமல் செய்து விட்டதால் அன்னார் அறியாமை உடையவராகி விட்டாரென்றும், பெண்களுக்கு அது பொருந்தாதென்றும் ஸ்ரீ முதலியார் சொல்லுகின்றார்.

இதை ஸ்ரீ முதலியார் ஆராய்ச்சியுடன் கூறியிருப்பதாக நமக்கு விளங்கவில்லை. ஏனெனில், எந்தக் காலத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் என்கின்ற கூட்டம் ஏற்பட்டதோ எந்தக் காலத்தில் எந்தக் கூட்டத்தாரால் 'தாழ்த்தப்பட்டோருக்கு அறிவு வளர்ச்சிக்குரிய சாதனங்கள் இல்லாமல் செய்யப்பட்டதோ' அந்தக் காலத்திலேயே அந்தக் கூட்டத்தாராலேயே பெண்மக்களுக்கும் அறிவு வளர்ச்சிக்குற்ற சாதனங்கள் இல்லாமல் செய்யப்பட்டு தாழ்த்தி அடக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. இதை ஏன் ஸ்ரீ முதலியார் உணர முடியவில்லை என்பது நமக்கு அறிய முடியவில்லை.

தவிர, பெண்களின் அறிவுத் திறத்திற்கு உதாரணமாக ஸ்ரீ முதலியார் ஒரு ஔவை பிராட்டியை எடுத்துக்காட்டுகின்றார். அதே மூச்சில் திரு வள்ளுவரையும் எடுத்துக் கொண்டிருப்பாரானால் தாழ்த்தப்பட்டவர் களுக்குள்ளும் ஏதோ ஒருவருக்கு அறிவு வளர்ச்சி இருந்து வந்தது என்பதை ஒத்துக் கொண்டிருப்பாரானால் நாம் ஒன்று இரண்டு பெண்ணரசி களைப்பற்றி பேச வரவில்லை என்றும் தற்காலத்து நிகழும் நூற்றுக்கு தொண்ணூற்தொன்பதே முக்காலே மூணுவீச அரைவீசம் பெண்களைப் பற்றி பேசுகின்றோம் என்பதையும் உணர வேண்டுகின்றோம்.

அன்றியும் இதனால் சித்திரபுத்திரன் தாய்மார்களைப் பழித்துக் கூறியவனானால் ஸ்ரீ முதலியார் 'தாழ்ந்த ஜாதி' என்பவர்களைப் பழித்துக் கூறியதாக ஏற்படவில்லையா? என்கின்றோம்.

உண்மையை பேசும்போது அதனால் யாருக்கு பழிப்பு ஏற்படு மானாலும் அதைப் பற்றிக் கவலை கொள்ளாது அப்பழிப்புக்கு காரணமா யுள்ளதை ஒழிக்க முயலவேண்டியதே வீரன் கடமையாகும்.

தவிர ஔவைப் பிராட்டியாரும் திருவள்ளுவரையே அரண் செய்கின்றார் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஔவையாரின் 'தையல் சொற்கேளேல்' என்கின்ற முதுமொழியை எடுத்துக் காட்டி, அதற்கு அரணாக வள்ளுவரின் 'பெண்வழிச் சேரேல்' என்கின்ற வாக்கை சுட்டிக் காட்டுகின்றார். மற்றும் 'பேதமை என்பது மாதர்க்கணிகலம்' என்ற பிராட்டி யாரின் முதுமொழியையும் கூடவே குறிப்பிட்டிருக்கிறார்.



இதனால் ஸ்ரீ முதலியார் தனது கடைசி ஆயுதத்தை எறிந்திருக்கிறார். ஆயினும் நமக்கு கவலையில்லை. பெண்களும் மனித ஜீவன் என்பதை ஒப்புக் கொள்ளும் எவரும் இம்மூன்றையும் ஒருக்காலும் நடுநிலைமை உள்ளார் வாக்கென்றோ உண்மை ஆராய்ந்த அறிவுடையோர் வாக் கென்றோ ஒப்புக் கொள்ள முடியாதென்பதே நமது துணிபு. அங்ஙன மில்லையாயின் அவ்வக்கால நிலைக்கேற்றதென்றாவது சொல்லியாக வேண்டும். இங்கு சற்று வாசகர்களுக்கு சங்கடமுண்டாகும் என்பது நமக்குத் தெரியும். ஆகிலும் குற்றமில்லை. முதலாவது ஔவையும் வள்ளுவரும் சகோதரர்கள் என்பது ஒரு கதை. அக்கதையே ஆதி என்கின்ற புலைச் சிக்கும் பகவன் என்கின்ற பார்ப்பனனுக்கும் பிறந்த பிள்ளைகள் ஏழில் இவர்கள் இருவர் என்று சொல்லுகின்றது. இவற்றுள் மற்றொரு விசேட மென்னவென்றால் மேல்கண்ட ஆதிக்கும் பகவனுக்கும் புணர்ச்சி முடிந்ததும் பிள்ளையை பெற்று போட்டுவிட்டு போய்விட்டதாகவும் கதை கூறப்பட்டிருக்கின்றது. இது சம்மந்தமாக மற்றும் பல பல கதைகளும் உண்டு. அன்றியும் மற்றும் பல பல ஔவைகள் இருந்தார்கள் என்றும் சிலர் கூறுவார்கள். எனினும் இது விஷயத்தில் புராணக் கூற்றையும் சற்று ஒதுக்கி வைத்து விட்டு தனி அறிவைக் கொண்டு மேற்கண்ட நீதிவாக்கியங்களும் குறள்களும் யாரால் சொல்லப்பட்டிருந்தாலும் அதை கவனியாமல் மே வாக்கியங்களை மாத்திரம் கவனித்து அதுபோன்ற மற்ற வாக்கியங்களுக்கு பொருள் காணுவது போலவே இவைகளுக்கும் காணுவோமானால் மேல்கண்ட முதுமொழிகளின் கருத்தான 'பெண்கள் சொல்லைக் கேட்கக் கூடாது' என்பதும் 'அறியாமை என்பது பெண்களது ஆபரணம். அதாவது அவர்களின் தன்மைக்கு ஏற்றது என்பதும் "பெண்கள் இஷ்டபடி நடக்கக் கூடாது" என்பதுமே பொருளாக விளங்குகின்ற கருத்துக்கள்தான் காணக் கிடைக்கும். இனி இதற்கு விசேட உரைகளும் தத்துவார்த்தங்களும் பல பல சொல்ல பல வித்துவான்கள் முந்தக்கூடும். ஆனாலும் தத்துவார்த் தமும் விசேட உரையும் சொல்ல முடியாத சப்தங்களும் எழுத்துக்களும் வாக்கியங்களும் செய்யுள்களும் உலகத்தில் கிடைப்பது அரிது என்பது நமக்கு தெரியும். ஆதலால் இதற்கு மாத்திரம் தத்துவார்த்தமும் விசேட உரையும் கொண்டு பொருள்கூற வரவேண்டிய காரணம் அறிவாளிகளால் ஒப்புக் கொள்ளக் கூடியதாகாது. ஔவை முதுமொழியும் வள்ளுவர் குறளும் யார் சொன்னார்கள் என்பது இங்கு காண வேண்டிய விஷயமல்ல. மற்றபடி இவ்விரண்டும் நீதி நூல்களில் சிறந்ததாக எடுத்துக் கொள்ளப் பட்டிருக் கின்றது என்பதை யாவரும் ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். ஆதலால் தான் இதைப்பற்றி பேச முன் வருகின்றோம். இதில் குறுக்கே நிற்கும் சங்கடம் என்னவென்றால் இவ்வளவு உயர்ந்த தத்துவங்களை கொண்ட நீதிகளை உணர்ந்தவர்கள் இவ்வளவு பெரிய பிழைகளை இழைத்திருப்பார்களா என்னும் விஷயமாகும். ஆனால் எல்லா விஷயங்களுக்கும் இவ்வாயுதத்தை உபயோகிக்க முற்படுவதால் அவ்வாயுதம் சில சமயங்களில் உபயோகிப்



RangaRakes tamilnavarasam.com

பவர்களையே மோசம் செய்துவிடக் கூடும். அல்லாமலும் காலதேச வர்த்தமானத்தைக் கொண்டு தான் யாரும் எதையும் சொல்லியிருக்க முடியுமேயல்லாமல் பார்ப்பனர்கள் சொல்லுவது போல் எதையும் கடவுள் சொன்னார் என்பதும் அது எப்போதைக்குமே பொருந்தியது என்பதும் இக்காலத்திற்கு பொருத்தமற்றதாகும். இவ்விரு பெரியார்களும் உண்மை யாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்நீதிநூற்கள் சொல்லப்பட்ட காலம் ஆரிய ஆதிக்கம் பரவியிருந்த காலமென்பதையாவது ஒவ்வொருவரும் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். தவிர, ஒளவை பிராட்டியார் பெய ராலோ வள்ளுவர் பெயராலேயோ சொல்லப்பட்ட நீதிகளை ஆக்கிய கர்த்தர் கள் நம்மைப் போன்ற மனிதத்தன்மை வாய்ந்தவர்கள் என்பதை முதலா வதாக ஏற்றுக் கொள்ள வேண்டும்? இந்த இடத்தில் தெய்வத்தன்மைகள் என்று சொல்லப்படுவதை அதாவது மனிதத் தன்மைக்கு மேற்பட்டது என்பது எதையும் மூட்டை கட்டி வேறாக வைத்துவிட்டு பார்த்தால் தான் உண்மை விளங்கும். அப்படிக்கில்லாவிட்டால் யாரும் எதையும் சொல்ல இடமேற் பட்டு விடும். அப்படிப் பார்ப்போமானால்தான் இவர்கள் இப்படிச் சொன்ன தற்கும் நியாயம் கிடைக்கும். அதாவது அந்தக் காலத்திய நிலைமைக்கு யாராயிருந்தாலும் நீதி இப்படித்தான் சொல்லி இருக்க முடியும் என்கின்ற முடிவு காணலாம். எப்படி என்றால் கம்பர் அறிவுத்திறமுடைய கவி என்பதில் யாருக்கும் வேறுபாடு இருக்காது. ஆனாலும் அப்படிப்பட்ட கம்பர் ராமாயணம் பாடினார் என்றால் ஆரியர் செல்வாக்குக் காலத்தில் ஆரிய ஆதிக்கத்தில் மக்களுக்கு உணர்ச்சி உள்ள காலத்தில் பாடியதானதால் அது வால்மீகி உரைத்த கருத்துகளை மாற்றி அதிலுள்ள அருவருப்புகளை நீக்கி ஆரியர்களுக்கே முழு உயர்வையும் ஆதிக்கத்தையும் வைத்து மக்கள் கொண்டாடும்படி பாடியிருக்கின்றார். அதுபோலவே இப்போதும் கூட எவ் வளவு அறிவு முதிர்ச்சியும் ஆராய்ச்சி முதிர்ச்சியும் பலருக்கு இருந்தாலும் ஆரிய ஆதிக்கத்தை மறுப்பதற்கு பயப்படுகின்றார்கள். ஆரிய உயர்வையே பேசுகின்றார்கள். காரணம் ஆரியருக்குப் பயந்தல்ல வென்றும் சொல்லிக் கொள்ளலாம். மற்றென்னையோ வெனில் ஆரியப் பழக்க வழக்கமும் ஆரியர்கதைகளையே படிப்பதும் ஆரிய ஆதிக்கத்திற்கு ஏற்படுத்தின கடவுள் தன்மைகளையே வணங்கி வருவதும் ஆரியக் கதையை ஆதரித்து பாடுவதும் எழுதுவதும் ஆகிய குணங்களே ஆகும். எனவே இம் முறையில் குழந்தைப் பருவ முதல் வளர்ந்து சரீரத்தின் ரத்தத்தின் மூலமாகவும் மயிர்க்கால் மூலமாகவும் ஆரியத்தன்மையை ஏற்றுக் கொண்டு மூளையை நிரப்பிவைத்திருப்பவர்கள் வேறு என்ன செய்யக்கூடும். ஆதலால் அவர்கள் பரிசுத்த தன்மையும் மேன்மையும் உற்றவர்களானால் அக்காலத்திற்கேற்க கூறினார் என்பதோடு முடித்து விடுவது நன்று. அப்படிக்கில்லாமல் எக் காலத்திற்கும் ஏற்க வேண்டிய தென்போமாயின் அவைகள் குற்றம் குற்றமே. நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றமே தான்.



பின்பு ஸ்ரீமான் முதலியார் சமத்துவம் என்பது பற்றி என்ன என்னமோ அவசியமில்லாத அநேகவற்றை சொல்லுகின்றார். அதைப்பற்றி இங்கு இது சமயம் ஒரு விவகாரமும் வைத்துக் கொள்ள அவ்வளவு அவசிய மில்லை. ஆனால் கடைசியாக அவர் குறிப்பிடும் சமத்துவ கொள்கையை யாவது எடுத்துப்பார்ப்போமானால் அதிலும் முற்றும் முறையாய் சொல்லாமல் நழுவிவிட்டார். அதாவது "பெண்மக்கள் தமது உரிமையையும், தேவை யையும் ஆண்மக்கள் தடையில்லாமலும், ஆண்மக்கள் தமதுரிமைகளையும் தேவைகளையும் பெண்ணின் தடையின்றியும் அவர்களுக்குத் துன்ப மில்லாமலும் பெறுதலும் ஒருவர்க் கொருவர் உதவி செய்து வாழ்வதும் ஆண் பெண் சமத்துவமாகும்" என்று சொல்லுகிறார்.

ஆனால் அதே மூச்சில் "ஆண் உரிமை யாது, பெண் உரிமை யாது அன்னாரின் தனித்தனி தேவைகள் என்பவை யாவை என்பதைப் பற்றி ஆராய்வது வேறொன்று விரித்தலாகும்" என்று சொல்லிவிட்டார்.

இவ்வியாசத்தின் விவகாரத்தின் ஜீவநாடியே ஆண் உரிமை என்ன? பெண் உரிமை என்ன? இவ்விரண்டிற்கும் ஏன் வித்தியாசம் இருக்க வேண் டும் என்பதேயாகும். அப்படி இருக்க ஸ்ரீ முதலியார் அதை ஆராய்வது வேறொன்று விரித்தல் என்னும் குற்றமாகிவிடும் என்பது உள்ளதை விரிக்கப் பயந்து மறைத்தல் என்கின்ற குற்றத்திற்கு ஆளாகுமே தவிர வேறில்லை என்று சொல்ல வருந்துகிறோம்.

தவிர "ஆணின் தன்மை, வீரம், வன்மை, கோபம், ஆளுந்திறம் கொண்டு விளங்குகின்றது" என்றும் "பெண்ணின் தன்மை, அன்பு, மென்மை, சாந்தம் பேணுந்திறம் கொண்டு விளங்குகின்றது" என்றும் சொல்கின்றார். ஸ்ரீ பரமசிவ முதலியாரின் இம்முடிவுதான் திருவள்ளுவருக்கு வக்காலத்துப் பெற்று மறுப்பெழுத முன்வரச் செய்து விட்டதென்பது இப்போது நமக்கு நன்றாய் விளங்குகின்றது.

வன்மை; கோபம்; ஆளுந்திறம்; ஆண்களுக்குச் சொந்தமென்றும், சாந்தம்; அமைதி பேணுந்திறம் பெண்ணுக்குச் சொந்த மென்றும் சொல்வ தானது வீரம்; வன்மை; கோபம்; ஆளுந்திறம் புலிக்குச் சொந்தமென்றும், சாந்தம் அமைதி; பேணுந்திறம் ஆட்டுக்குச் சொந்தமென்றும் சொல்வது போன்றதே ஒழிய வேறில்லை. நாம் வேண்டும் பெண் உரிமை என்பது என்னவெனில் ஆணைப் போலவே பெண்ணுக்கும் வீரம், வன்மை, கோபம், ஆளுந்திறம் உண்டென்பதை ஆண்மக்கள் ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

அன்றியும் மனித சமூக வளர்ச்சிக்கு இருபாலருக்கும் ஸ்ரீ முதலியார் குறிப்பிட்ட இருபாலார் குணங்களும் சமமாய் இருக்க வேண்டும் என்பதும் நமது கருத்தாகும். இருபாலுக்கும் சமமாகவே இருக்க இயற்கையில் இடமும்



RangaRakes tamilnavarasam.com

இருக்கின்றது. ஆனால் அது செயற்கையில் ஆண்களின் சுயநலத்தால் சூழ்ச்சியால் மாறுபட்டு வருகின்றது.

கர்ப்பமாகி பத்து மாதம் சுமந்து பிள்ளை பெறுகின்ற குணம் பெண்களுக்கு இருப்பதாலேயே பெண்கள் நிலை ஆண்களைவிட எவ்விதத்திலும் அதாவது வீரம், கோபம், ஆளுந்திறம், வன்மை முதலியவைகளில் மாறுபட்டு விட வேண்டியதில்லை என்றே சொல்வோம். கர்ப்பந் தரித்து பிள்ளை பெறாத காரணத்தாலேயே ஆண்மக்களுக்கு அன்பும் சாந்தமும் பேணுந் திறமும் பெண்களைவிட மாறுபட்டதாகிவிடாதென்றும் சொல்லுவோம்.

உண்மையான காதலுக்கு மதிப்புக் கொடுப்போமானால் உண்மையான காதல் இருக்குமேயானால் பிள்ளையைச் சுமந்து பெறும் வேலை ஒன்று தவிர மற்ற காரியங்கள் இரு பாலருக்கும் ஒன்று போலவே இருக்கும் என்பது உறுதி.

தவிர தற்கொண்டான் என்பதற்கு அன்பைக் கொண்டவன் என்கின்ற பொருளை வருவித்துக்கொள்ளுவது இங்கு வள்ளுவருக்கு காப்புச் செய்யக் கருதியதாகுமேயல்லாமல் குறளுக்கு நீதி செய்ததாகாது.

அன்றியும் பெண்ணிடமிருந்து ஆண் அறிய வேண்டிய குணம் இல்லை என்பதும் அப்படி இருந்தால் “தற்கொண்டாள்” என்பதாக சொல்லலாம் என்பதும் பொறுத்தமற்ற தென்றே சொல்லலாம்.

அது போலவே ‘தொழுதெழுவதையும்’ ஆணுக்கு குறிப்பிட்ட நியதி இல்லை என்பதும் பொருத்தமற்றதே யாகும். பெண்ணை கொள்ள ஆணுக்கு உரிமை இருந்தால் ஆணைக் கொள்ள பெண்ணுக்கு உரிமை வேண்டும். ஆணைத் தொழுதெழ பெண்ணுக்கு நிபந்தனை இருந்தால் பெண்ணைத் தொழுதெழ ஆணுக்கு நிபந்தனை இருக்க வேண்டும். இதுதான் சம உரிமை என்பது.

இஃதில்லாதது எதுவானாலும் வன்மையும் கோபமுமே அல்லாமல் வைததல்ல என்றே சொல்லி விடுவோம்.

தவிர ஸ்ரீ முதலியார் அவர்கள் குறளில் ஆண்களுக்கும் வள்ளுவர் கற்பு கூறியிருப்பதாக சொல்லுகின்றார். இருக்கலாம், ஆனாலும் பெண்களுக்கு கூறியது போல் இல்லை என்றுதான் சொல்லுகிறோம் – அதாவது ஆண்களின் கற்புக்கு ஸ்ரீ முதலியார் அவர்கள் இரண்டு குறள்களை எடுத்துக் காட்டாக கூறியிருக்கிறார். அதாவது,

“சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை”



“நிறை நெஞ்சமில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்”

ஆண்கள் கற்பை வலியுறுத்த கூறியதாகக் கூறுகிறார் போல் காண்கின்றது. இவைகள் அதற்காக கூறியதல்ல என்பது நமது அபிப்பிராயம்.

அதாவது, முதற் குறளுக்கு காவலினால் பெண்கள் கற்பாயிருப்பதால் பயனில்லை. பெண்கள் தாங்களாகவே கற்பாயிருக்க வேண்டும் என்பது தான் கருத்து என்று கருதுகிறோம்.

இரண்டாவது குறள் விலைமாதரை புணர்கின்றவர்க்கு கூறிய பழிப்புரையே அல்லாமல் காதல் கொண்ட மற்றப் பெண்களைக் கூடித் திரியும் ஆண்களைக் குறித்து கூறியதல்ல என்பது நமதபிப்பிராயம். நிறை என்கின்ற வார்த்தை மாத்திரம் காணப்படுகின்றதே தவிர நிர்பந்தமில்லை.

ஆகவே இருபாலர்க்கும் சம நிபந்தனை குறளில் இல்லை என்பதற்கு மற்றும் பல குறள்களையும் நாம் கூறக்கூடும்.

தவிர கடைசியாக ஸ்ரீ முதலியார் நமக்கு உறுத்தும் அறிவுக்கு நாம் அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம். அவர் விரும்புவது போலவே ஆன்றோர் நூல்களில் ஐயம் தோன்றும் இடங்களில் ஐயவினாவாகவே எழுதி வருகிறோம். சில விஷயங்களில் தவறி இருந்தாலும் இனி அப்படியே எழுத விழைகின்றோம். ஆனால் இக்கற்பு விஷயத்தில் நாம் குறிப்பிட்ட குறளின் கருத்தில் நமக்கு ஐயமில்லை என்று கருதுவதோடு மற்றும் சில அறிஞர்களின் கருத்தையும் பெற்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மற்றும் குறள் விஷயத்திலும் குறளாசிரியர் விஷயத்திலும் நாம் கொண்டுள்ள பக்தி ஸ்ரீ முதலியார் கொண்டுள்ள பக்திக்கு மீறியதல்லவானாலும் குறைந்ததல்ல வென்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அதற்கு அநேக சான்றுகள் உண்டு. மற்றபடி ஸ்ரீ முதலியார் குறிப்பிட்ட கடைசி குறள்கள் இரண்டையும் பற்றி நாம் ஒரு சிறிதும் கவலைப்படவில்லை. ஏனெனில் சரி என்று பட்டதைச் சொல்லும் தன்மை எவனிடமிருந்தாலும் அவன் இக்குறள்கள் மாத்திரமல்ல இதுபோன்ற வசைகள் பலவற்றிற்கும் மற்றும் அநேக காரியங்களுக்கும் தயாராயிருக்க வேண்டியவன் தான் என்கின்ற முடிவால் கவலைப்படவில்லை.

**குடி அரசு – கட்டுரை – 12.02.1928**



RangaRakes tamilnavarasam.com

# இது கமிஷனுக்கு தெரிய வேண்டாமா?

மதுராந்தகத்தில் சமீபத்தில் நடந்த நாடகத்திற்காக போடப்பட்ட ஒரு துண்டு விளம்பரத்தின் அடியில் 'பஞ்சமர்களுக்கு டிக்கட்டு கொடுக்கப் படமாட்டாது பிராம்மண ஸ்திரீகளுக்கு தனி இடம் ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் அந்த ஊர் சேர்மன் இந்த நிபந்தனையின் பேரிலேயே நாடகக் கொட்டகைக்கு லைசென்சு கொடுத்திருக்கிறாராம். துண்டு விளம்பரம் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. கூத்தாடிப் பெண்களும் கூத்தாடி ஆண்களும் கூடி கூத்தாடுகிற இடத்தில் கூட ஆதிதிராவிடர்கள் போகக் கூடாது என்பதும், அங்கு கண்ணே பெண்ணே என்று பேசிக் கொண்டு மூக்கையும் காதையும் கன்னத்தையும் கடித்துக் கொண்டு விளையாடுவதைப் பார்க்கப் போகும் பார்ப்பனப் பெண்களுக்கும்கூட தனி இடம் ஒதுக்கித் தருவது என்பதும் பார்ப்பன ஆதிக்கத்தை காட்டுகின்றதா இல்லையா என்று கேட்பதோடு இது சைமன் கமிஷனுக்கு தெரியவேண்டாமா? என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 12.02.1928**



# சங்கராச்சாரி மடத்து ஸ்ரீமுகம்

பொட்டுக் கட்டுவதை ஒழிக்க வேண்டும் என்று ஸ்ரீமதி முத்துலக்ஷிமி அம்மாள் அவர்களால் கொண்டுவரப்பட்ட மசோதாவானது இந்து மதத்திற்கு விரோதமென்றும் அதை இந்துக்கள் நிறைவேற்ற விடக் கூடாது என்றும் ஸ்ரீ சங்கராச்சாரியார் மடத்தில் தீர்மானம் செய்து சிஷ்ய கோடிகளுக்கு வினியோகிக்கப்பட்டு இருக்கின்றதாம். இந்த மாதிரியான இந்து மதத்தின் பெருமையை கமீஷனுக்கு தெரிவிக்க வேண்டாமா?

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 12.02.1928**



RangaRakes tamilnavarasam.com

# மந்திரிகளின் நிலை

சென்னை அரசாங்க மந்திரிகளின் நிலை ஆட்டம் கொடுத்திருக்கும் விஷயம் யாவரும் அறிந்ததே. மந்திரிகளின் நியமனத்தின் போது காங்கிரஸ் பார்ப்பனர்களும் ஒத்துழையா பார்ப்பனர்களும் ஐகோர்ட் ஜட்ஜ் பார்ப்பனர்களும் நிர்வாகசபைப் பார்ப்பனர்களும் உள் உளவாய் இருந்து பார்ப்பன ஆதிக்கத்துக்கு ஒப்பந்தம் பேசிக் கொண்டு பார்ப்பனரல்லாதாரிலேயே மூவரைப் பிடித்து சுயேச்சைக் கக்ஷி மந்திரிகள் என்று பெயர் தந்து மந்திரி சபையை சிருஷ்டித்தார்கள். உதாரணமாக இம்மந்திரிகளை நியமிக்கும் விஷயத்தில் ஒத்துழையாமைக்கார ஸ்ரீமான்கள் ராஜகோபாலாச்சாரியார், ஸி. விஜயராகவாச்சாரியார் முதலியோரும், காங்கிரஸ் முட்டுக்கட்டைகளாகிய ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, சீனிவாசய்யங்கார் முதலியோரும் சட்ட மெம்பர் ஐகோர்ட் ஜட்ஜுகள் முதலியோரும் வெளிப்படையாகவே எடுத்துக் கொண்ட முயற்சி யாவருக்கும் தெரிந்ததே. இவர்கள் தயவால் ஸ்தானம் பெற்ற மந்திரிகளும் மேற்கண்ட பார்ப்பனர்கள் சொன்னபடியெல்லாம் ஆடினதும் பார்ப்பனரல்லாதார் கட்டைக் குலைத்து அவர்களது இயக்கத்தையே பாழாக்க எவ்வளவு தூரம் கொடுமைகள் செய்யலாமோ அவ்வளவு தூரம் செய்ததும் மறக்கக் கூடியதல்ல. கடைசியாக பார்ப்பனரல்லாதார் கோவையில் மகாநாடு கூடி இம் மந்திரிகளை ஒழிக்கக் கருதி "இரட்டை ஆக்ஷி ஒழியும் வரை உத்தியோகம் ஏற்பதில்லை" என்கின்ற தீர்மானம் செய்த பிறகு மந்திரிகள் பயந்து போய் பார்ப்பனரல்லாதாருக்கும் சிற்சில உத்தியோகங்களும் நியமனங்களும் செய்ய வேண்டி நிர்ப்பந்தம் வந்து விட்டது. இந்த சிற்சில உத்தியோகங்கள் பார்ப்பனரல்லாதாருக்கு மந்திரிகள் கொடுக்க ஏற்பட்டதால் பார்ப்பனர்கள் பொறுக்க மாட்டாமல் மந்திரிகளை நெருக்க ஆரம்பித்து விட்டார்கள். இதற்கு முக்கிய காரணம் சட்ட கலாசாலை தலைமை உபாத்தியாயர் (அதாவது லா காலேஜ் பிரின்சிபால்) வேலையை ஸ்ரீமான் ரத்தினசாமி என்கின்ற ஒரு கிருஸ்தவ கனவானுக்கு கொடுத்ததினால் எல்லா பார்ப்பனரும் ஒன்றுகூடி மந்திரியை ஒழிக்க கங்கணங்கட்டிக் கொண்டார்கள். ஸ்ரீமான் ரத்தினசாமி ஒரு பாரிஸ்டர் இங்கிலீஷில் உயர்ந்த கல்வியாளர். மேல்நாட்டு கல்வி அனுபவமும் உள்ளவர். சட்டசபை பிரசிடெண்டாக மீ 2000 ரூ. சம்பளம் வாங்கி வந்தவர். பச்சையப்பன் பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயராக கிட்டத்தட்ட 1000 ரூ. சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தவர். இந்தியா சட்டசபை மெம்பர். இவ்வளவு யோக்கியதையும் உள்ள ஒருவருக்கு மீ 1000 ரூ. சம்பளமுள்ள ஒரு வேலை கொடுத்ததற்காக மந்திரி சபையே ஆட்டங் கொடுக்கத்தக்க நிலைமையை பார்ப்பனர்கள் உண்டாக்கி விட்டார்கள். காரணம் என்ன வென்றால் சட்ட கலாசாலையில் படிப்பவர்கள் எல்லாம் பார்ப்பனர்கள். அவர்களுக்கு பார்ப்பனர் உபாத்தியாராய் இருந்தால் எவ்வளவு அனுகூலம் உண்டாகுமோ அவ்வளவு அனுகூலம் உண்டாகாதே என்கின்ற பயமும், பார்ப்பனரல்லாத பிள்ளைகளும் படித்து முன்னுக்கு வந்து விடுமோ என்கின்ற வயிற்றெரிச்சலும் அவர்களைப் பிடித்துக் கொண்டது. இதனால் பார்ப்பனர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து முதல் மந்திரியிடம் இந்த வேலைக்கு ஒரு பார்ப்பனரையே நியமிக்கச் சொல்லிப் பார்த்தும் வேறு எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் யார் பேச்சையும் கேளாமல் டாக்டர். சுப்பராயன் பார்ப்பனரல்லாதாரையே நியமித்துவிட்டார். மற்றும் சில இடங்களில் பார்ப்பனரல்லாதார் விஷயத்திலும் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டாரே என்கின்ற பயமும் பார்ப்பனர்களுக்கு நன்றாய் விழுந்து விட்டது.

எனவே, மந்திரி சபையை கலைக்க ஆரம்பித்துவிட்டார்கள். அதனால் இப்பொழுது மந்திரி கட்சியில் பிளவு உண்டாகிவிட்டது. மந்திரி கட்சியில் உள்ள பார்ப்பனர்கள் அவரை விட்டுப் பிரிந்துவிட்டார்கள். மற்றும் பல பார்ப்பனரல்லாதார்களும் பல மீறமுடியாத செல்வாக்குகளால் பார்ப்பனர்களைப் பின்பற்ற வேண்டி வந்துவிட்டது. மற்றொரு மந்திரியாகிய ஸ்ரீமான் ரங்கநாத முதலியார் பார்ப்பனர்கள் சொல்லுகிறபடி ஆடுவதாக ஒப்பந்தம் செய்து கொண்டார். அதிலிருந்து அவர் ஒரு சிறிதும் மாறவும் இல்லை. பார்ப்பனர்களுக்கு ஸ்ரீமான். முதலியாரின் குருவாகிய ஸ்ரீ பெசண்டம்மையாரின் ஜாமீனும் இருக்கின்றது. மற்றபடி மற்றொரு மந்திரி ஸ்ரீமான் ஆரோக்கியசாமி முதலியார் அவர்களைப் பற்றியோ யாருக்கும் கவலையில்லை. அதாவது 'அடிப்போன சட்டி ஆத்தாள் வீட்டிலிருந்தாலும் ஒன்றுதான் மகள் வீட்டிலிருந்தாலும் ஒன்றுதான்' என்பது போல் அவர் பார்ப்பனர்கள் போட்ட கோட்டை மீற முடியாதவர். எனவே சைமன் விஷயத்தில் சட்டசபையில் டாக்டர் சுப்பராயனுக்கு எதிரிடையாக அவர் கூட்டு மந்திரிகளும் கட்சி மெம்பர்களில் சிலரும் ஓட்டு கொடுத்ததால் மந்திரி கட்சி ஒழுங்கற்றதாகி விட்டதுடன் டாக்டர் சுப்பராயனுக்கு மந்திரி கட்சியில் ஆதரவு இல்லை என்றும் ஏற்பட்டுவிட்டது. இதனால் ஒன்றா கவர்னராகவே மந்திரிகளைக் கலைக்க வேண்டும். அல்லது மந்திரிகளாவது ராஜீனாமா கொடுக்க வேண்டும். இந்த இரண்டும் நடக்காவிட்டால் பலக் குறைவான மந்திரியாவது ராஜீனாமா கொடுத்து விட வேண்டும். அல்லது மறுபடியும் எல்லோரும் ராஜியாகி விடவேண்டும். இந்நான்கில் ஒன்று நடந்தாக வேண்டுமேயல்லாமல் சும்மா இருக்க முடியாது. இந்த நிலைமை தான் டாக்டர். சுப்பராயன் அவர்கள் ராஜீனாமா கொடுத்துவிட்டார்கள் என்கின்ற சங்கதி வெளியாகக் காரணமாயிருந்தது. முதல் மந்திரி ராஜீனாமா கொடுத்ததாக சொல்லப்படும் விஷயத்



RangaRakes
tamilnavarasam.com

திற்கு அஸ்திவாரமில்லை என்றுதான் அசோசியேட் பிரஸ் சொல்லக் கூடுமேயல்லாமல் ராஜீனாமா கொடுக்கவில்லை என்று சொல்ல யாருக்கும் தைரியம் வரவில்லை. இன்று நாளைக்கில்லாவிட்டாலும் மந்திரிகளுக்குள் புது ஒப்பந்தம் ஏற்பட்டு காங்கிரஸ் பார்ப்பனர்களும் உத்தியோகப் பார்ப்பனர் களும் ஆதரிப்பதாக வாக்கு கொடுக்காத பட்சம் ராஜினாமா சங்கதி வெளியாகித்தான் தீரும் என்றே சொல்லுவோம். ஸ்ரீமான் டாக்டர். சுப்பராயன் மந்திரி நிலைக்க வேண்டுமானால் காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கு பதிலாக ஜஸ்டிஸ் கட்சியார் உதவி செய்வதாக வாக்களிக்க வேண்டும். அவர்களும் ஒன்று அல்லது இரண்டு மந்திரி ஸ்தானங்களை ஒப்புக்கொள்ளத் தயாரா யிருக்க வேண்டும். ஆனால் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்களுக்கு இது சமயம் மந்திரி ஸ்தானம் ஒப்புக்கொள்ள சற்று பயமாயிருக்கிறதென்றே தெரிகின்றது. ஏனெனில் கோயமுத்தூர் தீர்மானம் ஒன்று குறுக்கே நிற்பதாலும் மறு எலக்ஷ னுக்கு போனால் ஜனங்கள் பரிகாசம் செய்வார்களே என்கின்ற எண்ணத் தாலும்தான் காங்கிரசுக்குள் இருந்தே வேறு கக்ஷி ஆரம்பித்த ஸ்ரீ முத்தய்ய முதலியார் அவர்கள் கக்ஷியார் தாராளமாய் மந்திரி பதவி ஒப்புக் கொள்ள லாமானாலும் பார்ப்பனர்கள் போக மீதி இருக்கும் மந்திரிக் கக்ஷியும் ஸ்ரீமுத் தைய்யா முதலியார் கட்சியும் ஒன்று சேர்ந்தாலும் போதுமான மெஜாரிட்டி கிடையா ததால் அவர் அந்த ஒரு கட்சியின் உதவியைக் கொண்டு அமைக்க முடியாது மற்றபடி இண்டிபெண்டண்ட் ஆபோசீஷன் என்கின்ற ஸ்ரீமான் சி.எஸ். ரத்னசபாபதி முதலியார் அவர்களுடைய கட்சிக்கு ஒரு மந்திரி கொடுத்து அக்கட்சியையும் சேர்த்துக் கொள்வதானாலோ அப்பொழுதும் தைரியமாய் இருக்கத்தக்க மெஜாரிட்டி இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். டாக்டர். சுப்பராயனை வெளியேற்றி விட்டு ஸ்ரீமான்கள் ரங்கநாத முதலியாரும் ஆரோக்கியசாமி முதலியாரும் இருந்து கொண்டு மற்றொரு மந்திரியை தெரிந்தெடுக்க வேண்டுமானால் ஒரு பார்ப்பன மந்திரியைத் தான் தெரிந்தெடுத்தாக வேண்டும். இதற்கு காங்கிரஸ்காரர்களின் உதவி வேண்டியது அவசியம். ஆனால் காங்கிரசினுள் சில பார்ப்பனரல்லாதார்கள். மந்திரி பதவி தங்களுக்கு வருவதாயிருந்தால் வரட்டும் இல்லாவிட்டால் வேறொரு பார்ப்பனனுக்கு உதவி செய்து பெயரைக் கெடுத்துக் கொள்ள வேண்டியதில்லை என்று உறுதியாய் மறுக்கிறார்கள். இந்த நிலையில் பார்ப்பனர்களின் நாக்கில் ஊறும் தண்ணீருக்கு கணக்கு வழக்கு இல்லை. கடைசியாக இது எப்படி முடியும் என்று சொல்லுவதும் கஷ்டமாகத்தான் இருக்கிறது.

எப்படியானாலும் நிலைக்கத்தக்க மந்திரி சபையை அமைக்க கவர்னர் பிரபு படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. இதற்காக வேண்டியே சட்டமெம்பர் வேலையை கையில் கெட்டியாய் வைத்துக் கொண்டு, மந்திரி சபையை உறுதியாக்குகிறவர்களுக்கு கொடுப்பதாய் ஆசைக்காட்டி வருகின்றார். சட்ட மெம்பர் வேலை பார்ப்பனரல்லாதாருக்கு கொடுப்பதானால் மந்திரிகளிலும் ஒரு பார்ப்பனர் இருக்க வேண்டும் என்று வேலையை விட்டுப் போகும் உத்தியோகஸ்தர் சர்க்காரை மிரட்டிக் கொண்டிருக்கிறார். இதனால் வெகுபேர் களுக்கு தூக்கமே இல்லை. வெகு பேர்களுக்கு சாப்பாடு இறக்கமே இல்லை. வெகுபேர் இளைத்துப் போய்விட்டார்கள். கடைசியாக என்ன ஆகுமோ தெரியவில்லை. இவற்றுள் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர் கோயமுத்தூர் தீர்மானத்தை மதித்து அதை மீறக் கூடாது என்று சொல்லி மந்திரி வேலையை உதைத்துத் தள்ளி வந்திருப்பதானது ஒரு விஷேஷம் என்று சொல்லலாம். மறுபடியும் மந்திரி வேலை ஒப்புக் கொள்ளுவதானால் வேறொரு மகாநாடுகூட்டி அதற்குத் தகுந்த காரணங்களைக் காட்டி பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்கள் சம்மதம் பெறாமல் மந்திரி வேலை ஒப்புக் கொள்ளு வார்களேயானால் காங்கிரஸ்காரர்களுக்கும் ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லாமல் போவதோடு இரண்டு கக்ஷியாருக்கும் நாணயம் கிடையாது என்றும் சமயம் போல மக்களை ஏமாற்றுகின்றவர்கள் என்றும் பொது ஜனங்கள் சொல்லிவிடுவார்கள் என்று எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 19.02.1928**


RangaRakes

tamilnavarasam.com

# தமிழர்களே உங்களுக்கு புத்தி இல்லையா

தமிழ்நாடும் தமிழ் மக்களும் மனிதத் தன்மையாகிய "சுயமரி யாதையை இழந்து மிருகங்களிலும், பூச்சி புழுக்களிலும் கேவலமாய் வாழும் நிலைமை ஏற்பட்டதற்கு முக்கிய காரணங்களில் பார்ப்பன மதமாகிய இந்து மதமும் அம்மத ஆதாரங்களாகிய வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, புராணம் முதலிய ஆபாச புரட்டுகளே முக்கிய காரணம்" என்று வெகுநாளாகச் சொல்லி வருகிறோம். அநேக விதங்களில் அறிவைக் கொண்டும் அனுபவங் களைக் கொண்டும் யாவருக்கும் நன்றாய் விளங்கும்படி விவரமாய் எழுதியும் வந்திருக்கின்றோம். இவற்றை மறுத்து இதுவரை யாரும் எவ்வித சமாதானமும் சொல்லாமல் "மதம் போச்சு" "நாஸ்திகமாச்சு" "தெய்வம் போச்சு" என்று பொய் அழுகை அழுகிறார்களேயல்லாமல் சற்றாவது கவனித்துப் பார்த்து இதற்கு என்ன செய்ய வேண்டும் இனி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி ஒருசிறிதாவது கவலை கொள்ளாமல் இருப்பதுடன் செய்ய முயற்சிப்பவர்களையும் காலை வாரி விட சூழ்ச்சிகள் நடந்த வண்ணமாகவும், எதிர் பிரசாரங்கள் நடந்த வண்ணமாகவும் இருந்து வருகிறது.

அன்றியும் முன்னையை விட பார்ப்பனப் பிரசாரமும் பலமாய் நடந்து வருகின்றது. என்னே! தமிழர்களின் மானங்கெட்ட தன்மை.

தமிழ் மக்களில் பலர் படித்தவர்கள் என்றும், பண்டிதர்களென்றும், வித்துவான்கள் என்றும், ஆராய்ச்சிக்காரர்கள் என்றும், சீர்திருத்தக்காரர்கள் என்றும் சொல்லிக் கொண்டு வெளியில் புறப்பட்டு புஸ்தகம் எழுதுவது மூலமும், புராண பிரசங்க மூலமும், ஆராய்ச்சி மூலமும், சீர்திருத்தப் பிரசாரம் மூலமும், பத்திரிகையின் மூலமும் தமிழ் பாஷையைப் பரப்புவதென்பதன் மூலமும் மற்றும் பலவழிகளில் பார்ப்பன மதப்பிரசாரங்களையே மேலும் மேலும் செய்கின்றார்களே யொழிய வேறு ஒரு காரியமும் செய்ய அறிவும் ஆற்றலும் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். இந்த உபத்திரவம் போதாமல் இப்பொழுது சினிமாக்களும் நாடகக் காரர்களும் பாராட்டுக் காரர்களும் உபந்நியாசகாரர்களும் இப்பார்ப்பனப் பிரசாரத்தையே கைப்பற்றி தினமும் கோடிக்கணக்கான மக்களுக்கு புராணப் பிரசாரம் செய்து வருகின்றன.



அன்றியும் சமீப காலமாக நமது நாட்டில் உள்ள எல்லா பத்திரிகை களும் அறிந்தோ அறியாமலோ இதே வேலையையே செய்து வருகின்றன. எந்தவாரப் பத்திரிகையின் முகப்பைப் பார்த்தாலும் ஆரியப் புராணப் புளுகுகளைப்பற்றி வியாக்கியானம் பண்ணுவதும், அதற்கு விசேஷ அர்த்தமும், தத்துவார்த்தமும் சொல்லுவதும் எழுதி வைத்தவர்களைப் புகழ்வதுமாகவே இருக்கின்றன. எந்த தினசரிப் பத்திரிகையைப் பார்த்தாலும் பார்ப்பன மதக் கொள்கைகளை பிரசாரம் செய்யத்தக்க வண்ணம் ஆரியக் கதைகளையே விளக்கி வருகின்றது.

ஆனால் ஒவ்வொரு பத்திரிகையும் தன்னை சீர்திருத்தப் பத்திரிகை யென்று சொல்லிகொண்டேதான் இந்தக் காரியம் செய்கின்றது என்பதைக் கவனிக்கும்போது தான் நமது மனம் பதறுகின்றது.

அன்றியும் இந்தக் கொடுமைக்கு இன்னதுதான் பரிகாரம் என்பது நமக்கு விளங்கவில்லை. தேவஸ்தான மசோதா வந்த காலத்தில் கூட எல்லா பார்ப்பனரல்லாத பத்திரிகைகளும், பார்ப்பனர்களையும் பார்ப்பன பத்திரிகை களையும் பின்பற்றி அம்மசோதாவை நிறைவேறச் செய்துவிட்டன. 'திராவிடன்' ஒன்று மாத்திரம் தைரியமாய் உண்மையாய் பிரசாரம் செய்து வந்தது. ஆனாலும் ஒரு பயனும் உண்டாகவில்லை. தவிர தற்சமயம் முக்கிய பிரச்னையாய் இருக்கும் சுவாமிக்காக தமிழ் பெண்களை பொட்டுக்கட்டி விபசாரத்திற்கு அனுகூலமாக்கினதை ஒழிக்கச் செய்யும் பிரயத்தனத்தையும், பக்குவமறியாக் குழந்தைகளை பெண்ஜாதி புருஷர்களாக ஆக்கி குரங்கு குட்டிகள் போல பிள்ளைகள் பெற்று மிருகப் பிராயத்திற்கு போய்க் கொண்டிருக்கும் நிலையைத் தவிர்க்கச் செய்யும் பிரயத்தனங்களையும் அடக்க பார்ப்பனர்கள் செய்யும் இடையூறுகள் ஒன்றல்ல பல. கொஞ்ச கால மாக 'சுதேசமித்திரன்' முதலிய தினசரி பத்திரிகைகளில் இதே விஷயங்கள் வெளியாகின்றன. சங்கராச்சாரியர்களும், பண்டிதர்களும், சாஸ்திரிகளும், வைதீகர்களும் தினம் ஒவ்வொரு இடத்தில் மீட்டிங்குகள் நடந்ததாகப் பேர் செய்து இவ்விரு காரியங்களையும் மறுத்து கண்டித்து தீர்மானங்கள் செய்த தாக எழுதி வருவதும், பொதுமக்கள் ஏமாறும்படி கடவுள் சொன்னதாகவும் தேவர்கள் சொன்னதாகவும் ரிஷிகள் சொன்னதாகவும் அசரீரி சொன்ன தாகவும் அநேக விஷயங்களை எடுத்து எழுதுவதுமாய் இருக்கின்றார்களே! இதை யாராவது கவனிக்கின்றார்களா? என்று கேட்கின்றோம்.

இது தவிர பள்ளிக்கூட டெக்ஸ்ட் பாடப் புஸ்தகங்கள் என்று அநேக பார்ப்பனர்களும் சுயமரியாதையும் அறிவும் இல்லாத சில பார்ப்பன ரல்லாதார்களும், ராமாயணம், பாரதம், பாகவதம், கந்தப்புராணம் பெரிய புராணம், அருணாசலப்புராணம், திருவிளையாடல் புராணம் முதலிய குப்பை கூலங்களின் பேரால் சிறு சிறு கதைப்புத்தகமும் எழுதி சிறு குழந்தைகளுக்கு பார்ப்பன விஷத்தை ஊட்டுவதும் சகிக்கக் கூடியதாயில்லை.



RangaRakes tamilnavarasam.com

எந்தப் புத்தகத்தைப் பார்த்தாலும் ஆரியர் மேலோர் என்பதும், பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்பதும் தென்னாட்டில் ஒரு முரட்டு ஜாதியர் காட்டுமிராண்டிகளாய் இருந்தார்கள் அவர்களைத்தான் வானரங்கள் என்று சொல்லப்படுவது என்றெழுதுவதும், ஆரியர் தென்னாட்டிற்கு வந்த பிறகே தமிழ் மக்கள் மனிதத் தன்மையை அடைந்தார்கள் என்று எழுதியதுமான புஸ்தகங்களைப் படிக்கச் செய்வதே இப்போது தேசீயப் படிப்பாக மாறி வருவதும் நினைக்க நினைக்க வயிறெல் லாம் பற்றி எரிகின்றது. இன்னும் பல வழிகளில் தமிழர்களை இழிவுப்படுத்தி யிருக்கின்றார்கள். அவைகளையெல்லாம் இதில் எழுத மனம் வெட்கப் படுகிறது. இதற்கு என்ன வழி என்று யார் சிந்திக்கிறார்கள். பார்ப்பனர்களு டைய முகக்கோணலை பொறுத்துக்கொள்ள தமிழ் மக்களில் ஆட்கள் இல்லையென்றால் அந்த சமூகம் வாழுவதால் பயன் என்ன? என்று கேட்கின் றோம். பார்ப்பனரல்லாதார்களில் வயிற்றுக்கில்லாத கூலிகளின் செய்கை களைப்பற்றி நாம் பிரமாதமாய் இதில் எழுத வரவில்லை.

வயிற்றுக்கு தாராளமாய் கிடைக்கத்தக்க தொழிலையும் தனி சம்பாத்தி யத்தையும் சொத்துகளையும் நிலையையும் வைத்துக் கொண்டிருக்கும் ஆசாமிகள் பார்ப்பனப் பிரசாரங்கள் செய்யும் முட்டாள்தனத்திற்கு நாம் என்ன சமாதானம் செய்து கொள்ளக்கூடும். பார்ப்பனரல்லாத அரசர்களில் பெரும்பகுதியார் பார்ப்பனர்களுக்குப் பிள்ளையாய் பிறக்கக் கருதுகிறார் களேயொழிய பார்ப்பன மதக் கொடுமையில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இழிவைப்பற்றி கருதுகிறார்களா என்று பார்த்தால் அதுவும் ஒரு சிறிதும் இல்லை.

பார்ப்பனரல்லாத ஜமீன்தார்கள், பிரபுக்கள், லேவாதேவிக்காரர்கள், வியாபாரிகள் என்போர்களோ ஏழைகளை வதைத்துப் பட்டினி போட்டு ஏமாற்றி கொள்ளையடித்து பல லக்ஷக்கணக்கான சொத்துக்களைச் சேர்த்துக் குட்டிச்சுவர்களாக விளங்கும் கோவில்களைக் கட்டுவதும் அங்கு பார்ப்பனத் திருவிழா செய்வதும் பார்ப்பன மதப்பிரசார பள்ளிக்கூடங்கள் வேத பாட சாலைகள் கட்டுவதும், பார்ப்பனர்கள் சாப்பிட சத்திரங்கள் கட்டுவதுமான கொடுமைகளைச் செய்வதற்காகவே தங்கள் பணங்களை உபயோகிக்கின் றார்கள். பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர்களோ தங்கள் செல்வாக்கு முழுவதையும் பார்ப்பன நன்மைக்கே உபயோகிக்கிறார்கள். இல்லாவிட்டால் அவர்களுடைய உத்தியோகத்திற்கும் வாழ்வுக்கும் ஆபத்தாய் முடிந்து விடுகின்றது. பார்ப்பனரல்லாத சன்னியாசிகளின் சங்கதி சொல்லவே வேண்டியதில்லை எனலாம். சுருங்கக் கூறினால் இயற்கைக்கு விரோதமான இன்பத்தை அனுபவிப்பதே அவர்களது தபசாகிவிட்டது. இனி மீதி இருக்கும், பாமர மக்களோ மேல்கண்ட பெரிய ஆசாமிகள் என்பவர்கள் நடப்பதைப் பார்த்து அவர்களைப் பின்பற்றி மேலும் மேலும் தங்களை



உயர்ந்த ஜாதியான் என்றும் பக்திமான் என்றும் ‘சனாதன இந்து’ என்றும் சொல்லிக் கொள்வதற்கே ஆசைப்பட்டு விபூதியையும் நாமத்தையும் பூசிக் கொள்ளுவதும் யாத்திரையும் சடங்கும் செய்வதுமான வாழ்க்கையிலேயே தமது சம்பாதனையை கூடப் போடுவதுமாய் இருக்கின்றார்களே யொழிய ஐயோ பாவம்! மனிதத் தன்மை இன்னது என்பதைப்பற்றி ஒரு சிறு கவலையும் இல்லாதவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் தமிழ் மக்களின் சுயமரியாதை எங்கே இருக்கின்றது? எப்பொழுதுவரும் என்பதைப்பற்றி சற்று யோசித்துப் பாருங்கள். நேயர்களே!

உங்கள் மனம் பதற வில்லையா? உங்கள் அறிவு வெட்கப்பட வில்லையா? நீங்களும் மக்கள் என்று எண்ணிக் கொள்ள உங்கள் எண்ணம் இடம் கொடுக்கின்றதா? உலகத்தில் மானமற்ற மக்கள், ஈனம் உற்ற மக்கள் சுயமரியாதை இன்னதென்று உணராத மக்கள் என்பவர்கள் எங்கிருக் கின்றார்கள்? அவர்கள் யார்? என்பதை சற்று நிதானமாய் தேடிப்பார்த்தால் உங்களைத் தவிர வேறு யாரையாவது கண்டு பிடிப்பீர்களா? போதும் போதும் இனியாவது உங்கள் முயற்சியை சற்று சுயமரியாதைப் பக்கம் திரும்புங்கள். தேசீய நரகத்தில் அழுந்தாதீர்கள். கடைந்தெடுத்த அயோக்கியர்களுக்கும் துரோகிகளுக்கும் ஈனவயிறு பிழைப்புக்காரருக்கும் அறிவிலிகளுக்கும் அதை விட்டுவிடுங்கள். தமிழ்த்தாயின் மானத்தைக் காப்பாற்ற முன்வாருங்கள்.

சமீப காலத்தில் நடைபெற வேண்டிய சுயமரியாதை சத்தியாக் கிரகத்திற்கு வரிந்து கட்டி முன் நில்லுங்கள், உங்கள் விண்ணப்பங்களில் உங்கள் ரத்தத்தைக் கொண்டு கையெழுத்துச் செய்து அனுப்புங்கள். உங்கள் சொத்துக்கள் என்பதில் ஒரு பகுதியை இப்போதே ஒதுக்கி வைத்து விடுங்கள் புரட்டுப்பிரசாரங்களை வெறுத்துத் தள்ளி பாமர மக்களுக்கு உண்மை இன்னது போலி இன்னது சத்தியம் இன்னது பொய் இன்னது என்று உணரும் படி செய்யுங்கள். சுயமரியாதைக்கு உழைக்கும் உண்மைப் பத்திரிகைகளை எல்லாத் தமிழ் மக்களும் படிக்கும்படி செய்யுங்கள். இனி உறங்காதீர்கள்! பார்ப்பனர்களின் மதத்தின் மூலமாவது புராணங்கள் மூலமாகவாவது அதில் உழலும் பண்டிதர்கள் மூலமாகவாவது அரசியல் பார்ப்பனரல்லாதார்கள் மூலமாகவாவது தமிழ் மக்கள் தலை எடுக்கக் கூடும் என்றோ அல்லது சுய மரியாதை அடையகூடும் என்றோ நினைப்பதை அடியோடு மறந்து விடுங் கள், மறந்து விடுங்கள்.

**குடி அரசு – கட்டுரை – 19.02.1928**



RangaRakes tamilnavarasam.com

# சங்கீதமும் பார்ப்பனீயமும்

சென்னை சங்கீத மகாநாட்டில் பார்ப்பனரல்லாத சங்கீத வித்வான் ஸ்ரீமான் காஞ்சீபுரம் சி. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் விஷயத்தில் பார்ப்பனர்கள் எவ்வளவு நாணயக் குறைவாயும் குற்றமாயும் நடந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கும் நிரூபத்தால் அறியலாம். இவற்றை நமது பார்ப்பனரல்லாத பிரபுக்கள் சற்றும் லக்ஷியம் செய்யாமல் பார்ப்பனரல்லாத வித்வான்கள் எவ்வளவு பாண்டித்ய முடையவர்களாயிருந்தாலும் அதை லக்ஷியம் செய்யாமல் பார்ப்பனர்கள் என்கின்றதற்காகவே அவர்களை ஆதரிக்க முற்படுகிறார்கள். நமது நாட்டுப்பிரபுக்களின் முட்டாள்தனத்திற்கு இதைவிட வேறு ஆதாரம் வேண்டியதில்லை என்பதே நமது அபிப்பிராயம். அன்றியும் பார்ப்பன ரல்லாத வித்வான்களும் தங்கள் சுயமரியாதையைப் பற்றி ஒரு சிறிதும் கவலையில்லாமல் பார்ப்பன வித்வான்கள் என்பவர்கள் எவ்வளவு குறைவு படுத்தினாலும் லக்ஷியம் செய்யாமல் சுவாமிகளே ! என்று வாயைப் பொத்தி முதுகை வளைத்துக் காட்டிக் கொண்டு அவர்கள் பின் தொடருகின்றார்களே யொழிய மானத்துடன் வாழ ஒருப்படுவது அருமையாய் இருக்கின்றது. இவைகளை அனுசரித்தே ஒவ்வொரு ஊரிலும் பார்ப்பனரல்லாத சங்கீத சமாஜம் ஏற்படவேண்டும் என்றும் அங்கெல்லாம் பார்ப்பனரல்லாத வித்வான்களை ஆதரிக்க வேண்டுமென்றும் பலதடவைகள் சொல்லியும் எழுதியும் வந்திருக்கின்றோம். பெரும்பாலும் இதை உத்தேசித்தே கோவை யிலும் முதல் முதலாக ஒரு சங்கீதசபை ஏற்படுத்தியும் இருக்கின்றார்கள். மற்ற இடங்களும் இதை கவனித்து நடக்குமா?

**குடி அரசு – கட்டுரை – 19.02.1928**

# சூழ்ச்சியும் ஏமாற்றமும்

திருவண்ணாமலை கோயில் வழக்கு ஆர்கியுமெண்டிற்காக ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியார் வரப்போகிறார் என்று திருவண்ணாமலை பொது ஜனங்களும் முனிசிபாலிட்டியாரும் ஸ்ரீ முதலியாருக்கு பல வரவேற்பு களும் மீட்டிங்குகளும் ஏற்பாடு செய்திருந்தார்கள். இதைப் பொறுக்காத பார்ப்பனர்கள் இந்த பொதுஜனங்கள் ஏமாற்றமடையட்டும் என்கின்ற எண்ணத்தின் பேரிலும் ஸ்ரீ முதலியாருக்கு இவ்வளவு வரவேற்பா என் கின்ற பொறாமையின் பேரிலும் ஸ்ரீ முதலியார் அன்று திருவண்ணா மலைக்கு வராமல் இருக்கும்படி செய்யவேண்டுமெனக் கருதி, டிப்டி கலெக்டர் கச்சேரியில் கோயில் கேசை திருவண்ணாமலை மெஜிஸ்ட் றேட்டிடமிருந்து மாற்றவேண்டுமென்பதாக ஒரு விண்ணப்பம் போட்டு கேஸ் விசாரணையை நிறுத்தும்படி உத்திரவு வாங்கிவிட்டார்கள். நல்ல வேளையாய் இந்த உத்திரவு போய்ச் சேருவதற்கு முன்பாகவே ஸ்ரீமான்கள் ராமசாமி முதலியாரும் கண்ணப்பரும் புறப்பட்டு விட்டதால் கிரமப்படி எல்லா வரவேற்புகளும் மீட்டிங்குகளும் வெகு ஆடம்பரமாகவே நடந்து விட்டன. பார்ப்பனர்கள் தங்கள் சூழ்ச்சியின் பயனாய் எதிர்பார்த்த காரியம் ஏமாற்றமடைந்து விட்டதால் பிறகு மாற்று விண்ணப்பத்தைப் பற்றி கவலை எடுத்துக் கொள்ளவில்லை. ஏனெனில் மாற்றுவதற்கு போதுமான காரணம் இல்லையென்று தெரிந்தே விஷமஞ் செய்யக் கருதி டிப்டி கலெக்டர் பார்ப்பனராயிருப்பதால் உத்திரவு கிடைத்துவிடுமென்று நினைத்து போட்டார் களானதால் உத்திரவு கிடைத்தும் உத்தேசித்த காரியம் நிறைவேறாமற் போய்விட்டது.

மற்றபடி கேசின் ஆர்க்யுமெண்டு திருவண்ணாமலையிலேயே நடக்கும். ஸ்ரீமான் முதலியாரும் போவார் என்றே தெரிகின்றது.

**குடி அரசு – செய்திக் குறிப்பு – 19.02.1928**



RangaRakes tamilnavarasam.com

# அருப்புக் கோட்டையில் பார்ப்பனத் தொல்லை

அருப்புக் கோட்டையில் சில பார்ப்பனர்கள் தொல்லை விளை வித்து வருவதாக தெரிகின்றது. 7, 8 பார்ப்பனரல்லாத வாலிபர்கள் மீது போலீசார் நடவடிக்கை எடுத்துக் கொண்டதாகவும் அரஸ்ட் செய்து ஜெயி லில் வைத்து ஜாமீனில் விட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது. இதுவும் திருவண்ணாமலைக் கேசு போலவே இந்தக் கேசும் பார்ப்பனர்களிடம் நடக்கக் கூடாது என்று விண்ணப்பம் போட வேண்டிய நிலைக்கு வரும் போல் தெரிகின்றது. அந்த ஊரில் பார்ப்பனரல்லாத வக்கீல்கள் இல்லை யாதலால் மதுரையிலிருந்து யாராவது பார்ப்பனரல்லாத வக்கீல் போக வேண்டியிருப்பதையும் தெரிவித்துக் கொள்வதோடு இந்த கேசின் செலவுக் காக திருவண்ணாமலை கேசு செலவுக்கு பொதுஜனங்கள் உதவியது போலவே உதவ வேண்டும் என்று அப்பீல் செய்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - வேண்டுகோள் - 19.02.1928**



# இஸ்லாமிய ஊழியன்

ஒத்துழையாமைக் காலத்தில் இருமுறை சிறைசென்று பலவருஷம் சிறைவாசம் செய்த தேசபக்தர் திண்டுக்கல் ஜனாப் வி.கே. தங்கமீரான் சாயபு அவர்கள் "இஸ்லாமிய ஊழியன்" என்ற தமிழ் வாரப் பத்திரிகை யொன்று ஆரம்பிக்கப் போவதாய் நாம் தெரிவிக்கப்பட்டிருக்கிறபடியால் ஷை பத்திரி கையை நாம் ஆவலோடு எதிர்பார்ப்பதுடன் பொதுஜனங்கள் ஆதரவளிப் பார்கள் என்றும் நம்புகிறேன்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 19.02.1928**



RangaRakes tamilnavarasam.com

## இரங்கூன் தனவணிக வாலிபர் இரண்டாவது மகாநாடு

இம்மகாநாட்டின் வரவேற்புத் தலைவர் திருவாளர் இராமன் செட்டியார் அவர்களின் வரவேற்புப் பிரசங்கமும் தலைவர் திருவாளர் அ. வெ. தியாகராஜா அவர்கள் தலைமை முகவுரையும் வரப்பெற்றோம். அவைகளில் தனவணிகர்களுக்கான பல அரிய வுரைகள் மலிந்து கிடக்கின்றன. அவைகளில் சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம்.

"................................... இளம் கைம்பெண்களின் நிலை அந்தோ! அவர்களை மணப்பதற்கு முற்படுபவர்கள் நமது குலத்து வீரராவார்கள். இப் பாழும் குலத்தில் ஏன் பிறந்தோம் என்று நினைந்து நினைந்து அவர்கள் உள்ளங் குழையாமற் செய்வது உங்கள் கடன்".

".........மற்றொரு பெரும் பிரச்சினை மனைவியை வெளிநாட்டிற்கு உடனழைத்துச் செல்லல். மனைவியுடன் கூட வாழல் வேண்டுமென வாலிபர்களாகிய நீங்கள் கொண்டுள்ள பேரவா பளிங்குக்கற் போலத் தெளிவாய் விளங்குகிறது. அவ்வுணர்ச்சி இயற்கை உணர்ச்சி; தெய்வீக உணர்ச்சி; அதைக் குலைப்பது கொடுமை கொடுமை..........."

".............கேவலம் பொருளே நமது குறிக்கோளன்று. பொருள் பெருக்குவது மனைவி, மக்கள், சுற்றத்தார் நாட்டார் இன்புறுவதற்குத் தானே. பொருள் பெருக்குவதிலேயே நம்மவர்கள் தங்கள் காலமெல்லாம் போக்கின் மனைவி மக்களுடன் இல்லறம் நடத்தி இன்புறுவது எக்காலம்?"

".............தீண்டாமை இந்து மதத்தைத் தாழ்மைப்படுத்துவது. அதைச் சீக்கிரம் நாட்டைவிட்டுத் துரத்தல் வேண்டும். இந்து மதத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் கோவில்களிலும் பொதுவிடங்களிலும் சம உரிமையிருத்தல் வேண்டும். பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பித்தல் கூடாது."

".............தேடிச் சோறு நிதந் தின்று, பல சின்னஞ் சிறு கதைகள் பேசி, மனம் வாடித்துன்பமிக வுழன்று, பிறர் வாடப் பல செயல்கள் செய்து, நரைகூடிக் கிழப்பருவமெய்தி, கொடுங்கூற்றுக்கிரையெனப் பின் மாயும், பல வீண் மனிதர்களைப் போல் நீங்கள் வாழவிரும்புகின்றீர்களா? நீங்கள் உலகத்தில் வந்து போனதற்கு உங்கள் நாட்டுச் சரித்திரத்தில் சில முத்திரைகள் வைக்க விரும்புகிறீர்களா?"

இன்னும் கல்வி தொழில் முதலியவைகளை ஆதரித்தும், சுபாசுப காலங்களில் செய்யும் ஆடம்பரச் செலவுகளைக் கண்டித்தும் பல அரிய மொழிகள் மிளிர்கின்றன.

இவைகளைத் தனவணிகரேயன்றி நமது நாட்டார் அனைவருமே ஏற்று அதன்படி யொழுக வேண்டுமென்று நாமும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 19.02.1928**



RangaRakes
tamilnavarasam.com

# நம் நாட்டுக்கு வேண்டியது என்ன?

## அரசியல் திருத்தமா? சமூக திருத்தமா?

இந்த சமயம் தமிழ் மக்கள் மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியதும் கூர்மையாய் கவனித்து நடக்க வேண்டியதுமான நெருக்கடியான சமயம் என்பதை நாம் பல தடவை அடுத்து அடுத்து வெளியிட்டு வந்திருக்கிறோம். இம்மாதிரியான சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படாது. 10 வருஷங்களுக்கு ஒரு முறையோ 20 வருஷங்களுக்கு ஒரு முறையோதான் ஏற்படுகின்றது. அதை தக்க வழியில் உபயோகித்துக் கொள்ள முடியாமல் பார்ப்பனர்கள் கொடுமை செய்து வருவது ஒரு பக்கமிருந்தாலும் பார்ப்பனரல்லாதார்களில் அரசியல் பிழைப்புக்காரரும் கோடாரிக் காம்புகளும் முடத்தெங்குகளும் மற்றொரு பக்கமும் இருந்து கொண்டு நாடு முழுவதும் பாழாகும் வண்ணமும் சமூகம் முழுவதும் இழிவுபடும் வண்ணமும் துரோகச்செயல்கள் செய்து வருகின்றார்கள். ஆதலால் பார்ப்பனரல்லாத மக்கள் இதுசமயம் முக்கியமாய் விழித்திருக்க வேண்டியதாய் இருக்கின்றது.

நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆக வேண்டிய காரியங்களைப் பற்றி விசாரிப்பதற்கென்றோ எவ்வகை சீர்திருத்தம் வழங்க வேண்டுமென்பதை அறியவோ, இதுசமயம் ஒரு கமிஷன் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டு இருக்கிறது. இதை தக்க வழியில் உபயோகித்துக் கொள்ள வேண்டியது மக்களின் முக்கிய கடமை. எனவே இப்போது வந்திருக்கும் இந்த கமிஷனிடம் நமது நிலைமைகளையும் தேவைகளையும் சொல்லிக் கொள்வது எவ்வழியிலும் இழிவானதாகாது. ஆதலால் இப்போது நமது நிலை என்ன? நமக்கு இப்போது வேண்டியது என்ன? சுயமரியாதையும் ஒற்றுமையும் தரவல்ல சமூக சீர்திருத்தமா அல்லது நாட்டை இழிவுபடுத்தி பிரித்து வைக்கும் அரசியல் திருத்தமா என்பதுதான் முக்கியமான கேள்வி. அரசியல் சீர்திருத்தம் என்பது நமக்கு இரண்டு மூன்று தடவை வழங்கப்பட்டாய்விட்டது. அதனால் எதிர்பாராத பதவிகள் எல்லாம் நமக்கு கிடைத்திருக்கின்றது. மாதம் 5500 ரூ, 6500 ரூ, 7500ரூ. கிடைக்கும்படியான உத்தியோகங்கள் கிடைத்துவிட்டன. அதுவும் தெருவில் பிச்சை எடுத்தும், பஞ்சாங்கம் சொல்லி பணம் பறித்தும், முனிசிப்பாலிட்டி விளக்கு வெளிச்சத்தில் படித்தும் வந்தவர்களுக்கு உயர்தர நீதிபதி பதவியும் நிர்வாக பதவியும்



கிடைக்கத்தக்க சீர்திருத்தம் வழங்கப்பட்டு இருக்கின்றது. பிரபு பட்டமும் கவர்னர் பதவியும் கிடைத்திருக்கின்றது. இனி நமக்கு கிடைக்க வேண்டிய பதவி இன்னது பாக்கி இருக்கின்றது என்று சொல்ல மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அரசர் பதவியும் அரசு பிரதிநிதி பதவியும் சேனாதிபதி பதவியும்தான் இனி பாக்கி இருக்கின்றது என்பது நமது அபிப்பிராயம். ஆனாலும் இது வரை நமக்கு கிடைத்த மேல்கண்ட பதவிகளை நாம் உபயோகமற்றதென்று சொல்லித் தள்ளிவிடவும் இல்லை. ஒருவர் மேல் ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு அதை அடைய முயற் சிக்கின்றோமே யொழிய அடைந்து வருகின்றோமே ஒழிய, வேண்டா மென்று ஒருவரும் சொல்லவே இல்லை. அவைகளை எந்த அரசியல் இயக்கமும் தள்ளவும் இல்லை. இந்த நிலையில் நாடு என்ன முன்னேற்ற மடைந்திருக்கிறது என்று கேட்கின்றோம். ஒருசமயம், பதவியும் சம்பளமும் மாத்திரம் கிடைத்ததேயல்லாமல் அதற்கேற்ற அதிகாரம் கிடைக்கவில்லை என்று யாராவது சொல்லக் கூடுமா? நீதிபதி அதிகாரங்களில் நம்நாட்டு மக்களின் சகல சொத்துகளைப் பற்றியும் அவர்களது உயிரைப்பற்றியும் நீதி வழங்கத்தக்க அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கின்றோம். அது மாத்திரமல்ல. இந்த நீதியை மக்களுக்கு வாங்கிக் கொடுப்பதற்கு பாடுபடுகின்றவர்களுக்கும் *மீ* ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 50000 ரூபாய் 100000 ரூபாய் வரையிலும் கூட வரும்படி சம்பாதிக்கத்தக்க நீதி வழங்கும் முறைகளையும் நீதி அடையும் முறைகளையும் கொடுக்கப் பெற்றிருக்கின்றோம். அந்நீதிகள் இன்ன விதம் இருக்க வேண்டுமென்று சட்டம் ஏற்படுத்தும் பொறுப்பும் நமக்கே கொடுக்கப்பட்டிருப்பதைக் காட்ட சட்ட நிருமாண சபைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவைகளும் உபயோகமற்றவை யென்று யாராலும் வெறுத்துத் தள்ளிவிடப் படவும் இல்லை. இந்தியாவில் உள்ள எல்லா விதமான அரசியல் தலைவர்களும் இந்தச் சட்ட நிருபண சபைகளில் இன்றும் உட்கார்ந்து கொண்டு சட்டமியற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். அதுவும் தங்களது சொந்த ஓதாவில் அல்லாமல் சீர்திருத்தத்தின் மூலம் ஏற்பட்ட நியதிப்படி பொது ஜனங்களின் வாக்குப் பெற்று பொது ஜனங்களின் பிரதிநிதிகள் என்கின்ற முறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்க சபை தவிர மற்ற 7, 8 மாகாண சட்ட சபைகளிலும் இந்திய சட்டசபைகளிலும் ஜனப் பிரதிகளே அதிக எண்ணிக்கை இருக்கத்தக்க விதமாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் சர்க்காரை தோற்கடிக்கத்தக்க அதிகப்படிக்கான எண்ணிக்கையாகவே இருப்பதுடன் பல தடவை சர்க்கார் தோற்கடிக்கப்பட்டும் இருக்கிறது.

நீதி இலாக்கா, சட்டசபை இலாக்கா மாத்திரமில்லாமல் நிர்வாக இலாக்காவிலும் நமக்கு அதிக எண்ணிக்கை வழங்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக சென்னையை எடுத்துக் கொள்வோம். நிர்வாக சபையில் ஏழு மெம்பர்களும் ஒரு தலைவரும் இருப்பதாக வைத்துக் கொண்டால் அதில் ஐந்து பேர் இந்தியர்களாகவே இருக்கத்தக்க மாதிரி இருக்கின்றது.



RangaRakes tamilnavarasam.com

இந்த ஐவர்களிலும் மூன்று பேர் ஜனப் பிரதிநிதிகள் என்பவர்களின் நம்பிக்கையை பெற்றே இருக்கத்தக்க வண்ணம் அமைக்கப்பட்டிருக் கிறார்கள். மற்ற இருவர்களும் இந்தியப் பிரமுகர்களாகவே நியமிக்கப்படத் தக்கதாயிருக்கின்றது. அந்தப்படியே நியமிக்கப்பட்டும் வருகிறது. அந்தப்படி நியமனம் பெறுகின்றவர்களும் அற்பத்தனமாய் நடந்து கொள்வதற் கில்லாமலும் கண்ணியமாய் நடக்கத்தக்க மாதிரியாகவும் *மீ* 5550 ரூபாய் சம்பளமும் *மீ* சுமார் 1500 ரூபாய் படித்தரமும் பெறும்படியான சவுகரியங் களும் அமைக்கப்பட்டு இராஜபோகமும் கொடுக்கப்பட்டு அந்தப்படியே அடைந்தும் வருகின்றார்கள்.

இந்திய ஜனப் பிரதிநிதித்துவம் கொண்ட இவ்வளவும் அரசியல் ஸ்தாபனங்கள் என்பது மூலமாய் கேட்டுக் கொண்டதற்கு இணங்கியே அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்டதாக இருக்கின்றதேயல்லாமல் வேறல்ல. எனவே இவைகளினால் நாட்டிற்கோ நாட்டிலுள்ள பற்பல ஜனசமூகங் களுக்கோ ஏற்பட்ட நன்மைகள் என்ன? ஏழைகளுக்கு ஏற்பட்ட நன்மை கள் என்ன? விவசாயிகளுக்கு ஏற்பட்ட நன்மை என்ன? கூலிக்காரருக்கு ஏற்பட்ட நன்மை என்ன? வியாபாரிகளுக்கு ஏற்பட்ட நன்மை என்ன? தொழிலாளிக்கு ஏற்பட்ட நன்மை என்ன? என்று கேட்கின்றோம்.

ஏழைகளுக்கு ஏற்பட்ட நன்மையின் யோக்கியதைக்கு பிச்சைக்காரர் களின் தொல்லையும் ஒழுக்கக் குறைவுகள் அதிகப்படுவதும் போதிய சாக்ஷியாகாதா? என்று கேட்கின்றோம்.

விவசாயகாரர்களுக்கு ஏற்பட்ட நன்மையின் யோக்கியதைக்குப் பூமிகள் எல்லாம் ஒவ்வொரு தனி மனிதனுக்கே அதுவும் விவசாயம் செய்யத் தெரியாதவனுக்கே போய்ச் சேர்ந்து வருகின்றதும் விவசாயிகள் அவர் களுக்கு உழைத்துப் பட்டினி கிடப்பதும் போதிய சாக்ஷியாகாதா? என்று கேட்கின்றோம்.

கூலிக்காரர்களுக்கு ஏற்பட்ட நன்மையின் யோக்கியதைக்கு தூத்துக் குடி, மண்டபம், நாகப்பட்டணம், சென்னை, காகிநாடா முதலிய துறைமுகங் களில் தங்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் வாரம் ஒன்றுக்கு பதினா யிரக்கணக்கான மக்கள் கூலிக்காரர்களாக கப்பல் ஏறுகின்ற காக்ஷி போதாதா? என்று கேட்கின்றோம்.

தொழிலாளிகளுடைய நன்மையின் யோக்கியதைக்கு திடீர் திடீர் என்று ஆயிரக்கணக்காக பதினாயிரக்கணக்கான தொழிலாளர்களை முத லாளிமார்கள் வேலையிலிருந்து தள்ளுவதும் அவர்களது வேலைகளை இயந்திரங்களைக் கொண்டு சரி செய்து கொள்வதும் அத் தொழிலாளிகள் தெருத்தெருவாய் திண்டாடுவதும் *மீ* 100 ரூ. வரும்படி பெற்ற தொழிலாளி



கூலி போதாது என்று கேட்டதற்கு நீக்கப்பட்ட நிமித்தம் ஒற்றை மாட்டு வண்டி ஓட்டுவதும், பால் கறந்து விற்பதுமான வேலையில்கூட ஜீவனம் செய்ய முடியாமல் திண்டாடுவதுமான நிலைமை போதாதா? என்று கேட்கின்றோம்.

மற்றபடி நாடு முன்னேற்ற மடைந்தது என்பதற்கு சாக்ஷியாக மக்களின் அரசாங்க நிர்வாகச் செலவுக்காக வரி வசூலிப்பது வருஷத்திற்கு வருஷம் விஷம் ஏறுவது போல வருஷம் ஒன்றுக்கு 40 கோடியிலிருந்து 165 கோடி ரூபாயாக உயர்த்தியிருப்பதும், நாட்டிலிருந்து வியாபாரத்தின் மூலம் வருஷத்திற்கு வருஷம் மேல்கண்டபடியே கோடிக்கணக்கான ரூபாய்கள் உயர்ந்து கொண்டே வெளிநாடுகளுக்கு போய்க் கொண்டு இருப்பதும் எங்குப் பார்த்தாலும் படித்த மக்கள் முதற் கொண்டு வேலை யில்லாமல் திண்டாடுவதும் போதாதா? என்று கேட்கின்றோம்.

வியாபாரிகள் நிலைக்கு சாக்ஷியாக நாணய மாற்றுதல் மூலமாகவும் வருமான வரி மூலமாகவும் பத்து லட்சக் கணக்கான ரூபாய்களுக்கு வரு ஷா வருஷம் நூற்றுக் கணக்கான பெரிய பெரிய வியாபாரிகளும் இயந்திர சாலை களும் தீபாவளி ஆகிவருவது போதாதா என்று கேட்கின்றோம்.

நாடு ஒழுக்கத்தில் முன்னேறியிருக்கின்றது என்கின்ற யோக்கி யதைக்கு சாக்ஷியாக கோர்ட்டுகளும் நியாயாதிபதிகளும் நியாயவாதிகளும் காவலாளிகளும் நிர்வாக ஸ்தாபனங்களும் ஜெயில்களும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போவது போதாதா? என்று கேட்கின்றோம்.

சமூக ஒற்றுமையின் யோக்கியதைக்கு சாக்ஷியாக நாளுக்கு நாள் இந்து முஸ்லீம் கலவரங்களும், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் விவாதங் களும், கீழ் ஜாதி மேல் ஜாதி தொல்லைகளும் புதிய புதிய வகுப்பு உரிமை களும் வளர்ந்து கொண்டு போவதும் போதாதா? என்று கேட்கின்றோம்.

நாடு அரசியல் அறிவு பெற்றிருக்கும் யோக்கியதையை அறிய சாக்ஷி யாக எலக்ஷன் கஷ்டங்களும் விவகாரங்களும் வேற்றுமை விரோதங்களும் போதாதா? என்று கேட்கின்றோம்.

சமூக முன்னேற்றமடைந்திருப்பது என்பதின் யோக்கியதையை அறிய கேவலம் மனிதனுக்கு மனிதன் தொட்டால் பாவம், பார்த்தால் பாவம் என்பதை ஒழிப்பதில் உள்ள கஷ்டங்களும் காங்கிரசில் இருந்த தீண்டாமைத் திட்டமும் மனித சமத்துவத் திட்டமும் எடுத்தெறியப்பட்டிருப்பதும் வீதியில் நடப்பதற்கும் பள்ளியில் படிப்பதற்கும் கிணற்றில் தண்ணீர் மொண்டு குடிப்பதற்கும் நம்மால் ஒப்புக் கொள்ளப்படாமல் சர்க்கார் கோர்ட்டுகளில் நீதி பெற வேண்டியிருப்பதும் பல சந்தர்ப்பங்களில் அங்கும் இந்திய



RangaRakes
tamilnavarasam.com

அதிகாரிகளாலேயே இவைகள் மறுக்கப்படுவதும் வருணாசிரம மகாநாடுகள் நடப்பதும் வகுப்பு மகாநாடுகள் பெருகிக் கொண்டு போகவேண்டிய அவசிய மேற்படுவதும் போதாதா? என்று கேட்கின்றோம்.

நாட்டின் பொது நாகரீக முன்னேற்றத்தின் யோக்கியதையைப்பற்றி அறிவதற்கு சாட்சியாக மிஸ்.மேயோ போன்ற நூற்றுக்கணக்கான பேர்கள் எழுதி இருக்கும் புஸ்தகங்களும் அதை நாடக ரூபமாக அன்னிய நாடுகளில் நடத்திக் காண்பிக்கப்படுவதும், இன்னும் பலர் இப்போதும் அம் மாதிரி விஷயங்களில் பிரவேசித்து புஸ்தகமெழுதி பணம் சம்பாதிப்பதும், இவ்வளவுமல்லாமல் மதத்தின் பேரால், கோயில்களின் பேரால், சுவாமிகளின் பேரால் விபசாரப் பெண்கள் உற்பத்தியையாவது தடுக்க வேண்டும் என்கின்ற நிபந்தனை கொண்ட சட்டம் செய்வதில் மதத்திற்கு ஆபத்து வந்துவிடும் என்று மதத் தலைவர்களும் உயர்ந்த ஜாதியார் என்பவர்களும், வாதாடுவதும் அறியாக் குழந்தைகளை பொம்மைக் கல்யாணம் செய்து பெண்ஜாதி புருஷர்களாக்கி வீட்டிற்குள் தள்ளக் கூடாது என்பதாக சட்டம் ஏற்படுத்த பெண்மணிகள் முயற்சித்தால் அதையும் மதத் தலைவர்களும், உயர்ந்த ஜாதியார் என்பவர்களும், அரசியல் தலைவர்களும் மதத்தின் பேராலும் தேசத்தின் பேராலும் தடுப்பதும், மற்றும் ஒருவரை ஒருவர் தொடுவது பாவம் என்றும் ஒருவர் தொட்ட தண்ணீர் சாப்பிட்டால் நரகம் கிடைக்குமென்றும், ஒருவர் தொழும் இடத்தில் மற்றொருவர் தொழுதால் கடவுள் அருள் போய்விடும் என்றும், ஒருவர் குளிக்கும் இடத்தில் மற்றொருவர் குளித்தால் நதியோ குளமோ கெட்டுப் போகும் என்றும் மதத்தின் பேராலும் கடவுள்கள் பேராலும் நிர்பந்தப்படுத்தி வருவதும் போதாதா? என்று கேட்கின்றோம். அன்றியும் இவைகள் முழுவதும் ஒழிய வேண்டும் என்று யாராவது முயற்சித்தால் அதற்கு "நாஸ்திகம்" என்றும் "தேசத் துரோக"மென்றும் பெயர் கொடுத்து அம்முயற்சிகளை ஒழிக்கமுற்படுவதும் போதாதா? என்று கேட்கின்றோம்.

எனவே அரசியல் சீர்திருத்தத்தால் இந்தியர் இந்திய மக்கள் அடைந்திருக்கும் நன்மைக்கு மேல் கண்டவைகளைவிட இனியும் வேறு என்ன உதாரணங்கள் வேண்டும் என்று கேட்கின்றோம். ஆதலால் இனியும் அதிகமான அரசியல் சீர்திருத்தம் கிடைத்தால் இந்தியாவுக்கு என்ன பலனைக் கொடுக்கக்கூடும், இந்தியா என்ன கதியை அடையக் கூடும், என்பவைகளை யோசித்துப் பார்த்தால் உண்மையான இந்தியனுக்கு இப் போது என்ன வேண்டும்? அதாவது அரசியல் திருத்தமா? சமூக திருத்தமா? என்பது புலனாகாமல் போகாது என்று சொல்லுவோம். எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசியல் திருத்தத்தால் நமது நாடு முன்னேற முடியவே முடியாது என்பது இதுவரையில் கிடைத்த அனுபவத்தினாலேயே தெரிந்து கொண்டோம். அன்றியும் எந்நாடும் முதலில் சமூக சீர்திருத்தமும் சமூக



ஒற்றுமையும் பெறாமல் அரசியல் சுதந்திரம் பெற்றதாக யாரும் கூற முடியாது.

தேசீயம் என்பது வேறு அரசியல் என்பது வேறு என்பதை முதலில் உணர்ந்து கொள்ளவேண்டும். தேசீயம் என்பது தேச மக்களின் சுயமரியாதை முன்னேற்றத்தைப் பொறுத்தது. அதை பலர் தப்பாக அர்த்தம் செய்து காட்டி பாமர மக்களை ஏமாற்றி உயிர் வாழ்கிறார்கள். அரசியல் என்பது யார் நம்மை ஆள்வது என்கின்ற விஷயமல்ல. நமது மக்களுக்கு எம்மாதிரி அரசியல் முறை இருக்க வேண்டும் என்பதுதான் நமது அரசியல் விஷயமாகும். இப்போதைய அரசியல்வாதிகள் எல்லாம் தங்கள் தங்கள் தனி ஆதிக்கத் திற்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் ஏற்ற முறைகளை வகுக்கின்றார்களே யொழிய தேசத்திற்கும் தேசத்திலுள்ள பெரும்பான்மை மக்களுக்கும் ஏற்ற முறைகளை வகுப்பதே இல்லை. அந்தப்படி வகுத்தால் அரசியலில் பிழைப்பவர்களுக்கு பிழைப்பு போய்விடும். ஏனென்றால் நமது நாட்டில் யோக்கியமான பிழைப்புகள் மறைந்து விட்டதினால் அநேகருக்கு அரசியல் வயிற்றுப் பிழைப்பாய் போய்விட்டது. அதிலும் தேசத்தைக் காட்டிக் கொடுத்தும் தேசமக்களின் சுயமரியாதையை விற்றும் பிழைக்க வேண்டிய நிலையில் அரசியல் பிழைப்பு அமைக்கப்பட்டுவிட்டது. ஆதலால் இப் போதைய அரசியல் இயக்கங்களாலும் இப்போதைய அரசியல் பிழைப்புக் காரர்களாலும் ஏற்படும் அரசியல் சீர்திருத்தத்தால் இந்திய நாடு ஒரு நாளும் முன்னேற்றமடைய முடியவே முடியாது என்று உறுதியாய்ச் சொல்லுவோம். போதிய பலனளித்தாலும் பலனளிக்காவிட்டாலும் சமூக சீர்திருத்தமே இப்போது வேண்டற்பாலது. சமூக சீர்திருத்தம் இல்லாத காரணமே இந்திய மக்கள் பல மதங்களாகப் பிரியவும் அவற்றுள் உயர்வு தாழ்வு, உள் சண்டைகள் ஏற்படவும், பல ஜாதிப்பிரிவுகள் உண்டாகவும், அவற்றுள் உயர்வு தாழ்வுச் சண்டைகள் ஏற்படவும், இதன் பலனால் மக்கள் நிரந்தரமாய் ஒற்றுமைப்பட மார்க்கமில்லாமல் வேற்றுமைப்பட்டு பிரிந்து நிற்கவுமான நிலை ஏற்பட்டு இருக்கின்றது. இதை யாரும் மறைக்க முடியாது. இவற்றை உணர்ந்தே அனேக பெரியோர்கள் சமூக சீர்திருத்தத்திலேயே உழைத்து வந்திருக்கிறார்கள். தற்காலம் நமது சமூக நிலையின் பலன்தான் அரசியல் கொடுமைகளேயல்லாமல் வேறல்ல. அரசியல் சீர்தி ருத்தம் வந்த பிறகு சமூக சீர்திருத்தம் ஏற்பட்டு விடும் என்று சொல்பவர்கள் எல்லாம் முதல் நெம்பர் அயோக்கியர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. ஏதாவது ஒன்று இரண்டு யோக்கியர்கள் என்போர்களும் அதில் கலந்திருக்கின்றார்கள் என்று யாரா வது சொல்ல வருவார்களானால் அப்படி கலந்திருப்பவர்கள் அயோக்கியர் களாயில்லாவிட்டாலும் முட்டாள்களாகவாவது கண்டிப்பாய் இருந்து தான் ஆகவேண்டும் என்று உறுதி கூறுவோம்.

சுவாமி விவேகானந்தருடைய வாக்கைப் பாருங்கள். ஸ்ரீ மான் காந்தி யின் முந்திய வாக்குகளைப் பாருங்கள். அப்படிப் பார்ப்பீர்களானால் இந்திய நாட்டின் நன்மையைப்பற்றி இவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பது உங்களுக்கு நன்றாய் விளங்கும்.



RangaRakes tamilnavarasam.com

எனவே இதுசமயம் நமது நாட்டிற்கு வந்துள்ள ராயல் கமிஷனை சமூக சீர்திருத்தத்திற்காகவே நாம் உபயோகித்துக் கொள்ள வேண்டும். பகிஷ்காரமானாலும், வரவேற்பானாலும், சமூக சீர்திருத்தத்திற்கும் சுய மரியாதைக்குமே நடத்த வேண்டும். எம்மை சர். ஜான் சைமன் கூப்பிட்டு உமக்கு அரசப் பிரதிநிதி பட்டம் வேண்டுமா? சூத்திரன் என்கின்ற பட்டம் நீங்க வேண்டுமா? என்று கேட்டால் சூத்திரன் என்கின்ற பட்டம் நீங்க வேண்டும் என்றுதான் சொல்லுவோம். ஏனென்றால் நமக்கு கவர்னர் பதவியும் சட்ட மெம்பர் பதவியும் மந்திரி பதவியும் கிடைத்தும் இந்தப்பதவி பெற்றவர்களாலாவது ஜனப்பிரதிநிதிகள் சபைகளிலாவது நம்மை சூத்திரன் என்று அழைக்கும் தன்மை மாறவில்லை என்பதை உத்தேசித்துத்தான். பறையர் என்று இழிவாக பேசப்படும் குலத்தில் உதித்தவர் என்று சொல்லப் படும் ஸ்ரீமான் எம்.சி. ராஜாவுக்கு இந்திய சட்ட சபையில் உட்காரும் யோக் கியதை கிடைத்தும் தெருவில் நடக்கும் உரிமையும் சுவாமியைப் பார்த்து கும் பிடும் உரிமையும் கிடைக்கவில்லை, குளத்தில் தண்ணீர் குடிக்கும் உரிமையும் கிடைக்கவில்லை.

இனி எந்த அரசியல் பதவியும் பட்டமும் அதிகாரமும் கிடைத்தால் நாம் சூத்திரனாகாமல் மனிதனாயிருக்கக் கூடும். ஸ்ரீ எம்.சி. ராஜா குளத்தில் தண்ணீர் குடிக்கக் கூடும் என்பதை யோசித்துப் பாருங்கள். ‘சுயராஜ்யம் கிடைத்தால் எல்லாம் சரியாய் போய்விடும்’ என்கின்ற பித்தலாட்டக் காரர்களை நம்புபவர்களுக்கு ஒரு வார்த்தை. அதென்னவென்றால் இந்தியா சுயராஜ்யமடைந்திருந்த காலத்தில்தான் ராமராஜியத்தில் தான் மனு அதர்ம சாஸ்திரம் உண்டானது. அது ஆட்சியிலும் இருந்தது. நமக்கு சூத்திரப்பட்ட மும் சண்டாளப் பட்டமும் கிடைத்து. தெருவில் நடக்க உரிமை கேட்டவர் களை கழுவில் ஏற்றினது வேதத்தையும் நீதியையும் படித்தால் நாக்கை அறுக்கவும், கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவும், பார்த்தால் கண்ணை குத்துவதுமான சட்டம் அமுலிலிருந்து வந்தது. இப்போது இந்திய அரசர்கள் ஆளும் ராஜ்யங்கள் அதாவது மைசூர் திருவாங்கூர் கொச்சி முதலிய தேசங்களில் தான் மனு அதர்மம் தாண்டவமாடுகின்றது. ஆதலால் நமக்கு வேண்டியது. சமூக முன்னேற்றம், சுயமரியாதை. இதை அடையாமல் ராயல் கமிஷன் மாத்திரமல்ல மற்றும் நரகத்தில் இருப்பது என்பதையும் உப யோகித்து கொள்ள வேண்டியது மக்கள் கடமை. எனவே சுயநலக்காரர்கள் வார்த்தையையும் புரட்டர்கள் வார்த்தையையும் நம்பி ஏமாந்துவிடக்கூடாது என்று எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 26.02.1928**



# இந்திய சட்டசபை முடிவு

இந்திய மக்களுக்கு காங்கிரசு எவ்வளவு தூரம் பிரதிநிதித்துவம் உடையது என்பதைப் பற்றியும், சட்டசபைகள் எவ்வளவு தூரம் பிரதி நிதித்துவம் உடையது என்பதை பற்றியும், இவைகளில் உள்ள தலைவர்கள் என்போர்களும் அங்கத்தவர்கள் என்போர்களும் எவ்வளவு தூரம் பிரதி நிதித்துவம் உடையவர்கள் என்பதைப் பற்றியும் நாம் பொது மக்களுக்கு அதிகமாய் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

சாதாரணமாக காங்கிரசு என்பது பார்ப்பனர்களுடையவும் படித்த சிலருடையவும் நன்மைக்காக, அதாவது, உத்தியோகமும், பிழைப்பும் பெறுவதற்காக ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சங்கம் என்பதாக நாம் பல நாளாக சொல்லிக் கொண்டே வந்திருக்கிறோம். அதுபோலவே சட்டசபை முதலியவைகளில் அங்கம் பெறவும் அது சம்மந்தமான தேர்தல்களில் ஏழைகளை, பாமர மக்களை நாணயக் குறைவான காரியங்களால் ஏமாற்றி சுயநலத்திற்காக ஸ்தானம் பெறவும் ஆன ஸ்தாபனங்கள் என்றும் சொல்லி வந்திருக்கின்றோம். இவற்றை இதுவரையில் எவரும் மறுத்ததில்லை. ஸ்ரீமான் காந்தியும் இவைகளை ஒப்புக் கொண்டு பாமர மக்களுக்கு அறிவுவரும்வரை இப்படித்தான் ஏமாற்றப்பட்டு வரக்கூடும் என்று சொன்னாரேயல்லாமல் பாமர மக்களுக்கு அறிவு உண்டாக்கும் விஷயத்தில் ஒரு சிறிது முயற்சியும் எடுத்துக் கொண்டவரல்ல. எனவே மகாத்மா என்றவர்களெல்லாம் பாமர மக்களின் அறிவில்லாத தன்மையை உபயோகித்துக் கொள்ளாமல் இருக்க முடியாமலும் பாமர மக்களுக்கு அறிவு வரும் மார்க்கத்தைச் செய்ய முடியாமலும் தலைவர்களாக இருந்து வரும்போது மற்றவர்களைப்பற்றி நாம் சொல்லுவது வீண் வேலையாகும்.

தேசீயத் தலைவர்கள் என்கின்ற முறையில் இந்தியாவுக்கு சுயராஜ்யத் திட்டம் வகுக்க அநேக கூட்டங்கள் கூட்டியாகிவிட்டது. அதிலும் இந்தியா சுயராஜ்யத்திற்கு எவ்வளவு தூரம் அருகதை உடையது என்பதை அறிவதற் காக பார்லிமெண்டாரால் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கும் சமயத்தில் இந்தியாவுக்கு வேண்டியதை அதனிடம் தெரிவித்துக் கொள்வது இந்தியாவின் சுயமரியாதைக்கு அழகல்ல என்று சொல்லிக் கொண்டு தாங்களாக பல பல திட்டம் போட்டுக் கொண்டு வருகிறார்கள். எனவே,



RangaRakes tamilnavarasam.com

இவர்கள் இந்தத் திட்டத்தை என்ன செய்யப் போகிறார்கள்? என்பதை சற்று யோசித்தால் இதன்புரட்டு இன்னது என்பது மக்களுக்கு விளங்காமல் போகாது.

இவர்கள் போடும் திட்டம் காங்கிரஸ் மூலமோ, சட்டசபைகள் மூலமோ, அல்லது தனித்தனி நபர்களின் சொந்த ஓதாவின் மூலமோ, அல்லது சர்வ கட்சி மகாநாடு என்பதன் மூலமோ, பார்லிமெண்டுக்கு அனுப்பியோ அல்லது அறிவித்தோ தான் அதன் பலன்களை எதிர்பார்க்க வேண்டு மேயல்லாமல் திட்டம் போட்ட ஸ்தாபனங்களோ திட்டம் போட்ட ஆசாமி களோ "இனிமேல் இந்தப்படியே ராஜரீகம் நடைபெற்று வரத்தக்கது" என்று வெளிப்படுத்தி விட்டால் அந்தப்படி அனுபவத்தில் நடக்கப் பெற்றுவிடுமா என்று கேட்கின்றோம்.

'சொன்னதைச் சொல்லுமாங் கிளிப்பிள்ளை' என்பது போல் சுய அறிவு இல்லாதவர்களும் அரசியல் பிழைப்புக்காரரும் ஏமாற்றி வாழும் சில மக்களும் சேர்ந்து கொண்டு 'கமிஷன் பஹிஷ்காரம்' 'கமிஷன் பஹிஷ்காரம்' என்று கத்துவதால் எல்லா காரியமும் சரிப்பட்டுப் போகுமா? என்று கேட்கின்றோம் சர்வ கட்சி மகாநாட்டின் பேரால் சீர்திருத்த திட்டம் என்பதாக ஸ்ரீமான்கள் சாப்புரூ. மாளவியா, சீனிவாசய்யங்கார் முதலியவர் கள் சில திட்டங்களை தனித்தனியாய் பத்திரிகைகளில் வெளியிட்டிருக் கிறார்கள். அதிலுள்ள முக்கிய விஷயமும் ஒற்றுமையான விஷயமும் ஒன்றே ஒன்றுதான். அது என்னவென்றால் மகமதியர்களுக்கு தனித் தொகுதி அதாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கக் கூடாது என்பதுதான். இந்த திட்டம் குறிப்பிட்ட தலைவர்கள் என்பவர்கள் மூவரும் பார்ப்பனர்கள். இவர்களுக்கு இப்போது உள்ள கவலையெல்லாம் வகுப்புவாரி பிரதிநிதித்து வம் கொடுக்கக் கூடாது என்பதும் முகமதியர்களுக்கு வழங்கப்பட்டிருப் பதையும் பிடுங்கிக் கொள்ளல் வேண்டும் என்பதுமே தவிர வேறில்லை. இதற்காக இதுவரை சுமார் நூற்றுக்கணக்காக இந்து முஸ்லீம் ஒற்றுமை மகா நாடும், சர்வ கட்சி மகாநாடும், ஒழுங்குத் திட்டங்களும் போட்டாய்விட்டது. ஒன்றும் பலித்தபாடில்லை. சர்வகட்சி மகாநாட்டிற்குச் சென்றிருந்த ஸ்ரீமான் ராமசாமி முதலியாரால் ஒரு காரியமும் செய்ய முடியாமல் போனாலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் (தனித்தொகுதி தேர்தல்) அவசியம் இருக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. யார் சொன் னாலும் லக்ஷியம் செய்யாமல் எல்லோரையும் லஞ்சம் கொடுத்தாவது ஏமாற்றி வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஒழிக்க வேண்டியதைத் தவிர பார்ப் பனர்களுக்கு வேறு கதியில்லை. சைமன் கமிஷன் பஹிஷ்காரத்தின் தத்துவமே இதுதான். தவிர ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் தனித்திட்டத்தில் மற்றொரு விசேஷம் இப்போது புதிதாகக் காணப்படுகின்றது. அதாவது மாகாண நிர்வாகங்களைப்பற்றிய முழு அதிகாரமும் இந்திய சட்டசபைக் குத்தான் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அநேகம் பேர் அநேக நாளாக ஸ்ரீ சீ. ஆர். தாஸ் முதற்கொண்டு மாகாண சுய ஆக்ஷி (புரொவன்ஷியல் அட்டானமி) கொடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்க பல அரசியல் மகாநாடுகளும் தீர்மானித் திருக்க இப்போது ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் மாகாண நிர்வாக அதிகாரம் இந்திய சட்டசபைக்கு இருக்க வேண்டும் என்று சொல்ல வேண்டிய அவசியமென்ன என்பதைப்பற்றியும் அதுவும் இந்தியாவுக்கு அரசியல் விசாரணைக் கமிஷன் வந்திருக்கும் சமயம் இப்படிச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்பதைப்பற்றியும் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

என்னவென்றால் சென்னை மாகாணத்தில் உள்ள மக்களைப்பற்றி பார்ப்பனர்களுக்கு இருந்த நம்பிக்கை போய்விட்டது. சென்னை மாகாண பார்ப்பனரல்லாத மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி பரவத்தக்க வேலைகள் நடந்து வருகின்றது. வயிற்றுச் சோற்று தேசபக்தர்களாக இருக்கும் இரண் டொருவரைத்தவிர மற்றவர்களை இனி ஏய்க்க முடியாது என்கின்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. பார்ப்பனருடன் இருந்து வந்த பார்ப்பனரல் லாதார் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் உணர்ந்து, ஸ்ரீமான்கள் வரதராஜுலு, கந்தசாமி செட்டியார், குழந்தை, குப்புசாமி முதலியார், அண்ணாமலை முதலியார், ஷாபிமுகமது சாயபு போன்ற சில நிர்ப்பந்தமுடைய ஆசாமிகள் தவிர மற்றவர்கள் எல்லாம் அவர்களைவிட்டு வெளிபட்டு விட்டார்கள். இந்தக் கனவான்கள் தங்களுடன் இருப்பதாலும் தங்களுக்கு ஒரு நன்மையும் உண்டாவதாக தெரிவதில்லை அன்றியும் சென்னை மாகாணமானது ஆந்திர மாகாணம், தமிழ் மாகாணம் என இரண்டு பிரிவாய் பிரிக்கப்பட போவதாக வும் அவர்களுக்குத் தெரியவருவதால் சுத்த சுத்தமாக நம்பிக்கை போய் விட்டது. ஆதலால் தமிழ்நாட்டு நிர்வாக அதிகாரம் மாகாண சட்டசபையில் இருக்க கூடாதென்றும் இந்திய சட்டசபைக்கு இருக்கவேண்டுமென்றும் சொல்ல வேண்டிய நிலைக்கு பார்ப்பனர்கள் வந்து விட்டார்கள். இதிலி ருந்தே இந்திய சட்ட சபை பார்ப்பன ஆதிக்கத்திற்குத் தக்கதாயிருக்கின்றது என்பது நன்கு விளங்க வில்லையா? என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது.

தவிரவும் இந்திய சட்டசபையில் இது சமயம் தமிழ்நாட்டு பிரதி நிதிகளாய் உள்ளவர்கள் யார் என்பதைப் பார்த்தால் ஸ்ரீமான். ஆர்.கே. ஷண்முகம் செட்டியாரைத் தவிர எல்லோரும் அய்யங்கார்கள் ஸ்ரீமான்கள் ஏ. ரங்கசாமி அய்யங்கார், எம்.கே. ஆச்சாரியார், சீனிவாசய்யங்கார், துரைசாமி அய்யங்கார், சேஷய்யங்கார் ஆகிய அய்யங்கார் 'சுவாமி'களாகவே இருக் கிறார்கள். ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் பார்ப்பனர் கூட இருந்து


RangaRakes tamilnavarasam.com

கோவிந்தா போட்டதால் தான் அங்கு போக முடிந்தது. இந்த பிரபுக்கள் உள்ள கூட்டத்தில் சைமன் கமிஷனைப் பகிஷ்கரித்து தீர்மானம் செய்வது அதிசயமல்ல. ஸ்ரீமான் எம்.சி. ராஜா அங்கிருக்க நேர்ந்ததும் உள்ள நிலையை எடுத்துச் சொல்ல இடம் கிடைத்ததும் பார்ப்பனதாசராய் இல்லாமல் சர்க்கார் தயவு பெற்றதால்தான். அப்படி இருந்தும் அவர் தனது சமூகத்தைப்பற்றி கொஞ்சம் பேச ஆரம்பித்த உடனே "ஸ்ரீமான் எம்.சி.ராஜா எங்கள் பிரதிநிதி அல்ல" என்று சில வரதராஜுலுக்களையும் சாம்பசிவங்களையும் பிடித்து தந்தி தருவித்து விளம்பரம் செய்துவிட்டார்கள். ஆதலால் இப்போது நமது பார்ப்பனர்களுக்கு இந்திய சட்டசபைதான் பிரதிநிதித்துவ முடையதாகி விட்டது. அங்குதான் தமிழ் நாட்டைப்பற்றி அறியாத ஆசாமிகள் கூட்டம் கூடும். அங்கு என்ன வேண்டுமானாலும் பொய்யும் புளுகும் வண்டி வண்டியாய் அளக்கலாம் என்கின்ற தைரியம் இருக்கிறது. இந்திய சட்ட சபையில் உள்ளவர்களுக்கு தமிழ்நாட்டைப் பற்றித் தெரியாது என்பதற்கும் தெரிந்திருந்தாலும் அவர்கள் பார்ப்பனர்கள் சொல்வதையே 'ஆமாசாமி' போடுகிறவர்கள் என்பதற்கும் ஒரு சிறு உதாரணம் காட்டுகின்றோம்.

சென்ற காங்கிரசின்போது, சென்னைக்கு வந்திருந்த பல வெளி மாகாண பிரமுகர்கள் என்பவர்களில் ஸ்ரீமான் கோஸ்வாமி என்பவரும் ஒருவராவார். அவருக்கு தமிழ்நாட்டு நிலையைப்பற்றி எடுத்துச் சொல்லலாம் என்பதாக ஒரு சிறு விருந்து வைத்து அதில் எல்லா சங்கதியும் எடுத்துச் சொல்லப்பட்டது. அந்தச் சமயம் ஸ்ரீமான் கோஸ்வாமி தமிழ்நாட்டில் தொடக் கூடாத ஜாதி, பார்க்கக் கூடாத ஜாதி, தெருவில் நடக்கக் கூடாத ஜாதி இருப்ப தாகத் தனக்குத் தெரியாது என்றும் தனது நாடாகிய வங்காளத்தில் ஜாதி வித்தியாசம் இருந்தாலும் இம்மாதிரி தொடக்கூடாத ஜாதி முதலியவை கள் இல்லையென்றும் சொன்னார். அதற்காகவே இங்கு சுயமரியாதை சங்கம் முதலியவைகள் ஏற்படுத்தி இருப்பதாகவும் அது மும்முரமாக வேலை நடக் கின்றது என்றும் இன்னின்னார் அதில் முக்கியமாய் உழைக்கின்றார்கள் என்றும் எடுத்துச் சொல்லப்பட்டது; அந்த சமயம் நன்றாய் குறிப்பாய் கேட்டுக் கொண்டுமிருந்தார்.

இப்படி இருக்க சமீபத்தில் கமிஷன் விஷயமாய் இந்திய சட்டசபை யில் பேச நேர்ந்த இதே ஸ்ரீமான் கோஸ்வாமி சென்னையில் புதுப்புதுச் சங்கங்கள் தோன்றி இருக்கிறது. சுயமரியாதை சங்கம் கூட தோன்றியிருக் கின்றது என்று பரிகாசமாய் பேசி இருக்கிறார் எனவே அங்குள்ள ஆட் களுக்கு தமிழ்நாட்டைப் பற்றி எவ்வளவு கவலை இருக்கும் என்பதும் அவர்கள் எப்படி நடந்து கொள்ளக் கூடும் என்பதையும் இதன் மூலமாகவே தெரிந்து கொள்ளலாம்.



தமிழ்நாட்டுக்காகவும் தமிழ்மக்களுக்காகவும் பாடுபடும் பெரியோர் களும் தொண்டர்களும் இவற்றை உத்தேசித்தே இந்திய பொது ஸ்தாப னங்களால் ஒரு நன்மையும் விளையாதெனக் கருதியே தனி ஸ்தாபனங்கள் மூலமாகவே வேலை செய்து வந்திருக்கிறார்கள். இதனாலேயே தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள் இம்மாதிரி ஸ்தாபனங்களை அழிக்கப் பலப் பல சமயங்களில் ஸ்ரீமான்கள் வரதராஜுலு, கந்தசாமி செட்டியார், குப்புசாமி முதலியார் போன்றவர்களை கையில் போட்டுக் கொண்டு முயற்சி செய்தும் வருகிறார்கள். இம்மாதிரி நிலையில் தமிழ் மக்கள் இனியும் உறங்கிக் கொண்டிருப்பது பெருத்த ஆபத்துக்கிடமானதாகும் அடுத்த தேர்தலிலாவது இந்திய சட்டசபை தேர்தலுக்கு பார்ப்பனர்களை விடாமலும் பார்ப்பன அடிமைகளை விடாமலும் விரட்டி அடிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். தமிழ் மக்கள் சுயமரியாதை அடைய வேண்டிய விஷயத்தில் பார்ப்பன தாசர்களாயிருந்து தேசத்திற்கும், சமூகத்திற்கும் துரோகம் செய்வதை விட சர்க்கார் தாசர்களாகவாவது இருந்து ஸ்ரீ மான் எம்.சி. ராஜாவைப் போல் நமது சமூக இழிவை நீக்க முயற்சிப்பது ஆண்மைத்தனமும் யோக்கியப் பொறுப்பு முடையதாகும்.

ஆதலால் இனிவரும் இந்திய சட்டசபை தேர்தல்களில் பார்ப்பன ஆதிக்கத்திற்கு இடம் கொடுத்து விடக்கூடாது என்று எச்சரிக்கை செய் கின்றோம்.

**குடி அரசு – கட்டுரை – 26.02.1928**



RangaRakes tamilnavarasam.com

## சிதம்பரத்தில் சுயமரியாதைப் பிரசாரம்

எனக்கு முன் பேசிய மூன்று கனவான்களும் பேசியவற்றிற்குப் பின் நான் சில விஷயம் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அதாவது முதலில் பேசியவர், தலைவர்கள் அடிக்கடி மாறுவதால் சுயராஜ்யம் தூரமாகி விடுகின்றது என்று சொன்னார்கள். நான் தலைவனல்ல ஒரு தொண்ட னாவேன். நான் எப்போதாவது மாறவும் இல்லை. பொது வாழ்வில் தொண்டு ஆரம்பித்த காலத்தில் நமது விடுதலைக்கு என்ன என்ன காரியங்கள் தடையாயிருக்கின்றது என்று சொன்னேனோ அதையேதான் இப்போதும் சொல்லுகிறேன். தீண்டாமையும் வருணாசிரம தர்மமும் ஒழிந்தாலல்லது நமக்கு விடுதலை இல்லை என்பது எனது உறுதி. அதற்காக இப்போதும் பாடுபடுகிறேன். காங்கிரசினால் தீண்டாமையும் வருணாசிரமும் ஒழியாது என்பது உறுதியாதலால் நான் அதை விட்டுவிட்டு அதற்காக தனியாய் பிரசாரம் செய்கின்றேன்.

ஸ்ரீமான் காந்தியை நான் மகாத்மா என்று கூப்பிடவில்லை என்கின் றார். ஸ்ரீமான் காந்தியை நான் மகாத்மா என்று கூப்பிட்ட காலத்தில் எனக்கு அவரிடம் இருந்த மதிப்பு இப்போது இல்லை. என்னவென்றால், இப்போது அவர் வருணாசிரமத்திற்கு வியாக்கியானம் செய்ததில் பிறவியில் ஜாதி உண்டென்று சொல்வதோடு இந்த ஜன்மத்தில் பிராமணனுக்குத் தொண்டு செய்தால்தான் அடுத்த ஜன்மத்தில் பிராமணனாகப் பிறக்கலாம் என்று சொல்லி இருக்கிறார் இதைக் கேட்ட பிறகு அவரை 'மகாத்மா' என்று சொல்ல எனக்கு இஷ்டமில்லை.

மற்றபடி மற்ற மதங்களிலும் பிரிவுகளும் மூடநம்பிக்கைகளும் இருப்பதாக சொல்லியிருக்கிறார்.

மற்ற மதங்களிலும் இருக்கின்றது என்கின்ற சமாதானம் போதாது. ஜனசமூகம் உண்மையான விடுதலை பெற மற்ற மதங்களிலும் உள்ள மூடநம்பிக்கைகளும் ஒழிய வேண்டியது தான். ஆனால், இப்போது எனது வேலை அதுவல்ல. என் தலைமீதும் எனது சகோதரர்கள் மீதும் சுமத்தப்பட்ட மதத்தின் யோக்கியதை வெளியாகி மக்கள் உண்மையறிந்து அதிலிருந்து அறிவு பெற்ற பிறகுதான் நமக்கு மற்ற மதங்களின் சீர்திருத்தத்தைப்பற்றி



பேச யோக்கியதை உண்டு. ஆதலால் மற்ற மதங்களின் ஊழல்கள் இருப்பதற் காக நாம் நமது மதம் என்பதின் ஊழல் களை மூடி வைத்திருக்க முடியாது. நான் தொட்டால் அருகில் சென்றால் செத்துப் போகும் சாமிகளைப்பற்றி அலக்ஷியமாய் பேசினதற்காக வருந்து வதாக பேசினார். நான் அதற்கு பரிதாபப்படுகின்றேன். நான் தொட்டால் நான் அருகில் சென்றால் செத்துப் போகும் சாமியை நான் வேஷ்டி துவைக்கக்கூட உபயோகிக்கமாட்டேன். யார் என்னை என்ன சொன்னாலும் சரி, எனக்குக் கவலையில்லை. அப்படிப்பட்ட குணம் ஏற்பட்ட உருவத்திற்கு என்ன பெயர் சொன்னாலும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். அதை வெறும் கல்லென்றும் செம்பென்றும் தான் சொல்லுவேன். ஸ்ரீ முத்துகிருஷ்ணன் பிள்ளையை அனுசரித்து ஸ்ரீமான் ரங்கநாதம் செட்டியாரும் பேசியிருக்கிறாராதலால் அவருக்குத் தனியாய் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. ஆனாலும் முன்பு இந்த ஊர் ஜில்லா மகாநாட்டுக்கு தலைமை வகித்த காலத்தில் தீண்டாமை ஒழிய வேண்டு மென்பதையும் அதற்கு விரோதமாய் உள்ள மதம், சாஸ்திரம், புராணம் என்பதையும் பற்றி அப்போது அதாவது சுமார் 5, 6 வருஷங்களுக்கு முன்னால் நான் 2-மணி நேரம் அக்கிராசனர் என்கின்ற முறையில் பேசியிருப்பதை ஞாபகப்படுத்தி கொண்டாரானால் நான் ஏதாவது இப்போது மாறி இருக்கின்றேனா அல்லது காங்கிரசும் அந்த கூட்டத்தில் இப்போது இருப்பவர்களும் மாறி இருக்கின்றார்களா? என்பது புலனாகும் என்றும் சொல்லிவிட்டு ஸ்ரீமான் திருநாராயண அய்யங்கார் பேசியதற்கும் மற்றதற் கும் பொதுவாக நீண்ட பதில் உரைத்ததாவது:- ஸ்ரீ அய்யங்கார் வெகு நேரம் பேசியதில் குறிப்பாய் எடுத்துக் காட்டிய குற்றம் இன்னது என்பது எனக்குத் தெரியவில்லை என்று நாயக்கர் சொன்னதும் அய்யங்கார் எழுந்து "நீங்கள் சாமியை கல்லென்று சொன்னீர்களே இது சரியா" என்றார்.

உடனே ஸ்ரீமான் நாயக்கர், "ஆம், வேண்டுமானால் எல்லோரும் என்னுடன் வாருங்கள் காட்டுகின்றேன்" என்று மேஜை மீதிருந்த கைத் தடியை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். எல்லோரும் கைத்தட்டி சிரித்தார்கள். அய்யங்கார் பதில் சொல்ல வகையில்லாமல் தலைகுனிந்தார்.

மற்றொரு பார்ப்பனர் - (பத்திரிகை நிருபர்) "அந்த கல்லுக்கு மந்திர உச்சாடனம் செய்யப்பட்டிருக்கிறது."

**நாயக்கர்:-** அப்படியானால் மொட்டைப் பாறையில் உடைத்த கல்லுக்கும் செய்த மந்திர உபதேசம் உண்மையில் சக்தி உள்ளதானால் இதோ - எதிரில் இருக்கும் சகோதரருக்கும் கொஞ்சம் அதே மந்திர உப தேசம் செய்து அவரை அந்த கல்லுச்சாமிக்கும் பக்கத்தில் இருந்து பூசனை செய்யும் படியாகவாவது செய்யக்கூடாதா என்றார்.

அந்த அய்யரும் தலை கவிழ்ந்தார்.



RangaRakes tamilnavarasam.com

மறுபடியும் ஸ்ரீ திரு. நாராயணய்யங்கார் "இந்து மதம் இல்லை என்பதை நானும் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் நீங்களாவது ஒரு புது மதம் சொல்லுவது தானே" என்றார்.

**நாயக்கர்:-** நான் ஒரு புது மதத்தை போதிக்க வரவில்லை. ஒழுக்கத் திற்கு விரோதமான கொள்கைகளை மதம் என்றும் சாமி என்றும் புராணம் என்றும் பின்பற்றாதீர்கள். ஒழுக்கமாகவும் சத்தியமாகவும் மற்ற ஜீவன்களிடத் தில் அன்பாகவும் பரோபகார எண்ணத்துடன் இருந்தால் போதும் என்று தான் சொல்லுகிறேன். அதற்குத் தகுந்த கொள்கைகள் எந்த மதமானாலும் சரி அது மதம் அல்லாவிட்டாலும் சரி என்றுதான் சொல்லுகின்றேன்.

**அய்யங்கார்:-** இருக்கின்றதை மறைப்பதானால் புதிதாக ஒன்றைக் காட்ட வேண்டாமா என்றார்.

**நாயக்கர்:-** வீட்டிற்குள் அசிங்கமிருக்கின்றது, நாற்றமடிக்கின்றது, எடுத்து எறியுங்கள் என்றால், அதற்கு பதில் என்ன அந்த இடத்தில் வைக் கின்றது என்று ஏன் கேட்க வேண்டும். இந்து மதம் என்பதாக உலக மெல்லாம் நாறுகின்றதே அந்த துர்நாற்றம் போய்விட்டால் அதுவே போதும். நீங்களே இந்துமதம் என்பதாக ஒன்று இல்லை என்றும் சொல்லி ஒப்புக் கொண்டு விட்டீர்களே இனி நான் என்ன சொல்ல வேண்டும்.

**அய்யங்கார்:-** நீங்கள் இவ்வளவு சமத்துவம் பேசுகின்றீர்களே. உங்களுக்கு லக்ஷ லக்ஷமாக சொத்துக்கள் இருக்கின்றதே, அதை ஏன் எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுக்க கூடாது? உமக்குத்தான் பிள்ளை குட்டி இல்லையே என்றார்.

**நாயக்கர்:-** ஸ்ரீமான் அய்யங்கார் சொல்லுகின்றபடி எனக்கு ஒன்றும் அப்படி பெருவாரியான சொத்துக்கள் கிடையாது. ஏதோ சுவல்ப வரும் படிதான் வரக்கூடியதாயிருக்கின்றது. அதையும் எனக்கு சரியென்று தோன்றிய வழியில் பொது நலத்துக்குத்தான் செலவு செய்து வருகிறேன். அல்லாமலும் இந்த தொண்டுக்கு வருமுன் பெருவாரியாக வியாபாரமும் செய்து வந்தேன். வருஷம் ஒன்றுக்கு 1000 ரூபாய் கூட இன்கம்டாக்ஸ் செலுத்தி இருக்கின்றேன். ஆனால் அவைகளை இப்போது அடியோடு நிறுத்தி விட்டேன். இந்த பிரசார செலவு சில சமயம் மாதம் 200, 300 ரூபாய் வீதம் ஆகிவருகிறது. மற்றும் அநேக செலவுகளும் இருக்கின்றன. நான் ஒன்றும் அதிகமாய் அனுபவிப்பதில்லை. நான் அனேகமாய் மூன்றாவது வகுப்பு வண்டியில்தான் போகிறேன். அப்படி இருந்தும் நான் ஒன்றும் மீத்து வைப்பதுமில்லை.



**அய்யங்கார்:-** புரோகிதத்தைப் பற்றி இழிவாய்ப் பேசினீர்கள். நான் புரோகிதத்திற்கும் போவதில்லை, பிச்சைக்கும் போவதில்லை, காப்பிக்கடை வைத்து எச்சில் கிண்ணம் கழுவி ஜீவிக்கிறேன். எல்லாரையும் ஒன்றாகக் கண்டிக்கிறீர்கள். அப்படியானால் என்னதான் செய்கின்றது? எந்த புஸ்தகத்தைதான் படிக்கின்றது.

**நாயக்கர்:-** நான் குறிப்பிட்டு யாரையும் சொல்லுவதில்லை. மனிதத் தன்மைக்கு விரோதமான குணம் யாரிடமிருந்தாலும் மனிதனின் சுபாவத் திற்கும், சமத்துவத்திற்கும் சுயமரியாதைக்கும் விரோதமான கொள்கை களும் கதைகளும் எதிலிருந்தாலும் அவைகளை ஒதுக்கி சுட்டுப் பொசுக்க வேண்டும் என்றுதான் சொல்லுகின்றேன் என்று ஆவேசமாய் சொல்லி கடைசியாக முடிவுரையாக சொன்னதாவது:- இந்த ஊர் எவ்வளவோ நல்ல ஊர் என்றுதான் சொல்வேன். சில ஊர்களில் கல்லுகள் போடவும் கூட்டத்தில் கலகம் செய்யவும் கூச்சல் போடவும்கூட பார்த்திருக்கின்றேன். இதெல்லாம் எனக்கு அனுபவிப்பது சகஜம் தான். எவ்வளவுக்கெவ்வளவு எதிர்ப்பு ஏற்படுகின்றதோ, எவ்வளவுக்கெவ்வளவு எதிர்பிரசாரங்கள் ஏற்படுகின் றதோ அவ்வளவுக்கவ்வளவு எனது வேலை சுலபமாகும். எனது எண்ண மும் நிறைவேறும் என்கின்ற தைரியம் எனக்கு உண்டு. இம்மாதிரி வேலை கள் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்இருந்தே பலர் செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் அந்த சமயம் இருந்த அரசர்கள் முட்டாள் களாகவும் பலவிதத்தில் பார்ப்பனர்களால் மயக்கப்பட்டவர்களாகவும் இருந்ததினால் அது பலிக்காமல் போய்விட்டது. "ராமராஜ்ய"மாகவோ "பாண்டிய ராஜ்ய" மாகவோ இருந்தால் நான் இதுவரை 'ஒரே' பாணத்தால் கொல்லப்பட்டிருப்பேன் அல்லது கழுவேற்றப்பட்டிருப்பேன். நல்ல வேளையாக அந்த அரசாங்கங்கள் மண் மூடிப்போய்விட்டது. வேறு ஒரு லாபமும் இல்லாவிட்டாலும் நமது பணம் கொள்ளை போனாலும் மனிதனின் சுயமரியாதையைப் பற்றியாவது வெள்ளைக்காரர் ராஜ்யத்தில் இதுவரை தாராளமாக பேச இடம் கிடைத்துவிட்டது. சுயமரியாதை விதை ஊன்றியாய் விட்டது. இனி நான் கொல்லப்பட்டாலும் சரி நான்கு நாள் முன்னோ பின்னோ சாகவேண்டியது தான். வீட்டில் ஒயில் எழுதி வைத்துவிட்டுத்தான் நான் இத்தொண்டிற்கு பிரவேசித்திருக்கின்றேன். ஒவ்வொரு பயணத்திற்கும் முடிவாக பயணம் சொல்லிக் கொண்டு தப்பிப் பிழைத்தால்தான் திரும்பி வரமுடியும் என்று என் பெண் ஜாதிக்கும் தாயாருக்கும் முடிவு சொல்லி உத்திரவு பெற்றுத்தான் நான் பயணம் புறப்படுகின்ற வழக்கம். நான் பேசிக் கொண்டிருக்கும்போதே உயிர்விட வேண்டும் என்பது எனது ஆசை. ஏனெனில் நான் எடுத்துக் கொண்ட வேலை அவ்வளவு பெரியதும் பல எதிரிகளைக் கொண்டதும் தக்க விலை கொடுக்க வேண்டியதுமானது என்று எனக்குத் தெரியும். ஆதலால் இனி நாஸ்திகம் என்ற பூச்சாண்டிக்கும் தேசத் துரோகம் என்ற பூச்சாண்டிக்கும் இனி பயப்படுவது என்பது முடியாத காரியம்.



RangaRakes tamilnavarasam.com

ஆயிரம் தரம் சொல்லுவேன், நாம் கும்பிடும் சாமிகளும் நமது கோயிலில் உள்ள சாமிகளும் வெறும் கல், வெறும் கல். நமது தேசீய இயக்கம் என்கின்ற காங்கிரஸ் முதலியவைகள் வெறும் புரட்டு, வெறும் புரட்டு என்பது எனது முடிவு. யார் ஒப்புக் கொண்டாலும் சரி, ஒப்புக் கொள்ளாவிட்டாலும் சரி நான் யாருக்கும் போதிக்க வரவில்லை. எனக்குப்பட்டதைச் சொல்ல வந்தேன். சரியானால் ஒப்புக் கொள்ளுங்கள். தப்பானால் தள்ளிவிடுங்கள். சாமி போய்விடுமே என்று யாரும் சாமிக்காக வக்காலத்து பேச வேண்டியதில்லை. பேசினாலும் நான் ஒப்புக் கொள்ளப் போவதில்லை. உண்மையான கடவுளும் உண்மையான தேசீயமும் எனக்குத் தெரியும் அதை வெளியிடும் தொண்டு தான் இது" என்று பேசி உட்கார்ந்தார்.

உடனே அக்கிராசனர் இனி யாராவது பேச வேண்டுமா என்றும் இதற்கு யாராவது பதில் சொல்லுகிறீர்களா என்றும் கேட்டார். 2 நிமிஷம் நிஸ்சப்தமாய் இருந்தது. ஒருவரும் பேசவில்லை என்று சொல்லிவிட்டு ஒரு கனவான் ராயல் கமிஷன் பகிஷ்கார விஷயமாக ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அதைச் சிலர் பகிஷ்காரத்திற்காக இக்கூட்டம் கூட்டவில்லை என்று ஆட்சேபித்தார்கள். ஸ்ரீமான் நாயக்கர் எழுந்து அதைப்பற்றி கவலையில்லை என்றும் தான் அதையும் எதிர்ப்பதாகவும் சொல்லி அதைப் பற்றி சில விஷயம் பேச அக்கிராசனரை அனுமதி கேட்டார். மணி சுமார் பத்தாய் விட்டதால் சீக்கிரம் சொல்லி முடிக்கும்படி சொன்னார். ஸ்ரீமான் நாயக்கர் வெகுவேகமாக அரசியல் புரட்டையும் பகிஷ்காரப் புரட்டையும் சொன்னார். பிறகு ஸ்ரீமான் காப்பிக்கடை திரு.நாராயணய்யங்கார் பேசி ஓட்டுக்குவிட்டார். சிலரே கை தூக்கியதால் தோல்வி உற்றதாக அக்கிராசனர் சொன்னார். மறு படியும் ஓட்டு எடுக்க கைதூக்கச் சொல்லும்படி அக்கிராசனரை அய்யங்கார் வேண்டிக் கொண்டார். அக்கிராசனர் மறுபடியும் தீர்மானத்திற்கு சாதகமா னவர்களை கை தூக்கும்படி சொன்னார். வெகு சிலரே கைதூக்கினார்கள். பாதகமானவர்களை தூக்கும்படி சொல்லாமலும் முடிவு சொல்லாமலும் அக் கிராசனர் முடிவுரை துவக்கி கூட்டத்தை முடித்து விட்டார். பிறகு வந்தனோ பசாரம் கூறப்பட்ட சுமார் 6 மணி முதல் 10 மணிக்கு மேலாக அதாவது 4.30 மணி நேரம் மக்கள் சுமார் 1000 பேருக்கு மேல் அசையாமல் பொறுமையுடன் உட்கார்ந்து கேட்டுகொண்டு இருந்தது மிகவும் குறிப்பிடத்தக்கது. இதுவரை இம்மாதிரி கூட்டம் பொறுமையாக 4.30 மணி நேரம் உட்கார்ந்து கேட்ட தில்லை என்று சொல்லலாம். இனியும் 2 மணி நேரம் பேசினாலும் இருக்க ஜனங்களுக்கும் பிரியம் தானே யொழிய யாரும் நேரத்தை கவனிக்கவில்லை. தவிர பேசியவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒருவருக்கொருவர் கண்ணிய மாயும், யோக்கியமாயும், பேசிக் கொண்டார்களேயொழிய நியாயத் தப்பாய் யாரும் பேசிக் கொள்ளவில்லை. கூட்டம் முடிந்து திரும்பிப் போகும்போது மாத்திரம் வழியில் பார்ப்பனர்களைப் பற்றியும் அவர்கள் சூழ்ச்சியைப் பற்றியும் அவர்கள் கையாளாய் இருக்கும் பார்ப்பனர் அல்லாத ஆட்களைப்



பற்றியும் பத்திரிகைகளைப் பற்றியும் மிக கேவலமாக பேசிக் கொண்டார்கள். நாயக்கர் வரவால் சிதம்பரம் ஒருவித புத்துயிர் பெற்றதென்றே சொல்ல வேண்டும்.

*குறிப்பு:- 26.02.1928 அன்று சிதம்பரத்தில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 04.03.1928**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பன சூழ்ச்சியும் பனகால் ராஜாவும்

டாக்டர் சுப்பராயன் அவர்கள் இப்போது பார்ப்பனர்களின் தாளத் திற்குத் தகுந்தபடி ஆடாததால் அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துவிட்டார்கள். நமது சட்டசபை என்பது பெரிதும் விளையாட் டுத்தனத்திற்கும், அயோக்கியத் தனத்திற்கும் உறைவிடமாய் விட்டதாக கருதவேண்டி இருக்கின்றதே தவிர ஏதாவது ஒரு கவுரவமோ கண்ணியமோ, பிரதிநிதித்துவமோ பொருந்தியது என்று சொல்வதற்கில்லை. இந்த ஒரு வருஷத்திற்குள்ளாக 3, 4, தடவை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டாய்விட்டது. இதைப் போன்ற விளையாட்டு விஷயங்களே மிகுதி யும் சட்டசபைகளில் நடக்கின்றதேயல்லாமல் பொதுஜனங்களுக்கு அனு கூலமாக ஒரு காரியமாவது நடந்திருப்பதாகச் சொல்வதற்கில்லை. இப்போது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் பார்ப்பனர் கட்சியாகிய காங்கிரஸ் என்கின்ற கட்சியில் 23 பேரும், மந்திரி கட்சியில் 7 பேரும், ஜஸ்டிஸ் கட்சியில் 6 பேரும் எழுந்து நின்றதாகத் தெரிகின்றது. ஆகவே ஷை மூன்று கக்ஷிகளிலும் பிளவு ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. ஆனால் ஜஸ்டிஸ் கட்சியிலும் 6 பேர்கள் எழுந்து நின்றதாக ஏற்பட்டதானது பெரிய முட்டாள் தனமான காரியம் என்றே சொல்லுவோம். ஜஸ்டிஸ் கட்சியார் பார்ப்பனரல்லாதார் நன்மைக்காக சர்க்காருடன் ஒத்துழைப்பதைப் பற்றியும், சர்க்காரோடு ஒத்துழையாமை செய்வதைப் பற்றியும் அவர்களும் பார்ப்பனர்களைப் போல் தேசீய வேஷம் போடுவதைப் பற்றியும் நமக்கு சிறிதும் கவலை யில்லை. ஆனால் அந்த அறிவு அதாவது பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு என்கின்ற அறிவு ஒரு சிறிதும் இல்லாமல் நூற்றுக்கு மூன்றுபேர் கொண்ட பார்ப்பன சூழ்ச்சிக்கு அனுகூலமான வழிகளில் பார்ப்பனருடன் ஒத்துழைக்கப் போவது நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஆபத்தான காரியம் என்பதே நமதபிப்பிராயம். கொஞ்ச காலமாக பனகால் ராஜா அவர்களின் போக்கு மிகுதியும் ஒழுங்கற்ற தாகவே போய்க் கொண்டிருக்கின்றது. கோயமுத்தூர் மகாநாட்டிலிருந்து குற்றத்தின்மேல் குற்றம், அறியாமையின்மேல் அறியாமையாகவே நடவடிக் கைகள் நடந்து கொண்டு வருகின்றன. இது ராஜா அவர்களின் பெரிய யுக்தியான காரியமாயும் இருக்கலாம். அதனால் ஏதாவது சில வெற்றி



ஏற்பட்டதாகவும் காணலாம். ஆனால் இதெல்லாம் பார்ப்பனரல்லாதார் கக்ஷி தேய்ந்து போகும்படியானதாகிவிடும் என்று நாம் பயப்படுவதுடன் ராஜா அவர்களும் கண்டிப்பாய் சீக்கிரத்தில் உணரக் கூடும் என்றே சொல்லுவோம். டாக்டர். சுப்பராயனிடம் இப்போது ஜஸ்டிஸ் கட்சிக்கு ஏற்பட்ட அவநம் பிக்கை என்னவென்று கேட்கின்றோம். இந்த விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சிக் குள்ளும் ஏன் பிரிவு ஏற்பட இடம் உண்டாக வேண்டும்? பார்ப்பனர்கள் சைமன் கமிஷன் விஷயமாய் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்கள் என்பது ராஜா அவர்களுக்குத் தெரியாதா என்று கேட்கின்றோம். உண்மையில் இரட்டை ஆட்சியை ஒழிக்கத் தீர்மானம் கொண்டு வந்திருந்தால் அது வேறு விஷயம். அப்படிக்கில்லாமல் இரண்டு மந்திரி களை இரட்டை ஆட்சிக்கு உதவிபுரிய விட்டுவிட்டு பார்ப்பன ஆட்சியின் அனுகூலத்திற்காக ஒரு தீர்மானம் பார்ப்பனர் கட்சியார் கொண்டு வந்தால் அதற்கு பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவர் என்பவர் உதவி அளிக்கலாமா? என்பது நமக்கு விளங்கவில்லை. சூதாடுவதில் லாபமே ஏற்பட்டாலும் அது கெட்டகாரியம் என்பதையும் அது எப்படியானாலும் கடைசியாக நஷ்டத் தையும் கஷ்டத்தையும் கொடுத்தே தீரும் என்பதையும் உணர்ந்து இனி யாவது ராஜா அவர்கள் தயவு செய்து இந்த அரசியல் சதுரங்கத்தை விடுத்து கட்சியை உருவாக்க முயற்சிப்பாராக.

**குடி அரசு - தலையங்கம் - 04.03.1928**



RangaRakes tamilnavarasam.com

# தேவஸ்தான நிர்வாகத்திலும் பார்ப்பனீயம்

தஞ்சை தேவஸ்தான கமிட்டியார் நாடார்களை தேவஸ்தான கமிட்டி அங்கத்தவர்களாய் நியமிக்கக் கூடாது என்றும் அவர்களுக்கு கோவிலுக்குள் நுழைய அருகதை இல்லையென்றும் ஒரு தீர்மானம் செய்து அரசாங்கத்துக்கு அனுப்பியிருக்கின்றார்களாம்! இதை என்ன மாதிரி அயோக்கியத்தனம் என்று சொல்வது என்பது நமக்கு விளங்கவில்லை. இதைப் பற்றி எந்த தேசீய பத்திரிகையும் எழுதாமல்: "சைமனே திரும்பிப்போ, எல்லாம் நாங்களே சாதித்து விடுகின்றோம்" என்கின்றன. சைமனை திரும்பி போக சொல்லும் சில நாடார் வாலிபர்கள் நாளைக்கு யாரிடம் இதைப் பற்றி சொல்வார்களோ தெரியவில்லை. ஒரு கூட்டத்தார் தங்கள் வயிற்று பிழைப்புக்கும் கூலிக்கும் சைமனை பஹிஷ்கரித்தால் மற்றொரு கூட்டத்தார் தங்கள் அறியாமையால் பஹிஷ்கார போலிகளுடைய மாய்கையில் சிக்கிவிடுகின்றார்கள். ஐயோ பாவம்!

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 04.03.1928**



# பொய்ப் பெருமை

சென்னையில் சைமன் கமிஷன் வந்து இறங்கிய தினத்தில் வேறு யாருடைய பிரயத்தனமும் இல்லாமல் பொது ஜனங்களாகவே வேலை நிறுத்தம் செய்ததாக, சொந்தத்தில் பெருமை சம்பாதிக்க யோக்கியதை இல்லாதவர்கள் தங்களது பொய்ப் பிரசாரத்தால் பெருமை அடைகிறார்கள். இது அமாவாசை அன்றைய தினம் சந்திரனுக்கு வெளிக்கிளம்பாமல் இருக்கும்படி உத்திரவு போட்ட வீரனின் பெருமைக்கே ஒக்கும். ஏனெனில் யார் சொன்னாலும் சொல்லாவிட்டாலும், பிராட்வே, சைனா பஜார் முதலிய முக்கிய வியாபார ஸ்தலங்களில் ஞாயிற்றுக் கிழமையதினம் பெரும் பான்மையான கடைகளை மூடிவிடுகின்ற வழக்கம் உண்டு என்பது தெருப் பொருக்கிக்குக் கூட தெரிந்த விஷயம். அத்தோடு போலீசையும் தடபுடலை யும் சென்ற மாதம் 3- தேதி காங்கிரஸ் காலித்தனத்தையும், கண்ட ஆசாமிகள் யாராவது இரண்டொருவர் அன்று வேறு வேலைக்குப் போயிருக்கவும் கூடும். உதாரணமாக அனேக வக்கீல்களும் பார்ப்பன உத்தியோகஸ்தர் களும்கூட மூன்றாந்தேதி பயத்தினால் 26 தேதி தங்கள் பெண்டு பிள்ளை களை வேறு ஊருக்கு அனுப்பி விட்டதாகவும் கேள்வி. இதுவும் 'தேசீய வீரர்'களின் பிரசாரம் தான் போலும். இம்மாதிரி பொய்ப் பெருமையால் அரசியல் புரட்டர்கள் எத்தனை நாளைக்கு வாழமுடியுமோ தெரியவில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 04.03.1928**



RangaRakes tamilnavarasam.com

## இன்னும் அடி

சைமன் கமிஷன் அர்த்தாலின் போது பார்ப்பனர்களை அடிக்க ஆரம்பித்தது இன்னும் நிற்கவில்லை என்று தெரிகிறது. அதாவது சென்ற வாரத்தில் ஒரு உத்தியோகப் பார்ப்பனரை யாரோ சில காலிகள் வழிமறித்து நன்றாய் புடைத்தார்களாம்! ரிக்ஷா வண்டிக்காரன் பயந்து ஓடினதற்கு ஓடாதே! ஓடாதே! உன்னை நாங்கள் அடிக்க வரவில்லை, இந்தப் பார்ப் பனனைத் தான் அடிக்க வந்தோம் என்று காலிகள் சொன்னார்களாம்! ஆனால் சிலர் அந்தப் பார்ப்பனரை அடிப்பதற்கு காரணம் வேறு விதமாக வும் சொல்லிக் கொள்ளுகிறார்களாம்! அதாவது ஆபீசில் உத்தியோக தோரணையில் அவர் செய்யும் கொடுமையால் இம்மாதிரி ஏற்பட்டதென் கிறார்களாம். எப்படி இருந்தாலும் இது மிகவும் ஆட்சேபிக்கத்தக்கது. எனவே இதை அடக்காமல் இருப்பது யோக்கியமல்ல.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 04.03.1928**

## சைமனுக்கு பார்ப்பனர்களின் விருந்து

ஸ்ரீமான் சர்.சி.பி.ராமசாமி அய்யர் என்கின்ற பார்ப்பனர் சைமன் கமிஷனுக்கு ஒரு விருந்து வைத்து பார்ப்பனர்களுக்கும் அழைப்பு அனுப்பி எல்லா பார்ப்பனர்களையும் அறிமுகம் செய்து வைத்ததோடு அவரிடம் பார்ப்பனப் பிரசாரமும் செய்யப்பட்டு விட்டது. இதைப்பற்றி பேசுவோர் யாருமில்லை. தேசீய வீரர்களும் தேசீயப் பத்திரிகைகளும் தங்களை மறைத்துக் கொண்டன. பார்ப்பனரல்லாதார் யாராவது பகிஷ்காரப் புரட்டில் கலவாவிட்டால் அல்லது பகிஷ்கார புரட்டர்களின் யோக்கியதையை வெளியாக்கினால் அதற்கு பெயர் பக்தர்கள் பரவசமாம், அல்லது சர்க்கார் தாசர்களாம். என்னே அரசியல் அயோக்கியத்தனம்!

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 04.03.1928**





RangaRakes tamilnavarasam.com

# சைமனுக்காக சட்டசபை பகிஷ்காரம்

சைமன் சென்னையில் இருக்கும் தினத்தன்றே நமது தேசீய வீரப்புலிகள் சட்டசபைக்குப்போய் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து பிரயாணப்படி வாங்கி வந்துவிட்டார்கள். காங்கிரஸ் சட்டசபைக் கக்ஷிக் காரர்களின் சட்டசபை பகிஷ்காரக் கூச்சலுக்கு இதைவிட வேறு என்ன யோக்கியதைவேண்டும். இவர்களை நம்பி எத்தனையோ சோணகிரிகள் இன்னமும் ஏமாந்து போகிறார்கள் என்றால் இவர்களுக்கு என்ன மாதிரி சுயராஜ்யம் கொடுப்பது என்பது நமக்குப் புரியவில்லை.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 04.03.1928**



# அதிசய விருந்து

ஈரோட்டிற்கு சென்ற வாரம் முதல் மந்திரி வந்திருந்த சமயம் ஒரு விசேஷம் நடந்தது. அதாவது கோவை ஜில்லாவில் உள்ள கொங்கு வேளாள கனவான்களுக்குள்ளாகவே சிலர், அதாவது பட்டக்காரர்கள் என்கின்ற கனவான்கள் அந்தச் சமூகத்தார் பந்தியில்கூட உட்கார்ந்து உணவருந்தும் வழக்கம் இதுவரை நடந்ததில்லை. ஆனால் முதல் மந்திரிக்கு அளித்த விருந்தின்போது பட்டக்காரர்களில் மிக செல்வாக்குப் பெற்றவரும் ஈரோடு தாலூகா போர்டு பிரசிடெண்டுமான பழய கோட்டை பட்டக்காரர் ஸ்ரீராய் பஹதூர் நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார் அவர்கள் தாராளமாக இந்து முஸ்லீம் கிருஸ்தவர்கள் ஆகிய கனவான்கள் அடங்கிய கூட்டத்தில் கலந்து சமமாய் இருந்து விருந்துண்டார்கள். இது மிகவும் முற்போக்கான காரியமாகும். இதைப் பின்பற்றியாவது அச்சமூகத்தில் மற்ற சாதாரண கனவான்கள் நடந்து கொள்ளக் கூடாதா? என்று ஆசைப்படுவதுடன் ஸ்ரீ பட்டக்காரர் அவர்களையும் அவர்களது தாராள நோக்கத்தை பாராட்டி மனதார வாழ்த்துகின்றோம்.

**குடிஅரசு - செய்தி விளக்கம் - 04.03.1928**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பன அயோக்கியத்தனம்

நமது நாட்டு முன்னேற்றத்திற்கும், சுயமரியாதைக்கும் பார்ப் பனர்களே ஜன்ம விரோதிகள் என்றும், அவர்களாலேயே நமது நாடு அடிக்கடி அன்னிய ஆதிக்கத்திற்கும் கொடுங்கோல் அரசு முறைக்கும் ஆளாகி வந்துக் கொண்டிருக்கின்றது என்றும், பார்ப்பன அயோக்கியத்தனம் வீழ்ந்த அன்றே வெள்ளைக்கார கொடுங்கோல் ஆட்சிமுறை பட்டு மாய்ந்து விடும் என்றும் நாம் விபரம் தெரிந்த காலம் முதல் தொண்டை கிழியக் கத்தியும் வருகின்றோம், கை நோக எழுதியும் வருகின்றோம். ஆனாலும், வேறு வழியில் வயிறு வளர்க்க முடியாத இழிமக்கள் தங்கள் வாழ்வுக்காக பார்ப்பனர்களுக்கு அடிமைகளாகி சிலர் கடவுளுக்கு வக்காலத்து பேசுவது போல் இவர்கள் பார்ப்பனர்களுக்கு வக்காலத்து பேசி நமது முயற்சியைக் கெடுக்க வந்து விடுகின்றார்கள். பொதுஜனங்களும் முக்கியமாய் பாமர மக்களும் இவ்விஷயத்தில் கவலை இல்லாமலும் தங்கள் பகுத்தறிவை சரியாய் உபயோகிக்காமலும் கவலை அற்ற முறையில் “பார்ப்பானைக் குற்றம் சொல்லாத முறையில் நமது வேலை நடக்கக் கூடாதா” என்போர் களும் “பார்ப்பனர்கள் 100-க்கு மூன்று பேர்கள் தானே, அவர்கள் நமக்கு ஒரு எதிரிகளா” என்று “தர்மம்” பேசுவோர்களும், மற்றும் பலவிதமாக அர்த்தமில்லாத சமாதானம் சொல்வோர்களுமாக இருந்து வருகிறார்கள். என்றைக்காவது நமது நாடு யோக்கியமான முன்னேற்றமும் சுயமரியாதையும் பெறவேண்டுமானால் பார்ப்பன அயோக்கியத்தனமும், சூழ்ச்சியும், ஆதிக்கமும் ஒழிந்த பிறகுதான் சாத்தியப்படக்கூடிய விஷயமேயல்லாமல் பார்ப்பனீய ஆதிக்கம் அடியோடு அழிபடாமல் ஒரு நாளும் முடியாது என்று கோபுரத்தின் மீதிருந்தும் கூவுவோம். வெளியில் இருக்கிற பாமர மக்களுக்கு பார்ப்பனத் தொல்லை இன்னது என்பது ஒரு நாளும் புலப்படுவது இல்லை. பார்ப்பனன் தன்னுடைய வாழ்வுக்குத் தக்கபடி தனது நடவடிக்கையை மாற்றிக் கொள்ளத்தக்க சவுகரியங்கள் மதத்தின் பேராலும், கடவுள், வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, புராணங்கள் முதலியவைகளின் பேராலும் பழக்க வழக்கங்களினாலும் ஆதியிலேயே ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறான். அன்றியும் நம்மவர்களின் பெரும்பாலோர்களை படிக்க முடியாமல் செய்தும், படித்த சிலரையும் மேல்கண்ட கடவுள், வேதம், சாஸ்திரம், சமயம், பக்தி முதலியவைகளால் பிடிவாத மூடர்களாக்கி வைத்திருப்பதாலும் எவ்வளவு



எடுத்துச் சொன்னாலும் புத்தியில் படாமல் நமது முயற்சிகள் வீணே போய் விடுகின்றன.

கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் நமது பெண்களை விபசாரி களாக்கும் கொடுமையை ஒழிக்க முயற்சிக்கும் விஷயத்திற்கும் சிறு குழந்தைகளை புருஷன் பெண்ஜாதிகளாக்கும் கொடுமையை ஒழிக்கும் விஷயத்திற்கும் மனிதனுக்கு மனிதன் தீண்டாதவன் தாசி மகன் என்பதை ஒழிக்க வேண்டும் என்பதற்கும் நம் கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் ஸ்மிருதிகள் பேராலும் ‘மதத் தலைவ’ப் பார்ப்பனர்கள் முதல் காப்பிக் கடைப் பார்ப்பனர்கள் இடையாக தரகுப் பார்ப்பனர் ஈறாக எவ்வளவு எதிர்ப்புகளும் சூழ்ச்சிகளும் தொல்லைகளும் விளைவித்து வருகின்றார்கள் என்பது யாராவது அறியாத விஷயமா என்று கேட்கின்றோம்.

“சுயராஜ்யம் வேண்டும்” “தேசீயம் முக்கியமானது” என்று கூச்சல் போடுகிற யாராவது இக்கொடுமையிலும் இழிவிலும் இருந்து விலகுவதற்கு ஏதாவது கவலை எடுத்துக் கொள்ளுகிறார்களா அல்லது அதற்கு ஆதாரமாய் இருக்கும் இடத்தைக் கண்டு அதை வெட்டி எறிய ஏதாவது முயற்சி எடுத்துக் கொள்ளுகிறார்களா என்று கேட்கின்றோம். தேசீயக் கூச்சல் போடுகின்ற வயிற்றுச் சோற்று ஆசாமிகள் எந்த சமயத்திற்கு எதைச் சொன்னால் பாமர மக்கள் ஏமாறுவார்கள், பொது ஜனங்களை ஏமாற்றி வாழலாம் என்கின்ற கவலையில் இருக்கின்றார்களேயொழிய வேறு ஏதாவது மானம், அவமானம், சுரணை, இழிவு என்பதைப்பற்றி கொஞ்சமாவது உணர்ச்சி உள்ளவர்களாக இருக்கிறார்களா?

உதாரணமாக பொட்டுக் கட்டும் வழக்கத்தை ஒழிக்க ஸ்ரீமதி முத்து லக்ஷிமி அம்மாளவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு விரோதமாக ஒரு ‘பிரபல தேசீயவாதி’ என்கின்ற பெயர் பெற்ற ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் சொன்னது என்ன என்பதை சற்று ஞாபகப்படுத்திப் பாருங்கள். அவர் என்ன சொன்னார் “பெண்களை கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் பொட்டுக்கட்டி விபசாரத்திற்கு விடுகிற வழக்கம் தப்பு என்பதாக இன்று நாம் ஒரு முடிவு செய்து விடுவோமானால் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரும், வரதராஜுலு நாயுடுவும் நாளைக்கு கோவிலில் சுவாமிக்கு (தரகர்கள்) அர்ச்ச கர்கள் வேண்டியதில்லை என்று சொல்லுவார்கள். அதையும் கேழ்க்க வேண்டியதாய் ஏற்பட்டுவிடும். ஆதலால் கண்டிப்பாய் மதத்தில் பிரவேசிக்க (அதாவது எவ்வித சீர்திருத்தமும் செய்ய) இடம் கொடுக்கக் கூடாது” என்று 3 மாதத்திற்கு முன் சொன்ன சங்கதி யாவருக்கும் தெரியும். மற்றொரு சமயம் சுமார் 2 வருஷத்திற்கு முன்பு ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரை நட்டுவன் போல் படமெழுதி அவர் கையில் ஒரு ஜால்ராவைக் கொடுத்து ஒரு தாசிக்குப் பின்னால் நிறுத்தி அவர் தட்டும் மாதிரியாகவும் ஒரு தாசி ஆடும் மாதிரியாகவும் படம் போட்டு ‘இங்கிலாந்தில் தேசீயக் கூத்து’ என்று பெயர்



RangaRakes tamilnavarasam.com

கொடுத்து லண்டனுக்கு விபசாரத்திற்கு விடுவதற்காக ஸ்ரீமதி பத்மாசனி அம்மாளை அழைத்துப் போகிறார் என்று முதல் நாள் எழுதி விட்டு மறுநாள் கேஸ் ஆகிவிடுமோவென்பதாகப் பயந்து விபசாரத்திற்கு என்று எழுதியது கைப்பிசகென்றும் அதை உபசாரத்திற்கு என்பதாக திருத்திக் கொள்ள வேண்டும் என்றும் 'தமிழ் நாடு' பத்திரிகையில் ஸ்ரீ வரதராஜுலு திருத்தம் எழுதியதும் யாவருக்கும் தெரியும். எனவே அப்படிப்பட்ட ............ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரை அதே ஸ்ரீ வரதராஜுலு மந்திரி வேலையை தயவு செய்து ஒப்புக் கொள்ளும்படி எப்படி தந்தி கொடுத்தார்? அதே ஸ்ரீ சத்திய மூர்த்தி அய்யர் அதே ஸ்ரீமான் வரதராஜுலுவுக்கு இன்றைய தினம் எப்படி தலைவரானார்? அவர் தலைமையில் இவர் எப்படி தொண்டாற்றுகின்றார்? 'தமிழ்நாடு' ஆபீசில் அடிக்கடி கதவை மூடிக்கொண்டு எப்படி இருவரும் இரகசியக் கூட்டம் கூடுகின்றார்கள்? என்பவைகளையெல்லாம் கவனித்தால் பொது ஜனங்களுக்கு இதில் ஏதாவது ஒரு இரகசியம் இருக்கும் சங்கதி விளங்காமல் போகாது.

அடுத்தாப்போல் 'இந்து' பத்திரிகை என்னும் ஒரு பார்ப்பனப் பத்திரிகை எவ்வளவு தூரம் நமது மக்களுக்கு கொடுமை செய்கின்றது! எவ்வளவு தூரம் நமது முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் முட்டுக் கட்டையாயிருக்கின்றது! நமது ஆங்கிலம் படித்த மக்களை தலையெடுக்க வொட்டாமல் செய்ய எவ்வளவு அயோக்கியத்தனங்கள் செய்கின்றது! என்பனவாதியவைகள் யாருக்கும் தெரியாதா! என்று கேட்கின்றோம். உதாரணமாக சமீபகாலத்தில் 'இந்து' பத்திரிகையால் 10 வயது பெண்ணோ அல்லது 12 வயது பெண்ணோ ஒருவனுக்கு கல்யாணத்திற்காக வேண்டும் என்று ஒரு விளம்பரம் செய்திருக்கிறது. இதைப்பார்த்து ஒரு சீர்திருத்தக்காரர் 'இந்து'வை ஒரு கேள்வி கேட்டார். அதாவது "ஓ! இந்துவே நீர் சீர்திருத் தக்காரன் என்று முழக்கம் செய்கின்றனையே! இந்தக் காலத்தில் கூட 10 வயது அல்லது 12 வயது பெண் ஒரு மாப்பிள்ளைக்கு கலியாணத்திற்காக வேண்டும் என்று விளம்பரம் செய்யலாமா" என்று கேட்டார். அதற்கு 'இந்து' பத்திரிகை சொன்ன பதில் என்ன என்று பாருங்கள்.

"10 அல்லது 12 வயது பெண்களை இப்போது விவாகம் செய்வது என்பதாகக் காணப்படுவது விவாகச் சடங்கல்ல. அது நிச்சயார்த்தத்திற்கு ஒப்பானது. பெண்ணையும் மாப்பிளையையும் வீட்டிற்குள் விட்டு கதவு சாத்துகின்றோமே. அதுதான் விவாகம்" என்று அயோக்கியத்தனமாய் பதில் எழுதிற்று.

இதற்கு அந்த சீர்திருத்தக்காரர் என்ன பதில் எழுதினார் என்றால் "ஓ இந்துவே 10 வயதிலும் 12 வயதிலும் கல்யாணம் செய்வது போல் கண்ணுக்குத் தெரிவதெல்லாம் கல்யாணம் அல்ல. அது நிச்சயார்த்தம் என்று சொல்ல வருவாயானால் அந்த 10,12 வயது பெண்களின் நிச்சயார்த்தம் செய்யப்பட்ட



புருஷன் செத்தால் தாலி அறுபட்டதாக பெயர் செய்து மொட்டையடித்து முக்காடு போட்டு மூலையில் உட்கார வைப்பதேன்? அது கூட உங்கள் நிச்சயார்த்தச் சடங்கில் சேர்ந்த நிபந்தனையா" என்று கேட்டார். உப்புக் கண்டம் பறிகொடுத்த பார்ப்பனத்தி போல் "இந்து" இதற்கு ஒரு மறுமொழி யும் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டது. மற்றும் பல சமயங்களில் அது நம்மவர்களுக்கு விரோதமாக எவ்வளவோ கொலை பாதகத்திற்கு ஒப்பான கொடுமைகளைச் செய்திருக்கின்றது; செய்கின்றது; செய்யக் காத்திருக் கின்றது. இம்மாதிரியான பத்திரிகையைத்தான் ஸ்ரீமான் வரதராஜுலுவும் அவரது "தமிழ் நாடு"ம் உயர்ந்த யோக்கியமான பத்திரிகை என்று சொல்ல ஸ்ரீமான் காந்தியிடம் தூது சென்றன.

நிற்க, ஸ்ரீமான் சர்.சி.பி. ராமசாமி அய்யர் நமது சமூகத்தார் தயவினால் சட்ட மெம்பர் ஆனவர். அப்படி இருந்தும் அவர்கள் பரம்பரை வழக்கம் போல் அதை மறந்துவிட்டு நம்மவருக்கு செய்த இடையூறுகள் கொஞ்ச நஞ்சமா? என்பதை அறியாதார் யாரும் இருக்க மாட்டார்கள்.

மேட்டூர் திட்டத்தில் அவர் செய்த புரட்டும் பித்தலாட்டங்களும் கணக்கு வழக்குகள் அடங்கியதல்ல. இதை பிட்டுப்பிட்டு ஜஸ்டிஸ் 'திராவிடன்' பத்திரிகைகள் வெளியாக்கின. கொஞ்ச காலத்திற்கு முன்வரை ஸ்ரீமான் வரதராஜுலுவும் அவரது தமிழ்நாடும் ஸ்ரீமான் சி.பி. அய்யரைப் பற்றி எழுதிய வசவு எழுத்துக்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அப்படி இருக்க இப்போது திடீரென்று சர்.சி.பி. அய்யருக்கு சிபார்சு பேசுவதும் அவரை ஆதரிப்பதும் அவரையும் அவர் ஊழல்களையும் வெளியாக்கினதற்காக ஜஸ்டிஸ் கட்சியை 'தமிழ்நாடு' பத்திரிகை வைததும் ஆகிய விஷயங் களைப்பற்றி யோசிப்பவர்களுக்கு அதிலும் ஏதாவது இரகசியம் இருக்க வேண்டுமென்று புலப்படாமல் போகுமா?

எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்கிடையில் பார்ப்பன சூழ்ச்சியை வெளியாக்கி மக்களை பார்ப்பனக் கொடுமையிலிருந்து விடுதலை பெறச் செய்ய ஒரு சாரார் பிரயாசைப்படும்போது ஸ்ரீ வரதராஜுலுவும் அவரது பத்திரிகையும் பார்ப்பன பூஜை செய்து கொண்டு கவிபாடி திரிந்து கொண் டிருக்க வேண்டிய இரகசியம் என்ன? இதற்காக இவருக்குப் பார்ப்பனர்கள் கொடுத்த கூலி என்ன? என்பதை கவனித்துப் பார்ப்போமாக. 3 ௳ 'தமிழ் நாடு' உபதலையங்கத்திலும் 8 தேதி 'ஜஸ்டிசி'லும் 9 தேதி 'திராவிடனி'லும் உள்ள தலையங்கத்தில் காணப்படும் சில குறிப்புகளை சற்று கவனித்துப் பார்த்தால் ஸ்ரீ வரதராஜுலுவுக்கு பார்ப்பனர்கள் கொடுத்த கூலியும் அவர் களின் அயோக்கியத்தனமும் நன்றாய் விளங்கும். அதில் காணப்படுவ தென்னவென்றால்,

"இந்து" பத்திரிகையின் சந்தாதாரர்களின் தொகை 13,500 – ல் இருந்து



RangaRakes tamilnavarasam.com

17,500க்கு உயர்ந்துவிட்டது. .................... தமிழ் பத்திரிகைகளுக்குள் 'தமிழ் நாடு' பத்திரிகையின் சந்தாதாரர்களின் தொகை நூற்றுக்கு ஐம்பது வீதம் உயர்ந்து 6000 பத்திரிகை ஆகிவிட்டது. இது கொள்கையை மாற்றிக் கொண்டதனால் இப்படி உயர்ந்து விட்டது........... ஜஸ்டிஸ் முதலிய பத்திரிகைகளின் சந்தாதாரர்களின் தொகை மிகுதியும் குறைந்துவிட்டது.........

என்பதாகக் காணப்படுகின்றது. இது அரசாங்கத்தாரின் சென்ற வருஷ நிருவாக அறிக்கையில் பத்திரிகைகளைப் பற்றிய குறிப்புகளில் இருந்து எடுத்து எழுதப்பட்டது.

இதைப் பார்க்கும்போது பார்ப்பன அயோக்கியத்தனத்திற்கும் ஸ்ரீ வரதராஜுலுவுக்கு பார்ப்பனர்கள் கொடுத்த லஞ்சத்திற்கும் வேறு ஆதாரம் வேண்டுமா என்று கேட்கின்றோம். இந்த இலாகா நிர்வாகம் சர்.சி.பி. என்கின்ற பார்ப்பன ஆதிக்கத்தில் உள்ளது. பத்திரிகை கணக்கெடுக்கும் C.I.D உத்தியோகஸ்தர்கள் மிகுதியும் சர்.சி.பி. அய்யரின் ஏவலாள்களான பார்ப்பனர்கள். எனவே இந்தக் காரியமானது சர்.பி.பி. அய்யராலாவது அல்லது அவரது C.I.D சிஷ்யர்களாலாவது செய்த அயோக்கியத்தனமாக இருக்க வேண்டுமே யொழிய வேறு யாராலாவது அல்லது யோக்கியமா கவாவது செய்த காரியம் என்று சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம். இந்த ரிப்போட்டு எழுதப் பட்ட காலத்தில் 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைகள் மள மள வென்று உயர்ந்துகொண்டு போன காலம். இது எந்த மடையனுக்கும் தெரிந்த விஷயம். அதல்லாமல் 'தமிழ்நாடு' பத்திரிகை படல் படலாய் விழுந்துகொண்டு வந்த காலம். இப்படி இருக்க இம்மாதிரி அரசாங்க ரிபோர்ட்டில் எழுதப்படுவது என்றால் பார்ப்பன அயோக்கியத்தனம் எவ்வளவு தூரம் பாய்கின்றது என்பதற்கு அளவுண்டா என்பதை யோசித்துப் பாருங்கள். "தமிழ்நாட்டை" ப் பற்றி உயர்த்தி ஒன்றுக்கு மூன்றாய் எழுதியதில் நமக்கு பொறாமை இல்லை. வேலைக்குத் தகுந்தக் கூலி அடையட்டும். 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைகளைப் பற்றி இவ்வளவு குறைவாய் வேண்டுமென்றே போக்கிரித் தனமாய் எழுத வேண்டிய காரணம் என்ன? என்பதுதான் நமது கேள்வி.

விளம்பரம் கொடுப்பவர்களை இப்பத்திகைகளுக்கு கொடுக்க முடியாமல் செய்துவிடவேண்டுமென்றும் 'தமிழ்நாடு' பத்திரிகைக்கும் 'இந்து' பத்திரிகைக்கும் அதிகமான பேர் விளம்பரம் கொடுத்து அவைகள் பணம் சம்பாதித்து வயிறு வளர்த்து பார்ப்பனப் பிரசாரம் செய்யட்டும் என்றும் எண்ணினதேயல்லாமல் வேறு என்னமாய் இருக்க முடியும்?

அப்படிக்கில்லாமல் இந்த அறிக்கை அறியாமலாவது முட்டாள் தனமாகவாவது எழுதப்பட்டிருக்குமென்று யாராவது சொல்ல முடியுமா? வேண்டுமென்றே கூலிக்காகச் செய்த காரியமா அல்லவா என்பதைப் பொது ஜனங்களே யோசித்துப்பார்க்கட்டும். சற்று கடுமையாக இருப்பதாக யாராவது



சிலர் சொல்லவரக்கூடும். அக்கடுமையின் பலனை நாம் அனுபவிக்கத் தயாராயிருக்கின்றோம். ஆனால் கடுமை என்று நினைப்பவர்கள் எத்தனை நாளைக்கு இம்மாதிரி அயோக்கியத்தனங்களையும் போக்கிரித்தனங் களையும் சகித்துக் கொண்டு இருப்பது என்பதையும் இவைகளை நிறுத்த என்ன செய்வது, எப்படிப்பட்ட பாஷையில் எழுதுவது என்பதையும் பற்றி நமக்கு ஏதாவது யோசனை சொல்லட்டும். இல்லாத வரை வாயை மூடிக் கொண்டு நமது பத்திரிகையை கிழித்தெறிந்துவிட்டு சும்மா கிடக்கட்டும். இரண்டும் இல்லாமல் நோணாவட்டம் பேசவேண்டாம் என்றுதான் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கின்ற பாகுபடுத்தி நம்மை சூத்திரன் என்கின்ற பிரிவில் சேர்த்து சட்டசபையில் அறிக்கை வெளியிட்டு இன்னமும் ஆறுமாதம் கூட ஆகவில்லை. அதைப் பற்றி தொண்டையைக் கிழித்துக் கொண்டோம். கையை ஒடித்துக் கொண்டோம். யாரும் ஏன் என்று கேட்கவில்லை. 'தேசீயம் பறக்கின்றது' 'சீர்திருத்தம் வாழ்கின்றது' 'சுயமரியாதைக்காக பகிஷ்காரமும் அர்த்தாலும் தாண்டவமாடுகின்றது' 'சட்ட சபைகளில் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கர்ஜிக்கின்றது' 'பார்ப்பனரல்லாத் தலைவர்களும் அதற்கு எழுந்து நிற்கின் றார்கள்' இவ்வளவு அமோகத்தில் இதைப்பற்றிய அயோக்கியத்தனங் களுக்கும் கொடுமைகளுக்கும் சற்றும் இடமே இல்லை. இனி நம்ம 'தலைவிதி தான்' என்ன என்பதைப்பற்றி யாராவது யோசிக்க வேண்டாமா?

தமிழ் மக்களின் நிலைதான் என்ன? இது தலை எடுக்கும் காலந்தான் எப்பொழுது? என்பதை சற்று கவனித்துப் பார்க்க வேண்டும் என்பதுதான் இந்த வியாசத்தின் கருத்து "பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பேச்சே இப் போது கூடாது" என்று போலி தேசீய ஞானம் பேசும் ஸ்ரீமான்கள் வரதரா ஜுலுவும், குப்புசாமியும், அண்ணாமலையும், 'தமிழ்நாடு' பத்திரிகையும் வடநாட்டு இந்து - முஸ்லீம் கலவரங்கள் போல் தென்னாட்டிலும் பார்ப்ப னர் பார்ப்பனரல்லாதார் கலவரங்கள் ஏற்பட்டு தினம் இரு பக்கத்திலும் நாலு பத்து என்பதாக மடியவும் கை கால் ஒடியவும் ஏற்பட வேண்டும் என்கின் றதா இந்த தேசீய ஞானிகள் கருத்து என்று கேட்கின்றோம்.

அப்படி ஒரு சமயம் ஏற்பட்டாலும் கூட அதனால் ஏதாவது பெருமை வருவதாயிருந்தால் அப்போதும் இந்த வரதராஜுக்களும் "தமிழ்நாடு" போன்ற பத்திரிகைகளும் "நாம் சொல்லியபடியே நடந்தது, நாம் எழுதிய படியே நடந்தது. இதற்காக பொது ஜனங்களை பாராட்டுகிறோம்" என்று சொல்லி விளம்பரப்படுத்தி அதிலும் லாபம் சம்பாதிக்கப் பார்ப்பார் களேயொழிய இதற்காக கடுகளவாவது கவலைப்படுவார்களா என்று யோசித்துப் பாருங்கள். இம்மாதிரி நிலை (ஏற்படாமல் இருக்கட்டும்) ஒரு



RangaRakes tamilnavarasam.com

சமயம் ஏற்படுமானால் இவர் கதியும் என்ன ஆகும் என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டிக்கொள்ளுகின்றோம்.

இப்பார்ப்பனர்களும் அவர்களது அடிமைகளும் சாந்தத்தையும் பொருமையும் அகிம்சையையும் கொலை செய்கின்றார்களேயல்லாமல் கடுகளவாவது அதற்கு மதிப்பு கொடுக்கிறார்களா வென்பதை யோசித்துப் பாருங்கள். இந்தப் பார்ப்பன அயோக்கியத்தனத்தின் பலனாகவும் இப்பார்ப் பனர்களின் அடிமைகளின் நடவடிக்கையின் பலனாகவும் அரசாங்கத்தாரும் (வெள்ளைக்காரர்களும்) தங்களது ஆட்சி முறையை எவ்வளவு அக்கிரம மாக நடத்த முடியுமோ அதற்கு மேலும் நடத்திக் கொண்டு போகத் துணிந்து விட்டார்கள். மேலும், அவர்கள் இக் கொடுமைக்கார பார்ப்பனர்களை ஆதரித்து தங்கள் கொடுமையான ஆட்சி முறையை வலுப்படுத்திக் கொண் டும் போகின்றார்கள் என்றே சொல்ல வேண்டும். பார்ப்பனீயம் உள்ளவரை அரசாங்கத்தை யோக்கியமானதாகச் செய்ய முடியாது. பார்ப்பனரல்லாதா ருக்கு நியாயம் வழங்கத்தக்கதாக செய்யவும் முடியாது என்பது நமது கடைசி முடிவு. இந்த நிலையில் இப்போது அரசாங் கத்தைப் பற்றிப் பேசுவது காட்டிலிட்ட கூச்சலாகும். பார்ப்பனீயம் என்னும் மரம் வெட்டி வீழ்த்தப் படும்போது அன்றே அதே சமயத்தில் அந்த நிழலில் வாழும் அரசாங்கமும் நசுக்குண்டு போகுமென்பது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

எனவே இவ்விஷயங்களை பார்ப்பனரல்லாத வாலிபர்கள் கண்டிப் பாய் அறிய விரும்புகின்றோம். இது மிகவும் நெருக்கடியான சமயம் என்பதை வலியுறுத்துகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 11.03.1928**



# “சர்க்கார் சாதித்ததென்ன”

தீண்டாதார்களுக்கும் தீண்டாமையைப் பற்றியும் “சர்க்கார் சாதித்த தென்ன, சர்க்கார் சாதித்ததென்ன” என்று தலைவர்கள் என்போர்கள் முதல் வாலர்கள் என்போர்கள் வரை கத்துகின்றார்கள்.

‘சர்க்கார் அயோக்கிய ஆட்சிமுறை கொண்டது, கொள்ளை அடிக்க வந்தது’ என்று நாம் தீர்மானம் செய்தாகிவிட்டது. ‘உலகத்தை ரக்ஷிக்க வந்த பிராமணர்களும் மதமும் தேசிய வீரர்களும்’ என்ன செய்தார்கள், செய்கிறார் கள், செய்யப்போகிறார்கள் என்று தான் கேட்கின்றோம். அதற்கு பதில் சொல் லாமல் சற்றும் வெட்கமின்றி சர்க்கார் சாதித்ததென்ன என்று கேட்பது அயோக்கியத்தனமா அல்லவா என்று கேட்கின்றோம்.

அதோடு இன்றையத்தினம் ஸ்ரீ. M.C. ராஜாவும் சிவராஜவும் சாமி சகஜானந்தாவும் சட்டசபைக்குப் போனதும். தங்கள் குறைகளை அங்கெடுத் துப் பேசுவதும் சர்க்கார் சாதித்ததா அல்லது ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தியும் வரதராஜுலுவும், குப்புசாமியும், அண்ணாமலையும் சாதித்ததா என்று கேட்கிறோம்.

அவர்கள் பிள்ளைகள் இன்று ஆயிரக்கணக்காக பள்ளியில் அரிச் சுவடி படிப்பது சர்க்கார் சாதித்ததா அல்லது வேதமும் சங்கராச்சாரியும் இந்து மதமும் சாதித்ததா என்று கேட்கின்றோம்.

கல்பாத்தி தெருவில் நடக்கவும் பச்சயப்பன் பள்ளியில் படிக்கவும் ஏற்பட்டது சர்க்கார் சாதித்ததா அல்லது ஸ்ரீ சீனிவாச அய்யங்காரும் ரங்கசாமி ஐயங்காரும் சாதித்ததா என்று கேட்கின்றோம்.

இன்னும் இம்மாதிரி எத்தனை வேண்டும்?

**குடி அரசு - கட்டுரை - 11.03.1928**



RangaRakes tamilnavarasam.com

## வேடிக்கை சம்பாஷணை

**– சித்திர புத்திரன்**

**ஒரு குடித்தனக்காரன்:** ஐயா ஆ ஆ! எங்க வீதியில் நெருப்புப் பிடித்து 10, 20 வீடு வேகுதய்யா! எவ்வளவு தண்ணீர் ஊற்றியும் அவிய மாட்டேன் என்கிறது. எல்லோரும் வந்து கொஞ்சம் உதவி செய்யுங்கள். உங்கள் பிள்ளைக் குட்டிகளுக்கு புண்ணியமாகும்.

**சித்ரபுத்ரன்** : ஐயய்யோ! ஏனப்பா நெருப்புப் பிடித்தது?

**குடி** : ஒருத்தருக்கும் தெரியவில்லை அய்யா?

**சித்தி** : அப்படியானால் உங்கள் வீதியில் ‘பிராமணாள்’ இருக்கின்றார்களா ?

**குடி** : ஆம் 4, 5 வீட்டுக்காரர்கள் இருக்கின்றார்கள்.

**சித்தி** : அவர்கள் ஏதாவது உங்கள் வீதி பக்கம் வந்தார்களா?

**குடி** : ஆம் அய்யா, காலையில் ஒரு பிராமணர் ஆத்துக்குபோய் குளித்துவிட்டு மொண மொணா என்று சொல்லிக்கொண்டு இந்த வீதியில்தான் போனார்.

**சித்தி** : சரி சரி, உங்கள் வீதி வீடுகள் வெந்துபோனதற்குக் காரணம் தெரிந்துபோயிற்று.

**குடி** : என்ன அய்யா எனக்கு தெரியவில்லையே!

**சித்தி** : இது தெரியாதா உனக்கு; பிராமணாள் கையில் நெருப்பு இருக்கிறதே; நீ கேட்டதில்லையா.

**குடி** : நான் கேட்டதில்லையே!

**சித்தி** : அட பயித்தியமே, பிராமணாள் நாம் கும்பிட்டால் அவர்கள் இடது கையை மோந்து பார்ப்பது போல் மூக்குக்குப் பக்கத்தில் தூக்குகிறார்களே அது ஏன்?வலது



கையில் அக்கினி இருப்பதால் அது தூக்கினால் எறிந்து போய் விடுவோம் என்று இடது கையை மோந்து பார்ப்பது.

**குடி** : அப்படியா! அது எனக்கு தெரிந்திருந்தால் நான் அவர்களை அந்த வீதியிலேயே நடக்கவிட்டு இருக்க மாட்டேனே. ஏமாந்து போய்விட்டேன்.

**சித்தி** : அது மாத்திரமா, பிராமணாள் வாயிலும் நெருப்பு, வயிற்றிலும் நெருப்பு; இது உனக்குத் தெரியாதா?

**குடித்** : தெரியவில்லையே! சற்றுத் தெரியும்படியாய் சொல்லுங்களேன்.

**சித்தி** : பிராமணாள் ‘எங்கள் வாயில் விழுந்தால் பஸ்பமாய்போய் விடுவாய்’ என்று சொல்லுகிறார்களே அது என்ன? வாயில் நெருப்பு இருப்பதால்தானே அவர்கள் அப்படிச்சொல்வது. தவிரவும், பிராமணாள் நம்மைப் பற்றி ஏதாவது நினைத்தால் நாம் பஸ்பமாய் விடுவோம் என்று சொல்லுகின்றார்களே அதன் அருத்தம் என்ன? நினைத்தால் பஸ்பமாய் விடுவதாய் இருந்தால் வயிற்றில் நெருப்பு இல்லா விட்டால் முடியுமா?

**குடி** : இதென்ன இந்த இழவு பார்ப்பனர்கள் சங்கதி. கையில் நெருப்பு, வாயில் நெருப்பு, வயிற்றில் நெருப்பு இப்படி வைத்திருந்தால் நாம் எப்படி அவர்களோடு வாழ்வது. இப்படி தினம் ஒரு வீதி வெந்து சாம்பலாவதானால் இந்த நாலு பிராமணர்களாலேயே இந்த ஊரே சீக்கிரம் சாம்பலாய் விடும் போலிருக்கிறதே.

**சித்தி** : பின்னை தெரியாமலா நம்முடைய பெரியவாள் பிராமணர்களை கிட்ட சேர்க்க வேண்டாம் என்று சொல்லுகின்றார்கள்.

**குடி** : ஓ! ஹோ!! இதற்காகத்தான் அவர்கள் அப்படி சொல்லுகின்றார்களா! சரி, இனி புத்தியாய் பிழைத்துக் கொள்ளுகிறேன். இந்த நெருப்பை எப்படியாவது அணைத்து விடுங்களய்யா.

**குடி அரசு – உரையாடல் – 18.03.1928**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பன தேசீயம்

சென்னை அரசாங்கத்திற்கு விலக்கப்பட்ட மந்திரிகளுக்கு பதிலாக ஸ்ரீமான்கள் முத்தையா முதலியாரும் சேதுரத்தினமய்யரும் நியமனம் பெற்றுவிட்டார்கள். இவர்களால் நமக்கு ஏற்படப்போகும் நன்மை தீமைகளை பற்றி இப்போது ஒன்றும் எழுதாமல் விட்டுவிடுகிறோம்.

மந்திரிகளிடமிருந்தோ, சர்க்காரிடமிருந்தோ அல்லது எந்த விதமான அரசியல் கட்சியார் என்பவர்களிடமிருந்தோ நாம் எவ்வித அரசியல் விஷயத்தையும் நாம் இப்போது எதிர்பார்ப்பதில்லை. அதற்கு காலம் வரும்போது அதைப் பற்றி பேசிக்கொள்ளலாம். இப்போது நாம் மந்திரிகளிடமும், அரசாங்கத்தினிடமும் எதிர்பார்ப்பதெல்லாம் நம் மக்களுக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் சமத்துவமும் சமசுதந்திரமும், சுயமரியாதையும் ஏற்படுவதற்கு ஆதரவுதான். இந்தக் காரியத்திற்கு எவ்வளவு தூரம் இந்த மந்திரிகள் ஆதரவளிப்பார்கள் என்பதைப்பற்றி இப்போது "ஜோசியம்" கூறும் நிலைமையில் நாம் இல்லை.

ஏனெனில் ஒரு மந்திரி பார்ப்பனர்; அதிலும் வைதீக வேஷம் கொண்ட பார்ப்பனர். வைதீக வேஷமில்லாத பார்ப்பனராகிய சர். சி. பி. அய்யரால் நமது சமூகத்திற்கு நேர்ந்த கொடுமைகளை பார்க்கும்போது வைதீக வேஷக்காரப் பார்ப்பனரால் என்ன விளையக்கூடும் என்பதைப் பற்றி யோசித்தால் பயமாய்தான் இருக்கும். மற்றொரு மந்திரி ஸ்ரீமான் முத்தையா முதலியார் ஒரு பார்ப்பனரல்லாதார். ஆனாலும் பார்ப்பனருக்கு அடுத்தபடி என்று சொல்லத்தக்க வேளாள சமூகத்தை சேர்ந்தவர். இவரால் எவ்வளவு தூரம் அனுகூலம் ஏற்படும் என்பதும் யோசிக்கக் கூடியதுதான். ஆனால் இப்போது நாம் அதைப் பற்றி பேச வரவில்லை.

இந்த இருகனவான்களும் மந்திரி பதவி ஒப்புக்கொண்டதற்காக "தேசீய" வயிற்றுப் பிழைப்பு ஆசாமிகளின் கூக்குரலுக்குத் தான் நாம் சமாதானம் சொல்ல விரும்புகின்றோம்.

கோஹத்தி காங்கிரசுக்குப் பின்னாலும், மந்திரி வேலை ஒப்புக்



கொள்ளுவதில்லை என்று சொல்லியும், முட்டுக்கட்டை போடப் போகிறோம் என்று சொல்லியும் இன்னும் என்ன என்னமோ சொல்லியும் ஓட்டு வாங்கி சட்டசபை ஸ்தானம் கிடைத்த பிறகும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரியை மந்திரி உத்தியோகம் ஒப்புக்கொள்ளும்படி தந்தி கொடுத்த ஸ்ரீமான்கள் வரதராஜுலு போன்றோருக்கும் 'தமிழ் நாடு' பத்திரிகை போன்றவைகளுக்கும் ஸ்ரீமான்கள் முத்தையா முதலியாரும், சேதுரத்தினமய்யரும் மந்திரி வேலை ஒப்புக்கொண்டதைப் பற்றி பேச வாயுண்டா? எழுத கையுண்டா? என்று கேட்கின்றோம். அப்படி மீறிப்பேசினால் அது பேசும் வாயா அல்லது கழிக்கும் வாயா என்று கேட்கின்றோம். மீறி எழுதினால் அது எழுதும் கையா? உலக்கையா? என்று கேட்கின்றோம்.

நிற்க, புதிய மந்திரிகளுக்கு ஜஸ்டிஸ் கட்சியார் ஆதரவளிப்பதாக கவர்னரிடம் ஒப்புக்கொண்டதாக தெரிகின்றது என்றும், "ஜஸ்டிஸ் கட்சியின் குட்டிக்கரணம்." "பனகால் ராஜாவின் துரோகம்" என்றும் ஷை ஆசாமிகளும், பத்திரிகைகளும் கூப்பாடு போடுகின்றன. கோஹத்தி காங்கிரசில் "மந்திரி பதவி ஒப்புக் கொள்ளவும் கூடாது, வேறு கட்சிகள் மந்திரி ஸ்தானம் பெறுவதை ஆதரிக்கவும் கூடாது" என்கின்ற தீர்மானம் நிறைவேறி இருக்கும் போதே திருட்டுத்தனமாய் பார்ப்பன அடிமைகளை மந்திரியாக்கி, அவர்களை ஆதரித்து, விஷயம் வெளியான பின்பும் ஸ்ரீமுத்தையா முதலியாரை இதைப்பற்றி கேள்விக் கேட்கக்கூட உரிமையில்லாமல் செய்ததுடன் இம்மாதிரி அயோக்கியத்தனம் செய்ததிற்காக தங்களையே தாங்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் பாராட்டிக் கொண்ட யோக்கியர்களுக்கு ஜஸ்டிஸ் கட்சியார் ஆதரிப்பதாக ஒப்புக் கொண்டது தப்பு 'என்பதற்கு வாயேது; எழுத கையேது என்று கேட்கிறோம். ஜஸ்டிஸ் கட்சியார் இரட்டை ஆட்சி ஒழியும் வரை உத்தியோக மேற்பதில்லை என்று சொன்னது வாஸ்தவம் தான். அந்தக் கட்சி மறுபடியும் அனுமதி கொடுக்கும்வரை அவர்கள் உத்தியோகமேற்பதில்லை என்பதை காப்பாற்றி வருகின்றார்கள். ஜஸ்டிஸ் கட்சியாரை தெரிந்தெடுத்த வோட்டர்கள் உத்தியோகம் ஏற்க வேண்டாம் என்று சொல்லி தெரிந்தெடுக்கவில்லை என்பது முழுமூடனுக்கும் தெரியும். எனவே கட்சிக் கூட்டத்தின் தீர்மானம் கட்சிக் கூட்டத்திலேயே யோசித்து செய்யவேண்டியது; செய்து கொள்ளவும் பாத்தியமுடையது. ஆதலால் அவர்கள் நாளைக்கே கூட்டம் கூடி தீர்மா னித்து மந்திரி பதவிகளை ஒப்புக்கொள்வதை எந்த நியாயமும் தடுக்க முடியாது. காங்கிரஸ்காரரைப் போலவோ மற்றும் பல கக்ஷியாரைப் போலவோ, ஜஸ்டிஸ் கக்ஷியார் ஓட்டர்களை ஏமாற்றி ஓட்டர்களுக்குத் துரோகம் செய்யவில்லை என்பதை பார்ப்பனர்களும், பார்ப்பனக் கூலிகளும் உணரட்டும்.

தவிர, கோவைத் தீர்மானத்தில் ஜஸ்டிஸ் கட்சியார் நிபந்தனைகளுக்குள்பட்டு தாங்கள் மந்திரி பதவி ஒப்புக் கொள்ளுவதில்லை என்று தீர்மானித்



RangaRakes
tamilnavarasam.com

துக் கொண்டார்களேயொழிய வேறு கட்சி மந்திரிகளை ஆதரிப்பதில்லை என்று எங்கும் எப்போதும் தீர்மானிக்கவேயில்லை.

இதையறியாத தற்குறிகளும் துவேஷக்காரர்களும் சுயநலக்காரர் களும், ஜஸ்டிஸ் கட்சியை குற்றம் சொல்வதின் கருத்தென்ன? இதில் பனகால் ராஜாவின் துரோகமென்ன? என்று கேட்கின்றோம்.

தவிர கோவை மகாநாட்டில் இரட்டை ஆட்சியென்பதைப் பற்றி பேசியபோது நிர்வாக சபையில் ஒரு பார்ப்பனர் இருந்து கொண்டு பார்ப்பன ரல்லாதாருக்கு செய்த அக்கிரமங்களையும் கொடுமைகளையுமே முக்கிய மாகக் குறிப்பிட்டு பேசியது அக்கூட்டத்திலிருந்த பந்தற்கால்களுக்கும் சுவர்களுக்கும் கூட நன்றாய் விளங்கியிருக்கும். அப்படி இருக்க அந்த பார்ப்பனர் ஒழிந்ததோடல்லாமல் அந்த ஸ்தானமும் ஜஸ்டிஸ் கட்சியாருக்கே கொடுப்பதானால் மற்ற மந்திரிகளிடம் ஜஸ்டிஸ் கட்சியார் வேலை வாங்கிக் கொள்வதில் யாருக்கு என்ன ஆட்க்ஷேபம்? எந்த "சத்திய தேவதைக்கு" இதில் ஆபத்து வந்து விட்டது? என்று கேட்கின்றோம்.

பார்ப்பன அடிமைகள் பார்ப்பன ஆதிக்கத்திற்கு மந்திரி வேலை ஒப்புக் கொண்டால் அது 'தேசீயம்' ஆகிவிடுகிறது. அம்மந்திரிகள் 'தேசீய மந்திரிகள்' ஆகிவிடுகின்றார்கள். அவர்களை வெளியில் இழுத்து விட்டுவிட்டு பார்ப்பனரல்லாதாருக்கு அனுகூலமான மந்திரிகள் வந்தால் அது 'தேசத் துரோகம்' 'பனகால் துரோகம்', ஜஸ்டிஸ் கக்ஷியார் குட்டிக் கரணம் ஆய்விடுகின்றது. என்னே பார்ப்பன சக்தி! இந்த பித்தலாட்டம் ஒழிந்தாலல்லது இந்த நாட்டுக்குச் சுயமரியாதை இல்லையென்பது நமது உறுதி. ஜஸ்டிஸ் கட்சிக்கு ஒரு வார்த்தை :- எந்தக் காரணத்தைக் கொண்டா வது அரசாங்கத்தார் சட்ட மெம்பர் பதவியை ஒரு பார்ப்பனருக்கு கொடுப் பார்களேயானால் மறு நாளே இந்த மந்திரிகளை கவிழ்த்து விட வேண்டியது அவர்களது கடமையாகும். நமக்கு சுயமரியாதையும், சமத்துவமும், சம உரிமையுமே நமது தேசீயம் என்று உறுதியாய்ச் சொல்லுவோம். மற்றபடி வயிற்றுப் பிழைப்புக்கு தேசீயத்தைப்பற்றி நமக்கு ஒரு சிறிதும் கவலை இல்லை.

**குடி அரசு - தலையங்கம் - 18.03.1928**



# தலைவர் உத்தம பாளையம் முதலியார் மறைந்தார்

தமிழ்நாட்டுத் தலைவரும் தமிழர்களின் நண்பருமான உத்தம பாளையம் முதலியார் என்கின்ற மதுரை ஸ்ரீமான் எம்.டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வியாழக் கிழமை இரவு காலஞ்சென்றார் என நண்பர் திரு. பி.டி. ராஜன் அவர்களின் தந்தியால் தெரிந்து திடுக்கிட்டுப் போனோம். தலைவர் முதலியார் அவர்களுக்கு ஏற்பட்ட நீரழிவு வியாதியானது எவ்வளவு சிகிச்சை செய்தும் குணப்படாமல் அவரது உயிருக்கு "கூற்றுவ"னாகவே முடிந்துவிட்டது. திருவாளர் முதலியார் அவர்கள் தமிழ் நாட்டின் பழங்குடி மக்களுள் முதன்மையானவர். தென்னாட்டில் நாயக்கர் அரசாங்கம் ஏற்பட்டிருந்த காலத்தில் அவருக்கு பிரதம மந்திரிகளில் ஒருவராகிய திரு. அரியநாயக முதலியாரின் சந்ததியில் வந்தவர். மதுரை ஜில்லாவிலுள்ள பெரிய மிராசுதார்களில் முக்கியமானவர். பாரம்பரிய மாகவே செல்வமும் செல்வாக்கும் பெற்ற குடும்பத்தவர். அரசாங்கத் தாராலும் சுதேச மன்னர்களாலும் புராதன ஜமீன்களாலும் மிகுதியும் போற்றப்பட்டவர். நமது மன்னராகிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியவர் களின் முடிசூட்டு வைபவத்திற்கு அழைக்கப்பட்டு இங்கிலாந்து சென்றவர். இவையாவும் அவரது மேன்மையையும் அந்தஸ்தையும் காட்டக்கூடிய தானாலும் நாம் அவரைப் போற்றி துதிக்கும் தன்மை என்ன வென்றால், தமிழ்நாட்டில் உள்ள மற்ற செல்வவான்களைப் போல் தமது வாழ்வுக்கும் திருப்திக்கும் தமது செல்வத்தை உபயோகிப்பதும் தமது சுயநலத்திற்காக செல்வம் சம்பாதிக்க வாழ்வு நடத்துவதும் போன்ற செல்வவான்களைப் போலல்லாமல் இவர் தமிழ் மக்களின் மேன்மைக்கும் சுயமரியாதைக்குமாக பெரிதும் தமது வாழ்வையும் செல்வத்தையும் உபயோகப்படுத்தி வந்தவர். பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஆரம்பித்த காலம் முதற் கொண்டு அவ் வியக்கத்திற்கு ஸ்தம்பமாய் இருந்து வந்தவர். அன்றியும் எந்தக் காரணம் கொண்டும் அவ்வியக்க சம்மந்தமாய் மற்றவர்களைப் போல் அடிக்கடி அபிப்பிராய மாறுதல் அடையாமல் ஒரே நிலையில் இருந்து அவ்வியக் கத்திற்கு தொண்டு செய்து வந்தவர். தென் இந்திய நல உரிமைச் சங்கத்திற்கு உபதலைவர். சென்ற சட்டசபைத் தேர்தலில் பார்ப்பனரல்லாதார் இயக் கத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் தோல்வி அடைந்த காரணத்தால் இயக்கமே



RangaRakes
tamilnavarasam.com

மறைந்து விட்டது என்று நினைக்கும்படியாக ஏற்பட்ட நெருக்கடியான காலத்தில் மதுரையில் பெரிய மகாநாடு கூட்டுவித்து இயக்கத்திற்கே புத்துயிர ளித்த பெரியார். நமது மக்களுக்காக இன்னும் எவ்வளவோ அரிய பெரிய காரியங்கள் செய்ய வேண்டும் என்றும் இவ்வியக்கத்தினரிடம் பிணங்கி பிரிந்து நிற்கும் மக்களை ஒன்று சேர்க்க வேண்டும் என்றும் பெரிதும் கவலையுடன் பல பெருந் திட்டங்களையும் ஏற்படுத்திக் கொண்டி ருந்தவர். சுருங்கக் கூறின் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு சென்னை தவிர வெளியிடங்களில் யாராவது உண்மையான தலைவர்கள் இருப்பார்களானால் அவர்களுள் நமது முதலியாரே முதன்மையானவர். இப்பேர்ப்பட்ட ஓர் பெரியார் இந்நிலையில் நம்மைவிட்டுப் பிரிந்ததானது நமது தவறு காலம் என்றே சொல்ல வேண்டும். அவர்களது அருமை குமாரருக்கும் அவரது சகோதரருக்கும் மற்றொரு சகோதரரின் குமாரரான திரு. பி.டி. ராஜன் அவர் களுக்கும் மற்றும் அக்குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றோம். எல்லாம் வல்ல சக்தியானது அவர்கட்கு ஆறுதல் அளிப்பதாக.

**குடி அரசு - தலையங்கம் - 25.03.1928**



# ‘REVOLT’
# ‘ரிவோல்ட்’

ஸ்ரீமான்கள் ராஜகோபாலாச்சாரியும் கே. நடராஜன் போன்றவர்களும் மற்றுஞ் சில சுயநலக்காரர்களும், கூலிகளும் நமது பிரசாரத்திற்கு விரோத மாக ஆங்கிலத்தில் பத்திரிகைகள் மூலியமாயும், வியாசங்கள் மூலியமாயும் பிரசாரம் செய்கிறபடியாலும், நமது பிரசாரமும் பத்திரிகையும் தமிழிலேயே இருப்பதாலும் அது தமிழ்நாட்டை விட்டு வெளியில் போக மார்க்க மில்லாமலிருப்பதாலும் ஆங்கிலத்தில் ஒரு வாரப் பத்திரிகை ‘குடி அரசு’ கொள்கையை ஆதாரமாகக் கொண்டு ஆரம்பிக்க வேண்டுமென்பதாக ஒரு யோசனை தோன்றியிருக்கிறது. அப்பத்திரிகைக்கு ‘ரிவோல்ட்’ (Revolt) என பேர் கொடுப்பதென்றும் தீர்மானித்திருக்கிறோம். அப்பத்திரிகைக்கு கௌரவ ஆசிரியர்களாக இருக்க சில ஆங்கிலங் கற்ற நண்பர்கள் வாக்களித்து இருக்கிறார்கள். பல அறிஞர்கள் அரிய விஷயதானம் செய்யவும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அப்பத்திரிகையை தற்கால ‘குடி அரசு’ அளவில் 8 பக்கம் கொண்டதாகவும் வருஷ சந்தா ரூபாய் 3 ஆகவும் வைத்து வெளிப் படுத்தத் தீர்மானித்துள்ளோம். சமீபத்தில் வெளியிட முயற்சித்துக் கொண்டி ருக்கிறோமாதலால் அன்பர்கள் சந்தாதாரர்களாய்ச் சேரவும் மற்றும் கூடிய உதவிகள் செய்யவும் முன்வர வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறோம். சந்தா தாரர்களாகச் சேர இஷ்டமுள்ளவர்கள் பதிவு செய்துகொள்ள வேண்டுமாய் விரும்புகிறோம்.

**குடி அரசு - அறிவிப்பு - 25.03.1928**



RangaRakes tamilnavarasam.com

# உஷார்! உஷார்!
# மண்டையிலடியுங்கள்!

சென்னையில் பார்ப்பனீயத்தைப் பரப்புவதற்கு ஒரு புதிய ஸ்தாபனம் சமீபத்தில் பார்ப்பனர்களால் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அதுதான் "கிராமப் புனருத்தாரண வேலை ஸ்தாபனம்." நண்பர்களே இந்தப் பெயரைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். கொஞ்ச காலத்திற்கு முன்பு ஸ்ரீமான்கள் நேரு, சீனிவாசய்யங்கார், சீனிவாச சாஸ்திரியார் போன்றவர்கள் ஒன்று சேர்ந்து 'இந்திய ஐக்கிய ஒற்றுமை சங்கம்' என்பதாக ஒன்றை ஸ்தாபித்தார்கள். அதில் வகுப்பு உணர்ச்சி உள்ளவர்களை சேர்ப்பதில்லை என்றும் நிபந்தனை போட்டார்கள். அது நமது தமிழ் நாட்டிற்குள் வராதபடி மண்டையிலடித்து கொல்லப்பட்டுப் போய்விட்டது.

அதுபோலவே இப்போது மறுபடியும் முயற்சி எடுத்து கிராம புனருத்தாரணம் என்னும் பெயரில் சென்னையில் ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்கு மெம்பர்கள் ஸ்ரீமான்கள். சர்.சி.பி. ராமசாமி அய்யர், மோதிலால் நேரு, ஏ. ரங்கசாமி அய்யர், கேல்கர், பட்டாபி சீதாராமய்யர், பி. சிவராவ், டாக்டர் பெசண்டு, அருண்டேல், ரங்கநாத முதலியார் போன்றவர்களே. இது பிரம ஞான சங்கத்தினர் வாலைப்பிடித்து ஆரம்பித்த புதிய சூழ்ச்சியே யாகும்.

தமிழ்நாட்டில் பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு கொடிய எதிரியாக பிரம்மஞான சங்கம் விளங்குகின்றது. அச்சங்கத் தலைவர் ஸ்ரீமதி பெசண் டம்மைக்கு உள்ள பணமும் செல்வாக்கும் அடையாறு பிரம்மஞான சங்கத் தோற்றமும் அநேக பார்ப்பனரல்லாதார்களையும் மூடர்களாகவும் இனத் துரோகிகளாகவும் ஆக்கி அச்சங்கத்திற்குப் பலி கொடுத்திருக்கிறது. இதைப் பார்த்து யாரும் ஏமாந்து விடக் கூடாது என்றும், இப்புதிய சூழ்ச்சியில் யாரும் சிக்கி அதற்கு ஆளாகக் கூடாது எனவும் எச்சரிக்கை செய்து பணிவாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 25.03.1928**

# யார் வார்த்தைகள் கடினம்?

பார்ப்பனர்களுக்கு அனுகூலமில்லாத மந்திரிகளை கண்டிப்பதற்கு என்று பார்ப்பனர்கள் காங்கிரசின் பேரால் கோகலே ஹாலில் ஸ்ரீ பெசண்டம் மையின் தலைமையில் ஒரு கூட்டம் கூடியபோது ஒருவர் பேசுகையில் "மந்திரிகள் தங்கள் பெண் ஜாதிகளை விட்டுக்கொடுத்து மந்திரி வேலை களை சம்பாதிப்பார்கள்" என்று சொன்னாராம். இது யோக்கியமான வார்த் தையா என்று கேட்கின்றோம். இவ்வார்த்தைகளை எந்த யோக்கியர் களாவது கண்டித்தார்களா என்று கேட்கின்றோம். ஸ்ரீ வரதராஜுலுவாவது அவரது பத்திரிகையாவது தமது தலைவர்களுடைய இம் மாதிரி வார்த்தை களை கண்டித்தாரா என்று கேட்கின்றோம்.

ஸ்ரீமான் குழந்தை கடற்கரையில் மந்திரிகளை கொடும்பாவி கொளுத் தியதற்கு கோபித்துக்கொண்டதாக வேஷம் போட்ட ஸ்ரீ வரத ராஜுலுவுக்கும் "தமிழ்நாடு"க்கும் "பெண் ஜாதிகளை விட்டுக் கொடுப்பார்கள்" என்று சொன்ன வார்த்தை அவ்வளவு கடினமானதாக தோன்றவில்லைபோல் இருக்கின்றது. இதனால் அக்கோஷ்டியின் அற்பத்தனமும் காலித்தனமும் எவ்வளவு என்பது விளங்கவில்லையா?

சாதாரணமாக ஹைகோர்ட் ஜட்ஜிகளில் யாருக்காவது மேக வியாதி இருக்குமானால் அது மைலாப்பூர் காங்கிரஸ்வாதிகள் தேசீயவாதிகள் உபயமேயாகும். இம்மாதிரி யோக்கியர்கள் மிகுதியும் நிறைந்த சென்னை காங்கிரஸ்வாதிகள் தங்கள் யோக்கியதைகளை மறைத்துக் கொண்டு இம்மாதிரி பேச அயோக்கியர்களைத் தூண்டிவிடுவதும், அதை கண்டிக் காமல் இருக்கச் செய்வதும் ஒரு ஆச்சரியமல்ல. தவிர, வேறு ஒரு காங்கிரஸ் தலைவராகிய ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்களும் அவரது ஆயுளில் இம்மாதிரியாக அநேக தடவைகளில் அதிகப் பிரசங்கித்தனமாய் பேசிவிட்டு மன்னிப்பு கேட்டுக் கொண்டதானது ஸ்ரீவரதராஜுலு மன்னிப்பு கேட்டுக் கொண்டதைவிட நூறு பங்கு அதிகமாகவே இருக்கும். ஆகவே யாருடைய வார்த்தைகள் கடினமானதென்பதும் முழுவதும் அக்கிரமமானதும் பொய்யானதும் என்பதும் இழிவானது என்பதும் இதிலிருந்தாவது பொது ஜனங்கள் உணர வேண்டுமாய் எதிர்பார்க்கின்றோம்.


RangaRakes tamilnavarasam.com

அன்றியும் பார்ப்பனர்களுக்கு அனுகூலமான, உத்தியோகங்கள் என்ன வேலை செய்து யார் பெற்றாலும் பத்திரிகைகள் என்ன வேலை செய்து யார் நடத்தினாலும் அவைகள் எல்லாம் யோக்கியமான தேசீய மென்பதும் பார்ப்பனர்களுக்கு அனுகூலமில்லையானால் அவைகளைப் பற்றி என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்பதுமே தேசீயமாகவும் காங்கிரஸ் சட்ட மாகவும் இருக்கின்றது என்பதையும் உணரவேண்டுமாய் விரும்புகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 25.03.1928**



# பெரிய அக்கிரமம்

பம்பாயில் ஆயிரம் பேர்கள் பார்ப்பன மதத்தில் சேர்க்கப்பட்டதாக கேட்க மிகவும் வருந்துகிறோம். இது ஒரு பெரிய அக்கிரமமாகும். இந்த அக்கிரமத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பம்பாய் பார்ப்பனரல்லாதாருக்கு அறிவிருந்ததா இல்லையா என்று சந்தேகிக்கின்றோம். அதாவது,

ஆயிரம் தீண்டாதார்கள் என்பவர்களுக்கு பூணூல் போட்டு உபநய னம் செய்யப்பட்டதாம். இதற்காக பார்ப்பனர்களுக்கு செய்யும் சடங்குகள் எல்லாம் செய்யப்பட்டனவாம். இந்தத் தீண்டாதார்கள் எனப்படும் ஆயிரம் பேரும் நாளைக்கு நமக்கு எமனாய் வரப்போகிறார்கள் என்பது சத்தியம்.

ஏனெனில் இதுபோல் ஒவ்வொரு காலத்தில் சீர்திருத்தம் என்னும் பெயரால் நம்மவர்களுக்கு போட்ட பூணூலினாலும் செய்த உபநயத் தினாலுமே இந்நாட்டில் இத்தனை பார்ப்பன எமன்கள் தோன்றியிருக்கின் றன என்பது ஆராய்ச்சி உள்ள எவருக்கும் தெரியும். எனவே இந்த பூணூல் போட்ட ஆயிரம் பேரும் நாமம் போட்டார்களானால் ஸ்ரீமான்கள் சி. ராஜ கோபாலாச்சாரியார், எஸ். சீனிவாசய்யங்கார், வி.வி. சீனிவாசய்யங்கார் களாகவும் விபூதி பூசினார்களானால் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, சிவசாமி அய்யர், சீனிவாச சாஸ்திரிகள், கே. நடராஜன் போன்றவர்களாகவும், கோபி சந்தனம் போட்டார்களானால் ஸ்ரீமான்கள் மதன்மோகன் மாளவியா வாகவும் தோன்றப்போகிறார்கள் என்பதில் ஒரு சிறிதும் சந்தேகமே இல்லை.

இவைகளுக்கு சற்று தாமதமானாலும் ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியாராகவாவது வெகு சீக்கிரத்தில் வரப்போகிறார்கள் என்பது உறுதி. பூணூலை அறுத்தெரிய வேண்டிய சமயத்தில் ஆயிரக்கணக்கான பேருக்கு பூணூல் உபநயனம் நடப்பது அக்கிரமம்! அக்கிரமம்!! பெரிய அக்கிரமம்!!!

எனவே தீண்டாதார்கள் என்கிற நமது சகோதரர்களை பார்ப்பன மதத்திற்கு விட்டு பார்ப்பனர்களுக்கு பறிகொடுக்காமல் அவர்களுக்கு சகல உரிமைகளும் கொடுக்க வேண்டியது பார்ப்பனரல்லாதாரின் முக்கிய கடமையாகும்.

**குடி அரசு - கட்டுரை - 25.03.1928**



RangaRakes tamilnavarasam.com

# இன்னுமா சந்தேகம்? இரகசியம் வெளியாய் விட்டது

பார்ப்பனர்கள் காங்கிரஸின் பேராலும் தேசீயத்தின் பேராலும் ஸ்ரீ வரத ராஜுலு போன்ற ஆசாமிகளை சுவாதீனம் செய்து கொண்டு பார்ப்பன ரல்லாதாருக்கு கெடுதி செய்து வருவதைப் பற்றியும் சென்ற சட்டசபை தேர்தல் முடிந்தவுடன் 'காங்கிரசுக்கும் தேசீயத்திற்கும்' விரோதமாய் பொய்க்கால் மந்திரிகளை சிருஷ்டித்ததும் அவர்களை ஆதரித்ததும் பார்ப்பனரல்லாதார்களுக்கு கெடுதி உண்டாகச் செய்யவே என்பதாகவும் பலமுறை எழுதிவந்திருக்கின்றோம். இதற்கு சரியான ருஜு கொடுக்க சமீபத் தில் சென்னை சட்ட சபையில் விலக்கப்பட்ட மந்திரியாகிய ஸ்ரீமான் ரங்க நாத முதலியார் சொன்ன வாசகமே போதுமானதென்று நினைக்கின்றோம்.

அவர் சொன்னதாவது "1926-ல் நாங்கள் மந்திரி பதவிகளை ஏற்றுக் கொண்டவுடன் சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் எங்களை ஆதரிப் பதாக காங்கிரஸ் கட்சியாரிடமிருந்து ஒப்பந்தம் வெளியாயிற்று. அந்த ஒப்பந்த நிபந்தனை என்னவென்றால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் கமிட்டி களுக்கும் மற்ற நியமனங்களுக்கும் ஜஸ்டிஸ் கட்சியாரை நியமிக்காமல் இருக்க வேண்டும் என்பதுதான்", இந்த வாசகம் ஸ்ரீமான் எ. ரங்கநாத முதலியார் அவர்கள் சொன்னதாக 23-3-1928 உ 'சுதேசமித்திர' னிலேயே இருக்கிறது. இதை காங்கிரஸ் கக்ஷி சட்டசபைத் தலைவர்கள் ஸ்ரீமான்கள் சாமி வெங்கிடாசலமும், சத்தியமூர்த்தியும் சட்டசபையில் மறுக்கவில்லை என்பதினாலேயே இது உண்மை என்பது ஒரு சிறிதும் சந்தேகமில்லை. இப்படி இருக்க ஜனாப் அமீத்கான் சாயபு காங்கிரஸ் கட்சியாருக்கு அம்மாதிரி நிபந்தனை செய்துகொள்ள யாரும் அதிகாரம் கொடுக்கவில்லை என்பதி னாலேயே ஸ்ரீ ரங்கநாத முதலியார் சொல்வது பொய்யாகி விடுகிறதா? என்பதை வாசகர்களே யோசித்துப் பார்த்து தேசீயமென்பதும் காங்கிர சென்ப தும் பார்ப்பனரல்லாதாருக்கு ஆபத்தா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டுகிறேன்.

**குடி அரசு - கட்டுரை - 25.03.1928**



# ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியின் சீர்திருத்த யோக்கியதை

## மனுதர்ம சாஸ்திரத்துக்கு வக்கீல்

தமிழ்நாட்டில் தற்காலம் தோன்றியிருக்கும் சுயமரியாதைக் கிளர்ச்சி யின் பலனாக இந்துமத மென்பதைப் பற்றியும், அதற்காதாரமாயுள்ள வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, புராணம் என்பனவற்றைப் பற்றியும், வருணம், தர்மம் என்பனவற்றைப் பற்றியும் மக்களுக்குள் பரபரப்புண்டாகி அவற்றைப் பற்றித் தீவிரமாக ஆராய்ச்சி செய்தலும், அவற்றின் புரட்டுகளை வெளியாக்கி தைரியமாய் கண்டித்தலும், அவற்றால் ஏற்பட்ட கொடுமைகளை ஒழிக்க ஆங்காங்கு தீவிரப் பிரசாரம் செய்தலும், கொடுமைக்கு ஆதரவளிக்கும் ஆதாரங்களைத் தீயிட்டுக் கொளுத்துதலுமான பிரசாரங்கள் மும்முரமாய் நடப்பதைக் கண்டு பார்ப்பனர்கள் தங்கள் வாழ்வுக்கே ஆபத்து வந்தெனக் கருதி இவைகளுக்கு விரோதமாக எதிர் பிரசாரம் செய்வதும், பார்ப்பன ரல்லாதாரிலேயே சிலரை ஏவிவிட்டு இடையூறு செய்விப்பதும், வேறு மார்க்கத்தில் வாழ முடியாதவர்கள் இவ்வெதிர்ப் பிரசாரத்திற்கு ஆதரவ ளித்து வாழ்வதுமான காரியங்கள் நடைபெற்று வருவதும் யாவரும் அறிந்த விஷயமேயாகும். சிறிதுகாலமாய் 'சுதேசமித்திரனும்' 'தமிழ்நாடும்' 'சுயராஜ்யா'வும் 'ஹிந்து'வும் மற்றும் சில பார்ப்பன கூலிப் பத்திரிகைகளும் இவ்வேலையில் ஈடுபட்டுத் தீவிரமாய் எதிர்ப் பிரசாரம் செய்து வருவதும் யாவரும் அறிந்த விஷயமாகும். இவ்வளவும் போதாமல் சீர்திருத்தக்காரர் என்றும், தேசாபிமானிகள் என்றும் பேர்வாங்கிய சில பார்ப்பனர்களும் இதில் ஈடுபட்டு மக்களை ஏய்த்து வருகிறார்கள்.

சீர்திருத்தக்காரர் என்பவர்களில் ஸ்ரீமான் கே. நடராஜன் என்னும் பார்ப்பனர் இந்தியா முழுதுக்கும் சீர்திருத்தக்காரர் என்னும் பேர்வாங்கி யவர். அவருடைய சூழ்ச்சியைப் பற்றி பலதடவை எழுதியிருக்கிறோம். ஸ்ரீ.சி. ராஜ கோபாலாச்சாரி என்கின்ற ஒரு ஐயங்கார் பார்ப்பனர் தமிழ்நாடு முழுவதிலும் பெரிய சீர்திருத்தக்காரர் என்ற பெயர் வாங்கினவர், தமிழ் மக்க ளையெல்லாம் அடியோடு ஏய்த்தவர். இப்பொழுதும் சமயம் பார்த்து வெளிக் கிளம்புவ தற்காக பதுங்கிக் கொண்டிருப்பவர். பொது உலகத்தில் தன்னை ஒருவரும்



RangaRakes tamilnavarasam.com

மறந்து விடாமலிருக்கும்படி விஷமப் பிரசாரத்தின் பேரால் அடிக்கடி தலைக்காட்டிக் கொண்டிருப்பவர். தனக்கு ஜாதி வித்தி யாசமில்லை என்பதாகச் சொல்லிக் கொண்டும், தன்னிடம் பார்ப்பனத் தன்மை இல்லை யென்று சொல்லிக் கொண்டும், பார்ப்பனீயத்தை விட்டு வெகுகாலமாயிற்று என்று சொல்லிக் கொண்டும், சில பார்ப்பனரல்லாத வாலிபர்களை ஏமாற்றிக் கொண்டும், பார்ப்பனரல்லாதாரியக்கத்தை ஒழித்து பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதில் இந்தியாவிலுள்ள பார்ப்பனரெல்லாரையும் விட அதிகமான கவலையும் அதற்கேற்ற சூழ்ச்சியும் தந்திரமும் கொண்டவர். இப்படிப்பட்ட ஸ்ரீ.ஸி. ராஜகோபாலாச்சாரியார் 21.3.28 ல் இங்கிலீஷ் ‘சுயராஜ்யா’ பத்திரிகையில் மனுதர்ம சாஸ்திரத்துக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு 7 கலங்கள் எழுதியிருக்கிறார். அதில், மனுசாஸ்திரத்தை எரிக்க வேண்டுமென்பது தற்கொலைக்கு ஒப்பாகுமென்றும், அது அருமையான நீதிகளைக் கொண்டது என்றும் விசேஷமாய் புகழ்ந்துவிட்டு, பார்ப்பனருக்கு சம்பந்தப்படாததும், கவலையில்லாததுமான விஷயங்களைப் பற்றி மனுதர்ம சாஸ்திரத்திலிருந்து இரண்டொரு வாக்கியங்களை எடுத்துக்காட்டி பொது ஜனங்களை ஏமாற்றப் பார்த்திருக்கிறார். இதன் காரணமென்னவென்போ மானால், மனுதர்ம சாஸ்திரத்தைக் கொளுத்த வேண்டுமென்பதான உணர்ச்சி இந்தியாவெங்கும் பரவி வருவதைப் பார்த்து அதை அழிப்பதற்காகவே எழுதப்பட்டதாகும். மனுதர்ம சாஸ்திரத்தில் உள்ள சில வாக்கியங்களை நாம் இதிலெடுத்து காட்டுகிறோம். அந்தந்த வாக்கியங்களின் முடிவில் அவ்வாக்கி யங்கள் எத்தனையாவது அத்தியாயத்தில் உள்ளதென்பதையும், அது எத்தனையாவது சுலோக மென்பதையும், காட்டி அவ்வவ்வாக்கியங்களை கீழே குறிப்பிடுகின்றோம். அதாவது

‘பிராமண குலத்தில் பிறந்தவன் ஆசாரமில்லாதவனாயினும் அவன் நீதி செலுத்தலாம், சூத்திரன் ஒருபோதும் நீதி செலுத்தலாகாது’. அ.8.சு.20.

‘சூத்திரர்கள் நிறைந்த தேசம் எப்பொழுதும் வறுமையுடைய தாயிருக்கும்’. அ.8. சு.22.

‘சூத்திரனாகவும் மிலேச்சனாகவும் பன்றியாகவும் பிறப்பது தமோகுணத்தின் கதி’ அ 8 சு.22

‘ஸ்திரீகள் புணர்ச்சி விஷயத்திலும், பிராமணரைக் காப்பாற்றும் விஷயத்திலும் பொய் சொன்னால் குற்றமில்லை’. அ.8.சு112.

‘நீதி ஸ்தலங்களில் பிரமாணம் செய்யவேண்டிய பிராமணனை சத்திய மாகச் சொல்லச் சொல்ல வேண்டும். பிரமாணம் செய்யவேண்டிய சூத்திர னைப் பழுக்கக் காய்ச்சின மழுவை எடுக்கச் சொல்ல வேண்டும். அல்லது தண்ணீரில் அமிழ்த்த வேண்டும். சூத்திரனுக்குக் கை வேகாமலும் தண்ணீரில்



அழுத்தியதால் உயிர்போகமலும் இருந்தால் அவன் சொன்னது சத்தியம் என உணர வேண்டும்.’ அ.8.சு113, 114, 115.

‘சூத்திரன் பிராமணரைத் திட்டினால் அவனது நாக்கையறுக்க வேண்டும். அ. 8, சு 270.

‘சூத்திரன் பிராமணர்களின் பெயர், ஜாதி இவற்றைச் சொல்லித் திட்டினால் 10 அங்குல நீளமுள்ள இரும்புத் தடியைக் காய்ச்சி எரிய எரிய அவன் வாயில் வைக்க வேண்டும்.’ அ.8.சு.271.

‘பிராமணனைப் பார்த்து’ நீ இதைச் செய்ய வேண்டும் என்று சொல்லு கிற சூத்திரன் வாயிலும் காதிலும் எண்ணெயைக் காய்ச்சி ஊற்றவேண்டும்.’ அ.8.சு272.

‘சூத்திரன் பிராமணனுடன் ஒரே ஆசனத்திலுட்கார்ந்தால் அவனது இடுப்பில் சூடு போட்டாவது அல்லது ஆசனப் பக்கத்தைச் சிறிது அறுத்தாவது ஊரைவிட்டுத் துரத்த வேண்டும். அ.8.சு281.

‘பிராமணனைக் காப்பாற்றும் பொருட்டு பிராமணரல்லாதாரைக் கொன்றவனுக்கு பாவமில்லை.’ அ.8.சு143.

‘சூத்திரன் பிராமணப்பெண்ணைப் புணர்ந்தால் அவனது உயிர்போகும் வரையில் தண்டிக்க வேண்டும்.’

‘பிராமணன் கொலைக்குற்றம் செய்தாலும் அவனைக் கொல்லாமல், செய்த குற்றத்துக்கு எத்தகைய தண்டனைக்கும் ஆளாக்காமலும் பொருளைக் கொடுத்து அனுப்பிவிட வேண்டும்’அ.8.சு380.

‘அரசன் சூத்திரனை பிராமணர் முதலிய உயர்ந்த சாதிக்கு பணிவிடை செய்யும்படி கட்டளை இடவேண்டும். சூத்திரன் மறுத்தால் அவனைத் தண்டிக்க வேண்டும்.’ அ.8.சு410.

‘பிராமணன் கூலி கொடாமலே சூத்திரனிடம் வேலை வாங்கலாம். ஏனென்றால் பிராமணனுக்கு தொண்டு செய்யவே கடவுளால் படைக்கப் பட்டிருக்கிறான்.’ அ.8.சு413.

‘பிராமணன் சந்தேகமின்றி சூத்திரன் தேடிய பொருளைக் கைப் பற்றலாம். ஏனென்றால் அடிமையாகிய சூத்திரன் எவ்விதப் பொரு ளுக்கும் உடையவனாக மாட்டான்.’ அ.8.சு417.

‘சூத்திரன் பொருள் சம்பாதித்தால் அது அவனுடைய எஜமான



RangaRakes tamilnavarasam.com

னாகிய பிராம்மணனுக்குச் சேரவேண்டுமேயன்றிச் சம்பாதித்தவனுக்குச் சேராது.' அ.9.சு416.

'பிராமணனால் சூத்திர ஸ்திரீக்குப் பிள்ளை பிறந்தால் அப் பிள்ளைக்குத் தந்தை சொத்தில் பங்கில்லை.' அ.8.சு455.

'பிராமணன் பொருளை அபகரித்த சூத்திரனை சித்திரவதை செய்து கொல்லவேண்டும். ஆனால் சூத்திரனுடைய பொருளை பிராமணன் தன் இஷ்டப்படி கொள்ளையிடலாம்.' அ.9.சு248.

'பிராமணன் மூடனானாலும் அவனே மேலான தெய்வம்' அ.9.சு317.

'பிராமணர்கள் இழிதொழில்களில் ஈடுபட்டிருந்தாலும் பூஜிக்கத் தக்கவர்களாவார்கள்.' அ.9.சு318.

'பிராமணனிடமிருந்து ஷத்திரியனுண்டானவ னானதனால் அவன் பிராமணனுக்குத் துன்பஞ்செய்தால் அவனை சூன்யம் செய்து ஒழிக்க வேண்டும்'. அ.9.சு319, 320.

'சூத்திரனுக்கு பிராமணப் பணிவிடை ஒன்றே பயன் தருவதாகும். அவன் பிராமணரில்லாதவிடத்தில் க்ஷத்திரியனுக்கும் க்ஷத்திரியனில்லா விட்டால் வைசியனுக்கும் தொண்டு செய்ய வேண்டும். அதிகமான பசுக் களும் செல்வமும் வைத்திருக்கிறவன் பிராமணன் கேட்டுக் கொடுக்கா விட்டால் களவு செய்தாவது பலாத்காரம் செய்தாவது அவற்றைப் பிராம ணன் எடுத்துக் கொள்ளலாம். அ.11.சு12.

'சூத்திரன் வீட்டிலிருந்து கேளாமலும் யோசிக்காமலும் தேவையான பொருளைப் பிராமணன் பலாத்காரத்தினால் கொள்ளையிடலாம்.' அ.11.சு13.

'யோக்கியமான அரசன் இவ்விதம் திருடிய பிராமணனைத் தண்டிக் கக் கூடாது.' அ.11.சு20.

'பெண்களையும் சூத்திரரையும் கொல்லுவது மிகவும் குறைந்த பாவ மாகும்.' அ.11.சு66.

'ஒரு பிராமணன் தவளையைக் கொன்றால் செய்ய வேண்டிய பிராயச்சித்தம் ஏதோ அதைத்தான் சூத்திரனைக் கொன்றால் செய்ய வேண்டும்.' அ.11.சு131.

'அதுவும் முடியாவிடில் வருணமந்திரத்தை 3 நாள் ஜெபித்தால் போதுமானது.' அ.11.சு132.

'க்ஷத்திரியன் இந்நூலில் சொல்லப்பட்டபடி ராஜ்ய பாரம் செய்வதே தவமாகும். சூத்திரன் பிராமணப் பணிவிடை செய்வதே தவமாகும்.' அ.11.சு285.

'சூத்திரன் பிராமணனுடைய தொழிலைச் செய்தாலும் சூத்திரனே யாவான். பிராமணன் சூத்திரனுடைய தொழிலைச் செய்தாலும் பிராமணனே யாவான். ஏனெனில் கடவுள் அப்படியே நிச்சயம் செய்துவிட்டார்.' அ.10.சு75.

'பிராமணரல்லாதவன் உயர்குலத்தோனுடைய தொழிலைச் செய்தால் அரசன் அவனது பொருள் முழுவதையும் பிடுங்கிக் கொண்டு அவனை நாட்டை விட்டுத் துரத்திவிட வேண்டும்.' அ.10.சு96.

'சூத்திரன் இம்மைக்கும் மோக்ஷத்திற்கும் பிராமணனையே தொழவேண்டும்.' அ.10.சு122.

'பிராமணன் உண்டு மிகுந்த எச்சில் ஆகாரமும் உடுத்திக் கிழிந்த ஆடையும் கெட்டுப்போன தானியங்களும் சூத்திரனுடைய ஜீவனத்துக்குக் கொடுக்க வேண்டும்' அ.10.சு125.

'சூத்திரன் எவ்வளவு திறமையுடையவனாயிருந்தாலும் கண்டிப்பாய் பொருள் சேர்க்கக் கூடாது. சூத்திரனைப் பொருள் சேர்க்கவிட்டால் அது பிராமணருக்குத் துன்பமாய் முடியும்.' அ.10.சு129.

'மனுவால் எந்த வருணத்தாருக்கு இந்த மனுதர்ம சாஸ்திரத்தால் என்ன தர்மம் விதிக்கப்பட்டதோ அதுவே வேத சம்மதமாகும். ஏனென்றால் அவர் வேதங்களின் கருத்துகளை நன்றாய் உணர்ந்தவர்.' அ.2.சு7.

'வேதத்தைச் சுருதியென்றும் மனுதர்ம சாஸ்திரத்தை ஸ்மிருதி யென்றும் அறியத் தக்கது. இது இரண்டையும் தர்க்க யுக்தியைக் கொண்டு மறுப்பவன் நாஸ்திகனாவான். அத்தகைய நாஸ்திகனை ஒழித்துவிட வேண்டும்.' அ.2.சு10.

இம் மாதிரி ஆயிரக்கணக்கான சுலோகங்கள் மனுதர்ம சாஸ்திரத்தில் காணப்படுவதைப் பற்றி ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரி என்ன சமாதானம் சொல்லுகிறார் என்று கேட்கிறோம். இது போலவே நாமும் நம்மையே ஒரு மனுவென்பதாகப் பெயர் சூட்டிக் கொண்டு பார்ப்பனரல்லாதாருக்கனுகூல மாய் ஒரு 'தர்ம நூல்' இதுபோல் எழுதினால் ஸ்ரீமான்கள் ராஜகோபா லாச்சாரியும் நடராஜனும் மற்றும் இந்துமதப் பிரசாரம் செய்யும் வரதராஜுலு



RangaRakes
tamilnavarasam.com

போன்றாரும் சும்மாயிருப்பார்களா வென்று கேட்கிறோம்.

இந்து மதம் என்பதற்கு மனுதர்ம சாஸ்திரமென்பதும் அதற்காதார மென்று சொல்லப்பட்ட வேதமென்பதும் இவைகளை ஆதாரமாய்க் கொண்டு எழுதி வைத்த புராணங்களென்பதும் அப்புராணங்களில் காணப் பட்ட கடவுள்கள் என்பவைகளும் தவிர வேறு ஏதாவது ஆதாரமிருக் கின்றதாக யாராவது சொல்ல முடியுமா? அன்றியும் அவ்வாதாரங்கள் இம் மனுவாதாரங்களை மறுக்க முடியுமா? இவற்றை யோசித்தால் நாம் செய்து வரும் பிரசாரம் யோக்கியமானதா அல்லது ஸ்ரீமான்கள் நடராஜனும் ராஜகோபாலாச்சாரியும் செய்துவரும் சீர்திருத்தப் பிரசாரமும் வரதராஜுலு வும் அவர்கள் போன்ற சில கூலிகளும் செய்து வரும் இந்துமதப் பிரசாரமும் யோக்கியமானதா என்று முடிவு செய்யும் பொறுப்பை ஜனங்களுக்கே விட்டுவிடுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 25.03.1928**



# ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியின் ‘ஞானோதயம்’

ராஜீய உலகத்தில் பார்ப்பனர்களுடையவும் அவர்களது வால்களினு டையவும் நாணயமும் யோக்கியதையும் அடியோடு ஒழிந்து அவர்களின் அயோக்கியத்தனம் வெளியாய் விட்டதால் இந்த சமயம் அவர்களுக்கு ஆதரவு கொடுக்க யாரும் இல்லாததை அறிந்து ஸ்ரீமான் காந்தி காலத்தில் அவர் நிழலில் யோக்கியதை பெற்ற ஸ்ரீ சி. ராஜகோபாலாச்சாரியார் இப் போது வெகு மும்முரமாய் முழு பார்ப்பன வேஷத்தோடு ஆதரிக்க வெளி வந்து விட்டார்.

முதலாவதாக மனுதர்ம சாஸ்திரத்தை ஆதரித்து எழுதினார். பிறகு ‘ஜஸ்டிஸ்’ கட்சியை வைது எழுதினார். இப்போது அரசியலே அயோக் கியத்தனமென்றும் தற்கால மந்திரிகள் ராஜீனாமா கொடுக்க வேண்டும் என்றும் எழுதி இருக்கிறார். ஸ்ரீ ஆச்சாரியார் அரசியல் அயோக்கியத்தனம் என்பதை என்றைய தினம் தெரிந்து கொண்டார்? திருட்டுத்தனமாய் பார்ப்பனர்களுடன் சேர்ந்துகொண்டு ஒத்துழையாமைக்கு டில்லியில் உலை வைத்தாரே அன்றா? அல்லது காகிநாடாவில் சட்டசபைக்கு போபவர்களை ஆதரித்தாரே அன்றா? அல்லது ஜமன்லால் பஜாஜ் இடம் ரூ.50000 வாங்கினாரே அன்றா? அல்லது புதுப்பாளையம் ஜமீன்தாரிடம் 10000 ரூ. பொறுமான தோப்பு தானமாய் வாங்கினாரே அன்றா? அல்லது ஸ்ரீ வெங்கட்டரமணய்யங்காருக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க நாயக்கர்மார்கள் கிராமங்களில் சுத்தினாரே அன்றா? அல்லது மது விலக்கின் பெயரால் சுயராஜ்யக் கட்சிக்கு ஓட்டுச் செய்யும்படி பத்திரிகைகளில் கோடு கட்டிய குறள்கள் எழுதிவந்தாரே அன்றா? அல்லது சட்டசபைத் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சிக்கு பலம் குறைந்ததாக தெரிந்தவுடன் சென்னைக்கு ஓடி டாக்டர் சுப்பராயனை முதல் மந்திரி ஆக்கினாரே அன்றா? அல்லது தமிழ் நாட்டில் எந்தப் பார்ப்பனரும் வெளியில் தலைகாட்டுவதற்கு யோக்யதை இல்லாமல் போன சமயம் பார்த்து ஸ்ரீமான் காந்தியை தமிழ்நாட்டுக்கு அழைத்து வந்து வருணாசிரம பிரசாரம் செய்வித்து அவரை அடியோடு ஒழித்தாரே அன்றா?

அல்லது ஸ்ரீமான் காந்தி செய்த பிரசார தைரியத்தை வைத்துக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டு மனுதர்ம சாஸ்திரப் பிரசாரம் செய்யத் துணிந்தாரே அன்றா? அல்லது புதுப்பாளையத்தில் பார்ப்பனரல்லாத ஜமீன்தாராகிய ஸ்ரீ ரத்தின சபாபதி கவுண்டர் தானமாய் கொடுத்ததான பூமியில் இருந்து கொண்டு "பத்மாசூரன் கதைபோல்" அந்த சமூகத்தையே ஒழிக்க ஒரு பத்திரிகை சீக்கிரத்தில் ஆரம்பிக்க முடிவு செய்தாரே அன்றா? அல்லது இவர் பார்ப் பனருக்கு அனுகூலமாக பிடித்து வைத்த மந்திரிக்கு பார்ப்பனரல்லாதார் அபிமானம் சிறிது தோன்ற ஆரம்பித்ததே அன்றா? என்று கேட்கின்றோம். நமது ஆச்சாரியாருக்கு தானும் தன் இனமும் என்ன அயோக்கியதனம் செய்தாலும் அது காந்தீயம், ஒத்துழையாமை, தேசாபிமானம், ஆஸ்ரமத் தன்மை முதலியவைகள் ஆகிவிடுகின்றது.

பார்ப்பனரல்லாதார் நன்மைக்காக ஏதாவது ஒரு சிறு நன்மை காணப்பட் டால் அது திடீரென்று தேசீய அயோக்கியத்தனமாகி விடுகின்றது. இதுவே தற்கால பார்ப்பனரல்லாதார் நிலைக்கு உதாரணம்போலும். 'நம்மவரே நம்ம குலத்தைக் கெடுக்கக் கைப்பிடியாய் இருக்கும் போது இரும்பு என்ன செய்யும்' என்று ஒரு மரம் சொல்லிற்றாம். அது போல் பார்ப் பனரல்லா தாரிலே உள்ள கோடலிக் காம்புகளை நினைக் கும் போது ஸ்ரீ ராஜகோபாலாச் சாரியாரின் நடவடிக்கை நமக்கு ஆச்சரிய மாகத் தோன்ற வில்லை.

**குடி அரசு - தலையங்கம் - 01.04.1928**



# "ஆனால் இந்து மதத்தை ஒழித்துவிடுவதே மேல்"

## சுவாமி ராமதீர்த்தாவின் வாக்கியம்

இந்திய சட்டசபையில் குழந்தைகள் விவாகத் தடுப்பு மசோதாவின் மேல் விவாதம் நடக்கையில் "சென்னை பிரதிநிதிகளான" அய்யங்கார் கூட்டத்தைச் சேர்ந்தவரும் சட்டசபை பிரயாணச் செலவிலேயே பெரிதும் வாழ்க்கை நடத்துகிறவருமான ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியார் அவர்கள் மேற்கண்ட மசோதாவை எதிர்த்துப் பேசும் போது இந்தியாவின் செல் வாக்குள்ள சனாதன தர்மிகளின் பிரதிநிதியாகவே தான் அச்சபையில் இருப்பதாகவும், எவ்வித சீர்திருத்தமும் சட்டத்தின் மூலம் செய்யக்கூடா தென்றும், மதத்தில் தலையிட யாருக்கும் இடம் கொடுக்கக்கூடாதென்றும் அதிலும் சர்க்கார் தலையிட கொஞ்சமும் இடம் கொடுக்கக் கூடாதென்றும், சர்க்காரை மிரட்டிப் பேசினபோது அதற்கு பதில் சொல்லக் கிளம்பிய ஸ்ரீமான் ஈஸ்வரண் சரமுன்ஷி அவர்கள், வைதீகர்களில் சிலர் இம் மசோதாவை எதிர்த்தாலும், ஏராளமான பொது ஜனங்கள் இம் மசோதாவை ஆதரிக்கிறார் கள் என்றும், ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியார் இம் மசோதாவை எதிர்ப்பதன் இரகசியம் தனக்கு விளங்கவில்லை என்றும், இன்று இந்து மதம் அடைந் திருக்கும் கேவல நிலைக்கு ஸ்ரீ ஆச்சாரியார் போன்றவர்களே காரணம் என்றும், 'இந்து மதம் முன்னேற்றத்திற்குத் தடையிருக்குமானால் அதை ஒழித்து விடுவதே மேல்' என்று சுவாமி ராமதீர்த்தர் கூறியிருக்கின்றார் என்றும் கூறினாராம்.

இந்து மதத்தை காப்பாற்றத் தோன்றியிருப்பதாய் நடிக்கும் நமது "தமிழ்நாடு" பத்திரிகையோ அல்லது ஸ்ரீ வரதராஜுலுவோ இந்திய சட்டசபையிலும் இருந்திருந்தால் "முன்ஷி" ஈஸ்வர சரணரின் நயவஞ்சகம் என்றோ அல்லது "ஈஸ்வர சரணர் பிரசாரம்" என்றோ தலையங்கம் கிளம்பியிருக்கும். அவைகள் அருகிலில்லாதது ஸ்ரீ ஈஸ்வர சரணர் நல்ல காலமே ஆகும். தவிர பொது ஜனங்களின் பிரதிநிதி என்று சொல்லி சட்ட



RangaRakes tamilnavarasam.com

சபைக்குப் போய் அதனால் வயிறு வளர்க்கும் ஸ்ரீமான் எம்.கே. ஆச்சாரியார் இப்போது தாம் சனாதன வைதீகர்களின் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ளும் அயோக்கியத்தனத்தை அறிந்து அவருக்குப் பொது ஜனங்கள் தக்க புத்தி கற்பிப்பார்களா என்றும் கேட்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 01.04.1928**



# சர். பாத்ரோ ஆச்சாரியார்

சென்னை சட்டசபையில், பாலிய விவாகத்தை தடுக்க ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாளால் கொண்டுவரப்பட்ட ஒரு சிபார்சு தீர்மானம் விவாதத்திற்கு வந்த காலத்தில் சர். பாத்ரோ அவர்கள் அத்தீர்மானத்திற்கு எதிரிடையாய் அதாவது மதத்தில் சர்க்கார் பிரவேசிக்கக்கூடாது என்று பேசியிருக்கிறார். இது யோக்கியமா என்று கேட்கிறோம். இந்த சம்பவம் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கே ஒரு பெரிய மானக்கேடு என்று சொல்லு வோம். மனிதர்கள் அரசியலில் கரணம் போடுவதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஏனென்றால் அரசியல் என்றாலே அயோக்கியதனம், கேப்பமாறித்தனம், தேசத்துரோகம் என்பவைகள் நமது அகராதி அர்த்தம். காங்கிரஸ் கொள்கை முதல்கொண்டு, அதை ஆரம்பித்த பெரியார்கள் என்பவர்கள் முதல்கொண்டு, அதில் உள்ள தலைவர்கள் என்பவர்கள் முதல்கொண்டு, எல்லாவற்றிலும் பெரும்பான்மையார்கள் அந்த எண்ணத்தைக் கொண்டே ஆரம்பித்து நடத்திவரப்படுகின்றது என்பதே நமது முடிவு. ஆனால் சமூக சீர்திருத்த விஷயத்திலாவது மேல்கண்ட குணங்கள் இல்லாமல் யோக்கியமாய் நடந்து கொள்ள வேண்டாமா என்று கேட்கின்றோம். சர்.பாத்ரோ பிரம்ம சமாஜி என்று சொல்லிக் கொள்ளுபவர். உண்மையிலேயே அவருக்கு மதத்தில் சர்க்கார் பிரவேசிக்கக் கூடாது என்கின்ற அபிப்பிராயமிருக்குமானால் தேவஸ்தான சட்டம் செய்ததைப் பற்றியும் யூனிவர்சிடியில் செய்ததைப் பற்றியும் மன்னிப்பு கேட்டுக் கொண்டு மரியாதையாக பார்ப்பனரல்லாதார் கட்சியை விட்டு வெளியில் போய்விடும் படியாக வேண்டிக்கொள்ளுகிறோம். ஸ்ரீ பாத்ரோ ஆச்சாரி யாரைவிட ஸ்ரீ வரதராஜுலு அய்யங்காரே மேல் என்று ஜனங்கள் நினைக் கும்படி நடந்து கொண்டதற்கு நாம் மிகுதியும் பரிதாபப்படுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 01.04.1928**



RangaRakes tamilnavarasam.com

# "தமிழ்நாடு" பத்திரிகையின் புரட்டு

'தமிழ்நாடு' பத்திரிகை 6000 பிரதி வெளியாகின்றது என்று சூழ்ச்சி அறிக்கை வெளியானதைப் பற்றி நாம் முன்னமேயே அச் சூழ்ச்சிக்கு ஆதர வாய் இருந்த சர்க்கார் அதிகாரிகளையும் கண்டித்து எழுதியிருந்தோம். இப்போது சர்க்காரார் இனி அம்மாதிரி நடந்து கொள்ளுவதில்லை என்று ஒரு அறிக்கை வெளியிட்டு இருக்கின்றார்கள்.

மேற்படி அறிக்கை வெளியிடப்பட்ட காலத்தில் 'தமிழ்நாடு' தினசரிப் பத்திரிகை ஆரம்பிக்கவே இல்லை. வாரப் பத்திரிகை அவ்வளவு இருந்ததாக அவர்களே சொல்லுவதும் இல்லை. ஆகவே இப்புரட்டு சர்க்காருக்கு தாராளமாய் வெளிப்படுத்தப்பட்டுவிட்டதால் சர்க்கார் 23.3.28ல் ஒரு அறிக்கை வெளியிட்டு அதில் 'ஜஸ்டிஸ்' பத்திரிகை இந்த இரண்டு வருஷ மாய் அதிகமாய்க் கொண்டு வருவதை ஒப்புக் கொண்டு இனிமேல் விவகாரத் திற்கு இடம் கொடுக்கத் தக்கதான பத்திரிகைகளின் எண்ணிக்கை களைப் பற்றி வெளிப்படுத்துவதில்லை என்றும் தெரிவித்து விட்டார்கள். இதிலிருந்து ஸ்ரீ வரதராஜுலுவின் சூழ்ச்சி நிஜமா அல்லது நாயக்கரின் கண்ணப்பரின் பொறாமை நிஜமா? என்பதை முடிவு செய்யும் வேலையை பொது ஜனங் களுக்கே விட்டு விடுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 01.04.1928**



# பாலிய விவாகம்

**குழந்தை :** என்னடி அம்மா நேற்று அவன் கழுத்தில் போட்டிருந்த நகையைக் காணோமே! அதை யார் எடுத்தார்கள்?

**தாயார் :** அடி பாவி அது நகையல்ல ; தாலி அதை ராத்திரி அறுத் தாய்விட்டது.

**குழந்தை :** எனக்குத் தெரியவில்லையே.

**தாயார்:** ராத்திரி 11 -மணி இருக்கும் நீ அப்போது தூங்கி விழுந்து கொண்டிருந்தாய். ஆதலால் உனக்குத் தெரியவில்லை.

**குழந்தை :** அதை ஏன் அறுத்தார்கள்

**தாயார்:** அத்தாலியைக் கட்டின உன் புருஷன் இறந்துபோய் விட்டா னல்லவா. அதனால் அறுத்துவிட்டார்கள்.

**குழந்தை :** அவன் போனால் போகட்டுமே. வேறு யாரையாவது கட்டச் சொல்வதுதானே, அதையேன் எனக்குத் தெரியாமல் கழட்டிக் கொண்டாய், அதை மறுபடியும் என் கழுத்தில் போட்டால் தான் சாப்பிடுவேன். ஊ! ஊ!! ஊ!!!

**குடி அரசு - உரையாடல் - 01.04.1928**



RangaRakes tamilnavarasam.com

# உத்தியோகம் பெறுவது தேசத்துரோகமல்ல அதுவே சுயராஜ்யம்

தலைவர் அவர்களே! சகோதரர்களே!!

நான் நேற்று ஈரோட்டிலிருந்து புறப்பட்டு மதுரைக்குப் புறப்பட்டு செல்லும்பொழுது ஸ்ரீ திருமலைசாமி செட்டியார் ஸ்டேஷனில் வற்புறுத் தலுக்கிணங்கி இங்கு பேசுவதாக ஒப்புக்கொண்டேன்.

நான் இன்று பேசுவதாகக் குறிப்பிட்டுள்ள விஷயம் 'சட்ட அங்கத் தினரும் மந்திரிகளும்' என்பதாகும். நான் இப்பொழுது மந்திரிகளைப் பற்றி பேசுகிறேன். பின்னர் முன்னைய பொருளை விளக்குவேன். சென்ற தேர்தலில் அதிக அங்கத்தினரைக் கொண்டதாக வெற்றி பெற்றது சுயராஜ் யக் கட்சி. அவர்கள் பொது மக்களிடத்திலே ஓட்டு பெற்ற காலத்தில் என்ன வாக்குறுதி செய்தார்கள்? நாங்கள் அதிகார வர்க்கத்தை ஒரேயடியாய் எதிர்ப் போம். மந்திரிசபையை எந்த காரணத்தை முன்னிட்டும் ஒப்புக்கொள்ள மாட்டோம், இரட்டையாட்சியைக் கலைப்போம், சுயராஜ்யத்தை விரைவில் வாங்கித் தருவோம் என்று 'கர்ச்சித்து' உட்புகுந்தார்கள். எனவே, இவர்கட்கு மந்திரிசபையில் வேலையில்லாது போய்விட்டது. இரண்டாவதாக விளங்கிய ஜஸ்டிஸ் கட்சியார் முழு ஓட் பலமின்மையால் ஒப்புகொள்ள மறுத்து விட்டனர். இவர்கள் எங்களுக்கு ஓட் வழங்கி பெரும்பான்மையாய் அனுப் பினால் மந்திரி சபையை ஒப்புக்கொண்டு அதனால் பார்ப்பனரல்லாதா ருக்குச் செய்யக்கூடிய எல்லா நலன்களையும் செய்வோம் என்று உறுதியிட்டு வெற்றி பெற்றார்கள். எஞ்சி நின்றது சில்லரை கக்ஷிகள். அவைகளிடத்தில் பேரம் பேசிச் சுயேச்சைக் கட்சியென்று உற்பத்தி செய்து மந்திரிசபையை நியமிக்க இரட்டையாட்சியைக் கலைக்கும் வீரர் நிறைந்த சுயராஜ்யக் கட்சி ஆதரவு தந்தது. இந்த உண்மையை அறியாத பொது மக்கள் சந்தேகங் கொண்டனர். உண்மையை வெளிப்படுத்தும் பொருட்டு ஜஸ்டிஸ் கட்சியார் நம்பிக்கையில்லாத தீர்மானங் கொண்டு வந்தனர். காங்கிரஸ் கக்ஷியார் அதை எதிர்த்து தங்கள் யோக்கியதையை வெட்ட வெளிச்சமாக்கினர். இதனால் எங்கும் அவர்கள் மீது பெரும்புகார் ஏற்பட்டது. எவரும் சுயராஜ்யக் கட்சியை இழித்துக் கூறுவாராயினர். இந்த இழிவை நிவர்த்தித்துக் கொள்ள சென்னை



மாகாணம் சம்பந்தப்பட்ட மட்டில் ஜஸ்டிஸ் கட்சியாரை ஒழிக்கவே காங்கிரஸ் மந்திரி சபையை உடைக்குந் தீர்மானத்தை நிறைவேற்றியதாகவும் அந்த வேலையை சென்னை சுயராஜ்யக் கட்சியார் செய்து முடித்ததற்கு அவர்களை பாராட்டுவதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டனர். ஏன் சுயேச்சை கட்சியை ஆதரிக்க வேண்டுமென்ற கேள்வி எழும்போது 'தாங்கள் அப்படி' செய்யாது போயின் ஜஸ்டிஸ் கட்சியினர் மந்திரி பதவி ஒப்புக்கொள்ளுவர், என்று சொல்லி ஏமாற்றி வந்தனர். ஜஸ்டிஸ் கட்சியினர் கூட்டம் கூட்டி ஒப்பு கொள்ளுவதில்லை என்று உறுதி கூறினர். அதில் நம்பிக்கை இல்லையென்று காங்கிரஸ்காரர் ஏமாற்றிவந்தனர். முடிவில் கோயம்புத்தூரில் ஜஸ்டிஸ் கட்சியின் மாகாண மகாநாடு கூட்டப்பட்டது. அங்கு ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமான கொள்கையையுடைய மந்திரிகளை எதிர்க்க வேண்டுமென்றும் சட்ட மெம்பர் பார்ப்பனராயிருப்பதால் மந்திரிகள் தங்கள் வேலைகளை சுதந்திரமாய் செய்ய முடியவில்லை யாதலாலும், பல இடையூறுகள் நேருகின்றமையாலும் மாகாண சுயாட்சி வரும் வரையில் (இரட்டையாட்சி ஒழியும் வரை) மந்திரிசபையை ஏற்றுக் கொள்ளுவதில்லை என்ற தீர்மானம் ஒன்று நிறைவேறியிருக்கிறது. பார்ப்பன சட்டமெம்பர் சொன்னபடியெல்லாம் கவர்னர் நடந்தமையால் கவர்னர் மீதும் நம்பிக்கை யில்லா தீர்மானம் நிறைவேறியது. ராயல் கமிஷன் சம்பந்தமான தீர்மானம் சட்டசபையில் வந்தமையால் மந்திரிகட்குள் பிளவேற்பட்டது. எனவே, ஒத்துழைப்பதாகச் சொன்ன டாக்டர் சுப்பராயன் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் சுயராஜ்யக் கட்சியார் கொண்டு வந்து தோல்வியுற்றனர். இந்த காரணங்கொண்டு ஏனைய இரண்டு மந்திரிகளையும் கவர்னர் விலகுமாறு உத்திரவிட்டு விட்டார். உடனே இந்த பதவிகளை ஜஸ்டிஸ் கட்சியினர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கவர்னர் வற்புறுத்தினார். தங்கள் கோயம்புத்தூர் தீர்மானத்திற்கிணங்க சட்ட மெம்பர் தங்கள் கட்சியைச் சார்ந்தவராய் இருந்தாலொழிய ஒத்துழைக்கவும் முடியாதென்று கூறிவிட்டனர். இவர்கள் சட்ட மெம்பர் பதவியினால் இடையூறு விளைவதற்கு முதற் காரணமாயிருந் ததென்று சொல்லப்பட்ட இலாக்காக்களை வழக்கப்படி வேறு மந்திரிகளிடம் கவர்னர் ஒப்படைத்தார். அந்த சட்ட மெம்பர் பதவிக்கு நியமிக்கப்பட்டு இரண்டு நாட்கள் வேலை பார்த்த ஸ்ரீ வெங்கிட்டராம சாஸ்திரி உடனே விலக நேரிட்டது. பிறகு அரசாங்கத்திற்கு புத்தி வந்து இப்பதவியை பார்ப்பன ரல்லாதாருக்கு கொடுக்க வேண்டியதாயிற்று. அதன்பேரில் தாங்கள் மந்திரி பதவி ஒப்புக்கொள்ள முடியாது என்றும் பார்ப்பனரல்லாதாருக்கு பெருந் துன்பம் விளைவித்து வந்த இந்த பதவி தம் வசப்பட்டதால் சுயேச்சைக் கட்சியினர் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு இடையூறு இல்லாத மந்திரி சபை நியமித்தால் தாங்கள் அதை எதிர்ப்பதில்லை என்று ஜஸ்டிஸ் கட்சியார் கூறினர். அதுபோல் மந்திரி சபையும் நியமிக்கப்பட்டது. இவைகளினின்று ஜஸ்டிஸ் கட்சியினர் நியாய நெறியினின்றும் தவறிவிட்டதாக எவராவது கூற முடியுமா? மெய்ப்பிக்க முடியுமா? காங்கிரஸ்காரர் பொறாமை கொண்டு



RangaRakes tamilnavarasam.com

நம்மை குட்டிக்கரணம் என்று கத்தினால் அறிவுடைய உலகம் ஒப்புக் கொள்ளுமா?

சட்ட மெம்பர் பதவிக்கு நமது கிருஷ்ணன் நாயர் அவர்கள் நியமிக்கப்பட்டவுடன் பார்ப்பனர்கள் நம்மை தேசத்துரோகம் என்று பூச்சாண்டி காட்டுகின்றனர். அவர்கள் யோக்கியதையை கவனியுங்கள். சென்ற பதினெட்டு வருடங்களாய் வழக்கமாகவோ, நிர்பந்தமாகவோ சட்ட மெம்பர் பார்ப்பனரே நியமிக்கப்பட்டு வந்தனர். அந்த காலத்தில் அவர்கள் நமது சமூகத்திற்கு இழைத்த அநீதிகள் அளவற்றன. ஆறு பார்ப்பனர் அந்த பதவியிலிருந்து நம்மை தலையெடுக்க வொட்டாமல், அரசாங்கத்தார் மக்களைக் கொடுமைப்படுத்திய காலத்தில் ஸ்ரீமான்கள் கிருஷ்ணசாமி அய்யர், சிவசாமி அய்யர், சீனிவாசய்யங்கார், ராமசாமி அய்யர் முதலியவர்கள் மாப்பிள்ளை போல அந்த பதவியில் உட்கார்ந்திருந்தனர். ஒத்துழையாமை காலத்திலே ஆயிரக்கணக்கான மக்கள் ஜெயில் வாசம் செய்த காலத்திலே மாப்பிள்ளை போல் சர். சி.பி. ராமசாமி அய்யர் அந்த பதவியை ஒப்புக்கொள்ளவில்லையா? 144-வது தடையுத்தரவை அந்த காலத்தில் அநுஷ்டித்து வந்த அக்கிரமத்தை ஒப்புக்கொள்ளவில்லையா? பாலக்காடு தெருவில் நடக்கும் தீர்மானத்துக்கு அக்கிரம வியாக்கியானம் செய்யவில்லையா? இப்பொழுது சுயமரியாதைக்காக விலகியதாக புழுகும் அதே ஸ்ரீ வெங்கட்ராம சாஸ்திரி அவர்கள் அந்த காலத்தில் அட்வகேட் ஜெனரல் பதவியினின்றும் ஏன் இராஜீனாமா செய்யவில்லை? தேசாபிமானிகட்கு அப்பொழுது அவமானம் எங்கு சென்றிருந்தது என்று கேட்கின்றேன். சட்ட மெம்பர் பதவிக்கு இன்ன இலாக்காக்களை கொடுக்க வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டில் சட்டம் கிடையாது. அப்படியிருக்க ஜனாப் உஸ்மான் என்ற மகமதிய கனவானுக்கு புதிதாக சில இலாக்காக்களை மாற்றிய உடன் ஏன் இவ்வளவு பொறாமைப் படவேண்டும். இப்பொழுது இவ்வளவு பெரும் சப்தம் போடும் பார்ப்பனர்கள் அக்காலத்தில் நமக்கு செய்த தீங்குகளை ஒருவாறு எண்ணி பார்க்கட்டும். அவர்களால் நீதி இலாக்காவில் நமக்கு நேர்ந்த துன்பங்கள் சொல்லி முடியாது. சென்னை ஹைகோர்ட்டில் ஒரு மகமதிய கனவான் காலியான அந்த ஸ்தானத்திற்கு ஒரு மகமதியரை நியமிக்க சட்டசபைத் தீர்மானம் செய்து கூட ஒரு ஐயங்கார் நியமிக்கப்பட்டார். அந்த பதவியில் இருக்க வேறொரு மகமதியருக்கு உரிமை இல்லையா? பார்ப்பன சட்ட மெம்பர்கள் மகமதியர்களுக்கோ மற்றவர்களுக்கோ வேலை கொடுக்காதொழிந்தாலும் கவலை இல்லை. லாயக்கு இல்லை என்று நம்மைச் சொன் னால் இதை யார் பொருத்துக் கொள்ள முடியும். இதைவிட வேறு என்ன அயோக்கியத்தனம் அவர்கள் செய்ய வேண்டும் என்று யோசித்துப் பாருங்கள்.

நாம் உத்தியோகம் பெறுவதை உத்தியோக வேட்டை என்றும் தேசத் துரோகம் என்றும் சொல்லிக் கொண்டு தாங்களே எல்லா உத்தியோகங் களிலும் இருக்க ஆசைப்படுவது **“சரீரம் அநித்தியம் உன்சொத்தை எனக்கு கொடுத்துவிடு”** என்பதைப் போன்ற அயோக்கியத்தனம் அல்லவா வென்று கேட்கின்றேன். இப்பொழுது ஆயிரக்கணக்கான மக்கள் ஆங்கில அடிமைக் கலாசாலைகளில் படிக்கின்றனர். படிக்கின்றவர்கள் எல்லாம் உத்தி யோகப் பைத்தியம் பிடித்து அலைவதும் தொழிலில்லாது பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் வருந்துவதும் நாம் கண்ணால் நாடோறும் பார்க்கின்ற காட்சிகளாகும். இதற்கு முதற்காரணமாயிருந்தது காங்கிரசு. காங்கிரசு சபைதான் உத்தியோகங்களை பெருக்க வேண்டும் என்று மன்றாடியது. அதுதான் சுயராஜ்யம் என்று இப்போதும் கருதி வருகிறது. உத்தியோகம் பார்ப்பது தேசசேவை என்று பார்ப்பனர் கருதி படித்து விட்டு எவ்வளவோ இழித் தொழில்களைச் செய்து பெரிய பெரிய உத்தியோகங்களை எல்லாம் பெற்று நமக்கு தீங்கிழைத்து வருகிறார்கள். நம்நாட்டில் ஒவ்வொரு மனிதனுடைய ஜாதகமும் உத்தியோகம் கிடைக்குமா கிடைக்காதா என்பதைப் பற்றித்தான் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு நாளும் எத்தனையோ பள்ளிக் கூடங்கள் எதற்காக புதுப்பித்து வருகின்றார்கள்? உத்தியோகங்கட்கு ஆட்களை திரட்டுவதற்காகவா அல்லவா? பள்ளிக்கூடங்களில் எல்லோருமே பிள்ளைகளும் படிக்கின்றார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் யார்? பார்ப்பனர்கள் என்பதை எவர் மறுக்க முடியும்? அவர்கள் எதற்காக படிக்கின்றார்கள்? சங்கராச்சாரியாகவா? ஜீயர்களாகவா? மாதம் மூன்று மழை பெய்யச் செய்யவா? ஆற்றோரத்தில் உட்கார்ந்து கொண்டு மூக்கைப் பிடித்துக் கொள்ளவா? இல்லவே இல்லை. அது உத்தியோகம் பெறுவதற் கென்பதை விளையாட்டுப் பிள்ளையும் அறியும். உத்தியோகம் பெறுவதற் கென்று படிக்கும் அவர்களெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியாருக்கா பிறந்தார்கள்? ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டையாடுகிறதென்பதற்கு பொருள்தான் என்ன?

## சைமன் கமிஷன்

சைமன் கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமென்ற காங்கிரஸ் அது நாட்டைவிட்டு செல்லுவதற்கு முன்னேயே ஒரு சுயராஜ்யத் திட்டம் தயாரித்தனுப்பியிருக்கிறது. அந்த திட்டப்படி உத்தியோகங்கள் ஒன்றுக்கு பத்தாக ஆவதைத்தவிர வேறு பயன் பெற முடியாது. 130 அங்கத்தினர்கள் உள்ள சட்டசபைக்கு 400 அங்கத்தினர்கள் வேண்டுமாம். 150 பேர் உள்ள டெல்லி சட்டசபைக்கு 700 அங்கத்தினர்களாக்க வேண்டுமாம். இதுவா சைமன் கமிஷன் பகிஷ்காரம்? மாஜி காங்கிரஸ் தலைவர்களான ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார் திட்டம் தயாரித்து புத்தக வடிவில் வெளியிட்டு 8 அணாவுக்கு கடைதோறும் விற்கிறது. ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் ஸ்ரீ அனிபெசண்டு ஸ்ரீ நேரு முதலியவர்கள் திட்டத்தை பார்லிமெண்டுக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். தற்கால காங்கிரஸ் தலைவர் டாக்டர் அன்சாரி சர்வ கட்சி மகாநாடு கூட்டி சைமன் கமிஷனிடம் திட்டத்தை அனுப்பப் போகிறார்.


RangaRakes
tamilnavarasam.com

வீடு வேகிற சமயத்தில் பிடுங்கினது லாபம் என்பதாக வீட்டிலுள்ள சாமான்களை வேடிக்கை பார்க்க வந்தவர் பங்கிட்டுக் கொள்வது போல் காங்கிரஸ்காரர்கள் நடந்து வருவார்களானால் அவர்களுடன் ஜஸ்டிஸ் கட்சியார் எப்படி ஒத்துழைக்க முடியும்? தங்கள் பரம்பரை வழக்கம்போல் ஏமாந்தவன் துடையில் கயிறு திரிப்பது என்ற தத்துவத்தை பார்ப்பனர்கள் கையாண்டு வருகிறார்கள். இந்த நிலையில் சுயராஜ்யம் என்பது எதுவா யிருக்க முடியும்? இந்த கேள்விகளுக்கெல்லாம் எந்த காங்கிரஸ்காரராவது பார்ப்பனராவது சமாதானம் சொல்லுகிறார்களா? சொல்லுவதேயில்லை. இதற்குக் காரணம், நம்மை பொருட்படுத்தவில்லை என்று அவர்கள் சொல்லலாம். நாம் உத்தியோகம் ஒப்புக் கொள்ளுவதை மட்டும் ஏன் அவர்கள் பொருட்படுத்தி குலைத்துக் கொண்டிருக்க வேண் டும்? சட்ட மெம்பர் வேலையை நாம் ஒப்புக் கொண்டதால் உண்டாகும் தீமையை யாராவது சொன்னார்களா? உலகத்தாரெல்லாம் பைத்தியக்காரர்கள் என்று எண்ணி தேசத்துரோகம் என்பதன் மூலமாக அவர்களுடைய பொறாமைச் செறிவைக் காண்பித்து வருகிறார்கள். இவைகளிலிருந்து உத்தியோகம் ஏற்பது தேசத்துரோகமல்ல வென்றும், அதுதான் தேசத் தொண்டு, அதுதான் சுயராஜ்யம் என்றும் பார்ப்பனர்கள் கருதி வேலை செய்து வரும் உண்மையை நாம் ஒவ்வொருவரும் அறிந்து நன்னிலை யடைவோமாக.

*குறிப்பு: 02.04.1928 ஆம் நாள் திருச்சி டவுன்ஹாலின் முன்பு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 08.04.1928**



# ஏற்றுக்கொண்டோம்

'திராவிடன்' பத்திரிகையின் நிர்வாகத்தை நாம் ஏற்றுக் கொள்ளுவதா என்கின்ற விஷயத்தைப் பற்றி பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்தை கேட்டிருந்தது வாசகர்களுக்குத் தெரியும். அதற்கு பதிலாக சுமார் 500 கனவான்களுக்கு மேலாகவே 'திராவிடனை' ஒப்புக் கொள்ளும் படிக்கு எழுதினதுடன் தங்கள் தங்களால் கூடுமான உதவியைச் செய்ய முன் வருவதாக வாக்குத்தத்தமும் செய்தார்கள். அதை அனுசரித்து சென்ற ஆவணி -மீ 26-தேதி 'குடி அரசில்' 'சென்னைக்குச் செல்கின்றோம்' என்பதாக ஒரு தலையங்கம் எழுதி அதன் கீழ் 'திராவிடனை' நடத்துவதில் நமது கொள்கை இன்னது என்பதையும் விளக்கியிருக்கின்றோம். அதாவது,

'திராவிடன்' கொள்கைகள் 'குடி அரசு' கொள்கைப்படியேதான் இருக்கும். "குடி அரசின்" கொள்கைகள் யாவரும் அறிந்திருப்பார்க ளென்றே நினைக்கிறோம். அதாவது:- **பார்ப்பனரல்லாதாரை அழுத்தி பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்த பார்ப்பனர்களுக்கு நமது நாட்டில் ஆயுதங்களாக இருக்கும் அரசியல் புரட்டையும், மதப் புரட்டையும் அடியோடு அழிப்பதுடன் பார்ப்பனீயத்தையும் ஒழித்து மக்களுக்கு சுயமரியாதை உண்டாகும்படி செய்வது** என்பதுதான். இதற்கு 'திராவிடன்' சொந்தக்காரர்கள் சம்மதிக்காதபோது நாம் விலகிவிடுவோம் என்பது உறுதி. இது சமயம் இந்தக் கொள்கையை ஒப்புக் கொள்ளவோ ஆதரிக்கவோ நமது நாட்டில் ஒரு குட்டித் தலைவராவது ஒருகுட்டிப் பத்திரிகையாவது இல்லை. ஆனாலும் நாம் அதற்காக பயப்படவில்லை.

ஏனெனில் இக்காரியங்கள் நடைபெறாமல் போனால் நமது பார்ப்பன ரல்லாதார் சமூகத்துக்கு மாத்திரமல்லாமல் இந்தியாவுக்கே சுயமரியாதையும் விடுதலையும் ஒருக்காலும் ஏற்படப்போவதில்லை என்பதே நமது முடிவு. பார்ப்பனரல்லாதார் இயக்கமாகிய தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தாரும் அவர்களது பத்திரிகைகளாகிய 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைகளுங்கூட இக்கொள்கைகளைப் பொருத்த வரையில் நம்மிடம் சிறிது அபிப்பிராய பேதம் கொண்டிருப்பதும் நமக்குத் தெரியும். நம்மிடம் 'திராவிடன்' ஒப்புவிக் கப்பட்டால் இக்கொள்கைகளுடன் தான் அது நடத்தப்பெறும் என்பதாக அவர்களுக்கும் இப்போதே சொல்லி விடுகிறோம். அரை நூற்றாண்டாக அநேக இந்திய மேதாவிகளால் உண்டாக்கப்பட்டதாகச் சொல்லப்படும்



RangaRakes tamilnavarasam.com

அரசியலைக் குற்றம் சொல்வதும் ஆயிரக்கணக்கான வருஷங்களாக ரிஷிகளாலும், முனிவர்களாலும், கடவுள் அவதாரங்களாலும் உண்டாக்கப்பட்ட தாய்ச் சொல்லப்படும் – 'மகாத்மா' காந்தியாலும் கூட சொல்லப்படும் – மத இயலைக் குற்றம் சொல்வதும், இரத்தத்திலும், நரம்புகளிலும், எலும்புகளிலும், சதையிலும் ஊறிக்கலந்து இருக்கும் இவ்விஷயங்களைக் குற்றம் சொல்லி மக்களைத் திருப்புவது என்பதும் ஒருக்காலும் சுலபமான காரியம் என்ற சொல்ல முடியாது. அன்றியும் தற்போது எல்லாத்துறைகளின் ஆதிக்கத்திலும், அதிகாரத்திலும் இருக்கும் பார்ப்பனீயத்தை ஒழிப்பது என்பது இவற்றையெல்லாம்விட அதிகமான கஷ்டமென்பதும் நாம் சொல்லாமலே விளங்கும். இதற்கு ஆதாரமாக "மகாத்மா" காந்தியினாலேயே "பார்ப்பனீயமில்லாதவர்" என்று மதிக்கப்பட்ட ஒரு பார்ப்பனர் ஒரு சமயம் சொன்ன வார்த்தைகளைக் குறிப்பிடுகின்றோம்.

"பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான வருஷங்களாக அனேக பெரியவர்களாலும், சித்தர்களாலும், சமணர்களாலும், புத்தர்களாலும் எவ்வளவோ பாடுபட்டாய் விட்டது. மற்றும் மகமதிய அரசாங்கத்தாராலும் எவ்வளவோ பாடுபட்டு பார்த்தாய் விட்டது. இதனால் இவ்வளவு பேரும் தோற்றார்களே யொழிய ஒருவரும் வெற்றி பெறவில்லை. இந்த நிலையில் உன் ஒருவனுடைய முயற்சி எம்மாத்திரம்?" என்று சொல்லி பரிகாசம் செய்தார்.

இந்த வார்த்தைகள் வாஸ்தவமாக இருந்தாலும் இருக்கலாம். அது போலவே நமது முயற்சியும் வெற்றி பெறாமல் தோல்வியும் உறலாம். ஆனாலும் ஒன்று மாத்திரம் சொல்லுவோம். என்னவெனில் இம்முயற்சிகள் வெற்றிபெறாமல் நமது நாட்டுக்கும் சமூகத்துக்கும் விடுதலை இல்லை என்பதை மாத்திரம் மறுபடியும் உறுதியாய்ச் சொல்லுகிறோம். எனவே நமக்கு இதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று நமக்கு பட்ட வழியில் உழைக்க வேண்டியது நமது கடமையே அல்லாமல் வெற்றி, தோல்வி என்பவைகளைப் பற்றி முதலிலேயே முடிவு செய்து கொள்ள வேண்டியது நமது கடமை அல்ல.

எனவே நமது நாட்டிலுள்ள பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் இவ் விஷயங்களை நன்றாய் கவனிப்பதோடு மற்றொரு விஷயத்தையும் அறியவேண்டும். அதாவது 'திராவிடனும்' 'குடிஅரசும்' பார்ப்பனர்கள் கையில் இருக்கும் உத்தியோகங்களையும் பதவிகளையும் பிடுங்கி பார்ப்பனரல்லாத ஜமீன்தாரர்களும் மிராஸ்தாரர்களும் வியாபாரிகளும் லேவாதேவிக்காரருமான பணக்காரர்களுக்கும் ஆங்கிலம் படித்த வக்கீல்களுக்கும் கொடுப்பதற்காக நடத்துகிறது என்று நினைப்பார்களானால் அவர்கள் கண்டிப்பாய் ஏமாந்து பேவார்கள். ஏனெனில் அரசியல் விஷயத்தில் பார்ப்பன ஆதிக்கத்தை விட பணக்கார ஆதிக்கத்தைவிட வக்கீல் ஆதிக்கத்தைவிட வெள்ளைக்கார ஆதிக்கமே ஒடுக்கப்பட்டவர்களுக்கும் ஏழை



மக்களுக்கும் குடியானவர்களுக்கும் யோக்கியர்களுக்கும் அதிகமான கெடுதி இல்லாதது என்பதே நமது அபிப்பிராயம். வெள்ளைக்கார ஆதிக்கம் ஒழிவதாயிருந்தால் நேரே அது ஏழை மக்களான தொழிலாளர்கள் கைக்கு வருவதுதான் நன்மையே அல்லாமல் ஏழை மக்களுக்கு பார்ப்பனர்களும், பணக்காரர்களும், வக்கீல்களும் தர்மகர்த்தாக்களாகவும் தரகர்களாகவும் இருக்கக் கூடாது என்றே சொல்லுவோம். இந்தக் கொள்கையின் பேரில் தான் பணக்காரர்கள் இப்பத்திரிகைக்கு உதவி செய்ய வேண்டும் என்பதாகவும் இப்போதே வெளிப்படையாய் சொல்லிவிடுகிறோம்.

அது போலவே மத இயலில் நமக்கு உதவி செய்பவர்களும் இந்து மதம் என்பதான பார்ப்பன மதத்துடன் போர் புரிந்து வெற்றி ஏற்படுமானால் சைவ சமயத்திற்கு அனுகூலமாகும் என்றோ, வைணவ சமயத்திற்கு அனுகூலமாகுமென்றோ, கிறிஸ்துவ மதத்திற்கு அனுகூலமாகுமென்றோ, மகம்மதிய மதத்திற்கு அனுகூலமாகுமென்றோ, மாத்துவ மதத்திற்கு அனுகூலமாகுமென்றோ ஒவ்வொருவரும் தன் தன் சுயமத நலத்திற்கு என்று நினைத்து கொண்டார்களானால் அவர்களும் ஏமாற்றமடைவார்கள் என்பதையும் இப்போதே சொல்லிவிடுகிறோம். பார்ப்பன மதம் ஒழிவத னால் உண்மையான சமரசமும் சன்மார்க்கமும் உடையதான மதம் ஏற்பட வேண்டும். எல்லா மக்களுக்கும் சுயமரியாதை உணர்ச்சி ததும்பவேண்டும். என்பதாகவே ஓர் அறிக்கையை வெளியிட்டுவிட்டு சென்னை சென்றோம். 'திராவிடனுக்கு' உதவி செய்வதாக வாக்களித்திருந்த சில கனவான்கள் இந்த அறிக்கையைப் பார்த்துக்கொண்டு தாங்கள் முற்றிலும் இந்த அறிக்கையை ஒப்புக் கொள்வதாகவும் இந்த நிபந்தனையின் மீதே உதவி செய்து வருவதாகவும் வாக்குறுதி செய்து கடிதம் எழுதினார்கள். அதிலிருந்து இதுவரை ஒருவாறு நம்மால் 'திராவிடன்' கவனிக்கப்பட்டு வந்தாலும் ஏப்ரல் முதல் தேதி முதலே கணக்கு முதலிய நிர்வாகங்களும் தென்னிந்திய மகாஜன சங்கத்தை விட்டு பிரித்து நமது வசம் ஒப்புவிக்கப்பட்டு விட்டது.

இதன் மத்தியில் "தமிழ்நாடு" பத்திரிகையும் ஸ்ரீ வரதராஜுலுவும் 'திராவிடனை'ப் பற்றி எவ்வளவோ பொய்யும் புளுகும் – அதாவது ராமசாமி நாயக்கர் திராவிடனுக்கு வந்தார், தமது ஜம்பம் செல்லவில்லை; ஓடிவிட்டார் என்பது போன்ற பல விஷயங்களை எழுதிவிட்டார். அதற்கும் பொது ஜனங்கள் ஏமாறாமல் எவ்வளவு தூரம் இம்மாதியான ஒரு பத்திரிகையை ஆதரிக்கக்கூடுமோ அவ்வளவு தூரம் ஆதரித்து வந்திருக்கிறார்கள்.

'திராவிடன்' பத்திரிகை மற்ற பத்திரிகைகளைப் போல வயிற்றுப் பிழைப்பு பத்திரிகையாகவோ வியாபாரப் பத்திரிகையாகவோ, கூலிக்கு உழைக்கும் பத்திரிகையாகவோ இல்லாமல் ஒரு குறிப்பிட்ட கொள்கையை பிரசாரம் செய்யும் பத்திரிகையாக இருப்பதால் பொது மக்களின் மதிப்பை



RangaRakes tamilnavarasam.com

பெற அது கொஞ்சம் தனது நாணயத்தையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியத்தை முன்னிட்டு "தமிழ்நாடு" முதலிய பத்திரிகைகளைப் போல வெளி ஆடம்பரத்திலும் வியாபாரப் புரட்டிலும் பொதுமக்களிடம் பணம் பறிக்கச் செய்யும் தந்திரங்களையும் கையாளாமல் உள்ளது உள்ளபடி நடந்து வந்ததால் "திராவிடன்" அதனுடைய நிலைக்குத் தகுந்த விளம்பர ஆதரவு முதலியவைகள் பெறவில்லை. ஆனபோதிலும் அதற்காக வேண்டி அது தன் கொள்கையையோ நாணயத்தில் உள்ள கவலையையோ ஒரு சிறிதும் மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்பதாக உறுதி கூறுவோம்.

நிற்க "திராவிடன்" நமக்கு சாஸ்வதமான சாதனமல்லவென்பதையும் தற்காலம் நமது தொண்டிற்காக உபயோகித்துக் கொள்ளும் ஒரு உதவி சாதனமேயாகும் என்பதையும் "குடி அரசே" நமது தொண்டிற்கு சாஸ்வத மான மூல சாதனம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இது சமயம் பார்ப்பனர்களுக்கு பலவழிகளிலும் அவர்களது யோக்கியதை வெளியாகி அவர்களது செல்வாக்கு முன்னேறுவது தடைப்பட்டு இருந்தாலும் இனியும் அவர்களால் பொது மக்கள் ஏமாறக்கூடிய நிலைமை இருப்பதற்குக் காரணம் அவர்களுடையவும் அவர்களது கூலிகளாகவும் வால் பிடித்து பிழைப்பவர் களாகவும் உள்ள சில பார்ப்பனரல்லாதாருடைய பத்திரிகைகளினுடையவும் பிரசாரமுமே தவிரவேறல்ல :

இது சமயம் நமது நாட்டிலுள்ள சற்றேறக்குறைய எல்லாப் பத்திரிகை களும் பார்ப்பனத் தலைமையின் கீழ் தான் நடத்தப்படுகின்றன. பார்ப்பனர் களேதான் கொள்கைகளை உற்பத்தி செய்கிறார்கள். அதுவும் பார்ப்பன ரல்லாத சமூகத்திற்கு கெடுதி பயக்கத்தக்கதாகவே பார்த்து கண்டுபிடிக்கின் றார்கள். அதை மீற யாருக்கும் தைரியமில்லை. ஏனெனில் அவர்களை விரோதித்துக் கொண்டால் எந்த பத்திரிகையையும் நடத்த முடியாதபடி செய்யத் தகுந்த அளவு செல்வாக்கு பார்ப்பனர்களுக்கு இருக்கின்றது. எனவே, பார்ப்பன ஆதிக்கம் இந்தப் பத்திரிகைகளின் பிரசாரத்தாலேயே நிலைபெற்றுவிடுவதால் நமக்கும் தக்க பத்திரிகை உதவி வேண்டும். பார்ப்பனர்களை எதிர்ப்பதால் பார்ப்பனர்களின் எதிர்ப்புக்கு தலை கொடுக் கத்தக்க அளவில் நஷ்டப்படவும், கஷ்டப்படவும் தயாராயிருக்க வேண்டும். போதாக்குறைக்கு ஸ்ரீமதி பெசண்ட்டம்மையாரும், சர்.சி.பி. ராமசாமி அய்யரும் ஒரு தமிழ் பத்திரிகையை தினசரியாகவோ வாரப்பதிப்பாகவோ ஆரம்பிப்பதாக ஏற்பாடு செய்து வருகிறார்கள். அதற்காக முன் ஒரு காலத்தில் "ஒரு தேசீயத் தமிழ் பத்திரிகையின்" ஆசிரியராய் இருந்த பார்ப்பனரல்லாத ஒரு கனவானை ஆசிரியராக வர வேண்டுமாய் கூப்பிட்டும் அவர் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. ஆனாலும் இனியும் தக்க பார்ப்பனரல்லாத ஆசிரியரையே தேடித்திரிகிறார்கள். "சுதேசமித்திரன்" "சுயராஜ்யா" போன்றவைகளின் பிரசாரமும் "தமிழ்நாடு" போன்றவைகளின் கூலி



வயிற்றுப் பிழைப்பு முதலிய சமய சஞ்சீவிப் பிரசாரமும் நமது முன்னேற் றத்திற்கு எவ்வளவு தூரம் கெடுதி செய்து வந்திருக்கின்றன என்பதும் ஸ்ரீமதி பெசண்டம்மை ஸ்ரீ ராமசாமி அய்யர் கம்பெனியாரின் புதிய பத்திரிகையும் வெளிவந்தால் இனியும் எவ்வளவு தொல்லை ஏற்படும் என்பதையும் யோசித்துப் பார்ப்பவர்களுக்கு 'திராவிடனின்' அவசியமும் அருமையும் தெரியாமல் போகாது. ஆதலால் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையிலும் முன்னேற்றத்திலும் அபிமானமும் கருணையும் உள்ள கனவான்கள் "திராவிடனை" முன்னிலும் அதிகமாக ஆதரிக்க முன்வர வேண்டுமாக வேண்டிக்கொள்கின்றோம். அடுத்து வரும் தமிழ் வருஷப் பிறப்பு தினத் தன்று கூடுமானவரை திராவிடனுக்கு புதிய சந்தாதாரர்களை சேர்க்கும் தொண்டைச் செய்து அன்றைய தினம் தக்க அளவு புதிய சந்தாதாரர் களையாவது சேர்த்துக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 08.04.1928**



RangaRakes tamilnavarasam.com

# தர்மத்தின் நிலை

நாட்டுக் கோட்டை நகரத்தாருள் முக்கியஸ்தரான ஸ்ரீமான் சர். அண்ணாமலை செட்டியார் அவர்கள் 20 லட்சம் ரூபாய் கல்விக்காக தர்மம் செய்திருப்பதாக அறிகின்றோம். ஆனால் அத்தருமம் எவ்வளவு தூரம் நாட்டிற்கோ அல்லது பார்ப்பனரல்லாத மக்களுக்கோ உபயோகப்படும் என்பது அறியக்கூடாததாகவே இருக்கின்றது. தவிர பார்ப்பனர் எந்த ஒரு சிறிய தர்மம் செய்தாலும் அது தங்கள் இனத்தாரைத் தவிர வேறு யாருக்கும் உபயோகப்படாதபடியே செய்வது வழக்கம். ஆனால் பார்ப்பனரல்லாதாரில் பெரிதும் குறிப்பாய் நாட்டுக்கோட்டை நகரத்தார் செய்யும் தருமங்கள் ஒவ்வொன்றும் பார்ப்பனரைப் போல் தமது சமூகத்தாராகிய பார்ப்பன ரல்லாதாருக்கே உபயோகப்படும்படி செய்யாவிட்டாலும் முழுதும் பார்ப் பனர்களுக்கே உபயோகப்படும்படி செய்வதே வழக்கமாகி வருகிறது. கோவில்கள், வேதபாடசாலைகள், சத்திரங்கள், அறுபதாம் கல்யாணங்கள் முதலியவைகளில் செலவிடும் பணங்கள் போகும் வழிகளை அறிந்தவர் கள்தான் உண்மையை உணரலாம். அதோடு கூடவே இப்படிப் பார்ப் பனருக்கே பெரிதும் தருமஞ் செய்த பல நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் கோடீஸ்வரர்களாயிருந்து பாப்பராகிவிட்டதையும் அறியலாம். இப்படி இவர்கள் பாப்பர்களாவதில் யாரும் வருத்தபட நியாயமிருப்பதாகவும் தெரியவில்லை. ஏனெனில் இவர்கள் எந்த சமூகத்தாரிடம் இருந்து நல்வழியிலேயோ கெட்ட வழியிலேயோ இப்படி கோடிக்கணக்கான பணம் சம்பாதித்தார்களோ அந்த சமூகத்தாரை துரோகம் செய்து பார்ப்பனரல்லாத மக்களை வஞ்சித்துப் பிழைக்கும் ஒரு சமூகத்தாருக்கே அதை செலவு செய்வதானால் அப்படியானவர்கள் தண்டனை அடைய வேண்டியது கிரமமா அல்லவா? ஆதலால் நமது சர். அண்ணாமலை செட்டியார் செய்தி ருக்கும் இந்த 20 லட்ச ரூபாய் தர்மமானது மேல் கண்ட குற்றத்திற்கு ஆளா காமல் இருக்கத்தக்க மாதிரியில் தமது தர்மப் பணங்கள் முழுதும் உபயோகப் படும்படியாக தக்க ஏற்பாடும் செய்ய வேண்டும் என்று சர். அண்ணாமலை செட்டியார் நன்மையையும் பார்ப்பனரல்லாதார் நன்மையையும் நமது நாட்டின் நன்மையையும் உத்தேசித்து வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 08.04.1928**



# துருக்கியில் மாறுதல்

துருக்கி ராஜாங்கத்தில் அரசாங்க விஷயத்தில் மதசம்பந்தமே இருக்கக் கூடாது என்று பலமான மாறுதல்கள் ஏற்படக்கூடும் என்பதாக பத்திரிகைகளில் காணப்படுகின்றன. இதை நாம் மனமாற வரவேற்பதுடன் இது உலக விடுதலைக்கு ஒரு பெரிய அறிகுறியென்றே சொல்லுவோம். துருக்கி ராஜாங்கம் மதத்திற்காகவே இருப்பதாக சொல்லப்படுவது. கிலா பத்து இயக்கமும் அதற்காகவே ஏற்பட்டது. அப்படிப்பட்ட அரசாங்கம் மத சம்பந்தத்தை நீக்க - மனித தர்மத்தை ஆதாரமாக வைத்து - அரசாட்சி புரிய ஏற்பட்டால் இன்றைய தினமே நாம் துருக்கிப் பிரஜையாக இருக்க பதிவு செய்து கொள்ளத் தயாராகயிருக்கிறோம்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 08.04.1928**



RangaRakes
tamilnavarasam.com

# பள்ளிக் கூடத்தில் புராண பாடம்

**– சித்திரபுத்திரன்**

**உபாத்தியாயர் :** அடே பையா! இந்த உலகம் யார் தலைமேல் இருக்கின்றது சொல் பார்ப்போம்.

**பையன் :** எனக்கு தெரியவில்லையே சார்.

**உபாத்தியாயர் :** ஆதிசேஷன் என்கின்ற ஆயிரம் தலையுடைய பாம்பின் தலைமேல் இருக்கின்றது. "பூமியை ஆதிசேஷன் தாங்குகிறான்" என்கின்ற பழமொழி கூட நீ கேட்டதில்லையா மடையா?

**பையன் :** நான் கேட்டதில்லை சார். ஆனால் ஆதிசேஷன் என்கின்ற பெயர் மாத்திரம் ஒரு நாள் எங்கள் வீட்டில் ராமாயணம் படிக்கும் போது ஒரு சாஸ்திரியார் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதாவது ஆதிசேஷன் விஷ்ணுவின் படுக்கையென்றும் அந்த விஷ்ணு ராம அவதாரம் எடுத்தபோது இந்த ஆதிசேஷன் லக்ஷ்மணனாக அவதாரம் செய்தார் என்றும் கேட்டதாக ஞாபகமிருக்கின்றது.

**உபாத்தியாயர் :** ஆமாம் அந்த ஆதிசேஷன் தான் பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கிறான் தெரியுமா?

**பையன் :** இப்போது தெரிந்து கொண்டேன். ஆனால் ஒரு சந்தேகம் சார்..............

**உபாத்தியாயர் :** என்ன சந்தேகம் சீக்கிரம் சொல்.

**பையன் :** பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற ஆதிசேஷன் விஷ்ணுவுக்கு படுக்கையாய் வந்துவிட்டால் அப்போது பூமியை யார் தாங்குவார்கள்? தவிர லட்சுமணனாக உலகத்திற்கு வந்து விட்டபோது பூமியை ஆதிசேஷன் யார் தலையில் வைத்துவிட்டு வந்தார்? தயவு செய்து சொல்லுங்க சார்.



**உபாத்தியாயர் :** நீ என்ன 'குடி அரசு' படிக்கிறயோ! அது தான் அதிகப் பிரசங்கமான கேள்விகளை கேட்கின்றாய். பொறு! உனக்கு இந்த பரீக்ஷையில் சைபர் போடுகின்றேன்.

**பையன் :** இல்லவே இல்ல சார். நான் சத்தியமாய் குடி அரசைப் படிப்பதே இல்லை சார். ராமாயணம்தான் சார் கேட்டேன். தாங்கள் சொல்வதிலிருந்தே எனக்கு இந்த சந்தேகம் தோன்றிற்று சார்.

**உபாத்தியாயர் :** ஆதிசேஷன் தெய்வத்தன்மை பொருந்தியவன். அவன் ஒரே காலத்தில் பல வேலை செய்யக்கூடிய சக்தி அவனுக்கு உண்டு. அவன் பூமியையும் தாங்குவான். விஷ்ணுவுக்கு படுக்கையாகவுமிருப்பான். விஷ்ணு ராமனாக உலகத்திற்கு போகும் போது லக்ஷமணனாக கூடவும் போவான். தெரியுமா?

**பையன் :** இப்ப தெரிந்தது சார். ஆனால் ஒரு சின்ன சந்தேகம் சார். அது மாத்திரம் சொல்லிப் போடுங்கள். இனி நான் ஒன்றும் கேட்பதில்லை.

**உபாத்தியாயர் :** என்ன சொல் பார்ப்போம்.

**பையன் :** பூமியை ஆதிசேஷன் தாங்குகிறான் சரி, அதை நான் ஒப்புக் கொள்ளுகின்றேன். அப்புறம் தாங்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது சார். எனக்கு நிஜமாலும் தெரியவில்லை சார்.

**உபாத்தியாயர் :** என்ன சங்கதி சொல்லு; நான் கோபிக்கிறதில்லை.

**பையன் மறுபடியும் :** பூமியை ஆதிசேஷன் தாங்குகின்றான் சார் (தலையை சொரிந்து கொண்டு) ஆதிசேஷனை யார் தாங்கறாங்க சார்? அவர் எதன் மேலிருந்து கொண்டு தாங்கராங்க சார். அதை மாத்திரம் சொல்லிக் கொடுத்தால் போதும் சார். அப்புறம் ஒரு சந்தேகமும் இப்போதைக்கு இல்லை சார்.

**உபாத்தியாயர் :** போக்கிரிப்பயலே நீ குடி அரசு படிக்கிறாய் என்பது இப்போது எனக்கு உறுதியாச்சுது. பொறு, பொறு, பேசிக்கொள்கிறேன். வாயை மூடிக்கொண்டு போய் உட்கார், அதிகப் பிரசிங்கிப் பயலே!

**பையன்**: பேசாமல் உட்கார்ந்து கொண்டான் உபாத்தியாயரும் எஸ்.எஸ்.எல்.சி. பரீக்ஷைக்கு அவனை அனுப்பவில்லை. இதைப் பற்றி கேள்வி கேட்பாரும் இல்லை. பள்ளிக்கூட மேனேஜரையும் வாத்தியார் சரிப்படுத்திக் கொண்டார்.

**குடி அரசு – உரையாடல் – 08.04.1928**



RangaRakes tamilnavarasam.com

# அலசந்தாபுரத்தில் சொற்பொழிவு

சகோதரர்களே!

நான் இன்றைய தினம் போல் என்றைக்கும் சந்தோஷமாயிருந்த தில்லை. இன்றைய தினம் தான் என் வாழ்நாளில் ஓர் சுபதினமாகும். நான் உழைத்த உழைப்பின் பலனாக இன்று நடந்த இந்த ஒரு காரியமே என்னைச் சந்தோஷத்தில் அமிழ்த்திவிட்டது. இந்த மாதிரி ஒருவராவது நான் சொல்வது சரியென்று பட்டு தமது வாழ்க்கையை சுயமரியாதையில் திருப்பி அந்திய காலத்திலாவது பார்ப்பன சூழ்ச்சியை ஒழித்து நல்ல விஷயத்தைச் செய்ததை நோக்க நான் செய்து வரும் எல்லா ஊழியத்திற்கும் இந்த ஒரே கைமாறு போதுமென நினைக்கிறேன். இந்த மாதிரி அனுபவத்தில் காட்டக்கூடிய உணர்ச்சி அன்பர்கள் அவரவர்கட்கே உண்டாகி விட்டால் என் போன்றோர் உழைப்பில்லாமலேயே நம் மக்கள் சுயமரியாதையைப் பெற்றுவிடுவார்கள். எனக்குப் பல வேலைகளும் உடல் நலிவும் இருந்தபோதிலும் உங்கள் அழைப்பிற்கு நான் மிகவும் சந்தோஷத்தோடு இங்கு வந்திருக்கிறேன். இவ்வளவு பெரிய விசேஷக் கூட்டங்களுடனும் உணர்ச்சியுடனும் இக் காரியம் நடைபெறுமென்று நான் நினைக்கவேயில்லை. நான் 50 கிராமங்க ளுக்குச் சென்று செய்ய வேண்டிய 50 நாள் வேலையை எல்லோரும் இங்கு வந்திருக்கிறபடியால் ஒரு நாளில் ஒரே மணியில் செய்து முடிக்க நேர்ந்ததே என்றும் திருப்தியடைகிறேன். துப்பாக்கி, பீரங்கி குண்டுகள் நுழையக் கூடாத இம்மலையடர்ந்த காட்டிற்குள்ளும் நான் சொல்லும் சிறு மொழியும் 'குடி அரசு' உபதேசமும் நுழைந்து இவ்வளவு மாறுதலையுண்டு பண்ணியிருக் கின்ற தென்றால் இதன் கொள்கைகளின் உண்மைகள் எவ்வளவு மேலானதென்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. நான் சொல்வதை பல பேர் கேட்டு நடக்க ஆரம்பித்திருக்கிறபடியாலும், நானே வந்து அவ் விஷ யங்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்கின்றபடியாலும், என்னால் சொல்லப்படுகின்ற உண்மை ஜனங்களின் உண்மையான உணர்ச்சியில் தோன்றக் கூடியதுதான் என்றும், அதுதான் சுயமரியாதையுள்ள மக்களுக் குள்ள உயர்ந்த அபிப்பிராயமென்றும், அதையேதான் நான் சொல்கின்றேன் என்றும் உணர்கின்றேன். ஆனால் நான் சொல்வதையெல்லாம் நீங்கள் கேட்டதன்படி நடக்க வேண்டுமென்று கட்டாயமில்லை. நான் சொல்வதைக் கேட்காவிட்டால் நரக தண்டனை யென்று நான் மேற்கோளும் காட்ட வரவில்லை.



சங்கராச்சாரி, மடாதிபதிகள், குருக்கள், புரோகிதர்களுடைய ஊழல் களைச் சொல்லுவதனால் நான் ஷை மடாதிபதியாக வருவதற்கல்ல. நான் நாயனாராகவோ ஆழ்வாராகவோ ஆவதற்கல்ல. ஆனால் என் அனு போகத்திற்கும் ஆராய்ச்சிக்கும் உண்மையென்று பட்டதை, நான் உள்ளபடி உணர்வதை உங்களுக்கும் சொல்லுகின்றேன். உங்கள் அறிவிற்கு அது சரியென்று பட்டால் கொள்ளுங்கள். அல்லவென்று பட்டால் தள்ளுங்கள்; சரியென்று பட்டபின் அதைக் கொள்ள தைரியமில்லாமல் ஊரை ஏமாற்ற 'நாய்க்கர் நாஸ்திகம் பேசுகிறார்' என்று சொல்லி வீண் பழி பாவத்திற்கு உள்ளாக்காதீர்கள். நமது சமூகத்திற்கு எதிரிகளாக இருந்து நம்மைக் காட்டிக் கொடுத்து பிழைக்கும் கோடாலிக் காம்புகளின் பேச்சைக் கேட்டு ஏமாறா தீர்கள். கடவுள் என்று சொல்லிக் கொண்டு கடவுள் பேரால் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொண்டு, கடவுள் பேரால் விபசாரம் செய்து கொண்டு, கடவுள் பேரால் தீண்டாமையை உற்பத்தி செய்து கொண்டிருப்பதை யெல்லாம் தான் நான் கண்டிக்கிறேன். கடவுளை நம்புகிறவன் யோக்கியமாய் இருக்க வேண்டியது அவசியம். கடவுளை நம்பி யோக்கியமாய் இருக்க முடிய வில்லையானால் கடவுளைப் பற்றி கவலைப்படாமலாவது நீங்கள் யோக்கி யர்களாய் இருக்க வேண்டுமென்பதுதான் என் கோரிக்கை. எல்லாரையும் சமமாயும் சகோதரராயும் பாவிக்க வேண்டும். எல்லாரிடத்திலும் அன்பு செலுத்துதல் வேண்டும். தீண்டாமையை அறவே ஒழிக்க வேண்டும். தாசித் தொழில் ஒழிய வேண்டும். பாலிய விவாகம் ஒழிந்து நமது பெண்கள் எப்பொழுதும் சுகமாயிருக்க வேண்டும். பொய் சொல்லக் கூடாது. திருடக் கூடாது. யோக்கியமாய் சுயமரியாதையுடன் வாழ வேண்டுமென்று இது போல் சொல்லி வருகின்றேன். இதைச் சில அயோக்கியர்களும் அவர் தம் பத்திரிகைகளும் பொறாமை, சுயநலம், அற்ப புத்தி காரணமாக நாஸ்திகம் என்று பேசியும் எழுதியும் வருகின்றன. இவையெல்லாம் நாஸ்திகமாயின் பின் ஆஸ்திகம் தான் என்ன?

கடவுள் பேரால் பொட்டுக்கட்டி விபசாரத்திற்கு விடுதலும், கடவுள் பேரால் தீண்டாதார்களைக் கோயிலுக்குள் கும்பிட விடாமலும், கடவுள் பேரால் இளங்கன்னிகளைக் கல்யாணம் செய்து அறுதலியாக்குவதும், கடவுள் பேரால் 100க்கு 96½ பேர் முட்டாளாகவும் 3½ பேர் படிக்கவும், கடவுள் பேரால் ஒரு வகுப்பார் உட்கார்ந்து சாப்பிடவும் மற்றொரு வகுப்பார் உப்பில்லாமல் ஓடியுழைக்கவும், கடவுள் பேரால் பொய் சொல்லவும், திருடவும், பலியிடவும், யாகங்கள் செய்யவும், ஏமாற்றவும் செய்தால் இது தானா ஆஸ்திகம் என்று கேட்கின்றேன். அப்படியானால் இந்த ஆஸ்திகத் தை ஒழிப்பதே உலகுக்கு நன்மை பயக்குமல்லவா. உங்கள் அறிவை விளக்கி, இம்மாதிரி ஆஸ்திகப் பேச்சை விட நான் சொல்லும் பேச்சில் ஆஸ்திகம் அதிகமிருக்கிறதா நாஸ்திகம் இருக்கிறதா என்று பகுத்தறிந்து பின்பற்றுங்கள். அயோக்கியர்கள் உங்களை நீண்ட காலம் ஏமாற்ற முடியாது. இம்மாதிரி



RangaRakes tamilnavarasam.com

குக்கிராமத்திலேயே ஒரு வயது சென்ற பெரியார் அந்தக் காலத்தில் சுயமரியாதை உணர்ச்சி பெற்று பார்ப்பனீயத்தை ஒழிக்க முற்பட்டதும் அதையும் பக்தியுடன் நிறைவேற்றிய அவர்தம் புதல்வரையும் நோக்க இந்த சுயமரியாதைக் கிளர்ச்சியின் பலம் எதிரிகளுக்கு விளங்காமற்போகாது. இதற்காக அப்பெரியாரையும் போற்றி அவர் தம் குமாரனையும் ஆசீர்வதிக் கிறேன்.

மதத்தின் பேரால் பார்ப்பனர்களின் பொய் புரட்டு, வேதம், புராணம், சாஸ்திரம் முதலியவைகளில் நம்மக்கள் பல்லாயிரக்கணக்கான வருஷங் களாக அடிமைப்பட்டு விட்டனர். சுயமரியாதையே இல்லாது போய் விட்டது. சுயமரியாதை இல்லாது போனால் சுயராஜ்யம் எங்கே இருக்கும்?

கிறிஸ்துவ மதத்திற்கு ராஜ்யமிருக்கிறது. புத்த மதத்திற்கு ராஜ்யமி ருக்கிறது. முகமதிய மதத்திற்கு ராஜ்யமிருக்கிறது. அந்தந்த ராஜ்யம் அந்தந்த மதத்தார்களால் ஆளப்படுகிறது. ஆனால் பழைய தொன்மையான ஹிந்து மதத்திற்கு அநாதி காலந்தொட்டு ராஜ்யமுமில்லை, இருக்கிற ராஜ்யத்தையும் ஹிந்துக்கள் ஆளாமல் அன்னியர் ஆளுகின்றனர். ஒவ்வொரு மதத்திற்கும் ஜனத்தொகை பெருகுகின்றது. நம் பழமையான ஹிந்து மதத்திற்கு ஜனத் தொகை குறைகின்றது. இந்தியாவில் உள்ள இந்து மத சம்பிரதாயப்படியுள்ள தீண்டாமையென்னும் கொடிய வழக்கத்தால் சுமார் 7, 8 கோடி முகமதியர் களாகவும் கிறிஸ்தவர்களாகவும் ஆகிவிட்டனர். இன்னும் தீண்டாமை ஒழியாவிட்டால் முகமதியராகவும் கிறிஸ்தவராகவும் ஆவதற்காக 6 கோடி பேர் காத்துக் கொண்டிருக்கின்றனர். இந்துவாக இருந்து முகமதியராக மாறினவர்களுக்கும் துருக்கி சுல்தானுடனும் ஆப்கன் அமீருடனும் சமத்துவமாக நின்று தொழவும் 'குரான்' படிக்கவும் உணவு அருந்தவும் சமத்துவமான சுதந்திரம் உண்டு. இது போல் கிறிஸ்துவ மதத்திலும் புத்த மதத்திலும் உண்டு. ஆனால் பழைய ஹிந்து மதத்தில் கடவுளைப் பார்க்கக் கூடாத ஒரு சாதி கிட்டே போகாத சாதி. இந்து வேதத்தைப் படிக்கக்கூடாத ஒரு சாதி உண்டு. ஆனால் அதை ஒப்புக் கொள்ளுகிறவன் தான் ஹிந்து, இதெல்லாம் வெறும் புரட்டும், மக்களை ஏமாற்ற எழுதி வைத்ததும் தற்கால வாழ்விற்கு வேண்டாததும் ஆகியவைகளா இல்லையா என்று தான் கேட்கின்றேன். ஆதலால் இந்தப் புரட்டையெல்லாம் உதறித் தள்ளி நல்ல சமயத்தில் பற்றிக்கொண்டு நல்ல காரியத்தைச் செய்யுங்கள் என்றால் நாஸ்திகம் என்று குறுக்கே சொல்ல வந்துவிடுகிறார்கள். பிறகு கடவுள், மதம், சடங்குகள் முதலியவற்றால் சுயநலம் கொண்ட ஒரு சாதியார் எப்படி மக்களை ஏமாற்றி பிழைத்து வந்தார்கள் என்பதை சாங்கோ பாங்கமாக எடுத்து உரைத்து தமது ஆசனத்தமர்ந்தார்.

*குறிப்பு: 20.03.1928 இல் அலசந்தாபுரத்தில் சொற்பொழிவு,*

**குடி அரசு - சொற்பொழிவு - 15.04.1928**



# தென் இந்திய பௌத்தர் மூன்றாவது மகாநாடு

தலைவரே! தாய்மார்களே! அன்பர்களே!

இன்று என்னை மதம் என்பது பற்றி சில வார்த்தைகள் சொல்லும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அக்கட்டளையை சிரமேற்கொண்டு என் அறிவிற்கெட்டிய சில முக்கிய விஷயங்களை மட்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன். அதனை நீங்கள் அப்படியே நம்பி ஒப்புக்கொள்ள வேண்டு மென்றோ நான் ஓர் பெரிய அறிவாளி, ஆராய்ச்சிக்காரன் என்றோ சொல்ல வரவில்லை. நான் சொல்வதை நன்காராய்ந்து உங்களுக்குச் சரியெனத் தோன்றுவதை எடுத்துக்கொண்டு சரியல்ல வெனத் தோன்றுவதை ஒதுக்கி விடும்படிதான் நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். நான் பெரிய சீர்திருத் தக்காரனும் உபதேசக்காரனுமல்ல. ஆனால் என் அறிவுக்கெட்டிய வரை தீயவைகளாகத் தோன்றுவதைக் கண்டித்து நல்லவைகளை எடுத்துக் காட்டி பொது ஜன உபயோகமான துறையில் செலவிட வேண்டுமென்பது தான் என் முக்கிய நோக்கமும் விருப்பமுமாகும். என்னுடைய அறிவுக்கு எது தீய தென்றும், எது ஒழிந்துபட்டு மறைந்தொழிய வேண்டுமென்றும் பட்டிருக் கின்றதோ அதனைப் பல தலைப்புகளின் கீழ் பல விடங்களிலும் எடுத்துச் சொல்லி வருகின்றேனேயன்றி வேறல்ல. அதைத்தான் இங்கும் மதம் என்பதன் பெயரால் நான் உங்கள் முன்னிலையில் சொல்ல வந்தி ருக்கிறேன்.

நான் ஏன் மதம் என்பதைப்பற்றி பேசி வருகிறேன் என்றால் நான் ஏதோ சிறிது நேரமாயினும் பொது நன்மைக்கென்று செலவிட்டுக்கொண்டு வந்த வரையில் சில விஷயங்கள் நம் நாட்டுக்கு மட்டுமன்றி மனித சமூகத்திற்கே முன்னேற்றத் தடைகளாயிருப்பது மதத்தின் பெயரால் செய்ய படுபவைகள் தான் என்று நான் அபிப்பிராயப்படுகிறபடியால் தான். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு மதமிருக்க வேண்டுமென்றும் சொல்லப் படுகிறது. அப்படியானால் அம்மதம் அவன் வாழ்நாளில் உபயோகமான நன்மைகளைச் செய்யக் கூடியதாயிருத்தல் வேண்டியது அவசியம். ஆயினும் நம் நாட்டில் ஒரு மனிதனின் மதம் என்பது அவன் வாழ்நாளில் அவனுக்கு எவ்வளவு உபயோகமில்லாததாயினும் அதன் கற்பனைகளுக்கு



RangaRakes tamilnavarasam.com

கட்டுப்பட்டு நடக்க வேண்டியதாயிருப்பதைக் கண் கூடாகக் காண்கின் றோம். மகமதிய, கிறிஸ்துவ, இந்து, சைவ, வைஷ்ணவ சமயங்களெது வாயினும் எல்லாம் ஒரே மாதிரி பல நிர்ப்பந்தங்களையுடைய மதங்களாகத் தானிருக்கின்றன. அந்த நிர்ப்பந்தங்களின்படி அந்தந்த மதஸ்தர்கள் நடக்க வேண்டுமென்ற கட்டுப்பாடுகளுமிருக்கின்றன. என்னுடைய அனுபவத்தில் எந்த மதத்தினரைக் கேட்டாலும் இதற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென் றும் அதற்கு மீறி நடக்கக் கூடாது என்றும் ஏதோ சில நிர்ப்பந்தங்களைச் சொல்லுகின்றார்களேயன்றி அதில் உள்ள ஒழுக்கத்தை பின்பற்றியதென்பது ஒரு சிறிதும் இல்லை. மனிதன் தன் அறிவிற்கெட்டிய உண்மைப்படி நடக்க வேண்டும் என்று ஒரு மதமும் சொல்வதில்லை. மேலும் அவர்கள் அக்கட்டுப் பாட்டிற்கு மாறாக எண்ணினால் பாவம், பேசினால் மதத் துவேஷம் என்றும் சந்தேக நிவர்த்திக்கு ஏதாவது ஒரு சிறிது முயற்சித்தால் அதை நாஸ்திக மென்றும் சொல்லுகின்றார்கள். இதனால் அறிவின் தன்மைக்கும் இயற்கைக் கும் ஒத்த மாதிரி ஏற்றவாறு நடக்க இடம் கொடுக்கும் படியான மதம் உலகில் மிக அருமையாகத்தானிருக்கிறது. உண்மையில்,

மதமென்பது என்னவென்பதையும் அதன் அவசியத்தையும் அறிந்திருப்போர் வெகு சிலர்; அது என்னவென்றேயறியாது பழமை என்பதனாலும் முன்னோர்களுடையது என்பதனாலும் பழக்க வழக்கங் களினாலும் கண்மூடித்தனமாகப் பின்பற்றிக் கொண்டுமிருப்பவர்கள் பெரும்பாலோர். பெரும்பாலோருக்கு அவர்கள் அனுசரித்துவரும் கொள் கைகளைப் பற்றியோ அல்லது தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள நிர்பந்தங் களைக் குறித்தோ ஒன்றுமே தெரியாது. ஆனால் அத்தகையோர் "பெரி யோர்கள் சொன்னபடி கேட்க வேண்டும். அவர்கள் சென்றவழி செல்ல வேண்டும். இல்லாவிட்டால் பாவம், தோஷம்" என்று ஏதோ சமாதானம் சொல்லுகின்றார்களேயன்றி அதன் உண்மையை யறியும் விஷயத்தில் ஒரு சிறிதும் முயற்சியில்லாமல் தானிருக்கின்றனர். என்ன காரியத்திற்காக மதம் இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறதோ அந்தக் காரியத்திற்காக மதம் உபயோகப்படுவதாய் காணப்படவில்லை. ஒருவரை உனக்கு மனைவி மக்களுண்டா? எவ்வளவு படித்திருக்கிறீர்கள்? என்ன சொத்து சுதந்திரம் இருக்கிறது? என்று விசாரிப்பது போலத்தான் ஒருவனை உன் மதம் என்னவென்று கேட்பதும் ஒரு சொத்தாய் மதிக்கக் கூடியதாயிருக்கின்றது. மதம் என்று சொல்வது எதற்காக? அது எப்போது ஏற்பட்டது? அது ஒரு நிலையாயிருக்க வேண்டுவதா? அல்லது அடிக்கடி மாறக் கூடியதா? அல்லது புதிதாக உண்டாக்கிக் கொள்ளக் கூடியதா! என்பனவற்றை ஆலோசிப் போமாயின் மற்ற தோற்றங்கள் மாறக்கூடியதாயிருப்பது போன்றே மதமும் அறிவிற்கு ஏற்றவாறு மாறக்கூடியதற்கு இடந்தர வேண்டும் என்பது புலனாகும். அன்றியும் ஒருவனுக்கு ஒரு மதமென்பது நித்தியமானதென்றும், அது என்றைக்கும் மாறக்கூடாதென்றும் சொல்வதற்கு இடமில்லை.



மதமானது அவ்வப்போதைய காலதேச வர்த்தமானத்திற்கேற்றவாறும், மக்களின் வாழ்க்கையை எப்படி நடத்துவதென்பதன் படியும், சரீர பலத்தினாலோ புத்தி பலத்தினாலோ அவரவர்கள் புத்திக்கு ஏற்றவாறு பல கொள்கைகளையும் கட்டுப்பாடுகளையும் நிர்ணயித்து அதைத்தான் மக்கள் பின்பற்றி நடக்க வேண்டுமென்றும் கட்டுப்படுத்தி நிர்ப்பந்தித்து வருவ தையே தான் இப்போது மதம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இதற்கு பல ஆதாரங்களையும் அற்புதங்களையும் சொல்லி விடுகிறார்கள். அவை கள் ஒரு சமயம் அந்தக் காலத்திற்கு தகுந்ததாக ஒப்புக் கொள்ளப்பட்டி ருப்பினும் இப்போது அவை ஒன்றும் ஒப்புக்கொள்ளக் கூடியவைகளா? என்பதை ஒரு சிறிதும் கவனிப்பதில்லை. ஒவ்வொரு மதத்திலும் கடவுள், கடவுள் அவதாரம், கடவுள் மகன், கடவுள் மூலமான தூதன் என்று பலவாறு மதத்துடன் கடவுளை இணைத்து சொல்லப்படுகிறது. அக்காலத்து நிலைமையை உத்தேசித்து மக்களுடைய நன்மையை முன்னிட்டு அவ்வா றான பிரமாணங் கற்பனை செய்யப்பட்ட தென்றாலாவது ஏதோ ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். அப்படிக்கின்றி கடவுள் அவதாரமாகவோ பிள்ளை யாகவோ தோன்றி இதைச் சொன்னார் அதைச் சொன்னார் என்பதும், ஆழ்வார்கள் ஆச்சாரியார்கள் நாயன்மார்கள் முதலிய பல பெயர்களுடை யவர்கள் தோன்றி பல அற்புதங்கள் செய்து காட்டி இதைச் சொன்னார் அதைச் சொன்னார் என்பதும் தான் இவ்வுலகத்திற்குப் பெரிய கஷ்டத்தையும் துன்பத்தையும் தரக்காரணமாயிருப்பதுடன் மக்களை முழு மூடர்களாக்கிக் கொண்டும் வருகின்றது. (கரகோஷம்) உலக வாழ்வில் மற்றொருவனுக்கு இம்சையின்றி பிறருக்கு எப்படி உபயோகப்படுவது என்பதையேதான் முக்கிய கொள்கையாகக் கொண்டுழைப்பவனுக்கு வேறு மதம் வேண்டுவ தில்லை என்பதுடன் தேவகுமாரனும், நபியும், ஆழ்வாரும், ஆச்சாரி யார்களும், நாயன்மார்களும், தெய்வீகமும், அற்புதங்களும் வேண்டிய தில்லை என்பதே என் முடிவு. அம்மாதிரி தருமத்தையேஅனுபவமாக்கத்தக்க விதமாய் இப்போது போதிக்கத்தக்க மதமெதுவுமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அப்படிக்கு இருப்பதாக இப்போது சொல்ல வருவ தெல்லாம் ஏதோ செல்லரித்த ஏட்டை எடுத்துக்கொண்டு வந்து இதோ பார் நீ சொல்வதெல்லாம் இதில் எழுதியிருக்கிறது என்று காட்டப்படுவதன்றி சமூக வாழ்க்கையின் அனுபவத்திலிருக்கின்றதெனச் சொல்லப்படும் மதமோ சமயமோ ஒன்றுமில்லை. இவ்வளவு மதங்கள் சமயங்கள் இருந்தும் அனுப வத்திற்கும் இயற்கை இன்பத்திற்கும் ஒத்தது எது அவசியமானது எது, என்று கண்டுபிடிக்கத்தான் வேண்டியிருக்கின்றதே ஒழிய தாராளமாய் பின்பற்ற ஒரு சமயமும் இடம் கொடுக்கவில்லை. அந்த விதமான ஒரு நிலைமை மனித சமூகத்திற்கு ஏற்பட்டாலொழிய மனித சமூகம் ஒற்றுமையுடனும் அன்புட னும் சுதந்திரத்துடனும் வாழ்வது கஷ்டந்தான். நாளுக்கு நாள் புதிய மதங்கள் உற்பத்தியாவதும்; பழைய மதங்களுக்குப் புதிது புதிதான பாஷியமும் பொருளும் சொல்லிப் பிரசாரங்கள் மிகுந்து கொண்டுமிருக்கின்றன



RangaRakes tamilnavarasam.com

வேயன்றி மனித சமூகத்தின் அவசியம், தன்மை, கடமை முதலியவை என்னவென்றும் இத்தகைய பாஷியங்களும் மதமும் அவற்றிற்கு ஏற்றவைகளாயிருக்கின்றனவா? யென்றும் ஆலோசிப்பார் யாருமில்லை. அக்கிராசனர் சொல்லியது போல் ஆயிரக்கணக்கானவர்கள் பல ஆயிரக் கணக்கான கொள்கைகளையும் தர்மங்களையும் எழுதி வைத்தி ருக்கலாம். அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. எந்த மனிதனுக்கும் அவசியமெனச் சொல்லும் எக்கொள்கையும் அனுபவத்தில் எளிதாக அனுசரிக்கப்படுவதற்கு ஒத்ததாயிருக்கின்றதோ - அனுசரித்தே தீர வேண்டியதாயிருக்கின்றதோ அதனைத்தான் உத்தமமும் உண்மையுமுள்ள கொள்கையென்று சொல்ல வேண்டும். இல்லாமல், இப்படியிருக்க வேண்டும் அப்படியிருக்க வேண்டு மென்று கட்டுப்பாடுகளும் நிர்ப்பந்தங்களும் மாத்திரம் ஏற்படுத்திக் கொண்டு அதை சிவன் சொன்னார், விஷ்ணு சொன்னார், கிறிஸ்து சொன்னார், நபி சொன்னார், புத்தர் சொன்னார், ரிஷி சொன்னார், முனி சொன்னார், மனு சொன்னார் என்பதாக சொல்லிக் கொண்டு காரியத்தில் நடைபெற முடியாமல் இருக்கும் மதங்கள் எவற்றினாலும் உலகம் ஒரு நாளும் உய்யப்போவ தில்லை. மனிதனுடைய இயற்கை தத்துவத்திற்கும் அனுபவத்திற்கும் விரோத மானதைப் புகட்டும் எந்த மதத்தையும் சுருட்டிக் கட்டி மடக்கி சமுத்திரத்தில் போட வேண்டியதுதான். புண்ணியம், பாவம், மதம், கொள்கை முதலிய இவற்றின் பெயரால் ஜன சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களும், துன்பங்களும் இவ்வளவு என்று சொல்ல முடியாது. உலகத்தில் அநீதிகளும் மக்களுக்கு விரோதமான காரியங்களும் எவ்வளவு இருக்கக் காண்கி றோமோ அவ்வளவும் மதத்தின் பேராலும் தெய்வத்தின் பேராலும்தான் ஏற்படுகின்ற தென்பதை உறுதியாய்ச் சொல்லுவேன். திருட்டுக்கும், விபசாரத் திற்கும், பொய், கொலை, முதலியத் தீத் தொழில்களுக்கும், குடிக்கும், சர்வ சதாகாலமும் மக்களை வஞ்சித்து பிறருடைய உழைப்பினால் சாப்பிட்டுக் கொண்டு சோம்பேறிகளாய் காலங்கழித்துக் கொண்டிருப்பதற்கும் மதங்க ளும் தெய்வங்களும் சம்மதப்பட்டு இடங் கொடுத்துக் கொண்டிருப்பதாய்ச் சொல்லி புராணங்களும் இதிகாசங்களும் எழுதி வைத்திருப்பதுடன் கடவு ளுக்கும் அது இஷ்டந்தான் என்றும் கடவுளும் அவற்றில் ஆசைப்பட்டு நடந்திருப்பதாயும் எழுதிவைக்கப்பட்டு இருக்கின்றன. (கரகோஷமும் நகைப்பும்) குடிப்பதே சில கடவுள்களுக்கு இன்பம். மற்றும் விபசாரம் திருட்டு முதலிய பல தீச் செயல்கள் செய்வதே சில கடவுளுக்கு விருப்பம். ஏழை களை வதைத்து அவர்கள் உழைப்பினால் சுகமாக வாழ்வதே சில கடவுளுக் குச் சந்தோஷமென்று மதத்தின் பேரால் பலவாறாக ஆபாசமான கற்பனை களும் புராண ஆதாரங்களும் வேதங்களு மேற்பட்டிருக்கவில்லையா? மக்களுக்கு உபயோகமற்றதும் இம்மாதிரி இயற்கைக்கு விரோதமானதுமாகிய கடவுளும் மதம் முதலியவைகளும் உலகத்தை விட்டொழியும்போதுதான் மக்களுக்கு சுகமுண்டாகும். மனிதனுக் கும் இத்தகைய சுகத்தைப் பெறுவதற் கான வழியைத் தேடுவதற்கு வேண்டிய தைரியம் வந்தால் தான் அந்த



எண்ணமும் உதயமாகும். ஆனால் அந்த எண்ணம் உதயமாகுமுன்பே அந்நெறியிலிருந்து மனிதனை வலைவீசி இழுத்து பாழ்படுத்த பல முட்டுக்கட்டைகளும் நிர்ப்பந்தங்களுமிருக்கின்றன. மனிதன் இம்முயற்சி யில் இவற்றிலிருந்து விடுபட வேண்டுமானால் எந்தவிதமான கட்டுப்பாட்டுக் கும் அடங்கியவனாக இருக்கக்கூடாது. எதையும் உடைத்தெறிந்து கலகம் செய்யத் தயாராய் இருக்க வேண்டும்.

மனிதன் தன்னுடைய அயலானுக்கு கஷ்டம் கொடுக்காமலும் எந்த விதத்தில் உதவி செய்யலாம், நாமும் இன்பமாய் வாழலாம் என்ற நோக்க முடையவனாயும் வாழ வேண்டும். மற்றப்படி சிறு கூட்டங்களின் சுயநன் மைக்காகப் பலவித கட்டுப்பாடுகளையும், நிர்ப்பந்தங்களையும் வைத்துக் கொண்டு மக்களையும் ஏமாற்றித்திரியும் மதங்களையும், கொள்கைகளையும் வெட்டி ஆழப் புதைக்கவேண்டும். ஆதாரங்களை சுட்டுப் பொசுக்கி சமுத்திரத்தில் கரைத்து விட வேண்டும். ( கரகோஷம்) நான் மதத்தைப் பற்றிப் பேசும்போது சிலருக்கு வருத்தமாகத் தான் இருக்கும். ஏனென்றால் அவர்கள் பார்க்கும் கண், இந்து மதத்தின் கொள்கைகளின் மூலமானதாயும், பிறரை வஞ்சித்து மோசம் செய்வது, இம்சிப்பது முதலான கொள்கைகளின் மூலமாகவும் பார்ப்பதுமாக விருப்பதனால் தான். யாருக்கு எந்த மதத்தில் பற்று இருப்பினும் அதைக் குறித்து எனக்குக் கவலை இல்லை. ஆனால் அந்த மதத்தினால் நாடு என்ன நன்மை பெற்றது, மனித வர்க்கத்திற்கு என்ன பலனேற்பட்டது என்னும் கேள்வி முக்கியமானதாய் இருக்க வேண்டும். புல்லாகிப் பூண்டாகி புழுவாகி மனிதனாகிப் பிறகு கடவுள் பக்கத்தில் இருப்பவன் என்றும் பலவாறு பரிணாம நிலைகளை ( நகைப்பு ) குறித்துச் சோம்பேறிகள் பெருமையாகப் பாடிக்கொண்டு போவதனால் என்ன பயன்? வேண்டுமானால் மூடர்கள் முன்னிலையில் ஆழ்வார்களாகவும் நாயன்மார் களாகவும் வாழலாம். (கரகோஷம்) மனிதனோ புல் பூண்டு, புழு மிருக முதலிய ஜீவராசிகளுக்கெல்லாம் மேலான அறிவைப் படைத்துள்ளவ னென்று சொல்லப்படுகிறது. ஆனால் அவற்றினிடத்தும் மனித வருக்கத் திற்கு அப்புல் பூண்டு புழு பூச்சிகளை விட அறிவற்ற தன்மையும் துன்ப முமே தொடர்ந்து வரக் காண்கின்றோம். ஒரு சமயம் மனிதனுக்கும் அவற்றிற் குச் சமமான அறிவு இருந்திருந்தால் துக்கம் துக்கமென்ற, உணர்ச்சியில்லாமற் போயிருக்குமல்லவா? மனிதனுடைய உண்மையான நிலையை ஒருவருக் காவது கற்றுக் கொடுக்கக் கூடிய மதம் இல்லை. உள்ளதைக் கொண்டு திருப்தி யடையுங்கள், அடுத்தவனுக்கு உபகாரியாய் நன்மை செய்யுங்க ளென்று எந்த மதமும் காரியத்தில் கற்பிக்கவில்லை. அதனை அறியும் வரை மனிதனும் பூச்சிப் புழுக்களைப் போல் நசுக்குண்டுதான் துன்பத்திலுழன்று கொண்டிருப் பான்.

இந்து மதமென்றாலும் வேறு மற்றெந்த மதமென்றாலும் நாட்டையும்



RangaRakes tamilnavarasam.com

ஜன சமூகத்தையும் பாழ்படுத்த எவ்வளவு, கட்டுப்பாடுகளும் நிர்ப்பந் தங்களும் நிறைந்திருக்கக் கூடுமோ அவ்வளவும் நிறைந்து வழியக் கூடிய வைகளாகத் தானிருக்கின்றன. காரிய அளவில் இந்து மதம் என்பதும் அதன் பெயரால் கொள்ளப்படும் கொள்கைகளும் மற்றெல்லா மதங்களைவிட மனிதனை ஏமாற்றிக் கட்டுப்படுத்தி நிர்பந்தங்களுக்குள்ளாக்கக் கூடியவைக ளாகத்தானிருக்கின்றன. கூடியவரை புத்த மதக் கொள்கைகள் ஒரு விதத்தில் உயரிய கருத்தைக் கொண்டதாக இருப்பதாய் சொல்லப்படுகின்றது. மேலும் மற்றெல்லாம் மதங்களைவிட புத்த மதத்தில் கருத்துக்கள் விசாலமாக மனித தர்மத்திற்கும் அனுபவத்திற்கும் ஒத்ததாக விருக்கின்றன என்று சொல்லப் படுகின்றது. இதனை நான் முழு ஆராய்ச்சியினால் சொல்லுவதாகக் கருதி விடக்கூடாது. உலகத்தில் ஏதாவது ஒரு நல்ல விஷயத்தைச் சொன்னால் என்ன இது புத்த மதமாயிருக்கிறதே என்று சொல்லப்படுவது இயற்கை யாயிருப்பதிலிருந்துதான் இம் மதத்தின் கருத்துக்களை அனுமானித்தேன். இன்றைய தினம் இங்கு கூட்டப்பட்டுள்ள மகாநாட்டில் நீங்கள் இப்படி நடக்க வேண்டும். அப்படி நடக்க வேண்டுமென்று கட்டுப்படுத்தும் தீர்மானங்களும் செய்யப்படலாம். அதனாலேயே முடிவான நன்மைகள் விளைந்து விடாது. உலகத்திலுள்ள பெரிய மதங்கள் என்பவை ஏன் மக்களை உயரிய கருத்துக் களை அனுசரித்து வாழ்க்கையிலுய்யுமாறு பக்குவப்படுத்தவில்லை என்னும் கேள்விக்கும் பதில் சொல்லக் கடமைப் பட்டுமிருக்கின்றோம். அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒத்ததாயுள்ள மதம் என்றால் மக்களுள் பெரும்பாலோரால் ஏன் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றால் இதற்கு "எதிரிகளின் சூழ்ச்சி களினால்தான்" என்று பதில் சொல்லப்பட்டிருக்கின்றது. எல்லா மதத்தினரும் இவ்வாறு தான் சொல்லுகின்றனர். எந்த மதம் மக்களுடைய வாழ்க்கையைக் கைப்பற்றி அவர்களைப் பக்குவப்படுத்தியிருக்கின்றது என்று பார்ப்போமா னால் ஒன்றைக் கூடச் சொல்வதற்கில்லை. மதத்தின் பெயரால் செய்யப்படும் காரியங்கள் ஒன்றாவது மக்களை மனிதத் தன்மைக்குத் திருப்புபவைகளா யிருக்கவில்லை. ஆதலால் இம்மாதிரியான மகாநாடுகள் மனிதனை மனிதத் தன்மைக்குத் திருப்புவது என்ற முயற்சிகளிலிறங்கி நிர்ப்பந்தமின்றி அனுபவத்தில் எளிதில் கைக்கொண்டனுசரிக்கத்தக்க - அனுசரித்துத் தீர வேண்டியதான கொள்கைகளை பகுப்பது உசிதமாகும். எது மனித தர்மத் திற்கு விரோதமோ எது அறிவுக்கு விரோதமாக முட்டுக்கட்டையாக நிற்கின் றதோ அதை எல்லாம் அழிக்க தைரியமாக முன் வந்து அவ் வேலையில் ஒரு கட்டுப்பாட்டுக்கும் நிர்ப்பந்தத்திற்கும் இடங்கொடாது அவற்றை அழித்து மனிதத் தன்மையைப் பரவச் செய்வதனால்தான் இது சாத்தியமாகும். உலகமும் மனித சமூகமும் சுகமும் சுதந்திரமுமடையக்கூடும். (பெருத்த கரகோஷம்) இந்து மதமென்பதாக ஒரு மத மில்லை என்பது தான் என் அறிவுக்கு எட்டிய முடிவு. ஆனால் பல மதங்கள் (சைவம், வைணவம் முதலியன) சேர்ந்தது இந்து மதமென்று சிலர் சொல்லுகின்றனர். இந்து மதமென்பதில் சைவம் வைணவமாகிய இத்தியாதி மதங்கள் சேர்ந்த



தொடர்பெனச் சிலர் சமாதானம் கூறினாலும் அவை எவ்வித உண்மைக்கும் ஒத்ததல்லவென்பது தான் என் அபிப்பிராயம். இந்து மதம் என்பதில் சைவம் வைணவம் என்றும் இரண்டு சமயமும் வெறும் புரட்டையே அஸ்திவாரமாகக் கொண்டு கட்டப்பட்டது. மகமதிய மதமும், கிறிஸ்துவ மதமும் ஒரு குறிப் பிட்ட காலத்தில் ஏற்பட்டதென்றும் அதனை உண்டாக்கியவரைக் குறித்தும், கொள்கைகளைப் பற்றியும் சில ஆதாரங்களுமிருப்பதாகச் சொல்லப்படு கின்றது. ஆனால் சைவம் வைணவம் முதலிய மதங்கள் சேர்ந்த தொடர்பான இந்து மதமென்பது எக்காலத்தில் எப்படி ஏற்பட்டதென்ற அஸ்திவாரம் குறிப்பிடுவதற்கில்லாமலிருக்கின்றது. இம்மதங்களென்பது ஜனங்கள் அறி யாமை காரணமாக வளர்ந்து கொண்டு இந்நாட்டினரை ஒன்று படுத்துவதற் கிடமில்லாமலிருக்கின்றது. நானும் கூடியவரை அந்தந்த மதத்தில் சம்பந்தப் பட்டவர்கள் சொல்லும் சமாதானங்களையும் அவர்கள் அபிப்பிராயங் களையும் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். மதங்களால் ஒரு பெரிய சமூகம் சிதறுண்டு பல கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் இலக்காகியிருக் கின்றது. மதங்கள் என்ற பித்த லாட்டங்களும் சமயங்கள் என்ற புரட்டுகளும் மக்களை அந்தகாரத்தில் ஆழ்த்தி வருகின்றன. பெரும்பகுதியான மக்களின் உன்னத நாகரீகமும் செல்வ வளர்ச்சியும் நிறைந்த நாட்டு மக்களை மக்க ளெனச் சொல்ல முடி யாது மாக்களாக்கியிருப்பதும் இம்மதமென்ற புரட்டுக் கள்தான். (கரகோஷம்) பெரும் இடையூறுகளை எளிதில் சொல்லமுடியா தாயினும் சிறுமையாக விருக்கும் தடைகளைச் சீக்கிரத்திலேயே ஒழிக்க முயல வேண்டும். "மகாத்மா" காந்தி என்பவரும் மக்களைச் சமத்துவப் படுத்தி சகோதரத்து வத்தை நிலைநாட்ட ஊரெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்ய வந்தவர் கடைசியில் விலங்கைத் தறித்து குட்டையிலடைத்து விட்டதுபோல் செய்து வைத்தார். (கரகோஷம்) அவருடைய சமீபமாறுதல் களால் அவர் உலகத்திற்கு பெரும் தீங்கிழைத்திருப்பது புலனாகும். ராமானுஜர் சமத்துவத்திற்காக பாடுபட்டதாகச் சொல்லப்பட்டாலும் அவர் மதம் இப்போது வித்தியாசமில்லாதவர்களுக்குள்ளும் வித்தியாசத்தைப் புகுத்தி விட்டது. (நகைப்பு) சங்கராச்சாரியார் மனிதனுக்கு மனிதன் பேத மில்லை என்று சொல்லி பெரும் பேதத்தை உண்டாக்கி மக்கள் வாழ்க்கையை பாழ்படுத்தி வைத்தார். இவ்வாறு மற்றும் பல மதத்தலைவர்களும் ஆச்சாரி யார்களும் குழப்பத்தில் தான் கொண்டு வந்து விட்டிருக்கின்றனர். இந்து மதம் என்பதை இன்னும் பிரித்து பிரித்து நன்காராய்ந்தால் அதன் பெயரால் கஷ்டங் களும் ஆபாசங்களும் மிகுந்து மக்களை மேன்மேலும் கொடுமைகளுக்கும் அவமானத்திற்கும் உட்படுத்தியிருப்பது தான் தெளிவாகக் காண்கின்றன. அதனால் இதற்காக புதிதான கொள்கைகளும் மார்க்கமும், சமயமும் அவசிய மில்லை. உள்ள மார்க்கத்தில் எது எது இயற்கைக்கும் அனுபவத்திற்கும் விரோதமாயும் மனிதத் தன்மைக்கு முரணாயுமிருக் கின்றதோ அவற்றை எல்லாம் உடைத்தெறிய வேண்டும். அதற்காக ஒருவன் பிறக்கப் போகிறான் என்பதும் மூட நம்பிக்கையாகும். ஒவ்வொருவரும் அதை உடைத்தெறிய



RangaRakes tamilnavarasam.com

சுதந்திரமுடையவர்கள் என்ற கொள்கை மனித வர்க்கத்தினர் யாவருக்கும் உதிக்க வேண்டும். நிற்க மனித வர்க்கத்தில் பாதியான ஸ்திரீ வர்க்கத்தை நம் நாட்டிலும் கேவலமாகத்தான் நடத்தப்பட்டு வருகின்றது. இதைப்பற்றி எல்லா மதமும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. இயற்கைத் தோற்றத்திலேயே பெண் என்றால் தாழ்ந்தவர்கள் என்ற உணர்ச்சிதான் ஆண் மக்களுக்கு தோன்றுகிறது. பல மதங்களில் பெண் மக்களுக்குச் சுதந்திரமும் உரிமை களுமளிக்கப்படுவதாகத் தோன்றினாலும் அவர்கள் இன்னும் பழைய அடிமைத்தனத்திலிருந்து விடுபட எந்த ஆண்மகனும் யாரும் சம்மதிப்பதாக காணவில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் எந்த நிலையாலும் எவ்வித வித்தி யாசமும் கற்பிக்கப்ப ட்டிருக்கவில்லை என்ற தத்துவத்தை மனிதன் உணரும் போதுதான் மனிதத்தன்மை என்பது வெளிப்படக்கூடும். (கரகோஷம்) இயற்கைக்கும் அனுபவத்திற்கும் விரோதமான கட்டுப்பாடுகளை எல்லாம் உடைத்தெறியத்தக்க கொள்கைதான் மனிதவர்க்கத்திற்கு அவசியமான தென்று கருதுவதின் மூலம்தான் அவர்கள் ஒரு காலத்தில் அந்நிலைமைக்கு வந்து சேரக்கூடுமென்றும் நம்பிக்கையும் எனக்குப் பூர்ணமாய் ஏற்பட்டிருக் கின்றது. (கரகோஷம்) நான் இது வரை கூறியதில் உங்களுக்குச் சரி எனப் படுவதை ஏற்றுக்கொண்டு தப்பாகத் தோன்றுவதை ஒதுக்கி என் அறியா மைக்கு என்னிடம் பரிதாபப்பட்டு என்னை மன்னிப்பீர்களென்று கேட்டுக் கொள்ளுகிறேன். (கரகோஷம்)

*குறிப்பு: 07.04.1928 இல் சென்னை சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் லட்சுமி நரசு அவர்களின் தலைமையில் நடந்த தென் இந்திய பவுத்தர்களின் மூன்றாவது மாநாட்டில் மதங்கள் குறித்து ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 15.04.1928**



# பார்ப்பனீய போக்கிரித்தனம்

சென்ற ஒரு மாத காலமாக பார்ப்பனப் பத்திரிகைகளும் அவர்கள் வாலைப் பிடித்து வயிறு வளர்க்கும் சில பார்ப்பனரல்லாதார் பத்திரிகை களும் ஒரே அடியாய் சற்றும் அறிவு, மானம், வெட்கம் இன்றி பார்ப்பன ரல்லாதார் கக்ஷியையும் மந்திரிகளையும் வசைபாடும் வேலையிலேயே ஈடுபட்டிருக்கின்றன. அதற்கேற்றாற்போல் வெளியிடங்களில் உள்ள பார்ப்பனர்களும் அவர்களிடம் கூலி வாங்கி வயிறு வளர்க்கும் பார்ப் பனரல்லாத வயிற்றுப் பிழைப்பு தேச பக்தர்களும் இதையே பின்பற்றிக் கொண்டு ஆங்காங்கு கூட்டம் போட்டது போலவும், மந்திரிகளையும் பார்ப்பனரல்லாதார் கக்ஷியையும் கண்டித்து தீர்மானங்கள் செய்தது போலவும், மந்திரிகளை ராஜீனாமா செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வது போலவும் பலவித பித்தலாட்டத் தீர்மானங்களைச் செய்ததாக பத்திரிகைகளில் எழுதி விடுகின்றார்கள். “மந்திரிகளின் துரோகம்” என்றும் “தேசத்துரோகம்” என்றும் மற்ற பல இழிவான வார்த்தைகளை போக்கிரித் தனமாக எழுதி பாமர மக்களை ஏமாற்றப் பார்க்கின்றார்கள்.

எனவே இவர்கள் வையும் இந்த மந்திரிகள் யார் என்றும், எங்கிருந்து வந்தவர்கள் என்றும், எந்த கக்ஷியைச் சேர்ந்தவர்கள் என்றும் சற்று யோசிப் போம்.

ஸ்ரீமான்கள் சுப்பராயன், ரங்கநாத முதலியார் ஆரோக்கியசாமி முதலியார் ஆகிய மூவர்களையும் சுயராஜ்ஜியக் கக்ஷியின் உதவியைக் கொண்டு ஸ்ரீமான்கள் ஸி. ராஜகோபாலாச்சாரியார், ஸி. விஜயராகவாச் சாரி யார், சர்.சி.பி. ராமசாமி அய்யர் மற்றும் பல பார்ப்பனர்கள், அடையாறு கோஷ்டியார் ஆகியவர்கள் ஒன்று சேர்ந்து சிருஷ்டித்தார்களா இல்லையா? என்று கேட்கின்றோம்.

இந்தப்படி பார்ப்பன கோஷ்டியார் மந்திரிகளை சிருஷ்டித்ததற்காக மேல் கண்ட மந்திரிகளிடம் பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் கவலையுள்ள பார்ப்பனரல்லாதாருக்கு உத்தியோகங்களும் ஸ்தல ஸ்தாபன நியமனங் களும் கொடுக்கக் கூடாது என்றும், பார்ப்பனரல்லாதார் கக்ஷியை ஒழித்து விட வேண்டும் என்றும் வாக்குறுதி வாங்கிக் கொண்டு அந்த நிபந்தனை



RangaRakes tamilnavarasam.com

யின் பேரில் ஆதரிப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்டது உண்டா? இல்லையா? என்று கேட்கின்றோம்.

அந்தப்படியே மூன்று மந்திரிகளையும் தங்கள் கையில் உள்ள களிமண் உருண்டைகள் போல் நினைத்து தங்களுக்கு வேண்டிய படியெல்லாம் பொம்மைகள் செய்து கொண்டார்களா இல்லையா என்று கேட்கின்றோம்.

மற்றும் இம்மந்திரிகள் மூலம் பார்ப்பனர்கள் தங்களுக்கு வேண்டிய மாதிரியெல்லாம் ஸ்தல ஸ்தாபனங்களில் புரட்டும் பித்தலாட்டங்களும் செய்து கொண்டு பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கும் நன்மைக்கும் தங்களால் கூடிய உபத்திரவமெல்லாம் செய்து வந்தார்களா இல்லையா என்று கேட்கின்றோம்.

சட்டசபை தேர்தல் ஆனவுடன் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை மந்திரி வேலை ஒப்புக் கொள்ளும்படிக்கும் கவர்னரை ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு மந்திரி வேலை கொடுக்கும் படிக்கும் கேட்டுக் கொள்வதாக ஸ்ரீமான் வரதராஜுலு காங்கிரஸ்வாதி என்கின்ற முறையில் தந்தி கொடுத்தாரா இல்லையா என்று கேட்கின்றோம்.

மந்திரிகள் நியமனமான பிறகு மந்திரிக்கு காங்கிரசு கட்சித் தலைவர் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஒரு விருந்தளித்து தான் மந்திரிக்கு வேண்டியவர் என்று காட்டிக்கொண்டு தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டாரா இல்லையா என்று கேட்கின்றோம்.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி இந்த விளம்பரத்தை வைத்துக் கொண்டு ஸ்தல ஸ்தாபன நியமனங்களுக்கும், உத்தியோகங்களுக்கும் மற்றும் மந்திரிகளால் ஆக வேண்டிய காரியங்களுக்கும் பீஸ் வாங்கிக்கொண்டு சிபார்சு செய்து பதினாயிரக்கணக்காக பணம் சம்பாதித்தாரா இல்லையா என்று கேட்கின்றோம்.

இம்மாதிரியெல்லாம் செய்யலாமா என்று கனம் ஸ்ரீ முத்தையா முதலியார் காங்கிரஸ் முறையில் கேட்டதற்கு ஆம் அப்படித்தான் செய்வோம். பார்ப்பனரல்லாதார் கட்சியை எப்படியாவது ஒழிப்பதுதான் எங்கள் வேலை என்றும் அதற்காக "இதுவும் செய்வோம் இனியும் என்னமுஞ் செய்வோம்" என்றும் சொன்னார்களா இல்லையா யென்று கேட்கின்றோம்.

இந்த மேல் கண்ட மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்த காலத்தில் அவர்களுக்கு செல்லுமிடங்களிலெல்லாம் பார்ப்பனர்கள் பூரண கும்பங்கள் எடுப்பது, ஆடம்பர மரியாதை செய்வது முதலிய பல காரியங்கள் நடந்ததா இல்லையா என்று கேட்கின்றோம்.



பார்ப்பனரல்லாத மந்திரிகளை பார்ப்பனர்கள் தங்கள் வீட்டிற்குள் இறக்கி வைத்துக்கொண்டு வேறொருவர் பார்க்காதபடி மூடுமந்திரங்கள் செய்தார்களா இல்லையா என்று கேட்கின்றோம்.

கவர்னர், ஸ்ரீமான்கள் அரங்கநாதம், ஆரோக்கியசாமி ஆகிய முதலியார்மார்களை வெளியில் பிடித்து தள்ளி விட்டதற்காக இந்த பார்ப்பனர்களும் அவர்கள் கூலியாகிய ஸ்ரீமான் வரதராஜுலுவும் இந்த மந்திரிகளை கவர்னர் வெளியில் போகச் சொன்னது தப்பு என்றும் மறுபடியும் அவர்களையே மந்திரியாக நியமிக்க வேண்டும் என்றும் தங்கள் பத்திரிகையில் எழுதினார்களா இல்லையா என்று கேட்கின்றோம்.

மேற்படி முதலியார் மந்திரிகள் விலக்கப்பட்டதற்கு ஒப்பாரி வைத்து அழுதார்களா இல்லையா? என்று கேட்கின்றோம். இப்பொழுது இருக்கும் மந்திரிகளை பாராட்டுவதற்காக காங்கிரஸ் பார்ப்பனர்கள் அதாவது ஸ்ரீமான்கள் ஏ. ரங்கசாமி, சி.வி. வெங்கட்டரமணன் முதலிய அய்யங்கார்களும் பல அய்யர் சாஸ்திரி பார்ப்பனர்களும் காஸ்மாபாலிட்டன் கிளப்பு மெத்தைக்கு போய் பாராட்டி வந்தார்களா இல்லையா என்று கேட்கின்றோம்.

இப்பொழுதும், மந்திரிகள் தங்களுக்கும் பகுதி நாமிநேஷனும் உத்தியோகமும் கொடுப்பதாயிருந்தால் தாங்கள் இந்தக் கூப்பாடு போடாமல் வாயை மூடிக்கொண்டிருக்கிறோமென்று சொல்லி தூது அனுப்பிக் கொண்டிருக்கிறார்களா இல்லையா என்று கேட்கின்றோம். இந்த ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் அதாவது புதிய மந்திரிகள் மந்திரி வேலை ஒப்புக் கொண்டது அரசியல் நாணயக் குறைவு என்று இப்போது சொல்லுபவர் இனியும் முதல் மந்திரியிடம் தனது வகுப்பு நன்மைக்காக சமாசாரப் போக்கு வரத்தும் சிபார்சு போக்குவரத்தும் வைத்துக் கொண்டிருக்கிறாரா இல்லையா என்று கேட்கின்றோம். மற்றும் பல பார்ப்பனர்களும் காங்கிரஸ் சுயராஜ்ஜியக் கட்சி வீரர் என்பவர்களும், நியமனம், உத்தியோகம் ஆகிய எலும்புகளுக்கு இன்னமும் மந்திரிகளின் வீட்டைச் சுற்றிக் கொண்டு பல்லைக் காட்டிக் கொண்டும் திரிகிறார்களா இல்லையா என்று கேட்கின்றோம். ஆகவே இந்த பார்ப்பனர்களுக்கும் ஸ்ரீ வரதராஜுலுக்கும் மற்றும் காங்கிரஸ் சுயராஜ்ஜியக் கட்சி என்று சொல்லிக் கொள்ளும் மானங்கெட்ட வீரர்களுக்கும் இந்த மந்திரிகள் எந்த விதத்தில் தேசத்துரோகிகளாய் விட்டார்கள் என்று கேட்கின்றோம்.

தாங்கள் என்ன சொன்னாலும் என்ன எழுதினாலும் கேட்பதற்கும் படிப்பதற்கும் நாட்டில் தேவையான முட்டாள்கள் இருக்கின்றார்கள் என்கின்ற ஆணவமேயல்லாமல் இந்த மந்திரிகளை இவர்கள் குறை சொல்ல வேறு ஏதாவது உண்மையான காரணங்கள் உண்டு என்று யாராலாவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம். "எள்ளுதான் எண்ணைக்காக காய்கின்றது. இந்த எலிப்புளுக்கை எதற்காக காய்கின்றது" என்று ஒரு



RangaRakes tamilnavarasam.com

பழமொழி உண்டு. அதுபோல் பார்ப்பனர்கள்தான் தங்கள் வகுப்புக்கு ஆதிக்கம் போய்விடுமே, நியமனம் போய்விடுமே, உத்தியோகம் போய் விடுமே என்று நினைத்துக் கொண்டு இந்த சமயம் ஊளையிட வேண்டியது அவர்களுக்கு அவசியமாகும். மற்றபடி தம்மை பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக் கொள்ளும் ஸ்ரீ வரதராஜுலுக்கு இதில் ஆமா சாமி போட வேண்டிய அவசியம் என்ன என்பதுதான் பொது ஜனங்க கண்டுபிடிக்க வேண்டிய ரகசியமாயிருக்கின்றது. மந்திரிகள் விஷயத்தில் ஸ்ரீ வரதராஜுலு கொள்கை என்ன? தேசீய விஷயத்தில் ஸ்ரீவரதராஜுலு கொள்கை என்ன? தொழிலாளர் விஷயத்தில் ஸ்ரீ வரதராஜுலு கொள்கை என்ன? மத விஷயத் தில் ஸ்ரீ வரதராஜுலு கொள்கை என்ன? என்று இந்த உலகத்தில் யாராலாவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம். இம்மாதிரி தனக்கும் புத்தியில் லாமல் வேறொருவர் சொல்லுவதையும் கேட்காமல் உயிருடன் இருப்பதற் காகவே பார்ப்பனர்களின் வாலைப் பிடித்துக் கொண்டு அவர்கள் சொல்லுவ தற்கெல்லாம் ஆமா சாமி போட்டுக் கொண்டும் காற்றடிக்கும் பக்கம் சாய்ந்து கொண்டும் பார்ப்பனரல்லாத சமூகத்தையே காட்டிக் கொடுத்துக் கொண்டும் இருப்ப வர்களுக்கு மந்திரிகள் பேரில் ஆத்திரம் வருவதற்கு ஏதாவது அர்த்த மிருக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

தவிர கனம் ஸ்ரீமான் சேதுரத்னமய்யர் சுயேச்சை கட்சியைச் சேர்ந் தவர். மந்திரிகளுக்காகவே அக்கக்ஷி காங்கிரஸ் பார்ப்பனரால் உண்டாக் கப்பட்டது. இந்த கனம் ஸ்ரீமான் சேதுரத்னமய்யர் சுயராஜ்யக் கட்சியின் பேரால் அதாவது மந்திரி வேலை ஒப்புக் கொள்வதில்லை, மந்திரிகளை ஆதரிப்பதில்லை என்கின்ற கொள்கையின் பேரால் சட்டசபைக்கு நின்று எதிர்ப்பு இல்லாமல் வெற்றி பெற்றவர். அப்படிப்பட்டவர் தேர்ந்தெடுக் கப்பட்டவுடன் மந்திரி வேலை ஒப்புக்கொள்ளும் கட்சிக்கு போய்விட்டாரே அந்தக் காலத்தில் இந்தப் பார்ப்பனர்களின் வாயும் கையும் என்ன செய்தன என்று கேட்கின்றோம். ஒரு பார்ப்பனராவது ஒரு பத்திரிகையாவது ஸ்ரீமான் "சேதுரத்னமைய்யர் கட்சி மாறிவிட்டார்" என்று கூட சொல்லவில்லையே, அதுவும் இல்லாமல் காங்கிரஸ் பார்ப்பனர்கள் தானே அவரை அந்தக் கட்சிக்கு அனுப்பினது. அப்பேர்பட்ட ஸ்ரீமான் சேதுரத்னமய்யர் இப்போது கனம் சேதுரத்னமய்யரானவுடன் இந்தப் பார்ப்பனர்களுக்கும் அவர்களது கூலிகளுக்கும் ஏன் இவ்வளவு ஆத்திரம் வருகிறது என்று கேட்கின்றோம்.

தவிர ஸ்ரீமான் முத்தையா முதலியார் சட்டசபை மெம்பர் ஆனவுடன் மந்திரிகளை ஆதரிப்பது காங்கிரஸ் கொள்கைக்கு விரோதம் என்று தொண்டையைக் கிழித்துக் கொண்ட காலத்தில் ஒருவராவது அவருக்கு செவி சாய்க்காமலும் அவர் ஒரு காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் "சுயராஜ்யக் கட்சியார் அயோக்கியத்தனம் செய்கின்றார்கள். தேர்தல் வாக்குறுதிகளுக்கு விரோதமாய் திருட்டுத்தனமாய் மந்திரிகளை ஆதரிக்கிறார்கள்" என்று சொல்ல எழுந்தபோதெல்லாம் அவரை தலையில் அடித்து உட்கார வைத்ததை ஒரு பார்ப்பனப் பத்திரிகையாவது அவர்கள் வால்களாவது கண்டிக்காமல் இருந்துவிட்டு அவர் திருட்டுத்தனமாய் வேறு ஒருவரை ஆதரிக்காமல் நேரடியாய் தைரியமாய் ஒப்புக் கொண்டதற்கு மாத்திரம் இவ்வளவு ஆத்திரப்படுவதின் அர்த்தமென்ன என்று கேட்கின்றோம்.

முன்னால் தங்களாலேயே சிருஷ்டிக்கப்பட்டு தங்களாலேயே ஆதரிக்கப்பட்டு தங்களாலேயே பூரண கும்பம் எடுக்கப்பட்டு வந்த டாக்டர் சுப்பராயன் இப்போது இவர்களுக்கு கசந்து போகக் காரணமென்ன என்பன வைகளை நடுநிலையிலிருந்து யோசித்துப் பார்த்தால் பார்ப்பனரல்லாத கட்சியை ஒழிக்க இந்த மந்திரிகள் இப்போது ஒப்புக்கொள்ளவில்லை என்கின்ற காரணம் தவிர வேறு ஏதாவது உண்டா? என்று கேட்கின்றோம்.

ஆகவே பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் எதுவரையில் இம் மந்திரிகளை வைகின்றார்களோ அதுவரையில் இந்த மந்திரிகளை ஆதரிக்க வேண்டியதும் அவர்களை உற்சாகப்படுத்தி அவர்களிடமிருந்து பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு ஆன வேலை வாங்கிக் கொள்ள வேண்டி யதும் ஒவ்வொரு அறிவுள்ள பார்ப்பனரல்லாதார் கடமை ஆகும் என்று தைரியமாய்ச் சொல்லுவோம். மற்றபடி பார்ப்பனர்கள் காட்டும் சுயராஜ் ஜியம், தேசீயம், தேசத்துரோகம் என்கின்ற பூச்சாண்டிகளைக் கண்டு யாரும் பயப் படக்கூடாது என்றும் மற்றபடி அவர்கள் கூலிகளையும் காலிகளையும் வால்களையும் லட்சியம் செய்யக்கூடாது என்றும் தெரிவித்துக் கொள்ளு கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 15.04.1928**


RangaRakes
tamilnavarasam.com

# இந்துமத பிரசாரம்

இந்து மதம் என்பது ஒரு போலி மதம் என்றும், ஒரு கொள்கையும் அற்றதென்றும், பார்ப்பனர்களின் வாழ்வுக்கும் வயிற்றுப் பிழைப்புக்குமே கடவுளின் பெயராலும், முனிகள் பெயராலும், ரிஷிகள் பெயராலும் பல ஆபாசங்களையும் சுயநலக் கொள்கைகளையும் கற்பனை செய்து அவற்றை பாமர மக்கள் நம்பும்படி பல மிரட்டுதலான நிபந்தனைகளை ஏற்பாடு செய்து அவைகள் நிலைப்பதற்குத் தகுந்த தந்திரங்களும் சூழ்ச்சிகளும் செய்து வருகிறார்கள் என்றும் அதை அறியாமல் பல தமிழ் மக்களும் சைவம் என்றும் வைணவ மென்றும் அர்த்தமற்ற சில கடவுள்களின் பேரால் சமயங்கள் என்பதாக வகுத்துக் கொண்டு சிவன், விஷ்ணு என்னும் பெயர்கள் உடைய பல கடவுள்கள் இருப்பதாகவும் அவர்கள் பல ரூபங்களாகவும், பல அவதாரங்களாகவும் இருப்பதாகவும், அவற்றை வணங்குவதும் துதிபாடுவதுமே சைவ வைணவ கொள்கையென்றும் வைத்துக் கொண்டு அதன் மூலம் பார்ப்பனர்கள் சூழ்ச்சிக்கு இடம் கொடுத்து வரப்படுகின்றது என்றும் நாம் பல தடவைகளில் பேசியும் எழுதியும் வந்திருக்கின்றோம். இதுவரையில் நம் நாட்டில் இதைப்பற்றித் தக்க காரணம் காட்டி மறுத்தோ அல்லது சமாதானமோ யோக்கியமான வழியில் சொல்லவோ எழுதவோ இல்லை.

ஆனால் குருட்டு நம்பிக்கையிலும் மூட வழக்கங்களிலும் பலமாக கட்டப்பட்ட சிலரும், மதத்தின் பேராலும் சமயத்தின் பேராலுமே தங்கள் வாழ்க்கையை நிலை நிறுத்திக் கொண்ட சிலரும் கொஞ்சமாவது தங்கள் பகுத்தறிவை உபயோகிக்காமலும் பொது ஜனங்களுக்கு என்ன சமாதானம் சொல்லுவது, எப்படி மெய்ப்பிப்பது என்பதைப் பற்றி கவலைப்படாமலும் பார்ப்பனர்கள் தங்கள் கற்பனைப் புரட்டுகளை நிலைநிறுத்த ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருப்பதான "நாஸ்திகமாச்சுது" "மதம் போச்சுது" "கலிகாலத்தின் கொடுமை" என்கின்ற யோக்கிய மற்றதும், வஞ்சகமும், கொடுமையும் நிறைந்ததுமான ஆயுதங்களை உபயோகித்து ஏமாற்றப் பார்க்கின்றார்களே ஒழிய ஒரு வழியிலாவது சரிப்பட்டு வருகின்றதில்லை சமீபகாலமாக சில சைவர்கள் என்போர்கள் நம்மைப்பற்றி காணாத இடங்களில் 'சைவத்திற்கு பெரிய ஆபத்து வந்துவிட்டது எல்லோரும் உஷார் உஷார்' என்பதும் ஏதாவது அர்த்தமற்றதும் பாமரர்கள் ஏமாறத்தக்கதுமான வார்த்தைகளை அடுக்கி துண்டு விளம்பரங்கள் போடுவதும் அதை சில வயிற்றுப் பிழைப்பு பத்திரிகைகளும் தனக்கென யாதொரு கொள்கை யுமற்று சமயம் போல் நடந்து உயிர் வாழ்வதையே முக்கிய பிழைப்பாய்க் கொண்டிருக்கும் பத்திரிகைகளும் ஆசாமிகளும் "நாயக்கர் பிரசாரம்," என்று விஷமத் தலைப்பின்கீழ் எடுத்துப் போடுவதும் மற்றும் தாங்களே தங்கள்பேரால் எழுதுவதற்கு தைரியமற்று ஏதோ பல அனாமதேயங்களின் பேரால் "நாயக்கர் மதத்தை அழிக்கப் பார்க்கின்றார், நாஸ்திகத்தை பிரசாரம் செய்கின்றார்" என்கின்ற மாதிரி எழுதுவதுமான காரியங்கள் நடந்து வருகின்றது.

நிற்க, சிவனைப் பற்றியும் சிவனைக் கடவுளாகக் கொண்ட சைவ சமய ஆதாரங்களான பல புராணங்களைப் பற்றியும் அதில் உள்ள புரட்டுகளைப் பற்றியும் அதுபோலவே விஷ்ணுவைப் பற்றியும் விஷ்ணுவை கடவுளாகக் கொண்ட வைண சமய ஆதாரங்களான பல புராணங்களைப் பற்றியும் நாம் குறிப்பிடும் விஷயங்களைப் பற்றி 'மத தூஷணை' 'தெய்வ நிந்தனை' என்று பேசிவிட்டு எழுதிவிட்டு தங்கள் தங்கள் சமயத்தைப் பற்றி பேசும்போதும் அதைப் பெருமைப்படுத்தி நினைக்கும் போதும் சைவன் வைஷ்ணவத்தையும் விஷ்ணுவையும், வைணவன் சைவத்தையும் சிவனையும் எவ்வளவு தூரம் இகழ்ந்தும், இழிவாயும் ஆபாசமாயும் வேதத்தின் பேராலும் உபநிடதத்தின் பேராலும் புராணங்களின் பேராலும் எழுதியும் பேசியும் வருகின்றார்கள் என்பதைப் பார்ப்போமானால் இதுவரை நாம் பேசியும் எழுதியும் வந்தது அவற்றில் பதினாயிரத்தில் ஒருபங்குகூட இருக்காது என்றே சொல்லுவோம். உதாரணமாக,

சிவ பராக்கிரமம் என்னும் புத்தகமும், கூரேச விஜயம் என்னும் புத்தகமும், ராமாயணம், பாரதம், பாகவதம், விஷ்ணு புராணம், கந்த புராணம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், அருணாசல புராணம், விநாயக புராணம் என்னும் சமய புராணங்களும் ஆகியவைகளை நடுநிலையில் இருந்து படித்துப்பார்ப்பவர்களுக்கு இதன் உண்மைகள் விளங்காமல் போகாது. நாம் சொல்வதும் எழுதுவதும் ஒவ்வொன்றும் மேற்கண்ட சமய ஆதாரங்களாகி பல புத்தகத்தில் சிவன் சொன்னதாகவும், விஷ்ணு சொன்னதாகவும், பிரம்மா சொன்னதாகவும், முனி சொன்ன தாகவும், ரிஷி சொன்னதாகவும் உள்ள விஷயங்களையே குறிப்பு காட்டி எழுதியும் சொல்லியும் வருகின்றோமேயல்லாமல் நம்மை எதிர்க்கும் சில புரட்டர்கள் சொல்வது போல் 'அதற்கு இதல்ல அருத்தம்' 'இது சையன்சுக்கு பொருத்தம்' 'இது படியாத முட்டாளின் கருத்து' 'இது குண்டர்களின் வேலை' 'ஆராய்ச்சியில்லாதவர்களின் கூற்று' என்பதான அயோக்கியத் தனமும், போக்கிரித் தனமும், பேடித்தனமும், இழிதகைமையும் பொருந் தியதான சமாதானங்களை ஒருபோதும் சொல்ல முன் வருவதே இல்லை.

அன்றியும் நாம் சொல்லும் விஷயங்களை சமயத்தைக் காக்க வந்த





RangaRakes tamilnavarasam.com

தாகச் சொல்லிக் கொள்ளும் வைணவ சைவ பக்தர்கள் சொல்லுவதையும் எடுத்து இரண்டொரு உதாரணங்கள் காட்டுவோம்.

தற்சமயம் நமது பிரசாரத்தைப் பற்றி வைணவர்களைவிட சைவர்களுக்குத்தான் அதிக ஆத்திரமாக இருக்கின்றது. அவர்களுக்குத்தான் எங்கு அவர்கள் சைவசமயம் போய்விடுமோ என்கின்ற பயம் அதிகமாய் பிடித்து ஆட்டி மதம்போச்சு மதம் போச்சு என்கின்ற பொய்யழுகை அழுகின்றார்கள். அவர்கள் தான் நாம் மிகுதியும் சமய நிந்தனை செய்வதாக கூப்பாடு போடுகின்றார்கள். வைணவர்களில் பெரும்பான்மையோர் இதைப் பற்றி அதிக கவலை எடுத்துக் கொண்டதாக தெரியவில்லை. ஒரு சமயம் நம்மை எதிர்க்கத் தக்க ஆதாரங்கள் தேடிக் கொண்டிருந்தாலும் இருக்கலாம். ஆனாலும் இப்போது வெளிப்படையாய் ஒன்றையும் காணோம். சமீபத்தில் 'வைணவன்' என்கின்ற ஒரு பத்திரிக்கை நம்மைப் பற்றி குற்றம் சொல்லப் புறப்படுகையில் ராமாயணத்தைப் பற்றி நாம் எழுதியவைகளில் தனக்கு சற்று மனத்தாங்கல் இருப்பதை மாத்திரம் காட்டிக் கொண்டதே ஒழிய அது சரியா தப்பா அல்லது பொய்யா என்பதைப்பற்றி ஒரு வார்த்தையும் சொல்ல முன்வர (இஷ்டமில்லையோ அல்லது தனக்குச் சக்தி இல்லையோ)வில்லை ஆனால் கடைசியாக அப்பத்திரிகை சொன்ன சமாதானம் என்னவென்றால் இராமாயணத்தைக் காட்டிலும், பன்மடங்கு ஆபாசமான நூல்கள் பல இருக்கின்றன என்றும்,

இராமனைக் காட்டிலும் ஆபாசமான நடை உடைய கடவுளர் பலர் இருக்கிறார்கள். அவ்வாபாசங்களைக் குறித்து இவ்வாராய்ச்சிக்காரர் ஒரு வார்த்தையேனும் கூற முன்வரவில்லை. இராமாயண மட்டும் இவர்கள் கண்களில் உருத்திக் கொண்டிருக்கக் காரணம் என்ன' என்று கேட்டு இருக்கிறாரே ஒழிய மற்றபடி ஒரு மறுப்பும் சமாதானமும் காணவில்லை. அதற்கு நாம் அவருக்கு சொல்லும் பதில் மற்ற நூல்களுடையவும் கடவுள்களுடையவும் ஆபாசங்கள் அதனதன் முறையில் தானாகவெளிவரும். இதிகாசங்கள் என்கின்ற தலைப்பு இராமாயணத்திற்கு மாத்திரம் ஏற்பட்டதல்ல. வரிசை கிரமமாய் எல்லா ஆபாசங்களுக்கும் ஏற்பட்டது என்பதும் 'இராமாயணத்தை முதலில் எடுத்துக் கொண்டதற்குக் காரணம் அதை பார்ப்பனர்கள் அதிகமாக நமது மக்களின் தலையில் சுமத்தி தினமும் அதற்காக அனேக நேரமும் பொருளும் செலவாவதும் அதனால் பார்ப்பனர்கள் கொள்ளையடிப்பதும் அதிகமாயிருப்பதினால் அதை முதலில் எடுத்துக் கொண்டிருக்கிறது' என்பதுந்தான்.

சைவர்களின் மதப்பிரசாரத்தைப் பற்றியும் சிலவார்த்தை சொல்லுவோம்.

நாம் நாட்டுக்கோட்டை நகரத்திற்குப் போய்வந்த பிறகு அங்குள்ள சில நேயர்கள் ஒன்றுகூடி அவர்களுடைய சைவசமயத்திற்கு நம்மால் பெரிய



ஆபத்து வந்துவிட்டதாகவும் உடனே அதற்குத் தக்க முயற்சி எடுத்துக் கொள்ளாவிட்டால் சைவ சமயமே முழுகிப்போகும் என்றும் கருதி பல ஆயிர ரூபாய்கள் ஒதுக்கி வைத்து 'சிவநேசன்' என்பதாக ஒரு பத்திரிகை ஆரம்பித்தார்கள். அப்பத்திரிகையை இந்து மதத்தைக் காப்பாற்ற புறப்பட்டதாகச் சொல்லி மக்களிடையே பரப்பினார்கள். அதன் முதலாவது ஆண்டு பதினாலாவது மலர் அனுபந்தத்தில் "கோபிசந்தனம்" என்னும் தலைப்பில் ஒரு சைவ சித்தாந்த செல்வர் எழுதுவதாவது:-

"............................................ தேவர்கள் முதலிய யாவரும் விபூதியை தரித்து மோட்சமடைய வேண்டும் என்னும் கருத்தினாலேயே கடவுள் மனிதனின் நெற்றியை குறுக்காகவே படைத்திருப்பதை யாவரும் காணலாம்.

இதற்கு ஆதாரம் கூர்ம புராணத்தில் சொல்லியிருப்பதானது:- 'ஸ்ருஷ்டா ஸ்ருஷ்டி சலே ராஹர்தி புண்டசஸ்ய ரசஸ்த தாம, ஸஸர் ஜசல லாடம் ஹித்ரியக் கோர்த்துவம், நர்த்துலம் ததாபி மாவை மூர்க்கா நகுர் வந்தித்ரி புண்டரகம்'.

அதாவது பிரம்மா சிருஷ்டி துடங்கும் போதே விபூதி மகிமை கூறி அதனை அணிந்து உய்வதற்காகவே சர்வசனங்களின் நெற்றிகளையும் குறுக்கே ஆகிர்தியாகப் படைத்தனர். நெடுமையாகவேனும் வட்டமாக வேனும் படைத்திலர், அப்படியிருக்க சிலர் அவ்விபூதி திரிபுண்டா மணியாமல் தீவினை வயப்பட்டு உழறுகிறார்கள் என்று விளங்குதலால் அறியலாம்" என்கிறார்.

இனி கோபிசந்தனத்தைப் பற்றி வாசுதேவ உபநிஷத்தில் வாசுதேவன் மகன் அதாவது கிருஷ்ணன் கூறுவதாவது.

**கிருஷ்ணன் கோபிகா ஸ்தீரிகளை தழுவிக் கலந்தபோது அப்பெண்கள் ஸ்தனங்களிலிருந்தும் கிருஷ்ணன் மேனியில் ஒட்டியபின் அவர்கள் கழுவுவதால் வழிந்தோடிய சந்தனமே கோபி சந்தனமென்று கூறப்படுகிறது. அப்பெயராலேயே அவ்வுண்மை விளங்கும்** என எழுதியிருக்கிறார்.

எனவே சைவர்கள் பூசும் விபூதி யாக குண்டத்தில் இருந்து வந்ததென்றும், வைணவர்கள் பூசும் கோபிசந்தனம் என்னும் நாமம் கிருஷ்ணன் கோபிகளை புணர்ந்த பிற்பாடு கழுவிய தண்ணீரென்றும் கருத்தை வைத்துக் கூறப்பட்டிருக்கிறது. இது உண்மையோ பொய்யோ என்று நாம் விசாரிக்க நாம் நேரம் செலவழிக்க வில்லை. ஏனென்றால் அவர் சொல்வது இன்ன இன்ன சாஸ்திரத்தில் இருக்கின்றது என்பதாக அவரே எடுத்துக் காட்டியிருக்கிறார். ஆதலால் அதைப்பற்றி அதிகமாய் சந்தேகிக்கவும் வேண்டியதில்லை. ஆனால் ஒன்று நமக்குத் தெரிய வேண்டும். அதாவது:-கிருஷ்ணனும்



RangaRakes tamilnavarasam.com

கோபிகளும் கலந்தபின் கழுவினது தான் வைணவர் நெற்றியில் வைக்கும் கோபி நாமம் என்று இந்து மத ஆதாரங்களில் இருந்து சைவர்கள் எடுத்துக் காட்டுவது சைவர்களுக்கு இந்துமத தூஷணையும், வைணவ சமய தூஷணையும் அல்லவென்று தோன்றும் போதும் ஆண் குறியும், பெண்குறியும் சேர்ந்தபோது அறுந்துவிழுந்ததின் தத்துவம்தான் லிங்கமும் ஆவுடையாரும் என்றும் அதைத்தான் சைவர்கள் கடவுளாக வணங்குகிறார்கள் என்றும் வைணவர்கள் சொல்லி இந்துமத ஆதாரங்களிலிருந்தே மேற்கோள்கள் எடுத்துக்காட்டுவது இந்துமத தூஷணையும் சைவசமய தூஷணையும் அல்ல வென்று வைணவர்களுக்குத் தோன்றும் போதும் நாம் இவ்விரண்டையும் திரட்டி எடுத்துக் காட்டும் போது மாத்திரம் நம்மையேன் இவர்கள் இந்துமத தூஷணை, சமய தூஷணை நாஸ்திகம் என்று சொல்லுகின்றார்கள் என்பது தான் நமக்கு விளங்கவில்லை.

தவிர மதப்பித்துக் கொண்ட பேயர்களைப் பற்றியோ வயிற்றுப் பிழைப்புக்கும் கூலிக்கும் பிரசாரம் செய்யக் கிளம்பும் மதாபிமானி களைப் பற்றியோ நாம் ஒரு சிறிதும் கவலைப்படவில்லை.

ஆனால், ஆராய்ச்சிக்காரர்கள் என்றும் பண்டிதர்களென்றும் வித்து வான்கள் என்றும் பெயர் வைத்துக் கொண்டு சமய வேஷமும் போட்டுக் கொண்டு சமய வரலாற்றுக்கும் சமய நூல்களுக்கும் தங்களையே நிபுணர்கள் என்று சொல்லிக் கொண்டு இருப்பவர்களை மாத்திரம் ஒன்று கேட்கிறோம். நாம் எழுதுவதும் பேசுவதும் நம்முடைய கற்பனையா? அல்லது இந்துமத ஆதாரங்கள் என்பவைகளில் உள்ளவைகளா? உள்ளவைகளானால் அதற்கு என்ன சமாதானம் சொல்லுகிறீர்கள்? என்றுதான் கேட்கிறோம். தக்க சமாதானம் சொல்ல முன்வராமல் சூழ்ச்சிப் பிரசாரமும் பேடிப் பிரசாரமும் செய்யாதீர்கள். நபரைக் குறித்து ஆத்திரப்படாதீர்கள். உங்களைப் போல் பல கற்றறி மூடர்கள் சேர்ந்துதான் பார்ப்பனர்களுக்கு உதவி செய்து நாட்டை பார்ப்பனர்களுக்கு அடிமையாக்கி மக்களை மூட நம்பிக்கையில் ஆழ்த்தி அறிவற்ற மிருகங்களாக்கிவிட்டார்கள். இதுவரை செய்ததே போதும். இனியாவது உங்கள் ஆராய்ச்சி என்பதையும் சமய நிபுணத்துவம் என்பதையும் புதிது புதிதாகக் கண்டுபிடித்தல் என்பதையும் மக்களின் மனிதத் தன்மைக்கும், தன்னம்பிக்கைக்கும், சுயரிமரியாதைக்கும், அறிவு வளர்ச்சிக்கும் பயன் படும்படி செய்யுங்கள். முடியாவிட்டால் சப்தத்திற்கும் எழுத்துக்கும் வார்த்தைக்கும் இலக்கணம் சொல்லும் வேலையில் உங்கள் வாழ்வை கடத்திக் கொள்ளுங்கள். சமயம் என்கிற வேலையில் புகுந்து மக்களைப் பாழ்படுத்தாதீர்கள். முட்டாள்கள் ஆக்காதீர்கள் என்றுதான் சொல்லுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 15.04.1928**



# அரசியல் புரட்டுக்குச் சாவுமணி

அரசியலில் பார்ப்பனர்களும் அவர்தம் கூலிகளும் தமிழ்நாட்டில் பார்ப்பனரல்லாதாருக்கு இடையூறாய் செய்துவரும் சூழ்ச்சிகளையும் பிரசாரங்களையும்பற்றி சென்ற வாரம் பார்ப்பனீய போக்கிரித்தனம் என்ற தலைப்பின் கீழ் எழுதியிருந்ததோடு சென்னை மந்திரிகள் நடுநிலைமை வகிப்பதன்மூலம் பார்ப்பனரல்லாதாரின் நலத்திலும் சற்று கவலை ஏற்படுவதால் அவர்களைப்பற்றி இப்பார்ப்பனர்களும் அவர்களது தாசர்களும் எவ்வளவு தூரம் விஷமமும் பொய்யும் கலந்த சூழ்ச்சிப் பிரசாரம் செய்கின்றார்கள் என்றும் எடுத்துக் காட்டி அது சரியா தப்பா என்பதற்கும் பல உண்மைகளை வெளியிட்டிருந்தோம். அன்றியும் கடைசியாக எது வரையில் தற்கால மந்திரிகளை இப்பார்ப்பனர்களும் அவர்களது தாசர்களும் வைகின்றார்களோ அது வரையில் அம் மந்திரிகளை அவர்களிடமிருந்து பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு ஆன காரியங்களை பெற ஆதரிக்க வேண்டியது பார்ப்பனரல்லாதாரின் கடமை என்றும் எழுதியிருந்தோம்.

அது போலவே இவ்வாரம் மந்திரிகளின் தஞ்சை, திருச்சி, கடலூர் ஜில்லா சுற்றுப் பிரயாணங்களில் மந்திரிகளுக்கு பொது ஜனங்கள் நடத்திய வரவேற்புகளும் நமக்கு மிகுதியும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. எது காரணம் பற்றியென்றால், மந்திரிகள் சாதித்துவிட்டார்கள் என்றோ சாதித்து விடுவார்கள் என்றோ அல்ல. மற்றென்னை எனில், இப்பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் ஒன்று சேர்ந்துகொண்டு தற்கால மந்திரிகளை எப்படியாவது கவிழ்த்து தங்கள் தாசர்களை மந்திரியாக்கி பொம்மைகளைப் போல் ஆட்ட வேண்டுமென்ற பேராசையாலும் அடுத்த தேர்தலில் தாங்களே வெற்றி பெற்று பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டும் என்னும் ஆத்திரத்தாலும் மந்திரிகள் செல்லும் இடங்களிலெல்லாம் அதை ஆதாரமாய் வைத்து தேர்தல் பிரசாரம் செய்ய ஆங்காங்கு தினக்கூலிகளையும் அமர்த்திக் கொண்டு செய்த விஷமப் பிரசாரங்களையும் ‘மந்திரிகளின் துரோகம்’ ‘வாக்கு மீறல்’ ‘தேசத்தைக் காட்டிக் கொடுத்தல்’ என்பதான எத்தனையோ இழி மொழிகளை உண்டாக்கி பெரும் கொட்டை எழுத்துகளில் தங்கள் தங்கள் பத்திரிகைகளில் எழுதியும் கூப்பாடு போட ஆள்களை சேர்த்தும் செய்த பிரசாரங்களும் பணச் செலவுகளும் ஒரு காதொடிந்த ஊசிக்கும் பிரயோசனப் படாமல் போனதோடு சில இடங்களில்



RangaRakes tamilnavarasam.com

கூலிகளுக்கு உதையும் அடியும் கிடைத்ததோடு பிரசாரம் செய்யச் சென்ற 'தலைவர்கள்' என்போர்களும் சென்ற இடங்களிலெல்லாம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமலும், நின்று பேச இடம் கிடைக்கா மலும், கூட்டங்கள் கலவரத்தில் முடிந்ததும் மற்றும் பல இடங்களில் பெருமித அவமானங்களும் அடைந்து வந்ததும், பார்ப்பனப் பத்திரிகைகளிலேயே விளங்கிவிட்டன. சென்னையில் சைமன் கமிஷன் பகிஷ்காரத்தின் போது எப்படி தலைவர்கள் என்போர்கள் புத்திகள் கற்பிக்கப்பட்டார்களோ அதற்கு மேலாகவே மந்திரி விஜயத்தாலும் பல தலைவர்கள் ஆங்காங்கு தக்கபடி புத்தி கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இனித் தமிழ் நாட்டில் பார்ப்பனர் களின் சூழ்ச்சிக்கும் அவர்கள் தாசர்களின் வயிற்றும் சோற்றுக் கூலி பிரசாரத் திற்கும் யோக்கியதை இல்லை என்பதும் கூடிய வரையில் பொது ஜனங்க ளுக்கு யோக்கியர்கள் யார், அயோக்கியர்கள் யார், என்பதும் பொது நலத் திற்கு உழைப்பவர்கள் யார், சுயநலத்திற்கு உழைப்ப வர்கள் யார் என்பதும், பார்ப்பனரல்லாதாருக்கு உழைப்பவர்கள் யார், பார்ப்பனர்களுக்கு தாசர்களா யிருந்து அவர்களுக்காக உழைத்து கூலி பெறுவதின் மூலம் பார்ப்பன ரல்லாதார் சமூகத்திற்கு துரோகம் செய்பவர்கள் யாரென்பதும் நன்றாய் விளங்கி அரசியல் புரட்டுக்கும் தேசீய புரட்டுக்கும் சாவு மணி அடித்து விட்டதற்கு இது ஒரு அறிகுறியாய் இருப்பதற்காகவே இச்சம்பவங்களையும் மந்திரிகளின் வரவேற்பு ஆடம்பரங்களையும் ஆதாரமாய் வைத்துக் கொண்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

ஸ்ரீமான் கனம் சேதுரத்தினமையர் அவர்களுக்கு அநேக பார்ப்பன மிராசுதார்களும் சட்டசபை மெம்பர்களும் பார்ப்பனரல்லாத மிராசு தாரர்களும் பொது ஜனங்களும் ஆடம்பரமான வரவேற்பு விருந்து முதலிய விழாக்கள் நடத்தி இருக்கிறார்கள். ஸ்ரீமான் கனம் முத்தையா முதலியார் அவர்களுக்கும் அது போலவே மிராசுதாரர்களும் பொது ஜனங்களும் வரவேற்பும் விருந்தும் மற்றும் பல பெருமைகளும் நடத்தியிருக் கிறார்கள். முதல் மந்திரி ஸ்ரீமான் டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கோ ஜஸ்டிஸ் கக்ஷி மந்திரிகள் என்பவர்களுக்கு நடந்த பெருமைக்கு மேலாகவே சென்ற இடங்களிலெல்லாம் பல பல ஊர்வலங்களும் வரவேற்புகளும் விருந்துகளும் பொதுக் கூட்டங்களும் வெகு தடபுடலாகவே நடந்திருக் கின்றன. எனவே இந்த மந்திரிகள் எந்த விதத்தில் யாரால் மறுக்கப் பட் டார்கள்? யாரால் பஹிஷ்கரிக்கப்பட்டார்கள்? என்பது நமக்கு விளங்க வில்லை.

பார்ப்பனக் கூச்சல்களும் அவர்களது தாசர்கள் கூச்சலும் பத்திரிகை அறைக்குள் நின்று விட்டதே யல்லாமல் சிலது பத்திரிகைகளில் எழுத் தளவில் நின்று விட்டதே அல்லாமல் காரியத்தில் எங்காவது யாராலாவது நடத்தப்பட்டதா என்று கேட்கின்றோம்.



எனவே இனியாவது பாமர மக்களில் சிலர் இன்னும் மயக்கந் தெளியாமல் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் பார்ப்பன தாசர்களின் வயிற்று சோற்றுக்குமாக கூப்பாடு போடும் தேசீயம் என்றும் காங்கிரஸ் அரசியல் என்றும் சுயராஜ்யம் என்றும் சொல்லப்படும் மாய வார்த்தைகளை நம்பி ஏமாறமாட்டார்கள் என்றே நம்புகின்றோம்.

உண்மையான தேசீயம் என்பது தேச மக்களின் சுயமரியாதையை பொருத்ததே அல்லாமல் சிலரின் ஜீவனோபாயத்திற்கு மாத்திரம் ஏற்படும் வழியல்ல.

உண்மையான அரசியல் என்பது எல்லா மக்களும் சமமாய் அனுப விக்கக் கூடியதாயிருக்குமேயொழிய ஒரு வகுப்பாருடைய ஆதிக்கத் திற்கு மாத்திரம் கிடைக்கக் கூடியதல்ல.

உண்மையான சுயராஜ்யம் என்பது எல்லா மக்களும் சமமாய் ஏற்றத் தாழ்வில்லாமல் பாவிக்கக் கூடியதும் பொது வாழ்வில் எல்லோருக்கும் சமத்துவம் அளிக்கக் கூடியதுமாயிருக்குமே யல்லாமல் ஒரு குலத்திற்கு ஒரு நீதி உடையது அல்ல என்றே சொல்லுவோம்.

ஆகவே கனம் முதல் மந்திரி முதல் ஒவ்வொருவரும் இந்த சுற்றுப் பிரயாணத்தில் ஆங்காங்கு பொது ஜனங்களுக்கு சொல்லி வந்திருப்பது போல் சமத்துவமும் சகோதரத்துவமும் சுயமரியாதையும் ஏற்பட்ட பிறகுதான் மக்கள் அரசியல் சுதந்திரம் என்பது அடையக்கூடும் என்பதையும் அப்படிக் கில்லாவிட்டால் ஒரு சமயம் அரசியல் சுதந்திரம் கிடைத்தாலும் நிலைக்காது என்பதையும் ஒவ்வொருவரும் கண்டிப்பாய் உணர வேண்டுமென்றே விரும்புகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 22.04.1928**



RangaRakes tamilnavarasam.com

# இந்து மதமும் யாகங்களும்

மதத்தின் பெயரால் "கடவுள் வழிபாடு" என்று கருதப்படும் அக்கிரமச்செயல்கள் பலவற்றுள் 'யாகம்' செய்வதும் ஒன்று. இது ஒரு கொடிய பாதகச் செயலாகும். ஏனெனில், யாகத்தில் பிராணிகளை இம்சிக்கின் றார்கள். இது பார்ப்பனர்களால் கடவுள் வழிபாடாக நடந்து வருகிறது. அஸ்வமேதம், அஜமேதம், கோமேதம் முதலான யாகங்களில் ஒன்றும் அறியாத அபல பிராணிகளான, குதிரை, ஆடு, மாடு முதலான ஜீவன்களைக் கொலை செய்கின்றார்கள். உலகில் கொலை செய்வதைவிட கடினகர்மம் வேறு ஒன்றுமில்லை யென்பது மகான்களின் அபிப்பிராயம். பூர்வத்தில் மனிதனையும் பலியிடும் வழக்கம் இருந்ததாக சரித்திரங்கள் மூலம் அறிகின் றோம். ஆரியர்கள் நம் நாட்டிற்கு வருவதற்கு முன் நம் தேசம் அறிவிலும் ஒழுக்கத்திலும் சமத்வ சகோதரத் தன்மையிலும் ஜீவகாருண்யத்திலும் சிறந்து விளங்கியிருந்த தென்பதை தொல்காப்பியம் முதலான பழம் தமிழ் நூல்களால் அறியக்கூடும். ஆரியர்களின் வருகைக்கு பின்னர் அவர்களின் பழக்க வழக்கங்கள் நம் நாட்டில் புகுந்து விட்டதால் கடவுளின் பெயரால் பலியிடும் வழக்கத்தை நம்மவர்களும் பழகி விட்டார்கள். இதை சில கோவில்களில் நிகழும் கொலைகளால் நிச்சயிக்கலாம். கடவுளின் பெயரால் நாதனில்லாத அபல பிராணிகளை யாகத்தில் பலியிடுவதின் கருத்து என்ன? என்பது தெரிய வில்லை. கடவுளின் கருணைக்கு பாத்திரமாக வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இக்காரியங்கள் செய்யப்படுகின்றன. பிராணிகளெல்லாம் அவருடைய சந்ததிகளாயிருக்கின்றன எனச் சொல்பவர் களே அவருடைய சந்ததிகளையறுத்து அவருக்கே நிவேதனமாகச் செய்வதென்றால் அது அவருக்கு சம்மதமாயிருக்க முடியுமா? விசேஷ புத்தியில்லாத புலி, கரடி முதலான துஷ்ட ஜந்துக்களும் தங்கள் குட்டிகளை அறுக்கவோ, அறுத்துக் கொடுத்தால் ஏற்றுக்கொள்ளவோ செய்வதில்லை. பகுத்தறிவில்லாத இத்தகைய துஷ்ட ஜந்துக்களை விட ஞானமில்லாதவனும் துச்சமான மாம்சத்தில் பிரியமுள்ள வனும், புலியைவிட பெரிய புலியாயிருப்பவனும் தானோ ஹிந்துக்களின் தெய்வம்? கடவுளுக்கு ஏதாவது காய்ச்சல் பிடித்து தேகம் மெலிந்து விட்டதா? அல்லது அவர் ஆடு, கோழி முதலான பிராணிகளை திருடித்தின்னும் குள்ள நரியின் கூட்டத்தில் சேர்ந்தவரா? எந்த காரணத்தைக் கொண்டு பிராணிகளை இம்சித்து கடவுளுக்காக மாம்சத்தை வைத்து ஆராதிக்கிறார்களோ? அறியோம்.



யாகம் செய்வது கடவுளுக்கல்லவென்றும் தேவர்களுக்காக செய் கிறார்களென்றும் சிலர் கூறுகின்றார்கள். தேவர்கள் அமிர்தத்தை அருந்தி ஜரைநரைகளை நீக்கினவர்களென்று புராணங்களில் காணப்படுகின்றன. ஆகையால் அமிர்தத்தை உண்டவர்கள் அசங்கியமான மாம்சத்தை உண்ண மாட்டார்கள். மேலும் மாம்ச உணவு இராக்ஷசர்களுக்கு ஏற்பட்டதென்றும் அதை தேவர்கள் உண்ண மாட்டார்களென்றும் சொல்லப்படுகிறது. ஓர் வேளை, பூதேவர் ( பிராமணர்) களுக்கு சாப்பிட வேண்டி ஏற்பட்டால் ஏற்பட்டி ருக்கலாம். அதற்காக அவர்கள் கடவுள் பெயரையும் மதத்தின் பெயரையும் சொல்லிக்கொண்டு இவ்வித தந்திரங்களை செய்கின்றார்கள் என்று தான் நிச்சயிக்க வேண்டியிருக்கிறது. இதற்கு பிரமாணங்களும் உண்டு அதாவது,

சு. "த்விஜைர் போகரதைர் வேதே, தர்சிதம் ஹிம்சனம் பசோஜி ஹ்வாஸ் வாதபரை, காமா, அஹிம்சைவ பரம்மத" என்று தேவி பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இதன் கருத்து :- "விஷயங்களில் ஆசையுள்ளவர்களும் நாக்கின் ருசியை மட்டும் கருதுவோருமாகிய சில பிராமணர்கள் யாகத்தில் பசு ஹிம்சை செய்யவேண்டுமென்று வேதத்தில் எழுதிவைத்திருக்கிறார்கள். அஹிம்சையை விட உத்தம தர்மம் வேறு ஒன்றுமில்லை" என்பதாம்.

இந்த சுலோகத்தின் கருத்தை பார்க்கும் பொழுது, வேதத்தில் பார்ப் பனர்கள் அநேகம் தகாத செய்கைகளை தங்கள் சுயநலத்தைக் கருதி எழுதி வைத்திருக்கின்றார்கள் என்பது புலனாகும்.

அநேக வருடக்கணக்காக மக்களை ஏமாற்றி பணம் சம்பாதித்து வருவ தில் யாகம் செய்வதும் ஒரு தந்திரச் செய்கையாகும். மற்ற செய்கைகளால் அதிக பணம் கிடைக்காது. யாகம் செய்வதால் அதிக பணம் கிடைக்கின்றது. யாகம் செய்ய வேண்டுமென்றால் ரூபாய் 5000, 10000 ஏன்? இவ்வுலகம் முழுவதையும் தானம் வாங்கவும் உரிமையுண்டு. என்னே ஏமாற்றம்! மதத்திற்கும் கடவுளுக்கும் அவமானத்தை உண்டுபண்ணும் இத்தகைய கொடுமையான செய்கைகளை வேதம்வேதமென்று எழுதிவைத்து ஜனங் களின் தனத்தை கொள்ளையடிப்பதுமன்றி அறிவையும் கெடுத்து மூட நம்பிக்கைக்குள் மூழ்கியிருக்கும்படி செய்துள்ளார்களே! அநியாயம்! அநியா யம்! யாகத்தில் செய்யும் ஜீவ இம்சயையை ஒழிப்பதற்காக விஷ்ணு பகவான் புத்தாவதாரமாக வந்திருக்கிறார் என்று இந்துக்களால் ஒத்துக்கொள்ளப் பட்ட பகவான் புத்தர் இதற்காக எவ்வளவோ பாடு பட்டார். "அஹிம்சா பரமோ தர்ம" என்ற சிறந்த உபதேசத்தை உபதேசித்தார். என்ன பயன் ஏற்பட்டது. மகாத்மாவும் ஞானியும் தயாளுவுமான புத்தரின் மதத்தை நாட்டிலிருந்து முடுக்கி விட்டவர்களல்லவா



RangaRakes tamilnavarasam.com

நம் ஆசாமிகள். என்னே! ஹிந்து மதத்தின் பெருமை.

உபநிஷத்துகளில் உள்ள சாரங்களையெல்லாம் திரட்டியிருப்பதும் ஹிந்துக்களால் மேலான சாஸ்திரமென்று கொண்டாடப்படுவதுமான பகவத் கீதையிலும் யாகம் முதலான ஆபாச கர்மங்கள் வற்புறுத்தப்பட்டிருக்கின்றன. கீதையை ஸ்ரீ கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு உபதேசித்திருக்கிறார். அதில் " இஷ்டான் போகான், ஹிதோதேவான் தாஸ்யந்தே யக்ஞ வித". என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது யாகம் செய்வோர்களுக்கு தேவர்கள் இஷ்டபோகங்களை கொடுக்கின்றார்கள் ( தருவார்கள்) என்பதாம். இதை கிருஷ்ணன் சொன்னாரோ அல்லது மற்று யாராவது சொல்லியருப்பார்களோ என்பதை இங்கு ஆராய சந்தர்பம் இல்லை. ஆனால் தத்துவமென்ன? என்பதை மட்டும் ஆராய்ந்துகொள்வது அவசியம்.

யாகம் செய்வதால் தேவர்கள் ப்ரத்யக்ஷமாய் இஷ்டபோகங்களை கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை கிருஷ்ணனுக்கு இருந்தால் யாகத்தை செய்து தேவர்களை வசப்படுத்தி, அர்ச்சுனனுக்கு ராஜ்யாதிபத்தியத்தையும் இஷ்டபோகங்களையும் வாங்கிக்கொடுத்திருக்கலாமல்லவா? அர்ச்சுனன் யுத்தம் செய்ய இஷ்டமில்லாதவனாகி காண்டீபத்தை போட்டு விட்டு தேரில் உட்கார்ந்தான் என்று சொல்லப்படுகிறது, யுத்தம் செய்வதற்கிஷ்டமில்லாத அர்ச்சுனனை பலாத்காரமாக, பயங்கரமான யுத்தத்தில் இறங்கும்படியாக கிருஷ்ணன் ஏன் வற்புறுத்தவேண்டும்? அர்ச்சுனனுக்கு கிருஷ்ணன் மைத்துனராகவும் குருவாகவும் இருக்கிறார். யுத்தத்தில் வெற்றி, தோல்வி இன்னார்களுக்கென்று ஆரம்பத்தில் தெரிந்துகொள்ளவும் முடியாது. ஓர் வேளை அர்ச்சுனன் இறந்துபோக நேரிட்டால் கிருஷ்ணன் தன் சகோதரியாகிய சுபத்திரையின் வைதவ்ய துக்கத்தை பார்த்துக்கொண்டு துக்கிக்கவும் நேரிடு மல்லவா? இவ்வித அபாயங்கள் ஒன்றுமில்லாத யாகத்தை செய்து காரியத்தை சாதித்துகொள்ள ஏன் கிருஷ்ணன் முயலவில்லை. தேவர்களுக்கு தலைவனான தேவேந்திரன் அர்ச்சுனனுடைய பிதாவாயுமிருக்கிறார். இதனால் மற்றுள்ளவர்களுக்கு தேவர்கள் பிரத்யட்சமாவதைவிட சீக்கிரத்தில் அர்ச்சுனனுக்கு வசப்பட்டுவிடுவார்கள். இவ்வளவு சுலபமான காரியங்களெல்லாமிருக்க அவ்வண்ணம் செய்யாமல் யுத்தத்தை செய் என்று சொல்லி எண்ணிறந்த ஜனங்களை கொல்லச்செய்து ராஜ்யத்தை கைவசப்படுத்தியிருக்கிறார். இதனால் கிருஷ்னனுக்கு யாகத்தில் நம்பிக்கை இல்லை என்று ஏற்பட்டது. இதை கிருஷ்ணன் பாகவதத்தில் யுத்தவருக்கு உபதேசிக்கிறார். அதாவது :- சு. "தேமேமதமவிஞ்ஞாய பரோக்ஷம் விஷயாத்மக வ்ருதா பசூன் விஹிம் சந்தி, ஹிம்சந்தே ப்ரேத்தைஸ்துதே".

கருத்து:- " என்னுடைய உண்மையான தர்மத்தை அறியாமல் விஷயங்களில் ஆஸக்தியுள்ளவர்கள் வீணாக யாகத்தில் பசுக்களை கொல்கின்றார்கள். பின்னால் பசுக்கள் இவர்களையும் கொல்லுவார்கள்." என்பதாம்.



இதனால் கிருஷ்ணனுக்கு யாகத்தில் நம்பிக்கையில்லையென்றும் அது பெரிய பாதகமான செயலென்றுதான் கருதுவதாகவும் ஏற்பட்டது. ஆகவே கீதையிலும் சுயநலப் பூனைகள் சுயநலமான பல வாக்கியங்களை நுழைத்திருக்கின்றார்கள் என்பது வெட்டவெளிச்சமாயிற்று.

முற்காலத்தில் ராவணன் தன்னுடைய சிரசுகளை அறுத்து யாகத்தில் ஹோமித்து விட்டதனால் கடவுள் பிரத்யட்சமாகி வேண்டிய வரங்களை அளித்தார் என்று புராணங்களில் காண்கிறோம். யாகம் செய்வோர் அவ்வண்ணம் தங்கள் சிரசுகளை வெட்டி கடவுளுக்கு அர்ப்பணம் செய்தால் சீக்கிரத்தில் கடவுள் கருணை கிடைக்குமல்லவா? அங்ஙனம் செய்யாமல் ஒன்று மறியா பிராணிகளை கடவுளின் பெயரால் ஏன் கொலை புரிகின்றார்கள்? இதுதான் சனாதன தர்மமா? கடவுளுக்கும் மகான்களுக்கும் மதத்திற்கும் திருப்திகரமாயில்லாத இத்தகைய பாவச்செயல்களை இக்காலத்திலும் செய்து வருகிறார்கள். என்ன அநீதி! இதனால் கடவுளின் கருணையை தேடுவோர் குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதை ஒத்திருக்கும் இதையும், இதைப் போன்ற ஆபாச கிரியைகளையும் தான் " குடி அரசு" வேண்டாமென்று சொல்வது. மதம் போச்சு என்று சொல்லவேண்டாம். மதத்தினிடம் பற்றுள்ளவர்கள் இத்தகைய ஆபாச கொள்கைகளைக் கண்டித்து ஜனங்களின் சுயமரியாதையை காப்பாற்ற நல்வழியில் முயற்சி செய்யவேண்டும். அதற்கு சாத்தியமில்லை என்று கருதுவோர், இத்தகைய ஆபாசங்களுக்கு ஆதரவளிக்காமல் இருக்கவேண்டும். அதுவும் முடியாதென்றால் மக்களின் முன்னேற றத்தைக் கருதி உழைப்பவர்களை எதிர்க்காமலாவது இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**குடி அரசு - கட்டுரை - 22.04.1928**



RangaRakes tamilnavarasam.com

# சுயமரியாதைச் சங்கங்களுக்கு ஆதரவு

தமிழ் நாட்டில் புதிதாய் தோன்றி இருக்கும் சுயமரியாதைச் சங்கங்களுக்கும் பார்ப்பனரல்லாத வாலிப சங்கங்களுக்கும் ஏறக்குறைய நாடு முழுதுமே ஆதரவு கிடைத்துவரும் விஷயம் யாவரும் அறிந்திருக்கலாம். காங்கிரசின் போது வங்காளத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்திருந்த திருவாளர் கோஸ்வாமி முதலியோர் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைப்பற்றி பார்ப்பனரல்லாத தலைவர்களிடம் பேசும்போது தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்தைப் பற்றியும் சுயமரியாதைச் சங்கத்தைப் பற்றியும் புகழ்ந்து பேசி விட்டுப் போய் இந்திய சட்டசபையிலும் பிரஸ்தாபித்தது நேயர்களுக்கு தெரிந்திருக்கலாம். இப்போது சென்னை மாகாண மந்திரிகளும் முக்கியமாய் முதல்மந்திரியும் தஞ்சையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது இது சமயம் "நாட்டில் சுயமரியாதைச்சங்கங்களை ஸ்ரீ மான் ராமசாமி நாயக்கர் போன்றார்கள் ஸ்தாபித்து வருவது கேட்டு தாம் மிகவும் சந்தோஷப்படுவதாகவும் அவைகள்தாம் இப்போது வேண்டப்படுகின்றனவென்றும் சிறிதும் பயமில்லாமல் பார்ப்பனரல்லாதார் இக்காரியத்தை தொடர்ந்து நடத்திக்கொண்டு போனால் சீக்கிரத்தில் நன்மை பிறக்குமென்றும் இவ்வேலைகள் தான் சுயராஜ்யமடையச் செய்யுமென்றும் பேசி பார்ப்பனரல்லாத இளைஞர்களையும் உற்சாகப்படுத்தி பேசினார்"( இந்த வாக்கியங்கள். 20-4-28 உ 'சுதேசமித்திரன்' 6-வது பக்கம் 5-வது கலத்தில் இருக்கின்றது). ஆனால் 'தமிழ்நாடு' பத்திரிகை சுயமரியாதைச் சங்கங்களும் பார்ப்பனரல்லாத வாலிப சங்கங்களும் வயிற்று பிழைப்புக்காக நடைபெறுவதாக ஜாடை ஜாடையாக எழுதுகிறது.

எனவே ஸ்ரீ வரதராஜுலுவும் அவர் தேசிய பிரசாரமும் வயிற்றுப் பிழைப்பு பிரசாரமா, அல்லது சுயமரியாதைப் பிரசாரமும் பார்ப்பனரல்லாத வாலிப சங்கப் பிரசாரமும் ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், கண்ணப்பர், ஆரியா போன்றவர்களின் பிரசாரமும் வயிற்றுபிழைப்பு பிரசாரமா என்பதை பொது ஜனங்களே உணர்ந்து கொள்ள விட்டு விடுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 22.04.1928**



# "ரிவோல்ட்"

'ரிவோல்ட்' என்னும் ஆங்கில வாரப் பத்திரிகையின் பதிப்பாளராகவும் வெளியிடுவோராகவும் மேஜிஸ்ட்ரேட் முன்னிலையில் பதிவு செய்துகொள்ள ஸ்ரீமதி நாகம்மாள் 19.4.28 இல் மறுபடியும் கோர்ட்டுக்கு போனதில், மேஜிஸ்ட்ரேட் தான் இது விஷயமாய் போலீசாரை ரிப்போர்ட்டு கேட்டு விட்டிருப்பதாகவும் அது வந்த மேல்தான் பதிவு செய்துகொள்ள முடியும் என்றும் சொல்லி பதிவு செய்துகொள்ள மறுத்துவிட்டார்.

பிறகு போலீசார் 'ரிவோல்ட்' என்னும் பத்திரிகையின் கொள்கை என்ன என்பது பற்றியும் மற்றும் பல விஷயங்களைப் பற்றியும் இரகசியமாகவும் வெளிப்படையாகவும் வேவு விசாரித்து வருவதாகத் தெரிகிறது.

ஸ்ரீமதி நாகம்மாள் அவர்களை போலீஸ் இன்ஸ்பெக்டர் கேட்ட கேள்விகளுக்கு அடியிற்கண்ட ஸ்டேட்மெண்டு எழுதிக் கொடுக்கப் பட்டிருக்கின்றது.

"ஈரோடு டவுன் கச்சேரி வீதியிலிருக்கும் உண்மை விளக்கம் பிரஸ் புரோப்ரைட்ரெஸ் ஸ்ரீமதி நாகம்மாள் எழுதிக் கொடுத்த ஸ்டேட்மெண்ட்:-

இப்பவும் ஷை பிரசில் 'ரிவோல்ட்' என்கின்ற ஆங்கில வாரப் பத்திரிகை நடத்துவதன் கருத்து, இப்போது நான் பதிப்பாளராயிருந்து நடத்தும் 'குடி அரசு' என்னும் தமிழ் வாரப் பத்திரிகையின் கொள்கைகளையே முக்கியமாய்க் கொண்டு நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. Revolt என்கிற வார்த்தைக்கு நான் எடுத்துக் கொண்ட அர்த்தம் கட்டுப்பாட்டை உடைத்தல் என்பது. அதாவது மனித தர்மத்துக்கும் மனித இயற்கைக்கும் விரோதமாக அரசியலிலானாலும் சரி, மத இயலிலானாலும் சரி, அதிகார இயலிலானாலும் சரி, முதலாளி இயலிலானாலும் சரி, ஆண் இயலிலானாலும் சரி மற்றும் எவைகளிலானாலும் சரி அவைகளினால் ஏற்படும் இயற்கைக்கும் அறிவுக்கும் மாறுபட்ட கட்டுப்பாடுகளை உடைத்து உலகமும் அதன் இன்பமும் எல்லோருக்கும் பொது என்பதும் மக்கள் யாவரும் சமம் என்பதுமான கொள்கையை மனச்சாக்ஷிப்படி சாத்தியமான வழிகளில் பிரசாரம் செய்வதே அதன் நோக்கம். இதற்கு பத்திராதிபராக எனது



RangaRakes tamilnavarasam.com

கணவர் ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் இருப்பார்."

இதன் மேல் போலீசாரின் அறிக்கை இன்னது என்றும் மாஜிஸ்ட்ரேட் எப்பொழுது பதிவு செய்து கொள்வார் என்பதும் குறிப்பாய்த் தெரியவில்லை.

**குடி அரசு - அறிக்கை - 22.04.1928**



# அம்பலூர் சமரச சன்மார்க்க சங்கத்தாரின் வரவேற்பு

## சமய நெறி உணர்த்துவது சன்மார்க்கமா? துன்மார்க்கமா?

அக்கிராசனாதிபதியே! சமரச சன்மார்க்க சங்கத்தினர்களே! மற்றும் இங்கு கூடியிருக்கும் அன்பர்களே!

இன்று சமரச சன்மார்க்க சங்க சார்பாக வாசித்துக் கொடுத்த உபசாரப் பத்திரத்தில் கண்ட புகழுரைகளுக்கு நான் உண்மையிலேயே ஒரு சிறிதும் பொருத்தமில்லாதவனாயிருந்த போதிலும் அதன் போக்கானது எனது தொண்டின் தாத்பர்யத்தையும் போக்கையும் தாங்கள் மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டு என்னை புகழ்வதாயிருப்பதால் மிக்க நன்றியறிதலோடும் மகிழ்ச்சியோடும் இவ்வுபசாரப் பத்திரத்தை ஏற்றுக்கொள்ளுகின்றேன்.

எனது தொண்டைப் பற்றி பலர் ஆதரவளித்தாலும் ஒரு சிலர் அபிப் பிராய பேதப்படுவதையும் ஏதோ முழுகிப் போனது போல் கவலைப் படுவதையும் பார்க்கும் போது எனக்கே சிற்சில சமயங்களில் நாம் ஏதாவது தப்பான வழியில் போகின்றோமோ என்று தோன்றி கலக்கமுறுவதுமுண்டு. இந்த நிலையில் தங்கள் உபசாரப் பத்திரமானது "இனி உனக்கு அப்பேர்ப் பட்ட கலக்கங்கள் கண்டிப்பாய் வேண்டியதில்லை. உனது **கருத்துப்படியே** உனது தொண்டை தீவிரமாக செய்து கொண்டுபோ நாங்கள் உனக்கு பின் உதவியாய் இருக்கின்றோம்" என்று எனக்கு ஊக்கத்தை மூட்டி எனது தொண்டை முன்னிலும் அதிக முயற்சியுடன் செய்ய பிடரியைப் பிடித்து தள்ளுவது போல் இருக்கின்றபடியால் நான் அதை மகிழ்ச்சியும் நன்றியறி தலுடனும் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

நிற்க, அன்பர்களே! இந்த சமயத்தில் சமரச சன்மார்க்க சங்கம் என்பதைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகின்றேன். அது ஒரு சமயம் உங்கள் மனத்திற்கு கசப்பாயிருந்தாலும் இருக்கலாம். அன்றியும் "என்னடா இவன் நம்மிடத்தில் உபசாரப் பத்திரம் பெற்றுக் கொண்டு நம் மையே உடைச்சல் விடுகிறான்" "ஏன் இவனுக்கு உபசாரப்பத்திரம் கொடுத்தோம்" என்பதாக தோன்றினாலும் தோன்றலாம். ஆன போதிலும்



RangaRakes tamilnavarasam.com

சிலர் சமரச சன்மார்க்க சங்கம் என்பதாக பெயர் வைத்துக் கொண்டே சமரசத்திற்கு பதிலாக ஏற்றத் தாழ்வும் சன்மார்க்கத்திற்கு பதிலாக துன்மார்க் கமுமே விளையத்தக்க முறையில் நடந்து வருகின்றார்கள். சுருங்கக் கூறில் சமரச சன்மார்க்கமென்பது அனுபவத்தில் பிறரை ஏமாற்றி தங்கள் காரியத் தை சாதித்துக் கொள்வதற்கும் தங்கள் சமயத்தை உயர்த்திக் கொள்வதற்கும் பயன்படுத்தப்படுகின்ற ஆயுதமே ஒழிய வேறில்லை என்றே சொல்லலாம். பொதுவாக ஒவ்வொரு மதக்காரரும் உட்சமயக்காரரும் தங்கள் தங்கள் மதம் சமயம் ஆகியவைகளை சமரச சன்மார்க்கக் கொள்கை கொண்ட தென்று தான் சொல்லுகின்றார்கள். ஆனால் அவரவர்கள் நடை உடை பாவனை உணர்ச்சி முதலியவைகள் வேறாகவே இருந்து வருகின்றன. ஒவ்வொரு மார்க்கக்காரரும் தமது கொள்கையை ஒப்புக்கொள்ளாத ஒருவனை துன் மார்க்கியாகவே கருதுகிறார். மகமதிய மதம் சமரச சன்மார்க்கத் தன்மை பொருந்தியதானாலும் மற்ற சமயக் கடவுள்களும் கொள்கைகளும் அவர்களுக்கு சிறிதும் சகிக்க முடியாததாகவே இருக்கின்றது. கிறிஸ்த்தவ மதம் சமரச சன்மார்க்கக் கொள்கையுடையதுதான் என்று சொல்லப்பட்டாலும் அதுவேறெந்த மதத்திலும் மோக்ஷமடைய வழி கிடையாது என்றும் மற்ற மதஸ்தர்கள் எல்லாம் அஞ்ஞானிகள் என்றும் சொல்லக் கூடியதாக இருக்கின் றது. இந்து மதமும் அதன் ஒவ்வொரு உட்பிரிவும் சமரச சன்மார்க்கம் கொண்டதென்றே பறையடிக்கப்படுகின்றது. இதைப் போல ஏற்றத்தாழ்வு களும் துன்மார்க்கங்களும் கொண்ட மதம் இது சமயம் உலகில் வேறு ஒன்றும் இருப்பதாக சொல்ல முடியாது. வைணவத்திற்கும் சைவத்திற்கும் அதனதன் கடவுள்களுக்கும் உள்ள பேதங்களும் விரோதங்களும் சொல்லி முடியாது. ஒவ்வொரு நாளும் இதில் உள்ள உயிர்கொலைகள் கணக்கிலடங்காது. குடியும் விவசாரமும் ஏட்டிலடங்காது. நிற்க சகலருக்கும் பொதுவாகவே சன்மார்க்கம் என்பது ஒரு குறிப்பிட்ட கொள்கையை உடையது அல்ல வென்றே சொல்லுவேன். ஒருவருக்கு சன்மார்க்கமாயிருப்பது மற்றொருவ ருக்கு துன்மார்க்கமாகவே காணப்படுகின்றது. சிலருக்கு, குழந்தைகளுக்குக் கலியாணம் செய்வது சன்மார்க்கம் சிலருக்கு பக்குவமான ஆண் பெண்கள் இருவருக்கும் அவரவர்கள் சம்மதப்படி கலியாணம் செய்விப்பது சன்மார்க்கம். சிலருக்கு மனிதனை மனிதன் தொடுவது துன்மார்க்கம். சிலருக்கு மனிதனுக்கு மனிதன் தொடுவதினால் குற்றமில்லை என்று சொல்வது சன்மார்க்கம். சிற்றப்பன் மகளை மணந்து கொள்வது சிலருக்கு சன்மார்க்கம், சிலருக்கு துன்மார்க்கம். அத்தை மகளை மணந்து கொள்வது சிலருக்கு சன்மார்க்கம். சிலருக்கு துன்மார்க்கம். மாடு தின்பது சிலருக்கு சன்மார்க்கம் சிலருக்கு துன்மார்க்கம் கடவுளுக்கு கண்ணு, மூக்கு, கை கால், பெயர் பெண்டு பிள்ளை முதலியவைகள் வைத்து வணங்குவது சிலருக்கு சன்மார்க்கம், சிலருக்கு துன்மார்க்கம். காலும் கையும் கெட்டியாயிருந்து நன்றாய் உழைத்து சாப்பிடக்கூடிய வரத் தடியர்களுக்குச் சாப்பாடு போடுவது சிலருக்கு சன்மார்க்கம்; சிலருக்கு துன்மார்க்கம் ஏழை எளியவர்கள், சரீர



ஊனமுள்ளவர்கள், உழைத்துச் சாப்பிட சக்தியற்றவர்கள் ஆகியோருக்கு சாப்பாடு போடுவது சிலருக்கு சன்மார்க்கம், சிலருக்கு துன்மார்க்கம்.

எனவே இம்மாதிரி ஒருவருக்கு சன்மார்க்கமாயிருப்பது மற்ற வருக்கு துன்மார்க்கமாயிருப்பதை நித்திய வாழ்வில் தினம் தினம் எத்த னையோ காண்கின்றோம். ஒரு மார்க்கத்தின் முட்டாள்தனத்தையும், புரட்டு களையும் வெளியிலெடுத்துச் சொன்னால் எப்பேர்ப்பட்ட சமரச சன்மார்க்கம் என்கிறவனும் பதில் சொல்ல முடியாவிட்டாலும் காய்ந்து விழுந்து மக்களை ஏய்க்கப் பார்க்கின்றானேயொழிய தனது மார்க்கம் உண்மையில் யோக்கிய மானதா என்பதைப் பற்றி கவலைப்படுவதே இல்லை. எனவே உலகத்தில் உள்ள எத்தனையோ புரட்டு மதங்களில் சமரச சன்மார்க்கம் என்பதும் ஒன்றேவொழிய உண்மையில் எல்லோருக்கும் ஏற்ற சமரசத்தையும் சன்மார்க் கத்தையும் கொண்டது எதுவும் இல்லை என்றே சொல்வேன். உங்கள் சமரச சன்மார்க்க சங்கம் இம்மாதிரியான குற்றங்களில் சிக்காமலும் மூட நம்பிக்கை குருட்டு பழக்க வழக்கங்களாகிய வைகளுக்கு அடிமையாகாமலும் புராணக் குப்பைகளுக்கும் உயர்வு தாழ்வுகளுக்கும் ஆளாகாமலும் மக்களிடத்தில் காட்டும் அன்பும் கருணையுமே பிரதான மாகக் கொண்டு மனிதத் தன்மை யுடன் நடைபெறுமென்று நினைப்பதுடன் அம்மாதிரியே நீடூழி காலம் நடை பெற்று வர வேண்டும் என்றும் ஆசைப் படுகின்றேன்.

*குறிப்பு: 08.04.1928 ஆம் நாள் அம்பலூர் கரிய கவுண்டர் அவர்கள் பங்களாவில் அம்பலூர் சமரச சன்மார்க்க சங்கத்தாரால் வழங்கப்பட்ட வரவேற்பு உபசாரப் பத்திரத்திற்கு பதில் அளித்து உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 22.04.1928**



RangaRakes tamilnavarasam.com

# கூடா ஒழுக்கம்

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரி சென்ற இடங்களிலெல்லாம் கலவரம் ஏற்பட்டதாகவும் சில விடங்களில் கூட்டத்தில் செருப்புகள் வந்து விழுந்த தாகவும் பத்திரிகைகளில் காணப்படுகின்றன. மந்திரிகளின் விஜயத்திலும் பார்ப்பனர்களின் கூலிகள் சிலருக்கு அடி விழுந்ததாகவும் காணப்படு கின்றன. இம்மாதிரியான காரியங்கள் மிகுதியும் வெறுக்கத்தக்க தென்றும் நாம் அழுத்தமாகச் சொல்ல வேண்டியிருப்பதற்கு வருந்துகிறோம்.

இதற்கு முன்னும் ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார் முதலியோருடைய படங்களை கிழித்து மிதித்து எறிந்ததற்கும் சில கூட்டங்களில் செருப்புகள் பறந்ததற்கும் நாம் மிகுதியும் வருத்தப்பட்டு கண்டித்து எழுதியிருந்தோம். மறுபடியும் அம்மாதிரியான காரியங்கள் நடைபெற்றதாக தெரிவதற்கு நாம் மிகுதியும் வருத்தமடைகின்றோம். “தமிழ்நாடு” பத்திரிகையில் இச் சம்பவங்கள் சுயமரியாதை சங்கத்தைச் சேர்ந்ததாக பிறர் நினைக்கும்படி காணப்படுகின்றதானாலும் நாம் அதை சிறிதும் நம்புவதில்லை. ஏனெனில் அது காட்டிக் கொடுத்து கூலி பெறுவதிலோ அபாண்டத்தை சிருஷ்டித்து பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளை ஆவதிலோ பார்ப்பனர்களை விட ஒருபடி முன்னிற்பது. ஆதலால் அதை நாம் ஆதாரமாய் எடுத்துக் கொள்ள வில்லை.

ஒரு சமயம் அப்படி ஏதாவது உண்மையில் நடந்திருக்குமானால் அது யாரால் நடந்திருந்தாலும் அதற்காக நாம் மிகுதியும் வெட்கப்பட வேண்டிய வர்களாவோம். ஏனெனில், இத்தொழில் பார்ப்பனக் கூலிகளுக்கே உரியது. சுயமரியாதை உடையவர்களானால் இம் மாதிரி காரியங்களை மிகவும் வெறுக்க வேண்டும். பேசுபவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். கூட்டத் திற்கு வேண்டிய சவுகரியம் செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் பேசிய தற்கு சமாதானம் மறுநாள் கூட்டம் போட்டு சொல்ல வேண்டும். அப்படிக் கில்லாமல் கூட்டத்தைக் கலைப்பது யோக்கியமானதாகாது. கூட்டத்தில் செருப்பெடுத்து எறிவது மிகுதியும், அயோக்கியத்தனமான செய்கையாகும். சென்னையில் ஒரு கடற்கரை கூட்டத்தில் பார்ப்பனர்கள் முதல் முதலாக ஒரு செருப்பை எடுத்து எறிந்துவிட்டு பிறகு அவர்கள் வெளியில் கூட்டம் போடுவதற்கே தகுதியற்றவர்களானதும் அவர்கள் போடும் கூட்டங்களில்



பல தடவை செருப்புகள் வந்து விழுந்ததும் தேசீய வீரர்கள் ஓடி ஒளிந்ததும் தெருக்களில் ஒவ்வொருவரும் விரட்டப்பட்டதும் நாம் அறிந்த விஷய மாகும். அப்படியிருக்க மற்றவர்களும் அந்த மாதிரி செய்ய முற்படுவது அறிவீனமான காரியமென்றே சொல்லுவோம். ஸ்ரீ சத்தியமூர்த்தி சாஸ்திரி தனது சமூக நன்மையை கருதி அவர்கள் தொண்டாற்றி வருகின்றார். கூடுமா னவரை அவரை ஒரு சமூகத் தொண்டர் என்றே சொல்ல வேண்டும். அதன் மூலம் ஏதாவது சுயநலம் கிடைத்தால் அதை அனுபவிக்கிறார். எந்த சமயத் திலும் தனது பார்ப்பன சமூகத்தை காட்டிக் கொடுத்து ஒரு வார்த்தையாவது பேசினவரல்ல. அம் மாதிரி சமூகத் தொண்டர்களை நாம் போற்ற வேண்டும். அவருடைய தனிப்பட்ட சொந்த விஷயங்கள் பல இருக்கலாம். அவற்றை அவர் நமக்கு தலைவராகவோ, உபதேசிப்பவராகவோ வரும்போது நாம் பேசிக் கொள்ளலாம். கூட்டத்தில் அவரை மறித்தது சரியல்லவென்றே சொல்லுவோம். இம் மாதிரிக் காரியம் நமது கூட்டங்களிலும் செய்ய அவர் களாலும் முடியக் கூடியதுதானேயல்லாமல் ஒருவருக்கே சொந்தமல்ல என்றே சொல்லுவோம்.

யாவருக்கும் பேச்சு சுதந்திரம் கொடுக்க வேண்டும். திருச்சியில் நடந்ததாகச் சொல்லப்படும் இந்தக் காரியம் பார்ப்பனர்களுக்குள்ளாகவே ஸ்ரீமான்கள் சாஸ்திரி, டாக்டர் ராஜன் கூட்டத்தாருக்கும், ஸ்ரீமான் சேதுரத்ன மய்யர் கூட்டத்தாருக்குமே நடந்ததாக நம்பத்தகுந்த இடத்திலிருந்து சேதி வந்தாலும் இது யாருக்குமே கூடாது என்று சொல்லுகின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 22.04.1928**



RangaRakes tamilnavarasam.com



பதிவு எண் 2041 KUDI ARASU.

# குடி அரசு

வாரப்பதிப்பு.

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

ஈரோடு, விபவ ௵ சித்திரை ௴ 17௳ (29—4—28) ஞாயிற்றுக்கிழமை. மலர் 1

இனும்! இனும்!

14 Kt. Self-filling

CANADIAN WATCH PEOPLE, George Town, Madras.

டேபில் டைம்பீஸ் இனும்!!

CANADIAN WATCH PEOPLE, George Town, Madras.

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

துப்பு இரகசியம் அறியும் கருவி.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ௵ ஸ்தாபிக்கப்பட்டது)

கணித சோதிடம்

# ஜஸ்டிஸ் கக்ஷியும் ஸ்ரீவரதராஜுலுவும்

ஸ்ரீ வரதராஜுலு ஏப்ரல் 27 தேதி ‘தமிழ் நாடு’ பத்திரிகையில் எழுதியிருப்பதாவது :- “ஜஸ்டிஸ் கக்ஷியார் செய்து வரும் தொல்லையால் தென்னாட்டு மக்கள் நோயுற்றிருக்கின்றார்கள்”....... ஜஸ்டிஸ் கட்சியின் ராஜீய நய வஞ்சகத்தை உடைத்தெறிய ஸ்ரீவரதராஜுலு 12 வருஷங்களாக பாடுபட்டு வருகிறார்.”

‘நாயக்கர் பிரசாரம் இப்போது போலவே நடைபெறுமானால் அடுத்த தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி இருந்த இடமே தெரியாமல் போகும்.’

‘தேசீய முற்போக்குக்கு ஜஸ்டிஸ் கக்ஷி ஒரு பெரிய முட்டுக் கட்டையாக இருக்கிறது......’

‘கேவலம் ஒரு சட்ட மெம்பர் பதவிக்காக தேசத்துரோகம் செய்தது ஒழுங்கா?’

‘பிராமணர்களை தேசீயக் கூட்டத்திலிருந்து விலக்கிவிட நாம் ஒரு நாளும் சம்மதிக்க முடியாது...’

என்பதும் மற்றும் இது போன்றதுகளும் எழுதி ஜஸ்டிஸ் கட்சியை மிரட்டுகிறார்.

இவைகள் முழுவதும் வெறும் மிரட்டல்கள் என்று எல்லோரும் நினைப்பார்கள் என்பது ஸ்ரீ வரதராஜுலுவுக்கே தெரிந்திருந்தாலும் பார்ப்பனர்களை ஏமாற்றுவதற்காகவும் தான் இப்போது பார்ப்பனர்கள் கட்சிக்கே முழுதும் வந்து விட்டதாக பார்ப்பனர்கள் நினைக்க வேண்டும் என்றும் நினைக்கும் பேதமையானது இதையெல்லாம் எழுதச் செய்கின்றது. ஒரு ஒற்றை மனிதனின் வயிற்றுப் பிழைப்பு என்னவெல்லாம் செய்யத் துணிவு கொடுக்கின்றது என்பதை எடுத்துக் காட்டவே இவைகளை நாம் எழுதுகிறோம். ஜஸ்டிஸ் கட்சியாரால் தமிழ் மக்களுக்கு என்ன நோவு வந்திருக்கின்றது என்பதை முதலில் காட்டி பிறகு அக்கட்சியில் வந்த நோவுக்கு அக் கட்சியைக் காட்டிக் கொடுப்பாரானால் அது ஆண்மையும்



RangaRakes
tamilnavarasam.com

யோக்கியமும் பொருந்தின காரியமாயிருக்கும். ஜஸ்டிஸ் கட்சி என்பதாக ஒரு இயக்கம் தமிழ் நாட்டில் இல்லாதிருந்திருக்குமானால் தமிழ் மக்களின் யோக்கியதை இது சமயம் என்னமாயிருக்கும் என்பதை யோசித்தால் ஒரு அறிவிலிக்கும் ஜஸ்டிஸ் கட்சியால் தமிழ் மக்களுக்கு நோய் உண்டாயிற்றா அல்லது ஸ்ரீ வரதராஜுலு போன்றார் பார்ப்பன வால்களாயிருந்து கொண்டு பார்ப்பன ஆதிக்கத்திற்கு உள் உளவாயிருப்பதால் தமிழ் மக்களுக்கு சுயமரியாதை இல்லாததான நோய் உண்டாகிக் கொண்டு வந்திருந்ததா என்பது விளங்காமல் போகாது.

'12 வருஷகாலமாக ஜஸ்டிஸ் கட்சியின் 'நய வஞ்சகத்தை உடைத் தெறிய ஸ்ரீ நாயுடு வேலை செய்தது' என்பது வாஸ்தவமே. ஆனால் அது நாட்டின் நலத்திற்காகவா தனது சுயநலத்துக்காகவா என்பதை அறிய பொது ஜனங்களுக்கே விட்டு விடுகின்றோம். ஆனால் இவர் ஜஸ்டிஸ் கட்சியை வைது அதற்காக பார்ப்பனரிடம் கூலி வாங்கிக் கொண்டதல்லாமல் ஜஸ்டிஸ் கட்சியின் மீது ஒட்டிய ஒரு சிறு தூசியையாவது அசைக்க முடிந்ததா என்று கேட்கின்றோம்.

அன்றியும் அக்கட்சி ஒன்று இல்லாதிருந்தால் ஸ்ரீ வரதராஜுலுவை பூதக்கண்ணாடி கொண்டாவது காணமுடியுமா என்று கேட்கின்றோம்.

"நாயக்கர் பிரசாரம் இப்படியே இருந்தால் அடுத்த தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி இருந்த இடம் தெரியாமல் போய்விடு"மாம். போன தேர்தலில் ஸ்ரீ வரதராஜுலுவும் அவர்கள் தலைவர்களும் சேர்ந்தே ஒரு கை பார்த்தார்கள். தமிழ் நாட்டில் இந்த ஒன்றரை வருஷமாய் ஜஸ்டிஸ் கட்சியை எவ்வளவு தூரம் இருந்த இடம் தெரியாமல் செய்து விட இவர்களால் முடிந்தது என்பதையும் பொது ஜனங்களே யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம். ஸ்ரீ வரதராஜுலு போன்றவர்கள் இருந்த இடம் தெரிய காங்கிரசில் சிலர் ராஜீனாமா கொடுத்து விட்டு ஜஸ்டிஸ் கட்சிக்கு விண்ணப்பம் போட நேர்ந்ததும் அதை அவர்கள் தள்ளும்படி செய்ததும் பொது ஜனங்களுக்குத் தெரியுமா தெரியாதா என்று கேட்கின்றோம். தவிர நாயக்கர் பிரசாரத்தைக் கண்டு பயந்து ஜஸ்டிஸ் கட்சியை மிரட்டுவது எவ்வளவு இழி தன்மை என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

"தேசீய முற்போக்குக்கு ஜஸ்டிஸ் கட்சி முட்டுக்கட்டையாயிருக்கின்றது" என்று சொல்வது. தேசீயம் என்றால் என்ன? அதற்காக யார் எந்த விதமான பிரசாரம் செய்கிறார்கள்? அதனால் ஏற்பட்ட பலன் என்ன? என்பதைப் பற்றி 'குடி அரசு' சுமார் ஒரு நூறு இருநூறு தடவை ஸ்ரீ வரதராஜுலு போன்ற வயிற்றுப் பிழைப்பு தேசீய வீரர்களை கேட்டிருக்கும். ஆனால் நாளிது வரை ஸ்ரீ வரதராஜுலுவாவது மற்றும் எந்தப் பார்ப்பனராவது



தேசீயத்திற்கு வியாக்யானம் சொன்னவர்கள் அல்ல. அப்படியிருக்க ஜஸ்டிஸ் கட்சி தேசீயத்திற்கு முட்டுக்கட்டை என்பது ஏமாற்றுப் பிரசாரமா அல்லவா? என்று கேட்கின்றோம்.

"ஒரு சட்ட மெம்பர் பதவிக்கு தேசத்துரோகம் செய்தது" என்பது. இதைப் பற்றி இதே மாதிரி பார்ப்பனர்களும் ஸ்ரீ வரதராஜுலுவும் இதற்கு முன்னால் போட்ட கூப்பாட்டிற்கு நீண்ட பதில் எழுதியிருக்கிறோம். அதற்கு சமாதானம் சொல்லாமல் மறுபடியும் அதை எழுதுவது பொது ஜனங்கள் பைத்தியக்காரர்கள் என்கின்ற எண்ணமே ஒழிய வேறு என்ன என்று கேட்கின்றோம்.

ஸ்ரீ கிருஷ்ணன் நாயர் சட்ட மெம்பர் பதவி ஒப்புக்கொண்டதில் தேசத் துரோகம் என்ன என்றும் திரு. சர் சிவசாமி, சர்.சி.பி. சர். கிருஷ்ணசாமி, சர். ராஜகோபாலாச்சாரி, ஸ்ரீ வெங்கட்டறாமசாஸ்திரி ஆகியவர்கள் ஒப்புக் கொண்டதில் உள்ள தேச பக்தி என்ன என்றும் எடுத்துக்காட்ட விரும்பு கிறோம். அப்படிக்கில்லாமல் தேசத்துரோகம் என்று எழுதுவது வயிற்றுப் பிழைப்புக்காகச் செய்யும் இனத்துரோகமேயல்லாமல் வேறு என்ன என்று கேட்கின்றோம்.

"பிராமணர்களை விலக்க முடியாது" என்பது ஸ்ரீ வரதராஜுலுவைப் பார்ப்பனர்கள் சேர்க்காவிட்டாலும் ஸ்ரீ வரதராஜுலுவின் ஆயுள் வரை வரதராஜுலு பார்ப்பனர்களை விட முடியாது என்பது பார்ப்பனர்கள் உள்பட எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஆதலால் அதில் ஒன்றும் அதிசய மில்லை என்றே சொல்லுவோம்.

எனவே ஸ்ரீ வரதராஜுலுவின் இவ்வாக்கியங்களிலிருந்து அவர் எவ்வளவு தூரம் தனது சமூகத்தாரின் கேட்டுக்குத் தயாராயிருக்கிறார் என்பது முதலியவைகளை விளக்கவே இதை எழுதுகிறோமேயல்லாமல் மற்றபடி இவரது இம்மாதிரி பிரசாரத்தில் ஏதாவது விளைந்துவிடுமோ என்கின்ற பயத்தினால் நாம் இதற்கு சமாதானம் எழுதவரவில்லை என்பதையும் தெரிவிக்கின்றோம்.

**குடி அரசு – கட்டுரை – 29.04.1928**



RangaRakes tamilnavarasam.com

# நமது பத்திரிகையின் நான்காவதாண்டு

'குடி அரசு' பத்திரிகை தோன்றி இன்றைக்கு மூன்றாவது ஆண்டு கழிந்து நான்காவது ஆண்டு தொடங்கிவிட்டது.

அது தோன்றிய நாள் முதல் இது வரை செய்து வந்த தொண்டைப் பற்றியும் அதனால் ஏற்பட்ட பலனைப் பற்றியும் பொது ஜனங்களுக்கு நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை என்றே நினைக்கின்றோம்.

'குடி அரசின்' கொள்கையை அதன் முதல் மலர் முதலிதழில் தலையங்கத்தில் தெரிவித்தபடி, அதாவது:-

"மக்களுக்குள் சுயமரியாதையும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளர்த்தல் வேண்டும்............

உயர்வு தாழ்வு என்கின்ற உணர்ச்சி ஒழிந்து அனைத்துயிரும் ஒன்றென்னும் உண்மை அறிவு மக்களிடம் வளர்தல் வேண்டும், சமயச் சண்டைகள் ஒழிய வேண்டும். இன்னோக்கங்கள் நிறைவேற உண்மை நெறி பற்றி இவர் எமக்கு இனியர் இவர் எமக்கு மாற்றார் என்கின்ற விருப்பு வெறுப்புகள் இன்றி... நண்பரே ஆயினும் ஆகுக. அவர் தம் சொல்லும் செயலும் கேடு சூழ்வதாயின் அஞ்சாது கண்டித்தொதுக்கப்படும்."

என்று நாம் உலகத்தாருக்கு ஆதியில் வாக்குக்கொடுத்தது போலவே இதுகாறும் ஒரு சிறிதும் மாறுதல் இன்றியும் கள்ளங் கபடின்றியும் தயவு தாக்ஷண்யம் இன்றியும் அது தனக்கு சரி என்று பட்டதை எவருக்கும் அஞ்சாது எப்பழிக்கும் பின் வாங்காது உண்மையுடன் உழைத்து வந்திருக்கின்றது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எனவே இப் பத்திரிகையின் கொள்கை இன்னது என்பதையும் அது ஆரம்பித்த நாள் முதல் இது வரை அதையே கடைப்பிடித்து வந்திருக்கிறது என்பதையும் வெளிப்படுத்தவே இக் குறிப்பை வெளியிட்டோம்.

அன்றியும் 'குடி அரசின்' இக் கொள்கை கொண்ட உழைப்பானது மற்ற பெரும்பான்மையான பத்திரிகைகளின் உழைப்பைப் போல் பத்திராதி



பரின் வாழ்வுக்கும் ஜீவனத்திற்கும் மாத்திரம் அனுகூலமாக்கி கொண்டு நாட்டை பாழ்ப்படுத்திக்கொண்டோ அல்லது ஒரு பயனும் இல்லாமல் மக்களை மூடபக்தியிலும் குருட்டு நம்பிக்கையிலும் அமுத்திக் கொண்டோ அல்லது சோம்பேறி வேதாந்தம் கற்பித்துக்கொண்டோ அல்லது அர்த்தமற்ற சுயராஜ்ய பேச்சோ தேசிய போச்சோ பேசிக் கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டோ இருந்துவராமல் மக்களுக்குள் ஒரு வித உணர்ச்சியையும் எழுச்சியையும் கொடுத்து அறிவை விளக்கி வந்திருக்கின்றது என்பதை பல நண்பர்கள் நமக்கு எடுத்துக் காட்டி இருப்பதையே நாம் இங்கு இது சமயம் சுட்டிக் காட்டுகின்றோம்.

'குடி அரசினால்' தேசிய வாழ்வுக்காரரின் பிழைப்புக்கு ஆபத்து நேரிட்டிருப்பதும் புராணப்பிழைப்புக்காரருக்கு ஆபத்து நேரிட்டிருப் பதும் அவர்களை நம்முடன் வந்து விவரமில்லாமல் அடிக்கடி முட்டிக் கொள்வதாலேயே நாம் நன்றாய் உணருகின்றோம். ஆனாலும் அக் கூட்டத்தையும் அவர்களது கூச்சலையும் ஒரு கடுகளவும் லக்ஷியம் செய்யாமல் நாம் முனைந்து நிற்பதால் அவர்களால் நேரிடும் இடையூறுகள் யாவும் தூள் தூளாய் சின்னா பின்னப்பட்டு காற்றில் பறப்பதும் வாசகர்கள் நிதமும் உணர்ந்ததேயாதலால் அதை பற்றி நாம் அதிகம் எழுத வரவில்லை.

உதாரணமாக மோட்டார் வண்டிகள் தெருக்களில் வேகமாச் செல்லும் போது தெருப்பொறுக்கும் சுணங்குகள் அவ்வண்டியின் நிலையறியாது அதை வழிமறித்து தடுத்து கடித்தெறிந்து விடலாம் என்கின்ற ஆவலுடன் குரைத்துக் கொண்டு சிறிது தூரம் வண்டியைத் தொடர்ந்து ஓடி காலும் வாயும் வலித்த உடன் எப்படி முணு முணுத்துக்கொண்டு திரும்பிப்போய் விடு கின்றனவோ அது போல் 'குடி அரசி'ன் வேகத்தினிடம் அநேகம் பத்திரிகை களும் தனி நபர்களும் வெகு ஆத்திரமாக அதை தடுத்து நிறுத்தி விடுவதுபோல் ஆர்ப்பாட்டம் செய்து பார்த்துவிட்டு அடங்கிபோனவை களும் சில மறைமுகமாய் விஷமம் செய்து கொண்டிருப்பதும் சில மானம் வெட்கமில்லாமல் நின்ற நிலையில் இருந்தே குரைத்துக் கொண்டதுமான நிலையை தினமும் உணருகின்றவர்களுக்கு 'குடி அரசி'ன் வேகத்தைப் பற்றியோ தத்துவத்தைப் பற்றியோ அது உண்மையானதா அல்லது போலியானதா என்பதைப் பற்றியோ அறிவிக்க வேண்டியதில்லை.

நிற்க, தமிழ் நாட்டின் நிலைமைகளும் வயிற்றுப் பிழைப்புத் தேசீய வாழ்வுக்காரர்களின் யோக்கியதைகளும், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் வேறுபாடுகளும், வெளிமாகாணக்காரருக்கும், வெளி தேசத்தாருக்கும் தெரியப்படுத்த சுமார் 10, 12 வருஷங்களாக பார்ப்பனரல்லாதார் இயக்கமும் 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைகளும் எவ்வளவோ பாடுபட்டும் பார்ப்ப னருடையவும், அவர்களது கூலிகளுடையவும் பலவித சூழ்ச்சிகளால் அதன்



RangaRakes tamilnavarasam.com

குரல் வெளியில் போகாமல் தடுக்கப்பட்டிருந்தது யாவரும் அறிந்த விஷயமாகும். அவ்வித தடைகளை எல்லாம் தாண்டி, இப்பொழுது வெளி மாகாணங்களுக்கும் மேல்நாடுகளுக்கும் கூட அவைகள் எட்டியிருப்பதற்கு, நம்நாட்டு தேசீயப் புரட்டும் பார்ப்பன சூழ்ச்சியும் பாமரர்கள் யாவரும் அறிந்திருப்பதற்கும் 'குடி அரசி'ன் தொண்டு ஒரு சிறிதாவது காரணமென்று சொல்வது மிகையாகாது.

'குடி அரசு' முதல் வருஷத்தின் முடிவில் 2000 சந்தாதாரர்களையும், இரண்டாவது வருஷ முடிவில் 4500 சந்தாதாரர் களையும், மூன்றாவது வருஷ முடிவில் 7000 சந்தாதாரர்களையும் கொண்டு உலவி வருவதனாலேயே அது ஒரு விதத்தில் பொது ஜனங்களின் ஆமோதிப்பைப் பெற்று வருகின்றது என்று சொல்லலாம். அதோடு, தமிழ்நாட்டில் உள்ள தமிழ் தினசரி, வாரப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் 'குடி அரசே' அதிகமான சந்தாதாரர்களை யும், வாசகர்களையும் கொண்டிருப்பதாகவும் சொல்லலாமானாலும் இனியும் அது அடையவேண்டிய உயர்ந்த எண்ணிக் கையை அது அடைந்து விட்டதாக நாம் சொல்வதற்கில்லை.

சற்றேறக்குறைய 2 கோடி மக்களையுடைய தமிழ்நாட்டில் 'குடி அரசு' 7000 பிரதிகள் மாத்திரம் உலவுவதானது ஒருக்காலும் போதாது என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில் 'குடி அரசு' மேற்போட்டுக் கொண்டிருக்கும் தொண்டு இலேசானதல்ல என்பதாலும் அது அழிக்க முனைந்திருக்கும் கேடுகள் இன்று நேற்று ஏற்பட்ட கெடுதி அல்ல வென்பதும் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் மயங்கும் படியான தெய்வத்தின் பேராலும் மோக்ஷத்தின் பேராலும் மதத்தின் பேராலும் ஏற்படுத்தப்பட்டு என்றென்றைக்கும் விடுதலையடைய மார்க்கமில்லாமல் கட்டிப் போடப் பட்டிருக்கின்றதாதலாலும் இந்த கேட்டை பரப்புவதையும் நிலை நிறுத்து வதையும் பார்ப்பனரல்லாதாரிலும் பலர் பக்தியாகவும் ஜீவனோபாயமாகவும் கொண்டிருக்கிறதினாலும் இப்புரட்டுகளும் சூழ்ச்சிகளும் உலகத்தில் நூற்றுக்கணக்கான வருஷங்களில் கூட அழிக்க முடியாதபடி கோவில் களாகவும் தெய்வங்களாகவும் வேதங்களாகவும் புராணங்களாகவும் படங் களாகவும் பஜனை பாட்டுக்களாகவும் இலக்கணங்களாகவும் இலக்கியங் களாகவும் நாடெல்லாம் நிறைந்து அரசன், செல்வந்தன், படித்தவன், பிச்சைக்காரன் ஆகிய எல்லோர் வாயிலும் மனத்திலும் குடிகொண்டதாலும் இப்படிப்பட்ட விஷயத்தை அது எவ்வளவு புரட்டானதானாலும் மோசமான தானாலும் மக்களுக்கு எவ்வளவு இழிவும் கேடும் சூழ்வதானாலும் அதை ஒழித்து உண்மையை வெளியாக்கி மக்களை சீர்படுத்துவதென்றால் அதை சில வருஷங்களில் வாரம் ஒரு 7000 பிரதி வெளியீட்டில் முடியக்கூடிய காரியம் என்று நினைப்பது பைத்தியக்காரத்தனமேயாகும். ஆதலால்தான்



ஏழாயிரம் பிரதி போதாதென்பதோடு குறைந்தது 50,000 பிரதியாவது வாராவாரம் வெளியாக வேண்டுமென்பதே நமதபிப்பிராயம்.

மற்றப்படி இதற்கு ஏற்படும் எதிரிகளைப் பற்றியோ எதிர்ப் பிரசாரத்தைப் பற்றியோ நாம் ஒரு போதும் கவலைப்படுவதில்லை. ஏனெனில் இது வரை பல எதிரிகள் வெளிப்படையாகவும் திருட்டுத்தனமாகவும் தானாகவும் கூலிக்கும் தனது உண்மை அபிப்பிராயத்திற்கும் தனது சுயநலத் துக்கும் ஆக பலவிதங்களில் எதிர்த்துப் பார்த்து விட்டார்கள். நமது வாசகத் தையும் எழுத்தையும் திரித்தும் பழித்தும் விஷமம் பிரசாரம் செய்தும் பார்த்து விட்டார்கள். இவைகளினாலெல்லாம் 'குடி அரசி'ன் அபிப்பிராயம் பரவுவதிலும் பிரதிகள் உயர்வதிலும் எவ்வித தடையும் ஏற்படவில்லை என்கின்ற காரணத்தினாலேயே உறுதி கூறலாம்.

அன்றியும் 'குடி அரசை'யும் அதன் கொள்கைகளையும் எதிர்ப் பதாகவோ வெளியில் எதிர்த்து பிரசாரம் செய்வதாகவோ வெளியில் வந்த யாரும் இதுவரை 'குடி அரசில்' கண்ட விஷயங்களில் எதற்காகவாவது ஒன்றுக்கு யோக்கியமான சமாதானம் சொல்லவும் முன்வரவில்லை என்ப தினாலும் உணரலாம்.

ஆனாலும் 'குடி அரசு' தமிழ் நாட்டில் 50000 பிரதிகள் உலவி அதில் காணும் முக்கிய விஷயங்களை ஜில்லா தோறும் பதினாயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் வெளியாக்கி வினியோகித்து வந்தால் மாத்திரம் சரியானபடி பரவக்கூடுமேயல்லாமல் இந்த 7000 பிரதியோ அல்லது 17000 பிரதியோ ஒரு காரியமும் செய்து விடாது என்றே சொல்லுவோம்.

தவிர, "குடி அரசு" இனி ஈரோட்டிலிருந்து வெளிவருவது சற்று கஷ்டமாகவேதான் காணப்படுகிறது. ஏனெனில் யந்திரங்கள் போதுமானதா யில்லாததோடு போதிய சவுகரியமும் இல்லை. இன்னம் ஒரு மிஷின் வாங்க வேண்டியதாயும் இருக்கின்றது. இதல்லாமல் இனி "குடி அரசு" ஒரு தனிப் பட்ட மனிதனின் ஆதிக்கத்தில் இருப்பதும் சரியல்ல வென்றே நினைக் கிறோம். என்னவெனில் இப்படி ஒருவராலேயே நடத்தப்படுவதாயிருந்தால் இது இனி வெகு காலத்திற்கு நடந்து வர முடியுமா என்பதுதான். ஆதலால் "குடி அரசை" ஒரு லிமிடெட் கம்பெனியாக்கி இந்த கொள்கை கொண்ட ஒரு நிர்வாக கம்பெனியிடம் ஒப்படைத்து இன்னமும் கொஞ்சம் குறைந்த விலையில் அதாவது ஒரு வருஷம் 2 ரூபாய் சந்தாவில் இனியும் அதிகமான பிரதிகள் வெளியாக்கத்தக்க மாதிரியிலும் இனியும் அதிகம் பேர் படிக்கத்தக்க மாதிரியிலும் செய்ய வேண்டுமென்றே ஆசைப்படுகின்றோம். சாதாரணமாக 20,000 பிரதிகள் வாரா வாரம் வெளியானால் வருட சந்தா 2 ரூபாயாக ஆக்கினாலும் நஷ்டம் வராது என்பது நமது துணிவு. பக்கங்களை வேண்டு மானாலும் குறைத்துக் கொள்ளலாம். லிமிடெட் கம்பெனி ஆக்க வேண்டு



RangaRakes tamilnavarasam.com

மென்பது பொறுப்பை உண்டாக்கவே ஒழிய பணம் அதிகம் தேவை என்பதாகவல்ல என்றும் சொல்லுவோம். இனி ஒரு மிஷினைத் தவிர வேறு ஒன்றும் வேண்டியதில்லை. தவிர நமக்கு எவ்வளவு மனஉறுதி இருந்தாலும் சற்று உடல் தளர்ச்சி ஏற்பட்டு விட்டது. என்னவெனில் 2, 3, 4 மணி நேர மானாலும் பேசுவது சுலபமாயிருக்கின்றதேயல்லாமல் எழுதுவது அரைமணி நேரமானாலும் தலைவலி வந்து விடுகின்றது. கையும் வலி எடுத்துக் கொள்ளு கின்றது. அடிக்கடி மயக்கம் வருகின்றது. இது தவிர இங்கிலீஷ் வாரப் பத்திரிகையும் (ரிவோல்ட்) நடத்த வேண்டியிருப்பதாலும் அடிக்கடி பிரசாரத் திற்காக வெளியில் போகவேண்டியிருப்பதாலும் 'திராவிடன்' பத்திரிகை யின் பொறுப்பையும் ஒப்புக் கொண்டிருப்பதாலும் இவ்வளவு காரியமும் ஒரு மனிதன் தலையிலேயே போடக்கூடிய காரியம் ஆகுமா என்பதும் யோசிக்க வேண்டிய காரியமாகும். அன்றியும் இக்கொள்கைக்கு ஒரு கட்டுப்பாடான இயக்கம் ஏற்படுத்தி அதற்கு ஜில்லா தாலூக்கா பிரசாரக்காரர்களையும் ஏற்படுத்தி அவ்வியக்கத்தின் சார்பாய் இப்பத்திரிகைகள் நடைபெறுவது நலமளிக்குமாதலால் அம்மாதிரி இயக்கம் ஒன்று வேண்டியிருப்பதோடு அதற்கு வேறு பல பிரயத்தனங்களும் செய்ய வேண்டி இருக்கிறது. இவற்றை யெல்லாம் நன்றாய் யோசித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வரும்படி வாசகர் களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 29.04.1928**



# மாயவரமும் ஸ்ரீ வரதராஜுலுவின் "வீரமும்"

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் மாயவரத்தில் கூடி பிரமாதமான காரியத்தைச் சாதித்துவிட்டதாகத் தங்களையே புகழ்ந்து கொண்டு அடிதடி யுடன் கலைந்து ஆளுக்கொரு மூலையாய் ஓடி ஒளிந்து விட்டு சென்னைக்கு வந்து "கீழே விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை" என்று வீரம் பேசுகின்றார்கள்.

மாயவரம் பெரிதும் பார்ப்பன அக்கிராரமாய் இருந்தாலும் அங்கு சில காலமாகவே தேசீய புரட்டுக்கு இடம் இல்லாமலே இருந்ததுடன் சமத்து வத்திற்கும் சுயமரியாதைக்கும் தமிழ் நாட்டில் முன்னணியில் இருந்தது.

குருகுல வேஷத்தின் போதுகூட ஸ்ரீ வரதராஜுலுவைப் பார்ப்பனர் கள் துன்புறுத்த கட்டுப்பாடாய் ஏற்பாடு செய்து கொண்டு கூட்டத்தில் வந்து விளக்கு முதலியவைகளைக்கூட உடைத்து மீட்டிங்கு நடக்காமல் தொந்தரவு செய்த காலத்திலும் இதே மாயவரம் தேச பக்தர்களால் தான் தடுக்கப்பட்டு ஸ்ரீ நாயுடு காப்பாற்றப்பட்டார் என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்பேர்ப் பட்ட இடத்தில் "தீட்டின மரத்தில் பதம் பார்ப்பது" என்கின்ற பழமொழிபோல் ஸ்ரீ வரதராஜுலு நாயுடு எல்லாரிடத்திலும் நடந்து கொள்ளும் மாதிரியாகவே மாயவரம் தொண்டர்களிடத்திலும் நடந்து கொண்டது அதிசயமல்ல. அதைப் பற்றி நமக்கு அதிக கவலை இல்லை. மாயவரம் தொண்டர்கள் யோக்கியர் அல்லாதவர்களை யோக்கியர் என்று நம்பிய குற்றத்தினால் அடைந்த பலன் களுக்கு நாம் என்ன சமாதானம் சொல்லக்கூடும். ஸ்ரீ வரதராஜுலுவை பார்ப்பனரல்லாதார் கோஷ்டியில் சேர்த்துக் கொண்டு அவரைப் பார்க்க அங்கு தனியாய் சென்றதின் பலனாகவே திரு. சுப்பிரமணியம் அடிபட நேர்ந்தது. இதைப் பற்றி ஸ்ரீ வரதராஜுலு ஒண்டியாய் வந்தவர் அடிபட நேர்ந்ததைப் பற்றி மாத்திரம் ஜம்பம் பேசிக் கொள்ளலாம். ஆனாலும் திரு. சுப்பிரமணிய பிள்ளையைப் பொருத்தவரையில் ஸ்ரீ நாயுடுவின் நன்றி கெட்டதன்மையை தமிழ் மக்கள் பெரிதும் அறிய இது ஒரு சம்பவமாகும். நிற்க,

ஸ்ரீ வரதராஜுலு சுயமரியாதைப் பிரசாரத்தை அடக்கவும் மாயவரத்தில் ரத்தம் சிந்தியதைப் போல் தமிழ்நாடு எங்கும் இரத்தம் சிந்தச்



RangaRakes tamilnavarasam.com

செய்யவும் 20 ஆயிரம் ரூபாய் சென்னை காங்கிரசில் மீந்த பணத்திலிருந்து ஒதுக்கி வைத்திருப்பதாகவும் அதை செலவிட்டு அடக்கிவிடப் போவதாகவும் பந்தயம் கூறி நம்மை பயமுறுத்துகிறார். ஸ்ரீ வரதராஜுலுவின் வீரத்திற்கும் அவரது பந்தயத்திற்கும் எவ்வளவு தூரம் மதிப்பு உண்டென்பது தமிழ் மக்களுக்கு ஏற்கனவே தெரிந்த விஷயம் தான். வெறுங் குடத்தை தட்டினால் அதிகமாகத்தான் சத்தம் கேழ்க்கும், உள்ளே சாமான் இருந்தால் சத்தமாகாது என்பது போல் ஸ்ரீ வரதராஜுலுவின் வாழ்வின் அஸ்திவாரமே இந்த வாயளப்பைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்பது அவருடன் பழகாத எதிரிக்குங்கூட தெரிந்த விஷயம். தான் அடங்கிக்கிடக்க நேரும்போது, "கிடந்து போகட்டும் என்று அலட்சியமாய் இருந்து வந்தோம்" என்பதும் வெளியில் வர கொஞ்சம் இடம் கிடைத்ததும் "இனிமேல் பார் நம்ம சங்கதி" என்பதுமான வீரமும் அவர் கூடவே பிறந்த குணங்களாகும். இம்மாதிரி இதற்குமுன் எத்தனை தடவை பேசியிருக்கிறார். இதுவரை ஏதாவது ஒரு செல்லாக்காசு பெறுமான காரியமாவது செய்தாரா? அல்லது அதனால் ஏற்பட்டதா? என்கின்ற விஷயங்களை கவனித்தால் உண்மை வெளியாகாமல் போகாது தவிர ஸ்ரீ வரதராஜுலுவின் எதிர் பிரசாரத்தின் யோக்கியதை அறியாதவர்கள் இந்த மாகாணத்தில் யாரும் இல்லையாதலால் அதைப்பற்றி எழுத வேண்டிய அவசியமும் இல்லை என்றே இத்துடன் விட்டு விடுகின்றோம்.

மற்றபடி எந்த பார்ப்பனர்களாவது இவரை நம்பி பக்கத்தில் சேர்த்துக் கொள்வார்கள் என்கின்ற சந்தேகமும் நமக்கு கிடையாது. ஆதலால் இவராகப் போய் பார்ப்பனர்களுடன் உறைய வேண்டியது தானேயல்லாமல் இவரைக் கொண்டு அவர்களுக்கு யாதொரு காரியமும் ஆகிவிடப் போவதுமில்லை. ஆதிதிராவிடர்களின் இயக்கத்திற்கும் முன்னேற்றத்திற்கும் விரோதமாய் சிலருக்கு கூலி கொடுத்து திராவிடர் சபை என்பதாக ஒரு போலி சபையை உண்டாக்கி இருப்பது போல ஸ்ரீ வரதராஜுலுவைப் பிடித்து பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு விரோதமாக 'தேசீயப் பார்ப்பனரல்லாதார் சபை' என்பதாக ஒன்றை ஏற்படுத்தி நமக்கு விரோதமான காரியங்களைச் செய்ய தூண்டலாம். ஆனால் இனி அவைகள் நடப்பதென்பது முடியாத காரியம் என்றே சொல்லுவோம். ஏனெனில் ஸ்ரீ வரதராஜுலுவும் இந்த மூன்று நான்கு வருடங்களாக தேசீய சபை என்றும் தேசீய பார்ப்பனரல்லாதார் சபை என்றும் ஒவ்வொரு தடவையும் தன் கை காசு 100, 200 செலவு செய்து கூட்டம் கூட்டியும் கட்சி சேர்த்தும் பார்த்து விட்டார். அக்கூட்டங்களுக்கெல்லாம் இதுவரை போனவர்கள் எத்தனை பேர் என்பதும் அவர்கள் யார் யார் என்பதும் அதில் பெரும்பாலோர் மற்றவர்கள் யார் கூப்பிட்டாலும் போகாதவர்கள் என்பதும் கவனித்தவர்களுக்கு தெரியாமல் இருக்க முடியாது. மாயவரத்தில் திரு. சுப்பிரமணிய பிள்ளையை அடித்து விட்டு வந்த ஜோரில் 19-தேதி சென்னையில் கூட்டப்போவதாக பறை அடித்த தொண்டர் கூட்டம் தேதி போடாமல் ஒத்தி வைக்க நேர்ந்தது 27-தேதி 'தமிழ்நாடு' பத்திரிகையை பார்த்தால் தெரியும்.

இந்த நிலையில் தகப்பன் வீட்டுப் பெருமையை அண்ணனிடம் சொல்ல வந்த பயித்தியக்காரி போல் ஸ்ரீ வரதராஜுலுவின் தேசீய பெருமையை தமிழ் மக்களிடம் சொல்லவருவது வேடிக்கையாயிருக்கின்றது.

தவிர, ஒரு காலத்தில் ஸ்ரீ நாயுடு போன்ற மற்றொரு பார்ப்பனரல்லாத தேசீயவாதியை 'ஏனையா ஜஸ்டிஸ் கட்சியை வைகின்றீர்' என்று ஒருவர் கேட்டதற்கு அவர் "திரு. ராமசாமி நாயக்கர் என்னை வைகின்றார் ஆதலால் அவர் ஆதரிக்கும் ஜஸ்டிஸ் கட்சியை நான் வைய நேரிடுகின்றது" என்று சொன்னார். இப்போது ஸ்ரீ வரதராஜுலுவையும் ஒருவர் கண்டு "ஏன் ஜஸ்டிஸ் கட்சியுடன் போய் முட்டிக் கொள்கின்றீர்" என்று கேட்டால் இவரும் அதே மாதிரி "திரு. நாயக்கர் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கின்றார். திரு. நாயக்கரை ஜஸ்டிஸ் கட்சி பின்பற்றுகின்றது. அதனால் தான் அதை ஒழிக்க வேண்டியிருக்கின்றது" என்று சொல்கின்றாராம். எனவே இவ்விரண்டு தேசீய பிராமணரல்லாதார்களால் ஜஸ்டிஸ் கட்சி அழிந்துவிடக் கூடுமாயிருந்தால் அது இன்றைக்கே அழிந்து விடுவதுமேல் என்றே ஆசைப்படுகின்றோம். அந்த மிரட்டுதலுக்கும் இங்கு யாரும் பயப்படுகின்றவர்களும் இல்லை என்பதை தைரியமாய்ச் சொல்லுவோம். நிற்க ஸ்ரீ வரதராஜுலு கடைசியாக திரு.வி.கல்யாணசுந்தர முதலியார் அவர்களை தஞ்சமடைந்திருப்பதாக தெரிய வருகின்றது.

நம்மை முன்னிட்டாவது அவர்கள் இருவரும் மறுபடியும் ஒற்றுமைப்பட நேர்ந்தது பற்றியும் ஒருவருக்கொருவர் ஆதரவு கொடுத்துக் கொள்ள நேர்ந்ததைப்பற்றியும் நாம் மிகுதியும் மகிழ்ச்சி அடைவதுடன் அவர்களது ஒற்றுமையின் பலனையும் கவனித்து வருவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 29.04.1928**



RangaRakes
tamilnavarasam.com

# 'தேசீயமும்' சுயமரியாதைப் பிரசாரமும்

தேசீயத்திற்கு விரோதமாக சுயமரியாதைப் பிரசாரம் நடப்பதாகவும் ஆதலால் "ரத்தம் சிந்தியாவது, தேசபக்தர்கள் புற்றீசல்களைப் போல் உயிர் துறந்தாவது, சுயமரியாதைப் பிரசாரத்தை ஒடுக்கி விடவேண்டும்" என்றும் "அதற்காக பல ஆயிரம் ரூபாய்கள் காங்கிரஸ் நிதியிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றது" என்றும் 'தமிழ்நாடு' பத்திரிகை எழுதி இருக்கின்றது. மற்றபடி பார்ப்பனப் பத்திரிகைகளோ ஒன்று சேர்ந்து இவ்விஷயத்தில் எதிர் பிரசாரம் செய்ய ஸ்ரீ வரதராஜுலுக்கே வக்காலத்து கொடுத்துவிட்டு யாவருக்கும் தெரியாமல் அடுத்த தேர்தலில் பார்ப்பனரல்லாதார் கக்ஷியைத் தோற்கடிக்க இரகசியமாக ஜஸ்டிஸ் கக்ஷியைப் பற்றியும் மந்திரிகளைப் பற்றியும் சட்டமெம்பரைப்பற்றியும் குறைகூறி விஷமப் பிரசாரம் செய்து கொண்டிருக்கின்றன. பார்ப்பனர்கள் இஷ்டப்படியும் அவர்களது கூலிகளின் ஆசைப்படியும் அடுத்த தேர்தலிலும் ஜஸ்டிஸ் கக்ஷி தோல்வியடைந்து மந்திரி பதவி வகிப்பதற்கு தகுதியில்லாமல் போய் விட்டாலுங்கூட உண்மையிலேயே நாம் ஒரு சிறிதும் கவலைப்படமாட்டோம். ஏனெனில் அக்கக்ஷியானது ஆறு வருஷ காலம் மந்திரிப் பதவி ஏற்று அதிகாரத்தில் இருந்த காலத்தில் எவ்வளவு நன்மை அடைய முடிந்ததோ அதைவிட பலமடங்கு அதிகமாகவே அக்கட்சி வேலையின் பயனாக பார்ப்பனரல்லாத சமூகம் நன்மையையும் விழிப்பையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அடைந்திருக்கின்றது என்றே தைரியமாய்ச் சொல்லுவோம். அது போலவே இனியும் ஒரு மூன்று வருஷ காலத்திற்காவது அக்கக்ஷி மந்திரி முதலிய அதிகார பதவியில் இல்லாமல் இப்போது இருப்பதுபோல் மந்திரிகளையும் சர்க்காரையும் ஆட்டிக் கொண்டு இருக்கும் நிலைமையில் இருக்குமானால் பார்ப்பனரல்லாதாருக்குள் இன்னும் அதிகமான உணர்ச்சி ஏற்படும் என்பதே நமது துணிபு.

உதாரணமாக, திரு.ஏ.ராமசாமி முதலியார் அவர்களுக்கு சட்டசபை ஸ்தானம் கிடைக்கக்கூடாது என்று கருதி திரு. சீனிவாசய்யங்கார் பந்தயங் கூறி தனது கூலிகளை விட்டு எவ்வளவோ விஷமப் பிரசாரங்களும் சூழ்ச்சிகளும் செய்து தங்கள் கருத்துப்படியே திரு. முதலியாரை தோற்கடித்து தாங்கள் வெற்றி பெற்று விட்டார்கள். ஆயினும் அத்தோல்வியின் பயனாக



திரு. முதலியார் சட்ட சபையிலிருந்து எவ்வளவு தூரம் பார்ப்பனரல்லாதார் சமூகத்தின் நன்மைக்கு உழைக்கக் கூடுமோ அதைவிட எத்தனையோ மடங்கு அதிகமாக உழைத்து நன்மை செய்ய முடிந்தது. உதாரணமாக 1200 பிரதி மாத்திரம் வெளியாகிக் கொண்டு தூங்கிக் கிடந்த 'ஜஸ்டிஸ்' பத்திரிகையை 4000 பிரதிக்கு மேலாக வெளியாக்கி தமிழ்நாட்டையே ஆட்டிவைக்க முடிந்தது; பார்ப்பனரல்லாத வாலிபர்களையெல்லாம் தட்டி எழுப்ப முடிந்தது. பார்ப்பனக் கொடுமையை வெளி மாகாணத்திற்கெல்லாம் வெளிப்படுத்த முடிந்தது. பார்ப்பனர்களின் அரசியல் புரட்டுகளையும் அரசாங்கம் பார்ப்பனர்களுக்கு அடிமைபட்டுக் கிடந்ததையும் பார்ப்பனர்கள் தேசீயத்தின் பேரால் அரசாங்கத்திற்கு உளவாய் இருக்கிறதையும் வெளியாக்க முடிந்தது. பார்ப்பனரல்லா பாமர மக்களும் பார்ப்பனர்களுடையவும் அவர்களது கூலிகளுடையவும் வயிற்றுப் பிழைப்புத் தேசீயத்தின் யோக்கியதையை உணர முடிந்தது!. மற்றும் எவ்வளவோ நன்மைகளும் ஏற்பட்டிருக்கின்றன. அது போலவே திரு. பனக்கால் அரசருக்கும் மந்திரி பதவி இல்லாததால் எவ்வளவு நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றது என்பதைப் பற்றியும் நாம் அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

முதலாவதாக, பனக்கால் அரசர், மந்திரி ஆகாத காரணத்தினாலேயே பார்ப்பனர்களின் தேசீயத்தையும், காங்கிரஸ் கொள்கையையும், சுயராஜ்ஜியக் கட்சியின் யோக்கியதையையும், அவர்களது முட்டுக்கட்டையின் தத்துவத்தையும் வெளியாக்க முடிந்ததுடன் ஜஸ்டிஸ் கட்க்ஷியாகிய பார்ப்பனரல்லாதார் கக்ஷியை ஒழிப்பதுதான் காங்கிரஸ் கொள்கை என்பதை காங்கிரஸ் காரர்களின் வாயாலேயே ஒப்புக்கொள்ளச் செய்ததையும் பொது ஜனங்கள் உணர முடிந்ததுடன் காங்கிரஸ் என்பதே பார்ப்பனர் பிழைப்புக்கு ஏற்பட்ட சாதனங்களில் ஒன்று என்பதையும் மக்கள் உணர முடிந்தது. தவிரவும் பனகால் அரசர் சட்டசபை அங்கத்தினர் பதவிகூட அடைய முடியாமல் போயிருந்திருக்குமானால் பார்ப்பனரல்லாதார் இயக்கம் இனியும் சற்று முன்னேற்றம் அடைந்திருக்கக் கூடும் என்று கூடச் சொல்லுவோம். இதை இப்போது மாத்திரம் சொல்ல வரவில்லை. சென்ற தேர்தலின் போதே நாம் எடுத்துக் காட்டி இருக்கிறோம். அதாவது "பனக்கால் அரசர் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றதில், பார்ப்பனர்கள் பனக்கால் அரசர் சட்டசபை அங்கத்தினராகக் கூடாது என்று எவ்வளவோ முயற்சிகள் செய்து பார்த்தும் பலிக்காமல் தோல்வி அடைந்தார்கள் என்கின்ற ஒரு விஷயத்திற்காக மாத்திரம் நாம் மகிழ்ச்சியடைகின்றோமே யல்லாமல் மற்றபடி பனக்கால் அரசரின் தோல்வியே நமக்கு நல்ல பலனை அளிக்கும்" என்று பேசியும் எழுதியும் இருக்கிறோம்.

அது போலவே வரப்போகும் தேர்தலிலும் திரு. ராமசாமி முதலியாரும், பனக்கால் அரசரும் தோல்வியடைவார்களானால் அது பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு எவ்வளவோ வெற்றியளிக்குமே தவிர எவ்



RangaRakes
tamilnavarasam.com

விதத்திலும் இடையூறு செய்து விடாது என்று சொல்லுவோம். இது "சீ இந்தப் பழம் புளிக்கும்" என்று சொல்லும் தத்துவத்தில் சொல்லுவதல்ல என்றும், உண்மையாகவும் அனுபவத்தைக் கொண்டுமே தான் சொல்லுகின்றோம் என்றும் முன்னமேயே நாம் சொன்னது என்றும் வாசகர்கள் உணர்வார்களாக.

நிற்க, தேசீயம் என்பது என்ன என்பது பற்றியும் சிலர் கூப்பாடு போடுவது போல சுயமரியாதைப் பிரசாரத்தால் அந்த தேசீயம் எப்படி தடைப்படுத்தப்படுகின்றது என்பது பற்றியும் சற்று ஆராய்வோம். தேசீயம் என்கின்ற பதத்திற்கு என்ன பொருள் என்பதை முதலில் ஆராய்வோம்.

முதல் முதலில் ஆங்கிலத்தில் இருந்துதான் இந்த வார்த்தையை நமது மக்கள் பேசத் தெரிந்து கொண்டார்கள். அதாவது ஆங்கிலத்தில் நேஷன், நேஷனல், நேஷனலிசம் என்கின்ற பதங்களின் பொருள்களே தான் தேசம், தேசத்திற்குரியது, தேசீயம் என்கின்ற பதங்களாகும். அதாவது ஒரு குறிப்பிட்ட தேச சமூகத்தின் சுயமரியாதையைப் பொருத்த விஷயங்களையே தான் பெரிதும் குறிப்பிடுகின்ற முறையில் அவ்வார்த்தை ஏற்படுத்தப்பட்டதே ஒழிய வேறில்லை. அந்த முறையில் இந்திய தேசீயம் என்பது இந்திய சமூகத்தின் சுயமரியாதையைப் பொருத்ததாகும். இப்பொழுது அரசியல் உலகில் பெரும்பாலும் பிரஸ்தாபிக்கப்படும் தேசீயம் என்கின்ற பதத்தில் தேச சமூகத்தின் சுயமரியாதையைப் பொருத்ததோ நன்மையைப் பொருத்ததோவான கருத்துக்கள் ஏதாவது பொதிந்து கிடக்கின்றனவா என்று பார்த்தால் தேசீயம் என்கின்ற பதம் உண்மையான பொருளில் உபயோகப் படுத்தப்படுகின்றதா என்பது நன்கு விளங்கும்.

தவிர, தமிழ் நாட்டைப் பொருத்தவரை யாராவது தேசீயம் என்பதை எடுத்துக் கொண்டால் தமிழ் மக்களுடைய சுயமரியாதையைப் பற்றியோ நன்மையைப் பற்றியோ ஏதாவது கவலை எடுத்துக்கொள்ளத்தக்க குறிப்பு அதில் இருக்கின்றதா என்பதும் மிகுதியும் கவனிக்கத்தக்கதாகும். எனவே இவ்விரண்டும் அதாவது இந்திய மக்கள் சமூகத்தைப்பற்றியும் தமிழ் மக்களின் சமூகத்தைப் பற்றியும் சுயமரியாதையைப் பற்றியும் சீர்திருத்தத்தைப் பற்றியும் ஒரு சிறிது கவலையும் இல்லாது தேசீயம் என்கின்ற வெறும் வார்த்தையை மாத்திரம் பாமர மக்கள் ஏமாறும் மாதிரி உச்சரித்துக் கொண்டு சிலரின் உத்தியோகத்திற்கும் சிலரின் வயிற்றுப் பிழைப்புக்கும் உபயோகித்துக் கொண்டு உண்மையான தேசீயமாகிய சுயமரியாதையைப் பற்றிக் கவலை எடுத்துக்கொண்டிருக்கும் இயக்கங்களையும் குறை கூறிக்கொண்டு "சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க வேண்டியது தேசீயத்தின் கடமை" என்று சொல்வதில் எவ்வளவு தேசீயத் துரோகம் இருக்கின்றது என்பதை பொது மக்களையே யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

பொதுவாக ஒரு சிறு கூட்டத்தார் பிழைக்கவே அவர்களது சுலநலத்





திற்காகவே தேசீயம் என்கின்ற வார்த்தையை உண்டாக்கிக் கொண்டிருப்பதாக சொல்வதில் உண்மை இருக்கின்றதா இல்லையா என்பது இங்கு கவனிக்க வேண்டும். தேசீயம் என்கின்ற வார்த்தையோ, தேசீயம் என்கின்ற இயக்கமோ நமது நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு இன்றைக்கு சுமார் 40 வருஷங்களுக்கு மேலாகின்றது. இந்த இயக்கம் ஏற்பட்ட பிறகுதான் இதன் பயனாக நமது அரசியல் உத்தியோகங்கள் ஏராளமாக உண்டாக்கப்பட்டதும், அதை நம் நாட்டுப் பார்ப்பனராகிய ஒரு கூட்டத்தாரே ஏக போகமாய் அனுபவிப்பதுமான நிலைமை ஏற்பட்டது என்பதை யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

தேசீய இயக்கம் (காங்கிரசு) ஏற்படுவதற்கு முன் நிர்வாக சபை மெம்பர்கள் (மந்திரிகள்) இருவர்களும் ஐகோர்ட்டு ஜட்ஜிகள் ஐவருமாக இருந்தார்கள். தேசீய இயக்கத்தின் (காங்கிரசின்) பயனாக இப்பொழுது நிர்வாக சபை மெம்பர்கள் (மந்திரிகள்) எழுவரும் ஐகோர்ட் ஜட்ஜுகள் பதி நால்வரும் இருக்கின்றார்கள். இது போலவே கிராமத்தலையாரி வரையிலும் உத்தியோகங்கள் பெருகிக் கொண்டே வந்திருப்பதுடன் அவ்வுத்தியோகங்களுக்கு சம்பளங்களும் ஏராளமாய் பெருகிக் கொண்டே வந்து தேசீய இயக்கம் ஏற்படுவதற்கு முன் இந்தியா முழுமைக்கும் 40 அல்லது 50 கோடி ரூபாய்க்குள் இருந்த சர்க்கார் வரியானது தேசீயம் ஏற்பட்டதின் பயனாகவும் அதனால் உண்டான உத்தியோகங்களின் பயனாகவும் அவைகளுக்கு உயர்ந்த சம்பளங்களின் பயனாகவும் இன்றைய தினம் 150 கோடியாக வரி உயர்ந்து ஏழை இந்தியக் குடியானவர்கள் தலையிலும், வியாபாரிகள் தலையிலும் மற்றும் பொது ஜனங்கள் தலையிலும் பளுவு ஏற்பட்டிருக்கின்றது. இதை நாளிது வரை எந்த 'தேசீயவாதி'யாவது 'தேசீய நிபுண'ராவது மறுத்தார்களா? என்று கேட்கின்றோம்.

இம்மாதிரி வரிப்பளுவு 40 கோடியில் இருந்து 150 கோடி ஆனதின் பயனாக இந்த "தேசீயத் தலைவர்"களுக்காவது மற்றும் அவர்கள் காலை நக்கிப் பிழைக்கும் வயிற்றுச் சோற்று "தேசீய வீரர்"களுக்காவது ஒரு புதுக் கோட்டை அம்மன் காசு பெறுமான நஷ்டமுண்டா என்று கேட்கின்றோம்.

இந்த பார்ப்பனத் தேசீயத்தின் பலனாகவும் அவர்களது கூலி தேசீயத்தின் பலனாகவும் ஏற்பட்ட உத்தியோகங்களில் அதன் செலவின் பளு முழுவதையும் பொறுக்கும் பார்ப்பனரல்லாதாரில் யாராவது சிலர் தங்கள் வகுப்பாருக்கும் சில உத்தியோகங்கள் ஏன் கொடுக்கப்படக் கூடாது என்று கேட்டால் அது பெரிய தேசத்துரோகம் என்று சொல்லப்பட்டு வருகின்றது. இது பார்ப்பனர்களால் மாத்திரமல்லாமல் அவர்களது கூலிகளாகிய பார்ப்பனரல்லாதார்களில் சிலராலும் சொல்லப்பட்டு வருகின்றது. இந்த அறிவிலிகள் – இனத்துரோகிகள் – தேசீயம் என்பதின் பொருள் தெரியாமல்

RangaRakes tamilnavarasam.com

உளறுகிறார்கள் என்றருத்தமா, அல்லது தெரிந்தும் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக வேண்டி இப்படிச் சொல்லுகின்றார்களா? என்பதை பொது மக்களே யோசித்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறோம்.

நமது நாட்டின், நமது சமூகத்தின், சுயமரியாதைக்கு நிரந்தர விரோதி களாய் இருக்கும் பார்ப்பனர்களுக்கும் அவர்களை நத்தி தன் இனத்தைக் காட்டிக் கொடுத்து வாழும் சுயநலக்காரருக்கும் எப்படியாவது சுயமரியாதை உணர்ச்சி என்னும் தேசீயத்தில் கவலை இருக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

பார்ப்பனர்கள் "இத்தனையாம் தேதியில் உங்கள் தகப்பனாருக்கு திதி வருகின்றது தயாராயிருங்கள்" என்று சொல்வதில் நமது பெற்றோர்களைப் பற்றி எவ்வளவுதூரம் அவர்களுக்கு கவலை இருக்க முடியுமோ, ரயில்வேக் காரன் "இன்ன மாதம் இன்ன தேதியில் சிதம்பரத்தில் ஆருத்திரா தரிசனம் வருகின்றது; எல்லோரும் போய்ப்பார்த்து மோக்ஷமடையுங்கள்" என்று ரயில்வே கைய்டிலும் பணம் கொடுத்து வேறு பத்திரிகையிலும் விளம்பரப் படுத்துவதில் நாம் மோக்ஷமடைவதில் அவனுக்கு எவ்வளவு நம்பிக்கையும் கவலையும் இருக்குமோ அவ்வளவு கவலைதான் இந்தப் பார்ப்பனர்களுக் கும் அவர்களது கூலிகளுக்கும் நமது தேசீயத்தைப் பற்றி பிரசாரம் செய்வ திலும் பத்திரிகைகளில் எழுதுவதிலும் இருக்கும் என்று நாம் நினைப்பதில் ஏதாவது கடுகளவாவது பிசகு உண்டா என்று கேட்கின்றோம்.

எனவே சிலரின் சுய நன்மைக்கும் வயிற்றுப்பிழைப்புக்கும் ஏற்படுத் திக் கொண்ட 'தேசீயத்திற்கு' இனியும் எத்தனை காலம் நமது மக்கள் ஏமாறு வது என்பது இப்போது முக்கியமாய் யோசிக்கத்தக்க விஷயமாகும். நமக்கு கடுகளவாவது சுயமரியாதை உணர்ச்சி வந்து இருக்கின்றது என்று நாம் சொல்லிக் கொள்ள விரும்பினால் நமது தேசத்தை விட்டு - குறைந்தது நமது தமிழ்நாட்டை விட்டாவது - தேசீயப் புரட்டை ஒழிக்க முற்பட்டோமா? என்பதை ஒவ்வொருவரும் தம்தம் நெஞ்சில் கையை வைத்துப் பார்க்க வேண்டுமாய் விரும்புகிறோம்.

பொதுவாக நமது நாட்டு மக்களின் உண்மையான தேசீயத்திற்கு அதாவது சுயமரியாதைக்கு எமனாய் இருப்பது. இந்தப் போலி - நாட்டைக் காட்டிக் கொடுத்து வரும் - கூட்டத்தாரின் உத்தியோகக் கற்பனையும் இனத்தை காட்டிக் கொடுத்து வாழும் ஒரு சிலரின் தேசீய வேஷமுமேயாகும் என்று கோபுரத்தின் மீதிருந்தும் கூவுவோம். இந்த போலி சுயநல வயிற்றுப் பிழைப்பு தேசீயத்தை வெட்டி வீழ்த்தினாலல்லது மக்கள் சுயமரியாதை அடைந்து ஏழைகள் வாழ முடியும் என்பது ஒருக்காலும் முடியாத காரியம் என்றே சொல்லுவோம்.



'மோக்ஷமும்' 'பக்தியும்' 'மதமும்' எப்படி ஒரு சமூகத்தைப் பிரித்து சின்னாபின்னப்படுத்தி நிரந்தர முட்டாள்களாகவும் காட்டுமிராண்டி களாகவும் மனிதத்தன்மை அற்றவர்களாகவும் செய்து விடுகின்றதோ அது போலவே இந்த 'தேசீயமும்' நாட்டையும் மக்களையும் பிரித்து ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்து ஏழைகளையும் குடியானவர்களையும் வதைத்து மீளாத் தரித்திரத்தில் ஆழ்த்தி மனச்சாக்ஷியை இழந்து சுயமரியாதையற்று வாழச் செய்கின்றது. எனவே நமது சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய கொள்கைகளில் இந்த போலி தேசீயத்தை வெளியாக்கி வயிற்றுப் பிழைப்பு தேசீயவாதிகளை ஒழிப்பதும் ஒரு முக்கிய கொள்கையாகக் கொள்ள வேண்டும் என்பதை உண்மைச் சுயமரியாதை வீரர்களுக்கும் தொண்டர் களுக்கும் அறிவுறுத்துகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 06.05.1928**



RangaRakes tamilnavarasam.com

# திரு.ஆர்.கே. ஷண்முகம் செட்டியாரும் திரு. ஸ்ரீனிவாசய்யங்காரும்

திரு.ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் இம்மாதம் 2-ந் தேதி இந்தியர் பிரதிநிதியாக பொது மக்கள் சார்பாய் தெரிந்தெடுக்கப்பட்டு சர்க்காராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு ஜினிவா மகாநாட்டுக்குச் செல்கின்றார்.

திரு. ஸ்ரீனிவாசய்யங்கார் வெயில் காலத்தில் சுகம் அனுபவிக்க உடல் நலம் பேணி இங்கிலாந்துக்குச் செல்கின்றார்.

ஆனால் தனது சுகவாசத்திற்குச் செல்லும் திரு, ஸ்ரீனிவாசய்யங்காருக்குத் தேசீயத்தின் பேரால் வழியனுப்பு உபசாரங்கள் பொதுமக்கள் பேரால் சென்னையில் செய்யப்பட்டதே ஒழிய திரு. ஷண்முகம் செட்டியாருக்கு ஒரு உபசாரமும் நடத்தப்படவில்லை. இதன் காரணம் என்ன என்பதைப் பற்றி நாம் அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

திரு. செட்டியார் பார்ப்பனரல்லாதார், திரு. அய்யங்கார் பார்ப்பனர் என்பதைத் தவிர வேறு காரணம் இல்லை. இவ்வய்யங்கார் வழியனுப்பு உபசார திருவிழாவுக்கு போட்டி போட்டு செலவு செய்து தலைமை வகித்த திரு. வரதராஜுலு அவர்கள் திரு. அய்யங்காரைப் பற்றி பாடியிருக்கும் கவியை சற்று கவனிப்போம்.

"திரு. அய்யங்காரை முப்பது கோடி மக்கள் பொது சொத்து என்று கருதுகிறார்கள்.

சுயராஜ்யப் போரில் அய்யங்கார் தளகர்த்தராய் இருக்கிறார். தேக சௌக்கியத்தை முன்னிட்டு இங்கிலாந்துக்கு போவதாக அய்யங்கார் சொன்னாலும் சமயம் நேர்ந்தால் தேச விடுதலைப் போரின் லக்ஷியங்களை எடுத்துச் சொல்ல பின்வாங்கமாட்டார். இந்த நாட்டில் ஜாதிச் சண்டை, சமூக வேற்றுமை, வகுப்புப் பிணக்கு உண்டுமானால் அதை மத்தியஸ்தம் செய்ய பிரிட்டிஷாருக்கு உரிமை இல்லையென்பதை திரு. அய்யங்கார் பிரிட்டிஷாருக்கு தெரிவிக்க வேண்டும்." (திரு அய்யங்காருக்குத்தான் உண்டு போலும். ப-ர்)



RangaRakes

என்று பேசியிருக்கின்றார். பின்னர் திரு. வரதராஜுலுவின் சகாக்களாகிய திரு. ஷாபி முகம்மது சாயபும், திரு குழந்தையும், திரு சத்திய மூர்த்தியும், திரு வரதராஜுலுவை விட ஒருபடி குறைவாகவே அய்யங்காரைப் பற்றிக் கவிபாடி உற்சவத்தை ஒருவாறு முடித் திருக்கின்றார்கள்.

திரு. வரதராஜுலுவைப் பற்றி திரு. அய்யங்காரும் திரு. அய்யங்காரைப்பற்றி திரு. வரதராஜுலுவும் இதற்கு முன் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்ட வார்த்தைகள் "நாய் கூட குறுக்கே போகமுடியாது" என்று சொல்லும் பழமொழிபோல் அவ்வளவு கேவலமாக இருந்தது யாவருக்கும் தெரிந்த விஷயம்.

திரு. வரதராஜுலுவை காங்கிரசிலிருந்து விலக்கினால்தான் காங்கிரசு பரிசுத்தப்படும் என்று அய்யங்கார் சொன்னதும், மைலாப்பூர் அய்யங்காரை காங்கிரசை விட்டு ஒழித்து காங்கிரசைக் கைப்பற்றினால்தான் அது பார்ப்பனரல்லாதாருக்கு ஆபத்தில்லாமல் இருக்கும் என்றும், பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு கேட்டை விளைவித்து பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்த காங்கிரசை ஆயுதமாக உபயோகித்துக் கொண்டிருக்கிறார்களாதலால் அவர்களை காங்கிரசை விட்டு ஒழிக்க வேண்டும் என்றும் திரு. வரதராஜுலு சொன்னதும் போய், இவர்கள் இப்போது ஒருவருக்கொருவர் புகழ்வது கவி பாடிக் கொள்வதில் உள்ள இரகசியம் என்ன என்பதை பொது ஜனங்களே கண்டு கொள்ளட்டும். சென்ற வருடம் திரு. வரதராஜுலுவை பார்ப்பனர்கள் காங்கிரசிலிருந்து வெளிப்படும் படியாய்ச் செய்ததற்காக பார்ப்பனரல்லாதார்களில் சிலரை கெஞ்சிக் கேட்டுக் கொண்டதின் பலனாகவும் "இந்த ஒரு தடவை பாருங்கள், இனிமேல் எனக்கு புத்தி வந்து விடும்" என்று சொல்லிக் கொண்டதின் பலனாகவும் பார்ப்பனரல்லாதாரிலும் சிலர், "இஷ்டப்பட்டவர்கள் - அதுவும் காங்கிரசினால் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு கெடுதி செய்ய முடியாமல் பார்த்துக் கொள்ள சக்தி உடையவர்கள் - காங்கிரசில் சேரலாம்" என்று அனுமதி கொடுத்தவுடன், யாரும் காங்கிரசிற்குள் நுழையாதபடி திரு. அய்யங்கார் பந்தோபஸ்து செய்து கொண்ட காலத்தில், திரு. வரதராஜுலுவின் ஊர் காங்கிரஸ் கமிட்டியையும் பார்ப்பனர்கள் சுவாதீனம் செய்து கொண்டு வரதராஜுலுவை வெளியாக்கிய போது ஸ்ரீவரதராஜுலு வெட்கப்பட்டு பல ரூபாய் செலவு செய்து சேலத்தில் ஜில்லா காங்கிரஸ் மகாநாடு கூட்டி "பார்ப்பனர்கள் என்னை மிக அவமானப் படுத்தி விட்டார்கள். ஆதலால் நாயக்கர்வாளே தாங்கள் வரவேண்டும்! திரு. சிதம்பரம் பிள்ளைவாளே! தாங்கள் வரவேண்டும்! திரு. பனகால் ராஜாவே தாங்கள் வந்து என் மானத்தைக் காப்பாற்ற வேண்டும்! திரு. ராமசாமி முதலியாரே ! தாங்கள் வரவேண்டும். திரு. ஷண்முகம் செட்டியாரே தாங்கள் வரவேண்டும்" என்று ஒவ்வொரு பார்ப்பனரல்லாதவர்களையும் கெஞ்சி அழைத்து மகாநாட்டை நடத்தியதும், அது சமயம் திரு. வரதராஜுலு



tamilnavarasam.com

அய்யங்காரையும் பார்ப்பனர் களையும் வைததும், பார்ப்பனரல்லாதார்களை திருப்தி செய்ய காங்கிரசின் கொள்கையிலேயே ஜாதி வித்தியாசம் இல்லை என்கின்ற ஒரு குறிப்பை சென்னையில் கூடும் காங்கிரசில் சேர்த்து விடுவதாகவும் அது முடியா விட்டால் தான் காங்கிரசை விட்டு மறுபடியும் வெளியில் வந்துவிடுவதாக வீரம் பேசினதும் இதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது.

அப்படிப்பட்ட நாயுடு இதே திரு. அய்யங்கார் அழையாமலே காங்கிரசிற்குள் வலிய நுழைந்ததும் கூட்டம் திரு. நாயுடு மீது சந்தேகப்பட்டு காங்கிரசில் திரு. நாயுடுவை மேடையில் கூட உட்கார வைக்காமல் அவமானப்படுத்தியதும், இதற்காக திரு. நாயுடு இதே திரு. அய்யங்காரிடம் "காங்கிரசின் கொள்கையில் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க வேண்டும் என்று சேர்க்க திரு. ஷண்முகஞ் செட்டியார் கொடுத்திருக்கும் தீர்மானம் வெளியானால் நானே அதை எதிர்த்து தோற்கடிக்க உதவியாய் இருக்கின்றேன்" என்று உறுதி சொல்லி தன்னை சேர்த்துக் கொள்ளும்படி செய்து கொண்டதும் யாவரும் அறிந்த ரகசியமேயாகும். இந்த நிலையில் திரு அய்யங்காரை நாயுடு புகழ்வதும் திரு. அய்யங்கார் நாயுடுவைப் புகழ்வதும் இருவரும் சேர்ந்து இந்தியப் பிரதிநிதியாய் ஜினிவாவுக்குச் செல்லும் திரு. செட்டியாருக்கு வேறு சிலர் நடத்த இருந்த வழியனுப்பு உபசாரத்தைக் கூட தடுத்ததும் ஒரு அதிசயமல்ல.

எனவே தேசீயம் என்பது என்ன என்பதை வெளிப்படுத்த இதை எழுதுகிறோமே ஒழிய செட்டியாருக்கு உபசாரம் இல்லை என்பதற்கு இதை எழுதவில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.05.1928**



# யாகம்

பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனரல்லாதார்களில் பெரும்பான்மையோருக்கும் வித்தியாசமிருப்பதாக பார்ப்பனர்களால் சொல்லப்படும் காரணம் ஒன்றே ஒன்றுதான். அதாவது பார்ப்பனர்கள் மாமிசம் சாப்பிடுவதில்லை என்பதும், பார்ப்பனரல்லாதார் மாமிசம் சாப்பிடுகிறார்கள் என்பதுமேயாகும். மாம்சம் சாப்பிடுவதிலும், பதார்த்தத்தில் உள்ள குண தோஷங்களைப் பற்றி - அதாவது காய்கறிகளுக்கும் மாமிசத்திற்கும் உள்ள உருசி குணம் முதலியவைகளைப் பற்றிக் கூட அல்லாமல் - ஒரு ஜீவனை வதைக்கின்றது கூடாது என்பதான ஜீவ ஹிம்சையையே பிரதானமாகக் கருதி சொல்லப்படுகின்றது.

இதை உத்தேசித்தே ஆங்காங்கு ஜீவகாருண்ய பிரசாரமும், கொலை மறுத்தல் பிரசாரமும், புலால் உண்ணாமை பிரசாரமும் எவ்வளவோ செய்யப்பட்டு வருகின்றன.

இப்படியிருக்க, இந்த நாளில் பார்ப்பனர்கள் ஒன்று கூடி தெய்வத்தின் பேராலும், மதத்தின் பேராலும், மோக்ஷத்தின் பேராலும் ஜீவன்களை வதைத்து கொன்று தின்பதானது மோக்ஷத்திற்காக செய்யப்படும் காரியமாய் பாவிக்கப்படுகின்றது. என்னே நமது அறிவீனம்! மாமிசம் சாப்பிடுவது நல்லதா கெட்டதா? பாவமா புண்ணியமா? அவசியமா இல்லையா? என்பதைப் பற்றிய விவகாரத்தை நாம் இந்த வியாசத்தில் வைத்துக் கொள்ளவில்லை.

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்கின்ற கொள்கையை மதமாக உடையவர்களும், ராமன் நன்றாக வெந்த நல்ல நல்ல மாமிசமாகப் பார்த்து பொறுக்கி எடுத்து சீதைக்குக் கொடுத்தான் என்கின்ற புராணத்தை கும்பிடுவதை மதமாகக் கொண்டவர்களும், எச்சில் மாமிசத்தை, அதாவது தான் கடித்துத் தின்று ருசி பார்த்து பின்பு சிவனுக்கு படைத்து அதனால் மோக்ஷமடைந்த பக்தர்களைப் பாடி மோக்ஷமடைவதை மதமாகக் கொண்டவர்களும், ஆடும், கோழியும், பன்றியும், எருமைக்கிடாவும் அடுக்கடுக்காக கொன்று பூசை செய்ய வேண்டிய கடவுளை கும்பிடுவதை மதமாகக் கொண்டவர்களும், வீணாகப்



RangaRakes tamilnavarasam.com

போவது மனிதனின் பசிக்குதவுவதால் யாருக்கு என்ன நஷ்டம் என்பவர்களும், தண்ணீரைக் காய்ச்சி சாப்பிட்டால் அதிலுள்ள பல ஜீவன்கள் சாகின்றனவாதலால் காய்ச்சாமல் சாப்பிடவேண்டுமென்றும், விளக்கு வைத்தால் அதில் பல பூச்சிகள் வந்து விழுந்து சாகுமாதலால் இருட்டில் இருக்க வேண்டுமென்றும், மூச்சு விட்டு சுவாசம் உள்ளே இழுத்தால் பல பூச்சிகள் உள்ளே போய் இறந்து போகுமாதலால் வாயையும் மூக்கையும் துணியில் மூடிக் கொள்ள வேண்டுமென்றும் சொல்லுகின்றவர்களும் இருக்கும்போது மாமிசம் சாப்பிடுவது சரியா தப்பா என்பதை சுலபத்தில் முடித்துவிட முடியாது. ஆனால் வேதத்தின் பேரால் கும்பகோணத்தில் பார்ப்பனர்கள் ஆடுகளை வதைத்துக் கொன்றது சரியா என்பதுதான் இவ்வியாசத்தின் கருத்தாகும். கசாப்புக் கடைக்காரனோ அல்லது வேறு கீழ்த்தரக் கடவுள்களோ ஜீவன்களை ஒரேவெட்டாக ஒரு வினாடியில் வெட்டிவிடச் செய்கின்றார்கள். ஹிம்சை என்பதை அச்சீவண்கள் ஒரு சிறிதும் அனுபவிப்பதற்கில்லாமல் திடீரென்று வெட்டி விடுகின்றார்கள். ஆனால் யாகத்தின் பேரால் ‘உயர்ந்த வகுப்பு’ பார்ப்பனர்கள் ‘உயர்ந்த வகுப்பு கடவுளுக்கு’ மோக்ஷத்திற்காக உண்ணுவதற்கு பலி கொடுப்பதற்காக செய்யும் கொலையில் மேல் கண்டபடியாவது வெட்டாமல் உயிருடன் விரையை நசுக்கியும் தோலை உரித்தும் வேண்டிய அவயவங்களை உயிருடனிருக்கும் போதே அறுத்தெடுப்பதும் என்றால் எவ்வளவு கொலை பாதகம் – சித்ரவதை – கடுஞ்சித்தம் என்பதை கவனித்து பார்க்கவேண்டும் என்றே வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஒரு ஜீவகாருண்ய சங்கமாவது, கொலை மறுத்தல் கூட்டமாவது, சிவனடியார் திருக்கூட்டத்தாராவது இதைப் பற்றி ஒரு வார்த்தையாவது இதுவரை பேசினவர்கள் அல்லர். மதமும் கடவுளும் சுயராஜ்மும் எப்படி புரட்டின் மீதே கட்டப்பட்டிருக்கின்றதோ அது போலவே ஜீவகாருண்யமும் கட்டப்பட்டிருக்கின்றதேயொழிய உண்மையான தத்துவத்தின் பேரில் இல்லை. இதுதான் இப்படி புரட்டு இயக்கம் என்றால், ஜீவஹிம்சை நிவாரண சங்கத்தார் அதாவது S.P.C.A.சங்கத்தார் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. அவர்கள் இந்த யாகத்தின் பேரால் கொலை பாதகம் செய்த பார்ப்பனர்களை S.P.C.A. சட்டப்படி நடவடிக்கை நடத்தி ஏன் தண்டித்திருக்கக் கூடாது என்று கேட்கின்றோம். மதத்தின் பேராலும் சுவாமியின் பேராலும் செய்யும் காரியங்கள் குற்றமல்ல என்று சொல்வார்களானால், நமது சுவாமிகள் எல்லாவித பாபத்திற்கும் காரண பூதமாகவும் உடந்தையாகவும் இருக்கின்றது என்பதில் என்ன சந்தேகம். பார்ப்பனர்கள் எது செய்தாலும் அது மோக்ஷத்திற்கும் சுயராஜ்யத்திற்குமாக ஆய்விடுகின்றது. அதே காரியங்களை நம்மவர்கள் செய்வது தேசத் துரோகமும், தெய்வத் துரோகமும் ஆய்விடுகின்றது.

**குடி அரசு – தலையங்கம் – 13.05.1928**



# நமது கருத்து

‘குடி அரசின்’ நான்காவது ஆண்டு முதல் இதழில் எழுதியிருந்த தலையங்கத்தைப் பார்த்த நண்பர்கள் பலர் நமது இயக்கத்தைப் பற்றியும் நம் ‘குடி அரசின்’ வளர்ச்சியைப் பற்றியும் வாழ்த்துக் கூறி பல கடிதங்கள் எழுதி இருக்கின்றார்கள். உதாரணமாக காரைக்குடி ‘குமரன்’ பத்திரிகையும், அதன் ஆசிரியர் திரு. முருகப்ப செட்டியார் அவர்களும், அமராவதிப்புதூர் திரு. பிச்சப்பா சுப்பிரமணிய செட்டியாரும், கானாடுகாத்தான் திரு. வையி. சு. ஷண்முகம் செட்டியார் அவர்களும், மதுரை, அருப்புக்கோட்டை, திருப்பூர், கோயம்புத்தூர், திருச்சி, நாகப்பட்டணம், கும்பகோணம், மாயவரம், தஞ்சை, திருச்செங்கோடு, மாரண்டள்ளி, அம்பலூர், சென்னை, கொளும்பு முதலிய இன்னும் பல இடங்களிலிருந்து பல நண்பர்களும் எழுதி இருக்கின்றார்கள். அவற்றுள் சிலர் ‘குடி அரசை’ லிமிட்டெட் கம்பெனியாய் ஏற்படுத்துவதை ஆதரித்தும் பலர் அதைத் தடுத்தும் எழுதியிருக்கிறார்கள். ஆனாலும் சுயமரியாதை இயக்கத்தை ஒரு தனி ஸ்தாபனமாக்கி அதற்கு வேண்டிய சங்கம், பிரசாரம் காரியஸ்தலம் முதலிய ஏற்பாடுகள் செய்யும் விஷயத்தில் யாவரும் ஒரே அபிப்பிராயமாகத்தான் எழுதி இருக்கிறார்கள். இதை சுமார் ஒருவருஷ காலமாகவே பலர் எழுதி வருகிறார்கள். இவைகளில் மலேயா நாட்டுக் கடிதங்களே பல. ‘குடி அரசை’ தனித்த முறையில் நமது சொந்த பத்திரிகையாக நடத்துவதில் பொருள் நஷ்டம் ஒன்றுமில்லையானாலும் நம்மால் இனி நிர்வகிக்கக் கூடியதாயில்லை என்பதை நாம் தெரிவித் தாக வேண்டியதாயிருக்கின்றது.

எனவே சுயமரியாதைக் கொள்கை உடையவர்களாகவே சேர்த்து ஒரு லிமிட்டெட் கம்பெனியாக்கி (எந்த மதத்தைப் பற்றியானாலும் சரி) வேதம், சாஸ்திரம், புராணம், ஜாதி, மதம் முதலியவைகளில் (எந்த மதத்தில் பிறந்தவர்களானாலும் சரி) அடியோடு நம்பிக்கையில்லாதவர்களாகவும் மனம், வாக்கு, காயங்கள் மூலம் சற்றும் அவை அனுபவத்திலில்லாதவர்களுமான ஒரு கூட்டத்தாரின் சுதந்திரத்தில் ஆசிரியத் தன்மையை விட்டு ‘குடி அரசு’ம், ‘ரிவோல்ட்’டும் நடைபெறும்படியான ஏற்பாடு செய்வது மிகுதியும் அவசியமான காரியம் என்பதே நமது அபிப்பிராயம். ‘குமரன்’ பத்திரிகை எழுதியிருப்பது போலும் மற்றும் பல நண்பர்கள் எழுதியிருப்பதுபோலும் வெகு காலமாகவே இம்மாதிரி இயக்கம் நம் நாட்டில் பல தோன்றித் தோன்றி,



RangaRakes tamilnavarasam.com

மறைந்து கொண்டே வந்திருக்கின்றதே ஒழிய ஒன்றாவது நிலைத்திருக்கவே யில்லை. இதை நமது எதிரிகளே நன்றாய் சொல்லிக்காட்டி நம்மையும் வெருட்டி வருகிறார்கள். அதாவது "வள்ளுவர், புத்தர் முதலியோர்களின் இயக்கங்களும் இன்னும் எத்தனையோ பேர்கள் முயற்சியும் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது. அப்படியிருக்க இதை யார் லட்சியம் செய்யப் போகிறார்கள்" என்று சொல்வது போலவே நடந்து வந்திருக்கின்றது. ஆனால் மேல் நாடுகளில் சற்று இவ்வியக்கம் வெகு வேகமாக பரவி வருகிறதாக இப்போது தெரியவருகிறது. நமது நாட்டில் இவ்வியக்கம் வேரூன்றி விட்டதில் சந்தேகமில்லையானாலும் இனி ஒரு ஐம்பது ஆண்டாவது விடாமல் தொடர்ச்சியாய் வேலை செய்தாக வேண்டும். முன்காலங்களில் இவ்வியக்கம் நிலைக்காததற்கும் பலனளிக்காததற்கும் முக்கிய காரணம் என்னவென்றால், அவ்வக் காலங்களில் இருந்த அரசர்கள் வேத, சாஸ்திர, புராண, ஜாதி, மதப் பார்ப்பனர்களின் கைப்பிள்ளைகளாகவே இருந்து வத்ததால்தான். இப்போது உள்ள அரசாங்கம் பார்ப்பனர்களைக் கொண்டு நடைபெறுவதானாலும் வேதம், சாஸ்திரம், புராணம், மதம், ஜாதி என்கின்ற விஷயங்களில் பார்ப்பனர்களைப் பின்பற்றுபவர்கள் அல்ல. அன்றியும் இவ்விஷயங்களில் அரசாங்கத்திற்கும் உண்மையான நம்பிக்கை கிடையாது. ஏதோ அவர்களது ஆட்சி நிலைத்திருக்க வேண்டியும், இவ்வேத சாஸ்திர புராண ஜாதி மதம் அதற்கு அனுகூலமாயிருப்பதாலும் இவற்றை ஒழிக்க அவர்களாக முன்வருவது இல்லையேயல்லாமல் மற்றபடி இவைகளை ஒழிக்கச் செய்யும் இயக்கத்திற்கு வெளிப்படையான எதிரிகள் யில்லை. இது நமக்கு எவ்வளவோ அனுகூலம் என்றே சொல்ல வேண்டும்.

ஆப்கானிஸ்தான அமீரும், துருக்கி கமால் பாட்சாவும், இட்டலி முசோலினியும் ஒரு அளவுக்காவது சுயமரியாதையையும் அறிவையும் ஆதாரமாக கொண்டு அவரவர்கள் நாட்டை உன்னத நிலைமைக்கு கொண்டு வந்து காட்டிவரும் உதாரணத்தைக் காண்பவர்களுக்கு நமது இயக்கத்தைப் பற்றிய பயமோ சந்தேகமோ ஒரு சிறிதும் இருக்கத் தேவையில்லை என்றே சொல்லுவோம்.

மற்றபடி தங்கள் இனத்தாரின் சுயநலங்காரணமாகவோ, சில தனிப் பட்டவர்களின் பிழைப்பு காரணமாகவோ, அறிவில்லாத காரணமாகவோ கூப்பாடு போடுபவர்களை லட்சியம் செய்ய வேண்டிய நிலைமையையும் நமது இயக்கம் ஒருவாறு தாண்டிவிட்டதென்று சொல்லலாம். அன்றியும் அவ்வித கூப்பாடுகளால் நமக்கு பலவித நன்மைகளும் ஏற்பட்டு வருகிறது. ஆதலால் தொடர்ந்து வேலை செய்ய ஏற்பாடுகள் செய்வதுதான் இப்போது நாம் செய்ய வேண்டிய வேலையாகும். ஏதேனும் சில நண்பர்களாவது ஒன்று சேர்ந்து இவ்வியக்கத்திற்கு ஒரு சங்கமேற்படுத்தி அதை பதிவு செய்து அதன் மூலம் பத்திரிகைகளையும் நடத்த ஏற்பாடு செய்வதே நலம் என்று தெரிவித் துக் கொள்கிறோம்.



இதைப்பற்றி சமீபத்தில் தஞ்சை ஜில்லாவில் கூட இருக்கும் மாகாண சுயமரியாதை மகாநாட்டில் ஒரு முடிவு செய்யலாம் என நினைக்கிறேன். அதற்குள் ஏதாவது கடிதப் போக்குவரத்து செய்ய வேண்டும் என்கிற எண்ண முள்ள கனவான்கள் திரு. ஈ.வெ. ராமசாமி என்கின்ற சொந்த விலாசத்திற்கு எழுதிக் கொள்ளலாம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.05.1928**



RangaRakes tamilnavarasam.com

# ஸ்ரீ வரதராஜுலுவின் மற்றொரு சபதம்

ஸ்ரீ வரதராஜுலு நாயுடு 10-ந் தேதி தமிழ்நாடு பத்திரிக்கையில் பின் வருமாறு எழுதுகிறார்:-

"சமதர்மம் நிலைபெற உழைப்பதே எனது நோக்கம். இரண்டு வருஷங்களாக எச்சரித்து வந்தேன். நாயக்கர் சீர்படவில்லை. வெற்றி தோல் வியை பற்றி எனக்கு கவலை இல்லை. நாயக்கர் பிரசாரம் தொலைய வேண்டும் அல்லது நான் தொலைய வேண்டும். நான் எதற்கும் துணிந்தவன் என்பது தங்களுக்குத் தெரியும். பிராமணரல்லாதாருக்குள் போராட்டம் வேண்டாமென்றே இதுவரையில் பொறுத்திருந்தேன். இனிமேல் நான் சும்மாயிருந்தால் அது தேசத்துரோகமாகும். 'திராவிடனை'ப் பற்றி கவலை இல்லை. நாயக்கர் ஒரு காலத்தில் காங்கிரசில் இருந்தாரென்பதற்காக ஒரு சில நண்பர்கள் அவர் சொல்வதை கேட்கிறார்கள். அந்த தப்பு அபிப்பிராயத்தை போக்குவதே எனது பிரசாரத்தின் நோக்கம். குருக்ஷேத்திர பூமியில் தயங்கி நின்ற அர்ஜுனனுக்கு துணைபுரிந்த திரு. கிருஷ்ணபகவான் ஒருவரே எனக்குத் துணை. இன்றைய தமிழ்நாட்டு நிலைமை இதுவேயாகும். நாயக்கர் பிரசாரத்தில் வந்தவினை இது தான்".

இது எத்தனையாவது சபதம் என்பதும் இனியும் இது போல் எத்தனை சபதம் பிரசுரம் வெளியாகப் போகிறது என்பதையும் பொது ஜனங்கள் பொறுமையோடு கவனிக்க வேண்டுகிறோம். 30.4.28 தேதி தலையங்கத்தின் கீழ் பஞ்சம மந்திரி பாதபூஜை செய்வது தனது பாக்கியம் என்றார். இன்று, ஒன்று நாயக்கர் பிரசாரம் தொலையவேண்டும் அல்லது தான் தொலைய வேண்டும் என்கிற பிரயத்தனத்தில் இறங்கி விட்டதாகக் கூறுகிறார். இனி எதில் இறங்கி விடுவாரோ?

**குடி அரசு - செய்தி விளக்கம் - 13.05.1928**



# ஸ்தல ஸ்தாபன சட்டத் திருத்தம்

காங்கிரஸ் என்றும், சுயராஜ்யக் கக்ஷி என்றும், தேசீயக் கூட்டம் என்றும் சொல்லப்படுவனவாகிய கூட்டங்கள் மக்களின் அறியாமையாலும் கவலைக் குறைவாலும் நாட்டில் செல்வாக்குப் பெற்றதன் பயனாக நம்நாடு மிகமிகக் கேவலமான நிலைமைக்கு வந்து விட்டதோடு அதனால் ஏற்பட்ட அரசியல் சுதந்திரங்கள் என்பவைகள் அயோக்கியர்களுக்கு ஆக்கத்தை தேடிக் கொடுத்துக் கொண்டு வருவதுடன் நாட்டைப் பிரித்து வைத்து ஏழை மக்களையும் பாமர மக்களையும் வதைத்துக் கொண்டு வருகின்றது. அதாவது மந்திரி பதவிகளும் நிர்வாக மெம்பர் பதவிகளும் ஐகோர்ட்டு ஜட்ஜ், ஜில்லா ஜட்ஜ் பதவி முதலியவைகளும் சட்டசபை மெம்பர் ஜில்லா தாலூகா போர்டு தலைமை முதலிய பதவிகளும் இந்திய மக்களுக்குக் கிடைக்க ஆரம்பித்தக் காலம் முதற்கொண்டே அவற்றை எப்படி நாட்டுக்கும் மக்களுக்கும் அனுகூலமாக நடத்துவது என்கின்ற விஷயத்தில் ஒரு சிறிதும் கவலை கொள்ள இடமில்லாமல், அந்த உத்தியோகங்களை யார் வகிப்பது என்பது பற்றியும், எந்த வகுப்பார் அதை ஏக போகமாய் அனுபவித்து வருவது என்பது பற்றியுமே கவலை கொண்டு, அதன்மூலம் அடைந்த உத்தியோகங் களை மறுபடியும் தாங்களோ அன்றி தங்கள் பின் சந்ததியாரோ அல்லது இனத்தார்களோ நிரந்தரமாய் அனுபவிக்க மார்க்கம் செய்து கொள்ளுவ திலேயே அவற்றை உபயோகப்படுத்திக் கொண்டு வந்திருப்பதுடன் நீதியும் நாணயமும் பக்ஷபாதமற்ற தன்மையும் இல்லாமல் கொள்ளைக்கும் திருட்டுக்கும் புரட்டுக்கும் அயோக்கியத்தனத்திற்கும் தாய்வீடாக இருந்தும் வருகின்றது. மந்திரி பதவிகளால் அது ஏற்பட்ட காலம் முதல் கொண்டு இது வரை ஏழை குடியானவர்களின் வரிப் பணத்தில் மாதம் பதினாயிரக்கணக் கான ரூபாய் சம்பளமும் செலவும் ஏற்பட்டதல்லாமல் அதனால் நாட்டிற்கு ஏதாவது பலன் உண்டாயிற்று என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

அதுபோலவே நிர்வாகசபை மெம்பர்கள் உத்தியோகம் இந்தியர் களுக்கு கிடைத்ததன் பலனாக ஏதாவது நன்மை உண்டாயிற்றா என்று பார்த் தால், சர்.சி.பி. அய்யரின் ஆக்ஷியையும் அப்பதவியில் நாட்டில் ஏற்பட்ட கோர்ட்டுகளையும் அவ்வதிகாரங்கள் ஒரு வகுப்பாருக்கு பெரும்பான்மை யாக வழங்கப்பட்டு அதனால் மற்ற வகுப்பார் நசுக்கப்பட்டதையும் விவ



RangaRakes tamilnavarasam.com

காரத்திற்கு அதிக சிலவேற்பட்டதையும் தவிர வேறு என்ன பலன் வரி செலுத்தும் பொதுமக்கள் அடைந்தார்களென்று சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

மற்றபடி ஹைகோர்ட் நிர்வாகம் சந்தைக் கடை வியாபாரத்தை விடக் கேவலமாய் பொறுப்பற்று விளங்குவதும் நாளுக்கு நாள் ஜட்ஜுகளின் எண்ணிக்கையும் சம்பளமும் உயருவதும் விவகாரமாடும் மக்களின் எண்ணிக்கை உயர்ந்து அநேக பழம்பெரும் குடும்பங்கள் தாசி, குடி, சூது இவைகளில் பாழாவதைக் காட்டிலும் எண்மடங்கு விவகாரத்தால் பாழாக்கக் கூடிய மாதிரியாகவும் இருந்து வருகின்றதேயல்லாமல் நியாயம் கிடைக்கும் முறை நாணயமாகவோ யோக்கியமாகவோ சுலபமாகவோ இருந்து வருவதாக யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

மற்றும் ஜட்ஜுகளுக்கும் வக்கீல்களுக்கும் உள்ள சம்பந்தமும் ஜட்ஜுகளுக்கும் கவர்னர் சீப் ஜட்ஜுகளுக்கும் உள்ள சம்பந்தமும் எழுதுவது வெட்கக் கேடான காரியம் என்பதே நமது அபிப்பிராயம்.

கலெக்டர் பதவியின் யோக்கியதை சொல்லவே வேண்டியதில்லை என்போம். உதாரணமாக ஒரு தண்டுவப் பார்ப்பனக் கலெக்டரின் நடத்தை சகிக்க முடியாததாயிருந்தும் கேள்வி கேட்பாடு இல்லாமல் பெரிய தர்பாராய் இருந்து வருகின்றது. தினமும் ஒரு பெண் வீதம் கீழ் அதிகாரியோ குமாஸ்தாவோ, கட்சிக்காரனோ சப்ளை செய்து தீரவேண்டும். அவர் ஆசைப்பட்ட குமாஸ்தா பெண்ஜாதி அவசியம் சப்ளை செய்தாக வேண்டும். இல்லாவிட்டால் குமாஸ்தா வீட்டில் கல்லு போடுவதும் காலித்தனம் செய்வதுமாகிவிடும். ஜில்லா சூப்ரண்டுக்கு விண்ணப்பம் போட்டால் அவரும் அடக்கிவிடுகின்றார். நிருவாக சபை மெம்பருக்கு விண்ணப்பம் மகஜர் முதலியவைகள் அனுப்பினால் அவரும் குப்பைத் தொட்டியில் போட்டுவிடுகின்றார். இவரைப் பற்றிய கதை மற்றும் அநேகம் உண்டு. இதுபோல் இன்னும் சில கலகங்கள் ஐரோப்பியர்களிலும் உண்டு அவர்கள் மாற்றப்படும் ஊர்களுக்கு எல்லாம் (சுற்றுப்பிரயாணம்) சர்க்யூட் போகும் இடங்களுக்கெல்லாம் கீழ் அதிகாரியையோ குமாஸ்தாவையோ சம்சார சகிதம் கூட்டிக் கொண்டு போகின்றவர்களும் உண்டு. அவர் கூட சம்சார சகிதம் போகக் கூடியவர்களுக்கே சீக்கிரம் மேலுத்தியோகங்கள் கிடைப் பதும் அதற்கு சம்மதிக்காதவர்கள் எவ்வளவு யோக்கியர்களானாலும் அப்படியே இருப்பதுமான விஷயங்கள் எவ்வளவோ பார்க்கின்றோம்.

சட்டசபை மெம்பர்கள் யோக்கியதை அறியாதவர்கள் இருக்க முடியாதென்றே சொல்லுவோம். ஒவ்வொருவரும் தேர்தலுக்கு 1000, 10000, 50000 வரை ரூபாய்களை லஞ்சமாகவும் கூலியாகவும் செலவாகவும் செலவு செய்து பாமர ஓட்டர்களுக்குப் பணமும் கள்ளு சாராயமும் கொடுத்து



உபாத்தியாயர்கள் கிராமாதிகாரிகள் முதலிய தரகர்கள் மூலம் ஓட்டுப் பெற்று மெம்பராகி சிலர் கட்சிகளை உண்டாக்கியும் சிலர் கட்சிகளில் சேர்ந்தும் அங்கத்தின் பதவியை தங்களுக்குப் பதவியும் உத்தியோகமும் கிடைக்கும் வகைகளுக்கு ஒரு சிறிதும் நாணயமும் யோக்கியப் பொறுப்பும் இல்லாமல் உபயோகித்து மக்களின் நலத்தில் ஒரு சிறிதும் கவலையில்லாமல் எவ்வெவ் வழிகளில் மக்களுக்கு விரோதமாகவும் வெள்ளைக்காரர்களுக்கு அனுகூலமாகவும் நடக்கக் கூடுமோ அவ்வளவு வகையிலும் நடந்து சுயநலத்தை கவனிப்பதல்லாமல் வேறுண்டோ? என்று கேட்கின்றோம்.

## ஸ்தல நிர்வாகம்

ஜில்லா போர்டுகளின் நிலை மிக மிக பரிதபிக்கத் தகுந்தது. ஒரு மெம்பருக்காவது ஜில்லா போர்ட்டு எதற்கு ஆக ஏற்பட்ட தென்பதே தெரியாது. ஜில்லா போர்டு மெம்பர்களில் பெரும்பான்மையோர் இப் பதவிகளை தங்களுக்கு ஒரு பெருமைக்காக விரும்புகிறார்களே ஒழிய தங்கள் கடமையை அறிந்தவர்களாகவாவது அதில் கவலை உள்ளவர்களாகவாவது இருக்கின்றார்களா?

ஜில்லா போர்டு தலைவர்களும் தாங்கள் எப்படி இந்த உத்தியோகத்தில் நிரந்தரமாய் இருப்பது என்று அஸ்திவாரம் போடுபவர்களும் சட்டசபை மெம்பர் பதவி பெற இதை உபயோகித்துக் கொள்ளலாம் என்று இருப்பவர்களுமல்லாமல் ஜில்லா போர்டு வேலையை கவனிக்க வேண்டியவர்கள் மிகவும் அருமையாகவே இருக்கின்றார்கள். அனேக போர்டுகளில் பிரசிடெண்டோ அல்லது மெம்பர்களோ அல்லது அவர்களுக்கு வேண்டியவர்களோ தான் கன்றாக்டராயிருந்து வருகிறார்கள்.

தாலூக்கா போர்டுகளின் நிலைமையும் கேவலமாகவேதான் இருந்து வருகின்றது. அங்கு நடக்கும் தேர்தல்களும் கன்றாக்ட்களும் உபாத்தியாயர்களின் மாற்றங்களும் மெம்பர்களின் சுயநலங்களும் சிறிதாவது யோக்கியமானதென்று சொல்லமுடியாததாகவே பெரும்பான்மை இருந்து வருகின்றது.

முனிசிபல் சேர்மென்களோ இவர்கள் எல்லாரையும் விட மோசமானவர்களாகவே இருந்து வருகின்றனர். தேர்தல் அதிகாரத்தில் சேர்மென்கள் செய்யும் அயோக்கியத்தனங்கள் கணக்கிலடங்காது என்போம். தமக்கு வேண்டாத பேர்களை ஓட்டர் லிஸ்டில் சேர்ப்பது கிடையாது.

தனக்கு வேண்டிய அன்னக் காவடிகள் எல்லோரையும் கையில் இருந்து பத்துப் பத்தணா கொடுத்து ஓட்டர்களாக்கிக் கொள்வது.

தேர்தல் நியமனச் சீட்டை வாங்கி கிழித்து எரிந்து விடுவது.



RangaRakes tamilnavarasam.com

தேர்தல் நியமனத்தை (நாமினேஷன் ஸ்லிப்பை) வித்திட்றா செய்து கொண்டதாக போர்ஜரி காகிதம் எழுதி வைத்துக் கொண்டு தள்ளி விடுவது, அனாவசியமான காரணத்தால் தேர்தல் நாமினேஷன் சிலிப் (நியமன விண்ணப்பத்தை) செல்லுபடியற்றதென்று சொல்லித் தள்ளிவிடுவது. கட்டாயப்படுத்தி பயமுறுத்தி ஓட்டு வாங்குவது.

ராத்திரியில் பெட்டியை உடைத்து ஓட்டுகளைத் திருத்துவது.

அனாவசியமாக ஓட்டுகளை செல்லுபடி அற்றவை (இன்வாலிட்) களாக்குவது.

அதிக எண்ணிக்கை பெற்றவனை விட்டு விட்டு குறைந்த எண்ணிக்கை உள்ளவனை (டிக்ளேர்) கவுன்சிலராக்குவது.

இவ்வளவுக்கும் பரிகாரம் கோர்ட்டுக்கு போயாக வேண்டும்.

அப்படி கோர்ட்டுக்கு போனாலும் முனிசீப்புக்கு லஞ்சம் கொடுத்தலில் ஏறிய கை தான் ஜெயிக்கும்.

ஹைகோர்ட்டுக்கு போய்விட்டாலோ ஒரு குமாஸ்தாவுக்கு 10ரூ. கொடுத்து விட்டால் தப்பாக கவுன்சிலரானவரின் காலாவதி முடிவுவரை கேசு வெளிவருவதில்லை. சேர்மெனின் நிர்வாகமோ, குமாஸ்தாக்கள் உபாத்தியாயர்கள் முதலியவர்களின் சம்பளத்தில் பங்கு. கண்ட்ராக்டில் முதலிலேயே அட்வான்ஸ் என்று செக் எழுதி தானே பணம் எடுத்துக் கொள்வது. கண்ட்ராக்டர் கொடுத்த டெண்டருக்குமேல், தான் ரேட்டை உயர்த்தி டெண்டரை திருத்தி பணம் கொள்ளை அடிப்பது.

கவுன்சிலர்களுக்கு பங்கு கொடுப்பது, கலக்டர்களுக்கு சப்ளை செய்வது.

கலெக்டருக்கும் கவர்னருக்கும் வேண்டிய பாதிரிகளுக்கு குலாமாய் இருந்து முனிசிபாலிட்டி பணத்தையும் மிஷின்களுக்கு அள்ளிக் கொடுப்பதும், பல பெண் உபாத்தியாயர்களை சேர்மெனும் கவுன்சிலர்களும் படிப்பு நிர்வாக அதிகாரியும் குமாஸ்தாக்களும் பஞ்ச பாண்டவர்கள் போல் முறை வைத்துக் கொள்வது. தனக்கு 1000ரூ. கிடைப்பதற்கு முனிசிபாலிட்டியில் 5000ரூ. வேலைகளை இடித்து குமாஸ்தாக்களுக்கும் கவுன்சிலர்களுக்கும் 100ரூபா கண்ட்ராக்ட் விட்டு விட்டு புதிதாக 7000 ரூபாயுக்கு கட்டிடம் கட்டுவது. கட்டிடங்களையும், இடங்களையும் முனிசிபாலிட்டியின் அவசியத்திற்கு என்று 1000 ரூபாய் பெறுமானதை 8000க்கு விலை பேசி சேர்மென் 5000ரூ. எடுத்துக் கொண்டு இடக்காரனுக்கு 3000 கொடுப்பது.



இடக்காரன் அந்தப் பணத்தில் மானேஜருக்கும் சர்வேயருக்கும் ஓவர்சியருக்கும் ஆளுக்கு ரூ.100 கொடுப்பது.

பொய் பில் எழுதி பணம் எடுத்துக் கொள்வது. ரிகார்ட்டுகளை திருத்துவது. தனது ஆள்களுக்கு வேலை கொடுக்க புது உத்தியோகங்களை உண்டாக்குவது.

ஆறுமாதம் ஏழுமாதம் மீட்டிங்கு போடாமல் இருப்பது. தனக்கு வேண்டாத கவுன்சிலரை மூன்று மாதம் வரவில்லை என்று தள்ளிவிடுவது.

கடிகாரத்தை திருப்பி வைத்து முன்னால் வந்து தனக்கு வேண்டியவர்களை வைத்து வேண்டியபடி எழுதிக் கொண்டு போய்விடுவது.

தீர்மான புஸ்தகங்களில் வரி பிளந்தும் திருத்தியும் புது தீர்மானங்களையும் அதிகப் பணத்தையும் சாங்ஷன் செய்ததாக செய்து கொள்வது.

இவைகளை கலெக்டரிடம் சொன்னால் மந்திரிகளை கேட்கச் சொல்லுவது.

மந்திரிகளிடம் சொன்னால் கோர்ட்டுக்குப் போகச் சொல்லுவது. கோர்ட்டுக்குப் போனால் முன் லஞ்சம் கேட்பது.

இன்னமும் இது போல் நடக்கும் அக்கிரமங்கள் எண்ணத் தொலையாது என்றே சொல்லுவோம்.

இந்நிலையில் சர்க்கார் ஸ்தல ஸ்தாபன சட்டத்தை திருத்தப் போவதாக பத்திரிகைகளில் வெளியாகி இருக்கின்றது.

அத் திருத்தங்களில் ஏதாவது பலன் ஏற்படும் என்பதாக நாம் சொல்வதற்கில்லை. சர்க்கார் ஸ்தல ஸ்தாபனங்களில் யோக்கியமான திருத்தம் செய்ய நினைப்பார்களானால் முனிசிபாலிட்டி, தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டு இம் மூன்றையும் உடனே எடுத்துவிட்டு ரிவினியூ அதிகாரிகள் வசம் ஒப்படைத்து விட வேண்டும். அப்படிச் செய்வதில் வரி கொடுப்போர்களுக்கு அநேக நன்மைகள் உண்டு. ஆனால் இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளத் தக்க பக்குவம் இது சமயம் நமது மக்களுக்கு போதாது. ஆதலால் இது சமயம் எதையும் கலைக்க வேண்டியதில்லை.

மற்றபடி நிர்வாகத்திற்கு சம்பளம் கொடுத்து ஆள்களை வைத்து விட வேண்டும்.

ஜில்லா போர்டுக்கு ஒரு சப் கலெக்டரும் தாலூக்கா போர்டுக்கு ஒரு



RangaRakes tamilnavarasam.com

தாசில்தாரும் முனிசிபாலிட்டிக்கு ஒரு டிப்டி கலெக்ட்டரும் ஆக 35 வயது முதல் 45 வயதுக்கு மேல் படாத உத்தியோகஸ்தர்களை சம்பளம் கொடுத்து நிர்வாக உத்தியோகஸ்தராக நியமித்து விடவேண்டும்.

இரண்டு வருஷத்திற்கு மேல் ஒருவர் அதில் இருக்கக் கூடாது.

கவுன்சிலர்களும் சேர்மேனும் பிரசிடெண்டும் தீர்மானம் நிறைவேற்றிவிட்டுப் போய்விடவேண்டும். சிப்பந்திகள் நியமிப்பதோ வேலைகள் கண்ட்ராக்ட் கொடுத்து நடத்துவிப்பதோ ஆபீசு நிர்வாகமோ எக்ஸிக்யூடிவ் ஆபீசர் என்கின்ற மேற்படி நிர்வாக உத்தியோகஸ்தருடைய பொறுப்பாய் இருக்க வேண்டும். நாமிநேஷன்கள் இருக்கக் கூடாது. ஆறு வருஷத்திற்கு ஒரு முறை தேர்தல்கள் நடைபெற வேண்டும்.

காலி ஏற்பட்டால் கவுன்சிலர்களே நியமித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் தேர்தல்கள் அடிக்கடி ஏற்பட்டு ஊருக்குள் அடிக்கடி கலவரங்கள் ஏற்படக் கூடாது என்பதுதான். வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்படும் வரையில் மகமதியர், கிறிஸ்துவர், ஆதிதிராவிடர், பார்ப்பனர் ஆகிய தனிப்பட்ட வகுப்புக்கு தனித் தொகுதி ஏற்படுத்திவிட வேண்டும்.

தேர்தல்களில் எந்தக் காரணத்தைக் கொண்டும் சேர்மேனோ தலைவரோ பிரவேசிக்க இடம் கொடுக்கக் கூடாது. ஓட்டர்களை குறைப்பதானாலும் குறைத்துக்கொள்ளலாம். அல்லது வரி கொடுக்க லாயக்குள்ளவர்கள் எல்லோருக்கும் ஓட்டுரிமை கொடுக்கலாம். ஆனால் வரி பாக்கி உள்ளவர்களுக்கு ஓட்டுரிமை இல்லை என்கிற முறை கூடாது.

ஏனென்றால் சமயத்துக்கு பணம் கையில் இல்லாத காரணத்தால் உரிமை இழக்க இடம் கொடுக்கக் கூடாது. இம் மாதிரி ஸ்தல ஸ்தாபனங்கள் ஜனப் பிரதிநிதித்துவம் பொருந்தியதல்ல என்று சொல்லிவிட முடியாது. ஏனெனில் அதன் இலாக்கா நிர்வாகம் ஜனப் பிரதிநிதி என்று சொல்லப்பட்ட மந்திரியின் ஆட்சியின் கீழ் இருப்பதாலும் நிர்வாக உத்தியோகஸ்தர்களை ஸ்தல ஸ்தாபனங்கள் தங்கள் பொறுப்பில் கடன் வாங்கிக் கொள்வதாலும் ஜனப் பிரதிநிதித்துவம் மாறுவதில்லை.

நிர்வாக உத்தியோகஸ்தர்கள் சம்பளமானது வருஷம் ஒன்றுக்கு ஜில்லா போர்டுக்கு ரூ.12000 தாலூக்கா போர்டுக்கு ரூ.5000 முனிசிபாலிட்டிக்கு ரூ.6000 ஆகக் கூடும். இந்த செலவுகள் இந்த ஸ்தாபனங்களின் யோக்கியதைக்கு அதிகம் என்று சொல்ல முடியாது.

இப்போதைய கவுரவ தலைவர்கள் தாக்ஷணியத்தாலும் போதிய



சாவகாசம் இல்லாததாலும் மற்றும் பல காரணங்களாலும் அந்தந்த ஸ்தாபனங்களுக்கு ஏற்படும் நஷ்டம் இதைப் போல இரண்டு மடங்கு மூன்று மடங்கு சில இடங்களில் நான்கு மடங்கும் ஆகின்றன.

தலைவர்கள் நாணயக் குறைவில் நஷ்டமாவது கணக்கே இல்லை. தவிர ஜில்லா தாலூக்கா, முனிசிபாலிட்டி தலைவர்கள் சட்டசபைக்கு நிற்கக் கூடாது என்கின்ற நிபந்தனை இருப்பது நலமாகும். ஏனெனில் இதை உத்தேசித்து எவ்வளவோ ஒழுங்குத்தவறுதல் ஏற்படுவதோடு தனக்குத் தானே எஜமானனாகியும் ஆகிவிடுகிறார்கள். கீழே அக்கிரமங்கள் செய்துவிட்டு மேலே (சட்டசபையில்) தாங்களே இருந்தால் அதனால் நியாயம் கிடைக்காமல் போய்விடும்.

எனவே, தற்கால ஸ்தல ஸ்தாபனங்களில் இவ்வளவாவது சீர்திருத்தம் ஏற்பட்டாலொழிய அவை ஒழுங்காக நடைபெறும் என்றாவது மக்களை யோக்கியமாக இருக்கும்படி செய்யும் என்றாவது சொல்வதற்கில்லை.

தாலூகா போர்டை எடுத்து விடுவதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. மற்ற ஸ்தாபனங்களையும் எடுத்து விடுவதிலும் நமக்குக் கவலை இல்லை. கொஞ்ச காலத்திற்கு சட்டசபையை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்ற ஜனப்பிரதிநிதி ஸ்தாபனங்களை எடுத்துவிட்டு சட்டசபையிலுள்ள ஜனப்பிரதிநிதி மந்திரிகளுக்கு அதன் தணிக்கையை விட்டுவிட்டால் நாட்டிற்கு எவ்வளவோ நன்மையும் ஒற்றுமையும் உண்டாகுமென்பதே நமது முடிவு.

ஏனெனில் இப்போதைய நிலையில் தேர்தல் முறையானது நமது நாட்டிற்கு எமனாய் இருக்கின்றதுடன், நாட்டு நலத்தின் பொறுப்பை. அரசாங்கத்தார் நமது தலையில் போட்டு நாட்டைச் சுரண்டும் வேலையை மாத்திரம் அவர்கள் வைத்துக் கொண்டு நம்மை ஏமாற்றுகிறார்கள். நாம் சரியானபடி வேலை செய்தாக வேண்டுமானால் அப்பொறுப்பு அவர்கள் தலையிலேயே இருக்க வேண்டும் என்பதுதானே ஒழிய வேறில்லை.

அதாவது இப்பொழுது அவ்வளவு வரிகளைக் கொடுத்துவிட்டு ஏதாவது காரியங்கள் கேட்டுப் போனால் நாம்தான் ஒருவரை ஒருவர் குடுமியைப் பிடித்துக் கொள்ளும் மாதிரியில் அரசாங்க முறை இருக்கின்றதே தவிர ஆட்சி புரிபவர் நேரில் ஜவாப்தாரியாயிருப்பதற்கில்லாமல் இருக்கின்றார்கள்.

நம்மவர்கள் செய்யும் அக்கிரமங்களை கவனிக்க ஆரம்பித்தால் ஜாதியும், கட்சியும், சுயநலமும் குறுக்கிட்டு காரியங்களை அதிகமாகக் கெடுத்து விடுகின்றதைத் தினமும் பார்த்து வருகின்றோம். எனவே நமக்குத்



RangaRakes tamilnavarasam.com

தணிக்கை செய்யும் அதிகாரமும், வெள்ளையருக்கு வேலை செய்யும் கடமையுமுடையதாக நமது சீர்திருத்தங்கள் இருக்க வேண்டும் என்பதுதான் மேல்கண்ட நமது அபிப்பிராயத்தின் தத்துவமாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 20.05.1928**



# ஏன் இவ்வளவு ஆத்திரம்?

திரு. வரதராஜுலுவுக்கு கொஞ்ச காலமாக ஒருவித பயமும் நடுக்கமும் ஏற்பட்டு, அதனால் மூளை கலங்கி, எப்போது பார்த்தாலும் சுயமரி யாதை இயக்க ஞாபகமும் கவலையும் ஏற்பட்டு, கனவிலும் சுயமரியாதை இயக்கம் என்கின்ற பேச்சைக் கேட்டால் நடுங்குவதாகத் தெரியவருகிறது.

இதனாலேயே அவரது எழுத்தும் பேச்சும் எப்போது பார்த்தாலும் "சுயமரியாதை இயக்கம் தொலைய வேண்டும்" என்றும், "அதைத் தொலைப் பதே தேசீய வேலை" என்றும் "ஒன்றா சுயமரியாதை இயக்கம் தொலைய வேண்டும், இல்லாவிட்டால் நானாவது (அதாவது தானாவது) தொலைய வேண்டும்" என்றும் "இதற்காக பதினாயிரக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி வைத்திருக்கிறேன்" என்றும் "இந்த வேலையில்தான் மிகவும் முனைந் திருப்பதாகவும் இதற்கு தேசீயவாதிகள் உதவி செய்ய வேண்டும்" என்றும் பேசியும் எழுதியும் வருகிறார்.

அல்லாமலும் பொது ஜனங்களும் இந்த சுயமரியாதை இயக்கத்தை தெரியாத்தனமாக ஆதரிப்பதாகவும், இதனால் பெரிய ஆபத்து நேரிடப் போகின்றதென்றும் எழுதிவிட்டு கடைசியாக சுயமரியாதை இயக்கப் பிரசாரம் நடைபெறுவதால்தான் பார்ப்பனரல்லாதாரியக்கத்தையே தான் அழிக்க வேண்டியிருப்பதாகவும் அடுத்த தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி இருந்தவிடம் தெரியாமல் போக நேரிடுமென்றும் பயமுறுத்தி எழுதியும் பேசியும் வருகிறார். முடிவாக 'திராவிடனை'ப் பற்றிக் கூட தனக்கு கவலை யில்லை என்றும் நாயக்கரையும் 'குடி அரசை'யும் ஒழித்தாலல்லது தேசீயம் உருப்படியாகாதென்பதாகவும் எழுதிவிட்டு இறுதியாக அர்ஜ்ஜுனனுக்கு துணை இருந்த கிருஷ்ண பகவானே தனக்கு இக்காரியத்தில் துணை என்றும் சொல்லி முறையிட ஆரம்பித்து விட்டார். இதிலிருந்து ஸ்ரீ வரதராஜுலு சாதித்து விடுவதைப் பற்றியும் அவர் புதிதாக சிபார்சு பிடித்திருக்கும் கிருஷ்ண பகவான் துணைபுரியப் போவதைப் பற்றியும் பின்னால் பேசிக் கொள்ளலாம்.

'கையால் ஆகாதவனுக்கு கடவுள் துணை' என்பது போலவும் 'சாகப் போகிறவனுக்கு சாமி துணை என்பது போலவும் தன் சக்தியெல்லாம் முடிந்து



RangaRakes tamilnavarasam.com

விட்டதாகதானே தீர்மானித்துக் கொண்டு சாமியைத் துணைக்கு கூப்பிட ஆரம்பித்து விட்டார்.

நிற்க, ஸ்ரீ வரதராஜுலு இவ்வளவு ஆத்திரமும் கவலையும் சாமியிடம் முறையீடும் அழுகையும் அழுவதற்கு சுயமரியாதை இயக்கம் இவரை என்ன செய்துவிட்டது என்பதை முதலில் யோசிப்போம்.

சுயமரியாதை இயக்கம் ஆரம்பமான பிறகு பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஆதாரமான அரசியல் புரட்டு, மதப் புரட்டு, தெய்வப் புரட்டு முதலிய புரட்டு கள் வெளியாகி இவைகளின் மூலம் பார்ப்பனர்களுக்குள்ள செல்வாக்குகள் சிறிதளவாவது குறையத் தலைப்பட்டதே ஒழிய ஸ்ரீ வரதராஜுலுக்கு என்ன கெடுதி ஏற்பட்டது என்பது நமக்கு விளங்கவில்லை.

ஸ்ரீ வரதராஜுலுக்கு ஏதாவது குறை ஏற்பட்டிருக்குமானால் அவரது பத்திரிகை வீழ்ச்சி பெற்று சற்று வரும்படி குறைந்திருக்கலாம். அதோடு மின்சார மருந்து வியாபாரமும் சற்று குறைவு பட்டிருக்கலாமேயல்லாமல் அவர் கவலைப்படத்தக்க அளவு குறை ஏற்பட்டிருக்க நியாயமில்லை. மேல்கண்ட இரண்டிற்கும் கூட தனது முட்டாள்தனம் காரணமா அல்லது சுயமரியாதை இயக்கம் காரணமா என்பதை ஸ்ரீ வரதராஜுலு நிதானமாக யோசித்துப் பார்த்திருந்திருப்பாரானால் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி அவர் இவ்வளவு பயமும் ஆத்திரமும் பட வேண்டிய காரணம் ஏற்பட்டிருக் காது. ஸ்ரீ வரதராஜுலு நினைப்பது போலும் எழுதுவது போலும் பத்திரிகையிலும் மின்சார ரசத்திலும் அவர் பணம் சம்பாதிப்பதைப் பற்றி யாருக்கும் வருத்தமோ பொறாமையோ இருக்க நியாயமே இல்லை. ஏனெ னில் ஸ்ரீவரதராஜுலுவைவிட மோசமான வழியில் எத்தனையோ பார்ப்ப னர்கள் பணம் சம்பாதித்துக் கொண்டிருப்பதை நாம் பார்த்துக் கொண்டும், விட்டுக் கொண்டும் தான் வருகின்றோம். அப்படியும் பாவம் ஸ்ரீ வரதராஜுலு மற்றவர்கள் பொறாமைப்படத்தக்கதான பெரும் பணம் ஒன்றும் சம்பாதித்து விடவுமில்லை என்பது நமக்குத் தெரியும். கடைசியாக அவர் குடியிருக்கும் வீடாவது அவருக்கு மிஞ்சுமா என்பது மிகவும் கவலையோடு கவனிக் கத்தக்க விஷயமாகும். தினசரி பத்திரிகை ஆரம்பித்த காலம் முதல் கொண்டு வாரப் பதிப்பில் வந்து கொண்டிருந்த சுமார் மாதம் 400 ரூபாயும் உள்ளே இழுத்துக் கொண்டதானது அவரது வரவு சிலவு கணக்கை பார்த்தாலேயே தெரியும்.

மின்சார விற்பனை லாபந்தான் அவரது ஜீவனத்திற்கு வழியாய் இருப்பது. அதுவும் மலாய் நாட்டில் மாத்திரந்தான் தக்கபடி விற்று வந்தது. அதாவது மாதம் 1-க்கு 500 ரூபாய் அல்லது 600 ரூபாய் வரை லாபம் கிடைக்கும்படி விற்பனையாகி வந்தது.

இது அவர்கள் செலுத்திவரும் இன்கம்டாக்ஸ் கணக்கு மூலமே தெரியலாம். இந்த 500, 600 ரூபாயும் சரியானபடி மீத்தாமல் தன்னைப் பெரிய பிரபு என்று பிறர் நினைத்துக் கொள்ளவேண்டும் என்கிற பைத்தியக் காரத்தனமான ஆசையால் அவ்வளவுக்கும் சரியான செலவை வைத்துக் கொண்டார். ஆகவே கொஞ்ச காலமாக வரவும் செலவும் சரியென்று சொல்ல வேண்டுமேயல்லாமல் வேறில்லை. மேல்கொண்டு ஏதாவது சொல்ல வேண்டுமானால் அச்சடிக்கும் ஈயமும் தண்டவாள இரும்புந்தான் மீதி என்று சொல்ல வேண்டும். அதிலும் முற்றும் பலருடைய பங்குத் தொகைகளும் இருக்கின்றன. இந்நிலையில் ஸ்ரீவரதராஜுலுவின் மீது பொறாமைப் படுவதெதற்கு என்பது விளங்கவில்லை.

இவர் பத்திரிகையின் வீழ்ச்சிக்கு காரணம் 'குடி அரசும்' நாயக்கர் பிரசாரமுமா? அல்லது ஸ்திர புத்தியும் நிலையும் இல்லாமல் அடிக்கடி பச்சோந்தி போல் மாறி மாறி வந்தது காரணமா? என்பதை யோசித்தால் ஸ்ரீவரதராஜுலுவுக்கே உண்மை விளங்காமல் போகாது. இவர் தினசரிப் பத்திரிக்கை ஆரம்பித்த தினமேதான் சுதேசமித்திரன் அடிச்சுவட்டை பின் பற்றி நடக்கப் போவதாக தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டதால் அது தலை எடுக்க முடியாமல் போனதோடு வாரப் பதிப்பையும் சந்திக்கு கொண்டுவந்து விட்டுவிட்டது. விளம்பரம் கொடுப்பவர்களை ஏமாற்றி வந்தாலும் வாரப்பதிப்பு லாபத்தாலும் கொஞ்ச காலம் நஷ்டம் இல்லாமல் நடத்திவர முடிந்தது. பத்திரிகை எண்ணிக்கையின் உண்மையை அறிந்த சில விளம்பரக்காரர்கள் விழித்துக்கொண்டதால் இப்போது நஷ்டமேற்பட்டி ருக்கலாம். அதற்கு யார் என்ன செய்யக்கூடும்? விளம்பரம் கொடுக்கும் வியாபாரிகளையும் ஏமாற்ற சர்க்கார் அறிக்கையில் தனது பத்திரிகை 6000 வெளிப் போவதாக உண்மைக்கு மாறாக குறிக்கும்படி ஏற்பாடு செய்தும் வெற்றிபெற்றார். ஆனாலும் அவ்வெண்ணிக்கை இருந்ததாக குறித்த காலத்தில் இவர் தினசரிப் பத்திரிகையே ஆரம்பிக்கவில்லை என்பது வெளியானவுடன் அவ்வறிக்கையும் உள் நாட்டில் பிரயோஜனப்படாமல் போய்விட்டது. ஆனால் வெளிநாட்டிலும் மேல்நாட்டிலும் சற்று இப்புரட்டு செலாவணியாகிக் கொண்டு வருகிறது என்று சொல்லலாம். அதைப்பற்றி நமக்கு கவலை இல்லை. அவ்வறிக்கையில் 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைகளைப் பற்றி தாழ்வாக எழுதச் செய்யாமல் இருந்திருக்குமானால், அவ்வறிக்கையின் புரட்டைக் கூட வெளியாக்க வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது.

இந்நிலையில் ஸ்ரீவரதராஜுலு மற்றவர்கள் பேரில் சங்கடப்பட்டு ஆத்திரப்படுவதில் என்ன பலன்? 'குடி அரசோ' நாயக்கர் பிரசாரமோ வலு வில் எப்போதாவது ஸ்ரீ வரதராஜுலுவைப் பற்றி ஏதாவது வம்பிழுத்திருக் கிறதா? அல்லது வாழ்வை வெளிப்படுத்த வந்ததா?


RangaRakes
tamilnavarasam.com

ஸ்ரீ வரதராஜுலுவின் போக்கை ஸ்ரீ நாயக்கர் கண்டித்ததற்காக ஒரு காலத்தில் (10.8.25ல்)ஸ்ரீ வரதராஜுலு ஸ்ரீ நாயக்கருக்கு எழுதிய கடிதத்தின் ஓர் பாகத்தில் எழுதியிருப்பதாவது:-

..."... என்னை விட தாங்கள் வயதிலும், அனுபவத்திலும், தியாகத்திலும் சிறந்தவர்கள். நான் ஏழை, தங்களைப் போன்றவர்களின் தேச சேவையைப் பார்த்து நானும் தேச ஊழியத்தில் ஈடுபட்டவன்".

என்று எழுதிய கடிதத்திற்கு அப்போதே ஸ்ரீ நாயக்கர் எழுதிய பதில் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது என்னவென்றால் :

"தங்கள் சுய நன்மையின் பொருட்டுத் தாங்கள் நடந்து கொள்ளும் எவ்வித காரியத்திலானாலும் என் போன்ற தனிப்பட்ட நபர்கள் விஷயத்தில் கெடுதி உண்டாகும்படியாக தாங்கள் செய்யும் எவ்வித காரியத்தைப் பற்றி யானாலும், நான் எவ்வித கவலையும் எடுத்துக் கொண்டதுமில்லை; இனியும் நானாவது என்னைப் போன்ற எனது நண்பர்களாவது எடுத்துக் கொள்வதாக உத்தேசமுமில்லை. தங்கள் நிலையையும் பலக்குறைவையும் நன்றாய் அறிந்தே அதற்காக எவ்வளவோ இடம் ( Margin ) விட்டுக் கொண்டுதான் வந்து உள்ளது. ஆனால் சமூகத்தையே அடியோடு காட்டிக் கொடுத்து காலம் தள்ள இனி ஒருக்காலும் ஒருப்படப் போவதில்லை. இதற்காக தாங்கள் வருத்தப்படுவதிலும் பிரயோஜனமில்லை.

தங்கள் தேச சேவையின் உத்தேசம் எதுவானாலும், தங்கள் சுய ராஜ்யத்தின் கருத்து எதுவாயிருந்தாலும், எனது தொண்டிற்கும் அதன் கருத்துக்கும் தங்கள் ஒத்துழைப்பும் இருந்தால் நல்லது என்பது எனக்கு தெரியும். ஆனால் முடியாவிட்டால் என்ன செய்வது. ஆன வரையில் ஆகட்டுமென்று செய்ய வேண்டியதுதான். தங்களுக்கு தைரியமிருந்தால் இனியும் ஒத்துழைப்புக்கும் தங்கள் உத்தேசம் நிறைவேறுவதற்கும் இடமிருக்கின்றது. நான் இதை ராஜதந்திரமாக எழுதவில்லை. மனதில் உள்ளதை அப்படியே வைத்திருக்கிறேன் என்று தாங்கள் நம்ப வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்."

என்று ஸ்ரீ நாயக்கர் குறிப்பிட்டிருக்கிறார். மற்ற சமயங்களிலும் இது போலவே எழுதிய கடிதங்களும் எழுதச் செய்த கடிதங்களும் இருக்கின்றன.

இந்நிலையில் யார் மீது யாருக்கு பொறாமையோ துவேஷமோ இருக்கக் காரணம் ஏது? நிற்க,



ஸ்ரீ நாயுடுவின் தேசீயம் என்பதுதான் என்ன என்பதாக இதுவரை யாராவது அறியக்கூடியதாக இருக்கின்றதா? அதற்கு என்ன கொள்கை என்பதாகவாவது தெரிவிக்கக் கூடியவராக அவர் இருக்கிறாரா? அதனால் இதுவரை மக்கள் அடைந்த பலன் இன்னது என்பதாகவாவது எதையாவது அவர் காட்டக்கூடுமா?

தேசீயத்தின் பேரால் பிழைக்கின்ற பார்ப்பனரல்லாதார் யாரைப் பற்றியும் நாம் அதிக கவலை எடுத்துக் கொள்வதே இல்லை. ஏனெனில் பார்ப்பனர்கள் எல்லோருக்குமே அதனால் பிழைப்பு நடக்கும்போது பார்ப்பனரல்லாதார் சிலருக்கும் அதனால் பிழைப்பு நடப்பதில் நமக்கு பிரமாதமான கெடுதி ஒன்றும் இல்லை என்பதுதான். அதனால் எந்த பார்ப்பானும் எந்தவித தேசீயத்திற்காகவும் தனது சமூகத்தின் நன்மையை ஒரு சிறிதும் காட்டிக் கொடுத்து பிழைப்பது இல்லை. எந்த "தேசீய"ப் பார்ப்பானாவது வருணாசிரம மகாநாட்டைப் பற்றியாவது, சங்கராச்சாரிகளைப் பற்றியாவது, பார்ப்பனக் கக்ஷி பிரசாரத்தைப் பற்றியாவது, ஏதாவது ஒரு வார்த்தை சொல்லுவதைப் பார்க்கின்றோமா?

"தேசீய" பார்ப்பனரல்லாதார்களுக்கு ஜஸ்டிஸ் கட்சியை வைவதும் பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு விரோதமாகப் பேசுவதுமல்லாமல் வேறு வேலை காங்கிரசிலோ, சுயராஜ்ஜியக் கக்ஷியிலோ, மிதவாதக் கூட்டத்திலோ, தேசீயத்திலோ இருக்கின்றதாக யாராவது காட்ட முடியுமா என்று கேட்கின்றோம்.

ஸ்ரீ வரதராஜுலுவுக்கும், நாயக்கருக்கும் பொறாமையோ துவேஷமோ இருப்பதாக வைத்துக் கொண்டாலும், அது போலவே ஸ்ரீமான்கள் குப்புசாமி முதலியார், அண்ணாமலைப் பிள்ளை, இரத்தினசபாபதி முதலியார், கந்தசாமிச் செட்டியார், ஆதிநாராயண செட்டியார் முதலிய "தேசீய" திருக் கூட்டத்தார்களைப் பற்றியும் தான் எழுதிவருகின்றோம். இதனால் அவர்களுடன் நாயக்கருக்கோ "குடி அரசு"க்கோ ஏதாவது பொறாமையோ துவேஷமோ உண்டா என்று கேட்கின்றோம்.

மற்றும் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ராஜகோபாலாச்சாரியார், ரங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார், வெங்கிட்டரமணய்யங்கார் முதலிய "காங்கிரஸ் தலைவர்களை"ப் பற்றி எழுதி வருகின்றோமே, அவர்களுடன் ஏதாவது நமக்கு பொறாமையோ துவேஷமோ உண்டா என்று கேட்கின்றோம்.

திரு.வி. கல்யாணசுந்தர முதலியாரைப் பற்றியும் காஞ்சீபுரம் முதல் அவர் காங்கிரசில் ராஜீனாமா கொடுக்கும் வரை கண்டித்து எழுதி வந்தோமே, அவருக்கும் நமக்கும் பொறாமையோ துவேஷமோ உண்டா என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

மற்ற பார்ப்பனரல்லாதார்களையும், அதாவது பனகால் ராஜாவின் முட்டாள்தனமென்றும், ஸ்ரீ பாத்ரோ கக்ஷியை விட்டு மரியாதையாய் விலகிக் கொள்ள வேண்டும் என்றும், ஸ்ரீ தணிகாசலம் செட்டியாரால் கக்ஷிக்கும் மானக்கேடு என்றும் எழுதினோமே அவர்கள் பேரில் பொறாமையும் துவேஷமுமா என்று கேட்கின்றோம்.

டாக்டர். சுப்பராயன் அவர்களை மந்திரியானது முதல் பார்ப்பன ரல்லாதார் நன்மைக்கு திரும்பு மட்டும் வெளுத்துக் கொண்டு வந்தோமே, அவர் மீது நமக்கு பொறாமையும் துவேஷமுமா என்று கேட்கின்றோம்.

திரு. ராமலிங்கம் செட்டியாரையும் திரு. ஷண்முகம் செட்டியாரையும் கண்டித்து எழுதி வந்தோமே. அப்பொழுது அவர்களுக்கும் நமக்கும் துவேஷமும் பொறாமையுமா என்று கேட்கின்றோம்.

கோயம்புத்தூர் மகாநாட்டில், கவர்னர் துரையை திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்து அவரை கண்டித்தோமே அப்பொழுது கவர்னரிடம் நாயக்கருக்கு பொறாமையும் துவேஷமுமா என்று கேட்கின்றோம்.

ஸ்ரீ வரதராஜுலு அதே வேலையாய் இருப்பதால் நாம் அதே வேலையாய் கண்டிக்கின்றோம். அவர் அதை விட்டு விட்டவுடன் நாமும் அவரை போற்றி இருக்கின்றோம். மறுபடியும் அவர் மாறினால் மறுபடியும் அவரை வெளியாக்குகிறோம்.

எனவே தாங்கள் செய்யும் அயோக்கியத் தனத்தையும் அதனால் ஒரு பெரிய சமூகத்திற்கே ஏற்படும் தீங்கையும் ஒரு சிறிதும் யோசித்துப்பாராமல், அதை வெளிப்படுத்துபவர்களை மாத்திரம் பொறாமை என்றும், துவேஷம் என்றும், சர்க்கார் பிரசாரம் என்றும் எழுதிவிட்டால் சரியாய் போய்விடுமா என்று கேட்கின்றோம் அல்லது நாயக்கர் பணம் திருடிக் கொண்டார் என்று சொல்லிவிட்டால் தாங்கள் செய்யும் அயோக்கியதனமெல்லாம் மறைந்துபோகுமா என்றும் கேட்கின்றோம்.

நாயக்கர் பணம் திருடியிருப்பது வாஸ்தவமானால் எந்த யோக்கி யனாவது பொறுப்புடன் முறையுடன் நாயக்கரைக் கேட்டால் அது ஆண் தன்மையாகும். அஃதில்லாமல் 'நாயக்கர் பணம் திருடி விட்டார். கணக்கு கொடுக்கவில்லை' என்று இழிபிறப்பு போலவும் கலப்புப் பிறப்புப் போலவும் காணாத இடங்களிலும் பொறுப்பற்ற முறையிலும் நாய் போல் குலைப்பதால் பயன் என்ன? நாயக்கர் பணம் திருடிக் கொண்ட விஷயமாய் விசாரிக்க மாயவரம் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட கமிட்டியாரின் வாயும் கையும் இதுவரை என்ன வேலையில் ஈடுபட்டிருக்கின்றது என்று கேட்கின்றோம்.



ஏன் இதைப்பற்றி ஸ்ரீநாயக்கரை ஒரு வார்த்தையாவது இவர்கள் கேட்கக் கூடாது? கேட்பதற்கு தைரியமும் யோக்கியதையும் இல்லாத ஆட்கள் ஏன் அக்கமிட்டியில் அங்கம் பெற சம்மதிக்க வேண்டும்? நாயக்கர் பிரசாரத்தின் எதிர் பிரசாரத்திற்கு இதுவரை நாயக்கர் மீது யார் என்ன குற்றம் கண்டு பிடித்தார்கள்? அல்லது நாயக்கரின் சொந்த நடவடிக்கைகளில் இதுவரை யார் என்ன குற்றம் சொல்ல முடிந்தது? காஞ்சீபுரத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் நாயக்கர் அங்குள்ள சில காங்கிரஸ்வாதி களையும் பார்ப்பனர்களையும் பார்த்து "நீங்கள் அயோக்கியர்கள், வயிற் றுக்கு சோறு சாப்பிடுபவர்களல்ல" என்று உரத்துச் சொன்ன காலத்தில் ஸ்ரீமான்கள் ஏ. ரங்கசாமி அய்யங்காரும், சி.வி. வெங்கிட்டரமண அய்யங் காரும் "நாயக்கர் மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டும்" என்றும், ஸ்ரீமான்கள் வரதராஜுலுவும், கல்யாணசுந்தர முதலியாரும் "நாயக்கர் இவ் வார்த்தைகளை திருப்பி வாங்கிக் கொள்ள வேண்டும்" என்றும் சொல்லி பார்ப்பனர்களுக்காக சிபார்சு பேசவந்தார்கள். நாயக்கர் ஒரே அடியாய் அது ஒன்றும் முடியாது என்றும், தன்னைத் தூக்கு மேடையின் மீது நிறுத்தினாலும் இதைச் சொல்ல தயாராயிருப்பதாகவும் சொன்னார். அதற்கு பிறகுதான் அதே நிமிஷத்தில் நாயக்கரையும் நிர்வாகக் கமிட்டியில் நியமித்தும் ஸ்ரீனிவாசய் யங்காருக்கு தலைவர் தேர்தல் ஆகியும் ஸ்ரீ நாயக்கர் சம்மதிக்காவிட்டால் தான் அப்பதவியை ஏற்றுக்கொள்ள முடியாதென்று நாயக்கரை சம்மதம் கொடுக்கும்படி கேட்டதும், ஸ்ரீமான்கள் வரதராஜுலுவும் கல்யாண சுந்தர முதலியாரும் நாயக்கரை ஒப்புக் கொண்டதாக சொல்லும்படி வேண்டினது மான காரியங்கள் நடந்தன. இவற்றின் குறிப்பு அப்போதே 'குடி அரசிலும்' 'இந்து' பத்திரிகைகளிலும் கூட பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. எனவே நாயக் கருக்கு காங்கிரசில் மதிப்பிருக்கவில்லையா அல்லது அவர் காங்கிரசையும் 'தலைவர்' களையும் வைத பிறகும் அவருக்கு காங்கிரசில் இடமளிக்கப்பட வில்லையா என்பவைகளை யோசித்தால். நாயக்கரின் சுயநலமும், நாயக்கர் பணம் அடித்ததும், நாயக்கரின் சர்க்கார் பிரசாரமும் விளங்காமல் போகாது என்று சொல்லுகின்றோம். தவிர,

ஸ்ரீ வரதராஜுலு சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள்தான் என்ன என்பதை எடுத்து எழுதியாவது அதை தொலைக்கக் காரணம் சொல்லு கின்றாரா என்றால் அதுவும் இல்லை. எனவே சுயமரியாதை இயக்கத்தைப் பற்றியும் பிரசாரத்தைப் பற்றியும் எந்த பார்ப்பனரும் பார்ப்பனப் பத்திரிகை யும் படாத அவ்வளவு ஆத்திரமும் வேதனையும் நமது வரதராஜுலுக்கு மாத்திரம் உண்டாகக் காரணம் என்ன என்பதை பொது ஜனங்களே கண்டு கொள்ள வேண்டியதுதான். ஆனாலும் அடுத்த வியாசத்தில் தேசீயக் கொள்கை என்ன என்பதையும் சுயமரியாதைக் கொள்கை என்ன என்பதை யும் விரிவாய் எழுதுவோம்.

**குடி அரசு – கட்டுரை – 20.05.1928**



RangaRakes tamilnavarasam.com

## சுயமரியாதைச் சங்கங்கள்

நமது சுயமரியாதை இயக்கமானது தமிழ் நாட்டில் எவ்வளவு பரவ வேண்டுமோ அவ்வளவு பரவிவிட்டதாகக் கொள்வதற்கில்லை.

ஆனால் அது ஒரு விதத்தில் மக்கள் கவனத்தை பெரிதும் இழுத்துக் கொண்டும் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டும் வருகின்றது என்பதில் நமக்கு எள்ளளவு ஐயமும் இல்லை. ஆனால் இவ்வளவோடயே நாம் திருப்தி அடைந்து விட முடியாது. மந்திரிகள் ஆதரித்ததினாலும் சட்ட மெம்பர் முதலிய அறிஞர்கள் நற்சாக்ஷிப் பத்திரம் வழங்குவதினாலும் நமக்கு எந்த வித இலாபமும் ஏற்பட்டுவிடாது. அவர்களும் இதை ஏற்றுக் கொள்ளு கின்றார்கள் என்கின்ற அளவில் திருப்தி அடையலாமே ஒழிய வேறொன்றும் இல்லை.

தவிர நமது இயக்கம் நம் நாட்டில் எவ்வளவு பரவி இருக்கின்றது என்று நினைக்கின்றோமா அதைவிட அதிகம் பரவி இருப்பதாகவே நமது எதிரிகள் பயந்து கிலிபிடித்து நடுக்கமுற்று வருகின்றார்கள் என்பது மாத்திரம் நமக்கு நன்றாய் விளங்குகிறது.

தவிர நமது இயக்கத்தை பரப்பும் விஷயமாய் நாம் இன்னமும் அதிகமான வேலை செய்ய வேண்டியிருக்கின்றது. நமது மாகாணத் திலேயே ஆந்திர நாட்டிலும் மலையாள நாட்டிலும் கர்நாடக நாட்டிலும் உள்ள மக்களில் அநேகருக்கு இப்படி ஒரு இயக்கம் தோன்றி இருக்கும் சங்கதியே சரியாகத் தெரியாது என்பதே நமது அபிப்பிராயம். இப்படி இருக்கும்போது வெளிமாகாணங்களைப் பற்றி கேட்க வேண்டுமா?

எனவே கூடிய சீக்கிரத்தில் இவ்வியக்கத்தை இன்னமும் சரியான ஒழுங்குமுறையில் அமைக்க வேண்டியது நமக்கு மிகுதியும் அவசரமா யிருக்கின்றது. ஏனெனில் அடுத்தாப்போல் சமீபத்தில் நமது நாட்டுக்கு வரப் போகும் அரசியல் விசாரணைக் குழுவினரான 'சைமன் கமிஷன்' வருவ தற்கு முன்பாகவே நாம் ஒவ்வொரு ஊரிலும் சங்கங்கள் நிறுவி அங்கத் தினர்களை சேர்க்க வேண்டும். தமிழ் நாட்டில் ஒரு ஐம்பதினாயிரம் அங்கத்தி னர்களையாவது சேர்த்து நமது நாட்டிலுள்ள எல்லா சங்கங்களையும் விட



இதுவே அதிக ஜனப் பிரதிநிதித்துவம் கொண்டது என்பதை உணர்த்திவிட வேண்டும். அன்றியும் இச்சங்கந்தான் பொதுமக்களின் சரியான பிரதிநிதித்துவம் பொருந்தியது என்பதை மெய்ப்பித்துவிட வேண்டும்.

வரப்போகும் கமீஷனிலோ சீர்திருத்தத்திலோ மக்களின் சுய மரியாதைக்கேற்ற திட்டங்கள் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அதில் அதிகாரமும் பதவியும் சம்பளமும் உள்ள உத்தியோகங்களை எவ் வளவுக் கெவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு குறைக்க முயல வேண்டும். குறைக்க முயலாவிட்டாலும் இனியும் அதிகமாகப் பெருகி ஏழைகளை துன்புறுத்தி பொது மக்கள் ஒற்றுமையைக் குறைத்து கக்ஷி பிரதிகக்ஷிகள் ஏற்படுத்திக் கொடுமையான ஆட்சி முறை நடைபெறச் செய்யும் தன்மையையாவது நிறுத்தவேண்டும். எனவே ஜில்லாக்கள், தாலூக் காக்கள், கிராமங்கள் தோறும் நம் சங்கங்களை, நிறுவவும் அங்கத்தினர் களைச் சேர்க்கவும் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வொரு சுயமரியாதை தொண்டரை நியமிக்க வேண்டியது இது சமயம் மிகவும் அவசியமா யிருக்கின்றது. ஆகையினால் இதை உத்தேசித்து இப்போது திருச்சி ஜில்லா வுக்கு திரு. இராவணதாஸையும், தஞ்சை ஜில்லாவுக்கு திரு. காளியப்ப தேவரையும், கோவை ஜில்லாவுக்கு திரு. A.R. சிவானந்த முதலியாரையும் நியமிக்க உத்தேசித்து அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். மற்ற ஜில்லாக்களுக்கும் ஒவ்வொரு தொண்டரை சிபார்சு செய்யும்படி ஆங்காங்கு உள்ள பிரமுகர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். அவர்களின் பதில் வந்த உடன் நியமனம் செய்யப்படுவார்கள். இச் சுயமரியாதை சங்கத்தின் சார்பாக சட்டசபை, ஜில்லா போர்டு, தாலூக்கா போர்டு, முனிசிபாலிடி முதலியவற்றின் தேர்தல்களுக்கு அபேக்ஷகர்களை நிறுத்தவோ அல்லது நமது சுயமரியாதைத் திட்டத்தை ஏற்றுக் கொண்ட வர்களுக்கு மாத்திரம் தேர்தல்களில் உதவி செய்யவோ கூடியதான நிலை மையை நாம் அடுத்த சட்டசபை தேர்தல்களுக்குள் அடைந்தாக வேண்டும். அப்படிக்கில்லையானால் இப்போதைய நிலைமையில் சுலபத்தில் மக்கள் சுயமரியாதைத் தன்மையை அடைய முடியாதென்பதாகவே காணப் படுகின்றது.

நமது சுயமரியாதை திட்டத்திற்கு அரசாங்க சட்டங்கள் எவ்வளவோ இடையூறாக இருந்து வருகிறது.

உதாரணமாக அரசியல் தன்மையில் பறையர், சக்கிலிகள் என்று சொல்லப்படுவதான குற்றமற்ற பெயர்களை மாற்றிக் கொண்டு ஆதி திராவிடர்கள் என்கின்ற பெயரை வைத்துக் கொள்ள ஏற்றுக் கொண்ட சர்க்கார், தாசிமகன், அடிமை என்கின்ற தத்துவம் கொண்ட சூத்திரன் என்கின்ற பெயரை மாற்ற சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று சொல்லி விட்டார்கள். சட்டத்தைத் திருத்த மதம் இடம் கொடுக்கவில்லை என்று ஜனப்



RangaRakes tamilnavarasam.com

பிரதிநிதிகள் என்போர்கள் சொல்லிவிட்டார்கள். இந்நிலையில் சுயமரியாதை உணர்ச்சியுள்ள கனவான்கள் சட்டசபையில் இருந்தால் சூத்திரன் என்ற பெயரை மாற்ற சட்டமும் மதமும் குறுக்கிடுமா என்று கேட்கின்றோம்.

தவிர, பார்ப்பனப் புரோகிதம் இல்லாமல் செய்யப்படும் கல்யாணங்கள் சட்டப்படி செல்லுபடியாகாது என்பதாக சட்டத்தில் இருக்கின்றது. இந்துலாப்படி பார்ப்பனனும் பார்ப்பனச் சடங்கும் இல்லாமல் ஒரு கல்யாணம் நடந்தால் அது சட்டப்படி நடந்த கல்யாணமாகக் கருத முடியாத நிலையில் சட்டம் செய்யப்பட்டிருக்கின்றது.

சொத்துக்கள் பங்கு வீதத்திலும், ஆண், பெண் தன்மையிலும், தகப்பன் மகள் முறையிலும் சட்டத்தில் பல ஊழல்கள் இருக்கின்றன.

மற்றும் அநேக விஷயங்களில் சுயமரியாதைக்கு விரோதமாக எவ்வளவோ கொடுமைகள் சட்டத்தில் இருக்கின்றன. இவைகளை எல்லாம் சட்டசபைகள் மூலம் மாற்றினாலன்றி நமது லட்சியம் நிறைவேற்றுவதற்கு மார்க்கமில்லை என்றே சொல்லுவோம். சட்டத்தினால் தடைகளைவைத்துக் கொண்டு விபரமில்லாமல் வெள்ளைக்காரர் மீதும் பொது ஜனங்கள் மீதும் குற்றம் சொல்லிக் கொண்டிருப்பதில் ஒரு பலனும் இல்லை.

ஆகையால் நாம் நமது இலட்சியத்தை அடைய வேண்டுமானால், வைதீகர்கள் வசமும், வைதீகத்தின் அடிமைகள் வசமும் அதிகாரங்களை ஒருநாளும் விட்டுவைத்தல் கூடவே கூடாது என்பதே நமது அபிப்பிராயம். ஜஸ்டிஸ் கக்ஷி என்பதான தென்இந்திய நல உரிமைச் சங்கம் பெரும்பாலும் சுயமரியாதை இலட்சியத்தை ஒப்புக் கொள்ளுகின்றதானாலும் அதிலுள்ள சிலர் அதிகாரத்தையும் உத்யோகத்தையும் பொருத்த வரையில் மாத்திரம் பார்ப்பனீயத்தை ஒழிக்க சம்மதிக்கிறார்களேயொழிய நித்திய வாழ்க்கையில் பார்ப்பனர் காலில் விழுவதையோ பார்ப்பனர் கால் கழுவின தண்ணீரை சாப்பிட்டு தலையில் தெளித்துக் கொள்வதையோ நீக்கிவிட அநேகர் சம்மதிப்பதில்லை.

உதாரணமாக ஒரு பார்ப்பனன் சட்டசபை மெம்பராகவோ தாலூக்கா போர்ட் மெம்பராகவோ வருவதாயிருந்தால் மாத்திரம் பார்ப்பனீயம் கூடாது என்று சொல்லி பார்ப்பன ஆக்ஷியை வைய வருகிறானேயல்லாமல் அதே பார்ப்பனன் இவருக்கு குருவாகவோ மோக்ஷத்திற்கு வழிகாட்டியாகவோ கடவுளை அறிமுகப்படுத்துபவனாகவோ வருவதையும் அப் பார்ப்பனன் காலில் விழுவதையும் ஆக்ஷேபிக்க ஒரு சிறிதும் சம்மதிப்பதே இல்லை. எனவே, சுயமரியாதையின் தத்துவத்தை ஜஸ்டிஸ் கட்சியார் என்கின்ற தென் இந்திய நலவுரிமைக் கட்சியார் உணர்ந்திருக்கின்றார்கள் என்று சொல்லி விட முடியாது. ஆதலால் நமது லக்ஷியத்திற்கு அக்கக்ஷியையே முழுவதும் நம்பி



விட்டுவிடுவதற்கில்லாத நிலையில் இருக்கின்றோம். ஆதலால் நமக்கென்று தனிக் கட்சி ஒன்று சட்டசபையில் அதாவது நமது சுயமரியாதைக்கு இடையூறாக இருக்கும் சட்டத் தடையை ஒழிப்பதற்காவது அவசியம் வேண்டியிருக்கின்றது.

இவ்விஷயத்தில் அலட்சியமாய் இருந்துவிட்டு எவ்வளவுதான் பிரசாரம் செய்தாலும், எவ்வளவு தான் தியாகமும் கஷ்டமும் நஷ்டமும் அடையத் தயாராயிருந்தாலும் ஒரு பலனையும் அடைந்து விட முடியாது. ஆதலால் இப்போதே ஆங்காங்குள்ள சுயமரியாதை வீரர்கள் ஆங்காங்கு சங்கங்கள் கண்டு அங்கத்தினர்கள் சேர்க்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 27.05.1928**



RangaRakes tamilnavarasam.com

# எது தொலைய வேண்டும்

தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கம் தோன்றிய இந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக அரசியல் புரட்டர்களுக்கு பேச மேடையில்லாமலும் மதப் புரட்டர்களுக்கு மரியாதை இல்லாமலும், புராணப் பிரசங்கத்திற்கு இடமில்லாமலும் செய்து விட்டதோடு இவைகள் மூலம் அவரவர்களின் சொந்த வியாபாரத்திற்கும் இடையூறு ஏற்பட்டு விட்ட விபரம் இவைகளி னால் வயிறு வளர்த்துக் கொண்டிருந்தவர்கள் நெருப்பில் விழுந்த புழுத் துடிப்பது போல் துடிப்பதினாலே விளங்கும். இதுபோலவே பார்ப்பன ஆதிக் கமும் புரோகிதர்கள் ஆதிக்கமும் ஆங்காங்கு ஒருவாறு மறைந்து கொண்டே வருவதும் வெள்ளிடைமலை. இந்த இரண்டு ஆண்டுகளுக்குள் சுமார் பதினாயிரம் பேருக்கு மேலாகவே போலி அரசியலையும், புரட்டுப் பார்ப்பனீ யத்தையும் விட்டு விலகி விட்டதாக அவர்கள் தங்கள் பெயரை வெளிப் படுத்தி இருப்பதையும், ஆயிரக்கணக்கான சடங்குகள் பார்ப்பனர்களை நீக்கி நடத்தி இருப்பதாக வெளியாகி வருவதையும், அநே கர் தங்கள் குலகுரு என்கின்ற போலிக் குருமார்களை நீக்கியிருப்பதையும் கவனித்துப் பார்ப் பவர்கள், இச்சுயமரியாதை இயக்கம் இத்தமிழ் நாட்டில் எவ்வளவு தூரம் வேரூன்றி வருகின்றது என்பதை உணரலாம். இந்நிலையில் ஸ்ரீவரதராஜுலு நாயுடு சுயமரியாதை இயக்கம் தொலையவேண்டும் என்றும், அதைத் தொலைத்தாலொழிய தேசீயம் வளராதென்றும், ஆதலால் அதைத் தொலைப் பது என்பதே தனது வேலையாகக் கொண்டிருப்பதாகவும் வீரமுழக்கம் செய்கிறார். எனவே இது எதற்காக என்பதைப் பற்றியும் சுயமரியாதை இயக்கம் தொலைய வேண்டுமா அல்லது ஸ்ரீமான்கள் வரதராஜுலு, சத்தியமூர்த்தி, குப்புசாமி முதலியார் போன்றார்களின் தேசீய இயக்கம் தொலைய வேண்டுமா என்பதைப் பற்றியும் ஒரு முடிவுக்கு வரவேண்டுமாய் பொதுமக்களை வேண்டிக் கொள்கின்றோம்.

திரு. வரதராஜுலு முதலியோரின் தேசீயம் என்பது காங்கிரசா, அல்லது சுயராஜ்யக் கட்சியா, அல்லது தேசீயக் கட்சியா, அல்லது ஓம்ரூல் கட்சியா, அல்லது மிதவாதக் கட்சியா, அல்லது மற்றெதுவோ என்பதை திரு. வரதராஜுலு சொல்லுவாரா? அல்லது அவருடைய தலைவர்களாவது மற்றக் கூலிகளாவது சொல்வார்களா என்று கேட்கின்றோம். அன்றியும் இவைகளின்



எதனுடைய கொள்கைகளாவது இன்னது என்பது வரதராஜுலு அவர்களுக் குத் தெரியுமா? என்று கேட்கின்றோம்.

ஸ்ரீரங்கம் கோவிலில் நடக்கும் வைகுண்ட ஏகாதசி உற்சவம் இன்னது என்று தெரியாமலும், அதனால் இன்ன பலன் உண்டு என்பதை உணராமலும், எப்படி ரயில்வே கம்பெனிக்காரன் தனது வரும்படிக்காக எல்லோரையும் “ஸ்ரீரங்கம் உற்சவத்திற்குப் போங்கள்” என்று விளம்பரம் செய்கின்றானோ அதுபோலவும், கும்பகோணம் மாமாங்கக் குளத்தின் தண்ணீரின் யோக்கி யதை இன்னதென்று தெரியாமலும், அதில் குளித்தால் இன்ன பலன் கிடைக்கும் என்று தெரியாமலும், எல்லோரும் மாமாங்கத்திற்குப் போய் மோட்சமடையுங்கள் என்று எப்படி ரயில்வேகாரன் விளம்பரம் செய்கின் றானோ அது போலவும் சுயராஜ்ஜியம் இன்னது, தேசீயம் இன்னது அதன் பலன் இன்னதாகும் என்பதைப் பற்றி ஒரு சிறு அறிவும் இல்லாமல் “எல்லோரும் சுயராஜ்ஜியம் அடைய வேண்டும்” “தேசீயத்தில் சேர வேண்டும்” என்று தங்கள் தங்கள் லாபத்திற்கும் வயிற்றுப் பிழைப்புக்குமாக கூப்பாடு போடுவதல்லாமல் இதில் வேறு ஏதாவது காரியம் உண்டா என்று கேட்கின்றோம்.

இந்த 42 வருஷகாலமாக சுயராஜ்ஜியத்திற்கு பாடுபட்டவர்களின் நிலைமை என்ன? அதனால் மக்களுக்கு ஏற்பட்ட பலன் என்ன? என்று கேட்ட கேள்விக்கு யாராவது இதுவரை பதில் இறுத்திருக்கிறார்களா? ஒரு சிறு விளம்பரக்காரன் ஏதாவது ஒன்று சொன்னதாக வெளியானால் உடனே அவனைப் பிடித்து அவனுக்கு எலும்பு போட்டு அதை மறுக்கும்படி கடிதம் எழுதி வாங்கியோ கற்பனை செய்தோ மறு நாளே பதிலெழுதும் முறையில் வெளிப்படுத்தப்படும். “தமிழ் நாடு” போன்ற பத்திரிகைகளும் திரு. வரதராஜுலு போன்ற தேசீயப் பிழைப்புக்காரர்களும் 33 கோடி மக்களை ஏமாற்றிப் பிழைக்கத்தக்க வழிதான் சுயராஜ்ஜியமும் தேசீயக் கூப்பாடும் என்றால் இவர்கள் ஏன் அதற்கு உடனே பதில் சொல்லக் கூடாது என்று கேட்கின்றோம்.

இன்றைய உத்தியோக பெருக்குக்கும், வரி உயர்வுக்கும், கட்சிப்பிரதி கட்சிக்கும், ஏழைகள் கஷ்டத்திற்கும், அரசாங்கத்தின் அநீதிக்கும் சுயராஜ் ஜிய கூச்சலும் தேசீயப் புரட்டும் காரணமா இல்லையா என்று கேட்கின்றோம்.

இவ்வளவு கொடுமையைச் செய்த காங்கிரசும் தேசீயமும் மக்கள் ஒற்றுமைக்காவது சமத்துவத்திற்காவது ஏதாவது ஒரு சிறு நன்மையாவது செய்து இருக்கின்றதா? அல்லது சமத்துவத்தைப் பற்றிய கொள்கை ஏதாவது காங்கிரசில் இருக்கின்றதா?

ஒத்துழையாமையின் போது காங்கிரசில் நுழைக்கப்பட்ட 1. சமத்துவம்



RangaRakes tamilnavarasam.com

2. தீண்டாமையொழித்தல் 3. மதுவிலக்கல் 4. கதர் 5. ஒற்றுமை ஆகிய மக்களுக்கு வேண்டிய திட்டங்களில் ஏதாவது ஒன்று இன்றைய காங்கிரசிலோ தேசீயத்திலோ இருக்கின்றதா? என்று கேட்கின்றோம்.

அன்றியும் சென்ற வருஷ காங்கிரசில் கொண்டு வரப்பட்ட சமத்துவத் தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் ஏற்றுக்கொண்டதா என்றும், தீண்டாமை ஒழிக்கக் கொண்டு வந்த தீர்மானத்தை பம்பாய் மாகாண காங்கிரஸ் ஏற்றுக் கொண்டதா என்றும், எல்லோருக்கும் சம உரிமை கொடுக்க வேண்டுமென்று கொண்டு வந்த தீர்மானத்தை சென்னை மாகாண காங்கிரஸ் அனுமதித்ததா? என்றும், கதரைத் தவிர வேறு ஒன்றும் கட்டக் கூடாதென்ற தீர்மானத்தை காங்கிரஸ் வைத்திருக்கிறதா? என்றும், முஸ்லீம்களுக்கு அவர்களுக்குள்ள உரிமையைக் கொடுக்க வேண்டும் என்பதை காங்கிரஸ் ஒப்புக் கொள்ளுகிறதாவென்றும் கேட்கிறோம்.

இந்நிலையில் காங்கிரசும் தேசீயமும் மக்களுக்கு என்ன நன்மை செய்து விட்டது, அல்லது செய்யக் கூடும் என்று கேட்கிறோம். இவைகள் ஒன்றும் இல்லாமல் உத்தியோகங்களை உண்டாக்குவதும், அதற்காக அதிக சம்பளங்களை ஏற்படுத்துவதும், அதற்காக வரியை அதிகப்படுத்துவதும், வரியை ஏழைமக்கள் தலையில் விதிப்பதும், அவ்வுத்தியோகத்தை ஒரு வகுப்பாரே அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டு கூலிகளை விட்டு கூப்பாடு போடுவதும் அக்கூலிக்காரர்களுக்குள் ஒருவராக திரு. வரதராஜுலு தன்னையும் பதிவு செய்துகொண்டு வாழ்வதும் அல்லாமல் தேசீயத்திற்கு வேறு ஏதாவது அர்த்தமோ பலனோ திரு. வரதராஜுலு சொல்லக் கூடுமோ என்று அறை கூவி அழைக்கிறோம்.

நிற்க, சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் என்ன என்பது பற்றியும் அதனால் யார் பிழைக்கிறார்கள் என்பதையும் சற்று யோசித்துப் பார்ப்போம்.

மக்களுக்கு பிராணனைவிட மானம் பெரிதென்பது அதன் முதலாவது கொள்கையாகும்.

எல்லோரும் பிறவியில் சமம் என்பது இரண்டாவது கொள்கையாகும்.

பெண்களுக்குச் சம உரிமை இருக்க வேண்டுமென்பது மூன்றாவது கொள்கையாகும்.

ஜாதி மத பேதங்கள் தொலையுமட்டும் நாட்டின் ஒற்றுமையையும் எல்லாருடைய நம்மையையும் உத்தேசித்து ஒவ்வொரு ஜாதி மதத்திற்கும் அரசியலில் சரியான பிரதிநிதித்துவம் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும்



என்பது நான்காவது கொள்கையாகும்.

கண்மூடி வழக்கங்களும் மூட நம்பிக்கையும் தொலைய வேண்டு மென்பது ஐந்தாவது கொள்கையாகும்.

வேதம், சாஸ்திரம், புராணம், பழக்கம் என்றும் காரணங்களால் மனிதனின் பகுத்தறிவை கட்டுப்படுத்தக்கூடிய பார்ப்பனீயம் ஒழிந்து சுயேச்சையும் அறிவும் வளர வேண்டும் என்பது ஆறாவது கொள்கையாகும்.

இது போன்ற இன்னும் அநேக கொள்கைகளை சுயமரியாதை இயக்கம் இன்றைய தினம் தாங்கிக் கொண்டு மூலை முடுக்குகளிலெல்லாம் வேலை செய்து வருகிறது.

அதில் வேலை செய்பவர்கள் ஒவ்வொருவரும் இதுவரை தன்தன் சொந்தக் காசை செலவு செய்து தொண்டாற்றி வருகின்றார்கள்.

திரு. வரதராஜுலுவும் அவர் கூட்டமும் தேசீய விளம்பரத்தால் பிழைப்பது போல் சுயமரியாதை விளம்பரத்தால் யாராவது பிழைக்கின்றார்களா? யாருக்காவது இதனால் ஒரு அம்மன் காசு லாபமுண்டா?

எனவே இம் மாதிரி மக்களுக்கு உண்மையான விடுதலையளித்து அறிவைப் பரவச் செய்யத்தக்க சுயமரியாதை இயக்கம் தொலைய வேண்டுமா? அல்லது கூலிகளுக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் மாத்திரம் அனுகூலமாயிருந்து நாட்டையும் பாழாக்கும் தேசீயம் தொலைய வேண்டுமா? என்பதைப் பற்றி யோசித்து முடிவாக எது தொலைய வேண்டும் என்பதை உணருமாறு பொது மக்களை வேண்டிக்கொள்ளுகிறோம். திரு. வரதராஜுலோ அவரது கூட்டாளிகளோ மாத்திரமல்லாமல் வேறு யார் இதற்கு தக்க பதிலுரைத்தாலும் வந்தனத்தோடு ஏற்று சமாதானம் சொல்ல தயாராயிருக்கின்றோம்.

**குடி அரசு – கட்டுரை – 27.05.1928**



RangaRakes tamilnavarasam.com

# செங்கல்பட்டு ஜில்லா போர்டு ஆரம்ப ஆசிரியர் மகாநாடு

"திரு. ரெட்டியார் அவர்களே! உபாத்தியாயர்களே மற்றும் இங்கு கூடியிருக்கும் சகோதர சகோதரிகளே! இந்த ஆசிரியர் மகாநாட்டுக்கு இந்த ஜில்லா போர்டார் என்னைத் தலைவனாக யிருக்க வேணுமாய் கேட்டுக் கொண்டது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. ஏனென்றால் இது "கல்வி" என்பது சம்பந்தமான ஆசிரியர் மகாநாடாயிருப்பதால், அந்தக் கல்வி என்பது ஒரு சிறிதும் இல்லாதவனும், ஆசிரியர் என்பவர்களிடத்தில் கொஞ்சமாவது பயிற்சி பெறாதவனுமான நான் இம் மகாநாட்டுக்கு தலைமை வகிக்க எவ்விதத்தில் தகுதியுடையவன் ஆவேன் என்பதுதான். நான் என்னுடைய ஒன்பதாவது பத்தாவது வயதிற்கு மேல் எந்த பள்ளிக் கூடத் திலுமே வாசித்தவனும் அல்ல. அந்த ஒன்பது வயதிற்கு உள்பட்ட காலத்திலும் என்னை பள்ளிக்கு அனுப்பிய காரணமெல்லாம், நான் வீட்டில் உள்ளவர்களுக்கு தொல்லை விளைவிக்காமலிருக்க வேண்டுமென்ற கருத்துக்கொண்டு ஓர் திட்டத்தில் காவலில் வைப்பதற்காகவே, அதுவும் ஒரு திண்ணைப் பள்ளி உபாத்தியாயர் வசமே ஒப்படைக்கப்பட்டிருந்தேன். அந்தப் பள்ளியில் இருந்த காலமும், உபாத்தியாயர்களுக்கும் பிள்ளை களுக்கும் தொல்லை விளைவிப்பதும், அவர்களிடம் அடிபடுவதுமான காலந்தான், நான் ஏதாவது இரண்டொரு எழுத்தை கற்றக் காலமாயிருக்கும். இதை நான் அநேக சந்தர்ப்பங்களில் பல பொதுக் கூட்டங்களில் சொல்லி யிருக்கின்றேன். இதை ஆதாரமாய் வைத்துக் கொண்டுதான் ஒரு சிலர் அதாவது என்னுடைய கொள்கைகளுக்கு முரண்பட்டவர்களோ அதனால் நஷ்டப்பட நேரிடுகிறவர்களோ என்னைக் கண்டிப்பதற்கு இதை உபயோ கித்துக் கொள்கிறார்கள். என்னவென்றால் "நான் கல்வி அறிவு அற்றவ னென்றும் அதனால் எனது கொள்கைகள் அறிவு அற்றதென்றும்" சொல்லி யும் எழுதியும் வருவதைப் பார்க்கின்றேன். ஆனாலும் உங்கள் ஜில்லா போர்டு தலைவர் திரு. எம். கே. ரெட்டியார் அவர்களுக்கு என்மீதுள்ள அன்பும் நம்பிக்கையும், நான் எவ்வளவோ மறுத்தும் என்னையே மகாநாட் டுக்கு தலைமை வகிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தியதால் வேறு வழியில்லாமல் நான் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. நீங்கள் எந்தவித மான சிறந்த உபந்நியாசத்தையோ எதிர்பார்க்க முடியாது. உங்கள் ஜில்லா



போர்டு தலைவர் இந்த மகாநாட்டை திறந்து வைக்கும்போது செய்த வரவேற்புப் பிரசங்கமானது மிகவும் அற்புதமாகவும் ஆணித்தரமானதாகவும் பெரிய அநுபோகமும் ஆராய்ச்சியும் பொருந்தியதாகவும் இருந்தது. அது உங்கள் நிலையை விளக்கியதுடன் நீங்கள் செய்ய வேண்டியதையும் நன்றாய் எடுத்துக்காட்டி இருக்கின்றது. அவ்வுபன்னியாசம் உங்களுக்கு மாத்திர மல்லாமல் உங்கள் மாணாக்கர்களுக்கும் அவர்கள் பெற்றோர்களுக்கும் மற்றும் கிராம வாசிக ளுக்கும் பொதுநல சேவைக்காரர்களுக்கும் மிகுதியும் பயன்படக்கூடியது.

அது போல நான் எதையும் எடுத்துச் சொல்ல முடியாது. தவிர அக்கிராசனம் வகித்தவன் என்கின்ற முறையில் நான் ஏதாவது இரண்டு வார்த்தை சொல்ல வேண்டும் என்றால் அதுபோல் ஆராய்ச்சியோடு ஒன்றும் சொல்ல முடியாது என்றும் ஏதோ என் சிற்றறிவிற்கு எட்டிய விஷயம் எதையாவது என் சொந்த முறையில்தான் சொல்லக் கூடும் என்றும் முதலில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஆசிரியர்களே! நான் அறிந்த வரையில் தற்கால ஆசிரியர்கள் என்கின்றவர்கள் ஒருவித தொழிலாளிகளே. அதாவது ஜீவனத்திற்காக வேலையோ கூலியோ செய்கின்ற மக்களைப் போல் வயிற்றுப் பிழைப்புக் காரர்களேயல்லாமல் உண்மையான ஆசிரியத்தன்மையுடையவர்கள் அல்ல என்பதே எனது அபிப்பிராயம். எப்படி ஒரு மனிதன் தன் ஜீவனத்திற்கு மூட்டை தூக்குகிறானோ, மாடு மேய்க்கிறானோ, வண்டி ஓட்டுகிறானோ, வக்கீல் வேலை செய்கிறானோ, குமாஸ்தாவாக இருக்கிறானோ அப்படியே உபாத்தியாயர் வேலை என்பதும் ஒரு தொழிலாகவே ஏற்பட்டு விட்டது. ஒவ்வொரு உபாத்தியாயரும் தங்கள் தங்களை உபாத்தியாயர் வேலைக்குத் தகுதி ஆக்கிக் கொண்டதின் கருத்தே அவர்களின் ஜீவனத்திற்கு ஏதாவது தொழில் வேண்டாமா என்கின்ற கருத்து கொண்டுதானேயல்லாமல் ஏதாவது ஆசிரியத்தன்மையில் ஆசை இருந்து ஏற்பட்டதாக எனக்கு தோன்றுவ தில்லை. ஆதலால் இம் மாதிரி மகாநாட்டுக்கு உபாத்திமைத் தொழிலாளர் மகாநாடு என்று சொல்லுவதுதான் பொருத்தமான பெயராகும். அதுபோலவே உங்களிடம் தங்கள் பிள்ளைகளை படிக்கவிடும் பெற்றோர்களும், பிள்ளை களின் வயிற்றுப் பிழைப்புக்கு ஏதாவது வழி ஏற்பட சற்றுப் படிக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடுதான் தமது பிள்ளைகளை படிக்க வைக்கிறார்களே யொழிய அவர்களும் படிப்பை வயிற்றுப் பிழைப்பைத் தவிர வேறு காரியத் திற்கு கருதுவதில்லை. உங்கள் ஜில்லா, தாலூக்கா போர்டுகளும் முனிசிபா லிட்டிகளும் கூட அந்த கருத்துடன்தான் பள்ளிக்கூட நிர்வாகம் செய்து வருகின்றார்கள். கடைசியாக சர்க்காரும் கூட இவ்வளவு வரிப் பணத்தை படிப்புக்காக செலவு செய்தும் படிப்பு இலாக்கா விஷயத்தில் எவ்வளவோ கவலை செலுத்தியும் வந்தாலும் தங்கள் அரசாங்கம் தங்கள் இஷ்டப்படி



RangaRakes tamilnavarasam.com

நடைபெற கூலிகளைத் தயார் செய்யும் கருத்தோடுதான் செய் கின்றார்கள். அதனால்தான் பலவழிகளிலும் தற்கால கல்விக்கு வயிற்றுப் பிழைப்புக் கல்வி என்றும் அடிமைக் கல்வி என்றும் சொல்லப்படுகிறது. மனிதனுக்கு கல்வியின் அவசியமெல்லாம் மனிதன் தன் அறிவை வளர்க்கவும் அவ்வறிவால் தான் இன்புறவும் மக்கள் இன்புறவுமான தன்மை ஏற்படவும் அனுகூலமானதாக இருக்க வேண்டும் என்பதற்கே. இப்போதைய கல்வி எவ்வளவு அதிகமாக கற்றவனானாலும் அது அவனது அறிவுக்கு ஒரு சிறிதும் சம்மந்தமில்லாத தாகவே இருக்கின்றது. எவ்வளவு பெரிய கல்வியும் ஒரு கலையாகவும் தொழி லாகவும் போய்விட்டதேயல்லாமல் பகுத்தறிவுக்கு ஒரு சிறிதும் பயன்படு வதாக இல்லை. ஒரு நிமிஷத்திற்கு 100 கவி பாடக் கூடிய வித்வானானாலும் அவன் அக்கவி பாடுவதில் அதாவது ஒரு நிமிஷத்திற்கு நூறு அச்செழுத்தை கோர்க்கும் ஒரு கம்பாசிட்டருக்கு சமானமான தொழிலாளிதானே ஒழிய அவனை ஒரு பெரிய அறிவாளி என்று சொல்லிவிட முடியாது. அது போலவே ஒரு பாட்டுக்கு நூறு அர்த்தம் சொல்லக்கூடிய ஒரு பண்டிதனோ ஒரு பாஷ்யக்காரனோ என்பவன், ஒரே தோலில் நூறுவிதமான செருப்புத் தைக்க கற்றுக் கொண்ட ஒரு சக்கிலிக்கு மேலானவனென்று சொல்லிவிட முடியாது.

ஒரு பாட்டுக்கு நூறு அர்த்தம் சொல்லும் பண்டிதனுக்கு எப்படி செருப்பு தைக்க தெரியாதோ அது போல சக்கிலிக்கும் அர்த்தம் சொல்லத் தெரியாது. ஆனாலும், இருவர்களும் இரு தொழிலில் இரு வித்தையில் சிறந்தவர்களே ஒழிய அறிவாளிகள் என்று சொல்லிவிட முடியாது.

உதாரணமாக சில பெரிய சட்டம் படித்த வக்கீல்களை விட சிறிய சட்டம் படித்த வக்கீல்கள் கெட்டிக்காரர்களாய் இருக்கின்றார்கள்.

சிலருக்கு படிப்பெல்லாம், நெட்டுருப்போட்டு ஒப்புவிக்க முடிகிற தல்லாமல் தங்களுக்கு ஒரு காரியத்திற்கும் உபயோகப்படுவதில்லை.

உதாரணமாக ஒரு பெரிய விஞ்ஞான சாஸ்திரி அதாவது சைன்ஸ் படித்த பண்டிதன் ஒரு புளியமரத்தடியில் பேய் இருப்பதாக யாராவது சொல்லிவிட்டால் அந்தப் புளிய மரத்தடியில் நடக்க நேரும்போது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நடுக்கத்துடன் நடக்கின்றான். தன் பெண்ஜாதியை பேயோட்ட கோயிலுக்கு அனுப்பிக் கொடுக்கிறான், உடற்கூறும் அதன் சிகிச்சையும் படித்த பெரிய பண்டிதனான டாக்டர் கூட தன் பெண்ஜாதியோ மகளோ வீட்டிற்கு தூரம் என்றால் உடனே வெளியில் உட்கார வைத்து விடுகிறான் அல்லது கோழிக்கூடு போன்ற சிறு அறைக்குள் இருக்கச் செய்து விடுகின்றான் அல்லது நிழல் மேலேபட்டால் தீட்டு என்று சொல்லி விடுகின்றான். இரவில் வெளியில் தள்ளி கதவைத் தாளிட்டு விட்டு உள்ளே படுத்து தூங்குகிறான். தனது குழந்தை நொண்டியாய்ப் பிறந்தால், தான் முன்



ஜென்மத்தில் செய்த வினை என்று வருத்தப்படுகின்றான்.

பெரிய வான சாஸ்திர பண்டிதன் கிரகணத்தின் போது ஊறுகாய்ச் சட்டியில் அருகம்பில்லைப் போட்டுவிட்டு கிரகணம் ஆரம்பிக்கும்போது ஒரு முழுக்கும் நீங்கும்போது ஒரு முழுக்கும் போடுகிறான். பெரிய ஞான சாஸ்த்திர பண்டிதன் என்பவனும் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட ஊருக்குப் போனால் மோட்சம் என்று குறிப்பிட்ட குளத்து தண்ணீரில் (அது எவ்வளவு அழுக்காயிருந்தாலும்) முழுகினால் தான் செய்த அக்கிரமங்களின் பலன் எல்லாம் தீர்ந்து விடும் என்றும் நினைத்துக் கொண்டு முழுகி விட்டு இதுவரையில் செய்த பாவம் எல்லாம் தீர்ந்துவிட்டது என்று தன்னை தைரியப் படுத்திக் கொண்டு புதுக்கணக்கு போட்டு மறுபடியும் அக்கிரமங்களைச் செய்ய தைரியவானாகி விடுகிறான். பெரிய ஸ்தாவர சாஸ்திரமும் ஜீவ ஜெந்து சாஸ்திரமும் படித்தவன் நாயைக் கொன்றால் பாவம் இல்லை, நரியைக் கொன்றால் பாவம் இல்லை, கெருடனைக் கொன்றால், குரங்கைக் கொன்றால் பாவம் என்கிறான். பால் சாப்பிட்டால் மாம்ச பக்ஷணமல்ல, ஆடு, கோழி சாப்பிட்டால் மாம்ச பக்ஷணம் என்கின்றான்.

இம்மாதிரி எத்தனையோ காரியங்களில் படித்தவர்கள் என்பவர் களின் நிலைமை அறிவுக்கும், படிப்புக்கும் சம்பந்தமில்லாமலே இருக் கின்றது. எப்படிப் பல புஸ்தகங்கள் நிறைந்த அலமாரிக்கு ஒரு சிறிதும் புஸ்தகங்களின் தன்மை தெரியாதோ அதுபோலவே பல புஸ்தகங்களையும் அலமாரிக்கு பதிலாக அவைகளை உள்ளத்தில் வைத்து இருக்கிறதாகக் காணப்படும் நகரும் அலமாரிகளான பண்டிதர்கள் கடுகளவு பகுத்தறிவும் புஸ்தகத்தின் தன்மையும் அறியாதவர்கள் அனேகர்கள் இருப்பது எனக்குத் தெரியும். எனவே கல்வி என்றும் பெயர் வைத்துக் கொண்டு நாம் செய்யும் இம்மாதிரியான அநேக பிரயத்தனங்கள் மக்களின் ஒரு சிறு பகுத்தறிவிற்கும் உபயோகப்படாமலே இருந்து வருகின்றது. உதாரணமாக நமது நாட்டின் சரித்திரம் என்பதாக சொல்லப்படும் எந்த பழஞ் சரித்திரத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் மற்ற நாட்டார் எல்லோரையும் விட நாம் மேல் நிலையில் இருந்ததாகவே காணப்படுகின்றது. ஆனால் இன்று நாம் இருக்கும் நிலையானது மற்ற எல்லா நாட்டாரின் நிலைமையை விட தாழ்மையாகவே இருக்கின்றது. *(தொடர்ச்சி 03.06.1928 குடி அரசு)*

*குறிப்பு:- 19.05.1928 அன்று பூந்தமல்லி கண்டோண்மெண்ட் கட்டிடத்தில் நடந்த செங்கல்பட்டு ஆரம்ப ஆசிரியர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்து ஆற்றிய உரையின் முதல் பகுதி.*

**குடி அரசு - சொற்பொழிவு - 27.05.1928**



RangaRakes tamilnavarasam.com

# செங்கல்பட்டு ஜில்லா போர்டு ஆரம்ப ஆசிரியர் மகாநாடு

இந்த, நம் தாழ்ந்த நிலைக்குக் காரணம் என்ன என்றால் தெய்வ எத்தனம் என்று வெகு சுலபமாக பதில் சொல்லிவிடுகின்றார்கள். இப்படிப் பதில் சொல்லுபவர்களே தான் பெரும்பாலும் தங்களை ஆஸ்திகர்கள் என்றும் தெய்வ நம்பிக்கை உடையவர்கள் என்றும் சொல்லிக் கொள்ளுகின்றார்கள். இம் மாதிரி தொட்டதற்கெல்லாம் உண்மையான காரணத்தைக் கண்டு பிடிக்காமலும் கண்டுபிடிக்க ஒரு சிறிதாவது முயற்சிக்காமலும் சோம்பேறி ஞானம் பேசுவதுதான் நமது மத இயலாகவும் பெரியோரின் ஞானமாகவும் ஆஸ்திகமாகவும் போய்விட்டது. இப்போது முன்னுக்கு வந்திருக்கும் மற்ற நாட்டார் எல்லோரும் தங்கள் புத்திக்கும் முயற்சிக்கும் மதிப்புக் கொடுத்தே மேல்நிலைக்கு வந்திருக்கிறார்கள். இந்த நிலையை முதலில் உபாத்தியாயர்கள் உணர வேண்டும். இந்த நிலைக்கு பிள்ளை களையும் கொண்டு வர வேண்டும். அம்மாதிரி நிலைமை பெற்ற மக்கள் உள்ள தேசம் எந்த விதத்திலும் முன்னடைந்தே தீரும்.

இன்று இவ்விடம் பல அறிஞர்கள் பலவிஷயங்களைப் பற்றி உபந்நியாசம் செய்தார்கள். அவைகளில் கிராம சீர்திருத்தம், இயற்கைப் பாடம், சாரணர் இயக்கம் முதலிய விஷயங்கள் முக்கியமானவை. அவைகளைப் பற்றி எனது அபிப்பிராயங்களையும் சிறிது சொல்கிறேன். உபந்யாசகர் தமிழ்நாட்டில் மட்டும் 27 இலட்சம் கிராமங்கள் இருப்பதாக சொன்னார்கள்.

## கிராம சீர்திருத்தம்

அவைகள் உண்மையாகவும் இருக்கலாம். அக்கிராமத்தின் நன்மைக்கும் கிராம வாசிகள் முன்னேற்றத்திற்கும் இதுவரை அரசாங்கமோ அரசியல் இயக்கமோ, கிராம சீர்திருத்தக்காரர்களோ, அரசியல் ஜனப் பிரதி நிதிகளோ ஏதாவது ஒரு சிறிது நன்மை செய்திருக்கிறார்களா? ஆனால் ஒவ்வொருவரும் தம்தம் நலனுக்காக வேண்டி கிராமத்தார்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதாகச் சொல்லியே மக்களை ஏமாற்றிப் பிழைப்பை வலுப் படுத்தியோ தாங்கள் ஓட்டுப் பெற்றோ மக்களின் நம்பிக்கை பெற்றோ சுயநலமடைந்து வருகிறார்கள். கிராமத்தின் நிலைமைகள் மாத்திரம் நாளுக்கு



நாள் கீழ் நோக்கிக் கொண்டே போகின்றது. உதாரணமாக எங்கள் ஜில்லாக் களில் அனேக கிராமங்கள் அக்கிராமச் சொத்தைவிட அதிகமான கடனுக்கு ஆளாகி கிராம மிராசுதார்கள் வெளி நாட்டு லேவாதேவிக்காரர்களுக்கு தங்கள் சொத்துக்கள் முழுவதையும் அடமானம் செய்திருக்கிறார்கள். இதற்கு காரணம் விளைவு இல்லை என்று சொல்லிவிட முடியாது. அல்லது விளைபொருள்களுக்கு விலை இல்லை என்றும் சொல்லிவிட முடியாது. இவற்றுள் அனேக கிராமங்கள் வருஷம் மூன்று போகம் விளையக் கூடிய தண்ணீர் வசதிகளையும் நிலத் தோட்டத்தையும் நிரந்தரமாய் உடையவைகள். நெல், வாழை, கரும்பு, பருத்தி, புகையிலை, மஞ்சள் முதலிய விலை உயர்ந்த விளை பொருள்களையே அதிகமாக வெள்ளாமை உடைய பூமிகளாகவே இருந்து வருகின்றன. இப்பூமிகளை உடைய விவசாயிகளும் லேசான மிராசுதார்கள் அல்ல. அதாவது ஒவ்வொரு மிராசுதாரனும் வருஷம் ஒன்றுக்கு 1000 சலகை 2000 சலகை 3000 சலகை என்கின்ற எண்ணிக்கையான தானிய வருவாய் உடையவர்கள். (ஒரு சலகை நெல் 12 ரூபாய் விலை பெறுமானது)

இப்படிப்பட்ட மிராசுதார்களே 10 ஆயிரம், 50 ஆயிரம், ஒரு லட்சம், 2 லட்சம் ரூபாய்கள் 100-க்கு 10 முதல் 15 வரை வட்டியுள்ள கடனாளிகளாக இருக்கின்றார்கள் என்றால் சிறிய மிராசுதார்களைப் பற்றி விளக்க வேண்டுமா? கிராம சீர்திருத்தம் என்பது வீதி கூட்டுவதும், பள்ளிக்கூடம் கட்டுவதும் பஜனைமடம் உண்டாக்குவதும், உத்சவங்கள் செய்விப்பதும அதிக வெள்ளாமை விளையச் செய்வதுமான காரியங்களைச் செய்து விட் டால் போதும் என்று பலர் நினைக்கிறார்கள். இக்காரியங்களினால் எந்தக் கிராமமும் முற்போக்கடைந்து விடாது. கிராமக் குடித்தனக்காரருக்கு பகுத்தறிவையும், சிக்கனத்தையும், ஏழை மக்கள் நிலைமையையும் ஒழுக்கத்தையும் கற்பிக்க வேண்டும். கிராமவாசிகள் கள்ளுக்கடை ஒப்பந்தத்தில் குத்தகைக்கு எடுத்து சுவாமி கோவில் கட்டுகிறார்கள். பரம்பரையாய் திருடுகின்ற ஜாதியார் என்கின்றவர்களுக்கு திருட அனுமதி கொடுத்து, அவர்களை போலீசார் கண்டுபிடித்து தண்டிக்க இடம் கொடுக்காமல் இருப்பதாக வாக்களித்து அபயம் கொடுத்து அவர்களிடம் திருட்டில் பங்கு வாங்கி உற்சவம் செய்கிறார்கள். வெறும் புராணப்படிப்பைச் சொல்லிக்கொடுத்து தங்கள் பணங் காசையெல்லாம் பஜனைக்கும், உற்சவத்திற்கும் கல்யாணத்துக்கும் கருமாதிக்கும் கும்பாபிஷேகம் முதலிய காரியங்களுக்கும் செலவு செய்யச் செய்வதும் யாத்திரைக்கும் உற்சவத்திற்கும் சமாராதனைக்கும் சிலவு செய்து அவற்றில் போட்டி போட்டு தங்கள் வரும்படியையும் மேற்கொண்டு கடன் வாங்கியும் செலவு செய்ய பழகிவிடுகிறார்கள். மற்றும் பக்தி என்றும் மதம் என்றும் முட்டாள்தனமாக கிரகித்துக் கொண்டு பட்டை நாமங்கள் போட்டுக் கொண்டும் சாம்பலை பூசிக்கொண்டும் குடும்பத்தை கவனிக்காமல் பாஷாண்டிகளாய் திரிவதும் புது நாகரீகம் என்னும் பேரால் தங்கள் வாழ்க்கைச் செலவை அதிகப்படுத்திக் கொண்டு மோட்டார் வண்டி யென்றும் அனுபவிக்க உயர்ந்த சாமான்கள் என்றும் உயர்ந்த ஆடைகள் என்றும் பல வழிகளில் தங்கள்



RangaRakes tamilnavarasam.com

தேவைகளுக்கு மேலும் தங்கள் அனுபவிக்கவேண்டிய சுகத்திற்கு மேலும் போட்டி போட்டுக் கொண்டு முட்டாள்தனமாக தங்கள் பணங்களை செலவு செய்து விடுகின்றார்கள். போதாக் குறைக்கு அரசியல் புரட்டால் ஏற்பட்ட தொல்லையாகிய ஜனப்பிரதிநிதித்துவம் என்று சொல்லப்படும் ஸ்தானங் களாகிய யூனியன், பஞ்சாயத்து, தாலூகா ஜில்லா போர்டு, முனிசிபாலிடி சட்டசபை முதலிய ஸ்தானங்களின் தேர்தல்களுக்கும் போட்டி போட்டுக் கொண்டு 1000, 5000, 10000, 50000 ரூபாய்கள் வரை தேர்தல்கள் செலவும் அவைகளினால் தங்கள் வாழ்க்கை கவனிப்பு கெடுதலும் ஏற்படுகின்றன. மற்றபடி ஒழுக்கங்களிலும் மிராசுதாரர்களாயிருக்கிறவர்கள் தாசி, வேசி, வைப்பு முதலிய விஷயங்களில் ஈடுபட்டு தங்கள் வீட்டு பெண்களை கவனியாமலும் அவர்களுக்கு வாழ்க்கையில் இன்பமில்லாமல் கொடுமைப் படுத்துவதும் அதனால் இம்மாதிரி மிராசுதாரர்கள் வீட்டுப் பெண்கள் பெரிதும் தங்கள் இயற்கை உணர்ச்சியை கட்டுப்படுத்த சக்தியற்ற வர்களாகி தங்கள் வேலையாட்கள் வெளியாட்கள் முதலானவர்களுடன் இன்பம் அனுபவிக்க துணிவு கொள்ள வேண்டி ஏற்படுவதும், இதனால் குடும்ப கவனம் குறைந்து அவரவர்கள் இஷ்டம் போல் அவரவர்கள் கையில் சிக்கின பணத்தை பாழாக்குவதுமான வழிகளால் அநேக குடும்பங்கள் கெடுவதும், மற்றும் விவகார வியாஜியங்கள் முதலிய காரியங்களில் வக்கீல் களுக்கும் அதிகாரி களுக்குமாக தங்கள் பொருள்களை அள்ளிக் கொடுத்து பாப்பராவதும், அதிகாரிகள் சிநேகத்திற்காகவும் பட்டம், பெருமை, முதலியவைகளுக் காகவும் பொருள்களை கவலையின்றி வாரி இறைத்து கடன்காரர்களாவதும் ஆகிய எத்தனையோ விதங்களில் கிராமங்களும் கிராம மிராசுதாரர்களும் 100-க்கு 80 பேருக்கு மேலாக கடன்காரர்களாகவும் ஒழுக்கமில்லாதவர் களாகவும் குடும்பங்களில் கவலை இல்லாதவர்களாகவும் இருந்து வருவதை நாம் தினமும் பார்த்துவருகின்றோம்.

இக் குறைகள் நீங்கினாலன்றி வேறு எந்த காரணத்தாலாவது நமது கிராமங்கள் முற்போக்கடைந்து விட முடியுமா என்று கேட்கின்றேன்.

எனவே இக் குறைகள் நீங்க எந்த அரசியலோ, மத இயலோ, கிராம சீர்த்திருத்த இயலோ, இதுவரையில் ஏதாவது செய்து வந்திருக்கிறதா என்று கேட்கின்றேன்.

உண்மையாய் ஏதாவது ஒரு கிராமம் திருத்தமடைய வேண்டுமானால் மேற்கண்ட குற்றங்கள் நீங்கத் தகுந்த கொள்கை கொண்டதாக கிராம சீர்திருத்தத் தன்மை ஏற்பட்டாலொழிய வேறு எந்த விதத்திலும் சீர்திருத்தம் ஏற்படாது. இவைகள் எல்லாம் என்னுடைய 35 வருஷ கிராமவாசிகளுடை யவும் மிராசுதாரர்களுடைய சினேக அனுபவத்தினாலேயே சொல்லு கின்றேன். இந்த மேற்கண்ட காரணங்களால் வருஷம் பத்தாயிரம், இரு



பதாயிரம், ஐம்பதாயிரம் ரூபாய் வரும்படி உடைய பெரிய பெரிய குடும்பத் தாரின் கடனுக்கும் சொத்துக்கும் சரி என்றும் சொத்துக்கு மேற்பட்ட கடன் என்றும் சொல்லும்படியான நிலையில் இருந்து வருகின்றது.

## இயற்கைப் பாடம்

இனி இயற்கைப் பாடம் என்பதைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகின்றேன்.

இந்த இயற்கைப் பாடம் என்பதை நமது சிறு குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுப்பதைப் பற்றி உபாத்தியாயர்கள் மிகவும் கவலை எடுத்துக் கொள்ள வேண்டியது மக்களின் அறிவு வளர்ச்சிக்கு மிக்க அவசிய மானதாகும். ஆனால் அநேக உபாத்தியார்களுக்கு இயற்கைத் தத்துவம் இன்னதென்றே தெரியாது என்பது எனது அபிப்பிராயமாகும்.

நமது மக்களின் அறிவு வளர்ச்சி பெறாமலிருப்பதற்குக் காரணம், இயற்கையின் தத்துவம் இன்னதென்று அறிய முடியாமல் போனதே தான். மேல் நாட்டார்கள் குறிப்பாக வெள்ளைக்காரர்கள், நம்மால் தெய்வத் தன்மையென்றும் அற்புதம் என்றும், சொல்லத்தக்கதான அநேக ஆச் சரியப்படத்தக்க காரியங்களை செய்து கொண்டும் இனியும் அநேக ஆச் சரியங்களைக் கண்டு பிடித்துக் கொண்டும் வருவதற்கு அவர்கள் இயற்கை யின் தத்துவத்தை அறிவதில் பெரிதும் கவலை எடுத்துக் கொண்டதே காரணமாகும்.

நமது பிள்ளைகளுக்கு நாம் இயற்கையின் தத்துவம் சொல்லிக் கொடுப்பதின் யோக்கியதையும் மேல் நாட்டார் தங்கள் பிள்ளைகளுக்கு இயற்கையின் தத்துவத்தை சொல்லிக் கொடுப்பதின் யோக்கியதையும் ஒன்றுக் கொன்று நேர் விரோதமானது. நாம் நமது பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்கும் போதே, "எல்லாம் கடவுள் செயல்; அவனின்றி ஓர் அணுவும் அசையாது; கடவுள் சம்மதம் இல்லாமல் நம்மால் ஒரு காரியமும் செய்ய முடியாது. ஆகையால் இதில் நம்பிக்கை வைத்து எல்லா பொறுப்பை யும் கடவுள் மீது போட்டுவிட்டு பக்தியாய் இருக்க வேண்டும்" என்று சொல்லிக் கொடுக்கின்றோம். மேல்நாட்டாரோ அப்படி இல்லாமல், "மனித னால் செய்யக் கூடாத காரியம் ஒன்றும் இல்லை. முயற்சி செய்; பலனடை வாய். உனது சக்தியில் நீ சந்தேகம் கொள்ளாதே; உன்னால் ஆகுமோ ஆகாதோ என்று பயப்படாதே சகல அற்புதங்களும், அதிசயங்களும், உனது நம்பிக் கைக்குள்ளும், உனது முயற்சிக்குள்ளும் சிக்கிக் கிடக்கின்றது" என்று சொல்லிக் கொடுக்கின்றார்.



RangaRakes tamilnavarasam.com

மழை பெய்யாவிட்டால் பார்ப்பானுக்கு பணம் கொடுத்து வருண ஜெபம் செய்ய வேண்டும் என்று நாம் சொல்லிக் கொடுக்கின்றோம்.

மேல் நாட்டார் மழை பெய்யாததற்கு மேகத்தில் உள்ள கோளாறு என்ன என்று கண்டுபிடித்து, மேகத்தை கலக்கிவிட்டு மழை பெய்யச் செய்யும்படி சொல்லிக் கொடுக்கிறார்கள். இயற்கைத் தத்துவம் அறியத்தக்க அறிவுப் பெருக்கத்திற்கு நாம் குழந்தைகளை பழக்குவதில்லை.

குழந்தைகள் இயற்கை விசாரணையில் இறங்கினால் நம்மவர்கள் மிரட்டி நாஸ்திகம் என்றும் அதிகப் பிரசங்கம் என்றும் பயப்படுத்தி அடக்கி விடுகின்றோம்.

இவ்விதம் அடக்கும் தன்மையை பெரும்பாலும் நாம் மதத்தின் பேரால் செய்கின்றோம். நமது நாட்டின் அடிமைத் தன்மைக்கு இம்மாதிரி மதத்தின் பேரால் கடவுள் தண்டிப்பாரென்றும், பாவம் வரும் என்றும், நாஸ்திகம் ஆகும் என்றும் சொல்லி பயப்படுத்தி மக்களை முட்டாள்களாக்கிய கொடுமையேதான் முக்கிய காரணமாகும்.

மதத்தையும் கடவுளையும் நினைத்ததற்கெல்லாம், எடுத்ததற்கெல்லாம், தொட்டதற்கெல்லாம் சம்மந்தப்படுத்தி 'எல்லாம் கடவுள் செயல்; எல்லாம் கடவுள் செயல்' என்பதையும் எந்தக் காரணத்தைக் கொண்டும் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கும் தன்மையை அடியோடு நிறுத்திவிட வேண்டும்.

*குறிப்பு:- 19.05.1928 அன்று பூந்தமல்லி கண்டோண்ட்மெண்ட் கட்டிடத்தில் நடந்த செங்கல்பட்டு ஜில்லா ஆரம்ப ஆசிரியர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்து ஆற்றிய உரை - தொடர்ச்சியின் இறுதிப்பகுதி.*

**குடி அரசு - சொற்பொழிவு - 03.06.1928**



# சுயமரியாதைத் திருமணங்கள்

இந்த வாரம் அநேக இடங்களில் இருந்து சுயமரியாதைத் திருமணங்கள் நடந்ததாக சமாச்சாரங்கள் வந்த வண்ணமாகவே இருக்கின்றன. ஆனாலும் அவற்றில் பெரிதும் பார்ப்பனர்களை விலக்கி நடத்தியதாக மாத்திரம் தெரிய வருகின்றனவேயல்லாமல் மற்றபடி அவை முழுவதும் சுயமரியாதைத் தத்துவப்படி நடைபெற்றிருப்பதாக சொல்லுவதற்கில்லாமலிருப்பதற்கு வருந்துகின்றோம். ராமநாதபுரம் ஜில்லா சுக்கிலநத்தத்தில் நடந்த மூன்று திருமணங்களையும் மதுரையில் நடந்த ஒரு திருமணத்தையுமே பரிபூரண சுயமரியாதைத் திருமணங்களென்று சொல்லலாம். சுயமரியாதைத் திருமணத்திற்கும் அது அல்லாத திருமணத்திற்கும் நாம் குறிப்பிடும் வேறுபாடுகள் என்ன வெனில்,

## சுயமரியாதை அற்ற திருமணமென்பது

1. மற்றவர்களைக் காட்டிலும் ஜாதியாலோ சமயத்தாலோ தன்னை உயர்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளுகிற ஆச்சாரியன் என்பவனைக் கொண்டு மணச்சடங்கு நடத்துவது.

2. மணமக்களுக்கு, மணமக்கள் அறியாத பாஷையில் சடங்கு வாக்கியங்களைச் சொல்வது.

3. மணமக்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் பொருள் விளங்காத சடங்குகளைச் செய்விப்பது.

4. இன்னின்ன காரியத்திற்காக இன்னின்னவைகளைச் செய்கிறோம் என்கின்ற குறிப்பில்லாமல், வழக்கம், பழக்கம், பெரியவாள் காலத்தில் ஏற்பட்டது என்கின்ற குருட்டு நம்பிக்கையின் பேரில் காரியங்களைச் செய்வது ஆகிய இவைகளும் மற்றும் இதுபோன்ற நடவடிக்கைகளும் கொண்ட மணங்களை சுயமரியாதையற்ற மணங்கள் என்றே சொல்லலாம்.

தவிர, மணமக்கள் விஷயத்திலும் போதிய வயது முதலிய பொருத்தமில்லாததும், பெண்ணின் சம்மதமோ அல்லது ஆணின் சம்மதமோ இல்லாமல் பெற்றோர்கள் தீர்மானம் செய்துவிட்டார்களாதலால் கட்டுப்பட்டுதான்



RangaRakes tamilnavarasam.com

தீரவேண்டும் என்கின்ற நிர்பந்த முறையில் நடப்பதும் சுயமரியாதையற்ற மணங்கள் என்றே சொல்லலாம்.

இந்நிலையில் சுக்கில நத்தத் திருமணங்கள் சுயமரியாதைத் திருமணம் என்றே சொல்ல வேண்டும். முதலாவது மணமக்கள் ஒருவரை ஒருவர் அன்புங் காதலும் கொண்டு தாங்களாகவே சம்மதங் கொண்டவர்கள். இரண்டாவது, திருமணத்தின்போது முன் சொன்னக் குற்றங்களில்லாமல் பரிசுத்தத் தன்மையாகவே நடைபெற்றன. அதாவது மணமக்களை வெகு சாதாரண உடையில் சுமார் 2000 பந்துக்களும் பொதுமக்களும் நிறைந்த கூட்டத்தின் நடுவில் கொண்டு வந்து இருத்தி மணமக்களின் பெற்றோர் எழுந்து சபையாரை நோக்கி "இன்று இங்கு எழுந்தருளியிருக்கும் பெரியா ரான திருவாளர் ராமசாமி நாயக்கரவர்களை எனது மகனின் திருமணத்தை இனிது நடத்திவைக்கும்படி நான் வேண்டிக்கொள்ளுகிறேன்." என்று கேட்டுக் கொண்டார். திரு. நாயக்கர் எழுந்து சபையோரைப் பார்த்து "மண மகனின் தந்தையார் வேண்டியபடி நாம் நடத்தி வைக்கப் போகும் திருமண மானது இனிது நடைபெறவேண்டும்" என்றும் "மண மக்களும் சுற்றத்தாரும் எல்லாப் பேறும் பெற்று இன்பமாய் நீடூழி வாழ வேண்டும்" என்றும் எல்லாம் வல்ல சக்தியை இறைஞ்சி ஆசீர்வதிக்கும் படியாய் வேண்டிக் கொண்டார். சுற்றத்தாரும் பொதுமக்களும் ஒரு நிமிஷம் அவரவர் வழிபடும் சக்தியை பிரார்த்தித்து ஆசீர்வதித்தார்கள். பிறகு நாயக்கர் மணமக்களைப் பார்த்து சொல்லும் படி கேட்டுக் கொண்டதாவது:-

"எல்லாம் வல்ல சக்தியின் அருளால் நமது இல்லற வாழ்க்கைக்கு அரிய துணையாக தங்களைப் பெறுகிறேன். தங்களைப் பேணுவதில் தங்களருமைத் தாய் தந்தைகளைப் போலவும் இல்லறத்தை நடத்துவதில் தங்களுக்கு உண்மையான அமைச்சராகவும் அருமைத் தோழியாகவும் இருந்து வருவதோடு என் மனத்தாலும் சொல்லாலும் செயலாலும் தாங்கள் செல்லும் நல்வழியில் தங்கள் உள்ளம் மகிழ்ச்சியடையும்படியாக யான் எச்செயலையும் செய்யவும் உடன்படுகிறேன். நாம் இருவரும் உடலும் உயிரும் போலவும் கண்ணும் இமையும் போலவும் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்க அருள் புரியுமாறு எல்லாம் வல்ல சக்தியை வணங்கி இம் மாலையைத் தங்களுக்கு சூட்டுகின்றேன்" என்று சொல்லி மணமகள் மணமகனுக்கு மாலை சூட்டினார். அதுபோலவே மணமகனும் சொல்லி மங்கல நாணை மணமகளுக்கு பூட்டினார். மற்றும் ஒரு முறை சபையோர் ஆசீர்வதித்தார்கள். சிலர் எழுந்து நின்று இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லி ஆசீர்வதித்தார்கள். மணமக்கள் மணத்தை ஒப்புக் கொண்டதற்கறி குறியாக மாலைகளை மாற்றிக் கொண்டார்கள்.

கடைசியாக மணமக்கள் எழுந்து நின்று தங்களுக்கு திருமணம் செய்வித்ததற்காக வணக்கம் செய்வதின் மூலம் நன்றி செலுத்திவிட்டு



இருவரும் "நமது இல்லற வாழ்க்கையை ஒழுங்காக நடத்தவும், காதலின் பத்தை அனுபவிக்கவும், உலகிலுள்ள மக்கட்கு நம்மாலான உதவி புரியவும், குடும்ப வாழ்க்கையை ஏற்று நடத்திச் செல்வோம்." என்று சொல்லிக் கொண்டே நடந்து அம்மியை மிதித்துவிட்டு வீட்டிற்குச் சென்றார்கள்.

*(குறிப்பு:- இந்த இடத்தில் அம்மியை மிதிப்பதற்கும் மணவரையைச் சுற்றுவதற்கும் பொருள் இன்னதென்று விளங்கவில்லையானாலும் இந்து லாப்படி இவ்விரு சடங்கும் செய்தால்தான் மணம் செல்லுபடியாகும் என்றிருப்பதால் இவற்றைச் செய்ய வேண்டி நேரிட்டது.)*

மணமக்களின் பெற்றோர்கள் இம்மாதிரி திருமணம் நடத்த வெகு ஆவலோடு இருந்தார்கள் என்பதையும் மற்றபடி மூடப்பழக்க வழக்கங் களில் அவர்களுக்கு நம்பிக்கையில்லையென்பதையும் பொது ஜனங்கள் உணர்வதற்கு ஒருசிறு உதாரணமே போதுமானது. அதாவது மணமகளின் பெற்றோர் பல லட்சத்திற்கு அதிபதிகளாயிருந்தும் மணமக்களுக்கு புது உடை கூட உடுத்துவிக்காமலும், மணப்பெண்ணுக்கு சாதாரணமாய் அணிந்திருக்கும் அணியை விட விசேஷ நகையொன்றும் பூட்டாமலும், மணமகன் சாதாரண வேஷ்டியுடனும் ஒரு சிறுதுண்டை மேல் வேஷ்டியாக அணிந்திருந்ததோடு ஒரு காசளவு பொன்னோ வெள்ளியோ அணியாமலும் வெகு இயற்கையழகோடு வந்து வீற்றிருந்தார்கள். நிற்க திருமணச் சடங்கு தொடங்கும்போது ஒரு பெரிய அம்மையார் மணமக்களின் முன்பாக ஒரு குத்து விளக்கை வைத்து விளக்கு ஏற்ற நெருப்புக் குச்சியை உரைக்கும் போது மணமகளின் தகப்பனரான ஸ்ரீதுரைசாமி ரெட்டியார் எழுந்து "எதற் காக இங்கு விளக்குப் பற்றவைக்க வேண்டும்? பகல் 11 மணி நேரத் துக்கு இங்கு இருட்டாகவா இருக்கிறது? அனாவசியமாக அர்த்தமில்லாததைச் செய்யாதீர்கள்" என்று தடுத்துவிட்டார். தவிர வேறு எவ்வித சடங்கையும் வைத்துக் கொள்ளவில்லை. மற்றபடி ஒரே ஒரு சடங்கில்தான் எல்லோரும் ஈடுபட்டிருந்தார்கள். அதாவது பகல் 12-மணிமுதல் இரவு 2-மணி வரையிலும் வந்திருந்த சுமார் 5000 பேருக்கு குறையாமல் சாப்பாடு போட்ட வண்ண மாகவே இருந்தார்கள். பலர் மூட்டை கட்டிக் கொண்டு போன வண்ண மாகவே இருந்தார்கள். ஒரு ஊர்வலமும் நடந்தது.

நிற்க மறுநாள் காலையில் நாயக்கரும் அவர்கள் சகாக்களும் ரெட்டி யார் அவர்களிடம் விடை பெற்றுக் கொள்ளும்போது ரெட்டியார் சொன்ன தாவது:-

"தாங்கள் இங்கு வந்தது எனக்கு பெருமையும் திருப்தியும் அளிக்கத் தக்கதாய் இருக்கிறது. தங்களால் நடத்தி வைக்கப்பட்ட இத் திருமணங் களைப் பற்றி என் சுற்றத்தார்களும் நண்பர்களும் நேற்றுப்பகல் 11 மணி முதல்



RangaRakes tamilnavarasam.com

மாலை 6மணி வரை குற்றம் சொல்லிக் கொண்டும் பரிகாசம் செய்து கொண்டும் இருந்தார்கள். ஆனால் நேற்று மாலை 6 மணி முதல் 10 மணி வரை நிகழ்த்திய தங்களுடையவும் தங்கள் சகாக்களுடையவும் பிரசங்கங் களைக் கேட்ட பின்பு ஒவ்வொருவரும் திருப்தியடைந்ததோடு இனி தாங்கள் செய்யப்போகும் ஒவ்வொரு சடங்கையும் இப்படியே செய்வதாக தீர்மானித்துக் கொண்டும் முதல் முதல் இச்சடங்கை நானே செய்து காட்டிய பாக்கியம் பெற்றதற்காக பாராட்டிவிட்டும் சென்றார்கள்"

எனவே, நம் நாட்டில் நடக்கும் திருமணங்களில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவெனில் அர்த்தமற்ற சடங்குகளை விலக்கு வதும் ஆடம்பரமற்ற முறையில் அதாவது அனாவசியமான வழியில் பெருமைக்காகப் பணத்தைச் செலவாக்காமல் இருப்பதும் கல்யாணங்களை பல நாட்கள் நீடித்து நடத்தாமல் ஒரே நாளில் முடிப்பதும் ஆகிய காரியங் களை முக்கியமாகக் கொண்டு ஒவ்வொருவரும் நடக்க வேண்டுமென்ப தற்காகவே அம்மாதிரி நடத்திய ஒரு பெரியாரின் செயலை ஆதாரமாகக் கொண்டு இத்தலையங்கம் எழுதியிருக்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 03.06.1928**



## திரு.வி. கல்யாணசுந்தர முதலியார்

திரு. முதலியார் அவர்கள் சிறிது காலம் உறங்கிக் கிடப்பதும் பிறகு திடீரென்று பூர்வக்கியானம் பெற்றவர் போல் நாட்டுக்கு பெரிய அழிவு வந்துவிட்டதாகவும் அதைத்தான் காப்பாற்றப் போகின்றதாகவும் வேஷம் போட்டுக் கொண்டு சீர்திருத்தக்காரர்களால் ஆபத்து! ஆபத்து! என்று சப்தம் போடுவதும் அதன் பேரில் ஏதாவது இரண்டு கிடைத்தால் வாங்கிக்கொண்டு பொறுக்கமுடியாமல் 'நான் அப்படி செய்யவில்லை இப்படி நினைக்க வில்லை. அதற்கு இதல்ல அருத்தம் அதல்ல பொருள்' என்று பல்லைக் காட்டுவதும் ஆகிய காரியத்திலேயே இருந்து வருகிறார்.

உதாரணமாக கொஞ்ச காலத்திற்கு முன் சீர்திருத்தம் என்கின்ற தலையங்கம் இட்டு ஒரு வியாசத்தில், தற்காலம் நடைபெறும் சீர்திருத்தத்தால் நாட்டிற்கு பெரிய ஆபத்து என்றும் சீர்திருத்தக்காரர்கள் மிக்க மோச மானவர்கள் என்றும் ஜனங்கள் நினைக்கும்படி எழுதினார்.

'குடி அரசு' அதற்கு தகுந்த ஆப்புக்கடாவினவுடன் 'நான் அப்படி எழுதவில்லை இப்படி எழுதவில்லை', 'அதற்கு இதல்ல அர்த்தம்' என்று சமாதானம் சொல்லி அமர்ந்தார். இப்போது பல இடங்களில் மூடநம்பிக்கை ஒழிந்த சடங்குகளால் சில நடவடிக்கைகளில் மக்களின் கவனம் இழுக்கப் பட்டதும் மறுபடியும் 'சீர்திருத்தம்' என்கின்ற தலைப்பு கொடுத்து 'சீர்திருத்தக் காரர் அப்படி இருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும்' என்று உபதேசம் செய்ய வந்து விட்டார்.

அதோடு தனது ஆராய்ச்சி ஆணவத்தை முன்னால் தள்ளிக் கொண்டு 'ஆராய்ச்சி வேண்டும். அனுபவம் வேண்டும், குணநலம் வேண்டும்' என்று சோம்பேறி ஞானம் பொரிக்கின்றார். இவற்றிற்கு 'திராவிடன்' ஒருவாறு பதிலிருத்தவுடன் தனது பழய குணப்படி "நான் பொதுவாகச் சொன்னேனே ஒழிய 'திராவிடனை'யோ 'குடிஅரசை'யோ சொல்லவில்லை" என்று ஒளியப் பார்ப்பதுடன் மற்றும் தனக்கு ஒரு புதிய இயக்கம் வேண்டும் என்றும், யாராவது ஆரம்பித்தால் அதற்கு தான் உதவி செய்யப் போவதாயும், நாஸ்திக இயக்கங்களை அழிக்க ஏதோ ஒரு புது இயக்கம் தோன்றப் போவதாகவும், அதற்கு முப்பது ஆண்டாக தமிழ்நாட்டின் சீர்திருத்தத்திற்கு உழைத்த



RangaRakes tamilnavarasam.com

ஒருவரின் தலைமை கிடைக்கப்போவது கேட்டு மகிழ்வதாகவும் எழுதி மிரட்டுகிறார்.

திரு. முதலியாரை நன்குணந்தவர்கள் இவற்றிற்கெல்லாம் எவ்வளவு மதிப்புக் கொடுப்பார்கள் என்பது நமக்குத் தெரியும்.

திரு. முதலியாருக்கு ஒரு இயக்கம் வேண்டுமானால் திருவாரூர், விஜயபுரம் சர்வமத சங்க இயக்கத்தை கைக்கொண்டு அதற்கு உதவி செய்ய லாம். அல்லது பட்டுக்கோட்டை நகரத்தார் தோற்றுவித்திருக்கும் சிவநேச இயக்கத்தில் சேர்ந்து அதற்கு உதவி செய்யலாம். அல்லது தானே இப் பொழுது பலருக்கு எழுதிக் கேட்டுக்கொண்டிருப்பது போன்று ஒரு இயக் கத்தை ஆரம்பிக்கலாம். எதுவானாலும் வரவேற்கத் தயாராயிருக்கின்றோம்.

திரு. முதலியாருக்கு இருக்கும் சீர்திருத்த ஆண்மை நாம் நன்றாக அறிந்தது தானே ஒழிய அறியாதது ஒன்றும் மறைவிலில்லை என்றே சொல்லுவோம்.. அப்படி ஒன்று இருக்குமானால் 'சீர்திருத்தம்', 'சீர்திருத்தம்' என்கின்ற தலையங்கத்தின் கீழ் ஜாடைமாடையாய் எழுதவேண்டியும் இருக்காது. எழுதிவிட்டு 'உன்னை சொல்லவில்லை' என்று எழுதுகிற பயங்காளித்தனமும் இருக்காது. நமது தொண்டு முதலியார் சக்தியையும் செய்கையையும் அவரது குழாத்தின் சக்தியையும் எதிர்ப்பையும் முழுதும் எதிர்நோக்கி துவக்கப்பட்டதே ஒழிய முதலியாரை மறந்து துவக்கப்பட்டது அல்ல என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். திரு. முதலியார் நமது தொண்டிற்கு இதுவரை எவ்வளவு இடையூறு செய்து வந்தார் என்பது நமக்கு தெரிந்ததேயொழிய தெரியாதது அல்ல. எனினும் திரு முதலியாருடன் இனியும் நாம் நேசமாகவே இருக்கின்றோம். ஏனெனில் திரு. முதலியார் அவர்களின் இடையூறு நமது தொண்டை கெடுத்து விடாது என்கின்ற தைரியத்தோடு தானே அல்லாமல் வேறல்ல. அன்றியும் திரு. முதலியார் தயவில்லாவிட்டால், அழிந்து போகும்படியான தொண்டால் உலகிற்கு என்ன பயன் ஏற்படக்கூடும் என்கின்ற எண்ணமும் கூடத்தான்.

நமது தொண்டின் கருத்தை மறுபடியும் பொதுமக்களுக்கு தெரியப் படுத்துகின்றோம். இதில் ஒன்றும் மறைவாக வைத்துக் கொள்ள நமக்கு இஷ்டம் இல்லை. ஏற்கின்றவர்கள் ஏற்கட்டும். அதாவது, முதலாவது புராணக் குப்பை யுலகத்திலிருந்து மக்கள் விடுதலை அடைந்தே தீர வேண்டும். அது எந்தப் புராணமானாலும் நமக்கு அக்கரை இல்லை. உதாரணமாக ராமாயணமோ, பாரதமோ, மச்ச புராணமோ, தவளைப் புராணமோ, பெரிய புராணமோ, சின்னப் புராணமோ, சிவ புராணமோ, விஷ்ணு புராணமோ அதைப்பற்றி நாம் ஒரு சிறிதும் வித்தியாசம் பார்க்கமாட்டோம். அதோடு இந்தப் புராணங்களைப் படித்துவிட்டு பிரசங்கத்தில் வயிறு வளர்ப்பவர் களுக்கும் இவற்றை அச்சடித்து



விற்பனைக்கு காத்திருப்பவர்கட்கும் கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்பது நமக்குத் தெரியும். ஆனாலும் நமக்கு அதைப்பற்றி கவலையில்லை. ஏனெனில் மக்களின் விடுதலை நமக்கு பெரிதே ஒழிய புராணப் பிரசங்கியுடையவும் புஸ்தகக் கடைக்காரனுடைய வும் வயிறு வளர்ப்பு பெரிதல்ல.

இரண்டாவது, மூட நம்பிக்கை ஒழியவே வேண்டும். அது சிவ னைப்பற்றியதானாலும், விஷ்ணுவைப்பற்றியதானாலும், காளியைப் பற்றிய தானாலும், கருப்பைப்பற்றியதானாலும், நமக்குக் கவலையில்லை. இவர்களை நம்பிக் கொண்டிருப்பவர்கள் அநேகர்கள் என்பதும் இவர்களால் பிழைத்துக் கொண்டிருப்பவர்கள் அநேகர்கள் என்பதும் நமக்குத் தெரியும். அதைப் பற்றியும் நமக்கு கவலையில்லை. மக்கள் அறிவு பெறுவதே நமது கவலை.

மூன்றாவது, அனுபவத்திற்கு ஒத்துவராத சமயங்களும் மக்களுக்கு சுயமரியாதை அளிக்காத சமயங்களும், ஒழிந்தே தீரவேண்டியது மிக்க அவசியமான வேலை. அது எந்த சமயம் ஆனாலும் சரி , வைணவ சமயமோ, சைவ சமயமோ ஸ்மார்த்த சமயமோ மாத்துவ சமயமோ மற்றைய சமயமோ என்பதைப் பற்றிய கவலை நமக்கு ஒரு சிறிதும் இல்லை. இனியும் இது போன்ற பல உண்டு. எனவே நமது தொண்டில் இதைத் தவிர வேறு இரகசியம் ஒன்றும் இல்லை. ஆதலால் இவற்றிற்கு எதிராக உள்ளவர்கள் எம்முறை யிலாவது நம்மோடு போராடட்டும். அதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். ஆனால் சூழ்ச்சி முறை மாத்திரம் வேண்டாம் என்கின்றோம். அதாவது பவுத்த சமயத்தை அழிக்க சிலர் பவுத்த மதத்திலேயே சேர்ந்து துரோகம் செய்தது போல் நம்முடன் கூட இருப்பவர்கள் போல் காட்டிக் கொண்டும், நம்மையே சதா புகழ்ந்து கொண்டும் வேறு விதமாக அயோக்கியத்தனமாக யாரும் நடக்க வேண்டாம் என்று தான் கேட்டுக் கொள்ளுகின்றோம். நாம் எழுதுவதற்கோ, பேசுவதற்கோ யோக்கியமாக சமாதானம் சொல்லத் தயாரா கவே இருக்கின்றோம். பார்ப்பானுடைய வேத சாஸ்திர ஸ்மிருதிகளுடன் வாதாடும் வேலையைவிட திரு. முதலியார் போன்ற புராணக்காரர்களுடைய வும் அழுக்கு மூட்டைகளுடையவும், உபத்திரவமே நமக்கு பெரிய தொல்லை யாய் இருந்து வருகின்றது. காரணம் இவர்கள் வெளிப்படையாய் நேரான வழியில் எதிர்க்காமல் சூழ்ச்சி வழியை பின்பற்றுகிறது தானே ஒழிய வேறில்லை.

நிற்க. ஆராய்ச்சிக்காரர்கள் என்பதற்காகவோ, பண்டிதர்கள் என்பதற் காகவோ இவ்விஷயத்தில் நம்மிடத்தில் தனிமரியாதை ஒன்றுமில்லை என்பதை பொதுமக்கள் உணரவேணுமாய் வேண்டுகின்றேன். ஏனெனில் ஆராய்ச்சியும் பண்டிதத் தன்மையும் வேறு, அறிவு வேறு என்பது நமது



RangaRakes
tamilnavarasam.com

அபிப்பிராயம். ஆராய்ச்சிக்காரரும் பண்டிதர்களும் அறிவாளிகளாகவே இருப்பார்களென்று எண்ணினால் ஏமாந்து போய்விடுவோம். ஆதலால் அவர்களிடத்தில் பொது ஜனங்கள் அறிவாளிகளுக்கு கொடுக்கத்தகுந்த மதிப்பை கொடுத்து ஏமாந்துவிடக்கூடாதென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சமீபத்தில் நான் ஒரு தொல்லையிலிருந்து நீங்கி சற்று ஓய்வடைந்தோம் என்று எண்ணியிருந்தோம். திரு. முதலியார் தொல்லை தவிர்க்க முடியாததாகிவிட்டதால் அதன் முடிவையும் பார்த்து விடவேண்டியது அவசியமாகிவிட்டதற்கு வாசகர்கள் மகிழச்சி அடைவார்கள் என்றே நினைக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 10.06.1928**



# மறுபடியும் பகிஷ்காரப் புரட்டு

சைமன் கமீஷன் விஷயமாகப் பார்ப்பனர்கள் ஆரம்பித்த பகிஷ்காரப் புரட்டுக்கு ஒருவிதத்தில் சாவுமணி அடித்து விட்டதானாலும் மறுபடியும் சிலர் செத்த பாம்பை ஆட்டுவது போல் சத்தில்லாத விஷயங்களைக் காட்டிக் கொண்டு பாமரமக்களை ஏமாற்ற புதிது புதிதாக வழி கண்டுபிடித்து தங்கள் தங்கள் அரசியல் புரட்டுத் தேரை ஓட்டப் பார்க்கின்றார்கள். இனி இம்மாதிரியான புரட்டுகளுக்கெல்லாம் பாமர மக்கள் ஏமாற மாட்டார்கள் என்றே உறுதி கூறுவோம்.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை பஹிஷ்கார வேஷம் இனி செலாவணியாகாது என்று தெரிந்திருந்தாலும் அடுத்து வரப் போகும் தேர்தல்களுக்கு தங்களுக்கு அனுகூலமாக ஏதாவது மார்க்கம் செய்து கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணமுடையவர்களும் பார்ப்பனரல்லாதார் கக்ஷி வலுப்படுவதன் மூலம் தங்கள் வாழ்வுக்கு பங்கம் வந்து விடுமோ என்கின்ற சுயநல வாதிகளும் சேர்ந்து பகிஷ்காரம் பகிஷ்காரம் என்று போலிக் கூக்குரல் இடுகின்றார்கள். அதைப் பற்றி நாம் ஒரு சிறிதும் கவலைப் படவில்லை. ஆனாலும் பகிஷ்காரக் கூச்சலில் ஏதாவது ஒரு சிறு நாணயமாவது இருக்கின்றதா? என்பதை யோசித்துப் பார்க்கும்படி பொது மக்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

சைமன் கமீஷனை பகிஷ்கரிப்பது எதற்காக?

இந்தியர்களை கமீஷனில் சேர்க்கவில்லை என்பதற்காகவா?

அல்லது இந்தியாவின் சுதந்த ரத்தை நிர்ணயிக்க வெள்ளைக்காரருக்கோ பார்லிமெண்டுக்கோ அதிகார மில்லை என்பதற்காகவா?

அல்லது வேறு எதற்கு ஆக? இதற்கு இதுவரை எந்த அரசியல் தலைவராவது எந்த அரசியல் இயக்கமாவது சரியான பதிலிருக்கவே இல்லை.

மற்றபடி மொத்தத்தில் தற்காலம் சுயமரியாதை இயக்கத்தால் சுயமரியாதை என்கின்ற வார்த்தைக்குச் சற்று மதிப்பு இருப்பதை உணர்ந்து



RangaRakes tamilnavarasam.com

அந்த வார்த்தையை உபயோகப்படுத்திக் கொள்ளக் கருதி "கமீஷனுடன் ஒத்துழைப்பது இந்தியரின் சுயமரியாதைக்கு ஏற்றதல்ல" என்று மாத்திரம் சொல்லப்படுகின்றதே ஒழிய வேறில்லை. எவ்விதத்தில் சுயமரியாதைக்கு ஏற்றதல்ல என்பதையும் யாரும் விளக்கிக் காட்டவுமில்லை.

'இந்தியர்களை கமீஷனில் நியமிக்காததற்காக கமீஷனுடன் ஒத்துழைக்கக் கூடாது' என்று சேலம் ஜில்லா அரசியல் கான்பரன்சு முதல்முதலாக தீர்மானித்து அந்த பெருமையை அது அடிக்கடி பாராட்டிக் கொண்டாலும் இந்தியர்களில் யாரை நியமிப்பது? எந்த மதத்தினரை நியமிப்பது? அதற்குள் ளடங்கின எந்த வகுப்பாரை நியமிப்பது? அல்லது எந்த அரசியல் கட்சித் தலைவரை நியமிப்பது? என்கின்ற கேள்வி பிறந்தவுடன் 'திருடனைத் தேள் கொட்டியது' போல் அந்த பிரசினையை அடியோடு நழுவவிட்டு விட்டு சுயமரியாதை மந்திரத்தை மொட்டையாய் பிடித்துக் கொண்டார்கள். பிறகு கிட்ட நெருங்கி கேட்க ஆரம்பித்த பிறகுதான் 'பார்லிமெண்டுக்கு இந்தியா வின் சுதந்திரத்தை நிர்ணயிக்க அதிகாரமில்லை' என்ற புதிய யுக்தி வாதத்தை கண்டுபிடித்தார்கள். ஆனால் இவ்விரண்டையும் பகிஷ்காரப் புரட்டர்கள் எல்லாரும் ஒப்புக் கொள்வதாக காட்டிக் கொள்வதுமில்லை, ஒப்புக் கொள்வ தில்லை என்பதாக தைரியமாய் சொல்லுவதும் இல்லை.

உதாரணமாக ஸ்ரீமதி பெசண்டம்மையார் தனது "காமன் வெல்த் ஆப் இந்தியா" என்கின்ற இந்திய சுயராஜ்ய மசோதா ஒன்றை சேலம் அரசியல் மகாநாட்டிலும் மற்றும் பல காங்கிரஸ் கூட்டங்களிலும் நிறைவேற்றிக் கொண்டு பார்லிமெண்டின் பாதத்தில் வைத்து அதை ஒப்புக் கொள்ளும்படி விழுந்து கும்பிட்டுக் கொண்டிருக்கின்றார். இதைப்பற்றி எந்த தேசீயத் தலைவர்களாவது தேசீய சுயமரியாதைக்காரர்களாவது ஒரு சிறிதும் வாய் திறந்தவர்கள் அல்ல.

பார்லிமெண்டை லக்ஷியம் செய்யாதவரும், பார்லிமெண்டுக்கு இந்தியாவின் மீது ஆதிக்கமில்லை என்பவரும், அரசியல் கமீஷனை சமூக விஷயத்தில் கூட பகிஷ்கரிக்க வேண்டும் என்பவருமான மாஜி காங்கிரஸ் தலைவரும், தமிழ்நாட்டு தனிப்பெருந் தலைவர் என்பவரும், 30 கோடி மக்களுடைய தலை எழுத்தை கையில் வைத்துக் கொண்டிருக்கின்றவர் என்றும் பிரபல தேசீயவாதிகள் என்றும் சொல்லிக் கொள்ளுவோர்களால் சொல்லப்படுபவருமான ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பார்லிமெண்ட் மெம்பர் களால் பிச்சையாகக் கொடுக்கப்பட்டதாகச் சொல்லிக் கொள்ளப் படும் இந்திய சட்டசபை ஸ்தானத்தை முதுகில் தூக்கிக் கொண்டு பார்லி மெண்டுக் காரர் வேஷமான உடையை உடுத்திக் கொண்டு, 'சமூக விஷயத்தில் அரசியல் கமிஷனை பகிஷ்கரிக்கும்படி நான் சொல்லவில்லை' என்கின்ற பொய்யை உளறிக் கொண்டு பார்லிமெண்டின் பாதத்தில் வைக்க ஒரு திட்டத்தையும் தயாரித்து தலையில் சுமந்து கொண்டு காயலாக்காரர் என்கின்ற



பெயர் வைத்துக் கொண்டு இங்கிலாந்தில் பார்லிமெண்ட் மெம்பர் வீட்டு புறவிடைப்புறம் திரிகின்றார் என்றால் பஹிஷ்காரமெங்கே? சுயமரி யாதை எங்கே? பூரண சுயேச்சை எங்கே? என்றுதான் கேட்கின்றோம்.

அன்றியும் இது யாருடைய கண்களில் மிளகாய்த்தூள் அள்ளிப் போடுவதற்காக செய்யும் சூழ்ச்சி என்பதாக தேசீயவாதிகள் என்போர்களை கேட்கின்றோம்.

போதாக் குறைக்கு சர்வ கக்ஷி மகாநாடு என்பதாக ஒன்றைக் கூட்டி அதன் மூலம் பாமர மக்களின் தலையில் கை வைக்கவும் தாழ்த்தப்பட்ட வகுப்பாரையும் குழியில் தள்ளவும் எவ்வளவோ சூழ்ச்சியும் செய்துப் பார்த்தாய் விட்டது.

எனவே இனியாவது இந்தப் புரட்டுகளை தலைகாட்டவிடாமல் அடிக்க வேண்டியது பொது மக்களின் கடமையாகும்.

**குடி அரசு – துணைத்தலையங்கம் – 10.06.1928**



RangaRakes tamilnavarasam.com

## அருப்புக்கோட்டை சுயமரியாதை கேஸ் விடுதலை

அருப்புக்கோட்டையில் சுகாதார வார கொண்டாட்டம் நடைபெற ஏற்பாடு செய்திருந்த ஒரு கூட்டத்தில் ஒரு பார்ப்பனர் தன்னைத்தானே அக்கிராசனாதிபதியாக தேர்ந்தெடுத்துக் கொண்டு ஆசனத்திலமர்ந்து நடவடிக்கை ஆரம்பிப்பதற்காக முதலில் ஒரு பார்ப்பனரல்லாத வாலிபர் பாட ஆரம்பித்தவுடன் அக்கிராசனத்திலிருந்த பார்ப்பனர் கோபம் கொண்டு “முதல் முதல் சூத்திரன் பாடக் கூடாது; பிராமணன் தான் பாட வேண்டும்” என்று சொல்ல, உடனே அங்கிருந்த கூட்டம் ‘சூத்திரன்’ என்று சொன்னதற்காக அக்கிராசனரை மன்னிப்பு கேட்கும்படி கேட்கவே, அக்கி ராசனர் மன்னிப்பு கேட்காததால் கூட்டத்தார் அத்தனை பேரும் சுய மரியாதைக்கு ஜே! ராமசாமி நாயக்கருக்கு ஜே! என்று சொல்லிக் கொண்டு கலைந்து போய்விட்டார்கள். பிறகு எவ்வளவு தூரம் மன்னிப்பு கேட்டுக் கொண்டும் கூட்டம் கூடவே இல்லை. இதனால் ஆத்திரம் கொண்ட ஒரு பார்ப்பன சுகாதார இன்ஸ்பெக்டர் பார்ப்பன போலீசின் உதவி பிடித்து, பல பார்ப்பனரல்லாத வாலிபர்களின் மேல் கேஸ் தொடுத்து, அதாவது அரசாங்க உத்தியோகஸ்தரின் வேலையை செய்யவொட்டாமல் தடுத்ததாகவும் மற்றும் சிலகுற்றங்களும் சுமத்தி அரஸ்டு செய்து ஜாமீனில் விடவும் மறுத்து சிறைச் சாலையில் இரவெல்லாம் அடைத்து வைத்து கேஸ் தொடர்ந்தார்கள். கேசுக்கு மதுரையிலிருந்து வக்கீல்கள் பீசில்லாமல் போய் பல வாய்தாக்கள் ஆஜராகி கேஸ் நடத்தினார்கள். கடைசியில் குற்றவாளிகள் இன்னார் என்று சரிவர அடையாளம் காட்டவே முடியாமல் போய் விட்டது. அப்படி இருந்தும் அதிகாரிகளின் மனப்பான்மையை அறிந்த மேற்படி வாலிபர்கள் கேஸை வேறு கோர்ட்டுக்கு மாற்ற ஆசைப்பட்டார்கள். கடைசியாய் கேசு தள்ளுபடி யாகிவிட்டதாக அருப்புக்கோட்டையிலிருந்து தந்தி வந்திருக்கின்றது.

அனாவசியமாய் ஒரு இரவு முழுவதும் அடைத்து வைத்திருந்த தற்காக போலீசு அதிகாரிகள் மீது நஷ்டத்திற்கு விவகாரம் தொடர வேண்டும் என்கின்ற எண்ணம் அவ்வூராருக்கு இருப்பதாக தெரிய வருகின்றது. அதற்காக பலர் பொருளுதவி செய்வதாகவும் முன் வருவதாகவும் தெரிய வருகின்றது.



என்றாலும் விடுதலை அடைந்த விஷயத்திற்காக வாலிபர்கள் பதினொருவரையும் பாராட்டுவதுடன் இந்த கேசுக்கு பொருள் கருதாது தங்கள் கஷ்ட நஷ்டத்தையும் கருதாது வந்து உதவி செய்த மதுரை வக்கீல் களுக்கு நமது நன்றியறிதலைத் தெரிவித்து கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 10.06.1928**



RangaRakes
tamilnavarasam.com

## ‘லோகோபகாரி’யின் மயக்கம்

31-5-28 தேதி லோகோபகாரியின் தலையங்கத்தில் மணவயது மசோதாவைப் பற்றி எழுதுகையில்,

“......................குழந்தைகளுக்கு மணம் செய்து வைக்கும் முறையைக் கண்டித்து சில ஆண்டுகளாகவே நாட்டில் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. இது நன்று. ஆனால் இது விஷயத்தில் பொது ஜனங்களுக்கு அறிஞர்களின் பிரசாரத்தால் நல்லறிவு தோன்றுமாறு செய்தலே நல்வழியாகும். தற்காலத்தில் இது முடியாத காரியமாகத் தோன்றுகிறது. ஆயினும் இவ்விஷயத்தில் அரசாங்கத்தார் சட்டம் போடுதல் பொருத்தமுடைய செயலல்ல வென்று நமக்குத் தோன்றுகிறது” என்று எழுதியிருக்கின்றது. இப்படி எழுதி இருப்ப தானது சீர்திருத்தக்காரருக்கு தலையையும் அதன் விரோதிகளான பார்ப்பனர் களுக்கு வாலையும் காட்டுவது போல் இருக்கின்றது.

‘குடிகளால் சரி செய்து கொள்ள முடியவில்லை’ என்று தன்னாலேயே ஒப்புக் கொள்ளப்பட்டதும் உண்மையிலேயே மனித சமூகத்துக்கு கேடு உண் டாக்குவதுமான விஷயம் சர்க்காரால் சரி செய்யப்பட நேருவதில் ‘லோகோ பகாரி’க்கு உள்ள கஷ்டம் இன்னது என்பது நமக்கு விளங்கவில்லை.

கடைசியாக “இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் பொழுது வயது நிர்ணயம் முதலிய விஷயங்களில் பலவித தொல்லை விளையும்” என்று எழுதுகின்றது. மனிதன் தன் சொத்தை அடையும் விஷயத்திலும் உத்தி யோகம் பெறும் விஷயத்திலும் மற்றும் அனேக விஷயத்திலும் வயது நிர்ணயம் குறிக்கப்பட்டிருக்கின்றது. இவைகளில் என்ன தொல்லைகள் விளைந்து மக்களைக் கெடுத்துவிட்டது என்பது விளங்கவில்லை. வேறு மதஸ்தர்கள் என்பவர்களுக்காகிலும் வயது கண்டு பிடிக்கும் விஷயம் சற்று கஷ்டமாக இருக்கலாம்.

இந்துக்கள் என்போர்களுக்கு அதிலும் பார்ப்பனர்கள் என்போர்க்கு வயது கண்டுபிடிப்பதில் தொல்லை விளைய காரணமில்லை என்றே சொல்வோம். ஏனெனில், அவர்கள் ஜோசியம், ஜாதகம் என்னும் ஒரு வித



மூடநம்பிக்கையுள்ளவர்களானதால் கண்டிப்பாய் கணக்கு வைத்திருக்க முடியும். அதோடு சர்க்கார் பிறப்பு இறப்புகளைப் பதிவு செய்து வருவதால் ஜாதகத்தை புரட்டி விடுவார்கள் என்கின்ற பயமும் வேண்டியதில்லை.

எனவே இனியாவது ‘லோகோபகாரி’ச் சீர்திருத்த விஷயங்களில் இம்மாதிரி வழவழப்பையும் இரண்டு பேருக்கும் நல்லவராகப் பார்க்கும் தன்மையையும் விட்டு தைரியமாய் ஒரு வழியில் நின்று மக்களுக்கு உதவ வேண்டுமாய் ஆசைப்படுகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 10.06.1928**



RangaRakes tamilnavarasam.com

# “நவசக்தி” முதலியாரின் நாணயம்

நாம் சென்ற வாரம் ‘குடி அரசில்’ திருவாளர் திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களைப் பற்றி எழுதியதில் ‘நவசக்தியின் சீர்திருத்தம்’ என்கிற கட்டுரையானது திரு. முதலியாரால் பேடித்தனமாகவும், திருட்டுத் தனமாகவும் நம்மைக் குறிப்பிட்டே ஜாடையாக எழுதப்பட்டதென்னும் பொருளைக் காட்டியதோடு அதை நாம் மறுக்கவோ, கண்டிக்கவோ ஆரம் பித்தால் உடனே, திரு.முதலியார் “அது குடி அரசைப் பற்றி எழுதவில்லை” என்றும் பொதுப்பட எழுதினது என்றும் எழுதி ஒளியப் பார்ப்பார் என்றும் எழுதியிருந்தோம். அது போலவே இவ்வாரம் “நவசக்தி”யில் திரு.முதலியார் அவர்கள் “குடி அரசின் குதர்க்கம்” என்னும் தலையங்கத்தில் நாம் குறிப்பிட்டபடியே தமது பழங் குணத்தைக் காட்டியிருக்கிறார். அதாவது,

“குடி அரசு” குதர்க்கத்தில் பேர் பெற்றது என்றும் அது தோன்றியது முதல் யாரையேனும் போருக்கிழுப்பதே அதன் வேலை என்றும் அது இவ் வாரம் தம்மீது (திரு. முதலியார் மீது) நாட்டத்தைச் செலுத்தி இருப்பதாகவும் எழுதிவிட்டு,

“நவசக்தியில் தோன்றிய ‘சீர்திருத்தம்’ என்னும் கட்டுரை பொது நெறிபற்றி எழுதப்பட்டதே தவிர ‘குடி அரசின்’ ஆசிரியரையோ அதன் இயக்கத்தையோ உளம் கொண்டு எழுதவில்லை” என்றும் எழுதி யிருக்கிறார்.

இப்படி திரு, முதலியார் எழுதி மறையப் பார்ப்பார் என்று நாமும் நமது நண்பர்களும் முன்னமே நினைத்ததுதான். ஆனாலும், பின்னை அது யாரைப் பற்றி எழுதினது என்று கேட்டு இம்முறை திரு.முதலியாரின் நாணயத்தின் யோக்கியதையை சந்திக்கு இழுத்து விட வேண்டும் என்கிற எண்ணத்துடன் தான் சென்ற வாரம் ‘குடி அரசில்’ “திரு.வி.கலியாண சுந்தரமுதலியார்” என்கின்ற தலையங்கம் எழுதினோம்.

திரு.முதலியார், உடனே வெகு அவசரமாக அடுத்த வாரமே அது நம்மைப் பற்றி எழுதவில்லை என்று எழுதி தப்பித்துக் கொள்ளப் பார்த்தாரானாலும் வெகு ஆத்திரத்தின் மீது 5, 6 கலம் நீட்டி எழுதிய அதே



கட்டுரையில் தம்மை அறியாமலே தமது விஷம் முழுவதையும் கக்கி விட்டார். அதாவது,

“குடி அரசில் வரும் கட்டுரைகளில் பல எமக்கு (திரு.முதலியாருக்கு) பிடிப்பதில்லை” என்றும் “அதற்காக நான் அறப்போர் தொடுக்கப் போகி றேன்” என்றும் எழுதி அவ்வாதப் போரிட நம்மை அறைகூவி அழைத் திருக்கிறார்.

அதோடு “ஆண்டவன் அருளை முன்னிட்டே இப் போர்முனை யில் நான் இறங்குகிறேன்” என்று சொல்லி ஆண்டவன் அருளில் போய் ஒளிகிறார். அதோடு நில்லாமல் “முரடர்களால் தாக்கப் பெறும் பேறும் கொல்லப் பெறும் பேறும் எமக்கு கிடைத்தால் அதுவே போதும்” என்றும் சோம்பேறி ஞானமும் பேசி பேடி வசவும் வைகிறார்.

அன்றியும் பெரியோர்களை இழிந்த உரைகளால் தூற்றும் கட்டுரை களைக் கொண்டு வெளிப்பட்டுள்ள ஒரு பத்திரிகையுடன் (குடி அரசுடன்) போர் புரிந்து உயிர் நீப்பதே எனது பிறவிப்பயன்” என்றும் எழுதுகிறார்.

அன்றியும் “குடிஅரசுத் தலைவருக்கு ஆள்வலி, தோள்வலி, பொருள் வலியுமுண்டு; எமக்கோ அத்தொன்றுமில்லை; ஆதலால் ஆண்டவன் அருள்வலிகொண்டு போர் தொடங்குகிறேன்” என்றும் எழுதி இருக்கிறார். இவ்வெழுத்துக்களின் யோக்கியதை எப்படி இருந்தாலும் இவ்வெழுத்துக் களுக்குள் எவ்வளவு புரட்டும் இழிகுணமும் நிறைந்திருந்தாலும் ஒன்று மாத்திரம் வெளிப்படையாய்த் தெரிகிறதா இல்லையா? என்றுதான் கேட் கின்றோம்.

அதாவது, தாம் இதுவரை எழுதிவந்த ‘சீர்திருத்தம்’ என்னும் கட்டு ரைகள் ‘குடி அரசை’யோ அதன் கொள்கைகளையோ குறித்ததல்ல என்றும், பொதுவான சீர்த்திருத்தையே குறிக்கொண்டு எழுதப்பட்டது என்றும் எழுதி வந்ததும் இப்போது இப்படி எழுதுவதும் யோக்கியப் பொறுப்பற்ற பொய்யா அல்லவா? என்பதுதான்.

இம்மாதிரியான யோக்கியரைப்பற்றி தாம் வசை மொழிகள் எழுதி விட்டதாக மிக்க வருந்துகிறார். அதோடு இவரை கண்டித்திருக்கும் வார்த்தை கள் சுயமரியாதைக்கு ஏற்றதல்ல என்றும் எழுதுகிறார். எனவே பிறர் செய்யும் அயோக்கியத்தனங்களை மறைத்து வைப்பதுதான் திரு.முதலியார் அவர்கள் அகராதியில் சுயமரியாதைக்கு பொருள் போலும்.

தவிர திரு. முதலியார் நம்முடன் தொடங்கியிருக்கும் போர் அறப் போரா மறப்போரா என்பதையும் பொது மக்கள் யோசித்துப் பார்க்க வேண்டு



RangaRakes tamilnavarasam.com

மாய் விரும்புகிறோம். அறப்போர் என்பது எதிரி என்ன குற்றம் செய்தான் என்பதை எடுத்துக்காட்டி, அது குற்றம்தானா? என்பதை ருசுப்படுத்தி, அதன் மீது போர் தொடுத்து கண்டித்தல் யோக்கியர்கள் செய்யும் அறப்போருக்கு உரிய தர்மமாகும்

நமது திரு. முதலியார் அவர்களின் அறப்போருக்கு இந்த தர்மங்கள் வேண்டியதில்லை போலும். அன்றியும் 'நாஸ்திகம்' 'பெரியோரை நிந்தித்தல்' என்று சொல்லிவிட்டு, பேடித்தனமாக வாயில் வந்தபடி மறைவாக வைது விட்டு யாராவது ஏன் அப்படிச் செய்தீர்கள் என்று கேட்டால் 'உம்மையல்ல' என்று சொல்லிவிடுவதுதான் அறப்போர்க்குற்ற தர்மங்களாகிவிடும் போலும்.. இவ்வித அறப்போருக்கு நமது திரு. முதலியாருக்கு கடவுள் அருள் வேறு வேண்டுமாம்.

கடவுள் ஒன்று இருப்பதாக திரு. முதலியார் அவர்கள் உண்மையிலேயே எண்ணி இருப்பாரானால் அதன் அருளை தமக்கு மாத்திரம் சொந்தமாக்கிக் கொண்டிருக்கமாட்டார். அதுவும் தன்னுடைய ஒழுக்கமும், நாணயமும், ஆண்மையும் அற்ற மறப்போருக்கு ஆண்டவன் அருள் கிடைக்குமென்று ஒரு க்ஷணமும் நினைத்திருக்கவும் மாட்டார். எனவே, உலகத்தில் எப்படிப்பட்டவர்கள் தொட்டதற்கெல்லாம் கடவுளை நினைக்கிறார்கள் என்பதற்கும், கடவுள் அருளை வேண்டுகிறார்கள் என்பதற்கும் இதுவே ஒரு உதாரணமாகும்.

நிற்க திரு. முதலியாரவர்கள் புராணங்களைப்பற்றி எழுதும்போதும் திருட்டுத்தனமாகவே எழுதுகிறார். அதாவது புராணங்களைப்பற்றிய நமது கருத்து நேயர்களுக்கு முன்னமே தெரியுமாம். ஆதலால் இப்பொழுது எழுத வேண்டியதில்லை என்று மறைந்து கொண்டார். இந்தப் போருக்கோ கட்டுரைக்கோ ஜீவாதாரமான விஷயம் இப்புராண விஷயந்தான் என்பது யாவரும் அறிந்ததாகும். அப்படியிருக்க அதைப்பற்றி மற்றுமொரு சமயம் எழுதப்போகிறாராம். எப்பொழுது எழுதுவது? என்பது நமக்கு விளங்கவில்லை. புராணங்களைப் பற்றி குறைகூறுவதாக நம்மீது குற்றம் சுமத்தும் போது அதன் யோக்கியதைகளை எடுத்துச் சொல்லாமல் மற்று எப்போது சொல்லுவதற்காக அதை வைத்துக் கொண்டிருக்கின்றார் என்பது விளங்க வேண்டாமா? இதற்குதான் அறப்போர் என்று பெயரிட்டிருப்பதுடன் ஆண்டவன் அருளை நம்பி போருக்கு எழுந்து விட்டாராம். அதோடு கூடவே தான் ஒருபடி இறங்கி "புராணங்களை கவி அழகு, இயற்கை வருணனை முதலியவற்றைக் கருதிக்கூடவா படித்தல் கூடாது" என்கிறார். அவ்வியற்கை அழகுக்கும் கவி அழகுக்கும் உதாரணமாக கம்பராமாயணத்தையும், பெரிய புராணத்தையுமே காட்டத் துணிந்து விட்டார். இவ்வளவாவது இறங்கி வந்தது நல்ல காலமே.



கம்பராமாயணத்தையும், பெரிய புராணத்தையும், கவியழகையும், வருணனையும் குறிக்கொண்டு படிப்பவரிடம் நமக்கு வேலையில்லை என்பதை திரு. முதலியார் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஆனால் பாமர மக்களைக் கூட்டிவைத்து அதைப் படிப்பதுதான் பக்தி என்றும் கேட்பதுதான் மோட்சமென்றும், அதில் உள்ளவைகளை நம்பாதவன் நாஸ்திகன் என்றும், முரடன் என்றும், கடவுளையும், கடவுள் நெறியையும், கடவுள் நெறியை உணர்த்திய பெரியார்களையும் தூஷிப்பவன் என்றும் சொல்லுகின்றார்களே அம்மாதிரியான மூடர்களின் பிரசாரம் ஒழிய வேண்டும் என்பதுதான் நமது கவலை.

மற்றும் திரு. முதலியார் அவர்கள் எழுதுவதாவது "பத்திரிகை உலகில் ஈண்டு 'குடி அரசு' உலவுவது போல கலைகளில் குப்பைப் புராணங்கள் உலவுகின்றன" என்றும்

"நாயக்கர் போன்றாருக்கு உலகில் இடமிருக்கும் வரை புராணங்களுக்கும் இடமிருந்தே தீரும்" என்றும்

"புராணக் கலைகளை நாயக்கர் போன்றாருக்கு உவமையாய்க் கூறலாம்" என்றும் எழுதி இருக்கிறார்.

இம்மூன்று வாக்கியங்களாலும் நாயக்கரை திரு. முதலியார் அவர்கள் எவ்வளவு இழிவாய்க் கருதி இருக்கிறார் என்பது ஒருபுறமிருந்தாலும், அப்படி இழிவாய் கருதுவதிலும் நமக்கு என்ன லாபமிருக்கின்றது என்று பார்த்தால் இதிகாச புராணங்கள் என்பவைகளை அவ்வளவு இழிவாய்க் கருதி இருப்பதாக திரு. முதலியார் இப்போதாவது ஒப்புக் கொள்கின்றாரே, அதுவே நமக்கு ஒரு பெரிய லாபமாகக் கொள்ளலாம். ஆனால் இந்தப் புத்தி எவ்வளவு நேரம் நிற்குமோ?

உள்ள இதிகாசங்களையும் புராணங்களையும் வெறும் கலையாக ஒப்புக் கொண்ட பிறகும், மற்றும் அவை "நாயக்கரை"ப்போன்ற அவ்வளவு இழிகுணமுள்ளதாகத் தீர்மானித்த பிறகும், திரு. முதலியார் அவர்கள் கடவுளையும் கடவுள் நெறியையும், கடவுள் நெறிகளை உணர்த்திய பெரியாரையும் வேறு எதிலிருந்து கண்டுபிடித்தார் என்பதையும், எப்படிப்பட்ட கடவுளையும் கடவுள் நெறியையும் நெறி உணர்த்திய பெரியாரையும் நாயக்கர் வைகிறார் என்பதையும் திரு. முதலியார் ஆண்மை இருந்தால் இப்போதாவது சொல்ல முன் வருவாரா? என்றுதான் கேட்கின்றோம்.

எனவே, திரு. முதலியார் அவர்கள், "சீர்திருத்தம்" என்று எழுதிய கட்டுரைகள் நம்மையும் நமது இயக்கத்தையும் பற்றி எழுதியதுதான் என்று நாம் கொண்டது சரியென்றும், திரு. முதலியார் நம்மைப்பற்றி எழுதியது



RangaRakes tamilnavarasam.com

அல்ல என்று சொல்வது நாணயப் பொறுப்பற்ற பேடித்தனம் என்றும், திரு. முதலியார் அவர்களாலேயே 13-6-28 தேதி "நவசக்தி"யில் "குடிஅரசின் குதர்க்கம்" என்று எழுதப்பட்ட தலையங்கத்திலேயே தாம் முன் எழுதிய 'சீர்திருத்தம்' என்னும் கட்டுரையை நம்மைப்பற்றியே எழுதியதாகவும், அதுவும் கடவுளையும், கடவுள் நெறியையும், அந்நெறி உணர்த்திய பெரியார்களையும் குறைகூறுவதானாலும். நாஸ்திகம் பரப்புவதானாலுமே நம்முடன் இப்போர் தொடுக்க நேரிட்டது என்றும் எழுதி ஒப்புக் கொண்டிருப்பதையும் வாசகர்களுக்கு மெய்பித்து விட்டோம் என நினைக்கிறோம்.

மற்றும், திரு. முதலியார் அவர்களின் கட்டுரையின்கண் காணும் இழிமொழிகளுக்கு அதாவது சிற்றினம் என்றும், நாய் என்றும் புன்மொழி என்றும், நாயக்கர் இறுமாந்தவரென்றும், நாஸ்திகத்தை புகுத்துகிறவர் என்றும், "குடிஅரசு" இழிவுரை உமிழும் பத்திரிகை யென்றும், "குடி அரசு" கடவுள் நெறிக்கும் கலைகளுக்கும் கேடு சூழ்ந்து வருகின்றது என்றும் மற்றும் அது போன்று காணும் பழிப்புகளுக்கும், இழி மொழிகளுக்கும், மற்றும் அதில் கண்ட பலவற்றிற்கும் பின்னால் எழுதுவோம்.

**குடி அரசு – தலையங்கம் – 17.06.1928**



# பார்வதிக்கும் பரமசிவனுக்கும் சம்பாஷணை

**– சித்திரபுத்திரன்**

**பார்வதி** :– எனது பிராணநாதனாகிய ஓ சிவபெருமானே! ஆகாயத்தில் பறக்கின்ற, கருடன் என்கின்ற பட்சியைப் பார்த்து பலர் காலையிலும், மாலையிலும் கன்னஙகன்னமாய் போட்டுக் கொள்ளுகின்றார்களே, அது எதற்காக நாதா?

**பரமசிவன்** :– கண்மணி! இது உனக்குத் தெரியாதா? கருடன் நமது அடிமையாகிய மகாவிஷ்ணுவுக்கு வாகனமல்லவா? அதனால் விஷ்ணு பக்தர்களில் சிலர் கருடனைக் கண்டால் கன்னத்தில் அடித்துக் கொள்ளுகிறார்கள்.

**பார்வதி** :– ஓ ஹோ அப்படியா சங்கதி! சரி அப்படியானால் நமது அடிமை வாகனத்திற்கு இவ்வளவு மதிப்பு இருக்கும்போது நம்முடைய வாகனமாகிய காளை மாட்டைக் கண்டால் ஏன் யாரும் கன்னத்திலடித்துக் கொள்வதில்லை? அன்றியும் வண்டியில் கட்டி ஓட்டுகிறார்கள், ஒடை அடிக்கிறார்கள், செக்கில் கட்டி ஆட்டுகிறார்கள், அடித்துக்கூட தின்று விடுகிறார்களே அது ஏன்?

**பரமசிவன்** :– நம்முடைய பக்தர்களுக்கு அவ்வளவு பக்தி இல்லை. நன்றாக சாம்பலை பூசிக் கொள்ளத்தான் தெரியும். நமது வாகனத்தினிடத்தில் பக்தி காட்டத் தெரியாது.

**பார்வதி** :– அதுதான் போகட்டும், நமது குமாரனாகிய கணபதியின் வாகனமாகிய பெருச்சாளியைக் கண்டால் ஏன் கன்னம் கன்னமாய் அடித்துக் கொள்ளாமல் தடி எடுத்து அடித்துக் கொன்று விடுகிறார்கள்? அய்யோ பாவம்!

**பரமசிவன்** :– கணபதியின் பக்தர்களுக்கும் போதுமான பக்தி கிடையாது. ஏனென்றால் கணபதிக்கு அபிஷேகம் செய்யும்போது அவனது வாகனமாகிய கல்லுப் பெருச்சாளிக்கும் அபிஷேகம் செய்வார்கள். அதற்கும் பால், நெய், தயிர் ஊற்றி கொழுக்கட்டையை வைப்பார்கள். உயிருடன்



RangaRakes tamilnavarasam.com

காணும்போது ஓடி ஓடி அடிப்பார்கள். நம் பக்தர்கள் யோக்யதையே இப்படித்தானே! இந்த வெட்கக் கேட்டை யாருடன் சொல்லுவது!

**பார்வதி** :- அதுதான் போகட்டும், தங்களுடைய மற்றொரு வாகன மாகிய நாயைக் கண்டால் ஒருவரும் கன்னத்தில் அடித்துக் கொள்ளாமல் எல்லோரும் சோடு சோடு என்று விரட்டுகின்றார்களே அது என்ன காரணம் நாதா?

**பரமசிவன்** :- கண்மணி அதுவும் பக்தர்களின் அறியாத்தனம் தான். ஆனாலும் அது மலம் சாப்பிடுகின்றதல்லவா? அதனால் அதன் மீது சிலர் அசுசிப்படுகின்றார்கள் போல் இருக்கின்றது.

**பார்வதி** :- என்ன நாதா, வைரவக் கடவுள் வாகனம் மலம் சாப் பிட்டால் மகாவிஷ்ணுவின் வாகனம் அதிலுள்ள பூச்சி, புழு, நத்தை, நண்டு முதலிய அசுசியமான வஸ்துக்களையெல்லாம் சாப்பிடுகின்றதே! அதையெல் லாம் அந்த பக்தர்கள் மன்னிக்கும் போது மலம் சாப்பிடுவதை மாத்திரம் ஏன் நமது பக்தர்கள் மன்னிக்கக்கூடாது?

அதுதான் போகட்டும் நமது குமாரன் வாகனமாகிய மயிலைக் கண்டால் ஏன் முருக பக்தர்கள் கன்னங் கன்னமாய் போட்டுக் கொள்ளுவ தில்லை, அன்றியும் அதைக் கண்டால் அடித்துத்தின்று விடுகிறார்களே!. அவன் கொடியாகிய சேவலைக் கண்டால் அறுத்துத்தின்று விடுகிறார் கள்? இது என்ன அநியாயம்?

**பரமசிவன்** :- அது அந்த பக்தர்களின் பக்திக் குறைவு. அதற்கு நாம் என்ன செய்யலாம்.

**பார்வதி** :- நாதா! சரி சரி, இதையெல்லாம் பார்க்கும் போதுதான் எனக்கு மிகவும் வெட்கக்கேடாயிருக்கின்றது. நமக்குக் கீழ்ப்பட்ட விஷ்ணுவின் வாகனத்திற்கு மாத்திரம் உலகத்தில் இவ்வளவு கௌரவமும் அவர் பக்தர்களுக்கு மாத்திரம் இவ்வளவு பக்தியும் இருப்பதும் நமது வாகனங்களுக்கு இவ்வளவு மரியாதைக் குறைவும், நமது பக்தர்களுக்கு இவ்வளவு பக்திக் குறைவும் இருப்பதும் எனக்கு வெளியில் தலை நீட்ட முடியவில்லையே தவிர விஷ்ணுவின் பெண்ஜாதியான மகாலக்ஷ்மி கூட இதனாலேயே அடிக்கடி என்னைப் பார்த்து பரிகாசம் பண்ணுகின்றாள். தவிர நம்முடைய பக்தர்களிலும் பலர் அறிவில்லாமல் நம்ம வாகனத்தை மரியாதை செய்யாமல் இருப்பதோடல்லாமல் விஷ்ணு வாகனத்திற்கு விஷ்ணு பக்தர்களைப் போலவே கன்னங்கன்னமாய் போட்டுக் கொண்டு மரியாதை செய்கிறார்களே இது என்ன மானக்கேடு! தாங்களே யோசித்துப் பாருங்கள்.



**பரமசிவன்** :- என்ன செய்யலாம் சகி? நம் தலையில் பிரம்மன் இப்படி அவமானப்படும்படியாக விதித்துவிட்டான். விதி யாரை விட்டது? சொல் பார்ப்போம் என் கண்மணி! நீ இதற்காக அழவேண்டாம். உன்னைப் பார்த்தால் எனக்கும் அழுகை வருகிறது.

**பார்வதி** :- சரி சரி, இதற்காக நான் ஒருத்தி அழுவது போதாதாக்கும். இனி நீங்கள் வேறு அழுக வேண்டும்! போனால் போகட்டும் இம்மாதிரி நம் தலையில் எழுதிய அந்த பிரம்மாவை பேசிக் கொள்ளலாம். வாருங்கள் நம்ம வேலையைப் பார்க்க நாம் போவோம்.

**குடி அரசு - உரையாடல் - 17.06.1928**



RangaRakes

tamilnavarasam.com

# திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்

திரு.வி.கல்யாணசுந்தர முதலியாரவர்கள் தமது 20.6.28 உ 'நவசக்தி' பத்திரிகையில் 'திறந்த மடல்' என்னும் தலையங்கத்தின் கீழ் நமக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதியிருக்கிறார். அக்கடிதத்தில், நாம் சென்ற வாரக் 'குடி அரசு' பத்திரிகையில் எழுதிய விஷயங்களை தாம் ஒப்புக் கொள்ள வில்லை என்றும் 'நவசக்தி'யில் கண்ட மற்ற – நாம் கண்டிக்காமல் விட்ட – விஷயங் களை நாம் ஒப்புக் கொண்டதாக தாம் கொள்ளுவதாகவும் எழுதி யிருக்கிறார். இதைப்போன்ற அறிவுடைமை பயித்தியக்கார ஆஸ்பத்திரியிலும் கண்டு பிடிக்க முடியாது என்றே சொல்லுவோம். மற்றவைகளைப் பற்றி நாம் பின்னர் எழுதுவோம் என்று குறிப்பிட்டது திரு. முதலியாரின் கண்களில் படாமல் போனது ஏனோ அறியோம்.

மற்றும் நமது கட்டுரையை நான்கு பிரிவாக்கி

முதலாவதாக வசைமொழி என்றும், அதை இனி நாம் குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும், நமக்கு புத்தி சொல்லி வருகிறார். இது அவரு டைய அதிகப் பிரசங்கித்தனத்தையே காட்டுகின்றது. தற்கால பண்டித உலகத்தில் இது ஒரு அதிசயமல்ல. இதையே இவர் வசைவு என்றால் திரு. முதலியார் அவர்களின் யோக்கியதைக்கேற்ற மாதிரி அவர் போக்கை முழுதும் பின்பற்றியே எழுதியிருந்தால் அவர் அதற்கு என்ன பேர் இடுவா ரோ நாம் அறியோம். நம்மை சிற்றினம் என்று சொன்ன திரு. முதலியாரின் இனத்தை விரிக்க நாம் துணிந்திருந்தால் அதை என்ன வென்று சொல்லு வாரோ நாம் அறியோம். அன்றியும் பின்னும் ஒரு காலத்தில் திரு. முதலியார் அவர்களுடன் பழமை பாராட்ட நேரிடும் என்றே அவர் இனத்தை மனப் பூர்வமாக மூடி வைத்தோம். இதை திரு. முதலியார் ஒப்புக் கொள்ளாவிட்டால் நமக்கு கவலை இல்லை. சமயம் வரும் போது, நாம் எவ்வளவு மூடி வைத்தோம் என்பதை அவர் உணரக்கூடும் என்கிற தைரியம் நமக்குண்டு. ஆதலால் இனிமேலாவது திரு. முதலியாரவர்கள் நம் போன்றோருக்கு அறிவுறுத்தும் தன்மையை விட்டு தன்னையே அவர் திருத்திக் கொள்ள முயல வேண்டுமென்று அவருக்கு அறிவுறுத்த நமக்கு யோக்கியதை இல்லாவிட்டாலும் அந்நிலை ஏற்பட நாம் ஆசைப்பட உரிமை உண்டு என்று நினைக்கின்றோம்.



இரண்டாவதாக 'நவசக்தி'யின் மொழிகளில் சிலவற்றை நாம் தவறாக கொண்டதாக குறிப்பிட்டு தனது கல்வித்திறன் முழுவதையும் அதற்காக செலவழித்திருக்கின்றார்.

இதைப்பற்றிய விசாரணையை வாசகர்களுக்கே விட்டு விடுகிறோம். திரு. முதலியாரவர்களின் எழுத்தையோ மொழிகளையோ பிறழக் கொள்ள வில்லை என்று ஒரு மனிதன் திரு. முதலியார் அவர்களிடம் பேர் வாங்க வேண்டுமானால் அது உலகத்தில் மக்கள் பிறவிக்கு ஆகக்கூடிய காரியமா? என்பது நமக்குப் பெரிய மயக்கமாகவே இருக்கின்றது. ஆழந்தெரியாமல் காலைவிட்டுக் கொள்வதும் பிறகு மற்றவர்கள் மீது பிறழக்கொண்டதாகக் குறை கூறுவதும் அவரோடு கலந்திருந்த முறையில் நாம் கண்டு பிடித்த ஒன்றாகும்.

மூன்றாவதாக திரு. முதலியார் பொறித்த சீர்திருத்தக் கட்டுரையை பொதுநெறி பற்றி எழுதியதாகவே திரும்பவும் எழுதி தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்கிறார்.

திரு. நாயக்கர் மீது போர்தொடுக்க ஆரம்பித்துவிட்டோம். உதவிக்கு நீ வா, நீ வா என்று கதவு வைத்த வீடுதோறும் காத்துத் திரிந்ததும், விலாசம் தெரிந்த பேர்வழிகளுக்கெல்லாம் சேதி அனுப்பினதும் திரு. முதலியாரவர் களாலேயே சமீபகாலத்தில் மடையன், அயோக்கியன், துர்த்தன், இழிமகன் என்றும் இன்னும் இன்னோரன்ன பலவாறாகச் சொல்லிக் கொண்டிருந்த நபர்களிடமெல்லாம் உயிர்துணை எதிர்பார்த்து இறைஞ்சியதும் 'அறப் போர்' தொடுக்க ஆண்டவன் அருளைத் துணை கொண்டதும் இவ்வளவும் பெற்றும் போதாமல் உயிர்விடத் துணிவு கொண்டதும் ஆகிய மற்ற காரியங் கள் எதற்காக யாரை உத்தேசித்து எது முதற்கொண்டு ஏற்பட்ட கெடுதிக்காக என்பதை கருணை கூர்ந்து திரு. முதலியாரவர்கள் திருக்கரங்கொண்டு இப் போதாவது அருளுவாரா? என்று இறைஞ்சிவிட்டு அவ்விஷயத்தை தற்கால சாந்தியாக நிறுத்தி வைக்கின்றோம்.

நான்காவது புராணக்கலையை ஒட்டியது என்று குறிப்பிட்டுவிட்டு புராணத்தைப்பற்றிய தமது அபிப்பிராயத்தை முருகன் என்னும் புத்தகத்தில் முன்னமேயே குறிப்பிட்டிருப்பதாகவும் எழுதி அதில் உள்ள விஷயத்தை எடுத்து நான்கு கலம் நீட்டி தீட்டியிருக்கிறார்.

அவற்றுள் நாம் இது சமயம் இரண்டு இடங்களை மாத்திரமே எடுத்தாளுவோம். அதாவது, ஒன்று கடவுளைப் பற்றியது; மற்றது புராணங் களைப் பற்றியது. அவற்றுள் "கடவுளைப் பற்றியதில் – சைவ, வைணவ, பௌத்த சமயவாதிகள் அறநெறி பிறழ்ந்து ஒருவரோடொருவர் போரிட்டு ஒருவரை ஒருவர் தூற்றி எழுதிய ஏட்டுச் சுவடிகள் பல...........



RangaRakes tamilnavarasam.com

இச்சமய வெறியர்கள் முருகன் - என்னும் தமிழ்ப் பெயரை விரும்பா தொழியினும் இயற்கை முதற்கு வேறுபெயர் சூட்டியாதல் வழிபட்டிருக் கலாம்? இயற்கையின் உட்பொருளை எப்பெயரால் வழுத்தினால் என்ன? இயற்கை, கடவுள் முருகன் என்னும் பெயர் தாங்கினால் என்ன? அரி, அரன், அல்லா, ஜோஹோவா முதலிய எப்பெயரிட்டு அழைத்தாலென்ன?"

என்று எழுதியிருக்கும் இடத்தை முதலாவதாக எடுத்துக் கொள்ளுகிறோம்.

இங்கு திரு. முதலியாரவர்கள் தம்மை இயற்கையவாதியாகக் கொள்ளு கின்றார் என்று கொள்ளுகிறோம்.

அதாவது ஆங்கிலத்தில் நேச்சுரலிஸ்ட் (Naturalist) என்று சொல்லும் மதம்.

அதோடு இயற்கையை எந்த பெயரால் அழைத்தாலென்ன என்றும் அதை முருகன் என்று அழைக்க ஒருப்படாதவர்கள் வேறு எப்பெயரால் வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளுங்கள் என்றும் சொல்லி யிருக்கிறார்.

அன்றியும் முருகனைப்பற்றி ஒவ்வொரு புராணத்தில் ஒவ்வொரு விதமாக சொல்லப்பட்டிருக்கின்றது என்றும் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

எனவே பல சமயக்காரர்கள், பல புராணக்காரர்கள், பல பேர் வழிகள் முருகனைப்பற்றி பல விதமாக எழுதியிருக்கிறார்கள் என்பது போலவே திரு. முதலியார் அவர்களும் தமது மதப்படி அல்லது தான் அறிந்தபடி ஒருவாறு முருகனைப்பற்றி திரு. முதலியார் அவர்களின் முருக புராணத்தில் எழுதி இருக்கிறார் என்றே வைத்துக் கொண்டு, இவைகளில் எந்த சமயக்காரரை, எந்த புராணத்தை, எந்த நபரை ஏற்றுக் கொள்வது என்பதைப்பற்றியும், எது சரி? எது தப்பு என்பதைப் பற்றியும், எவ்வாறு வழிபடுவது, எதற்காக வழிபடுவது என்பதைப் பற்றியும் மற்றொரு சமயம் ஆராய்வோம்.

இரண்டாவதாக புராணங்களைப் பற்றி எழுதியதில் "குப்பை என்று வழங்கப்படும் சுவடுகளில் பேர் பெற்று விளங்குவன புராணங்கள். அவை ஆரிய உலகினின்றும் நம் தமிழ் நாட்டிற்குள் புகுந்தவை. புராணங்கள் தமிழ் நாட்டின் முதல் நூல்கள் அல்ல.

புராணம் என்ற சொல்லே தமிழ்ச் சொல்லன்று" என்று எழுதிவிட்டு.

"பெரிய புராணம்" என்பது (மாத்திரம்) தமிழ் நாட்டில் தோன்றிய தென்றும் அது பதினெண் புராணக் கூட்டத்தில் சேர்ந்ததல்ல வென்றும்,



"ஒன்று அல்லது இரண்டு போக மீதி உள்ள புராணங்கள் எல்லாம் வட மொழியினின்று மொழி பெயர்த்தது" என்றும் எழுதிவிட்டு "சமய வெறியர் கள் பலர் பிறர் சமயக் கடவுளர் நிந்தனை கொண்டு போலிக் கதைகள் புனைந்து புராணம் பாடத் தொடங்கினார்கள். காமுகர் சிலரும் புராணம் பாடி இருக் கிறார்கள். இப்புராணங்களிலுள்ள வருணனைகள் இயற்கையை மறைப்பவை யாயின, கதைகளோ விலங்குகளும் வெறுக்கத் தக்கன; இப்போலிப் புராணங்களால் கடவுள் நெறிக்கும் ஒழுக்கங்களுக்கும் கேடு விளைந்தது......" என்றும் எழுதியிருக்கிறார்.

எனவே இவை இரண்டினுள்ளும் இயற்கை தோற்றந்தான் கடவுள் என்பதாக அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பதைப் பற்றியும் புராணங்கள், குப்பைகள் என்று எழுதியதைப் பற்றியும் அவைகள் ஆரியர் களால் புகுத்தப்பட்டன என்று எழுதியதைப் பற்றியும் அவைகள் பல சமய வெறியர்கள் பலரால் பாடப்பட்டவை என்று எழுதியது பற்றியும் அவை களால் உலகில் மக்கள் ஒழுக்கங்கட்கு கேடு சூழ்ந்தது என்று எழுதியது பற்றியும் நாம் திரு. முதலியார் அவர்களோடு போர் தொடுக்க கவலை கொள்ளவில்லை என்பதை திரு. முதலியாருக்கு வணக்கமாய் தெரிவித்து விடுகிறோம்.

இனி அவற்றுள் போருக்கு நிலைக்களனாய் எஞ்சி நிற்பது பெரிய புராணமேயாகும். "இது போன்ற ஒன்று அல்லது இரண்டு" என்பது எது என்பதையும் குறிப்பிட்டு அதை எதற்காக குறிப்பிட்டு மீத்துக் கொண்டிருக் கிறார்கள் என்பதையும் சொல்லியிருந்தால் நலமாயிருக்கும். ஆகிலும் அவை வெளியாகும் போது பார்த்துக் கொள்வோம்.

முதலாவதாக அப்"பெரிய புராணத்தை" திரு. முதலியார் என்னமாய்க் கருதிக் கொண்டிருக்கின்றார் என்பது நமக்கு சற்று புலனாக வேண்டியிருக்கின்றது. அது திரு. முதலியார் கருதி இருக்கும் இயற்கை கடவுளால் பூலோகத்திற்கு அனுப்பப்பட்டது என்கின்றாரா?

அல்லது அதில் உள்ள விஷயங்கள் திரு. முதலியார் அவர்களின் இயற்கை கடவுளின் திருவிளையாடல்கள் என்கின்றாரா?

அல்லது அதை ஒரு வான சாஸ்திரம் என்கிறாரா? அல்லது விஞ்ஞான சாஸ்திரம் என்கிறாரா?

அல்லது உடற்கூறு சாஸ்திரம் என்கின்றாரா? உலகக் கூறு சாஸ்திரம் என்கின்றாரா?

அல்லது "வேதாந்த" சாஸ்திரம் என்கின்றாரா? சித்தாந்த சாஸ்திரம் என்கின்றாரா?



RangaRakes
tamilnavarasam.com

அல்லது அதை ஒரு தேச சரித்திரம் என்கின்றாரா? அல்லது அதை தெய்வ சரித்திரம் என்கிறாரா? அல்லது அதை இகத்திற்குச் சாதனம் என்கிறாரா? 'பரத்திற்கு' சாதனம் என்கிறாரா?

கற்புக்கு வழி என்கிறாரா? களவுக்கு வழி என்கிறாரா?

அரசியலுக்கு அறிவு என்கிறாரா? மத இயலுக்கு அறிவு என்கிறாரா?

'கடவுள்' தன்மைக்கு நெறி என்கின்றாரா? மனிதத் தன்மைக்கு நெறி என்கின்றாரா?

அறிவுக்கு ஆதாரம் என்கின்றாரா? ஆராய்ச்சிக்கு ஆதாரம் என்கின்றாரா?

அல்லது அது திரு. முதலியாரின் இயற்கை கடவுளை உணர்த்த உதவுகின்றதா? அன்றி செயற்கைக் கடவுளை உணர்த்த உதவுகின்றதா? அன்றியும்,

முடிவாக அதிலுள்ள தெல்லாம் திரு. முதலியாரவர்கள் சத்தியமாய் நடந்தது என்பதாக ஒப்புக் கொள்ளுகின்றாரா அல்லது ஒரு சமயத்தாரால் மக்கள் நன்மைக்காக என்று பெரியோர்களால் கற்பிக்கப்பட்ட கற்பனைக் கதைகள் என்று ஒப்புக் கொள்ளுகின்றாரா?

திரு. முதலியார் அவர்கள் ஏதோ ஒரு விதத்தில் அதை ஏற்றுக் கொள்ளுவதினாலேயே உலகில் உள்ள மற்ற மக்கள் எல்லோரும் அதை ஏற்றுக் கொண்டே தீரவேண்டும் என்கின்றாரா?

அன்றியும் யாராவது ஒருவன் அதை ஏற்றுக் கொள்ள ஒருப்படா விட்டால் அதற்கு காரணம்கூட சொல்லக்கூடாது என்கின்றாரா?

இன்னோரன்ன பிறவற்றிற்கு திரு. முதலியாரவர்களின் திரு. மனதி லுதித்த திருச்சமாதானம் என்னவென்பதை திருவாய் மலர்ந்தருளுவாரா? என்று விண்ணப்பித்துக் கொள்ளுகின்றோம்.

நிற்க, திரு. முதலியார் அவர்கள் மேலே குறிப்பிட்ட 20-6-28 உ தலையங்க முடிவில் நாயக்கரை முன்னிலைப்படுத்தி, "நண்பரே! தங்கள் பொருட்டு எனது காலம் வீணே கழிகின்றது. தாங்களும் நானும் சில அறிஞர் கள் முன்னிலையில் சமய சீர்திருத்த பொருள்பற்றி வாதம் நிகழ்த்தி ஒரு முடிவிற்கு வருவது நலம். கல்வி, கேள்வி ஆராய்ச்சிகளில் வல்ல சிலரிடமே சாலும். அன்னார் இன்னார் என நாமே தெரிந்தெடுத்துக் கொள்ளலாம். தங்கள் பதிலை விரைந்து எதிர்நோக்கும் திரு. கலியாண சுந்தரன். (முதலியார்)



ஆசிரியர் 'நவசக்தி' இராயப்பேட்டை, சென்னை." என்று எழுதி முடித் திருக்கிறார்.

திரு. முதலியார் அவர்களுக்கு எது முதல் இந்த பஞ்சாயத்து ஞானம் உதயமாயிற்று என்று கேட்கின்றோம்? "சிற்றின"த்தினிடத்தில் அவருக்குப் பஞ்சாயத்து எதற்கு? ஆண்டவன் அருள்கொண்டு உயிருக்குத் துணிந்து போருக்குத் தொடங்கினவர்கள் போர்க்கோலத்தையும் தமது படைவீரர் களையும் களத்தே போரிட்டு வெறுங்கையோடு பஞ்சாயத்தில் புகுவதன் கருத்து யாது என்பதும்

இப்பஞ்சாயத்தில் புகுவோரின் யோக்கியதை தானா தென்னாடு எழுதிற்று, வடநாடு குசும்பிற்று, தமிழ் நாடு கதறிற்று என்று தன்னாலே நேற்று வரை இழிந்துரைக்கப்பட்ட அவைகளிடம் தஞ்சம் புகுவது என்பனவாகிய விஷயங்களும் நமக்குப் புலனாகவில்லை.

அன்றியும் இவைகளிலிருந்து, திரு. முதலியாரவர்களின் பஞ்சாயத் திற்குக் காரணமாகிய சமய சீர்திருத்தம் இன்னது என்பதும் நமக்குப் புலனாக வில்லை; அவர் எச்சமயத்தவர்? எச்சீர்திருத்தம் விரும்புகின்றவர் என்பவை களும் நமக்கு விளங்கவில்லை. இவைகள் ஒன்றும் அறியாமலே எங்ங னேயாம் பஞ்சாயத்தில் புகுவது? என்பதும் நமக்கு விளங்கவில்லை. முடி வாக திரு. முதலியாருக்கு நாம் ஒன்று சொல்ல விழைகின்றோம்.

திரு. முதலியார்வாளே! நமது சீர்திருத்தமெல்லாம் போர் எல்லாம் நமது பெரிய புராணத்தையும் அது போன்றவைகளையும் "கடவுள்" களுக்காகவும் "கடவுள்" நெறிகளுக்காகவும், அந்நெறி உணர்த்திய பெரியா ருக்காகவும், ஏற்றுக் கொள்ளுகின்றவர்கள் போன்றாரிடமும் 'நாஸ் திகம் என்பதாக ஒன்று இருப்பதாகக் கருதி அதைச் சிலர் பரப்புவதாகவும் கருதி அதை ஒழிக்க "ஆண்டவர்" அருள் கொண்டு உயிருக்கு துணிந்து கிளம்பிய வீரர்கள் போன்றாரிடமும்தாள் பெரிதும் இருக்கின்றது. அதற்குத் தாங்கள் எப்பஞ்சாயத்தைக் குறிப்பிடுகின்றீர்கள் என்பதைத் தங்களுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். தங்களது அருளும் வீரமும் பெற்ற நேரம் வீணாவதில் நான் பரிதாபப்படுகிறேன். ஆனாலும் வேறு வழி இல்லாமல் தங்களது நேர்மை கொண்ட பதிலை எதிர்பார்க்கின்றேன்.

இப்படிக்கு தங்கள் உளத்தை மதியைக் கொள்ளை கொண்ட

**"சிற்றினம்."**

**குடி அரசு - தலையங்கம் - 24.06.1928**



RangaRakes tamilnavarasam.com

# சைமன் கமிஷன் பஹிஷ்காரப் புரட்டு

சைமன் கமிஷன் பஹிஷ்காரம் என்பது பார்ப்பனர்களின் சூழ்ச்சி என்றும், மற்றும் பல பார்ப்பன தாசர்களின் வயிற்றுப் பிழைப்பு வியாபாரம் என்றும் பலமுறை தெரிவித்து வந்திருக்கின்றோம். அதற்கிசைந்த வண்ண மாக தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்கள் அடிக்கடி குட்டிக் கரணம் போட்டு வருவதையும் பகிஷ்காரத்திற்கு புது புது வியாக்கியா னங்கள் சொல்லி வருவதையும் அவ்வப்போது தெரிவித்து வந்திருக் கின்றோம் திரு. சீனிவாசய்யங்கார் தமது திட்டத்தை தூக்கிக் கொண்டு சீமைக்குச் சென்றிருப்பதைப் பற்றியும் தெரிவித்திருக்கின்றோம். இப்போது பார்ப்பனர்கள் பார்ப்பன சமூகத்தின் பேராலும் வருணாசிரம தர்ம சபையின் பேராலும் கமிஷனுடன் ஒத்துழைக்கும் விதமாக தங்கள் திட்டங்களைத் தயாரித்து அனுப்பியிருக்கிறார்கள். கமிஷனிடம் சாட்சி சொல்லவும் தயாரா யிருக்கிறார்கள். எனவே பகிஷ்கார உபதேசத்தை இந்தப் பார்ப்பனர்களும் அவர்களது தாசர்களும் இனி யாருக்கு உபதேசம் செய்கின்றார்கள் என்பதை பொதுஜனங்களே யோசித்துக் கொள்ள வேண்டுகின்றோம். அன்றியும் இப்பார்ப்பனர்களையும் அவர்களது அடிமைகளையும் நம்பி மோசம் போகாமல் ஒவ்வொரு சமூகத்தாரும் தங்கள் தங்கள் குறைகளை அவசியம் கமீஷனுக்கு தெரிவிக்க வேண்டும் என்பதாகவும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 24.06.1928**



# திருச்சியில் 144

திருச்சி மலைக்கோட்டை கோவிலுக்குள் பிரவேசிக்கக்கூடாது என்று திருவாளர்கள் ஜே. கண்ணப்பர், தண்டபாணி பிள்ளை, ஜே. என். ராமநாதன் ஆகியவர்களுக்கு அவ்வூர் மாஜிஸ்திரேட் திரு. சீனிவாசராவ் என்கின்ற ஒரு பார்ப்பனரால் 144ம் உத்திரவு பிறப்பிக்கப் பட்டிருக்கின்றது. இவ்வுத்திரவு அக்கிரமமான உத்திரவானதால் அதை மீறி பிரவேசித்து சிறை புக தீர்மானித்து திருவாளர்கள் கண்ணப்பரும் தண்டபாணி பிள்ளையும் முடிவு செய்து விட்டார்கள். இன்று அல்லது நாளை திருச்சிக்கு சென்று உத்திரவை மீறுவார்கள்.

## பின் வந்த தந்தி

திரு. கண்ணப்பரும் தண்டபாணியும் இன்று காலை 144ஐ மீறுவதற்கு இவ்விடமிருந்து திருச்சிக்கு பிரயாணமாயிருக்கிறார்கள். தங்களது மீறுதலால் எவ்வித கலகமும் பலாத்காரமும் நடைபெறாது என்று உறுதி கூறி திருச்சி பொது மக்கள் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் இருப்பதாகவும் தங்களை அவசியம் மீற வேண்டும் என்பதாக மனபூர்வமாய் ஆமோதித்திருப்ப தாகவும் திருச்சியில் இருந்து இன்று மாலை தந்தி கொடுத்திருக்கிறார்கள்.

## திருச்சியில் கோவிலதிகாரிகளின் பலாத்காரம்

திருச்சி மலைக் கோட்டை கோயிலுக்கு சுவாமி தரிசனைக்கு திருவா ளர்கள் ஜே. என். ராமநாதனும் மற்றும் அவர்களின் பல நண்பர்களும் சென்றதற்காக கோவில் அதிகாரிகள் காலிகளை வைத்து வழிமறித்து அடிக்கும்படி ஏற்பாடு செய்து நன்றாக அடித்து துன்பப்படுத்திவிட்டதாக திரு. ராமநாதன் அவர்களால் திருச்சி நியாயஸ்தலத்தில் கோவிலதிகாரிகளின் மீது பிராது தொடரப்பட்டிருக்கின்றது. இந்த பிராதுக்கு பார்ப்பனரல்லாத வக்கீல்கள் பீசு இல்லாமல் ஆஜராகி வழக்கை நடத்திக் கொடுக்க வேண்டும் என்றும் உத்திரவை மீறி நடப்பதற்காகவும் மேல்கண்ட விவகாரத்தை நடத்து வதற்காகவும் ஏற்படும் செலவுக்காக பொது மக்கள் தங்களால் கூடுமான பொருளுதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - வேண்டுகோள் - 24.06.1928**



RangaRakes tamilnavarasam.com

# குடி அரசு

# 1928-2

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 7

**பெரியார் திராவிடர் கழகம்**
29 இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்
சென்னை - 600 041

## சாமியும், சமயமும், சமயாச்சாரியார்களும்.

தேவர்கள் என்றும், தெய்வங்கள் என்றும், அவதாரமென்றும், ரூபமென்றும், அதற்காக மதமென்றும், சமயமென்றும், அதற்காக மதாச்சாரியார்கள் என்றும் அதற்கு சமயாச்சாரியர்கள் என்றும் கட்டியழுபவர்கள் ஒன்றா வயிற்றுப்பிழைப்பு புரட்டர்களாயிருக்க வேண்டும். அல்லது பகுத்தறிவில்லாதவர்களாகவாவது இருக்க வேண்டும் என்பதே நமது அபிப்பிராயம் என்பதாக பல தடவைகளில் வெளிப்படுத்தி இருக்கின்றோம்.

அது போலவே சிவன் என்றோ, விஷ்ணு என்றோ, பிரம்மா என்றோ, சொல்லப்படுபவையும் ஒரு "சாமி" என்றோ அல்லது ஒரு ஆசாமி என்றோ அல்லது ஒரு உருவமென்றோ கொள்ளுவதும் ஞானமற்றவர்களின் கொள்கை யென்றே சொல்லுவோம்.

உலகத் தோற்றமும், அதில் நடைபெறும் உற்பத்தி, வாழ்வு, அழிவு என்பவைகளான மூவகைத் தன்மைகளையும், ஷ "சாமி"களோ ஆசாமிகளோ ஒவ்வொரு தன்மையை ஒவ்வொரு ஆசாமி நடத்துகிறான் என்றோ அல்லது ஒவ்வொரு தன்மைக்கும் ஒவ்வொரு ஆசாமி பொறுப்பாளியாய் இருக்கின்றான் என்றோ நினைத்துக் கொண்டிருப்பவர்களும் விசார ஞான மற்றவர்கள் என்றே சொல்லுவோம்.

மற்றபடி "மேல் கண்ட ஒவ்வொரு தன்மைக்கும் மேல்கண்ட ஒவ்வொரு பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது" என்றும், "அது ஒரு உருவமல்ல, ஒரு உருப்படி அல்ல" என்றும், "உற்பத்தி, வாழ்வு, அழிவு என்னும் தன்மையையும் அத்தன்மைக்கு ஆதாரமான தோற்றங்களைத் தான் கடவுள் என்றோ, தெய்வம் என்றோ சாமி என்றோ, ஆண்டவன் என்றோ கருதுகிறோம்" என்பதாகவும், "தானாகத் தோன்றிற்று, தானாக வாழ்ந்தது தானாக அழிகின்றது என்கின்ற யாவும் இயற்கைதான்" என்றும், "அவ்வியற்கைக் குத்தான், கடவுள், ஆண்டவன், சாமி, தெய்வம் என்று சொல்லுகின்றோம்" என்பதாகவும் மற்றும் "இவ்வியற்கைத் தோற்றங்களுக்கு ஏதாவது ஒரு காரணமோ அல்லது ஒரு சக்தியோ இருக்க வேண்டுமே" என்றும் "அந்த காரணத்திற்கோ சக்திக்கோதான் கடவுள், சாமி, ஆண்டவன், தெய்வம் என்கின்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதாகவும் சொல்லிக்

RangaRakes
tamilnavarasam.com

கொண்டு மாத்திரம் இருப்பவர்களிடத்தில் நமக்கு இப்போது அவ்வளவாக தகரார் இல்லை என்று சொல்லிக் கொள்ளுகின்றோம்.

ஆனால் அந்தக் கடவுளுக்கு கண், மூக்கு, வாய், கை, கால், தலை, பெயர், ஆண் பெண் தன்மை, பெண்ஜாதி புருஷன், குழந்தை குட்டி, தாய் தகப்பன் முதலியவைகளை கற்பித்து, அதனிடத்தில் பக்தி செய்ய வேண்டும் என்றும், அதற்கு கோவில்கட்டி கும்பாபிஷேகம் செய்து தினம் பல வேளை பூசை செய்ய வேண்டும் என்றும், அச்சாமிகளுக்கு கல்யாணம் முதலிய வைகள் செய்வதோடு அந்தக் கடவுள் அப்படிச் செய்தார், இந்தக் கடவுள் இப்படிச் செய்தார் என்பதான "திருவிளையாடல்கள்" முதலியவைகள் செய்து காட்ட வருஷா வருஷம் உற்சவம் செய்ய வேண்டும் என்றும், அக்கடவுள்களின் பெருமையைப் பற்றியும் திருவிளையாடல்களைப் பற்றியும் பாட வேண்டும் என்றும், அப்பாடல்களை 'வேதமாக' 'திருமுறை யாக' 'பிரபந்தமாக' கடவுள் உண்டு என்பதற்கு ஆதாரமாக கொள்ள வேண்டும் என்றும், அப்பாடல்களைப் பாடினவர்களை 'சமயாச்சாரி யர்'களாக, 'ஆழ்வார்'களாக, 'சமயகுரவர்' களாக, 'நாயன்மார்'களாக பல அற்புதங்கள் செய்தவர்களாக கொள்ள வேண்டும் என்றும் இது போன்ற இன்னும் பல செய்தால் அக்கடவுள்கள் நமது இச்சைகளை நிறைவேற்று வார்கள் என்றும் மற்றும் நாம் செய்த, செய்கின்ற, செய்யப்போகின்ற எவ்வித அக்கிரமங்களையும், அயோக்கியத்தனங்களையும், கொடுமைகளையும் மன்னிப்பார் என்றும் சொல்லப்படுபவைகளான மூட நம்பிக்கையும் வயிற்றுப் பிழைப்பு சுயநலப்பிரசாரமும் ஒழிய வேண்டுமென்பதுதான் நமது கவலை. ஏனெனில் இந்நாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் மக்களை மக்கள் ஏமாற்றிக் கொடுமைப்படுத்துவதற்கும் மற்ற நாட்டார்கள் போல நம்நாட்டு மக்களுக்கு பகுத்தறிவு விசாலப்பட்டு மற்ற நாட்டார்களைப் போல விஞ் ஞான (சையன்ஸ்) சாஸ்திரத்திலே முன்னேற்றமடையாமல் இருப்பதற்கும், அன்னிய ஆட்சிக் கொடுமையிலிருந்து தப்பமுடியாமல் வைத்து பளுவைச் சுமக்க முதுகைக் குனிந்து கொடுத்துக் கொண்டிருப்பதற்கும் இம்மூட நம்பிக்கையும், சில சுயநலமிகளின் வயிற்றுச் சோற்றுப் பிரசாரமும், இவை களினால் ஏற்பட்ட கண்மூடி வழக்கங்களும் செலவுகளுமேதான் காரணங் கள் என்பதாக நாம் முடிவு செய்து கொண்டிருக்கிறோம்.

நாமும் நமது நாடும் அடிமைப்பட்டுக் கிடப்பதற்கும் ஒருவரை ஒருவர் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொடுமைப்படுத்தி ஒற்றுமை இல்லாமல் செய்திருப்பதற்கும், மக்கள் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பொருள்கள் எல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்கு பலன்படாமல் பாழாவதற்கும், மக்களின் அறிவு வளர்ச்சி கட்டுப்பட்டுக் கிடப்பதற்கும் சிறப்பாக மக்களின் ஒழுக்கங் கள் குன்றி மக்களிடத்தில் மக்களுக்கு அன்பும் உபகாரமும் இல்லாமல் இருப்பதற்கும் மேல்கண்ட கொள்கைகள் கொண்ட கடவுள் என்பதும் அதன் சமயமும் சமயச்சாரியர்கள் என்பவர்களும், அவர்களது பாடல்களும், நெறி



களுமே முக்கிய காரணம் என்பதைத் தூக்கு மேடையிலிருந்தும் சொல்லத் தயாராயிருக்கின்றோம்.

நிற்க, இக்கடவுள்களின் பொருட்டாக நம்நாட்டில் பூசைக்கும், அபிஷேகத்திற்கும், அவற்றின் கல்யாணம் முதலிய உற்சவத்திற்கும் பஜனை முதலிய காலக்ஷேபத்திற்கும் இக்கடவுள்களைப் பற்றிய சமயங்களுக்காக மடங்களுக்கும், மடாதிபதிகளுக்கும், மூர்த்தி ஸ்தலம், தீர்த்த ஸ்தலம் முதலிய யாத்திரைகளுக்கும், இக்கடவுள்களின் அவதார மகிமைகளையும், திருவிளையாடல்களையும், இக்கடவுள்களைப் பற்றிப் பாடின பாட்டுக் களையும், அச்சடித்து விற்கும் புஸ்தகங்களை வாங்குவதற்கும், மற்றும் இவைகளுக்காக செலவாகும் பொருள்களிலும், நேரங்களிலும் நம் ஒரு நாட்டில் மாத்திரம் சுமார் இருபது கோடி ரூபாய்களுக்குக் குறைவில்லாமல் வருஷா வருஷம் பாழாகிக் கொண்டு வருகின்றது என்று சொல்லுவது மிகையாகாது.

இவ்விருபது கோடி ரூபாய்கள் இம்மாதிரியாக பாழுக்கிறைக்காமல், மக்களின் கல்விக்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, விஞ்ஞான (சையன்ஸ்) வளர்ச்சிக்கோ, தொழில் வளர்ச்சிக்கோ, செலவாக்கப்பட்டு வருமானால் நம் நாட்டில் மாத்திரம் வாரம் லக்ஷக்கணக்கான மக்களை நாட்டை விட்டு அன்னிய நாட்டிற்கு கூலிகளாக ஏற்றுமதி செய்ய முடியுமா? அன்றியும் தொழிலாளர் கள் கஷ்டங்கள் என்பது ஏற்படுமா? தீண்டக்கூடாத – நெருங்கக்கூடாத – பார்க்கக்கூடாத – மக்கள் என்போர்கள் கோடிக்கணக்காய் பூச்சி, புழு, மிருகங் களுக்கும் கேவலமாயிருந்து கொண்டிருக்க முடியுமா? 100 – க்கு மூன்று பேர்களாயிருக்கும் பார்ப்பனர்கள் மற்ற 100 க்கு 97 பேர்களை சண்டாளர், மிலேச்சர், சூத்திரர், வேசி மக்கள், தாசிமக்கள், அடிமைப் பிறப்பு என்று சொல்லிக் கொண்டு அட்டை இரத்தத்தை உறிஞ்சுவது போல் உறிஞ்சிக் கொண்டும், நம்மையும், நம் நாட்டையும் அன்னியனுக்குக் காட்டிக் கொடுத்து நிரந்தர அடிமைகளாக இருக்கும்படி செய்து கொண்டும் இருக்க முடியுமா? என்று கேட்கின்றோம். நமக்கு கல்வி இல்லாததற்கு சர்க்கார் மீது குற்றம் சொல்லுவதில் கவலை கொள்ளுகின்றோமேயல்லாமல் நம் சாமியும், பூதமும், சமயமும் நம் செல்வத்தையும் அறிவையும் கொள்ளை கொண்டிருப்பதைப் பற்றி யாராவது கவலை கொள்ளுகின்றோமா என்று கேட்கின்றோம்.

நிற்க, "அன்பையோ, அருளையோ, ஒழுக்கத்தையோ உப சாரத்தையோ மாறுபெயரால் கடவுள் என்று கூப்பிடுகின்றேன், அதனால் உனக்கு, என்ன தடை?" என்று யாராவது சொல்ல வருவார்களானால் அதை யும் (அதாவது அக்குணங்கள் என்று சொல்லப்பட்ட கடவுள் என்பதையும்) பின்பற்றும் படியான குணங்களாகவோ "கடவுள்" களாகவோ தான் இருக்க



RangaRakes tamilnavarasam.com

வேண்டும் என்று சொல்லுகின்றோமே யொழிய வணங்கும்படியான கடவுளாக இருக்க நியாயமில்லை என்றே சொல்லுவோம்.

## மதம்

இதுபோலவேதான் “மதம் என்பதும், சமயம் என்பதும், சமயநெறி என்பதும் மற்ற ஜீவன்களிடத்தில் மனிதன் நடந்து கொள்ள வேண்டிய நடையைப் பற்றிய கொள்கைகளைக் கொண்டது” என்பவர்களிடத்திலும் நமக்கு அவ்வளவாக தகரார் இல்லை. “அன்பே சிவம், சிவமே அன்பு” என்பதான சிவனிடத்தில் நமக்குச் சண்டையில்லை. “அன்பு என்னும் குணம்தான் சிவம்; அந்த அன்பை கைக்கொண்டு ஜீவன்களிடத்தில் அன்பு செலுத்துவதுதான் சைவம்” என்பதானால் நாமும் ஒரு சைவனாகவும் அதன் மூலம் நாமும் ஒரு சைவன் என்று சொல்லிக் கொள்ளவும் ஆசைப் படுகின்றோம். அதுபோலவே “ஜீவன்களிடத்தில் இரக்கம் காட்டுவது, ஜீவன்களுக்கு உதவி செய்வது ஆகிய குணங்கள்தான் விஷ்ணு; அக் குணங்களைக் கைக்கொண்டு ஒழுகுவதுதான் வைணவம்” என்பதான விஷ்ணுவிடத்திலும் வைணவனிடத்திலும் நமக்கு அவ்வளவாக தகரார் இல்லை என்று சொல்லுவதோடு நாமும் நம்மை ஒரு வைணவன் என்று சொல்லிக் கொள்ளும் நிலைமை ஏற்பட வேண்டும் என்றே ஆசைப் படுகின்றோம். நமக்கும் மற்றும் உள்ள மக்களுக்கும் அச்“சைவத் தன்மை” யும் “வைணவத்தன்மை”யும் ஏற்பட வேண்டும் என்றும் தவங்கிடக் கின்றோம்.

அப்படிக்கில்லாமல், இன்னமாதிரி உருவம் கொண்ட அல்லது குணம் கொண்டதுதான் கடவுள் என்றும், அதை வணங்குகிறவன்தான் சைவன் என்றும், அப்படி வணங்குகிறவன் இன்னமாதிரியான உடை பாவனை கொண்டவனாகவும் இன்னமாதிரி குறி இடுகிறவனாகவும் இருப்பதுதான் சைவம் என்றும், இன்ன பேருள்ள கடவுள்களைப் பற்றி பாடின எழுதின ஆசாமிகளையும் புஸ்தகத்தையும் வணங்குவதும் மரியாதை செய்வதும்தான் சைவம் என்றும், மற்றபடி வேறு இன்ன உருவமோ பேரோ உள்ள “கடவுள்” என்பதை வணங்குகிறவர்களையும் வேறு குறி இடுகின்றவர்களையும் யாதொரு குறியும் இடாதவர்களையும் சைவரல்லாதவர் என்று சொல்லுவது மான கொள்கைக்காரரிடமே நமக்குப் பெரிதும் தகரார் இருக்கின்றது என்று சொல்வதுடன் அக்கொள்கைகளையும் அச்சமயங்களையும் அக்கடவுள் களையும் சுட்டுப் பொசுக்கவேண்டும் என்றும் சொல்லுகின்றோம்.

அன்றியும் பல சமயப் புரட்டர்கள் இம்மாதிரி விவகாரம் வரும் போது “நான் கடவுள் என்பதாக ஒரு தனி வஸ்துவோ ஒருகுணமோ இருப்பதாகச் சொல்லவில்லை” என்றும் “மலைதான் கடவுள், ஆறுதான் கடவுள், சமுத்திரம் தான் கடவுள், மரம்செடிதான் கடவுள், புஷ்பம்தான்



RangaRakes

கடவுள், அதன் மணம் தான் கடவுள், அழகுதான் கடவுள், பெண்தான் கடவுள், அதன் இன்பம்தான் கடவுள், இயற்கைதான் கடவுள், அத்தோற்றம்தான் கடவுள்” என்பதாக தமக்கே புரியாமல் உளறுவதும். மறுபடியும் “சிவன்தான் முழுமுதற் கடவுள், மற்றபடி விஷ்ணுவும் பிரம்மாவும், அவரது பரிவார தேவதைகள், சைவ சமயம்தான் உண்மைச் சமயம், அதுதான் முக்தி அளிக்க வல்லது” என்பதும் அல்லது “விஷ்ணுதான் முழுமுதற் கடவுள், அதுதான் பரத்துவம் கொண்டது, மற்றவைகள் விஷ்ணுவின் பரிவார தேவதைகள்” என்பதும், “வைஷ்ணவ சமயம்தான் உண்மைச் சமயம், அதில்தான் பரத்திற்கு மார்க்கம் உண்டு” என்பதும், “அச்சிவனையோ விஷ்ணுவையோ முழுமுதற் கடவுளாகக் கொண்டு அக்கடவுள்களையும் அச்சமயங்களையும் பாடினவர்கள்தான் கடவுள் நெறியையும் நிலைமையையும் உணர்த்திய பெரியார்கள், சமயாச் சாரியர்கள்” என்பதுமாக மக்கள் முன் உளறிக் கொட்டி அவர்களது மனதை குழப்பச் சேற்றில் அழுத்துகின்றவர்கள் பலர் இருக் கின்றார்கள். அவர்களது புரட்டையும் பித்தலாட்டங்களையும் வெளியாக்கி மக்களை குழப்பச் சேற்றிலிருந்து விடுவிக்க வேண்டுமென்றுதான் சொல்லுகின்றோம்.

உலகத்தில் கடவுள் என்பது இன்னது என்பதாக மனதில் விவரப் படுத்திக் கொள்ளாமலே கடவுளைப் பற்றிய தர்க்கங்களும் தகராறுகளும் தினமும் நடைபெற்று வருகின்றது. இது இன்று நேற்று ஏற்பட்ட விவகார மல்ல என்றுங்கூட சொல்லுவோம்.

எனவே மக்களின் பாரம்பரியமானதும் எங்கும் பரவியிருக்கும் படியானதுமான மடமைக்கு இதைவிட வேறு உதாரணம் கிடையாது என்பது நமது அபிப்பிராயம். ஏனெனில் இந்த விவகாரம் பாமர மக்களிடை யில் மாத்திரம் நடைபெற்று வருகின்றது என்று சொல்லுவதற்கில்லை. இது பெரும்பாலும் படித்தவன். ஆராய்ச்சிக்காரன், பண்டிதன், பக்திமான் என்கின்ற கூட்டத்தாரிடையேதான் பெரிதும் (இவ்வறியாமை) இடம் பெற்று உரம் பெற்றிருக்கின்றது.

## கடவுள் அவசியமா?

நிற்க, சர்வ வல்லமையுள்ள என்று சொல்லப்படுவதான ஒரு “கடவுள்” இருக்கின்றார் என்பதை (அது இன்னது என்று புரியாவிட்டாலும்) விவகார மில்லாமல் ஒப்புக் கொள்ளுவதாகவே வைத்துக் கொண்டாலும் மனிதனின் வாழ்க்கைக்கு அக்கடவுளின் சம்மந்தமோ வழிபாடோ அவசியமா? அல்லது மனிதனுக்கு சில குணங்களைக் கைக்கொண்டு அதன்படி ஒழுகும் தன்மை அவசியமா என்பதே நமது கேள்வி. அன்றியும் அப்படிப்பட்ட ஒரு “கடவுள்” தன்னை மக்கள் வழிபட வேண்டும் என்றாவது, தனக்கு கோவில் கட்ட வேண்டுமென்றாவது பூசை, அபிஷேகம், தேர், திருவிழா, உற்சவம்



tamilnavarasam.com

முதலியவைகள் செய்ய வேண்டும் என்றாவது ஆசைப்படுமா? அல்லது மக்கள் சில குணங்களைக்கைக் கொண்டு மற்ற ஜீவன்களிடத்தில் இன்ன இன்ன விதமாய் நடந்து கொள்ள வேண்டும் என்பதை விரும்புமா? என்பதை யோசித்துப்பார்த்தால் "கடவுள்" என்பது வாழ்க்கைக்கு வேண்டுமா வேண்டாமா என்பது விளங்காமல் போகாது. அன்றியும் அச்சர்வ வல்லமை உள்ள சாமிகளை மக்களுக்கு அறிமுகப்படுத்த இவ்வளவு ஆசாமிகளும் சமயங்களும் வேண்டுமா? என்றும் அந்தச் சாமிகளை இல்லை என்பவர்களுக்கு ருஜுபடுத்த இவ்வளவு வக்கீல்கள் வேண்டுமா என்றும் கேட்கின்றோம்.

இது போலவே ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு விதமாக உலகத்திற்கும் மக்களுக்கும் கடவுளுக்கும் சம்மந்தம் கற்பிக்கப்பட்டிருந்தாலும் புத்த மதம் என்பதில் மனிதன் நடந்துகொள்ள வேண்டிய ஒழுக்கங்களைத் தவிர வணக்கம் என்பதை அம்மதத் தலைவர் ஒரு சிறிதும் வலியுறுத்தியிருப்பதாகக் காணப்படவில்லை.

அன்றியும் அவர் கடவுளைப் பற்றியோ, கடவுளை வணங்குவதைப் பற்றியோ, கடவுள் நெறி உணர்த்திய பெரியார்களை மரியாதை செய்வதைப் பற்றியோ கவலைகொண்டு ஒரு கடுகளவு நேரமாவது செலவழித்திருப்பதாகவும் காணக் கிடக்கவில்லை. அன்றியும் அதைப்பற்றிய வார்த்தைகளையாவது அவர் எங்காவது உபயோகித்திருப்பதாக சொல்பவர்களும் காணக் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட ஒருவரை மதத் தலைவராகவும் அக்கொள்கையை, அம்மதத்தை, அச்சமயத்தை இன்றைய தினம் உலகத்திலுள்ள மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் அதாவது 50 கோடி மக்களுக்கு மேல் தம் மதமாகவும் ஏற்றுக்கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அன்றியும் அப்படிப்பட்ட புத்தரை தங்கள் கடவுள் அவதார மென்றும் தீர்க்கதரிசி என்றும் பகவான் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிற ஜனங்கள் இந்துமதம் என்பதிலே, சைவ மதம் என்பதிலே, வைணவ மதம் என்பதிலே பல கோடிக்கணக்கானவர்கள் இருப்பதோடு அதற்கு பல ஆதாரங்களும் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதை யாராவது மறுக்க முன்வருகின்றார்களா?

"மனிதனுக்கு ஏதாவது ஒரு மதமோ சமயமோ வேண்டியது அவசியம்" என்று யாராவது சொல்ல வருவார்களானால் புத்த மதம் என்பதும், உலகாயுத மதம் என்பதும், சூன்ய மதம் என்பதும், இயற்கை மதம் என்பதும் மதங்கள் என்று தானே சொல்லப்படுகின்றது. அப்படி இருக்கையில் அம் மதங்களில் ஏதாவது ஒன்றைக் கொண்டவர்கள் பலர் இருக்கலாம். எனவே அது எப்படி குற்றமுடையதாகும். எப்படி பல மதங்களுக்கும் சமயங்களுக்கும் தலைவரும் காலமும் இல்லாமல் இருக்கின்றதோ அது



போலவே இம்மதங்களில் சிலவற்றிற்கும் காலமோ தலைவரோ இல்லாமலிருக்கலாம்.

ஆகவே, ஒரு மனிதன் இன்ன மதக்காரனாகவோ இன்ன சமயக்காரனாகவோ, இன்ன கடவுளை வணங்குகிறவனாகவோ இருக்க வேண்டும் என்பதாக கட்டளை இடவும், இன்ன இன்ன மதக்காரனாக இருக்கக்கூடாது என்று நிர்ப்பந்திக்கவும் யாருக்கு உரிமை உண்டு என்று கேட்கின்றோம்.

மனிதனுக்கு மதம் வேண்டும் என்பது அந்தந்த மனிதனின் தனி இஷ்டத்தைப் பொறுத்ததா அல்லது மற்றொருவனுடைய நிர்ப்பந்தமா என்று கேட்கின்றோம்.

"துறவி"க்கு மதம் ஏது? "ஞானி"க்கு சமயம் ஏது? கடவுள் ஏது? "வேதாந்தி"க்கு மதம் ஏது? கடவுள் ஏது? சகலத்தையும் துறந்தவர்தானே துறவி? சகலத்தையும் சரி என்று எண்ணுகிறவர்தானே "ஞானி"?

"சகலமும் மித்தை, பொய், மாய்கை" என்று எண்ணுகிறவன் தானே "வேதாந்தி" என்பவன்? இவைகளை உலகம் ஒப்புக் கொள்ளுகின்றதா இல்லையா? அங்ஙனமாயின் இம்மூவர்களும் "நாஸ்திகர்"களா என்று கேட்கின்றோம்,

உலகத்தில் "துறவி" ஆவதற்கோ, "ஞானி" ஆவதற்கோ "வேதாந்தி" ஆவதற்கோ எவனுக்கு உரிமை இல்லை என்று கேட்பதோடு எந்த புஸ்தகத்தை படித்துவிட்டு யாரிடம் உபதேசம் பெற்று அல்லது எந்த சமயத்தை ஏற்று எந்தக் கடவுளைத் தொழுது "துறவி"யாகவோ, "வேதாந்தி"யாகவோ ஆகவேண்டும் என்கின்ற நிர்பந்தமுண்டா என்று கேட்கின்றோம்.

இவ்விஷயங்களை நாம் வலியுறுத்துவதால் பல நண்பர்களுக்கு சற்று மனக்கசப்பு ஏற்படலாம் என்பது நமக்குத் தெரியும். ஆனாலும் நம் நாட்டின் விடுதலை கண்டிப்பாய் இந்த விஷயங்கள் விளக்கமாவதில்தான் இருக்கின்றதேயொழிய வெள்ளைக்காரரிடமும் பார்ப்பனர்களிடமும் நேரில் முட்டிக் கொள்வதால் ஒரு பயனும் இல்லை என்றே சொல்லுவோம்.

வெள்ளைக்கார அரசாங்க முறையும், பார்ப்பனர்களின் ஆதிக்கமும் நமது மானத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் தரித்திரத்திற்கும் ஆதாரமாயிருக்கின்றது என்பது சத்தியமானாலும் அவ்வக்கிரமமும் ஆட்சியும் ஆதிக்கமும் இந்த மதம், கடவுள், சமயம் என்பவைகளான மூட கொள்கைகளின் பேரில்தான் கட்டப்பட்டிருக்கிறது என்பது நமது முடிவு. இம்மூடக் கொள்கைகளை வைத்துக் கொண்டு வெள்ளைக்காரர்களையும், பார்ப்பனர்களையும் பூண்டோடு அழிக்க நம்மால் முடிந்து விட்டாலும் மறுபடியும்



RangaRakes
tamilnavarasam.com

‘வெள்ளக்காரர்களும்’ ‘பார்ப்பனர்களும்’ வேறு எங்காவதிருந்தோ அல்லது நமக்காகவே உற்பத்தியாகியோ நம்மை அடிமைகளாக்கி ஆதிக்கம் செலுத்திக் கொண்டுதான் வருவார்கள் என்பதை ஒவ்வொருவரும் கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதாக தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வெள்ளைக்கார அரசாங்கமோ அல்லது வேறு அன்னிய அரசாங்கமோ இல்லாமல் நம் நாட்டார்கள் என்போர்கள் அரசாண்டு வந்த காலத்திலேயே நாம் அடிமைகளாக, தற்குறிகளாக, தாசிமக்களாக, தீண்டாதார்களாக இருந்து வந்திருக்கின்றோம் என்பதை தயவு செய்து நம்புங்கள் என்று வேண்டிக்கொள்ளுகின்றோம்.

நம்புவதற்கு ஏதாவது கஷ்டமாய் இருந்தால் நம் நாட்டு, நம்மக்களால் “சாமுண்டீஸ்வரி” பேராலும், “பத்மநாபசாமி” பேராலும், “கிருஷ்ணசாமி பேராலும் ஆளப்படும் மைசூரையும், திருவாங்கூரையும், கொச்சியையும் தயவுசெய்து சற்று திரும்பிப் பாருங்கள் என்று வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஆட்சி முறை கொடுமையும், பார்ப்பன ஆதிக்கமும் வெள்ளைக்கார அன்னிய அரசாங்கத்தைவிட உள்நாட்டு மக்களால் ஆளப்படும் சுயராஜ்ய அரசாங்கத்தில் அதிகமா? கொஞ்சமா? என்பதை கவனித்தால் வெள்ளைக்காரரும் பார்ப்பனர்களும் தாங்களாகவே தங்கள் பலத்தால் அக்கிரமங்களை செய்கின்றார்களா? அல்லது இந்த மதமும், கடவுளும், மதவெறியும் இவ்வித அக்கிரமங்கள் செய்ய இடம் கொடுக்கின்றதா? என்பது சுலபத்தில் விளங்காமல் போகாது என்றே எண்ணுகின்றோம்.

எனவே நம் நாட்டிற்கு இப்போது அவசியமாக வேண்டியது என்னவென்றால், மூடநம்பிக்கை ஒழியவேண்டும்; அறிவுக்கு சுதந்திரமும், விடுதலையும் ஏற்பட்டு அது வளர்ச்சி பெற வேண்டும்; சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டும். இம்மூன்றும் ஏற்பட வேண்டுமானால் மதமும், சாமியும், சமயாச்சாரியார்களும் சந்திக்கு வந்தே தீரவேண்டுமேயல்லாமல் இதற்கு வேறு பர்த்தியோ, ராஜியோ இல்லை யென்றே சொல்லி இதை முடிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 01.07.1928**



RangaRakes

# தாரா சசாங்கம்

## (இரண்டு மாணாக்கர்கள் சம்பாஷணை)

**- சித்திரபுத்திரன்**

**ராமசேஷன் :** அடே ஜோசப்! இன்று நல்ல டிராமா என்று நோட்டீஸ் பார்த்தேன் போகலாமென்றிருக்கிறேன்; நீயும் வருகிறாயா?

**ஜோசப் :** அது என்னடா அப்பா அப்பேர்ப்பட்ட நல்ல டிராமா? கொஞ்சம் சொல்லு பார்க்கலாம்?

**ராமசேஷன் :** அதா? தாரா சசாங்கம்; நல்ல சீன்களும் நல்ல பாட்டுகளும் உடையது.

**ஜோசப் :** என்னடா என்னமோ கொசமுசாங்கம் என்று சொல்லுகிறாய் அதன் கருத்து என்ன?

**ராமசேஷன் :** உனக்கென்னடா தெரியும்; நீயோ தற்குறி அது உன் வாயிலேயே நுழைவதில்லை; அதற்கு யாரு என்ன செய்வார்கள்?

**ஜோசப் :** அந்தக் கிரகமெல்லாம் உன் வாயிலேயே நுழையட்டும், நல்ல வேளையாக என் வாயில் நுழையவேண்டாம். அதன் கருத்தென்ன சொல்லு பார்ப்போம்?

**ராமசேஷன் :** தாரா சசாங்கம் என்றால் தாரை சந்திரனுக்கு நிர்வாணமாய் எண்ணெய் தேய்க்கும் பாகத்தை நாடக ரூபமாய் பிரத்தியக்ஷத்தில் காட்டுவார்கள்.

**ஜோசப் :** அப்படியா? தாரை என்றால் என்ன? சந்திரன் என்றால் என்ன? இரண்டு பேருக்கும் என்ன சம்பந்தம் என்பதை முதலில் சொல்லு அப்புறம் நிர்வாணத்தைப் பற்றியும் எண்ணை தேய்ப்பதைப் பற்றியும் கவனிக்கலாம்.

**ராமசேஷன் :** இனி உனக்கு அஸ்திவாரத்திலிருந்து சொல்லியாக வேண்டும்போல் இருக்கிறது.

**ஜோசப் :** சும்மாதானா ஒருமனிதன் நிர்வாணத்தைப் பார்க்க வருகின்றது? அது இன்னது என்று கூடத் தெரிய வேண்டாமா?

**ராமசேஷன் :** சொல்லுகிறேன் கேள்.



tamilnavarasam.com

**ஜோசப் :** சொல்லப்பா சொல்லு.

**ராமசேஷன் :** தேவர்களுக்கெல்லாம் குருவாக பிரகஸ்பதி என்பதாக ஒரு தேவகுரு உண்டு.

**ஜோசப் :** பொறு, பொறு, யாருடைய தேவர்களுக்கு?

**ராமசேஷன்:** எங்கள் தேவர்களுக்கு.

**ஜோசப் :** சரி, சரி, அதுதான் கேட்டேன், எல்லோருடைய தேவர் களுக்கு என்று எங்கே சொல்லி விட்டாயோ என்னமோ என்றுதான் கேட்டுப் பார்த்தேன். அப்புறம்?

**ராமசேஷன் :** அந்த தேவகுருவுக்கு தாரை என்கின்ற ஒரு பெண்சாதி உண்டு. தேவர்களுடைய குழந்தைகளையெல்லாம் அந்த பிரகஸ்பதியிடம் கொண்டுவந்து விட்டுத்தான் கல்வி கற்பிக்கின்றது வழக்கம்.

**ஜோசப் :** நிறுத்து நிறுத்து, அப்படியானால் அந்த பிரகஸ்பதி யென்கின்றவர் ஒரு வாத்தியாரா?

**ராமசேஷன் :** ஆமாப்பா, குரு என்றால் என்ன? வாத்தியாரென்றால் என்ன? இரண்டும் ஒன்றுதானே உனக்கு இது கூடத் தெரிவதில்லையே! உன்னோடு எப்படி அழுவது?

**ஜோசப் :** இரப்பா இரு, அதுக்குள்ளே கோபித்துக் கொள்ள வேண்டாம். குரு என்றால் இந்தப் பல்லக்கில் ஆனை, குதிரை, ஒட்டகை, மேளம், வாத்தியம் இதுகளுடன் மிரவணை (ஊர்கோலம்) வந்து கரண்டியில் தண்ணீர் விற்று பணம் கொள்ளையடிக்கிறானே அந்த ஆசாமியோ என்னமோ அவனுக்குச் சொந்தப் பெண்டாட்டி இல்லையென்று சொல்லுகிறார்களே, அப்படியிருக்க நீ இந்த குருவுக்கு பெண்டாட்டி இருப்பதாக சொல்லு கிறாயே, என்னப்பா அதிசயமாயிருக்குது என்றுதான் யோசிக்கின்றேன்.

**ராமசேஷன் :** அடே இந்த குரு வேறேயடா; நீ ஒன்றும் தெரியாமல் உளறாதே.

**ஜோசப் :** அப்படியானால் அந்த குருவுக்கு என்ன பேரு?

**ராமசேஷன் :** அவர்களுக்கும் குரு என்றுதான் பெயர். அவர்க ளெல்லாம் சமயாச்சாரியார்கள், மடாதிபதிகள், லோக குரு, குலகுரு, ஆச்சாரி யார்கள், பண்டார சன்னதிகள், சுவாமிகள் என்றும் பலவிதமாகச் சொல்லப் படுபவர்கள். நான் சொல்லுகின்ற இவர் தேவகுரு அதாவது தேவர்களுக்கு உபாத்தியாயர் என்று சொல்லப்படுபவர்.

**ஜோசப் :** நில்லு நில்லு; அவசரமாகப் போகாதே; எனக்குப் புரிய வேண்டாமா? முன் நீ சொன்னாயே லோககுரு என்று அந்த லோக குரு என்பவர் எந்த லோகத்திற்கு குரு.

**ராமசேஷன் :** என்னப்பா உன்னோடு பெரிய தொல்லையாய் இருக்கின்றது? ஒவ்வொன்றும் உனக்குச் சொல்லித் தொலைக்க வேண்டும்



போல் இருக்கின்றது.

**ஜோசப் :** சும்மாதானா நிர்வாணத்தைப் போய் பார்க்கின்றது. அது இன்ன நிர்வாணம் என்று புரிய வேண்டாமா?

**ராமசேஷன் :** கேலி பண்ணாதே, விவரமாய்ச் சொல்லுகிறேன் கேள். எங்கள் ரிலிஜனை (மதத்தை) நீ படித்தால் தானே தெரியும். நடுவில் புகுந்து கொண்டு கேட்டால் சுலபத்தில் புரியும்படி சொல்ல முடியுமா?

**ஜோசப் :** ஓ ஓஹோ! இதெல்லாம் உங்கள் ரிலிஜனை (மதத்தை)ச் சேர்ந் ததா? அப்படியானால் கவனமாய் கேட்கின்றேன்; சொல்லு பார்ப்போம்.

**ராமசேஷன் :** லோக குரு என்பது ஒரு பட்டப்பெயர். அவர் பார்ப்பனர்களில் ஒரு கூட்டத்தார்க்கு மாத்திரம் சாமியார். அந்தக் கூட்டத் தாரின் செல்வாக்கினாலும் மற்ற மக்களின் அறிவீனத்தினாலும் அவரை எல்லாருக்கும் குரு என்று சொல்லி பணம் சம்பாதிக்க ஏற்பாடு செய்திருக் கின்றார்கள். இப்படிப் பல பேர்வழிகள் உண்டு. அது போலவே ஒவ்வொரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒவ்வொரு சாமியார் என்பவர் உண்டு. அவர்களை எல்லாம் இம்மாதிரி கவுரவமான பெயர்களால் அழைக்கின்றது எங்கள் வழக்கம். ஏனென்றால் ஒருவகுப்பு சாமியாரை வேறு ஒரு வகுப்பார் பரிகாசம் பண்ணினால் அப்புறம் அந்த வகுப்புச் சாமியாரை மற்ற வகுப்பார் பரிகாசம் செய்வார்கள். அப்புறம் ஒருவருக்கும் யோக்கியதை இல்லாமல் போய்விடும். ஆதலால் ஒருவருக்கொருவர் மரியாதை கொடுத்து மரியாதை வாங்கிக்கொள்ளுகின்றது வழக்கம். இந்த முறையில் அவர்களுக்கு அந்தப் பெயர் கிடைத்திருக்கின்றது. ஆதலால் தேவகுரு என்பவர் இதில் சேர்ந்த வருமல்ல. இந்த லோகத்தில் இருப்பவருமல்ல.

**ஜோசப் :** சரி இந்த சாமியார்களால் உங்களுக்கு என்ன லாபம் சொல்லு பார்க்கலாம்.

**ராமசேஷன் :** லாபம் என்ன; நஷ்டந்தான். வருஷா வருஷம் வந்து வரி வசூல் செய்வதுபோல் பணம் கொள்ளையடித்துக் கொண்டு போகின்றது அல்லது மடத்துக்கு முன்னோர்களால் விட்ட சொத்துக்களின் வரும்படிகளை அவர்கள் இஷ்டப்படி அனுபவிப்பது ஆகிய காரியங்கள் தவிர அவர்களால் மக்களுக்கு சாதிக்கப்படுவது ஒன்றும் கிடையாது.

**ஜோசப் :** எனக்கு நேரமாய்விட்டது. இந்த சாமியார்களைப் பற்றி மற்றொரு நாளைக்குப் பேசிக் கொள்ளலாம். இப்போது நிர்வாண காக்ஷிக்கு சம்மந்தப்பட்ட அந்த தேவகுரு சங்கதி சொல்லு சீக்கிரம் முடியட்டும்.

**ராமசேஷன் :** மேலே சொன்ன அந்த பிரகஸ்பதி என்கின்ற தேவ குருவுக்கு தாரை என்கின்ற ஒரு பெண்சாதி உண்டு. அந்த அம்மாள் ரொம்ப வும் அழகு வாய்ந்தவள். யௌவன பருவமுடையவள். இந்த பிரகஸ்பதி என்கிற குரு தாடியும் மீசையும் முளைத்துப் பார்க்கின்றதற்கு 'கிழப்பிசாசு' போல் இருப்பார். இப்படி இருக்கும் நாளையில் அந்த தேவகுருவிடம்



RangaRakes tamilnavarasam.com

படிப்பிக்க சந்திரனை அவன் தாய் தந்தையர்கள் பிரகஸ்பதியிடம் கூட்டி வந்துவிட்டார்கள்.

**ஜோசப் :** ஓடாதே ஓடாதே! கொஞ்ச நில்லு சந்திரன் என்று இப்போது சொன்னாயே அது யாரு.

**ராமசேஷன் :** அடமுட்டாளே! சந்திரன் என்றால் யார் என்று கூடவா தெரியாது. வானத்தில் தெரிகின்றதே. ராத்திரியில் வெளிச்சம் கொடுக் கின்றதே அந்த சந்திரன்தான். இது கூடவா சொல்லித் தொலைக்க வேண்டும்?

**ஜோசப் :** கோபித்துக் கொள்ளவேண்டாமப்பா! சும்மா தானா நிர்வாணத்தைப் பார்க்க வருகிறது?

மானத்தில் தெரிகின்ற சந்திரனா ஒருவருக்குக் குழந்தையாக பிறந்து பிரகஸ்பதி என்கின்ற குரு இடம் படிக்கக் கொண்டு போய் விடப்பட்டான்.

**ராமசேஷன் :** ஆமாம், ஆமாம், ஆமாம். உனக்கு நூறு தரம் சொல்லித் தொலைக்க வேண்டுமாக்கும்.

**ஜோசப் :** தெரியாதவனுக்கு என்னைப் போல் தற்குறிக்கு தெரியும் படியாய்ச் சொல்ல வேண்டாமா? அப்படியானால் நீர் சொல்லுகிற சந்திரன் பிறப்பதற்கு முந்தி மானத்தில் சந்திரன் இருந்ததா இல்லையா?

தவிர பிஸ்பிஸ்பதியிடம் படித்துக் கொண்டிருந்த காலத்தில் மானத்தில் என்ன இருந்தது? எப்போதும் அமாவாசையாகவே இருந்ததா? சற்று விளக்கு பார்ப்போம்.

**ராமசேஷன் :** என்னப்பா இழவு, நீ கிருஸ்தவன் என்பது சரியாய் இருக்கின்றது.

**ஜோசப் :** திடீரென்று அப்படிச் சொல்லி விடாதே. இதை உன் தம்பி கேட்பதாகவே நினைத்துக் கொண்டு சாமாதானம் சொல்லி விளங்கப் பண்ணப்பா.

**ராமசேஷன்:** என் தம்பி இந்த மாதிரி கேள்விகள் கேட்பானேயாகில் அப்போதே அவனை நன்றாய் உதைத்து இனிமேல் இம்மாதிரி அதிகப் பிரசிங்கித்தனமானதும் நாஸ்திகத்தனமானதுமான கேள்விகளை கேட்க வேண்டாம் என்று சரியானபடி புத்தி கற்பித்திருப்பேன்.

**ஜோசப் :** என்னடாப்பா கடைசியாக இப்படிச்சொல்லி விட்டாய், நிர்வாண நாடகம் பார்க்கவாவென்று வெகுஒழுங்காய் கூப்பிட மாத்திரம் உனக்கு அறிவிருக்குது, அந்தக் கதையின் யோக்கியதை என்னவென்று கேட்டால் இப்படிச் சொல்கிறாயே. இது தானா உன்னுடைய மதத் தத்துவம்.

**ராமசேஷன் :** இல்லையப்பா அதற்காக நான் சொல்லவில்லை. இம் மாதிரியான கேள்விகள் கேட்பதெல்லாம் தப்பு. அதாவது இதனால் ஒரு மத தத்துவத்தை (இன்சல்ட்) அவமானப்படுத்தியதுபோல் ஏற்படுகின்றது. இதை யெல்லாம் அறிந்து தான் பெரியவர்கள், பெரியவாள் சொன்னதையும் எழுதிவைத்ததையும் அப்படியே நம்ப வேண்டுமென்றும் நம்பாமல் கேள்வி கேட்பது நாஸ்திகம் என்றும் பாவம் என்றும் எழுதி வைத்திருக்கின்றார்கள். அதோடு இப்படி தர்க்கம் செய்பவனை சித்ரவதை செய்து கொன்றுவிட வேண்டும் என்றும் வேதம் சொல்லுகின்றது.

**ஜோசப் :** நல்ல வேளையாக வெள்ளைக்கார அரசாங்கம் இருப் பதால் நீ கூட என்னைக் கொல்லாமல் விட்டாய் போலும். வெள்ளைக்கார அரசாங்கம் வேறு வகையில் எவ்வளவோ மோசமானதென்று சொல்லிக் கொள்ளப்படுவதாயிருந்தாலும் இந்தக் காரியத்துக்காகவாவது இன்னும் கொஞ்ச நாளைக்கு இருக்க வேண்டும் என்றே எனக்குத் தோன்றுகின்றது. அதிருக்கட்டும் இதையாவது சொல்லு பார்ப்போம்.

**ராமசேஷன் :** எதை?

**ஜோசப் :** அதாவது எப்பொழுது சந்திரன் பிள்ளையாய்ப் பிறந்தான் எந்த உருவத்தோடு பிறந்தான். எப்படி மானத்திற்கு (ஆகாயத்திற்கு) போனான். அதையாவது சொல்லு பார்ப்போம்.

**ராமசேஷன் :** இதுவும் அந்த மாதிரி கேள்விகளை சேர்ந்ததுதான் தெய்வமூலம், ரிஷிமூலம், நதிமூலம் ஆகியவைகள் ஒன்றும் கேட்கப்படாது என்பதும் கேட்பதும் அதைத் தெரிய விரும்புவதும் பாவம் என்பதும் எங்கள் வேதத்தில் சொல்லப்பட்ட கட்டளையாகும். ஆதலால் நான் இவைகளைப் பற்றி கவலை எடுத்துத் தெரிந்து கொள்ள முயற்சிக்கவேயில்லை. மற்றபடி இவைகளை உனக்குச் சொல்லக் கூடாது என்கின்ற நிர்ப்பந்தம் ஒன்றும் எனக்கு இல்லை.

**ஜோசப் :** சரி அப்படியானால் அந்த வேதத்தை நீ பார்த்திருக்கின் றாயா? அதில் இம்மாதிரி எழுதியிருப்பது உனக்கு நேரில் தெரியுமா?

**ராமசேஷன்:** அதை நான் பார்க்கவில்லை; எங்கள் வேதத்தை எல்லோருமே பார்த்து விட முடியாது.

**ஜோசப் :** அதென்ன அப்படி?

**ராமசேஷன் :** அப்படித்தான்; அதைச் சிலர்தான் பார்க்கலாம். அவர் கள் தவிர மற்றவர்கள் பார்த்தால் பார்த்தவர்களின் கண்ணைக்குத்த வேண் டும் என்றும் அதில் உள்ளதைக் காதால் கேட்டால் அந்தக் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்றும் வாயால் படித்தால் படித்த நாக்கை அறுக்க வேண்டும் என்றும் மனதில் பதிய வைத்துவிட்டால் அந்த நெஞ்சைப் பிளந்து அதை வெளியாக்கிவிட வேண்டும் என்றும் நிபந்தனை இருக்கின்றது.

**ஜோசப் :** அது எதில் இருக்கின்றது?

**ராமசேஷன் :** அதுவும் அந்த வேதத்தில்தான் இருக்கின்றது.

**ஜோசப் :** அதையாவது நீ பார்த்தாயா?

**ராமசேஷன் :** நான்தான் பார்க்கக்கூடாது என்று முன்னமே சொன்னேனே.

**ஜோசப் :** பின்னை உனக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது?

**ராமசேஷன் :** பெரியோர்கள் சொல்லித் தெரிந்தது.

**ஜோசப் :** அப்படியானால் வேதத்தில் உள்ளது உனக்கும் தெரிந்து இப்போது எனக்கும் தெரிந்து விட்டதே. நீ சொல்கின்ற வேத நிபந்தனைப் படி பார்த்தால் உன் காதிலும் என் காதிலும் ஈயத்தைக் காய்ச்சிவிட்டு உன் நெஞ்சையும் என் நெஞ்சையும் பிளந்தல்லவா ஆகவேண்டும்.

**ராமசேஷன் :** நீ என்னடாப்பா தொட்டதற்கெல்லாம் குதர்க்கவாதம் பேசுகின்றாய் இப்படியே பார்த்துக் கொண்டு போனால் உலகத்தில் எந்த மதமும் எந்த வேதமும் நிலைக்க இடம் இருக்காது. இந்த விஷயங்களை யெல்லாம் நம்பித்தான் ஆகவேண்டும். ஒரு மாதிரியாகத்தான் பார்க்க வேண்டும்.

**ஜோசப் :** மற்ற மதங்களையும் வேதங்களையும் பற்றி நீ ஒன்றும் கவலைப் படாதே அவைகள் எப்படியோ போகட்டும், அவைகளைப் பற்றி இது முடிந்தவுடன் கவனிக்கலாம் இப்போது உன் சங்கதியை அதாவது உன் தலைமேல் இருக்கும் பாரத்தைப் பற்றி நீ உணர்ந்திருப்பதை எனக்குச் சொல்லு அதாவது நீ இப்போது சொன்ன வேதம் என்பது யாரால் உண்டாக்கப் பட்டது.

**ராமசேஷன் :** அது கடவுளால் உண்டாக்கப்பட்டது.

**ஜோசப் :** அந்த வேதம் கடவுளால் உண்டாக்கப்பட்டது என்று யார் சொன்னார்கள்?

**ராமசேஷன் :** அந்த வேதத்தில் தான் சொல்லப்பட்டிருக்கிறது.

**ஜோசப் :** வேதத்தில் அப்படி சொல்லப்பட்டிருக்கிறது என்று உனக்கு யார் சொன்னார்கள்?

**ராமசேஷன் :** வேதம் பார்த்த பெரியோர்கள் சொன்னார்கள்.

**ஜோசப் :** அந்தப் பெரியவர்கள் அந்த வேதத்தில் உள்ளதை கேட்கவும் பார்க்கவும் படிக்கவும் யோக்கியதை இல்லாத உனக்கு எப்படிச் சொன்னார்கள்?

**ராமசேஷன் :** இதெல்லாம் தான் அதிகப்பிரசங்கித்தனம், குயுக்தி வாதம், தர்க்க வாதம், நாஸ்திகம் என்று சொல்வது.

**ஜோசப் :** சரி சரி கோபித்துக் கொள்ளாதே, நிர்வாணக் கதையாகிலும் சொல்லித் தொலை. சந்திரனை அவன் பெற்றோர்கள் பிரகஸ்பதியிடம் படிப்புச் சொல்லிக் கொடுக்கக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அப்புறம்?

**ராமசேஷன் :** அப்படிக் கேளு. சொல்லுகின்றேன். கூட்டிக் கொண்டு வந்தார்களா? சரி கூட்டிக் கொண்டு வந்தார்கள். பிரகஸ்பதியும் சந்திரனை தனது மாணாக்கனாக ஏற்றுக் கொண்டார்.

**ஜோசப் :** சரி அப்புறம்?



**ராமசேஷன் :** சந்திரனுக்கு பிரகஸ்பதி படிப்புச் சொல்லிக் கொடுத் துக் கொண்டிருக்கும் நாளையில் ஒரு நாள் அவசரமாக தேவர்களுக்கு அரசனான தேவேந்திரன் பிரகஸ்பதியை கூப்பிட்டனுப்பினான்.

**ஜோசப் :** சரி. கூப்பிட்டனுப்பினான், அப்புறம்?

**ராமசேஷன் :** பிரகஸ்பதி தம் சம்சாரமாகிய தாரையைக் கூப்பிட்டு சந்திரனைச் சரியாகப் பார்த்துக் கொள்ளும் படிக்கும் தன் மாணாக்கனாகிய சந்திரனைக் கூப்பிட்டு தாரையைச் சரியாகப் பார்த்துக் கொள்ளும்படிக்கும் கட்டளை இட்டுவிட்டு தேவலோகத்திற்குப் போய்விட்டார்.

**ஜோசப் :** சரிசரி கொஞ்சம் நில்லு. இங்கே ஒரு சின்ன சந்தேகம் என்ன வென்றால் அந்த பிரகஸ்பதி தேவலோகம் போய்விட்டார் என்று சொன்னாயே அப்படியானால் இது அதாவது அப்போது சந்திரன் தாரை பிரகஸ்பதி ஆகியவர்கள் இருந்து வந்தது எந்த லோகம்?

**ராமசேஷன் :** இது தானே அதிகப்பிரசிங்கித்தனம்.நாஸ்திகம் என்பது.

**ஜோசப் :** சரி சரி கோபித்துக் கொள்ளாதே. பிரகஸ்பதி தேவலோகம் போய்விட்டார் அப்புறம் சொல்லு.

**ராமசேஷன் :** அப்புறமா? அப்புறந்தான் உன்னிடம் அதைப்பற்றி சொல்லுவது சரியல்ல என்று நினைக்கிறேன்.

**ஜோசப்:** தாரை சந்திரனுக்கு நிர்வாணமாய் எண்ணெய் தேய்ப்பதை நேரில் பார்க்கலாம் வா என்று கூப்பிடுகிற நீ அந்தக் கதையைச் சொல்ல வெட்கப்படுகின்றாயே. இது தானா உன்னுடைய மதபக்தி. ஆஸ்திகம். என்னைக் கூப்பிட்ட யோக்கியதை.

**ராமசேஷன் :** சரி சொல்லித் தொலைக்கின்றேன் கேளு!

**ஜோசப் :** சொல்லப்பா சொல்லு "பிரகஸ்பதி" தேவலோகத்துக்குப் போய்விட்டார். அப்புறம்?

**ராமசேஷன் :** போய்விட்டாரா.....

**ஜோசப் :** சரி போய்விட்டார். அப்புறம் சொல்லு.

**ராமசேஷன் :** அப்புறமென்ன? அதைகூடச் சொல்ல வேண்டுமா? சந்திரன் நல்ல அழகு உள்ளவன் என்று உனக்குத் தான் தெரியுமே ஆகாசத்தைப் பார்த்தாலே தெரியாதா?

**ஜோசப் :** ஆகாயத்தில் உள்ள சந்திரன் அழகுக்கும் பிரகஸ்பதி வீட்டில் உள்ள அழகுக்கும் என்ன சம்பந்தம்?

**ராமசேஷன் :** இது தானே அதிகப் பிரசிங்கித்தனம்.

**ஜோசப் :** இல்லை, இல்லை, சொல்லு, சந்திரன் நல்ல அழகானவன் அப்புறம்?

**ராமசேஷன் :** அதோடு வாலிப பருவம் உடையவன், அது போல வே தாரையும் நல்லஅழகும் வாலிபபருவமும் உடையவள். இப்படிப்பட்ட



RangaRakes tamilnavarasam.com

இரண்டுபேர் ஒரு இடத்தில் இருந்தால் அப்புறம் சொல்ல வேண்டுமா?

**ஜோசப் :** அதையும் சொல்லித் தொலை.

**ராமசேஷன் :** சந்திரன்மேல் தாரைக்கு ஆசை உண்டாய்விட்டது

**ஜோசப் :** இது சகஜந்தான்; மாணாக்கன் மீது வாத்தியாரைப் போலவே வாத்தியார் சம்சாரத்துக்கும் ஆசை இருப்பது வழக்கம்தான். அதனால் என்ன?

**ராமசேஷன் :** அந்த மாதிரி ஆசையல்லடா.சந்திரன் மேல் தாரைக்குக் காதல் உண்டாய்விட்டது.

**ஜோசப் :** அப்படிச் சொன்னால் எனக்கு விளங்கவில்லையே.

**ராமசேஷன் :** உனக்கு நன்றாகச் சொல்ல வேண்டுமாக்கும். காதல் என்றால் சந்திரனைத் தனது ஆசை நாயகனாகக் கொண்டு அவனிடத்தில் கலவி இன்பம் அனுபவிக்க வேண்டும் என்கின்ற ஆசையும் காமவிகாரமும் உண்டாய் விட்டது.

**ஜோசப் :** தேவர்களுக்கெல்லாம் குருவாயிருக்கும் தேவகுரு பெண்ஜாதிக்கு தன் புருஷனிடத்தில் படிக்க வந்த மாணாக்கன் மேல் இந்தக் காமவிகாரம் உண்டாய் விட்டது என்றா சொல்லுகின்றாய்.

**ராமசேஷன் :** ஆம் ஆம்.

**ஜோசப் :** அப்புறம் சந்திரன் அதற்குச் சம்மதிக்காமல் அவளைத் தடுத்துவிட்டான்.

**ஜோசப் :** அப்புறம்?

**ராமசேஷன்:** ஒரு நாள் தாரையானவள் தான் குருபத்தினி என்கின்ற முறையில் சந்திரனை மாணாக்கன் என்கின்ற முறையில் எண்ணை தேய்த்து குளிப்பாட்டுவதுபோல் ஒரு ஏற்பாடு செய்து சந்திரனை உட்கார வைத்து எண்ணைக் கிண்ணத்தை தன் காலடியில் வைத்து தனது துகில் எண்ணை தேய்க்கத் தேய்க்க அவிழ்ந்து விழும்படியாக அவ்வளவு தளர்வாய் கட்டிக் கொண்டு எண்ணை தேய்க்க ஆரம்பித்தாள்.

**ஜோசப் :** சரி; ஆரம்பித்தாள் அப்புறம்?

**ராமசேஷன் :** எண்ணை தேய்க்கும் போது சந்திரன் தலை குனிந்து கொண்டிருந்ததால் எண்ணைக் கிண்ணத்திற்குள் குருபத்தினியுடைய அவயவ உருவங்களெல்லாம் நிழலில் தெரியும்படியாக இருந்தது. அப்படியே இருக்கும்போது சந்திரனுடைய புத்தியும் கொஞ்சம் கொஞ்சமாய் சபலப்பட்டுக் கொண்டே வந்தது

**ஜோசப் :** யாருக்கு?

**ராமசேஷன் :** மாணாக்கனுக்கு.

**ஜோசப் :** சரி, சபலப்பட்டு விட்டது அப்புறம்?

**ராமசேஷன் :** இதே சமயத்தில் தாரைக்கும் மெள்ள மெள்ள



அவளுடைய ஆடை அவிழ்ந்து கீழே விழுந்து விட்டது. தாரை நின்று கொண்டு எண்ணை தேய்த்துக்கொண்டிருக்கும்போது ஆடை கீழே விழுந்ததைப் பார்த்த சந்திரன் தலை நிமிர்ந்து பார்த்தான்..........

இதுவரையில் தான் நாடகக் கொட்டகையில் சீன் நடக்கும். இதற்கு மேல் கொண்ட சங்கதிக்கு நாடக மேடையில் உடனே திரையைப் போட்டு விடுவார்கள். இதைத்தான் தாரா சசாங்கம் என்று சொல்லுவது. இதைப் பார்க்கத்தான் உன்னைக் கூப்பிட்டேன்; வருகிறாயா இல்லையா? சொல்லு நீ வராவிட்டால் நானாவது போகிறேன். இன்று நல்ல பாட்டு நல்லசீன் நல்ல காக்ஷி. மிகவும் வேடிக்கையாய் இருக்கும். பெண்கள்கூட அனேகம் பேர் வருவார்கள்.

**ஜோசப் :** சரி சரி; இந்த கதையைக் கேட்க எனக்கு எப்படியோ வாந்தி வருகின்றது போல் இருக்கின்றது.

இந்த லக்ஷணத்திற்கு இதைப்பார்க்க பெண்கள்கூட வருவார்கள் என்றாயே அது வேறையா இந்த அழகுக்கு. அவர்கள் எதற்காக வரு வார்கள்.

**ராமசேஷன் :** முதலாவது, இது எங்கள் மதத்தைச் சேர்ந்த ஒரு பக்தி மார்க்க கதை. இக் கதையை கேட்டவர்களுக்கு மோக்ஷம் உண்டு என்று எங்கள் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இரண்டாவது இது ஒரு வேடிக்கை கதை.

**ஜோசப் :** என்ன வேடிக்கை கதை இது?

**ராமசேஷன் :** தாரை சந்திரனைக் கட்டாயப்படுத்தி இழுப்பது, அவன் சம்மதிக்கமாட்டேன் என்று வாதாடித் தப்பித்துக் கொண்டு ஓடுவது, சந்தி ரனை தாரை பலவந்தபடுத்துவதன் மூலம் இருவரும் கட்டிப்புரளுவது சிற்றின்பமான பாட்டுகள் பாடுவது, கடைசியாக நிர்வாணக் காக்ஷி காட்டுவது ஆகிய வேடிக்கைகளை பார்க்கக்கூடும். ஆதலால் எங்கள் பெண்களும் வருவார்களென்று சொன்னேன்.

**ஜோசப் :** இவ்வித நடவடிக்கை நடக்கும் இம்மாதிரி காக்ஷிகள் காட்டப்படும் இம்மாதிரிப் பாட்டுகள் பாடப்படும் என்கின்ற விஷயங்கள் எல்லாம் தெரிந்தபிறகு தானா உங்கள் ஸ்திரீகளும் ஏராளமாய்ப் போகிறார் கள் என்கின்றாய்?

**ராமசேஷன் :** ஆம் தாரா சசாங்க நாடகம் என்று சொல்லி விட்டால் நாடகக்காரன் கூட இன்ன இன்ன காக்ஷி, இன்ன இன்ன வேஷம் இன்ன இன்னார் போடுவார்கள் என்பதை ஆண்களைவிட பெண்களுக்கே அதிகம் தெரியும் படியாக விளம்பரம் செய்வான்.

**ஜோசப் :** உங்கள் ஆண்கள் இதெல்லாம் தெரிந்துமா உங்கள் பெண்களை அனுப்புகிறார்கள்?

**ராமசேஷன் :** ஆம். ஏனென்றால் ஆண்கள் நாடகத்திற்கு புறப்



RangaRakes tamilnavarasam.com

படும்போது பெண்களும் அவசர அவசரமாய் தங்களை சிங்காரித்துக் கொண்டு புறப்படுவார்கள்.

ஆண்கள். இந்த காக்ஷியை பார்க்க வருகிற பல பெண்களைப் பார்க்கலாம், அவர்களைப் பார்த்துச் சிரிக்கலாம் என்றே வருவார்கள். இது எல்லாப் பெண்களுக்கும் தெரியும். ஆதலால் ஆண்கள் தங்கள் பெண்களை வரவேண்டாமென்று சொன்னால் அவர்கள் இந்த இரகசியத்தைச் சொல்லி ஆண்களை கண்டித்து விடுவார்கள்.

தவிர சில ஆண்களுக்கு பெண்களை வீட்டில் தனியாய் விட்டு விட்டுப் போவதற்கும் சந்தேகம். எனவே இருவரும் போவார்கள். அன்றியும் இப்படிப் போவதில் இன்னம் ஒரு லாபம் இருக்கின்றது. அதாவது மேல் கண்ட மாதிரியான காமாதுரமான பாட்டும் காக்ஷியும் செய்கையும் நாடகத்தில் காணப்படும் பொழுது பெண்களுக்கும் ஆண்களுக்கும் காமாவிகார மேற்பட நேரும், அப்போது அவரவர்கள் புருஷனும் பெண் ஜாதியுமாயிருந்தால் அவரவர்களுடைய சொத்தை அவரவர்கள் பார்த்து ஒரு விதத்தில் திருப்தி அடையக்கூடும். அப்படிக்கில்லாவிட்டால் அச்சமயத்தில் வேறு ஒருவர் சொத்தை ஒருவர் பார்க்க நேரிடும். அதோடு இருவரும் போனால் ஒருவருக்கொருவர் பயந்து கொண்டு வேறு ஒருவரைப் பார்த்துக் கொள்ளவும் மாட்டார்கள். ஆதலால் புருஷனும் பெண்ஜாதியுமாக போவதே தனியாய் போவதைவிட மேலானது என்பது எனது அபிப்பிராயம்.

**ஜோசப் :** அது எப்படியோ போகட்டும். மேற்கொண்டு கதையின் முடிவு என்ன?

**ராமசேஷன் :** கதை முடிவு இதுதான். விசேஷ பாகம். மற்றது சாரமில்லாதது.

**ஜோசப் :** சாரமில்லாவிட்டாலும் சற்று சொல்லு கேட்போம்.

**ராமசேஷன் :** பிறகு ஒருவரை ஒருவர் கூடுகிறார்கள். பிரகஸ்பதி வருகின்ற வரை இதே வேலையாய் இருக்கிறார்கள். இதனால் தாரைக்கு கர்ப்பம் தரித்து விடுகின்றது. பிறகு தேவகுரு பிரகஸ்பதி வந்து ஞான திருஷ்டியால் தெரிந்து கோபித்துக் கொண்டு சந்திரனை 15 நாள் தேயும் படியாகவும் 15 நாள் வளரும்படியாகவும் சபித்து விடுகின்றார். அதுதான் வளர்பிறை தேய்பிறை என்பது. தாரை மீதும் ஏதோ கோபித்துக் கொள்ளுகின்றார். தாரைக்கு புதன் என்கிற பிள்ளையும் பிறக்கின்றது. தேவகுருவும் சந்திரனை சபித்துவிட்டு தன் பெண்சாதியை கடைசியாக மன்னித்து விடுகிறார். அதோடு கூட தாரையை உலகில் உள்ள கற்புள்ள ஸ்திரீகள் ஐவரில் ஒருத்தியாக சேர்த்து விடுகிறார். தாரையை நினைத்தால் நினைத்தவர்களுக்கு சகல பாவமும் உடனே தீரும்படியான சக்தியையும் அவர்களுக்கு ஏற்படுத்திவிடுகிறார். அதுபோலவே இன்னும் உலகத்தில் தினமும் கோடிக்கணக்கான பேர்கள் இந்த தாரையை நினைப்பதன் மூலம் தினந்தோறும் அவரவர்கள் செய்யும் பாவங்கள் மன்னிக்கப்பட்டு புதிது புதிதான பாவங்கள் செய்யவும் மக்களுக்கு எவ்வளவோ தைரியம் கொடுக்க



RangaRakes

உபகாரமாகவுமிருக்கிறது.

இதுதான் தாரா சசாங்கக் கதையின் தாத்பரியம்.

**ஜோசப் :** இக்கதையினால் உங்கள் குரு பெண்ஜாதிமார்கள் சங்கதியும் சீஷப் பிள்ளைகளின் சங்கதியும் நன்றாய் தெரிய வந்தது. அதோடு உங்கள் கற்புக்கும் அர்த்தம் தெரிந்தது. இவ்வளவே எனக்கு போதும். நீ சொன்னதிலிருந்தே இந்த கொசமுசாங்க கதையை நேரில் பார்த்தது போலவே ஆகி விட்டது. இதை நீயும் உங்கள் பெண்களுமே நன்றாகப் பார்த்து மோக்ஷத்திற்குப் போங்கள்.

உங்கள் உபாத்தியாயர் பத்தினிமார்களும் இந்த கண்காட்சியை நன்றாகப் பார்த்து அந்தப்படியே நடந்து மாணாக்கர்களுக்கு கற்றுக் கொடுத்துவிட்டு பஞ்ச கன்னிகைகளோடு சேர்ந்து அவர்களை நினைத்தவர்களுக்கெல்லாம் மோக்ஷத்தைக் கொடுத்து வரட்டும்.

மாணாக்கர்களாகிய நீங்களும் அவர்களுக்கு சீஷப் பிள்ளைகளாகச் சேர்ந்து சந்திரனைப்போலவே தினமும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு புதன்களைப் பெற்றுக் கொண்டிருங்கள்.

நம்மை மாத்திரம் அந்த மோக்ஷக் காட்சிக்கு கூப்பிடாதீர்கள்.

**ராமசேஷன் :** இதையெல்லாம் நீ எங்கிருந்து படித்துக் கொண்டாய் என்பது எனக்குத் தெரியும். ‘குடி அரசு’ என்கின்ற அந்த நாஸ்திகப் பத்திரிகையை நீ தினம் படிக்கின்றதை நான் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன். அது உன்னை இம்மாதிரி ஆக்கிவிட்டது. நீ என்ன செய்வாய், உன் மீது தப்பிதமில்லை.

**ஜோசப் :** குருபத்தினி சீஷப் பிள்ளைக்கு நிர்வாணமாய் எண்ணெய் தேய்ப்பதை பார்க்க இஷ்டமில்லை என்று சொன்னால் அது ‘குடி அரசை’ பார்த்ததனால் வந்த கேடாக்கும்? நாஸ்திகமாக்கும்? போதும், போதும், உங்கள் ஆஸ்திகத்தை மூட்டை கட்டி வையுங்கள். இனி என்னிடம் விரிக்காதீர்கள். எனக்கும் நேரமாச்சுது. நான் போய்வருகிறேன். மற்றொரு நாளைக்கு உங்கள் வேதத்தைப்பற்றி பேசிக் கொள்ளலாம்.

குட்பை – Good bye.

**குடி அரசு – உரையாடல் – 08.07.1928**



tamilnavarasam.com

# தொழிலாளர் துயரமும் சைமன் பஹிஷ்கார வேஷமும்

இயற்கை அமைப்பிலேயே கைத்தொழில்களையும், தொழிலாளர் களையுமே ஜீவநாடியாகவும் அணியாகவும் கொண்டு நிலவிய நம் நாடானது எந்தக் காலத்தில் ஆரியர்களால் மேல்கண்ட இரண்டுமற்ற அன்னிய நாட்டாருக்கு காட்டிக்கொடுக்கப்பட்டு அன்னிய நாட்டு நன்மைக்காக ஆளப்படும் அன்னிய ஆதிக்கத்திற்கு – அடிமை ஆக்கப்பட்டதோ அன்று முதலே நம்நாட்டுத் தொழில்கள் கொஞ்சம் கொஞ்சமாய் அருகிப் போக வழி ஏற்பட்டதல்லாமல் தொழிலாளர்களும் தரித்திரத்திற்கும் துன்பத்திற்கும் ஆளாக நேர்ந்து வருடா வருடம் லக்ஷக்கணக்கான கைத்தொழிலாளர்கள் தொழிலில்லாமல் வேற்று நாடுகளுக்கு மிருகங்களாக ஏற்றுமதி செய்யப் பட்டும் வருகின்றார்கள்.

எஞ்சியுள்ள தொழில் மக்கள் உள் நாட்டு ஒரு சிறு கூட்டத்தினராகிய பேராசை கொண்ட முதலாளிகளிடமும், நம்மிடமும் நம் நாட்டிடமும் ஒரு சிறிதும் அன்பும் இரக்கமும் பற்றுதலும் அற்ற வெளிநாட்டு முதலாளி களிடமும் கொடுமைப்பட்டு வருகின்றார்கள்.

இதன்பலனேதான், நம்நாட்டில் ஒவ்வொரு நாளும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தமும், கதவடைப்பும், சத்தியாக்கிரகமும் பெண்டு பிள்ளை குட்டி களுடன் பட்டினி கிடப்பதும் அடிபடுதலும், உதைபடுதலும், துப்பாக் கியால் சுடுபடுதலும், ஈட்டியால் குத்தப்படுதலும், சிறையில் அடைக்கப்படு தலும் ஆன காரியங்கள் நடந்தவண்ணமாகவே இருக்கின்றன. நாம் நன்றாய் அறிந்த இந்த சுமார் பத்து வருஷம் தொழிலாளர் உலகத்தில் நடந்ததான கொடுமைகள் நினைத்தால் வயிறு பற்றி எரிகின்றது. இதைப்பற்றி ஏன் என்றுகூட கேட்க பொதுமக்களிடை எவ்வித இயக்கமும் இல்லை. யாதொரு உண்மைத் தலைவருமில்லை. தொழிலாளர்கள் பெயரைச் சொல்லிக் கொண் டும் அவர்களை காட்டிக் கொடுத்தும் அவர்களது உழைப்பால் பிழைக்கும் தேசீயத் தலைவர்களுக்கும் தேசீய இயக்கங்களுக்கும் மாத்திரம் நம் நாட்டில் குறைவில்லை.

நம்நாட்டு ஏழைக் கைத்தொழில் மக்களின் கூலிகளின் வாயில் மண்ணைப்போட இதுவரையில் எத்தனைவித இயந்திரப் பிசாசுகள் வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு வந்திருக்கின்றன என்பதை அறியாதார் யார்? இதைப்பற்றி யாராவது கவலை கொண்டு அதற்காக ஏதாவது பரிகாரம் செய்திருக்கிறார்களா? அர்த்தமற்ற சைமன் கமீஷன் பகிஷ்காரத்திற்காக கூச்சல் போட மாத்திரம் "தேசீய" இயக்கங்களுக்கு குறைவில்லை. தேசீய தலைவர்களுக்கும் குறைவில்லை. அதற்கு செலவு செய்ய நம் மூட மக்களின் பணமும் இருக்கின்றது. அன்றியும் ஏதாவது ஒரு சிறு கிராமத்தில் ஒரு ஏக்கராவுக்கு இரண்டணா நிலவரி உயர்ந்து விட்டால் உடனே வரிகொடா இயக்கம் ஆரம்பித்து பொது மக்களிடம் பணம் வசூலித்து பெரியதனம் செய்து தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளவும் பல இயக்கங்கள் இருக் கின்றன; அதற்கேற்ற தலைவர்களுமிருக்கின்றார்கள். சைமன் கமீஷனை பகிஷ்காரம் செய்வதாக கூச்சல் போடுவதால் நாட்டிற்கு என்ன விதமான நன்மை விளையக்கூடும் என்பதை யாராவது உணர்கிறார்களா? சர்க்காரே பஹிஷ்காரக் கூச்சலுக்கு பயந்து ஒரு சமயம் இணங்கி வந்து விட்டதாகவே வைத்துக் கொண்டாலும் நம் நாட்டு மக்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டு விடக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை.

சாதாரணமாக இந்தியாவுக்கு சுயராஜ்யத் திட்டம் ஏற்படுத்தும் யோக் கியதை, உரிமை, அதிகாரம் ஆகிய இவைகள் ஒரு சிறிதும் வெள்ளைக் காரனுக்கோ பார்லிமெண்டுக்கோ கிடையாது என்பதை பிரிட்டிஷ் சர்க்கா ராரே ஒப்புக்கொண்டு அவற்றை இந்தியர்கள் தலையிலேயே போட்டு விட்டதாகவே வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது இந்தியர்களின் சுயராஜ்யத் திட்டம் என்பது என்ன என்னவாக இருக்க முடியும், யார் யாரால் கோலப்படுமென்பதை சற்று யோசிக்க வேண்டும். திருவாளர்கள் சீனிவாசய் யங்கார், இரங்கசாமி அய்யங்கார், சத்தியமூர்த்தி, எம்.கே. ஆச்சாரியார், பெசன்டம்மை, விஜயராகவாச்சாரியார், மாளவியா ஆகியவர்கள் இப்போது ஏற்படுத்திக் கொண்டிருக்கும் தனித்தனி திட்டமா? அல்லது வர்ணாசிரம சபையார் என்பவர்களும் பிராமண சபையார் என்பவர்களும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் திட்டங்களா? அல்லது ஆதிதிராவிடர்கள் ஏற்படுத்தும் திட்டமா? அல்லது இந்து மகாசபையார் போடும் திட்டமா? அல்லது மகமதிய மகாசபையார்கள் ஏற்படுத்தும் திட்டமா? அல்லது கிருஸ்தவ சங்கத்தார்கள் ஏற்படுத்தும் திட்டமா? அல்லது காங்கிரஸ்காரர்கள் என்பவர்கள் திட்டமா? அல்லது அதற்குள் முளைத்த காங்கிரஸ், சுயராஜ்யக்கக்ஷிக்காரர் திட்டமா? அல்லது காங்கிரசு சுயேச்சைக்கக்ஷியார் திட்டமா? அல்லது திருவாளர்கள் சிவசாமி அய்யர், சீனிவாச சாஸ்திரிகள், சாப்ரு ஆகிய தனிப் பார்ப்பனர்கள் தலைமை கொண்ட மிதவாதிகள் சங்கத்தார் திட்டமா? அல்லது திரு. ஜயக்கர், திரு. ஜின்னா போன்ற வக்கீல் கொள்ளைக்காரர்கள் தனித்தனியாக ஏற்படுத் தும் திட்டமா? அல்லது 'ஜஸ்டிஸ்' கக்ஷியார் என்பவர்கள் திட்டமா? அல்லது அதற்குள் முளைத்த ஒழுங்கு முறைக்காரர் திட்டமா? அல்லது சர்வகக்ஷி



RangaRakes tamilnavarasam.com

மகாநாடு என்பதாக ஒரு மகாநாட்டைக் கூட்டி அதில் எல்லாக் கட்சி யாருக்கும் எல்லாக் கூட்டத்தாருக்கும் இடம் இருப்பதாக வேஷம் போட்டு தங்கள் கூட்டத்தாரைத் தவிர வேறு யாரும் வருவதற்கு இடமில்லாமல் சூழ்ச்சி செய்து, அதற்கு எவ்வளவு தூரம் பிரதிநிதித்துவத் தன்மை இருக்கின்றது என்பதுகூட அம்மகாநாடு கூட்டுபவர்களுக்கும் அம்மகாநாட் டில் கலந்து கொள்ளுகின்றவர்களுக்கும் கூட தெரியாமல் ஒரு சிலர் ஒன்று கூடி, அதிலும் ஒரு முடிவுக்கு வராமல் தங்கள் தங்கள் சுய நன்மைக்கோ அல்லது ஒரு சில வகுப்பு நன்மைக்கோ ஏற்ற விஷயங்களையே பிரதானமாகக் கொண்டு விடியவிடியப் பேசி, கடைசியில் ஒரு முடிவுக்கு வராமல் அவரவர்கள் வந்தவழி திரும்புகின்றதான அந்தத்திட்டமா? அல்லது திருவாளர்கள் அண்ணாமலை, குப்புசாமி, அமீத்கான், ஆதிநாராயண செட்டியார், குழந்தை, முத்துரங்கம், வரதராஜலு, ரத்தினசபாபதி, மாரிமுத்து உன்னியார் போன்றார்கள் மூலை மூலைக்கு ஜஸ்டிஸ் கட்சியையும் மற்றும் பார்ப்பனரல்லாதார்களையும் வைதுக் கொண்டு பார்ப்பனர்கள் மீதில் கவிபாடிக் கொண்டு பார்ப்பனர்கள் சொல்வதற்கெல்லாம் ஆமாம் சாமி போட்டு தலையாட்டி வரும் திட்டமா?

அல்லது சுத்தி இயக்கம், சங்கதன் இயக்கம் ஆகிய இயக்கத்தார்கள் தனித்தனியே போடும் திட்டமா? இதுபோன்று மற்றுமுள்ள சங்கங்களின் இயக்கங்களின் திட்டங்களில் எந்த திட்டம் இந்தியாவுக்காக இந்தியப் பிரதிநிதிகளால் போடப்பட்டு இந்திய மக்கள் பெரும்பகுதியோரால் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டம் என்று ஒன்றை நிர்ணயிக்கக் கூடும் என்பதால் இந்த பஹிஷ்கார ‘வீரர்கள்’ நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று யாராலும் சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

இதுபோலவே தஞ்சையிலோ, பர்டோலியிலோ ஒரு கிராமத்தில் போடப்பட்ட அதிக வரி என்பதைக் குறித்து வரிகொடாஇயக்கத்தை நடத்தி அந்த கிராமத்தார் வெற்றி பெற்று வரிகளை குறைத்துக் கொண்டார்கள் என்றே வைத்துக் கொண்டாலும் மற்றபடி நாட்டிலுள்ள பூமிகளுக்கெல்லாம் போடப்பட்ட அல்லது போடப்போகின்ற அதிக வரி என்பது இல்லாமல் போய்விடுமா என்று கேட்கின்றோம்.

பர்டோலி விஷயம் முடிவு பெற்றால் பர்டோலிக்கு வெற்றி என்று சொல்லிக் கொள்ளலாம். பக்கத்து ஊர்க்காரருக்கு என்ன லாபம். உதாரணமாக வைக்கத்தில் நடைப்பாத்திய வெற்றி ஏற்பட்டது என்று நாம் சொல்லிக் கொள்ள இடம் ஏற்பட்டது என்பதாகவும், அதனால் சிலருக்கு விளம்பரமும், பெருமையும், கீர்த்தியும் ஏற்பட்டதாகவும் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவ்வெற்றி வைக்கத்திற்கு அடுத்த ஆலப்பிழை, அம்பலப்பிழை என்பதான பக்கத்து கிராமங்களுக்குக்கூட பயன்படாமல் வழக்கம்போல் உள்ள கொடுமைகள் ஆங்காங்கு நடைபெற்றுக் கொண்டுதான் வருகிறது.



இதுபோல் இரண்டு வருஷத்திற்கு முன் சட்டசபைகளிலும் பெரிய வெளியேற்றமும் நடந்தது. அதை ஒரு பெரிய தியாகம் என்றும் கொண்டாடப்பட்டது. முடிவில் அதனால் ஏற்பட்ட பலன் என்ன? எனவே இம்மாதிரியான பகிஷ்காரத்தாலும் சத்தியாக்கிரகத்தாலும் வெளியேற்றத்தாலும் வரிகொடா இயக்கத்தாலும், மக்களுக்கோ நாட்டிற்கோ ஏற்படும் வெற்றிகள் எவ்வளவு பெரியதாயிருந்தாலும் அதனால் ஏற்படும் பலன் எவ்வளவு, நாட்டிற்கும், நாட்டின் ஏழை மக்களுக்கும் எவ்வளவு பயன்படக்கூடியது என்பதைத்தான் இங்கு கவனிப்பதற்காக இதை எழுதினோம்.

வங்காளத்தில் நிரபராதிகளான தேசபக்தர்களை யாதொரு காரணமும் சொல்லாமல் சிறையிலடைத்து வைத்திருப்பதற்காக அத்தேச பக்தர்களின் தேச பக்தியை பாராட்டியாவது அல்லது அவர்களது கஷ்டத்தைப் பற்றியாவது இதுவரை எந்த தேசீயமோ தேசபக்தர்களோ காங்கிரசோ யாராவது கவலை எடுத்து அதற்காக எந்த பகிஷ்காரமோ சத்தியாக்கிரகமோ வரி மறுப்போ துவக்கினார்களா என்று கேட்கின்றோம்.

சைமன் கமிஷன் நியமனத்தாலும், பர்டோலி மிராசுதாரர்களின் பூமிக்கு போடப்பட்டதாகச் சொல்லும் அதிக வரியாலும், நமது நாட்டிற்கு ஏற்பட்டி ருக்கும் அவமானமும் சர்க்கார் ஆணவமும் நஷ்டமும் பெரிதா? அல்லது வங்காளத்தில் நிரபராதிகளான மேல்கண்ட தேசபக்தர்களை நிஷ்காரணமாய் ஜெயிலில் அடைத்து வைத்திருக்கும் விஷயத்தில் நாட்டிற்கு ஏற்பட்ட அவமானமும் சர்க்காரின் அக்கிரமமும் நஷ்டமும் அத் தேச பக்தர்கள் படும் கஷ்டமும் பெரிதா? என்று நடுநிலைமை வாய்ந்தவர்களைக் கேட்கின்றோம்.

இந்த நிலைகளையெல்லாம் நன்றாய் உணர்ந்த வெள்ளை முதலாளிகளில் ஒரு பகுதியர்களான தென் இந்திய ரெயில்வே கம்பெனிக்காரர் இதுதான் சமயமென்று ஒரே அடியாய் ஆயிரக்கணக்கான தொழிலாள மக்களைப் பட்டினி போட்டு கொல்லத் துணிந்துவிட்டார்கள். அதாவது “தாங்கள் ரயில்வே வேலைக்கு யந்திரசக்திகள் அதிகமாய் ஏற்படுத்திக் கொண்டோம்; ஆதலால் எங்களுக்குக் கையால் வேலை செய்யும் ஆட்கள் 5000 பேர்கள் வரையில் தேவை இல்லை” மற்றும் ஏதேதோ சாக்குகளைச் சொல்லி கூலிகளைக் குறைக்கவும் இந்திய தொழிலாளர்களை நீக்கி விட்டு ஒன்றுக்கு நான்காய் கூலி கொடுத்து வெள்ளைக்கார ஆட்களை சீமையில் இருந்து தருவித்து வைத்துக் கொள்ளவுமான ஏற்பாடுகள் செய்து கொண்டு இதை அமுலில் கொண்டு வர ஆரம்பித்து விட்டார்கள். இந்தக் கஷ்டத்திலிருந்து நீங்க நம் தொழிலாள சகோதரர்கள் மேல்படி தென்னிந்திய ரயில்வே அதிகாரிகளை எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார்கள். தேசீயத் தலைவர்களிடமும் பொது ஜனங்களிடமும் எவ்வளவோ முறையிட்டுப் பார்த்தார்கள்; சட்டசபை அங்கத்தினர்களிடமும் சர்க்கார் அதிகாரிகளிடமும் குறை இரந்து



RangaRakes tamilnavarasam.com

பார்த்தார்கள்; ஒருவர் மூலமாகவாவது ஒரு பரிகாரமும் கிடைக்கவில்லை, கடைசியாக சாத்வீகமான சத்தியாக்கிரகத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

இதன் பலனாய் ரயில்வேகாரர்கள் பதினான்காயிரம் பேர்களை வெளியில் தள்ளி தொழிற்சாலையை அடைத்து விட்டார்கள் என்று சமாச் சாரம் தெரிய வருகின்றது. ஐயோ இந்திய நாடே! சென்னை மாகாணமே! உனது ஜீவாதாரமான அருமைச் சேய்கள் பதினாலாயிரம் பேர்கள் அதாவது அவர்கள் குடும்ப அங்கத்தினர்களையும் கணக்கில் சேர்த்தால் ஐம்பதினா யிரத்துக்கு மேல்பட்ட மக்கள் இம்மாதிரி வதைக்கப்படுகின்றார்களே! இதற்காக நீ என்ன செய்யப்போகின்றாய்? இவ்விஷயத்தில் உனக்கு ஈவு இரக்கம் என்பது ஒரு சிறிதும் இல்லையா? என்று கேட்கின்றோம். மலை இருக்கின்றது; ஆறு இருக்கின்றது; வயல் இருக்கின்றது; தோட்டம் இருக் கின்றது. துரவு இருக்கின்றது. தங்கம் விளைகின்றது என்று பெருமை பேசிக் கொள்ளுகின்றாய். நான் வீரர்களைப் பெற்றவளாக்கும், சூரர்களைப் பெற்றவ ளாக்கும் என்று பெருமை பேசிக் கொள்ளுகின்றாய். இப்பதினாலாயிரம் மக்களும் அவர்களது பெண்டு பிள்ளைகளும் சேர்ந்து சுமார் 50000 பேர் களின் இந்த ஆபத்தான நிலைமைக்கு நீ என்ன பரிகாரம் செய்யப் போகின் றாய்? அன்றியும் அவர்கள் தங்களது குறைகளைச் சொல்லி முறையிட்டுக் கொள்ள ஒவ்வொரு ஊர்கள் தோறும் வரப்போகின்றார்கள். அங்குள்ள பெரியார்களும் சுயமரியாதை மக்களும் அச்சகோதரர்களில் ஒவ்வொரு வரையும் அன்புடன் வரவேற்று அவர்கள் குறைகளை பொறுமையாய்க் கேட்டு அவர்கள் எதிர்பார்க்கும் உதவியைச் செய்து அவர்களுக்கு உங்கள் ஆதரவு இருப்பதாக ரயில்வேகாரர்கள் உணரும்படி செய்ய வேண்டியது உங்கள் கடமை என்பதை நாம் விண்ணப்பித்துக் கொள்ளுகின்றோம்.

ஏழைத்தொழிலாளர்களே! நீங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டிய தில்லை; உங்களது சகோதரர்கள் நீங்கள் செல்லுமிடங்களில் உங்களுக்கு ஆதரவளிப்பார்கள் என்றே எதிர்பார்க்கின்றோம். ஆனால் நீங்கள் மாத்திரம் இந்த நெருக்கடியான நிலைமையை பொறுமையுடனும் அஹிம்சையுடனும் புத்திசாலித்தனத்தோடும் சமாளியுங்கள் என்று உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 08.07.1928**



RangaRakes

## திரு. முதலியார் அவர்களின் 'முடங்கல்'

திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களின் பெயரை தலையாகக் கொண்ட விஷயம் "குடி அரசில்" தலையங்கமாக வராமல் இப்போது உபதலையங்கமாக வருவதினாலேயே திரு. முதலியார் தலையங்கத்திற்கு அருகர் அல்லாமல் போய்விட்டாரோ என்னமோ என்பதாக யாரும் கருதிவிடக் கூடாது என்பதாக முதலில் வாசகர்களுக்கு தெரிவித்துக் கொண்டு சில வாக்கியங்களுடன் நாமும் இக்கிளையை முடிக்கின்றோம்.

திரு. முதலியார் அவர்கள் 27.6.28 உ "நவசக்தி" தலையங்கத்தில் "தொடர் முடங்கல்" என்னும் தலைப்புக் கொடுத்து நமக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதியிருக்கிறார். அதில் 24.6.28 உ "குடி அரசில்" அவ்விஷயத்தை தற்கால சாந்தியாக நாம் நிறுத்தி வைக்கின்றோம்" என்றும், "திரு. முதலியார் அவர்களோடு போர் தொடுக்க கவலை கொள்ளவில்லை" என்றும் கண்டி ருக்கும் வாக்கியங்களை எடுத்துக்காட்டி அதை ஆதாரமாகக் கொண்டு அதற் காகத் தாமும் போர் தொடுக்க வரவில்லை என்று எழுதியிருக்கிறார். அவைகள் எந்த வாக்கியங்களோடு இணைக்கப்பட்டது என்பதை எடுத்துக் காட்டி திரு. முதலியார் வாசகர்களுக்கு நியாயம் செலுத்தாமல் போய்விட்டார். ஆயினும் நாம் அதைப்பற்றி கவலை கொள்ளாமல் திரு. முதலியார் அவர்கள் அவ்விரு வாக்கியங்களையும் ஒப்புக் கொண்டு முடங்கலுக்கு முந்தி நேர்ந்ததான அரிய நன்மைக்காக நாம் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இதை மாத்திரம் தயவு செய்து வாசகர்கள் சற்று கவனமாய்ப் படித்து மனதில் பதிய வைக்க வேண்டுகின்றோம்.

அதாவது, முதலாவது வாக்கியத்தில் முன் தொடர்பு திரு. முதலியார் அவர்கள் "சீர்திருத்த"க் கட்டுரையைப் பற்றியது.

அதைப்பற்றி ருஜுக்களை காட்டிவிட்டு "அவ்விஷயத்தை தற்கால சாந்தியாக நிறுத்தி வைக்கின்றோம்." என்று எழுதினோம். அவற்றில் சிலவற்றை திரு. முதலியார் அவர்கள் மறுத்துவிட்டு சிலவற்றை விட்டு விட்டார்கள். இனி அம்மறுப்புக்கு மறுப்பு எழுதுவதால் நாம் திரு. முதலியார் அவர்களின் "முடங்கலை" ஒப்புக் கொள்ளாதவராவோம் ஆனதாலும், அன்றியும் அவ்விஷயம் என்றைக்கும் கிளம்பக் கூடியதானதாலும், இன்றே



tamilnavarasam.com

மறுப்பு வேண்டும் என்கின்ற அவசியத்தில் பட்டதுமல்லவாதலாலும், தற்கால சாந்தியாக நிறுத்தி வைப்பதில் குற்றம் ஒன்றும் இல்லை.

மற்றபடி எஞ்சிய இரண்டாவது வாக்கியந்தான் மிக முக்கியமானது.

அதாவது, "நாம் திரு. முதலியார் அவர்களோடு போர் தொடுக்கக் கவலை கொள்ளவில்லை" என்கின்ற வாக்கியத்தின் முன் தொடர்பு.

> "எனவே திரு. முதலியார் அவர்கள் இயற்கைத் தோற்றம்தான் கடவுள் என்பதாக நினைத்துக் கொண்டிருக்கின்றார் என்பது பற்றியும்,
>
> புராணங்கள் குப்பைகள் என்று எழுதியது பற்றியும்,
>
> அவைகள் (புராணங்கள்) ஆரியர்களால் புகுத்தப்பட்டன என்று எழுதியதைப் பற்றியும்,
>
> அவைகள் சமய வெறியர்கள் பலரால் பாடப்பட்டவை என்று எழுதியது பற்றியும்,
>
> அவைகளால் உலகில் மக்கள் ஒழுக்கங்களுக்கு கேடு சூழ்ந்தது என்று எழுதியது பற்றியும்,
>
> நாம் திரு. முதலியார் அவர்களோடு போர் தொடுக்க கவலை கொள்ளவில்லை என்பதை திரு. முதலியார் அவர்களுக்கு வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்."

என்று எழுதியிருந்தோம். ஆதலால் திரு. முதலியாரவர்கள் இவற்றை அப்படியே ஒப்புக் கொண்டதானது நமக்கு எவ்வளவோ விடுதலையைக் கொடுத்திருக்கின்றது. இவை இதற்கு முன் பல தடவை பல இடங்களில் திரு. முதலியாரவர்கள் சொல்லாலும் எழுத்தாலும் இகழ்ந்திருந்தாலும் நாம் "கடவுளை நிந்தனை செய்ததற்கு" ஆகவே நம்முடன் "அறப்போர் தொடுக்க"க் கிளம்பிய பெரியார் "இயற்கைத் தோற்றங்கள்"தான் கடவுள் என்று ஒப்புக் கொண்டாரானால் அது நமது கருத்துக்கு நன்மையா அல்லவா என்பதை யோசித்தால் நம் கருத்துக் கொண்டவர்கள் பெரும் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது.

நிற்க! புராண விஷயங்களைப்பற்றி பெரிய புராணம் ஒன்று தவிர மற்ற புராணங்களையெல்லாம் ஒரே அடியாய் குப்பை என்றும், **ஆரியர்களால் புகுத்தப்பட்டு மத வெறியர்களால் பாடப்பட்டு மக்கள் ஒழுக்கங்களுக்கு கேடு சூழ்வதாக இருக்கின்றது** என்று ஒப்புக் கொண்டதும் நமக்குப் பெரும் வெற்றியா அல்லவா என்பதை வாசகர்களே உணர்ந்து பார்க்கட்டும்.



RangaRakes

இவ்வளவும் அல்லாமல், இதுவரை பல இடங்களிலிருந்தும் பல ஆராய்ச்சிக்காரர், பண்டிதர்கள் என்போர்களிடமிருந்தும் கிடைத்த வெற்றிகளையெல்லாம் விட பெரும் வெற்றி என்னவென்றால், அதுதான் பெரிய புராணத்தைப் பற்றியது. திரு. முதலியாரவர்களை பெரிய புராணத் தைப்பற்றி நாம் எழுதிக் கேட்டிருந்த பல வினாக்களுக்கு – அதாவது பெரிய புராணம் என்பது,

"இயற்கைக் கடவுளால்" அனுப்பப்பட்டதா? "இயற்கைக் கடவுளின் திருவிளையாடல்களை உணர்த்துகின்றதா? "இயற்கைக் கடவுளை" உணர்த்துகின்ற "செயற்கைக் கடவுளை" உணர்த்துகின்றதா? அது வான சாஸ்திரமா? விஞ்ஞான சாஸ்திரமா? உடல் கூறு சாஸ்திரமா? உலகக் கூறு சாஸ்திரமா? "வேதாந்த" சாஸ்திரமா? "சித்தாந்த" சாஸ்திரமா? தேச சரித்திரமா? "தெய்வ" சரித்திரமா? "இகத்திற்கு" சாதனமா? "பரத்திற்கு" சாதனமா? "கற்புக்கு" வழியா? களவுக்கு வழியா? அரசியலா? மத இயலா? "கடவுள்" தன்மைக்கு நெறியா? மனிதத் தன்மைக்கு நெறியா? முடிவாக அதிலுள்ளதெல்லாம் உண்மைதானா? அன்றி அது ஒரு சமயத்தாரால் மக்களின் நன்மைக்கென்று கற்பிக்கப்பட்ட கற்பனைக் கதையா அல்லவா? அதை எல்லோரும் ஒப்புக் கொண்டே தீர வேண்டுமா? ஒப்புக் கொள்ளாத வர்கள் காரணம் கூட காட்டக் கூடாதா?

எனப் பல கேள்விகளுக்கு திரு. முதலியார் அவர்களை சமாதானம் கேட்டிருந்ததில் அவைகளுக்கு ஒரே பதிலாக,

> "பெரிய புராணத்தின் உள்ளுறையை, இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுக்கள், அகச்சான்றுகள், நமது நாட்டைப் பற்றி இங்கு வந்துள்ளவர்கள் எழுதி வைத்த குறிப்புகள், சில புறச்சான்றுகள், சரித்திரப் பொருள்கள், கால நிலை முதலியவற்றிற்கு அரண் செய்யும் அளவுக்குக் கொள்ளலாம்."

என்று தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

இதற்கு ஆதாரமாகப் பெரியார்கள் சுந்தரம் பிள்ளை. சீனிவாச பிள்ளை, சுவாமி வேதாசலம் முதலியோர்கள் நூல்களையும் ஆய்ந்து பார்க்கும்படி கட்டளையிட்டிருக்கின்றார்.

புராணப் பிடுங்கல்களுடையவும் அழுக்கு மூட்டைகளுடையவும் தொல்லைகளிலிருந்து விடுதலை பெற இது ஒருவாறான ஆதாரம் என்பதே நமது அபிப்பிராயம்.

இப்பெரியார்களை அறிஞர்களாகக் கொண்ட எவரும், இனி அவ்வ



tamilnavarasam.com

ளவு சுலபமாக நம்மீது "புராணங்களைக் குற்றம் சொன்னான்" "கடவுளை வைதான்" "நாயன்மார்களின் கதையைப்பற்றி வாதம் நிகழ்த்துகின்றான்" என்று பழிசுமத்தி இதனால் "சமயம் போச்சு! நாயன்மார்களுக்கு ஏச்சு ! கடவுளர்களுக்கு ஆபத்து!" என்று ஆத்திரப் படமாட்டார்கள் என்றும் அப்படி ஆத்திரப்படுபவர்கள் முதலில் நம் திரு. முதலியார் அவர்கள் மீது பாய்ந்து விட்டுத்தான் பிறகு நம்மீது பாய வருவார்கள் என்றுமே நினைத்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்நிலையில், வாதசபை ஒன்றும் வேண்டியதில்லை என்றும் தானாக வந்தால், வேண்டுமானால் பார்த்துக் கொள்ளலாம் என்றும் கருதுகின்றோம்.

இறுதியில் "அன்பு முறையில் ஒருவரை ஒருவர் போர் புரிந்து திருந்த முயலவேண்டும்; பிடிவாதம் பெரும் பேய்" என்று எழுதியிருக்கிறார்.

ஒழுங்கு முறைப் போருக்கு அன்பு முறைப் போரே புரிவது நமது கடன். சூழ்ச்சி முறைப் போருக்கு "பிடிவாதப் பேய்" ஆட்டம் ஆடுவதே நமது குணம். நம்மைச் சிற்றினம் என்று கருதவில்லை என்று சொல்லுவதை நாம் ஏற்றுக்கொள்வதில் ஏதும் நஷ்டம் இருப்பதாய்த் தோன்றவில்லை. ஏதாவது ஒரு வசைமொழியை சொன்னவர்கள், சொல்லிவிட்டு இல்லை என்று சொல்வார்களானால், சொல்லப்பட்டவர்களுக்கு அது ஒரு வெற்றியாகும் என்பது ஒரு வழக்கு. அம்முறையில் திரு. முதலியார் அவர்கள் சொல்லி இருந்தாலும், இல்லாவிட்டாலும் அதைப்பற்றிய கவலையை விட்டுவிட்டோம். அப்படி விட்டு விடுவதால் நமக்கு ஒன்றும் குறைந்து போகாது. ஏனென்றால், திரு. முதலியார் அவர்களாலேயே இனியும் இம்மாதிரி எத்தனையோ தடவை கேட்கக் காத்திருக்கின்றோம்.

அப்படி திரு. முதலியார் இனியும் இம்மாதிரி சொல்லாவிட்டாலும் இன்னும் எத்தனையோ பேர் இப்படியும் இன்னும் கேவலமாகவும் நம்மைச் சொல்லக் காத்திருக்கின்றார்கள் என்கின்ற உறுதி நமக்குண்டு. என்னவெனில், நமது தொண்டானது அவ்வளவு உரம் பெற்றதும் வசை மொழி கிடைப்பதாலேயே அது பலன் பெற வேண்டி இருப்பதால் நமக்கு வசைமொழி இல்லையே என்றும், அதைப்பற்றிக் கொண்டு நமது கருத்தை தாராளமாய் வெளியிட்டு வெற்றி பெற சந்தர்ப்பங்கள் இல்லையே என்றும் இப்போது நாம் கவலைப்படவில்லை.

முடிவாக நமது நலன் கருதி திருவருளை வழுத்துவதாக எழுதி அக்கட்டுரையை முடித்திருப்பதற்கு நாம் நன்றி அறிதலை காட்ட கடமைப் பட்டுள்ளோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 08.07.1928**



# மறுபடியும் பஹிஷ்காரக் கூச்சல்

சைமன் கமீஷன் பகிஷ்காரம் என்பதாக மறுபடியும் கூச்சல் போட கிளம்பிவிட்டார்கள். இக்கூச்சலின் உள்கருத்து அடுத்து வரப்போகும் சட்டசபைத் தேர்தலில் பார்ப்பன ஆதிக்கத்திற்கு வழிதேடவேயாகும். இதற்காகவே இச்சூழ்ச்சி கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது என்றும், அதற்காகவே பார்ப்பனர் அல்லாதாரிலும் சில தேசீய வயிற்றுப் பிழைப்பு ஆசாமிகளையும் கஞ்சிக்கு வேறுவழியில் பிழைக்க வகையில்லாத ஆசாமிகளையும் பிடித்து கூலி கொடுத்து சைமன் பகிஷ்காரம் என்னும் பேரால் பார்ப்பனக்கக்ஷி ஆதிக்கப் பிரசாரமும் பார்ப்பனரல்லாதார் கக்ஷிகளை வைது அதன் முற்போக்குக்கு இடையூறான பிரசாரமும் நடத்த பார்ப்பனர் கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்றும் இதற்கு முன் பல தடவைகளில் எழுதி சைமன் கமீஷன் பகிஷ்காரம் என்பது புரட்டு என்பதற்கும் ஒரு வகுப்பாரின் சுயநலம் என்பதற்கும் பல ஆதாரங்களையும் எடுத்துக் காட்டி வந்தோம். அவைகளில் ஒன்றுக்காவது எந்த 'தேசீயவாதி'யாவது 'தேசீய பத்திரிகையையாவது அல்லது பார்ப்பனர்களின் தேசீயவாதியாவது, தேசீய பத்திரிகையாவது இதுவரை பதிலுரைத்தவர்கள் அல்ல. நமது கேள்விகளை மூடி வைத்துக் கொண்டு பாமர மக்களின் மூடத்தனத்தை தங்களுக்கு ஆதரவாய் வைத்துக் கொண்டு தங்களால் கூடுமானவரை சூழ்ச்சிப் பிரசாரம் செய்த வண்ணமாகவே இருந்தார்கள். இச்சுயநலக்கூட்டத்தாரும் வயிறு வளர்ப்புக் கூட்டத்தாரும் எவ்வளவு சூழ்ச்சிப் பிரசாரம் செய்தும், எவ்வளவு போலி தேசீய வேஷம் போட்டும், இவர்களது நம்பிக்கைக்கு விரோதமாய் இப்போலிகளின் பிரசாரத்தால் தாங்கள் ஏமாறவில்லை என்பதைக் காட்டவும், போலிகளுக்கு இனி நாட்டில் இடம் கொடுக்க மாட்டோம் என்று முடிவு செய்ததைக் காட்டவும் பாமர மக்கள் அர்ட்டால் தினத்தை நன்றாய் உபயோகித்துக் கொண்டு தக்கபடி புத்தி கற்பித்து விட்டார்கள். அதன் பலனாகவே மறுபடியும் அர்ட்டால் என்கின்ற பேச்சுகூட பேச முடியாமல் செய்து விட்டார்கள். ஒன்றிரண்டு மாதம் வரை கூட்டம் போட்டுப் பேசவும் யோக்கியதை இல்லாமல் செய்ததோடு இப்போலி தேசீய வாதிகள் தாங்களே "நாங்கள் அர்ட்டால் செய்யப் போவதில்லை" என்று சர்க்காருக்குத் தெரிவிக்கும்படியான நிலைமையில் வைத்து விட்டார்கள். சர்க்கார் இனி அர்ட்டால் செய்யக்கூடாது என்று போட்ட 144-ஆம் தடை உத்திரவையும் வாங்கிப் பூஜை வீட்டில் வைத்து அதற்கு கீழ்ப்படிந்து பூஜை செய்து



RangaRakes tamilnavarasam.com

கொண்டிருக்கும்படியான நிலைமைக்கும் வந்துவிட்டார்கள்.

அன்றியும் இந்தியா முழுவதும் பகிஷ்காரத்தில் இருக்கின்றது என்றும், வெற்றி மேல் வெற்றி என்றும் கத்திக் கொண்டிருந்ததும் மறைந்து போய், அவர்கள் மாறிவிட்டார்கள்! இவர்கள் மாறிவிட்டார்கள்! அந்த மாகாண சட்டசபை ஒத்துழைக்கப் போகின்றது! இந்த மாகாண சட்டசபை ஒத்துழைக்கப் போகின்றது! இனி என்ன செய்வது! என்று கூடி ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்து விட்டார்கள்.

இந்த நிலையில் பகிஷ்காரப் போலிகளினுடையவும் கூலிகளி னுடையவும் உண்மை வேஷம் வெளிப்பட்டுவிட்டது.

அதாவது, திருவாளர்கள் ஒ. கந்தசாமி செட்டியார், குழந்தை, அண்ணாமலை, நைனியப்பர், பஷீர் அகமது, அமீத்கான், இரத்தினசபாபதி முதலியோர்கள் திக்கு விஜயம் செய்ய தமிழ் நாட்டிற்குள் பிரசாரத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். பத்திரிகைகளையும் கூப்பாடு போட உசுப் படுத்தி விட்டிருக்கிறார்கள். இவர்கள் செய்யும் வேலைகளை கவனித்துப் பார்த்து வருபவர்களுக்கு இவர்களின் வேஷம் விளங்காமல் போகாது. அதாவது, பார்ப்பனரல்லாதார் கட்சியையும் அக்கட்சித் தலைவர்களையும் காரணமில்லாமல் இழிதுறைகளில் வைதுகுரைப்பதும், அவர்களுக்கு அடுத்த தேர்தலில் ஓட்டுக் கொடுக்காதீர்கள் என்றும் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனக் கூலிகளுக்கும் அடிமைகளுக்கும் ஓட்டுக் கொடுங்கள் என்றும் எழுதுவதும் கூப்பாடு போடுவதுமான கூலிக்கு மாரடித்து வரும் காரியங்களாலும், எவ்வளவு எழுதினாலும், எவ்வளவு தொண்டை கிழிய கத்தினாலும், அதை நம்பி ஏமாந்து போகும் காலமே மலையேறிப் போய்விட்டதால் சென்றவிட மெல்லாம் தக்க மரியாதை கற்பிக்கப்பட்டும். கூட்டம் கலைக்கப்பட்டும் கூலிகள் ஓட்டப்பட்டும் நடந்து வரும் காரியங்களாலும் நன்கு உணரலாம்.

நிற்க, பகிஷ்கார விஷயத்தில் பார்ப்பனர்கள் கூலிகொடுத்து பார்ப் பனரல்லாதாரிடையில் மாத்திரம் பகிஷ்காரப்பிரசாரம் செய்யச் செய்திருக் கிறார்களே ஒழிய தங்கள் சமூகத்தைப் பொறுத்தவரை பகிஷ்காரத்திற்கு விரோதமாகவே பிரசாரம் செய்து ஜாக்கிரதையாய் இருக்கின்றார்கள். அதாவது,

பார்ப்பன சபையும் வர்ணாசிரம பார்ப்பன சபையும் சைமன் கமிஷனை பகிஷ்கரிக்கக் கூடாது என்று சொன்னதோடு கமிஷனில் சாட்சி சொல்லவும் ஒத்துழைக்கவும் தீர்மானங்கள் செய்தும் யாதாஸ்த்து தயார் செய்தும் அனுப்பிவிட்டன. திருவாளர்கள் எம்.கே. ஆச்சாரியார், சத்திய மூர்த்தி சாஸ்திரியார் போன்ற "பிரபல தேசீய வாதிகள்" எல்லோரும் அதில் அங்கத்தினர்களாகவும் தலைவர்களாகவும் தான் இருந்து வருகின்ற சபைகளாகவே அவைகள் இருக்கின்றன.

தவிர 'முதல் வகுப்புத் தேசியத் தலைவர்களான' திருவாளர்கள் விஜயராகவாச்சாரியார், ஸ்ரீனிவாசய்யங்கார், எ. ரங்கசாமி அய்யங்கார் முதலியோர்களும் தங்கள் யாதாஸ்த்தை தனியாக அச்சுப்போட்டு சைமன் கமிஷனுக்குப் போய் சேரும்படி செய்தாய் விட்டது. அவைகள் கடை களிலும் விற்க ஏற்பாடு செய்தாய் விட்டது. திருமதி பெசண்டம்மையார் கூட்டமும் தங்களது யாதாஸ்தை பகிரங்கமாகவே ஒப்படைத்தாகி விட்டது.

இனி பகிஷ்காரம் செய்திருக்கின்றவர்கள் யார் என்று பார்ப்போ மானால் மேல்கண்ட கூலிப்பிரசாரக் கூட்டத்தைத் தவிர வேறில்லை என்பது புலனாகும். அவர்களும், யார் பகிஷ்காரம் செய்யாததற்காக வைகின்றார்கள் என்று பார்ப்போமானால், பார்ப்பனரல்லாதார் கட்சியார்களை மாத்திரந்தான் என்பது வெளியாகும். எனவே, இவ்வித கூலிபகிஷ்காரக் கூச்சலுக்கு இடம் கொடுக்காமலும் அதைக் கண்டு பயந்து விடாமலும் இருக்கும்படி பார்ப்பன ரல்லாத மக்களுக்கு எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 15.07.1928**


RangaRakes
tamilnavarasam.com

# தொழிலாளர்

தென்னிந்திய ரயில்வே தொழிலாளர்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லவும், அதை நிவர்த்திக்கத் தாங்கள் கொண்டுள்ள முறைகளுக்கு ஆதரவு தேடவும், ஊர் ஊராய் பிரசாரம் செய்து வருகின்ற விஷயம் யாவரும் அறிந்ததே. இம்முயற்சிக்கு ஆங்காங்குள்ள பொது மக்கள் ஆதரவு கொடுக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்கிறோம். தாடியில் நெருப்பு பற்றி எரிகின்றபோது ஒருவன் அதில் சுருட்டைப் பற்றவைக்க கொஞ்சம் நெருப்புக் கேட்டதுபோல், நாட்டின் ஜீவனாடியாகிய தொழிலாள மக்கள் இம்மாதிரி வேதனைப்பட்டு அலையும்போது சைமன் கமிஷன் பிரசாரமும் பர்டோலி சத்தியாக்கிரகத்திற்குப் பணம் தண்டலும் வெகு மும்முரமாய் நடந்து வருவதிலிருந்து நாட்டின் ஏழை மக்களிடத்தில் "தேசீய" இயக்கங்களுக்கோ "தேசீய தலைவர்கள்" என்போர்களுக்கோ எவ்வளவு கவலை இருக்கின்றது என்பதும் அவைகளால் நாட்டிற்கு எவ்வளவு பலன் ஏற்படும் என்பதும் தானாகவே விளங்குகின்றது. இனியாவது பொது மக்கள் இம்மாதிரி போலியும் அவசியமில்லாததுமான காரியங்களில் போலித்தலைவர்களை நம்பி மோசம் போகாமல் முக்கியமான காரியங்களில் கவனம் செலுத்த வேண்டுமாய் வேண்டுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 15.07.1928**



# இன்னும் ஒரு லோககுரு அவதாரம்

நமது நாட்டில் பார்ப்பனர்கள் ஆதிக்கத்திற்காக அவதரித்த லோக குருக்கள் அநேகர் என்பது யாவரும் அறிந்த விஷயம். அவர்களால் ஏற்பட்டிருக்கும் தொல்லைகளும் நமது சுயமரியாதைக்கு இடையூறுகளும் நமது சீர்திருத்தத்திற்கும் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டைகளும் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. இவ்வளவும் போதாமல் திருமதி பெசண்டம்மையார் அவர்களால் சுமார் 20, 30 வருஷங்களாக "லோககுரு வருகிறார்! லோக மாதா வருகின்றார்!" என்பதாக கூப்பாடு போடப்பட்டு வந்து, அநேக டாக்டர் பட்டம் பெற்றவர்கள் பி.ஏ., எம்.ஏ., பட்டம் பெற்றவர்கள் முதல் நம்பச்செய்து இரவும் பகலும் எதிர்பார்த்து திடீரென்று சீமையில் திரு. கிருஷ்ணமூர்த்தி என்ற வாலிபர் லோககுருவாகவும் திருமதி அருண்டேல் ருக்மணி அம்மாள் என்கின்ற ஒரு அம்மையார் லோக மாதாவாகவும் அவதாரம் செய்து உலகோர்கள் ஒப்புக்கொண்டதாகவும் ஏற்பாடு செய்யப் பட்டு ஒரு பக்கத்தில் ' உலகாக்ஷிப்பு' நடந்து வருகின்றது.

இவ்வளவும் போதாமல் நமது திரு.திரு.வி.கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் தமது தவத்தால் இன்னும் ஒரு லோககுரு அவதாரம் செய்யப் போவதாய் திருநெல்வேலியில் 8-7-28 தேதி வெளியாக்கி விளம்பரப் படுத்தியிருக்கின்றார். ஆனால் அந்த லோககுரு அவதாரம் செய்யப் போவதற்கு அப்போது அவர் சொன்ன காரணம்தான் மிக வெட்கக்கேடானது என்று சொல்லுவோம். என்னவென்றால் மக்களுக்கு கடவுள் எண்ணம் மறைந்துபோன காலத்தில், கடவுள் அவ்வெண்ணத்தை உண்டாக்க அவதாரம் செய்வது எப்போதும் வழக்கமாம். அதுபோலத்தான் முன்பு ஒரு காலத்தில் சமணர்களால் கடவுள் எண்ணம் மக்களுக்குள் மறைபட்டிருந்த காலத்தில் திருஞானசம்மந்தர் என்கின்ற பார்ப்பனர் தோன்றி, தனது மூன்றாவது வயதிலேயே சமணர்களை வென்று, அவர்கள் தத்துவங்களை அழித்து, கடவுள் பெருமையைக் காட்டி, மக்களை மோக்ஷமடையும்படி செய்தாராம். " அதுபோலவே இப்போது...................... என்பவரால் மக்களுக்குள் கடவுள் எண்ணம் மறைபட்டு வருவதால் அதை ஒழித்து அவனை வாதில் வென்று மக்களுக்கு கடவுள் எண்ணத்தை ஊட்டி மோட்சம் கொடுக்க ஒரு லோககுரு அவதரிக்கப்போகின்றார்; அவர் தயாராயிருக்கின்றார்; எல்லோரும் தவம் கிடங்கள்" என்று பேசியிருக்கின்றார். அந்த லோககுரு இனிமேல்



RangaRakes tamilnavarasam.com

பிறக்கப் போகின்றாரோ அல்லது திரு. கிருஷ்ணமூர்த்தி லோககுரு ஆய் விட்டது போல் நமது திரு.திரு.வி.கல்யாணசுந்தரரே லோககுரு ஆய்விடு வாரோ அல்லது நமது சுந்தரராலேயே யாராவது காட்டப்படுவாரோ அறி கிலோம்.

பத்து அவதாரங்களும், பன்னிரண்டு ஆழ்வார்களும், நான்கு சமயக் குரவர்களும், அறுபத்து மூன்று நாயன்மார்களும் அவதரித்து வெகுகாலமாக யாரும் அவதரிக்கவே இல்லை என்பது யாவரும் அறிந்ததே. இதற்குக் காரணம் உலகம் க்ஷேமமாய் நீதியாய் சத்தியமாய் நடந்து வந்ததாலோ அல்லது யாராவது 144 போட்டு தடுத்து விட்டதாலோ என்பது நமக்கு விளங்க வில்லை. ஆகிலும் நமது முதலியார் அவர்கள் தவத்தால் இப்போதாவது கடவுளை உணர்த்த ஒரு அவதாரம் வரப்போவதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி எய்து கிறோம். ஆனாலும் நமக்கு இதில் ஒரே ஒரு சந்தேகம் தோன்றுகின்றது. அதாவது கடவுள் உணர்ச்சி மறைந்த மக்களுக்கு ஒருசமயம் கடவுள் ஒரு அவதாரம் அனுப்பித் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதை விட கடவுள் தானாகவே மக்கள் மனதில் வெளிப்படும்படி செய்து கொள்ள முடியாதா என்பதுதான். இதற்கு ஒரு கதை உண்டு. அதாவது ஒரு ஊரில் ஒரு பிள்ளையார் கோயில் இருந்தது. அந்தக் கோயிலின் மேடையில் ஒரு ராமசாமி பிள்ளையாருக்கு நேரே காலை நீட்டிப் படுத்துக்கொண்டிருந்தான். இதைப் பார்த்து பிள்ளையாருக்கு மிகவும் அவமானம் ஏற்பட்டுத் தன்னை வெகு பக்தியுடன் பூசை செய்யும் ஒரு கல்யாணசுந்தரக் குருக்களைக் கூப் பிட்டு " ஓ குருக்களே! இந்த ராமசாமியை காலை எடுத்து அப்புறம் வைத்துக் கொள்ளச் சொல்லுகின்றாயா? அல்லது உன் கண்ணை பொட்டை ஆக் கட்டுமா" என்று கேட்டதாம். அந்தக் குருக்கள் பிள்ளையாரைப் பார்த்து " என் கண்ணைப் பொட்டையாக்க சக்தியுள்ள பிள்ளையாரே! அவன் காலை முடமாக்காவிட்டாலும் சற்று மடக்கச் சொல்லக்கூடாதா" என்று கேட்க ஞான மில்லாமல் ராமசாமியின் காலை எடுக்கும்படி தவம் செய்தாராம். அதுபோல் இருக்கின்றது நமது திரு.முதலியார் அவர்கள் வெளிப்படுத்தும் அவதார மகிமை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 15.07.1928**



RangaRakes

# நாடார் மகாநாடு

அருப்புக்கோட்டையில் நாடார் சமூக மகாநாடு சென்ற வாரம் 4,5,6 தேதிகளில் மிகவும் விமரிசையாக நடந்தேறிய விவரங்களை மற்ற பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விஷயங்களிலிருந்து அறியலாம்.

சமூக மகாநாட்டை திறந்து வைத்த டாக்டர். சுப்பராயன் அவர்கள் வகுப்பு மகாநாடுகளின் அவசியம் என்றது பற்றியும் ஒவ்வொரு வகுப்பும் முன்னேறினால்தான் நாடு விடுதலை அடையமுடியும் என்றது பற்றியும் இந்த விஷயங்களை வெற்றி பெற தன்னால் கூடியதை செய்யக் காத்திருப் பதாக வாக்களித்ததைப் பற்றியும் நாம் மிகுதியும் பாராட்டுகின்றோம்.

மகாநாட்டு அக்கிராசனர் திரு. கனகசபை நாடார் அவர்கள் தமது அக்கிராசனப் பிரசங்கத்தில் குறித்துள்ள பல விஷயங்கள் பொன்னே போல் போற்றத் தக்கன.

"நாம் பல துறைகளிலும் சிறப்புப் பெற்றிருந்தும், நமது யோக்கி யதைக்கு தகுந்த கவுரவம் நமக்கு அளிக்கவில்லை; பகிரங்கமாய் அவர்கள் (பிற வகுப்பார்கள்) கூறிவரும் கொள்கைகள் யாவையாயிருப்பினும் சரி, பொதுக்கூட்டங்கள் மூலமாயும் பத்திரிகை மூலமாகவும் அவர்கள் கூறும் செய்திகள் எவையாயிருப்பினும் சரி, காரியத்தில் மாத்திரம் ஒவ்வொரு வகுப்பினரும் தாங்கள் விட்டுக் கொடுக்காது வெகு ஜாக்கிரதையாக இருக்கின்றார்கள்".

"ஒரு சிறுபான்மையோர் தாங்கள் ஏதோ மேற்குலத்தவர் என்பதை ஆதாரமாகக் கொண்டு எல்லா உரிமைகளையும் கவர்ந்து லக்ஷக் கணக்கான மற்றையோரைத் தாழ்மையாக நடத்தி அவர்களை விரோதங் கொள்வது முறையா? இது நியாயமா? தேசத்தின் பொதுநலத்திற்கு இது சாதகமாகுமா?"

"இந்தியர்களுக்கு நெட்டாலிலும் கேப் காலனியிலும் நடக்கும் கொடுமைகளை நாம் வெகுவாகக் கண்டிக்கின்றோம். ஆனால் நாமோ இவைகளிலும் மேம்பட்ட குற்றம் செய்கின்றோம் என்பதை மறக்கவோ, அல்லது அசட்டை செய்யவோ செய்கிறோம்".



tamilnavarasam.com

“இந்தியர்களுக்குச் சமத்துவம் அளிக்கப்படவில்லை என்றும், முழுதும் ஆங்கிலேயர் நிறைந்த ஒரு கமிஷன் அனுப்பப்பட்டிருப்பது இந்தியாவை அவமதித்ததாகுமென்றும், ஆகையால் அந்த கமிஷனை பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்றும் தீர்மானம் செய்யும் நம் தேசத்தாரில் சிலர் தங்கள் சகோதரர்களுக்கே சமத்துவம் இல்லையென்று மறுப்பது என்ன விந்தை? நமக்குள்ளிருக்கும் பல ஜனசமூக வித்தியாசங்களையும் வேற்றுமைகளையும் களைந்தெறிந்தாலல்லாமல் நமது தேசத்தின் முன்னேற்றத்தில் நாம் அவா வுறுவது நியாயமன்று, இதற்கிடையில் எவ்வித நன் முயற்சிகள் செய்யப்பட்டிருப்பினும் அவைகள் வீண் முயற்சிகளேயாகும்.”

இன்னோரென்ன பல அருமையான வாக்கியங்கள் திகழ்கின்றன. தேசீய வாதிகள் என்போர்களையும் சுயராஜ்ய வாதிகள் என்போர்களையும் இவற்றிற்கு என்ன சமாதானம் சொல்லுகின்றீர்கள் என்று கேட்கின்றோம். இதிலிருந்து தேசீயம் என்பதும் கமிஷன் பஹிஷ்காரம் என்பதும் எவ்வளவு புரட்டும் சுயநலமும் கொண்டது என்பது யாவருக்கும் வெட்ட வெளிச்சமாயிருக்குமென்றே நினைக்கின்றோம். அன்றியும் அம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்களில் பல மிகவும் குறிப்பிடத்தக்கனவும் பாராட்டத்தக்கனவுமாகும். அவையாவன:-

கல்யாண காலங்களில் வீண் செலவுகளும் அனாவசியமான சடங்குகளும் இல்லாமல் ஒரே நாளில் திருமணத்தை முடித்துவிடவேண்டும் என்றும், சடங்குகளிலும் கோவில்களிலும் நாடார் வகுப்பார்களையே கொண்டு முறையே சடங்கு, பூசை முதலியவைகள் நடத்திக் கொள்ள வேண்டுமென்றும் ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப்புக்காக ஒரு லக்ஷ ரூபாய் சேகரிக்க லாட்டரி சீட்டு போட வேண்டுமென்றும் நாடார் காலேஜ் என்பதாக ஒரு காலேஜ் ஏற்படுத்த வேண்டும் என்றும்,

தென் இந்திய ரெயில்வே தொழிலாளர் கஷ்டத்திற்கு அனுதாபப்படுவதாகவும், அவர் நடத்தும் சத்தியாக்கிரகத்தை ஆதரிப்பதாகவும், இன்னும் இதுபோன்ற பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன.

அன்றியும் இத்தீர்மானங்களை அமுலுக்கு கொண்டு வருவதற்கு தக்க கனவான்கள் இவ்வருஷ நிர்வாக சபைக்குத் தெரிந்தெடுக்கப் பட்டிருப்பதானது மற்றொரு விசேஷம் என்றே சொல்ல வேண்டும். அதாவது பொரையார் திரு.வி.கனகசபை நாடார் அவர்கள் அக்கிராசனராகவும் விருதுப்பட்டி திரு.செந்தில்குமார நாடார் அவர்கள் உபஅக்கிராசனராகவும் திருவாளர்கள் பட்டிவீரன்பட்டி சட்டசபை மெம்பர் ஊ. பு. அ. சௌந்தர பாண்டிய நாடார், கூ.சா.பி. பெரியதம்பி நாடார் ஆகிய கனவான்கள் காரிய தரிசிகளாகவும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். மற்றபடி நடைமுதல்



வருஷத்திற்கு அச்சங்க வேலைகள் நாடார் சமூகத்திற்கு மாத்திரமல்லாமல் இதர சமூகத்திற்கும் பலனளிக்கத்தக்க அனேக முற்போக்கான வகையில் நடைபெறுமென்றே எதிர்பார்க்கின்றோம். தற்காலம் நமது தென்னாட்டில் உள்ள பல சமூகங்களில் நாடார் சமூகமே தக்க அளவுக்கு முற்போக்கடைந்தும் பொதுக்காரியங்களில் பகுத்தறிவை உபயோகித்து தக்கது செய்வதுமான காரியங்களில் தலையிட்டிருக்கிறார்கள் என்று சொல்லுவது மிகையாகாது. சாதாரணமாக நாட்டுக் கோட்டை நகரத்தார்களும் இது போலவே முற்போக்கடைந்து வருகின்றார்கள் என்றாலும் அவர்கள் பணம் சம்பாதிப்பதில் மாத்திரம் பகுத்தறிவை உபயோகித்து எப்படியாவது சம்பாதிக்கப் பழகியிருக்கின்றார்களேயல்லாமல் இப்படி சம்பாதிக்கிற பணத்தை சரியான வழியில் செலவு செய்யப் பழகவில்லையென்றே சொல்ல வேண்டும். அதாவது பாறைக் கற்களில் இறைத்து கோவில்களை கட்டுவதும், வாகனங்கள் செய்வதும், உற்சவம் செய்வதும், பார்ப்பனர்களுக்கு இறைப்பதும், வேத பாடசாலை சமஸ்கிருத பாடசாலை என்பது போன்ற பிச்சை எடுப்பதற்கு மாத்திரம் உபயோகப்படும்படியானதும், அதுவும் ஒரு கூட்டத்திற்கே பயன்படுவதும் எந்தக் கூட்டத்தாரிடம் இருந்து கொள்ளை கொள்ளையாய் இப்படி பணம் சம்பாதிக்கிறார்களோ அந்தக் கூட்டத்தார்களுக்கு ஒரு பைசாவும் உபயோகப்படாததும் தங்கள் சமூகத்திற்கும் உபயோகப் படாததுமான ஸ்தாபனங்களுக்குக் கொடுப்பதிலும் வீணாக இறைத்து வருகிறார்கள்.

ஆனால் நாடார் சமூகத்தார்களோ இவர்களைப்போல் அவ்வளவு கடுமுறைகளாலும் கொள்ளை கொள்ளையாயும் சம்பாதிக்கா விட்டாலும், சம்பாதித்த பணத்திலிருந்து பள்ளிக்கூடம் கட்டுவதும், அரைச் சம்பளத்திலும், கால் சம்பளத்திலும், சம்பளமில்லாமலும் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லி கொடுப்பதும் அப்படியே எல்லா வகுப்பாருக்கும் உபயோகப் படும்படியாக எல்லா வகுப்பு பிள்ளைகளும் சம்பளமில்லாமல் படிக்க இடம் செய்திருப்பதும் ஆன காரியங்களில் செலவு செய்து வருகின்றார்கள். இதிலிருந்து நாட்டுக்கோட்டை நகரத்தார் தாங்களும் பள்ளிக்கூடம் கட்டவில்லையா என்று கேட்கலாம். ஆனால் அது அவர்கள் வீணுக்கிறைக்கும் பணத்தில் நூற்றில் ஒரு பங்கு என்று கூட சொல்ல முடியாது. இந் நாடார் வகுப்பார்களுக்கு இவ்வளவு பலன்தரத்தக்க வேலை செய்ய இடம் ஏற்பட்டதற்குக் காரணம் எதுவெனில், நமது நாட்டின் நற்காலத்தின் பயனாக நாடார் வகுப்பார்கள் கல்லுச் “சாமி” இருக்கும் கோவில்களுக்குள் நுழைந்து மூடர்களாகாமல் உயிர்ச் “சாமிகள்” இருக்கும் கோயில்களில் நுழைந்து அவைகளுக்குத் தொண்டு செய்யும்படியான நிலைமை எந்தக் காரணத்தினாலோ அவர்களுக்கு ஏற்பட்டதே தான் முக்கியக் காரணம் என்போம்.

நிற்க, மேல்படி மகாநாட்டை ஒட்டி நாடார் வாலிப மகாநாடு ஒன்றும் தொழிலாளர் மகாநாடு ஒன்றும் நடைபெற்றது. வாலிப மகாநாட்டில் தலைமை



RangaRakes tamilnavarasam.com

வகித்த திருவாளர் திரு. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் புராணத்தைப் பற்றிய விளம்பரங்களுக்கே அத்தலைமை ஸ்தானத்தை உபயோகித்துக் கொண்டார் என்று சொல்லுவது மிகையாகாது. எனவே அத்தலைமை உபந்யாசத்தைப்பற்றி மற்றொரு சமயம் ஆராய்வோம். நிற்க,

தொண்டர் மகாநாட்டில் தலைமை வகித்த திரு. ஈ.வெ. ராமசாமி நாயக்கரின் தலைமை உபந்யாசம் அங்கு கூடியிருந்த மக்களுக்கு ஒரு புதிய உணர்ச்சியையும் புதிய உலகத்தையும் உண்டாக்கிற்று என்று சொல்லலாம். அது மிகுதியும் மூட நம்பிக்கைகளை ஒழிப்பதும் சுயமரியாதையை பெறுவதும், மக்களுக்குத் தொண்டு செய்வதுமே மனிதப் பிறவியின் பயன் என்பதுமான கொள்கைகளையே வற்புறுத்தியதாயிருந்தது. மற்றபடி அம்மகாநாடு நடந்த பெருமையும் ஒழுங்கும் பிரதிநிதிகள் வந்த கூட்டமும், பிரதிநிதிகளுக்கு செய்த வசதிகளும், உபசாரங்களும் இதுவரை நமது நாட்டில் நடந்த மகாநாடுகளில் சுமார் இரண்டொன்றைத் தவிர வேறு எங்கும் இதுபோல நடந்திருக்காது என்றே சொல்லுவோம். முடிவாக இம்மகாநாட்டின் பெருமைகளைப் பற்றி சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்காமல் அடுத்த வருஷத்திற்குள்ளாகத் தீர்மானங்கள் அமுலுக்கு வரத்தக்க முன்னேற்றத் திற்கான வேலைகளை நடத்திக் காட்ட வேண்டுமாய் நிர்வாகக் கனவான் களைக் கேட்டுக் கொண்டு இத் தலையங்கத்தை முடிக்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 15.07.1928**



RangaRakes

# தென்னிந்திய ரயில்வே தொழிலாளரின் வேலை நிறுத்தம்

நீண்ட நாளாக ரயில்வே தொழிலாளர்கள் தங்களுடைய குறை களைப்பற்றி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அதிகாரிகள் கொஞ்சமும் இணங்காமலிருந்ததினாலும் பதினாயிரக்கணக்கான பேர்கள் திடீரென்று வேலையை விட்டுப் போக வேண்டியிருந்ததினாலும் வேறு கதியில்லாமல் தொழிலாளர்கள் சத்தியாக்கிரகமும் வேலை நிறுத்தமும் செய்தே தீர வேண்டியதாய் விட்டது.

வேலை நிறுத்த விஷயத்தில் தொழிலாளர்களுக்கு எவ்வித உதவியும் இல்லாமல், அதாவது தொழிலாளர் தலைவர் என்று சொல்லிக் கொள்ளு கிறவர்களும், தேசீயத்தலைவர் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களும், தேசீயப்பத்திரிகைகள் என்பவைகளும் பல ரயில்வேக் கம்பெனிக்காரர் களிடமிருந்து தங்கள் சுற்றத்தார்களுக்கு உத்தியோகங்கள் பெற்றிருக்கும் முறையிலும், பெற எதிர்பார்த்திருக்கும் முறையிலும், மற்றும் தங்கள் பத்திரிக் கைகளுக்கு விளம்பரங்கள் பெற்றிருக்கும் முறையிலும் ரயில்வேக் காரர்களுக்கு அடிமைகளாகி வேலை நிறுத்தத்தை தக்கபடி ஆதரிக்காமல் வேலை நிறுத்தம் செய்ய வேண்டியதில்லை என்றும், வேலை நிறுத்தம் அனாவசியம் என்றும், ஏஜண்டு கூடியவரை நெருங்கி வந்திருக்கிறார் என்றும், இன்னும் மற்ற பொது ஜனங்களுக்கும் தொழிலாளருக்கும் அதிகாரி களின் கொடுமையையும் வேலை நிறுத்தத்தின் அவசியத்தையும் சரியானபடி எடுத்துக்காட்டாமல் எவ்வளவோ மறைத்துக்கொண்டு வந்திருந்தும், சென்ற 19 - ஆம் தேதி தொழிலாளர்களால் தொடங்கப்பட்ட வேலை நிறுத்தமானது ஒருவாறு வெற்றிக்குறியுடனேயே மிக அமைதியாகவும், சமாதானமாகவும் நடந்து வருவதாகவே சமாச்சாரங்கள் எட்டி இருக்கின்றன.

## தொழிலாளர்களின் கடைசி வேண்டுகோள்களாவன :-

1. கதவடைப்பு செய்த காலத்திற்கு கூலி கொடுக்க வேண்டும்.
2. ராஜீனாமாச் செய்தவர்களைத் தவிர மற்றவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும்.
3. கீழ்த்தர வேலையாட்களுக்கு சம்பளம் கூட்ட வேண்டும்.



tamilnavarasam.com

4. ரன்னிங்ஸ்டாவ் என்னும் ரயில் போக்குவரத்தில் சேர்ந்த ஆட்களின் குறைகளை நீக்க வேண்டும்.

இவைகள் ரயில்வே அதிகாரிகளால் சரியானபடி கவனிக்கப்பட வில்லை. இதனால் வேலை நிறுத்தம் செய்ய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

## வேலைநிறுத்த விபரம்

சென்னை 20 - உ காலையில் சென்னைக்கும் எழும்பூருக்கும் வரவேண்டிய வண்டிகள் வரவில்லை.

**தாம்பிரம்** என்னும் இடத்தில் 30 தொழிலாளர்கள் லயினில் படுத்துக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்ததாக அரஸ்ட் செய்யப்பட்டார்கள்.

**சேத்துப்பட்டுக்கும் எழும்பூருக்கும்** ஓடும் ஆபீஷியல் டிரெயின் ஓடிக் கொண்டிருக்கையில் நெருப்பை அணைத்து விட்டபடியால் வழியில் நின்று விட நேர்ந்தது.

**எழும்பூர் ஸ்டேஷன்** கீழ்த்தர சிப்பந்திகள் வேலைக்குப் போக வில்லை.

19 உ யிரவு எழும்பூரைவிட்டுப் புறப்பட்ட போட்மெயில் முதலியவைகள் விழுப்புறமிருந்து சரியானபடி ஓடாமல் தகராறுபட்டுக் கொண்டேயிருந்தது.

உயர்தர அதிகாரிகளே வண்டிபோக்குவரத்துக்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

**விழுப்புரம்** தோட்டி, போர்ட்டர் எல்லோரும் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள்.

**திருச்சிக்கும்** ஈரோட்டிற்கு செல்ல வேண்டிய வண்டிகள் வழியி லேயே நிறுத்தப்பட்டு விட்டன. ஈரோட்டுக்கு வரவேண்டிய வண்டிகள் வரவில்லை.

**திருநெல்வேலியில்** நடுராத்திரியில் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப் பட்டது. அங்கிருந்து செல்ல வேண்டிய வண்டிகளும் தெற்கிலும் வடக்கி லுமிருந்து வரவேண்டிய வண்டிகளும் போக்குவரத்து நடைபெறவில்லை.

**மதுரையில்** மணியடிக்கும் சிப்பந்திகள், நிலக்கரி வாரும் ஆட்கள் உட்பட பலர் வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள். மதுரையிலிருந்து புறப்பட வேண்டிய ஷட்டில் வண்டிகளில் ஒன்றுமே போகவில்லை.

**ஈரோடு** ஸ்டேஷனில் நடுராத்திரியில் வேலை நிறுத்தம் செய்யப் பட்டது.

**போத்தனூரிலும்** நடுராத்திரியில் வேலைநிறுத்தம் செய்யப்பட்டது.

ஆங்கிலோ இந்தியர், ஸ்டேஷன் மாஸ்டர் முதலியவர்களின் பிரயத்தினங்களினாலே சிற்சில மெயில் வண்டிகள் மாத்திரம் ஆங்காங்கு காலந்தவறிப் போய்க் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. வேலை நிறுத்தத்தை



RangaRakes

வெற்றியடையாமற் செய்யப் பல சூழ்ச்சிகள் நடப்பதாகவும் தெரிய வருகிறது.

## ஏஜண்டின் தந்தி

தொழிலாளர்களுக்குள்ள குறைகளை லக்ஷியம் செய்யாமல் தொழி லாளர்களுக்கு உதவி செய்யும் கீழ்த்தர சிப்பந்திகளுடையவும் வண்டியில் போகும் சிப்பந்திகளுடையவும் குறைகளை மாத்திரம் கவனிப்பதாக ஏஜண்டு சம்மதித்திருப்பதாய் வெளியிட்டிருக்கிறார் எனத்தெரிகிறது. தொழிலாளர்கள் இதை ஒரு பிரித்தாளும் சூழ்ச்சியாகவே கருதியிருக் கின்றனர். வேலை நிறுத்தம் வளர்ந்து கொண்டும் வலுத்துக் கொண்டும் போவதாகவே தெரிகிறது. தொழிலாளர்கள் வெற்றி பெற்று தொழிலாளர் களின் குறைகள் நீங்கி சுகப்படவேண்டும் என்று மனப்பூர்வமாய் ஆசைப் படுகிறோம். பொது மக்களை வேலை நிறுத்தத்திற்கு எல்லாவுதவியும் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். தொழிலாளர்களையும் பொறுமை யோடும் அமைதியாகவும் பலாத்காரமற்ற தன்மையோடும் உறுதியோடும் எவ்விதத் தியாகத்துக்கும் தயாராகயிருந்து முழு வெற்றி யடையவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 22.07.1928**



tamilnavarasam.com

# வேதாளம் மறுபடியும் முருங்க மரம் ஏறிக்கொண்டது

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அருப்புக்கோட்டை வாலிபர்கள் மகாநாட்டில் வாலிபர்களுக்கு புராணப் பிரசங்கம் செய்கையில், முன் திரு. நாயக்கருடன் "போர்" நடத்துகையில் முருகனைப்பற்றியும் புராணங் களைப் பற்றியும் என்ன எழுதினாரோ அவற்றிற்கு நேர் விரோதமாய் புராணங்களை ஆதரித்து பிரசங்கம் செய்திருக்கின்றார். மற்றும் பெரிய புராணத்தைப் பற்றி அவர் எழுதிய காலத்தில் "கவியழகுக்கும் இயற்கை வருணனைக்கும் கூடவா புராணங்களைப் படிக்கக்கூடாது" என்றும் "பெரிய புராணத்தின் உள்ளுறையை இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுகள், அகச்சான்றுகள், நமது நாட்டைப்பற்றி இங்கு வந்துள்ளவர்கள் எழுதி வைத்த குறிப்புகள், சில புறச்சான்றுகள், சரித்திரப்பொருள்கள் காலநிலை முதலியவற்றிற்கு அரண் செய்யும் அளவுக்குக் கொள்ளலாம்" என்றும் எழுதியிருந்தார். இப்படி எழுதினவர் அடுத்த வாரத்திலேயே புராணப் பிரசாரத்திற்காக ஆரம்பித்து மறுபடியும் பழைய உணர்வு கொண்டு அதே புராணத்தை மூட நம்பிக்கைக்காக மக்களிடை பிரசாரம் செய்யத் திருநெல் வேலியைக் கண்டுபிடித்து அங்குள்ள மக்களிடம் தமது பழைய மூட்டையை அவிழ்க்க ஆரம்பித்துவிட்டார். அக் கூட்டத்தில் பேசும்போது அதே பெரிய புராணத்திலுள்ள ஒரு கதையை எடுத்துக்கொண்டு, அவர்முன் எழுதினபடி கவியழகுக்கோ, இயற்கை வருணனைக்கோ மற்றும் கல்வெட்டுகள், நாட்டைப் பற்றிய குறிப்புகள் முதலியவற்றிற்கு "அரண் செய்யும் அளவு"க்கோ எடுத்துக் கொள்ளாமல் மூட நம்பிக்கைக்கும் மற்ற மதக்காரர் களை சமய வெறியர்கள் என்று பிற சமய நிந்தனை ஒன்றையே குறிக் கொண்டு போலிக்கதைகள் புனைகிற தத்துவத்துக்கும் போலிப்புராணங் களால், "கடவுள் நெறி"க்கும் ஒழுக்கங்களுக்கும், அன்புக்கும், கேடு விளையும் படியான தத்துவத்திற்கும் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார். உதாரணமாக ஷை சொற்பொழிவில், "சமண மதம் சிறந்தது. ஆனால் சமண மதமும் சீர்கெட்டு நாட்டில் கொடுமைகள் அதிகரித்து கடவுள் நம்பிக்கை யொழிந்து நாடு அதிகம் சீர்கெட்டிருந்த சமயத்தில் நாட்டு மக்கள் செய்து வந்த தவப்பயனால் திருஞான சம்பந்தர் சீர்காழியில் அவதரித்தார்" என்றும் பேசிவிட்டு, "சமணர்கள் கழுவேற்றப்பட்டதாக சொல்லுவது கட்டுக் கதை"யென்றும் "சமணர்களைக் கழுவேற்றிய வரலாற்றுக்குப் போதிய அகச் சான்றாவது புறச்சான்றாவது இல்லை" என்றும் சொன்னதோடு மற்றும் ஏதேதோ கொட்டியிருக்கிறார்.





திரு. முதலியார் சமண மதம் சிறந்தது என்று ஒரு தரம் சொல்லிவிட்டு மறுபடியும் கீழே சமண மதத்தால் நாட்டில் கொடுமைகள் அதிகரித்தது என்றும் சொல்லி அதை ஒழிக்கவே திருஞான சம்பந்தர் அவதாரம் எடுத்தார் என்றும் சொல்லுகிறார்.

இது பிற சமயக்காரரை நிந்தனை செய்ததாகாதா? என்று கேட்கின் றோம். இவர்களை ஒழிக்க கடவுள் ஒரு அவதாரம் அனுப்பியிருப்பதாகச் சொல்வதானால் அது கடவுளுக்கும், கடவுள் நெறிக்கும் ஒழுக்கங்களுக்கும் கேடு சூழ்ந்ததாகாதா? என்று கேட்கின்றோம்.

சமண மதம் என்பது எந்த விதத்தில் சிறந்தது என்றும், அது சீர்கெட்டதாகச் சொல்லப்படுவதற்கு என்ன ஆதாரம் என்றும் திரு. முதலி யாரால் சொல்ல முடியுமா? சமணர்கள் செய்ததாகச் சொல்லப்படும் கொடு மைகள் என்ன என்பதை திரு. முதலியாராவது மற்றும் எந்த சமயாச் சாரியார், அவதாரம் என்பவர்களாவது எங்காவது சொல்லியிருக்கிறார்களா? திரு. முதலியாரால் "இயற்கை இறை உறையுள்" என்று போற்றப்படும் தேவாரம், திருவாசகம் என்கின்ற புராணங்களிலாவது ஏதாவது குறிக்கப் பட்டிருக்கின்றதா? அப்படிக்கொன்றுமில்லாமல் சமண மதத்தைப் பற்றி திரு முதலியார் சமணர்களுக்கு பயந்து கொண்டு பூஜித்தும் சைவர்களுக்கு பயந்து கொண்டு தூஷித்துமிருந்தாலும் திரு. முதலியாரால் "அவதாரம்" "பெரியார்" என்று சொல்லப்படுகிற ஆசாமிகள் எல்லாம் சமண மதத்தை யும், சமணர்களையும் மிகப் புன்மொழிகளால் வைதிருக்கின்றார்கள் என்பதை முதலியார் மறுக்கிறாரா? என்று கேட்கின்றோம்.

நிற்க, சமணர்கள் கழுவேற்றப்பட்டது பொய் என்றும், அதற்கு 'அகச்சான்று, புறச்சான்று' இல்லையென்றும் சொல்லுகிறார்.

திரு. முதலியாரால் 'இயற்கை அன்பு' என்று கூறப்படும் பெரிய புராணத்திலேயே சமணர்கள் கழுவேற்றப்பட்டது காணப்படுகிறது. திரு. முதலியார் அவர்கள் பெரியபுராணத்தை அதிலுள்ள அகச்சான்றுகளைக் கொண்டு கொள்ளலாமென்று ஒப்புக்கொள்வதோடு, அப்பெரிய புராணத்தி லுள்ள கதைகளில் ஒன்றாகிய திருஞானசம்பந்தர் அவதாரத்தையும் அவரது அற்புதத்தையும் ஒப்புக்கொண்டிருப்பதோடு, அவரைப்போல் இன் னொருவர் வருவதாகவும் சொல்லுகிறார்.

இது நிற்க, ஒவ்வொரு வருஷமும், பல கோவில்களில் சமணர்களை

RangaRakes tamilnavarasam.com

கழுவேற்றுகிற உற்சவமும், கழுவை நட்டு அதில் சைவர்கள் சமணர்களை கழுவிலேற்றி அழுத்துவதும் நாடகம் போல நடித்துக் காட்டப்படுகிறது. இதை இன்று வரையிலும் தப்பு என்றாவது, அம்மாதிரி நடத்தக்கூடா தென்றாவது திரு. முதலியார் சொன்னவருமல்ல; ஏதாவதுமுயற்சி எடுத்துக் கொண்டவருமல்ல. எனவே திரு. முதலியார் எவ்வித பொறுப்பையும் உணராமலும் ஒரு சிறிதும் தமது பகுத்தறிவை உபயோகப்படுத்தாமலும், நினைத்தது நினைத்தபடியெல்லாம் உளறிக் கொட்டுவதும், சமயத்துக்குத் தகுந்தபடியெல்லாம் மாற்றிப்பேசுவதும், இவற்றை யாராவது எடுத்துக் காட்டினால் அவர்கள் மீது பழிசுமத்துவதும், அவர்களைப்பற்றி விஷமப் பிரசாரங்கள் செய்வதும் தமது சமயத்தொண்டாகவும் ஆஸ்திகத் தன்மை யாகவும் கொண்டிருக்கிறார் என்பது பொது மக்களுக்கு விளங்கவில்லையா? என்று கேட்கின்றோம்.

மற்றும் அவர் அதுசமயம் பேசியதாகக் காண்பவைகளை புராணத் தைப் பற்றி எழுத ஏற்றுக்கொண்டிருக்கிற அறிஞருக்கு விட்டு விடுகிறோம்.

நிற்க, திரு. முதலியார் இவ்விதம் புராணப் பிரசாரத்திற்காகவும், அதைக் கண்டிப்பவர்களை எதிர்ப்பதற்காகவும், லஞ்சம் கொடுத்து பல நண்பர்களிடம் நட்புக் கொண்டிருக்கிறார். அதில் ஒருவராய் திரு. வரதராஜு லுவுக்கு கொடுத்திருக்கும் லஞ்சம் என்னவென்பதை இவ்வார “நவசக்தி” தலையங்கத்திலிருந்து உணர்ந்திருக்கலாம். என்னவெனில், திரு முதலியார் காங்கிரஸைப் பற்றி இதற்கு முன்னால் வெளிப்படுத்தியுள்ள அபிப்பிராயம் யாவரும் அறிந்ததொன்றே. அதாவது, வகுப்புப் பிணக்குகளும் உயர்வு தாழ்வுத் தன்மைகளும் உள்ள நாட்டில் அரசியல் இயக்கம் என்று ஒன்று ஏற் படுவது அந்நாட்டிற்குக் கேட்டை விளைவிப்பதாகும் என்பதாக எழுதியிருப் பதோடு, தாமும் அக்காங்கிரஸ் என்ற அரசியல் குழுவிலிருப்பது குற்ற மென்றும் சொன்னதுடன் காங்கிரஸ் நிர்வாக சபையிலிருந்து ராஜீனாமா கொடுத்து விலகினதல்லாமல் காங்கிரஸ் குழுவில் ஒரு சாதாரண அங்கத் தினராக யிருப்பதிலிருந்தும், விலகிக்கொண்டதாகவும் சொன்னவர் இப் போது காங்கிரசை நிலைநாட்ட மிகக் கவலை கொண்டிருப்பதாக எழுதி யிருக்கிறார். இதற்காக திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் புராணக் குப் பைகளையும், காங்கிரஸ் புரட்டையும் ஆதரிக்க முன்வந்திருப்பதாக எழுதிக் கொண்டு அவரைப் பாராட்டி இருக்கிறார். இது எம்மட்டு நிஜமாயிருந்தாலும் அதையும் பார்ப்போம்.

நிற்க, சைமன் கமிஷனைப் பற்றி திரு. முதலியார் அதை பகிஷ் கரிக்கக் கூடாதென்பதாக எழுதி வந்ததும், பகிஷ்கரிப்போர்களின் புரட்டு களை வெளியாக்கினதும், அதை ஆதரித்தே துண்டு விளம்பரங்களும் சுவர் விளம்பரங்களும் வெளியாக நேர்ந்ததும் அவைகளை கண்டித்து திரு. வரத ராஜுலு எழுதி வந்ததும் அதற்கு மறுபடியும் திரு. முதலியார் எழுதினதும்



யாவருக்கும் நினைவிருக்கலாம். இப்போது திரு. வரதராஜுலு தமது (திரு. முதலியாரது) புராணப்புரட்டுக்கும் சமயப்புரட்டுக்கும் உதவி செய்வதற்காகக் காணிக்கையாய் தாம் (திரு. முதலியார்) அவரது (திரு. வரதராஜுலுவின்) பகிஷ்காரப்புரட்டுக்கும் தேசீயப்புரட்டுக்கும் உதவி செய்ய ஒருப்பட்டு துணிவோடு காங்கிரசையும் பகிஷ்காரத்தையும் ஆதரித்து எழுதியிருக் கிறார். சைமன் கமிஷனை குறை கூறியும் எழுதியிருக்கிறார். இதன் மூலம் பார்ப்பனரல்லாதார் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியை தூற்றவும், காங்கிரசைப் புகழவும் சூழ்ச்சி தேடிக்கொண்டு அத்தொண்டிலும் மறைமுகமாக இறங்கி யிருக்கிறார். இவைகளெல்லாம் பூனை கண்ணைக் மூடிக்கொண்டு பாலைக் குடிப்பது போலக் கருதி திரு. முதலியார் மொட்டையாக எழுதி வந்தாலும் பொதுமக்கள் கண்ணில் இவர்கள் இனி மண்ணைப் போட முடியாதென்பதே நமது துணிவு.

பொதுமக்கள் உண்மையான க்ஷேமத்தையும், சுயமரியாதையையும், விடுதலையையும் அடைய வேண்டுமானால், நல்ல அரசாட்சி என்னும் பேரால் வெள்ளைக்காரர்கள் அடிக்கும் கொள்ளையையும், அதிலிருந்து சுயராஜ்யம் என்னும் பேரால் தேசத்தைக் காட்டிக் கொடுத்து பார்ப்பனர்கள் அடையும் பங்கையும், அதிலிருந்து தேசீயம், ஆஸ்திகம், மதம் என்பவை களின் பேரால் மக்களைக் காட்டிக் கொடுத்து நம்மிற் சிலர் அடையும் கூலி யையும் எப்பாடுபட்டாவது வெளியாக்கி, நிறுத்தினாலொழிய ஒரு கடுகளவும் நமது நாடும் மக்களும் முன்னேற முடியாது என்கிற உறுதி கொண்டதினால் தான் இவை எழுதி வர நேரிடுகின்றது.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 22.07.1928**



RangaRakes tamilnavarasam.com

## சுயமரியாதைப் பிரசாரங்கள்

சுயமரியாதைப் பிரசாரங்கள் பல இடங்களில் நடந்து வருவதாகச் செய்திகள் எட்டுகின்றன. அவற்றில் பேசுகிறவர்கள் பல மாதிரி பேசுவ தாகவும் அதைக் கேட்கிறவர்கள் பல விதமாய் அர்த்தம் செய்து கொள்ளு வதாயும் சிற்சில சமயங்களில் விபரீத அர்த்தம் ஏற்பட்டு விடுவதாகவும் தெரிய வருகிறது. அவ்விபரீதத்தை நிறுத்துவதற்காக குறைந்தது பதினைந்து நண்பர்களை தயார் செய்யும் பொருட்டு ஈரோட்டில் ரயில்வே ஸ்டேஷனுக் கடுத்த திரு. வெங்கட்ட நாயக்கர் தோட்டத்திலுள்ள ஒரு கொட்டகையில் "சுயமரியாதைப் பிரச்சார போதனைக் கூடம்" என்பதாக ஒரு ஸ்தாபனம் ஏற் படுத்துவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் ஒரு மாத காலத்திற்கு, தினமும் இரண்டு காலம் ஒவ்வொரு மணி நேரம் உபந்யாசங்களின் மூலமும், மற்றும் சம்பாஷணை, 'குடி அரசில்' கண்ட வியாசங்கள் முதலியவை மூலமாகவும் கற்பித்துக் கொடுக்க முடிவு செய்திருக்கிறோம். காலாவதி யொன்றுக்கு பதினைந்து பேர்களை சேர்த்துக் கொள்ளக்கூடும். அவர்களில் சௌகர்யமில்லாதவர்களுக்கு இலவச சாப்பாடு போடப்படும். இஷ்டமுள்ள வர்கள் தெரிவித்துக்கொண்டால் ஏற்றுக் கொண்ட விஷயத்துக்கும் வர வேண்டிய விபரத்துக்கும் மற்ற நிபந்தனைகள் விபரத்துக்கும் தெரிவிக்கப் படும்.

**– ஈ.வெ.ராமசாமி**

**குடி அரசு – அறிவிப்பு – 22.07.1928**

## பல்லாவரத்துப் பண்டிதர்

திரு. வேதாசலம் அவர்கள் சென்னை குகானந்த சபையில் சமீபத்தில் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் திரு. ஈ.வெ. ராமசாமி நாயக்கரையும் அவர் நண்பர்களையும் சுயமரியாதை இயக்கத்தையும் பற்றி மிகக் கடுமையாகத் தாக்கிப் பேசினதாகவும் " சுத்த சைவ ரத்த ஓட்டம் உள்ளவர்கள் இன்னமும் இவர்களைக் கொல்லாமல் இருக்கலாமா" என்பதாக சபையோர்களைக் கேட்டதாகவும் "தமிழ்நாடு" "திராவிடன்" பத்திரிகைகளில் காணப் படுகின்றது.

அதே கூட்டத்தில் திரு. வேதாசலத்தை திருவாளர்கள் தண்டபாணி பிள்ளை, ராமனாதன், கண்ணப்பர் முதலிய பலர் பல கேள்விகள் கேட்ட தாகவும் பதில் சொல்ல இயலாமல் திக்கு முக்காடியதாகவும் கடைசியாக கண்ணீர் விட்டு அழுததாகவும் மற்றும் பல விதமாய் காணப்படுகின்றது. அன்றியும், சிற்சில விஷயங்களில் திரு. வேதாசலம், நாயக்கரைத் தாக்க உண்மைக்கு மாறாக சில கற்பனைகள் செய்து கொண்டு போனதாகவும் அதைக் அக்கூட்டத்திலேயே வெளியாக்கி அவர் அவமானமடையச் செய்ததாகவும் "திராவிடனி"ல் காணப்படுகின்றது. அவைகள் அடுத்த வாரத்திற்குள் திரு. வேதாசலம் அவர்களால் மறுக்கப்படாத வரை "குடி அரசி"ல் அவைகளை எடுத்து எழுதி தக்க சமாதானங்கள் வெளியாக் கப்படும்.

**குடி அரசு – தலையங்கம் – 29.07.1928**



RangaRakes

tamilnavarasam.com

## ஈரோட்டில் தொழிலாளர் மீட்டிங்குகள்

ஈரோட்டில் ரயில்வே ஷ்டேஷனுக்கு அருகாமையில் திரு. வெங்கட்ட நாயக்கர் சத்திரத்தில் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் அக்கிராசனத்தின் கீழ் ஜூலை 21-ல் ஒரு தொழிலாளர்கள் வேலை நிறுத்த மீட்டிங்கு கூடியது.

மீட்டிங்குக்கு ஏராளமான ஜனங்களும் தொழிலாளர்களும் கூடியிருந்தார்கள். திருவாளர்கள் தேவ அன்பும், முத்துகிருஷ்ணன், அரூர் வேடி செட்டியார், மண்டி சி. குமாரசாமி கவுண்டர் முதலியோர்கள் தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்கு அனுதாபம் காட்டி பேசினார்கள்.

மறுநாள் கோணைவாய்க்கால் டேராகாட்டில் திரு. நாயக்கர் அக்கிராசனத்தில் ஒரு மீட்டிங்கு கூடியது.

அதற்கும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். அங்கு இரண்டு மூன்று நாளாக லைன்களில் நடந்த விஷயங்களை எடுத்துச்சொல்லி சத்தியாக் கிரக விஷயமாய் பேசப்பட்டது.

மறுபடியும் 25-தேதி புதன்கிழமை கடைவீதி அலிசவுக்கில் 'தாஜுல் இஸ்லாம்' பத்திராதிபர் ஜனாப் நைனாமுகம்மது சாயபு அவர்கள் தலைமையில் ஒரு மீட்டிங்கு கூட்டப்பட்டது.

தொழிலாளர்களும் திருவாளர் M.A.ஈஸ்வரரும் மற்றும் சில நண்பர்களும் பேசி சில தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள்.

27-7-28 ந் தேதி சாயந்திரம் 7-மணிக்கு, ஈரோடு "காந்திசவுக்" என்கிற காரைவாய்க்கால் மைதானத்தில் தொழிலாளருக்கு அனுதாபங்காட்ட E.P. வெங்கிடாசலம் செட்டியார் அக்கிராசனத்தின் கீழ் ஒரு பொதுமக்களின் மகாநாடு நடைபெற்றது, தொழிலாளர் சகோதரர்கள் ஸ்ரீமான்கள் தேவ அன்பும், முத்துகிருஷ்ண நாயுடு அவர்களும் பேசினார்கள்.

பிறகு ஸ்ரீமான்கள் சுப்பண்ண ஆசாரியார் M.A.ஈஸ்வரன், ஈ.வெ. ராமசாமி நாயக்கர் அவர்களும் பேசினார்கள்.



தீர்மானங்கள் :- ஸ்ரீமான் நயக்கர் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு, அக்கிராசனர் அவர்களால் பொது மக்களின் அங்கீகாரத்திற்கு விடப்பட்டு, ஏகமனதாய் நிறைவேறியது.

1. ரயில்வே பொது வேலை நிறுத்த சம்பந்தமாக கவர்ன்மெண்டாரால் கைது செய்யப்பட்டவர்களுக்கும், போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தாருக்கும் மற்றும் எதிர்பாராத சம்பவங்களால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களால் வருந்தும் குடும்பத்தாருக்கும் இக்கூட்டம் அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது.

2. தொழிலாளர்கள் கோரிக்கைகள் மிகவும் இரக்கமானது என்று தீர்மானிப்பதோடு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களுக்கு பொது ஜனங்கள் தங்களால் கூடிய ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுவதாக இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

3. அரசாங்கத்தார், போலீசார், ரயில்வே அதிகாரிகள் ஆகியவர்கள் எவ்வளவோ கோபமூட்டத்தக்க செய்கை செய்தாலும் தொழிலாளர்களும் பொது ஜனங்களும் பொறுமையாகவே இருக்க வேண்டும் என்றும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் பொறுமை இழந்துவிடக் கூடாது என்றும் இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகின்றது.

மேல்கண்ட தீர்மானங்கள் தீர்மானிக்கப்படுகையில் **திரு. நாயக்கர்** பேசியதாவது :-

சகோதரர்களே! தொழிலாளர்கள் குறைகள் உண்மையானவை என்பது எனது அபிப்பிராயம்.

ரயில்வேக்காரர்கள் திடீரென்று மூன்று நான்காயிரம் பேர்களை வேலையிலிருந்து விலக்கவேண்டும் என்று சொல்லுகின்றார்கள். அது உண்மையான சிக்கனத்தை முன்னிட்டாவது அல்லது லாபம் கட்டவில்லை என்பதற்காவது அல்லது ஜனங்களின் நன்மைக்காக ரயில் சார்ஜை குறைப்பதற்கென்றாவது இத்திட்டத்தை அனுசரிப்பதானால் எனக்கு சந்தோஷமே.

அப்படிக்கில்லாமல், சீமையில் உள்ளவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக அங்கிருந்து யந்திரங்கள் தருவிக்கவும், வெள்ளைக்காரர்களுக்கும் அவர்கள் சார்பாருக்கும் வேலை கொடுப்பதற்கும் இம்மாதிரி சூழ்ச்சி செய்கின்றார்கள். தென்னிந்திய ரயில்வேக்காரர் மற்ற எல்லா ரயில்காரர்களைவிட அதிக கொள்ளை அடிக்கின்றார்கள். மற்ற ரயில்களில் மெயிலுக்குக் கூட மைலுக்கு இரண்டரைக் காசு சார்ஜ். ஆனால் இவர்கள் நான்கு காசு, நாலரைக் காசு வாங்குகிறார்கள். வண்டி சவுகரியம் மற்ற வண்டிகளைவிட எஸ்.ஐ.ஆர்



RangaRakes tamilnavarasam.com

ரயிலில் மிகக் கொடுமையானது. சம்பளம், கூலி முதலியவைகளும் நம் மவர்களுக்கு மற்றவர்களைவிட மிகக் கொஞ்சமாகவே கொடுக்கின்றார்கள். இந்த நிலைமையில் இவர்கள் சிக்கனமென்பது இந்தியர்கள் வாயில் மண்ணைப்போட்டு வெள்ளைக்காரர்கள் வயிறு வெடிக்கச் செய்யும் கொடுமையேயாகும்.

நிற்க, ரயில்களில் நடந்த அபாயங்களுக்கெல்லாம் ரயில்வே அதிகாரிகளே காரணமாவார்கள். ஏனெனில், வேலை நிறுத்தம் செய்வதாக முன்னெச்சரிக்கை கொடுத்துத்தான் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது ரயில்வேக்காரர்கள் எச்சரிக்கையாய் இருந்திருக்கவேண்டும். ஒரு வேலை நிறுத்தம் என்றால் என்னென்ன காரியங்கள் நேருமென்பது அதிகாரிகள் அறிந்த விஷயம் தான். மேல்நாடுகளின் வேலை நிறுத்த அனுபவம் தெரிந்த வெள்ளைக்காரர்கள் அலட்சியமாய் இருந்தது மிகவும் கண்டிக்கத்தகுந்தது. கலகக்காரர்களும் காலிகளும் தொழிலாளர்களிடம் அனுதாபம் கொண்ட வாலிப ரத்த ஓட்டமுள்ளவர்களும் இன்னமும் என்னென்ன செய்வார்கள் என்பது நாம் சுலபத்தில் முடிவுகட்டக்கூடியதல்ல. இதற்காக தொழிலாளர்கள் மீது குற்றம் சொல்லுவது அறியாமையே யாகும்.

உதாரணமாக, திருச்சி பாலக்கரை ஸ்டேஷனுக்கருகில் லயனில் உள்ள கேட்டில் கதவில்லை என்றும், காவலில்லை என்றும் தெரிந்து வண்டியை விட எப்படி ரயில்வே அதிகாரிகள் சம்மதித்தார்கள் என்று நான் கேட்கின் றேன். அப்படி கவலையின்றி இஞ்சின் விட்டதால் மோட்டார் பஸ் மீது ஏறி 10 பேர்கள் கச கச வென்று நசுங்க நேர்ந்தது. இதற்கு யாரை தண்டிக்க வேண்டும் என்பதை நீங்களே யோசியுங்கள். நல்ல அரசாங்கமாயிருந்தால் இஞ்சின் ஓட்ட ஆதாரமாயிருந்தவர்களில் 10 பேரை தூக்கில் போட்டு இனி இம்மாதிரி நடக்காமல் பந்தோபஸ்து செய்திருக்கும். அப்படிக்கில்லாமல் மேல் கண்ட 10 பேர் நசுக்கப்பட்டு போனதற்காக விசனப்பட்ட ஜனங்களை சுட்டார்களாம். இது என்ன ஒழுங்கு! இது அதிகாரம் இருக்கின்றது என்கிறதும் துப்பாக்கியும், குண்டும், மருந்தும் சொன்னபடி கேட்க போலீஸ்படையும் இருக்கின்றது என்கிறதுமான ஆணவத்தைக் கொஞ்சமாவதும் காட்டுகின்றதா இல்லையா என்று கேட்கின்றேன். இம்மாதிரி கொடுமைகளும், ஆத்திரம் மூட்டத்தக்க காரியமும் செய்துவிட்டு பொறுமையா யிருங்கள்! சாந்தமாயிருங்கள் என்று சொன்னால் அது வார்த்தை அளவில் இருக்குமேயல்லாது காரியத்தில் பயனளிக்குமா?

தவிர, **144** போடுவதாலும் ஜெயிலில் வைப்பதாலும் என்ன காரியத்தை சாதிக்க முடியும்? **144**ஐ மீறுவது வெகு கஷ்டமான காரியமா என்று கேட்கின்றேன். பலாத்காரமான காரியங்கள் யாராலானாலும் சரி, நடந்ததாகக் காணப்படாதிருந்தால் **144**ஐ மீறும்படியே கட்டளை இட்டிருப்பேன்.



ஜெயிலில் போடுவதால் யாரும் பயந்துவிட மாட்டார்கள். ஜெயில் அனுபோகம் எனக்கு நன்றாய் தெரியும். மூன்று நான்கு தடவை நான் அனுபோகித்துப் பார்த்தவன். உள்ளே போய் வெளியில் வரும்போது உடல் இடை 10 ராத்தல் அதிகமாகவேதான் வரக்கூடும். ஆதலால் அந்த பூச்சாண்டிக்கு யாரும் பயப்படமுடியாது. மரியாதையாக தொழிலாளர் கோரிக்கைகளுக்கு இணங்கியோ அல்லது அவர்களை சமாதானப்படுத் தியோ ஒரு முடிவுக்கு வருவதுதான் நலமாக முடியும். கடைசியாக நான் பொது மக்களையும் தொழிலாளர்களையும் கேட்டுக் கொள்வதாவது:–

எந்தக் காரணத்தை முன்னிட்டும் பலாத்காரமும் பொறுமை இழத்தலும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், பலாத்காரம் ஏற்படுவது அதிகாரிகளுக்கு நன்மையாகவும் நமக்கு கெடுதியாகவும் முடியும். ஒத்துழையாமையின் போது கூட திடீரென்று திருவாளர் காந்தி இயக்கத்தை நிறுத்த நேர்ந்ததற்குக் காரணம் பலாத்காரம் ஏற்பட்டதுதான். அதனாலேயேதான் அவ்வியக்கம் தோல்வியடைந்ததாக கருத நேரிட்டது. ஆதலால் பலாத்காரமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நமது கடமையாகும். போலீசார் மீது குற்றம் சொல்வதில் யாதொரு பயனும் இல்லை. அவர்கள் சம்பளத்திற்காக, மேல் அதிகாரி சொன்னபடி கேட்கும் நிபந்தனை இல்லாத அடிமைகள். அவர்கள் எஜமான் சொன்னபடி நடக்கா விட்டால் வேலை போய்விடும். **144** போட்ட மாஜிஸ்ட்ரேட்டிடமும் நாம் குற்றம் கண்டுபிடிப்பது முட்டாள்தனம். வெள்ளை அதிகாரிகள் சொன்னபடி உத்திரவு போடாவிட்டால் வேலை போய்விடும். அப்புறம் உபாதான மெடுக்க வேண்டியதோ கருமாந்திர வீட்டில் தக்ஷிணைக்கு போக வேண்டியதோ அவர்கள் கடமையாகி விடும். ஆதலால் பொறுமை இழக்காமல் பலாத்கார மில்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எங்களாலான உதவி கடைசி வரை செய்யக் காத்திருக்கின்றோம். பலாத்காரம் ஏற்பட்டால், அதுவும் தொழிலாளர்களால் நடந்தது என்பதாக தெரிந்தால் நாங்களும் விலகிக்கொள்வோம் என்பதைக் கண்டிப்பாய் சொல்லுகின்றேன். மற்றபடி இங்கு நடத்தப் போவதாய் சொல்லப்படும் சத்தியாக்கிரகத்திற்கு என்னாலான பண உதவியும் ஆள் உதவியும் செய்யத் தயாராயிருக்கின்றேன் என்று சொல்லி முடித்தார்.

*குறிப்பு : 21.6.1928 இல் ஈரோடு தொடர்வண்டி நிலையத்தின் அருகில் தொழிலாளர் வேலை நிறுத்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஒட்டிப்பேசியது.*

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 29.07.1928**



RangaRakes tamilnavarasam.com

# ஒரு ஆபீசருக்கும் குடியானவனுக்கும் சம்பாஷணை

**– சித்திரபுத்திரன்**

**குடியானவன் : எ**ன்ன சார், தங்களிடம் தனித்து சற்று நேரம் பேச வேண்டும் என்கின்ற எண்ணம். ஏனென்றால் நாம் இருவரும் வெகு நாளைய சினேகமல்லவா? ஆதலால் சில விஷயங்களைத் தெரிவிக்க வேண்டும் என்கின்ற ஆசை எனக்கு உண்டு.

**ஆபீசர் :** ஆ! ஆ!! பேஷா பேசலாம். இப்பொழுதே வாருங்கள். என்ன விசேஷம்!

**குடியானவன் :** விசேஷம் ஒன்றும் இல்லை; தாங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. சிநேகித விஷயத்தில் மனம் பொறுக்கவில்லை. ஆதலால் தங்களிடம் சொல்லித் தீர வேண்டும் என்கின்ற கவலை கொண்டு விட்டேன்.

**ஆபீசர் :** என்ன இவ்வளவு யோசிக்கின்றீர்கள். கோபம் என்ன வந்தது? தாராளமாய்ச் சொல்லுங்கள். என்ன விசேஷம்.

**குடியானவன் :** கொஞ்சகாலமாகத் தங்களுடைய சம்சாரத்தின் நடத்தை சரியாய் இல்லை. என்னேரம் பார்த்தாலும் நம்ம வீட்டுக்கு அடுத்த வீட்டுத் தையல்காரனிடமே சாகவாசம் வைத்துக் கொண்டிருக்கின்றதாகத் தெரிகின்றது. சில சமயங்களில் அந்த தையல்காரன் அந்த அம்மாளை அடிக்கின்றதாகவும் தெரிய வருகின்றது. இதைப் பற்றி ஊரிலும் பல விதமாகப் பேசிக் கொள்ளுகின்றார்கள். இதைத் தங்களிடம் தெரிவித்து விடவேண்டும் என்று துணிந்து விட்டேன்; மன்னிக்க வேண்டும்.

**ஆபீசர் :** இதில் மன்னிக்க வேண்டிய சங்கதி ஒன்றுமில்லையே. தாங்கள் சொல்வது உண்மையாகவும் இருக்கலாம். ஏனென்றால் அந்தக் கமுதையை என் சம்சாரம் அல்ல என்று விலக்கி பல வருஷமாகிவிட்டது. எப்பொழுது ஒரு கான்ஸ்டேபிளை இழுத்துக் கொண்டு போய் இரண்டு மாதம் வரையில் காணாமல் இருந்தாளோ அன்று முதலே நான் "இனி அவள் என்னுடைய சம்சாரமல்ல" என்பதாக தீர்மானித்து விட்டேனே. இது தங்களுக்குத் தெரியாதா?

**குடியானவன் :** இந்த விஷயமெல்லாம் எனக்குத் தெரியவே தெரியாது. தாங்கள் சொல்லத்தான் தெரியவருகின்றது. ஆனால் அந்தம்மாள் தங்கள் வீட்டில் தங்களுடன் தானே இருக்கிறார்கள்?

**ஆபீசர் :** அதனாலென்ன? முன்பு அவளை அடித்துக் கொண்டு போன கான்ஸ்டேபிள் அவளிடம் இருந்த நகையைப் பிடுங்கிக் கொண்டு விரட்டி விட்டு விட்டான். அவள் இந்த ஊர் சத்திரத்தில் வந்து திண்டாடு வதாக கேள்விப்பட்டேன். நேரில் போய்ப் பார்த்தேன். அவள் அழுதாள். அதற்கு நான் "நீ என்றைக்கு ஊரை விட்டு ஓடினாயோ அன்று முதலே உன்னை என் சம்சாரமல்ல என்று தீர்மானித்து விட்டேன்; இனிமேல் எனக்கும் உனக்கும் புருஷன் பெண்ஜாதி என்கிற பாத்தியமும் இல்லை" என்று கண்டிப்பாக சொல்லிவிட்டேன். பிறகு அவள் வருத்தப்பட்டதைப் பார்த்து மறுபடியும் "உனக்கு என்னிடம் வர பிரியமிருந்தால் உன்னை நான் ஒரு தாசி மாதிரியாகக் கருதி உன்னிடம் நேசம் வைத்துக்கொள்ளுகின்றேன். இஷ்டமிருந்தால் என்னோடு வா" என்று சொன்னேன். அவளும் அதற்கு சம்மதித்து என்னோடு வந்தாள். நானும் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய்விட்டேன். இப்போது அவளை ஒரு தாசி மாதிரியாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் தாசி வீட்டிற்கு நான் போவதற்கு பதிலாக என் வீட்டிற்கு அவளை வரவழைத்துக் கொள்கிறேன். அடிக்கடி அவள் போய்விட்டு வருவதற்குப் பதிலாக என் வீட்டிலேயே இருக்கும்படி சொல்லி விட்டேன். குழந்தைகள் விஷயத்திலும், ஓடுவதற்கு முன் பிறந்த குழந்தை களை என் சொந்தக் குழந்தைகள் மாதிரிதான் வைத்திருக்கின்றேன். திரும்பி வந்ததற்குப் பின் பிறந்த குழந்தைகளை தாசிக்குப் பிறந்த குழந்தை மாதிரி தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். தவிர,

என் குழந்தைகளையும் அவளையே பார்த்துக் கொள்ளும்படியாய்க் கேட்டுக்கொண்டேன். அவளும் தன் குழந்தைகள் மாதிரியே பார்த்துக் கொள்ளுகின்றாள். அந்த விதத்தில் அவள் உத்தமி என்றே சொல்ல வேண்டும்.

**குடியானவன் :** அப்படியானால் அடிக்கடி டெய்லர் ( தையல்காரன்) வீட்டில் இருக்கக் காண்கின்றேனே, அதன் காரணம் என்ன?

**ஆபீசர் :** என்னமோ காரணம் இருக்கலாம். அதைப்பற்றி நமக்கு ஏன் கவலை? நாமே அவளை ஒரு தாசி போல் நினைத்து தாசியை வைத்துக் கொண்டிருக்கிறது போலவே கருதிக்கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க நமக்கு அனாவசியமான கவலை எதற்கு? அவள் எங்கு போனால் நமக்கென்ன? என்று தான் அதில் என் நேரத்தை ஒரு சிறிதும் வீணாக்குவதே யில்லை.

ஆனால் அந்த டெயிலரிடம் அடிப்படுவதாக சொல்லுகின்றீர்களே, அதைக் கேட்க நமக்கு சற்று பரிதாபமாகத்தான் இருக்கின்றது; என்ன செய்யலாம்? பாவம் அந்த டெயிலர். ஒரு சமயம் இவளை தன் சம்சாரமாக நினைத்துக் கொண்டிருக்கலாம். அவளும் அவனை தன் புருஷனாக நினைத்துக் கொண்டிருந்தாலும் இருக்கலாம். அப்படியிருந்தால் அடிக்க





RangaRakes tamilnavarasam.com

வேண்டியதும் அடிபட வேண்டியதும் நியாயந்தானே. நானும் அவளை என் சமுசாரம் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது நன்றாய் உதைத்துக் கொண்டுதான் இருந்தேன். அதற்கு நாம் என்ன செய்யலாம்.

**குடியானவன் :** சரி சார், இப்போதுதான் தங்களுடைய கொள்கை (பிரின்சிபிள்) எனக்கு விளங்கிற்று. அனாவசியமாய் தங்கள் நேரத்தை கெடுத்ததற்காக மன்னிக்க வேண்டும். நான் போய் வருகிறேன்.

**ஆபீசர் :** சரி போய்விட்டு வாருங்கள். இதைத் தவிர வேறு விஷயமில்லையே.

**குடியானவர் :** இல்லை.

**குடி அரசு - உரையாடல் - 29.07.1928**



RangaRakes

# பார்ப்பனீயம்

பார்ப்பனப் பத்திரிகைகளும், பார்ப்பன உத்தியோகஸ்தர்களும் தங்கள் ஆதிக்கத்திற்கு ஊனம் வராமல் காப்பதில் கவலை எடுத்துக் கொண்டு அதற்காக எந்தெந்த வகையில் மக்களை ஏமாற்றலாமோ அந்தந்த வகையில் எல்லாம் இன்னும் துணிவுடன் வேலை செய்து கொண்டேதான் இருக்கிறார்கள். ஆதலால் இனி அதைப் பற்றியும் சற்று கவனம் செலுத்துவோம்.

என்னவெனில், உதாரணமாக, சென்றவாரத்தில் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள உத்திராதி மடம் என்கின்ற ஒரு வைணவப் பார்ப்பன மடத்தில் வைத்துப் “பிராமணர்கள் கூட்டம்” என்பதாக ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அதில் ஐகோர்ட் மாஜி ஜட்ஜியும் இப்போது வக்கீலுமான திரு. வி.வி. சீனிவாசய்யங்கார் அக்கிராசனத்தின் கீழ் மற்றொரு ஐக்கோர்ட்டு வக்கீல் என். சீனிவாசாச்சாரியார் என்பவரால் “பிராமணர்களின் தற்கால நிலைமை” என்பது பற்றி ஒரு உபன்யாசம் செய்யப்பட்டிருக்கின்றது. அது வைதீகப் பார்ப்பனக் கூட்டம் என்றாலும் எல்லா வகையான பார்ப்பனர்களுமே அக் கூட்டத்தில் கூடி இருந்திருக்கின்றார்கள். அந்தச் சமயத்தில் அக்கிராசனரும் உபன்யாசகரும் ஆகிய இருவர்களும் பேசிய பேச்சைக் கேட்டவர்களுக்கு பார்ப்பனர்களின் தற்கால நிலைமை எப்படிப்பட்டது என்பது ஒருவாறு தெரியக்கூடுமாயினும் பார்ப்பனரல்லாதாரின் தற்கால நிலைமை என்னவென்பதும் அவர்கள் இனி என்ன செய்ய வேண்டும் என்பதும் அதைவிட நன்றாய் தெரியுமென்றே நினைக்கின்றோம்.

முதலில் அவ்விருவர்களும் பேசிய பேச்சுகளில் உள்ள முக்கிய விஷயங்கள் சிலவற்றை அதாவது ஜூலை 27-தேதி “மித்திரன்” பத்திரிகையில் காணுவதின் சாரத்தை குறிப்பிட்டுவிட்டு பின்னால் அதைப் பரிசீலனை செய்வோம்.

## அக்கிராசனர் முன்னுரையில் காணப்படுவது:-

நான் 20 வருஷமாக அரசியல் விஷயத்தில் கவலை வெளிப்படையாக எடுத்துக்கொள்ளவில்லை. இப்போது எடுத்துக்கொள்ள நேர்ந்தது.

எனது அனுபவத்தைக் கொண்டு எனக்கு சுயராஜ்யத்தில் நம்பிக்கை குறைந்துவிட்டது.



tamilnavarasam.com

பிராமணர்கள் தாங்கள் சிறுபான்மையாய் இருந்தாலும் தேச நன்மை யையே பிரதானமாக கருதியதால் தங்களுக்காகவென்று ஒன்றும் அரசிய லில் கேட்டுக் கொள்ளவில்லை.

அப்படி இருந்தும் இது சமயம் பிராமணர் என்ற மாத்திரத்தில் ஒருவித துவேஷ புத்தி கிளப்பிவிடப்பட்டு வருகின்றது.

பிராமணர்களை தூஷிப்பவர்கள் தங்கள் பிள்ளைகளை படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வருவதை பிராமணர்கள் எவ்வழியில் தடை செய்தார்கள்?

பிராமண துவேஷம் 25 வருஷத்திற்கு முன் கிளப்பிவிடப்பட்ட பொழுது அது நிலைக்காது என்று கருதி பிராமணர்கள் அலக்ஷியமாக இருந்து விட்டார்கள்.

இப்போது பிராமண துவேஷம் பரவும் ரீதியைப் பார்த்தால் பிராமண தத்துவத்திற்கே ஆபத்து வரும்போல் இருக்கின்றது.

இதை எண்ணியேதான் ஸ்ரீமான் சீனிவாசாச்சாரியார் பிராமண இயக் கத்தை ஆரம்பித்திருக்கிறார்.

இத் தேசத்தில் ஜாதி மத பேத மாச்சரியம் இருக்கும்போது சுயராஜ்ஜி யத்தால் என்ன பலன் விளையும்.

அநேக பிராமணர்களை நான் விசாரித்துப் பார்த்த வரையில் வெள்ளைக் கார ராஜ்ய பாரமே மேலானது என்று சொல்லுகிறார்கள்.

இந்நிலையில் பிராமண மகாசபை ஏற்பட்டது மிகவும் நல்ல விஷயம். ஸ்ரீ சீனிவாசாச்சாரியார் சைமன் கமிஷனை பகிஷ்கரிக்கக் கூடாது என்று சொல்ல தைரியமாய் முன் வந்திருக்கிறார்.

நாம் சுயராஜ்யத்திற்கு அருகரா? நம்மால் பரிபாலனம் செய்ய முடியுமா? நமக்கு சுயராஜ்ஜியத்தில் இடம் கிடைக்காது என்பது நிச்சயம். இதரர்கள் (பார்ப்பனரல்லாதார்கள்) ஒற்றுமையாய் இருக்கும் போது பிராமணர்களும் கட்டுப்பாடாய் இருக்க வேண்டாமா?

மத விஷயத்தில் யாராவது பிரவேசித்தால் பிராமணீயத்திற்கு கெடுதல் வருமாகையால் மதத்தில் பிரவேசிக்க யாரையும் விடக் கூடாது.

பிராமணர் என்பதற்காக நாம் ஒரு வித்தியாசத்தையும் கற்பிக்கிற தில்லை.”

பின்பு உபன்யாசகர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாச்சாரியார் பேசியதின் முக்கிய பாகம்:–

இந்த பிராமண சங்கம் பல வருஷங்களாகவே வேலை செய்து வருகின்றது.

எவன் தன் மனதை அடக்கி யோக்கியனாக இருக்கின்றானோ அவனே பிராமணன்.





பிராமணர்கள் இந்த மேன்மை ஸ்திதியில் இருக்கவேண்டு மென்றேதான் நாங்கள் பிரசாரம் செய்கிறோம். ராஜீய விஷயத்தில் நாங்கள் தலையிடுவதே கிடையாது.

“குடி அரசு” கிளர்ச்சி வலுத்துவரும் இச்சமயத்தில் யாவும் வரம்பு மீறிப் போகின்றபடியால் அதைத் தடுக்க வேண்டுமென்றே ராஜீய விஷயத்தில் தலையிட முன்வந்திருக்கிறேன்.

பிராமணரல்லாதார் இயக்கம் உத்தியோகம் பெற ஏற்பட்டதென்று எண்ணி யாவரும் கவலையில்லாமல் அதைச் சும்மா விட்டுவிட்டார்கள்.

இப்போது அது ஒரு உரிமையை ஸ்தாபித்துக் கொள்வதற்கு கிளம்பி விட்டது. பிராமணர்கள் தங்களுக்கு சட்டபூர்வமாக பதவி அளிக்கப் படவேண்டுமென்று ஏற்படுத்திக் கொள்ளவில்லை. பிராமணரல்லாதார் இயக்கத்தினால் துவேஷ புத்தியை ஊட்டி வருகிறார்கள், மத விஷயத் திலும், கோவில் முதலிய விஷயத்திலும் பிரவேசித்து அடியோடு கவிழ்க்க முயற்சிக்கிறார்கள். **ஆயிரக்கணக்கான வருஷங்களாய் நாம் அநுபவித்து வரும் பாத்தியதைகளை பலாத்காரமாய் பிடுங்கிவிட ஆரம்பித்திருக்கிறார்கள்.** சுயமரியாதை இயக்கமென்று சொல்லிக் கொண்டு சிலர் செய்துவரும் கொடுமைகளையும், அவமானங்களையும் ஊர் ஊராய்ப் போய் சுற்றிப் பார்ப்பவர்களுக்குதான் தெரியும். மேற்கண்ட துவேஷ புத்தி இயக்கத்தினால் **(சுயமரியாதை இயக்கத்தால்) பிராமணர் களுக்கு யாதொருவித கெடுதியும் ஏற்படா வண்ணம், தடுக்க வேண்டுமென்றே சைமன் கமிஷன் முன் நமது விஞ்ஞாபனத்தைக் கொடுக்க உத்தேசித்திருக்கிறேன்.** அதில் இரண்டு விஷயங்கள்தான் முக்கியமானது. ஒன்று மதவிஷயத்தில் அரசாங்கம் தலையிடாமல் இருக்க வேண்டுமென்பது மற்றொன்று வகுப்புவாரி பிரதிநிதித்துவத் தினால் அநர்த்தம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பது. இவை வருணாசிரம தர்ம மகாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றும் பிராமணர்கள் யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இத்தேசத்தில் உள்ள பல கட்சிகளும் நம்மை லட்சியம் செய்யவில்லை. இந்தியாவிலுள்ள சர்வ கட்சி மகாநாடும், காங்கிரஸ் முதலானவைகள் தங்கள் ரிப்போட்டை பார்லி மெண்டுக்குத்தான் அனுப்பப்போகிறார்கள். சைமன் கமிஷனும் தாங்கள் சேகரிக்கும் விஷயங்களை பார்லிமெண்டுக்குத்தான் அனுப்பப் போகி றது. நம்மை இங்கு ஒருவரும் பொருள்படுத்தாமல் இருக்கையில் **நம் பாத்தியதையை யாரிடமேனும் வற்புறுத்தி வைக்கவே நமது கோரிக் கையை கமிஷன் முன் ஆஜர்படுத்த வேண்டும்.** நமது உரிமையை வற்புறுத்த வேண்டிய காலத்தில் நாம் சும்மா இருந்துவிடக் கூடாது. **பெரும்பாலோர் சைமன் கமிஷனை பகிஷ்கரிக்காத காலத்தில் 100 க்கு மூன்றுபேர் ஆகிய நாம் மாத்திரம் ஏன் பகிஷ்காரம் என்று புத்தியில்லாமல் உளறிக் கொண்டிருக்க வேண்டும்** என்று பேசி யிருக்கிறார்கள். இவ் வாக்கியங்களை ஒவ்வொன்றாக கவனித்துப்

RangaRakes
tamilnavarasam.com

பார்ப்பவர்களுக்கு பார்ப்பனர்களின் இரகசியமும், பார்ப்பனரல்லாதாரின் நிலைமையும், சைமன் பகிஷ்காரம் என்பதின் யோக்கியதையும், "இரண்டொரு பார்ப்பனர்கள் அயோக்கியத்தனமாய் இருக்கிறார்கள் என்பதற்காக பார்ப்பன சமூகத்தையே குற்றம் சொல்லலாமா?" என்று சொல்லும் பார்ப்பனக் கூலிகளின் கூற்றுகளின் யோக்கியதையும் வெட்ட வெளிச்சமாகாமல் போகாது.

மேற்படி தென் இந்திய பார்ப்பன பிரதிநிதி சபையாக இரண்டு தக்க பார்ப்பனர்களை முக்கிய புருஷர்களாக மாஜி ஹைகோர்ட் ஜட்ஜும், செல்வாக்குப் பெற்ற வக்கீல் என்பவருமான திரு. வி.வீ. சீனிவாசய்யங்கார் என்பவர் அக்கிராசனாதிபதியாகவும், வைதீக பார்ப்பனருக்குப் பிரதிநிதியாக திரு.என். சீனிவாசாச்சாரி என்பவர் உபந்யாசராகவும், அநேக லௌகீக உத்தியோகப் பார்ப்பனர்களும் அனேக வைதீகப் பார்ப்பனர்களும் சபையோர்களாகவும் இருந்து கூட்டம் நடைபெற்றிருப்பதால் இது பொதுவாக தென்னாட்டு "லௌகீக வைதீக"ப் பார்ப்பனர்களின் பொறுப்பேற்ற சபை என்பதற்கு யாரும் ஆட்க்ஷேபனை சொல்ல முடியாது.

திரு.வி.வி. சீனிவாசய்யங்கார் அரசியல் புரட்டின் பலனாய் 20 வருஷங்களாக மாதம் ஆயிரம் பதினாயிரம் ரூபாய்கள் வீதம் வக்கீல் தொழிலில் கொள்ளையடித்து விட்டு ஹைகோர்ட் ஜட்ஜி வேலையும் பெற்று அதிலும் ஒரு கை பார்த்துவிட்டு இன்னமும் மாதம் பதினாயிரக் கணக்காய்ச் சம்பாதித்துக் கொண்டிருப்பவர். இந்நிலையில் பார்ப்பனரல்லாதார்களும் இவரைப் போல் ஆகிவிடுவார்களே என்கின்ற பொறாமையால் தனக்கு இப்போது சுயராஜ்ஜியத்தில் அதாவது அரசியல் சுதந்திரத்தில் நம்பிக்கை இல்லை என்றும் ஜாதி மதத் துவேஷமிருக்கும் போது சுயராஜ்யம் பெறுவதில் பலன் இல்லை என்றும் பார்ப்பனர்களுக்கு சுயராஜ்யத்தில் பங்கு கிடையாது என்றும் சுயராஜ்ஜியத்தை விட வெள்ளைக்காரரின் ராஜ்ஜிய பாரமே மேலானதென்றும் சொல்லிவிட்டார். இதையேதான் எல்லாப் பார்ப்பனர்களும் இப்போது சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். (ஆனால் சிலர் ரகசியமாய்ச் சொல்லுகிறார்கள்) எனவே தங்களுக்கு அதிகாரமும் பதவியும் உத்தியோகமும் கிடைப்பதாயிருந்து அதுவும் நிலைத்திருந்தால் மாத்திரம் சுயராஜ்ஜியம் வேண்டும் என்பதும் வேறு யாருக்காவது அதில் பங்கு போய் விடும் என்று தோன்றினால் உடனே சுயராஜ்ஜியம் வேண்டாம் என்பதும் பார்ப்பனர்களின் யோக்கியதை என்பதாக நாம் அடிக்கடி சொல்லி வருவதானது வெட்டவெளிச்சமாகும்படி வெளியானதற்கு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். அடுத்தபடி பார்ப்பனரல்லாதார் படிப்பதை பார்ப்பனர்கள் தடுத்தார்களா என்கிறார்.

நமது படிப்பு விஷயத்தில் பார்ப்பனர்கள் எவ்வளவு இடையூறாய் இருந்திருக்கின்றார்கள் என்பது திரு அய்யங்காருக்கு உண்மையிலேயே



தெரியாதா? சுருங்கச் சொன்னால் இப்போதும் உபாத்தியாயர்கள் பார்ப்பனர்கள்; பரீட்க்ஷை அதிகாரிகள் பார்ப்பனர்கள். (அதுவும் நம்மைச் சூத்திரர்கள் என்றும், சூத்திரர்களைப் படிக்கவிடக் கூடாது என்றும் சொல்லும் மதக்காரர்கள்) இந்த நிலையில் அப்பார்ப்பனர்களிடம் நம் பிள்ளைகள் எப்படிப் படித்து பாஸ்செய்யக் கூடும் என்பதை வாசகர்களே உணர்ந்து கொள்ளட்டும்.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் வலுப்படுகின்றது என்றும், இதனால் "பிராமணத்துவம்" கெட்டுப்போகும் என்றும் திரு. அய்யங்கார் முதலைக் கண்ணீருடன் கவலைப்படுகிறார். வகுப்புவாதத்தை வெட்டிப் புதைத்தாய் விட்டது. "டிங் டாங் டிங்" என்று பறையடித்த கூட்டத்தார் இப்போது துவேஷம் வளருகிறது என்று சொல்லுவதின் அர்த்தமென்ன? பார்ப்பனன் மற்றவர்களை விட உயர்ந்தவன் என்று எண்ணிக்கொண்டிருக்கும் ஒரு சிறு பார்ப்பனக் கரு உலகத்தில் உள்ள வரை பிராமணத் துவேஷத்தை ஒழிக்க யாவராலும் முடியாது என்பதையும், அப்படி அது ஒரு சமயம் எந்தக் காரணத்தாலாவது ஒழிவதானாலும் நாம் உயிர் விடும் வரை அதற்கு இடையூறாய் இருந்துதான் தீருவோம் என்பதையும் வாசகர்களும், மற்றப் பார்ப்பனர்களும் ஒன்றாய் உணர்வார்களாக.

மற்றும் பிராமணத்துவேஷத்தால் பிராமண தத்துவத்திற்கு கெடுதி வரும் போலிருக்கின்றது என்று மிக்க துக்கப்படுகிறார்.

பிராமணத்துவம் என்றால் என்ன? ஊரை ஏமாற்றுவதா? உத்தியோகங்களெல்லாம் எந்த வேலை செய்தாவது தாங்களே பார்க்க வேண்டுமென்பதா? தங்கள் சுயநலத்துக்காக நாட்டைக் காட்டிக் கொடுத்து கொடுமுறை அரசாங்கத்துக்கு உளவாய் இருப்பதா? வக்கீல் வேலை செய்வதா? போலீசு வேலை பார்ப்பதா? லஞ்சம் வாங்குவதா? அதிகாரிகளின் தயவுக்காக இழிதொழிலில் இறங்குவதா? எல்லாவித அயோக்கியத் தனங்களையும் இழி தொழிலையும் செய்து கொண்டும் உடம்பினால் ஒரு தொழிலும் செய்யாமல் பிச்சையெடுத்து வயிறு வளர்த்துக் கொண்டும் சோம்பேறி வர்க்கமாய்த் திரிந்து கொண்டும் பிராமணன் உயர்ந்தவன் என்று சொல்லுவதா? பார்ப்பனரல்லாதாரை தலையெடுக்கவொட்டாமல் மதத்தின் பேராலும் சாமி பேராலும் அரசியலின் பேராலும் அழுத்தி வைத்திருப்பதா?

காப்பிக்கடையில் எச்சில் கிண்ணம் கழுவுவதா? விபசாரத்திற்கு தரகு வேலை செய்வதா? என்று கேட்பதுடன் அப்படியானால் இவற்றில் எந்தக் காரியம் கெட்டுப் போகும் என்று திரு. அய்யங்கார் வருத்தப்படுகிறார் என்பது நமக்கு விளங்கவில்லை.

மற்றும் "பிராமணர் இயக்கம் பிராமணத் தத்துவத்தை" காப்பாற்றவே வெகுகாலமாய் இருந்து வருகின்றது என்கின்றார். பார்ப்பனரல்லாதார்



RangaRakes tamilnavarasam.com

இயக்கத்தை காட்டிக் கொடுத்து பிழைக்கும் வயிற்றுப் பிழைப்பு தேசீய வாதிகள் பலர் பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளை ஆவதற்காக அடிக்கடி பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை குறை கூறி வகுப்பு இயக்கம் கூடாது கூடாது என்று சொல்லுவதற்கு ஒரு வாய்ப்பு ஆகும் என்றே சொல்லுவோம். மற்றும் "எல்லா பிராமணர்களும் வெள்ளைக்கார அரசாங்கமே மேல் என்று சொல்லுகிறார்கள்" என்கின்றார். இது உண்மையே. எப்படி என்றால், எப்போதும் பார்ப்பனர்கள் தங்கள் இஷ்டம் போல் தங்கள் ஆதிக்கத்திற்கு ஏற்றபடி நடக்கக் கூடிய அரசாங்கம் இல்லாவிட்டால் உடனே வேறு அரசாங்கத்தைக் கொண்டுவந்து நிலைக்க வைக்க முயற்சிப்பது சரித்திர பூர்வமானது; ஆனதால் நமக்கும் அதிகாரத்தில் சற்று பங்கு கிடைக்கும் என்கின்ற பயம் ஏற்பட்டவுடன் சுயராஜ்ஜியம் வேண்டாம் வெள்ளைக்கார ராஜ்ஜியமே இருக்க வேண்டும் என்று சொல்ல வந்து விட்டார்.

மற்றும் மத விஷயத்தில் யாரும் பிரவேசிக்க இடம் கொடுக்கக் கூடாது என்கின்றார்.

மதவிஷயம் என்றால் என்ன? எல்லோரும் சம்பாதிக்கும் பணம் ஒரு கூட்டத்தாரின் வயிற்றிலேயே போய் விழுவதற்கு அனுகூலமாயிருக் கட்டும் என்பதா? அல்லது மத ஆதாரத்தை ஒரு கூட்டத்தார் தவிர வேறு யாரும் பார்க்கக்கூடாது என்பதா? ஒருவனை ஒருவன் தொடக்கூடாது என்பதா? தெருவில் நடக்கக் கூடாது என்பதா? சாமி பேரால் பெண்கள் பொட்டுக்கட்டிக் கொண்டு ஊராருக்கெல்லாம் மேகவியாதி விநியோகித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதா? பார்ப்பானுக்கு வேலை செய்யவே மற்றவர்களைக் கடவுள் படைத்தார் என்பதா? என்ன அக்கிரமம் செய் தாலும் "பிராமணன் பிராமணன் தான்" என்பதா? சாமிகளுக்கு பெண்டு பிள்ளை, வைப்பாட்டி, விபசாரம் முதலிய குணங்கள் கற்பித்து அதற்கு கோயில் குளம் திருவிழாக்களும் கற்பித்து அதனால் ஒரு கூட்டத்தாரே பிழைக்க வழி செய்திருப்பதா? 10 வயது பெண்ணுக்கு 60 வயது கிழவனை கட்டுவதா? 11 வயதுள்ள பெண் குழந்தை மற்றொரு குழந்தையைப் பெறுவதா? 5 வயது குழந்தையை தாலியறுத்து முண்டைச்சி என்று மொட்டையடித்து சகுனத்தடையாக்கி முக்காடிட்டு சாகும் வரை மூலையில் கிடத்துவதா? பெண்ணாய்ப் பிறந்துவிட்டால் ஆண்பிறப்பு இல்லாவிட்டால் தான் பதிவிரதைகளாக இருக்கலாம் என்பதா? பெண்கள் விபசாரித்தனம் செய்தால் வீட்டுக்கு விலக்கானதும் அத்தோஷம் தீர்ந்துவிடுகிறது என்பதா? கடவுளே பெண்களை விபசாரிகளாகச் சிருஷ்டித்து விட்டதால் காவல் செய்வதில் பிரயோஜனமில்லை, பிராயச்சித்தம் செய்தால் போதும் என்பதா? ஏதாவது ஒரு கிராமத்தில் ஒரு பார்ப்பான் ஒரு ராத்திரி தன் பக்கத்தில் போகத்திற்குப் பெண் இல்லாமல் படுத்துக் கொண்டிருந்தால் அந்தக் கிராமத்திற்கே தோஷம், ஆதலால் திண்ணை திண்ணையாய் தேடிப் பார்த்து தனியாய்ப்படுத்திருந்தால் ஒரு பெண்ணைப் படுக்க வையுங்கள் என்பதா?



இந்து மதம் தப்பு என்று பார்ப்பன ஜாதியில் பிறந்து கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்து அதில் பெரிய உத்தியோகம் பெற்றுக் கொண்டு மறுபடியும் பார்ப்பானாகி பார்ப்பனரல்லாதாருக்கு கெடுதி செய்வதா? மறுபடியும் மகமதிய மதத்தில் சேர்ந்து மறுபடியும் பார்ப்பானாவதா? அண்ணன் மிதவாதி, தம்பி சர்க்கார்வாதி, தான் உளவாளி சி.ஐ.டி தகப்பன் பிஞ்சின் வாங்கிய பிறகு காங்கிரஸ் வாதி, மாமனார் வக்கீல் வேலையில் லக்ஷக் கணக்காய் பணம் கொள்ளையடித்துக் கொண்ட பிறகு பூரண சுயேச்சைவாதி, கண் தெரியாத பாட்டனார் ஒத்துழையாவாதி என்பதா? இன்னும் இது போன்ற விஷயங்கள் பதினாயிரக்கணக்கில், எதை மத தத்துவம் என்கிறார் என்பது நமக்கு விளங்கவில்லை. மற்றும் நமது நாட்டில் பிராமணன் பிராமணரல்லாதவன் என்பதற்கு ஒரு வித்தியாசத்தையும் கற்பிப்பதில்லை என்கின்றார். இது வாஸ்தவமா என்பதை வாசகர்களே தெரிந்து கொள்ளட்டும் என்றாலும், இது ஒன்றே போதும். இவர் எவ்வளவு பொய்யைப் பேசுகின்றார் என்பதற்கு ஆதாரம் போதாதா என்று பார்க்க விரும்புகிறோம்.

இதுவரை அக்கிராசனர் சீனிவாச அய்யங்கார் முன்னுரையில் சிலதைப்பற்றி மாத்திரம் எடுத்து விவரித்திருக்கின்றோம். மற்றபடி உபந்நியாசகர் திரு. சீனிவாசாச்சாரியார் உபந்யாசத்தைப் பற்றி மறுமுறை எழுதலாம் என்று நிறுத்திவிடுகின்றோம். இதிலிருந்து சைமன் கமிஷன் பஹிஷ்காரத் தைப் பற்றிய உண்மை என்ன என்பதும் அது விஷயத்தில் பார்ப்பனர்களின் சூழ்ச்சி என்ன என்பதும் ஒத்துழைப்பும் பஹிஷ்காரமும் எதற்காக என்பதும் ஒருவாறு திரு. சீனிவாசாச்சாரியார் பேசிய குறிப்புகளிலிருந்தே வாசகர்கள் உணரலாம் என்றும் நினைக்கின்றோம்.

ஆகவே பார்ப்பனரல்லாதார் இயக்கமும் சுயமரியாதை இயக்கம் என்கின்ற சீர்திருத்தத் தன்மை கொண்ட இயக்கமும் நமது மக்களுக்கு வேண்டுமா வேண்டாமா என்பதும், பஹிஷ்காரக் கூச்சலைப் புரட்டு என்று நாம் இதுவரை சொல்லி வந்தது உண்மையா அல்லவா? என்பதும் ஒருவாறு வாசகர்களுக்கு அக் குறிப்புகளால் விளங்கக் கூடும் என்றும் நினைக் கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 05.08.1928**



RangaRakes tamilnavarasam.com

# பெண்கள் உண்மை விடுதலையடைய வேண்டுமானால் "ஆண்மை" அழிய வேண்டும்

பெண்கள் விடுதலையின் பேரால் உலகத்தில் அனேக இடங்களில், அனேக சங்கங்களும், முயற்சிகளும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. இம்முயற்சிகளில் ஆண்களும் மிகக் கவலையுள்ளவர்கள் போலக் காட்டிக் கொண்டு மிகப் பாசாங்கு செய்து வருகின்றார்கள். ஆண்கள் முயற்சியால் செய்யப்படும் எவ்வித விடுதலை இயக்கமும் எவ்வழியிலும் பெண்களுக்கு உண்மையான விடுதலையை அளிக்கமுடியாது. தற்காலம் பெண்கள் விடுதலைக்காக பெண்மக்களால் முயற்சிக்கப்படும் இயக்கங்களும் யாதொரு பலனையும் கொடுக்காமல் போவதல்லாமல் மேலும் மேலும் அவை பெண்களின் அடிமைத்தனத்திற்கே கட்டுப்பாடுகளை பலப்படுத்திக்கொண்டே போகும் என்பது நமது அபிப் பிராயம். எதுபோலவென்றால், இந்திய பொதுமக்கள் விடுதலைக்கு வெள் ளைக்காரரும் பார்ப்பனரும் பாடுபடுவதாக ஏற்பாடுகள் நடந்து வருவதின் பலனாக எப்படி நாளுக்கு நாள் இந்திய மக்களுக்கு அடிமைத்தனம் விடுதலை பெற முடியாதபடி பலப்பட்டு என்றென்றைக்கும் கட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறதோ அதுபோலவும் சமூகசீர்திருத்தம், சமத்துவம் என்பதாக வேஷம் போட்டுக் கொண்டு பார்ப்பனர்களும் புராணக்காரர்களும் சீர் திருத்தத்தில் பிரவேசித்து வருவதன் பலனாக எப்படி சமூகக் கொடு மைகளும் உயர்வு தாழ்வுகளும் சட்டத்தினாலும் மதத்தினாலும் நிலை பெற்று பலப்பட்டு வருகின்றதோ அது போலவுமே என்று சொல்லலாம்.

அன்றியும் ஆண்கள், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன் பெண்கள் என்றும் விடுதலை பெற முடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டு கொண்டு வருகின்றன. பெண் களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும் பெண்கள் விடுதலைக்காக பாடு படுவதாகவும் ஆண்கள் காட்டிக்கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்று வதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிகளால் ஆடு கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது முதலாளிகளால் தொழிலாளிகளுக்கு



விடுதலை உண்டாகுமா? எங்காவது வெள்ளைக்காரர்களால் இந்தியர் களுக்கு செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்பனர்களால் பார்ப்பனரல் லாதார்களுக்குச் சமத்துவம் கிடைக்குமா? என்பதை யோசித்தால் இதன் உண்மை விளங்கும். அப்படி ஒருக்கால் ஏதாவது ஒரு சமயம் ஷை விஷயங்களில் விடுதலை உண்டாய் விட்டாலுங் கூட ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது என்பதை மாத்திரம் உறுதியாய் நம்பலாம். ஏனெனில் ஆண்மை என்னும் பதமே பெண்களை இழிவுபடுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைப் பெண்கள் மறந்துவிடக் கூடாது அந்த ஆண்மை உலகில் உள்ள வரையிலும் பெண்மைக்கு மதிப்பு இல்லை யென்பதைப் பெண்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். உலகத்தில் "ஆண்மை" நிற்கும் வரையில் பெண்கள் அடிமையும் வளர்ந்தே வரும். பெண்களால் "ஆண்மை" என்ற தத்துவம் அழிக்கபட்டாலல்லாது பெண்மை விடுதலை யில்லை யென்பது உறுதி. "ஆண்மை"யால்தான் பெண்கள் அடிமையாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சுதந்தரம், வீரம் முதலிய குணங்கள் உலகத்தில் "ஆண்மை"க்குத் தான் உரியதாக்கப்பட்டுவிட்டது. ஏன்? "ஆண்மை"க்குத்தான் அவைகள் உண்டு என்று ஆண்மக்கள் முடிவு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதை மாத்திரம் பெண்கள் நன்றாய் உணர வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகின்றோம்.

எனவே பெண்மக்கள் அடிமையானது ஆண் மக்களாலேயேதான் ஏற்பட்டது என்பதும், அதுவும் "ஆண்மை"யும் பெண் அடிமையும் கடவுளாலேயே ஏற்படுத்தப்பட்டதாக எல்லா ஆண்களும் கருதிக் கொண்டி ருக்கிறார்கள் என்பதும், அதோடு பெண் மக்களும், இதை உண்மை என்றே நினைத்துக்கொண்டு வந்த பரம்பரை வழக்கத்தால் பெண் அடிமைக்கு பலம் அதிகம் ஏற்பட்டிருக்கின்றதென்பதும், நடுநிலைமைப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் யோசித்துப்பார்த்தால் விளங்காமல் போகாது. பொது மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு ஒழிய வேண்டுமானால், எப்படி கடவுளாலேயே மக்களுக்கு பிறவியில் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டிருக்கின்றது என்ற இந்துமதக் கொள்கையைச் சுட்டுப்பொசுக்க வேண்டியது அவசியமோ அதுபோலவே பெண்மக்கள் உண்மை விடுதலை பெற்று உண்மை சுதந்திரம் பெற வேண்டுமானால் "ஆண்மை"யும் "பெண் அடிமையும்" கடவுளால் உண்டாக்கப்பட்டவை என்பதற்குப் பொறுப்பாயுள்ள கடவுள் தன்மையும் ஒழிந்தாக வேண்டும்.

பெண்கள் விடுதலை பெறுவதற்கு இப்போது ஆண்களைவிடப் பெண்களே பெரிதும் தடையாயிருக்கின்றார்கள். ஏனெனில் இன்னமும் பெண்களுக்கு தாங்கள் முழு விடுதலைக்கு உரியவர்கள் என்கின்ற



RangaRakes tamilnavarasam.com

எண்ணமே தோன்றவில்லை. தங்களுடைய இயற்கைத் தத்துவங்களின் தன்மையையே தங்களை ஆண்களுக்கு அடிமையாகக் கடவுள் படைத்தி ருப்பதின் அறிகுறிகளாய்க் கருதிக் கொண்டிருக்கின்றார்கள். எப்படியெனில் பெண் இல்லாமல் ஆண் வாழ்ந்தாலும் வாழலாம்; ஆனால் ஆண் இல்லாமல் பெண் வாழமுடியாதென்று ஒவ்வொரு பெண்ணும் கருதிக் கொண்டிருக் கிறாள். அப்படி அவர்கள் கருதுவதற்கு என்ன காரணம் என்று பார்ப்போ மானால், பெண்களுக்குப் பிள்ளைகள் பெறும் தொல்லை ஒன்று இருப்பதால் தாங்கள் ஆண்கள் இல்லாமல் வாழ முடியும் என்பதை ருஜுப்படுத்திக் கொள்ள முடியாதவர்களாயிருக்கின்றார்கள். ஆண்களுக்கு அந்தத் தொந்த ரவு இல்லாததால் தாங்கள் பெண்கள் இல்லாமல் வாழ முடியும் என்று சொல்ல இடமுள்ளவர்களாயிருக்கின்றார்கள். அன்றியும் அப்பிள்ளை பெறும் தொல்லையால் தங்களுக்குப் பிறர் உதவி வேண்டியிருப்பதால் அங்கு ஆண்கள் ஆதிக்கம் ஏற்பட இடமுண்டாய்விடுகின்றது. எனவே உண்மை யான பெண்கள் விடுதலைக்கு பிள்ளை பெறும் தொல்லை அடியோடு ஒழிந்து போகவேண்டும். அது ஒழியாமல் சம்பளம் கொடுத்து புருஷனை நியமித்துக் கொள்வதாயிருந்தாலும் பெண்கள் பொதுவாகஉண்மைவிடுதலை அடைந்துவிட முடியாது என்றே சொல்லுவோம். இம்மாதிரி இதுவரை வேறு யாரும் சொன்னதாகக் காணப்படாவிட்டாலும் நாம் இதைச் சொல்வது பெரிதும் முட்டாள்தனமோ என்பதாகப் பொதுமக்கள் கருதுவார்கள் என்று இருந்தாலும் இந்த மார்க்கத்தைத் தவிர - அதாவது பெண்கள் பிள்ளை பெறும் தொல்லையில் இருந்து விடுதலையாக வேண்டும் என்கின்ற மார்க்கத்தைத் தவிர - வேறு எந்த வகையிலும் அவர்களுக்கு விடுதலை இல்லை என்கின்ற முடிவு நமக்குக் கல்லுப் போன்ற உறுதி உடையதாய் இருக்கின்றது. சிலர் இதை இயற்கைக்கு விரோதம் என்று சொல்லவரலாம். உலகத்தில் மற்றெல்லாத் தாவரங்கள், ஜீவப்பிராணிகள் முதலியவை இயற்கை வாழ்வு நடத்தும்போது மானிட வாழ்க்கையில் மாத்திரம் இயற்கைக்கு விரோதமாகவே அதாவது பெரும்பாலும் செயற்கைத் தன்மையாகவே வாழ்வு நடத்தி வருகின்றபோது, இந்த விஷயத்திலும் இயற்கைக்கு விரோத மாய் நடைபெறுவதில் ஒன்றும் முழுகிப் போய்விடாது.

தவிர "பெண்கள், பிள்ளை பெறுவதை நிறுத்திவிட்டால் உலகம் விர்த்தியாகாது, மானிட வர்க்கம் விர்த்தியாகாது" என்று தர்ம நியாயம் பேசச் சிலர் வருவார்கள். உலகம் விர்த்தியாகாவிட்டால் பெண்களுக்கு என்ன நஷ்டம்? மானிட வர்க்கம் பெருகாவிட்டால் பெண்களுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடும்? அல்லது இந்த தர்ம நியாயம் பேசுபவர்களுக்குத்தான் என்ன கஷ்டம் உண்டாகிவிடும் என்பது நமக்குப் புரியவில்லை. இது வரையில் பெருகிக் கொண்டு வந்த மானிட வர்க்கத்தால் மானிட வர்க்கத் திற்கு ஏற்பட்ட நன்மைதான் என்ன என்பதும் நமக்குப் புரியவில்லை.



பெண்களின் அடிமைத்தன்மை பெண்களை மாத்திரம் பாதிப்ப தில்லை. அது மற்றொரு வகையில் ஆண்களையும் பெரிதும் பாதிக்கின்றது. இதைசாதாரண ஆண்கள் உணருவதில்லை. ஆனால் நாம் இவ்விஷயத்தில் அதைப்பற்றிச் சிறிதும் கவலைகொள்ளவில்லை. பெண்களைப் பற்றியே கவலைகொண்டு சொல்லுகின்றோம். தற்கால நிலைமையில் பெண்களின் விடுதலைக்குப் பெண்களே வேறு எந்த முயற்சி செய்தாலும் அது சிறிதாவது ஆண்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கலாம். ஆனால் இந்தக்காரியத்தில், அதாவது பெண்கள் பிள்ளை பெறுவதில்லை என்கின்ற காரியத்தில் ஆண்களுக்கு எவ்விதக் கஷ்டமும் நஷ்டமும் கிடையாது என்ப தோடு ஆண்களுக்கு இலாபமும் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். எப்படியெனில் ஒரு மனிதன் தான் பிள்ளைகுட்டிக் காரணாயிருப்பதினாலேயே யோக்கியமாகவும் சுதந்திரமாகவும் நடந்து கொள்ளப் பெரிதும் முடியாமலிருக்க வேண்டியவனாய் விடுகிறான். அன்றி யும் அவனுக்கு அனாவசியமான கவலையும் பொறுப்பும் அதிகப்படவும் நேரிடுகின்றது. மற்றபடி இதனால் ஏற்படும் மற்ற விஷயங்களையும் முறைகளையும் மற்றொரு சமயம் விரிப்போம்.

**குடி அரசு - தலையங்கம் - 12.08.1928**



RangaRakes tamilnavarasam.com

# திரு. கண்ணப்பர்

"திராவிடன்" பத்திராதிபர் திரு. கண்ணப்பர் அவர்கள் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு அனுதாபம் காட்டியது பற்றி கைது செய்யப்பட்ட விபரம் முன்னமேயே தெரிவித்திருக்கின்றோம். திரு. கண்ணப்பர், பார்ப்பனரல்லாதார் மக்களின் நலத்திற்கு என்று இத்தமிழ்நாட்டில் திருவாளர் நாயர் பெருமானும், தியாகராய வள்ளலும் தோற்றுவித்த "தென் இந்தியர் நல உரிமைச் சங்கம்" என்னும் பார்ப்பனரல்லாதார் சங்கம் துவக்கப்பட்டது முதல் சுயநலம் கருதாது தொண்டாற்றி வருபவர்.

அச்சங்கத்தில் உழைத்து வந்த மக்களில் திரு. கண்ணப்பர் போன்று தன்னலம் கருதாமலும் உழைத்ததற்காக கூலி கேட்காமலும் உழைத்தவர்களைக் காண்பது மிகவும் கஷ்டமான காரியம் என்பது நாம் சொல்லாமலே விளங்கும். திரு. கண்ணப்பர் வெலம நாயுடு வகுப்பைச் சேர்ந்தவராயினும் அவருக்கு ஜாதிமத பேதமோ மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு என்கின்ற உணர்ச்சியோ ஒரு சிறிதுமில்லாத சமரசவாதியாவார். அவருக்கு இன்றைய வயது முப்பத்துஒன்றேயாகும். உறுதியும் தைரியமும் பெற்ற வீரர். தமிழிலும், ஆங்கிலத்திலும் பயிற்சியுள்ளவர். அவரது 22, 23 வது வயதிலே பிரசாரத்தில் புகுந்தவர். ஒத்துழையா இயக்கம் என்பதாக நமது நாட்டில் 7, 8 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கோடி ரூபாயை மூலதனமாகக் கொண்டு மேளதாளம், ஊர்வலம், பூமாலை, ஜே கோஷம் முதலியவைகளோடு பார்ப்பனரும் பார்ப்பனரல்லாத சிலரும் பாமர மக்களிடையில் பெரிதும் செல்வாக்குப் பெற்று பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் பிரசாரம் செய்து கொண்டிருக்கையில் திரு. கண்ணப்பர் கல்லடியும் மண்ணடியும் பெற்றுக் கொண்டதுடன் காலிகளின் உபத்திரவங்களையும் சமாளித்துக் கொண்டு வெகு தீரத்துடன் பார்ப்பனரல்லாதார் நலத்தின் பொருட்டு காங்கிரஸ் புரட்டையும் பார்ப்பனப் புரட்டையும் அவர்களது கூலிகளின் யோக்கியதையையும் வெளியாக்கி வெற்றிமாலை சூடிக்கொண்டு வந்தவர். சுமார் 4, 5 வருஷ காலமாக "திராவிடன்" பத்திரிகைக்கு யாதொரு ஊதியமும் இல்லாமல் தனது வாழ்க்கைக்கு மாத்திரம் வேண்டிய ஒரு சிறு அலவுன்சைப் பெற்றுக் கொண்டு இரவும் பகலும் இடைவிடாமல் உழைத்து வந்தவர்.

திரு. கண்ணப்பர் "திராவிடன்"பத்திரிகை ஆசிரியத் தன்மையை ஏற்றுக் கொள்ளும்போது அப்பத்திரிகை ஆயிரம் பிரதிகளுக்கு கீழாகவே வெளியாகிக் கொண்டிருந்ததோடு அவற்றில் மூன்றில் இரண்டு பங்கு பிரதிகளைப் பிரித்துக் கூடப் பார்ப்பவர்கள் இல்லாமல் குப்பைக்கு போய்க் கொண்டேயிருந்தது என்று சொல்வது ஒரு சிறிதும் மிகையாகாது. அப்பேர்ப்பட்ட "திராவிடன்" இன்று தினம் 6000 பிரதி வெளியாவதும் அதுவும் ஒவ்வொரு பத்திரிகையை 5, 10 பேர்கள் கூடி வாசிப்பதும் "திராவிடன்" பத்திரிகை படிக்குமிடங்களில் தெருக்கூத்துபோல் ஜனங்கள் கூடிக் கேட்பதும் ஆகிய இன்றைய நிலைக்கு திரு. கண்ணப்பர் அவர்களின் அஞ்சா நெஞ்சமும், பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு உயிரை ஒப்படைத்திருக்கும் தியாக உணர்வுமே பெரிதும் காரணமானது. அதுமாத்திரமல்லாமல் அவர் டைரக்டராகவும் முக்கிய மெம்பராகவும் இருக்கும் ஜஸ்டிஸ் கக்ஷி தலைவர்களின் அபிப்பிராய பேதங்களுக்கும் ஒரு சிறிதும் பயப்படாமல் சுயமரியாதை இயக்கக் கொள்கையையே தமது கொள்கையாகவும் தமது "திராவிடன்" பத்திரிகையின் கொள்கையாகவும் கொண்டு அரசாங்கத்திற்கும் சட்டத்திற்கும் சமய சமூக கட்டுப்பாட்டிற்கும் தனது கக்ஷிக்கும் தனது மனச்சாக்ஷியையோ கொள்கையையோ ஒரு சிறிதும் விட்டுக் கொடுக்காது மனிதத்தன்மையோடு போர் முனையில் நின்று கொண்டிருக்கின்றவர். இப்பேர்ப்பட்ட ஒரு சுயமரியாதை வீரர் இன்றையதினம் பார்ப்பனரல்லாத ஏழைத்தொழிலாள சகோதரர்களின் நெருக்கடியான சமயத்தில் தனது கடமையைச் செலுத்தியதன் மூலம் சிறைவாசம் செய்ய ஏற்பட்டது அவரது பாக்கியமேயாகும். அவர் அடைந்த இவ்வொப்பற்ற பாக்கியத்திற்காக தமிழ் மக்கள் அவரைப் பாராட்டாமலிருக்க முடியாது. அவரை 5 நாள் சிறையில் அடைத்து வைத்திருந்து ஜாமீனில் விட்டுச் சென்ற 6 தேதி அவர் மீதுள்ள இன்டியன் பினல் கோட் 143, 188(2) பிரிவுப்படி கேஸ் விசாரணை நடந்தது. விசாரணையில் நடந்த பல ஊழல்களாலும் அதிகாரிகளின் மனோபாவத்தாலும் பார்ப்பன ஆதிக்கமே இக்கேசுக்கு ஆதாரம் என அவர் உணர்ந்ததாலும் இதை வேறு கோர்ட்டுக்கு மாற்ற விண்ணப்பம் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இம்மாதம் 22 தேதி வரை வாய்தா கொடுக்கப்பட்டிருக்கிறது.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 12.08.1928**



RangaRakes tamilnavarasam.com

# மதராஸ் கவர்ன்மெண்டு ஆபீசும் பார்ப்பனரும்

1921ஆம் ஆகஸ்ட் மாதம் 5 உ சென்னை சட்டசபையில் கனம் திவான் பகதூர் ஓ. தணிகாசலம் செட்டியார் கொண்டு வந்து பாஸ் செய்த தீர்மானங்களுள் முக்கியமானது சென்னை கோட்டைக்குள் கொரடுபோட்டுக் கொண்டிருக்கிற பிராமணர்களுடைய கோட்டையை தகர்த்து, ஷை கோட்டையாகிய கவர்மெண்டு ஆபீசாகிய கோட்டைக்குள் பிராமணரல்லாதாரும் சூப்பிரண்டுகளாகவும் உயர்தர கிளார்க்குகளாகவும் செய்விக்க வேண்டுமென்பதும், அதுவும் மூன்று வருஷ காலத்திற்குள் நூற்றுக்கு ஐம்பதுக்கு குறையாமல் பிராமணரல்லாதாரை ஷை வேலைகளில் நியமிக்க வேண்டுமென்பதும், அந்த கவர்ன்மெண்டு ஆபீசில் இருக்கும் பிராமணருக்குப் பிரண்டுகள், கிளார்க்குகள் வெளிப்படுத்தப்படவேண்டு மென்பதுமான இந்த தீர்மானத்துக்கு என்ன மதிப்பு தந்தனர் கவர்ன்மெண்டார்? இந்த நிலைக்கு யார் உத்தரவாதம்? பிராமண உத்தம சீலர்களும். தீர்மானத்தை நிறைவேற்றக் கூடிய மனத்திடமில்லாத மினிஸ்டர்களும் அல்லவா? இதில் அதிக அக்கிரமமுடையது. சர்.சி.பி. ராமசாமி அய்யருடைய லா டிபார்ட்டுமெண்டு ஒரு பிராமண சூப்பிரண்டு கூட கவர்மெண்டு ஆபீசை விட்டு வெளிப்படுத்தவே இல்லை. பிராமணர்களுக்கே லா டிபார்ட்டுமெண்டு காணியாட்சியா? புது லா மெம்பர் இதைக்கவனிக்கும் படியாக வேண்டுகின்றோம். கனம் நாப்பு துரை தாம் கவனித்து ஏற்பாடு செய்வதாக கவுன்சிலில் வாக்களித்தார். அவரும் போய் விட்டார். திரு. தணிகாசலம் செட்டியாரும் சட்டசபையில் தற்போது இல்லை. இந்த நிலையில் இனியாவது சரியான நிலைமையிலுள்ள எல்லா அதிகாரிகளும், பிராமணரல்லாதாருக்கு நியாயம் நடத்துவார்கள் என்பது எங்கள் பூரண நம்பிக்கை. லா டிபார்டுமெண்டில் 100 –.க்கு 50க்கு மேல் பிராமணரல்லாதாரை சூப்பிரெண்டுகளாகவும் கிளர்க்குகளாகவும் அஸிஸ்டெண்டு செக்ரிடரிகளாகவும் ஆக்கி வைக்க வேண்டுமென்பது ஜஸ்டிஸ் கட்சிக்காரருடைய வேண்டுகோள். புது லாமெம்பர் கட்டாயம் இந்த அக்கிரமமான நடவடிக்கையை மாற்றி நியாயம் செய்ய வேணும். இனிமேல் புது லா மெம்பர் கவனித்து அக்கிரமத்தைக் குறைத்து மற்ற வகுப்பினரையும் லா டிபார்ட்மெண்டில் அதிகமாக சேர்க்கும்படி உத்திரவு உடனே பிறப்பிப்பார் என நம்புகிறோம். எங்கள் கோரிக்கை நிறைவேற வேண்டாமா? – நியாய வேண்டுகோள்.

**குடி அரசு – கட்டுரை – 12.08.1928**



# தொழிலாளர் வேலை நிறுத்தம்

தென் இந்திய ரயில்வெ தொழிலாளர் வேலை நிறுத்தமானது தொழிலாளர்களுக்கு பலன் கொடுக்காமல் போனதாக சிலர் சொல்வதானாலும் அந்த வேலை நிறுத்தம் பல "தலைவர்"களுக்கும் பத்திரிகைக்காரர்களுக்கும் கொழுத்த பலனைக் கொடுத்திருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது என்றே சொல்லுகின்றோம். என்னவென்றால் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக பல நாளாகவே எச்சரிக்கை செய்தும் ரயில்வே அதிகாரிகள் இணங்காமல் பிடிவாதமாயிருப்பதற்கும், வேலைநிறுத்தம் ஏற்பட்ட பிறகும் வேலைநிறுத்தத்திற்கு கேடு நேரிடுவதற்கும் உண்மையற்ற சமாசாரங்களை வெளிப்படுத்தியும், தொழிலாளர்கள் மீது பழிசுமத்தியும் எழுதிவந்த தலைவர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் நல்ல ஆதாயம் ஏற்பட்டதென்றே சொல்ல வேண்டும். ரயில்வே அதிகாரிகளும் தங்கள் அனுதாபிகளுடனும் சில பத்திரிகைக்காரர்களுடனும், சில தலைவர்களுடனும் இது விஷயமாய் தக்க முன்னேற்பாடுகள் செய்து கொண்டுதான் வேலை நிறுத்தத்தைச் செய்து தீர வேண்டிய அவசியத்தைக் கொண்டு வந்து விட்டார்களே ஒழிய வேறில்லை.

இந்த உண்மையானது ஏஜண்டின் முரட்டுத்தனத்தாலேயே ஒருவாறு ருஜுவாகாமல் போகாது. அதாவது திருவாளர் கோவை சி.எஸ். ரத்தின சபாபதி முதலியார் ஏஜண்டுக்கு மிகவும் அனுகூலமானவர் என்று சிலரால் சொல்லப்படுபவர். அவர் வேலைநிறுத்தத்தின் போது மக்களின் சுகாதாரத்தைப் பொறுத்தவரை அதாவது கக்கூஸ் சுத்தம் செய்வதற்கு ஆள் கொடுத்து உதவினவர். இதனால் சில தொழிலாளர்களுடைய மன வருத்தத்தையும் பெற்றவர். அப்படிப்பட்டவரே "தொழிலாளர் போராட்டத்தை ஒரு விதமாக முடிவு செய்யலாம் போலிருக்கின்றது. ஆதலால் இது விஷயத்தில் நான் ஏதாவது சேவை செய்ய ஆசைப்படுகின்றேன். அதற்கு இடம் கொடுக்கின்றீர்களா?" என்று ஏஜண்டைக் கேட்டதற்கு "உமது சேவை எனக்கு வேண்டியதில்லை, எனக்கு அவசியமுமில்லை" என்று மனிதத் தன்மைக்கேற்ற மரியாதை கூட இல்லாமல் தந்தி அடித்துவிட்டார். இம்மாதிரி மரியாதை கூட இல்லாமல் நடந்து கொண்டீர்களே என்று கேட்டால் அதற்கு பொருத்தமற்ற பதிலைச் சொல்லிவிட்டு, நீர் ஏதாவது சேவை செய்ய வேண்டுமென்கிற ஆசையிருந்தால் தொழிலாளர்களை என் காலில் கொண்டு வந்து



RangaRakes tamilnavarasam.com

கும்பிட வையும் என்பது போன்ற வன்னெஞ்சமான கடிதம் எழுதினார். இதை உத்தேசித்து அவர் அந்த ரயில்வே அட்வைசரி போர்டில் தனக்குள்ள மெம்பர் ஸ்தானத்தை ராஜீனாமா கொடுக்கக்கூடத் தீர்மானித்தார். அவரது உண்மை நண்பர்கள் சிலரின் வேண்டுகோளால் அது தடுக்கப்பட்டது. இதன் மேல் திரு. முதலியார் அடுத்துக் கூடப்போகும் சட்டசபைக் கூட்டத்தில் ஒரு அவசரத் தீர்மானம் கொண்டுவந்து தொழிலாளர் நிலையைப் பற்றிப் பேசப்போவதாக அறிகிறோம். இதனால் என்ன பலன் ஏற்படும் என்பது நமக்கு விளங்கவில்லை. சட்டசபை மண்டபத்திலுள்ள சுவர்களும் தூண்களும் திரு. முதலியார் பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பதால் என்ன பலன் விளையுமோ, அதுதான் அங்குள்ள சட்டசபை மெம்பர்களும் சர்க்கார் அதிகாரிகளும் கேட்டுக் கொண்டிருப்பதாலும் விளையுமே ஒழிய வேறில்லை.

அரசாங்கம் என்பதும், ரயில்வே முதலாளிகள் என்பதும், ஜனப் பிரதிநிதிகள், தலைவர்கள், காங்கிரசு, சுயராஜ்யம், தேசீயம் என்பதும், ஏழைகள் தலையில் கையை வைத்துக் கொள்ளையடித்துத் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்ளும் ஒரே தன்மைமையுடைய கொள்ளைக் கூட்டமே ஒழிய வேறில்லை என்று நாம் கோபுரத்தின் மீதிருந்தும் கூவுவோம். இதற்கு உதாரணம் வெகு தூரம் போகவேண்டியதில்லை. ஒவ்வொரு தன்மையிலும் தலைவர்களின் ஜீவிய சரித்திரத்தை சற்று ஞாபகப்படுத்திக் கொண்டால் போதுமானதாகும்.

எனவே ரயில்வெ அதிகாரிகளின் ஆணவத்திற்குக் காரணம் இன்னது என்பது இப்போதாவது பொது ஜனங்களுக்கு விளங்கியிருக்கும். இந்த மாதிரிப் பத்திரிகைகளினுடையவும் தலைவர்களினுடையவும் உதவி ஏஜண்டுக்கு விலை கொடுக்காமல் கிடைத்திருக்குமென்று யாராவது நம்பக் கூடுமா? ஆதலால்தான் இவ்வேலை நிறுத்தத்தால் பலருக்கு லாபம் என்று சொன்னோம். “குதிரை கீழே தள்ளினதல்லாமல் குழியும் பறித்தது” என்பது போல் வேலை நிறுத்தத்தை தோல்வியடையச் செய்தது போதாமல் தொழிலாளர்களை சிறையிலடைத்துக் கொடுமைப்படுத்தவும் பலமான காரியங்கள் செய்யப்பட்டும் வருவது மிகவும் வெறுக்கத்தக்கதென்றே சொல்லுவோம். கடலூர் சிறையில் சில தொழிலாளர்கள் தண்டிக்கப்பட்டு எண்ணெய்ச் செக்கு ஆட்டுவதாக கேள்விப்படுகின்றோம். பல தொழிலாளர்கள் மீது பல வருஷம் தண்டிக்கத்தக்க கேசுகளை ஜோடினை செய்வதாக கேள்விப்படுகின்றோம். போலித் தலைவர்களுக்கு அடிமைப்படாத தொழிலாளர் சங்கங்களை அடியோடு அழிக்க முயற்சிப்பதாகவும் கேள்விப்படுகின்றோம். இன்னமும் இதில் எழுதமுடியாத கொடுமைகளும் நடைபெறுவதாகத் தெரியவருகின்றது. இதனாலெல்லாம் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஒருக்காலும் தோல்வியடையச் செய்துவிட முடியாதென்றே சொல்லுவோம்.



தொழிலாளர்கள் தாங்கள் செய்தது தப்பு என்பதாக உணர்ந்து ரயில்வே அதிகாரிகளின் காலில் போய் விழுந்தால்தான் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், அதுவும் காலில் விழுந்தவர்களைப் பொறுத்தவரையில் தோல்வி அடைந்ததாகுமே யொழிய மற்றப்படி அவர்கள் எந்த லட்சியத்தை உத்தேசித்து வேலை நிறுத்தம் செய்தார்களோ அந்த லட்சியம் நிறைவேறினாலொழிய என்ன கஷ்டம் நேர்ந்தாலும் தொழிலுக்குப் போவதில்லை என்று முடிவு செய்து கொண்ட சுயமரியாதையுடைய தொழிலாளர்களுக்கு எந்த விதத்திலும் தோல்வி ஏற்படுமென்று சொல்லமுடியாது.

உதாரணமாக இதுவரை சுமார் 5000 தொழிலாளர் தங்கள் வேலையை ராஜீனாமா கொடுத்துவிட்டு வேறு கௌரவமான வேலையில் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொள்ளுவது என்று முடிவு செய்துவிட்டார்கள். இந்த மன உறுதியையும், சுயமரியாதைத் தன்மையையும் கெடுக்கவே மறுபடியும் சில பத்திரிகைகளும் சில தலைவர்கள் என்போர்களும் சூழ்ச்சி செய்வதோடு சர்க்கார் ஆட்சியும் அதற்குத் துணைபோய்க்கொண்டு கண்டபடி அரஸ்ட் செய்வதும், தண்டிப்பதும், வழக்கு ஜோடிப்பதும், ஜெயிலில் கொடுமைப் படுத்துவதுமான அக்கிரமங்களைச் செய்து கொண்டு வருகின்றது. இவைகளால் நாம் ஒரு சிறிதும் அதிசயப்படவில்லை. இந்த நாட்டின் தற்கால நிலை இதுதான் என்று நாம் கொஞ்சகாலத்திற்கு முன்னாலேயே முடிவுசெய்து கொண்டுதான் இந்தத் தொண்டில் இறங்கியிருக்கின்றோம்.

இதிலிருந்து தேசீயம் என்பதும், அரசியல் என்பதும், சீர்திருத்தம் என்பதும், சுயராஜ்யம் என்பதும், தொழிலாளர் நன்மை என்பதும், காங்கிரஸ் என்பதும், சைமன் பகிஷ்காரம் என்பதும் தொழிலாளர்கள், தலைவர்கள் என்பதும், தேசீயத் தலைவர்கள் என்பதும் தேசீயப் பத்திரிகைகள் என்பதும், தொழிலாளர்கள் நன்மைக்குப் பாடுபடும் பத்திரிகைகள் என்பதும், ஏழைகளிடத்தில் அன்புள்ள முதலாளிகள் என்பதும், ஏழைகள் நன்மைக்குப் பாடுபடும் அரசாங்கம் என்பதும் ஆகியவைகளின் புரட்டுகளை மக்கள் அறிந்து கொள்ள ஒருவாறு வசதி ஏற்பட்டதென்றே நினைக்கிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 19.08.1928**



RangaRakes tamilnavarasam.com

# இந்துமத தத்துவம்

திருப்பதியில் திருப்பதி தேவஸ்தான பண்டில் நடைபெறும் ஒரு பள்ளிக்கூடத்தில் சமஸ்கிருத வியாகரண வகுப்பில் பார்ப்பனரல்லாத பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது என்று பள்ளிக்கூட அதிகாரிகள் மறுத்துவிட்டார்களாம். பொது ஜனங்கள் இதைப்பற்றி தேவஸ் தான அதிகாரியாகிய மகந்துவிடம் சொன்னதில் அவர் தமக்குத் தெரியாது என்று சொல்லி விட்டாராம்.

மிஸ். மேயோ, இந்திய மக்கள் கல்வியறிவில்லாமல் இருப்பதற்கு பார்ப்பனர்களே காரணம் என்று தமது "இந்தியத் தாய்" என்ற புத்தகத்தில் எழுதியதற்கு "தேசீயத் தலைவர்களான" திரு. சத்தியமூர்த்தி பனக்கால் ராஜாவை சமூகத் துரோகி, தேசத்தைக் காட்டிக் கொடுத்த தேசத்துரோகி என்ற பொருள்படக் கூறினார். மற்றொரு "தேசீயத் தலைவர்" மிஸ். மேயோவை "குப்பைக்காரி" என்று கூறினார்.

இவர்கள் திருப்பதி பள்ளிக்கூட நடவடிக்கைகளுக்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள் என்று கேட்கின்றோம்.

சமஸ்கிருதம், தேவபாஷை, பொதுபாஷை, மதபாஷை, அறிவு பாஷை என்று சொல்லி அதற்கு பார்ப்பனரல்லாதார் பணத்தில் பள்ளிக் கூடம் ஏற்படுத்துவதும், அதில் பார்ப்பனரல்லாதார் பிள்ளைகள் படிக்க ஆசைப்பட்டால் மறுப்பதுமான அயோக்கியத்தனத்தை ஒழிக்கவோ கண்டிக்கவோ இதுவரை எந்த தேசீயத் தலைவர்கள் முன் வந்தார்கள் என்று கேட்கின்றோம்.

பார்ப்பனர்களின் புன்சிரிப்புக்கு பயந்து கொண்டு அவர்கள் காலுக்கு முத்தமிட்டு வரும் "தேசீய வீரமுழக்கம்" இப்போது எங்கே போய் ஒளிந்து கொண்டது என்று கேட்கின்றோம்.

செத்த பாம்பை ஆட்டுவது போல் "செத்துச் சுட்டுச் சாம்பலாக்கி ஆற்றில் கரைத்து விட்டுக் காடாற்றிக் கருமாதியும்" நடந்து விட்ட சைமன் கமிஷன் பகிஷ்காரத்தைப்பற்றியும் சூழ்ச்சியும் தந்திரமும் பார்ப்பன ஆதிக்கமும் வயிற்றுச் சோற்று தேச பக்தர்களின் பிழைப்புக்கு மார்க்கமும்



நிறைந்த தேசீயத் திட்டத்தைப் பற்றியும் கூக்குரலிட்டு கூலி வாங்குகின்றார் களேயொழிய இந்த விஷயத்தில் யாராவது கவலை செலுத்தி வருகிறார்களா என்று கேட்கின்றோம்.

வேதம்தான் "சூத்திரர்கள் என்கின்ற வேசி மகனும் பார்ப்பனர் தாசி மகனுமாகிய" பார்ப்பனரல்லாதார் படிக்கக் கூடாது என்றால் வியாகரணம் என்கின்றதான பொதுவான இலக்கணமும் கூட பார்ப்பனரல்லாதார் படிக்கக் கூடாது என்று சொல்லுவது எவ்வளவு அயோக்கியத்தனமானது என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை. எந்தப்படிப்பை பார்ப்பனரல்லாதார் படிக்கக் கூடாதோ அந்தப் படிப்புக்கு பார்ப்பனரல்லாதார் பணத்தை உபயோகப்படுத் தலாமா என்று கேட்பதுடன் சற்றாவது மானமோ, வெட்கமோ, சுய மரியாதையோ, சுத்த ரத்த ஓட்டமோ உள்ள கூட்டமானால் இந்தக் காரியம் செய்யமுடியுமா என்று கேட்கின்றோம்.

இனியாவது சர்க்காரோ அல்லது இந்து மத பரிபாலன போர்டாரோ அல்லது பொது ஜனங்களோ இந்தக் காரியத்தில் பிரவேசித்து இந்த மாதிரி பொது நன்மைக்கல்லாத தனிப்பட்டவர்களின் நன்மைக்கு ஏற்றதுமான காரியங்களுக்கு பொதுமக்களின் பணத்தை உபயோகப்படுத்தாமல் பார்த்துக் கொள்ளக்கூடுமா என்று கேட்கின்றதுடன் சுயமரியாதை என்றால் என்ன என்று விழிப்பதுடன் தூங்கிக் கொண்டிருப்பது போன்ற விதண்டா வாதிகளுக்கு இதிலிருந்தாவது சுயமரியாதை என்பது இன்னதென்று புரியுமா என்று கேட்கின்றோம்.

**குடி அரசு – கட்டுரை – 19.08.1928**



RangaRakes tamilnavarasam.com

# "கோவில் பிரவேசம்"

தீண்டாதார் என்பவர்களை கோவிலுக்குள் விடவேண்டுமென்பதும், பார்ப்பனனுக்கு வேறு இடம் நமக்கு வேறு இடம் என்று இருக்கக் கூடாது என்பதும், உள்ளே போய் சுவாமி தெரிசனம் செய்வதாலோ தொட்டுக் கும்பிடுவதாலோ பக்தி அதிகமாகுமென்றோ, பலன் அதிகமென்றோ கருதி அல்ல என்பதை பொது ஜனங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளு கின்றோம்.

அக் கோயில்களின் நிபந்தனைகள் மக்கள் சுயமரியாதைக்கு இடை யூறாகவும் உயர்வு தாழ்வு கற்பிப்பதற்கு ஆதாரமாகவும் இருப்பதால் இவை களுக்கு ஆதாரமான சகலத்தையும் ஒழிக்க வேண்டுமென்றே கருதி இதை செய்யத் தூண்டுகின்றோமேயல்லாது சாமி என்று ஒன்று இருந்தால் அங்கு தான் இருக்கக்கூடுமென்றோ, அந்தக் கல்லுச்சாமிக்கு பக்கத்தில் போவதால் அதிக லாபம் கிடைக்குமென்றோ நினைத்திருக்கும் படியான அவ்வளவு முட்டாள்தனத்துடன் நாம் கோவிலில் எல்லோருக்கும் சம உரிமை கேட்கவில்லை.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 19.08.1928**



# சுயமரியாதை போதனாமுறைப் பாடசாலை

ஈரோட்டில் சுயமரியாதைப் பிரசாரத்திற்கு போதனாமுறைப் பாட சாலை ஏற்படுத்துவதாய் 'குடி அரசி'லும் 'திராவிடனி'லும் வெளியிட்டிருந்த படி நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் வந்திருப்பவைகளில் சுமார் 20 பேர்களுக்கு மட்டும் சில நிபந்தனைகள் கண்டு தனித்தனியாக கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவர்கள் தயவு செய்து உடனே அதில் கண்ட விபரங்களுக்கு பதில் எழுதிவிட்டு இவிடமிருந்து வரும் படி கடிதம் வந்தால் ஆவணி மாதம் 15 ம் தேதி வாக்கில் இவிடம் இருக்கத் தயாராயிருக்க வேண்டும். படுக்கை, புராணம், சாஸ்திரம் என்பதான புஸ்த கங்கள் முதலிய அவரவர்களுக்கு வேண்டிய சவுகரியமான சாமான்களுடன் வரவேண்டியிருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - அறிவிப்பு - 19.08.1928**



RangaRakes tamilnavarasam.com

# திரு. வேதாசலம்

திரு. வேதாசலம் அவர்களின் சென்னை ராயபேட்டை குகாநந்த நிலைய ஆண்டு விழா வைபவத்தின் அக்கிராசனப் பிரசங்கத்திலும் திரு வாளர் தண்டபாணிபிள்ளை, கண்ணப்பர், ராமனாதன் ஆகியோர்களின் வாதங்களின் போதும் பேசிய விஷயங்களைப்பற்றி வெளியான "தமிழ்நாடு" "திராவிடன்" பத்திரிகையில் கண்ட விஷயங்களுக்கு திரு வேதாசலம் அவர்களின் சமாதானமோ மறுப்போ ஒரு வாரத்தில் வராத பக்ஷத்தில் நாம் அதன் ஆராய்ச்சியை தெரிவிப்பதாக எழுதியிருந்தோம், அந்தப்படி இதுவரை அவரால் யாதொரு மறுப்போ சமாதானமோ இதுவரை வராததால் திரு. வேதாசலம் என்னும் தலைப்பில் அவற்றை ஆராய்ந்து எழுதி வருவோம் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம். இந்த நிலையில் மற்றவர்கள் எழுதும் வியாசங்களுக்கு போதிய இடமளிக்க முடியாமைக்கும் வருந்துகின்றோம்.

**குடி அரசு - அறிவிப்பு - 19.08.1928**



# இந்து கடவுள்கள்

**- சித்திரபுத்திரன்**

## 1. பிள்ளையார்

இந்து மதம் என்பதில் உள்ள கடவுள்களின் எண்ணிக்கை "எண்ணித் தொலையாது. ஏட்டிலடங்காது" என்பதுபோல் எண்ணிக்கைக்கு அடங்காத கடவுள்கள் சொல்லப்பட்டிருப்பதும் அத்தனை கடவுள்களுக்கும் புராணம், கோயில், குளம், பூஜை, உற்சவம், பஜனை, பாட்டு முதலியதுகள் ஏற்படுத்தி இருப்பவை அவைகளுக்காக நமது இந்திய நாட்டில் வருடம் ஒன்றுக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்களும், பல கோடி ரூபாய் பெரும்படியான நேரங் களும், பல கோடி ரூபாய் பெரும்படியான அறிவுகளும் வெகுகாலமாய் பாழாய்க்கொண்டு வருவதும் எவராலும் சுலபத்தில் மறுக்கக்கூடிய காரியமல்ல.

இக்கடவுள்களில் முதன்மை பெற்றதும், மக்களிடம் மிகவும் செல் வாக்குப் பெற்றதும், இந்துக்கள் என்பவர்களில் ஏறக்குறைய எல்லோ ராலும் ஒப்புக்கொண்டு வணங்கப்படுவதுமான கடவுள் பிள்ளையார் என்பது. இதனைக் கணபதி என்றும் விநாயகர் என்றும் விக்கினேஸ்வரன் என்றும் இன்னும் இதுபோன்ற பல நூற்றுக்கணக்கான பெயர்களைச் சொல்லி அழைப்பதும் உண்டு.

நிற்க, இந்தப் பிள்ளையார் என்னும் கடவுளை இந்துக்கள் என் பவர்கள் தங்களுடைய எந்தக் காரியத்திற்கும் முதன்மையாய் வைத்து வணங்குவதும், கடவுள்களுக்கெல்லாம் முதல் கடவுளாக வணங்குவதுமாக இப்போது அமுலில் இருக்கும் வழக்கத்தை எந்த இந்து என்பவனாலும் மறுக்க முடியாது. ஆகவே இப்படிப்பட்டதான யாவராலும் ஒப்புக்கொள்ளக் கூடியதும் அதிசெல்வாக்குள்ளதும் முதற் கடவுள் என்பதுமான பிள்ளை யாரின் சங்கதியைப் பற்றி சற்று கவனிப்போம். ஏனெனில் கடவுள்களின் சங்கதி தெரிய வேண்டுமானால் முதல் முதலாக முதற் கடவுளைப்பற்றித் தெரிவதுதான் நன்மையானதாகும். ஏனெனில் முதல் கடவுள் என்று சொல்லப்படுவதின் சங்கதி இன்னது மாதிரி என்பதாகத் தெரிந்தால் மற்ற



RangaRakes tamilnavarasam.com

கடவுள்கள் சங்கதி தானாகவே விளங்க ஏதுவாயிருக்கலாம். அன்றியும் எந்தக் காரியம் ஆரம்பித்தாலும் முதலில் பிள்ளையார் காரியத்தைக் கவனிக்க வேண்டியது முறையென்று சொல்லப்படுவதால் நாமும் கடவுள்களின் கதைகளைப் பற்றி விளக்கப் போவதில் முதல் கடவுளைப் பற்றி ஆரம்பிக்க வேண்டியதும் முறையாகுமன்றோ. இல்லாவிட்டால் "அக்கடவுளின் கோபத்திற்கு ஆளாக நேரிட்டு எடுத்த இக்காரியத்திற்கு விக்கினம் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும்" அன்றியும் சமீபத்தில் அக் கடவுளின் உற்சவம் (பிள்ளையார் சதுர்த்தி) ஒன்றும் வரப்போவதால் இந்தச் சமயம் ஒரு சமயம் பொருத்தமானதாகவும் இருக்கலாம். ஆதலால் தொடங்குதும்.

## பிள்ளையார் பிறப்பு

1. ஒரு நாள் சிவனின் பெண்ஜாதியான பார்வதிதேவி தான் குளிக்கப் போகையில் குளிக்குமிடத்திற்கு வேறு ஒருவரும் வராமல் இருக்கும் படியாக ஒரு காவல் ஏற்படுத்துவதற்காக தனது சரீரத்தில் உள்ள அழுக்கு களைத் திரட்டி உருட்டி அதை ஒரு ஆண் பிள்ளையாகும்படி கீழே போட்டதாகவும், அது உடனே ஒரு ஆண் குழந்தை ஆகிவிட்டதாகவும், அந்த ஆண் குழந்தையைப் பார்த்து "நான் குளித்துவிட்டு வெளியில் வரும் வரை வேறு யாரையும் உள்ளே விடாதே" என்று சொல்லி அதை வீட்டு வாயிற்படியில் உட்கார வைத்திருந்ததாகவும் அந்தச் சமயத்தில் பார்வதி புருஷனான பரமசிவன் வீட்டிற்குள் புகுந்ததாகவும், அழுக்குருண்டையான வாயில் காக்கும் பிள்ளையார் அந்தப் பரமசிவனைப் பார்த்து "பார்வதி குளித்துக் கொண்டிருப்பதால் உள்ளே போகக் கூடாது" என்று தடுத்ததாகவும், அதனால் பரமசிவக் கடவுளுக்கு கோபம் ஏற்பட்டு தன் கையிலிருந்த வாளா யுதத்தால் ஒரே வீச்சாக அந்தப் பிள்ளையார் தலையை வெட்டிக் கீழே தள்ளி விட்டு குளிக்குமிடத்திற்குள் போனதாகவும், பார்வதி சிவனைப் பார்த்து "காவல் வைத்திருந்தும் எப்படி உள்ளே வந்தாய்" என்று கேட்டதாகவும் அதற்குச் சிவன் "காவல்காரன் தலையை வெட்டி உருட்டி விட்டு வந்தேன்" என்று சொன்னதாகவும், இது கேட்ட பார்வதி தான் உண்டாக்கின குழந்தை வெட்டுண்டதற்காகப் புரண்டு புரண்டு அழுததாகவும், சிவன் பார்வதியின் துக்கத்தை தணிக்க வேண்டி வெட்டுண்டு கீழே விழுந்த தலையை எடுத்து மறுபடியும் ஒட்டவைத்து உயிர் கொடுக்கலாம் எனக்கருதி உடனே வெளியில் வந்து பார்க்க வெட்டுண்ட தலை காணாமல் போனதால் அருகிலிருந்த ஒரு யானையின் தலையை வெட்டி முண்டமாகக் கிடந்த குழந்தையின் கழுத்தில் ஒட்ட வைத்து அதற்கு உயிரைக் கொடுத்து பார்வதியை திருப்தி செய்த தாகவும் கதை சொல்லப்படுகின்றது. இக்கதைக்கு சிவபுராணத்திலும், கந்த புராணத்திலும் ஆதாரங்களுமிருக்கின்றனவாம்.



2. ஒரு காட்டில் ஆண் பெண் யானைகள் கலவி செய்யும்போது சிவ னும் பார்வதியும் கண்டு கலவி ஞாபகமேற்பட்டுக் கலந்ததால் யானை முகத் துடன் குழந்தை பிறந்தது என்றும் பிள்ளையார் கதையில் கூறுகின்றதாம்.

3. பார்வதி கர்ப்பத்தில் ஒரு கருவுற்றிருக்கையில் ஒரு அசுரன் அக் கருப்பைக்குள் காற்று வடிவமாகச் சென்று அக்கருச் சிசுவின் தலையை வெட்டிவிட்டு வந்ததாகவும் அதற்குப் பரிகாரமாகப் பார்வதி யானையின் தலையை வைத்து உயிர் உண்டாக்கி குழந்தையாகப் பெற்றுக் கொண்ட தாகவும் விநாயகர் புராணம் கூறுகின்றதாம்.

4. தக்கனுடைய யாகத்தை அழிப்பதற்காக சிவன் தனது மூத்த குமாரனாகிய கணபதியை அனுப்பியதாகவும், தக்கன் அக்கணபதி தலையை வெட்டிவிட்டதாகவும், சிவன் தனது இரண்டாவது பிள்ளையாகிய சுப்பிர மணியனை அனுப்பினதாகவும், அவன் போய்ப் பார்த்ததில் தலை காணப் படாமல் வெறும் முண்டமாய்க் கிடந்ததாகவும், உடனே ஒரு யானையின் தலையை வெட்டி வைத்து உயிர்ப்பித்ததாகவும் மற்றொரு கதை சொல்லப் படுகின்றது. இது தக்கயாகபரணி என்னும் புஸ்தகத்தில் இருக்கின்றதாம்.

இன்னும் பல வழிகள் சொல்லப்படுகின்றன. அதனைப் பற்றியும் இப்பிள்ளையாரின் மற்ற கதைகளைப் பற்றியும் மற்றொரு சமயம் கவனிக்கலாம்.

எனவே பிள்ளையார் என்னும் கடவுள் சிவனுக்கோ பார்வதிக்கோ மகனாக பாவிக்கப்பட்டவர் என்பதும் அந்தப் பிள்ளையாருக்கு யானைத் தலை செயற்கையால் ஏற்பட்டதென்பதும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயமாகும்.

கடவுள் கூட்டத்தில் முதல்வரான பிள்ளையார் சங்கதியே இப்படிப் பலவிதமாகச் சொல்லப்படுவதும். அவைகளிலும் எல்லாவிதத்திலும் அவர் பிறரால் உண்டாக்கப்பட்டதாகவும், பிறப்பு வளர்ப்பு உடையவராகவும் ஏற்படுவதுமானதாயிருந்தால் மற்றக் கடவுள்கள் சங்கதியைப்பற்றி யோசிக்க வும் வேண்டுமா? நிற்க, ஒரு கடவுளுக்குத் தாய் தகப்பன் ஏற்பட்டால் அந்தத் தாய் தகப்பன்களான கடவுள்களுக்கும் தாய் தகப்பன்கள் ஏற்பட்டுத்தானே தீரும். ( இவைகளைப் பார்க்கும்போது கடவுள்கள் தாமாக ஏற்பட்டவர்கள் என்றால் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? ஆகவே இந்தக் கடவுள்களும் உலகமும் ஏற்பட்டதற்கு வேறு ஆதாரங்களைக் கண்டு பிடிக்க வேண்டியதாயிருக்கின்றது. இதனைப் பின்னால் கவனிக்கலாம்)

கடவுளைப் பற்றிய விவகாரங்களோ சந்தேகங்களோ ஏற்படும் போது மாத்திரம் "கடவுள் ஒருவர்தான், அவர் நாம ரூப குணமற்றவர், ஆதியந்தமற்



RangaRakes tamilnavarasam.com

றவர், பிறப்பு இறப்பு அற்றவர். தானாயுண்டானவர்" என்று சொல்லுவதும் மற்றும் "அது ஒரு சக்தி" என்றும், "ஒரு தன்மை அல்லது குணம்" என்றும் பேசி அந்தச் சமயத்தில் மாத்திரம் தப்பித்துக் கொண்டு பிறகு இம்மாதிரி கடவுள்களைக் கோடிகோடியாய் உண்டாக்கி அவைகளுக்கு இது போன்ற பல ஆபாசக் கதைகளை வண்டி வண்டியாய்க் கற்பித்து அவற்றை யெல்லாம் மக்களை நம்பவும் வணங்கவும் பூசை செய்யவும் உற்சவம் முதலியன செய்யவும் செய்வதில் எவ்வளவு அறியாமையும் புரட்டும் கஷ்டமும் நஷ்டமும் இருக்கின்றது என்பதை வாசகர்கள்தான் உணர வேண்டும்.

உதாரணமாக ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகின்றோம். சிதம்பரக் கோவிலில் யானை முகங்கொண்ட ஒரு பிள்ளையார் சிலை செய்து அதன் தும்பிக்கையை மற்றொரு பெண்சிலையின் பெண் குறிக்குள் புகவிட்டு இக்காட்சியை யாவருக்கும் தெரியும்படியாகச் செய்திருப்பதுடன் இந்தக் காட்சிக்கு தினமும் முறைப்படி பூசையும் நடந்து வருகின்றது. பல ஆண் பெண் பக்தர்கள் அதைத் தரிசித்துக் கும்பிட்டும் வருகின்றார்கள்.

சில தேர்களிலும் ஒரு பிள்ளையார் உருவம் தனது துதிக்கையை ஒரு பெண் உருவத்தின் பெண்குறியில் புகுத்தி அப்பெண்ணைத் தூக்கிக் கொண்டிருப்பது போலவும் அந்தப் பெண் இரண்டு காலையும் அகட்டிக் கொண்டு அந்தரத்தில் நிற்பது போலவும் செதுக்கப்பட்டிருக்கின்றது. இவைகளைப் பார்த்த யாராவது இது என்ன ஆபாசம் என்று கேட்டால், இவைகளுக்கு ஒரு கதையும் புராணமும் இருப்பதாகவும் சொல்லப் படுகின்றது.

அதாவது ஏதோ ஒரு அசுரனுடன் மற்றொரு கடவுள் யுத்தம் செய்த தாகவும், அந்த யுத்தத்தில் தோன்றிய அசுரர்களை யெல்லாம் அந்தக் கடவுள் கொன்று கொண்டே வந்தும், தன்னால் முடியாத அளவு சூரர்கள் ஒரு அசுர ஸ்திரீயின் பெண் குறியில் இருந்து ஈசல் புற்றிலிருந்து ஈசல் புறப்படுவது போல் பல லக்ஷக்கணக்காய் வந்து கொண்டே இருந்ததாகவும், இதை அறிந்த அந்தக் கடவுள், பிள்ளையார் கடவுளின் உதவியை வேண்டியதாகவும் உடனே பிள்ளையாரானவர் ஈசல் புற்றிலிருந்து கரடி ஈசல்களை உறிஞ்சுவது போல் தனது தும்பிக்கையை அந்த ஸ்திரீயின் பெண் குறிக்குள் விட்டு அங்கிருந்த அசுரர்களையெல்லாம் ஒரே உறிஞ்சாக உறிஞ்சி விட்டதாகச் சொல்லப்படுகின்றது. எனவே இம்மாதிரியான காட்டுமிராண்டித் தன்மையான ஆபாசங்களுக்கு, கண்டதையெல்லாம் கடவுள் என்று சொல்லும் "ஆஸ்திகர்கள்" என்ன பதில் சொல்லக்கூடும் என்று கேட்கின்றோம்.

"எவனோ ஒருவன் ஒரு காலத்தில் இப்படி எழுதி விட்டான்" என்று பொறுப்பில்லாமல் சொல்லிவிட்டால் போதுமா? இன்றையத் தினமும் அவ்வெழுத்துக் கொண்ட ஆதாரங்கள் போற்றப்படவில்லையா? அன்றியும்



RangaRakes

பல கோவில்களில் உருவாரங்களாகத் தோன்றவில்லையா? இதை "எவனோ ஒருவன் செய்து விட்டான்" என்று சொல்வதானால் இவைகளுக்குத் தினமும் பெண்டுபிள்ளை வாகனம் முதலியவைகளுடன் பூஜைகள் நடக்க வில்லையா? என்பது போன்றவைகளைச் சற்று யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக்கொள்ளுகின்றோம்.

சீர்திருத்தக்காரர்கள் "அப்படி இருக்க வேண்டும்" "இப்படி இருக்க வேண்டும்" என்றும் "மதத்திற்கு ஆபத்து, சமயத்துக்கு ஆபத்து, கடவுள் களுக்கு ஆபத்து" என்றும் கூப்பாடு போட்டு மதத்தையும் கடவுளையும் காப்பாற்றவென்று அவைகளிடம் "வக்காலத்துபெற்று" மற்ற மக்கள் துணையைக் கோரும் வீரர்கள் யாராவது இதுவரை இந்த ஆபாசங்களை விலக்க முன்வந்தார்களா என்றும் கேட்கின்றோம்.

இவற்றையெல்லாம் பற்றி எந்த ஆஸ்திக சிகாமணிகளுக்கும் ஒரு சிறிதும் கவலையில்லாவிட்டாலும் பிள்ளையார் சதுர்த்தி என்கின்ற உற்சவம் என்றைக்கு என்பதில் மாத்திரம் வாதத்திற்கும் ஆராய்ச்சிக்கும் குறைவில்லை என்று சொல்வதோடு இந்த ஆபாசங்களையெல்லாம் ஒழிக்க முயற்சிக்காமல் சும்மா இருந்து கொண்டும், இவ்வாபாசங்களை பிரசங்கம் பண்ணிக் கொண்டும் இருந்துவிட்டு இதை எடுத்துச் சொல்லுபவர்களை நாஸ்திகர்கள் என்று சொல்லி விடுவதாலேயே எந்தக் கடவுளையும் எந்தச் சமயத்தையும் காப்பாற்றிவிட முடியாதென்றே சொல்லுவோம். இனி அடுத்த முறை அடுத்த கடவுளைப் பற்றிக் கவனிப்போம்.

**குடி அரசு – கட்டுரை – 26.08.1928**



tamilnavarasam.com

# தொழிலாளர் தூது

பார்ப்பனரல்லாதார் தலைவர்களாகிய திருவாளர்கள் கோவை சட்டசபை அங்கத்தினரான ராவ் பகதூர் சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களும், மதுரை சட்டசபை அங்கத்தினர் திருவாளர் பி.டி. இராஜன் அவர்களும், சென்னை திருவாளர் ஏ. ராமசாமி முதலியார் அவர்களும் தென் இந்திய ரயில்வே தொழிலாளர்கள் நெருக்கடி விஷயமாக சென்னை கவர்னர் துரை அவர்களை பேட்டி கண்டு பேச வேண்டுமென்று தெரியப்படுத்திக் கொண்டதற்கேற்ப கவர்னர் துரையவர்களும் சம்மதித்து பேட்டி கொடுத்துப் பேசினார்கள்.

தூது சென்ற கனவான்கள் மூவரும், தொழிலாளர்களை ரயில்வேக் காரர்கள் கொடுமைப்படுத்திய விஷயங்களையும், சர்க்கார் அதிகாரிகள் அடக்கு முறை மூலம் தொழிலாளர்களுக்குச் செய்த அநீதிகளையும் பற்றி விரிவாய் எடுத்துச் சொன்னதின் பேரில் கவர்னர் துரையவர்கள் யாவற்றை யும் பொறுமையாய் வெகு அனுதாபத்துடன் கேட்டு இதுவிஷயத்தில் தம்மால் கூடியதைச் செய்வதாக வாக்களித்ததாகத் தெரிய வருகின்றது.

பொதுவாக தொழிலாளர் தலைவர்களில் சிலர் மீதும் தொழிலாளர் களின் அனுதாபிகள் பலர் மீதும் ஸ்தல அதிகாரிகள் 144 உத்திரவு பிரயோகித்து அடக்கினதைப் பற்றியும் இது விஷயமாய் சில இடங்களில் வழக்குத் தொடுத்ததைப் பற்றியும் கவர்னர் துரையும் மற்றும் அவரது நிர்வாக சகாக்களும் மனவருத்தமடைந்ததாகவும் தெரியவருகின்றது. பலாத்காரமான செய்கைகளில் சம்பந்தப்பட்டதாக போதுமான ருஜு கிடைக்கப்பெற்று நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் விஷயங்கள் தவிர, மற்றபடி தொழிலாளர்கள் விஷயத்திலும் பிரசாரகர்கள் விஷயத்திலும் அனுதாபிகள் விஷயத்திலும் ஸ்தல அதிகாரிகள் எடுத்துக் கொண்ட முறைகளைப் பற்றியும் வழக்குகளைப் பற்றியும் தங்கள் முழுகவனத்தைச் செலுத்தி அவைகளுக்குப் பரிகாரம் தேடுவதாக வாக்களித்திருப்பதாகவும் தெரிய வருகின்றது. சட்ட மெம்பரின் நிர்ப்பந்தத்தின் மீதிலேயே பல இடங்களில் ஸ்தல அதிகாரிகள் பிரயோகித்த 144 பாணங்களை திருப்பி வாங்கிக் கொள்ள நேர்ந்ததாகவும் தெரிகின்றது.



போலீஸ் இலாக்கா மெம்பரின் நிர்ப்பந்தம் காரணமாகவே ஸ்தல போலீஸ் அதிகாரிகளின் அக்கிரம அடக்குமுறை வழக்குகளை பின்வாங்கிக் கொள்ளச் செய்யவேண்டிய நிலைமையேற்படும் போலவும் தெரிகின்றது. பொதுவாக இந்தத் தூதுக்கூட்டம் கவர்னர் துரை அவர்களை பேட்டி கண்டதின் பயனாக அவசரமானதும் அனாவசியமானதுமான அடக்கு முறைகள் ஸ்தல அதிகாரிகளின் அதிகார துஷ்பிரயோகத்தாலேயே ஏற்பட்டதாக அதிகாரிகள் உணர்வதாகத் தெரியவருகிறது.

ஆனாலும் ஒரு தடவை தங்கள் அவசரப் புத்தியாலும் அறியாமை யாலும் செய்த காரியங்களைப் பற்றி பிடிவாதமாயிராமல் தங்கள் குற்றங்களை உணர்ந்து அவற்றிற்கு பரிகாரம் செய்து கொள்ள ஸ்தல அதிகாரிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

ஆனபோதிலும் இம்மாதிரியான காரியங்களினாலெல்லாம் தொழி லாள சகோதரர்களுக்கு எவ்வித நன்மையாவது ஏற்பட்டுவிடக் கூடும் என்று நாம் நினைப்பதற்கில்லை. ஏனெனில் இதெல்லாம் கண்ணைத் துடைக்கும் காரியமேயொழிய காரியத்தில் எவ்வித அனுகூலத்திற்கும் ஏற்றதாகாது. மற்றபடி தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்குக் காரணமாயிருந்த குறைகள் ஏதாவது கவனித்து பரிகாரம் செய்யப்படுமானால் அதைப்பற்றி மாத்திரம் நாம் திருப்தியடைய இடமுண்டாகும். ஆனால் அது மாத்திரம் கவர்னர் துரை அவர்களாலோ அல்லது வைசிராய் துரையவர்களாலோ கூடச் செய்யக் கூடிய காரியமல்லவென்பதும் நமக்குத் தெரியும். ஏனெனில் வைசிராய் துரைகளும், கவர்னர் துரைகளும், ரயில்வே துரைகளும் பிரிட்டிஷ் என்ப தான ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள். இப்படியிருக்க, ஒருவர் செய்யும் மோசத்தை மற்றொருவர் காட்டிக் கொடுக்க முன்வருவார்களா? அன்றியும் அதற்குத் தக்கபடி அவர்களை நிர்ப்பந்திக்கவாவது நம்மிடம் ஏதாவது மார்க்கமிருக்கின்றதா?

தேசீய இயக்கங்கள் என்பதும் தேசீயதலைவர்கள் என்பவர்களும் ரயில்வேக்காரர்களுடையவும், சர்க்காருடையவும் சிப்பந்திகளாகவும் உள் உளவுக்காரர்களாகவும் இருக்கத்தக்கவர்களாகிவிட்டார்கள். எனவே என்றைக்காவது தொழிலாளர்களும் கூலிக்காரர்களும் இந்த நாட்டில் சுய மரியாதையோடும் சுதந்திரத்தோடும் பிழைக்க வேண்டுமானால் இம்மாதிரி போலி இயக்கங்களையும் போலித்தலைவர்களையும் நம்பாமல் அவர்கள் காலிலே அவர்கள் நிற்கும்படியான நிலைமை ஏற்பட வேண்டும். அம்மாதிரி நிலைமை பெறுவதில் சில தடவை நழுவி விழுந்தாலும் குற்றமில்லை. மற்றபடி சுயமரியாதையில் மாத்திரம் கவனம் இருந்துக் கொண்டு வந்தால் போதுமானது என்றே சொல்லுவோம்.

**குடி அரசு – கட்டுரை – 26.08.1928**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனீயம்

சென்ற இரண்டு வாரங்களுக்கு முன் வெளியான "குடி அரசு" அதாவது 5.8.28 உ மலரில் பார்ப்பனீயம் என்பது பற்றி எழுதிய தலையங்கத்தில், சென்னை திருவல்லிக்கேணி உத்திராதி மடத்தில் நடந்த வைதீக பார்ப்பனர் கூட்டத்தில் தலைமை வகித்த திருவாளர் வி.வி. சீனி வாசய்யங்கார் அவர்களின் அக்கிராசன உபன்யாசத்தைப் பற்றி விரித்து விட்டு உபன்யாசகரான திரு. என். சீனிவாசாச்சாரியாரின் உபன்யாசத்தைப் பற்றி பின்னர் எழுதுவதாக எழுதியிருந்தோம். அந்தப்படி இவ்வாரம் அதைப்பற்றி எழுதுகின்றோம்.

திரு. சீனிவாசாச்சாரியார் அவர்கள் தமது சொற்பொழிவில் சொல்லி யிருக்கும் விஷயங்களைச் சுருக்கி ஷை முதல் வியாசத்திலேயே வெளியிட்டி ருக்கின்றோம்.

அதில் திரு. ஆச்சாரியார் "பிராமண சங்கம் பல வருஷங்களாக இந்த நாட்டில் வேலை செய்து வருகின்றது" என்றும், "எவன் தன் மனதை அடக்கி ஆண்டு கொண்டு யோக்கியனாக இருக்கின்றானோ அவனே பிராமணன்" என்றும் சொல்லியிருக்கின்றார்.

அப்படியானால் இப்போது பிராமணர் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்கள் எல்லாம் தம் மனதை அடக்கி ஆண்டு கொண்டு யோக்கியர்களாக இருக்கின்றவர்களா அல்லது பிறர் மனதை அடக்கி அவர் களை ஆண்டு கொண்டு அயோக்கியர்களாக இருக்கின்றவர்களா என்று கேட்பதுடன் வெகு நாளாக இந்த நாட்டில் நடந்து வரும் பிராமண சங்கங்கள் என்பவைகளெல்லாம் தங்கள் மனதை அடக்கி ஆண்டு யோக்கியமாய் இருந்து கொண்டு வரும் பிராமணர்களுடைய சங்கமா என்றும் கேட் கின்றோம்.

யார் பிராமணன்? என்று கேட்கும் போது மாத்திரம் "தன் மனதை அடக்கி ஆண்டு கொண்டும் யோக்கியனாக இருந்து கொண்டும் இருக்கின்றவன் பிராமணன்" என்று சொல்லுவதும், மற்ற சமயங்களில் மான ஈனமின்றி உலகிலுள்ள சகல அயோக்கியத்தனங்களையும் அதாவது கொலை, களவுகள், திருட்டு, புரட்டுகள் செய்வதும் சாமி தரிசனைக்கும், தாசி



RangaRakes

தரிசனைக்கும் தரகு பெறுவதும், போலீசு வேலை செய்வதும், வக்கீல் வேலை செய்வதும், இஷ்டமில்லாத பெண்களைக் கூட்டிக் கொடுத்தாவது உத்தியோகம் பெறுவதும், அவ்வுத்தியோகத்தில் லஞ்சம் வாங்குவதும், தங்கள் வகுப்பாரைத் தவிர மற்ற வகுப்பார் தலையெடுக்காமல் அழுத்து வதும், தங்கள் பிள்ளைகளைத் தவிர மற்ற பிள்ளைகளை படிக்க விடாமல் தடுப்பதும், தேசத்தையும், ஏழை மக்களையும் காட்டிக் கொடுத்து உயிர் வாழ்வதுமான காரியங்களையெல்லாம் செய்து கொண்டு தங்களை பிராமணர்கள் என்று சொல்லிக் கொண்டும், இந்தப் பிராமணத் தன்மைக் காக கள்ளுக்கடை வேசி வீடு முதல் கடவுள் சன்னிதானம் என்பது வரையில் தங்களுக்கு வேறு உரிமையும் மற்றவர்களுக்கு வேறு உரிமையும் இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு மக்களை வதைத்துக் கொண்டிருக் கின்றதுமான அக்கிரமங்களை இனியும் எத்தனை காலத்திற்கு மறைக்கலாம் என்று திரு. ஆச்சாரியார் கருதிக்கொண்டிருக்கின்றார் என்பது நமக்கு விளங்கவில்லை.

தவிர "ராஜீய விஷயத்தில் நாங்கள் (பிராமணர்கள்) தலையிடு வதே கிடையாது" என்று சொல்லி யிருக்கின்றார்.

இது உண்மையா? அப்படியானால் திருவாளர்கள் எஸ். சீனிவாசய் யங்கார், சக்கிரவர்த்தி அய்யங்கார், சத்தியமூர்த்தி, கஸ்தூரி ரங்கய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார், ராமாநுஜ ஆச்சாரியார், ராஜகோபாலாச்சாரியார், மாளவியா, நேரு, திலகர், சாஸ்திரி, சர்மா, சாப்ரூ, வி.வி.சீனிவாசய்யங்கார், மணி அய்யர், சிவசாமி அய்யர், சர்.சி.பி. ராமசாமி அய்யர், சரோஜினி தேவி, பாலாம்பாள், இதே உபன்யாசகர் திரு. என். சீனிவாசாச்சாரியார் முதலிய வர்கள் அரசியல் விஷயத்தில் தலையிடவில்லை என்கின்றாரா? அல்லது இவர்களை இந்த "பிராமணர்"களோடு சேர்க்காமல் பேசுகின்றாரா? என்று திரு. ஆச்சாரியாரைக் கேட்கின்றோம்.

பிச்சைக்கும் புரோகிதத்துக்கும் வரும்போது மாத்திரம் தாங்கள் அரசியலில் பிரவேசிக்காதவர்கள் என்று சொல்லுவதும், உத்தியோகத்திற்கு வரும்போது வெள்ளைக்காரர்களிடம் பிராமணர்கள்தான் அரசியலில் தலைமை வகிக்கவும் சீர்திருத்தத்தில் பெரிய உத்தியோகம் வகிக்கவும் யோக்கியர்கள் என்றும்,வெள்ளைக்காரர்களுக்கு தகுந்தபடி சகல விதத்திலும் நடந்து கொள்ளும் திறமையும், சவுகரியமும், பிராமணர்களுக்குத்தான் உண்டு என்றும் சொல்லி சகல அரசியல்களிலும் இந்த பிராமணர்களே புகுந்து கொண்டு வெள்ளைக்கார ராஜ்யத்தை நடத்துவதும் இந்த உபன்யா சகருக்கு உண்மையிலேயே தெரியாதா என்று கேட்கின்றோம்.

"பிராமணர்கள் தங்களுக்கு சட்டபூர்வமாய் எவ்வித உரிமையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை" என்கின்றனர். இது அவர் மனதாரச் சொல்லும்



tamilnavarasam.com

பேச்சா அல்லது தங்களைத் தவிர மற்றவர்கள் முட்டாள்கள் என்று கருதிக் கொண்டு சொல்லும் பேச்சா என்று கேட்கின்றோம். வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, ஆகமம், புராணம், மனுதர்மம், இந்துலா, பழக்கவழக்கம் முதலியவைகளின் பேரால் தங்களுக்கு ஏற்படுத்திக்கொண்டிருக்கும் பதவிகளும், தனி உரிமைகளும் சட்டபூர்வமாக ஏற்படுத்திக்கொண்டதாகாதா என கேட்கின்றோம். மற்றும் கக்கூசுகளில் போர்ட் பலகை போட்டு ஆண் பெண்களுக்கு பிரித்திருப்பதுபோல் இன்றைக்கும் அனேக இடங்களில் (போர்டு) பலகை போட்டு பிராமணர்களுக்கு மாத்திரம் என்று பிரித்திருப்பது சட்டபூர்வமா அல்லது பலகைப் பூர்வமா என்று கேட்கின்றோம்.

"பிராமணரல்லாதாரியக்கம் உத்தியோகத்திற்கு ஏற்பட்டது என்று எண்ணி கவலை இல்லாமல் இருந்துவிட்டோம்; அது குடி அரசு இயக்கத்தில் சேர்ந்து கொண்டு (சுயமரியாதை) உரிமையை ஸ்தாபித்துக் கொள்வதற்கு என்று சொல்லிக்கொண்டு மத விஷயத்திலும் கோவில் விஷயத்திலும் புகுந்து நம்மை அடியோடு கவிழ்க்க ஆரம்பித்து ஆயிரக்கணக்கான வருஷங்களாய் நாம் (பிராமணர்கள்) அனுபவித்து வந்த உரிமையை இப்போது பலாத்காரமாய் பிடுங்கிக் கொள்ள ஆரம்பித்திருக்கிறது.

உதாரணமாய், சுயமரியாதைக்காரர்கள் செய்து வரும் பிரசாரத்தின் கொடுமை ஊர் ஊராகச் சுற்றிப் பார்ப்பவர்களுக்குதான் தெரியும்" என்பதாகச் சொல்லி இருக்கின்றார்.

இந்த வாக்கியங்களால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் உண்மையும், சுயமரியாதை இயக்கத்தின் தத்துவமும் விளங்காமல் போகாது. வெறும் உத்தியோகத்தைப் பற்றி பார்ப்பனரல்லாதார் இயக்கம் பாடுபடுவதாக பார்ப்பனர்கள் நினைத்துக் கொண்டிருந்த காலத்தில் அவர்களுக்கு இதைப்பற்றி ஒரு சிறிதும் கவலை இருக்க நியாயமில்லை. ஏனெனில் எவ்வளவு பிரயத்தனப் பட்டாலும் சர்க்கார் உத்தியோகங்களிலிருந்து பார்ப்பனர்களை சுலபத்தில் விரட்டிவிட முடியாது. ஏனெனில் வெள்ளைக்காரர்களிடமிருந்து உத்தியோகம் பெறும் யோக்கியதையும், சவுகரியமும் அவைகளுக்கேற்றபடி நடக்கும் தன்மையும் பார்ப்பனரல்லாதார்களுக்கு இல்லை என்பது பார்ப்பனர்களுக்கு நன்றாய் தெரிந்த விஷயம். அன்றியும் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் எதிர்ப்பிரசாரம் செய்ய பார்ப்பனரல்லாத பல கூலிகள் தங்களுக்கு சுலபமாய் கிடைப்பார்கள் என்கின்ற தைரியமும் இருந்தது. ஆதலால் அவர்கள் இதை லட்சியம் செய்யவில்லை. ஆனால் இப்போது சுயமரியாதை இயக்கமானது பார்ப்பனச் சூழ்ச்சிகள் பலிக்க விடாமல் செய்வதோடு பார்ப்பனரல்லாத கூலிகளும் பார்ப்பனர்களோடு முன் போல அவ்வளவு தாராளமாய் சேருவதற்கில்லாமல் செய்வதால் இப்போது பார்ப்பனர்கள் பயந்து தீர வேண்டியதாய்விட்டது. அன்றியும் சுயமரியாதைக் கொள்கைகள் பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஆதாரமானதும் ஆணி வேரானதுமான பார்ப்பன



மதத்தையும், பார்ப்பன சாமி கோயில்களையும் கழுத்துப் பிடியாய் பிடித்துக் கொண்டதால் பார்ப்பனர்கள் திமிருவதற்கு இடமில்லாமல் கண் பிதுங்க விழிக்கின்றார்கள். மேலும் இவ்வியக்கம் வெற்றி பெற்றது என்று சொல்லுவது, பார்ப்பனர்கள் ஆயிரக்கணக்காக அனுபவித்து வந்த தனி உரிமைகளைப் பிடுங்கி எல்லா மக்களையும் சமமாக்கித் தீரவேண்டிய தாதலால் சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க முயற்சிக்க வேண்டியது பிராமண மகாசபையின் கடமையாகப் போய்விட்டது என்பதில் அதிசய மொன்றுமில்லை.

"கிராமங்களில் கூட இவ்வியக்கம் பரவிவிட்டது" என்று திரு ஆச்சாரியார் சொல்லுவதிலிருந்து நாம் சந்தோஷப்படவேண்டியதானாலும் அது பரவவேண்டிய அளவுக்கு ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இன்னும் பரவவில்லை என்பது நமது கருத்தாகும்.

தவிர உபன்யாச முடிவில் "சுயமரியாதை இயக்கம் பிராமணத் துவேஷ இயக்கமானதால் அவ்வியக்கத்தால் பிராமணர்களுக்கு கெடுதி ஏற்படாமல் தடுப்பதற்காக சைமன் கமிஷனை தஞ்சமடைய வேண்டும்" என்பதாக சொல்லி இருக்கின்றார்.

தாங்கள் மாத்திரம் எவ்வளவு இழிவானதும் அயோக்கியத் தனமானதுமான காரியங்களைச் செய்தாலும் பிராமணர்கள் என்பதும், தங்களைத் தவிர மற்றவர்கள் எவ்வளவு யோக்கியர்களானாலும் அவர்கள் தங்களது வைப்பாட்டி மக்கள் என்றும், சூத்திரர்கள் என்றும், சண்டாளர்கள் என்றும், தொடக்கூடாதவர்கள் என்றும், தெருவில் நடக்ககூடாதவர்கள் என்றும் பல மாதிரியான இழிவான வார்த்தைகளால் அழைப்பதும் கொடுமைப்படுத்தி வதைப்பதும் துவேஷமாகாமல் போவதும், இம்மாதிரி செய்வது யோக்கியமானதல்ல வென்று நாம் சொல்லுவது மாத்திரம் துவேஷ மாவதுமானால் இந்த துவேஷம் உலக முழுமையும் ஏற்படவேண்டும் என்றே ஆசைப்படுவதோடு இந்த துவேஷமில்லாத தமிழ் மக்கள் சுயமரியாதை அற்றவர்கள் என்றே சொல்லுவோம்.

திரு. ஆச்சாரியார் எந்தக் காரணத்துக்காக தங்கள் மீது துவேஷம் ஏற்படுவதாக சொல்லுகின்றாரோ அல்லது சுயமரியாதைக்காரர்கள் எந்த விஷயங்களைச் சொல்லிக்கொண்டு பார்ப்பனர்கள் மீது துவேஷம் உண்டாகும்படி செய்கின்றார்களென்று நம்புகின்றாரோ அந்தக் காரணங் களைப் பற்றி ஒரு சிறிதாவது கவனித்தாரா என்றும் அல்லது அதற்கு ஒரு சிறிதாவது சமாதானம் சொல்ல முற்படுகின்றாரா என்றும் கேட்கின்றோம்.

திரு. ஆச்சாரியாரின் கூட்டம் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் ஒரு உரிமையை அனுபவித்துக் கொண்டு வந்ததாலேயே அவர்களுக்கு அது



RangaRakes tamilnavarasam.com

நிரந்தரப்பாத்தியமாய் விடுமானால் அதனால் மனிதத்தன்மையை இழந்து கஷ்டப்படுகின்ற மக்கள் அவ்வுரிமையை பலாத்காரத்தால் பிடுங்கிக் கொள்வதல்லாமல் வேறு என்ன வழி அவர்களுக்கு இருக்கின்றது என்று கேட்கின்றோம். தங்களுடைய ஆயிரக்கணக்கான அனுபோக பாத்தியதை யைச் சொல்லாமல் வேறு யோக்கியமான நியாயத்தைச் சொல்லி தங்கள் உரிமையை காப்பாற்றிக் கொள்ள வந்தால் அதற்கு நாம் தாராளமாய் இடம் கொடுக்கத் தயாராயிருக்கின்றோம். அப்படிக்கில்லாமல் வெறும் அனுபோக பாத்தியம் மாத்திரம் சொல்லுவதானால் அதை யார் ஒப்புக் கொள்ள முடியும்? ஏனெனில் பார்ப்பனர்கள் மீது நாம் சொல்லும் குற்றமே அதுதானேயல்லாமல் வேறு என்ன? அதாவது இந்தப் பார்ப்பனர்கள் வேதம் என்றும், மதம் என்றும் சாமி என்றும், பூதமென்றும் புரட்டுகள் கற்பித்து அவைகளின் பேரால் நம்மை ஏமாற்றி, நம்மைத் தாழ்த்தி, நம்மீது ஆயிரக்கணக்கான வருஷங்களாய் ஆதிக்கம் செலுத்தி வருகின்றார்களாதலால் அவ்வாதிக்கத்தை ஒழித்து நாம் விடுதலை பெற வேண்டும் என்றுதான் சொல்லி வருகின்றோம். இந் நிலையில் இருக்கின்ற நாம் எப்படி காலாவதி தோஷத்தை ஒப்புக்கொள்ள முடியும்?

அன்றியும் இவ்வாதிக்கத்தையும் உரிமைகளையும் நிலைநிறுத்திக் கொள்ள சைமன் கமிஷனை தஞ்சமடைந்து விஞ்ஞாபனம் செய்து கொள்ள வேண்டும் என்கின்றார்.

இதை, தான் மாத்திரம் தனியாய் சொல்வதாக இல்லாமல் பிராமண சபை, வருணாசிரம பரிபாலன சபை, வைதீக பிராமண சபை ஆகியவை களும் இக்கொள்கைகளை ஒப்புக் கொண்டிருப்பதாகவும் சொல்லுகின்றார். இதிலிருந்து சைமன் கமிஷனின் சக்தி இவ்வளவென்பது விளங்காமல் போகாது.

எனவே சுயமரியாதை இயக்கத்தை குற்றம் சொல்லுகின்றவர்களும் சைமன் கமிஷனைப் பஹிஷ்கரிக்க வேண்டும் என்று கூலிப்பிரசாரம் செய்கின்றவர்களும் இதிலிருந்தாவது பாடம் கற்றுக் கொள்ளுவார்களாக!

*குறிப்பு : 05.08.1928 குடி அரசு தலையங்கத்தின் தொடர்ச்சி.*

**குடி அரசு - தலையங்கம் - 26.08.1928**



# இதைவிட வேறு சாக்ஷி வேண்டுமா?

தென்நாட்டு பார்ப்பனர்கள் ஒத்துழையாமையை ஒழித்து திரு. காந்தியையும் மூலையில் உட்கார வைத்துவிட்டு ஒத்துழையாமையில் ஜெயிலுக்குப் போனவர்களுடையவும் திரு. காந்தியவர்களுடையவும் செல்வாக்கையும் உபயோகப்படுத்திக்கொண்டும், அவர்களுடைய பெயர் களைச் சொல்லிக் கொண்டும் ஒன்று இரண்டு வருஷம் சட்டசபைத் தேர்தல் களிலும் ஜில்லா, தாலூக்கா முனிசிபாலிட்டி முதலிய ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களிலும் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாகவும் தங்கள் ஆதிக்கத் திற்கு அனுகூலமாகவும் எவ்வளவு தூரம் தலைக்கொழுப்புடன் காரியங்கள் செய்யலாமோ அவ்வளவும் செய்தார்கள். இதற்கு சில பார்ப்பனரல்லாத வயிற்றுச் சோற்றுக் கூலிகளும் தங்கள் சுயநலத்தை உத்தேசித்து தங்கள் மானத்தை விற்று பார்ப்பனருக்கு எவ்வளவு தூரம் அடிமையாய் இருந்து கொண்டு பார்ப்பனரால்லாதாருக்கு எவ்வளவு இடையூறு செய்யக் கூடுமோ அவ்வளவும் செய்தார்கள். அந்த சமயத்தில் "குடி அரசு" ஒன்றுதான் தைரியமாய் தனி வீரனாக நின்று இந்தப் புரட்டுகளை எவ்வளவு தூரம் வெளியாக்கி அதனால் ஏற்பட்ட கெடுதிகளை எவ்வளவு தூரம் ஒழிக்க லாமோ அவ்வளவு தூரம் ஒழிக்க முன் வந்தது. இந்தக் காரணத்தால் "குடி அரசும்" அதன் ஆசிரியரான திரு. ராமசாமி நாயக்கரும் பெரிய "தேசத் துரோகி"களானதும் வாசகர்கள் உணர்ந்ததே யாகும்.

ஆனால் "கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் வெளியாய் விடும்" என்பதுபோல் அடுத்து தேர்தல்கள் வருவதற்குள்ளாகவே, பார்ப்பனர்களுடையவும் அவர்களது வால்களாகிய வயிற்றுச் சோற்று தேச பக்தர்களுடையவும் புரட்டுகள் வெளியாகி இப்போது இந்தக் கூட்டம் வெளி யில் தலைகாட்டுவதற்குக் கூட யோக்கியதையில்லாமல் முக்காடிட்டு மூலை யில் உட்கார்ந்து கொள்ள நேரிட்டது.

உதாரணமாக சென்னை கார்ப்பரேஷன் கௌன்சிலர் தேர்தல்களிலும் வெளி முனிசிபல் கௌன்சிலர்கள் தேர்தல்களிலும் "சுயராஜ்யக் கட்சிக்கு வெற்றி! காங்கிரசுக்கு வெற்றி" என்று மொச்சைக் கொட்டை பருமனுள்ள எழுத்துக்களில் விளம்பரம் செய்துகொண்டு வந்த "தேசீய பத்திரிகை களும்" "தேசீய தலைவர்களும்" இப்போது இருக்குமிடம் கூட தெரிய



RangaRakes tamilnavarasam.com

வில்லை. ஒரு தேர்தலிலாவது சுயராஜ்யக் கட்சி சார்பாகவோ காங்கிரஸ் சார்பாகவோ ஆட்களை நிறுத்தியதாகவும் தெரியவில்லை.

தேசத்துரோக கட்சியென்று பார்ப்பனர்களாலும் அவர்களது கூலி களாலும் சொல்லப்பட்ட ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் நின்றவிடமெல்லாம் வெற்றி பெற்று வருவதோடு அவர்களுக்கு போட்டியாக ஆட்களை நிறுத்துவதற்குக் கூட காங்கிரஸுக்காரருக்கு தைரியமில்லாமல் போய்விட்டது.

இந்த வருடத்திய சென்னைத் தேர்தலில் திரு. எ. ராமசாமி முதலியார் அவர்கள் சென்னை கார்ப்பரேஷனில் இரண்டு இடங்களில் ஏக காலத்தில் அபேக்ஷகராய் நின்றதில் மேல்கண்ட இரண்டு ஸ்தானங்களிலும் போட்டி யில்லாமலே வெற்றி பெற்றார் என்றால் மற்றபடி வேறு என்ன உதாரணம் வேண்டும்.

நிற்க, காங்கிரஸ் பேரால் ஒரே ஒரு தொழிலாளர் நிறுத்தப்பட்டதில் அவர் மிகப்பெருமித ஓட்டுகளால் நன்றாய் தோல்வியடைந்தார். சென்ற வருஷம் தொழிலாளர் சார்பாய் நின்ற கனவான் தனியாக தொழிலாளர் என்ற முறையில் நின்றதால் காங்கிரஸ்காரர்கள் பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து அவரை எதிர்த்தும் கூட அத் தொழிலாளர் வெற்றி பெற்றார். இவ்வருஷம் காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொண்டு நின்றதன் பயனாகவும், காங்கிரஸ் தலைவர்களாகியவர்கள், காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. முத்துரங்க முதலியார், திரு. கல்யாணசுந்தர முதலியார் முதலியவர்களும் மற்றும் பல "தேசீய வீரர்களும்" பாடுபட்டும் தெருத்தெருவாய் பிரசங் கித்தும் தலையில் கையை வைத்துக் கொள்ள நேர்ந்து விட்டது. எனவே காங்கிரஸ் புரட்டும் தேசீயப் புரட்டும் மக்களுக்கு நன்றாய் வெளியாய் விட்டதற்கு இதைவிட வேறு சாக்ஷி வேண்டுமா என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 26.08.1928**



# திரு. வேதாசலம்

திரு. வேதாசலம் அவர்கள் சென்னை பாலசுப்பரமணிய பக்த சபை ஆண்டு விழாவில் தலைமை வகித்து நிகழ்த்திய தலைமைப் பேருரையில் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றியும் அதன் கொள்கைகளைப் பற்றியும் திரு.ஈ.வெ. ராமசாமி நாயக்கரைப் பற்றியும் வசை மொழிகளும் கடுமொழி களும் மொழிந்ததாகவும் அதுபற்றி அதுசமயம் அங்கு வரநேர்ந்த திரு வாளர்கள் கண்ணப்பர், தண்டபாணி பிள்ளை, ராமநாதன் ஆகியோர் களுக்கும் திரு. வேதாசலம் அவர்களுக்கும் வாக்குவாதப் போர் நடந்த தாகவும் "திராவிடன்" முதலிய பத்திரிகைகளில் காணப்பட்டதோடு பல நிரூபர்களும் நமக்கு எழுதி வந்தார்கள்.

ஆகிலும் திரு. வேதாசலம் அவர்கள் தமிழ்நாட்டில் செல்வாக்கும் மதிப்பும் பெற்ற பண்டிதர் என்பதாக நாம் கருதி வந்ததால் பத்திரிகை களிலும் நிரூபங்களிலும் கண்டவற்றிற்கு சமாதானம் எழுதுவது என்பது நமக்கு சற்று சங்கடமாகவே இருந்தது. ஏனெனில், முதலாவது, இவ்வளவு மோசமாக அவர் பேசியிருப்பாரா என்பது. இரண்டாவது, அப்படியே பேசி இருக்கலாமென்றாலும் அது அவர் மனதாரப் பேசியதாக இருக்காது என்பதும், மற்றபடி ஏதோ சமய சந்தர்ப்பங்கள் இம்மாதிரி பேச வேண்டிய நிலைக்கு அவரை கொண்டு வந்து விட்டிருக்கலாம் என்றும் கருதியதோடு இதை அனுசரித்து திரு. வேதாசலம் அவர்களிடமிருந்து ஏதாவது ஒரு தகவல் கிடைத்தால் அதை ஆதாரமாக வைத்தே அவ்விஷயங்களை நழுவ விட்டுவிடலாம் என்றும் கருதி எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அது போலவே திரு. வேதாசலம் அவர்களுக்கும் நமக்கும் பொதுவான இரண்டொரு நண்பர்கள், நாம் மேலே நினைத்த இரண்டு விதமாகத்தான் விஷயம் நடந்ததென்றும் அதற்காக திரு. வேதாசலம் அவர்கள்கூட சற்று வருத்தப்பட்டாரென்றும், எப்படி இருந்தாலும் இனி அதைப்பற்றி கிளறாமல் அப்படியே விட்டுவிடுவது எல்லோருக்கும் நன்மை பயப்பது என்றும் சொன்னார்கள். அதை ஆதாரமாய் வைத்து ஒரு சிறு குறிப்புடன் அவ் விஷயத்தை முடித்துவிடலாம் என்றே இருந்தோம்.

ஆனால் அடுத்த ஒன்று இரண்டு வாரம் திரு. வேதாசலம் அவர்களின் சிஷ்யர்கள் பெயரால் பல துண்டு பிரசுரங்கள் திரு. வேதாசலம் அவர்கள் பேசியதாகக் காணப்பட்டவைகளை மறுக்கின்றது போலவும் மற்றும் சில



RangaRakes tamilnavarasam.com

துவேஷங் கொண்ட வார்த்தைகளுடனும் வெளியாக்கப்பட்டன. மற்றும் சிற்சில இடங்களில் அவர் பேசியதுபோலவே நமது இயக்கத்தை தாக்கியும் விஷமப் பிரசாரங்கள் செய்யப்பட்டும் வந்ததாகவும் தகவல்கள் கிடைத்தன. இந்நிலையில் நாம் எவ்வித சமாதானமும் சொல்லாமல் ஒளிந்து கொள்ளுவது சரிஅல்ல என்று தோன்றியதுடன் நமது நண்பர்கள் பலரும் தூண்டியதுடன் பல நிருபங்களும் வந்த வண்ணமாய் இருந்தன.

இந்நிலையில் நாம் ஏதாவது சமாதானம் எழுதித்தீர வேண்டிய தாகவே ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் எழுத மனமும் இசையவில்லை, கையும் ஓடவில்லை.

ஏனெனில் நமக்கு அவரது பெயரைக் கேட்க நேரிட்ட சமயம் முதலே அவரிடம் (காரணம் சொல்ல முடியாது) ஒருவித விஸ்வாசம் ஏற்பட்டதுடன் நமது நண்பர்களிடம் அவரைப் பற்றி பேச நேர்ந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் நமது உணர்ச்சிகளுக்கும் கொள்கைகளுக்கும் அவர் ஒரு உற்ற துணை வராயும் பின்பலமாகவும் இருக்கின்றார் என்பதாக ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதுமாகவே இருந்து வந்ததால், இச்சமயம் யாராவது மத்தியில் அவரது மனதை விஷப்படுத்தி இருக்கலாமோ என்கின்ற எண்ணம் தோன்றியதனால்தான் மறுபடியும் ஒருமுறை "திரு. வேதாசலம் அவர்களின் சமாதானம் வரவில்லை; ஆதலால் அடுத்த வாரம் எழுதப்படும்" என்று எழுதி எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். பிறகு சென்றவாரம் ஒரு*சமாதானக் கடிதம் நண்பர் திரு. விஸ்வநாதம்பிள்ளை அவர்கள் மூலமாய் திரு. வேதாசலம் அவர்கள் எழுதி அனுப்பியது கிடைத்தது. அதில் எழுதப்பட்டிருந்தது என்ன என்பது பற்றிக்கூட நாம் கவனிக்க இஷ்டப்படவில்லை. தவிர அவர் எப்படி எழுத வேண்டும் என்றுகூட நாம் நினைத்ததும் கிடையாது. ஏனெனில் ஏதாவது ஒரு வழியில் அச்சம்பவத்தை மறக்க வேண்டும் என்கின்ற கவ லையே ஒழிய வேறில்லை. அக்கடிதமானது நண்பர் திரு. விஸ்வநாதபிள்ளை அவர்களால் தப்பாய் வினியோகிக்கப்பட்டதால் அது "திராவிடன்" பத் திராதிபரிடம் போகவும், அவர் அதை "மன்னிப்புக் கடிதம்" என்கின்றதாக பெயர் கொடுத்து பிரசுரிக்கவும் நேர்ந்தது நமக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது என்றாலும் அதன் குற்றத்தையும் நாமே ஏற்றுக் கொள்ளு கின்றோம். ஏனெனில் ஒரு விஷயத்தில் நமது நண்பர்கள் எல்லோருக்கும் ஒரே விதமான பொறுப்பு இருக்கும் என்று நினைத்துக் கொண்டு நண்பர் களிடம் பழகுவது எப்போதும் சரியாகவே இருப்பதில்லை. ஆதலால் அக் குற்றத்திற்கு நாம் பொறுப்பாளி ஆவதுடன் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் இனிமேலாவது நமது நண்பர்களும் துணைவர்களும் இம்மாதிரி நடந்து கொள்ளாமல் இருப்பதற்காக நாம் விலை கொடுப்பதின் பொருட்டு நம் மையே நாம் தண்டித்துக் கொள்ளக் கருதி "திராவிடன்" பத்திரிகையில்

"மறைமலை அடிகள் மன்னிப்புக் கடிதம் அனுப்பியுள்ளார்"



என்கின்ற வார்த்தை காணப்பட்டதற்காக நாம் நிபந்தனையில்லாமல் திரு வேதாசலம் அவர்களை மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகின் றோம். அன்றியும், அக்கடிதத்தில் அவ்வளவு கூட இல்லாமல் இன்ன மும் எவ்வளவு சாதாரணமாய் எழுதியிருந்தாலும் கூட அதை ஒரு சாக்காகக் கொண்டே அவர் பேசியதைப் பற்றிய விவகாரத்தை நிறுத் தியே யிருப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மற்றபடி அபிப்பிராய பேதத்தைப்பற்றிய விஷயத்தில் அவர் எவ்வளவு இணங்கி வருவதாயினும் நாம் நமது கொள்கையிலோ அபிப் பிராயத்திலோ ஒரு சிறிதளவு கூட விட்டுக் கொடுக்கவோ, திரு வேதாசலத் தினுடையவோ அல்லது வேறு யாருடையவோ நட்பைக் கருதியானாலும் கடுகளவு மாற்றிக் கொள்ளவோ நாம் சிறிதும் தயாராயில்லை. ஏனெனில் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் நமது நாட்டில் தோன்றிய சீர்திருத்தக் காரர்களின் உழைப்புகள் பலன் தராததற்கு காரணமே இவ்விட்டுக் கொடுக் கும் தன்மையும் தாக்ஷண்ணியமும் ராஜதந்திரச் செய்கையும்தான் என்பது நமது முடிவு.

இன்று கூட நமது இயக்கத்தின் எதிரிகளும் சில சுயநலக்காரர்களும் "மகாத்மா காந்தி இப்படியா சொன்னார்" "சுவாமி விவேகாநந்தர் அப்படியா சொன்னார்" "திருவள்ளுவரை விடவா இவர்கள் புத்திசாலிகள்?" "பெரிய புராணத்திற்கும் கம்பராமாயணத்திற்கும் மேலாகவா இவர்கள் தத்துவம் இருக்கின்றது?" என்கின்றது போன்ற பல சமாதானங்களையும் பாட்டி கதைகளையும் சொல்லுவதை நாம் பார்க்கின்றோம்; கேட்கின்றோம். ஆனாலும் இப்படி சொல்லப்படுபவைகள் ஏமாற்ற உபயோகப்படுகின்றன வேயன்றி காரியத்தில் ஏதாவது பலனுண்டா என்று கேட்கின்றோம்.

ஜாக்கிரதையாகவும், ராஜதந்திரமாகவும் பேசியதால் பார்ப்பனர்கள் தயவு சற்று கிடைத்தது. அதனால் பெரியோர்கள் என்றும் பூசிக்கத்தக்க வர்கள் என்றும் சொல்லிக் கொள்ள நேர்ந்தது. அவர்களுக்கு சரித்திரங் களும் படங்களும் உலவுகின்றன. ஆனால் மக்கள் உண்மை அறிந்து கொள்ள முடியாமல் "பெருமாள் பெத்த பெருமாளானது" போல் "மகாத்மா காந்தியும் சுவாமி விவேகாநந்தரும் கூட பார்ப்பனர்களையும் புராணங் களையும் புகழ்ந்து பேசியிருக்கின்றார்கள்; அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டுமென்று சொல்லி இருக்கின்றார்கள்" என்று இன்றும் பலர் எடுத்துப் பேசி பார்ப்பனர்கள் காலுக்குள் போய் புக இடங் கிடைத்ததல்லாமல் மற்றபடி ஆன காரியம் இன்னதென்பது விளங்கவில்லை.

அது போலவே, சைவ வைணவ புராணங்களிலும் "பறையரிலே நந்தன் திருநாளைப் போவார் ஆனார்; பள்ளரிலே பாணன் திருப்பாணாழ் வார் ஆனார்" என்று சொல்லுவதாலும் நமக்கென்ன பலன் உண்டு என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

திருநாளைப் போவார் என்று ஒரு கல்லுருவமும் திருப்பாணாழ்வார் என்று ஒரு கல்லுருவமும் செய்து அறுபத்து மூவர் என்கின்ற அறுபத்து மூன்று கல்லுருவங்களோடு சேர்த்தும் பன்னிரண்டாழ்வார் என்கின்ற பன்னிரெண்டு கல்லுருவங்களோடு சேர்த்தும் நட்டு வைத்து அதற்கு பொங்கலும் புளியோதரையும் வைத்து பூசை பண்ணி பார்ப்பான் சாப்பிட்டு விட்டதினாலேயே பறையர் என்பவர்களும் பள்ளர்கள் என்பவர்களும் "ஈன ஜாதிக்காரர்கள்" என்று சொல்லப்படுவதும் மறைந்து போயிற்றா? அல்லது அந்த சாமிகளைச் சேர்ந்த ஆசாமிகளுக்காவது அந்த கல்லுருவத்தைப் பார்க்கவாவது இடம் கிடைக்கின்றதா என்று கேட்கின்றோம்.

இந்த சாக்கை சொல்லிக்கொண்டு புஸ்தகக் கடைக்காரன் புஸ்தகம் அச்சுப் போட்டு பணம் சம்பாதிக்கவும், புராணப் பிரசங்கக்காரர் பிரசங்கம் பண்ணி பணம் சம்பாதிக்கவும், பார்ப்பான் பூசை உற்சவம் செய்து பணம் சம்பாதிக்கவும் உபயோகப்பட்டதேயல்லாமல் மற்றபடி அவைகளால் விளைந்த நன்மை என்னவென்று கேட்கின்றோம்.

முடிவாக திரு. வேதாசலம் அவர்களுக்கும் அவரது குழாத்தினர்களுக்கும் ஒன்று சொல்லுகின்றோம். அதாவது நாமும் நமது இயக்கமும் புராணங்களுக்கும், அப்புராணங்களில் காணப்படும் சமயங்களுக்கும் அச்சமயத்தில் காணப்படும் சமய ஆச்சாரிகளுக்கும், அச்சமய ஆச்சாரிகளால் காணப்படும் சாமிகளுக்கும், அச்சாமிகளது பெண்டு பிள்ளைகளுக்கும் வெளிப்படையான விரோதிகள் தான். இதில் ஒளிமறைவு ஒன்றும் இல்லை என்பதோடு "இதற்கு அப்படி அருத்தம்" "அதற்கு இப்படி அருத்தம்" என்கின்ற பண்டிதப் புரட்டுகள் ஒன்றும் இனி கூடாது என்றும் கண்டிப்பாய்ச் சொல்லுகின்றோம்.

இதைப்பற்றி எச்சமயவாதியாயினும் எப்பண்டிதராயினும் செய்யும் அறப்போருக்கும் அறிவுப் போருக்கும் தலைகொடுக்க மகிழ்ச்சியுடன் தயாராயிருக்கிறோம்.

அதைவிடுத்து குறுக்கு வழியில் வஞ்சகப் போருக்கும் மூட நம்பிக்கைப் போருக்கும் தலைகொடுப்பதானால் சற்று சங்கடமாகத்தான் இருக்கின்றது. ஆயினும் வேறு வழியில்லாவிட்டால் அதையும் வரவேற்க வேண்டிய நிர்ப்பந்தத்திலே தான் இருக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 02.09.1928**



## * திரு. வேதாசலம் அவர்களின் கடிதம்

பல்லாவரம் திரு. வேதாசலம் அவர்கள் திரு.ஈ.வெ. இராமசாமி நாயக்கருக்கு திரு. விஸ்வநாதம் பிள்ளை அவர்கள் மூலம் எழுதிய கடிதம்:-

அன்புள்ள ஐயா,

நலம், தங்கள் நலத்தைத் தெரிவித்தல் வேண்டும். என்னைப் பற்றிய ஒரு குறிப்பு 'குடி அரசு' பத்திரிகையில் வெளிவந்திருப்பதாக திருச்சி திரு. விஸ்வநாத பிள்ளை வாயிலாக இன்று அறிந்தேன். சென்னை குகானந்த நிலையத்தின் ஆண்டு விழா நிகழ்ச்சி முறையைப்பற்றித் 'திராவிடன்' 'தமிழ் நாடு' பத்திரிகைகளிற் போந்துள்ள சிலவுரைகளை நம்பி, அக்குறிப்புத் தங்களால் வரையப்பட்டதென அறிகின்றேன். தங்களுக்காவது, தங்கள் இயக்கத்தைச் சார்ந்த அன்பர்கட்காவது எவ்வகையான தீங்கும் செய்ய அல்லது செய்விக்க வேண்டுமென்று யான் எண்ணியதுமில்லை, யாண்டும் சொல்லியதுமில்லை. தாங்கள் என்னை வேறாக நினைத்து என்மீது வருந்துதல் வேண்டாம். என்றாலும், கடவுளைப்பற்றியும் அடியார்களைப் பற்றியும் தாங்கள் கொண்டுள்ள கோட்பாடுகளில் மட்டும் யான் கருத்து உடன்பாடுடையேன்னல்லேன். பத்திரிகைகளில் வெளிவந்த சிலவற்றைப் பார்த்து தாங்கள் வருந்தியிருந்தால், அவ்வருத்தத்தை தாங்கள் அன்பு கூர்ந்து நீக்கிவிடல் வேண்டும். தமிழ்மக்கள் முன்னேற்றத்தின் பொருட்டுத் தாங்கள் செய்துவரும் நன் முயற்சிகள் இனிது நடைபெறுக.

அன்புள்ள,

24-8-28

சு.வேதாசலம்



RangaRakes tamilnavarasam.com

# வடநாட்டுக் கடவுள்கள்

கடவுள்கள் என்பது ஒவ்வொரு நாட்டுக்கொவ்வொரு விதமாகவும், ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு விதமாகவும் இருந்து வருகின்றன. சாதாரணமாய் இந்தியாவிற்கே பிரதான "புண்ணிய பூமிகளான" காசி, ஜகநாதம், பண்டரிபுரம் முதலிய க்ஷேத்திரங்களிலுள்ள சாமி கோவில்களில் யார் வேண்டுமானாலும் உள்ளே சென்று சாமியைத் தொட்டு பூசை செய்யவும், கட்டி அழுது தனது குறைகளைச் சொல்லிக் கொள்ளவும் உரிமைபெற்ற சாமிகளாகவே இருக்கின்றன. ஆனால் தென்னாட்டிலோ அதே சாமிகளைத் தொடாத போதிலும் கிட்டப் போய் கும்பிட்டாலும் அல்லது சிலர் கோயிலுக்குள்ளே புகுந்துவிட்டாலும் உடனே அச்சாமிகள் செத்துப்போய்விடுகின்றன. ஆனால் பார்ப்பானுக்குப் பணமும் சோறும் கொடுத்தால் மறுபடியும் அவைகள் உயிர்பெற்று விடுகின்றன. எனவே நமது தென்னாட்டுச் சாமிகளின் சக்திகள் கூட நமது பார்ப்பனர்களிடம் எவ்வளவு அடிமைப்பட்டுக் கிடக்கின்றன என்பது கவனிப்பவர்களுக்கு விளங்காமல் போகாது.

இப்போது மத்திய மாகாணத்தில் வார்தாவென்னுமிடத்தில் உள்ள சாமிகள் காசி முதலியவைகளிலுள்ள சாமிகளைப் போலவே தங்கள் சக்தியை பிராமணனிடமிருந்து விடுதலை செய்து கொண்டதாகத் தெரியவருகின்றது. அதாவது, வார்தாவில் உள்ள லக்ஷிமி நாராயணசாமி கோவிலுக்குள் தீண்டாதவர்கள் எனப்படுபவர்கள் போய் கும்பிடலாம் என்று அங்குள்ள மக்கள் தீர்மானித்து அந்தப்படியே இந்த ஒரு வாரமாக எல்லோரும் உள்ளே போய் கும்பிட்டு வருகிறார்களாம்.

இதுவரை அந்தக் கோவிலில் உள்ள ஒரு சாமி கூட சாகவில்லையாம். இன்னும் சில இடங்களிலும் இது போலவே நடைபெற்றும் வருகின்றதாம்.

ஆனால் நம் தென்னாட்டு சாமிகளுக்கு மாத்திரம் பார்ப்பனர்கள் கையிலிருந்து தப்பிக்க இன்னும் சக்தியேற்படவில்லை என்கின்றதானது நமக்கு மிகவும் வெட்கக் கேடான காரியமாய் தோன்றுகின்றது.

"கடவுள் நெறியையும், கடவுள் தன்மையையும் ராமசாமி நாயக்கனும் சுயமரியாதைக்கூட்டத்தாரும் பாழாக்குகின்றார்கள்" என்று சொல்லுவதற்கு



RangaRakes

மாத்திரம் நமது நாட்டில் ஆட்கள் ஏராளமாய் இருக்கின்றார்களே யொழிய மற்றபடி இக் கூட்டத்தாருக்குள் பார்ப்பானைத் தவிர கடவுள்களின் கோவிலுக்குள்ளே மற்றவர் போனாலும் அதைத் தொட்டாலும் கடவுள் செத்துப் போவார் என்கின்ற கொள்கை கடவுள் தன்மைக்கும் கடவுள் நெறிக்கும் ஏற்றதா என்பதை ஒருவராவது கவனிக்கின்றாரா என்று பார்த்தால் அடியோடு இல்லையென்றேதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. இனியாவது நமது தென்னாட்டுக் கோவில்களின் நிர்வாகிகள் கவனித்து தங்கள் தங்கள் நிர்வாகத்திலுள்ள கோவில்களில் இருக்கும் கடவுள்களை பார்ப்பன அடிமைத்தனத்திலிருந்து வடநாட்டு சாமிகளைப்போல விலக்கி சுதந்திரமுள்ள சாமிகளாகவும், எல்லோருக்கும் சமமான சாமிகளாகவும் இருக்கத்தக்கதான நிலையில் இருக்கும்படி செய்வார்களா? என்று கேட்கின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 02.09.1928**



tamilnavarasam.com

## பஹிஷ்காரப் புரட்டும் சர்வகக்ஷி மகாநாட்டுப் புரட்டும்

சர்வகக்ஷியாரும் சேர்ந்து ஒரு சுயராஜ்யதிட்டம் போட்டுவிட்ட தாகவும் அதை எல்லோரும் சேர்ந்து ஒப்புக் கொண்டதாகவும் இனி பொது ஜனங்களும் சர்க்காரும் அதை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான் பாக்கி யென்றும் அரசியல் வயிற்றுப்பிழைப்புப் பத்திரிகைகள் ஊளையிடு கின்றன. இது ஒரு அன்னக் காவடி, “இராஜா மகளுக்கும் எனக்கும் கல்யாணம் தீர்மானம் ஆகிவிட்டது. ஆனால் ராஜாவும் அவனது மகளும் சம்மதம் கொடுக்க வேண்டியது மாத்திரம்தான் பாக்கியாய் இருக்கின்றது” என்று சொல்லிக் கொண்டது போலிருக்கிறது. சர்வ கக்ஷி மகாநாடு என்பது என்ன? அதில் யார் யார் இருந்து “திட்டம்” செய்தார்கள்? அவர்களுக்கும் நாட்டின் ஏழை மக்களுக்கும் ஏதாவது சம்மந்தமுண்டா? இந்தியாவில் உள்ள எந்த ஜாதியாருக்கு அல்லது எந்த மதக்காரருக்கு அல்லது எந்த தொழில் காரர்களுக்கு இவர்கள் சம்மந்தப்பட்டவர்கள் என்று சொல்லிக் கொள்ளக் கூடும்?

மகமதிய சபையார்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களா? கிறிஸ்தவ சபை யார்கள் ஒப்புக் கொள்கின்றார்களா? இந்து சபையார் ஒப்புக் கொள் கிறார்களா? பார்ப்பன சபையார் ஒப்புக் கொள்ளுகின்றார்களா? பார்ப்பன ரல்லாதார் சபையார் ஒப்புக்கொள்ளுகிறார்களா? ஆதி இந்துக்கள் ஆதி திராவிடர்கள் என்கின்ற சபையார் ஒப்புக் கொள்ளுகின்றார்களா? எனவே இந்தியாவில் இத்திட்டத்தை யார் ஒப்புகொள்ளுகின்றார்கள் என்பது விளங்கவில்லை. ஒரு சமயம் உத்தியோகம் சம்பாதிக்கும் சபைகளாகிய காங்கிரஸ், சுயராஜிய, மிதவாத சபைகளின் பேரால் உள்ள சிலர் ஒப்புக் கொள்ளுகின்றார்கள் என்று சொல்ல வருவார்களேயானால்,

காங்கிரஸ் தலைவர் ஒப்புக்கொள்ளுகின்றாரா? அல்லது சுயராஜியக் கக்ஷி உபத் தலைவர் ஒப்புக்கொள்ளுகின்றாரா? தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஒப்புக்கொள்ளுகின்றாரா? மற்றும் யார் ஒப்புக்கொள்ளு கின்றார்கள் என்பது விளங்கவில்லை.

மேல்கண்ட இத்தனை பேர்களும் ஷை சுயராஜ்ஜியத்தை ஒப்புக் கொள்ளவில்லை என்பது தெரிந்து ஒப்புக்கொள்ளாத மேற்படியார்களை ஒரு பக்கம் திட்டிக் கொண்டு மறுபக்கத்தில் “சர்வகக்ஷி மகாநாட்டுத் தீர் மானத்தை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகின்றார்கள்” என்று எழுதுபவர் களை பொதுமக்கள் இப்போதாவது வயிற்றுப் பிழைப்பு பத்திரிகைக்காரர்கள் என்று தீர்மானிப்பதற்கு ஏதாவது ஆக்ஷேபனை உண்டா என்று கேட்கின்றோம்.

தவிர இதற்கு முன் திட்டங்கள் போட்ட பல கனவான்களின் சங்கதி யும், அத்திட்டங்களின் சங்கதியும் அதாவது ஸ்ரீமதி பெசண்டம்மை, திரு வாளர்கள் விஜயராகவாச்சாரியார், மதன் மோகன் மாளவியா, சீனிவாசய் யங்கார், ரங்கசாமி அய்யங்கார், மோதிலால் நேரு மற்றும் அநேகர்கள் போட்ட திட்டங்கள் என்ன ஆயின என்பதும் “சிதம்பர இரகசியமாய்” இருக்கின்றது.

நிற்க, இந்த சர்வகக்ஷி மகாநாட்டார் என்பவர்கள் புதிதாக செய்து முடித்திருக்கும் வேலைகளிலெல்லாம் குறிப்பிடத்தக்கது ஒரே ஒரு வேலைதான். அதாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்னும் சமத்து வத்தை ஒழிப்பதற்கு செய்துள்ள சூழ்ச்சிதான்.

இந்த சூழ்ச்சியை சர்வ கக்ஷி மகாநாடுதான் புதிதாக செய்திருப்பதாக அவர்களது கூலிகள் பெருமை பாராட்டிக் கொள்ளலாமானாலும், வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் என்பது ஏற்பட்டது முதலே இதே கூட்டத்தார் அதாவது இப்போது சர்வகக்ஷி மகாநாடு என்பதில் ஆதிக்கம் கொண்டுள்ள கூட்டத்தாரும் அவர்களுக்கு ஆதி முதலே அடிமைகளாகவும் கூலி களாகவும் இருந்து வரும் கூட்டத்தாரும் இந்த சூழ்ச்சிகள் செய்து வருவது யாவருக்கும் தெரியாது என்பதாக நினைத்து, இப்போது வேறு போர்வை போர்த்துக் கொண்டு வந்துவிட்டதாகத் தெரிகின்றது. இதே காரணத் தினாலேயே சைமன் கமீஷனை பகிஷ்கரிக்க வேண்டுமென்று பார்ப்பனக் கூலிகளாய் இருந்து கூவினதும் பொது ஜனங்களுக்குத் தெரியாது என்று இவர்கள் நினைத்துக் கொண்டிருப்பதாகவும் தெரிகின்றது. எது எப்படி யிருந்தாலும் பகிஷ்காரக் கூச்சலில் தாங்கள் தோற்றுவிட்டதை நன்றாய் அறிந்து அதே சைமன் கமிஷனின் பாதத்தில் வைத்து விழுந்து கும்பிட ஒரு திட்டத்தையும் தயார் செய்துகொண்டு அதற்கு சர்வசக்ஷி மகாநாட்டுத் திட்டம் என்பதாக பெயரையும் கொடுத்து முக்காட்டை விலக்கிக் கொண்டு வெளியில் வந்தாய் விட்டது.

எனவே இதனால் ஒவ்வொருவரும் அவரவர்கள் திட்டத்தை சைமன் கமிஷனுக்கு தெரிவிப்பதற்காக விரைந்து போட்டி போட வேண்டிய அவசியம் ஒன்று புதிதாய் ஏற்பட்டதே ஒழிய வேறு ஒரு காரியமும் ஏற்பட்டு விட்டதாய்ச் சொல்வதற்கில்லை.


RangaRakes
tamilnavarasam.com

கடைசியாக நாம் குறிப்பிடுவது என்னவென்றால், கமீஷன் பகிஷ்காரம் என்கின்ற புரட்டை பார்ப்பனர்களும் அவர்களது அடிமைகளும் கூலிகளும் என்றைக்கு ஆரம்பித்தார்களோ அந்த வினாடி முதல் அதைப் பற்றி நாம் என்ன என்ன எழுதியும் பேசியும் வந்தோமோ அவைகள் எல்லாம் ஒன்று விடாமல் நடந்து வருகிறதா இல்லையா என்பதை மாத்திரம் ஞாபகப் படுத்திப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 02.09.1928**



# "விஸ்வநேசன்"

திருவாளர்கள் கா. சுப்பண்ண ஆச்சாரியார் அவர்களும், ந. நல்லய்ய ஆச்சாரியார் அவர்களும் ஈரோட்டிலிருந்து 'விஸ்வநேசன்' என்பதாக ஒரு புதிய வாராந்திர பத்திரிகை நடத்துவதாக ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிகின்றது. அது சீக்கிரத்தில் வெளியாகலாமென்றும் நினைக்கின்றோம். அப்பத்திரிகையானது ஏனைய சில சமூகப் பத்திரிகைகள் போலவும் அரசியல் புரட்டுப் பத்திரிகைகள் போலவும் வயிற்றுப் பிழைப்புப் பத்திரிகைகள் போலவும் 'அரைத்த மாவை அரைத்துக் கொண்டே இருக்கின்றது' என்பது போல் ஒவ்வொரு விஷயத்திலும் பார்ப்பனர்களையும் அவர்களது சமய பழக்க வழக்கங்களையும் பின்பற்றிக் கொண்டு கண்மூடித்தனமாய் நடப்பதாக இல்லாமல், சுதந்திரத்துடன் தனது சொந்த அறிவுக்கு மரியாதை கொடுத்து தற்காலம் நமது மக்களுக்கு வேண்டியதான வழிகளில் செல்லும் என்பதாக உறுதிகொண்டு அதை வரவேற்கின்றோம். அன்றியும் அதன் பத்திராதிபராக இருக்கப்போகும் திரு. கா. சுப்பண்ண ஆச்சாரியாரவர்கள் ஒத்துழையாமை காலத்தில் ஈரோட்டில் சர்க்காரின் அக்கிரம உத்திரவை மீறி சிறை சென்றவர். இப்போதும் தொழிலாளர் விஷயமாகவும் ஈரோட்டில் சர்க்காரால் போடப்பட்ட அநியாய உத்தரவை மீறினதாக கைது செய்யப்பட்டு, திரு. ஈ.வெ.ராமசாமி நாயக்கர் முதலியவர்களுடன் விசாரணையிலிருப்பவர். எனவே இப்போர்ப்பட்ட அவரது ஆதிக்கத்தில் அப்பத்திரிகை நடைபெறும் வரையில் அது பெரிதும் சுயமரியாதைக் கொள்கைகளையே ஆதாரமாய்க் கொண்டு நடைபெறும் என்பதும் நமது உறுதி. ஆதலால் இத்தகைய பத்திரிகையை பொது மக்கள் ஆதரிக்க வேண்டுகின்றோம்.

**குடி அரசு - மதிப்புரை - 02.09.1928**



RangaRakes tamilnavarasam.com

# இந்து கடவுள்கள்

**–சித்திரபுத்திரன்**

## உ.சுப்பிரமணியனது பிறப்பு

விஸ்வாமித்திரன் சுப்ரமணியனது பிறப்பைப் பற்றி ராமனுக்குக் கூறியது:–

1. சிவபெருமான் உமாதேவியைத் திருக்கலியாணம் செய்து, மோகங்கொண்டு அவளுடன் 100 தேவ வருஷம் (மனித வருஷத்தில் பல யுகம்) புணர்ந்து கொண்டிருந்தனர். அவ்வளவு காலம் கழிந்தும் பார்வதி கர்ப்பம் அடையவில்லை. அது கண்டு நான்முகன் முதலிய தேவர்கள் சிவனிடத்தில் வந்து, "இவ்வளவு காலம் புணர்ந்த உம்முடைய தேஜஸ்ஸாகிய விந்து வெளிப்படுமானால் உலகம் பொறுக்கமாட்டாது. உம்முடைய விந்துவை தயவு செய்து விடாமல் நிறுத்திக் கொள்ளும்" என்று வேண்டவும், அதற்கிசைந்த சிவன் தனது விந்துவை மற்றபடி யார் தரிப்பது? எங்கு விடுவது? என்று கேட்க, தேவர்கள் பூமியில் விடும்படி சொல்ல, அந்தப்படியே சிவன் பூமியின் மீது விட்டுவிட்டார். பூமி அதை தாங்க மாட்டாமல் பூமி முழுதும் கொதிகொண்டு எழ, தேவர்கள் அந்த வீரியத்தை பூமி தரிக்க முடியாது எனக் கருதி அக்கினியிடம் சென்று வேண்ட, அக்கினி வாயுவின் உதவியால் அவ்வீரியத்திற்குள் பிரவேசித்து பிரம தேவன் கட்டளைப்படி அதை கங்கையில் கொண்டு சேர்த்து, அவ்வீரியத்தைப் பெற்று ஒரு குழந்தைப் பெற வேண்டுமென்று கங்கையை வேண்ட, கங்கையும் அதற்குச் சம்மதித்து அவ்வீரியத்தைப்பெற, அவ் வீரியமானது கங்கை முழுவதும் பரவி நிறைந்துவிட, கங்கை அதை தாங்கமாட்டாமல் மறுபடியும் அக்கினியை வேண்ட, அக்கினி மனமிரங்கி கங்கையை நோக்கி " ஏ கங்கையே! நீ அடைந்த சிவனின் வீரியத்தை தாங்க முடியாவிட்டால் பனிமலை அருகில் விட்டுவிடு" என்று சொல்ல, கங்கையும் அவ்வாறே அவ்வீரியத்தை பனிமலையின் அருகில் விட, அங்கு அது குழந்தையாகத் தோன்ற அதை இந்திரன் பார்த்து அக்குழந்தைக்கு பால் கொடுத்து வளர்க்க கிருத்திகா தேவிகளை ஏவ, அவர்கள் அதற்கு பால் கொடுத்து வளர்த்து வரலானார்கள். பல இடத்தில் சிவனது வீரியம் ஸ்கலிதமானதன் பலனாக அக் குழந்தை உற்பத்தியானதால் அக்குழந்தைக்கு ஸ்கந்தன் என்றும், கிருத்திகா



தேவிகள் ஆறுபோர்களுடைய பால் சாப்பிட்டதால் கார்த்திகேயன் என்றும், மேல்கண்ட ஆறுபேரின் முலையிலும் ஆறுமுகம் கொண்டு ஏககாலத்தில் பால்குடித்ததால் ஷண்முகன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன.

இவ்வரலாறு வால்மீகி ராமாயணத்தில் "சிவன் பார்வதியை புணர்ந்தது" என்று தலைப்பெயர் கொண்ட 36 – வது சருக்கத்திலும் "குமாரசாமி உற்பத்தி" என்கின்ற 37வது சருக்கத்திலும் காணப்படுகின்றது.

இரண்டாவது வரலாறு, தேவர்கள் சிவனிடம் சென்று அசுரர்களை அழிப்பதற்கு தகுந்த சக்தி கொண்ட ஒரு குழந்தையை பெற்றுத்தர வேண்டுமென்று வேண்ட, சிவன் அருள்கூர்ந்து தனது ஐந்து முகங்களுடன் மற்றும் ஒரு முகத்தையும் சேர்த்துக் கொண்டு தோன்ற அவ்வாறு முகங்களில் உள்ள நெற்றிக்கண் ஆறிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் வெளியாக, அப்பொறிகளைக் கண்டு தேவர்களும் மனிதர்களும் நடுங்கி பரமனை வேண்ட, பரமன் அப் பொறிகளை கங்கையில் விடும்படி சொல்ல அவர்கள் அப்படியே செய்ய, கங்கை அது தாங்க மாட்டாமல் அவைகளைக்கொண்டு சரவணத்தில் செலுத்த, அங்கு ஆறு குழந்தைகள் தோன்ற, அந்த ஆறு குழந்தைகளையும் கிருத்திகைப் பெண்கள் அறுவர்களும் பால் கொடுத்து வளர்த்து வந்தார்கள். பிறகு சிவன் பெண்ஜாதி பார்வதி தேவி இந்த ஆறு குழந்தைகளையும் சேர்த்துக் கட்டி அணைத்து முத்தமிட்டு பாலூட்டுகையில் அவ்வாறு குழந்தைகளும் ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளும் கொண்ட ஒரே குழந்தையாக ஆகிவிட்டது. இதற்கு ஆறுமுகமுடையதால் ஆறுமுகன் என்றும் கங்கையாறு ஏந்திச் சென்றதால் காங்கேயன் என்றும் சரவணப் பொய்கையில் தோன்றியதால் சரவணபவன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இது கந்தபுராணத்திலும் முருகன் கதையிலும் உள்ளது.

குறிப்பு:–சுப்பிரமணியன் பிறப்புக்கு மேல்கண்டபடி இரண்டு கதைகள் காணப்பட்டாலும் கந்த புராணத்தின் கதைப்படி பார்த்தாலுமே வால்மீகி ராமாயணத்தில் விஸ்வாமித்திரர் ராமருக்குச் சொன்னதாகச் சொல்லப்படும் மேல்கண்ட கதைதான் உறுதியாகின்றது. ஏனெனில் கந்தபுராணத்திலும் பார்வதியானவள் தன்மூலியமாய் பிள்ளை பெறுவதை தடுத்ததற்காக தேவர்கள் மீது கோபித்து தேவர்களை "பிள்ளையில்லாமல் போகக் கடவது" என்று சபிக்கின்றாள் என்று காணப்படுகின்றது. சிவனது நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறி வெளியாகி அதிலிருந்து பிள்ளை உண்டாகியிருக்கும் பட்சத்தில் பார்வதிக்கு தேவர்களிடத்தில் கோபம் உண்டாகக் காரணம் ஏற்பட நியாயம் இல்லை. இந்தக் கோபம் உண்டாவதற்குக் காரணம், வால்மீகி ராமாயணத்தில் சொல்வது போல், அதாவது 100 தேவ வருஷம் சிவன் பார்வதியைப் புணர்ந்து கடைசியாக வீரியம் வெளிப்பட்டு கருதரிக்கும் சமயத்தில் தேவர்கள் குறுக்கிட்டு சிவனை தனது வீரியத்தை பார்வதி கர்பத்துக்குள் விடாமல் நிறுத்திக் கொள்ளும்படி வேண்டினதால் சிவன்



RangaRakes tamilnavarasam.com

அதை எடுத்துக் கொண்டதற்கு பார்வதி கோபித்து வீரியம் ஸ்தலிதமாக்கும் சமயத்தில் கொடுமை செய்ததற்காக அவர்களைச் சபித்தது, அதாவது தன்னைப் போலவே தேவர்களுடைய பெண்சாதிகள் எல்லோரும் பிள்ளை யில்லாமல் மலடிகளாக வேண்டுமென்று சபித்ததாகக் காணப்படுவது நியாயமாக இருக்கின்றது.

அன்றியும் பார்வதி தனது கர்ப்பத்தில் விழ வேண்டிய வீரியத்தை பூமி பெற்றுக் கொண்டதால் பூமியையும் பார்வதி தனது சக்களத்திபோல் பாவித்து அவளையும் ( பூமியையும் ) பலபேர் ஆளவேண்டுமென்று சபித்ததாகவும் அதனாலேயே பூமிக்கு அடிக்கடி அரசர்கள் மாறுகிறார்கள் என்றும் வால்மீகியில் காணப்படுகின்றதும் பொருத்தமாயிருக்கின்றது.

கந்தப்புராணமோ மேல் கண்ட சிவன் 100 வருஷம் புணர்ந்த விஷயம் ஒன்றைத் தவிர மற்றவைகளையெல்லாம் ஒப்புக்கொள்ளுகின்றது.

ஆகவே சுப்பிரமணியன் என்றும் சண்முகன் என்றும் கார்த்திகேயன் என்றும் ஸ்கந்தன் என்றும் சொல்லப்படும் சாமியானது மேல்கண்ட மாதிரி ஒரு பிறப்பு வளர்ப்புக்கு உள்பட்டது என்பது வைணவப் புராணங்களிலும் சைவப் புராணங்களிலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றபடி இந்த சுப்பிரமணியனுடைய கடவுள் தன்மையையும் செய்கைகளையும் வேறு தலைப்பின் கீழ் விரிக்கலாம்.

**குடி அரசு - கட்டுரை - 02.09.1928**



# நாம் செய்த "துரோகம்"

சுயமரியாதை இயக்கத்தின் பலனாய், அரசியலின் பேரால் வாழ்ந்து வந்தவர்களுக்கெல்லாம் இந்தச் சமயம் நமது நாட்டில் சகல கவுரவங்களும் செல்வாக்குகளும் அடியோடு போய்விட்டதுடன், இது சமயம் அரசியல் என்பதில் சம்மந்தப்பட்டிருக்கின்றவர்கள் என்பவர்களெல்லோரும் சுயநலக்காரரும் வயிற்றுப் பிழைப்புக்காரரும் சிறிதும் நாணயமும் யோக்கி யதையும் அற்றவர்கள் என்ற சங்கதியும் பாமரமக்கள் யாவருக்கும் தெரிந்து விடவே அரசியல் பிழைப்புக்காரர்களின் ஆர்ப்பாட்டங்கள் கொஞ்ச நாளாகவே நமது நாட்டில் தலைகாட்ட யோக்கியதை இல்லாமல் போய் விட்டது என்பது யாவரும் அறிந்ததேயாகும். உதாரணமாக இது சமயம் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் யார் என்பதையும் அரசியல் பிரதிநிதிகள் யார் என்பதையும் அவர்களுக்கு நாட்டில் உள்ள யோக்கியதை என்ன என்பதையும் கவனித்தால் இவ்விஷயம் யாருக்கும் சுலபத்தில் விளங்காமல் போகாது.

தவிர, இப்பொழுது எங்கு அரசியல் மீட்டிங்கு போட்டாலும் எங்கு அரசியல் மகாநாடு கூட்டினாலும் அங்கு தலைவர்களும் பேசுபவர்களும் அபிப்பிராயம் கொடுப்பவர்களும் யார் என்று பார்ப்போமேயானால் திரு வாளர்கள் குழந்தை, அமீத்கான், பஷீர் அஹம்மது, குப்புசாமி முதலியார், அண்ணாமலை பிள்ளை முதலியோர்கள் ஆகிய இவர்களோடேயே சகல அபிப்பிராயங்களும் சகல பிரதிநிதித்துவங்களும் நின்றுவிடுகின்றன. சில சமயங்களில் வழக்கம் போல் மற்றும் இரண்டொரு ஆசாமிகளின் பெயர் களும் அடிபடுகின்றன. அந்த இரண்டொரு ஆசாமிகளும், பொதுஜனங்கள் தங்கள் பெயரை மறந்துவிடாமல் இருப்பதற்காக ஏதாவது ஒருவகையில் விளம்பரம் ஆக வேணுமே என்கின்ற கவலையின் பேரில் எங்கு கூட்டம் நடந்தாலும் அங்கெல்லாம் தாங்களும் இருப்பதாக தங்கள் பெயர்களை உபயோகித்துக் கொள்ள மாத்திரம் உத்தரவு கொடுத்துவிட்டு, எந்தக் கூட்டத் திலும் தலைகாட்ட வெட்கப்பட்டுக் கொண்டு தலைமறைவாகவே திரிய வேண்டியவர்களாகி விட்டார்கள். ஆகவே நமது நாட்டு அரசியல் வாழ்வின் யோக்கியதைக்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டியிருக்காது என்றே நினைக்கின்றோம்.

அரசியலில் சம்பந்தப்பட்ட ஆசாமிகளின் யோக்கியதைதான் இப்படி



RangaRakes tamilnavarasam.com

என்றால், அரசியலில் அடிபடும் சங்கதிகளைப் பற்றியோவென்றால், அது இதைவிட மோசமானதும் வெட்கக்கேடானதுமென்றே சொல்லித் தீரவேண்டும். ஏனெனில் எந்த சங்கதியை அரசியல் விஷயமாக எடுத்துக் கொண்டால் பாமர மக்களை ஏமாற்றலாமோ - எந்தச் சங்கதியை எடுத்துக் கொண்டால் யோக்கியர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்களோ - எந்தச் சங்கதியை எடுத்துக் கொண்டால் பார்ப்பனரல்லாதார்கள் கலந்துகொள்ள முடியாதோ - அந்த நாணயமற்றதும் யோக்கியதையற்றதும் உபயோகமற்றதுமான சங்கதிகளை எடுத்துக்கொண்டு, அதை ஒரு பிரமாதமான சங்கதி போல் செய்து, அதன் மூலமாய் பாமர மக்களை ஏமாற்றி எலக்ஷன்களில் தாங்கள் வெற்றி பெற்று பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்தலாம் என்பதாகவும், அப்பார்ப்பன ஆதிக்கப் பிரசாரகர்களாகவும் கூலிகளாகவும் இருந்து வயிறு வளர்க்க மார்க்கம் கிடைக்கும் என்பதாகவும் கருதி அதற்கேற்ற வண்ணமான சூழ்ச்சிகள் தயாரிப்பதாக இருக்கின்றதேயல்லாமல் வேறு யோக்கியமானதும் பொது மக்களுக்கு உபயோகமானதுமாக ஒன்றுமே கிடையாது என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

உதாரணமாக இன்றையத்தினம் அரசியல் துறையில் முக்கியமானதும் செல்வாக்கு பெற்றதுமான பிரசினை என்பது சைமன் கமிஷன் பகிஷ்காரம் என்கின்றதான பொருளற்றதும் நாணயமற்றதுமான ஒரு விஷயம். அதைப் பற்றி சுமார் 5, 6 மாத காலமாக நடந்து வரும் கலவரங்களை அறியாதாரில்லை. தேசீயத் தலைவர்கள் என்பவர்களும் தேசீய பத்திரிகைகள் என்பவைகளும் எல்லாம் ஒரே அடியாய் கூடி பேசிக் கொண்டு "சைமன் கமிஷன் பகிஷ்காரத்திற்கு நாடு முழுவதுமே அனுகூலமாயிருக்கின்றது. ஏதோ இரண்டொரு சர்க்கார் பிரசாரகர்கள் மாத்திரந்தான் சைமன் கமிஷனுக்கு அனுகூலமாயிருக்கின்றார்கள்" என்று எழுதியும் பேசியும் வந்தார்கள்.

கடைசியாக இப்போது அந்த ஆசாமிகளும் பத்திரிகைகளும் தாங்களாகவே தங்களின் புரட்டு பலிக்கவில்லை என்று தெரிந்து கொண்டு "சீ இந்தப் பழம் புளிக்கும்" என்பது போல் "சைமன் கமிஷனை பகிஷ்கரிப்பதால் லாபம் ஒன்றும் இல்லை. பகிஷ்கரிக்காவிட்டால் நஷ்டம் ஒன்றும் இல்லை" என்று சொல்ல வந்து விட்டதுடன் "சைமன் கமிஷன் பகிஷ்காரம் என்பது பெரிய தொல்லையாகிவிட்டது" என்று ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

ஆகவே இதை திடீரென்று விட்டு விட்டாலும் அக் கூட்டத்தார்களின் வாழ்க்கைக்கும் வேறு வழியில்லை. ஆகையால் செத்தப் பாம்பை ஆட்டுவது போல் மேலும் மேலும் சைமன் பகிஷ்காரம் என்பதைப் பற்றி பேசிக் கொண்டாவது இருக்க வேண்டியிருக்கின்றது. இப்பேர்ப்பட்ட சைமன் பகிஷ்காரம் இந்தியாவிலுள்ள ஏறக்குறைய எல்லா மாகாண சட்டசபைகளிலும், அதாவது பொது ஜன பிரதிநிதித்துவ சபை என்று இது சமயம் எல்லா



அரசியல்வாதிகள் என்பவர்களும் சொல்லிக் கொள்வதான சட்டசபைகளிலும், சைமன் கமிஷனுடன் ஒத்துழைப்பதென்றும், அதற்கு கூடவே இருந்து உதவி செய்ய பொது ஜனப்பிரதிநிதி என்பவர்களுக்குள்ளாக இருந்தே ஒவ்வொரு மாகாணத்திற்கு ஒவ்வொரு கமிட்டி இருக்க வேண்டும் என்றும் ஏற்பாடாகி அந்தப்படிக்கே கமிட்டிகளும் தெரிந்தெடுக்கபட்டாய் விட்டது. இனி கமிஷனை பகிஷ்கரிப்பவர்களோ, ஆட்சேபிப்பவர்களோ யார் என்பதுதான் கண்டுபிடிக்கப்பட வேண்டிய காரியமாகிவிட்டது. ஒரு சமயம் காங்கிரஸ்காரர்கள்தான் ஆட்சேபிக்கின்றார்கள் என்று சொல்லப் படுமானால், அக் காங்கிரஸ்காரர்களுக்கு நாட்டில் செல்வாக்கில்லை என்பதற்கும் அக் காங்கிரஸ் அபிப்பிராயத்தை நாட்டு மக்கள் லட்சியம் செய்யவில்லை என்பதற்கும் இதைவிட வேறு சாட்சி தேவை இல்லையென்றே சொல்லுவோம்.

இவ்வாரம் சென்னையில் நடந்த சட்டசபைக் கூட்டத்தில், அதாவது காங்கிரஸ்காரர்கள் தேசீயவாதிகள் என்பவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள் என்று காங்கிரஸ்காரர்களாலும் தேசீயக்காரர்களாலும் அவர்களது பத்திரிக்கைகளாலும் காங்கிரசுக்கு வெற்றி தேசீயத்திற்கு வெற்றி என்று சொல்லிக் கொண்ட சட்டசபையில் சைமன் கமிஷனுடன் ஒத்துழைக்கவும் உதவி செய்யவும் ஒப்புக் கொண்டு கமிட்டியும் (அதிலும் போட்டியுடன்) நியமிக்கப்பட்டாய் விட்டது.

இதற்கு அரசியல் பிழைப்புக்காரர்கள் ஒரு சமாதானம்தான் சொல்லக் கூடும். அதாவது "ஜஸ்டிஸ் கட்சியின் துரோகம்" என்பதுதான். அப்படிச் சொல்வதானால் அவர்களை நாம் ஒரு கேள்வி கேட்கின்றோம். அதாவது இந்தியாவிலுள்ள மாகாணங்கள் எல்லாம் கமிஷனுடன் ஒத்துழைக்க சம்மதித்து கமிட்டி நியமித்துக் கொண்டதற்கு யாருடைய துரோகம் காரணம் என்று கேட்கின்றோம்.

தவிர இந்தியாவிலுள்ள 'சர்வகட்சி' யாரும் பார்லிமெண்டுக்கு அனுப்ப என்று ஒரு திட்டம் தயாரித்து விட்டார்களே, இதற்கு யாருடைய துரோகம் காரணம் என்று கேட்கின்றோம்.

இந்து சபையார்கள், மகமதிய சபையார்கள், கிறிஸ்துவ சபையார்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பு சபையார்கள், வருணாசிரம வகுப்பு சபையார்கள், பார்ப்பன சபையார்கள் ஆகிய எல்லோரும் சைமன் கமிஷனிடம் ஒத்துழைக்க சம்மதித்து ஏறக்குறைய எல்லோரும் ஒவ்வொருதிட்டம் தயாரிக்கின்றார்கள். இதற்கு யாருடைய துரோகம் காரணம் என்று கேட்கின்றோம்.

"காங்கிரஸ்" தலைவர்கள் என்பவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திட்டம் தயாரித்து வைத்துக்கொண்டு அவற்றை சைமன் கமிஷனுக்கு



RangaRakes tamilnavarasam.com

அனுப்பவில்லை என்று சொல்வதானாலும் சைமன் கமிஷனுடைய அப்ப னான பார்லிமெண்டுக்கு போய்ச் சேரும்படி செய்துவருகின்றார்களே, இதற்கு யாருடைய துரோகம் காரணம் என்று கேட்கின்றோம். எனவே, சைமன் கமிஷனையோ அதன் தகப்பனான பார்லிமெண்டையோ பஹிஷ் கரிக்கின்றவர்கள் யாராவது இந்த நாட்டில் இருக் கின்றார்களா என்று எந்த யோக்கியனாவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

ஒரு சமயம் யாராவது ஒன்று இரண்டு 'துறவி' இருக்கலாம். அதைப் பற்றி நமக்கு கவலை இல்லை. ஏனெனில், 'துறவிக்கு வேந்தன் துரும்பு' எது போல் என்றால், ஒரு காலத்தில் நாணயவிகித மாறுபாடுகள் ஏற்பட்ட போது மக்கள் எல்லோரும் ஒவ்வொரு பாங்கியின் நிலைமையைக் குறித்தும் கவனித்து வந்தார்களாம். ஏனெனில் அவர்கள் ஜீவநாடியான செல்வங்களை எல்லாம் பாங்கியில் போட்டு வைத்திருக்கின்றவர்களானதால் எந்த பாங்கி முறிந்து விடுமோ என்று ஒவ்வொருவரும் கவலைப்பட்டுக் கொண்டு பாங்கி வர்த்தமானத்தை கவனித்த வண்ணமாகவே இருந்தார்களாம். அந்த சமயத்தில் ஒரு மனிதன் "எந்த பாங்கி முறிந்து போனாலும் நான் மாத்திரம் சிறிது கூட கவலைப்பட மாட்டேன்" என்று பெருமை பேசிக்கொண்டானாம் இதைப் பார்த்த பலர் "இவன்" ஒரு பெரிய பிரபுவாக இருக்கலாமோ அல்லது கஷ்டம் வந்தாலும் கலங்காத வீரனாக இருக்கலாமோ என்று கருதிக்கொண்டு அவனுடைய யோக்கியதைகளை அறிய ஆசைப்பட்டு விசாரித்ததில், அவன் பரமபாப்பர் என்றும், எந்த பாங்கியிலும் அவனுக்கு ஒரு காசு கூட இருப்பு இல்லை என்றும், அதனால்தான் அவன் அவ்வளவு "தைரியமாயும்" "வீரமாயும்" "எந்த பாங்கு முறிந்தாலும் நான் ஒரு சிறிதும் கவலைப்பட மாட்டேன்" என்றும் சொன்னான் என்பதாகத் தெரிந்து கொண்டார்களாம்.

எனவே, இப்போது சைமன் கமிஷனை பஹிஷ்கரிப்பதாக ஏதாவது ஒன்று இரண்டு ஆசாமிகளாவது இருக்கிறதாகச் சொல்ல ஏற்படுமானால் அவர்கள் மேற்கண்ட தைரியவானைப் போன்ற "துறவி"யாகத்தான் இருக்க வேண்டும்.

சைமன் கமிஷனை பஹிஷ்காரம் செய்யாத எவரும் இப்பேர்ப்பட்ட 'துறவி'களின் அபிப்பிராயத்தை லட்சியம் செய்து தாங்கள் ஏதாவது துரோகி களாகி விட்டோமா என்பதாக சந்தேகப்பட வேண்டியதில்லை என்பதே அறிவுடமை என்பதை எடுத்துக்காட்டுகின்றோம். மற்றபடி இதில் ஏதாவது துரோகம் உண்டா என்பதாக கேட்பார்களானால், ஆம் ஒரு வழியில் துரோ கம் என்றே சொல்லுவோம். அதென்னவெனில், பார்ப்பன ஆதிக்கத்திற்கும், பார்ப்பன ஆதிக்கக் கூலிப் பிரசாரத்திற்கும் சந்தேகமில்லாத துரோகம்தான். ஆனால் இந்த துரோகத்தை ஒவ்வொரு உண்மைப் பார்ப்பனரல்லாதாரும் செய்யவேண்டும் என்பதே நமது வேண்டுகோள்.

**குடி அரசு - தலையங்கம் - 09.09.1928**



RangaRakes

## காங்கிரஸ்காரர்களின் துரோகம்

தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்த சம்மந்தமாக சர்க்காரார் ரயில்வே அதிகாரிகளுடன் சேர்ந்து கொண்டு தொழிலாளர்களை இம்சைப்படுத்தி வருவதைப் பற்றி சென்னை சட்டசபையில் விவாதிப் பதற்காக மற்ற விஷயங்களை ஒத்திப்போட வேண்டுமென்று ஒரு அவசரப் பிரேரேபணைக் கொண்டு வரப்போவதாக கோயம்புத்தூர் திரு.சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார் பத்திரிகைகளுக்கு தெரிவித்திருந்தது யாவரும் அறிந்த விஷயமேயாகும். இதை அறிந்த காங்கிரஸ்காரர்கள் என்னும் அரசியல் பிழைப்புக் கூட்டத்தார்கள் திரு. முதலியார் இந்தப் பிரேரேபணை யைக் கொண்டு வந்து பேசுவார்களேயானால் பார்ப்பன சூழ்ச்சியும் தேசீய புரட்டும் காங்கிரஸ் குட்டும் வெளியாகிவிடுமே என்பதாகக் கருதி திரு. சத்தியமூர்த்தி மூலம் திரு. முதலியாரால் இப் பிரேரேபணை பிரேரேபிக்கக் குறிப்பிட்டிருந்த காலத்திற்கு முன்னதாகவே தாங்கள் பிரேரேபிக்கப் போவதாக நோட்டீஸ் கொடுத்தார்கள். இதை உண்மை என்று நம்பிய முதலியாரும் மற்றும் தொழிலாள அனுதாபிகளும் அதில் கலந்து கொள்ளத் தீர்மானித்துத் தங்கள் பிரேரேபிப்பதற்கென்று தனிச்சமயம் கேட்காமல் இருந்து விட்டார்கள். இந்த நிலையில் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் பொறுப்பில்லாமல் தாங்கள் சூழ்ச்சிக்கு ஏற்றவிதமாய் ஒரு தீர்மானத்தை எழுதிக் கொடுத்துவிட்டு அதைப் பிரேரேபிக்கும்போது அதற்கு விரோத மாய் பேசத் தொடங்கினார். அப்போது சட்டசபை அக்கிராசனர் திரு. சத்திய மூர்த்தியைத் தீர்மானத்தை அனுசரித்துப் பேச வேண்டுமென்று சொன்னா ராம். இதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு திரு. சத்தியமூர்த்தி உடனே நாம் இத்தீர்மானத்தைப் பிரேரேபிக்கின்றதில்லை என்று சொல்லி உட்கார்ந்து கொண்டார். உடனே தலைவர் அடுத்த விஷயத்திற்கு போய்விட்டார். அடுத்த நாள் திரு. சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் தாம் முன் தெரிவித்திருந்த ஒரு தீர்மானத்தை அனுப்பினார். இதை சட்டசபைத் தலைவர் "இத்தீர்மானம் திரு. சத்தியமூர்த்தியால் நேற்றே கொண்டுவரப்பட்டு அவரால் பின் வாங்கிக் கொள்ளப்பட்டதால் அதே காரியத்திற்கு இன்று மறுபடியும் இடங்கொடுக் கப்படமாட்டாது" என்றும் வேறு இரண்டு அவசரப் பிரேரேபணைகள் கொண்டுவரவேண்டியிருக்கின்றதென்றும் ஆதலால் சமயம் இல்லை யென்றும் சொல்லிவிட்டாராம்.

இந்தக் காரணங்களால் நல்ல ஒரு சமயம் வீணாகப் போய்விட்டது.



tamilnavarasam.com

பொது நிலையில் இருந்து யோசித்துப் பார்த்தால், திரு. சத்தியமூர்த்தி அவர்கள் தீர்மானம் கொண்டு வந்ததும் அவர் அதை பின்வாங்கிக் கொண்டதும் முன் ஏற்பாட்டுடன் செய்த சூழ்ச்சியென்றே சொல்ல வேண்டும்.

சட்டசபைத் தலைவர் "தீர்மானத்திற்கு கட்டுப்பட்டுப் பேசுங்கள்" என்று சொன்னால் இதில் தப்பிதம் என்ன என்றும் அதற்காக திரு. சத்தியமூர்த்தி தீர்மானத்திற்கு கட்டுப்பட்டு பேசாமல் தீர்மானத்தையே வாபீசு வாங்கிக் கொள்ள வேண்டிய அவசியம் என்னவென்பதையும் யோசித்தால் விளங்காமல் போகாது.

ஒரு சமயம் அக்கிராசனர் அப்படிச் சொன்னதில் ஏதாவது குற்றமிருந்தாலோ அல்லது வேறு காரணங்கள் இருந்து தீர்மானத்தை அனுசரித்துப் பேச திரு. சத்தியமூர்த்திக்கு முடியாமல் போயிருந்தாலோ திரு. சத்தியமூர்த்தியவர்கள் பேச்சு ஒன்றும் இல்லாமல் தான் ஏற்கனவே எழுதிக் கொடுத்து அக்கிராசனரால் ஒப்புக்கொண்டபடி தீர்மானத்தை படித்துச் சொல்லி அதைப் பிரேரேபிப்பதில் உள்ள ஆக்ஷேபணை என்ன என்று கேட்கின்றோம். தவிர "அப்படியானால் நான் பேசவில்லை" என்றாவது சொல்லிவிட்டு தான் சும்மா உட்கார்ந்து கொள்ளாமல் "நான் தீர்மானத்தைக் கூட பிரேரேபிப்பதில்லை" என்று சொல்ல வேண்டிய அவசியமென்ன என்று கேட்கின்றோம். எனவே இச்சம்பவம் "தானும் குடிக்காமல் வேறு யாரையும் குடிக்கவொட்டாமல் வீணாய் கீழே கவிழ்த்து விட்ட துரோகக்காரன்" செய்கைக்கு ஒப்பாக இருக்கின்றதா இல்லையா என்று கேட்கின்றோம்.

அன்றியும் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை எப்படியாவது கெடுத்து அவர்களை அடியோடு தொலைக்க வேண்டும் என்கின்ற கருத்துடனே காங்கிரஸ்காரர்களும் தேசீயக்காரர்களும் அவர்களது பத்திரிகைகளும் ஏஜண்டிடம் விலை பேசிக்கொண்டு தொழிலாளர்களுக்கு பரிகாரம் செய்ய முடியாத துரோகம் செய்து விட்டார்கள் என்பதை திரு.சத்தியமூர்த்தி அவர்களின் செய்கை ஆதரிக்கின்றதா இல்லையா என்று கேட்கின்றோம்.

முதலாவது, யாரோ பல போக்கிரிகளும் காலிகளும் சேர்ந்து ரயில் வண்டியைக் கவிழ்த்து விட தென் இந்தியா ரயில்வே தொழிலாளர்கள் செய்து விட்டார்கள் என்று அவர்கள் மீது பழி சுமத்தி தொழிலாளர்களை அக்கிரமமாகப் பிடித்து அடைக்கச் செய்தது ஒரு குற்றம்.

இரண்டாவது, வேலை நிறுத்தம் தோல்வி அடைந்துவிட்டது என்று பொய்யான செய்தியை கட்டிவிட்டது ஒரு குற்றம்.

மூன்றாவது, இவ்விஷயம் தெரிந்தே வேண்டுமென்றே தொழிலாளர் வேலை நிறுத்தத்தை கெடுக்கக் கருதி "வேலை நிறுத்தம் முறிந்துவிட்டது"



RangaRakes

என்று பத்திரிகைகளில் போட்டு கட்டுப்பாட்டை உடைத்து சின்னாபின்னப் படுத்தியது ஒரு குற்றம். இன்னும் இது போல் பல குற்றங்களும் செய்து விட்டு இவ்வளவும் போதாமல், இதைப்பற்றிய அக்கிரமங்களைப் பற்றி பொது ஜனங்கள் அறியும்படி செய்ய சட்டசபையில் பேசி ஏதாவது ஒரு காரியம் செய்யலாம் என்றால் அங்கு விவரிக்கும் போது இந்த துரோகங்கள் எல்லாம் வெளியாகிவிடுமே என்கின்ற காரணத்தைக் கொண்டு வேறொருவர் தீர்மானம் கொண்டு வராமல் தடுப்பதற்காக, ஒரு தீர்மானம் கொண்டு வருவது போல வேஷம் போட்டு, மற்றவர்களுக்குள்ள சந்தர்ப்பங்களைக் கெடுத்து இம்மாதிரி மோசம் செய்வதென்றால் இதற்கு என்ன பெயர் கொடுப்பது என்பது நமக்கு விளங்கவில்லை.

தங்களாலேயே "உபயோகமற்றது" என்று சொல்லப்படும் சைமன் கமிஷனுடனும், "யார் ஒத்துழைத்தாலும் ஒன்றும் முழுகிப் போய்விடாது" என்று சொல்லப்படும் சைமன் கமிஷனுடனும், இந்திய மக்கள் பிரதிநிதிகள் என்பவர்களால் ஒத்துழைக்க தீர்மானித்த சைமன் கமிஷனுடனும் ஒத்துழைப்பது என்பதற்கு துரோகம் என்றும் சர்க்கார் தாசத்தனம் என்றும் சொல்வதானால் இந்த மாதிரி அயோக்கியத்தனமும் கொலைபாதகத்தனமும் பொருந்திய இப்பெரு மோசத்திற்கு என்ன பெயர் கொடுப்பது என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. மனப்பூர்வமாய் 30000, 40000 ஜீவன்கள் கஞ்சியில்லாமல் தவிப்பதும், சாதுக்களும், நிரபராதிகளுமுள்பட 200, 300 பேர்கள் ஜெயிலில் அடைக்கப்பட்டு 10 வருஷம் 20 வருஷம் தண்டிக்கப் படத்தக்க குற்றங்கள் சுமத்தப்பட்டு விசாரணையில்லாமலும் ஜாமீனில் விடாமலும் கொடுமைப் படுத்தப்படுவதுமாயிருக்கும் இச் சமயத்தில் இதைப் பற்றி யாருக்கும் எவ்வித கவலையுமில்லாமல், கவலைப்படுகின்றவர்களையும் அவர்களால் கூடியதைச் செய்யவொட்டாமல் தடுத்துக் கொண்டும் இருப்பதானால் இந்தக் கூட்டத்தார் "காங்கிரஸ்" காரர்கள் என்றும் "சுயராஜ்யக்" காரர்கள் என்றும் "தேசீயக்"காரர்கள் என்றும் "பூரண சுயேச்சைக்"காரர்கள் என்றும் சொல்லிக் கொள்ளுவதானால், இந்த நாட்டில் சூட்சிக்காரர்களுக்கும், வஞ்சகக்காரர்களுக்கும், ஏழைகளைக் காட்டிக் கொடுத்து வயிறு வளர்க்கும் துரோகிகளுக்கும் இன்னமும் இடமிருக்கின்றது என்கின்றதாக ஏற்படுகின்றதா இல்லையா என்று கேட்கின்றோம்.

அன்றியும் இந்தக் கூட்டத்தார்கள் தானே தங்களோடு சேராத மற்றவர்களைப் பார்த்து தேசத் துரோகிகளென்று சொல்லுகிறவர்களாக இருக்கின்றார்கள் என்பது தெரிகின்றதா இல்லையா என்று கேட்கின்றோம்.

எனவே முடிவாக இனியாவது பாமர மக்கள் உண்மையை உணர்வார்களா என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.09.1928**



tamilnavarasam.com

# ராமனாதபுரம் ஜில்லாபோர்டு

ராமனாதபுரம் ஜில்லாபோர்டு பிரசிடெண்டாயிருந்த ராமனாதபுரம் ராஜா அவர்கள் காலமானதின் மூலம் இப்போது அந்த பிரசிடெண்ட்ஸ்தானம் காலியாக இருந்து வருகின்றது. சர்க்காரார் அந்த ஸ்தானத்தை பூர்த்தி செய்வதற்கு இதுவரை யாதொரு முடிவும் செய்திருப்பதாகத் தெரியவில்ல. ஆனாலும் அந்த ஸ்தானத்தை தேர்தலுக்கு (எலக்ஷனுக்கு) விட்டுவிடலாமா அல்லது தாங்களே ஒருவரை பிரசிடெண்டாக நியமனம் ( நாமிநேஷன்) செய்து விடலாமா என்று யோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. தற்கால நிலைமையில் அதுவும் ராமனாதபுரம் ஜில்லாவைப் பொருத்தவரை அந்த ஸ்தானத்தை எலக்ஷனில் விடுவதைவிட நாமிநேஷனில் தக்க ஒருவரை நியமனம் செய்வதே யோக்கியமும் அறிவுடைமையுமான காரியம் என்று சர்க்காருக்கு யோசனை கூறுவோம். மதுரையில் சில பாகம், திருநெல் வேலி, இராமனாதபுரம் ஆகிய ஜில்லாக்களிலும் ஜாதிக் கர்வமும் ஜாதிக் கொடுமையும் தலைசிறந்து விளங்குவது யாவரும் அறிந்த ஒன்றாகும். உதாரணமாகப் பார்ப்பனர்களின் கொடுமையோ சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. அதற்கடுத்ததான தெற்கத்திய சைவ வேளாள சமூகத் தாரின் கொடுமையோ பார்ப்பனரல்லாதார் சமூகமே வெட்கப்படத்தக்கதாகும். இவ்விரு சமூகக் கொடுமைகளுக்கும் மத்தியில் அங்குள்ள மற்ற வகுப்பார் கள் படும் கஷ்டம் நினைக்கமுடியாததென்றே சொல்லுவோம்.

சாதாரணமாக சென்னை மாகாணத்தில் வேறு எங்குமே இல்லாத கொடுமைகள் பல மேல்கண்ட ஜில்லாக்களில் தாண்டவமாடிக்கொண்டு வருகின்றன.

திருச்செந்தூரில் இருக்கின்ற ஒரு சைவக் கோவிலில் வைசியர்கள் என்கின்ற வாணியச் செட்டியார் சகோதரர்களுக்கு உள்ளே செல்ல உரிமை இல்லை. அதுபோலவே மதுரை, ராமேஸ்வரம் முதலிய அனேக கோவில் களில் க்ஷத்திரியர்கள் என்கின்ற நாடார் சகோதரர்கள் பிரவேசிக்க உரிமை இல்லை. ஆனால் பக்கத்து ஊர்களாகிய பழனி முதலிய இடங்களில் கோவிலுக்குள் செல்ல அவர்களுக்கு உரிமை உண்டு.

இதுமாத்திரமல்ல. இச்சில்லாக்களில் உள்ள அனேக தெருக்களில்



RangaRakes

நடக்கக்கூட சில ஜனங்களுக்கு உரிமை தடுக்கப்பட்டிருக்கின்றது. ஏதோ இரண்டொரு பார்ப்பனரோ சைவ வேளாளரோ சில நாடார் சகோதரர்களிட மும் வாணியச் சகோதரர்களிடமும் மற்றும் சிலருடனும் அளவளாவுதாலோ, குடித்தல், உண்ணல் வைத்துக் கொண்டிருப்பதாலோ இக்கொடுமைகள் மறைந்து போனதாகச் சொல்லிவிட முடியாதென்றே சொல்லுவோம். வாணியச் சகோதரர்களுக்கும் நாடார் சகோதரர்களுக்கும் இக்கோவில் பிரவேசமும் தெருப் பிரவேசமும் கிடைத்து விட்டதினால் அவர்களுக்கு ஏதாவது பெரிய ஆதாயம் கிடைக்கும் என்பதாகக் கருதியோ அல்லது அவர்கள் இதை லக்ஷியம் செய்கின்றார்கள் என்றோ நாம் இதை இங்கு குறிப்பிடவில்லை.

மற்றபடி ஒரு பொது ஸ்தலமானது அந்நாட்டு மக்களுக்கே அதுவும் அறிவு, ஆற்றல், ஒழுக்கம், செல்வம், செல்வாக்கு, பரோபகாரம் முதலிய உயர் குணங்கள் ஒருங்கே அமையப் பெற்ற சகோதரர்களை மனித உரிமைக்கு அருகதை அற்றவர்கள் என்று சொல்வது எவ்வளவு கொடுமையானதாகவும், சகிக்க முடியாத இழிவை உண்டாக்குவதாகவும் இருக்கின்றதென்பதைக் காட்டவே இதைக் குறிப்பிடுகின்றோம்.

அன்றியும், இக்கொடுமைகள் கடவுளின் பேரால், மதத்தின் பேரால், தர்ம சாஸ்திரத்தின் பேரால் செய்யப்பட்டு வருவதுடன் அரசாங்க ஆட்சி யின் பேராலும் சட்டங்களின் பேராலும் கோர்ட்டு தீர்ப்புகளின் பேராலும் நிலை நிறுத்தப்படுவதுமானால் இனி வேறு எந்த வழியில் இதிலிருந்து விலக முடியும் என்பதுதான் நமது கேள்வி.

இச்சமூக மக்களில் ஏதோ சில பேர் அறியமையாலோ, அயோக்கியத் தனத்தாலோ அல்லது தங்களுக்குள் உள்ள உள்மாச்சரியத்தாலோ சுய மரியாதையில் கவலையற்று உதைத்த காலுக்கு முத்தமிடுவதுபோல் இக் கொடுமைக்கும் இழிவுக்கும் அடிப்படையான கடவுளையும் மதத்தையும் சாஸ்திரத்தையும் கட்டிக் கொண்டு அழுவதுடன் அதைக் கற்பித்த பார்ப்பனர்களின் வாலைப் பிடித்து திரிவதுடன் இதைத்திருத்த முயலாத அரசியல் இயக்கத்துடனும் அரசாங்க முறையுடனும் ஒத்துழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆயினும் இனியாவது இவற்றை ஒழிக்க முற்பட வேண்டியதவசியமாகும்.

கொடுமைப் படுத்தப்பட்ட இச்சமூகத்தாருக்கு இதில் போதிய கவலை இன்னும் ஏற்படவில்லையே என்று யாராவது சொல்வதானாலும் அதை ஒரு சாக்காக வைத்துக்கொள்ளாமல் பொதுநலத்தை உத்தேசித்து நாட்டின் பொது சுயமரியாதையில் கவலையுள்ள மற்றவர்களாவது நாட்டின் க்ஷேமத்தையும் மனித சமூகத்தின் பிறப்புரிமையையும் உத்தேசித்து வேண்டுவன செய்யவேண்டியதே முதற்கடமை என்போம். இதை உத்தேசித்தேதான்



tamilnavarasam.com

இராமநாதபுரம் ஜில்லாபோர்டு தலைவர் பதவியைத் தேர்தலில் விடாமல் நியமன மூலமாய் பூர்த்தி செய்ய வேண்டுமென்கின்றோம். ஏனெனில் தேர்தல் மூலமாய் பூர்த்தி செய்வதானால் இக்கொடுமைகளை ஒழிக்கும் மனப்பான்மையும் சந்தர்ப்பமும் உள்ளவர்களுக்கு அந்த ஸ்தானம் கிடைக்க முடியாது. நியமனம் செய்வதானால் மாத்திரம்தான் இது சமயம் சர்க்கார் தேடிப்பார்த்து அதற்க ஏற்ற ஒருவரை நியமிக்கக்கூடும்.

கொடுமைப் படுத்தப்பட்டவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் விடுதலை பெற்று சமத்துவமடைய வேண்டுமானால் அச்சமூகத்தாருக்கு அதிகாரமும் பதவியும் வழங்கப்பட்டாலொழிய வேறு வழியில் சரிப்படுத்துவதென்பது சுலபமான காரியமல்ல, வெள்ளைக்காரர்களை “நீச்சர்கள்” என்றும், மகமதியர்களை ‘மிலேச்சர்கள்’ என்றும் கிறிஸ்தவர்களை ‘இழிந்தவர்கள்’ என்றும் இன்றைக்கும் மத ஆதாரம் வைத்துக்கொண்டிருக்கும் இந்துக்கள் என்போர்களும் இந்துக்களில் உயர்ந்த ஜாதியார் என்போர்களும் அந்த எண்ணத்தை அடியோடு மறந்துவிட்டு இன்றைய தினம் அவர்களும் சமத்துவம் பொருந்தியவர்கள் என்று சொல்லிக்கொண்டு அவர்கள் தயவையும் எதிர்பார்த்துக் கொண்டு திரிவதற்கு காரணம் அச்சகோதரர்களுக்கு அதிகாரமும் பதவியும் கிடைத்ததின் பயனா அல்லவா என்று கேட்கின்றோம். அதிகாரத்தையும் பதவியையும் உத்தியோகத்தையும் கண்டால் சாமியும் மதமும் சாஸ்திரமும் இடம் கொடுத்து விட்டு ஒதுங்கி நிற்பதை நாம் தினமும் அனுபவத்தில் பார்க்கின்றோம்.

பொதுவாக இந்நாட்டில் பார்ப்பனரல்லாதார் ஒரு 20 வருஷத்திற்கு முன் இருந்ததை விட இப்போது சற்று உணர்வும் சுயமரியாதை உணர்ச்சியும் பெற்றிருப்பதற்குக் காரணம் சிறிதாவது அதிகாரமும் பதவியும் கிடைத்ததன் பயனா அல்லவா என்று கேட்கின்றோம். அதுபோலவே இப்போதும் எந்தெந்த சமூகம் பிறரால் கொடுமைப்படுத்தப்படுகின்றது என்று கருதுகின்றோமோ அந்தச் சமூகங்களுக்கு அதிகாரமும் பதவியும் உத்தியோகமும் தாராளமாய்க் கிடைக்கும்படி செய்து விட்டால் அச்சமூகங்கள் தாமாகவே விடுதலை அடைந்து சமத்துவமடைந்து விடும் என்பது நமது துணிபு.

இதற்கு உதாரணமாக, இந்நாட்டில் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட ஆதிக்கங்கள் கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் உள்ள ஆதாரத்தின் பேரால் என்று சொல்லுவதானாலும் இந்த விழிப்புக் காலத்திலும் அதை அசைக்க முடியாமல் செய்து வந்தது அப்பார்ப்பனர் கைப்பற்றிக் கொண்ட அதிகாரங்களாலும் பதவிகளாலும் உத்தியோகங்களாலுமே தவிர வேறல்ல. ஆதலால் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களிலெல்லாம் அச்சமூகங்களுக்கு அதிகாரமும் பதவியும் உத்தியோகமும் தாராளமாய் வழங்கிட வேண்டியது நேர்மையான சர்க்காரின் முக்கிய கடமையாகும். அப்படிக்கில்லாமல் “இந்தியாவுக்கு நாங்கள் தான் தர்ம கர்த்தாக்கள், இந்தியாவை காக்க எங்க



ளைக் கடவுள் அனுப்பினார். இங்கு உயர்வு தாழ்வு கொடுமைகள் அதிகம், அதை நாங்கள் தான் கவனித்து சமன்செய்து ஆள முடியும்” என்று வாயில் மாத்திரம் சொல்லிக்கொண்டு சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோது கவனிக்காமல் அச்சமூகங்களை அன்று பார்த்த காட்சிக்கு அழிவில்லாமல் வைத்திருப்பதானால் அதை பார்ப்பன சூழ்ச்சிபோல் மற்றொரு வெள்ளைக்கார சூழ்ச்சியோ அல்லது அரசாங்க சூழ்ச்சியோ என்றுதான் சந்தேகப்பட வேண்டுமே ஒழிய மற்றபடி வார்த்தைகளில் நாணயமுடையவர்கள் என்று சொல்லிவிட முடியாது.

எனவே, அரசாங்கத்தார் இத்தத்துவங்களை நன்றாய் கவனித்து தெற்கு ஜில்லாக்களில் உள்ள ஜாதிக் கொடுமையையும் ஜாதி அகம்பாவத்தையும் ஒழிக்க தைரியமாய் முன்வந்து வெகு காலமாய் கொடுமைப் படுத்தப்பட்ட சமூகத்தினர்களுக்கு தக்க அதிகாரமும் பதவியும் உத்தியோகமும் கொடுத்து ஆதரித்து அவர்களுக்கு நியாயமான செல்வாக்குண்டாக்கி அவர்களை கொடுமைப்படுத்தப்படுவதிலிருந்து மீளச் செய்வார்களாக.

நிற்க, சென்றவாரம் சென்னையில் கவர்னர் துரையவர்களையும் ஸ்தல ஸ்தாபன இலாக்கா மந்திரியவர்களையும் இது சம்மந்தமாகவே நாடார் சமூக பிரமுகர்கள் அதாவது திருவாளர்கள் நாடார் மகாஜன சபைத் தலைவர் வி. கனகசபை நாடார், உபதலைவர் செந்தில்குமார நாடார், காரியதரிசி பெரிய தம்பி நாடார், கவுன்சிலர் புன்னையப்ப நாடார், இராமசாமி நாடார், சிதம்பர நாடார் வக்கீல் நடராஜன் முதலிய பல தக்க கனவான்கள் பேட்டிகண்டு பேசிய தாகவும் தெரிய வருகின்றது. ஆகையால் இது விஷயத்தை சர்க்கார் அலக்ஷி யமாகக் கருதி விடாமல் வினயத்துடன் கவனித்து அச்சமூகப் பிரமுகர்களில் ஒருவரையே அந்த ஸ்தானத்திற்கு நியமிக்க வேண்டுமென்று யோசனை சொல்லுகின்றோம்.

தக்க கனவான் கிடைக்கவில்லை என்று சர்க்கார் சாக்கு சொல்லி தப்பித்துக் கொள்ள முடியாதென்பதையும் எச்சரிக்கை செய்கின்றோம். ஏனெனில் சட்டசபை அங்கத்தினர் பதவிக்கும் ஜில்லா போர்டு மெம்பர் பதவிக்கும், சேர்மன் பதவிக்கும் மற்றும் உத்தியோக பதவிக்கும், அதிகார உத்தி யோக பதவிக்கும் அச்சமூகத்தில் தக்க கனவான்கள் இருக்கும்போதும் வருஷம் ஐம்பதினாயிரம் ரூபா லக்ஷம் ரூபா வரும்படியுள்ள பெரிய எஸ்டேட்டுகளையும் வியாபாரங்களையும் சொந்தமாய் நிர்வகித்து நடத்தக் கூடியவர்களும் இருக்கும் போதும் இந்த வேலைக்கு மாத்திரம் ஆள் கிடைக்கவில்லை என்றால் அரசாங்கத்தின் நாணயத்தில் யாருக்கும் நம்பிக்கை இருக்காதென்றே சொல்லுவோம்.

ஆகையால் கவர்னர் துரையவர்களும் ஸ்தல ஸ்தாபன மந்திரிய



RangaRakes tamilnavarasam.com

வர்களும் தங்களின் யோக்கியதையை காட்டிக் கொள்ள நேர்ந்த தக்க சமயத்தை இழந்துவிடமாட்டார்கள் என்றே நம்புகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 16.09.1928**



# பழிவாங்கும் குணம்

திருச்சி ஜில்லா நியாயாதிபதியவர்கள் திரு. ஞானப்பிரகாசம் என்கின்ற ஒரு தொழிலாளருக்கு 10 வருஷம் கடின காவல் தண்டனை விதித்ததாக தெரியவருகின்றது.

இந்த வழக்கில் நியாயம் வழங்கப்பட்டதா அல்லது பழிவாங்கும் பேய்தன்மை நியாயம் வழங்கப்பட்டதா என்பது நமக்கு விளங்கவில்லை.

என்ன சமாதானம் சொன்னபோதிலும் இத் தீர்ப்பு எழுதிய நியாயாதி பதி மனிதத்தன்மையுடன் நடந்துக்கொன்டிருக்கிறாரா என்பதை வாசகர் கள்தான் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வேலைநிறுத்தத்தில் ஏற்பட்ட சம்பவங்களின் பலனாக சற்றும் ஈவு இரக்கமற்று பழி வாங்கும் தண்மையோடு வழக்குகள் ஜோடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் விஷயங்கள் யாவருக்கும் வெட்டவெளிச்சமாய் தெரிந் திருக்கும்.

நியாயாதிபதிகள் என்பவர்கள் தங்களுக்கு கிரமமாய் இருக்க வேண் டிய மனிதத்தன்மையை மறைத்துவிட்டு ஏதோ சில சுயநலப் பத்திரிகை காரர்கள் சுமத்திய அநியாயப் பழியையும் சில சுயநல அதிகாரிகள் ஜோடித்த விஷயங்களையும் ஆதரவாய் கொண்டு இம்மாதிரி நடப்பதென்றால் பிறகு வாயில்லா பூச்சிகளுக்கு எங்குதான் விடுதலை இருக்கின்றது என்பது நமக்கு விளங்க வில்லை. அஸெஸர்கள் ஏகோபித்து எதிரி குற்றவாளியல்ல என்று சொல்லியும் தண்டித்திருப்பதாய் தெரிகின்றது.

சட்டத்திற்கும் நீதிக்கும் பொறுப்பானவர்கள் இதற்கு என்ன பரிகாரம் செய்வார்களோ தெரியவில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 16.09.1928**



RangaRakes tamilnavarasam.com

## "புண்ணியஸ்தலங்கள்"

### பண்டரிபுரம்

**-சித்திரபுத்திரன்**

இதிகாசங்களைப் பற்றியும் புராணங்களைப் பற்றியும் கடவுள்களை பற்றியும் தனித் தனி மகுடமிட்டு "குடி அரசில்" எழுதிக் கொண்டு வருவதை வாசகர்கள் கூர்ந்து கவனித்து வாசித்து வருகின்றார்கள் என்றே எண்ணு கின்றேன். அவற்றை எழுதி வருவதின் நோக்கமெல்லாம், ஒரு சில சுயநலக் காரர்கள் தங்கள் நன்மையின் பொருட்டு எவ்வளவு ஆபாசமானவை களையும் அசம்பாவிதமானவைகளையும் வெகு சாதாரணமானவை களையும் எழுதிவைத்துக்கொண்டு பிரமாதப்படுத்தி, அவற்றையே மதம் என்றும் பக்தி என்றும் மோக்ஷத்திற்கு மார்க்கம் என்றும் பாமர மக்களை நம்பும்படியாகச் செய்து, மக்கள் அறிவையும் சுதந்திரத்தையும் சுயமரியாதை யையும் ஒற்றுமையையும் கெடுத்து வருகின்றார்கள் என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டி மக்கள் யாவரும் சமம் என்பதையுணர்ந்து சுயமரியாதை யோடு வாழ வேண்டுமென்பதுதான்.

ஷை சுயநலக்காரர்கள் சிற்சில இடங்களைப் பெரிய புண்ணிய ஸ்தலம் என்பதாக பெயர் கொடுத்து அவற்றிற்கு ஏராளமான யோக்கியதை களைக் கற்பித்திருப்பதை பகுத்தறிவற்ற மூட ஜனங்கள் புண்ணியஸ்தல யாத்திரை என்பதாகக் கருதி வெகு பணங்களைச் செலவு செய்து கொண்டு அந்தந்த ஊர்களுக்குப் போய் புத்தியையும் தங்கள் காலத்தையும் பணத்தையும் வீணில் பறிகொடுத்துவிட்டு வருவதுடன் தாங்கள் இதுவரை செய்த அக்கிரமங்களும் அயோக்கியத்தனங்களும் இந்த யாத்திரையில் மன்னிக்கப்பட்டு விட்டதாகக் கருதி மேலும் மேலும் புதிய அக்கிரமங் களையும் அயோக்கியத்தனங்களையும் செய்ய தைரியமுடையவர்களாக ஆக இடம் கொடுத்து வருகிறது.

ஸ்தல யாத்திரை என்று சொல்லப்பட்டு வந்ததானது ஒரு காலத்தில் மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கும் உலக அனுபவப் பயிற்சிக்கும் அனுகூலமாகக் கக்கினதாய் இருந்திருக்கலாம். எப்படியெனில் ரயிலும் போக்குவரத்து வசதியும் இல்லாத காலத்தில் மக்கள் ஒரே இடத்தில் இருந்து கொண்டிருந்ததால், உலக அனுபவம் தெரிந்து கொள்வதன் பொருட்டு வெளியிடங்களைச் சுற்றிப் பார்த்து வருவதற்காக ஸ்தல யாத்திரை என்பதின் பேரால் போய் வரும் வழக்கம் அனுகூலத்தைக் கொடுத்திருக்கலாம், ஆனால் இப்போது ரயில் வசதி ஏற்பட்டு விட்டதாலும் சுலபத்தில் ஒவ் வொரு இடத்து சங்கதிகளும் தன்மைகளும் பத்திரிகைகளின் மூலமாய் தெரிந்து கொள்ளுவதற்கு அனுகூலமாய் இருப்பதாலும் இப்போது புண்ய ஸ்தல யாத்திரை என்பதின் பேரால் அனாவசியமாக மக்கள் கஷ்டப்பட வேண்டியதில்லை என்றே சொல்லுவோம். தற்காலத்திய புண்ணியஸ்தல யாத்திரைகளின் யோக்கியதைகளைப் பற்றியும் யாத்திரைக்காரர்களின் யோக்கியதைகளைப் பற்றியும் புண்ணியஸ்தலங்களிலுள்ள பண்டாரங்கள், பூசாரிகள், குருக்கள் முதலியவர்களின் யோக்கியதைகளைப் பற்றியும் அத னால் மக்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் பற்றியும் நாம் அதிகமாக விவரிக்க வேண்டியதில்லை. ஏனெனில் அது பல தடவை 'குடி அரசி' லேயே பல தலைப்பின் கீழ் வந்திருக்கின்றது. இன்னும் வர இருக்கின்றது. ஆதலால் அந்த ஸ்தலங்களின் பெருமைகள் என்பவைகளைப் பற்றி மாத்திரம் எழுதலாம் என்று இந்த வியாசம் தொடங்குகின்றேன் :-

### பண்டரிபுரம்

முதல் முதல் பண்டரிபுரம் என்பதின் யோக்கியதையைப் பற்றி எழுத துணிகின்றேன்.

பதும புராணத்தில் உமா தேவியின் அறிவு பிரகாசிக்கும் பொருட்டு சிவபெருமான் சொல்லியருளிய பண்டரிபுரத்தைப் பற்றிய கதையை ஸ்ரீதரர் விஸ்தரிக்கிறார் :-

கைலாச பர்வதத்தில் ஓர் காலத்தில் எழுந்தருளியிருந்தபோது உமா தேவியார் சிவ பெருமானை நோக்கி, "நிலவுலகில் பண்டரிபுரத்தில் திருமால் நித்யவாசம் செய்வது யாது காரணத்தால்" என்று கேட்டதாகவும், அதற்கு சிவபெருமான் சொல்வதாகவும் கதை ஆரம்பிக்கப்படுகிறது.

1. கொடி போல்பவளே! திருமாலானவர் வைகுந்தத்தில் வீற்றிருக்கும் காலத்தில் இந்திராணி அவரைக் கண்டு மோகித்து " இறைவனே! நான் உமது மடியில் இருக்க வேண்டுமென்று அபேக்ஷிக்கிறேன்" என்று பிரார்த்திக்க, திருமால் இரக்கங்கொண்டு 'நீ பூலோகத்திற்குப்போய் 60000 வருஷம் தவம் செய்தால் நான் துவாரகாபுரியில் கிருஷ்ணாவதாரம் செய்து உன் விருப்பத் தைப் பூர்த்தி செய்வேன்' என்று சொல்ல, இந்திராணி அப்படியே நிலவுலகில் சென்று 60000 வருடம் தவம் செய்து கோகுலத்தில் ராதையாகப் பிறந்து வளர்ந்து, திருமால் கிருஷ்ணனாக அவதரித்து எழுந்தருளியிருக்கும் துவாரகாபுரிக்குச் சென்று அவரை வணங்க, கிருஷ்ணன் ராதையை



RangaRakes
tamilnavarasam.com

இன்னாளென்று அறிந்து வாரியெடுத்து தன் மடிமீது வைத்துக் கொள்ள, இதைக் கண்ட கிருஷ்ணனின் மனைவியான ருக்குமணி கோபங் கொள்ள, அதைக் கண்டு ராதை கிருஷ்ணனை விட்டு நீங்கி திண்டீரவனத்திற்குப் போய் கிருஷ்ணன் தனக்கு கணவனாக வேண்டுமென்று தவம் செய்ய, கிருஷ்ணன் ருக்குமணியை விட்டு விட்டு துறவி வேடம் பூண்டு ராதையைத் தேடித் திரிந்து கடைசியாக திண்டீரவனம் என்கின்ற ஓர் வனத்தில் அவளைக் கண்டு, ‘பிராண நாயகி! என்னை தனியே விட்டு இக்கொடிய வனத்திற் கெவ்வாறு வந்தனை’ என்று கேட்க, ராதையானவள் கிருஷ்ணனைப் பார்த்து ‘உன்னைப் பார்த்தாலே நீ ஒரு வஞ்சகனென்று தோன்றுகிறது. ஆதலால் நீ இங்கு நில்லாமல் ஓடிப்போ’ என்று சொல்ல கிருஷ்ணன் மதி மயங்கி தன் கைத்தடியை முழங்கால்களினால் இடுக்கிக் கொண்டு இடுப்பில் கையை வைத்து மூக்கின் முனையில் தன் பார்வையை வைத்து விருப்பத்தோடு இன்றையவரையும் அதாவது 28 துவாபரயுக காலம் ராதையின் முன் நிற்கின்றான். மேலும் பார்வதி!

2. திண்டீரனென்ற கொடிய அசுரன், சூரியனைத் தன் தேர்மீது ஏறிச் செல்லவொட்டாமல் தடுத்து தொந்திரவு செய்து கொண்டிருந்தான். ஆகவே தேவர்கள் திருமாலை அடைந்து இந்தச் செய்தியை விண்ணப்பம் செய்ய திருமால் மல்லிகார்ஜுனனாக சந்திரன் என்னும் அரசனிடம் பிறந்து வளர்ந்து வேட்டையாட ஷை திண்டீரன் என்னும் அசுரன் வசித்த திண்டீரவனம் சென்று அவனோடு ஆயிரம் வருஷம் போர் செய்தும் அவன் தோற்காமலிருக்க கடைசியாக லோகதண்டம் என்னும் கதாயுதத்தை கைக்கொண்டு அவனை யடித்து பூமியில் வீழ்த்தினார். அவன் உயிர்விடுபோது ‘ஸ்ரீஹரி’ என்று உச்சரிக்க மல்லிகார்ஜுனன் உடனே திருமாலாக மாறி அவ்வசுரனை நோக்கி “உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்டுக்கொள்” என்று அருள அவ்வசுரன் “இவ்வனம் லோக தண்டமென்று விளங்கவும் இதில் அழகிய நகர் ஒன்று உண்டாக்கி, நான் இறந்த இடத்தில் என் பேரால் ஒரு தீர்த்தமுண்டாக்கி அதனிடத்தில் உன் கதாயுதத்தை நிறுத்தி, அந்தத் தீர்த்தத்தில் மூழ்கி அக்கதா யுதத்தை ஆலிங்கனம் செய்வோர்களுடைய பாவங்களை நிவர்த்திக்க வேண்டும்” என்று வேண்டிக் கொள்ள, திருமாலும் அவ்வரத்தைக் கொடுத்து அசுரனுக்கு வைகுண்டலோகத்தை அளித்தார். அன்றுமுதல் அந்த வன மானது ‘லோகதண்டம்’ எனவும் பெயர் பூண்டு விளங்கிக் கொண்டிருக்கிறது.

3. மேலும் கேளும் பார்வதீ! அவ்வனத்தில் ஜன்ஹு என்ற ஒரு வேதியர் ஸாத்யகி என்பவளோடு இல்லறம் செய்து கொண்டு வரும் காலத் தில், புத்திரரில்லாமையால் நெடுங்காலம் தவம் செய்து, ‘புண்டலீகர்’ என்ற ஒரு அழகிய மைந்தனைப் பெற்றார். புண்டலீகன் வயதடைந்த பின் அவனுக்கு மணம் செய்வித்து மகிழ்ந்திருந்தனர். புண்டலீகனோ வெகு துஷ்டனாகி தாய் தந்தையரை வைது, அடித்து, துரத்திவிட்டு தன் மனைவி யோடு தனியே வாழ்ந்திருந்தனன். துரத்தப்பட்ட தாய், தந்தையர் காசிக்குப்



போக எண்ணிப் புறப்பட்டனர். புண்டலீகனும் அவனது மனைவியும் குதிரை மீதேறிக் கொண்டு பின் தொடர்ந்தனர். தாய் தந்தையர் நடக்க மாட்டாமல் தள்ளாடிக் கொண்டு போவதைப் பார்த்தும் புண்டலீகனுக்கு மனமிரங்காமல் பார்த்துக் கொண்டே போய் காசிக்கருகில் ஒரு சோலையில் குக்குடர் என்னும் ஓர் முனிவரது ஆசிரமத்தின் அருகில் இறங்கினான்.

அந்தக் குக்குட முனிவர் தம்தாய் தந்தையரையன்றி வேறு தெய்வ மில்லை என்று துணிந்து இரவும் பகலும் அவர்களுக்கு சேவை செய்பவர். இப்படிப்பட்ட அவரது ஆசிரமத்தில் புண்டலீகன் அன்றிரவு தங்கி யிருந்தான். அப்படியிருக்கையில், கோர ரூபங்கொண்ட மூன்று பெண்கள் நள்ளிரவில் அவ்வாசிரமத்திற்குள் புகுந்து அதிலுள்ள குப்பைகளைக் கூட்டி தரையை மெழுகி கோலமிட்டு அலங்கரித்து, ஒரு கணத்தில் தம் கோர ரூபம் நீங்கி சௌந்தரியவதிகளாய் வெளிவந்தனர். இதைக் கண்ட புண்டலீகர் இவர்களை பேய்களோ தேவதைகளோ என எண்ணி ஆச்சரியமும் பயமும் கொண்டு கடைசியாக ஒருவாறு பயந்தெளிந்து அம்மாதர்களிடம் அணுகி, “நீங்கள் யாவர்” என்று கேட்க, அவர்களில் ஒரு மாது ‘அடா பாவி! நீ முற்பிறவிகளில் செய்த நல்வினைப் பயனே உன்னை இம் முனிவரிடம் கொண்டுவந்து விட்டது. அவரைக் கண்ட புண்ணியத்தால் எங்களையும் கண்டாய். இனி நீ எந்தப் பாவமும் தொடரப் பெறாதவனாய் பரிசுத்தனாகக் கடவை! நாங்கள் கங்கை, காளிந்தி, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகள் இந்த உருக்கொண்டு வந்திருக்கின்றோம். எங்களிடத்தில் மூழ்குவோருடைய பாவங்களையெல்லாம் நாங்கள் ஏற்று அதனால் கோர ரூபங்கொண்டு, அந்த ரூபத்தை பரிசுத்த ஆத்மாவாகிய இந்த குக்குட முனிவருக்கு ஊழியம் செய்வதனால் மாற்றி நல்ல ரூபங்கொண்டு போகிறோம். இவர் தமது தாய் தந்தையரை வழிபடுகிற புண்ணியமே எங்கள் பாவத்தைப் போக்கிற்று” என்று சொல்லிச் சென்றுவிட்டனர்.

பின்பு புண்டலீகர் குக்குடரிடம் விடைபெற்றுக்கொண்டு தாய் தந்தையரைத் தேடினார். தேடிக் கண்டு அவர்களைத் தமது குதிரை மீதில் ஏற்றிக் கொண்டு, புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கிவித்து, தம் ஊருக்கு வந்து தாமும் தம் மனைவியும் அத்தாய் தந்தையருக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்க பூர்வயுகத்தில், ‘விருத்திரன்’ என்பவன் தேவ ராஜனாகிய இந்திரனைக் கொல்ல நினைத்து பாதாள லோகத்தில் தவம் செய்து கொண்டிருந்தான். இதையறிந்த இந்திரன் பாதாள லோகம் சென்று தன் வஜ்ஜிராயுதத்தால் அவன் தலையை சேதித்து வீழ்த்தினான். அப்பொழுது விருத்திரன், “தவஞ் செய்யும்போது தலையை அறுத்த பாவத்தால் நீ செங்கல்லாய் பூமியில் விழக்கடவை” என்றான்.



RangaRakes tamilnavarasam.com

இந்திரன் செங்கல்லாய் விழுமுன்னே திருமால் மகிழும்படி தோத்திரம் செய்ய, திருமால் மகிழ்ந்து "தேவராஜனே நான் புண்டலீ காஸ்ரமத்தில் வந்து செங்கல்லுருவாய்க் கிடக்கிற உன் மேல் அடிவைத்து உன்னைப் பூர்வ ரூபமாய்ச் செய்கிறேன். அஞ்ச வேண்டாம்" என்றனர். அன்று முதல் இந்திரன் புண்டலீகர் வசிக்கும் திண்டீரவனத்தில் செங்கல் லுருவாய்க் கிடந்தான்.

இப்படியிருக்க திருமால், புண்டலீகர் தாய் தந்தையர் வழிபட்டுக் கொண்டிருக்குஞ் சமயம் அவருக்குப் பின்புறம் வந்து நின்றார். அப்போது திருமாலின் ஒளி புண்டலீகரின் தந்தையாரின் பாதத்தில் படவே புண்ட லீகன் திரும்பிப் பார்த்து அருகிற் கிடந்த ஒரு செங்கல்லை எடுத்தெறிந்து "இதன் மீது சற்றுநேரம் நில், என் வேலையை முடித்து வருகிறேன்" என்று சொல்லி விட்டு தாய்தந்தையருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்து விட்டு திருமாலிடம் வந்து வணங்கினான். திருமால் "உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று புண்டலீகனைக் கேட்க அவன் 'தேவரிர்' இந்த இடத்தை என் பெயர்ச் சார்பினால் பண்டரிபுரமென்ற பெயருடையதாய்ச் செய்து இத்தலத்தில் எல்லாவற்றிலும் சிறந்த தீர்த்தமொன்றையுமுண்டாக்கி, அதில் மூழ்கி உன்னை வணங்குவோர் யாவரும் பாவ விமோசனம் அடைந்து பரிசுத்தராகும்படி இத்தலத்தில் தேவரீரும் பாண்டுரங்கன் என்னும் நாமத்துடன் நித்யவாசம் செய்யவேண்டும்" என்று வேண்ட திருமாலும் அவ்வரத்தை யருளினார்.

திருமாலின் அடியில் செங்கல்லாகக் கிடந்த இந்திரன் நற்பதவி யடைந்து தேவதச்சனை வரவழைத்து அத்தலத்தில் ஒரு அழகிய நகரமும் விமானமும் செய்யச் செய்து திருமாலை மகிழ்வித்தான். அந்நகரமே இப்பண்டரிபுரம், திருமாலே இப்பண்டரிநாதன்; சந்திர பாகை என்னும் நதியே இத்தீர்த்தம் என்று சிவபெருமான் சொன்னாராம்.

மேல்கண்ட வரலாறுகளிலிருந்து, திண்டீரவனமென்ற ஒரு வனம் எப்படி லோகதண்டமென்றும் பண்டரிபுரமென்றும் பேர் பெற்றன என்பதும் திருமால் பாண்டுரங்கன் என்று பேர் பெற்றனர் என்பதும் காணக்கிடக் கின்றதுடன் திருமால், தேவராஜனாகிய இந்திரன், இந்திராணி முதலிய நம் இந்து தெய்வங்களெனப்படுபவைகளின் யோக்யதையும் வெளியாகின்றது. 'தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய இந்திரனுடைய மனைவி இந்திராணி' தன் கணவனை அலட்சியம் செய்துவிட்டு திருமாலைக் கண்டுமோகிக்கிறாள். "லோக ரக்ஷகராகிய திருமாலும்' தமது மனைவி லக்ஷிமியை அலட்சியம் செய்து விட்டு பிறன் மனையாளாகிய இந்திராணியைத் தம்மடி மீது எடுத்து வைத்துக் கொள்கிறார். அவளுக்காக மாறுவேடம் பூண்டு காமப் பித்தேறி அலைகிறார். அப்பித்தால் 28 துவாபரயுக காலம் இந்திராணியின் முன்னிலை யில் மதிமயங்கி நிற்கிறார். என்னே "பரம் பொருளாகிய திருமால்" "தேவ



ராஜன் மனைவி இந்திராணி" இவர்களின் ஒழுக்கம்!

கேவலம் ஒரு அசுரனைக் கொல்ல திருமால் ஆயிரம் வருடம் போர் செய்தும் வெல்லமுடியாமல் கடைசியாக சூழ்ச்சியாக தம்மிடமுள்ள லோக தண்டத்தால் அவனைக் கொன்றார் என்றால் எல்லாம் வல்ல திருமாலின்' சக்தியும் நேர்மையுந்தான் என்னே!

ஆயிரம் வருடம் போர் செய்தும் தம்மால் வெல்ல முடியாத ஒரு வருக்கு திருமால் வைகுண்ட பதவி அளித்தார் என்பது கொஞ்சமும் பொருந்தாது என்பதை நாம் வாசகர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய தில்லை.

கங்கை, காளிந்தி, சரஸ்வதி ஆகிய நதிகளில் குளித்தவர்களுடைய பாவங்களையெல்லாம் அந் நதிகள் ஏற்றுக் கொள்கின்றனவென்பதும் அப்படி குளித்து தம்மை புகழ்ந்தவர்களுக்கெல்லாம் திருமால் முக்தி அளித்தார் என்பதும் உண்மையென்று நம்பினவர்கள், என்ன பாவம் செய்தாலும் கங்கையில் மூழ்கி திருமாலைப் புகழ்ந்து விட்டால் அப் பாவங்களெல்லாம் ரத்தாகி முக்தி வந்து விடும் என்று மேலும் மேலும் அக்கிரமங்கள் செய்வார்களா மாட்டார்களா?

நிற்க, தேவராஜனாகிய இந்திரனுடைய யோக்கியதையைப் பாருங்கள். அவன், விருத்திரன் கண்ணை மூடிக் கொண்டு தவம் செய்து கொண்டிருக்கிற போது அவனை வஜ்ராயுதத்தால்அடித்துக் கொல்கிறான். இப்படிப்பட்ட கொடும் பாதகன் திருமாலைப் புகழ்ந்து விருத்திரன் கொடுத்த சாபத்தைப் போக்கிக் கொள்கிறான்!

ஆச்சரியம்! பாவமன்னிப்பு டிக்கட்டும் மோட்சலோக டிக்கட்டும் இவ் விந்து மதத்தில் கிடைப்பதுபோல வேறு எந்த மதத்திலும் இவ்வளவு சுலபமாகக் கிடைப்பதில்லை. செங்கல், நதி முதலியவைகள் மனிதர் களாகவும், மனிதர்கள், நதி, கல் முதலியவைகளாகவும் திடீர் திடீரென்று மாறுகின்றனர். இவைகளெல்லாம் ஆதாரமாகக் காட்டப்படும். '.இந்து மத கடவுள்கள், புராணங்கள் முதலியவைகளெல்லாம் – நம்பாவிட்டால் நாஸ்தி கமாம்! மேற்கண்ட கதைகளை ஆதாரமாகக் கொண்ட பண்டரி புரத் திற்குத்தான் நம் பாமர மக்கள் – பகுத்தறிவில்லா மக்கள் – லக்ஷக்கணக்காக ஒவ்வொரு வருஷமும் பிச்சையெடுத்துக் கொண்டாவது போய் விடு கிறார்கள். இப்படிப் போய் வருவதில் இவர்கள் செலவிடும் காலமும் பணமும் கணக்கிடப்படமுடியாது. அரிய காலத்தையும் பொருளையும் செலவிடு வதின்றி ஆண் பெண் என்ற வித்யாசமின்றி ஒருவரை யொருவர் தழுவிக் கொள்ளலாகிய ஒழுக்கக் குறைவுகளுக்கும் உட்பட்டு, சீதோஷ்ண மாறுதலினாலும் ஆகார மாறுதலினாலும், நோய்வாய்ப்பட்டு, ரயிலில்



RangaRakes tamilnavarasam.com

இடிபட்டு, எல்லா உணர்ச்சியுமற்று கோவிந்தா! கோவிந்தா! என்ற வாய் வார்த்தையோடு ஊர் வந்து சேருகிறார்கள்.

அந்தோ! இப்பண்டரிபுர யாத்திரைக்குச் செலவிடும் காலத்தையும் பணத்தையும் ஏழைமக்களின் அறிவு வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கு மான கல்விக்கு செலவழித்தால் பண்டரிநாதன் நம் கண்ணைக் குத்தி விடுவானா? பகுத்தறிவைக் கொண்டு யோசித்துப் பாருங்கள்.

**குடி அரசு - கட்டுரை - 16.09.1928**



## ஸ்ரீமதி டாக்டர் மார்த்தா வோகளி ஆரியா

வீரர் திரு. ஆரியா அவர்களின் வாழ்க்கைத்துணை நல்லார் ( பாரியை) ஆகிய ஸ்ரீமதி டாக்டர் மார்த்தா வோகளி ஆரியா M.A.B.D.,M.D சர்ஜன் அன் பிசிஷன் அவர்கள் குழந்தை வைத்திய விஷயத்திலும் ஸ்தீரிகள் வைத்திய விஷயத் திலும் சிறப்பாக மருத்துவ விஷயத்திலும் தேர்ச்சி பெற மேல்நாடு சென்று ஜெர்மனி முதலிய இடங்களில் உள்ள உயர்தர வைத்திய காலேஜுகளில் படித்து டாக்டர் பட்டம் பெற்று இந்தியாவுக்கு இரண்டு மாதத்திற்கு முன் வந்திருக்கிறார்கள். அவர்கள் இது சமயம் அரசாங்க உத்தி யோகம் பெற சம்மதிப்பார்களானால் தக்க பதவியும் உத்தியோகமும் கிடைக் கக்கூடுமானாலும் தேசத்திற்கும் ஏழைமக்களுக்கும் தொண்டு செய்ய வேண்டுமென்கின்ற அவாவின் பேரில் தனியே சொந்தத்தில் ஒரு வைத்திய சாலை ஏற்படுத்தி இருப்பதுடன், யாவருக்கும் வைத்திய உதவி செய்யவும் தயாராயிருக்கின்றார்கள். இப்பேர்ப்பட்ட தயாளகுணமும் தாராள நோக்கமும் உள்ள அம்மையார் அவர்களை நாம் மனமார பாராட்டுவதுடன் அவர்கள் எடுத்த காரியம் சித்தி பெற்று யாவருக்கும் பயன்படவேண்டுமென்று மனதார ஆசைப்படுகிறோம்.

**குடி அரசு - செய்திக்குறிப்பு - 16.09.1928**



RangaRakes
tamilnavarasam.com

# திரு. சண்முகம் செட்டியாருக்கு டாக்டர் நாயர் கல்விக் கழகத்தார் அளித்த உபச்சாரம்

திரு. செட்டியார் அவர்களைக் குறித்து நான் விரிவாக ஒன்றும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவரை நீங்கள் என்னைவிட நன்கறிவீர் களென்றே நினைக்கிறேன். திரு. செட்டியார் பேசியதை மறந்து அதற்கு விரோதமாக நடப்பவரல்லர்(நகைப்பு). பள்ளிக் கூடத்தில் சிறுவர்களுக்கு சூரியனை பூமி சுற்றுகின்றது. அதனால் இரவும் பகலும் வருகின்றது என்று பல சாஸ்திரீயமான விஷயங்களைப் போதித்து விட்டு வீட்டுக்குச் சென்றதும் மறுநாள் ஆசிரியர் கிரகணம் என்று நூறுதரம் தலைமுழுகி தர்ப்பைப் புல்லால் தர்ப்பணம் செய்வதும் இதற்குப் பொருத்தமான உதாரணமாகும். (நகைப்பு). மகாத்மா காந்தி வந்து திரு. செட்டியார் வீட்டில் தங்கியிருந்தபோது அவர் காந்தியிடம் நம் நாட்டிலிருந்து மதசம்பந்தமான மூடப் பழக்கங்கள் என்று ஒழிகின்றதோ அன்றுதான் விடுதலையுண்டாகுமென்று தைரியமாய்க் கூறினார்.

நம்நாட்டு மூட பழக்க வழக்கங்களைத் தைரியமாகக் கண்டித்து, மேனாட்டு மேலான கொள்கைகளைச் சிலாகித்து, நேர்மையாக எங்கு வேண்டுமானாலும் பேசுவதற்கும் குற்றங்களைக் கண்டிப்பதற்கும் அவர் ஒரு போதும் பின் வாங்கியதில்லை. கும்பகோணத்தில் கூடிய நாடார் வகுப்பார் மகாநாட்டில் அவருக்கு வாணிபச் செட்டிமார்கள் வாசித்துக் கொடுத்த பத்திரத்திற்குப் பதிலளிக்கும்போது அவர் பிறர் தம்மைக் குறித்து என்ன சொல்லுவார்கள் என்பதைக் கவனியாது தைரியத்துடன் அவ் வகுப்பா ரிடத்துள்ள குறைகளையும் மூட நம்பிக்கைகளையும் வெளியிட்டுத் திருத்த முயன்றது பாராட்டத் தக்கதேயாம். சமீபத்தில் திரு, செட்டியார் இந்தியா சட்டசபையில் பெண்களுக்கும் சொத்துரிமை அளிக்கப்பட வேண்டுவதை யும் மற்ற வித்தியாசங்களை ஒழிக்க வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தத் தீர்மான மொன்று கொண்டுவர உத்தேசித்திருப்பதாகக் கூறினார். அக் கமிட்டியில் திரு. செட்டியார் அவர்களும் ஒருவராயிருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்ட போது அவர் அதற்கு ஒப்புக்கொண்டு தம்மாலான வகையிலெல்லாம் அவ் வியக்கத்திற்கு உதவியளிப்பதாக வாக்களித்தார்.



RangaRakes

திரு. செட்டியார் தம்மைக் குறித்து பிறர் என்ன சொல்லிக் கொள்ளுகின்றார் கள் என்பதைப் பொருட்படுத்தாது தம் மனசாட்சியின் படி நடப்பவர் என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய மாசற்ற மனத்துடன் அறிவாற்றலும் பொருந்தியவர்களுள் நம் நாட்டிலிருக்கும் பெரியார்களில் திரு. செட்டியார் முக்கியமானவர். நீங்கள் அவர் அந் நாட்டிலும் இந்நாட்டிலும் செய்துள்ள வேலைகளைப் புகழ்ந்து பாராட்டுவதை விட அவருடைய அபிப்பிராயத்தை அறிந்து அதனைப் பின்பற்ற முயல்வதுதான் உசிதமாகும். இன்று திரு. செட்டியாரைக் குறித்து சில வார்த்தைகள் சொல்ல இக்கூட்டத்தில் எனக்கு சந்தர்ப்பமளித்ததற்கு டாக்டர் நாயர் கல்விக் கழகத்தாருக்கு என் நன்றியறித லையும் சந்தோஷத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*குறிப்பு:06.09.1928 ஆம் நாள் சென்னை டாக்டர் நாயர் கல்விக்கழகத்தார் பச்சையப்பன் மண்டபத்தில் திரு.ஆர்.கே.சண்முகம் செட்டியார் அவர்களுக்கு உபசாரப் பத்திரம் வழங்கிய நிகழ்வில் சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 16.09.1928**



tamilnavarasam.com

# சென்னையில் மாபெருங்கூட்டம்

## "தற்கால ராஜீயநிலைமை"

**சகோதரர்களே!**

இன்று நான், இன்ன விஷயத்தைப் பற்றித்தான் பேச வேண்டுமென்று நான் முடிவு செய்யவில்லை, ஆகிலும் கமிஷன் பகிஷ்காரம் என்னும் பொருள் பற்றிச் சிறிது பேச விரும்புகிறேன். ஏனெனில் அதுதான் இப்போது அரசியல் உலகத்தில் முக்கியமாக அடிபடுகிறது. அதாவது நமக்கு இதற்குமுன் சர்க்காரால் அளிக்கப்பட்டு நாம் அனுபவித்து வருகிற சீர்திருத் தத்தைக் குறித்தும், இந்தியர்களுக்கு இன்னும் அதிகப்படியான சீர்திருத்தம் கொடுக்கலாமா, அவர்கள் அவற்றை அடைய லாயக்குதானா என்பவை களைக் குறித்தும் விசாரித்து அறிவிக்கும்படி பிரிட்டிஷ் பார்லிமெண்டு இப்போது ஒரு கமிஷனை அனுப்பியிருக்கிறது என்பதைப் பொருத்தவரை அரசியல் வாதிகள் ஒப்புக் கொள்ளுகிறார்கள். எனவே, நாம் இதை இப்போது பகிஷ்கரிக்க வேண்டுமா அல்லது அதனிடம் நமது குறைகளைச் சொல்ல வேண்டுமா வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டும். ஒத்துழைப் பதால் நாட்டுக்கு நன்மையுண்டா அல்லது பகிஷ்கரித்தால் நன்மையுண்டா என்பதை முதலில் கவனிக்க வேண்டும். நான் ஆரம்பத்திலிருந்தே ஒரு சிலர் ஆரம்பித்திருக்கும் கமிஷன் பகிஷ்காரம் வெறும் புரட்டென்றும், ஏதோ சில பார்ப்பனர்கள் கமிஷனால் தங்களுடைய ஆதிக்கம் போய்விடுமோ என்னும் பயத்தால் பகிஷ்காரம் பகிஷ்காரம் என்று வெறும் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்களென்றும், அவர்கள் மற்றவர்களை ஏமாற்றி தங்கள் காரியம் கொண்டுபோகவே இவ்வியக்கத்தை ஆரம்பித்திருக்கிறார்களென் றும், ஆகையால் இழிவையும் கொடுமையையும் அனுபவித்துக் கொண்டிருக் கும் பார்ப்பனரல்லாதார் இத்தகைய ஏமாற்று வார்த்தைகளுக்கு ஆளாகாமல் கமிஷனிடம் தங்களுடைய கஷ்ட நஷ்டங்களை தெரிவித்தால்தான் அவர்களுக்கு ஏதாவது நன்மை உண்டாகலாமென்றும் நான் அடிக்கடி கூறி வந்திருக்கிறேன். சைமன் கமிஷன் பிரச்சினையின் ஆரம்பத்தில் ஜஸ்டிஸ் கட்சியும் கூட முதலில் திணறிவிட்டது. அது நமக்கும் கமிஷனுக்கும் என்னென்ன சம்பந்தங்களிருக்கின்றன, நமக்கு அதனால் நன்மை ஏதாவது கிடைக்குமாவென்றெல்லாம் கவனிக்காமல் பகிஷ்கரிக்கத் தீர்மானித்து விட்டது. ஏனெனில் அவர்கள் அடுத்த தேர்தல் எப்படி எப்படி வந்து



முடியுமோ வென்று பயந்துவிட்டார்கள். நம் ஓட்டர்களுக்கோ ஓட்டை எப்படி உபயோகிப்பது என்கிற அறிவு இன்னும் வரவில்லை. அவர்களை ஏமாற்றி வயிறு வளர்க்க ஒரு சாரார் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அக் கூட்டத்தில் ஜனங்களை ஏமாற்றிப் பிழைக்க வேண்டிய கூலிகளெல்லாம் சேர்ந்து கொண்டார்கள். ஆனால் சமூக சீர்திருத்தத்துக்காகப் பாடுபடுகிறவர்களும், உத்தியோகத்தை விரும்பாதவர்களும், சுயமரியாதையுள்ளவர்களும், பகிஷ்காரம் புரட்டு, அதில் ஒன்றுமேயில்லை, பகிஷ்காரம் என்று கூச்சல் போடுகிறவர்களின் யோக்கியதை நமக்குத் தெரியும் எனச் சொல்லி மக்களை எச்சரிக்கை செய்து கொண்டு வந்தார்கள். சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், பகிஷ்காரம் புரட்டு என்று கூறி வந்தார்கள். நானும் எனது பத்திரிகையில் அவ்வாறே எழுதி வந்தேன். நமது மதத்திலுள்ள ஊழல்களையும், புரட்டுகளையும் எடுத்துக்காட்டினால் நம்மை நாஸ்திக மதத்தைப் பரப்புவர்களென்று சொல்வது போல் அரசியல் புரட்டுகளை எடுத்துக்காட்டினால் தேசத் துரோகிகள், சர்க்கார் பூசாரிகள், உத்தியோக வேட்டைக்காரர்கள் என்றெல்லாம் நம்மை ஒரு சாரார் தூற்றிவந்தார்கள். அந்தக் காலத்தில் நாம் எக்காரணத்தைக் கொண்டு கமிஷன் பகிஷ்காரம் புரட்டென்றும், அதனிடம் நமது குறைகளைச் சொல்லிப் பார்த்து விட வேண்டுமென்றும் கூறி வந்தோமோ அந்தக் காரணங்களைக் கொண்டே முன்பு பகிஷ்காரத்தில் சேர்ந்திருந்தவர்கள் இப்போது வந்துவிட்டார்கள். முன்பு பகிஷ்கரிப்பதென முடிவு செய்த ஜஸ்டிஸ் கட்சியும் கமிஷனுடன் ஒத்துழைக்க முடிவு செய்து விட்டது. ஏனெனில் அவர்கள் கமிஷனுடன் ஒத்துழைப்பதற்கு தடையாயிருந்த நிபந்தனைகள் நீக்கப்பட்டுவிட்டன. சென்னையில் ஒரு கூட்டத்தார் கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமென்று கூச்சலிட்டதுமன்றி சைமன் இந்தியாவுக்கு வந்திறங்கிய தினத்தில் ஹர்த்தாலும் நடத்தினார்களே, அது என்னவாயிற்று. இரண்டொருவர் ஹைகோர்ட்டு முன்பு சுட்டுக் கொல்லப்பட்டதோடு அது நின்றது. அவர்களில் சிலர் இப்போது சட்டசபை கமிட்டித் தேர்தலுக்கும் அபேட்சகர்களாக நிற்கிறார்கள். அவர்கள் அடுத்த தேர்தலை எண்ணியே பகிஷ்காரத்தில் சேர்ந்தார்கள். ஒரு மாகாணத்திலும் பகிஷ்காரம் பலிக்கவில்லை. அவர்கள் கூறும் பகிஷ்காரத்துக்கு நம்முடைய குறைகளை சர்க்காரிடமும், கமிஷ னிடமும், பார்லிமெண்டாரிடமாவது சொல்லிக் கொள்ளக்கூடாதென்பது தான் அர்த்தமா? பகிஷ்காரமென்று கூச்சல் போடுகிறவர்களுக்கு உள்ளுக் குள் ஒத்துழைக்க வேண்டுமென்பது தான் எண்ணம். ஆனால் மக்களை ஏமாற்றி வாழ்வதற்கே அவ்வாறு சொல்லிக் கொண்டார்கள். அவர்களுடைய நடவடிக்கைகளை நன்கு கவனித்தால் அவர்களுடைய யோக்கியதை இன்ன தென்பது நமக்குத் தெரியவரும். பகிஷ்காரம் வெறும் கூச்சலாக இல்லா விட்டால் ஒவ்வொருவரும் தனித் தனியாக சுயராஜ்யத் திட்டம் தயாரித்து அனுப்புவானேன்?



RangaRakes tamilnavarasam.com

## ரகசிய திட்டங்கள்

ஸ்ரீ. எஸ். சீனிவாசய்யங்கார் தயாரித்த திட்டம் பார்லிமெண்டு குப்பைத் தொட்டிக்குப் போயிற்று. அம்மட்டோ? அவர் இங்கு பகிஷ்காரம், பகிஷ் காரம் என்று சொல்லி விட்டுச் சீமைக்கு தேசசுகத்தை முன்னிட்டுச் செல்வ தாகச் சொல்லிப் போய் அங்கு பல ஆங்கிலேயர்களையும், அரசியல்வாதி களையும் ஒருவர் பாக்கியில்லாமல் நேரில் கண்டு பேசி தம்முடைய திட்டத்தை அவர்களிடம் கொடுத்து அதை ஒப்புக் கொள்ள வேண்டு மென்று கெஞ்சினார். இதெல்லாம் பகிஷ்காரமா அல்லது ஒத்துழைப்பா? இனி "ஹிந்து" ஆசிரியர் ஸ்ரீ. எ.ரெங்கசாமி அய்யங்கார் ஒரு திட்டம் தயாரித்து அனுப்பினார். அதுவும் பார்லிமெண்டு குப்பைத் தொட்டிக்கு இரையாயிற்று. அன்னிபெசண்டு அம்மையார் குடியாட்சி மசோதா ஒன்று தயாரித்து அனுப்பினார். அது ஒன்றரை வருஷமாகப் பார்லிமெண்டில் தொங்கிக் கொண்டிருக்கிறது. அந்த மாது இந்தியாவில் கதவு வைத்த வீடு வீடாகச் சென்று அதற்கு சம்மதம் வாங்கிக் கொண்டிருக்கிறார். காங்கிரஸ்காரர்கள் தாங்கள் கெட்டுப்போனதல்லாமல் மற்றக் கட்சிகளையும்கெடுக்கும் பொருட்டு சர்வகட்சி மகா நாடொன்று கூட்டி கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்துவிட்டு மற்றொரு அரசியல் திட்டத்தைத் தயாரித்து கமிஷன் கால்களில் வைத்துப் பூசை செய்யக் காத்துக் கொண்டி ருக்கிறார்கள். பண்டித நேரு ஒரு திட்டம் தயாரித்திருக்கிறார். அதுவும் கமிஷனுக்கு அனுப்பவே தயாரிக்கப்பட்டிருக்கிறதென்று நான் திட்டமாகக் கூறுகிறேன். ஆகவே அவர்கள் ஒவ்வொருவரும், தலைவரும், தனித் தனியாக திட்டங்களும், அபிப்பிராயங்களும் கொடுத்துக் கொண்டிருக் கிறார்கள். இனி பார்ப்பனர் சபையொன்று ஒரு யாதாஸ்து தயாரித்து அனுப்பி வருகின்றது. பார்ப்பனர்களெல்லாம் இவ்விதம் ரகசியமாக தங்களுடைய குறைகளையும், அபிப்பிராயங்களையும் கூறிக்கொண்டு வருகையில், பார்ப்பனரல்லாதாராகிய நாம் ஏன் நமது குறைகளை சர்க்காரிடம் சொல்லிக் கொள்ளக்கூடாதென்பது எனக்கு விளங்கவில்லை. இனி மற்ற மாகாணங் களெல்லாம் கமிஷனை பகிஷ்கரித்துவிட்டதென்றும், சென்னை மாகாணம் மட்டும்தான் கமிஷனை பகிஷ்கரிக்க மறுக்கிறதென்றும் அதற்குப் பார்ப்பன ரல்லாதார் தான் காரணமென்றும் பார்ப்பனர்கள் இப்போது பறைசாற்றி வருகிறார்கள். நமது குறைகளை சர்க்காரிடத்தில் உள்ளபடி கூறுவதிலோ, அரசியல் புரட்டுகளை எடுத்துக்காட்டுவதினாலோ நாம் தேசத் துரோகிகளாக மாட்டோம். இதுவரை நாம் பார்ப்பனர்களிடம் இருந்து ஒத்துப்பாடியும் அவர்கள் நம்மை லட்சியம் செய்தார்களா? இதிலிருந்து அவர்கள் நம்மை ஏமாற்றுவதற்கே பகிஷ்காரக் கூச்சல் போடுகிறார்களென்பது தெரியவரும். நாம் இதுவரை ஏமாந்து வந்தது போதும். கோயமுத்தூர் மகாநாட்டில் கவர்னர் மீது நம்பிக்கையில்லை என்ற ஒரு தீர்மானம் செய்யப்பட்டபோது இந்தப் பார்ப்பனர்கள் கவர்னரிடம் ஓடிப்போய் இதுவரை ஜஸ்டிஸ் கட்சிக்



காரர்களை நல்லவர்களென்றும் எண்ணிக் கொண்டிருந்தீர்கள். பாருங்கள், இப்போது உங்களையே விரட்டவேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கின் றார்கள்? என்று கூறினார்கள். இப்படிப்பட்டவர்களை நம்பலாமா? இதுவரை நாம் அவர்களுடைய பேச்சைக்கேட்டு ஏமாந்து வந்ததுபோதும். ஆகையால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் குறைகளை சர்க்காரிடம் சொல்லிக் கொள்வதில் குற்றமில்லை. கடைசியாக நான் என்ன சொல்கிறேன் என்றால், பார்ப்பனரல்லாதார் அரசியல் விஷயத்தில் தனித்து நின்றால்தான் உண்மை யான விடுதலைபெற முடியுமேயல்லாமல் பார்ப்பன ருடன் கலந்தால் அவர் கள் நம்மை அரசாங்கத்திற்குப் பலிகொடுத்துக் கூலி பெற்றுக் கொள்வார்கள்.

*குறிப்பு : 06.09.1928 இல் சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பார்ப்பனரல்லாதார் பொதுக்கூட்டச் சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 16.09.1928**



RangaRakes tamilnavarasam.com

# இளம் வயது விவாக விலக்கு மசோதா

## தேசீய வாதிகள் யோக்கியதை

மக்கள் இளம் வயதில், அதாவது தக்க வயதும் அறிவும் உணர்ச்சியும் இல்லாத காலத்தில் விவாகம் செய்யப்பட்டு வருவதால் மக்கள் சமூக வளர்ச்சிக்கும் உரத்திற்கும் கேடாயிருந்து வருகிறது என்கின்ற உண்மையை நமது வாழ்வில் தினமும் அனுபவத்தில் கண்டு வருவதோடு அவற்றை தடுக்க வேண்டுமென்பதாகவும் முயற்சி எடுத்தும் வருகின்றோம்.

இதைப்பற்றி பல சமூக மகாநாடுகளிலும், பல சீர்திருத்த மகாநாடு களிலும் பேசி தீர்மானங்களும் செய்து வந்திருக்கின்றோம். ஆனால் அதை அனுசரித்து அது அமுலில் வரத் தக்க ஏற்பாடுகள் ஏதாவது செய்ய ஆரம் பித்தால் உடனே அங்கு மதம் வந்து குறுக்கே விழுந்து அம்முயற்சிகளை அழிப்பது வழக்கமாகவே இருந்து வந்திருக்கின்றதும் நாம் அறிவோம். இதன் காரணமாகவே பெரிதும் நாம் மனித இயற்கைக்கு விரோதமான மதங்களும் கண்மூடிக் கொள்கைகளும் மண்மூடிப் போக வேண்டுமென்று முயற்சித்து வருகின்றோம். இம்முயற்சிக்கு யார் எதிரிடையாக இருந்தபோதிலும் நாம் ஒருசிறிதும் லக்ஷியம் செய்யாமல் இடையூறான மதங்களையும் அதற்கு ஆதாரமான சாமிகளையும் கூட ஒழித்தாக வேண்டும் என்றே சொல்லு கின்றோம். சமீப காலத்தில் சென்னை சட்ட சபையில் இது விஷயமாய் சட்டம் செய்வதைப் பற்றி வாதம் நடைபெற்ற சமயத்தில் பார்ப்பனரல்லாதார் கக்ஷியைச் சேர்ந்த மாஜி மந்திரி சர். ஏ.பி. பாத்ரோ அவர்கள் சற்று மாறுதலாய் பேசியதற்காக அவரை, 'பார்ப்பனரல்லாதார் கக்ஷி ஸ்தானத்தை ராஜிநாமா கொடுத்துவிட்டு பார்ப்பனர் கக்ஷிக்கு போய்விட வேண்டுமென்றுகூட எழுதியிருந்தோம். அவரை, 'இனி பார்ப்பனரல்லாதார் கக்ஷியைச் சேர்ந்தவர் என்று சொல்வது பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கே அவமானம்' என்று கூட எழுதியிருந்தது வாசகர்களுக்குத் தெரியும். இந்நிலையில் சென்ற வாரம் இந்தியா சட்டசபையில் இம்மசோதா விவாதத்திற்கு வந்த போது தமிழ் நாட்டு பார்ப்பனர்கள் பெரிதும் இம்மசோதாவிற்கு விரோதமாய்ப் பேசியிருப்ப தாகவும், பலர் தனி விண்ணப்பம் கொடுத்து இருப்பதாகவும் அதில் சில மகமதிய அங்கத்தவர்களும் கையொப்பமிட்டிருப்பதாகவும் தெரிய வருவதுடன் பல சங்கராச்சாரிகளும் சாஸ்திரிகளும் 'ராமராஜ்யம்' நடத்தும்



RangaRakes

மகாராஜாக்களும் இம் மசோதாவுக்கு விரோதமாய் அரசப் பிரதிநிதியிடம் தூது போனதாகவும் தெரியவருகின்றது.

இந்த வருணாச்சிரமக்காரரோடு சில மகமதியர்களும் சேர்ந்து கொண்டதானது அச்சமூகத்திற்கே அவமானத்தை விளைவித்த காரிய மென்பதோடு மனித சமூக உரிமைக்கே கேடு விளைவித்ததாகுமென்றே கருதுகிறோம் . அவர்களைப் பற்றிய மற்ற விஷயங்களையும், அதில் இவர் பார்ப்பனர்களுக்கு அடிமையாய் இருந்து வாழவேண்டிய அவசியத்தில் இருக்கிற விஷயங்களையும் வெளிப்படுத்தவும், அவர்களைக் கண்டிக் கவும் ஆன காரியங்களை அச்சமூகத் தலைவர்களுக்கும் அச்சமூக பத்திரிகைகளுக்குமே விட்டுவிட்டு நமது பிரதிநிதி என்னும் உரிமையின் பேரால் நடந்து கொண்டவர்களைப் பற்றி சற்று விசாரிப்போம்.

இது விஷயமாய் இந்திய சட்டசபையில் நடந்த முழு விபரத்தையும் எழுத நமக்கு போதிய இடமில்லாவிட்டாலும் அம் மசோதாவிற்கு விரோதமாய்ப் பேசிய தமிழ்நாட்டுப் பிரதிநிதியும் இந்துமத வருணாசிரமப் பிரதிநிதியும் ஆகிய திரு. எம்.கே. ஆச்சாரியார் அவர்களின் போக்கை சற்று கவனிப்போம்.

திரு. ஆச்சாரியார் அவர்கள் இச்சட்டத்தை எதிர்த்துப் பேசுகையில், "பால்ய விவாகமில்லாவிட்டால் உண்மையான கற்பு என்பது சாத்திய மில்லை" என்றும், "பெண்களின் வாழ்க்கை நாசமடைந்து விடும்" என்றும், "குடும்ப வாழ்க்கை துக்கமயமாகி சதா ஆபத்திற்குள்ளாகி இருக்கும்" என்றும் "புருஷர்களுக்கு சிறைத்தண்டனை அளித்துவிடுவதால் பெண்கள் நடத்தையும் அதிக கேவலமாக மாறிவிடும்" என்றும் "பாலிய விவாகம் இருந்தாலொழிய வாழ்க்கையில் உண்மையான ஒழுக்கம் ஏற்படுவது அசாத்தியம்" என்றும் பேசி இருக்கின்றதாக தெரியவருகின்றது. இவைகள் ( சு – மி, த – நா) பத்திரிகைகளில் காணப்படுகின்றதுடன் சுதேசமித்திரன் நிருபரும் திரு. ஆச்சாரியாரை ஆதரித்தும் புகழ்ந்தும் எழுதி இருக்கின்றார்.

பாலிய விவாகமில்லாவிட்டால் பெண்கள் கற்பு கெட்டுப் போகும் என்று சொல்வதும் வாழ்க்கையில் துக்கம் ஏற்படும் என்று சொல்வதும் எவ்வளவு மனந்துணிந்து சொன்ன அயோக்கியத்தனமான வார்த்தை களாகும் என்பதை வாசகர்கள்தான் யோசித்துப்பார்க்கவேண்டும். இது பார்ப்பனர்களுக்காக என்றோ அல்லது அய்யங்கார் கூட்டத்திற்காக என்றோ திருவாளர் ஆச்சாரியார் பேசி இருப்பாரானால் நமக்கு அதைப்பற்றி அவ்வளவு கவலை இல்லை. ஆனால் நம்மெல்லோருக்குமே பிரதிநிதி என்கின்ற முறையில் பேசியிருப்பதால் நாம் அதைக் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. நம்மில் அனேகர்கள் இதுவரை பெண்களை சுமார் இருபது



tamilnavarasam.com

வயது வரை கூட வைத்திருந்து விவாகம் செய்து கொடுக்கின்றார்கள் என்பதும், இப்போதுதான் வர வர பார்ப்பனீயத்திற்கு அடிமைப்பட்டு பார்ப் பனர்களைப் பார்த்து காப்பியடித்து தாங்களும் உயர்ந்த ஜாதிக்காரர் என மதிக்கப்படவேண்டும் என்கின்ற ஆசையில் பலர் சிறுபிராயத்திலேயே கலியாணம் செய்து விடுகின்றார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே. திரு. ஆச்சாரியாரின் வாக்குமூலப்படிக்குப் பார்த்தால் பக்குவமான பின்னோ பக்குவமாகி 2 வருஷம் 4 வருஷம் பொறுத்தோ விவாகம் செய்யப்பட்ட பெண்கள் கற்பில்லாமல் விபசாரிகளான பிறகுதான் விவாகம் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாக ஏற்படுகிறது. திரு. ஆச்சாரியார், ஒரு சமயம் தாம் மற்றவர்களைப் பற்றி அப்படிச் சொல்லவில்லையென்றும் தம்முடைய சமூகத்தைப் பற்றித்தான் தாம் சொன்னதாகச் சொல்வாரானால் தம் சமூகத் துப் பெண்களும் பக்குவமடைந்து விட்டால் அவர்கள் கல்யாணமில்லாமல் கற்புடனிருக்க முடியாதென்று கருதிச் சொன்னவராகவே நினைக்க வேண்டி யிருக்கிறது. இதனால் அவர் எப்படியும் பெண்கள் சமூகத்தையே இழிவு படுத்தியாகத்தான் கொள்ள வேண்டியிருக்கிறது.

திரு. ஆச்சாரியார் இப்படிச் சொல்ல நேர்ந்தது அந்தப் பார்ப்பனியத் தன்மையே யொழிய வேறல்ல. ஏனெனில் பார்ப்பனியத் தன்மையான இந்து மதம் என்பதில் பெண்கள் காவலில்லாமல் கற்புடனிருக்க முடியா தென்றே சொல்லப்படுகிறது. உதாரணமாக இந்துக்கள் என்பவர்கள் கல்யாண காலத்தில் கல்யாணப் பெண்களுக்கு கற்புக்கு உதாரணமாகக் காட்டி உறுதிவாங்க வழங்கும் மகா பதிவிரதையென்று சொல்லப்படும் அருந்ததி என்னும் 'உத்தம ஸ்திரீ'யின் யோக்கியதையைப் பார்த்தால் மற்ற பெண்களுடைய நிலைமை தானாகவே விளங்கும். அதாவது ஒரு சத்தியம் சொல்ல வேண்டிய சந்தர்ப்பத்தில் அருந்ததி சொல்வதாவது:-

"ஸ்ரீகளுக்கு மறைவான இடமும் புருஷர்களின் சந்திப்பும் கிடைக்கும் வரையில்தான் ஸ்திரீகள் பதிவிரதைகளாயிருக்க முடியுமாதலால் பெண் களை வெகு ஜாக்கிரதையாகக் காவல் காக்க வேண்டும்".

என்பதாக தேவர்களிடத்தில் சொல்லி சத்தியத்தைக் காப்பாற்றினதாக இந்துமதம் - அதிலும் சைவர்களுக்கு ஆதாரமான மகாசிவபுராணம் சொல்லுகிறது. இதற்கு ஆதாரமாக மற்றொரு இடத்திலும் அதாவது திரௌபதையும் அருந்ததி சொன்னதைதான் சொல்லி சத்தியத்தை நிரூபித்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:-

"ஆண்கள் இல்லாதிருந்தாலொழிய பெண்கள் கற்புடையவர்களாக இருக்கமுடியாது" என்பதாக பாரதத்தில் இதைப்பற்றிச் சொல்லும் போது "வசிஷ்டர் நல்லற மனைவியை அணையாள்" அதாவது அருந்ததிக் கொப்பானவள் சொன்னாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.



இந்தக் கொள்கைகளையுடைய இந்த இந்துமதப் பிரதிநிதியிடம் அதிலும் வருணாசிரம தர்மியிடம் வேறு என்ன எதிர்பார்க்கமுடியும். இதே யோக்கியர் தான் மூன்று வருஷத்திற்கு முன் திருச்சியில் கூடிய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் "ஒரு பார்ப்பனரல்லாத பையனுடன் ஒரு பார்ப்பனப் பையன் ஒரு வேளை சாப்பிட்டால் ஒருமாதம் பட்டினியிருப்பேன்" என்று சொன்னவர். இப்படிச் சொன்னபிறகுதான் செங்கல்பட்டு வடஆற்காடு தென்ஆற்காடு ஜில்லாக்களின் பிரதிநிதியாக அச்சில்லாவாசிகள் அவரை இந்தியா சட்ட சபைக்கு அனுப்பினார்கள். இவருடைய தேர்தலுக்காகத்தான் பார்ப்பனரல்லாத தேசீயவாதிகள், காங்கிரஸ்காரர்கள் என்பவர்கள் தொண்டை கிழியப் பிரசாரம் செய்தார்கள்.

எனவே இதிலிருந்தே நம்நாட்டு ஓட்டர்களின் யோக்கியதையையும் தேசீயவாதிகளின் யோக்கியதையையும் ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

தவிர, இப்படிப்பட்ட ஆசாமிகளையும் இவர்களுக்கு ஆதாரமா யுள்ள மதங்களையும் இவர்களை இந்திய சட்டசபைக்கனுப்பிய காங்கிர ஸையும் காப்பாற்றிக் கொண்டிருக்கும் யோக்கியர்கள்தான் மிஸ் மேயோ வைக் குற்றஞ் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள் என்பதை வாசகர்களே தெரிந்து கொள்வார்களாக.

நிற்க, திரு. ஆச்சாரியார் சொன்ன மற்றொரு விஷயத்தைப் பற்றி கவனிப்போம். அதாவது பால்ய விவாகம் செய்யாவிட்டால் குடும்ப வாழ்க்கையில் துக்கம் ஏற்படுமென்கிறார்.

என்ன துக்கமேற்படுமென்பது நமக்கு விளங்கவில்லை. அதைப் பற்றி விரிக்க நமக்கு வெட்கமாயிருக்கிறது. அன்றியும் புருஷர்கள் சிறைக்குப் போய்விட்டால் பெண்களின் நடத்தை கேவலமாய் விடு மென்றும் சொல்லுகிறார். இவை எவ்வளவு தூரம் பெண்களை இழிவு படுத்து வதாகிறது. இந்து மதமும், வேதமும், புராணமும், வைதீகமும், வருணா சிரமும் பெண்களை அடிமைப்படுத்துவதையும் கேவலப்படுத்துவதையும் அஸ்திவாரமாகக் கொண்டதாதலால் இம்மாதிரியான வார்த்தை நமது இந்திய சட்டசபைப் பிரதிநிதிகளிடத்திலிருந்து வருவது ஒரு அதிசயமல்ல.

உதாரணமாக கடவுளுடைய அவதாரமாக சொல்லப்படும் ராமனே, கடவுள் பெண் சாதியின் அவதாரமென்று சொல்லப்படும் சீதையின் கற்பில் சந்தேகப்பட்டு அவள் நெருப்பில் பொசுக்கப்படவும் பூமியில் புதைக்கப் படவும் செய்ததிலிருந்தும், சீதையும் ஒரு சமயத்தில் புருஷனை விட்டுப் பிரிந்தபோது, "இதோ பார் நான் இப்பொழுதே கர்ப்பமாயிருக்கிறேன்"; என்றும், "இது புருஷனிடத்திலேயே உண்டான கர்ப்பம்" என்றும் வயிற்றைத் திறந்து காட்டியதோடு, தான் கொஞ்சகாலம் புருஷனைவிட்டு நீங்கி இருக்க



RangaRakes tamilnavarasam.com

நேருவதாலேயே தான் விபசாரத்தனம் செய்து கர்ப்பந்தரித்து விட்டதாக தன் புருஷன் கருதக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டிருப்பதிலிருந்தும் (வால்மீகி ராமாயணம்) திரு. ஆச்சாரியார் மற்ற பெண்கள் புருஷனை விட்டு நீங்கியிருந்தால் ஒழுக்கம் கெட்டுவிடுவார்கள் என்று சொல்வதில் ஆச்சரிய மொன்றுமில்லை.

ஆனால் இவைகள் மனிதத்தன்மைக்கு ஏற்றதான வார்த்தை களாகுமா என்றும் நமது பெண் சகோதரிகளுக்கு நியாயம் செய்ததாகுமா என்றும் கேட்கின்றோம். இதைக் கேட்ட அன்னிய நாட்டார்கள் என்ன நினைப்பார்கள். எனவே நமது மக்களின் முன்னேற்றத்திற்கும் மனிதத் தன்மைக்கும் ஏற்றதான சீர்திருத்தங்கள் செய்யப் புறப்படும் போதெல்லாம் இப்படி ஒரு கூட்டத்தார் இருந்து கொண்டு நம்மை இழிவுபடுத்தி முட்டுக் கட்டை போட்டுக் கொண்டு வருவதை இனி எத்தனை காலத்திற்குத்தான் நாம் பொறுத்துக் கொண்டிருப்பது என்பது நமக்கு விளங்கவில்லை. இவை இப்படியிருக்க இவ்விஷயங்களில் ஒரு சிறிதும் கவலை எடுத்துக் கொள்ளா மல் தேசத்தின் பேராலும், சாமியின் பேராலும், சமயத்தின் பேராலும், சமயாச்சாரியாரின் பேராலும், புராணங்களின் பேராலும் உலகத்திற்கு நன்மை யைச் செய்கிறவர்களைப் போல் வேஷம் போட்டுக் கொண்டு மக்களை ஏமாற்றி வயிறு வளர்த்து வருகிறவர்களைப் பார்க்கும்போது திரு, ஆச்சாரி யாரை விட இக் கூட்டத்தார்களே அதிகமான அயோக்கியர்களும் கொடு மைக்காரர்களும் மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு எதிரிகளுமாவார் கள் என்று தோன்றுகிறது.

ஆதலால் பொது மக்கள் இதிலிருந்தாவது அறிவு பெற்று தேசீய மென்றும், சைமன் பகிஷ்காரமென்றும், சமயப் பாதுகாப்பென்றும், தேசீயத் திட்டமென்றும், முழு சுதந்திரமென்றும் சொல்லிக் கொண்டு திரியும் சுய நல வீணர்களின் வலையில் சிக்கி ஏமாந்து போகாமல் உண்மையான சீர் திருத்தத்திற்கும் சுயமரியாதைக்கும் ஏற்ற கொள்கைகளில் ஈடுபட்டு அரசிய லையும் சமூக இயலையும் கைப்பற்றி அதை தக்க வழியில் திருப்ப வேண்டியது அவசியமென்று மற்றுமொரு முறை தெரிவித்துக் கொள்ளு கிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 23.09.1928**



## ‘புண்ணிய ஸ்தலங்கள்’

**–சித்திரபுத்திரன்**

“புண்ணிய ஸ்தலம்” என்னும் தலைப்பின் கீழ் புண்ணிய ஸ்தலங்கள் என்பவைகளைப் பற்றி ஏன் எழுதிக் கொண்டு வரப்படுகின்றது என்பது பற்றி முந்தின வியாசத்தின் முதல் பகுதியிலேயே தெளிவாய் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. தவிர முந்தின வியாசத்தில் பண்டரிபுரம் என்னும் “புண்ணிய ஸ்தலத்தின்” யோக்கியதையையும் விளக்கி இருக்கிறது.

பண்டரிபுரம் வைணவர்களுக்கு மிகவும் முக்கியமான ஸ்தலம். அந்த ஸ்தல புராணத்தில் ஒரு சமயம் அந்த முக்கியத்துவத்திற்கு ஏற்ற காரணம் ஏதாவது குறிப்பிட்டிருக்கக்கூடுமோ என்பதாக சந்தேகப்படகூடுமானாலும் வைணவ பக்தர்களின் சரித்திரத்தைப் பற்றிச் சொல்லும் பக்தவிஜயம் என்னும் புஸ்தகத்தின் சுருக்கமாகிய பக்தலீலாமிர்தம் என்னும் புத்தகமானது சைவர்களுக்கு எப்படி சைவ பக்தர்களின் சரித்திரத்தைச் சொல்லக் கூடிய தான சைவபுராணமாகிய பெரிய புராணமோ, அதுபோல் – ஏன்? ஒரு விதத்தில் அதைவிட முக்கியமானதென்று கூட சொல்லலாம். எப்படி எனில், பெரிய புராணம் என்பது சுந்தரமூர்த்திசுவாமி என்கிற ஒருவர் பாடிய ஒரு பாட்டிலிருந்த பக்தர்களின் பெயரைத் தெரிந்து அதற்கு ஆதாரமாக நம்பியாண்டார் நம்பி என்பவர் பாடிய ஒரு சில – அதாவது ஒரு நூறு பாட்டைக் கொண்டு நாலாயிரத்துச் சில்லரைப் பாட்டுகளாக்கி அவற்றிற்கு வேண்டிய சங்கதிகளை தமது சொந்த அபிப்பிராயமாக நுழைத்து பாடிய புஸ்தகமாகும். அதுவும் சமணர்களுக்கு விரோதமாய் அவர்கள் மீதும் அவர்களது குற்றமற்ற நூல்களின்மீதும் உள்ள துவேஷத்தாலும் தமது சமய வெறியாலும் கற்பிக்கப்பட்டது என்று கூடச் சொல்ல இடமுள்ளதாகிய நூல். பக்தவிஜயமோ அப்படிக்கில்லாமல் ஏதோ ஒரு முனிவர் ஏதோ ஒரு ஆசாமிக்கு எல்லா சங்கதிகளும் சொன்னதாகவும் சிவன் பார்வதிக்குச் சொன்னதாகவும் எழுதிய புஸ்தகம் . ஆனதால் சேக்கிழார் என்கின்ற ஒரு மனிதன் சொன்னதை விட சிவன் முனிவர் என்கின்றவர்கள் சொன்னது என்பது உயர்ந்தது என்பதில் இவற்றை நம்பும் பக்தர்களுக்கு சிறிதும் சந்தேகமிருக்க நியாயமில்லை.



RangaRakes tamilnavarasam.com

எனவே இப்பேர்ப்பட்ட புஸ்தகத்தில் உள்ளதையேதான் எடுத்து எழுதி இருக்கிறதே ஒழிய மற்றபடி நமதபிப்பிராயம் என்பதல்ல. அதாவது:-

தேவர்களுக்கு அரசனான தேவேந்திரன் பெண்ஜாதியான இந்திராணி திருமால் என்கின்ற சாமியின்பேரில் காதல் கொண்டதாகவும், சாமியும் அதற்கு சம்மதித்து பூலோகத்திற்கு போய் அங்கு 60000 வருடம் தவம் செய்யச் சொன்னதாகவும், அதற்குப் பிறகு சாமி கிருஷ்ணனாக அவதரித்ததாகவும், இந்திராணியும் ராதையாகப் பிறந்ததாகவும், பிறகு இருவரும் கூடினதாகவும், இதைக்கண்ட கிருஷ்ணனின் சொந்தப் பெண் ஜாதியாகிய ருக்குமணி கோபங்கொண்டதாகவும் அதன் நிமித்தம் ராதை கிருஷ்ணனை தனக்கே புருஷனாக்கிக் கொள்ள காட்டிற்கு தவத்திற்குப் போனதாகவும், இந்த சமயத்தில் கிருஷ்ணன் ராதையை பிரிய நேர்ந்ததால் துறவி வேஷம் பூண்டு காடு காடாய் திரிந்து ஏதோ ஒரு காட்டில் ராதையைத் தவக்கோலத்தில் கண்டு பிடித்ததாகவும், ராதை கிருஷ்ணனைப் பார்த்து, "நீ ஒரு வஞ்சகன், என் முன் நில்லாதே" என்று கோபித்ததாகவும், கிருஷ்ணன் மதிமயங்கி மூக்கில் கைவைத்துக் கொண்டு 28 துவாபரயுக காலமாய் நின்று கொண்டிருக்கின்றதாகவும், அந்தக் காக்ஷியே பண்டரிநாதன் என்றும், மற்றும் இதுபோல சில ஆபாசக் கதைகளும் எழுதப்பட்டு பண்டரிபுரத்திற்கு ஆதாரமாக சொல்லப்படுகிறது. எனவே, இம் மாதிரி ஆபாசமும் புளுகும் கொண்டதான பண்டரிபுரத்தை ஒரு பெரிய புண்ணியஸ்தலமாகக் கருதி மக்கள் ஏராளமாக பணம் செலவு செய்து கஷ்டப்பட்டு யாத்திரை போவதுடன் பட்டை பட்டையாய் நாமமும் போட்டுக் கொண்டு, "பண்டரிநாதா விட்டல்லே! பாண்டுரங்கா விட்டல்லே" என்று கூப்பாடு போட்டுக் கொண்டு குதித்துக் கொண்டு போவதையும் கருதினால் எவ்வளவு பைத்தியக் காரத்தனமாகவும் கஷ்டமாகவும் இருக்கும் என்பது சுலபத்தில் வெளிப்படுத்தக் கூடியதாயில்லை என்பது பற்றியும் முன்னமேயே எழுதப்பட்டி ருக்கின்றது. ஜகநாதம் என்பதைப் பற்றி சிறிது ஆராயலாம்.

## ஜகநாதம்

ஜகநாதம் என்பது இந்தியாவில் உள்ள புண்ணிய ஸ்தலங்களிலெல்லாம் மிக முக்கியமானது என்று சொல்லப்படுவது,. இந்துக்கள் என்போர்களில் தென்னாட்டில் உள்ள சைவர்களில் யாரோ ஒரு சிலரால் மதத்துவேஷம் காரணமாக ஜகநாதம் ஒரு சமயம் அலட்சியமாகக் கருதப்பட்டாலும், இந்தியாவில் உள்ள பெரும்பாலோரான இந்துக்கள் என்பவர்கள் எல்லோராலுமே முக்கியஸ்தலமாகக் கருதப்படுவது. அந்த ஸ்தலத்தின் முக்கியத்துவத்திற்கு உதாரணம் என்னவென்றால், அந்த ஜகநாதம் என்கின்ற ஊரின் எல்லைக்குள் ஜாதி வித்தியாசம் பார்க்கக் கூடாது என்று சொல்லுவார்கள். அதற்கு உதாரணமாக அந்த கோவில் பூசை பண்ணுகின்றவர்கள் அந்தப் பக்கத்திய நாவிதர்கள். அவர்கள் குளத்தருகில் அடைப்பத்துடன்



நின்று கொண்டு க்ஷவரம் செய்வார்கள். பிறகு கோவிலில் பூசாரிகளாகவும் இருப்பார்கள். அந்த கோவிலில் பூசை செய்யும் உரிமையே அந்த ஊரிலுள்ள நாவித வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குத்தான் உண்டு என்கின்றார்கள். அங்கு சுவாமிக்கு முன்னால் சாப்பாட்டை மலைபோல் குவித்து ஆராதனை செய்வார்கள். அந்தச் சாதத்தைப் பூசாரிகள் பங்கு பிரித்து எடுத்துக் கொண்டு வெளியில் வந்து விற்பார்கள். யாத்திரிரைக்காரர்கள் யாராயிருந்தாலும் அதை வாங்கிச் சாப்பிடவேண்டும். மற்றபடி கடையிலும் சாதத்தை சட்டியில் வைத்து விற்பார்கள். ஜாதி வித்தியாசம் என்பதில்லாமல் யாரும் வாங்கிச் சாப்பிடுவார்கள். தவிர அந்த ஸ்தல எல்லைக்குள் எச்சில் வித்தியாசம் பார்க்கக் கூடாது என்பார்கள். இலையில் உள்ள சாப்பிட்ட மீதியை எடுத்து திரும்பவும் சட்டிக்குள்ளேயே போட்டுக் கொள்ளுவார்கள். கடைகளில் விற்பனைக்காக வைத்திருக்கும் சாதச் சட்டியில் யாரும் கைவிட்டு சாதத்தை எடுத்து வாயில் போட்டுப் பார்த்து மீதியை சட்டியிலேயே போட்டுவிடலாம். அதையாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.

ஜெகநாதத்திலுள்ள அந்த ஜெகநாதர்கோவிலுக்குள் யாரும் போகலாம். சாமியைத் தொடலாம், சாமியைச் சுற்றலாம், காலைத் தொட்டுக் கும்பிடலாம். இது மாத்திரமில்லாமல் அந்த எல்லைக்குள் யாரும் திதி, விரதம் தர்ப்பணம் முதலிய அனுஷ்டானங்கள் ஒன்றும் செய்யக்கூடாதாம். செய்தால் பாவமாம். அன்றியும் அங்குள்ள சாமிகள் கிருஷ்ணன், பலராமன், சுபத்திரை ஆகிய மூவர்கள். அதாவது மற்ற இடங்களைப்போல் சாமி புருஷன் பெண் ஜாதியுடன் இல்லாமல் அண்ணன், தம்பி, தங்கை ஆகிய மூன்று பேர்களும் தங்கையாகிய சுபத்திரையை நடுவில் வைத்து அண்ணன்மார் இருவர்களும் இருபக்கத்தில் நிற்கின்றார்கள். இதுவும் மரக்கட்டையில் அரைகுறையாய் செய்த உருவங்கள்தான் விக்கிரகங்கள்.

இந்த ஊரைப் பற்றிச் சொல்லும்போது 'சர்வம் ஜகநாதம்' என்று சொல்லுவது ஒரு வழக்கம். அதாவது எந்த விதமான வித்தியாசமும், அதாவது ஜாதி, மதம், எச்சில், விரதம்முறை முதலிய வித்தியாசம் அந்த எல்லைக்குள் இல்லை என்பதை காட்டுவதற்காகச் சொல்லுவது. இதற்கு ஆதாரமாக இரண்டுவிதமான கதைகள் சொல்லப்படுவதுண்டு. ஒன்று, இப்படி விஷ்ணு என்னும் முழுமுதற் கடவுளின் அவதாரமாகிய கிருஷ்ணன் என்னும் கடவுள் இறந்த பிறகு அந்தக் கடவுளின் பிணத்தை துவாரகைச் சுடுகாட்டில் வைத்து தகனம் செய்து அது எரிந்து கொண்டிருக்கையில் திடீரென்று சமுத்திரம் பொங்கியதால் துவாரகை முழுவதும் தண்ணீருக்குள் ஆழ்ந்துவிட்டபோது இந்த கடவுளின் பிணமும் எரிந்து கொண்டிருந்த சுடுகாடும் தண்ணீருக்குள் மூழ்க நேரிட்டதால் அரைகுறையாய் வெந்த பிணக்கட்டையானது தண்ணீரில் மிதந்து கரைஓரமாய் ஒதுங்கியதாகவும், அந்த ஊருக்கு ஜகநாதம் என்று சொல்லப் பட்டதாகவும், அந்த ஊரார் அந்தக் குறைபிணத்தை எடுத்து அதன் சக்தியை ஒரு மரக்கட்டையில் ஏற்றி



RangaRakes tamilnavarasam.com

அம்மரக்கட்டையில் இருந்து குறை பிணம் போலவே ஒரு உருவம் செய்து அதை வைத்து பூசித்து வருவதாகவும் அந்த ஸ்தலத்தின் சரித்திரம் சொல்லுகின்றது.

மற்றொன்று, கிருஷ்ண பகவானின் லீலா விநோதங்களில் ஒன்றாகிய கோபிகளுடன் கூடி குலாவி வருவதை கிருஷ்ண பகவானின் தங்கையாகிய சுபத்திரை பார்த்து பொறாமைப்பட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் சென்று "ஓ அண்ணாவே! நீ எவ்வளவோ அழகாகவும் பெருமை உள்ளவனாகவும் இருக்கின்றாய். உன்னுடன் கூடி அனுபவிக்கும் பெருமை கோபிமார்கள் எல்லோரும் பெற்று அனுபவித்து வருகின்றார்கள். ஆனால் நானோ உனக்கு தங்கையாக பிறந்து விட்ட காரணத்தினால் அந்த சுகபோகத்தை அடைய யோக்கியதை இல்லாதவளாய்ப் போய் விட்டேனே" என்று துக்கப்பட்ட தாகவும், கிருஷ்ணபகவான் பார்த்து, "உலகத்திலேயே மிகவும் புண்ணிய பூமியாகிய ஜகநாதம் என்கின்றதாக ஒரு ஸ்தலம் இருக்கின்றது; அங்கு எந்த விதமான வித்தியாசமும் கிடையாது; எந்த விதமான செய்கைக்கும் பாவம் கிடையாது. ஆதலால் அந்த ஜெகநாதத்திற்குப் போய் எல்லா விதமான சுகங்களையும் அனுபவிக்கலாம்" என்பதாகச் சொல்லி ஜகநாதத்திற்கு வந்து கிருஷ்ணன் சுபத்திரை பலராமர் ஆகிய சகோதர சகோதரிகள் ஒன்று சேர்ந்திருப்பதாகவும் ஒரு கதையை ஜெகநாத பண்டாக்கள் ஸ்தல மகிமை யைச் சொல்லும் முறையில் சொல்வதுண்டு.

எனவே இந்தக் கதையும் பொறுத்தமானதாயிருக்கலாம் என்கின்ற மாதிரியில்தான் அங்கு மற்ற விஷயங்களும் இருக்கின்றன. அதாவது தீட்டு இல்லை; ஜாதி வித்தியாசமில்லை; விரதாதி அனுஷ்டானம் இல்லை; எச்சில் வித்தியாசமில்லை என்பது போன்ற பல விஷயங்கள் இருப்பதுடன் அண் ணன் மாரும் தங்கையும் ஒன்றாய் இருந்தாலும் இருக்கலாமாம். அன்றியும் அந்த ஸ்தலத்திற்கு அதிகமான யோக்கியதை கொடுக்கவேண்டும். என்கின்ற எண்ணத்தின் பேரில் இப்படி ஒரு கற்பனை செய்து இருந்தாலும் இருக்கலாம். சாதாரணமாக சைவ சமயத்திலும் ஒரு ஸ்தலத்தையோ தீர்த்தத் தையோ ஒரு சாமியையோ பெருமைப் படுத்துவதில் இது போன்ற அல்லது இந்த தத்துவம் கொண்ட கதைகள் சொல்லப்படுவதையும் பார்க்கின்றோம். அதாவது திருவிளையாடல் புராணத்தில் ஒருவன் தன் தாயைப் புணர்ந்த துடன் தகப்பன் கண்டு கோபித்ததற்கு தகப்பனையும் கொன்றுவிட்ட பாவத் தை சிவன் போக்கியிருப்பதாகவும் அந்த ஸ்தலத்திற்கும் தீர்த்தத்திற்கும் அந்த கடவுளுக்கும் இன்னமும் அந்த சக்திகள் இருப்பதாகவும் கருதும்படி சொல்லப்படுகிறது. ஆதலால் இப்படிப்பட்ட கதைகள் கட்டுவது ஒரு அதிசயமல்ல. எனவே இந்தக் கதை எப்படி இருந்தாலும் முதல் கதையைப் பற்றி யோசிப்போம்.

கடவுள் அவதாரமாகிய கிருஷ்ண பகவான் எவ்வளவோ



RangaRakes

அற்புதங்களைச் செய்தவர். கடவுளான அவர் செத்துபோனார் என்பதும், அவர் பிணம் கொளுத்தப்பட்டது என்பதும், நெருப்பில் வெந்து கொண்டிருக்கும் போது ஜலப்பிரளய மேற்பட்டு அந்தப் பிணம் சரியாய் வேகாமல் தண்ணீரில் மிதந்துகொண்டு வந்து ஜெகநாதத்தைச் சேர்ந்த கடற்கரையில் ஒதுங்கியது என்பதும் ஆகிய விஷயங்களை யோசித்துப் பார்த்தால் கிருஷ்ணனிடத்தில் கடவுள் தன்மை இருந்திருக்கும் என்று நம்ப இடமுண்டா? நம்புவதானாலும் செத்த பிறகு அந்தப் பிணத்திற்கு அதுவும் நெருப்பில் கருக்கப்பட்ட அரைகுறைப் பிணத்திற்கு ஏதாவது சக்தி இருந்திருக்குமா? அந்த சக்தியை மரக்கட்டையில் ஏற்றமுடியுமா? அந்த மரக்கட்டையும் அடிக்கடி மாற்றப்பட்டு வருகின்ற போதெல்லாம் அந்த சக்தி மாறிமாறி அதில் வருமா?

தவிர மற்றும் ஒரு அதிசயம் சொல்லுகிறார்கள். அதாவது கோவிலில் இருக்கும் மரக்கட்டைக்கு சக்தி குறைந்து போனால் அந்த சமயம் அதாவது 10 அல்லது 20 வருஷத்திற்கு ஒருமுறை மறுபடியும் சமுத்திரத்தில் ஒரு கட்டை முன்பு பிணம் மிதந்து வந்தது போல் மிதந்து வருமாம். அதை எடுத்து மறுபடியும் விக்கிரகம் செய்து வைத்து விடுவதாம். இதன் யோக்கியதைகளை வாசகர்கள் தான் யோசித்துப் பார்க்கவேண்டும்.

முன்பு வந்த குறைப்பிணம் ஜலப்பிரளயத்தால் வந்தது என்று சொல்லப்படுகின்றது. அதுபோல் இப்போது வந்துகொண்டிருக்கும் மரக்கட்டைக்கும் ஏதாவது ஜலப்பிரளயம் கற்பிக்கப்படுகிறதா? எனவே புண்ணிய ஸ்தலங்களிலெல்லாம் சிறந்த புண்ணியஸ்தலமான ஜகநாதத்தின் நிலையை அந்த ஸ்தல சரித்திரப்படியே யோசித்துப்பாருங்கள்.

இந்த லக்ஷணத்தில் அங்கு ஒரு தீர்த்த மகிமையும் சொல்லப்படுகிறது. அதைப்பற்றி பின்னால் ஆராய்வோம்.

இவ்வளவையும் ஒப்புக்கொண்டு அந்த ஸ்தலத்திற்கு யாத்திரை போகின்றவர்களுக்கு ஏதாவது விசேஷஞானம் ஏற்படுகிறதா? அல்லது அந்த ஸ்தல சரித்திரத்தின் யோக்கியமான கற்பனையையாவது மதித்து ஏதாவது ஒழுக்கத்தைப் பெறுகின்றார்களா? ஒன்றுமேயில்லாமல் ரயில் சார்ஜு செலவும், பூசாரி, பார்ப்பான் முதலியவர்களுக்கு செலவும் செய்த தல்லாமல் வேறு பலன் என்ன என்பதுதான் இது எழுதியதின் கருத்து.

**குடி அரசு – கட்டுரை – 30.09.1928**



tamilnavarasam.com

# சமயம்

சமயம் என்பதைப் பற்றி இவ்வாரம் ஒரு நீண்ட வியாசம் எழுத வேண்டிய அவா ஏற்பட்டதின் காரணம் என்னவென்பதை முதலில் குறிப்பிட்டுவிட்டு பின்னால் சமயத்தைப்பற்றி எழுதுவோம். இதுசமயம் சமயத்தைக் காப்பாற்ற புறப்பட்டிருப்பதாக சிலர் திடீரென்று வெளிவந்து பெரிய ஆர்ப்பாட்டம் செய்து பாமர மக்களின் அறியாமையை தங்களுக்கு அனுகூலமாய் உபயோகித்துக் கொண்டு பத்திரிகைகள் மூலமாகவும் துண்டு பிரசுரங்கள் மூலமாகவும் பிரசங்கங்கள் மூலமாகவும் விஷமப் பிரசாரம் செய்து வருவதோடு சமயத்திற்குத் தகுந்த விதமாய் பேசிக் கொண்டும் யோக்கியப் பொறுப்பற்ற முறையில் நமது முயற்சிக்கு இடையூறு விளைவிப்பதெனவே முடிவு கட்டிக் கொண்டுமிருக்கின்றார்கள்.

இக்கூட்டத்தார் யாவர் என சிலராவது அறிய விரும்பலாம். இக்கூட்டத்தவருள் பெரும்பாலானவர் சமயத்திற்கென ஒரு வினாடி நேரமோ ஒரு அம்மன் காசோ செலவழிக்காத “தியாகிகளும்” அதுமாத்திரமல்லாமல் தங்களது வயிற்றுப் பிழைப்புக்கும் பணம் சம்பாதிக்கும் தொழிலுக்கும் இந்த விஷமப் பிரசாரத் தொழிலைத் தவிர வேறு ஒரு மார்க்கமும் அடியோடு இல்லாதவர்களும் என்றே சொல்லலாம். இக்கூட்டத்தார், கோர்ட்டு விவகாரங்களில் நீதியை எடுத்துச் சொல்லுவதற்கு என்று ஏற்பட்டிருக்கும் நியாயவாதிகள் எனப்படும் வக்கீல்களின் நாணயம் எவ்வளவோ, அதை விட மோசமான யோக்கியதையுடையவர்கள் என்றே சொல்லவேண்டும். அதாவது வக்கீல்களுக்கு அவர்கள் எடுத்துச்சொல்லும் வாதத்தில் எவ்வளவு மனச்சாக்ஷி உண்டோ, அதைவிட மோசமான மனசாக்ஷியும் வக்கீல்களுக்கு அந்த வாதங்களில் எவ்வளவு கவலை (தங்களது வரும்படியைப் பொருத்தவரையில் மாத்திரம்) உண்டோ அதைவிட பிரசங்கம் நடக்க வேண்டிய அளவையும் பத்திரிகை செலவாகும் அளவையும் புஸ்தகம் விற்கும் அளவையும் பொருத்தவரையில் மாத்திரம் கவலை உடையவர்கள் என்றே சொல்லலாம். இதற்கு உதாரணம் நாம் காட்டித் தெரிந்து கொள்ள வேண்டிய அளவில் இல்லை என்பதே நமதபிப்பிராயம். ஆனாலும் சில பத்திரிக்கைக்காரர்களையும், சில பண்டிதர்களையும் சில புஸ்தகக் கடைக்காரர்களையும் ஞாபகப்படுத்திக் கொண்டால் இந்த யோக்கியதை தானாகவே விளங்கிவிடும்.



அதாவது, எப்படி தேசீயத்தைப் பற்றி தேசத்தின் பேரால் வாழ்வு நடத்துகிறவர்களும் வயிறு வளர்க்கிறவர்களும் தங்களைத் தவிர மற்றவர்களுடைய அபிப்பிராயத்தை பலனற்றது என்றும், தேசத் துரோகமானதென்றும் சொல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கின்றார்களோ அது போலவே இந்த சமயத்தின் பேரால் வாழ்வு நடத்துகிறவர்களும் வயிறு வளர்க்கின்றவர்களும் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தவிர மற்ற அபிப்பிராயங்கள் சரியானதல்லவென்றும், மத விரோதமானதென்றும் நாஸ்திகமென்றும் சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

அப்படி இருப்பதிலும் பொதுவாக மக்கள் ஏமாறும் படி பேசுவதும் எழுதுவதுமாயிருக்கின்றார்களே ஒழிய விவகாரத்தை எதிர்ப்பதில் தக்க சமாதானம் சொல்லி தங்களது கக்ஷியை நிலைநிறுத்த வலியுறுத்துகிறவர்களாகவும் இல்லை. உதாரணமாக இக்கூட்டத்தவர்களின் மனப்பான்மையையும் வாழ்க்கையையும் அறிந்தவர்களுக்கு, இவர்களது வார்த்தைக்கும் எழுத்துக்கும், மனப்பான்மைக்கும் வாழ்க்கைக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்பதை ஒருவாறு அறியலாம். அது எப்படியோ இருந்துபோகட்டும் என்றாலும் இந்தச் சைவமும் வைணவமும் சமயாச்சாரிகளும் மக்களுக்கு எதற்காக வேண்டும் என்பதைப்பற்றி சற்று யோசித்துப் பார்க்கும்படி பொதுமக்களை வேண்டிக் கொள்ளுகின்றோம். தேசமோ மக்களோ முன்னேற்றமடைய வேண்டுமானால் அறிவும் சயன்ஸ் என்று சொல்லும்படியான விஞ்ஞான தத்துவமும் ஒழுக்கமும் முன்னேற்றமடைந்தாக வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் முதலில் ஞாபகப் படுத்திக் கொள்ளவேண்டும். ஏனெனில் இவைகளில் முன்னேற்றமடைந்த தேசமும் மக்களுந்தான் இதுவரையில் உண்மையில் முன்னேறி வந்திருக்கின்றார்கள்; வந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை வாசகர்கள் நாம் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. தெரிய வேண்டிய அவசியமிருக்குமானால் இந்தியாவைத் தவிர மற்ற நாடுகளை சற்று ஞாபகப் படுத்திப் பார்த்தால் தானாக விளங்கும். எனவே மேல்கண்ட அறிவு ஆற்றல் ஒழுக்கம் ஆகியவைகளுக்கு ஏற்றதாக நமது மதமோ மதாச்சாரியார்களோ அல்லது சாமிகளோ இருக்கின்றனவா என்பதைத் தனியே இருந்து பாரபக்ஷம் விருப்புவெறுப்பு இல்லாமல் யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம்.

நமது மதமென்பதோ வேதமென்பதோ சாமிகள் என்பதோ சமீப காலத்தில் ஏற்பட்டதாகச் சொல்வதற்கில்லை. யுகம், சதுர்யுகம், மகாயுகம், கற்பம் என்பவைகளையெல்லாம் ஒதுக்கி விட்டு சரித்திர ஆராய்ச்சிப்படி பார்த்தாலும் 5000, 6000 வருஷ காலத்திற்கு குறையாதது என்று சொல்ல இடமிருக்கின்ற தென்பதில் ஆராய்ச்சிக்காரர்களுக்குள் அபிப்பிராய பேதமில்லை. உலகத்தில் தோன்றி இப்போது ஜீவனுடனிருக்கும் மற்ற சமயங்கள் எல்லாம் அதைவிடக் குறைந்த காலத்தைக் கொண்டதாகவே இருக்கின்றது



RangaRakes tamilnavarasam.com

அப்படி இருக்க நம் தேசம் மாத்திரம் இன்னிலையில் இருக்கக் காரண மென்ன என்பதற்கு மேல் கண்ட சமயவாதிகள் என்ன பதில் சொல் கின்றார்கள்?

இதற்காக அரசாங்கத்தைப் பற்றி இரண்டு வார்த்தைகள் சொல்லி அரசாங்கத்தை வைது விட்டால் அதுவே போதுமான சமாதானமாகுமா என்று கேட்கின்றோம்.

மற்றும் சமயத்தையே ஆதாரமாகக் கொண்ட ராமன், கிருஷ்ணன் போன்ற விஷ்ணு அவதார அரசர்களும், மீனாக்ஷி, சொக்கலிங்கர் போன்ற சிவ அவதார அரசர்களும், மற்றும் சேரன், சோழன், பாண்டியன் போன்ற தெய்வத் தன்மை தாண்டவமாடிய அரசர்களும் ஆண்ட காலத்தைவிட இப்போதைய அரசாங்கமோ அல்லது ஜனப்பிரதிநிதி அரசாங்கமோ எந்த விதத்தில் மோசமானது என்பதற்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட சிறு உதாரணம் சொல்லக்கூடுமோ என்று கேட்கின்றோம்.

எனவே ஆயிரக்கணக்கான வருஷங்களாக மக்களின் நிலை குலைந்து வருவதையும் தேசம் அடிமைப்பட்டு வருவதையும் தொடர்ச்சி யாக கேட்டும் பார்த்தும் வந்தும் கொஞ்சமாவது அறிவு என்பதை உபயோ கப்படுத்தி இதன் காரணங்கள் என்ன என்பதை கவனிக்காமலும் அக்கம் பக்கம் எப்படி இருக்கின்றது என்பதை ஒரு சிறிதும் திரும்பிப் பாரா மலும் மக்களை பாழும் சமயம், சமயாச்சாரி, சாமி என்பதையே குரங்குப் பிடியாய் பிடித்துக் கொண்டே நாசமாய்ப் போகும்படி செய்வதால் யாருக்கு என்ன நன்மை விளையக்கூடும் என்று கேட்கின்றோம்.

சாமியின் மூலமும் சமயத்தின் மூலமும் சமயாச்சாரிகளின் நடத்தை யின் மூலமும் மக்களுக்கு ஒழுக்கத்தையும் வாழ்க்கையையும் கற்பிக்கலாம் என்று யாராவது சொல்ல வருவார்களேயானால் அவற்றையெல்லாம் விட்டு விட்டு நேரே ஒழுக்கத்தையும் வாழ்க்கை நலன்களையும் கற்பிப்பதால் என்ன நஷ்டம் விளைந்து விடக்கூடும் என்று கேட்கின்றோம்.

இதுகால பரியந்தம் அதாவது குறைந்தது 5000 ௵ காலம் இந்த வேலையைச் செய்து பார்த்தாய் விட்டதல்லவா? இனி ஏன் புதுமுறை கண்டுபிடிக்கக் கூடாது? சாதாரணமாக வைத்திய சிகிச்சையில், வியாதிக்கு தக்க மருந்தை இரைப்பைக்கு அனுப்பி அங்கு அது ஜீரணக்கருவி மூலம் ஜீரணிக்கச் செய்து சக்கையை மலத்தின்மூலம் கழித்து, சத்தை இரத்தத்தோடு கலரும்படி செய்து வியாதியைக் குணமாக்க முயற்சிப்பதைவிட மருந்தின் உண்மையான சத்தை எடுத்து நேரே ரத்தத்தில் சேர்த்து வேலை செய்யும்படி (இன்ஜெக்ஷன்) செய்வது போல ஒழுக்கங்களையே கற்பிப்பதில் என்ன நஷ்டம் என்று கேட்கின்றோம். ஒரு சமயம் அந்த தொழில் பழகாத சில வைத்தியர்களுக்கு வேறு தொழில் கற்றுக் கொள்ளும் வரையில் வயிற்றுப் பிழைப்புக்கு கஷ்டமாயிருக்கலாம். இதற்காக மக்கள் வியாதியோடு கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதா என்பதை யோசித்துப் பார்த்தால் சிலரது வயிற்றுப்பிழைப்புக் கஷ்டம் அவ்வளவு பெரிதாகத் தோன்றாது. நிற்க,



பொது ஜனங்களில் சிலர் இக் கூட்டத்தினர்களின் யோக்கிய தையையும் உண்மையையும் அறியாமல், நாம் ஏதோ சற்று அளவுக்கு மீறி சற்று வேகமாய்ப் போவதாக கருதுகிறார்கள் போல் தெரியவருகின்றது. ஆனால் அவர்கள் அப்படி கருதுவதற்கு ஆதாரமோ நியாயமோ ஒன்றும் எடுத்துக்காட்டாமல் "இருந்தாலும் இவ்வளவு எடினமாக போகலாமா" என்கின்ற ஒரே பல்லவியைப் பாடிக் கொண்டிருக்கின்றார்கள். அதனால் தான் நாமும் அவற்றை ஒரு சிறிதும் லக்ஷியம் செய்வதில்லை. ஏனெனில் நேற்றுவரை அமிதவாதிகளாக இருந்தவர்கள் அந்தக் கொள்கையுடனேயே நம்மால் மிதவாதிகள் என்று சொல்லப்படுபவர்களாகி விட்டார்கள். காரணம் என்னவென்றால் நாம் அவர்களைவிட சற்று வேகமாய்ப் போவதாக ஜனங்கள் நினைப்பதுதான்.

இதே முறையில் வெகு சீக்கிரத்தில் நாமும் மிதவாதிகள் என்று கருதப்படக்கூடியவர்களாக ஆனாலும் ஆகலாம் என்பதே நமது முடிவு.

நம்மைவிட வேகமாகப் போகக்கூடிய வாலிபர்கள் முளைப்பதை வளருவதை நாம் நேரிலேயே பார்க்கின்றோம்.

அதாவது, எவ்வளவு கொடுமையை அனுபவிப்பதானாலும் பலாத்காரம் என்றால் இன்னமும் நமக்கு கஷ்டமாகத்தான் இருக்கின்றது. நியாயத்தையும், வாதத்தையும் எடுத்துச் சொல்லி மெய்ப்பித்து பார்க்கலாம். முடியாவிட்டால் இன்னமும் பொறுக்கலாம் என்கின்ற எண்ணமே தோன்றுகிறது.

ஆனால் நமது இளவல்களுக்கோ "இன்னமும் எத்தனை நாளைக்கு இந்தப் புரட்டுகளுக்கும், பித்தலாட்டங்களுக்கும், சுயநலத்திற்கும் கொடுமைகளுக்கும் இடம் கொடுத்துக் கொண்டிருப்பது, இரண்டில் ஒன்று பார்க்க வேண்டியதுதான்" என்கின்ற துடிதுடிப்பு கொழுந்து விட்டெழு வதைப் பார்க்கின்றோம். அவர்கள் காலத்தில் நாம் அவர்களால் மாத்திர மல்லாமல் பொதுமக்களாலும் 'மிதவாதிகள்' என்றும் 'பழம்பிடுங்கல்கள்' என்றும் குற்றம் சொல்லப்படுவோம் என்கின்ற உறுதி நமக்குண்டு. எனவே இவ் விஷயத்தில் அதிகமாகப் போவதும் நிதானமாகப் போவதும் அவரவர் கள் மன உணர்ச்சியைப் பொறுத்ததே தவிர வேறல்ல.

உதாரணமாக பண்டிதர் திரு. வேதாசலம் அவர்கள் ராயப்பேட்டை



RangaRakes tamilnavarasam.com

யில் காந்தி நிலைய ஆண்டுவிழா தலைமைச் சொற்பொழிவில் அவர் நிகழ்த்தியதாக காணப்பட்டவைகளில் ஒன்று "சைவத்தை குற்றம் சொல்பவனை இன்னமும் விட்டுவைத்திருக்கின்றீர்களா? உங்கள் சரீரத்தில் சைவ ரத்தம் ஓடவில்லையா?" என்பதாகச் சொன்னதாக காணப்பட்டது. (அது ஒருவாறு மறுக்கப்பட்டது) அவர் அப்படியே சொன்னதாக வைத்துக் கொண்டாலும் அதுசட்டப்படி குற்றம் என்று சொன்னால் சொல்லாமே ஒழிய அவரது உணர்ச்சிப்படி அது எப்படிக் குற்றமாகும்?

ஒருசமயம் அதிலிருந்து பண்டிதர் சரீரத்தில் சைவ ரத்தம் ஓடிற்றா இல்லையா என்கின்ற கேள்வி வேண்டுமானால் கேட்கலாமே ஒழிய அவ்வுணர்ச்சி மக்களுக்கு தோன்றுவது இயல்பு என்பதே நமதபிப்பிராயம். தற்கால நிலையில் இப்போ்ப்பட்ட சந்தர்ப்பங்கள் அமிதமாக அதாவது மிக்க வேகமாக சிலருக்கு பட்டால் படலாம். அதற்காக மக்களின் உணர்ச்சி காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது அவ்வளவும் பயனளிக்காதென்றே சொல்லுவோம்.

மக்களின் சுதந்திரத்திற்கும் அறிவிற்கும் சுயமரியாதைக்கும் உலகம் போகின்ற போக்கில் நாம் இருக்கும் நிலை எவ்வளவு பிற்பட்டது என்பதையும், நமது போக்கு எவ்வளவு அசைவற்றதும் நிதானமுமானது என்பதையும் யாராவது கவலையுடன் சிந்தித்துப் பார்த்தால், கடுகளவு கவலை இருந்தாலும் மதமும் சாமியும் மத ஆச்சாரிகளும் அவர்கள் கதைகளும் நம்மை ஒரு சிறிதும் தடைப்படுத்தவே மாட்டாது என்றே துணிந்து சொல்லுவோம். ஆனால் அவற்றில் ஒரு சிறிதும் கவலையில்லாமல் தங்கள் வாழ்வும் அறிவுமே பிரதானம் என்பவர்களுக்கு உலகம் தெரியாதென்றே சொல்ல வேண்டும்.

ஆதலால் பொதுமக்கள் இனித்தான் சற்று ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 30.09.1928**

# பழியோரிடம் பாவமோரிடம்

காலஞ்சென்ற தமிழ் தேசீயகவி சி. சுப்பிரமண்ய பாரதியவர்களின் தேசீய நூல்களின் முதலிரண்டு பாகங்களை சென்னை அரசாங்கத்தார் அராஜக நூல்களென்று பறிமுதல் செய்திருப்பதாகத் தெரிகிறது. அந்நூல்கள் பறிமுதல் செய்யப்படுவதற்கு காரணம் ஜஸ்டிஸ் கட்சியார்தான் என்று "தமிழ்நாடு" பத்திரிகை ஜஸ்டிஸ் கட்சியார் மீது வீண் பழி சுமத்துகிறது. சென்னை அரசாங்கத்தார் ஷை நூல்களை பறிமுதல் செய்வதற்கு முன்னரே பர்மா அரசாங்கத்தார் பறிமுதல் செய்தனரே அதற்கு யார் காரணம் என்று "தமிழ்நாடு" கூறுமா? பர்மா அரசாங்கம் பறிமுதல் செய்த புஸ்தகத்தை சென்னை கவர்மெண்டாரும் பறிமுதல் செய்ய வேண்டும் என்ற ஒரு அரசாங்க முறை இருந்து வருவதால் ஷை நூல்களை சென்னையில் பறிமுதல் செய்ததற்கு பர்மா கவர்மெண்டார் தான் காரணம் என்று சுதேசமித்திரன் பத்திரிகையும் கூட சொல்லியிருக்கிறது. ஆகவே இந்த பறிமுதலுக்கு ஜஸ்டிஸ் கக்ஷியார் எந்த விதத்திலும் காரணமாயிருக்கவில்லை.

பறிமுதல் செய்யப்பட்ட ஷை ஸ்ரீசுப்பிரமண்ய பாரதியாரின் நூல்களில் ராஜீயத்தைவிட பார்ப்பனீயமே மிகக் கடுமையாகக் கண்டிக்கப் பட்டிருப்பதால் அவை பறிமுதல் செய்யப்பட்டதற்கு யார் காரணமாயிருந்திருக்கலாம் என்பதை அறிந்தும் அறியாததுபோல் ஜஸ்டிஸ் கட்சியாரை "தமிழ்நாடு" தாக்குவதைப் பார்த்தால் அதைக் "கோடாரிக்காம்பு" என்று சொல்லுவதா அல்லது பழியோரிடம் இருக்க பாவத்தையோரிடம் சுமத்துகிறதென்பதா?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 30.09.1928**





RangaRakes

tamilnavarasam.com

# சைவ சமயம்

சமயம் என்பதைப்பற்றி சென்ற வாரம் ஒரு தலையங்கம் எழுதியிருந்தோம். இவ்வாரம் சைவ சமயம் என்பது பற்றி எழுதுகின்றோம்.

கொஞ்ச காலமாக சைவ சமயத்தின் பேரால் சிலர் போடும் கூச்சல் அளவுக்கு மேல் போகின்றது. சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாக வேண்டும் என்று கட்சி சேர்க்கின்றார்களாம். அரசியல் பிழைப்புக்காரர்கள் சிலர் அப்படித்தான், அதாவது, "சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாக வேண்டும் , அதை ஒழிக்காவிட்டால் சுயராஜ்யம் தடைபட்டுப் போகும்" என்று கூச்சல் போட்டார்கள். கூலி கொடுத்தும் கூச்சல் போடச் சொன்னார்கள். அவ்வளவு கூச்சல்களையும் அடக்கிக்கொண்டு இப்போது நமதியக்கம் தலைநிமிர்ந்து நிற்கின்றதையும் அரசியல்காரர்களில் பெரும்பாலோரும் இதை ஆதரிப்பதையும் பார்த்து ஒருவாறு அடங்கிவிட்டார்கள். இப்போது சைவ சமயத்தார்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களில் சிலர் கிளம்பி சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க வேண்டுமென பிரசாரம் செய்து வருகின்றார்கள். இச்சைவ சமயத்தார்கள் என்பவர்கள், சுயமரியாதை இயக்கம் பார்ப்பனீயத்தையும், பார்ப்பனர்களையும் கண்டிக்கும் பொழுதும், வைணவ சமயத்தையும் வைணவர்களையும் கண்டிக்கும் பொழுதும் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டு நம்மீதும் சுயமரியாதை இயக்கத்தின் மீதும் புகழ் புராணமும் கவியும் பாடிக்கொண்டிருந்தார்கள்.

அதாவது, பார்ப்பன ஆதிக்கத்தை கண்டித்து சங்கராச்சாரியாரை தாக்கி வரும் போது நமக்கு உதவியும் செய்தார்கள். பிறகு வைணப் புராணங்களின் வண்டவாளங்களை வெளியாக்கும்போதும் நமக்கு உதவி செய்து வந்தார்கள். இதுமாத்திரமல்லாமல், இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லையென்றும் இந்துமதம் என்று சொல்லப்படுவது பார்ப்பனாதிக்கக் கொள்கைகள் கொண்டது என்றும் சொல்லும் போதும் அதை ஆதரித்து அதற்கும் வேண்டிய ஆதாரங்கள் உதவி வந்தார்கள்.

கடைசியாக சைவ மதப் புராணங்கள் என்பவைகளின் முறையில் அவற்றின் யோக்கியதைகளை வெளியாக்க நேரிட்டபோது மாத்திரம் 'சுயமரியாதை இயக்கம் சமயங்களுக்கு ஆபத்தை விளைவிக்கின்றது; மோக்ஷத்திற்குத் தடையாய் நிற்கின்றது' என்று சொல்ல வந்து விட்டார்கள்.



எனவே சைவ மதம் என்றால் என்ன? அது பார்ப்பன மதமல்லாமல் வேறு தனி மதம் என்றோ அல்லது தமிழ் மக்கள் மதம் என்றோ யாராவது சொல்ல முடியுமா? என்பதை முதலில் கவனிக்க விரும்புகின்றோம்.

நம் நாட்டு சைவர்கள் பெரும்பாலும் தாங்கள் 'பார்ப்பன மதத்தை வெறுக்கின்றோம்' என்கின்றார்கள். அன்றியும் பார்ப்பனர்களது மத ஆதாரம் என்பவைகளாகிய நான்கு வேதங்கள் என்பதையும் சைவர்கள் தங்களுக்கு சம்பந்தப்பட்டதல்ல என்கின்றார்கள். பார்ப்பனர்களின் "மோக்ஷ"சாதனமான வேள்விச் சடங்குகளையும் தாங்கள் ஒப்புக் கொள்ளுகின்றதில்லை என்கின்றார்கள். மற்றும் புராணங்கள் என்பவைகளையும் ஆரிய சாஸ்திரங்கள் என்பவைகளையும் தாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது என்பதுடன் அவைகள் பொய் என்றும் கற்பனை என்றும் சொல்ல முன் வந்திருக்கின்றார்கள். பார்ப்பன ஆச்சாரியார்களும் அதாவது சங்கராச்சாரி போன்றார்களும் தங்களுக்கு சம்மந்தப்பட்டவர்கள் அல்ல என்றும் சொல்லுகின்றார்கள்.

மற்றும் எவ்வளவோ, அதாவது, "ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!" என்று ஆரியத்தையும் தமிழையும் பிரித்து ஆரியத்திற்கும், தங்களுக்கும் தங்கள் சைவ மதத்திற்கும் சிறிதும் சம்மந்தமில்லை என்றும் தாங்கள் தனித்தமிழ்ச் சமயத்தார் என்றும் சொல்லிக்கொள்ளுவதுடன் அதற்கு வேண்டிய ஆதாரங்களையும் கண்டு வைத்திருக்கின்றார்கள். உதாரணமாக 'தென்னாட்டு சிவனே போற்றி' என்றும் பிரித்துச் சொல்லுகின்றார்கள். எனவே இந்நிலையில், சைவ மதம் என்றால் என்ன?

முதலாவதாக, கற்பனை என்றும் பொய் என்றும் ஆபாசமென்றும் அசம்பாவிதம் என்றும் சொல்லும்படியான கந்தபுராணம், சிவமகா புராணம் முதலாகிய புராணங்களை ஒதுக்கி விட்டு பார்த்தால் சிவனுக்கோ, சைவத்திற்கோ ஏதாவது கடுகளவு இடம் இருக்கின்றதா என்பதை கூர்ந்து நோக்கும்படி வாசகர்களை கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இரண்டாவதாக, இந்து மதத்தையோ, வைணவ மதத்தையோ, சைவ மதத்தையோ தனித்தனியாகவோ பொதுவாகவோ எடுத்துக் கொண்டு பார்ப்போமேயானால் அவைகளிலுள்ள பொதுவான கடவுள்களும், வைணவ, சைவ கடவுள்களும், சுரர்கள் என்னும் "தேவர்"களின் வேள்வி என்னும் யாகத்தை அழித்து வந்த அசுரர்கள் என்னும் "அரக்கர்களை" கொன்று வென்று யாகத்தைக் காக்க வந்தது என்கின்ற அஸ்திவாரம் தவிர வேறு மார்க்கத்தில் வந்த கடவுள்கள் ஏதாவது எங்காவது இருக்கின்றனவா? என்று பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

அல்லது பார்ப்பனர்கள் என்னும் ஆரியர்களின் வேதத்தை ஒப்புக் கொள்ளாததினாலோ, நிந்தித்ததினாலோ உலகம் "நீதியும் ஒழுக்கமும்



RangaRakes tamilnavarasam.com

கெட்டுப் போய்விட்டது" என்று சொல்லிக் கொண்டு அவதாரம் செய்த தாகவோ தோன்றியதாகவோ அல்லாமல் வேறுவழியில் வந்த ஏதாவது கடவுள்கள் உண்டா? இருக்கின்றனவா?

இந்து, வைணவ, சைவ சமய சம்மந்தமான எந்த புராணமும் இதைத் தவிர வேறு என்ன காரணங்களாவது கற்பிக்கின்றனவா?

உதாரணமாக, சைவ சமயச்சாரியார்கள் என்பவர்களும், "வேத வேள்வியை மக்கள் நிந்தனை செய்ததால் தோன்ற வேண்டியவர்களா னார்கள். வேத வேள்வியை நிந்தனை செய்த மக்களையும் அழித்து வேத வேள்விச் சமயத்தையும் கடவுள்களையும் ஆதரிக்க வேண்டியவர்களானார் கள்" என்பதை யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

மற்றும் வேதத்தையும் வேள்வியையும் தள்ளிவிட்டு அவற்றைக் காப்பாற்ற வந்த கடவுள்களையும் தள்ளிவிட்டு ஆரியர்களால் புனையப் பட்டது என்கின்ற புராணங்களையும் தள்ளிவிட்டால், தேவாரத்திற்கோ, திருவாசகத்திற்கோ மற்றும் "தமிழ் மறை"க்கோ எங்காவது இடமிருக்கிறதா என்று கேட்கிறோம்.

சிவம், சைவம், ஆகமம், தேவாரம், திருவாசகம் என்ற வார்த்தை களும் ஆரியத்தை அடிப்படையாகக் கொண்டவை என்னும் வழக்கை சுலபத்தில் தள்ளிவிட முடியாது. மற்றும் சைவக் கடவுள்கள் பெயரும் அக் கடவுள்களின் பெண்ஜாதி பிள்ளைகளின் பெயரும் அனேகமாய் முழுதும் ஆரியபாஷைப் பெயர்களே தவிர வேறில்லை. மற்றும் அப்பெயர்களுக்கு ஏற்ற காரணங்களும் அக்காரணங்களுக்கு ஆரியர்களால் கற்பிக்கப்பட்ட கதைகள்தான் ஆதாரமே ஒழிய வேறில்லை. மற்றும் அப்பெயர்களுக்கும் கதைகளுக்கும் ஏற்படுத்தப்பட்ட புராணங்கள் என்பவைகளும் பெரிதும் ஆரிய மூலத்திலிருந்து மொழி பெயர்த்ததாகச் சொல்லப்படுப்பவைகளேயல் லாமல் வேறல்ல.

நிற்க. சைவ சமயம் தென்னாட்டில் பரவி இருக்கின்ற அளவு மற்ற நாட்டில் அதாவது வடநாட்டில் பரவி இருப்பதாக சொல்ல முடியுமா? வட நாடு முழுவதும் ஏறக்குறைய வைணவ மதம் என்றே சொல்ல வேண்டும்.

தென்னாட்டில் மாமிசம் சாப்பிடாதவனுக்கு எப்படி சைவன் என்று சொல்லப்படுகின்றதோ அதுபோல வடநாட்டில் மாம்சம் புசிக்காதவனுக்கு வைஷ்ணவன் என்று சொல்லுவதுண்டு.

தென்னாட்டிலும் சமயத்தை ஏற்றுக் கொண்டவர்கள் சிலர் என்றுதான் சொல்லவேண்டும். அதிலும் சைவ சமயத்தார்களோ சைவ சமயம் இன்னது



RangaRakes

என்று அறிந்தவர்களோ வெகு சிலர் என்றுதான் சொல்லவேண்டும். பாக்கியுள்ள மக்கள் அதாவது 100 – க்கு 90 – பேர்கள் மாரி, கருப்பன், மாடன், மதுரை வீரன், பேச்சி என்பது போன்ற கடவுள் வணக்கக்காரரும் மற்றும் ஒரு சிலர் சைவ வைணவக் கடவுள்களையும் இக்கூட்டத்தில் சேர்த்துக் கொண்டிருக்கின்றவர்களுமே தவிர வேறல்ல.

ஏதோ பழைய காலத்து அரசர்கள் தங்கள் மடமையினால் கட்டி வைத்த கோவில்களும் அவர்கள் விட்ட சொத்துக்களால் நடக்கும் உற்சவங்களும், இப்போது சில கொடுமைக்காரர்கள் மக்களிடைத்திலிருந்து அனியாய வழிகளில் கொள்ளையடித்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு கீர்த்திக்கும் தங்களை உயர்த்திக் கொள்வதற்கும் சிலர் தாங்கள் செய்த கொடுமையினால் ஏற்படும் பாவத்தைத் தொலைப்பதற்கும் என்று பழுது பார்ப்பதும் புதுப்பிப்பதும் இல்லாவிட்டால் இவ்வளவு பெருமைகள் கூட சொல்லிக் கொள்ள வகை இருக்காது என்றே சொல்லலாம்.

சமயம் என்பதும், வைணவம் என்பதும், சைவம் என்பதும் என்ன என்று பொதுவாக யோசிக்குமிடத்தில் பார்ப்பனர்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு தங்களை அறியாமல் பார்ப்பனியத்திற்கும் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் உழைக்கும் சாதனங்களா அல்லவா என்பதை நிதானித்து நடுநிலைமையில் இருந்து பார்த்தால் யாருக்கும் விளங்காமல் போகாது.

எனவே இப்படிப்பட்ட சைவத்தைப்பற்றியோ சமயத்தைப் பற்றியோ ஏதாவது எழுத நேரிடுவதால் "நாட்டின் க்ஷேமத்திற்கோ மக்களின் மோட்சத்திற்கோ" எவ்விதமான ஆபத்துக்கள் எப்படி நேரிட்டு விடும் என்பதைப்பற்றி விருப்பு வெறுப்பின்றி நிதானமாய் யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 07.10.1928**



tamilnavarasam.com

# உலகமெங்கும் சுயமரியாதை இயக்கம்

சுயமரியாதை இயக்கம் நம் தமிழ்நாட்டில் மாத்திரம் இருப்பதாக சிலர் கருதிக் கொண்டு இருக்கின்றார்கள்! இதை தப்பான எண்ணம் என்றே சொல்லுவோம். உலகத்தில் இது சமயம் எங்கு பார்த்தாலும் உண்மை உழைப்பாளிகளும் வீரர்களும் இந்தக் காரியத்தைத்தான் செய்து வருகின் றார்கள்- இந்த இயக்கத்தினால் தான் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நாட்டை விடுதலை அடையச்செய்தும் வருகின்றார்கள். ஆனால் இது கஷ்டப்படவும், நஷ்டப்படவும் துணிந்தவர்களாலும், உண்மை வீரம் உடையவர்களாலும் மாத்திரம் ஆரம்பிக்கக்கூடிய காரியமானதால் சுயநலத்திற்காக பொதுநல சேவையில் ஈடுபட்டிருப்பதாக வேஷம் போடுகின்றவர்கள் இக் காரியத்தைச் செய்ய முடியாததுடன் வேறொருவர் செய்வதையும் அவர்களால் சகித்துக் கொண்டிருக்க முடியாது. ஏனெனில் மக்களுக்கு உண்மையான காரியத்தில் கவலை ஏற்பட்டு அதில் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டால் போலிகளுக்கு இடமில்லாமல் போவதுடன் அவர்களது வாழ்க்கைக்கே ஆபத்தாய் முடிந்து விடும். ஆதலால் அப்படிப்பட்டவர்கள் சுயமரியாதை இயக்கத்தைத் தாக்க வேண்டியவர் களாகி விடுகின்றார்கள். எனவே எவ்வளவு தான் சுய நலமிகளால் இவ் வியக்கம் தாக்கப்பட்டாலும், ஒழிக்க எவ்வளவு தான் சூழ்ச்சி முறைகள் கையாளப்பட்டாலும் அம்முயற்சிகள் சூரியனை கைகொண்டு மறைத்து உலகத்திற்கு வெளிச்சம் இல்லாமல் செய்து விடலாம் என்கின்ற முட்டாள் தனமான முயற்சிக்கு சமானமாக முடியுமே அல்லாமல் வேறல்ல,

சுயமரியாதை இயக்கம் இப்போது ஒவ்வொரு நாட்டிலும் வீறு கொண்டு எழுந்து தாண்டவமாடுகின்றது. பம்பாய் மாகாணத்தில் கொஞ்ச காலமாக பெருத்த கிளர்ச்சிகள் நடந்து வருகின்றன. அதாவது சென்ற இரண்டு வருஷத்திற்கு முன்பே அங்கு புரோகிதக் கொடுமையை ஒழிக்க சட்ட சபைக்குப் பல தீர்மானங்கள் வந்தன. ஜாதித்திமிரை ஒழிக்க பூனாவில் பெருத்த கிளர்ச்சிகள் நடந்து பல கேசுகளும் ஏற்பட்டு பல பெரியார்களும் சிறை சென்றனர். பம்பாயில் சென்ற வருஷத்தில் பாதிரிகளையும் முல்லாக்களையும் குருமார்களையும் ஒழிக்க வேண்டும் என்று வாலிப மகாநாடுகளில் பேசினார்கள். மற்றும் ஜாதித்திமிர் கொண்டவர்களுக்கு வண்ணார், நாவிதர் என்பவர்கள் தங்கள் தொழிலைச் செய்வதில்லை



என்று தீர்மானித்துக் கொண்டார்கள். பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் எல்லோரும் அதாவது எல்லா வகுப்புக்காரர்களும் ஒரே பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக் கொள்ள உரிமை இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்கள்.

மத்திய மாகாணத்தில் கோவிலுக்குள் இந்துக்கள் என்பவர்களில் உள்ள எல்லா வகுப்பாரும் போகலாம் என்று தீர்மானித்து அந்தப்படியே சில இடங்களில் நடந்து வருகின்றார்கள்.

கல்கத்தாவில் மகமதிய மாணவர்கள் தாடி வளர்ப்பதை மத சம்மந் தத்தில், இருந்து பிரித்து விடவேண்டுமென்று பலாத்கார சண்டை போட்டுக் கொண்டார்கள்.

சமீப காலத்தில் பஞ்சாப் மாகாணத்தில் சீக்கியர்கள் தங்களுடைய மத ஆரம்பகால முதல் வெகு முக்கியமானதாகக் கருதி வந்த காரியங்களில் ஒன்றாகிய க்ஷவரம் செய்து கொள்ளக்கூடாது, தலைமயிரைக் கத்தரிக்கக் கூடாது என்கின்ற கொள்கையை அடியோடு மாற்றி தலைமயிர் வெட்டிக் கொள்ளவேண்டும் என்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

கடைசியாக கல்கத்தாவில் நம் நாட்டு சுயமரியாதை இயக்கத்தைப் போலவே - ஏன் இதைவிட அதிவேகமானது என்று கூட சொல்லும் படியான - ஒரு பெரிய இயக்கத்தை ஆரம்பித்து விட்டார்கள். அதன் கொள்கைகள் நமது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைவிட வேகமுள்ளதாய் காணப்படுகின்றன. அதாவது,

ஜாதி வித்தியாசத்தை ஒழிப்பது,

மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பது,

குருமார்கள், ஆச்சாரியார்கள், புரோகிதர்கள் முதலியவர்களின் ஆதிக்கங்களை ஒழித்து பகுத்தறிவை விளக்குவது.

பெண்கள் அடிமையை ஒழித்தும் ஜாதிக்கட்டுப்பாட்டை ஒழித்தும் கலப்பு விவாகம் முதலியவைகளை ஆதரிப்பது,

முதலாளிகளின் ஆதிக்கத்தை ஒழித்து தொழிலாளர்களுக்கு உரிமை அளிப்பது,

மிராசுதாரர்களின் ஆதிக்கத்தை ஒழித்து விவசாயிகளுக்கு உரிமை அளிப்பது.



RangaRakes tamilnavarasam.com

பொது வாழ்வில் ஏழை பணக்காரன் என்கின்ற பாகுபாட்டையும், உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்கின்ற வித்தியாசத்தையும் ஒழித்து யாவருக்கும் சமத்துவத்தை அளிப்பது.

இவ்வளவும் போதாமல் நாட்டின் சொத்துக்களை எல்லோருக்கும் சரிசமமாய்ப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்னும் கொள்கையையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

அதோடு மாத்திரமல்லாமல் அதன் தலைவர் திரு சுபாஷ் சந்திரபோஷ் என்பவர் இவற்றை நிறைவேற்ற அரசியல் சங்கங்களிலிருந்து பிரிந்து தனியாய் நின்று முயற்சி செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டதுடன் இவைகள்தான் உண்மையான விடுதலைக்கு மார்க்கம் என்று சொல்லி இவ்வியக்கத்திற்கு உண்மையான பூரண விடுதலை இயக்கம் என்று பெயரும் கொடுத்திருக்கின்றார்.

வெகு சீக்கிரத்தில் இதன் பிரசாரம் ஆரம்பிக்கப்படுமாம். இதைப் பார்த்தவர்கள் நமது சுயமரியாதை இயக்கத்தை மிதவாத இயக்கம் என்று தான் சொல்லுவார்கள். இப்படி இருந்தாலும் சுயமரியாதை இயக்கத்தை மிக மோசமான இயக்கம் என்றும் மிக வேகமான இயக்கம் என்றும் சொல்லுவதுடன் நம் மீது பழி சுமத்துகின்றவர்களுக்கும் குறைவில்லை.

மத விஷயங்களில் கல்கத்தா இயக்கத்தைவிட வேகமாக ஆப்கானிஸ்தானமும் துருக்கியும் போய்க் கொண்டிருப்பது எல்லோரும் அறிந்ததேயாகும்.

அதாவது ஆப்கன் அமீர் அவர்கள் தம் சீர்திருத்தக் கட்டளைக்கு விரோதமாய் பேசுகின்றவர்களையெல்லாம் மாஜி கவர்னர் உள்பட மௌல்வீகள் உள்பட சிறையில் எல்லோரையும் அடைக்கின்றார்.

துருக்கியோ அரசாங்கத்திற்கும் மதத்திற்கும் சம்பந்தமில்லை என்று விளம்பரப்படுத்தி விட்டது.

ருஷியாவோ வைதீக கொள்கைகளை உடையவர்களை யெல்லாம் கைது செய்து வருகின்றது. அதாவது சமீபத்தில் அங்கு சூரியனையும் சந்திரனையும் தெய்வமாக வணங்குபவர்களையெல்லாம் போலீசார் கைது செய்து வருகின்றார்கள்.

இதே ருஷியாவில் கொஞ்ச காலத்திற்கு முன்பு பள்ளிக்கூடங்களில் மதத்தைப் பற்றியும், கடவுளைப் பற்றியும் பிள்ளைகளுக்குக் கற்பிக்கக் கூடாது என்று உபாத்தியாயர்களுக்கு உத்திரவு போட்டது எல்லோருக்கும் ஞாபகம் இருக்கலாம்.



அதுமாத்திரமல்லாமல் அங்குள்ள கோவில்களை இடித்ததும் ஞாபகமிருக்கலாம்.

நமது நாட்டைச் சுற்றியுள்ள இடங்களில் இவ்வளவு காரியங்கள் நடக்கின்ற போது நமது நாட்டில் இன்னமும் புராணக்காரரும், புரோகிதர்களும், பூசாரிகளும், பொதுநலத்தின் பேரால் வாழ்வை நடத்தும் வயிற்றுப் பிழைப்புக்காரர்களும் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள் என்றால், நம் நாட்டு வாலிபர்களுக்கு கண்ணும் காதும் இருக்கின்றதா இல்லையா என்று கேட்கின்றோம்.

**குடி அரசு – கட்டுரை – 07.10.1928**



RangaRakes tamilnavarasam.com

## சர்வகக்ஷி மகாநாட்டின் வண்டவாளம் I

சர்வகக்ஷி மகாநாடு எனப் பெயர் வைத்துக்கொண்டு சிலர் கூடி செய்துவரும் ஜெகஜாலப் புரட்டுகளையும் சூழ்ச்சிகளையும் மக்கள் ஏமாறத்தக்கவண்ணம் வேண்டுமென்றே நம் நாட்டில் சில தேசீயப் பத்திரிகைகள் என்னும் வயிற்றுப் பிழைப்புப் பத்திரிகைகள் செய்து வந்த புரட்டுகளெல்லாம் இப்போது வெட்டவெளிச்சமாகி விட்டதை யாவரும் அறிந்திருக்கலாம். இதன் காரணம் அப்பத்திரிகைகள் தங்களுக்கென யாதொருவித கொள்கையும் இல்லாமல், சற்றும் விவகார ஞானமும் இல்லா மல் சமயத்திற்குத் தகுந்தபடியும் காசு கொடுப்பவர்கள் சொல்கின்ற படியும் நடக்க வேண்டியிருப்பதால், சற்றும் மானம் ஈனம் வெட்கமின்றி தினத்திற்கு ஒரு குட்டிக்கரணம் வீதம் போட்டு மாறி மாறி எழுத வேண்டிய வைகளாகவே இருக்கின்றன.

உதாரணமாக சர்வகக்ஷி மகாநாட்டைப் பற்றியும் அதன் தீர்மானங் களைப் பற்றியும் இக்கூலிப் பத்திரிகைகள் ஒரே அடியாக வானமளாவப் புகழ்ந்ததும், அதை உலகமே ஒப்புக் கொண்டாய் விட்டது என்றதும், இனி தேசத்திற்கு விடுதலை ஒரு விரக்கடை தூரம் தான் இருக்கின்றது என்றதும், அதில் கலந்து வேலை செய்தவர்களையெல்லாம் பாராட்டி எழுதி வந்ததும் போய் இப்போது அதில் உள்ளவர்களையும் அதன் முக்கியஸ்தர்களையும் வைவதைப் பார்த்தால் ஒருவரிடம் கூலி வாங்கிக் கொண்டு மற்றவர்களை வைவதாகவோ அல்லது கூலி கொடுக்காததற்காக வைவதாகவோ நன்றாய் விளங்கும். நிற்க,

முதலில் சர்வகக்ஷி மகாநாட்டுத் தீர்மானங்கள் என்பது மக்கள் எல்லோருக்கும் பொதுவான உரிமையும் நலமும் அளிக்கக்கூடியதா என்பதைக் கவனிப்போம். ஏனெனில் எந்த சீர்திருத்தமோ, சுயராஜ்யமோ, விடுதலையோ, பூரண விடுதலையோ என்பவைகள் ஒரு நாட்டுக்கு கிடைப்பதானால் அது அந்த நாட்டு மக்கள் எல்லோரும் சம உரிமை அனுபவிக்கக்கூடிய யோக்கியதையில் இருக்கின்றதா என்பதைத்தான் பார்க்கவேண்டும். இந்த முறையில் நமது நாட்டை எடுத்துக் கொள்ளுவோம். எந்தக் காரணத்தை முன்னிட்டானாலும் சரி, எந்தக் காலம் முதற்கொண் டானாலும் சரி, நமது நாடு அதாவது நாம் சுயராஜ்யமோ விடுதலையோ கோரும் நாடாகிய இந்திய நாடானது பல்வேறு மதம் ஜாதி வகுப்புகளாக



பிரிக்கப்பட்டது என்பதும், அதனாலேயே மக்கள் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு பாராட்டுகின்றார்கள் என்பதும் ஒருவருக்கொருவர் நடை, உடை, பழக்கவழக்கம், வாழ்க்கை முதலியவைகளில் ஜாதியின் பேரால், மதத்தின் பேரால், மோக்ஷத்தின் பேரால், கடவுளின் பேரால் மாறுதல் அடைந்திருக்கின்றார்கள் என்பதும், இந்தக் காரணங்களால் ஒருவரிடம் ஒருவர் ஒற்றுமையில்லாமல் நம்பிக்கை கெட்டு வெறுப்புக்கும், துவேஷத்திற்கும், பழிவாங்கும் தன்மைக்கும் ஆளாகியிருக்கின்றார்கள் என்பதும் இதற்கு அரசாக்ஷியும் சட்டமும் கடவுளும் மதமும் வேத சாஸ்திரங்களும் ஆதரவு கொடுத்து வருகின்றன என்பதும் யாராலும் மறுக்கக்கூடிய காரியம் அல்ல.

இந்த நிலையிலுள்ள மக்களைக்கொண்ட நாட்டிற்கு ஏதாவது ஒரு கடுகளவு முன்னேற்றத்திற்கோ விடுதலைக்கோ முயற்சி செய்வதானால் முதலில் மேல்கண்ட கெடுதிகளை ஒழிக்கும்வழி இருக்கும்படியான ஏற்பாட்டுடன் முயற்சிக்க வேண்டியது நியாயமும் யோக்கியமும் நாணயமும் ஆகும். அதை வேண்டுமென்றே மூடிவைத்துக் கொண்டோ அல்லது அதைப்பற்றிக் கவலை இல்லாமலோ இருந்துகொண்டு வேறு வழியில் பிரவேசிப்பதென்பது ஒரு சிறிதும் பயனளிக்காத காரியம் என்பதல்லாமல், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பெரிதும் கேட்டை விளைவிப்பதாகும் என்றே சொல்லுவோம். ஏனெனில் இந்த முக்கியமான குற்றங்கள் நமது நாட்டில் இருப்பதினாலேயே நமது நாடு வெகுகாலமாகவே அடிமை வாழ்க்கையிலும் அந்நிய ஆதிக்கத்திலும் இருக்க வேண்டி இருக்கின்றது. எனவே இவைகளை ஒழிக்கத்தக்க கொள்கைகளோ முறைகளோ ஏதாவது ஒரு சிறிது மேல்கண்ட சர்வகக்ஷி மகாநாட்டில் இருக்கின்றதா என்று பார்த்தால் அடியோடு இல்லாததோடு ஏற்கனவே உள்ள ஒரு சிறிதும் பிடுங்கப்பட்டிருக்கின்றது என்றுதான் சொல்லவேண்டும்.

அதாவது இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், ஐரோப்பியர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் ஆகிய பிரிவினர்களுக்கு தனித்தனி தேர்தல் தொகுதியும், இந்துக்களில் தென்னாட்டில் உள்ள பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரிவுகளுக்கு தேர்தல் மூலம் ஒதுக்கி வைக்கும் முறையும், தீண்டாதவர்கள் என்னும் தாழ்த்தப்பட்ட வகுப்புக்கு சர்க்கார் மூலம் நியமனம் செய்வதற்கு ஒதுக்கி வைத்துக்கொண்டு வருவதும் ஆகிய முறைகள் கொஞ்ச காலமாக இருந்து வந்தது. இந்த முறைகள் 20 வருஷத்திற்கு முன்னும் 10 வருஷத்திற்கு முன்னும் இந்து முஸ்லிம் மகாநாடு என்னும் பேராலும் சீர்திருத்தம் என்னும் பேராலும் காங்கரஸ் என்னும் பேராலும் சர்வகக்ஷி மகாநாடு என்னும் பேராலும் கூட்டங்கள் கூட்டி இந்தியப் பொது மக்களால் ஒப்புக் கொள்ளப்பட்டத் திட்டம் என்கின்ற முறையில் சர்க்காருக்கு அறிக்கை செய்து அதன் மூலமாக அடைந்த சாதனங்களாகும். அன்றியும் இந்த சாதனங்களின் பலனாக சமூக வாழ்க்கை



RangaRakes tamilnavarasam.com

யில் தாழ்த்தப்பட்டவர்களும் கல்வியில் பிற்பட்ட வகுப்பார் என்பவர்களும் ஒரு விதத்தில் தங்கள் நிலைமையையும் யோக்கியதையையும் உணரவும் ஒரு சிறிதாவது மனிதத் தன்மையடைய வேண்டும் என்கின்ற ஆசை பிறக்கவும் மார்க்கம் ஏற்பட்டது. இதற்கு நாம் உதாரணங்கள் எடுத்துக்காட்ட வேண்டிய தில்லை என்றே நினைக்கின்றோம்.

இப்படி இருக்க, இப்போது சர்வகக்ஷி மகாநாட்டின் பேரால் ஏற்படுத்தப்பட்ட சுயராஜ்ய திட்டத்தில் வேண்டுமென்றே இந்த சாதனங் கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது முகமதியர்களுக்கும் கிறிஸ்தவர் களுக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் இல்லை.

பிற்பட்ட வகுப்பாருக்கு என்று ஒதுக்கி வைக்கும் முறையும் இல்லை.

தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு என்று சர்க்கார் நியமனமும் இல்லை.

இவ்வளவும் இல்லாததோடு இவர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைப் பதற்கு வேறு எந்த விதமான மார்க்கமும் செய்யவும் இல்லை.

வங்காளம், பஞ்சாப்பு ஆகிய மாகாணங்களுக்கு மாத்திரம் இந்து முஸ்லிம்களைப் பொறுத்தவரை சில ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்து கொள்ள சம்மதித்திருப்பதாக மாத்திரம் காணப்படுகின்றது.

தென்னாட்டில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரி வினையும், தீண்டக்கூடாதார், கண்ணில் பார்க்கக்கூடாதார், தெருவில் நடக்கக் கூடாதார் என்கின்ற பிரிவினையும், இந்த வகுப்புகள் ஒன்றுக்கொன்று நம்பிக்கையின்மையும், ஒற்றுமையின்மையும், துவேஷமும் கொண்டு ஒன்றுக்கொன்று சம உரிமை அற்று கொடுமையாய் நடந்து வருவதும் மறுக்கக்கூடாத விஷயமாகும். இதற்கு மேல்கண்ட சர்வகக்ஷி மகாநாட்டில் எவ்வித விமோசனமும் இல்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு தனித் தேர்தல் தொகுதியோ, ஒதுக்கி வைத்தலோ, சர்க்கார் நியமனமோ ஆகிய ஒன்றுமே இல்லாவிட்டால் அவர்கள் மற்றபடி வேறு எந்த வழியில் பிரதி நிதித்துவத்தை அடைய முடியும்?

அதுபோலவே முஸ்லீம்களுக்கும் தனித்தேர்தலோ, ஒதுக்கி வைத்தலோ, நியமனமோ இல்லாதவரை அவர்கள் எந்த விதத்தில் பிரதி நிதித்துவம் பெற முடியும்? அதுபோலவே பார்ப்பனர் பார்ப்பனரல்லா தார்களும் – பொதுத்தேர்தலாலேயே ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதமும், கட்சியும், துவேஷமும் ஏற்பட்டிருப்பதற்கு தனித் தேர்தல் ஏற்படுத்தாத பக்ஷம் வேறு எந்த மார்க்கத்தில் இவர்கள் ஒற்றுமைப் பட முடியும்?



ஒரு நாட்டில் 5ல் ஒரு பங்காகிய 6–கோடி மக்கள் தீண்டாதாராக பாவிக்கப்பட்டு கல்வி, அறிவு, மனிதத்தன்மை, சுயமரியாதை முதலிய வைகள் அடைவதற்கு மார்க்கமில்லாமல் அநேக காலமாக அமுத்தி வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு எவ்வித விமோசனமும் செய்யப்படாமல், ஒரு திட்டம் தயாரித்திருப்பதாகச் சொன்னால் அந்தத் திட்டம் யோக்கிய மான திட்டமாகுமா? அந்த சமூகத்தார் அத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள சம்மதிப்பார்களா? அன்றியும் பொதுத்தேர்தலில் இவர்களுக்கு ஒரு ஸ்தானமாவது கிடைக்குமா? எனவே எல்லோருக்கும் சமமான பிரதிநிதித் துவம் கிடைக்கும்படியான முறை அதில் இல்லை என்றே சொல்லுவோம்.

தவிர, எல்லோருக்கும் ஓட்டுரிமை அதாவது 20 வருஷத்திற்கு மேற்பட்ட ஆண் பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கப்படவேண்டுமென்று சர்வ கட்சி மகாநாடு திட்டத்தில் கேட்கப்பட்டிருக்கின்றது.

எல்லா மக்களும் தங்களது ஓட்டுரிமையை சரியானபடி உபயோகிக்க கற்பிக்கப்பட்டிருக்கின்றார்களா? என்பது நமது முதல் கேள்வி. ஓட்டுரிமை இன்னதென்றும் அதை எப்படி உபயோகப்படுத்தவேண்டும் என்பதைப் பற்றியும் பாமர மக்களுக்கு ஒரு சிறிதும் கற்பிக்காமலும் கற்பிக்க கவலை கொள்ளாமலும் இருந்துகொண்டு அவர்களுக்கு ஓட்டுரிமை வாங்கிக் கொடுப்பதால் அந்த நாட்டுக்கு என்ன பலன் கிடைக்கக்கூடும்? பாமர மக்களை ஏய்க்கவும், அவர்கள் கையைக் கொண்டே அவர்கள் கண்ணைக் குத்திக் கொள்வதற்குமே உதவுமேயல்லாமல் வேறு என்ன பலன் ஏற்படும்.

இப்பொழுது நமது நாட்டின் தேர்தல்களின் யோக்கியதைகளைப் பற்றி யோசிப்போமேயானால் அதன் தன்மையை வெளியிட முடியாத நிலைமையில் இருக்கின்றோம். வெளியிடுவதானாலும் இதில் இடம் போதாது. எவ்வளவு ஒழுக்க ஈனங்களும், புரட்டுகளும், பித்தலாட்டங்களும், ஏமாற்றல்களும், நாணயக்குறைவான காரியங்களும் நடைபெறுகின்றன! என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டுமா?

இந்த நிலையில் இவைகள் திருத்தப்பட எவ்வித முயற்சியும் செய்யாமல் மேலும் மேலும் இம்மாதிரியான காரியங்கள் அதிகமாவதற்கு தக்க மாதிரியாகவே ஓட்டர் தொகுதிகளை ஏற்படுத்தினால், அதனால் நாட்டிற்கோ மக்களுக்கோ என்ன நன்மைகள் கிடைக்கக்கூடும்? மிராசு தாரன், முதலாளி, பணக்காரன், படித்த பித்தலாட்டக்காரன், கையில் வலுத்த வன் முதலியவர்கள் போன்ற சுயநலக்கூட்டத்தாருக்கு இம்முறைகள் பயன்படுமே ஒழிய பாமர மக்களுக்கோ தொழிலாளிக்கோ விவசாயிக்கோ ஏதாவது ஒரு சிறிது அனுகூலமாவது ஏற்பட வழியுண்டா என்று யோசித்துப் பார்க்க விரும்புகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

தவிர, எல்லா மக்களுக்கும் பொதுவுடைமையில் சமஉரிமை அளிக்கப்படும் என்பதாக ஒரு வாசகம் அத்திட்டத்தில் காணப்படுகின்றது.

இது பொது ஜனங்கள் கண்களில் மிளகாய்ப் பொடியை அள்ளிப் போடுவதற்காகவே கண்டுபிடித்து எழுதப்பட்டதாகும். ஏனெனில் மத சம்மந்தமான காரியங்களிலும் பழமையான பழக்க வழக்க அனுபோகங்களிலும் சர்க்கார் பிரவேசிக்கக்கூடாது என்பதாக ஒரு நிபந்தனை ஏற்கனவே இருப்பதாகவும் அது மகாராணியால் ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும் உறுதிப்படுத்தப் பட்டாய் விட்டது.

அந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டே எந்த விதமான உரிமைகளோ சீர்திருத்தங்களோ தலைகாட்டினாலும் ஒரே அடியாய் மண்டையில் அடித்துக் கொன்று விடுவதாயிருக்கின்றது.

அந்த நிபந்தனைகள் இருக்கும்போது மக்களுக்கு புதிதாக வேறு எந்த வழியில் சம உரிமை கொடுக்க முடியும்?

சமீபத்தில் சட்டசபை முதலியவைகளில் சீர்திருத்த சம்மந்தமாய் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களும் மசோதாக்களும் மத ஆச்சாரிகளாலும் உயர்ந்த ஜாதிக்காரர்களாலும் பட்ட பாட்டிலிருந்தும் அவைகளுக்கு ஏற்பட்ட எதிர்ப்பிலிருந்தும் அவ்வுரிமையின் பயன் நன்றாய் விளங்கும். ஆதலால் அந்த வாசகம் மக்களை ஏய்ப்பதற்கு கண்டுபிடிக்கப் பட்டதே தவிர வேறில்லை.

எனவே சர்வகட்சி மகாநாடு என்பது ஒரு ஏமாற்றும் மகாநாடே ஒழிய வேறில்லை. அதில் கலந்திருப்பவர்களிலும் அதை ஆதரிப்பவர்களிலும் பெரும்பான்மையோர் கடைந்தெடுத்த மோசக்காரர்களும், சுயநலக் காரர்களும் தங்களது சமூகத்தையும், தேசத்தையும் விற்று வாழ்க்கை நடத்தும் இழிகுணம் படைத்தவர்களுமானவர்களேயொழிய வேறில்லை என்றே சொல்ல வேண்டியிருப்பதற்கு வருந்துகிறோம்.எனவே அத்திட்டத்தை பொதுமக்களும் சிறப்பாக பிற்பட்டவர்களுமே ஒப்புக்கொள்வது என்பது தற்கொலை என்றே சொல்லுவோம்.

மற்றபடி அதன் சூழ்ச்சிகளைப்பற்றியும் இந்த சமயத்தில் அது எதற்காக செய்யப்பட்டது என்பதைப்பற்றியும் சென்னையில் கூட்டிய சர்வ கட்சி மகாநாடு என்பதின் புரட்டைப்பற்றியும் அதில் கூடியுள்ளவர்களின் தனித்தனி யோக்கியதைகளைப் பற்றியும் பின்னால் எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 14.10.1928**



RangaRakes

# சீர்திருத்தமும் இந்துமத ஸ்மிருதியும்

திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரி அவர்கள் தற்காலம் ஆலோசனையிலும் கமிட்டி விசாரணையிலும் இருந்து வரும் குழந்தை விவாகத் தடை மசோதாவைக் கண்டித்து ஒரு “ஸ்ரீமுகம்” வெளியிட்டிருக்கின்றார். அதை “சுதேசமித்திரன்” பிரசுரித்துள்ளபடி மற்றொரு பக்கத்தில் எடுத்துப் போட்டிருக்கின்றோம். அதன் காரண காரியங்களைப் பற்றி ஆராயுமுன் திரு. சத்தியமூர்த்தி யார் என்பதையும், அவர் எந்த முறையில் வெளிப் படுத்தியிருக்கின்றார் என்பதையும் முதலில் கவனிப்போம்.

திரு. சத்தியமூர்த்தியை அவருடைய தனித்த ஹோதாவில் ஒரு சாதாரண மனிதர் என்பதாகச் சொல்லிவிடலாமானாலும் அவருக்கு இம் மாதிரியான ஸ்ரீமுகங்கள் வெளியிட சந்தர்ப்பங்கள் அளித்ததும் அந்த ஸ்ரீமுகங்களை மக்கள் கவனிக்க நேர்ந்ததும், சில விஷயங்களிலாவது அவர் இந்திய மக்கள் பிரதிநிதி என்கின்ற தன்மை அடைந்திருக்கிறார் என்பதே. அதாவது “தேசீய அரசியல்” இயக்கம் என்று சொல்லப்படுவதில் ஒரு குறிப் பிட்ட மனிதராகவும், சென்னை சட்டசபை என்பதில் ஜனப்பிரதிநிதி அங்கத்தினராகவும், அதிலும் படித்த மக்களின் பிரதிநிதியாகவும், அதாவது யூனிவர்சிட்டி பிரதிநிதியாகவும், சென்னை முனிசிபாலிட்டியின் ஒரு அங்கத்தினராகவும், மற்றும் பொது ஜனசேவை செய்கின்றவர் என்று சொல்லிக் கொள்ளும் கூட்டத்தில் சேர்ந்தவராகவும் இருக்கின்றார் என்பதே. அன்றியும், தன்னை ஒரு சீர்திருத்தக்காரர் என்றும் மதம், சமூகம் முதலிய வைகளில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியது அவசியம்தான் என்றும் சொல்லிக் கொள்பவர்.

எனவே, இப்படிப்பட்ட ஒருவர், குழந்தைகள் புருஷன் பெண் ஜாதியான வாழ்வு நடத்தாதிருப்பதற்கும், குழந்தைகள் தங்கள் குழந்தைப் பருவம் மாறாததற்கு முன்பே பிள்ளை பெறும்படியான நிலைமையை உண்டாக்காமல் இருப்பதற்கும், மற்றும் மனித சமூகத்தின் அறிவு, சரீர வளர்ச்சி, பலம் முதலியவைகள் விர்த்தி அடைவதற்கும் அவசியமானதான மேல்கண்ட குழந்தை விவாகத் தடுப்பு மசோதா என்பதை எதிர்த்து போராட



tamilnavarasam.com

முன்வந்து அதற்கு ஆதாரமாக பெரிதும் மதசம்மந்தமான ஆக்ஷேபனைகளையே எடுத்துக்காட்டி இருக்கிறார்.

இது மாத்திரமல்லாமல், மற்றும் இதுபோன்ற பல சீர்திருத்தங்களையும், மதத்தை சாக்காகக் கொண்டே ஆக்ஷேபித்து வந்திருக்கின்றார். இதற்கு உதாரணமாக இரண்டொன்றைக் குறிப்பிடுகின்றோம்.

அதாவது கொஞ்ச நாளைக்கு முன் சென்னை சட்டசபையில் திரு. முத்துலக்ஷிமி அம்மாளால் கொண்டுவரப்பட்ட சாமி பேரால் விபசாரத்திற்கு பொட்டுக் கட்டும் வழக்கத் தடுப்பு மசோதாவையும் மதத்தை சாக்காகக் கொண்டே தடுத்து நின்றதும் யாவருக்கும் தெரிந்ததாகும். அந்த சமயத்தில் திரு. சத்தியமூர்த்தி அய்யர் சொன்ன ஆக்ஷேபனை என்னவென்றால் பொட்டுகட்டுகின்ற வழக்கம் கேட்டைத் தரத்தக்க தானாலும் அதை நிறுத்தச் சம்மதிப்பது மதத்தில் பிரவேசிப்பதாகும் என்றும், இன்று பொட்டுக் கட்டுவதை நிறுத்த ஒப்புக்கொண்டால் நாளை மற்றொரு சீர்திருத்தம் வரும் என்றும், ஆதலால் அதற்கு சம்மதிக்க முடியாதென்றும் சொல்லி விட்டார்.

பிறகு சென்ற வாரத்தில், சென்னையில் நடைபெற்றுவரும் விபசாரங்களை தடுக்க ஒரு மசோதா கொண்டுவர முயற்சித்த போதும் இதுபோலவே தடைகல்லாய் நின்றதுடன் அவர் சொன்ன சமாதானம் என்னவென்றால், "விபசாரிகள் எவ்வளவுதான் ஒழுக்க ஈனமாக நடந்து கொண்டாலும் அவர்களும் நமது சமூகத்தார் அல்லவா? அப்படியிருக்க அவர்களின் விபசாரத் தொழிலை நிறுத்தி விட்டால் பிறகு அவர்கள் ஜீவனத்திற்கு என்ன செய்வார்கள்" என்று சொல்லி ஆட்சேபித்தாராம்.

இம்மாதிரியாகவே எவ்விதமான சீர்திருத்தங்கள் வந்த போதிலும் மதத்தின் பேராலும் சமூகத்தின் பேராலும் ஆக்ஷேபித்து அவைகள் நிறைவேற்றப்படாமல் போவதாயிருந்தால் பிறகு எந்த விதத்தில் தான் நமக்கு கதிமோட்சம் ஏற்படக்கூடும்? அன்றியும் பராசர் ஸ்மிருதியும் மனு ஸ்மிருதியும் நமது வாழ்க்கைக்கும் மதத்திற்கும் ஆதாரமென்பதை நாம் சகித்துக் கொண்டு அதைப் பின்பற்றுவதென்றால், அதை விட ஈன வாழ்க்கை வேறு எங்காவது ஏதாவது உண்டா என்று கேட்கின்றோம். இப்பேர்ப்பட்ட இந்துமதம் என்பதும் அதனுட்பிரிவுகள் என்பதான சைவ வைணவ முதலிய சமயங்கள் என்பதும், அதன் ஆதாரங்களான வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, ஆகமங்கள் என்பவைகளும், நமது மோக்ஷ சாதனத்திற்கு ஏற்பட்டவை என்றும், உலகத்திலுள்ள மற்ற மதங்களுக்கெல்லாம் சிறந்தது என்றும் சொல்லிக்கொண்டு அச்சமயங்களைக் காப்பாற்ற வெளி வந்திருக்கும் வீரர்கள், 'சுயமரியாதை இயக்கம் இந்து மதத்தைக் கெடுக்கின்றது, வைணவ மதத்தை வைகின்றது, சைவ சமயத்தை ஒழிக்கின்றது' என்று ஊளையிட்டு



கொண்டிருக்கின்றார்களே ஒழிய இம்மாதிரி சீர்திருத்தத்தைப் பற்றியாவது இதை எதிர்க்கும் ஆதாரங்களைப் பற்றியாவது கடுகளவு கவலையாவது கொள்ளுகின்றார்களா என்பதை பொது ஜனங்களை யோசித்துக் கொள்ளும் படி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

அன்றியும் மத சமயக்காரர்கள் என்பவர்கள் "சம்மந்தன் சமணர்களைக் கழுவேற்றினது பொய்யா மெய்யா? முதலைதான் உண்ட பாலகனை 14 வருஷம் வரை வயிற்றில் வளர்த்து வெளியில் கக்கினதை ஒப்புக் கொள்ளுவாயா? மாட்டாயா?" "ராமன் கடவுளா மனிதனா" "ராவணன் யோக்கியனா? ராமன் யோக்கியனா?" "சிவன் பெரியவனா, விஷ்ணு பெரியவனா?" "விஷ்ணுவுக்கு வடகலை ராமமா, தென்கலை ராமமா?" "சூரியனுடைய ரதத்திற்கு எட்டு குதிரையா பதினாறு குதிரையா?" "விதி பெரியதா மதி பெரியதா?" இதுபோன்ற விசயங்களில் 'மதபக்தி'யையும் அறிவு சக்தியையும் காண்பித்துக் கொண்டு "சமயத் தொண்டையும், தெய்வத் தொண்டையும்" செய்துகொண்டும், இம்மாதிரியான விஷயங்களிலெல்லாம் பார்ப்பனர்கள் சொன்னதே 'தெய்வாக்கு' என்பதாகவும், அதை மறுத்தால் தங்களுக்கு எந்தவித யோக்கியதையும் இல்லாமல் போய்விடும் என்று பயந்துகொண்டும் பாமர மக்களை மிருகங்களாக்கி விடுகின்றார்கள். ஆதலால் இம்மாதிரி மதமும் சமயமும் நமக்கு எதற்காக வேண்டும்? இவை மக்களுக்கு நன்மையளிக்கும் சமயமாகுமா? என்பதாக கேட்க ஆரம்பித்தால் அதை நாஸ்திகம் என்று சொல்லிவிரட்டியடிக்கப் பார்க்கின்றார்களே யொழிய மனிதத் தன்மை அறிவுத் தன்மை என்பதை ஒரு சிறிதும் காட்டுவதே கிடையாது.

தவிர திரு. சத்தியமூர்த்தி, "பால்ய விதவைகளின் கொடுமையையும் சிறு குழந்தைகள் பிள்ளை பெற்று தாயாகி விடுவதால் நேரிடும் கெடுதியையும் நான் அறிவேன்" என்று கொடுமைகளையும் கஷ்டங்களையும் ஒப்புக் கொள்ளுகின்றார்.

ஆனால் கூடவே அதன் கீழ் "12 வயதுக்குள் பெண்களுக்கு கல்யாணம் செய்யாவிட்டால் பாபம் வரும் என்று பராசர் ஸ்மிருதியில் சொல்லி இருக்கின்றது" என்கின்றார். கொடுமையையும் கெடுதியையும் நீக்குவது பாபமாகுமானால் அந்தப் பாபத்திற்கு பயப்படவேண்டுமா? என்றுதான் கேட்கின்றோம்,.

அன்றியும் திரு. சத்தியமூர்த்தி ஆதாரம் காட்டும் பராசர் ஸ்மிருதியின் விவாகப் பிரகரணத்தில், "8 வயதுப் பெண்ணை விவாகம் செய்து கொடுத்தவன் சுவர்க்க லோகத்தையும், 9 வயதுப் பெண்ணை விவாகம் செய்து கொடுத்தவன் வைகுண்டத்தையும், 10 வயதுப் பெண்ணை விவாகம் செய்து கொடுத்தவன் பிரம்மலோகத்தையும் அடைகிறான்; அதற்கு



RangaRakes tamilnavarasam.com

மேற்பட்டு பெண்ணை விவாகம் செய்து கொடுப்பவன் ரௌரவாதி நரகத்தை அடைகின்றான்" என்று எழுதியிருக்கின்றது.

ஆனால், திரு. சத்தியமூர்த்தி "10 வயதுக்கு முன் கல்யாணம் செய்யும் வழக்கம் இப்போது நின்றுபோய்விட்டது" என்று சொல்லுகின்றார். இந்தப்படி, பார்த்தால் இப்போது பெண் பெற்றவர்கள் எல்லோரும் ரௌரவாதி நரகத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று தானே சொல்லவேண்டும். எனவே இனி 16 வயதில் கலியாணம் செய்பவர்களுக்கு புதிதாக பாவம் ஏது என்று கேட்கின்றோம்.

தவிர திரு. சத்தியமூர்த்தி பயப்படுவதாக வேஷம் போடும் பராசர் ஸ்மிருதியின் யோக்கியதையை கவனிப்போம்.

"10 வயதுக்கு மேல்பட்ட பெண்ணுக்கு கலியாணம் செய்யாவிட்டால் ரௌரவாதி நரகத்தை அடைய வேண்டும்" என்று சொல்லும் அதே ஸ்மிருதியானது அதே ஸ்திரீகள் விஷயத்தில் சொல்லுவதென்னவென்றால், "ஸ்திரிகள் பூமிக்கு சமானமானவர்கள்; அவர்கள் குற்றம் செய்தால் தூஷிக் கக் கூடாது. அவர்கள் என்ன தவறுதல் செய்தாலும் அவர்களை விலக்கி விடக் கூடாது. சண்டாளன் வசித்த பூமியை எப்படி சில சுத்திகள் செய்து அதில் நாம் வசிக்கின்றோமோ, அது போல் ஸ்திரீகள் சண்டாள சம்பந்தம் வைத்துக் கொண்டாலும் அவர்களை சுத்தி பிராயச்சித்தம் செய்து ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்று சொல்லியிருக்கின்றது. அந்த பிராயச்சித்தம் என்னவென்று பார்ப்போனால் அதாவது "ஒரு பிராமண ஸ்திரீ தன் மனதறிந்து ஒரு சண்டாளனுடன் சம்மந்தம் வைத்துக் கொண்டால் சாந்திராயண கிருச்சிரம் செய்துவிட்டால் சுத்தியாகிறாள்" என்று சொல்லியிருக்கின்றது. இது பராசர் ஸ்மிருதி பிராயச்சித்த காண்டம் 7-வது அத்தியாயம் 23-வது சுலோகம்.

சாந்திராயண கிருச்சிரம் என்பது "கிருஷ்ண பட்சம் முதல் அமா வாசை வரையில் தினம் ஒரு பிடி சாதமாக குறைத்துக் கொண்டு வந்து ஒரு நாள் பட்டினி விரதமிருந்து, மறுபடியும் ஒவ்வொரு பிடி விருத்தி செய்து சாப்பிட வேண்டியது" இது 7-வது காண்டம் 2- வது சுலோகம்.

"ஒரு பிராமண ஸ்திரீ பாவசீலர்களான சூத்திரர்களால் அனுபவிக்கப் பட்டால் அவள் பிரஜாபத்திய கிருச்சிரம் செய்வதாலும் ருது ஆவதாலும் சுத்தி அடைகின்றாள்" என்று சொல்லுகின்றது (இது மேல்படி காண்டம் மேல்படி அத்தியாயம் 24-வது சுலோகம்)

பிரஜாபத்திய கிருச்சிரம் என்பது 3 நாள் காலையிலும் 3 நாள் மாலையிலும் புசித்து 3 நாள் யாசிக்காமல் வந்ததை புசித்து 3 நாள் உபவாச மிருத்தல். (இது பராசர் ஸ்மிருதி 7-வது காண்டத்தில் 9-வது அத்தியாயத்தில் சொல்லப்படுகின்றது.)

இதுவும் செய்வதற்கு கஷ்டமாயிருக்குமானால் 12 பிராமணர்களுக்கு சாப்பாடுபோட்டால் போதும். (இதுவும் மேற்படி அத்தியாயம்)

இன்னும் இதுபோலவே மகாபாதகம் என்று சொல்லும்படியான "குருபத்தினியைப் புணர்ந்தவன் ஒரு பசுவையும் எருதையும் பிராமண னுக்குக் கொடுத்தால் சுத்தனாகிறான்" (ஷை காண்டம் ஷை அ. சு. 13)

இன்னும் இதைவிட மகாபாதகமான அனேக காரியங்களுக்கும் ஒரு வேளை இரண்டு வேளை பட்டினி கிடப்பதும் பிராமணனுக்குக் கொடுப்ப துமே பிராயச்சித்தமாய்ச் சொல்லப்படுகிறது. அதிலும் பிராமணன் சூத்திரன் என்பதாகப் பிரித்து அதற்குத் தகுந்தபடி பிராயச்சித்தம் சொல்லப்பட்டி ருக்கின்றது. அதாவது "ஒரு வேதம் ஓதின ஒரு பிராமணன் ஒரு பசுவைப் புணர்ந்தால் ஒரு பசுவை பிராமணனுக்கு கொடுத்தால் சுத்தனாகிறான். இதே காரியத்தை ஒரு சூத்திரன் செய்தால் 4 பசுவையும், 4 எருதையும் பிராமணனுக்குக் கொடுத்தால் சுத்தனாகிறான்" என்று சொல்லுகிறது. ( ஷை அத்தியாயம் 14வது சுலோகம் )

எனவே இப்பேர்ப்பட்ட காரியங்களுக்கெல்லாம் இவ்வளவு சுலபமாக பிராயச்சித்தம் சொல்லி இருக்கும்போது ஒரு பெண்ணை 12 வயது ஆண் பிறந்து கலியாணம் செய்வதால் ஏற்படும் பாபத்திற்கு மிகவும் சுலபமான பிராயச்சித்தம் தானே இருக்கக்கூடும். ஆதலால் பராசர் ஸ்மிருதியை கடவுள் வாக்கு என்றே நம்புகின்றவர்களுக்குக் கூட குழந்தை விவாகத்தடுப்பு மசோதாவில் பிரமாதமான கெடுதி ஒன்றும் வந்துவிடாது என்றே சொல்லுவோம். அதிகமான தண்டனை விதித்திருந்தாலும் அது 'பாலும் பழமும் மாத்திரம் சாப்பிட்டுக் கொண்டு ஒரு வேளை பட்டினி கிடக்க வேண்டும்' என்றுதான் இருக்கக் கூடும். ஆதலால் உண்மையானதும் அவசியமானதுமான சீர்திருத்தங்களை விரும்புகிறவர்கள் மதம், சமயம், சாஸ்திரம், சாமி என்கின்ற பூச்சாண்டிகளுக்கு ஒரு சிறிதும் பயப்படக் கூடாது என்பதற்காகவே இதை எழுதுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 21.10.1928**



RangaRakes



tamilnavarasam.com

# யாகத்தின் ரகசியம்

## ஓர் சம்பாஷணை

**சங்கரன் :** ஏது நண்பனே, இன்று அவசரமாய்ச் செல்கின்றாய். வயிறு பசித்துவிட்டதோ?

**கிருஷ்ணன் :** அப்படியில்லை. நாளையத்தினம் எங்கள் கிராமத்தில் ஓர் யாகம் நடக்கப் போகிறது; இன்று மாலையிலேயே ஆரம்பம், அதற்காகப் போகிறேன்.

**சங்கரன் :** யாகம் என்றால் எனக்குப் புரியவில்லை. அதை எப்படிச் செய்வார்கள்?

**கிருஷ்ணன் :** அதை எல்லாம் உனக்குச் சொல்வது கூடாது, அந்தரங்கமானது; அது எங்கள் பரம்பரை பரம்பரை வழக்கமாயுள்ளது; யாகம் செய்தால் ஊர் செழிக்கும். பிராமணர்களுக்குச் செல்வம் வளரும்.

**சங்கரன் :** நண்ப, எவ்வளவு அந்தரங்கமானாலும் பலர் சேர்ந்து செய்தால் எப்படியும் வெளிவந்துதானே தீரும். அன்றியும் நீ சொல்வதைப் பார்த்தால் நல்ல காரியமாகத்தானே தெரிகிறது. அதை நான் தெரியும்படி சொல்லவேண்டுகிறேன்.

**கிருஷ்ணன் :** ஏது என்னைச் சீக்கிரம் போக விடமாட்டாய் போலிருக்கிறது. எனக்கு முக்கிய நண்பனாதலால் சுருக்கமாகக் கூறுகிறேன். மற்றவர்களிடம் சொல்லாதே.

**சங்கரன் :** அப்படியே

**கிருஷ்ணன் :** எங்களூர் சிவன் கோவிலின் வடபாகத்தில் யாக குண்டம் வெட்டிப் பந்தலிட்டு அதற்கு வேண்டிய சமித்துக்கள் , நெய், பால், தயிர், தானியம், தேங்காய், பழம் முதலிய சாமான்கள் தருவித்து அயலூர்களிலுள்ள உபாத்தியாயர்கள், கனபாடிகள், சடாவல்லவர்கள், தீக்ஷதர்கள் முதலியோரை எல்லாம் வருவித்து யாகத்தை முடித்துத் தேவர்களுக்கு அவிர்ப்பாகங் கொடுத்து பிராமண போஜனம் செய்து முடிப்பார்கள்.

**சங்கரன்** : நண்ப, இவ்வளவு அவசரமாகச் சொல்லிவிட்டால் நான் தெரிந்து கொள்ளவேண்டாமா? உபாத்தியாயர்கள் என்றாயே, நம்முடைய பள்ளிக்கூட உபாத்தியாயர்களெல்லாம் வருவார்களா?

**கிருஷ்ணன் :** அட மூடமே, இது கூடத் தெரியாதா? இந்த உபாத்தியாயர்களுக்கு அங்கென்ன வேலை? வேதஅத்யயனம் செய்த உபாத்தியாயர்களாகிய வைதீகர்களாக்கும்.

**சங்கரன் :** அந்த உபாத்தியாயர்களைக் கொண்டு நம் பள்ளிக்கூடத்தில் அவ்வேதத்தைக் கற்றுக் கொடுக்கும்படி செய்தால் இந்த விஷயங்களெல்லாம் எங்களுக்கும் தெரிய வழியிருக்குமே?

**கிருஷ்ணன் :** நீ என்ன பைத்தியக்காரனாயிருக்கிறாயே! நீங்களெல்லாம் அவ்வேதத்தைக் காதாலும் கேட்கப்படாதாம் அப்படியானால் பிராமண தர்மம் கெட்டுவிடுமாம். உதாரணமாக கல்லிடைக் குறிச்சி சமஸ்கிருதப் பாடசாலையைத் தாலூக்கா போர்டார் வகித்து நடத்தும் போது, உங்களவர்களைச் சேர்க்கும்படிசெய்ய அவர்களுக்கு எங்கள் உபாத்தியாயர்கள் கற்றுக் கொடுக்க மறுத்து விட்டதால் அப்பாடசாலையை போர்டு நிர்வாகத்திலிருந்து நீக்கி விட்டார்கள். இப்போது அது ஆற்றங்கரையில் ஆற்றங்கரைப் பிழைப்பாகவே காலத்தை எதிர்ப்பார்க்கிறது.

**சங்கரன் :** ஐயோ! அப்படிப்பட்ட வேதம் ஒன்றிருக்கின்றதா? அதில் அப்படி சொல்லியிருக்குமா? அதை யார் செய்தது?

**கிருஷ்ணன்** : அது கடவுள் பிராமணர்களுக்காகச் செய்து கொடுத்தாராம். அவர்களே கற்று அதன்படி காரியங்களை அவர்களே செய்ய வேண்டும். மற்றவர்கள் கேட்டாலும் பார்த்தாலும் கற்றாலும் தண்டனை உண்டு.

**சங்கரன் :** படிப்புக்குத் தண்டனையா! வெகு அழகு! உண்மையான கடவுள் இப்பாஷையைச் செய்திருக்கமாட்டார். அப்படிச் செய்திருந்தால் எல்லோருக்கும் பொதுவாகயிருக்கும். உலக பாஷைகள் கற்பவருக்கெல்லாம் பொதுவாகும். இது தன்னலம் போற்றும் பிராமணக் கடவுள்தான் செய்திருப்பார். அவருக்கு கடவுள் பட்டம் தகுதியன்று.

**கிருஷ்ணன் :** உனக்கென்னடா தெரியும், அப்பாஷை தேவ பாஷையாக்கும். சாதாரண மனிதர்கள் அறியப்படாதென்றும் அது அவ்வேதத்திலேயே சொல்லியிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

**சங்கரன் :** தண்டனையுண்டென்றாயே, இதற்குமுன் அப்படி எங்கேயாவது நடந்திருக்கிறதா?

**கிருஷ்ணன்** : இக்காலத்தான் ஆங்கில அரசாட்சியாய் போய்ச்சே! அக்காலத்து ஆரிய அரசர்களாகிய மனு, மந்தாதா, தசரதன், இராமன், தருமர் முதலியவர்கள் ஆட்சியானால் நீ இதைப்பற்றி இவ்வளவு பேசினதற்கே நீ படும்பாடு வேறாகும்.

**சங்கரன் :** அம்மம்மா! அவ்வநியாய அரசர்கள் வேண்டாமப்பா! யாகத்தைப்பற்றி இன்னும் கொஞ்சம் விவரிக்க வேண்டும்.


RangaRakes
tamilnavarasam.com

**கிருஷ்ணன் :** சீக்கிரம் போக வேண்டும். கேட்பதை சுருக்கமாகவே கேள்.

**சங்கரன் :** நண்ப இந்த யாகம் எதற்காக யாரை உத்தேசித்தது?

**கிருஷ்ணன் :** உலக க்ஷேமத்துக்கும் பிராம்மண அபிவிருத்திக்கும் இந்திரனை உத்தேசித்து செய்வது.

**சங்கரன் :** இந்திரன் வருவானா? மந்திரம் செய்பவராவது காணு வார்களா?

**கிருஷ்ணன் :** அது முடியாது. அவனுக்கு உரிய மந்திரத்தாலழைத்து மந்திர பூர்வமாய் ஆகுதி செய்து அவிர்ப்பாகம் கொடுப்பதை அவன் ஏற்றுத் திருப்தியடைவான் என்பது வேதாந்தம்.

**சங்கரன் :** இந்திரனுக்கு எதை எப்படி ஆகுதி செய்து அவிர்ப்பாகம் கொடுப்பது.

**கிருஷ்ணன் :** உன்னிடம் நான் சிக்கிக் கொண்டேன். இதற்குமேல் சொன்னால் என்னை ஏளனம் செய்தாலும் செய்வாய்.

**சங்கரன் :** நண்ப, உன் கூட்டத்தார் செய்கைக்கு உன்னை ஏளனஞ் செய்வது நன்றாய் இருக்குமா? விஷயம் தெரிய கேட்கிறேன்.

**கிருஷ்ணன் :** இப்போது சொல்லப் போகிற விஷயத்தில் எனக்கும் ஒரு விதத்தில் அதிருப்திதான். வைதீகாள் காரியம் - அதை உனக்கும் தெரிவித்து விடுகிறேன். அதாவது தீ யாககுண்டத்தில் பலவித சமித்துக்களையிட்டு, ஆவின் நெய் சொரிந்து எரித்து, தானிய வகைகள், பஞ்ச கவ்வியங்கள், பழந்தேங்காய், பட்டு முதலியவைகளைப் போட்டு கடைசியாய் கொழுத்த ஆட்டை தீட்சதரென்பவர் குரல் வளையை நெருக்கி உயிரைப் போக்கி அதை அறுத்து வவை என்னும் இரத்தாசயத்தை எடுத்து மந்திரஞ் சொல்லி ஓம குண்டத்தில் அவிர்ப்பாகம் கொடுப்பார். இதுதான் யாகம் இதன் ரகசியம் தெரிந்ததா?

**சங்கரன் :** சிவ சிவா, தெரிந்து கொண்டேன். ஆட்டின் மாமிசத்தை என்ன செய்வார்கள்?

**கிருஷ்ணன் :** அதைக் கேளாதே; சொல்லத் தயாரில்லை. நீயே யூகித்துக் கொள் அது பலவிதம்.

**சங்கரன் :** நண்ப, இது விஷயத்தை பலர் பலவிதமாகப் பேசினர். அதனுண்மை தெரியவே உன்னைக் கேட்டுத் தெரிந்தேன். நீயும் பலவிடங்களில் புதையல் செய்துவிட்டுச் சிறிது தெரிவித்தாய். ஆகிலும் சில வார்த்தைகள் சொல்லியபின் போகக் கடவாய்.

தமிழ் வேதமென்னும் திருக்குறளில் உங்கள் விஷயங்களைக் கண்டித்துத் தமிழ் மகனாகிய தெய்வப் புலமை திருவள்ளுவர் கூறுவதைக் கேள்.



***"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்***
***உயிர்செகுத்து உண்ணாமை நன்று"***

***"நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்***
***கொன்றாகும் ஆக்கம் கடை"***

***"உயிர்உடம்பின் நீக்கியார் என்ப, செயிர்உடம்பின்***
***செல்லாத்தீ வாழ்க்கை யவர்"***

***"அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்***
***பிறவினை எல்லாம் தரும்"***

என்ற முதுமொழியின் கருணையை கண்டனையோ? இப்படிப்பட்ட ஆபாச மான யாகங்கள் சிறு தெய்வ வழிபாடுகள் கூறுங் கூற்றுகளைத் தமிழ் மக்கள் கற்றால் உமது நூல்களை கையால் தொடவும் விரும்புவாரோ! இதற்காகத்தான் வேதத்தைப் பார்ப்பனர் தவிர மற்றவர்கள் படிக்க கூடா தென்ற கட்டுபாடு போலும் - நண்பனே, நீ அந்த அநியாயமான கொலைக் களத்திற்குப் போகாதே.

**கிருஷ்ணன் :** அன்ப, உன் போதனை கேட்டதும் அவசியம் போக வேணுமென்ற ஈர்ப்பு என்னை விட்டு நீங்கி நின்றது - உனக்கு ஒன்றுந் தெரியாதென்றும் உங்களவர்களுக்கு சாஸ்திரங்கள் கிடையாதென்றும் எங்களவர்கள் சொல்வதைக் கேட்டு மயங்கினேன் - உங்களுக்குரியதெனக் கொண்டிருக்கும் தமிழ் வேதத்தின் ஆழ்ந்த நோக்கின் பெருமையை இந்நான்கு செய்யுட்களாலேயே கண்டு கொண்டேன். உன்னோடு பேசியதன் பயனாய் அவ்விடத்திற்குப் போக அருவருப்பாயிருக்கின்றது. மற்றவை நாளை பேசுவோம். வந்தனம்,

**குடி அரசு - உரையாடல் - 21.10.1928**



RangaRakes tamilnavarasam.com

# அந்தோ!
# பரஞ்சோதி சுவாமிகள் பிரிந்தார்

சிதம்பரம் பொன்னம்பல மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ பரஞ்சோதி சுவாமிகள் சிலநாள் உடல் நலங்குன்றியிருந்து நிகழும் அக்டோபர் மாதம் 10 ம் நாள் புதன் கிழமையன்று, அந்தோ! இம் மண்ணுலகை விட்டுப் பிரிந்தார்– சுவாமிகள் தென்மொழியிலும் வடமொழியிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். தாம் மடாதிபதியானதும் கால நிலைமைக்குத் தக்கபடி மடத்து வேலைகளுடன் பொது நலத்திற்கான வேலைகளையும் கவனித்து உழைத்து வந்தார். கதர், மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு முதலியவைகளை பல இன்னல்களுக் கிடையிலும் உபதேசித்து வந்தவர். ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து சிதம்பரம் தச்சன் குளத்தையும் ஞானப்பிரகாசர் குளத்தையும் வெட்டியும் படிகட்டியும் சிதம்பரவாசிகளுக்கு உதவினவர். சிதம்பரம் நகர பரிபாலன சபையில் ஓர் ஆதிதிராவிட சகோதரிக்கு ஸ்தானம் வாங்கிக் கொடுத்ததும் நம் சுவாமிகளே. ஆதலின் இத்தகைய பெரியாரின் பிரிவாற்றாது தவிக்கும் தமிழ் மக்கள் அனைவருக்கும் சிறப்பாக சிதம்பரவாசிகளுக்கும் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளு கிறோம்.

**குடி அரசு – இரங்கல்செய்தி – 21.10.1928**



RangaRakes

# காந்தியும் கடவுளும்

திரு. காந்தியவர்கள் சென்ற வாரத்திய தமது ‘யங் இந்தியா’ வில் தம்மை ஒரு நண்பர் கடவுளைப்பற்றிக் கேட்ட சில கேள்விகளை பிரசுரித்து அவைகளுக்கு தமது அபிப்பிராயத்தையும் எழுதியிருக்கின்றார்.

கேள்விகளின் சுருக்கம் யாதெனில்:–

“கடவுளைத் தவிர மற்றதெல்லாம் நிச்சயமற்ற தென்றும்,

சத்தியம் தான் கடவுள் என்றும்,

துன்பத்தை சகித்துக் கொண்டு பொறுமையாயிருப்பதே கடவுள் என்றும்,

அயோக்கியர்களை எச்சரிக்கை செய்து அவர்கள் தமக்குத்தாமே கேடு விளைவித்துக்கொள்ளும்படி செய்து விடுகிறார் என்றும், “யங் இந்தியா”வில் தாங்கள் எழுதியிருக்கிறீர்கள்.

ஆனால் கடவுள் இருக்கின்றார் என்கின்ற உறுதி எனக்கு இல்லை.

ஏனெனில் அப்படி கடவுள் என்பதாக ஒன்று இருக்கும் பக்ஷத்தில் உலகத்தில் சத்தியத்தை நிலை நிறுத்துவதே அவரது லக்ஷியமாகவல்லவா இருக்கவேண்டும்.

ஆனால், உலகம் எங்கு பார்த்தாலும் பலவிதமான அயோக்கியர் களாலும் கொடுமைக்காரர்களாலும் நிரப்பப்பட்டிருப்பதுடன் ஒழுக்க நடவ டிக்கைகளைப் பற்றி சிறிதும் கவலையே எடுத்துக் கொள்ளாத அயோக்கியர் களான அவர்கள் சௌகரியமாகவும் க்ஷேமமாகவும் வாழ்கின்றார்கள்.

அயோக்கியத்தனம் என்பது ஒருவித தொத்துவியாதி போல் உலகில் தாராளமாய்ப் பரவிக் கொண்டும் வருகிறது.

இது இப்போதிருக்கும் மனித வர்க்கத்துடன் மறைந்து போவதாக



tamilnavarasam.com

இல்லாமல் இனிவரப்போகும் பின்சந்ததியார்களும் ஒழுக்கமற்றவர் களாகவும் நாணயமற்றவர்களாகவும் நடக்கும்படி செய்கின்றது.

கடவுள் சகலத்தையும் தெரிந்தவரும் சர்வ வல்லமையும் உள்ள வரல்லவா?

அப்படி இருந்தால் தனது சகலத்தையும் அறியும் சக்தியைக் கொண்டு கெடுதியும் கொடுமையும் எங்கெங்கிருக்கின்றது என்பதை அறிந்து தனது சர்வவல்லமையைக் கொண்டு அவைகளை ஒழித்து அயோக்கியர்களை வளர விடாமல் ஏன் செய்யக் கூடாது?

அன்றியும் கடவுள் ஏன் கஷ்டங்களை அனுமதித்துக் கொண்டு பொறுமையாய் இருக்கும்படி செய்யவேண்டும்,

அயோக்கியத்தனத்துடனும், நாணயக் குறைவுடனும், மகா கொடுமை யுடனும் உலகம் நடந்து கொண்டே இருப்பதை அனுமதித்துக் கொண்டே இருப்பாரானால் பிறகு கடவுளுக்கு என்னதான் யோக்கியதை இருக்கின்றது?

தாங்கள் சொல்லுவது போல் கொடுமை செய்கின்றவர்கள் தாங்க ளாகவே கெட்டுப்போகவும் தங்களுக்குத் தாங்களாகவே குழி வெட்டிக் கொள்ளவும் கடவுள் செய்வது உண்மையானால் அவர் ஏன் அக் கொடியவர்களைக் கொடுமை செய்வதிலிருந்து விலக்கி கொடுமைகளை முளையிலேயே கிள்ளியெறிந்து விடக்கூடாது?

அப்படிக்கில்லாமல், ஒருவனுக்கு கெட்ட காரியம் செய்ய தாராள மாய் இடம் கொடுத்து விட்டு, அக்கெட்ட காரியத்தால் உலகமும் பதினா யிரக்கணக்கான மக்களும் துன்பமும் அடையும்படி செய்துவிட்டு அதன் பிறகு கேடு செய்தவனை தானாக கெட்டுப் போகும்படி செய்துகொண்டிருப் பது எதற்காக?

உலகம் நாளுக்கு நாள் கெட்ட தன்மையிலேயே போய்க்கொண் டிருக்கின்றது. ஆதலால் உலகத்தை யோக்கியமாகவும் அயோக்கியர்களை அழித்து யோக்கியர்களை உண்டாக்கவும் செய்வதற்கு தனது சக்தியை உபயோகிக்காத ஒரு கடவுளிடத்தில் மனிதன் ஏன் நம்பிக்கை வைக்க வேண்டும்?

அயோக்கியர்கள் தாங்கள் அயோக்கியத்தனத்துடன் சௌக்கியமாகத் தீர்க்காயுளுடன் வாழ்வது எனக்கு நன்றாய்த் தெரியும். அப்பேர்ப்பட்ட வர்களால் மக்களுக்கு துன்பம் இல்லாமல் இருப்பதை முன்னிட்டாவது அவர்கள் ஏன் சீக்கிரம் அழிந்து போகக்கூடாது?



எனக்கு கடவுளை நம்பவேண்டும் என்கின்ற ஆசை உண்டு. ஆனால் நம்புவதற்குக் கொஞ்சமும் ஆதாரம் இல்லவே இல்லை. தயவுசெய்து தங்களுடைய 'யங் இந்தியா' பத்திரிகை மூலம் இவற்றுக்குச் சமாதானம் சொல்லி எனக்கு நம்பிக்கை உண்டாக்க வேணுமாய் கோருகிறேன்." இக் கேள்விகளுக்கு திரு. காந்தியின் சமாதானமாவது:–

இந்தக் கேள்விகள் மிகப் பழைய கேள்விகள். இந்தக் கேள்விக ளுக்கு நான் சொல்லக்கூடிய பதில் ஒன்றும் என்னிடத்தில் இல்லை. ஆனால் நான் ஏன் கடவுளை நம்புகிறேன் என்பதற்கு மாத்திரம் சமாதானம் சொல்லக்கூடும். அதாவது:–

விவரித்துச் சொல்ல முடியாத ஒரு மறைவான சக்தி இருக்கிறது என்பதை நான் காணமுடிவதில்லை; ஆனாலும் ஒருவாறு உணருகிறேன். ஆனால் அதை எந்த விதத்திலும் மற்றவர்களுக்கு ருஜுபித்துக் காட்ட முடியாததாயிருக்கிறது. ஏனென்றால் அது எனது புலன்களின் சக்திக்கு மீறினதாய் இருக்கின்றது.

வேண்டுமானால் ஒரு அளவுக்கு கடவுள் இருக்கிறார் என்பதற்கு ஆதாரம் காட்டலாம்.

அதாவது ஒரு சாதாரண மனிதனுக்கு தன்னை ஆளுகிற அரசன் யார் என்பது தெரியாத போதிலும் ஒரு அரசன் இருந்து ஆண்டு கொண்டுதான் இருக்கவேண்டும் என்பது மாத்திரம் அவனுக்குத் தெரியும். எனவே ஒரு சாதாரண மனிதனுக்குச் சாதாரண சங்கதிகூட தெரியாமலிருக்கின்றது போல நம் போன்றவர்களுக்கு மகா பெரிய சங்கதியான கடவுள் விஷயம் புலப் படுவது என்பது சாத்தியமான காரியமல்ல. ஆனாலும், இந்த பிரம்மாண்ட மான உலகத்தைப் படைத்து ஆட்சி செலுத்தும் சட்டம் ஒன்று இருக்கின்றதாக நான் அறிகிறேன். அந்தச் சட்டம்தான் கடவுள். அதை நான் மறுக்கமுடியாது. **ஆனால் அந்த சட்டத்தைப் பற்றியாவது அச்சட்டத்தை வழங்கு பவரைப் பற்றியாவது எனக்கு ஒன்றுமே தெரியாது.**

ஒரு ராஜ்ஜியத்தை ஆளும் அரசனை மறுப்பதால் அந்த ராஜ்ஜியத்தில் உள்ளவன் எப்படி அந்த ஆட்சியில் இருந்து விடுதலை பெற முடியாதோ அதைப்போல் கடவுளை மறுப்பதால் கடவுள் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுவிட முடியாது.

மொத்தத்தில் தெய்வீகமான சட்டம் ஒன்று இருக்கிறது என்பதை மறுக்காமல் ஏற்றுக்கொண்டு அதற்குப் பணிந்து நடந்து வந்தால் வாழ்வு சுலப மாக நடைபெறும்.

**கடவுளை உணர விரும்புபவன் உறுதியான நம்பிக்கை கொண்**



RangaRakes tamilnavarasam.com

**டால் தான் முடியும். அந்நம்பிக்கைக்கு வெளி ஆதாரங்கள் தேடப் புறப்பட்டால் அது முடியாத காரியமாய் விடும்.**

கடைசியாக மேற்கூறிய கேள்விகளுக்கு ஒழுங்கு முறையில் காரணங்கள் காட்டி மேல்கண்ட கேள்விகள் கேட்டவரை திருப்தி செய்ய தக்க நியாயங்கள் ஒன்றும் என்னிடம் இல்லை என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.

கடவுள் நம்பிக்கை காரணகாரிய ஆராய்ச்சிக்கு எட்டாதது. ஆனதி னால் நான் இக்கேள்விகள் கேட்பவருக்கு கடைசியாக சொல்லுவதென்ன வென்றால், சாத்தியப்படாத காரியத்தில் பிரவேசிக்கவேண்டாம் என்பதுதான்.

உலகத்தில் இருக்கும் கெடுதிகளுக்கும் கொடுமைகளுக்கும் அறிவினால் காரணம் காட்டமுடியாது. ஆனால் கெடுதிகள் இருப்பதையும் அதன் தன்மை அறிய முடியாதது என்பதையும் நான் ஒப்புக் கொள்கிறேன்.

கடவுள் பொறுமை உள்ளவர் என்பதற்கு காரணமே அவர் கொடுமை உலகத்தில் நடக்க அனுமதிக்கிறதினால்தான். கடவுளிடத்தில் கெட்டகுணம் இல்லை என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் உலகில் ஏதாவது கெடுதி யிருந்தால் அதற்கு அவரே கர்த்தா. ஆனால் அவருக்கு அதில் சம்மந்தமில்லை."

'இதற்கு அவருடைய இங்கிலீஷ் வாசகமாவது'

I call God long suffering and patient precisely because He permits evil in the world. I know that He has no evil in Him, and yet if there is evil, He is the author of it and yet untouched by it . . . . . . .."

என்று எழுதியிருக்கின்றார்.

எனவே அவர் சொன்ன பதில்களிலிருந்தாவது அவர் காட்டி இருக்கும் நியாயங்களிலிருந்தாவது கேள்வி கேட்ட நண்பருக்கு ஏதாவது பதில் இருக்கின்றதா என்பதைக் கவனித்துப் பார்க்கும்படி வாசகர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இக்கேள்விகளை எப்படி திரு. காந்தி பழைய கேள்விகள் என்று சொன்னாரோ அதேபோல் அவருடைய சமாதானங்களும் பழைய கதைகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

என்னவென்றால், "கடவுளை அறிவது அசாத்தியம்"

"அசாத்தியமான காரியத்தில் பிரவேசிக்காமல் இருப்பது நல்லது."



"கடவுள் நம்பினால் தான் உண்டு"

"அதுவும் உறுதியான நம்பிக்கையாக இருந்தால்தான் முடியும்" என்பன போன்ற சமாதானங்கள்.

ஆனால் ஒரு புதிய உதாரணம் காட்டியிருக்கிறார். அது என்ன வென்றால்:-

சாதாரண மனிதனுக்கு தங்கள் அரசர்கள் யார் என்பது தெரியாதாம். அதுபோல் தங்களுக்கு கடவுள் என்பது தெரியவில்லையாம். இது எவ்வளவு அசட்டுத்தனமான சமாதானம் என்பதை வாசகர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்.

ஏனெனில் அரசன் எல்லோரும் தன்னை அறியும்படி செய்து கொள் ளத்தக்க சக்தி உடையவன் அல்ல. கடவுள் என்பவரோ சர்வ சக்தி உள்ளவர் என்பதை கேள்வி கேட்ட நண்பர் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறார்.

தவிர மற்றொரு புதிய விஷயம் கண்டு பிடித்திருக்கிறார். அதாவது,

கடவுள் இருக்கிறார் என்பது விளங்காமல் போனாலும், இருக்கிறார் என்று வைத்துக் கொண்டால் வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் முடியுமாம். வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் முடிகின்றதற்காக ஒரு விஷயத்தை-தனக்கு எட்டாததை-தெரியாததை-நம்ப வேண்டும் என்று சொல்வதானால், வாழ்க்கை பிரயாணம் எளிதில் நடைபெற வேண்டியதற்கு சவுகரியமான வேறு அநேக காரியங்கள் செய்யக் கூடுமானால் அவைகளையும் செய்யச் சொல்லுகிறாரா என்பது விளங்கவில்லை.

ஏனெனில் பலவிதமான புரட்டு, பித்தலாட்டம், திருட்டு முதலிய காரியங்கள் செய்து ஏராளமான பணம் சம்பாதித்தவர்களின் வாழ்க்கைப் பிரயாணம் சுலபமாக இருப்பதை நாம் பார்க்கிறோம்.

தனக்குத் தெரியாததான கடவுளை நம்பாமல் நிறைய கள்ளையும், சாராயத்தையும் குடித்து போதை ஏற்றிக் கொண்டு வாய்க்குளறிப் பாடிக் கொண்டு தள்ளாடி நடந்து போகிறவனுக்கு இதைவிட வாழ்க்கை யாத்திரை சுகமாகவும், சுலபமாகவும் கழிக்கின்றதை நாம் நேரில் பார்க்கிறோம். வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் கழிவதே முக்கியமானால் நாம் ஏன் இவனைப் பின்பற்றக் கூடாது. இந்த மாதிரி போதையில் மூழ்கியிருக்கும் போது எவ்வித இன்ப துன்பமும் தோன்றாமல் வாழ்க்கை கழிந்து விடுகிறதா இல்லையா? நிற்க,



RangaRakes tamilnavarasam.com

தீமைகளும் கொடுமைகளும் கடவுளால் அனுமதிக்கப்படுகின்ற தென்றும் அதனாலேயே அவர் பொறுமைசாலி ஆகிறார் என்றும் சொல்லு வதை கவனித்தால் இது எவ்வளவு கவலை அற்ற பதில் என்பது விளங்காமல் போகாது.

ஏனெனில், கடவுள் பொறுமையால் மற்ற ஜீவன்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கின்றது என்பதை உணர்ந்து பார்த்தால் விளங்கும்.

மற்றும் கொடுமைகளும் கெடுதிகளும் கடவுளிடம் இல்லை என்றும் ஆனாலும் அக்கெடுதிகளை கடவுளே உண்டாக்குகிறார் என்றும் ஆனால் அவைகளில் கடவுளுக்கு சிறிதும் சம்மதமில்லை என்றும் சொல்லுவது அறியாமையால் சொல்லும் வாக்கியமா அல்லது ஏதாவது ஒரு சமாதானம் சொல்லி கேள்வி கேட்டவர்களை ஏமாற்றிவிடலாம் என்பதாகக் கருதிச் சொன்ன வாக்கியமா என்பது நமக்கே விளங்கவில்லை.

உலகில் மிகப் பெரியார் கூட்டத்திலும் மேதாவிகள் கூட்டத்திலும் சேர்ந்த ஒருவரும் சதா சர்வகாலம் கடவுள் பேரைச் சொல்லிக் கொண்டு இருப்பவரும் கடவுள் செயலை அடிக்கடி உணர்ந்து அதன் பயனை அனுபவித்துக்கொண்டே இருப்பதாகச் சொல்லுபவருமான ஒருவரே கடவுளைப் பற்றி சொல்லுவது இதுவானால் மற்றவர்களிடம் அதாவது கடவுள் பெயரையும் சமயத்தின் பெயரையும் சொல்லிக்கொண்டு வயிறு வளர்ப்பவர்களிடம் இருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

அன்றியும் கடவுளைப் பற்றி பேசுகின்ற ஒவ்வொருவர்களும் “கடவுள் பெயரற்றவர், ரூபமற்றவர், குணமற்றவர்” என்பதையும், “அவர் மனதிற்கெட்டாதவர், இந்திரியங்களுக்கு அகப்படாதவர்” என்பதையும் அவருக்கு லக்ஷணமாகச் சொல்லும் போது, அதற்கு மேல் கடவுள் உண்டா இல்லையா என்கின்றது போன்ற கேள்விகளே அனாவசியமானதும் பலனற்றதும் என்பது நமது முடிவு.

ஏனெனில் இது ஆகாயத்தில் ஒரு கோட்டை இருப்பதாக வைத்துக் கொண்டு அதற்கு ஜன்னல் எவ்வளவு கதவு எவ்வளவு என்று சண்டை போடுவதைப் போன்றது. அன்றியும் அவ்வேலையில் ஈடுபடுவது போன்ற முட்டாள் தனமும் அசட்டுத்தனமுமாகிய காரியம் வேறு இல்லை என்பதும் நமது முடிவு.

அல்லாமலும் அப்படிப்பட்ட ஒரு கடவுள் இருந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி, அதைப்பற்றி நமக்கு கவலை வேண்டுவதில்லை என்பதும் நமது முடிவு.

ஆனால் கடவுளைப் பற்றிய விஷயங்கள் வரும்போது நாம் கவலைப்படுவது எதைப் பொறுத்தவரையில் என்றால், கடவுள் இருக்கிறார் என்று ஒருவன் ஒப்புக்கொள்ளுவதின் மூலம் அவனுடைய அறிவு வளர்ச்சியும் முயற்சியும் கெட்டு சோம்பேறித்தனம் உண்டாகக்கூடாது என்பதைப் பொறுத்த வரையில்தானே ஒழிய வேறில்லை.



உதாரணமாக பாதாள லோகம் என்று ஒரு லோகம் இருக்கின்றது என்றும் அதில் நாகராஜன் என்கின்ற ஒரு அரசன் இருக்கின்றான் என்றும் ஒருவன் சொல்லிக்கொண்டு திரிவானானால், அந்த லோகம் எங்கே. அந்த அரசன் வீடு எங்கே, என்று கேட்டுக் கொண்டு திரிய வேண்டியது ஒவ்வொரு வனுடையவும் வேலை அல்ல.

அதுபோலவே இல்லாத பட்டணம் என்று ஒரு பட்டணம் ஆகாயத் த்தில் இருக்கின்றது என்றும் அதற்கு அரூபி என்கின்ற ஒரு அரசன் இருக்கின்றான் என்றும் அவனுக்கு அனங்கள் என்கின்ற பூஜ்ஜியம் (0 சைபர்) பெண்கள் இருக்கின்றார்கள் என்றும், ஒருவன் சொல்லிக்கொண்டு திரிவானானால், அதை காட்டு என்று கேட்டுக் கொண்டு திரிய வேண்டியதும் ஒவ்வொருவனுடையவும் வேலையல்ல. மற்றென்னவென்றால்,

இம்மாதிரி அரசர்களையும் பெண்களையும் பற்றி எல்லாமக்களும் நம்பாவிட்டால் அதற்காக தண்டனை என்று நிபந்தனை ஏற்படுத்தி, “அந்த நாகராஜாவே உனக்கு சோறு போட்டுவிடுவார், ஆகாய கன்னிகையே உனக்கு பெண்ஜாதியாய் இருந்து விடுவாள், மற்றபடி நீ, ஒன்றுக்கும் கவலைப் படாதே” என்று சொல்லுவதை ஏற்றுக்கொள்ளச் செய்து மக்களது அறிவையும் நேரத்தையும் பொருளையும் பாழாக்கி அவர்களை வெறும் அர்த்தமற்ற அடிமைப்படுத்தி பட்டினி போட்டு வதைப்பதில் தான் கவலையேயொழிய வேறில்லை,

ஒரு மனிதன் கடவுள் இல்லை என்று சொல்வானேயானால் அவன் உலகம் முழுவதும்,“அதற்கு அப்பாலும் இப்பாலும்” என்பவைகளெல்லாம் அறிந்து நேரில் தேடித்தேடி பார்த்து காணாவிட்டால்தான் சொல்ல வேண்டும் என்பது முழுதும் தப்பல்ல. ஆதலால் அதைப்பற்றிய முடிவைப் பற்றி நமக்கு இப்பொழுது ஒன்றும் அவசரமில்லை. ஆனால் அதற்கும் மனிதன் வாழ்க்கைக்கும் உள்ள சம்மந்தம் எவ்வளவு? அதற்காக மனிதனின் அறிவையும் நேரத்தையும் பொருளையும் ஏன் செலவு செய்து கொண்டே இருக்கவேண்டும்? இதுவரையில் அநேகர் அப்படிச் செய்து வந்ததின் மூலம் அடைந்த நன்மைகள் என்ன? அப்படிச் செய்யாததின் மூலம் ஏற்பட்ட அல்லது ஏற்படப்போகும் கெடுதி என்ன? என்பன போன்றவைகளே இந்நிலையில் முக்கியமாக ஆராயத்தகுந்த விஷயமாகும். இந்த சந்தர்ப்பத் தில் வாசகர்கள் தயவு செய்து கடவுளைப்பற்றிய நம்பிக்கையும் கவலையு மில்லாத புத்தர் நடந்து கொண்டதையும் கடவுளிடத்தில் நம்பிக்கை வைத்து



RangaRakes
tamilnavarasam.com

அவரது அருள் பெற்றவர் என்பவரான சம்மந்தருடைய நடவடிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கடவுளை நம்பினால் தான் யோக்கியனாக இருக்க முடியுமா என்பதும் நம்பாதவன் எல்லாம் அயோக் கியனா என்பதும் விளங்காமல் போகாது.

இதை ஏன் வலியுறுத்த நேரிடுகிறது என்றால் நம்மைச் சுற்றியுள்ள மக்கள் படும் கஷ்டங்களும் நமக்கு வெளியில் உள்ள நாடுகளில் உள்ள மக்கள் நிலையும் நடவடிக்கையும் அவர் கண்ட அற்புதக் காக்ஷியையும் அறிந்து அந்நிலை பெற்று கஷ்டப்படுகிறவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்கின்ற கருத்துக் கொண்டே ஒழிய வேறில்லை.

இந்த நிலையில் குட்டிச் சமயக்காரர்கள் தங்கள் நிலை என்ன? அவைகளின் அவசியம் என்ன? அதனால் ஏற்பட்ட நன்மை என்ன? என்பவைகளை தாங்களே சற்று தங்களது நடுநிலைமை அறிவைக் கொண்டு யோசிப்பார்களானால் அவர்களது மடமையும் இதுவரை தங்கள் வாழ்வு வீணானதும் ஒரு சிறிதாவது அவர்களுக்கு புலப்படாமல் போகாது.

**குடி அரசு - தலையங்கம் - 28.10.1928**



RangaRakes

# ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் நியமனம்

ராமனாதபுரம் ஜில்லா போர்டு தலைவராயிருந்த திரு. ராமநாதபுரம் ராஜா பாஸ்கர சேதுபதியவர்கள் காலமான பிறகு அந்த ஸ்தானத்திற்கு அந்த ஜில்லாவில் கொடுமைப்படுத்தப்பட்டவரும் சமூகப்பிரமுகர்களில் ஒருவரை நியமனம் செய்ய வேண்டுமென்று நியமன அதிகாரங்களை சர்க்கார் தங்களுக்கென்று ஒதுக்கி வைத்துக் கொண்டிருப்பதே அதற்காகத் தான் என்பதையும் சர்க்காருக்கு கொஞ்சநாளைக்கு முன்பாக பல பத்திரிகைகள் மூலம் எடுத்துக்காட்டப்பட்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

அன்றியும் அச்சில்லாவில் செல்வாக்கும் நாகரீகமும் செல்வமும் அறிவு வளர்ச்சியும் பெற்ற சமூகங்களில் ஒன்றாகிய நாடார் சமூகப் பிரதிநிதி களான பல கனவான்கள் சென்னை அரசாங்க கவர்னர் பிரபுவையும் ஸ்தல ஸதாபன இலாக்கா மந்திரியையும் தூது சென்று கண்டு தங்கள் குறைகளை தெரிவித்ததும் அதற்கு அவர்கள் நம்பிக்கையான பதில் அளித்ததும் வாசகர்களுக்கு தெரிந்திருக்கலாம்.

எனவே சர்க்கார் இது விஷயத்தில் பிரதிநிதித்துவப் பத்திரிகை களினுடைய யோசனைகளை ஏற்றும் பிரதிநிதித் தூதுக் கூட்டத்தாரினுடைய ஆசையை மதித்தும் அந்த ஸ்தானத்திற்கு தென்னிந்திய நாடார் சமூகத்தில் ஒரு பிரமுகரான திருவாளர் W.P.A.சௌந்திரபாண்டிய நாடார் அவர்களை நியமனம் செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

திரு. நாடார் அவர்கள் ஒரு பெரிய செல்வந்தர். ஆங்கில பாஷா ஞானமும் உடையவர். இரண்டு தடவை சென்னை சட்டசபைக்கு அங்கத் தினராக நியமனம் செய்யப்பட்டவர். தற்கால சீர்திருத்த முறையின்படி ஏற்பட்ட அரசாங்க முறையில் பொதுஜனங்களின் பேரால் ஆதிக்கம் பெற்ற கக்ஷியான சுயேச்சைக் கக்ஷியின் முக்கிய பொறுப்பாளியானவர். எனவே இப்போர்ப்பட்ட கனவான் ஒரு ஜில்லா போர்டுக்கு தலைவராக நியமனம் பெற்றதில் யாதொரு அதிசயமும் இல்லை.



tamilnavarasam.com

இந்நியமத்தினாலேயே நாடார் சமூகத்திற்கோ அல்லது திரு. சௌந்திர பாண்டிய நாடாருக்கோ பெரிய அனுகூலம் ஒன்றும் ஏற்பட்டுவிட முடியாதா னாலும் சர்க்கார் கொடுமைப்படுத்தப்பட்ட மக்கள் விஷயத்தில் நேர்மையான கவனம் செலுத்த தங்கள் கண்களைத் திருப்பி இருக்கிறார்கள் என நம்புவ தற்கு ஒருவாறு இடம் உண்டாயிருக்கின்றது. இந்த முறையை சர்க்காரார் பின்பற்றுவார்களேயானால் இந்திய நாட்டிற்கு பிடித்த உள்நாட்டுச் 'சனி' ஒருவாறு சீக்கிரத்தில் தொலைந்து விடும் என்று நம்பலாம்.

இவ்விஷயத்திலும் பல இடையூறுகள் ஏற்பட்டு சிறிதுகாலம் சர்க்கார் கையைப் பிடித்துக் கொண்டிருந்ததாகவும் தெரியவருகின்றது.

இதற்கு உதாரணம் 'சுதேசமித்திரன்' என்னும் ஒரு பார்ப்பன பத்திரிகையின் வயிற்றெறிச்சலை பார்த்தாலே தெரியவரும். அது 26-10-28 தேதி பத்திரிகையில் எழுதுவது என்னவென்றால் :-

"திரு. சவுந்திரபாண்டிய நாடார் சாமான்ய நிலைமையில் இந்தப் பதவி பெற்றிருந்தால் இதைப்பற்றி தோஷங்கூற இடம் ஏற்பட்டிருக்காது." ஆனால் இதை "மந்திரி கோஷ்டியினர் தங்களுடைய கக்ஷிக்கு பலம் தேடிக் கொள் வதற்காக செய்த காரிய மென்று பொது ஜனங்கள் நினைப்பார்கள்." அன்றி யும் "யார் யாருக்கு எந்தெந்த வேலையை கொடுக்க வேண்டும் என்கின்ற சிபாரிசு செய்ய வேண்டிய பொறுப்பு ஏற்பட்ட கொரடாவானவருக்கு அப் பதவி கொடுத்ததில், கொடுத்தவருக்கும் ஏற்றுக்கொண்டவருக்கும் கௌரவ மில்லை"

"ஸ்தல ஸ்தாபனத்தில் நெருங்கிய பழக்கமும் அந்த ஜில்லாவில் நேரடி யான சம்மந்தமும் அவருக்கு இல்லை." எனவே இந்த நியமனம் ஆக்ஷே பிக்க தக்கதாம்.

இது எவ்வளவு முன்னுக்கு பின் முரண் என்பதையும் இதில் பார்ப்ப னர்கள் தங்கள் ஆத்திரத்தை காட்டிக்கொள்ள எத்தனை விஷம யுக்தியை உபயோகப்படுத்தி இருக்கிறார்கள் என்பதையும் இவர்கள் உள்ளுக்குள் எவ்வளவு இடைஞ்சல்கள் செய்திருப்பார்கள் என்பதையும் இதிலிருந்தே ஒருவாறு அறிந்துகொள்ளளாம், அதாவது திரு நாடார் தமது சாமன்ய நிலை யில் இந்தப் பதவி அடைந்திருந்திருந்தால் தோஷம் கூற இடமிருக்காது என்று சொல்லுகின்றார். சாமான்ய நிலையில் அடைந்ததாக வைத்துக் கொண்டால் அப்போது திரு நாடாருக்கு ஸ்தலஸ்தாபன அனுபோகக் குறை வும் அந்த ஜில்லாவின் நேரிட சம்மந்தமற்ற தன்மையும் மாறிவிடுமா என்று கேட்கின்றோம். முன்பின் பழக்கமில்லாததும் பாஷை தெரியாததுமான ஒரு நாட்டிற்கு திடீரென ஒரு பார்ப்பானை திவானாகவோ மந்திரியாகவோ போட்டு அவனுககு மாதம் 3000, 4000 ரூபாய் கிடைப்பதானால் இந்த



பார்ப்பனர்களுக்கு அது நல்ல நியமனமாகிவிடும்.

எந்த ஜில்லாவிலோ பஞ்சாங்கம் சொல்லி பிச்சை யெடுத்து எந்த ஊரிலோ முனிசிபல் லாந்தர் வெளிச்சத்தில் படித்து எந்த காரியம் பண்ணியோ பாசானாதாக பெயர் வாங்கி விட்டு எந்த ஊருக்கு போய் எவ்வளவு பெரிய உத்தியோகம் பார்ப்பதானாலும் அது பார்ப்பனருக்கு மாத்திரம் பொருத்த மானதும் திருத்தமானதுமான நியமனமாகிவிடும். உதாரணமாக மகாமகாகனம் சீனிவாச சாஸ்திரிக்கும் 33 கோடி மக்களுக்கும் தென் ஆப்ரிக்காவுக்கும் 4000 ரூ. சம்பளத்திற்கும் அவர் செய்த வேலைக்கும் பலனுக்கும் உள்ள சம்பந்தத்தை நினைத்தால், 2 தடவை சட்டசபையில் இருந்தவரும், வருஷம் ஏராளமான வருமானமுள்ள செல்வத்தை உடையவராயிருந்து அதை நிர்வா கம் செய்து வருபவரும், சமீபகாலம் வரை மதுரையும் ராமநாதபுரமும் ஒரே ஜில்லாவாய் இருந்தபோதும் இப்போதும் மதுரையையே தலைமை ஸ்தான மாக உடையதுமானதாகியதில் அனுபோகம் பெற்றவரும் மற்றும் ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கத்தவராக இருந்தவரும், இந்த ஒரு சாதாரண வேலைக்கு பொருத்தமில்லை என்று இந்த பார்ப்பனர்கள் சொல்லுவது ஒரு அதிசயமல்ல.

அன்றியும் வேறு யாரையாவது நியமித்து இருக்கக்கூடாதா? என்பதன் மூலம் இவர்கள் வேறு சில ஆசாமிகளுக்கும் வக்காலத்து வாங்கி முயற்சித் துப் பார்த்திருக்கின்றார்கள் என்பதும் இவர் இதை அடைந்ததில் தங்களுக்கு இஷ்டமில்லை என்பதும் நன்றாய் விளங்கும்.

எப்படியும் இந்த உலகம் உள்ளவரை இந்த மாதிரி ஒரு பார்ப்பனக் கூட்டம், தங்களுடைய அடிமை அல்லாதவர்களும், தங்களுடைய வைப் பாட்டி மக்கள்தான் மற்றவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளாதவர்களும், மற்றும் பார்ப்பனீயத்திற்கு அடிமையாக மறுப்பவர்களும், சுயமரியாதையில் கவலை உள்ளவர்களும் எந்தப் பதவிக்கு வருவதானாலும் அவர்கள் விஷயத்தில் ஏதாவது ஒரு குற்றத்தை கற்பனை செய்தும் அவர்களுக்கு எதிரிகளையும் உள் கலகங்களையும் உற்பத்தி செய்தும் உபத்திரவித்துக் கொண்டே வருவார் கள் என்பது கல்லுப் போன்ற உறுதி.

நிற்க, பார்ப்பனர்கள் பேச்சைக் கேட்டோ அல்லது தாங்களாக ஆசைப் பட்டோ இந்தப் பதவிக்கு முயற்சி செய்த கனவான்களோ எதிர்பார்த்த கனவான்களோ யாராவது ஒருவர் இருவர் இருக்கலாம். என்றாலும் அவற் றைப்பற்றி இனி கவனம் செலுத்தாமல் ராமநாதபுரம் ஜில்லா போர்ட் மெம்பர் கள் திரு. நாடார் அவர்களுடன் ஒத்துழைத்து அவரது தலைமைப் பதவியை நாட்டுக்கும் மக்களுக்கும் பயன்படும் முறையில் நடத்திக் கொடுக்க உதவி புரிய வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். எவ்வளவு பெரிய கூட்ட மானாலும் அதில் ஒரு பார்ப்பனர் இருந்துவிட்டால்



RangaRakes tamilnavarasam.com

எப்படியாவது கலகத்தை மூட்டிக் காரியத்தைக் கெடுத்துக்கொண்டே இருப்பார்கள் என்பது பழ மொழியும் அனுபவமும் ஆகும்.

ஆதலால் அப்பழமொழியையும் அனுபவத்தையும் ராமநாதபுரம் ஜில்லா போர்டு மெய்ப்பிக்காமல் இருக்க வேண்டுமாய் ஆசைப்படு கின்றோம்.

கடைசியாக இந்நியமனத்திற்காக தமது உறுதியை உபயோகித்த மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்களை பாராட்டாமல் இருக்கமுடியவில்லை.

திரு. நாடார் அவர்கள் உறுதியுடன் நின்று அந்தப் பதவியை வெற்றி யுற நடத்துவதில் கொடுமைபடுத்தப்பட்ட மக்களுக்கும் தக்கபடி பயன் படுத்துவார்கள் என்று நம்புகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 28.10.1928**



# எ.ராமசாமி முதலியாரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும்

திருவாளர் எ. இராமசாமி முதலியார் அவர்கள் வகுப்புவாரித் தொகுதியைப் பற்றி தமது அபிப்பிராயத்தை பத்திரிக்கைகளில் ஒரு அறிக்கையின் மூலம் வெளியிட்டிருக்கிறார். அவ்வறிக்கை வருமாறு:-

"நான், சைமன் கமிஷன் முன்பாக பார்ப்பனரல்லாதார் கொடுத்த சாட்சியங்களை கவனத்துடன் கவனித்து வந்தேன். பம்பாய் மாகாண பார்ப்பனரல்லாதாரின் குறைகளைப் பற்றி நான் முடிவாக ஒன்றும் கூற முடியாத நிலைமையில் இருக்கிறேன். தனித் தொகுதிகள் பார்ப்பன ரல்லாதார் அடைவதற்கு 1919ல் பாராளுமன்றக் கமிட்டியினர் அனுகூலமாக இருக்கவில்லை. என்றாலும் அதைப் பார்ப்பனரல்லாதார் சமாதானத்துடன் சகித்து வந்தனர் என்று எனக்கு நினைவிருக்கிறது. சென்ற பத்து வருடங்களின் நடவடிக்கைகளை ஆய்ந்து பார்க்கையில் முன் செய்த தீர்மானம் இப்போது சைமன் கமிஷனால் மாற்றமடைதல் வேண்டு மென்பதற்கு முதிர்ந்த காரணங்களைக் காட்டியதாக எனக்குத் தென்பட வில்லை.

எங்களுடைய கட்சியாவது, நானாவது எவ்வகுப்பேனும் வகுப்பு வாரித் தேர்தலடையும் நோக்கத்திற்கு மாறுபட்டிருக்கவில்லை. வகுப்புவாரித் தொகுதித் தேர்தல்களால், பல கெடுதிகள் விளையுமென்ற கூற்றினை நான் நம்பவில்லை. ஐக்கியத்தேர்தலாலும் பிரத்தியேக ஸ்தானங்கள் வழங்கப்படும் உரிமையாலும் வகுப்புப்பேதம் நீங்கி அமைதியும் திருப்தியும் உண்டாகுமென்றும் நான் கருதவில்லை; இப்பொழுது பொது தொகுதியும் ஒதுக்கி வைத்தலும் ஆகியவைகளை பார்ப்பனரல்லாதார் மீது சுமத்தப் பெற்றிருக்கும் சென்னை மாகாணத்தின் நிலைமையே நான் கூறுவ தற்குப் போதிய சான்றாகும். நான் இந்த அபிப்பிராயங்களை ஏற்கனவே டில்லி சர்வ கட்சி மகாநாட்டின் முன்பாக எடுத்துரைத்திருக்கின்றேன்.

சென்னைப் பார்ப்பனரல்லாதாரைப் பற்றிய வரையில், நான் அவர்களைப் பற்றி ஒன்றும் கூறுவதற்கு உரிமையில்லாவிட்டாலும் கூட, ,சென்னைப் பார்ப்பனரல்லாதார்களின் எந்தப் பிரசித்திபெற்றதும் பொது



RangaRakes tamilnavarasam.com

ஜனங்களால் ஒத்துக் கொண்டதுமான மதிப்புள்ள சங்கங்களும் தங்களுக்குத் தனித்தொகுதி வேண்டுமென்று எவர்கள் முன்னிலையிலாவது வேண்டுவரேல் அது ஆச்சரியப்படத்தக்கதாகும். இப்பொழுது சென்னையில் வழங்கி வருவது போல் பிரத்தியேக ஸ்தானங்கள் அளிக்கப்பட்ட கொள்கையினையாவது அளித்த முறையினையாவது சென்னைப் பார்ப்பனரல்லாதார்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். பார்ப்பனரல்லாதார் இதைப் பற்றி லக்ஷியம் செய்யமாட்டார்கள்.

என்றாலும் பார்ப்பனரல்லாதாருக்குச் சென்னையிலாவது பம்பாயிலாவது உரிமைப்பாதுகாப்பு அவசியமில்லையென்று நான் கூற முன் வரவில்லை. இவர்களின் நலத்தினைக் குலைக்கும் எதிரிகளைப் பற்றி நாம் பூனாவில் நடந்த விபரமான சாட்சியங்களில் கவனித்திருக்கின்றோம். நான் சென்ற சின்னாட்களாக பம்பாய் நிலைமையைப் பற்றி அறிந்து வந்த வரையில், பார்ப்பனரல்லாதார்களுக்குள் கட்டுப்பாடும், பரஸ்பர நம்பிக்கையும், உணர்வும் இன்னும் மிகுதியாய் இருக்கவேண்டுமென்னும் முடிவான அபிப்பிராயத்தைக் கொள்ளுகின்றேன். நான் இவ்வாறு மறைக்காமற் கூறுவதை என் பார்ப்பனரல்லாத நண்பர்கள் மன்னிப்பார்கள் என்று நம்புகிறேன்.”

இவ்வறிக்கையில் எவ்வளவுதான் சாமர்த்தியமாகவும் தந்திரமாகவும் வார்த்தைகள் அமைக்கப்பட்டிருந்தாலும் இரண்டு விஷயங்கள் தெளிவாக அமைந்துவிட்டன. அதாவது ஒன்று “செல்வாக்கும் மதிப்பும் பெற்று பொது ஜனங்களால் ஒப்புக்கொள்ளகூடியதுமான சென்னையில் உள்ள எந்த பார்ப்பனரல்லாதார் சங்கமும் தனித் தொகுதிகளைக் கேட்டால் நான் மிகுதியும் ஆச்சரியப்படுவேன்” (அதாவது கேட்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன் என்பது) மற்றொன்று, “பொது தொகுதிகளின் மூலம் சில ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதையும் சென்னை மாகாணத்தார் லக்ஷியம் செய்யமாட்டார்கள்” என்பதாகும்.

எனவே இந்த ஸ்டேட்மெண்டிலிருந்து தனித்தொகுதியும் வேண்டாம் ஒதுக்கி வைப்பதும் வேண்டாம் என்பதே அவரது அபிப்பிராயத்தின் சாரமெனக் கொள்ளவேண்டியதாகும். இப்படிச் சொன்னவர் வேறு வழியும் காட்டவில்லை. எனவே பார்ப்பனரல்லாதாராகிய நாம் இவ்விரண்டும் வேண்டியதில்லை என்று முடிவு செய்து விட்டோமானால் பிறகு பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்பதாக ஒரு தனி அரசியல் இயக்கம் எதற்காக இருக்கவேண்டும்? மற்றபடி பார்ப்பனரல்லாதார் பூண்டு உள்ளவரை உத்தியோகத்திற்காகவும் உத்தியோகமற்ற பிரதிநிதித்துவத்திற்காகவும் சதாசர்வகாலம் அரசாங்கத்தின் காலடியில் தொங்கிக் கொண்டிருப்பதற்காகவா என்று கேட்கின்றோம். நிற்க “வகுப்புவாரித் தொகுதி எந்த பார்ப்பனரல்லாத செல்வாக்கும் பொதுஜனப் பிரதிநிதித்துவமும் மதிப்பும்



கொண்ட சங்கங்களும் கேட்காது” என்பதானது பொறுப்புள்ள வார்த்தையா என்பதை சற்று யோசித்துப் பார்க்க வேண்டுமாய்க் கோருகிறோம்.

முதலாவதாக, திரு முதலியார் அவர்கள் மகமதியர்கள், கிறிஸ்தவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் முதலிய சகோதரர்களை பார்ப்பனரல்லாதார் என்கின்ற கூட்டத்தில் சேர்த்திருக்கிறாரா அல்லது அவர்களை ஒதுக்கி விட்டாரா என்பது இதிலிருந்து சந்தேகமாயிருக்கின்றது. எனவே ஒரு சமயம் அவர்களை ஒதுக்கி அந்த ஸ்டேட்மெண்டில் இந்த வார்த்தைகளை வழங்கி இருப்பாரானால் இதுவரை பார்ப்பனரல்லாதார் என்னும் பேரால் அரசியலில் நடத்தி வந்த காரியங்களும் எழுதியும் பேசியும் வந்த காரியங்களும் உண்மையல்ல வென்றுதான் ஏற்படும்.

ஒரு சமயம் அவர்களையும் சேர்த்துதான் சொல்லப்பட்டது என்று சொல்வாரானால், கண்டிப்பாய் திரு. முதலியாரின் இந்த ஸ்டேட்மெண்டு முக்கியமாக அச் சமூகத்தாருக்கு பெரும்பாதகத்தையும் அச்சமூகத்தாரின் பிரதிநிதித்துவ சங்கங்களுக்கு அவமானத்தையும் விளைவிப்பதாகும். எப்படியெனில் “எந்த செல்வாக்கும் மதிப்பும் பெற்ற சங்கமும் தனித்தொகுதியையோ ஒதுக்கி வைப்பதையோ கேட்காது” என்று அவர் சொல்வதால் விளங்கும். பொதுவாக இந்தியாவிலும் சிறப்பாகச் சென்னை மாகாணத்திலும் உள்ள மகம்மதிய கிருஸ்தவ, ஆதி திராவிட சங்கங்கள், சபைகள், அவற்றின் பிரதிநிதிகள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்திக் கொண்டே வருகின்றன.

அதுமாத்திரமில்லாமல் மீதியுள்ள பார்ப்பனரல்லாதார்களான முதலியார், செட்டியார், நாயக்கர், நாயுடு முதலாகிய பட்டங்கள் கொண்ட ஒவ்வொரு தனித்தனி வகுப்புச் சங்கங்களும் மகாநாடுகளும் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பெயரால் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தையும் ஒதுக்கி வைப்பதையும் கேட்டுத் தங்கள், தங்கள் சமூக மகாநாடுகளில் தீர்மானங்களும் செய்து கொண்டு வருகின்றன. எனவே திரு. முதலியார் அவர்கள் தயவு செய்து எந்த சமூகத்தாராவது தனித்த முறையிலாவது பிரதிநிதித்துவ முறையிலாவது வகுப்புவாரி பிரதிநிதித்துவமோ ஒதுக்கி வைப்பதோ வேண்டாம் என்று சொல்லிவிட்டதாக தயவு செய்து எடுத்துக்காட்டுவாரா என்று கேட்கின்றோம்.

அன்றியும் வகுப்புவாரி பிரதிநிதித்துவமோ ஒதுக்கி வைத்தலோ இல்லாவிட்டால் மகமதியர், ஆதித்திராவிடர் ஆகியவர்களின் கதி என்னவாக முடியும் என்பதைப்பற்றி திரு. முதலியார் அவர்கள் சற்றாவது யோசித்து அதற்கு ஏதாவது சமாதானம் அந்த ஸ்டேட்மெண்டில் கூறி இருக்கின்றாரா என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

அரசியல் உலகில் பார்ப்பனப் பத்திரிகைகளின் செல்வாக்கு காரணத்தால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்கின்ற பேச்சு பேசுபவர்களுக்கு செல்வாக்கு கிடைப்பது கஷ்டம் என்கின்ற காரணம் ஒன்று தவிர வேறுவிதமாக வகுப்புவாரி முக்கியத்துவத்திற்கோ ஒதுக்கிவைப்பதற்கோ விரோதமானதும் அவசியமில்லாததுமான காரணம் ஏதாவது ஒன்றை எடுத்துக் காட்டமுடியுமா? என்று கேட்கின்றோம்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று ஆரம்பிக்கப்பட்ட இயக்கத்திற்கு தலைவர்களாயிருந்த - ஒருகை விரலை விட்டு எண்ணிவிடக் கூடிய - சில தலைவர்களுக்கு மாத்திரம் உயர்பதவியும் யோக்கியதையும் மதிப்பும் கிடைத்துவிட்ட காரணத்தினாலேயே இனிமேல் அந்த சமூகத்திற்கே எந்த வித குறைவும் இல்லையென்று தீர்மானித்து விட்டார்களா? அல்லது சர்க்கார், எப்படி நமக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்பட்டு விட்டால் மக்கள் தங்களை வந்து தொங்கிக் கொண்டும் தங்களுக்கு சதா சர்வகாலம் அடிமையாய் இருந்து கொண்டும் இருக்கும் தன்மை போய் விடுமே என்று பயப்படுகிறார்களோ அதுபோல் இந்த வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் ஏற்பட்டுவிட்டால் இந்தத் தலைவர்கள் வீட்டு வாசலில் அதிகாரத்திற்கும் பதவிக்கும் ஆள்கள் வந்து தொங்கிக் கொண்டும் பல்லைக்காட்டி கெஞ்சிக் கொண்டும் இருக்கமாட்டார்கள் என்று நினைத்தார்களா என்று கேட்கின்றோம்.

சாதாரணமாக திரு. முதலியாரவர்கள், இந்துக்கள் என்பவர்களுக்குள்ளாகவே ஆதித்திராவிடர்கள் என்பவர்களுக்கு அரசியலில்மேல்கண்ட இரண்டும் இல்லாமல் வேறு என்ன வழி சொல்லக் கூடும் என்று கேட்கின்றோம். தவிர, ஜஸ்டிஸ் பத்திரிகையிலும் திராவிடன் பத்திரிகையிலும் அடிக்கடி எழுதி கணக்கு காட்டி வரும் “ஏகபோக” உரிமையை தடுத்து எல்லோருக்கும் “சமசந்தர்ப்பம்” கொடுக்க இந்த இரண்டு வழியுமில்லாமல் வேறு என்ன மார்க்கம் காட்டக்கூடும் என்று கேட்கின்றோம்.

திரு. முதலியாரவர்களின் ஸ்டேட்மெண்டானது, பார்ப்பனரல்லாதார் இயக்கம் இதுவரை அரசியலில் செய்து வந்த வேலையை அடியோடு குழி தோண்டிப் புதைப்பதற்கு இடம் கொடுப்பதுடன் அந்த சமூகத்திற்கே நிரந்தர அரசியல் அடிமைத்தனத்தை நிலைநாட்டுவதற்கு உதவி செய்வதுமாகும் என்றே நாம் சொல்லுவோம்.

இது மாத்திரமல்லாமல் மகமதியர்களையும் ஆதிதிராவிடர்களையும் நசுக்கிவிட ஏதுவானதாகவும் முடியும். அன்றியும் பார்ப்பனர்களும் அவர்தம் கூலிகளும் இரண்டொரு சுயநலக்காரர்களும் போடும் போலி கூப்பாடுகளை மெய்ப்பிக்கவும் உற்ற துணையாகவும் இருக்கும். முடிவாக வகுப்பு வித்தியாசம் நீங்கி எல்லோரும் ஒற்றுமையாய் இருக்கவேண்டும் என்கின்றதைவிட எல்லோருக்கும் சம உரிமை இருக்கவேண்டும் என்பதே நமது முக்கிய கொள்கை. ஏனெனில் சமஉரிமை கிடைத்துவிட்டால் தானாகவே ஒற்றுமையும் வந்துவிடும். சமஉரிமை இல்லாத இடத்தில் உண்மை ஒற்றுமை இருக்கமுடியாது. ஆகவே சமஉரிமைக்காக எவ்வளவு பெரிய கலகமும் ரத்தக் களரியும் ஏற்படுவதானாலும் அதைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் சுதந்திரமும் சமத்துவமும் இல்லாத ஒற்றுமை வேறு; அவைகள் உள்ள ஒற்றுமை வேறு, ஆதலால், சமத்துவத்திற்கும் சுதந்திரத்திற்குமாக எவ்வளவு ஒற்றுமையை தியாகம் செய்தாலும் அச்சுதந்திரமும் சமத்துவமும் கிடைத்த பிறகு தானாகவே உண்மையான ஒற்றுமை தோன்றிவிடும். ஆதலால் எந்த முறையிலாவது எவ்வளவு கஷ்ட நஷ்டப்பட்டாவது ஒவ்வொரு வகுப்பும் சமத்துவமும் சம உரிமையும் பெறமுயற்சிப்பதே பொறுப்புள்ள ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரினுடையவும் கடமையாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 04.11.1928**



RangaRakes



tamilnavarasam.com

# பிரசாரப் பள்ளிக்கூடம்

ஈரோட்டில் ஏற்படுத்தப் போவதாய் தெரிவித்திருந்த சுயமரியாதைப் பிரசார பள்ளிக்கூடம் சென்ற மாதம் 31-தேதியில் ஆரம்பிப்பதாய் தீர்மானித்திருந்ததில், அந்த ஆரம்ப விழாவை நடத்தித்தர கேட்டுக் கொள்ளப்பட்ட திருவாளர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் வேறு அவசரத்தினால் அந்த தேதிக்கு வர சௌகரியப்படவில்லை என்றும் ஒரு வாரம் தள்ளிவைக்க வேண்டுமென்றும் தெரிவித்துக் கொண்டதன் பேரில் தள்ளிவைத்துக் கொள்ளவேண்டியதாயிற்று. ஆனாலும் அந்தப்படி ஒரு வாரத்தில் வைத்துக் கொள்வதில் தீபாவளி என்கின்ற பண்டிகை ஒன்று சமீபத்தில் வரப்போவதால் பள்ளிக்கூடத்திற்கு வருபவர்களில் சிலராவது தீபாவளிக்காக என்று மத்தியில் ஒருசமயம் ஊருக்குப்போக நேரிட்டாலும் நேரிடலாம் என்றும் அதன்மூலம் அவர்களுக்கு போக்குவரத்துச் செலவும் அசௌகரியமும் ஏற்படக்கூடும் என்றும் தோன்றியதால் தீபாவளி கழிந்த பிறகு ஏற்படுத்த தீர்மானிக்க வேண்டியதாயிற்று.

திருவாளர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் பள்ளிக்கூட ஆரம்பவிழா நடத்துவார். எனவே அப்பள்ளிக்கூடத்திற்கு வர இஷ்டப் பட்டு முன் தெரிவித்துக் கொண்டவர்கள் கடிதம் பார்த்தவுடன் வரத் தயாரா யிருக்க வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஈ.வெ.ராமசாமி**

**குடி அரசு - அறிவிப்பு - 04.11.1928**



# மந்திரி S.முத்தையா முதலியார் வாழ்க! வாழ்க! வாழ்க!

## உத்தியோகத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

நமது மந்திரி திரு. S. முத்தய்யா முதலியார் அவர்கள் தமது ஆதிக்கத்தில் உள்ள முக்கிய இலாக்காவில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ கொள்கையை நிலைநாட்டி விட்டார். அதாவது, பத்திரப்பதிவு இலாக்கா உத்தியோகத்திற்கு நபர்களை நியமிப்பதில் அடியில் கண்ட வகுப்பு வாரிப்படி தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டும் என்பதாக ஒருவிதி ஏற்படுத்தி, அதை கவர்னர் பிரபுவாலும், மற்ற மந்திரிகள் நிர்வாக சபை அங்கத்தினர்கள் முதலியவர்களாலும் சம்மதம் பெற்று அமுலுக்கு கொண்டு வரவேண்டியதான சட்டமாக்கி விட்டார். அதாவது, பத்திரப்பதிவு இலாக்கா உத்தியோகத்திற்கு நியமிக்க வேண்டிய ஸ்தானங்கள் 12 இருக்குமானால் அவைகளில்

| | |
|---|---|
| பார்ப்பனரல்லாத இந்துக்கள் என்பவர்களிலிருந்து | 5 |
| பார்ப்பனர்களிலிருந்து | 2 |
| மகம்மதியர்களிலிருந்து | 2 |
| ஐரோப்பிய ஆங்கிலோ இந்தியர்கள் அடங்கிய கிறிஸ்தவர்களிலிருந்து | 2 |
| தாழ்த்தப்பட்டவர்களிலிருந்து | 1 |
| ஆக | 12 |

நபர்களை வகுப்புவாரி முறையில் தெரிந்தெடுத்து நியமிக்க வேண்டும் என்கின்ற சட்டம் செய்திருக்கிறார். எனவே மேல்படி இலாக்காவுக்கு எவ்வளவு பேர் தேவை இருந்தாலும் இந்த விகிதப்படியே நியமிக்கப்படவேண்டும் என்பதாகும். இந்த திட்டத்தின் விகிதங்களில் 100-க்கு 3 வீதம் ஜனத்தொகை உள்ள பார்ப்பனருக்கு 100-க்கு 16 உத்தியோகம் வீதமும், 100-க்கு 20 வீதத்திற்கு மேல்பட்ட மகம்மதியர்களுக்கு 100-க்கு 16 வீதமும், 100-க்கு 20 வீதம் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் என்கின்ற வகுப்பாருக்கு 100-க்கு 8 வீதமும் உத்தியோகங்கள் பங்கு பிரித்துக் கொடுத்திருப்பதானது மிகவும் அநியாயமானதென்றே சொல்லுவோம்.



RangaRakes tamilnavarasam.com

ஒருசமயம் உத்தியோகத்திற்கு ஏற்ற நபர்கள் குறைவான பங்கு கொடுக் கப்பட்டிருக்கும் வகுப்புகளில் கிடைக்கவில்லை என்று யாராவது சமாதானம் சொல்ல வருவார்களானால் அது அந்த வகுப்பார்களுக்கு உத்தியோகங்கள் கொடுப்பதில் அவர்களுக்கு செய்திருக்கும் கொடுமையை விட பல மடங்கு மேல்பட்ட கொடுமையாகும். என்னவெனில், உத்தியோகப் பங்கில் மண்ணைப் போட்டதல்லாமல் அந்த வகுப்புகளை உத்தியோகத்திற்கு லாயக்கில்லை என்று அவமானப் படுத்தியதாகும். இந்த திட்டத்தை மகமதியர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் ஒப்புக் கொள்வதானது "பிச்சை போடாவிட்டாலும் கவலையில்லை. தயவு செய்து நாயை பிடித்துக் கட்டுங்கள்" என்றபடி ஒரு வீட்டில் பிச்சைக்கு போன ஒருவர் மீது வீட்டுக்காரர் நாயை அவிழ்த்துவிட்டு கடிக்கச் சொன்னபோது எஜமானனைப் பார்த்து அந்தப் பிச்சைக்காரர் கெஞ்சினது போல்தான் ஆகும்.

எனவே, யார் யாருக்கு எவ்வளவு பங்கு என்பதை தீர்மானித்துக் கொள்ளும் விஷயத்தில் சற்று கஷ்டமோ அதிருப்தியோ இருந்தாலும் சர்க்கார் உத்தியோகம் என்பவைகள் பொது சொத்தென்பதையும் அதில் எல்லோருக்கும் பங்குண்டு என்பதையும் ஒப்புக்கொண்டு பங்கு பிரித்துக் கொடுக்கவும் பங்கு பிரித்துக் கொள்ளவும் ஒரு ஆதாரம் ஏற்படுத்திக் கொள்ள இடம் கிடைத்ததே இது சமயம் நமக்கு ஒரு பெரும் வெற்றியாகும். இதுபோலவே மற்ற இலாக்காக்களுக்கும் ஒரு விதி ஏற்பட்டு விடுமானால் நமது நாட்டைப் பிடித்த கேட்டில் பெரும் பாகம் தொலைய மார்க்க மேற்பட்டு விட்டதென்றே சொல்லுவோம். இந்த முறைக்கு ஒரு சமயம், அதிகப் பங்குகளுக்கு பல வழிகளிலும் முயற்சித்து கொள்ளை அடித்து அனுபவித்து வரும் பார்ப்பனர்கள் ஒப்புக் கொண்டாலும், நமது அரசாங்கத்தார் ஒப்பு கொள்வது என்பது அவர்களுக்கு மிகவும் கஷ்டமான காரியம் என்பதே நமது அபிப்பிராயம். நமது நாட்டில் வெள்ளைக்கார ஆட்சியானது இந்நாட்டு மக்களின் இவ்வளவு அதிருப்தியின் மீதும் கவலையற்று பொருத்தமற்ற கொடுங்கோன்மைமுறையில் நடைபெற்று வருவதற்கு காரணமே ஒரு வகுப்பை ஒரு வகுப்பார் ஏய்த்து கையில் வலுத்தவன் காரியம் என்பது போல் வலுத்தவன் ஏக போக உரிமை அடையும் படியான மாதிரியில் அமைக்கப்பட்டிருக்கும் தன்மை தான் என்றே சொல்லுவோம்.

இத்தன்மையே உள் கலகங்களுக்கும் வகுப்புச் சச்சரவுகளுக்கும் ஒற்றுமையின்மைக்கும் இடமாய் இருந்து வருகின்றது. எனவே அவர் களுக்குள்ள இந்த சவுகரியமான தன்மையை மாற்றிவிடக் கூடியதும் அடி யோடு கவிழ்த்துவிடக் கூடியதுமான வகுப்பு உரிமைக் கொடுத்து விட்டால் எப்படி ஏக போக உரிமைபோய்விடுமோ அதைப்போல் ஏக போக ஆட்சி யும் போய்விடும். ஆதலால் ஏக போக ஆட்சியை எதிர்பாக்கும் எந்த அரசாங்கத்தாரும் இந்த வகுப்புவாரி உரிமையை ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். இருந்தாலும் எப்படியோ சாமர்த்தியமாகவோ தந்திரமாகவோ



நமது திரு.எஸ். முத்தையா முதலியார் அவர்கள் விதி ஏற்படுத்திக் கொண்டது போல் மற்ற மந்திரிகளும் நிர்வாக சபை அங்கத்தினர்களும் ஒருவிதி செய்து கொண்டார்களானால், அதிலும் முக்கியமாக திருவாளர்கள் கிருஷ்ணன் நாயர் அவர்களும் மகமது உஸ்மான் அவர்களும் தங்கள் தங்கள் இலாக்கா வுக்கு திரு. முத்தையா முதலியாரைப் பின்பற்றி இம்மாதிரி ஒரு ஏற்பாடு செய்து வைப்பதில் கவலை எடுத்து வெற்றி பெறுவார்களானால் அதுவே அவர்களது உத்தியோக காலத்தை வெற்றி பெற நடத்தியதாகும் என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்திக் கொள்ளுகின்றோம். அப்படிக்கில்லாமல் 30 நாளை எண்ணிக் கொண்டிருப்பதும் அது எண்ணி முடிந்தவுடன் ரூபாய் 5333-5-4 ஐ எண்ணுவதும் ரூ 5333-5-4-ஐ எண்ணி ஆனவுடன் மறுபடியும் 30 நாட்களை எண்ணுவதும், மீதி ஏதாவது கொஞ்ச நஞ்சம் நேரமிருக்கு மானால் தங்கள் அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன், சிநேகிதன் அடிமை முதலியவர்களுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுப்பதிலும் மறுபடியும் தங்களுக்கு மேல் உத்தியோகங்கள் கிடைப்பதற்கு தந்திரமும் சூழ்ச்சியும் கண்டுபிடித்துக் கொண்டிருப்பதில் செலவழிப்பதுமான காரியத்தை செய்து கொண்டிருந்தால் அவர்கள் என்னவென்றழைப்பது என்பதை பொது ஜனங்களுக்கே விட்டு விடுகிறோம்.

இந்த நிலையில் பச்சைப் பார்ப்பனப் பத்திரிகையாகிய "சுதேச மித்திரன்" 8-11-28 தேதி தலையங்கத்தில் "வகுப்புப்பித்தம் தலைக்கேறி விட்டதா?" என்கின்ற தலைப்புக் கொடுத்து தனது ஆத்திர விஷத்தைக் கக்கியிருக்கின்றான்.

அதாவது, எடுப்பிலேயே " ஜஸ்டிஸ் கக்ஷியார் மந்திரிகளாக இருந்த காலத்தில் செய்யத் துணியாத அக்கிரமத்தை ....கனம் எஸ்.முத்தையா முதலியார் செய்யத் துணிந்து விட்டார்" என்று ஆரம்பித்து "இது சட்ட விரோதமான காரியமாகும்" என்று முடித்திருக்கிறான்.

"மித்திரனின்" ஜாதிப்புத்தி இதுதான் என்பது ஏற்கெனவே எல்லோ ரும் அறிந்ததுதான். என்னவெனில் பார்ப்பனருக்கு இஷ்டமில்லாத எந்தக் காரியமானாலும் அதைப்பற்றி உலகமே முழுகிப் போய்விட்டது போல முதலில் கூப்பாடு போடுவார்கள். அது பலிக்கவில்லையானால் பிறகு சட்டத்தைக் கொண்டு வந்து சட்டம் பேச ஆரம்பித்து விடுவார்கள். மனுதர்ம சட்டத்தைப்போலவே வெள்ளைக்கார சட்டமும் பார்ப்பனர்கள் பிழைப் புக்குத் தக்கபடி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்கின்ற தைரியம் அவர்க ளுக்கு இருப்பதால் அவர்களுக்கு சட்டம் என்கிற ஆயுதத்தைக் கொண்டு எப்படியும் பேசலாம் என நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இனி இந்த நினைப்புக்கு இடம் கொடுக்கக்கூடாது. நாம் நியாயத்திற்கு விரோதமாய் இருக்கும் எந்த சட்டத்தையும் மண்டையில் அடித்து உடைத்து சுட்டு பொசுக்கத் தயாராகயிருக்க வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

"மித்திரன்"ஜஸ்டிஸ் கக்ஷியை புகழ்ந்ததற்கும் ஆதாரம் இல்லாமல் போகவில்லை. ஏனெனில் சென்ற தேர்தலில் பார்ப்பனர்களின் விஷமப் பிரசாரத்தால் ஜஸ்டிஸ் கக்ஷிக்கு நல்ல சூடு கிடைத்துவிட்டதால் இந்தத் தேர்தலிலும் அப்படி ஏற்பட்டு விடுமோ என்கின்ற பயத்தில் சூடுபட்டவர்கள் பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளை ஆகலாம் என நினைத்து குட்டிக் கரணம் அடித்து வருகின்றார்கள். இதன் பலன்களில் ஒன்றுதான் திரு. ராமசாமி முதலியாரவர்கள் தலை ஒருவருக்கும் வால் ஒருவருக்கும் காட்டுவது. இதன் பலன்தான் திரு. பாத்ரோ அவர்கள் சமூக சீர்திருத்தத்திற்கு சட்டம் செய்யகூடாது என்றது. இதன் பலன்தான் இப்பேர்பட்ட திரு. பாத்ரோ அவர்களை பனகால் அரசர் சைமன் கமிட்டி மெம்பராக்கினதும் அவரை அக் கமிட்டிக்குத் தலைவராக்கினதும் ஆகும். இதன் பலன் தான் தொழிலாளர்கள் கொடுமைப்படுத்தப்பட்ட விஷயத்தில் சற்று கவலை கொள்ளாமல் தங்கள் ஆதிக்கத்தின் பெருமையில் அலட்சியமாயிருந்ததும் இன்னும் இது போன்ற பல இரகசியங்களும் ஆகும். எனவே இதன் சக்தியில் இன்னும் நடப்பதைப்பார்க்கலாம் என்றுதான் காத்திருக்கிறோம். எது எப்படியானாலும், 'மித்திரன்' ஜாதி என்ன சொன்னாலும், ஜஸ்டிஸ் கக்ஷி எப்படி அந்தர் அடித்தாலும் நமது மக்கள் தைரியத்தை விடாமல் அதிகாரத்திலும் பதவி யிலும் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் நமது வீரர் முத்தைய்யா முதலியார் அவர்களைப் பின்பற்ற வேண்டுமென்பதே நமது வேண்டுகோளாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 11.11.1928**



# நமது குழந்தைகள் பார்ப்பன உபாத்தியாயர்களால் படும் கஷ்டம்

"திராவிடன்" பத்திரிக்கை 26.10.28ல் தலையங்கத்தில் எழுதுவதாவது:-

> "நம் மாகாணத்தில் பார்ப்பன ஆசிரியர்களின் கொடுமையால் பார்ப்பனரல்லாத மாணவர்கள் படுந்துயரை என்னவென்று எடுத்து ரைப்பது?பார்ப்பன ஆசிரியர்கள் பார்ப்பனரல்லாத மாணவர்களை வகுப்புகளில் சரியாய் நடத்துவது கிடையாது; பாடம் செவ்வனே சொல்லிக் கொடுப்பதும் கிடையாது. ஒரு மாணவன் "குடி அரசு" படிக்கின்றவனாகவோ அன்றி "திராவிடன்" படிக்கின்றவனாகவோ அல்லது "ஜஸ்டிஸ்" படிக்கின்றவனாகவோ இருந்து விட்டால் அவன் பாடும் திண்டாட்டந்தான். அதுவும் இராமசாமி நாயக்கர் பிரசங்கத்திற் குப் போய்விட்டால் இன்னும் திண்டாட்டம். அவன் எவ்வளவு கெட்டிக்காரனாக விருந்தபோதிலும் அவனை பரீக்ஷையில் மொட்டையடித்து விடுவார்கள். இத்தகைய கொடும் நிகழ்ச்சிகள் இம்மாகாணத்தில் பல இடங்க ளில் நேர்ந்துள்ளனவென்பதை நாம் அறிவோம். இன்று லால்குடி போர்டு ஹைஸ்கூலில் அப்பள்ளிக் கூடத்துப் பார்ப்பன ஆசிரியர்களால் பார்ப்பன ரல்லாத மாணவர்கள் எவ்வளவு கொடுமையாக நடத்தப்படுகின்றார்கள் என் பதை ஒரு கமிட்டியார் விசாரணை செய்வார்களாயின் திரு. நாவேல் அவர் கள் சைமன் கமிஷன் முன்பு கூறியது உண்மையென்பது புலனாகிவிடும்."

இந்த வாக்கியங்களை நாமும் முழுமனதோடு ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கின்றோம். ஏனெனில் நாமும் லால்குடிக்கும் அதுபோன்ற பல ஊர் களுக்கும் சென்றிருந்த காலையில் பார்ப்பனரல்லாத மாணவர்கள் அவ்வப் பாட சாலையில் பார்ப்பன உபாத்தியாயர்களால் படும் துன்பங்களைக் கேட்டதில் நமது நெஞ்சமும் குமுறுகிறது.

லால்குடி பள்ளிக்கூடத்தின் கொடுமைக்கு ஒரு சிறு உதாரணம் மாத்திரம் கூறி மேலே சொல்லுவோம். அதாவது லால்குடி பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த வாசக சாலைக்கு 'இந்து' 'சுதேசமித்திரன்' முதலிய பார்ப்பனப்



RangaRakes tamilnavarasam.com

பத்திரிகைகள் போர்டார் செலவில் வரவழைக்கப்படுகின்றன. 'திராவிடன்' 'ஜஸ்டிஸ்' பத்திரிகையும் வரவழைக்க வேண்டுமென்று நூற்றுக்கணக்கான மாணவர்கள் கையொப்பமிட்டு தலைவர்களுக்கு அனுப்பியும் பல வேண்டுகோள்கள் பல மாதக்கணக்காகியும் மதிக்கப்படாமலிருப்பதோடு சுயமரியாதையில் பற்றுள்ள மாணவர்கள் உபாத்தியாயர்களால் வெறுக்கப் பட்டு வருகின்றனர்.

எனவே ஜில்லா தாலூக்கா போர்டு தலைவர்களும் முனிசிபல் தலைவர் களும் தாங்களும் தங்கள் மக்களும் தலைவர்கள் பதவியை அனுபவிப் பதற்கு மாத்திரம் அந்த ஸ்தாபனங்கள் இருக்கின்றதாகக் கருதி அதற்கேற்ற காரியங்களுக்கே தங்கள் முழு நேரத்தையும் அறிந்து செலவழிக்காமல் சத்தியத்திற்கும் நாணயத்திற்கும் ஒரு சிறிது பாகத்தையாவது செலவிடும்படி வேண்டுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 11.11.1928**



RangaRakes

# திரு.எ.ராமசாமி முதலியாரின் அறிக்கை

வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப்பற்றி நாம் பத்திரிகைகளுக்கு அனுப்பிய சேதிக்கும் சென்றவாரக் 'குடி அரசு' 'திராவிடன்' கட்டுரை களுக்கும் திரு.எ. இராமசாமி முதலியாரவர்கள் பதில் அளித்திருப்பதாவது.

"நான் தனித்தொகுதி சம்மந்தமாக வெளியிட்ட அறிக்கையைப்பற்றி எனது மதிப்பிற்குரிய நண்பரும் தலைவருமான திரு. ராமசாமி நாயக்கரின் அபிப்பிராயத்தை நான் படித்துப் பார்த்தேன்.

நான் வெளிப்படுத்திய அபிப்பிராயம் என் சொந்த அபிப்பிராயம் என்று நான் அசோசியேட் பிரஸ் நிரூபரிடம் சொல்லியிருந்தும் அதை அது வெளிப்படுத்தாததற்கு காரணம் இன்னது என்பது எனக்கு தெரிய வில்லை.

தற்கால நிலைமையில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஆகிய இரண்டு சமூகங்களுக்கும் உள்ள பலமான மனக்கசப்பானது தனித்தொகுதி ஏற்படுத்து வதன் பயனாய் ஒரு அளவுக்கு பாதுகாப்பளிக்கக்கூடியதாகவும் சமநிலைமை உண்டாக்கத்தக்கதாகவும் இருக்குமென்று சொல்லியிருந்தேன்.

ஆனாலும் இந்தசமயத்தில் அதை வற்புறுத்துவது பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு அனுகூலமானதல்ல என்று நம்புகின்றேன். ஏனெனில் மேல் கண்ட தனித்தொகுதித் தேர்தல் முறை ஏற்பட்டால் இனி ஏற்படப்போகும் பார்ப்பனர்கள் எவ்வளவு அடையக்கூடுமோ அதை விடவும் அவர்கள் எத்தனை ஸ்தானங்களுக்கு உரியவர்களோ அந்த ஸ்தானங்களை விட அதிக மாகவும் அடைந்துவிடக்கூடுமென பயப்படுகின்றேன்.

இந்த காரணங்களாலேயே நாம் தனித்தொகுதித் தேர்தல் முறைகேட்ப தானது பார்ப்பனர்களுக்குக்கூட அனுகூலமானதும் ஆசையுள்ளதுமாக இருக்குமென்றே நான் கருதுகிறேன்.

நான் பம்பாய் மாகாணத்தின் நிலைமையை நன்கு தெரிந்தபிறகுதான் இதைச்சொல்ல முன்வந்தேன் என்பதை எனது நண்பர்கள் அறியவேண்டும்.



tamilnavarasam.com

இந்தமாதிரி நான் சொல்வதற்கு எனக்கு தைரியமேற்பட்டதற்கு காரணம் என்னவென்றால் திரு.ஈ.வெ. ராமசாமி நாயக்கர் செய்துவருகின்ற அபாரமான வேலையின் பயனாய் ஏற்படப்போகும் பலனில் எனக்கு ஏற்பட்ட உறுதியான நம்பிக்கையேதான்.

எப்படியிருந்தபோதிலும் நான் எனது தலைவர்களுடைய அபிப்பி ராயப்படி நடக்க எப்போதும் தயாராயிருக்கிறேன். மற்றபடி உத்தியோக சம் மந்தமாக வகுப்புவாரி பிரதிநிதித்துவ விஷயத்தில் என்னுடைய அபிப்பி ராயங்கள் எல்லாருக்கும் தெரிந்ததாகும். அதிலிருந்து நான் ஒரு சிறிதும் மாற்றமடையவில்லை.

பம்பாயைப் பொருத்தவரையில் நான் கவலைப்படுவது நல்ல விஷயங்களை சரியான படி எடுத்துச்சொல்லாததால் கெட்டுப்போய் விடுகிறதே என்பது தான்."

என்பதாக தமது பதிலில் தெரிவித்திருக்கின்றார். இதைப்பற்றிய நமது அபிப்பிராயத்தை பின்னால் வெளிப்படுத்தலாம் என்பதாக எண்ணி யுள்ளோம்.

**குடி அரசு- குறிப்புரை - 11.11.1928**



# "ரிவோல்ட்"

"ரிவோல்ட்" என்னும் ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றை சென்ற ஆறாம் தேதி செவ்வாய்க்கிழமை பட்டிவீரன்பட்டி திரு. சௌந்திர பாண்டிய நாடார் அவர்களைக் கொண்டு திறப்பு விழா நடத்தி 7ஆம் தேதி புதன் கிழமை முதல் இதழ் வெளிப்படுத்தி விட்டோம். இனி அதை ஆதரித்து அதன் கொள்கைகளை வெற்றி பெறச் செய்து வைக்க வேண்டியது பொது மக்களின் கடமையாகும்.

"ரிவோல்ட்" பத்திரிகையின் ஆரம்பத்தின் உத்தேசமெல்லாம் நமது நிலைமையையும் கொள்கையையும் தமிழ் மக்கள் தவிர மற்ற மக்களுக்கும் தெரிவிக்க வேண்டும் என்கிற ஆவலேயாகும். நமது நிலைமை சென்னை மாகாணத்திலேயே தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பாஷை களை நாட்டு பாஷையாகக் கொண்ட பல ஜில்லாக்களுக்கே தெரியவில்லை என்றால் வெளி மாகாணங்களுக்கும் வெளி தேசங்களுக்கும் எப்படித் தெரிந்திருக்க முடியும்? உதாரணமாக ஒரு சமயத்தில் இந்தியா மந்திரியுடன் திரு. டாக்டர் டி.எம். நாயர் அவர்கள் பேசிக் கொண்டிருந்தபொழுது, "சென்னை பார்ப்பனரல்லாதார்களுக்காக பெரிய உத்தியோகங்கள் அளிக்கப் படவில்லை" என்று சொன்னபோது "திரு. B.N. சர்மா என்பவர் இந்திய அரசாங்கத்தில் நிர்வாக சபை மெம்பராயிருந்து 6500 ரூபாய் சம்பளம் வாங்குகிறாரே, அது போதாதா"என்று இந்தியா மந்திரி சொன்னாராம். "அதற்கு திரு. டாக்டர் நாயர் அவர்கள் நான் இந்தியாவை விட்டு புறப்படும் வரை திரு. B.N. சர்மா அவர்கள் பார்ப்பனராயிருந்தார், நான் புறப்பட்ட பிறகு அவர் ஏதாவது பார்ப்பனரல்லாதாராய் விட்டாரோ என்னமோ எனக்குத் தெரியவில்லை. ஆதலால் தயவு செய்து அவர் பார்ப்பனரல்லாதாராக ஆயிருப்பதாய் தங்களுக்கு வந்த செய்தியை காட்டுகிறீர்களா" என்று கேட்டாராம். அதன் பிறகு அந்த இந்தியா மந்திரி திடுக்கிட்டு, "நான் இத்தனை நாளாக அவரை பார்ப்பனரல்லாதார் என்றுதான் நினைத்துக் கொண்டிருக் கிறேன்; இப்போது தாங்கள் சொல்வது எனக்கு ஆச்சரியமாய் இருக்கின்றது" என்று சொன்னாராம்.

அதுபோலவே சென்னையில் சென்ற வருடம் நடந்த காங்கிரசுக்கு கல்கத்தாவிலிருந்து வந்த முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு. கோஸ்வாமி



RangaRakes tamilnavarasam.com

என்கின்றவரோடு நாம் பேசிக் கொண்டிருந்தபோது, "சென்னை மாகாணத்தில் தெருவில் நடக்கக் கூடாதவர்களும், கோவிலுக்குள் போகக் கூடாதவர்களும், தொடக்கூடாதவர்களும், நிழல் மேல் படக்கூடாதவர்களும் இருக்கின்றார்களே, அவர்களைப் பற்றி தங்கள் அரசியல் திட்டத்தில் என்ன கவலை எடுத்துக் கொண்டிருக்கின்றீர்கள்" என்று கேட்டபோது, அவர் ஆச்சரியப்பட்டு, "அப்படி ஒன்று இருப்பதாக எனக்கு இதுவரை தெரியவே தெரியாது. இது உண்மையா" என்று பக்கத்தில் இருந்த திரு.ஆர். கே. ஷண்முகம் செட்டியாரைக் கேட்டார். அதற்கு திரு.ஷண்முகம் செட்டியார் அவர்கள் சிரித்துக் கொண்டே, "இதற்கு சாக்ஷிக்காக அதிக தூரம் போகா தீர்கள். நானே சில கோவிலுக்குள் போகக்கூடாத ஜாதி என்பதைச் சேர்ந்தவன். ஹைக்கோர்ட்டு வரையில் விவகாரம் செய்து பார்த்தும் எங்களை அந்த கோவிலுக்குள் போகக்கூடாத ஜாதியிலேயே சேர்த்து தீர்ப்பு பெற்று விட்டார்கள். எனவே இனி உங்களுக்கு ஏதாவது சந்தேகம் உண்டா" என்று கேட்டார். பிறகு திரு. கோஸ்வாமி பட்ட ஆச்சரியத்திற்கு அளவே இல்லை.

இதுபோலவே பல உதாரணங்கள் எடுத்துக் காட்டலாம். எனவே நம் நிலையையும் தேவையையும் வெளி நாட்டார்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரியப்படுத்த வேண்டுமானால் தாக்ஷண்யமும் பயமும் சுயநலமும் அற்ற தன்மையில் தைரியமாய் வெளிப்படுத்தக் கூடிய ஒரு சாதனம் இருந்தாக வேண்டும் என்ற கருத்தைக் கொண்டே "ரிவோல்ட்" ஆரம்பித்து விட்டோம். அதன் கொள்கையைப் பற்றி நாம் அதிகமாக சொல்லிக் கொள்ள வேண்டியதில்லை என்றே நினைக்கின்றோம்.

முக்கியமாக அரசியல் துறையில் உழைக்க வேண்டும் என்பது அதன் கவலையல்ல. ஆனால் அரசியல் அயோக்கியத்தனங்களை தைரியமாயும் தாராளமாயும் வெளியாக்கி விடவேண்டும் என்பதே "ரிவோல்ட்" டின் பெருங்கவலைகளில் ஒன்றாகும். அதுபோலவே சாமியைப் பற்றியும் சமயத்தைப் பற்றியும் அதற்கு சிறிதும் கவலையில்லை. ஆனால் அவற்றின் பேரால் நடைபெறும் அயோக்கியத்தனங்களையும் கொடுமைகளையும் அடிமைத்தன்மைகளையும் அறியாமையையும் வெளியாக்குவது எல்லாவற்றையும் விட முக்கியமானது ஆகும். சுருக்கமாகவும் மொத்தமாகவும் கூறுமிடத்து இதற்கு முன் ஒரு தடவை அதாவது,

"ரிவோல்ட்" பத்திரிகையை அரசாங்கத்தாரிடம் பதிவு செய்து கொண்ட சமயத்தில், அதன் கொள்கை என்ன என்பதாக அரசாங்கத்தார் அறிய விரும்பிய போது தெரிவிக்கப் பட்டதையே மறுமுறையும் தெரிவித்து இதை முடித்து விடுகின்றோம். அதாவது :-

"ரிவோல்ட்" என்ற ஆங்கில வாரப் பத்திரிகை நடத்துவதின் கருத்து, இப்போது நாம் பதிப்பாசிரியராயிருந்து நடத்தும் "குடி அரசு" என்னும் தமிழ்



RangaRakes

வாரபத்திரிகையின் கொள்கைகளையே முக்கியமாய்க் கொண்டு நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 'ரிவோல்ட்' என்கின்ற வார்த்தைக்கு எடுத்துக் கொண்ட அர்த்தம் கட்டுப்பாட்டை உடைத்தல் என்பது. அதாவது மனித தர்மத்துக்கும், மனித இயற்கைக்கும் விரோதமாக அரசியலிலானாலும் சரி, மத இயலிலானாலும் சரி, அதிகார இயலிலானாலும் சரி, முதலாளி இயலிலானாலும் சரி, ஆண் இயலிலானாலும் சரி, மற்றும் எவைகளிலானாலும் சரி அவைகளினால் ஏற்படும் இயற்கைக்கும் அறிவுக்கும் மாறுபட்ட கட்டுப்பாடுகளை உடைத்து, உலகமும் அதன் இன்பமும் எல்லோருக்கும் பொது என்பதும் மக்கள் யாவரும் சமம் என்பதுமான கொள்கையை மனசாக்ஷிப்படி சாத்தியமான வழிகளில் பிரசாரம் செய்வதே அதன் நோக்கம் என்பதாகும்.

இதற்கு முக்கிய பத்திராதிபராக திரு. எஸ். ராமநாதன் எம்.ஏ.பி.எல் அவர்கள் இருந்து வருவார். நாமும் அதில் பங்கு எடுத்து வருவோம். எனவே இதை வாலிப உலகம் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றோம். எம் வாலிப நண்பர்கள் ஆங்காங்குள்ளவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் சந்தாதாரராய்ச் சேருவதுடன் ஒவ்வொருவரும் இது சமயம் மூன்று சந்தாதாரர்களுக்கு குறையாமல் சேர்த்து விட்டு மறு காரியம் பார்ப்பது என்கின்ற உறுதியைக் கொள்ள வேண்டுகின்றோம்.

**சந்தா விபரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ 4 - 0 - 0 |
| மாணாக்கர்களுக்கு | ரூ 3 - 0 - 0 |
| வெளிநாட்டிற்கு | ரூ 5 - 0 - 0 |

மாதிரி காப்பி வேண்டியவர்கள் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

**விலாசம்**

மேனேஜர் "ரிவோல்ட்"

ஈரோடு.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 11.11.1928**



tamilnavarasam.com

# பாஞ்சால சிங்கம்

நமது பத்திரிகை முடிந்து கடைசித்தாள் அச்சுக்குப் போகுந் தருவாயில் பாஞ்சாலசிங்கம் முடிசூடா மன்னர் உண்மைத் தலைவர் லாலா லஜபதிராய் அவர்கள் திடீரென்று மாரடைப்பு வியாதியால் மரணமடைந்தா ரென்று தந்தி கிடைத்ததைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனோம். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் இந்தியாவில், இருந்த - இருக்கிற - தலைவர் களில், லஜபதியவர்கள் சொல்லும் வார்த்தைக்குத் தப்பு எண்ணம் அவரது எதிரியாலும் கற்பிக்க முடியாத உத்தம வீரர் இவர் ஒருவர்தான் என்றே சொல்லவேண்டும். இவரது மரணத்தால், தனது மனத்திற்குப்பட்டதை தைரியமாயும் ஒளிக்காமலும் வெளியிடக்கூடிய ஒரு ஒப்பற்ற தலைவர் இந்தியாவில் இல்லை என்றும் சொல்லும்படியான நிலைமை உண்டாகி விட்டது. சுயராஜ்யக் கக்ஷியாரைப்பார்த்து, "பஞ்சாப் மாகாணத்தில் உள்ள எல்லா தொகுதிகளில் வேண்டுமானாலும் நான் ஒருவனே தேர்தலுக்கு நிற்கின்றேன். யாராவது வந்து என்னுடன் போட்டி போடுவதாயிருந்தால் வாருங்கள் ஒரு கை பார்க்கலாம்" என்று சொன்ன தீரர், திரு. மோதிலால் நேருவின் வாடையே பஞ்சாப் நாட்டிற்குள் அடிக்கவிடாமல் செய்த தனி வீரர்.

சமீபத்தில் தமிழ் நாட்டையும் மலையாளத்தையும் பார்த்து விட்டுப் போனபிறகு தமிழ் நாட்டின் நிலையை பயப்படாமல் சிறிதும் ஒளிக்காமல் வெளியிட்டவர். தமது ஆயுள் காலமெல்லாம் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் மக்களுக்கு என ஒதுக்கி வைத்து விட்ட உண்மைத் தியாகி தேசத்துக்காக முதல் "சீர்திருத்தத்" தின் போது 20 வருஷத்திற்குமுன் நாடு கடத்தப்பட்டவர். இரண்டாவது, "சீர்திருத்தத்"தின் போது 15 வருஷத் திற்குமுன் அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு வரவிடாமல் தடைசெய்யப்பட்டவர். ஒத்துழையாமையின் போது 2 வருடம் சிறை சென்றவர். 3வது "சீர்திருத்தம்" வரப்போவதற்கு முன் சர்க்காரால் அடியும் பட்டவர். அதாவது அதனாலேயே உயிர்விட நேர்ந்ததோ என்று எண்ணத் தக்க அளவு அடியும் பட்டவர். இப்பேர்ப்பட்ட ஒப்பற்ற ஒரு மகான் உண் மைத் தியாகி இறந்தது ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 18.11.1928**



# அரசியலும் சத்தியமும்

திரு. சீனிவாசய்யங்கார் அவர்களை திரு. லாலா லஜபதிராய் அவர்கள் "பூரண சுயேச்சையே வேண்டுமென்று கேட்பவர்களான தாங்கள் ராஜபக்திப் பிரமாணம் செய்யலாமா" என்று கேட்டபொழுது அதற்கு பதில் திரு. அய்யங்கார் "நான் அந்த பிரமாணத்தை மனதில் வேறு ஒரு விஷயத்தை நினைத்துக் கொண்டு கபடமாக பிரமாணம் செய்தேனே ஒழிய உண்மையாக செய்யவில்லை" என்று சொன்னாராம் இதை பச்சை தமிழில் சொல்வதானால் "பொய்ச்சத்தியம் செய்தேனே ஒழிய உண்மையாக சத்தியம் செய்யவில்லை" என்று சொன்னாராம். உடனே திரு. லாலாஜி "அப்படியானால் மற்றபடி நீர் இப்போது என்னிடம் பேசியதாவது உண்மைதானா அல்லது இதிலும் ஏதாவது ஒன்றை மனதில் நினைத்துக் கொண்டு, வேறு ஏதாவது வாயில் பேசுகிறீரா என்ன" வென்று கேட்டராம். திரு. அய்யங்கார் வெட்கித் தலைகுனிந்து கொண்டாராம்.

நமது தென்னாட்டுப் பார்ப்பனர்களின் தலைவர்களானவரிடத்தில் சத்தியத்திலேயே இரண்டு விதம். அதாவது பொய் சத்தியம் நிசமான சத்தியம் என்பதான வித்தியாசங்கள் இருந்தால் இனி சாதாரணமாக அதாவது சத்தியம் என்று எண்ணாமல் பேசும் விஷயங்களில் எத்தனை வித வித்தியாசங்கள் இருக்கும் என்பதை கண்டுபிடிக்க வல்லவர்கள் யார் என்பது நமக்கு விளங்கவில்லை. ஆனபோதிலும் இந்த பொய் சத்திய முறைகூட தற்காலத் தில் அனேக கனவான்களுக்கு மிகவும் யோக்கியமான முறை யென்றேற் பட்டு திரு. அய்யங்காருக்கு நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுக்க முன் வந்திருக் கின்றார்கள்.

அதாவது திருவாளர்கள் சத்தியமூர்த்தியும் வரதராஜுலுவும் முறை யே இந்தியாவின் அரசியலை நடத்த திரு. சீனிவாசய்யங்காரே தக்க பெரியாரென்றும் இந்தியாவில் உள்ள 33 கோடி மக்களும் இந்த திரு. சீனிவாசய்யங்காரையே நம்பி இருக்கின்றார்கள் என்றும் சொல்லி அய்யங் காரை குஷால் படுத்தினார்கள். போதாக்குறைக்கு திருவாளர் சி. ராஜகோபா லாச்சாரி என்கின்ற சத்தியகீர்த்தியும் "திரு. சீனிவாசய்யங்காரை விட்டால் சென்னை மாகாணத்தில் காங்கிரசை நிர்வகிக்க வேறு தக்க நபர் கிடையாது" என்று பம்பாயில் சொன்னார். இவர்களே இப்படி சொல்லியிருக்க மற்றபடி



RangaRakes
tamilnavarasam.com

இதே கூட்டத்தில் இருக்கும் திருவாளர்கள் குழந்தை, குப்புசாமி, அண்ணா மலை, கந்தசாமி, அமித்கான் முதலிய தலைவர்கள் சொல்லுவதைப் பற்றி நாம் இங்கு குறிப்பிட வேண்டுமா என்று கேட்கின்றோம். எனவே அரசியல் என்பது எவ்வளவு அயோக்கியத்தனம் என்பதையும் எந்த விதத்திலும் இந்த அரசியல் ஸ்தாபனங்கள் மானம் வெட்கம் ஒழுக்கம் நாணையம் முதலிய வைகள் இல்லாதவர்களுக்கே சொந்தமாக இருக்கின்றது என்பதையும் பொது ஜனங்கள் உணருவதற்காகவே இதை எழுதுகின்றோமேயல்லாமல் மேற் கண்ட கனவான்களின் யோக்கியதையை பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காக இதை எழுதவில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 18.11.1928**



RangaRakes

# தென்னிந்திய சீர்திருத்தகாரர் மகாநாடு

தென்னிந்திய சமூகச் சீர்த்திருத்தக்காரர்கள் மகாநாடு இந்த மாதம் 26,27 தேதிகளில் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தலைமையில் சென்னை யில் கூடப்போகிறது. இம் மகாநாடானது தென்னிந்திய சமூகத் தொண்டர் சபையாரால் கூட்டப்படுவதாகும். தென் இந்தியாவில் இருந்து வரும் சமூக ஊழல்களை நினைக்கும் போது இம்மாதிரி மகாநாடுகள் தினமும் கூட்டப்பட வேண்டும் என்றும், சுயநலப்பிரியர்களாக மாத்திரம் இருந்து செத்தால் போதும் என்ற கொள்கைக்கு அடிமையாகாத மனிதர்களும் கடுகளவு உண்மையான ஜீவகாருண்யமுடையவர்களும் தங்கள் வாழ்நாட்களை இதற்காகவே செலவிட வேண்டியது மனிதத் தன்மையில் முக்கியமான கடனென்றும் சொல்லுவோம்.

நிற்க, சீர்திருத்த மகாநாடென்று, ஒன்றைக் கூட்டி சிலர் மாத்திரம் முன்னணியில் நின்று வெறும் வாய்ப்பந்தல் போட்டு வேஷத் தீர்மானங்கள் செய்து தங்கள் தங்கள் பெயரை விளம்பரஞ்செய்து தங்களை அன்னியர் பெரிய தேசாபிமானியென்றும் சமூக சீர்திருத்தக்காரன் என்று சொல்ல பெயர் பெற்றுக் கொண்டு காரியத்தில் வரும்போது மதத்தின் பேராலும் சாஸ்திரத்தின் பேராலும் சமயத்தின் பேராலும் மதத்தின் பேராலும் வருணாசிரமத்தின் பேராலும் சங்கராச்சாரிகளின் பேராலும் “மதத்தில் சர்க்கார் பிரவேசிக்கக் கூடாது” என்பதான திருட்டு தேசியத்தின் பேராலும் நாணயப் பொறுப்பில் லாமலும் போக்கிரித்தனமாகவும் கிளம்பி முட்டுக்கட்டை போடுவதும், வெளிக்கு யோக்கியர்கள் போல் காட்டிக் கொண்டு உள்ளுக்குப் பணச் செலவு முதலியவைகள் செய்து தடங்கல் செய்யச் செய்வதும், லஞ்சமும் கூலியும் கொடுத்து ஆட்களைச் சேர்த்து தேசீயத்தின் பேராலும் சமயத்தின் பேராலும் கூப்பாடு போடச் செய்வதுமான காரியங்கள் நடந்து வருகின்றன. இக்கொள்கைகளுடனேதான் இதுவரை அநேக சீர்திருத்த மகாநாடுகள் கூட்டப்பட்டிருக்கின்றன.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் தென்னிந்தியாவில் சீர் திருத்தத் தலைவர்களுக்குள் மிகவும் சிறந்து விளங்குபவர்களில் திருவாளர் கள் எஸ்.சீனிவாசய்யங்கார், சர்.சி.பி. ராமசாமி அய்யர், எஸ்.சத்தியமூர்த்தி,.



tamilnavarasam.com

சி.ராஜகோபாலாச்சாரி, டாக்டர் எஸ்.எஸ். ராஜன் முதலியோர்களான இவர்கள் பெரிதும் சீர்திருத்த ஸ்தாபனத் தலைவர்களும் சீர்திருத்த மகாநாடுகளுக்குத் தலைமைவகித்தவர்களும் சீர்திருத்தக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளு பவர்களுமே ஆவார்கள். இவர்களின் சீர்திருத்தக் கொள்கைகள் எல்லாம் பெரிதும் எதையும் குடித்தால் சீர்திருத்தக்காரர்கள் ஆகிவிடலாம் என்பதும், எதையும் சாப்பிட்டால் சீர்திருத்தக்காரர் ஆகிவிடலாம் என்பதும், யாருடனும் சுகித்தால் சீர்திருத்தக்காரர் ஆகிவிடலாம் என்பதும் எங்கும் சாப்பிடுவதாக காட்டிக் கொண்டால் சீர்திருத்தக்காரர்களாகி விடலாம் என்பதுமான கொள் கைகள் என்றுதான் சொல்ல வேண்டுமேயொழிய மற்றபடி உண்மையான சீர்திருத்தக் கொள்கைகள் அமுலில் வருவதானால் தங்களால் கூடியவரை முட்டுக்கட்டை போடுகின்றவர்கள் என்றுதான் சொல்லி ஆக வேண்டும்.

உதாரணமாக சமூக சீர்திருத்த சங்கத் தலைவரும் சர். சங்கரன் நாயருடைய சிஷ்யர் என்று சொல்லிக் கொள்பவருமான திரு. சீனிவாசய் யங்கார் பொதுப் பணத்தில் நடந்ததும் பொது ஸ்தாபனமாக இருந்ததுமான குருகுல விவகார சம்பந்தமான விஷயத்தில் பார்ப்பனனேதான் சமையல் செய்தாக வேண்டும் என்று சொன்னதும், பார்ப்பனக் குழந்தை சாப்பிடு வதை பார்ப்பனரல்லாத குழந்தை பார்க்கக் கூடாது என்பதற்கு வக்காலத்து வாங்கிப் பேசினதும், பிரபலமும் பிரக்யாதியும் பெற்ற தேசீயவாதியும் சமூக சீர்திருத்தக்காரரும், சீமைசென்று வந்தவரும் மற்றும் பல சீர்திருத்தப் பெருமைகள் படைத்தவருமான திரு. சத்தியமூர்த்தி அய்யர் என்பவர் கோவிலில் சுவாமிகள் பேரால் விபசாரத்திற்கு சிறு பெண்களுக்கு முத்திரை போடக்கூடாது (பொட்டு கட்டக் கூடாது) என்பதையும் நகரத்தில் விபசாரி களின் தொல்லையை ஒழிக்கவேண்டும்-என்பதையும் முக்கியமாகக் கொண்டதான சட்டங்களை எதிர்த்ததும், அவ்விழிதொழில் காரியங்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு எதிர்பிரசாரம் செய்ததுமே போதுமான சாட்சியாகும்.

மற்றும் தென்னாட்டு காந்தி என்றும் காந்தியடிகளின் சிஷ்யர் களுக்கு சட்டாம் பிள்ளை என்றும் திரு. காந்திக்கு அடுத்த வாரிசுதாரர் என்றும் சீர்திருத்தமே உருவாய் வந்தவர் என்றும் சொல்லப்பட்டு வந்த வரான திரு. ராஜகோபாலாச்சாரியாரும் அவரது உற்ற நண்பரும் பின்பற்று வோருமான திரு. திருச்சி டாக்டர் ராஜனும் தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் - தேசீய சம்மந்தப்பட்ட வரையிலாவது மக்கள் பிறவியால் உயர்வு தாழ்வு பாராட்டக் கூடாது - என்கின்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டவுடன் அக்கமிட்டியிலிருந்து ராஜீனாமாக் கொடுத்து விட்டதும், மற்றும் சில சமரச சன்மார்க்கிகளும் அவர்கள் போன்றவர்களும் இதற்கு விரோதமாய் ஓட்டுக் கொடுத்ததுமான காரியங்களே நாம் முன்குறிப்பிட்ட வைகளுக்கு தக்க சான்றாகும். ஆனால் மேல்கண்டவர்கள் மேல்கண்ட விஷயத்தில் நடந்து கொண்ட மாதிரிகள் தங்கள் பகுத்தறிவுக்கும் மனச்



சாக்ஷிக்கும் சரி என்று பட்டமுறையில் அந்தப்படி நடந்து கொண்டிருப் பார்களானால் நாம் குற்றம் சொல்ல இடமிருந்திருக்காது. ஆனால் தங்கள் தங்கள் சுயநலத்தையும் வகுப்பு நலத்தையும் முக்கியமாகக் கருதி நடந்த வர்கள் என்று சொல்லும்படியாகவே இவர்கள் நடந்து கொண்டார்கள் என்று தைரியமாய் சொல்லலாம்.

எனவே சமீபத்தில் சென்னையில் கூட்டப்போகும் சீர்திருத்தக் காரர்கள் மகாநாடும் சீர்திருத்த வேஷக்காரர் மகாநாடு போலல்லாமல் உண்மையான பலனைக் கொடுக்கும் உண்மையான மகாநாடாக இருக்க வேண்டும் என்று ஆசைபடுவதுடன் தென் இந்தியாவின் நாலா பக்கங் களிலுமுள்ள உண்மைத் தொண்டர்கள் தவறாமல் வந்து தாராளமாய் கலந்து வேண்டிய உதவி செய்யக்கோருகின்றோம். அம்மகாநாட்டை நடத்தும் பொறுமையை மேற்போட்டுக் கொண்டிருக்கும் திரு. ஆரியா, திரு. எம்.கே. ரெட்டியார் மற்றும் சில நண்பர்கள் ஆகியோர்கள் தாராள நோக்க முடையவர்களும் இவ்வேளையில் உள்ளும் புறமும் ஒத்தவர்கள் என்பதும் நாம் சொல்லித் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயமல்ல. மற்றும் இம் மகாநாட்டுக்கு கொடியேற்றம் செய்யும் அம்மையார் திரு. தேவி கமலாக்ஷி பண்டலே அவர்கள் மிகவும் தாராள நோக்கமும் பரிசுத்த மனமும் கொண்டவர்கள். மகாநாட்டை திறந்து வைக்கும் சென்னை அரசாங்க மந்திரி கனம் திரு. எஸ். முத்தையா முதலியாரவர்களும் சமூக சீர்திருத்த விஷயத் திலும் மக்கள் எல்லோருக்கும் சமசுதந்திரமும் சமசந்தர்ப்பமும் இருக்க வேண்டும் என்கிற விஷயத்திலும் உண்மையான கருத்தும் உழைப்பும் கொண்டவர். மகாநாட்டுக்கு தலைமை வகிப்பவரைப் பற்றி நாம் ஒன்றும் இங்கு எழுத வரவில்லை. அன்றியும் இவ்விஷயத்தில் எழுதவேண்டிய அவசியமும் இல்லை. ஆதலால் இம்மகாநாடானது தென் இந்தியாவின் அவசியமான சீர்திருத்தத்திற்கு வழிகாட்டியாகவும் அஸ்திவாரம் போடுவ தாகவும் இருப்பதோடு நமது நாட்டின் நிலையையும் தேவையையும் அறிவ தற்கென்று அரசியலின் பேரால் சீமையிலிருந்து வரும் பார்லிமெண்ட் கமிட்டியாகிய சைமன் கமிஷனுக்கும் உண்மையான நிலையையும் தெளி வையும் தெரிவிக்கக் கூடியதான ஒரு அறிக்கையாகவும் ஆகலாம் என்றும் நினைக்கின்றோம். நம்நாட்டுசெல்வந்தர்களும் சீர்திருத்த அபிமானிகளும் இம்மகாநாடு விமரிசையாயும் செவ்வையாயும் நடைபெற தங்கள் தங்களால் கூடிய பொருளுதவியும் செய்ய வேண்டுமென ஞாபகப்படுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 18.11.1928**



RangaRakes tamilnavarasam.com

# தஞ்சை ஜில்லா போர்டாரின் தைரியம்

தஞ்சை ஜில்லா போர்டுக்கு சம்மந்தப்பட்ட ரயில்வே லைனை ரயில்வே போர்டாருக்கு கொடுத்துவிட சம்மதிப்பதாக இவ்வளவு காலம் பொறுத்தாவது ஒரு தீர்மானம் செய்ய முன் வந்ததைப்பற்றி அதன் தைரியத்தை நாம் பாராட்டுகின்றோம். கொஞ்ச நாட்களுக்கு முன்பாக இந்த விஷயம் தஞ்சை ஜில்லா போர்டின் யோசனைக்கு வந்ததில் ஜில்லா போர்டார் ரயில்வே லைனை ரயில்வே போர்டாருக்கு கொடுக்க முடியாது என்று தீர்மானித்து விட்டார்கள். அது சமயம் அவர்கள் அப்படிச் செய்தது தப்பு என்ற சொன்னதுடன் ஜில்லா போர்டு தலைவரையும் சில அங்கத் தினர்களையும் நேரிலும் கண்டு பேசினோம். அப்படிப் பேசியதிலிருந்து லைனை ரயில்வே போர்டாருக்கு ஒப்புக் கொடுக்க மறுத்ததின் காரணம் எல்லாம் அப்போர்டிலுள்ள பார்ப்பன விஷமத்திற்கு பயந்தும் கட்சிப் பிரதிகட்சி ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதைக் கருதியுமே அப்படிச் செய்ய வேண்டியதாக ஏற்பட்டது என்பதை அறிய நேர்ந்தது.

முதலாவதாக இதுவரை எந்த ஸ்தாபனமாவது சர்க்காரார் நடத்தி வந்ததை விட யோக்கியமாகவோ திறமையாகவோ பொது ஜனங்களின் பிரதிநிதித்துவ சங்கத்தால் நடத்திவருவதாக நாம் ஒப்புக்கொள்ளவே முடியாது. சர்க்கார் ஆட்சி முறை மோசமானதும் நம்மால் சகிக்க முடியாததும் ஆனது என்பதைப் பொருத்தவரையில் நமக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் அவர்களிடமிருந்து நமது கைக்கு மாற்றப்பட்ட எந்த ஒரு சிறு முறையும் அதைவிட மோசமானதாகவும் பொறுப்பற்றதாகவும் நாணயக் குறைவானதாகவுமே நடைபெற்று வருகின்றதே ஒழிய வேறில்லை. இது நாம் எந்த இலாக்காவைப் பொருத்து வேண்டுமானாலும் ருசுச் செய்ய முடியும், அதிலும் ஸ்தல ஸ்தாபன இலாக்காக்களில் நடைபெற்று வரும் அயோக்கியத்தனங்களும் நாணயக்குறைவுகளும் ஒழுக்க ஈனங்களும் எழுதி முடியாததும் எல்லோருக்கும் தெரிந்ததுமான இரகசியமாகவே இருக்கின்றது. இதைப்பற்றி முன்னும் பல தடவை எழுதியும் பேசியும் இருக்கின்றோம்.

எனவே முதலாவதாக இக்காரணங்களாலேயே ரயில்வே போன்ற



பெரிய பொறுப்புள்ள காரியங்களை ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, தாலூக்கா போர்டு போன்ற ஜனப்பிரதிநிதி சபை என்னும் பொறுப்பற்ற ஸ்தாபனங்களின் சுவாதினத்தில் விடுவது என்பது பெரிதும் ஆக்ஷேபிக்கத் தக்கது என்று தைரியமாய் சொல்லுவோம். ஆனால் எந்த நிலையிலா னாலும் பார்ப்பனர்கள் கையில் இருப்பதைவிட பார்ப்பனரல்லாதார் கையில் இருப்பது மேல் என்பதில் நமக்கு சந்தேகமில்லை. உதாரணமாக திருவாளர் இராமானுஜாச்சாரியார் நிர்வாகத்தையும் திருவாளர் பன்னீர்செல்வம் அவர்களின் நிர்வாகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே இது தெரியவரும்.

எனவே அரசாங்கத்தாரும் ரயில்வேக்காரரும் செய்வது மிகவும் மோசமாயிருக்கின்றதே என்று சொல்வதானால், நம்முடைய ஒற்றுமை யையும் பரஸ்பர நம்பிக்கையையும் கட்டுப்பாட்டையும் சுயநலமற்ற தன்மையையும் பலப்படுத்திக் கொண்டு அரசாங்கத்தின் தலையில் பொறுப்பை சுமத்தி அதை நெருக்கி நம்மிஷ்டம்போல் செய்கின்றனையா இல்லையா என்று அதிகாரத் தோரணையில் கட்டளையிட்டு யோக்கிய மாகவும் நாணயமாகவும் நடக்கச் செய்ய வேண்டும்; அப்படிக்கில்லாமல் "நீ போனால் கலகமாகிவிடும் நான் போய் செருப்பிலடித்து விட்டு வந்து விடுகிறேன்" என்று ஒரு சமாதானக்காரன் சொன்னான் என்கின்ற பழமொழி போல் அரசாங்கத்தைப் பார்த்து, "உன்னால் அதை நடத்த முடியாது, என்னிடம் ஒப்புவி, நான் அதை பாழாக்கி விடுகிறேன்" என்பதாகச் சொல்லி அதன் தலையில் சுமத்த வேண்டிய பொறுப்புகளையெல்லாம் நம்ம தலையில் சுமத்திக்கொண்டு, காரியமும் சரியாய்ச் செய்ய முடியாமல் நாணயமாயும், நடக்க முடியாமல் நிர்வாகத்திற்கு சம்மந்தப்பட்டவர்கள் மாத்திரம் தம் தம் சுயநலத்திற்கு அவ்வுரிமைகளை உபயோகப்படுத்தி கொண்டு மக்கள் பணத்தையும் நலத்தையும் பாழாக்குவதில் என்ன பலன் என்றுதான் கேட்கின்றோம்.

இப்படி எழுதுகின்ற நாம் அனுபோகமில்லாமலாவது இது பெரும் பான்மையான விஷயமல்ல என்றாவது கருதி எழுதுகின்றோமில்லை முனிசிபல் சேர்மன் பதவி, ஜில்லா போர்டு மெம்பர், தாலூக்கா போர்டு மெம்பர், ஆனரரி மாஜிஸ்திரேட்டு மற்றும் சில சர்க்கார் சம்மந்தான பொது ஸ்தாபனம் ஆகியவைகளில் இருந்து கொண்டிருந்த போதும் சர்க்கார் அதிகாரிகள் அனாவசியமாயும் நாணயமற்ற தன்மையாயும் நமது ஆதிக்கத்தில் பிரவேசிக்கிறார்கள் என்பதை உணர்ந்து கண்டித்து அரசாங்கத்திற்கு எழுதியும், அரசாங்கத்தார் கவனிக்கவில்லை என்கின்ற காரணத்திற்காக மேல்கண்ட அவ்வளவு பதவிகளையும் ஒரே துண்டுத் தாளில் இராஜினாமா கொடுத்தோமானாலும், அந்த சர்க்கார் ஆக்கிரமிப்பு முதலிய அக்கிரமங்களைவிட ஜனப்பிரதிநிதிகளின் பெரும்பாலான நடவடிக்கைகள் குறிப்பிடதக்க அளவு மோசமாகவே இருக்கிறது. ஆதலால்



RangaRakes tamilnavarasam.com

ரயில்வே லைனின் நன்மையை பொருத்தவரையிலும் ஜனங்களின் நன்மையைப் பொருத்தவரையிலும் தஞ்சை ஜில்லா போர்டார் லைனை ரயில்வே போர்டுக்கு ஒப்புக்கொடுத்து விட்டதானது மிகவும் பாராட்டதக்க விஷயமேயாகும். இதில் மற்றொரு விஷயம் என்னவென்றால் இதனால் போர்டாருக்கு பொருளாதார விஷயத்திலும் எவ்வித கஷ்டமும் ஏற்பட வில்லை என்பது தெரிய வருவதால் தஞ்சை ஜில்லா போர்டார் பார்ப்பன விஷமப் பிரசாரத்திற்கும் பார்ப்பன பத்திரிகைகளின் அயோக்கியத் தனத்திற்கும் சற்றும் பயப்படாமல் தைரியமாய் இத்தீர்மானம் செய்ததை நாம் பாராட்டுகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 18.11.1928**



# "ரிவோல்ட்" ஆரம்ப விழா

## ஈரோட்டில் என்றுமில்லாத குதூகலமும் உணர்ச்சியும்

சகோதரர்களே! நம் பிராமணரல்லாதார் கக்ஷி எவ்வளவோ முக்கிய அடிப்படையான நோக்கங்களைப் பற்றி ஆரம்பிக்கப்பட்டிருப்பது நம் மாகாணத்தில் உள்ளவர்களுக்கு நன்கு தெரிந்ததே. ஆனால் வடநாட்டில் உள்ளவர்களுக்கு இந்த இயக்கத்தைப் பற்றி அறிந்து கொள்ள போதிய ஏது இல்லாததும் வட நாட்டினர் இவ்வியக்கத்தைப் பற்றிச் சிறப்பாக அறிந்து கொள்ளாமலிருப்பதும் அவ்வளவு ஆச்சரியமல்ல. சிறிது நாட்களுக்குமுன் இப்பக்கங்களுக்கு வந்திருந்த வடநாட்டுத் தலைவரில் ஒருவராகிய திரு வாளர் கோஸ்வாமி அவர்கள் சில நண்பர்களுடன் பேசிகொண்டிருக்கும் பொழுது திரு. கோஸ்வாமி கேட்டதாவது:- "என்ன, இம் மாகாணத்தில் முக்கியமாக 2,3 பேர்கள் சேர்ந்துகொண்டு, பிராமணரல்லாதார் கக்ஷி என்று வைத்துக் கொண்டு இருக்கிறார்களாமே? அதன் அர்த்தமென்ன? அது வேண்டியது அவசியம் தானா" என்று கேட்டார். ஏனென்றால் அவருக்கு தென்னாட்டின் சமாச்சாரமே தெரியாது.

உடனே நான் (ஈ.வெ.ரா) திரு. ஷண்முகம் செட்டியார் எம்.எல்.ஏ. அவர்களைக் காட்டி "இவர்களை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட் டேன். அதற்கு அவர் "ஆகா! நன்றாகத் தெரியும். நானும் அவரும் ஒரே கவுன்சிலில் மெம்பராக இருக்கின்றோம். தென்னிந்தியாவிலிருந்து வரும் கவுன்சிலர்களில் பேச்சு வன்மையிலும், அரசியல் ஞானத்திலும் திறமை பெற்றவர்" என்றார்.

நான் உடனே கோஸ்வாமியிடம் "இவர், இப்பக்கங்களில் உள்ள சில கோயில்களில் உள்ளே செல்லமுடியாத ஒரு தீண்டாதவராக கருதப்பட்டவர்" என்று சொன்னேன்.

உடனே கோஸ்வாமி பிரமித்து விட்டார்கள். இது உண்மைதானா வென்றும் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். பிறகு எல்லா விவரங்களையும் நம் இயக்கத்தின் நோக்கத்தையும் சொன்னோம். அவர்களும் அதை



RangaRakes tamilnavarasam.com

அங்கீகரித்தும் தங்களுக்கு இவ்விவரங்களெல்லாம் தெரிய வராது என்றும் எங்கள் வடநாட்டில் இப்படி எல்லாம் இல்லையென்றும் இவ்வியக்கம் அவசியம் என்றும் தாங்களும் ஒத்துழைப்பதாகவும் சொன்னார்கள். வட நாட்டிலுள்ளவர்களுக்கு நம்மியக்கம் இன்னதென்று தெரியமுடியாமல் இருப்பதால் நம் இங்கிலிஷ் வாரப்பத்திரிகை அவர்களுக்கு நம்இயக்கத்தின் நோக்கத்தை ஊட்டும், அந்த நோக்கமாகவே 'ரிவோல்ட்' வெளியாகிறது.

## நமது எதிரிகள்

முக்கியமாக நமக்கு எதிரிகள் பிராமணர்கள் என்று எண்ணி யிருந்தோம். ஆனால் அவர்கள் கூடுமானவரை எதிர்த்துப் பார்த்தார்கள், பின் தங்கள் பித்தலாட்டக் காரியம் இங்கே செல்லாது என்று கண்டு அவர்களே இவ்வியக்கம் அவசியம் வேண்டியது தான் என்று வெளியள விலாவது சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

ஆனால், நமக்கு எதிரிகள் நமக்குள்ளாகவே இருக்கிறார்கள். ஏறக்குறைய தென்னாட்டிலும், முக்கியமாக தமிழ் மக்களிடை நமது நோக்கம் எல்லாருக்கும் பிடித்திருக்கும். ஆனால் இது பிடியாதது யாருக்கு என்றால், நம்மவர்களிலே மதப் பைத்தியம் பிடித்தவர்களுக்கும், பண்டிதர் என்பவர்களுக்கும் 100 க்கு 90 பங்கு பிடியாது.

ஆனால் இப்பொழுது பிராமணர்கள் எவரும் நம்மை எதிர்க்க நேரில் வருவதே கிடையாது. ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள சில பிரமுகர்களும், தங்கள் கக்ஷியானது பிராமணர்களை உத்தியோகத்துக்கு வரவொட்டாமல் தடுத்து அந்த உத்தியோகங்களை நாம் வகிக்க வேண்டும் என்ற நோக்கங் கொண் டிருக்கின்றது என்று நினைக்கிறார்கள். அது மாதிரியே திரு. ஏ. ராமசாமி முதலியார் அவர்களும் தனக்கு ஒரு உத்தியோகமும், தன்னால் சிலருக்கு உத்தியோகவும் வாங்கிக் கொடுக்கக்கூடிய யோக்கியதையும் செல்வாக்கும் வந்தவுடன் தம் கக்ஷியின் முக்கிய நோக்கமாகிய வகுப்புவாரிப் பிரதிநிதித் துவமே (தனித்தொகுதியே) வேண்டாம் என்கின்றார்கள். நம் இயக்கத்தின் முக்கிய நோக்கமானது பழைய மூடபழக்க வழக்கங்களை அடியோடு ஒழிப்பது, வேதம், புராணம், இவைகளின் புரட்டுகளை வெளியிடுவது, நம் பகுத்தறிவை உபயோகித்து மேல் நாட்டார்களைப் போல் அநேக முன்னேறத் தக்க அற்புதங்களை கண்டு பிடிப்பதுமேயாகும். இந்த நோக்கத்தோடேயே இன்று ரிவோல்ட் பத்திரிகையைத் திறப்பதற்கு நம் இயக்கத்துக்கு ஒரு மணியாகிய திரு. நாடார் அவர்கள், அவர்களுடைய அநேக சிரமங் களுக்கிடையே இவ்விடம் விஜயம் செய்திருக்கிறார்கள். அவர்களைப்பற்றி நான் முன்பே முனிசிபல் வரவேற்பின் போதே சொன்னேன். அத்துடன் இவ்விழாவை நடத்திக் கொடுப்பதற்கு தலைமை வகிக்கும்படி நமது ஜில்லா



RangaRakes

தலைவரும் நம் நண்பருமான திரு. சி.எஸ். ரத்ன சபாபதி முதலியார் எம்.எல்.சி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு : 06.11.1928 ஆம் நாள் ஈரோட்டில் 'ரிவோல்ட்' ஆரம்ப விழா சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 18.11.1928**



tamilnavarasam.com

# இதற்கு என்ன வால் என்று பெயர்

திரு. நேரு, திரு சீனிவாசய்யங்கார் ஆகிய இருவரையும் ஆதரிப்பவர்களுக்கு வௌவால் என்கின்ற பெயரானால், திரு. நேருவும், திரு சீனிவாசய்யங்காரும், திரு. பெசண்டம்மையும் ஆகிய மூவரை திருட்டுத் தனமாக ஆதரிப்பதற்கு என்ன வால் என்று சொல்லுவது?

**குடி அரசு - சிறு குறிப்பு - 18.11.1928**



# கோவையில் சர்வகக்ஷி மகாநாடு

கோயமுத்தூரில் இம்மாதம் 23-ஆம் தேதி அகில இந்திய சர்வகக்ஷி மகாநாட்டு அரசியல் திட்டம் என்பதைப் பற்றி யோசிக்க ஒரு சர்வகக்ஷி மகாநாடு கூடப் போகின்றது. அதற்கு காரியதரிசி திரு. R.K. ஷண்முகம் செட்டியார் M.L.A. அவர்களாவார்கள். அதன் வரவேற்புத் தலைவர் திரு. C.S. இரத்தினசபாபதி முதலியாரவர்கள் M.L.C. ஆவார்கள். மகாநாட்டு தலைவர் சென்னை திரு. சாமி வெங்கிடாசலம் செட்டியார் M.L.C. ஆவார்கள்.

எனவே மேல் கண்ட மூன்று கனவான்களும் பார்ப்பனரல்லாதார் என்பதில் நாம் எவ்வித ஆக்ஷேபனையும் சொல்ல முடியாது. ஆனால் பார்ப்பனர்களுக்கும் பாமர ஓட்டர்களுக்கும் பயப்படாமல் தைரியமாய் தங்கள் சமூகத்திற்கும் தங்கள் நாட்டின் ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூகத்திற்கும் உண்மையான யோக்கியமான பிரதிநிதிகளாய் இருந்து அவர்களின் கஷ்ட நஷ்டம் முதலிய கொடுமைகளை தைரியமாய் எடுத்துச் சொல்லி அதற்கு வேண்டியதை வலியுறுத்துவார்களா? என்பவைகளை மாத்திரம் மகாநாட்டின் நடைமுறைகளுக்குப் பின் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது என்றாலும் இன்னிலையில் அம்மூன்று கனவான்களையாவது உத்தேசித்து மகாநாட்டுக்கு எல்லோரும் போய் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை தாராளமாய்ச் சொல்வதற்கும் வலியுறுத்துவதற்கும் முடியாமல் போனாலும்கூட சாக்ஷியினராகவாவது சென்று அக்கனவான்களை கௌரவப்படுத்த வேண்டுகின்றோம்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 18.11.1928**



RangaRakes

tamilnavarasam.com

# மூடர்களுக்கு இந்தியா மாத்திரந்தான் சொந்தமா?

மேல்நாட்டில் கூட சிலர் சுவாமி என்றும் மோக்ஷம் என்றும் நரகம் என்றும் சூக்ஷூம சரீரம் என்றும் சொல்லுகின்றார்களென்றும் ஆதலால் அவைகள் நிஜம் என்றும் ஒரு 'சூக்ஷூம சரீரக் காரர்' தனது பத்திரிகையில் எழுதுகிறார். நாம் அதற்கு ஒரு பதில் தான் சொல்லக்கூடும். அது, முட்டாள்களுக்கும் அயோக்கியர்களுக்கும் இந்தியாவும் சிறப்பாக தமிழ் நாடும் மாத்திரம் சொந்தமா? என்பதுதான்.

**குடி அரசு - சிறு குறிப்பு - 18.11.1928**



# கார்பொரேஷன் தலைவர்

சென்னை கார்ப்பரேஷன் தலைவர் தேர்தலில் திரு. ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் வெற்றி பெற்றார் என்ற சேதியைக் கேட்டு மகிழ்ச்சி யடையாத உண்மைத் தமிழ் மக்கள் இந்நாட்டில் இருக்க மாட்டார்கள் என்றே நினைக்கின்றோம். தவிர இந்த முடிவானது சென்ற வருஷம் முதலே உறுதியாய் எதிர்பார்த்த முடிவாகும். மேலும் இந்த முடிவானது, சென்னை பார்ப்பனர்கள் தங்களுக்குள்ளாகவோ தங்கள் அடிமைகளுக்குள்ளாகவோ காங்கிரஸ் வேஷத்தாலோ தேசீய வேஷத்தாலோ யாரையும் நிறுத்த முடியாமல் போனதைப் பொருத்தவரையில் பார்ப்பனரல்லாதாருக்கு ஒரு பெரிய வெற்றியானாலும் ஜஸ்டிஸ் கட்சியில் கட்சிப் பிளவை உண்டாக்கும் வேலையில் கரும் பார்ப்பனர்களும் வெள்ளைப் பார்ப்பனர்களும் ஒருவாறு வெற்றிபெற்று விட்டார்கள் என்றே சொல்லவேண்டும். திரு. ராமசாமி முதலியாருக்கு ஏற்பட்ட வெற்றியின் சந்தோஷத்தைவிட ஒரே கட்சியில் ஏற்பட்ட அபிப்பிராயபேதம் வருந்தத்தக்கதேயாகும் என்றாலும் திரு. ராமசாமி முதலியார் அவர்களை தலைவராகக் கொண்ட சென்னை கார்ப்பொ ரேஷனை நாம் பாராட்டாமலிருக்க முடியாது. சென்னை கார்ப்பொ ரேஷனுக்கு இதுவரை இருந்த கெட்ட பெயரும் இழிவும் திரு முதலியார் காலத்தில் மாறி அதற்கு ஒரு கௌரவம் ஏற்படும் என்று எதிர்பார்க் கின்றோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 18.11.1928**



RangaRakes tamilnavarasam.com

# லாலா லஜபதி

திருவாளர் பஞ்சாப் லாலா லஜபதிராய் அவர்கள் தமிழ்நாட்டை வந்து நேரில் பார்த்து விட்டு போன பிறகு சென்னை உலகம் என்று "தியாக பூமி"யில் ஒரு வியாசம் எழுதியதை சோழவந்தான் திரு. முனகால் பட்டா பிராமய்யர் அவர்கள் மொழிபெயர்த்து பிரசுரிக்க அனுப்பியிருந்ததை எளிய நடையில் மற்றொரு பக்கம் பிரசுரித்திருக்கின்றோம். அதில் சென்னை அரசியலைப் பற்றியும் கோயில், குளம், புராணம், பண்டிதர்கள், தலைவர்கள் ஆகியவைகளின் யோக்கியதைகளைப் பற்றியும் நன்றாய் விளக்கியிருக் கின்றார். எனவே வாசகர்கள் தயவு செய்து பொறுமையுடன் ஷை விஷயம் முழுதையும் படித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 18.11.1928**



# சம்மத வயது விசாரணையின் அதிசயம்

ஆண் பெண் மக்களின் கல்யாண வயதைப் பற்றியும், கலவி வயதைப் பற்றியும் சட்டத்தின் மூலம் ஒரு நிபந்தனை ஏற்படுத்த வேண்டி பொது மக்களின் கருத்தை அறிவதற்கு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அது பல மாகாணங்களில் விசாரணை செய்து விட்டு இப்போது நமது மாகாணத்தில் விசாரணை நடைபெறுகின்றது.

இவ்விசாரணையின் மூலம் முடிவில் ஏற்படப் போகும் நன்மையை விட விசாரணை நடுவில் வெளிப்படும் பல அதிசயங்கள் மக்களின் பொது அறிவிற்கு மிகவும் பயன்படுமென்று கருதுகின்றோம். விசாரணை துவக்கத்திலிருந்து நாம் மேல் வாரியாகத்தான் கவனிக்க முடிந்தது. அநேக சாக்ஷிகள் வாக்குமூலத்தை நாம் படிக்கவே இல்லை. என்றாலும் சில விஷயங்கள் வெளியானது நமது தகவலுக்கு வந்தது. அவைகளில் மிகவும் கவனிக்கத்தக்கவை என்னவெனில், பெண்கள் பக்குவமடைந்த பிறகு வீட்டில் வைத்திருந்தால் அவர்களது கற்புக்கு இடையூறு ஏற்படும் என்றும் பூப்பு அடைந்தவுடன் பெண்களுக்கு கலவி இச்சை ஏற்பட்டு விடுகின்றது என்றும், அதற்கு உடனே பரிகாரம் செய்யாவிட்டால் மோசம் வந்துவிடும் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். இவர்கள் யார் என்று பார்த்தால் வருணா சிரம பார்ப்பனர்கள். அதாவது திரு. டி.ஆர். ராமச்சந்திர அய்யரும், திரு. எம்.கே. ஆச்சாரியாரும் மற்றும் இவர்கள் போன்றவர்களுமாவார்கள். ஆனால் இவர்களால் சொல்லப்பட்ட இந்த விஷயங்கள் ஒரு சமயம் தப்பா யிருக்கலாம் என்பதாக அவர்களாலேயே ஒப்புக்கொள்ளச் செய்தாலும் கூட மற்றொரு விஷயத்தைப் பொருத்து பெண்களுக்கு கட்டாயம் பூப்புக்கு முன்புதான் விவாகம் செய்தாக வேண்டும் என்று வாதிக்க வேறு காரணங் களையும் கொண்டவர்கள். அதாவது இந்துமத சம்பிரதாயப்படி ஏற்பட்ட வேத சாஸ்திர ஸ்மிருதிகளின் படிதான் நடந்தாக வேண்டுமே ஒழிய வேறு எந்த புது மார்க்கத்துக்கும் அது எவ்வளவு மேன்மை தரத்தக்கதானாலும் அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்கின்ற கொள்கைகளாகும். மற்றும் பெண்கள் விஷயத்தில் ஆண்களைப் பொறுத்த விஷயமாக மாத்திரம் அல்லாமல் பெண்கள் ஆண்களைப் போல் சொத்து உடையவர்களா யிருப்பதும், கல்வி உடையவர்களாயிருப்பதும், வாழ்க்கையில் சுதந்திரம்



RangaRakes tamilnavarasam.com

உடையவர்களாயிருப்பதும் ஆகிய அநேக விஷயங்களிலும் மாறுபட்ட அபிப்ராயமுடையவர்கள் - இம்மாறுபாடான அபிப்பிராயத்தையும் மேல் கண்ட மதம், வேதம், சாஸ்திர ஸ்மிருதி ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டே வற்புறுத்துகின்றவர்கள்.

எனவே இந்த நிலைமையில் நமது கடமை என்ன என்று பார்ப்போமானால் இப்படிப்பட்ட விஷயத்தில் அதாவது மதம், சாஸ்திரம், ஸ்மிருதி என்னும் விஷயத்தில் உண்மையான விஸ்வாசம் கொண்டு அவைகளை பக்திபூர்வமாய் அனுசரித்து வருகின்றவர்கள் விஷயத்தில் நாம் நிர்ப்பந்தப் படுவதைப் பற்றி சற்று நிதானிக்க வேண்டியது தான். அதுவும் அந்த விஷயத்தின் தன்மையைப் பொறுத்ததேயாகும். ஆனால் இந்த கனவான்கள் திருவாளர்கள் டி. ஆர். ராமச்சந்திர அய்யர், எம்.கே. ஆச்சாரியார் போன்றவர்கள் எவ்வளவு தூரம் மதம், வேதம், சாஸ்திரம் ஸ்மிருதி ஆகியவைகளில் விசுவாசம் உடையவர்கள் பக்தி உடையவர்கள் என்பதை வாசகர்கள்தான் உணரவேண்டும். திரு.டி.ஆர்.ராமச்சந்திரய்யர் ஒரு வக்கீல். வக்கீலுக்கு எவ்வளவு தூரம் வேதம், மதம், சாஸ்திரம் ஸ்மிருதிகட்கு கட்டுப்பட்டு யோக்கியமாய் நடந்து கொள்ள சௌகரியம் உண்டு என்பதைப் பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அன்றியும் அவர் தன்னை ஒரு வருணாசிரம பார்ப்பனர் என்று சொல்லிக் கொள்ளுபவர். பிராமணன் என்பவனுக்கு அவர் குறிப்பிடும் வேத சாஸ்திர ஸ்மிருதிகள் எவ்வளவு நிபந்தனைகள் விதித்திருக்கின்றனவோ அவைகளை திரு ராமச்சந்திர அய்யர் எவ்வளவு தூரம் அனுசரிக்கின்றார் என்பதையும் வாசகர்களுக்கே விட்டுவிடுகின்றோம். அதுபோலவே திரு. எம். கே. ஆச்சாரியாருடைய பார்ப்பனத் தன்மையையும் நாணயத்தையும் யோக்கியப் பொறுப்பையும் நாம் வாசகர்களுக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. சுருக்கமாய்ச் சொன்னால் திரு. ஆச்சாரியார் யோக்கியமாகவோ நாணயமாகவோ நடந்து கொண்ட சமயத்தைப் பார்க்கும் பாக்கியமே நமக்கு வாய்க்கவில்லை. எனவே வேத சாஸ்திர ஸ்மிருதிகளில் தாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி கவலை ஒரு சிறிதும் இல்லாமல் மற்றவர் தங்களிடத்தில் நடந்து கொள்ள வேண்டிய நிபந்தனையை மாத்திரம் வலியுறுத்தலுக்கு மதிப்பு கொடுக்க வேண்டுமா? அல்லது அவர்களின் யோக்கியப் பொறுப்பில் மற்றவர்கள் நம்பிக்கை வைக்க வேண்டுமா? என்று கேட்கின்றோம், நமது நாட்டில் வேதப்பிராமணர்கள், தெய்வ பிராமணர்கள் என்கின்ற பாத்தியதை கொண்டாடும் பார்ப்பனர்களிடத்தில் இல்லாத எந்த அக்கிரமமாவது வேறு ஒருவரிடம் தனியாகக் காணக்கூடியது ஏதாவது இருக்கிறதா என்று கேட்கின்றோம்.

ஆதலால் எந்தப் பார்ப்பனர்களானாலும் சரி, வேதம், மதம், சாஸ்திரம், ஸ்மிருதி என்பதாக சொல்லிக் கொண்டு நம்மிடம் வந்தோ அல்லது அதைக் கொண்டு வந்து நம் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாகப்



போட்டுவிட்டோ நிற்பார்களானால், அவர்களை லக்ஷியம் செய்யாமல் உதறித் தள்ளிவிட்டு லக்ஷியம் நாம் செய்யவேண்டியவைகளை செய்து கொண்டு போக வேண்டியது என்பது தான் நமது யோசனையாகும். பெண்களுக்கு சொத்தும் உரிமையும் பருவம் வந்தபிறகு தன்னிஷ்டப்படி காரியங்களை தெரிந்தெடுத்துக் கொள்ளும் உரிமையும் வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி பெண்களைக் கேட்டால் நியாயம் தெரிய முடியுமா அல்லது அவர்களை அடிமையாக்கி வைத்திருப்பவர்களிடமும் அவர்களை தங்கள் சுயநலத்திற்காக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கின்றவர்களிடமும் கேட்டால் நியாயம் தெரிய முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள். எனவே அவர்களின் சொத்துரிமையை பற்றியும் கணவனை தெரிந்தெடுப்பதைப் பற்றியும் இப்பொழுது இந்த வியாசத்தில் விவரிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி இதை விட்டு விட்டு மற்ற விஷயங்களை ஆராய்வோம்.

“ஒரு பெண்பூப்பு நிகழ்ந்த உடன் புருஷ இச்சை அடைகிறாள்” என்றும் “பூப்பு நிகழ்ந்த பிறகு புருஷனில்லாவிட்டால் கற்பு இழக்கின்றாள்” என்றும் சொல்லுவதானால் பூப்பு நிகழ்ந்து 2,3,4,5 வருஷமாக கல்யாணம் இல்லாமல் இருக்கும் பெண்கள் எல்லாம் கற்பு இழந்திருப்பவர்கள் என்று தானே கொள்ளவேண்டும்.

அப்படியானால் கல்யாணம் ஆகி பூப்பு நிகழும் முன்போ பூப்பு நிகழ்ந்து புருஷனுடன் கொஞ்சகாலமோ அதிக காலமோ வாழ்ந்த பிறகோ புருஷனை இழந்த பெண்கள் விஷயத்தில் என்ன நினைப்பது என்பதற்கு இவர்கள் என்ன சமாதானம் சொல்லுவார்கள் என்றுதான் கேட்கின்றோம். ஒரு சமயம் மேல் குறிப்பிட்ட விதவைகள் என்பவர்களை இவர்கள் கற்பு இழக்க முடியாமல் பந்தோபஸ்தாக வைத்திருப்பதாக சொல்லுவார்களானால் அந்தப்படியே இந்த இளங் குழந்தைகளையும் பந்தோபஸ்தாக வைத்திருப்பதில் என்ன கஷ்டம்? விதவைகளை பந்தோபஸ்தாக வைப்பதை விட குழந்தைகளை பந்தோபஸ்தாக வைப்பது வெகு சுலபம் என்றே சொல்லுவோம், ஏனெனில் ‘கற்பைக் கெடுத்துக் கொள்ள’ விதவைகளுக்கு இருக்கும் சவுகரியம் குழந்தைகளுக்கு இல்லை. அன்றியும் அவர்களை பந்தோபஸ்தாக வைத்திருக்கவேண்டிய அத்தனை காலம் அதாவது அவர்கள் சாகும்வரை வைத்திருப்பதை விட குழந்தைகளை 2,3 வருஷம் மாத்திரம் வைத்திருந்தால் போதுமல்லவா? அப்படிக்கில்லாமல் ஒருசமயம் விதவைகள் விஷயத்தில் எப்படியோ போனால் போகட்டும் என்று விட்டு விட்டு இருக்கின்றோம் என்பார்களானால் இவர்களுக்கு இந்த குழந்தைகள் விஷயத்தில் அந்த நியாயம் ஏன் பாதிக்குமோ தெரியவில்லை. விதவைகள் என்பவர்களும் குழந்தைகள் சகோதரிகள் என்கின்ற முறையுள்ளவர்கள் தானே? இவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லுவது மிகுதியும் ஆபாசமான விஷயங்கள் என்றாலும் நம் நாட்டில் பார்ப்பனர்கள் என்பவர்கள் எவ்வளவு



RangaRakes tamilnavarasam.com

தூரம் மனிதத்தன்மைக்கும் முற்போக்குக்கும் இடையூறான கொள்கைகள் கொண்டவர்களாய் இருக்கின்றார்கள் என்பதை தெரிவிக்க வேண்டியே இவற்றை குறிப்பிட்டுத் தீரவேண்டியிருக்கிறது. இவர்கள் தங்கள் நடவடிக்கை களைப் பற்றி கவனம் செலுத்தாமல் பெண்கள் விஷயத்தில் மாத்திரம் இப்படி அநியாயமான நிர்ப்பந்தங்கள் சுமத்தப்படுவதைப் பார்க்கும் போதும் பெண்களை அடிமைப்படுத்திக் கொடுமைப் படுத்த மாத்திரம் வேதமும் சாஸ்திரமும் கையாளப்படுவதை பார்க்கும் போதும் இதற்கு சமாதானமாக நியாயங்கள் சொல்லிக் கொண்டிருப்பது வீண் கால தாமதமும் உபயோகமற்ற வேலையும் ஆகும் என்பதுதான் நமது முடிவான அபிப்பி ராயம். ஏனெனில் எந்தக் காரணத்தைக் கொண்டும் இக்கூட்டத்தாரைத் திருத்த முடியவே முடியாது. ஏன் என்றால் எல்லாம் தெரிந்தே வேண்டுமென்றே செய்பவர்கள். மற்றபடி ஏதாவது செய்ய வேண்டுமானால் எதேச்சாதிகாரத்துடன் சட்டம் செய்யும் சக்தி உள்ள ஒரு அரசாங்கத்தைத் தோற்றுவிக்க வேண்டும். அப்படி செய்யமுடியாவிட்டால் எல்லாவிதக் கட்டுப்பாட்டையும் அடியோடு உடைத்தெறிய ஏற்பாடு செய்ய வேண்டும் அப்படிக்கில்லாமல் செய்யும் முயற்சிகள் எல்லாம் வீண் “கொக்கு பிடிக்கும்” முயற்சியேயாகும்.

கொஞ்ச நாளைக்கு முன்பு பெண்கள் விடுதலையைக் குறிக்கொண்டு சித்திரபுத்திரனால் “கற்பு” என்னும் ஒரு வியாசமும், “பெண் விடுதலை வேண்டுமானால் ஆண்மை அழிய வேண்டும்” என்று ஒரு வியாசமும் எழுதப்பட்டதை வாசகர்கள் படித்திருக்கலாம். அதைப் பற்றி பல நண்பர்கள் தங்கள் கசப்பையும் தெரிவித்தார்கள். ஆனால் அதில் கண்ட ஒரு அபிப்பிராயத்தையே இப்போது சர். பி. சிவசாமி அய்யர் என்கின்ற ஒரு பார்ப்பனர் ஒருவாறு தெரிவிக்கின்றார். அதாவது “பெண்கள் பிள்ளை பெறுவதை மட்டுப்படுத்த வேண்டும்”-என்பதைப்பற்றி இவர் சமீபத்தில் பெங்களூரில் சர், விஸ்வேஸ்வரய்யாவின் தலைமையில் பல பெரியோர்கள் முன்னிலையில் செய்த ஒரு உபன்யாசத்தில் பேசியிருக்கின்றார். ஆனால் பெண்கள் பிள்ளை பெறுவதை கட்டுப்படுத்துவதற்கு அவர் சொல்லி யிருக்கும் சாதனம் என்னவென்றால் கலவியில் பெண்களை ஒருவித கருவியை உபயோகப்படுத்திக் கொள்ளும்படி யோசனை சொல்லியிருக் கின்றார். நாம் சொல்லும் விஷயங்கள் சிற்சில சமயங்களில் சிலருக்கு அதிசயமாகவோ அல்லது வேறு பொறுப்பற்றதாகவோ காணப்படுவதை நாம் ஒருவாறு உணருகின்றோம் . ஆனாலும் அப்பேர்ப்பட்டவர்கள் கண் களுக்கு நாம் ஒருவர் மாத்திரம் தனியாய் தோன்றிக் கொண்டிருக்கும்படி இல்லாமல் அவர்களாலேயே மதிக்கத்தக்க வேறு சிலரும் நம்மோடு சேர்ந்து தோன்றி விடுகின்றார்கள் என்பது நமக்கு சில சமயங்களில் ஆறுதலை உண்டாக்கிவிடுகின்றது.

**குடி அரசு - தலையங்கம் - 25.11.1928**



# திரு. சௌந்திர பாண்டிய நாடாருக்கு வாழ்த்து

## என்றும் கண்டிராத காக்ஷி

கனவான்களே,

சில உபசாரப் பத்திரங்களிலும் திரு. சௌந்திரபாண்டிய நாடார் அவர்கள் வாக்கியங்களிலும் இப்பதவி அவருக்குக் கிடைத்ததற்கு திரு. ராஜனும் நானும் பொறுப்பாளிகள் என்று கண்டிருக்கின்றது. அதை நான் ஒருவாறு வணக்கத்துடன் மறுக்கின்றேன். திரு. ராசன் அவர்கள் பொறுப்பாளி என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. உங்களோடு சேர்ந்து நானும் அவருக்கு நன்றி செலுத்துகின்றேன். ஒரு விதத்தில் நான் எப்படி பொறுப்பு டையவன் என்றால் திரு. சௌந்திரபாண்டிய நாடார் அவர்கள் தம்முடைய மற்ற காரியங்களையும் தொண்டுகளையும் கெடுத்துவிடும் எனக்கருதி தமக்கு இப்பதவி வேண்டாம் என்று சொல்லி மறுத்துவிட்டபோது, நான் கண்டிப்பாய் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டுமென்று உற்ற நண்பர் என்கின்ற முறையில் அவருக்கு கட்டளை இட்டு கட்டாயப்படுத்தினேன். அதைத்தவிர எனக்கு வேறு சம்பந்தம் கிடையாது. ஆகையால் அப்புகழுரைகள் திரு. ராஜன் அவர்களுக்கே உரியது. இந்த சந்தர்ப்பத்தில் திரு. நாடார் அவர்களுக்கு நான் சொல்லுவதெல்லாம் இந்த ஜில்லா போர்டு பதவியை நிர்வகிப்பதில் எல்லோரையும் திருப்தி பண்ண வேண்டும் என்றாவது எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக வேண்டு யென்றாவது கருதிக்கொண்டு ஒரு காரியமும் செய்ய வேண்டாமென்றே சொல்லுகிறேன்.

ஏனெனில், அது முடியாத காரியம் - ஒரு சமயம் முடிவதாயிருந் தாலும் அது யோக்கியமான மனிதனின் காரியமாகாது. ஒரு சமயம் யோக்கி யமான மனிதனுக்கும் சாத்தியப்படுமானாலும் அதனால் நன்மையை விட கெடுதியே அதிகமாகும். மக்களில் பலதிறமுண்டு - யோக்கியனும் அயோக் கியனும் உண்டு - இருவரையும் திருப்தி செய்யக் கருதுவது நாணயமாகாது. ஆதலால் அடியோடு கஷ்டப்படுகின்றவர்களுக்கு நன்மை செய்வதின் மூலம் சுகப்படுபவர்களுடைய ஆசையும் அனுபவமும் சற்று குறைந்தாலும் குற்றமில்லை. நான் பொதுவாக இம்மாதிரி பதவி பெறுபவர்களை பாராட்டுகிற



RangaRakes tamilnavarasam.com

வழக்கமில்லை. ஆனால் திரு. நாடாரைப் பாராட்டுகின்ற காரணம் எல்லாம் அவர் கொடுமைப்படுத்தப்பட்ட கூட்டத்தைச் சேர்ந்தவர் என்றும் அவரிலும் அதிகமாய்க் கொடுமைப்படுத்தப்பட்ட மக்கள் ஏராளமாய் நமது நாட்டில் வதைக்கப்படுகின்றார்கள் என்றும் அவர்களுக்கு விடுதலையும் சாந்தியும் ஏற்பட கொடுமையை அனுபவித்த ஒருவருக்கு பதவி கிடைப்பது அனுகூலமானதென்றும் அந்த வழியில் நாடார் மன உறுதியோடு உழைப்பார் என்றும் நம்பி அவர் அடைந்த பதவியில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஏற்படப் போகும் நன்மையை உத்தேசித்து அவர்களைப் பாராட்டும் முறையில் இவர்களைப் பாராட்டுகின்றேன் என்றும் திரு. நாடார் அந்தத் துறையில் உறுதியுடன் நின்று இந்தக் காரியத்தை நடத்தத் தாட்சண்யமோ பயமோ சுயநலமோ பொது ஜனங்களிடம் கீர்த்தி பெற முடியாதே என்கின்ற சந்தேகமோ தோன்றுமானால் தயவு செய்து அந்த க்ஷணமே அந்த வேலையை இராஜீனாமாக் கொடுத்து விட்டு வெளியில் வந்து இப்போது செய்கின்ற தொண்டே செய்ய வேண்டுமென்றும் சொல்லுகின்றேன்.

*குறிப்பு : 23.11.1928 இல் இராமநாதபுரம் ஜில்லா போர்டுக்குத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. ஊ.பு.அ.சௌந்திரபாண்டியனார் அவர்களுக்கு விருதுநகர் பொதுமக்களால் நடத்தப் பெற்ற பாராட்டுக்கூட்டத்தில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 25.11.1928**



# சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு

தென்னிந்திய சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு சென்னை விக்டோரியா மண்டபத்தில் திருவாளர் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் தலைமையில் நடந்தேறிய விபரமும் தலைவர் உபன்யாசமும் மற்றும் பல விபரங்களும் நிறைவேற் றப்பட்ட தீர்மானங்களும் இத்துடன் வரும் அநுபந்தத்தில் காணலாம்.

அக்கிராசன உபன்யாசத்தில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களில் சீர்திருத்தக்காரர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயங்களும், சீர்திருத்தம் செய்யப்படவேண்டிய விஷயங்களும், செய்யவேண்டிய முறைகளும், தெளிவாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன.

முதலாவதாக, அக்கிராசனர் தாம் சீர்திருத்தத்தில் நம்பிக்கையுடைய வரல்ல வென்றும் அழிவு வேலையிலேயே நம்பிக்கையுடையவ ரென்றும், அதாவது ஒன்றை மாற்றியோ அல்லது யெடுத்துவிட்டோ அந்த ஸ்தானத்தில் மற்றொன்றை வைக்க வேண்டுமென்கிற விஷயத்தில் கவலை யில்லாதவரென்றும், அவசியமில்லாததும் கொடுமை விளைவிப்பதுமான விஷயங்களை அழித்து விட வேண்டியது என்கின்ற கருத்தின் பேரில் கவலை கொண்டிருக்கும் அழிவு வேலைக்காரரென்றும் சொல்லியிருக் கிறார்.

அதற்கேற்ப இப்போது சமுதாய முற்போக்குக்கும் சமத்துவத்திற்கும் விடுதலைக்கும் புதிதாக நாம் கைக்கொள்ளவேண்டியது என்னவென்றால், அறிவு வளர்ச்சிக்கும் சமத்துவத்திற்கும் தடையாய் இருப்பவைகளை அழித்து விட வேண்டுமென்பதேயாகும். இவ்விதம் அழிவு வேலை மூலம் தடைகளை நீக்கிவிட்டால் தானாகவே முற்போக்குக்கு சரியான பாதை ஏற்பட்டு விடும் என்பது அதில் நன்றாய் அறியக்கிடக்கிறது. இந்தக் குறிப் பானது "இருப்பதை எடுத்துவிட்டால் வேறொன்று வேண்டாமா?" என்று ஆலோசனை இல்லாமல் பிதற்றிக் கொண்டிருக்கிற விதண்டாவாதிகளுக்கும் பாமர மக்களை ஏய்ப்பதற்குச் சில சுயநலவாதிகள் "நாய்க்கர் எல்லா வற்றையும் அடியோடு அழிக்க வேண்டுமென்கிறாரே, அப்படி அழித்து விட்டால் மக்களுக்கு வேறு கதியென்ன?" என்று நீலிக்கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கும் பாஷாண்டிகளுக்கும் தக்க பதிலாகும்.



RangaRakes tamilnavarasam.com

மற்றும் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னால் நடந்து வந்த சீர்திருத்தங்கள் பலிக்காமல் தடைபட்டு போனதற்குக் காரணம், மேல் குறிப்பிட்டதான தடைகளாயிருப்பவைகளை சரியானபடி வேருடன் களைந்தெறிவதான அழிவு வேலை செய்யாததுதான் காரணம் என்றும் தற்காலத்தில் செய்யப்படுவதாய்ச் சொல்லப்படுவதெல்லாம் புரட்டும் சுயநலமும் அடிப்படையாய் கொண்டதென்றும், சீர்திருத்தத்திற்கு விரோதிகளாய் உள்ள உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்களாலும் "சித்தாந்தக்காரர்" களாலுமே நடைபெற்று வந்ததென்றும் தெளிவாய் எடுத்துக் கூறியிருப்பதிலிருந்து நமது நாடு உண்மையான சீர்திருத்தமடையாமல் போனதற்குக் காரணம் விளங்கும் மற்றும்.

"கபிலரை ஏமாற்றி விட்டோம், புத்தரை ஏமாற்றி விட்டோம் கூன் பாண்டியனை ஏமாற்றி விட்டோம், மூவேந்தர்களை அழித்து விட்டோம், மகமதிய அரசாங்கத்தை ஒழித்து விட்டோம், நாயக்கர் அரசாங்கத்தை பாழ்படுத்தி விட்டோம், கம்பனைக் கொண்டே எங்களைக் கடவுளாகவும் தேவர்களாவும் செய்து கொண்டோம். இப்படிப்பட்ட எங்களுக்கு சில பார்ப்பனரல்லாத கூலிகளைப் பிடித்தே இப்புதிய சீர்திருத்த இயக்கத்தை ஒழித்து எங்கள் ஆதிக்கத்தை பழையபடி நிலைநிறுத்திக் கொள்ளச் செய்வதுதானா ஒரு பிரமாதமான காரியம்" என்று மனப்பால் குடித்துக் கொண்டு இறுமாந்து ஆணவமாய் பிதற்றித் திரிபவர்களுக்கு, அக்கிராசனர் உபந்நியாசத்தில் "அந்தக் காலமும் சவுகர்யமும் அப்போதைய அரசாங்கத்தின் யோக்கிதையும் வேறு, இந்தக் காலமும் இப்போதைய அரசாங்கமும் சீர்திருத்தம் செய்யவோ அழிவு வேலை செய்யவோ விருப்பம் கொண்டவர்களுடைய சவுகரியமும் வேறு" என்று சொல்லியிருப்பது தக்க பதிலாகும். இப்போதைய இயக்கம், அடிக்க அடிக்க எழும்பும் பந்து போலவும், வெட்ட வெட்ட தளிரும் கொடிகள் போலவும் பரவிவிட்டது, கொஞ்ச காலத்திற்கு முன் ஒருவர் எழுதியது போல், அதாவது "எங்களுக்கு இச்சுயமரியாதை இயக்கம் கண்களை திறந்து விட்டது. இனி எவர் தடுத்தாலும், இந்த இராமசாமி நாயக்கரே மாறி விட்டாலும், இந்த உணர்ச்சியை அடக்கிவிடமுடியாது" என்று எழுதியதுபோல் இனி என்றைக்கும் இவ்வியக்கமும் இந்த உணர்ச்சியும் மறையாது என்பதையும் யாரும் அழிக்க முடியாது என்பதையும் வெள்ளிடை மலைபோல் விளக்கி விட்டது.

மற்றபடி பெண்கள் விடுதலைக்கு தடையான அர்த்தமற்ற கற்பும், சம்மதமற்ற விதவைத்தன்மையும் அழிக்கப்படவேண்டும் என்றும், அவைகள் அழிக்கப்படத்தக்க முறைகளும், அதாவது புருஷன் என்பவன், "பழைய சாதம் சுடுகிறது, விசிறி கொண்டு வீசு" என்றால் உடனே பெண்ஜாதி என்பவள் விசிறிகொண்டு வீச வேண்டியதுதான் கற்பு என்றும், பெண் ஜாதி என்பவள், கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கும் போது புருஷன் என்பவன் கூப்பிட்டால், திடீரென்று சேந்தும் கயிற்றை விட்டு விட்டு



RangaRakes

ஓடிவரவேண்டுமென்றும், ஓடி வந்தால் மாத்திரம் போதாது கிணற்றில் கயிறும் பாத்திரமும் அந்தரமாய் தொங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்றும், அப்படி தொங்கிக் கொண்டிருந்தால் தான் கற்பு உள்ளவள், பதிவிரதையானவள் என்றும் சொல்வதான கற்பையும் பதிவிரதா தன்மையையும் அடியோடு ஒழித்தாக வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதும், விதவைகளுக்கு அவர்கள் தாய் தகப்பன்மாரோ அல்லது சுற்றத்தார்களோ மறு கல்யாணம் செய்து வைக்காவிட்டால், அவ்விதவைகள் தங்களுக்கு இஷ்டமான கணவரை தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டியது என்றும், புருஷனுடன் வாழும் மற்ற பெண்களும் இதற்கு உதவி செய்து விதவை களை கணவனுடன் வாழச் செய்ய அனுகூலமாகயிருக்க வேண்டும் என்றும் சொல்லியிருப்பது குறிப்பிடத்தக்கது. அது மாத்திரமன்றி,

குறுகிய நோக்கங்கொண்டோ அல்லது விஷம புத்தி கொண்டோ, "பெண்கள் எப்படி வேண்டுமானாலும் ஒழுக்க ஈனமாய் நடந்து கொள்ளலாமா" என்று கேட்பவர்களுக்கும் சமாதானமாக, அதாவது "கணவன் மனைவி என்பதாக இருவர் சேர்ந்து இல்வாழ்க்கை நடத்துவதற்காக செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பலனாகவோ காதலன் , காதலி என்கின்ற முறையில் இருவர்களின் காதல் இன்பத்தின் பயனாகவோ இருவரையும் சம நிபந்தனை கொண்ட கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு இருக்கக்கட்டினாலும் அது எவ்விதத்திலும் பெண்கள் விடுதலைக்கு இடையூறாக இருக்காது" என்று சொல்லியிருப்பதும் மிகவும் குறிப்பிடத்தக்கது.

மற்றபடி, விதவைகள் என்னும் கொடுமைப்படுத்தப்பட்டவர்கள் விஷயத்திலும் " அவர்கள் தங்கள் துக்க நிவர்த்திக்கு இனி பெற்றோர்களையோ உறவினர்களையோ எதிர்பாராமல் தாங்களாகவே தக்க கணவனை தெரிந்தெடுத்து வெளிப்படுத்தி விட வேண்டியதுதான்" என்று குறிப்பிட்டதும், மற்றப்படி "புருஷனுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களும் விதவைகளின் மேற்கண்ட முயற்சிக்கு உதவி செய்ய வேண்டியது" என்றும் குறிப்பிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதேயாகும்.

மற்றபடி ஜாதி வித்தியாசம், தீண்டாமை, மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவைகளை ஒழித்தலைப் பற்றியும், கல்வியைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருப்பவைகளும் ஊன்றிக் கவனிக்கத்தக்கவைகளாகும்.

மகாநாட்டிலும் அக்கிராசனரின் உபன்யாசத்திற் கண்டபடியே சில தீர்மானங்களேயானாலும் மிக முக்கியமான தீர்மானங்களாகவே தீர்மானிக்கப்பட்டிருப்பதானது குறிப்பிடத்தக்கது.

அதாவது, பெண்கள் சுதந்திரத்திற்குப் பெரிதும் இப்போது இடையூறாயிருப்பது அவர்களுக்கு சொத்துரிமை இல்லாமையால்தான் என்பதை



tamilnavarasam.com

உணர்ந்து இனிமேல் குடும்பச் சொத்தில் பெண்களுக்கு சம உரிமையும், விதவைகள் விதவைத் தன்மையுடன் இருந்து கொண்டு கஷ்டப்பட வேண்டியதற்கு காரணமாயிருப்பது அவர்களுக்கு புருஷன் இறந்தவுடன் மற்றவர்களிடம் ஜீவனாம்சத்திற்கு தொங்கிக் கொண்டிருக்க வேண்டியிருப்ப தால்தான் என்பதை உணர்ந்து அது மாறும்படி புருஷன் சொத்து பாத்தியம் முழுவதும் சர்வ சுதந்திரத்துடன் விதவைகளுக்கு அளிக்கப்பட்டு விட வேண்டும் என்றும் தீர்மானித்திருப்பதானது சரியான பரிகாரமாகும்.

மற்றும் தீண்டாதார்கள் என்பவர்கள் கல்வி இல்லாத காரணத்தால் முன்னேற முடியாமல் இருப்பதால், அவர்களுக்கு சாப்பாடு போட்டு கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்திருப்பதும், மூட பழக்கவழக்கங்களை ஒழிப்பதற்காக பள்ளிக் கூடங்களில் குருட்டு பக்தி மூட நம்பிக்கைகளுக்கு இடந்தரும்படியான கல்வி கற்பிக்கக்கூடாது என்றும், மூடநம்பிக்கையும் குருட்டுப் பக்தியும் உள்ள உபாத்தியாயர்களை பள்ளிக் கூடங்களில் பிள்ளைகளை படிப்பிக்க சேர்க்கக்கூடாது என்றும், உபாத்தியாயர்களைத் தயார் செய்யும் பள்ளிக் கூடங்களிலும் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக் கூடங்களிலும் மூட நம்பிக்கையும் குருட்டு பக்தியும் உண்டாக்கத்தக்க எந்த புஸ்தகங்களையும் பாடபுஸ்தகமாக வைக்கக் கூடா தென்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதும், மற்றும் சில தீர்மானங்களும், முக்கியமாக மதத்தின் பேரால் பெண்களுக்கு பொட்டுக்கட்டி விபசாரத்திற்கு விடும் வழக்கத்தை ஒழிக்கச் சட்டம் செய்ய வேண்டும் என்று ஸ்ரீமதி டாக்டர் வோகளி ஆர்யா அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமதி அலமேலு மங்கைத் தாயாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப் பட்ட தீர்மானமும் குறிப்பிடத்தக்கவை,

எனவே இவ்வளவு முக்கிய தீர்மானம் செய்ததில் மகாநாட்டு பிரதிநிதிகள் காட்டிய ஆரவாரத்திற்கும் ஊக்கத்திற்கும் அளவே இல்லை. மகாநாட்டிற்கு விஜயம் செய்து தீர்மானங்களில் கலந்து கொண்ட பெரி யோர்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் என்றே சொல்லவேண்டும். அவர்கள் அரசாங்க இலாகா இப்போதைய மந்திரிகளும், மாஜி மந்திரி களும், இனி வரப்போகும் மந்திரிகளும், சட்டசபை பிரதிநிதிகளும், பல ஸ்தல ஸ்தாபனத் தலைவர்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும், மதச் சம்மந்தமான ஆராய்ச்சியுள்ளவர்களும், சீர்திருத்தத்தில் பெரிதும் கவலை கொண்டவர்களும், தக்க கல்வியும் அறிவும் உள்ள பெண்மணி களும், பண்டிதர்களும், வாலிபர்களும், முதியோர்களும் ஆகிய பலதிறப் பட்ட தக்க பிரதிநிதிகளேயாவர்கள். அவர்களில் வெளியூர்களிலிருந்தும் அனேகர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஆனாலும் மேல்கண்ட மகாநாட்டை திறம்படவும் சிறப்புடனும் நடத்திய பெருமை மிகுதியும் திரு சுரேந்திரநாத் ஆரியா அவர்களையும் ராவ்பகதூர் எம். கே. ரெட்டி அவர் களையும் சேர்ந்தது என்றே சொல்லுவோம். இதுவரை சீர்திருத்த சம்மந்தமாக



எத்தனையோ மகாநாடுகள் நடந்திருந்தாலும் இது போன்ற பிரதிநிதித் துவமும் பலன் தரத்தக்க தீர்மானங்களும் கொண்ட மகாநாடு மிகச் சுருக்க மாகத் தானிருக்கும்.

நிற்க தீர்மானங்கள் எவ்வளவோ முன்னேற்றமுடையதானாலும் அவைகளை நிறைவேற்றி வைப்பதில் அரசாங்க சம்மந்தமான சட்ட உதவிகளும் தேவையிருப்பதால், பொது ஜனப் பிரதிநிதிகளைத் தெரிந் தெடுப்பதில் பொது ஜனங்கள் மேல்கண்ட அபிப்பிராயமுடைய கனவான்களையே சட்டசபை லோக்கல் போர்டு முதலிய ஸ்தாபனங்களில் போய்ச் சேரும்படி பார்க்க வேண்டியதே முக்கிய கடமையாகும் என்பதைப் பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை.

**குடி அரசு - தலையங்கம் - 02.12.1928**



RangaRakes tamilnavarasam.com

# சென்னை சட்டசபை

இந்த வாரம் சென்னையில் நடந்த சட்டசபைக் கூட்டத்தில் மந்திரி கனம் முத்தய்யா முதலியார் அவர்கள் தமது இலாக்காவில் உள்ள உத்தியோகங்களில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்படுத்தியது பற்றி அவரைக் கண்டிப்பதற்காக சட்டசபையை ஒத்தி வைக்கவேண்டும் என்று ஒரு அவசரப் பிரேரேபனை பார்ப்பனர்களால் திரு. சாமி வெங்கிடா சலத்தைப் பிடித்து சுயராஜ்யக் கட்சி தலைவர் என்கிற முறையில் கொண்டு வரப்பட்டது.

காங்கிரஸ் கக்ஷி என்றும், சுயராஜ்யக் கக்ஷி என்றும், தேசீயக் கக்ஷி என்றும், அவைகளுக்கு சட்டசபையில் ஒத்துழையாமை செய்வதும், முட்டுக்கட்டை போடுவதுதான் கொள்கைகள் என்றும் சொல்லி பார்ப்பன ரல்லாதாரிலேயே சில கூலிகளை விட்டு பிரசாரம் செய்யச் செய்து பாமர மக்களை ஏமாற்றி சட்டசபைக்குப்போய் உட்கார்ந்து கொண்டு, பார்ப்பன ரல்லாதார் சமூகத்திற்கே விரோதமாய் பல கெடுதிகள் செய்து வந்திருப் பதுடன் இப்போது தைரியமாய் வெளியில் வந்து உத்தியோகப் பிச்சை கேட்கவும், பார்ப்பனரல்லாத சமூகத்தாருக்கு அளிக்கப்படும் சம சந்தர்ப் பத்தை ஒழித்து தங்கள் ஆதிக்கத்தையே எப்போதும் நிலை நிறுத்திக் கொள்வதற்குமே இது உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த பார்ப்பனர்கள் காங்கிரசுக்குள் சுயராஜ்யக் கக்ஷி என்பதாக ஒரு சூழ்ச்சிக் கக்ஷியை எப்போது ஆரம்பித்தார்களோ அன்று முதலே சுயராஜ்யக் கக்ஷி பார்ப்பனக் கக்ஷி என்றும், அது சமயம் அதை ஆதரித்து பார்ப்பனர்களின் காலை நக்கிக் கொண்டு அவர்கள் பின் திரிந்து கொண்டிருந்த பார்ப்பன ரல்லாதார்கள் எல்லாம் வயிற்றுச் சோற்று பிரசாரகர்களும் பார்ப்பனக் கூலி களும் பார்ப்பனரல்லாத சமூகத்தைக் காட்டிக் கொடுத்து வயிறு வளர்க்க வேண்டிய நிலையில் இருக்கும் இழிமக்கள் என்றும் ஒவ்வொரு நாளும் ஓயாமல் சொல்லி வந்தோம். அந்த சமயம் அநேக பார்ப்பனக் கூலிகள் நம்மை சர்க்கார் தரகரென்றும் தேசீய விரோதிகள் என்றுங்கூட தூற்றி வந்த ததுடன் நில்லாமல் சுயராஜ்யக் கக்ஷி ஒன்றுதான் சர்க்காரரோடு யுத்தம் செய்யும் கக்ஷி என்றும், சுயராஜ்யக் கட்சிகாரர் சொந்தத்தில் எவ்வளவு அயோக்கியர்களாக இருந்தாலும் அவர்களுக்குத்தான் ஓட்டுக் கொடுக்க வேண்டும் என்றும் பார்ப்பனர்களிடம் கூலி வாங்கிக் கொண்டு எழுதியும் பேசியும் பிரசாரம் செய்தார்கள்.



ஆனால் நாம் சொல்லி வந்தது அப்பொழுதே அநேகருக்கு சரியென்றுபட்டிருந்தாலும் இப்போது ஷை கூலிகளும் ஒப்புக்கொள்ளத்தக்க மாதிரியில் அது வெளியாகிக் கொண்டு வருவதும், அக்கூலிகள் அது விஷயத்தைப் பொருத்தமட்டிலும் திருடனைத் தேள் கொட்டியதுபோல் வாய் மூடிக் கொண்டிருப்பதும் வெட்டவெளிச்சமாய் விட்டது. மந்திரி கனம் முத்தய்யா முதலியார் அவர்கள், தமது ஆதிக்கத்தில் உள்ள பத்திரப் பதிவு இலாக்காவில் உள்ள உத்தியோகங்களில் ஒவ்வொரு பன்னிரண்டு உத்தியோகத்திற்கும் பார்ப்பனரல்லாதார்களுக்கு பத்தும், பார்ப்பனர்களுக்கு இரண்டும் என்பதாக பிரித்து பார்ப்பனரல்லாதாரிலும் உள்ள முக்கிய பிரிவுகளான மகமதியர்களுக்கு 2ம் , கிறிஸ்தவர்கள், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் ஆகியவர்களுக்கு 2ம், ஆதி திராவிடர்களுக்கு 1ம் இவர்கள் நீங்கிய பார்ப்பனரல்லாத இந்துக்கள் என்பவர்களுக்கு 5ம் என்பதாக கணக்கு பிரித்து அந்தப்படி உத்திரவும் போட்டுவிட்டார். எனவே இந்தக் கொள்கையையும் அவருடைய தைரியத்தையும் நாம் பாராட்டிய துடன் பிரிவினை செய்த விகிதாச்சாரத்தைப்பற்றி நமக்குள்ள அதிருப்தி யையும் முன்னமே குறிப்பிட்டிருக்கின்றோம்.ஏனெனில் மகமதியர்களுடைய எண்ணிக்கைக்காவது கிறிஸ்தவர்களுடைய எண்ணிக்கைக்காவது பார்ப் பனர்களுடைய எண்ணிக்கைக்காவது ஆதிதிராவிடர்களின் எண்ணிக் கை குறைந்து எண்ணிக்கையுடையதல்ல.

பார்ப்பனர்களையும் கிறிஸ்தவர்களையும் பார்க்கிலும் சற்றேறக் குறைய ஆதிதிராவிடர்கள் 5 மடங்கு அதிகமானவர்கள் என்று சொல்லலாம். எனவே இந்த திட்டம் ஆதி திராவிடர்கள் விஷயத்தில் நியாயம் செய்யப் பட்டதாகாதானாலும் திட்டம் ஏற்படுத்த முனைந்ததைப் பற்றியும் இதை ஒரு வழிகாட்டிக் கொள்கையாக உபயோகித்துக் கொள்ளவாவது சந்தர்ப்பம் கிடைத்ததென்பதைப் பொருத்த வரையிலும் நாம் வரவேற்றதுடன் கனம் முதலியார் அவர்களையும் நெஞ்சாரப் பாராட்டி வாழ்த்தினோம்.

காங்கிரசுக் கட்சியாரும் சுயராஜ்ய கட்சியாருமாகிய யோக்கியவர்கள் இப்போது இதை எதிர்க்க வேண்டிய அவசியமென்ன என்பதே நமது கேள்வி.

“உத்தியோகத்தை இந்தியமயமாக்க வேண்டும்” என்பதுதான் காங்கிரசின் முக்கிய கொள்கையாயும் லக்ஷியமாயும் இருந்து வந்திருக் கின்றது. அந்தப்படி பல உத்தியோகங்கள் இந்திய மயமாக்கப்பட்டதுடன் பல சிறு உத்தியோகங்கள் அளிக்கும் அதிகாரமும் இந்திய மயமாக்கப் பட்டிருக்கின்றது.

இதன் பயனாய் ஏற்படும் உத்தியோகங்களை இந்தியர்கள் என்பவர் கள் எல்லோரும் அடையும்படி செய்யத்தக்க ஒரு திட்டம் போட்டால் இதில்



RangaRakes tamilnavarasam.com

ஏன் ஒரு கூட்டத்தாருக்கு அதிலும் காங்கிரஸ்காரர்கள் என்பவர்களுக்கு அதிலும் சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் என்னும் சட்டசபையில் முட்டுக்கட்டை போடப் போனவர்களுக்கு இத்தனை ஆத்திரம் உண்டாக வேண்டும்? தேசீய பத்திரிகைகள் என்று சொல்லும் 'இந்து' "சுதேசிமித்திரன்" முதலிய பத்திரிகைகளும் அவைகளின் வாலைப் பிடித்துக் கொண்டு வயிறு வளர்க்கும் குட்டிப் பத்திரிகைகளும் ஏன் இந்தப்படி ஊளையிடவேண்டும்? என்பதை வாசகர்களையே யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம். இந்தப் பார்ப்பனர்களும் அவர்கள் கூலிகளும் இந்த மாதிரியான காரியங்களுக்கு முக்கியமாய்ச் சொல்லும் ஆக்ஷேபங்கள் என்னவென்று பார்ப்போமானால், "எல்லா வகுப்பாருக்கும் உத்தியோகங்களில் பங்கு இருக்கும்படி செய்துவிட்டால் நிர்வாகத்தில் ஊழல்கள் ஏற்பட்டு விடும்" என்கின்ற ஒரே பல்லவிதான் பாடப்பட்டு வருகிறது. இதையேதான் கோவை திரு. சி.வி. வெட்கிட்டரமணய்யங்கார் சட்டசபை வாதத்தில் சொல்லி இருக்கின்றார். இதைப் பொது ஜனங்கள் சற்று கவனிக்க வேண்டுமென விரும்புகின்றோம்.

ஒவ்வொரு வகுப்பாருக்கும் உத்தியோகத்தில் பங்கு இருக்க வேண்டு மென்று சொல்லுவதற்கும் நிர்வாக ஊழலுக்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது?

இப்பொழுது கனம் முத்தையா முதலியார் அவர்களால் பிரித்துக் காட்டப்பட்ட எந்த ஒரு வகுப்பாரையாவது சுட்டிக்காட்டி பெரிதும் நிர்வாகத் திறமையற்றவர்கள் என்று யாராவது மெய்ப்பிக்க முடியுமா? என்று கேட்கின்றோம். மந்திரி கனம் முதலியாரவர்கள் பிரித்திருப்பதும், இதுவரை அரசியலில் பிரிக்கப்பட்டு வந்திருப்பதுமான வகுப்புகள் அதாவது,

பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், பார்ப்பனரல்லாதார்களில் மகமதியர், கிறிஸ்துவர், இந்துக்கள், கிறிஸ்தவர்களில் ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், தீண்டிக் கொள்ளக்கூடியவர்கள் என்று கருதும்படியானவர்கள், தீண்டாதவர் கள் என்று சொல்லப்படும் தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் என இந்தப்படி வெகுகாலமாகவே பிரிவினையாக்கப்பட்டிருக்கும் வகுப்புகளில் எந்த வகுப்பாரை இந்த சுயராஜ்ய கட்சிக்காரர்களான திரு. சி.வி. வெங்கிட்டரமண அய்யங்கார் போன்ற பார்ப்பனர்கள் குறிப்பிடுகின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

திரு. அய்யங்கார் குறிப்பிடும் நிர்வாகத் திறமை என்ன என்பதும், இங்கு நமக்கு விளங்கவில்லை. அதை சிறிதாவது குறிப்பிட்டிருப்பார்களா னால் நிர்வாகத் திறமையைப் பற்றிப் பேசியதானது யோக்கியப் பொறுப்பான தாய் இருந்திருக்கும். அல்லது இதுவரை உத்தியோகம் பார்க்க நேரிட்ட வகுப்புகளில் எந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பாரிலாவது திறமைக் குறைவை கண்டுபிடித்து சுட்டிக்காட்டி இருந்தாலாவது அது யோக்கியப் பொறுப்புள் ளதாய் இருந்திருக்கும். அப்படிக்கில்லாமல் வெறும் கூப்பாடு போடுவதானது



வெறும் அயோக்கியத்தனமா அல்லவா என்பதை யோசித்துப் பாருங்கள்.

ஒரு உத்தியோகத்திற்கு வேண்டிய திறமை என்ன என்பதை அந்த உத்தியோகத்தின் விளம்பரத்தின் கீழேயே குறிப்பிட்டிருக்குமே யொழிய வேறில்லை. அதில் யாருக்காவது ஆக்ஷேபனை இருந்தால் திறமை இன்னதென்று குறிப்பிடும் போது மாத்திரம் அதைப்பற்றி பேசி திறமையை தீர்மானித்துக்கொள்ளலாமே யல்லாமல் அத்திறமையை வகுப்பில் கொண்டுவந்து புகுத்துவதில் எவ்வளவு அயோக்கியத்தனமும் கெட்ட எண்ணமும் இந்தக் கூட்டத்தாருக்கு இருக்கின்றது என்பதை வாசகர்களா கவே தெரிந்து கொள்ள விட்டு விடுகின்றோம்.

தவிரவும், முதலாவதாக ஒரு உத்தியோகத்திற்கு அவசியமாக வேண்டியிருக்கும் கல்வியின் யோக்கியதாபக்ஷமோ அல்லது நிர்வாகத் திறமையோ இன்னது என்று தீர்மானித்து விட்டால் உத்தியோகத்திற்கு தெரிந் தெடுக்கும்போது அந்த இரண்டும் இருக்கின்றதா இல்லையா என்று பார்த்துக் கொள்வதைப்பற்றி நமக்கு ஆக்ஷேபனை இல்லை. ஆனால், அந்த உத்தியோகத்திற்கு வேண்டிய யோக்கியதையைவிட மற்றொருவன் அதிக யோக்கியதாபட்சம் பெற்றிருப்பதாய் சொல்ல வந்தால் அதை உத்தியோகம் கொடுப்பவர்கள் கவனிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூட நாம் சொல்லுவோம். ஏனெனில் கலாசாலைக் கல்வியே யோக்கியதாபட்சத்திற்கு போதுமானது என்பதானால் அது திறமையைக் கவனிப்பதாகாததாய்ப் போய்விடும். ஏனெனில் இப்போது கருதப்படும் கலாசாலை யோக்கிய தாம்சம் என்பது சில கிராமபோன் பிளேட்டுகளுக்கு கூட கிடைத்துவிடும். அதாவது ஏதாவது ஒன்றை நெட்டுரு போட்டு பாடம் பண்ணி ஒப்புவித்து விட்டவரே யோக்கியதாம்சம் பெற்றவர் என்றால், யோக்கியதாம்சத்தின் கேவலத்திற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை. சர்வகலாசாலை பரீக்ஷைகளால் "இவன் பரீக்ஷையில் தேரிவிட்டான்" என்று கால் கெஜ கடிதத்துண்டு வாங்கிவிட்டால் அது நிர்வாகத் திறமைக்குகூட போதுமான தென்று சொல்லவருவார்களானால் உடனே அந்த கலாசாலைகளை ஒழித்து விடவேண்டும் அல்லது அக்கலாசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கும் போதே நிர்வாகத் திறமையை சோதித்து விடவேண்டும் அல்லது சேர்க்கும் போதே வகுப்புவாரி பிரதிநிதித்துவப்படி சேர்த்து யோக்கியதை உண்டாக்கி வைக்க வேண்டும்.

நாம் ஏன் இப்படிச் சொல்லுகின்றோம் என்றால் கலாசாலைகள் உத்தியோக யோக்கியதைக்காக படிப்பிக்கின்ற ஸ்தாபனம் என்று இதனால் தெரிகின்றபடியால்தானேயொழிய வேறில்லை. அன்றியும் நிர்வாகத் திற மைக்கு வகுப்புகளைக் கவனிக்கக்கூடாது என்று யாராவது சொல்ல வருவார் களானால் நிர்வாகத் திறமைக்கு நெட்டுருவைக் கண்டிப்பாக கவனிக்கக் கூடாது என்று சொல்லுவோம்.



RangaRakes
tamilnavarasam.com

கனம் முத்தையா முதலியாரை மற்ற மந்திரிகளும் நிர்வாக சபை மெம்பர்களும் இன்னும் பின்பற்றாமல் இருப்பதைப்போன்ற பொறுப்பற்ற தன்மை அவர்களுக்கு வேறில்லை என்றே சொல்லுவோம். அது மாத்திர மல்லாமல் சட்டசபையில் மேற்கண்ட ஒத்திப்போடும் தீர்மானம் வந்த காலத்தில் சட்டசபை மெம்பர்கள் அதை சீக்கிரம் முடித்து ஓட்டுக்கு விட்டுத் தோற்கடிக்காமல் சட்டசபையில் வெறும் பேச்சிலேயே இருந்து விட்ட தானது மெம்பர்களுடைய பொறுப்பற்ற தன்மையையும் காட்டுகின்றது. என்றாலும், இனி அடுத்துக் கூடும் சட்டசபைக் கூட்டத்திலாவது சட்டசபை மெம்பர்கள் இம்மாதிரிப் பொறுப்பற்ற தன்மையாய் இராமல் உத்தியோகத்தில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ ஏற்பாடு செய்ததற்காக கனம் முத்தையா முதலியார் அவர்களைப் பாராட்டும் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்று வதுடன் அந்தப்படி செய்யாத மந்திரிகள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும் நிர்வாக சபை மெம்பர்கள் மீது கண்டனத் தீர்மானமும்கொண்டு வந்து நிறைவேற்றி வைக்க வேண்டுமாய் விரும்புகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 02.12.1928**



# தென் இந்திய சீர்த்திருத்தக்காரர்கள் மகாநாடு

சகோதரிகளே! சகோதரர்களே!

இந்த பெரியதும் முக்கியமானதுமான மகாநாட்டிற்கு என்னை தலைவ னாக தெரிந்தெடுத்ததன் மூலம் தாங்கள் எனக்களித்த கௌரவத்திற்காக எனது மனமார்ந்த நன்றி அறிதலை தங்கள் எல்லோருக்கும் தெரிவித்து கொள்கிறேன்.

இம்மகாநாடு சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு என்று சொல்லப்படுகிறது. எனவே, இத்தகைய ஒரு மகாநாட்டுக்கு சீர்திருத்தத்தில் மிகுதியும் நம்பிக்கையுள்ள ஒருவரைத் தலைவராக தெரிந்தெடுத்திருப்பீர்களானால் அது மிகவும் பொருத்தமுடையதாக இருந்திருக்கும் என்று நான் சொல் வதற்காக என்னை மன்னிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனெனில் வரவர எனக்கு சீர்திருத்தம் என்பதில் உள்ள நம்பிக்கை மறைந்து கொண்டே போகின்றது. அன்றியும் நமது நாட்டை முன்னுக்கு கொண்டு வரவேண்டும் என்பவர்களுக்கும், நமது நாட்டு பெரும்பான்மையான மக்களுக்கு சுயமரியாதையும், சமத்துவமும், விடுதலையும் உண்டாக்கச் செய்ய வேண்டும் என்பவர்களுக்கும், எதிரில் இருக்கும் வேலை சீர்திருத்த வேலை அல்ல என்பதே எனது அபிப்பிராயம். மற்றென்னை யெனில் உறுதியும் தைரியமும் கொண்ட அழிவு வேலையே ஆகும். அளவுக்கு மீறின பொறுமை கொண்ட யோசனையின் மீதே நான் இந்த முடிவிற்கு வந்திருக் கிறேன். உதாரணமாக ஒரு பெரிய கிணறு இருப்பதாக வைத்துக் கொள்ளுங் கள்; அந்தக் கிணற்றிற்கு மிகப் பழமையானதும் விசேஷமானதுமான ஒரு புராணம் இருப்பதாகவே வைத்துக் கொள்ளுங்கள்; அதாவது அந்தக் கிணற்று தண்ணீரில் ஒரு துளி தண்ணீரை சாப்பிடுவதனாலோ, அல்லது மேலே தெளித்துக் கொள்வதினாலோ நம்முடைய எல்லாப் பாவமும் - மகா பாதகமான காரியம் என்று சொல்லப்பட்ட செய்கைகளைச் செய்தாலும் மன்னிக்கப்படுவதுடன் மோட்சலோகம் என்பது கிடைக்கும் என்று எழுதி இருப்பதாகவே வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் இப்போது அந்தக் கிணற்றுத் தண்ணீரில் ஒரு சிறிது சாப்பிட்டால் விஷபேதி காணக்கூடிய தாகவும், அதில் ஸ்நானம் செய்தால் சரீரமெல்லாம் சொரி சிரங்கு



RangaRakes tamilnavarasam.com

வருவதாகவும் இருந்தால் அதற்காக நாம் செய்ய வேண்டிய வேலை என்ன? அந்தத் தண்ணிரில் விஷப் பூச்சிகள் உண்டாகி தண்ணீரைக் கெடுத்துவிட்டது என்று கருதி அந்த விஷப் பூச்சிகள் சாகத்தக்க மருந்தை அந்த கிணற்றுக்குள் போடுவோம்.

அப்படிப் போட்ட பிறகும் அந்தத் தண்ணீரின் குணம் அப்படியே முன்போலவே இருக்குமானால் மேல் கொண்டு என்ன செய்வோம்; மருந்துக்குக் கட்டுப்படாத அளவு கெடுதி அந்தத் தண்ணீரில் உண்டாய் விட்டதாகக் கருதி அந்தக் கிணற்றுத் தண்ணீர் முழுவதையும் இரைத்து வெளியில் ஊற்றி அந்தக் கிணற்றையும் நன்றாய்க் கழுவி விடுவோம். அந்தப்படி செய்த பிறகும் மறுபடியும் அந்தத் தண்ணீரின் குணம் அப்படியே இருக்குமானால் அதனுடைய காரணம் என்ன? அந்த கிணற்றுக்குத் தண்ணீர் வரும் ஊற்றே விஷத்தன்மை பொருந்தியது. அதாவது விஷ நீர் ஊற்றுக் கிணறு என்றுதானே ஏற்படும். அப்படிப்பட்ட விஷநீர் ஊற்றுக் கிணற்றை என்ன செய்வீர்கள்? பழைய புராணத்தையும் அதில் உள்ள அந்தக் கிணற்றுப் பெருமையையும் மதித்து, அதிலேயே குளித்து அந்த நீரையே சாப்பிட்டு விஷபேதியையும் சொரி சிரங்கையும் அடைந்து கொண்டிருப் பீர்களா? அல்லது அந்தக் கிணத்தை மண்ணைக் கொட்டி மூடி விடுவீர்களா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

எனவே, மருந்து போட்டு தண்ணீரைச் சுத்தம் செய்வதும், தண்ணீர் பூராவையும் இரைத்து கிணற்றைக் கழுவுவதும் சீர்திருத்த வேலையாகும். அடுத்தபடியான மண்ணைப் போட்டு நிரவி மூடிவிடுவதே அழிவு வேலையாகும். இந்த முறையில் தான் நான் ஒரு அழிவு வேலைக்காரன் என்பதாகத் தெரிவித்துக் கொண்டேன்.

நமது நாட்டைப் பொறுத்த வரையில் சீர்திருத்தம் என்பதெல்லாம் செய்து பார்த்தாய் விட்டது. நான் பார்த்தாய் விட்டது என்று சொல்வது இப்போது நடைபெற்று வரும் சீர்திருத்தம் என்பதைக் குறித்தல்ல. ஏனெனில், இது உண்மையான சீர்திருத்தமல்ல. இப்போதைய சீர்திருத்தம் என்று சொல்லப்படுவதுகளெல்லாம் பாமர மக்களை ஏய்த்து அவர்களிடம் செல்வாக்குப் பெறுவதற்காக படித்த கூட்டத்தார்களோ பணக்காரர்களோ தங்களில் ஒருவருக்கொருவர் போட்டி போடுவதற்காகக் கண்டுபிடிக்கப் பட்ட அநேக சூட்சி ஆயுதங்களில் இதுவும் ஒன்றாகும். இது மேல்நாட்டா ரைக் கண்டு பழகிய செய்கையாகும். இம்முறைகள் எல்லாம் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டியவர்களுடைய நன்மையைக் கருதி கண்டுபிடிக்கப் பட்டதல்ல. சீர்திருத்தம் செய்பவர்களுடைய சுயநலத்தை உத்தேசித்தே பெரிதும் கண்டுபிடிக்கப்பட்டதாகும். ஆனாலும், சீர்திருத்தம் பெற வேண்டிய மக்கள் இதை உண்மையாகவே நம்பி வந்திருக்கின்றார்கள். ஆனாலும், அதன் முடிவுகள் எல்லாம் மேலும் மேலும் மோசமான



நிலைமைக்கே, அதாவது இனிமேல் சுலபத்தில் சீர்திருத்தம் செய்யமுடியாத நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கின்றார்கள். இதன் முக்கிய காரணம் என்னவெனில், எந்தக் கூட்டத்தாரால் – எந்த மனப்பான்மை உடையவர் களால் மக்கள் கெட்டு சீர்திருத்தமடைய வேண்டிய நிலைமைக்கு வந்தார் களோ, யாருடைய எந்தக் கூட்டத்தாருடைய சுயநலத்திற்காக மக்கள் பெரிதும் நிலை குலைய வேண்டியதாயிற்றோ அந்தக் கூட்டத்தார்களே தான் மிகுதியும் சீர்திருத்தம் என்கின்ற துறையை உபயோகித்துப் பயன்பெற்று வந்திருக்கின்றார்கள். இனியும் அவர்களே தான் பெரும்பாலும் இத்துறையில் இருக்கின்றார்கள். அதனால்தான் நான் நமது மக்களின் நிலை சீர்திருத்த முடியாத நிலையை அடைந்து விட்டது என்று சொல்லுகின்றேன்.

## சீர்திருத்தம்

சமுதாய சீர்திருத்தம் என்பது ஒவ்வொரு நாடுகளில் ஒவ்வொரு மாதிரியாக இருக்கின்றது. உதாரணமாக மேல்நாடுகளில் எல்லாம் சமுதாய சீர்திருத்தம் என்பது எல்லா மக்களையுமே பொறுத்தது. அதாவது, சீர்திருத்தம் செய்யப்படவேண்டிய சமூகப்பழக்க வழக்கம் முதலியவைகள் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகவே இருப்பவைகளாகும். நமது நாட்டில் பெரும்பாலும் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டியவைகள் என்று சொல்லப் படுபவைகள் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு வகையானதாகும்.

நமக்குள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் சீர்திருத்தம் பொது மனித சமூகத்தில் மக்களின் பிறப்பின் காரணமாக உயர்வு தாழ்வு கற்பிப்ப தாகும். இந்த முறை நமது இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு மோசமான கற்பனையின் மீது கையாளப்படுவதே இல்லை. அடுத்தபடியானது வாழ்க்கையில் இருந்து வரும் பழக்க வழக்கம், மூட பக்தி, குருட்டு நம்பிக்கை ஆகியது போன்ற வகைகள்; இவைகள் எல்லாம் நமது நாட்டில் விசேஷமாய் மதம், கடவுள், மோட்சம் என்பதன் பெயர்களாலேயே அவைகளை ஆதாரமாய் வைத்தே நடைபெற்று வருகின்றது. என்றாலும், இவைகளை சீர்திருத்தம் செய்யவேண்டும் என்கிற கவலை வெகுகாலத்திற்கு முன்னதாகவே ஏற்பட்டது என்று சொல்லலாம். அதாவது புத்தர், இராமானுஜர், திருவள்ளுவர் முதலிய பல பெரியோர் காலத்திலேயே ஏற்பட்டதாகச் சொல்லலாம். ஆனாலும், மேற்கண்ட துறைகளில் அதுமுதல் இதுவரை ஒரு சிறு காரியத்திலாவது வெற்றியேற்பட்டு அது நமக்குப் பயன்பட்டது என்று சொல்லுவதற்கு இல்லை. இப்போது ஏதாவது ஒரு சிறிதளவு மாறுதல் ஏற்பட்டு இருக்கின்றது என்று யாராவது சொல்லவருவார்களானால் அது வெளி நாடுகளில் நடைபெறும் சமூக சீர்திருத்தத்தின் சாரல் அல்லது 'வெளிநாட்டார் தங்கள் சுயநலத்திற்காகச் செய்யப்பட்ட வேலைகளின் பலன்' என்றுதான் சொல்லவேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

நம் நாட்டில் நம் நாட்டு மக்களால் சமூக சீர்திருத்தம் என்பது ஒரு சிறிதும் செய்வதற்கு சாத்தியமே இல்லை. ஏனெனில், அவற்றிற்குத் தடையாய் கடவுள் உணர்ச்சியையும், மத உணர்ச்சியையுமே நிறுத்தப்பட்டு இருப்பதால் முடியாததாய் இருக்கின்றது அன்றியும் இந்நிலை சிலருக்குப் பயன்படுவதாயுமிருக்கின்றது. இதுவரை செய்து வந்த காரியங்கள் எல்லாம் பயன் படாமல் போனதற்குக் காரணமே இதுதான் என்றே சொல்லுவேன்.

இதற்கு சமாதானம் சொல்ல வேண்டியவைகள் எல்லாம் சொல்லி யாய்விட்டது. செய்யவேண்டியதெல்லாம் செய்து ஆய்விட்டது. அதாவது புத்தர், கபிலர், திருவள்ளுவர் முதலியவர்கள் சொன்னவைகளுக்கு மேலாகவும், இராமானுஜர் செய்ததற்கு மேலாகவும் இனி ஒருவர் வந்து புதிய ஞானத்தை போதித்தோ, புதிய காரியத்தைச் செய்தோ விடமுடியும் என்பது இலேசான காரியம் அல்ல. அன்றியும் சமூக சீர்திருத்தத்திற்கு இப்போது விரோதிகளாயிருப்பவர்களுங்கூட தங்களுடைய தடை வேலையில் நம்பிக்கை வைத்திருப்பதன் காரணமும் இதுவேதான். ஆனாலும் அப் போதைய நிலைமையும், சௌகரியமும், அரசாங்கமும் வேறு; இப்போதைய நிலைமையும், சௌகரியமும் அரசாங்கமும் வேறு என்பதான ஒரு சிறிய திருப்தி சமூக சீர்திருத்தக்காரர்களுக்கு நம்பிக்கை கொடுக்கக் கூடியதா யிருந்தாலும், கடவுள் உணர்ச்சியும், மத உணர்ச்சியும், ஒரு சிறிதும் மாறு பாடடையாமல் இருப்பதால் இந்த நிலையில் நமது நாட்டுச் சமுதாயத்திற்குச் சீர்திருத்தம் என்பது முடியாத காரியம் என்றே முடிவு கட்ட வேண்டி யிருக்கிறது. ஏனெனில் இந்த இரண்டையுமே மனிதனின் மூடபக்தியும், குருட்டு நம்பிக்கையும் என்கின்ற அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட்டிருக் கின்றது. ஏனெனில், குருட்டு நம்பிக்கையின் பயனாய் ஏற்பட கடவுளி னிடத்தில் தான் பெரிதும் மூட பக்தியால் ஏற்பட்ட மதத்தின் மூலம் கொள்கை களை வகுத்து வாழ்க்கை நடத்துகிறோம். இம் மூட பக்தியையும், குருட்டு நம்பிக்கையும் ஒழிக்க வேண்டும் என்று சொல்லுவது சீர்திருத்த வேலையின் பாற்பட்டதல்ல; அது மனித சமூகத்தின் நன்மைக்காக அழிக்கப்பட வேண்டிய வேலையின் பாற்பட்டதாகும். ஏனெனில், அடியோடு அழித்துத் தரைமட்டமாக்கி புதுப்பிக்க வேண்டி இருக்கும் வேலை சீர்திருத்த வேலை யாகாது, வேண்டுமானால் புனருத்தாரண வேலை Reconstruction என்று சொல்லலாம்.

இவ்வேலையில் ஈடுபடுபவர்களுக்கு மகத்தான மன உறுதியும் சந்தேகமற்ற தெளிவும் இருக்கவேண்டும். அஃதில்லாமல் ஆவேசத்தில் தலையிட்டுவிட்டால் தற்கொலையாகவே முடியும். ஏனெனில் பலமானதும் இடையறாததுமான எதிர்ப்புகளிற்கிடையே இவ்வேலை செய்ய வேண்டி இருக்கிறது. காரணம் என்னவென்றால் வெகு காலமாக மனித சமூக இருதயத் தில் கலந்து ஊறி விட்டதும், இந்நிலை வெகு பேரினுடைய சுயநலத்திற்கு அனுகூலமாகயிருப்பதும் ஆகிய இரண்டு காரணங்களால்தான்.



RangaRakes

எந்த காரணங்களால் உண்மையான சீர்திருத்தம் வெற்றி பெற வில்லையோ, என்ன என்ன சாதனங்கள் அச்சீர்திருத்தத்திற்குத் தடையோ அவைகளை வேருடன் அழிக்கத் தயாராயிருக்க வேண்டும். அவைகளில் ஒரு சிறு தாரையாவது கிளை வேரையாவது மீத்தி வைத்துக் கொண்டு சீர்திருத்தம் செய்யலாம் என்று எந்தவிதமான சீர்திருத்தக்காரர்கள் நினைத்தாலும் அவர்கள் ஒருக்காலமும் வெற்றி பெறமாட்டார்கள் என்பது எனது உறுதி.

அன்றியும் சிலர் சொல்லுவது போல் சீர்திருத்தக்காரர்களுக்கு நிதானமும் சாந்தமும் அளவுக்கு மீறி வேண்டும் என்பதையும் நான் ஒப்புக் கொள்ளுவதில்லை. அன்றியும் இவ்விஷயத்தில் வெறுப்பும் பிடிவாதமும் அடியோடு கூடாது என்பதையும் நான் ஒப்புக் கொள்வதில்லை.

நான் இப்படிச் சொல்லுவதால் அநேக பெரியோர்களுடைய அபிப்பிராயத்திற்கு முரண்பட்டவனாக பலருக்குக் காணப்படலாம். ஆம், இவ்வித அபிப்பிராயங்களில் நான் நன்றாக முரண்பட்டவன்தான். மேற் கண்ட விதம் சொல்லப்பட்டவர்களின் பொறுமையையும், நிதானத்தையும் சாந்தத்தையும், துவேஷமற்ற தன்மையையும் நான் என்னறிவுக்கு எட்டிய வரை கவனித்துப் பார்த்தேன். அவைகள் மிகுதியும் பயத்தாலும், ஒருவிதப் பலக்குறைவினாலும் இவ்விஷயத்தில் உபயோகப்படுத்தப்பட்ட வார்த்தை கள் என்றே கண்டேன்.

அன்னியர்கள் நம்மை மதிக்கமாட்டார்களே, பழிப்பார்களே, எதிர்ப்பு பலமாய் விடுமே என்கிற பயமும் பலக்குறைவும் யாரிடத்தில் இருக்கின்றதோ அவர்கள் ஒருக்காலமும் உண்மையான சீர்திருத்தத்திற்கு உதவவே மாட்டார்கள். அன்றியும் அக்குணங்களுடன் கூடியவர்களால் நடைபெறும் சீர்திருத்தம் ஒரு காலமும் பயனளிக்கவே முடியாது; அன்றியும் சீர்திருத்தம் செய்பவர்கள் எவ்விதக் கட்டுப்பாட்டிற்கும் ஆளாயிருத்தல் கூடாது. சீர்திருத்தத்திற்கு விரோதமான கட்டுப்பாடுகள் எல்லாம் உடைத்தெறிவதைக் கைக்கொள்வதுதான் சீர்திருத்தத்திற்கு முதன்மையான பாதையாகும். கட்டுப்பாடுகளுக்கு அடங்கிய சீர்திருத்தம் என்பது அதிலும் நம் நாட்டைப் பொருத்தவரை சிறிதும் பயனற்றது.

நிதானமும், சாந்தமும், பொறுமையும், கட்டுப்பாடும் கொண்டு வெறுப்பில்லாமலும், துவேஷமில்லாமலும் நல்ல வார்த்தையும் கூட்டுற விலும், நயமாகவும், கெஞ்சியும் நமது நாட்டில் எத்தனை காலமாக செய்து வந்திருக்கிறது? இதுவரை செய்து வந்த சீர்திருத்தங்கள் என்ன ஆயிற்று? இன்னும் எத்தனை நாளைக்குப் பரீட்சைப் பார்ப்பது என்கிற விஷயங் களை யோசித்தால் மேற்கண்ட வார்த்தைகள் சீர்திருத்தத்திற்கு விரோதி களாயுள்ளவர்களிடம் மரியாதை பெறுவதற்காகவும், தங்களது சொந்த



tamilnavarasam.com

புகழுக்காகவும், பெருமைக்காகவும் பேசப்பட்ட வார்த்தைகள் அல்லது பலவீனத்தின் தோற்றம் என்று ஏற்படுமே ஒழிய வேறொன்றுமே இருக்காது. சிலர் இம் மாதிரியான நமது அபிப்பிராயத்திற்கு விரோதமாய் சில பெரியோர்களான விவேகானந்தர், காந்தி முதலியோர்களுடைய வார்த்தைகளை எடுத்துக் காட்டுவார்கள். இம்மாதிரியான அப்பெரியோர்களுடைய வார்த்தைக்கு நான் முற்றும் முரண்பட்டவன் என்பதை நான் கண்ணியமாய் ஒப்புக் கொள்ளுகிறேன். காரணம், அவ்வார்த்தைகள் சொன்ன பெரியோர்களை சுவாமியாகவும், மகாத்மாவாகவும் மக்கள் கொண்டாடினார்கள்; கொண்டாடுகிறார்கள்; படம் வைத்து பூசிக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவ்வார்த்தைகளால் சீர்திருத்தம் வேண்டிய மக்கள் அடைந்த கதியென்ன? எந்த ஒரு அபிப்பிராயத்தையும் அதனால் ஏற்படும் பலனைக் கொண்டுதான் மதிக்க வேண்டுமே ஒழிய வார்த்தையினுடைய இனிப்பைக் கொண்டும், அழகைக் கொண்டுமே மதிப்பது அறிவுடைமை ஆகாது என்று சொல்லுவேன். சீர்திருத்தம் வேண்டியவர்கள் இதுவரை காட்டின பொறுமையும், கெஞ்சின கெஞ்சும் பேசின இனிமையான வார்த்தையும் போதாது என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேழ்க்கின்றேன்; அல்லது மக்கள் படும் கஷ்டம் அவர்கள் அறிவு அடைந்த தன்மை அதனால் நாடு கெட்ட நிலைமை ஆகியவைகள் இப்பொறுமையினுடையவும், சாந்தத்தினுடையவும் கெஞ்சுவதனுடையவும் பரீக்ஷைக்குப் போதாது என்றாவது யாராவது சொல்ல முடியுமா? எனவே, பொறுமையும், சாந்தமும், சகிப்புத் தன்மையும், இவ்விஷயத்தில் காரியத்தின் அனுகூலத்தை உத்தேசித்துக் காட்டப்பட வேண்டியதே அல்லாமல், வெறும் பொறுமைக்கும், சாந்தத்திற்கும் உருவாம் என்கின்ற பெயர் பெறுவதற்கல்ல.

அன்றியும் சிலர் சீர்திருத்தம் செய்வதன் மூலம் பழைய சின்னங்களையும், ஓவியங்களையும், கலைகளையும் அழித்து விடாதீர்கள் என்கின்றார்கள். இந்தக் கூட்டத்தார்கள் எந்தப் பழைய சின்னம் ஓவியம், கலை முதலியவைகளை மனதில் நினைத்துக் கொண்டு சொல்லுகிறார்களென்று நான் கண்ணியமாய் நினைக்கின்றேனோ அந்தச் சின்னமும் ஓவியமும் கலைகளுமே தான் நம்மையும் நம் மக்களையும் நமது நாட்டையும் பாழாக்கியதுடன், ஒவ்வொரு அறிவாளி மனதிலும் சமுதாய சீர்திருத்தம், செய்து தீரவேண்டும், இல்லாவிடில் வேறு எந்த விதத்திலும் நமக்கு கதி மோஷம் இல்லை என்கின்ற நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது.

உதாரணமாக இராமானுஜர் நாமத்தையும், பூணூலையும் பழைய சின்னம் என்பதாகக் கருதி அதை வைத்துக் கொண்டு ‘பறையன்’ என்பவர்களை யெல்லாம் பிடித்து நாமமும், பூணூலும் போட்டு மக்களைச் சமத்துவம் அடையச் செய்வது என்பதான சீர்திருத்தம் செய்தார் என்பதாகச் சொல்லப்படுகின்றது. இதனால் பழைய சின்னம் காப்பாற்றப்பட்டதே தவிர, மக்களுக்கு சமத்துவம் கிடைத்ததா? சமத்துவ உணர்ச்சி உண்டாயிற்றா?. நாமமும்



RangaRakes

பூணூலும் உடையவர்களுக்குள்ளாகவே உயர்வு தாழ்வும், அதுகள் இல்லாதவர்களை தாழ்மையாய்க் கருதுவதும் இன்று சூரியன் போல் துலங்குகிறது. மற்றும் பழைய சின்னங்கள் என்பதான கோயில்களை எடுத்துக் கொள்வோம். கோயில் என்றால் சர்வ சக்தியும், சர்வ வல்லமையும், சர்வ தயாபரத் தன்மையும் கொண்ட கடவுள் என்பவர் இருக்குமிடம் என்றும், அவரை வணங்க வேண்டிய இடம் என்றும் சொல்லப்படுகின்றது. அதை மக்கள் உணர்ந்து உய்வதற்கே உண்டாக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்லப்படும் கோயில்களின் நிலைமை என்ன? அதனால் மக்களுக்கு ஏற்படும் பலன் என்ன? தற்காலம் என்ன காரியங்களின் கொடுமைகள் சகிக்கமாட்டாமல் சீர்திருத்தம் வேண்டும் என்று மக்கள் கருத இடம் கொடுத்ததோ அந்தக் காரியங்களுக்கு எல்லாம் இந்த சர்வ சக்தியும், சர்வ வல்லமையும், சர்வ தயாபரத் தன்மையும் கொண்டதாக கடவுள் என்பது குடி இருப்பதாகச் சொல்லும் கோயில்களே காரணமாயிருக்கின்றது என்பதை யாராவது மறுக்க முடியுமா? பழைய ஓவியங்கள் என்பதுகளை எடுத்துக் கொண்டால் அதுவும் உண்மையான சீர்திருத்தத்திற்கு எவ்வளவு தடையாய் இருக்கின்றது என்பது விளங்காமல் போகாது. அது போலவே பழைய கலைகள் என்பதுகளை எடுத்துக் கொண்டால் அதுவே ஒரு மலையாக இருக்கும்.

உதாரணமாக வேதம் என்றும், சாஸ்திரம் என்றும் புராணம், என்றும் சொல்லப்படுவனவாகிய மனித வர்க்கத்தின் வாழ்க்கை நலத்திற்கு இலக்காக உண்டாக்கப்பட்டது என்று சொல்லும்படியான ஆதாரங்களும், அவைகளுள் முக்கிய கலைகளாகக் கொண்டாடப்படும் பல புராணங்களும் இதுவரை மக்களுக்கு என்ன நன்மையைக் கொடுத்து வந்திருக்கின்றது என்று யோசித்துப் பாருங்கள். அதிலும் தென் இந்திய வாசிகளும், அவர்களுள் சிறந்த பண்டிதர்கள் என்பவர்களும் பக்தி விசுவாசத்துடனும், கலா ஞானத்துடன் கொண்டாடும் புராணங்கள், இதிகாசங்களாகிய பாரதம், இராமாயணம், சிவபுராணம், விஷ்ணு புராணம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம் என்பவைகள் போன்ற கலைகளால் இதுவரை மக்களுக்கு ஏற்பட்ட பலன் என்ன? அவைகளில் காணப்படாத மனித தத்துவத்திற்கும், ஒழுக்கத்திற்கும் விரோதமான காரியங்கள் வேறு எந்தக் கலைகளிலாவது, கலைகள் அல்லாத வெறுக்கப்பட்ட புஸ்தகங்களிலாவது, வெகு கீழ்த்தர மக்கள் கூட்டத்தின் நடவடிக்கையிலாவது காண்கின்றோமோ என்பதைச் சற்று கவனித்துப் பாருங்கள்.

அன்றியும் எவ்வித சீர்திருத்தத்தையும் தடைசெய்யும் படியான முட்டுக்கட்டைகள் அக்கலைகள் என்பதற்குள் மலிந்து கிடக்கின்றதா இல்லையா என்பதைச் சற்று பொது நோக்குடன் யோசித்துப் பாருங்கள்.



tamilnavarasam.com

இன்றைய தினம் அறிவாளிகள் வெகு கவலையுடன் செய்ய ஆசைப் படும் சீர்திருத்தங்களுக்கு எதிரிகளாயிருப்பவர்கள் தங்களுடைய அதிக பலம் பொருந்திய ஆயுதங்களாக இந்தப் பழைய சின்னங்கள், ஒவியங்கள், கலைகள் என்பதையே உபயோகித்துக் கொண்டு அதாவது அவைகளி லிருந்தே ஆதாரங்கள் எடுத்துக்காட்டி சீர்திருத்தக்காரர்களை எதிர்த்து தடையுத்தம் செய்கின்றார்களா இல்லையா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

ஆனால், அச்சின்னங்களுக்கும் கலைகளுக்கும் வக்காலத்து பேசுபவர்களால் சீர்திருத்தக்காரர்களுக்கும் அனுகூலமான ஆதாரங்கள் அவைகளில் எங்கேயோ இருப்பதாக சொல்லப்படுகின்றது. அது வெறும் மயக்கம் என்பதும் நம்மை ஏமாற்றுவதற்கு உபயோகப்படுத்தக் கூடியது என்பதும் எனது அபிப்பிராயம்.

ஏனெனில், அவைகள் எல்லாம் கடவுள் வந்து நேரில் செய்ததாகவும், மற்றும் நம்மால் தாங்க முடியாத நிபந்தனைகள் கொண்டதும் மனிதன் நம்பமுடியாததும், மனிதத் தன்மைக்கு மீறினதுமான சம்பவங்கள் கொண்டது மாக இருக்கின்றனவேயன்றி, அனுபோகத்தில் இருக்கின்றதாகவோ அனு போகத்திற்கேற்றதாகவோ எடுத்துக் கையாளக் கூடியது அதில் ஒன்றும் காணக்கூடுவதில்லை. அப்படி காணக்கூடியது என்பதாக எதையாவது எடுத்து வியாக்கியானம் செய்யக் கூடியதாகயிருந்தாலும் அதை யாரும் ஒப்புக்கொண்டாக வேண்டும் என்று நிர்பந்திக்கவோ அமுலில் கொண்டுவரச் செய்யவோ அது உபயோகப்படுவதுமில்லை.

உதாரணமாக, பறையன், பள்ளன் என்பவர்கள் (கொடுமை செய்யப் பட்டவர்கள்) எல்லோரும் கோயிலுக்குள் போனதாகவும் கடவுள் ஏற்றுக் கொண்டு தனக்குள் ஐக்கியப்படுத்திக் கொண்டதாகவும் சொல்லப்படுவதை பழைய கலைகளாக உபயோகிக்கின்றார்கள். ஆனால், அவை இப்போது ஏன் அனுபோகத்தில் இல்லையென்றால் அந்தப் பறையன் வேறு, இந்தப் பறையன் வேறு என்று சொல்லி வெளியே தள்ளி விடுகின்றார்கள். இந்த கலையை எதற்காகக் காப்பாற்ற வேண்டும்? மனிதருக்குத்தான் பறையனில் வித்தியாசமிருக்குமே ஒழிய சாமிக்குக் கூடவா வித்தியாசம் என்றால், கலை களுக்கு ஆபத்து வந்து விட்டது என்கிறார்கள்.

ஆகவே இந்நாட்டிலுள்ள பழைய சின்னங்களையும், ஓவியங் களையும், கலைகளையும் காப்பாற்றிக் கொண்டு சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று சொல்லுகின்றவர்கள் என்றைக்குமே வெற்றி பெற மாட்டார்கள் என்று உறுதியாய்ச் சொல்லுவேன். இதுவரை நமது நாடு சீர்திருத் தப் பலன் அடையாததற்கு இந்த உணர்வுக்காரர்களேதான் முக்கிய காரண கர்த்தர்கள் என்றும் சொல்லுவேன். எனவே இந்த சில உரைகளால்



சீர்திருத்தக்காரர்கள் நிலைமையைப் பற்றிப் பேசினேன்.

## சீர்திருத்தப்பட வேண்டிய விஷயங்கள்

முதலாவது கடவுளும், மதமுமே முக்கியமாய்க் கவனிக்கப்பட வேண்டியிருக்கின்றது. ஏனெனில், முன்பு நான் சொன்னது போல நம்முடைய சீர்திருத்தத்திற்கு இவ்விரண்டுமே விரோதமாய் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது.

கடவுளைப் பற்றி இங்கு நான் அதிகமாகப் பேசவரவில்லை. அதைப் பற்றி எவ்வளவு குறைவாகப் பேசுகிறோமோ அவ்வளவும் நல்லதென்றே சொல்லுவேன். ஏனெனில் அது ஓட்டைக் குடத்தில் தண்ணீர் சேந்துகின்ற மாதிரி இழுக்கும்போது குடம் நிறைய தண்ணீர் மொண்டு பாரமாய் வரும் – மேலே வந்து சேரும்போது வெறுங் குடமாயிருக்கும். எத்தனை நாளைக்கு இதை வேலையில் இருந்தாலும் தண்ணீர் வந்து கரை சேராது. அதைப் போலவே கடவுள் என்பது வீண் தர்க்கத்திற்கேற்ற பேச்சே ஒழிய காரியத்திற்கேற்ற பேச்சல்ல. இதுவரையில் வாதம் செய்தவர்கள் கண்ட முடிவுகளில் மிகவும் முக்கியமானது நமது கண்ணுக்கும், மனதிற்கும், அறிவின் உணர்ச்சிக்கும் எட்டாத ஏதோவொன்று இருக்கின்றது என்றும், அதிலும் தேர்ந்த முடிவாக நம்பினால்தான் உண்டு என்றும் சொல்லும் படியானதுகளே ஆகும். இதற்காக மனத்திற்கும், கண்ணுக்கும், அறிவுக்கும் எட்டாத ஒன்றை ஏற்றுக் கொண்டு தக்க ஆதாரம் இல்லாவிட்டாலும் நம்பித்தான் ஆக வேண்டும். நாம் யாரைத் தொந்திரவு செய்வது? அல்லது அம்மாதிரியான தொந்தரவினால் யாருக்குத்தான் என்ன லாபம்? அடுத்தாற் போல் மதம் என்பதைப் பற்றியோவென்றால் அது ஒரு பொருளற்ற தன்மையது. என்னவெனில், இது வரை மதமானது உலகத்திற்கு எவ்வித மான பலனையும் கொடுத்திருப்பதாய் விளங்கவில்லை. எந்த மதக்காரனுக் காவது ஒரு சாந்தி ஏற்பட்டிருப்பதாய்த் தெரியவில்லை ஆனால் மதச் சண்டைக்கும் மதப் பிரசாரத்திற்கும் குறைவில்லை.

ஒவ்வொரு மதக்காரனும் தன் மதமூலமாகத் தான் மக்கள் முழுவதும் மோட்சத்திற்குப் போக முடியுமென்றும், தன் தன் மதத் தலைவன்தான் கடவுள் மகனென்றும், கடவுள் தூதன் என்றும், கடவுள் அவதாரம் என்றும், அவரவர்கள் சொன்னதுகள் எல்லாம் கடவுளால் சொல்லப்பட்டது தான் என்றும் சொல்லுகின்றார்கள். இவர்களுக்குள்ளும் கிளைகள் பல இருக் கின்றன. இதில் யார் மெய்யர்களாகயிருக்க முடியும் என்று கண்டுபிடிக்க முடிவதில்லை. ஒவ்வொரு மதக்காரனும் அவனவன் மதத்தை நம்பாதவ னுக்குப் பாவம் என்றும் நரகம் என்றும் சொல்லுகிறான். மனிதனாகப் பிறந்தவன் இந்த மதத்திற்காக எத்தனை நரகத்திற்குத்தான் போய் வருவது? பொதுவாக மனிதர்களை கடவுளிடத்தில் அனுப்புவதற்கு இத்தனை ஏஜண்



RangaRakes tamilnavarasam.com

டுகள் வேண்டுமா? இவர்களுக்குள் இத்தனைப் போட்டிகள் வேண்டுமா? இந்த மனிதர்கள் கடவுளை அடைய இந்த மதத் தலைவர்களுக்கு இவ்வளவு கவலையா என்பவைகளை நிதானமாய் நடுநிலையிலிருந்து யோசித்துப் பார்ப்பீர்களானால் மதத்தின் அசம்பாவிதமும ஆபாசமும் விளங்காமற் போகாது.

எப்படி ஒரு மனிதன் மக்களின் நலத்திற்காகவும் பாதுகாப்புக் காகவும் தான் அரசனாக வேண்டும் என்று கருதி ஒரு அரசாங்கத்தை ஸ்தாபித்து, பிறகு மக்கள் நலம் மறைந்து தான் அரசாட்சியை விஸ்தரிப்பதில் கவலைகொண்டு, கொலை முதலியவைகளைச் செய்து, அயல் நாடுகளைப் பிடிக்கும் கவலையில் மூழ்கியிருக்கின்றானோ அதுபோலவே மக்கள் நலத்திற்கு மதம் என்று சொல்லி மதத் தலைவனாகி, கடவுள் மகனாகி, தூதனாகி, அவதாரக்காரனாகி, உலகத்திலுள்ள மக்களை எல்லாம் தன் மதத்தில் சேர்க்கும் ஆசைகொண்டு, ஆள் பிடிக்கும் கவலையில் மூழ்கி இறக்கின்றான் என்பதே மத சம்பந்தமான எனது அபிப்பிராயமேயொழிய மதத் தலைவர்கள் கடவுளால் அனுப்பப்பட்டவர்கள் என்றாவது, அவர்கள் சொன்னதெல்லாம் கடவுளால் சொல்லப்பட்டவைகள் என்றாவது அவர்களி டத்தில் கடவுள் தன்மைகள் இருந்தது என்றாவது ஒப்புக்கொள்வது முடியாத காரியமாயிருக்கின்றது. ஏனெனில் இவைகளையெல்லாம் ஒப்புக் கொள்வ தானால் பல கடவுள்களையும், பல ஏஜண்டுகளையும் ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கின்றது. ஒரு கடவுள்பாடே திண்டாட்டத்தில் இருக்கும் போது பல கடவுள்கள் சங்கதி எப்படி நிலை நிற்க முடியும்? ஆதலால் மதம் என்ப தை கடவுள் என்பவனிடத்தில் சம்பந்தப்படுத்துவது பொருத்தமற்றதாகும்.

மற்றப்படி மதம் என்பது மனித வாழ்க்கைக்கான கொள்கைகளை வகுத்து அந்தந்த நாட்டு நிலைமைக்குத் தக்கபடி ஏற்படுத்தப்பட்டது அல்லது வகுக்கப்பட்டது என்று சொல்வதானால் ஒருவாறு அதைப்பற்றி யோசிக்கலாம். அதுவும் அந்தந்த கால நிலைமைக்குத் தக்கபடி கொள்கை களை மாற்றிக் கொள்ளக்கூடிய தன்மையை உடையது என்பதானால் மாத்திரம் தான் மதத்தைப் பற்றி யோசிக்கலாம். அப்படிக்கில்லாமல் மாற்ற முடியாதது, கடவுளின் மகனோ, தூதனோ, அவதாரமோ சொன்னது, கடவுள் தன்மைபொருந்தியது, அதனருகில் வேறுயாரும் நெருங்ககூடாதென்று சொல்வார்களானால் அந்த மதங்களை மதங்களாகவே (ஆணவம்) கருதி அவற்றை ஒழிக்க முயற்சிக்க வேண்டியது சமுதாய சீர்திருத்தக்காரர்களின் முக்கிய கடமைகளில் முதன்மையான கடமையாகும். ஏனெனில், சமுதாயச் சீர்திருத்தம் என்பது காலத்திற்கு ஏற்ற வண்ணம் அறிவுக்கு ஏற்றவண்ணம் மாறுபாடுகளைச் செய்ய ஒப்புக் கொள்ளுவதேயாகும். எனவே அத்தகை யவர்கள் முன்னால் "எக்காலத்திலும் எந்த நிலையிலும் மாற்றப்படக் கூடாது" என்கின்றதான மதத்தடைகள் வந்து குறுக்கிடுமானால் எந்த விதத்தில் அவற்றை வலம் வந்து வணங்கிக் கொண்டிருக்க முடியும்? கொஞ்சமும்



கலங்காது உறுதியுடனும் தைரியத்துடனும் தகர்த்தெறிய எவன் முன்னுக்கு வருகின்றானோ அவன்தான் சமுதாய சீர்திருத்தத் துறையை அணுக முடியும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். சமுதாய சீர்திருத்தகாரர்கள் அடுத்தபடி கவனம் செலுத்த வேண்டியது.

## ஆண், பெண், தன்மைகள்.

பொது மக்களில் பெண்கள், தீண்டாதார்கள் என்பவர்கள் மிக மோசமாக அழுத்தப்பட்டிருக்கிறார்கள் – புலிக்கு ஆடு கடவுளால் ஏற்படுத் தப்பட்ட உணவு என்பது போலவும் – பூனைக்கு எலி கடவுளால் ஏற்படுத்தப் பட்ட உணவு என்பது போலவும் – ஆணுக்குப் பெண் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட அடிமை என்பதாகக்கருதி நடத்தப்பட்டு வருகின்றார்கள். உண்மையிலேயே இப்படி ஒரு கடவுள் ஏற்படுத்தியிருப்பாரானால் முதலிலேயே அந்தக் கடவுளை ஒழித்து விட்டுத்தான் வேறு காரியம் பார்க்க வேண்டும். ஐயோ பாவம்! "ஏழைக் கடவுள்" மீது எத்தனை பழிதான் போடுவது என்று தோன்றினாலுங்கூட, அந்தக் கடவுளுக்கு இவ்வளவையும் சகித்துக் கொண்டு உயிர் வாழும்படியான அவசியம் என்ன வந்தது என்பது நமக்குத் தெரியவில்லை; கஷ்டமாயிருந்தால் ஒழிந்து தொலையட்டுமே என்றுதான் தோன்றுகின்றது.

உலகத்தில் சிறப்பாக நமது நாட்டில் எல்லாவற்றையும் விட பெண் கள் நிலையே மிக மோசமானது. அதிலும் அவர்கள் மீது சுமத்தப் பட்டிருக்கும் பதிவிரதைத் தன்மையை நினைக்கும்போது மனம் குமுறு கின்றது. அதாவது பதிவிரதம் என்கிற கற்புதான் அவர்களுடைய கடமை யாம் – அதுவும் எத்தகைய பதிவிரதம் என்றால் தன்னைக் கொண்ட வனாகிய புருஷன் பழைய சாதம் சுடுகின்றது என்றால் விசிறி எடுத்து விசிற வேண்டுமாம் – தண்ணீர் சேந்தும் போது கணவன் கூப்பிட்டால் அப்படியே கயிற்றை விட்டுவிட்டு ஓடிவர வேண்டுமாம் – ஓடி வந்தால் மாத்திரம் போதாதாம் – அந்தக் கயிறும் பாத்திரமும் கிணற்றின் நடுவே திரும்பி வருமளவும் இராட்டினத்தில் தொங்கிக் கொண்டிருக்கவேண்டுமாம் – இல்லாவிடில் அந்தப் பெண் கற்புடைய பதிவிரதை அல்லவாம். எனவே, சகோதரர்களே! பெண்களுடைய நிலைமைக்கு வேறு என்ன உதாரணம் வேண்டுமென்கிறீர்கள்? அன்றியும் ஆண்கள் பிறவி மூர்க்கப் பிறவி அல்லது தூர்த்தப் பிறவி என்பதற்கு வேறு என்ன உதாரணம் வேண்டு மென்கிறீர்கள்? உங்கள் கடவுள்கள் தங்கள் மனைவிகளை இப்படியா நடத்துகின்றன? தலையிலும், நாக்கிலும், மார்பிலும், தோளிலும் துடைகள் மீதும் தங்களது மனைவிகளை வைத்துக் கொண்டிருக்கிற கடவுள்களைக் கற்பித்துக் கொண்ட உங்கள் புத்தி இவ்விதம் சென்றதற்குக் காரணம் என்ன என்பது நமக்கு விளங்கவில்லை. பெண்களை அடிமைகளாக்கியதின் பலனாய் மக்கள் அடிமைகளால் வளர்க்கப்பட்டார்கள்; அடிமைகளால்



RangaRakes tamilnavarasam.com

வளர்க்கப்பட்டதன் பலனாய் மக்கள் சகலத்திற்கும் அடிமைகளானார்க ளெனவே மக்கள் அடிமைத் தொழிலினின்றும் நீங்க வேண்டுமானால் பெண்கள் அடிமை நீங்க வேண்டும்! பெண்கள் அடிமை நீங்க வேண்டும்!! முக்காலமும் பெண்கள் அடிமை நீங்க வேண்டும்!!!

பெண்கள் அடிமை நீங்க வேண்டுமானால் முதலாவதாக அவர் களைக் கற்பு என்னும் சங்கிலியில் கட்டிப் போட்டிருக்கும் கட்டை உடைத்தெறிய வேண்டும்; கட்டுப்பாட்டிற்காகவும், நிர்ப்பந்தத்திற்காகவும் கற்பு ஒருக்காலமும் கூடாது! கூடாது!! கூடவே கூடாது!!! வாழ்க்கை – ஒப்பந்தத் திற்காகவும், காதல் – அன்பிற்காகவும் இருவர்களையும் கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு வேண்டுமானாலும் இறுக்கிக் கட்டப்படட்டும்; அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஒரு பிறவிக்கு ஒரு நீதி என்கின்ற கற்பு அடிமைப்படுத்துவதில் ஆசை கொண்ட மூர்க்கத்தனமே அல்லாமல் அதில் கடுகளவு யோக்கியமும் பொறுப்பும் இல்லை.

இந்த விஷயங்களில் பெண்களுக்கு ஆண்கள் உதவி புரிவார்கள் என்று எதிர்பார்ப்பது வீண் வேலையே ஆகும். வீரப்பெண்மணிகள் தாங்க ளாகவே தான் முன் வந்துழைக்க வேண்டும். அரசாங்கத்திலும் அனேகம் செய்யப்படவேண்டி இருக்கின்றது. ஆனால் பெண் அரசாக்ஷியால் (விக்டோரியா மகாராணி) ஆகாத காரியம் ஆண் அரசாக்ஷியால் ஆகுமா என்பது சிலருக்கு சந்தேகமாயிருக்கலாம். பெண்களின் உறுதியான ஊக்கமும், உழைப்பும் இருந்தால் கண்டிப்பாய் முடியும். ஆனாலும் சமுதாய சீர்திருத்தக்காரர்கள் இதை மிகவும் முக்கியமாய்க்கருதவேண்டியது என்ப தாக முன்னமேயே சொன்னேன். பழக்கத்தையோ, வழக்கத்தையோ, மதத் தையோ, வேதத்தையோ கருதிக்கொண்டு பயப்பட்டுவிடாதீர்கள்; காலதேச வர்த்தமானத்தைப் பாருங்கள். துருக்கியையும், ஆப்கானிஸ்தானத்தையும், சைனாவையும் பாருங்கள்! சைனாப் பெண்களுடைய காலுக்கு விடுதலை ஏற்பட்டுவிட்டது என்பதை நினையுங்கள்.

## விதவைத் தன்மை

அடுத்த விஷயமாக உலக வாழ்க்கையில் இருந்து உயிருடன் பிரிக்கப்பட்ட சகோதரிகளான விதவைகள் என்பவர்களைப் பற்றி சில வார்த்தைகள் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஜீவ சுபாவத்திற்கே பொருந்தாததான ஒரு நிபந்தனையை நமது சகோதரிகள் மீது சுமத்திக் கொடுமைப்படுத்துவதான விதவைத்தன்மை என்பது எந்த விதத்திலாவது. பொருத்தமுடையதா என்பதை ஆலோசித்து பாருங்கள். இந்நிலை பெண்களை அடிமைகளாய் நடத்துகின்றோம் என்பது மாத்திரமல்லாமல் நம்மை போன்ற மனிதஜீவன்களிடத்தில் நாம் எவ்வளவு



RangaRakes

கொடுமையாய் அறிவீனமாய் நடந்து கொள்ளும் சுபாவமுடையவர்களாய் இருக்கின்றோம் என்பதற்கு அறிகுறியாகும்.

உலகத்தையும், நதியையும், சக்தியையும் பெண்ணாய் கருதும் இரண்டு பெண்டாட்டிக்குக் கம்மியில்லாத கடவுள்களையுடையதும் 1000, 10000, 60000 பெண்டாட்டிகளைக் கட்டிக்கொண்ட ராஜாக்கள் ஆண்டதுமான இந்த நாட்டில் பெண்கள் வதைக்கப்படுகின்றார்கள்!! உதைக்கப்படுகின்றார்கள்!! அதிலும் விதவைத் தன்மையால் மிகவும் வதைக்கப்படுகின்றார்கள்.

பெண்கள் சம்பந்தமான வேறு எந்த காரியத்திற்காவது ஆண்கள் தங்கள் சுயநலத்தைக் கொண்டு கொடுமைப்படுத்துகிறார்கள் என்று சொல்லுவதானாலும் இந்த விதவைத் தன்மையை எதற்காக கற்பித்தார்கள் என்பதே நமக்கு விளங்கமாட்டேன் என்கிறது.

இதில் எவ்வித அறிவுடைமையும் இருப்பதாக நமக்கு விளங்க வில்லை. இதனால் யாருக்கு என்ன பிரயோஜனம் என்பதும் அறியக் கூடவில்லை. ஒரு சமயம் சந்நியாசிகளையும் அதிதிகளையும் உத்தேசித்து இப்படி ஒரு கூட்டம் இருக்க வேண்டும் என்பதாகக் கருதினார்களா அல்லது பெண்கள் எண்ணிக்கை அதிகமாகி விட்டது ஆதலால் இம்மாதிரி செய்வதன் மூலம் மற்றப் பெண்களுக்கு புருஷன் கிடைக்கட்டும் என்று செய்தார்களா அல்லது வேறு என்ன காரணத்திற்காக இப்படிச் செய்தார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதற்கே முடியாதாயிருக்கின்றது. எப்படி இருந்தாலும் இதைப் போன்ற முட்டாள்தனமானதும், சித்திரவதைக் கொப்பான கொடுமை யானதும், இனி அரைக்ஷணமும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாததுமான காரியம் வேறு இல்லை என்றே சொல்லவேண்டும்.

இந்த விதவைத் தன்மை ஒழிய வேண்டுமானால் பெண்கள் மிக்க தைரியமாகப் பாடுபடவேண்டும்; இது விஷயத்தில் மானம் இன்னது அவமானம் இன்னது என்பதாகவோ, அவர்கள் என்ன சொல்லுவார்கள், இவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதாகவோ சற்றும் கருதாமல் தைரிய மாய் வெளிக்கிளம்பிவிட வேண்டும்; தங்களுக்கு இஷ்டமான கணவன் மார்களைத் தாங்களே தெரிந்தெடுத்துக் கொண்டதாய் வெளிப்படுத்திவிட வேண்டும்; இவ்விஷயத்தில் சற்று சௌகரியக் குறைவு இருந்தாலும் அதை வலிமையுடன் பொறுத்துக் கொண்டால் அடுத்து வரும் சகோதரிகளுக்கு மிகுதியும் பலனளிக்கும். அநேக நாடுகளில் இவ்வழக்கம் இருந்து வருகின் றது. நமது நாட்டிலேயே சில வகுப்புகளில் இவ்வழக்கம் நடைபெறுகின்றது. ஆகையால் இதில் இனி தாட்சண்ணியம் பார்ப்பதென்பது சற்றும் பொருந்தா தெனவே சொல்லுவேன். இதற்கு விதவைகள் அல்லாத ஸ்திரீகளும் கொடுமைப்படுத்தப்பட்ட ஸ்திரீகளுக்குப் புருஷன் சம்பாதித்துக் கொடுப்ப திலும், அவர்களுக்குத் தைரியமூட்டி கொடுமைப்படுத்தப்பட்ட குடும்பங்



tamilnavarasam.com

களிலிருந்து வெளிப்படுத்தித் தனியாகவும் சுயேச்சையாகவும் வாழச் செய்யத் தக்க வழியில் கவலை எடுத்துக் கொண்டு உதவி செய்ய வேண்டு மென்றும் கேட்டுக் கொள்ளுகின்றேன். நான் ஏன் இப்படிச் சொல்லு கிறேன் என்றால் இதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று கண்டதால்தான்.

## ஜாதி வித்தியாசம்

ஜாதி வித்தியாசம் என்பது கற்பிக்கப்பட்டதே ஒழிய வேறில்லை. வலுத்தவன் இளைத்தவனை அடக்கி வைப்பது என்பதற்கு ருஜூ ஜாதி வித்தியாசமேயாகும். இது இன்னும் நிலைத்திருப்பது என்றால் இந்த நாடு மிருகப்பிராயத்தில் இருந்து மனிதப்பிராயத்திற்கு இன்னமும் வரவில்லை என்பதைத்தான் காட்டுகின்றது. எதற்காக ஒரு மனிதன் உயர்ந்த ஜாதியாகவும் மற்றொரு மனிதன் தாழ்ந்த ஜாதியாகவும் கருதப்படுகின்றான் என்பதற்கு ஏதாவது காரணங்கள் இருக்கின்றதா? பிறவியிலாவது வாழ்க்கையிலாவது ஒழுக்கங்களிலாவது அறிவிலாவது வித்தியாசங்கள் காணப்படுகின்றதா? ஒன்றுமே இல்லையே. அப்படி ஏதாவது ஒரு வழியில் பிரித்திருந்தாலும் அதற்குச் சமாதானமாவது சொல்ல முயற்சிக்கலாம். ஒரு காரணமும் இல்லா மல் பிறவி மாத்திரத்தில் எதேச்சாதிகாரமாய் செய்யப்படும் கொடுமையாகத் தானே விளங்குகின்றது. இந்த முறை மக்களின் ஒழுக்கத்திற்கே நேர் விரோதமாக இருக்கவில்லையா?

சகோதரர்களே! இந்தக் கொடுமையை ஒப்புக் கொள்ளாதவர்கள் யார்? இதை ஒழிக்கவேண்டுமென்று சொல்லாதவர்கள் யார்? இதற்காக எத்தனை காலமாக முயற்சி செய்யப்பட்டு வருகின்றது? ஜாதி வித்தியாசம் உயர்வு தாழ்வு கூடாது அதற்கு ஆதாரம் இல்லை என்றும் சொல்லாத பெரியார் யார்? ஆயினும் ஏதாவது பலன் ஏற்பட்டிருக்கின்றதா? ஒரு சிறிதும் காணப் படவில்லையே. இதற்கு ஏதாவது ஒரு வழி செய்துதானே ஆகவேண்டும். எனவே இதற்குச் சரியான வழி அறிவினாலோ ஞானத்தினாலோ போதனை யினாலோ ஏற்பட்டுவிடும் என்கின்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இது பெரிதும் அரசாங்கச் சட்டத்தினாலும், அரசியல் வகுப்புவாரிப் பிரதிநிதித்து வத்தினாலும் தான் இதை (அதாவது இந்த உயர்வு தாழ்வு வித்தியாசத்தை) ஒழிக்க முடியும்.

ஆனாலும் இது அரசியல் கூட்டமல்ல. இங்கு நான் அரசியலைப் பற்றிப் பேசப்போவதில்லை. அரசாங்கத்தில் நமது முன்னேற்றத்திற்குப் பலவித சட்டம் வேண்டும் என்று கேட்பதுபோல எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் வேண்டும் என்கின்றோம். இதையும் ஏன் வேண்டும் என் கிறோம் என்றால் வலுத்தவன் இளைத்தவனை நசுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவேதான். இது சமுதாய சீர்திருத்தத்தின் பாற்பட்டதா இல்லையா என்பதைத் தாங்களே யோசித்துப் பாருங்கள். இன்னும் ஓர்



அவசியமும் சொல்லுகின்றேன். அரசியல்காரர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம் கேட்கும்போது எதற்காக வகுப்பு வித்தியாசத்தைக் கற்பிக்க வேண்டும். எல்லோரும் ஒற்றுமையாக இருக்கலாமே என்கின்றார்கள். இதை நம்பி, இந்தப்படியே சமுதாய வாழ்க்கையில் இருக்கலாம் என்றாலோ மத இயல்காரர்கள் அது மதத்திற்கு விரோதம் என்கின்றார்கள். அம்மதத் தடை யை நீக்க சட்டம் செய்யலாம் என்றாலோ மத ஆச்சாரியர்கள் 'மதத்தில் சர்க்காரோ சட்டசபையோ பிரவேசிக்கக் கூடாதெ'ன்கிறார்கள். எனவே இப் போதாவது ஒவ்வொரு வகுப்புக்கும் பிரதிநிதித்துவ உரிமை அளிக்க வேண்டிய அவசியம் என்று சொல்லுவது சரி என்று தோன்றவில்லையா? அடுத்தபடியாக உங்கள் கவனத்திற்கு கொண்டு வருவது என்னவென்றால் ஜாதி வித்தியாசம் என்பதற்கு தீண்டாமை என்பதாகும்.

## தீண்டாமை

கனவான்களே!

தீண்டாமை என்பதைப்பற்றி நான் ஏதாவது சொல்ல வேண்டும் என்பதாக நீங்கள் யாரும் எதிர்பார்க்கமாட்டீர்கள் என்றே கருதுகின்றேன். மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது; கண்ணில் படக்கூடாது; தெருவில் நடக்கக் கூடாது; கோயிலுக்குள் போகக்கூடாது; குளத்தில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்கின்றவை போன்ற கொள்கைகள் தாண்டவமாடும் ஒரு நாட்டை பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலையின் நெருப்புக் குழம்பால் எரிக்காமலோ; சமுத்திரத்தால் மூழ்கச் செய்யாமலோ, பூமிப்பிளவில் அமிழச் செய்யாமலோ விட்டிருப்பதைப் பார்த்த பிறகுங் கூட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் சர்வ தயாபரர் என்றும் யாராவது சொல்ல வந்தால் அவர்களை என்னவென்று நினைப்பது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். இம்மாதிரி கொடுமைப்படுத்தி தாழ்த்தப்பட்ட ஒரு பெரிய மக்கள் சமூகம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் பொறுமையோடும், சாந்தத்தோடும், அகிம்சாத் தர்மத்தோடும் இருக்கவேண்டுமென்று விரும்புகின்றீர்கள் என்பதும் இம் மாதிரியான மக்கள் இன்னமும் ஒரு நாட்டில் இருந்து கொண்டு உயிர் வாழ்வதைவிட அவர்கள் இம்முயற்சியில் உயிர் துறப்பதை உண்மையிலேயே தப்பு என்று யாராவது நினைக்கின்றீர்களா என்பதும் எனக்கு விளங்கவில்லை.

இம்மாதிரி ஒரு பெரிய மனித சமூகத்தை கொடுமைப்படுத்தி அடக்கி வைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு நாடு சுயராஜ்யம் என்றோ, அரசியல் சுதந்திரம் என்றோ, பூரண விடுதலை என்றோ வாயினால் உச்சரிக்கவாவது யோக்கியதை உடையதாகுமா என்று கேட்கின்றேன். சிலர் சுயராஜ்யம் வந்துவிட்டால்–பூரண சுயேச்சை வந்துவிட்டால் இவைகள் ஒழிந்து போகும் என்று சமாதானம் சொல்லக்கூடும். அவர்களை நான் ஒன்று கேட்கின்றேன்.



RangaRakes tamilnavarasam.com

சுயராஜ்யம் மட்டுமல்ல; தர்மராஜ்யமும், அவதார ராஜ்யமுமாகிய ராமராஜ்யமும் சத்திய சந்தன் ராஜ்யமாகிய, அரிச்சந்திர ராஜ்யமும் மற்றும் கடவுளே அரசாண்டதாகச் சொல்லும் அரசாட்சிகள் உள்ள காலத்தில் தானே இவைகள் உண்டாக்கப்பட்டதாகவும் இவற்றைச் சரிவர பரிபாலித்து வந்ததாகவும் இவை மகாக்கிரமமாக நடைபெற்று வந்ததாகவும் சொல்லப் படுகின்றது. எனவே மறுபடியும் அந்த ராஜ்யங்கள் வருமானால் இந்தக் கொடுமைகள் குறையுமா? அதிகமாகுமா? என்று கேட்கின்றேன். ஆதலால் இக்குற்றங்கள் நமது நாட்டை விட்டு ஒழிக்க முயற்சிக்க வேண்டியது சமுதாய சீர்திருத்தக்காரர்கள் கடமை மாத்திரமல்லாமல் அரசியல் சீர்திருத்தக்காரர்கள் என்பவர்களுடையவும் முக்கியமான கடமையேயாகும்.

## கல்வி

இனி கல்வி என்பதைப் பற்றியும் சீர்திருத்தக்காரர்கள் கவனம் செலுத்த வேண்டியது அதிகமுண்டு. 'கல்' என்பதற்கு 'அறி' என்று பொருள். கல்வி என்றால் அறிவி, தெரிவி என்பது தான் பொருளாயிருக்க வேண்டும். எனவே, எதை அறிவிப்பது என்று கவனித்தால் உலக சுபாவத்தையும் மனிதத்தன்மையையும் அறிவிப்பதே கல்வியாகும். மற்றவைகள் வித்தை யாகும். இதற்கு உதாரணமாக

'ஒத்ததறிவான் உயிர் வாழ்வான் மற்றையான்
செத்தாருள்வைக்கப்படும்'

'உலகத்தோடு ஒட்ட ஒழுகார் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்'

என்ற வள்ளுவர் வாக்கே போதுமானது. ஆதலால் உலக நிலையை யும் அதற்குத் தக்கபடி நடந்து கொள்ளத்தக்க மனிதத் தன்மையுமே முக்கியமாய்க் கொண்டு கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும், இப்போதைய கல்வி என்பது மனிதத் தன்மைக்கும் அறிவுக்கும் சிறிதும் பொறுத்தமானதல்ல. குடிகளிடத்தில் நம்பிக்கை இல்லாத ஒரு பொறுப்பற்ற அரசன் தனது பிரஜைகளை மூடர்களும் தேசத்துரோகிகளுமாக ஆக்கி தனது காலடியிலேயே அமுக்கி வைத்துக் கொண்டு நிரந்தமாய் தன் இச்சைப்படி ஆக்ஷி புரியவேண்டும் என்று கருதுகின்ற ஒரு அரசாங்கத்திற்கு அனுகூலமான கல்வியாகவே இருந்து வருகின்றது. அது மாத்திரமல்லாமல் ஊரார் உழைப்பில் நோகாமல் வயிறு வளர்க்கக் கருதும் அயோக்கியர்களின் ஆதிக்கத்திற்கு அனுகூலமான கல்வியே அளிக்கப்பட்டு வருகின்றது.

எனவே, இது அடியோடு மாற்றப்பட வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் கடவுள் பக்தி, மதபக்தி, இராஜபக்தியாகிய அறிவுத் தடையும், அடிமை புத்தியும் கற்பிக்கக்கூடிய விஷயங்கள் கல்விச் சாலை களுக்குள் தலைகாட்டவே விடக்கூடாது. ஏனெனில் கடவுளிடத்திலும், மதத் தினிடத்திலும் அரசனிடத்திலும் பக்தியாய் இருக்கும்படி அவ்வவைகளே செய்து கொள்ள வேண்டுமே ஒழிய இதற்காக ஒரு பள்ளிக்கூடம் வைத்து மக்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பது அயோக்கியத்தனத்தின் முதல் பாகமாகும். கல்வி கற்பிக்கும் வேலை இது சமயம் முக்கியமாய்ப் பெண்களுக்கும் தீண்டாதார் ஆக்கப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட வர்களுக்குமே செய்ய வேண்டும்.

ஏற்கனவே கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள் என்கின்ற சமூகத்திற்கும், பாரம்பரியமாகவே கல்வி அறிவோடு இருப்பதாகச் சொல்லப்படுபவர் களுக்கும் பிறவியிலேயே தங்களை அறிவாளிகள் என்று சொல்லிக் கொள்பவர்களுக்கும் இப்போது சிறிதும் கல்வி கற்பிக்க வேண்டிய தேயில்லை. எனவே குறைந்தது ஒரு பதினைந்து வருஷத்திற்காவது உயர்தர கலா சாலைகளையும் எல்லோருக்கும் கற்றுக் கொடுக்கும் பள்ளிக் கூடங்க ளையும் காலி செய்து, கதவைச் சாத்தி மூடிவிட்டு முன் சொன்ன கல்வியும், அறிவும் இல்லாதவர்கள் என்கிற கூட்டத்திற்கே பள்ளிக்கூடம் வைத்துக் கற்பிக்க வேண்டும். யோக்கியமான அரசாங்கம் இதைத்தான் முதலில் செய்யும். உண்மையான சீர்திருத்தக்காரர்களும் கல்வித் துறையில் இதைத் தான் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

## மூடப்பழக்க வழக்கங்களும் சடங்குகளும்

சீர்திருத்தக்காரர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்களில் மூடப்பழக்க வழக்கங்களையும் குருட்டு நம்பிக்கைகளையும் ஒழிப்பது என்பது எவ்வளவு முக்கியமானது என்பதைப் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை என்றே நினைக்கின்றேன். ஏனெனில் இந்த விஷயமே இப்போது எங்கும் பேச்சாயிருக்கின்றது. இந்த மூடப்பழக்க வழக்கங்களால் பிழைக்கின்ற கூட்டம் தவிர மற்றவர்கள் எல்லோரும் இதன் அறியா மையை நன்றாய் உணர்ந்திருக்கின்றார்கள். ஆனாலும் அவர்களுடைய தைரியமற்ற தன்மையினால் அதை மாற்றிக்கொள்ள முடியாதவர் களாயிருக்கின்றார்கள்.

கடவுள், மதம், பக்தி, வேதம் முதலாயதுகள் மாத்திரம் அல்லாமல் உற்சவம், சுபம், அசுபம் என்பது சம்மந்தமான சடங்குகள், நோன்பு, விரதம் மாத்திரம் அல்லாமல் வேண்டுதல் தீர்த்தம் மூர்த்தி ஸ்தலம்: காணிக்கை ஆகியவைகள் போன்ற அநேக விஷயங்களில் நாம் நடந்துகொள்ளும் நடவடிக்கைகள் முழுவதும் மூடப்பழக்க வழக்கங்கள் குருட்டு நம்பிக்கை கள் ஆகியவை களின் பாற்பட்டதேயாகும்.


RangaRakes
tamilnavarasam.com

இந்த மூடப்பழக்க வழக்க குருட்டு நம்பிக்கையும் செய்கையும் நம்முடைய அறிவு, ஆராய்ச்சி, பணம், நேரம், முயற்சி, முற்போக்கு முதலியவைகளையெல்லாம் அடியோடு கெடுத்துவிடுகின்றது. நல்ல காரியங்களுக்குப் பணமும் அறிவும் இல்லாமல் செய்துவிடுகிறது. உலகத்திலுள்ள நாடுகள் எல்லாவற்றையும் விட, இயற்கையிலேயே எல்லா வளமும் சௌகரியமும் பொருந்தியதான நமது நாடு மட்டும் உலகத்தில் உள்ள மற்ற எல்லா நாடுகளையும் விட மிக மோசமான நிலைமையில் என்றுமே விடுதலை அடைய முடியாத அடிமைத்தன்மையிலும், அறியாமையிலும் ஆழ்ந்து கிடப்பதற்குக்காரணமே. இந்த மூடப்பழக்க வழக்கங்களுக்கு நமது மக்கள் கண்மூடித்தனமாக அடிமையாகியிருப்பதுதான்.

நமது நாட்டைவிட மிகவும் பின்னணியிலிருந்த மற்ற நாடுகள் இன்றைய தினம் எல்லா நாடுகளையும் விட முன்னணியில் இருப்பதற்கு காரணம் அந்நாட்டார்கள் மூடப்பழக்க வழக்கங்களையும் குருட்டு நம்பிக்கைகளையும் அறவே ஒழித்து அவர்களது பகுத்தறிவுக்கு மதிப்புக்கொடுத்து ஆராய்ச்சித்துறையில் அவர்களது அறிவையும் பணத்தையும் நேரத்தையும் ஊக்கத்தையும் முயற்சியையும் செலவு செய்வதன் பலனே ஒழிய வேறில்லை.

நம் மூடப்பழக்க வழக்கம் என்று சந்தேகமற நன்றுயறிந்த ஒரு சிறு விஷயத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமானாலும் நடுங்குகின்றோம். தைரியமாய் ஏதாவது செய்வதாயிருந்தால் அதை சாமியும், மதமும், ஸ்மிருதியும், புராணமும் வந்து தடைக் கல்லாய் நிறுத்திவிடுகின்றது. இவைகளையெல்லாம் கூட ஒரு விதத்தில் சமாளித்துவிடலாம். ஆனாலும் ‘பெரியவர்கள் நடந்த வழி’ என்கின்ற பொறுப்பற்றதும் அர்த்தமற்றதுமான தடை பெரிய தடையாய் இருக்கின்றது. எனவே இவ்விஷயத்தில் சிறிதும் தாக்ஷண்ணியமில்லாததும் தயங்காத துமான அழிவு வேலையே மிகவும் தேவையானது என்று மறுபடியும் மறுபடியும் சொல்லுவேன்.

இந்த மூட நம்பிக்கை குருட்டு பக்தி என்கின்ற துறையில் நமது மக்கள் பணம் வருஷம் ஒன்றுக்கு பல கோடிக் கணக்கான ரூபாய்கள் வீணாகின்றது. நமது தென்னாட்டில் மட்டும் வருஷத்தில் ஒரு லக்ஷம், இரண்டு லக்ஷம், ஐந்து லக்ஷம், பத்து லக்ஷம், இருபது லக்ஷம் வரும்படியுள்ள கோயில்கள் பல இருக்கின்றன. வருஷத்தில் பத்து லக்ஷம், இருபது லக்ஷம், ஐம்பது லக்ஷம் செலவு செய்து கூட்டங்கூடும் யாத்திரை ஸ்தலங்கள் நமது தேசத்தில் அநேகமிருக்கின்றன; இவைகள் யாவும் ஒருசில கூட்டத்தாரின் சுயநலத்திற்காக வஞ்சகக் கருத்துக்கொண்டு உண்டாக்கப்பட்ட மோசடியே அல்லாமல் வேறல்ல. இதற்காக எழுதி வைத்த புராணங்களும், ஆகமங் களும், சமயாச்சாரியர்கள் என்பவர்களின் சரித்திரங்களும், ஸ்தல மான்மி யங்கள் தீர்த்த விசேஷங்கள் என்பதுகளும், புண்ணிய தினங்கள், திதி, திவசம் என்பது



களும் சுயநலம் கொண்ட அயோக்கியர்களாலேயே பாமர மக்களை ஏமாற்றச் செய்த சூழ்ச்சியேயாகும்.

உதாரணமாக இரயில்வேக்காரர்களை எடுத்து கொள்ளுங்கள். அவர்களுக்கு நமது தெய்வங்கள் என்பவைகளிடத்திலாவது, புண்ணிய ஸ்தலம், தீர்த்தம், சிரார்த்தம், புண்ணியதின ஸ்நானம், தேர்த்திருவிழா, உற்சவம், தீபம், மேளம் என்பவைகளிடத்திலாவது கடுகளவு நம்பிக்கையாகிலும் இருக்கின்றது என்று நீங்கள் நம்புகின்றீர்களா? அல்லது அவர்கள் உண்மையிலேயே நம்மைப் போன்ற அவ்வளவு முட்டாள்களா? ஒருக் காலமும் இல்லை என்றும் அல்லவென்றும் வெகு தைரியமாய்ச் சொல்லுவேன். ஆனால், அவர்கள் செய்யும் அயோக்கியத்தனத்தைப் பாருங்கள்.

( “தவிர ஸ்நானத்திற்குப் போகவில்லையா” “வைகுண்ட ஏகாத சிக்குப் போகவில்லையா” “ஆடி அமாவாசைக்கு தனுஷ்கோடிக்கு போகவில்லையா” “பிரயாகைக்கு சிரார்த்தம் கொடுக்கப் போக வில்லையா” “கார்த்திகை தீபத்திற்கு திருவண்ணாமலைக்குப் போக வில்லையா” “கும்பமேளாவுக்கு அரித்துவாரத்திற்குப் போகவில்லையா?” “மாமாங்கத்திற்குக் கும்பகோணம் போகவில்லையா” “ஆருத்திராவுக்குச் சிதம்பரம் போகவில்லையா”) என்று விளம்பரம் செய்கின்றார்கள். கூலி கொடுத்துப் பத்திரிகைகளில் போடச் செய்கிறார்கள். படம் எழுதி சுவர்களில் ஒட்டுகிறார்கள். நல்ல நல்ல பெண்களின் உருவத்தைப் படத்தில் எழுதி மக்களுக்குக் கவர்ச்சி உண்டாகும்படி செய்கின்றார்கள். இவைகளெல்லாம் எதற்காக? நாம் மோக்ஷம் அடைவதற்காகவா? நமக்கு புண்ணியம் சம்பாதித்துக் கொடுப்பதற்காகவா? ஒருக்காலமும் இல்லை என்பதை நீங்களே ஒப்புக் கொள்வீர்கள். ஆனால் மற்றெதற்கு? நம்மை ஏமாற்றிப் பணம் சம்பாதிப்பதற்காக நம்மிடத்தில் சற்றும் அன்பும் காதலும் இல்லாமல் தங்களை நன்றாய் அலங்கரித்துக் கொண்டு நம்முன் நின்று கண் ஜாடை காட்டும் கீழ்த்தர விபசாரிகளின் மனப்பான்மையை ஒத்ததான ஏமாற்றமல்லவா இது? இதன் மூலம் இரயில்வேக்காரர்களுக்குப் போகும் பணம் எவ்வளவு? இதுபோல்தானே புராணமும், ஆகமமும், ஸ்மிருதிகளும் எழுதினவர்கள் மனப்பான்மையும் இருந்திருக்கும் என்று எண்ண வேண்டியிருக்கின்றது. இல்லாவிட்டால் நம்முடைய மோட்சத்தைப் பற்றி இந்த கூட்டத்தாருக்கு இவ்வளவு அக்கறை எதற்கு? எனவே நமது மூடப்பழக்கம், குருட்டு நம்பிக்கையாகியதன் மூலமாக நமது பணங்கள் எத்தனை கோடி பாழாய்ப் போகின்றது என்பதைப் பாருங்கள். சர்க்கார் நம்மிடம் அரசாக்ஷியின் பேரால் வசூலிக்கும் வரி என்னும் கொள்ளையை விட இந்த மூடநம்பிக்கையாலும், குருட்டு பக்தியாலும் செலவிடும் பணமும் இதன் பேரால் பலர் கொள்ளையடிக்கும் பணமும் குறைந்த தொகை கொண்டதெனக் கருதுகின்றீர்களா? சர்க்கார் இதைச் செய்யவில்லை,



RangaRakes tamilnavarasam.com

அதைச்செய்யவில்லை என்று கத்தும் பொருளாதாரத் திட்ட நிபுணர்கள் இந்தப் பகல் வழிப்பறிக் கொள்ளைக்கு ஏதாவது கவலை கொள்ளுகின் றார்களா? இதைப் பற்றி பேசவாவது அனுமதிக்கின்றார்களா? இந்தப் பக்கம் சற்று தலை வைத்தாவது படுக்கின்றார்களா? அனுகூலமான துறையில் ஒன்றும் செய்யாமலிப்பதோடு இந்த ஒழுக்கமற்ற கொள்ளைக் கூட்டத் தாருக்கு தரகர்களாக இருந்து நம்மைக் காட்டிக் கொடுத்துக் குழியில் தள்ளு வதற்கு உடந்தையாய்த் தானே இருக்கின்றார்கள்.

இந்தப் பணங்களும் நேரங்களும் கல்வியிலாவது ஆராய்ச்சித் துறையிலாவது செலவு செய்யப்பட்டிருக்குமானால் நமது நாட்டில் 100-க்கு 93-ஆண்கள் தற்குறிகளாயிருப்பார்களா? 1000-க்கு 999 பெண்கள் தற்குறி களாயிருப்பார்களா? என்பதுகளை யோசித்துப் பாருங்கள். நமது நாடு தரித்திரமாயிருப்பதற்குக் காரணம் விளைவில்லையா? விளைவுக்கு விலை யில்லையா? போதிய பண புழக்கம் இல்லையா? எல்லாப் பணமும் சாமிக்கும் மதத்திற்கும் கோயிலுக்கும் உற்சவத்திற்கும் சடங்குகட்கும் மூடநம்பிக்கைக் கும் சோம்பேறிகளுக்கும் ஏமாற்றுகின்றவர்களுக்கும் அழுவதற்கே செலவாகிவிடுகின்றது. சூதாட்டத்தில் எப்படி சீட்டு மேஜை வாங்கின வனுக்கே எல்லாப் பணமும் போய் சேர்ந்துவிடுகிறதோ அதுபோல் நம்மை மூடநம்பிக்கையில் அழுத்தி வைத்திருப்பவர்களுக்கே எல்லாப் பணமும் போய்ச் சேர்ந்து விடுகின்றது.

எனவே, நமக்கு செல்வமோ, கல்வியோ, அறிவோ, ஆராய்ச்சியோ, வேண்டுமானால் இந்த மூட நம்பிக்கையை அடியோடு ஒழிக்க வேண்டும். இந்தத் துறையும் மற்றெல்லாத் துறைகளைவிட மிகுதியும் அழிவு வேலை செய்யப்படவேண்டியதாகும். மற்றதை முடிவுரையில் சொல்லுகின்றேன்.

*குறிப்பு : 26.11.1928 சென்னை விக்டோரியா பொது மண்டபத்தில் தென் னிந்திய சமுதாய சீர்திருத்தக்காரர்களின் மாநாடு - தலைமையுரை சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 02.12.1928**



# பிரம்மஞான சங்கமும் பார்ப்பனரல்லாதாரும்

உலகத்திலுள்ள மக்கள் மனித சக்தியை உணராததற்கும், அறிவின் அற்புதத்தின் கரைகாணாததற்கும் பல்வேறு பிரிவுகளாய் பிரித்து ஒற்று மையை கெடுத்திருப்பதற்கும், சுயநலம் பிற நல அலக்ஷியம், துவேஷம் முதலியவைகள் ஏற்பட்டு பரோபகாரம், இரக்கம், அன்பு முதலியவைகள் அருகிப் போனதற்கும், இயற்கை இன்பங்களும் சுதந்திர உரிமைகளும் மாறி துக்கத்தையும், நிபந்தனை அற்ற அடிமைத் தனத்தையும் இன்பமாகவும், சுதந்திரமாகவும் நினைத்துக் கொள்ள வேண்டியதான நிர்ப்பந்தமுள்ள செயற்கை இன்பத்தையும் சுதந்திரத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டியதற்கும் முக்கிய காரணம் மதங்கள் என்பதே எமது அபிப்பிராயம்.

இந்த மதங்களேதான் மக்களுக்கு கொடுங்கோன்மையான ஆட்சியை ஏற்படுத்துவதற்கும் காரணமாயிருந்ததென்றுகூட சொல்ல வேண்டியிருக் கின்றது.

உலகத்தில் பல காரணங்களால் ஏற்படும் பூகம்பம், எரிமலைக் குழம்பு, பூமிப்பிளவு, மண்மாரி, மழை, வெள்ளம், புயல்காற்று, இடி, மின்னல் ஆகியவைகள் போலவும், காலரா, பிளேக்கு முதலிய ரோகங்கள் போலவும் மனித சமூக வீழ்ச்சிக்கு அடிக்கடி வேறு வேறு வேஷத்தின் பேரால் மதங்கள் என்பவைகளும் தோன்றிக் கொண்டே வருவதுமுண்டு.

இம்மதக்கேடுகளை உணர்ந்த அனேகரும் உண்மையிலேயே அக்கெடுதல்களை ஒழிப்பதற்கென்று வேலை செய்தவர்கள் அநேகரும் அந்த மதத்தை அப்படியே வைத்துக் கொண்டு கொள்கைகளுக்கு வேறு வித வியாக்கியானம் செய்தும், மற்றும் அம்மதத்திற்கு வேறு கொள்கைகளைப் புகுத்தியும், மற்றும் வேறு மதத்தை ஏற்படுத்தி பழய கொள்கைகளையே வேறு ரூபத்தில் வைக்கும் பலவித மாயவேலை செய்தும் வந்து ஒரு விதத் திலும் வெற்றி பெறாமல் பழய நிலையிலேயே இருந்திருக்கின்றார்கள்.

மற்றும் சிலர் சுயநலம் கொண்டு தங்கள் சமூக உயர்வுக்கும் வகுப்பு ஆதிக்கத்திற்கும் ஆதாரமாக சூழ்ச்சிகள் செய்து மக்களை ஏமாற்றி பல



RangaRakes tamilnavarasam.com

தந்திரங்கள் மூலம் பழய கொள்கைகளையே நிலைநிறுத்தி வஞ்சித்து வருகின்றார்கள். இந்த இரண்டிற்கும் தோற்றத்தில் வித்தியாசமிருந்தாலும் காரியத்தில் ஒரே பலனைத்தான் கொடுத்து வந்திருக்கின்றன.

இந்த நிலையிலேயே, அதாவது மக்களை அறியாமையில் ஆழ்த்தவும் சிலரின் ஆதிக்கத்தை வலுப்படுத்தவுமாக இது சமயம் நமது நாட்டில், சிறப்பாக தமிழ் நாட்டில், கற்றறிந்த கூட்டத்தார் என்னும் பார்ப்பனரது உதவி கொண்டு ஒருவாறு நாட்டில் உலவுகின்ற புதிய மத தோற்றங்களில் பிரம்ம ஞான சங்கம் அல்லது தியாசபிகல் சொசைட்டி என்பதும் ஒன்று அது தலைமைப் பேராசையும் கீர்த்தி வெறியும் கொண்ட ஒரு ஐரோப்பிய மாதின் ஆதிக்கத்திலும் வெள்ளைக்காரர்களின் பண வலிமையிலும் ஒருவாறு செல்வாக்குப் பெற்று உலவுவதுடன் ஏற்கனவே பல காரணங்களால் உயர்வு தாழ்வு கொள்கையால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மூடநம்பிக்கையால் அறிவு வளர்ச்சி பெறாத மக்களுக்கும் பெரிதும் இடையூறாக தோன்றி இருக்கின்றது என்று தான் சொல்ல வேண்டும். இச்சபை செல்வமும் செல்வாக்கும் கொண்ட ஒரு ஸ்தாபனமாயிருப்பதால் மேல் கண்ட இரண்டிலும் ஆசையுடையவர்களான பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்திற்கு இதை ஒரு சாதனமாய் உபயோகித்துக் கொள்ளக்கருதி ஒருவாறு அதில் போய் குவிந்து கொள்ளுகின்றார்கள் - அதனால் பலனும் அடைந்து வருகின்றார்கள்.

நிற்க, இதன் கொள்கைகள் என்ன என்று பார்ப்போமானால், சத்தியம், சகோதரத்தன்மை ஆகியவைகள் முக்கியமானவையாம்.

அன்றியும் கடவுள்கள், ராம, கிருஷ்ணாதி அவதாரங்கள், தேவர்கள், மகாத்மாக்கள், தேவாத்மாக்கள், உலகத்தை ரக்ஷிக்க உலக குரு தோன்றப் போகிறார் என்பது, மகாத்மாக்களுடனும், தேவர்களுடனும் சம்பாஷனை நடத்துவது என்பது, புராணம், இதிகாசம், கீதை ஆகியவைகளில் சிலவற்றை முழுதும் சிலவற்றை ஒரு அளவுக்கும் ஒப்புக் கொள்வது, முன் ஜென்மம், அதன் நடவடிக்கைகளை அறிவது, மற்றும் இது போன்றவைகளில் நம்பிக்கையுடையவர்களும் இதை நேரில் தினம் அனுபவிக்கின்றவர்கள் என்பவர்களும் இம்மதஸ்தராவார்கள் என்று சொல்லப்படுகின்றது.

ஆனால், காரியத்தில் இவர்கள் நடவடிக்கை எப்படிப்பட்டது என்று பார்க்க வேண்டுமானால், அதை இந்த சங்கத்தில் சேர்ந்து இருக்கும் நபர்களைக்கொண்டு தெரிந்து கொள்ளலாம். இதில் சேர்ந்திருப்பவர்களில் பார்ப்பனர்களே முக்கியமானவர்கள். அதிலும் வருணாசிரமக்காரரும், வேத சாஸ்திர, இதிகாச, புராண முதலியவைகளில் நம்பிக்கையும் பக்தியும் உடையவர்களாம். அவர்கள் நடவடிக்கைகளை கவனிப்போமானால் போக்குக்கும் நடவடிக்கைக்கும் சிறிதும் சம்பந்த மற்றவர்கள் என்பதும் மக்களை ஏய்க்க



RangaRakes

வெளியில் ஒரு கொள்கையும் தங்கள் ஆதிக்கத்துக்கு உள்ளுக்குள் ஒரு கொள்கையும் உடையவர்கள் என்பதும் விளங்காமல் போகாது.

சுமார் இரண்டு வருஷத்திற்கு முன்பாக திருநெல்வேலியில் கூட்டப்பட்ட திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதை மகாநாட்டில் கொண்டுவரப்பட்ட "எல்லா இந்துக்களுக்கும் கோவில் பிரவேசம் கொடுக்க வேண்டும்" என்கின்ற தீர்மானத்தை உரமாய் எதிர்த்தவர் பிர்ம்ம ஞானசங்கத்தில் அதிக பக்தியும் நம்பிக்கையும் பற்றுதலும் யுடையவரான நண்பர் திருவாளர் நெல்லையப்ப பிள்ளையே ஆவார்கள். அவர்கள் சொன்ன ஆட்சேபம் என்னவென்றால்,

"ஆதி திராவிடர்கள் முதலியவர்கள் அசுத்தமுள்ளவர்களானதால் கடவுளின் அருகில் செல்லவோ பூஜை முதலியவைகள் புரியவோ அருகதை அற்றவர்கள்" என்றும் "கடவுளின் அருகில் அவர்களைச் செல்லவிடக் கூடாது என்றும் சொன்னார்கள். அதை ஆக்ஷேபித்து அவ்வூர் பிரபல சைவ மக்களும், சைவ தேசிகர்களும் தக்க காரணம் காட்டி மறுத்தார்கள். முடிவில் ஓட்டு எடுக்கும் போது பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்த பிரபலஸ்தரான திருவாளர் பென்ஷன் தாசீல்தார் நெல்லையப்ப பிள்ளை அவர்கள் ஒருவர் மாத்திரமே எதிரிடையாக கைதூக்கினார். இந்த விஷயத்தில் அச்சங்கத்தின் ஏக தலைவரான ஸ்ரீமதி பெசண்டம்மாள் அவர்களும் அதே அபிப்பிராயத்தையே சொல்லி இருக்கின்றார்கள். அதாவது,

"ஆதிதிராவிடர் முதலியவர்கள் பரிசுத்தமற்றவர்களானதால் அவர்கள் தீண்டப்படாதவர்கள் ஆனார்கள்" என்று சொன்னார்.

அது மாத்திரமல்லாமல் இவர்கள் சமீபத்தில் காசியில் பல்கலைக் கழகத்தில் மாணாக்கர்களின் முன்பு பேசிய காலத்தில் ஜாதிப்பிரிவுகளை அதாவது வருணாசிரமத்தை ஆதரித்து 'தேச நன்மையை உத்தேசித்து அது அவசியம்' என்றும் பேசியிருக்கின்றார்கள்.

ஆகவே வருணாசிரம தர்மமும் தீண்டாமையும் ஆதரிக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்தால் நாட்டுக்கு எந்த விதத்தில் சகோதரத்தன்மையும் ஒற்றுமையும் அன்பும் சத்தியமும் உண்டாக்கக் கூடும் என்பதை அறிவாளிகள் யோசித்துப் பார்க்க வேண்டுமாய் விரும்புகின்றோம்.

மற்றப்படி இந்த ஸ்தாபனத்தில் நடைபெறும் மற்ற விஷயங்களை நாம் இந்த வியாசத்தில் புகுத்த இஷ்டப்படவில்லை. ஆதலால் அதைப் பற்றி நாம் எழுதவரவில்லை. அரசியல் துறையில் பார்ப்பனரல்லாதார்களுக்கு இந்த சங்கத்திலுள்ள வருணாசிரமப் பார்ப்பனர்களின் தொல்லையும் வகுப்பு ஆதிக்கப் பேராசையும் தலைவியால் பார்ப்பனரல்லாதார்களுக்கு ஏற்படும்



tamilnavarasam.com

கொடுமையும் அளவிடற்பாலதல்ல.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், பிரம்ம ஞான சங்கம் என்பது ஆரிய தர்மப்பிரசாரம், வருணாசிரம தர்ம பரிபாலனம், பிராமண மகா சபை என்பன போன்ற பார்ப்பனாதிக்க பிரசார சபைகளில் ஒன்றே ஒழிய வேறல்ல, அதில் மேல் கண்ட சபைகளாவது வெளிப்படையாய் நம்முடன் போர் புரிகின்றன என்று ஒருவாறு சொல்லலாம். ஆனால் இந்த பிரம்மஞான சங்கம் என்பதோ சூழ்ச்சியின் மூலம் நம்மைக் கழுத்தறுத்து வருகின்றது. ஆதலால் பார்ப்பனரல்லாதார் பிரம்மஞான சங்கத்தில் சேருவது தற்கொலைத் தன்மை பொருந்தியது என்றே சொல்லுவோம்.

சமத்துவக் கொள்கையை அழித்துப் பார்ப்பனீயத்தைப் புகுத்தி திருஞானசம்பந்தர் என்ற பார்ப்பனர் உதித்து "சைவத்தைக் காப்பாற்றிய கதை"யைப் போலவே நமது பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை அழித்துப் பார்ப்பனீயத்தை பரப்ப பெசண்டம்மை என்னும் "லோக மாதா" வந்து பிரம்மஞான சங்கத்தால் "மக்களுக்கு பிரம்மஞானம் புகட்டுகின்றார்" என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு சமயம் அந்த ஸ்தாபனத்திற்கு ஏற்பட்டிருக்கிற செல்வாக்கால், தங்களது சுயநலத்திற்கு ஏதாவது வழி செய்து கொள்ளலாம் எனக்கருதி பார்ப்பனரல்லாதாரில் சிலர் அதில் சேருவ தானாலும் சுயமரியாதைக் கொள்கையை ஒப்புக் கொள்ளுபவர்கள் அதில் கலந்து கொள்ளுவது சிறிதும் பொருந்தாததாகும். அதில் உள்ளவர்களில் பெரும்பான்மையோர்களின் மனப்பான்மையும் முக்கியஸ்தர்களில் தனித்தனி நபர்களின் மனப்பான்மையையும் அறிந்தே நாம் இந்தப்படி எழுதுகின்றோம். மற்றொரு சமயம் இதைப் பற்றி விரிவாய் எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 09.12.1928**



# தம்பட்டம்

## மேயோக்கள்

**- சித்திரபுத்திரன்**

ஆயிரக்கணக்கான மேயோக்கள் தோன்றினாலும் நம் நாட்டு வைதீகர்களுக்கும், பண்டிதர்களுக்கும், பார்ப்பனர்களுக்கும் புத்திவராது என்பது உறுதி. இந்த நாட்டில் பார்ப்பனீயம் இருக்கும் வரையும், மனுதர்ம சாஸ்திரம் இருக்கும் வரையும், இராமாயணமும் பாரதமும் பெரிய புராணமும் இருக்கும் வரையும், விஷ்ணு புராணமும் சிவமகாபுராணமும் சிவ பராக்கிரம புராணமும் இருக்கும் வரையும், கெருட புராணமும் பாராசர் ஸ்மிருதியும் இருக்கும் வரையும், சுவாமியையும் அம்மனையும் படுக்கை வீட்டிற்குள் ஒரே கட்டிலின் மேல் படுக்க வைத்துவிட்டு பால் செம்பை கட்டிலின் கீழ் வைத்து கதவை மூடி விட்டு வருகின்ற கோவில்கள் இருக்கும் வரையும், சுவாமி தாசி வீட்டிற்கு போகும் உற்சவங்கள் நடக்கின்ற வரையும், ஞானம் போதித்த சமணர்களை கழுவில் ஏற்றிய உற்சவங்கள் நடக்கின்றவரையும், ஒருவன் பெண்ணையும் ஒருவன் மனைவியையும் திருடிக் கொண்டு போனவர் களையும் திருட்டுத்தனமாக விபசாரம் செய்தவர்களையும் சுவாமியாக வைத்துக் கும்பிடும் கோவில்கள் உள்ளவரையும், 2 பெண் ஜாதி 3 பெண் ஜாதி 100 வைப்பாட்டி 200 வைப்பாட்டி உள்ள சுவாமிகள் நமது நாட்டில் இருக்கும் வரையும், சுவாமி என்றும் அம்மனென்றும் நாச்சியாரென்றும் கல், செம்பு, பித்தளை பொம்மைகளுக்கு பேர் வைத்து தேர் என்றும் ரதம் என்றும் பெயருள்ளதும் ஆயிரம் பேர், ஐயாயிரம் பேர், பத்தாயிரம் பேர் இழுத்தாலும் அசைக்க முடியாத வண்டிகளில் வைத்து இழுப்பதே பக்தியும் மோக்ஷ முமாயிருக்கும் வரையிலும், பட்டினி கிடந்து சாகப் போகிறவனுக்கு கஞ்சி ஊற்றாமல் தின்று கொழுத்த சோம்பேறிகளுக்கு ஆக்கிப் படைப்பதே புண்ணியம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறவரையிலும், குடிக்கப் பாலில்லாத குழந்தைகள் தேவாங்கைப் போலவும் குரங்குக் குட்டிகளைப் போலவும் தொத்திக் கொண்டும் எலிக்குஞ்சுகளாகக் கத்திக் கொண்டும், சாவதை கொஞ்சமும் கவனிக்காமல் குடம் குடமாய் பாலை கல்லுருவத்தின் தலையிலும் பாம்புப் புற்றிலும் ஊற்றிப் பாழாக்கும் வரையிலும், ஏழை மக்களை வருத்தி ஒன்றுக்கு இரண்டாக வட்டி என்றும் நிபந்தனை என்றும்



RangaRakes
tamilnavarasam.com

கொள்ளைக்காரர்கள் போல் பணம் சேகரித்து கண்ணில்லாத குருடர்கள் என்று சொல்லத்தக்க மாதிரி கோடிக்கணக்கான மக்கள் எழுத்து வாசனை என்பதே ஒரு சிறிதும் இல்லாமல் தற்குறிகளாய் இருப்பதை சற்றும் கவனியாமல் கோவிலென்றும் குளங்களென்றும் கும்பாபிஷேகமென்றும் வேதபாடசாலை என்றும் சமஸ்கிருத பாடசாலை என்றும் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் சாப்பாடு போடும் சத்திரமென்றும் சொல்லி பொருளைப் பாழாக்கும் அறிவிலிகள் மிகுந்திருக்கும் மட்டும், சாணியையும் மூத்திரத்தையும் கலக்கி குடிக்கும் சடங்குகள் உள்ள மட்டும், அறியாத பெண்களுக்கு சாமி பேரைச் சொல்லி கழுத்தில் கயிறு கட்டி அவர்களை பொது ஜனங்கள் அனுபவிப்ப தற்காக முத்திரை போட்டு விபசாரிகளாக விட்டுக் கொண்டி ருக்குமட்டும், அவர்களைக் கொண்டே கோவிலுக்கும் சாமிக்கும் உற்சவத் திற்கும் சேவை செய்யும் முறைகளை வைத்துக் கொண்டிருக்குமட்டும், மனிதனுக்கு மனிதன் தொட்டால் பாவம் பார்த்தால் தோஷம் தெருவில் நடந்தால் கெடுதி என்கின்ற கொடுமைகள் இருக்கும் வரையும், மத ஆதாரம் என்பதை அந்த மதத்தைச் சேர்ந்த மக்களே படிக்கக்கூடாது கேட்கக்கூடாது என்கின்ற கொள்கையைக் கொண்ட ஆதாரங்கள் வேதமாக இருக்கும் வரையிலும், இனியும் அமெரிக் காவிலிருந்தும், ஆஸ்திரேலியாவிலிருந்தும் மேயோக்கள் வராவிட்டாலும் இந்தியாவிலிருந்தே ஆயிரக்கணக்கான மேயோக்கள் புற்றீசல்கள் போல் புலபுலென கலகலெனப் புறப்படுவார்கள் என்பதை பார்ப்பனர்களும் பண்டிதர்களும் உணர்வதோடு பார்ப்பனர்களுக்கும் வெள்ளைக்காரருக்கும் முறையே சமூகத்தையும் தேசத்தையும் காட்டிக் கொடுத்து வயிறு வளர்க்கும் "தேசீய" முடத் தெங்குகளும் உணர வேண்டுமாய் தம்பட்ட மடிக்கின்றேன்.

**குடி அரசு - கட்டுரை - 09.12.1928**



# சென்னை தென் இந்திய சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு

சகோதரர்களே! சகோதரிகளே!

நமது மகாநாட்டின் நடவடிக்கைகள் எல்லாம் அநேகமாய் முடிவு பெற்றுவிட்டன. மகாநாடுகளின் வழக்கப்படி பார்த்தால் மகாநாட்டுத் தலைவர் என்கின்ற முறையில் எனது முடிவுரை என்பதாக சில வார்த்தை களையாவது நான் சொல்லியாக வேண்டும். நீங்களும் அதை குறிப்பாய் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை உணருகிறேன். மகாநாட்டு நடவடிக்கை களில் ஆதி முதல் இதுவரை ஊக்கத்தோடும் உணர்ச்சியோடும் இடையறாக் கவனத்தோடும் கலந்திருந்த உங்களுக்கு இனி நான் அதிகமாய் ஒன்றையும் சொல்ல வேண்டியதில்லையென்றே நினைக்கின்றேன். ஆயிரக் கணக்கான வருஷங்களாகவே சீர்திருத்தம் என்பதைப் பற்றி பேசப்பட்டு வருகிறதாய் அறியக் கிடக்கின்றது. எவ்வித சீர்திருத்தத்தைப் பற்றி பேசப் பட்டு வந்ததோ அது ஒரு சிறிதும் காரியத்தில் வெற்றிபெறவில்லை.

சீர்திருத்தக்காரர்களும் தங்கள் சீர்திருத்தங்களைப் பற்றி வாயளவில் பேசிக் கொண்டு வந்திருக்கிறார்களே யொழிய காரியத்தில் கொண்டு வருவதில் வெற்றியடையவே இல்லை. ஆனாலும் இப்போதும் அம்மாதிரி யாகவேதான் வாய்ப்பேச்சிலும் வெறும் தீர்மானத்திலும் நடைபெறுகின்றதே யொழிய காரியத்தில் நடைபெறச் செய்யும் மார்க்கத்திற்கு கொண்டுபோய் விடும்படியான சீர்திருத்தம் செய்வதற்கு ஆட்களைக் காணோம்.

இந்த மாதிரியான வாய்ப்பேச்சு சீர்திருத்தத்திற்கும் எதிர்ப்புச் சீர்திருத்தங்கள் வெளிப்படையாயும் மறைமுகமாயும் சூழ்ச்சியாயும் நடந்து கொண்டே வந்திருக்கின்றன. இன்றைய தினமும் பல இடங்களில் நடந்து கொண்டிருக்கிறது. அவைகளில் ஒன்றுதான் அரசியல் இயக்கம் என்பதும் திரு. காந்தியின் வருணாச்சிரமப் பிரசாரம் என்பதும், மற்றும் வருணாச்சிரம தர்மபரிபாலன மகாநாடு, பிராமண மகாநாடு, இந்து மகாநாடு, ஆரிய தர்ம பரிபாலன மகாநாடு, சைவசித்தாந்த மகாநாடு, வைணவ சித்தாந்த மகாநாடு, ஆஸ்திகர்கள் மகாநாடு என்று சொல்லப்படுபவைகள் போன்றவைகளும், ராமாயணம், பாரதம், பாகவதம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம்



RangaRakes tamilnavarasam.com

முதலிய புராண இதிகாச காலக்ஷேபங்களும், வேத சாஸ்திரப்புராணப் பாடசாலைகள் முதலியவைகளும், இவைகளுக்கு அடிக்கடி பாஷியங்கள் கிளப்புவது முதலியவைகளுமாகும்.

ஆதலால் வெறும் சீர்திருத்தங்கள் எப்பேர்ப்பட்ட வீரர்களால் செய்யப்படினும் அவைகளை மேற்கண்ட கரையான்கள் அடியோடு அழித்துக் கொண்டே வந்துவிடுமேயொழிய ஒரு சிறு பாகத்தையும் மீதியிருக்க விடாது என்பதை தயவுசெய்து உணருங்கள். உண்மையான சீர்திருத்தத்தை நமது நாட்டிற்கு விரும்புபவர்கள் முதலில் மேற்கண்ட புல்லுருவிகளையும் கரையான்களையும் அழிக்க தைரியமாய் முற்படவேண்டும். பழக்க வழக்கம் என்கிற பிசாசுகளை முதலில் ஓட்டி விட வேண்டும். பழக்க வழக்கங்களை விடவேண்டுமானால் மனிதன் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுக்கத் தயாரா யிருக்க வேண்டும். அப்படி பகுத்தறிவுக்கு மதிப்பு கொடுப்பவர்கள் கேள்வி மாத்திரத்திலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது. எழுதி வைத்திருப்பதாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது. வெகுகாலமாக நடந்து வருவதாக தெரிய வருவதினாலேயே ஒன்றை நம்பிவிடக் கூடாது. அநேகர் பின்பற்றுவதா லேயே நம்பிவிடக்கூடாது, கடவுளாலோ, மகாத்மாவாலோ சொல்லப்பட்டது என்பதினாலேயே நம்பிவிடக்கூடாது. ஏதாவதொரு விஷயம் நம்முடைய புத்திக்கு ஆச்சரியமாய் தோன்றுவதாலேயே அதை தெய்வீகம் என்றோ மந்திரசக்தி என்றோ நம்பிவிடக்கூடாது. எப்படிப்பட்ட விஷய மானாலும் நடுநிலைமையில் இருந்து பகுத்தறிவிற்கு தாராளமாய்விட்டு ஆலோசிக்கத் தயாராய் இருக்க வேண்டும் அப்படி இருந்தால் தான் கண்மூடித்தனமான பழக்க வழக்கம் முதலியவைகளை ஒழிக்க முடியும்.

அப்படிக்கில்லாமல் “எதையும் நம்பித்தானாக வேண்டும்” “பெரிய வர்கள் நடந்தபடி தான் நடக்க வேண்டும்” என்று நினைப்போமானால் எதை நம்புவது? யார் சொன்னது சரி? யார் சொன்னது தப்பு? எந்த எந்த புஸ்தகம் கடவுள் சொன்னது? அதில் எதெது மத்தியில் மனிதனால் நுழைக்கப்பட்டது? அவைகளில் அறிவாளிகளுக்கு எழுதியது எது? புத்தியில்லாத பாமர மக்களுக்கு எழுதியது எது? பெரியவர்கள் யார்? என்கின்றவை போன்ற விஷயங்களுக்குச் சமாதானம் எங்கே இருக்கிறது? நமது சீர்திருத்த வேலையின் ஜீவநாடி இந்த இடத்தில்தான் இருக்கிறது. இங்குதான் மனிதன் தைரியமாயும் உறுதியாயுமாயிருக்க வேண்டும்.

தவிர சீர்திருத்தங்களைப் பற்றிப் பிரசாரம் செய்வதன் மூலம் மக்களுக்கு எடுத்துச் சொல்லி முழுவதையும் சரிப்படுத்திவிடலாம் என்று எண்ணுவதும் மிகுதியும் பைத்தியக்காரத்தனமாகும்.

ஏனெனில் நமது பிரசாரத்தை செய்வதற்கு நமக்குள்ள சந்தர்ப் பத்தைக் காட்டிலும் நமது சீர்திருத்தத்திற்கு எதிரிகளான வைதீகர்கள், பண்டிதர்கள், சுயநலப் பார்ப்பனர்கள். அவர்களது கூலிகள் ஆகியவர் களுக்கே மிகுதியும், சந்தர்ப்பங்களும் சௌகரியங்களும் அதிகமாய் இருக்கின்றன. எப்படியெனில் கோவில்கள், புராணங்கள், சித்திரப்படங்கள் ஆகியவைகளும், உற்சவம், காலக்ஷேபம், பஜனை ஆகியவைகளும் பழக்கம், வழக்கம், நடை, உடை, பாவனை, சம்பிரதாயம் ஆகியவைகளும், பள்ளிக்கூடம், படிப்பு, பாடபுஸ்தகம் முதலியவைகளும் யாருடைய பிரயத்தனமும் இல்லாமல் மக்களுக்குள் சீர்திருத்தத்திற்கு விரோதமான விஷத்தை புகுத்தி விடுகின்றன. இது தவிர கோடிக்கணக்கான ரூபாய் கள் வருவாய் கொண்ட மடங்களும் மடாதிபதிகளும், ஸ்தாபனங்களும் வெட்டி ஆட்களும் இருக்கின்றன.

அன்றியும் ஜனப்பிரதிநிதித்துவமான ஓட்டுகள் பெற்று, அதன் மூலம் பிரதிநிதிகள் தெரிந்தெடுத்து, அவர்களால் சட்டங்கள் செய்து முழு சீர் திருத்தங்களையும் செய்துவிடலாம் என்று எண்ணுவதும் அறியாமையே ஆகும். ஏனெனில் ஜனப்பிரதிநிதித்துவமான ஓட்டுகள் என்பது பெரிதும் பாமர மக்களிடையே இருக்கின்றது. பிரதிநிதிகளாக வருபவர்களும் பெரிதும் சீர்திருத்த விரோதிகளுக்கு பயந்தவர்களும், சரியான சீர்திருத்த அறிவில்லாதவர்களாகவுமே இருக்கிறார்கள்.

சர்க்காரும் நம்முடைய கேவல நிலையினால் வாழவேண்டியவர் களாகவே இருக்கின்றார்கள். ஆதலால் உண்மையானதும் முடிவானதுமான சீர்திருத்தம் ஒரு நாட்டிற்கு வரவேண்டுமானால் ஏகசக்ராதிபத்தியத் தன்மைகொண்ட ஒரு வீரனின் ஆட்சியால்தான் முடியும். அதாவது “இந்தப் பொதுக் கோவிலுக்குள் எல்லோருக்கும் செல்ல உரிமை உண்டு” என்று விளம்பரம் செய்ய வேண்டும். யாராவது ஆக்ஷேபித்தால் அவர்களை சிறையிலிட வேண்டும். இதை பொது ஜனங்கள் கூட்டம் போட்டு கண்டிக்க ஆரம்பித்தார்களானால் உடனே கோவிலை இடித்தெறிந்து விடவேண்டும்.

ஜாதி வித்தியாசமோ, உயர்வு தாழ்வோ கற்பிக்கின்ற புஸ்தகங்களை படிக்கக் கூடாது என்று சொல்லிவிடவேண்டும். மீறி படிக்க ஆரம்பித்தால் அவற்றை பறிமுதல் செய்யவேண்டும். உயர்வு தாழ்வு வித்தியாசம் முதலி யவை கொண்ட மடாதிபதிகளை எல்லாம் சிறையில் அடைத்துவிட வேண்டும். பொதுஜனங்கள் கிளர்ச்சி செய்தால் மடாதிபதிகளை தீவாந்திரத் திற்கு அனுப்பிவிடவேண்டும். சுவாமிகளுக்கு உள்ள நகைகள், வாகனங்கள், பூமிகள் எல்லாவற்றையும் பறிமுதல் செய்து அவைகளை விற்று படிப்பில் லாதவர்களுக்கு படிப்பும், தொழில் இல்லாதவர்களுக்கு தொழிலும் ஜீவனமும் ஏற்படுத்த உபயோகப்படுத்தி விடவேண்டும்.

இது போன்ற காரியங்கள் செய்யத்தக்க உரம் கொண்ட வீர ஆட்சிக்கு நாட்டைக் கொண்டுவர வேண்டும். அப்பேர்ப்பட்ட வீரர்களின் ஆட்சிக்குட்





RangaRakes tamilnavarasam.com

பட்ட நாடுகள்தான் இன்று சுயமரியாதையும் சீர்திருத்தமும் பொலிந்து விளங்குகின்றன.

இப்பேர்ப்பட்ட வீர ஆட்சிக்கு நாட்டைக் கொண்டுவர வேண்டு மானால் அநேக சீர்திருத்தக்காரர்கள் உயிர் துறக்கத் தயாராயிருந்து கொண்டு பாமர மக்களிடையில் உண்மையைப் பரப்ப முன்வர வேண்டும். நம்நாட்டுப் பார்ப்பனர்கள் நம் சீர்திருத்தங்களை எதிர்க்க வெளியில் வருவதில்லை. ஒரு விதத்தில் ஒளிந்து கொண்டார்கள். ஆனாலும் நம்மவர்களிலேயே சில கூலிகளையும் ஏமாந்த சோணகிரிகளையும் பிடித்து அவர்களை நம்மீது ஏவிவிட்டு தடைவேலை செய்யச் செய்துவிட்டு, தங்களுக்குள் ஒற்றுமையும் கட்டுப்பாடும் செய்து கொள்ள வர்ணாசிரம தர்ம மகாநாடு, ஆரிய தர்ம பரிபாலன மகாநாடு, பிராமணர்கள் மகாசபை, சனாதன தர்மிகள் மகாநாடு, வேத வித்துக்கள் மகாநாடு, புரோகிதர் நன் மகாநாடு, பண்டிதர்கள், சாஸ்திரி கள் கனபாடிகள் சம்மேளனம் ஆகிய பல மகாநாடுகள் திருட்டுத் தனமாகவும் சூழ்ச்சியாகவும் கூட்டி அதற்குள் பல இரகசிய தீர்மானங்கள் செய்து இரகசிய சமாச்சாரப் போக்குவரத்து மூலம் தெரிவித்துக் கொண்டு கட்டுப்பாடாய் வேலை செய்து வருகிறார்கள்.

இவ்வளவும் செய்துவிட்டு சீர்திருத்த இயக்கத்திற்கு நாஸ்திக இயக்கம் என்ற பெயரைக் கொடுத்து அதற்குப் பல தப்பர்த்தங்களையும் பழிப்பு களையும் கற்பித்தும் வருகிறார்கள். இதை சில பார்ப்பனரல்லாதார்களும் நம்பிக்கொண்டு அர்த்தமில்லாமல் குற்றம் சொல்லுகின்றார்கள். ஆனாலும் சீர்திருத்தக்காரர்கள் என்பவர்கள் நாஸ்திக மதம் என்கின்ற பூச்சாண்டிக்குப் பயப்படக்கூடாது. அது ஒரு அர்த்தமற்ற வார்த்தை. அதன் உண்மை அர்த்தமும் உண்மைப் பிரயோகமும் என்னவென்றால் “பார்ப்பனீயத்தில் அதாவது பார்ப்பனர்களுடைய வேதம், சாஸ்திரம், இதிகாசம், புராணம் ஆகியவைகளில் நம்பிக்கை இல்லாதவன், பார்ப்பனர்களின் புரட்டுக்களைக் கண்டுபிடித்து வெளிப்படுகின்றவன்” என்பதுதான். இந்நிலையில் நாம் எல்லோரும் நல்ல உறுதியான நாஸ்திகர்களே ஆவோம். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் தைரியமாய் நம்மை நாஸ்திகர் என்றே சொல்லிக் கொள்ள வேண்டும்.சீர்திருத்தக்காரர்கள் தங்களுடைய பெயரின் இறுதியில் நாஸ்திகன் என்ற பட்டத்தையே சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நாஸ்திகப் பூச்சாண்டியை கொல்ல முடியும்.

நமக்கும் வேதத்திற்கும் என்ன சம்மந்தம்? அதை யார் உண்டாக் கினவர்கள்? யாருக்காக உண்டாக்கப்பட்டது? என்ன பாஷையில் செய்யப் பட்டது? அதில் நமது நிலைமை என்ன? என்பவைகளாகிய விஷயங்களை யோசித்துப் பார்த்தால் அதை நம்பலாமா? நாம் ஒப்புக் கொள்ளலாமா? அது நமது மக்களிடை பரவுவதற்கோ, இருப்பதற்கோ இடம் கொடுக்கலாமா? என்பது விளங்கும்.



கடைசியாக சீர்திருத்தக்காரர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன்.

மதவெறியும் சமயவெறியும் பிடித்தவர்களும் பொதுவாக பார்ப்பனர் களும் சமத்துவம், சுதந்திரம், சுயமரியாதை, பகுத்தறிவு ஆகியவைகள் கொண்ட சீர்திருத்தத்திற்கு எப்போதுமே விரோதிகள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒருவர் “எங்கள் மதத்தில் மேல்கண்ட சீர்திருத்த முண்டு” என்பார். “ஆனால் எங்களைப் போல் வேஷம் போட்டுக் கொள்ள வேண்டும், எங்கள் வேதத்தை நம்ப வேண்டும், எங்கள் சாமியையும், தூதனையும் வணங்க வேண்டும்” என்று சொல்லுவார்கள். மற்றொருவர் “எங்கள் சமயத்தில் சீர்திருத்தம் உண்டு, ஆனால் எங்களைப்போல் வேஷம் போட்டுக் கொண்டு எங்கள் சாமிகளையும் புராணங்களையும் நம்ப வேண்டும்” என்பார்கள். நம்பாவிட்டால் “நாஸ்திகர், அஞ்ஞானி, பாவிகள், சமயத் துவேஷி” என்று சொல்லிவிடுவார்கள். இவர்கள் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் இவர்கள் உண்மை சீர்திருத்தத்திற்கு விரோதிகள் என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

முக்கிய எச்சரிக்கை என்னவென்றால், பார்ப்பனர்களில் சிலர் சீர்திருத் தக்காரர்கள் என்று சுலபத்தில் பட்டம்பெற்றுப் புறப்பட்டுவிடுவார்கள். அதாவது கள்ளும் சாராயமும் குடித்தால் அதனாலேயே அவர் ஒரு சீர்திருத் தக்காரர் ஆய்விடுவார்; ஒருவர் ஆடு, மாடு, பன்றி சாப்பிட்டால் அதனா லேயே அவர் ஒரு சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார்; மற்றொருவர் வெட்டிச் சோறாக யார் வீட்டிலும் கிடைத்ததையெல்லாம் சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக் கொண்டு திரிந்தால், அதனாலேயே அவர் ஒரு பெரிய சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார்; மற்றொருவர் ஒழுக்கமில்லாமல் யாரையும் எந்தப் பெண்ணையும் கல்யாணமாகவோ, வைப்பாட்டியாகவோ, வேசியாகவோ அனுபவித்துக் கொண்டு திரிந்தால் அதனாலேயே அவர் ஒரு பெரிய சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார்; ஜனங்களும் முட்டாள்தனமாக அவர்களை வித்தியாசமற்றவர் என்றும் சீர்திருத்தக்காரர் என்றும் நம்பிவிடுவார்கள். ஆனால் அவர்களால் சீர்திருத்தத்திற்கு மாத்திரமன்றியில் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே பெரிய ஆபத்து என்பதை மறந்துவிடாதீர்கள்.

மற்றும் எந்த விஷயத்திற்கும் சாமியையும் மதத்தையும் குறுக்கே கொண்டு வந்து போட்டுவிடுகின்றார்கள். ஆகவே உங்களுடைய முன்னேற் றத்திற்குத் தடையாக எந்த மதமாவது கடவுளாவது குறுக்கிட்டால் அவற் றைத் தைரியமாக எதிர்க்க வேண்டுமென்றே கேட்டுக் கொள்ளுகின்றேன். இனி பார்ப்பனர்கள் வித்தியாசம் காட்டுவதுடன் பார்ப்பனரல்லாதார்களுக் குள்ளும் பற்பல ஜாதியார் ஒருவருக்கொருவர் வித்தியாசம் பாராட்டுகின்ற னர். ‘மேல்ஜாதியார்கள்’ நீங்கள் உங்களுக்கு சமமாக இருக்கவேண்டு மென்று விரும்புவீர்களானால், உங்களுக்குக் “கீழேயுள்ள ஜாதியார்”



RangaRakes tamilnavarasam.com

களுக்கும் நீங்கள் சமத்துவம் அளிக்க வேண்டும். நம்மிடமிருக்கும் கொடுமை பார்ப்பனர்கள் காட்டும் கொடுமைகளை விட சற்று அதிகம் என்றே சொல்ல வேண்டும். ஆனால் நாம் பார்ப்பனர்களை ஏன் அதிகமாகச் சொல்லுகிறோமென்றால், அவர்கள் வைத்த தீ தான் நம்முடைய வீடுகளிலும் பிடித்துக் கொண்டது. நாம் மேல் ஜாதி என்பாரோடு சண்டை செய்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படி உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையில் வெற்றி பெற்றால் கீழ் ஜாதியார்களென சொல்லப்படு கிறவர்களுக்கும் அவர்களுக்குரிய பங்கை நாம் கொடுக்க வேண்டும். சர்வ கட்சி மகாநாட்டுத் திட்டத்தில் எல்லா வகுப்பாருக்கும் சமத்வம் கொடுக்க வேண்டும் என்ற விஷயமே காணப்படவில்லை. பார்ப்பனர்களுக்குப் பயந்தே எல்லோரும் அதில் கையெழுத்துப் போட்டு விடுகிறார்கள். முதலில் எல்லா வகுப்பாருக்கும் சமத்துவம் கொடுப்பதைவிட வேறு என்ன சீர்திருத்தம் வேண்டுமென்று நினைக்கின்றீர்கள். பிச்சை எடுப்பதற்கு உபயோகமாயிருக்கும் வேதப் படிப்பிற்காக கொள்ளை கொள்ளையாக லாபம் சம்பாதிக்கும் நாட்டுக் கோட்டை செட்டிமார்கள் சோறும் போட்டு படிக்கும்படி செய்கிறார்கள். இம்மாதிரியான உதவி ஆதிதிராவிட பிள்ளை களுக்கு அளிக்கப்படுமானால், அவர்களில் வயிற்றுப்பிழைப்பிற்கு வழியின்றி சிறு வயதிலேயே கூலிக்குச் செல்லும் எத்தனையோ பிள்ளைகள் பள்ளிக்கூடம் சென்று படித்து மந்திரி வேலைக்குத் தயாராக விருப்பார் களென்பதை நினைத்துப்பாருங்கள்.

இனி சிலர், வேதங்களும், புராணங்களும் பழங்கதையென்று சொல்லிக் கொண்டு பண்டிகை, திதி, திவசம், கிரகணம் ஆகியவைகள் வரும்போது அவர்கள் அப்புத்தகங்களையே முதலில் திறந்து பார்ப் பார்கள். ஆனால் அவர்களைக் கேட்டால் வழக்கத்துக்கு விரோதமாக நடக்கலாமாவென்று கூறுகிறார்கள். இவர்களை எந்தக் கூட்டத்தில் சேர்ப்பது.

கடைசியாக சீர்திருத்தங்கள் மக்களுக்கு ஒழுக்கங்கள் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும், ஜீவன்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப் படுத்தவுமே வேண்டும். ஆகையால் நீங்களெல்லோரும் இம்மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களைத் தைரியமாக நடத்தையில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு : 26.11.1928 - சென்னை விக்டோரியா பொது மண்டபத்தில் நடைபெற்ற தென்னிந்திய சமுதாய சீர்திருத்தக்காரர்கள் மாநாடு - நிறைவுரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 09.12.1928**



RangaRakes

# சைமன் கமிஷனும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும்

நமது நாட்டில் தற்சமயம் உண்மையானதும் சுயநலமற்றதுமான பொது நல சேவை செய்கின்றவர்கள் முக்கியமாய் கவனிக்க வேண்டியது நமது நாட்டு மக்களுக்குள் கற்பிக்கப்பட்டிருக்கும் பிறப்பு-உயர்வு-தாழ்வை ஒழித்து சமத்துவத்தை ஏற்படுத்தி அவர்களை சுயமரியாதையுடன் வாழச்செய்ய வேண்டியதேயாகும். இதை நாம் பலதடவைகளில் எடுத்துக் காட்டி வந்திருக்கின்றோம்.

எனினும் மக்களுக்குள் சமத்துவமும் சுயமரியாதை உணர்ச்சியும் ஏற்பட்டுவிட்டால் வாழமுடியாத நிலையில் நமது நாட்டில் சில சமூகமும் சில தனிப்பட்ட மக்களும் இருப்பதால், அவர்கள் தங்கள் தங்கள் வாழ்க்கையை இவ்வித்தியாசத்தின் மீதே நிலைநிறுத்திக் கொண்டதால், அவர்கள் மற்ற வர்களின் சமத்துவத்திற்கும் சுயமரியாதைக்கும் விரோதமாக இருந்தே தங்கள் வாழ்நாட்களைக் கழிக்க வேண்டியதான நிலைமை அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டு இருப்பதை நாம் மறைத்துப் பேசுவதில் பயனில்லை.

எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் இப்படிப்பட்டஒரு கூட்டம் இருந்தே வந்து தங்கள் சுயநலத்தின் பொருட்டு மக்களின் நலத்தை பாழ்படுத்தி வந்திருப்பது சரித்திர வாயிலான உண்மையேயாகும்.

எனினும் சமத்துவமும் சுயமரியாதையும் பெற்று முன்னேற்ற மடைந்து வரும் நாடுகளின் சரித்திரங்களைப் பார்ப்போமானால், முதலில் இக்கூட்டத்துடன் போர்புரிந்து அவர்களை அழித்தபிறகுதான் நாட்டினு டைய மக்களுக்கு சமத்துவம் கொடுத்து சுயமரியாதையைக் காப்பாற்றி தங்கள் தங்கள் நாட்டை முன்னுக்கு கொண்டு வந்திருப்பதாக அறியக் கிடக்கும். ஆதலால் நம் நாட்டிலும் பொதுநலத் தொண்டில் ஈடுபடுபவர்கள் இக்கூட்டத்தின் தொல்லைக்கு தலைகொடுத்துத்தான் ஆகவேண்டியவர் களாயிருக்கின்றார்கள் என்பதில் ஆக்ஷேபனை இல்லை.

அநேகமாக மற்ற நாட்டின் சமத்துவத்திற்கும் சுயமரியாதைக்கும் தடை வேலைக்காரர்களாயிருந்து தீர வேண்டியவர்கள் பெரிதும் மதத்தின்



tamilnavarasam.com

பேரிலேயே தங்கள் தடை வேலைகளை செய்து வந்ததாக காணலாம். ஆனால் நமது நாட்டின் சமத்துவத்தையும் சுயமரியாதையையும் எதிர்த்து நிற்பவர்கள் பெரிதும் அரசியலின் பேரால் தடைகல்லாய் நிற்கின்றார்கள். மதக்காரர்கள் என்பவர்களைவிட அரசியல்காரர்கள் என்பவர்களே தொல்லை கொடுக்கின்றார்கள் என்பதற்கு உதாரணம் என்னவென்றால், நமது நாடு இப்போது மதத்திற்கு கட்டுப்பட்டிருப்பதை விட அரசாங்க சட்டத்திற்கே அதிகமாய் கட்டுப்பட்டிருப்பதேயாகும்.

எனவே எந்த சமத்துவமும் சுயமரியாதையும் இப்போது பெரிதும் அரசாங்க சட்டத்தைக் கொண்டே செய்யப்படவேண்டிய நிலையில் இருக்கின்றது. அதனால் நாம் அரசாங்க சட்டமுறையில் சமத்துவம் கேட்கும் போது எதிரிகள் அரசியலின் மூலமாகத்தான் எதிர்த்தாக வேண்டும். எனவே அதை அரசியலின் பேரால் வாழ்பவர்கள்தான் எதிர்த்தாக வேண்டும். அன்றியும் மதக்காரர்களின் எதிர்ப்புக்கு நமது நாட்டின் மதிப்பும் குறைந்து விட்டதால் அரசியலின் பேரால் தடைவேலை செய்பவர்களுக்கு மதக் காரர்களின் பின்பலமும் தாராளமாய் இருக்கும் என்பதில் சந்தேகமிருக்காது.

நிற்க, நம்முடைய நாட்டிலுள்ள உயர்வு தாழ்வு முதலிய வித்தி யாசங்களைப் போக்க நம்மவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் அதற்காக பட்ட கஷ்டங்களும் இந்நாட்டில் உள்ள யாவரும் அறிந்ததே யாகும். அவர்கள் வேறு எந்த விதத்திலும் முயற்சி செய்து முடியாததனா லேயேதான் நம் நாட்டு முதிர்ந்த அனுபவசாலிகளும் சுயநலமற்ற பெரியார்களுமாகிய பலர் சேர்ந்து சமத்துவத்தையும் சமசந்தர்ப்பத்தையுமே முக்கியக் கொள்கைகளாய்க் கருதி, அதற்காக நமது நாட்டு அரசியல் தொகுதிகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பெறுவதே முக்கிய நோக்கமாகக் கொண்டு, பார்ப்பனரல்லாதார் என்கின்ற பெயருடன் ஒரு ஸ்தாபனம் கண்டு, அதற்காகவே பலர் தங்கள் தங்கள் உயிரையும் கொடுத்து வேலை செய்து வந்தார்கள் என்பதும் பலர் உயிரைக் கொடுக்க இருக்கிறார்கள் என்பதும் வெள்ளிடை மலை.

அதுபோலவே அவ்வியக்கத்தை, நாம் மேலே சொன்னது போல் உயர்வு தாழ்வு வித்தியாசத்தாலேயே தங்கள் வாழ்வையும் பிழைப்பையும் நிலை நிறுத்திக்கொண்ட சமூகமும் அவர்களுக்கு அனுகூலமாய் இருந்து வாழ வேண்டியவர்களான சில தனி நபர்களும் சேர்ந்து அக் கொள்கைகளை ஒப்புக் கொண்டது போல வேஷம் போட்டு பல சூழ்ச்சிகள் செய்து எதிர்த்த தும் இப்போது நேராகவே வெளிவந்து, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை அரசியலின் பேராலும் எதிர்ப்பதும் வெள்ளிடைமலை. இவ்வளவு எதிர்ப்புகளையும் தாண்டி அவ்வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது ஒருவாறு வெற்றிபெற்று இந்தியா முழுவதிலும் அமுலில் இருப்பதும் வெள்ளிடைமலை.



அதனால் அவ்வுரிமை பெற்ற சமூகங்கள் ஒவ்வொன்றும் ஒருவாறு சமத்துவமும், சம சந்தர்ப்பமும், சுயமரியாதை உணர்ச்சியும் பெற்றிருப்பதும் வெள்ளிடை மலையேயாகும். ஆனாலும் இப்போது அதை மேலும் கேட்பதை மறுப்பதற்கும் உள்ளதையும் ஒழிப்பதற்கும் மேல் கண்ட கூட்டமே அரசியலின் பேரால் அதாவது சர்வ கட்சி மகாநாட்டின் பேராலும் தேசத்தின் பேராலும் செய்யும் சூழ்ச்சியும் வெள்ளிடை மலையேயாகும்.

நிற்க, தற்காலம் இந்தியாவுக்கு அளிக்கப்படப்போகும் அரசியல் சுதந்திரம் எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும் என்பதை விசாரித்தறி வதற்கென்று பிரிட்டிஷ் பார்லிமெண்டாரால் நியமித்தனுப்பிய சைமன் கமிஷனைப் பஹிஷ்கரிப்பது என்கின்ற ஒரு சூழ்ச்சியையும், குறிப்பாக இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டே ஆரம்பித்து மக்களை ஏமாற்றுவதும் தாங்கள் மாத்திரம் தங்களுடைய இஷ்டப்படி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை ஒழிந்த ஒரு அரசியல் சுதந்திர சட்டத்தை ஏற்பாடு செய்து கொண்டு, அதைப் பொது ஜனங்களின் பேரால் சைமன் கமிஷனுக்கு தெரியப்படுத்துவதுமான வேலையில் ஈடுபட்டிருப்பதும் வெள்ளிடை மலையேயாகும். இந்த நிலையில் இந்திய மக்களின் பொது அபிப்பிராயம் என்ன என்பதை அக் கமிஷனுக்கு வெளிப்படுத்த பொது ஜனங்களும், குறிப்பாக மகமதியர்களும் கிறிஸ்தவர்களும் பார்ப்பனரல்லாதார்களும் தாழ்த்தப்பட்டவர்களும் ஒடுக்கப்பட்டவர்களும் தீண்டப்படாதவர்கள் என்று விலக்கப்பட்ட மக்களும் மிகுதியும் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

எனவே மேற்படி கமீஷன் சென்னைக்கு வரும்போது இக்கூட்டத் தவர்களுக்கு மனமார்ந்ததும் ஆடம்பரமும் பெருமையும் கொண்டதுமான வரவேற்பு அளித்து அவர்களை தங்கள் நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டி யதுடன் தங்கள் தங்கள் குறைகளை தாராளமாய் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியவர்களாகின்றார்கள் என்பதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூடாது என்பவர்களில் யாரும் இதுவரை அது கூடாது என்பதற்கு சரியான காரணமோ அல்லது எல்லா மக்களுக்கும் சமத்துவமும் சம சந்தர்ப்பமும் கிடைக்கும் படியான வேறு மார்க்கமோ எடுத்துச் சொன்னவர் யாரும் இல்லை.

பல கூலிகள் மாத்திரம், மக்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பதைப் பற்றி “தென்னாட்டில் ஒரு பகுதியில் பார்ப்பனரல்லாதார் என் கின்ற பேரால் யாரோ சிலர் மாத்திரம் தான் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்கின்றார்கள். அதுவும் சர்க்கார் தாசர்கள் கேட்கிறார்கள். பொது ஜனங்கள்



RangaRakes tamilnavarasam.com

கேட்கவில்லை" என்கின்ற ஒரு மந்திரத்தையே சொல்லிக்கொண்டு இதை பொது ஜனங்கள் நம்பும்படி பிரசாரம் செய்து இதனாலேயே சைமன் கமிஷன் கண்ணிலும் பொதுஜனங்கள் கண்ணிலும் மண்ணைப்போட்டுத் தெரியாமல் செய்து விடலாம் என்பதாக மனப்பால் குடித்துக் கொண்டு நமது நாட்டில் ஒருவாறு வயிற்றுப் பிழைப்புப் பிரசாரம் செய்து வருகின்றார்கள். ஆனால் இவர்களுக்குத் தக்கபதில் கீழ்க்கண்ட வார்த்தைகள் தான். அதாவது,

எட்டு கோடி ஜனம் கொண்ட மகமதியர்கள் வகுப்புவாரி பிரதி நிதித்துவம் கேட்கின்றார்களா இல்லையா? என்பதும்,

ஐந்து கோடி சன சமூகங்கொண்ட தீண்டாதவர்கள் என்கிறவர்கள் எல்லோரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கின்றார்களா இல்லையா? என்பதும்,

பார்ப்பனரல்லாதார் இயக்கம் வகுப்புவாரி இயக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதை அடிப்படையாகக் கொண்டதா இல்லையா? என்பதும்,

கிறிஸ்தவர்களும் ஐரோப்பியரும் ஆங்கிலோ இந்தியரும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் கேட்கின்றார்களா இல்லையா என்பதுமேயாகும்.

குறிப்பாக மகமதியரில் மௌலானாக்கள் ஷவ்கத்தலி மகமதலி போன்ற வீரர்கள் சர்க்கார் தாசர்களா என்பதும், தீண்டாதவர்கள் என்று ஒதுக்கித் தள்ளப்பட்ட சுமார் 5 1/2 கோடி மக்கள் சர்க்கார் தாசர்களா என்பதும், பார்ப்பனரல்லாதார்களில் பெரும்பாலோர் அதாவது திருவாளர்கள் எஸ். ராமநாதன் எம்.ஏ.பி.எல், ஆரியா, எம்.ஏ. தண்டபாணிபிள்ளை, ஈ.வெ. ராமசாமி நாயக்கர், சிதம்பரம் பிள்ளை முதலியவர்களைப் போன்ற கோடிக் கணக்கானவர்கள் அதாவது 1 வருஷம் 2 வருஷம் 10 வருஷம், ஒரு தடவை இரண்டு தடவை மூன்று தடவை நான்கு தடவை ஐந்து தடவை தேசத்திற்காக ஜெயிலுக்குப் போனவர்களும், பல வருஷம் இந்த மாகாண காங்கிரஸ் தலைவர்களாகவும், காரியதரிசிகளாகவும், மாகாண காங்கிரஸ், ஜில்லா காங்கிரஸ், தாலூகா காங்கிரஸ் மகாநாடுகளின் தலைவர்களாகவும் இருந்தவர்களும், ஒரு கோடி, இரண்டு கோடி, ஐந்து கோடி, பத்து கோடி ரூபாய் மதிப்புள்ள பெரிய ஜமீன்தாரர்களும் 1 லக்ஷம், 2 லக்ஷம் கிஸ்து கொடுக்கக்கூடிய மிராசுதார்களும், ஐம்பதினாயிரம், அறுபதாயிரம் ரூபாய் வருமானவரி கொடுக்கும் வியாபாரிகளும், பெரிய தலைவர்கள் என்று மதிக்கத்தக்கவர்களும், சாதாரண குடியானவர்களுமாகிய மக்கள் கூடிச் செய்யும் தீர்மானமும் மற்றும் அனேக சமூக மகாநாடுகள் செய்யும் தீர்மானமும் சர்க்கார் தாசர்களாலா? என்பதும்,

இதற்கு எதிரிடையாய் இதன் மூலம் தவிர வேறு மூலத்தில்



ஜீவனத்திற்கு மார்க்கமே இல்லையென்று சொல்லக் கூடியவர்களும், சமயம்போல் பேசுகின்றவர்களும், காசு கொடுத்த பக்கம் பேசுகின்றவர்களும், தங்கள் சுயநலத்திற்காக என்ன வேண்டுமென்றாலும் செய்யக் கூடியவர்களும், இதுவரை ஆயிரக்கணக்கானக் குட்டிக்கரணம் போட்டவர்களும் அவர்களாலேயே மேல்படி நிலையை மறுக்க முடியாதவர்களும் பொது ஜனங்களாகிவிடுவார்களா? என்பதும்தான்.

வார்த்தைகளைப் பேச கிளிப்பிள்ளைக்கும் மைனா குருவிக்கும் கூடத் தெரியலாம். அது இன்ன வார்த்தை என்று உணர்ந்து தன் புத்தியைக் கொண்டு தனக்காகப் பேசுகின்றதா என்பதுதான் கவனிக்கத்தக்க விஷயமாகும். ஆதலால் பொது ஜனங்கள் தங்கள் அறிவை இவ்விஷயத்தில் நிதானமாக உபயோகித்து சைமன் கமிஷனிடம் நடந்து கொள்ள வேண்டியதைப் பற்றி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதையும், சமீபத்தில் செங்கல்பட்டில் கூடப்போகும் மகாநாட்டில் எல்லோரும் கலந்து உண்மையான முடிவைச் செய்து, அதை சைமன் கமிட்டிக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பகிஷ்காரக் கூட்டத்திற்கு சென்னைதான் முதல் முதல் புத்தி கற்பித்த இடமாதலால் அதைப் பற்றி நாம் அதிகம் எழுத வேண்டியதில்லை என்றே கருதுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 16.12.1928**



RangaRakes tamilnavarasam.com

# கிருஷ்ணசாமி பிள்ளை மறைந்தார்!

நமது இயக்கத்திற்கு ஆரம்ப முதல் ஆதரவளித்து வந்தவரும் இயக்கத்திற்கு பணம் காசு தாராளமாய் செலவு செய்து வந்தவரும் கோயமுத்தூர் மகாநாட்டுக்கு காரியதரிசியாய் இருந்தவரும் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்திற்கு காரியதரிசியும் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கும் இயக்கத்திற்கும் உண்மையான உள்ளன்போடு கூடிய உதவியாளருமான நமது உண்மை நண்பர் திரு. கோவை, நெய் மண்டி கிருஷ்ணசாமிபிள்ளை அவர்கள் காலம் சென்றது மிகவும் துக்கப்படத்தக்க சம்பவமாகும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் அம்மாதிரியான உள்ளன்போடு உழைக்கும் மற்றொரு நண்பரை கோவையில் காணுவது மிகக் கடுமையென்றே சொல்ல வேண்டும். அவர்களின் அருமை மனைவியாருக்கும் தாயாருக்கும் தம்பிமார்களான நமது நண்பர்கள் திருவாளர்கள் சுப்பு, பஞ்சலிங்கம் ஆகியவர்களுக்கும் நமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - இரங்கல் செய்தி - 16.12.1928**



# நாஸ்திகம்

## (தூய வெழிலழகனார் எழுதி சித்திரபுத்திரன் திருத்தியது)

**மகன் :-** அம்மா! இதென்ன விபரீதம்? நமது தந்தை சதா சர்வகாலம் "குடி அரசு" "குடி அரசு" என்று "குடி அரசு"ம் கையுமாகவே இருந்து சதாகாலமும் படித்துக் கொண்டு வந்தது போதாமல் இப்போது "குடி அரசு" ஆபீசுக்கே போய்ச் சேர்ந்து விட்டாரே இதென்னம்மா! அநியாயம்! அவருக்கு நாஸ்திகம் தலைக்கேறிவிட்டது போல் இருக்கின்றது.

**தாய் :-** மகனே! இவ்வாறு கேட்பதற்குக் காரணமென்ன? "குடி அரசு" பத்திரிகை நாம் இழந்த சுயமரியாதை, அறிவு, செல்வம், நாடு ஆகியவைகளை மறுபடியும் பெறுவதற்கு வேண்டிய வேலை என்ன? என்ன செய்யவேண்டுமோ அவைகளை உயிர்க்கு துணிந்து செய்து கொண்டும், மனிதர்களுக்குள் பரவி நிற்கும் மூட நம்பிக்கைகளை ஒழிக்கவே இவ்வுலகமெங்கணும் வெற்றிக் கொடியோடு உலவிக் கொண்டும் வருகின்றது. உமது தந்தை அக் 'குடி அரசின்' கொள்கைகளை நன்கு அறிந்தவராதலால், நான்தான் அங்கே போய் அதற்கு ஏதாவது உதவி செய்யலாமே எனக்கருதி போகும்படி சொல்லி அவரை அங்கு அனுப்பினேன். இதிலென்ன அநியாயம்?

**மகன் :-** என்னம்மா! அக் 'குடி அரசை' இவ்வளவு மேன்மையாய் சொல்லிப் புகழ ஆரம்பித்துவிட்டாய். வெறும் நாஸ்திகத்தையே போதிக்கும் 'குடி அரசை'ப் பற்றி இப்படிப் புகழுவதோடு அப்பாவையும் அங்கு அனுப்பி விட்டாயே?

**தாய் :-** மகனே! நாஸ்திகத்தைப் போதிப்பது 'குடி அரசு' அல்ல, நானும் அல்ல, நீயும் அல்ல, உமது தந்தையுமல்ல, நாம் ஒருவரும் நாஸ்திகரல்ல; இதற்கு யாதொரு சந்தேகமும் படவேண்டாம்.

**மகன் :-** அம்மா! "குடி அரசை" நாஸ்திகமல்ல என்று எப்படி அம்மா சொல்லுவது? சாமியே இல்லை என்று வாரந்தோறும் வெளிவருகின்றதேயம்மா? நீங்கள் படித்ததே இல்லையோ? உலகமெங்கணும் எங்குப் பார்த்தாலும் "குடி அரசு நாஸ்திகத்தைப் பரப்புகின்றது" என்று சொல்லப் படுகின்றதே.



RangaRakes tamilnavarasam.com

**தாய் :–** அப்பா குழந்தாய்! நீ நல்ல புத்திசாலி, பகுத்தறிவு உள்ளவன். அப்படியிருக்க 'குடி அரசை நாஸ்திகமென்று சொல்லுதே அம்மா' என்று சொல்லுகின்றாயே ஒழிய நீ எப்போதாகிலும் எங்காகிலும் 'குடி அரசில்' சாமி இல்லை என்று எழுதியிருந்ததைப் பார்த்ததுண்டா? நீயும் வாரந் தோறும் படித்துக் கொண்டுதானே வருகின்றாய். நானும் இடைவிடாது படித்துக் கொண்டுதான் வருகிறேன். ஒரு நாளும் சாமி இல்லை என்ற கட்டுரையைக் 'குடி அரசு' கொண்டு வந்ததே இல்லையே! யாரோ சொல்லுவதைக் கேட்டுக்கொண்டு "அம்மா உலகம் சொல்லுகிறதே" என்கின்றாயே உனக்கு அமைந்த அறிவு எதற்காக இருக்கிறதோ தெரிய வில்லையே? அய்யோ, இந்த காலத்துப் பிள்ளைகளுக்கு இப்படித்தானே படிப்பிக்கின்றார்கள்.

**மகன் :–** நான் ஒன்றும் சந்தேகப்படவில்லை. உனது இட்டப்படியே வருகிறேன், சற்று பொறு, நீயும் 'குடி அரசை' படிக்கின்றாயே. சாமி உண்டு என்கிறாயா, இல்லை என்கிறாயா? சற்று சொல்லு பார்ப்போம். பிறகு குடி அரசைப் பற்றி பேசுவோம்.

**தாய் :–** மகனே, எனது இட்டப்படி ஒன்றும் வேண்டாம். உன் இட்டப்படியே எது வேண்டுமானாலும் கேள். ஆனால் இப்போது கேட்ட கேள்வி உண்டே, இது ஒரு நல்ல கேள்விதான். இதற்காக நான் மெத்த சந்தோஷிக்கிறேன். என்னப்பா! சாமி உண்டா இல்லையா? என்ற கேள்விதானே கேட்கிறாய்? வேறு ஏதாகிலும் உண்டா?

**மகன் :–** அம்மா! வேறு யாதும் இல்லை. குடி அரசைப் படிக்கின்ற வர்களின் மனப்பான்மையை அறிய இது ஒன்றே போதும்.

**தாய் :–** ஆஹா, அப்படியா! சரி பதில் சொல்லுகிறேன். பதில் சொல்லுவதற்கு முன்பு கேள்வியை நன்றாய் விளக்கிக் கொள்ள வேண் டாமா? அவசரப்படாதே; நிதானமாய்ப் பேசு; சந்திக்கடைப் பேச்சிலேயே உனது கவனம் சென்றுவிட்டதே ஒழிய உன் அறிவுக்கு நீ சற்றும் மதிப்புக் கொடுக்கவில்லை என்று தெரிகின்றது. ஆனாலும் குற்றமில்லை. உனது கேள்வி என்ன? சாமி உண்டா இல்லையா என்பது தானே?

**மகன் :–** ஆம் அம்மா.

**தாய் :–** அப்பா மகனே, சாமி என்றால் என்ன? அதை முதலில் சொல்லு பார்ப்போம். அதாவது அதற்குப் பெயர் என்ன? ரூபம் என்ன? நிறம் என்ன? குணம் என்ன? அது என்ன சொல்? சற்று புரியும்படி சொல்லு பார்ப்போம். பிறகு, அது உண்டா இல்லையா? என்பதைப் பற்றி பேசலாம்.

**மகன் :–** என்ன அம்மா உனக்கு இது கூடவா நான் சொல்லிக் கொடுக்க வேண்டும்?

பெயரும் உருவமும் குணமும் தோற்றமும் அற்றவனும், புத்திக்கும் மனத்திற்கும் எட்டாதவனும், எங்கும் வியாபித்து சகல உலகங்களையும் படைத்துக் காக்கும் சர்வ வல்லமையும், சர்வமும் அறியும் சக்தியும்



உள்ளவனும், அவனன்றி ஓரணுவும் அசைய முடியாத ஆதிக்கம் கொண் டவனும் ஆகிய ஏக பரம் பொருள் என்றும் அது ஒரு பெயர்ச்சொல் என்றும் நீ அறிந்ததில்லையா? என்தாயே, இந்தக் கேள்வியிலேயே நாஸ்திக வாடை வீசுகின்றதே.

**தாய் :–** குழந்தாய்! பொறு பொறு, அவசரப்படாதே. கிளிப் பிள்ளையைப் போல யாரோ சொல்லிக் கொடுத்ததை மனதில் வைத்துக் கொண்டு அர்த்தமில்லாமல் கஷ்டப்படுகின்றாய்.

'சாமி' என்றால் என்ன என்று கேட்டேன். அதற்கு ஒரு வண்டி சங்கதி சொல்லி விட்டாய். அவைகளில் ஒவ்வொன்றாக கவனிப்போம். நீ நல்ல பிள்ளை ஆனதினால் கேள்விப்பட்டவைகளையும் மற்றவர்கள் சொல்லிக் கொடுத்ததையும் எதிலாவது படித்ததையும் மறந்து விட்டதாக நினைத்துக் கொள். குருட்டு நம்பிக்கை முரட்டுப் பிடிவாதம் முதலிய அறிவுக்கு விரோதமான குணங்களை விட்டுவிட்டு மாசு மறுவற்ற பரிசுத்தமான மனதோடு நான் சொல்வதை சற்றுக் கூர்ந்து கவனமாய்க் கேள்.

மகனே! நீ உண்டா இல்லையா என்று என்னைக் கேட்ட சாமி பெயரில்லாதது, உருவமில்லாதது, குணமில்லாதது, ஆனால் எங்கும் வியாபித்தது, புத்திக்கும் மனதிற்கும் எட்டாதது என்று முதலில் சொல்லி முடிவில் அது ஒரு பெயர்ச் சொல் என்றும் சொல்லி இருக்கின்றாய். மத்தியில் உள்ளதை பற்றி பிறகு பேசுவோம். பெயர்ச் சொல் என்றால் நாமமோ, ரூபமோ, குணமோ இருந்தாக வேண்டும்–சரி அதுதான் போகட்டும் வஸ்து என்றால் அதற்கும் ஒருபெயர் வேண்டும், ரூபம் வேண்டும், குணமும் வேண்டும். அதுதான் போகட்டுமென்றால், எப்பேர்ப்பட்ட ஒரு தன்மையைப் பற்றியதானாலும் அது மனதிற்காவது புத்திக்காவது எட்டினதாக இருக்க வேண்டும். எனவே "பேர் இல்லை, குணமில்லை, மனதிற்கும் புத்திக்கும் எட்டவும் முடியாது, அப்படி ஒரு வஸ்து இருக்கின்றது, அதை உண்டு என்கிறாயா இல்லை என்கின்றாயா?" என்று நீ என்னைக் கேட்டால் நான் என்ன பதில் சொல்லக்கூடும் என்பது உனக்குத் தெரிய வேண்டுமானால், நான், அந்த மாதிரி ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு நீ என்ன பதில் சொல்லுகிறாய் என்று பார்க்கிறேன். அதாவது என்னருமைக் குழந்தாய்! நம்ம வீட்டுப் பெரிய பெட்டிக்குள் ஒரு வஸ்து இருக்கின்றது. அதற்குப் பெயர் இல்லை, ரூபமும் இல்லை, குணமும் இல்லை, அது உன் புத்திக்கும் மனதிற்கும் எட்டாதது, அது இப்போது இருக்கின்றதா? இல்லையா? என்று சொல்லு பார்ப்போம்.

**மகன் :–** என்னம்மா இப்படி கேட்கின்றாய்? நீ சொல்லுகின்ற மாதிரி ஒரு சாமான் இருந்திருக்க முடியுமா அம்மா? அப்படியானால் பெட்டிக்குள் ஒன்றுமில்லை என்று தானே அர்த்தமாகின்றது?

**அம்மா :–** ஏனப்பா அப்படிச் சொல்லுகின்றாய்? பெயரும் உருவமும் இல்லாததாலேயே ஒன்றும் இல்லை என்று சொல்லி விடலாமா? குழந்தாய்! நன்றாய் யோசித்து பதில் சொல்லு.



RangaRakes tamilnavarasam.com

**மகன் :-** பெயரும் உருவமும் இல்லாமல் ஒரு வஸ்து இருக்கக் கூடும் என்று என் புத்திக்கும் படவில்லை. மனதிற்கும் எட்டவில்லையே. எப்படியம்மா அப்படி ஒரு வஸ்து இருக்க முடியும்?

**தாய் :-** உன் புத்திக்கும் உன் மனதிற்கும் எட்டாததினாலேயே ஒரு வஸ்துவை நீ இல்லை என்று சொல்லிவிடலாமா? குழந்தாய்!

**மகன் :-** அந்தப்படி சொல்லி விடக் கூடாது என்றே வைத்துக் கொண்டாலும், நீ கேட்கின்ற வஸ்து யாருடைய புத்திக்கும் மனதிற்கும் படாதது என்று மேலே சொல்லி இருக்கின்றாயே. ஆதலால் வேறு யாருடைய புத்திக்கும் மனதிற்கும் படக்கூடியதாக இருக்கும் என்று நினைத்தாலும் கூட அது நீ சொல்லும் வஸ்து அல்லாததாய் விடுமே. ஆகையால் நீ கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டுமானால் நீசொல்லுகின்ற குணங்கள் கொண்டே ஒரு வஸ்து இருக்க முடியாது என்று சொல்வதுடன் அந்தக் கேள்வியை அர்த்தமற்றதும் (கோபித்துக் கொள்ள வேண்டாம்,) முட்டாள் தனமுமான கேள்வி என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்படிச் சொல்வதற்காக அம்மா! தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும்.

**தாய் :** மகனே நீ அப்படி கடுமையாக சொல்வதைப் பற்றி எனக்கு மிகவும் சந்தோஷமே; தயவுசெய்து இன்னம் ஒரு நூறு தடவை சொல்லு பார்ப்போம், என் காது குளிரட்டும்.

**மகன் :** என்னம்மா ஒருவர் உன்னை முட்டாள் என்று சொன்னால் அது உனக்கு மகிழ்ச்சியாய் இருக்கின்றது என்றால் அது எனக்கு அதிசய மாயிருக்கின்றதே?

**தாய் :** இதில் அதிசயம் ஒன்றுமில்லை; நீ என்னையா சொன்னாய்? அந்த மாதிரி கேள்வி கேட்டவர்களைத் தானே சொன்னாய்? அந்த மாதிரி கேள்வி நானா கேட்டேன்? கேட்டவர்களைத்தானே அந்த முட்டாள் பட்டங்கள் போய்ச்சேரும். நான் எதற்காக வருத்தப்படவேண்டும்?

**மகன் :** (சற்று யோசித்துப்பார்த்து) நீ சொல்லுவது ஒன்றும் எனக்குப் புரியவில்லையே, நீ தானே அந்த மாதிரி கேள்வி இப்பொழுது என்னைக் கேட்டாய்?

**தாய் :** மகனே! நன்றாக யோசித்துப் பார்: முதலில் நீ அந்த மாதிரி என்னை ஒரு கேள்வி கேட்கவில்லையா?

**மகன் :** என்னம்மா நான் சாமியைப் பற்றிக் கேட்ட கேள்விக்கும் நீ பெட்டியில் இருக்கும் வஸ்து என்பதைப்பற்றி கேட்கும் கேள்விகளுக்கும் வித்தியாசமில்லையா?

**தாய் :** என்ன வித்தியாசம் வேண்டுமென்கிறாய்? நீ கேட்ட வஸ்துக்கு என்ன குணங்கள் கற்பித்து 'உண்டா இல்லையா' என்று கேட்டாயோ, அதே குணங்களைத் தானே கற்பித்து நானும் ஒரு வஸ்துவைப் பற்றிக் கேட்டேன். நான் கேட்டது முட்டாள் தனமானால் நீ கேட்டது என்ன சொல் பார்ப்போம்?



RangaRakes

தவிர நீ பெயர் இல்லை என்று சொல்லிவிட்டு சாமி என்று முன்னுக் குப் பின் முரண் பேசினாய்: நான் அப்படிச் சொல்லவில்லை; பெயர்இல்லாத வஸ்து என்றேன். ஆகவே நான் கேட்டதில் நீ கேட்டதை விட அதிகமானத் தப்பு என்ன?

**மகன் :** என்ன அம்மா இப்படி நீ பேசுகின்றாய்? கேட்ட வஸ்துக்கு சர்வ சக்தி, சர்வ வல்லமை, சர்வ வியாபகம் படைத்துக் காத்து அழித்தல் ஆகியவைகள் உண்டா அம்மா?

**தாய் :** மகனே சர்வ சக்தி முதலிய விஷயங்களைப் பற்றியும், படைப்பு, காப்பு, அழிப்பு ஆகிய விஷயங்களைப் பற்றியும் பிறகு பார்த்துக் கொள்ளுவோம். வஸ்து நிச்சயம் செய்து கொண்டு குண நிச்சயத்திற்கும் போவோம்.

**மகன் :-** சற்று பொறு அம்மா. நான் போய் வாத்தியாரைக் கேட்டு விட்டு வருகின்றேன்.

**தாயார் :-** மகனே, நான் முன்னமே சொன்னேன், கிளிப்பிள்ளையைப் போல் வாத்தியார் சொன்னதையே நம்பிக் கொண்டு அவஸ்தைப் படவேண்டாம் என்று. ஆனாலும் குற்றமில்லை. அப்படியே ஆகட்டும், போய் கேட்டுவிட்டு வா, எனக்கு ஆட்க்ஷேபணை இல்லை. அவர் உனக்கு இன்னும் என்ன என்ன மூடபக்திகளைப் பற்றி சொல்லி வைப்பாரோ பார்ப்போம். நான் அப்பொழுதே இந்த மாதிரி மூடநம்பிக்கைகளைப் போதிக்கும் பள்ளிக்கூடங்களுக்கு நமது பிள்ளைகளை அனுப்பக் கூடாது என்று சொன்னால், உன் தந்தை அதைக் கவனிக்கவில்லை. இருந்தாலும், குற்றமில்லை. போய் உன் வாத்தியாரை நன்றாய்க் கேட்டு தெரிந்து கொண்டு வா. வாத்தியார் புத்திசாலித்தனத்தையும் பார்க்கலாம். ( தொடரும்)

**குடி அரசு – உரையாடல் – 16.12.1928**



tamilnavarasam.com

# செங்கல்பட்டில்
# தமிழ்நாட்டு சுயமரியாதை மகாநாடு

தமிழ்நாட்டு சுயமரியாதை மகாநாட்டை செங்கல்பட்டு ஜில்லாவில் கூட்ட வேண்டுமென்று செங்கல்பட்டு ஜில்லா பிரமுகர்கள் முடிவு செய்திருப்பதாக பத்திரிகைகளில் காண நாம் மிகுதியும் மகிழ்ச்சியுடன் அவ்வபிப்ராயத்தை வரவேற்கின்றோம்.

தற்காலம் அரசியல் புரட்டாலும், மதவியற் புரட்டாலும் கஷ்டப்பட்டும், பார்ப்பனர்களாலும் அவர்களது கூலிகளாலும் வஞ்சிக்கப்பட்டும், பகுத்தறிவும் தன்மதிப்பும் இழந்து தவிக்கும் நாட்டிற்கும் பாமர மக்களுக்கும் சுயமரியாதை இயக்கமே ஒருவாறு புத்துயிரளித்து வருகின்றது என்பது நடுநிலைமை கொண்ட அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயமேயாகும். அப்போர்பட்ட இயக்கத்தை நாடு முழுவதும் பரவச் செய்வதன் மூலம், மக்களுக்கு உண்மையை உணர்த்தி தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பி ஊக்கமூட்டி நிலைத்த உணர்ச்சியை உண்டாக்கவும், அடிக்கடி ஆங்காங்கு மகாநாடுகள் கூட்டி குறைகளை வெளிப்படுத்தியும் பல அறிஞர்களின் உபதேசத்தைக் கேட்கச் செய்தும் நாட்டில் தீவிர பிரசாரம் செய்யவும் வேண்டியது மிகவும் அவசியமானது என்பதும், இது ஆங்காங்குள்ள தலைவர்களுடையவும், பிரமுகர்களுடையவும் கடமையானதுமான காரியம் என்பதும் நாம் சொல்லாமலே விளங்கும்.

இதுவரை பல ஜில்லாக்களிலும், தாலூக்காக்களிலும் ஜில்லா, தாலூகா மகாநாடுகள் கூட்டப்பட்டிருக்கின்றதானாலும், தமிழ் நாட்டுக்கே தமிழ் மாகாண பொதுவான மகாநாடு கூட்டப்படவில்லை. இதற்காக சுமார் 4,5 மாதமாய் சில ஜில்லாக்காரர்கள் முயற்சி செய்து வருவதாகத் தெரிந்தாலும் நமது செங்கல்பட்டு ஜில்லாவில் தீவிர முயற்சி செய்து ரூபாய் 5000 –க்கு மேல் வசூல் செய்யப்பட்டு வரவேற்பு சபை முதலியவைகளும் ஏற்படுத்தி வரவேற்பு சபை அக்கிராசனரையும் தெரிந்தெடுத்தாய்விட்டதாகத் தெரிய வருகின்றது.

மகாநாட்டுக்கு தலைவரைத் தெரிந்தெடுப்பதில் தக்க கவனம் செலுத்தி சுயமரியாதையியக்கத்தில் மிகுதியும் கவலையும் உறுதியும் கொண்ட



RangaRakes

கனவான்களாகவும், சுயமரியாதை எல்லோருக்கும் மிக அவசியமானதெனக் கருதும் கனவான்களாகவும் பார்த்துத் தெரிந்தெடுக்க வேண்டும் என்றே விரும்புகின்றோம்.

திருவாளர்கள் சவுந்தரபாண்டிய நாடார், எம். கிருஷ்ணன் நாயர், பி. சுப்பராயன், சர். கே. வி. ரெட்டி நாயுடு, எம்.கே. ரெட்டி, பன்னீர் செல்வம், குமாரசாமி செட்டியார், ராஜன், சண்முகம் செட்டியார் முதலியவர்களைப் போன்றவர்களையே தெரிந்தெடுத்தால் மிகுதியும் பொருத்தமானதாக இருக்கும் என்பதை நாம் சொல்ல வேண்டியதே இல்லை.


நிற்க, தஞ்சாவூரும் மாகாண சுயமரியாதை மகாநாட்டை நடத்த முயற்சிப்பதாய்த் தெரிகின்றது. தமிழ் நாட்டிலுள்ள ஜில்லா போர்டுகளில் செங்கல்பட்டும் தஞ்சாவூரும் உறுதியானதும் பயமற்றதுமான தன்மையுடன் பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு அனுகூலமாயுமிருக்கிறது. அதற்கு காரணம், இந்த இரண்டு ஜில்லா போர்டு தலைவர்களையும் எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்று பார்ப்பனர்கள் தலைகீழாக பாடுபடுவதே போதியதாகும். பார்ப்பனப் பத்திரிகைகளும் அவர்கள் கூலிகளும் இவர்களைப் பற்றி தூற்றாத – விஷமப் பிரசாரம் செய்யாத நாட்களை காண்பது மிகவும் அரிதாகும். சென்னை மாகாணம் முழுவதற்கும் பார்ப்பனர்கள் கண்களுக்கு நமது பனகால் அரசர் எப்படி ஒரு பெரிய "இராக்ஷதராக" காணப்படுகின்றாரோ அதுபோல் தஞ்சை செங்கல்பட்டு ஜில்லாப் பார்ப்பனர்களுக்கு நமது திருவாளர்கள் டி. பன்னீர் செல்வம் அவர்களும் திரு. எம்.கே. ரெட்டி அவர்களும் "இராக்ஷதர்"களாகக் காணப்படுகிறார்கள். இராக்ஷதர்கள் என்றால் பார்ப்பன ஆதிக்கத்தை அழிக்கத் தோன்றியவர்கள் என்பது தத்துவார்த்தம்) இந்த நிலையில் அவர்கள் சுயமரியாதை மகாநாடு கூட்ட முன் வந்தது யாருக்கும் அதிசயமாய்த் தோன்றாது.

தஞ்சை ஜில்லாவில் பார்ப்பனரல்லாதார் மாகாண மகாநாடு கூட்டும் முயற்சியில் மாத்திரம் இருந்து கொண்டு சுயமரியாதை மகாநாட்டை செங்கல்பட்டு ஜில்லாவிற்கு விட்டு விட வேண்டுகிறோம். செங்கல்பட்டு ஜில்லா பிரமுகர்கள் இந்த முயற்சிக்கு தாராளமாய் வெளியில் வந்து வேண்டிய உதவி செய்யக் கோருகின்றோம்.

**குடி அரசு – வேண்டுகோள் – 16.12.1928**



tamilnavarasam.com



KUDI ARASU. Reg. No. M. 2041

குடி அரசு

தொகுதி 4 ... (23—12—28) ... மலர் 35

அநேக தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும் பெற்ற நல்ல மருந்துகள்.

[ரூ. 1-8-0 அமிர்தரஸம். (Rs. 1-8-0)

சகல ரோகங்களுக்கும் கைகண்ட ஔஷதம்.

டப்பி 1-க்கு விலை ரூ. 1—8—0

அமிர்தம்.

24 டோஸ் உபயோக 1 சீசா ரூ. 2—0—0.

தங்கரேக் குளிகை.

100 மாத்திரை ரூ. 15—0—0 50 மாத்திரை ரூ. 8—8—0. 25 மாத்திரை ரூ. 5—0—0.

தண்டபாணி வைத்தியசாலை,

292, ... மதராஸ்

சந்தாதாரர்களுக்கு

அறிவிப்பு

ஆனந்த விகடன்

ரூ 1—0—0

ரூ 1—4—0

ஆனந்த விகடன் ஆபீஸ்,

டெலிபோன் 3311.

மதனகாமம்.

(புதுச்சேரி பதிப்பு.)

விலை ரூ 1—0—0.



# மறைந்தார் நமதருமைத் தலைவர்! எனினும் மனமுடைந்து போகாதீர்

தேடற்கரிய ஒப்பு உயர்வு அற்ற நமதருமைத் தலைவர் கனம் பனகால் ராஜா சர். ராமராய நிங்கவாரு திடீரென்று நம்மை விட்டு சனிக்கிழமை இரவு 1 மணிக்கு பிரிந்துவிட்டார் என்கின்ற சங்கதியைக் கேட்டவுடன் பொதுவாக இந்திய மக்களுக்கும் சிறப்பாக தமிழ்நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களுக்கும் ஏற்பட்ட அதிர்ச்சிக்கும் துக்கத்திற்கும் அளவே இருக்காது. ஒரு நல்ல நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தலைவரின் காலம் முடிவு பெற்றதால் பெரியதும் திறமையானதுமான ஒரு யுத்தம் முனைந்து வெற்றி குறியோடு நடந்து கொண்டிருக்கும் சமயத்தில், போர் வீரர்கள் சேனாதிபதியின் ஆக்ஞையை எதிர்பார்த்து திரும்பியபோது சேனாதிபதி இறந்து போய் விட்டார் என்கின்ற சேதி கிடைக்குமானால், அந்தச் சமயத்தில் அப்போர் வீரர்களின் மனம் எப்படி துடிக்குமோ அதுபோல் நமது தமிழ் மக்கள் துடித்திருப்பார்கள் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. திரு. ராஜா சாஹேப் அவர்கள் நம் தேசத்தில் உள்ள மற்ற பெரும்பான்மையான தலைவர்கள் என்பவர்களைப் போல் கவலையும் பொறுப்பும் இல்லாமல் கூட்டத்தில் கோவிந்தா போட்டுக் கொண்டு பாமர மக்களின் அறியாமையை ஆதரவாய்க் கொண்டு வெறும் வார்த்தைகளை மாத்திரம் அடுக்காகவும் அழகாகவும் பேசுவதும் எழுதுவதும் சமயம், சந்தர்ப்பம், அவசியம் ஆகிய ஒன்றையும் கவனியாமல் சர்க்காரை எதிர்த்தும் கண்டித்தும் பேசுவது போல் காட்டுவதும் ஆகிய காரியங்களாலேயே பெரிய தலைவர் பட்டமும், கீர்த்தியும், பெருமை யும் பெற்று வாழக் கூடியதான ஒரு சுலபமான முறையைக் கைக்கொண்டு தலைவரானார் என்று யாரும் சொல்லிவிட முடியாது. அன்றியும் மற்றொரு விதமாகவும் அதாவது பத்திரிகைகாரர்கள் தயவால் அதாவது, பத்திரிகைகாரர்களை திருப்தி செய்து அவர்களது லட்சியங்களுக்கு ஆயுதமாய் இருந்து அவர்களால் கை தூக்கி விடப்பட்டு, தலைவரானவரும் அன்று. அன்றியும் மற்றொரு விதமாகவும், அதாவது ஆங்காங்கு கூலி ஆட்கள் பிடித்து கூலி கொடுத்து அவர்களைக் கொண்டு நாடு முழுவதும் தங்களை தலைவர்கள் எனக் கூச்சலிடச் செய்து அதனாலேயே தலைவரானவரும் அன்று. அன்றியும் பார்ப்பனர்களின் அடிமையாய் இருந்து உலக நலத்தின்



RangaRakes tamilnavarasam.com

பேரால் கலை நலத்தின் பேரால் 'மோட்ச' நலத்தின் பேரால் சுயராஜ்யத்தின் பேரால் என்று பார்ப்பன ஆதிக்கத்திற்கும் நலத்திற்கும் ஆளாயிருந்து அவர்களால் தலைவர் பட்டம் பெற்ற வரும் அன்று.

மற்றென்னையோவெனில், தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, இழிவாய்க் கருதப்பட்ட மக்கள் அதாவது தீண்டாதார், கீழ்சாதியார், ஈன சாதியார், சூத்திரர் என்பனவாகிய 'பிறவி இழிவும்' 'பிறவி அடிமைத்தனமும்' சுமத்தப்பட்ட சுமார் 20 கோடி இந்திய மக்களின் சுயமரியாதைக்கும் விடுதலைக்கும் சமத்துவத்திற்கும், மனிதத் தன்மைக்குமாக வேண்டி பிரவாகமும் வேகமும் கொண்ட வெள்ளத்தில் எதிர் நீச்சு செய்வது போன்ற கஷ்டமான காரியத்தைக் கைக்கொண்டு அதில் இறங்கி வேலை செய்தவர். அவ்வேலையில் அவர் பட்ட கஷ்டத்தை யார் அறிவார் என்பது எமக்கே சொல்ல முடியாத தாய் இருக்கின்றது. இந்தியாவில் ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற அரசியல் இயக்கத்திற்கும் விரோதி, ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற சமூகத்திற்கு விரோதி, ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற பத்திரிகைகளுக்கு விரோதி, ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற பிரசார கூலிகளுக்கு விரோதி, இவ்வளவு மல்லாமல் மதிக்கத்தக்க பிரதிநிதித்துவம் என்று சொல்லும்படியான பாமர மக்களுக்கும் விரோதி என்று சொல்லும்படியான நிலையில் நெருப்பின் மேல் நின்று கொண்டு வேலை செய்வது போல் வெகுகஷ்டமான துறையில் வேலை செய்தவர். இந்த வேலையில் ஈடுபடுபவர்களுக்கு என்ன குணங்கள் வேண்டும் என்பதற்கு ஒரு இலக்கணமாகவும் இலக்கியமாகவும் விளங்கி னார் நமது தலைவர் பனகால் அரசர் என்று சொல்லுவது ஒரு சிறிதும் மிகையாகாது என்றே எண்ணுகின்றோம்.

அது மாத்திரமல்ல, நமது தலைவரின் தொண்டில் அவருக்கு உற்ற துணையாகவாவது உதவியாகவாவது யாராவது இருந்தார்களா என்று பார்ப்போமானால், ஒருவரைக்கூட உறுதியாய்ச் சொல்லமுடியாது. இவருக்கு முன்னைய தலைவர்களான டாக்டர். நாயர், சர். தியாகராயர் ஆகியவர்க ளுக்கு நமது ராஜா போன்ற உள்ளன்போடு மனப்பூர்வமாய் பின்பற்றுகின்ற வர்கள் அநேகர்கள் இருந்தார்கள். ஆனால் நமது ராஜாவுக்கு யார் இருந் தார்கள்? ஒருவரும் இல்லை என்று சொல்லுவதுடன் மாத்திரம் நில்லாமல் உள்ளுக்குள்ளாகவே எதிரிகள் சதா குற்றம் சொல்லிக் கொண்டும் பழி சுமத்திக் கொண்டும் அவரது தலைமையைக் கவிழ்க்க சூழ்ச்சி செய்து கொண்டும் அவரைச் சுற்றிலும் அவரது சொக்காய்ப் பையிலும் இருந் தார்கள். பின்னை எப்படி ராஜாவுக்கு கட்சியும் ஆள்பலமும் இருந்தது என்று யாராவது கேட்பீர்களானால், அதற்கு பதில், அவருடைய தனி சாமார்த்தியத் தால், புத்திசாலித்தனத்தால், இராஜதந்திரத்தால், சிலரை தான் சொல்லு கின்ற படி கேட்டுத் தீரவேண்டிய நிலையில் வைத்துக் கொண்டிருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். அன்றியும் பார்ப்பனரல்லாத படித்தவர்கள் என்னும் கூட்டத்தாரில் பனகால் அரசரால் அதிருப்தி அடையாதவர்களோ



ஏமாற்றமடையாதவர்களோ அவர் மீது வெறுப்பு கொள்ளாதவர்களோ ஒருவர் இருவராவது உண்டு என்று சுலபத்தில் சொல்லிவிட முடியாது. ஏனெனில் அவர் ஒரு அருமையான சாதனத்துக்கு பாடுபட்டதினால் அது ஏதாவது கடுகளவாவது பயன் அளிப்பதானாலும் அந்தப் பலன், அனுபவிப்பதில் ஏற்படும் சண்டைகளும் போட்டிகளும், அபிப்பிராய பேதங்களும் ராஜா சாஹேபை அனேகருக்கு விரோதியாகவும் அதிருப்தி கொள்ள வேண்டியவராகவும் செய்து விடுகிறது. இந்த நிலையில் அவர் மேல் கண்ட தொண்டில் ஒரு தனி வீரராய் நின்று போர் புரிந்தார் என்றுதான் சொல்லியாக வேண்டும்.

அப்படியிருந்தாலும் எதிரிகளால் அடிக்கடி அவருக்கு ஏற்பட்ட இடையூறுகளை சமாளிப்பதில் வழிதவறி போயாவது மனிதத் தன்மைக்கு விரோதமாகவாவது ஒரு சிறு காரியத்தையும் செய்யாமல் ஒரு சுத்த வீரனைப் போலவே நின்று கருமம் ஆற்றியவர். எந்த சமயத்திலும் மனம் கலங்கியோ அல்லது யாருக்காவது பணிந்தோ அல்லது தலை குனிந்தோ நின்றவரல்ல.

## எக்காலத்திலும் வீரரே

உதாரணமாக அவரது தலைமை வாழ்வு இந்த 10 வருஷத்திற்கு உள்ளாக மூன்று வித பரீக்ஷைக்கும் ஆளாகிற்று. அதாவது ஒரு சமயத்தில், முதல் மூன்று வருஷத்தில் அவருக்கு அதிகாரமும் செல்வாக்கும், அதாவது மந்திரி அதிகாரமும் கக்ஷி செல்வாக்கும் இருந்தது. இரண்டாவது, மூன்று வருஷத்தில் உள்ளுக்குள்ளாகவே கக்ஷி ஏற்பட்டதால் செல்வாக்கு இல்லாத அதிகாரம், அதாவது கக்ஷி செல்வாக்கில்லாத மந்திரி அதிகாரம் மாத்திரம் இருந்தது. மற்றொரு சமயத்தில் மூன்றாவது மூன்று வருஷத்தில், உள் கலகத்தை எதிரிகள் தங்களுக்கு அனுகூலமாய் உபயோகித்துக் கொண்ட தால் அதிகாரமும் செல்வாக்கும் இரண்டும், அதாவது கக்ஷி செல்வாக்கும் மந்திரி அதிகாரமும் இல்லாமல் செய்யப்பட்டு விட்டது. ஆனாலும் முக் காலத்திலும் அவர் செய்ய வேண்டியதை தைரியமாகவும் ஒரே மாதிரி யாகவுமே செய்து வந்தார் என்று சொல்லியாக வேண்டுமேயொழிய எப்போதாவது களைத்துப் போயோ மனமுடைந்து போயோ விட்டார் என்று சொல்ல முடியாது. மேலும், அதிகாரமும் செல்வாக்கும் இல்லை என்று சொல்லும் படியான மூன்றாவது மூன்று வருஷமான நிகழ்காலத்தில் மந்திரி வேலையுமில்லாமல் கக்ஷி செல்வாக்குமில்லாமல் முன் ஆறு வருஷத்தில் செய்ய முடியாத காரியங்கள் அனேகம் செய்து முடித்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. அதனாலேயே நமது பனகாலரசரின் பெருமையும் சாமார்த்தியமும் விளங்கும்படியான சம்பவங்கள் நடந்து கொண்டே வந்தன.

திரு. பனகாலரசருக்கு மந்திரி அதிகாரமும் கக்ஷி செல்வாக்கும் இருந்த காலத்தில் நம் நாட்டில் பார்ப்பன ஆயுதமான காங்கிரசுக்கு இருந்த



RangaRakes tamilnavarasam.com

செல்வாக்கும் மதிப்பும் இப்போது பூதக்கண்ணாடி வைத்துத் தேடினாலும் கிடைக்க முடியாத மாதிரி வக்கீல் குமாஸ்தாக்களின் தோட்டங்களிலும் வக்கீலுக்குக் கக்ஷிக்காரர்களைக் கூட்டிக் கொண்டு வந்துவிடும் தரகர்களின் புழக்கடைகளிலும் புகுந்து மறைந்து கொண்டது.

இந்த இரண்டு வருஷ காலத்தில் நமது தமிழ்நாட்டில் காங்கிரசு, ஒரு மாகாண மகாநாடுகூட கூட்ட முடியாத அளவு முறியடிக்கப்பட்டதற்கு முக்கிய காரணம் நமது தலைவருக்கு 'அதிகாரமும் செல்வாக்கும்' என் பவைகள் 'போய் விட்டதின்' பலன்தான் என்று உறுதியாய்ச் சொல்லுவோம். இவ்வளவினும் பொறுக்கியெடுத்த மணிபோன்ற அதிசயம் என்ன வென்றால், அவர் எந்தக் காலத்திலும் சர்க்காரிடத்திலோ மற்றும் யாரிடத் திலோ தனது கொள்கையை சிறிதாவது விட்டுக் கொடுக்க சம்மதிக்காததும் யாருக்கும் தலைவணங்காததுமேயாகும்.

முக்காலத்திலும் சர்க்காரை நடத்தக்கூடிய ஒற்றைத் தலைவராகவே (டிக்டேட்ராகவே) இருந்தார். அதிகாரமும் செல்வாக்கும் இல்லாத காலத்தில் தான் நமது தலைவரானவர் பெருமை தங்கிய கவர்னர் பிரபுவான லார்ட்கோஷன் அவர்களை - சென்னை அரசாங்கத் தலைவரை - அரசரின் பிரதி காவலரை - மூட்டை முடிச்சுகளுடன் கப்பலேறும்படி உத்திரவிட்டார். "பெரிய தலைவர்கள்", "33 கோடி மக்களின் பிரதிநிதிகளான" காங்கிரஸ் காரர்களும் அவர்கள் முன்னோர்களும் முன்பு இதைவிட அதிகமாக சொன்னபோதெல்லாம் சிறிதும் லக்ஷியம் செய்யாத அரசாங்கம்- அரசாங்கத் தலைவர்கள் நமது அரசர் பனகால் வீரர் 'உம்மீது நம்பிக்கையில்லை; கட்டு மூட்டை" என்று சொன்னவுடன் லார்டு கோஷன் மாத்திரமல்ல, சென்னை அரசாங்கம் மாத்திரமல்ல, இந்திய அரசாங்கம் மாத்திரமல்ல, பார்லிமெண்டு கூட நடுங்கின நடுக்கம் யாரே அறிவார். சர்க்கஸ்காரன் குதிரைகளையும் யானைகளையும் சிங்கங்களையும் ஆட்டுவது போல் இந்த அதிகாரமும் செல்வாக்கும் இல்லாத காலத்தில் அவர் அரசாங்கத்தை ஆட்டி வைத்த ஆட்டம் அறிஞர்களுக்கு மாத்திரமல்லாமல் அறியாதவர்கள் என்பவர் களையும், அதே மந்திரமாகச் சொல்லிக் கொண்டிருக்கும்படி செய்துவிட்டது. இது ஒன்றே அவர் அரசாங்கத்திற்கு அடிமையாய் இருந்தாரா அரசாங் கத்தை ஆட்டி வைத்தாரா என்பதை விளக்கி வைக்கும்.

அவர் சென்னை அரசாங்கத்தை மாத்திரமல்லாமல் அவசியமான போது இந்திய அரசாங்கத்தையும் பார்லிமெண்டையும்கூட மிரட்டி நடுங்க வைத்து வந்திருக்கிறார். மற்றும் அவர் அதிகார ஆட்சியான ஆறு வருஷ மந்திரி காலத்தில் தனது மந்திரி வேலையை ராஜிநாமா கொடுத்தது குறைந்தது மூன்று நான்கு தரம் இருக்கும் என்றே சொல்லலாம். 1921-ல் தொழிலாள ருக்காக ஒரு தடவையும், 1924-ல் வெளியில் சொல்லக்கூடாத விஷயத் திற்காக ஒரு தடவையும், 1926 - ல் தேவஸ்தான ஆக்ட்டுக்காகவும் சர். சி.பி.



அவர்கள் அக்கிரமத்திற்காகவும் ஒரு தடவையும் மற்றும் சில சமயத் திலும் அவர் இராஜினாமா கொடுக்கத் துணிந்ததும் ராஜினாமா கடிதம் எழுதி கவர்னர் பிரபுவுக்கு அனுப்பி விட்டு வீட்டில் உட்கார்ந்து கொண்டதும், கவர்மெண்ட் மெம்பர்கள் ஜாமீனாக இருந்து ராஜினாமாவை வாபீசு பெற்றுக் கொள்ளச் செய்ததும் அவரது உத்தியோக அலக்ஷியத்தை காட்டப் போதுமானது.

மற்றும் அரசியல் சுதந்திரம் என்பதின் பேரால் தேசத்திற்காக பனகால் வீரர் போட்ட திட்டங்கள் இப்போது உள்ள எந்தப் பெரிய மகாத்மாக்களோ, சிங்கங்களோ, லோகமான்யர்களோ, தேச பந்துக்களோ, நேருக்களோ, தேசீய வீரர்களோ, அம்மைகளோ, மகான்களோ ஆகியவர்கள் கேட்டவைகளுக்கு ஒரு பிடியாவது அதிகமானதாயிருக்குமேயொழிய ஒரு நெல்லிடை அளவாவது குறைந்ததாயிருக்காது என்று கல்லின் மேலும் எழுதுவோம். வெள்ளைக்காரர்களிடமிருந்து அதிகாரங்களைப் பறிப்பதில் நமது ராஜா அவர்கள் காங்கிரசுக்காரர்களைவிட சிறிதும் பின் வாங்கியவரல்ல என்றே சொல்லுவோம். அநேக இடங்களில் இதுவரை வெள்ளைக்காரர்கள் பார்த்து வந்த உத்தியோகங்களை கையைத் திருகிப் பிடிங்கி கொள்வதுபோல் வாதாடி பிடுங்கிக் கொண்டார். அப்பேர்ப்பட்ட நிலையில் பார்ப்பனர் பார்ப்பனரல் லாதார் என்கின்ற வித்தியாசத்தை ஞாபகத்திற்கு கொண்டு வந்தவரே அல்ல. ஆனால் நமது பார்ப்பனக் காங்கிரசுக்காரர்கள் நேரே தங்கள் கைக்கு ஏதாவது உத்தியோகங்கள் வராது என்று நினைத்தால் உடனே அவற்றை வெள்ளைக் காரர்கள்தான் பார்க்க வேண்டும் என்று சொல்லி வந்திருக்கின்றார்கள்.

இதற்கு ஆதாரம், எவ்விதமான சீர்திருத்தம் வேண்டுமென்று பார்லிமெண்டாரால் சென்னை அரசாங்க மெம்பர்கள் என்கின்ற முறையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நமது பனகால் அரசர் கொடுத்த விடையும் வெகு நாளைய காங்கிரஸ்காரர் சர்.சி.பி. ராமசாமி அய்யரவர்கள் கொடுத்த விடையும் போதுமானது. அவ்விடைகளை பார்த்தவர்களுக்கு எந்த இயக்கம் எந்தக் கூட்டம் தேசத்துரோகி என்பதும் யார் தேசபக்தர்கள் என்பதும் ஒரு மூடனுக்கும் விளங்கச் செய்யும்.

அவரது தலைமை வாழ்நாளில் அவர் எந்தக் காரியம் செய்தாலும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஒரே வித நன்மையைக் கருதி திட்டம் போடுவாரே ஒழிய ஒன்றுக்கொன்று விரோதமாகவோ தனது சுயநலத்திற் காகவோ ஒரு சிறு காரியத்தையும் செய்ததாக அவர் இறந்த பிறகு கூட இழி முறையில் அவரைத்தூற்ற முற்பட்டவருங்கூட ஒரு சந்தர்ப்பத்திலாவது சொல்ல வரவில்லை என்பதாலேயே விளங்கும். பார்ப்பனர்களும் அவர் களது பத்திரிகைகளும் பார்ப்பனக்கூலிகளும் அவர்களது பத்திரிகைகளும் நமது ராஜாவின் மீது சுமத்திய பழிகளும் செய்த சூழ்ச்சிகளும் விஷமப் பிரசாரங்களும் கொஞ்சநஞ்சமல்லவானாலும் ஒன்றையாவது லக்ஷியம்



RangaRakes tamilnavarasam.com

செய்து பதில் சொல்லவோ அல்லது அந்த நபர்களை லக்ஷியம் செய்து திருப்பிச் சொல்லவோ சற்றாவது தனது காலத்தைச் செலவழித்தார் என்று அவரது எதிரிகள் கூட இதுவரை சொல்ல வரவில்லை.

இந்த தலைமை ஸ்தானத்தால் மற்றவர்களைப்போல் பணம் சம்பாதிக்காமல் இருந்ததோடு மாத்திரம் அல்லாமல் குறைந்தது மாதம் 1க்கு 2000 ரூ. வரை இயக்கத்திற்காக செலவு செய்து கொண்டு முழு நேரத்தையும் அதற்கே ஒப்புவித்து விட்டவர். கடைசியாக உயிரையும் கொடுத்துவிட்டார். இதனால் உண்மைத் தியாகி ஒப்பற்ற தலைவர் மறைந்தார்.

இந்த நிலையில் இப்பேர்ப்பட்ட தலைவரை இழந்து பரிதவிக்கும் தமிழ் மக்களுக்கு நாம் என்ன ஆறுதல் சொல்ல முடியும் என்பது நமக்கே விளங்காமல் துடிக்கின்றோம்.

## சமாதானம்

மனிதர்கள் பிறப்பதும் இறப்பதும் தடைசெய்ய முடியாத தத்துவம். தலைவர்கள் போவதும் வருவதும் முரண்பாடில்லாத வழக்கம். இதற்குமுன், எத்தனையோ தலைவர்கள் மறைந்து போனார்கள். எத்தனையோ தலைவர் தோன்றினார்கள். நமது தலைவரும் மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மன்னர் பிறந்த அன்றே அதே நேரத்தில் பிறந்து சாகும்வரை நமக்காகவே உழைத்து 62 வயதான பிறகே உயிர்நீத்தார். இந்திய மக்களின் சராசரி வயது 24 என்றால் சராசரிக்கு மேல் 39 வருஷம் வாழ்ந்திருந்து நமக்கு செய்திருக்கும் நன்மை களை உணர்ந்து திருப்தி அடையாமல் இன்னும் கவலைப்பட்டுக் கொண்டு மனமுடைந்து போவதானது நமது மயக்கத்தையும் பேராசையையுமே காட்டும். எந்தத் தலைவர் அல்லது எந்தப் பெரியார் சாகாமல் "சிரஞ் சீவியாய்" வாழ்வதை நாம் பார்க்கிறோம். இப்படி இருக்க உலகில் மக்களில் ஒருவர் இறந்ததற்காக ஒருவர் ஏன் துக்கப்படுகின்றார்கள் என்று கேட்டபோ மானால், அது இறந்தவரின் அருமை பெருமையைப்பற்றி பேசவும் அதனால் மற்றவர்களுக்கு ஏற்படும் நன்மை தீமைகளை உணர்ந்து அதன்படி நடக்கவும் அவர்களது உயர்ந்த குணத்தைப் பின்பற்றவும் சித்தாந்தப்படுத்திக் கொள்ள இந்த சமயத்தை உபயோகித்துக் கொள்வதற்காகத்தான் என்பதே எமது அபிப்பிராயம். அன்றியும் நாயர் பெருமான் அவர்களும் இதேமாதிரி நெருக்கடியான சமயத்தில் தேசம் விட்டுத் தேசம் போய் உயிர் துறந்தார். தியாகராய வள்ளலும் இதேபோல் இறந்தார். பனக்கால் வீரரும் அவர்களைப் பின்பற்றி நடந்தார். ஆனால் நாயர் பெருமான் காலமானவுடன் மக்கள் கண்ணிலும் மனதிலும் தியாகராய வள்ளல் தோன்றினார். அதுபோலவே தியாகராய வள்ளல் மறைந்தவுடன் நமது பனகால் வீரர் தோன்றினார். பனகால் வீரர் மறைந்த பிறகு யாரும் தோன்றக் காணோம். அவர் மறைந்த பிறகு சற்றேக்குறைய இரவும் பகலுமாக 192 மணி நேரம் லக்ஷக்கணக்கான



வர்கள் காலம் சென்ற தலைவரைப்போல் ஒரு தலைவரைத் தேடித்தேடி களைத்தாய்விட்டது. இன்னமும் ஒருவரும் புலப்படவில்லை. இது ஒன்றே நமது பனக்கால் வீரர், ஒப்பாரும் மிக்காரும் அற்ற தலைவர் என்பதைக் காட்டுகின்றது.

ஆனாலும் இதற்காக மனமுடைந்து போகாமல் இந்த நிவர்த்தி இல்லாததும் பெரிய துக்ககரமானதுமான சந்தர்ப்பத்தையும் "இதுவும் ஒரு நன்மைக்காக" என்பது போல் கருதி அதை அந்தப்படி உபயோகித்துக் கொள்வதுதான் அறிவுடைமையாகும். அன்றியும் அதுதான் அறிவும் வீரமும் தியாகமும் உறுதியும் கொண்ட தலைவரால் நடத்தப்பட்ட மக்கள் என்பவர்களுக்கு ஏற்ற குணமுமாகும்.

"இனிமேல் நமக்கு எதற்காக தலைவர்கள் வேண்டும்? இனியும் நாம் எத்தனை நாளைக்கு தலைவர்களாலேயே நடத்தப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்? இவ்வளவு அருமை பெருமை சாமர்த்தியம் வீரம் வாய்ந்த தலைவர்களாய் இத்தனை காலம் நடத்தப்பட்டும் இனியும் நாம் நமது காலிலேயே நிற்க முடியாத பலவீனர்களாக நாம் இருப்போமானால் அல்லது இருக்கின்றோம் என்று நினைத்துக் கொண்டிருப்போமானால் என்றுதான் நாம் மனிதர்களாவது?" என்பது போன்ற ஞானங்கள் உதயமாவதற்கு இதுவே தக்க சமயம் என்று கூசாமல் சொல்லுவோம். ஏனெனில் இந்த சமயத்தில் நாம் நிலைகொள்ள வில்லையானால் இனி நமக்கு வெகுகாலத்திற்கு விமோசனம் இல்லை என்றுதான் முடிவுகட்டிக் கொள்ளவேண்டும்.

## தலைவர் அவசியமா?

தந்தையை இழந்த மக்கள் தங்களது வாழ்க்கையை இனி தந்தை இல்லாமல் எந்த விதமாய் நடத்துவது என்கின்ற யோசனை கொண்டு மார்க்கம் கண்டு நடக்க முயற்சிப்பார்களே ஒழிய வேறு தந்தை யார் என்று நினைத்துக் கொண்டு தேடித்திரிய மாட்டார்கள். அதுபோலவே நாமும் இனித் தலைவரைத் தேடிக் கொண்டு திரிவதைப் போன்ற பைத்தியக்காரத்தனம் வேறில்லை என்று நினைக்க வேண்டும். உண்மையில் நமக்கு இப்போது என்ன குறை? தலைவர் இல்லாத குறையா? நமக்குப் போதிய கவலையும் உணர்ச்சியும் பொறுப்பும் இல்லாத குறையா? என்பதை ஒவ்வொருவரும் யோசித்துப் பார்க்க வேண்டும். உண்மையைப் பேச வேண்டுமானால் நமது மக்களுக்கு இனியும் போதிய உணர்ச்சி ஏற்பட வில்லை. பொறுப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. சுயநலம் அளவுக்கு மேல் தாண்டவமாடவிட்டு விடுகின் றோம். இத்தியாதி குணங்கள் உள்ள சமூகம் ஆயிரம் ஆயிர நாயர்களையும் தியாகராயர்களையும் பனகால் வீரர் களையும் "சிரஞ்சீவி"களாக வைத்துக் கொண்டிருந்தாலும் முற்போக்கடைய முடியவே முடியாது என்று சொல்லு வதற்காக மன்னிக்க வேண்டுகிறோம். நமது ஈன நிலைக்கு நமது மக்களில்



RangaRakes tamilnavarasam.com

பாமர மக்களைவிட படித்தவர்கள் என்பவர்களும் பணக்காரர்கள் என்பவர்களுமே மிகுதியும் காரணஸ்தர்களாய் இருந்து வந்திருக்கின்றார்கள் என்று சொல்லுவதற்கு படித்தவர்கள் என்பவர்கள் நம்மை மன்னிக்க வேண்டும்.

நமது மேல்கண்ட தலைவர்களால் இதுவரையில் பாமர மக்களை விட முக்கியமாய் படித்தவர்கள் என்பவர்களும் சிறிது பணக்காரர்கள் என்பவர்களுமே பயன்பெற்று வந்திருக்கின்றார்கள். அதற்கு உதாரணமாக அனேக படித்தவர்கள் பெற்றிருக்கும் உத்தியோகங்களையும் பணக்காரர்கள் பெற்றிருக்கும் பதவிகளையும் கவனித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. ஆனால் இப்படித்தவர்களினுடையவும், பணக்காரர்களினுடையவும் உணர்ச்சி எப்படி இருக்கின்றது என்று பார்ப்போமானால், வெளியில் சொல்ல வெட்கப்பட வேண்டியவர்களாகவேயிருக்கின்றோம்.

## நமது யோக்கியதை

உதாரணம் வேண்டுமானாலும் சொல்லுகின்றோம். ஆனால் கோபிப்பதில் பயன் இல்லை. ஒரு சாதாரணமான 2 $^1/_2$ அடி உயரமுள்ள பையன் அதுவும் அரை டிக்கட்டுக்கு அருகதை யில்லாதவன் என்று சொல்லக் கூடியவன் முதற்கொண்டு பெரிய ஆசாமி என்கின்றவர்கள் வரையில் இரண்டு கோணை எழுத்து அறிவோ அல்லது ஏதாவது ஒரு சர்வ கலாசாலைப் பட்டமோ பெற்று விட்டால் உடனே தன்னை ஒரு பெரிய முக்கியமான பார்ப்பனரல்லாதார் என்று நினைத்துக் கொள்வதும் "பார்ப்பனரல்லாதாரியக்கம் என்ன செய்துவிட்டது யாருக்கு சாதித்துவிட்டது, எனக்கு இன்னமும் யாதொரு உத்தியோகமும் கொடுக்கவில்லை, அவனுக்குக் கொடுத்தார்கள், இவனுக்குக் கொடுத்தார்கள், எல்லாம் அவரவர்கள் சுயநலத்திற்காக போடும் வேஷமே ஒழிய இது பார்ப்பனரல்லாதார் இயக்கமல்ல" என சவடால் அடிப்பதும், "பனக்காலைத் தெரியாதா, நாயரைத் தெரியாதா, செட்டியாரைத் தெரியாதா, எல்லாம் கூட்டுக் கொள்ளை" என்று சொல்லுவதும் "பார்க்கப்போனால் பார்ப்பனர்களே நல்லவர்கள்" என்று சொல்லுவதும் "என்ன இருந்தாலும் காங்கிரசைக் குற்றம் சொல்லலாமா? ஆதலால்தான் இவர்களோடு இருக்கமுடியவில்லை" என்பதும், எல்லாம் சரி, எனக்கு அந்தப் பெயர்தான் பிடிக்கவில்லை என்பதுமானது, ஆயிரத் தெட்டு அசந்தர்ப்பமும், அசம்பாவிதமான வார்த்தைகளை உளறிக் கொண்டு திரிவதும், இவ்வளவையும் சகித்துக் கொண்டும் தலைவர்கள் ஏதாவது உத்தியோகமோ, பதவியோ கொடுத்தாலும் அதைப் பெற்றுக் கொண்டவுடன் நேர் விரோதிகளாகவும் அலட்சியப் புத்தியுடையவர்களாகவும் இருந்து கொண்டு, "பனக்கால் இப்படி நடக்க வேண்டும், அப்படி நடக்க வேண்டும்" என்று அவருக்கே புத்தி சொல்லுவதும், பார்ப்பனர்களுக்கு உள் ஆளாயிருப்பதும், இயக்கத்தைக் குறை கூறுவதுமான வேலையிலேயே காலங் கழிப்பதுமாய் இருக்கின்றார்கள். பணக்காரர்களும் தங்களுக்கு பதவி



கேட்பதும், கிடைத்துவிட்டால் இயக்கத்தை மறந்து விடுவதும், கிடைக்கா விட்டால் இயக்கத்தையும் தலைவர்களையும் குற்றம் சொல்லிக் கொண்டு எப்படியாவது இந்த இயக்கத்தை ஒழித்தாலொழிய நாட்டுக்கு மோட்சமில்லை என்று பிதற்றித் திரிவதுமான வேலையில் ஈடுபடுவதைத் தவிர வேறு ஒரு நன்மையுமே செய்யாமல் இருந்து வருகின்றார்கள். இதற்கு வெளிப்படையான சாட்சி பார்ப்பனரல்லாதார் பெயர் சொல்லிக் கொண்டு பெரிய பெரிய உத்தியோகம் பெற்றவர்கள், ஜில்லா ஜட்ஜி, கலெக்டர் முதல் சாதாரண பெரிய உத்தியோகம் வரை பெற்றவர்கள் இயக்க பத்திரிகை வாங்கமாட்டார்கள். வாங்கச் சொன்னால் அதில் குற்றம் சொல்லுவார்கள். மீறி வாங்கினாலும் பணம் கொடுக்க மாட்டார்கள். கேட்கப் போனால் "அந்தப் பணம் என்ன ஆச்சுது, இந்தப் பணம் என்ன ஆச்சுது" என்று கேட்பதின் மூலம் பழி சுமத்த வருவார்கள். அதோடு எதிரிகளின் பத்திரிகைகளை முன்பணம் கொடுத்து வாங்கிப் படிப்பார்கள். அன்றியும் இவர்கள் தங்களை பார்ப்பனரல்லாத இயக்கத் தலைவர்கள் என்றும், அவ்வியக்கத்திற்குள்ளாகவே எதிர்க்கட்சித் தலைவர்கள் என்றும் சொல்லிக் கொள்ளுவார்கள்.

சாதாரணமாக, அவ்வியக்கம் அதிகாரத்திலும் செல்வாக்கிலும் இருந்ததான 1927ம் வருஷம் வரையில் "ஜஸ்டிஸ்" பத்திரிகை 1200ம் "திராவிடன்" பத்திரிகை 700 ம் தான் அச்சாகிக் கொண்டு வந்தன. இதற்கும் மந்திரிகள் மாதம் 2000 ரூபாய் போல் கொடுத்து வந்தார்கள். மற்றபடி சில ஜமீன்தார்களும் பெரிய பணக்காரர்களும் உதவி வந்தார்கள். ஆனால் இயக்கத்தால் உத்தியோகம் பெற்றவர்களில் பணங்கொடுப்பதையோ, பத்திரிகை படிப்பதையோ தங்கள் கடமை என்று நினைத்தவர்கள் யார் என்று சொல்ல முடியாமலே இருந்தது. இன்றைய தினமும் 3000க்கு மேல்பட்ட "ஜஸ்டிசு"ம், 6000க்கு மேல்பட்ட "திராவிட"னும் வெளியாகின்றதானாலும் "ஜஸ்டிசு"க்கு மாதம் 1–க்கு 1500 ரூபாய் நஷ்டமும் "திராவிட"னுக்கு மாதம் 1க்கு 500 ரூபாய் நஷ்டமும் ஏற்பட்டு வருவதன் மூலம் "ஜஸ்டிஸ்" "திராவிடன்" பத்திரிகைகள் 25000 ரூபாய் கடனிலும் அது இன்னமும் பெருகும்படியான நிலையிலும் இருக்கின்றது. தியாகராய மமோரியல் கட்டிடத்திற்கும் 40000 ரூபாய் கடனும் வட்டி ஏறிக் கொண்டும் வருகின்றது.

எனவே பார்ப்பனரல்லாதார் இயக்கத்தால் நன்மை அடைந்தவர்களின் யோக்கியதைக்கும், ஒப்பற்ற அருமையான 3 தலைவர்களால் அவ்வளவு தியாகபுத்தியுடனும் சமர்த்துடனும் நடத்தப்பட்ட மக்களின் நன்றியறிதலற்ற தன்மைக்கும் வேறு என்ன உதாரணம் வேண்டும் என்று கேட்கின்றோம். மற்றும் இவ்வியக்கமானது தன்னிடமிருந்து வெறும் உத்தியோகத்தையும் பதவியையும் மாத்திரம் எதிர்பார்க்கும் மக்களைக் கொண்டிருக்கின்ற வரையிலும் – இயக்கத்தின் லட்சியமே வெறும் உத்தியோகங்களை சர்க்காரிடமிருந்தும் பார்ப்பனர்களிடமிருந்தும் பிடுங்கிக் கொள்வதுதான் என்று கருதும் மக்களைக் கொண்டிருக்கும் வரையிலும் –



RangaRakes
tamilnavarasam.com

இனியும் எத்தனை தலைவர் தோன்றினாலும் உண்மை லட்சியம் கைகூடும் என்று நம்மால் சொல்ல முடியாது. பதவிப் போட்டியாலும் அதிகாரப் போட்டியாலும் உத்தியோகப் போட்டியாலும் மக்களுக்குள் கட்சிப்பிரதி கட்சியும் விரோதமும் வெறுப்பும் ஏற்படும் நிலைமையை மாறும்படி செய்ய வேண்டும். உத்தியோகம், பதவி, அதிகாரம் முதலியவைகள் எல்லாம் சமூக முன்னேற்றத்திற்காக பயன்படத்தக்க வழியில் கைப்பற்றவும் உபயோகப் படுத்தவுமான மாதிரியில் நிர்வகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பெரிய சம்பளம் உள்ள மந்திரி போன்ற பொறுப்புள்ள அதிகாரப் பதவிகள் இயக்கத்தின் பிரதிநிதித்துவமாக அனுபவிக்க வேண்டும். அதன் வருமானம் முழுவதும் இயக்கத்திற்குச் சேர வேண்டும். வேலை பார்ப்பவரின் செலவுக்காக இயக்கத்திலிருந்து ஏதாவது கொடுபட வேண்டும். கவுரவ உத்தியோகங்களும், பொது நன்மையை கருதுபவர்களுக்கே - ஒரு குறிப்பிட்ட நிபந்தனைப்படி நடப்பவர்களுக்கே - கொடுக்கப்பட வேண்டும்.

அன்றியும் சாதாரணமாக இது சமயம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் உண்மையிலேயே கொள்கைகளுக்காக அபிப்பிராய பேதம் இருப்பதாக யாரும் சொல்ல முடியாது. சுயநலத்தை முன்னிட்டு ஏற்பட்ட விரோதத்தினால் விலகி நிற்கவும் எதிர்த்து நிற்கவும் வேண்டி வேண்டுமென்றே சில மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கற்பித்துக் கொள்ள வேண்டியிருக்கிறதே ஒழிய வேறில்லை.

இந்த நிலைமை அடியோடு ஒழிய வேண்டும். இன்னும் இன்னோரன்ன பல விஷயங்களைக் கவனித்து மக்கள் தங்களைத் திருத்திக் கொள்ள சம்மதிப்பார்களானால் தலைவர் மறைந்த நஷ்டம் நம்மை ஒன்றும் செய்து விடாது. மற்றும் அவர்களின் உயிர்த் தத்தத்தால் நாட்டுக்கு நன்மை ஏற்பட்டது என்றுகூட சொல்லத்தக்க ஒரு பெருமையும் மறைந்த தலைவர்களுக்கு ஏற்படும். இந்த சமயத்தில் முடிவாகவும் சுருக்கமாகவும் நாம் இவற்றைச் சொல்லி இந்த நமது துயரத்தையும் ஆசையையும் படித்த மக்களைவிட சாதாரண பொது மக்களிடமே தெரிவித்துக் கொண்டும் அவர்களையே நம்பிக் கொண்டும் இருக்கின்றோம். ஆதலால் இந்த சகித்தற்கரிய துக்கத்தால் யாரும் தங்கள் பிற்கால கதியைப்பற்றி உடைந்து போகாமல் நம்பிக்கையோடு ஒற்றுமைப்பட்டு கட்டுப்பாடாக முனைந்து வேலை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**மக்கள் எல்லோரும் நாயராக!**

**எல்லோரும் தியாகராயராக!!**

**எல்லோரும் பனகால் வீரராக!!!**

**குடி அரசு - தலையங்கம் - 23.12.1928**



RangaRakes

# நமது பத்திரிக்கை

'குடி அரசு' பத்திரிகையானது அபிமானிகள் பெருக்கத்தால் வாராவாரம் கிட்டத்தட்ட 10000 பதினாயிரம் பிரதிகள் வரை பதிப்பிக்க வேண்டியிருப்பதாலும், சமீப காலத்திற்குள் பதினாயிரம் பிரதிகளுக்கு மேல் அச்சுப்போட வேண்டியிருக்குமாதலாலும். தற்போது நம்மிடம் இருக்கும் அச்சு இயந்திரம் அவ்வளவு பிரதிகள் அச்சியற்றபோதுமானதாய் இல்லாததாலும், இதற்காக வாங்கப்பட்ட மற்றொரு பெரிய அச்சியந்திரம் 'திராவிடன்' பத்திரிகையின் வாசகர்களின் பெருக்கத்தால் 'திராவிட'னுக்கு வேண்டியிருந்ததாலும் கொஞ்சநாளைக்கு "குடி அரசை" 16 பக்கத்துடனே வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. என்றாலும் இதனால் வாசகர்களுக்கு அதிகமான குறை ஏற்படாதிருக்கும் பொருட்டு இப்போது விளம்பரத்திற்காக உபயோகப்படுத்திவரும் சுமார் 7, 8 பக்கங்களை இனி 3 அல்லது 4 பக்கங்களுக்கு அதிகப்படாமல் செய்து விட்டு சற்றேக்குறைய 12 அல்லது 13 பக்கங்களுக்கு குறையாத விஷயங்கள் வெளியாக்க உத்தேசித்திருக்கின்றோம். இதனால் ஒரு சமயம் விளம்பர வியாபாரிகளுக்கு சற்று அதிருப்தி இருக்கலாம்; ஆனாலும் அவர்களையும் திருப்தி செய்ய சீக்கிரத்தில் ஏற்பாடு செய்யப்படும்.

குறிப்பு: நிரூப நேயர்களுக்கு இனி கண்டிப்பாய் இடம் ஒதுக்க முடியாததற்கு வருந்துகிறோம். அவசியம் என்று தோன்றியவைகளுக்கு மாத்திரம் சற்று இடம் கொடுக்கலாம். ஆனாலும் நிரூப நேயர்கள் வெறும் வர்த்தமானத்தை அனுப்பாமல் இருக்க வேண்டுகிறோம்.

**குடி அரசு - முக்கியக்குறிப்பு - 23.12.1928**



tamilnavarasam.com

# காங்கிரஸ் புரட்டைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள்

கல்கத்தாவில் இது சமயம் கூடிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் என்னும் கூட்டம் இந்த வருஷத்திய மற்றொரு ஏமாற்றுத் திருவிழா என்றுதான் சொல்ல வேண்டும். ஒவ்வொரு வருஷமும் நமது இந்தியப் பாமரமக்கள் ஆயிரக்கணக்காகக் கூட்டம் கூடுவதும் நாலைந்து கூட்டுக் கொள்ளை சுயநல ஆசாமிகள் சேர்ந்து இப்பாமர மக்கள் ஏமாறும்படி ஜாலவித்தைபோல் இரண்டொரு சதியாலோசனைத் தீர்மானங்கள் செய்வதும் "அதற்குள் இதுவும் இருக்கின்றது, இப்படியும் சொல்லலாம் அப்படியும் சொல்லலாம், எனினும் பொருந்தும், அதற்கு இதுவே முதற்படி, முதற்படிக்கும் இதுவே முதற்படி" என்பது போன்ற தந்திரவார்த்தைகளால் அத்தீர்மானங்களை அரண் செய்வதும், வாலிபர்களை இளம் பெண்களைக் காட்டி ஏமாற்றுவது போல் பாமர மக்களை திரு காந்தியவர்களைக் காட்டி ஏமாற்றி வருவதுமே காங்கிரஸ் நாடகமாக நடத்திக் காட்டப்பட்டு வருகின்றது. இதைப் போன்ற ஒரு மோசமான ஏமாற்றுத் திருவிழா நமது நாட்டில் வேறு எதன் பேராலும் நடத்தப்படுவதாகச் சொல்ல முடியாது. பார்ப்பனர்களோ, அல்லது ஆங்கிலம் படித்து உத்தியோகத்திற்கு காத்திருக்கும் படித்தவர்கள் என்பவர்களோ, அல்லது பெருமையையும் பதவியும் அடையக் காத்திருக்கும் பணக் காரர்களோ இவ்வித நாணயப் பொறுப்பற்ற காரியங்கள் செய்வதில் நமக்கு சிறிதும் அதிசயமில்லை. பார்ப்பனர்கள், படித்தவர்கள், பணக்காரர்கள் ஆகிய மூவரும் சிறப்பாக நமது நாட்டைப் பொருத்தவரையில் ஏழை மக்களுக்கும் குடியானவர்களுக்கும் எப்போதும் எதிரிகளே ஆவார்கள். அதனாலேயே தான் முதலில் பார்ப்பன ஆதிக்கத்தை அடியோடு அழித்தெறிய வேண்டுமென்கின்றோம். அது ஒழிந்தால் அடுத்ததைச் செய்யவே நமது சுயமரியாதை இயக்கம் தோன்றியிருக்கின்றது.

மற்றபடி திரு. காந்தி, துறவி என்றும் மகாத்மா என்றும் உத்தமர் என்றும் சத்திய சீலர் என்றும், ஏழைகள் நண்பர் என்றும் ஏன் அவதாரம் என்றும்கூட சொல்லும்படியான ஒருவர், ஒருகாலத்தில் தமக்கு ஏற்பட்ட செல்வாக்கையும் நம்பிக்கையையும் இவ்வேமாற்றுத் திருவிழாவுக்கு உபயோகப்படுத்துவதைப் பற்றி நாம் கண்டிக்காமலோ பாமர ஜனங்களுக்கு எடுத்துக்காட்டாமலோ இருக்க முடியவில்லை. நேற்றும் முன்தினமும்



கல்கத்தா காங்கிரசின் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி விஷயாலோசனைக் கூட்டத்தில் இரண்டு வித தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதாவது:-

"ராஜீய சமூகப் பிரசினைகளை தீர்த்து வைப்பதற்கு சர்வ கக்ஷி மகாநாட்டுத் தீர்மானம் உதவியாயிருப்பதால் அதைப் பாராட்டுகின்றது."

"சென்னை காங்கிரசில் பூரண சுயேச்சைதான் நமது லக்ஷியம் என்று தீர்மானித்திருப்பதை பின்பற்ற சம்மதித்தது."

"கால தேச வர்த்தமானத்திற்கு ஏற்றபடி மாற்றிக் கொள்ளும் அதிகாரத்தோடும் பிரிட்டிஷார் ஒப்புக் கொள்ளுவதைப் பொருத்தும் இந்த காங்கிரஸ் நேரு ரிபோர்ட்டில் கண்ட அரசியல் திட்டத்தை ஒப்புக் கொள்ளுகின்றது."

"இதை பிரிட்டிஷார் 2 வருஷ வாய்தாவுக்குள் ஒப்புக் கொண்டு அந்தப்படி சீர்திருத்தம் கொடாவிட்டால் பலாத்காரமற்ற தன்மையில் வரிகொடாமை, உதவி மறுத்தல் முதலிய ஒத்துழையாமை செய்வது" என்பதாகும்.

இது, திரு காந்தியால் பிரேரேபிக்கப்பட்டு திரு. சீனிவாசய்யங்காரால் ஆமோதிக்கப்பட்டு 3ல் 2 பங்கு பேர்களால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

சுயேச்சைக் கொள்கையின் மூலப் புருஷர்களான திரு. ஜவாரிலால் நேருவும், சுபாஷ் சந்திரபோசுவும் அவர்களது நண்பர்களும் கூட்டத்திற்கு வரவில்லை.

நிற்க ஷை தீர்மானத்தை பிரேரேபித்த திரு. காந்தியவர்களின் யோக்கியதையை முதலில் கவனிப்போம்.

அத்தீர்மானத்தில் மூன்று விஷயத்தை முக்கிய விஷயமாய் எடுத்துக் கொள்ளுவோம். அதாவது,

முதலாவது, பூரண சுயேச்சைத் தீர்மானத்தை பின்பற்றுவதாய் சம்மதித்தது,

இரண்டாவது, நேரு கமிட்டி அறிக்கையை ஒப்புக் கொள்ளுவது,

மூன்றாவது, இரண்டு வருஷத்தில் நேரு அறிக்கைப்படி சர்க்கார் சுயராஜியம் கொடாவிட்டால் ஒத்துழையாமை செய்வது.



RangaRakes tamilnavarasam.com

திரு. காந்தி சென்ற வருஷத்திய சென்னை காங்கிரசிற்கு வந்திருந்தும் சில சிஷ்யர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு பூரண சுயேச்சைத் தீர்மானத்தை எதிர்க்காமல் தாராளமாய் நிறைவேற்ற விட்டு விட்டு, காங்கிரஸ் முடிந்து நாலைந்து நாள் பொறுத்து அத்தீர்மானத்தை "விளையாட்டுப் பிள்ளைத் தனம்" என்று தனது "யங் இந்தியா"வில் எழுதி பரிகாசமும் செய்துவிட்டு இப்போது கொஞ்சமும் பொறுப்பும் கவலையும் இல்லாமல் பூரண சுயேச்சைத் தீர்மானத்தை தான் பின்பற்ற சம்மதித்திருப்பதாய் சொல்லுவது நாணயமாகுமா என்று கேட்கின்றோம்.

இரண்டாவது,

ஜாதி வகுப்புச் சச்சரவுகளும் ஜாதி உயர்வு தாழ்வுக் கொடுமைகளும் தீர்ப்பதற்கு யோக்கியமான முறைகள் ஒன்றும் இல்லாத நிலையில் புதிய சீர்திருத்தத்தை கேட்பது பொறுப்புள்ள அரசியல்வாதிக்கோ பொதுநல வாதிக்கோ யோக்கியமான காரியமாகுமா என்று கேட்கின்றோம்.

எனினும், திரு. காந்தியவர்கள், நேரு திட்டத்தில் கண்ட பரிகாரங் களே ஜாதி வகுப்பு ஒற்றுமைக்கும் கொடுமைகள் ஒழிவதற்கும் போதுமானது என்று மனப்பூர்வமாய் தன் மனசாக்ஷி அறிய நம்புகின்றாரா என்று கேட்கின்றோம்.

மூன்றாவதானது, ஒத்துழையாமைப் பூச்சாண்டி.

அதாவது, 2 வருஷத்திற்குள் சர்க்கார் நேரு திட்டத்தை ஒப்புக் கொள்ளாவிட்டால் ஒத்துழையாமை செய்வேன் என்பது. இதில் எவ்வளவு ஏமாற்றுதல்கள் நிறைந்திருக்கின்றன என்பதை வாசகர்கள்தான் உணர வேண்டும். மறுபடியும் ஒத்துழையாமை செய்வேன் என்று சொல்லும் திரு. காந்தி முன் ஏன் ஒத்துழையாமையை நிறுத்தினார் என்பதற்கு யாராவது பதில் சொல்ல முடியுமா? இவரை நம்பி ஒரு கோடி ரூபாயும் கொடுத்து முப்பது ஆயிரம் பேர் 1, 2, 3, 4 தடவைகள் ஜெயிலுக்கும் போய் அவரவர்கள் பிழைப்பு, வாழ்வு, பதவி முதலியவைகளைக் கூட விட்டுவிட்டு இவர் பின் திரிந்தார்களே, அந்தச் சமயத்தில் ஏன் நிறுத்தினார்? இப்போது அதைவிட நல்ல சமயமா? அல்லது இரண்டு வருஷமாகி விட்டால் தயாராகிவிடுமா? என்ன எண்ணத்தைக் கொண்டு இந்த தீர்மானத்தை பிரேரேபித்தார்? சற்றும் பொறுப்பும் கவலையும் இல்லாமல் மற்ற பித்தலாட்டக்காரர்கள் சொல்லுகின்ற படி ஆடியிருக்கின்றார் என்பதைத் தவிர வேறு என்னசொல்ல முடியும்?

அதிலும் "பலாத்காரமற்ற ஒத்துழையாமை" என்று பேசியிருப்பது வெறும் கேலிக் கூத்தும் முன்னுக்குப் பின் முரணானதுமாகுமென்றே சொல்லுவோம். ஏனெனில் முன் ஒத்துழையாமையை நிறுத்தினதற்கு காரணம் சௌரீ சௌரா கொலை என்றே குறிப்பிட்டுவிட்டார். இப்போதும் கல்கத்தா காங்கிரசில் பேசுவதற்கு இரண்டொரு மணி நேரத்திற்கு முன்பு தமது "யங் இந்தியா" பத்திரிகையில் "நமது தேசத்தில் பலாத்காரம் என்பது காற்றைப் போல் எங்கும் நிறைந்து கிடக்கின்றது" என்று எழுதியிருக்கின்றார். அந்த இங்கிகூட இன்னம் காயவில்லை. அதற்குள் தான் மறுபடியும் பலாத்காரமற்ற ஒத்துழையாமை செய்யப் போவதாய் மிரட்டுவது கேலிக் கூத்தும் நாணய மற்றதும் ஆகும் என்று சொல்ல வேண்டியதோடு தாம் (காந்தி ஜீ) முன் சென்னைத் தீர்மானத்தைப் பற்றிச் சொன்னது போல் இத்தீர்மானங்களையும் விளையாட்டுப்பிள்ளைகள் கூடிச் செய்யும் வெறும் பேச்சுக்குச் சமான மானவை என்றுகூட சொல்லலாமா வேண்டாமா என்று கேட்கின்றோம். திரு. காந்தி, சைமன் கமீஷன் பகிஷ்காரத்தில் ஏற்படும் பலாத்காரச் செய்கை களையும் சமீபத்தில், பஞ்சாப்பில் நடந்த படுகொலைகளையும் தெரிந்து இப்படிச் சொன்னாரா அல்லது இவ்விரண்டும் அவருக்கு எட்டாமலே சொன்னாரா? என்பதை யோசித்தால், திரு. காந்தியின் பலாத்காரமற்ற தன்மைக்கு அர்த்தம் விளங்காமல் போகாது.

திருவாளர்கள் சத்தியமூர்த்திகளும் ஸ்ரீனிவாசய்யங்கர்களும், குப்புசாமிகளும், வரதராஜுலுக்களும், நேருக்களும், மாளவியாக்களும், ரங்கசாமி அய்யங்கார்களும், ராஜகோபாலாச்சாரிகளும் போன்றவர்கள் பேசுவதைப் பற்றியோ நடந்து கொள்வதைப் பற்றியோ நாம் இவ்வளவு முக்கிய ஸ்தானம் கொடுத்து சமாதானம் சொல்லவேண்டுவதில்லை. திரு. காந்தி போன்றவர்கள், அதாவது எதாவது ஒருவிதத்தில் மக்களின் செல்வாக்குப் பெற்றவர்கள் இம்மாதிரி -அதாவது தாங்கள் பேசுவதால் என்ன நேரிடும் என்பதைக் கவனியாமல் "பிடித்தவனுக்கெல்லாம் பெண்டாட்டி" என்பது போல் யார் என்ன சொன்னாலும் கிளிப்பிள்ளையைப் போல் - சொல்லிக் கொடுத்ததைச் சொல்லிவிடுவதென்றால், அது மக்களுக்கு எவ்வளவு ஆபத்தை உண்டாக்கி விடுகிறது என்பதை கவனித்தால் நமக்கு ஆத்திரமாக இருக்கின்றது.

சாத்வீகத்திலாவது, தீண்டாமை ஒழிப்பதிலாவது, ஒடுக்கப்பட்ட - தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட - மக்களின் கஷ்டத்தை நிவர்த்திப் பதிலாவது, திரு. காந்திக்கு 4,5 வருஷமாய் ஒரு கடுகளவு கவலையாவது இருக்கின்றதென்று யாராவது சொல்ல முடியுமாவென்று கேட்கின்றோம். தென்னாட்டுக்கு வந்து 3 லக்ஷம் ரூபாய் கொள்ளையடித்து அதை பார்ப்பனர் களுக்கு பாதகாணிக்கை வைத்து விட்டுப் போய்விட்டார், அது நம் பார்ப்பனர்களின் தேர்தல் பிரசாரத்திற்கும் ஆதிக்கத்திற்கும் கதரின் பேரால் செலவாகின்றது. அன்றியும் அது ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் புகுந்து பார்ப்பனரல்லாதார்களுக்கு கெடுதியை செய்து கொண்டு வருகின்றது. இவற்றையெல்லாம் அவரது நேரில் எல்லோரும் சொன்னார்கள். சற்றும் கவனிக்காமல் வந்ததை வரப்பற்றுவதிலேயே கவலையாய் இருந்துவிட்டார்.


RangaRakes
tamilnavarasam.com

தீண்டாமையைப்பற்றி கனவிலும் நினைப்பதில்லை. யாதொரு பிரசாரமும் செய்தவருமல்ல. சமத்துவத்திற்காவது சம சந்தர்ப்பத்திற்காவது அப் பக்கங்களில் தலை வைத்துக்கூட படுத்தவர் அல்ல. எப்படியாவது அவரை மகாத்மா என்று சொல்லிக் கொண்டு ஒரு கூட்டம், தமது மடத்தில் வயிறு வளர்ப்பதே அவருக்கு திருப்தி போல் காணப்படுகின்றது.

எனவே, காங்கிரஸ் தீர்மானம் என்பது பித்தலாட்ட தீர்மானமா யிருப்பது வழக்கமானாலும் திரு. காந்தி அவர்களும் இவற்றில் இவ்வளவு நேரடியாய் பங்கெடுத்துக் கொள்வதென்பது சற்றும் சகிக்கக் கூடியதல்ல வென்பதற்காகவே இவ்வளவு எழுதினோம். எந்தக் காரணத்தைக் கொண்டும் நமது மக்கள் இனி ‘ஒத்துழையாமை’, ‘பூரண சுயேச்சை’ என்கின்ற நாடகங்களில் கலந்து கொள்வது இது சமயம் சிறப்பாக பார்ப்பனரல்லாத மக்களுக்கு தற்கொலையாகவே முடியும். காலம் சென்ற ஒத்துழையாமையின் பயனாய் ஏற்பட்ட நிலைமை இன்னமும் நமது நாட்டு மக்களின் மானத் தையும் நாணயத்தையும் பாழ்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஆனாலும் ஒத்துழையாமையின் தலைவர்களும் சிஷ்யர்களும் மாத்திரம் இன்னமும் மடாதிபதிகளாகவும் மடத்தாண்டிகளாகவும் பெருமையும் பிழைப்பும் பெற்று வாழ்கின்றார்கள்.

எனவே கடைசியாக பார்ப்பனரல்லாத மக்களுக்கு, சிறப்பாக தாழ்த்தப் பட்ட - ஒடுக்கப்பட்ட, விலக்கப்பட்ட தீண்டப்படாத மக்களுக்கு நாம் சொல்வது யாதெனில் சைமன் கமீஷனிடம் நமது நிலைமையை ஒளிக்காமல் யோக்கியமான முறையில் உள்ளது உள்ளபடி தெரிவித்துவிட வேண்டி யதுதான். இந்தியா மந்திரியும் சைமன் கமிஷனும் பார்லிமெண்டும் நமது நிலைமையை உணர்ந்துவிட்டார்கள் என்பதாக நாம் சந்தேகமற அறிந்த பிறகு அவர்கள் இதற்குத் தக்க பரிகாரம் செய்யவில்லை என்பது நமக்கு தீர்மானமாகத் தெரிந்து விட்டால், அதன்பிறகு காங்கிரசும் திரு. காந்தியும் செய்யும் ஒத்துழையாமை இந்த சர்க்காரை ஆட்டுமா? அல்லது நமது இயக்கம் செய்யும் ஒத்துழையாமை இந்த சர்க்காரை ஆட்டுமா என்பது சற்று பொறுமையோடு இருந்து பார்க்க வேண்டிய விஷயமாகும்.

முடிவாக சர்க்காருக்கு நாம் செய்யும் எச்சரிக்கை என்னவென்றால், இந்த ஜால வேடிக்கைத் தீர்மானத்தை மதித்தோ அல்லது அந்த மாதிரி ஒரு பொறுப்பும் கவலையும் நாணயமும் அற்ற சுயநலக்கூட்டத்தை எப்படியாவது கைக்குள் போட்டுக் கொண்டால் இன்னமும் கொடுமையான முறை வைத்து நாட்டைச் சுரண்டி கொள்ளையடித்துக் கொண்டிருக்கலாமென்றோ சர்க்கார் மனப்பால் குடிப்பார்களானால் அதைப் போன்ற ஒரு முடிவு காலம் அவர் களுக்கு வேறு இருக்காது என்றே சொல்லுவோம். காங்கிரஸ், உத்தியோகத் திற்கும் மற்றவர்களை அழுத்தி வைப்பதற்கும் ஆசைப்பட்டு பயங்காளித் தனமான தந்திரங்கள் செய்கின்றது. அவர்கள் தோற்றால் அவர்கள்



RangaRakes

பிழைப்புக்கு பிச்சை எடுக்கும் தொழில் இருக்கின்றது.

ஆனால் நமதியக்கமோ அப்படிக்கில்லாமல் சுயமரியாதையையும் சமத்துவத்தையும் சமசுதந்திரத்தையும் லக்ஷியமாகக் கொண்டு யோக்கிய மான முறையில் வெளிப்படையாக வேலை செய்யத் தீர்மானம் செய்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் நமதியக்கம் தோற்றால் ஒரு கை பார்த்து உயிர்விடுவதைவிட வேறு வழியில்லை என்பதை சர்க்காருக்கு நண்பர் முறையில் தெரிவிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 30.12.1928**



tamilnavarasam.com

# பார்ப்பனரல்லாதார் கவனிக்க வேண்டிய விஷயம்

நமது தலைவர் பனக்கால் அரசர் காலமான பிறகு கக்ஷி நிலையைப் பற்றிய உண்மைகளை பார்ப்பனரல்லாத மக்கள் எல்லோரும் உணர்ந் திருக்க வேண்டியது அவசியமாகும்.

தலைவர் பட்டத்திற்கு யார் வருவது என்பது பற்றிய யோசனை ஒவ்வொருவர் மனதிலும் ஊசலாடுவது அதிசயமல்ல.

சில பிரமுகர்கள் தாங்கள் தலைவராகவேண்டும் என்று ஆசைப் படுவதிலும் அதிசயமொன்றுமில்லை. அவரவர்களுக்கு வேண்டிய நண்பர்களை தலைவராக்க முயற்சிப்பதிலும் அதிசயமொன்றுமில்லை.

ஆனால் நமக்கு இப்போது அவசரமாய் ஆகவேண்டிய காரியமென்ன வென்றால், "ஜஸ்டிஸ்" "திராவிடன்" பத்திரிகைகள் நடக்க வேண்டும், ஆங்காங்கு இயக்க பிரசாரங்களும் ஸ்தாபனங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பனவே.

தற்காலம் "ஜஸ்டிஸ்" "திராவிடன்" கட்டடத்தின் மீதுள்ள 75000 ரூ. கடன் தீர்க்கப்பட வேண்டும். இது ஒரு விதத்தில் முடிவு பெற்றாலொழிய அடுத்து வரும் தேர்தலில் நாம் நிலை கொள்ள முடியாது என்பது நிச்சயம். அது மாத்திரமல்லாமல் நமது ஸ்தாபனமும் செல்வாக்கோடு இருக்க முடியாமல் போய்விடும் என்று கூடச் சொல்லுவோம். திரு. காந்திக்கும் காங்கிரசுக்கும் இன்றைய தினம் ஏதாவது செல்வாக்கு இருக்குமானால் அது அவரவர்களிடம் உள்ள பணச் செல்வாக்கே ஒழிய கொள்கை செல்வாக் கென்றோ நாணய செல்வாக்கென்றோ அடியோடு சொல்லிவிட முடியாது. அது போலவே நமது இயக்கமும், கொள்கையின் யோக்கியதையையும் நாணயத்தின் பெருமையையும் மாத்திரம் கவனித்துக் கொண்டிருந்தால் ஒரு காரியமும் ஆகிவிடாது. ஒற்றுமையும் கட்டுப்பாடும் இருந்தால் நமக்குப் பணம் கிடைப்பது ஒரு அதிசயமல்ல. சென்ற வருஷம் மாத்திரம் கதரின் பேரால் 3 லக்ஷம் அழுதோம். காங்கிரசின் பேரால் பல லக்ஷம் தொலைத் தோம். இன்னமும் சங்கராச்சாரிகளின் கொள்ளையால் ஊரூருக்கு 10, 20



RangaRakes

ஆயிரங்கள் பாழாகின்றன. மற்றும் சாவு, சடங்கு, உற்சவம், வேண்டுதலை முதலியவைகளின் பேரால் பல பல லக்ஷம் வீணாகின்றது.

எனவே நமது நாட்டில் பணமும், கொடுக்கும் தாராள தன்மையும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. ஆனால் அதை எப்படி உபயோகப்படுத்துவது என்பதற்கான புத்தி மாத்திரம் நம்மவர்களுக்கு இல்லை என்பதைச் சொல்லி ஆகவேண்டியிருப்பதுடன் அதை யாரும் கற்பிக்க முயற்சி செய்யவில்லை என்கின்ற குற்றத்தையும் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

முதலாவது நமது கக்ஷியில் ஒற்றுமைக்கும் கட்டுப்பாட்டிற்கும் விரோதமாய் உள்ள அபிப்பிராய பேதங்கள் என்ன என்பதை யாராவது சொல்ல முடியுமா? தங்கள் தங்கள் உத்தியோகம் பெறுவது, பதவி பெறுவது, ஆதிக்கம் பெறுவது என்பதினால் ஏற்படும் சொந்த அபிப்பிராய பேதமில்லாமல் பொது கொள்கைகளில் யாருக்கும் அபிப்பிராய பேதம் உண்மையில் இல்லையென்றே சொல்லுவோம்.

ஆதலால் இனி அவ்வித அபிப்பிராய பேதத்தை அடியோடு ஒழித்தாலொழிய கக்ஷி நிலைப்பதோ அல்லது அது பொது ஜனங்களுக்கு உபயோகமாகும் என்பதோ கவலைப்படத்தக்கதாகிவிடும். நாம் பார்ப்பன ரல்லாதார் கட்சி என்பதை அரசியலோடு பொருத்தாமல் இருப்பது குழப்பத் திற்கிடமில்லாததாக இருக்கும் என்று அபிப்பிராயப்படுகின்றோம். ஆனால் உத்தியோகங்கள் பதவிகள் எல்லாம் நமது மக்களின் சுயமரியாதையையும் சமத்துவத்தையும் சம சுதந்தரத்தையும் உத்தேசித்து கூடுமானவரைக் கைப்பற்றத்தக்க திட்டங்களையும் வகுத்துக் கொண்டு அதற்கு சரியான முக்கிய ஸ்தானம் கொடுத்துவிடவேண்டும். ஏனெனில் அரசியல் என்பது அர்த்தமற்றதும் பித்தலாட்டமானதும் ஆகும் என்பதே நமது அபிப்பிராயம்.

வெள்ளைக்காரர்களை நமது நாட்டை விட்டு ஓட்டுவதாயிருந்தால் அவர்கள் போய் விட்ட பிறகு எல்லாத் தன்மைகளும் மக்கள் யாவருக்கும் பொதுவானதாகயிருக்க வேண்டும். அப்படிக்கில்லாவிட்டால் வெள்ளை காரர்கள் போன பிறகு இன்னது செய்வது என்று தெரியாமல் திண்டாடுவதோ அல்லது வேறு ஒரு கொள்ளைக்காரனோ கொடுமைக்காரனோ சள்ளைக் காரனோ ஆளுவதாயிருந்தால் வெள்ளைக்காரனை நிறுத்தி வைப்பதே மேலானதாகும்.

அன்றியும் வெள்ளைக்காரனிடம் உள்ள உத்தியோகங்களைப் பற்றுவதானாலும், அதுவும் அது போலவே எல்லோரும் சமத்துவமுடனும் சம சந்தர்ப்பத்துடனும் அனுபவிக்க செய்வதானால் மாத்திரம் தான் அதில் நாம் சேர்ந்துழைக்கலாம். அதற்கு மக்களையும் தயார் செய்யலாம்.



tamilnavarasam.com

அப்படிக்கில்லாமல் வெள்ளைக்காரனிடமிருந்து பிடுங்கி ஒரு வகுப்பார் மாத்திரம் அனுபவிப்பதாயிருக்குமானால் அதைவிட அவ்வுத்தியோகம் வெள்ளைக்காரனிடத்திலேயே இருந்து விடுவதால் ஒன்றும் மூழ்கிப் போய் விடாது. ஆதலால் இது சமயம் நமது லட்சியம், சுயமரியாதை, சமூக சமத்துவம், சம சுதந்தரம் என்பவைகளையே முக்கியமாய்க் கொண்டு அதற்காகவே ஒவ்வொரு திட்டமும் வகுக்க வேண்டும் என்பதேயாகும்.

ஆதலால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் அரசியல் என்பதைக் கொண்டு வந்து புகுத்தாமல் இருக்க வேண்டிக் கொள்ளுகின்றோம். ஏன் இதை எழுதுகின்றோம் என்றால் சிலருக்கு நமது இயக்கத்தில் சேருவதற்கு "மற்றக் கொள்கைகள்" ஒப்புக்கொள்ள முடிவதில்லையாம். அதை விளக்க வும் நமது இயக்க வாலிபர்கள் அரசியல்காரர்கள் என்பவர்களால் ஏமாறாம லிருக்கவுமே இதை எழுதுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 30.12.1928**

## அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அசுபம் | - | தீமை |
| அதிதிகள் | - | விருந்தினர்கள் |
| அநர்த்தம் | - | பேரழிவு |
| அடைப்பம் | - | சவரக்கருவிகள் வைக்கும் பெட்டி, வெற்றிலைப்பாக்குப் பெட்டி |
| ஆக்ஞை | - | கட்டளை, ஆணை |
| உபதானம் | - | பிச்சை |
| எடினமாக | - | கடினமாக |
| சள்ளைக்காரன் | - | தொல்லை செய்பவன் |
| சாகவாசம் | - | நட்பு, தோழமை |
| சேதித்து | - | வெட்டி, அறுத்து |
| நிஷ்காரணமாய் | - | காரணமில்லாமல் |
| பரத்துவம் | - | கடவுள் தன்மை |
| பரிவாரம் | - | சுற்றி இருப்போர், உடன் இருப்போர் |
| பர்த்தி | - | இணை, ஒப்பு, நிரப்பல் |
| மித்தை | - | பொய் |
| யாதாஸ்து | - | அறிக்கை, குறிப்பு |
| விக்கினம் | - | இடையூறு, தீது |
| வியாகரணம் | - | இலக்கணம் |

RangaRakes tamilnavarasam.com

# குடி அரசு

# 1929-1

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 8


**பெரியார் திராவிடர் கழகம்**

29 இதழியலாளர் குடியிருப்பு

திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்

சென்னை - 600 041


# காங்கிரஸ் ஏமாற்றுத் திருவிழா முடிவு பெற்றுவிட்டது

## ஒற்றுமைத் தீர்மானத்தின் யோக்கிதை

43-ம் வருஷத்திய காங்கிரஸ் என்னும் இவ்வருஷத்திய ஏமாற்றுத் திருவிழா ஒருவாறு முடிவு பெற்று விட்டது. இந்நாடகம் இந்நிலையில் முடிவு பெற முக்கிய வேஷதாரியாய் திரு. காந்தியே நடித்திருப்பது மிகுதியும் குறிப்பிடத்தக்கது.

எனவே அம்முக்கிய நடிகராகிய திரு.காந்தி இந்நாடகத்தில் கலந்து கொண்டதற்கு அவர் (திரு.காந்தி) சொல்லும் முக்கிய காரணம் என்ன வென்றால்:- 'ஒற்றுமையின் அவசியத்தைக் கோரியே' இம்மாதிரி கலந்து கொண்டாராம். உண்மையில் ஒற்றுமை ஏற்பட்டதா? அல்லது ஒற்றுமை வாசனை சிறிதாவது அங்கு ஏற்பட்டதா? திரு. காந்தியின் ஒற்றுமைத் தீர்மானத்திற்கு முன்னும் சர்வ கட்சி மகாநாட்டின் ஒற்றுமைத் தீர்மானத்திற்கு முன்னும் நாட்டில் எத்தனை கட்சியும் வகுப்புப் பிரிவும் இருந்ததோ அதைவிட அதிகமான கட்சியும் பிரிவினைகளும் தீர்மானத்திற்குப்பின் ஏற்பட்டிருப்பது காங்கிரஸ் நடவடிக்கையைக் கவனித்தவர்களுக்கு தெள்ளென விளங்காமல் போகாது. இந்த இடத்தில் நமது (இந்தியர்களின்) லட்சியம் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும்.

அதாவது, நமது லட்சியம் ஒற்றுமையா, விடுதலையா என்பது இதுவரை தெளிவுபடுத்தப்படாமல் மாறிமாறி பேசப்பட்டே வந்திருக்கின்றது.

சாதாரணமாய் நமக்குத் தெரிந்து 1907-ஆம் வருஷத்திய சூரத்து காங்கிரசில் ஒருவருக்கொருவர் கலகமும் அடிதடியும் நடந்து கலைந்தது முதல் இதுவரையில் அரசியல் ஒற்றுமையைப் பற்றிப் பேசாத நாள்கள் மிக சொற்பம் என்றுதான் சொல்ல வேண்டும். ஒற்றுமையைப் பற்றி பேச ஆரம்பித்தபிறகே மிதவாதி, அமிதவாதி, சுயேச்சைவாதி, சுயராஜ்யவாதி, இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பார்ப்பனர்கள், பார்ப் பனரல்லாதார்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகிய பல கட்சிகள் தோன்றி யதுடன் சமீபகாலத்தில் ஒத்துழைப்பவர்கள், ஒத்துழையாதார்கள், சுயராஜ்யக் கட்சிக்காரர்கள், குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்காரர்கள், பூரண சுயேச்சைக்

RangaRakes tamilnavarasam.com

காரர்கள் என்பவர்களாகிய எத்தனையோ வித கட்சிகளும் அபிப்பிராய பேதங்களும் வளர்ந்து கொண்டே வந்தும், வந்து கொண்டும் இருக்கின்றதை யாரும் மறைத்து விட முடியாது.

இதுதவிர, சமய சமூக இயலிலும் பல கட்சிகளும் அபிப்பிராய பேதங்களும் இருந்து கொண்டு வருகிறது. சுமார் 20 வருஷ காலமாக ஒற்றுமை! ஒற்றுமை! என்று பேசிக் கொண்டு அதற்காக செலவழித்த நேரமும் அறிவும் ஊக்கமும் இதுவரை நாட்டுக்கு என்ன பலனைக் கொடுத்தது அல்லது எவ்வித வெற்றியை அளித்தது என்பதை யோசித்துப் பார்க்கும் படி வாசகர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ஒற்றுமையைப் பற்றி பேசும் எல்லோரும் அநேகமாய் மனதி லொன்றும் வாக்கிலொன்றும் நடவடிக்கையிலொன்றுமாக யோக்கியப் பொறுப்பற்ற தன்மையில் தங்கள் தங்கள் சுயநலத்தின் பொருட்டு பிறரை, சிறப்பாக இந்திய நாட்டு பாமர மக்களாகிய 100-க்கு 99 பேரை ஏமாற்றித் தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்ள செய்த சூழ்ச்சியே அல்லாமல் வேறு என்ன நல்லெண்ணம் இவ்வொற்றுமை முயற்சியில் இருந்து வந்தது என்று யாராவது சொல்ல முடியுமா என்று அதட்டியுடன் கேட்கின்றோம்.

இதற்கு ஆதாரம் கண்டுபிடிக்க நாம் அதிக தூரம் போக வேண்டிய தில்லை. உயர்ந்த தத்துவம் என்று கருதப்பட்ட ஒத்துழையாமை இயக்க சம்மந்தமாகவும் உண்மையான மனிதர் என்று கருதப்பட்ட திரு.காந்தி சம்மந்தமாகவும் ஏற்றபட்ட ஒற்றுமைகளின் யோக்கியதைகளைப் பற்றி கவனித்துப் பார்த்தாலே போதுமானது.

அதாவது திரு.காந்தி சிறையில் இருக்கும்போது டில்லி, அலகாபாத், நாகப்பூர், காகிநாடா முதலிய இடங்களில் ஏற்பட்ட ஒற்றுமைகளும், திரு. காந்தி வெளிவந்த பிறகு சுமார் 4, 5 தடவை ஏற்பட்ட ஒற்றுமை ஒப்பந்தங் களும், ஒற்றுமைத் திட்டங்களும் அதாவது காந்தி தாஸ் நேரு ஒப்பந்தமும், காந்தி தாஸ் ஒப்பந்தமும் திரு.காந்தி தானாகவே தனியாக ஒற்றுமைக்காக என்று திட்டங்களை மாற்றிக் கொண்ட வகையிலும் பெல்காம் காங்கிரசில் செய்து கொண்ட ஒப்பந்தமும் மற்றும் இந்து முஸ்லீம் ஒப்பந்த ஒற்றுமை களும், பட்டினி கிடந்ததின் மூலம் செய்து கொண்ட ஒற்றுமைகளும் மற்றும் "எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிப்போகிறேன்", "இமயமலைக்குப் போய் விடுவேன்" என்று மிரட்டி செய்த ஒற்றுமைகளும், கடைசியாக 'ராட்டினம் தான் கதி' என்று சொல்லி அரசியலில் இருந்து விலகிக் கொண்டதாய் விளம்பரப் படுத்தியதின் மூலம் செய்த ஒற்றுமைகளும் இதுவரை என்ன பலனைக் கொடுத்தன?

கொள்ளைக்காரர்கள் தங்களுக்குள் செய்து கொள்ளும் ஒற்றுமை போலவும், போலீசாரும் திருடர்களும் செய்து கொள்ளும் ஒற்றுமை போலவும் கருதி செய்யப்பட்டு வந்திருக்கின்றதே யல்லாமல் நாட்டின்



நன்மையைக் கருதி இதுவரை எந்த விதமான ஒற்றுமையாவது செய்யப் பட்டிருக்கின்றதா? என்று கவனித்துப் பார்க்க வேண்டுகின்றோம். அது போலவே இவ்வருஷ காங்கிரஸ் ஒற்றுமைத் தீர்மானத்தையும் சற்று கவனிப்போம்.

அது, திரு. காந்தி பிரேரேபிக்கிறார் என்கின்ற சலுகையின் பேரில் ஏழில் நாலு பங்கு ஓட்டுகளால் நிறைவேறி இருக்கின்றது. இது ஒற்றுமைத் தீர்மானமாகுமா? சாதாரணமாய் ஒத்துழையாமையின் போது இம்மாதிரியும் இதைவிட இன்னும் குறைந்த மைனாரிட்டியுமாக ஏற்பட்டு நிறைவேறிய அநேக தீர்மானங்களை இதே திரு. காந்தி ஏற்றுக் கொள்ளாமல் மைனாரிட்டி யாரின் லட்சியத்தையே மிகுதியும் கவனித்து மைனாரிட்டியாருக்கு இணங்கியே வந்திருக்கின்றார். கடைசியாக ஒத்துழையாமையை சித்திரவதை செய்த பெல்காம் காங்கிரசின்போது கூட ஒத்துழையாமைக்கு விரோதமாய் இப்போது கல்கத்தாவில் இருந்த மைனாரிட்டி விகிதத்தில் நாலில் ஒரு பங்குகூட இல்லாத நிலையில் எப்படியாவது தான் தப்பித்தால் போதும் என்று கருதி அடியோடு விட்டுவிட்டு ஓடிவிட்டார். நாமே நேரில் அதன் காரணம் கேட்டபோது, மூன்று மாதம் வாய்தா கொடுத்திருக்கின்றேன், அது கழிந்த பிறகு மணலைக் கயிராகத் திரித்து விடுகிறேன். பயப்பட வேண்டாம் என்று சொன்னார். மூன்று மாதம் கழிந்த பிறகு இவ்விஷயமே அவருக்கு ஞாபகமில்லாமல் போய்விட்டது. அப்படியிருக்க இப்போது நிறைவேறிய இவ்வளவு பெரிய மைனாரிட்டி உள்ள தீர்மானம் ஒற்றுமைத் தீர்மானமாகுமா?

திருவாளர்கள் சிந்தாமணி, சாப்ரு, சிவசாமி அய்யர், ராமசாமி அய்யர் ஆகிய சென்னை அய்யர் பார்ப்பனர்களும், மாளவியா, நேரு முதலிய வட நாட்டுப் பார்ப்பனர்களும் மற்றும் சில சூழ்ச்சிக்காரப் பார்ப்பனர்களும், இந்திய மக்களில் பல்வேறு வகுப்புகளையும், வகுப்பு சமத்துவத்தையும், சமசந்தர்ப்பத்தையும் ஒழிப்பதற்கும், பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கும் ஒன்று சேர்ந்திருக்கின்றார்கள். எனவே அந்தக் கைதான் இப்போது வலுத்த கையாதலால் அவர்களுக்கு நல்ல பிள்ளையாய் நடந் தால்தான் தனது மடாதிபதிப் பட்டம் நிலைக்கும். இல்லாவிட்டால் ஆட்டம் கொடுத்துவிடும் என்கின்ற ஒரே ஒரு எண்ணமில்லாமல் இத்தீர்மானத்தை பிரேரேபித்ததில் திரு.காந்திக்கு வேறு ஏதாவது எண்ணமிருந்திருக்கக் கூடும் என்று யாராவது முன்வந்து சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்?

உண்மையாக அத்தீர்மானத்தில் இந்து முஸ்லீம் ஒற்றுமை உண்டா? பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் ஒற்றுமை உண்டா? சீக்கியர் ஒற்றுமை உண்டா? அல்லது குடியேற்ற நாட்டு அந்தஸ்து - பூரண சுயேச்சை என்கின்ற கட்சிகள் ஒற்றுமையாவது உண்டா? என்று கேட்பதுடன் மற்றும் புதிதாக எத்தனை மாகாணப் பிரதிநிதிகள் மனவருத்தமும், வகுப்பார்கள் மன வருத்தமும் ஏற்பட்டது என்பதை காங்கிரஸ் நடவடிக்கைகளை படித்தவர் களுக்கு விளங்காமல் போகாது. இதுதவிர, இவ்வொற்றுமைத் தீர்மானத்தால்



RangaRakes tamilnavarasam.com

சுயேச்சைக் கட்சிக்காரர்களுக்குள்ளாகவே இரு பிரிவினைகளும், முஸ்லீம்க ளுக்குள்ளாகவே பல பிரிவினைகளும் ஏற்பட்டிருப்பதோடு, மிதவாதி களுக்குள்ளும், சுயாட்சிவாதிகளுக்குள்ளும் தீர்மானத்தின் பகுதி பாகம் ஒப்புக் கொள்ளவும் பகுதி பாகம் தள்ளப் படவுமாய் ஏற்பட்டிருக்கிறதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## ஒரு ஊரில் இரண்டு பைத்தியக்காரர்கள்

இது மாத்திரமல்லாமல் 'ஒரு ஊரில் இரண்டு பைத்தியக்காரர்கள்' என்பது போல் காங்கிரசின் பேரால் பாமர மக்களிடம் போய் ஒரு கூட்டம் வெள்ளைக்காரர்களின் ஆட்சியை அடித்துத் துரத்தி ஒழித்துவிட வேண்டும் என்றும், மற்றொரு கூட்டம் வெள்ளைக்காரர்கள் நமக்கு இன்னின்ன விதமான சீர்திருத்தம் கொடுக்க வேண்டும் என்றும் பிரசாரம் செய்யவும், இதன் மூலம் சிலர் ஜெயிலுக்குப் போகவும் உதைபடவும், சிலர் அவர்கள் பெயரைச் சொல்லி மக்களை ஏமாற்றவும் தாராளமாய் வேண்டுமென்றே இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வளவு வித அபிப்பிராய பேதக்காரர்களையும் கட்சிக்காரர் களையும் நாம் ஒன்று கேட்கின்றோம். இவ்வபிப்பிராய பேதங்களும் கட்சிகளும் பொது நலத்தை உத்தேசித்தா? அல்லது எந்த அபிப்பிராயம் கொண்டால் எந்தக் கட்சியில் சேர்ந்தால், நமது வகுப்பு நலமோ நமது தனி சுயநலமோ ஏற்படும் என்கின்ற எண்ணத்தைக் கொண்டா? என்று கேட்கின் றோம். உதாரணமாக முகமதியர்களில் ஜனாப்கள் ஜின்னா, மகமதலி, ஷௌக்கத்தலி, சர்அப்துர் ரஹீம், மகமதபாத் ராஜா, டாக்டர் அன்சாரி, சர் ஷாபி, ஆகாகான் முதலியோர்கள் பொதுவாக இந்தியா முழுவதுக்கும் பிரயத்தனப்படுகின்றார்களா அல்லது தங்கள் வகுப்புக்கு மாத்திரம் பிரயத் தனப்படுகின்றார்களா அல்லது தங்கள் சுயநல வாழ்வுக்கே பிரயத்தனப் படுகின்றார்களா அல்லது தங்கள் பெயரும் பொதுவாழ்வில் அடிபடட்டும் என்கின்ற ஆசையின் மீது பிரயத்தனப்படுகின்றார்களா என்று பார்த்தால் மகமதிய கனவான்களின் பொதுநல அபிப்பிராய பேதத்தின் யோக்கியதை விளங்காமல் போகாது. இதுபோலவே, திருவாளர்கள் மாளவியா, நேரு, சிந்தாமணி, சாப்ரு, சர். சிவசாமி, சர். ராமசாமி, அன்னிபெசண்டு, ஜவாரிலால், சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, C. ராஜகோபாலாச்சாரி, ஏ. ரங்கசாமி அய்யங்கார், சாம்பமூர்த்தி, அரிசர்வோத்தமராவ், பட்டாபி சீதாராமய்யா முதலிய பார்ப்பனர்களின் யோக்கியதைகளை கவனித்துப்பார்த்தால் இந்த தியாகிகளுக்குள் பொதுநல அபிப்பிராயபேதத்தின் மூலம், கக்ஷியா அல்லது சுயவகுப்பு நலம், சுயவாழ்வு நலம் ஆகியவைகளின் மூலம் அபிப்பிராய பேதமா என்பவைகள் விளங்காமல் போகாது. மற்றபடி காங்கிரசில் அதிகமாக அடிபட்ட பெயர்களில் முக்கியமானவைகள் திருவாளர்கள் காந்தி, போஸ், பெசண்டு அம்மாள் ஆகிய பார்ப்பனரல்லாதார்களாகும். இவர்களில்



திரு.காந்தியைப் பற்றியோ என்றால், ஏதாவது ஒரு கொள்கை திரு.காந்தியை நடத்துகின்றதா, அல்லது திரு காந்தியால் ஏதாவது ஒரு கொள்கை நடத்தப்படுகின்றதா என்பதைக் கண்டு பிடிப்பதே கஷ்டமாயிருப்பதுடன் அவருடைய இப்போதைய கொள்கையாவது என்ன என்பதே நம்மால் கண்டுபிடிக்க முடியாததாயிருக்கின்றது.

திரு.போஸ் அவர்களுக்கு, எந்த விதத்திலாவது தான் ஒரு பெரிய வீரன் ஆகிவிட வேண்டுமென்கின்ற ஆசையைத் தவிர வேறொன்றும் இருப்பதாய்க் காணமுடியவில்லை. திரு. பெசண்டம்மையோவென்றால், அவரது கொள்கையும் கண்டுபிடிக்க முடியாததாயிருப்பதுடன் தனது மடமும் மடாதிபதித் தன்மையும் இருப்பதாகக் காட்டிக் கொண்டால் போதும் என்கின்ற கவலையே அதிகமாய் இருப்பதாகக் காண்கின்றது. எனவே இந்தக் கூட்டங்கள், அதாவது உலகத்தில் கஷ்டம் என்ன? தொழிலாளர்கள், கூலிக் காரர்கள் நிலைமை என்ன? தாழ்ந்த ஜாதியார் என்பவர்கள் அனுபவிக்கும் துன்பம் என்ன? என்கின்ற விஷயங்களை ஒரு சிறிதும் அறியாதவர்களும் அறிய சந்தர்ப்பமில்லாதவர்களுமான இவர்கள் இந்திய மக்களுக்காக என்று அபிப்பிராய பேதப்படுவதும் கக்ஷி பிரிந்து நிற்பதும் மறுபடியும் ஒற்றுமை படுவதுமான காரியங்களால் ஏதாவது பலன் உண்டாக முடியுமா அல்லது பாமரமக்கள் லக்ஷியம் செய்யக் கூடியதாயிருக்குமா என்று கேட்கின்றோம்.

## ஒரு வருஷத்தில் ஒத்துழையாமை

நிற்க, ஒரு வருஷத்தில் ஒத்துழையாமை ஆரம்பிக்கப்படுமாம். அதாவது சர்க்கார் குடியேற்ற நாட்டு அந்தஸ்து ஒரு வருஷத்தில் கொடுக்கா விட்டால் ஒத்துழையாமை ஆரம்பிக்கப்படுமாம்.

சர்க்கார் ஒரு வருஷத்தில் குடியேற்ற நாட்டு அந்தஸ்து நமக்குக் கொடுக்கப் போவதில்லை என்பது உறுதி. அதில் சிறிதும் சந்தேகமில்லை. ஒரு சமயம் சர்க்கார் பகுதி கொடுத்தாலும் ஒன்றும் கொடுக்காவிட்டாலும் வேறு ஏதாவது சில மாறுதல் செய்தாலும். "அதுதான் நாங்கள் குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்று நினைத்துக் கேட்டோம்" என்று சொல்லிக் கொண்டால் கொள்ளலாமே ஒழிய உண்மையில் இந்த நிலைமையில் அந்த நிலைமை நமக்கு கொடுக்கப் போவதும் இல்லை. அதையடைய நம் நாட்டுக்கு இப்போது சக்தியும் இல்லை.

ஆகவே யோக்கியமான முறையில் நடப்பதாயிருந்தால் அடுத்த வருஷம் அதாவது 1930 ஜனவரி 1- தேதி ஒத்துழையாமை ஆரம்பித்தாக வேண்டும். எனவே, திரு.காந்தி இத்தீர்மானத்தை பிரேரேபிக்கும்போது உண்மையாகவே ஒத்துழையாமை ஆரம்பிக்கலாம் என்று உறுதி கொண்டு இதை பிரேரேபித்தாரா அல்லது சர்க்காரை மிரட்டவோ அன்றி பாமர மக்களுக்கு ஆசை வார்த்தை காட்டி ஏமாற்றவோ கருதி இதை பிரேரே



RangaRakes
tamilnavarasam.com

பித்தாரா என்பதை ஒவ்வொருவரும் நடுநிலையிலிருந்து கவனித்துப் பார்த்தால் உண்மை விளங்காமல் போகாது.

அன்றியும் அப்படியே ஒரு சமயம் ஒத்துழையாமை ஆரம்பிப் பதாகவே வைத்துக் கொண்டால், திரு. சத்தியமூர்த்தி, சாப்ரூ, சிந்தாமணி, சீனிவாசய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார், ராமசாமி அய்யர், பெசண்டு, மாளவியா ஆகியவர்கள் ஒத்துழையாமைக்கு தயாராயிருப்பார்களா?

எனவே, காங்கிரசும் ஒற்றுமையும் ஒத்துழையாமையும், எவ்வளவு கேலிக் கூத்தும் நாணயமற்றதும் சூழ்ச்சி நிறைந்ததுமான தன்மைகள் கொண்டதாய் இருக்கின்றது? என்பதை ஞாபகப் படுத்திப் பார்த்தால் நமது நாட்டிற்கு எப்போதாவது விடுதலை உண்டாகுமா என்று கூட எண்ண இடமில்லாமல் போவதாயிருக்கின்றது.

## சைமன் பகிஷ்காரம்

அடுத்தபடியாக சைமன் கமிஷன் பகிஷ்காரத்தைப் பற்றி ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது. இது, இதுவரை நடந்த பகிஷ்காரங்கள் தோல்வியுற்றதையும் பகிஷ்காரக் கூச்சல் சைமன் கமிஷன் நடவடிக் கைகளை கிஞ்சிற்றும் அசைக்கச் செய்யாமல் போனதோடு பகிஷ்காரத்தால் பலாத்காரங்கள், உயிர்ச்சேதங்கள் முதலியவை ஆங்காங்கு ஏற்பட்டிருப்ப தையும், பகிஷ்கார வேஷக்காரர்கள் பாமர மக்களை முன்னணியில் தள்ளி விட்டுவிட்டு தாங்கள் ஒளிந்து கொண்டும் பின்னணியில் நின்று கொண்டும் பொது மக்களை ஏமாற்றிய பயங்காளித்தனமான இழி தன்மைகளையும் காட்டவில்லையா? திரு.காந்தியும் காங்கிரசும் இவைகளை நன்றாய்த் தெரிந்து கொண்ட பிறகும், இம்மாதிரியான ஒரு ஏமாற்றுத் தீர்மானத்தை தீர்மானித்த தானது, இந்தியாவில் நடைபெறும் தேசீய அயோக்கியத் தனத்தை வெளிப் படுத்தத் தக்க சான்றாக வில்லையா?

பகிஷ்காரத்தைப் பற்றிப் பேசும் போது "இங்கிலாந்து முதலிய தேசங்களில் இம்மாதிரி பொதுமக்களால் வேண்டப்படாத ஒரு கமிஷன் இவ்வளவு கட்டாயத்துடனும் செல்வாக்குடனும் நடைபெறுமா" என்று சொல்லப்பட்டது.

இங்கிலாந்து முதலான மற்றும் அநேக இடங்களில் இம்மாதிரியான அக்கிரமம் நடவாது என்பது உண்மை என்றே வைத்துக் கொள்ளுவோம். ஆனால் இந்தியா தவிர மற்ற இடங்களில் இம்மாதிரி கீழ் ஜாதி மேல் ஜாதி வித்தியாசமும், கீழ் ஜாதிக்காரரின் மீது மேல் ஜாதிக்காரர் என்பவர்கள் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பதற்காக சூழ்ச்சிகளும் நடைபெறு கின்றதா? நடைபெற பாமர மக்கள் விட்டுக் கொண்டிருப்பார்களா என்று கேட்கின்றோம்.



இந்தியா பராதீனப்பட்டதற்கு முக்கியமான காரணம் என்ன? இந்திய மக்களிலேயே ஒருவருக்கொருவர் கீழ் ஜாதி மேல் ஜாதி என்கின்றதான ஒரு அக்கிரமமான கொள்கையாலல்லவா? எனவே அதை ஒழிக்காமல் 'இந்தியா பூரண சுயேச்சை அடையப் பாடுபடுகின்றேன்' என்பதும் பாடுபடுவதும் காரியத்தில் ஆகக் கூடிய காரியமா? அன்றியும் அது புத்திசாலித் தனமான காரியமா?

ஒரு நாடோ ஒரு சமூகமோ மாத்திரமல்லாமல் ஒவ்வொரு தனி வகுப்பும் ஒவ்வொரு தனிமக்களும் பூரண சுயேச்சை அடைய வேண்டும் என்பது தான் நமது கருத்தாகும். ஏனென்றால் அதுதான் மனிதவர்க்கத்தின் பிறப்புரிமையாகிய சுயமரியாதை என்று நாம் முடிவு செய்து கொண்டிருக் கின்றோம். ஏனெனில் மானத்தோடு வாழக்கூடியதான அடிமைத் தனத்தைப் பற்றி நமக்கு ஒரு சிறிதும் கவலையில்லை என்பதோடு மானமற்றதாயிருக் கும் படியான பூரண சுதந்திரமானாலும் அதை நாம் சிறிதும் லக்ஷியம் செய்ய மாட்டோம். இக்கருத்தையே முன் ஒரு சமயத்தில், அதாவது கிலாபத் அநீதிகளுக்காக என்று ஒத்துழையாமையை திரு.காந்தி மக்களிடையில் உபதேசித்த காலத்தில் சில சென்னைத் தலைவர்கள் "ஒத்துழையாமையின் லக்ஷியம் சுயராஜ்யம்" என்று குறிப்பிட வேண்டும் என்று சொன்னபோது திரு.காந்தி, "பஞ்சாப் அநீதிக்குப் பரிகாரம் கிடைக்காமல் எவ்வித சுயராஜ்யம் வருவதானாலும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்; ஏனெனில் மானம் என்னும் சுயமரியாதை பெரியதே ஒழிய சுயராஜ்யம் பெரியதல்ல" என்று பிராட்வே 8 நெம்பர் கட்டடத்தில் சொன்னார். சென்னை அய்யர் பார்ப்பனர் கள் தவிர மற்றப்படி அது சமயம் அங்குள்ளவர்கள் எல்லோரும் கை தட்டினார்கள். எனவே பூரண சுயேச்சை விரும்புகின்றவர்களாகட்டும் குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்கு குறைந்த எதையும் ஒப்புக் கொள்ளாதவர் களாகட்டும், சைமன் பகிஷ்காரக் கூப்பாட்டுக்காரர்கள் ஆகட்டும் இதுவரை யில் மனிதனின் பிறப்புரிமையாகிய சுயமரியாதைக்காக என்ன ஏற்பாடுகள் செய்திருக்கின்றார்கள் என்று கேட்கின்றோம். பொதுவாகவே சைமன் கமிஷன் நாளை கப்பலிலேயே திரும்பிப் போய் விட்டதாகவோ இந்தியா வுக்கு நாளைய தினமே குடியேற்ற அந்தஸ்து வந்துவிட்டதாகவோ அல்லது பூரண சுதந்திரம் வந்து விட்டதாகவோ அதாவது வெள்ளைக்கார ஆதிக் கம்மாத்திரமல்லாமல் அந்த சமூகமே இந்தியாவை விட்டு ஒரே அடியாய் ஓடிப்போனதாகவோ வைத்துக் கொள்ளுவோமானால் இந்திய மக்களுக்கு ஏற்படும் நன்மை என்ன? அவற்றால் இப்போதைய நிலைமையைவிட வேறு எந்த வித மாறுதல்கள் உண்டாகக் கூடும் என்பதை சற்று யோசிப்போம்.

இந்திய மக்களில் 100க்கு 90 பேர்களைப் பொருத்தவரை அவர்கள் அனுபவிக்கும் இழிவுக்கு-அடிமை நிலைக்கு சுயமரியாதையற்ற தன்மைக்கு - வெள்ளைக்காரர்களுடைய ஆட்சி காரணமா அல்லது உள்நாட்டு ஆரியப் பார்ப்பனீயமும் அதன் ஆதிக்கமும் காரணமா என்று ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நெஞ்சில் கையை வைத்துப் பார்க்கட்டும். அன்றியும் எந்த



RangaRakes tamilnavarasam.com

விதத்திலாவது வெள்ளைக்கார ஆட்சியே தானா நம்மைப் பிரித்து வைத் திருக்கின்றதென்பதை நடுநிலையில் இருந்து யோசித்துப் பார்க்கட்டும். அப்போது என்ன பதில் கிடைக்கும் என்பதை நாம் சொல்ல வேண்டுமா? ஆனால் நமக்குள் ஏற்பட்ட பிளவை வெள்ளைக்காரர்கள் தங்கள் கொடுங் கோன்மை ஆட்சிக்கு அனுகூலமாக உபயோகித்துக் கொள்ளுகின்றார்கள் என்பதை நாம் சிறிதும் ஆக்ஷேபிப்பதில்லை. ஆனால் அதற்கு வெள்ளைக் காரர்களே முழு ஜவாப்தாரிகளாவார்களா? ஏனெனில் நாம் அந்த நிலையில் இருந்தால் வேறு என்ன செய்வோம். அதைத் தான் செய்வோம். சைமன் கமிஷன் பகிஷ்காரத்திற்காக செலவழித்த தந்திரமும் நேரமும் கஷ்டமும் நஷ்டமும் மக்களின் உண்மையின் ஒற்றுமைக்கும் சமத்துவத்திற்கும் பரஸ்பர நம்பிக்கைக்கும் செலவிட்டிருந்தால் சைமன் கமிஷனுக்கு நமது நாட்டில் வேலை இருந்திருக்குமா? அவர்கள் திரும்பிப் பார்க்க ஆள்கள்தான் இருந்திருக்குமா?

மக்களின் ஒற்றுமையிலும் சமத்துவத்திலும் பரஸ்பர நம்பிக்கையிலும் சற்றும் கவலையில்லாது மூன்று வருஷத்திற்கு முன்பிருந்தே "சைமன் கமிஷன் வரப் போகிறது, வரப் போகின்றது; உண்மையான இந்திய தேசீய வாதிகள் அதில் சாட்சி சொல்ல வேண்டும்; ஆதலால் ஓட்டர்களே நீங்கள் தக்க தேசீய வாதிகளைத் தெரிந்தெடுங்கள்" என்று ஓட்டுப் பிச்சைப் பிரசாரம் செய்துவிட்டு ஓட்டர்களும் தங்கள் பிரதிநிதிகள் சைமன் கமிஷனிடம் சாட்சி சொல்ல வேண்டும் என்கிற எண்ணத்தின் பேரிலேயே தங்கள் ஓட்டுகளைக் கொடுத்து தெரிந்தெடுத்திருக்க, இப்போது தங்களைத் தெரிந்தெடுத்த ஓட்டர்களுக்கு விரோதமாய் "சைமன் கமிஷனைப் பகிஷ்கரிக்கின்றேன்" என்பது ஒரு யோக்கியமான பிரதிநிதிக்கு நாணயமான காரியமாகுமா? பிரதிநிதிகள் அயோக்கியராக இல்லாமல், ஓட்டர்களின் துரோகியாக இல்லா மல், நல்ல சுத்த ரத்த ஓட்டமுள்ள நாணயக்காரராயிருப்பார்களானால் உடனே தமது பதவியை ராஜீனாமா கொடுத்துவிட்டு, மறுபடியும் தேர்தலுக்கு நின்று தாம் பகிஷ்காரம் செய்யப் போவதாய் ஓட்டர்களுக்கு சொல்லி, ஓட்டு கேட்டு, அவர்களால் தெரிந்தெடுத்த பிறகு பகிஷ்காரம் செய்தால் அது ஆண்மையும் நாணயமுமான காரியமாகும். அப்படிக்கில்லாமல் 'காணாமல் பேசுபவர்கள் எதற்கோ சமானம்' என்பது போல் கண்ணுக்குத் தெரியாத இடத்தில் போய் நின்று கொண்டு உண்மையான விஷயங்களைச் சொல்லாமல் தமிழ்மக்கள் மீது வீண்பழி சுமத்துவதில் என்ன லாபம் வரும்? எனவே வீணான பகிஷ் காரக் கூச்சல் போடுவதும் கமிஷனை பகிஷ்கரிப்பதும் இந்திய தேசீய அயோக்கியத்தனத்திற்கு மற்றொரு உதாரணமாகும் என்று தைரியமாய்ச் சொல்லுவோம்.

## கதர்

கதரைப் பற்றியும் ஒரு தீர்மானம் காங்கிரசில் நிறைவேற்றப் பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. இது ஓட்டுப் பறிக்கும் தந்திரமே ஒழிய இதனால் நாட்டிற்கு எவ்வித பலனும் உண்டாகப் போவதில்லை என்று துணிந்து சொல்லுவோம்.

காங்கிரஸ் தீர்மானத்தில் கதர் இல்லாமலிருக்கும் போதே கதரின் பெயரைச் சொல்லிக் கொண்டு பார்ப்பனர்களில் ஒரு பகுதியார் வயிறு வளர்ப் பதோடு மாத்திரம் நில்லாமல் பார்ப்பனரல்லாதாருக்கு பல வழிகளிலும் தொல்லைகள் விளைவித்துக் கொண்டு வருகின்றார்கள் என்பதைப் பற்றி பல தடவை வெளிப்படுத்தி இருக்கின்றோம். இப்போது காங்கிரசில் தீர்மானிக் கப்பட்டுவிட்டதால் இனி முன்னிலும் அதிகமாக வெறும் ஆகாசப் பேர் வழிகள் எல்லாம் வெளியே கிளம்பி கதர்! கதர்! என்று கூச்சல்போட ஆரம்பித்து விடுவார்கள்.

ஆகவே, கதரின் யோக்கியதையைப் பற்றி இந்தச் சமயத்திலேயே சற்று வெளிப்படுத்தி விடுவது சரியான காரியமாகும்.

அதாவது கதர் இயக்கம் ஏற்பட்டு நமக்குத் தெரிய சுமார் 8 வருஷ மாகின்றது. அதில் இதுவரையில் எத்தனை லக்ஷ ரூபாய்க்கு அல்லது எத்தனை கோடி ரூபாய்க்கு கதர் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றதோ அதில் சரியாக மூன்றில் இரண்டு பங்கு ரூபாய் அதை வாங்கிக் கட்டிய மக்கள் நஷ்டப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் அவற்றில் 5-ல் ஒரு பங்கோ 6-ல் ஒரு பங்கோ தான் ஏழைகளான நூற்புக்காரர்களுக்குச் சேர்ந்திருக்கும். நெசவுக் காரர்களுக்கு இந்தக் கதரினால் எவ்வித லாபமும் ஏற்பட்டு விட்டதாகச் சொல்லிவிட முடியாது. நூல் நூற்பவர்களுக்கு மேற் சொன்னபடி சிறிது பாகம் சேர்ந்திருந்தாலும் அது அவர்களுக்குத் தினம் ஒன்றிற்கு 10 மணி அல்லது சில சமயங்களில் 12 மணி நேரத்திற்கும் குறையாமல் வேலை செய்வதற்கு 6 தம்பிடி முதல் 9 தம்பிடி அல்லது (ரொம்பவும் அதிகமாயிருந்தால்) 10-தம்பிடி வீதம் தான் பெரும்பாலும் கிடைத்திருக்கும். ஒரு அணாவுக்கு மேல் அடைந்திருக்கவே முடியாது.

அதாவது ஆறு முழமுள்ள ஒரு ஜதை கதர் வேஷ்டி சாதாரண பஜார் ரகமானால் ரூ.4-2-0 கொடுத்து வாங்க வேண்டும். இதே ஆறு முழ வேஷ்டியை மில் வேஷ்டியாக வாங்கினால் ரூ.1-10-0 அல்லது ரூ. 1-12-0. கொடுத்தால் போதுமானது. ஒரு ஜதை வேஷ்டிக்குக் கதரை உத்தேசித்து வாங்குகின்றவர்கள் குறைந்தது 2-4-0 அல்லது 2-8-0 ரூபாய் நஷ்டப் பட வேண்டியிருக்கிறது. சற்று நல்ல வேஷ்டியாய் பார்த்து வாங்க ஆசைப் படுகின்றவர்கள் சில சமயங்களில் இதற்கு இரட்டிப்பாயும் கொடுக்க வேண்டி வருகின்றது. பொதுமக்கள் இவ்வளவு நஷ்டமடைந்த பணத்தில் நூற்பவர்களுக்குப் போய்ச் சேரும் பணம் எவ்வளவு என்று பார்ப்போ மானால் சற்று விவரமாய் கூறுவோம்.

அதாவது இந்த வேஷ்டி, எடை போட்டுப் பார்த்தால் இரண்டே காலே அரைக்கால் பவுன் எடையாயிருக்கும். இந்த பஞ்சுக்கு நூற்பவர்களுக்கு கூலி



RangaRakes tamilnavarasam.com

ராத்தலுக்கு 4-அணா கூலி வீதம் சராசரி 0-9-6 அணா தான் போய்ச் சேரக்கூடும். அதுவும் ஒரு வாரத்திற்கு ஒரு பெண் இரவும் பகலும் வேலை செய்தால் தான் மேற்கண்ட இரண்டே காலே அரைக்கால் ராத்தல் நூலை நூற்று மேல்கண்ட ஒன்பதரை யணா கூலி பெற முடியும். இதற்கு ஒவ்வொரு பெண்மணியும், சராசரி 3 மைல் முதல் 6 மைல் வரை நடந்து வந்து பஞ்சு வாங்கிக் கொண்டு போய் நடந்து வந்து நூலை கொடுத்து கூலி வாங்கிக் கொண்டு போக வேண்டும்.

சாதாரணமாய் 8 வருஷ காலமாய் பல லக்ஷ ரூபாய்கள் பொது மக்களிடமிருந்து வசூல் செய்து பிரசாரம் செய்து ஆராய்ச்சி செய்த கதர் இயக்கத்தின் யோக்கியதை இதுவானால் இதை இனியும் எத்தனை வருஷ காலம் பிரசாரம் செய்வது? இனி எத்தனை லக்ஷம் ரூபாய் பொது மக்களிடமிருந்து பிடுங்குவது? இனி எத்தனை லக்ஷ மக்கள் இம்மாதிரி 100க்கு 200-வீதம் சதா வரி கொடுத்து சதா வாங்கிக் கட்டிக் கொண்டு வருவது என்பனவைகளை யோசித்தால் கதர் இயக்கம் ஜீவகாருண்யமும் புத்திசாலித் தனமானதும் என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம். உலகம் புதிய முறைகளையும் புதிய ஆராய்ச்சிகளையும் கண்டுபிடித்து அதனாலே மேன்மை அடைந்து வருகின்றது. தினத்திற்குத் தினம் புதுமை புதுமையான சக்திகள் கண்டுபிடிக்கப்பட்டு உலகம் சுகமும் நாகரீகமும் அடைந்து வருகின்ற காலத்தில் நமது நாடும் அப்பதவியை அடைய ஏன் முயற்சிக்கக் கூடாது. இப்படி பொதுமக்களிடம் கோடிக்கணக்காய் பணம் வசூலித்து அவை முழுவதும் ஒரு கூட்டத்தார் வயிற்றில் போய் விழும்படி - அதுவும் பணம் கொடுத்த கூட்டத்தாருக்கு துரோகம் செய்யச் செய்து கொண்டு ஒரு நாளைக்கு 10 மணி 12 மணி நேரம் வேலை வாங்குவதன் மூலம் முக்கால் அணாவும் ஒரு அணாவும் கூலி கிடைக்கும் படியான வேலைகளை ஆதரித்துக் கொண்டு வருவது ஒருநாளும் இனி பொறுத்துக் கொண்டு இருக்கக் கூடிய காரியமல்ல என்பதோடு அவ்வியக்கம் ஒரு பெரிய சமூகத் திற்கு தொல்லை செய்யக் கருவியாயிருக்க விட்டுக் கொண்டிருப்பதும் அதற்காக தொல்லைப்படும் மக்களே 100க்கு 200வீதம் வரி கொடுத்து வரவும் சகித்துக் கொண்டிருப்பது என்பதும் இனி அரை க்ஷணமும் பொறுத்துக் கொண்டிருக்கக் கூடியதல்லவென்றே சொல்லுவோம்.

ஆதலால் இனி பொதுமக்கள் கதரில் செலுத்தும் நேரத்தையும் பணத்தையும் அறிவையும் பிரயாசையையும் அதற்காக செலுத்தும் வரியை யும் வேறு ஏதாவது ஒரு தக்க ஆராய்ச்சியில் செலவு செய்து ஏழைகளுக்கு விமோசனம் உண்டாகும்படி செய்ய வேண்டியது மிகவும் முக்கியமான காரியமாகும்.

அன்றியும் பாமர மக்கள் இக்கதர்ப் புரட்டினால் ஏமாந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதும் பொது மக்களின் கடமையாகும். இதனா லேயே நாம் கதரைக் கட்டாமலிருக்கப் போகின்றோம் என்றாவது மற்றவர் களைக் கட்ட வேண்டாம் என்று சொல்வதாகவாவது யாரும் நினைத்துவிடக் கூடாது. இந்த முயற்சி பலனளிக்கவில்லை என்றும் சூழ்ச்சிக்கு உபயோகப் படுத்தப் படுகின்றது என்றும், சொல்லுவதுடன் இதையே நம்பிக்கொண்டிருக் காமல் ஏழைமக்களின் பொருட்டு வேறு முயற்சி கண்டு பிடிக்கவேண்டும் என்றும் பொது ஜனங்களுக்குத் தெரிவிக்கவும், இந்த எட்டு வருஷகாலம் கதருக்காக பாடுபட்டு கதருக்காக ஜெயிலுக்குப் போய் கஷ்ட நஷ்டப்பட்டு கதர் இயக்கத்திற்கு ஓரளவு பொறுப்பாளியாய் இருந்து வந்ததின் மூலம் அறிந்த அனுபவத்தையுமே நாம் எழுதுகின்றோம். இப்போது ஏன் இதை எழுத வேண்டியதாயிற்று என்றால் வர வர கதர்புரட்டு சகிக்கக் கூடியதா யில்லை என்பதோடு, தமிழ்நாடு கதர் இலாக்காகாரர்களான திரு.சி. ராஜ கோபாலாச்சாரியாரும் அவர்களது சிஷ்யர்களும் அடுத்த தேர்தலில் பார்ப்பனரல்லாதார்களை ஒழிக்க இக்கதர் புரட்டையே முக்கிய கருவியாய் கருதியிருக்கின்றார்கள் என்றும் அதை உத்தேசித்தே காங்கிரசில் கதர் தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றார்கள் என்றும் உறுதியாய் நம்புவதால் தான்.

உதாரணமாக சென்ற தேர்தலில் பார்ப்பனரல்லாதாரை ஒழிக்க மதுவிலக்குப் புரட்டுகளை ஆயுதமாக வைத்துக் கொண்டு இதே திரு. சி.ராஜகோபாலாச்சாரியாரும் அவரது சிஷ்ய கோடிகளும் பிரசாரம் செய்த தையும் கோடுகட்டிய குறள்கள் எழுதினதையும் கருப்பாயி சொக்காயி சம்பாஷணைகள் எழுதினதையும் இவற்றை எல்லாம் இதே திரு. காந்தியும் ஆமோதித்து மதுவிலக்குக்காரர்களுக்கே ஓட்டுக் கொடுக்கும்படி சிபார்சு செய்ததையும் ஞாபகப்படுத்திக் கொண்டால் போதுமானது. எலக்ஷன் நடந்த பிறகு இந்த திரு. காந்தியாவது திரு. ஆச்சாரியாராவது ஒரு கடுகளவாவது தங்கள் பொறுப்புகளை உணர்ந்தார்களா என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 06.01.1929**



RangaRakes tamilnavarasam.com

**வாருங்கள்!** **வாருங்கள்!!**

## சுயமரியாதை மகாநாடு

**செங்கற்பட்டில் பிப்ரவரி மாதத்தின் மத்தியில் நடக்கப் போகின்றது! சைமன் கமீஷனுக்கு என்ன சொல்லுவது என்பதை அங்குதான் தீர்மானிக்கப் போகின்றது. எல்லாரும் வாருங்கள். பதினா யிரக்கணக்கான மக்கள் கூடத் தகுந்த ஆடம்பரமான பலத்த ஏற்பாடுகள் இப்பொழுதிருந்தே நடைபெற்று வருகின்றன. வரத் தவறாதீர்கள்.**

**குடி அரசு - வேண்டுகோள் - 06.01.1929**



## சந்தேகம்
## பார்ப்பனரல்லாதார் இயக்கம்

1. தங்களை பார்ப்பனர்களில் சேர்ந்தவர்கள் என்றும் தங்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் ஆச்சார அனுஷ்டானங்களில் எவ்வித வித்தியாச முமில்லை என்றும் தங்களுக்கும் பார்ப்பன உரிமை உண்டென்றும் கருதிக் கொண்டு இருப்பவர்களுக்கும், பார்ப்பன மதத்தையும், வேதத்தையும், புராணத்தையும், பார்ப்பன தெய்வங்களையும் காப்பாற்ற முயலுகின்ற வர்களுக்கும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் இடமோ அல்லது தான் பார்ப்பனரல்லாதார் என்கின்ற முறையில் ஏதாவது உரிமைபெற அரு கதையோ உண்டா?

2. யாராவது ஒருவர் தன்னை மற்றவர்களை விட உயர்ந்த ஜாதி என்றோ அல்லது க்ஷத்திரியன் என்றோ, வைசியனென்றோ, சூத்திர னென்றோ, பஞ்சமன் என்றோ சொல்லிக் கொண்டு தன்னுடைய தனி ஜாதிக்கென்று தனி சின்னமோ, ஆச்சார அனுஷ்டானமோ உண்டு என்று சொல்லிக் கொள்பவனுக்கு பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் இடமோ பார்ப்பனர்களிடமிருந்து கைப்பற்றும் உரிமைகளில் பங்கு பெற பாத்தியமோ உண்டா?

3. பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்பது பார்ப்பனீயத்தை நீக்கிய இயக்கமா? அல்லது பார்ப்பனர்களை நீக்கிய இயக்கமா?

4. பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்றால் பார்ப்பனர்களிடம் உள்ள உத்தியோகத்தையும் பதவியையும் மாத்திரம் கைப்பற்றுவது என்ற கருத்தை உடையதா? அல்லது பார்ப்பனீயத்தை ஒழிக்க வேண்டுமென்ற கருத்தை உடையதா?

5. பார்ப்பனீயத்தை வைத்துக் கொண்டு எவ்வளவுதான் பார்ப்பனர் களின் ஆதிக்கத்தை குலைத்தாலும், பார்ப்பனீயமானது பார்ப்பனர்களை உண்டுபண்ணிக் கொண்டும், பார்ப்பன ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டும் இருக்காதா?

6. பணக்கார ஆதிக்கம் கூடாது என்பதாகக் கருதிக் கொண்டு நாம் எவ்வளவுதான் எல்லோருடைய சொத்துக்களையும் பிடுங்கி எல்லா மக்களுக்கும் சரிசமமாய் பங்கிட்டுக் கொடுத்தாலும் மறுபடியும் யாரையும்



RangaRakes tamilnavarasam.com

சொத்து சேர்க்காமல் பார்த்துக் கொள்ளத்தக்க ஏற்பாடு செய்யாவிட்டால் எப்படி மறுபடியும் பணக்கார ஆதிக்கம் உண்டாய் விடுமோ அதுபோலவே பார்ப்பனனிடமிருக்கும் உத்தியோகத்தையும் பதவியையும் அடியோடு கைப்பற்றி எல்லோருக்கும் சரிசமமாய்ப் பங்கிட்டு கொடுத்துவிட்டு பார்ப்பனீயத்தில் ஒரு கடுகளவு மீதி வைத்திருந்தாலும் மறுபடியும் பார்ப்பன ஆதிக்கம் வெகு சீக்கிரத்தில் வளர்ந்து விடுமல்லவா?

7. பார்ப்பனரல்லாதார் இயக்கம் பார்ப்பனீயத்தை ஒழிப்பதற்கு இடையூறாய் இருக்குமானால், அது உடனே ஒழிந்து போக வேண்டாமா? ஏனெனில், பார்ப்பனரல்லாதார் இயக்கம் இல்லாவிட்டால் பார்ப்பன ஆதிக்கம் ஒன்று மாத்திரம்தான் இருந்துவரும் என்றும், பார்ப்பனீயத்தை ஒழிக்கும் கொள்கையில்லாத பார்ப்பனரல்லாதார் இயக்கத்தால் வேறுபல ஆதிக்கங்களும் ஏற்பட இடமுண்டாகும் என்றும் சொல்வது சரியா தப்பா? உதாரணமாக, பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் பலனால் ஏற்கனவே உள்ள பார்ப்பனாதிக்கத்தோடு இப்போது ஜமீன்தார் ஆதிக்கம், பணக்கார ஆதிக்கம், ஆங்கிலம் படித்தவர்கள் ஆதிக்கம் முதலியன பார்ப்பன ஆதிக்கத்தைப்போல் மக்களை வாட்டி வருகின்றது என்று சொல்லுவதற்கு ஆதாரம் இருக்கின்றதா இல்லையா?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.01.1929**



# நமது நாடு

உலகமெல்லாம் சமூக சீர்திருத்தமும், அபேதவாதமும், சமதர்மமும், சமசொத்துரிமையுமான துறைகளில் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் போது நமது நாட்டில் வருணாச்சிரம தர்ம மகாநாடுகள் நடந்து கொண்டிருக்கிறது.

உலகமெல்லாம் சந்திரமண்டலத்துக்கு போய்வரவும், ஆகாயத்தில் பறக்கவும், மணிக்கு 100, 200, 300 மைல் வேகம் போகவும், பேசும் யந்திரங்களை உண்டாக்கவும், மழையை வருவிக்கவும், ஆணைப் பெண்ணாக்கவும் பெண்ணை ஆணாக்கவும், செத்தவனைப் பிழைக்க வைக்கவும், ஐயாயிரம் பத்தாயிரம் மையிலுக்கப்பால் நடப்பதையும் பேசுவதையும் காணவும் கேட்கவும் செய்யவும் மற்றும் இதுபோன்ற அற்புதங்களிலும் ஆராய்ச்சிகளிலும் புத்தி செலுத்திக் கொண்டிருக்கும்போது நமது நாட்டில் "இந்தக் குளத்தில் 'பறையன்' தண்ணீர் மொள்ளலாமா? இந்தக் கோவிலுக்குள் நாடார் போகலாமா? இந்தப் பள்ளிக்கூடத்தில் நாயக்கர் படிக்கலாமா?" என்கின்ற விவாதமும் "சூரியனுக்கு 8 குதிரையா 16 குதிரையா? தீபாவளி புரட்டாசி மாதத்திலா அற்பிசி மாதத்திலா? சாமிக்கு நெற்றியில் நாமம் வடகலையா தென்கலையா? விபூதியை குழைத்துப் பூசுவதா அப்படியே அடித்துக் கொள்வதா? சீதையை ராவணன் தலைமயிரைப் பிடித்து தூக்கிக்கொண்டு போனானா? தரையோடு பெயர்த்து எடுத்துக்கொண்டு போனானா? சுவாமிக்கு தாசி வேண்டுமா வேண்டாமா? பெண்களை 12 வயதில் படுக்கை வீடு கூட்டலாமா 16 - வயதில் கூட்டலாமா ? எந்த புராணம் நிஜமான புராணம் எந்த புராணம் பொய்யான புராணம்? எந்தப் பாட்டு பழைய பாட்டு, எந்தப் பாட்டு இடைச் செருகல்? சமணர்களை கழுவேற்றினதற்கு அகச்சான்று புறச்சான்று இருக்கின்றதா?" என்கின்ற ஆராய்ச்சியே மிகவும் முக்கியமான ஆராய்ச்சியாகக் கருதப்படுவதோடு இன்னமும் முடிவு பெற்றதாகவும் தெரியவில்லை.

**குடி அரசு - கட்டுரை - 06.01.1929**



RangaRakes tamilnavarasam.com



குடி அரசு

தேவை.

சுவாச காச ரோக நிவாரணி.

Instant Relief for Asthma.

அமிர்த சாரம்.

இன்றே எழுதுங்கள்.



# வட ஆற்காடு ஜில்லா பார்ப்பனரல்லாத வாலிபர்கள்

# முதலாவது மகாநாடு

சகோதர சகோதரிகளே, நமது நண்பரும் சகோதரருமான திரு. ஆரியா அவர்களால் துவக்கப்பட்ட இந்த பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கமானது இப்போது நமது நாடு முழுவதும் ஏற்பட்டு பெருத்த கிளர்ச்சி செய்து வருகின்றது.

எனது இயக்கத்தையும் தொண்டையும், எனது உடல் நலிவும் சரீரத் தளர்ச்சியும் எதிரிகள் தொல்லையும் ஒரு சிறிதும் தடை செய்ய முடியாமல் என்னை மேலு மேலும் உற்சாகப்படுத்தி வெற்றிக் கொடியை நாட்டி வருவதற்குப் பெரிதும் உதவியாய் இருந்து வருவது இந்த வாலிப இயக்கமே யாகும். உண்மையிலேயே இப்போதைய வாலிபர்களிடம் எனக்கு அளவுக்கு மேற்பட்ட நம்பிக்கை இல்லாதிருந்திருக்குமானால் என்னுடைய கடையை வெகுநாளைக்கு முன்பே சுருட்டிக் கட்டிக் கொண்டு வேறு ஏதாவது ஒரு துறையில் மூழ்கி இருப்பேன். ஆதலால் இந்த வாலிப இயக்கம்தான் நமது நாட்டிற்கு மாத்திரமல்லாமல் வெளிநாட்டிற்கும் சுதந்திரமும் விடுதலையும் சுயமரியாதையும் வாங்கிக் கொடுக்கப் போகின்றது. எப்படி எனில், எந்த ஒரு நாட்டிற்கும் அரசியல் தலைவனோ, தேசீயத் தலைவனோ, மதத் தலைவனோ, பாஷைப் பண்டிதனோ, சாஸ்திரியோ முயற்சித்து உண்மையான சுதந்திரமோ, விடுதலையோ வாங்கிக் கொடுத்ததாக சரித்திரக் காலந்தொட்டு நமக்கு ஆதாரங்கள் கிடையாது. எங்கும் வாலிபர் கிளர்ச்சிதான் விடுதலை அளித் திருக்கின்றது. ஒவ்வொரு விடுதலை முயற்சியும் முதலில் கட்டுப்பாட்டை உடைத்தெறிந்த பின்தான் வெற்றி பெற்றிருக்கின்றது. கட்டுப்பாடுகளை உடைப்பதற்கு வாலிபர்களால்தான் முடியுமே ஒழிய மற்றவர்களால் சுலபத்தில் சாத்தியப்படாது. ஆதலால் நான் முழுவதும் இந்த வாலிபர் களையே மனப்பூர்வமாக நம்பி இருக்கின்றேன். அவர்கள் இயக்கமும் கிளர்ச்சியும், வெகு சீக்கிரத்தில் உலகை நடத்த முன்வர வேண்டும் என்றும் ஆசைப்பட்டுக் கொண்டு இம்மகாநாட்டைத் திறக்கின்றேன்.

*குறிப்பு : 4.1.1929 இல் இராயவேலூரில் நடைபெற்ற வட ஆற்காடு ஜில்லா பார்ப்பனரல்லாத வாலிபர்கள் முதலாவதுமாநாட்டைத் திறந்துவைத்து உரை*

**குடி அரசு – சொற்பொழிவு – 13.01.1929**



RangaRakes tamilnavarasam.com

## வடஆற்காடு ஜில்லா பார்ப்பனரல்லாத வாலிபர்கள்

## முதலாவது மகாநாடு

சகோதரி சகோதரர்களே!

இந்த மகாநாட்டின் திறப்பு விழா நடத்த என்று நான் இங்கு வந்தவன். இந்தச் சமயத்தில் என்னைப் பற்றி இவ்வளவு காரியங்கள் நடக்குமென்றும் இவ்வளவு தூரம் புகழ்ந்து பேசப்படும் என்றும் நான் நினைக்கவில்லை. ஊர்வல மூலமாகவும், வரவேற்புப் பத்திர மூலமாகவும், எனது படத்திறப்பு மூலமாகவும், அளவுக்கு மீறிய உற்சாகமும் வரவேற்பும், புகழ்ச்சி உரைகளும் காணவும் கேட்கவும் நான் மிகுதியும் சந்தோஷமடைகிறேன். எனது தொண்டில் உள்ள இடையராத கஷ்டங்களிடையே இம்மாதிரியான சில வைபவங்கள் ஏற்படுவதால் சிலசமயங்களில் பரிகாசமாகவும் சில சமயங்களில் உற்சாகமாகவும் இருக்கச் செய்கின்றது.

என்னைப் பற்றிய ஆடம்பர வரவேற்பும் புகழுரைகளும் நான் உங்களிடம் ஒரு சிறிதும் எதிர்பார்க்கவில்லை. நீங்களும் இத்துடன் உங்கள் கடமை தீர்ந்து விட்டதாக தயவு செய்து நினைத்து விடாதீர்கள்.

நாம் பிரவாகமான எதிர் வெள்ளத்தில் நீந்துகின்றோம் என்பதையும், நமக்கு எதிரிகளும் எதிர்ப்பிரசாரங்களும் வெளிப்படையாயும், திரை மறைவிலும் சூழ்ச்சிகளுடனும் நடைபெற்று வருகின்றதை கருத்தில் வையுங்கள். அவற்றிற்குத் தலைகொடுக்கத் தயாராயிருங்கள். நமது தலைவர் பனகால் அரசர் காலமான ஒரு நெருக்கடியான சமயமானதால் இந்த சமயத்தில் உங்கள் விழிப்பும் தியாகமும் அதிகம் தேவை இருக்கின்றது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன் உங்களுக்கும் சிறப்பாக திருமதி மார்த்தா ஆரியா அம்மையார் அவர்களுக்கும் எனது நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

*குறிப்பு : 04,05-01-1929 நாட்களில் இராயவேலூர் லட்சுமணசாமி முதலியார் நகர மண்டபத்தில் கூடிய **வட ஆற்காடு ஜில்லா பார்ப்பனரல்லாத வாலிபர்கள் முதலாவது** மாநாட்டில் தமது படத்திறப்பு நிகழ்ச்சியின் போது ஆற்றிய நன்றியுரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 13.01.1929**



## தமிழ் மாகாண சுயமரியாதை மகாநாடு

சுயமரியாதை இயக்கம் தோன்றிய சுமார் மூன்று வருஷ காலத்திற்குள் தமிழ்நாட்டில் அது அநேகமாக ஒவ்வொருவருடைய கவனத்தையும் இழுத்திருப்பதோடு இவ்வியக்க விஷயமாய் அநேகரை கூர்ந்து கவனிக்கும் படிக்கும் கவலைப்படும் படிக்கும் செய்து வந்திருக்கின்றது என்று சொல்லுவது மிகையாகாது.

இவ்வியக்கம் ஆரம்பமானது முதல் இதற்கு அநேக தத்துக்கள் ஒன்றின்பின் ஒன்றாய் வந்து கொண்டே இருந்தாலும் ஒருவாறு அவ்வளவையும் சமாளித்து வளர்ந்து கொண்டு வருவதை யாரும் மறுக்க முடியாது.

இதற்கு உதாரணம், இவ்வியக்க ஆரம்ப காலத்தில், காங்கிரஸ் துவேஷமென்றும், பிறகு பார்ப்பன துவேஷ இயக்கமென்றும், பின்னால் தேசத்துரோக இயக்கமென்றும், பிறகு சர்க்கார் பிரசார இயக்கமென்றும், பிறகு வைணவ துவேஷ இயக்கமென்றும், பிறகு சைவத் துவேஷ இயக்கமென்றும், பிறகு நாஸ்திக இயக்கமென்றும், பிறகு நிரீச்சுவரவாத இயக்கமென்றும் மற்றும் அநேகர் அநேக விதமாய் அதன்மீது பழி சுமத்தி அதற்கு பொது ஜனங்களிடம் எவ்வளவு தூரம் வெறுப்பும் துவேஷமும் ஏற்படச் செய்ய வேண்டுமோ அவ்வளவு தூரம் ஏற்பட வேண்டி, பலவழிகளிலும் பெரு முயற்சிகள் செய்தாய் விட்டது என்றாலும் இவ்வளவு செய்தும், இதன் முன்னேற்றம் சிறிதும் குந்தகப்படாமல் மேலும் மேலும் முன்னேறுவதைப் பார்க்கின்றபோது இவ்வியக்க எதிரிகள் வேறு சமாதானம் சொல்ல முடியாமல் “இது இனி எத்தனை நாளைக்கு நிற்கப் போகின்றது, அப்பேர்ப்பட்ட ஒத்துழையாமை இயக்கமே பழங்கதையாய் விட்டது, இதுதானா வாழப் போகின்றது? ஏதோ பார்ப்பனர்கள் மீது நமது நாட்டு மக்களுக்கு இருக்கும் துவேஷத்தினால் சிலர் ஆதரிக்கின்றார்கள். நாயக்கருக்கு இருக்கும் சொந்த செல்வாக்குக்கும் அரசாங்க செல்வாக்குக்கும் பயந்து சிலர் ஆதரிக்கின்றார்கள், இதெல்லாம் எத்தனை நாளைக்கு நிற்கும்?” என இம்மாதிரியாக சொல்லிக் கொள்வதன் மூலம் தங்கள் பொறாமைகளை ஒருவாறு திருப்தி செய்து கொள்வதோடு இரகசியமாய் தங்களால் கூடிய கெடுதியையும் செய்து கொண்டே வருகிறார்கள் என்பதும் இவ்வளவையும் தாண்டித் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு முக்கிய இடங்களிலும் மற்றும் வெளியிடங்களிலும்



RangaRakes tamilnavarasam.com

சுயமரியாதைச் சங்கங்களும் மகாநாடுகளும் பிரசாரங்களும் நடந்து வருவதும் அதன் கொள்கைகளில் பல சற்றும் எதிர்ப்பின்றி காரியத்தில் அனுஷ்டிக்கப்படுவதுமே போதுமான உதாரணமாகும்.

அதுமாத்திரமல்லாமல், இப்போது எந்தவிதமான மகாநாடு எங்கு நடந்தாலும் சுயமரியாதைக் கொள்கைகள் கொண்ட தீர்மானங்களேதான் நிறைவேற்றப்பட்டு வருவதும் சமூக மகாநாடு, சமரச மகாநாடு, பெண்கள் மகாநாடு, பார்ப்பனரல்லாத வாலிபர் மகாநாடு, சீர்திருத்த மகாநாடு ஏன் சில அரசியல் மகாநாடுகள் - ஆகியவைகளில் எல்லாம் மேல்கண்ட தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இவ்வியக்கத்திற்கு ஆதாரமாக ருஷியா, ஜப்பான், சைனா, துருக்கி, ஈஜிப்ட், ஆப்கனிஸ்தானம் முதலிய நாடுகள் வழிகாட்டியும் வருகின்றதைப் பார்த்தால் இவ்வியக்கம் தளர்ந்து விடும் என்றோ, மறைந்துவிடும் என்றோ, நினைப்பவர்கள் கண்டிப்பாய் ஏமாந்து விடுவார்கள் என்பது தெளிவாகாமல் போகாது. அன்றியும் நமது நாட்டு அரசியல் தலைவர்கள் என்பவர்களும் அநேகமாக இக்கொள்கைகளை உச்சரிப்பதன் மூலமாகவே செல்வாக்கு பெறுவதையும் பார்க்கும்போது இக்கொள்கைகளின் தத்துவம் எவ்வளவு மேன்மையானது என்பதும் விளங்காமல் போகாது. இவ்வளவும் இருந்தாலும் இவ்வியக்கத்திற்கு ஒரு நிலையான ஸ்தாபனமும் பிரசார பலமும் ஏற்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமான வேலை என்று நமக்குப் படுகின்றது. மேல்நாடுகளிலும் ஒவ்வொரு தேசத்திலும் இக்கொள்கைகள் கொண்ட இயக்கம் அதிக பலமான அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட்டு வெகு விரிவான முறையில் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது. உதாரணமாக,

லண்டனில் R.P.A. என்னும் பகுத்தறிவாளர்கள் சங்கமும் அமெரிக்காவில் பிரீ திங்கர்ஸ் அசோசியேஷன் என்னும் தாராள எண்ணக்காரர்கள் (அறிவு எவ்வளவு தூரம் செல்லுமோ அவ்வளவு தூரம் செலுத்துவது) என்கிற சங்கமும், ருஷியாவில் ஆண்டி காட் சொசைட்டி (கடவுள் உற்சவம் வணக்கம் ஆகியவைகள் அவசியமில்லை) என்கின்ற (ருஷிய கவர்ன்மெண்டாராலும் ஆதரிக்கப்பட்ட) சங்கமும் சைனாவில் யங் சைனீஸ் அதாவது வாலிப சைனாக்காரர்கள் என்கின்ற சங்கமும் மற்றும் ஆப்கானிஸ்தானம் துருக்கி முதலிய சர்க்காரால் அநேக இடங்களில் குருட்டு நம்பிக்கைகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் ஒழிக்கும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன. அதுபோலவே நமக்கும் நமது அரசாங்கம் அடியோடு நமது இயக்கத்தின் சுவாதீனத்திற்கு வருமளவும் அதாவது சுயமரியாதை அரசாங்கம் ஏற்படும்வரை நமக்கு தக்க ஆஸ்பதம் வேண்டியிருக்கின்றது. அநேகமாய் இவற்றை உத்தேசித்தே அடுத்தமாதம் 2-வது 3-வது வார வாக்கில் செங்கல்பட்டில் தமிழ் மாகாண சுயமரியாதை மகாநாடு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அம்மகாநாட்டுக்கு



சைமன் கமீஷனும் அழைக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் இம்மகாநாட்டில் அநேக பெரியார்களும் செல்வாக்குக்காரர்களும் உண்மைத் தொண்டர்களும் செல்வந்தர்களும் பங்கெடுத்துக் கொள்ள சம்மதித்தும் இருக்கின்றார்கள். இதுவரை சுமார் 10 ஆயிரம் ரூபாய் போல வசூலும் செய்யப்பட்டிருக்கின்றது.

திருவாளர்கள் ராவ் பகதூர் எம்.கெ.ரெட்டியார், சி.ஜயராம நாயுடுகார், கே.வி. மேனன், கண்ணப்பர் முதலியவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் இவ்வேலையில் பூரணமாய் ஈடுபட்டு உழைத்தும் வருகின்றார்கள். சுமார் இருபத்தைய்யாயிரம் மக்களுக்குக் குறையாமல் கூடக்கூடும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இம்மகாநாட்டிற்கு வந்து சில தீர்மானங்களை எதிர்க்கவேண்டும் என்கின்ற எண்ணத்தோடு சிலர் இரகசியமாய் கக்ஷி சேர்ப்பதாகவும் தெரிய வருகின்றது. எப்படியானாலும் சரி, நமக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை. நமது நிலைமையையும் உண்மை என்று நாம் நினைப்பதையும் வெளிப்படுத்தி அதற்கு ஏற்ற நடவடிக்கைகள் நடத்த ஒரு பலமான ஸ்தாபனமும் பிரசாரமும் ஏற்படுத்த வேண்டும் என்பது தான் நமது கவலை. ஆதலால் நாட்டின் க்ஷேமத்திலும் மக்களின் முன்னேற்றத் திலும் கவலையுள்ள மக்கள் யாவரும் அங்கு வந்து கூடி தங்கள் கடமையைச் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். ஒவ்வொருவரும் தங்கள் மனைவி மக்களுடனேயே வரவேண்டியது மிகவும் அவசியமானது என்பதை மிகவும் அழுத்தமாய் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தனிப்பட்ட ஸ்திரீகளும், தங்களை விதவைகள் என்றோ வேசிகள் என்றோ நினைத்துக் கொண்டிருப்பவர்களும் அவசியம் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றோம். தவிர, அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அதிகாரிகளும் கண்டிப்பாய் வரவேண்டியது மிகவும் அவசியமாகும் என்று தெரிவிப்பதோடு இந்த மகாநாடு எவ்வழியிலும் அரசியல் மகாநாடு என்பதல்ல என்றும் அவர்களுக்கு உறுதி கூறுகின்றோம். அன்றியும் அரசாங்க சட்டமெம்பர் திவான்பகதூர் கனம் கிருஷ்ண நாயர் அவர்களும் மற்றும் பல பெரிய அதிகாரிகளும் வரச் சம்மதித்து இருக்கின்றார்கள்.

முக்கியமாக இம்மகாநாட்டில் யோசித்து தீர்மானிக்கப்படும் விஷயங்கள் என்னவென்றால், சமத்துவம், சமஉரிமை, சமசந்தர்ப்பம், சிக்கனம், அன்பு, இரக்கம், ஒழுக்கம் ஆகியவைகள் ஏற்படவும், குருட்டு நம்பிக்கை, மூடப் பழக்க வழக்கம், தீண்டாமை, பெண் அடிமை ஆகியவைகள் எடுபடவும் எளியோரை வலியோர் அடக்கி ஆளாமலும், பாமரர்களை படித்தவர்கள் ஏமாற்றாமலும், ஏழைகளை செல்வந்தர் கொடுமைப்படுத்தாமலும் இருப்பதற்கும் பகுத்தறிவு வளர்ச்சி பெறவும் தன் முயற்சியில் நம்பிக்கை உண்டாகவுமான தன்மைகள் போன்ற விஷயங்களே தான் அங்கு நடைபெறும். ஆகையால் இவைகளை அரசியல் விஷயமென்று யாரும் சொல்ல முடியாது. அரசியல் விஷயம் என்று ஏதாவது சொல்ல வந்தால் அது மேல்கண்ட



RangaRakes tamilnavarasam.com

விஷயங்கள் நிறைவேறி அமுலுக்குவர அரசாங்கத்தின் உதவி ஏதாவது வேண்டி யிருந்தால் அந்த அளவுக்கு அதுவும் அரசாங்கத்தின் ஆதரவை எதிர்பார்க்கும் அளவுக்கு ஏதாவது பேசப்படுமே ஒழிய வேறு ஒன்றும் நடைபெறாது என்று உறுதி கூறுவோம்.

இந்த 3,4 வருஷத்திய மகாநாடுகளில் இதுவே முக்கியமான மகாநாடாக இருக்கும். அன்றியும் இனி நமது பிரசாரமும் வேலைத் திட்டமும் எப்படி இருக்க வேண்டும் என்பதும் இம்மகாநாட்டில் தான் முடிவு செய்யப்படும். ஆதலால் செங்கற்பட்டு மகாநாட்டிற்கு எல்லோரும் முக்கியமாய் வாலிபர்களும், பெண்களும், தாழ்த்தப்பட்டவர்களும் அவசியம் வர வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 13.01.1929**



# எது நாஸ்திகமல்லாதது?

ருஷ்யா தேசத்தில் கொஞ்ச நாளைக்கு முன்பிருந்தே கடவுளைப் பற்றி பிரசங்கங்களோ, உபதேசங்களோ, வணக்கங்களோ அவசியமில்லை என்பதாக ஒரு சங்கம் ஏற்பட்டு அது தாராளமாய் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த வருஷத்திய கிறிஸ்து பிறந்த நாளை உற்சவமாகக் கொண்டாடக் கூடாதென்று வெகு பலமான பிரசாரம் செய்யப்பட்டு வந்ததில் முழுதும் வெற்றியடைய முடியாமல் போனதால் அடுத்துவரும் ஈஸ்டர் உற்சவத்தை அதாவது "கிறிஸ்து மறுபடியும் உயிர் பெற்றெழுந்த நாள்" உற்சவத்தை யாரும் கொண்டாடாமல் இருக்கும்படி இப்பொழுதிருந்தே வேண்டிய பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றதாம். இதற்கு அங்குள்ள சர்க்காராரும் இந்த இயக்கக்காரர்களை அனுசரித்து உத்திரவு போட்டு சர்க்கார் மூலமாகவும் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றதாம். இதற்காக அநேக பிரபுக்கள் லட்சக்கணக்காக ரூபாய்கள் கொடுத்து உதவியிருக்கின்றார்களாம்.எனவே, கடவுள் பிறந்த நாளையும் மறுபடியும் உயிர்த்து எழுந்த நாளையும் கொண்டாடக் கூடாது என்று சொல்லுவதும் சர்க்கார் மூலமாகவே அவற்றை பிரசாரம் செய்வதும் அங்கு நாஸ்திகம் என்று கருதப்படுவதில்லை. நமது நாட்டிலோ, சாமி தாசி வீட்டுக்கு போகும் உற்சவம் வேண்டாம் என்றால் அது நாஸ்திகம்! சமணரைக் கழுவேற்றும் உற்சவம் வேண்டாம் என்றால் அது நாஸ்திகம்! குடம் குடமாய் நெய்யையும் வெண்ணையையும் கொண்டுபோய் நெருப்பில் போட்டு வீணாக்கும் கார்த்திகை தீப உற்சவம் வேண்டாம் என்றால் அது நாஸ்திகம்! வெடி மருந்துக்கும் அடுப்புக்கரிக்கும் காசைப் பாழாக்கும் தீபாவளி உற்சவம் வேண்டாம் என்றால் அது நாஸ்திகம்! இளங் குழந்தைகளை பாலில்லாமல் கஷ்டப்பட வைத்துவிட்டு குடம் குடமாய் பால் கொண்டு போய் கல்லின் மீது கொட்டும் பாலாபிஷேக உற்சவம் வேண்டாம் என்றால் அது நாஸ்திகம்! அரசனிடம் குதிரை வாங்க என்று பணம் பெற்று தன்னிஷ்டப்படி செலவழித்து விட்டு அரசன் குதிரை எங்கே என்று கேட்டால் நரியைக் கொண்டு வந்து குதிரை என்று காட்டி அந்நரி அரசனுடைய பழய குதிரைகளையும் கடித்து கொன்றுவிட்டதுடன் அரசனும் அடிபட்ட உற்சவம் வேண்டாம் என்றால் அது நாஸ்திகம்! வேறு ஒரு மதக்காரர் (பௌத்தர்) கோவிலை இடித்து விக்கிரகத்தைத் திருடிக் கொண்டு வந்து உடைத்த உற்சவத்தை நடத்த வேண்டாம் என்றால் அது நாஸ்திகம்! எனவே, நமது நாட்டுக்கு எந்த காரியம்தான் நாஸ்திகம் அல்லாததோ நமக்கு விளங்கவில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.01.1929**



RangaRakes tamilnavarasam.com



குடி அரசு

ஹிந்திப் புரட்டு

# ஹிந்திப் புரட்டு

சமீபத்தில் சென்னை மாகாணத்திற்கு சென்னைப் பார்ப்பனர்கள் வடநாட்டுத் தலைவர்கள் என்பவர்களை ஹிந்திப் பிரசாரம் என்னும் பேரால் பார்ப்பனப் பிரசாரம் செய்ய அழைத்துவரப் போகின்றதாகத் தெரிய வருகின்றது. இந்த வழியில் பார்ப்பனப் பிரசாரம் செய்வதோடு மாத்திர மல்லாமல் பார்ப்பனரல்லாத மூடர்களிடமிருந்து சுமார் ஒரு லக்ஷம் ரூபா யாவது கொள்ளை அடிக்கக் கருதியிருக்கின்றார்கள் என்பதாகத் தெரிய வருகின்றது.

கதரின் பேரால் அடித்த கொள்ளையாகிய ஐந்து லக்ஷம் ரூபாய் இன்னும் ஜீரணம் ஆகாமல் அப்படியே கல்லுப் போல் பார்ப்பார்கள் வயிற்றில் கிடக்க, சென்ற வருட காங்கிரசின் பேரால் கொள்ளை அடித்த சுமார் 20, 30 ஆயிரம் ரூபாயும் அப்படியே கிடக்க இப்போது இன்னும் ஒரு லக்ஷம் ரூபாய்க்கு திட்டம் போட்டு சில பார்ப்பனர் வெளிக்கிளம்பியிருப்பது பார்ப்பனர்களின் சாமர்த்தியமா அல்லது பார்ப்பனரல்லாதார்களின் முட்டாள் தனமா என்பது நமக்கு பூரணமாய் விளங்கவில்லை யானாலும் ஒருவாறு இது பார்ப்பனரல்லாதார்களின் முட்டாள் தனமான இளிச்சவாய்த்தன்மை என்றே சொல்லவேண்டும். பார்ப்பனர்கள் வந்து எதற்காகப் பணம் வேண்டுமென்று கேட்டாலும் நம்மவர்கள் கொடுக்கத் தயாராயிருக்கின்றார்கள். வருணாசிரம மகாநாடு நடத்த பார்ப்பனர்களுக்கு பணம் கொடுக்கும் பார்ப்பனரல் லாதவர்கள் இந்திக்கு பணம் கொடுப்பது ஒரு அதிசயமல்ல.

எனவே, பணம் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் இந்தி யினுடையவும் இந்தி பிரசாரத்தினுடையவும் புரட்டையாவது பொது ஜனங்கள் அறியட்டுமென்றே இதை எழுகின்றோம்.

முதலாவது இந்தி பாஷை என்றால் என்ன? அதற்கும் தமிழ் நாட்டு மக்களுக்கும் என்ன சம்மந்தம்? அதை படித்ததினால் தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்படும் பயன் என்ன? என்பது போன்றவைகளை முதலில் கவனிப்போம். பிறகு இந்தி பாஷை என்பதை அகில இந்திய பாஷையாகக் கருதவேண்டும் என்பது பற்றிப் பின்னால் யோசிப்போம்.

இந்தி பாஷை படித்த தமிழ் மக்களுக்கு அதனால் ஏற்படும் பயன் என்ன? இதுவரை தமிழ்நாட்டில் காங்கிரஸ் பணத்திலிருந்தும் மற்றும் பொது மக்களிடமிருந்தும் இந்திக்காக செலவு செய்யப்பட்ட பணத்தில்



RangaRakes
tamilnavarasam.com

எவ்வளவு பார்ப்பனரல்லாதார்கள் படித்தார்கள்? அதை எதற்கு உபயோகப் படுத்துகின்றார்கள்? என்பவைகளும் கவனிக்கத்தக்கக்கவையாகும். இந்தி பாஷை என்பது தமிழ் மக்களுக்கு விரோதமான ஆரிய பாஷையாகும். அதிலுள்ள வாசகங்கள் முழுவதும் ஆரியப் புராணங்களும் மூடப்பழக்க வழக்கங்களும் கொண்டதும் பார்ப்பனர்களின் உயர்வுக்கு ஏற்படுத்தப் பட்டதுமாகும். இந்த நாட்டில் இப்போது சமஸ்கிருதம் இருப்பது போலவும் அது உபயோகப்படுவது போலவும் இந்தி ஒரு சிறிதும் தேவையில்லா ததாகும். அப்படி இருந்தாலும் அது ஏதாவது வடநாட்டுக்குப் போய் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்காவது உதவுமா? என்று பார்ப்போமா னால் அப்படியும் சொல்லுவதற்கில்லாமல் இதுவரை இந்தி படித்தவர்களில் 100க்கு 95 பேர் பார்ப்பனர்களே படித்து அந்த படிப்பைக் கொண்டு வட நாட்டுக்கு உத்தியோகத்திற்கோ பிச்சைக்கோ சென்று அதன் மூலம் பார்ப்பன ரல்லாதார்களுக்கு துரோகம் செய்யவே உதவப்பட்டு வருகின்றது. அதற்காக சம்பாதித்த பணங்கள் முழுவதும் பார்ப்பன ஆதிக்கத்திலேயே இருந்து வருகின்றது. ஒரு சமயம் பார்ப்பனரல்லாதார்களும் இந்தி படித்திருப்பதாக வைத்துக் கொண்டாலும் இந்த நாட்டில் அவர்களுக்கு அது என்ன பயனைக் கொடுக்கக் கூடும். இது வரை ஹிந்தி படித்த பார்ப்பனரல்லாதாரில் எவராவது அதனால் இன்ன பிரயோஜனம் அடைந்தார்கள் என்று ஏதாவது ஒரு சின்ன உதாரணமாவது காட்ட முடியுமா?

இந்தியாவுக்கு ஒரு பொதுப் பாஷை வேண்டுமானாலும் அல்லது வியாபாரத்திற்கு ஒரு பொதுப் பாஷை வேண்டுமானாலும் ஆங்கில பாஷையை தெரிந்து எடுத்து அதை எல்லா மக்களிடையிலும் பரப்ப முயற்சிக்க வேண்டுமேயல்லாமல் வேறு பாஷையைப் பற்றி யோசிப்பது முட்டாள் தனமோ அல்லது சூழ்ச்சியோதான் ஆகும். இங்கிலீஷ் உலக பாஷை, உலக வியாபாரப் பாஷை, இந்திய அரசாங்க பாஷை. அது மாத்திரமல்லாமல் மூடப்பழக்க வழக்கமும் பார்ப்பனீயமும் இல்லாமல் அவ்வளவும் அடிப்படையான கலைகளை வசமாக்கிய பாஷையாகும். இவைகள் மாத்திரமல்லாமல் இந்தி, உருது முதலிய பாஷைகளை தாய்ப் பாஷையாகக் கொண்ட துருக்கி பாஷைகூட இங்கிலீஷ் பாஷைக்கும் இங்கிலீஷ் எழுத்துக்குமே மதிப்பு கொடுத்து தனது தாய்ப் பாஷையை மாற்றிவிட்டது. அன்றியும் நமது இங்கிலீஷ் அரசாங்கம் உள்ளவரை-மேல் நாடுகளின் வியாபார சம்மந்தமோ கலை சம்மந்தமோ கல்வி சம்மந்தமோ உள்ள வரை- இங்கிலீஷ் இல்லாமல் முடியவே முடியாது. இப்படியெல்லாம் இருக்க, இதை சற்றும் கவனியாமல் இப்போது தமிழ்நாட்டில் இந்தி பாஷை பரப்ப வந்திருப்பதென்பது தற்காலம் தமிழ்நாட்டில் உள்ள உணர்ச்சியை ஒழிக்கச் செய்யும் சூழ்ச்சியேயாகும். ஆதலால் இதற்கு எந்த பார்ப்பன ரல்லாதாராவது பணம் கொடுத்தால் அது பெரிய சமூகத் துரோகமேயாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 20.01.1929**



RangaRakes

# காக்கை குருவி சம்பாஷணை

**- சித்திரபுத்திரன்**

**குருவி:-** ஓ, காக்கையே! நீ எவ்வளவு தான் கஷ்டப்பட்டாலும் பார்ப்பனர்களை ஜெயித்து விடலாம் என்றோ அல்லது அவர்களுடைய புரட்டுகளை வெளியாக்கிவிடலாம் என்றோ நினைப்பாயே யானால் அது அவ்வளவும் பகற்கனவுதான். காரியத்தில் சுலபத்தில் முடியும் காரியம் அல்ல. அடியோடு தடியடியாய் அடித்தால் அதுவும் ஒரு சமயம் முடியும்.

**காக்கை :-** என்ன குருவியே! நீ இப்படிச் சொல்கின்றாய்? பார்ப்பான் சங்கதி எடுத்ததெல்லாம் புரட்டாயிருக்கின்றது. அவன் சொல்வதெல்லாம் புழுகாயிருக்கின்றது. இதை வெளிப்படுத்த முடியாது என்கின்றாயே, உனக்கு என்ன அவனிடத்தில் அவ்வளவு பயம்?

**குருவி :-** எனக்கு பயம் ஒன்றுமில்லை, நீ பார்ப்பன தந்திரத்தை சரியாய் உணரவில்லை. தெரிந்திருந்தால் இவ்வளவு லேசாக அவனை மதித்திருக்க மாட்டாய்.

**காக்கை** :- சரி, நீ உணர்ந்த விஷயத்தைத் தான் சொல்லு பார்ப்போம்.

**குருவி** :- சொல்லட்டுமா?

**காக்கை** :- சொல்லு, சொல்லு.

**குருவி** :- முதலாவது, பார்ப்பான் எந்த விஷயத்தைச் சொல்ல வந்தாலும் 'அது உன் கண்ணுக்கும் மனதுக்கும் அறிவுக்கும் எட்டாதது' என்று சொல்லி விடுவான். இரண்டாவது, இந்த லோகத்தில் பிரத்தியக்ஷத்தில் கண்டு பிடிக்கக் கூடியதாகவோ இப்போது நடந்ததாகவோ எந்த விஷயத்தை யும் அவன் சொல்லி சிக்கிக் கொள்ளாமல் அவன் எது சொன்னாலும் மேல் ஏழு லோகத்தில் உண்டு என்றும் கீழ் ஏழு லோகத்தில் உண்டு என்றும் தான் சொல்வான்.' 'கண்ணுக்குத் தெரியாத சூக்ஷும சரீரத்தோடு இருக்கின் றார்கள்' என்றுதான் சொல்லுவான்.

"போன யுகத்தில் நடந்தது. அதற்கு முந்தின யுகத்தில் நடந்தது, பிரளய காலத்தில் நடந்தது" என்றுதான் சொல்லுவான். 'அசரீரியாய் சொல்லிற்று,



tamilnavarasam.com

மாயா ரூபியாய் இருந்தது' என்று தான் சொல்லுவான். நம்பினால்தான் உண்டு, நம்பாவிட்டால் பாவம்' என்று சொல்லுவான். 'இவைகளில் நீ எதைக் கண்டு பிடித்து பார்ப்பானைப் பொய்யன் என்று சொல்லி விட முடியும்? சொல்லு பார்ப்போம்.

**காக்கை** :- நீ சொல்லுவது ஒரு விதத்தில் வாஸ்தவம் தான். அதனாலேயே எல்லாம் பொய் என்று சொல்லிவிட முடியுமா?

**குருவி** :- அதுதான் நானும் சொல்லுகின்றேன். அதாவது பார்ப்பான் சொல்லுவதில் ஒன்றைக் கூட நீ பொய்யென்று ருஜூப்படுத்த முடியாது? உதாரணமாக, இந்த உலகம் எத்தனையோ யோசனை தூரம் விஸ்தீரணம் என்கின்றான். நீ எப்படி அளந்து பார்த்து தப்பு என்று சொல்ல முடியும்? எத்தனையோ மனுக்கள், பிர்மாக்கள், விஷ்ணுக்கள், சிவன்கள் பிறந்து இறந்தாய்விட்டது. ஒவ்வொருவருக்கு எத்தனையோ யுகங்கள் ஆயுள் என்று சொல்லுகின்றான். அதில் ஒரு வினாடி கம்மி என்று உன்னால் சொல்ல முடியுமா?

'எத்தனையோ சிரஞ்சீவிகள் இருக்கின்றார்கள். ஆனால் ஒருவரும் உன் கண்ணுக்கு தென்பட மாட்டார்கள்' என்கின்றான். இவற்றுள் ஒரு சிரஞ்சீவியாவது இல்லை என்று உன்னால் சொல்ல முடியுமா?

'நீ இதற்கு முன் இத்தனை ஆயிரம் ஜன்மம் எடுத்தாய் விட்டது. ஆனால் அது உனக்கு இப்போது தெரியாது' என்று சொல்லுகின்றான். அதை நீ இல்லை இல்லை என்று சொல்ல முடியாது.

'நீ எங்களுக்கு கொடுக்கும் சிரார்த்தம் முதலியவைகளை உனது பிதுர்க்கள் சூக்ஷ்ம சரீரத்துடன் வந்து பெற்றுப் போகின்றார்கள். ஆனால் அது உன் கண்ணுக்குத் தெரியாது' என்கின்றான். நீ அவற்றுள் ஒரு கடுகளவாவது போய்ச் சேரவில்லை என்று சொல்லி அவனிடம் தப்பித்துக் கொள்ள முடியுமா? சொல்லு பார்ப்போம்.

பார்ப்பனியம் இத்தனை காலமாய் நமது நாட்டில் இருப்பதற்கு காரணமே இதுதானே. எதை எடுத்தாலும் 'உனக்கு தெரியாது, உன் கண்களுக்கு படாது, உன் புத்திக்கும் மனதுக்கும் எட்டாது, நீ அதைப் படிக்க அருகனல்ல, யுக்தி வாதங்களால் தர்க்கம் பண்ணுவது நாஸ்திகம், சூக்ஷ்ம சரீரம், இதெல்லாம் சோதனை, சிவன் பார்வதிக்கு சொன்னார், ராமருக்கு வசிட்டர் சொன்னார், சூத புராணிகா நைமி சாரண்ய வாசிகளுக்கு சொன்னார் சுசர் சொன்னார், ஜனமே ஜயர் சொன்னார், பகவான் கீதையில் சொன்னார்', என்றே சொல்லுவார்கள். 'யார் சொன்னார்? எப்பொழுது சொன்னார்? யார் ஒண்டிக் கேட்டுக் கொண்டிருந்தது? உனக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டால், அது நாஸ்திகம் என்று சொல்லி விடுகின்றான். நீயோ நாஸ்திகம் என்றால் நடுங்கி விடுகின்றாய். பிறகு எப்படி நீ அவனை ஜெயிக்க முடியுமென்று சொல்லு பார்ப்போம்.



**காக்கை** :- ஆமாப்பா நீ சொல்லுவதெல்லாம் சரியாய்த் தான் இருக்கின்றது. மனுஷனை குண்டா முண்டா கட்டிப் போட்டு விடுகின்றான். ஒன்றையாவது யோசித்துப் பார்ப்பதற்கு இடம் கொடுப்பதில்லை. ஆனாலும் பார்ப்பனர்கள் புத்திசாலிகள்தான் அதில் சந்தேகமில்லை.

**குருவி**:- அவர்களை புத்திசாலிகள் என்றால் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். தந்திரசாலிகள் என்று வேண்டுமானால் சொல்லிக்கொள்.

**காக்கை** :- ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? அவர்கள் புத்திசாலித்தனம் உனக்கு விளங்கவில்லையா?

**குருவி** :- அவர்கள் புத்திசாலிகளா என்கிற விஷயத்தை சற்று கவனித்துப்பார். நீ எந்தப் புராணத்தையோ சாஸ்திரத்தையோ வேதத்தையோ வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு நன்றாய் ஆராய்ச்சி செய்து பார். இமயமலைக்கு அப்புறம் அவர்கள் ஒன்று கூடத்தெரிந்து கொண்டிருப்பதாய்க் காண முடியாது. அது மாத்திரமல்லாமல் பார்ப்பானுக்கு கைலாயமே இமயமலை தானே. அது பனிக்கட்டியில் மூடியிருப்பதால் அதை வெள்ளியங்கிரி என்று சொல்லிவிட்டான். அந்தக் காலத்தில் அங்கு யாரும் போக முடியாமல் இருந்ததால் 'சிவன் அங்குதான் இருந்தான், உமை அந்த மலைக்குத்தான் பிறந்தாள், பிர்மா அங்குதான், ரிஷிகள் அங்குதான், தேவர்கள் அங்குதான், சுவர்க்கம் அங்குதான் என்று எல்லாவற்றையும் அந்த மலையின் தலையிலேயே போட்டுவிட்டான்.

அது மாத்திரமா? நதியைப் பார்த்தால் அது ஒரு தேவதை, சமுத்திரத்தைப் பார்த்தால் அது ஒரு தேவதை, மழை பெய்தால் அது ஒரு தேவதை, காற்றடித்தால் அது ஒரு தேவதை, நெருப்பெரிந்தால் அது ஒரு தேவதை, சூரியன் ஒரு தேவதை, சந்திரன் ஒரு தேவதை, நட்சத்திரம் ஒவ்வொன்றும் தனித்தனி தேவதை. இது போலவே அந்தப் பயல்களுக்கு (சையன்ஸ்) விஞ்ஞான சாஸ்திரம் தெரியாததால் தொட்டதெல்லாம் தேவதை தேவதை என்று பேர் வைத்து ஒவ்வொன்றின் பேராலும் நம்ம தலையில் கையை வைத்து கொள்ளையடிக்க சவுகரியம் செய்து கொண்டான். அவன் முட்டாள் தனமும் அவனுக்கு உதவியாக இருக்கின்றது. ஆனால் நம்முடைய அறிவோ நமக்கு நாஸ்தீகமாவும் எமனாகவும் இருக்கின்றது.

இதெல்லாம் கிடக்க, உன் தலையில் கையை வைத்திருப்பது உனக்கு தெரியுமா? ஓ காக்கையே! நீ ஒரு காலத்தில் சீதையினுடைய முலைக் காம்பைக் கொத்திவிட்டாயாம். சீதையின் புருஷனாகிய இராமன் உன் கண் விழிகளில் ஒன்றைப் பிடுங்கிவிட்டானாம். அதனால் நீ ஒற்றைக் கண் குருடாய் இருக்கிறாயாம். இந்தப்படி எழுதி வைத்திருக்கின்றான். உன் பேரில் அவர்களுக்கு இருந்த கோபத்தினால் பெண்களிடம் கூட மரியாதை இல்லா மல் சீதை, ஒரு காக்கை வந்து கொத்தும்படி அவ்வளவு மெய்மறந்து தனது மார்பைக் காட்டிக் கொண்டு படுத்திருந்தாள் என்று எழுதியிருக்கின்றான்..



RangaRakes
tamilnavarasam.com

எனவே அவர்கள் சங்கதி சுலபத்தில் சரிபடுத்தக் கூடியதல்ல.

**காக்கை** :- நேரமாய்விட்டது சாவகாசமாய் பேசிக் கொள்ளலாம்.

**குருவி** :- சரி போய் வருகிறாயா?

**குடி அரசு - உரையாடல் - 20.01.1929**



# திருவள்ளுவரின் பெண்ணுரிமை

**- சித்திரபுத்திரன்**

தற்காலம் நமது தமிழ் நாட்டில் வழங்கப்பெறும் நீதி நூற்களிலெல்லாம் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது என்று சொல்லப்படும் குறள் என்னும் நீதி நூலே மிகவும் மேலானது என்று சொல்லப்படுகிறதானாலும் அதையும் பார்ப்பனர்களோ சைவர்களோ வைணவர்களோ மற்றும் எந்த பிரிவினர் களோ அடியோடு காரியத்தில் ஒப்புக் கொள்ளுவதென்றால் முடியாத காரியமாகவே இருக்கும். என்றாலும் திருவள்ளுவரைப் பற்றி ஏதாவது குற்றம் சொல்லிவிட்டால் பண்டிதர்களும் பெரும்பாலும் சைவர்களும் சண்டைக்கு மாத்திரம் வந்து விடுவார்கள். பார்ப்பனர்களென்றாலோ திருவள் ளுவரின் பெயரைச் சொன்னாலே சண்டைக்கு வந்துவிடுவார்கள்.

இவ்வளவும் இருந்தாலும், திருவள்ளுவர் யார்? என்ன ஜாதி? என்ன மதம்? அவரது கொள்கை என்ன? என்பதில் இன்னமும் எல்லோருக்கும் சந்தேகமாகவே இருக்கிறது. சைவர்கள் திருவள்ளுவரை தம் சமயத்தலைவர் என்று பாத்தியதை கொண்டாடிக் கொள்கிறார்கள். வைணவர்களில் சிலர் அவரை வைணவர் என்று கொண்டாடுகிறார்கள். சமணர்கள் அவரை தம் சமயத்தவர் என்கின்றார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பார்களில் ஒரு சாரராகிய பறையர் என்று சொல்லப்படுபவர்கள் திருவள்ளுவரை தம் இனத்தவர் என்று சுதந்திரம் பாராட்டுகின்றார்கள். அவரைப் பற்றிக் கிடைத்திருக்கும் புராணமோ அல்லது அவரது சரித்திரக் கதையோ, மிகவும் அசம்பாவிதமும் ஆபாசமானதுமாய்க் காணப்படுகின்றது. இவ்வளவு புறச்சான்றுகளையும் விட்டுவிட்டு அகச்சான்று என்பதாகிய திருவள்ளுவர் குறளைப் பார்த் தாலோ, அதுவும் மயக்கத்திற்கிடமானதாக இருக்கின்றதே ஒழிய ஒரு தெளிவுக்கு ஆதாரமானதாய் காணப்படவில்லை. அவரது குறளில் இந்திரன், பிர்ம்மா, விஷ்ணு முதலிய தெய்வங்களையும் மறுபிறப்பு, சுவர்க்கம், நரகம், மேல் லோகம், பிதுர், தேவர்கள் முதலிய ஆரியமத சம்பிரதாயங்களையும் மூடநம்பிக்கைகளையும் கொண்ட விஷயங்களையும் பரக்கக் காணலாம்.

எனவே, இவற்றைக் கொண்டு திருவள்ளுவர் யாராயிருக்கலாம் என்று பார்ப்போமானால், அவர், தற்காலம் பார்ப்பனர்களை மாத்திரம் குற்றம் சொல்லிக் கொண்டு அவர்களால் கற்பிக்கப்பட்ட தெய்வங்கள் புராணங்கள் முதலியவற்றை எல்லாம் ஏற்றுக் கொண்டு, பார்ப்பனீயம் என்னும் பார்ப்பனக்



RangaRakes tamilnavarasam.com

கொள்கைகளை ஒரு சிறிதும் தளர்த்த மனமில்லாதவர்களாய் இருந்து கொண்டு தங்களைப் பெரிய சீர்திருத்தக்காரர்கள் என்றும், தாங்கள் பெரிய கல்வி, கேள்வி ஆராய்ச்சி முதலியவைகளில் தேர்ச்சி பெற்ற வல்லவர்கள் என்றும் சொல்லிக் கொண்டு, தங்களை வெளியில் சமரச சன்மார்க்க சமயத் தவர் என்றும் உள்ளுக்குள் சைவ சமயம்தான் தன்னுடைய மதம் என்றும், மற்றும் இதுபோல் உள்ளொன்றும் புறம் ஒன்றும் செய்கை ஒன்றுமாய் இருந்து கொண்டு தங்களை ஒரு பெரிய சீர்திருத்தக்காரர்கள் என்று சொல்லிக் கொள் ளும் இப்போதைய சீர்திருத்தக்காரரைப் போல்தான் காணப்படுகிறார்.

இவை எப்படி இருந்தாலும் திருவள்ளுவரின் பெண்ணுரிமைத் தன்மையைப் பற்றிக் கவனித்தால் பெண்களுக்கு அவர் கூறிய குறளில் உள்ள நீதிகள் ஒருபுறமிருக்க, திருவள்ளுவர் மனைவியாகிய வாசுகி அம்மையாரின் சரித்திரத்தைக் கேட்போர் மனம் பதறாமல் இருக்கமுடியாது. அதாவது வாசுகி அம்மையாரை திருவள்ளுவர் தம் மனைவியாக ஏற்றுக் கொள்ளுமுன் ஆற்றுமணலைக் கொடுத்து சாதம் சமைக்கச் சொன்னாராம். அதாவது வாசுகி கற்புள்ளவரா அல்லவா என்று பரீட்சிக்க, அவ்வம்மையார் அந்தப்படியே மணலை சாதமாகச் சமைத்துக் கொடுத்து திருவள்ளுவருக்கு தமது கற்பைக் காட்டினாராம்.

அம்மையார் கிணற்றில் நீர் இறைக்கும்போது நாயனார் அம்மை யாரைக் கூப்பிட, அம்மையார் கயிற்றை அப்படியே விட்டுவிட்டு வந்த போது கயிறு கிணற்றில் விழாமல் அப்படியே தொங்கிக் கொண்டிருந்ததாம்.

திருவள்ளுவர் ஒருநாள் பகலில் நூல் நூற்கும்போது நூற்கதிர் கீழே விழ உடனே அம்மையாரைக் கூப்பிட்டு "விளக்கேற்றிக் கொண்டுவா நூற்கதிரைத் தேடவேண்டும்" என்று சொல்ல, அம்மையார், "பகல் நேரத்தில் விளக்கெதற்கு" என்று கேட்காமல் – கேட்டால் பதிவிரதா தன்மைக்கும், கற்புக்கும் பங்கம் வந்துவிடும் எனக்கருதி – உடனே விளக்குபற்ற வைத்துக் கொண்டு கொடுத்தார்களாம்.

ஒருநாள் நாயனார் பழைய சாதம் சாப்பிடும்போது 'சாதம் சுடுகின்றது' என்று சொன்னவுடன் அம்மையார், 'பழைய சாதம் சுடுமா' என்று கூடக் கேட்காமல்,– கேட்டால் பதிவிரதா தன்மை கெட்டுப் போகுமே என்று கருதி, உடனே விசிறி எடுத்துக் கொண்டு வந்து வீசி ஆற்றினாராம்.

திருவள்ளுவர் அம்மையாரைத் தினமும் ஒரு டம்ளரில் தண்ணீரும் ஒரு ஊசியும் தனியாக கொண்டு வந்து வைத்துவிட்டு சாதம் பரிமாறும்படி கட்டளையிட்டிருந்தாராம் – அவ்வம்மையாரும், 'இது எதற்காக?' என்று– கேட்காமல் – கேட்டால் பதிவிரதா தன்மை கெட்டுப் போகுமே என்று கருதிக் கொண்டு தினமும் அந்தப்படியே செய்து வந்தாராம். ஆனால் அம்மை யாரின் நிரியாண காலத்தில் அம்மையார் உயிர் போகாமல் வாதாடிக் கொண்டி ருக்க அது ஏன் என்று திருவள்ளுவர் அம்மையாரைக் கேட்கும்போது





அம்மையார் பயந்துகொண்டு "தினமும் பாத்திரத்தில் தண்ணீரும் ஊசியும் வைக்கச் சொன்னீர்களே, அது எதற்காக என்று தெரிந்து கொள்ள வேண்டு மென்கின்ற ஆசை முடிவு பெறாமல் இருப்பதால் உயிர்போகாமல் வாதாடி மரணாவஸ்தைபடுகிறேன்" என்று சொன்னாராம். பிறகு திருவள்ளுவர் தயவு செய்து பெரியமனது வைத்து அதன் காரணத்தை அதாவது சாப்பிடும்போது அன்னம் கீழே விழுந்தால் அந்த ஊசியில் குத்தி எடுத்து அந்த டம்ளர் தண்ணீரில் கழுவுவதற்கு என்று சொன்னாராம். அதன் பிறகுதான் அம்மை யாரின் உயிர் நீங்கிற்றாம். இது திருவள்ளுவர் புராணத்தில் உள்ள அவரது மனைவியின் சரித்திரம். எனவே இது இடைச்செருகலாகவோ கற்பனைக் கதையாகவோ இல்லாமல் உண்மைக் கதையாயிருந்தால் திருவள்ளுவரின் பெண்ணுரிமை என்ன என்பதையும் கற்பனையாக இருந்தால், கற்பனை யல்லாத புராணம் எது? அதற்கு என்ன பரீட்சை? என்பதையும் அறிஞர்கள் வெளிப்படுத்துவார்களாக.

**குடி அரசு – கட்டுரை – 20.01.1929**



tamilnavarasam.com

## வேலூரில் பொதுக்கூட்டம்

"சகோதரர்களே! எவனோ ஒரு பைத்தியக்காரன் எங்கோ இருந்து சத்தம் போட்டுவிட்டால் அதற்காக நீங்கள் இத்தனை பேரும் எழுந்து அவன் மீது பாய்வது கொஞ்சமும் சரியான காரியமல்ல. யார் எந்தக் கேள்வி கேட்டாலும், என்ன ஆட்சேபனை சொன்னாலும், அவற்றிற்குப் பதில் சொல்லவும் ஆட்சேபனைகளை சமாளிக்கவும் எங்களுக்கு ஆற்றலிருக்கிறது என்று நீங்கள் கருத வேண்டுமேயொழிய எங்களுக்குச் சிபார்சுக்காக இத்தனை பேரும் சத்தம் போடுவது எங்களை அவமானப் படுத்தியதாகும் என்றும் அன்றியும் நமது எதிரிகளும் பார்ப்பனக் கூலிகளும் தங்கள் பத்திரிகையில் 'வேலூர் கூட்டத்தில் பெரிய கலவரம்' என்று பெரிய தலைப்பு கொடுத்து அற்பத் தனமாகவும் இழிதனமாகவும் பத்திரிகையில் எழுதுவதற்கு இடம் கொடுத்த தாகும் என்றும் எந்தக் கேள்வி யார் கேட்டாலும் என்ன விதமான காலித்தனம் யார் செய்தாலும் நாங்களே பார்த்துக் கொள்ளுகிறோம். நீங்கள் அமைதி யாயிருக்க வேண்டும் என்றும் இல்லாவிட்டால் கூட்டத்தைக் கலைக்கும்படி அக்கிராசனரைக் கேட்டுக் கொள்ளுவேன்" என்றும் அதட்டியிட்டு உட்கார்ந் தார். உடனே கூட்டம் நிசப்தமாய் விட்டது. அந்த சமயத்தில் மறுபடியும் முன் சொன்ன பத்திரிகா நிரூபரின் தூண்டுதலால் ஒருநபர் சந்திலிருந்து கொண்டு 'பத்திரிகைக்காரர்களை அயோக்கியர்கள் என்று சொன்னதை வாபீஸ் வாங்கிக் கொள்ள வேண்டு'மென்று சொன்னார். நாயக்கர் தன்னிடம் அந்த வழக்கமில்லை என்று சொல்லிவிட்டு மேலால் திரு.கண்ணப்பரை பேசும்படி கேட்டுக் கொள்ள அவர் முன் பேசியதை ஒட்டிப் பேசிவிட்டு, சமூக சம்மந்தமாக பார்ப்பனர்கள் செய்யும் அக்கிரமங்களை நன்றாய் எடுத்துச் சொல்லி விட்டு உட்கார்ந்தார்.

பிறகு திரு.ஆரியா அவர்களைப் பேசும்படி கேட்டுக் கொள்ள அவர்களும் எழுந்து ஆவேசத்துடன் பேசினார். இந்த சமயத்தில் கூட்டத்தில் இரு சிறு கற்கள் வந்து விழுந்தன. இதை யாரும் லட்சியம் செய்யாமல் இருக்க வேண்டுமென்று திரு.நாயக்கர் கேட்டுக் கொள்ளவே அமைதி ஏற்பட்டது. பிறகு ஆரியா அவர்கள் பேச்சு முடிந்ததும் அக்கிராசனர் திரு.தண்டபாணி பிள்ளை "கேள்வி கேட்கிறவர்கள் கேட்கலாம்" என்று சொன்னதும், ஒருவர், தாம் இரண்டே கேள்விகள் கேட்பதாகச் சொன்னார். உடனே திரு.நாயக்கர் அவரை பக்கத்தில் வரும்படி சொல்லி அழைத்து வந்து பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு பொது ஜனங்களைப் பார்த்து, "சகோதரர்களே! இவர்



கேட்கப் போகும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லுகிறேன். நீங்கள் யாரும் இவரைப் பரிகாசம் பண்ணவோ, கைதட்டவோ, சிரிக்கவோ கூடாது என்று கண்டிப்பாய்ச் சொல்லுகிறேன்" என்று சொல்லிவிட்டு "என்ன கேள்வி?" என்று கேட்டார். அக்கேள்வி கேட்க வந்தவர் சொன்ன பதிலாவது:-

"ஐயா, நான் உங்கள் 'குடி அரசை'ப் படித்த நாள் முதற்கொண்டு என் வீட்டுக்கு எந்தவிதமான சுபாசுப காரியத்திற்கும் பார்ப்பனர்களைக் கூப்பிடுவதில்லை. பார்ப்பனர்களுக்குப் பிச்சையும் கொடுப்பதில்லை. இப்படியிருக்க உங்கள் தலைவர் பனகாலரசு இறந்து போன கருமாதிக்கு பார்ப்பனர்களை வைத்து நடத்தினார்களே, இது நியாயமா?" என்று கேட்டார்.

திரு.நாயக்கர், "அது நியாயமல்ல வென்று நானும் கருதுகிறேன். ஆனால், அந்தக் காரியத்திற்கு பனகால் அரசர் மீது பழி போடுவதற்கு நியாயமில்லை. அவர் இறந்த பிறகு அவர் வீட்டிலுள்ள மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து விடுதலை பெறாதவர்கள் செய்த காரியத்திற்கு யார் பொறுப்பாளியாயிருக்க முடியும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். அம்மாதிரி மூடப்பழக்க வழக்கங்களால் கட்டுப்பட்டுக் கிடப்பவர்கள் விடுதலை அடைய வேண்டுமென்றுதான் நாங்கள் இப்பொழுதும் பிரசாரம் செய்து வருகின்றோம். அன்றியும் யார் தங்களைத் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டு மேலும் இம்மாதிரி நடந்து கொள்கிறார்களோ அவர் களை எல்லாம் நாங்கள் தாராளமாய் கண்டித்துத்தான் வருகின்றோம். உதார ணமாக, திருவாளர்கள் பாத்ரோ, தணிகாசலம் செட்டியார் முதலியவர் களையும் கண்டித்துத்தான் வந்திருக்கின்றோம்"

கேள்வி கேட்டவர் "இது சரி, திரு.பத்மநாப முதலியார் தன் வீட்டுக் கிரகப் பிரவேசத்திற்கு பார்ப்பனர்களைக் கொண்டு சடங்கு நடத்தலாமா" என்று கேட்டார்.

திரு நாயக்கர் "திரு. பத்மநாப முதலியார் கூட்டத்தில் இருப்பதால் அவர் பதில் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ஏனெனில் இக்கேள்விக்கு பதில் சொல்வதின் மூலம் திரு.முதலியார் அவர்களுக்கும் தனது குற்றம் தெரிய இடம் ஏற்படட்டும்" என்று சொல்லி திரு.முதலியாரை பதில் சொல்லும்படி கேட்டுக் கொண்டார். திரு.பத்மநாப முதலியார் எழுந்து தனக்கு பார்ப்பானை வைத்து நடத்த இஷ்டமில்லை என்றும் தனது மனைவியாரும் மற்றும் இரண்டொரு பெரியோரும் தன்னை நிர்ப்பந்தப் படுத்தினார்கள் என்றும் கண்களில் தண்ணீர் விட்டு அழுதார்கள் என்றும் அதைப் பார்த்துதான் மனமிளகி அவர்களிஷ்டப்படி விட நேர்ந்ததென்றும் தனக்கு பார்ப்பான் உயர்ந்தவன் என்பதிலாவது பார்ப்பானைக் கொண்டு சடங்கு செய்யவேண்டும் என்பதிலாவது நம்பிக்கையில்லை யென்றும் சொன்னார்.



RangaRakes tamilnavarasam.com

உடனே திரு.நாயக்கர் திரு.முதலியார் அவர்களைப் பார்த்து “ நீங்கள் இந்தக் கூட்டத்தில் ஆஜரில்லாத சகோதரிகள் மீது குற்றம் சுமத்துவது தர்மமல்ல” வென்று சிரித்துக் கொண்டே சொன்னார். திரு.முதலியார் அப்படியானால் தாங்கள் எங்களுக்கு மாத்திரம் உபதேசம் செய்வதில் பலனில்லை, ஸ்திரீகளுக்கும் இந்த விஷயத்தை எடுத்துச்சொல்லி அவர்களையும் திருத்தவேண்டுமென்று சொன்னார். திரு.நாயக்கர் அப்படியே ஆகட்டும், அவர்களுக்காகவே நாளை ஒரு மீட்டிங்கு ஏற்பாடு செய்யுங்களென்று சொன்னார். அந்தப்படியே செய்வதாக பலர் வாக்களித்தார்கள். நிற்க கேள்வி கேட்டவர் “ திரு.நாயக்கர் சீதையை தட்டுவாணி என்று சொல்லலாமா? தசரதனையும் ராமனையும் கெட்டவர்கள் என்று சொல்லலாமா? என்று கேட்டார்.

திரு.நாயக்கர், நான் சீதையைத் தட்டுவாணி என்று சொல்லவில்லை என்றும். ஆனால், சீதை “பதிவிரதை” அல்ல என்று சொல்லியிருப்பதாக தனக்கு ஞாபகமிருப்பதாகவும். அதுவும் அந்தப் புராணக்காரர்களும் தர்ம சாஸ்திரத்தில் பதிவிரதைக்கு என்னென்ன நிபந்தனைகள் விதித்திருக் கின்றார்களோ அந்த நிபந்தனைப்படிக்கு சீதையை பதிவிரதைகளில் ஒன்றாகச் சேர்க்க முடியவில்லை என்று ‘குடி அரசில்’ எழுதியிருந்தது உண்மை என்றும் அதற்கு உதாரணம் சீதை தன் புருஷனாகிய ராமனைப் பார்த்து “என்னை நீ கண்டவர்களுக்குக் கூட்டிக் கொடுக்கப் பார்க்கிறாயா” என்றும் “உனக்கு பெண்டாட்டியை வைத்து வாழ ஆண்மையில்லையா” என்றும், தனது கொழுநனான லட்சுமணனை எதிர்த்துப் பேசி, ‘என் புருஷனை சாகவிட்டுவிட்டு என்னை நீ பெண்டாளலாமென்று நினைக் கிறாயா’ என்றும் கேட்டதினாலும், காட்டில் கொண்டுபோய் விட்ட காலத்தில் தன்னைப் பற்றித் தன் புருஷன் சந்தேகப்படக் கூடாது என்று கேட்டுக் கொள்ளும்போது தனது கொர்ப்ப வயிற்றை தன் கொழுநனுக்கு காட்டி தன் புருஷனை அவ்வளவு மோசமாக நினைத்திருப்பதாலும் சீதையை பதிவிரதைகளில் சேர்க்க முடியாமல் போய் விட்டதே ஒழிய வேறில்லை என்றும் சொன்னார்.

வேறொரு பட்டை ராமக்காரர், “இதெல்லாம் எங்கிருக்கின்றது” என்று கேட்டார்,

நாயக்கர் “வால்மீகி ராமாயணத்தில் இருக்கின்றது” என்று சொன்னார்.

மற்றும் “தசரதன் எப்படிப்பட்டவன்” என்று கேட்க திரு.நாயக்கர்,

“தசரதன் தனக்கு பல பெண்கள் இருந்தும் மறுபடியும் கைகேயியை கட்டிக் கொள்ள ஆசைப்பட்டபோது கைகேயியின் தகப்பனாராகிய கேகய மன்னன் தசரதனைப் பார்த்து, உனக்கு ஏற்கனவே பல பெண்கள் இருப்பதால் மறுபடியும் பெண் கொடுக்க முடியாதென்றும் அப்படிக் கட்டாயமாக வேண்டுமென்றால் என் பெண் வயிற்றில் பிறக்கும் குழந்தைக்கு பட்டம்



கொடுப்பதாய் சத்தியம் செய்ய வேண்டும் என்றும் நிபந்தனை கேட்க, அதற்கு தசரதன் கட்டுப்பட்டு உறுதி கூறி கைகேயியை மணந்து கைகேயி வயிற்றில் பிறந்த குழந்தைக்கு பட்டம் கொடுக்காமலும், அதற்குத் தக்க சமாதானமாவது பரதனுக்கோ கைகேசிக்கோ சொல்லாமலும், பரதன் ஊரில் இல்லாதபோது ராமனுக்கு பட்டாபிஷேகம் செய்ய நிச்சயித்ததும், ராமனும் இந்த விஷயங்களைத் தெரிந்திருந்தும் தன் தகப்பனாருக்கு நியாயத்தை எடுத்துச் சொல்லி யோக்கியமாய் நடந்து கொள்ளும்படி செய்யாமலும், பட்டம் கட்டிக் கொள்ள சம்மதித்ததுமான காரியங்களால் இவர்கள் இருவரை யும் அயோக்கியர்கள் என்று சொல்லாவிட்டாலும் யோக்கியர்கள் என்று சொல்ல முடியாது என்றும் சொன்னார். உடனே அந்த பட்டை நாமக்காரர்.

‘இந்த விஷயம் உங்களுக்கு எப்படித் தெரியும்’ என்று கேட்டார். திரு. நாயக்கர்.

வால்மீகி ராமாயணத்தில் ஆரணிய காண்டத்தில் ராமனே பரதனுக்குச் சொல்லுகின்றதாகவும் வால்மீகி சொன்னதாக வால்மீகி ராமாயணத்தில் இருக்கின்றது என்றும் சொன்னார். உடனே அந்த கேள்வி கேட்டவர், ‘ஆரண்யகாண்டம்’ என்பதைக் குறித்துக் கொண்டார். பட்டை நாமக்காரர். நீங்கள் ஏன் ராமன் என்கின்ற பெயர் வைத்துக் கொண்டீர்கள் என்று கேட்டார்.

திரு.நாயக்கர் “ராமன் என்கின்ற பெயர் ராமாயண ராமனுக்கு மாத்திரம் சொந்தமல்ல என்றும் ராமனுடைய பெற்றோர்களுக்கு தம் மகனுக்கு ராமன் என்கின்ற பெயர் வைக்க எவ்வளவு சுதந்திரம் உண்டோ அவ்வளவு சுதந்திரம் தனது பெற்றோர்களுக்கு உண்டென்றும் ராமன் என்றால் மிக்க அழகானவன் என்றுதான் அர்த்தம் செய்யப்படுகின்றது என்றும் தான் ராமனைவிட அழகானவன் என்று என் பெற்றோர்களுக்கு தோன்றியதால் அந்த ராமனுக்கும் மேலாக என்னைக் கருதி ராமசாமி (அதாவது ராமனுக்குச் சாமி) என்று பெயர் வைத்திருக்கிறார்கள் என்றும் அதை மறுக்க வேண்டிய அவசியம் எனக்கு ஒன்றும் தோன்றவில்லை.” என்றும் சொன்னார். உடனே எல்லோரும் கை தட்டி சிரித்தார்கள்.

திரு.நாயக்கர் மறுபடியும் கூட்டத்தைப் பார்த்து கண்டித்து எல்லோரும் அமைதியாயிருக்க வேண்டும் என்றும் யாரும் யாரையும் பரிகாசம் செய்யக் கூடாதென்றும் கேள்வி கேட்க வருகின்றவர்களை அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்களை அன்பாய் நடத்த வேண்டும் என்றும் அவர்கள் எந்த எண்ணத்தின் மீது கேட்டாலும் அதை நாம் நல்ல எண்ணமாகவே கருதி நல்லவிதமாய் உபயோகித்துக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னார். உடனே கூட்டத்தில் ஒருவன் நொண்டிக் கொண்டு வந்து “இதுதான் அன்போ! இப்படி என்னை அடிக்கலாமா? இது நியாயமா” என்று கேட்டார். அதற்கு திரு. நாயக்கர் “நீங்கள் அடிபட்டதற்கு நான் வருந்து கின்றேன் என்றும் அடித்தவர்களையும் நான் கண்டிக்கின்றேன் என்றும் அடிபட்டதாக தயவு செய்து இனிமேல் வெளியில் சொல்லிக் கொள்ளாதீர்கள்” என்றும்



RangaRakes tamilnavarasam.com

சொன்னார். மறுபடியும் அவர் தன்னுடைய கைத்தடியை யாரோ பிடிங்கிக் கொண்டு போய்விட்டதாகவும் சொன்னார்.

திரு.நாயக்கர், அவர் கை பிரம்பை எடுத்தவர்கள் கொடுத்து விட வேண்டுமென்று சொன்னார். இந்த நபர்தான் முன் சொன்ன பத்திரிகை நிரூபரின் தூண்டுதலால் சத்தம் போட்டவர் என்று தெரியவந்தது.

*குறிப்பு: 05.01.1929 ஆம் நாள் வேலூர் கோட்டை மைதானத்தில் வடஆர்க்காடு ஜில்லா பார்ப்பனரல்லாத வாலிபர் மகாநாடு நிகழ்ச்சியை முன்னிட்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 20.01.1929**



# செங்குந்தர் சமூக மகாநாடு பொருட்காட்சி திறப்பு

அன்புள்ள சகோதரர்களே!

இன்று தென்னிந்திய செங்குந்தர் முதலாவது சமூக மகாநாட்டின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இப்பொருள் காட்சி சாலையைத் திறந்து வைக்கும் பெருமையை எனக்கு அளித்ததற்காக என் மனப்பூர்வமான நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். வெகு சொற்ப கால முன்னறிவிப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பொருட் காட்சியானாலும், இதில் ஏராளமான சாமான்கள் காட்சிக்கு வந்து குவிந்திருப்பது போற்றத்தக்கதாகும்.

பொருள் காட்சிகள் என்பன மக்களின் முன்னேற்றத்திற்குரிய சாதனமாகும். வியாபாரம், கைத்தொழில், சிக்கனம் ஆகியவைகளின் முன்னேற்றம் பெரிதும் பொருள்காட்சியினாலேயே ஏற்படும். ஒவ்வொரு நாட்டாருடையவும் கைத்தொழில், பொருள் வரவு, மனோபாவம், தொழில் திறம், செய்யும் மாதிரி ஆகியவைகள் தெரியவும் மற்றவர்கள் அதைப் பின்பற்றவும் இன்னும் இம்மாதிரி எத்தனையோ விஷயங்களுக்கு இப்பொருள் காட்சிகள் பயன்படுகின்றன.

எவ்வளவோ கைத் தொழில்களுக்கு நமது நாடு மிகப் பழமை யானதும் பெயர் போனதுமாயிருந்தாலும், நாம் கைத் தொழில் முறையில் ஒரு சிறிதும் முற்போக்கடையவில்லை என்பதை தெரிவிப்பதற்காக நீங்கள் வருத்தப்படக் கூடாது. பொருள்காட்சி என்பது (இன்வென்ஷன்) கண்டு பிடித்தல், மேலும் மேலும் முற்போக்கடைதல் என்கின்ற தத்துவம் அடங்கியது.

ஆனால் நமது நாடு பழமையை கெட்டியாய் குரங்குப் பிடியாய் பிடித்துக் கொண்டிருப்பதில் உலகத்திலேயே பேர் போனது என்று சொல்ல வேண்டும். மேல்நாட்டார், அவர்கள் கண்டுபிடிக்கும் விஷயங்கள் எவ்வளவு மேலானதாயிருந்தாலும் மேலும் மேலும் அதிலிருந்து சீர்திருத்தம் கண்டுபிடிப்பதிலேயே கவலை கொள்ளுவார்களே யொழிய, ஓய்வெடுத்துக் கொள்ள சம்மதிக்கவே மாட்டார்கள். உதாரணமாக, ரயில் வண்டி, இரண்டு சக்கரவண்டி, மோட்டார்கார், ஆகாயவிமானம் ஆகிய வாகன சம்மந்த மானவைகள் ஒவ்வொரு நாளும் புதுப்புது சீர்திருத்தங்களுடனே



RangaRakes tamilnavarasam.com

வெளிவந்து கொண்டிருக்கின்றதைப் பார்க்கின்றோம். நாளுக்கு நாள் விலை குறைவு, செலவு சுருக்கம், காலம் சுருக்கம், சமான்கள் கெட்டி ஆகிய துறைகளில் ஆராய்ச்சி செய்து கொண்டே இருக்கின்றார்கள். இதுபோலவே ஒவ்வொரு துறையிலும் அற்புதங்களைக் கண்டு பிடித்துக் கொண்டே இருக்கின்றார்கள். இவற்றைத் தாராளமாய் தங்கள் நாடு முழுவதும் பயன டையும்படி பரப்பிக் கொண்டே வருகின்றார்கள். ஒவ்வொரு தொழிற் சாலைக்காரரும் வியாபாரியும் ஆராய்ச்சிக்காகவும், புதியமுறைகள் கண்டு பிடிப்பதற்காகவும், தங்களது வரும்படிகளிலும், சொத்துக்களிலும் தக்க பாகத்தை ஒதுக்கிவைத்து வருகின்றார்கள். நமது நாட்டிலோ ஆராய்ச்சி என்பதோ புதிய முறைகள் என்பதோ மக்களின் காதுகளுக்கு வெறுப்பாகவும், கண்களுக்கு நோவாகவும் கருதப்படுகின்றது.

சாதாரணமாக நம் ஊர்களிலுள்ள ஒத்தைமாட்டு வண்டி, இரட்டை மாட்டு வண்டிகளை எடுத்துக் கொண்டால் எனக்குத் தெரிய 40, 50 வருஷ காலமாக, இதே மாதிரியாகத்தான் இருக்கின்றது. வண்டிக்குள் உட்கார்ந்து ஒரு பத்து மைல் பிரயாணம் செய்துவிட்டால் இடுப்பு ஒடிந்துவிடும், முதுகு வளைந்துவிடும், உடல்வலி நிற்க ஒரு வாரமாகும். கெர்ப்ப ஸ்திரீயாயி ருந்தால் வண்டியிலேயே பிரசவமாகிவிடும். இது 80 அல்லது 100, 200 வருஷம் என்று கூடச் சொல்லலாம். இதுவரையில் ஒரு கடுகளவுகூட அவை கள் முன்னேற்றமடைந்திருப்பதாய்ச் சொல்ல முடியாது. பணக்காரர்களா யிருந்தால் வெள்ளியில் நுகத்தடி போட்டு தங்கத்தில் பூண்கட்டி இரண்டு வைரமோ செம்போ புதைத்து விட்டால், அதுவே விசேஷ வண்டியாக மதிக்கப்படுகின்றது. இம்மாதிரியே நூல் நூற்பதிலுங்கூட சுமார் 100, 200 வருஷங்களுக்கு முன் செய்த ராட்டினம் எதோ அதுதான் இன்றும் பூஜிக்கப்படுகின்றது. 200 வருஷத்திற்கு முன் ஒரு நாளைக்கு பத்து ரூபாய் எடை பஞ்சு நூற்று, முக்கால் அணா அல்லது ஒரு அணா கூலி பெற்றிருந்தால் இன்றைக்கும் 9 அல்லது 10 ரூபாய் எடை பஞ்சுதான் நூற்று 8 அல்லது 9 காசு கூலி தான் வாங்க வேண்டும். இந்த முறையைச் சற்றும் மாற்றாமல், குரங்குப் பிடிவாதமாய் பிடித்துக் கொண்டிருப்பது தான் இப்போது நமது முன்னேற்ற வேலை, விடுதலை வேலை, ஏழைகளைக் காப்பாற்றும் வேலை என்று மதிக்கப்படுகின்றது.

இன்னும் நெசவுத் துறையிலும் இதுபோலவே நமது நாட்டில் பெரும் பாலும் 100 வருஷத்துக்கு முன் இருந்த முறைகளேதான் கையாளப்பட்டு வருகின்றன. பொதுவில் கொஞ்சமும் மாறுதல் இல்லை. தென்னிந்தியாவில் உள்ள செங்குந்த சமூகம் ஒரு மதிக்கத்தகுந்த ஜனசங்கியை உடையதாக இருந்தும் இவ்வளவு பேருக்கும் 100-க்கு 99 பேருக்கு மேலாக நெசவுத் தொழிலாக இருந்தும், இதுவரையில் இச்சமூகம் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்கின்றது என்று பார்த்தால், செங்குந்தர்கள் என்பவர்கள் யார், நமது ஜனத் தொகை என்ன என்கின்ற விஷயம் தெரிந்து கொள்ளவே இத்தனை காலம் ஆச்சுது என்றுதான் சொல்ல வேண்டி இருக்கின்றது. மேலும் ஏதாவது முற்போக்கடைந்து இருக்கின்றோமா என்று பார்த்தால் நாம் எப்படி வந்தோம்? நமது ஆதி பெருமை என்ன? என்பதைப் பற்றிய ஆராய்ச்சியில் கவலை செலுத்தத்தக்க நிலைமையை அடைந்து கண்டுபிடித்து விட்டோம் என்கின்ற சந்தோஷந்தான். எனவே இதுவேதான் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு சமூகத்தினுடையவும், சமூக மகாநாட்டினுடையவும், கடமையாய் இருந்து வருகின்றது. நான் இதுவரை சுமார் நூற்றுக்கணக்கான சமூக மகா நாடுகள் பார்த்திருக்கின்றேன். அநேகமாய் ஒவ்வொன்றும் தங்கள் ஆதிப் பெருமையை பற்றிப் பேசுவதில் கவலை கொண்டிருக்கக் கண்டேனேயல் லாமல் இனிமேல் என்ன செய்வது என்பதை முக்கியமாய்க் கவனிப்பதைக் காணவில்லை. நாட்டின் முன்னேற்றமும் தங்கள் சமூக முன்னேற்றமும், தங்கள் நாடு ஆதியில் எப்படி இருந்தது என்று கண்டுபிடிப்பதிலும், தங்கள் சமூகம் ஆதியில் எப்படி இருந்தது என்று கண்டுபிடிப்பதிலும் ஒருசிறிதும் அடங்கி இருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயம். இம்மாதிரி பொருள் காட்சிகளும், நூதன தொழில் முறைகளும், சமூக மக்கள் அனைவரும் குறைந்த கஷ்டத்தில் தாராளமாய் நல்ல ஜீவனத்திற்கு ஏற்ற மார்க்கம் ஏற்படுத்திக் கொள்ளுவதற்கும் மானத்துடன் அதாவது ஜீவனத்துக்காக உயிர்வாழ்வதற்காக மானத்தையும் மனச்சாட்சியையும் பறிகொடுக்காமல் மனிதத் தன்மையோடு வாழும் நிலைமை உண்டாக்கிக் கொள்வதற்கும் தற்காலம் நமது நாட்டின் முற்போக்குக்கும் வழிகாட்டியாகும். ஆதலால் இந்த இரகசியத்தை உணர்ந்து இச்செங்குந்த சங்கத் தலைவர்கள் இம்மகா நாட்டுடன் ஒரு பொருள்காட்சி ஏற்பாடு செய்தது மிகவும் அறிவுடைமையும் பொருத்தமானதுமாகும் என்று சொல்லி நான் அவர்களைப் பாராட்டுவதுடன் இதைத் திறந்து வைக்கும் கௌரவத்தை எனக்குக் கொடுத்ததற்காக மறுபடி யும் ஒருமுறை எனது நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

*குறிப்பு : 19 , 20-01-1929 நாட்களில் ஈரோட்டில் நடைபெற்ற தென்னிந்திய செங்குந்தர் முதலாவது - சமூக மாநாட்டு - பொருட்காட்சியை திறந்து வைத்து உரை.*

**குடிஅரசு - சொற்பொழிவு - 20.01.1929**


RangaRakes
tamilnavarasam.com

# புதுச்சேரி - பொதுக்கூட்டச் சொற்பொழிவு

பெருமைமிக்க அக்கிராசனாதிபதி அவர்களே! பெரியோர்களே! இப்பொதுக் கூட்டமானது, இப்பிராஞ்சு தேசத்தில் இவ்வளவு சிறப்புடனும் முயற்சியுடனும் கூடுமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இங்கு கூடியுள்ள உங்களின் பூரண மகிழ்ச்சிக் குறிப்பைப் பார்க்கும்போதும், எனக்குக் கொடுத்த வரவேற்புப் பத்திரத்தில் குறிப்பிட்டிருப்பவைகளைப் பார்க்கும் போதும், உங்கள் பெருமுயற்சி நன்கு தெரிகின்றது. நீங்கள் எனக்குக் கொடுத்த பத்திரத்தில் சிறப்பித்துக் கூறும் வார்த்தைகளுக்கு நான் தகுதியுடையவனல்ல என்றே நான் நினைக்கின்றேன். ஆனால் என்னுடைய நோக்கத்தையும் எனது வேலையின் போக்கையும் இயக்க உண்மையையும் தெரிந்து கொண்டுள்ள உங்கள் கடமைக்கும் வந்தனம் அளிக்கின்றேன்.

நமது இயக்க எதிரிகளால் கடவுள் துரோகி, பிராமண துரோகி, மதத் துரோகி, சமயத்துரோகி, நாஸ்திகன் என்பன போன்ற பூச்சாண்டிகளால் பயமுறுத்தும் முதுகெலும்பு ஒடிந்த வாய்வேதாந்த சீலர்கள் செய்யும் சூழ்ச்சிகளைப் பொருட்படுத்தாதீர்கள்! என்னைப் பொருத்தமட்டில் நான் ஒரு நாஸ்திகன் அதுவும் நன்றாய் கொழுத்த நாஸ்திகன் என்றும் ஒப்புக் கொண்டேதான் இங்குகூட நாஸ்திகப் பிரச்சாரம் செய்ய வந்திருக்கின்றேன். மற்றவர்களும் நான் கூறிய நாஸ்திகத்தின் பொருளை நன்குணர்ந்தால் எல்லோரும் நாஸ்திகன் என்று சொல்லிக் கொள்ளவேதான் பிரியப்படுவார்கள். நாஸ்திகன் என்றால் ஆபத்தான அருத்தம் ஒன்றும் இல்லை. எவன் பார்ப்பன மதத்தை ஒப்புக் கொள்ளுவதில்லையோ எவன் பார்ப்பனர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக உண்டாக்கிவிட்ட கடவுள்களையும், அவைகளின் பெண்டுபிள்ளைகளையும், அவைகளின் 4 கை 2 பெண்டாட்டி 1000 வைப்பாட்டி என்பவைகளையும், அக்கடவுள்கள் செய்த கொலை,கொள்ளை, விபசாரம், கொடுமை, ஏமாற்றம், சூழ்ச்சி ஆகிய இழி தன்மைகளையும், எவன் ஒப்புக்கொள்ளுவதில்லையோ, இம்மாதிரி கடவுளுக்கு, செய்த செய்யும் உத்சவம், பூஜை, அபிஷேகம், கோயில் கட்டுதல், சமாதாரனை செய்தல் வேதபள்ளிக்கூடம் வைத்தல் ஆகிய வழிகளில் பணத்தை எவன் பாழாக்க சம்மதிப்பதில்லையோ, எவன் பார்ப்பான் பிழைக்க அர்த்த மற்ற மூடச் சடங்குகளை செய்வதில்லையோ, எவன் இவைகளுக்கு ஆதார மான வேத புராண சாஸ்திரங்களை ஒப்புக் கொள்வதில்லையோ அவன் தான் நாஸ்திகன். அப்படிப்பட்டவன் நாக்கை அறுக்க வேண்டும் என்று எழுதிவைத்து



அந்தப்படி பார்ப்பனர்கள் பிரசாரமும் செய்து வருகின் றார்கள். ஆனால் நல்ல காலமாய், அப்பார்ப்பன அடிமை ராஜ்யங்களான ராம, கிருஷ்ண முதலிய ராஜ்யங்கள் இல்லாமலிருப்பதால் தப்பி இருக் கின்றோம். ஆதலால் நாஸ்திகப் பூச்சாண்டிக்குப் பயப்படாமல் ஒவ்வொரு வரும் தங்களை நாஸ்திகர்கள் என்று தைரியமாய்ச் சொல்லிக் கொள்ள வேண்டும். சொல்லிக் கொள்ளுவது மாத்திரமல்லாமல் மனதிலும் உண்மை யான உறுதி கொண்ட நாஸ்திகனாய் இருப்பதோடு, கொள்கைகளிலும், அனுஷ்டானங்களிலும் நல்ல பரிசுத்தமான உள்ளும் புறமும் ஒத்த நாஸ்திகனாய் இருக்க வேண்டும். வேறு யாராவது நாஸ்திகர் என்கின்ற பதத் திற்கு கடவுள் இல்லை என்கின்ற அர்த்தம் சொல்ல வருவார்களானால் அதற்கும் நீங்கள் பயப்படாதீர்கள். ஏனென்றால் அவர்கள் சொல்லும் கடவுளை முதலாவது ஒரு மனிதன் இல்லை என்று சொல்லவே முடியாது. அப்படி ஏதாவது சொல்ல நேர்ந்தாலும் அதனால் கடவுள் இல்லாமலும் போய்விடாது, அன்றியும் அந்தக் கடவுளுக்காக இம்மாதிரி ஆசாமிகள் வக்கீலாகவும் இருந்து அந்தக் கடவுள்களைக் காப்பாற்றவும் வேண்டியதில்லை. கடவுளைக் கண்டுபிடிக்க அகச்சான்று புறச்சான்று வேண்டாம். யாராவது ஒருவன் உங்களை வந்து, ‘என்னப்பா, கடவுள் இல்லை என்று சொன்னாயா’ என்று கேட்டால், அவன் ஒரு மூடனாகவோ அல்லது அயோக்கியனாக வோதான் இருக்க வேண்டும். ஆதலால் அப்படிப்பட்டவனைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். அன்றியும் அப்படிப்பட்ட நபர்களை திருப்தி செய்யக் கவலைப்படாதீர்கள்.

பொதுவாக, நீங்கள் உங்கள் மனதில் உங்கள் பகுத்தறிவின் ஆராய்ச்சிக்கு எது சரி என்று படுகின்றதோ அதை நம்புங்கள். ஒழுக்கத்தைக் கடைபிடியுங்கள்! ஒழுக்கத்தின் சாரம் ஒரு மனிதன் மற்ற மனிதனுக்கு நியாயம் என்கிற முறையில் துன்பத்தை, விளைவிக்காமல் இருப்பது; ஜீவன்களிடத்தில் அன்பு, இரக்கம், காருண்யம், உபகாரம், சத்தியம் முதலிய குணங்களோடு நடந்து கொள்வது; இவ்வளவு இருந்தால் போதும்! இந்தக் குணப்படி ஒவ்வொரு மனிதனும் நடந்து கொண்டால் இதற்கு எல்லா பலனும் மற்றும் என்ன என்ன பதவி உண்டோ அவ்வளவும் கிடைத்துத் தீரும். நீங்கள் எதிர்பார்த்தபடியே நீங்கள் ஏமாற்றமடையாமல் அவர்களும் (உயர்திரு. கண்ணப்பர், தெண்டபாணி) வந்துவிட்டார்கள். அவர்களும் பேச வேண்டியிருப்பதால் வாலிபர்களை மட்டும் மீண்டும் வற்புறுத்தி நமது இயக்கமே, சுயமரியாதையே தேசவிடுதலை, மக்கள் விடுதலை என்பதை ஞாபகத்திலிறுத்தித் தொண்டு ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குற்றமிருந்தால் தள்ளிவிடுங்கள் அறிவுக்குச் சரி என்று பட்டால் செய்கையில் பின்பற்றி நடக்க முற்படுங்கள். உங்களால் முடியாவிடில் முன்வரும் வாலிபர்களின் ஊக்கத்தைத் தடுப்பது கூடாது.

குறிப்பு : *21-01-1929 ஆம் நாள் புதுச்சேரியில் நடைபெற்ற பொதுக்கூட்டச் சொற்பொழிவு .*

**குடி அரசு - சொற்பொழிவு- 27.01.1929**



RangaRakes tamilnavarasam.com

# புதுச்சேரியில்
# சுயமரியாதை கிருகப் பிரவேசம்

சகோதரர்களே! பெரியோர்களே!

இப்புதுவை முத்தியால் பேட்டையிலுள்ள உயர்திரு. கி. இராஜ கோபால் செட்டியார் அவர்களின் அழைப்புக்கு இணங்கி இப்புதுமனை திறப்பு விழாவிற்கு வருவதற்கு ஒப்புக் கொண்டேன். இப்பிராஞ்சு தேசத் திலுள்ள நீங்கள் என் வேலையின் அவசியத்தை நன்குணர்ந்து பின்பற்றி ஆதரித்து செய்கையிலும் செய்து காட்ட முன் வந்தது பற்றி மகிழ்கிறேன். திரு.கி.இராஜகோபால் செட்டியார் அவர்களின் புதுமனை திறப்பில் கலந்து கொள்ள வந்த பெரியார்களாகிய தாங்கள் எனக்கு இத்தகைய சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்கு உங்கள் அனைவர்க்கும் எனது நன்றியுடையது. இன்று மாலை நடக்கும் பொதுக் கூட்டத்தில் நமது சுயமரியாதை இயக்கம் என்பது பற்றி விவரமாய் பேசுகின்றேன்.

*குறிப்பு : 21-01-1929 திங்கள் காலை திரு.கி.இராஜகோபால் செட்டியார் புதுவை முத்தியால் பேட்டை புதுமனை திறப்பு விழாச் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு- 27.01.1929**



# தென்னிந்திய செங்குந்தர் மகாநாடு

தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு ஈரோட்டில் இம்மாதம் 19, 20-ந் தேதிகளில் வெகு சிறப்பாய் நடந்தேறியது. அதோடு கூடவே வர்த்தக மகாநாடும் வாலிப மகாநாடும் நடந்தேறி இருக்கின்றன. மேல்கண்ட மகாநாடுகளைத் திறந்து வைத்த கனவான்களும் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டி அக்கிராசனர்களும் மகாநாடுகளின் தலைவர்களும் செய்த சொற் பொழிவுகள் நீண்ட வியாசங்கள் ஆனதால் அவற்றைக் 'குடி அரசி'ல் பிரசு ரிப்பது சாத்தியமற்றதாய் இருந்ததால் பிரசுரிக்க முடியவில்லை, என்றாலும் மகாநாட்டுக்கொடியை உயர்த்திய காஞ்சீபுரம் மாஜிசேர்மென். திரு. ம.த. சாமிநாத முதலியார் அவர்களது உபந்யாசம் செங்குந்த சமூகத்தின் பெருமை யை எடுத்துக்காட்டும் முறையில் கந்த புராணத்தில் உள்ள முருகன் உற்பவக் கதையாகவே இருந்தது. மகாநாட்டைத் திறந்து வைத்த திரு.திவான் பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் சொற்பொழிவில் விவசாயமும் கைத் தொழிலும் நாட்டுக்கு முக்கியமென்று சொல்லி "கைத் தொழிலை விர்த்தி செய்ய வேண்டும், உலக வியாபார பாஷையாகிய ஆங்கிலத்தை விர்த்தி செய்ய வேண்டும், பெண்களுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும். செங்குந்த வாலிபர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று நெசவு சம்மந்தமான தொழில் கற்க வேண்டும்" என்றும் இது விஷயத்தில் அபிவிர்த்தி மந்திரி கனம் சேது ரத்தினமய்யரிடம் தாம் சிபார்சு செய்வதாகவும் சொன்னது மிகவும் குறிப் பிடத்தக்கதும் நன்றி செலுத்தத் தக்கதுமாகும்.

வரவேற்பு அக்கிராசனர் திரு.வி.எஸ்.செங்கோட்டையா அவர்களின் வரவேற்பு உபன்யாசம் மிக நீண்டு இருந்ததில் புராணக் கதைகளும், பண்டைப் பெருமைகளும் செங்குந்தர் பிரிவுகளும் சில பாகத்தை ஆக்கிர மித்துக் கொண்டாலும் ஒற்றுமை, கல்வி, கைத்தொழில், வியாபாரம், கூட்டுறவு முறை முதலிய முக்கிய விஷயங்களைப் பற்றி தெளிவாய் எடுத்துக் கூறி வற்புறுத்தி இருப்பது மெச்சத்தக்கதாகும்.

கூட்டுறவு பாங்கி விஷயத்தைப் பற்றி அவர் சொல்லி இருக்கும் விஷயம் எல்லாவற்றிலும் முக்கியமானது என்பதோடு அச்சமூகப் பிரமுகர் கள் உடனே அமுலுக்குக் கொண்டு வர வேண்டிய காரியம் என்றும் கருதக் கூடியதாகும்.

மகாநாட்டுத் தலைவர் புதுவை திரு. எ.வி.முத்தையா முதலியார் அவர்கள் தலைமைப் பேருரை மிகமிகப் போற்றத்தக்கதாகும். பண்டைப்



RangaRakes tamilnavarasam.com

பெருமையைச் சொல்லி மகிழ்வதோ, புராணக் குப்பைக் கதையைச் சொல்லி பெருமை கொள்ளுவதோ ஒரு சிறிதும் அதில் இல்லை. அவர் கூறியவற்றுள் முக்கியமாக "உலகத்தில் இப்போது தோன்றி நிற்கும் உயர் இயக்கத்தில் ஒழுக்க இயக்கத்தில் சேராதவர்கள் தாழ்வடைந்து விடுவார்கள். ஒழுக்கம் குன்றி, வேஷம் மிகுந்ததாலேயே, குலம் தாழ்ந்தது, இந்தத் தாழ்ந்த நிலைக்கு மக்கள் வர நேர்ந்தது என்றும் சொல்லி "அப்பேர்ப்பட்ட உயர் இயக்கம் நடைபெறத் தடை செய்யாமல் இருப்பதே ஒழுக்கத்தின் கடமை". என்றும் வெறும் ஆசாரங்களால் கட்டுண்டு நிற்பது மனிதத்தன்மை அல்ல என்றும் உண்மையை மறைத்து நிற்கும் இருளைப் போக்க வேண்டும் என்றும் உண்மையான பரிசுத்தத்தை மறந்துவிட்டு வெறும் பழக்கம் வழக்கம் என்கின்ற மூடநம்பிக்கையில் விழுந்து உழலுகின்றோம் என்றும், செங்குந்த மக்களிடை சில உயிரற்ற ஆசாரங்கள் உண்டு என்றும் இந்தக் குல ஆசாரங்களிலேயே பிறர் ஏளனமும் அவமதிப்பும் செய்கிறார்கள் என்றும், ஒரு குலத்தவர்களை அச்சார்பாளரிடம் பரவி இருக்கும் தீய வொழுக்கங்களே தாழ்த்துகின்றன என்றும் மற்றும் பிள்ளைகளை அளவுக்கு மீறிப் பெற்று விடுவதில் உள்ள கஷ்டங்களையும் எடுத்துச் சொல்லி பிள்ளைப் பேற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும்,

உண்மையின் பின் சென்றால், போலிச்சாதியார் உண்மைச்சாதியார் என்கின்ற சண்டைகள் நிகழா என்றும், பிறழ்ச்சியான வழியில் வந்தவர்கள், தாங்கள் நேர்வழியில் வந்தவர்கள் என்று சாதிக்க மாட்டார்கள் என்றும், தங்கள் வழி யாதாயினும் தங்களிடையே நல்லொழுக்கத்தை அமைத்துக் கொள்வதே முன்னேற்றத்தின் முதற்படி என்றும், உலகப் போக்கையும் உயர் இயக்கத்தையும் ஒழுக்கத்தின் உண்மையையும், அதன் அமைப்பையும் நன்றாய் அறிந்து கொண்டால்தான் நம்மிடையில் உள்ள கொடிய ஆசாரங்கள் தொலையும் என்றும், கல்வி விஷயத்தில் மேல்கண்ட ஒழுக்கத்திற்குத் துணை நிற்கும் கல்வியே வேண்டுமல்லாமல், ஒழுக்கமற்ற கல்வி வேண்டாம் என்றும், பெண்கள் விஷயத்தில் எங்கே பெண்கள் முன்னேற்றமடைய வில்லையோ அக்குலத்தவர்கள் தாழ்ந்த குலத்தவர்கள் ஆக இருப்பார்கள் என்றும், ஒழுக்கம் என்பது ஆண்பெண் இரு பாலாருக்கும் சமம் என்றும் சரிபகுதியான பெண்மக்களைச் சேர்க்காமல் ஆண் மக்கள் மாத்திரம் தமது ஜாதியை முன்னுக்குக் கொண்டுவர முயற்சிப்பது காலில்லாமல் நடக்க ஆசைப்படுவது போன்றது என்றும், தொழிலைப் பற்றிச் சொல்லும்போது தொழில் செய்வார்களுக்கு நாணயமும் நம்பிக்கையும் இருக்க வேண்டும் என்றும் தேகப்பிரயாசை கொஞ்சமானதும் கூலி அதிகம் கிடைக்கக் கூடியதுமான தொழில்கள் நடைபெற வேண்டு மென்றும், மதவிஷயத்தில் கோயில் கட்டுவதிலும் உத்சவங்கள் செய்வதிலும், பொருள்கள் செலவாகின்றன வென்றும் இதனால் என்ன பயன் என்றும், தற்புகழ்ச்சி தற்பெருமைக்கு என்கின்ற அறியாமை இல்லாவிட்டால் இச் செலவை அறிவாளிகள் செய்யமாட்டார்கள் என்றும், அப்படி ஏதாவது கடவுள்



கஷ்டநஷ்டப்படுத்தினால் அப்படிப்பட்ட கடவுள் கடவுளாகா தென்றும் கோவிலிலிருக்கும் கடவுளுக்கென்று செய்யும் காரியங்கள் யாதொரு பலனையும் கொடாது என்றும் கஷ்டப்படும் மனிதர்களை கடவுளாக நினைத்து அவர்களுக்கு வேண்டியது செய்வதே நன்மை என்றும் பலதுறைகளிலும் உண்மையைத் தைரியமாய் எடுத்துச் சொல்லி இருக்கிறார்.

அடுத்தாற் போல், வர்த்தக மகாநாட்டின் வரவேற்புத் தலைவர். திருச்செங்கோடு திரு. கந்தப்ப முதலியார் அவர்களின் வரவேற்பு உபன்யாசத்தில், அச்சமூகத்தாருக்கு மாத்திரமல்லாமல் பொதுவாக இந்திய வர்த்தகத்திற்கே முக்கியமான பல யோசனைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. கூட்டுறவுத் துறையில் வியாபாரத்தை பெருக்கப் பலவழிகளும் சொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. செங்குந்த சமூகத்திற்கென்று ஒரு தனி கூட்டுறவு இலாக்கா ஏற்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் மனதார ஆதரிப்பதோடு அதை அரசாங்கத்தாரும் கவனிக்க விரும்புகின்றோம்.

வர்த்தக மகாநாட்டுத் தலைவர் திருவாளர். தென்காசி ப.கு.ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையுரையில் வர்த்தகர்களுக்கு சில பொருத்தமான யோசனைகள் காணப்படுகின்றதுடன், நெசவுத் தொழில் நசித்துப் போவதற்குக் காரணம் போதிய ஊதியம் இல்லாததுவே என்றும், பிள்ளைகளுக்கு பழையமுறை நெசவுத் தொழிலைக் கற்பிப்பது பயனற்றதென்றும் புதிய முறைகளைக் கற்பிக்க வேண்டும் என்றும் காணப்படுவதோடு, கடைசியாக தனவந்தர்களும் சந்ததி இல்லாதவர்களும் வியாபாரிகளும் கோயில் முதலிய தர்மங்களுக்கும், மறுபிறப்பில் பயன்தருவதாய்ச் சொல்லப்படும் காரியங்களுக்கும் சில காலத்திற்காவது செலவு செய்யும் பொருள்களை நிறுத்தி இம்மை வாழ்க்கையில் நம் முன்னேற்றத்திற்காக வழங்கி வந்தால் அதைவிட பெரும்புண்ணியத்தை அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை என்று சொன்னதோடு நூற்றாண்டுகளுக்கு முன்செய்து வந்த முறையிலேயே தொழில்களைச் செய்யக் கூடாது. நவீனமானதும் அதிக ஊதியம் தருவதுமான தறிகளையும் அவசியமான இயந்திரங்களையும் கொண்டு அப்போதைக்கப்போது புதுமாதிரியான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று சொன்னவைகள் செங்குந்த சமூகத்தாரும் இதர சமூகத் தாரும் மிகுதியும் கவனிக்கத் தக்கது என்போம்.

## வாலிபர் மகாநாடு

பிறகு கூடிய வாலிப மகாநாட்டு வரவேற்பு அக்கிராசனர் திரு.என்.எம். ஷண்முகசுந்தரமுதலியார் வரவேற்பு உபன்யாசத்தின் ஆரம்பத்திலேயே சுயமரியாதை உணர்ச்சியையும் சமூகசீர்திருத்தத்தையும் மக்களின் விடுதலைக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டியதுடன் அவற்றிற்கு வாலிபர்களே தகுந்தவர்கள் என்று வற்புறுத்தி இருப்பது நாட்டின் உண்மை நிலையை நன்றாய் உணர்ந்து



RangaRakes tamilnavarasam.com

கூறியதாகும். அன்றியும் விவாதமான அரசியல் துறையில் இறங்கி குழப்பம் முதலான தீயவழியிலிழுக்கப்பட்டு பேராபத்தை விளைவித் துக் கொள்வது இளைஞரியக்கத்திற்குச் சிறிதும் ஏற்காது என்று குறிப்பிட்டி ருப்பது நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு வாலிபரும் கருத்தில் இருத்தி வைக்க வேண்டிய பொன்போன்ற வாசகமாகும்.

சமூக சமரசமில்லையாயின் நாம் விடுதலையைப் பெற இயலாது; பெற்றாலும் நிலைக்காது என்பது கல்லின் மேலெழுதி வைக்க வேண்டிய சொல்லாகும். முன்னேற்றத்திற்குத் தடையாயுள்ள எதையும் ஒழிக்க வேண்டும். இத்துறையில் வயதான பெரியோர்களின் மனஸ்தாபத்தை லட்சியம் செய்யக் கூடாதென்றும், பெண் கல்வி, விதவா விவாகம் முதலிய வைகளைத் தாராள நோக்கத்துடன் வலியுறுத்தி, ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட விவாகங்கள் செய்து கொண்டு பெண்களுக்கு விதவா விவாகத் தைக் கூட அனுமதிக்க ஆக்ஷேபிப்பது பெரிய பாதகமான செயலாகும் என்று சொல்லியிருப்பதும், ஒழுக்கம், தேகப் பயிற்சி ஆகியவைகளை வலியுறுத்தி இருப்பதும் வாலிபர்களுக்கு தக்க உபதேசமாகும்.

மகாநாட்டுத் தலைவர் திருவாளர் குடியாத்தம் மா.வெ. பீமராஜ முதலியார் அவர்களது தலைமைப் பேருரையில் சமூக இயக்கங்களின் அவசியத்தையும் சமூக சீர்கேட்டிற்குக் காரணம் ஜாதி வித்தியாசத்தை மதத் தோடும் கடவுளோடும் இணைத்திருப்பதே யென்பதையும், சமஉரிமையும் சமசந்தர்ப்பமுமில்லாத நாடு விடுதலையடையாது என்பதையும் முன்னேற்றமடைந்து முதற்படியிலிருக்கும் பார்ப்பனர்களே, பிராமணசபை கூட்டும்போது நாம் நமது சமூக சபை கூட்டி சமத்துவத்திற்குப் போராடுவது குற்றமல்ல என்றும், துருக்கி, ஆப்கான், ருஷியா, சைனா, ஜப்பான் முதலிய தேசங்கள் விடுதலை பெற்றதைக் கவனிக்கும்படிக்கும் குறிப்பிட்டிருப் பதுடன் பொருள் அறியாது தேவாரம் படித்து விபூதி, ருத்திராக்கமணிவதும் அடியார்கள் சரித்திரமும் கடவுள் திருவிளையாடலையும் படிப்பதும் பாடம் பண்ணுவதும், கலாசாலை பட்டம் பெறுவதும் மதமும் கல்வியுமாகிவிடாது என்றும், உலக அனுபவமே சரியான கல்வியாகும் என்றும், புராணப் பெருமை போதாதென்றும், சுய ஆராய்ச்சிக்கு மதிப்பு கொடுக்க வேண்டு மென்றும், குறிப்பிட்டுவிட்டு கைத்தொழில் விஷயத்தில் இயந்திரங்களோடு போட்டிபோட வேண்டிய இக்காலப் போக்கில் பல நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த நிலைக்குப் போக வேண்டு மென்பது நாடு க்ஷீணித்துப் போவதற்கு காரணமாகுமென்றும் வெறும் நெசவுத் தொழிலே குலதர்மம் என்று எண்ணி இருந்ததே நமது வறுமைக்குக் காரணமென்றும், ஒவ்வொருவரும் தங்களால் கூடிய எல்லா தகுதியான தொழிலையும் செய்ய முந்த வேண்டும் என்றும் குறிப்பிட்டிருப்பதுடன் கோவில், உத்சவங்களுக்கு பொருள் செலவிடுவது பற்றியும், கோவில்களினால் உண்டாகும் விபரீத பலன்களைப் பற்றியும், மத விஷயத்தில் முரட்டு நம்பிக்கையை விடவேண்டும் என்றும், நமக்குப் பொருந்தாததும், விளங்காததுமான நூல்களும் நமக்கு சரியென்று அனுபவத் திற்குத் தோன்றாத கொள்கைகளும் வேண்டியதில்லை என்றும் நம் மக்க ளுக்கு குறுகிய புத்தி உண்டானதற்கு நமது சமயத்தில் சொல்லப் பட்டவை களை சத்தியம் என்று நம்பினதே முக்கிய காரணம் என்றும், பெண்களுக்கு சமஉரிமையும் சொத்துரிமையும் வேண்டுமென்றும் குறிப்பிட்டிருப்பதும் எல்லோரும் கவனித்துப் பார்க்கத்தக்கதாகும்.

தீர்மானங்களைப் பற்றிய முழுத் தகவல்கள் இதுவரை தெரியவில்லை. ஆயினும் கூடுமானவரை முற்போக்குள்ள அறிகுறிகளே காணப்படுகின்றன. மகாநாடு நடத்திய திறமையும், பிரதிநிதிகள் முதலியவர்களுக்கு செய்து கொடுத்த சவுகரியங்களும் போற்றற்குரியதே யாகும். பொதுக் காரியதரிசி. திரு. டி.வி. நடேசமுதலியார் அவர்களும் மற்றும் உள்ளூர் வாசிகளான திரு.ந.மு. ஷண்முகசுந்தரம், சென்னியப்பன், மீனாக்ஷி சுந்தரம், மொட்டயப்ப முதலியார், செங்கோட்டையா பிரதர்ஸ், வி.வி.சி.பிரதர்ஸ் முதலியவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் மகாநாட்டின் இவ்வளவு பெருமைக்கும் காரணமென்று சொல்வது மிகையாகாது. ஆனாலும், புராணக் கூற்றிற்கு அடிமைப்பட்டவர்களும் தங்களை உயர்ந்த ஜாதியென்று நினைத்துக் கொண்டிருக்கும் ஆணவப்பான்மையுடையவர்களுமாய் உள்ள ஒரு சிலரும் தங்கள் மனப்பான்மையை மாற்றிக் கொண்டு பகுத்தறிவிற்கு மதிப்புக் கொடுக்க இசைந்து தொண்டாற்ற முன்வந்துவிடுவார்களானால் செங்குந்த சமூகம் மாத்திரமல்ல; இத்தேச மக்கள் எல்லோருக்குமே சுதந்திர உணர்ச் சியும் சுயமரியாதையும் திடீரென்று ஏற்பட்டுவிடும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. செங்குந்த சமூகம் ஒரு பெரிய முற்போக்குள்ள சமூகமான தாலும் தக்க செல்வந்தர்களும் ஊக்கமுள்ளவர்களும் தாராள நோக்கமுள்ள வர்களும் பொதுக்காரியங்களுக்கு தாராளமாய் உதவக் கூடியவர்களும் எவ்வித இயக்கத்திற்கும் தயாராயுள்ள வாலிபர்களும் மலிந்துள்ள சமூக மானதால் அது பிராமண மகாநாடு, சௌராஷ்டிர பிராமண மகாநாடு, விஸ்கர்மா பிராமண மகாநாடுகள் போன்று ஜாதிப் பெருமையை சொல்லிக் கொண்டு மற்றவர்களைவிட தாங்கள் உயர்ந்தவர்கள் என்கின்ற மந்திரத்தில் இல்லாமல் தற்கால நிலைக்கேற்ற வண்ணம் நாட்டின் விடுதலைக்கும் சுயமரியாதைக்கும் உதவ வேண்டுமென்பதே நமது அவா. ஆதலால், இவற்றைப் பற்றி இவ்வளவு விரித்து நமது ஆசையையும் தெரிவித்துக் கொண்டோம். அடுத்த மகாநாடு இது போல் பதினாயிரக் கணக்கான ரூபாய் களை செலவு செய்யாமலும் இந்த மகாநாட்டுத் தீர்மானங் களைவிட தாராள மனப்பான்மையுடன் ஒருபடி முன்னேறியும் வெற்றியுடன் நடைபெற வேண்டுமென்று எதிர்ப்பார்க்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 27.01.1929**





RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனப் பட்டங்களின் இரகசியம்

**– சித்திரபுத்திரன்**

பார்ப்பனப் புரட்டுகளின் வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, புராணம் ஆகியவைகளில் மிகுதியும் பொதிந்து கிடப்பது பட்டங்களே ஆகும். அதாவது தேவர், சுரர், அசுரர், ரிஷி, முனி, ராக்ஷதர், ஆழ்வார், நாயனார் போன்ற வார்த்தைகளேயாகும். இவ்வார்த்தைகள் கொண்ட பட்டமுடையவர்கள் தான் இப்போதும் மக்களுடைய நீதிக்கும் வாழ்க்கைக்கும் ஆதாரமானவைகள் என்று எழுதி வைத்திருக்கும் அநேக விஷயங்களுக்கும் கர்த்தாக்களாய் இருக்கிறார்கள். இவர்களைப் பற்றி ஏதாவது குற்றம் சொல்லுவது பெருத்த தோஷங்களாகக் கற்பிக்கப்பட்டும் இருக்கின்றன. எனவே இப்பட்டங்கள் யாருக்கு எந்த சந்தர்ப்பத்தில் கிடைக்கின்றது என்று பார்த்தால், பார்ப்பனர்களுடைய நன்மைக்கு ஆளாயிருக்கின்றவர்களுக்கெல்லாம் சாதாரணமாய்க் கிடைத்து விடுகின்றது. அவர்களுக்கு விரோதமாய் இருக்கின்றவர்களுக்கும் அசுரன், ராக்ஷதன் என்கின்ற பெயர்கள் கிடைத்து விடுகின்றன.

ஆனால் இவர்களால் உயர்ந்த பட்டங்களாகிய தேவர், முனிவர், ரிஷி போன்ற பட்டம் பெற்றவர்களுக்கும் தாழ்ந்த பட்டங்களாகிய ராக்ஷதர் அசுரர் போன்ற பட்டம் பெற்றவர்களுக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கின்றதா என்று பார்த்தால் நடவடிக்கையில் ஒழுக்கத்தில் உயர்ந்த பட்டம் பெற்றவர்களை விட தாழ்ந்த பட்டம் என்பதை பெற்றவர்களே பெரிதும் சிறந்தவர்களாயிருக்கின்றார்கள். ஆனால் உயர்ந்த பட்டத்திற்கும், தாழ்ந்த பட்டத்திற்கும் பார்ப்பனர்கள் சொல்லும் காரணங்கள் என்ன வென்றால், தேவர்களுக்கு இடையூறு செய்தவர்கள் இராக்ஷதர்கள் என்றும் சுரர்களுக்கு இடையூறு செய்தவர்கள் அசுரர்கள் என்றும் சொல்லப் படுவதைத் தவிர வேறு காரணங்கள் கற்பித்திருப்பதாக எங்கும் காணக் கிடைக்கவில்லை.

சமீப காலத்தில் திலகருக்கு ரிஷிப் பட்டமும் டாக்டர் சுப்ரமணிய அய்யருக்கு முனீந்திரர் பட்டமும் அரசியல் உலகில் பார்ப்பனர்களால் இடப்பட்டது. ஆனாலும் இவைகள் பார்ப்பனச் சட்டப்படி வைதீக உலகத்தில் செல்லாததாக இருக்கலாம். ஆனால் இந்த வாரப்பத்திரிகையில் சங்கராச்சாரி ஆழ்வார் மகாராஜாவிடம் அவரது உடலவ்வளவு எடை வெள்ளி வாங்கிக் கொண்டு அவருக்கு ஒரு ராஜரிஷிப்பட்டம் அளித்திருப்பதாகவும் அதற்காக



RangaRakes

மறுபடியும் ஆழ்வார் ராஜா ஒரு பெரிய மகாவிஷ்ணு யாகம் செய்யப் போவதாகவும், அதற்கு பதினாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து லக்ஷப் பிராமண போஜனம் செய்ய ஆழ்வார் மகாராஜா தீர்மானித்திருப்பதாகவும் வெளியாகி யிருக்கின்றது.

ரிஷி என்பது பெரிய பட்டம். அது இந்தியா முழுமைக்கும் "மேல் லோகத்திற்கும்" "கீழ் லோகத்திற்கும்" கூட பாத்தியப்பட்டது. அப்படிப்பட்ட பட்டம் பெற்ற ஆழ்வார் மகாராஜாவைப் பற்றி நம் நாட்டு மக்களில் யாருக்காவது ஏதாவது தெரியுமா? ரிஷிகளுக்குச் சொல்லப்படும் பெருமைகள் போல ஆழ்வார் ராஜாவிடம் என்ன பெருமைகள் இருக்கின்றன? அவர் யாருக்கு என்ன நன்மை செய்தார்? சங்கராச்சாரிக்குப் பணம் கொடுத்திருப்பார். இவருக்குத் தன்னளவு எடை வெள்ளி கொடுத்திருப்பார். பார்ப்பனர்களுக்கு வயிறு வெடிக்க சாப்பாடும், கஞ்சாவுக்கும் பூரணாதி லேகியத்திற்கும் தாராளமாய் தக்ஷணையும் கொடுத்திருப்பார், இதைத் தவிர வேறு என்ன செய்தார்?

இதுபோலவே கொஞ்ச காலத்திற்கு முன் தென்னாட்டு சங்கராச்சாரிகளில் ஒருவர் ரூபாய் 10000 பெற்றுக் கொண்டு ஒருவருக்கு தீர்த்தபதி என்ற பட்டம் கொடுத்தாராம். மற்றொரு நாட்டுக் கோட்டையாரிடம் 7000 ரூபாய் பெற்றுக் கொண்டு தர்ம பூஷணம் என்று பட்டம் கொடுத்தாராம். மலையாளத்துப் பார்ப்பனர்கள் தங்கத்தில் மாடு செய்து அதன் வயிற்றில் கொஞ்ச நேரம் மலையாளத்து ராஜாவை இருக்கச் செய்து பிறகு அவரைப் பிராமணராக்கி விட்டு தங்கமாட்டை வெட்டி பங்கு போட்டுக் கொள்ளுகிறார்கள். பிறகு ராஜா கோவிலுக்குள்ளும் விடப்படுகின்றார். பார்ப்பன பந்தியிலிருந்து சாப்பிடவும் அனுமதிக்கப்படுகின்றார். இதுபோல் இன்னமும் எத்தனையோ பட்டங்கள் வழங்கப்பட்டு அவைகள் நம்மவர்களால் வாலாக ஒட்டவைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் சர்க்கார் கொடுக்கும் பட்டத்தை மாத்திரம் சர்க்கார் தாசர்களுக்குப் பிரசாதம் என்றும், தேசத் துரோகம் செய்ததற்குச் சன்மானம் என்றும், சிலர் சொல்லுகின்றார்கள். சர்க்கார் பட்டம் சர்க்கார்தாசர்களுக்கு சன்மானமானால் பார்ப்பனர்கள் தரும் பட்டத்திற்கு என்னவென்று பெயர் வைப்பது? ராவணன் ராக்ஷதனானதற்கும், விபீஷணன் ஆழ்வார் ஆனதற்கும் காரணம் என்ன? பார்ப்பனப் புராணப்படியே பார்த்தாலும், ராவணனோ மகா சிவபக்தனாம், வேதம் படித்ததினால் பிராமணன் என்றுகூட சொல்ல வேண்டியவனாம்! ஒழுக்கத்திலும் தவத்திலும் சிறந்து விளங்கி கடவுள்களுக்குத் திருப்தி செய்து அரிய பெரிய வரங்கள் பெற்றவனாம். ஆனால் அவன் செய்த தப்பிதம் என்னவென்றால் தேவர்களுக்கு இடுக்கண் செய்ததுதானாம். இதுபோலவே இராக்ஷதர்கள் என்பவர்கள் மீது சுமத்தப்பட்ட தப்பிதங்க ளெல்லாம் மிகுதியும் தேவர்களுக்கு திருப்தியாய் நடந்து கொள்ளுவது தானே ஒழிய வேறு ஒன்றையும் பார்ப்பனப் புராணங்களிலேயே காண முடியவில்லை.



tamilnavarasam.com

எனவே, தேவர்கள் என்றால் யார் என்று கவனிப்போமானால் தேவலோகத்தில் உள்ளவர்கள் தேவலோகமோ நமக்குத் தெரியாததும் நமது புத்திக்கும் அறிவுக்கும் படாததுமாக இருப்பதால் அதைப்பற்றி நாம் எடுத்துக் கொள்ளும் கவலை வீணானதாகும். ஆனால் பூதேவர்களைப் பற்றிய ஆராய்ச்சி அவ்வளவு வீணானது ஆகாது. ஏனெனில் பூதேவர்கள் என்பவர்கள் பிராமணர்கள்; பிராமணர்கள் என்பவர்களை நமது பார்ப்பனர்கள் தாங்கள்தான் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆகையால் அதைக் கண்டுபிடிப்பது கஷ்டமானதல்ல. ஆனதால் நமது பூதேவர்களான பார்ப்பனர்களும் தமது பட்டங்கள் வழங்குவதில் தேவர்கள் என்பவர்களையே பின்பற்றி தங்களுக்கு இதமாய் இருப்பவர்களுக்கு ராஜரிஷி, பிரம்மரிஷி, ஆழ்வார், முனிவர், நாயன்மார்கள் முதலிய பட்டங்களும் தங்கள் நலத்திற்கு இடையூறாய் இருப்பவருக்கு ராக்ஷதர், அசுரர், சூரன் முதலிய பட்டங்களும் வழங்குவதைப் பார்க்கின்றோம். இன்றைய தினமும் நம்மவர்களிலேயே பலர் "ரிஷிகள் சொன்னார்கள், முனிவர்கள் சொன்னார்கள், ஆழ்வார்கள் சொன்னார்கள், நாயன்மார்கள் சொன்னார்கள்; அப்படிப் பட்டவர்கள் சொன்னதை மறுக்கலாமா? கண்டிக்கலாமா? யுக்தியினால் தர்க்கிக்கலாமா? அப்படித் தர்க்கிப்பது நாஸ்திகமல்லவா?" என்றும் வாது புரிய வருகின்றார்கள். ஆனால் இவர்களை "ரிஷிகள் என்றால் என்ன? முனிகள் என்றால் என்ன? ஆழ்வார்களின் யோக்கியதை என்ன? நாயன்மார்களின் நாணயம் என்ன?" என்று கேட்டு விட்டால் நிலத்தைப் பார்த்துக் கொண்டு தலையைச் சொரிந்து கொள்ளுகின்றார்கள். நாயன்மார்கள் பேராலும், ஆழ்வார்கள் பேராலும், ரிஷிகள், முனிவர்கள் பேராலும் தங்கள் வாழ்க்கையையே ஏற்படுத்திக் கொண்ட சிலர், மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டு, தமக்கே புரியாமல் எதையாவது உளறிக் கொண்டு பாமர மக்களை ஏமாற்றுவதில் வெகு கவலை உள்ளவர்களாய் இருக்கின்றார்கள். நமக்கு இக்கூட்டத்தாரின் எவ்வித ஏமாற்றமான வயிற்றுப் பிழைப்பைப் பற்றியும் கவலை இல்லை. ஆனால் இதை நம்பும் பாமர மக்களின் கதி என்ன ஆவது என்கின்ற கவலைதான்! அண்ணனை எதிரிக்கு காட்டிக் கொடுக்காமல் இருந்தால் விபூஷணன் ஆழ்வாராக ஆகியிருக்க முடியுமா? யாகத்தையும் வேதத்தையும் ஆதரிக்காமல் இருந்தால் நால்வர்கள் நாயன்மார்களாக ஆகியிருக்க முடியுமா? புத்தர் விக்கிரகத்தை உடைக்காமல் இருந்தால் திருமங்கை மன்னன் ஆழ்வாராக ஆகியிருக்க முடியுமா? வர்ணாசிரம தர்மத்தைப் பிரசாரம் செய்யாமலிருந்தால் திரு.காந்திக்கு "மகாத்மா" பட்டம் இன்னமும் நிலைத்திருக்குமா? இந்து மதத்தைப் பிரசாரம் செய்யாமலிருந்தால் நரேந்திரநாதர், சுவாமி விவேகானந்தராயிருப்பாரா? மற்றவர்களைப் பற்றிச் சாவகாசமாய்க் கவனிக்கலாம்.

**குடி அரசு - கட்டுரை - 03.02.1929**



# இதற்கு என்ன பதில் சொல்லுகின்றீர்கள்?

உலகத்தின் நாலா பக்கங்களிலும் உள்ள மக்கள் அறிவு வளர்ச்சியும், முன்னேற்றமும் பெற்று, பூரண விடுதலை மார்க்கத்தில் விரைந்து சென்று கொண்டிருக்கும் காலத்தில் நமது தேசத்தில் சிறப்பாக நமது நாட்டில் உள்ள மக்கள் மாத்திரம் இன்னமும் மிருகப் பிராயத்திலேயே இருந்து வர பலமான முயற்சிகள் செய்யப்பட்டு வருவதானது மிகவும் கேலிக்கும் இழிவுக்கும் இடமானது என்பதில் யாருக்கும் அபிப்பிராய பேதமிருக்காதென்றே எண்ணுகின்றோம். சுமார் இரண்டு மூன்று மாதத்திற்குள்ளாக தமிழ் நாட்டில் சோழ மண்டலத்தில் 2 மகாநாடுகள் பிராமண மகாநாடு என்னும் பேரால் நடைபெற்றிருக்கின்றன.

இம்மகாநாட்டில் வெறும் அன்னக்காவடிகளான அல்லது வயிற்றுப் பிழைப்பு பஞ்சாங்கப் பிச்சை ஜீவனக்காரர்களான, பொறுப்பற்ற சில பார்ப்பனர்கள் கூடி மகாநாட்டை நடத்தினார்கள் என்று சுலபத்தில் சொல்லி விட முடியாது.

படித்தவர்கள் என்றும் பொறுப்புள்ளவர்கள் என்றும் நாட்டின் முக்கிய பகுதியார் என்றும் சொல்லிக் கொள்ளும்படியான உத்தியோகஸ்தர்களும், உபாத்தியாயர்களும், வக்கீல்களும், மிராசுதாரர்களும் மற்றும் பல பொறுப்புள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்ளும்படியான பார்ப்பனர்களே பெரிதும் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும் போதே நமது நாட்டின் முன்னேற்றத்திற்கும், மக்களின் விடுதலைக்கும் எதிரிகள், விரோதிகள் நமது நாட்டிலேயே இருந்து கொண்டு பெரும்பான்மையான மக்களை கொடுமைப்படுத்தி வதைத்து வருபவர்களாக இருக்கின்றார்கள் என்பதும், அரசாங்கத்தாரோ அல்லது வேறு மதக்காரர்களோ நமக்கு விரோதிகள் அல்ல என்பதும் நன்றாய் விளங்குகின்றது.

எப்படியெனில், நமது நாட்டு சுயமரியாதைக்கும், சமத்துவத்திற்கும், விடுதலைக்கும் என்னென்ன கொள்கைகளும் ஆதாரங்களும் விரோதமாய் இருக்கின்றனவென்று நாம் கருதுகின்றோமோ, நாம் மாத்திரமல்லாமல் நமது நாட்டிலுள்ள அறிஞர்களும், வெளிநாட்டிலுள்ள அறிஞர்களும், கருதுகின்றார்களோ அவர்கள் எவ்வெவற்றை ஒழிக்க வேண்டுமென்று முனைந்து நிற்கின்றார்களோ அவைகளையே நிலைநிறுத்த இந்தப் பார்ப்பன மகாநாடுகள் தீவிர முயற்சிகள் செய்து வருகின்றன.



RangaRakes
tamilnavarasam.com

உதாரணமாக மதத்தின் பேராலும், வேத சாஸ்திர ஸ்மிருதிகளின் பேராலும் மக்கள் சுயமரியாதைக்கும், சமத்துவத்திற்கும், விடுதலைக்கும் பகுத்தறிவிற்கும் விரோதமானவைகளை அழிக்க வேண்டுமென்பது நமது கவலையும் முயற்சியும் என்றால் இவைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பது இந்தப் பார்ப்பன மகாநாட்டின் கவலையும் முயற்சியும் என்று அவர்களா லேயே வெளிப்படையாய் சொல்லப்பட்டிருக்கின்றது.

அதாவது, சென்ற வாரம் திருச்சியில் கூடிய பார்ப்பன மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளில், "எவனொருவன் சுருதி ஸ்மிருதிகளான சாஸ்திரங்களை ஒப்புக் கொள்ளுகின்றானோ அவன்தான் மகாநாட்டுப் பிரதிநிதியாகலாம்" என்பதாக நிபந்தனை ஏற்படுத்தப்பட்டி ருக்கின்றது. அம்மாதிரியே எல்லோரிடமும் வாக்குறுதியும், கையெழுத்தும் வாங்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

சுருதி, ஸ்மிருதி, சாஸ்திரங்கள் என்பன என்னவென்று பார்ப்போ மானால், வேதம் சாஸ்திரம் புராணம் ஆகியவைகளும், குறிப்பாக பாராசர் ஸ்மிருதியும் மனுதர்ம சாஸ்திரமும் மற்றும் இதுபோன்றவைகளே முக்கியமா னவை. பாராசர் ஸ்மிருதியில் இன்னது இருக்கின்றது என்பதையும் மனுதர்ம சாஸ்திரத்தில் இன்னது இருக்கின்றது என்பதையும் நமது வாசகர்களுக்கு நாம் தெரிவிக்க வேண்டிய கஷ்டம் இல்லை என்றே நினைக்கின்றோம். அநேக தடவை எடுத்துக் காட்டியுமிருக்கின்றோம். அதோடு மாத்திரமல்லாமல், அநேக கூட்டங்களில் அந்த சாஸ்திரங்கள் கொளுத்தப்பட்டும் இருக்கின்றன.

ஆகையால் அவை நமக்கு எவ்வளவு எதிரானவை என்பது தானாகவே விளங்கும்.

எனவே, அப்பேர்ப்பட்ட, நமக்கு இழிவையும் அடிமைத் தனத்தையும் மானக்கேட்டையும் உண்டாக்கத்தக்கதான ஆதாரங்களைக் காப்பாற்றவே, பிரசாரம் செய்யவே, அதில் கண்டுள்ள கொள்கைகளை நம்மீது சுமத்தவே, அம்மகாநாடுகள் நடத்தப்படுகின்றன என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டுமா?

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், முன் குறிப்பிட்டபடி நமது முன்னேற்றத்திற்கு எந்தெந்த சாதனங்கள் தடை என்று கருதி, அவைகளை அழிக்க முற்படுகின்றோமோ அவைகளைக் காப்பாற்றுவதுதான் பிராமண மகாநாடு என்பதன் முடிவு. இந்தப்படி பார்த்தால் இந்த நாட்டில் வேதம், சாஸ்திரம், புராணம் இவைகளின் மேல் நிற்கும் - இவைகளை ஒப்புக் கொள்ளும் - அமுலுக்குக் கொண்டுவர முயற்சிக்கும் பார்ப்பனர்களும் அவர்களது சிஷ்யர்களும் நமக்கு, அதாவது பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு கடும் விரோதிகள் என்பது தான் நமது அபிப்பிராயம்.

ஆதலால் இவ்விரோதிகளின் ஆதிக்கத்தை அடியோடு தரைமட்டாய்



ஒழிக்க வேண்டும் அல்லது இவர்கள் சம்மந்தத்தில் இருந்து அடியோடு விலகி, உலகில் மகமதியர், கிறிஸ்தவர், பாரசீகர், சீக்கியர்கள் முதலியவர்கள் இருப்பது போல் பார்ப்பனர்களையும் நமக்கு சம்மந்தமில்லாத ஒரு கூட்டத்தார் எனக் கருதி அவர்களது கொள்கைகளையும், ஆதாரங்களையும், நம்மீது சுமத்தவிடாமல் விலக்கிவிட வேண்டும். இவ்விரண்டிலொன்று செய்வதுதான் பார்ப்பன இரத்த சம்மந்தமில்லாத மக்களுடைய வேலை யாயிருக்க வேண்டும். அப்படிக்கு இரண்டில் ஒன்று இல்லாதவரை கண்டிப் பாய் பார்ப்பனரல்லாத மக்களுக்கு சுயமரியாதையோ சமத்துவமோ விடுதலையோ கிடையாது என்பதே நமது உறுதியான முடிவாகும்.

பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கானாலும், சுயமரியாதை இயக்கத்திற் கானாலும் ஏதாவது நிபந்தனைகள் ஏற்படுத்துவதாயிருந்தால் அவற்றுள் ஒன்றாக - ஏன் முக்கியமானதாக 'பார்ப்பனர்களுடைய அதாவது இந்து மத சம்மந்தமான வேத சாஸ்திர புராணங்களில் நான் நம்பிக்கை இல்லாதவன்', என்பதாக ஒரு நிபந்தனையைக் கண்டிப்பாய் ஏற்படுத்த வேண்டும் என்பது நமது கருத்தாகும். தவிர தன்னைப் பிராமணனென்று சொல்லிக் கொள்ளு கின்ற எவரையும் நமது எவ்வித முன்னேற்ற சங்கத்திலும், சீர்திருத்த சங்கங்கள் எதிலும் கண்டிப்பாய்ச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பதும் நமது கருத்தாகும். தவிர

'இந்து ராஜாக்கள் அரசாங்கம் இக்காலத்தில் இல்லாததால் மேல்கண்ட வேத சாஸ்திர புராண கொள்கைகளுக்கு கஷ்டம் வந்துவிட்டது' என்பதாக பார்ப்பனர் மகாநாட்டு அக்கிராசனர் கண்ணீர் வடித்திருக்கின்றார்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் என்ன வென்றால், 'அரசியல்' முயற்சியிலும் பிராமணர்களுக்கு அனுகூலமான ராஜியம் ஏற்படுத்தும் முயற்சிகளை நாம் அடியோடு கண்டிப்பாய் ஒழித்தாக வேண்டும் என்பதே. ஆதலால் பார்ப்பனக் கொள்கைகள் கொண்ட இந்து அரசாங்கம் என்பவைகளையும் ஒழித்து நடுநிலைமைக் கொள்கைகள் கொண்ட அரசாங்கத்தையே நாம் ஏற்படுத்த முயல வேண்டும். அது எந்த அரசாங்கமானாலும் நமக்குக் கவலையில்லை. ருஷிய அரசாங்கமானாலும் மேள தாளத்தோடு வரவேற்கத் தயாராயிருக்க வேண்டும். அரசாங்கம் என்பது மக்களின் மானத்திற்கும் சமத்துவத்திற்கும் சுவாதீனத்திற்குமே ஒழிய, அரசாங்கத்தினுடையவோ அல்லது ஒரு தனி வகுப்பு நன்மைக்காகவோ அல்ல என்பதை தைரியமாகச் சொல்லுவோம்.

மற்றும் தலைவர், வேத சாஸ்திரக் கொள்கைகளை இந்து அரசர்கள் ஆதரித்ததால் பிராமணீயம் காப்பாற்றப்பட்டு வந்ததாகவும் அப்பேர்ப்பட்ட இந்து அரசர்கள் இந்தியாவில் அடியோடு நசித்துப் போய் விட்டதாகவும், ஆதலால் பிராமணர்கள் மீது தப்பிதமில்லையென்றும் சொல்லி இருக்கின்றார். இவ்வளவு தூரம் வேத சாஸ்திர புராணக் கொள்கைகளை



RangaRakes
tamilnavarasam.com

ஆதரித்து பிராமணர்களை காப்பாற்றி வந்த இந்து அரசாங்கங்கள் அடியோடு ஒழிந்து போனதற்குக் காரணம் என்ன என்று நாம் மகாநாட்டுத் தலைவரைக் கேட்கின்றோம்.

கர்மத்தில் நம்பிக்கை உடையவன் இதற்குப் பதில் சொல்ல வேண்டுமானால் 'மேல் கண்ட இந்து அரசர்கள் வேத சாஸ்திர புராணங்களை ஆதரித்து பிராமணர்களைக் காப்பாற்றியதால் தான் அவர்களும் அவர்களது ராஜ்ஜியமும் அடியோடு நாசமாய்ப் போய்விட்டார்கள்' என்றுதானே சொல்லுவார்கள். இதை மறுப்பதற்கு தலைவருக்கு யோக்கியதை உண்டா என்று கேட்கின்றோம்.

மற்றும் 'பிற மதஸ்தர்கள் மதப்பிரசாரத்திற்கு ஏராளமான பணம் செலவழிக்கின்றார்கள்' 'நம் மதஸ்தர்கள் தெய்வ ஆராதனம் கூடச் சரி வரச் செய்வதில்லை' என்பதாகச் சொல்லி இருக்கின்றார். எத்தனை கோடி ரூபாய்கள் இந்து மதத்திற்காக இந்துக்கள் என்பவர்களிடமிருந்து செலவாகின்றதென்பது அக்கிராசனருக்குத் தெரியாதா? என்று கேட்கின் றோம். அவர் வாழும் திருவாங்கூர் ராஜியத்தில் திவான் பார்ப்பான் முதல் விபசாரத்திற்கு விதவைப் பார்ப்பனத்திகளைக் கூட்டிவைத்துக் கொண்டு பணம் சம்பாதிக்கும் பார்ப்பனர் வரை ஏறக்குறைய எல்லாப் பார்ப்பனரும் ராஜாங்கத்தின் பொதுப்பணமான வரிப்பணத்திலிருந்து செலவு செய்யும் சத்திரச் சாப்பாடு, கோவில் சாப்பாடு ஆகியவைகளை இன்னமும் சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கின்றார்கள் என்பது அக்கிராசனருக்குத் தெரியாதா? இந்துக்கள் மதப் பிரசாரத்திற்கு எவ்வளவு பணம் செலவு செய்கின்றார்கள் என்பதற்கு இந்த ஒரு உதாரணம் போதாதா?

இதுபோலவே காசியில் நடப்பதும் அக்கிராசனருக்குத் தெரியாதா? மற்றும் தென் இந்தியாவிலுள்ள இந்து கோவில்களுக்கு பூஜை, அபிஷேகம், ரிபேர், புதுக்கோவில் கட்டுதல், கும்பாபிஷேகம், உற்சவம், யாத்திரை, வேண்டுதல் முதலிய துறைகளில் வருஷம் ஒன்றுக்கு 10 கோடி ரூபாய்க்கு மேலும் சடங்கு முதலியவைகளுக்கு வருஷம் 10 கோடி ரூபாய்க்குக் குறையாமலும் செலவு செய்யப்பட்டு வருவது அக்கிராசனருக்கு உண்மையாகவே தெரியாதா என்று கேட்கின்றோம். மற்றும் சாமியார்கள், சங்கராச்சாரிகள், மடாதிபதிகள், பிராமணர்கள் என்னும் பேரால் தீவட்டிக் கொள்ளைகள் போல, பகற்கொள்ளைகள் போல, வருஷா வருஷம் கோடிக் கணக்கான ரூபாய்கள் கொள்ளை அடிக்கப்படுவது தலைவருக்குச் சத்திய மாகவே தெரியாதா என்று கேட்கின்றோம். எனவே மதப் பிரசாரத்திற்காக இன்னமும் என்ன செய்ய வேண்டும், எவ்வளவு பணம் தொலையவேண்டும் என்று அக்கிராசனர் விரும்புகின்றார் என்பது நமக்கு விளங்கவில்லை.

தவிர, அக்கிராசனர் முடிவுரையில், தாங்கள் 'இந்தியாவுக்கு மாத்திரம் பிராமணனாக இருக்கக் கூடாது, உலகத்திற்கே பிராமணனாக இருக்கத்தக்க



பிரசாரம் செய்ய வேண்டும்' என்று சொல்லியிருக்கின்றார். இதிலிருந்து பார்ப்பன ஆசைக்கு உள்ள எல்லை எவ்வளவு என்று தெரிகின்றது. ஆனாலும், இந்தியாவைத் தவிர வேறு நாட்டில் மனுதர்ம சாஸ்திரத்தி னுடையவும், பராசரர் ஸ்மிருதியினுடையவும் ராமாயணம், பெரியபுராணம் முதலிய புராணத்தினுடையவும் கொள்கைகள் கொண்ட பார்ப்பனீயம் தலைகாட்ட முடியுமா? அந்தப்படி தலைகாட்டிவிட்டு, பார்ப்பனர்கள் வாழ முடியுமா? என்று கேட்கின்றோம். நமது வேத சாஸ்திர புராணத்தில் ஆயிரத்திலொரு பங்கு கொடுமையும் அயோக்கியத்தனமுமில்லாத நாடுகளான துருக்கி, ஆப்கானிஸ்தானம், ருஷியா முதலிய நாட்டுப் பார்ப்பனர்கள் படுகின்ற பாட்டுக்கு இந்தியப் பார்ப்பனர்கள் கதி அங்கு என்ன ஆகும் என்பதைச் சற்று யோசித்தால் விளங்காமல் போகாது.

நிற்க, அந்த மகாநாட்டின் தீர்மானங்களைப் பற்றி இரண்டொரு வார்த்தை கூறுவோம். அதாவது அங்கு பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருந்தாலும், வேத சாஸ்திரம் உணராதவர்கள் மதத்தில் பிரவேசிக்கக் கூடாது என்றும் மதசம்மந்தமான விஷயங்களில் சர்க்கார் தலையிடக் கூடாது என்றும், சீர்திருத்தங்கள் சட்டத்தின் மூலம் செய்யக் கூடாது என்றும் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் கூடாது என்றும் மற்றும் இது போன்று செய்யப்பட்ட தீர்மானங்களே முக்கியமானவையாகும். எனவே இவற்றை சற்று கவனிப்போம்.

வேத சாஸ்திரம் (பிராமணர்களைத் தவிர) நாம் படிக்கக் கூடாது என்கின்ற நிபந்தனை இருப்பதால் மக்களும் 'மதத்தைப் பற்றியோ, மதத்தி னால் உள்ள கஷ்டத்தைப் பற்றியோ அதில் உள்ள கொடுமைகள், அயோக்கியத்தனங்கள் ஆகியவைகளைப் பற்றியோ பேசக் கூடாது' என்பதும் 'சர்க்காரும் அவைகளில் தலையிட்டு ஒன்றும் செய்யக் கூடாது' என்பதுமே மேல்கண்ட தீர்மானத்தின் கருத்தாகும். அப்படியானால் (நமக்கு) மக்களுக்கு வேறு என்னதான் 'கதிமோக்ஷம்' இருக்கிறது என்று கேட்கின்றோம்.

உதாரணமாக திரு. நாயக்கர், சடங்கைப் பற்றியும், உற்சவங்களைப் பற்றியும், பார்ப்பான் மேல் ஜாதி மற்றவர்கள் சூத்திரன், பார்ப்பனரின் தாசி மகன் என்கின்ற சாஸ்திரங்களைப் பற்றியும், சாமிக்குப் பெண்களைப் பொட்டுக் கட்டி விடுவதைப் பற்றியும், சிறு பெண்களைக் கல்யாணம் செய்வதைப் பற்றியும், பெண்களை அடிமைப்படுத்துவதைப் பற்றியும் மக்களுக்கு எடுத்துச் சொல்வது "வேதசாஸ்திரங்கள் தெரியாதவன் அதில் பிரவேசித்த குற்றமாவதால் அவனைத் தண்டிக்க வேண்டியது சர்க்கார் கடமை" என்றும் (இக்கருத்து வரவேற்பு அக்கிராசனர் உபன்யாசத்தில் இருக் கிறது) திரு. முத்துலக்ஷிமி அம்மாள் மசோதாவையும் திரு. சாரதா மசோதா வையும் சட்டசபையில் எடுத்துச் சொல்லி சட்டம் செய்ய கெஞ்சினால் அது "சர்க்கார் மதத்தில் பிரவேசித்த குற்றம்" என்றும் ஆகின்றது."



RangaRakes tamilnavarasam.com

எனவே, இந்த நிலையில் நாம் பார்ப்பனரல்லாத மக்களை குறிப்பாக, 'இந்து மதத்தையும்' அதன் 'உள் சமயங்களையும்' ஆதரிக்கவே கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் 'தேசீய வீரர்களை'யும் 'சமயக் காப்பாளர்களையும்' ஒன்று கேட்கின்றோம்.

அதாவது, ஓ அய்யன்மீர்! நீங்கள் இந்து மதத்திற்கு ஆதாரம் என்பதான வேத சாஸ்திர புராணங்களை (சுருதி ஸ்மிருதிகளை) ஒப்புக் கொள்ளுகின்றீர்களா? முதலாவது உங்களுக்கு அவைகளில் என்ன இருக்கிறது என்பது தெரியுமா? ஒப்புக் கொள்வதனால் அவற்றில் கண்டபடி நடக்கத் தயாராயிருக்கின்றீர்களா? தயாராயிருப்பதானால் அதன் கருத்துப்படி நீங்கள் யார்? 'இந்து' மதத்தில் உங்கள் நிலை என்ன? ஒப்புக் கொள்ள வில்லையானால் இந்து மதத்தையும் உள் சமயத்தையும் காப்பாற்ற வேண்டும் என்பதின் கருத்து என்ன? யாரிடம் கூலி வாங்க இந்த வேஷம்? என்பதுதான்.

மற்றபடி, "திரு. நாயக்கர் பார்ப்பனர்களைத் திட்டுவதில் நமக்கு ஆக்ஷேபணை இல்லை, மதத்தில் கை வைப்பது தான் நமக்கு அதிக வருத்தமாயிருக்கின்றது. திரு. நாயக்கரால் ஜஸ்டிஸ் கக்ஷிக்கே ஆபத்து வந்து விடும் போலிருக்கின்றது. நாயக்கர் போகின்ற போக்கைப் பார்த்தால் நானே ஜஸ்டிஸ் கக்ஷியில் இருக்க முடியாது போல் இருக்கின்றது" என்று சொல்லிக் கொண்டு பிரசவ வேதனைப் படுகின்றவர்களையும் ஒன்று கேட்கின்றோம். அதாவது, இந்தக் கேள்வி பாமர மக்களில் இப்படிக் கேட்பவர்களை அல்ல. சட்டசபை மெம்பர்களையும் மந்திரிகளையும் ஜஸ்டிஸ் கக்ஷி மூலம் பெரிய மனிதர்களான தலைவர்கள், ஜட்ஜிகள், ஜில்லா, தாலூகா போர்ட் முனிசிபா லிட்டி தலைவர்கள், மெம்பர்கள், சைமன் கமிட்டி அங்கத்தினர்கள், இயக்கத் தலைவர்கள் முதலிய பிரமுகர்களையே கேட்கின்றோம்.

அதாவது, நீங்கள் எந்த அளவில் இந்துக்கள்? உங்களுக்குத் தர்மம் என்ன? சமயம் என்ன? இவற்றிற்கு ஆதாரம் என்ன? அவைகளின்படி உங்களால் நடக்க முடியாவிட்டாலும், நீங்கள் அவைகளை ஒப்புக் கொள்ளு கின்றீர்களா? அப்படியானால் உங்களால் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு மானமோ, சமத்துவமோ, உண்டாக முடியுமா? உங்களைத் தலைவர்களாகவும் அங்கத்தினர்களாகவும் ஆதரவுக்காரர்களாகவும் கொண்ட கக்ஷி உயிருடன் இருக்க வேண்டுமா? என்பவைகளே யாகும்.

எனவே, நாம் மதத்தைப் பற்றியோ, வேதத்தைப் பற்றியோ, புராணங் களைப் பற்றியோ, அப்புராணங்களில் காணும் கடவுள்களைப் பற்றியோ வேண்டுமென்றே குற்றம் சொல்லுகின்றோமா, அல்லது அவற்றால் நாம் என்றென்றைக்கும் தலையெடுக்க முடியாத படிக்கு அழுத்தி வைத்திருப் பதால் குற்றம் சொல்லுகின்றோமா என்பதை உணர்ந்து பார்க்கும்படி வாசகர்களை வேண்டுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 03.02.1929**



# இது ஒரு அதிசயமா?
## பகுத்தறிவும் அதன் விரோதிகளும்

**- சித்திரபுத்திரன்**

மதம், சமயம், கடவுள், குரு, புரோகிதன், வேதம், சாஸ்திரம், புராணம், ஆகமம், சிவன், விஷ்ணு, பிர்மா, சில்லரைத் தெய்வங்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், ரிஷிகள், முனிவர்கள், இன்னமும் அநேக சங்கங்கள் பகுத்தறிவுக்கு விரோதிகளாகும்.

உதாரணமாக, மேல் நாட்டில் ஒரு பெரிய கூட்டத்தில் ஒரு பெரிய பாதிரியார் (பிஷப்) பேசும் போது, 'ஒவ்வொருவனும் தன் தன் பகுத்தறிவைக் கொண்டு ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ந்து பார்க்க வேண்டுமே ஒழிய குருட்டு நம்பிக்கைக்கூடாது' என்று உபதேசம் செய்து கொண்டு வரும்போது ஒரு குட்டிப் பாதிரியார் எழுந்து "இந்த பிஷப் நாஸ்திகம் பேசுகின்றார், இவர் பெரிய பாதிரியார் வேலைக்கே லாயக்கில்லை" என்று சொன்னாராம். கூட்டத்திலிருந்தவர்கள் 'ஏன், எதனால் இப்படிச் சொல்லுகின்றீர்கள்?' என்று கேட்டதற்கு, "குருட்டு நம்பிக்கை வேண்டாம் என்று சொல்லிவிட்டால் அல்லது பகுத்தறிவை உபயோகித்துவிட்டால் கிறிஸ்துவ மதமோ ஆண்ட வனோ இருக்க முடியுமா? நம்பிக்கையை விட்டு பகுத்தறிவை உபயோ கித்துப் பார்ப்பதனால் வேதத்தின் அஸ்திவாரமே ஆடிப்போகாதா? ஆதலால் மதமோ கடவுளோ வேதமோ இருக்க வேண்டுமானால் நம்பிக்கை இருக்க வேண்டும். பகுத்தறிவால் வாதம் செய்யக் கூடாது. ஆதலால், ஒருவன் குருட்டு நம்பிக்கையை விட்டு விட்டு பகுத்தறிவின் ஆராய்ச்சிக்குப் புகும்படி மக்களுக்கு எடுத்துச் சொல்லுவது நாஸ்திகத்தை உபதேசிப்ப தேயாகும்" என்று சொன்னாராம். உடனே அந்தக் கூட்டத்தில் உள்ள குட்டிப் பாதிரிகளும் மற்ற ஜனங்களும் இதை ஒப்புக் கொண்டு "பிஷப் சொன்னதை பின் வாங்கிக் கொள்வதுடன், மன்னிப்பும் கேட்டுக் கொள்ள வேண்டும்" என்று சொன்னார்களாம். பிஷப்பும், தான் சொன்ன 'அக்கிரமமான' வாக்கி யங்களைப் பின் வாங்கிக் கொண்டு தான் சொன்ன 'மகாபாதகமான' வார்த்தைக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டாராம்."

எனவே 100-க்கு 75 பேர்களுக்கு மேல் எழுதப்படிக்கத் தெரிந்த மேல் நாட்டுக் கடவுள்களும், மதமும், வேதமுமே இவ்வளவு பலமான நிபந்தனை



RangaRakes tamilnavarasam.com

மேல் நிற்கும்போது 100-க்கு 7ஆண்களும் 1000-க்கு $1\frac{1}{2}$ பெண்களும் படித்திருக்கும் நம் நாட்டின் சாமிகளுக்கும் சமயங்களுக்கும் வேதங் களுக்கும் எவ்வளவு பலமான நிபந்தனை வேண்டியிருக்கும் என்பதையும் பார்ப்பன அகராதியில் வேத புராணங்களை யுக்தியால் வாதம் செய்கின்றவன் ‘நாஸ்திகன்’ என்று எழுதி வைத்திருப்பதையும் யோசித்தால் அறிவும், ஆராய்ச்சிக் கவலையும் உள்ள மக்களுக்கெல்லாம் நாஸ்திகப் பட்டம் கிடைப்பது ஒரு அதிசயமா?

**குடி அரசு - கட்டுரை - 03.02.1929**



# திரு. சாமி வெளியாக்கப்பட்டார்

சென்னைக் காங்கிரஸ் கட்சிக்கும் சுயராஜ்யக் கட்சிக்கும் சட்டசபைத் தலைவராக திரு.சாமி வெங்கடாசலம் செட்டியாரை வைத்திருந்தார்கள். ஆனால், திரு.செட்டியார் பார்ப்பனரின் கைக்களிமண் உருண்டையா யிருந்தவரையில் தங்களுக்கு வேண்டிய மாதிரி எந்தவித பொம்மை வேண்டு மானாலும் செய்து கொள்ளலாம் என்கின்ற தைரியத்தில் அவரைத் ‘தலைவர்!’, ‘தலைவர்!’ என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், திருவாளர் செட்டியார், முத்துரங்கம், குழந்தை, அமீத்கான் கம்பெனி யார்களைப் போல் இல்லாமல் கொஞ்சம் தமது சுயபுத்தியைக் காட்ட ஆரம்பித்தவுடன் அவரைக் கீழே தள்ளிவிட்டார்கள். இது வெகுநாளாகவே நாம் எதிர்பார்த்ததுதான். திரு சாமியும் தயாராகவே இருந்ததாகத்தான் தெரிகின்றது. கடைசியாக திரு. சாமியைத் தள்ளியதற்குக் காரணம், திரு.சாமி, திரு. பனகால் ராஜாவிடம் அடிக்கடிபேசியதுதானாம்.

பிள்ளையாரைப் பிடித்த சனியன் அரச மரத்தையும் பிடித்தது என்பது போல் திரு. சத்தியமூர்த்தியின் உதவித் தலைவர் பதவியும் பிடுங்கப்பட்டி ருக்கிறது. ஆனால், இதற்கு ஏதாவது உள்இரகசியம் இருக்கலாம். அதாவது, திரு.ஸ்ரீனிவாசய்யங்கார், திரு.மூர்த்திக்கு ஏதாவது கொஞ்சம் பணம் கூட்டிக் கொடுத்திருக்கலாம் அல்லது கொஞ்ச நாளைக்கு மாத்திரம் பொறுத்திருக்கும் படி கேட்டுக்கொண்டிருக்கலாம். எப்படி ஆனாலும் திரு. சாமி வெளியாக் கப்பட்டுவிட்டார்.

திரு. வரதராஜுலுவும் காங்கிரஸ் கமிட்டியில் ராஜினாமா கொடுத்து விட்டு இந்த 2, 3 நாளாக பார்ப்பனர்களைத் திட்டுவது போல் வேஷம் போடுகின்றார். இதன் இரகசியம் இன்னது என்பதும் தெரியவில்லை. ஒரு சமயம் ராஜினாமா அனாமத்தில் வைக்கப்பட்டு சைமன் கமிஷன் சென்னை யை விட்டுப்போன பிறகு திருப்பி வாங்கிக் கொள்ளும்படி வற்புறுத்தப்பட்டு, வற்புறுத்தலுக்குக் கட்டுப்பட்டு வழக்கம் போல் மறுபடியும் திருவாளர் நாயுடு மெம்பரானாலும் ஆகலாம்.

சென்ற ஆண்டிற்கு முன்னைய ஆண்டில் காங்கிரசை குறைக் கூறிவிட்டுக் காங்கிரசை விட்டு ஓடிய திரு. கல்யாணசுந்தர முதலியாரும்



RangaRakes
tamilnavarasam.com

காங்கிரசை ஆதரிப்பதுடன், செத்துப்போன ஜில்லா தாலூகா காங்கிரஸ் கமிட்டிகளை உயிர்ப்பித்து கிராமப் பிரசாரம் செய்யவேண்டும் என்று உபதேசம் செய்கின்றார். இதன் இரகசியம் விளங்கவில்லை. ஒரு சமயம், அய்யங்காரிடம் வியாபாரம் பேசவோ என்பதும் புலப்படவில்லை. நம்மு டைய பார்ப்பனர்களுடைய வாழ்க்கைக்குத் தக்கபடி அவர்களை விட்டு ஒருவர் போனால் மற்றொருவர் வந்து வலிய விண்ணப்பம் போட்டுக் கொண்டேதான் இருக்கின்றார்கள்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 10.02.1929**



# ‘சுதேசமித்திரனின்’ போக்கிரித்தனம்

திரு.முத்துலட்சுமி அம்மையாரின் தேவதாசி மசோதாவைப் பற்றி சென்னை சட்ட சபையில் விவாதம் நடக்கும் போது, திரு.சத்தியமூர்த்தி அய்யர் பேசிய பேச்சுக்களை ‘திராவிடனி’ல் பார்த்திருக்கலாம்.

பிறகு அந்த மசோதாவிற்குப் பலமான ஆதரவுகள் இருப்பதைப் பார்த்து திரு.மூர்த்தியும் அவரது சகாக்களும் வாலை அடக்கிக் கொண்டு பேசாமல் இருந்துவிட்டார்கள்.

அம்மசோதாவும் எதிர்ப்பில்லாமல் நிறைவேறிவிட்டது. இதை ஒழிக்கவோ, இதற்கு பதில் சொல்லவோ வேறு மார்க்கம் இல்லாததால் சுதேசமித்திரன், தனது ஆத்திரத்தைக் காட்டிக் கொள்வதற்கு அந்த அம்மை யாரைக் கேவலப்படுத்தக் கருதி, தனது அயோக்கியத்தனத்தைக் காட்டி யிருக்கிறது.

அதாவது, 2-2-29 தேதி ‘மித்திரன்’ தலையங்கத்தில் ‘தேவதாசிச் சட்டம்’ என்று பெயர் கொடுத்து மனதில் கேலியாக நினைத்துக் கொண்டு எழுதுவதாவது:-

‘டாக்டர். முத்துலட்சுமி அம்மாள் தாம் பிறந்த குலத்திற்குப் பெரிய உபகாரத்தை செய்துவிட்டார் என்றும், அது என்ன குலம் என்று தெரிவதற் காக அடுத்த வார்த்தையாகவே ‘தேவதாசி என்று சொல்லப்படுகிறது’ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மசோதா நிறைவேற்றப்பட்டதற்குச் சாதகமோ பாதகமோ சொல்ல வேண்டியிருந்தால் திரு. முத்துலட்சுமி அம்மாள் தேவதாசிக் குலமென்று சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்பது நமக்கு விளங்கவில்லை. இது, வேண்டுமென்றே அந்த அம்மையாரைப் பொது ஜனங்கள் முன்னால் தப்பாய்க் காட்ட வேண்டுமென்பதைத் தவிர வேறு என்ன எண்ணத்தோடு இருக்க முடியும்? தேவதாசிகள் என்று ஒரு கூட்டம் பெண்கள் இருக்கின்றார்களே ஒழிய தேவதாசிக்குலம் என்று ஒரு குலம் இருக்கின்றதா என்று கேட்கின்றோம். ஒரு வீட்டில் பிறந்த சகோதரிகள் இருவரில் ஒருவர் கோவிலுக்கு விடப்பட்டு, மற்றவர் கல்யாணம் செய்து கொண்டிருந்தால், கல்யாணம் செய்து கொடுக்கப்பட்டவர் தேவதாசி குலத்தைச் சேர்ந்தவராவாரா? அதுபோலவே ஒரு தேவதாசி தன்மகளைக் கல்யாணம் செய்து கொடுத்திருந்தாலும் அந்த மகள் தேவதாசி குலத்தைச் சேர்ந்தவர்களாவார்களா? இந்த வித்தியாசம் மித்திரனுக்குத் தெரியாம



RangaRakes
tamilnavarasam.com

லிருக்கும் என்று யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம்.

தவிர, அதே வியாசத்தில் “இனிமேல் தேவதாசித் தொழிலில் தம் மக்களைப் புகுத்துவதும், புகுத்தாதிருப்பதும், இப்பொழுது தேவதாசிகளாக இருப்பவர்களின் இஷ்டத்தைப் பொருத்தது” என்று எழுதியிருக்கின்றது. இதன் கருத்து என்ன? இந்த மசோதா காரணமாக சுவாமி பேரால் செய்த விபசாரத் தொழிலுக்கு ஒன்றும் ஆபத்து வந்து விடவில்லை. இஷ்ட மிருக்கிறவர்கள் தாராளமாய்ச் செய்யலாம் என்று ‘தர்மோபதேசம்’ செய் கின்றது. பார்ப்பன மித்திரனுக்கு இவ்வளவு கவலையும் பிரசாரமும் எதற்கு என்று கேட்கின்றோம். யார் யாருக்கு விபசாரத்தனம் செய்யப் பாத்தியம் உண்டு, சட்டம் உண்டு என்பதை எடுத்துக் காட்டுவதுதான் ‘தேசீய பத்திரிகை கள், கடமை போலும்.

திரு.சத்தியமூர்த்தி, அவர்கள் விவசார மசோதாவைப் பற்றி பேசுகையில், ‘பெண்கள் எவ்வளவுதான் விபச்சாரம் செய்தாலும்’ அதனால் யாருக்கு எவ்வளவு துன்பம் நேரிட்டு வந்தாலும் விவசார ஸ்திரீகளும் நம்மவர்களேயானதால் அவர்கள் விஷயத்தில் அனுகூலமாயிருக்க வேண்டு’மென்று சிபார்சு பேசினதும் ‘தேவதாசித் தொழில் போய்விட்டால், மதம் போய் விடும்’ என்றதும் இன்று தேவதாசித் தொழிலை நிறுத்தினால் திரு. ராமசாமி நாயக்கர் நாளை அர்ச்சகத் தொழிலை நிறுத்தச் சட்டம் செய்ய வந்து விடுவாரே என்று ஆத்திரப்பட்டதும், ‘மித்திரன்’ தேவதாசி மசோதா வால் தேவதாசித் தொழிலுக்கு ஒன்றும் குந்தகம் ஏற்பட்டு விடவில்லை என்று தேவதாசிகளுக்கு வியாக்கியானம் செய்து மறுபடியும் அதே தொழிலில் இருக்க உற்சாகத்தையும் தைரியத்தையும் ஆசையையும் ஊட்டுவதையும் பார்த்தவர்களுக்கு நாட்டின் ஒழுக்கத்திற்கோ சுயமரியாதைக்கோ, விடுத லைக்கோ இத் ‘தேசீயப் பத்திரிகை’களும், ‘தேசீயவீரர்’களும் அனுகூலமாக இருப்பார்களா என்பதும் இவர்களுடன் யோக்கியர்கள் வந்து வேலை செய்ய முடியுமா என்பதும் தானாகவே விளங்கும்.

**குடி அரசு - கட்டுரை - 10.02.1929**



# பாரதிப் பாடல் புரட்டு

## பார்ப்பனர்களின்அயோக்கியத் தனத்திற்கு ஒரு உதாரணம்

பாரதி பாடல் என்பதாக சில பாட்டுகள் காலம் சென்ற திரு. சுப்ர மணிய பாரதி என்கின்ற ஒரு பார்ப்பனரால் பாடப்பட்டிருந்தது. அவர் இறந்தவுடன் அவர் குடும்பத்தாருக்கு வயிற்றுப் பிழைப்புக்கு ஆதாரமாக அந்தப் பாடல்களைப் பற்றி பிரமாதமாக விளம்பரப்படுத்தி பொதுப் பணமாகிய காங்கிரஸ் பணத்திலிருந்து சுமார் ஆயிரம் ரூபாய் பாரதியின் பெண் ஜாதிக்கு தர்மமாகக் கொடுத்து அந்தப் புத்தகத்தை அச்சுப் போடும்படி சொல்லி ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் அந்தப் பாட்டுகளை விளம்பரப்படுத்தி ஒவ்வொருவரையும் அதை வாங்கும்படி செய்யப்பட்டது. அந்தப் புத்தகம் சாதாரணமாய் இரண்டரையணா அல்லது மூன்று அணாவுக்குள் அடங்கக் கூடியதாயிருந்தும் புஸ்தகம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் விலை போட்டு ஏழைகள் பணம் கொள்ளை அடிக்கப்பட்டது. அது மாத்திரமல்லாமல் முதல் பாகம், இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம், நான்காம் பாகம் என்பதாக அவர் கள் பணத்தாசைக்குத் தக்கபடியும் நம்மவர்கள் மூடத்தனத்திற்குத் தக்க படியும் புதுப்புது பாகங்கள் வெளியாகிக் கொண்டே வந்தன. இவ்வளவு கொள்ளையையும் சகித்துக் கொண்டே வந்தும் கடைசியில் அது தன் ஜாதிப் புத்தியை காட்டியேவிட்டது.

எப்படியென்றால்:- சாதாரணமாக அப்புத்தகத்தின் பேரால் சில பார்ப்பனக் குடும்பம் கொள்ளை அடித்ததை, சிலர் பொறுத்துக் கொண்டு இருந்ததற்கு காரணமே அப்புத்தகத்தில் அவர் பார்ப்பனர்களை உயர்வாக சில இடத்தில் சொல்லியிருந்தாலும் சில இடத்திலாவது உண்மை பேசி இருக்கின்றார் என்ற எண்ணமேயாகும்.

ஆனால் இப்போது அதையும் கொஞ்சம் கொஞ்சமாய் திருத்த ஆரம்பித்துவிட்டார்கள் எனத் தெரிய வருகின்றது. அதாவது பாரதிபாடல் முதற் பாகத்திலுள்ள பாட்டுகளில் ஒன்றான “மன்னும் இமயமலை எங்கள் மலையே” என்னும் பாட்டின் அடிகளில் “உன்னத பாரத நாடெங்கள் நாடே” என்னும் வாக்கியம் ஒரு அடியாக இருந்து வந்தது. இது யாவருக்கும் தெரிந்த தேயாகும். இப்போதைய பதிப்புகளில் பாரத நாடு என்பதை எடுத்துவிட்டு “உன்னத ஆரிய நாடெங்கள் நாடே” என்று திருத்தி பதிக்கப்பட்டிருக்கின் றதாம். இம்மாதிரியாகவே அதில் வேறு பல விஷயங்களும் சந்தேகிக்க



RangaRakes tamilnavarasam.com

வேண்டியதாகவே இருக்கின்றன.

இரண்டரையணா புத்தகத்திற்கு ஒரு ரூபாய் விலை கொடுத்து வாங்கிப் படிப்பதின் மூலம் நமது பொருள் வீணாவதுமன்றி அது நம்மை ஏய்த்துத் தாழ்த்தி வைத்திருக்கும் அயோக்கியர்களுக்கு ஆக்கத்தையும் கொடுக்க உபயோகிக்கப்படுகின்றது. நிற்க,

இந்த புஸ்தகம் அரசாங்கத்தாரால் பறிமுதல் செய்யப்பட்டபொழுது, வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்ட 'யோக்கியர்'களின் கண்ணுக்கு இந்த மாதிரி அயோக்கியத் தனங்கள் சற்றும் தென்படாமலிருப்பது நமக்கு ஆச்சரியமல்ல என்றாலும் நாட்டின் 'தேச பக்தர்கள்' யோக்கியதைக்கும் பார்ப்பனர்களின் அயோக்கியத் தனத்திற்கும் இதுவரை அவர்கள் இந்த மாதிரி எத்தனை புரட்டுகள் செய்து நம்மவர்களை கண்மூடி முட்டாள்களாக அடிமை கொண்டிருக்கிறார்கள் என்பதற்கும் முழு மூடர்களுக்கும் கூட உதாரணம் வேண்டுமானால் இந்த 'பாரதிப் பாடல் புரட்டே' போதுமென்று நினைக்கின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 10.02.1929**



# பார்ப்பனர்களும் சர்க்காரும் பங்காளிகளே யாவார்கள்

டில்லியில் நடந்து கொண்டிருக்கும் இந்திய சட்டசபைக் கூட்டத்தில் விவாதத்திற்கு வந்த "சாரதா பில்" என்னும் கல்யாண வயது நிர்ணய மசோதா நிறைவேறாமல் இருப்பதற்கு சர்க்கார் சூழ்ச்சி செய்தது மிகவும் அருவருக்கத் தக்கதும் இழி தன்மை பொருந்தியதுமான செய்கையாகும். சீர்திருத்த சம்மந்தமாக ஏதாவது ஒரு மசோதா கொண்டு வந்து சட்டசபைகளில் நிறைவேற்றப்படவேண்டுமானால் சாதாரணமாகவே அதில் அநேக விதமான கஷ்டங்களுண்டு. சர்க்காராவது அல்லது பார்ப்பனர்களாவது ஏதாவது ஒரு சிறு விஷமம் செய்ய ஆரம்பித்து விட்டாலோ அதன் கஷ்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

இந்த நிலைமையில் இந்துக்களின் கல்யாண நிர்ணய வயதைப் பற்றி சட்டம் கொண்டு வருவதற்கு எத்தனை காலமாக எத்தனை பேர்கள் கஷ்டப் பட்டு வந்திருக்கிறார்கள் என்பது சீர்திருத்த உலகில் இருப்பவர்களுக்கு விளங்காமல் போகாது. திரு. சாரதா அவர்கள் இந்த பில் கொண்டு வந்து அதற்கு செய்யவேண்டிய சடங்குகள் எல்லாம் செய்து அதற்காக எவ்வளவோ பணம் செலவும் செய்து கடைசியாக அது நிறைவேற்றப்படத் தக்க உறுதியான நிலையில் இருக்கும்போது அதை பழைய குப்பையில் போடுவதற்கு சர்க்கார் உடைந்தையாய் இருந்தார்களானால், சர்க்காரின் நாணயத்தையோ யோக்கியப் பொறுப்பையோ நாம் எப்படி மதிக்க முடியும்? இந்த சர்க்கார் இந்த நாட்டில் அரை வினாடியாவது இருக்க வேண்டுமென்று நாம் நினைத்திருந்தால் அது இந்த நாட்டில் உள்ள பார்ப்பனீயக் கொடுமையை அடியோடு ஒழிப்பதற்காகத்தான் ஆசைப்பட்டிருப்போமேயொழிய மற்றபடி சர்க்காரில் நடுநிலைமை தவறாத நீதியையோ அல்லது அவர்களுடைய பொதுநல உணர்ச்சியையோ மதித்தல்லவென்று திடமாய்ச் சொல்லுவோம்.

எனவே இந்த யோக்கியதையுள்ள அரசாங்கம் பார்ப்பனீயக் கொடுமைக்கு உதவி புரிவதாயிருந்தால் அதனிடத்தில் எப்படித்தான் மக்களுக்கு நல்லெண்ணம் இருக்க முடியும்? தவிர சட்டசபையில் 'கல்யாண மசோதா' விஷயத்தில் சர்க்கார் பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டதற்கு காரணம்



RangaRakes

tamilnavarasam.com

சம்மத வயதுக் கமிட்டி அறிக்கை வந்த பிறகு யோசிக்கலாம் என்று கருதியதுதானாம்.

இது யோக்கியமான சமாதானமல்ல வென்றே சொல்லுவோம். கல்யாண வயது நிர்ணயத்திற்கும் சம்மத வயது நிர்ணயத்திற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது. சம்மத வயது நிர்ணயம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் எத்தனையாவது வயதில் கலவி செய்து கொள்ளலாம் என்பது; கல்யாண வயது என்பது ஒரு ஆணும் பெண்ணும் எத்தனையாவது வயதில் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்பது. கலவி என்பது ஒரு உணர்ச்சி, கல்யாணம் என்பது ஒரு ஒப்பந்தம். பார்ப்பனர்கள் சொல்லுவது போல் கலவி உணர்ச்சி பெண்களுக்கு 12-வயதிலும் ஆண்களுக்கு 14-வயதிலும் உண்டாகலாம். அவர்கள் தங்கள் தங்கள் உணர்ச்சிகளை தனித் தனியாகவே கூட தீர்த்துக் கொள்ளலாம். ஆகவே அதைத் தடுக்க சட்டம் செய்வது அவ்வளவு சாதாரணமான காரியமல்ல. எனவே அதோடு கூட கல்யாண வயது நிர்ணயச் சட்டத்தை யோசிக்கலாமென்று சொல்லுவதில் ஏதாவது பொருள் இருக்க முடியுமா?

கல்யாணம் என்பது ஒரு ஒப்பந்தம். அதுவும் தற்கால நிலையில், கல்யாணம் என்பது ஏற்பட்ட நாள் முதல் அவரவர்கள் சாகும்வரை கொண்டு செலுத்தித் தீர வேண்டியதான ஒப்பந்தம். அத்தகைய ஒப்பந்த காரியத்தைச் செய்து கொள்ள மக்களுக்கு எந்த வயதில் உரிமை உண்டு என்பதை யோசிப்பதற்கு ஏன் கால தாமதம் செய்ய வேண்டும்? ஒரு மனிதன் தன் சொத்தை அடையவும், ஒரு வோட்டு கொடுக்கவும்,ஒரு பதவியை ஏற்கவும் மற்றும் பல சாதாரண காரியங்களுக்கெல்லாம் வயது நிர்ணயமிருக்கும்போது ஆயுள் வரை கட்டுப்பட வேண்டிய நிபந்தனை கொண்ட ஒரு ஒப்பந்தத்திற்கு வயது நிர்ணயம் இதுவரை செய்யாதிருந்ததே மனித வர்க்கத்தின் முட்டாள் தனத்தை அல்லது அயோக்கியதனத்தை காட்டுகின்றது என்று தான் சொல்லவேண்டும். இவ்விஷயங்களில் பார்ப்பனர்கள் என்றைக்குமே எதிரிகளாய் இருக்கின்றார்கள் என்பது வெளிப்படை. அதே காரியத்திற்கு அரசாங்கத்தார் துணை இருப்பது என்பது பார்ப்பனர்களுக்கு இவர்கள் பங்காளிகள் என்பதையே காட்டுகின்றது. எப்படியெனில் பார்ப்பனர்கள் மதத்தின் பேரால் நிரந்தரமாய் வாழ நினைத்துக் கொண்டு இவ்வித அக்கிரமங்கள் செய்கின்றார்கள் என்றால் அரசாங்கத்தார் அரசாக்ஷியின் பேரால் நிரந்தரமாய் வாழ நினைத்துக் கொண்டு இவ்வித அக்கிரமங்களைச் செய்கின்றார்கள் என்பதுதான்.

**குடி அரசு - கட்டுரை - 10.02.1929**



# நாம் பொறுப்பாளியல்ல

கதர் இயக்கம் நாட்டின் பொருளாதார நிலைமைக்கு போதியதாகாது என்பதோடு அது வெற்றி பெறுவதும் மிகக் கஷ்டமானது என்கிற அபிப்பிராயம் கொண்டிருந்தாலும், கதர் கட்டக்கூடாது என்பதோ கதரைக் கொளுத்த வேண்டும் என்பதோ சுயமரியாதை இயக்கக் கொள்கையில் பட்டதல்ல என்பதையும், திருச்சியில் சுயமரியாதை இயக்கத்தின் பேரால் யாரோ கதரைக் கொளுத்தினதாகச் சொல்லப்படும் சங்கதி உண்மை யாயிருந்தால் நாம் அதற்குப் பொறுப்பாளியல்ல வென்றும் அச்செய்கையை வெறுக்கின்றோம் என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

( ப - ர் )

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 10.02.1929**



RangaRakes tamilnavarasam.com

## சென்னைக் கார்ப்பரேஷனில்
# சண்டித்தனமும் காலித்தனமும்

நமது நாட்டில் பார்ப்பனர்கள் சம்மந்தப்பட்ட எந்த ஸ்தாபனமானாலும் அதில் அவர்களிஷ்டப்படி ஏதாவதொரு காரியம் நடைபெற முடியாது என்பதாக அவர்களுக்குப் பட்டால் உடனே சண்டித்தனமும் காலித்தனமும் செய்வதன் மூலமாகவும் செய்விப்பதன் மூலமாகவும் வெற்றி பெற முயற்சிப்பது சரித்திரகாலம் தொட்டு அவர்களது பரம்பரை வழக்கம் என்பது உலகானுபவமுள்ள யாவருக்கும் தெரிந்த விஷயமாகும். அதே காரியத்தை சைமன் கமீஷன் பஹிஷ்கார விஷயமாய் சமீபத்தில் நடந்த சென்னை கார்ப்பரேஷன் கூட்டத்திலும் காட்டி தங்கள் கையாலானவரை முயற்சித்துப் பார்த்தும் முடிவில் வெற்றியில்லாமல் அவமானமடைந்து வெளியேறினது பத்திரிகைகளில் இருக்கின்றது.

சில சமயங்களில் சிறு பிள்ளைகள் எங்காவது சிக்கிக் கொண்டு அடிபட நேர்ந்தால் நன்றாய் அடிபட்டுவிட்டு அழுதுகொண்டு வீட்டுக்குப் போகும்போது, தங்களுடைய போலி மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டி தூரத்தில் போய் நின்று கொண்டு உதைத்தவர்களைப் பார்த்து "எங்கள் வீதிக்கு வந்துபார்! உன்னை அங்கு பேசிக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு ஓடுவதுண்டு. அது போலவே சென்னைப் பார்ப்பனர்களது சண்டித்தனமும் காலித்தனமும் தோல்வி அடைந்த பிறகு வேறு வழியில்லாமல் தங்கள் வீதி என்று நினைத்து மனப்பால் குடித்துக் கொண்டிருப்பதான அடுத்த முனிசிபல் தேர்தலுக்கும் சட்டசபைத் தேர்தலுக்கும் வரும்போது பேசிக் கொள்ளுகின்றதாக வாய்வலிக்கக் கத்துகிறார்கள்: கை வலிக்க எழுதுகின்றார்கள் . சில பார்ப்பனக் கூலிகளும் இவர்களோடு கூடவே கோவிந்தா போடுகின்றனர். இந்தப் பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் தேர்தல்களில் இனி தங்கள் ஜம்பம் சிறிதும் நடவாது என்பதை நன்றாய் அறிந்து கொண்டே தற்கால சாந்திக்காக இவ்வித கூச்சல் போடுகின்றார்களே ஒழிய உள்ளுக்குள் ஒன்றும் இல்லை என்பதை நாம் யாருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

6-2-29-தேதி சென்னை கார்ப்பரேஷன் மீட்டிங்கில் திருவாளர்களான சைமன் கோஷ்டியாருக்கு கார்ப்பரேஷனிலிருந்து ஒரு உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்க வேண்டும் என்கின்ற தீர்மானம் யோசனைக்கு வந்தது.



அத்தீர்மானத்தை கார்ப்பரேஷன் மீட்டிங்கில் யோசனைக்கு கொண்டு வரும்படியாக 26 அங்கத்தினர்கள் தங்கள் சம்மதத்தைக் காட்டி கையெழுத்திட்டு கார்ப்பரேஷனுக்கு விண்ணப்பம் அனுப்பி இருக்கின்றார்கள். ஆனால் அதற்கு விரோதமாக 11 பேர்களே தான் இருந்திருக்கின்றார்கள். ஆகவே பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் எவ்வளவோ விஷமப் பிரசாரம் செய்தும் 11 பேர்களே கமீஷனுக்கு வரவேற்பு கூடாது என்கின்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் பெரும் பகுதியார் வரவேற்க ஆசையுள்ளவர்களாயிருக்கின்றார்கள் என்பதும் இதிலிருந்து விளங்கும்.

அன்றியும் வரவேற்புக் கூடாது என்கின்ற 11 கனவான்களின் யோக்கியதை என்ன என்பதை பொது ஜனங்கள் அறிய அவசியம் ஆவலுள்ளவர்களாயிருப்பார்கள் என்றே எண்ணுகின்றோம்.

அப்பதினொருவர்கள் யாரென்றால் திருவாளர்கள் எஸ்.சத்தியமூர்த்தி சாஸ்திரி, ஜி.ஏ.நடேசய்யர், புர்ரா சத்திய நாராயணா, டாக்டர் மல்லய்யர், பஷிர்அகமது சாயபு, ஷாபி மகமது சாயபு, டி.வி. மீனாட்சிசுந்தரம், ஸ்ரீராமுலு நாயுடுகாரு, சாமி வெங்கடாசலம், கெத்தா ரெங்கய்ய நாயுடுகாரு, செல்வபதி செட்டியார் ஆகியவர்களே ஆவார்கள்.

எனவே முதல் நால்வரும் பார்ப்பனர்கள். அவர்களின் யோக்கியதையை அதிகம் எழுத வேண்டியதில்லை. அடுத்த இருவர்களும் மகமதிய கனவான்களானாலும் அவர்கள் திரு. சீனிவாசய்யங்கார் பிரதிநிதியாக திரு. சீனிவாசய்யங்கார் பணச்செலவில் கார்ப்பரேஷனுக்கு சீனிவாசய்யங்காரால் கலகம் செய்வதற்கென்றே கொண்டு வரப்பட்டவர்கள் ஆவார்கள் என்று சென்னை மகமதிய பத்திரிகைகளே பலதடவை எடுத்துக்காட்டி இருக்கின்றன. ஆதலால் நமது அபிப்பிராயம் தேவையில்லை. அடுத்த இருவரும் அய்யங்கார் பணத்தில் அய்யங்கார் முயற்சியில் அய்யங்கார் பிரதிநிதியாக அய்யங்காராலேயே கொண்டு வரப்பட்டவர்கள்.

திரு.சாமி வெங்கிடாசலம் செட்டியார், கமிஷனை வரவேற்கின்றவரே கார்ப்பரேஷன் தலைவராக இருக்கவேண்டுமென்று கோரி தலைவர் தேர்தலில் ஓட்டுச் செய்தவர். எனவே அவருடைய அபிப்பிராயத்தில் உள்ளுக்குள் இரகசியமாய் இருக்கும் அபிப்பிராயத்தை மதிப்பதா அல்லது வெளியில் காட்டிக் கொள்ளுமா என்பதை வாசகர்களே உணர்ந்து கொள்ள விட்டுவிடுகின்றோம். பின்னைய இருவர்களிடம் கமிஷனை வரவேற்கலாம் என்பதற்கு வேண்டுமானாலும் ஓட்டு வாங்கி விடலாம். ஏனெனில் அவர்கள் அவ்வளவு தாக்ஷண்யக்காரர்கள்.

எனவே இந்த பதினொருவரின் அபிப்பிராயம் சென்னை பொது ஜன அபிப்பிராயமா அல்லது மற்றபடி வரவேற்க வேண்டுமென்று அபிப்பிராயம் கொண்டு கையெழுத்துப் போட்ட 26 பேரினுடையவும் மற்றும் கமீஷனை வரவேற்பதால் தங்களுக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை யென்று கருதி



RangaRakes tamilnavarasam.com

அதைப்பற்றிய கவலையே எடுத்துக் கொள்ளாத மீதியுள்ள சுமார் 15 கார்ப்பரேஷன் கவுன்சிலர்களுடைவும் அபிப்பிராயங்கள் பொது ஜன அபிப்பிராயமா என்பதை வாசகர்களையே கவனிக்க விரும்புகின்றோம்.

தவிர, உலகமே முழுகிப் போய்விட்டதாக கூச்சல் போட்ட திரு. சத்திய மூர்த்திக்கோ அவரது கூட்டத்தாருக்கோ நமது நாட்டு க்ஷேமத்தில் கவலை இருக்க வேண்டிய அவசியம் ஏதாவது இருக்க முடியுமா? என்பதையும், யோக்கியமாய் கோவிலுக்கு தாசிகள் இருக்கும் வரையும், சென்னையில் தாராளமாய் விவசாரிகள் இருக்கும் வரையும், சத்திரங்களில் இலவசமாய் சாப்பாடுகள் போடப்படும் வரையும், பார்ப்பனர்களுக்கு சமாராதனை செய்வதும் அவர்களுக்கு தக்ஷணை கொடுப்பதும் பார்ப்பனரல்லாதாருக்கு மோட்சத்திற்கு மார்க்கம் என்று நினைத்து கொண்டிருக்கும் முட்டாள்கள் நம்மில் இருக்கும் வரையும் நமது சாஸ்திரிக்கும் அய்யருக்கும் வேறு என்ன கவலை இருக்க முடியும் என்பதையும் நமது நாடு எக்கேடு கெட்டால்தான் அவருக்கு என்ன கவலை என்பதையும் யோசிக்க வேண்டுகின்றோம். நிற்க இக்கூட்டத்தார் கார்ப்பரேஷன் மீட்டிங்கில் நடந்து கொண்ட யோக்கியதைப் பற்றி சற்று கவனிப்போம். மீட்டிங் கூடியதும் போலீசார் வெளியே இருந்த தைப் பற்றி ஆட்சேபித்தார்களாம்.

சாதாரணமாக பொதுக் கூட்டங்கள் கூடுகிற இடத்தில் போலீசார் தங்களுக்கு அவசியம் என்று தோன்றினால் வந்து நிற்பது வழக்கம். அது மாத்திரமல்ல, கூடுமானால் ஒவ்வொரு கூட்டத்திற்கும் அவர்கள் போக வேண்டியது அவர்களது கடமையாகும். இந்த விஷயம் கூட அறிய முடியாத வர்கள் கார்ப்பரேஷன் கவுன்சிலராயிருப்பதானால் அது அய்யங்கார் பணத்தின் பெருமையே ஒழிய ஓட்டர்களின் அறிவீனம் என்று சொல்லிவிட முடியாது.

தவிர மீட்டிங்கில் கூட்டத்தில் போலீசார் இருக்கக் கூடாது என்றும் இருந்தால் வெளியில் போகவேண்டும் என்றும் திரு சத்தியமூர்த்தி தலைவரைப் பார்த்து சொன்னாராம். பூரண சுயேச்சை விரும்பும் திரு. சத்தியமூர்த்தியின் தைரியத்திற்கு இந்த விஷயமே போதுமான சாக்ஷி யன்றோ? போலீசாருக்கு இவர்கள் ஏன் அவ்வளவு பயப்பட வேண்டும் என்பது நமக்குப் புரியவில்லை. போலீசார் எதிரில் பேசுவதற்கே பயந்த இந்த ‘வீரர்கள்’ நமக்கு பூரண சுயேச்சை வாங்கித் தரக்கூடியவர்களா என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

திரு.மூர்த்தியின் பயத்தை நீக்க அந்தக் கூட்டத்தில் போலீசார் யாராவது இருக்கின்றார்களா? என்று தலைவர் தேடியதில் அய்யரின் ‘யோகம்’ போலீசார் ஒருவரும் காணப்படவில்லையாம். இந்த விஷயம் நன்றாய்த் தெரிந்து கொண்ட பிறகு சரமாரியாகக் கேள்விகள் கேட்கப்பட்ட தாம். ஆனால் ஒவ்வொரு கேள்விக்கும் தலைவர் திரு.ஏ.ராமசாமி முதலியார் அவர்கள் கேள்வி கேட்டவர்கள் வெட்கித் தலைகுனியும் படியும் மேற்



கொண்டு மூச்சு விடுவதற்கு வழியில்லாமலும், சாந்தமாகவும் அலட்சிய மாகவும் பதில் சொல்லி வாயடக்கிக் கொண்டே வந்திருக்கிறார். இந்த உண்மை பார்ப்பனப் பத்திரிகையாகிய ‘இந்து’, ‘மித்திரன்’ முதலியவை களிலேயே காணக்கிடக்கின்றது.

இதுமாத்திரமல்லாமல், கேள்வி கேட்கும் முறையையே திரு.சத்திய மூர்த்தி முதலியவர்களுக்குத் தலைவர் கற்பித்துக் கொடுத்துக் கொண்டே வந்திருப்பதும், மெம்பர்களுடைய அதிகாரத்தையும் ஒழுங்கையும் பற்றி அவர்களுக்கு அடிக்கடி அறிவுறுத்திக் கொண்டு வந்திருப்பதும் அந்த இடத்தில் தலைவரின் சாமார்த்தியத்தை நன்றாய் விளக்கி இருக்கின்ற தென்றே சொல்ல வேண்டும். கடைசியாக சட்டத்தின் மூலம் தங்கள் ஜபம் பலிக்கவில்லையென்று தெரிந்தவுடன் காலித்தனம் செய்ய சிலர் ஆரம்பித் திருப்பதாகவும் நடவடிக்கைகளிலிருந்து தெரிய வருகின்றது. அதாவது, ஒரு அங்கத்தினர் எழுந்து வெளியேபோகும்போது அய்யங்கார் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர் தடுத்து மிரட்டியதாகவும் அதற்கு அந்த தடுக்கப் பட்ட அங்கத்தினர் அய்யங்கார் கூட்டத்தைப் பார்த்து, “பெருந் தன்மை யோடு நடந்து கொள்ளுங்கள்” என்று அதட்டிச் சொன்னதாகவும் பிறகு அவர் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டதாகவும் இன்னும் இதுபோல் பல காலித்தனம் என்று சொல்லப்படக் கூடிய சங்கதிகள் நடந்திருப்பதாகவும் தெரிய வருகின்றது.

நிற்க, கமீஷனுக்கு வரவேற்பு கூடாது என்று சொல்லவந்த கவுன்சிலர் கள் அங்கு சொன்ன சமாதானம் என்ன என்பதையும் கவனிப்போம்.

முதலாவதாக ஆட்சேபித்த கவுன்சிலர், திரு. ஜி.ஏ.நடேசய்யர் “சைமன் கமிஷனர்கள் பெரிய மனிதர்கள், கண்ணியமுள்ளவர்கள் என்ப தையும் அவர்களை சமூக விஷயங்களில் விலக்குவது கூடாது என்பதையும் அவர்கள் வரும்போது வேலை நிறுத்தம், கடையடைப்பு முதலியவைகள் செய்வதும் கூடாது என்பதையும் தாம் ஒப்புக் கொள்வதாகவும் முதலில் சொல்லிவிட்டு, பின்னர், ஆனால் இந்தியாவில் உள்ள பெரிய மனிதர்களும், பெரிய கட்சிகளும் பகிஷ்கரிப்பதால் நானும் பகிஷ்கரிக்க வேண்டியிருக் கிறது” என்று சொல்லியிருக்கின்றார். இதைக் கவனிக்கும்போது சில பள்ளிக் கூடத்துச் சிறுபிள்ளைகள் விஷயம் ஞாபகத்திற்கு வருகின்றது.

அதாவது, சில சமயங்களில், சிறுபிள்ளைகள் விளையாட்டுத்தனமாய் பள்ளிக்கு வராமல் இருந்துவிட்டால், உபாத்தியாயர் ‘ஏன் வரவில்லை’ என்று பையனைக் கேட்டும்போது பிள்ளை, “எனக்கு நேற்று வயிற்றுவலியாய் இருந்தது அதனால் வரவில்லை!” என்று சொல்லுவதும், உபாத்தியாயர், “உனக்கு வயிற்றுவலி என்று எப்படித் தெரிந்தது” என்று கேட்டால், “எங்க அம்மா சொன்னாங்கோ,” என்று சொல்லுவதும் போல நமது திரு. ஜி.ஏ. நடேசய்யர் “ஊரார் எல்லோரும் பகிஷ்கரிக்க வேண்டும் என்கின்றார்கள்.



RangaRakes tamilnavarasam.com

அதனால் நானும் பகிஷ்கரிக்க வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார். ஆனால், அவர்களுடன் விருந்துண்பதிலோ, பழகுவதிலோ தனக்கு ஆஷேபணை இல்லையாம்! அவர்கள் வரவுக்காக, பகிஷ்கார அறிகுறியாய் கடையடைப்பதிலும் தாம் சம்பந்தப்படப் போவதில்லையாம். எனவே, இது எவ்வளவு சரியான காரணம் என்பதை வாசகர்களே அறிந்து கொள்ள விரும்புகிறோம்.

அடுத்தாற்போல், திரு. சத்தியமூர்த்தி அய்யரும் "கமிஷன் மெம்பர்கள் உபச்சாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்க வேண்டிய அவ்வளவு பெரியவர்கள் அல்ல" என்று சொன்னதைத் தவிர, வேறொரு சரியான காரணமும் சொல்லவில்லை. திரு.சாமி வெங்கடாசலம் செட்டியாரும், 'கக்ஷிப் பிரதிகக்ஷி விஷயம் கார்ப்பரேஷனில் கூடாது' என்பதைத் தவிர வேறு சரியான காரணம் ஒன்றும் சொல்லவில்லை. இந்த உணர்ச்சி அவருக்கு இப்போதாவது வந்ததைப் பற்றி சந்தோஷமே.

பிறகு, ஜனாப் பஷீர் அகமது சாயபு பேசியிருப்பதில் முக்கியமாக, "வெள்ளைக்காரர்கள் துருக்கியை சின்னா பின்னப்படுத்தி 'கிலாபத்'தை அழித்துவிட்டார்கள்" என்றும், இதுவரையில் "முஸ்லீம்கள் ஒத்துழைத் ததற்கு யாதொரு கூலியும் கிடைக்கவில்லை," யென்றும், "ஆதலால் வெள்ளைக்காரர்களைச் சேர்ந்த சைமன் கோஷ்டிக்கு உபசாரம் கூடாது" என்றும் சொல்லியிருக்கிறார், 'கிலாபத்' ஒழிந்ததற்கு வீரர் கமால்பாக்ஷா காரணமா? வெள்ளைக்காரர் காரணமா? என்பதையும், முஸ்லீம்களுக்கு சர்க்கார் கொடுத்த கூலிக்கு உதாரணம், திரு. பஷீர் அகமது சாயபு போன்றவர்கள் சட்டசபை மெம்பராவதற்கு இடம் கொடுத்ததே போதாதா என்பதையும் யோசித்தால் யாருக்கும் விளங்காமல் போகாது.

முடிவாக, இத்தீர்மானத்தின் மீது நடத்திய கலகத்தால் பார்ப்பனர்கள் தேர்தல் பிரசாரத்திற்கு ஒரு மார்க்கமும் அவர்களது கூலிகள் பார்ப்பனர்க்கு உதவியாக பிரசாரம் செய்வதற்கு ஒரு ஆதாரமும் கிடைத்தது. இதைத்தவிர, வேறு முக்கியமான சங்கதி ஒன்றும் நடந்துவிடவில்லை.

பொதுவாக, சைமன் கமிஷனை பகிஷ்கரிப்பதில் எத்தனை பேருக்கு சம்மதம் என்றும், ஆதரிப்பதில் எத்தனை பேருக்கு சம்மதம் என்றும் அறியவேண்டுமானால், பொதுவாகப் பார்த்தால் முதலாவது இந்தியாவில் உள்ள மாகாண சட்டசபைகள் எல்லாம் ஆதரிக்கின்றன என்பதை யாரும் ஆக்ஷேபிக்க முடியாது. இரண்டாவதாக இந்தியா சட்டசபை ஆதரிப்பதையும், யாரும் ஆக்ஷேபிக்க முடியாது. மற்றபடி இந்தியாவில் உள்ள மதமுறைப்படி பார்த்தால் கிறிஸ்தவர்கள், மகமதியர்கள், "இந்துக்கள்" ஆகியவர்களில் முக்கிய சபைகள் ஆதரிக்கின்றன என்பதையும் மறுக்க முடியாது. கடைசியாக, வகுப்பு முறைப்படி பார்த்தாலும் பார்ப்பனர் சபை முதற்கொண்டு ஒவ்வொரு வகுப்பு சபையும் ஆதரிக்கின்றன.



எனவே, இனி ஆதரிக்காத மக்கள் யார் என்று கேட்கின்றோம். அன்றியும், மற்றவர்கள் விஷயம் எப்படிச் சொல்லப்படுவதானாலும் பார்ப்பனரல்லாதாருக்கு என்று ஏற்பட்ட பொது இயக்கங்களும், பொது சபைகளும், அவர்களுக்குள் உள்ள தனித்தனி வகுப்பு இயக்கங்களும் ஒன்றுவிடாமல் கமிஷனை ஆதரித்து வரவேற்று, தங்கள் குறைகளைச் சொல்லிக் கொள்ளத் தீர்மானித்திருக்கின்றன என்பதில் யாரும் ஆக்ஷே பணை சொல்ல முடியாதென்றே சொல்லுவோம்.

அது மாத்திரமல்லாமல், இந்த ஒரு வருஷகாலமாய் நடைபெற்ற ஒவ்வொரு வகுப்பு மகாநாடுகளிலும், வகுப்பு சபைகளிலும், பார்ப்பனர்களும் அவர்தம் கூலிகளும் பிரவேசித்து, கலகம் செய்ய ஆட்களை ஏவிவிட்டும் கூட, எவ்வளவு முயற்சி செய்தும்கூட ஒரு வகுப்பிலாவது ஒரு இயக்கத்திலாவது, சரியானபடி தங்களுக்கு அனுகூலமான கக்ஷியையோ அபிப்பிராய பேதத்தையோ கூட கொண்டுவந்து போட முடியாத அளவு கமிஷன் ஆதரவு பலப்பட்டிருக்கின்றது என்பதையும் கவனித்துப் பார்க்கும்படி ஞாபகப் படுத்துகின்றோம்.

கடைசியாக, சைமன் விஷயத்தை ஆதாரமாய் வைத்துக் கொண்டு தேர்தலில் விஷமம் செய்யலாமென்று நினைத்துக் கொண்டிருக்கும் கனவான் களுக்கும் ஒன்று ஞாபக மூட்டுகின்றோம். அதாவது எந்தக் காரணத்தை முன்னிட்டும் இனி பாமர மக்களை இந்த தந்திரங்களின் மூலம் ஏமாற்றலாம் என்கின்ற எண்ணத்தை மூட்டை கட்டிவைத்துவிட்டு, ஜீவனத்திற்கு வேறு வழிபார்த்துக் கொள்ளும்படி எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 10.02.1929**



RangaRakes tamilnavarasam.com

# சர்க்காரின் மனப்பான்மையும் நமது நோக்கமும்

இவ்வார சட்டசபைக் கூட்டத்தில் திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரியார், "திரு. ராமசாமி நாயக்கர் மதத்தையும் சமூகத்தையும் தூஷித்து, பிரசாரம் செய்தது, சர்க்காருக்குத் தெரியுமா? அந்தப்படி அவரைப் பிரசாரம் செய்ய விடலாமா" என்பதாக சர்க்காரை ஒரு கேள்வி கேட்டிருப்பதாய் தெரிய வருகின்றது. அதற்கு சர்க்கார் "திரு. நாயக்கர் மதத்தையும், சமூகத்தையும் தூஷித்து பிரசாரம் செய்தது எங்களுக்குத் தெரியாது" என்பதாகப் பதில் சொல்லி இருப்பதாகவும் தெரிய வருகின்றது. இந்த விஷயத்தில் சர்க்கார், உண்டு அல்லது இல்லை என்ற இரண்டில் ஒன்றைச் சொல்லாமல் தங்களுக்குத் தெரியாது என்று சொல்லியிருப்பது சர்க்காரின் தந்திரத்தன்மையைக் காட்டுகின்றது. ஏனெனில், திரு.நாயக்கர் சென்ற மாதத்தில் வேலூரில் சுமார் 5, 6 கூட்டங்களில் பேசி இருக்கின்றார். வேலூர் மகாநாட்டிலும், சுமார் 15, 20 தீர்மானங்களுக்கு மேலாகவே நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. இவ்வளவு சங்கதிகளையும் சர்க்கார் உத்தியோகஸ்தர் களான சுமார், 4, 5 தமிழ் சுருக்கெழுத்துப் போலீஸ் அதிகாரிகள் ஒன்று விடாமல் எழுதிக் கொண்டு போயிருக்கின்றார்கள். அவைகள் சர்க்கார் குப்பைத் தொட்டியில் இன்னமும் இருக்கக் கூடுமென்றே நினைக்கின்றோம். அப்படியிருக்க, திரு. நாயக்கர் பேசியவைகள் சர்க்காருக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டது நாணயமான பதிலாகாது என்றே மறுபடியும் சொல்லுவோம்.

அன்றியும், திரு.சத்தியமூர்த்தி கேள்வி கேட்ட பிறகாவது சர்க்கார், சி.ஐ.டி. ரிப்போர்ட்டுகளைப் பார்த்து பதில் சொல்லியிருக்கலாம். அப்படிக் கொன்றுமில்லாமல் ஒரேயடியாய் தங்களுக்குத் தெரியாது என்று சொன்ன திலிருந்து சமயம் வரும்போது, அதாவது திரு. நாயக்கர் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்கின்ற அவசியம் வரும்போது திடீரென்று அப்பொழுதுதான் இந்த விஷயங்கள் தெரிந்தவர்கள் போல் பாவனை காட்டி பிடித்து உள்ளே போட சவுகரியம் வேண்டும் என்கின்ற எண்ணத்தின் பேரிலேயேதான் இப்படித் தந்திரமாகச் சொல்லியிருக்க வேண்டும் என்பதைத் தவிர அதற்கு நம்மால் வேறு காரணங்கள் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனாலும் நமக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. திரு.சத்தியமூர்த்தி சாஸ்திரிகளும் கூட, திரு.நாயக்கர் வேலூரில் மதத்தையும் சமூகத்தையும் தூஷித்தார் என்பதைப் பற்றிச் சட்டசபையாரிடம் போய் முட்டிக் கொள்ள வேண்டிய அவசியமில்லாமல் நேராகவே அவருக்கு நமது கருத்தை வெளிப்படுத்தி விடுகிறோம். இதன்மேல் அவர் என்ன வேண்டு மானாலும் செய்து கொள்ள அவருக்குப் பூரண சுதந்திரம் உண்டு என்ப தையும் அவருக்கு ஞாபகப் படுத்துகிறோம்.

## மத விஷயம்

மதவிஷயத்தில் நாம் இந்து மதமென்பதாக ஒரு மதமே கிடையாது என்பதோடு இந்துமதம் என்பதாக ஒன்று உண்டு என்றும் தாங்கள் அம்மதத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் நினைத்துக் கொண்டிருக்கின்ற மக்களின் உணர்ச்சியையே அடியோடு ஒழித்து, மனித சமூகத்தின் வாழ்வு, அறிவு, மானம், அன்பு, இரக்கம், பரோபகாரம் முதலிய ஒழுக்கங்கள் ஆகிய வைகளே முக்கியமானவை என்பதை உணரச் செய்ய வேண்டும் என்பதும், இதற்கு விரோதமாக போலி விதமான இந்து மதம் மாத்திரமல்லாமல், வேறு எந்தமதம் தடையாயிருந்தாலும் அவற்றையும் வெளியாக்குவதே நமது முக்கிய நோக்கமாகும்.

## சமூக விஷயம்

சமூக விஷயங்களில். எந்த சமூகம் மற்றொரு சமூகத்தை விட தாங்கள் பிறவியால் உயர்ந்தவர்கள் என்றும், எந்த சமூகமும் பொது வாழ்க்கையில் மற்ற சமூகத்தை விடத் தங்களுக்குச் சற்றாகிலும் உயர் பதவியும் அதிக சுதந்திரமும் அடைய பிறவியால் உரிமை உண்டு என்று பாத்தியம் கொண்டாடுகின்றதோ, எந்தச் சமூகம் மற்றொன்றின் சுய மரியாதைக் கிடையூறாய் இருக்கின்றதோ அதைத் திருத்திச் சமநிலையை ஒப்புக் கொள்ளச் செய்வதும், அது முடியாவிட்டால் அவற்றை அடியோடு அழிக்க வேண்டும் என்பதுமே எல்லாவற்றையும் விட முக்கிய நோக்கம் என்பதை வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அன்றியும் இம்முயற்சியில் ஈடுபடுவதில் கெஞ்சுவதையோ, அன்னியர் மனம் நோகுமே என்பதான கவலை கொள்வதையோ, கொள்கையாய்க் கொள்ளாமல், உண்மையுடன் உள்ளதை உள்ளபடி எடுத்துக்காட்ட யாரும் சற்றும் பின் வாங்கக் கூடாது என்பதுவும் நமது முக்கிய நோக்கமாகும். நன்மைகளிடத்தில் விருப்பும், தீமைகளிடத்தில் வெறுப்பும் கொள்ளவேண்டியது பரிசுத்தமான மனித உணர்ச்சியெனக் கருதுவதால் அதையும் வலியுறுத்துவது அவசியமாகும். ஆனால் இவைகள் வெற்றிபெற பலாத்காரத்தையோ, குரோதத் தையோ உபயோகிக்கக் கூடாது என்பது என்னிலையிலும் ஞாபகக் குறிப்புக் கொள்கையாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 10.02.1929**



RangaRakes
tamilnavarasam.com

## கும்பகோணத்தில் பார்ப்பனாதிக்கமும் கிறிஸ்தவர்கள் சுயமரியாதையும்,

கும்பகோணத்தில் சங்கராச்சாரியார் என்கின்ற ஒரு பார்ப்பன மடாதிபதி குடியிருக்கின்ற வீதியில் கிறிஸ்தவர்கள் பஜனை செய்து கொண்டு போகக் கூடாது என்று தடுத்துவிட்டார்களாம். ராயல் கமீஷனை வரவேற்பது இந்தியாவின் சுயமரியாதைக்குக் குறைவு என்று நினைக்கும் திரு. குழந்தை போன்ற 'தேசீய வீரர்களுக்கு' கும்பகோணத்து சந்நியாசிப் பார்ப்பான் குடியிருக்கும் ஒரு வீதியில் அதுவும் நாய், கழுதை, பன்றி, மலம், மூத்திரம் தாராளமாய் நடமாடும் வீதியில் தன் இனத்தார்கள் பஜனை பாடிக் கொண்டு நடக்கக் கூடாது என்று சொன்னது தன் சமூகத்தின் சுயமரியாதைக்குக் குறைவு என்று தோன்றவில்லையா? அல்லது தோன்றினாலும் வயிற்றுக் கொடுமை அதை மறைத்துவிட்டு, சைமன் கமிஷனிடமும் இதைச் சொல்ல வேண்டாம் என்று அடக்கி "சைமன் பஹிஷ்காரக்" கூச்சல் போடும்படி செய்கின்றதா? என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 10.02.1929**



### இரண்டாவது சென்னை மாகாண

## தீண்டாமை விலக்கு மகாநாடு

வெகுகாலமாகவே தீண்டாமை என்பது நியாயமானதல்ல என்பதை எடுத்துக் காட்டி அக்கிரமமானதென்பதையும் விளக்கிப் போராடி வந்திருக் கின்றோம். ஆயினும் இத்தொல்லை காரியத்தில் நீங்கியதாய்த் தெரிய வில்லை. எங்கு நிர்ப்பந்தமிருக்கின்றதோ, அங்கு கொஞ்சம் நீங்கியிருக்கின் றது. அதாவது உதை கொடுக்குமிடத்தில் தீண்டாமை நீங்குகிறது (நகைப்பு). மனிதத் தன்மையினாலும் ஜீவகாருண்யத்தை முன்னிட்டும் இத்தீமையை ஒழிக்க வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக் கொள்ளும்போது இத்தீண்டாமை பலமாய் உட்கார்ந்து கொள்வதைக் காண்கிறோம். (நகைப்பு). இத்தகைய தீண்டாமை என்னும் தீமைக்கு யாதொரு ஆதாரமும் கிடையாது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு நாம் ஒரு சிறிதும் யாரையும்விட இளைத்தவர்களல்ல.

நம் நாட்டில் தீண்டாமைக்கு இடம் கொடுத்துக் கொண்டிருப்பது ஒரு வகையில் சாமியும் மதமும் தான் என்று சொல்லவேண்டும். "சொல்லுவ தெல்லாம் நியாயம் தான், கடவுள் அல்லவா அப்படி படைத்துவிட்டார்,. அதற்கு என்ன செய்வது?" என்று சிலர் கடவுள் மீது பழியைச் சுமத்து கின்றனர். மற்றும் சிலர், "என்ன செய்வது? மதம் இதற்கு இடம் கொடுக்க வில்லையே?" என்று மதத்தின் மீது பழிபோடுகின்றார்கள். ஆதலால் இத்தீண்டாமையைத் தைரியமான போராட்டத்தினால் தான் ஒழிக்கக் கூடிய தாயிருக்கின்றது. "கடவுள் எங்கும் நிறைந்த சர்வசக்தியுள்ளவர், பட்ச பாதக மற்றவர்" என்று சொல்லிக் கொண்டு "கடவுள் தான் தீண்டாதவர்கள் என்ற கொடுமைக்குட்படும் மக்களுக்கு ஆதார"மென்பது எவ்வளவு கேவல மானது. அநேகமாக அவர்தான் இந்த தீண்டாமையைப் படைத்தவர் என்றும் சொல்லப்படுகின்றது. அது உண்மையாயின் அத்தகைய கடவுளை எப்படியாவது ஒழித்துவிட்டுத்தான் மறுவேலை பார்க்க வேண்டும். (கர கோஷம்) இந்த அநியாயமான சங்கதி அவருக்குத் தெரியாதென்றால் அதற் காக அவரை இன்னும் சீக்கிரமாய் ஒழிக்க வேண்டும். (கரகோஷம்) அவரால் இத்தகைய அநீதியை விலக்கவோ அல்லது அக்கிரமம் செய்பவர்களை அடக்கவோ முடியாதென்றால் அவருக்கு எந்த உலகத்திலும் இருக்க வேண்டிய வேலையே இல்லை. ஒழிக்க வேண்டியது தான் நியாயம் (நகைப்பு)

கடவுளை முட்டாளும் அயோக்கியனும் சக்தியற்றவனும் என்று



RangaRakes tamilnavarasam.com

கேவலப்படுத்துவதற்கு என்ன மாறுபாஷையோ அதுதான் கடவுள் படைப்பினால் தீண்டாமையிலிருந்து வருகின்றதென்று சொல்லப்படுவ தென்பதே எனது அபிப்பிராயம். கடவுள் பேரில் பழிபோட்டுவிட்டு தப்ப முயலுபவர்களின் செய்கை மிகக் கேவலமானது. அவர்களையும் எவ்வளவு சீக்கிரத்தில் ஒழிக்கின்றோமோ அவ்வளவு நன்மையுண்டு. அது போலத் தான் மதத்தின் மீதும் பழிசுமத்துவதும், எந்த மதத்தை எந்தக் கடவுள் அல்லது யார் நேரில் வந்து சொல்லிவிட்டுப் போயிருந்தாலும், எந்தச் சமயாச்சாரி எவ்வளவு அற்புதங்கள் செய்திருந்தாலும் தீண்டாமை என்னும் கொடு மைக்கு இடம் கொடுத்துக் கொண்டுள்ள மதத்தை உடனே ஒழிக்க வேண்டும்.

கடவுளும் மதமும் இத்தீண்டாமை விலக்கப்படுவதற்கு இடம் கொடுக்கவில்லை என்று சொல்லப்படுவதற்கு ஏதாவது ஆதாரங்களிருந்தால் அவை யார் சொன்னாலும், எப்படிப்பட்டதானாலும் அவற்றை நெருப்பைப் போட்டுப் பொசுக்க வேண்டும். (கரகோஷம்) காரியத்தில் உறுதியாய் நிற்காமல் வாயளவில் தீண்டாமையை ஒழிப்பதாக பேசுவதான அயோக்கியத் தனத்தினால் ஒரு போதும் நாடு முன்னேற முடியாது. புண் கண்ணில் பட்டால் அதை உடனே தொலைக்க மருந்து முதலியன போட்டுச் சிகிச்சை செய்யவில்லையா? ஆனால் அது வலிக்கக் கூடாது. எரியக்கூடாது என்று மூடி வைத்துக் கொண்டு வாய்ச் சமாதானம் சொல்வது புழுத்துச் சாவதற்கு வழிதான்.

தீண்டாமை விலக்கு என்பது பிறருக்காகச் செய்யப்படும் பரோப காரமான செய்கை எனக்கருதுவது அறிவீனம். அதுமனிதத் தன்மையை நிலைநாட்ட, சுயமரியாதையைக் காக்க நாட்டின் விடுதலைக்கு அவசியமான தென்று கருத வேண்டும்.(கரகோஷம்) நம்மைப் பொருத்த மட்டில் நமக்குக் கீழாகக் கருதப்படும் மக்களை நாம் கொடுமைப்படுத்துகின்றோம். இதற்கு நாம் வெட்கப்பட வேண்டும். நமக்கு மேலாகக் கருதப்படும் ஒரு இனத்தார் நம்மைக் கொடுமைப்படுத்துகின்றனர். பஞ்சமர்கள் எனப்படுபவர்களுக் கிருக்கும் பழியைவிட நம்மிடத்திலிருக்கும் பழியை முதலில் ஒழிக்க முயல வேண்டும். அப்பொழுது அது தானாய் மறையும்.

பெண்களையும் ஒரு தீண்டாத சமூகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. (நகைப்பு) தீண்டாமைவிலக்கு என்பது நமது கடமையான காரியம். நாம் அது நன்மையை உத்தேசித்த காரியம் என்பதை உணர்வதில்லை. குருட்டுத் தனமாக அவர்கள் சொன்னார்கள், அதில் எழுதியிருக்கிறது என்பதை நம்பிக்கொண்டு அறிவைப் பொருத்தமட்டில் தீண்டாமைக்கு ஏதாவது ஆதாரமுண்டாவென்று ஆராய்ந்து முடிவு செய்யாமல் இன்னும் மூடப் பழக்கங்களை பின்பற்றுவதைவிட கேவலச் செய்கை வேறு ஒன்றுமே இல்லை. தீண்டாமை என்பது அறிவைப் பொருத்தும் ஆதாரங்களைப் பொருத்துமிருக்கவில்லை. ஆனால், முட்டாள்தனத்தையும், ஆணவத்தை யும் அயோக்கியத்தனத்தையும் பொருத்துத்தானிருக்கிறது (கரகோஷம்)



மலத்தைத் தொட்டால் கழுவினால்போதும். மனிதனைத் தொட்டால் குளிக்கவேண்டும் என்பது சுகாதாரத்தின் பெயரிலா? அல்லது ஆணவத்தை முன்னிட்டா என்றுதான் கேட்கிறேன். (பெருத்த கரகோஷம்) சுயநலத்தை உத்தேசித்தோ அல்லது முட்டாள்தனத்தை உத்தேசித்தோ இந்த அயோக் கியத்தனத்தை வைத்துக் கொண்டிருப்பது மிகக் கேவலமானது. அவர் அப்படிச் சொன்னார்; இவர் இப்படிச் சொன்னார்; அதற்கு ஆதாரங்க ளிருக்கின்றனவென்றால் இன்னமும் அவற்றிற்கு இடம் கொடுக்கலாமா என்று தான் கேட்கிறேன்? நந்தனை நாயன்மார்களுள் ஒருவராக்கி பாணனை திருப்பாணாழ்வாராக்கிய புராணத்தை நம்பினால் நந்தன் அண்ணன் தம்பி பேரப்பிள்ளை முதலானவர்களை ஏன் அவர்களைப் பார்க்க கோவிலில் போக விட்டு, கும்பிடுவதற்கு அனுமதிக்காமல் கொடுமை செய்யவேண்டும்? அறுபத்து மூன்று நாயன்மார்களுடன் ஒருவரெனக் கருதப்படும் ஒருவர் தன் குலத்தவரை கோவிலிலும் வரக் கூடாதென்று தடுத்து 63 குழவிக் கற்களை வைத்துப் பொங்கலும், புளியோதரையும் சாப்பிடுவதற்கென்று நாயன்மார்கள் பெயரையும் நந்தன் பெயரையும் ஆழ்வார்கள் பெயரையும் சொல்லிக் கொண்டு திரிவது எவ்வளவு கேவலமானது? (கரகோஷம்) தவிர அவர்கள் அருகில் வந்தால் நாற்றமடிக்கின்றது என்பதற்கு யார் ஜவாப்தாரி? குளிக்க இடமில்லை; ரஸ்தாவில் வரக்கூடாது; பொதுக்கிணறு, குளத்திற்கு வரக்கூடாது; வண்ணான் இல்லை; அம்பட்டனில்லை என்றால் இத்தகைய அநியாயங்களுடன் நாற்ற மடிக்காமல் மற்றபடி மணக்குமா என்றுதான் கேட்கிறேன். ‘சங்கராச்சாரி’யை 15 நாட்களுக்கு ஒரு ரூமில் போட்டு மூடிவைத்து குளிக்காமலிருக்கச் செய்து பாருங்கள்! பிறகு நாற்றமெ டுக்கிறதா? மணக்கிறதாவென்று தெரியும் (நகைப்பும் கரகோஷமும்) “சுவாமி” யையும் பத்து நாள் தண்ணீர் கொட்டி, அபிஷேகம் செய்து கழுவாதிருந்தால் அதுவும்தான் நாற்றமெடுத்துக்கொள்ளும் (நகைப்பு)

பின்னும், அவர்கள் சாராயம், கள் முதலியவற்றைக் குடிக்கின்றனர்; மாம்சம் தின்னுகின்றனர் என்றும் சொல்லப்படுகின்றது. சாராயம் யார் குடிப்பதில்லை? மாம்சம் யார் தின்பதில்லை? உற்பத்தியாகும் சாராயம், கள் முதலிய எல்லாவற்றையும் அவர்கள்தானா குடித்துவிடுகின்றார்கள்? (நகைப்பு) குடித்துவிட்டுத் தெருவில் உருளுபவர்கள் மூக்கில் கள் ஒழுகக் கோவிலுக்குப் போகலாம். பிற மதஸ்த்தரான கிறிஸ்தவர்களும் முஸ்லீம் களும் பாதிவழி போகலாம். ஆனால் இந்துக்கள் எனப்படும் அவர்கள் மட்டும் கோபுரத்துக்கு வெளியில் நிற்க வேண்டும். இத்தகையக் கொடுமை யைவிட நமது சமயத்தில் வேறு என்ன இருக்கிறது. விடிய விடியத் தெருவில் பன்றியும் கோழியும் என்ன தின்கின்றதென்பதைப் பார்த்துக் கொண்டிருக் கின்றோம் (நகைப்பு) அவற்றைத் தின்பவர்களுக்குத் தீண்டாமை இல்லை. ஆனால் பச்சைப்புல்லையும் பருத்திக் கொட்டையும் தின்னும் மாட்டைத் தின்பவர்களுக்குத்தானா தீண்டாமை? நியாயத்திற்கும் அறிவுக்கும் பொருந்துவதாயிருப்பதை ஒப்புக் கொள்ள வேண்டுமேயன்றி முட்டாள்



RangaRakes tamilnavarasam.com

தனமான அர்த்தமற்ற விஷயங்கள் எவற்றையும் எதன் பெயராலும் ஒரு போதும் ஒப்புக் கொள்ளக்கூடாது! கேளுங்கள்! கடவுள் பெயராலோ மதத்தின் பெயராலோ பழி போட்டுச் செய்யப்படும் அக்கிரமங்களை மற்ற நாடுகளில் அலட்சியம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள் அறிவுக்கும் நியாயத்திற்கும் பொருத்தமற்ற தீண்டாமை என்னும் தீமையை அடியோடு ஒழிப்பதில் நீங்கள் எதற்கும் பின் வாங்க மாட்டீர்களென்று நம்புகிறேன். (கரகோஷம்).

*குறிப்பு : சென்னை பச்சையப்பன் அரங்கில் 9, 10.02.1929 இரு நாளில் நடைபெற்ற இரண்டாவது சென்னை மாகாண தீண்டாமை விலக்கு மாநாட்டில் தீண்டாமை விலக்குத் தீர்மானத்தை* முன்மொழிந்து ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 17.02.1929**

### * தீண்டாமை விலக்குத் தீர்மானம்

"மனித வாழ்க்கையின் நன்மைகளை உத்தேசித்தும் ஜீவகாருண்யத்தை முன்னிட்டும் தேசமுன்னேற்றத்தைப் பொறுத்தும், நம் நாட்டின் பெரும்பகுதியினர் மீதும் சுமத்தப்பட்டுள்ள தீண்டாமை என்னும் கொடிய தடையை உடனே விலக்க வேண்டுமென்று இம்மகாநாட்டார் அபிப்பிராயப்படுவதால் சமுதாய ஊழியர்களும் தேசபக்தர்களும் சங்கங்களை ஸ்தாபித்து தீண்டாமையை ஒழிக்கும் நோக்கத்தில் வெற்றி பெறும் பொருட்டு பொது ஜனங்களிடை இடைவிடாத பிரசாரம் செய்து அவர்களைக் கண்விழிக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றனர்."



## சுயமரியாதை மகாநாடு

சுயமரியாதை மாகாண மகாநாடு செங்கல்பட்டில் இந்த வாரம் இன்றைய தினம் நடைபெறுகின்றது. அதைப் பற்றிப் பலவாறாக பழிப்புரைகளும் விஷமக் கருத்துக்களும் வெளியிடப்பட்டு வருகின்றன. அதாவது அரசாங்கத்தார் ஆதரவில் இம்மகாநாடு நடத்தப்படுவதாகவும் பார்ப்பன துவேஷத்தின் மீது நடத்தப்படுவதாகவும், மற்றும் போல்ஷ்விசம் பரப்ப அவர்கள் உதவிக் கொண்டு நடத்தப்படுவதாகவும், இதைப் பற்றி அரசாங்கத்திற்கும் சிலர் தெரிவித்ததாகவும் சொல்லப்படுவதுடன் சிலர் கவர்னரிடம் தூது சென்றதாகவும் தெரிகின்றது.

அரசாங்கத்தாரும் இவற்றிற்கு காது கொடுத்து சற்று துடிக்கின்றதாகவும் தெரிய வருகின்றது. எப்படி இருந்தாலும் நமக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. நமக்கு வேண்டியது சுயமரியாதை என்பதுதான். உலகத்திலே உயிரையுங் கூட கொடுத்துப் பெற வேண்டியதாக அவ்வளவு மதிப்பும் விலையும் பெறுமானமுள்ளது சுயமரியாதையே ஆகும். என்றாலும் சிலர் தங்களுக்கு அவ்வார்த்தையே பிடிக்கவில்லை என்றும், சிலர் ஜஸ்டிஸ் கக்ஷி இருக்கும் போது சுயமரியாதை இயக்கம் ஒன்று தனியாக எதற்கென்றும் மதத்திலும் மனிதனுடைய நம்பிக்கை உணர்ச்சியிலும் கை வைப்பது தங்களுக்குப் பிடிக்கவில்லை என்றும், சுயமரியாதை இயக்கத்தால் நாஸ்திகம் பரவுவதாகவும், அரசியல் கெட்டுப் போவதாகவும், தேசீயம் தடைப்படுவதாகவும் இன்னும் பல மாதிரியாகவும் பேசிக் கொள்ளப்படுகிறது.

இவற்றிற்கு நமக்குத் தோன்றிய பதில் சொல்ல ஆசைப்படுகின்றோம். ஒரு இயக்கத்திற்கு ஒரு பெயரை எதற்காக இடுவது என்றும் அது காதுக்கினிமையாக விருப்பதற்காகவா அல்லது இயக்கத்தின் தத்துவத்தையும் கொள்கைகளையும் உணர்த்துவதற்காகவா என்று கேட்கின்றோம். 'சுயமரியாதை இயக்கம் என்றால், சுயமரியாதை இல்லாதவர்களின் இயக்கம் என்று பிறர் கருதமாட்டார்களா' என்கின்றார்கள். அப்படியானால் நாம் அவர்களை "சன்மார்க்க இயக்கம் என்றால் அது துன்மார்க்கர்களுடைய இயக்கமாகிவிடுமா? ஜீவகாருண்ய இயக்கம் என்றால் அது ஜீவ காருண்யமில்லாத 'கசாப்புக் கடைக்காரர்கள்' இயக்கமென்றாகிவிடுமா? சைவ சித்தாந்த இயக்கம் என்பது 'அசைவர்கள்' கூட்டமாகிவிடுமா? அது போலவே ஜஸ்டிஸ் இயக்கம் என்பது இன்ஜஸ்டிஸ்காரர்கள் இயக்கம்



RangaRakes tamilnavarasam.com

என்றாகிவிடுமா?" என்று கேட்கின்றோம். ஒரு சமயம் அப்படியே அர்த்த மாகிவிடும் என்று சொல்வதானாலும் கூட சுயமரியாதை இயக்கம் என்பதற்கு பொருள் சுயமரியாதை இல்லாதவர்கள் அதை அடைய ஏற்படுத்திக் கொண்ட இயக்கம் என்பதில் நமக்கு ஆக்ஷேபனை இல்லை என்றே சொல்லுவோம். இதற்கு உதாரணம், முதலாவது சுயமரியாதை இயக்கம் என்கின்ற பெயர்கள் பிடிக்கவில்லை என்று சொல்லுகின்றவர்கள் தங்களையே அதாவது தங்கள் உருவத்தை கண்ணாடியில் பார்த்து 'உனக்கு சுயமரியாதை இருக்கின்றதா' என்பதாக ஒரு கேள்வி கேட்டுக் கொண்டு, தனது உருவம், நடை, உடை, குறி, கொள்கை இவைகளை வெளிப்பார்வையிலும் தனது எண்ணம், நம்பிக்கை, தான் நடந்து கொண்டமுறை, நடந்து கொள்ள இருக்கின்ற கருத்து ஆகிய வைகளை உள்ளுக்குள்ளாகவும் தான் கட்டுப்பட்டிருக்கும் ஆக்ஷி, தான் பின்பற்றிவரும் மதம், மத உணர்ச்சி, மதச் சடங்கு, மதக்கொள்கை ஆகிய வைகளை அனுபோகத்தைக் கொண்டும் மற்றும் தங்களைப் பற்றி மற்ற வர்கள் என்ன பேசிக் கொள்ளுகின்றார்கள் என்பதையும் சற்று யோசித்துப் பார்த்தால் எவ்வளவோ மோசமானவர்களாகவும் எவ்வளவோ சுயநலக் காரர்களாகவும் இருப்பவர்களுக்குங்கூட தங்களின் சுயமரியாதையற்ற தன்மை சூரிய வெளிச்சம் போல் விளங்காமற் போகாது என்றே நினைக் கின்றோம்.

மற்றும் 'ஜஸ்டிஸ் கட்சி இருக்கும்போது இது எதற்கு' என்பவர்கள், ஜஸ்டிஸ் கட்சியின் மூலம் 10 வருஷ காலமாய் விளைந்து வந்த உணர்ச்சிகளையும் சுயமரியாதைக் கிளர்ச்சியில் இந்த இரண்டு வருஷத்தில் விளைந்த உணர்ச்சியையும் கவனித்துப் பார்க்க வேண்டுகின்றோம். சமீப காலம் வரை ஜஸ்டிஸ் கக்ஷி அரசியலில் மாத்திரம் மிதவாதம் அமிதவாதம் என்கின்ற முறையில் மிதவாதிகளின் கொள்கைகள் என்பனவற்றைப் பின்பற்றிக் கொண்டு பார்ப்பனரிடமிருந்த உத்யோகங்களைப் பிடுங்கி எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுக்கும் வேலையில் மாத்திரம் ஒருவாறு வெற்றிபெற்று வந்ததே ஒழிய மற்ற வகைகளில் தாராளமாய் முன்னேற முடியாதபடி தடைப்படுத்தப்பட்டே வந்திருந்தது. சுருக்கமாகச் சொல்வோ மானால் பார்ப்பனரல்லாதார் என்கின்ற ஒரு குறிப்பிடத்தகுந்த சமூகம் தமிழ் நாட்டில் இருக்கும் சங்கதியை வெளி மாகாணங்களுக்குத் தெரிய முடியாமல் இருந்தது என்றும், கொஞ்சநஞ்சம் தெரிந்தாலும் அது "தேசத்துரோகிகள், முட்டாள்கள், காட்டு மிராண்டிகள்" என்று பிறர் கருதும் படியாகச் செய்து வந்த எதிரிகளை சமாளிக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததும் யாரும் மறுக்க முடியாது. அன்றியும் அரசாங்கத்தாராலும் இது ஒரு தனி வகுப்புவாதக் கட்சியென்று மாத்திரம் மதிக்கப்பட்டு அவர்களால் தங்கள் சுய நலத்திற்காக இது உபயோகப்படுத்தப்பட்டு வருவதாகவே கருதியும் வந்திருந்தார்கள். ஆனால் இப்போது அவர்கள் இதே ஜஸ்டிஸ் கட்சியை மதித்திருக்கின்றார்கள் என்பதற்கும், அதற்கு எவ்வளவு கட்டுப்பட்டு



இருக்கின்றார்கள் என்பதற்கும், இது வெளி மாகாணங்களில் எவ்வளவு மதிக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கும் இந்த வருஷத்திய அதாவது 27 – 28ஆம் வருஷத்திய இந்தியா கவர்மெண்ட் ரிப்போர்ட்டைப் பார்த்தால் விளங்காமல் போகாது. சமூக விஷயத்திலும் மக்களின் உணர்ச்சி எவ்வளவு முற்போக்கடைந்திருக்கின்றது என்பதற்கும் மதுரை மகாநாடு முதல் இதுவரை நடந்துவந்த பார்ப்பனரல்லாதார் மகாநாட்டு நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் கவனிப்பவர்களுக்கு விளங்காமல் போகாது. அரசியலில் ஜஸ்டிஸ் கட்சியை சர்க்கார் தாசர்கள் என்று நமது எதிரிகள் சொல்லி வந்ததை கோயமுத்தூர் தீர்மானத்தின் மூலமாகவும் அதற்குப்பின் அரசாங்கத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்குள்ள மதிப்பின் மூலமாகவும்தான் பொது ஜனங்களுக்கு பொய்ப்பித்துக் காட்ட முடிந்தது. ஆகவே சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கட்சிக்கு எவ்வளவு ஆதரவைத் தந்திருக்கின்றது என்பதைக் கவனித்தால் எந்த வகையிலும் அது அவசியமில்லாதது என்று சொல்ல முடியவே முடியாது என்று சொல்லுவோம்.

மத விஷயத்தில் பிரவேசிப்பதாய் சொல்லுவது:–

மதம் என்பது மனிதனின் வாழ்க்கை நலக் கூட்டுறவுக்கும் ஒழுக்கத் திற்கும் தேவையானதே ஒழிய மதத்திற்கு மனிதன் தேவையில்லை என்றே சொல்லுவோம். ஆதலால் இப்போது வாழ்க்கை நலக் கூட்டுறவுக்கும் ஒழுக்கத்திற்கும் ஆதாரமான எந்த மதத்தில் அது பிரவேசித்து என்ன கெடுதியைச் செய்தது அல்லது அதனால் என்ன விளைந்தது என்று யாராவது எடுத்துக்காட்ட முடியுமா என்று கேட்கின்றோம். அன்றியும் கூட்டுறவு நலத்திற்கும் ஒழுக்கத்திற்கும் சமரச உணர்ச்சிக்கும் விரோதமாக எது இருந் தாலும் அதை அழிக்க வேண்டுமா வேண்டாமா என்றும் நாம் அவர்களைக் கேட்கின்றோம்.

மனிதனுடைய நம்பிக்கை உணர்ச்சியை கெடுக்கின்றது என்று சொல்லப்படுவது:–

எந்த விஷயத்தையும் மனிதன் தன் அறிவைப் பொருத்து ஒரு விஷயத்தை நம்ப வேண்டுமா அல்லது குருட்டு நம்பிக்கையால் ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்று கேட்கின்றோம். அதுபோலவே நாஸ்திகம் என்பதும் அர்த்தமற்ற வார்த்தையேயாகும் என்பதே நமது அபிப்ராயம். கடவுள் உண்டா இல்லையா என்பதைப் பற்றி வாதம் செய்து முடிவு கட்டுவது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை அல்லவே அல்லவென்பதையும் அதற்காக அனாவசியமாய் நேரம் செலவழிக்காது என்பதையும் பொது ஜனங்கள் உணரவேண்டுகின்றோம். ஆனால் நமது இயக்கக் கொள்கைகளை நடைபெறவொட்டாமல் தடுப்பதற்காக கடவுள் என்பதைக் கொண்டுவந்து தடையாகவோ முட்டுக்கட்டையாகவோ போடச் சூழ்ச்சி செய்தால் அதற்குச் சற்றும் இடம் கொடுக்கமுடியாது என்பது தான் சுயமரியாதை இயக்கத்தின்



RangaRakes
tamilnavarasam.com

உறுதியான கொள்கையாகும். அறிவையும் தன்னம்பிக்கையையும் தன் முயற்சியையும் அன்பையும் ஒழுக்கத்தையும் தன்னகத்தில் கொண்ட எந்த சமயத்தினுடையவும் ஒத்துழைப்பை சுயமரியாதை இயக்கம் வலிய வரவேற்கும் என்றும் உறுதி கூறுகின்றோம்.

பின்னும் அரசியல், தேசீயம் ஆகியவற்றிற்கு சுயமரியாதை இயக்கம் தடையாயிருக்கின்றது என்பது:-

மக்களின் சுயமரியாதைக்காகத் தான், மக்கள் மானத்தோடு வாழ்வதற் காகத்தான் அரசாங்கமும் தேசீயமும் வேண்டுமேயொழிய மற்றபடி கேவலம் இவைகள் மனிதன் வயிறுவளர்க்க மாத்திரம் வேண்டியது என்றால் அதற்காக எந்த அரசாங்கமும் அரசியலும் தேசீயமும் கண்டிப்பாய் வேண்டியதில்லை என்றே சொல்லுவோம். இதுவரை நமது நாட்டில் ஏற்பட்டிருந்த ஏற்பட்டி ருக்கின்ற, எந்த அரசியல் இயக்கமாவது தேசீய உணர்ச்சியாவது மக்கள் சுயமரியாதைக்கேற்றதான திட்டங்களுடன் அமைக்கப்பட்டிருந்ததா யென்று அரசியல்வாதிகளையும் தேசீயவாதிகளையும் கேட்கின்றோம்.

எனவே, உண்மையான சுயமரியாதை உணர்ச்சி மக்களுக்குத் தோன்றிவிட்டால், அதுவே அரசியலையும் தேசீயத்தையும் மற்றும் மத இயலையும் தானாகவே சரிப்படுத்திக் கொள்ளும். அப்போது சுயமரியாதை வேறு, அரசியல் வேறு, தேசீயம் வேறு, மதஇயல் வேறு, ஒழுக்க இயல் வேறு, அன்பு இயல் வேறு என்கின்ற பாகுபாடுகளும் பிரிவுகளும் கண்டிப்பாய் மறைந்தோடி விடும்.

உதாரணமாக, நமக்கு மேலானதும் கீழானதுமான ஒரு வகுப்பு இருக்கக் கூடாது என்று சொன்னால் அந்த வார்த்தையிலேயே நமக்கு மேலானதாக ஒரு அரசாங்கமும் ஆட்சியும் இருக்கக் கூடாது என்பது தானாக உதயமாகிவிடும். அதுபோலவே நமக்கு மேலாகவோ கீழாகவோ ஒரு நாடு இருக்கக் கூடாது என்பதும் தோன்றிவிடும். பொதுவாக சுய மரியாதை என்கின்ற ஒரு இஞ்சினை பலப்படுத்தி சரியாக ஓடத்தகுந்த சக்தியை உண்டாக்கிவைத்து விட்டால் பிறகு அதில் எந்த இயந்திரத்தை (மிஷினை) கொண்டு வந்து அத்தோடு இணைத்து தோல்பட்டையை மாட்டிவிட்டாலும் அது தானாகவே ஓடும். அது இன்னவிதமான இயந்திரமாகத்தான் இருக்க வேண்டும் என்கின்ற கவலை யாருக்கும் வேண்டியதில்லை என்றே சொல்லுகின்றோம். மற்றபடி எல்லா உணர்ச்சிகளையும் விட சுயமரியாதை உணர்ச்சியே மேலானதும் மதிக்கத் தகுந்ததுமாகும் என்பதின் தத்துவத்தை உணர்ந்தவர்களுக்கு இந்த இயக்கத்தில் உண்மையான சந்தேகமே தோன்ற இடம் இருக்காது. அது இன்றைய தினம் வேண்டுமானால் ஏதோ ஒரு சிறு வகுப்பாருடன் போராடத் தோன்றியதாகத் தோன்றலாம். இதுவே அல்ல அதன் லட்சியம். ஒரு இயந்திரத்தை சுழற்றும்போது முதலில் சுற்றும் சிறுவேகம் போல் இன்று ஒரு சிறு வகுப்பார் உணர்ச்சியோடு போராடுவதாகக் காணப்படுவது. மற்றபடி பின்னால் அது உலகத்தையே ஒன்றுபடுத்த உலக



மக்களையே ஒரு குடும்ப சகோதரர்களாகச் செய்யும் முயற்சியின் போதுதான் அதன் உண்மைச் சக்தியும் பெருமையும் வெளியாகும்.

அன்றியும் இது கிளம்பிவிட்டால் யாராலும் இதை அழிக்கவோ அல்லது சற்றாவது அடக்கி வைக்கவோ கண்டிப்பாய் முடியாது என்பதுடன் அடிக்க அடிக்க எழும்பும் பந்துபோல் எதிர்க்க எதிர்க்க வளர்ந்து கொண்டே போகும் சக்தி உடையது என்பதே நமது உறுதி. அன்றியும் எந்த விதத்திலும் எல்லோரும் எவ்வித அபிப்ராயமுடையவர்களும் இது இன்றைக் கில்லாவிட்டாலும் நாளைக்காவது சேர்ந்துதான் ஆக வேண்டும் என்பதுவும் நமது பலமான உறுதியாகும். அன்றியும் இவ்வியக்கம் ஒவ்வொன்றையும் பெரிதும் வேண்டாம் என்று சொல்லும் விரக்தியைப் பற்றி இருக்கின்றதே ஒழிய, வேண்டும் என்று சொல்லும் படியான ஆசையைப் பற்றவில்லை. ஆதலால் இது யாரும் ஏமாற்றமடைவதற்கு இடமேயில்லை. அன்றியும் இதற்குள் போட்டிகளுக்கும் இடமில்லை.

மற்றபடி இதைப்பற்றி சர்க்கார் எப்படி நினைத்துக் கொண்டாலும் நமக்கு அதைப்பற்றி சற்றும் கவலையில்லை. உலக வாழ்க்கையில் இறங்கி ஆசையிலீடுபட்டு உழலும் சம்சாரவாளிகளிடமிருந்து நமக்கு யாதொரு உதவியும் ஒத்துழைப்பும் தேவையில்லாததாலும், பெரிதும் பரிசுத்தமானதும் சுயநலமற்றதும் எதற்கும் எவ்வித தியாகத்திற்கும் தயாராயிருக்கும் இளங்காளைகளிடத்திலும் இளம் கன்னிகைகளிடத்திலும் திக்கற்றவர் களிடத்திலும் நமது இயக்கத்திற்கு பெரிதும் உதவி எதிர்பார்க்கின்ற படியாலும் அவர்களும் தாராளமாய் உதவி அளிக்கத் தயாராய் மேல்விழுந்து வருவதாலும் நாமும் இதன் முடிவைப் பற்றி சற்றும் கவலை கொள்ளாமல் கடமையையே பின்பற்றிக் கொண்டிருப்பதாலும் இவ்வியக்கத்தின் மூலம் எவ்வித நஷ்டமாவது கஷ்டமாவது அடைய வேண்டி வருமோ என்கின்ற எண்ணமே சிறிதும் கொள்ளாமல் இருக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 17.02.1929**



RangaRakes tamilnavarasam.com

# இனிச் செய்ய வேண்டிய வேலை
# "ரிவோல்ட்" தலையங்கத்தின்
# மொழி பெயர்ப்பு

சுயமரியாதை இயக்கமானது, பன்னெடுங்காலமாக இந்திய சமூகத்
தைப் பாழ்படுத்தி அதன் இரத்தத்தை கொஞ்சங் கொஞ்சமாக உறிஞ்சி
உயிரை வாங்கிக் கொண்டிருந்த மூட நம்பிக்கைகளையும் குருட்டுப் பழக்க
வழக்கங்களையும் அடியோடு ஒழித்துவிடுவான் வேண்டி தங்கள் உயிர்
பொருள் ஆவி மூன்றையும் தியாகம் செய்யக்கூடிய பலரைத் தன்னிடம்
ஈர்த்துக் கொண்டிருக்கிறது. மக்களின் அறியாமையை அனுகூலப்படுத்திக்
கொண்டு அவர்களைப் பல வகைகளில் அடிமைப்படுத்தலை ஒழித்து பகுத்
தறிவை வளரச் செய்வதற்காகவே இவ்வியக்கம் பாடுபட்டு வருகிறது. அதன்
பலன்களும் திருப்திகரமானவைகளாகவே யிருக்கின்றன. வெகுகாலமாக
சுயநலவாதிகளால் அமுத்தப்பட்டு அறியாமையில் ஆழ்ந்திருந்த பாமர
மக்கள் மனித உரிமையை உணர ஆரம்பித்து விட்டார்கள். பரம்பரை வழக்
கம் என்பதற்காகவோ "பெரியோர் வாக்கு" என்பதற்காகவோ விசேஷ மதிப்
புக் கொடுப்பதில்லை. சுயநலமிகள் கொஞ்சங்கொஞ்சமாக ஒழிந்து கொண்டி
ருக்கிறார்கள். இந்தியமக்கள் தமது நிலையை உணர்ந்து கொண்டார்கள். இனி
அவர்களை ஏமாற்ற முடியாது. காலப்போக்கும் சீர்திருத்தக்காரர்களுக்கே
ஆதரவாயிருக்கிறது, பகுத்தறிவுக்கும் முன்னேற்றத்திற்கும் தடையாயிருப்
பவைகளெல்லாம் மடிந்துகொண்டே இருக்கின்றன.

யாவராலும் விரும்பப்படும் ஒரு பெரிய இலக்ஷியத்தைக் குறித்து
இதுவரை தன்னந்தனியாகவும் புகழை இச்சிக்காமலும் தமக்குத் தோன்றிய
முறையில் போராடிவந்ததொண்டர்களெல்லாம் முதன் முதலாக செங்கல்
பட்டில் கூடப்போகிறார்கள். ஆகவே செங்கல்பட்டு மகாநாடானது சமூகச்
சீர்திருத்த இயக்கத்தில் மிக முக்கியமானதாகும். இங்கு நம் முழு ஆற்ற
லையும் திரட்டி ஒருங்கே எதிர்க்க ஆயத்தமாக வேண்டும். இனி நாம் தனிப்
பட்ட ஒரு மனிதனின் முயற்சியிலாவது சில்லரை வெற்றிகளிலாவது திருப்தி
யடைந்துவிடக்கூடாது. இனிச் செய்யவேண்டிய காரியங்களை ஜாக்கிர



தையாக ஓர்ந்து நமக்கிருக்கும் ஆள்வலி, தோள்வலி, பொருள்வலி ஆகிய
வைகளைச் சரியாகக் கணக்கெடுத்து எல்லா அம்சங்களையும் கொண்ட
சரியான ஒரு திட்டம் தயாரிக்க வேண்டும். மகாநாட்டுக்கு வரும் பிரதிநிதி
களை, முரட்டுத்தனமான பயனற்ற விவாதங்களில் பொழுது போக்கக்கூடாது
என்று கேட்டுக் கொள்கிறோம். வாய் வேதாந்தமானதும் வார்த்தைகள்
நிரம்பியதுமான தீர்மானங்கள் செய்வதில் பயனில்லை. வாய் வேதாந்
தங்களினாலும் இனிய வசனங்களினாலும் ஏமாந்து மோசம் போனவர்களைப்
பார்த்து நாம் பயனடைவோம். நம் தீர்மானங்கள் எல்லாவித இயற்கை
உணர்ச்சிகட்கும் தத்துவங்கட்கும் ஏற்ற முறையில் குறிப்பாகவும் துரித
மாகவும் நடைபெறக்கூடியவாறு வகுக்கப்பட்டு இருக்க வேண்டும். இக்
காலத்தில் நம் நாட்டில் சிறப்பாகத் தமிழ் நாட்டில் இவ்வுணர்ச்சி தலைசிறந்து
விளங்குகிறது. எனவே இவ்வுணர்ச்சியை முறையாகவும் சீராகவும்
தொடர்ச்சியாகவும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டிய வழிகளைக்
கவனிப்போம்.

நம் லட்சியம் இன்னது என்பது வெள்ளிடைமலை. எனவே நாம்
அதைப்பற்றி விவாதிக்க வேண்டியதில்லை. நடைமுறையின் முற்போக்கு
நடத்துவிப்பவருக்கு தக்கபடியும் கால தேசவர்த்தமானங்களுக்கு ஏற்றபடியும்
இருக்கும். எனினும் முன்னேற்றத்தின் போக்கு ஸ்திரமானதே. அதாவது ஜாதி
பேதம், பிறவியினால் உயர்வு தாழ்வு, சமஸ்காரம், மறுபிறவி, அவதாரம், சிலை
வணக்கம், அதன் அண்ணனான புரோகிதம், மதச்சின்னம், சடங்குகளா
கியவைகளை நாம் சீர்திருத்தமாகிய புதுக்கட்டடத்தைக் கட்டுமுன்னரே
இடித்துத் தள்ளிவிட வேண்டும். பிறவியினால் உயர்வு உண்டு என்னும்
எண்ணம் மக்கள் மனத்தினின்று நீங்கினாலொழிய தீண்டாமையை யொழித்
தலும் பெண் மக்கள் முன்னேற்றமும் முடியாதவை. பிறவியினால் உயர்வு
தாழ்வு என்னும் பொய்க் கொள்கையே ஜாதிப் பாகுபாட்டிற்கு இடங்கொடுத்
தது. ஆண், பெண்ணிலும் மேம்பட்டவன் என்னும் அகம்பாவமானது
பெண்களைக் கோஷாக்களாகவும் சொத்துரிமையற்றவர்களாகவும் ஆண்க
ளுடைய சொத்துக்களாகவும் ஆக்கியிருக்கிறது. சம்ஸ்காரங்கள் கலியாணத்
தைக் கேலிக்கூத்தாக்கி இளமையின் சிறப்பை நாசமாக்கி விட்டது. மறுபிறவி,
அவதாரங்கள் என்னும் கொள்கைகள் மக்களை நிரந்தரமான சோம்பேறி
களாக ஆக்கிவிட்டன. எனவே நம் மக்களுக்குள் மனித உணர்ச்சியை
எழுப்ப வேண்டுமானால் நாம் அக்குருட்டு நம்பிக்கைகளின் மூலகாரணங்
களை வேரோடு களைய வேண்டும். நம் மக்கள் பழைய சின்னங்களையும்
சடங்குகளையும் மந்திரங்களையும் பின்பற்றி நம்பிக்கொண்டிருக்கும் வரை
எந்த இந்தியனும் பிறநாட்டாருடன் சம உரிமைக்குப் போராட முடியாது. இந்த
அறிவு ததும்பும் காலத்திலுங்கூட அறிவாளிகள் என்பவர்களும் சர்வகலா
சாலைப் பட்டதாரிகள் என்பவர்களுங்கூட வெட்கமின்றித் தம் நெற்றிகளில்
மதச்சின்னமணிவதைப் பார்க்க விந்தையாயிருக்கின்றது. உயர்வைக்
குறிப்பதாகச் சொல்லப்படும், தோள்களில் தொங்கும் பூணூலானது அணிந்



RangaRakes
tamilnavarasam.com

திருப்பவனின் மனிதத்தன்மை அற்றத்தன்மையைத் தெளிவாய்க்குறிக்கிறது. ஓமமும், திவசம், பிறப்பு இறப்பு முதலிய காலங்களில் சொல்லப்படும் மந்திரங்களும் மனக் கண்ணைக் கெடுத்து மனிதனை அஞ்ஞான இருளில் ஆழ்த்துகிறது. ஒரு நாகரீகமுற்ற சமூகமென்றால் சடங்குகளுக்குத் தண்டனை விதித்தாக வேண்டும். இந்த மாதிரிக் கொடிய மோசம் செய்கிறவர்களைத் தீயிலிட்டுக் கொழுத்தினாலும் தக்க தண்டனையாகாது. நம் உற்சவ காலங்களில் நடக்கும் குடிகாரக் கலகங்களும், அசிங்கங்களும், ஆபாசங்களும் எந்தக்காலத்திலும் வேறு எந்த நாட்டிலும் இருந்ததில்லை. திருவிழாக்கள் தொலைந்து உடல் நலத்திற்கும் மனோநலத்திற்கும் வேண்டிய வசதிகள் ஏற்பட வேண்டும்.

சிலை வணக்கந்தான் எல்லாத் தீமைகளுக்கும் பிறப்பிடமாயிருப்பது. நாட்டின் மதிப்பைக் காப்பாற்ற எண்ணமுடைய ஒவ்வொருவனும் கற்சிலைகளைத் தகர்த்து சிலைகளையுருக்கி அவ்வுலோகத்தைக்கொண்டு ஆயுதங்களும் இயந்திரங்களும் செய்விக்க வேண்டும். மத சம்பந்தமாக விடப்பட்ட சொத்துக்களெல்லாம் நாட்டின் நலத்திற்கு உபயோகப்படுத்தப்பட வேண்டும். மடங்களைப் பள்ளிக்கூடங்களாகவும் கல்லூரிகளாகவும்மாற்றவேண்டும். கோவில்கள் ஆஸ்பத்திரிகளாக வேண்டும். புரோகிதரை நீக்க வேண்டும். 'நரகத்திற்கு' அஞ்சக்கூடாது. சோதிடர், குறிகாரர், மந்திரவாதி முதலியவர்களைத் தண்டிக்க வேண்டும். சமஸ்கிருதத்தையொழித்து வேதங்களையும் புராணங்களையும் படிப்பதைத் தடுக்க வேண்டும். இப்போது நடைமுறையிலுள்ள மொழிகளை விருத்தி செய்து விஞ்ஞான அறிவையும் தொழில் ஞானத்தையும் பெருக்க வேண்டும். சோம்பேறிப் பாப்பானுக்குச் சோறு போடுவதைத் தடுத்து, வேலையற்றவருக்கு வேலை கொடுத்து, கிழவர்களுக்கு ஜீவனோபாயம் அளித்துக் காப்பாற்றவேண்டும். ஒருவனே உழைப்பது என்பதை நீக்கி நாட்டின் வருவாயை நீதியாக அனைவருக்கும் பங்கிட வேண்டும். ஏக போக உரிமைகளையொழித்து தன்னாட்சி முறையில் கைத்தொழில்கள் தாராளமாக விருத்தியாக ஏற்ற சாதனம் ஏற்படும்படியான பொருளாதார நிலையையொட்டியே ஒரு திட்டம் நிறுவ வேண்டும்.

இதில் குறிப்பிட்டுள்ளவை மட்டும் போதுமான தென்று நான் சொல்லவில்லை. ஆனால் நம் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக உள்ள முக்கியமான அம்சங்களை மட்டும் இங்கு குறிப்பிட்டிருக்கிறோம். நம் முன்னேற்றத்திற்கு எத்தனை இடையூறுகள் வந்தாலும் அனைத்தையும் தடுத்து ஓங்கக் கூடிய தைரியமும் உறுதியுமுள்ள ஒரு அமைப்பை உண்டு பண்ணுமானால் தான் இச்செங்கற்பட்டு மகாநாட்டின் நோக்கம் பயன்பெற்றதாகும்.

**குடி அரசு - மொழிபெயர்ப்புக் கட்டுரை - 17.02.1929**



RangaRakes

## ஓர் புதிய கோயில்

மேட்டூரில் ஓர் புதுக்கோவில் கட்டி, அங்கு பிள்ளையாரையும் ஆஞ்சனேயரையும் பிரதிஷ்டை செய்யும் நோக்கத்தோடு 11-2-29 காலை 10 மணிக்கு அஸ்திவாரம் நாட்டினார்கள். இக்கோஷ்டிக்குத் தலைவர் திரு. மகா தேவய்யரவர்கள் பி.ஏ. பி.இ. எக்ஸிக்யூடிவ் இஞ்சினீர். ஆராய்ச்சித்திறமுள்ள இஞ்சினீர்களுக்கு கோவில்களைப் பெருக்கக் கருத்தோடியதின் அர்த்தமென்ன? ஏழைக்கூலிகளுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் உபயோகப்படும் இராப்பள்ளிக்கூடம் வைக்க ஏற்பாடு செய்யக்கூடாதா? கோவில் கட்டுவது பார்ப்பனரல்லாத ஏழைப் பாமர மக்களைப் பிரித்து வைத்து ஏமாற்றித் தம்மினத்தவர்கள் பார்ப்பனரல்லாதார் செலவில் உண்டு கொழுப்பதற்கல்லவா?

**குடி அரசு - செய்தி விளக்கம் - 17.02.1929**



tamilnavarasam.com

## சென்னையில் சைமன் கமீஷனுக்கு ஆடம்பரமான வரவேற்பு. பகிஷ்காரம் 'பொஸ்ஸ்' என்று போய்விட்டது.

ராயல் கமிஷனுக்கு பார்லிமெண்டால் நியமிக்கப்பட்ட சைமன் கமிஷன் அங்கத்தினர்களும் இந்திய பிரதிநிதிகளால் தெரிந்தெடுக்கப்பட்ட சென்ட்ரல் கமிட்டி அங்கத்தினர்களும் ரங்கூனிலிருந்து சென்னை துறைமுகத்திற்கு 18-தேதி காலை 6-மணிக்கு "டிறா" என்னும் கப்பலில் சுகமே வந்து சேர்ந்தார்கள். அவர்களை சென்னை மாகாண மக்களின் பிரதி நிதிகளால் சைமன் மாகாணக் கூட்டுக் கமிட்டிக்கு தெரிந்தெடுத்த பொது ஜனப் பிரதிநிதி அங்கத்தினர்களும் சென்னை அரசாங்க பிரமுகர்களும் கப்பலிலிருந்து இறக்கி துறைமுக மேடையில் வெகு அலங்காரமாய்ப் போடப்பட்டிருந்த பந்தல்களுக்கு அழைத்துச் சென்றார்கள்.

பந்தலில் சென்னை நகர மக்கள் சார்பாக சென்னை கார்ப்பரேஷன் சபைத் தலைவரும் கார்ப்பரேஷன் அங்கத்தினர்களும் மற்றும் சென்னைப் பிரமுகர்களும் தென் இந்திய மிராசுதாரர்களின் பிரதிநிதிகளாகிய மிராஸ்தார் சங்க அங்கத்தினர்களும், ஜமீன்தார்களும், ராஜாக்களும் மற்றும் வெளி ஜில்லா மக்களின் பிரதிநிதிகளாக ஜில்லா போர்டு மெம்பர்களும், மகமதிய சமூகப் பிரதிநிதிகளும், ஆதிதிராவிட சங்கப் பிரதிநிதிகளும், வர்த்தக சங்கப் பிரதிநிதிகளும், மாகாண இளைஞர் சங்கப் பிரதிநிதிகளும், பொது ஜனங்கள் சார்பாக அரசாங்கத்தில் மந்திரிகளாக நியமிக்கப்பட்ட மந்திரிமார்களும் மற்றும் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த சகல திறப்பட்ட மக்களின் கூட்ட மும் ஏராளமாக வந்திருந்து ஒவ்வொரு பிரதிநிதி ஸ்தாபனங்களும் வரவேற்பு பத்திரங்கள் வாசித்துக் கொடுத்து அநேக வகுப்பு மகாநாடுகளில் கமிஷனை வரவேற்கச் செய்த தீர்மானங்களையும் தெரியப்படுத்தி வரவேற்றார்கள்.

சைமன் துரையவர்களும் கமீஷன் சார்பாக இவ்வாடம்பரமானதும் பிரதிநிதித்துவமானதுமான வரவேற்பை ஏற்று அதற்குத்தக்க பதிலளித்த தோடு தங்களது நன்றியறிதலையும் தெரிவித்து அரசாங்க விருந்தினராய்ச் சிலரும் மந்திரிகள் விருந்தினராய் சிலரும் தனிப்பிரபுக்களின் விருந்தினர் களாகச் சிலரும் அவரவர்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இவைதவிர மற்றும் அநேக பிரதிநிதித்துவ சபைகளினுடைய பத்திரங்களும்



அழைப்புகளும் கமீஷனுக்கு ஏராளமாக இருந்தது என்றாலும் அவற்றை எல்லாம் ஏற்றுக் கொள்ள கமீஷனர்களுக்கு போதிய சாவகாசம் இல்லை என்பதை முன்னமேயே அவர்கள் வருத்தத்துடன் தெரிவித்துக் கொண்ட தின் மீது பல ஏற்பாடுகள் நிறுத்தப்பட்டுவிட்டன. எனவே, சென்னையில் தாங்கள் தான் பொது ஜனங்களின் பிரதிநிதிகள் என்றும் தங்கள் கருத்துத்தான் தேசமக்கள் கருத்தென்றும், தாங்களேதான் தேசத் தலைவர்கள் என்றும் தங்களுக்குத் தாங்களே விளம்பரம் செய்து கொண்டும் தங்களுக்குள் ளாகவே ஒருவருக்கொருவர் தலைவர் பட்டங்களை பரிமாரிக் கொண்டும் இருந்த - இருக்கின்ற - ஒரு சில ஆசாமிகள் கூடிக் கொண்டு சுமார் ஒரு வருஷகாலமாக பஹிஷ்காரக் கூச்சல் போட்டும் எவ்வளவோ சூழ்ச்சிகளும் விஷமப் பிரசாரங்களும் செய்தும் கடைசியாக சைமன் பஹிஷ்காரம் பொஸ் ஸென்று காலி வேட்டாய் போய் விட்டதுடன் சைமன் கமீஷன் வரப் போவ தில்லை என்று தெரிந்த ஒரு தெருவில் நின்று தங்கள் செலவில் போட்டோ படம் பிடித்து தங்கள் தங்கள் பத்திரிகையில் போட்டுக் கொண்டதோடு பகிஷ்காரம் முடிவு பெற்றுவிட்டதென்றே சொல்லுவோம்.

ஒரு சமயம் பஹிஷ்காரக் கூச்சல்காரர்கள் இதை ஒப்புக் கொள்ளு வதில்லை என்று சொல்ல வருவார்களானால் அவர்களை ஒரே ஒரு கேள்வி கேட்கின்றோம். அதாவது, தமிழ்நாட்டு மக்களின் சார்பாக பஹிஷ்காரக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தவர்களில் அதாவது, திருவாளர்கள் சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ஷாபிமகமது, குழந்தை, வரதராஜுலு, திரு.வி.கல்யாணசுந்தரம், இரத்தினசபாபதி, அமீத்கான், ஜெயவேலு முதலிய கூட்டத்தார்களை விட எந்த விதத்திலாவது அதாவது, தேசீயப் பொறுப் பிலோ ஒழுக்கத்திலோ தியாகத்திலோ செல்வத்திலோ குறைந்த யோக்கியதை உடையவர்கள் ஒருவராவது சைமன் கமிஷனை வரவேற்ற பதினாயிரக் கணக்கான கூட்டத்தில் இருந்தார்களா என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - செய்தி விளக்கக் குறிப்பு - 24.02.1929**



RangaRakes tamilnavarasam.com

# செங்கல்பட்டு மகாநாட்டின் தீர்மானங்கள்

இரண்டு மூன்று மாத காலமாய் தென்னிந்தியா முழுவதும் ஒரே பேச்சாயிருந்த முதலாவது சுயமரியாதை மாகாண மகாநாடு செங்கற்பட்டில் இம்மாதம் 17,18ஆம் தேதிகளில் வெகுவிமரிசையாகவும் மிக்க ஆடம்பர மாகவும் கூடி பல தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு கலைந்துவிட்டது. வெகு சொற்ப நாட்களுக்குள்ளாகவே செங்கல்பட்டில் இந்த மாகாண மகாநாடு நடத்த தீர்மானித்ததால் போதுமான சாவகாசமில்லாதிருந்தும்கூட செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் ராவ்பகதூர் கே.கிருஷ்ணசாமி யவர்கள் முயற்சியாலும் செங்கற்பட்டு சேர்மன் திரு.வேதாசலனாரவர்கள் ஊக்கத்தாலும் செங்கற்பட்டு பிரபுவும் ஜமீன்தாரருமான அப்பாசாமி வள்ளலாரின் வள்ளல் தன்மையாலும் 'திராவிடன்' பத்திராதிபர் திரு. கண்ணப்பரின் இடையறா உழைப்பாலும் மற்றும் அநேக கனதனவான்களின் உதவியாலும் தென்னிந்தியாவில் இதுவரை எங்கும் நடந்திராத மகாநாடு போல் இம்மகாநாடு நடந்தேறிவிட்டதும் மகாநாட்டின் பிரதிநிதிகளிலும் இதுவரை எந்த மகாநாட்டிலும் கூடாதமாதிரி எல்லா தரத்தவர்களும் ஏராளமாக வந்து கூடியிருந்ததும் குறிப்பிடத்தக்கதேயாகும்.

முதலாவதாக வைதீகர்கள் கூட்டமும் இரண்டாவதாக பண்டிதர்கள் கூட்டமும் மூன்றாவதாக ராஜாக்கள், மந்திரிகள், ஜமீன்தார்கள், உத்தியோ கஸ்தர்கள், ஆங்கிலம் படித்தவர்கள், செல்வந்தர்கள், மிராசுதாரர்கள், வியாபாரிகள் முதலியவர்களின் கூட்டமும் எதிர்பாராத அளவில் விஜயம் செய்திருந்தது மிகவும் குறிப்பிடத்தகுந்ததாகும். மற்றபடி பெண்மணிகள், தொழிலாளர்கள், ஏழைமக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், கொடுமை செய்யப்பட்டவர்கள் ஆகியவர்கள் மற்ற எல்லாரையும் விட அதிகமாகக் கூடியிருந்ததாலும் அவர்களே மகாநாட்டுக்குச் சொந்தக்காரர்களானதினால் அவர்கள் வந்திருந்ததில் நாம் ஒன்றும் அதிசயப்படுவதற்கில்லை. எனவே இம்மாதிரி குறிப்பிடத்தகுந்த அளவு மகாநாட்டின் பெருமைகள் ஒரு புறமிருக்க மகாநாட்டின் தீர்மானங்களைப் பற்றிச் சிறிது கவனிப்போம்.

இம்மகாநாட்டில் சுமார் இருபது தீர்மானங்கள் வரை நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அவைகளில் சைமன் கமிஷன் பகிஷ்காரம் கூடாது என்றும் நேரு கமிட்டி ரிப்போர்ட்டை பகிஷ்கரிக்க வேண்டும் என்றும்



செய்யப்பட்ட தீர்மானங்களைப் பற்றி அரசியல் துறையில் இருப்பவர்கள் என்பவர்களில் ஒரு சிறு சாரருக்கு அபிப்ராய பேதமிருக்கலாம். அதற்கு நம்முடைய சமாதானம் என்ன வென்றால், முதலாவதாக நமது சுயமரியாதை இயக்கத்தில் அரசியல் நிர்வாக சம்மந்தமான சீர்திருத்த விஷயங்களைப் பற்றிய பேச்சுக்களுக்கு இடமில்லை என்பது யாவரும் அறிந்ததேயாகும். ஆனால் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளும் திட்டங்களும் நிறை வேற்றப்படும்போது ஜனங்களின் உதவியை எப்படி எதிர்பார்க்க வேண்டி யிருக்கின்றதோ அதுபோலவே அரசாங்க உதவியையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. ஆதலால் அந்த அளவுக்கு அரசியல் தீர்மானம் இருந்துதான் தீர வேண்டியிருக்கின்றது. இன்றைக்கும் சுயமரியா தைக் கொள்கைகளில் அநேக விஷயங்களை நிறைவேற்ற வொட்டாமல் செய்ய நமது எதிரிகள் அரசாங்கத்தின் துணையை எதிர்பார்க்கின்றதை நாம் பார்க்கின்றோம். அநேக விஷயங்கள் அரசாங்க சட்டத்தின் மூலம் செய்யப் படவேண்டியிருக்கின்றதையும் உணர்ந்து அவைகளுக்கு சட்டசபைகளின் மூலம் சட்டம் செய்ய முயன்று கொண்டுமிருக்கின்றோம்.

உதாரணமாக, ஆண்களுக்கொரு சட்டம், பெண்களுக்கொரு சட்டம் என்பதாகவும், பார்ப்பனருக்கொரு சட்டம், பார்ப்பனரல்லாதாருக்கொரு சட்டம் என்பதாகவும் உயர்ந்த சாதி என்பவர்களுக்கொரு சட்டம், தாழ்ந்த சாதி (தீண்டப்படாதவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டவர்கள்) என்பவர் களுக்கொரு சட்டம் என்பதாகவும் இருந்து வருவதையும் அவற்றை நாம் தினமும் அனுபவித்து வருவதையும் மாற்றி எல்லோருக்கும் சமமான நீதி ஏற்படுத்த வேண்டுமானால், நமக்குள்ளாகவே நாம் செய்து கொள்ளும் படியாக எந்தக்காரியம் செய்தாலும் சரி, எந்தத் தீர்மானம் செய்தாலும் சரி, அவைகளினால் நமது லட்சியத்தை நிறைவேற்ற முடிவதில்லை என்பதும், அவைகளுக்குக் கண்டிப்பாய் அரசாங்கத்தின் மூலம் பழய சட்டங்களை மாற்றி புதிய சட்டங்கள் செய்தே தீரவேண்டும் என்பதும் யாராலும் மறுக்கப் படமுடியாத உண்மைகளாகும். அல்லாமலும், அவைகளில் அநேகவற்றிற்கு சட்டம் செய்யக் கூட நம்மவர்கள் ஏகமனதாய் ஒப்புக் கொள்வதாயிருந் தாலும்கூட முதலில் அரசாங்க அனுமதியையும் பெற வேண்டியதான நிபந்தனைகளும் இருக்கின்றன.

இஃதொருபுறமிருக்க, அரசாங்கம் எல்லா மக்களுக்கும் பொதுச் சொத்து என்பதையும் அரசாங்க உத்தியோகங்களும் பதவிகளும் எல்லோ ருக்கும் பொதுச் சொத்து என்பதையும் அதுபோலவே அரசாங்க வரிப் பணமும் எல்லா மக்களுக்கும் பொதுச் சொத்து என்பதையும் யாராவது மறுக்க முடியுமா? அது போலவே அப்பணத்திலிருந்து செலவு செய்யப்படும் ஒவ்வொரு காரியமும் எல்லாருக்கும் பொது என்பதையும் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். எனவே அப்பொதுக் காரியங்கள் உரிமைகள் எல்லாருக்கும் சமமாய் அனுபவிக்க சம சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டு



RangaRakes tamilnavarasam.com

மல்லவா. ஆதலால் இதற்கு நாம் அரசாங்க உதவி எதிர்பார்க்காமலிருக்க முடியுமா? என்பதை யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம்.

உயர்ந்த பதவியில் இருப்பவர்களுக்கும் பொது உரிமைகளில் அதிகமான பங்கை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கும் மற்றவர்களை முன்னேறவிடாமல் தடுத்து சூழ்ச்சி செய்து முன்னணியில் இருந்து கொண்டிருப்பவர்களுக்கு மாத்திரம் இக்காரியங்களுக்காக அரசாங்கத்தை எதிர்பார்ப்பது என்பது ஒரு சமயம் தங்களது சுயமரியாதைக்குப் பங்கமாயிருப்பதாகக் காணப்படலாமே ஒழிய வெகுகுறைந்த உரிமைகளை அனுபவிப்பவர்களுக்கும் வெகு தாழ்ந்த பதவியில் தாழ்த்தப்பட்டிருப்பவர்களுக்கும் தங்கள் பதவிகளைக் கேட்பதும் விடுதலை பெறமுயற்சிப்பதும் ஒருக்காலும் அவர்களது சுயமரியாதைத் தத்துவத்திற்கு விரோதமானது என்று எவரும் சொல்ல முடியாதென்றே கூறுவோம்.

ஆதலால் இந்தமுறையில் சைமன் கமிஷனிடம் கொடுமைப்படுத்தப் பட்டவர்களும் பிறரால் ஏமாற்றப்பட்டுப் பின்னணியில் தள்ளப்பட்டவர்களும் தங்கள் கஷ்டங்களையும் தேவைகளையும் அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்துவது என்கின்ற முறையில் கமீஷனிடம் எடுத்துச் சொல்வதிலும் சம சுதந்திரமும் சம சந்தர்ப்பமும் ஏற்படுவதற்கு மார்க்கமில்லாத நேரு திட்டம் என்னும் அரசியல் திட்டத்தை சம சுதந்திரமும் சம சந்தர்ப்பமும் இதுவரை அனுபவியாத மக்கள் ஒப்புக் கொள்வதில்லை என்பதிலும் குற்றமொன்றுமில்லையென்றே சொல்லுவோம். ஆகவே இவை அரசியல் நிர்வாக விஷயத்தைச் சேர்ந்த தல்லவென்றும் ஒருசமயம் இவை அரசியல் நிர்வாக விஷயத்தைச் சேர்ந்தவைதான் என்று சொல்லப் படுவதானாலும், அவை உண்மையான சுயமரியாதைத் தத்துவத்திற்கு தள்ளப்பட முடியாத விஷயமேயாகும் என்றும் சொல்லுவோம்.

நிற்க, மக்கள் பிறவியில் ஜாதி வித்தியாச உயர்வு தாழ்வு கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டுமென்பது. இது இந்நாட்டு மக்களில் பல துறைகளில் உள்ள எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுவதானாலும் அதற்கு விரோதமாயுள்ள ஆதார விஷயங்களில் உள்ள பிடிப்பை விட்டுவிட அநேகர் சம்மதியாமல் இருப்பதையும், மற்றொரு புறம் அக்கொடுமைகள் நிலைத்திருக்க மதத்தின் பேரால் மகாநாடுகளும் பிரசாரங்களும் அரசாங்கத்தினிடம் தூதுகளும் நடைபெறுவதையும் பார்க்கும்போது நம் நாடு சுலபத்தில் அக்கொடுமைகளை ஒழிக்கத் தயாரில்லை என்பதும் உயர்வு தாழ்வுக் கொடுமையின் அஸ்திவாரம் இன்னதென்று பலருக்குப் புலப்படவில்லை என்பதுமே விளங்குகின்றது. அதுபோலவே வர்ணாசிரமப் பிரிவுப் பாகுபாடுகள் விஷயத்திலும் தேசாபிமானி, மகாத்மா, சீர்திருத்தக்காரர் என்பவர்கள் முதல் கொண்டு அவற்றை ஆதரிப்பதும் அதற்காதாரமான மதம், வேதம் முதலியவற்றைப் பற்றிப் பிரசாரம் செய்வதும், அவற்றிற்கு வேறு வியாக்கியானங்கள் செய்வதுமான நிலையிலேயே இன்னும் இருப்பதை சற்று



கூர்ந்து பார்த்தால் இது சம்மந்தமாக மகாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்களின் அவசியம் யாவருக்கும் நன்றாய் விளங்கும். நிற்க, அடுத்த படியாக,

வகுப்புப் பட்டங்களும் குறிகளும் விடப்படவேண்டும் என்னும் தீர்மானத்தின் அவசியமும் அதுபோலவேதான். எப்படியெனில் மக்களுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே அவர்களது குணம், அறிவு, தன்மை முதலியவைகள் ஒன்றும் தெரியாமலே அவர்களை பிரித்து வேற்றுமையாய் நினைக்கத் தகுந்த மாதிரியில் அர்த்தமற்ற பிரிவினைகளைக் காட்டும் வித்தியாசங்கள் ஒழிந்தாலொழிய நமது நாட்டில் மக்கள் ஒன்று பட்டு ஒரே லக்ஷியத்திற்குழைத்து வாழ முடியாதாகையால் அவ்வித்தியாசங்களைக் காட்டும் பெயர்களும் குறிகளும் ஒழிக்கப்பட வேண்டும் என்பது ஒற்றுமையையும் சமத்துவத்தையும் விரும்பும் யாவராலும் ஒப்புக் கொள்ளப் படத்தக்கதேயாகும். மற்ற தீர்மானங்களைப் பற்றிய கருத்துகள் தொடரும்.

**குடி அரசு – தலையங்கம் – 24.02.1929**



RangaRakes tamilnavarasam.com

# ஓர் விஞ்ஞாபனம்

செங்கற்பட்டில் நடைபெற்ற முதலாவது மாகாண சுயமரியாதை மகாநாட்டின் தீர்மானப்படி, பெயர்களுக்குப் பின்னால் சேர்க்கப்படும் நாயக்கர், நாயுடு, செட்டியார், முதலியார் போன்ற ஜாதிப் பட்டப் பெயர்களையும், ராமம், விபூதி, பூணூல் முதலிய மதச்சின்னங்களையும் நீக்கிவிட்டவர்களின் ஜாபிதாவையும் இனி "குடி அரசு"ப் பத்திரிகையில் வெளியிட உத்தேசித்திருப்பதால் ஜாதிப் பட்டங்களை நீக்கிவிட்டவர்களும், மதக்குறியை விட்டவர்களும், தம் தம் விலாசத்தை அவ்வப்போது தெரியப்படுத்தினால் பிரசுரிப்பதற்கு மிகவும் உபகாரமாயிருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நிற்க, இனி எமக்கு எழுதும் கடிதங்களிலும் எமது பெயரைக் குறிப்பிடும் சமயங்களிலும் எமது பெயருக்குப் பின்னால் நாயக்கர் என்று குறிப்பிடாமல் இருக்க வேண்டுகின்றோம்.

( ப - ர் .)

**குடி அரசு - அறிவிப்பு - 24.02.1929**



# செங்கற்பட்டு மகாநாட்டு தீர்மானங்களும் ஜஸ்டிஸ் பத்திரிகையும்

செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாட்டைப் பற்றி சென்னை ஜஸ்டிஸ் பத்திரிகை ஒருவாறு புகழ்ந்து எழுதியிருப்பதாகக் காணப்பட்டாலும், அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் பற்றி தனது அபிப்பிராயத்தை தெரிவித்திருப்பதில் மிக முக்கியமான தீர்மானங்கள் என்று பொது ஜனங்களால் கருதப்படும் தீர்மானங்கள் விஷயத்தில் அது தனக்கு உள்ள அபிப்பிராய பேதத்தை காட்டியிருக்கின்றதை நாம் மனப்பூர்வமாக வரவேற்று சமாதானம் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஏனெனில் அவரவர்களுக்குத் தோன்றும் எந்த விஷயங்களைப் பற்றியானாலும் அபிப்பிராய பேதங்களையும் அதனால் ஏற்படக் கூடிய சாதக பாதகங்களையும் எடுத்துச் சொல்ல யாவருக்கும் உரிமை உண்டு என்பதையும் ஒவ்வொரு அபிப்பிராய பேதத்தையும் கண்ணியமாய் வரவேற்று சமாதானம் சொல்ல வேண்டியது மிகவும் நியாயமானது என்பதையும் நாம் எப்போதும் வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

ஆதலால் அம்முறையிலேயே ஜஸ்டிசின் சில தீர்மானங்களைப் பற்றிய அபிப்பிராய பேதத்தையும் அதன் நியாய விளக்கத்தையும் கவனிப்போம். அதாவது,

கலியாண சம்மந்தமாகவும் பெண்ணுக்கும் ஆணுக்கும் உள்ள உரிமை சம்மந்தமாகவும் செய்த ஒரு தீர்மானத்தைப் பற்றியும் கடவுளுக்கு வணக்கத்திற்கென்று பணம் செலவு செய்யக் கூடாது என்கின்ற தீர்மானத்தைப் பற்றியும் ஜஸ்டிஸ் எழுதுகின்றபோது, பொது ஜனங்கள் அத் தீர்மானங்களுக்கு ஏகமனதாய் அபிப்பிராயம் கொடுக்கவில்லை என்றும் அன்றியும் அவர்கள் ஏகமனதான சம்மதத்தைப் பெற முடியாது என்றும் எழுதி இருக்கின்றது. இந்த இடத்தில் ஜஸ்டிஸ் ஒழுங்காக நடந்து கொள்ளவில்லை என்பதை எடுத்துக் காட்ட வருத்தப்படுகின்றோம். ஏனெனில் கலியாண சம்மந்தமான தீர்மானத்திற்கு அவ்வளவு பெரிய கூட்டத்தில் ஒரு சிறு ஆட்சேபனை கூட கிளம்பவேயில்லை. ஒரே ஒரு வாலிபர் புருஷனும் பெண்ஜாதியும் பிரிந்து கொண்டால் குழந்தை யாரைச் சேர்ந்தது என்று மாத்திரம் கேட்டார். உடனே ஒருவர் தகப்பனைச் சேர்ந்தது என்று சொன்னார். இதைத் தவிர வேறு எந்தவிதமான ஆக்ஷேபனையாவது, ஆக்ஷேபனைக்



RangaRakes tamilnavarasam.com

குறியாவது அங்கு நிகழவேயில்லை. அப்படியிருக்க மகாநாட்டு கூட்டத்தில் அதற்கு ஒரு வித சம்மதமில்லை என்று எழுதியிருப்பது வருந்தத்தக்கதே ஆகும்.

தவிர கோவிலில் கடவுளை வணங்கும் விஷயத்தில் பணம் செலவழிக்கக் கூடாது என்கின்ற தீர்மான விஷயத்தில் சிலர் ஆட்சேபனை இருந்தது மெய்தான். அதுவும் ஜஸ்டிஸ் கட்சி மாஜி பத்திராதிபரும் ஜஸ்டிஸ் பத்திரிகை காரியதரிசியும் ஜஸ்டிஸ் கட்சிக்காக நடத்தப்படும் தெலுங்கு பத்திரிகையாகிய 'சமதரிசினி' பத்திரிகை ஆசிரியரும் ஆகிய மூவர்களே ஆட்சேபித்து பேசினர். அப்படிப் பேசியதிலும் சிலவு செய்ய வேண்டும் என்கின்ற கட்சிக்காக அவர்களில் யாராவது ஒரு நியாயமும் சொல்லவே யில்லை. அவர்களில் ஒருவர் நியாயமான சிலவு செய்யலாம் என்றார். மற்றவர் கல்பூரம் மாத்திரம் கொளுத்தலாம் என்றார். இன்னொருவர் இந்தியா வின் சிற்ப வேலை அலங்காரத்திற்கு கோயில்களை மீத்துவைக்க வேண்டி யிருப்பதால் சிலவு செய்துதான் தீரவேண்டும் என்றார்.

எனவே ஆக்ஷேபித்துப் பேசிய மூன்று கனவான்களுடைய பேச்சிலிருந்தும் இம்மாதிரி விஷயங்களில் ஜஸ்டிஸ் மனப்பான்மை எப்படி இருக்கின்றது என்பதை உணர மட்டும் முடிந்ததே தவிர வேறு சரியான காரணங்கள் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவே இல்லை.

"அவசியமான செலவை செய்ய வேண்டும்" என்றால் என்னவித மான செலவு என்று கண்டுபிடிக்க தெர்மா மீட்டர் எங்குபோய் கண்டு பிடிப்பது. அதை நிர்ணயமாக்க என்ன அவசியமும் ஆதாரமும் இருக்கின் றது? உலக ஜனத் தொகையில் மிக்க அதிகமான பாகத்தைக் கொண்ட கிறிஸ்தவர்கள் மகமதியர்கள் கோவில்களில் கடவுள் வணக்கத்திற்கு என்றும் கடவுளை வணங்கும்போது எவ்வளவு பணம் செலவு செய்கின்றார்கள் அல்லது எவ்வளவு பொருமான சாமான் செலவு செய்கின்றார்கள் என்பதை யோசித்தால் இந்தத் தீர்மானம் எப்படி மக்களுக்கு நாஸ்திகத்தை போதிக்கக் கூடியதாகும் என்பது விளங்காமல் போகாது. அன்றியும் ஜஸ்டிஸ் கட்சியின் பிரயத்தனத்தால் தேவஸ்தானச்சட்டம் நிறைவேறி இன்றைக்கு 3,4 வருஷங்களாயின. எந்தக் கோவில் செலவுகள் சுருக்கம் செய்யப்பட்டது அல்லது யாத்திரைக்காரர்கள் செலவை மட்டுப்படுத்த முடிந்தது. அல்லது கடவுளுக்காக பொது ஜனங்கள் கொடுத்த பணங்களில் எந்தப் பாகம் மீதி செய்யப்பட்டது. வருகின்ற பணம் 'கிரமப்படி' 'முறைப்படி' செலவாகின் றதா என்று பார்க்கின்ற அதிகாரம் தவிர தினம் எத்தனை வேளை பூஜை எத்தனை பிடி அரிசி எத்தனை விளக்கு எத்தனை எண்ணை எத்தனை பால்விட்டு அபிஷேகம் என்பதை தணிக்கைப் பார்த்து சரியாய் கொஞ்சமும் இறையாமல் செலவு செய்யப்படுவது தவிர வேறு காரியமோ அதிகாரமோ சுதந்திரமோ அந்தச் சட்டத்தில் இருக்கின்றதா? என்று கேட்கின்றோம்.

இவ்வளவு கோடி ரூபாய்கள் நமது கடவுள்களுக்கென்று நாம்



செய்தும் இன்றையத் தினம் நமது நாட்டில் கண் ஆஸ்பத்திரி மருத்துவ ஆஸ்பத்திரி போர்போன உயர்தர கலாசாலை தீண்டாதார் பள்ளிக் கூடம் அனாதைகள் ரக்ஷண ஆஸ்ரமம் ஆகியவைகள் எல்லாம் முக்கியமாக கடவுளைத் தொழ கோயிலில் ஒரு காசு கூட செலவு செய்ய வேண்டியில்லாத மதத்தை சாமியை சேர்ந்த மக்களால் அவர்கள் இனத்தாரின் தர்ம பணத்தில் தானே நடைபெறுகின்றது. அன்றியும் நாமும்கூட சற்றும் 'தேசிய சுயமரியாதை' என்பது ஒரு சிறிதுமில்லாது அவைகளில் போய் சிகிச்சை செய்து கொண்டும் படித்துக் கொண்டும் இருந்துவிட்டு நம்முடைய சுவாமிக்கு பூஜைக்கும் வணக்கத்திற்கும் செலவு செய்வதை மாத்திரம் நிறுத்த முடியாது என்றால் இதில் ஏதாவது அறிவு இருக்கின்றதா என்று கேட் கின்றோம். தவிர "கற்பூரமாவது பற்றவைக்க வேண்டாமா" என்பது. இதை இந்த மகாநாட்டில் பேசியது ஒரு சிறிது கூட ஞானமில்லாமல் பேசிய வார்த்தைகள் என்றுதான் சொல்ல வேண்டியிருப்பதற்கு வருந்துகின்றோம். இவ்வார்த்தைகள் வர்ணாசிரம சனாதனதர்ம மகாநாடுகளில் பேசுவது ஒரு சமயம் கிரமமும் அவசியமுமான வார்த்தைகளாயிருக்கலாம். அப்படிக்கின்றி சீர்திருத்தம் பகுத்தறிவு தன்மானம் முதலியவைகளை அடிப்படையாகக் கொண்ட சுயமரியாதை மகாநாட்டில் சாமிக்குக் கற்பூரம் பற்ற வேண்டு மென்றால் இது எவ்வளவு வெட்கக் கேடான காரியம். பழமோ தேங்காயோ பொங்கலோ புளியோதரையோ செலவு செய்தாலாவது சுவாமி தின்கா விட்டாலும் சூட்சிக்காரச் சோம்பேறிப் பார்ப்பானுக்கு ஒரு மூடியும், வைத்துப் பூசை செய்த முட்டாளுக்கு ஒரு மூடியாவது கிடைக்கும். மற்றும் அவர்கள் தின்னவாவது உதவும். வெறும் கற்பூரத்தை வாங்கி கொளுத்தி அதன் கரிப்புகையை மூக்கிலும் வாயிலும் ஏற்றிக் கொண்டு அதன் கிரயத்தை சைனாக்காரனுக்கும் ஜப்பான்காரனுக்கும் போய்ச் சேரும்படி செய்வதில் யாருக்கு என்ன லாபம். கற்பூர வெளிச்சம் எதற்காக வேண்டும்? சுவாமி குருடா அல்லது நாம் குருடா அல்லது கற்பூரம் பற்றி வைத்து கும்பிட் டால்தான் நான் அந்தக் கும்பிடை ஏற்பேன் என்று சாமி சொல்கின்றதா? எதற்காக கல்பூரம் அவசியம்? அதில் எவ்வளவு கொழுப்பு கலந்திருக்கின்றது என்பது யாவருக்கும் தெரியாதா? இவற்றை சற்றும் கவனியாமல் "சாமிக்கு கற்பூரம் கூட வேண்டாம் என்கின்றார்களே இது என்ன அநியாயம்" என்று பேசுவதில் என்ன லாபம்? இதில் பகுத்தறிவு உண்டா அல்லது சீர்திருத்தம் உண்டா அல்லது மானம் வெட்கம் உண்டா என்று தான் கேட்கின்றோம். "இந்தியாவில் சிறந்த புண்யபூமி"யாகிய காசியில் உள்ள விஸ்வேஸ் வரசுவாமி வணக்கத்துக்குகூட கற்பூரம் பழம் தேங்காய் ஒன்றும் கிடையாது. தண்ணீரை அதன் தலையில் கொட்டி ஏதாவதொரு இலைகளை அதன் தலையில் போட்டு கையால் தொட்டுக் கண்ணில் ஒத்திவைத்துக் கொள்வதை இன்றைக்கும் யாரும் பார்க்கலாம். அப்படியிருக்க இத்தீர்மானம் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களுக்கு அதிலும் பார்ப்பனரல்லாதார் பணம் வீணாகாமல் பார்த்துக் கொள்பவர்களுக்கு சுவாமிக்கு செலவு செய்ய வேண்டும் என்ற



RangaRakes tamilnavarasam.com

அவசியம் இவ்வளவு பலமாக பதிந்திருப்பது நமக்கு வேடிக்கையைத் தருகின்றது.

தவிர பழய ஞாபகச் சின்னத்தை காப்பாற்றவாவது சாமி வணங்கு முறையில் பணம் செலவு செய்ய வேண்டும் என்று மகாநாட்டில் மற்றொரு கனவான் சொன்னது நமக்கு இன்னமும் அதிசயமாய் இருக்கின்றது. பழய சின்னத்தைக் காப்பாற்றுவதற்கும் சாமி வணக்கத்திற்குச் செலவு செய்வதற் கும் என்ன சம்மந்தம் இருக்கின்றது என்பது நமக்கு ஒரு சிறிதும் விளங்க வில்லை. பழய சின்னங்கள் இப்போது அநேகம் காப்பாற்றப்பட்டு வருவதை நாம் பார்க்கின்றோம். அவர்கள் சுவாமி வணக்கத்தின் பெயரால் செய்யும் செலவைக் கொண்டு காப்பாற்றப்படவில்லை என்பது நாம் சொல்ல வேண்டியதில்லை. சட்டசபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து இன்ன இன்ன சித்திர வேலைப்பாடுள்ள கட்டடங்களை சாமிகளை சர்க்கார் பழய சின்னங்களை காப்பாற்றும் திட்டத்தில் சேர்த்துப் பொதுப் பணத்திலிருந்து மற்றவைகளைப் போல் பாதுகாத்து வரவேண்டியது என்று உத்திரவுப் போட்டு விட்டால் தானாக காப்பாற்றப்பட்டுப்போகும். அப்படி இருக்க கட்டடத்தைக் காப்பாற்ற சாமி கும்பிடுகின்றவர்கள் எதற்காக செலவு செய்ய வேண்டும் என்றுதான் கேட்கின்றோம். பொதுவாக சென்னை நாகரீகம் பெற்ற நகரம் என்று சொல்லுவது வழக்கமாயிருந்தாலும் அது வெளிவேஷத்தில் நாகரீகம் பெற்றிருக்கின்றதே தவிர உள்ளுக்குள் பகுத்தறிவிலும் மூட நம்பிக்கைகளிலும் பட்டிக்காடு என்பவைகளைவிட மோசமான புத்தியையும் மனப்பான்மையையும் உடையது என்றே சொல்லுவோம். சென்னை ஆண்களுக்கும் பெண்களுக்கும் மூட பக்தியில் மிகுதியும் நம்பிக்கை உண்டு. அதாவது ஒரு கிழவி கழுத்தில் மொத்தமாக மஞ்சள் நூலை போட்டுக் கொண்டு கையில் நெருப்புச் சட்டியை ஏந்திக்கொண்டு இரண்டு மூன்று மாரியாயி பாட்டுப் பாடிவிட்டால் ஐக்கோர்ட்டு ஜட்ஜி வீட்டுப் பெண்கள் முதல் கொண்டு ஷெரீப் வீட்டுப் பெண்கள் முதல் கொண்டு நகர சபைத் தலைவர் வீட்டுப் பெண்கள் முதல் கொண்டு அக்கிழவி காலில் தண்ணீரைக் கொட்டி சாம்பிராணிப் புகை போட்டு கற்பூரம் பற்றவைத்து காலில் விழுந்து வரங் கேட்பதை இன்றும் பார்க்கலாம். ஆண்களும் மேல் வேஷ்டியை இடுப்பில் வரிந்துகட்டி கீழே விழுந்து கும்பிட்டு வரம் கேட்டு வேப்பி லையைக் கிள்ளி வாயில் போட்டுக் கொள்வதையும் பார்க்கலாம். எனவே இவர்கள் கற்பூரம் பொருத்தி வைப்பதற்கு வாதாடுவதில் அதிசயமில்லை. ஆனாலும் இவர்கள் வார்த்தைக்காக கூட்டத்தில் இருந்தவர்களில் 100க்கு 99 பேர் என்ன மதிப்பு கொடுத்தார்கள் என்பது அங்கிருந்தவர்களுக்கு நன்றாய் விளங்கியிருக்கும். நிற்க அடுத்த தீர்மானமாகிய கலியாண விஷயத்தைப் பற்றியும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை இருக்கும்படி செய்த அடுத்தத் தீர்மானத்தைப் பற்றி மறுமுறை எழுதுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 03.03.1929**



# "இராமனுக்கு சீதை தங்கை"
# "இராவணனுக்கு சீதை மகள்"
# "இராமனுக்கு பல பெண்டாட்டிகள்"

இராமாயணம் என்பது சூரியகுல அரசர்களின் சரித்திரங்களில் ஒன்று என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், இராமாயணம் என்னும் பெயரால் பல நூற்றுக்கணக்கான இராமாயணங்கள் இருந்ததாகவும், நூறு கோடிக் கணக்கான சுலோகங்கள் இருந்ததாகவும், அவைகள் காலப் போக்கில் பல தெய்வீகக் காரணங்களால் மறைந்து போய் விட்டன வென்றும், ஆனாலும் இப்போது 24 விதமான இராமாயணங்கள் இருப்பதாகவும், அவற்றை திரு.கோவிந்ததாஸ் அவர்கள் வட இந்தியாவிலுள்ள ஒரு மடத்தில் தாமே நேரில் பார்த்ததாகவும் தாம் எழுதிய "இந்துமதம்" என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார். அதை அனுசரித்தே சென்னை மைலாப்பூர் "இராமாயண விலாசம்" என்னும் கிருகத்தில் உள்ள இராமாயணப் பிரசுர கர்த்தாவாகிய திரு.சி.ஆர்.சீனிவாசய்யங்கார் பி.ஏ. என்பவரால் எழுதப்பட்டு 1928-ம் வருஷத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கும் "இதர இராமாயணங்கள்" என்னும் புஸ்தகத்தில் மேல்கண்ட விஷயங்கள் விளக்கப்பட்டு முதல் தடவையாக நான்கு இராமாயணங்கள் அதில் விவரிக்கப்பட்டு வெளியிடப் பட்டிருக்கின்றன. (அப்புஸ்தகத்தின் விலை ரூ.1) அவையாவன :- ஜைன ராமாயணம், பௌத்த ராமாயணம், யவன ராமாயணம், கிறைஸ்த ராமாயணம் என்பவைகளாகும்.

இவற்றுள் யவன ராமாயணம், கிறைஸ்த ராமாயணம் ஆகியவைகள் பெரும்பாலும் இராமாயணக் கதையைப் போன்ற போக்கில் இருந்தாலும் கதைகளில் வரும் பெயரும் மற்ற சில்லறை விஷயங்களும் பெரிதும் மாறுபட்டு அந்தந்த பாஷைக்கு ஏற்ற பெயர்களாக இருப்பதால் அதை நாம் இதில் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு உபயோகித்துக் கொள்ள விரும்ப வில்லை. ஆனால் மற்ற இரண்டும் அதாவது ஜைன பௌத்த ராமாயணங்கள் பெரிதும் கதைப் போக்கிலும் பெயர்களிலும் எல்லாம் பொருத்தமாக இருக்கின்றன. ஆனால் சில்லறை விஷயத்தில் உண்மைகள் மாத்திரம் மாறு பட்டிருக்கின்றன. அதில் ஜைன ராமாயணம் என்பது இப்போதும் அடையாற்றுப் புத்தக சாலையில் வைக்கப்பட்டிருப்பதாக பதிப்பாசிரியரே



RangaRakes tamilnavarasam.com

எழுதியிருக்கின்றார். அதில் தசரதன், ராவணன் முதலியவர்களுடைய சந்ததிக்கிரமம், பிறப்பு, வளர்ப்பு முதலியவைகளும் சிறிது வித்தியாசப் பட்டாலும் மூல புருஷனாகிய தசரதனை அப்படியே ஏற்றுக் கொண்டு அவனுக்கு நான்கு மனைவிகள் என்றும் அவர்களின் பெயர்கள் 1. அபரா ஜிதை, 2. சுமத்ரை, 3.கைகேயீ, 4.சுப்ரபை என்றும் குறிப்பிட்டு விட்டு கைகேயிக்கு தசரதன் கொடுத்த இரண்டு வரத்தையும் அப்படியே குறித்திருப்பதுடன், அபராஜிதைக்கு ராமன் பிறந்ததாகவும் சுமத்திரைக்கு லக்ஷ்மணன் பிறந்ததாகவும் கையேயிக்கு பரதன் பிறந்ததாகவும் சுப்ரபைக்கு சத்துருக்னன் பிறந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

இதுபோலவே சீதையை ஜனகராஜனுடைய மகள் என்றும், வில்லை வளைப்பவனுக்கு ஜனகன் சீதையைக் கொடுப்பதாக நிபந்தனை வைத்திருந்தான் என்றும், ஆகவே வில்லை வளைத்தே ராமன் சீதையை மணந்தான் என்றும், லக்ஷ்மணனுக்கு 18 பெண் சாதிகள் என்றும், பரதனுக்கு ஜனகனுடைய சகோதரரின் குமாரத்தி கொடுக்கப்பட்டாளென்றும் சொல்லப் பட்டிருக்கின்றது.

மற்ற பட்டாபிஷேகக் கதையும் வால்மீகி ராமாயணத்தைப் போலவே இருந்தாலும் சிறுசிறு மாறுதல்களுடன், தபசு செய்ததற்காக சம்பூகன் வதைக்கப்பட்டதும் குறிக்கப்பட்டிருப்பதோடு இராமனுக்கு நான்கு பெண்சாதிகள் என்றும் அவர்களின் பெயர் 1.சீதை, 2. பிரபாவதி, 3. ரதினிபா, 4. ஸ்ரீதாமா என்பவர்கள் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது.

பௌத்த ராமாயணத்திலும், தசரத ராஜனுக்கு பதினாயிரம்மனைவிகள் என்றும் அவர்களில் மூத்தவளுக்கு ராமன், லக்ஷ்மணன் என்பவர்களான இரண்டு ஆணும் சீதை என்று ஒரு பெண்ணும் ஆக மூன்று குழந்தைகள் பிறந்தன என்றும், அடுத்த மனைவிக்கு பரதன் என்கின்ற ஒரு ஆண் குழந்தை மாத்திரம் பிறந்தது என்றும், அரசன் பரதனுக்கு பட்டம் கொடுப்பதாய் இளைய மனைவிக்கு வாக்குக் கொடுத்திருந்தான் என்றும், ஆனால் அரசன் அந்தப்படி செய்யாமல் ராமனுக்கு பட்டம் கொடுக்க ஏற்பாடு செய்தான் என்றும், இளைய மனைவி கட்டாயப் படுத்தினதால் பரதனுக்குப் பட்டம் கொடுத்துவிட்டு ராமன், லக்ஷ்மணன், சீதை ஆகிய சகோதர சகோதரிகளை பரதன் கொன்றுவிடுவான் எனப் பயந்து காட்டுக் கனுப்பிவிட்டான் என்றும் பரதன் தமயனைத் தேடி காட்டுக்குப் போய் ராமனையே பட்டத்தை ஒப்புக் கொள்ளச் சொன்னதாகவும், ராமன் தன் தகப்பனார் இறந்த பிறகுதான் நான் நாட்டுக்குத் திரும்பிவர முடியுமென்றும், அதுவரை தனது பாதரக்ஷையையும் மற்ற சகோதர சகோதரிகளையும் அனுப்பும்படி கேட்டு வாங்கி அழைத்து வந்ததாகவும், பன்னிரண்டு வருடமான பின் தசரதன் இறந்து போனதாகவும், பிறகு ராமன் அயோத்திக்கு வந்ததாகவும், வந்தவுடன் ஊர் ஜனங்கள் ராமனுடைய தங்கையாகிய சீதையை அவளது தமையனாகிய ராமனுக்குக் கலியாணம் செய்வித்து



பட்டம் கட்டினதாகவும் எழுதப்பட்டிருக்கின்றது.

இவைகளை மெய்ப்பிக்க திரு. அய்யங்கார், அந்த காலத்தில் அண்ணனும், தங்கையும் கலியாணம் செய்து கொள்ளும் வழக்கம் உண்டு என்றும் எகிப்து தேச ராஜ தர்மமே சகோதரியை மணப்பதுதான் என்றும் இதை அறிந்து தான் ரிக்வேதம் 10-வது மண்டலத்தில் 10,12 -சுலோகங்களில் சகோதரியை மணப்பது கண்டிக்கப்பட்டிருக்கின்றதென்றும், அதற்கு முன் அவ்வழக்கமிருந்து வந்ததற்கு மேலும் ஆதாரமாக சூரியனும் அக்கினியும் தங்களது தங்கைகளையே மணந்து கொண்டிருக்கின்றார்கள் என்றும் எழுதியிருக்கின்றார். திரு.சி.ஆர்.சீனிவாசய்யங்கார் தாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த வால்மீகி ராமாயணம் பின்பகுதிக் குறிப்பு 431-ம் பக்கத்தில், சீதை தசரதனுடைய மகள் என்றும், அவளை தசரதன் ஜனகனுக்குத் தானம் கொடுத்தார் என்றும் அவள் பூமியில் பட்டால் பூமி இழுத்துக் கொள்ளும் என்றும், ஆதலால் பூமியில் விடாமல் காப்பாற்ற வேண்டுமென்ற நிபந் தனையுடன் தசரதன் கொடுத்தான் என்றும், தசரதன் இல்லாதபோது ஒரு நாள் சீதை பூமியின் மீது நின்றுவிட்டாள் என்றும், அதனால் அவள் பூமிக்குள் மறைந்துபோய் விட்டாள் என்றும், பிறகு கொஞ்சகாலம் பொறுத்து ஜனகன் பூமியை உழும்போது சீதை பூமிக்குள்ளிருந்து கலப்பையில் தட்டுப்பட்டு ஜனகனால் எடுத்து வளர்க்கப்பட்டாள் என்றும், ஆனால் ஜனகனுக்கு அவள் தான் முன் வளர்த்து வந்த சீதை என்று தோன்றவில்லை யென்றும், ஆகவே அவளது தமையனாகிய ராமனுக்கே அவளைக் கலியாணம் செய்து கொடுத்துவிட்டதாகவும் குறிப்பிட்டுவிட்டு இந்த விஷயம் வசிஷ்ட புராணத்திலும் ஸ்கண்டோத்திர புராணத்திலும் இருப்பதாகவும் குறிப்பிட் டிருக்கின்றார்.

அன்றியும் இதே திரு.சீனிவாசய்யங்கார், "எவனொருவன் தன்னு டைய தங்கையை மணம் செய்து கொள்ளுகின்றானோ அவன் மனைவியைத் தூக்கிக் கொண்டு போவதால் உனக்கு மரணமுண்டு" என்று ராவணனுக்கும் ஒரு காலத்தில் நாரதர் சாபம் கொடுத்திருந்ததாகவும் அந்தச் சாபத்தின் பலனாய் ராவணனானவன் ராமன் தன் தங்கையாகிய சீதையை மனைவியாக மணந்து கொண்ட விஷயம் தெரியாமல் சீதையைத் தூக்கிக் கொண்டு போனதாகவும், அதனாலேயே ராவணன் ராமனால் கொல்லப்பட்டதாகவும், ராவணனுக்கு உண்மையில் ராமன் தன் தங்கையைக் கட்டிக் கொண்டது தெரியாதென்றும், தெரிந்திருந்தால் சீதையைத் தொட்டிருக்க மாட்டான் என்றும், இந்த உண்மைகள் பார்க்கவ புராணத்தில் இருப்பதாகவும் மேற்கண்ட 431-ம் பக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கின்றார்.

மற்றும் இதே திரு. சீனிவாசய்யங்கார் அதற்குக் கீழேயே சீதை ராவணன் மகள் என்றும், அவர்கள் பிறந்த கால தோஷத்தால் தகப்பனுக்கு (இராவணனுக்கு) ஆபத்து விளையும் என்று நாரதர் இராவணனுக்குச் சொன்னதாகவும், அந்தக் காரணத்தால் இராவணன் தன் மகளாகிய சீதையை



RangaRakes tamilnavarasam.com

ஒரு பெட்டியில் வைத்து சமுத்திரத்தில் கொண்டுபோய் எறிந்துவிட்ட தாகவும், அது ஜனகனது ராஜ்யத்தில் ஓடும் ஆற்றிலடித்துக் கொண்டு வரப்பட்டதாகவும் அதை ஜனகன் கண்டெடுத்து வளர்த்து ராமனுக்குக் கொடுத்ததாகவும், ராமனும் சீதையும் வனத்திலிருக்கும்போது ராவணன் சீதையைத் தன் மகள் என்று தெரியாமல் எடுத்துக் கொண்டு வந்து விட்டதாகவும் குறிப்பிட்டு விட்டு இந்த உண்மை மவுட்கலிய ராமாயணத்தில் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவைகள் உண்மையாய் இருக்கலாம் என்பதற்கு அவர் ஒரு யுக்தி காரணமும் சொல்லுகின்றார். அதாவது, "சீதையின் பிறப்பைப் பற்றியோ அவளுடைய பழைய சங்கதியைப் பற்றியோ வால்மீகர் எங்கும் ஒரு வரி கூட எழுதவில்லை. ஆதலால் இந்தக் கூற்றுகள் உண்மையாக இருக்கலாம்" என்கின்றார்.

எனவே சீதை தசரதனுக்கு மகள் என்பதற்கும் ராமனுக்குத் தங்கை என்பதற்கும் இதுவரை 4,5 – ஆதாரங்களும், ராவணனுக்கு மகள் என்பதற்கு இரண்டு ஆதாரங்களும் கிடைக்கின்றன. இன்னமும் மற்ற ராமாயணங்களில் என்னென்ன பந்துத்வங்களும் இருக்குமென்பது ஊகிக்கக் கூடவில்லை.

*குறிப்பு : ஆனந்த விகடன் வருஷ அனுபந்தத்திற்கு எழுதியது.*

**குடி அரசு – கட்டுரை – 03.03.1929**



# செங்கல்பட்டு மகாநாட்டின் தீர்மானங்கள்

## II

ஜாதி வகுப்பு வித்தியாசத்தைக் காட்டும் பட்டங்களையும் சமய வித்தியாசத்தைக் காட்டும் குறிகளையும் விட்டுவிடவேண்டும் என்று செய்த தீர்மானம் நாட்டின் ஒற்றுமைக்கு மிகுதியும் அத்தியாவசியமானது என்பதைப் பற்றி முன் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

இத்தீர்மானத்தில் பொறாமை கொண்ட சில விஷமக்காரர்கள் வகுப்புப் பட்டம் நீக்க வேண்டும் என்கின்றவர்கள் வகுப்பு மகாநாடுகளில் கலந்து கொள்ளலாமா என்கின்ற ஒரு பிரசினையை கிளப்பிவிட்டிருக் கின்றார்கள். இதற்கு நாம் சொல்லும் சமாதானம் என்னவென்றால் ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் வகுப்பு மகாநாடுகள் கூட்டி அவற்றில் இவ்வித தீர்மானங்கள் கொண்டு வந்து நிறைவேற்றி அவற்றை முதலில் தங்கள் தங்கள் வகுப்புகள் என்பவைகளுக்குள் அமுலுக்குக் கொண்டு வருவதன் மூலம் வகுப்பு வித்தியாசங்களை ஒழியுங்கள் என்றுதான் கேட்கின்றோம். அதற்காகத்தான் வகுப்பு மகாநாடுகள் கூட்டுங்கள் என்கின்றோமே ஒழிய வேறில்லை. உதாரணமாக ஒரு வாணிய வைசிய மகாநாட்டில் நாம் பேசும் போது அவர்களுடைய பூணூலை எடுத்து விடும்படியும் தங்களை வைசியர் கள் என்று சொல்லிக் கொள்ள வேண்டாம் என்றே கேட்டுக் கொண்டோம், அது போலவே நாடார் க்ஷத்திரிய வகுப்பார் கூட்டத்தில் பேசும் போதும் தங்களை க்ஷத்திரியர்கள் என்று சொல்லிக் கொள்ள வேண்டாம் என்றும் பூணூலை எடுத்து விடும்படியும் பேசினோம்.

அதுபோலவே நாயுடுமார்கள் மகாநாட்டில் பேசும்போதும் தங்களை க்ஷத்திரியர்கள் என்று சொல்லிக் கொள்வதை விட்டுவிடும்படியே கேட்டுக் கொண்டோம். இம்மாதிரி சிறிதாவது விட்டுவிடவும் செய்தோம். ஆதலால் வகுப்புப் பிரிவுகள் எத்தனை உண்டோ அத்தனை வகுப்பும் மகாநாடுகள் கூட்டி வித்தியாசங்களை ஒழிக்க தீர்மானங்கள் செய்து கொள்ளாவிட்டால் எப்படி இந்தக் கொள்கைகள் ஒவ்வொரு வகுப்புக்குள்ளும் போய்ப் புகுந்து வகுப்பு நோயைத் தீர்க்க முடியும் என்பது நமக்கு விளங்காது. மற்றும் இப்போது ஆதிதிராவிட மகாநாடுகள் கூடுவதால் எவ்வளவு தூரம் அச் சமூகத்திற்கு உணர்ச்சி வந்து அவைகள் முன்னேற இடமேற் பட்டிருக் கின்றது என்பதை கவனித்தால் வகுப்பு மகாநாட்டின் அவசியம் விளங்கும்.



RangaRakes tamilnavarasam.com

ஒரு பெரும் சமூகம் ஒற்றுமையையும் சீர்திருத்தமும் பெற வேண்டுமானால் அதிலுள்ள பிரிவுகளான ஒவ்வொரு சிறு சமூகமும் தங்களுக்குள் முதலில் ஒற்றுமையையும் சீர்திருத்தத்தையும் பெற்றாக வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்த உண்மை உலகத்திலுள்ள எந்த யோக்கியனுக்கும் விளங்கியே தீரும்.

உதாரணமாக தென்னாட்டில் பார்ப்பனரல்லாதார் மகாநாடு கூட்டப் படாமல் இருந்திருக்குமானால் பார்ப்பனர்களின் கொடுமை நாடு அறிந்து, அதிலிருந்து விடுதலையடைய மார்க்கம் ஏற்பட்டிருக்க முடிந்தே இருக்காது என்று சொல்லுவோம். அன்றியும் வகுப்பு மகாநாடுகள் அடிக்கடி கூடுவதால் தாங்கள் மற்ற வகுப்பார்களால் அடையும் துன்பமும் அதிலிருந்து விடுபட்டு மற்ற வகுப்பார்களும் தாங்களும் ஒற்றுமையாயிருக்க மார்க்கமும் அவசியமும் தானாகவே ஏற்பட்டுவிடும். எனவே வகுப்பு வித்தியாசங்களால் வயிறு வளர்க்கலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் சுயநலச் சோம்பேரிகளைத் தவிர பொதுநலத்தில் கருத்துள்ள மற்ற யாவருக்கும் வகுப்பு வித்தியாசங்களை ஒழித்து ஒற்றுமைப்பட வகுப்பு மகாநாடுகள் கூட்டப்படுவது எந்த விதத்திலும் ஆபத்தாய் தோன்றாது.

ஜாதி பேதத்தை ஆதரிக்கின்ற மதம், வேதம், சாஸ்திரம், புராணம் ஆகியவைகளைப் பின்பற்றக் கூடாது என்பது.

இந்தத் தீர்மானத்தை எந்தவிதமான தீர்மானத்தைக் கொண்டும் யாரும் எதிர்க்க முடியாதானாலும் சமயத்தின் பேராலும் வேத சாஸ்திர புராணத்தின் பேராலும் தங்களது நித்திய வயிறு வளர்ப்பு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொண்டவர்களுக்கும் இத் தீர்மானம் ஒருக்காலும் திருப்தியை அளிக்காது என்பதோடு அவர்களது சூக்ஷி விஷமப் பிரசாரம் இரகசியமாய் நடந்துதான் தீரும்.

இத்தீர்மானத்தின் கருத்துப்படி பார்த்தால் முக்கியமாக இந்து மதக் கொள்கைகளையும் அவற்றின் ஆதாரங்களையும் பின்பற்றக் கூடாது என்பதாகக் காணப்படுகின்றது என்றுதான் ஒவ்வொருவருக்கும் தோன்றும். ஏனெனில் உலகத்திலுள்ள எல்லா முக்கிய மதங்களைவிட இந்து மதம் என்பதிலும் அதன் ஆதாரங்கள் என்பதான வேத சாஸ்திர புராணங்களில் தான் ஜாதி வகுப்பு பிரிவும் பிறவியில் உயர்வு தாழ்வு உண்டு என்பதையும் அதிகமாக வலியுறுத்தப்படுகின்றது. ஆதலால் இத்தீர்மானம் மிகுதியும் இவற்றை குறை கொள்வதாக நினைப்பதில் அதிசயமில்லை. ஆனால் நம்மைப் பொறுத்தவரை உண்மையில் இந்து மதம் என்பதாக ஒரு மதமே இல்லை என்றும், இருப்பதாக கருதிக் கொண்டிருப்பதும் அதன் ஆதாரங்கள் என்று சொல்லப்படுவதும் ஒரு சிலருடைய சுயநலத்தாலும் நமது மக்களுடைய அறியாமையினாலும் வழங்கி வரும் ஒரு வெறும் மயக்க உணர்ச்சியே தவிர வேறில்லை என்றும், அம்மயக்க உணர்ச்சி ஒழியவே இந்துமதமும் அதன் ஆதாரங்களும் ஒழிய வேண்டுமென்கின்றோமே ஒழிய வேறில்லை.



உதாரணமாக இந்துமதம் என்பதாக ஒருமதம் இல்லை என்று சொல்லி வந்திருக்கும் புஸ்தகங்களுக்கும் விஷயங்களுக்கும் இதுவரை யாரும் பதில் சொன்னவர்களே கிடையாது. ஞான சூரியன் புஸ்தகத்தில் காணப்படுவது போல ஒரு நாட்டின் இழி மக்களுக்கு அந்நாட்டு பாஷையில் சொல்லப்பட்ட ஒரு இழிவான பெயரே இந்து என்பது.

அப்பெயர் பெரும்பாலும் மகமதியர்களால் தங்கள் மதஸ்தர்கள் அல்லது தங்கள் நாட்டவர்கள் அல்லாத இந்தியா நாட்டவர்களுக்கு அளிக்கப் பட்டது. எப்படி ஐரோப்பியர்கள் நம்மைச் சுதேசிகள் என்று கூப்பிடுகிறார்களோ அதுபோலவே மகமதியர்கள் நம்மைச் சுதேசிகள் என்று கூப்பிடுவதற்கு பதிலாக இந்தியன் என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் சொல்லுவது போல இந்தி, அரபி, உருது முதலிய பாஷைகளில் இந்து என்று சொல்லி அழைத்தார்கள். இந்த நிலையில் இந்திய மக்கள் எல்லோரையும் குறிப்பிட வேறு பெயர் சமயத்தின் பேரிலோ நாட்டின் பேரிலோ ஜாதியின் பேரிலோ ஒரு குறிப்பும் இல்லாதிருந்ததால் இந்து என்கின்ற பெயரே எல்லோரையும் சேர்ப்பதற்கு ஒரு பொதுப் பெயராகவும் ஏற்பட்டதோடு ஆரியர்கள் கொள்கைகளுக்கே இந்து சமயம் என்னும் பெயர் தரப்பட்டு அது இந்தியர்கள் எல்லோர்கள் தலையிலுமே சுமத்தப்பட்டுவிட்டது. உதாரணமாக இந்து மதம் என்கின்ற வார்த்தை உச்சரிப்பு கூட சுமார் ஒரு 400, 500 வருஷங்களுக்கு முன்னால் இருந்ததாக எண்ணுவதற்கு ஒரு ஆதாரத்தையும் காணோம். சைவம் என்கின்ற பெயரும் சிவன் என்றால் அன்பு என்கிற வியாக்கியானமும் கூட ஆரியக் கொள்கைகளை சிறப்பாகவே ஆபாசங்களையும் வேள்வி கொடுமைகளையும் முறையே வெளியாக்கியும் அழிக்கவும் வந்த புத்த இயக்கத்தை எதிர்த்து அவரது கொள்கையை ஒழிக்கவே சைவம் என்பதாக ஒன்று கற்பிக்கப்பட்டதே தவிர மற்றப்படி அச்சைவம் என்பதற்கும் அதன் கொள்கைகளும் அதில் காணப்படும் பல்வேறு கடவுள்களுக்கும் தமிழ்நாட்டிற்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ எவ்விதச் சம்மந்தமும் இருப்பதாகவோ இதுவரையெவ்வித ஆதாரமும் வெளிப்படுத்தப்படவில்லை. நாளாக நாளாக சைவ ஆரியக் கொள்கை கொண்ட சமயம் தமிழ் மக்களுக்குப் பொருத்தமில்லாமல் போவதை அறிந்த சில தமிழர்கள் ஆரியர் சைவ சமயம் என்பது வேறு தமிழர் சைவ சமயம் என்பது வேறு என்று பிரித்து ஆரியக் கொள்கைகளை கண்டித்து ஒதுக்கி அதற்கு பதிலாகத் தமிழ் மக்களுக்கு பொருத்தமானது என்பதாக சிலவற்றை தாங்களே நினைத்து, வேறு சில கொள்கைகளையும் வியாக்கியானங்களையும் புகுத்தித் தமிழ்ச் சிவன், தமிழ்வேதம், தமிழ்க் கடவுள் என்பதாக வெள்ளரிக்காய்க்கு பூண் போடுவது போல் இழுத்துப் பிடித்துக் கொண்டு வருகின்றார்கள். அன்றியும் சைவ சமயத்திற்கு ஜாதி மத வகுப்பு பேதங்கள் கிடையாது என்று சொல்லி சமரசத்தைப் பற்றி பேசுவதிலும் குறைவில்லை. ஆனால் உட்புகுந்து பார்த்தால் சமயாச்சாரிகள் எல்லோருக்கும் ஜாதி உண்டு, இது மாத்திரமல்ல. சைவக் கடவுள்கள் எடுத்த மனித ரூபங்கள் எல்லாவற்



RangaRakes tamilnavarasam.com

றிற்கும் ஜாதி உண்டு. இதுமாத்திரமல்ல. சைவ புராணங்கள் எல்லாவற்றிலும் அவற்றை செய்தவர்கள், செய்யப்பட்டவர்கள் உள்பட ஜாதி உண்டு. எனவே சைவ சமயம் ஜாதிகள் ஏற்பட்டதற்கு பின்பு உண்டானதென்றும் அதுவும் ஜாதி மத பேதங்களை ஒழிக்கப் புறப்பட்ட பவுத்த சமண கொள்கை களுக்குப்பின் உண்டானதென்றும் சொல்லித் தீர வேண்டியிருக்கின்றது. அது போலவே வைணவ சமய மென்பதும். அது போலவே ஆரியக் கொள்கைகள் நாட்டில் பெரும்பாலோரால் வெறுக்கப் பட்ட காலத்தில் அதனுடைய அடிப்படைகளை மாத்திரம் நிறுத்திக் கொண்டு சற்று திருத்தப்பட்ட கொள்கைகளை வைத்து வெளியாக்கப்பட்ட சமயமாகும். ஆனாலும் அதுவும் வார்த்தை அளவில் சில நல்ல கருத்துக்கள் சொல்லப் பட்டாலும் வைணவப் புராணங்களும் கடவுள்களும் ஆச்சாரியார்களும் ஆழ்வார் களும் சகலமும் ஜாதி வித்தியாசம் கற்பிக்கக் கூடியதாகவே தான் இருந்து வருகின்றது.

இச்சமயத்தைச் சேர்ந்த சில பெரியார்கள் என்பவர்கள் மாத்திரம் ஜாதி வித்தியாசமில்லை என்று சொன்னதாகக் காணப்பட்டாலும் அதற்கும் பல நிபந்தனைகள் சொல்லப்பட்டிருப்பதையும் காணாமல் இருக்க முடியாது. எனவே ஜாதி வித்தியாசம் இயற்கை என்பதும் அதை ஒழிப்பதற்கு நிபந்தனைகள் வேண்டியிருப்பதால் அவ்விரு சமயங்களும் சமரசம் செயற்கை என்றும் விளங்குகின்றது.

**குடி அரசு - தலையங்கம் - 03.03.1929**



# மதிப்புரை

“முன்னேற்றம்” என்னும் பத்திரிகை திரு.வெ.சி. நாராயணசாமியவர் களை ஆசிரியராகவும் திரு.ஜி.எஸ். சாரங்கபாணியவர்களை வெளியிடுவோ ராகவும் கொண்டு மலாய் நாட்டில் சிங்கப்பூரிலிருந்து வெளிவருவதாகும். இப்பத்திரிகையின் ஐந்து மலர்களைப் பார்த்ததில் இதன் கொள்கைகள் முற்றிலும், மக்களைத் தொன்று தொட்டுள்ள மூடப்பழக்க வழக்கங்களாகிய படுகுழியினின்றும் ஜாதி மதங்கள் என்கின்ற கொடிய விலங்குகளினின்றும், பார்ப்பனீயக் கொள்ளைக்காரர்களின் பெருந்துன்பங்களினின்றும் மீட்டு வாழ்விக்கும்படியானதும் ஒப்பற்ற சுயமரியாதைத் தத்துவங்களையும் கொண்டதாகவே இருக்கின்றன. இப்பத்திரிகையானது தன் பெயருக்கேற்ப மக்களின் முன்னேற்றத்திற்கான விஷயங்களையே கொண்டு விளங்குவதால் இப்பத்திரிகையானது நம்மக்களுக்கு இன்றியமையாதவோர் நற்றுணை யாகும் என்பது எமதபிப்பிராயம்.

ஆனால், தற்காலத்தில் நாட்டில் எங்கு பார்த்தாலும் ஜனங்களெல்லாம் பத்திரிகை பத்திரிகை என்பதாக ஏற்படுத்திக் கொண்டு மக்களை உபத்ரவிக் கிறார்கள் என்று சிலர் எண்ணவோ சொல்லவோ செய்யலாம். ஆனால் நாம் அதை புத்திசாலித்தனமானவைகளென்று மதிக்க மாட்டோம். ஏனெனில், ஒரு நாடோ ஒரு சமூகமோ முன்னேற்றமடைய வேண்டுமானால் அதன் பரப்பெங்கும் பத்திரிகைகளும் பாடசாலைகளுமாகவே மிளிர வேண்டும். இதை யுத்தேசித்தே தான் சில அறிவிற் சிறந்த பெரியார்கள் எந்தச் சமூகத்தை யேனும் எந்த நாட்டையேனும் முன்னேற்றமடைந்திருக்கிறதா? இல்லையா? என தெரிந்து கொள்ளவேண்டுமானால் அவர்கள் அந்த நாட்டினரையோ சமூகத்தினரையோ கண்டால், உங்களுக்கென எத்தனை பத்திரிகைகள்? எத்தனை பாட சாலைகள்? எத்தனை கலாசாலைகள் இருக்கின்றனவென்னும் கேள்வி கிளத்துகின்றனர். ஆகவே, பத்திரிகைகளின் எண்கள் மிகுவதைத் தாழ்வாக நினைக்கவோ சொல்லவோ சற்றும் இடமில்லை. ஏனெனில் :-

பத்திரிகைதான் முன்னேற்றமடையக் கருதும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத ஆசான். பத்திரிகைதான் மக்களுக்கு அறிவையூட்டி வளர்க்கும் தாயினுமினியது. பத்திரிகைதான் புத்தி புகட்டும் ஓர் நற்றந்தை. பத்திரிகைதான் ஆபத்துக்குதவும் நற்புதல்வன். பத்திரிகைதான் உண்மைத் தோழன். அதுவே ஐம்புலன்களையுமொருமித்து இன்பம் நுகரச் செய்யும்



RangaRakes tamilnavarasam.com

உத்தம மனைவி. அதுவே பெருஞ்செல்வம். அதுவே நெருங்கிய சுற்றம். அதுவே இன்பந்தரு பெருவீடு. அதுவே நோயகற்றும் சஞ்சீவி, அதுவே இன்னமுது, அதுவே உண்மைச்சேவகன். அது மக்கள் வசிக்கும் ஒவ்வொரு இல்லந்தோறும் வந்து, சுயேச்சையும் சுவாதீனமற்று அஞ்ஞானத்திலும் சோம்பலிலும் பசியிலும் தரித்திரத்திலும் உறங்கிக் கிடக்கும் மக்களை யெழுப்பி உய்விக்கும் நற்றுணைவன்.

வெறும் நாட்டுச் செய்திகளையே தமக்கணியாகத் தாங்கியும் ஒரு சில தொகையினரான கூட்டத்திற்கு மட்டில் நலத்தைத் தருவதாகவும், ஆசிரியர்களின் கியாதி, லாபப் பூஜைகளுக்காகவும், மக்களின் பொருள்களையும், அவர்களின் அருமையான பொழுதுகளையும் கொள்ளை கொண்டு தமது ஒரு சாணை நிரப்பிப் பெருமைச் சின்னங்களை பரிமாறி காலத்தைக் கழித்து வரும் சில போலிப் பத்திரிகைகள் போன்றல்லாமல், ராயல் 1க்கு 16ல் 20 பக்கங்கள் கொண்டு மலர்கள் தோறும் கண்கவரும் தலைவர்களின் சித்திரப் படங்களாலும் நல்ல பதிப்புள்ள நல்ல தமிழில் பண்டித பாமர ரஞ்சனமான முறைகளில் உயர்ந்த அனுபவமும் பரோபகாரமுள்ள அறிவாளிகளால் எழுதப் பெற்றக் கட்டுரைகளைக் கொண்டதோடு ஒவ்வொரு மலர்களிலும் ஒவ்வொரு பக்கங்களிலும் ஒவ்வொரு வாக்கியங்களிலும் சுயமரியாதைத் தத்துவத்தின் தேன்றுளிகள் கசிந்தொழுகும் மாதிரியிலமைந்து ஒளிர்வதால் இக்காலத்துக்கேற்ற ஓர் நற்பயனை மக்கள் யாவருமிதை யாதரிப்பார்களென நம்புகிறோம்.

**இதன் வருட சந்தா**

| | |
|---|---|
| உள் நாட்டிற்கு | 2-25 |
| இந்தியா சிலோனுக்கு | ரூ.5 |

**கிடைக்குமிடம்**

மானேஜர், “ முன்னேற்றம் ஆபீஸ்”
125, சிலிகி ரோடு, சிங்கப்பூர்

**குடி அரசு - மதிப்புரை - 03.03.1929**



## செங்கல்பட்டு மகாநாட்டின் தீர்மானங்களும் ஜஸ்டிஸ் பத்திரிகையும்

செங்கற்பட்டுத் தீர்மானங்களைக் குறித்து ஜஸ்டிஸ் பத்திரிகை எழுதிய அபிப்பிராயத்தைப் பற்றி, சிறிது சென்றவாரம் அதாவது கடவுள் வணக்கத்திற்கு பணம் செலவு செய்ய வேண்டுமா என்பதைப் பற்றி எழுதிவிட்டு, கல்யாணம், கல்யாண ஒப்பந்தவிலக்கு என்கின்ற விஷயங்களைப் பற்றி இவ்வாரம் எழுதுவதாய்க் குறிப்பிட்டிருந்தோம்.

### கல்யாணம்

கல்யாணம் என்பது என்ன? அது மக்களின் வாழ்விற்கும் இயற்கை உணர்ச்சிகளுக்கும் அவசியமான ஒரு சாதனமே ஒழிய மற்றபடி வேறு ஏதாவதான அதாவது “தெய்வீகத்தன்மை” கற்பிக்கக் கூடியதான விஷயங்கள் அதில் என்ன இருக்கின்றது என்பதை நாம் அறிய முடியவில்லை. ஒரு மனிதன் தன் வாழ்க்கைக்கும் திருப்திக்கும் இன்பம் அனுபவிப்பதற்கும் என்று எப்படி சொத்து, உத்தியோகம், கீர்த்தி, நல்ல துணிமணிகள், அழகும் அறிவும் உள்ள குழந்தைகள், அதிகமான சவுகரியமும் பெருமையும் தரத்தக்க வீடுகள், மனமொத்த நண்பர்கள் ஆகியவைகளை அடைய விரும்புகின்றானோ அதுபோலவே ஒரு ஆண் ஒரு பெண்ணையும் ஒரு பெண் ஒரு ஆணையும் வாழ்க்கைத் துணையாக விரும்புவதும், அவ் விருப்பப்படி ஒருவரை ஒருவர் தெரிந்தெடுத்து தங்களுக்குள் திருப்தி உண்டானபின் தங்கள் இருவருடைய வாழ்க்கைக்கும் இன்பத்திற்கும் ஒத்தபடி செய்து கொள்ளும் ஒப்பந்தந்தான் கல்யாணம் என்று சொல்லப் படுவதாகும். எனவே இதில் “தெய்வீகத்திற்கோ” “ஆத்மார்த்தத்திற்கோ” என்ன வேலை இருக்கின்றது என்பது நமக்கு விளங்கவில்லை.

சொத்து, வீடு, ஆடை, ஆபரணங்கள், குழந்தைகளிடம் கொஞ்சுதல், சிநேகிதர்களின் மூலம் மகிழ்ச்சி அடைதல் ஆகியவற்றிலும் ஆத்மார்த்தமும் தெய்வீகமும் இருக்கின்றது என்றால் அந்த அளவுக்கு ஆத்மார்த்தத்தையும் தெய்வீகத்தையும் கல்யாணத்திலும் வைத்துக் கொள்வதில் நமக்கு அதிக கவலையில்லை. ஆனால் “அவைகள் எல்லாம் மானுஷீகத்தில் சேர்ந்தது, கல்யாணம் மாத்திரம் தெய்வீகத்தில் சேர்ந்தது” என்றால் அதை நாம் ஒருபோதும் ஒப்புக் கொள்ள முடியவே முடியாது என்கின்றோம். அன்றியும்



RangaRakes tamilnavarasam.com

மற்றெல்லா விஷயங்களையும் விட மானுஷீக வாழ்க்கையில் கல்யாணம் என்பது ஆண்பெண் இருபாலருக்கும் மிகவும் தெளிவானதாகவும் மற்றெல்லாவற்றையும்விட அதிக சுதந்திரமும் சுயேச்சையும் உடையதா கவும் இருக்க வேண்டுமென்றும் சொல்லுவோம். ஏனெனில் கல்யாணம் என்பதில் ஆண்பெண் இருவருக்கும் அதிக நம்பிக்கையும் ஒற்றுமையும் வேண்டியிருப்பதால் இருவருக்கும் தெளிவும் சுதந்திரமும் அதிகம் வேண்டி யிருக்கின்றதென்கின்றோம். ஆனால் இப்போதைய பெரும்பான்மையான கல்யாணங்கள் என்பவைகள் ஒரு சிறிதும் மனிதத்தன்மைக்குப் பொருந்தி னவையல்லவென்றே சொல்லுவோம். முதலாவது ஆணும் பெண்ணும் அல்லது ஆணோ பெண்ணோ அறியாமைப் பிராயத்தில் இருக்கும்போதே கல்யாணங்கள் வேறு ஒருவரால் நடத்தப்படுவது. இரண்டாவது தாலி கட்டும் சடங்கு வரையில் சில சந்தர்ப்பங்களில் தாலி கட்டி சிலநாள் ஆகும் வரையில் கூட ரூபத்தைப் பொறுத்த வரையில் கூட பெண் எப்படிப்பட்டது என்று ஆணுக்குத் தெரியாமலும் ஆண் எப்படிப்பட்டது என்று பெண்ணுக்குத் தெரியாமலும் இருக்க நேரிடுவதோடு, குணங்களைப் பற்றியோவென்றால் கல்யாணமாகி 2, 3, 4- வருஷங்களுக்குக் கூட இருவர் குணங்களையும் பற்றி ஒருவருக்கொருவர் தெரிந்து கொள்ள முடியாமலும் சில சந்தர்ப்பங்களில் சரீர சம்மந்தமாகி 3, 4 - வருஷங்கள் வரையில்கூட ஒருவரை ஒருவர் நன்றாய் தெரிந்து கொள்ள முடியாமல் இருப்பதோடு ஆண் பெண்ணைப் பற்றி சிறிதும் கவலை இல்லாமல் இருப்பதும், பெண் ஆணின் தாய், தகப்பன்மாருக்கும் அடிமையாக வாழ்க்கைப்பட்டதாக கருதிக் கொண்டு ஒரு வேலையாளாகவே இருக்க வேண்டியதோடு வெறும் ஒருவனுடைய புணர்ச்சி உணர்ச்சிக்காகத்தான் தயாராய் அவனுடைய சமயத்தை எதிர்ப் பார்த்துக் கொண்டு காத்திருக்க வேண்டியதான ஒரு நகரும் யந்திரம்போல் இருப்பதும் பெண் தனக்கு தன் தேவைக்குத் தேவையான சமயத்திற்கு எந்தவிதமான பரிகாரமும் கிடையாது என்பதாகத் தீர்மானித்து தனக்கும் இயற்கை உணர்ச்சி என்று ஒன்று இருப்பதாகவே கருதக் கூடாது என்றும் நிர்ப்பந்தப்படுத்தி வருவதுபோலாகவும் இருக்கின்றது. இதை யாராவது மறுக்கமுடியுமா? என்று கேட்கின்றோம்.

அன்றியும் ஒரு பொதுமகள், அல்லது விலைமகள் என்பவள் தனக்குள்ள இயற்கை உணர்ச்சியைத் தன் இஷ்டம் போல் அனுபவிக்கவும் அதற்கும் தன் இஷ்டம்போல் விலை பெறவும் வாழ்க்கையில் தன் இஷ்டம் போல் சுயேச்சையாகவும் சுதந்திரமாகவும் இருக்கவும் நமது சமுதாயத்தில் தாராளமாய் இடமளிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் வாழ்க்கையில் ஈடுபடுத் தப்பட்ட "தெய்வீகம்" என்று சொல்லத்தக்கதான கல்யாணம் செய்து கொண்ட நமது பெண்கள் வெறும் வயிறு வளர்ப்புக்காகவும் உடலை மறைக்கும் துணிக்காகவும் மாத்திரம் வேறு மனிதனுக்குத்தான் ஒரு அறிவும் உணர்ச்சியும் அற்ற நகரும் யந்திரம்போல் இருந்து கொண்டு இருக்க வேண்டியதாயிருக்கின்றது. பெண்ணுக்கு புருஷனிடமிருந்து எவ்வித ஒப்பந்தமும் வாங்க உரிமையில்லை. அவன் தன் கையால் தாலி கட்டிய பெண்ணை அன்று முதலே வேண்டாம் என்று சொல்லி விடலாம். (சொல்லி விடுகிறார்கள்) தாலி கட்டும் முன்பும் தனக்கு வேறு பல பெண்களிடம் சாகவாசமும் ஒப்பந்தமும் இருக்கலாம்.

மற்றும் சில பெண்களையும் பெண்டாட்டியாகக் கட்டிக் கொண்டு வாழலாம். அல்லது தான் முறைப்படி தாலிகட்டி கல்யாணம் செய்து கொண்ட பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு வேறு ஒரு பெண்ணை வைப்பாட்டி யாக அதே வீட்டில் வைத்துக் கொண்டு அந்த வைப்பாட்டியையும் பெண் டாட்டியையும் ஒன்றுபோலவே நடத்துவதும், சில சமயங்களில் வைப்பாட்டி யைப் பெண்டாட்டியை விட உயர்வாக நடத்துவதும், சில சமயங்களில் பெண்டாட்டியை வைப்பாட்டிக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி செய்து வீட்டு நிர்வாக அதிகாரத்தை வைப்பாட்டிக் கையில் ஒப்புவித்து விடுவதும், இவ்வ ளவும் செய்வதோடு மாத்திரம் நின்றுவிடாமல் ஆண் அந்த வைப்பாட்டி இடமே காதல் வைத்து அவளுடன் கூடவே இன்பம் அனுபவித்துக் கொண்டு பெண்டாட்டியை வேலைக்காரி போலாகவும் தொடக்கூடாதவள் போலவும் கருதி நடத்திக் கொள்ளுகின்றான். இவை யாவையும் பிரத்தியக்ஷத்தில் பார்க்கின்றோம். இவைகள் ஜஸ்டிஸ் பத்திரிகைக்குத் தெரியாதா என்று கேட்பதோடு இவற்றிற்கு, இப்போதுள்ள மதக் கொள்கைகளும் கல்யாண முறையும் அல்லவா காரணம் என்றும் கேட்கின்றோம். சுயமரியாதையின் பேரால் சீர்திருத்த நோக்கத்தோடும் சமத்துவ நோக்கத்தோடும் கூட்டப்பட்ட ஒரு மகாநாட்டில் இவ்விதக் கெடுதிகள் ஒழியத் தகுந்த மாதிரியான ஒரு தீர்மானம் அதுவும் ஆணும் பெண்ணும் தங்கள் வாழ்க்கைத் துணையாகவும் காதலர்களாகவும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியவர்களைத் தாங்கள் தாங்களாகவே தங்கள் இஷ்டப்படி தெரிந்தெடுத்துக் கொள்ள ஒரு தீர்மானம் தீர்மானிப்பது தகுதியற்றது அல்லது ஒப்புக் கொள்ள முடியாதது என்று சொல்வதானால் மற்றென்ன காரியம்தான் மக்கள் முன்னேற்றத்திற்கோ, மனித சுதந்திரத்திற்கோ பெண்கள் முன்னேற்றத்திற்கோ உரிமைக்கோ ஏற்றது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்தத் தீர்மானம் கூட இந்நாட்டு மக்க ளுக்கு கஷ்டமா யிருக்குமானால் அதற்கு பதிலாக மக்களுக்குள் கல்யாணம் என்கின்ற ஒரு முறையே கூடாது என்றுதான் நாம் சொல்லித் தீர வேண்டியவர் களாக இருக்கின்றோம். ஏனென்றால் இன்பத்திற்காக கல்யாணம் என்றால் அதற்கேற்றமுறையில் கல்யாணத்திட்டம் அமைக்கப்படவேண்டுமே ஒழிய மற்றப்படி இன்பமும் காதலும் அல்லாமல் வெறும் உலகத்தை நடத்து வதற்கும் உலக விருத்திக்கு என்று புலபுலென பிள்ளைகளைப் பெறுவ தற்கும் ஆண்மக்களுக்கு அவனது வாழ்வுக்கும் கீர்த்திக்கும் திருப்திக்கும் நிபந்தனையற்ற நிரந்தர அடிமையாகப் பெண் இருப்பதற்கும் தான் கல்யாணம் என்பதானால், அம்மாதிரி கல்யாண வாழ்க்கையில் நமது பெண் மக்கள் ஈடுபடுவதை விடக் கல்யாணமே இல்லாமல் வாழுவதையோ அல்லது அவர்கள் இஷ்டப்படி சர்வ சுதந்திரத்தோடு நடந்து கொள்வ





RangaRakes tamilnavarasam.com

தையோ தான் நாம் ஆதரிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். சம சுதந்திரத்தில் இயற்கை உணர்ச்சியில் சமசந்தர்ப்பம் அளிக்கப்படாத முறையைக் கொண்ட கல்யாணங்களை நாம் விபசார வாழ்க்கை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஏனெனில் நாம் விபச்சாரம் என்பதற்குக் கொள்ளும் பொருள் என்னவென்றால் தங்கள் ஆசைக்கும் மன உணர்ச்சிக்கும் விரோதமாய் வேறு நிர்ப்பந்தத்திற்காக அடிமைப்படுவதையேதான் இங்கு நாம் விபசாரம் என்று கொள்ளுகின்றோம்.

எப்படியெனில் கல்யாணமில்லாத ஒரு பொதுமகள் பணத்திற்கு ஆசைப்பட்டு தனக்கு இஷ்டமில்லாத நிர்ப்பந்தத்திற்கு சில சமயங்களில் உடன்பட வேண்டியிருப்பதாக வைத்துக் கொண்டாலும் கல்யாணமான குடும்பப் பெண் என்பவள் வெறும் ஆகாரத்திற்கும் துணிக்குமாக மாத்திரம் எப்போதும் தனக்கு சற்றும் சுதந்திரமில்லாமலும் தனது வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் மனித உரிமைக்கும் உணர்ச்சிக்கும் இஷ்டத்திற்கும் விரோதமாகவும் நிர்பந்தத்திலேயே ஜெயிலில் உள்ள கைதிபோல் இருக்க வேண்டியிருக்கின்றது. இத்தன்மை பொருந்திய மணம் பொறுப்புள்ள மணமா, காதல் மணமா, இன்ப மணமா அல்லது பொறுப்பற்ற மணமா? விபசார மணமா? அடிமை மணமா? நிர்ப்பந்த மணமா? என்பதை யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன். கல்யாணத்தின் விஷயமாகப் பின்னால் எழுதுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 10.03.1929**



RangaRakes

# தேவர்களின் முறை

**- சித்திரபுத்திரன்**

லண்டன் மாநகரமாகிய வைகுண்டத்திலே ஜார்ஜ் மன்னராகிய மகா விஷ்ணுவானவர் பார்லிமெண்டு என்னும் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருக்கின்றார்:-

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ கே.நடராஜன், சி. ராஜகோபாலாச்சாரி, வி.எஸ். சீனிவாச சாஸ்திரி, எஸ். சீனிவாசய்யங்கார், சிவசாமி அய்யர், வெங்கிட்டரமண சாஸ்திரி, சி.பி.ராமசாமி அய்யர், டி.ரங்காச்சாரி, டி.ஆர். ராமச்சந்திரய்யர், எம்.கே. ஆச்சாரி, சத்தியமூர்த்தி முதலாகிய அநேக பூதேவர்கள் போய் கால்மாட்டில் நின்று கொண்டு தவம் செய்கின்றார்கள்.

**மகாவிஷ்ணு** :- (தேவர்கள் தவத்திற்கிரங்கி) ஹே பூதேவர்களே! எங்கு வந்தீர்கள்?

**பூதேவர்கள்** :- ஆபத்பாந்தவா! அனாதரக்ஷகா! தங்களிடம்தான் வந்தோம்.

**ம.வி.**:- என்ன விசேஷம்?

**பூ.தே**:- தேவர்களுக்கு ஏதாவது இடுக்கண் வந்தால் அதைத் தடுக்கத் தங்களையன்றி இந்த உலகத்தில் யார் இருக்கின்றார்கள்? எனவே தங்களிடம் வந்தோம்.

**ம.வி.**:- என்ன விசேஷம்?

**பூ.தே** :- மகாப்பிரபூ. பழையபடி ராக்ஷதர்களுடைய ஆதிக்கம் வலுத்துவிட்டது. பூதேவர்களாகிய எங்கள் நிலை இருப்பதா? இறப்பதா? என ஊஞ்சலாடிக் கொண்டிருக்கின்றது இந்தச் சமயம் தாங்கள் அருள்புரியவில்லையானால் பூலோகமே சாம்பலாய்ப் போய்விடும். பூலோகமே இல்லையானால் மகாவிஷ்ணுவாகிய தாங்கள் பாடு கூட திண்டாட்டமாய்விடும். தங்களை வணங்கவோ, தங்களுக்கு பூஜை, ஆராதனைகள், உற்சவம்முதலியவைகள் செய்யவோ கூட யாரும் இருக்க மாட்டார்கள் வணங்காததும் பூஜிக்காததுமான பகவான் இருந்தென்ன ஒழிந்தென்ன? எனவே இந்தச் சமயம் தாங்கள் கிருபை கூர்ந்து எங்களைக் கடாக்ஷித்தருள வேண்டும்.



tamilnavarasam.com

**ம.வி.**:- என்ன! என்ன!! உங்களுக்கு அப்பேர்ப்பட்ட கஷ்டம் என்ன வந்தது? சங்கதியைச் சொல்லுங்கள்.

**பூ.தே.**:- பிரபுவே! முன்யுகங்களில் தேவர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள் போல இப்போது பெரிய ஆபத்துகள் வந்திருக்கின்றது.

**ம.வி.** :- எப்படி வந்திருக்கிறது? சீக்கிரம் விவரமாய்ச் சொல்லுங்கள்.

**பூ.தே**:- எப்படியோ வந்துவிட்டது! பெரிய உபத்திரவமாயிருக்கின் றது! ஒவ்வொரு யுகங்களிலும், தேவர்களுக்கு இடர்கள் செய்ய அசுரர் களாகவும், அரக்கர்களாகவும், ராக்ஷதர்களாகவும் வந்து எங்களை இடர்கள் செய்யும் போது பகவானாகிய தாங்கள் தான் பல அவதாரங்களாக வெளிக் கிளம்பி, இராக்ஷதர்களையெல்லாம் அழித்து எங்களையும் எங்கள் உயர்வா கிய வேதங்களையும் உத்தியோகங்களாகிய யாகத்தையும் காத்தருளி வருகிறீர்கள்.

**ம.வி**:- ஆம்! அது உண்மைதான்!

**பூ.தே**:- பிரபுவே! இந்த யுகத்திலும். அதுபோலவே ஒரு ராக்ஷதன் தோன்றிவிட்டான். அவன் எங்களுடைய பெரிய பெரிய உத்தியோமாகிய யாகத்திலும் வேதத்திலும் கையை வைத்து அவைகளை யெல்லாம் அடியோடு ஒழிக்கப்பார்க்கிறான்.

**ம.வி** :- அப்படிப்பட்ட ராக்ஷதன் யார்?

**பூ.தே.**:- பிரபுவே! அவன்தான் சுயமரியாதை என்று சொல்லப்பட்ட இராக்ஷதன். அவன் இப்போது தேவர்களாகிய எங்களுக்கு மாத்திரம் துன்பம் விளைவிக்கின்றான் என்றோ, எங்களுடைய உத்தியோகங்களாகிய யாகத்தை மாத்திரம் அழிக்கின்றான் என்றோ கவலையீனமாய் இருந்து விடாதீர்கள். நாங்கள் ஒழிந்தால் பகவானாகிய தாங்களும் ஒழிந்து போவது நிச்சயம். ஏனென்றால் எங்களை ஒழித்தால்தான் தங்களை ஒழிக்க முடியுமென்று நினைத்து முடிவு செய்து தங்களை ஒழிப்பதற்காகவே முதலில் எங்களை ஒழிக்கின்றானாம்.

**ம.வி.**:- அப்படியா! அப்பேர்ப்பட்ட ராக்ஷதனா அவன்? அவனுக்கு இவ்வளவு சக்தி எப்படி வந்தது?

**பூ.தே.**:- அவன் மகா தவசிரேஷ்டன். பெரிய பெரிய தவங்கள் செய்து அதன் மூலம் பெரிய பெரிய வரங்களைப் பெற்றுவிட்டான். அன்றியும் தக்க ஆயுதங்கள் அவனிடமிருக்கின்றன. அவ்வாயுதங்களுக்குப் பயந்து கொண்டு சில்லரை தேவதைகளும், தங்கள் பரிவாரங்களும் கூட அவனது பரிவாரங்களாக இருக்கின்றன. அவனைக் கண்டால் நடுங்காத முனிகள் இல்லை. ரிஷிகள் இல்லை.

**ம.வி.** :- அப்படியா அவன் செய்யும் கொடுமை என்ன?



RangaRakes

**பூ.தே**:- மதம் பொய் என்கிறான்; வேதம் பொய் என்கின்றான். புராணம் பொய் என்கின்றான். பராசர் ஸ்மிருதி பொய்யாம் மனுதர்ம சாஸ்திரம் பொய்யாம் எல்லாம் பொய் என்கின்றான்; ராமாயணம் பொய்யாம் பாரதம் பொய்யாம் திருவிளையாடல் புராணம் பொய்யாம் பெரியபுராணம்கூட பொய்யாம் தேவர்களைக் கண்டதார் விஷ்ணுவைக் கண்டதார் சிவனைக் கண்டதார் எல்லோரும் பொய் என்கின்றான். இருக்கின்றதாக அகச்சான்று, புறச்சான்று காட்டினாலோ காட்டுகின்றவர்கள் எல்லோரையும் அயோக்கியர் கள், அன்னக்காவடிகள் என்கின்றான். அவனுடைய உபத்திரவத்தினால் புராணங்களே விற்பனை ஆவதில்லை. காலக்ஷேபங்களே நடைபெறுவ தில்லை இவைகள் போனாலும் போகட்டும் எங்கள் யாகங்கள் நடைபெறு வதில்லை அவனால் எங்களுக்கு வெகு நஷ்டமாயிருக்கின்றது.

**ம.வி.**:- அப்படியா, சொல்லுகின்றான்?

**பூ.தே.**:- ஆமாம் பகவானே!

ம.வி:- இன்னம் என்ன செய்கிறான்?

**பூ.தே**:- நாள் பொய் என்கின்றான், திதி பொய் என்கிறான், சடங்கு பொய் என்கின்றான், தேர் பொய் என்கிறான், திருவிழா பொய் என்கிறான்!

**ம.வி**:- சரி; இவ்வளவையும் பொய் என்கின்றானா?

**பூ.தே**:-ஆம் பிரபூ!மற்றும் இவனுடைய உபத்திரவத்தினாலே புஸ்தகக் கடைக்காரன் பட்டினி, புராணக் கடைக்காரன் பட்டினி, புராணப் பிரசங்க பண்டிதன் பட்டினி, புரோகிதன் பட்டினி, அர்ச்சகன் பட்டினி, குருமார் பட்டினி, சமயப் பிரசாரகன் பட்டினி, நல்ல ஆங்கிலம் படித்த சாஸ்திரிகள், சாதுக்கள் எல்லாம் பட்டினி கிடக்கும் படியாகிவிட்டது! இதைப்பற்றிக் கேட்டால் மூட்டை தூக்கி மண்வெட்டி வயிறு வளர்க்கச் சொல்லுகிறான்; கொடுமை! கொடுமை!! சகிக்க முடியவில்லை.

**ம.வி**:- நமது கடவுள் தன்மையைப் பற்றி என்ன சொல்லுகின்றான் அதையாவது ஒப்புக் கொள்ளுகின்றானா இல்லையா.

**பூ.தே**:- கடவுளைப் பற்றிச் சொன்னால் எனக்கு அவசியமில்லை என்கின்றான். கடவுள் உண்டா? இல்லையா? என்றால் நான் அதைப்பற்றிக் கவலைப்படுவதே கிடையாது என்கின்றான். கடவுள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அதைப்பற்றி உனக்கென்ன கவலை என்கின்றான்.

**ம.வி**:- பின்னை, அவன் எதைத்தான் ஒப்புக்கொள்ளுகின்றான்?

**பூ.தே**:- அவன் மனிதனுக்கு மனிதன் அன்பு, இரக்கம், உதவி, ஒழுக்கம் இவற்றைத்தவிர மற்றொன்றையும் மதிப்பதில்லை என்கின்றான்.

**ம.வி**:-அப்படியானால், இவற்றை எல்லாம் உலகம் ஒப்புக் கொள்ளுகிறதா?



tamilnavarasam.com

**பூ.தே**:- ஒப்புக் கொள்ளுகிறதே, இதுதானே ஆச்சரியமாயி ருக்கின்றது. ஒப்புக் கொள்ளுவது மாத்திரமா? இந்த சமயம் நாங்கள் தெருவில் ஒண்டியாய் போகிறதே ஆபத்தாய் இருக்கிறது!

**ம.வி**:- நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? நீங்களும் எதிர்த்துப் போர் செய்வதுதானே!

**பூ.தே**:- நாங்களும் எங்களால் கூடியவரை பார்த்தோம். எங்கள் ஆயுதங்களாக அந்த ராக்ஷதக் கூட்டத்திலிருந்தே சில ஆட்களைக் கைப்பற்றி, அதன் மூலமாகவும் போரிட்டுப் பார்த்தோம். அவர்கள் ஆயுதங் களும் எங்கள் ஆயுதங்களும் நாங்கள் கூலிக்குப் பிடித்த ஆயுதங்களும், எல்லாம் அவன் ஆயுதங்களுக்கு முன்னால் முனை மழுங்கிப் போய்விட்டது.

**ம.வி**:- அப்பேர்ப்பட்ட அந்த ராக்ஷதனுடைய ஆயுதந்தான் என்ன?

**பூ.தே**:- குடி அரசு, திராவிடன், குமரன், நாடார்குலமித்திரன், தமிழன், விஸ்வநேசன், சிங்கப்பூர் முன்னேற்றம், சுயமரியாதைத் தொண்டன் முதலிய அநேக ஆயுதங்களின் வலிமை எங்கள் ஆயுதங்களின் முனைகளை எல்லாம் மழுங்கவைத்துவிட்டன. எங்கள் கூலி ஆயுதங்களும் உறை இல்லாமல் வெளியே தலைநீட்ட முடியவில்லை. இப்போது நாங்கள் செத்த பாம்பை ஆட்டுவதுபோல் பொய் வேஷம் போட்டுக் கொண்டு திரிந்து பார்த்தும், வேறு மார்க்கமில்லாததால் தங்கள் பாதத்தில் வந்து விழுந்து விட்டோம். தாங்கள்தான் எங்களைக் காப்பற்ற வேண்டும். தங்கள் பரிவாரங் களான சைமன் கமீஷன் என்னும் உபதேவர்களை நாங்கள் அறியாமல் பகிஷ்காரம் செய்துவிட்டோம். அதைத் தயவு செய்து மன்னிக்க வேண்டும்.

**ம.வி**:- இதற்காக என்னை என்ன செய்யச் சொல்லுகின்றீர்கள்.

**பூ.தே.**:- தங்களிடமுள்ள சில பாணங்களைக் கேட்க வந்திருக்கின் றோம்.

**ம.வி**:- என்ன பாணம்?

**பூ.தே**:- 124-ஏ, 153ஏ ஆகிய பாணங்கள் வேண்டும்.

**ம.வி**:- ஏன் 144- பாணம் வேண்டாமா?

**பூ.தே**:- 144 அவனிடம் செல்லாது. அது சரமாரியாய் அவன்மேல் விடப்பட்டும் அவைகள் அவனிடம் போய் போய் அவன் பாதத்தில் விழுந்து நமஸ்காரம் செய்துவிட்டு வந்தவிட்டதோடு மாத்திரமல்லாமல் திரும்பிவந்து எய்தவர்கள் மீதும் கூட சில சமயங்களில் பாய்ந்து விடுகின்றது.

**ம.வி**.:- சரி, நாம் நமது தூதர்களை முதலில் உங்கள் லோகத்திற்கு அனுப்புகிறோம். அவர்களைக் கொண்டு பூலோக நிலை அறிந்து பிறகு வேண்டியது போல் செய்வோம்!



**பூ.தே**:- பிரபுவே! தங்கள் தூதர்கள் யார்? தயவு செய்து அதைக் கொஞ்சம் தெரிவித்துவிட்டால் நாங்கள் ஜாக்கிரதையாயிருக்க அனுகூல மாயிருக்கும்.

**ம.வி**.:- நமது தூதர்கள் சைமன் கமிஷனர்கள். அவர்களிடம் முறைகளை மெய்ப்பியுங்கள்.

**பூ.தே**:- நாங்கள் அறியாத புத்தியினால், தங்கள் தூதர்களை ஆதியில் அலக்ஷிமாய்க் கருதிவிட்டோம். அதனால் வந்த வினைப் பகுதி என்று கூடச் சொல்லலாம். ஆனாலும் இப்போது அவர்களிடம் சொல்லிக் கொள்ளுவது எங்களுக்குக் கொஞ்சம் அவமானமாயிருக்கின்றதே.

**ம.வி**.:- நேரில் தெரிவிக்காவிட்டால் பாதகமில்லை மறைமுகமாக வேறு ஏதாவது வழிகளில் தெரிவித்து விடுங்கள்!

**பூ.தே**:- அப்படியே ஆகட்டும், பிரபுவே! எப்படியாவது இந்தச் சமயம் எங்களைக் காப்பாற்றுங்கள்! இல்லாவிட்டால். தங்களுக்கும் எங்களுக்கும் இரண்டு பேருக்குமே ஆபத்து வந்துவிடும். இதை நன்றாய் மனதில் வையுங் கள்.

**ம.வி** :- நம்மைப்பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் காரி யத்தை நீங்கள் ஜாக்கிரதையாய் பார்த்துக்கொள்ளுங்கள். சரி போய் வாருங்கள்.

**குடி அரசு - உரையாடல் - 10.03.1929**



RangaRakes tamilnavarasam.com

# திரு. ராஜகோபாலாச்சாரியாரின் பஞ்ச நிவாரணப்புரட்டு

சேலம் ஜில்லா திருச்சங்கோட்டிற்கு பக்கத்தில் புதுப்பாளையம் என்கின்ற கிராமத்தில் திரு.ராஜகோபாலாச்சாரியார் கதரின் பெயரால் ஒரு ஆசிரமம் வைத்துக் கொண்டு மதுவிலக்கு பிரசாரம் செய்வதாகவும், பஞ்ச நிவாரண வேலை செய்வதாகவும் அங்குள்ள ஏழை மக்களுக்கு கூலி கொடுப்பதாகவும் தானியம் கொடுப்பதாகவும் அடிக்கடி பத்திரிகைகளில் எழுதிக் கொண்டும் திரு.காந்தியைவிட்டு தன்னை விளம்பரம் செய்யச் செய்தும் இதன் பலனாய் திரு.காந்தி சிபார்சின் மீது வெளி இடங்களி லேயிருந்து பணம் வரும்படியாகச் செய்து கொண்டும் சூழ்ச்சிகள் செய்து பெரிய ஆர்ப்பாட்டங்கள் செய்து வருகிறார்.

இந்த சூழ்ச்சியும் ஆர்ப்பாட்டமும் அடுத்த சட்டசபைத் தேர்தலில் சேலம் ஜில்லா மக்கள் பூராவையுமே ஏமாற்றி அவர்களுடைய ஓட்டுக்கள் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் வைத்தே செய்து வருகின்றார்கள்.

இவர் சென்ற தேர்தலின்போதும் இதே மாதிரி மதுவிலக்கின் பெயரால் செய்த பிரசாரங்களும் அவற்றின் மூலம் திரு.சி.வி.வெங்கிட்டரமணய்யங்கார் போன்ற பல பார்ப்பனர்களுக்கு வாங்கிக் கொடுத்த ஓட்டுகளும் மற்றும் திரு.காந்தியைவிட்டு திரு. ராஜகோபாலாச்சாரியார் சொல்லுகின்ற நபர் களுக்கே ஓட்டு கொடுங்கள் என்று எழுதச் செய்த சூழ்ச்சியும் மக்கள் அறிந்த தேயாகும். ஆனால் அந்த தேர்தல் நடந்த பிறகு அச்சூழ்ச்சிகளால் ஓட்டுப் பெற்ற சுயராஜ்ஜியக் கட்சியாரோ அல்லது காங்கிரசுக்காரரோ அல்லது சுதந்திரக் கட்சியரோ செய்த வேலை என்ன என்று கேட்கின்றோம்.

கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்து பெரிய பூசாரி ஆய்விடுவதைப் போல், திரு.காந்தியைக் கொண்டு பணம் வசூலிப் பதும், அப்பணத்தைக் கொண்டும் மாதம் 50, 100, 150, 200 என்பதாக பார்ப்பனர்களுக்குச் சம்பளம் கொடுத்து பல பார்ப்பனர்களை வளர்ப்பதும், பார்ப்பனரல்லாதாரில் ஏதாவது ஒன்று இரண்டு பேர்களை அதுவும் முட்டாள் களாகத் தேடிப்பிடித்து அவர்களை வைத்துக் கொண்டு பார்ப்பனரல்லாதார் களையும் தான் சேர்த்துக் கொண்டிருப்பதாக பொது ஜனங்களை ஏமாற்று





வதும் ஆகிய இந்த பித்தலாட்ட காரியத்தினாலேயே பார்ப்பனரல்லாதாரை நிரந்தரமாய் ஏமாற்றலாம் என்று கருதியிருக்கின்றார். ஆதியில் இந்த ஆச்சிரமம் பெரிதும் பஞ்சமர்கள் என்பவர்களையே பிரதானமாகக் காட்டி ஏற்படுத்தியதாகும். அந்தப் பெயராலேயே பொது ஜனங்களிடம் பணமும் வசூலிக்கப்பட்டது. எனவே அப்பேர்ப்பட்ட ஒரு ஆச்சிரமத்தில் தீண்டாதார் என்பவர்கள் எத்தனை பேர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றார் என்பதும், பார்ப்பனரல்லாதார் என்பவரிடமிருந்தே கொடுக்கப்பட்ட பூமியால் பார்ப்பன ரல்லாதாரிடமிருந்தே வசூலிக்கப்பட்ட பணத்தில் நடைபெறும் ஆச்சிரம மான புதுப்பாளையம் ஆச்சிரமம் என்பதில் இப்போது இருக்கும் பார்ப்பனர் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் எவ்வளவு? பார்ப்பனரல்லாதார் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களுக்கு ஆள் ஒன்றுக்கு கொடுக்கப்படும் மாதச் சம்பளம் எவ்வளவு? ஆகிய இவைகளைக் கவனித்தால் ஆச்சிரமப் புரட்டும் ஆச்சாரியாரின் பஞ்ச நிவாரணப்புரட்டும் தீண்டாமை விலக்குப் புரட்டும் கதர்த் தொண்டு புரட்டும் தானாகவே ஒரு மூடனுக்குக் கூட விளங்கிவிடும். நிற்க, இச்சூக்ஷிகள் நடக்கும் இவ்வாச் சிரமத்திற்காக திரு.காந்தியின் சிபார்சை கேட்டுக் கொண்டு வடநாட்டிலும் தென்னாட்டிலும் சில பைத்தியக்காரர்கள் பணத்தை அள்ளிக் கொடுப்பதைப் பற்றியோ அவைகளை பொது நலத்தின் பெயரால் சில பார்ப்பனர்களை தின்று கொழுக்கச் செய்யும் சிரமங்களைப் பற்றியோ நமக்குச் சிறிதும் கவலை இல்லை. ஆனால் இந்த புரட்டுகளும் யோக்கியப் பொறுப்பற்ற காரியங்களும் சமீபத்தில் வரப்போகும் அடுத்த சட்டசபைத் தேர்தலில் பார்ப்பனரல்லாதார் கட்சியை ஒழிப்பதற்கு என்று செய்யப்படும் சூக்ஷிசி என்பதை அறியாமல் எங்கு பார்ப்பனரல்லாத மக்கள் ஏமாந்து போய் பார்ப்பனர்களுக்கும் அவர் களது கூலிகளுக்கும் தங்கள் ஓட்டுகளைக் கொடுத்து பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கே தீங்கு விளைவித்துக் கொள்ளுவார்களோ என்கின்ற விஷயத் தில்தான் நாம் கவலைப்படுவதோடு பொது மக்களையும் உஷாராயிருக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு – கட்டுரை – 10.03.1929**

RangaRakes tamilnavarasam.com

# பஹிஷ்காரத்தின் இரகசியமும் "தலைவர்களின்" யோக்கியதையும்

சென்ற வருஷம் சென்னையில் சைமன் கமிஷன் வந்திறங்கிய போது சில பார்ப்பனர்களின் பகிஷ்காரப் புரட்டு வெளியாய் விட்டதின் பலனாய் சென்னையில் சும்மாயிருந்த பார்ப்பனர்களுக்கு எல்லாம் அடிவிழும் படியான நிலைமை ஏற்பட்டு விட்டதாலும், அதனால் சில பார்ப்பனர்கள் ஊரைவிட்டே ஓடவேண்டியதாய் ஏற்பட்டு விட்டதாலும், சென்னைப் பார்ப்பனர்களில் பலர் பார்ப்பன சமூகத்தின் பேரால் தாங்கள் சைமன் கமிஷனை வரவேற்கின்றோம் என்று விளம்பரப்படுத்திக் கொண்டதோடு, சில அரசியல் பார்ப்பனத் தலைவர்களான திருவாளர்கள் எஸ்.சீனிவா சய்யங்கார் முதலியவர்களிடமும் சண்டைக்குப் போய் விட்டார்கள். அதாவது "பஹிஷ்காரம் என்று வாயில் சொல்லிவிட்டு நீங்கள் டெல்லிக்குப் போய் பங்களா நிழலில் உட்கார்ந்து கொள்ளுகின்றீர்கள்! நாங்கள் அடிபட வேண்டியிருக்கின்றது" என்றும் "இந்தப் பட்டணத்திலேயே இருந்து பஹிஷ்காரம் இல்லாமல் பார்த்துக் கொள்ளுகின்றீர்களா? அல்லது நாங்கள் ஊரைவிட்டுப் போய்விடுவதா" என்று கோபத்துடன் கேட்டார்கள். அதற்கு ஆகவே, திருவாளர்கள் சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி முதலியவர்கள் நாங்கள் கடை அடைக்கப் போவதில்லை என்றும் கூட்டம் போடுவதில்லை என்றும் சர்க்கார் உத்திரவில்லாமல் தெருவில் தலைகாட்டு வதில்லை என்றும் மற்ற பார்ப்பனர்களுக்கு வாக்கு கொடுத்ததுடன் சர்க்காருக்கும் போலீஸ் கமிஷனர் மூலம் தெரிவித்துவிட்டுப் பொதுமக்களை ஏமாற்ற வேண்டி சைமன் கமிஷன் நடக்காத ஏதாவது ஒரு தெருவில் சில குறிப்பிட்ட நபர்களுடன் ஊர்வலம் செல்ல மாத்திரம் அனுமதி கேட்டுக் கொண்டார்கள். போலீஸ் கமிஷனர் "சைமன் கமிஷன் வரும் வீதியில் வேண்டுமானாலும் நீங்கள் ஊர்வலம் போகலாம் நான் பந்தோபஸ்து கொடுக்கின்றேன்" என்று சொல்லியும் கண்டிப்பாய்க் கமிஷன் போகாத வீதியிலேயே ஊர்வலம் போக உத்திரவு பெற்றதோடு அதற்கும் பந்தோபஸ்தும் பெற்றுக் கொண்டார்கள்.

இதை அறிந்த ஆந்திர தேசத்துப் பார்ப்பனர்கள் போலீஸ் கமிஷனரோடு சென்னை பார்ப்பனர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டதை அறிந்து தாங்கள் நேரில் பஹிஷ்காரம் நடத்துவதாய் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். சர்க்காரார் அவர்களைப் பிடித்து அரஸ்டு செய்தவுடன் அவர்களும் தங்களை வெளியில் விட்டால் உடனே ஊருக்கு போய்விடுகின்றோம் என்கின்றதாக வாக்குக் கொடுத்துவிட்டு வெளியில் வந்துவிட்டார்கள். இந்த இரண்டு விஷயங்களும், சென்னை பார்ப்பனர்களும் ஆந்திரப் பார்ப்பனர்களும் பத்திரிகைகளுக்கு ஒருவரை ஒருவர் தூற்றி எழுதிய சேதிகளிலேயே அறியக் கிடக்கின்றது. பகிஷ்காரத்தின் யோக்கியதை இப்படி இருக்க வேறு பல பார்ப்பனர்கள் தங்கள் சமூகத்தின் பேரால் தாராளமாய் சைமன் கமிஷனிடம் சென்று தங்கள் சமூக நன்மைக்குத் தேவையான காரியங்களை எடுத்துச் சொல்லிவிட்டு வந்துவிட்டார்கள். அவர்கள் சொல்லியிருக்கும் விஷயங்களை அடுத்த வாரம் வெளிப்படுத்துவோம்.

பொதுவாகச் சைமன் கமிஷனைப் பகிஷ்கரித்து தங்கள் சங்கதியை அவர்களிடம் எடுத்துச் சொல்லாதவர்கள் யார் என்பதும், சைமன் கமிஷனர்கள் உத்தேசித்து வந்த காரியங்களில் எது தடைபட்டுப் போய் விட்டது என்பதும் முக்கியமாக யோசித்துபார்க்க வேண்டியதோடு காங்கிரஸ் மகா சபை என்பதின் யோக்கியதை எப்படிப்பட்டது, அதை மக்கள் எவ்வளவு தூரம் மதிக்கின்றார்கள் என்பதும் இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பகிஷ்காரம் என்கின்ற கூச்சல் நமது நாட்டில் ஏற்றபட்ட அந்த நிமிஷம் முதலே இக்கூச்சல் வடநாட்டில் மகமதியர்களுக்கு விரோதமாக அவர்களுடைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமையை பிடுங்கிக் கொள்ளவும் தென்னாட்டில் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாகவும் சிறப்பாக தீண்டப்படாதார் என்று கொடுமைப் படுத்தப்பட்ட மக்களைத் தலையெடுக்க வொட்டாமல் செய்வதற்காகவும் செய்யப்பட்ட சூழ்ச்சிகள் என்று நாம் எழுதியும் பேசியும் வந்ததோடு, மகமதியர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் கண்டிப்பாய்த் தங்கள் நிலைமையையும் தேவைகளையும் அவசியம் கமிஷன் முன் சொல்லியே ஆகவேண்டுமென்று வற்புறுத்தியும் வந்தோம். அந்தப்படியே விஷயங்கள் நடந்ததோடு முக்கியமாய்த் தீண்டப்படாதவர்கள் எனப்பட்டவர்கள் இமயம் முதல் குமரிவரையில் ஒரே மாதிரியாகத் தங்கள் நிலைமைகளையும் தேவைகளையும் எடுத்துச் சொல்லியிருப்பது குறித்தும் அவற்றைக் கமிஷனர் கனவான்கள் நன்றாய் உணர்ந்து வேண்டியது செய்வதாய் வாக்குறுதி கொடுத்திருப்பதைக் குறித்தும் நாம் அளவில்லா மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்தக் கமிஷன் அறிக்கையின் மீது வழங்கப்படும் சீர்திருத்தம் என்பது எத்தன்மையதுவாக இருப்பினும் நமக்கு அதைப் பற்றிச் சிறிதும் கவலை இல்லை. ஏனெனில் அச்சீர்திருத்தம் என்பதில் இப்போது தெரிவிக்கப்பட்ட குறைகள் நீங்கும் படியான மார்க்கங்கள் இல்லாதிருக்குமானால் இந்தச் சர்க்காரின் கண்களில் கோலை விட்டு ஆட்டக்கூடிய நிலைமையைச் சாதாரணமாக வெகு சுலபத்தில் உண்டுபண்ணிக் கொள்ளக் கூடிய சௌகரியங்கள் தாராளமாக கிடைத்துவிடும் என்கின்ற உறுதிதான். ஆதலால் சைமன் கமிஷன் விஷயத்தில் நாம் நமது கடமையைச் செய்து விட்டோம்.

**குடி அரசு - கட்டுரை - 10.03.1929**



RangaRakes tamilnavarasam.com

# தேர்தல் தந்திரம்

## அன்னிய ஆடை பகிஷ்காரப் புரட்டு

சூக்ஷிகளிலும் வஞ்சகத்திலும் சிறந்த ஒரு கூட்டத்தார் சமுதாய வாழ்க்கையில் தங்களது சுயநலத்திற்கென்று எப்படி மதம், சமயம், வேதம், சாஸ்திரம், கோவில், பல சாமிகள், அவைகளுக்குப் புராணங்கள், குளங்கள், தீர்த்தங்கள், சடங்குகள், பூசைகள், உற்சவங்கள், பிராயச்சித்தங்கள், மோக்ஷம் நரகம், மேல் ஜாதி, கீழ் ஜாதி முதலியவைகளைக் கற்பித்து, தங்களையும் உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக் கொண்டு இவைகளுக்கு சமயத்திற்குத் தகுந்தபடி வியாக்கியானம் (அர்த்தம்) சொல்லிப் பாமர மக்களை ஏமாற்றி அவர்களைப் படிக்கவிடாமலும் செய்ததோடு, மற்றவர்கள் உழைப்பில் தாங்கள் நோகாமல் பிழைக்கவும் வழி செய்து கொண்டது போலவே நமது நாட்டில் படித்தவர்கள் என்கின்ற ஒரு கூட்டத்தார் சிறிது காலமாய் அதாவது 40,50 வருஷ காலமாய் தங்கள் சுயநலத்திற்கென்று அரசியலிலும் தேசியக் காங்கிரஸ், சுயராஜ்யம், தேசீயம் என்பதாகப் பல பெயர்களை உற்பத்தி செய்து அதன் மூலமாகவும் அரசாங்கத்தில் உத்தியோகங்களும் அதிகாரங்களும் பெற எண்ணம் கொண்டு பாமர மக்களைக் கூட்டி, ஏமாற்றி, பல தீர்மானங்கள் செய்து, ஒன்றுக்கு இரண்டு மூன்று நான்கு, சில சமயங்களில் பத்து என்பதாக உத்தியோகங்களையும் இலாக்காக்களையும் உற்பத்தி செய்து சம்பளங் களையும் அதுபோலவே நாளுக்கு நாள் கோடிக்கணக்காய் உயர்ப்பித்துக் கொண்டு அவைகளுக்காக பொது ஜனங்கள் மீது வரியையும் தாறுமாறாய் உயர்த்தி நாட்டையும் ஜனசமூகத்தையும் பாழ்ப்படுத்திவரும் விஷயத்தை இதற்கு முன் பல தடவைகளில் எடுத்துக்காட்டி வந்திருக்கின்றோம். இதற்கு உதாரணங்களைச் சுருக்கிக் காட்ட வேண்டுமானால் நம் நாடு காங்கிரசுக்கு முன் இருந்த நிலைமையும் அதற்குப்பின் ஏற்பட்ட நிலைமையும் ஒன்று இரண்டு விஷயங்களில் பார்த்தாலே விளங்காமல் போகாது. நமது மாகாண அரசியல் நிர்வாகத்தில் காங்கிரசுக்கு முன் மீ. 5500 ரூபாயில் 2 மந்திரிகள் 2000 ரூபாயில் 2 காரியதரிசிகள் இருந்தது, காங்கிரசுக்குப் பின் 5550 ரூபாயில் 7 மந்திரிகள் 2500 ரூபாயில் 5 காரியதரிசிகள் ஏற்பட்டதும், நீதி நிர்வாகத்தில் காங்கிரசுக்கு முன், மீ .2500 ரூபாயில் 5 ஹைகோர்ட் ஜட்ஜிகள் இருந்தது, காங்கிரசுக்குப் பின் மீ 3000 ரூபாய் சம்பளத்தில் 15 ஜட்ஜிகள் இருப்பதும், காங்கிரசுக்கு முன் இந்தியா பூராவுக்கும் 30 கோடி ரூபாய் வரி வசூலிக்கப்பட்டு வந்தது, இப்போது 150 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டதும் ஆகியவைகளைக் கவனித்தால் போதுமானதாகும். இன்னமும் இதுபோன்ற விஷயங்கள் எத்தனை வேண்டுமானாலும் எடுத்துக் காட்டலாம்.

இந்த நிலையில் பாமர மக்கள் வஞ்சிக்கப்பட்டு வதைக்கப்பட்டதோடு நில்லாமல் இந்த அதிகாரங்களையும், உத்தியோகங்களையும், சம்பளங் களையும் நமது நாட்டில் ஒரு கூட்டத்தாரே, அதாவது பார்ப்பனர்களே அடைய வேண்டும் என்பதற்காகக் கருதி அதற்காகவும் பல சூக்ஷிகள் செய்யப்பட்டும் வருகின்றது. அந்த சூக்ஷிகளின் பலனாகத்தான் நமது மாகாணத்தில் சமீபகாலம் வரையில் சட்டசபை, ஜில்லா போர்ட், தாலுக்கா போர்ட், முனிசிபாலிட்டி முதலிய பிரதிநிதித்துவ ஸ்தாபனங்கள் எல்லா வற்றிலும் பார்ப்பனரல்லாத ஓட்டர் என்பவர்களே 100-க்கு 75 பேர்களுக்கு மேலாக இருந்தும், பார்ப்பனர்களே தெரிந்தெடுக்கப்பட்டு அங்கத்தினர் களாகவும் தலைவர்களாகவும் இருந்து வந்திருக்கின்றார்கள். அதுபோலவே பொதுஜன எண்ணிக்கையில் பார்ப்பனர்கள் 100-க்கு மூன்று பேர்வீதமே இருந்து வந்தும், அதிகாரப் பதவியிலும் பெருத்த அதாவது, 100, 200, 500, 1000, 2000, 3000, 5000 ரூபாய் சம்பளமுள்ள உத்தியோகங்களில் 100-க்கு 90 வீதமும் 95 வீதமும் சிலவற்றில் 100-க்கு 100 வீதமும் இருந்து வந்தார்கள். சிலவற்றில் இன்னமும் இருந்து வருகின்றார்கள். இவைகளை உணர்ந்த சிலர் இக்கொடுமைகளை ஒழிக்க முயற்சித்ததில் அவர்களை இப்பார்ப்பனர்கள் தேசத்துரோகன் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டதால் கடைசியாக இந்த பதவிகளையும் உத்தியோகங்களையும் சம்பளங்களையும் அப்பார்ப்பனர் களே ஏகபோகமாய் அனுபவித்து வருவதையாவது ஒழித்து எல்லா மக்க ளுக்கும் அதில் பங்கு கிடைக்கட்டும் என்று முயற்சி செய்து தீரவேண்டி யதாயிற்று. இம்முயற்சியின் பலனாய் பார்ப்பனரல்லாதார் ஒருவாறு கொஞ்சம் கொஞ்சமாய்ப் பலனடைந்து வருவதன் மூலம் பார்ப்பனர்களின் ஏகபோக ஆதிக்கமும் உரிமையும் ஆட்டம் கொடுக்கவேண்டியதாய்ப் போய் விட்டதால் அதற்காக பார்ப்பனர்கள் வேறு பல சூட்சிகளும் கண்டு பிடிக்க வேண்டியவர்களாகி விட்டார்கள். அந்த சூட்சிகள் தான் தேர்தல் சமீபிக்கின்ற காலங்களில் சுயராஜ்யக் கட்சி, முட்டுக்கட்டைக் கட்சி, பூரண சுயேச்சை கட்சி என்பது போன்ற 'தீவிரவாதிகள்' கட்சிகளும் அவைகளுக்குள் தீண்டாமை விலக்கு, உத்தியோக விலக்கு, பதவி விலக்கு, சைமன் கமிஷன் விலக்கு, அரசாங்கங்க விருந்து விலக்கு, அன்னியத்துணி விலக்கு என்பது போன்ற பல விலக்குத் திட்டங்களையும் வார்த்தை அளவில் கற்பித்துக் கொண்டு அவைகளுக்காக அறிவுக்கும், அனுபவத்திற்கும், நாணயத்திற்கும் பொருந் தாத முறைகளில், சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் யோக்கியர்களும் அறிவாளிகளும் நாணயமும் சுயமரியாதையும் உள்ளவர்கள் பின்பற்ற முடியாத ஒப்புக் கொள்ளாத, ஒத்துழைக்க முடியாத முறைகளில் அவை களைப் பிரசாரம் செய்வதன் மூலம் பாமர மக்களின் செல்வாக்கையும் ஓட்டு களையும் பெற முயற்சித்து வருகின்றார்கள். இந்த சூட்சிகள் சாதாரணமாக ஒவ்வொரு தேர்தல்களிலும் கையாளப்பட்டு வருவதையும் பார்க்கலாம்.





RangaRakes tamilnavarasam.com

உதாரணமாக அதிக தூரம் கூடப் போக வேண்டியதில்லை. தீண்டாமை விலக்கு என்பது காங்கிரஸ் திட்டத்தில் ஒரு முக்கியமான தீர்மானமாக இருந்தும் அது காரியத்தில் வருவதானால் பார்ப்பனர்கள் உயர்வு அடியோடு போய்விடும் எனக் கருதினதைப் பற்றி எல்லா காங்கிரஸ் திட்டத்திலும் நழுவ விட்டுக் கொண்டே வந்துவிட்டார்கள். சென்னைக் காங்கிரசிலும் அக்கொள்கையைக் காங்கிரஸ் கொள்கையில் ஒன்றாக இருக்கும்படி சேர்க்க வேண்டும் என்று திரு.ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் தீர்மானம் அனுப்பியிருந்தும், அதை யோசனைக்குக் கூட எடுக்காமலே சூட்சி செய்து அடக்கி விட்டார்கள்.

தவிர, சென்ற சட்டசபைத் தேர்தலுக்கு முந்தின சட்டசபைத் தேர்தலின் போது சுயராஜ்யக் கட்சி என்று ஒன்றைக் கற்பித்து அரசாங்கம் நடைபெற ஒட்டாமல் முட்டுக்கட்டை போடுவது என்ற கொள்கையைச் சொல்லிக் கொண்டு தேர்தல் வேட்டை ஆடினார்கள்.

இதைக்கண்டு பல பாமர மக்களும் ஏமாந்தார்கள் தேர்தல் நடந்த பின்பு வெற்றிபெற்ற சுயராஜ்யக் கட்சியாரும் முட்டுக் கட்டையாரும் அரசாங்க சட்டசபைகளில் கலந்து கொண்டு தீர்மானங்களை பிரேரேபிக்கவும் எதிர்க்கவும், கிடைத்த உத்தியோகங்களையும் பதவிகளையும் வருமானங்களையும் நாணயக் குறைவான முறையில் பெறவும் செய்ததன் மூலம் அரசாங்கத்தை ஒருவாறு நடத்திக் கொடுத்தார்கள்.

அது மாத்திரமல்லாமல், இரண்டு வருஷ காலம் சட்ட சபையிலிருந்து சகல போகமும் அனுபவித்துவிட்டு அந்த சட்டசபை காலாவதியாகும் தருணத்தில் கொஞ்சமும் மானம், ஈனம், நாணயம் ஆகியவைகள் ஒருசிறிதும் இல்லாமல் "இந்த சட்டசபைக்கு வந்ததே தப்பு. இதில் ஒரு காரியமும் செய்ய முடியவில்லை. இந்த சர்க்கார் எங்களை ஒரு மனிதர்கள் என்றுகூட ஒரு சிறிதும் மதிக்கவே இல்லை. ஆகையால் இதில் இனி அரைவினாடி நேரம் கூட இருப்பது எங்களுடைய சுயமரியாதைக்கு இழிவு. ஆதலால் நாங்கள் இந்த சட்டசபையை விட்டு வெளியில் போகின்றோம்" என்று சொல்லிவிட்டு வெளிவந்துவிட்டு மறுபடியும் அந்த சர்க்கார் இவர்களை மதிக்காமலும் லக்ஷியம் செய்யாமலும் கூப்பிடாமலும் இருக்கும்போதே அந்த சட்ட சபைக்குள் போய் சிறிது கூட மானம் வெட்கம் இல்லாமல் தீர்மானங்களைப் பிரேரேபிப்பதும் எதிர்ப்பதும் ஆன காரியங்கள் செய்து விட்டு மறுபடியும் அடுத்த சட்டசபைத் தேர்தலுக்கும் நின்றார்கள்.

அப்படி நிற்கும்போது முன்போல் முட்டுக்கட்டைபோடுவது என்கின்ற வார்த்தையை அடியோடு விட்டுவிட்டு புதிதாக ஒரு சூட்சி செய்தார்கள். அதாவது:- தாங்கள் மந்திரி பதவி, உத்தியோகம் முதலியவைகள் பெற்றுக் கொள்வதில்லை என்றும் மந்திரிப் பதவிகள் வேறு யார் பெற்றுக் கொண்டாலும் அந்த மந்திரிசபைகளை அழித்து விடுவதாகவும் சொல்லி பிரசாரம் செய்து ஓட்டுப்பெற்று மறுபடியும் சட்டசபைக்குப்



போனார்கள். அந்தப்படி போனபின்பு மந்திரி பதவி பெறுவதில் தங்களுக்குள் போட்டி இருந்தபடியால் வேறு ஆசாமிகளைப் பிடித்து, மந்திரிகளாக இருக்கச் செய்து அவர்களுக்கு உதவியும் செய்து சட்டசபைத் தலைவர் பதவியும், தங்கள் கட்சித் தலைவர் ஒப்புக் கொண்டு அரசாங்கத்தை நன்றாய் நடத்திக் கொடுத்தார்கள். இதற்கு காங்கிரஸ் என்கின்ற ஒழுக்கம் கெட்ட இயக்கமானது சற்றும் நாணயமும் யோக்கியப் பொருப்பும் இல்லாமல் சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சி மந்திரி சபை அமைக்கவும், மந்திரிசபையை நடத்திக் கொடுக்கவும் உதவி செய்ததற்காக அதைப் பாராட்டுவதாக ஒரு தீர்மானமும் செய்துவிட்டது. இது இப்படி இருக்க ஒத்துழையாதார் என்று சொல்லிக் கொண்டு மக்களை ஏமாற்றும் நாணயம் கெட்ட கூட்டமாகிய திரு.காந்தி கூட்டமும் இந்த நாணயமும் யோக்கியதையும் அற்ற கட்சியின் வெற்றிக்கு மதுவிலக்கின் பேரால் திருட்டுத்தனமாகவும் வெளிப்படையாகவும் உதவி செய்ததோடு "வேதவாக்கு" என்று சொல்லக் கூடிய "யங் இந்தியா" பத்திரிகையும் காந்தி சிஷ்யர் என்கின்ற திரு. ராஜகோபாலாச்சாரியாலும் கோடு கட்டிய குறள்களும் கிராமப்பிரசாரமும் செய்து இக்கூட்டத்திற்கு ஓட்டுகளும் வாங்கிக் கொடுத்தார்கள். கடைசியாக விளைந்த பலன் என்ன என்று பார்த்தால் சட்டசபையின் மூலம் எவ்வளவு தூரம் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்குத் தடை செய்யலாமோ அதைத்தவிர வேறு ஒரு காரியமும் செய்ததாக அவர்களே சொல்லிக் கொள்ள முடியாமல் போய் விட்டது. போதாக்குறைக்கு இந்த வருஷத் தேர்தலுக்கும் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டாய்விட்டது.

அவைகளில் முதலாவது, சைமன் கமிஷன் பகிஷ்காரம். இது அழுவாரற்ற பிணமாய் நாற்றமெடுத்து புழுத்து சருசாகக் காய்ந்துவிட்டது.

இரண்டாவது, பூரண சுயேச்சை கட்சி என்பது. இதன் யோக்கியதை இப்பொழுதே வெளியில் எடுத்துப் பேசுவதற்கு இடமில்லாமல் போனதோடு கூடிய சீக்கிரத்தில் இக்கட்சியில் சேர்ந்து பயந்து கொண்டு ஓடிப் போய்விட்ட இரண்டொருவரைத் தவிர மற்றும் மீதியுள்ள இரண்டொருவர்களும் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகப்பட்டு விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

போக மூன்றாவதாக ஸ்லேத்துமம் கட்டி, சாகப் போகும் மனிதனுக்குத் 'துளசி தீர்த்தமாக' விளங்குவதுபோல் 'அன்னிய ஆடை பகிஷ்காரம்' என்கின்ற ஒரு பித்தலாட்டம் பிரசாரமேயாகும். இந்த பித்தலாட்ட மூட்டையைத் தூக்கி திரு.காந்தியின் தலையில் வைத்து அவருக்கு கொஞ்ச நஞ்சம் இருந்த மரியாதையையும் ஒழிக்க முடிவு செய்து கொண்டு வெளியில் புறப்பட்டாய்விட்டது. இதன் பேரால் திரு.காந்தி கைது செய்யப்பட்டு சொந்த பொருப்பில் வெளிவந்தும் ஆய்விட்டது. இதை இனி பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் பத்திரிகையில் கலம் கலமாய் எழுதுவதின் மூலமும் கிராமங்களில் போய் கத்துவதின் மூலமாகவும் பார்ப்பனர்களுக்கு ஓட்டு



RangaRakes
tamilnavarasam.com

வாங்கி கொடுக்க பிரசாரங்கள் செய்து பார்ப்பனர்களிடம் இருந்து கூலி வாங்கப் போகின்றார்கள் என்பது நிச்சயம். ஆனால் இவர்கள் பேச்சைக் கேட்டு ஏமாறுவதற்கு இனி எந்தக் கிராமத்திலும் முன்போல முட்டாள்கள் இல்லை என்பதும் நிச்சயம்.

ஏனெனில், இப்போது நமது நாட்டில் தீண்டாமை விலக்கைவிட மது விலக்கைவிட அன்னிய துணி விலக்குக்கு என்ன அவசியமும் அவசரமும் நியாயமும் இருக்கின்றது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்தியாவில் எவ்வளவோ மில்லுகள் இருந்தும் இந்தியாவுக்கு வருஷா வருஷம் வெளிநாட்டில் இருந்து வரும் துணியின் கிரயம் ரூ.60,00,00,000 அறுபது கோடியே ஆகும். இந்த அறுபது கோடிரூபாய்க்கு ஈடு செய்வதற்கு இந்தியா வில் உற்பத்தியாகும் கதர் வருஷம் ஒன்றுக்கு 5 முதல் 10 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கதர் துணியேயாகும். இதுவும் வெளிநாட்டுத் துணிகளும் மில் துணிகளும் கஜம் ஒன்றுக்கு 4 அணா முதல் ஆறு அணா வரையில் விலையானால் கதர் துணிகள் 10 அணா முதல் கொண்டு 12 அணா வரையில் விலை ஆகக் கூடியதாயிருக்கின்றது. இவற்றில் பெண்களுக்கு என்று கதர் 50,000ரூ பெறுமானமுள்ள துணிகள்கூட உற்பத்தி ஆவதில்லை. ஆனாலும் அன்னியத் துணி ஒரு சேலை இரண்டரை ரூபாய் அல்லது மூன்று ரூபாய் அடங்கினால் கதரில் அதைப்போல் ஒரு சேலை 8 ரூபாய் அல்லது 10 ரூபாய் அடக்கமில்லாமல் கிடைப்பதில்லை.

ஆகவே இன்றையதினம் நமது நாட்டில் உள்ள அன்னியத் துணிகளை எல்லாம் நெருப்பில் கொளுத்திவிட்டால் சுமார் 5992 லக்ஷ ரூபாய் துணிகள் கட்டும்படியான ஆண்களும் பெண்களும் என்ன கதி அடை வார்கள்? ஒரு சமயம் எல்லோரும் திரு.காந்தியை போல் முழங்காலுக்குமேல் துணி கட்டிக் கொள்வதன் மூலம் சுமார் 10, 20 கோடி ரூ. பெருமான துணி வேண்டியதில்லாமல் போய்விட்டாலும் அதற்குப் பதிலாக திரு.காந்தி உபயோகிப்பதுபோல் மெத்தைத் தலையணை துப்பட்டி கொசுவலை ஆகியவைகளையும் பார்த்து, ஜனங்கள் அதையும் பின்பற்றுவதானால் மேல் கண்ட 10, 20 கோடி ரூபாய் துணி மீதியாவதற்கு பதிலாக 20, 30 கோடி ரூபாய் துணி அதிகமாகத்தான் வேண்டியிருக்கும். தவிர ஏழைகளுடைய துணிகளை வாங்கிக் கொளுத்தினால் அவர்கள் அதற்குப் பதிலாக வேறு எதை வாங்க யோக்கியதை உடையவர்கள் ஆவார்கள் என்பதை யாராவது யோசித்துப் பார்த்தார்களா? கதர் வாங்குவதானால் பணம் ஒன்றுக்கு இரண்டு மூன்று அதிகமாய் செலவு செய்ய வேண்டும். அப்படி செலவு செய்வ தானாலும் கிடைக்குமா? கடைசியாக உள்நாட்டு மில் துணியானாலும் வாங்குவதாயிருந்தாலும் அதுவும் போதாமல் தானே மேல்கொண்டு அறுபது கோடி ரூபாய் துணி வெளிநாட்டிலிருந்து வரவேண்டியிருக்கின்றது.

அப்படி இருக்க, இந்த கணக்கை எப்படி சரிசொல்ல முடியும்? எல்லோருமே நூல் நூற்க ஆரம்பித்தால் ஒரு சமயம் துணி கிடைக்கக்கூடும் என்று சொல்லலாமானாலும் நூல் நூற்பவர்களுக்கெல்லாம் மணிக்கு ஒரு (சல்லி) பை தானே கூலி கிடைக்கின்றது. அந்தப்படி மணிக்கு ஒரு தம்பிடி கூலி கிடைப்பதானாலும் அந்த நூலில் நெய்த வேஷ்டிக்கு ஒன்று இரண்டாக மூன்றாக கிரயம் கொடுத்து வாங்கினால்தானே கிடைக்கக்கூடியதாயிருக் கின்றது. இதுவரை கதருக்காக என்று பாழாக்கின ரூபாய்களை நூல் நூற்பு மில்லாகவும் நெசவு செய்யும் மில்லாகவும் கட்டி இருந்தால் சுமார் ஒரு 50மில் கட்டியிருக்கலாம். இந்த ஐம்பது மில்லில் உற்பத்தியாகும் நூலுக்கும் துணிக்கு கொடுக்கக்கூடிய கூலிகளில் இப்போது மணிக்கு ஒரு தம்பிடி சம்பாதிக்கும் கூலி ஆண்களைவிட இரண்டு மூன்று பங்கு ஆட்கள் மணிக்கு ஒரு அணா முதல் ஒரு ரூபாய் வரை சம்பாதிக்கக் கூடிய யோக்கியதை அடைவார்கள்.

இவற்றையெல்லாம் விட்டுவிட்டு மக்களை ஏமாற்றுவதற்கென்றே ஒரு கூட்டத்தாரின் வயிற்று வளர்ப்புக்கென்றே- தேர்தல் சூழ்ச்சிக்கென்றே போலி இயக்கங்களை வைத்துக் கொண்டு மக்களின் பணங்களையும் நேரங்களையும் ஊக்கங்களையும் அறிவுகளையும் கெடுத்துக் கொண்டும் இருக்கும்படி இனியும் எத்தனை காலத்திற்கு நாம் இடங்கொடுத்துக் கொண்டு இருப்பது என்பதை யோசித்துப் பார்க்கும்படி விரும்புகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 10.03.1929**



RangaRakes tamilnavarasam.com

# மதுவிலக்கு பிரசாரத்திற்கு 400000 ரூ.

நமது மாகாணத்தில் உள்ள சுமார் 4 கோடி பார்ப்பனரல்லாத மக்களும் ஏறக்குறைய ஏகமனதாய் இருந்து பல நாட்களாகக் கிளர்ச்சி செய்து வந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையை சென்னை அரசாங்க உத்தியோகத்தில் ஒருவாறு அமுலுக்கு கொண்டுவர முயற்சித்து தைரியமாய் வாதாடி வெற்றி பெற்ற நமது சுகாதார மந்திரி கனம் எஸ்.முத்தையா முதலியார் அவர்கள் மதுபானத்தில் பெரிதும் கஷ்டமும் நஷ்டமும் அடையும் பார்ப்பனரல்லாத ஏழை மக்களின் நன்மையை உத்தேசித்து மது விலக்கு பிரசாரம் செய்வதற்கு என்று இவ்வருஷத்திய வரவு செலவு திட்டத்தில் நான்கு லட்சம் (4,00,000) ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இதைக்கண்ட நமது எதிரிகளான கன்மனப் பார்ப்பனர்கள் மதுபானம் நின்றுவிட்டால் தங்கள் பிழைப்புக்கு ஆபத்து வந்துவிடுமே எனக் கருதி சட்டசபையில் அத்தீர்மானம் நிறைவேறாமல் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஆதலால் பார்ப்பனரல்லாத சட்டசபை அங்கத்தினர்களான கனவான்கள் இப்பார்ப்பனர்களின் சூட்சிக்கும் விஷமத்திற்கும் பயந்து ஏமாந்து போகாமல் தைரியமாய் உறத்து நின்று பிரசாரத் துகையை அனுமதித்து நிறைவேற்றி வைப்பதுடன் மந்திரி கனம் எஸ்.முத்தையா முதலியார் அவர்களும் நம் மதுபானத்தினால் கஷ்டப்படும் மக்கள் சார்பாக நன்றி செலுத்தவும் கடமைபட்டிருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்துகின்றோம்.

**குடி அரசு - அறிவிப்பு - 10.03.1929**



# நம்பிக்கையில்லாத் தீர்மானம்

தென்னாற்காடு ஜில்லா போர்டு பிரிசிடெண்ட் திருவாளர் ராவ்பகதூர் சீதாராம ரெட்டியார் அவர்கள் மீது அவரது சகோதர அங்கத்தினர்களால் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து பெருமித ஓட்டுகளால் நிறைவேற்றப்பட்டுவிட்டதாகத் தெரிய வருகின்றது. திரு.ரெட்டியார் பார்ப்பனர்களுக்கு ரொம்பவும் பயந்தவர். ஜஸ்டிஸ் கட்சி கூட்டமோ, சுயமரியாதைப் பிரசாரமோ, பார்ப்பனர் அல்லாதார் கூட்டமோ தனது ஜில்லாவுக்குள் கண்டிப்பாய் வரக்கூடாது என்று வெகு கவலையுடன் தனது ஜில்லாவைப் பாதுகாத்து வந்தவர். கடலூரில் பார்ப்பனர் அல்லாதார் மகாநாடு கூட்டுவதாக பல பார்ப்பனரல்லாத அபிமானிகள் முன்வந்து தேதி முதலானவைகள் குறித்து வேலை தொடங்கியும் அதை திரு. ரெட்டியார் அவர்கள் அங்கு கூட வொட்டாமல் செய்தவர். முயற்சி செய்தவர்களையும், பொறுப்பற்றவர்கள் என்று சொன்னவர். பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு விரோதமான திரு.சூணாம்பேட்டை கோஷ்டியார்களுக்கும் சுயமரியாதை கொள்கைக்கு துவேஷமான திரு.முத்துரங்க கூட்டத்தாருக்கும் ஆப்த நண்பராகவும் இருந்தவர். மந்திரி கட்சியாருக்கும் வேண்டியவர். ஜஸ்டிஸ் கட்சி தலைவருக்கு வலக் கையாய் இருந்தவர். ஜில்லா கலெக்டர் ஒரு பார்ப்பனர். அவரையும் சுவாதீனப் படுத்திக் கொண்டவர். ஐயோ பாவம். இவ்வளவும் இருந்தும் கோழிக்குஞ்சை ராசாளி தூக்கிக் கொண்டு போவது போல் கண்மூடி கண் திறப்பதற்குள்ளாக திரு.ரெட்டியாரின் நம்பிக்கை பறந்தோடிவிட்டது. ‘தூங்கையிலே வாங்குகின்ற மூச்சு, அது சுழி மாறிப் போனாலும் போச்சு’ என்கின்ற பெரியார் வாக்கியப்படி திடீரென்று சுழிமாறிப் போய் தனக்கு 11 ஓட்டுகளும் தன் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தவர்களுக்கு 23 ஓட்டுகளும் கிடைத்து, நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறிவிட்டது. ஆனாலும் ஒன்றும் முழுகிப் போகவில்லை, குறைந்த பட்சம் திரு.ரெட்டியார் உலகம் என்பது என்ன என்பதை கற்றுக் கொள்ளவாவது இந்த முடிவை ஒரு தக்க சந்தர்ப்பமாக கொண்டாரானால் அவசியம் அவருக்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானமே அனுகூலமான பயனை கொடுத்தாலும் கொடுக்கலாம். மேலும் திரு.சீதாராம ரெட்டியார் போன்ற மற்றும் சில ஸ்தல ஸ்தாபன தலைவர்களுக்கும் இது ஒரு படிப்பினையாகவும் ஆகலாம்.

**குடி அரசு - கட்டுரை - 17.03.1929**



RangaRakes tamilnavarasam.com

# "ஆஸ்திக சங்கம்"

## சுயமரியாதைக்கு எதிர்பிரசாரம்

சமீப காலத்தில் சென்னையில் ஆஸ்திக சங்கம் என்பதாக ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாய் பத்திரிகைகளில் வெளியாகி இருக்கின்றது. இதன் தத்துவம் சுயமரியாதை இயக்கத்திற்கு எதிர்பிரசாரம் செய்வது என்பதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இச்சங்கத் தலைவர்களும் சூத்திரதாரர்களும் யார் என்று பார்ப்போமானால் பார்ப்பனர்களின் ஆதிக்கத்திற்கு உபயோகப் படுத்தப்பட்டு வரும் காங்கிரசின் பேரால் வயறு வளர்த்து வந்த நபர்களே யாவார்கள்.

எனவே பிழைப்புக்கு ஆபத்து வந்த ஒரு கூட்டம் தானாகவே ஒன்று சேர நேர்ந்தது ஒரு அதிசயமல்ல, ஆனாலும் அப்படிச் சேர்ந்தவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு அனுகூலமாக புத்திசாலித்தனமாய் ஒருவழி கண்டுபிடிக்காமல் கொள்ளிக் கட்டையை எடுத்து தலையைச் சொரிந்து கொள்வது போல சுயமரியாதை இயக்கத்திற்கு எதிர்பிரசாரம் செய்ய ஒரு சங்கம் ஏற்படுத்து வதாகவும் அதற்கு 'ஆஸ்திக சங்கம்' என்று பெயர் வைத்துக் கொண் டதாகவும் வெளிப்படுத்திக் கொண்டது ஒன்றே போதுமானது இவர்களது முட்டாள்தனத்தை விளக்குவதற்கு. சுயமரியாதை சங்கத்தில் எந்த பாகத்தை அல்லது எந்த கொள்கையை இவர்கள் எதிர்க்கப் போகின்றார்கள் என்று கேட்கின்றோம்.

இவர்கள் காங்கிரசின் புரட்டு வெளிபட்டுவிட்டதால் வேறு வழி கண்டுபிடிக்க வேண்டிய நிமித்தம் சுயமரியாதை இயக்கத்தை "நாஸ்திகம்" என்று சொல்லிக் கொண்டு தாங்கள் அதற்கு எதிர்பிரசாரம் செய்யப் போவ தாக சொல்லிக் கொண்டு தேர்தல் பிரசாரம் செய்யப்புறப்பட்டு விட்டார்கள். இவர்களின் யோக்கியதையைப் பற்றி மற்றொரு சமயம் யோசிப்போம்.

பொதுவாக, தங்கள் கடவுளைப் பற்றி சுயமரியாதை இயக்கம் என்ன சொல்லுகின்றது என்று பார்த்தால், கடவுளை வணங்க தரகன் வேண்டாம், வணக்கத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டாம் என்று தான் இப்போது சொல்லுகிறது; முதலாவது இதை எதிர்க்க மகமதிய ஷாபி சாயபுக்கும் கிருஸ்தவக் குழந்தைகளுக்கும் அங்கு வேலையே கிடையாது. அவர் களுக்கு தரகர்களும் இல்லை. பூசாரியும் இல்லை. அன்றியும் உருவக்



கடவுளே இல்லை. மற்றபடி ஜெயவேலு என்பவரோ தீண்டாதவர் என்று ஒதுக்கித் தள்ளப்பட்டவர். அவருக்கு கோவிலுக்குள் இடமே இல்லை என்று தள்ளிவிட்டார்கள். எனவே, அவருக்கு பூசைக்கு சிலவைப்பற்றியும் பூசாரியைப் பற்றியும் கவலையே இல்லை. திரு.கல்யாணசுந்தர முதலியாரோ கோவிலில் சாமி கிடையாது என்பவர். அது மாத்திரம் அல்ல. தான் கோவிலுக்குப் போகும் வழக்கமே இல்லை என்று சொல்லுபவர். அவருக்கும் செலவும் தரகனும் தேவையில்லை.

ஒரு சமயம் சுயமரியாதை இயக்கம் சாமியே இல்லை என்று சொல்லுகின்றது என்று யாராவது சொல்ல வருவார்களானால் எங்கு எப்போது யாரால் சொல்லப்பட்டிருக்கின்றது என்று யாராவது சொல்லக் கூடுமா? அந்த விசாரணையே அறிவுக்கு பொருத்தமற்றது என்றும். அதைப்பற்றி கவலைக்கொள்ள வேண்டாம் என்றும் ஒருவன் தன் சொந்த அறிவைக் கொண்டு ஒழுக்கமாக நடந்து கொள்ள முடியாமல் போகுமானால் அவனை பயப்படுத்தி ஒழுக்கத்தில் திருப்புவதற்கு சாமியோ, பூதமோ, எதை வேண்டுமானாலும் கற்பித்துக் கொள்ளுவதில் கவலையில்லை யென்றும், ஆனால் அதுவும் அப்படிக் கற்பித்துக் கொண்ட பிறகும் மனிதன் ஒழுக்க மாக நடக்க முடியவில்லையானால் அதற்கு மேல் என்ன சமாதானம் சொல்லு கின்றீர்கள் என்றுதான் கேட்கின்றதே ஒழிய வேறு என்ன கேட்கின்றது?

மேலும் கடவுளைப் பற்றி வீண் கவலைப் படாதீர்கள் என்றுதான் சுயமரியாதை இயக்கம் சொல்லுகின்றது. ஏனென்றால், அது வெகு காலமாகவே முடிவடைய முடியாத விவகாரத்திற்கு இடமான விஷயம். அநேகர் அநேகவிதமாய் சொல்லி இருக்கின்றார்கள், எழுதி இருக்கின்றார் கள், சொல்லியும், எழுதியும் வருகின்றார்கள். உதாரணமாக ஒருவர் கடவுள் என்பதாக வேறு ஒன்று இல்லை, தானே தான் கடவுள் என்று சொல்லி இருக்கின்றார். ஒருவர் அது ஒரு ஜோதி என்றார். மற்றும் ஒருவர் அது ஒரு சக்தி என்றார். மற்றும் ஒருவர் அது ஒரு தத்துவம் என்றார். மற்றும் ஒருவர் அது இயற்கைத் தோற்றம் என்றார். ஒருவர் கண்ணுக்கும் மனதிற்கும் எட்டாதது என்றார். ஒருவர் வேதங்களும் அறியப்படாதது என்றார். ஒருவர் அது ஒரு மயக்கம் என்றார். ஒருவர் அது ஒரு உணர்ச்சி என்றார். ஒருவர் அது நம்பிக்கை என்றார். ஒருவர் ஒரே கடவுள் என்றார். ஒருவர் பல கடவுள் என்றார். ஒருவர் மனித உருக்கொண்டவர் என்றார். ஒருவர் உருவமே இல்லாதவர் என்றார். ஒருவர் சிவனே கடவுள் என்றார். ஒருவர் விஷ்ணுவே கடவுள் என்றார். ஒருவர் அதை அறிந்தவர்கள் யாரப்பா என்றார். ஒருவர் நம்பினால் தான் உண்டு நம்பாவிட்டால் இல்லை என்றார். ஒருவர் சூனியத்தில் முடிந்தது என்றார். ஒருவர் அன்பு என்றார். ஒருவர் அறிவு என்றார். இப்படி பலவாறாக சொன்ன இவர்கள் எல்லோரும் பெரியோர்கள் தானே தவிர வேறு சாதாரணமான ஆஸ்திக பிரசாரகர்களின் யோக்கியதை மாத்திரம் உடையவர்களல்ல என்று மதிக்கப்படுகின்றார்கள். ஆதலாலேயே



RangaRakes tamilnavarasam.com

நாம் அதைப்பற்றிய கவலை எடுத்துக் கொள்ளவில்லையே ஒழிய வேறில்லை.

மற்றபடி சுயமரியாதை இயக்கம் சமயத்தை குறை கூறி இருக்கின்றது என்று சொல்வதாயிருந்தால் எந்தச் சமயத்தை என்று கேட்கின்றோம்.

இந்து சமயத்தை என்றால் ஆம் கண்டிப்பாக ஆம் என்றே சொல்லுவோம். ஏன் என்றால் அப்படி ஒரு சமயமே இல்லை. அந்த வார்த்தையே பொருளற்றது. அதற்கு ஏதாவது கொள்கைகள் இருக்குமானால் அது பார்ப்பன ஆதிக்கத்திற்காக கற்பிக்கப்பட்டது. அதை நாம் கண்டிப்பாய் ஒப்புக் கொள்ள முடியவே முடியாது. இந்து சமயம் என்பதை ஒழித்தால் ஒழிய மக்கள் சுயமரியாதையுடன் வாழ முடியாது.

ஏனெனில் இந்து மதத்திற்கு வேதம் ஆதாரமாம். அதை எல்லோரும் கேட்கவோ, படிக்கவோ, பார்க்கவோ கூடாதாம். ஆனால் அந்தப் படிக்கவோ, பார்க்கவோ, கேட்கவோ கூடாத ஒன்றை நம்புகின்றவனும் ஒப்புக் கொள்ளு கின்றவனுந்தான் இந்துவாம். முதலாவது இந்தக் கொள்கையை ஒப்புக் கொண்டு எவர்கள் தன்னை இந்து சமயக்காரனென்றும் இந்து சமயத்தைக் காக்க ஆஸ்திகப்பிரசாரம் செய்பவனென்றும் சொல்லிக் கொள்ளு கின்றார்களே அவர்கள் எல்லோரையும் ஒன்றா முட்டாள்கள் என்றோ, அயோக்கியர்களென்றோ தான் நாம் சொல்லித் தீர வேண்டியவர்களா யிருப்பதற்கு வருந்துகின்றோம்.

தவிர, இந்து சமயக்காரர்கள் என்பவர்களுக்கு தர்ம சாஸ்திரங்களாயும் வேதங்களின் சாரமாயும் (கொள்கைகளாய்) விளங்குவது மனுதர்ம சாஸ்திரமும், பராசர ஸ்மிருதியும் புராணங்களுமேயாகும். உலகத்தில் கடு களவு சுயமரியாதை உணர்ச்சியும் பார்ப்பனக் கலப்பற்ற சுத்த ரத்தமும் ஓடுகின்ற மனிதன் இவற்றை ஒப்புக் கொள்ளக்கூடும் என்று எதிர்பார்ப்பது மடமையேயாகும்.

அப்படி வேறு யார் ஒப்புக் கொள்ளுவதானாலும் நாம் கண்டிப்பாய் அவ்வுணர்ச்சிகளை ஒழிக்கவே உயிர்விட நிச்சயத்திருக்கின்றோம். இதில் சிறிதளவாவது ராஜியோ ரகசியமோ ஒன்றும் கிடையாது என்றே சொல்லு வோம்.

மற்றபடி சைவ சமயத்தையோ, வைணவ சமயத்தையோ நாம் தாக்குவதாக சொல்வதானால், வேதத்தையும் சாஸ்திரத்தையும், புராணங் களையும் தள்ளிவிட்டால் சைவத்திற்கும் வைணவத்திற்கும் இடம் எங்கே என்று கேட்கின்றோம். முதலாவது இந்து மதத்தைச் சேர்ந்த அறிவாளிகள் கற்றவர்கள் என்னும் பெரியோர்களாலேயே இழித்துக் கூறப்பட்ட புராணங் களை மாத்திரம் தள்ளிவிட்டாலே சைவனுக்கும், வைணவனுக்கும் இடம் எங்கே? அவர்களுக்கு தெய்வங்கள் எங்கே? வைணவத்திலும், சைவத்திலும் உள்ள சமயாச்சாரிகள் எல்லோரும் பாடி இருக்கின்ற பாட்டுகள் பெரிதும்



புராணங்களை திருப்பியும் விளக்கியும் சொன்னதோடு கடவுள் கண்ணையும், மூக்கையும், குறிகளையும் வர்ணித்து சொன்னதல்லாமல் வேறு என்ன அதிசயத்தை அற்புதத்தை சொல்லிப் பயன் உண்டாக்கினார்கள் என்று கேட்கின்றோம். ஒரு சமயம் சமயாச்சாரிகளை வைகின்றார்கள் என்று சொல்வதானால் சுயமரியாதை இயக்கத்தார் எந்த சமயாச்சாரியை வைகின்றார்கள். முதலாவது அனேக சமயாச்சாரிகளைப் பற்றி அவரவர்கள் கதைப்படி அவரவர்கள் இருந்திருக்க முடியாதென்றே சுயமரியாதை இயக்கத்தார் கருதுகின்றார்கள். 3 வயதில் ஒருவருக்கு கடவுள், கிண்ணியில் பால் கொண்டுவந்து ஊட்டியதையும், அதைக்குடித்த குழந்தை பாடினதையும் போன்ற கதைகளை ஒருக்காலமும் சுயமரியாதை இயக்கத்தார் ஒப்புக் கொள்ள முடியாது. முடிந்தாலும் அந்தக் கதை இப்போது எந்தக் காரியத் திற்கும் மக்களுக்குத் தேவையில்லை. அன்றியும் அதை நம்புவதால் எவ்வித பலனும் உண்டாகப் போவதில்லை என்று சொல்லுகின்றார்கள். அன்றியும் அப்படிப்பட்ட சமயாச்சாரிகள் மீது சுயமரியாதைக்காரருக்கு யாதொரு குரோதமும் இல்லை. ஆனால் அவர் செய்ததாகவும், சொன்னதாகவும் சொல்லும் அநேக விஷயங்கள் ஒழுக்கம் என்று சொல்லப்படுவதற்கு விரோதமாகவும், நீதிக்கு விரோதமாகவும் ஒரு சமூக மக்கள் சுயமரியாதைக்கு ஈனமாகவும் இருப்பதை வெளிப்படுத்தாமல் இருக்கவே மாட்டார்கள். அன்றியும் அதற்கு சுயமரியாதை இயக்கத்தார் காரணஸ்தர்கள் அல்ல. அவர்களைக் கற்பித்து அவர்கள் மீது இம்மாதிரி ஆபாசங்களை ஏற்றின சமயவெறியர்களே பொறுப்பாளிகளாவார்கள்.

மற்றும் ஒரு சமயம் சுயமரியாதை இயக்கத்தார் கலைகளை அழிக்கப் பார்க்கின்றார்கள் என்று சொல்ல வருவார்களானால் எந்தக் கலைகளை அழிக்கின்றார்கள் என்று கேட்கின்றோம்.

உதாரணமாக திரு.கல்யாணசுந்தர முதலியாரைப் பற்றியே கேவல மான முறையில். அவரது ஒழுக்கத்தையும், நாணயத்தையும் கண்டித்து இழித்துக் கூறி "கம்பரைவிட" மேலான கற்பனைகளை அமைத்து இலக்கிய, இலக்கணங்களுக்கு ஆதாரமாகவும், மேற்கோளாகவும் கருதும் படியாக அவ்வளவு அற்புதமாய் ஒரு வித்துவான் பாடியிருப்பார்களானால் கலையில் கவலையுள்ள திரு. முதலியார் அதனை பிரசங்கம் செய்வாரா அல்லது அச்சுப் போட்டு விற்பாரா அல்லது குறைந்தபக்ஷம் அக்கலையைப் பற்றினவையாலும் சங்கடப்படாமல் அதை இருக்க வேண்டுமென்று சொல்லுவாரா என்று கேட்கின்றோம்.

அதுபோலவே ஒரு நல்ல ஓவியக்காரன் திரு. முதலியார் மனம் புண்படத்தக்க முறையில் திரு.முதலியாரைப் பற்றியே ஒரு அருமையான ஓவியம் எழுதிக் கொண்டு வந்தால் அந்த ஓவியத்தைக் காப்பாற்ற திரு.முதலியார் ஆசைப்படுவாரா என்று கேட்கின்றோம்.

தவிரவும் அந்தக் கலையும், ஓவியமும் படிக்கும் பார்க்கும் மக்கள்



RangaRakes tamilnavarasam.com

100-க்கு 99 பேருக்குமேலாக கலை அறிவும் ஓவிய அறிவும் சிறிதும் இல்லாமல் படித்தபடியும் பார்த்தபடியும் அப்படியே நம்பி நடவடிக்கையில் கொண்டுவருவதாயிருந்தால் அவர்களிடம் கூட அக்கதையின் யோக்கிய தையை எடுத்துச் சொல்ல வேண்டாமா என்று கேட்கின்றோம். உதாரணமாக திரு.முதலியார் ராமாயணக் கதையைப் படிக்கின்றார், பிரசங்கம் செய்கின்றார், ராமாயணத்தில் வரும் கதாநாயகர்களைப் பற்றி அதில் கற்பிக்கப்பட்டி ருக்கிறபடியே கருதி விருப்பும் வெறுப்பும் கொள்கிறார். இதைப்பற்றி திரு.முதலியாரை ஒரு அறிவாளி கேள்வி கேட்கும்போது, அது நடந்த சங்கதி யல்ல; அது ஒரு கலை என்று சொல்லி மழுப்புகிறார்.

ஆனால், பாமர மக்களிடம் நின்று கொண்டு பேசும் போது, "என் ஆண்டவன் ராமன்" "என் தெய்வம் சீதை" "அயோக்கிய ராக்கதன் ராவணன்" என்று கண்ணில் தாரை தாரையாய் நீர் வடிக்கிறார். எனவே, திரு. முதலியார் ராமாயணத்தைக் கலையாகக் கண்டாரா கற்பனை கதையாகக் கண்டாரா கடவுள் நெறியாகக் கண்டாரா என்று கேட்கின்றோம். அது போலவே பெரிய புராணத்தைப் பற்றிப் பேசும்போது அறிஞர்களிடத்தில் அது ஒரு சையன்ஸ் என்பதும், அது ஒரு சீர்திருத்தக் கொள்கை என்பதும், அது ஒரு கலை என்பதும், இடைச் செருகு என்பதும், அகச்சான்று புறச்சான்று இல்லை என்பதும், பாமர மக்களிடம் புராணப் பிரசங்கம் செய்யும்போது "என் அப்பன்," "எனது குருநாதன்" உடனே அங்கு சிவபெருமான் ரிஷபாரூடராய் வந்து காக்ஷியளித்தார் என்பதும், தவடை தவடையாய்ப் போட்டுக் கொண்டு கண்ணீர் வடிப்பதும், இரு கையையும் கூப்பிக் கண்களை மூடிக்கொண்டு வாயில் முணுமுணுப்பதும் பார்க்கின்றோம். எனவே இங்கு திரு.முதலியார் பெரிய புராணத்தை கலையாகக் கண்டாரா? கற்பனைக் கதையாகக் கண்டாரா? கடவுள் நெறி உணர்த்த வந்த பெரியார் வாக்காக கண் டாரா அல்லது வயிற்றுப் பிழைப்பிற்கு இதை ஒரு ஆஸ்பதமாகக் கண்டாரா என்று கேட்கின்றோம்.

கடைசியாக, திரு. முதலியாருக்கோ அல்லது அவரது ஆஸ்திக குழாங்களுக்கோ உண்மையில் கடவுளிடத்திலாவது, கடவுள் நெறியிடத்தி லாவது, கடவுள் ஒழுக்கத்திலாவது, கடுகளவு நம்பிக்கையோ பக்தியோ இருக்கின்றதா என்றும், தங்கள் தங்கள் சொந்தத்திலாவது குறைந்த அளவு நாணயமோ, ஒழுக்கமோ இருக்கின்றதா என்றும், அவ்வாஸ்திகக் குழாங்க ளைக் கேட்பதற்கு முன்னால் அவ்வாஸ்திகக் குழாம் யாரை ஏய்க்க இவ் வேடம் பூண்டார்களோ அவர்களைக் கேட்கின்றோம்.

இவ்வாஸ்திகப் பிரசாரம் தவிர இச்சூழ்ச்சியும் சுயமரியாதை இயக் கத்தை அழிக்கவேண்டும் என்கின்ற சூழ்ச்சியும் இவர்களுக்கு உண்மை யிலேயே ஆஸ்திகத்தில் அன்பு கொண்டு செய்ய வேண்டியதாயிற்றா அல்லது அக்குழாத்தின் வயிற்றுப் பிழைப்பில் சுயமரியாதை இயக்கம் மண்போட்டு விட்ட வயிற்றெரிச்சலாலும், பார்ப்பனர்கள் அந்தத் தேர்தலுக்கு



RangaRakes

இதை ஒரு ஆயுதமாக உபயோகித்துக் கொள்ளலாம் எனக்கருதி, கூலி கொடுத்து இக்குழாங்களை உசுப்படுத்திவிட்டதினாலும் செய்ய வேண்டியதாயிற்றா என்று பொது ஜனங்களைக் கேட்கின்றோம்.

தவிர, இக்கூட்டத்தினர்களின் கூச்சலைக் கண்டு ஜஸ்டிஸ் கட்சி யாரிலும் சிலருக்குத் தங்களுக்கு அடுத்த தேர்தலில் ஓட்டுக் கிடைக்காமல் போகுமோ என்கின்ற பயம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது. அதைப்பற்றி நமக்குச் சிறிதும் கவலையில்லை. நமது இயக்கம் யாருக்கும் ஓட்டு வாங்கிக் கொடுப்பதற்கு அல்ல, எல்லோருக்கும் மானமும் அறிவும் உண்டாக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீதில் ஆரம்பிக்கப்பட்டது. சென்ற தேர்தல் தோல்விபோல் இன்னம் 2, 3 தோல்வி கிடைத்தால் கட்டாயம் மானமும் அறிவும் வந்துவிடும் என்றே நினைக்கின்றோம். ஆதலால், நாம் தோல்வியையே வரவேற்கின்றோம். எங்கு வெற்றி தோல்வி ஏற்பட்டாலும் ஜஸ்டிஸ் கட்சிக்கு சிறப்பாக சென்னையில் நல்ல கண்ணியமான தோல்வி ஏற்படுமானால் அது சுயமரியாதை இயக்கத்திற்கு மாத்திரமல்ல, ஜஸ்டிஸ் கட்சிக்கு கூட நன்மையைப் பயப்பதாகும். வெளியிடங்களிலும் இரண்டொரு இடங்களில் தோல்வியே விரும்புகின்றோம். ஏனெனில் தோல்விதான் புத்தி கற்பிக்கிறது, வெற்றி ஆணவத்தையும் மயக்கத்தையுமே கற்பிக்கின்றது. ஜஸ்டிஸ் கட்சியின் வெற்றி தோல்விக்கும் சுயமரியாதை இயக்கத்திற்கு எவ்வித சம்பந்தமும் இல்லை. உதாரணமாக இன்றைய நிலையில் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த அக்கட்சியின் மூளை என்னும் திருவாளர் ஏ.ராமசாமி முதலியாரும் சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த திரு. ஆர்.கே. ஷண்முகமும் ஒரு பகுதிக்கு நிற்பார்களானால் திரு.ஷண்முகம் செட்டியாருக்குத்தான் நமக்கு ஓட்டு இருந்தால் கொடுப்போம். அதுபோலவே ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த அதன் காரியதரிசியும் அக்கட்சிக்காக தள்ளாத வயதில் யாதொரு பிரதிபலனும் கோராமல் உழைக்கும் திவான்பகதூர் டி.வரதராஜுலு நாயுடு அவர்களும், சுயராஜ்யக் கட்சியைச்சேர்ந்த திரு.திருகூட சுந்தரமும் ஒரு தொகுதிக்கு நிற்பார்களானால் நமக்கு ஓட்டு இருந்தால் திருகூட சுந்தரத் திற்குத் தான் கொடுப்போம்.

அரசியல் அபிப்பிராயமே நமது இயக்கத்திற்கு முக்கியமானதல்ல என்பதை பொது ஜனங்கள் நன்றாய் உணர வேண்டும். அவர்கள் யாராயிருந்தாலும் சரி- குணங்குடி கொண்டால் உயிர்க்குயிர்தான் - என்ன குணம் சுயமரியாதை உணர்ச்சிக்குணம். ஆகையால் ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டு இல்லாமல் போகும் என்கின்ற காரணத்திற்காக சுயமரியாதை இயக்கம் ஒரு மயிர்க்கால் அளவுகூட தனது உறுதியை மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்பதை ஆஸ்திகப் பூச்சாண்டிகளும் அவர்களுக்குப் பணம் கொடுத்து வேலை செய்பவர்களும் அவர்களைக் கண்டு நடுங்குபவர்களும் கண்டிப்பாய் உணர வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 17.03.1929**



tamilnavarasam.com

## காங்கிரசும் மதுவிலக்கு பிரசாரமும்

நமது இலாக்கா மந்திரி கனம் முத்தையா அவர்கள் மதுவிலக்குப் பிரசாரம் செய்ய சிறிது பணம் ஒதுக்கி வைக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தபோது காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியின் உபதலைவரும் கோவை ஜில்லா பிரதிநிதியும் கள்ளு உற்பத்தி செய்யக் கூடிய சுமார் ஆயிரம் தென்னை மரங்களை உடையவரும் வருஷம் கள்ளில் 5000, 10000 சம்பாதிப்பவரும் அய்யங்கார் பார்ப்பனருமான திரு.சி.வி.வெங்கட்டரமண அய்யங்கார் அவர்கள் எழுந்து சர்க்கார் மது விலக்குப் பிரசாரம் செய்யக் கூடாது என்றும், மதுவிலக்குப் பிரசாரம் செய்தால் குடிக்காத மனிதனுக்குக் கூட இவர்கள் ஏன் குடிக்க வேண்டாம் என்று சொல்லுகின்றார்கள் என்று பரீட்சை செய்து பார்ப்பதற்காக குடித்துப் பார்க்க வேண்டுமென்று ஆசை உண்டாக்கிவிடும் என்றும் சொல்லி அதை ஆட்சேபித்தார். (இவர்தான் சென்ற தேர்தலில் திரு.C. ராஜகோபாலாச்சாரியாரால் மதுவிலக்குப் பிரசாரத் தின் பேரால் ஓட்டுவாங்கிக் கொடுக்கப்பட்டு சட்டசபை மெம்பர் ஆவார்.) உடனே கோவை திரு.சி.எஸ்.இரத்தினசபாபதியார் எழுந்து திரு. அய்யங்கார் அவர்கள் சொல்லுகின்ற கொள்கைப்படி பார்த்தால் ஒத்துழையாமை காங்கிரசின் போது பத்துலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து மது விலக்குப் பிரசாரம் செய்ததால் தான் நாட்டில் குடி அதிகரித்து விட்டது என்பதாக அர்த்தமாகின்றது. இதைத் திரு.அய்யங்கார் ஆம் என்று ஒப்புக் கொள்வாரானால் அய்யங்காருடன் சேர்ந்து ஓட்டுக் கொடுக்கின்றேன் என்று சொன்னாராம். உடனே சபையிலுள்ளவர்கள் “அய்யங்காருக்கு, வெட்கம், வெட்கம்” என்று கைதட்டிச் சிரித்தார்களாம். அய்யங்கார் திருடனைத் தேள் கொட்டியது போல் விழித்தாராம். நிற்க, மது விஷயத்தில் தென்னை மரத்தினால் வருஷம் 10000, 5000ம் சம்பாதிக்கும் நபர். அதிலும் பார்ப்பனக் கனவானிடமிருந்து நாம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும். இது கோவை ஜில்லா ஓட்டர்கள் இவரைத் தெரிந்தெடுத்ததின் மூலம் செய்த பெரிய தவறு என்று உணர்வதற்கு வேறு என்ன உதாரணம் தேடுவார்களோ தெரிய வில்லை.

தவிர, முன்னுள்ள மது மந்திரி, அம்மை குத்தும் இலாகா அதிகாரிகள் கிராமங்களில் மதுவிலக்கு பிரசாரம் செய்யும் வேலையில் தங்கள் நேரத்தைச் செலவிடக் கூடாது என்று சுற்று உத்திரவு போட்ட காலத்தில் இந்தப் பார்ப்பனர்கள் தான் சர்க்கார் அதிகாரிகள் மதுவிலக்குப் பிரசாரம் செய்யக் கூடாது என்று உத்திரவு போடலாமா என்று நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முயற்சித்தவர்கள். இப்போது இதே பார்ப்பனர்கள் சர்க்கார் மதுவிலக்குப் பிரசாரம் செய்வதை எதிர்த்துச் சண்டைபோடுகின்றவர்கள். எனவே இதிலிருந்து காங்கிரசினுடையவும் பார்ப்பனர்களின் மதுவிலக்குப் பிரசாரத்தன்மையினுடையவும் யோக்கியதையை பொது ஜனங்கள் உணர்ந்து கொள்வார்களாக.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 17.03.1929**





RangaRakes tamilnavarasam.com

# சீர்காழியில் சுயமரியாதை முழக்கம்

சகோதரர்களே! பெரியோர்களே!

சில வருஷங்களுக்கு முன் ஒத்துழையாமைக் காங்கிரஸ் பிரசாரத்தின் போது இவ்வூருக்கு வந்திருக்கிறேன். ஆனால், இன்றோ சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி உங்களுக்கு எடுத்துக்கூற வந்திருக்கிறேன். சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி அதன் எதிரிகளும் அவர்களது ஆள்களும், தப்பும் தவறுமாகத் திரித்துக் கூறி வருகின்றார்கள். உங்கள் ஊரிலும் அதே காரியம் சற்று அளவுக்கு மீறிச் செய்து விட்டதால் வெகுபேர் ஆச்சரியப்பட்டு பார்க்கலாம் என்றே நான் எதிர்பார்த்ததற்கு மேலாகவே இங்கு கூடியிருக் கின்றீர்கள். இது நமது இயக்க எதிரிகள் தங்களுக்குத் தெரியாமலே நமக்குச் செய்த உதவியாகும். மற்றும் என்றுமே இப்படிப்பட்ட பொதுக் கூட்டங் களுக்கு வராத அரும்பெரும் கனவான்களும் விஜயம் செய்திருப்பதும் எனக்கு அதிக மகிழ்ச்சியைத் தருகின்றது. என்னை அன்னிய மதப் பிரசாரகன் என்றும், சர்க்கார் பிரசாரகன் என்றும் எழுதப் பட்டிருந்த ஒரு விளம்பரத்தைப் பார்த்தேன். நான் இந்து மதம் என்று சொல்லப்படும் மதத்தைத் துவேஷம் செய்து, அன்னிய மதங்கள் என்று அழைக்கப்படும் மதங்களை ஆதரிப்பதாகவும் அவர்களிடம் பிரதிபலன் பெறுவதாகவும் உங்கள் ஊரில் சிலர் கட்டுகட்டி விட்டிருக்கின்றதாக கேள்விப்பட்டேன். எங்கள் ஜில்லாவிலும் ஆலயங்களும் தேவஸ்தான போர்டும் உண்டு. அதில் காரியதரிசியாகவும், பிரசிடெண்டாகவும், வைஸ்பிரசிடெண்டாகவும் 20, 30 - வருஷகாலமாய் இருந்து வருகின்றேன். எங்கள் குடும்பத்தாரிலும் பல கோவில்கள் கட்டப்பட்டும், உற்சவங்கள் செய்யப்பட்டும் வருகின்றன.

எனவே, என்னுடைய இந்தச் சுமார் 25 வருஷ நிர்வாகத்திற்குள்ளாக லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து பல கோவில்கள் ரிப்பேர் செய்தும், நிர்வகித்தும் வந்ததின் பயனாக அவற்றின் பயனின்மையையும் அவற்றால் ஏற்படும் தீமைகளையும் நான் நன்றாய் அறிந்திருக்கின்றேன்.

இந்து மதத்தை எப்படிக் கண்டிக்கின்றேனோ அதே கண்ணுடனேயே தான் மற்ற சமயங்களையும் பார்த்துக் கண்டித்து வருகின்றேன். மற்ற சமயக்காரர்களுக்கும் என்மீது சிறிது அபிப்பிராய பேதம் இருக்கலாம்.



பிறவியில் உயர்வு தாழ்வு ஏமாற்றம் ஆகியவைகளுக்கு மதத்தின் பேரால் இடம் கொடுக்க முடியாது. ஆதலால் இதுவரை ஏமாற்றி வந்தவர்களுக்கு நமது பிரசாரம் கஷ்டமாகத்தான் இருக்கும். அதற்காக அவர்கள் எதையும் சொல்லவும் துணிவார்கள். அதற்கு நாம் பயப்படக்கூடாது.

அதுபோலவே, நான் சர்க்காரை ஆதரிப்பதாகவும் கூறப்படுகிறது. எனக்கு எந்த சர்க்கார் தயவும் தேவையில்லை. எனது வாழ்க்கையில் ஸ்தல ஸ்தாபன சம்பந்தமாக என் சக்திக்கியன்றவரை எவ்வளவு உயர்ந்த பதவியி லிருந்து பார்க்க வேண்டுமோ அதெல்லாம் பார்த்தாகிவிட்டது. தாலூகா போர்டு, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, ஆனரரி மேஜிஸ்டிரேட்டு, ஆகிய வேலைகளில் இருந்து பார்த்தாய் விட்டது. முனிசிபல் சேர்மனாகவும் இருந் தாய்விட்டது. இவைகளையெல்லாம் நானே ஒரே நிமிஷத்தில் ஒன்றாய் ஒரே காகிதத்தில் ராஜிநாமாக் கொடுத்துவிட்டு வெளிவந்து விட்டேன். மற்றபடி சர்க்கார் உத்தியோகம் ஏதாவது எதிர்பார்க்கிறேன் என்பதற்கோ முதலில் எனக்கு ஆங்கிலம் தெரியாது, இவ்வளவு கிழ வயதான நான் இனி எந்த உத்தியோகத்திற்கு லாயக்காயிருக்க முடியும்.

அன்றியும், மூன்று நான்கு தடவை சிறைவாசம் தண்டனை அடைந்த வனுக்கு சர்க்காரில் உத்தியோகம் தான் கொடுப்பார்களா? என்னை சர்க்கார் தங்கள் அடிமையாக ஏற்றுக் கொள்ள நம்புவார்களா? இன்னமும் சி.ஐ.டி. போலீசார் என்கூடவே இருக்கிறார்கள். இதோ இந்தக் கூட்டத்திலும் சி.ஐ.டி. நான் பேசுவதை எழுதுகின்றார்கள், பாருங்கள்.

ஒரு சமயம் நான்தான் பலவிதத்தும் உத்தியோகத்திற்கு லாயக்கில்லை யானாலும் எனது பிள்ளை குட்டிகளுக்காவது உத்தியோகம் வாங்கிக் கொடுக்க, சர்க்காருடன் ஒத்துழைக்கக் கூடுமென்றாலோ, எனக்குப் பிள்ளை யும் இல்லை; குட்டியும் இல்லை; என் சகோதரருக்கு சென்ற வாரத்தில் தான் ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. சில வருடங்களுக்கு முன் எனது அண்ணன் குழந்தை ஒன்றைச் சீமைக்கு அனுப்பி அங்கு சில வருஷகாலம் படிக்க வைக்கப்பட்டான். மறுபடியும் அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருந்தேன். பாதி வழியில் 'இன்புளூயென்சா' ஜுரம் கண்டு இங்கு வந்து மதனபள்ளியில் இறந்துவிட்டான். என் பந்துக்களிலும் உத்தியோகத்திற்கு லாயக்கானவர்கள் எவரும் இல்லை. ஆகவே, எனக்கு எவ்விதத்திலும், சர்க்கார் கூட்டுறவோ, தயவோ வேண்டியதில்லை. எனக்கு ஜீவனத்திற்கும், என் தகப்பனார் சம்பாதித்து வைத்துவிட்டுப் போயிருக் கின்றார். அது எனக்குப் போதும், மற்றும் பலருக்கு உணவளிக்கவும் உதவும். ஆதலால் ஜீவனத்திற்கும் யாருடைய தயவும் தேவையில்லை, மற்றபடி காங்கிரசுக்கு நான் விரோதி என்றும் அதை நான் திட்டுகிறேன் என்றும் கூறப்படுகின்றது.

ஆம், இப்பொழுதும் அதையே கூறுகிறேன். காங்கிரஸ் என்ற சபை திரு.காந்தியின் தலைமையின் கீழ் இரண்டு மூன்று வருடம் தேசமக்களின்



RangaRakes tamilnavarasam.com

நன்மைக்குப் பாடுபட்ட காலத்தில் அதிலிருந்த தேசீய வீரர்களில் பெரும் பாலோர் இன்று அதில் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். அக்காலத்தில் நான் காங்கிரசிற்கு எவ்வளவு உழைத்தேன் என்பதும் உங்களுக்குத் தெரியாததல்ல. ஒத்துழையாத் திட்டத்தில் அதி தீவிரமாக நின்று உண்மையில் பாடுபட்ட ஒரு சிலரில் நானும் ஒருவன் என்பதுடன், நான் மாத்திரமல்லாமல் எனது குடும்பத்தாரும், அக்காலத்தில் திரு.காந்தியின் தலைமையில் காங்கிரசைப் போற்றி அத்திட்டம் வெற்றியுறப்பாடுபட்டோம். காங்கிரசானது, தியாகம், கஷ்டம், சிறை என்பவைகளுடன் பிணைக்கப் பட்டிருந்த போது, இந்நாட்டிலுள்ள எல்லா அரசியல் சங்கங்களும், சர்க்காரும் காங்கிரசை எதிர்த்த காலத்தில், அக்காங்கிரசின் இம்மாகாணக் கமிட்டியில் தலைவர், காரியதரிசி என்ற பதவிகளைப் பெற்று நான் ஊழியம் செய்ததுடன், என் குடும்பத்தாரும் அவ்விதமே வேலை செய்தார்கள் என்பதற்கும் ஒரு உதாரணம் கூறி அதை முடித்து விடுகிறேன்.

ஒத்துழையாமை மும்முரமாய் நடந்து நான் சிறையில் இருக்கும்போது சர்.சங்கரன் நாயர் தலைமையில் பம்பாயில் ரவுண்ட் டேபிள் கான்பரன்ஸ் ஒன்று நடந்தது. அதன் பிரதிநிதியாய் திரு.காந்தியும் போயிருந்தார். அப் பிரதிநிதி கூட்டத்தில் முக்கியஸ்தர்கள், திரு.காந்தியைப் பார்த்து, மற்ற சகாக்களான அங்கத்தினர்கள் சொல்லும் திட்டங்கள் இருக்கட்டும். தாங்கள் (திரு.காந்தியை) சமாதானத்திட்டங்களைப் பற்றிப் பேசுமுன் ஒத்துழையாமையைச் சற்று நிறுத்திவையுங்கள் என்று கேட்டார்கள். அதற்குத் திரு. காந்தி கூறிய பதில் என்ன? “அது முடியாத காரியம். ஏனென்றால் அது என் இஷ்டமல்ல, மற்ற காங்கிரஸ்காரர்களையும் குறிப்பாக, தமிழ் மாகாணத்தில் ஈரோடு என்ற நகரில் உள்ள இரு பெண்மணிகளையும் கேட்டுக் கொண்டு தான் ஒத்துழையா திட்டத்தைத் தள்ளிவைப்பதைப் பற்றி யோசிக்க முடியுமேயன்றி, நானாக எதுவும் சொல்லுவதற்கில்லை” என்று கூறினார். அவ்விரு பெண்களும் யார் தெரியுமா? எனது மனைவி ஒன்று; எனது தங்கை ஒன்று. ஆக இவ்விரு பெண்களேயாகும் (கரகோஷம்) இந்த விஷயம் 1922 –ல் ஜனவரி 19 முதல் 22 தேதிக்குள் ‘இந்து’ பத்திரிகையில் இருக்கின்றது. வேண்டுமானால் பார்த்துக் கொள்ளுங்கள். இதை ஒரு பெருமைக்காகச் சொல்ல வரவில்லை. மற்றெதற்காக என்றால், திரு.காந்தியும், காங்கிரசும் நாட்டிற்கு உண்மையில் பலனுடைய நல்லதிட்டத்தையும் கொள்கையையும் கொண்டிருந்த காலத்தில் நான் மாத்திரமல்லாமல், என் குடும்பமும் பெண்களும் கூடச் சற்றும் சலிப்பின்றி அதில் பாடுபட்டவர்களே யன்றி, இன்று என்னைக் குறைகூறும் நண்பர்களைப்போல் தியாகம் செய்ய வேண்டிய காலத்தில் ஓடி ஒளிந்தவன் நானல்ல என்பதற்காகவேயாகும். இதுவே என்னைப் பற்றி முதலில் உங்களுக்கு சொல்லிக் கொள்ள வேண்டிய வார்த்தை. இதில் தற்பெருமைக்காக ஏதாவது சொல்லப்பட்டதாகக் கருதாதீர்கள். உங்களுக்கு என்னைப் பற்றி பார்ப்பனர்களும் அவர்கள் கூலிகளும் செய்திருந்த விஷமப் பிரசாரத்தின் உண்மையை நீக்கவே இதைச் சொன்னேன்.



## அரசியல் புரட்டு

நிற்க. அரசியல் உலகில் இன்று விளம்பரப்பட்டிருப்பவர்கள் 1. காங்கிரஸ்காரர்கள், 2. பூரணசுயேச்சைக்காரர்கள். இவர்களின் யோக்கியதை யாது இவர்கள் அரசியல் என்பதின் பெயரால் செய்யும் – செய்து வரும் செய்கைகள், இவர்கள் முன்பின் செய்த தியாகங்கள் என்பவைகள் என்னவென்பதைச் சற்று ஞாபகப்படுத்திப்பாருங்கள். ஒரு காங்கிரஸ் தலைவர், மேடையில் பேசும்போது “ஆங்கில அரசாங்கம் மிகவும் மோசம், அதை அழித்துவிட்டுத்தான் மறுவேலை பார்க்க வேண்டும்.” என்று கூறுவார்; நீங்களும் கைதட்டுவீர்கள். அவர் மகனும், அண்ணனும், தம்பியும் சம்மந்தியும் சர்க்காரில் மாதம் ஒன்றுக்கு 500, 1000, 2000, 3000 ரூபாய் வாங்கும் படியான முன்சீபு, ஜட்ஜ், கலெக்டர் ஆகிய உத்தியோகத்திலிருப்பார்கள். இவர் பேசும் ‘வீரப்பேச்சு’ அவர் உறவினர்களின் உத்தியோகத்தை வலுப்படுத்தவும் உயர்த்தவும் தான் உதவுமே தவிர உங்களுக்கோ, நாட்டிற்கோ கடுகளவு நன்மையுண்டாவதற்கு அதில் ஒன்றுமே இருக்காது. மற்றொரு காங்கிரஸ் காரியதரிசி, ரெங்கசாமி அய்யங்கார், இங்கு பேசும் போது, “சர்க்காரை முட்டுக்கட்டை போட்டு திக்குமுக்கலாடச் செய்ய வேண்டும். சிங்கத்தின் குகைக்குள் புகுந்து அதன் தாடியைப் பிடித்து ஆட்ட வேண்டும்” என்று பேசுவார். அங்கு அவர் தம்பி சர்க்கார் என்கின்ற குகைக்குள் புகுந்து வெள்ளைக்காரர் என்கின்ற சிங்கத்தின் தயவுக்கு வாலைத் தூக்கிப்பிடித்துக் கொண்டிருப்பதற்கு அதிகார வர்க்கத்தின் காலடியில் கிடந்து சர்க்கார்வாதியாயிருப்பார். திரு.எஸ்.சீனிவாசய்யங்கார் வெள்ளைக்கார சம்பந்தமே கூடாது என்பார். ஆனால் காலையில் எழுந்ததும் வெள்ளைக்காரர்கள் கோர்ட்டுகளில் போய் அவர்கள் காலடியில் நின்று கொண்டு “அப்பா! அய்யா! பிரபுவே! துரையே! சாமியே! என்று கெஞ்சி, மாதம் 5000, 10000 சம்பாதித்துக் கொண்டிருப்பார். அவர் சம்மந்தி மாமன் மைத்துனன் எல்லோரும் சர்க்காரிடம் சம்பளம் வாங்கிப் பிழைக்கும் அடிமைகளாயிருப்பார்கள். அவர்கள் பிரமோஷனுக்கு இவர்கள் பூரண சுதந்திரம் உதவியாகவும் இருக்கும். மற்றும் மகாகனம் சீனிவாச சாஸ்திரி ஒரு பெரிய தேசியவாதி. அவர்கள் மகன் சர்க்காரில் மீ 1க்கு ஆயிரம் ரூபாய் சம்பளவாதி. திரு.ரங்காச்சாரி ஒரு பெரிய தேசியவாதி, அவர்கள் மக்கள் தற்குறிகள், எல்லாம் மீ 1க்கு 500, 1000 ரூபாய்கள் வாங்கும்படியான சர்க்கார் சம்பளவாதிகள், திரு.மணி அய்யர் பென்ஷன் பெற்றபின் ஒரு பெரிய தேசியவாதி. அவர்கள் மக்கள் ஷை சர்க்கார் சம்பளவாதி, திரு.கிருஷ்ணசாமி அய்யர் பெரிய தேசியவாதி, அவர் மக்கள் சகோதரர்கள் மீ 1000, 500 சம்பளவாதி, சர் சி.பி. ராமசாமி அய்யர் ஒரு பெரிய தேசியவாதி. காங்கிரஸ் காரியதரிசி, உத்தியோகக் காலத்தில் மீ 2000, 5000 சம்பளவாதி, உத்தியோகம் போய் விட்டால் மறுபடியும் தேசியவாதி, திரு.விஜயராகவாச்சாரியார் ஒரு பெரிய கிழ தேசியவாதி. அவர் சகோதரரும் மருமகனும் சர்க்கார் சம்பள வாதிகள். பார்ப்பனர்களில் உத்தியோகத்திற்கு லாயக்கில்லாதவர்களும் உத்தியோகம்



RangaRakes
tamilnavarasam.com

பார்த்து பென்ஷன் வாங்கினவர்களும் பெரிய தேசீயவாதிகள், அவர்கள் பிள்ளைகுட்டி பந்துக்களான மற்றவர்கள் சர்க்கார் சம்பளவாதிகள். இதை நீங்கள் யாராவது மறுக்க முடியுமா? காங்கிரஸ் ஏற்பட்ட பிறகு காங்கிரசின் பலனாக இந்த 30, 40 வருடங்களாக சமீபகாலம் வரை எல்லா ஸ்தல ஸ்தாபனங்களையும் சர்க்கார் உத்தியோகங்களையும் பார்ப்பனர்களே கைப்பற்றும் படியாகிவிட்டது. அதற்குமுன் எல்லா உத்தியோகங்களிலும் பார்ப்பனரல்லாதாரே இருந்தார்கள். ஆனால் "தேசீய ஸ்தாபனமாகிய" காங்கிரஸ் ஏற்பட்டபிறகு ஓட்டு ஜனத் தொகையில் நூற்றுக்கு மூன்று வீதமுள்ள பார்ப்பனர்களே நூற்றுக்கு தொண்ணூற்றேழு உத்தியோகங்களை கைப்பற்றி வாழ முடிந்தது என்றால் காங்கிரசின் தேசீயம் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் சம்பாதிக்கும் ஸ்தாபனம் என்பதற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்?

காங்கிரஸ் தீர்மானம் ஆக ஆக, பொறுப்பாட்சி கேட்கக், கேட்க, சீர்திருத்தம் வழங்க வழங்க உத்தியோகங்கள் அதிகமாயிற்றே அல்லாமல் கந்தாயம், வரிவட்டம் குறைந்தபாடில்லை. சர்க்காருக்கு படித்த கூட்டத்தின் தொந்திரவையடக்க எப்படியாவது உத்தியோகங்களை உற்பத்தி செய்து அவர்களுக்கு லஞ்சமாக அவற்றை கொடுத்துத் தீர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இதை சர்க்கார் செய்யாவிட்டாலோ, நாட்டில் பாமர மக்களின் பேரால் பார்ப்பனர்களின் கிளர்ச்சி அதிகமாகின்றது. இந்த மாதிரி காங்கிரசாலும் அதனால் உண்டாகும் உத்தியோகங்களாலும் அவற்றைப் பார்ப்பனர்களுக்கே கொடுப்பதினாலும் சர்க்காருக்கு நாளுக்கு நாள் அதிக சவுகரியம் ஏற்படுகிறது. அதனால் தான் காங்கிரசு என்றால் சர்க்காராரும் அதற்கு உதவி செய்து வந்தனர். வெள்ளைக்காரர்கள் சுகமும், சம்பாத்தியமும் பெறவே அவர்கள் இங்கு இருக்கிறார்கள். ஆங்கில சர்க்காருக்கும், அவர்களது கொள்ளைக்கும், ஏமாற்றத்துக்கும் உடனிருந்து ஏமாற்ற நம்மை காட்டிக் கொடுத்தும் உளவாளாக இருந்தவர்கள் இந்த காங்கிரஸ்காரர்களே யாகும். இந்த காங்கிரஸ்காரர் என்னும் படித்த கூட்டத்தார் நமது நாட்டில் பாமரர்களை சர்க்கார் கொடுமையிலிருந்து காப்பாற்றுவதாக மேடைகளில் பேசிவிட்டு நம்மை சர்க்காருக்கு காட்டிக் கொடுத்து அதிக அடிமைத் தனத்திற்கு ஆளாக்கியதோடு நமது தலை மீது சுமக்க முடியாத அதிக வரியை விதிக்கவும் யேதுவாயிருந்திருக்கிறார்கள். இன்னும் காங்கிரசால் சுயேச்சை, சுயராஜ்யம், விடுதலை, பூரண சுயராஜ்யம், ஹோம்ரூல் என்ற எண்ணற்ற அரசியல் கட்சிகள் நாட்டில் தோன்றின. இவைகள் ஒவ்வொன்றின் பேச்சும், பிரசாரமும், தீர்மானமும், கிளர்ச்சியும் ஆகிய எல்லாம் பாமர ஜன சமூகத்தை காப்பாற்ற வேண்டுமென்ற பல்லவியைப் பாடிக்கொண்டு புதிது புதிதான உத்தியோகங்களும், கமிட்டிகளும், அங்கத்தினர் பதவிகளும், தனித்தனி இலாக்காக்களும், வெளிநாட்டுக்குப் பிரதிநிதிகளாகச் செல்லும் பெருமைகளும் மற்றும் இத்தகைய புதுப்புது சனியன்கள் தோன்றி நன்மையும், நாட்டையும் கெடுத்து, அதிக பளுவான வரியை சுமத்தி ஜனசமூகத்தை



பாழ்படுத்தி வந்திருக்கின்றனவேயன்றி வேறு என்ன பலன் உண்டாயிற்று, உதாரணமாக காங்கிரசுக்கு முன் இருந்த தாசில்தார்கள், மாஜிஸ்ட்ரேட்டுகள், கோர்ட்டுகள், போலீஸ் ஸ்டேஷன்கள், ரெவின்யூ இலாகாவின் அளவுகள், ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகள், சர்க்கார் நிர்வாக உத்தியோகஸ்தர்கள், இவைகளின் எண்ணிக்கை என்ன? இன்றைய எண்ணிக்கை என்ன? மூன்று மடங்கு அதிகமாயிருக்கின்றதா? இல்லையா? இவ்விதம் அதிகமானதற்கு அன்று இருந்ததைவிட இன்று மூன்று மடங்கு ஜனங்கள் அதிகமாக அபிவிருத்தி யடைந்திருக்கின்றார்களா? இல்லை. முன் இருந்த ஜன சமூக யோக்கியப் பொறுப்பு, கண்ணியம் இவைகள் கூட ஆயிரம் மடங்கு குறைந்துவிட்டது என்பதைத் தவிர வேறு என்ன சமாதானம் சொல்லக் கூடும்? உங்களிடம் வந்து "ஆங்கில பாஷை", "அன்னிய பாஷை" "நீச பாஷை" அதைப் படிக்கக் கூடாது என்று சொல்லி விட்டு, உங்களை மோக்ஷத்திற்கு அனுப்ப வும் உங்கள் முன்னோர்களின் ஆன்மா சாந்தியடையும்படி செய்யவும் என்று சொல்லி உங்களிடமிருந்து பெற்ற பணத்தைக் கொண்டு தங்கள் பிள்ளை குட்டிகளை மட்டும் அவ்வாங்கில பாஷையைப் படிக்கச் செய்து உங்கள் நன்மைக்கென்று காங்கிரசின் மூலம் உத்தியோகங்கள் உண்டாக்கி அவை களை அவர்களே பெற்று வருகின்றார்கள். அதன் ரகசியம் என்ன என்பதை நீங்கள் சற்றாவது யோசித்துப் பார்த்தீர்களா? காங்கிரஸ் ஏற்பட்டதின் பலனாய் சத்திரத்தில் சாப்பிட்டு முனிசிபல் லாந்தர் வெளிச்சத்தில் படித்த பஞ்சாங்கப் பார்ப்பனர்கள், சாஸ்திரிகள் ஆகியவர்களின் வீட்டுப்பிள்ளைகள்தானே இன்று 'நீச்ச' அரசாங்கத்தில் - 'கொடுங்கோல் அரசாங்கத்தில்' - 'அன்னிய அரசாங்கத்தில்' உள்ள உயர்ந்த உத்தியோகம் முதல் தாழ்ந்த உத்தியோகம் வரையில் நிரம்பி யிருப்பதுடன், ஜாதி ஆணவமும் கொண்டு நமக்கு எவ்வளவு கொடுமையும், அவமானமும், இழிவும் உண்டாக்க முடியுமோ, அவ்வளவையும் சற்றும் ஈவும் இரக்கமன்னியில் செய்து வருகின்றார்களா இல்லையா என்பதை யோசித்துப் பாருங்கள். சமீபகாலத்திற்கு முன்வரையில் ஹைகோர்ட் ஜட்ஜிகளாகவும் மாகாண நிர்வாக உத்தியோகஸ்தர்களாகவும் இருந்தது யார்? நம்மவர்களில் படித்தவர்களா? அல்லது பிரபுக்களாகவும் பெரும் பண்ணைகளாகவும் உள்ளவர்களா? அல்லது நம்மிடம் வாழ்வுக்கும் சாவுக்கும் சடங்குகள் பேரால் பிச்சை பெற்று வயிறு வளர்த்து வந்த பார்ப் பனக் கூட்டத்தார்களா என்பதை யோசித்துப் பாருங்கள். காங்கிரஸ் ஏமாற் றத்துக்கு முன் அதாவது வெள்ளைக்காரர்கள் பார்ப்பனர்களுக்கு உத்தி யோகத்தின் பேரால் லஞ்சம் கொடுக்கவேண்டிய அவசியத்திற்கு முன், நமது தேசத்தில் வருஷம் ஒன்றுக்கு 25 அல்லது 30 கோடி ரூபாய்தான் சர்க்காருக்கு வரும்படி வரியாக வசூலிக்கப்பட்டு வந்தது. காங்கிரசின் 50 வருஷ வேலை யின் பயனாய் இன்று 140, 150 கோடி ரூபாய் வருஷா வருஷம் குடிகளிட மிருந்து வசூலிக்கப்படுகின்றது. ஒன்றுக்கு ஐந்து மடங்கு அதிகவரி ஏற்பட்ட தால் கஷ்டப்படுவதும் கொடுமைப்படுவதும் விவசாயமும் வியாபாரமும் செய்யும் குடிகளாகிய நாமும் ஏழைகளும், கூலிகளும் அல்லாமல் பிச்சை



RangaRakes tamilnavarasam.com

எடுத்து வந்த கூட்டத்தாராகிய இன்றைய “பூரண சுயேச்சை” வாதிகளல்ல; ஒருபுறம் மாதம் லக்ஷக்கணக்கான சகல ஜனங்கள் இந்நாட்டில் வேலை இல்லாமல் வெளி நாடுகளுக்குக் கூலிகளாய்ச் செல்லவும் மற்றொரு புறம் சர்க்கார் இவ்விதம் ஒன்றுக்கு ஐந்து மடங்காக அதிகவரி வாங்கவும் என்ன அவசியம் ஏற்பட்டது. காங்கிரசுக்கு முன், ஆள் ஒன்றுக்கு மாதம் 2500 ரூபாய் சம்பளத்தில் 5 ஐகோர்ட்ட் ஜட்ஜிகள் இருந்தார்கள், இன்று மாதம் ஒன்றுக்கு ஆள் ஒன்றுக்கு 4000 ரூபாய் சம்பளத்தில் 15 ஐகோர்ட்டு ஜட்ஜிகள் இருக்கிறார்கள்.

எனவே, முன்வருஷம் 1-க்கு ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் சம்பளமென்றால் இன்று 15 பேருக்கு (பதினைந்து- நான்கு- அறுபது, அறுபதாயிரம், ஆறு - பன்னிரண்டு- எழுபத்திரண்டு) வருஷம் ஒன்றுக்கு ஏழு லட்சத்து இருபதினாயிரம் ரூபாய் செலவு ஆகிறது. முன்பு அரசியல் நிர்வாக அங்கத்தினராக 5,500 ரூபாயில் இரு மந்திரியும் அவர்களுக்குள்ள 2 காரியதரிசிக்கு 2000 ரூபாய் சம்பளமென்றால் இன்று 5500 ரூபாயில் 7 மந்திரிகளும் ஏற்பட்டு அவர்களுக்கு ஒரு பிரசிடெண்டு, வைஸ்பிரசிடெண்டு, மந்திரிகளுக்கு 5 காரியதரிசி, இவர்களுக்குக் கொட்டிக் கொடுக்கும் சம்பளம் எத்தனை லட்சம் ரூபாய்கள் ஆகின்றது என்று பாருங்கள். முன்பு மாகாண சட்டசபையில் 8 பிரதிநிதிகள் என்றால் இன்று 150 பெயர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அக்கால படிச்செலவைவிட இன்று 15 மடங்கு அதிக படிச்செலவு ஆகிறதல்லவா? இவ்விதமாகவே, இனியும் “விடுதலை”யும், “சுயராஜ்ஜியமும்”, “சீர்திருத்தத் திட்டமும்” “பூரண சுயேச்சையும்” வளர்ந்து கொண்டே போனால் நமது கதி என்ன ஆவது? இதைச் சற்று சுயபுத்தியோடு யோசித்துப் பாருங்கள். இவ்விதம் பலவிதத்தும் அரசியல் பேராலும் மதத்தின் பேராலும் நம்மை ஏமாற்றிச் சகல பொறுப்புடைய பதவிகளிலும் உத்தியோகங்களிலும் பார்ப்பனர்கள் உட்கார்ந்து கொண்டு நம்மை இழிவும் செய்ய ஆரம்பித்த பின்புதான் நாம் சகிக்காது பாமர மக்கள் முன்னேற்றமடைய வேண்டும் என்றும், இருக்கும் உத்தியோகங்களிலும், இனிஆகும் உத்தியோகங்களிலும் நமக்கும் சரியான பங்கு விகிதம் கிடைக்க வேண்டுமென்றும் கேட்கத் தொடங்கி விட்டோம். நாம் இப்படிச் செய்தால், இனி பார்ப்பனர்கள் உத்தியோகத்தை ஒருநாளும் அதிகரிக்கமாட்டார்கள். இது பிராமணத் துவேஷமா? தேசத் துரோகமா? என்று தான் உங்களைக் கேட்கிறேன். காங்கிரசின் பேரால் தேசீயத்தின் பேரால் உங்களிடம் வந்து கூச்சல் போடும் நபர்களுக்கு நமது வரிகள் இன்னமும் ஒன்றுக்கு பத்து வீதம் உயர்ந்தாலும் அவர்களுக்கு ஒரு அம்மன் காசு நஷ்டம்வராது. ஆதலால் அவர்களுக்கு வரி உயர்வைப் பற்றி சிறிதும் கவலையில்லை. பார்ப்பனர்கள் சொல்லிக் கொடுத்தபடி இங்கு வந்து பேசிவிடுகின்றார்கள். எனக்குப் பொதுவாக எந்தத் தனிப்பட்ட நபரிடமும் துவேஷமில்லை. எல்லோரிடமும் நான் நேசமாய்த்தான் இருக்கின்றேன். திரு.சீனிவாசய்யங்கார் முதல் எல்லாக் காங்கிரஸ்வாதிகளும் மற்றும்



அவர்களது பிரசாரகர்களும் இப்போது என்னை வந்து காங்கிரசை நடத்துங்கள் என்று தான் கூப்பிடுகின்றார்கள். எத்தனையோ பேர் என்னைப் பற்றி எவ்வளவோ விஷமப் பிரசாரம் செய்தும், என் மீது அல்லது எனது சொந்த வாழ்க்கையில் ஒரு குற்றமாவது கண்டுபிடித்து எடுத்துக் காட்டினவர்கள் அல்ல; மற்றபடி புகழ்ந்தும் பேசிக்கொண்டு தான் வருகின்றார்கள்.

உதாரணமாக சென்ற வாரம் கூட திரு.சீனிவாசய்யங்கார் சென்னையில் ஒரு பிரசங்கம் செய்தபோது, திரு. ராமசாமி நாயக்கர் வந்து காங்கிரஸ் நிர்வாகப் பதவியை ஏற்றுக் கொண்டு நடத்தினால் நான் அவரைப் பின்பற்றத் தயாராயிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஒருக்காலமும் இந்தக் காங்கிரசின் பக்கம் திரும்பிப் பார்க்கவே மாட்டேன். ஒரு சமயம் காங்கிரசை ஒழிக்க என்னால் என்வாழ்நாளில் முடியாமற் போனாலும் போகலாம். ஆனாலும் எனது வாலிப வீரர்கள் ஆயிரக்கணக்காய் அதை ஒழிக்கக் காத்திருக்கின்றார்கள். அந்த தைரியத்தில்தான் நான் உயிர்விடு வேன்; அதில் எனக்குச் சந்தேகமில்லை.

## மந்திரிகள் விஷயம்

இன்றைய மந்திரிகளான திருவாளர்கள் டாக்டர். சுப்பராயன் அவர்களும், எஸ்.முத்தைய முதலியார், சேதுரத்தினமய்யர் ஆகியவர்களும் காங்கிரஸ்காரர்களால் கண்டிக்கப்படுகிறார்கள். விசேஷமாய் கனம் எஸ்.முத்தைய முதலியார் அவர்கள் அடிக்கடி கண்டிக்கப்படுகிறார். துரோகம் விளைவித்ததாகத் தூற்றப்படுகிறார். இதன் ரகசியம் என்ன, ‘இரட்டை ஆட்சி பயனில்லை,’ என்பதும் மந்திரிகளை, ஆதரிக்கவோ ஆதரிப்பவர்களுக்கு ஆதரவு காட்டவோ கூடாதென்பதும் அக்காங்கிரசின் திட்டமும் தீர்மானமும் ஆகும். சென்ற சட்டசபை தேர்தல் முடிந்ததும் கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களின் மந்திரி சபையை அமைத்துக் கொடுத்தது இந்தக் காங்கிரசின் “வீரர்”களா அல்லவா? என்று கேட்கின்றேன். இவர்கள் சொன்னபடி ஆடுவதாக ஒப்புக் கொண்டதின் மீது திருவாளர்கள் ரெங்கனாத முதலியாரும் ஆரோக்கியசாமி முதலியாரும் காங்கிரசுக்காரர்களால் ஆதரிக்கப்பட்டார்கள். காங்கிரசுக்காரர்களின் இந்த அயோக்கியத்தனத் தைக் கண்டித்து மாகாண காங்கிரஸ் கமிட்டியிலும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும், சென்று திரு.எஸ். முத்தைய முதலியார் வாதாடினார். அவருக்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் பேசுவதற்குக் கூட சந்தர்ப்பம் அளிக்க மறுத்துவிட்டு, தாங்கள் மந்திரிசபை ஏற்படுத்தினதையும் அதை ஆதரித்ததையும் பற்றியும் தங்களையே பாராட்டி ஒரு தீர்மானமும் செய்து கொண்டார்கள். இதற்குக் காரணம் என்ன வென்றால் பார்ப்பனரல்லாதார் கக்ஷி ஆகிய ஜஸ்டிஸ் கக்ஷியை அழிக்க இப்படிச் செய்ய நேரிட்ட தாம். இதை அறிந்த பின் உண்மையான பார்ப்பனரல்லாத ரத்தம் ஓடும் எந்தப் பார்ப்பனரல்லாதாராவது காங்கிரசில் இருக்க முடியுமா என்று நீங்களே யோசித்துப் பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

எனவே திரு. எஸ். முத்தைய முதலியார் காங்கிரஸ் கமிட்டியை விட்டு விலகிவிட வேண்டியது அவசியமாயிற்று? எனவே விலகின முதலியார் தனிக்கக்ஷி அமைத்து மந்திரி வேலை ஒப்புக் கொண்டு பார்ப்பனரல்லா தாருக்குத் தம்மால் கூடிய நன்மை செய்ய வேண்டியதாயிற்று. பழய மந்திரி கள் 7 வருஷமாய்ச் செய்ய முடியாத வேலையை, திரு. முத்தைய முதலியார் மந்திரியானவுடன் செய்து முடித்தார். அவர்தான் சர்க்கார் உத்தியோகங்களை இதுவரை பார்ப்பனர்கள் மாத்திரம் கொள்ளை யடித்து வந்ததுபோல் இல்லா மல் எல்லா மக்களுக்கும் சமசந்தர்ப்பமும் சமஉரிமையும் இருக்கும்படி செய்துவிட்டார். இதனாலேயே பார்ப்பனர்கள் திரு.முத்தையா முதலியாரை அதிகமாக வைகின்றார்கள்; வையவும் கூலி கொடுக்கின்றார்கள். பார்ப்பனர் களுக்கு அவர்களின் ஏகபோக அனுபவத்தில் ஒரு சிறு நஷ்டம் வருவதானா லும் அவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லி விடுவார்கள். ஒரு சிறு மாறுதல் செய்ய ஆரம்பித்தால் கூட உடனே காங்கிரஸ் துரோகிகள் என்று சொல்லி விடுகிறார்கள். இப்படிப்பட்ட காங்கிரஸ் நமக்கு வேண்டாம். இப்படிப்பட்ட தேசாபிமானமும் நமக்கு வேண்டாம். இதனால் என்ன வந்தா லும் வரட்டும், நீங்கள் காங்கிரஸ் துரோகப் பூச்சாண்டிக்கோ தேசத்துரோகப் பூச்சாண்டிக்கோ பயப்பட்டு விடாதீர்கள். அடுத்துவரும் தேர்தலில் திரு. முத்தைய முதலியாருக்கு விரோதமாய்ப் பார்ப்பனர்கள் வெகுபாடுபடுவார் கள். அநேக கூலிகளை அமர்த்தி உங்களை ஏமாற்றப்பார்ப்பார்கள். நீங்கள் ஏமாந்து போகாதீர்கள். நன்றாய் உங்கள் சுயபுத்தியைக் கொண்டு யோசித்துப் பார்த்து எதையும் செய்யுங்கள், இதனால் பெரும்பாலான சமூகம் ஏமாற்றப் படுவதுடன் அநீதியும் நடைபெறுகிறதே என்று வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை அனுஷ்டிக்க எஸ்.முத்தையா முதலியார் கிளம்பினால் உடனே பெரும் ராக்ஷஸனாகவும் ஜனசமூகத் துரோகியாகவும் மாறிவிடுகிறார். இவ்விதம் ஒவ்வொன்றிலும் நீண்ட நாளாய் ஏமாற்றப்பட்டோம். இன்று அதை உணர்ந்து ஒரு வழியைத் தேட முயலுகிறோம். இதைத்தான் என்னென்னவோ என்று உங்களுக்கு கூறி ஏமாற்ற முயலுகிறார்கள்.

சகோதரர்களே!

இன்றைய மந்திரி கக்ஷியைத் தூற்றும் 'தேசீய வீரர்கள்' சொல்லும் காரணம் என்ன? 'இரட்டை ஆட்சியை ஒழிக்க வேண்டும்' என்பது. அப்படியானால் தேர்தல் முடிந்ததும், இரட்டை ஆட்சியை நிலை நிறுத்தியது மந்திரி கட்சியை அமைத்தது காங்கிரஸ் வீரர்கள் தானே! என்று கேட்டால், நாம் காங்கிரஸ் துவேஷியா? நீட்டின காகிதத்தில் கையெழுத்துப் போட்ட கனம் ஆரோக்கியசாமி முதலியார் நல்லவராக இருந்ததற்கும் கையெழுத்துப் போடு என்று கேட்கப் பயப்படக்கூடிய நிலையில் உள்ள கனம் எஸ்.முத் தையா முதலியார் பார்ப்பனக் கண்ணுக்குத் தேசத்துரோகி போல் தோன்று வதற்கும் காரணம் விளங்கவில்லையா? இதைப் பார்த்தபின்பும் கூட நம்ம வர்கள் கண் விழிக்க வில்லையானால் கெதி மோக்ஷம் இந்த நாட்டுக்கு எப்பொழுது கிட்டப்போகிறது?



## சைமன் கமிஷன்

சைமன் கமிட்டியை நான் ஆதரிப்பதைப் பற்றி என்மீது பெரிய குற்றம் சுமத்தப்படுகின்றது. சென்ற தேர்தலில் உங்களிடம் ஓட்டுக் கேட்ட காங்கிரஸ் வாதிகள் (ராயல் கமிஷன்) சைமன் கமிஷனிடம் சாட்சி சொல்வதாய் ஒப்புக் கொண்டு அதற்காக வேண்டியே தங்களுக்கு ஓட்டு கொடுக்க வேண்டு மென்று கேட்டார்கள். இப்போது அக்கமிட்டியில் பார்ப்பனர்களையும், பார்ப்பனதாசர்களையும் சேர்க்காததால் அதைப் பகிஷ்கரிக்கவேண்டு மென்று கூச்சல் போடுகிறார்களே ஒழிய வேறில்லை. உண்மையில் பகிஷ் கரிக்கும் யோக்கியர்கள் தங்கள் மெம்பரை ராஜிநாமா கொடுத்துவிட்டு கமிஷனைப் பகிஷ்கரிப்பதாய்ச் சொல்லி ஓட்டு வாங்கி மெம்பராகி பிறகு தான் பகிஷ்கரிக்க வேண்டும். இதுதான் நாணயமாகும். நிற்க, வைஸ்ராய் நிர்வாக சபையில் மெம்பராயிருந்த திருவாளர் எஸ்.ஆர்.தாஸ் பார்லி மெண்டை மிரட்டிவிட்டாராம்! அதாவது ஏதாவது ஒரு பார்ப்பானை ராயல் கமிஷன் கமிட்டியில் போட்டால் பார்ப்பனரல்லாதார் கிளர்ச்சி செய்வார்கள். ஆதலால் போடுவதாயிருந்தால் சென்னை மாகாணத்திய ஒரு பார்ப்பன ரல்லாதாரைப் போடும்படி சொன்னாராம். வைஸ்ராய் சபையிலுள்ள மற்றொரு கனவான் பார்ப்பனரல்லாதாரைப் போட்டால் பார்ப்பனர்கள் கிளர்ச்சி செய்வார்கள். ஆதலால் மகமதிய கனவானைப் போடும்படி சொன்னாராம். எனவே, பார்லிமெண்டார் பயந்து கொண்டு யாரையும் போடாமல் வெள்ளைக்காரர்களாகவே பார்த்துப் போட்டுவிட்டார்கள். இதனால் எந்த விதத்தில் இந்தியாவின் சுயமரியாதைக்கு ஆபத்து வந்துவிட்டது. மேல்கண்ட மூவரில், யாரையாவது ஒருவரைப் போட்டிருந்தால் மற்ற இருவருக்கும் இதைவிட சுயமரியாதைக்கு அதிகமான பங்கம் வந்துவிட்டதாகக் கூப்பாடு போட்டிருப்பார்கள். இந்தப் போலி பகிஷ்காரக் கூச்சலினால் இப்போதும் சைமனுக்கு வேண்டிய தகவல்களில் எது தடைப்பட்டுவிட்டது. நேரு ரிப்போர்ட், காங்கிரஸ் ரிப்போர்ட், எல்லாக்கட்சி ரிப்போர்ட், திருவாளர் பெசண்ட் திட்டம், விஜயராகவாச்சாரி திட்டம், ரங்கசாமி அய்யங்கார் திட்டம், சீனிவாசய்யங்கார் திட்டம், வர்ணாஸ்ரமத் திட்டம், பார்ப்பனத் திட்டம், பார்ப்பனரல்லாதார் திட்டம், மகமதியர் திட்டம், கிறிஸ்தவர்கள் திட்டம், ஆதிதிராவிடர்கள் திட்டம், ஜமீன்தார் திட்டம், வியாபாரிகள் திட்டம், நிலச் சுவான்தார்கள் திட்டம், நூற்றுக் கணக்கான உள்பிரிவு ஜாதிகள் திட்டம், சர்க்கார் உத்தியோகத்தில் உள்ள பார்ப்பனர்கள் – பார்ப்பனரல்லாதார்கள், வெள்ளைக்காரர்கள் ஆகியவர்கள் திட்டம் இன்னமும் என்னென்னமோ திட்டம் வண்டி வண்டியாக அவர்கள் முன் குவிந்து இருக்கின்றது. எனவே சைமன் பகிஷ்காரம் என்பது எந்த அர்த்தத்தில் சொல்லப்பட்டது? எந்த அர்த்தத்தில் செய்து, எந்த அர்த்தத்தில் நிறைவேற்றப்பட்டது? என்பதை நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்.



RangaRakes tamilnavarasam.com

## மதம்

கனவான்களே! முதலாவது மதம் என்றால் என்ன? அது கால, தேச, வர்த்தமானத்திற்கும், அக்காலத்திய அறிவின் தன்மைக்கும் தக்கபடி மக்களின் வாழ்க்கைக்கென்று ஏற்படுத்திக் கொள்ளும் சில கொள்கை யேயாகும். அக்கொள்கைகள் எப்போதும் எல்லா இடத்திற்கும் ஒன்று போலவோ அல்லது மாற்ற முடியாததென்றோ சொல்வது சுத்த மடமை யேயாகும்.

உதாரணமாக, விளையாட்டுச் சங்கத்திற்கோ அல்லது ஒரு ஓய்வு சங்கத்திற்கோ, அச்சங்கத்தில் உள்ளவர்கள் தங்கள் சங்க காரியங்கள் கிரம மாய் நடைபெறுவதற்கு என்று சில கொள்கைகள் வகுத்துக் கொள்ளுவதை நாம் பார்க்கின்றோம். நாளாக நாளாக அதன் நிலைமைக்கும் தேவைக்கும் தக்கபடி அவற்றை மாற்றிக் கொண்டு வருவதையும் பார்க்கின்றோம்.

அதுபோலவே, மக்கள் சமூக வாழ்க்கைக்கும் சில நிபந்தனைகள் ஏற்படுத்திக் கொள்வதும், நாளாக நாளாக அவைகளைத் தேவைக்குத் தக்கபடி, காலத்திற்குத் தக்கபடி மாற்றிக் கொள்ளுவதும் அவசியமான தேயாகும். இந்நிபந்தனைகள் சில சமயங்களில் மக்கள் அறிவுக்குத் தக்கபடி சுயலநலக்காரர்கள் தங்கள் சுயநலத்திற்கு ஏற்ற வண்ணமாயும் செய்து விடுவதுமுண்டு. உதாரணமாக தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு வெள்ளைக்காரர்கள் நிபந்தனை ஏற்படுத்துவது போல, கையில் வலுத்த வனோ, அறிவில் வலுத்தவனோ, ஏமாற்றத்தில் வலுத்தவனோ தன் தன் சௌகரியப்படி நிபந்தனைகள் அமைத்துக் கொள்கிறான். இதையுணராமல் மதம் என்பது ஒரு சர்வ வல்லமையுள்ளது என்று சொல்லப்பட்ட 'கடவுள்' கட்டளை யென்றும் அதை எப்போதும் சிறிதுகூட மாற்றக் கூடாது என்றும், அதிலுள்ளவைகள் எல்லாம் கடவுள் வாக்கு என்றும் சொல்லுவதானால், அது எந்த மதமானாலும் சரி, அவற்றை அடியோடு ஒழிக்கத்தான் வேண்டும். அதனிடத்தில் மக்களுக்குள்ள குருட்டு நம்பிக்கையும் குரங்குப் பிடி வாதத்தையும் மாற்றத்தான் வேண்டும்.

அராபிப் பாலைவனத்திலுள்ள மக்களுக்கு அவர்கள் மதம் தினம் மூன்று வேளை குளிக்கும்படி கட்டளையிட முடியவே முடியாது. ஐரோப் பிய குளிர் தேசத்திலிருக்கும் மக்களுக்கு அவர்கள் மதம் ஜலமல பாதை களுக்குப் போனால் அடிக்கடி தண்ணீர் விட்டுச் சுத்தி செய்யச் சொல்லாது. அது போலவே, வடதேசத்தின் மலைச்சார்புப் பகுதிகளில் குளிரில் அவஸ் தைப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு, அவர்கள் மதம் எப்போதும் நெருப்புக்கனல் இல்லாமல் இருக்கும்படி சொல்லியிருக்காது.

அதுபோலவே தென்னாட்டில் உஷ்ண தேசத்து மக்களுக்கு எப்போதும் நெருப்புக் கனல் இருக்க வேண்டுமென்று அவர்கள் மதம் சொல்லியிருக்க முடியாது.



வெள்ளைக்காரர்கள் ஆதிக்கத்தினால் எப்படி அவர்களது கொள்கை களையும், அவர்களுக்கு அனுகூலமானதையும் சிலவற்றை நம் மீது சுமத்தியிருக்கின்றார்களோ, அதுபோலவே நமது நாட்டில் முன் காலத்தில் பூர்ண ஆதிக்கம் செலுத்த சந்தர்ப்பம் அடைந்தவர்கள் அவர்களது கொள்கைகளையும், அவர்களுக்கு அனுகூலமான கொள்கைகளையும் நம் மீது சுமத்திவிட்டார்கள். ஏகபோக ஆதிக்கத்தின் பலனாய் அவற்றிற்கு ஆதாரங்களும் எழுதிவைத்து அவற்றை எல்லாம் மதக் கொள்கைகள் என்றும் அவைகள் கடவுள் கட்டளை என்றும், கடவுள் வாக்கு என்றும் சொன்னால் நாம் நிரந்தரமாய் ஒப்புக் கொண்டு பின்பற்ற முடியுமா? நமக்கு பகுத்தறிவு என்கின்ற தன்மை எதற்காக இருக்கின்றது? இப்பேர்ப்பட்ட விஷயத்திற்கு உபயோகப்படுத்திப் பார்க்காத பகுத்தறிவு வேறு என்ன வேலை செய்ய உபயோகப்படும்? ஆதலால், கண்டிப்பாய் மத விலங்கி லிருந்து விடுதலையடைய வேண்டும். பிறகுதான் நாட்டை விடுதலை யடையச் செய்யலாம். நாடு வெறும் வெள்ளைக்கார ஆட்சியிலிருந்து மாத்திரம் விடுதலை அடைந்தால் போதும் என்பது அர்த்தமற்ற வார்த்தை. நாடு வெள்ளைக்காரர் ஆட்சியிலில்லாதபோதுதான் நாம் மத அடிமைத் தன்மையில் மூழ்கினோம். நாடு முகமதியர் ஆட்சியில் இல்லாத காலத்தில் தான் மக்கள் மிருகப் பிராயத்தில் காட்டுமிராண்டிகளாயிருந்தார்கள். நாடு சுயராஜ்யத்திலும் ராமகிருஷ்ண அரிச்சந்திராதி கடவுள்கள் ஆட்சியிலும் இருக்கும் போதுதான் பார்ப்பனரல்லாதார்கள் சூத்திரர்களாகவும், வேசி மக்களாகவும், குரங்குகளாகவும், அரக்கர்களாகவும், படிக்கக் கூடாதவர்களா கவும், கடவுள் வணக்கத்திற்கும் தவத்திற்கும் லாயக்கில்லாதவர்களாகவும் நடத்தப்பட்டதுடன் வேற்று அரசர்கள் கைக்கு நாடும் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றது. இந்நாட்டில் வெள்ளைக்கார அரசாங்கமும் மகமதிய அரசாங்கமும் இல்லாத காலத்தில் தான் சம உரிமை, ஜீவகாருண்யம் ஆகிய வைகளைக் கொள்கைகளாகக் கொண்ட பவுத்தமதம் அழிக்கப் பட்டது. சமணர்களைக் கழுவேற்றிச் சமணமதம் ஒழிக்கப்பட்டது. இப்பவும் வெள்ளைக்கார ஆட்சி இல்லாததும் சுய ஆட்சியும் இந்து அரசர்கள் ஆட்சியும் உள்ள மைசூர், திருவாங்கூர், கொச்சி முதலிய சுதேச அரசர் நாடு களில்தான் மனிதர்களை மனிதர்கள் நாய், கழுதை, பன்றி,மலம், மூத்திரம், எச்சில், நாறிப் புழுத்த வஸ்துகளுக்கும் கீழாக மதிக்கின்றனர். எனவே இந்த நிலையில் இந்த வெள்ளைக்கார ஆட்சி போனால் இன்னும் ஒரு மஞ்சள்காரர் அல்லது சிகப்புக்காரர் ஆட்சி தான் ஏற்படுமே ஒழிய கருப்புக்காரர் (இந்திய மக்கள்) ஆட்சி உண்டாகவே உண்டாகாது. ஏனெனில் நமது நாட்டில் எந்தெந்த குணங்களும் கொள்கைகளும் நம்முள் ஒற்றுமையைக் கெடுத்து அன்னிய ஆட்சியை வலியக் கூவி அழைத்ததோ அந்தக் கொள்கைகளும், குணங்களும் மாறினால் ஒழிய இனி எந்தக் காலத்திலும் நமது நாட்டை விட்டு அன்னிய ஆட்சியை விரட்டி விடமுடியாது.



RangaRakes tamilnavarasam.com

நிற்க, கடவுள் என்பது பற்றியும் சிலவார்த்தைகள் சொல்ல விரும்பு கின்றேன். கடவுள் இல்லையென்று சொன்னதாகவும் அதனால் நாஸ்திகப் பிரசாரம் செய்கின்றதாகவும் சொல்லப்படுகின்றது. அது உண்மையானாலும், பொய்யானாலும் இங்கு இவ்வளவு பெரிய கூட்டம் கூட்டிக் கொடுக்க இந்த மாதிரியான விஷமப் பிரசாரங்கள் அனுகூலமாயிருந்ததால் ஒரு விஷயத்தில் நான் நாஸ்திகனானதற்கு மகிழ்ச்சியடைகின்றேன்.

சுயமரியாதை இயக்கம் கடவுள் உண்டா இல்லையா? என்கின்ற விஷயத்தில் சற்றும் கவலையெடுத்துக் கொள்வதேயில்லை. மற்றபடி நமது மக்கள் கடவுளுக்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் குணங்களைப் பற்றியும், கடவுள்களுக்கு என்று செய்யப்படும் பூசை, அபிஷேகம், உத்சவம் முதலிய செலவுகளைப் பற்றியும்தான் நான் மிகுதியும் ஆட்சேபிக்கின்றேன். கடவுளுக்கு இவ்வளவு பெரிய கோவில் எதற்கு? உத்சவத்திற்கு லக்ஷசக் கணக்கான ரூபாய்கள் செலவு எதற்கு? மேல்நாட்டார் நம்மைவிடக் காட்டு மிராண்டிகளாயிருந்தவர்கள். இப்போது உலகத்தில் பெரும் பகுதியை ஆளச் சக்தி கொண்டுவிட்டதற்கு இம்மாதிரியான பெரிய கோவில்களும், உத்சவமும் செய்வதிலும் பணம் செலவழித்ததாலா? அல்லது இவற்றிற்குப் பணம் செலவழிப்பதை நிறுத்திக் கொண்டு அவற்றைக் கல்விக்கும், ஆராய்ச்சிக்கும் செலவழித்ததாலா? என்பதை யோசித்துப்பாருங்கள். நமது நாட்டிலுள்ள கற்கள் எல்லாம் சாமிகள்; மரம், செடிகள் எல்லாம் சாமிகள்; ஆறு, மலை, குளம், குட்டை, இடி, மின்னல், மழை, நட்சத்திரம், வானம், சந்திரன், சூரியன், காற்று, நெருப்பு, தண்ணீர், பிளேக்கு, பேதி, அம்மை முதலிய காணப்படும் பொருள்கள் குணங்கள் எல்லாம் சாமிகளாய்க் கற்பிக்கப் பட்டிருக்கின்றன. இது மக்களுக்கு அறிவு வளர்ச்சி இல்லாத காலத்தில், காரண காரியங்களை அறிய முடியாத காலத்தில் ‘சையின்ஸ்’ என்னும் விஞ்ஞான அறிவு இல்லாத காலத்தில், காட்டுமிராண்டி பருவத்தில் ஏற்பட்ட நிலைமையாக இருக்கலாம்.

உதாரணமாக, வேதகாலம், புராணகாலம் என்று சொல்லப்பட்ட காலம் மனிதனுக்கு சற்றுக் கூட அறிவு வளர்ச்சியும் பகுத்தறிவு விசாரமும் இல்லாத காலமென்பதற்கு உதாரணம் வேண்டுமானால் எனக்குத் தோன்றுவதைச் சொல்லுகின்றேன்- உலகம் என்பதைப் பற்றிச் சொல்லும்போது இந்தியா விற்கு அப்புறம் ஒன்றையுமே வெகுவாய்க் கண்டதாக எவருமே எதிலும் குறிக்கவே இல்லை. வேதகாரர்களுக்கு இமயமலையோடு உலகம் முடிந்து விட்டது. அதன் மீது செல்ல முடியாததால் அதுவே கைலாயமாகிவிட்டது. இம்மலையின் மீது பனிக்கட்டிகள் உறைந்து கலந்து மலையையே அடியோடு மூடிக் கொண்டதாலும் சூரிய வெளிச்சத்திற்கு அது வெள்ளையாய் பளிங்கு போல் காணப்பட்டதாலும், அதை வெள்ளியங்கிரி என்றும், அங்கிருந்து நதி (கங்கை) வருவதால் சிவனின் தலையிலிருந்து வருவதாகவும் இம்மாதிரி சிறு குழந்தைகளுக்குச் சோறு ஊட்ட பாட்டிகள் கதை சொல்லுவது போல் மூடக் கதையாய் உளறிக் கொட்டிவிட்டார்கள். வெள்ளைக்காரர்கள் வந்தபிறகுதான், இமயமலை மீது ஏறிப் பார்த்து வருகின்றார்கள். இமயமலை இன்னது என்று உணர முடியாத, சென்று பார்க்க முடியாத முடங்கள், மேல் ஏழு லோகம், கீழ் ஏழு லோகம் இருக்கின்றது என்பதும் கங்கையின் உற்பத்தியைக் கண்டு பிடிக்காத முடங்கள் பாற்கடல், தயிர்க்கடல் இருப்பதாகச் சொல்லுவதும் எவ்வளவு மடமை என்பதும் அதை நம்புவது அதைவிட எவ்வளவு முட்டாள்தனம் என்பதும் நான் உங்களுக்கு எடுத்துக்கூற வேண்டியதில்லை.

மற்றும் கல்வியைக் கடவுளாக மதித்து அதற்காக கோடிக்கணக்காய்ப் பணம் செலவு செய்து வரும் நாட்டில் ஆண்களில் 100-க்கு 10 பேர் கூட பெண்களில் 1000-க்கு 10 பேர் கூட படித்தவர்கள் இல்லையானால் உண்மையிலேயே கல்வி என்பதாக ஒரு கடவுள் இருந்து நமது பூஜையை ஏற்றுக் கொண்டு வருகின்றது என்று நம்புகின்றீர்களா? காளி, கருப்பன், வீரன் என்று வீரத்தன்மைக்குக் கூடக் கடவுள்களைச் சிருஷ்டித்து அதை வணங்கி வரும் மக்கள் துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டவுடன் காய்ச்சல் வருவதானால் ஒரு வீரக்கடவுள் இருந்து பூஜைகளை ஏற்கின்றது என்று நம்புகின்றீர்களா?

வியாதிகளையெல்லாம் தெய்வமாகக் கும்பிட்டு, அவற்றிற்கு கோவில், பூஜை, உற்சவம் செய்து வந்தும் நமது நாட்டில் வியாதிகளும் சாவுக் கணக்குகளும் மற்ற நாட்டாரை எல்லாம்விட ரெட்டிப்பாய் இருந்து வருகின்றது. இந்த வியாதி தெய்வங்கள் என்பவைகள் உண்மையிலேயே நமது பூஜை, உத்சவம், செலவு ஆகியவைகளை ஏற்றுக் கொண்டது உண்மை யானால் இப்படி நடக்குமா? என்று கேட்கின்றோம்.

மற்றும் இதுபோலவே, தொட்டதற்கெல்லாம் கடவுளை ஏற்படுத்தி அதற்குப் பூஜை, உத்சவம் செய்வதில் நமது புத்தியும், பணமும் நேரமும், ஊக்கமும் பாழாகின்றதேயல்லாமல் காரியத்தில் ஏதாவது கடுகளவு பயனுண்டா? என்று கேட்கின்றேன்.

விவசாய விஷயத்திலும், மாடு கடவுள், ஏர் கடவுள், உழவு கடவுள் ஆகிய கடவுள்களுக்கு பூஜை, உத்சவங்கள் செய்து பணம் செலவழிக் கின்றோமே யொழிய காரியத்தில் என்ன பலனடைகின்றோம். ஏரும், உழவும் மாடும் கடவுளாகக் கருதப்படாத ஆஸ்திரேலியா தேசத்தில் ஒரு ஏக்கராவில் 3000 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வெள்ளாண்மை எடுக்கின்றார்களாம். நாம் இன்னும் ஏர்பூட்ட அய்யரைக் கூப்பிட்டு நேரம் பார்த்துக் கொண்டிருக் கின்றோம். இன்னும் எவ்வளவோ வழிகளில் நாம் மூடர்களாகவே, காட்டு மிராண்டிகளாகவே இருக்கின்றோம். நாம் எந்த அரசாங்கத்தை ஒழிக்க வேண்டுமென்கின்றோமோ அந்த அரசாங்க தேசபக்தர்கள் தங்கள் தேசங் களில் ஆராய்ச்சித் துறையில் இறங்கி, அநேக அற்புதங்களைக் கண்டு பிடித்து இரசவாதம் போல் செல்வத்தைப் பெருக்கி பிரஜைகள் எல்லோரும் அரச போகத்தை அடைய ஏற்பாடு செய்து உலகத்தில் பெரும்பாகத்தை



RangaRakes
tamilnavarasam.com

ஆட்சி புரிகின்றார்கள். அன்றியும் அவர்களது தர்மம் நம்மைப் போன்று உத்சவத்திலும், பூஜையிலும், வாகனத்திலும், கும்பாபிஷேகத்திலும், தடிராமன்களுக்கு அன்ன சத்திரத்திலும், திதியிலும், அறுபதாம் கல்யாணத்திலும் செலவாக்கப்படாமல் அவர்கள் நாட்டு ஆராய்ச்சிக்குச் செலவு செய்தது போக மீதியை நமது நாட்டில் நமது மக்களுக்கு நன்மைக் கான பிரசவ ஆஸ்பத்திரி, குஷ்டரோக ஆஸ்பத்திரி, க்ஷயரோக ஆஸ்பத்திரி, கண் ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், அனாதை ஆஸ்ரமம், கைத்தொழிற்சாலை, புஸ்தகசாலை முதலான விஷயங்களுக்குச் செலவு செய்யப்படுகின்றது. எனவே, எந்த நாட்டார் முன்னுக்கு வருவார்கள் என்பதை நீங்களே யோசி யுங்கள்.

ஒரு மனிதனுடைய ஒழுக்கத்தை திருத்துப்பாடு செய்வதற்கு மாத்திரம் அதுவும் அறிவில்லாதவனுக்கு பயத்தை உண்டாக்கி அவனுடைய நடவடிக்கைகளைத் திருத்த என்று கடவுள் என்கின்ற உணர்ச்சி வேண்டு மானால் எனக்கு ஆக்ஷேபணையில்லை. மற்றபடி மக்களின் பணத்தையும் நேரத்தையும் அறிவையும் கொள்ளை கொண்டுவிட்டு யாதொரு பயனும் இல்லாமல் கல்லைப் போல் நெட்டுக்குத்தாய் நின்று கொண்டிருக்க மாத்திரம் கடவுள் உணர்ச்சியும் வேண்டுமானால் அதை நான் அரை வினாடியும் ஒப்புக் கொள்ள முடியாது. எனவே, இதுதான் எனது நாஸ்திகம் என்பது. இதைப்பற்றி நீங்கள் எப்படி நினைத்துக் கொண்டாலும் எனக்குக் கவலையில்லை. என் அபிப்பிராயத்தை உங்களுக்குத் தெரிவித்துவிட்டேன். ஏற்கவும் தள்ளவும் உங்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு. மற்றபடி பார்ப்பனர்களைப் போல் "சிவன் பார்வதிக்குச் சொன்னார், நாரதர் விசுவாமித்திரருக்குச் சொன்னார்". பராசரர் சொன்னார், நம்பாவிட்டால் நரகம், நம்பினால் மோட்சம் என்று சொல்லி உங்களை நாம் ஏய்க்கவில்லை. ராமசாமி என்னும் பெயர் கொண்ட– ஒரு மனிதன் அதுவும் எழுத்து வாசனை இல்லாதவன், பள்ளிக் கூடத்தில் படிக்காதவன் சொல்லுகின்றான் என்பதாகக் கருதி நான் சொன்னவற்றை உங்கள் சொந்த புத்தியைக் கொண்டு அலசிப் பார்த்து சரி என்று தெரிந்தால் நடவுங்கள். நேரம் அதிகமாய் விட்டதால் மற்றும் பல விஷயங்களைப் பற்றிப் பேச போதிய சாவகாசம் இல்லை. சமீபத்தில் இந்த ஊரில் சுயமரியாதை மகாநாடு கூட்டுவதாக உங்கள் ஊர் பிரமுகர்கள் தெரிவித்தபடியால் அது சமயம் வந்து மற்ற விஷயங்களையும் செங்கற்பட்டுத் தீர்மானங்களைப் பற்றியும் விளக்க இருக்கின்றேன்.

*குறிப்பு; 11.03.1929 இல் சீர்காழி சட்டநாத சாமி கோயிலில் திரு ஆர். சின்னையா தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சுயமரியாதைப் பிரசார சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 24.03.1929**



# எதிர்ப்பிரசாரங்கள்

தமிழ்நாட்டில் பார்ப்பனர்களில் திரு.சத்தியமூர்த்தியும் பார்ப்பனரல்லா தார்களில் திரு.வரதராஜுலுவும் இரண்டிற்கும் நடுவில் அதாவது பண்டிதக் கூட்டத்தில் திரு.கலியாணசுந்தர முதலியாரும் ஆக மூவர்கள் எப்படியாவது ஒரு வழியில் தினம் தங்களை விளம்பரம் செய்து கொண்டும் எப்படியாவது ஒரு வழியில் நாடோறும் சூரிய உதயமும் அஸ்தமனமுமாகி இன்றைய நாள் கழிந்ததா என்கின்றதுமான கவலையே வாழ்க்கையாகக் கொண்டவர்களே யல்லாமல் மற்றபடி 'நேற்று என்ன சொன்னோம், என்ன எழுதினோம், எப்படி நடந்தோம், இன்று என்ன சொல்லுகின்றோம், எப்படி நடக்கப் போகின்றோம், நாளை நமது கதி என்ன' என்கின்ற கவலையே அணுவளவும் இல்லாதவர் களாய் அவ்வளவு பெரிய 'துறவிகள்' முற்றும் துறந்த 'ஞானிகள்' என்று சொல்லத்தக்கவண்ணம் நடந்து வருகின்றார்கள். இம் மூவருக்கும் கொஞ்ச காலமாய் தமிழ்நாட்டில் ஒன்று போலவே நாணயம் குறைந்து வெளியில் தலைநீட்ட யோக்கியதை இல்லாத அளவு செல்வாக்கு ஏறிவிட்டது. இவர் களில் திரு.சத்தியமூர்த்தியோ வெளிப்படையாய் காலித்தனத்தில் இறங்கி விட்டார். இவர் கொஞ்சநாளைக்கு முன் சென்னை கார்ப்பரேஷன் பிரசி டெண்டு திரு.எ.ராமசாமி முதலியாரை நாய், கழுதை, பன்றி, மடையன் என்பது போன்ற மொழிகளைக் குடி வெறியில் உளறுவது போல் உளறி கலகம் செய்துவிட்டு மறுநாள் மன்னிப்பு கேட்டுக் கொண்டது யாவருக்கும் தெரியும். அது போலவே இந்த வாரத்திலும் சட்டசபைக் கூட்டத்தில் கனம் டாக்டர் முகமது உஸ்மானைப் பார்த்து 'உமக்கு சீனிவாசய்யங்காருடைய கால்பூட்சு கழற்ற யோக்கியதை உண்டா' என்று கேட்டுவிட்டு உடனே வாபீசு வாங்கிக் கொண்டார்.

திரு.சத்தியமூர்த்தியின் இம்மாதிரியான அயோக்கியத்தனங்கள் நாட்டில் பார்ப்பனர்களாலும் அவர்களது கூலிகளான காங்கிரஸ்காரர்கள் என்பவர்களாலும் பாராட்டப்பட்டே வருகின்றது. காங்கிரஸ்காரர்கள் சென்ற பக்கமெல்லாம் உதைபட்டுக் கொண்டு வருகிறார்கள். இழிவாய் நடத்தப் படுகிறார்கள் என்றால் அவர்கள் உதைபடுவதிலும் இழிவாய் நடத்தப் படுவதிலும் ஏதாவது அதிசயமிருக்க முடியுமா? ஒரு வேடிக்கைக் கதை சொல்லுவார்கள் அதாவது ஒரு பெரியார் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டி ருந்தார், ஒரு அயோக்கியன் போகும் போதும் வரும் போதும் தனது கால் அவர் மீது படும்படி ஆணவமாக நடப்பதும் உடனே "தெரியாமல் கால்



RangaRakes tamilnavarasam.com

பட்டுவிட்டது மன்னிக்க வேண்டும்” என்று சொல்லி கால்பட்ட இடத்தை தொட்டு கண்ணில் ஒத்திக்கொள்வதுமாயிருந்தான். அப்பெரியவர் பார்த்தார். இவன் ஆணவத்தையும் மானம் கெட்ட தன்மையையும் பார்த்து இவனுக்கு சரியானபடி புத்தி கற்பிக்க எண்ணி அவ்வயோக்கியன் உட்கார்ந்திருக்கும் போது பிடரியில் ஒரு சரியான உதை கொடுத்து கழுத்து முறியும்படி செய்துவிட்டு 'தெரியாமல் கால்பட்டுவிட்டது' என்று சொல்லி இரண்டு கையாலும் அவன் கழுத்தை தொட்டு இரு கண்களிலும் நன்றாய் ஒத்திக் கொண்டாராம். உடனே உதைப்பட்டவனுக்கு புத்திவந்து “என் கால் அவ்வளவு தடவை பட்டதற்கும் தங்கள் கால் ஒரு தடவை பட்டதற்கும் தங்கள் கால் சற்று பலமாய் பட்டுவிட்டதால் நம் இருவர்களுக்கும் கணக்கு சரியாய் விட்டது. இனி யார் மீதும் பாக்கியில்லை, ஆதலால் தயவுசெய்து மீதி எண்ணிக்கைகளை மறந்து விடுங்கள்” என்று கேட்டுக் கொண்டானாம்.

இக்கதைப் போல் இவர்கள் விடிந்தெழுந்தால் ஏதாவது பேசுவதும் பிறகு பல்லைக்காட்டுவதும் மன்னிப்பு கேட்பதும் காணாமல் மற்றும் தங்களைப் போலுள்ள காலிகளுடன் இதைப் பெருமையாய்ப் பேசி மகிழ்ந்து கொள்ளுவதும், பிறகு இவர் காலித்தனத்திற்கும் சூத்திரர்களாய் இருக்கின்ற அயோக்கியரிடம் போய் கூலி பெற்றுக் கொள்ளுவதும் நித்திய கர்மமாய் போய்விட்டது.

இம்மாதிரி பொறுப்பற்ற காலிகளின் நடவடிக்கைகள் வெகு சீக்கிரத் தில் நமது நாட்டு மக்களை ராணுவச் சட்டத்தின் கீழும் தண்டப் போலீஸ் அதிகாரத்தின் கீழும் வாழவேண்டிய நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டு விடும் என்று வெகு அழுத்தமாய் எச்சரிக்கை செய்கின்றோம். இதன் உண்மையை அறிய வேண்டுமானால் இதை எழுதி வைத்துக் கொள்ளட்டும். தமிழ்நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட காலித்தனம் இந்திய சட்டசபைக்கும் பரவி அங்கும் கை கலக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதும் திரு.நேரு என்கின்ற ஒரு பார்ப்பனர் இந்திய தேசீயத் தலைவர் என்னும் பேரால் அங்கும் காலித் தனமாய் நடந்து கொண்டதும் நமக்கு இந்த எண்ணத்தை உறுதிப்படுத்துகின்றது.

நிற்க, தன்னை சதா தேசீயவாதி என்று சொல்லிக் கொள்வதன் மூலம் வாழும் திரு.வரதராஜுலுவுக்கு நமது நாட்டுப் பார்ப்பனர்களின் இந்த விதமான காலித்தனமான காரியங்களில் கவலையில்லாமல் “நாயக்கர் பிரசாரத்தால்” உலகம் முழுகிப் போவதுபோல் நீலிக் கண்ணீர் விட்டு பார்ப்பனர்களின் காலுக்குள்ளாக புகுவதற்கே புத்திபோய் கொண்டிருக் கின்றது. இதுவரை 'நாயக்கர் பிரசாரத்தை' பற்றி இவ்வளவு ஆபத்து வந்துவிட்டதாய் ஊளையிடும் எவராவது 'நாயக்கரின்' எந்த பிரசாரத்திற்கு எந்தக் கருத்துக்கு எந்த வாக்கியத்திற்கு தாங்கள் கவலைப்படுகின்றார்கள் என்று பொது ஜனங்களுக்கு எடுத்து காட்டி சமாதானம் சொல்லி கூப்பாடு போட்டிருக்கின்றார்கள்? மொத்தத்தில் “நாயக்கர் பிரசாரம்” “நாஸ்திக பிரசாரம்” “சுயமரியாதைப் புரட்டு” “மதம் போச்சு” “சமயத்திற்கு ஆபத்து” என்று எழுதியும் பேசியும் பாமர மக்களை ஏமாற்றி வாழப் பார்ப்பதைத் தவிர இவர்கள் நம்மீது கண்டுபிடித்த குற்றம் என்ன என்று கேட்கின்றோம்.



16-3-29 உ தமிழ்நாடு பத்திரிகை தலையங்கத்தில்: –

“தமிழ்நாடு காங்கிரசுக்கு ஒரு கண்ணாயிருந்த ஸ்ரீ ஈ.வெ. ராமசாமி நாயக்கர் சமய சமூக அரசியல் விஷயங்களில் கண்ணிழந்த குருடர்போல் மனம்போன போக்கில் பிரசாரம் செய்ததின் பயனாக தமிழ்நாட்டில் எதிர்ப்பு சக்தி தோன்றியிருப்பதை யாரும் மறுக்க முடியாது”.

“சமதர்மக் கொள்கைகளில் நமக்கும் நாயக்கருக்கும் பேத மிருப்பதாக ஒருவரும் சொல்ல முடியாது.”

“செங்கல்பட்டில் செய்த தீர்மானத்தை நாம் ஒப்புக் கொள்ள முடியாது,”

என்று எழுதியிருக்கின்றார்.

சமய சமூக விஷயங்களில் திரு.வரதராஜுலுக்கு இஷ்டமில்லாத நமது கொள்கை எது? கண்மூடித்தனமாக நாம் செய்த பிரசாரக் கருத்து எது? என்று திரு. வரதராஜுலுவால் எடுத்துக் காட்ட முடியுமா? என்று கேட் கின்றோம். நம்மைவிட “மோசமாகவும் கண்மூடித்தனமாகவும்” உத்திரவு போட்டும், எதிர்த்தவர்களை சிறையில் போட்டும் நிர்ப்பந்தம் செய்த திரு.ஆப்கன் அமீர் அமானுல்லாவுக்கு “பணமும் படையும்” திரட்டியும் தயாராய் வைத்துக் கொண்டு அங்கு செல்வதற்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உத்திரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த “சமூக சமூதாய சீர்திருத்த வீரருக்கு” நம்மிடம் என்ன குறை காணப்பட்டது? என்று கேட்கின்றோம்.

தவிர, செங்கல்பட்டு தீர்மானத்தில் இவர் எதை ஆக்ஷேபிக்கிறார் என்று கேட்கின்றோம். ஜாதிப் பட்டத்தையும் சமயக் குறிகளையும் எடுத்து விடுவதைப் பற்றியா? பெண்கள் தங்கள் இஷ்டப்படி கணவனை தேடிக் கொள்வதைப் பற்றியா? இஷ்டமில்லாத போது விலகிக் கொள்வதைப் பற்றியா? கடவுள் பூசைக்கு பணச் செலவும் தரகனும் கூடாது என்பதைப் பற்றியா? என்று கேட்கின்றோம்.

திரு.வரதராஜுலு வெகுகாலத்திற்கு முன்பே ஜாதிப் பட்டத்தையும் சமயக் குறிகளையும் எடுத்துவிட்டதாக விளம்பரப்படுத்திக் கொண்டிருக் கிறார் என்பதை நாம் ருஜுப்பிக்க முடியும். பெண்கள் விஷயத்தைப் பற்றியும் தனது மனைவியார் அவர்களது கழுத்தில் இருந்த தாலியைக் கூட அறுத் தெறிந்துவிட்டதாகவும் சர்வ சுதந்திரத்துடன் இருக்க அனுமதித்திருப்பதாக வும் தானும் எழுதியதோடு தனது மனைவியார் பேராலும் வெளிப்படுத்தி இருக்கின்றார். கடவுள் விஷயத்திலும் தான் கோவிலுக்கே போவதில்லை



RangaRakes tamilnavarasam.com

என்றும் விக்கிரக வணக்கமே செய்வதில்லை என்றும் அநேக இடங்களில் சொல்லி இருக்கின்றார்.

அன்றியும் .இவர் விக்கிரக ஆராதனை இல்லாத ஆரிய சமாஜத்தில் சேர்ந்து கொஞ்சம் காலம் இருந்தார். இப்பேர்ப்பட்டவருக்கு செங்கல்பட்டு தீர்மானத்தில் எது பட்டுக் கொண்டது என்பது நமக்கு விளங்கவில்லை.

நிற்க, திரு.கலியாணசுந்தர முதலியாரின் விஷயம் வரவர மிக இழிவான துறையில் போய்கொண்டிருக்கின்றது. இவருக்கும் திரு.சத்திய மூர்த்திக்கும் கடுகளவு வித்தியாசமாவது இருப்பதாகக் கண்டுபிடிப்பதற் கில்லை. ஆனால் முந்தினவர் மன்னிப்பு கேட்டு கொள்வார், இவரோ தான் சொல்லவில்லை என்று பொய் சொல்லிவிடுவார். இது இரண்டிலும் பிந்தினவர் குணமே மிகவும் இழிந்துரைக்கத்தக்கது. இவரும் தனது பத்திரி கையில் "நாயக்கர் எனது அன்பர் அவர் சிங்கக்குட்டி" என்று எழுதுவதும் திருவாளர்கள் பாவலர், குழந்தை, ஷாபி முதலிய ஆசாமிகளுடன் கூடிக் கொண்டு இழித்தன்மையில் விஷமப் பிரசாரம் செய்வதும், "சுயமரியாதை இயக்கம் நல்லதுதான்; ஆனால் அது ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்து கெட்டுப்போய் விட்டது" என்று சொல்லுவதும், ஜஸ்டிஸ் கக்ஷி நல்லதுதான்; ஆனால் அது சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து கெட்டுப்போய் விட்டது என்பதும், கூட்டத்தில் எங்காவது சிக்கிக் கொண்டால் பல்லை காட்டி கெஞ்சுவதும் தனது அறையில் இருக்கும்போது அவன் முட்டாள், இவன் எட்டன், படியாதவன் என்பதுமான முறையில் பேசுவதுமாய் நடந்து கொள்கின்றார். எனவே இம் மூவரும் சேர்ந்துதான் 'இந்திய நாட்டு தேசீய' காங்கிரசை காப்பாற்றுகின்றவர்களாக பறை அடித்துக் கொள்ளுகின்றவர்கள் என்பதை பொது ஜனங்கள் உணர ஆசைப்படுகின்றோம்.

நிற்க, ஆஸ்திகச் சங்கம் ஸ்தாபித்தவர்களும் அதன் மூலம் "கடவுளைக் காப்பாற்றவும் சமயங்களைக் காப்பாற்றவும் வேலை செய்கின் றோம்" என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டிருப்பவர்களுமான திருவாளர் கள் பாவலர், குழந்தை, ஷாபி சாயபு, ஜயவேலு, கல்யாணசுந்தர முதலியார் முதலிய கனவான்களுக்கு முதலாவது "கடவுள் பக்தியோ" "சமய" ஒழுக்க மோ நாணயமோ உண்டா என்பதை யோசித்துப் பாருங்கள். சிஷ்யர்களு டைய யோக்கியதை அறிய வேண்டுமானால் குருவின் யோக்கியதையி லிருந்து தெரிந்து கொள்ளலாம். இவர்களின் குருவான திரு. கல்யாணசுந்தர முதலியாரின் கடவுள் எது? அதற்கு கற்பிக்கப்பட்ட ஒழுக்கம் எது? என்று அவராவது மற்றும் யாராவது சொல்லமுடியுமா? அதுபோலவே திரு.முதலி யாருக்கு அவரது சமயம் எது? அதன் கொள்கைகள் எவை? அவற்றுள் அவர் பின் பற்றுவது எது? என்று அவராவது மற்றும் யாராவது சொல்லமுடியுமா என்று கேட்கின்றோம்.

திரு.முதலியார் சிஷ்யர்களில் ஒருவர், "நாயக்கருக்கு" ஒரு பகிரங்கக் கடிதம் எழுதி இருக்கிறாராம். அதாவது அதில் திரு.நாயக்கர் அந்த



சிஷ்யருடன் வாதுக்கு வரவேண்டுமாம், எதைப்பற்றி என்றால் திரு.நாயக்கர் வாதம் வியர்க்காத தோஷமுடையதாம். ஆதலால் "நாயக்கர்" இலக்கிய இலக்கண தர்க்க சமய சாஸ்திர அனுபவ ஞானம் இல்லாதவரென்று நிரூ பணம் செய்யத் தயாராயிருக்கின்றாராம். இதைத்தான் பத்திரிகைகளுக்கு பகிரங்கக் கடிதம் என்று எழுதி இருக்கின்றார்.

திரு. 'நாயக்கர்' தனக்கு இலக்கண இலக்கியம் தெரியுமென்று எப்போதாவது சொன்னாரா? தர்க்க சமர சாஸ்திரம் பார்த்திருப்பதாய் எப்போ தாவது சொன்னாரா? மனிதனுக்கு பகுத்தறிவு இருக்கின்றதா? இல்லையா என்றும், அந்த அறிவு என்ன சொல்லுகின்றது என்றும், தான் சொல்லுவது அந்த அறிவுக்குப் பொருத்தமானதா விரோதமானதா என்றும் தான் கேட்கின்றாரே ஒழிய வேறு என்ன? இதற்கு சமாதானம் சொல்ல முடியாமல் இலக்கணத்தில் வெல்லுவேன்; இலக்கிய சாஸ்திரத்தில் வெல்லுவேன்; அதுவும் "இலக்கிய இலக்கண தர்க்க சாஸ்திர பண்டிதர்" களான தமிழ் பேசத் தெரியாத திருவாளர்கள் ஏ. ராமசாமி முதலியாரும் தணிகாசலம் செட்டியாரும் தான் இதற்கு மத்தியஸ்தராயிருக்க வேண்டுமாம்.

எனவே இந்த அறிவாளிகளின் தீரத்தை வாசகர்களே உணர்ந்து கொள்ளலாம். இந்த 'பண்டிதர்களை' மத்தியஸ்தமாக வைத்துக் கொள்ளும் பண்டிதருக்கு எவ்வளவு இலக்கண இலக்கிய அனுபவ ஞானம் இருக்கும் என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

எனவே, இதிலிருந்தே ஆஸ்திக பிரசாரர்களின் அறிவு எவ்வளவு என்பதை உணர்ந்து கொள்ளலாம். ஆஸ்திகர்கள் தங்களின் காலித்தனத்தாலும் தேசத்துரோக பூச்சாண்டியாலும் நாஸ்திக பூச்சாண்டியாலும் சுயமரியாதை இயக்கத்தை அசைத்துவிட முடியாது என்பதையும், அசைக்கப் புறப்பட்டி ருப்பதாய்ச் சொல்லிக் கொள்ளும் நபர்களும் வெறும் கூலிக்கு மாரடிப்பவர் கள் என்றும் தெரிவித்து கொள்வதோடு இதற்காக சுயமரியாதைக்காரர்கள் மெனக்கெட்டு அவர்களுக்கு எதிர்பிரசாரம் செய்வதற்கென்று காலத்தை யும் எண்ணத்தையும் வீணில் செலவழிக்க வேண்டாம் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 24.03.1929**



RangaRakes tamilnavarasam.com

## ‘மித்திரன்’ புரட்டு
### நிருபர்களின் அயோக்கியத்தனம்

தஞ்சைக்கு அடுத்த திருவையாற்றில் 28-2-29 தேதியில் நடந்த பனகால் வாசகசாலைத் திறப்பு விழாவின்போது தஞ்சை உயர்திருவாளர். டி.வி. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் சொற்பொழிவு நிகழ்த்திய காலையில் சுயமரியாதை இயக்கத்தைத் தாக்கிப் பேசியதாகவும் ‘குடி அரசையும்’ ‘திராவிடனை’யும் படித்துப் பிள்ளைகள் கெட்டுபோகக் கூடாது என்று சொன்னதாகவும் இந்த ஊருக்குச் சுயமரியாதை இயக்கத்தார் வந்தால் அவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று சொன்னதாகவும், மற்றும் பல விபரீதமான விஷயங்கள் பேசியதாக சுதேசமித்திரன் ‘நிருபர்’ பெயரால் 4-3-29 தேதி ‘மித்திரனில்’ வெளியாயிருந்ததற்கு திரு.உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் மறுத்து தான் பேசாத விஷயங்களையும் நினைக்காத விஷயங்களையும் ‘மித்திரனில்’ எழுதி இருப்பதாகக் குறித்து ‘மித்திரன்’ யோக்கியதையை வெளியிட்டிருப்பதுடன் அன்று தான் பேசிய விஷயம் இன்னது என்பதையும் சென்ற மலரில் வெளியிட்டிருக்கின்றோம்.

எனவே சுயமரியாதை இயக்க விஷயத்தில் பார்ப்பனப் பத்திரிகைகளும் அதன் நிருபர்களும் அவர்களை நத்தித் திரியும் பார்ப்பனரல்லாத பத்திரிகைகளும் நிருபர்களும் எவ்வளவு இழிவாய் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதற்கு இதையும் ஒரு உதாரணமாய்க் கொள்ள வேண்டுகின்றோம்.

தவிர, திரு. பிள்ளையவர்களிடம் நமக்குக் குழந்தைப் பருவம் முதல் பழக்கமுண்டு அவர் சுபாவத்தில் தன்னை அடிக்கடி தாழ்த்திப் பேசிக் கொள்ளுகின்ற பெருமையான குணமுடையவர். மற்றவர்களிடம், உண்மையிலேயே குற்றம் கண்டு பிடித்தாலும் அதையும் தன்னைத் தாழ்த்திப் பேசிக் கொள்ளுவதன் மூலமே வெளிப்படுத்தவும் கண்டிக்கவும் ஆற்றலுடையவர். நாமறிந்தவரை அவர் அன்னியரை இகழ்ந்தோ தாழ்த்தியோ பேச நாம் கேட்டதில்லை.

இதைப் பற்றி நாம் ஏன் இங்கு இவ்வளவு எழுத நேரிட்டது என்பதைப் பற்றிச் சிலர் ஐயுறக் கூடும். (அதாவது பிள்ளையவர்கள் இனியாவது குற்றம் கூறாமலிருக்க வேண்டி நாம் அவரைப் புகழ்வதாகச் சிலர் கருதக் கூடும்) உண்மையில் நாம் அதைப் பற்றி (பிள்ளையவர்கள் வசவைப் பற்றி) கவலை



கொள்ளவில்லை. முதலாவது பிள்ளைக்கு வையத் தெரியாது. அப்படி மீறி எங்காவது இரவல் வாங்கிக் கொண்டு வைதாலும் எத்தனையோ பேரின் வசவை நித்தியமும் சகஸ்ர நாமமாகக் கொள்ளும் நமக்கு பிள்ளையவர்களின் வசவு அதிக பாரமாய் போய்விடாது. மற்றபடி என்னவென்றால் திரு.பிள்ளையவர்கள் ‘மித்திரன்’ கூற்றை மறுத்தெழுதிய தனிக்குறிப்பில் கண்டுள்ள விஷயமும் நமக்கும் பிள்ளைக்கும் பொதுவாழ்வு சம்மந்தமாக மாத்திரமல்லாமல் குடும்ப சம்மந்தமாகவும் பெரியோர்கள் காலம் முதல் 30, 40 வருஷமாக உள்ள நெருக்கமான பழக்கமும் மித்திரனின் பொய் நிருபத்தைக் கண்டு எம்மிருவர்களுடையவும் பல நண்பர்களுக்குள் அபிப்பிராய பேதம் நிகழ்ந்ததாகத் தெரிய வந்ததாலும் இக்குறிப்பு எழுத வேண்டியதாயிற்று.

**குடி அரசு - குறிப்புரை - 31.03.1929**



RangaRakes tamilnavarasam.com

# வட ஆற்காட்டை மற்ற ஜில்லா போர்டுகள் பின்பற்றுமா?

வடஆற்காடு ஜில்லா போர்டின் 27-3-29 ஆம் தேதி மீட்டிங்கில் ஜில்லா போர்டின் ஆதிக்கத்தில் உள்ள பள்ளிக்கூட உபாத்தியாயர்களில் 100-க்கு 80 உபாத்தியாயர்களைப் பார்ப்பனரல்லாதார்களாகப் பார்த்து நியமிக்க வேண் டும் என்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பெற்றிருக்கின்றது. அந்த மீட்டிங்கில் நான்கு பார்ப்பன கனவான் மெம்பர்கள் இருந்து விவாதத்தில் கலந்து எதிர்த்துப் பேசி கடைசியாக தீர்மானத்திற்கு சாதகமாகவே தங்கள் ஓட்டுகளையும் கொடுத்தது பாராட்டத்தக்கதாகும்.

வடஆற்காடு ஜில்லாபோர்டு பிரசிடெண்டவர்கள் பார்ப்பனர்களுக்கு வேண்டியவர் என்று சிலர் சொல்லுவதுண்டு. இந்தத் தீர்மானத்தில் நாலு பார்ப்பன மெம்பர்களும் தீர்மானத்திற்கு அனுகூலமாய் ஓட்டு செய்திருப் பதாகத் தெரிவதிலிருந்து பிரசிடெண்டு திரு.நாயுடுகாரு அவர்கள் பார்ப்பனர் களுக்கு வேண்டியவராயிருந்ததின் உண்மையை வெளிப்படுத்திவிட்டார் போலும், இதிலிருந்து திரு. நாயுடுகாரு பார்ப்பனர்களுக்கு வேண்டியவரா? பார்ப்பனர்கள் திரு. நாயுடுகாருக்கு வேண்டியவர்களா? என்பதையும் பொது ஜனங்கள் ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

நிற்க, வட ஆற்காடு ஜில்லா போர்டை மற்ற ஜில்லா போர்டு பின் பற்றுமா என்று அறிய ஆசையுடையவர்களாயிருக்கின்றோம்.

**குடி அரசு - வேண்டுகோள் - 31.03.1929**



# நமது மந்திரிகள்

சென்னை அரசாங்க மந்திரிகளின் பெருமைகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் சுருக்கமாக ஒரு வார்த்தையில் விளங்கவைத்துவிடலாம். அதென்னவென்றால், மந்திரிகள் மூவரும் பொதுஜன நன்மைக்கு விரோதிகளான பார்ப்பனர்களால் வெறுக்கப்பட்டவர்கள்.

எனவே இவர்கள் பார்ப்பனரல்லார்களுக்கு எப்படிபட்டவர் களாய் இருக்கின்றார்கள் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

ஏனெனில், பொது ஜனங்களின் நன்மைக்கு நடுநிலையில் இருந்து பாடுபடுபவர்களோ வேலை செய்கின்றவர்களோ அவர்களுக்கு உதவி செய் கின்றவர்களோ ஆகிய எவரும் பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளைகளாய் இருக்க முடியவே முடியாது. அதுபோலவே பார்ப்பனர்களால் மதிக்கப்பட்ட- புகழப்பட்ட- எவரும் பொது மக்களுக்கு 'துரோகம்' செய்யாதவர்களாக இருக்க முடியவே முடியாது. இது இன்றைய அனுபவமாக மாத்திரம் இல்லாமல் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கண்ட முடிவும் இதுவாகவேதான் விளங்குகின்றது. இன்றைய தினம் யார் யார் பார்ப்பனர்களால் வையவும் தூற்றவும் படுகின்றார்களோ அவர்களில் அநேகமாய் எல்லோருமே பொதுஜனங்களின் நன்றியறிதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவர்களாக இருப்பதை அனுபவத்தில் காண்கின்றோம். அதிகாரிகளில் கூட ஏறக்குறைய யோக்கியப் பொறுப்பும் நாணயப் பொறுப்பும் ஒழுக்கப் பொறுப்பும் இல்லாத வெள்ளையர்கள் யார் யார் ஹைகோர்ட் ஜட்ஜி முதல் போலீஸ் சேவகன் வரை உள்ள உத்தியோகங்களில் உண்டோ அவர்கள் எல்லோரும் இன்றைய தினம் பார்ப்பன பத்திரிகைகளிலும் பார்ப்பன மேடைகளிலும் புகழப் படுவதோடு அநேகமாய் அப்படிப்பட்ட வெள்ளையர்களின் படங்கள் பார்ப் பனர்களின் படுக்கை வீடுகளிலும் தொங்கிக் கொண்டிருப்பதையும் காணலாம்.

வெள்ளைக்காரர்கள் விஷயங்களே இப்படியானால் இந்தியர்கள் விஷயத்தில் அவர்கள் எப்படி நடந்து கொள்ளுவார்கள் என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டுமா?

சென்ற தேர்தலின் போது பார்ப்பனரல்லாதார் கட்சி வெற்றி பெறுவது கஷ்டமாயிருக்கும் என்கிறதும் பார்ப்பனர்களுக்கும் அவர்களது அடிமை களுக்கும் தான் வெற்றியேற்படக் கூடும் என்கின்றதுமான சந்தேகம் நமது



RangaRakes tamilnavarasam.com

கவர்னர் துரையான லார்ட் கோஷனுக்குத் தோன்றியவுடன் அவர் வகுப்புவாதம் கூடாது; அதனால் தேசத்துக்கு நன்மையில்லை என்று சொன்னார். அந்தப்படி அவர் சொன்னவுடன் அவரைப் பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் புகழ்ந்ததற்கு அளவே இல்லை, அந்த சமயத்தில் நாம் கோஷன் பிரபுவை பலமாக கண்டித்தோம். அதோடு 'அவர் மீது நம்பிக்கை இல்லை' என்றும் 'அவரைத் திருப்பி அழைத்து கொள்ள வேண்டும்' என்றும் கோயமுத்தூர் மகாநாட்டில் தீர்மானமும் கொண்டுவந்து பலர் வேண்டுகோளின் பேரில் 'திருப்பி அழைத்துக் கொள்ளவேண்டும்' என்பதை விட்டுவிட்டு 'நம்பிக்கை இல்லை, என்கின்ற பாகத்தை ஏகமனதாக நிறைவேற்றினோம். அந்தக் காலத்தில் இந்தப் பார்ப்பன பத்திரிகைகள் திரு.கோஷன் பிரபுவை வானமளாவப் புகழ்ந்ததுடன் அவருக்கு இந்தப் பார்ப்பனர்கள் சங்கராச்சாரிக்கு செய்யும் உபசாரம்போல் உபசாரம் செய்தார்கள். கோஷன் பிரபுவும் இப்பார்ப்பனர்களை நம்பிக் கொண்டு கோவைத் தீர்மானத்தை பற்றி பரிகாசமாய் நினைத்து கொண்டு "இனி நான் மூட்டை முடிச்சுகளுடன் கப்பலேறத் தயாராய் இருக்கவேண்டியது தானா" என்று இறுமாப்பாய் பேசினார். ஆனால் வெகுசீக்கிரத்தில் உண்மை நிலை உணரப்பட்டு தனது தப்பிதத்திற்காக வருந்த வேண்டியும் ஏற்பட்டு கிரமமாய் நடந்து கொள்ள வேண்டிய அவசியத்தையும் உணர்ந்தார். இந்த நிலை ஏற்பட்டவுடன் மறுபடியும் பார்ப்பனர்களால் வழக்கம்போல் தூற்றவும் பட்டார்.

எனவே யோக்கியமாகவும் நாணயமாகவும் நடக்கக் கூடிய யாரும் பார்ப்பனர்களால் மதிக்கப்பட முடியவே முடியாது. அதுபோலவே நமது மந்திரிகளும் பார்ப்பனதாசர்களாய் இருந்தால் மாத்திரம் தான் பார்ப்பனர்களாலும் அவர்களது கூலிகளாலும் புகழப்படுவார்கள் சற்று கோணலாக நடக்க ஆரம்பித்துவிட்டால் உடனே அவர்களை தூற்ற ஆரம்பித்து விடுவார்கள். அன்றியும் அவர்களை ஒழிப்பதற்கும் எவ்வளவு இழி தொழிலில் வேண்டுமானாலும் இறங்கி வேலை செய்யத் துணிந்துவிடுவார்கள், மற்றபடி ஒழுக்கமோ நாணயமோ ஆகியவற்றைப் பற்றி ஒரு சிறிதும் கவலை கொள்ளமாட்டார்கள்.

## கனம் சேதுரத்னமய்யர்

உதாரணமாக இன்றைய மந்திரிகளில் ஒருவரான கனம் சேதுரத்தினமய்யர் அவர்களிடம் பார்ப்பனர்கள் என்ன குற்றம் கண்டுபிடித்துவிட்டார்கள்? அவருடைய ஆட்சியில் ஒரு பார்ப்பனன் கூட இதுவரை குற்றம் சொல்ல முன் வந்ததாகச் சொல்லமுடியாது. அப்படி இருக்க பிராமண மகாநாட்டில் கனம் சேதுரத்தினமய்யர் மந்திரி வேலை ஒப்புக் கொண்டதற்காக கண்டித்து ஒரு தீர்மானம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதே உத்தியோகம் திரு.வி.சி. வெங்கிட்டரமணய்யங்காரோ அல்லது திரு. கே.ஆர். வெங்கட்ராமய்யரோ ஒப்புக் கொண்டிருந்தால் அவரை வானமளாவப் புகழ்ந்து திரிவார்கள்.



## கனம் முத்தையா முதலியார்

தவிர கனம் முத்தையா முதலியாரவர்களைப் பற்றியும் பார்ப்பனப் பத்திரிகைகள் தூற்றுவதும் பழிசுமத்துவதும் கூலிகளைவிட்டு விஷமப் பிரசாரம் செய்யச் செய்வதும் கணக்கு வழக்கில்லை. இதுவரையில் பார்ப்பனர்கள் அவர்மீது குறிப்பிட்டு என்ன குற்றம் சொன்னார்கள் என்று பார்த்தால் ஒன்றையுமே காணோம். காங்கிரசைத் துரோகம் செய்ததாக சொல்வதானாலும் "இதே குற்றம் செய்த" திரு கனம் சேதுரத்தனமய்யரவர்கள் மீது இதைப்பற்றி ஒன்றுமே சொல்வதைக் காணோம்.

நிற்க, கனம் முத்தையா முதலியார் அவர்கள் சென்னைக் காங்கிரஸ்காரர்கள் மந்திரி சபை அமைத்த காரியமான 'பெருந்துரோக'த்தைப் பற்றி காங்கிரசில் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்பாரற்று போனதினாலும் அந்த துரோகங்கள் காங்கிரசினால் ஆதரிக்கப்பட்டதினாலும் அவர் காங்கிரஸ் தீர்மானத்தின் உண்மையான கருத்தை உணர்ந்து அதன்படி நடந்து கொண்டார் என்றுதான் சொல்ல வேண்டும். மற்றபடி அவர் மந்திரி உத்தியோகத்தில் பார்ப்பனர்களுக்கு என்ன கெடுதி செய்து விட்டார் என்று பார்த்தால், உத்தியோகங்களில் பார்ப்பனர்களுடைய ஏகபோக உரிமைக்கு ஆபத்தை கொண்டுவந்து விட்டுவிட்டார். அதாவது அவரது இலாகாவில் உள்ள உத்தியோகங்கள் எல்லா வகுப்பாருக்கும் கிடைக்கும்படி செய்துவிட்டார். இது பார்ப்பனர்களுக்கு பெரிய ஆபத்தான காரியம். ஏனென்றால் இந்த உத்திரவு மாத்திரம் எல்லா இலாக்காக்களிலும் சரியாக அமுலுக்கு கொண்டு வரப்பட்டு விடுமானால் இனி 10 வருஷத்தில் 'பார்ப்பான் உயர்ஜாதி' என்கின்ற பேச்சே கண்டிப்பாய் இல்லாமல் போய்விடும். இன்றைய தினம் நமது நாட்டில் உள்ள அரசியல் இயக்கத்தின் தத்துவம்கூட பார்ப்பன ஆதிக்கத்தையும் பார்ப்பான் உயர்ந்தவன் என்பதையும் நிலை நிறுத்தவே ஒழிய மற்றபடி ஜனங்களுக்கு ஒரு காதொடிந்த ஊசியளவு நன்மைக்குமல்ல என்பதோடு அவற்றால் அநேக ஆபத்துகளும் உண்டாகி வருகின்றது என்பது சத்தியமான விஷயம். எனவே அப்பேர்ப்பட்ட காரியத்தின் தலையில் கனம் முதலியார் கை வைத்து விட்டதோடு, மது விலக்குப் பிரசாரம் செய்யவும் 4 லக்ஷம் ரூபாயும் வைத்துவிட்டதின் மூலமும் பார்ப்பனர்களின் சூழ்ச்சிக்கு இடமில்லாமல் போய்விட்டதால் பார்ப்பனர்கள் எப்படியாவது அவரை ஒழித்து மறுபடியும் சட்டசபைக்கும் மந்திரி பதவிக்கும் வரவொட்டாமல் தடுத்து அவர் செய்த வேலையையும் அழித்து மறுபடியும் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திகொள்ள வேண்டியது பார்ப்பன வேதத்தின் கட்டளையாகிவிட்டது. ஆதலால் அவர்கள் தூற்ற வேண்டியவரும் பொது ஜனங்கள் போற்ற வேண்டியவருமாய் விட்டார்.

## கனம் சுப்பராயன்

அதுபோலவே கனம் திரு.சுப்பராயன் அவர்கள் மீதும் பார்ப்பனர்



RangaRakes tamilnavarasam.com

களுக்கு ஆத்திரம் இருப்பதில் அதிசயமில்லை. அது மாத்திரமல்ல கனம் முத்தையா முதலியாரவர்கள் மீது உள்ள ஆத்திரத்தைவிட அதிகமான ஆத்திரம் கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் மீது இருக்கப் பல காரணங்கள் உண்டு. ஏனென்றால் கனம் சுப்பராயன் அவர்களின் இடுப்பில் கயிறுகட்டி தங்கள் இஷ்டப்படி ஆட்டலாம் என்று நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் ஒத்துழையாதாரான திரு.சி. ராஜகோபாலாச்சாரி, கிழ தேசீயவாதியான திரு. சி. விஜயராகவாச்சாரி, சர்.சி.பி.ராமசாமி அய்யர் ஆகிய இவ்வளவு பேராலும் மற்றும் அரசாங்கத்தை "முட்டுக்கட்டை போடுவதன் மூலம் பணியச்செய்யச் செய்பவர்களான தேசீயவாதிகளும்" சுயராஜியக் கக்ஷியாரும் காங்கிரஸ் காரருமான இவ்வளவு பார்ப்பனர்களாலும் பிரதிஷ்டை செய்து கும்பா பிஷேகம் செய்யப்பட்ட ஒரு மந்திரியானவர், கனம் முத்தையாவைவிட ஆபத்தான காரியத்தில் பார்ப்பனர்களின் தலையில் கையை வைக்கத் தொடங்கிவிட்டதால் இனி ஒன்றா, அவரை மறுபடியும் எந்த விஷத்திலாவது தங்கள் சுவாதீனம் செய்து கொள்ளப்பார்க்க வேண்டும். அல்லது அவரையும் சட்டசபைக்கு வராமலும் மந்திரியாகாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். இந்த இரண்டில் ஒன்று இல்லாவிட்டால் ஆபத்துத்தானென்பதில் சிறிதும் அவர்களுக்குச் சந்தேகமில்லை. ஏனெனில் கனம் முத்தையாவோ உத்தி யோகத்தின் வாயில் மண்ணைப் போட்டார் என்றால், கனம் டாக்டர் சுப்ப ராயனோ அடியோடு அவர்கள் பஞ்சாங்கப் பிச்சைப் பிழைப்பிலும்கூட மண்ணைப் போட்டுவிடப் பார்க்கின்றார். அவர்களின் உபன்யாசங்க ளிலிருந்தும் மற்றும் செங்கல்பட்டு சுயமரியாதை மகாநாட்டைப் பற்றி சட்டசபையில் பார்ப்பனக் கூலிகளாகிய திரு.முத்துரங்கம் கம்பனியார்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு கனம் சுப்பராயன் அவர்கள் சொன்ன மறு மொழிகளிலிருந்தும் பார்ப்பனர்களுக்கு கனம் சுப்பராயனை விட கனம் முத்தையாவே சற்று தேவலாம் என்று நினைக்கும்படியாக ஏற்பட்டுவிட்டது. என்னவென்றால், முதலாவது "கல்வி விஷயத்தில் இனி உயர்தரக் கல்விக்கு நான் அதிகம் பணம் செலவழிக்க மாட்டேன்" என்றும் "ஆரம்பக் கல்விக்குதான் செலவு செய்யவேண்டும்" என்றும் "கூடிய சீக்கிரத்தில் சென்னை மாகாணத்தில் படியாத மக்களே இல்லை என்று சொல்லும் படியாக செய்துவிடுவேன்" என்றும் சொல்லி இருக்கின்றார். மறுபடியும் "கல்வி என்பதில் ஜாதி வித்தியாசத்தையும் பிறவியில் உயர்வு தாழ்வு என்கின்ற வித்தியாசத்தையும் ஒழிப்பதுதான் முக்கியமான கல்வி" என்றும் "அதைச் செய்யும் முறையில் கல்வியை திருப்பப் போகின்றேன்" என்றும் சொல்லி இருக்கின்றார், "ஆரம்பக் கல்விக்கு பெண்மக்களையே உபாத்தியாயர்களாக இருக்க ஏற்பாடு செய்யப் போகின்றேன்" என்றும் சொல்லி இருக்கின்றார். பெண்களுக்கு பூரண உரிமை அளிக்கபோவதாயும் சொல்லி இருக்கிறார். கிராமப்புனருத்தாரண வேலைப் பிரசாரம் என்பதில் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதும் சேர்ந்தது என்றும் சொல்லி இருக் கின்றார், அதோடு மாத்திரமல்லாமல் சமுதாய விஷயத்தில் பார்ப்பனரின்



ஆதிக்கமும் மூடநம்பிக்கையும் ஒழிந்தால்தான் அரசியலிலும் அன்னிய ஆதிக்கமும் மூடநம்பிக்கையும் ஒழியும் என்றும் சொல்லிவிட்டார்.

எனவே இந்த மந்திரிகள் தங்களை ஜஸ்டிஸ் கட்சியார் என்று சொல்லிக் கொள்ளாவிட்டாலும் 6 வருஷகாலம் மந்திரியாயிருந்தும் 5500 ரூபாய் வீதம் சம்பளம் வாங்கி வந்தவரும் தற்காலம் ஜஸ்டிஸ் கட்சிக்கு சட்டசபையில் தலைவராயிருப்பவருமான ஜஸ்டிஸ் கட்சியான மந்திரி சர்.ஏ.பி. பாத்ரோவை விட மேலானவர்கள் என்று மாத்திரம் சொல்வ தோடல்லாமல் முடிவாகச் செய்ய வேண்டிய வேலையின் பக்கம் திரும்பி விட்டார்கள் என்றே சொல்லவேண்டும்.

நிற்க, இவர்களில் கனம் முத்தையா அவர்கள் தான் செய்ய வேண்டிய காரியங்களை காரியத்தில் செய்து காட்டி விட்டார்கள். கனம் டாக்டர் சுப்ப ராயனவர்களின் திட்டங்கள் வாய் வார்த்தைகளில் இருக்கின்றன. ஆனாலும் இனியும் அவருக்கு இந்தத் தடவை 8 மாத காலம் சாவகாசமிருக்கிறது. இந்த 8 மாதத்தில் அவர்கள் உத்தேசங்களைக் கூடுமான அளவு காரியத்தில் கொண்டு வந்துவிடுவார் என்றே நினைக்கின்றோம்.

அதாவது பெண்கள் போதனை முறைப் பள்ளிக் கூடங்கள் தாராள மாய் ஏற்படுத்தப்பட வேண்டும். விதவைகள் பள்ளிக்கூடங்கள் சென்னைக்கு வெளியிலும் மதுரை, கோயமுத்தூர், வேலூர் ஆகிய ஜில்லாக்களின் தலைமை ஸ்தானங்களிலோ இடவசதியான ஸ்தானங்களிலோ ஏற்படுத்தி அவர்களை வெகுசீக்கிரத்தில் உபாத்தியாயினிகளாக ஆக்கிவிட வேண்டும். தீண்டப்படாத மக்கள் என்பவர்களின் மக்கள் படிப்புக்கும் உணவுக்கும் புஸ்தகங்களுக்கும் சர்க்காரிலேயே செலவு செய்து படிப்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதற்காக சில இடங்களில் போர்டிங் ஸ்கூல் ஏற்படுத்த வேண்டும்.

மதச் சம்மந்தமான இலாகாவிலும் தீண்டாமை ஒழிய சட்டத்தின் மூலமாகவோ அல்லது ஒரு மகாநாடு கூட்டி எல்லோருடைய சம்மதத்தின் மூலமாகவோ அல்லது அதைப்பற்றி பொதுஜன அபிப்பிராயம் தெரிய ஒரு கமிட்டி நியமித்து அந்த ரிப்போர்ட்டின் மீதிலோ ஏதாவது விதாயம் செய்ய வேண்டும். இன்னும் இது போன்ற அநேக காரியங்கள் இருந்தாலும். சிலவற்றையாவது இக்காலாவதிக்குள் செய்ய வேண்டும். கல்வி, பெண் மக்கள், தீண்டப்படாதார் ஆகிய இம்மூன்று விஷயங்களிலும் அவசரமாக முதலில் ஏதாவது செய்ய வேண்டியது மிகவும் அவசியமானதாகும். வாய்ப்பேச்சில் பலனில்லை.

திரு. காந்தி கூட தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று வாயினால் சொல்லி 'மகாத்மா' ஆனார். மகாத்மா பட்டம் நிலைத்ததும் 'வருணாசிரம தருமம்' இருக்கவேண்டும். பிறவியில் ஜாதி வித்தியாசம் உண்டு. அவனவன் ஜாதித் தொழிலையே அவனவன் செய்து தீரவேண்டும். அந்தப்படி



RangaRakes tamilnavarasam.com

செய்யாதவன் கீழ்ஜாதிக்காரன் ஆகிறான் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். எனவே கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் அது போலில்லாமல் மீதி உள்ள 8 மாதக் காலத்தில் தைரியமாக காரியத்தில் ஏதாவது செய்து தீரவேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். தீண்டாதவர்கள் எனப்பட்டவர் களுக்கு தனி தேர்தல் தொகுதியையும் சீக்கிரத்தில் கொடுக்கவேண்டியதும் மிக அவசியமாகும்.

அன்றியும், இந்தப்படி செய்துவிட்டால் அடுத்த தேர்தலுக்கு எந்த கக்ஷியின் பெயரையும் சொல்லிக் கொண்டு நிற்க வேண்டிய அவசியமும் இருக்காது. அப்படி சொல்லிக் கொண்டு நிற்கவும் வேறு யோக்கியமான கக்ஷியையும் காணோம். ஆதலால் சமுதாயச் சீர்திருத்த சம்மந்தமான கொள்கையின் பேரிலேயே தேர்தலுக்கு நிற்கலாம். அதற்கேற்றாற்போலவே மக்களும் அது சம்மந்தமான கொள்கைகளுக்கு மாத்திரமே ஓட்டுக் கொடுக்கும் நிலைமைக்கு வந்து கொண்டு இருக்கின்றார்கள். ஆதலால் அந்தக் கொள்கையின் மீதே கூடிய சீக்கிரத்தில் தேர்தலிலும் வெற்றிபெற்று அரசாங்கத்தையும் நடத்தக் கூடிய நிலைமையை சீர்த்திருத்தக்காரர்கள் அடையலாம் என்றே உறுதிக் கொண்டிருக்கின்றோம்.

எனவே, இந்தத் தடவையில் நமது மந்திரிகள் பொதுவாக சமுதாய விஷயத்தில் சரித்திரத்தில் குறிப்பிட்டுப் பாராட்டத்தக்க அளவு வேலைகள் செய்திருக்கின்றார்கள் என்றே சொல்ல வேண்டும். கனம் டாக்டர். சுப்பராயன் அவர்களால் குறிப்பிடப்பட்ட வேலைகள் எல்லாம் நிறைவேறுமானால் இந்த மாகாணத்தில் நாம் செய்ய வேண்டிய வேலைகள் தீர்ந்தது என்று சொல்லி விட்டு வேறு மாகாண சட்டசபைகளையும் கைப்பற்றி அங்கு வேலை செய்யப் போய்விடலாம் என்றே சொல்லலாம். ஏனெனில் இந்தத் தடவை மந்திரிகளுக்கு எதையும் செய்வதற்குத் தக்கபடி தாராளமாக ஆதரவு இருந்திருக்கின்றது; இருந்தும் வருகின்றது. ஆதலால் மீதி நாட்களை வீணாக்காமல் துரிதத்தில் குறிப்பிட்ட வேலைகளைச் செய்ய வேணுமாய் விரும்புகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 31.03.1929**



# இனியாவது புத்திவருமா? இந்திய சட்டசபையில் பார்ப்பனர்களின் விஷமம்

'சுதேசமித்திரன்' 'இந்து' பத்திரிகைகளின் பத்திராதிபரும், தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி ஜில்லா மக்களுக்கு இந்திய சட்டசபை பிரதிநிதி மெம்பரும், காங்கிரஸ் காரியதரிசியாயிருந்தவரும் இந்தியாவின் 33 கோடி பொது மக்களுக்கு சுயராஜியம் வாங்கிக் கொடுக்க "உயிர் விட்டுக் கொண்டு" பத்திராதிபராயிருப்பதில் மாதம் 2000 ரூபாய் சம்பாதிப்பவருமான திரு. எ. ரங்கசாமி அய்யங்கார் என்னும் பார்ப்பனர் இந்திய சட்டசபையில் சென்னை மந்திரி திரு.முத்தையா முதலியார் விஷயமாக சில கேள்விகள் கேட்டாராம். அதாவது சென்னை சுகாதார மந்திரி ரிஜிஸ்ட்ரேஷன் இலாகாவில் உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்துவதில் வகுப்பு வாரி உரிமை ஏற்படுத்தியிருப்பது இந்திய அரசாங்கத்திற்கு தெரியுமா? அது சட்ட விரோதமல்லவா? அதனால் அரசாங்கத்தார் மீது மக்களுக்கு பெரிய அதிருப்தி ஏற்பட்டிருப்பது தெரியுமா? அதைப்பற்றி இந்திய அரசாங்கத்தார் விசாரித்து அந்த உத்திரவை ரத்து செய்ய முடியுமா? என்பது பொருளாக பல கேள்விகள் கேட்டாராம்,

இதற்கு பதில் சொல்லும் சமயத்தில் சென்னை மாகாண பார்ப்பன ரல்லாத ஒரே ஒரு பிரதிநிதி (திரு.ஆர்.கே. ஷண்முகம்) தவிர மற்ற எல்லோரும் பார்ப்பனர்களானதால் யாரும் ஒன்றும் பேசாமல் கேள்விக்கு அனுகூலமா யிருந்தார்களாம். அரசாங்க மெம்பர் பதில் சொல்லுகையில் இதைப் பற்றி தனக்கு ஒன்றும் தெரியாதென்றும் சென்னை அரசாங்கத்தை விவரம் கேட்டுப் பதில் சொல்லுவதாயும் சொல்லிக் கொண்டிருக்கும் போது திரு. ஆர்.கே.ஷண்முகம் அவர்கள் எழுந்து அதைப்பற்றி சர்க்கார் மீது யாருக்கும் அதிருப்தி இல்லையென்றும் மேலும் அநேகருக்கு திருப்தி என்றும் சொன்னாராம். உடனே திரு.எ.ரங்கசாமி அய்யங்கார் இது உண்மை யல்ல என்றாராம். உடனே திரு.ஷண்முகம் எழுந்து 'சென்னை சட்டசபையில் இதைப்பற்றி விவாதம் கிளப்பி அங்கத்தினர்கள் எல்லோராலும் வகுப்புவாரி உரிமை ஒப்புக் கொள்ளப்பட்டும் அநேக பொதுக்கூட்டங்களில் அரசாங்கத் தையும் மந்திரிகளையும் ஆதரித்தும் பாராட்டியும் தீர்மானங்களும் செய்யப் பட்டும் இருக்கின்றது' என்று சொன்னாராம். இந்த சமயம் அரசாங்க



RangaRakes tamilnavarasam.com

மெம்பரும் சட்டசபை மெம்பர்களும் அய்யங்கார் முகத்தைப் பார்த்தார் களாம். அய்யங்கார் முகம் பூமியை பார்த்ததாம். உடனே அரசாங்க மெம்பர் எழுந்து நல்ல சமயத்தில் தனக்கு இந்த விஷயத்தை எடுத்துச் சொல்லி உதவி செய்ததற்காக திரு. ஷண்முகத்திற்கு வந்தனம் செலுத்துவதாய்ச் சொன்னா ராம். இந்திய சட்டசபை அங்கத்தினர்கள் கைத் தட்டினார்களாம்.

இவற்றை அசோசியட்பிரஸ் பிரீபிரஸ் பிரதிநிதியும் பார்த்து கொண்டே இருந்தும் கூட இதை எந்தப் பத்திரிகைக்கும் தெரியப் படுத்தவே யில்லை. எனவே பார்ப்பன ஆதிக்கம் பத்திரிகைகளுக்கு விஷயங்கள் அனுப்புவதில் எவ்வளவு அயோக்கியத்தனம் செய்கின்றது என்பதை இதிலிருந்தே அறிந்து கொள்ளலாம். அன்றியும் இந்திய சட்டசபை ஸ்தானங் களை பெரிதும் பார்ப்பனர்களே கைப்பற்றி இருப்பதால் அவர்களால் நமக்கு எவ்வளவு துரோகங்கள் நடைபெறுகின்றது என்பதையும் தெரிந்து கொள்ள லாம். இனியாவது இந்திய சட்டசபை ஓட்டர்களுக்கு புத்திவருமா?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 31.03.1929**



## பரோடா சமஸ்தானத்தில் கல்யாண ரத்து மசோதா

செங்கல்பட்டு சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்களுக்குப் பிறகு உலகமே முழுகிப் போய்விட்டதாக தமிழ்நாட்டில் சில அழுக்கு மூட்டைகள் போடும் கூச்சல்களையும் இதைப் பார்ப்பனர்கள் தங்கள் தேர்தலுக்கு ஒரு ஆதாரமாய் வைத்துக் கொண்டு கூலிகளையும் காலிகளையும் விட்டு கூப்பாடு போடச் சொல்வதையும் பொது ஜனங்கள் கவனித்திருக்கலாம். அத் தீர்மானங்களில் மிகவும் ஆபத்து என்று சிலரால் கருதப்பட்ட கல்யாண ஒப்பந்த ரத்து தீர்மானத்தைப் பற்றி வெளிப்படையாய் பேசுவதற்கு தைரிய மில்லாத சில பயங்கொள்ளிகள் இரகசியமாக விஷமப் பிரசாரம் செய்வதும் பலர் அறிந்திருக்கலாம்.

ஆனால், செங்கல்பட்டு தீர்மானத்தை அமுலுக்கு கொண்டுவர பரோடா அரசாங்கத்தார் முந்திவிட்டார்கள் என்பதாக 29-3-29 -ந் தேதி 'இந்து' 'சுதேசமித்திரன்' 'சுயராஜ்யா' 'ஜஸ்டிஸ்' முதலிய பத்திரிகைகளில் காணப்படுகின்றது. அதாவது பரோடா சமஸ்தானத்தில் நடந்த- இனி நடக்கப் போகும் கல்யாணங்கள் எவையாயினும் அவற்றை தம்பதிகள் இஷ்டப்பட்ட போது ரத்து செய்து கொள்ளலாம் என்பதாக ஒரு மசோதா கொண்டு வரப்பட்டிருக்கின்றது. அதை கொண்டுவந்தவர்கள் அம் மசோதாவின் ஒவ்வொரு பிரிவுக்கும் "சாஸ்திர" ஆதாரங்களை காட்டியிருக்கின்றார்களாம். இனி இதைக் கேள்விப்படும் தமிழ்நாட்டுக் கிணற்றுத் தவளைகள் பெண்களை "காப்பாற்ற" 'பரோடா சமஸ்தானத்திற்கு ஓடுவார்களா? அல்லது இங்கேயே மூலையில் உட்கார்ந்து கொண்டு "பெண்ணின் பெருமையை" பேசிக் கொண்டு வயிறு வளர்ப்பார்களா? என்பது பொறுமையுடன் எதிர்பார்க் கப்பட வேண்டிய விஷயமாகும். பெண்களின் சுதந்திரத்திற்கு முதலாவது அவர்களுக்கு கல்யாண ஒப்பந்தத்தை ரத்து செய்து கொள்ளும் உரிமை அளிப்பதே முக்கியமானதாகும். இது விஷயமாய் நமது செங்கற்பட்டுத் தீர்மானத்திற்குப் பிறகு அமெரிக்காவில் இம்முறை சில பாகங்களில் நடைபெறுவதையும், ஜர்மனி பார்லிமெண்டில் ஒரு மசோதா கொண்டுவந்தி ருப்பதையும், ஜப்பான், பிரான்ஸ், இட்டாலி, ஸ்காண்டிநேவியா, ஜெக்கோஸ் லோவியா, ஹாலண்டு, நியூஜிலந்து, ரஷ்யா, டென்மார்க், கனடா முதலிய தேசங்களிலும் கல்யாண ரத்துக்கனுகூலமாக உள்ள சட்டங்களையும்



RangaRakes tamilnavarasam.com

ஆதாரமாக எடுத்துக் காட்டி பரோடா சட்டசபையில் ஒரு மசோதா கொண்டு வந்திருப்பதையும் பார்த்துவிட்டோம். இனியும் நமது தமிழ் நாட்டிலும் பழந்தமிழ் மக்களில் ஏறக்குறைய அநேக வகுப்புகளில் இவ்வழக்கம் இன்றும் இருந்து வருவதையும் நடைபெற்று வருவதையும் பார்க்கின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 31.03.1929**



# சென்னையில் சுயமரியாதைத் திருமணம்

நான் மணமக்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று விரும்பு கின்றார்கள். ஆசீர்வாதம் செய்யும் வழக்கம் என்ன என்பதைப் பற்றி யோசித் ததில் இப்பொழுது வழக்கத்தில் ஆசீர்வாதம் செய்கின்ற மாதிரியானது, சிறிதும் பொருளற்றது என்பதோடு, நம்மிடம் பிச்சை வாங்கி உண்பவர்கள் தங்கள் வயிறு வளர்ப்பதற்காகச் செய்யும் காரியமாக இருக்கிறபடியால், இம்முறையில் ஆசீர்வாதம் செய்வது என்பது எனக்கு இஷ்டமில்லாத காரியமாகும். ஏனெனில் ஆசீர்வாதம் செய்யும்படி விரும்புகின்றவர்களும் எதிர்பார்க்கின்றவர்களும் இவ்வாசீர்வாதத்தால் உண்மையான பலனை எதிர்பார்க் கின்றார்கள். ஆனால் ஆசீர்வாதம் செய்கின்றவர் ஆசீர்வாதம் செய்யப் படுகின்றவர்களைப் பற்றி ஒரு கவலையுமில்லாமல் ஆசீர்வாதம் செய்வது என்பதை ஒரு பெருமையாக நினைத்து, தமக்கும் மற்றவர் களுக்கும் பொருள் விளங்காத ஏதோ ஒன்றின் மீது பழியைப் போட்டு அது உன்னைக் காப்பாற்றட்டும் இது உங்களைக் காப்பாற்றட்டும் என்று கை காட்டிவிட்டுப் போவதில் யாதொரு பலனும் இல்லை. அதுவும் இதுவும் மணமக்களை காப்பாற்ற ஆசீர்வாதம் செய்பவருடைய தயவு வேண்டிய தில்லை. அப்படிக் காப்பாற்றும் ஒரு வஸ்துவோ, அல்லது ஒரு சக்தியோ வேறு ஒருவர் காப்பவருக்கும் காக்கப்படுபவருக்கும் இடையில் தரகரா யிருந்து வக்காலத்துப் பேச வேண்டியதுமில்லை. அன்றியும் அப்படிக்காக்க வல்லமையுள்ள பொருளோ சக்தியோ மத்தியில் வக்கீலையும் தரகரையும் எதிர்பார்க்காது. ஆதலால் அந்த முறை அசட்டு முறை என்பதுதான் எனது அபிப்பிராயம். ஆனால் இப்படி ஒரு வழக்கம் ஏன் இருக்கிறது? என்று பார்த்தால் ஆசீர்வாதம் பெறுவது என்பது ஆதரவு பெறுவது என்பதற் காகத்தான் ஏற்பட்டதாக இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. யாதானு மொருவர் ஒரு கனவானையோ மணமக்களையோ அல்லது ஏதாவது ஒரு ஸ்தாபனத்தையோ ஆசீர்வதிப்பது, வாழ்த்துவது என்பதானால், அவ்வா சீர்வதிப்பவர் மீது பொறுப்பு விழுகக் கூடியதாய்த்தானிருக்கும். எப்படி யெனில் வாழ்த்தினவர் வாழ்த்தப்பட்டவர்களின் வாழ்வுக்குப் பொறுப்பாளி யாவார். அப்படிக் கில்லாமல் வாழ்த்துவது ஏமாற்றுவதுதான் ஆகும். அதுபற்றியே அறிஞர்களா யுள்ளவர்கள் பெரியோர்களாகவும், செல்வாக்கும் பொது ஜனமரியாதையும், பெற்றவர்களையே வாழ்த்துதலுக்கு விரும்பு கின்றதும், வழக்கமாயிருக்கின்றது. ஆனால் இங்கு இது சமயம் என்னை



RangaRakes
tamilnavarasam.com

விரும்பியது எது பற்றி என்பது எனக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் எனது தலை நரையைப் பார்த்து இங்குள்ளவர்களில் நானே பெருங்கிழவனென்று எண்ணி அழைப்பதாக நினைக்கின்றேன். இம்மாதிரி வாழ்த்துதலுக்கும் வயதுக்கும் சம்பந்தமில்லை. இந்த மணமக்களை வாழ்த்த கிரமமாக நான் எதிர்பார்க்க வேண்டியவர்கள் இங்கு விஜயம் செய்திருக்கும் உயர்திரு. ராஜா சர். அண்ணாமலையாரின் குமாரர் குமாரராஜா மு.அ.முத்தையா அவர்களே ஆவார். மணமக்கள் அவர்களின் வாழ்த்தைப் பெற்றுவிட்டால் அப்புறம் மணமக்களின் வாழ்வுப் பெருக்கம் குமாரராஜாவையும், குமாரராஜா அவர்களைப் பின்பற்றும் மற்றவர்களுடைய பொறுப்புமாகும். ஆனதால் எனக்கு இட்டகட்டளையை மீறாமல் உங்கள் எல்லோருடைய ஆதரவையும் எதிர்பார்த்து நான் இம்மணமக்களின் வாழ்வு இன்பமாகவும், சுதந்தரமாகவும் மற்றும் பொது ஜனங்களுக்கு உதவுவதாகவும் கழிய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

நிற்க, இந்தத் திருமணத்தைப் பற்றியும், இரண்டொரு வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்பதாகச் சிலர் ஆசைப்படுகின்றார்கள். நான் சுருக்கமாகச் சொல்வதென்ன வென்றால், திருமணங்களை அதாவது விவாகங்களை நமது மக்களில் அநேகர் பொறுப்பற்ற முறையில் விவாகம் என்பது தெய்வீகமானது என்கிறார்கள். தெய்வீகம் என்பது குழந்தைகளைப் பெறுவதும் மாமனார் மாமியார் முதலியவர்களுக்கடங்கி நடப்பதும், புருஷனையே தெய்வமாகக் கொண்டு அவர் அடித்தாலும் உதைத்தாலும் மற்றும் எவ்வித அக்கிரமம் செய்தாலும் அவ்வளவையும் பொறுத்துக் கொண்டு அவருக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டியது என்றும், மற்றும் இதுமாதிரி எவ்வளவோ அதாவது மனிதத்தன்மை சுதந்திரம் சுயமரியாதை ஆகியவை ஒன்றும் இல்லாமல் அடிமைப் போல் இருக்க வேண்டும் என்பதாக சொல்லப்படுகின்றன. இந்த லட்சணமுள்ள மணம் தெய்வீக மணமானால் கண்டிப்பாய் அதை ஒழித்துச் சுதந்தரமும் சுயமரியாதையும் உள்ள மனுஷீக மணமே நடைபெறவேண்டும்.

எனவே, தெய்வீக மணமென்பது அடிமைமணம்; சந்தையில் காம நுகர்ச்சிக்கு வாங்கிய நுகரும் யந்திரமணம் அல்லது வைப்பாட்டி வாழ்க்கை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. புருஷனுக்கு பெண் அடங்கித்தான் நடக்க வேண்டுமென்றால் பெண்ணுக்குப் புருஷன் அடங்கித் தான் நடக்கவேண்டும் என்பதானால் மாத்திரம்தான் அந்த நிபந்தனையை ஒப்புக்கொள்ளலாம். பெண் மாமியார், மாமனாருக்குக் கீழ்ப்பட்டு அவர் களுக்கு ஏவல் செய்துதானாக வேண்டுமென்றால் புருஷன் தனது மாமியார் மாமனாருக்கு ஏவல் செய்யத் தயாராயிருந்தால்தான் அந்த நிபந்தனையை ஒப்புக் கொள்ள முடியும். அப்படிக்கில்லாமல் வீட்டு வேலைக்கு ஒரு அடிமைப் பெண்ணை விலைக்கு வாங்கினது போல இருக்க கல்யாணம் செய்வதும், அந்த மாதிரி கல்யாணத்தில் தெய்வீக சக்தியும் தன்மையும்



இருக்கின்றது என்பதை இனி அரைவினாடி கூட நமது நாட்டில் செல்லும் படியாக விடாமல் செய்துவிடவேண்டும். அதுதான் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய வேலைகளில் ஒன்றாகும். மற்றபடி நாட்டுக்கோட்டை நகரப் பிரமுகர்களுக்கு இவ்வுணர்ச்சி தோன்றியிருப்பதும் அதிமுக்கியமான நாட்டுக்கோட்டை நகரத் தலைவர்கள் இங்கு விஜயம் செய்திருப்பதும் எனக்கு அளவிலாத மகிழ்ச்சியை விளைவிப்பதோடு இந்நாட்டின் விடுதலைக்கும் சுயமரியாதை வளர்ச்சிக்கும் ஒரு அறிகுறியாகும்.

*குறிப்பு : 31.03.1929 இல் சென்னையில் நடைபெற்ற சென்னை சட்டசபை துணைத் தலைவர் டாக்டர். எஸ். முத்துலட்சுமி அம்மாள் அவர்களின் வளர்ப்பு மகள் திருமணத்தில் வாழ்த்துரை .*

**குடி அரசு – வாழ்த்துரை – 07.04.1929**



RangaRakes tamilnavarasam.com

# "நாஸ்திகத்" திற்கு முதல் வெற்றி

நமது மாகாணச் சுயமரியாதை மகாநாடு செங்கற்பட்டில் நடந்த பிறகு நமது பார்ப்பனர்கள் அம்மகாநாட்டுத் தீர்மானங்களைத் திரித்துக் கூறியும், பல கூலிகளை விட்டு விஷமப் பிரசாரம் செய்யச் செய்தும் வருவதோடு அதையே இவ்வருஷத்திய தேர்தல் பிரசாரமாக வைத்துக் கொள்ளலாம் எனவும் கருதி சில காலிகளுக்குப் பணஉதவி செய்து உசுப்படுத்திவிட்டு வேடிக்கை பார்ப்பது யாவரும் அறிந்ததாகும். இந்தப்படி காலிகள் மூலம் செய்யப்படும் விஷமப் பிரசாரம் இப்பார்ப்பனர்களுக்கு எவ்வளவு தூரம் பயன்பெறும் என்பதற்குச் சமீபத்தில் ஒரு சரியான பரீக்ஷை நடத்திப் பார்த்தாகிவிட்டது.

அதாவது, சென்னைப் பச்சையப்பன் தர்ம ட்ரஸ்டிகளில் ஒரு பார்ப்பன ட்ரஸ்டியின் ஸ்தானம், அதாவது 'சுதேசமித்திரன்' 'இந்து' ஆகிய பத்திரிகைகளில் பத்திராதிபரான திரு.ஏ.ரங்கசாமி அய்யங்கார் என்கின்ற ஒரு பார்ப்பனரின் ஸ்தானம் காலாவதி ஆனதும் அந்த ஸ்தானத்திற்கு மறுபடியும் திரு.ஏ.ரங்கசாமி அய்யங்கார் போட்டி போட தைரியமில்லாமல் விட்டுவிட்ட தால் மற்றொரு பார்ப்பனராகிய அதாவது காலித்தனத்திலும், திரு.ரங்கசாமி அய்யங்காரை விட பார்ப்பனத் திமிரிலும், சூழ்ச்சியிலும் தலைசிறந்து விளங்கும் திரு.புர்ரா சத்தியநாராயணா அய்யர் என்ற பார்ப்பனரை நிறுத்தி வேலை செய்தார்கள். ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக திரு.ஏ. இராமசாமி முதலி யார் நின்றார். இந்தத் தேர்தலில் முக்கியமாகப் பார்ப்பனர்களே பெரும் பான்மையான ஓட்டர்களாயிருந்தும், ஒருபக்கம் பார்ப்பனரல்லாத பிரமுகர்களில் ஒருவரான திரு.சி. டாக்டர். நடேச முதலியாரும் அவரது சகபாடிகளும் திரு.புர்ரா அய்யருக்கே தங்கள் ஓட்டுச்செய்தும் மற்றவர் களின் ஓட்டுகளைச் சேகரித்துக் கொடுத்தும், மற்றொரு பக்கம் சில பார்ப்பனர்கள் செங்கற்பட்டு மகாநாட்டுத் தீர்மானங்களைப் பற்றிக் காலித் தனமாய்க் கூலிகளை விட்டு, திரு. ராமசாமி முதலியாருக்கு எதிரியாய் இழிபிரசாரம் செய்தும் கடைசியாக திரு.ராமசாமி முதலியாரே வெற்றி பெற்றார். ஏனென்றால் இந்தக் காலிப் பிரசாரத்தையும் சூழ்ச்சியையும் சென்னைக் கார்ப்பரேஷன் மீட்டிங்கில் திரு.புர்ரா நடந்து கொண்ட மாதிரி யையும் பார்த்த பிறகே சில பார்ப்பனர்கள் தைரியமாக வெளிவந்து வெளிப் படையாகவே திரு.ராமசாமி முதலியாருக்குத் தங்கள் ஓட்டுகளைக் கொடுத்தார்கள். இதிலிருந்து சுயமரியாதைப் பிரசாரமும் அதன் எதிர் பிரசாரமும் அநேக பார்ப்பனர்களை யோக்கியர்களாகும்படி செய்து கொண்டும் வருகின்றது என்பதும் வெளிப்படை.

எனவே சுயமரியாதை இயக்கத்தாலும் செங்கற்பட்டு மகாநாட்டுத் தீர்மானங்களாலும் "நாஸ்திகம் ஏற்பட்டுவிட்டது," "கடவுள்கள் ஒழிந்து போய்விட்டன" என்று சொல்லிக் கொண்டு ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்கக் கூலி வாங்கிக் கொண்டு புறப்பட்ட வீரர்களும், அவர்களுக்குக் கூலி கொடுத்த தலைவர்களும், இதிலிருந்தே பாடம் கற்றுக் கொண்டிருக்கவும், அதாவது ஜஸ்டிஸ் கட்சியின் "ஜீவநாடி" என்பவராகிய திரு.ராமசாமி முதலியார் அவர்கள் பார்ப்பனத் தொகுதி என்று சொல்லப்பட்ட, "செனட்" தொகுதியில் ஒரு சரியான பார்ப்பனரோடு நின்று பல பார்ப்பனரல்லாதார் விரோதமாய் நடந்தும், வெற்றி பெற்றார் என்றால் "நாஸ்திக"த்திற்கு, அதாவது செங்கற் பட்டுத் தீர்மானத்திற்கு முதல் வெற்றி அதுவும் சென்னையிலேயே ஏற்பட்டுவிட்டது என்பதிலிருந்து ஆஸ்திகப் பூச்சாண்டியின் மிரட்டல் இனிப் பலிக்காது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

**குடி அரசு - கட்டுரை - 07.04.1929**





RangaRakes tamilnavarasam.com

## மதுவிலக்கின் பேரால் காங்கிரஸ் புரட்டு

சட்டசபைத் தேர்தல் சமீபிக்கும் போதெல்லாம் காங்கிரஸ் பேய்க்கு திரு.ராஜகோபாலாச்சாரியாரால், திரு.காந்தியின் மூலம் உச்சாடனம் செய்யப் பட்டு, அது கண் கொண்டபடி நமது நாட்டில் தலைவிரித்து ஆடுவது வழக்கம். இதை நாம் கொஞ்சகாலம் கூடவே இருந்து பார்த்தவர்களில் ஒருவராதலால் இந்தப் பேயாட்ட உபத்திரவத்தை எப்படி ஒழிப்பது என்பது நமக்கு அதிக கஷ்டமான வேலையல்ல.

இந்தப் பேய் உச்சாடனத்திற்காக 27-3-29 தேதியில் டில்லியில் காங்கிரஸ் காரியக்கமிட்டி என்பது கூடி சில தீர்மானங்கள் செய்திருப்பதாகப் பத்திரிகைகளில் தெரிய வருகிறது.

அதாவது, மறுபடியும் முன்போல் (ஒத்துழையாமைக் காலம்) போல கள்ளுக்கடை மறியலும் மரத்தின் பாளைகளை வெட்டுதல் போன்ற காலித்தனத்திற்கு மக்களைத் தூண்டும் படியான தன்மையுடையதான தென்னை மரத்துக்காரர்களை மரம் கள்ளுக்கு விடாமல் செய்யும் பிரசாரமும் பொதுஜன அமைதிக்குப் பங்கம் உண்டாக்கும்படியானதாகிய குத்தகைக் காரர்களை ஏலத்தில் கோராமல் இருக்கும்படி செய்யும் பிரசாரமும் செய்வ தற்குத் தீர்மானங்கள் நிறைவேற்றி அவற்றை நடத்துவதற்கும் திரு.ராஜ கோபாலாச்சாரியார் தம்மையே நியமித்து கொண்டும், அதற்காகச் செலவுக் கும் மாதம் 500 வீதம் கிடைக்கும்படி செய்து கொண்டிருப்பதாய்த் தெரி கின்றது.

இதை ஒன்பது மாதத்திற்கு (அதாவது தேர்தல் வரை) செய்ய வேண்டுமாம். அதோடு தீண்டாமை விலக்கு பிரசாரமும் அனுமதித்து அதை நடத்த பண்டித மதன் மோகன மாளவியா நியமனம் பெற்று அந்த செலவுக்கும் மாதம் 200 ரூபா அனுமதி பெற்றுக் கொண்டிருக்கிறார்.

எனவே இந்தப் பிரசாரங்களை இப்போது அதுவும் சட்டசபையைக் கலைத்து மறுதேர்தல் ஏற்படுத்துவது உறுதி என்று ஏற்பட்டவுடன் இவ்வளவு அவசரமாய் இதை நடத்தக் காரணம் என்ன? என்பதை யோசித்தால் ஒரு முழு மூடனுக்கும் இதன் புரட்டுகளும் பித்தலாட்டங்களும் யோக்கியப் பொறுப்பற்ற சூழ்ச்சிகளும் விளங்காமற் போகாது. சென்ற தேர்தலின் போது இதே மாதிரிதான் திரு.ராஜகோபாலாச்சாரியார் பார்ப்பனர்களுக்கும் அவர் களுடைய அடிமைகளுக்கும் ஓட்டு வாங்கிக் கொடுக்க வேண்டி 1000



கணக்கான தென்னை மரங்களைக் கள்ளுக்கு விட்டு வருஷம் பதினா யிரக்கணக்கான ரூபாய்களைக் கள்ளினால் சம்பாதிக்கும் திரு. வெங்கட்ரமண அய்யங்கார் போன்றவர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுத்துவிட்டு இந்த இரண்டரை வருஷ காலம் "உப்புக்கண்டம் பறி கொடுத்த பார்ப்பனி"யைப் போல் மதுவிலக்கில் மவுனம் சாதித்துவிட்டு, கதரின் பேரால் லக்ஷக் கணக்கான ரூபாய்களையும் மூட மக்களிடமிருந்து கொள்ளையும் அடித்து விட்டு இப்போது தேர்தல் வருகின்றது என்று தெரிந்தவுடன் மறுபடியும் பழைய பல்லவியை பாடத்தொடங்கி இருப்பதில் ஏதாவது நாணயமிருக் குமா? என்பதை யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

நிற்க, இந்த இரண்டு வருஷகாலம் இந்தக் காங்கிரஸ் என்ன செய்தது? என்பதைப் பற்றியும், அது ஏன் மதுவிலக்குப் பிரசாரம் செய்யவில்லை என்பதைப் பற்றியும், சென்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் பேரால் மது விலக்குத் திட்டத்தை ஒப்புக் கொண்டவர்கள் சட்டசபையில் 50 அங்கத் தினர்களுக்கு மேல் தெரிந்தெடுக்கப்பட்டிருந்த காலத்திலும், தங்கள் இஷ்டப்படியே மந்திரிகளை நியமித்து அவர்களைத் தங்கள் இஷ்டப்படி ஆதரித்து ஆட்டிக் கொண்டு வந்த காலத்தில் இந்த மதுவிலக்குப் பிரசாரமும், சட்டசபையில் சட்டத்தின் மூலம் சாதிப்பதும் ஆகிய காரியங்கள் எங்கு போய்விட்டன?

தவிர, 1927-ம் வருஷத்தில் காங்கிரஸினால் ஆதரிக்கப்பட்டு வந்த மது, மந்திரிகள் முதலாவதாக ஜனங்கள் மதுவை வெறுக்கின்றார்களா? இல்லையா? என்பதே தமக்குச் சரியாகத் தெரியவில்லை என்றும், மதுபானம் மக்களுக்கு நன்மையா? கெடுதியா? என்பதைத் தாம் இன்னமும் பூரணமாய் அறிந்து கொள்ளவில்லை என்றும் சொல்லிக் கொண்டிருந்தது உலகமறியும். அப்பேர்ப்பட்ட மந்திரிகளை ஆதரித்துக் கொண்டிருந்தவர்கள் இப்போது மறுபடியும் மதுவிலக்குப் பிரசாரம் செய்யப் போகிறோம்; மதுவிலக்கு ஒப்புக் கொண்டவர்களை சட்டசபைக்கு அனுப்பப்போகிறோம் என்பதில் ஏதாவது யோக்கியப் பொறுப்பு இருக்கமுடியுமா? என்று கேட்கின்றோம்.

மது இலாக்கா மந்திரி கனம் திரு.முத்தையா அவர்கள் மதுவிலக்குப் பிரசாரம் செய்ய ஆரம்பித்த பிறகும், தமிழ் நாட்டில் மதுவிலக்குக்காக ஒரு கமிட்டி நியமித்து அதன் மூலம் மதுவிலக்குப் பிரசார ஏற்பாடு செய்ய உத்தேசித்த பிறகும், வேண்டுமென்றே சூழ்ச்சிக்காக தேர்தலை உத்தேசித்து அதுவும் பார்ப்பனர்களுக்காகத் தேர்தல் பிரசாரம் செய்ய இந்தக் குயுத்தி செய்து காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொண்டு பொதுப்பணத்தில் மாதம் 500 ரூபாய் திரு. ராஜகோபாலாச்சாரியாருக்கும் கொடுத்து தமிழ்நாட்டு மக்களை ஏய்க்க முடிவு செய்துவிட்டார்கள்.

காங்கிரஸ்காரர்களின் மதுவிலக்குப் பிரசாரத்தின் யோக்கியதை யையும், நல்ல எண்ணத்தையும் பொது ஜனங்கள் உணரவேண்டுமானால் ஒரு உதாரணம் எடுத்துக்காட்டுகின்றோம். சட்டசபையில் மதுவிலக்குப்



RangaRakes tamilnavarasam.com

பிரசாரத்திற்கு ஏற்பாடு செய்ய மந்திரிகள் திட்டம் கொண்டு வந்த காலத்தில் காங்கிரஸ் மெம்பரானவரும் கோயமுத்தூர் ஜில்லா பிரதிநிதியானவரும் 9 வருஷம் தொடர்ந்து சட்டசபையில் இருப்பவரும் கோயமுத்தூர் ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவருமான திரு.சி.வி.வெங்கட்டரமணய்யங்கார் பிரசார திட்டத்தை எதிர்த்துப் பேசுகையில் என்ன காரணம் சொன்னா ரென்றால்.

> “மதுவிலக்குப் பிரசாரம் செய்தால் ஜனங்களுக்குள் மதுக்குடி அதிகமாய்விடும். ஏனெனில் இவர்கள் ஏன் நம்மை கள்ளுக்குடிக்கக் கூடாது என்று சொல்லுகின்றார்கள் என்று நினைத்து ஒவ்வொருவனும் அதைக் குடித்துத்தான் பார்ப்போமே என்பதாகக் கருதி குடிக்க ஆரம்பித்து விடுவான். ஆதலால் பிரசாரம் கூடாது”

என்பதாகச் சொன்னாராம்.

இதிலிருந்து காங்கிரஸ்காரரின் மதுவிலக்கு யோக்கியதையை உணர்ந்து கொள்ளலாம். காங்கிரஸ்காரர்கள் மந்திரிகளின் மதுவிலக்குப் பிரசாரத் திட்டத்தை ஒப்புக் கொள்ளாததற்காக இப்படிச் சொன்னார்கள் என்று யாராவது சமாதானம் சொல்லக் கூடுமானால் அதை நாம் மற்றொரு புரட்டும் நாணயக் குறைவுமான காரியம் என்று சொல்லுவோம். ஏனெனில் காங்கிரஸ்காரருக்கு உண்மையிலேயே திட்டத்தில் ஆக்ஷேபணை இருந்தால் அதைத் தாராளமாய் வெளியிலெடுத்துச் சொல்லி அதற்காக ஏதாவது திருத்தம் கொண்டு வந்து பேசுவதோடு திட்டத்தில் உள்ள குறைகளைக் கண்டிப்பதற்குத் தாராளமாய் முயற்சித்திருக்கலாம். அதைவிட்டு விட்டு “குடிக்க வேண்டாம் என்று பிரசாரம் செய்தால் குடி அதிகரிக்கும்” என்று சொல்லுவதின் கருத்து என்ன? என்று தான் கேட்கின்றோம். இதன் உண்மை தெரிய வேண்டியவர்கள் மேற்படி சட்டசபை நடவடிக்கைகளை வர வழைத்துப் பார்த்தால் விளங்கும்.

இனி மதுவிலக்கு விஷயமாய் காங்கிரஸ்காரர்கள் செய்யும் பிரசாரத் தில் ஏதாவது நாணயமிருக்க முடியுமா? என்பதையும் யோசித்துப் பார்க்க விரும்புகிறோம். காங்கிரஸ் ஏற்கனவே செய்து பார்த்தாய்விட்டது. அதோடு மாத்திரமல்லாமல் அந்த முறை தப்பென்றும், உணர்ந்து நடுவேளையில் திடீரென்று நிறுத்தும்படியும் செய்து அதில் ஈடுபட்ட உண்மைத் தொண்டர்களையும் காட்டிக் கொடுத்துவிட்டது. இப்படியிருக்க இப்போதும் அதே முறையில் மதுவிலக்குப் பிரசாரம் செய்யப் போகின்றோம் என்று அதுவும் தேர்தல் சமயத்தில் அதுவும் கள்ளினால் வருஷம் பதினாயிரக் கணக்கான ரூபாய் வரும்படி சம்பாதிக்கும் அங்கத்தினர்களும் மதுவில் முழுகி எழுந்திருக்கும் நபர்களும் சேர்ந்து கொண்டு முன்போலவே மறுபடியும் சுயராஜ்ஜியத்திற்கு ஒரு ஞூ 6 *மீ* 3 *மீ* ஒரு *மீ* ஆகிய வாய்தாக் களையும் அதோ தெரிகின்றது இதோ தெரிகின்றது என்கின்ற செப்பிடு வித்தைகளையும் செய்துகொண்டு புறப்பட்டிருப்பதன் இரகசியத்தை



உணர்ந்து காங்கிரஸ் பேயையும், மதுவிலக்குப் பிரசாரப் புரட்டையும் தமிழ்நாட்டுக்குள் அண்டவிடாமல் தலையிலடித்துத் திருப்பி அனுப்பி விடும் படியாகத் தெரிவித்துக் கொள்கின்றோம். உண்மையிலேயே மதுவிலக்குப் பிரசாரத்திற்கு தமிழ்நாடு மதுவிலக்குப் பிரசாரம் செய்வதற்கென்று சமீபத்தில் ஈரோட்டில் ஒரு பெரிய கூட்டம் கூட்டுவித்துத் தமிழ்நாடு மதுவிலக்குப் பிரசாரக் கமிட்டி என்பதாக ஒரு பொதுக் கமிட்டி தெரிந்தெடுக்கப்பட்டிருக் கின்றது. அந்தக் கமிட்டியில் உள்ள அந்தந்த ஜில்லா கனவான்கள் முயற்சியால் அந்தந்த ஜில்லாவில் ஒரு ஜில்லாக் கமிட்டி ஏற்பாடு செய்யப் படும். அதன் மூலம் ஜில்லா முழுவதும் பிரசாரம் செய்யப்படும். இந்தப் பிரசாரத்தில் பலாத்காரம் செய்வதோ, பலாத்கார மறியல் செய்வதோ, பாளைகளை வெட்டுவதோ, ஏலத்தின் போது காலித்தனம் செய்வதோ முதலாகிய காரியங்கள் ஒரு சிறிதும் இல்லாமல், மதுவிலக்கின் தோஷங்களை எடுத்துச் சொல்லுவதன் மூலமும், பெண்களால் புருஷர்களின் குணங்களைத் திருத்தப்பாடு செய்வதன் மூலமும் மற்றும் ஓட்டர்களுக்கு மதுவிலக்கு எப்படி சட்டத்தின் மூலம் செய்யப்படும் எப்படிப்பட்டவர்கள் மதுவிலக்குச் சட்டம் செய்யச் சவுகரியம் உடையவர்கள் என்பது போன்றவைகளை எடுத்துச் சொல்லுவதின் மூலமும் மதுவிலக்குப் பிரசாரம் செய்யப்படும். எனவே பொதுமக்கள் காங்கிரஸ் தேர்தலுக்காகச் செய்யும் சூழ்ச்சியில் விழுந்து விடாமலும் தேர்தலில் மோசம் போகாமலும் இருக்க வேண்டுமாய் எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 07.04.1929**



RangaRakes tamilnavarasam.com

# இரண்டு வகை மகாநாடுகள்

சுயமரியாதை இயக்கம் தோன்றியபிறகு நமது நாட்டில் ஒருவிதக் கிளர்ச்சி உண்டாயிருப்பதோடு அவ்வியக்கத்திற்கு சில எதிர்ப்புகள் தோன்றியிருக்கின்றன என்பதையும் மறுக்க முடியாது.

இவ்வெதிர்ப்புகளில் காங்கிரசின் பேரால் வயிறு வளர்க்கும் சில கூலிகளுடையவும், வயிற்றுப் பிழைப்புக் காலிகளுடையவும், சமய புராண வியாபாரிகள், வயிற்றுப் பிழைப்புப் பிரசங்கிகள், பண்டிதர்கள் ஆகியவர் களுடையவும், எதிர்ப்புக் கூச்சல்களை லட்சியம் செய்து எவரும் பதில் சொல்ல வேண்டியதில்லையானாலும், வருணாசிரமத்தின் பேரால் பார்ப் பனர்களும், சைவசமயத்தின் பேரால் சில சைவர்கள் என்பவர்களும் வருணாசிரம மகாநாடுகளும், சைவ சமயக் கூட்டங்களும் கூட்டி அதில் செய்யப்பட்டிருக்கும் தீர்மானங்களைப் பற்றிக் கவனித்துத் தீர வேண்டிய வர்களாக இருக்கின்றோம்.

ஜாதி வித்தியாசம், தீண்டாமை ஆகியவற்றை விலக்க வேண்டும் என்கின்ற உணர்ச்சி நமது நாட்டில் ஏற்பட்ட காலம் முதல் பார்ப்பனர்கள் வருணாசிரம மகாநாடு என்பதாக ஒரு மகாநாடு கூட்டி, தீண்டாமை இருக்க வேண்டும்; அது கடவுளால் ஏற்பட்டது என்று சொல்லிக் கொண்டுதான் வந்திருக்கின்றார்கள். அதுபோலவே, பால்ய விவாக விலக்குக்கும், விதவா விவாக ஆதரிப்புக்கும் சிலர் தோன்றிய காலம் முதல் கொண்டும் பார்ப்பனர் கள் வருணாசிரம மகாநாடுகள் கூட்டி "பால்யவிவாகம் செய்யாவிட்டால் பாபம்; அது மதத்திற்கும் வேதத்திற்கும் விரோதம்" என்றும், "விதவா விவாகம் செய்வதால் மதமும் ஒழுக்கமும் கெட்டுப் போகும்" என்றும் சொல்லி ஆக்ஷேபித்துத் தீர்மானங்கள் செய்து கொண்டு வந்திருப்பதுடன் இதுவிஷயங்களில் சட்டத்தின் மூலம் ஏதாவது செய்யலாம் என்று யாராவது முயற்சித்தால், "அரசாங்கத்தார் மத விஷயங்களில் தலையிடக்கூடாது" என்று தீர்மானங்கள் செய்து கொண்டும் வந்திருக்கின்றார்கள். பொது ஜனங்களுக்கு சீர்திருத்த விஷயங்களில் எவ்வளவுதான் அறிவும் ஆசையும் இருந்தாலும், காரியத்தில் வரும்போது பார்ப்பனர்களும் பண்டிதர்களும் மதப்பூச்சாண்டியைக் கிளப்பிவிட்டு விடுவதால் பாமர மக்கள் உடனே மதத்திற்குப் பயந்து மூலையில் ஒடுங்கி விடுகின்றார்கள். இந்த காரணத் தாலேயே தான் மதத்தை வைத்துக் கொண்டு சீர்திருத்தம் செய்ய வேண்டும்



என்று புறப்பட்ட ஒருவர்கூட இதுவரையில் ஒரு சிறிதும் வெற்றி பெற முடியாமலே போய்விட்டது. இந்த அனுபவத்தைக் கண்டபிறகேதான் மதத்தின் யோக்கியதை என்ன என்பதாக அதைக் கிளரப் புறப்பட்டோம். எனவே அதைக் கிளரக்கிளர நாவிதன் குப்பையைக் கிளர்வது போல் உபயோகமற்ற குப்பைகளையே காணமுடிந்ததே யல்லாமல். ஒரு சிறிதாவது பயன்படத்தக்கதாக ஒன்றையுமே காண முடியவில்லை!

உதாரணமாக மதங்கள் என்பவைகள் பல பல. அவற்றுள் உள் மதங்கள் பல பல. உள்மதங்கள் ஒவ்வொன்றனுள்ளும் பிரிவுகள் பல பல; அப்பிரிவுகளுக்கும், வியாக்கியானங்கள், அகச்சான்றுகள், புறச்சான்றுகள் தத்துவார்த்தங்கள் ஆகியவைகள் பல பல. இப்படி கரைகண்டு முடிவு செய்ய முடியாத மாதிரியில் கையில் வலுத்தவன், வாயில் வலுத்தவன், செல்வத்தில் வலுத்தவன், சூழ்ச்சியில் வலுத்தவன், மானமற்ற தன்மையில் வலுத்தவன் என்கின்றதை அனுசரித்து மக்களை மக்கள் ஏமாற்ற மாத்திரம் பயன்படு கின்றதே ஒழிய, எதற்காக அவைகளை ஸ்தாபிக்க வேண்டுமென்று சொல்லப் படுகின்றதோ, அதற்கு ஆக அவை சற்றாவது பயன்படாமல், ஒரு சில சோம்பேறிகளுக்கும் சுயநலமுள்ள நாணய மற்றவர்களுக்கும் மாத்திரம் பயன்பட்டு வருவதை நன்றாய்ப் பார்த்து வருகின்றோம். ஆதலால் அவை களை அழிப்பதைத் தவிர வேறு வேலையின் மூலம் ஒருக்காலமும் இப்போது மதங்களின் மூலம் நாட்டிற்கும், மக்கள் வாழ்க்கைக்கும், ஒழுக்கத் திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் ஏற்பட்டுள்ள இடையூறுகளை ஒழிக்கமுடியாது என்று கருதி அவற்றைத் தைரியமாக வெளியாக்கி விட்டோம் – வெளியாக் கிக் கொண்டும் வருகின்றோம்.

இதைக் கண்டபிறகுதான் பார்ப்பனர்களும் அவர்களின் எதிரிகளாகிய சைவசமயிகளும் இது சமயம் தங்கள் இருவர்களின் அடிப்படையான வித்தியாசத்தைக் கூட மறந்துவிட்டு எப்படியாவது அடியோடு அழிக்க வந்திருக்கும் ஆபத்திலிருந்து தப்புவித்துக் கொண்டால் பின்னால் அவரவர் கள் தனித்தனிக் காரியத்தைப் பார்த்து கொள்ளலாம் என்று கருதி தினம் ஒரு வருணாசிரம மகாநாடும், வாரம் ஒரு சைவசித்தாந்த மகாநாடும் கூட்டிய வண்ணமாகவே இருக்கின்றார்கள். இவ்விரண்டு வகை மகாநாடுகளுக்கும் இரண்டு வகை மடாதிபதிகள் என்பவர்களும் உள் ஆதரவாய் இருந்து பணசம்பந்தமான உதவிகளைத் தாராளமாகச் செய்தும் வருகின்றார்கள். ஏனெனில், அப்படிச் செய்யவில்லையானால் முதல் பிடிமண் அவர்கள் வாயில்தான் விழுகவேண்டிவரும். ஏனெனில் பார்ப்பன மடாதிபதிகள் சுமார் 2, 3 டஜன் (உலக குருக்களான) சங்கராச்சாரியார்களும் 2, 3 டஜன் மகந்துகள், ஜீயர்கள் மற்றும் பல மடச்சுவாமிகள் ஆகிய பார்ப்பனர்களும், ஒரு டஜனுக்கு மேற்பட்ட பார்ப்பனரல்லாத சைவ மடாதிபதிகளும் சேர்ந்து வருஷத்தில் கோடிக் கணக்கான ரூபாய்களின் வருவாய்களால் அனுபவித்துக் கொண்டு வரும் அதிகாரங்களையும், போக போக்கியங்களையும் துறக்க வேண்டிவரும்.



RangaRakes tamilnavarasam.com

அன்றியும் இவர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டும் இவர்களது போக போக்கியத்திற்கு உதவி செய்து கொண்டும். இருக்கும் பல ஆயிரக்கணக்கான மக்களது அனுபவமும் வயிற்றுப் பிழைப்பும் ஒழிந்துபோகும். அன்றியும் இவர்கள் ஆதீனத்தில் உள்ள பல கோயில்களின் வரும்படிகளும் ஆதிக்கங் களும் ஒழிந்து போகும். ஆதலால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டார் நமது நாட்டை விட்டுத் தாங்களாகவே ஒதுங்கிப் போவதற்கு ஒரு காலம் யோக்கிய மாக வந்தாலும் வரக்கூடுமே தவிர, இந்தக் கூட்டங்கள் ஒழிந்து போக ஒருக் காலும் சம்மதிக்கவும் மாட்டார்கள், அல்லது யோக்கியமான முறையில் ஒழிக்கப்படுவதற்கும் இலக்காகவும் மாட்டார்கள். ஆதலால்தான் இவர்கள் இம்மாதிரி கூட்டங்கள் கூட்டவும், கூட்டச் செய்யவும், கூட்டுபவர்களுக்கு உதவி செய்யவும் கட்டுப்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள்.

எனவே, இந்த மாதத்தில் மாத்திரம் 3, 4 வருணாசிரம மகாநாடுகளும், 3,4 சைவசமாஜக் கூட்டங்களும், ஒரு பெரிய சைவ சித்தாந்த மகாநாடும் கூட்டப்பட்டுவிட்டது அதிசயமல்ல. ஆகவே அதன் யோக்கியதைகளைச் சற்றுக் கவனிப்போம்.

முதலாவதாக சைவப் பெரியார் மகாநாட்டைப் பற்றிக் கவனிப்போம்.

இம்மகாநாடு கூடிக் கலைந்த விவரம் 'திராவிடன்' பத்திரிகையில் உள்ளபடி வேறு பக்கத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம். சைவப் பெரியார் மகாநாட்டுத் தீர்மானங்கள் என்னவென்றால், முதல் தீர்மானமாவது:-

"நல்ல ஒழுக்க வாழ்க்கைக்கு கடவுள் உண்டு என்னும் கொள்கை இன்றியமையாதது" என்பதாகும்.

இந்தத் தீர்மானம் மலையைத் தோண்டி எலியைப் பிடித்தது போன்ற தாய் இருக்கின்றது. சைவ சமய மகாநாடு கூட்ட முயற்சித்த போது கடவுள் இல்லை என்னும் நாஸ்திகம் நாட்டில் வளர்ந்துவிட்டதாகவும் கடவுளை நிர்த்தாரணம் செய்யவேண்டிய அவசியத்திற்கும் நாஸ்திக இயக்கத்தை ஒழிப்பதற்கும் என்று வெகு அவசரமாக மகாநாடு கூட்டி எவ்வளவோ பேர்கள் இரண்டு மூன்று நாள் மெனக்கெட்டு, பல பொருளும் செலவிட்டு பலரை மகாநாட்டில் கலந்து கொள்ளாமலும் செய்து கடைசி கடைசியாக கடவுளைப் பற்றிய தீர்மானம் என்னவென்றால், கடவுள் உண்டு என்ற கொள்கை நல்ல ஒழுக்கத்திற்கு அவசியமானது என்பதோடு நின்றுவிட்டதே ஒழிய கடவுள் உண்டு என்றாவது இல்லை என்றாவது யாதொரு முடிவும் கட்ட முடியாமல் போய்விட்டது.

எனவே, இந்த விதமான கடவுள் முடிவு சுயமரியாதை இயக்கத்தின் முடிவை விட, புத்த சமண இயக்கங்களின் முடிவைவிட எந்தவிதத்தில் மேலானது என்று கேட்கின்றோம்.

மேல்கண்ட இயக்கங்களும் எல்லாவற்றையும் விட ஒழுக்கத்தையே



பிரதானமாய்ச் சொல்லுகின்றனவே ஒழிய அவற்றுள் ஏதாவது விட்டுக் கொடுக்கின்றதா? ஒழுக்கம் எது என்னும் விஷயத்தில் அபிப்பிராய பேதமிருந்தால் அதற்காக ஒழுக்க மகாநாடு கூட்டி ஒருமுடிவுக்கு வருவதில் யாருக்கும் ஆக்ஷேபனை இல்லை. அதற்காகக் கடவுளை ஏன் பொருத்த வேண்டும்? நெருப்பைத் தொட்டால் கடவுள் தண்டிப்பார் என்பதைவிட, கை சுடும் தொடாதே! என்று அனுபவமுறையில் நன்மை தீமைகளைக் கற்பிப்பதன் மூலம் சீக்கிரம் சுலபத்தில் கண்டிப்பாய் ஒழுக்கமான வாழ்க்கை களை உண்டாக்க முடியாதா? என்று கேட்கின்றோம்.

வியாதியை மருந்து சாப்பிடுவதன் மூலம் சவுகரியம் செய்வதைவிட நேராய் ரத்தத்தில் கலரும்படி மருந்தை (இன்ஜக்ட்) ஊசி வழி ஏற்றுவதன் மூலம் சவுக்கியப்படுத்துவது சீக்கிரமாகவும், சுலபமாகவும் முடியக் கூடியதா? அல்லவா? என்றுதான் கேட்கின்றோம்.

அன்றியும் கடவுள் உண்டு என்னும் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கும் மக்களில், மடாதிபதிகளில், பண்டிதர்களில் 1000-ல் எத் தனை பேர் ஒழுக்கமுள்ளவர்களாக இருக்கின்றார்கள்? என்பதையும் ஒழுக்கத்திற்குக் கடவுளை சம்பந்தப்படுத்தாமலும் ஒழுக்கத்தையே ஒழுக்கத் திற்காகக் கொண்டவர்களில் அதாவது புத்தர்கள், சமணர்கள், நிரீச்சுரவாதிகள் என்பவர்களில் ஆயிரத்திற்கு எத்தனை பேர்கள் ஒழுக்கமில்லாதவர்களாக இருக்கின்றார்கள் என்றும் கேட்கின்றோம்.

எனவே, சைவப் பெரியோர்கள் தாமாக, தாங்கள் ஒழுக்கமாக நடக்க முடியாதவர்கள் என்றும், கடவுள் உண்டென்ற கொள்கை மூலம்தான் தாங்கள் ஒழுக்கமான வாழ்க்கையை நடத்த முடியும் என்னும் முடிவைக் கொண்ட வர்கள் என்றும் தான் இத்தீர்மானத்தால் விளங்குகின்றது.

இரண்டாவது தீர்மானம் "சைவசமயம் அறிவு ஆராய்ச்சிக்குப் பொருத்தமுள்ளதாகவும் அன்பு நெறியையே அடிப்படையாகக் கொண்ட தாகவும் இருத்தலினால் அது எக்காலத்திற்கும் எச்சமூக நிலைக்கும் இசைந்ததாயிருக்கின்றது" என்பதாகும்.

இது சுத்தப் பயித்தியக்காரத் தீர்மானம் அல்லது மதப்பித்துக் கொண்ட தீர்மானம் என்றுதான் சொல்லவேண்டும். முதலாவது சைவ சமயம் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமாயிருந்தால் அறிவும் ஆராய்ச்சியும் பெற்ற மக்கள் என்று நம்மாலேயே ஒப்புக் கொள்கின்றவர்களிடம் சைவ சமயம் இருக்கின்றதா? உலகத்தில் இருக்கும் சுமார் 150 கோடி மக்களில் பௌத்தர்களும் பௌத்த சமயச் சார்புடையவர்களும் 54 கோடி மக்களாவார் கள். அடுத்தாற்போல் கிறிஸ்துவ மதத்தவர்கள் சுமார் 50 கோடி மக்களாவார் கள். மகமதியர்கள் 20 கோடியாவார்கள். இந்துக்கள் என்பவர்களும் 21 கோடி மக்களாவார்கள். மற்றபடி 2, 3 கோடி மக்கள் சில்லறை மதங்களை சேர்ந்தவர் களாக இருக்கக் கூடும். இவற்றுள்.



RangaRakes
tamilnavarasam.com

மேல்கண்ட 21 கோடி இந்துக்களில் 5,6 கோடி மக்கள் தீண்டாதவர்கள். இவர்கள் சைவக் கொள்கைப்படி சைவர்களாக இருப்பதாக சைவர்களே ஒப்புக் கொள்ளமாட்டார்கள். மீதி பதினைந்து கோடி மக்களில் அநேக மதங்கள் உண்டு. அநேகமாக வடநாட்டில் தானே கடவுள் என்கின்ற சங்கர மதமும், விக்கிரக வணக்கமில்லாத ஆரிய சமாஜமும், வேத புத்தகத்தை வணங்கும் சீக்கிய மதமும், வைணவ மதமுமே சிறப்பாக உள்ளவை. எனவே, தென்பாகத்தில், அதுவும் தென்னாட்டில் உள்ள மக்களில் "பேய்த் தெய்வ" வணக்கக்காரர்கள், சமணர்கள், ஜெயினர்கள், இதுபோன்ற மற்றும் மத வித்தியாசமில்லாதவர்கள், ஸ்மார்த்தர்கள் ஆகியவர்களை எல்லாம் கழித்து மீதிஉள்ள விபூதி பூசாதவர்களையும், விபூதி பூசுபவர்களிலும் மாமிசம் சாப்பிடுபவர்களையும், இயற்கை வணக்கக்காரர்களையும் கழித்துக் கணக்குப் பார்த்து, இதில் சைவர்கள் எவ்வளவுபேர் இருக்கக் கூடும் என்பதை யோசித்துப் பார்த்தால், உமியை ஊதினால் என்ன மீதி யாகுமோ அது தான் மீதியாகலாம். இந்த மாதிரியான ஒரு சிறு கூட்ட மக்கள், ஒரு இடத்தில் கூடி ஒருவரை ஒருவர் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு, சாப்பிடாமல் இருந்து கொண்டு "சைவ மதம் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் ஒத்த மதம்; எத்தேசத்திற்கும், எக்காலத்திற்கும், பொருத்தமானது" என்று தீர்மானிப்பதில் ஏதாவது அர்த்தமிருக்க முடியுமா? என்பதை யோசித்து முடிவு கட்டும்படி பொது ஜனங்களுக்கே விட்டுவிடுகின்றோம்.

மூன்றாவதாக, சாதாரணமாய் இந்த நாட்டில் சைவர்களது குறுகிய புத்தியும் அவர்களது சமய அகம்பாவமும் சமீப காலத்தில்தான் அதாவது திரு.வேதாசலம் அவர்களது ஆராய்ச்சியும் திரு.சுப்பிரமணிய பிள்ளை அவர்களது ஆராய்ச்சியும், மேனாட்டு முறையை ஒட்டிச் செய்து கொண்டு போனதின் பலனாய் சைவர்கள் கண்ணுக்கு மற்ற மனிதர்களைப் பார்த்தால், அவர்களும் மனிதர்கள் தான் என்று எண்ண முடிந்தது. இதற்கு முன் அவர்களது குறுகிய புத்திக்கும், ஆணவத்திற்கும், அநேக உதாரணம் சொல்லலாம். அவர்களது தீட்சையும், பஞ்சாட்சர மகிமையும், ஜபமும், மற்றவர்களை நாயினும் கடையாய் மதிக்கச் செய்தாலும் சுமார் 20 வருடத்திற்கு முன் அவர்களை மனிதப் பிறவி என்று சொல்லுவதற்குக் கூட யோக்கியதை இல்லாமலிருந்தது என்பதை நாம் நேரில் அறிவோம். ஏன்? இப்போது கூட எத்தனையோ பதர்கள் தங்களைச் சைவர்கள் என்று சொல்லிக்கொண்டு மனிதனைத் தொட்டால் பாவம் என்றும், ஒரு மனித னோடு வேறு ஒரு மனிதன் கூட இருந்து உணவு கொண்டால் அது உணவு அல்லவென்றும் மற்ற சமயக்காரர்கள் எல்லாம் மக்கள் அல்லவென்றும், சாம்பலும் கொட்டையும் தவிர வேறு கொள்கை சைவத்திற்கு இல்லை என்றும் கருதும்படி நடப்பவர்களையும் தாராளமாய்க் காணலாம்.

நான்காவதாக, சைவ சமயத்திற்கு ஆதாரம் 12 திருமுறைகளும், 14 மெய்கண்ட சாத்திரங்களும், வேதசிவாகமப் பகுதிகளும் என்று தீர்மானித் திருக்கின்றார்கள். சைவ சமயம் மிகுதியும் மோசமானது என்பதற்கு இதைப் போல வேறு உதாரணம் தேவையில்லை. திருமுறைகளில் அநேகம் எல்லாம் புராணக்குப்பைகளை ஆதாரமாகக் கொண்டவையே ஒழிய வேறில்லை. அவற்றுள்ளும் அநேகம் பிற சமயக்காரர்களைப் பார்ப்பனர்களைப்போல் இழிமுறையில் வையும்படியும் கொல்லும்படியும் வைததாகவும், கொன்ற தாகவும், ஒவ்வொரு பதிகத்திலும் மிதக்கக் காணலாம். ஆகமங்களோ, எந்த அளவில் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும், மனிதத் தன்மைக்கும் பொருத்த மானவை என்று கருதினார்களோ தெரியவில்லை!

இவ்வளவும் போதாமல் வேத, சிவாகம பகுதிகளும் ஆதாரமாம். எனவே சைவ சமய ஆராய்ச்சி "பிள்ளையார் பிடிக்க அது குரங்காய் முடிந்தது" என்பது போல் முடிந்தது.

ஐந்தாவதாக சைவச் சின்னம் சிவன்தான் பதி.சரியை, கிரியை யோகம் ஞானம் என்பவைகள் எப்படி ஆராய்ச்சிக்குள் அடங்கின என்பது விளங்கவில்லை. இதை விளக்கினால் 10 பக்கம் போதாது.

## வருணாசிரம மகாநாடுகள்

இது இப்படி இருக்க வருணாசிரம மகாநாடுகளின் தீர்மானங்களோ சைவப் பெரியார் மகாநாட்டிற்குக் கொஞ்சமும், பின்வாங்கியவை அல்ல. உருண்டைக்கு நீளம் புளிப்பிற்க வளப்பன் என்பது போல் சைவப் பெரியார் கள் தீர்மானங்களை தோற்கடித்துவிடக் கூடியவையாகவே இருக்கின்றன. இவற்றைப்பற்றி அடுத்தவாரம் விளக்குவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 07.04.1929**


RangaRakes
tamilnavarasam.com

# வருணாசிரம மகாநாடு

சென்ற வாரம் 'இரண்டு மகாநாடுகள்' என்னும் தலைப்பின் கீழ் நமது முன்னேற்றத்திற்கு விரோதமான கிளர்ச்சிகளைப் பற்றி எழுதி முதலாவதாக சைவப் பெரியார் மகாநாட்டைப் பற்றி குறிப்பிட்டுவிட்டு இந்த வாரம் வருணாசிரம மகாநாடு, பார்ப்பனர்கள் மகாநாடு ஆகியவைகளைப்பற்றி எழுதுவதாகக் குறிக்கப்பட்டிருந்தோம். அதோடு இந்த வாரம் சென்னையில் திரு.எ.ராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் காங்கிரஸ் கக்ஷியைச் சேர்ந்த முக்கியத் தலைவரான திரு.சாமி வெங்கடாசலம் செட்டியார் சீர்திருத்த சம்மந்தமாகவும் சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்கள் சம்மந்தமாகவும் தமது அப்பிப்பிராயத்தை ஒரு உபன்யாசம் மூலமாகத் தெரிவித்திருக்கின்றார்.

அதுவும் ஏறக்குறைய பார்ப்பனர்கள் மகாநாடு, வருணாசிரம மகாநாடு, சைவப் பெரியார் மகாநாடுகள் போன்றவைகளின் அபிப்பிராயத் தையே வர்த்தக யுத்தி முறையில் பேசியிருக்கின்றார். அதன் சாரமும் அதற்கு திரு. எ.ராமசாமி முதலியார் அவர்களின் விளக்கமான சமாதானமும் வேறு பக்கத்தில் பிரசுரித்திருக்கின்றோம்.

திரு.சாமி வெங்கிடாசலமவர்கள் வவ்வாலைப்போல் பார்ப்பனர் களுக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் நல்ல பிள்ளையாக நடந்து கொள்ள வேண்டும் என்னும் முறையில் எவ்வளவோ சாமர்த்தியமாகப் பேசியிருந்தாலும் தன்னைப் பொறுத்தவரை தான் சூத்திரன் அல்லவென்ற எண்ணத்தினால் வருணாசிரமத்தை காப்பாற்ற எண்ணி அதை மக்களிடம் புகழ்ந்து பேசியிருக்கிறார்.

திரு.சாமி அவர்கள் எவ்வளவு தூரம் பார்ப்பனீயத்தை ஆதரித்தாலும் பார்ப்பனர்கள் திரு.சாமியையும் சூத்திரர்கள் என்பவர்களின் கணக்கில்தான் சேர்த்து வாழ்க்கையில் கோவில், ஓட்டல் முதலியவைகளில் 'சூத்திரன்' மரியாதைதான் கொடுத்து வருகின்றார்கள் என்பதை மறுக்க முடியாது. அன்றியும் திரு.சாமி வெங்கிடாசலம் அவர்களின் வருணம் என்பதான வைசிய வருணத்திற்கு வருணாசிரம தர்ம வியாக்கியானமொன்றில் 'பிராமண ஆணும், க்ஷத்திரிய பெண்ணும் சேர்ந்து பிறந்த பிள்ளை வைசியனாகின்றான்' என்று எழுதி இருப்பது தெரியுமா? தெரியாதா? அல்லது தெரிந்தே வருணாசிரமத்தை ஆதரிக்கின்றாரா? என்பது விளங்கவில்லை.



நிற்க, மதுரை ராமநாதபுரம் திருநெல்வேலி முதலிய பார்ப்பன மகாநாடுகளில் அதன் தலைவர்கள் பேசியிருப்பதை பார்த்த பிறகாவது திரு.சாமிவெங்கிடாசலம் செட்டியாரவர்களுக்கு ஏதாவது மாறுதல் உண்டா குமோ அல்லது பழைய எண்ணமேதான் இருக்குமோ என்பது குறிப்பிட முடியாதது. மேற்படி மகாநாட்டுத் தலைவர்கள் பேசியிருப்பதின் சாரமாவது:-

**பிராமண மகாநாட்டு வரவேற்பு அக்ராசனர் சொற்பொழிவுச் சாரம்**

மோட்சத்திற்கு ஆதாரம் வேதம், வேதத்தை அப்யசிக்கின்றவர்கள் பிராமணர்கள்; கிரேக்கர், பார்சி, டச்சு, போர்ச்சுகீசு, பிரஞ்சு, மகமதியர் ஆகிய நம் மத, துவேஷ, ராஜாக்கள் காலத்திலும் இம்மாதிரி ஒரு மகாநாடு கூட்ட வேண்டிய அவசியமல்லாமல் நமது மதம் நிலைநின்றிருக்கின்றது.

நாம் தினமும் செய்துவரும் பிரார்த்தனை பிராமணர்களுக்கும் பசுக்களுக்கும் க்ஷேமம் உண்டாக வேண்டும்; ராஜா (இதற்கேற்றபடி) நீதியாய் நடக்கவேண்டும் என்பவைகளாகும். இம்மாதிரி பிரார்த்தனை எந்த மதத்திலாவது உண்டா? இப்பொழுது நாடார், சுயமரியாதைக்காரர், ஸ்திரீகள், விதவைகள், யுவர், யுவதிகள் முதலியவர்கள் சங்கங்கள் விருத்தியடைந்து வருகின்றது. நமது அப்பிராமணர்கள் (சூத்திரர்கள்) நம்மீது துவேஷம் கொள்ளுகின்றார்கள். இவைகள் எல்லாம் நாம் ஈடேற விடாமல் செய்யத்தக்கதல்லவா?

சூத்திரர்கள் அவர்களுடைய கடமைகளை கடந்ததால் பிராமணர்கள் சுய நலக்காரர்களாக வேண்டியதாயிற்று.

மத விஷயங்களிலும் சமூக விஷயங்களிலும் சட்டசபைகள் பிரவேசிக்கக்கூடாது (அவர்கள் யார்).

சதிகாப்பு, விதவாவிவாகம், ஜாதி பேதவிலக்கு தர்மசொத்து ஆகியவைகளைப் பற்றி சட்டம் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

இன்னும் ருதுமதி, கல்யாண ரத்து, பெண்களுக்குச் சொத்துரிமை ஆகியவைகளுக்கும் சட்டம் வேண்டுமாம்.

தேவதாசிகளைத் தூஷிக்கவும், பாலியவிவாகத்தை தடுக்கவும் வந்துவிட்டார்கள். இவைகள் எல்லாம் இந்து மதத்தையே வேரறுக்கச் செய்வதே தவிர இதனால் ஒரு பலனும் விளையாது.

(இவைகள் இந்து மதக் கொள்கையானால் இந்துமதமிருக்க வேண்டுமா?)

பெண்களை பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி கற்பித்தல் கூடாது.

அப்படிச் செய்வதால் அவர்களும் ஆண்களாகி விடுவார்கள். பெண்களுக்கு குடும்ப காரியம், கற்பு, புத்திராபிவிர்த்தி செய்வதற்கும்



RangaRakes tamilnavarasam.com

ராமாயண பாரதம் கற்பித்தல் ஆகியவைகளே போதுமானது.

சூத்திரர்கள் வேதம் படிக்கக்கூடாது என்பதை பற்றியும் சூத்திரன், பஞ்சமன் என்று அழைப்பதை பற்றியும் ஆட்சேபித்து சிலர் கிளர்ச்சி செய்துவருகின்றார்கள்.

சூத்திரன் என்ற சொல் மிகப் பரிசுத்தமானது.

யாக எக்யாதிகளுக்கு சூத்திரன் அவசியமானவனாகிறான்.

பஞ்சமர், தீண்டாதார் என்று வித்தியாசப்படுத்திக் கொண்டு அப்படி ஒரு ஜாதி இருப்பதாய் வித்தியாசம் கற்பிப்பது கொடிதான காரியமாகும்.

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் ஆகியவர்கள் அவரவர்கள் கடமையிலிருந்து தவறும் போதுதான் பஞ்சமர்களாகின்றார்கள்.

அப்படி தன் வருண தர்மத்திலிருந்து தவறினவன் மறுபடியும் அந்த வருணத்தை அடைய முடியாது.

தினமும் ஸ்நானம் செய்யாததினாலேயே தீண்டாதவர்களாகின்றார் கள். தீண்டாமையை விலக்க தீண்டாதவர்களே சம்மதிக்க மாட்டார்கள். ஏனென்றால் தீண்டாதவர்களிடம் உயர்குணமிருக்கிறது. உள்ளது போதும் என்று திருப்தியடைகின்றார்கள்.

## தலைவர் உபன்யாசத்தின் சாரம்

"துவேஷமும் தெய்வ தூஷணையும் ஏற்பட்டு விட்டதால் பிராமண சபை கூட்டவேண்டியதாயிற்று. ஒவ்வொரு வர்ணத்தாரும் அவரவர்கள் தர்மப்படி நடந்தால் எல்லோரும் நன்மையடையலாம்.

சூத்திரர்கள் வேதம் படிக்காததால் ஒன்றும் முழுகிப் போய்விடாது. அவர்களுக்குப் புராணங்கள் இருக்கின்றது. சூத்திரன் என்ற பதம் நல்ல பதம்.

ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு தர்மம் இருக்கின்றன. அதுபோல் இங்கும் அவனவன் தர்மப்படி நடக்கவேண்டும்.

பிராமணர்களை அப்பிராமணர்கள் (சூத்திரர்கள்) ஏன் தூஷிக்க வேண்டும். சூத்திரர்களில் நாயக்கர், வேளாளர் ஆகியவர்கள் எவ்வளவோ ஆச்சாரமாயிருக்கின்றார்கள்.

சூர்ப்பனகை எதிரில் வந்ததால் சீதை அக்கினிபிரவேசமாக நேர்ந்தது. ஸ்திரீகளை பத்திரமாக காப்பாற்ற வேண்டியது ஆண்கள் கடமை. ஸ்தீரீகள் உத்தியோகத்திற்கு லாயக்கில்லை. மேலதிகாரிகளுக்கு என்னவெல்லாம் செய்ய நேரிடுமோ?"

எனவே பிராமணன்தான் இந்து மதத்திற்கு ஆதாரமானதென்றும் வேதம் படிக்கலாம் என்பதும். தாங்கள் தான் பிராமணர் என்பதும், இந்துமத



தத்துவப்படி மற்றவர்களை சூத்திரர்கள் என்பதும், வெகுகாலமாக அநேக இந்து மகமதிய ராஜாக்கள் காலத்தில் கூட தாங்கள் அவர்களை ஏமாற்றி தங்களது ஆதிக்கங்களை நிலைநிறுத்தி வந்திருப்பதும் பிராமணனும் அவனதும் ஆதாரத்திற்கு மாடுகளும் க்ஷேமமாக இருந்தால்போதும்; மற்றவர்கள் எக்கேடு கெட்டாலும் கவலை இல்லை என்பதும், இதை நிலை நிறுத்தத்தக்கவன்தான் அரசனாக இருக்க வேண்டுமென்பதும், நாடார் முதலிய சமூக மகாநாடுகளும் சுயமரியாதை மகாநாடுகளும் தங்கள் ஆதிக் கத்திற்கு விரோதமானவை என்பதாகக் கருதி இருக்கின்றார்கள் என்பதும், சூத்திரன் பிராமணனுக்கு அடிமையாயிருக்க வேண்டியதும், சூத்திரப் பெண்கள் அவர்களுக்கு தாசிகளாயிருக்க வேண்டியதுமான சூத்திரத் தர்மம் தவறினதாலேயே பிராமணர்கள் சுயநலக்காரர்களாக இருக்கின்றார் என்று சொல்லுவதன் மூலம் பார்ப்பனர் தங்கள் சுயநலத்திற்கு சமாதானம் சொல்லுவதும், சமத்துவம் இருக்கக் கூடாது, தர்ம சொத்துக்களின் கணக்கு கேட்கக் கூடாது, குழந்தைப் பெண்களுக்கு கல்யாணம் செய்ய வேண்டும், பெண்களுக்கு சொத்துக்கள் இருக்கக் கூடாது, படிப்புக்கூடாது, சுதந்திரம் கூடாது, தாசிகள் இருக்க வேண்டும், விதவைகள் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது என்பது போன்ற கொள்கைகளே இந்துமதம் என்பதும் மேல் கண்ட கொள்கைகளில் எதைத் திருத்துவதானாலும் இந்துமதத்தை அழித்ததாகுமாதலால் சர்க்கார் அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதும், பெண்கள் வீட்டு வேலை செய்வதும் பிள்ளை பெறுவதும் தவிர வேறு உரிமைக்கு லாயக்கில்லை என்பதும், கற்பு பெண்களுக்கு மாத்திரமே ஒழிய ஆண்கள் விஷயத்தில் கவலை இல்லை என்பதும் ராமாயணம் பாரதம் ஆகியவைகளே தர்மத்திற்கு ஆதாரமானதென்பதும், சூத்திரன், பஞ்சமன், என்று அழைப்பது மிகவும் சரியானதென்றும், அவை அவர்களுக்கு மிகவும் மேன்மையானதென்பதும் சூத்திரன் என்ற சொல் மிகவும் பரிசுத்தமான தென்பதும், பிராமணர்களின் யாகத்திற்கு பயன்படவே சூத்திரன் இருக் கின்றான் என்பதும் சூத்திரன் அவனுக்குள்ள கடமையை செய்யாததால் பஞ்சமனாக வேண்டியதாகின்றதென்பதும் தினமும் ஸ்நானம் செய்யாததால் தீண்டாதவர்களானார்கள் என்பதும், தீண்டாதவர்கள் அப்படியே இருக்க விரும்புவதுதான் உயர்குணமென்பதும், சூத்திரர்கள் புராணங்கள் படித்து அதன்படி நடந்தால் அவர்கள் வேதம் படித்ததற்கு சமான மென்பதும், வேளாளர்கள் நாயக்கர் முதலியவர்கள் எல்லாம் சூத்திரர்கள் என்பதும் ஆகிய விஷயங்கள் வியக்தமாகவும் நன்றாகவும் பொருள்படும்படி பேசி இருக்கின்றார்கள். இதற்கேற்ற தீர்மானங்களும் செய்திருக்கிறார்கள்.

சைவமத சைவப்பெரியார் மகாநாடு தீண்டாதவர்களுக்கு தனிக் கோவில் கட்டிக் கொடுப்பதன் மூலம் தீண்டாமையை நிலைநிறுத்தப் பாடு படுகின்றது, வருணாசிரம மகாநாடும் பிராமண மகாநாடும். ஒரே அடியாய் இருக்கின்றபடியே இருக்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டன. இதிலிருந்து வாசகர்களை நாம் ஒன்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

அதாவது “மேற்கண்ட கொள்கைகளையுடைய இந்து மதமும் அதற்கு ஏற்ற கடவுள்களும் சைவ மதமும் அதற்கு ஏற்ற சிவனும் இருக்க வேண்டுமா? அல்லது அவற்றைக் குழித்தோண்டிப் புதைக்க வேண்டுமா?” என்பதேயாகும். இதுவரை எந்த ஆஸ்தீக சிகாமணியும் தேசீய வீரர்களும் மேற்கண்ட இந்துமத ஆதாரத்தையும் சைவ சமய ஆதாரத்தையும் மறுத்துப் பேசவோ வேறு ஆதாரம் காட்டவோ சிறிதாவது முற்பட்டவரல்ல; ஆனால் இந்துமதத்தையும் வேதத்தையும் ஆகமத்தையும் தர்மத்தையும் புராணங் களையும் காப்பாற்ற மாத்திரம் வரிந்து கட்டி கொண்டு முன்வந்திருக் கின்றார்கள்.

சிலர் தங்களை சூத்திரன் என்று சொல்லிக் கொள்ளப்போவதாகவும் தாங்கள் உண்மையிலேயே சூத்திரர்கள் தான் என்றும் அதிலும் சற்சூத்திரர் கள் என்றும் சொல்லி ஆனந்தபடுகிறார்களாம். பார்ப்பன செல்வாக்கும் அவர்களது பணமும் நமது மக்களை என்ன வேண்டுமானாலும் செய்யதக்க வலுவுடையதாக இருக்கின்றது என்பதை நாம் சுலபத்தில் மறுக்க முடியாத வர்களாயிருக்கின்றோம். பார்ப்பனரல்லாத மக்கள் பலருக்கு சுயமரியாதை மகாநாடு விஷயமாய் இருக்கும் ஆத்திரத்தில், அதிருப்தியில் ஒரு பங்குகூட இந்த வருணாசிரம மகாநாட்டிலும் பிராமண மகாநாட்டிலும் ஏற்படாதிருப் பதற்கு நமக்கு காரணமே விளங்கவில்லை. எப்படியானபோதிலும் இந்த மகாநாடுகளும் எதிர்ப்பிரசாரங்களும் நமது கொள்கைகளையும் உத்தேசங் களையும் முயற்சிகளையும் உறுதிப்படுத்துகின்றதே தவிர சற்றாவது தளர்ச்சி யாக்கவில்லை என்பதையும் நமது வாலிபர்கள் மேற்கண்ட கொள்கைகள் கொண்ட மதங்களையும் சாமிகளையும் ஒழிக்கத் தயாராயிருக்க வேண்டியது தான் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 14.04.1929**



RangaRakes

## இந்தியாவில் எப்படி பார்ப்பனீயம் நிலைத்திருக்கின்றது?

உலகம் முழுவதும் விழிப்படைந்து முன்னேறிக் கொண்டிருக்கிற காலத்தில், குறிப்பாக எல்லா சமூகத்தைவிட மதசம்பந்தமான பிடிவாதத்தில் இணையற்ற மகமதிய அரசர்கள் ஆக்ஷி செய்யும் நாடுகளும் கூட அரசுரி மையை இழந்தாவது சீர்திருத்தத்தைப் பரப்பவேண்டும் என்று முயற்சித்துக் கொண்டிருக்கும் அரசர்களுக்கும் கட்டுப்பட்டு நடந்துவரும் இக்காலத்தில் இந்தியா மாத்திரம் ஒரு கடுகளவுகூட தன் நிலையைவிட்டு அசையாமல் இருக்கக் காரணம் என்னவென்பதை மக்கள் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

நிற்க, பொதுவாக உலக மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து சகோதர பாவம் கொள்ளுவதற்கு உலகத்தில் முதல் தடையாயிருந்தது - இருப்பது - மதங்கள் என்று சொல்லப்படுபவைகளேயாகும். இரண்டாவது, அதன் உட்பிரிவுகள் ஆகும். மூன்றாவது பாஷைகள் ஆகும். இதை அனுசரித்து இடவித்தியாசங்களுமாகும். உதாரணமாக பவுத்தர்கள், கிறிஸ்தவர்கள், மகமதியர்கள் இந்துக்கள் என்பன போன்ற மதப்பிரிவுகள் உலகத்தில் இல்லாமலிருந்தால் மக்கள் சமூகத்தை பெரும்பெரும் பிரிவுகளாகப் பிரித்துக்காட்டவும் ஒரு நாட்டாருடைய சுகதுக்கங்கள் மற்ற நாட்டார்களுக்கு சம்மந்தமில்லாமலிருக்கவுமுள்ளதான நிலை உலகத்தில் இருக்கவே முடியாது எனலாம்.

வேண்டுமானால் ஒரு சமயம் தேசத்தின் பேரால் மக்களையும் பிரித்துக்காட்ட வேண்டியதாக ஏதாவது ஏற்பட்டால் ஏற்படலாம். அப்படிக்கு இருந்தாலும் துருக்கியருக்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் உள்ள பிரிவுகள் போன்ற பிரிவுகளும் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் உள்ள வித்தியாசம் போன்ற பிரிவுகளும் போல இருக்குமே ஒழிய எந்தக் காரணத் தைக் கொண்டும் ஒற்றுமைப்பட முடியாததும் ஒரு தேசத்தையோ ஒரு சமூகத்தையோ அடியோடு கொன்று ஒரு தேசத்தார் வாழத்துணியும்படியான பிரிவுகளாகவும் மற்றவர்களைப் பற்றி ஒரு சிறிதும் கவலை கொள்ளாமல் தங்கள் தங்கள் சமூக நன்மையை மாத்திரம் கவனிக்கக் கூடிய பிரிவு களாகவும் ஒருவருக்கொருவர் நடை, உடை, பாவனை, பழக்க வழக்கம் முதலியவைகளால் வெறுப்புக் கொள்ளும் பிரிவுகளாகவும் பிரிந்திருக்க



tamilnavarasam.com

முடியவே முடியாது என்பது நமது உறுதியாகும். கிறிஸ்தவர்களுக்குள் பலபிரிவுகள் இருந்த போதிலும் மதம் என்கின்ற ஒரு காரணத்தால் ஒன்றுபட்டு உலகத்தில் உள்ள எல்லாக் கிறிஸ்தவர்களும் இந்தியாவின் ஆதிக்கம் முதலிய விஷயங்களில் எதிரிகளாகவே இருந்து இந்தியாவை உறிஞ்சி வருகின்றார்கள் என்பதை தினமும் உணருகின்றோம். அது போலவே உலகத்தில் உள்ள எல்லா மகமதியர்களும் தங்கள் மதத்தின் பேராலும் சமூகத்தின் பேராலும் தங்களது நன்மையைக் குறிக்கொள்ளும் போது இந்துக்கள் என்பவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிரிடையாய் இருக்க நேர்ந்தாலும் சிறிதும் அபிப்பிராய பேதமில்லாமல் ஒன்று சேருகின்றார்கள்.

அதுபோலவே இந்துக்கள் என்பவர்களும் மதவிஷயங்கள் என்பவைகளில் மகமதியர்கள் கிறிஸ்தவர்கள் என்பவர்களுக்கு எதிராக ஒன்று சேர முடியாதவர்களாயிருந்தாலும்கூட ஒன்று சேர வேண்டும் என்கின்ற உணர்ச்சிகளை எளிதில் அடைவதன் மூலம் எதிரிகளாக கருதத் தக்கவர்களாகி விடுகின்றார்கள்.

இது சரியா? தப்பா? அல்லது இதற்கு ஏதாவது பொருள் உண்டா? என்பவைகள் ஒருபுறமிருந்தாலும் முக்கியமாய் மதத்தின் பலனாய் வேற்றுமை உணர்ச்சிகள் தோன்றியே தீருகின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. இப்படியெல்லாம் இருந்தாலும் கூட மேல்நாட்டில் உள்ள ஒவ்வொரு மதக்காரர்களும் சமீபகாலமாய் தங்கள் பிடிவாத குணங்களை விட்டு முதலில் தங்களுக்குள் ஒன்றுபடுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு அம்முயற்சிக்கு எதிரிடையாய் இருப்பவைகளைத் தகர்த்தெறிந்து ஒரே சமூகமாக ஆவதற்கு மிக முனைந்து வருகின்றார்கள். இம் முயற்சிக்கு விரோதமாக மதத்தின் பேராலும் தெய்வத்தின் பேராலும் இருக்கும் தடைகளைக் கூட வெகு சுலபத்தில் தகர்த்தெறியத் துணிந்து வருகிறார்கள்.

உதாரணமாக இம்முயற்சியில் சிறிதளவானாலும் முதலில் வழிகாட்டிய பெருமை மேல்நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கே உண்டு என்று சொல்ல வேண்டும். ஏனெனில், அவர்கள்தான் முதன் முதலாக நிலைமைக்குத் தக்கபடி தங்களைச் சரிப்படுத்தி கொள்ள முன்வந்தவர்கள். உதாரணமாக அவர்கள் வேதம் என்று சொல்லப்படும் பைபிளைக்கூட திருத்த முயன்று பழைய ஏற்பாட்டிற்கு விரோதமாய் புதிய ஏற்பாட்டை உண்டாக்கி நடை உடை முதலியவைகளையும் மாற்றிக் கொண்டார்கள். அதுபோலவே, இரண்டாவதாக மகமதியர்களையும் சொல்லலாம். ஏனெனில் அவர்களிலும் இந்துக்கள் என்பவர்களைபோல் பிறவியில் உயர்வு தாழ்வு என்பது போன்ற சில கடுமையான பிரிவினை வித்தியாசங்கள் இல்லாவிட்டாலும் வாழ்க்கையில் மகமதியர்களையும் மதம் என்பது இந்துக்கள் என்பவர்களைப்போலவே அநேக விதங்களில் கட்டுப்படுத்தி வந்திருக்கின்றது என்று சொல்லலாம். உதாரணமாக நடை உடை பாவனை முதலாகிய பலவற்றுள் மதங்களின்



பேரால் கட்டுபட்டுக் கிடந்தாலும் இப்போது தைரியமாய் அக் கட்டுப்பாடுகளில் சிலவற்றையாவது தளர்த்திவிட ஆரம்பித்து விட்டார்கள். அது மாத்திரமல்லாமல் வெகு துரிதமாகவும் தைரியமாகவும் சிலர் மாற்றிக் கொள்ளவும் ஆரம்பித்துவிட்டார்கள். அந்தப் படிக்கு மாற்றிய மகமதிய வீர அரசர்களான அமீருக்கும் பாஷாவுக்கும் ஆதரவு கொடுக்கவும் முந்துகின்றார்கள்.

மற்றும் வெளிநாடுகளில் அந்தந்த தேச குடிஜனங்கள் பெரும்பாலோர் அத்திருத்தங்களுக்கு தாராளமாய் ஆதரவளித்துப் பின்பற்றி வருவதில் யாதொரு தடையும் காண முடியவில்லை. ஆனால் புரோகிதக் கூட்டத்தின் தொல்லைகள் மாத்திரம் எந்த மதத்திலும் சிறிதளவாவது இல்லாமலிருக்கும் என்று சொல்லிவிட முடியாது என்றாலும் அவர்களிலும் சிலர் தம் சுயநலத்திற்கு வலியுறுத்துவதை தவிர வேறு காரணங்கள் சொல்லவோ ஆதாரங்கள் காட்டவோ முடியாதபடி மக்கள் அறிவு பெற்று விட்டார்கள். இந்தியாவில் உள்ள மகமதிய சமூகமும் இந்தியர்களுடன் பழகுவதால் கமால் பாக்ஷாவுக்கும் அமீருக்கும் விரோதமாக அதிருப்தியும் ஆத்திரமும் காட்டுவதன் மூலம் ஒரு புறத்தில் தங்கள் மதப்பற்றை காட்டிக் கொண்டாலும் மற்றொரு புறம் தங்கள் சமூக நன்மையை உத்தேசித்து அவர்களுக்கு ஆதரவளித்தே வருகின்றார்கள். உதாரணமாக அமீரையும் அவரது மனைவியரையும் இந்திய மகமதியர்களில் சிலர் குறைகூறி இருந்தாலும் அமீரினது ஆட்சிக்கு ஆபத்து வந்துவிட்டது என்று தெரிந்தவுடன் அவருக்கு இந்தியாவில் உள்ள மவுலானாக்கள் முதல் கொண்டு அனுதாபப்படுவதுடன் ஆதரவளிக்கவும் முந்துகின்றார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதன் காரணம் என்னவென்று பார்ப்போமானால் கூடுமான வரை அந்த சமூக நன்மை சம்மந்தமான கவலையும் ஒற்றுமையுமேயாகும். ஆனால் இந்துக்கள் என்பவர்களுக்குள் அம்மாதிரியான சமூக ஒற்றுமை இல்லாமல் எவ்வித திருத்தங்களுக்கும் எதிர்ப்புகள் இருந்து வருவதற்குக் காரணம் என்ன என்று பார்ப்போமானால் இதிலுள்ள மதப்பிரிவுகளோடு அவைகளிலுள்ள உட்பிரிவுகளும் ஜாதிப்பிரிவுகளும் அவற்றில் உள்ள உயர்வு தாழ்வுகளும் அதனால் சிலருக்கு ஏற்படும் நிரந்தர நலமுமே காரணமாகும். இந்த உள் பிரிவுகளும் ஜாதிப் பிரிவுகளும் நிலைத்து குருட்டுப் பிடிவாதமாய் இருப்பதற்குக் காரணம் என்னவென்று பார்ப்போமானால் மற்ற மதங்களைவிட இந்துக்கள் இந்துமதம் என்பவற்றில் அதிகமான நிர்ப்பந்தங்கள் இருந்து வருகின்றது என்பதேயாகும்.

அவையாவன முதலாவது இந்துக்களுடைய மதக்கொள்கைகளின்படி மக்கள் படிக்கக்கூடாது. ஆனால் ஒரு சிறு வகுப்பினர் – பார்ப்பனர்கள் என்பவர்கள் மாத்திரம்தான் படிக்க உரிமையுள்ளவர்கள். மத ஆதாரம் என்பதைப் பற்றி இந்து மதத்தைச் சேர்ந்த மக்களே தெரிந்து கொள்ளக் கூடாது. மத சம்மந்தமான எந்த விஷங்களிலும் பிறவியிலேயே தாங்கள் உயர்ந்தவர்கள் என்று ஏற்பாடு செய்து கொண்ட ஒரு சிறு வகுப்பார் அதாவது



RangaRakes tamilnavarasam.com

100-க்கு 2 பேர்களான பார்ப்பனர்கள் - தவிர மற்றவர்களுக்கு சொந்த அறிவை உபயோகிக்கவோ ஆராய்ச்சி செய்யவோ நன்மை தீமை எவை? அவசியமானவை எவை? அவசியமில்லாதவை எவை? என்று தெரியவோ சற்றும் உரிமை கிடையாது.

படிப்பு மத சம்பந்தம் ஆகியவைகளில் இம்மாதிரியான நிர்ப்பந்தம் இருப்பதோடு மாத்திரமல்லாமல், மனித வாழ்க்கையிலும் மக்களைத் தனித்தனி ஜாதிகளாகப் பிரித்ததோடல்லாமல், அவற்றில் உயர்வு தாழ்வும் ஒருவரை ஒருவர் தொடாமல் நெருங்காமல் காணமுடியாமல் செய்வித்து ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு பிறவித் தொழிலையும் ஏற்படுத்தி அவைகளையேதான் அவ்வவ்வகுப்பைச் சேர்ந்தவன் செய்து தீரவேண்டும் என்றும் அந்தப்படி அரசன் சட்டம், தண்டனை, கண்டனை ஆகியவைகள் மூலம் செய்விக்க வேண்டும் என்றும் அரசர்களாலும் நிர்ப்பந்தப்படுத்தப் பட்டுவிட்டது.

ஒரு சிறு கூட்டத்தார் தங்கள் ஜனத் தொகைக்குத்தக்கபடி, தங்கள் வாழ்வுக்குத் தேவையானபடி நிரந்தரமாய் பொருள் வருவாய் இருக்கத் தக்கதாக பதினாயிரக்கணக்கான கடவுள்களை சிருஷ்டித்து ஆயிரக்கணக் கான சடங்குகளையும் சிருஷ்டித்து அவற்றிற்கு தினப்படி பூஜை, உற்சவம், கல்யாணம் அவைகளின் திருப்திக்கு என்று அச்சிறு கூட்டத்தாருக்கு வேண்டியவைகளையெல்லாம் அவசியமாக்கி அவர்கள் கேட்டதையெல் லாம் கொடுக்க வேண்டும் என்றும் அச்சிறு கூட்டத்தாரின் திருப்தியே கடவுள் திருப்தி என்றும் மற்ற மக்கள் பிறந்ததே, அச்சிறு கூட்டத்திற்கு தொண்டு செய்வதற்கென்றும் பலவாறாகக் கற்பித்து, அக்கட்டுப்பாடுகளிலிருந்து யாராவது விலகவோ அல்லது அக்கட்டுப்பாடுகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யவோ புறப்பட்டால் அவ்வாராய்ச்சி செய்வது மகாபாதகமான தென்றும் நாஸ்திகமென்றும் அப்படிப்பட்ட நாஸ்திகனை அரசன் தண்டிக்க வேண்டுமென்றும் மற்றும் இது போன்ற பல நிர்ப்பந்தங்களையும் உண்டாக்கி வைத்திருக்கின்றார்கள்.

இது மாத்திரமல்லாமல் யாராவது துணிந்து இக்கட்டுப்பாட்டையும் கொடுமையையும் உடைக்கப் புறப்பட்டால் அவர்களை அசுரர்கள், ராக்ஷதர்கள், துஷ்டர்கள், தேவர்களுக்கு விரோதி, கடவுளுக்கு விரோதி, உலகத்திற்கு ஆபத்தை விளைவிப்பவன் என்பதான விஷமப் பிரசாரத்தால் அவனை அடியோடு அழித்து வந்திருக்கின்றார்கள். இன்றைய தினமும் மேல் கண்ட கொள்கைகளே மதக் கொள்கைகளாகவும் அவைகளைக் கொண்ட புஸ்தகங்களே மத ஆதாரங்களாகவும் அவைகளை நிலைநிறுத்தச் செய்வதே சீர்திருத்தங்களாகவும் இருந்து வருகின்றன.

உதாரணமாக இது சமயம் நாட்டில் ஏற்பட்ட ஒரு புது உணர்ச்சியும் கிளர்ச்சியுமானது மக்களை எவ்வளவோ தூரம் நடை உடை ஆச்சாரம் போகம் போக்கியம் முதலியவைகளில் பழய கொள்கைகளையும் பழய



RangaRakes

அனுபவங்களையும் மாற்றிக் கொள்ள அவசியமும் இடமும் ஏற்படுத்தி கொடுத்து அனுபவத்திலும் தலை சிறந்து விளங்கிக் கொண்டிருந்தும், தனது சொந்த சுயநலம் மாத்திரம் எவ்வளவு அறிவீனமும் ஆணவமும் இழிவும் பொருந்தியதாக இருந்த போதிலும் அதிலிருந்து சற்றாவது மாறுபடுவதோ தளர்த்தப்படுவதோ என்பது சிறிதும் முடியாததாகவே இருக்கின்றது.

உதாரணமாக, மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் ஜாதி வித்தியாசத்தை நமது இந்திய நாட்டில் உள்ள அறிவாளிகள், பிரமுகர்கள், தலைவர்கள், பெரியோர்கள் இந்திய நாட்டில் உள்ள பொது இயக்கங்கள், சமய தத்துவங்கள் என்பவைகள் எல்லாம் அநேகமாய் ஒரே முகமாக விலக்க வேண்டும் என்றும் ஒழிக்க வேண்டும் என்றும் அந்தப்படி ஒழிக்காவிட்டால் நாட்டிற்கு சுதந்திரமில்லை, தேசத்திற்கு சுயமரியாதை இல்லை, சமயத்திற்கு மதிப்பு இல்லை என்று பலவாறாக அபிப்பிராயம் கொடுத்தும் தர்மத்தின் பேராலும் மதத்தின் பேராலும் கூட்டங்கள் கூடித் தங்களுக்கும் தங்கள் ஆதிக்கத்திற்கும் தகுந்தபடியே தீர்மானங்கள் செய்து வருகின்றார்கள்.

உதாரணமாக சமீபத்தில் பல இடங்களில் பார்ப்பனர்கள் ஒன்று கூடி வருணாசிரமத்தை உறுதிப்படுத்தி "பார்ப்பனர் தவிர மற்றவர்கள் பார்ப்பனர் களின் வைப்பாட்டி மக்கள் பார்ப்பன சேவைக்காக கடவுளால் உண்டாக்கப் பட்டவர்கள்" என்கின்ற கருத்துக்களடங்கிய சூத்திரர்கள் என்பதை நிலை நிறுத்த முயற்சித்திருப்பதும் சைவர்கள் என்பவர்கள் ஒன்று கூடி தீண்டாமை என்பதை நிலை நிறுத்தத்தக்க வண்ணமாக தீண்டாதவர்கள் என்பவர்களுக்கு தனிக் கோவில் கட்டிக் கொடுக்க என்று தீர்மானித்திருப்பதும் போதுமான உதாரணமாகும்.

எனவே இந்த மாதிரி வருணாசிரம தர்மங்களும் இந்தமாதிரி சைவர்களும் நமது நாட்டில் உள்ளவரை எந்த விதத்தில் பார்ப்பனீயம் ஒழிய முடியும்? எந்த விதத்தில் சமத்துவம் உண்டாகும்?

எந்தவிதத்தில் மக்கள் ஒற்றுமைப்பட்டு மானத்துடன் வாழ முடியும்? என்பதை யோசித்தால் இந்தியாவில் எப்படி பார்ப்பனீயம் நிலைத்து எந்தெந்த வழியில் நாட்டைப் பாழாக்கி வருகின்றது என்பது புலனாகும்.

எனவே, இந்தியாவில் பார்ப்பனீயமற்ற மதமே இல்லை என்றும் இந்து மதமென்னும் தலைப்பின் கீழ் எந்த மதமானாலும் சமயமானாலும் அகச் சமயமானாலும் அவற்றை எல்லாம் அடியோடு அழித்தாலல்லாது மக்கள் கடவுள் நிலை என்பதையோ அன்பு நிலை என்பதையோ ஒருக்காலமும் அடைய முடியாதென்றே சொல்லுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 14.04.1929**



tamilnavarasam.com

## ஈரோட்டில்
## ஆலயப்பிரவேசமும் அதிகாரிகள்பிரவேசமும்

ஈரோடு தேவஸ்தான கமிட்டியார் தங்கள் ஆதிக்கத்திற்குள் உள்ள தேவாலயங்களில் இந்துமதம் என்பதைச் சேர்ந்தவர்களுள் சுவாமியை வணங்க வேண்டும் என்கின்ற ஆசையுள்ளவர்கள் எல்லோரும் சுத்தமாகவும் ஆசாரமாகவும் ஆலயத்திற்குட் சென்று கடவுளை வணங்கலாம் என்று தீர்மானித்த தீர்மானத்திற்கிணங்க இந்துக்கள் என்பவர்களில் சிலர் கடவுளை வணங்க ஆலயம் சென்றதற்கு ஆலயக் குருக்கள் உட்கதவைப் பூட்டி விட்டுப் போய்விட்டதும், பிறகு வெகுநேரம் குருக்கள் வராததால் கோவி லுக்கு சுவாமி தரிசனம் செய்வதற்கென்று சென்றவர்கள் திரும்பிவிட்டதும் பிறகு குருக்கள் கோவில் வெளிக்கதவையும் பூட்டிவிட்டதும், சுமார் 15 நாட்களாக கதவு பூட்டி இருப்பதும் வாசகர்கள் உணர்ந்திருக்கலாம். இப்போது அதிகாரிகள் பிரவேசித்து போலீசாரை நடவடிக்கை எடுக்கச் செய்து இ.பி.கோ. 295, 297, 109 பிரிவுகளின்படி குற்றம்சாட்டி திடீரென்று வாரண்டு பிறப்பித்து மூன்று பேர்களை அதாவது திருவாளர்கள் ஈஸ்வரன், கருப்பன், பசுபதி ஆகியவர்களை மாத்திரம் அரஸ்டு செய்து அன்றைய பகலிலேயே விசாரணைக்கு வரும்படி ஜாமீனில் விடப்பட்டது. பகலில் மூன்று பேர்களும் மாஜிஸ்ரேட் கோர்ட்டுக்குப் போனவுடன் உடனே விசாரணை தொடங்கு வதாய் மாஜிஸ்ரேட் சொன்னதாகவும், எதிரிகள் தங்கள்மீது சுமத்தப்பட்ட குற்றம் இன்னது என்று தெரியக்கூட முடியாதபடி விசாரிப்பதின் இரகசியம் தெரியவில்லை. ஆகையால் வாய்தா கொடுத்தாலொழிய விசாரணையில் கலந்து கொள்ள மாட்டோம் என்று சொன்னார்களாம். அதற்கு மாஜிஸ்ட்ரேட் கோபமாகவும், ஆத்திரமாகவும் வாய்தா கொடுக்கப்படமாட்டாது என்றும், பிராதின் விபரம் தெரியவேண்டுமானால் விண்ணப்பம் போட்டால் நகல் உடனே கொடுக்கப்படும் என்றும் நாளையே விசாரணை செய்து கேஸ் முடிக்கப்படும் என்றும் சொன்னாராம். எதிரிகள் மேஜிஸ்ட்ரேட்டைப் பார்த்து நீங்கள் ஒரு பார்ப்பனராயிருப்பதாலும் உங்கள் கோபத்தையும் ஆத்திரத் தையும் பார்த்தால் எங்களுக்கு உங்கள் மனப்பான்மை ஏற்கனவே விரோத மாகக் கொண்டிருப்பதாய்த் தெரிய வருகின்றதாலும் உங்களிடம் இந்த வழக்கு நடப்பதன் மூலம் நியாயம் எதிர்பார்க்க முடியாதென்றும், வழக்கை வேறு கோர்ட்டுக்கு மாற்றிக் கொள்ள முயற்சிக்கப்பட வேண்டியிருப்பதால் வாய்தா கொடுங்கள் என்றும் விண்ணப்பம் கொடுத்துக் கேட்டார்களாம்.



உடனே மேஜிஸ்ட்ரேட்டுக்கு மயக்கமுண்டாகி அந்த விண்ணப்பத்தை ஏதோ சாக்குச் சொல்லி எதிரிகளிடம் கொடுத்துவிட்டு திங்கட்கிழமை வரை வாய்தா கொடுத்திருப்பதாக தாமே உத்திரவிட்டுவிட்டு முச்சலிக்கை வாங்கிக் கொள்ளும்படி சொல்லிவிட்டார்களாம். திங்கட்கிழமைய தினமும் எதிரிகள் இவ்வழக்கை வேறு கோர்ட்டுக்கு மாற்ற விண்ணப்பம் போடுவார்கள் என்பதாகத் தெரியவருகின்றது. ஊர் முழுவதும் எதிரிகளுக்கும் எதிரிகளின் செய்கைக்கும், அனுகூலமாகவும் குதூகலமாகவும் இருக்கின்றது. கூட்டங்களுக்கு 1000, 2000 ஜனங்கள் வந்தவண்ணமாய் இருக்கின்றார்கள். தினப்படி மீட்டிங்குகள் நடக்கின்றன. வழக்கை எதிர் வழக்காடாமல் விட்டுவிட்டு இதையே சத்தியாக்கிரகமாகச் செய்து தினப்படி ஜெயிலுக்கு ஆட்களை அனுப்பிக் கொண்டிருக்கலாம் என்பதாகச் சிலரும் எதிர் வழக்காடுவதின் மூலம் உரிமை உண்டா? இல்லையா? என்பதை உணர்ந்து பிறகு வேறு ஏதாவது காரியம் செய்யலாம் என்பதாக சிலரும் கருதிக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. எதற்கும் திரு. ஈ.வெ.ராமசாமியார் இவ்விரண்டு வாரமும் வெளி ஊர்களிலேயே இருந்திருப்பதால் அதாவது சென்னை, கோயமுத்தூர், பாலக்காடு, கொச்சி, ஆலப்புழை முதலிய இடங் களிலும் கோயமுத்தூர், திருச்செங்கோடு, சேலம் முதலிய இடங்களிலும் மகாநாடு காரியமாகவும் முன்னாலேயே ஒப்புக் கொண்டபடியும் போக வேண்டியிருந்ததால் இக் காரியங்கள் எதிலும் கலந்து கொள்ளவோ கலந்து யோசிக்கவோ முடியாமல் போய்விட்டது. ஆனாலும் சீக்கிரத்தில் கலந்து ஏதாவது ஒரு முடிவுக்கு வரப்படும். எதற்கும் தக்க முஸ்தீபுகளுடன் முன்ஜாக்கிரதையாயிருக்க வேண்டியது அவசியமாகும். ஒரு சமயம் தாராளமாகத் தொண்டர்களும் பணமும் வேண்டி இருந்தாலும் இருக்கும். அதோடு இவ்விஷயம் துவக்கப்பட்டுவிட்டால் சட்டசபை தேர்தல்களைப் பற்றி கவனிக்க முடியாமல் போனாலும் போகலாம். ஆதலால் தேர்தல் விஷயமான சகலப் பொறுப்பையும் ஜஸ்டிஸ் கட்சிகாரர்களே எடுத்துக் கொள்ளவிட்டுவிட்டு சுயமரியாதை இயக்கத்தார்களும் மற்றும் சீர்திருத்தக் கொள்கைக்காரர்களும் இதில் முனைந்து நிற்பதின் மூலம் தீண்டாமை விலக்கு பிரசாரம் செய்வதும் பொது ஜனங்களுடைய மனப்பான்மையை இன்னும் அதிகமாக நமக்கு அனுகூலமாக்கிக் கொள்ளும் விஷயத்தில் உபயோகப்படுத்திக் கொள்வதும் மேன்மையாகும். ஆலயப்பிரவேச உரிமையைப் பற்றி நமது நாட்டில் பார்ப்பனர்களின் வர்ணாசிரம மகாநாடு ஒன்று தவிர மற்றபடி எல்லா ஸ்தாபனங்களும் இயக்கங்களும் இது சமயம் அனுகூலமாகவே இருக்கின்றன. அதாவது சமய சம்மந்தமாக வைணவ சைவ சமய மகாநாடுகளும், அரசியல் சம்மந்தமாக காங்கிரஸ்கள் சுயராஜிய கட்சி, சுதந்திர தேசிய கட்சி, பூரண சுயேச்சை கட்சி, ஹோம்ரூல் கட்சி, ஜஸ்டிஸ்கட்சி என்னும் தென்னிந்திய நலஉரிமைக் கட்சி மற்றும் சமூக சம்மந்தமான எல்லா இயக்கங்கள் மகாநாடுகள் இந்து மகாசபை மார்வாடி சபை மற்றும் அநேக பொது கூட்டங்களும், கடைசியாக எல்லாக் கட்சியார்



RangaRakes tamilnavarasam.com

மகாநாடு என்பதும் நேரு திட்டம் என்பதும் மந்திரிகள் உபன்யாசங்களும் சைமன் கமிஷனுக்கு சமர்ப்பிக்கப்பட்ட யாதாஸ்துக்களும் மற்றும் எல்லாத் தலைவர்கள் என்பவர்களும் 'பிராமணன்' என்கின்ற பத்திரிகை தவிர மற்றபடி எல்லாப் பத்திரிகைகளும் குறிப்பாக பிரஸ்தாப கோவில் சம்பந்தப் பட்ட தேவஸ்தான கமிட்டியும் அனுகூலமாக இருப்பதோடு அல்லாமல் தேவஸ்தான இலாகா மந்திரியினுடையவும் என்டோமெண்ட் போர்ட் மெம்பர்களினுடையவும் அபிப்பிராயமும் கடைசியாக கவர்மெண்டினுடைய போக்கும் இச்செய்கைக்கு அனுகூலமாக இருப்பதுடன் ஆதரிப்பும் இருந்துவருகின்றது. இவ்வளவு ஆதரிப்பும் அனுகூலமும் இருப்பதோடு நமது நாட்டில் பணமும் தொண்டர்களும் தாராளமாய் கிடைக்கத்தக்க வண்ணம் தேசநிலையும் இருந்து வருகின்றது. எனவே இம்மாதிரியான முயற்சிக்கு இதைத் தவிர வேறு ஒரு தக்க சந்தர்ப்பம் கிடைக்கும் என்று யாராலும் சொல்லமுடியாது. எனவே, இந்தக் காரியம் முக்கியமா அல்லது சட்டசபை தேர்தல் காரியம் முக்கியமா என்று யோசித்தால் தேர்தலைவிட இதுவே முக்கியமென்று அநேகருக்கு தோன்றலாம் என்றே கருதுகின்றோம். ஆதலால் எதற்கும் பணக்காரர்களும் தொண்டர்களும் தயாராய் இருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

**குடி அரசு - கட்டுரை - 21.04.1929**



## எலக்ஷனுக்குப் புதிய சூழ்ச்சி

### வாசருக்கும் மூர்த்திக்கும் சம்பாஷணை

**- சித்திரபுத்திரன்**

**வாசர்**:- என்ன மூர்த்தி! இந்தத் தடவை சட்டசபை எலக்ஷன் நிரம்பவும் மோசமாய் முடியும் போலிருக்கின்றதே என்ன செய்வது?

**மூர்த்தி** :- ஏன் இந்த மாதிரி நினைக்கின்றீர்கள்? நமக்கென்ன குறைவு? காங்கிரசு இருக்கின்றது. காந்தி இருக்கின்றார். தவிர எல்லோரையும் விட வெகு தீவிரக்காரர்களாக வேஷம் போட்டுக் கொண்டு பூரண சுயேச்சை கேட்கின்றோம். இவைகள் தவிர சைமன் பகிஷ்காரத்தின் மூலம் நாம் பெரிய அமிதவாதிகளாகி இருக்கின்றோம். இவ்வளவு சங்கதிகள் நமக்கு அனுகூல மாயிருக்கும்போது நாம் ஏன் எலக்ஷன் விஷயத்தில் பயப்பட வேண்டும்?

**வாசர்**:- இதெல்லாம் இனி நடவாது. காங்கிரஸ் சாயம் வெளுத்துப் போச்சுது. இனி யாரும் காங்கிரஸின் பேரால் ஏமாறுவார்கள் என்று எதிர்பார்ப் பது முதுகில் ஒரு கை முளைக்க வைத்தியம் செய்து கொள்ளுவது போல் தான் முடியும். உதாரணம் வேணுமானால் ஒரு இரகசியம் சொல்லுகின்றேன் கேள்! நமது மிஸ்டர் சி.வி. வெங்கட்டரமணய்யங்கார் அசம்பளிக்கி நிற்கிறார். அவர் காங்கிரஸ் பேரால் நிற்கமுடியாது என்று சொல்லிவிட்டு தனியாக நிற்கிறார் பார். நான் நேரில் கேட்டுக் கொண்டு கூட அவர் காங்கிரஸ் பேர் சொன்னால் இனி ஓட்டுக் கிடைக்காது என்று வெளிப்படையாய்ச் சொல்லி விட்டு ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்களிடம் போய் தொங்கிக் கொண்டிருக்கிறார். இதிலிருந்தே காங்கிரசிற்கு எவ்வளவு யோக்கியதை என்பதைத் தெரிந்து கொள்.

**மூர்த்தி**:- சரி காந்தி இருக்கின்றாரல்லவா?

**வாசர்** :- அதுவும் இனி நடவாது. அவருக்கு ஆந்திர நாட்டில் ஏதாவது செல்வாக்கு இருக்குமோ என்னமோ தெரியவில்லை, தமிழ்நாட்டில் அவர் பாச்சா இனி பலிக்காது. ஆதலால் அவரை நம்புவதிலும் பயனில்லை.

**மூர்த்தி** :- பூரண சுயேச்சை, சைமன் பகிஷ்காரம் இவைகள் இருக்கின்றனவே?



RangaRakes tamilnavarasam.com

**வாசர்** :- பூரண சுயேச்சை நாறிப்போய்விட்டது, சைமன் பகிஷ்காரமோ உதையும் அடியும் படாமல் தப்பித்துக் கொண்டால் போதும் என்கின்ற நிலைக்கு வந்துவிட்டது. இவையெல்லாம் உனக்குத் தெரியாதா என்ன?

**மூர்த்தி** :- சரி, இவைகள் தான் போகட்டும், வழக்கம்போல் நம்மகூட ஆள்களும் பத்திரிகைகளும் உண்டல்லவா? அவர்கள் எப்படியும் நம்முடன் இருந்து நமக்கு வெற்றி சம்பாதித்துக் கொடுக்க வேண்டியது அவர்களது சுமையல்லவா?

**வாசர்** :- எல்லா பத்திரிகைகளின் யோக்கியதையும் போய்விட்டது. எல்லா கூலி ஆட்களின் யோக்கியதையும் கெட்டுப் போய்விட்டது. இனி எவன் இருக்கின்றான், முன் போல நமக்கு பாடுபடுவதற்கு? எல்லோரும் திருட்டுப் பயல்களாகிவிட்டார்கள். அங்கும் வாங்கிக் கொள்ளுகின்றார்கள். இங்கும் வாங்கிக் கொள்ளுகின்றார்கள். நம்மிடம் ஒன்று பேசுகின்றார்கள். அவர்களிடம் ஒன்று பேசுகின்றார்கள். யாரையும் நம்புவதற்கில்லை பத்திரிகைகாரர்களும் ஒரு நாளைக்கு அவர்களை வைவதும் ஒரு நாளைக்கு நம்மை வைவதுமாகி யாதொரு நிலையும் இல்லாமல் போய் செல்வாக்கும் இல்லாமல் போய்விட்டது. நாமாவது ஒரு பத்திரிகை வாங்கி நடத்தலாம் என்றால் அதற்கும் நாட்டில் ஆதரவு கிடைப்பது கஷ்டமாயிருக்கின்றது. எப்படியும் இந்தத் தடவை நமது பாடு சற்று கஷ்டம் தான் என்று எனக்கு தோன்றுகின்றது.

**மூர்த்தி** :- நீங்கள் இப்படி எல்லாம் நினைத்து மனதை விட்டு விடாதீர்கள் தைரியமாயிருங்கள். எப்படியாவது வேலை செய்யலாம்.

**வாசர்** :- எப்படி வேலை செய்வது? நான்தான் எல்லாவற்றையும் பார்த்துதானே சொல்லுகின்றேன். இந்த ஒரு வருஷமாய் எல்லாத் தேர்தலிலும் அவர்களே வெற்றிபெற்று வருவதும், அவர்களுக்கு எதிரிடையாக கேண்டிடேட் போடக்கூட நமக்கு ஆளில்லாமல் திண்டாடி அன்அப்போஸ்டாய் விட்டுவிட்டதும் அவர்களுக்குள்ளாகவே கட்சி உண்டாக்கலாம் என்று பார்த்தாலும் முடியாமல் போவதும் நாம் பார்த்துத்தானே வருகின்றோம்.

**மூ**:- என்ன இருந்தாலும் தாங்கள் பயப்பட வேண்டியதில்லை. நான் சில ஆசாமிகளிடம் கலந்தேன். அவர்கள் நமக்குத் தைரியம் சொல்லி இருக்கின்றார்கள்.

**வா** :- அது யார் சொல் பார்ப்போம்.

**மூ**:- மிஸ்டர் நமது அருமை முதலியார் மற்றும் அவர் மாதிரியே இன்னும் ஒன்று இரண்டு ஆசாமி ஆகியவர்களைப் பார்த்தேன்.



**வா** :- அவர்கள் என்ன சொன்னார்கள்?

**மூ:-** அவர்களும் தாங்கள் சொன்னது போல்தான் காங்கிரசு முதலிய நமது பழைய சூழ்ச்சி ஸ்தாபனங்களுக்கு மதிப்புப் போய் விட்டதென்றும். ஆனாலும் வேறு வழியில் ஏதாவது வேலை செய்யலாம் என்றும், ஆனால் அதற்குக் கொஞ்சம் செலவு அதிகம் பிடிக்குமென்றும், முன் போன்ற கூலிகளைப் பிடித்தால் முடியாதென்றும் வேறு மாதிரி ஆட்களைப் பிடிக்க வேண்டும் என்றும் சொன்னார்கள்.

**வா**:- அது என்ன? சொல் பார்ப்போம்.

**மூ** :- அதுவா? சென்ற தேர்தலில் ஒரு தந்திரம் செய்தோமே. அதாவது அவர்கள் தேவஸ்தான சட்டம் செய்ததால் மதத்தில் கை வைத்து விட்டார்கள், மதத்தில் சர்க்காரைப் பிரவேசிக்கச் செய்து விட்டார்கள் என்று கூப்பாடு போட்டோமே, அதுபோல் இந்தத் தேர்தலுக்கும் ஏதாவது தந்திரம் செய்யலாம் என்றும் அதாவது சுயமரியாதை இயக்கம்தான் ஜஸ்டிஸ் இயக்கம் என்றும் சுயமரியாதை இயக்கம் நாஸ்திக இயக்கம், அது மதத்தையும், மதப் பெரியார்களையும் வைவதுடன் 'கடவுள் இல்லை' என்று சொல்லுகின்றது என்றும் பிரசாரம் செய்வதன் மூலம் பாமர மக்களை ஏமாற்றி ஒரு விதத்தில் ஓட்டு வாங்கிவிடலாம் என்றும், ஆனால் அதற்கு, முன்னைய கூலிகள் மாதிரி ஆட்களை வைத்தால் பொது ஜனங்கள் காது கொடுக்கமாட்டார்கள் என்றும், சற்றாவது தமிழ், புராணம், கதை முதலியவைகளில் பரிச்சயமுள்ள வர்களாக பார்த்துப் பிடித்து அவர்களுக்குப் பண்டிதர்கள், பக்திவான்கள், சமய அபிமானிகள் என்று பெயர் கொடுத்து பிரசாரத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும், ஆனால் அவர்கள் முன் போல் மாதம் 20, 30க்கு வரமாட்டார்கள் என்றும் குறைந்தது 50 ரூபாயும் செலவும் கொடுக்க வேண்டும் என்றும் இந்தப்படி செய்வதானால் தம்மிடத்தில் சில ஆட்கள் இருப்பதாகவும் தாமும் ஊர் ஊராய்ச் சுற்றுவதாகவும் தமது பத்திரிகையையும் இதற்கே விட்டு விடுவதாகவும் சொன்னார்கள்.

**வா** :- செலவைப் பற்றி கவலையில்லை காங்கிரஸ் பணந்தானே. நமக்கு என்ன நஷ்டம்? வேண்டுமானால் மதத்தையும் கடவுளையும் காப்பாற்ற வேண்டியது காங்கிரசின் கடமை என்று காங்கிரஸ் கமிட்டியில் (வர்க்கிங் கமிட்டியில்) ஒரு தீர்மானம் செய்து கொள்ளலாம். ஆனால் இந்த ஆசாமிகள் பிரளாமல் கட்டுப்பாடாய் இருப்பார்களா? என்பதுதான் பயமாயிருக்கின்றது. ஏனெனில் இவர்களை நான் நன்றாய் அறிந்தவன்.

**மூ**:- அதைப் பற்றி தாங்கள் பயப்பட வேண்டியதில்லை. ஏனென்றால், இந்த ஆட்களை இனி அவர்கள் கண்டிப்பாய் சேர்க்கமாட்டார்கள். ஆதலால் இவர்களுக்கு நம்மைவிட வேறு கதியில்லை. அதோடு அவர்களது சுயநலத்திற்கும் அனுகூலமாகின்றது. ஆகையால் இதுதான் நமக்கு அனுகூலம். வேறு யாதொரு மார்க்கமும் இல்லை.



RangaRakes tamilnavarasam.com

**வா**:- சரி, அப்படியே செய்வோம். அந்த ஆட்களை நான் வரச் சொன்னதாக உடனே ஒரு ஆள் அனுப்பு. மேலும் சுயமரியாதை இயக்கத்தை வைத்துக் கொண்டு அவர்கள் நமக்கு எப்படி வேலை செய்யமுடியும்?

**மூ**:- எப்படி இது தங்களுக்கு தெரியாதா? சுயமரியாதை இயக்கத்துக்காரர்கள் மீது ஏதாவது பழியைப் போட்டு "ஆதலால் ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டுக் கொடுக்காதீர்கள்" என்று சொல்ல வேண்டியதுதானே! அதெல்லாம் அவர்களைச் சேர்ந்தது. நமக்கு ஏன் அந்தக் கவலை. நாம் ஒப்பந்தம் பேசிக் கொள்ள வேண்டியது, அவர்கள் எப்படியாவது வேலை செய்ய வேண்டியது அவ்வளவுதான். ஏனென்றால் சென்ற தேர்தலில் மிஸ்டர் கல்யாணசுந்தர முதலியார், மிஸ்டர் ராமசாமி முதலியாருக்கு விரோதமாய் செங்கற்பட்டு ஜில்லாவில் நமக்காகப் பிரசாரம் செய்யும் போது "குழந்தைகள் சாகின்றன; அரிசி ரூபாய்க்கு இரண்டு படியாகிவிட்டது. இந்தியரின் சராசரி வயது 23 ஆகிவிட்டது. ஆதலால் ராமசாமி முதலியாருக்கு ஓட்டு செய்யாதீர்கள்" என்று சொல்லவில்லையா? அதுபோல் ஏதோ அவர்கள் பாமர மக்களை ஏமாற்றத் தக்கபடி சொல்லிக் கொள்ளுவார்கள். அவர்களுக்கு இம்மாதிரி காரியங்களில் எவ்வளவோ அனுபோகம் உண்டு. ஆதலால் அவர்களை நாம், நம்பித்தான் ஆக வேண்டும் வேறு கதியில்லை. நிற்க, இதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்று கருதித்தான் முன்னமேயே மிஸ்டர் கல்யாணசுந்தர முதலியாரைப் பிடித்து "ஆஸ்தீக சங்கம்" என்று ஒன்று ஏற்படுத்தி, அதற்கு நமது பழைய ஆசாமிகளையே அதாவது மெஸ்ஸர்ஸ் ஜயவேலு, குழந்தை, பாவலர், ஷாபி மகமது, சாயபு முதலிய ஆசாமிகளையும் மற்றும் சில புதிய நபர்களையும் சேர்த்துவிட்டு வேலையும் துவக்கி ஆய்விட்டது. இதை அனுசரித்து சட்ட சபையிலும் சரமாரியாக கேள்விகளும் கேட்டாய் விட்டது. ஆதலால் இதுதான் சரியான மார்க்கமாகும். நாமும் இனிமேல் வீண் சங்கதி அதாவது சுயராஜ்ஜியம், பூரண சுயேச்சை ஆகிய பேச்சுகளைப் பேசாமல் மதம் போச்சு, கடவுள் போச்சு என்று கத்த வேண்டியதுதான். அதற்கேற்றபடி தேவாரம், திருவாசகம் ஆகியவைகளிலும் சில பாட்டுகள் பாடம் செய்து கொண்டேன். தாங்களும் பிரபந்தத்தில் சில பாட்டுகள் பாடம் செய்து கொள்ளுங்கள். மீட்டிங்கில் இவைகளைச் சொல்லிக் கண்களில் நீர் வடியவைத்து தேம்பித் தேம்பி அழுது கொண்டுதான் இனி பிரசங்கம் செய்ய வேண்டும். ஆதலால் தயவு செய்து மனதை விடாமல் தைரியமாயிருங்கள்.

**வா**:- என்னமோ அப்பா! இதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. அப்துல்காதர் சாயபுக்கும் ஆடி அமாவாசைக்கும் என்ன சம்பந்தம் என்று ஜனங்கள் கவனிக்கமாட்டார்களா? சுயமரியாதை இயக்கத்திற்கும் சட்டசபை ஓட்டுக்கும் என்ன சம்பந்தம் ஏற்படும்? எப்படி ஆனாலும் சரி, அதையும் பார்த்து விடுவோம், அந்த ஆசாமிகள் வந்தார்களா?

**மூ**:- இராத்திரிக்கு வருகிறார்களாம்.



**வா**:- ஏன் இப்பொழுது வருவதற்கென்ன?

**மூ**:- வீதியில் யாராவது பார்த்து கொள்வார்களாம். ஆதலால் இராத்திரிக்கு முக்காடு போட்டுக்கொண்டு வருவார்கள்.

**வா**:- சரி அவர்கள் வரும்போது நீயும் வா பேசலாம்.

**மூ**:- ஆகட்டும் போய்வருகிறேன்.

**குடி அரசு - உரையாடல் - 21.04.1929**



RangaRakes tamilnavarasam.com

## கண்ணில்லையா?

## இந்திய சட்டசபைக்கு இன்னும் எத்தனை ஐயங்கார்கள்?

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்னும் பார்ப்பனரல்லாதார் இயக்கமும், சுயமரியாதை இயக்கம் என்னும் சமரசமும் சன்மார்க்கமுங் கொண்ட இயக்கமும் தமிழ்நாட்டில் எவ்வளவோ பெரிய கிளர்ச்சியையும், புத்துணர்ச்சியும் உண்டாக்கியிருப்பதாகச் சொல்லப்பட்டாலும் அவை முக்கியமாய்ச் செய்ய வேண்டிய காரியங்களில் முக்கியமானதான துறை களில் இன்னமும் தலைவைத்துக் கூடப் படுக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது.

மேற்கண்ட இரண்டு இயக்கங்களும் வெற்றிபெற வேண்டுமானால், அவற்றின் கொள்கைகளில் பெரும்பான்மையானவைகள் அரசாங்க சட்டத்தின் மூலமும், அரசாங்க நடுநிலைமை மூலமும், சில அரசாங்க உதவியின் மூலமுமே வெற்றிபெற வேண்டியிருக்கின்றதென்பது யாவரும் அறிந்ததாகும். அரசாங்க சட்டங்களில் முக்கியமானவைகள் பல இந்திய சட்டசபையில் நிறைவேற்றப்பட வேண்டியிருப்பதும் இந்திய அரசாங்க நிர்வாக சபையின் ஆதரவு பெற வேண்டியிருப்பதும் யாரும் அறியாததல்ல.

அப்படியிருக்க தென் இந்தியாவில் சிறப்பாக தமிழ்நாட்டின் சார்பாக இந்தியா சட்டசபைக்குள்ள பிரதிநிதிகள் 7 பேர்களில் 6 பேர்கள் நமது சமுதாயத்திற்கும், சமரசத்திற்கும், சன்மார்க்கத்திற்கும் பரம்பரை விரோதி களான பார்ப்பனர்களே - சிறப்பாக ஐயங்கார் பார்ப்பனர்களே, நமது பிரதிநிதிகளாக இருக்கும்படி ஏற்பாடு செய்து கொண்டு நமது முற்போக்கிற்கு முட்டுக் கட்டைகளாக அங்கு (இந்திய சட்டசபையில்) உட்கார்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

அதாவது, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக் கென்று திரு.எம்.எஸ்.சேஷையங்காரும், திருச்சி, தஞ்சை ஜில்லாக்களுக்கு என்று திரு.ஏ.இரங்கசாமி ஐயங்காரும், செங்கல்பட்டு தென் ஆற்காடு ஜில்லாக்களுக்கு என்று திரு.எம்.கே. ஆச்சாரியாரும், சென்னைக்கு என்று திரு.எஸ்.சீனிவாசய்யங்காரும், சித்தூர் வகையரா ஜில்லாக்களுக்கு என்று திரு.துரைசாமி ஐயங்காரும், தென்கன்னடம் மலையாளம் ஜில்லாக்களுக்கு என்று திரு.கே.வி. இரங்கசாமி ஐயங்காரும் ஆக ஆறு பேர்கள் ஐயங் கார்களாக அமர்ந்து கொண்டார்கள்.



கோயமுத்தூர், சேலம், வடஆற்காடு ஆகிய ஒரு தொகுதிக்கு மாத்திரம் கோயமுத்தூர் திரு.ஆர். கே. ஷண்முகம் அவர்கள் ஒருவர் மாத்திரம் இருந்து வருகின்றார்.

இதற்குக் காரணம் என்னவென்று பார்ப்போமானால் ஐயங்கார்களின் ஆதிக்கமும் அவர்களின் காங்கிரஸ் புரட்டும், அவர்களது கூலிகளின் தேசீயப்புரட்டும் என்று சொல்லிவிடலாமானாலும் பார்ப்பனரல்லாதார் தலைவர்கள் என்பவர்களின் மீதும் குற்றம் சொல்லாமலிருக்க முடியவில்லை.

என்னவெனில், பார்ப்பனரல்லாத தலைவர்களுக்கு பெரிதும் சென்னை சட்டசபையின் மீது ஆவல் இருக்கின்றதேயல்லாமல் இந்திய சட்டசபையைப் பற்றி அவர்களுக்குச் சிறிதும் கவலை உண்டாவதில்லை.

ஏனெனில், சென்னை சட்டசபைக்குப் போனால் மந்திரி ஆகலாம், மந்திரி ஆக முடியாதவர்கள் மந்திரிகளுக்கு வால் பிடித்துக் கொண்டோ அல்லது பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டு மந்திரிகளை கவிழ்த்து விடுவதாய் மிரட்டிக் கொண்டோ ஜில்லா, தாலூகா போர்டு, முனிசிபாலிட்டி ஆகியவைகளின் ஆதிக்கங்களை கைப்பற்றவும் உத்தியோகங்கள் சம்பாதிக் கவும் இன்னும் வெளிப்படையாய்ச் சொல்லுவதென்றால் பலவழிகளில் சிலர் பணம் சம்பாதிக்கவும் ஆன காரியங்களில் சித்திபெறக் கூடும் என்கின்ற ஆசையும், இந்திய சட்டசபைக்குப் போவதால் பிரயாணப்படியில் ஏதோ இரண்டு பிச்சைக்காசு மீதி ஆவதைத்தவிர வேறுபலன் உண்டாகாது என்கின்ற அலட்சியப் புத்தியும் முக்கிய காரணமாகும்.

ஆனால், பார்ப்பனர்கள் தங்களுக்குத் தமிழ்நாட்டில் செல்வாக் கில்லை என்பதும், சட்டசபை ஸ்தானம் கிடைக்காதென்பதும் தீர்மானமாகத் தெரிந்தவுடன் இதை விட்டுவிட்டு பார்ப்பனரல்லாதார் அலட்சியமாய்க் கருதும் இந்தியா சட்டசபையில் ஸ்தானத்திற்கு நின்று வெற்றி பெற்று பார்ப்பன ஆதிக்கத்திற்கு வேண்டிய காரியங்களை நோகாமல் சாதித்துக் கொண்டு வருகின்றார்கள். அதோடு இந்திய சபைக்கு வெறும் பார்ப்பனர் களாகவே தமிழ்நாட்டுக்கும் ஆந்திரநாட்டுக்கும் பிரதிநிதிகளாக ஏற்பட்டுவிட்டதாலும், திருவாளர்கள் நேரு, மாளவியா, கேல்கார், கோஸ்வாமி முதலிய பார்ப்பனர்களே பம்பாய், அலகாபாத், வங்காளம் முதலிய மாகாணத் தலைவர்களாகவும் ஏற்பட்டு அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அம்மாகாணங் களின் பிரதிநிதிகளாய் இந்தியா சட்டசபையில் உட்கார்ந்து கொண்டிருப் பதாலும் இந்திய சட்டசபை பார்ப்பனக்கோட்டை என்றும் அதனாலேயே பெரிய பெரிய இந்திய உத்தியோகங்கள் எல்லாம் பார்ப்பனர்களுக்கே ஏகபோகமாகவும் பரம்பரை பாத்தியமாகவும் அனுபவிக்க வசதியாகவும் இருந்து வருகின்றது. இதைப் பற்றி பல தடவைகளில் எடுத்துக்காட்டி வந்திருக்கின்றோம்.

இப்படிக்கெல்லாம் இருந்தும் இப்போது அதாவது சமீபத்தில்



RangaRakes tamilnavarasam.com

வரப்போகும் இந்திய சட்டசபைத் தேர்தலுக்கு இத்தனை ஐயங்கார் பார்ப்பனர்கள் இருப்பது போதாமல் இன்னமும் ஒரு ஐயங்கார் - அதுவும் வருணாசிரம ஐயங்கார் - மதுவிலக்குப் பிரசாரம் செய்தால் மதுபானம் அதிகமாகிவிடும். ஆதலால் மதுவிலக்கு பிரசாரம் செய்யக் கூடாது என்று சொல்லும் ஐயங்கார் ஆயிரக்கணக்கானத் தென்னை மரங்களின் கள்ளினால் பல ஆயிர ரூபாய் சம்பாதிக்கும் ஐயங்கார் - ஒத்துழையாமையின் போது பதினாயிரக்கணக்கான மக்களை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டு தாம் மாத்திரம் காங்கிரசைவிட்டு ஓடிப்போய் காங்கிரசுக்கு விரோதமாய் பிரசாரமும் செய்து காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாய் சட்டசபைக்கும் போய் உட்கார்ந்து கொண்டு இருந்த ஐயங்கார்- சென்ற தேர்தலில் காங்கிரசின் பேரால் நின்று வெற்றிபெற்று காங்கிரசுக்கு விரோதமாய் மந்திரி சபைகளை ஏற்படுத்தி அதற்கு ஆதரவளித்துவிட்டு ‘இது சரிதானா’ என்று கேட்டவர்களுக்கு ‘ஜஸ்டிஸ் கட்சி’யை அழிப்பதற்காக மந்திரி சபையை ஆதரித்தேன் என்று சொன்ன ஐயங்கார் - மற்றும் சென்னை சட்டசபையில் இருந்த 9 வருஷ காலமாக பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கும் கொள்கைகளுக்கும் நேர் விரோதமாயிருந்ததுடன் பார்ப்பனரல்லாதார் மந்திரிகளைக் கவிழ்க்கவே வெளிப்படையாயும், இரகசியமாயும் சூழ்ச்சிகளும் வேலைகளும் செய்துவந்த ஐயங்கார் இன்னும் எத்தனையோ வழிகளில் பார்ப்பன ரல்லாதாருக்கு இடையூறு செய்துவரும் ஐயங்காரான திருவாளர் கோவை. சி.வி.வெங்கட்டரமண ஐயங்கார் அவர்கள் இந்திய சட்டசபைக்கு ஒரு அபேட்சகராக நிற்கப் போவதாகத் தீர்மானித்து ஆகாயத்திற்கும், பூமிக்குமாக பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார். இதில் ஒரு அதிசயம் என்ன வென்றால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு பனகாலரசருக்குப் பின் தலைவராகக் கருதப்படும் ராஜா. சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் உதவி இருப்பதாகவும் - பார்ப்பனரல்லாதார்களுக்குள் சிறந்த அறிவாளியும் இயக்கப் பிரமுகர்களில் முதன்மையானவருமான திரு.ஏ.இராமசாமி முதலியார் அவர்கள் ஆதரிப்பதாகவும் மற்றும் கோவை பிரமுகரான திரு.ராவ்பகதூர் சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் ஆதரிப்பதாகவும் சுயமரியாதை இயக்கத்தின் பிரதான பிரமுகரான திரு.ஆர்.கே. ஷண்முகம் அவர்கள் ஆதரிப்பதாகவும் பிரஸ்தாபத்தை கிளப்பிவிட்டு ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாத பிரமுகர்களையும் மயக்கி வருவதும், அதற்கு ஏற்றாற்போல் பல பார்ப்பனரல்லாத கனவான்களின் கையொப்பமும் பெற்றிருப்பதாகச் சொல்லிக் கொள்ளுவதுமேயாகும். திரு.ராஜா சர் அண்ணாமலையாரின் பெயரை திரு. அய்யங்கார் சொல்லிக் கொள்வதில் பொதுஜனங்கள் நம்பி ஏமாந்துபோகும் படியான ஒரு சந்தர்ப்பம் திரு.அய்யங்கார் ஏற்படுத்தி கொண்டது மிகவும் மதிக்கத்தகுந்த தந்திர மேயாகும். அதென்னவென்றால் ராஜா சர் அண்ணாமலையாரின் உருவச் சிலை சம்பந்தமாக ஏற்பட்ட ஒரு கமிட்டியில் திரு.சி.வி. வெங்கட்டரமண ஐயங்கார் அவர்கள் தந்திரமாக தம்மை ஒரு முக்கிய புருஷராக ஆக்கி



கொண்டதால் பொது ஜனங்கள் ராஜா சர். அவர்களின் உருவச்சிலை கமிட்டிக்கு திரு.ஐயங்கார் காரியதரிசியாக யிருப்பதால் திரு.ராஜா சர். அவர்கள் திரு. ஐயங்காருக்கு உதவி செய்தாலும் செய்யக்கூடும் என்று சகஜமாக நினைப்பதற்கு இடமேற்படுவதுதான். ஆனால் நமது ராஜா சர் அவர்கள் இதைப் போல் ஆயிரத்தெட்டு ஐயங்கார்களின் யோக்கியதைகளை அறிந்தவர். ஆகையால் இந்தப் பெயரைக் கொண்டு யாரும் அவரை சுலபத்தில் ஏமாற்றிவிட முடியாதென்றே சொல்லுவோம், தவிர கோயமுத்தூர் பிரமுகர்கள் திரு ஐயங்காருக்கு ஆதரவளிப்பதாய்ச் சொல்லிக் கொள்வதிலும் உண்மை இருக்கலாமோ என்னமோ என்பதாக சிலர் சந்தேகப்படவும் இடமிருக்கின்றது.

என்னவெனில், கோவைப் பிரமுகர்கள் திருவாளர்கள் சி.எஸ். ரத்தின சபாபதி முதலியார், ஆர்.கே.ஷண்முகம், டி.ஏ.இராமலிங்கஞ் செட்டியார், வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர், பட்டக்கார எஜமானர் ஆகியவர்கள் எப்படியாவது கோயமுத்தூர் ஜில்லாவைப் பொறுத்தவரை ஐயங்காரின் தொல்லை ஒழிந்தால் போதும்! அவர் வேறு எந்தத் தொகுதியிலாவது நின்று கொள்வதின் மூலம் தங்களுக்கு உபத்திரவமில்லாமல் இருப்பதானால் சரி என்று நினைத்து திரு.ஐயங்காருக்கு உதவி செய்வதாக ஜாடை காட்டி இருந்தாலும் இருக்கலாம். ஆனால் அந்த ஜாடைகள் திரு. ஐயங்காரை கோயமுத்தூர் ஜில்லாவை விட்டு வெளியாக்கத்தான் உதவுமே ஒழிய உண்மையிலேயே அக்கனவான்களுடைய ஆதரவு பெற முடியுமா என்பது யோசிக்க வேண்டிய விஷயமாகும். திரு.ஆர்.கே. ஷண்முகம் அவர்கள் பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ள செய்திகளில் காணப்படுவதென்ன வென்றால் திரு.வெங்கட்டரமண ஐயங்கார் காங்கிரஸ் அபேக்ஷகராக நிற்க வில்லை என்றும் காங்கிரஸ் திரு. ஐயங்காரை ஏற்றுக் கொள்ள போகின்றதா? என்பது தெரியவில்லை என்றும் ஆதலால் தாம் சி.வெங்கிட்டரமண ஐயங்காருக்கு உதவி செய்ய முடியாது என்றும் தெரிவித்திருக்கின்றார்.

அது போலவே திரு.இரத்தினசபாபதி முதலியாரும் ஜஸ்டிஸ் கட்சி திரு.வெங்கட்டரமண ஐயங்காரை ஆதரிப்பதானால் மாத்திரம்தான் திரு. ஐயங்காருக்கு உதவி செய்ய முடியுமென்றும் இல்லாவிட்டால் முடியாது என்றும் தெரிவித்துவிட்டார்.

(இது “அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா என்று கூப்பிடத் தடையில்லை” என்பது போன்ற உதவி)

திரு.ஏ.இராமசாமி முதலியார் அவர்கள் திரு வெங்கட்டரமண ஐயங்கார் அவர்களின் இந்திய சட்டசபைத் தேர்தலுக்கு உதவி செய்ய முன் வருவார்களானால் ஒன்றா திரு.இராமசாமி முதலியார் இராமசாமி ஐயங்காராக மாறி பூணூல் போட்டுக் கொள்ள வேண்டும். அல்லது திரு.வெங்கட்டரமண ஐயங்கார் பூணூலை அறுத்துவிட்டு வெங்கட்டரமண முதலியார் ஆக வேண்டும். இவ்விரண்டும் இல்லாமல் ஒருவருக்கொருவர் உதவி செய்து



RangaRakes tamilnavarasam.com

கொண்டதாகச் சொல்லப்படுமானால் இரண்டு பேருக்கும் நடுவில் ஏதாவது இரகசியம் இருக்க வேண்டும். அப்படிக்கு இல்லாமல் இந்தக் காரியம் ஆவதல்ல என்றே உறுதி கூறுவோம்.

நிற்க, திரு. ஐயங்கார் நிற்கும் தொகுதியைப் பற்றி சற்று யோசித்தால் திரு.ஐயங்கார் அபேக்ஷகராக நிற்பதாக வெளிப்படுத்தியிருக்கும் தொகுதி சென்னை மாகாண இந்திய வர்த்தகர்கள் தொகுதியாகும். இத்தொகுதிக்கு ரூ.350க்கும் மேல்பட்டு வருமானவரி செலுத்துபவர்கள் ஓட்டர்களாக பதிவு செய்யப்படுவார்கள், இத்தொகுதிக்கு சுமார் 2000 ஓட்டர்கள் உண்டு. இதில் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் சுமார் 500 அல்லது 600 பேர்களாவார்கள். மற்றபடி, மீதி உள்ளவர்கள் வியாபாரிகளும், லேவாதேவிக்காரர்களும் ஆவார்கள். இந்த தொகுதிக்கு ஒரு பிரபலமானவரும் பெருத்த வியாபாரியும் வியாபார அனுபவமும் வியாபார சம்பந்தமான விஷயங்களில் ஆராய்ச்சி அறிவும் உள்ளவர்களும் நிற்க வேண்டியது நியாயமும் அவசியமுமாகும்.

அப்படியிருக்க திரு.வெங்கட்டரமண ஐயங்காருக்கு அத்தொகுதியில் என்ன வேலை என்பது நமக்கு விளங்கவில்லை. "இரும்பு அடிக்கும் களத்தில் ஈக்கு என்ன வேலை" என்பது போல் வியாபாரத் தொகுதியில் வருணாச்சிரமப் பார்ப்பனருக்கு என்ன வேலை? பிராமணன் வியாபாரம் செய்வதும், இந்தியன் கப்பலேறுவதும் பாவம், சண்டாளத்துவம், பிராமணீயத்திற்கு விரோதம் என்று வேதமும், மனுதருமமும், வருணாசிரமும் சொல்லுகின்றது. இந்தக் காரணத்தினாலேயே திரு.காந்தியும். திரு. லஜபதியும் சண்டாளர்களாகக் கருதப்பட்டு கோவிலுக்குள் விடப்படவில்லை.

எனவே வியாபாரத் தொகுதிக்கு நிற்கும் அபேட்சகருக்கு வெளிநாட்டுக்குப் போய் வந்த அனுபவமும், வெளிநாட்டு வியாபார இரகசியமும், வெளிநாட்டு நாணய மாறுதல்களின் தத்துவ நிபுணத்துவமும், வியாபாரத்தில் அபார பரிச்சயமும் வேண்டியதாகும். அதற்காகவே இந்த ஸ்தானம் ஒதுக்கப்பட்டதாகும். அப்படியிருக்க விவசாயிகளின் ஸ்தானங்களாகிய பொது ஸ்தானங்களையும் பார்ப்பனர்களே அதாவது ஐயங்கார் பார்ப்பனர்களே கைப்பற்றிக் கொண்டதோடல்லாமல் வியாபார ஸ்தானங்களையும் ஐயங்காரே கைப்பற்றுவதென்றால் தமிழ்நாட்டில் தமிழ் மக்களின் முட்டாள் தனத்திற்கு இனியும் ஒரு புதிய உதாரணம் தேடப் புறப்பட்டுவிட்டாற்போல இருக்கின்றதே தவிர இதற்கு வேறு என்ன காரணம் சொல்ல முடியும்?

நிற்க, திரு.வெங்கட்டரமண ஐயங்கார் இப்போது யாருக்கு எதிராக நிற்கின்றார் என்று பார்ப்போமானால் அதுவும் ஒரு பெரிய அதிசயமாகவே தான் கருதக் கூடியதாகும். அதாவது "மார்ச்செண்ட் பிரின்ஸ்" என்று சொல்லத்தக்கவரான இந்தியவர்த்தக முடிசூடா மன்னரும் தென்னிந்திய வர்த்தக சங்கத் தலைவரும் கோடீஸ்வரரும், வருஷம் 75000 ரூபாய் வருமானவரி செலுத்துபவரும் மேல்நாடுகளில் லண்டன் முதலிய



இடங்களில் வர்த்தகக் கிளை உடையவரும் இங்கிலாந்து, ஜர்மனி, ஜப்பான், அமெரிக்கா முதலிய இடங்களுக்கு வர்த்தக சுற்றுப்பிரயாணம் செய்தவரும், நாணய மாற்று விஷயத்தில் அனுபவஞானமுள்ள நிபுணரும் தென் இந்தியாவின் முக்கிய பட்டணங்களிளெல்லாம் வர்த்தகக் கிளை உள்ள வருமான ஜனாப் எம்.ஜமால் முகம்மது சாயபு அவர்களுக்கு எதிரிடை யாகவும் போட்டியாகவும் நிற்கின்றார் என்றால் திரு. ஐயங்கார் அவர்களின் வர்த்தக அபிமானம் எவ்வளவு என்பதற்கு வேறு சாட்சியம் வேண்டிய தில்லை.

தவிர, ஐயங்காரின் வியாபார அனுபவம் எவ்வளவு என்று பார்ப்போ மானால் கோயமுத்தூரில் மால்மில் என்பதாக ஒரு நெசவு மில் ஏற்படுத்தி அதைத் தாமே நடத்துவதாக அதற்கு ஏராளமாக பங்கும் வசூல் செய்து மில் நடத்தத் தெரியாமல் நஷ்டமடைந்து பிறகு தம்மால் முடியாமல் ஒரு வெள்ளைக்கார கம்பெனியாரிடம் நிர்வாகத்தை ஒப்புவித்து மில்லுக்கும் பங்குக்காரர்களுக்கும் மத்தியில் வெள்ளைக்கார கம்பெனிக்கு ஒரு லாபமும் தமக்கு ஒரு லாபமும் ஏற்பாடு செய்துகொண்டு பங்குக்காரர்கள் தக்கபடி லாபமடைய முடியாமல் கஷ்டப்பட்டுவரச் செய்யத்தக்க வியாபார அறிவுள்ளவராவார்.

மற்றபடி, ஐயங்கார் ஏன் காங்கிரசின் பேரால் நிற்கவில்லை? என்று பார்ப்போமானால் சில சமயத்தில் இந்திய சட்டசபையில் காங்கிரசுக் கட்சி சமுதாயச் சீர்திருத்தங்களில் தலையிட்டுவிட்டால் அதற்கு எதிரிடையாக வேலை செய்வதற்கென்றே தம் சொந்த பொறுப்பில் நிற்க வேண்டியிருக் கின்றதாகும். ஜனாப் ஜமால் மகம்மது மேல் கண்டபடி பெரிய வியாபாரி, பிரபு, வியாபார அனுபவமும், தர்மசிந்தையும் உள்ளவர் என்பதோடு மல்லாமல் 'சுதேசமித்திரன்' என்னும் பார்ப்பனமித்திரன் பத்திரிகை லிமிடெட்டில் ஒரு டைரக்டராக இருந்தும் திரு. வெங்கிட்டரமணய்யங்கார் அவர்கள் அப்பத்திரிகைக்குள்ள ஓட்டர் பாத்தியதையை கொண்டு நிற்பதற்கு அப்பத்திரிகை நிர்வாகஸ்தர்கள் சிபார்சு செய்திருப்பதாகவும் தெரிய வருகின்றது. சென்னை மாகாண வியாபாரத் தொகுதிக்கு ஜனாப் ஜமால் முகமது அவர்கள் நிற்பது தெரிந்தும் அவருடைய தகுதியை அறிந்தும் அவரை ஒரு டைரெக்டராகக் கொண்டிருக்கும் 'சுதேசமித்திரன்' பத்திரிகை திரு சி.வி.வெங்கிட்டரமணய்யங்காரை அத்தொகுதிக்கு அனுமதித் திருப்பதையும் அவரையே விளம்பரப்படுத்துவதையும் பார்த்த பிறகு, மித்திரனின் வர்த்தக அனுதாபமும் பொது நலத்தன்மையும் எவ்வளவு என்பதற்கு அளவுதேட வேறு எங்கும் போக வேண்டியதில்லை என்றே சொல்லுவோம்.

எனவே, சென்னை மாகாணத்தில் உள்ள பெரியோர்கள், சிறப்பாக பார்ப்பனரல்லாத வியாபார ஓட்டர்கள் தங்கள் கடமையையும் வியாபார அபிவிருத்தியையும் பார்ப்பனரல்லாத மக்களின் சமத்துவத்தையும்,



RangaRakes tamilnavarasam.com

சுயமரியாதையையும் உத்தேசித்து இந்திய சட்டசபைக்கு இனிமேலாவது ஒரு பார்ப்பனரை அதுவும் ஒரு வருணாசிரம அய்யங்காரை அனுப்பாமல் இருக்கச் செய்யவேண்டுமாய் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஒரு சமயம் அய்யங்கார் எப்படியாவது சூழ்ச்சி செய்து வெற்றி பெற்றாலும் பெறலாம். அல்லது அவரது சூழ்ச்சி சொல்லுபடியாகாமல் உட்கார்ந்தாலும் உட்காரலாம். ஆனால் உண்மைப் பார்ப்பனரல்லாதார் இவ்விஷயத்தில் கண்டிப்பாய் அவரவர்கள் கடமையைச் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 21.04.1929**



# மகமதிய வாலிபர்களுக்குள் சுயமரியாதை உணர்ச்சி

வங்காள மாணவர்கள் தங்கள் சமூகத்திலும் புரோகிதக்கொடுமை இருப்பதையும், அதனால் தங்கள் சமூக முன்னேற்றமும் சுயமரியாதையும் உணர்ச்சியும் தடைபட்டுவருவதையும் உணர்ந்து முல்லா வர்க்கத்தையே அதாவது இப்பொழுது உள்ள புரோகித வர்க்கத்தையே அடியோடு ஒழிக்க வேண்டுமென்கின்ற எண்ணத்துடன் சமூக முன்னேற்றத்திற்கு அனுகூலமான சட்டங்களியற்றுவதற்கு எதிரிடையாயிருக்கும் எல்லா முல்லா வர்க்கத்தையும் ஒழிப்பதற்கு என்று புரோகித விலக்கு சங்கம் என்பதாக ஒன்றை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். சென்ற வருஷத்திலும் வங்காளம், பம்பாய், மத்திய மாகாணம் முதலிய இடங்களில் உள்ள வாலிபர்கள் இம்மாதிரியாக ஒரு கிளர்ச்சி செய்தது ஞாபகமிருக்கலாம். எனவே எந்த முற்போக்குக் கிளர்ச்சி களும் அவசியம் என்பது முதலில் வாலிபருக்குத்தான் படும் என்பதும், அவர்கள் தான் இம்மாதிரி சமூகத்திற்குள் நுழைந்து அழுகி நாறிப்போன பழைய பழக்க வழக்கங்களை தக்க தியாகத்தை கைம்மாறாகக் கொடுத்து ஒழிக்க சக்தியுடையவர்களாயிருப்பார்கள் என்பதும் நமது அபிப்பிராய மாகும். ஆதலால் நமது நாட்டு வாலிபர்களும் உலகமெல்லாம் கண் விழித்துக் கொண்டிருக்கும் இந்த சமயத்தை கைவிட்டுவிடாமல் முனைந்து நிர்ப்பார்கள் என்று நம்புகின்றோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 21.04.1929**



RangaRakes tamilnavarasam.com

# கடவுளும் மதமும் “காப்பாற்றப்பட்டால்” சுயராஜ்யம் வந்துவிடுமா?

சென்னை சட்டசபை இவ்வருஷக் கோடியில் அனேகமாய் கலைக்கப் பட்டுவிடும் என்கின்ற விஷயம் வெளியானதும் பார்ப்பனர்கள் வழக்கம்போல் இப்போதிருந்தே தேர்தல் நாடகம் நடிக்கத் தீர்மானித்து, திருவாளர்கள் எஸ். சீனிவாசய்யங்காரும் சத்தியமூர்த்தி முதலிய அவரு டைய சிஷ்யர்களும் ஒருபுறமும் ஜனாப்கள் பஷீர் அகமது, அமீத்கான், ஷாபிமகமது ஆகியவர்கள் ஒருபுறமும் திருவாளர்கள் குழந்தை, ஜயவேலு, அண்ணாமலை, பாவலர், கல்யாணசுந்தரமுதலியார் ஆகியவர்கள் ஒரு புறமும் கிளம்பி இப்பொழுதிருந்தே ஊர் ஊராய்ச் சுற்றி தெருக்கூத்தாடிகள் போல தேர்தல் நாடகம் ஆடத் தொடங்கிவிட்டார்கள். இந்தக் கூட்டத்தார் சென்ற தேர்தல்கள் வரையில் பாமர மக்களிடம் தாங்கள் சுயராஜ்ஜியம் வாங்கிக் கொடுப்பதற்காகப் பாடுபடுவதாயும், பார்ப்பனரல்லாதார் கட்சியாய ஜஸ்டிஸ்கட்சியார் சுயராஜ்ஜியத்துக்கு விரோதமா யிருப்பதாகவும், ஆதலால் அவர்களுக்கு ஓட்டுக்கொடுக்காமல் காங்கிரஸ்காரர்களாகிய தங்களுக்கே ஓட்டுக் கொடுத்து தங்களையே சட்டசபைக்கு அனுப்ப வேண்டும் என்றும் சொல்லிவந்தார்கள். ஆனால் சுயராஜ்ஜிய புரட்டுகள் முழுவதும் இப்போது பொதுஜனங்களுக்கு வெட்ட வெளிச்சம்போல் வெளிப்பட்டுப் போனவுடன் இப்போது பரராஜ்ஜியம் அதாவது மோக்ஷ ராஜ்ஜியம் வாங்கிக் கொடுக்கப் போவதாகவும் அதற்கு ஜஸ்டிஸ் கக்ஷியார் விரோதமாயிருந்து கொண்டு சாமியையும் மதத்தையும் வைகின்றார்கள் என்றும் ஆதலால் தாங்கள் கடவுளையும் மதத்தையும் காப்பாற்ற சட்டசபைக்கு போக வேண்டியிருப் பதாகவும், அந்தப்படி தங்களை சட்டசபைக்கு அனுப்பினால்தான் கடவுளும், மதமும் காக்கப்பட்டு மக்களுக்கு பரராஜ்ஜியமாகிய மோக்ஷ ராஜ்ஜியம் கிடைக்குமென்றும் பேசி ஓட்டுக்கேட்டு வருகின்றார்கள். இந்த மாதிரி ஓட்டு வேட்டையை பார்ப்பனர்கள், தங்களை வெளியில் காட்டிக்கொள்ளாமல் சில கூலிகளை மாத்திரம் ஏவிவிட்டு அவர்கள் கடவுளையும், மதத்தையும் காப்பாற்றுவதுபோல் வேஷம் போட்டு ஜஸ்டிஸ் கட்சியை வைது கொண்டே இருக்கும்படி செய்து, அதனால் தங்களுக்கு ஓட்டுக் கிடைக்கும்படி செய்து



பார்த்தார்கள். ஆனால் நாம் ஆரம்பத்திலேயே இதன் இரகசியத்தை தெரிந்து “இது ஐயங்கார் கூலிப்பிரசாரமே தவிர இதில் கடவுளைக் காப்பாற்றக் கவலை கொண்ட பிரசாரம் ஒன்றும் இல்லை, ஐயங்காரைக் காப்பாற்ற அவர்களது கூலிகள் சென்ற தேர்தலில் சுயராஜ்ஜியப் பிரசாரம் செய்தது போல் இந்த தேர்தலுக்கு மோக்ஷ ராஜ்ஜியப் பிரசாரம் செய்கின்றார்கள்” என்று சொன்னோம். இதற்கு அக்கூலிகள் தங்களது மோக்ஷ ராஜ்ஜியப் பிரசாரத்திற்கும் ஐயங்காருக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்று சொல்லிக்கொண்டே வந்தார்கள். ஆனால் சமீபத்தில் திரு. சீனிவாசய்யங்கார் வாயாலேயே இதன் உண்மை தாராளமாய் வெளியாய்விட்டது.

அதாவது, சமீபத்தில் திரு.எஸ்.சீனிவாசய்யங்காரும் அவர்களது வால்களும் கூலிகளும் கடலூர் கும்பகோணம் முதலிய இடங்களுக்குச் சென்று அங்கு நடத்திய தேர்தல் கூத்துகளில் ராமசாமி நாயக்கர் கடவுளையும் மதத்தையும் கோவில்களையும் குற்றம் சொல்லுகின்றார். ஜஸ்டிஸ் கட்சியார்கள் அவரை ஆதரிக்கின்றார்கள். ஆதலால் ஜஸ்டிஸ் கக்ஷியாரை சட்டசபைக்கு அனுப்பாதீர்கள் என்று சொல்லி இருக்கின்றார். எனவே ஐயங்கார் சங்கமும் ‘ஆஸ்தீக’ சங்கமும் ஒரே உட்கருத்தைக் கொண்டு தான் வேலை செய்கின்றன என்பதும் ஐயங்கார்கள் தங்களுக்கு ஓட்டுக் கிடைக்க வேண்டி கடவுளையும் மதத்தையும் காப்பாற்றமுற்பட்டால் அவர்களது கூலிகள் வயிற்றுப் பிழைப்புக்கு கூலி கிடைக்க கடவுளையும், மதத்தையும் காப்பாற்றப் புறப்பட்டிருப்பதாய்ச் சொல்லிக் கொள்ள வேண்டியவர் களாயிருக்கின்றார்கள் என்பதும் விளங்கவில்லையா? எனவே, இந்தத் தேர்தல் நாடகத்திற்குப் பயந்து ஜஸ்டிஸ் கக்ஷி பிரமுகர்களில் சிலர் நம்மிடம் வந்து சுயமரியாதை இயக்கத் தத்துவத்தை ஐயங்கார் கூலிகள் திரித்துக் கூறுவதன் மூலம் தங்களுக்கு ஓட்டுக் கிடைக்காமல் போய்விடுமோ எனப் பயந்து சற்று அதை நிறுத்திவைக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். நாம் அதற்கு சொன்ன பதில் என்னவென்றால் ஜஸ்டிஸ் கட்சியாருக்கு ஓட்டு கிடைப்பதே நமது லட்சியமல்ல வென்றும் நமது கொள்கைகள் நிலை பெற்று அவைகள் அமுலில் வரவேண்டியதே நமது கவலை என்றும், இக் கொள்கைகளை ஒப்புக் கொள்ளும் முறையிலும் நடத்தி வைக்கச் சம்மதிக்கும் முறையிலும் தான் ஜஸ்டிஸ்கட்சிக்கு ஓட்டுக்கிடைக்க நாம் ஆசைப்படுவோமே ஒழிய பெயரளவில் எக்கட்சியையும் பற்றி நமக்கு அதிக கவலை இல்லை என்றும், சுயமரியாதை இயக்கத் தத்துவத்தைப் பற்றி பார்ப்பனர்கள் கூலிகளைப் பிடித்து திரித்துக் கூறி விஷமப் பிரசாரம் செய்து ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டில்லாமல் செய்து விடுவார்களே என்று உண்மையாகவே உங்களுக்கு பயமிருக்குமானால், அதே கூலிகளைப் பிடித்து மேலால் நாலோ, ஐந்தோ சேர்த்துக் கொடுத்து அவர்களைக் கொண்டே ஐயங்கார்களின் யோக்கியதையை வெளியாக்கும் உண்மைப் பிரசாரம் செய்விக்க நீங்கள் ஏன் முயற்சிக்கக் கூடாது? என்றும் நீங்களும் வெளி இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு ஏன் உண்மையை எடுத்துக்



RangaRakes tamilnavarasam.com

கூறக்கூடாது என்றும்தான் நாம் மறு மொழி சொன்னோம். அதன் மீது அவர்களும் பிரசாரத்திற்குக் கிளம்புவதாகத் தெரிகின்றது. எனவே, நம்மைப் பொறுத்தவரை நம்மை எவர் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் குற்றம் கூறிப் பிரசாரம் செய்வதைப் பற்றி நமக்கு பயமில்லை. அன்றியும் நமக்கு ஓட்டுக் கிடைக்காமல் போவதால் பெரிய நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டு விடப் போவதில்லை. நம்மை எவ்வளவு பெரிய நாஸ்திகர் என்று அழைத்தாலும் கவலை இல்லை. ஒரு காரியத்தில் இறங்கினால் அதன் எதிரிகளால் சொல்லப்படும் பழிகளை ஏற்கவும், அவைகளுக்கு சமாதானம் சொல்லி சமாளிக்கவும், அதற்கு உயிர் கொடுக்கவும் சக்தி இல்லாதவர்கள் பெரிய காரியங்களைச் சாதித்துவிடலாம் என்று எண்ணுவது பைத்தியக் காரத்தனமாகும். ஆதலால் எவ்வளவு பழிப்புகள் வந்தாலும் சமாதானம் சொல்ல அவைகளை மனதார வரவேற்கின்றோம்.

ஏனெனில் நமது நாட்டு நிலைமைக்கு நாம் கொண்டிருக்கும் கடவுள் உணர்ச்சியும் சிறப்பாக பார்ப்பனரல்லாதார் இருந்துவரும் இழிநிலைக்கு அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் மத தத்துவங்களுமே காரணம் என்பதை நாம் ஒருகாலமும் மாற்றிக் கொள்ளப்போவதில்லை என்பதையும் அவ் விரண்டையும் தலைகீழாக மாற்றி அவற்றின் உண்மையை வெளியாக்கு வதையே நமது முக்கிய கடமையாய்க் கொண்டிருக்கின்றோம் என்பதையும் அழுத்தமாக வலியுறுத்துகின்றோம். இதனால் நமக்கு எவ்வளவு பெரிய நாஸ்திகப்பட்டம் வருவதானாலும் எவ்வளவு காலம் மீளாத 'நரகம்' ஏற்படுவதானாலும் அன்றியும் அதனால் அக்காலத்தில் உயிர்போவ தானாலும் ஒரு சிறிதும் கவலை இல்லை. மற்ற நாட்டினர்களின் கடவுள் உணர்ச்சியைவிட நமது கடவுள் உணர்ச்சியும் பக்தியும் பூசையும் நம்மை ஓட்டாண்டிகளாக்கி அறிவிலிகளாக்கி நம்மை நமது நாட்டை விட்டுத் துரத்திக் கொண்டு வருகின்றது. அதுபோலவே மற்ற நாட்டினர்கள் மதத்தை விட நமது மதம் நம்மை பிரித்துவைத்து இழிமக்களாக்கி அன்னிய ஆட்சிக்கு உட்படுத்தி மனிதத்தன்மை இல்லாமல் வாழச் செய்கின்றது. இவை நேற்று இன்று என்றில்லாமல் ஆராய்ச்சிக்கு எட்டும் சரித்திரகாலம் தொட்டு இப்படியே இருப்பதாய்க் காணப்படுகின்றது. இதற்கு, அர்த்தமில்லாமல் வெள்ளைக்காரர்கள் மீது பழி போடுவதிலும் சுயராஜ்ஜிய சாக்கு சொல்லு வதிலும் பயன் என்ன? என்று தான் கேட்கின்றோம். ஏனெனில் சுயராஜ்ஜிய மும் அதற்கு மேற்பட்ட ராம ராஜ்ஜியம் கிருஷ்ண ராஜ்ஜியம் முதலிய ராஜ்ஜியங்களும் இருந்த காலத்தில் இருந்த நிலையைவிட வெள்ளைக்காரன் ராஜ்ஜிய காலம் எப்படி இந்நிலைக்கு அதிகமான பொறுப்புடையது என்பதுதான்.

தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களைத் தெருவில் நடக்கவிடாதது ஆப்பிரிக்கர்களுடைய அகம்பாவமாக இருக்கலாம். அமெரிக்காவில் கவி ரவீந்திரநாத் தாகூர் அவர்களை அவமரியாதை செய்தது அமெரிக்கர் களுடைய ஆணவமாக இருக்கலாம். திரு.காந்தியை தண்டித்தது இங்கிலீஷ்காரருடைய இறுமாப்பாக இருக்கலாம். ஆனால் இந்தியனை இந்தியாவில் தெருவில் நடக்க விடாததும் இந்துக்கடவுள் கோவிலுக்குள் செல்ல இந்துவை விடாததும் யாருடைய அகம்பாவம், ஆணவம், இறுமாப்பு என்று கேட்கின்றோம்.

திருவாளர்கள், காந்தியும் லஜபதியும் கோவிலுக்குள் சென்று அவர்களது கடவுளை வணங்க அனுமதிக்காமல் திருப்பி அனுப்பிய கொடுமையையும் அவமானத்தையும் இழிவையும் விடவா திரு தாகூரை அமெரிக்கர்கள் அவமானப்படுத்திவிட்டார்கள் என்று யோசித்தால் இந்தியர்கள் அயோக்கியர்களா முட்டாள்களா என்பதும், அமெரிக்கர்கள் அயோக்கியர்களா முட்டாள்களா என்பதும் இந்திய அரசர்கள் ஆட்சி ஐரோப்பிய அரசர்கள் ஆட்சியைவிட மேலானதாயிருக்குமா என்பதும் விளங்காமல் போகாது. எந்த நாட்டிலாவது குளத்தில் தண்ணீர் மொள்ள உரிமையில்லாதவனும் தெருவில் நடக்க உரிமையில்லாதவனும் தங்களது உரிமையை மறுக்கின்றவர்களுடன் சேர்ந்து சுயராஜ்யம் அடைய முயற்சிப் பார்களா என்று யோசித்துப் பார்த்தால் சுயராஜ்ஜியத்திற்கு யார் முட்டுக் கட்டை போடுகின்றார்கள் என்கின்ற உண்மை ஒரு மூடனுக்கும் விளங்காமல் போகாது. கடவுளையும் மதத்தையும் கோவில்களையும் காப்பாற்றுகின்றோம் என்று வேஷம் போட்டுக் கொண்டு ஜஸ்டிஸ் கட்சியை ஒழித்து பார்ப்பனக் கட்சியை சாதிக்கப் போவதாக வெளிவந்திருக்கும் ஆஸ்திக கனவான்கள் கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் கோவில்களின் பேராலும் நடக்கும் கொடுமைகளை ஒழிப்பதற்கு ஏதாவது செய்கின்றார்களா, நினைக் கின்றார்களா, செய்தார்களா, நினைத்தார்களா என்றுதான் கேட்கின்றோம். எனவே பார்ப்பனர்கள் தேர்தலுக்கு ஏற்படுத்திக் கொண்ட நாடகத்தில் வரும் வேஷங்களைக் கவனிக்காமல் அந்த வேஷக்காரர்கள் யார்? அவர்களின் அறிவு, ஒழுக்கம், லக்ஷியம், பிழைப்பு, யோக்கியதை ஆகியவைகள் என்ன? என்பதைப் பற்றி விசாரித்தால் கண்டிப்பாய் ஒவ்வொருவருக்கும் அவர்கள் கூற்றின் உண்மை விளங்காமல் போகாது.

**குடி அரசு - தலையங்கம் - 28.04.1929**



RangaRakes

tamilnavarasam.com

## பாராட்டுதல்

திருவாளர் சென்னை பண்டிதர் எஸ்.எஸ்.ஆனந்தம் அவர்களை சென்னை கார்ப்பரேஷன் அங்கத்தினராக நியமித்த அரசாங்க ஸ்தல ஸ்தாபன மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களை நாம் மனமார பாராட்டுவதுடன் நமது வேண்டுகோளுக்கு செவி சாய்த்தமைக்கு நமது நன்றியறிதலையும் செலுத்துகின்றோம். வெகு காலத்திற்கு முன்னமேயே இந்நியமனம் பெற்றிருக்க வேண்டிய பண்டிதர் ஆனந்தம் இப்பொழுதாவது நியமனம் பெற்றிருப்பதற்கு மகிழ்ச்சி அடைவதுடன் மேலுக்கு மேலும் உயர்பதவி நியமனம் பெற்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உழைக்க வேண்டுமாய் ஆசைப்படுகின்றோம்.

**குடி அரசு - குறிப்புரை - 28.04.1929**

## இந்திய சட்டசபை வர்த்தகத் தொகுதிக்குத் தேர்தல்

இந்தியா சட்டசபைக்கு சென்னை வர்த்தகத் தொகுதிக்காக ஒதுக்கப்பட்ட ஸ்தானத்திற்கு கோவை வருணாச்சிரம ஐயங்கார் பார்ப்பனராகிய திரு. சி.வி. வெங்கிட்டரமண ஐயங்கார் அவர்களும் சென்னை பிரபல வியாபாரியாகிய ஜனாப் ஜமால் மகமதுசாயபு அவர்களும் போட்டி போடுகின்றார்கள். திரு. அய்யங்காருக்கு அதிகமான பின்பலமும் ஆதரவும் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் இருப்பதாகத் தெரியவருகின்றனது. இத்தொகுதியில் சுமார் 500 பேர் வரை நாட்டுக்கோட்டை நகரத்தார் கனவான்கள் ஓட்டர்களாயிருப்பதும் ராஜா சர். அவர்கள் வர்த்தக உலகத்தில் தக்க செல்வாக்குடையவராக இருப்பதுமே திரு.அய்யங்கார் அவரைப் போய் பிடித்ததற்கு முக்கிய காரணமாகும். திரு.ராஜா சர். அவர்களின் செல்வப்பெருக்கும் செல்வாக்கு வன்மையும் உலகத்தில் யாராலும் மறுக்கக்கூடியதல்ல என்பதை நாம் வலியுறுத்திக் கூறுவோம். ஆனால் அதை மக்களுக்குப் பயன்படும் முறையில் உபயோகப்படுத்தாமல் எதேச்சாதிகார வழியில் உபயோகிக்கத் துணிந்து கொண்டே போனால் யாரால் தான் சங்கடப்படாமல் இருக்க முடியும்? அவர்களது சிதம்பரம் காலேஜ் பார்ப்பன அக்கிராரமாயிருக்கின்றது என்று கொஞ்சகாலத்திற்கு முன் எழுதினோம். அதை ஒருவாறு வேறு அவசரத்தில் மறந்தோம் - பிறகு சிதம்பரம் யூனிவர்சிட்டிக்கு வைஸ் சான்சலராக பார்ப்பனப் பித்துப்பிடித்த ஒரு சாஸ்திரியை நியமித்தார்கள். போதாக் குறைக்கு சட்டசபை வர்த்தகர் தொகுதிக்கு ஒரு பிரபல வர்த்தகருக்கு விரோதமாய் அதுவும் மகமதிய வர்த்தகருக்கு விரோதமாய் ஒரு பார்ப்பனரை அதுவும் அய்யங்கார் பார்ப்பனரை அதுவும் ஏற்கனவே எல்லோரும் அய்யங்கார் பார்ப்பனராக அடைந்து கிடக்கும் இடத்திற்கு மறுபடியும் ஒரு வருணாச்சிரம அய்யங்கார் பார்ப்பனரை ஆதரிப்பது என்று சொன்னால் நாம் எப்படித்தான் சமாதானமடையமுடியும்? எனவே நமது ராஜா சர். அண்ணாமலை செட்டியார் அவர்கள் தயவு செய்து புனராலோசனை செய்து தம்மிடம் அன்பும் நம்பிக்கையும் கொண்டிருக்கும் மக்களுக்கு நியாயம் வழங்குவார்களாக.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 28.04.1029**



RangaRakes tamilnavarasam.com

# 13-வது நாடார் மகாநாடு

# கொடியேற்றுவிழாச் சொற்பொழிவு

"இந்தக் கொடியில் குறிக்கப்பட்டிருக்கும் பெரியோர்களினாலேதான் நீங்கள் முன்னுக்கு வந்தீர்கள். மகாநாட்டில் சுயமரியாதை அடையக் கூடிய பல தீர்மானங்களை நிறைவேற்றுவீர்கள் என நம்புகிறேன். நாடார் சமூகத்திற்குத் தனி மகாநாடு எதற்கு என்ற சந்தேகம் கிளம்பலாம், இருந்தாலும் நாம் இதற்குப் பயப்படாமல் நமது மகாநாடுகளை நடத்த வேண்டும். இம் மாதிரி மகாநாடுகளில் நாமும் கலந்து கொண்டு அவர்களுக்குள் உள்ள கெடுதிகளை களைந்தெறிந்து சுத்தப்படுத்தி தேசத்தாருடன் சேர்க்க வேண்டுமென்பது எங்கள் கொள்கை. மகாநாடு வெற்றியுடன் நடைபெற வேண்டுமென்று நம்பி இக்கொடியினை உயர்த்துகின்றேன்."

*குறிப்பு: 29.04.1929 ஆம் நாள் பிறையாற்றில் நடைபெற்ற 13-ஆவது நாடார் மாநாட்டில் மாநாட்டுக் கொடியை ஏற்றிவைத்து ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 05.05.1929**



# நமது பத்திரிகை

## ஐந்தாவதாண்டு

"குடி அரசு" அபிமானிகளே!

நமது "குடி அரசு" தோன்றி நான்காவதாண்டு கடந்து, ஐந்தாவதாண்டின் முதல் இதழ் வெளியாக்கும் பேறு பெற்றமைக்கு மகிழ்வெய்துகின்றோம். அது தோன்றிய நாள் தொட்டு இற்றைய நாள்வரை மக்கள் முன்னேற்றத்திற்கும், நாட்டின் விடுதலைக்கும் தன்னால் இயன்றதைச் சிறிதும் ஒளிக்காமல் தொண்டாற்றி வந்திருக்கும் விஷயம் நாம் எடுத்துக் காட்டாமலே அன்பர்கள் உணர்ந்திருக்கலாம்.

இதன் ஆசிரியராகிய யாம் சுமார் 30 ஆண்டு உலக வாழ்க்கை அனுபவம், அதாவது வியாபாரம், விவசாயம் அனுபவமும் சுமார் இருபதாண்டு பொது நலவுழைப்பு என்பதின் பேரால் அதாவது உள் ஊர் அக்கப்போர்கள், ஜில்லா பொதுநல சர்க்கார் சம்பந்தமில்லாத ஸ்தாபனங்கள், சர்க்கார் சம்பந்தமுள்ள ஸ்தல ஸ்தாபனம் முதலியவைகளில் நிர்வாக விஷய அனுபவமும் அரசர்கள், அதிகாரிகள் ஆகியவர்களின் கூட்டுறவு அனுபவமும், ஜமீன்தார்கள், பிரபுக்கள், ஏழைகள், காலிகள் ஆகியவர்களின் நெருங்கிய நேச அனுபவமும், இவைகளெல்லாம் அல்லாமல் வீட்டையும் குடும்பத்தையும் விட்டு துறவறம் கொள்ள எண்ணம் கொண்டு வெளிக் கிளம்பி சன்னியாசி வேஷமிட்டு காவி தரித்து சாமியாராகி இந்தியா முழுவதும் சுற்றி அலைந்த பிறகு அதையும் விட்டு, வெறும் கோவணத்துடன் தெருப்பிச்சை எடுத்து பிறகு அதையும் விட்டு எச்சிலையில் கிடப்பதை எடுத்து உண்டது ஆகிய வாழ்க்கைகளிலும் ஈடுபட்ட அதன் அனுபவமும், கடைசியாக அரசியலுக்கும் சமூக இயலுக்கும் என்று சென்னை மாகாண சங்கம் உபதலைவராகவும், தேசீயவாதிகள் சங்க காரியதரிசியாகவும், காங்கிரஸ் இயக்கம் என்பதில் ஒத்துழையாமை இயக்கத்திற்கு மாகாணத் தலைவர், காரியதரிசி ஏக தலைவர் ஆகிய பதவிப் பேறும், வைதீக ஒத்துழையாமை கொள்கைக்கு முக்கிய தலைமையும் மற்றும் சத்தியாக்கிரகம், சர்க்கார் உத்திரவு மீறுதல், உண்மையை ஒளிக்காமல் பேசுதல் ஆகியவைகளுக்கு ஆக பல தடவை அரசாங்க தண்டனைக்கு ஆளாகி சிறைவாசம் அடைதல் ஆகிய பல பேறுகளும் பெற்றதன் மூலம் சிறிது சிறிதாய் உலக அனுபவம் பெற்று, அவைகளின் பயனாய் நமது நாட்டின் உண்மை



RangaRakes tamilnavarasam.com

விடுதலைக்கு விரோதியாயிருப்பது பார்ப்பனீயமே என்பதையும், அதன் ஆதிக்கம் வலுத்திருப்பதற்குக் காரணம் நமது மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியும், அறிவு வளர்ச்சிக்கு இடமும் இன்மையே என்பதையும் அதற்கு முக்கிய காரணம் மூட நம்பிக்கையே என்பதையும் உணர்ந்து, சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்கி அறிவை வளரச் செய்து மூட நம்பிக்கைகளை ஒழித்துப் பார்ப்பனீயத்தை அடியோடு அழித்து மக்களை அடிமைத் தனத் திலிருந்து மீட்கவேண்டும் என்கின்ற ஒரே ஆசையின் மீதே இக் "குடி அரசு" பத்திரிகையை ஆரம்பித்த நாம் அதற்கேற்ப இத்தமிழ்நாடு முழுவதும் இடைவிடாமல் சுற்றிச் சுற்றி அலைந்து திரிந்து சொற்பொழிவாற்றிக் கொண்டுமிருப்பவராவோம்.

எனவே இப்படிப்பட்ட நிலையில் இதன் கொள்கை என்ன என்ப தையும் இது என்ன செய்தது என்பதையும் உலகமே அறிந்ததாதலால் இதைக் குறிப்பிட வேண்டிய தில்லை என்றே நினைக்கின்றோம். நிற்க இக் கொள்கை யைக் கடைபிடித்து நடந்து வந்த சென்ற நான்கு வருஷகாலமாய் "குடி அர"சானது முதலில் யாருடைய உதவியும் இன்றி பிரவாக வெள்ளத்தில் எதிர்நீச்சல் நீந்த வேண்டியது போன்ற மிகக் கஷ்டமான காரியத்தில் இறங்கி இருந்ததோடு செல்வமும் செல்வாக்கும் பெற்ற பெரியோர்கள் என்பவர்கள் முதற்கொண்டு மானமும் ஈனமும் அற்ற காலிகள் என்பவர்கள் வரையும், அறிவும் ஆராய்ச்சியும் உள்ளவர்கள் என்று சொல்லப்படும் பண்டிதர்கள் முதல் தனக்கும் அறிவில்லாமலும் பிறர் சொல்வதையும் கேட்க இயலாமலும் உள்ள பிடிவாத சுயநலக்காரர்கள் வரையிலும் உள்ளவர்களின் இரக்கமும் மனிதத் தன்மையும் அற்ற எதிர்ப்புக்கு ஆளாகி வந்தும், மேற்கூறிய எவ்வித எதிர்ப்பும் இடையூறும் இல்லாமல் தாராளமாய் விடப்பட்டிருந்து மேற்கண்ட வர்கள் எல்லாம் நேசமாயிருந்து உதவி செய்து வந்திருந்தாலும் கூட அது உத்தேசித்துள்ள காரியங்களில் எவ்வளவு செய்திருக்க முடியுமோ அவற்றை எல்லாம் விட குறிப்பிடத்தக்க அளவு அதிகமாகவே செய்திருக்கின்ற தென்றே நாம் மனப்பூர்வமாக உணருகின்றோம். இதற்கு உதாரணம் என்னவென்றால் முதலாவதாக "குடி அரசு" இன்றைக்கு வாரம் ஒன்றுக்கு 9500 பிரதிகள் வெளியாகின்றதும், அடிக்க அடிக்க பந்துகிளம்புவது போல் எதிர்க்க எதிர்க்க வாசகர்கள் அதிகமாவதும் மற்றும் "குடி அரசு" கொள்கை களை ஆதரிக்கும் பத்திரிகைகளுக்கும் இதுபோலவே பல ஆயிரக்கணக் காக பிரதிகளும் வாசகர்களும் பெருகிக் கொண்டு போதலும் இக்கொள்கைக் காக என்றே புதிதுபுதிதாகப் பத்திரிகைகள் துவக்கப்படுதலும் அவைகளுக் கும் ஆரம்பத்திலேயே செல்வாக்கு பெருகுதலும், இரண்டாவதாக இக் கொள்கைகளை அனுபவத்தில் ஏற்றுக் கொண்ட மக்களுக்கும், இக் கொள்கைகளை உபதேசிக்கும் மக்களுக்கும், இக்கொள்கைகளை ஒப்புக் கொண்ட ஸ்தாபனங்களுக்கும் நாட்டில் செல்வாக்கும் மதிப்பும் வளர்தலும், மூன்றாவதாக இக்கொள்கைகளுக்கு எதிரிடையாக உள்ள பத்திரிகை களுக்கும் தனிப்பட்ட நபர்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் மதிப்பும்



செல்வாக்கும் குறைந்து போதலும் முதலாகிய காரணங்களால் உணரலாம். அன்றியும் எங்கு பார்த்தாலும் அடிக்கடி இக்கொள்கைகளைப் பரப்புவதற் காக மாகாண ஜில்லா, தாலூக்கா, சுயமரியாதை மகாநாடுகள் நடப்பதும், இக்கொள்கைக்கு விரோதமான ஸ்தாபனங்கள் என்று சொல்லப்படும் காங்கிரஸ், தேசீயம் முதலிய அரசியல் புரட்டு ஸ்தாபனங்களுக்கு நாட்டில் சிறிதும் செல்வாக்கற்று இரண்டு மூன்று வருஷமாக நமது நாட்டில் அரசியலின் பேரால் மாகாண மகாநாடு கூட நடத்த முடியாமலும், ஜில்லா தாலூக்கா மகாநாடுகள் என்பதுகள் கூட நடப்பதென்பது மிக அருமையாயும் போய்விட்டதோடு சுயமரியாதைக் கொள்கைக்கு விரோதமான கூட்டத்தார் வெளியில் தலைகாட்டவோ மேடை ஏறுவதற்கோ லாயக்கில்லாத முறையில் அடங்கிக்கிடக்கவேண்டிய நிலைமையை உண்டாக்கியிருக்கின்றது. சுருங்கச் சொன்னால் அரசியல் சமுதாய இயல் ஆகிய புரட்டுகளை மக்களுக்கு வெட்ட வெளிச்சமாக்கி அதன் பேரால் ஏமாற்றி வயிறு வளர்த்தவர்களையும் ஆதிக்கம் பெற்று வந்தவர்களையும் ஒருவாறு ஒடுங்கச் செய்துவிட்ட தென்றே சொல்ல வேண்டும். நிற்க, சமயப் புரட்டுத் துறைகளிலும் எதிர்பாராத அளவு அவைகளை வெளியாக்கி அவற்றின் போலி ஆதிக்கத்தை ஒருவாறு அழித்துக் கொண்டு வருகின்றது என்றும் சொல்லலாம். உதாரணமாக ஆயிரக்கணக்கான சாமிகளுக்கு இருந்த மதிப்புகள் எல்லாம் மலை உச்சியிலிருந்து உருட்டிவிட்ட உருண்டைக் குன்றுபோல் வேகமாக இறங்கி வருகின்றது. அவற்றின் பூசைகள் உற்சவங்கள் ஆகியவைகளின் யோக்கிய தைகளுக்கும் முன்னிருந்த மதிப்பில் பகுதி மதிப்புக் கூட இல்லாமல் இருந்து வருகின்றது. சில இடங்களில் வெகுகாலமாய் நடந்து வந்த உற்சவங்களும் பூஜைகளும் நிறுத்தப்பட்டுவிட்டன, சாமிகளும் அவற்றின் பூசைகளும் உற்சவங்களும் இக்கதியனால் சடங்குப் புரட்டைப் பற்றி நாம் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் யாருக்கும் இருக்காது என்றே நினைக்கின்றோம். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் சடங்கை நிறுத்தினவர் களும் சாதிப் பட்டத்தை எடுத்துவிட்டவர்களும் சமயக் குறியைத் தள்ளி விட்டவர்களும் ஆயிரவாயிரக் கணக்காகத் தைரியமாகப் பெயர் கொடுத்து வருகின்றார்கள். இவ்வளவும் அல்லாமல் இத்தனைக் காலம் ஏமாற்றியதைப் போல் தேசத்தையும் தேசீயத்தையும் சுயராஜ்யத்தையும் சொல்லிக் கொண்டு தேர்தலுக்கு நிற்க யாருக்கும் யோக்கியதை இல்லாமலும் செய்துவிட்டது.

உதாரணம் பாமர மக்களுக்குள்ள மற்றொரு மூடநம்பிக்கையை ஆதாரமாய் வைத்துக் கொண்டு அதாவது மதத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு நிற்கப் போவதாய் வெளியிட வேண்டியதாய் விட்டதே போதுமானது.

சமுதாய புரட்டுத் துறையிலும் தீண்டாமை விலக்கைப் பற்றி எங்கும் வெகுதாராளமாய்ப் பேசப்படுகின்றது. சமபந்தி போஜனம் அதிசயிக்கத்தக்க வண்ணம் முன்னேறி வருகின்றது. பொதுவாக இவைகளுக்கு ஒரு கடுகளவு



RangaRakes tamilnavarasam.com

அறிவுள்ள கூட்டத்திலும் அணுவளவு ஆட்சேபமாவது அதிருப்தியாவது கிளம்புவதாக யாருமே சொல்ல முடியாத நிலைமை எய்திவிட்டது என்று உறுதியாய்ச் சொல்லலாம். ஆனால் பொறாமைக்காரர்களுடையவும் சுயநலக் காரர்களுடையவும் அவர்களது கூலிகளுடையவும் எதிர்ப்பும் அதிருப்தியும் சிறிதாவது இல்லையென்று சொல்ல முடியாது என்றாலும் அவர்களையும் இக்கொள்கைகளை நேரான முறையில் வெளிப்படையாய் எதிர்ப்பதற்கு தைரியமற்றவர்களாக்கி சூழ்ச்சியிலும் பித்தலாட்டத்திலுமேதான் மறைமுக மாய் தலைகாட்ட முடியும்படியாகச் செய்திருக்கின்றது.

இதுபோலவே கல்யாண முறையிலும் சாதாரணமாய் எதிர்பார்க்க முடியாத அளவு சீர்திருத்தமும், கலப்புமண உணர்ச்சியில் ஆண்களைவிட பெண்களுக்கே அதிக ஆவலும், பெண் உரிமையில் ஆண்களைவிட அதிகமான உரிமை பெண்களுக்கு வேண்டும் என்று பெண்களே கருதத்தக்க வண்ணமும் ஆண்கள் சிறிதும் ஆட்க்ஷேபிக்க முடியாமல் தலை குனிந்து ஒப்புக் கொள்ள வேண்டியதான உணர்ச்சியும் உண்டாயிருக்கின்றது.

இவைகள் தவிர சாஸ்திரம் புராணம் இதிகாசம் என்பவை முதலிய வற்றின் யோக்கியதைகளும் புரட்டுகளும் சந்தி சிரிக்கத் தக்கவண்ணம் வெளியாகி முக்கிய சாஸ்திரங்கள் இதிகாசங்கள் என்பவைகளை அதாவது வருணாசிரமக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவைகளை ஆயிரம் பதினாயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தின் முன் நெருப்பு வைத்துக் கொளுத்தத்தக்க ஆவேசமும் உணர்ச்சியும் ஏற்பட்டு விட்டது. தினம் தினம் வருணாசிரம மகாநாடுகளும் அடிக்கடி சைவ சமய மகாநாடுகளும் மூலை முடுக்குகளில் கூட்டி 'குடி அரசை'யும் அதன் கொள்கைகளையும் கண்டிப்பதும் சட்டசபைகளில் சரமாரியாக கேள்விகள் கேட்பதும் ஆகிய பல அவசியத்தைக் கொண்டு வந்தும் விட்டுவிட்டது.

இந்த சொற்ப காலத்திற்குள் இவ்வளவு காரியங்கள் நடைபெற்றதற்கு காரணம் என்னவென்று பார்ப்போம். நாம் இத்தொண்டில் இறங்கிய காலம் முதல் இதுவரை யாருடைய வாக்குச் சகாயமாவது பண சம்பந்தமான உதவியாவது கடுகளவு கூடக்கிடையாது. இதற்கு விரோதமாய் எதிர்ப்புகள் மாத்திரம் மலிந்து கிடந்தன. பள்ளிக் கூட படிப்பில்லாமலும் பத்திரிகை அனுபவம் சிறிதுமில்லாமலும் உள்ள நிலையில் இப்பத்திரிகை ஆரம்பிக் கப்பட்டதும் நமக்கெதிராக அநேக பத்திரிகைகள் ஒன்று சேர்ந்து சதியாலோசனை செய்து எதிர்த்துக் கொண்டிருந்தன. உதாரணமாக நமது பத்திரிகை விளம்பரத்தைக் கூட எவ்வளவு பணம் கொடுத்தாலும் விளம்பரப் படுத்த "சுதேசமித்திரன்" "நவசக்தி" போன்றவைகள் மறுத்துவிட்டன. பத்திரிகை வெளிப்படுத்தும் விஷயத்தில் தபால் ரயில் இலாகாவிலுங்கூட சகிக்க முடியாத தொல்லைகள் அனுபவிக்க வேண்டியதாயிற்று. எங்கு சென்றாலும் ஆங்காங்குள்ள ஸ்தல அதிகாரிகளின் தொல்லையும் வெகு தொல்லையாயிருந்தது. இவ்வளவு மல்லாமல் நமது எழுத்துக்களையும்



சொற்களையும் நமது எதிரிகள் பாமர மக்களுக்கு திரித்து எழுதியும் கூறியும் வந்த தொல்லைகள் எல்லாவற்றையும் விட அதிகமாக இருந்தன. அதோடு மாத்திரமல்லாமல் பத்திரிகை ஆரம்பித்தவுடன் நம்மை தேசத்துரோகி என்று தீர்மானித்து காங்கிரசிலிருந்து வெளியாக்கிவிட்டதாக 'நவசக்தி' முதலிய பத்திரிகைகளின் பிரசாரமும், நாம் காங்கிரசிலிருந்து பணம் திருடிக் கொண்டதாக 'தமிழ்நாடு' முதலிய பத்திரிகைகளின் பிரசாரமும் பறை அடிப் பதுபோல் மூலை முடுக்குகளில் எல்லாம் செய்து வந்ததல்லாமல் மலேயா முதலிய வெளிநாடுகளுக்கும் ஆட்களை அனுப்பி அங்கும் விஷமப் பிரசாரம் செய்தும் சில சந்தாதாரர்களிடம் "குடி அரசு" வரவழைப்பதை நிறுத்திவிட்டால் "தமிழ்நாடு"வை இலவசமாய் அனுப்புகின்றோம் என்று சொல்லியும் "குடி அரசை" நிந்தித்து தாங்களே கடிதம் எழுதி அதில் பாமர சந்தாதாரர்கள் கையெழுத்து வாங்கி நமக்கனுப்புவதும் "குடி அரசு"க்கு விளம்பரம் கொடுத்திருப்பவர்களிடமெல்லாம் சென்று "குடி அரசு"க்கு விளம்பரம் கொடுக்கக்கூடாது என்று சகல செல்வாக்கையும் செலுத்தி பலவந்தம் செய்தும் கடைசியாக 'குடி அரசு' விளம்பரத்தை நிறுத்திக் கொண்டால் "தமிழ்நாடு"வில் இலவசமாய் விளம்பரம் போடுவதாகச் சொல்லி "குடி அரசு"க்கு வந்த விளம்பரங்களை நிறுத்தியும், மற்றும் ஒவ்வொரு சமூகத்தாரையும் நமக்கு விரோதமாய்க் கிளப்பிவிடக் கருதி நாம் சொல்லாதவைகளையும் எழுதாதவைகளையும் எழுதியும் தங்கள் நிருபர் களைவிட்டு உட்கலகம் செய்யும்படி செய்தும், உதாரணமாக விருதுநகர் நாடார் சமூகத்தை நமக்கு விரோதமாகக் கிளப்பிவிட சூழ்ச்சி செய்ததும் ஆகிய எத்தனையோ இழித் தகைமையான எதிர்ப்புகள் எல்லாம் இருந்தும் இன்று "குடி அரசு"ம் அதன் கொள்கையும் வெற்றியில் இருப்பதற்கு காரணம் என்ன என்று யோசித்துப் பார்க்க வேண்டாமா? அப்படி யோசித்தால் என்ன பதில் கிடைக்கும்? ஒரே ஒரு பதில்தான் கிடைக்கும். அதாவது 'குடி அர'சோ அதன் ஆசிரியரோ ஆரம்பகாலம் முதல் மனதில் பட்டதை ஒளிக்காமல் சொல்லுவதும் கொள்கைகளில் சமயத்திற்குத் தகுந்தபடி சுயநலத்தையே கருதி அடிக்கடி குட்டிக்கரணம் போடாமல் இருந்ததும் வேறு யாருடைய தயவையும் கையையும் எதிர்பாராமல் தன் காலிலேயே நின்று தன்னுடைய சொந்தச் செலவிலேயே இயக்கத்தை நடத்தினதுமே முக்கிய காரணமாகும் என்பதே. இதில் யாருக்காவது சந்தேகம் இருக்குமானால் விளக்குவதற்கு வெளிப்படையாகவே சொல்லுகின்றோம். அதாவது "குடி அரசு" ஆரம்பித்த காலம் முதல் இன்றையவரை ஏதோ சிலர் கல்யாண காலத்திலும் "கருமாதி" காலத்திலும் 4 அணா, 8 அணா ஒரு ரூபாய் வீதம் நன்கொடையாக அளித்து வந்ததில் மொத்தம் சுமார் 100 அல்லது 120 ரூபாய்கள் தவிர மேற்கொண்டு ஒரு அம்மன் காசாவது கொடுத்தவர்கள் யாரும் இல்லை என்றே சொல்லு வோம். ஆனால் 'குடி அர'சின் கொள்கையையும் தொண்டையும் ஒப்புக் கொண்ட சில நண்பர்கள் "குடி அரசு"க்கு சில சமயங்களில் பண உதவி செய்ய தாங்களாகவே முன்வந்த போதும் அதை திருப்பி விட்டு வேண்டு



RangaRakes tamilnavarasam.com

மானால் தயவு செய்து "திராவிட"னுக்கு உதவுங்கள் என்று கேட்டு கொண்ட தன் மூலம் "திராவிட"னுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டிருக்கின்றது என்றாலும் "திராவிடன்" "குடி அரசு"க்கு உதவியாய் நின்றதன் பயனாக "குடி அரசு"க்கு ஏற்பட்ட உதவிக்கு நாம் நன்றி செலுத்தியாக வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

இதுதவிர அதுபோலவே, நமது சுற்றுப் பிரயாணங்களுக்கும் நமது பிரசாரர்களுக்கும் நண்பர்களுக்கும் இன்றைவரை யாரும் எவ்வித பண உதவியும் செய்யப்பெறவில்லை என்றும், தைரியமாய்ச் சொல்லுவோம். பத்திரிகை நடத்துவதிலும், "குடி அரசு" ஆரம்பித்த காலம் முதல் இது ஒரு வருஷம் தவிர அதாவது மலேயா நாட்டுக்கு நமது சகோதரர் சந்தா சேர்க்கச் சென்றுவந்த வருஷம் தவிர, மற்றபடி நஷ்டத்திலேயே நடைபெறுகின்ற தேயல்லாமல் வேறில்லை.

உடல்நிலையும் முதலாவது கண்பார்வை சற்றுக் குறைவு, தலைவலி, அடிக்கடி மயக்கம், ஜீரண குறைவால் மார்பு வலி, பல்வலி, சிறிது காதிலும் தொல்லை, குடல்வாதம், அதிக வேலை செய்யக் கூடாது என்று பிரபல வைத்தியர்களின் கண்டிப்பான அபிப்பிராயம் முதலிய நெருக்கடியான கஷ்டத்தில் இருக்கின்றது.

தினப்படி வரும் தபால்களில் நூற்றுக்கணக்காய் வெறுக்கத்தக்க வண்ணம் புகழ்ந்தெழுதுபவை ஒருபுறமிருந்தாலும், வைதும் மிரட்டியும் எழுதப்பட்டு வரும் மொட்டைக் கடிதங்களுக்கும் குறைவில்லை. இவ்வளவு நிர்ப்பந்தங்களுக்கிடையில் நமது இயக்கம் ஒருவித நன்னிலை அடைந்து மேற்செல்லுவதையும், இவைகள் நமக்குப் பேரூக்கத்தை விளைவித்து வருவதையும் ஆயிரக்கணக்கான வாலிபர்கள் நம்மைத் தாங்கி நிற்பதையும், நாம் மனமார உணருகின்றோம். முடிவாக நமது கொள்கைகளிலாவது, நமது எழுத்துகளிலாவது சொற்களிலாவது நமக்கு சிறிதளவும் சந்தேகமோ மயக்கமோ இல்லாத அளவு தெளிவாயிருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

கடைசியாக நமக்கு உதவியாக இருக்கும். 'குமரன்', 'நாடார் குலமித்திரன்', 'தமிழன்' 'முன்னேற்றம்', 'விஸ்வநேசன்', 'சுயமரியாதைத் தொண்டன்', 'லட்சுமி', 'ரிவோல்ட்', 'திராவிடன்', 'முத்தமிழ்நாட்டின் பள்ளி உதயம்', 'பிரசண்ட மகாவிகடன்', மலையாளமொழி பத்திரிகைகளாகிய 'சகோதரன்', 'மிதவாதி', 'தேசாபிமானி' முதலாகியவைகள் மொத்தம் சுமார் நாற்பதினாயிரம் சந்தாதாரர்களைக் கொண்டு நமக்காக உழைத்து வருவதற் கும் தென் இந்திய நல உரிமைச் சங்கத்திற்கும், பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்திற்கும், நாடார் மகாஜன சங்கத்திற்கும் மற்றும் சில, சைவ சமாஜம் சன் மார்க்க சங்கம் முதலாய சங்கங்களுக்கும் சிறிதும் தன்னலமின்றி தங்களது முழு நேரத்தையும் தங்களது உடல் பொருள் ஆவி ஆகியவைகளை யெல்லாம் இவ்வியக்கத்திற்கே உவந்தளிக்கக் காத்திருக்கும் எமது அருமை



வாலிப இளஞ்சிங்கங்களுக்கும், அவசியமானபோது எவ்வித உதவியும் புரியத் தயாராயிருக்கும் செல்வமும் செல்வாக்கும் உண்மை ஆசையும் கொண்ட செல்வ நண்பர்களுக்கும், எமது நன்றியறிதலையும் தெரிவித்துக் கொண்டு நான்காவது ஆண்டைக் கடந்து ஐந்தாவது ஆண்டிற்குச் செல்கின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 05.05.1929**



RangaRakes tamilnavarasam.com

# மூன்றாவது நாடார் வாலிபர் மகாநாடு

சகோதரர்களே!

நமது நாட்டினுடைய முன்னேற்றத்தைக் கருதிய விஷயங்களிலே வாலிப மகாநாடுகளைப் பற்றி ஒருவிதமான அபிப்பிராய பேதமும் கிடையாது. ஏனென்றால் உலக முன்னேற்றத்திற்கே காரணம் வாலிபர்கள் தான். அதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுவர். ஒவ்வொரு நாட்டிலும் பல வகையிலும் அடிக்கடி கஷ்டம் நிகழ்ந்திருக்கின்றது. அவை விடுதலைப் பெற சுயமரியாதை அல்லது விடுதலை உணர்ச்சி வாலிபர்களுக்கு ஏற்பட்டதின் மூலம் உலகத்தின் பெரும்பான்மையான நாடுகள் விடுதலை யடைந் திருக்கின்றன. இந்தியாவைத்தவிர மற்ற எல்லா நாடுகளும் முன்னேறி வருகின்றன. ஏன் நமது நாடுமட்டும் தூங்குகிறது? வாலிபர்கள் கவலை எடுக்காததினால்தான். நாம் இதுகாறும் பாடுபட்டும் பிரயோஜனமில்லாமல் முன்னிருந்த நிலையில்தான் இருக்கின்றோம். எப்படி மற்ற நாட்டு வாலிபர்கள் தத்தம் நாடு முன்னேற உயிர்விட்டுக்கூட உழைத்தார்களோ அதுபோல் நமது வாலிபர்களும் உழைக்க முன் வரவேண்டும்.

சுயமரியாதை உணர்ச்சியை வாயளவில் மறுக்கின்றார்களேதவிர சுய மரியாதைக் கொள்கைகளையும் திட்டத்தையும் எல்லோரும் ஒப்புக் கொள் கின்றார்கள். சுயமரியாதை உணர்ச்சி தப்பிதமானது என்று சொல்லுகின்ற வர்கள் எவரும் இதுவரை நமது கொள்கைகளில் இன்ன இடத்தில் இன்ன பிசகு இருக்கிறது என்று சொல்ல யாரும் முன்வரவில்லை. அவர்கள் இவ்வளவு வேகம் கூடாது, சுமாராயிருக்க வேண்டுமென்கிறார்களே ஒழிய அடியோடு தப்பு என்று கூறுபவர்கள் கிடையாது. ஆனால், சில சுயநல வாதிகள் எலக்ஷன் சமயத்தில், ‘சுயமரியாதை இயக்கம் உலகத்தையே பாழ் படுத்தப்போகிறது,’ ‘நாஸ்திக பிரசாரம் செய்கின்றது’ என்று கூறி விஷமப் பிரசாரம் செய்கின்றனர். இதைப் பற்றி கண்ணியமாய் அபிப்பிராயப் பேதப்படுபவர்கட்கு நாம் சமாதானம் சொல்லலாம். மற்றவர்கட்கு நாம் நியாயம் சொல்ல வேண்டியதில்லை. அவர்களைச் சமாதானப்படுத்த முடி யாது. நாம் ஒற்றுமையுடனும், விடா முயற்சியுடனும் பாடுபடுவதுதான் அவர் கட்குத் தக்கபதில் ஆகும். சுயமரியாதை இயக்கமானது நம் நாட்டிற்கும் உலகத்திற்கும் புதிதல்ல. முக்கியமாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்





கிறவர்கட்கும் அடிமைப்படுத்தப் பட்டவர்கட்கும் தாழ்த்தப்பட்டவர்கட்கும் சுயமரியாதை இயக்கந் தவிர வேறு இயக்கம் கிடையாது. ஒவ்வொரு நாடும் சுயமரியாதைக் கிளர்ச்சினால்தான் முன்னுக்கு வந்திருக்கின்றன. சுயமரியாதை உணர்ச்சியே சமயம், சமூகம், ஆத்மார்த்தம், அரசியல், பொருளாதாரம் ஆகிய எல்லாத் துறைக்கும் மார்க்கமாகும். ஐரோப்பா தேசத்திலே, ஆத்மார்த்த சம்பந்தமாக அடிமைப்பட்டு அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்த மக்கள் மார்ட்டின் லூத்தர் போன்ற பெரியார்களின் சுயமரியாதைக் கிளர்ச்சியினால்தான் கண்விழித்து எழுந்து இப்போது உலகத்திலே தலைசிறந்து விளங்குகின்றனர். காட்டுமிராண்டிகளாக இருந்த அவர்கள் இப்போது முன்னேற்றப் போட்டியில் முன்னணியிலிருக்கின்றனர். அவர்கள் மத சம்பந்தமான மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்த பிறகே சயன்ஸ் முறைகளைக் கண்டுபிடித்து முன்னேறி வருகிறார்கள். நம் புரோகிதக் கொடுமையைவிட அவர்கள் புரோகிதர்களால் பட்ட கொடுமையும் பழக்கக் கட்டுகளுக்கு கட்டுப்பட்ட அடிமைத்தனமும் இப்போது பறந்து போய்விட்டன. அதுபோலவே ருஷியா முதலிய இடங்களில் பொருளாதார விஷயத்தில் சுயமரியாதை உணர்ச்சி உண்டானதினால்தான் அவர்கள் பொது உடைமை இயக்கம் தோற்றுவித்தனர். நமது அரசாங்கம் அவ்வியக்கத்தை (போல்ஸ்விக் மசோதா) நமது நாட்டில் பரவவிடாமல் செய்ய சட்டம் செய்ய முயலுகின்றார்கள். மேலும் துருக்கியில் சமுதாய சுயமரியாதை உணர்ச்சி உண்டானதினால் வெள்ளைக்காரர்கள்கூட பயப்படுகின்ற முறையில் அவர்கள் முன்னேறி வருகின்றார்கள். அயர்லாந்துக்காரர்களுக்கு அரசியல் சுயமரியாதை உணர்ச்சி உண்டான பிறகுதான் அவர்கள் விடுதலை பெற்றார்கள். ஜப்பான், சைனா முதலிய நாடுகள் முன்னுக்கு வந்திருக்கின்றன. சமுதாயம், அரசியல், பொருளாதாரம், ஆத்மார்த்தம், அறிவு ஆகிய எல்லாவிஷயத்திலும் நாம் சுயமரியாதை அற்று இருக்கின்றோம் என்பதில் சந்தேகமில்லை. பொருளாதார விஷயத்தில் சுயமரியாதை அற்றதன்மைக்கு நற்சாட்சி வேண்டுமானால் கூலிகள் வெளிநாடுகட்குச் செல்லுவதே போதும். அதாவது ஒவ்வொரு வாரமும் பதினாயிரக்கணக்கான நமது சகோதரர்கள் மோரிசு, நேட்டால், தென் ஆப்பிரிகா ஆகிய இடங்களுக்குப் பிள்ளைகுட்டி பெண்டுகளுடன் சென்று மானங்கெட்டுச் சாகிறார்கள். ஆத்மார்த்த விஷயத்தில் சுயமரியாதையற்ற தன்மைக்குச்சாட்சி வேண்டுமானால் மோக்ஷத்திற்கென்று பார்ப்பான் காலில் விழுந்து அவன் காலைக்கழுவின தண்ணீரைப் “பாத தீர்த்தம்” என்று பருகுவதினாலேயே விளங்கும். அரசியல் சுயமரியாதை அற்றத் தன்மைக்கு ஆதாரம் வேண்டுமானால், நமது அரசியல் பிரதிநிதிகளாக பார்ப்பனர்கள் இருந்து கொண்டு சில வயிற்றுப் பிழைப்புக் கூலிகள் நம்மை ஏமாற்றி வருவதே போதுமானது சமூக விஷயத்தில் நமக்குச் சுயமரியாதை இல்லை என்பதற்கு நாம் சூத்திரர்கள் என்றும், பஞ்சமர்கள் என்றும் அழைக்கப்படுவதும், கோயில், தெருவு, குளம், பள்ளிக்கூடம் ஆகிய இடங்களில் நமக்குச் சமவுரிமை இல்லாததே

RangaRakes tamilnavarasam.com

போதுமானதாகும். ஆகவே, நமக்கு எந்தத் துறையிலும் சுயமரியாதை இல்லை. ஆதலால் இவைகளில் சுயமரியாதை அடைய ஓர் இயக்கம் அவசியமா? இல்லையா? என நீங்களே யோசியுங்கள். சுயமரியாதை வேண்டும் என்ற அளவில் ஒருவருக்கும் சந்தேகம் இல்லை, அதை என்றும் எல்லோரும் விரும்புகின்றார்கள் என்பதும் எனக்கு தெரியும். அதனால்தான் எனக்கு எவ்வளவோ எதிர்ப்புகள் இருந்தும், இந்த இயக்கத்திலேயே பிராணனை விடவேண்டும். (கை தட்டுதல்) என்ற எண்ணத்துடன் தான் இடைவிடாமல் உழைக்க முன்வந்தேன். அதற்கு உங்களைப் போல பல வாலிபர்கள் உயிர்விடவும் தயாராயிருப்பதாகவும் எனக்கு நன்றாகத் தெரியும். என்னைவிட அவர்கட்கு நன்றாக இந்த உணர்ச்சி பிடித்துவிட்டது. ஆதலால் நான் வாலிபர்கட்கு இதைப் பற்றி ஒன்றும் அதிகமாகக் கூற வேண்டியதொன்றுமில்லை. ஒற்றுமையாக இருங்கள். பதட்டம் கூடாது, நமது எதிரிகள் மீது ஆத்திரப்படாதீர்கள்! என்றுதான் நான் சொல்ல வேண்டியவனாக இருக்கின்றேன். சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி பலர் பலவிதமாகச் சொன்னாலும், நாடார் குலத்திலேயே சில எதிர்ப்புகள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. எப்படி இருக்க முடியும்? என்பது எனக்கு விளங்கவில்லை. இன்றைய மகாநாட்டில் காலையில் நாடார் பிரமுகர்களும் மற்றவர்களும் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளையெல்லாம் தீர்மானமாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதாவது அறிவுக்கும் இயற்கைக்கும் நியாயத்திற்கும் ஒத்தவற்றைத்தான் ஒப்புக் கொள்ளுவது என்று தீர்மானித்திருக்கிறார்கள். நான் சொல்லுவதில் செய்வதில் ஏதாகிலும் ஒரு சிறிய விஷயமாவது அறிவிற்கும் இயற்கைக்கும் நியாயத்திற்கும் விரோதமாயிருக்கிறது என்று எடுத்துக் காட்டினால் நான் தூக்குப் போட்டுச் சாகத் தயாராயிருக்கிறேன். சுயமரியாதை இயக்கமானது அறிவு, ஆராய்ச்சி, இயற்கை, நியாயம் ஆகியவைகளையே அடிப்படையாகக் கொண்டது. எனவே, அறிவு, ஆராய்ச்சி இயற்கை தத்துவத்திற்கு இடம் கொடுத்தால் வேறு மூடபழக்கங்கட்கு தானாகவே இடம் இல்லாமல் போய்விடும். அடுத்தபடியாக நாடார் மகாநாட்டில் நமது நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் இடையூறாக இருக்கும்படியானதை நீக்க பெண்கட்கு ஆண்களைபோல் சமவுரிமை கொடுக்க வேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறார்கள். இது சுயமரியாதை இயக்கத்தின் ஜீவாதாரமான கொள்கையாகும். செங்கற்பட்டு மகாநாட்டுப் பெண்கள் சம்பந்தமான தீர்மானம் இதுதான். புருஷன் தாசி வீட்டுக்கு போவது குற்றமில்லையானால் ஸ்திரீகள் ஆசைநாயகன் வீட்டுக்குப் போவது குற்றமில்லை. புருஷன் பல பெண்களை மணந்தால் ஸ்தீரீகள் பல புருஷர்களை மணப்பது குற்றமில்லை என்பதுதான் சமவுரிமை என்பதில் அடங்கியது. எனவே நாடார் மகாநாட்டுத் தீர்மானங்கள் சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்கட்குச் சற்றும் இளைத்தவையல்ல வென்றே சொல்லுவேன். மற்றும் சுயமரியாதை இயக்கம் கடவுளை மதத்தைப் புராணங்களைப் பழக்க வழக்கங்களை குற்றம் சொல்லுகிறது என்று



சொல்லுகிறார்கள். ஆனால் அவைகளை எந்த அளவில் குற்றம் கூறுகிறது என்று யோசிக்க வேண்டும். யாராவது இன்றுவரை நான் கடவுளைப் பற்றியும், மதத்தைப் பற்றியும், புராணத்தைப்பற்றியும் எழுதி வருவதைப் பற்றியாவது பேசிவருவதைப் பற்றியாவது குறிப்பிட்டு எடுத்துக்காட்டி சமாதானம் சொல்ல முன்வந்திருக்கிறார்களா? அல்லது இனியாவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றேன். எனக்குத் தெரிந்தவரை யாரும் இதுவரை எடுத்துக்காட்டக் காணோம். கடவுள் இருக்கின்றது அல்லது இல்லை என்று வாதிடுவது அர்த்தமற்றதாகும். அன்றியும் அது சுலபமான விவகாரமல்ல. இருக்கிறது என்று நிரூபிப்பதைவிட இல்லை என்று நிரூபிப்பவர்களுக்கு கஷ்டம் அதிகம்.

சகோதரர்களே! இதுவரை நம்மைப் பற்றி குற்றம் கூறுகின்றவர்களை ஒன்று கேட்கின்றேன். அதாவது 'நான் கடவுள் இல்லை என்று சொல்லுவதாக நினைத்துக் கொண்டு கஷ்டப்படுகின்ற சிகாமணிகளே! கடவுள் என்றால் என்ன? நீங்கள் எதைக் கடவுள் என்கிறீர்கள்? அதற்கு நீங்கள் ஏற்படுத்திக் கொண்டு இருக்கும் குணமும், தன்மையும் என்ன? என்பதை முதலில் சொல்லுங்கள். பிறகுநான் அப்படிப்பட்ட கடவுள் உண்டா? இல்லையா? என்பதைப் பற்றியும், அதற்கும் உங்களுக்கும் உள்ள சம்பந்தம் என்ன? என்பதைப் பற்றியும், அதனால் உங்களுக்கு என்ன பயன் உண்டாகும் என்பதைப் பற்றியும் சொல்லுகிறேன்" என்பதுதான். சகோதரர்களே! என்னை நாஸ்திகன் என்று சொல்லுகின்ற சில "ஆஸ்திகக்" குடுக்கைகளைப் பற்றி எனக்கு நன்றாய்த் தெரியும். இவர்களில் கடவுளுக்கு அர்த்தம் சொன்ன ஒருவர் சமுத்திரந்தான் கடவுள், ஆறுதான் கடவுள், மலைதான் கடவுள், மரம் தான் கடவுள், புஷ்பம்தான் கடவுள், துளிகள்தான் கடவுள் என்று கூறுகிறார். அப்படியானால் நான் இந்த மாதிரிக் கடவுள் இல்லை என்று சொன்னால் மரம் வளராதா? மலை மண்ணாய் விடுமா? ஆறு மேடாய் விடுமா? புஷ்பம் வாசனை இருக்காதா? இந்தக் கடவுளைக் காப்பாற்ற வக்கீல் வேண்டுமா? ஆஸ்தீகச் சங்கம் வேண்டுமா? 63 நாயனார் அவதாரம் வேண்டுமா? என்று கேட்கின்றேன். சைவப் பெரியார் கூட்டத்திலுங்கூட மனித வாழ்க்கைக்கும் ஒழுக்கத்திற்கும் கடவுள் உணர்ச்சி வேண்டுவதுதான் என்று தீர்மானித்தார்களேயன்றி, கடவுள் உண்டு இல்லை என்று தீர்மானிக்க அவர்களுக்கு ஆதாரமும் தைரியமும் உண்டாகவில்லையே. ஒழுக்கத்திற்கு வேறு சாதனம் இருந்தால் கடவுள் உணர்ச்சி எதற்காக? என்றால் இவர்கள் என்ன பதில் சொல்லுவார்கள். பணம் திருடக் கூடாததற்கு கடவுள் பேரைச் சொல்லி ஒழுக்கம் உண்டாக்கி இருப்பதைவிட, போலீசுக்காரனை வைத்து இருப்பதாலும் திருடினவனைத் தண்டிப்பதாலும் திருட்டுக் குறைந்திருக்கின்றது என்பதை ஒப்புக் கொள்கின்றீர்களா? இல்லையா என்று கேட்கிறேன். நமது நாட்டில் ஒழுக்க ஈனத்திற்கு காரணம் அர்த்தமற்ற முறையில் கடவுளைக் கட்டிக் கொண்டழுவதுதான். உண்மைக் கடவுள் ஒழுக்கம் மற்ற ஜீவன்களை இம்சைபடுத்தக்கூடாது என்பதுதான் என்று உணர்வானானால் நாட்டில் ஒழுக்கமும் அன்பும் இரக்கமும் எவ்வளவு தாண்டவமாடுமென்பதை



RangaRakes tamilnavarasam.com

நினைத்துப் பாருங்கள். குழந்தைப் பருவத்தில் அக்குழந்தை தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியாத காலத்தில் பெற்றோர்கள் அதைக் காப்பாற்றுவதற்காக வெளியில் போகாமல் இருக்கச் செய்வதற்காக அதற்குச் சற்று பயம் கொடுக்க வேண்டி பூச்சாண்டி இருக்கிறது என்று சொல்வதுபோல் கடவுள் உணர்ச்சியும் வேண்டும் என்றால், நான் அடியோடு கூடாது என்று சொல்லப் போவதில்லை. ஆனால் அது 6 வயதாகிய பின் நாம் அதைப் பள்ளிக்கூடத்திற்குப் போகச் சொன்னால் அது பூச்சாண்டி பிடித்துக் கொள்ளுவான், நான் வெளியில் போகமாட்டேன் என்று சொல்லிக் கொண்டு அழுதால் நாம் என்ன சமாதானம் சொல்லுவோம்? தலையைப் பார்த்து இரண்டு குட்டு வைத்து கையைப் பிடித்து இழுத்து, பூச்சாண்டி இல்லை, ஒன்றும் இல்லை என்று சொல்லி வெளியில் தள்ளிவிட மாட்டோமா? என்பதை நினைத்துப் பாருங்கள். அதுபோலவே ஒரு காலத்தில் மக்களைப் பயப்படுத்த பொய் மிரட்டிலும் பயமும் ஏற்படுத்தப்பட்டது. மக்கள் அறிவு வளர்ச்சி பெற்றபின் கடவுள் பயத்தை நீக்கி உண்மையும் ஒழுக்கமும் ஆகிய தத்துவங்களைச் சொல்லிக்காட்ட வேண்டாமா? என்று கேட்கிறேன். அன்றியும்கடவுள் பக்தியும், கடவுள் தன்மை அறிந்த ஞானமும் இருப்பதாகச் சொல்லிக்கொண்டு திரியும் ஆயிரத்தில் ஒருவன்கூட யோக்கியனாகவும், ஒழுக்க முள்ளவனாகவும் இருப்பதை நான் பார்க்கவேயில்லை. உதாரணமாக மடாதிபதிகளையும், ஆஸ்தீக பிரசாரகர்களையும், சைவப் பண்டிதர்களையும், வைணவ பாகவதர்களையும் சற்று ஞாபகப்படுத்திப் பாருங்கள். அவர்களிடம் இதுவரை கடவுள் பெயரால் கணக்கற்ற ஒழுக்கவீனங்கள் இருப்பது கண்கூடு. ஒவ்வொரு துறைகளிலும் அவர்களது கூடா ஒழுக்கம் சொல்லித் தீராது என்று சொல்ல வேண்டி இருக்கிறது. தவிர எது செய்தாலும் கடவுள் செயல் என நினைப்பதினால் ஒருவனுடைய சொந்த முயற்சி குன்றி சோம்பேறியாவதற்கு இடமுண்டாய்விடுகின்றது. தன் முயற்சி உடைய உலகம் தான் முன்னேற்றமடையும். முயற்சி இல்லாத காரணத்தினாலேயே நம் தேசம் இந்நிலையிலிருக்கிறது.

குறிப்பாக நமது நாடு மிகவும் கேவல நிலையிலிருக்கின்றது. பொறுப்பற்ற வீணர்கள் வீண் வார்த்தையாடவே சுயமரியாதை இயக்கத்தை தூஷிக்கின்றனரே அன்றி நாட்டின் முன்னேற்றத்திற்கோ அறிவின் முன்னேற்றத்திற்கோ ஒழுக்கத்தின் முன்னேற்றத்திற்கோ இதுவரை ஒரு சிறு காரியமும் செய்தவர்களல்லர். ஒரு சிறு தியாகமும் செய்தவர்களல்லர், தவிர பூசைக்காகக் கடவுளுக்கு காசு செலவு செய்யாதவர்கள் எல்லாம் நாஸ்திகர் என்று சிலரால் சொல்லப்படுகின்றது. அப்படியானால் மகமதியர்கள் எல்லாம் நாஸ்திகர்களா? அவர்களைக் கடவுள் காப்பாற்றவில்லையா? கடவுளுக்குக் காசு செலவு செய்யும் பூசை எதற்கு? அதற்கு வயிறு, பெண்டு, பிள்ளை, கல்யாணம், சாந்திமுகூர்த்தம் முதலியவைகள் உண்டா? அவசியமா? அவசியம் என்பீர்களானால் அப்படிப்பட்ட சாமி நமக்கு கண்டிப்பாக வேண்டாமென்பதோடு அப்படிப்பட்ட சாமி இருக்க முடியாது என்றும்



இருந்தாலும் நாம் அதைக் காப்பாற்ற முடியாது என்றுமே சொல்லுகின்றோம். ஏனெனில், இப்படிப்பட்ட தேவையும் சுயநலமும் உள்ள சாமிகள் நமக்கு என்ன நன்மைகளைச் செய்துவிட முடியும்? இவ்வளவு பணச்செலவில் பூசையும் உற்சவமும் பெற்ற கடவுள்கள் இதுவரை நமது மக்களில் 100-க்கு 6 பேரைக்கூட படிக்கவைக்கவில்லையே. கிறிஸ்துவர்களும் வெள்ளைக் காரர்களும் கடவுள் பூசைக்கு தேங்காய் பழம் உற்சவம் செய்யாமல் எவ்வளவு தர்மம் செய்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா?

நமது நாட்டில் உள்ள பிரசவ ஆஸ்பத்திரியும் க்ஷயரோக ஆஸ்பத் திரியும், குஷ்டரோக ஆஸ்பத்திரியும், கண் ஆஸ்பத்திரியும், கைத்தொழில் பள்ளிக்கூடமும், சர்வகலாசாலையும், அநாதை ஆஸ்ரமமும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சாப்பாடு, கல்வி, கைத்தொழிற் கற்பிக்கும் ஆஸ்ரமங்களும் இவை போன்ற சிறந்த வகைகளெல்லாம் அவர்களுடையவையாகவே இருக்கின்றன. நாம் அவர்களை வைது கொண்டும், பழித்துக் கொண்டும் அவற்றின் பலன்களை மாத்திரம் அனுபவித்துக் கொண்டே வருகின்றோம் ஆனால், நாம் அதைவிட அதிகமான பொருள்களைச் சாமி பூசைக்குச் செலவழித்துவிட்டு அந்தச் சாமிகளால் ஒரு பலனும் அடையாமல் நாமும் மூடர்களாயிருக்கின்றோம். அந்தச் சாமிகளும் கல்லுபோல் அசையாமல் அதே இடத்தில் இருந்துகொண்டு ஒரு நற்பலனும் உண்டாக்காமல் இருக்கிறது. தவிர, நாம் புராணங்களையும் மத ஆதாரங்களையும் குற்றம் சொல்லுகின்றோமாம்.

நாம் மனிதனின் ஒழுக்கத்திற்கும், முன்னேற்றத்திற்கும் அறிவுப் பொருத்தத்திற்கும் உதவி செய்யக் கூடிய எந்தப் புராணங்களையும் வேண்டாமென்று சொல்லவில்லை.

நமது நாட்டையும், அறிவு வளர்ச்சியையும், ஒழுக்கத்தையும் பாழ்படுத்தியது நமது புராணங்களும், அவற்றைப் பிரசங்கம் செய்வதையும் அச்சுப் போட்டு விற்பதையும் வயிற்றுப் பிழைப்பாகக் கொண்ட பண்டிதர்களும் புஸ்தகக் கடைக்காரர்களுமே ஆவார்கள்.

*குறிப்பு: 30.04.1929 பிறையாற்றில் (பொறையாற்றில்) நடைபெற்ற நாடார் வாலிபர்களின் 3 –ஆவது மாநாடு தலைமையுரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 12.05.1929**



RangaRakes
tamilnavarasam.com

# திருவாங்கூரில் S.N.D.P யோகம்

## சுயமரியாதை மகாநாடு ஆலயப்பிரவேச மகாநாடு சுயமரியாதை கொள்கைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன

இப்போது உங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் தீண்டாமை என்பது ஆகாயத்திலிருந்தோ மக்கள் பிறக்கும்பொழுது தாய் வயிற்றிலிருந்தோ உண்டாய்விடவில்லை. மதத்தினாலும், கடவுளினாலும், கோவிலினாலும் வேத புராணங்களினாலுமே உண்டாயிற்று. தீண்டாமை ஒழிய வேண்டுமானால் அதை வலியுறுத்தும் மதங்களும் கடவுள்களும், கோவில்களும் அவற்றிற்கு ஆதாரமான வேத சாஸ்திர புராணங்களும் அடியோடு ஒழிந்தாக வேண்டும். இவைகளில் ஒரு சிறிது மீதி இருந்தாலும் மறுபடியும் அது வளர்ந்துவிடும். இதுவரையில் தீண்டாமையை ஒழிக்கப் பிரயத்தனப் பட்டவர்கள் யாரும் தீண்டாமைக்கு அஸ்திவாரமான காரியத்தை அறியாமலும், சிலர் அதைப் பற்றி அறிந்தும் கவலை கொள்ளாமலும், சிலர் வேண்டுமென்றே தெரிந்து மறைத்துவைத்தும் மக்களையும் ஏமாறச் செய்துவிட்டுப் போய் விட்டார்கள், இப்பொழுதும் சில போலித் தீண்டாமை விலக்கு பிரசாரக்காரர்கள் அதை வலியுறுத்தும் மதத்தையும் கோவிலையும் சாமிகளையும் அது சம்பந்தமான ஆதார புராணங்களையும் வைத்துக் கொண்டே தீண்டாமை ஒழிய வேண்டும் என்று உங்களை ஏமாற்றுகின்றார்கள். உதாரணமாக பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கின்ற பெயர் கொண்ட வர்ணாச்சிரமத்தை அடிப்படையாகக் கொண்ட இந்து மதம் வேதம் மனுதர்ம சாஸ்திரம் என்பவைகள் உள்ள வரையிலும், தீண்டாமை ஒழியாது.

சூத்திரன் கடவுளை வணங்கியதற்காக பிராமணன் குழந்தை செத்துப் போனதாகவும், கடவுள் அவதாரமாகிய ராமன் என்பவன் அந்த சூத்திரனைக் கொன்ற பின் அந்தப் பிராமணக் குழந்தை உயிர் பெற்றெழுந்ததாகவும் சொல்லும் இராமாயணமும் இராமன் என்னும் கடவுளும் உள்ளவரையிலும் தீண்டாமை ஒழியாது,

அது போலவே 'பறையன்' என்னும் நந்தன் நெருப்பில் விழுந்த பிறகுதான் கடவுள் தரிசனை கிடைத்தது என்கின்ற பெரியபுராணமும் அதிலுள்ள கடவுள்களும் உள்ளவரையிலும் தீண்டாமை ஒழியாது!



ஜீவகாருண்யமும் அன்பும் ஒழுக்கமுமே பிரதானம் என்று சொன்ன பௌத்தரையும் சமணர்களையும் நாஸ்திகர்கள் என்னும் ஜீவ இம்சையும் இரக்கமற்ற தன்மையும் ஒழுக்கங்கெட்ட நிலைமையும் கொண்டுள்ளவர்களை பெரியோர்கள் சமயாச்சாரிகள், ஆழ்வார்கள் என்று கொண்டாடும் புராணங்களும் சமயங்களும் உள்ளவரையிலும் தீண்டாமை ஒழிந்து, ஒழுக்கமும் அன்பும் மக்களுக்குள் ஏற்படாது.

உண்மையிலேயே கஷ்டப்படும் மக்களாகிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இப்போதிருக்கும் "நரகத்தை"விட இனி வேறு நரகம் இல்லை. ஆதலால் இந்த நரகத்திலிருந்து மீள வேண்டும் என்கின்ற ஆசை உங்களுக்கு இருக்குமானால் நீங்கள் கட்டாயம் உங்கள் மீட்சிக்கு விரோதமாய் இன்றும் உங்கள் முன் தோன்றும் மதத்தையும் அதன் ஆதாரங்களையும் அடியோடு வெறுத்துத்தள்ள வேண்டுமென்றும், சில மதப் புரட்டர்களும், அதனால் வயிறு வளர்ப்பவர்களும், அவர்களால் அமர்த்தப்பட்ட கூலிகளும் உங்களிடம் வந்து "மதத்தின் தத்துவம் அதுவல்ல" வென்றும் "புராணத்தின் கருத்து இதுவல்ல" வென்றும் அது 'இடைச்செருகல்' 'உட்கிடக்கை வேறு' 'அதற்கு அகச்சான்று இல்லை' 'இதற்கு புறச்சான்று இல்லை' 'என் வருணாசிரமம் வேறு' 'என் இராமன் வேறு' 'என் கிருஷ்ணன் வேறு' என்றும் பேசி உங்களை மயக்கி ஏமாற்ற வருவார்கள் என்றும் அதை நீங்கள் கண்டிப்பாய் நம்பக் கூடாதென்றும் சொல்லிவந்து, உதாரணமாக சூத்திரன் கடவுளை ஸ்மரித்ததற்காக ராமன் அவனை கொன்றது என்கின்ற விஷயம் மத்தியில் பார்ப்பனர்களால் சேர்க்கப்பட்ட கதை என்று சொல்லி உங்களை சிலர் ஏமாற்றுவார்கள். ஆனால் அவர்களை நீங்கள் ஒரே ஒரு கேள்வி கேளுங்கள், அதாவது "சம்பூகனைக் கொன்ற இராமா! என்னைக் காப்பாற்று" என்று ஆழ்வார்கள் பாடின பாட்டு நாலாயிர பிரபந்தத்தில் இருக்கின்றதே அதற்கு என்ன சொல்லுகின்றீர்கள்? என்றும், அந்த ஆழ்வாரையும், பிரபந்தத்தையும் என்ன செய்யப் போகிறீர்கள்? என்றும், அந்த ஆழ்வார் புரட்டாழ்வாரா? அல்லது அந்த பிரபந்தம் புரட்டா என்றும் தைரியமாக கேளுங்கள்! அதோடு புத்தர் கடவுள் உண்டு என்று சொன்னார் என்றும், புத்தர் கடவுளைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை என்றும் சொல்லுபவர்கள் நாஸ்திகர்கள் என்றும் சில தற்குறிகள் உங்களிடம் பேசி விட்டுப் பார்ப்பனர்களிடம் கூலி பெறுகிறார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்களை நீங்கள் ஒன்று கேளுங்கள். அதாவது புத்தர் நாஸ்திகர், கடவுள் இல்லை என்று சொன்ன பாதகர் என்று சொல்லி இருக்கும், இராமன் முதலிய கடவுள்களும், சமயாச்சாரிகளும், நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும் ஆராய்ச்சி அற்றவர்களா அல்லது பொய்யர்களா அல்லது அயோக்கியர்களா? அல்லது அவர்களின் அவ்வித இராமாயணம், பாரதம், தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம் முதலிய 'வணங்கத் தகுந்த' புஸ்தகங்கள் பொய்யா? அல்லது இடைச்செருகலா?அல்லது அகச்சான்று புறச்சான்றுகள் அற்றவையா? அல்லது நீவிரும் நும் குழாங்களும்..........ளா என்று கேளுங்கள்.



RangaRakes tamilnavarasam.com

கடைசியாக உங்களை யார் நாஸ்திகர் என்றாலும் பயப்படாதீர்கள் "ஆஸ்திகர்"களைப் போல் கூலிக்காக நாம் நாஸ்தீக பிரசாரம் செய்யவில்லை என்றும், நாஸ்தீகர் என்றால் வேத சாஸ்திர புராணங்களின் புரட்டுகளை வெளிப்படுத்துவதைத் தவிர வேறில்லை. ஆதலால் நானும் நீங்களும் மற்றும் சுயமரியாதையையும், சமத்துவத்தையும் விடுதலையையும் வேண்டும் ஒவ்வொருவரும் கண்டிப்பாய் நாஸ்திகர்களே ஆகவேண்டும். அதில்லாமல் வேறுவழியில்லை. யாராவது வந்து உங்களிடம் நாஸ்திகம் என்றால் கடவுள் இல்லை என்று சொல்வதாகும் என்று சொல்லவந்தால் அதற்கும் நீங்கள் பயந்து ஏமாந்து போகாமல் தைரியமாக அவர்களை ஒன்று கேட்க வேண்டும். அதாவது கடவுள் என்றால் என்ன? நீ எதைக் கடவுள் என்று நினைத்துக் கொண்டு பேசுகின்றாய் என்று முதலில் கேட்க வேண்டும். இந்தக் கேள்வி கேட்டால் முதலில் எவனும் விழிப்பான். ஒருவன் சக்தி என்பான்; ஒருவன் ஜோதி என்பான்; ஒருவன் அருள் என்பான்; ஒருவன் அன்பு என்பான்; ஒருவன் அறிவு என்பான்; ஒருவன் உயிர் என்பான்; ஒருவன் ஆன்மா என்பான்; ஒருவன் சித்து என்பான்; ஒருவன் சத்து என்பான்; ஒருவன் சைதன்னியமென்பான்; ஒருவன் பதி என்பான்; ஒருவன் அழகு என்பான்; ஒருவன் இன்பம் என்பான்; ஒருவன் சைபர் என்பான், ஒருவன் நாமரூப குணம் இல்லாதது என்பான், ஒருவன் அது உன் மனதுக்கும் அறிவுக்கும் எட்டாதது என்பான், கடைசியாக சர்வசக்தியும் சர்வ வியாபகமும் சர்வ தயாபரத்துவமும் அவனன்றி ஒரு அணுவும் அசையாத அதிகாரமும் பெற்ற ஒரு வஸ்து என்பான்;

இப்படியாக ஊமையன் கனாக்கண்டு சொல்வது போல் அவனுக்கும் புரியாமல் நமக்கும் தெரிய மார்க்கமில்லாமல் உளறிக்கொட்டுவான். கடைசியாக இந்த பயித்தியக்காரனுடன் இவ்வளவு நேரம் ஏன் பேசினோம்? நேரம் வீணாகப் போயிற்றே என்று தான் உங்களுக்குத் தோன்றும். ஆனாலும் சோர்வடைந்துவிடாமல் அப்பேர்ப்பட்ட கடவுளை பரப்ப உன்னை அனுப்பினது யார்? நீ நினைத்துக் கொண்டிருக்கும் கடவுளா? அல்லது நீயாகவே வந்தாயா? என்று கேளுங்கள், அவன் கடவுள் அனுப்பித்தான் வந்தேன் என்றால், அந்தக் கடவுள் இது தன்னால் ஆகாத காரியம் என்று கருதி உனக்கு வக்காலத்துக் கொடுத்து எம்மிடம் அனுப்பினாரா? என்று கேளுங்கள்! அல்லது "நானாகவே வந்தேன்" என்றால் அப்பொழுது உனக்கு கடவுள் மீது நம்பிக்கை இல்லையா அவர் தன்னை எல்லோரும் அறியும்படி செய்து கொள்ளமாட்டாரா? அன்றியும் கடவுள் திருவுளம் இல்லாமல் ஒருவன் கடவுளை இல்லை என்று சொல்லிவிடமுடியுமா? என்று கேட்பதோடு "பைத்தியக்காரா! உனக்குக் கடவுளைப் பற்றி இப்போதுதான் அ.ஆ தெரியும், எங்களுக்குக் கடவுளைப் பற்றி நாங்கள் என்று தீண்டாதவர்கள் என்று சொல்லப்பட்டோமோ அன்று முதலே தெரியும், ஆதலால் வேறு எங்காவது போய் உன் வயிற்று பிழைப்புக்கு இடம் பார்த்துக் கொள்" என்று மரியாதையாய்ச் சொல்லி அனுப்பிவிடுங்கள் என்றும்



சொன்னதோடு நாஸ்தீகம் என்கின்ற பழிப்புக்கு பயந்து கொண்டோ கலைகள் ஓவியம் என்கின்ற பித்தலாட்டங்களுக்கு பயந்து கொண்டோ தீண்டாமை கடவுள் செயல் என்பதாக முட்டாள்தனமாக கடவுளை நம்பிக்கொண்டோ நீங்கள் உங்கள் சுயமரியாதை முயற்சியில் அதாவது உங்கள்மீது கடவுள் பேராலும் மதத்தின் பேராலும், வேத சாஸ்திர புராணங்கள் பேராலும் - சுமத்தப்பட்டுள்ள தீண்டாமை என்னும் இழிவிலிருந்து விடுதலை பெற ஒரு நிமிஷமும் தயங்காதீர்கள், கடவுள் அல்ல, மதம் அல்ல, வேத சாஸ்திர புராணமல்ல; சமயச்சாரியார்; நாயன்மார்கள்; ஆழ்வார்கள் அவதாரங்கள் அல்ல, மற்றும் உங்கள் உயிர்கள் அல்ல எதுவானாலும் சரி, அவைகளையெல்லாம்விட சுயமரியாதையே பிரதானம் என்று எண்ணினீர்களானால் கண்டிப்பாய் வெற்றி பெறுவீர்கள்; அதில்லாதவரை இப்படியே இருப்பீர்கள்.

*குறிப்பு : 08.05.1929 திருவாங்கூரில் நடைபெற்ற சுயமரியாதை - ஆலயப்பிரவேச மாநாடு - சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 12.05.1929**



RangaRakes
tamilnavarasam.com

# மலையாளமும் மாளவியாவும்

தென்னாட்டு பார்ப்பனர்கள் அரசியலிலாவது மத இயலிலாவது சமுதாய இயலிலாவது தங்களுடைய புரட்டுகள் எல்லாம் வெளியாய் விடுவதின் மூலம் செலவழிந்துவிட்டால் வடநாட்டிலிருந்து யாராவது ஒருவரைக் கொண்டு வந்து பித்தலாட்டப் பிரசாரம் செய்வது வழக்கம். அது மாத்திரமல்லாமல் தாங்களாக தனித்து வெளியில் புறப்பட்டு பிரசாரம் செய்ய முடியாத பட்சத்திலும் வெளிநாட்டிலிருந்து யாரையாவது பிடித்து வந்து அவர்கள் மதிப்பின் மறைவில் மேடை மேலேறிப் பேச இடம் சம்பாதித்துக் கொள்வதும் வழக்கம். இதுவும் சமீபகாலம்வரை பாமர மக்கள் முழு மோசமாயிருந்த காலம் வரையில்தான் செல்லாய்க் கொண்டு வந்தது. இப்போது அடியோடு இவர்கள் யோக்கியதை வெளியாய் விட்டதால் சிறிது கூட செலாவணி ஆவதற்கில்லாமல் செல்லுமிடங்களிலெல்லாம் சாயம் வெளுத்துப் போய் உண்மை நிறம் வெளியாய்க் கொண்டு வருகின்றது. அதாவது சென்ற வருஷத்திற்கு முன் திரு.காந்தியைக் கூட்டிக் கொண்டு வந்து அவரைத் தங்களிஷ்டப்படி ஆட்டி வைத்து ஊர் ஊராய் திரிந்ததில் இவர்கள் சாயம் வெளுத்ததல்லாமல் அவர் சாயமும் வெளுத்து "என் ராமன் வேறே; என் வருணாச்சிரமம் வேறே" என்று சொல்லி கொண்டு தப்பித்துப் போகப் பட்டபாடு வெகு பாடாய்ப் போய்விட்டதும்; பிறகு திரு பஜாஜ் அவர்களை தருவித்து அவர்களுடன் திரிந்ததில் உள்ள யோக்கியதையும் போய் அவர் தலையில் கைவைத்துக் கொண்டு திரும்பியதும் திருவாளர்கள் சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ராஜகோபாலாச்சாரியார் முதலியவர்கள் தாங்கள் தனித்து போக முடியாமல் திருவாளர்கள் வரதராஜுலு, கல்யாண சுந்தரம், முத்துரங்கம், ஓ.கந்தசாமி, பாவலர், ஜயவேலு, ஷாபிமுகமது, பஷீர் அகம்மது முதலிய நபர்களை கூட்டிக் கொண்டு வெளியில் போவதும், அங்கும் இப்போது எந்த ஊருக்கு போனாலும் எவ்வளவு பயந்து ஒடுங்கி அடக்கமாகப் பேசினாலும் இவர்களைப் பேசவொட்டாமல் திருப்பி அனுப்பிக்கப்படுவதும் பார்ப்பனப் பத்திரிகைகளும் அவர்களது கூலிப் பத்திரிகைகளும் எவ்வளவுதான் மறைத்தாலும் தாராளமாய் வெளிப்பட்டுக் கொண்டு வருகின்றது. இந்த இரண்டு மூன்று வாரமாய் திரு.சீனிவாசய்யங்கார் கம்பெனி செல்லுமிடங்கள் பலவற்றில் கூட்டம்போட முடியாமல் திரும்புவதும், கூட்டம் கலைக்கப்பட்டு வருவதும் அவர் கூடச் செல்பவர்களுக்கு நடக்கும் மரியாதைகளும் சேலம், திருச்சி, கோயமுத்தூர் முதலிய ஊர்களில் நடந்த சம்பவங்களே போதுமானது. இவ்வளவும் போதாமல் இந்த வருஷத்திற்கு திரு பண்டிட் மாளவியா அவர்களைத் தருவித்து கடவுளுக்கும் கோயிலுக்கும் மதத்திற்கும் ராமாயணத்திற்கும் ஆபத்து வந்துவிட்டதென்று சொல்லி பிரசாரம் செய்யச் செய்ததில் அவர் சென்றவிடங்களிலெல்லாம் சரமாரியாகக் கேள்விகள் கேட்டுத் திணற வைத்து கடைசியாகக் கூட்டம் கலைந்து வீட்டுக்குத் திரும்பும் படியாகி விட்டது. பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் பண்டிதரைப் பிடித்து அவர் தலையில் வருணாசிரமத்தையும் கோவிலையும் மதத்தையும் இராமனையும் இராமாயணத்தையும் தூக்கி வைத்து எவ்வளவோ விளம்பரம் செய்தும் ஒரு காசுக்குக் கூட விற்க முடியாமல் போனதோடு திரு.மாளவியாவுக்கு கொஞ்ச நஞ்சம் இருந்த யோக்கியதையும் அடியோடு கவிழ்ந்து விட்டதென்றே சொல்லலாம்.

உதாரணமாக கோட்டயத்தில் நடந்த கோவில்பிரவேச மகாநாட்டில் தலைமைவகித்து பேசிய விவரமும் அங்கு நடந்த விவரமும் அடுத்த பக்கத்தில் தெரியலாம். ஆனால் அந்த விஷயங்களைப் பார்ப்பனப் பத்திரிகைகள் எவ்வளவோ மறைத்தும் சிறிதாவது வெளியாக வேண்டியதாய் விட்டது.

அதாவது 11 - உ இந்து பத்திரிகை வேண்டுமென்றே அயோக்கியத் தனமாய் அடியோடு மறைத்துவிட்டு "உணர்ச்சியுள்ள வாதங்கள் நடந்தன" என்று மாத்திரம் எழுதி இருக்கிறது.

10 - உ "சுயராஜ்ஜியா"வில் "மாளவியாஜி பேசும்போது ஜாதி இருக்க வேண்டும் என்று சொன்னவுடன் கூட்டத்தார் பலமாக ஆக்ஷேபணை செய்தார்கள். சரமாரியான கேள்விகள் பல பக்கங்களிலிருந்து புறப்பட்டன" என்றும் "கூட்டத்தில் கூச்சலும் குழப்பமும் கலகமும் பரபரப்பும் உண்டாயிற்று" என்றும் எழுதி பலர் மேடைக்கு வந்து கண்டித்துப் பேசியதையும் எழுதி இருக்கின்றது.

12-ந் தேதி "மித்திர"னில் திரு.மாளவியா பேசின கான்பரன்சில் திரு.மாளவியாவை கண்டித்து ஒரு தீர்மானம் செய்திருப்பதாகவும் பிரீ பிரசின் பேரால் போடப்பட்டிருக்கிறது. ஆனால் கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும் இன்னவையென்று ஒரு பத்திரிகையாவது எழுதவில்லை என்றாலும் திரு.மாளவியா அவர் பிறந்தது முதல் இதுவரை இதுபோல் ஒரு கஷ்டத்தையும் அவமானத்தையும் அடைந்திருக்கமாட்டார் என்றே சொல்லலாம். திரு.மாளவியா ஜாதிகள் இருக்க வேண்டியது அவசியம். எனக்கு சாஸ்திரம் தெரியும் என்று சொன்னவுடன் ஒருவர் எழுந்து ஒரு கிருஸ்தவனையோ முகமதியனையோ இந்துவாக்கினால் அவனை எந்த ஜாதியில் சேர்ப்பது என்று கேட்டவுடன் மாளவியாஜி அதற்கு சாஸ்திரம் பார்த்துதான் சொல்ல வேண்டுமென்று தலைகுனிந்து சொன்னதானது அவரைத் தருவித்தவர் கண்களில் ஜலம் ததும்பும்படி செய்தது.



RangaRakes tamilnavarasam.com

மறுபடியும் ஒரு கேள்விக்கு அதாவது உமது இந்து யுனிவர்சிட்டி காலேஜில் ஈழவர்களை சேர்த்துக் கொள்ளுவீர்களா என்று கேட்டதற்கு மாளவியாஜீ "நீங்கள் புலையர்களைச் சேர்த்து கொள்ளுவீர்களா?" என்று கேட்டதும் கூட்டமே ஆம் சேர்த்துக் கொள்வோம் என்று சொன்னதும், மாளவியாஜியை மூர்ச்சையடையச் செய்துவிட்டது. எனவே மாளவியா நல்ல பாடம் கற்றுக் கொண்டார் என்று சொல்லத்தான் வேண்டும். இதற்கு நேர் எதிரியாகச் சுயமரியாதை கொள்கைகள் அங்கு தாண்டவமாடியதும், அவைகள் ஒரே அடியாய் ஒப்புக் கொள்ளப்பட்டதும், அப்போது ஏற்பட்ட உற்சாகமும் அங்கு சமீபத்தில் இருந்து பார்த்தவர்கள்தான் அறியக்கூடும்.

**குடி அரசு - தலையங்கம் - 12.05.1929**



RangaRakes

# வாழ்க! வாழ்க!! டாக்டர் சுப்பராயன் வாழ்க!!!

முதல் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் நாம் எதிர்பார்த்தது போலவே தமது ஆதிக்கத்தில் உள்ள இலாக்காக்கள் மூலம் நமது பெண்மணிகளுக்கு மூன்றாவது பாரம் வரையில் இலவசமாய்க் கல்வி கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்து இருக்கிறார் என்ற செய்தியைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சி அடைந்து போற்றுவதுடன் மனமார வாழ்த்துகின்றோம். மற்றும் தீண்டாதவர்கள் என்பவர்களுக்கும் விதவைகள் என்பவர்களுக்கும் கல்வி விஷயத்தில் ஏதாவது உதவி செய்வதுடன் பெண்கள் உபாத்தியாயர் களாவதற்குத் தகுந்தபடி ஏராளமான போதனாமுறைப் பாடசாலைகளையும் ஏற்பாடு செய்யவேண்டுமாய் விழைகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 12.05.1929**



tamilnavarasam.com

# கேரளத்தில் சுயமரியாதைப் பிரசாரம்

சகோதரர்களே!

இங்கு கூடியிருக்கும் உங்களில் பெரும்பாலோர் எனக்குப் பழைய நண்பர்களாகவே காணப்படுகின்றீர்கள். வியாபார முறையில் இந்த ஊர் சுமார் 30 வருஷத்திய பழக்கமும் அதிகமான பரஸ்பர விஸ்வாசமும் உள்ள ஊராகும். நான் வியாபாரம் நிறுத்திய இந்த 10 வருஷ காலத்திற்குள்ளும் இந்த ஊருக்கு பல தடவை வந்து பல விஷயங்களைப் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கின்றேன். ஒத்துழையாமை பற்றியும் தீண்டாமை விலக்கு விஷயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை தெருவில் நடக்க விட வேண்டும் என்பது பற்றியும் இதே இடத்தில் பலதடவை பேசியிருப்பது உங்களுக்கு ஞாபகமிருக்கும். சுமார் இரண்டு வருஷத்திற்குள்ளாக இந்த ஊரில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. கல்பாத்தியில் பார்ப்பனர்கள் குடி இருக்கும் வீதிகளில் ஈழவர்கள் தீயர்கள் என்று சொல்லப்பட்ட சகோதரர்கள் நடக்க பாத்தியம் ஏற்பட்டிருப்பதும் கடைவீதியில் செரமாக்கள் என்னும் மக்கள் நடக்கவிடப்பட்டிருப்பதும் ஒரு பெரிய மாறுதல் என்று சொல்லக் கூடுமானாலும் இன்னமும் அநேகக் காரியங்கள் செய்யப்பட வேண்டியிருக்கின்றன. சில இடங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பார் என்று சொல்லப்படுபவர்களே அத்தெரு வழிகளில் நடக்க சம்மதிப்பதில்லை என்று சொல்லப்படுகின்றது. ஏன் என்றால் அவர்கள் நடக்க பயப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. அவர்களுக்கு தைரியமூட்டி பயத்தை தெளிவிக்கச் செய்ய வேண்டிய பொறுப்பு நம்முடையதென்பதை நாம் உணருவதில்லை.

இன்று நான் பேசுவதற்கு குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயம் தற்கால தேசீய நிலைமை என்பதாகும். தேசீய நிலைமை என்பதற்கு நமது தேசத்தினுடையவும் தேச மக்களுடையவும் நிலைமையைப் பற்றியும் அக்கம் பக்கமுள்ள தேசங்களின் நிலைமைக்கும் நமது தேசத்தின் நிலைமைக்கும் என்ன வித்தியாசம் என்பது பற்றியும் அதற்கு காரணங்கள் என்ன என்பது பற்றியுமே நான் பேச வேண்டும் என்று நீங்கள் கருதுவதாக நான் நினைக்கின்றேன். சகோதரர்களே! ஒவ்வொரு நாடும் இது சமயம் தனது பழைய நிலைமையில் இருந்து விடுபட்டு புதிய முறையில் முன்னேற வேண்டும் என்கின்ற ஆசை கொண்டு அதிலேயே ஈடுபட்டிருக்கின்றன. இவ்வழியில் சில நாடுகள் கொஞ்ச நாளைக்கு முன்பே இறங்கி வெற்றி பெற்று



பழமையைச் சற்றும் லக்ஷியம் செய்யாமலும் வெறுத்தும் அழித்தும் புதுமைகளில் இறங்கி எவ்வளவோ முற்போக்கடைந்துவிட்டன. சில நாடுகள் பழமையை அழிக்கும் வேலையில் இப்போதுதான் இறங்கி அதிலேயே வெகு கஷ்டத்துடன் ஈடுபட்டு வேலை செய்வதன் மூலம் வெற்றியடைந்தும் வருகின்றன. ஆனால் நமது நாடோ பழமையிலிருந்து ஒரு சிறிது கூட மாற்றமடையக்கூடாது என்னும் குரங்கு பிடிவாதத்தில் இறங்கி பழமையைக் காப்பாற்றப் பாடுபடுவதோடு அதற்கும் முந்தின பழமையை கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் இறங்கி வெகு தீவிரமாய் வேலை செய்கின்றது. இந்த உபயோகமற்றதும் பிற்போக்கானதுமான காரியத்திற்குச் சிலர் நமது மக்கள் முன் பெரிதும் பொருளற்ற விதத்தில் மதத்தையும் கடவுளையும் கொண்டு வந்து போட்டுக் கொண்டு வெகு பாடுபட்டு குழப்பி வருகின்றார்கள் இவர்கள். பாமர மக்கள் முன்னிலையில் "மதத்திற்காக எதையும் - தியாகம் செய்வேன் உயிரையும் விடுவேன்" என்று வெறும் ஆவேசப் பேச்சு பேசுவதன் மூலமே மக்களின் அறிவைக் கெடுத்து நாட்டின் முற்போக்கை நாசப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கின்றார்கள். "கடவுளுக்கு ஆபத்து வந்துவிட்டது. ஆஸ்தீக மகாநாடு கூட்டுங்கள்" என்பவர்களும் "தர்மங்களுக்கு ஆபத்து வந்து விட்டது கூட்டுங்கள் வருணாசிரம மகாநாடு" என்பவர்களும் "புராணங்களுக்கும் இதிகாசங்களுக்கும் ஆபத்து வந்துவிட்டது, கூட்டுங்கள் சமய மகாநாடு" என்பவர்களும் இப்போது மிகுதியும் மலிந்து விட்டார்கள். இந்தப்படியே அடிக்கடி மகாநாடுகள் கூட்டித் தீர்மானங்கள் செய்து கொண்டுமிருக்கிறார்கள். நாட்டின் நிலையைப் பற்றிய கவலையில்லாத சோம்பேறிகளினுடையவும் சுயநல பண்டிதர்களுடையவும் தொழில் இதுவென்றால் ஆங்கிலம் படித்தவர்களென்னும் ஒரு கூட்டத்தார் மற்றொரு பக்கத்தில் "தேசத்திற்கு இது சமயம் சுயராஜ்ஜியம் மிகவும் அவசியம்" என்று கூப்பாடு போட்டுக் கொண்டு அதற்கேற்றபடி பல ஆள்களை கூலிக்குப் பிடித்து ஏவிவிட்டு தேசம் போச்சுது என்றும் தேசீயம் போச்சுது என்றும் தேசமே பிரதானம் என்றும் கூப்பாடு போடச் செய்து அரசியல் என்றும் காங்கிரசென்றும் தேசீயமென்றும் மகாநாடுகள் கூட்டி பொது மக்கள் பேரால் தீர்மானங்கள் செய்யத் திரிகின்றார்கள். ஆனால் இக்கூட்டத்தார் யார் என்று பார்த்தால் தங்கள் குழந்தை குட்டிகளுக்கு வெள்ளைக்காரர்கள் பெயர் வைத்துக் கொண்டும் வெள்ளைக்கார ஆதிக்கத்திற்கு உதவி செய்து பிழைப்பதற்கு தங்கள் பெண்டு பிள்ளைகளைத் தயார் செய்து கொண்டும், வெள்ளைக்காரர் பூட்சு துடைப்பதில் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டும் "வெள்ளைக்காரர்களை விரட்ட வேண்டும்" "வெள்ளையர் ஆட்சியை ஒழிக்க வேண்டும்" என்று கூப்பாடு போடுகின்றவர்கள் ஒரு சிலரும், தொட்டதெற்கெல்லாம் வெள்ளைக்காரர்கள் மீதே பழி போட்டு "வெள்ளைக்கார ஆட்சியிலேயே நமது நாடு அநியாயமாய் பாழாய்விட்டது" என்றும் "என்ன கஷ்டப்பட்டாவது அதை ஒழித்துவிட்டால் பிறகு நமக்கு எல்லாம் சரிபட்டுப் போகும்" என்றும் ஆதலால் இன்ன



RangaRakes tamilnavarasam.com

இன்னாருக்கு ஓட்டுக் கொடுங்கள் என்றும் சொல்லிக் கொண்டு உண்மையான காரணத்தை மனதார மறைத்து கூலிக்கு கூப்பாடு போடுகின்றவர்கள் ஒரு சிலரும் ஆவார்கள். எனவே இம்மாதிரியான சூழ்ச்சிகளிலேயே நாட்டின் கவனம் முழுவதையும் ஈடுபடச் செய்து விட்டு அவசியமான காரியத்திற்கு இடையூறுகளை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றதே இது சமயம் நமது நாட்டின் தற்கால தேசநிலைமையாக இருக்கின்றது. இந்த நிலைமையை அடியோடு மாற்றி மக்களை உண்மையான தேசீய முன்னேற்றத்தில் ஈடுபடச் செய்வதற்கென்றுதான் தேசீய சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப் பட்டிருக்கிறது. எனவே இம்மாதிரி கொள்கையில் ஈடுபட்டிருக்கும் இவ்வியக்கம் முன் சொல்லப்பட்ட வேலைகளில் ஈடுபட்டிருக்கும் கூட்டத் தார்களுக்கு பெரிதும் அடியோடு விரோதமாயிருப்பதும் அவர்களால் பழிக்கப்பட்டு திரித்துக் கூறி எதிர்பிரசாரம் செய்யப்படுவதும் உண்மை உணர்ந்தவர்களுக்கும் அறிஞர்களுக்கும் சிறிதும் அதிசயமாகத் தோன்றாது. இப்போது மேற்கண்ட இரண்டு மூன்று கூட்டத்தார்களும் தனித்தனியே புறப்பட்டு ஊர் ஊராய் திரிந்து பிரசாரம் செய்து வருவதை நீங்கள் தினம் பத்திரிகையில் படித்திருக்கலாம்.

வருணாசிரமக்காரர்கள் கூட்டம் கூட்டி அங்கு பேசுவது என்ன என்பதை சற்று யோசித்துப் பாருங்கள்.

“இந்து மதமே உலகத்தில் சிறந்த மதம், இந்து மதத்திற்கு ஆதாரம் வேதம், வேதத்தின் சாரம் மனுதர்ம சாஸ்திரம், மனுதர்ம சாஸ்திரத்தின் முக்கியம் வருணாசிரம தருமம், வருணாசிரமத்தின் தத்துவம் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், சண்டாளன் ஆகிய பிறப்பில் ஜாதி பிரிக்கும் கொள்கை, ஜாதிக் கொள்கையின் உண்மை பிராமணன் கடவுள் முகத்தில் பிறந்தவன், க்ஷத்திரியனும் வைசியனும் கலியுகத்தில் கிடையாது. சூத்திரன் கடவுள் பாதத்தில் பிறந்தவன். அவன் பிராமணர்களுக்கு அடிமையாயிருந்து தொண்டு செய்யவே கடவுளால் இழிவான ஸ்தானத்திலிருந்து பிறப்புவிக்கப்பட்டவன். பிராமணனுக்கு அடிமையாயிருந்து தொண்டு செய்து வரவேண்டியவன். அவனது பிறவித் தொழில் தர்மத்தைச் செய்யாவிட்டால் சண்டாளனாகின்றான்.

சூத்திரன் படிக்கக் கூடாது; பணம் சேர்க்கக் கூடாது; சுதந்திரமாய் நடக்கக் கூடாது. சூத்திரன் மேற்கண்ட தனது கடமையிலிருந்து விலகியதால் பிராமணனும் தன் கடமையிலிருந்து விலகி சுயநலக்காரனாகவே வேண்டியதாயிற்று. பெண்களும் விதவைகளும் நாடார்களும் சங்கங்கள் வைத்து சுவதந்திரியம் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள் என்றும் சொல்வதோடு உடன்கட்டையேறும் வழக்கம் ஒழிந்ததைப் பற்றி வருத்தப்படுவதும், “பெண்கள் படிக்கக் கூடாது, விதவைகள் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது, அவர்களுக்குச் சொத்துரிமை இருக்கக்கூடாது. குழந்தை பருவத்திலேயே கல்யாணம் செய்ய வேண்டும், சூத்திரன் என்ற சொல் மிகவும்



பரிசுத்தமானது, சூத்திரன் பிராமணனுக்கு அவசியமானவன்” என்றும்

மற்றும் ஆதலால் “சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க வேண்டும்” என்றும் இது போன்றவைகளையே பேசுகின்றார்கள். இதை அனுசரித்த தீர்மானங்களும் செய்து பொது ஜனங்களுக்கும் சர்க்காருக்கும் அனுப்புகிறார்கள். வருணாசிரமக்காரர்கள் நிலை இப்படியானால், சமயக் காரர்கள் என்பவர்களோ ‘சைவ சமயமே உண்மை மதம். சிவனே முழு முதற்கடவுள். வேத ஆகமமே அதற்கு ஆதாரம் என்பதும்.

புராணக்காரர்களோ “சமயம் போச்சுது” “சமய பெரியாருக்கு ஆபத்து” “சமய நூல்களுக்கு ஆபத்து” “கலைகளுக்கு ஆபத்து” என்பதும் மற்றும் “10 வருஷத்துக்கு முன்னால் அவினாசியில் முதலை விழுங்கிய குழந்தையை முதலை வயிற்றிலேயே வளரச் செய்து 14 வருஷ வாலிபனாய் அந்த முதலை வாயிலிருந்தே கக்கும்படி செய்த 3-வயதுள்ள பெரியோர் களையும், எலும்பை பெண்ணாக்கிய 4-வயதுள்ள பெரியோர்களையும் ஒரு பாட்டில் ஊமைப் பெண்ணை பேச வைத்த 5- வயதுள்ள பெரியோர் களையும், பனை ஓலை நறுக்கை பிரவாக வெள்ளத்தில் எதிர்நீந்திப் போகும் படி செய்த 6-வயதுள்ள பெரியோர்களையும், எண்ணாயிரம் சமணர்களை வாதத்தில் தோல்வியுறச் செய்து கழுவேற்றக் காரணமாயிருந்து சைவத்தை காப்பாற்றிய ஜீவகாருண்ணிய சீலர்களாகிய சைவ பெரியோர்களையும் குற்றம் சொல்கின்றார்களே! இவைகளை இனியும் பொறுத்துக் கொண்டிருக் கலாமா” வென்றும் “ஆதலால் சுயமரியாதை இயக்கத்தை அழிக்க வேண்டும்” என்றும்.

“60 ஆயிரத்து மூன்று பெண்டாட்டிகளை மணந்து 60 ஆயிரம் வருஷம் வாழ்ந்தும் பிள்ளையில்லாமல் யாகத்தில் பக்குவம் செய்த பாயசத்தை குடித்தவுடன் கர்ப்பமாகி பெற்ற பிள்ளையாகிய ராமனான மகா விஷ்ணுவை குற்றம் சொல்கின்றார்களே, உழும்போது கலப்பையில் பட்டு பூமியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட பரிசுத்த சீதையாகிய மகா லட்சுமியை குற்றம் சொல்லுகிறார்களே” என்றும் “ஆதலால் சுயமரியாதை இயக்கத்தை அழிக்க வேண்டும்” ஆதலால் “ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டு கொடுக்கக் கூடாது” என்றும் பிரசாரம் செய்வதும் வருணாசிரம சமய புராணக் காரர்கள் தொல்லை இவைகளானால் இனி,

அரசியல், தேசீய காங்கிரஸ்காரர்கள் என்பவர்களோ “தேசம் பிரதானம், வகுப்பு வித்தியாசங்களையும் உயர்வு தாழ்வு கஷ்டங்களையும் மறந்துவிடுங்கள். முதலில் வெள்ளைக்காரனை ஒழித்துவிட்டு அப்புறம் நாம் நமக்குள் இருக்கும் தகராறுகளை தீர்த்துக் கொள்ளலாம், ஜஸ்டிஸ் கட்சியார் கள் வகுப்புவாதம் பேசுகின்றார்கள், சர்க்கார் உத்தியோகத்தை ஒப்புக் கொள்ளுகின்றார்கள், மந்திரிகளை ஆதரிக்கின்றார்கள், சர்க்காருக்கு உதவி செய்கின்றார்கள், சைமன் கமிஷனை வரவேற்று அவர்களிடம் குறைகளைச் சொல்லி தேசத்தின் மானத்தைக் கெடுத்துவிட்டார்கள். இந்த காரணங்களால்



RangaRakes tamilnavarasam.com

அவர்கள் தேசத் துரோகிகளாய்விட்டார்கள். அன்றியும் கடவுளையும் மதத்தையும் கண்டிக்கும் சுயமரியாதை இயக்கத்துடன் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் நாஸ்திகர்களாகி விட்டார்கள், மதத் துரோகிகளாகி விட்டார்கள். ஆதலால் தேசத்துரோகத்தையும், மதத் துரோகத்தையும் நாஸ்திகத்தையும் மேற்கொண்டுள்ள ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டுச் செய்யாதீர்கள்" என்றும்,

"சுயமரியாதை இயக்கம் காங்கிரசை வைகின்றது. மதத்தை அழிக்க வேண்டும் என்கின்றது. கோயில்களை கெடுக்க வேண்டும் என்கின்றது. ஆதலால் அந்த நாஸ்திக இயக்கத்தில் யாரும் சேராதீர்கள், அதை வளர்க்க விடாதீர்கள்" என்றும் பிரசாரம் செய்கின்றார்கள்.

சகோதரர்களே!

இந்த இருபதாவது நூற்றாண்டில் அதாவது உலக அனுபவமும் அறிவு வளர்ச்சியும் மக்களுக்கு தாராளமாய் கிடைக்கக் கூடியதும் சையன்ஸ் அறிவும் மின்சார சக்தியின் வேலையும், பழைய உலகத்தையே தலைகீழாய் கவிழ்த்துக் கொண்டிருப்பதுமான இந்த காலத்திலேயே இக்கூட்டங்கள் இவ்வளவு தைரியமாய் வெளிக்கிளம்பி உலகத்தை ஏமாற்றத் துணிந்திருப் பதை நினைக்கும்போது அய்யோ! பாவம்! என்று கருதத்தக்க ஆயிரம் இரண்டாயிரம் வருஷத்திற்கு முன்னிட்ட பழங்காலமாகிய புத்தர், சமணர் காலத்தில் இக்கொடும்பாவிகளான பாதகர்கள் என்ன என்னவெல்லாம் செய்திருக்கமாட்டார்கள்? என்பதைச் சற்று நினைத்துப் பாருங்கள். கடவு ளைப் பற்றிப்பேசும் ஒவ்வொரு அயோக்கியனும் கடவுள் சர்வசக்தி உள்ளவர் என்பதாகச் சொல்லிக் கொண்டு தனக்கு மாத்திரம்தான் கடவுள் மற்றவனுக்கு இல்லையென்றும், தான்தான் மற்றவனுக்கு காட்டிக் கொடுத்து அக்கடவுளை காப்பாற்ற புறப்பட்டவன் என்றும் நினைத்துக் கொண்டு பேசுவதை பார்க்கும்போது அத்தகையவர்களை எவ்வளவு அறிவீலிகள் அல்லது அயோக்கியர்கள் என்று நினைக்க வேண்டி இருக்கின்றது.

கடவுளைக் காப்பாற்றுவதும் கடவுள் இருப்பதாக உலக மக்கள் அறியச்செய்வதும் என்கின்ற ஒரு தொண்டை ஒருவன் ஏற்றுக் கொண்டு தன்னை மகா புத்திசாலி என்றும் தான் ஒரு பெரிய பரோபகாரியென்றும் சொல்லிக் கொண்டு எவனாவது வெளியில் புறப்பட்டு உங்களுக்கு உபதேசம் செய்யவந்தால் நீங்கள் அதைக் கடவுள் தொண்டென்று நினைக்கிறீர்களா? அல்லது கடவுளை பரிகாசம் செய்து பிழைக்க வேண்டிய நிலையில் உள்ள வயிற்றுப் பிழைப்புத் தொண்டு என்று நினைக்கிறீர்களா? என்று கேட்கின்றேன் ஒரு சமயம் யாராவது தங்கள் அறிவீனத்தால் இது கடவுள் தொண்டாயிருக்கலாம் என்று நினைப்பார்களேயானால் அவர்கள் கடவுளைப் பற்றி நினைத்திருக்கும் எண்ணம் தான் என்ன என்று யோசித்துப் பாருங்கள். திரு.சீனிவாசய்யங்கார் தலைவர் என்பதைப் பரப்ப ஒருகூலிக் கூட்டம் அவர் பின்னால் திரிந்து கொண்டு சென்றவிடங்களிலெல்லாம்



"சீனிவாசய்யங்கார் என்று ஒருவர் உண்டு; அவர் இந்தியாவுக்கே தலைவர்" என்று கூப்பாடு போட்டு வயிறு வளர்ப்பது போல் கடவுள் என்று ஒருவர் உண்டு அவர் சர்வசக்தி உள்ளவர் என்று சொல்வதன் மூலம் தான் கடவுளை நிலை நிறுத்தவோ அல்லது மக்கள் உணரும்படி செய்யவோ வேண்டியது அவசியமா? என்று கேட்கின்றேன்.

அன்றியும் அதற்காக மனிதன் பூசை உற்சவம் வேண்டுதலை ஆகியவைகளுக்கு ஆக பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்ய வேண்டியது அவசியமா? என்று கேட்கின்றேன். பெரும்பான்மையான மக்கள் மழைக்கும் வெய்யிலுக்கும் ஒதுங்கக் கூட இட நிழலும் மறைவும் இல்லாமலும் இரண்டு நாளைக்கு ஒரு வேளை ஆகாரமில்லாமலும் வாடி நடுங்கும்போது இந்த கடவுள்களுக்கு லக்ஷம் பத்து லக்ஷம் கோடி இரண்டு கோடி ரூபாய்களில் ஏழு சுற்று மதில் சுவர்களும் நூற்று இருபது உயர அடி கோபுரங்களும் ஆயிரங்கால் மண்டபங்களும் பத்து நூறு ஆயிரம் லக்ஷம் தீபங்களும் தினம், மூன்று வேளை நான்கு வேளை, நடு ஜாம வேளை பூஜைகளும் வேண்டுமா என்று கேட்கின்றேன். வேலை செய்ய சக்தியிருந்தும் ஜீவனத்திற்கு மார்க்கமில்லாமலும் தொழில் இல்லாமலும் பெண்டுபிள்ளைகளுடனும் கிழடு கிண்டுகளுடனும் கர்ப்பத்துடனும் சிங்கப்பூர், பினாங்கு, மோரீசு, தென் ஆபிரிக்கா, நெட்டால், ஆஸ்ட்டி ரேலியா, பிஜி முதலிய இடங்களுக்கு நமது நாட்டிலிருந்து கும்பல் கும்பலாய் கூலிகளாக தூத்துக்குடி, பாம்பன், நாகபட்டணம், சென்னை, காக்கிநாடா, மசூலிப்பட்டணம், ரங்கூன் முதலிய துறைகளில் வாரம் பதினாயிரம் இருபதினாயிரம் கணக்காக கப்பல் ஏறிக்கொண்டிருக்கையில் இந்த கடவுள்களுக்கு வருஷம் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவுசெய்து அபிஷேகம், அர்ச்சனை, கல்யாணம், கருமாதி, உற்சவம், ஊர் கோலம், தேர், திருவிழா, தாசி வேசிகள் ஆட்டம், அதிர் வேட்டு, பாணம், முத்தங்கி, வைரக் கிரீடம், மரகத மாலை, தங்கப் பல்லக்கு, வெல்வெட்டு, சரிகை மெத்தை, திண்டு, தலையணை, வைப்பாட்டி, படுக்கை அறை ஆகியதுகளில் செலவு செய்து கொண்டிருக்க வேண்டியது அவசியமா என்று கேட்கின்றேன்.

இந்த மாதிரி வயிறெரிந்து யாராவது எடுத்துக் காட்டினால் அவர்களைப் பார்த்து பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் வெகு சுலபத்தில் நாஸ்திகர் என்று ஒரு வார்த்தையில் சொல்லி மக்களை ஏமாற்றி விடுவார்கள். எனக்கு அதைப்பற்றி கடுகளவுகூட பயமில்லை. இப்படிச் சொல்லுவது நாஸ்திகமானால் தூக்கு மேடையில் இருந்து கொண்டுகூட நான் நாஸ்திகன்தான் அதுவும் நல்ல பரிசுத்தமான நாஸ்திகன்தான் என்று கூப்பாடுபோட்டுச் சொல்லிக்கொள்ள தயாராயிருக்கின்றேன். என்னைப் பற்றி நீங்கள் கவலைப் படாதீர்கள். ஆனால் இப்படி ஒரு கூட்டம் கடவுள் பெயரைச் சொல்லி வயிறு வளர்ப்பதன் மூலம் நாடும் நாட்டு மக்களும் மூடர்களாகி பாழாக இன்னும் எத்தனை நாளைக்குப் பார்த்துக் கொண்டிருக்க போகின்றீர்கள் என்பதுதான் எனது கவலையும் சங்கடமுமாகும்.



RangaRakes tamilnavarasam.com

இது போலவேதான் மதத்தைப் பற்றியும் நான் சொல்வதை சிலர் மதத் துரோகம் என்கின்றார்கள். பிறவியின் காரணமாக மனிதனுக்கு மனிதன் ஒரு நீதியும் ஆணுக்கு ஒரு நீதியும் பெண்ணுக்கு ஒரு நீதியும் உள்ள எந்த மதமானாலும் சரி அது ‘கடவுளை நேரே கொண்டுவந்து காட்டி மோக்ஷத் திற்கு அழைத்துச் செல்ல செய்யும் மதமாயிருந்தாலும் சரி அல்லது அது நம்மையே கடவுளாக்கும் மதமாயிருந்தாலும் சரி, அதை அழிக்க வேண்டி யதும் அழிக்க முடியாவிட்டாலும் அந்த அழிக்கும் வேலையில் உயிரைவிட வேண்டியதும் உண்மையான மனிதனது கடமை என்றுதான் நான் தீர்மானித்துக் கொண்டிருக்கின்றேன். இதில் சிறிதும் ராஜிக்கு இடமில்லை என்பதை கண்டிப்பாய் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அது போலவே காங்கிரஸ் என்பதும் தேசீயம் என்பதும் சுயராஜ்யம் என்பதும் அக்கூட்டத்தாரின் சுயநலத்திற்கும் ஒரு கூட்டத்தாரின் வயிற்றுப் பிழைப்பிற்கும் ஏற்பட்டு நாட்டையும் ஏழை மக்களையும் பாழ்படுத்தி வரும் தொல்லைகள் என்றே சொல்லுவேன். தேசத்தின் பேரைச் சொல்லிச் சத்தம் போடும் ஒவ்வொருவரும் சுயநலத்திற்கும், சுயஜாதி நலத்திற்கும் குறி வைத்துக் கொண்டு வேறு வழியில் பிழைக்க முடியாதவர்களை பிடித்து கூலி கொடுத்து கூப்பாடுபோடச் சொல்லும் சூழ்ச்சியே தவிர வேறில்லை. சுய ராஜ்யம் என்றால் என்ன என்று இதுவரை இவர்களில் யாராவது எடுத்துச் சொல்லி இருக்கிறார்களா? இவர்கள் கேட்கும் சுயராஜ்ஜியத்தால் ஏழைகளுக் கும் தொழிலாளிகளுக்கும் குடியானவர்களுக்கும் ஏதாவது பலன் காட்டி யிருக்கின்றார்களா? அல்லது இதுவரை போட்ட சுயராஜ்யக் கூப்பாட்டினால் ஏதாவது அவர்களுக்கு பலன் உண்டாக்கி இருக்கின்றார்களா? என்பதை நடுநிலையிலிருந்து யோசித்துப் பாருங்கள்.

எல்லாக் கூப்பாடுகளும் யாரை ஏமாற்றி யார் மந்திரியாவது? யார் உத்தியோகம் பெறுவது? யார் பணம் சம்பாதிப்பது? யார் யாரை அழிப்பது? என்பதைத் தவிர சர்க்காரைப் பற்றியோ ஏழை மக்களைப் பற்றியோ நாட்டின் கதியைப் பற்றியோ யாருக்காவது கடுகளவு கவலையுண்டு என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றேன்.

ஆதலால் தான் இப்போது சிலர் வெகு பிரயாசையுடன் தங்கள் தங்கள் சுயநலத்திற்கும் கூலி பிழைப்பிற்குமாக காப்பாற்ற முற்பட்டிருக்கும் போலிக் கடவுள்களையும் கோவில்களையும் மதங்களையும் சுயராஜ்யங்களையும் ஒழிக்க வேண்டும் என்று சொல்லுகின்றேனே ஒழிய மற்றபடி என் சொந்தத்தில் மேற்கண்டவைகளிடம் எனக்கு யாதொரு வெறுப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*குறிப்பு : பாலக்காட்டில் 09.05.1929 ஆம் நாள் நடந்த பொதுக்கூட்டத்திலும் தொடர்ந்து பிற இடங்களிலும் பேசிய சொற்பொழிவுகளின் சுருக்கம்.*

**குடி அரசு - சொற்பொழிவு - 19.05.1929**



## உங்களுக்கு
# எது வேண்டும்
### வகுப்பு வாதமா? சமூக வாதமா?

வகுப்பு வாதம் எல்லா வகுப்புக்கும் சம சந்தர்ப்பமும் சம சுதந்திரமும் வேண்டும் என்கின்றது. சமூக வாதம் தங்கள் சமூகம் மாத்திரம் எப்போதும் உயர்வாகவே இருக்க வேண்டும் என்கின்றது.

காங்கிரசென்றும் தேசீயமென்றும் சுயராஜ்ஜியமென்றும் நமது பார்ப்பனர்களும், அவர்களது அடிமைகளும், கூலிகளும் போடும் கூச்சல் கள் எல்லாம் பார்ப்பன சமூக ஆதிக்கத்திற்கெனச் செய்யப்படும் சூழ்ச்சி என்றும், அவர்கள் உட்கருத்துக்கள் எல்லாம் எப்படியாவது பார்ப்பன ரல்லாதாரை வகுப்புவாதிகள் என்று சொல்லி அவர்களுடைய நிலைமை யைத் தாழ்த்தி அவர்கள் தலையெடுக்க ஒட்டாமல் செய்ய வேண்டும் என்பதைத் தவிர வேறு ஒன்றும் அல்லவென்றும் பார்ப்பனரல்லாதார்களில் வேறுவழியில் அரை வயிற்றுக் கஞ்சிக்குக்கூட வழிதேடிக் கொள்வதற்கு முடியாதவர்களும் பார்ப்பனர்களுக்கு கூலிகளாயிருந்தும் அடிமைகளா யிருந்தும் சமூகத் துரோகம் செய்தாலொழிய பிழைக்கவும் பெருமை பெறவும் முடியாதவர்களுமே பெரிதும் அவர்கள்கூட இருக்கின்றார்களே ஒழிய மற்றபடி யோக்கியமும் பொறுப்பும் சுயமரியாதையும் சுயேச்சையும் உள்ளவர்களில் எவரும் பார்ப்பனர்கள்கூட இல்லை என்றும் நாம் பலதடவை களில் சொல்லியும் எழுதியும் வந்திருக்கின்றோம்.

இதன் உண்மைகள் முக்கியமாக இந்த இரண்டு மூன்று வருஷத்திய காங்கிரஸ் நடவடிக்கைகளினால் தாராளமாய் வெளியாயிருப்பதும் இதனால் நமது நாட்டில் காங்கிரசின் பெயரைச் சொல்லிக் கொண்டு எவ்வளவு மானங் கெட்டானாலும் பார்ப்பன அடிமைகளும் கூலிகளும் தவிர வேறு பொறுப் புள்ள யாரும் வெளியில் வர யோக்கியதை இல்லாமல் போயிருப்பதுமே போதுமான உதாரணமாகும்.

மேலும் இன்றைய தேதியில் நமது நாட்டில் காங்கிரஸ் தலைவர் களாகவும் காங்கிரஸ் முக்கியஸ்தர்களாகவும் காங்கிரஸ் பிரசாரகர்களாகவும் விளங்குபவர்கள் யார் என்று பார்ப்போமானால் திருவாளர்கள் எஸ்.சீனி வாசய்யங்காரும் சத்தியமூர்த்தியும் முதல் வரிசையிலிருப்பவர்களாவார்கள்.



RangaRakes
tamilnavarasam.com

அதாவது காங்கிரசின் அபிப்பிராயம் இன்னதுதானென்று சொல்வதற்கும், காங்கிரஸ் அபிப்பிராயம் இன்னதாகத்தான் இருக்க வேண்டும் என்று அதிகார தோரணையில் சொல்லி திட்டம் ஏற்படுத்துவற்கும் உரிமை யுள்ளவர்கள் இந்தக் காரியத்தில் மாத்திரம் வேறு எந்த பார்ப்பனரல்லா தாரையும் அவர்கள் சேர்த்துக் கொள்ளவும் முடியாது. மற்றபடி யாருக்கும் இந்த காரியங்களில் அதிகாரம் கொடுக்கவும் முடியாது.

அவர்களுக்கு அடுத்தாற்போல் திருவாளர்கள் ஓ.கந்தசாமி செட்டியார், முத்துரங்க முதலியார், வரதராஜுலு, கல்யாணசுந்தர முதலியார், மயிலை முதலியார், ஏவலர் என்கின்றவர்கள் பார்ப்பனரல்லாத சமூகத்தின் பிரதிநிதிகளாகவும், திருவாளர் ஜயவேலு என்பவர் தீண்டப்படாதவர்கள் என்கின்ற சமூகத்தின் பிரதிநிதியாகவும், திருவாளர் குழந்தை என்பவர் கிருஸ்தவ சமூகத்தின் பிரதிநிதியாகவும், ஜனாப்புகள் ஷாபிமகமது சாயபு, அமித்கான் சாயபு, பஷீர் அகமட் சாயபு என்பவர்கள் மகமதிய சமூகத்தின் பிரதிநிதிகளாகவும் காங்கிரசின் இரண்டாவது அணியில் இருப்பவர்கள். இவர்களுக்கு திருவாளர்கள் அய்யங்காரும் அய்யரும் சொல்வதற்குப் பின்னாலிருந்து ஆமா சாமி போடவும் ஆடு என்று சொல்லுகின்றபடி ஆடவும் "ஸ்ரீனிவாசய்யங்கார்தான் நமது அரும்பெரும் தலைவர்" என்று சொல்லி மேடைகளிலும் பத்திரிகைகளிலும் பேசவும் எழுதவும் தவிர காங்கிரசின் பேரால் வேறு எவ்வித அதிகாரமும் கிடையாது என்பது எல்லோரும் அறிந்த விஷயமாகும்.

மேலும் இக்கூட்டத்தில் காங்கிரசிலும் தேசீயத்திலுமே உடல் பொருள் ஆவி வாழ்க்கையாகியவையெல்லாம் வைத்துக்கொண்ட உயர்திருவாளர்கள் பி.வரதராஜுலு வி.கல்யாணசுந்தரம் ஆகியவர்கள் மாத்திரம். தங்களுக்கு இஷ்டமில்லையானால் காங்கிரசில் ராஜீனாமாக் கொடுக்கவும் வேறு வழியில்லையானால் மறுபடியும் தாங்களாகவே போய்ச் சேர்ந்து கொள்ளவும் மாத்திரம் பூரண சுயேச்சை உரிமை வைத்துக் கொண்டிருக்கின்றவர்கள். மறு படியும் இவர்கள் சேரப்போகும் போது அவர்கள் ஆக்ஷேபணை சொல் லாமல் சேர்த்துக் கொள்வதே தங்களுடைய மதிக்கத்தகுந்த சொல்வாக் கென்று நினைத்துக் கொண்டிருக்கிறவர்கள்.

மற்றபடி பிரசாரக்காரர்கள் என்பவர்களைப் பற்றி நாம் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் இங்கு ஒருவருமிருக்க மாட்டார்கள் என்றே நம்பி அதை விட்டு விடுகிறோம்.

நிற்க, இக்கூட்டத்தவர்களின் கொள்கையும் பிரசாரமும் என்ன என்று பார்ப்போமானால் "தேசீயவாதிகளுக்கு ஓட்டுக் கொடுத்து முனிசிபாலிட்டி, தாலூகா, ஜில்லா போர்டு, சட்டசபை ஆகிய ஸ்தானங்களுக்கு அனுப்ப வேண்டும், வகுப்புவாதிகளுக்கு ஓட்டு கொடுக்காமலும், ஆதரிக்காமலும் அவர்களை அடியோடு அழிக்க வேண்டும்" என்பதே தற்கால கொள்கையும் பிரசாரமும் ஆகும். இவர்களுக்கு இதற்குமுன் அநேக விஷயங்கள்



வார்த்தையளவிலாவது கொள்கையாகவும் பிரசாரமாகவும் இருந்தன.

அதாவது, ஒத்துழையாமை, முட்டுக்கட்டை, பரஸ்பர ஒத்துழைப்பு, சிங்கத்தின் குகைக்குள் போய் அதைப் பிடித்து ஆட்டுவது, சர்க்காரைத் திணறச் செய்வது, பூரண மதுவிலக்கு, இரட்டை ஆட்சியை அழிப்பது கடைசியாக **உத்தியோகமேற்காதது** முதலாகியவைகளாக இருந்தன. நமது 'குடி அரசு' தோன்றியபின் இதன் இரகசியங்கள் வெளியாகி இவைகள் எல்லாம் மறைந்து இப்போது வகுப்புவாதிகளை ஒழிப்பது என்பது தவிர வேறு எவ்வித கொள்கையும் திட்டமும் இல்லாமல் போய்விட்டது. வகுப்புவாதிகள் யார்? அல்லாதவர்கள் யார்? என்று பார்த்தாலோ அது இவைகளை யெல்லாம் விட மிக யோக்கியமானதாக இருக்கும். அதாவது வகுப்பு வித்தியாசம், ஜாதி உயர்வு தாழ்வு, ஒரு வகுப்புக்கு ஒரு நீதி ஆகியவைகள் அடியோடு கூடாது என்றும், எல்லா வகுப்புக்கும் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் இருக்க வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யவேண்டும் என்பவர்கள் தான் இக்கூட்டத்தாருக்கு வகுப்பு வாதிகளாகத் தென்படுகின்றார்கள்.

உயர்ந்த வகுப்பு என்பதாக ஒன்று உயர்ந்திருக்க வேண்டும், தாழ்ந்த வகுப்பு என்பதாக ஒன்று தாழ்ந்து இருக்கவேண்டும், பார்ப்பனர்கள் உயர்ந்த வகுப்பு, மற்றவர்கள் அவர்களைவிடத் தாழ்ந்த வகுப்பு, சூத்திரர், பஞ்சமர் என்கின்ற வித்தியாசமிருக்க வேண்டும். இந்த வித்தியாசங்களை ஒழிக்க யாரும் முயற்சிக்கக் கூடாது. எவ்வித சட்டமும் செய்யக் கூடாது என்பவர்கள் இவர்களுக்கு வகுப்புவாதிகள் அல்லாதவர்கள். சுருங்கச் சொன்னால் அவர்கள் கொள்கைப்படி பார்ப்பனர்களும் அவர்களை நத்திப் பிழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளவர்களும் அவர்களது கூலிகளும் வகுப்பு வாதிகள் அல்லாதவர்களாவார்கள். மற்றபடி இவர்களும் வெள்ளைக் காரர்களும் தவிர மற்றவர்கள் எல்லாரும் அதாவது பார்ப்பனரல்லாதவர்கள் எல்லோரும் வகுப்புவாதிகள் ஆவார்கள். எனவே இந்த வகுப்புவாதிகளை அழிப்பதற்கு காங்கிரஸ்வாதிகளும் தமிழ் மாகாண காங்கிரஸ்வாதிகள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று மதுரையில் கூடிய தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டிருப்ப தோடு எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியாலும் அதிகாரம் பெறப் போகின் றார்களாம். தமிழ் மாகாணக் கமிட்டியில் நிறைவேறிவிட்டால் பிறகு எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஆக்ஷேபிக்க யாருக்கு அதிகாரம் இருக்க முடியும்? ஏன் என்றால் அந்தந்த மாகாண நிலையை அறிந்து நடந்து கொள்ள அந்தந்த மாகாணத்துக்காரருக்குத்தான் உரிமை இருக்கவேண்டுமே ஒழிய வேறு ஒருவர் அதில் பிரவேசிப்பது "மாகாண சுயாட்சிக்கு விரோதமான காரியமாய்விடும்" என்பது அவர்களுக்குத் தெரியும். இதற்கு உதாரணம் வேண்டுமானால் சென்ற தேர்தலின்போது நடந்த நடவடிக்கைகளே போதுமானது. அதாவது காங்கிரஸ்காரர்கள் மந்திரிசபை அமைக்கக்கூடாது



RangaRakes tamilnavarasam.com

என்றும் மந்திரிகளை ஆதரிக்கக்கூடாது என்றும் இந்திய தேசீய காங்கிரஸ் தீர்மானம் இருந்தும், சென்னை மாகாணத்தில் காங்கிரசுக்காரர்கள் மந்திரி சபை அமைத்து மந்திரிகளுக்கு உதவியாயிருந்ததை தமிழ் மாகாண நிலையை உத்தேசித்து எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டி ஒப்புக் கொண்ட தோடு தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியும் சிறப்பாக காங்கிரஸ் தலைவரும் பாராட்டப்பட்டதே போதுமானது. அதுபோலவேதான் இப்போதும் மந்திரிசபையை அமைத்து மந்திரிகளை ஆதரிப்பது மாத்திரம் போதாது என்பதோடல்லாமல் வகுப்புவாதிகளை அடியோடு அழிக்க அவசியமானால் மந்திரி வேலையையும் ஒப்புக் கொள்ளவேண்டும் என்று வெகு கஷ்டமா னதும் அதாவது வேப்பெண்ணெய் சாப்பிடுவது போன்ற “கசப்பானதும்” பெரிய “தியாகம்” செய்ய வேண்டியதுமான காரியத்தையும் செய்து தீர வேண்டுமாய் தீர்மானம் செய்து கொண்டு இருக்கின்றார்கள். காங்கிரஸ் காரர்களின் “தன்னலமறுப்புக்கும் தியாகத்திற்கும்” இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்? என்பது நமக்கு விளங்கவில்லை. இதில் நாம் மகிழ்ச்சியடைவதென்ன வென்றால் சர்க்காரை ஒழிக்கவோ தேசாபிமானத் திற்கோ மந்திரி வேலையை ஒப்புக் கொள்வதாயிருந்தால் அது வேறு விஷயம். வகுப்புவாதிகளாகிய பார்ப்பனரல்லாதார்களை அழிக்க மந்திரி வேலையை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும், மற்றும் அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்றும் தீர்மானித்திருப்பதானது அதாவது சர்க்காரும் தேசமும் பின்னால் பார்த்துக் கொள்ளுவோம் முதலில் இவர்களை ஒழிப்போம் என்று தீர்மானித்திருப்பதானது நமது கொள்கைக்கு பலத்தையும் நமது செய்கைக்கு ஊக்கத்தையும் கொடுக்கின்றது.

எப்படி என்றால் நாமும் இதைத்தான் சொல்லுகின்றோம். அதாவது சர்க்காரையும் தேசத்தையும் பிறகு பார்த்துக் கொள்ளலாம். சமூகவாதிகளை முதலில் அழிக்க வேண்டுமென்பதேயாகும். இந்த தேசம் பாழாய்ப் போவதற்கும் இந்த சர்க்கார் இங்கு இவ்வளவு அநீதியான ஆட்சி புரிவதற் கும் சமத்துவக் கொள்கை பரவாதிருப்பதற்கும் எந்த சமூகத்தார் தங்கள் சமூக நன்மையை உத்தேசித்து எதிரிகளாய் இருக்கின்றார்களோ அந்த சமூகத்தார் முதலில் அழிக்கப்பட்ட வேண்டும் என்பதேயாகும். இதற்காக நாம் காங்கிரஸ்காரர்களைவிட ஒருபடி அதிகமாகக் கூட போகத் தயாரா யிருக்கின்றோம். அதென்னவென்றால் மந்திரி வேலை ஒப்புக்கொள்ளுகின்ற கஷ்டம் மாத்திரமல்லாமல் கிடைக்குமானால் கவர்னர் வேலை ஒப்புக் கொள்ளுகின்ற அளவு தியாகம் செய்தாவது சமூக வாதத்தை அடியோடு ஒழிக்க ஆசைப்படுகின்றோம். எனவே எல்லா வகுப்பாரும் சமமாய் இருக்க வேண்டும்; எல்லா வகுப்புக்கும் சம சுதந்திரமும் சந்தர்ப்பமும் அளிக்க வேண்டும் என்கின்ற வகுப்பு வாதம் ஒழிய வேண்டும் என்கின்றவர்கள் பார்ப்பனர்களாகிய காங்கிரஸ் வாதிகளுக்கே ஓட்டுச் செய்யட்டும். ஒரு வகுப்பு உயர்வாகவும் ஒரு வகுப்பு தாழ்வாகவும் இருப்பதை எப்போதும் எந்த விதத்திலும் சட்டத்தின் மூலமும் மாற்றக்கூடாது என்கின்ற சமூக வாதம்





ஒழிய வேண்டும் என்று கருதுகின்றவர்கள் பார்ப்பனரல்லாதாராகிய வகுப்பு வாதிகளுக்கு ஓட்டுக் கொடுங்கள் என்று தான் நாம் கேட்டுக் கொள்கின்றோம். மற்றபடி சமூகவாதம் வகுப்புவாதம் இரண்டையும் விட்டுவிட்டு தேசத் தையும் சுயராஜ்ஜியத்தையும் விரும்பி யாராவது ஓட்டுச் செய்வதாயிருந்தால் அவர்கள் கக்ஷிகளைக் கவனிக்காமல் கொள்கைகளையும் திட்டங்களையும் அவைகளுக்காக அவரவர்கள் இதுவரை நடந்து கொண்டு வந்திருப்பதையும் நாணயத்தையும் கவனித்து ஓட்டுச் செய்வதில் நமக்கு யாதொரு ஆக்ஷேப ணையும் இல்லை. ஏனெனில் சமூகவாதிகளான பார்ப்பனர்களுடைய காங்கிரசும் ‘சுயராஜ்யம்’ கேட்கின்றது.

வகுப்பு வாதிகளான பார்ப்பனரல்லாதாருடைய ஜஸ்டிசும் ‘சுயராஜ் யம்’ கேட்கின்றது. அவர்களும் “குடியேற்ற நாட்டு அந்தஸ்து” கேட்கின் றார்கள். இவர்களும் அதையே கேட்கின்றார்கள்.

அவர்களும் “இரட்டை ஆட்சி கூடாது” என்கிறார்கள். இவர்களும் “அது கூடாது” என்கிறார்கள். அவர்களும் “கதர் மதுவிலக்கு தீண்டாமை” என்கின்றார்கள். இவர்களும் “தீண்டாமை மதுவிலக்கு கதர்” என்கின்றார்கள். அவர்களும் “சுயராஜ்ஜியத் திட்டம்” தயாரித்து புஸ்தகங்கள் பத்திரிகைகள் மூலம் சைமனுக்கும் பார்லிமெண்ட்டுக்கும் அனுப்பியிருக்கின்றார்கள். இவர்களும் நேரிலும் பத்திரிகைகள் மூலமும் சைமனுக்கும் பார்லி மெண்டுக்கும் அனுப்பியிருக்கின்றார்கள்.

ஆனால் சமூதாய விஷயத்திலும் சீர்திருத்த விஷயத்திலும் வகுப்பு வாதம் சமூகவாதம் ஒழியும் விஷயத்திலும் சுயமரியாதை இயக்கத்தின் தத்துவங்களாகிய செங்கற்பட்டு தீர்மானங்களில் அநேகத்தை வகுப்பு வாதிகள் என்னும் பார்ப்பனரல்லாதாராகிய ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் ஒப்புக் கொள்ளுகின்றார்கள். ஆனால் வகுப்புவாதிகள் அல்லாதவர்களான காங்கி ரஸ்காரர்கள் எனும் சமூக வாதிகளான காங்கிரசுக்காரர்கள் ஒப்புக் கொள்ளா மல் அதை அடியோடு எதிர்த்து பிரசாரம் செய்கின்றார்கள். இது தான் வித்தியாசமாகும். ஆதலால் ஓட்டர்கள் கவனித்து தங்கள் இஷ்டப்படி நடக்க உரிமை உள்ளவர்கள் ஆவார்கள்.

**குடி அரசு – தலையங்கம் – 19.05.1929**

RangaRakes tamilnavarasam.com

# தேர்தல் கவலை

## மூர்த்திக்கும் - வாசருக்கும் சம்பாஷணை

**- சித்திரபுத்திரன்**

**வாசர்** : என்ன மூர்த்தி, இந்த தடவை தேர்தலில் நமது ஜபம் செல்லாது போல் இருக்கின்றதே.

**மூர்த்தி :** எதனால் இவ்வளவு சந்தேகப்படுகின்றீர்கள்.

**வாசர் :** எதனால் என்று கேட்கின்றாயே, ஒவ்வொன்றும் நீ நேரில் பார்க்கவில்லையா? நாம் போகின்ற இடங்களில் எல்லாம் மீட்டிங்கு போடக் கூட முடியாதபடி கலவரங்கள் நடக்கின்றதே; எவ்வளவோ கஷ்டப்பட்டு மிதவாதிகளிடம் இருந்த மேடைகளை நமது சுவாதீனம் செய்தோம். பிறகு அதை ஒத்துழையாமைக்காரர்கள் வந்து பிடுங்கிக் கொண்டார்கள். அதற்கும் எவ்வளவோ பாடுபட்டு அவர்களையும் விரட்டி அடித்து அவர்களிடமிருந்து சுவாதீனம் செய்து கொண்டோம். கடைசியாக அது ஜஸ்டிஸ்காரரிடம் கூட இல்லாமல் சுயமரியாதைக்காரரிடமல்லவா போய்விட்டது.

**மூர்த்தி:** அதென்ன ஜஸ்டிஸ்காரரிடம் கூட இல்லாமல் என்று அவர்களுக்காக வருத்தப்படுகின்றவர் போல் பேசுகின்றீர்களே.

**வாசர் :** ஜஸ்டிஸ்காரரிடம் போகாததால் எனக்கு வருத்தமில்லை. ஜஸ்டிஸ்காரரிடம் இருந்தால் நாம் அவர்களை சுலபத்தில் விரட்டியடித்து பிடுங்கிக் கொள்ளலாம். ஏனென்றால் அவர்களும் நம்மைப் போலவே ஓட்டர்களிடம் போய் பொய்யும் புளுகும் அடித்து ஓட்டுப்பெற முயற்சிக்கின்றவர்கள். ஆதலால் நாம் கொஞ்சம் அதிக கூலி ஆள் வைத்து விரட்டினால் மேடையை விட்டுவிட்டு ஓடிவிடுவார்கள். சுயமரியாதைக்காரருக்கு ஒரு கவலையும் இல்லை. ஒருவர் தயவும் வேண்டியதில்லை. உள்ளதை உள்ளபடி கூப்பாடு போடுகின்றார்கள். அதனால் மேடைகள் எல்லாம் அவர்கள் வசமாய்விட்டன. அவர்களை விரட்டுவதென்றால் பெரிய கஷ்டமாக இருக்கின்றது. எங்கு போனாலும் அவர்கள் தொல்லை நம்மை தலைகாட்ட விடாமல் செய்கின்றது பார்.

**மூர்த்தி:** என்ன மகா பிரமாதம். திருச்சி, சேலம், கோயமுத்தூர், மதுரை இந்த ஜில்லாக்களில் தானே அவர்கள் ஜபம் செல்லும், மற்றபடி தஞ்சாவூர்



நம்முடையது. அங்கு சில ஆட்கள் மாத்திரம் கூப்பாடு போடுவார்களே ஒழிய மற்றபடி ஓட்டர்களை ஒன்றும் செய்துவிடமுடியாது.

**வாசர் :** என்ன சொன்னாலும் இந்த தடவை எலக்ஷனில் தமிழ் நாட்டை பொறுத்தவரை நமக்கு பூஜ்ஜியம்தான் கிடைக்கும் போலிருக்கின்றது. வேண்டுமானால் கணக்கு சொல்கின்றேன் கேள். திருநெல்வேலியில் திரு.ரெட்டியார் எப்படியும் வந்துவிடுவார். மற்றொரு ஸ்தானம் யாராவது சைவ பிள்ளைமார்தான் வரமுடியும். எப்படியும் பிராமணன் வர முடியாது. அந்த சைவப்பிள்ளையும் நம்முடன் சேரமாட்டார். டவுன் தொகுதிக்கும் இந்த தடவை சாவடிப் பிள்ளை வருவது கஷ்டம். வந்தாலும் நமக்கு ஒன்றும் இலாபமில்லை. ஆதலால் அந்த ஜில்லாவையும் மறந்துவிடவேண்டியதுதான்.

**மூர்த்தி :** ராமநாதபுரம் ஜில்லாவோ?

**வாசர் :** அதுவும் அப்படித்தான்: எப்படியும் திவான் பகதூர் முருகப்ப செட்டியார் வந்துவிடுவார். திரு. அள.அரு. நாராயண செட்டியார் சந்தேகம் வந்தாலும் நமக்குப் பிரயோஜனப்படமாட்டார். திரு.டி.சி.சீ. அய்யங்கார் வருவது இந்த தடவை கஷ்டமாகிவிடும். நாட்டுக் கோட்டைச் செட்டியார் போட்டியில் ஏதாவது நமக்கு கிடைத்தால்தான் உண்டு. அவர்கள் ஏதாவது ராஜியாய் போய்விட்டால் நம்ம பாடு ஆபத்துதான். ஆதலால் அதையும் விட்டுவிட வேண்டியதுதான்.

**மூர்த்தி :** சரி, அப்படியே வைத்துக்கொள்ளுவோம். மதுரை ஜில்லாவோ?

**வாசர் :** மதுரையை நினைக்காமலிருப்பதே மேலானது. ஏனென்றால் திரு.கே.ஆர்.வெங்கிடராமய்யர் தான் மாத்திரம் இனிமேல் சட்டசபைக்கு நிற்பதில்லை என்று அல்ல, தனது பின் சந்ததிகளையும் நிற்க வேண்டாம் என்று திட்டம் செய்ய தீர்மானம் செய்து கொண்டார். சென்ற தடவை நமது சி.பி. அவருக்கு பொய் நம்பிக்கை கொடுத்து எலக்ஷனால் 40, 50 ஆயிரம் ரூபாய் கடன் உண்டாக்கிவிட்டார். அது சூடுகண்ட பூனை ஆதலால் இனி தலை காட்டாது.

சேத்தூர் ஜமீன்தாரும் இந்த ஜில்லாவில் நிற்பதில்லை என்று சொல்லிவிட்டாராம். எனவே திருவாளர்கள் பி.டி.ராஜனும், சௌந்திர பாண்டியனும், போடிநாயக்கனூர் செட்டியாரும் மாப்பிள்ளைகள் போல எதிரிகள் கூட இல்லாமல் வந்து விடுவார்கள் போல இருக்கின்றது. இதை நினைக்கும்போது என் வயிறு பற்றி எரிகின்றது. யாரையாவது போட்டிக்கு பெயருக்காவது நிறுத்தாவிட்டால் நமது யோக்கியதையே போய்விடும் போலிருக்கின்றது. ஆதலால் நாம் பணம் கொடுத்தால் கூட ஆள்களைக் காணோமே என்கின்ற கவலையில் இருக்கின்றேன்.

**மூர்த்தி :** சரி மதுரை டவுன்சீட்டு ( Seat ) ஒன்று இருக்கின்றதல்லவா. அது நமது திரு. துளசிராமுக்குத் தானே அதில் என்ன ஆக்ஷேபம்?



RangaRakes tamilnavarasam.com

**வாசர்:** அது அநியாயமாய்ப் போகின்றது. ஏன்? போய்விட்டதென்றே சொல்லலாம்.

**மூர்த்தி :** ஏன் அப்படிச் சொல்லுகின்றீர்கள்? அதில் கூடவா சந்தேகம்.

**வாசர் :** அதில் சந்தேகம் ஒன்றுமில்லை. தீர்மானமேதான். நமது துளசிராம் நிற்கவேமாட்டார். நின்றாலும் அவர் வகையார்களே ஓட்டு செய்யமாட்டார்கள்.

**மூர்த்தி :** ஏன் ஓட்டு செய்யமாட்டார்கள்?

**வாசர் :** ஏன் என்றா கேட்கின்றாய். அவர்கள் முன் போல கண்மூடித் தனமாக இல்லை. இப்போது காரியம் தெரிந்து கொண்டார்கள். முக்கால் வாசிப்பேர்கள் திரு.ஆர்.எஸ்.நாயுடுவுக்கே போடுவதாக இப்போதே தீர் மானம் செய்து கொண்டார்கள் என்பது அந்த வகைக்காரர்களாலேயே சொல்லத் தெரிந்து கொண்டேன். அந்த ஸ்தானம் கண்டிப்பாக ஆர்.எஸ். நாயுடுவுக்குத்தான். அதைவிட்டு வேறே பேச்சுப் பேசு.

**மூர்த்தி :** சரி அதுவும் தொலைந்து போகட்டும். திருச்சி ஜில்லாவோ?

**வாசர்:** அது மாத்திரம் என்ன வாழுமா? எப்படியும் திரு.நாராயண சாமிப்பிள்ளை வந்து விடுவார். நம்ம சேதுவுக்கு பதிலாக யாரையாவது போடலாம் என்றுதான் தோன்றுகின்றது. ஏன் என்றால் நம்மை ஏமாற்றி விட்டார். ஆனால் வேறு யாரைப் போடுவது என்று பார்த்தால் எல்லாம் அவரைவிட மோசமான ஆள்களாகத்தான் இருக்கின்றார்கள். அன்றியும் வேறு ஒரு பிராமணனை நிறுத்தினால் இரண்டு பிராமணன் சண்டையில் ஒரு பிள்ளைக்கோ, தேவருக்கோ, ரெட்டிக்கோ போய்விட்டால் அது இதைவிட கேவலமாய்விடும். பிராமணன் என்கின்ற பெயருக்காவது ஒரு ஆள் இருக்கட்டும். அவர் வந்தாலாவது மறுபடியும் மந்திரியாக்கி மாதம் 4,000 ரூ. வாங்கிக் கொண்டு ஏதோ 4 பிராமணனுக்கு வேலை கொடுத்துக் கொண்டி ருக்கட்டும். அவரை தொந்திரவு செய்ய வேண்டாம். ஆனால் நம்ம கணக்கிலும் சேர்க்க வேண்டாம்.

**மூர்த்தி :** சரி, திருச்சி, சீரங்கம், டவுன் சீட்டு இருக்கின்றதே. அதைப் பற்றி என்ன சொல்கின்றீர்கள்.

**வாசர்:** சரி, அது கண்டிப்பாய் இப்போது இருக்கும் திரு.யூ.ராமசாமி அய்யருக்கு கிடைக்காது. தவிரவும் முன்போல் இரண்டு பிராமணரல்லாதார் சண்டை போட்டுக்கொண்டால் மாத்திரம் ஒரு பிராமணனுக்குக் கிடைக்கும். ஆனால், இந்த தடவை அவர்களுக்குள் சண்டை வராது என்றே நினைக்கின்றேன்.

**மூர்த்தி :** சரி, இனி நம்முடைய தஞ்சாவூரில் மூன்றும் நம்முடையது தானே?



**வாசர் :** சரிசரி, நன்றாகச் சொன்னாய். மூன்றும் நம்முடையதென்றா சொல்லுகின்றாய்? மூன்றும் ஜஸ்டிஸ் கட்சிக்காரருக்கே போய்விட்டாலும் சரி அல்லது சுயமரியாதை கட்சிக்காரருக்கே போய்விட்டாலும் சரி. எப்படியாவது இந்த முத்தையா முதலியாருக்கு இல்லாமலிருந்தால் அதுவே பத்து ஸ்தானம் நமக்கு கிடைத்தது போலாகும்.

**மூர்த்தி :** இந்த தடவை கண்டிப்பாய் அவருக்கு ஆகப்போவதில்லை. நீங்கள் ஏன் கவலைப்படுகின்றீர்கள். காரணம் சொல்லட்டுமா?

**வாசர் :** நீ ஏன் அந்தக் கனவு காண்கின்றாய். உன்னுடைய காரணத்தைத்தான் சொல்லு பார்ப்போம்.

**மூர்த்தி:** சொல்லுகின்றேன் கேளுங்கள். ஒன்று சுயமரியாதைக் கட்சியில் சேர்ந்ததால் மடாதிபதிகள் உதவி செய்யமாட்டார்கள்.

இரண்டு திருவாளர்கள் சாமியப்பா, பன்னீர் செல்வம் ஆகியவர்கள் முத்தையா முதலியாருக்கு விரோதிகள். மூன்று நம்முடைய ஆட்கள் கண்டிப்பாய் அவருக்கு ஓட்டு செய்ய மாட்டார்கள். இந்த மூன்று முக்கிய காரணங்கள்தான்.

**வாசர் :** இதுதானா பெரிய சங்கதியாய் கருதிவிட்டாய். மடாதிபதிகள் திரு.முதலியாரை சட்டசபைக்கு நிற்கும் படிக்கும் செலவும் போட்டுக் கொள்ளுவதாகவும் வற்புறுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நான் மடாதிபதி களுக்கு என்ன என்னமோ சொல்லிப் பார்த்தேன். அவர்கள் அத்தனையும் கேட்டுக்கொண்டு கடைசியாக அதையெல்லாம் முதலியாரிடமும் சொல்லி விட்டார்கள். அந்த மடாதிபதிகளுக்கு முத்தையா ரொம்பவும் நம்பிக்கை யுள்ளவர். சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி மடாதிபதிகளுக்கு ஒன்றும் தகராறில்லை. அது எப்படியாவது பிராமணர்களைத்தான் ஒழிக்கக் கிளம்பி இருக்கின்றதே அல்லாமல் பிராமணரல்லாத மடாதிபதிகளுக்கு ஒன்றும் அதனால் ஆபத்தில்லை என்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

சுயமரியாதைக்காரருக்கும், சைவர்களுக்கும் இருக்கும் தகரா றெல்லாம் ஒன்றே ஒன்றுதானே. அதாவது கோவில்களுக்குள் எல்லோரையும் விடவேண்டும் என்பது. இதில் சைவ மடாதிபதிகள் யாருக்கும் தகராறு இருப்பதாய் தெரியவில்லை. சீக்கிரத்தில் அவர்கள் எல்லாம் ராஜியாய் போய் நம்மீது திரும்பப் போகின்றார்கள். அதெல்லாம் முத்தையா முதலியார் இரண்டு பேருக்கும் தக்கபடி சொல்லி, கூடிய சீக்கிரத்தில் ஒரு விதத்தில் முடிவு செய்துவிடுவார்.

அடுத்தபடியான திருவாளர்கள் பன்னீர் செல்வம், சாமியப்பா இவர்கள் விரோதம் ஒன்றும் நிலைக்காது. அதெல்லாம் வெளிக்குத் தானே யொழிய காரியத்தில் ஒருவொருக்கொருவர் முட்டிக் கொள்ளமாட்டார்கள். தவிர திரு.சாமியப்பாவும் அசெம்பளிக்கு நிற்பதாய்த் தெரிகின்றது. ஆதலால்



RangaRakes tamilnavarasam.com

அவர் விரோதத்திற்குப் போகமாட்டார். போனாலும் இருக்கின்றவர்கள் விட மாட்டார்கள். எப்படியாவது இருவரையும் சரிப்படுத்தி விடுவார்கள். திரு. சாமியப்பாவை சரிக்கட்டிவிட்டால் திரு.பன்னீர்செல்வம் தகராறு இருக்கவே இருக்காது.

அன்றியும் திரு.முத்தையா சென்ற தேர்தலில் "சுதேசமித்திரனும்" மற்றும் சில பிராமணர்களும் உள்ளுக்குள் விரோதமாக வேலை செய்தும் இந்த மாகாணத்திலேயே அதிகப்படியான ஓட்டு வாங்கினவர். பிராமணர்கள் வெகுபேர் இந்த தடவை அவருக்கு வெளிப்படையாகவே அனுகூலமாக வேலை செய்வார்கள் என்று கூடத் தெரிகின்றது.

தவிர, அவரும் இந்த தேர்தலுக்கு முப்பது நாற்பது ஆயிரம் ரூபாய் எடுத்து வைத்து விட்டார். போதாக்குறைக்கு நாகப்பட்டினம் திரு.காயா ரோகணமும் சட்டசபைக்கு நின்று அவரோடு சேர்ந்து வேலை செய்யப் போகின்றாராம். அவரும் முப்பது நாற்பது ரூபாய் ஆறு மாத வரும்படியை இப்போதே ஒதுக்கி வைத்துவிட்டாராம். இரண்டு பேரும் சேர்ந்துவிட்டால் பிறகு சொல்லக்கூட வேண்டுமா? மூன்றாவது ஸ்தானம் தானாக வந்தால் வரட்டும் இல்லாவிட்டால் வேண்டியதில்லை என்று அவ்வளவு அலட்சிய மாய் சொல்லுகின்றார்களாம். அப்படி அவர்கள் அலட்சியமாய் விட்டால்கூட நம்மில் யாருக்காவது வருமா என்பது சந்தேகமாக இருக்கின்றது. ஏனெனில் திரு. மருதவாணம் பிள்ளைக்கு ஒன்று நாம் விடவேண்டாமா? தவிர திரு. நாடிமுத்து பிள்ளை ஆசைப்பட்டால் அவருக்கு விட வேண்டாமா? எப்படியாவது கஷ்டப்பட்டால் இந்த ஜில்லாவில் வேண்டுமானால் ஒரு ஸ்தானம் கிடைக்கலாம்.

**மூர்த்தி :** அப்பாடா! இது வரையில் ஐந்து ஜில்லாவுக்கு கணக்கு போட்டதில் ஒரு ஸ்தானம் கிடைத்தது. மற்றபடி தென் ஆற்காடு ஜில்லாவோ?

**வாசர் :** அதில் ஒன்று திரு.வேணுகோபால் நாயுடுவுக்கு கிடைக்கும் மற்றொன்று திரு.குமார ராஜா முத்தையா செட்டியாருக்கு கிடைக்கலாம். (ராஜா சர். அண்ணாமலையாரின் குமாரர்) மற்றொன்று திரு.சீதாராம ரெட்டியாருக் காவது மற்றும் வேறு யாருக்காவது கிடைக்குமே ஒழிய எந்த விதத்திலும் இத்தடவை பிராமணனுக்கு கிடைப்பதற்கு மாத்திரம் இடம் இல்லை.

**மூர்த்தி :** சரி, அந்த ஜில்லாவிலும் உள்ளதும் போச்சுதா? தொலைந்து போகட்டும். வடஆற்காடு ஜில்லாவின் சங்கதி என்ன?

**வாசர் :** அதுவும் அநேகமாய் அப்படித்தான் ஆகும். ஒன்று திரு.மாணிக்கவேலுக்கும், மற்றொன்று திரு.கிருஷ்ணசாமி நாயுடுவுக்கும் உறுதி. மூன்றாவது ஸ்தானம் திருவாளர்கள். வெங்கிட்டரங்கமும் ஆதிநாரா யண செட்டியாரும் சண்டை போட்டுக் கொள்ள வேண்டியது தான். வெங்கிட்டரங்கம் தனக்கு வேண்டாமென்று சொல்லுகின்றாராம். ஆதி நாராயண செட்டியாரோ என்ன என்னமோ குள்ளநரி தந்திரம் செய்கின்றார்.



கடைசியில் எப்படியாகுமோ தெரியவில்லை. ஒரு சமயம் 100-க்கு 25 பங்கு ஆதி நாராயண செட்டியார் வந்தால் வரலாம். ஒரு சமயம் வன்னியகுல க்ஷத்திரியர்களுக்கும் நாயுடு க்ஷத்திரியர்களுக்கும் புத்தி வந்து ஒன்று சேர்ந்து செட்டியார் யோக்கியதை தெரிந்து கொண்டார்களானால் மற்றும் ஒரு படையாச்சியோ நாயுடோ கடைசி பக்ஷம் முதலியாரோ தான் வரக்கூடும். ஆனால் செட்டியார் வருவதுகூட அவ்விரு சமூகத்திய முட்டாள்தனத்தைப் பொறுத்திருக்கிறது.

**மூர்த்தி:** சரி! ஆதிநாராயண செட்டியார் வருவதைவிட வராமல் இருப்பதே மேல். ஏனென்றால், வந்துவிட்டால் அதுவேண்டும் இது வேண்டும் மக்களுக்கு உத்தியோகம் வேண்டும் என்றும் மற்றும் பல விதத்தில் நம் உயிரை வாங்கி விடுவார்.

**வாசர் :** அப்படிச் சொல்ல வேண்டாம். அவர் பார்ப்பனரல்லாதாரை பொய்யும் புளுகும் சொல்லி வைவதற்கும், விஷமப் பிரசாரம் செய்வதற்கும், பிறத்தியார் நம்பும்படி தந்திரமாய் பேசுவதற்கும் அவர் நல்ல ஆசாமி தெரியுமா?

**மூர்த்தி :** சரி, தொலைந்து போகட்டும். வந்த காலத்து நல்லவரா கெட்டவரா பார்த்துக் கொள்ளலாம். செங்கற்பட்டு ஜில்லாவைப் பற்றி என்ன சொல்லுகின்றீர். அதிலுள்ள இரண்டு ஸ்தானமும் நம்முடையது தானே?

**வாசர் :** சரியாய் போய்விட்டது. முதலாவது திரு.முத்துரங்கமும் கிருஷ்ணசாமி நாயக்கரும் இந்தத் தடவை சட்டசபைக்கு நிற்பதில்லை என்று சொல்லிவிட்டார்கள். வேறு ஆள் பிடிப்பது வெகு கஷ்டமாய் இருக்கிறது. ஆனாலும் சூனாம்பேட்டைக்கும் அப்பாசாமிக்கும் இருக்கும் விரோதத்தினால் யாரையாவது போட வேண்டுமென்று சூனாம்பேட்டைக்கு ஆத்திரம் மாத்திரம் இருக்கின்றது. நிற்பதற்குத்தான் ஆட்களைக் காணோம். அவைகள் அநேகமாய் ஒன்று திரு. வேதாசலத்திற்கும் மற்றொன்று திரு.ஜெயராம நாயுடுவுக்காவது அல்லது வேறு ஒரு ரெட்டியாருக்காவதுதான் போய்விடும். அதை நம்புவதில் பிரயோஜனமே இல்லை.

**மூர்த்தி:** சரி, நம்முடைய மதராஸ் 4 ஸ்தானங்கள் இருக்கின்றதே அவை நான்கும் நம்முடையதுதானே?

**வாசர் :** நான்குக்கும் நமக்காக நிற்பதற்கு ஆள்கள் எங்கே முதலில் சொல் பார்ப்போம். முதலாவது திருவாளர்கள் கோவிந்தராஜு முதலியார் பெயரையும் பக்தவத்சலத்தின் பெயரையும் சென்னை ஓட்டர்களிடம் சொன்னால் அடிதான் கிடைக்கும். அவர்கள் யோக்கியதை ஓட்டர்களுக்கு அவ்வளவு தூரம் தெரிந்து போய்விட்டது. திரு.மல்லையாவையோ பிராமணன் என்கிற முறையால் தள்ளிவிடுவார்கள். ஒரு சமயம் திரு.சாமி. வெங்கிடாசலத்திற்கு கிடைத்தால் கிடைக்கலாம். ஆனால் அவரே அந்த தொகுதியில் நிற்க பயந்து கொண்டு வேறு தொகுதிக்கு நிற்க பிரயத்தனப்



RangaRakes tamilnavarasam.com

படுவதாய்த் தெரிகிறது. அவர் நின்று ஜெயித்தாலும் முன்போல நமக்கு உதவியாய் இருக்கமாட்டார். நமக்கு தலையும் ஜஸ்டிஸ் கக்ஷிக்கு வாலையும் காட்டிக் கொண்டிருக்கிறார். ஆதலால் அதை நம்புவதில் பயனில்லை.

**மூர்த்தி :** ஜஸ்டிஸ் கக்ஷியில் யார்தான் நிற்பார்கள்?

**வாசர் :** திரு டாக்டர் சி. நடேச முதலியார் இஷ்டப்படி அவர் யாரை நிறுத்துகின்றாரோ அவருக்குத்தான் ஆகக்கூடும். கொஞ்சம் நஞ்சம் நமக்கு இருந்த நம்பிக்கையும் "ஆஸ்தீக" சங்க காலிகளால் கெட்டுப் போய் விட்டது. அன்றியும் அதனால் நமது யோக்கியதையும் வெளியாய் விட்டது. இதனால் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்கள் தங்கள் பெருமையைச் சொல்லிக் கொண்டுகூட ஓட்டுக் கேட்க வேண்டியதில்லை. நம்ம யோக்கியதையையும் காங்கிரஸ் யோக்கியதையையும் சொல்லிக் கேட்டாலே அவர்களுக்கு கண்டிப்பாய் ஜெயம் கிடைத்துவிடும்.

**மூர்த்தி :** சரி, சேலம் ஜில்லா என்ன ஆகும்?

**வாசர் :** ஒன்று திரு. எல்லப்ப செட்டியாருக்கு கிடைத்துவிடும். மற்றொன்று டாக்டர் சுப்பராயனுக்குக் கிடைக்கும்.

**மூர்த்தி :** ஏன் திரு. ராஜகோபாலாச்சாரி நிற்கக் கூடாதோ?

**வாசர்:** நிற்கலாம். அவருக்கும் ஆசைதான்; ஆனால் திரு. வரதராஜுலு ஒரு பக்கம் உபத்திரவம் செய்கின்றார். என்ன வென்றால் ராஜகோபாலாச்சாரி நின்றால் தானும் நிற்பேன் என்று சொல்லுகின்றாராம். ஆதலால், ராஜகோபாலாச்சாரி தனக்கு வேண்டாம் என்பதுபோல் பேசுகிறார். ஆனாலும் ஜில்லா முழுவதும் இதற்காகத்தான் மதுவிலக்கின் பேரால் சுற்றுகின்றார். கடைசியாக அவர் நின்றாலும் ஒன்றும் ஆகப் போவதில்லை. மேற்கண்ட இருவரும் தான் வருவார்கள். ஒரு சமயம் டாக்டர் சுப்பராயன் நிற்கவில்லையானால் திரு.ராஜமாணிக்க பண்டாரத்திற்காவது, தருமபுரி செட்டியாருக்காவது ஆகும்.

**மூர்த்தி :** கோயமுத்தூர் ஜில்லாவோ?

**வாசர் :** அதுவும் அப்படித்தான். ஒரு கவுண்டர், ஒரு முதலியார், ஒரு செட்டியார் வருவார்கள்.

**மூர்த்தி :** ஏன் நாயுடுமார் வரமாட்டார்களோ?

**வாசர் :** ஒரு சமயம் அவர்களிலும் யாராவது ஒருவர் வந்தாலும் வரலாம். ஆனாலும் எந்தவிதத்திலும் திரு.வெங்கிட்டரமணய்யங்கார் மாத்திரம் வரமாட்டார் என்பது உறுதி.

**மூர்த்தி :** அப்படியானால் அங்கு யாரோ வந்துவிட்டுப் போகட்டும். நமக்குக் கவலையில்லை. ஏனென்றால், அய்யங்காரைத்தவிர யார் வந்தாலும் நம்முடன் சேரப் போவதில்லை.



RangaRakes

**வாசர் :** இதுதான் பொதுத் தொகுதியின் நிலை. இனி கிறிஸ்தவத் தொகுதியில் நம்ம குழந்தை வந்தால்தான் நமக்கு உதவும். ஆனால் அவருக்கு கட்டின பணம் கூட வராது. மற்றபடி யார் வந்தாலும் திரு. ஆரோக்கியசாமி வந்தாலும் நமக்குப் பயனில்லை. மகம்மதியர்களிலும் ஜனாப்புகள் ஷாபிமகமது, அமித்கான், பஷீர் அகமது ஆகிய இந்த மூன்றே மூன்று கனவான்களைத் தவிர வேறு யார் வந்தாலும் பயன்படாதென்றே சொல்லலாம். ஆனால் இந்த மூன்று பேரும் வருவது கஷ்டமான வேலை. ஏனென்றால், ஜனாப் ஜமால் முகம்மது விஷயத்தில் நாம் நடந்து கொண்ட மாதிரி அப்படிச் செய்து விட்டது. மீதி உள்ளது ஜமீன்தார் தொகுதி. இந்த தடவை ஒரு ஜமீன்தாராவது நமக்கு அனுகூலமாய் நிற்கின்றவர்களைக் காணோம். எந்த விதத்திலும் நமக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை என்பது மாத்திரம் உறுதி. மற்ற தொகுதிகளைப் பற்றியும் இந்திய சட்டசபையைப் பற்றியும் மற்றொரு சமயம் பேசலாம்.

எதற்கும் இந்த தேர்தலுக்கு சுயமரியாதை இயக்கத்தையும், கடவுளையும், மதத்தையும், கோவிலையுமே பிடித்துக் கொள்ளுவோம். வேறு வழி ஒன்றையும் காணோம். ஆதலால், நம்ம ஆட்களை யெல்லாம் இனிமேல் இதைப் பற்றியே பேசச்சொல்லு.

**மூர்த்தி :** சரி, அப்படியே ஆகட்டும்.

**குடி அரசு – உரையாடல் – 19.05.1929**



tamilnavarasam.com

# பூரண சுயேச்சை இயக்கமும் திரு. சீனிவாசையங்காரும்

திரு.எஸ். சீனிவாசையங்கார் இந்த வருஷத்திய தேர்தலுக்கு ஒரு புதிய தந்திரம் கண்டுபிடிக்க வேண்டிய அவசியத்தின் மீது எல்லா அரசியல் கொள்கைகளையும்விட தீவிரமாய் இருக்கவேண்டும் என்கின்ற ஆத்திரத்தின் மீது பூரண சுயேச்சையே தமது அரசியல் கொள்கை என்று வெளிப்படுத்திக் கொண்டார். கல்கத்தா புரட்சி இயக்க உணர்ச்சி கொண்டால் செல்வாக்குப் பெறலாம் என்று கருதிய திரு.சுபாஷ் சந்திரபோசும் சமீபத்தில் ருஷியாவில் சுற்றுப் பிரயாணம் செய்ததின் பயனாய் சமத்துவ உணர்ச்சி கொண்டால் செல்வாக்குப் பெறலாம் என்று கருதிய திரு.ஜவாரிலால் நேருவும் திரு.சீனிவாசய்யங்காரையும் அவரது பூரண சுயேச்சைக் கொள்கையையும் நம்பி இவருடன் சேர்ந்தார்கள்.

ஆனால் திரு.சீனிவாசையங்கார் பூரண சுயேச்சைக் கூப்பாட்டிற்கு தமிழ்நாட்டில் யோக்கியதை இல்லை என்பதையும் அரசாங்க அடக்குமுறையின் வேகத்தையும் தெரிந்துதான் பூரண சுயேச்சை இயக்கத் தலைமைப் பதவியை ராஜீனாமா செய்துவிட்டார். அதோடு கூடவே இனியும் ஒரு புதிய இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் சொல்லி இருக்கிறார். இவர் தொட்டது துலங்காது, என்றிருந்தாலும் என்றைக்கிருந்தாலும் ஓட்டர்களை ஏமாற்ற ஏதாவது ஒரு புரட்டு வேண்டியிருப்பதால் திருவாளர்கள் வரதராஜுலு, கல்யாணசுந்தரம் ஆகியவர்களுடன் சேர்ந்து ஏதாவது ஒரு கொள்கையை வெளிப்படுத்துவார். ஏனென்றால் சீனிவாசையங்கார் கூப்பிட்டபோது ஓடவும் வேண்டுமென்று கூப்பிட்டவுடன் ஓடிவரவும் அய்யங்கார் வார்த்தையை “வேதவாக்காக”க் கொண்டு பிரசாரம் செய்யவும் தமிழ்நாட்டில் இந்த இரண்டு கனவான்கள்தான் உண்டு, மற்றபடி, இப்போது அய்யங்கார்கூட இருக்கும் எந்தப் பார்ப்பனரல்லாதாரும் அய்யங்காரை விட்டு பிரிந்து மறுபடியும் அவருடன் சேருவதானால், மானம் ஈனம் சுயமரியாதை என்பவைகளைப் பற்றி சற்றாவது யோசித்துப் பார்ப்பார்கள். ஆனால், மேல்கண்ட இரண்டு கனவான்களுக்கும் இந்த விஷயங்களில் சிறிது கூட கவலை கிடையாது. ஏனென்றால் முற்றத்துறந்த ஞானியிடம் மானம் ஈனம் இருக்க இடமேது?

**குடி அரசு - கட்டுரை - 26.05.1929**



# மாளவியாவின் பித்தலாட்டம்

திரு.பண்டிதர் மதன்மோகன மாளவியா சென்னை மாகாணத்திற்குள் கால் வைத்தது முதல் சமயத்திற்குத் தகுந்தபடி பேசி ஜனங்களை ஏமாற்றி வந்ததும் அந்த புரட்டுகளை பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாதார்களும் வெளிப்படுத்தியதும் “மித்திரனிலும்” “திராவிடனிலும்” பார்த்திருக்கலாம். அவர் சென்ற இடங்களிலெல்லாம் கோவிலுக்குள் தீண்டத்தகாதவர் என்கிறவர்கள் போவதற்கு இந்து சாஸ்திரங்கள் இடங்கொடுக்கிறதென்று சொல்லிக் கொண்டே வந்துவிட்டு தாம் அதிக சாஸ்திரம் பார்த்திருப்பதாயும் சொல்லிவிட்டு கடைசியாக சென்னையில் 22 தேதி கூடிய சாஸ்திரிகள் கூட்டமொன்றில் சிக்கி தீண்டத்தகாதவர்கள் என்பவர்கள் கோவிலுக்குள் பிரவேசிப்பதற்கு சாஸ்திரத்தில் இடமில்லை என்று சொல்லித் தப்பித்துக் கொண்டாராம். எனவே திரு.மாளவியாவின் பித்தலாட்டம் பார்ப்பனர்களின் அசல் அயோக்கியத்தனத்திற்கு ஒரு உதாரணமாகும்.

**குடி அரசு - கட்டுரை - 26.05.1929**



RangaRakes tamilnavarasam.com

# உத்தியோக ஆசையும் தேசீயப் புரட்டும்

திரு வரதராஜுலுக்கு கொஞ்சகாலமாய் உத்தியோகப் பைத்தியம் தலைக்கேறி விட்டது. தேசீயமெல்லாம் இப்போது உத்தியோகத்திற் குள்ளாகவே ஐக்கியமாய் விட்டது. தமிழ்நாட்டில் பார்ப்பனர்கள் கூட சேருவதற்கு சுயேச்சையுள்ள பார்ப்பனரல்லாதார் ஒருவருமில்லாமல் போனதையும் தமது கக்ஷிக்கு எந்த விதத்திலும் கூலிகளையும் காலிகளையும் விட வேறு யாருடைய அனுதாபமும் இல்லாமல் போவதையும் பார்த்து நாங்கள் உத்தியோகங்கள் ஏற்றுக் கொள்ள சம்மதித்து உத்தியோகங்கள் சம்பாதிக்கப் போகின்றோம், யாராவது வருகின்றீர்களா? என்று கேட்டவுடன் திரு. வரதராஜுலுவைப் போன்ற ஆள்கள் கூட அப்படியானால் தமக்கும் ஏதாவது கிடைக்காதா என்ற எண்ணத்தின் மீது இப்போது அய்யங்காருடன் சேர்ந்து கொண்டு உத்தியோகம் ஒப்புக் கொள்ள வேண்டியது அவசிய மென்றும் "நான் வெகு காலமாக இதைச் சொல்லிவந்திருக்கிறேன்" என்றும் சொல்லிக் கொண்டு அய்யங்கார் பின்னால் கடற்கரைக்குச் சென்று கூப்பாடு போட ஆரம்பித்துவிட்டார். ஆனால் திரு. வரதராஜுலு உத்தியோகம் சம்பாதிப்பதற்கும் ஒப்புக் கொள்ளுவதற்கும் சொல்லும் காரணம் தான் நம்மை இந்த வியாசம் எழுதச் செய்கின்றது.

அதாவது :-

"ஜஸ்டிஸ் கட்சியாரை ஒழிப்பதற்குத் தாம் மந்திரி வேலை ஒப்புக் கொண்டாக வேண்டும்" என்கின்றார். காங்கிரஸ்காரர்களுக்கோ அல்லது திரு.வரதராஜுலுவுக்கோ மந்திரி வேலை ஒப்புக் கொள்ள என்றைக்காவது யோக்கியதை இருந்து இவர்கள் ஒப்புக் கொள்ளாமல் தியாகம் செய்திருந்தால் இவர்கள் பேச்சு யோக்கியமானதாயிருக்கும். ஒத்துழையாமை ஆரம்பத்தில் முதல் சட்டசபையில் திரு.சீனிவாசையங்கார் காங்கிரசுக்கு விரோதமா யிருந்து காங்கிரசையும் வைது கொண்டு சட்டசபைக்குப் போய் அங்கு தமக்கு எவ்வித யோக்கியதையும் கிடைக்காததால் விட்டுவந்து "சீ! இந்தப் பழம் புளிக்கு"மென்று கருதி கூப்பாடு போடுகின்றவர். இரண்டாவது சட்ட சபைக்கு எல்லோரும் போகவேண்டுமென்று திரு.வரதராஜுலுவும் கூட சத்தம் போட்டு சுயராஜ்யக் கட்சியை ஆதரித்து ஊர் ஊராய்ப் பார்ப்பனர்கள் பின் திரிந்து, அவர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுத்தவர். அப்பொழுதும் காங்கிரஸ்காரருக்கு உத்தியோகம் ஒப்புக்கொள்ளகூடிய பலமும் யோக்கியதையும் கிடைக்கவில்லை என்றும் அதோடு சட்டசபையில் தங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றும், சட்டசபைக்குப் போனது மானக்கேடு என்றும் சொல்லிக் கொண்டு சட்டசபை கலையுமுன்பே முகத்தில் துணியைப் போட்டு மறைத்துக் கொண்டு அழுது கொண்டே வந்தார்கள். பிறகு மூன்றாவது சட்டசபைக்கும் திருவாளர்கள் சீனிவாசையங்கார், கல்யாணசுந்திர முதலியார், வரதராஜுலு, ஷாபிமுகம்மது சாயபு, ஐயவேலு, குப்புசாமி, அண்ணாமலை ஆகிய எல்லோர்களுமே ஊர் ஊராய்த்திரிந்து காங்கிரஸ் காரர்களுக்கு ஓட்டு வாங்கி கொடுத்தார்கள். கடைசியாக "காங்கிரஸ்காரர்களே எல்லா ஸ்தானங்களையும் கைப்பற்றி விட்டார்கள். ஜஸ்டிஸ் கட்சியை அழித்தாய்விட்டது" என்று விளம்பரப்படுத்தினார்கள். இதைத் திரு.வரத ராஜுலு, திரு.சத்தியமூர்த்தியை முதல் மந்திரி ஸ்தானத்தை ஒப்புக் கொள்ளும் படி தந்தியிற் சொன்னார். திருவாளர்கள் விஜயராகவாச்சாரி, ராஜகோபாலாச் சாரி, சி.பி.ராமசாமி அய்யர், சீனிவாசய்யங்கார் முதலிய எல்லாப் பார்ப்பனர் களும் தங்கள் கையாலானவரை பார்த்தார்கள். கடைசியாக ஒன்றுமே முடியாமல் ஒரு புதுக்கட்சியை சிருஷ்டித்து அதன் பெயரால் மந்திரி ஆதிக்கத் தைப் பெற்று 'தேசீயத்தை' நடத்த ஆரம்பித்தார்கள்.

அதுவும் மூன்று நாளைய வாழ்வாய் முடிந்தது. அதுமுதல் இதுவரை என்ன என்ன தந்திரமோ செய்து பார்த்தாய் விட்டது. ஜஸ்டிஸ் கட்சியின் ஒரு சுள்ளாணியையும் அசைக்க முடியவில்லை. காங்கிரசுக்கு சில படித்த பணக்காரர்களிடமும் பாமர மக்களிடமும் மதிப்பு இருந்த காலத்திலேயே ஒரு காரியமும் செய்ய முடியாமல் போன இவர்கள் காங்கிரஸ் யோக்கியதை சந்தி சந்தியாய்ச் சிரிப்பாய் சிரிக்கும்போதும், காங்கிரசு தேசீயம் என்றால் காலி களுடையவும், கூலிகளுடையவும், வயிற்றுப் பிழைப்பு தேசீயக்காரர்களு டையவும் கூட்டம் என்று வெளிப்படையாய் அகராதியில் அர்த்தம் ஏற்பட்டிருக்கும் இக்காலத்திலும் காங்கிரசென்று சொல்லி ஒரு மூடனை யாவது ஏமாற்ற முடியுமா? என்று கேட்கின்றோம் - காங்கிரஸ், மந்திரி வேலையையும் உத்தியோகத்தையும் ஏற்றுக் கொள்ளப் போகின்றது, ஜனங் களுக்கெல்லாம் - மந்திரி பிச்சையும் உத்தியோகப் பிச்சையும் கொடுக்கப் போகின்றோம் என்று "ஒரு முதலை, தெருவில் போவார்களைக் கூப்பிட்டு பொன் காப்பு கொடுப்பதாய்ச் சொன்ன கதைபோல்" கூப்பிடுவதானாலும், திருவாளர்கள். வரதராஜுலுவையும் கல்யாணசுந்தரத்தையும் ஆமாசாமி போட்டு பின்பாட்டு பாடச் சொல்லுவதினாலும் யார் மயங்கிவிட முடியும்? எனவே, இனி கல்யாண சுந்தரமும் வரதராஜுலுவும் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி சென்ற வருஷத்தில் பேசியிருக்கும் பேச்சும் இப்போது பேசும் பேச்சும் என்ன என்பதை சற்று கவனித்துப் பார்ப்போம்.

சென்ற வருஷ கோயமுத்தூர் மகாநாட்டில் பேசும்போது திரு. கல் யாணசுந்தரம் பார்ப்பனர்களின் அயோக்கியத்தனத்தையும் காங்கிரசின் அக்கிரமத்தையும் குறிப்பாய் திரு.சீனிவாசையங்கார் அயோக்கியத் தனங்களையும் எடுத்துச் சொல்லி காங்கிரஸ் தலைவரான சீனிவாசையங்





RangaRakes tamilnavarasam.com

காரைத் தலைவர் என்று சொன்ன நாக்கை அறுத்து சாணியில் போட்டு பிராயச்சித்தம் செய்து கொள்ளுவதாகவும், இனிமேல் ஜஸ்டிஸ் கட்சித் தலைவரையே தாம் தலைவர் என்று மதித்துக் கூப்பிடப் போவதாகவும் சுமார் 5000 பேர்கள் முன்னிலையில் சொல்லி ஜனங்களுடைய கைத்தட்டலைப் பெற்றவர். தீண்டாமையும் வகுப்புப் பிணக்கும் உள்ள நாட்டில் அரசியல் இயக்கம் (காங்கிரஸ்) கூடாது அதை ஒழிக்க வேண்டும் என்றும் சொன்னவர். அது மாத்திரமல்ல "காங்கிரஸ் உத்தியோகமேற்றதால் நான் காங்கிரசிலிருந்து விலகிக் கொள்ளுகிறேன்" என்று ராஜினாமா செய்தவர். இன்னமும் அவர் காங்கிரசையும் திரு.சீனிவாச ஐயங்காரையும் உத்தியோகம் ஒப்புக் கொள்ளுவதையும் பற்றி கண்டித்தும் வைதும் எழுதின எழுத்துக்கள் நமது குப்பையில் வண்டி வண்டியாய்க் கிடக்கின்றன. இப்படிப்பட்டவருக்கு இப்போது காங்கிரசும், உத்தியோகமேற்பும், சீனிவாசய்யங்கார் தலைமையும், ஜஸ்டிஸ் கட்சியை வைவதும், அவர்களுக்கு ஓட்டுக் கொடுக்காதீர்கள் என்பதும் என்ன அவசியத்திற்காக? அதுவும் தேர்தல் பிரசாரம் வரும்போது மாத்திரம் ஏன் வந்தது? என்பது விளங்கவில்லை. அது போலவே திரு.வரத ராஜுலுவின் யோக்கியதையையும் சற்று கவனிப்போம். திரு.வரதராஜுலுவும் பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஆரம்பித்தவுடன் திரு.கல்யாணசுந்தரத்தைப் போலவே பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டு அவர்கள் பின் ஊர் ஊராய்த் திரிந்து கொண்டு டாக்டர், நாயரையும், சர்.தியாகராயரையும், பார்ப்பனரல்லா தார் இயக்கத்தையும் மிக்க கேவலமாய் வைவதின் மூலம் பார்ப்பனர்களா னாலும் அவர்களது பத்திரிகைகளினாலும் விளம்பரம் செய்யப்பட்டு மனிதரானவர். அதுமுதல் இதுவரை பார்ப்பனர்களுக்கே நல்ல பிள்ளையாய் இருப்பதுடன் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கும் அவர்களது நலத்திற்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இடையூறும் துரோகமும் செய்து கொண்டும், ஏதாவது ஒரு சமயத்தில் பார்ப்பனர்கள் இவரை லட்சியம் செய்யாவிட்டால் மாத்திரம் மறுபடியும் பார்ப்பனர்களைப் பயப்படுத்துவதற்காகப் பார்ப்பனரை வைதுகொண்டு பார்ப்பனரல்லாதாரைப் பற்றியும், அவர்களது இயக்கத்தைப் பற்றியும் புகழ்ந்துபேசி, அதில் சேருவதாய் வேஷம் போடுவதும், பிறகு அவர்கள் சரிப்பட்டுவிட்டால் மறுபடியும் பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொள்வதும், அவர்கள் இவரை லக்ஷியம் செய்யாவிட்டால் ஏதாவது ஒரு சாக்கை வைத்துக் கொண்டு தாமாகவே அவர்களுள் போய் நுழைந்து கொள் வதும் வழக்கமாயிருந்து வருவதை அநேக உதாரணங்களால் அறிந் திருக்கலாம்.

கொஞ்ச காலத்திற்குமுன் சில ஸ்தல ஸ்தாபன தேர்தல்களின் போது திரு.வரதராஜுலு பார்ப்பனர்களுக்காக எவ்வளவோ பாடுபட்டும், அவர்கள் பல இடங்களில் தோல்வி அடைய நேரிட்டவுடன் தாம் ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர ஆசைப்பட்டு, "தமிழ்நாடு" பத்திரிகையில் பார்ப்பனர்களை வைதும், ஜஸ்டிஸ் கக்ஷியைப் புகழ்ந்தும், ஷை பத்திரிகையில் எழுதிய ஒரு தலையங்கத் தின் குறிப்புகளாவன:-



"சமீப தேர்தல்களில் சுயராஜ்ஜியக் கக்ஷியாருக்கு ஒரு ஸ்தானம் கூட கிடைக்காமல் போனதற்குக் காரணம் சென்ற ஒரு வருஷ காலமாக பிராமணர்கள் செய்துவரும் சூழ்ச்சிகளை ஜனங்கள் அறியத் தொடங்கினமைதான். அதனாலேயே பிராமணர்களுக்குத் தோல்வி கிடைத்து வருகின்றது. பிராமணரல்லாதாரை நசுக்கிவிட பிராமணர்கள் கட்டுப்பாடாக செய்துவந்த சூழ்ச்சிதான் தேசீய பிராமணரல்லாதார்கள் கூட ஜஸ்டிஸ் கக்ஷியிடம் அநுதாபம் காட்டும்படி செய்துவிட்டது. எத்தனையோ பிராமணர்கள் உத்தியோகத்திற்காக காங்கிரசை எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷார் இந்நாட்டில் நிலை பெற்றது முதல் பிராமணர்கள் உத்தியோக வேட்டை ஆடி வருகிறார்கள். ஆனால் ஜஸ்டிஸ் கட்சியார் இந்த ஆறு வருஷமாகத்தான் உத்தியோகம் வேண்டும் என்று கேட்கின்றார்கள். இதில் என்ன தவறு இருக்கின்றது? இது இயற்கைதானே? உத்தியோகம் கூடாது என்றால், எல்லா வகுப்பாருக்கும் கூடாது தானே. ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கு மாத்திரம் உத்தியோகம் கூடாது என்று சொல்ல யாருக்கு அதிகாரமிருக்கிறது? யார் உத்தியோகத்திற்குப் போனாலும், காங்கிரஸ் பிராமணருக்கு ஏன் இவ்வளவு கவலை? சுயராஜ்ஜியம் வேண்டுமென்று போராடும் கூட்டத்தாருக்கு அவர் உத்தியோகத்திற்குப் போகிறார் இவர் உத்தியோகத்திற்குப் போகிறார் என்கிற ஆத்திரம் ஏன்? ஆறு வயதாகிய ஜஸ்டிஸ் கக்ஷிக்காரரை உத்தியோக வேட்டைக்காரரென்றால் 150-வருடங்களாக உத்தியோக வேட்டை ஆடிவரும் இந்த பிராமணர்களை என்னவென்று அழைப்பது? உத்தியோகங்களிலிருக்கிற பிராமணர்கள் தங்கள் பதவிகளி லிருந்து வெளியில் வந்து பிறகு ஜஸ்டிஸ் கக்ஷியாரை நீங்களும் உத்தியோகங் களை விட்டு வெளியில் வந்து விடுங்கள் என்று சொன்னால் மாத்திரம் அதை நியாயம் என்று நாம் ஒப்புக் கொள்ளுவோம். இப்போது ஜஸ்டிஸ் கக்ஷிக்காரரை உத்தியோக வேட்டைக்காரர்கள் என்று அழைக்கும் பிராமணர்கள் உத்தியோகங் களை துறந்த முனிவர்கள் அல்ல. தங்கள் ஜாதியார் விடாப்பிடியாய் பிடித்துக் கொண்டிருக்கும் உத்தியோகங்களை பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசாமல் ஜஸ்டிஸ் கக்ஷியாரைப் பற்றி மாத்திரம் தூற்றிப் பேச இந்த **அன்னக் காவடி களுக்கு** என்ன யோக்கியதை இருக்கிறது?

ஜஸ்டிஸ் கக்ஷியார் பிராமணரல்லாதார் என்கிற பாவத்திற்காக காங்கிரஸ் பிராமணர், மிதவாதப் பிராமணர், ஒத்துழையா பிராமணர், குமாஸ்தா பிராமணர் முதலிய சகல பிராமணர்களும் அபிப்பிராய பேத மின்றி ஒன்று சேர்ந்து ஜஸ்டிஸ் கக்ஷியை எதிர்த்து வருகின்றனர். குருகுலப் போராட்டத்திலும், இந்து மத பரிபாலன சட்ட விஷயத்திலும், தேசீய பிராமணரும், வைதீகப் பிராமணர்களும் நடந்து கொண்டதே பார்ப்பனர் களின் யோக்கியதையை அறியப் போதுமானது. **சின்ன காந்தி என்று ஏமாற்றிவந்த ஸ்ரீராஜகோபாலாச்சாரி முதல் ஆசாரத்திருத்தம் பேசிவந்த ஸ்ரீசீனிவாசய்யங்கார் வரை ஒன்று சேர்ந்து கொண்டு** தங்கள் ஜாதி, 'மேல் ஜாதி' என்று பேச ஆரம்பித்து விட்டார்கள், அன்று முதல் பிராமணர்கள் மீதிருந்த நம்பிக்கை தொலைந்துவிட்டது. தேசீய கிளர்ச்சியில் உள்ள



RangaRakes tamilnavarasam.com

பிராமணர்கள் நியாய புத்தி உள்ளவர்களாயிருந்திருந்தால் இன்றுள்ள பிராமணர் - பிராமணரல்லாதார் என்கிற சண்டை ஏற்பட்டிருக்காது. பிராமணர்கள் சில அயோக்கியர்களை ஏவிவிட்டு பிராமணரல்லாதாரை திட்டச் சொன்னதாலும் தேர்தல்களில் கையாளப்படும் சூழ்ச்சிகளைக் கண்ட தாலும், ஸ்ரீமான்கள் நாயுடுவும் முதலியாரும் காங்கிரசிலிருந்து விலகிக் கொண்டார்கள். சில பிராமணரல்லாத அன்னக் காவடிகளை ஏவிவிட்டு பிராமணரல்லாத தலைவர்களைத் திட்டும்படியும் பத்திரிகைகளில் தாக்கி எழுதும்படியும் செய்தார்கள். பணத்தைக் கொண்டு எல்லாம் செய்துவிடலாம் என்று நினைத்து ஸ்ரீ. சீனிவாசய்யங்கார் பிராமணரல்லாத அன்னக் காவடி களை திட்டும்படி செய்தால் பிராமணரல்லாதார் எப்படி பொறுத்துக் கொண்டிருப்பார்கள்? இதன் பலனாக எல்லோர் மனமும் மாறிவிட்டது. **ஒரு தேசீயப் பிராமணனைவிட ஒரு ஜஸ்டிஸ் கட்சி பிராமணரல்லாதார் எவ்வளவோ சிலாக்கியம்.**

ஸ்ரீ சீனிவாசய்யங்கார் மந்திரி பதவிகளை ஒப்புக் கொள்வதாய் பேசிய பேச்சுகள் வெளியாய்விட்டன. **ஸ்ரீமான்கள் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் போன்றவர்களின் மனத்துயரத்தை யாரும் அலக்ஷியம் செய்துவிட முடியாது.** பிராமணரல்லாதாரை நசுக்கிவிடலாம் என்ற எண்ணமும், பணத்தால் எதுவும் செய்துவிடலாம் என்கிற எண்ணமும், அன்னக்காவடிகளுக்குக் கூலி கொடுத்து ஏவிவிட்டு தங்களை காப்பாற்றிக் கொள்ளலாம் என்கிற எண்ணமும் இனி பலிக்காது.

பிராமணர்கள் சுயராஜ்ஜியம் கேட்பது உண்மையானால் அரசியல் விஷயத்தில் இன்னவர்களுக்கு இத்தனை ஸ்தானங்கள் என்பதை நிர்ணயித்து எல்லோருக்கும் சம உரிமை உண்டு என்ற கொள்கையை ஒப்புக் கொண்டு பிராமணர்கள் அல்லாதார் முன்னேற்றத்திற்கு பிராமணர்கள் இடையூறு செய்யாமல் இருக்கும்படி தங்கள் ஜாதியாரைக் கேட்டுக் கொண்டு பிரபல பிராமணர்கள் கையெழுத்திட்டு உடனே ஒரு அறிக்கை வெளியிட்டால்தான் இப்பொழுது பரவிவரும் ஜாதித் துவேஷத்தை அடக்க முடியும். இல்லாதவரை கர்மத்திற்குத் தக்கபலன் கிடைக்கும்" என்று எழுதியிருக்கிறார்.

தவிர கோயமுத்தூர் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் வந்து காங்கிர சின்பேரால் பார்ப்பனர்கள் செய்யும் அக்கிரமங்களை அடக்கவும் பார்ப்பனர் களை காங்கிரசை விட்டு விரட்டவும் பார்ப்பனரல்லாதார் காங்கிரசுக்கு வரவேண்டுமென்று சொல்லித் தாமும் ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்து கொண்ட தாக பெரிய கூட்டத்தில் விளம்பரப்படுத்தினார்.

சமீபத்தில் சைமன் மதராசுக்கு வந்த போதும் காங்கிரஸ் நடவடிக்கை பிடிக்காமல் காங்கிரசில் ராஜீனாமா செய்தார். இன்னும் இதுபோல் இரண்டு மூன்று வண்டி எழுதலாம். இப்படியெல்லாம் உண்மை இருக்க இப்போது மறுபடியும் ஜஸ்டிஸ் கக்ஷி உத்தியோக வேட்டைக் கக்ஷி, அதையும் மந்திரி கள் கனம் சுப்பராயனையும் கனம் முத்தையா முதலியாரையும் ஒழிக்க



வேண்டும். ஆதலால் உத்தியோகமேற்க வேண்டும் என்று திரு.வரதராஜுலு கடற்கரையில் கூப்பாடு போடுவதின் இரகசியம் என்ன? என்பதை வாசகர்களே யோசித்துத் தெரிந்துகொள்ள விட்டுவிடுகின்றோம்.

தவிர, அன்றைய தினம் பார்ப்பனர்களை அவ்வளவு திட்டிய திரு.வரதராஜுலுக்கு இன்றையதினம் கனம் சேதுரத்தினமைய்யர் மந்திரி வேலை பார்ப்பதை பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லாமல் மற்ற மந்திரிகளை மாத்திரம் திட்டுவானேன்? இவையெல்லாம் பார்ப்பன தயவுக்கும் உத்தியோகங்கள் கிடைப்பதானால் தமக்கும் ஒரு எலும்பு கிடைக்கட்டும் என்கின்ற சுயநலமும் பேராசையும் அல்லவா? என்று கேட்கின்றோம்.

வெளியே வர யோக்கியதை இல்லாதபோதும், பதில் சொல்ல யோக்கியதை இல்லாத போதும், தம் பெயரை வெளிப்படுத்த வேறு சந்தர்ப் பமில்லாதபோதும் உடம்பு காயலா என்று சொல்லிக் கொண்டு காயலாவின் பேரால் பலனடைவதும், கொஞ்சம் சந்தர்ப்பம் கிடைத்தாலும் பார்ப்பன ரல்லாதாரை வைது பலன் பெறுவதுமாயிருந்துவிட்டு இப்போது சட்டசபைப் பைத்தியமும் உத்தியோக பேராசையும் கொண்டு பழயபடி பார்ப்பனத் தரகனாய் வெளிவந்தால் யார் இவரை நம்ப முடியும்? பார்ப்பனரல்லாதார் கக்ஷியை அழிக்கவும் பார்ப்பனரல்லாதார் மந்திரிகளை ஒழிக்கவும் ஒருவர் சட்டசபைக்கு போவதாயிருந்தால் அது திரு.காந்தி நிற்பதானாலும் கூட கடுகளவு பார்ப்பனரல்லாதார் இரத்தம் சரீரத்தில் ஓடுபவன் கூட ஓட்டுச் செய்யமாட்டான் என்பது உறுதி.

பார்ப்பனரல்லாதார் மந்திரிகள் இதுவரை இந்த மாகாணத்தில் மந்திரி தோரணையில் செய்த காரியங்களில் இன்ன காரியம் தப்பு என்று குற்றம் சொல்லி அவர்களை ஒழிக்க வேண்டுமென்று ஒருவன் சொல்வானானால் அவன் மனிதத் தன்மையுடையவன் என்று சொல்லலாம். சைமன் கமிஷனை வரவேற்றது ஒரு தப்பு என்று சொல்வதானால் சைமன் கமிஷனை இந்தியாவில் எந்த மந்திரி வரவேற்கவில்லை? வரவேற்று அவர்களிடம் இந்தியாவின் நன்மைக்கு விரோதமான எந்தக் காரியத்தைச் சொல்லி விட்டார்கள்? அதனால் என்ன தீமை விளைந்தது? என்று சொல்லி ஆட்சேபிப்பது யோக்கியமானதாகும். அப்படிக்கில்லாமல் அய்யங்கார் சொல்வதற்கெல்லாம் ஆமா சாமி போட்டுக் கொண்டு பார்ப்பனரல்லா தார்களை வைவதின் மூலமே தேசீயவாதியாகவும் சட்டசபை மெம்பராகவும் அதன் மூலம் ஏதாவது பலனடையலாமென்றும் நினைத்தால் அது இனி ஒருகாலமும் கைகூடாது என்று தைரியமாய்ச் சொல்லுவோம். மற்றபடி திரு.அய்யங்கார் யோக்கியதையை மற்றொரு சமயம் வெளிப்படுத்துவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 26.05.1929**



RangaRakes tamilnavarasam.com

### இனிமேல்தான்

# மதத்தையும் சாஸ்திரத்தையும் திருத்தப் போகின்றார்களாம்

நல்லதனமாகவும், நயமாகவும், கெஞ்சியும் கேட்பவர்களைப் பற்றி சாதாரண மனிதர்கள் சற்றும் லக்ஷியம் செய்வதில்லை. எவ்வளவுக் கெவ்வளவு நயமும் கெஞ்சுதலும் ஏற்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஆணவமும் பிடிவாதமும் மிரட்டுதலும் ஏற்படுவது நடுத்தர மனிதர்களிடம் காணும் சுபாவம். சாதாரண நடுத்தர மக்களின் குணமே இப்படி இருக்குமானால் மற்றபடி கீழ்த்தர மக்கள் அதாவது சமய சமூக வித்தியாச சேற்றில் உழன்று கொண்டு அதன் மூலம் ஆதிக்கமும் வயிற்றுப் பிழைப்பும், ஏற்படுத்திக் கொண்ட இழி மக்களிடம் கெஞ்சுதலுக்கும் நல்லதனத்திற்கும் செவிசாய்ப்புக்கும் எதிர்பார்ப்பது எங்ஙனம் கூடும்?

உதாரணமாக, சமயக்கட்டுப்பாட்டுக் கொடுமைகளும், சமூகக் கட்டுப்பாட்டுக் கொடுமைகளும், நமது நாட்டைப் பாழாக்கி அன்னியர் வசம் ஒப்புவித்து மானமிழந்து நிற்கச் செய்கின்றது என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்ட பிறகும், நாடு மானத்துடன் அவைகளை ஒழித்தாலல்லது வாழ முடியாது என்பதை அறிந்தும் அவைகளை ஒழித்து, விடுதலையையும், சமத்துவத்தையும் ஏற்படுத்துவதுடன் மக்களின் வறுமையையும் எளிமையையும் ஒழிக்க வேண்டும் என்னும் எண்ணத்தோடு ஆயிரக் கணக்கான வருஷங்களாகவே பல பெரியோர்கள் முயற்சித்து வந்திருப்பதும் நாம் எல்லாரும் அறிந்ததாகும். அப்படி முயற்சித்த அவ்வளவுபேரும் "ஆண்டவன் அருள்பெற்றவர்களாகவும்", "ஆண்டவனால் அனுப்பப் பட்டவர்களாகவும்", "முத்திநிலை, மோக்ஷ நிலை அடைந்தவர்களாகவும்" கருதப்பட்டும் வருகின்றார்கள் என்பதிலும் ஆக்ஷேபணை இல்லை.

ஆனாலும் அவர்களது அபிப்பிராயங்களுக்கும் வார்த்தைகளுக்கும் மாத்திரம் வெவ்வேறு வித பாஷ்யங்களும் வியாக்கியானங்களும், செய்யப்பட்டு காரியத்தில் கடுகளவுகூட அப்பெரியார்களது கருத்துக்கள் நிறைவேற முடியாமலும், செய்யப்பட்டு வந்திருக்கின்றன.

உதாரணமாக, சங்கரர் என்னும் ஒரு பார்ப்பனர் பறையனால் ஞானோதயம் பெற்று, அவன் காலில் விழுந்தார் என்றும், 'பறையன் என்பதாக ஒரு தனி பிறப்பு இல்லை' என்று ஒத்துக் கொண்டார் என்றும் சொல்லப்படுவதை எல்லோரும் ஒப்புக் கொண்டதுடன் அவர் சிவன் அவதாரம் என்றும் ஒப்புக் கொண்டும், கடைசியாக, சங்கரர் வேதாந்த தத்துவத்தைக் காட்டுவதற்காகப் பறையன் காலில் விழுந்தார் என்றும், விழப்பட்ட பறையன் ஜாதியில் பறையனல்ல வென்றும், சிவனே தான் அந்தப்பறையன் வடிவமாகவும் வந்தார் என்றும், சொல்லி மறுபடியும் பழைய படியே பறையனைக் கண்டால் பாவம் என்றும், அதற்காகப் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டுமென்றும் சொல்லுகின்ற சாஸ்திரத்தை நிலைபெறச் செய்து, அதன் கொள்கைகளை இன்றைக்கும் அமுலில் இருக்கவும் செய்தாய் விட்டது.

மற்றும், அதே சங்கரரின் பேரால், கடவுள் என்று ஒரு தனி வஸ்து இல்லை என்றும், ஒவ்வொரு மனிதனுள் இருக்கும், ஜீவனே, ஜீவ ஆத்மாவே கடவுள் என்றும் சொல்லிப் போனார் என்றும் சொல்லி அதற்காக அவரை 'லோககுரு' என்றும் – லோக மக்கள் எல்லோருக்குமே ஆச்சாரியார் என்றும் சொல்லப்பட்டு அதே மாதிரி மக்கள் மனதில் பதியவைத்தும் ஆய்விட்டது. ஆனால் எண்ணிக்கைக்கு அடங்காத தனித்தனி கடவுள்களுக்கு கோவில் கட்டி வணங்குகின்றவர்கள் இன்றைக்கும் சங்கராச்சாரி சிஷ்யர்களாகவே தான் பாவிக்கப்பட்டு வருகின்றார்கள்.

அதுபோலவே, ராமானுஜர் என்னும் ஒரு பார்ப்பனர் மக்களில் ஜாதி பேதமில்லை என்றும், மந்திர ரகசியங்களை அறியக் கூடாத மனிதர்கள் இல்லை என்றும், எல்லா மக்களும் அதாவது எவனெவன் நாமம் வைத்துப் பூணூல் போட்டுக் கொள்கின்றானோ அவனெல்லாம் வைணவனாவான் என்றும் சொன்னதுடன் அந்தப்படியே கோடிக்கணக்கான மக்களை வைணவ ராக்கினார் என்றும், பார்ப்பனனல்லாதவன் சாப்பிட்ட எச்சில் இலையை எடுக்காததற்கு ஆக பெண் ஜாதி மீது கோபங்கொண்டு வெளிக்கிளம்பினார் என்றும், இன்றைய வைணவ மதம் ராமானுஜருடைய மதம் என்றும் வைணவரெல்லாம் ராமானுஜருடைய சிஷ்யர் என்றும் சொல்லிக் கொண்டு அவரையும் கடவுளாக்கி அவருக்கும் கோவில் முதலியவைகள் கட்டி, பூஜை, உற்சவம் முதலியவைகள் செய்து கொண்டும் பட்டை நாமங்கள் போட்டுக் கொண்டும் அவரைப் பற்றிப் பாடிக் கொண்டும் இருக்கும் மக்கள் இன்றைய தினம் சம்பந்தி வீட்டில் சாப்பிடாமலும், ஒருவர்க்கொருவர் திரை போட்டுக் கொண்டு சாப்பிடுவதையும் பார்க்கின்றோம்.

அதுபோலவே, திருவள்ளுவர் என்று சொல்லப்பட்டவர், குலத்தில் பறையர் என்றும், அவர்பாடிய குறள் என்னும் நூல் அய்ந்தாம் வேதம் என்றும், தெய்வப் புலவர் என்றும், பிரம்மாவின் அவதாரம் என்றும், அப்பேர்ப்பட்டவரால் செய்யப்பட்ட குறளை ஒப்புக் கொள்ளாத மனிதன் அறிவுடையவனாக மாட்டான் என்றும், மற்றும் சங்கரர், ராமானுஜர் பார்ப்பனர் என்றும் வள்ளுவர் பார்ப்பனரல்லாதார் என்றும், ஆகையால் அதுதான் தமிழ் மக்களுக்கு நீதி என்றும் சொல்லும் மக்கள் தங்களைக்





RangaRakes
tamilnavarasam.com

குறளில் வல்லவர், புலவர் என்று சொல்லிக் கொள்ள விரும்புவதோடு, வள்ளுவருக்குக் கோவில் கட்டிப் பூஜிப்பதல்லாமல் வள்ளுவர் குறளில் சொன்னபடி நடப்பவர்கள் யாரும் இல்லை. அன்றியும் குறளானது "வள்ளுவர் போன்ற ஞானிகளுக்கு உகந்ததே ஒழிய நமக்கல்ல" என்று சமாதானமும் சொல்லிவிடுகிறார்கள்.

அது போலவே சைவர்கள் என்னும் ஒரு கூட்டமும் தங்கள் மதத்திற்கு என்று ஆதியோ, ஆச்சாரியரோ ஒரு தமிழ் ஆதிநூலோ ஒன்றும் இல்லை யாயினும் பார்ப்பனர்களால் தாங்கள் இழிவுபடுத்தப் பட்டிருக்கும் காரணத் தால் எப்படியாவது தங்களைப் பார்ப்பனரைவிட்டுப் பிரித்துக்காட்ட எண்ணி, அப்பார்ப்பனர்களிடமிருந்தே சிலவற்றைப் பொறுக்கிக் கொண்டு அதையே ஆதாரமாகவும் வைத்துக் கொண்டு தாங்களுக்கு ஒரு தனிமதம் உண்டென் றும், அதுதான் சைவம் என்றும், அதற்கு சிவனே கடவுள் என்றும், சிவன் என்றால் அன்பு என்னும் குணம் என்றும், எல்லோரும் சிவசொரூபம் என்றும் சொல்லி பிறகு, பார்வதி, பரமசிவன், கைலாயம், ரிஷபவாகனம், லிங்கம், ஆவுடையார் என அர்த்தமற்றதும் கேவலமானதும் பொருந்தாததுமான கண்டவற்றையெல்லாம் சொல்லிக் கொண்டு உலகத்தில் அது ஒரு பிரமாத மான விஷயம் போல் கருதி, மக்களை மக்கள் பார்க்க முடியாமலும், ஒன்று சேர்க்க முடியாமலும், பிரித்துவைத்துக் கொண்டிருக்கத்தக்க வண்ணத்தில் நிபந்தனைகளையும், நிர்ப்பந்தங்களையும் வைத்துக் கொண்டு இருப்ப தையும் பார்க்கின்றோம்.

இம்மாதிரி இன்னும் எத்தனையோ விஷயங்களை அறிவிற்கும் எண்ணத்திற்கும், வார்த்தைக்கும், செய்கைக்கும் அனுபவத்திற்கும் ஒன்றுக் கொன்று பொருத்தமில்லாத பல விஷயங்களும் ஆதாரங்களும் மனித தத்துவத்திற்கும், முன்னேற்றத்திற்கும், தடைகல்லாய் இருப்பதை யாரும் மறைத்துவிட முடியாது. இவைகளைப் பற்றி யாராவது எடுத்துச் சொல்லி அதன் துன்பங்களை நீக்க வேண்டுமென்று நயமாகவும் கெஞ்சியும் கேட்ட போதெல்லாம் அவைகளால் பிழைத்து வருபவர்கள், "மதம் இடம் கொடுக்க வில்லை", "சமயம் இடம் கொடுக்கவில்லை", "கடவுளுக்கு விரோதம்", "பெரியார்களுக்கு விரோதம்", "வேதத்திற்கு விரோதம்", "சாஸ்திரத்திற்கு விரோதம்", "ஆகமத்திற்கு விரோதம்" என்று சொல்லி அவர்களை எதிர்த்து வாயெடுக்கவொட்டாமல் அடக்கிக் கொண்டே வந்துவிட்டார்கள். இப்பொழுது அப்பேர்ப்பட்ட மதம், சமயம், கடவுள், பெரியார், வேதம், சாஸ்திரம், ஆகமம் முதலிய எல்லாவற்றையும் ஒருகை பார்த்துவிடுவதென்று தீர்மானித்து அவைகளின் ஆபாசங்களையும், அயோக்கியத்தனங்களையும் வெளியாக்கி அடியோடு ஒழிக்கத் துணிந்த பின்பு, தங்களால் கூடியவரை என்னமோ சூழ்ச்சிகள் செய்து எதிர்த்துப் பார்த்தும் முடியாது போகவே, இனி தங்கள் பாடு ஆபத்து என்று உணர்ந்து ஒருவாறு வழிக்கு வந்திருக்கின்றார்கள். அதாவது இவ்வாரத்தில் பம்பாய் மாகாணத்தைச்



சேர்ந்த பூனாவில் உள்ள வருணாசிரமப் பார்ப்பனர்களும், அதிகாரப் பார்ப்பனர்களும் அரசியல் பார்ப்பனர்களும், எல்லாரும் ஒன்று சேர்ந்து, இந்து மத சாஸ்திர ஆராய்ச்சியும், திருத்தமும், என்பதாக ஒரு மகாநாடு கூட்டிப்பேசி இருக்கின்றார்கள். அதில் வரவேற்புத் தலைவர் திரு.கேல்கர் தமது சொற்பொழிவில் "காலத்திற்குத் தக்கபடி சாஸ்திரங்களைத் திருத்திக் கொள்ளவேண்டும், ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட தர்மசாஸ்திரம் எக்காலத்திற்கும் பொருத்தமானதென்று கருதுவது சரியல்ல" என்று சொல்லி, ஆராய்ச்சியும் திருத்தமும் அவசியமென்று பேசினார். மகாநாட்டுத் தலைவரான மற்றொரு ஹைகோர்ட்டு ஜட்ஜி பார்ப்பனர் "சாஸ்திரங்களைத் திருத்தியாகவேண்டிய காலம் வந்துவிட்டது" என்றும், "திருத்தங்களுக்கு ஒப்புக் கொள்ளாதவர்கள் சாஸ்திரங்களை அறியாதவர் கள்" என்றும் சொல்லி இருக்கின்றார்.

தவிர, இந்த விஷயங்களை ஆதரித்து, 28-05-1929 உ "சுதேச மித்திர"னிலும், "தர்மசாஸ்திர ஆராய்ச்சியும் திருத்தமும்" என்று ஒரு தலையங்கமும் எழுதப்பட்டிருக்கின்றது. இது ஒரு சமயம் உண்மையான எண்ணத்தோடு பேசப்பட்டும் எழுதப்பட்டும் இருந்தாலும் சரி, அல்லது தற்சமயம் பொது ஜனங்களுக்கு தோன்றியிருக்கும் உணர்ச்சியின் வேகத்தைத் தணிக்கக் கருதி, சூழ்ச்சி எண்ணத்துடன் எழுதியிருந்தாலும் சரி, எப்படியாவது சாஸ்திரங்கள் எல்லாக் காலத்திற்கும் ஆதாரமல்ல என்ப தையும் காலத்திற்குத்தக்கபடி புதுப்பித்துக் கொள்ளலாம் என்பதையும் பார்ப்பனர்கள் ஒப்புக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு வந்தது நமக்கு ஒரு வெற்றி என்றே சொல்லவேண்டும்.

நிற்க, சாஸ்திரத்தைத் தங்கள் சொந்த சொத்தாகக் கொண்ட பார்ப்பனர் களே இந்த மாதிரி வேத சாஸ்திரங்களையே புதுப்பித்தாக வேண்டுமென்று ஒப்புக் கொண்டபிறகு அதிலிருந்து திருடிக் கொண்டும் பிச்சை வாங்கிக் கொண்டும் அவர்களிடம் கூலி பெற்றுப் பிரசாரம் செய்து கொண்டும் இருக்கின்ற குப்பைப் புராணச் சமயவாதிகளும், புராணக் கடவுள்களை ஸ்தாபிக்கும், ஆஸ்திக பிரசாரவாதிகளும், இனி என்ன செய்யப் போகின் றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் அவர்களும் பார்ப்பனர் களைப் பின்பற்றி தங்கள் புராணங்களையும், சமயங்களையும், கடவுள் களையும், புதுப்பிக்க வேண்டும் என்பார்களோ அல்லது ஒரு எழுத்துக் கூட மாற்றக் கூடாது, ஒரு கடவுளைக்கூட தள்ளக்கூடாது, எல்லாம் உண்மை, எல்லாம் சத்தியம் என்று தத்துவார்த்தம் சொல்லிக் கொண்டே திரிவார்களோ தெரியவில்லை.

எப்படியானாலும் சட்டசபைத் தேர்தல் ஒரு வருஷம் ஒத்திப்போட்டு விட்டதாலும், அதன் காரணமாய் "ஆஸ்திக ஸ்தாபன அவதாரமான" திரு. சீனிவாசய்யங்கார் ஓய்வெடுத்துக் கொள்ளுவதாய்ச் சொல்லிவிட்டபடியா லும், அநேகமாக சமய மகாநாடுகளும், ஆஸ்திக பிரசார மிஷினும் சற்று



RangaRakes tamilnavarasam.com

ஓய்வு எடுத்துக் கொள்ள நேரிடும் என்றே கருதுகின்றோம்.

ஏனெனில், இனி ஒன்றரை வருஷம் பொறுத்து வரப்போகும் தேர்தலுக்கு ஆக இப்பொழுதிருந்தே சமயப் பிரசாரமும் ஆஸ்திகப் பிரசாரமும் செய்வதென்றால், பணம் கொடுப்பவர்களுக்குத்தான் அந்தக் கஷ்டம் தெரியுமே ஒழிய, சும்மா நின்று கத்திவிட்டு கூலிவாங்குகிறவர் களுக்குத் தெரிய முடியவே முடியாது. ஆதலால் நமக்கும் சற்று தானாகவே ஓய்வு கிடைத்துவிடும் போலவே தெரிகின்றது. ஏனெனில் நமக்கு எதிரிகள் என்று நான்கு பேர் தோன்றி அவர்கள் ஏதாவது நமது இயக்கத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தால்தான் நாமும் அதற்குப் பதில் சொல்லும் முறையில், நமது பிரசாரமும் மேலும் மேலும் வளருவதற்கு அனுகூலமாக இருக்குமே ஒழிய எதிர்ப்பு இல்லாதபோது உணர்ச்சியும் வேகமும் இருக்கவே முடியாது.

உதாரணமாக, திரு.கல்யாணசுந்திர முதலியார் கடவுள் போச்சுது, கலைகள் போச்சுது, கடவுளைக் கண்ட பெரியார்கள் போச்சுது அவைகளைக் காப்பாற்ற அவதாரம் வேண்டும், அறப்போர் செய்ய வேண்டும் என்று கூப்பாடு போடாமலிருந்தால் கடவுள்கள் யோக்கியதையும் பெரிய புராணம் முதலிய கலைகள் யோக்கியதையும், அதில் உள்ள கடவுள்களைக் கண்ட பெரியார்கள் யோக்கியதையும் இவ்வளவு தூரம் மக்களுக்கு வெளியாக்கப் பட்டிருக்க முடியவே முடியாது என்று துணிந்து கூறுவோம். அன்றியும் அநேக பெரியார்கள் யோக்கியதையும் வெளியாயிருக்காதென்று கூடச் சொல்லுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 02.06.1929**



## வரதராஜுலுவின் விஷமப் பிரசாரம்

“தமிழ்நாடு” பத்திரிகையில் திரு.வரதராஜுலு அவர்கள் ஈரோடு தேவஸ்தானக் கமிட்டியார் செய்திருந்த ஆலயப் பிரவேசத் தீர்மானத்தைத் திருப்பூரில் கூடிய தேவஸ்தானக் கமிட்டி மீட்டிங்கில் கேன்சில் செய்து விட்டதாகவும், அதற்கு ஈ.வெ.ராமசாமியும் சம்மதித்ததாகவும் இதனால் ராமசாமி குட்டிக்கரணம் போட்டுவிட்டதாகவும் பொருள்பட அயோக்கியத் தனமாகவும், விஷமத் தனமாகவும் ஒரு செய்தியும் போட்டு அதற்காக உபதலையங்கமும் எழுதியிருக்கிறார். திருப்பூர் மீட்டிங்கில் அந்தத் தீர்மானம் ரத்து செய்யப்பட்டதாய் எழுதியிருப்பது பொய் என்றும் முதலாவது அம்மாதிரி ஒரு தீர்மானமே அன்றைய மீட்டிங்குக்கு வரவில்லை என்றும் நாம் உறுதி கூறுவதுடன், மேலும் அந்த மீட்டிங்கிற்கு திரு.ஈ.வெ.ராமசாமி போகவில்லை என்றும், அவர் அன்று பட்டுக்கோட்டை சுயமரியாதைத் தொண்டர் மகாநாட்டு விஷயமான வேலையில் ஈடுபட்டு இருந்தார் என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். எனவே இதனால் ‘தமிழ்நாடு’ பத்திரிகையின் யோக்கியதையையும் அது இதுவரை நடந்துவந்த மாதிரி யையும் கோவில் பிரவேச விஷயத்தில் அதற்குள்ள பொறாமையையும், இழிகுணத்தையும் பொது ஜனங்கள் அறிந்து கொள்ள ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டதன் மூலம் நமக்கு மகிழ்ச்சி ஏற்பட்டதைத் தவிர, வேறு எவ்வித நஷ்டமும் உண்டாகிவிடவில்லை என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தவிர அம்மாதிரி ஏதாவது, ஒரு சமயம் தேவஸ்தானக் கமிட்டியார் அத் தீர்மானத்தை ரத்து செய்வார்களானால் கண்டிப்பாய் திரு.ஈ.வெ.ராமசாமியார், கமிட்டி வைஸ்பிரசிடெண்ட் ஸ்தானத்தையும், மெம்பர் ஸ்தானத்தையும் ராஜீநாமாக் கொடுத்துவிட்டு அத்தீர்மானத்தின் தத்துவத்தை சட்டத்தின் மூலமோ, சுயமரியாதை சத்தியாக்கிரகத்தின் மூலமோ அமுலில் கொண்டு வரும் வேலையில் இறங்குவாரே ஒழிய ‘உடம்புக்குச் சவுகரியமில்லை’ என்று சாக்குச் சொல்லிக் கொண்டு முதுகு காட்டி ஓடிவிடமாட்டார் என்பதை திரு.வரதராஜுலுவுக்கு வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 02.06.1929**



RangaRakes tamilnavarasam.com

# ஒத்திபோடுதல்

இந்திய சட்டசபை மாகாண சட்டசபை ஆகியவைகளின் காலாவதி ஒரு வருஷகாலம் ஒத்தி போடப்பட்டாய் விட்டதால், திரு. சீனிவாச அய்யங்கார் பிரசாரமும், அவர் ஓய்வெடுத்துக் கொள்வதன் மூலம் ஒத்தி போட்டாய்விட்டது. ஜஸ்டிஸ் கட்சியாரும் தங்களது நெல்லூர் மாகாண மகாநாட்டை ஒத்தி போட்டு விட்டார்கள். அதுபோலவே, திரு. கல்யாண சுந்தர முதலியாரது ஆஸ்திகப் பிரசாரமும், சைவப் பெரியார்கள் மகா நாடுகளும் அநேகமாக ஒத்திபோடப்பட்டுவிடும். திரு.வரதராஜுலுவின் உத்தியோகமேற்கும் பிரசாரமும் அவருக்கு அடிக்கடி காயலா வருவதன் மூலம் ஒத்திபோடப்பட்டாய்விட்டது. இதுமாத்திரமல்லாமல் திரு.சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரின் மதுவிலக்கு பிரசாரமும், திரு.ஜம்னாலால் பஜாஜின் தீண்டாமைப் பிரசாரமும், திரு.சங்கர்லால் பாங்கரின் அன்னியத் துணி பகிஷ்காரமும் கண்டிப்பாய் ஒத்தி போடப்படலாம். அன்றியும் “தேசமே பிரதான” மென்கின்ற உத்தியோகப் பிரதான கட்சியாரின் தேசாபிமானப் பிரசாரமும் கண்டிப்பாய் ஒத்தி போடப்பட்டுவிடும்.

இவற்றையெல்லாம் விட, 1929-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி இரவு 12 மணி 5 நிமிஷத்திற்குள் நேரு திட்டப்படி குடியேற்ற நாட்டு அந்தஸ்து கொடுக்கப்படாவிட்டால் கண்டிப்பாய் ஒத்துழையாமை நடத்துவது என்கின்ற திரு.காந்தியின் வாய்தாவும் கண்டிப்பாய் யார் தடுத்தாலும் நிற்காமல் ஒத்திபோட்டாய்விடும்.

**குடி அரசு - அறிக்கை - 02.06.1929**



# சைவப் பெரியார் மகாநாடு

திருநெல்வேலியிலும், திருப்பாப்புலியூரிலும் சமீபத்தில் கூட்டப்பட்ட சைவப் பெரியார்கள் மகாநாடு என்பதானது திருவாளர்கள் அண்ணாமலை பிள்ளை, சாமிநாதசெட்டியார், திரு.வி.கல்யாணசுந்தர முதலியார், கிருஷ்ண சாமி பாவலர் என்பவர்களுக்கு மகாநாட்டில் கலந்து கொள்ளவும், மகாநாட்டு மேடைமேல் ஏறி அவர்கள் யோக்கியதைக்குத் தகுந்தபடி பேசவும் மகாநாட்டுத் தீர்மானங்களுக்கு ஓட்டுக் கொடுக்கவும் தாராளமாய் இடமளித்து திருவாளர்கள் வ.உ.சிதம்பரம் பிள்ளை, பொ.திரிகூடசுந்தரம் பிள்ளை, பூவாளூர் செல்வக்கணபதியார் ஆகியவர்களுக்கும் மற்றும் சில சைவ சமாஜப் பிரதிநிதிகளுக்கும் இடமளிக்க மறுத்ததிலிருந்தும், சைவப் பெரியார்கள் என்பவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும், அம்மகாநாடு எந்தப் பிரசாரத்திற்காகக் கூட்டப்பட்டது என்பதையும் அதைப்பற்றி நாம் முன் எழுதி வந்தவைகள் எல்லாம் உண்மையா அல்லவா? என்பதையும் பொது ஜனங்கள் அறிந்து கொள்ள அம்மகாநாடானது ஒரு அளவு கருவியாக பயன்பட்டமைக்கு நாம் மகிழ்ச்சியுடன் மகாநாட்டைக் கூட்டிய பிரமுகர்களுக்கும் நன்றி செலுத்துகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 02.06.1929**



RangaRakes tamilnavarasam.com

# "குடி அரசு" வாசகர்களுக்கு ஓர் வேண்டுகோள்

இந்த இரண்டு மூன்று வாரமாய் தெரிவித்து வந்தபடி நமது பத்திரிகாலயத்தை சென்னையில் நிறுவவேண்டிய ஏற்பாடு செய்து வருகின்றோம். இதனால் ஒரு வாரம் அல்லது இரண்டு வாரம் நமது பத்திரிகை தடைப்படலாம். பிறகு சென்னையிலிருந்து மேல்காகிதத்துடனும் 20 பக்கங்களுடனும் வெளிவரும்.

குறிப்பு :- "குடி அரசு" ஆரம்பித்த இந்த ஐந்து வருஷகாலத்தில், இரண்டாவது வருஷ முதலில் ஒரு தடவை ஒரே வாரமும், இப்போது ஒரு தடவையும் தான் அதுவும் அபிவிர்த்தி காரணமாகவேதான் தவக்கப்பட்டிருப்பதால், வாசகர்கள் அவசியம் பொறுத்துக் கொள்வார்கள் என்று நினைக்கின்றோம்.

**( ப - ர் )**

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 02.06.1929**



# சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாடு

சகோதரி சகோதரர்களே!

இந்த மகாநாட்டுக்கு திரு.குருசாமி அவர் களைத் தலைமை வகிக்க ஆதரிப்பதில் நான் அதிக மகிழ்ச்சியடைகிறேன். இப்பேர்ப்பட்ட தொண்டர் மகாநாட்டிற்கு அதுவும் முதன் முதலாகக் கூட்டப் பட்ட மகாநாட்டிற்கு திரு.குருசாமியாரை வரவேற்புக் கமிட்டியார் தெரிந் தெடுத்ததற்கு நாம் அவர்களைப் பாராட்ட வேண்டும். ஏனெனில், நமது இயக்கத்தின் தத்துவங்களைப் பற்றி மிகத் தெளிவாக உணர்ந்தவர்களும் சிறிதும் சந்தேகம் இல்லாதவர்களுமாக உள்ளவர்களென்று நான் கருதிக் கொண்டிருக்கின்ற சிலர்களில் அதாவது நமது சங்கத் தலைவர் திரு.சௌந்திர பாண்டியனார், சொ. முருகப்பர், எஸ். குருசாமி ஆகிய முக்கியமானவர்களில் ஒருவராவார். ஆகவே, அப்படிப்பட்டவரும் அதோடுகூடவே, செய்கையிலும் ஒவ்வொரு துறையிலும் அக்கொள்கையையே பின்பற்றுகிற வருமாவார். நமது இயக்கத்துக்காக நடைபெறும் ஆங்கிலப் பத்திரிகையாகிய "ரிவோல்ட்"க்கு பெயரளவில் நான் பத்திராதிபனே ஒழிய காரியத்தில் அவரேதான் சகல நடவடிக்கைகளையும் நடத்துகிறவர். அவரது எழுத்துக்களும், கருத்துக்களும் தமிழ்நாடு மாத்திரமல்லாமல் வெளிமாகாணங்களிலெல்லாம் சுயமரியாதை மகாநாடு நடத்தும்படி செய்துவிட்டது. இந்த மாதத்திலேயே கேரள மாகாணத்தில் கோட்டயத்திலும், பம்பாய் மாகாணத் தில் நாசிக்கிலும், பஞ்சாப் மாகாணத்தில் லாகூரிலும் நடைபெறச் செய்திருக் கிறது. இந்தியா மாத்திரமல்லாமல் மேல் நாடுகளிலும், அமெரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களிலிருந்து பாராட்டுக் கடிதங்களும் சந்தாதாரர்களும் வந்து கொண்டிருக்கின்றன. இதைத் தவிர, திரு.குருசாமிக்கு நல்ல கல்வியும் அறிவும் இருப்பதின் நிமித்தம் அவருடைய வகுப்பில் பெரிய பிரபுக்களும் பதினாயிரக்கணக்கான பணத்துடன் பெண்கள் கொடுப்பதற்கு வலிய வந்தும் அவைகளையெல்லாம் லட்சியம் செய்யாமல் கலப்பு மணமே செய்து கொள்ளுவதென்றும், அதிலும் விதவையாயிருத்தலே மேலென்றும் தீர்மானித்துக் கொண்டிருப்பவர். எனவே இப்பேர்ப்பட்ட, அதாவது, எண்ணத்தில், எழுத்தில், பேச்சில், செய்கையில் எல்லாவற்றிலும் ஒரே மாதிரி




RangaRakes tamilnavarasam.com

யான கொள்கையுள்ள ஒரு பெரியார் நமக்குக் கிடைத்தது நமது இயக்கத்தின் முற்போக்கிற்கு ஒரு நல்ல அறிகுறியும் தொண்டர்களுக்கு வழிகாட்டியும் ஆகும்.

*குறிப்பு : பட்டுக்கோட்டையில் 24.05.1929 இல் சுயமரியாதைத் தொண்டர்கள் மாநாட்டுத் தலைவரை வழிமொழிந்து ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 02.06.1929**




தனிப்பிரதி விலை | உள் நாடு 1 அணா
வெளிநாடு 1½ அணா

ரிஜிஸ்டர் நெ. 2041

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரு 3—0 |
| 6 மாத சந்தா ,, — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரு. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரு. 2
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கில ஆனிமீ 3உ (16—6—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 6

"குடி அரசு" "ரிவோல்ட்"

பத்திரிகைகளின் காரியாலயம்

சென்னைக்கு வந்துவிட்டது.

16—6—29-ந் தேதி முதல் சென்னையினின்றும் வெளிவரும்

விலாசம்:—

மானேஜர்,
குடி அரசு காரியாலயம்.
14, மவுண்ட்ரோட், சென்னை.

மானேஜர்,
ரிவோல்ட் காரியாலயம்.
14, மவுண்ட்ரோட், சென்னை.



RangaRakes
tamilnavarasam.com

# காங்கிரசின் யோக்கியதை

காங்கிரசைப்பற்றி நாம் அது பார்ப்பனர்களுக்கும் படித்தவர்களுக்கும் பணக்காரர்களுக்கும் தங்கள் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ளுவதற்கு ஏற்பட்ட ஸ்தாபனமே ஒழிய ஏழைகளுக்கும் குடியானவர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் உபயோகப்படக் கூடியதல்ல வென்றும் இவர்களுக்கு, கெடுதியை தரத்தக்க தென்றும் 4, 5 ௵ காலமாக விடாமல் சொல்லி வருகின்றோம். இதனால் நம்மை பலர் காங்கிரஸ் துரோகி, தேசத்துரோகி என்று சொல்லி விஷமப் பிரசாரமும் செய்து வருகின்றார்கள். ஆனால் வங்காளத்தில் எவ்விதத்திலும் சந்தேகப்பட முடியாத அமிர்த பஜார் பத்திரிகையானது தனது தலையங்கத்தில், “காங்கிரசு பணக்காரர்கள், உயர்ந்த ஜாதியார்கள் என்பவர்கள் இயக்கமாய்விட்டது. உயர்ந்த ஜாதிக்காரரும் படித்தவர்களுமே தலைவர்களாக இருக்கின்றார்கள். ஆதலால் தாழ்த்தப் பட்ட மக்கள் காங்கிரசை விட்டு விலகிவிட்டார்கள். காங்கிரசுக்கு எதிரி களாய்விட்டார்கள். முஸ்லீம்களும் அப்படியே விலகி விட்டார்கள்” என்று எழுதி இருக்கின்றது.

இதிலிருந்து நாம் மாத்திரம் காங்கிரசை குற்றம் சொல்லுகின்றோமா? எல்லா மாகாணத்திலும் குற்றம் சொல்லுகின்றார்களா? என்பதை தெரிந்து கொள்ளும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டுவிடுகின்றோம்.

**குடி அரசு – செய்தி விளக்கக் குறிப்பு – 16.06.1929**



# இப்பொழுது மதம் எங்கே?

திருப்பதி தேவஸ்தான சமஸ்கிருத பாடசாலையில் வியாகரணம் இலக்கணம் வகுப்புகளில் பார்ப்பனரல்லாதாரை சேர்த்துக் கொள்ளுவது மதத்திற்கு விரோதமென்று ‘மகந்து’வும் பள்ளிக்கூட அதிகாரிகளும் சொல்லி பார்ப்பனரல்லாதார்களை விலக்கிவிட்டார்கள். இப்பொழுது மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் அப்பள்ளிக் கூடத்தில் எத்தகைய வகுப்பு வித்தியாசமும் இல்லாமல் எல்லா வகுப்பு பிள்ளைகளுக்கும் எல்லா பாடமும் போதிக்க வேண்டுமென்று உத்திரவு போட்டு விட்டார்கள். எனவே இப்போது அந்த மதம் இருக்கிறதா போய்விட்டதா? என்று கேட்கின்றோம். பழைய காலத்தில் சர்க்கார் சம்பந்தமான மரங்களில் “பேய்” இருக்குமானால் 3 நாள் வாய்தா போட்டு சர்க்கார் முத்திரை போட்ட ஒரு தாக்கீதை அந்த மரத்தில் கட்டி விட்டால் அந்த வாய்தாவுக்குள் பேய் ஓடிப் போகும் என் பார்கள். அதுபோல் இப்போது சுப்பராய மந்திரவாதி தாக்கீதைக் கண்டால் மதப்பேய் பறந்து விடுவதாகத் தெரிகிறது.

**குடி அரசு – செய்தி விளக்கக் குறிப்பு – 16.06.1929**



RangaRakes
tamilnavarasam.com

# திருக்கோவிலூரில் சுயமரியாதைப் பிரசாரம்

## நமது முன்னேற்றம்

சகோதரர்களே! நான் உங்கள் ஊருக்கு இதற்கு முன் இரண்டொரு தடவைகள் வந்திருக்கின்றேன். ஒரு தடவை ஒத்துழையாமையின்போது உங்கள் ஜில்லாவாகிய தென் ஆற்காடு ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்த காலத்தில், இந்த மண்டபத்துக்கெதிரில் பேசியிருப்பதாக எனக்கு ஞாபகமிருக்கின்றது. இன்னொரு தடவை காலஞ்சென்ற நமது நண்பர் திரு.ம.ரா. குமாரசாமி பிள்ளையவர்கள் இருக்கின்ற போழ்து திரு.பிள்ளை யவர்களால் அழைக்கப்பட்டு உங்களூர்வாசிகளாகிய திரு.லட்சுமணசாமி முதலியார், திரு.கிருஷ்ணசாமி பிள்ளை முதலியவர்களாலும் கடைவீதிக் காரர்களாலும் பெரிய ஆடம்பரத்துடன் வரவேற்கப்பட்டு, இவ்வூருக்கு வந்து இதே இடத்தில் பேசியிருக்கிறேன். நான் இங்கு காலஞ்சென்ற எனது நண்பர் குமாரசாமியாரவர்களின் குடும்பத்தாரைக் கண்டு எனது அனுதாபத்தைத் தெரிவித்து விட்டுப் போகலாமென வந்த இடத்தில் ஞானியார் ஆசிரமக் காரியஸ்தர் திரு.வடிவேலு செட்டியாரும் அவரது நண்பர்களும் இன்று இங்கு ஒரு சொற்பொழிவு நிகழ்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டதால் நானும் சம்மதித்து ஏதோ சில வார்த்தைகள் இன்று இங்கு பேச வந்திருக்கின்றேன்.

நான் எடுத்துக் கொண்ட விஷயம் பேசத் தொடங்கு முன் காலஞ் சென்ற திரு.ம.ரா.குமாரசாமியாரவர்களைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல அனுமதிக்க வேண்டுகின்றேன்.

திரு.குமாரசாமியார் சுமார் 10 வருஷமாக எனக்கு தெரிந்தவர். அவர் சற்றும் சுயநலம் கருதாத ஒரு உண்மைத் தொண்டராவார். நான் செல்லும் அநேக இடங்களுக்கு அவரும், அவர் செல்லும் அநேக இடங்களுக்கு நானும் செல்வதன் மூலம் அடிக்கடி பொது மேடைகளில் சந்தித்து வந்திருக்கின்றோம். என்னிடத்தில் அவருக்கு அதிக அன்புண்டு. என்னு டைய கொள்கைகள் பெரிதும் அவரால் ஒவ்வொரு கூட்டத்திலும், நான் இல்லா காலங்களில் கூட ஆதரிக்கப்படுவதுண்டு. அதனாலேயே எனக்கு அவரிடம் அதிகமான விசுவாசம் இருந்துவந்தது. அவரைப் பிறந்த இடமாகக் கொண்டதால் இந்த ஊருக்கு வெளியிடங்களில் அதிகமதிப்பு உண்டென்றே சொல்லுவேன். அப்பேர்ப்பட்ட பெரியார் தொடங்கிய ஆசிரம விஷயத்தில் நீங்கள் அதிக கவலை எடுத்து அவரது கொள்கையைப் பரப்ப வேண்டிய



முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டியது உங்கள் முக்கிய கடமையாகும். திரு.வடிவேலு செட்டியாரும் அதற்கு மிகுதியும் ஏற்றவர் என்றே சொல்வேன்.

நிற்க, நான் இன்று பேச வேண்டிய தலைப்பு விஷயம், “நமது முன்னேற்றம்” என்பதாகும். இந்த தலைப்பின் கீழ் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்றாலும் நான் நமது நாட்டு மக்கள் முன்னேற்றம் என்பதைப் பற்றி சொல்லும் முறையில் மற்ற நாட்டிற்கும் நமக்கும் உள்ள வித்தியாசத்தை முதலில் சொல்லி பிறகு நாம் செய்ய வேண்டியவைகள் என்று எனக்குத் தோன்றுவதை சொல்லுகின்றேன். நான் சொல்லுவது பெரும்பாலும் என்னுடைய சொந்த கருத்தும் நான் மனப்பூர்வமாய் சரி என்று உணர்ந்ததுமே சொல்லுகின்றேன். நமது நாட்டைப் பற்றி முற்காலத்தில் இருந்த நிலை என்பதாக அதற்கு பிரத்தியக்ஷ சாக்ஷியம் இல்லாத இக்காலத்தில் எவ்வளவு பெருமையாகப் பேசிக் கொண்டாலும் இன்றைய பிரத்தியக்ஷ நிலையை உணர்ந்து இது நமது முற்போக்கா? பிற்போக்கா? என்பதை முதலில் உங்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். நமது நாடு இன்றைய நிலைமையில் விளை பொருளிலும் மூலப் பொருளிலும் வியாபாரத் துறையிலும் கைத் தொழில் வசதியிலும் இன்றைய தினம் நாமறிந்த எந்த நாட்டிற்கும் பிற்பட்டதல்ல என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளுவீர்கள். அதுபோலவே மக்கள் வாழ்வில் செல்வத்திலும் அறிவிலும் ஆராய்ச்சி யிலும் சமூக உரிமையிலும் அரசியல் உரிமையிலும் பிற்பட்டு அடிமைபட்டு இருக்கின்றோம் என்பதையும் நீங்கள் ஒப்புக் கொள்ளுவீர்கள் என்று நினைக் கின்றேன். உதாரணமாக செல்வத்தில் நாம் பிற்பட்டவர்கள் என்பதற்கு மற்றநாட்டு சாதாரண பெண்மணிகளிடம் இருக்கும் செல்வம் நமது நாட்டு பிரபுக்கள் என்பவர்களிடம் இல்லை. அதுமாத்திரமல்லாமல் மற்ற நாட்டு ஒவ்வொரு தனிமனிதனுடைய சராசரி மாத வரும்படி 35 ரூபா வீதம் என்றால் நம்நாட்டு மனிதனின் சராசரி வரும் படி $3^1/_2$ ரூபா ஆகின்றது. மற்றும் பிழைப்பு வசதியோ நமது நாட்டில் வேலைக் கிடைக்காமலும் கூலி கிடைக்கா மலும் வாரம் ஒன்றுக்கு பதினாயிரக்கணக்கான மக்கள் வெளிநாடுகளுக்கு கூலிகளாகக் கப்பலேறுகின்றார்கள். ஆனால், வெளிநாடுகளிலிருந்து நமக்கு முதலாளிகளாகவும் எஜமானர்களாகவும் அதிகாரிகளாகவும் பலர் தினம் இறங்கிக் கொண்டே இருக்கின்றார்கள். அவர்களைக் கண்டால் நாம் நடுங்குகின்றோம்.

மற்றபடி அறிவிலும் நமது மக்களின் சராசரி அறிவு தெரிய வேண்டுமானால் 100-க்கு 7 பேரே கையெழுத்துப் போட தெரிந்தவர்கள். பெண்களிலோ 1000-க்கு $1\frac{1}{2}$ பேர் கையெழுத்துப் போட தெரிந்தவர்கள். அதிலும் சிறந்த மூடர்கள் என்பவர்கள் பண்டிதக் கூட்டங்களிலேயே பெரும்பான்மையோராக இருந்தால் மற்றவர்களைப் பற்றி நாம் யோசிக்கவும் வேண்டுமா? ஆராய்ச்சி விஷயத்தில் ஆனால் வெளிநாட்டார்களின்



RangaRakes tamilnavarasam.com

ஆராய்ச்சியோ மின்சாரத்தின் மூலமும் தண்ணீர் ஆவியின் மூலமும் எண்ணெயின் சூட்டின் மூலமும் அவர்கள் செய்கின்ற அற்புதங்களுக்கு அளவே இல்லை. ஒவ்வொருத் துறையிலும் நாளுக்கு நாள் முன்னேறு கின்றார்கள். செத்தவனை பிழைக்க வைக்க முயற்சித்து பலன் கண்டு கொண்டு வருகின்றார்கள். நக்ஷத்திர மண்டலத்திற்கு போக முயற்சிக் கிறார்கள். மணிக்கு 500 மைல் வேகம் பறக்கப் பார்க்கிறார்கள். ஒரு வாரத்தில் 6000 மைல் தூரமுள்ள சீமைக்குப் போகிறார்கள். ஒரு மணி நேரத்தில் 10000 மைல்களுக்கப்பாலுள்ள செய்தியை அறிகின்றார்கள். ஒரு பீரங்கி வெடியில் பதினாயிரக்கணக்கான மக்களை உயிர் வாங்கும்படியான யுத்த முறைகளைக் கண்டு பிடித்திருக்கின்றார்கள். கண் மூடி திறப்பதற்குள் மின்னி மறையும் மின்னலிலிருந்து மின்சார மெடுக்கின்றார்கள். தண்ணீர் வீழ்ச்சியிலிருந்தும் சூரிய வெப்பத்திலிருந்தும் மின்சாரம் உண்டாக்குகிறார்கள்.

எண்ணெய் இல்லாமல் நெருப்பில்லாமல் தண்ணீர் இல்லாமல் கடிகாரத்திற்குச் சாவி கொடுத்தால் அது ஓடிக் கொண்டிருப்பது போல் தானாக சாவி கொடுப்பதின் மூலம் ஓடும்படியான மாதிரியில் இயந்திரங்களையும் வண்டிகளையும் செய்ய முயற்சித்து வருகின்றார்கள். ஆனால், நமது நாட்டு ஆராய்ச்சிக்காரர்கள் என்பவர்களுக்கோ என்றால் புல்லிலும் பூண்டிலும் கல்லிலும் மண்ணிலும் கடவுளைத் தேடி அவைகளுக்கு எப்படி பக்தி செலுத்துவது என்கின்ற வேலையே இன்னமும் முடிவு பெறாமல் இருக்கின்றது. மோக்ஷத்திற்குப் போகின்ற வழிகளைப் பற்றியே இன்னமும் பலருக்கு ஆராய்ச்சி முடிவு பெறவில்லை.

கடவுள்களுடைய எண்ணிக்கைகளும் பெயர்களும் அவர்களுடைய லீலைகளும் பெண்டு பிள்ளை வைப்பாட்டிகளும் இன்னமும் கணக்கு கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டி இருக்கின்றது. நாமத்தின் நடுவிலும் மஞ்சள் திருச்சூரணத்திற்கும் சிவப்புத் திருச்சூரணத்திற்கும் உள்ள பெருமை சிறுமை வித்தியாசங்களுக்கும் பாதம் வைத்து இடும் நாமத்திற்கும் வளைவாய் இடும் நாமத்திற்கும் உள்ள பிரதானங்களுக்கும் உள்ள வித்தியாசம் கண்டுபிடிக்க நமது ஆராய்ச்சியால் முடியாமல் வெளிநாட்டு ஆராய்ச்சி நிபுணர்களின் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. நம்மை மோக்ஷத்திற்கு அனுப்ப அவதாரம் செய்த சமயாச்சாரிகள் சரித்திரமும் எண்ணிக்கையும் எப்படி நமக்குக் கிடைத்தது? என்னும் விஷயம் யாரோ ஒருவர் சொல்வதை நம்புவதன் மூலம்தான் அறியக் கூடும் என்கின்ற நிபந்தனைகளை ஒப்புக் கொண்டாலும் என்ன சொல்லுவது என்கின்ற விஷயம் இன்னும் ஆராய்ச்சியில் இருந்து வருகின்றது. எந்த எந்த பாஷை, எந்த எந்த புஸ்தகம், யார் யார் படிக்கலாம் என்கின்ற விஷயமும், எந்த எந்த ஊரில், எந்த எந்த கடவுளை யார் யார் எவ்வளவு எவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்கலாம், கும்பிடலாம் என்கின்ற விஷயமும், எந்த எந்த வீதியில் யார் யார் நடக்கலாம், எந்த எந்த ஜாதியார் எந்த எந்த ஜாதியாருக்கு



எவ்வளவு எவ்வளவு தூரத்தில் இருக்க வேண்டும் என்கின்ற விஷயமும் எந்த எந்த மாதிரிக் குடுமி யார் யார் வைத்துக் கொள்ள வேண்டும், எந்த எந்த மாதிரி வேஷ்டி யார் யார் கட்டிக் கொள்ள வேண்டும், யார் யார் எங்கெங் கிருந்து சாப்பிட வேண்டும் என்கின்ற விஷயமும் இன்னமும் ஆராய்ச்சி யிலும் தர்க்கத்திலுமே இருந்து வருகின்றது. மற்றும் ஒரு ஜாதி ஆணும் ஒரு ஜாதிப் பெண்ணும் கூடினால் என்ன ஜாதி மனிதன் பிறப்பான்? என்பது இன்னமும் ஆராய்ச்சியில் இருக்கின்றது. நம்மைப் போன்ற யாராவது என்ன ஐயா! மற்ற நாட்டார்கள் எவ்வளவோ முற்போக்கடைந்திருக்கும்போது நாம் இன்னமும் இந்த ஆராய்ச்சியில் இருப்பது சரியா என்று கேட்டால் உடனே கோபம் வந்து, உடனே அட போ! உனக்கென்ன தெரியும்? நீ எவ்வளவு படித்திருக்கின்றாய்? எங்களுக்குப் புத்தி சொல்ல வந்துவிட்டாய்! மேனாட்டு ஆராய்ச்சி இரண்டு நாளைய வாழ்வு. அது இகத்தைப் பொருத்தது. இன்றைக்கிருப்பவர் நாளைக்கு இருக்க மாட்டார்கள். இதெல்லாம் வாவென் றால் வரும் போ என்றால் போகும். மனிதன் எதற்காகப் பிறந்தான்? அவன் வந்த வேலையை அல்லவா அவன் கவனிக்க வேண்டும்? அதுதான் ஆத்மார்த்தம் மோக்ஷ சாதனம் என்று சொல்லி ஏதோ ஒன்றை தனக்கும் புரியாமல் மற்றவர்களுக்கும் புரியாமல் பேசுகிறார்கள். யாராவது தட்டிப் பேசினால் உடனே “தோஷம் தோஷம்” என்று கன்னத்தில் அடித்துக் கொள்ளுகின்றார்கள்.

எனவே, நமது நாட்டு முன்னேற்றம் எப்படி இருக்கின்றது, மற்ற நாட்டு முன்னேற்றம் எப்படி இருக்கின்றது என்பதை இதிலிருந்து யோசித்துப் பாருங்கள். பொதுவாக நமது மக்கள் முதலாவதாக 100க்கு ஏழுபேர்தான் படித்திருக்கின்றார்கள் என்பதை ஒப்புக் கொள்ளுகின்றீர்களா? இரண்டாவ தாக நமது மக்கள் சாப்பாட்டிற்கில்லாமல் வேலையும் கூலியும் கிடைக்காமல் வெளிநாட்டிற்கு பதினாயிரக்கணக்கான குழந்தை குட்டி கர்ப ஸ்திரீகளுடன் கப்பலேறி கண்காணாததும் முன்பின் அறியாததுமான நாட்டிற்குப் போய் கஷ்டப்பட்டு மடிகின்றார்கள் என்பதை ஒப்புக் கொள்ளுகின்றீர்களா? மூன்றாவது மனிதனுக்கு மனிதன் இழிவாகவும் அவமானமாகவும் கருதத் தக்கபடி கீழ்மேல் ஜாதி பிரித்து பஞ்சமன் என்றும் மிலேச்சன் என்றும் சூத்திரன் என்றும் அழைக்கப்படுவதும் சமூக வாழ்வில் சுயமரியாதைக்கு ஈனமான நிலையில் தாழ்த்தப்பட்டும் கொடுமைப்படுத்தப்பட்டும் இருக்கின்றார்கள் என்பதை ஒப்புக் கொள்ளுகின்றீர்களா?

நான்காவதாக அதுபோலவே ஒரு வகுப்பு மனிதர் தங்களை உயர்ந்த பிறவிகள் என்றும் பூலோக தேவர்கள் என்றும் சொல்லிக் கொண்டு மற்ற மக்களைத் தாழ்த்தி அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வருவதை ஒப்புக் கொள்ளுகின்றீர்களா?

ஐந்தாவதாக நாட்டுச் செல்வத்தில் பெரும்பாகம் ஏழைகளுக்கும் கையாலாகாதவர்களுக்கும் தொழிலுக்கும் கல்விக்கும் உபயோகப்படாமல்



RangaRakes tamilnavarasam.com

வெறும் கோயில் கட்டவும் கல்லைக் கடவுளாக்கவும் அதற்கு கல்யாணம் உற்சவம், தேர், திருவிழா, தினம் பலதடவை பூஜை, அபிஷேகம், நகை, வாகனம், தீவட்டி, விளக்கு, சதுர் மேளம், ஊர்கோலம் ஆகியவைகளுக்கு செலவாகின்றது என்பதை ஒத்துக் கொள்கின்றீர்களா?

அப்படியானால் இந்த நிலைமை இப்படியே வைத்துக் கொண்டிருப்பதால் நமது நாடு முற்போக்கடைய முடியுமா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். இவைகளைத் திருத்தி இந்தவழியில் வீண் ஆகும் செலவுகளை மற்ற நாடுகளைப் போல் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் தொழிலுக்கும் செலவிட வேண்டுமென்று சொன்னால் அதை நாத்திகம், மததர்ம விரோதம் என்று சொல்லுகிறார்கள். இது நாத்திகமா மத விரோதமா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

மற்ற நாட்டாரின் ஆதிக்கமும் மததர்மமும் அவர்கள் நாட்டில் 100-க்கு 100பேரையும் படிக்க வைத்து அவர்கள் அத்தனைப் பேருக்கும் தாராளமாய் தொழில் சம்பாதித்துக் கொடுத்துவிட்டு பிச்சைக்காரர் என்பவர்களே தங்கள் நாட்டில் இல்லாமல் செய்து ஆராய்ச்சியின் மூலம் நாம் இன்னது என்று கண்டுபிடிக்க முடியாத மாதிரியில் அற்புதங்களைக் கண்டுபிடித்து வெளிநாட்டுச் செல்வங்கள் எல்லாம் தங்கள் நாட்டிற்கே வரும்படி செய்து கொண்டு மத தர்மமாக நமது நாட்டில் பள்ளிக்கூடமும் ஆஸ்பத்திரிகளும் மருத்துவ உதவிச் சாலையும் அனாதைப் பிள்ளைகள் பாதுகாப்பு நிலையமும் “தீண்டாதார்கள்” சட்டசபை மெம்பராக்கவும், மந்திரிகளாக்கவும் தக்க மாதிரியில் கல்வியும் உத்தியோகமும் கிடைக்கத்தக்க மதமாற்ற ஸ்தாபனங்களும் ஏற்படுத்தி அதற்காக கோடிக்கணக்காக செலவு செய்தும் வருகின்றார்கள். இதை நீங்கள் தயவு செய்து நன்றாய் கவனித்துப் பாருங்கள். நாம் இப்படியே இருந்தால் முன்னேற முடியுமா? மற்ற நாட்டார்கள் முன்னிலையில் மானத்தோடு வாழ முடியுமா? நமது எதிரிகள் பழக்க வழக்கம் என்பதையும், பெரியோர்கள் போன வழி என்பதையும், கடவுள் கட்டளை என்பதையும் ஆயுதமாக வைத்துக் கொண்டு நம்மை முன் னேறவொட்டாமல் தடுத்து வருவதற்கு நீங்கள் இனியும் இடங் கொடுக்கா தீர்கள். உங்கள் புத்திக்கு சரி என்று பட்டதை தைரியமாகச் செய்யுங்கள் அது நாஸ்திகமானாலும் மகாபாதகமானாலும் நரகம் கிடைப்ப தென்பதனாலும் கடைசியாய் ஒரு சிறிது கூட அந்த பூச்சாண்டிகளுக்குப் பயப்படாதீர்கள்.

*குறிப்பு: திருக்கோவிலூரில் 13.06.1929 ஆம் நாள் பெண்ணையாற்றில் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் கூட்டப்பட்ட கூட்டத்தில் நமது முன்னேற்றம் என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 16.06.1929**



# காங்கிரசு கட்டுப்பாடு

சட்டசபை தேர்தல் காலாவதியை சர்க்கார் ஒத்திப் போட்டு விட்டதி னால் காங்கிரசுக்காரர்கள் தங்களது சுயமரியாதையையும் அதிருப்தியையும் காட்டுவதற்கு அறிகுறியாய் இனிமேல் கூடப்படப் போகும் சட்டசபை மீட்டிங்குகளுக்கு மறு தேர்தல் வரை யாரும் போகக் கூடாது என்று எல்லா இந்திய காங்கிரசு கமிட்டியார் திரு.காந்தியவர்கள் யோசனைபடி தீர்மானம் செய்து எல்லா மாகாணங்களுக்கும் சார்வு செய்தாய் விட்டது. அதை எல்லோரும் ஒப்புக் கொண்டதாகவும் பத்திரிகைகளிலும் வெளிவந்து விட்டது. ஆனால், சென்னை மாகாண தமிழ் நாட்டு காங்கிரஸ்காரர்களான பார்ப்பனர்கள் அக்கட்டுப்பாட்டுக்கு கட்டுப்பட முடியாதென்றும் தாங்கள் எல்லா இந்திய காங்கிரஸ் கட்டளையை மீறி சட்டசபைக்குப் போகப் போவதாகவும் இரகசியமாய் தீர்மானித்து இருக்கின்றார்கள். காங்கிரஸ் சட்டசபைக்கு போகும்படி கட்டளை இட்டால் வெகு பக்தியாய் அக்கட்ட ளையை நிறைவேற்றுவார்கள். வேண்டாமென்றால் கட்டுப்பாட்டை மீறுவார்கள். நமது பார்ப்பனர்களின் காங்கிரஸ் பக்தி நமது ஆஞ்சநேய ஆழ்வாருக்குக் கூட கிடையாதென்றே சொல்லலாம்.

**குடி அரசு - செய்தி விளக்கக் குறிப்பு - 16.06.1929**



RangaRakes tamilnavarasam.com

# வட இந்தியாவிலும் "நாஸ்திகம்"

இந்தியாவில் ஆங்கில அரசாட்சியை ஒழித்துவிட்டு ருஷிய தேச ஆட்சி முறையை நிறுவச் சதியாலோசனை செய்ததாக 31 பேர்கள் மீது கொண்டு வரப்பட்ட வழக்கு மீரத்தில் விசாரணையிலிருக்கிறது. இம்மாதம் 12ம் தேதி நடைபெற்ற விசாரணையின் போது பப்ளிக் பிராஸிகியூட்டர் "போல்ஷ்விக்காரர்கள் (எதிரிகள்) கடவுள் நம்பிக்கையை ஒழிப்பவர்கள். இவர்கள் கிறிஸ்தவக் கடவுள், மகமதியக் கடவுள், பௌத்தக் கடவுள் ஆகிய கடவுள்கள் மீதுள்ள நம்பிக்கையெல்லாம் ஒழித்துவிட்டு இறுதியில் இந்து மதக் கடவுள்கள் மீதுள்ள நம்பிக்கையையும் தங்கள் ஆட்சிமுறைக் காலத்தில் அழிப்பது நிச்சயம். இவர்கள் கொள்கைப்படி உலகத்திலுள்ள எல்லா மதங்களும் அழிந்துபட வேண்டும். இதற்கென இவர்கள் சர்வ மதங்களிலுமுள்ள குருக்களைக் கொன்று கோயில்களை இடித்துத் தகர்க்கும் திட்டத்தையே உழைப்புத் திட்டமாகக் கொண்டுள்ளவர்கள். கடவுளுக்கு எதிர்ப்பிரசாரம் புரியும் திட்டத்தைப் படைத்தவர்கள்......... இக் கொள்கைக் காரர்கள் தங்கள் மனோபாவங்களை வாழ்க்கையில் அநுசரித்து அதற்கேற்ற வேலைத்திட்டங்களையும் செய்து வருகிறார்கள். இதற்கென இப்படித்தான் செய்தல் வேண்டும், லட்சியங்கள் இவைகள்தான் என்றும் இவர்கள் வரையறுத்துள்ளனர்" என்று எடுத்துக் காட்டினார்.

அப்போது எதிரிகளின் வக்கீல் எதிரிகள் மீது தப்பெண்ணம் கற்பிப்பதற்காக இந்த விஷயங்களைப் புகுத்திப் பிரசாரம் செய்யப்படு கின்றது என்று கூறினார். வழக்கின் தத்துவம் எவ்விதமாயினும் உலகமெங் கும் கடவுள் மத சம்பந்தமான இத்தகைய உணர்ச்சி பரவியிருக்கிற தென்பதற்கும் அதிகமாகப் பேசப்படுகிறது என்பதற்குமே இதை எடுத்துக் காட்டினோம்.

**குடி அரசு - செய்தி விளக்கக் குறிப்பு - 16.06.1929**



# தென்னாற்காடு ஜில்லா ஆதிதிராவிடர் மகாநாடு

## கள்ளக்குறிச்சி தாலுகா ஆ:தி: மகாநாடு

சகோதர சகோதரிகளே!

இந்த ஜில்லா ஆதிதிராவிடர்கள் மகாநாட்டுக்கு நான் இதற்கு முன் நான்கைந்து தடவை அழைக்கப்பட்டிருந்தாலும், அப்போது பல காரணங்களால் எனக்கு வர முடியாமல் போய் விட்டதால், இந்தத் தடவை கட்டாயமாய் எப்படியாவது வரவேண்டுமென்று கருதியே வந்து சேர்ந்தேன். வரவேற்பு கழகத் தலைவர் என்னைப் பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்து கூறினார். அவ்வளவு புகழ்ச்சி எனக்கு வெட்கத்தை கொடுத்ததேயல்லாமல் மற்றபடி அதில் உண்மை இல்லை என்று சொல்லுவேன்.

தீண்டாமை விலக்கு என்னும் விஷயத்தில் நான் ஏதாவது ஒரு சிறிதாகிலும் வேலை செய்திருப்பதாக ஏற்படுமானால், அது எங்கள் நலத்திற்கு செய்ததாகுமேயொழிய உங்கள் நலத்திற்கு என்று செய்ததாக மாட்டாது. ஏனெனில் உங்களுக்கும் எங்களுக்கும் சமூக வாழ்வின் பொதுத் தத்துவத்தில் சிறிதும் பேதமில்லை. அநுபோகத்தில் மாத்திரம் ஏதாவது அளவு வித்தியாசமிருக்கலாம். உதாரணமாக நீங்கள் எப்படி தீண்டப்படா தவர்களோ, அப்படியே தான் உங்களை விட சிறிது மேல் வகுப்பார் என்கின்ற நாங்களும் ஒரு வகுப்பாருக்கு - அதாவது கடவுள் முகத்திலிருந்து பிறந்ததாகவும் பூலோக தேவர்கள் என்றும் சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர் களுக்கு நாங்கள் தீண்டாதவர்களாகவே இருக்கின்றோம். கோயில் பிரவே ஷம் என்பதிலும் உங்களைவிட சற்று முன்னால் போக மாத்திரம் அனுமதிக் கப்படுகிறோமே தவிர மற்றபடி பார்ப்பனர் நிற்கும் இடத்திற்குப் பின்னால் தான் நிற்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். நீங்கள் கோயிலுக்குள் வந்தால் எப்படிக் கோயிலும் சாமியும் தீட்டுப்பட்டு விடுகின்றதோ, உங்கள் எதிரில் சாப்பிட்டால் உங்களுடன் சாப்பிட்டால் உங்கள் வீட்டில் சாப்பிட்டால் எப்படித் தோஷமும் பாவமுமான காரியமாகி விடுகின்றதோ அப்படியே எங்கள் வீட்டிலே எங்கள் முன்னாலே எங்கள் பக்கத்திலே சாப்பிட்டாலும் தோஷம், மோசம் பாவமென்று தான் சொல்லப்படுகின்றது.

நமது சமூகத்திற்கு பெயர் சொல்லி அழைப்பதிலும் உங்களைவிட



RangaRakes tamilnavarasam.com

மிக இழிவாகவேதான் அழைக்கப்படுகின்றோம். உங்களைப் பறையர் என்றும், பள்ளர் என்றும் சொல்லுகிறார்கள். ஆனாலும் பறையர், பள்ளர் என்கின்ற வார்த்தை தொழிலையும், வசிப்பு இடத்தையும் பொறுத்து ஏற்படுத்தப்பட்டது. பறையனும் பள்ளனும் அந்த பெயரால் சுதந்திரமான வராகவும் இழிவுபடுத்தத்தகாதவராகவும் இருக்கிறார்கள். ஆனால் எங்களை அழைக்கும் பெயராகிய சூத்திரன் என்று சொல்லப்படும் பேரானது பிறவி யிலேயே இழிவை உண்டாக்கத்தக்கதும், ஒருவனுக்குப் பிறவி அடிமை யாகவும், பிறவி தாசி மகனாகவும் மற்றும் மிக்க இழிவான கருத்துக் கொண்டதாகவுமே இருக்கின்றது. எங்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் நிர்ப்பந்தங்களும் சகிக்க முடியாத இழிவை கொடுக்கக்கூடியதாகவே இருக்கின்றது. பறையன் என்றால் சொந்தத்தாய் தந்தைக்கே பிறந்தவன் என்கின்ற கருத்து உண்டு. ஆனால் சூத்திரன் என்றால் – தாசிமகன், வேசிமகன், வைப்பாட்டி மகன், பிறவி அடிமை, விலைக்கு வாங்கப்பட்ட அடிமை என்பது போன்ற பல இழிவுப் பொருள்கள் நிறைந்திருக்கின்றது.

தவிர, உங்களைப் போன்ற ஒருவகுப்பு, அதாவது பஞ்சமர்கள் என்று சொல்லப்படுவதற்கும், அப்படி ஒன்று இருப்பதற்கும் பார்ப்பன மதத்தில் அதாவது இந்து மதத்தில் இடமே இல்லை. இந்து மதத்தில் சூத்திரன் என்பதற்கும் கீழாக ஒரு ஜாதியே பிறவியில் கிடையாது. ஆனால் வாழ்க்கையில் நான்கு வருணக்காரர்களும் நடந்து கொள்ளுகின்ற முறையில் சண்டாளர்கள் என்று ஒரு வகுப்பு உண்டாகின்றது. அதாவது, பார்ப்பன ஆணுக்கும் பார்ப்பனரல்லாத பெண்களுக்கும் பிறக்கும் பிள்ளைகள், பார்ப்ப னிக்கும் பார்ப்பனரல்லாதவனுக்கும் பிறக்கும் பிள்ளைகள், பார்ப்பனர்களில் வேதம் படிக்காதவன், நெருப்பு வளர்க்காதவன், சந்தியா வந்தனம் செய்யா தவன் மற்றும் இதுபோல் பார்ப்பனீய கருமங்கள் என்பதுகளைச் செய்யாத வன் முதலானவர்கள் சண்டாளர்களாகின்றார்கள்.

இது தர்க்க பார்ப்பனப் பண்டிதர்களும், வேதசாத்திர நிபுணர்கள் என்பவர்களுமே சொல்லி உறுதிப்படுத்தி இருக்கின்றார்கள். ஆதலால் உங்களை யாராவது சண்டாளர்கள் என்று சொல்வார்களானால் அவர்கள் உங்களை பார்ப்பனிக்கும் பார்ப்பனரல்லாதவருக்கும், அல்லது பார்ப்பனருக் கும் அல்லாத பெண்ணுக்கும் பிறந்தவர்கள் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். அப்படியில்லையானால் ஒழுக்கந் தவறிய பார்ப்பனர்கள்தான் நீங்கள் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். அப்படியானால் இன்றைய தினம் பார்ப்பனச் சமூகத்தில் உள்ள 100க்கு 99 $^{3}/_{4}$ பெயர்வழிகள் சண்டாளர்களாகத்தான் இருக்கவேண்டும். எனவே, இந்த முறையில் உங்களுக்காவது தர்க்க ரீதியில், ஒரு வழியில் குற்றம் சொல்லாமலிருக்க ஆதாரங்களும் இடமுமிருக்கின்றன. ஆனால் எங்கள் நிலை நினைக்கவே முடியாதபடி பெரிய இழிவாயிருக்கின்றது. ஆதலால் தான் சமூக வாழ்வில் உங்களை விட நாங்கள் தாழ்ந்த – இழிவான – தன்மையில் இருக்கின்றவர்கள்



RangaRakes

என்று சொல்லுகின்றதுடன் இவ்விழிவு நீங்க முயற்சிக்கும் வேலை முக்கியமாக எங்கள் வகுப்புக்காகச் செய்யப்படும் வேலையென்றும் சொல்லு கின்றேன். தவிர, உங்களுக்கோ எங்களுக்கோ இப்போதிருக்கும் இழிவுகள் ஒழிய வேண்டும் என்கின்ற கவலை சிறிதளவாவது யாருக்காவது இருக்கு மானால், அவர்கள் இவ்விழிவு நிலைக்கு ஆதாரமாயுள்ளதை அழிக்கத் தைரியங்கொண்டு தயாராயிருந்தாலொழிய கண்டிப்பாய் முடியவே முடியாது. ஏனெனில், இவ்விழிவுகளை ஏற்படுத்தியது மனிதனுடைய அயோக்கியத் தனமாய் இருந்தாலும், அதை நிலை நிறுத்தக்கருதி அதையே ஒரு மதத் தத்துவமாகவும், அத்தத்துவம் எல்லாம் வல்ல கடவுள் என்பவரால் ஏற்படுத்தப்பட்டதென்றும் கற்பிக்கப்பட்டு நிலைநிறுத்தி அமுலில் நடத்தி வரப்படுகின்றது.

இந்நிலை சிறிது மாற்றப்பட வேண்டுமென்றாலும் மேற்கண்ட மதமும் கடவுளும் வந்து குறுக்கிடுகின்றது. ஆதலால் இந்நிலைக்கு ஆதாரமான தென்று சொல்லப்படும் மதத்தையும், அம்மதத்தை உண்டாக்கினதாகச் சொல்லப்படும் கடவுளையும் எதிர்த்து நின்று அவற்றை அழித்தாலொழிய வேறு மார்க்கமில்லை என்று பதில் அளிக்கவும் ஒழிக்கவும் தைரியமாகவும் தயாராகவுமிருந்தாலொழிய, வேறு மார்க்கத்தில் முடியவே முடியாது. அன்றியும் உங்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சி வேண்டும். நாம் ஏன் தாழ்ந்தவர்கள்? நாம் ஏன் ஒருவரைச் சாமி என்று கூப்பிடவேண்டும்? நாம் ஏன் ஒருவனுக்குப் பாடுபட வேண்டும்? என்கின்ற உணர்ச்சி வரவேண்டும். நீங்களும் மற்றவர்களைப் போல் மனிதர்கள்தான் என்று கருத வேண்டும்.

உங்களை யாராவது கிராமவாசிகள் துன்புறுத்தினால் இழிவாய் நடத்தினால் எதிர்த்து நிற்கவேண்டும். முடியாவிட்டால் வேறு பட்டணங்க ளுக்குக் குடியேறிவிட வேண்டும். அங்கும் ஜீவனத்திற்கு மார்க்கமில்லா விட்டால் இம்மாதிரியான கொடுமையான மதத்தை உதறித் தள்ளிவிட்டு சமத்துவமுள்ள மதத்திற்கு போய்விட வேண்டும். அதுவும் முடியாவிட்டால் வெளிநாடுகளுக்காவது கூலிகளாய்ப் போய் உயிரையாவது விட வேண்டும். இம்மாதிரியான உறுதியான முறைகளைக் கையாளத் துணியவில்லையானால். உங்கள் மீது சுமத்தப்பட்ட இழிவு சுலபத்தில் ஒழியாது என்றே சொல்லுவேன். கஷ்டப்படவும், கட்டுப்பாட்டை உடைத்தெரியவும், உயிரைவிடவும் தயாராயில்லாமல் எந்த காரியத்தையும் சாதிக்க முடியாது. அன்றியும், வேறு ஒருவன் வந்து உங்களுக்கு உதவி செய்வானென்று எதிர்பார்ப்பதும் பெரிய முட்டாள்தனமாகும். உங்களையே நீங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளத் துணிவு கொள்ள வேண்டும். படிப்பினாலும், பணஞ் சம்பாதிப் பதாலும் குளிப்பதனாலும், குடிக்காமலிருப்பதாலும், மாமிசம் சாப்பிடா திருப்பதனாலும் இவ்விழிவு போய்விடுமென்று சிலர் உங்களுக்கு உபதேசம் சொல்லுகின்றார்கள். நான் அவைகளை ஒப்புக் கொள்ளமாட்டேன். உங்களு டைய இழிவுக்கு இவைகள் தான் காரணம் என்றால், இந்தத் தன்மைகள்



tamilnavarasam.com

உள்ளமற்றவர்கள் இவ்வழியை அடையாமல் "பிராமணர்" களாகவே எப்படி இருக்கின்றார்கள். உங்களுடைய இழிவுக்குக் காரணம் உங்களுக்கு மானம், சுயமரியாதை உணர்ச்சி ஏற்படாதது தானேயொழிய வேறில்லை. ஆகையால் நீங்கள் உங்களைத் தாழ்ந்தவர்கள் என்று நினைத்துக் கொள்ளாமல் நீங்களும் மற்றவர்களைப் போல் மனிதர்கள் தான் என்று எண்ணிக் கொண்டு அதற்கு ஏற்றவிதமாக நடந்து கொள்ளத் துணிவு கொள்ளுங்கள். அதனால் ஏற்படும் கஷ்டங்களைச் சகிக்க தைரியங் கொள்ளுங்கள்! சீக்கிரத்தில் விடுபடுவீர்கள்.

*குறிப்பு : 12.06.1929 இல் சின்ன சேலம் சிறுவத்தூரில் நடைபெற்ற தென்னார்க்காடு ஜில்லா ஆதிதிராவிடர் மாநாட்டைத் திறந்து வைத்து உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 16.06.1929**



# நமதியக்க ஸ்தாபனம்

சுயமரியாதை இயக்க ஸ்தாபனமானது சென்னையில் பொது ஸ்தாபன பதிவுச் சட்டப்படி சென்னையில் பதிவு செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வரப்படுகின்றன. அது முடிந்தவுடன் 'குடி அரசு' 'ரிவோல்ட்' ஆகிய வாரப் பத்திரிகைகளும் 'பகுத்தறிவு' என்னும் மாதப் பத்திரிகையும் சுயமரியாதை சங்கச் சார்பாகவே பிரசுரிக்கப்படும். 'திராவிடன்' தினசரிப் பத்திரிகையும் அதன் நிர்வாகப் பொறுப்பும் நம்மிடம் இருக்கும்வரை இச்சங்கச் சார்பாகவே பதிப்பித்து வரப்படும்.

சுமார் இரண்டு வருஷ காலமாகவே பத்திரிகைகள் நடத்தும் பொறுப்பை யார் வசமாவது ஒப்புவித்து விடுவதற்கு நாம் மிகுதியும் முயற்சி செய்து வந்தது நாம் பல நண்பர்களிடம் நேரில் தெரிவித்து கொண்டதாலும் பத்திரிகையின் ஒவ்வொரு ஆண்டுத் தொடக்கத்தில் எழுதிவரும் தலையங்கத்தாலும் நன்றாய்த் தெரிந்திருக்கலாம். பத்திரிகை நடத்துவதில் உள்ள கஷ்டம், அதுவும், ஒரு குறிப்பிட்ட லட்சியத்தின் பிரசாரத்திற்காக நடத்தப்படும் பத்திரிகைகளுக்கு இருக்கும் கஷ்டம் அதை அனுபவித் தவர்களுக்குத்தான் தெரியவரும். உதாரணமாக "ஜஸ்டிஸ்" "திராவிடன்" பத்திரிகைகள் தென்னிந்திய நலஉரிமை சங்கச் சார்பாக சுமார் 12 வருஷத் திற்கு மேலாகவே நடந்து வருகின்றன. அதற்கு இந்த மாகாணத்திலுள்ள பெரிய பெரிய பிரபுக்களும் ராஜாக்களும் ஜமீன்தாரர்களும் மற்றும் 100-க்கு 97வீதம் உள்ள பொது ஜனங்களும் ஆதரித்தும் பதினாயிரக்கணக்காக பணம் கொடுத்தும் வந்திருக்கின்றார்கள். அச்சங்கத்தார் அதிகார ஆதிக்கம் பெற்றக் காலத்திலும் அதாவது மந்திரிகள் இருந்த காலத்திலும் மாதம் 1-க்கு 3000 ரூபாய் வீதம் உதவி வந்தார்கள். இந்த மாதிரி உதவி செய்ததின் மூலம் சுமார் 2 லக்ஷ ரூபாய்கள் வரை இப்பத்திரிகைகளுக்கு பணவுதவி கிடைத்தும், இன்றைக்கும் தன் காலில் நிற்க முடியாமல் மாதம் 2000 ரூபா போல் நஷ்டத்தில் நடைபெற வேண்டியிருக்கின்றது. இவ்வளவு ஜனக்கட்டும் பணக்கட்டும் செல்வாக்கும் இருக்கும் பத்திரிகைகளின் கதியே இப்படியா னால் நம்போன்றவர்கள் அதிலும் செல்வாக்குள்ள கொள்கைகளுக்கு எதிரா கவும் ஆதிக்கமும் அதிகாரமும் சூழ்ச்சியுமுள்ள சமூகங்களுக்கு விரோத மாகவும் ஒரு பத்திரிகையைத் துவக்கினால் அதில் எவ்வளவு கஷ்டம் இருக்கும் என்பதை யோசித்தால் தெரியும். அதோடு மாத்திர மல்லாமல் சந்தாவும் வெகு சுருக்கமான தொகை, அதாவது வருஷத்திற்கு மூன்றே



RangaRakes tamilnavarasam.com

ரூபாய். 20 பக்கமுள்ள பத்திரிகையின் காகித கிரயம், அச்சுக்கூலி, ஸ்டாம்பு ஆகியவைகளுக்கே சந்தா தொகை போதும் போதாத நிலையில் இருக்கின்றது. இதில் நிலுவை பாக்கி வீண் செலவு ஆகியவைகளும், ஆசிரியக் கூட்டத்திற்கும், கணக்கு நிர்வாகத்திற்கும் கைப்பொறுப்பு என்று தான் சொல்ல வேண்டும். இந்த நிலையில் பத்திரிகை ஆரம்பித்த 4 வருஷ காலத்தில் ஒரே ஒரு தலையங்கம் மாத்திரம் அதுவும் காயலாவாய் படுத்த படுக்கையில் இருந்த சமயம் தவிர பாக்கி எல்லா தலையங்கமும் நம்மாலேயே எழுதப்பட்டு வந்திருக்கின்றது. ஆரம்பத்தில் ஒவ்வொரு வாரமும் 12 பக்கமும் நாமாகவே எழுதி வந்திருக்கின்றோம். இந்த நிர்ப்பந்தத்தில் வாரம் 2, 3 நாள்களுக்கு குறையாமல் வெளிப் பிரயாணமும் செய்து வந்திருக்கின்றோம். இதனன்றி பிரசாரகர்களையும் பல இடங்களுக்கு அனுப்பியும் வந்திருக்கின்றோம்.

இம்மாதிரி எவ்வளவோ கஷ்டமும் நஷ்டமும் அடைந்து கொண்டு இப்பத்திரிகையை நடத்தி வந்திருக்கின்றோமென்றாலும், சாதாரணமாக இந்தத் தொண்டில் எனக்குப் பெருத்தலாபம் இருப்பதாகவும் மாதம் 1000, 2000 வரும்படி வருகின்றதென்றும் உண்மையாகவே பலர் நம்பி இருக்கின்றார்கள். சமீபத்தில் எமது குடும்பத்தில் கட்டப்பட்ட வீட்டைப் பார்த்து பெண்கள் குழந்தைகள் எல்லாம், பத்திரிகை லாபத்தாலும் பிரசாரத்திற்குப் போகிற இடத்தில் கிடைக்கும் லாபத்தாலும் கட்டப்பட்டதென்றே நமது காதுக்கு எட்டும் படியாகப் பேசிக் கொண்டு போகின்றார்கள். இதை எதற்காக எழுதுகின்றோம் என்றால், பொதுநல சேவையில் உண்மையாக கஷ்டமும் நஷ்டமும் கெட்ட பேரும் பழியும் அடைகின்ற மக்களை பார்த்தால் பெருத்த லாபமடையும் சுயநலக்காரர்களைப்போலத் தோன்றுவதும், பொது வாழ்க்கையின் பேரால் பணலாபமும் சுகமும் கீர்த்தியும் பெறுகின்றவர்களைப் பார்த்தால் பெரிய தியாகிகள் போலவும் கஷ்ட நஷ்டம் அனுபவிப்பவர்கள் போலவும் காணப்படுவதும் உலக இயற்கைகளில் ஒன்றாயிருக்கின்றது என்பதைக் காட்டவே எழுதினோம். எது எப்படி இருந்தபோதிலும் எவ்வளவு கஷ்டமும் நஷ்டமும் பழியும் ஏற்பட்டிருந்த போதிலும் மொத்தத்தில் நமது தொண்டினால் நாம் நமது யோக்கியதைக்கு மேலான லாபத்தை அடைந்திருக்கின்றோம் என்பதை மனதார ஒப்புக்கொள்ளுகின்றோம். அதாவது நமது இயக்கம் பரவி இருக்கின்ற அளவுக்கு நாம் கொடுத்த விலை மிகமிகக் கொஞ்சமென்றுதான் சொல்லுவோம். நிற்க, இதுவரை அதாவது நஷ்டமும் கஷ்டமும் உள்ளவரை நாம் நமது சொந்த பொறுப்பில் நடத்தி வந்து இப்போது இனிமேல் எந்த விதத்திலும் இதற்கு நட்டம் வராது என்பதோடு கவனித்து நடத்தினால் சகல லாபமும் கிடைக்கும் என்கின்ற நிலையில் அதுவும் 9000 பிரதிகளுக்கு மேல் வெளியாகத் தக்க நிலைமையில் அதை ஒரு பொது ஸ்தாபனத்தின் பொறுப்பில் விடுவதைப் பற்றி யாரும் எவ்வித தப்பபிப்ராயத்தையோ பலக் குறைவையோ கற்பிக்க முடியாதென்றே சொல்லுவோம். மற்றபடி இப்படி நாம் ஒப்பி விட்டதற்கு முக்கியக் காரணம்



என்னவென்றால், சுயமரியாதை இயக்கம் ஒரு தனிப்பட்ட மனிதனுடைய இயக்கமாக இருக்கக்கூடாது என்கின்ற ஒரே எண்ணமே தவிர வேறில்லை. ஏனெனில், ஒத்துழையாமை இயக்கம், திரு.காந்தியின் தனி இயக்கமாக இருந்ததாலும் ஒத்துழையாமைக்கும் சத்தியாக்கிரகத்திற்கும் திரு.காந்தி ஒருவரே பாஷியக்காரராயிருந்ததினாலும் அது அவர் காலத்திலேயே ஏதோ ஒரு காலத்தில் நடந்தது என்று சொல்லும்படி ஆகிவிட்டது. எந்த இயக்கமானாலும் இயக்கத்தைத் தொடங்கினவர் பலக் குறைவுடையவராக ஆகிவிட்டாலும் அல்லது செத்தே போய்விட்டாலும் அவருக்குப் பிறகும் நடக்கும்படியான நிலைமையில் அதை வைத்துவிட்டு போனால்தான் அது ஏதாவது பலனைக் கொடுக்க முடியும். அப்படிக்கில்லாமல் தன் கையிலேயே வைத்துக் கொண்டு தன்னிஷ்டப்படி தன்னைச் சுற்றிக் கொண்டே திரியும் சிஷ்யர்களை மாத்திரம் வைத்துக் கொண்டு வாழ்நாளைக் கடத்தி வந்தால் அவ்வியக்கத் தலைவன் இறந்தவுடன் அத்தலைவனது பிணத்தைச் சுட்ட இடத்தை மடமாகவோ கோயிலாகவோ கட்டி அதில் ஒரு படத்தையும் உருவத்தையும் வைத்து பூஜை செய்கின்ற வேலையோடு அவ்வியக்கத்தின் பலன் முடிவெய்திவிடும்.

ஆதலால் தான் அதை இப்போதே சர்வ சுதந்திரமாய் பொது ஜனங்கள் வசம்விட்டுவிட்டோம். ஆனால் இப்பத்திரிகைகளை நடத்தும் கொள்கைகளை மாத்திரம் நாம் வைத்துக் கொண்டு இருக்கின்றோம். தவிர நமது இயக்கத்தைப் பற்றி நமது எதிரிகளும் அவர்களது கூலிகளும் பலவாறான கெட்ட எண்ணத்தோடு பொது ஜனங்களுக்குத் திரித்துக் கூறி இதுவரை எவ்வளவோ விஷமப் பிரசாரம் செய்து வந்தும், ராமாயணக் கதையில் வாலிக்கு அவனை எதிர்ப்பவர்களுடைய பலத்தில் பகுதி அவனுக்கு போய் சேருகின்றது என்றதுபோல் இவ்வியக்கத்தின் எதிரிகளுடைய பிரசாரத்தால் நமதியக்கம் பாமர மக்களிடை பரவவும், அவர்களுக்கு இருக்கும் சந்தேகங்கள் விளங்கித் தெளிவடையவும் பெரிதும் உபயோகப்பட்டு வந்திருக்கின்றது. அன்றியும் வெளியிடங்களிலும் பரவத்தலைப்பட்டு விட்டது.

தவிர, நமது இயக்கத்தை அழிக்க எதிரிகள் கைக்கொண்ட சூழ்ச்சி ஆயுதம் இரண்டே இரண்டுதான். அதாவது நாம் மதத்திற்கு விரோதி என்பதும் மக்களுக்கு கடவுள் உணர்ச்சியைக் கெடுக்கின்றோம் என்பவைகளே. இவ்விரண்டு காரியங்களையும் நாம் செய்கின்றோமோ இல்லையோ என்பது ஒரு பக்கமிருந்தாலும் அவர்கள் சொல்லும் மேற்படி இரண்டு காரியங்களும் இப்போது உலகத்தில் காட்டுத்தீ போல் பரவி வருகின்றது. இன்றைய மலரில் வேறு ஒரு பக்கம் வெளியிட்டிருக்கும் வெளிநாட்டு செய்தி *ஒன்று ஐரோப்பா நாட்டிலுள்ள மாஸ்கோ என்கின்ற நகரில் கடவுள் மறுப்பு மகாநாடு ஒன்று கூடி உலகத்தில் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகளும் காட்சியாளர்களும் வந்து கடவுளையே மறுத்து தீர்மானங்கள் செய்திருக்கின்றார்கள். கடவுள் மறுப்புக்கு ஆதாரமாய் அனேக கண்காட்சி



RangaRakes tamilnavarasam.com

களையும் வைத்துக் காட்டி அதை உலகமெல்லாம் பிரசாரம் செய்ய கமிட்டிகள் ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்.

அது மாத்திரமல்லாமல் அந்த தேசத்தில் உற்சவங்கள்கூட நடத்தக் கூடாது என்று அரசாங்கத்தின் மூலம் உத்திரவுகள் போடச் செய்ததோடு அதைப் பிரசாரமும் செய்து வருகின்றார்கள். இவை நிற்க, நமது நாட்டிலேயே பம்பாய் மாகாணத்தில் சென்ற வாரத்தில் ஒரு சுயமரியாதை மகாநாடு கூட்டி ஐயாயிரக்கணக்கான மக்கள் கூடி கடவுள் பூசைக்காக சர்க்கார் கொடுத்து வரும் மோகினித் தொகையை (தஸ்தி தொகை) நிறுத்திவிட வேண்டுமென்று தீர்மானம் செய்திருப்பதுடன் ராமாயணம், பாரதம், மனுஸ்மிருதி முதலிய மத ஆதாரங்கள் என்பவைகளை பறிமுதல் செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கின்றார்கள். இவ்வளவும் ஒரு புறமிருந்தாலும், மீரத் சதி வழக்கில் எதிரிகளின் பேரில் சர்க்கார் வக்கீல் குற்றம் சாட்டுகின்ற முறையில் எதிரிகள் கடவுளை நம்பாதவர்கள் என்றும், கடவுள் நம்பிக்கையை ஒழிக்கப் பிரசாரம் செய்கின்றவர்கள் என்றும் சொல்லியிருக்கின்றார். எதிரிகளுடைய வக்கீலும் கடவுளை மறுப்பதும் கடவுள் நம்பிக்கையை ஒழிக்கப் பிரசாரம் செய்வதும் குற்றமாகாதென்றும் அதற்கும் இக்குற்றத்திற்கும் சம்பந்தமில்லை என்றும் வாதாடினாரே ஒழிய அது உண்மை அல்லவென்று சொல்லவே இல்லை, இதுவும் தவிர, ஆப்கன் அரசர் அமானுல்லா அவர்கள், அவர் நாட்டு முல்லாக்கள் சூழ்ச்சியால், நாத்திகர் என்றும் இஸ்லாம் மத விரோதி என்றும் மதத் துரோகி என்றும் பழி சுமத்தப்பட்டு அரசைத் துறக்கச் செய்திருந்தாலும், நமது மாகாணத்தில் ஹைகோர்ட் ஜட்ஜாகவும் வங்காள மாகாண மந்திரியாகவும் இருந்த சர்.அப்துர் ரஹீம் அவர்கள் மேற்படி அமீரைப் பற்றி வெகு பரிதாபப்பட்டு என்ன சொல்லுகின்றார் என்றால் "அமீரின் தத்துவங்களை ஆப்கானியர்கள் ஒப்புக் கொள்ளாததிலிருந்து அத்தேசத்தில் தேசிய உணர்ச்சி சிறிதும் இல்லை என்பதாகத் தெரிகிறது. அமீருக்கு விரோதமாயிருந்தவர்கள் தேசத் துரோகியும் ராஜத் துரோகியுமாவார்கள். அமானுல்லாவைப் போன்ற தேச பக்தர் வேறு எந்த தேசத்திலும் பிறக்கவில்லை. பண்டைய மூடநம்பிக்கைகளை ஒழிக்க வேண்டியது அவசியம். அவ்வெண்ணம் கொண்டவர்கள் மிகவும் ஊக்கமாகவே இருப்பார்கள். அமீரின் கொள்கைகள் வெற்றி பெற்றால் முஸ்லீம் நாடு உலகத்தில் ஒரு சிறந்த நாடாய் இருக்கும்" என்று பேசியிருக்கின்றார்.

எனவே, இந்த மாதிரியாக அநேக இடங்களிலிருந்து நமது இயக்கத்திற்கு ஆதரவுகள் தாராளமாய்க் கிடைத்து வருவதைப் பார்க்க நாம் எய்தும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆதலால், நமது வாலிப நண்பர்கள் நமது வேலையை ஒப்புக் கொண்டு நமக்கு வேண்டிய உதவி புரிய கேட்டுக் கொள்வதற்காகவே இந்த நீண்ட கட்டுரை எழுதினோம். அதாவது 'குடி அரசு' இந்த இதழிலிருந்தே, சுயமரியாதைச் சங்கத்திற்கு அங்கத்தினர்களைச் சேர்க்கும் உத்தேசத்துடன்



அங்கத்தினராய்ச் சேருவதற்கு ஒரு விண்ணப்ப ரூபமாக ஒரு துண்டு விளம்பரம் * * பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. அதைக் கண்ணுறும் வாலிபர்கள் தயவு செய்து கத்தரித்து அங்கத்தினர்களாகச் சேர்வதோடு, மற்றவர்களின் கையொப்பத்தையும் சந்தா அணா இரண்டையும் பெற்று நமக்கு அனுப்பிக் கொடுக்க வேண்டுகின்றோம். இந்த வருஷ முடிவிற்குள் தமிழ் நாட்டில் ஏராளமான அங்கத்தினர்களைச் சேர்க்க வேண்டிய பொறுப்பை நமது வாலிபர்களுக்கே விட்டிருக்கின்றோம். அங்கத்தினர்கள் சேர்க்கும் ரசீது புத்தகங்களும் அச்சாகின்றன. சீக்கிரத்தில் வேண்டியவர்களுக்கு அனுப்பிக் கொடுக்கின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 16.06.1929**

*** ருஷியாவிலும் "கடவுளுக்கு ஆபத்து" மாஸ்கோவில் கடவுள் மறுப்பு மகாநாடு**

10-6-29 உ யில் மாஸ்கோ நகரத்தில் கடவுள் மறுப்பு மகாநாடு ஒன்று நடைபெற்றது. அதற்கு சோவியத் ராஜ்யம் முழுவதிலுமிருந்து 700 பிரதிநிதிகளும், ஜர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்வீடன் முதலிய ஐரோப்பிய நாடு முழுவதிலுமிருந்து பல பிரதிநிதிகளும் அன்பர்களும் விஜயம் செய்திருந்தார்கள். இம்மகாநாட்டின் சார்பாக கடவுள் மறுப்பு கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடவுள் மறுப்புக் கொண்டாட்டங்களும் நடைபெற்றன.

*** * சுயமரியாதை மாகாணச் சங்கம்**

காரியதரிசி,

**சுயமரியாதை மாகாணச் சங்கம்,**
" திராவிடன்" பதிப்பகம்,
14, மவுண்ட் ரோடு, சென்னை.

ஐயா,

என்னைத் தங்கள் சங்கத்தின் அங்கத்தினராய்ச் சேர்த்துக் கொள்ள கேட்டுக் கொள்ளுகின்றேன். இத்துடன் ஓர் ஆண்டுக் கட்டணம் 0-2-0 அனுப்பி யிருக்கின்றேன்.

பெயர் ..............................................................

விலாசம் ..............................................................

..............................................................

(இதில் கையொப்பமிட்டு வெட்டி அனுப்பவும்)



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனனுக்கும் சைவனுக்கும் சம்பாஷனை

**– சித்திரபுத்திரன்**

**சைவன் :–** ஓய்! என்னாங்காணும்! அய்யரே! நீர் இப்போது மாமிசம் சாப்பிடுகின்றீரே! என்ன இப்படி கெட்டுப் போய்விட்டீர்.

**பார்ப்பனன் :–** வாரும், வாரும், பிள்ளைவாள்! எனக்கு வரவர ஜீவ ஹிம்சை என்றால் சற்றும் பிடிப்பதே இல்லை. இன்றைக்கு சாகின்றோமோ, நாளைக்கு சாகின்றோமோ; இதற்குள் ஏன் அநியாயமாய் பல ஜீவன்களை இம்சை செய்ய வேண்டும் என்பதாகக் கருதியே இனிமேல் காய்கறிகள் சாப்பிடுவதில்லை என்று தீர்மானித்து மாமிசம் சாப்பிட துணிந்துவிட்டேன்.

**சைவன் :–** என்னங்காணும் பார்ப்பனர் ஜீவ இம்சை கூடாது என்கின்றீர். அதற்காக மாமிசம் சாப்பிடுகின்றேன் என்கின்றீர். இது என்ன, போக்கிரித்தனமா அல்லவா?

**பார்ப்பனன்:–** கோபித்துக் கொள்ளாதீர் ஐயா! நீர் சைவர் அல்லவா? உமக்கு வெறும் கோபம்தான் வருமேயொழிய விஷயம் புலப்படுவதுதான் கஷ்டம்.

**சைவன்:–** என்ன பார்ப்பனக் குறும்பு நம்மிடம் காட்டுகிறாய். பார்ப்பான் மாமிசம் சாப்பிட்டுத்தான் இந்த நாடு பாழாச்சுது.

**பார்ப்பனன் :–** இந்த நாடுதான் பார்ப்பனன் மாமிசம் சாப்பிட்டு பாழாச்சுது, சரி வெள்ளைக்கார நாடு என்ன சாப்பிட்டு நல்லா ஆச்சுது? தவிரவும், இந்தியாவில் உள்ள 33 கோடி மக்களில் மாமிசம் சாப்பிடுகின்றவர்கள் எத்தனைப் பேர்? சாப்பிடாதவர்கள் எத்தனையோ பேர் என்பது உமக்குத் தெரியுமா? 7 கோடி மகமதியர் மாமிசம் சாப்பிடுகிறார்கள்! ஒரு கோடி கிறிஸ்தவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். 6 கோடி தீண்டாதார் என்கின்றவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். க்ஷத்திரியர் என்கின்றவர்களில் சிங்கு க்ஷத்திரியர்கள் மராட்டா க்ஷத்திரியர்கள் நாடார் க்ஷத்திரியர் வன்னிய க்ஷத்திரியர், நாயுடு க்ஷத்திரியர், செங்குந்த க்ஷத்திரியர் ஆகியவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். ஷை வகுப்பார்களில் வாணிய வைசியர் மாமிசம் சாப்பிடு கிறார்கள். நாட்டுக் கோட்டை தன வைசியர் வகுப்பார்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். வேளாளர்களில் கொங்கு வேளாளர்கள், கார்காத்த வேளாளர்கள், உடையார் வேளாளர்கள், மறவ வேளாளர்கள், படைத்தலை வேளாளர்கள், வடுக வேளாளர்கள், நாட்டார் வேளாளர்கள் ஆகியவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். திருநெல்வேலி தஞ்சாவூரில் உள்ள சில வேளாளர்கள் அவர்களைச் சேர்ந்த வெளியில் உள்ள சிலர்கள் தவிர மற்ற எல்லா வேளாளர்களும் மாமிசம் சாப்பிடுகிறார்கள். கடைசியாக, பிராமணர்கள் என்பவர்களிலோ சௌராஸ்டிர பிராமணர்கள், விஸ்வ பிராமணர்கள், தேவாங்க பிராமணர்கள், சாலிய பிராமணர்கள், கொங்கிணி பிராமணர்கள் கவுடப் பிராமணர்கள், காஷ்மீரப் பிராமணர்கள், மச்சப் பிராமணர்கள், அம்பஷ்ட்டப் பிராமணர்கள் முதலிய பல பிராமணர்களும் மாமிசம் சாப்பிடுகின்றார்கள். இந்தியாவில் இவர்கள் எண்ணிக்கைகளை யெல்லாம் சேர்த்தால் குறைந்தது 15 கோடிக்கு குறையாது. அடியோடு மாமிசம் சாப்பிடாதவர்கள் சுமார் ஒரு கோடி இருக்கலாமா என்பது சந்தேகம். 35 கோடியில் 1 கோடி அதாவது 100–க்கு 3 பேராகலாம். தவிர, இந்தியர் தவிர உலக மக்கள் எல்லோரும் மாமிசம் சாப்பிடுகின்றார்கள். எனவே மொத்த ஜனத் தொகையில் 100–க்கு 99 $^1/_2$ பேர்களை ஜீவ காருண்யமற்றவர்கள் என்று நீர் சுலபத்தில் சொல்லிவிட முடியுமா? சொல்லும் பார்ப்போம்.

**சைவன் :–** என்னங்காணும்! பார்ப்பனன் நீர் மாமிசம் சாப்பிடுகின்றீரே இது யோக்கியமா? என்றால் ஊர் கதையெல்லாம் பேசுகிறீர்!

**பார்ப்பனன் :–** சொல்லுவதை கவனமாய் கேளும் சைவரே, வெறும் கோபம் ஒரு காசுக்கும் உதவாது. அதெல்லாம் அந்த காலம். இது அறிவு ஆராய்ச்சி சைன்சு காலம் தெரியுமா? நான் மாமிசம் சாப்பிடக் கூடாது என்று நினைத்து வெகுநாளாய் சாப்பிடாதிருந்தது உண்டு. அது எதற்காக என்றால் ஜீவகாருண்யத்தை உத்தேசித்து தானே ஒழிய வேறு இல்லை. பிறகு இத்தனை பேர்கள் மாமிசம் சாப்பிடுவதை கணக்குப் பார்த்து உலகத்தில் 100–க்கு 99 $^1/_2$ பேருக்கு ஜீவகாருண்யம் இல்லாமல் இருக்குமா? இப்படி ஒரு கடவுள் மக்களை பிறப்பித்து இருப்பார் என்று யோசித்து, யோசித்து மயங்கிக் கிடந்தேன்.

கடைசியாக திரு.சர்.ஜகதீச சந்திரபோஸ், மரம் செடி கொடி புல் பூண்டு ஆகியவைகளுக்கு உயிர் இருக்கின்றது. அவைகள் தொட்டாலும், நாடினாலும், முறித்தாலும், பறித்தாலும் கஷ்டப்படுகின்றன என்பதைக் கண்டு பிடித்தபிறகுதான் சரி, எது ஜீவ காருண்யம்? என்பதை ஆராயப் புகுந்தேன்.

காய்கறிகள் சாப்பிடுவதைவிட மாமிசம் சாப்பிடுவதுதான் அதிகமான ஜீவகாருண்யம் என்பதாக உணர்ந்தேன். எப்படி என்றால், உயிர் இருப்பதால் அது ஜீவனாகின்றது. ஜீவனை வதைத்துச் சாப்பிடுவது மாமிசமாகின்றது. ஆகவே, ஒரு செடியின் தழைகளை கிள்ளிப் பிடுங்கும் போதும், காய்களை அறுக்கும்போதும், கிழங்குகளைப் பறித்து வாடவைக்கும்போதும் அவைகள் படும்பாடு சித்திரவதைக்கு ஒப்பாகிறது என்று போஸ் சொல்லுகிறார். எனவே ஒரு ஜீவனை தினம் தினம் பல தடவை வதை செய்து அதைத் துன்புறுத்துகின்றோம் என்பதை உணர நேரிட்டது. இப்போதும் அதை நினைத்தால்





RangaRakes tamilnavarasam.com

சகிக்க முடியாத துக்கம் வருகிறது. ஆனால் மாமிசம் அப்படியல்ல ஒரு ஜீவனை சாப்பிடுவதனால் ஒரு தடவைக்குமேல் யாரும் தொந்திரவு செய்யமாட்டார்கள். அதுவும் க்ஷணத்தில் முடிந்து போகும். ஆதலால்தான் கிழங்கு, கீரை, காய், கறியைவிட மாமிசம் சாப்பிடுவது ஜீவகா ருண்யமாகும் என்று சொன்னேன். ஆதலால் ஓய்! சைவரே நான் உம்மை விட குறைந்த ஜீவகாருண்யம் உடையவன் என்று எண்ணிவிடாதீர். தவிர, திரு.போஸ் காய், கறிகளுக்கு உயிர் இருப்பதை இன்று கண்டுபிடித்தார். ஆனால் மாமிசம் சாப்பிடும் மக்கள் வெகுகாலத்திற்கு முன்பே கண்டுபிடித்துத் தான் மாமிசம் சாப்பிடுகின்றார்கள் என்பதாகத் தெரிகின்றது. அன்றியும், வேதமும் மனுதர்ம சாத்திரமும் கண்ணப்ப நாயனாரை ஒப்புக் கொண்ட சைவப் புராணங்களும் இதை அறிந்துதான் மாமிசத்தை அனுமதித்திருப்பதோடு மாமிசத்தை மறுக்கும் பிராமணன் இருபத்தொரு தலைமுறைக்கு நரகத்தை அடைவான் என்று மனுதர்ம சாஸ்திரமும் வேதமும் கூறுகின்றன தெரிந்ததா? சைவரே.

**சைவன் :-** ஓய், ஓய், பார்ப்பனரே சரி தான், கடையைக் கட்டுங்காணும் உம் ஆராய்ச்சியையும், சயன்சையும், சாஸ்திரத்தையும், வேதத்தையும், புராணத்தையும் கொட்டை அடுப்பில் வைத்துக் கொளுத்தும். என்றைக்கு ஆராய்ச்சியும் சயன்சும் உலகத்தில் தோன்றிற்றோ அன்றே எல்லாம் கெட்டுது. கடைசியாக முழுமுதற் கடவுளான சிவன் தலையில் கைவைக்க வந்து விட்டது. இந்தப்பாழும் அறிவும், ஆராய்ச்சியும், சயன்சும் என்றைக்கு ஒழியுமோ அன்றுதான் சைவம் தழைக்கும். ஆதலால், இவை ஒழிய தவம் கிடப்போம். போம், போம், பார்ப்பானே! போம் உம்மைப் பார்த்ததற்கும், உம் பேச்சைக் கேட்டதற்கும் கண்களையும் காதுகளையும் கழுவ வேண்டும்.

**பார்ப்பான் :-** அய்யா சைவரே! நன்றாய் தவம் கிடங்கள். அதுவும் திரு. ஜகதீஸ் சந்திரபோசும் இயற்கை ஆராய்ச்சியும் சுயமரியாதை இயக்கமும் ஒழியட்டும் என்று தவம் கிடங்கள். இதில் எது மீதியானாலும் உங்கள் சைவ மும், உங்கள் ஜீவ காருண்யமும் சிறிதுகூட நிலைக்காது. தவிர, என்னைப் பார்த்ததற்கும், என் பேச்சுக்களைக் காதில் கேட்டதற்கும் மகா பாதகம் தீர்த்த குளத்தில் போய் குளியுங்கள். கழுவினால் மாத்திரம் போதாது.

**குடி அரசு - உடையாடல் - 16.06.1929**





பலனில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

சி. எம். சாமி மகா வீரிய

தங்க பஸ்பம்.

48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10.

10-1-29.

குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு.

24 நாள் புட்டி 1-க்கு ரூ. 15. 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

சித்த ஆயுர்வேத வைத்தியசிரியர்

சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை, பழனி. எஸ். ஐ. ஆர்.


மகா மன்மத சிந்தாமணி லேகியம்:

தண்டபாணி வைத்தியசாலை, 202, காசு பஜார், மதராஸ்.

(10)

PHOTO HAND CAMERA

ரொம்பவும் குறைந்த விலை ரூபா 2—15—0.



காண்டியன் வாட்ச் பிபி, ஜி. டி., மதராஸ்.

குடி அரசு புத்தகாலயம்

| | |
|---|---|
| ஞானசூரியன் 2-ம் பதிப்பு ... | 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | 0—1—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு ... | 0—2—0 |

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

இங்கிலீஷ்

பேசவும் வாசிக்கவும் எழுதவும் தெரியுமா?

ஸ்பெஷல் இங்கிலீஷ் கோர்ஸ்.

டைரக்டர்,

கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்

நாசரேத் (தென் இந்தியா)



RangaRakes tamilnavarasam.com

# மிஸ். மேயோ

மிஸ். மேயோ என்னும் ஓர் அமெரிக்க மாதால் இந்தியாவிலுள்ள சமூக மத ஆபாசங்களைப் பற்றி எழுதப்பட்ட "இந்திய தாய்" என்னும் புத்தகத்தில் உள்ள விஷயங்களை அநேகமாகப் பத்திரிகை உலகத்தில் கலந்திருக்கும் மக்கள் எல்லோரும் அறிந்திருக்கக் கூடும். அதோடு சீர்திருத்த உலகத்திலும் வைதீக உலகத்திலும் நடந்துள்ள சாதக பாதகமான அபிப்பிராயமுடையவர்கள் எல்லோரும் அநேகமாக அறிந்திருக்கலாம். ஆனால் அப் புத்தகங்களிலுள்ள விஷயங்களை நம் நாட்டிள்ள எல்லா பத்திரிகைக்காரர்களும், அரசியல்காரர்களும், எல்லாச் சீர்த்திருத்தக்காரர்களும், எல்லா வைதீகர்களும், எல்லா மேடைப் பிரசங்கிகளும் வெளியிட்டு மிஸ். மேயோ அம்மையை கைவலிக்க வாய்வலிக்க இழி மொழிகளால் வைதார்களே ஒழிய இன்றையவரையில் இனிமேலாவது இதைப்போல் இனியுமொரு புத்தகம் ஒருவரும் எழுதாமலிருப்பதற்கு எவ்வித ஏற்பாடுகளும் செய்தார்கள் இல்லை. அன்றியும் அவ்வம்மை எழுதிய விஷயங்களை தைரியமாய் மறுத்துக் கூறி வாதுக்கழைத்தார்களும் இல்லை. ஆனால் அப்புத்தகத்திற்கு 'பதில்' என்பதாக ஏதேதோ பொருத்தமற்ற குப்பைக் கூளங்களையும் பழி வாங்கும் நோக்கம் கொண்ட இழிவான எதிர்வாசகங்களையும் நிரப்பி புத்தக ரூபமாய் அச்சுப்போட்டு அதனால் பலர் பணம் சம்பாதித்துக் கொண்டார்கள். அன்றியும், அப்படிப்பட்ட பதில் புத்தகங்களில் காணப்படும் விஷயங்கள் தான் என்ன என்று பார்ப்போமானால் மிஸ் மேயோ தனது புத்தகத்தில் இந்தியாவைப் பற்றி எழுதப்பட்ட ஆபாசமான விஷயங்களைப் போல் "அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் நடப்பதில்லையா?" என்பதும் "இதை விட அதிகமாக நடப்பதில்லையா?" என்பதும் அவைகளுக்கு ஆதாரமாய் மேல்நாடுகளில் நடக்கும் ஏதோ இரண்டொரு விஷயங்களையுமே எழுதி சரி செய்து விட்டார்கள். மற்றபடி நம் நாட்டில் உள்ளவைகளை ஒழிக்கவோ அல்லது திருத்தவோ இன்றைய வரையில் யாரும் வேறு எவ்வித பிரயத்தனமும் செய்தார்கள் இல்லை.

உதாரணமாக மிஸ். மேயோவின் புத்தகத்தில் இந்தியர்களில் அநேகர் மாட்டு மலத்தையும் மூத்திரத்தையும் சாப்பிடுகின்றார்கள் என்று எழுதியிருக்கின்றார்கள் என்றால் அதற்கு பதில் சொன்ன கவி.ரவீந்திரநாதர் "மதத்தின் பேரால் ஆத்மார்த்தத்தை உத்தேசித்து நாங்கள் மாட்டின் மலத்தையும் மூத்திரத்தையும் சாப்பிடுகின்றோமே ஒழிய வயிற்றுக்கில்லாமல் சாப்பிடுவதில்லை" என்றுதான் சொன்னார்களேயொழிய சாணியும் மூத்திரமும் நாங்கள் சாப்பிடுவதில்லை என்று சொல்லவே இல்லை. மற்றும் இந்தியாவில் உள்ள பார்ப்பனர்கள் தங்கள் சூழ்ச்சிகளால் தங்களைத் தவிர மற்ற பார்ப்பனரல்லாதார்களை படிக்கவொட்டாமல் கொடுமை செய்து விட்டதோடு அதையே மதக் கட்டளையாகவும் கடவுள் கட்டளையாகவும், செய்துவிட்டார்கள். இதனால்தான் இப்போதுகூட இந்தியாவில் பார்ப்பனர்கள் நூற்றுக்கு நூறுபேர் படித்தவர்களாகவும், பார்ப்பனரல்லாதார்களில் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து பேர் படிக்காதவர்களாகவும் இருக்கின்றார்கள் என்று எழுதி இருப்பதற்குப் பதில் சொல்ல வந்த திரு.எஸ்.சத்தியமூர்த்தி சாஸ்திரி என்ன சொன்னார் என்றால் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார்களை வேதமும் சாஸ்திரமும் தான் படிக்கக் கூடாது என்று சொன்னார்களே ஒழிய வேறில்லை, அதுவும் மதக்கட்டளையால் சொல்லப்பட்டதே தவிர தாங்கள் சுதாவாய்ச் சொல்லப்பட்டதல்ல என்று சொன்னாரேயொழிய அந்தப்படி இல்லை என்று சொல்லவே இல்லை. மனிதன் படிக்க வேண்டியது என்பது நீதிகளும் தர்மங்களும் அடங்கியது என்று சொல்லப்படும் வேத சாஸ்திரங்களே அல்லாமல் வேறு என்னமாயிருக்கக் கூடும்? இம்மாதிரியாகவே அந்தம்மாள் இந்தியாவைப் பற்றி எழுதியுள்ள ஆபாசங்கள் ஒன்றைக் கூட அடியுடன் மறுப்பதற்கு யோக்கியதையில்லாத நிலையில்தான் இன்றைய இந்து மதமும் வைதீகமும் லௌகீகமும் அனுபவமும் இருந்து வருகின்றதே அல்லாமல் வேறு என்ன? அந்தம்மாள் இந்த புஸ்தகத்தை எந்த எண்ணத்தோடு எழுதினார்கள் என்பது வேறு விஷயம். அது அரசியல் புரட்டர்கள் கவனிக்க வேண்டியதாகும். சுயமரியாதை உள்ள இந்திய மக்கள் கவனிக்க வேண்டிய விஷயம் என்ன என்பதேதான் இங்கு கவனிக்க வேண்டிய விஷயமாகும். ஏனெனில் இதே அபிப்பிராயத்தை மிஸ்.மேயோவுக்கு முன்னும் பின்னும் ஆயிரக்கணக்கான பேர்கள் எழுதி இருக்கின்றார்கள். திரு.காந்தி அவர்கள் கூட இந்த புத்தகத்தைப் பார்த்து என்ன பதில் எழுதி இருக்கின்றார் என்று பார்ப்போமானால், அவர் அதிலுள்ள விஷயம் ஒன்றைக் கூட மறுக்காமல் "மிஸ் மேயோ எழுதியிருப்பவை எல்லாம் இந்தியாவின் சாக்கடைகளில் காணப்படும் விஷயமாகும்" என்று சொன்னார். அதோடு கூட, அநேக தடவைகளில் மிஸ்.மேயோ போன்றவர்கள் எழுதியிருக்கும் "குறைகள் இந்தியாவை விட்டு நீங்கினாலொழிய இந்தியாவுக்கு சுயராஜ்ஜியம் கிடைக்கும் என்று நினைப்பது முட்டாள்தனமும். அல்லது அயோக்கியத்தனமும் ஆகும்" என்றும் எழுதி இருக்கின்றார். இவற்றால் என்ன ஏற்படுகின்றது? இந்தியாவில் அம்மாதிரி விஷயங்கள் இல்லை என்று எழுதியதாக ஏற்படுகின்றதா? இருக்கின்றது என்றும், அது சாக்கடைபோல் இழிமக்களிடம் இருக்கின்ற வழக்கம் என்றும்தான் ஏற்படுகின்றது. அந்தப்படி பார்ப்போமானால் இந்தியா முழுவதும் தான் சாக்கடையாக இருப்பதாக முடிவு செய்ய வேண்டுமேயொழிய வேறில்லை. அதிலும் "உயர்ந்த ஜாதியார்", "மேல் வகுப்பார்",





RangaRakes tamilnavarasam.com

“வைதீகர்கள்”, “படித்தவர்கள்” என்பவர்கள் வீட்டில் நடக்கும் விஷயங்களே சாக்கடையானால், இன்னும் மற்ற இடங்களில் நடக்கும் விஷயங்கள் கக்கூஸ் என்றுதானே சொல்லியாக வேண்டும். மேலும், திரு.காந்தி அப்புத்தகத்தைப் பற்றி முடிவுரை கூறுகையில் இந்தியர்கள் அப்புத்தகத்தை மறக்காமல் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் வெளிநாட்டார் உடனே மறந்துவிட வேண்டும் என்றும் எழுதியிருக்கின்றார். இதனுடைய அர்த்தம் என்ன? இந்தியர்கள் இதை எப்போதும் ஞாபகத்தில் இருத்தி இவ்வாபாசங்களில் இருந்தும் இழிவுகளிலிருந்தும் இந்தியா மீளுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்றுதானே கொள்ள இடமிருக்கின்றது. இப்படி இருக்க எந்த சமூக சீர்த்திருத்தக்காரரோ இந்து மத சீர்திருத்தக்காரரோ, ஆஸ்தீகவாதியோ, பூரண சுயேச்சைக்காரரோ, சுயராஜ்ய வாதியோ, தேசீயவாதியோ இதுவரை அவற்றுள் ஒரு சிறிதாவது விளக்க முயற்சித்தார்களா? என்று கேட்கின்றோம். மேன் மேலும் வருணாசிரம மகா நாடுகள் கூட்டி மேயோ புத்தகத்திற்கு மேலொப்பம் போட்டார்களேயொழிய வேறு என்ன செய்தார்கள்? என்று கேட்கின்றோம்.

ஒருவன் நம்மைப் பார்த்து! “அயோக்கியனே” “கீழ் மகனே” என்று கூப்பிட்டால், “நீ மாத்திரம் வாழ்கின்றனையோ” என்று நாம் திருப்பிக் கேட்டு விட்டால் நாம் அயோக்கியர்கள் அல்ல, கீழ் மக்கள் அல்ல என்று நிரூபித்ததாக ஏற்பட்டு விடுமா? ஒருக்காலும் ஆகாதே. அன்றியும் நாம் திருப்பிக் கேட்டதில் இருந்து நம்மிடம் இருக்கும் கீழ்மையையும், இழிவையும் நாம் ஒப்புக் கொண்டதாகவும், அதை மறுக்க முடியாததற்காக நமது மனசமாதானத்தின் பொருட்டு நாமும் திருப்பிச் சொன்னதாகவும் தானே ஏற்படும். இதனால் நம்மை அவர்கள் சொன்ன சங்கதிகள் உறுதியாய் விட்டது என்பதும் அவர்களை நாம் சொன்னவைகள் அவர்கள் ஒப்புக் கொள்ளுகின்றவரை அனாமத்தில் வைக்க வேண்டியது என்பதுமாய் விட்டது. அதனால் நமக்கு என்னலாபம்? ஒரு சமயம் பதில் சொல்லாமலும் திருப்பிச் சொல்லாமலும் அவற்றை அலட்சியமாய்க் கருதி இருப்பதாகக் காட்டிக் கொண்டிருந்தாலாவது மற்றவர்கள் ஒரு சமயம் சந்தேகப்படவாவது கூடும். இப்போது அதற்குக்கூட இல்லாமல் முழுவதையும் நாம் ஒப்புக் கொண்டதாக முடிவு கட்டிக் கொண்டோமே, இதற்கென்ன செய்யப் போகின்றோம் என்பதுதான் இப்போது நம்முடைய கேள்வி? அன்றியும் மிஸ் மேயோ இந்தியாவின் நிலைமைபற்றி எழுதிய புத்தகத்தினால் உலகில் இந்தியாவின் யோக்கிதையைப் பற்றி வெகு இழிவாய்க் கருதப்பட்டு போய்விட்டதன் பலன் இந்தியர்கள் அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் திருப்பி வைவதால் தீர்ந்து விடுமா? அல்லது அதில் கூறப்பட்ட - நமது நாட்டில் உள்ளதான குறைகள் ஒழிந்து விடுமா? என்று கேட்கின்றோம். நிற்க, அப்புத்தகத்தில் கண்டுள்ள ஏதாவது ஒரு சிறிய விஷயத்திற்காவது மகம்மதியர்களோ வெள்ளைக்காரர்களோ மகம்மதிய அரசாங்கமோ வெள்ளைக்கார அரசாங்கமோ காரணம் என்றாவது அல்லது அச்சமூகங்களும் அவ்வரசாங்கங்களும் ஒழிந்தால்தான் முடியும் என்றாவது எந்த ஒரு யோக்கியமான சீர்திருத்தவாதியோ, மதவாதியோ, தேசீயவாதியோ, அரசியல் வாதியோ, ஆஸ்தீக வாதியோ சொல்ல முடியுமா? என்று பந்தயம் கூறிக் கேட்கின்றோம். எனவே இந்தியாவின் சுயமரியாதையிலோ, விடுதலையிலோ, சுயராஜ்ஜியம் என்பதிலோ யாருக்காவது ஒரு சிறிது கவலை இருந்தாலும் அவர்கள் செய்ய வேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றால் திரு.மேயோவின் இந்தியத் தாய் என்னும் புத்தகத்தையும் மற்றும் அது போன்ற புத்தகங்களையும் கையில் வைத்துக் கொண்டு அதில் சொல்லப் பட்டுள்ள குறைபாடுகளை ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து, அது சிறிதானாலும், பெரிதானாலும் பெரிதுபடுத்திச் சொன்னதானாலும் கவலையோடு தேடிப் பிடித்து அவைகளை அடியோடு ஒழிக்க வேண்டியதே முக்கிய கடமையாகும். கோபத்தையும் வெறுப்பையும், தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் காட்டி அவைகளை மறைக்க முயற்சித்தோமானால் ஒரு சமயம் இன்று நாம் வெற்றியடைந்தாலும் நம்மால் மறக்கப்பட்ட விஷயங்கள் அழுகிப் புழுத்துப் புரையேறி மற்ற எல்லா விஷயங்களையும் நாசமாக்கி விடும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 23.06.1929**


RangaRakes
tamilnavarasam.com

# "நாஸ்திக"த்தின் சக்தி

ருஷியாவில் கடவுளே இல்லை என்றும், கடவுள் மீது நம்பிக்கை இல்லை என்றும் சபைகளும் மகாநாடுகளும் கூட்டி, கடவுள் மறுப்புக் கண்காட்சிகளும் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு, கடவுளுக்கு எதிர் பிரசாரம் பலமாக நடைபெறுகின்றது. இதன் பலனாக கடவுளால் முடியாத காரியங்களைக் கூட அந்தத் தேசத்தில் உள்ளவர்கள் செய்து காட்டி வரு கின்றனர். அதாவது செத்தவர்களை பிழைக்க வைத்து விடுகின்ற விஷயம் பத்திரிகைகளில் பறந்த வண்ணமாயிருக்கின்றது. கடவுளுக்குப் பிறக்கச் செய்வதும் இறக்கச் செய்வதும்தான் தெரியுமேயொழிய செத்தவர்களுக்கு உயிர் கொடுக்கத் தெரியாது. இந்த வேலை தமக்குத் தெரியாது, சக்தியில்லை என்று அவர் பேசாமல் அடங்கி விட்டாரோ என்னமோ தெரியவில்லை. அல்லது இந்தப் புதிய வேலையை அவர்களே செய்து கொள்ளட்டும், நமக்கு ஏன் இந்த வீண் தொல்லை என்று கருதி பிறப்பிப்பதும், காயலாக் கொடுத்து சாகடிப்பதுமான இந்த இரண்டு வேலையுடன் சும்மா இருந்துவிட்டார் போலும். "நாஸ்திக"த்தின் சக்தியே சக்தி!

**குடி அரசு – செய்தி விளக்கம் – 23.06.1929**



# பிரம்மஞான சங்கம்

தியசாபிகல் சொசைட்டி என்பதாகவும் பிரம்மஞான சங்கம் என்பதாக ஒரு சங்கம் நமது நாட்டில் பார்ப்பனீய மதத்தையும் ஆதாரங்களையும் அஸ்திவாரமாகக் கொண்டு 30 – 40 வருஷ காலமாக இந்தியாவில் செல்வாக்குப் பெற்றுவரும் விஷயம் யாவருக்கும் தெரிந்ததாகும். பார்ப்பன மதத்தையும் ஆதாரங்களையும் அஸ்திவாரமாகக் கொண்டு வேறு எவ்விதக் கொள்கையுடன் ஏற்படுத்தும் சங்கமோ, இயக்கமோ ஆனாலும் பார்ப்பனர்கள் அதை எவ்விதத்திலும் ஆதரித்தே தீருவார்கள். ஏனெனில் பார்ப்பன மதத்திற்கு மற்றொரு ஆதரவும் உபகரணமும் கிடைத்தது என்கின்ற எண்ணத்தோடு அதை வரவேற்பார்கள். அவர்கள் மதத்திற்கும் ஆதாரத்திற்கும் ஆட்சேபணையோ மறுப்போ கொண்டதான ஏதாவதொன் றைச் சொல்லி விட்டோமேயானால், அது எவ்வளவு நன்மையும் உயர்ந்த தத்துவத்தையும் கொண்டதானாலும் அவற்றை எப்பாடுபட்டாவது ஒழித்துவிட முயற்சி செய்ய வேண்டியது பார்ப்பனர்கள் கடமையும் வழிவழிச் செய்கையுமாகும். உதாரணமாக, புத்தமதம், சமணமதம் போன்ற ஒழுக்கமும் ஜீவ காருண்யமும் முதன்மையாகக் கொண்ட பிரத்தியட்ச அறிவு மதங்கள் எல்லாம் நமது நாட்டில் இருக்கின்ற இடம் தெரியாமல் போனதும், கொலையும், கள்ளும், பொய்யும், புளுகும், ஜீவஹிம்சையும், மூட நம்பிக்கையும், முட்டாள் தனமும் கொண்ட மதங்கள் எல்லாம் தலைவிரித்து ஆடுவதுமே போதுமான உதராணமாகும். இவற்றுள் மேற்கண்ட பிரம்மஞான சங்கம் என்னும் மதமும் ஒன்றாகும்.

சாதாரணமாக பிரம்மஞான சங்கத்திற்கு வேதம், கீதை, புராணம் இவைகளில் உள்ள தேவர்கள், ரிஷிகள், மகாத்மாக்கள் முதலியவர்கள் எல்லாம் முக்கிய ஆதாரமாகும். அதோடு அவதாரம், மறுபிறப்பு, மகாத்மாக் கள் அவர்களுடன் சம்பாஷித்தல் ஆகியவைகளும் முக்கியக் கொள்கையும் தினப்படி அனுபவமுமாகும். இந்த இருபதாவது நூற்றாண்டில் அதுவும் சயன்ஸ் என்னும் விஞ்ஞானத் தத்துவம் இவ்வளவு தூரம் முற் போக் கடைந்திருக்கும் இக்காலத்தில் சாதாரண மனிதர்கள், அதிலும் ஒழுக்கம் – உண்மை ஆகியவைகளில் சராசரி மக்கள் நிலைக்கு எவ்விதத்திலும் உயர்வு இல்லாதவர்கள் (உதாரணமாக வக்கீல் முதலியவர்கள்) இந்தக் கொள்கை களை அனுபவிப்பதாகச் சொல்லிக் கொண்டு அவற்றை மக்களுக்குள் பரப்புவதையும், பார்ப்பனர்களில் பெரிய பெரிய படிப்பாளிகள் என்று



RangaRakes tamilnavarasam.com

சொல்லத்தக்கவர்கள் எல்லாம் இவற்றை நம்புவதாக வேஷம் போட்டுக் கொண்டிருப்பதையும் பார்க்கின்ற ஒருவன் இதன் ரகசியம் என்னவாயிருக்குமென்று யோசித்தால் குருட்டு நம்பிக்கைகளையும் மூடப் பழக்க வழக்கங்களையும் எவ்வளவு கீழான மக்கள் பரப்புவதானாலும் பிரசாரம் செய்வதானாலும் அதனால் எப்படியும் தங்களுக்கு லாபந்தானே என்கின்ற ஒரே கருத்தால்தானே அல்லாமல் வேறல்ல என்பது நன்றாய் புலப்படும். இதன் பலனாக பார்ப்பன மதக்காரர்கள் அல்லாமல் அநேக கிறிஸ்தவர்களும் மகம்மதியர்களும் மற்றும் பலரும் அப்பார்ப்பன மதத்தை ஒப்புக் கொண்டு அதை ஆதரிக்க முடிந்ததேயொழிய இதனால் பார்ப்பனர்களுக்கு ஒன்றும் நஷ்டம் ஏற்பட்டுவிடவில்லை. மேலும், இந்தச் சங்கம் இவ்வளவோடு நிற்காமல் ஒரு புதிய அவதாரத்தை உற்பத்தி செய்ய ஆசைப்பட்டு பல நாளாக முன் ஜாக்கிரதையுடன் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு திடீரென்று ஒரு பார்ப்பனரை கடவுள் அவதாரமாகவும், லோக குருவாகவும், ஒரு பார்ப்பனியை மேரி அவதாரமாகவும் ஆக்கி வெளிப் படுத்திவிட்டார்கள். அந்த அவதாரத்தையும், லோக குருவையும் பார்ப்பன வகுப்பில் இருந்தே பொறுக்கி எடுத்து ஏற்படுத்திவிட்டதால் எந்தப் பார்ப்பனரும் (“சங்கராச்சாரி” போல் மதித்து) அதை எதிர்க்காமல் ஒப்புக் கொண்டு வருகிறார்கள். ஆனால், அவற்றை வேறு ஒரு பார்ப்பனரல்லாத வகுப்பில் இருந்து வெளிப்படுத்தி இருந்தால் இந்நேரம் அச்சங்கமே பறந்து போயிருக்கும். அன்றியும், அந்த “லோக குருவின்” கொள்கைகள் அநேகம் நமது கொள்கையை யொட்டியதும் பெரிதும் நாமறிந்தவரை குற்றம் சொல்லத் தகாததாகவும் காணப்படுகின்றது என்பதோடு பிரம்மஞான சங்கத்தின் முக்கிய கொள்கைகளைக் கூட ஒரு ஆட்டம் ஆட்டி விட்டது. ஆனாலும் அந்த அவதார லோக குருவுக்கு பகலில் கண் தெரியாமல் வண்டியில் இடித்து மோதிக் காயம் ஏற்பட்டும் அநேகப் பார்ப்பனர்கள் வாய்மூடிக் கொண்டுதான் இன்னமும் அவர் லோககுரு என்பதை ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட லோககுருவுக்கு இப்போது ஆபத்து வந்துவிட்டது. ஆனால் அந்த ஆபத்து பார்ப்பனர்களாலல்ல. மற்று யாரால் என்றால் பார்ப்பனரல்லாத ஒரு பார்ஸி கனவானால். அவரும் இந்தச் சங்க பிரதானிகளில் முக்கியஸ்தராய் இருந்து தினமும் ரிஷிகளுடனும் மகாத்மாக்களுடனும் பேசிக் கொண்டிருந்தவர்.

ஆனாலும் இந்த பார்ப்பனர்களின் புரட்டுக்களைக் கண்டு இதிலிருந்து பிரிந்து போய் இந்த லோக குருவையும், கன்னிமேரியையும் ஒப்புக் கொள்ள மறுக்கிறார். பார்ப்பனர்கள் மறுத்தாலொழிய மற்றும் யார் மறுத்தாலும் மறுப்பில் வெற்றி பெற முடியாது. ஏனெனில் ஏதாவது ஒரு பார்ப்பனன் அவர்கள் காலில் விழுந்து அவரைச் சங்கராச்சாரியைப் போல் விளம்பரப் படுத்திக் கொண்டுதான் இருப்பார்கள்.

என்றாலும், இனி அந்தப் புரட்டுகள் பலிப்பது என்பது சற்று சந்தேகந்தான், ஏனெனில், ஜனங்களுக்கும் விழிப்பு ஏற்பட்டு விட்டதுடன்



கோட்டைக்குள்ளாகவே பிரிவினை ஏற்பட்டு விட்டது. அதாவது, திரு.பி.பி. வாடியா என்பவர் எதிர்ப்பிரசாரம் செய்ய ஆரம்பித்து இருக்கின்றார். மற்றபடி வேதங்களுக்கும் கடவுள்களுக்கும் குருமார்களுக்கும் இப்போது ஆபத்துக்கள் வந்ததுபோல் விகிதாசாரம் பிரம்மஞான சங்கத்திற்கும் வந்திருப்பதில் அதிசயமொன்றுமில்லை. ஆனால் இத்தனை காலம் பொறுத்து வந்ததே என்பதுதான் அதிசயப்படத்தக்கதாகும்.

**குடி அரசு – கட்டுரை – 23.06.1929**



RangaRakes tamilnavarasam.com

# மறுபடியும் திரு.ராஜகோபாலாச்சாரியார்

**திரு.ராஜகோபாலாச்சாரியார்** தேர்தலுக்காக கள்ளின் பேரால் வழக்கம்போல் அவருடைய சூழ்ச்சி விஷமப் பிரசாரத்தைத் துவக்கி விட்டார். சேலம், வடஆற்காடு ஜில்லாக்களில் இப்போது செய்து கொண்டும் வருகின்றார். பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை அழித்துப் பார்ப்பன ஆதிக் கத்தை நிலை நிறுத்த அவர் எந்த காரியம் வேண்டுமானாலும் செய்யலா மென்கின்ற முடிவு கொண்டவர். அவருடைய மனச்சாட்சி என்பது கொலை, கொள்ளை, புரட்டு, நம்பிக்கை துரோகம், சித்திரவதை முதலிய எவ்வளவு கடினமான காரியத்திற்கும், சற்றும் அசையாது; எந்த வேடம் போடுவதற்கும் சற்றும் பின்வாங்கார். இப்பேர்ப்பட்ட ஒரு மகா புருடருக்கு, மகாத்மா என்னும் உலகப் பிரசித்தியும், மதிப்பும், மரியாதையும் பெற்ற திரு.காந்தி தமது சிஷ்யக் கோடிகளுடன் கையாளாகவும் கிடைத்திருக்கின்றார். இவ்வளவும் போதாமல் மேற்கண்ட பெருமையுடைய திரு.காந்தியார் இந்திய மக்களிடமிருந்து கொள்ளை போல் வசூலிக்கப்பட்ட பத்து லட்சக்கணக்கான ரூபாய்கள் கொண்ட பொக்கிஷமும் அவர் வசமிருக்கின்றது. இவ்வளவும் போதாமல் ஈவு இரக்கமற்றதும் சூழ்ச்சியும், தந்திரமும், விஷமமும் பொருந்தியதுமான மனோ சக்தியும் ஏற்பட்டிருக்கின்றது. தம் காரியத்தை நடத்துவதற்கு இனி அவருக்கு என்னவேண்டும்? ஒன்றுமே வேண்டிய தில்லை. ஏதோ நான்கு கூலிகளும், காலிகளும் மாத்திரம் வேண்டும். அதுவும் எதற்கென்றால், கூட்டம் ஏற்பாடு செய்யவும், ஆள்களைச் சேர்க்கவும், மேடையில் நின்று பேசுவதற்கு வேண்டிய சௌகரியம் செய்து கொடுப்பதற்கும் மாத்திரமே யாகும். பிறகு தமது விஷப்புகையைக் கக்குவதன் மூலம் பாமர மக்களை ஏமாற்றிவிடலாம் என்கின்ற முரட்டுத் தைரியம் அவருக்கு உண்டு.

சாதாரணமாக, ஒத்துழையாமை ஆரம்பித்த காலத்தில் தீண்டாமையும், கதரும், மதுவிலக்கும் முக்கிய கொள்கையாக வைத்துக் கொண்டு வேலை செய்தது யாவருக்கும் தெரியும். அக்காலத்தில் திரு.ராஜகோபாலாச்சாரியார் இவைகளில் ஒரு காரியமும் காரியத்தில் செய்வதற்கில்லாமல் வெறும் ஆர்ப்பாட்டத்தால் மாத்திரம் இயக்கத்தைத் தளுக்காக நடத்திப் போகக் கருதிக் கொண்டிருந்தவர். ஆனாலும் அவருடைய சகாக்கள், அவரது இஷ்டம் போல் விடாமல் காரியத்தில் நடத்த ஏற்பாடு செய்துவிட்டதன் பலனாய் அவரும் கூடவே "கோவிந்தா"ப் போட வேண்டிவந்துவிட்டது. குறிப்பாகத் தீண்டாமை விலக்கிலும், மது விலக்கிலும் எவ்வளவு



முட்டுக்கட்டையாய் இருக்க வேண்டுமோ, அவ்வளவு முட்டுக்கட்டையாய் இருந்தவர். உதாரணமாக, காங்கிரசில் தீண்டாமைக்காக ஒதுக்கிவைத்த பணங்கள் அவ்வளவையும் தம்பேரால் பிரித்து வைத்துக் கொண்டதோடு அவ்வியலில் செய்யவேண்டிய காரியப் பொறுப்பு முழுவதையும் தமக்கே வைத்துக் கொண்டு கடைசிவரையில் யாதொரு காரியமும் செய்யாமல் இருந்து கொண்டு சிலர் கண்டித்துக் கேட்டபின், பொறுப்பில் இருந்து மாத்திரம் விலகிக் கொண்டு முட்டுக்கட்டையில் மேலும் பலமாக இருந்து வந்தார். அதுபோலவே மதுவிலக்கிலும் ஆங்காங்கு நூற்றுக் கணக்கான தொண்டர்கள் சிறைக்குப் போய்க் கொண்டிருக்கும் போதும் மேலும் மாதம் நூற்றுக்கணக்காய் சிறைக்குப் போவதற்கு 2 – 3 மாதத்திற்குத் தொண்டர்கள் தயாராயிருந்தும் சர்க்காரும் இணங்கி வருவதற்கு யோசித்துக் கொண்டிருக் கும் பொழுதும், திடீரென்று மறியலை நிறுத்தும்படி செய்து மறுபடியும் தொண்டர்களுக்கு அது விஷயத்தில் உற்சாகமே ஏற்படுவதற்கில்லாத மாதிரியில் அதை அடியோடு அழித்துவிட்டார். முதன்முதலாக திரு.ஈ.வெ. ராமசாமியார், திரு.எஸ். ராமநாதன் முதலியவர்கள் திரு. ஆச்சாரியாரிடம் அபிப்பிராய பேதமும் அவநம்பிக்கையும் கொள்ள வேண்டி வந்ததற்கு முக்கிய காரணமே இந்தச் சம்பவமாகும். அதுமுதல் இதுவரை தீண்டாமைக் காவது மதுவிலக்குக்காவது காரியத்தில் பயனுண்டாகும்படி, ஒரு சிறு காரியத்தையும் செய்தவரல்லர். அதோடு ஒத்துழையாமை இயக்கம் அழிந்து பட்டதற்கும் முக்கிய கர்த்தாவாய் இருந்தவர் திரு. ஆச்சாரியாரே ஆவார். ஏனெனில், மற்றவர்கள் அதாவது, சுயராஜ்ய கட்சியார் தேசீயக்காரர்கள் என்பவர்கள் போட்ட கூச்சல்களால் ஒத்துழையாமை என்னும் கட்டிடத்தை அசைக்கவே முடியவில்லை; கட்டிடமும் ஒரு சிறிதும் பழுதாகவும் இல்லை. ஆனால் திரு. ஆச்சாரியார் காகினாடாவில் வைத்த டைனாமெட் (அதாவது பூமியின் கீழ் வைக்கும் வெடிகுண்டு) தான் அடியோடு அழித்து காங்கிரசைப் பழையபடி பார்ப்பனர்களிடமும் அவர்களுடைய கூலிகளிடமும் ஒப்படைக்கச் செய்தது. ஆனாலும், தாம் மாத்திரம் அதில் சேராதவர் போல் வேடம் போட்டுக் கொண்டே மக்களை ஏமாற்றிவந்தார். இந்நிலையில் ஒவ்வொரு தேர்தலின் போதும் பார்ப்பனர்களுக்கும் அவர்களது நிபந்தனையில்லாத கூலிகளுக்கும் ஓட்டு வாங்கிக் கொடுப்பதற்கு மது விலக்கையும், தீண்டாமையையும் பேச்சளவில் உபயோகப்படுத்திக் கொண்டு வருவதில் அவர் தவறினதே இல்லை. சென்ற தேர்தலின் போது காங்கிரஸ்காரர்கள் கூட திரு. சீனிவாச ஐயங்கார், திரு.சத்தியமூர்த்தி சாஸ்திரி உட்பட 'சட்டசபையின் மூலம் கள்ளை ஒழித்துவிட முடியாது' என்று சொல்லியும் 10 வருஷத்தில் ஒழித்தாலே பெரிய காரியம் என்று சொல்லியும், திரு. ஆச்சாரியார் ஒரு வருஷத்தில் ஒழித்துவிடுகின்றேன் (திரு.காந்தி சுயராஜ்யத்திற்கு ஒரு வருஷ வாயிதாவே வைத்துக் கொண்டு வருவதுபோல்) ஆனால் பார்ப்பனர்களுக்கு ஓட்டுச் செய்ய வேண்டும் என்று பிரசாரம் செய்து ஓட்டுச் சேகரித்தார். அவர் பிரசாரத்தின் யோக்கியதையின் உண்மை



RangaRakes tamilnavarasam.com

தெரிய வேண்டுமானால், தென்னை மரத்தில் கள்ளுக்கு முட்டிகட்டி வருஷம் பல ஆயிரம் ரூபாய் சம்பாதித்துக் கொண்டிருக்கும் ஓர் ஐயங்கார் பார்ப்பனருக்கு (திரு.சி.வி.வெங்கிட்டரமண ஐயங்கார்) அவர் தோட்டத்தில்-அவருடைய மரத்தில் கள்ளுமுட்டி தொங்குவதைப் பார்த்துக் கொண்டே அவருக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்கப் பிரசாரம் செய்தது ஒன்றே போதுமானது. தவிர தேர்தலான பிறகு மறுதேர்தல் வரும்வரை கள்ளைப் பற்றி ஏதாவது ஒருபேச்சாவது பேசினாரா? என்பதும், தேர்தலுக்குப் பிறகு இவரால் ஓட்டு வாங்கிக் கொடுக்கப்பட்ட மெம்பரிடமாவது, இவரால் சிருடிக்கப்பட்ட மந்திரிகளிடமாவது மதுவைப் பற்றி ஏதாவது பேசினாரா? அல்லது செய்யும் படியாவது சொன்னாரா? என்பதும் அவர்கள் செய்ததைப் பற்றியோ, செய்யாததைப் பற்றியோ ஏதாவது இதுவரையில் வெளியிட்டாரா? என்பதும் யோசித்துப் பார்த்தால் ஆச்சாரியாரின் மதுவிலக்குக் கொள்கையின் யோக்கியதை விளங்காமற்போகாது. இந்தக் காலத்திலும் ஒரு பார்ப்பனர் இம்மாதிரி வேடம் போட்டுக் கொண்டு இந்நாட்டுப் பழங்குடி மக்களாகிய பார்ப்பனரல்லாதாரை அழிக்க இவ்வளவு வெளிப்படையாய் - பித்தலாட்டமாய் வேலை செய்கின்றார் என்றால் அது பாராட்டக்கூடிய செய்கையாகுமே யொழிய வேறில்லை. அதுபோலவே இதை நம்பி ஏமாறும் பார்ப்பனரல்லாதார் நிலையும் பரிகசிக்கத்தக்கதே ஒழிய வேறில்லை. திரு. ஆச்சாரியாருக்கு மதுவிலக்கு விஷயமாய் ஏதாவது கொள்கையுண்டா? திட்டம் உண்டா? என்று பார்த்தால் அதுவும் இல்லை என்பதையும் அவரால் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை என்பதையும் பலர் ஒப்புக் கொள்ளத் தக்கதாய்க் காரியத்தில் வெற்றி பெறத்தக்கதாய் ஒன்றும் கொள்கை இல்லை என்பதையும் பொதுஜனங்களே அறிவார்கள். எனவே, வெறும் தேர்தலுக்காக மாத்திரம் திருவாளர் சீனிவாச ஐயங்கார் பூரண சுயேச்சை என்பது போலும், திரு.காந்தி ஒரு வருஷத்தில் சுயராஜ்யம் அல்லது ஒத்துழையாமை என்பது போலும், தேசம் பிரதானக் கட்சியும், உத்தியோகப் பிரதானக்காரரும் எல்லா உத்தியோகங்களையும் கைப்பற்ற வேண்டும் என்பது போலவும், ஆத்திகக் காரர் கடவுளையும், புராணங்களையும் காப்பாற்ற வேண்டும் என்பது போலவும், திரு. ஆச்சாரியார் மதுவிலக்கு என்று சொல்லுவதும், கோடு கட்டிய குறள்களுக்குப் பதிலாக எதுகை, மோனை கொண்ட வாக்கியங்களை எழுதுவதும் திருவாளர்கள் அண்ணாமலைப் பிள்ளை, ஆதிநாராயண செட்டியார் போன்றவர்களுடன் சென்று மதுவிலக்கு பிரசாரம் செய்வதுமா யிருக்கின்றதைத் தவிர, மற்றபடி இவற்றில் ஏதாவது நாணயமோ, உண்மையோ, கவலையோ இருப்பதாக யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம். சுமார் 25 அல்லது 30 லட்ச ரூபாயுடன் கதர் ஸ்தாபனத்தை ஒப்புக் கொண்டு மாதம் 100, 150, 200, 250 வீதம் பல பார்ப்பனர்களுக்குச் சம்பளங்களைக் கொடுத்துக் கொண்டு பழைய காலத்து மூட ராஜாக்களின் தர்ம சத்திரம் போல் கதர் இலாகா முழுவதும் 100-க்கு 100 பார்ப்பனர்களைச் சிஷ்யர்களாக அமர்த்திக் கொண்டு தம் இஷ்ட பிரகாரம் ஏகபோகமாய் சங்கராச்சாரி மகந்துக்கள் பண்டார சன்னதிகள் போல இரண்டு லட்சம், மூன்று லட்சம் செலவு செய்து நடத்தி வரும் கதர் மடத்தில் இதுவரை என்ன முற்போக்கான அல்லது பலன் கொடுக்கத்தக்கதான வேலையை இவர் செய்திருப்பதாகச் சொல்ல முடியும்? என்று கேட்கின்றோம். பொதுஜனங்களுக்கு கதர் விற்பனை காட்டுவதில் "திருப்பூரிலிருந்து பம்பாய்க் கதர் டிப்போக்களுக்கு அனுப்பிய கதர் 2 லட்ச ரூபாய், பம்பாய், கதர் டிப்போக்களில் விற்பனையான கதர் 2 லட்ச ரூபாய் ஆக இந்த இனத்தில் மொத்தம் 4 லட்ச ரூபாய்க்குக் கதர் விற்பனை ஆகி இருக்கின்றது" என்று இரட்டித்து உற்பத்திக்கு மேல் விற்பனையைக் காட்டுவதும், சீமை ஜவுளியும், உள்நாட்டு மில் ஜவுளியும் கஜம் 0-4-0, 0-5-0 அணாவுக்கு விற்றால் தேசாபிமானி என்று பேர்வாங்க விலை கொடுப்பதுபோல் கதருக்கு கஜம் ஒன்றுக்கு 10-அணா, 11-அணா, 12-அணா வீதம் ஒன்றுக்கு இரண்டு மூன்று பங்கு விலை கொடுத்து வாங்கச் செய்வதும் தவிர வேறு என்ன அனுகூலம் ஏற்பட்டிருக்கின்றது? இவர் ஆதிக்கத்தில் எவ்விதத்தில் கதர் முற்போக்கடைந்தது? அந்த ஸ்தாபனம் பார்ப்பன அக்கிரகாரமாகவும் தர்ம சத்திரமாகவுமானது தவிர மற்றப்படி விலையிலா? துணி நயத்திலா? ஜனங்களிடம் அதுபெறும் செல்வாக்கிலா? எதிலென்று சொல்ல முடியும்? என்று கேட்கின்றோம். இவ்வளவும் போதாமல், இப்பெரியார் மதுவிலக்குக்கும் நமக்கு ஞானம் போதிக்க வந்துவிட்டார். தேர்தலை உத்தேசித்து காங்கிரசிலிருந்து மதுவிலக்குப் பிரசாரத்திற்கு மாதம் 500 ரூபாய் திரு.ஆச்சாரியார் வசம் கொடுக்கப்படுவதினாலும், திரு. ஆச்சாரியார் அந்த பணத்தை வைத்துக் கொண்டு, முதலை பொன் காப்பைக் காட்டினதுபோல் காட்டுவதாலும், இதுசமயம் மதுவிலக்குப் பிரசாரம் மும்முரமாய் இருப்பதாக ஜனங்களுக்குத் தெரியக் கூடும். ஆனால் அதற்கு ஏதாவது நமது ஜனங்கள் ஏமாந்து கதரைப்போல் அதற்கும் ஒரு ஸ்தாபனம் உண்டாக்கி அதன் பேராலும் திரு.காந்தி பல லட்சம் நம்மவர்களிடமிருந்து வசூல் செய்து அவரிடம் ஒப்புவித்து விட்டால் பிறகு கதரைப்போலவே காரியத்தில் ஒன்றுக்கு மூன்றாய் கதர் கட்டுபவர்கள் நஷ்டப்படவும் அவற்றுள் 16ல் ஒரு பங்கு ஏதோ கிராமத்தில் உள்ளவர்கள் லாபமடைவதாய் காணப்படுவதும் மற்றபடி லட்சக்கணக்கான ரூபாய்கள் பார்ப்பனர்கள் வயிற்றில் போய் விழும்படியாக இலாக்கா முழுவதும் தரும சத்திரமாகவும் அக்கிரகாரமாகவும் ஆவதைத் தவிர வேறு ஒரு காரியமும் ஆகப் போவதில்லை என்பது நமது உறுதி. பார்ப்பனர்களின் கதர் தொண்டிற்கும் ஏழைகளிடம் உள்ள அன்பிற்கும் ஒரு சிறு உதாரணம் காட்டுவோம். அதாவது ஒரு மணிநேரம் ஒரு பெண்ணோ ஒரு ஆணோ நூல் நூற்றால் ஒரு சின்னக் காசுதான் கூலி கிடைக்கின்றது. இந்த மாதிரி தொழிலால் நமது நாட்டு மக்களுக்குள் கைத்தொழில் தரித்திரம் தீர்ந்து விடுமா? இதற்கு மேல் சம்பாதிக்கும்படியான நிலைமை தேடவேண்டாமா? என்றால் அதற்கு அவர்கள் சொல்லும் பதில் என்னவென்று பார்த்தால் "அதாவது கிடைப்பதற்கு வேறு வேலை சொல்"



RangaRakes
tamilnavarasam.com

என்பதுதான். இது யார் கேட்கின்றார்கள் என்று பார்த்தால் அதே கதர் தொண்டில் அதாவது ஒரு மணி நேர வேலைக்கு ஒரு சல்லி கிடைப்பதற்குத் தகுந்த வேலையில் மாதம் 200 ரூ. சம்பளமும் 100 ரூ. போல் படியும் வாங்குகின்ற ஒரு 'தேசபக்தர்' இந்த ஒரு மணிக்கு ஒரு சல்லி கூலியாவது எங்கிருந்து சம்பாதித்துக் கொடுத்தார்கள்? வேஷ்டி வாங்குபவனிடம் ஒன்றுக்கு மூன்றாய் அபராதம் வாங்கி ஒன்றுக்கு வீசமாய் கூலி கொடுத்து விட்டு மாதம் 200 ரூ. தாங்கள் சம்பளம் பெறுகின்றார்கள். ஆனால், கனம் மந்திரி முத்தையா முதலியாரவர்கள் மதுவிலக்கு பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்தால் அது மாத்திரம் இவர்களுக்கு புரட்டும் பித்தலாட்டமுமான காரியமாய் விடுகின்றதாம். அதன் காரணம் என்ன?

திரு.ராஜகோபாலாச்சாரியார் வாயால் அவர் கையில் கொடுக்கப்பட்ட பணத்தால் பிரசாரம் செய்தால் மாத்திரம் அது சரியான மதுவிலக்குப் பிரசாரமாவதும், மற்றவர்கள் செய்தால் அது புரட்டாவதுமானால், பார்ப்பனப் புரட்டுக்கு இது ஒன்றே சாட்சி போதாதா? என்று கேட்கின்றோம்.

திரு.ராஜகோபாலாச்சாரியாரால் சிருஷ்டிக்கப்பட்ட முன் இருந்த மந்திரிகள் மதுபானம் கெடுதியா? நல்லதா? என்பது கூடத் தெரியாதென்றும், அதை ஒழிக்க வேண்டியது அவசியமென்று ஜனங்கள் கருதுகின்றார்களா? இல்லையா? என்பது கூட இன்னும் தெரியவில்லை என்றும் சொன்ன மந்திரிகளை ஆதரித்துக் கொண்டு அப்போது எவ்விதப் பிரசாரமும் செய்யாமலிருந்த இந்த பார்ப்பனர்களுக்கு இப்போது மதுபானம் தப்பு என்றும் மதுவிலக்கு அவசியமென்றும் சொல்லி மதுவிலக்கு பிரசாரம் செய்ய பொதுஜனங்களை அனுமதித்ததோடு அதற்காக 4- லட்ச ரூபாயும் பொதுஜனங்களிடம் கொடுக்க முன் வந்த மந்திரியைப் பற்றி குறை கூறிக் கொண்டு திரிவதோடு அவர் மறுபடியும் சட்டசபை மெம்பராகக் கூடாது, மந்திரி ஆகக்கூடாது என்று பிரசாரம் செய்வார்களானால் இவர்களின் அயோக்கியத்தனத்திற்கும் சூழ்ச்சிக்கும் வேறு என்ன உதாரணம் வேண்டும் என்று கேட்கின்றோம். அன்றியும் இதாவது இதுவரை யார் செய்தார்கள் என்றும் சர்க்காரை இவ்வளவு தூரம் யார் வசப்படுத்தினார்கள் என்றும் கேட்கின்றோம். இந்த மாதிரி பிரசாரம் ஒழுங்கானதல்ல என்பதையும் நாணயமானதல்ல என்பதையும் திரு.ராஜகோபாலாச்சாரியார் உண்மை யாகவே மனபூர்த்தியாகவே நம்பியிருப்பாரானால் கனம் மந்திரியை அந்தத் தொகையில் நாலில் ஒரு பாகமான ஒரு லட்ச ரூபாயை தமக்குக் கொடுக்கும் படி கேட்டிருப்பாரா? என்று கேட்கின்றோம். எனவே இப்போது அந்தப் பணம் முழுவதும் பார்ப்பனர் தொப்பைக்குப் போய்ச் சேர முடியாததினா லேயே அந்த மந்திரி கெட்டவரா? என்றும் அந்த பிரசாரம் சூழ்ச்சியா? என்றும் கேட்கின்றோம். உண்மையிலேயே திரு.ஆச்சாரியார் யோக்கியமான மதுவிலக்கு பிரசாரகராயிருந்தால் மந்திரியின் காரியத்தைப் புகழ்ந்து அவருக்கு குடியினால் கெட்டுப் போகிறவர்கள் சார்பாய் நன்றி பாராட்டி



அதை ஒவ்வொரு இடத்திலும் புகழ்ந்து சொல்லிக் கொண்டும் சர்க்காரும் நம் வழிக்கு வந்துவிட்டார்கள், ஆதலால், மதுவிலக்குப் பிரசாரம் சர்க்காருக்கு விரோதமல்ல; ஆதலால் எல்லோரும் தைரியமாய் பிரசாரம் செய்யலாம்; இந்த வருஷம் பிரசாரம் செய்ய நமது மந்திரியின் சாமர்த்தியத் தால் இசைந்த சர்க்கார் அடுத்த வருஷம் இதைவிட பலமாக அதாவது ஒரு 10 கடைகளையாவது மூடத்தக்க அளவுக்கு முற்போக்கான காரியங்கள் செய்வார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டவராவார். அப்படிக்கு இல்லாமல் மந்திரி கெட்டவர் அவர்கூடாது, வேறு யாராவது ஒரு பார்ப்பனருக்கு ஓட்டுக் கொடுங்கள், இல்லாதவரை பார்ப்பனக்கூலிக்கு ஓட்டுக் கொடுங்கள் என்று சொன்னால் இவர்கள் யோக்கியதை எப்படிப்பட்டது என்பதை யோசித்துப் பாருங்கள் என்று தெரிவித்து இதை முடிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 23.06.1929**



RangaRakes tamilnavarasam.com

# ஆஸ்திகர்களே இதற்கு யார் பொறுப்பாளி?

**– சித்திரபுத்திரன்**

இந்த ஒரு வார காலமாக எங்கு பார்த்தாலும் கொடுமை! கொடுமை!! கொடுமை!!! மயமாகவே செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன. ஜப்பானைச் சேர்ந்த டோக்கியோவில் எரிமலை வெடித்துத் தீப்பொறிகளும், தீக்குழம்புகளும், புகைகளும் கிளம்பி அநேக கிராமங்களை சாம்பலாக்கி விட்டதென்றும், அதனால் அநேக பொருள்களுக்கும் உயிர்களுக்கும் நஷ்டமேற்பட்டுவிட்டதென்றும் நியூசிலாண்டிலும் ஆஸ்டீரியாவிலும் பூகம்பங்கள் ஏற்பட்டு அநேக கட்டிடங்கள் இடிந்து விழுந்தும் அநேக உயிர்கள் மடிந்தும் பலத்த சேத மேற்பட்டு வருகின்றதென்றும், இங்கிலாந்திலும் லண்டனிலும் புயல் காற்றும் மழையும் வெள்ளமும் அடித்து அநேக பட்டிணங்களும் உயிர்களும் சாமான்களும் தொழிற்சாலைகளும் அழிந்து சேதமும் நஷ்டமுமுண்டாய்விட்டதென்றும், வங்காளம், அஸ்ஸாம், சைல்சாட் பிரதேசங்களில் ஐந்நூறு சதுர மைல்கள் மழையினால் வெள்ளம் ஏற்பட்டு அநேக கிராமங்களையும் அநேக மனித உயிர்களையும், ஏராளமான கால் நடை ஜீவன்களையும் அடித்துக் கொண்டு போய்விட்டதென்றும், திருவாங் கூரிலும் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டதென்றும் பம்பாய், சைனா முதலிய இடங்களில் நெருப்பு பிடித்து அநேகக் கட்டிடங்களும் பொருள்களும் வெந்து சாம்பலாகிவிட்டதென்றும், மற்றும் பல பெரிய பட்டணங்களில் பெரிய பெரிய கட்டிடங்கள் இடிந்து விழுந்து மக்களை அழுத்திக் கொன்றுவிட்டதென்றும், இவைகளாலும் மற்றும் பல காரணங்களாலும் பல இடங்களில் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் ஜீவனத்திற்கு மார்க்கமில்லாமல் பட்டினியால் வாடி மயங்கி சொத்துப் பொத்தென்று விழுந்து சாகின்றார்கள் என்றும், மற்றும் இவை போன்ற கொடுமையும் பரிதாபகரமானதுமான செய்திகள் தினப்படி வந்த வண்ணமாகவே யிருக்கின்றன. இது நிற்க, முகரம் பண்டிகைக் கொண்டாட்டத்தால் பல இடங்களில் இந்து, முஸ்லீம் கலகங்களும், முஸ்லீம் – முஸ்லீம் கலகங்களும், அடிதடிகளும் கொலை களும் நடந்து பலர் காயப்பட்டதாகவும், பலர் உயிர் துறந்ததாகவும் செய்திகள் ஒரு புறம் வந்த வண்ணமாயிருக்கின்றன.



இவைகள் தவிர பல இடங்களில் முதலாளிமார்கள் கொடுமையால் தொழிலாளர்கள் வயிற்றுக்கு போதாமல் கஷ்டப்படுவதாகவும் வேலை நிறுத்தம் செய்து பட்டினி கிடப்பதாகவும் செய்திகள் மற்றொரு புறம் வந்த வண்ணமாயிருக்கின்றன. மற்றும் மேல்ஜாதி கீழ்ஜாதி என்றும் சுதேசி பரதேசி என்றும், வெள்ளையர் கறுப்பர் என்றும் ஜாதிமத தேசபிரிவுகளால் ஒருவரையொருவர் துன்புறுத்துவதும் ஒருவொருக்கொருவர் கலகம், அடிதடி, கொலை, கொள்ளை முதலியவைகள் செய்து கொண்டு இறப்பதும் கஷ்டப்படுவதாயிருப்பதாகவும் சமாசாரங்கள் பறந்த வண்ணமாயிருக்கின்றன. மற்றும் பெண்ணை ஆண் துன்பப்படுத்தினான், ஆணைப் பெண் துன்பப்படுத்தினாள் இதனாலும் மற்ற காரணங்களாலும் உலக வாழ்க்கை பிடிக்காமல் தற்கொலை புரிந்து கொண்டார்கள் என்கின்ற செய்திகளும் ஒருவனுடைய மனைவி மற்றொருவனை இச்சிக்கிறதனாலும், ஒருவன் மனைவியை மற்றொருவர் அடித்துக் கொண்டு போய்விட்டதாலும் நடைபெறும் கொலைகளின் விவரமும் இடையறாமல் வந்த வண்ணமாயிருக்கின்றன. மற்றும் புருஷன் பிடிக்காமலும், விதவை, புருஷனை வேண்டியும் வீட்டை விட்டு ஓடி விட்டதாக உலகறிந்த ரகசியங்கள் எங்கும் பேசிய வண்ணமாக இருக்கின்றது. மற்றும் மழையில்லாக் கொடுமையால் உஷ்ணத் தாக்கு ஏற்பட்டு டில்லியில் 125 பேர்கள் இறந்ததாகவும், மழையில்லாததாலும் வெய்யில் கொடுமையாலும் சில இடங்களில் கிணறுகளில் குடிக்கக்கூட தண்ணீரில்லாமல் வரண்டு போனதாகவும், வேளாண்மை விளையாமல் கருகிப் போனதாகவும், கஷ்டப்படுவதாயும், மற்றொரு இடத்தில் அதிக மழை பெய்து வேளாண்மை நாசமாய் போய்விட்டதாகவும், குளிரினால் நடுங்குவதாகவும், செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதைப்போல் ஒரு இடத்தில் கால்நடைகளுக்குத் தீவனமில்லாமல் கஷ்டப்பட்டு பட்டினியால் இறப்பதாகவும், மற்றொரு இடத்தில் கால்நடைகளுக்கு தீவனம் தாராளமாக இருந்தும் கால்நடைகள் தொத்து வியாதியால் தினம் நூற்றுக்கணக்காய் மடிவதாகவும் மற்றும் 'கடவுள்' கோவில்களில் நெருப்புப் பற்றிக் கொண்டதாகவும், 'அம்மன்' நகைகள் திருட்டுப்போய் விட்டதாகவும் சமாச்சாரங்கள் வருகின்றன.

இவை ஒருபுறமிருக்க, ஒரு நாட்டில் நூற்றுக்கு 90 பேர் படித்திருக்கின்றார்களென்றும், ஒரு நாட்டில் நூற்றுக்கு 5 பேர் படித்திருக்கின்றார்களென்றும் நமக்குச் சந்தேகமறத் தெரிய வருகின்றது.

ஒருநாட்டில் பெரும்பான்மையான மக்கள் தினம் நான்கு வேளை சமைத்துச் சாப்பிடுகின்றார்களென்பதையும், ஒரு நாட்டில் தினம் ஒரு வேளைக்குக் கூட மார்க்கமில்லாமல் கஷ்டப்படுகின்றார்களென்பதையும் பார்க்கின்றோம்.

ஒரு நாட்டில் 'ஜீவஹிம்சை' என்பது ஜீவன்களுக்குச் சிறிது கூட சரீரப் பிரயாசையோ மனநோயோ இருக்கக் கூடாதென்பதும், மற்றொரு நாட்டில்



RangaRakes tamilnavarasam.com

ஜீவகாருண்யம் என்பது உயிருடன் ஜீவனைக் கட்டிப்போட்டு வாயையும், கால்களையும் அமுத்திப் பிடித்துக் கொண்டு, பலமணி நேரம் விரைகளைப் பிடித்து நசுக்கிக் கொல்வதாக இருப்பதையும் பார்க்கின்றோம். அதையே வேதக்கட்டளை கடவுள் பிரீதி என்று சொல்லுவதையும் காதால் கேட்கின்றோம்.

ஒரு நாட்டில் மத ஆச்சாரியார்கள் (பாதிரிகள்) என்பவர்கள் பிரபுக்களிடமும், படித்தவர்களிடமும் பணம் வாங்கி ஏழைகளுக்குச் சாப்பாடு, தொழில், படிப்பு முதலிய உதவிகளுக்குச் செலவு செய்வதும், மற்றொரு நாட்டில் மத ஆச்சாரியார்கள் (சங்கராச்சாரி) ஏழைகளின் பணத்தை மதத்தின் பேரால் கொள்ளையடித்து, தம் இனத்தார், உயர்ந்த ஜாதியார், படித்தவர்கள் என்பவர்களுக்கே உபயோகப்படுத்துவதும் நேரிலேயே பார்க்கின்றோம்.

ஒரு பக்கம் மக்கள் கஞ்சிக்கில்லாமல் வாடி வதங்குவதும், மற்றொரு பக்கம் சீரங்கம் ரங்கநாதசாமிக்கு மற்றும் ஒரு நெய்க்கிணறு வெட்டுவதும் மற்றும் ஒரு வேளை அதிகப் பூஜைக்கு நெல் விளையும் கிராமங்கள் லட்சக்கணக்கான ரூபாய்க்கு வாங்கிவிடுவதும் பார்க்கின்றோம். எனவே, இவைகளுக்கு யார் பொறுப்பாளி? இந்த விஷயங்கள் கடவுளால் நடக்கின்றனவா? அல்லது தானாகவே நடக்கின்றதா? இவை கடவுள்களுக்குத் தெரியுமா? அல்லது தெரியாதா? ஒரு சமயம் தெரிந்தும் அலட்சியமாய் சும்மா இருக்கிறாரா? அல்லது இவைகளை கவனித்து தக்கது செய்ய தமக்கு சக்தியில்லையா? அல்லது இவைகள் கடவுளுக்கு திருவிளையாடலா? அல்லது இச்செய்கைகளுக்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லையா? ஒரு சமயம் அந்தந்த தேசத்தினுடையவும், அந்தந்த தேச மக்களுடையவும் அல்லது நெருப்பு, நீர், காற்று, மண்ணினுடையவும் (இயற்கை) கர்மபலனா? கடவுள் கவலைக் காரர்களே! இவற்றிற்கு என்ன பதில் சொல்லுகின்றீர்கள். இதில்தான் "எல்லாம் கடவுள் செயல்" என்றும் "அவனன்றி ஓரணுவுமசையாது" என்றும் திண்ணை ஞானம் பேசி ஏழைகளை வஞ்சித்துப் பாடுபடாமல் வயிறு வளர்க்கும் சோம்பேறிகளுடையவும், ஏமாற்றுக்காரர்களுடையவும் யோக்கியதை வெளியாகும்.

ஒரு மனிதன், தனக்கு மற்றவர்களைவிட அதிகமான பகுத்தறிவு இருப்பதாய் ஒப்புக் கொண்டு எல்லாவற்றிற்கும் தானே பொறுப்பாளி என்கின்ற உணர்ச்சியுடன் தன் அறிவின்படியே காரியங்களைச் செய்ய ஒவ்வொரு வினாடியும் முயன்று கொண்டிருக்கும்போதே அதற்கு நேர் மாறாய் வாயால் 'எல்லாம் கடவுள் செயல்', 'அவனன்றி ஓரணுவும் அசையாது என்று சொல்லிக் கொண்டு திரிவானானால் மற்றபடி அறிவற்ற நிலையிலிருக்கும் பாமர மக்களுக்கு எப்படி பொறுப்பும் தன் முயற்சியும் உண்டாகும். எனவே இனி மேலாவது நமது நாட்டில் 'கடவுள்' கவலை கொண்ட பெரியோர்கள் உலகத்தை இனியும் அதிகமான கடவுள்களை உற்பத்தி செய்து அவைகளைக் கொண்டு நிரப்பாமலும் இன்னும் 'கடவுளு'க்கு புதுப்புது குணங்களை கற்பிக்காமலும், இன்னும் புதுப்புது மதங்களை உற்பத்தி



செய்யாமலும், இப்போது உள்ளதாகக் கருதும் மதங்களுக்கும் புதுப்புதுக் கொள்கைகளையும் தத்துவார்த்தங்களையும் வியாக்கியானங்களையும் செய்யாமல் இருக்கும்படி தெரிவித்துக் கொள்ளு கின்றோம். ஏனெனில், இன்றைய தினமே இந்தியாவில் இந்துக்கள் ஜனத் தொகை 22 கோடி என்றால், இவர்களுக்குள்ள கடவுள் தொகை 33 கோடி தேவர்களாகும். இந்தக் கணக்குப்படி பார்த்தால், குழந்தை குஞ்சு முதல், கிழடு கிண்டு வரை உள்ள மக்கள் ஒவ்வொருவருக்கும் சராசரி (உருப்படி ஒன்றுக்கு) ஒன்றரைக் கடவுள் வீதமாகின்றது. மேலும், நாட்டின் அழகான பாகங்களை யெல்லாம் கடவுள்கள் தங்கள் குடியிருப்புக்கென்று கைப்பற்றி அவைகளை அசிங்கமும் அக்கிரமங்கள் நடப்பதுமான இடங்களாக்கிவிட்டன. மற்றும் அக்கடவுள்கள் வெளிப்போக்குவரத்தானது தெருக்களில் வண்டிகளும், மக்களும், தாராளமாய் நடமாடுவதற்குக்கூட இடமில்லாமல் நெருக்கடி உண்டாக்கித் தடைப்படுத்தப்பட்டு வருகின்றது. அக்கடவுள்களின் உற்சவங்கள் சுகாதாரங்கள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டு தொத்து நோய்கள் பிறப்பிக்கும் பருவமாகின்றது அக்கடவுள்களின் தீர்த்த ஸ்தல யாத்திரைகளெல்லாம் வழிப்பறிக் கொள்ளைகள் நடக்கும் பாதை பிரயாணமாயிருக்கிறது. இவ்வளவும் போதாமல் இனியும் மக்களுக்கும் நாட்டிற்கும் என்ன பலன் உண்டாக வேண்டும் என்று இந்த 'கடவுள் கவலை'க்காரர்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றார்களென்பது நமக்கு விளங்கவில்லை. மற்றும் கடவுளைப் பரப்புகின்றவர்கள் எங்கும் கடவுள் இருக்கின்றாரென்று சொல்லுவதும், ஆனால் அதை வணங்க வேண்டுமானால் குறிப்பிட்ட இடங்களில்தான் போய் வணங்க வேண்டுமென்பதும், எல்லா வஸ்துக்களிலும் கடவுள் இருக்கிறார் என்று பிரசங்கிப்பதும், பிறகு சிலை கல் அல்லது உலோகம் ஆகியவைகளில்தான் இருக்கின்றார் என்பதும், பிரசங்கிக்கும் போது கடவுள் எல்லா ரூபமாயும் இருக்கின்றாரென்பதும் காரியத்தில் வரும்போது அவர் மனித ரூபமாய்தான் இருக்கின்றார் என்பதும் பிரசங்கிக்கும் போது எல்லா மக்களும் கடவுள் பிறப்பு என்றும், எல்லா மக்களும் சகோதரர்கள் என்றும் சொல்லுவதும் காரியத்தில் வரும்போது எட்டி நில், தொடாதே, நீ தாழ்ந்தவன், நான் உயர்ந்தவன் என்பதும், இப்படி ஆயிரக் கணக்கான விஷயங்களில் முன்னுக்குப்பின் முரணாகவும் ஒன்றுக்கொன்று பொருந்தாமலிருக்கும் படியான மதத்தையும் கடவுள்களையும் பரப்புவது யோக்கியதையா என்பதாகக் கடவுள் கவலைக்காரர்களைக் கேட்கின்றோம். அன்றியும், பொது ஜனங்களையும் இம்மாதிரி பொய்யும் பித்தலாட்டமுமான கடவுள்களையும் மதங்களையும் இனியும் நம்பாமலிருக்க வேண்டுகிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 23.06.1929**



RangaRakes tamilnavarasam.com

# சம்மத வயது முடிவு

பெண்களின் சம்மத வயதை நிர்ணயிக்க நியமிக்கப்பட்ட கமிட்டி யாரின் விசாரணை முடிவடைந்துவிட்டதாகத் தெரிகிறது. இந்தக் கமிட்டி பெண்களுக்கு 14 - வயதுக்கு முன் கலியாணம் செய்யக்கூடாதென்றும் கலி யாணமான பெண்கள் விஷயத்தில் சம்மத வயது 15 - ஆகவும், கல்யாண மாகாத பெண்களின் சம்மத வயது 18 - ஆகவும் இருக்க வேண்டுமென்றும் சிபார்சு செய்திருக்கிறது. இந்தக் கமிட்டியை நியமனம் செய்தபோதும் இது ஆங்காங்கு விசாரணை நடத்தியபோதும் பார்ப்பனர்கள் எல்லோரும் சனாதன தருமத்துக்கு ஆபத்து ஸ்மிருதிகளுக்கு ஆபத்து என்று வெறுங் கூச்சல் கிளப்பி தங்களால் என்ன என்ன இடையூறுகள் செய்ய முடியுமோ அவ்வளவையும் தங்கள் முழுச் செல்வாக்கையும் உபயோகித்துச் செய்து பார்த்தனர். பெண்களின் விடுதலைக்கும் முற்போக்குக்கும் முக்கிய தடை யாக இருந்த இந்த விஷயத்தில் வைதீகப்பார்ப்பனர்களின் எதிர்ப்புக்களையும் கூச்சல்களையும் லட்சியம் செய்யாமல் இந்தமட்டில் ஒரு வித நல்ல முடிவுக் குக் கொண்டு வந்த பெருமை சிறப்பாக திரு. ஏ.ராமசாமி முதலியாருக்கே உரியதாகும். இனிமேல் சனாதன தருமங்களும் பராசர மனுஸ்மிருதிகளும் என்ன தான் செய்யப்போகின்றனவோ தெரியவில்லை.

**குடி அரசு - செய்தி விமர்சனம் - 23.06.1929**



# புரசைவாக்கம் அருணகிரி சபை
## தர்மத்தின் உண்மை விளக்கம்
## நாடும் சமூகமும் நன்மை பெறும் வழிகள்

நான் பேசுவதற்கு முன்னே அக்கிராசனர் என்னைக் குறித்து வெகு வாகப் புகழ்ந்து கூறிவிட்டார்கள்; அதனால் பேச வேண்டியதையும் மறந்துவிட்டேன். அவர் என்னைக் குறித்து அவ்வளவு பெருமையாக எடுத்து சொன்னதை நான் ஒப்புக்கொள்ள முடியாதாயினும், அக்கிராசன ருக்கு என்னிடத்திலுள்ள அதிக அன்பினால் பலவாறு புகழ்ந்து பேசியிருக் கின்றார். நான் இன்று பேசக்கூடியது உங்கள் மனதுக்கு வருத்தத்தைக் கொடுக்கக் கூடுமெனக்கருதித்தான் அக்கிராசனர் முன் எச்சரிக்கையாகச் சிலவார்த்தைகள் கூறினார். நான் யாருக்காகப் பேச வந்தேனோ அவர்களை வருத்தமுறச் செய்வதில் என்ன பயன்? முரட்டுத் தனமாகப் பிறர் உணர்ச்சி யைப் புண்படுத்தக் கூடியவாறு பேசுவதில் யாதொரு பயனும் இல்லை என்பதை அறிவேன். ஆயினும் எனக்குச் சரி எனத் தோன்றுவதை நான் வெளியிட்டுப் பேசுவதில் பின்வாங்குவதில்லை யாதலால்தான் அக்கிராசனர் அதை யாரும் குற்றமாகக் கொள்ளக்கூடாதெனக் குறிப்பிட்டுப் பேசினார். எனக்கு முன் பேசிய நண்பர் குருசாமி தர்மத்தைக் குறித்தும் அருணகிரி நாதரைப் பற்றியும் சில வார்த்தைகள் சொன்னார். அவர் வாலிபராதலால் தமக்கு உண்மையாகப்பட்டதை எடுத்துச் சொன்னார். நான் வாலிபர்களின் உண்மைக் கருத்தை வெளியிடுவதைப் பாராட்டுபவன்தான் அதற்கு முலாம் பூசி மறைப்பது நாட்டுக்குத் தீமையைதான் விளைக்கும் பரோபகார சிந்தையோடு கஷ்டப்படுபவர்களுக்கு உதவி புரிவோரிடத்துள்ள அசூசையி னால் அவ்வாறு பேசவில்லை. நமக்கு தர்மம் என்பது இதுதான் என்று வரையறுத்துக் கற்பிக்கப்பட்டிருப்பதனால்தான், கண் மூடித்தனமான செய்கைகள் இன்னும் செழித்து வருவதற்கிடமாயிருக்கின்றது. இதன் சம்மந்தமாக நமது மதமும் கோட்பாடுகளும் தர்மமும் ஒரு எல்லை ஏற்படுத்தியிருப்பதனால் அவ்வளவுக்குச் செய்யத்தான் யாருக்கும் மனம் வருமே தவிர அதைத் தாண்டிப்போக யாருக்கும் மனம் வராது. ஒரு அடி யாருக்கு அன்னமளித்தால் இவ்வளவு புண்ணியம் என்று கணக்கு வாரியாக அதன் பலனாய் இவ்வளவு காலத்திற்கு மோட்சத்திலிருக்கலாமென்று வகுத்தெழுதியிருக்கிறார்கள். இதைக் கேட்ட பிறகு, இத்தகைய தர்மம் சம்பந்தமான எண்ணம் வருகிறதே தவிர வேறல்ல. இம்மாதிரியான



RangaRakes tamilnavarasam.com

காரியங்களினால் உண்மையான பரோபகாரமான காரியங்களுக்குக் குந்தகமேற்படுகின்றதென்பதை நீங்கள் நன்றாய்க் கவனிக்க வேண்டும். இவற்றால்தான் நாடு முன்னுக்கு வருங்காரியங்கள் தடைப்படுகின்றன. எந்த தேசத்திலும் தர்மமில்லாமலிருக்கவில்லை. வெள்ளைக்காரன் தேசத்தின் தர்மம் நம்நாட்டுத் தர்மத்தைவிட பன்மடங்கு உத்தமமாயும் தேசத்திற்கும் சமூகத்திற்கும் உண்மையான நன்மையளிப்பதாயுமிருக்கின்றது. வெள்ளைக் காரன் நாட்டு தர்மம் கிணறு நிரம்பி வழிவது போல அவன் ராஜ்யம் நிரம்பி நம் நாட்டிலும் வழிந்தோடுகின்றது.

அத்தகைய தர்மம் நிறைந்த நாட்டில் என்னவழக்கமென்றால் ஒருவன் தெருவில் பிச்சைக்கு வந்தால் உடனே போலீஸ்காரன் பிடித்துக் கொண்டு போவான். அங்கு பிச்சையிடுவது சோம்பேறிகளை வளர்க்கும் முறை என்பதை நன்கறிந்து கொண்டார்கள். வெள்ளைக்காரன் நாட்டில் படிக்காத வன் என்றால் அவன் வெட்கித் தலைகுனிந்து விடுவான். நம்நாட்டிலோ தர்மம் என்று வந்தால் நமக்கென்ன நம்மாலான சாப்பாடு போட்டு விடுவோம்; பிறகு அவன் தலைவிதி போலாகிறது. சரஸ்வதி நாக்கிலிருந்தால் எப்படியும் படித்துவிடுவான் என்ற தர்மந்தான் நமக்குக் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் முன்னேறும்போது நாம் இக்கதிக்காளாக்கியிருக்கக் காரண மென்ன? நமது மதங்கள், தர்மங்கள் என்ற பலத் தத்துவங்கள் தான் நம்மை இந்நிலையில் வைத்திருக்கின்றன. அவர்கள் முன்னேற்றத்திற்குப் பலமும் பீரங்கியும் மட்டும் காரணமல்ல. சென்னை மாகாணத்தில் உயர்ந்த குஷ்டரோக, க்ஷயரோக, மருத்துவ ஆஸ்பத்திரிகளும், உயர்ந்த கலாசாலைகளும், கல்லூரி களும் அவர்களுடையதாகத்தானிருக்கக் காண்கின்றோம். தப்பான வழி களில் பிள்ளைகளைப் பெற்று கள்ளியில் போட்டுவிட்டால் அவற்றை எடுத்து வளர்த்து சம்ரட்சிக்கும் அனாதை ஆசிரமங்களும் அவர்களுடைய தாகத் தானிருக்கின்றது. தெருவிலும் நடக்கக்கூடாது, அருகிலும் வரக்கூடா தென்று மிருகங்களிலும் கேவலமாய் நம்மால் நடத்தப்படுபவர்களையும் அவர்கள் சேர்த்துக் கல்வி அளித்து சமத்துவம் பாராட்டி மாக்களெனக் கருதப்பட்டவர்களையும் அவர்கள் மக்களாக்கி வருவதைக் காண்கின்றோம். இவற்றை எல்லாம் நாம் எளிதில் மறக்க முடியாது; அல்லது மறைக்கவும் முடியாது. அவர்கள் நொண்டி, முடம், குருடர்களைக் கொன்றுவிடு கிறார்களா? அத் தகையவர்களுக்கும் தம் சுய உதவியினால் எவ்வளவுக்கு ஜீவனோ பாயத்தைத் தேடிக்கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு உதவிபுரிந்து வழிகாட்டி வருகின்றார்கள். இதனால் வெள்ளைக்காரன் தான் புத்திசாலியா? நமது முன்னோர்கள் என்ன முட்டாள்களா? என்ற கேள்வியும் கிளம்பக் கூடும். இதற்காக நாம் நமது முன்னோர்கள் பேரிலும் சுலபமாகக் குற்றம் சொல்லிவிட முடியாது. எந்தக் கொள்கையும் நீதியும், தர்மமும் காலத்திற்கும் இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறுதானிருக்கும். ராமேஸ்வரத்தில் ஒரு செட்டியார் தர்மம் செய்வதற்காகச் சாணியும், பாலும் சுக்கு மட்டும் கொடுக்கிறார் என்றால் அதுபோல நாமும் இங்குச் சாணியை குவியலாய்க்



கொட்டிக் கொண்டு வாரிக் கொடுப்பது தகுதியாகுமா? அந்தவிடத்திற்கு அவசியத்திற்கேற்றவாறு அது முக்கிய தர்மமாகவிருக்கலாம். அதற்காக நாம் அந்த செட்டியார் மீது குறை சொல்ல முடியுமா? முந்நூறு நானூறு வருடங்களுக்கு முந்திய காலத்துத் தர்மமென்ற காரியங்கள் இப்போது செய்ய முடியாதவைகளாகத் தானிருக்கும். அப்போது அவை அவசியமாகச் செய்யவேண்டியவைகளாகத் தானிருந்திருக்கும். அக்காலத்தில் தற்போ திருப்பது போன்று துரிதமான போக்குவரத்து சாதனங்களோ மற்ற வசதி களோ கிடையாது. அவ்வந்த நாட்டு மக்களுக்கு அவ்வந்த ஊரே சுவர்க்கம். அக்காலத்தில் அவர்கள் கிணற்றுத் தவளைகளைப் போலத்தானிருந்திருக்க முடியும். அப்பேர்பட்டவர்களுக்கு விளைச்சலும் அபரிமிதமாய் விளைந்து கொண்டிருந்தது. அக்காலத்தில் மழை பெய்வதற்கு அவசியமான காடு முதலியவை அடர்ந்திருந்ததால் பருவ மழைகள் தப்புவதில்லை. இதனால் உழுதாலும் உழாமல் விட்டாலும் அறுவடைக்குக் குறைவில்லை. அப்போது அதிகமாக விளைந்ததாலும் தற்போதைப் போல விளைந்த தானிய முழுதும் வெளி ஊருக்குக் கொண்டு போகப் படாமல் பெரும் குழிகள் வெட்டி அவற்றில் புதைத்து வைப்பதும் வழக்கமாயிருந்து வந்தது.

அன்றியும், அக்காலத்தில் பிச்சைக்காரர்களும் மிக அரிதென்றே சொல்லலாம். எவ்வளவு விளைந்தாலும் வாரி வெளிநாட்டுக்கு அனுப்புவது என்ற முறை அக்காலத்தில் அதற்கு சாதனமும் கிடையாது. அதனால்தான் இவ்வளவு பேருக்கு அன்னமிட்டால் இவ்வளவு புண்ணியமென்றும் எழுதிவைக்க இடமிருந்தது, அதனால் நம் நாட்டில் காலக்கிரமத்தில் பிச்சை எடுக்கும் சாதிகளென்றே பல ஜாதிகளும் தோன்றிவிட்டன. ஏதோ சாம்பலையும் மண்ணையும் பூசிக்கொண்டு வந்தாலும் சாமி என்று விழுந்து கும்பிடும் முட்டாள்கள் அதிகமிருக்கின்றார்கள் என்பதையறிந்து தான் பிச்சைக்காரர்களும் நாளுக்கு நாள் விருத்தியாகி கொண்டு வருகின்றனர். இத்தனைக் கோயில்களிருக்கையில் இன்னும் புதிதாகக் கோயில் கட்டுவது அவசியமாவென்று கேட்டால் "பாவி தடுக்கிறான் அவன் சொல்லைக் கேட்ட காதை லோஷன் போட்டுக் கழுவ வேண்டு"மென்கிறார்கள். (நகைப்பும், கர கோஷமும்) அக்காலத்தில் செல்வமிகுதியினால் செலவிடுவதற்கு வழியின்றி இவ்வாறெல்லாம் செய்து கொண்டிருந்தார்கள். தங்கள் விளைபொருள் களுக்கு செலவு வேண்டுமென்ற முறையில் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு மேன்மேலும் தர்மம் என்னும் பெயரால் பலவாறு செலவிட்டு வந்தார்கள். அக்காலத்தில் எத்தனைக் கடவுளிருந்தாலும் பூசை போட்டு எவ்வளவு பேர் வந்தாலும் சோறுபோடும் செல்வமும் செழிப்பு மிருந்தது. அதனால்தான் இவ்வளவு கடவுள்களும் அடியார்களும் ஏற்பட இடமிருந்தது. ஆனால் இப்போதைய கொள்கையும் மதக்கோட்பாடுகளும் காலதேசவர்த்தமானத்திற்கு ஏற்றபடியும் மனிதன் அறிவுக்கும் தன்மைக்கும் ஏற்றவாறுமிருக்கவேண்டும். மகமதியர்களும், கிறிஸ்துவர்களும், இந்துக்



RangaRakes tamilnavarasam.com

களும் எல்லா மதஸ்தர்களும் தான் பாவம் செய்யக்கூடாதென்கிறார்கள். ஆனால் பாவம், சுத்தம் முதலான தத்துவங்களுக்கு அவ்வந்த மதத்தினருக்கும் அர்த்தம் வேறாகத்தானிருக்கின்றது. பாலைவனத்தில் தோன்றிய இஸ்லாம் மதத்தில் சுத்தமென்றால் மூன்று வேளையும் குளிப்பதுதான் சுத்தமென்று எழுதி வைக்க முடியாது. அங்கு மணல் உடம்பில் தேய்த்துக் கொண்டாலும் குளித்து சுத்தமாவதற்கு ஒப்பாகத்தான் கருதப்படக்கூடும். அதனால் அந்த சுத்தம் தப்பு என்று சொல்லிவிடமுடியாது. நமக்குள் வெளிக்குப் போனால் நான்கு செம்பு தண்ணீர் விட்டு கழுவுபவர்களும் போதாக்குறைக்கு தலைமுழுகுபவர்களுமிருக்கிறார்கள். அவ்வாறு செய்தால் தான் அதனைச் சுத்தமெனக் கருதப்படுகிறது. ஆனால் இவர்களைவிட பன்மடங்கு கடுமையான சுகாதாரமுடைய வெள்ளைக்காரன் காகிதத்தில் பாதியும் கால்சராயில் பாதியுமாக துடைத்துவிட்டு போகிறான். அவன் நாட்டில் அவ்வளவுதான் வசதி. இங்கு குளிக்காவிட்டால் பாவி என்கிறார்கள். அங்கு குளித்தாயாவென்று கேட்பதே மரியாதைக் குறைவாகக் கருதப்படுகின்றது. இங்கு சிற்சிலர் வியர்வையினால் குளிக்க வேண்டிய அவசியமுண்டு. அங்கு குளிரினால் அத்தகைய அவசியமில்லை. அவ்வாறே நமக்கு பாவம் என்பது எறும்பை மிதித்துவிட்டாலும் பாவம். அவன் சங்கதி அதைப்பற்றி அவனுக்கு கவலையில்லை. இங்கு நாம் பசுவை அடித்தாலும் மகா பாவமென்கிறோம். அங்கு அவன் அதைக் கொன்று தின்னாவிட்டால் மார்க்கமில்லை. ஒருவன் சிற்றப்பன் மகளைக் கட்டலாமென்கிறான். மற்றவன் அதைப் பாவம் என்கிறான். இப்படி சௌகரியத்திற்கும் பழக்கத்திற்கும் ஏற்றவாறு தான் கொள்கைகளும் கோட்பாடுகளுமிருக்கக் கூடும். ஆதலால் அனைத்தும் காலதேசவர்த்தமானத்திற்கேற்றவாறிருக்க வேண்டுமென்பது நன்கு விளங்கும், அன்றியும் அவ்வந்தக்காலத்தில் திறமைக்கேற்றவாறு ஏமாற்ற, ஏதேதோ எழுதி வைத்திருக்கலாம். அவற்றைக் குறித்து இப்போது கவலையில்லை. ஆனால் நாம் முக்கியமாய் கவனிக்க வேண்டியது இன்றைய நிலைமையில் எப்படியிருக்க வேண்டுமென்பதே யாகும். அதிலிருந்து தப்ப வழியுண்டாவென்றும் பார்க்கவேண்டும். நாம் நமது செல்வம், அறிவு, ஒழுக்கம் முதலியவை பிரயோசனமான வழியில் செலவிடப்படவேண்டு மென்பதனால் அது தர்மத்திற்கு விரோதமானதென்று சொல்ல முடியாது. இப்போது நாமிருக்கும் நிலையில் தர்மத்தின் பெயரால் சத்திரமும் சாவடி களும் கட்டிக் கொண்டு போவோமானால் நம் சமூகத்தின் கதி என்னாகும்? நமது நாட்டின் நிலைக்கும் மக்களின் தேவைக்கும் ஏற்றவாறு தான் எந்த தர்மமும் ஏற்பாடும் செய்யப்பட வேண்டும். இனி நமக்குப் புதிதாகச் சாமிகள் வேண்டியதில்லை. இப்போது இந்துக்கள் கணக்கின்படி 22 கோடி இந்துக் களிருக்கின்றனர். இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடவுள்களோ புராணங் களின் கணக்குப்படி 33 கோடி கடவுள்களாயிருக்கின்றன. இதனை பங்கிட்டால் ஒரு ஆசாமிக்கு ஒன்றரைக் கடவுள் வீதம் மக்களைவிட கடவுள்தான் அதிகப்படுகிறது. (நகைப்பும் கரகோஷமும்) இவ்வளவு



கடவுள்களை நாம் காப்பாற்றினால் போதும். நாட்டின் பெருமையை வளர்க்க மக்கள் கஷ்டத்தைப் போக்க அறிவை வளர்க்க கல்வி அத்தியாவசியம். அவர்கள் சுயமரியாதையுடனும் சுகமாயும் வாழ்வதற்குத் தொழிலபிவிருத்தி அவசியம். எந்தத் தேசத்திலும் இவையிரண்டும் இன்றியமையாத அவசியமான அம்சங்கள். நம்நாட்டிலோ நூற்றுக்கு 93 பேர் படிப்பில்லாத தற்குறிகளாயிருக்கிறார்கள். இதைவிட அவமானமான காரியம் ஒரு தேசத்திற்கு வேறு என்ன இருக்கிறது? அதுபோலவே சாப்பாட்டிற்கு கஷ்டப் பட்டு வெளிநாடுக்கு பிழைப்புக்காக துறைமுகங்கள் தோறும் கப்பல்கள் தோறும் ஆயிரக்கணக்கான ஜனங்களை பெண்டு பிள்ளைகளுடன் ஏற்றுமதி செய்யப்படுவதான கோரக் காட்சியைத் துறைமுகங்களுக்குச் சென்று பார்த்தால் தெரியும். இவ்வாறு பிழைப்பின்றியும் சாப்பாட்டுக்கு வகை யின்றியும் கடல் கடந்து ஜீவிக்கச் செல்லும் ஏழை மக்கள் தொகைகளை இச்சென்னை மாகாணத்தில் மட்டும் மாதமொன்றுக்கு லட்சத்திற்கு அதிகமாகக் கூடும். இவர்கள் குழந்தை குட்டிகளுடனும் வயோதிகர்கள் கர்ப்பிணிகளுடனும் செல்வதான பரிதாபத்தை என்ன வென்றுசொல்வது? இங்குள்ள கஷ்டத்தைவிட அங்குபோய் சாகலாமென்று தான் மனம் முறிந்து போகிறார்கள். இக் கொடுமைகளைக் கவனித்து பரிகாரம் தேடப்படுவதில்லை. இத்தகைய நாட்டில் நடக்கும் விஷயங்களோ விபரீதமாகத்தானிருக்கின்றன. இங்கு சாமிகளுக்கும் சடங்குகளுக்கும் உற்சவ வேடிக்கைகளுக்கும் லட்சக்கணக்காகத்தான் செலவிடப்படுகின்றது. திருப்பதி முதலிய தேவஸ் தானங்களுக்கும் முக்கியமான மடங்களுக்கும் சுமார் 20 லட்சத்திற்கு அதிகமாக மாதாமாதம் வருமானம் கிடைக்கிறது. ஒரு சாமிக்கு ஒரு வேளைச் சாப்பாடாகிய சட்டி அரணைப் பூசைக்கு சுமார் 20 ரூபாய்க்கு அதிகம் செலவிடப்படுகிறது. இவ்வாறிருக்க அச்சாமியின் பிள்ளைகள், சாமியே கதி என்று கருதிக் கொண்டிருக்கும் மக்கள் கஞ்சிக் கலைந்து கொண்டு பிழைக்க வழியில்லாது ஆயிக்கணக்காகக் கப்பலேறி வெளிநாடு சென்று துன்புறுகின் றார்கள். இவையிரண்டினையும் சேர்த்துப் பார்த்தால் அந்த சாமிக்குத்தான் அதிக அவமானமென்பது நன்கு விளங்கும். அத்தகைய சாமிகளுக்கிருக்கும் சொத்துகளுக்கும் ஆடம்பரங்களுக்கும், வாண வேடிக்கைகளுக்கும் சதுர் கச்சேரிகளுக்கும் ஒரு விதமான அளவில்லை. ராஜாவுக்குகூட அவ்வளவு ஆடம்பரமில்லை. ராஜாவாயினும் கொடுங்கோன்மையினால் அந்த சுகங்களை ஜனங்கள் படும் கஷ்டத்தைப் பாராமல் அனுபவிக்கின்றான் என்று சொல்லலாம். ஆனால் கருணை வள்ளல் என்ற கடவுள் இப்படி வீணாக்கு வதற்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்கலாமாவென்று தான் உங்களை கேட்கிறேன். இதனால் நாம் கடவுள் மீது குற்றம் சொல்லவில்லை. அது என்ன செய்யும். இன்றைக்கு யாராவது தங்கக் காரை போட்டால் பேசாமல் போட்டுக் கொள்ளுகிறது. யாராவது கழற்றிக் கொண்டு போனாலும் கல்லுப்போல் பேசாமல் சும்மா இருக்கிறது. சமீபத்தில் ஆண்டாள் தாலியையும் யாரோ கழற்றிக் கொண்டு போய் விட்டதாயும் இப் பத்திரிகைகளில் வாசித்திருப் பீர்கள். ஏன் இந்த நாட்டில் நூற்றுக்கு 93 வீதமானவர்கள் தற்குறிகளா



RangaRakes tamilnavarasam.com

யிருக்கவேண்டும்? இதற்கும் வறுமைக்கும் காரணமென்ன? ஆனால், நான் உங்களை சந்தோஷப்படுத்த ஒரு வார்த்தையில் பதில் சொல்லிவிடலாம். வெள்ளைக்கார நீச்ச அரசாங்கத்தார். நம் பணத்தைக் கொள்ளையிட்டுப் போவதாகச் சிலர் கூச்சலிடுகின்றனர். அந்த நீச்ச அரசாங்கத்தால்தான் சரஸ்வதியும் நம் நாட்டை விட்டு ஓடி விட்டாள் என்கின்றனர் மற்றும் சிலர். ஆனால் நம் நாட்டை விட்டோடிய சரஸ்வதி அந்த நீச்ச நாட்டுக்குத்தான் போய்ச் சேர்ந்திருக்கிறாள். வெள்ளைக் காரன் கொள்ளையிட்டு போவதையும் சாமிகளுக்கும் சடங்குகளும் செலவிடுவதையும் கணக்குப் பார்த்தால் சாமிகளுக்கு செலவாவது தான் பன்மடங்கு அதிகமாகும். சாமிகள், மதம், சடங்குகள் முதலியவற்றின் பேரால் செலவாகும் பணமும் கஷ்டமும் அசௌகரியங்களும் கணக்கிட முடியாது. பணம் சம்பாதிப்பதில் எத்த னையோ தந்திரமும் சூழ்ச்சியும் செய்யும் அறிவாளிகளும் கூட இவ்வாறு செலவிடுவதில் அந்தத் தந்திரமொன்று மில்லாமல் முட்டாள்களாகத்தான் நடந்துக் கொள்கின்றனர். (கரகோஷம்) அபிஷேகத்தில் 150 ரூபாய் கொடுத்தா லென்ன? 10 ரூபாய் கொடுத்தா லென்ன? வித்தியாசமென்னவென்று யாராவது சிந்திப்பது உண்டா? சென்னை மாகாண சர்க்காருக்கு வரும் கணக்குப்படி சாமிகளுக்கு வருமானம் 2 கோடிக்கு அதிகமாகிறது. இது தவிர கணக்கில் வராத கொள்ளைகளும் போக்குவரத்து தரகர் செலவும் சொல்ல வேண்டிய தில்லை. கணக்குப் பார்த்தால் சாமிகளுக்கு நாம் கொடுப்பது சர்க்கார் வரி வருமானத்தை விட அதிகமாகுமேயன்றி ஒருவிதத்திலும் குறையாது. தர்மமென்றால் சாப்பாடு போடுவது தானாவென்று கேட்டால் பாவம் என்ற தர்ம முறையைத்தான் நமக்குக் கற்பிக்கப்படுகிறது. இத்தகைய வீணுக்குச் செலவாகும் பணம் மூன்று ஜில்லாவுக்குச் சாப்பாட்டுடன் கல்வி போதிக்கப் போதுமானதாகும். இந்த மாதிரி, சுமார் 25 வருடங்களுக்கு நம் சாமிகள் சிறிது வயிற்றை இழுத்துக் கட்டிக் கொண்டு சும்மா இருந்தால் பிறகு நம் நாட்டில் ஒருவன்கூட மருந் துக்கும் தற்குறியாய் இருக்கக் காண முடியாதென்பது திண்ணம். (பெருத்த கரகோஷம்) உள்ளது உள்ளபடி உண்மையைச் சொன்னால் அவன் தப்பு சொன்னான் இவன் நாத்திகப் பேச்சுப் பேசு கின்றான் என்று வீண் கூச்சலிடும் கூட்டத்தாருக்கும் குறைவில்லை. மேடை மீதேறி வெள்ளைக்காரர்களைத் துரத்தி விடுவோமென்று பயமுறுத்தலாம், மிரட்டினாலும் அர்த்தத்தோடல்லவா மிரட்ட வேண்டும்? ஜோபில் எலிக்குஞ்சு இருக்கிறது. எடுத்துவிட்டால் செத்துப் போவாய் என்றால் எவன் பயன்படுவான்? எடுத்துவிடு ஒரு கை பார்ப்போமென்றுதான் சொல்வான். ( நகைப்பு) முற்போக்குக்கான மார்க்கத் துக்கும் அது வெற்றி பெறத்தகுந்த வழிக்கும் நமது அறிவையும் செல்வத்தையும் செலவிடாமல் நாம் யாரையும் வெல்ல முடியாது. ஒரு கூட்டத்தார் நம்மைத் தாழ்ந்த நிலையிலேயே அடக்கி வைத்துக் கொண்டிருக்க முயல்வது சரித்திர பூர்வமாயும் நிரூபிக்கப் பட்டிருக்கின்றது. மத விஷயத்திலும் மற்ற விஷயங்களிலும் வெள்ளைக் காரன் நம்மைவிடக் கேவலமாக விருந்திருப்பதை அவர்கள் தேச சரித்திரமே



நன்கு விளக்குகிறது. ஆங்கிருந்த புரோகிதமும் சாமிகளும் இப்போது எங்குபோயின? எல்லாம் இங்கு வந்து சேர்ந்துவிட்டன. (நகைப்பு) அவர்கள் எல்லாவற்றையும் இங்கு மூட்டை கட்டி செலவுக்குப் பணமும் கொடுத்து அனுப்பிவிட்டு அங்கு விஞ்ஞான ஆராய்ச்சியிலிறங்கியிருப்பதால் நாளுக்கு நாள் அந்நாட்டார் முன்னேற்றமடைந்து வருகிறார்கள். அவர்கள் சாமிக்கு உற்சவமில்லை, தேர் இல்லை, திருவிழா இல்லை. அப்படியிருந்தும் அந்த சாமி அவர்களைப் பல அற்புதங்கள் கண்டுபிடிக்க வழியாயிருக்க, நம் சாமிகளுக்கு லட்சக் கணக்கான பணம் செலவிட்டு தேர் திருவிழா நடத்தியும் நாம் இந்தக் கதியிலிருக்கின்றோம். நம் நாட்டுப் பொருள்கள் வெளிநாட்டுக்கு போகின்றது என்று கூச்சலிடுவதனால் பயன் என்ன? கடுகளவாவது நாம் முன்னேறும் முயற்சி செய்வதில்லை. நேற்றுதினம் ருஷ்யாவில் செத்தவர் களைப் பிழைக்க வைக்கும் நூதன முறையை ஒருவர் கண்டுபிடித்ததாகத் “திராவிட”னில் படித்திருப்பீர்கள். இத்தனைக்கும் அது நாத்திகம் நிறைந்த நாடு. நாத்திகருக்கு நரகம் வேண்டுமானால் ருஷியாவிலிருப்பவர்களுக்கே இருக்குமிடம் சரியாய் போய்விடும். ஆதலால், வேறு எந்த நாத்திகர்களுக்கும், நரகத்தி லிடமிராது. அவ்வளவு நாத்திகமாயிருக்கும் ஊரில் செத்தவனைப் பிழைக்க வைத்து சாமியோடு போட்டி போடுகிறார்கள். வெள்ளைக்காரன் நாட்டில் சாமிக்கு முக்கால் துட்டுக்கூட செலவில்லை. மகமதியனும் அப்படித் தான் வெள்ளைக்காரன் கோவிலுக்குப் போனால் துணி அழுக்கை வெளுப்ப தற்குச் செலவிடுவதைவிட வேறு செலவில்லை. விவசாயத்திலும் அவர்கள் எந்தப் பழத்தை எந்த நிறத்துடன் எந்தச் சுவையில் பயிரிடவேண்டுமென்னும் ஆராய்ச்சி செய்து அதற்குத் திராவகங்கள் ஊற்றிப் பயிரிட்டு வெளிநாடு களுக்கு அனுப்புகிறார்கள். நாம் உழவுகட்ட வேண்டுமானாலும் பார்ப்பன னைக் கூப்பிட்டு நல்ல வேளை பார்த்து அந்தந்த ஏருக்கும் மாட்டுக்கும் பூசை போட்டு உழுவதனால் தான் இக்கதியிலிருக்கிறோம். (கரகோஷம்) நமக்கு இவ்வளவு கோடி சாமிகளும், இவ்வளவு பணச் செலவுமிருந்தும், நாம் கடுகளவாவது முன்னேற முடியாதிருக்கிறோம். பூகோள சாத்திரம் போதிக்கும் ஆசிரியரின் தகப்பனும் கிரகணத்தன்று தர்ப்பையை எடுத்துக் கொண்டு சமுத்திரக்கரைக்கு தர்ப்பனம் செய்துவைக்க வந்து விடுகிறான். இவன் பேச்சைக் கேட்டுக் குளிக்கப்போனால் நம்மை முதலை இழுத்துக் கொண்டு போய்விடுகிறது. கிரகண ஸ்நானத்துக்குப் போவோம் என்று சொல்லும் எம்.ஏ.க்களும், பி.ஏ.க்களும் இன்னுமில்லாமல் போகவில்லை. இக்காலத்திலும் சந்திரசூரியனை ராகுகேதுவென்னும் பாம்புகள் விழுங்கும் கதைகளும், அதன் மூலமான புரட்டுகளும், பணம் பறிக்கும் சூழ்ச்சிகளும் ஒழிந்த பாடில்லை. தேச முன்னேற்றத்திற்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, ஒழுக்கத் துக்கோ முட்டுக்கட்டையாயிருக்கும் எவற்றையும் ஒழிக்க முயல வேண்டும். அம்மாதிரி செய்யும் தேசமும் மதமும் சமூகமும் தான் முன்னுக்கு வரும். கிலாபத் மதப்பித்துப் பிடித்திருந்த துருக்கி தற்போது அதனை இருந்தவிடம் தெரியாமல் மூட்டைக் கட்டியனுப்பி விட்டு முன்னேற்றத்துக்கு வழி



RangaRakes tamilnavarasam.com

தேடியதனால் தான் தற்போது ஐரோப்பாவில் மற்றைய நாடுகளை போல நல்ல நிலைமையடைந்து வருகிறது. நாம் தர்மம் வேண்டாமென்று சொல்லவில்லை. நம் மதத்திலுள்ள அர்த்தமற்ற தத்துவங்களை ஒழித்து, பிறருக்கு எவ்விதத்தில் உபகாரமோ, அதை செய்து மக்களுள் சமத்துவமுவம், சகோதரத்துவமும், சத்தியமும், ஜீவகாருண்யமும் பரவச் செய்வதற்கு வழி தேட வேண்டு மென்றுதான் சொல்லுகிறோம். வீண் செலவிடும் பணங்களை உண்மையாகக் கஷ்டப்படுவர்களுக்கு உபகாரம் செய்வதில் செலவிடுங்கள் என்றுதான் சொல்லுகின்றோம். பழைய குருட்டு நம்பிக்கைகளைத் தம் சூழ்ச்சிகளுக்கு ஆதாரமாகக் கொண்டு சுகமாயிருந்த கூட்டத்தார் இப்போது கூலிகளை, குறும்புப் பிரசாரத்தில் ஏவிவிடுகின்றனர். எந்தக் காலத்திலும் நன்மைக்கும் பரோபகாரத்திற்கும் விரோதமாக நம் நாட்டில் ஒரு கூட்டத்தார் இருந் திருப்பது சரித்திர மூலமாகவும் நன்கறியப்படும். அர்த்தமற்ற கொள்கைகளை ஒழித்து ஒழுக்கமே பிரதானமென்று சீர்திருத்தி மற்றவனுக்கு உபகாரம் செய்வதுதான் மோட்சமென்று புகட்ட வேண்டுவது அவசியம். கஷ்டப் படுபவர்களுக்கு உதவியளித்து திருப்தி செய்வது தான் மேலான புண்ணியம். இவற்றைச் சொன்னால் என்ன நாத்திகம் வந்துவிட்டது? வீணாக மக்களைக் குழப்பி அவன் அறிவை கட்டிப் போட்டு நான் சொல்வதை நம்பு. இல்லா விட்டால் பாவம் என்று நான் சொல்லவில்லை. எதிலும் உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டும். அப்போது தான் நம் நாடு முன்னேற்றமடையுமேயன்றி, என் பாட்டன், முப்பாட்டன் போனபடி போகிறேன் என்ற மூடக் கொள்கை களால் நாடு நாளுக்கு நாள் நாசமடைவது திண்ணம். என் புத்திக்கு எட்டியதை நான் சொன்னேன். அதில் சரி எனத் தோன்றியதை ஒப்புக் கொண்டு அதன் படி நடக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். நான் சொல்வதில் பிசகிருந்தால் என் அறியாமைக்கு பரிதாபப்படும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். ( பெருத்த கரகோஷம்)

*குறிப்பு : 23.06.1929 ஆம் நாள் அருணகிரி நாதர் சபையின் ஆதரவில் புரசைவாக்கம் அன்னதான சமாஜத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சொற் பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 30.06.1929**



# எது வேண்டும்?

இந்திய நாடு பார்ப்பனர் என்னும் ஆரியர்களால் சமூகத்துறையில் அடிமைப்படுத்தப்பட்ட காலம் முதல் இன்றைய வரை அரசியலிலும் சமூகத்துறையிலும் நாம் அடிமைப்பட்டிருக்கும் அளவுக்கு அடிமைப்பட்டி ருக்காவிட்டாலும் அதனால் செல்வத்துறையில் மிகுதியும் அடிமைப் பட்டிருக்கின்றோம் என்பதை எவரும் ஒப்புக் கொண்டுதானாகவேண்டும். இதற்குக் காரணம் என்னவென்றால் சமூகத் துறையில் நம்மை அடிமைப் படுத்தி வைத்திருக்கும் பார்ப்பனர்கள் அவ்வடிமைத் தன்மையை என்றென் றைக்கும் தங்களுக்கு அனுகூலமாய் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீது இந்திய உள்நாட்டு மக்கள் ஆட்சி செய்வதை அழியச் செய்து அவைகளுக்கு பதிலாக வெளிநாடுகளிலிருந்தே ஆட்சிகளைக் கொண்டுவந்து அவர்களுக்கு இடம் கொடுப்பதன் மூலம் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொண்ட முறையில் நாட்டைப் பழாக்கி வந்திருக்கின்றார்கள். உதாரணமாக இன்றைக்கு ஆயிர வருஷகாலமாக இந்தியாவை ஏகபோகமாய் அரசாட்சி புரிந்த அரசர்கள் வருணாச்சிரமத் திலும் சாதி வித்தியாசத்திலும் சிறிதும் நம்பிக்கை இல்லாதவர்களாயிருந்தும், தங்கள் தங்கள் நாட்டில் உள்ளதையும் ஒழித்து வந்தும் கூட தாங்கள் இந் நாட்டிலிருந்து அடித்துக் கொண்டு போகும் கொள்ளை பார்ப்பனர்களுக்கு லஞ்சம் கொடுப்பதுபோல் வருணாச்சிரமத்தையும் ஜாதி வித்தியாசத்தையும் அழிப்பதற்கு சிறிதும் இடம் கொடுக்காமல் பார்ப்பனர்களுக்கு அனு கூலமாகவே இருந்து வந்திருக்கின்றார்கள். அரேபியா, ஆப்கானிஸ்தானம், துருக்கி முதலிய இடங்களில் இருந்து இங்கு வந்த மகமதிய அரசர்களைப் போலவும் ஐரோப்பாவில் இருந்து வந்த கிறிஸ்தவ அரசர்களைப் போலவும் பார்ப்பனர்கள் என்கின்ற ஆரியர்களும் இந்த நாட்டிற்கு வந்தவர் களே. ஆனதால் நாட்டின் நலத்தைப் பற்றியும் மக்களின் க்ஷேமத்தைப் பற்றியும் சிறிதும் கவலை இல்லாது தங்கள் ஆதிக்கத்தையும், க்ஷேமத்தையும் மாத்திரம் கவனித்துக் கொண்டு நாட்டை முழுதும் காட்டிக் கொடுத்துக் கொண்டே வந்துவிட்டார்கள். உதாரணமாக மகமதிய அரசாங்கம் பாழ்பட்ட தற்குக் கூட இப்பார்ப்பனர்களே பலவிதத்தில் பொறுப்பாளிகள் என்பதாக இப்போதும் பெரும்பாலான மகமதிய அறிவாளிகளால் சொல்லப்படுவதை நாம் தினமும் கேள்விப்படுகின்றோம். ஏனெனில் மகமதியர்கள் மத சமூகத்துறையில் மக்கள் எல்லோரையும் ஒன்று படுத்தவும் எல்லோரையும்



RangaRakes tamilnavarasam.com

சமமாக பாரபட்சமில்லாமல் கவனித்து நடத்தவும் முயற்சித்ததனாலேயே பார்ப்பனர்கள் மகம்மதிய அரசாங்கத்தை வெள்ளைக்காரர்களுக்குக் காட்டிக் கொடுக்க நேர்ந்தது என்றும் சொல்லுகின்றார்கள். இது எப்படி இருந்தாலும் இப்பொழுதும் பார்ப்பனர்கள் வெள்ளைக்கார அரசாங்கத்திற்கு உதவி செய்வதும் விரோதம் செய்வதும் வெள்ளைக்கார அரசாங்கம் பார்ப்பனர்களின் தனி ஆதிக்கத்திற்கு எவ்வளவு தூரம் உதவி செய்கின்றதோ அதைப் பொறுத்துத்தான் இருக்கின்றதே ஒழிய சிறிதும் நாட்டைப் பொறுத்தல்ல. இதற்கு உதாரணம் வேண்டுமானால், திரு.சாஸ்திரி கொஞ்ச நாளைக்குமுன் பிரிட்டிஷாருக்குக் கொடுத்த எச்சரிக்கையைப் பார்த்தாலே தெரியவரும். அதாவது "பார்ப்பனர்களாகிய நாங்கள் இல்லாவிட்டால் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் இவ்வளவு பலமாய் நிலைகொண்டிருக்க முடியுமா" என்பதாக எழுதியிருந்தார். அதே மாதிரி சென்னைச் சட்டசபையில் ஒரு ஆச்சாரியார் "பார்ப்பனர்களைப் பகைத்தால் அவர்கள் மறுபடியும் ஒத்துழையாமையில் சேர்ந்து கொள்ளுவார்கள்" என்றார். வெள்ளைக்கார அரசாங்கமும் இந்த சூழ்ச்சியை அறிந்தே சமூக சம்பந்தமான பிரச்சினைகளில் இந்நாட்டிற்கு ஏதாவது செய்யவேண்டுமென்றால் எல்லாப் பொறுப்பையும் பார்ப்பனர்கள் மீதே போட்டுவிட்டு தாங்கள் ஏதோ நமக்கும் பார்ப்பனர்களுக்கும் மத்தியஸ்தக்காரர்கள் போல் வேஷம் போட்டு ஒவ்வொரு சமயத்திலும் நம்மை ஏமாற்றி விடுகின்றார்கள். இதற்கு ஆகவேண்டிய வெள்ளைக்காரர்கள் பார்ப்பனர்களுக்கு ஆதியிலேயே சமூகமத விஷயத்தில் தாங்கள் பிரவேசிப்பதில்லை என்று ஒரு வாக்குக் கொடுத்திருப்பதாய் அடிக்கடி பல்லவி பாடுவதற்கும், பார்ப்பனர்களும் அதை அடிக்கடி எடுத்துக் காட்டி நோகாமல் அடிப்பதுபோல் வெள்ளைக்காரர்களை வைவதற்கும் இடம் செய்து வைத்து கொண்டிருக்கின்றார்கள். இந்த பார்ப்பனர்களும் வெள்ளைக்கார அரசாங்கத்தினிடம் அரசாங்கம் "மத சமூக விஷயத்தில் பிரவேசிக்கக்கூடாது" என்று வாக்கு வாங்கினார்களே ஒழிய, இந்நாட்டு செல்வத்தைக் கொள்ளை அடித்துக் கொண்டு போகக்கூடாது என்று ஒரு சிறு வாக்காவது வாங்கினவர்கள் அல்லர். எவ்வளவு கொள்ளை போவதாயிருந்தாலும் பக்கத்தில் இருந்து, அனுப்பிக் கொடுத்து வருகின்றார்கள். இதுவரை பல பார்ப்பனர்களே அரசியல்வாதிகள் என்கின்ற போர்வைத்துக் கொண்டு வேறு யாரையும் அத்துறையில் பிரவேசிப்பதற்கு இடமில்லாமல் செய்து கொண்டு இருந்ததாலும், பாமர ஜனங்களும் இவர்களையே நம்பி விட்டுவிட்டதாலும், ஒரு சிறிதாவது இந்திய செல்வப் பொருளாதார விஷயத்தில் அதாவது வெளிநாட்டு வியாபாரம் நாணயபரிவர்த்தனம், வரி விதித்தல் ஆகிய விஷயங்களில் சிறிதும் கவலை கொள்ளாமல் வெள்ளைக்காரர்களை அவர்கள் இஷ்டப்படியெல்லாம் செய்து கொள்ள பொது ஜனங்கள் பேரால் இடங்கொடுத்துவிட்டு தங்கள் ஆதிக்கத்தை – அதாவது தாங்கள் மாத்திரம் படித்தவர்கள் என்கின்றவர்களாகவும் தங்களுக்கே எல்லா உத்தியோகங்களும் கிடைக்கவும் அவ்வுத்தியோகங்களுக்கும் வெள்ளைக்காரர்கள்



பெறும் சம்பளத்திற்குச் சமமான சம்பளங்கள் மாதம் 1000, 2000, 3000 ரூபாய்கள் வீதம் கிடைக்கவும், அவைகள் அவ்வளவையும் தாங்களே வம்சபாரம்பரியமாக அனுபவிக்கவும் ஏற்பாடு செய்து கொண்டார்கள்; செய்து கொண்டும் வருகின்றார்கள். எனவே இவர்கள் இருவரின் கூட்டுக் கொள்ளையாலும் கஷ்டமும் நஷ்டமும் அடைந்து பட்டினியால் வாடி வதங்கி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சாகும் மக்கள் மேற்கண்ட வெள்ளைக்காரர்களும் பார்ப்பனர்களுமல்லாத இந்திய மக்களாகவே இருக்கிறார்கள். வெள்ளைக்காரர்களும் பார்ப்பனருமல்லாத மக்களிலும் ஏதோ மிகச் சிலரின் ஈன வயிற்றுப்பிழைப்பும் இழிந்த பேராசையும் வெள்ளைக்காரரையும் பார்ப்பனர்களையும் பின்பற்ற ஏற்பட்டுவிடுவதை நாம் மறைக்கவில்லை. ஆனாலும் அது ஆங்கிலத்தில் "எந்த கூட்டத்திலும் கறுப்பு ஆடுகள் உண்டு" என்கின்ற பழமொழிக்கு இலக்காக்கிவிட்டு விட்டு அதற்காக சமூகத்தையே குற்றஞ்சொல்லிவிட முடியாதென்றே சொல்லுவோம்.

சமூகத் துறையில் பார்ப்பனரல்லாத இந்திய மக்களுக்கிருக்கும் இழிவுக்குப் பார்ப்பனர்கள் எவ்வளவு பொறுப்பாளிகளோ அதைவிட வெள்ளைக்கார ஆட்சி பொருளாதாரத் துறையிலிருக்கும் தரித்திரத்திற்குச் சிறிதும் குறைந்ததல்லவென்றே சொல்ல வேண்டும். பார்ப்பனன் தன் சமூக சுயநலத்திற்குத் தானாகவே செய்கின்றான் என்று சொல்லலாம். ஆனால், வெள்ளைக்கார ஆட்சியோ தன்தேச சுயநலத்திற்குப் பார்ப்பனனுக்கு லஞ்சம் கொடுப்பதற்காக பணத்தில் ஒரு பங்கும், ஆதிக்கத்திற்கு இடமும் கொடுப்பதில் பார்ப்பனனின் சூழ்ச்சிக்கும் கொடுமைக்கும் இளைத்ததல்லவென்று சொல்ல வேண்டும். இந்த உண்மையையறிந்து நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து வெள்ளைக்காரர்களை நிர்ப்பந்தப்படுத்தி நமது சமூக அடிமைத்தனத்தை விலக்கிக் கொள்ள முயற்சி செய்யும்போது அவன் நம்மீது பார்ப்பனர்களை ஸ்கேபடுத்திவிட்டு கவலையற்று இருந்துவிடுகின்றான். அந்தச் சந்தர்ப்பத்தில் நாம் வெள்ளைக்காரன் மீது இருக்கும் ஆத்திரத்தைப் பார்ப்பான் மீது விட ஆரம்பித்தால் பார்ப்பனன் நம்மவர்களிலேயே சிலரை நம்மீது உசுப்படுத்தி விட்டு விட்டு வெள்ளைக்காரனிடம் போய்க் காலைக் கட்டிப்பிடித்துக் கொண்டு இருவருமாய்ச்சேர்ந்து நம்மைப் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்து விடுகின்றார்கள். உண்மையை ஒளிக்காமல் பேசுவதென்றால் இந்நிலையில் இருவரும் நமக்கு விரோதிகளென்றே சொல்ல வேண்டும், இருவருடைய தொல்லையிலிருந்து நாம் விலகினாலொழிய இந்திய நாடும் சமூகமும் அடிமைத்தனத்திலிருந்தும் தரித்திரத்தில் இருந்தும் மீளுவது முடியாத காரியமென்றே சொல்லுவோம். ஆனால் இருவருடைய கொடுமைகளிலிருந்தும் ஏக காலத்தில் விடுபட முடியுமா என்பதை யோசிக்க வேண்டும். அது கண்டிப்பாய் முடியாத காரியமேயாகும். பார்ப்பனர்களும் வெள்ளைக்காரர்களும் ஒன்று சேர்ந்து கொண்டார்களேயாகில் நம்மால், ஒன்றுமே செய்ய முடியாதென்றே உறுதி கூறுவோம். ஒரு சமயம் பார்ப்பனர்களிடம் சேர்ந்து வெள்ளைக்காரர்கள் கொடுமையிலிருந்து தப்ப



RangaRakes
tamilnavarasam.com

முயற்சித்தோமானால் முடியவே முடியாது. ஒரு சமயம் முடிவதானாலும் பார்ப்பனன் முன்னிலும் அதிகமான லஞ்சத்தை வாங்கிக் கொண்டு கண்டிப்பாய் நம்மைக் காட்டிக் கொடுத்து முன்னிலும் அதிகமான ஆபத்தில் கொண்டு வந்து வைத்து விடுவான். ஆதலால் இந்தச் சமயத்தில் நாம் செய்ய வேண்டியதென்ன? நமக்கு அவசரமாயும் முக்கியமாயும் வேண்டியது என்ன? என்பதை இப்போது ஜாக்கிரதையுடன் நன்றாய் யோசித்துப் பார்க்க வேண்டும். எவ்வளவு யோசனை செய்து பார்த்தாலும் பார்ப்பனனிடமிருந்து விடுபட வேண்டியது தான் முக்கியமானதாகத் தோன்றும். ஏனெனில், அவன் நமது சுயமரியாதைக்கு அதாவது மனிதத் தன்மைக்கு விரோதமாகவும், மற்ற நாட்டு மக்கள் நம்மைக் காட்டு மிராண்டிகள் என்று நினைக்கும் படியாகவும், மிருகத்திலும் கேவலமாய் அடிமைப்படுத்தியிருப்பதோடு வெள்ளைக்காரக் கொள்ளைக்கும் பெரிதும் காரணமாயிருக்கின்றான். ஆதலால் இவன் வேலையைத் தான் முதலில் பார்க்க வேண்டியது அறிவாளிக்கும் தன் மதிப்பில் கவலையுள்ளவர்களுக்கும் முதலாவது காரியமாகத்தோன்றும், ஆனால் இது சுலபமான காரியமென்று யாரும் கருதி விடமுடியாது. ஏனெனில், பார்ப்பனன் நம்மை அடிமை கொண்டு நம்மீது ஆதிக்கம் செலுத்த ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சூழ்ச்சி என்னும் கட்டிடமானது மதம் என்னும் சிமெண்ட் சுண்ணாம்பினால் கடவுள் கற்களைக் கொண்டு என்றும் அழியாத மாதிரியில் பலமாகக் கட்டி வேதசாஸ்திரபுராணம், மறுபிறவி, சொர்க்கம், மோட்சம் என்னும் அழகான சித்திர வேலைகளுடன் பூச்சு பூசப்பட்டிருக்கின்றது. சுலபத்தில் நம்மால் தனியாய்நின்று இடிக்க முடியாத தாகவும் இருக்கின்றது. இதில் ஒரு சிறிது பாகம் இடிபடாமல் நின்றாலும் மறுபடியும் அச்சூழ்ச்சிகள், அச்சிறிதுபாகம் மீதி ஆதாரத்தைக் கொண்டே மலையாய் வளர்ந்து விடும். ஆதலால் நாம் என்ன செய்வது? இங்குதான் சற்று ஆழ்ந்து பொறுமையுடன் யோசனை செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றோம். வெளியிலிருந்து வேடிக்கையாய் பேசுபவர்களும் எழுது பவர்களும் அதன் தத்துவத்தையும் பொறுப்பையும் உணராமல் இரண்டு காரியத்தையும் ஏக காலத்தில் செய்ய வேண்டுமென்கிறார்கள். இது அவர் களின் கவலையற்ற தன்மையையோ உணர முடியாத தன்மையையோதான் காட்டுகின்றது என்றே சொல்லியாகவேண்டும். எப்படி எனில், ஒரு மனிதன் ஏககாலத்தில் இரண்டு எதிரிகளுடன் சண்டைபோடுவானேயானால் எதிரிகள் இருவரும் செய்யவேண்டிய முதல் வேலை என்னவென்று பார்ப்போமானால் அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து அந்த ஒரு மனிதனை எதிர்ப்பதுதான். ஆகையால் இந்த எதிரிகள் ஏற்கனவே ஒன்றுபட்டு ஒருவருக்கொருவர் அந்நியோன்ய மாய் இருப்பவர்கள். ஆதலால், எவ்வளவுக்கெவ்வளவு இவர்களுடன் தனித்து எதிர்த்து, வெற்றி பெறச் சந்தர்ப்பம் செய்து கொள்ள முடியுமோ அதைத் தாராளமாகச் செய்ய முன்வரவேண்டும். அப்படிப் பார்ப் போமானால் பார்ப்பனன் கொடுமையிலிருந்து விடுதலை பெறும் வேலை யைத் தான் நாம் இப்போது செய்ய யோக்கியதை உடையவர்களாகவும்,



அவசியம் உடையவர் களாகவும் இருக்கின்றோம். இதில் வெள்ளைக்கார ஆட்சியினுடைய உதவி யை எதிர்பார்க்க முடியாது. ஆனால் எவ்வளவு உப யோகித்துக் கொள்ளலாமோ அவ்வளவையும் உபயோகித்துக் கொள்ளப் பார்க்க வேண்டும். குறைந்த அளவு உதவி கிடைக்காவிட்டாலும் அவனு டைய விரோதத்தையாவது வலுவில் சம்பாதித்துக் கொள்ளாமலாவதிருக்க வேண்டும். இந்த மார்க்கத்தில் நாம் வெற்றி பெற்றுவிட்டால் பிறகு வெள்ளைக்காரனிடம் நமக்குத் தகராறு செய்து கொள்ள இடமேயிருக்காது. ஏனெனில் வெள்ளைக் காரன் மிக புத்திசாலி, ஆனதால் தானாகவே ராஜிக்கு வருவதுடன் நம்மிஷ் டம் போல் ராஜி நிபந்தனையை அவனே பிரேரேபித்து விடுவான். நாம் இங்கு வந்திருக்கும் வெள்ளைக்கார தனிமனிதன் நிலை மையை உத்தேசித்துப் பேசவில்லை: பொதுவாக வெள்ளைக்கார தேச மக்களின் யோக்கியதையைப் பார்த்துப் பேசுகின்றோம்.

## தேசீயமும் அரசியலும் வேண்டுமென்பவர்கள்

இவ்வளவு தூரம் நாம் ஏன் எழுதினோமென்றால், தேசீயவாதிகள், தேசபக்தர்கள் என்கின்றவர்கள் இப்போது எங்கு பார்த்தாலும் பாமர மக்களிடம் "சமூக சமத்துவமும் வேண்டும், அரசியல் முன்னேற்றமும் வேண்டும் . ஆதலால் இரண்டு காரியமும் ஏக காலத்தில் செய்ய வேண்டும்" என்று சொல்லி மக்களின் ஊக்கத்தையும், லட்சியத்தையும் இரண்டாகப் பிரித்து அர்த்தமற்றதான தேசீய முன்னேற்றமென்பதற்கே கொண்டு போய் விடுகின்றார்கள். இதிலும் நமக்கு சிறிது வெற்றி ஏற்பட்டிருக்கின்றதென்றே சொல்லலாம். இதற்கு முன் "இத்தேசீயவாதிகளும் தேச பக்தர்களும்" முதலில் அரசியல் சுதந்தரம் கிடைத்துவிட்டால் பிறகு 100க்கு 3 பேர் களாயுள்ள இப்பார்ப்பனர்களிடம் சமூக சுதந்தரம் பெறுவது வெகு சுலப மானதால் சமூக விஷயத்தைப் பற்றி பேசி, அரசியல் சுதந்திரத்தை - சுய ராஜ்யத்தை கெடுத்துவிடக் கூடாதென்றும், அப்படி செய்பவர்கள் தேசத் துரோகிகளென்றும் பேசியும் எழுதியும் வந்தார்கள். ஆனால் இப்போது இரண்டும் ஏககாலத்தில் செய்ய வேண்டும் என்கின்ற நிலைக்கு வந்திருக்கின்றார்கள். அன்றியும் ஆப்கானிஸ்தான் அமீர் அமானுல்லாக் கான் நிகழ்ச்சியைப் பார்த்த பின்பும் அந்நாட்டு முல்லாக்களாகிய புரோகிதர் களின் யோக்கியதையைப் பார்த்த பின்பும் சில தேசீயவாதிகள் என்பவர் களுக்கு புத்திவந்திருப்பதாகக் காணப்படுகின்றது. 24.6.1929 உ 'தமிழ்நாடு' பத்திரிகையில் திரு.வரதராஜுலுவே "சுயராஜ்யம் கிடைத்த பிறகு சீர்த்திருத் தங்கள் செய்து கொள்ளலாம் என்று சில தேசியவாதிகள் நினைப்பது தவறு" என்றும், இதற்கு "அமானுல்லாவின் கதையே தக்க எடுத்துக்காட்டு" என்றும் எழுதி இருக்கின்றார். ஆனால் எந்த அபிப்பிராயம் அவருக்கு 24 மணி நேரம் கூட நிலைக்காது என்று நாம் எண்ணினதுண்டு. அது போலவே அடுத்த நாள் பழையபடியே "ஜஸ்டிஸ் கட்சி"யார் சமய சமூகவேற்றுமைகளைப் போக்க முற்பட்டிருந்தாலும் அரசியல் விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சியினர் மிகவும் பிற்போக்கான கொள்கையுடையவர்களாகயிருக்கின்றார்கள்" என்று எழுதி



RangaRakes tamilnavarasam.com

இருக்கின்றார். அதோடு "சமய, சமூக அரசியல் விஷயத்தில் சம உரிமைகளை நிலை நிறுத்த வேண்டும் என்றும் தெளிவான நோக்கத்தோடு தேசீயக்கட்சி ஒன்று அமைக்க வேண்டியது அவசியம்" என்றும் எழுதி விட்டு "அதில் காங்கிரசும், ஜஸ்டிஸ் கட்சியாரும் வந்து சேர வேண்டும்" என்றும் கேட்டுக் கொள்வதாக எழுதி இருக்கின்றார். காங்கிரசிடமும் ஜஸ்டிஸ் கட்சியாரிடமும் இல்லாத தேசீயக் கொள்கை இன்னது என்று இவர் தெளிவு படுத்துவாரா? காங்கிரசுக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் உள்ள வித்தியாசம் இன்னது என்பதையாவது தெரியப்படுத்துவாரா? எனவே 'தொம்பன் 60 அடி கம்பம் ஏறி விளையாடினாலும் கீழிறங்கி வந்து தான் காசு கேட்டாக வேண்டும்' என்பது போல் திரு வரதராஜுலு எவ்வளவு பெரிய "தேசீய வாதம்" பேசினாலும், சமய சமூக சீர்திருத்தத்தைத் தவிர இனிமேல் அவருக்கு வேறு சொல்லுவதற்கோ எழுதுவதற்கோ வார்த்தைகளும், காரியத்தில் செய்வதாயிருந்தால் அதைத் தவிர வேறு காரியமும் கண்டிப்பாய் இல்லை என்றே சொல்லுவோம், பார்ப்பனர்கள் திருப்திக்காக தேசீய பல்லவியோ ஜஸ்டிஸ் கட்சி பிற்போக்கான கட்சி என்கின்ற பல்லவியோ பாடுவதாயிருந்தாலும் இனி அதை உபாதனப் பார்ப்பனரும் தட்சணைப் பார்ப்பனரும் தான் இவரிடம் வந்து நம்பினதுபோல் வேஷம் காட்டி காசு வாங்கி போவாரே தவிர உண்மையில் நம்புவதற்கு இனி தென்னாட்டில் பார்ப்பனரில்லையென்றே சொல்லுவோம். ஆதலால், இனியாவது இந்த "புண்ணிய கைங்கரியத்தை"விட்டு விட்டு உண்மையைத் தாராளமாக எடுத்து சொல்லி கட்சி சேர்ப்பதோ, அல்லது வேலை செய்வதோ என்கின்ற கொள்கைக்கு வந்து சேரும்படி வேண்டுகின்றோம்.

## பொது ஜனங்களுக்கு

நிற்க, பொது ஜனங்களும் இம்மாதிரி தேசீயக்காரர்களையும் சீர் திருத்தக்காரர்களையும் நம்பிக்கொண்டே இருந்தால் கடைசியாக மனம் குழப்பத்தில் தான் போய் சேருமே ஒழிய உண்மையைக் கண்டுபிடித்து நடந்து கொள்ளவோ ஏதாவது ஒரு தக்க பலனடையவோ ஒருக்காலமும் முடியாமலே போய்விடுமாதலால் சமய சமூக சீர்திருத்தம் என்பது என்ன? தேசீய முன்னேற்றம் - அரசியல் சுதந்திரம் - சுயராஜ்யம் என்பவைகள் என்ன? என்கின்றவைகளைத் தாங்களாகவே கவனித்துப் பார்ப்பதுடன் இதுவரையில் எந்த தலைவர்களாவது இவைகளை விளக்கியோ, தெளிவாயோ சொல்லி யிருக்கின்றார்களாவென்றும், இம்மாதிரி கூச்சல் போட ஆரம்பித்த காலமுதலாய் இதுவரை ஏற்பட்ட பலன் என்னவென்றும் ஒவ் வொருவரும் தங்களுக்குள்ளாகவே யோசனை செய்து பார்க்க வேண்டும். அப்படிக் கில்லாமல் கூடவே கோவிந்தம் போடுவதனால் யாரோ சில சுயநலக் காரர்கள் பிழைக்க முடியுமே தவிர வேறு ஒரு பிரயோஜனமும் கண்டிப்பாய் உண்டா காதென்றே எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 30.06.1929**



# கடவுள் திருவிளையாடல் ஒரு கொலைக்கு ஒன்பது கொலை

மத்திய ஆசியாவில் உள்ள ஆஸ்பெக் என்னும் ஊரில் ஒரு புஸ்தக ஆசிரியர் நாஸ்திக பிரசாரம் செய்ததற்காக அவரைச் சில மதக் குருக்கள்கள் கொன்று விட்டதற்காக நியாயஸ்தலத்தில் ஒன்பது குருக்களுக்கு தூக்கு தண்டனையும், ஏழு பேர்களுக்குக் காவல் தண்டனையும், 19 பேர்களுக்குத் தேசப் பிரஷ்டத் தண்டனையும், கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே கடவுள் இல்லையென்று சொன்னவனைக் கொன்று கடவுளைக் காப்பாற்றி புண்ணிய கைங்கரியத்திற்காக 9 பேர் கொல்லப்படுவதென்றால் கடவுளுக்கு ஏதாவது நன்றி விசுவாசம் இருக்கின்றதா? மேலும் கடவுள் கட்டளை இல்லாமலும், கடவுள் சம்மதமில்லாமலும் அந்தப் பாதிரிகள் நாஸ்திகனான கடவுள் விரோதியைக் கொன்றிருக்க முடியுமா? அதுபோலவே அவ்வரசாங்கத்தாரும் நீதிபதியும் கடவுள் சித்தமில்லாமல் கடவுள் பக்தர்களைக் கொலை செய்ய தீர்ப்புக் கூறி இருக்க முடியுமா? கடவுள் இல்லை என்பதற்காக ஒருவன் சாவதும், உண்டு என்பதற்காக ஒன்பது பேர் தூக்கிலிடப்படுவதும் என்றால் கடவுள் திருவிளையாடலின் பெருமைதான் என்னே? என்னே.?

**குடி அரசு - செய்தி விமர்சனம் - 30.06.1929**



RangaRakes
tamilnavarasam.com

## நல்ல வர்க்கம்

**- சித்திரபுத்திரன்**

நமது நாட்டில் கல்யாணம் செய்வதில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பெண் தேடுவதிலோ, மாப்பிள்ளை தேடுவதிலோ நல்ல வர்க்கமாக இருக்க வேண்டும் என்கின்ற சாக்கைச் சொல்லிக் கொண்டு பணக்காரர்கள், பிரபுக்கள் வீட்டிலேயே போய் சம்மந்தம் வைத்துக் கொள்ள பிரயத்தனப் படுவதைப் பார்க்கின்றோம். ஆனால் பிரபுக்கள் வீட்டுப் பிள்ளைகளில் அதுவும் சரியான பிரபுக்கள் என்கின்றவர்களின் வீட்டுப் பிள்ளைகளில் பெரிதும் சமையல்காரன் வர்க்கமாகவும், மோட்டார் டிரைவர் வர்க்கமாகவுமே முடிந்து விடுகின்றது. அந்த பிரபுக்கள் வர்க்கமெல்லாம் தாசிகளிடமுமே போய் சேர்ந்து விடுகின்றது. ஏனெனில் பிரபுக்கள் என்றால் அவர்களுக்குக் கட்டாயம் தாசிகள் இருந்தாக வேண்டும். இல்லாவிட்டால் பிரபுப்பட்டம் பூர்த்தியாவதில்லை. ஆதலால் இவர்கள் வர்க்கம் தாசிகளிடமே இறங்கி விடுகின்றது. அப்பிரபுக்களின் மனைவிமார்கள் ஐயோ பாவம்! வேறு வகையின்றியும் குடும்பத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டாமா என்கின்ற கவலை மீதும், தங்கள் கணவர்களைப் போல் வெளியில் வேறு தக்க மனிதர்களின் சிநேகம் வைத்துக் கொள்ளாமல் வீட்டுக்குள்ளாகவே சரிபண்ணிக் கொள்ளக் கருதி சமையல்காரனுடனேயோ, அல்லது மோட்டார் டிரைவருடனேயோ மாத்திரம் தான் பெரிதும் சம்மந்தம் வைத்துக் கொள்ள முடிகின்றது. ஆகவே இதனால் சமையல் வர்க்கமும் டிரைவர் வர்க்கமும் தான் பிரபுக்கள் வீட்டில் இறங்கிவிடுகின்றது. இதைக் கண்ட ஒரு தாசி தன் மகனைப் பார்த்து "சமஸ்தானாதிபதிக்குப் பிறந்த நீ சங்கீதத்தில் பிழைக்கின்றாய், சமையல்காரனுக்கு பிறந்தவன் சர்வாதிகாரம் பண்ணுகின்றான். என்னே! கடவுளின் திருவிளையாடல்" என்று சொன்னதாக ஒரு பழமொழி சொல்லிக் கொள்ளப்படுவதுண்டு. ஆதலால் அறிவும் கல்வியும் அழகும் உடையது தான் நல்லவர்க்கமாகுமே தவிர பணக்காரர் வீட்டுப் பிள்ளைகள் என்கின்ற தனாலேயே அவர்கள் எப்படி இருந்தாலும் நல்ல வர்க்கம் என்று நினைப்பது வெறும் மதியீனமும் பேராசையுமேயாகும்.

**குடி அரசு - கட்டுரை - 30.06.1929**

## அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அப்யசிக்கின்றவர்கள் | - | பயிலுகின்றவர்கள் |
| அம்மன்காசு | - | ரூபாயில் 320 இல் ஒரு பங்கு மதிப்புள்ள காசு ( 1 ரூபாய் = 16 அணா ; 1 அணா = 20 அம்மன் காசு ) |
| அந்நியோன்யம் | - | ஒற்றுமை, ஒன்றிப்பு |
| அனாதரக்ஷகன் | - | ஆதரவற்றோரைப் பாதுகாப்பவன் |
| ஆபத்பாந்தவன் | - | இடரில் உதவுவோன் |
| ஆப்த | - | நம்பகமான |
| ஆஸ்பதம் | - | இடம், பற்றுக்கோடு |
| இகத்தை ( இகம் ) | - | இவ்வுலகம் ( பரம் - மறு உலகம் ) |
| இரசவாதம் | - | இரும்பு போன்றவற்றை தங்கமாக மாற்றுதல் |
| உபதானம் | - | அரிசி பிச்சை |
| உபத்ரவித்தல் | - | தொல்லை படுத்தல் |
| உயிர்பித்துக்கொண்டு | - | உயர்த்திக்கொண்டு |
| கடாக்ஷித்து | - | அருள் பாலித்து |
| கண்டனை | - | கண்டித்தல், எச்சரித்தல் |
| கனதனவான்கள் | - | செல்வந்தர்கள் |
| கன்மனம் | - | கல் மனம் |
| சிலாக்கியம் | - | மெச்சத் தகுந்தது |
| சுதாவாய் | - | தானாக, தன்விருப்பமாக |
| சுவதந்திரியம் | - | சுதந்திரம் |
| செரமாக்கள் | - | செரமர் எனப்படும் மலையாள நாட்டு தீண்டாத வகுப்பினர் |
| சைத்தன்னியம் | - | பேரழிவு |
| தத்துக்கள் | - | தடைகள், ஆபத்துகள் |
| தவக்கப்பட்டிருப்பதால் | - | தாமதமாகி இருப்பதால் |
| நாணய பரிவர்த்தனம் | - | நாணய மாற்று விகிதம் |

RangaRakes

tamilnavarasam.com

# குடி அரசு

# 1929-2

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 9

பெரியார் திராவிடர் கழகம்

29 இதழியலாளர் குடியிருப்பு

திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்

சென்னை - 600 041

# மரகதவல்லி மணம்

## மறுமணமும் கலப்பு மணமும் கலந்த காதல் மணம்

அருமை மணமக்களே! இங்கு கூடியுள்ள சகோதரிகளே! சகோதரர்களே! இங்கு நடைபெற்ற மணத்தைப் பார்த்த பின்பு சீர்திருத்த மணமென்பது எத்தகையது என்பது இப்போது உங்களுக்கு நன்றாய் விளங்கியிருக்கும். பண்டைக் காலத்திலும் நம் நாட்டில் இம்முறையில்தான் மணங்கள் நடைபெற்று வந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். ஆனால் இடையில் இம்முறை எப்படி மாறிற்று என்பதுதான் அதிசயமாய் இருக்கின்றது. இப்போது நம் நாட்டில் நடைபெற்றுவரும் மணங்கள் பெரிதும் மணத்தின் உண்மைத் தத்துவமற்றதும், அர்த்தமற்ற வெறும் சடங்கையே முக்கியமாக கொண்டதுமாய் நடைபெறுகின்றன.

மணமக்கள் தங்களுக்குள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை காப்பாற்றுதற்குப் பலர் முன் உறுதிப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட மண முறையானது தற்காலம் வெறும் சடங்குகளையும் அர்த்தமற்ற பழக்க வழக்கங்களையும் காப்பாற்றும் முறையாய்த் திகழ்கின்றது. மணத்தின் லட்சியம் முழுவதும் சடங்காய் ஏற்பட்டுவிட்டது. இயற்கை எழுச்சியாலும் உணர்ச்சியாலும் ஏற்படவேண்டிய மணம் செயற்கையில் நிகழ வேண்டியதாய்விட்டது. அது போலவே, இயற்கைக் காதலும் இன்பமும்கூட செயற்கைக் காதலாகவும் இன்பமாகவும் மாறிவிட்டது. மணமக்கள் ஒருவரை ஒருவர் தாங்களாகவே தெரிந்து எடுத்துக் கொள்ள வேண்டியதற்குப் பதிலாக வேறு ஒருவர் தெரிந்தெடுத்து மணமக்களை ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டியதாயிருக்கின்றது. அநேக மணங்களில் மணம் நிகழும்வரை, அதாவது தாலியைப் பெண் கழுத்தில் கட்டும் வரை ஆண் இன்னார், இப்படிப்பட்டவர் என்று பெண்ணுக்கும், பெண் இன்னார், இப்படிப்பட்டவர் என்று ஆணுக்கும் தெரியாமலேயே இருக்கின்றது. சில மணங்களில் தாலி கட்டி சில நாள் வரை கூட தெரிவதற்கில்லாமல் இருக்கின்றது. ஒருவருக்கொருவர் முன்னைக் கூட்டியே தெரியவேண்டாமா என்று யாராவது கேட்டால், “அன்று பிரமன் போட்ட முடிச்சை இனி அவிழ்த்து வேறு முடிச்சு போடவா போகிறான்” என்று சமாதானம் சொல்லி விடுகின்றார்கள்.

எங்கள் பக்கங்களில் கல்யாணப் பெண்கள் இரண்டு கைகளைக் கொண்டும் கண்களை நன்றாய் பொத்திக் கொண்டும் தேம்பித் தேம்பி அழுது

RangaRakes tamilnavarasam.com

கொண்டும் இருக்க, மற்றொரு பெண் கையைப் பிடித்து தரதர வென்று மணவறைக்கு இழுத்துக் கொண்டு வருவது வழக்கம். தாலி கட்டுவதற்குக் கூட கைகளைப் பிடித்து விலக்கித்தான் கட்ட வேண்டும். யார் தாலி கட்டினதென்று பெண்ணுக்கு தெரியவே தெரியாது. இப்படி அழுது கொண்டும் கண்களை மூடிக் கொண்டும் இருக்கும் பெண்கள்தான் நல்ல உத்தமப் பெண்கள் என்று சொல்லுவார்கள். பெண்களுக்கு கல்யாணம் என்பது தன்னை மற்றொரு வீட்டிற்கு அடிமையாய் விற்பது என்பது அர்த்தமாயிருக்கின்றதேயொழிய ஆணும் பெண்ணும் கூடி வாழ்வதற்கு செய்யும் காரியம் என்பது இன்னமும் அநேக பெற்றோர்களுக்குத் தெரியவே தெரியாது.

கல்யாணச் சடங்கு நடந்து பெண்ணை மாப்பிள்ளை வீட்டிற்கு அனுப்பும் போது பெண் வீட்டாரும், நெருங்கின சுற்றத்தாரும் அழுது கொண்டும், பெண்ணும் தேம்பித் தேம்பி அழுது கொண்டும் தான் அனுப்பப்படுகின்றது, "கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன்" என்று சொல்லி, புருஷன் சொன்னபடியும், மாமி, மாமன், நாத்தி, கொழுநன் சொன்னபடியும் நட என்று பெண்களுக்கு படிப்பிக்கப்படுகின்றது. இம்மாதிரி உபதேசத்தில் கட்டுப்பட்ட பெண்கள் தங்களை மாமியின் வேலைக்காரிகள் என்று எண்ணிக் கொள்ளுவார்களே தவிர இயற்கை இன்பத்தை எப்படி அனுபவிக்க முடியும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

வாழ்க்கை, மணம், இன்பம், காதல் என்பவைகள் ஒவ்வொரு தனி மனிதனின் உரிமையாகும். அன்றியும் அவை அவரவரின் தனி இஷ்டத்தைப் பொறுத்ததுமாகும். இவற்றில் அன்னியருக்குச் சற்றும் இடமில்லை. ஆனால் இப்போது இவை மற்றவர்களுடைய திருப்திக்கும் இஷ்டத்திற்கும் ஏற்றபடி நடக்கின்றது. மணமக்களுக்கு தங்கள் தங்கள் காதலின் மேல் ஏற்படும் மணம்தான் வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுக்க முடியும்.

ஆதலால் இன்று நடந்த மணமானது உண்மையான சீர்திருத்த மணமாகும். இங்கு வந்திருக்கும் பெரியார்களையும் அன்பர்களையும் பார்க்கும்போது இம்மாதிரி மணத்திற்கு இதுசமயம் நாட்டில் உள்ள பேராதரவு நன்கு விளங்குகின்றது.

திரு.முருகப்பர் அவர்கள் நாட்டின் நிலையையும் தேவையையும் நன்கறிந்தவர். அவருடைய எழுத்தும் பேச்சுமே அவருடைய தெளிவைக் காட்ட போதுமானதாகும். சென்ற பத்து பதினைந்து வருஷங்களாக இவர் சீர்திருத்தத் துறையில் உழைத்து வருபவர். சீர்திருத்த முறையைச் சொல்லில் மாத்திரமல்லாமல் செயலிலும் காட்டிவிட்டார். நாட்டுக்கோட்டை நகரத்தார் களில் திரு.முருகப்பர் - திரு.பிச்சப்பா சுப்பிரமணியம் முதலியவர்கள் மிகுதியும் உழைத்து வந்திருக்கின்றார்கள். இப்போது அந்த சமூகம் எல்லாத் துறையிலும் முன்போக்கடைந்து நாட்டுக்கு வழிகாட்டியாய் இருப்பதற்குப் பெரிதும் இவர்கள் போன்றவர்களே பொறுப்பாளிகளாவார்கள். பொது



RangaRakes

வாகவே நாட்டில் சீர்திருத்தத்திற்கு அதிக ஆதரவு ஏற்பட்டு வருகின்றது. நாளுக்கு நாள் நிலைமை அனுகூலப்பட்டுக் கொண்டே வருகின்றது. சாதாரணமாக சென்ற வருஷத்தை விட இவ்வருஷம் எவ்வளவோ பெரிய மனமாறுதல் ஏற்பட்டு இருக்கின்றது.

சென்ற இரண்டு மாதத்திற்கு முன் நடந்த திரு.அருணகிரி திரு.சுந்தரி திருமணமும் இம்மன மாறுதலுக்கு உதாரணமாகும்.

திரு.மரகதவல்லி அம்மாளும் மிகவும் பாராட்டற்குரியவராவார். அவர்களைப் பட்டுக்கோட்டையில் சந்தித்த போது அவ்வம்மையார் தமது அபிப்பிராயத்தை சிலரிடம் தெரிவித்தார்கள். நாம் அதை அவர்களின் பெற்றோர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டோம். அதில் அவர்களுக்கு அனுகூலம் கிடைக்காததால் தாமாகவே முயற்சி எடுத்துக் கொண்டது மிகவும் பாராட்டத்தக்கதாகும். நம்நாட்டு விதவைத் தன்மையின் கொடுமையை நன்றாய் அனுபவித்தவர்களானதாலும், "குடி அரசு" முதலிய பத்திரிகைகளை பார்த்து வந்ததனாலும், அவர்கள் தைரியமாய் முன்வர நேர்ந்தது. மற்றபடி உலகத்தில் எத்தனை பெண்கள் இம்மாதிரி கஷ்டப்பட்டுக் கொண்டு இருப்பார்கள் என்பதை நினைத்தால் மனம் பதறும். திரு.காந்தி அவர்களைச் சில "விதவைகள்" ஒன்று கூடி தங்கள் கஷ்டத்திற்கு வழி என்ன என்று கேட்டபோது, அவர்கள் "உங்கள் இஷ்டத்தை உங்கள் தாய் தகப்பன்மாரிடம் சொல்லிப் பார்த்து அவர்கள் அதற்கு ஏதாவது பரிகாரம் செய்யவில்லையானால் தைரியமாய் வெளிக்கிளம்பி உங்களுக்கு ஏற்ற மணாளனை நீங்களே தெரிந்தெடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னார். அந்த உபதேசத்தை முறைப்படி திரு.மரகதவல்லியே முதன் முதலாய் நிறைவேற்றி இருக்கின்றார். அதாவது, திரு.மரகதவல்லிக்கு இது இரண்டா வது மணமாகும். முதல் மணக் கணவன் காலமாய்விட்டார். மறுமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டு இன்று தமது இச்சையை நிறைவேற்றிக் கொண்டார். இதுதான் இயற்கைத் தத்துவம். எப்படி எனில், ஒரு புருஷன் தன் மனைவி இறந்து விட்டாலோ அல்லது அது தனக்கு சரிப்படாவிட்டாலோ உடனே மறுமணம் செய்து கொள்ள ஏற்பாடு செய்கிறான். மனைவி காயலாவாய் இருக்கும்போதே பிழைக்காது என்று தெரிந்தால் வேறு பெண்ணை மனதி லேயே தேடுகின்றான். மனைவி இறந்து போனவுடன் மறு கல்யாணத் திலேயே கவலையாய் இருக்கின்றான். பந்துக்களிடம் சென்று "அணைந்து போன விளக்கை மறுபடியும் ஏற்றிவைக்க வேண்டியது உங்கள் கடமை", என்று சொல்லி பெண் கேட்கின்றான். வருஷத்திற்குள் மறு கல்யாணம் செய்து கொள்ளுகின்றான். அப்படியிருக்க, பெண்கள் மாத்திரம் ஏன் அந்தமாதிரி செய்து கொள்ளக் கூடாது? ஆகவே, திரு.மரகதவல்லி மற்ற பெண்களுக்கு ஒரு வழி காட்டியாக துணிந்து மணம் செய்து கொண்டதற்கு நான் மிகவும் போற்றுகின்றேன். மணமக்கள் இருவரும் நல்ல கல்வியும் அறிவும் உள்ள தக்க ஜதையானதால் இன்று இவ்வைபவத்தைக் கண்டு



tamilnavarasam.com

ஆனந்திக்க முடிந்தது. அன்றியும் இம்மண வைபவம் ஆடம்பரமின்றியும் வீண் சடங்குகளின்றியும் வெகு சிக்கனமாகவும் சுருக்கமாகவும் முடிவு பெற்றது மிகவும் போற்றத்தக்கதாகும். இம்மணமக்கள் இனியும் இவ்வித காரியங்களுக்கு வழிகாட்டியாய் இருந்து ஒத்த இன்பத்துடன் வாழ்ந்து உலகத்திற்கு நன்மை செய்ய வேண்டும் என்பதாக ஆசைப்படுகின்றேன்.

குறிப்பு : *29.06.1929 ஆம் நாள் மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்தில் திரு முருகப்பர் அவர்களுக்கும் திரு மரகதவல்லி அவர்களுக்கும் நடைபெற்ற திருமணத்தில் மணமக்களைப் பாராட்டி சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 07.07.1929**



# பார்ப்பனரல்லாத மாணவர் படிப்பின்
## கஷ்டமும் பார்ப்பன உபாத்தியாயர்களின் கொடுமையும்

எங்கு பார்த்தபோதிலும் பார்ப்பன உபாத்தியாயர்களின் கொடுமை யானது சகிக்க முடியாத அளவில் பெருகிக்கொண்டே வருவதாக தினமும் நமக்குச் சங்கதிகள் எட்டிக் கொண்டே வருகின்றன. அவற்றுள் அநேகம் வெளியிடவே மனம் கூசுகின்றது. அரசாங்கக் கல்வி இலாகா மந்திரி ஒரு பார்ப்பனரல்லாதாராயிருந்தும் ஸ்தல ஸ்தாபனங்களின் தலைவர்களும், மற்றும் தனிப்பட்ட பள்ளிக் கூடங்களின் நிர்வாகஸ்தர்களும் பார்ப்பன ரல்லாதாரராகவே இருந்தும் பார்ப்பனரல்லாத பிள்ளைகளின் கஷ்டம் சற்றாவது நிவர்த்தியானதாகக் காண்பதற்கில்லை. இனி சீக்கிரத்தில் நிவர்த்தி யாவதற்கு மார்க்கம் ஏற்படும் என்றும் கருதுவதற்கில்லை. இதற்கு முக்கிய காரணம் என்னவென்று பார்ப்போமானால் அநேகமாய் கல்வி இலாகா உத்தியோகங்களில் பெரிதும் பார்ப்பனர்களே அதிகாரிகளால் இருந்து வருவதும், பரீட்சை அதிகாரிகளும் பார்ப்பனர்களாகவே இருந்து வருவதும் அவர்களது சலுகைக்குப் பாத்திரமான உபாத்தியாயர்களும் தலைமை உபாத்தியாயர்களும் பார்ப்பனர்களாகவே இருந்து வருவதும் தவிர வேறு காரணம் சொல்வதற்கில்லை என்றே சொல்லுவோம். யோக்கியமாகவும், நியாயமாகவும் பேசுவோமேயானால் கல்வி இலாகாவில் பார்ப்பனர்கள் என்பவர்கள் கண்டிப்பாய், அதிகாரியாகவோ உபாத்தியாயர்களாகவோ இருக்கக் கூடாதென்றே சொல்லுவோம்.

பார்ப்பனர்கள் மூலம் மக்களுக்குக் கல்வி போதிக்க எண்ணுவதை விட கல்விச்சாலைகளை அடைத்துவிடுவது மேலென்று கூடச் சொல்லத் துணிவோம். ஏனெனில் முதலாவதாக இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு பார்ப்பனனும் தன்னை உயர்ந்த சாதி என்றும், அதாவது வருணாச்சிரமப்படி தாம் 'பிராமண'ரென்றும், மற்றவர் 'சூத்திர'ரென்றும் எண்ணிக் கொண்டிருப் பவர்கள். எந்த கொள்கைப்படி தன்னை 'பிராமணரென்றும்' மற்றவனை 'சூத்திர'ரென்றும் எண்ணிக்கொண்டிருக்கின்றார்களோ, அதே கொள்கை யின்படி பிராமணன் 'சூத்திரனை'ப் படிக்க வைக்கக் கூடாதென்றும், 'சூத்திரன்' படித்தால் வருண தர்மம் கெட்டுப் போகுமென்றும், பிராமண னுக்கு ஆபத்தாய் முடியுமென்றும் 'சூத்திரனை'ப் படிக்க வைத்தப் பிராமணர் 'நரகத்தை அடைவார்' என்றும் கருத்துப்பட ஆதாரங்கள் இருக்கின்றன.



RangaRakes tamilnavarasam.com

இந்தக் கொள்கையை மனப்பூர்வமாக நம்பின பார்ப்பனர்கள் உபாத்தியாயராயிருந்தால் பார்ப்பனரல்லாத பிள்ளைகளை அவர்கள் படிக்க விடுவார்களா? படித்தாலும் பாசாக சம்மதிப்பார்களா? என்பதை வாசகர்களே யோசித்து முடிவு கட்டிக்கொள்ள விரும்புகின்றோம்.

கல்வியில் இருக்கும் சூதுகள் அநேகமாக நம்மவர்களுக்குத் தெரியாதென்றே சொல்லலாம். உதாரணமாக பார்ப்பனரல்லாத பிள்ளைகள் பி.ஏ.பாஸ் செய்வதென்றால் பிள்ளைகளுக்கு 22, 23, 24 வருடங்களாகி விடுகின்றன. ஆனால் பார்ப்பனப் பிள்ளைகள் 18, 19, 20 வயதிற்குள் பி.ஏ.பாசு செய்து விடுகின்றன. இதற்குக் காரணம் என்ன? என்பது நம்மவர்களுக்கு தெரியுமா? யாரையாவது காரணம் கேட்டால், "அது பிராமணப்பிள்ளை,. அதற்குப் படிப்பு சீக்கிரம் வருகின்றது. நம்ம பிள்ளை ரொம்பவும் மந்தம்,. அதனால் சீக்கிரம் வருவதில்லை" என்று ஒரு வார்த்தையால் பதில் சொல்லி விடுவார்கள். ஆனால் நம் பிள்ளைகளும் ஒரு வருடமாவது தவறாமல் ஒவ்வொரு வகுப்பிலும் பாசு ஆகிக்கொண்டே போனாலும் எப்படியும் பி.ஏ. பரீட்சைக்குப் போக 22 வயதாய் விடுகின்றது. ஒன்று அல்லது இரண்டு வருடம் தவறினால் இருபத்து நான்கு வயதாய் விடுகின்றது. மூன்று வருடம் தவறினால் இருபத்தைந்தாய் விடுகின்றது. பிறகு சர்க்கார் உத்தியோகத்திற்கு லாயக்கில்லாதவர்களாகி விடுகின்றார்கள்.

ஆனால் பார்ப்பனப் பிள்ளைகளோ ஒன்று இரண்டு வருஷம் தவறினாலும் கூட 20, 21-ல் பி.ஏ. படித்து முடித்து விடுகின்றார்கள். இதன் ரகசியம் என்னவென்றால் நம் பிள்ளைகளை 7-வது வயதில் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி அரிவரி வகுப்பில் சேர்க்கின்றோம். 7-வது வயதில் அரிவரியில் சேர்ந்தால், அவன் தவறாமல் பாசு செய்தால்கூட 22-ல்தான் பி.ஏ. பரீட்சைக்குப் போக முடியும். ஏனென்றால் அரிவரி வகுப்புக்கும் பி.ஏ. பாசு செய்யும் வகுப்புக்கும் இடையில் 15 வருஷம் வேண்டியிருக்கின்றது. அதாவது அரிவரியில் இருந்து 4-வது வகுப்புக்கு ஐந்து வருடமும், 4-வதிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி. அல்லது 6-வது பாரத்திற்கும் 6 வருஷம். அதிலிருந்து பி.ஏ.க்கு 4 வருஷம் ஆகவே தவறாமல் பாசு செய்தாலும் 15 வருஷ சாவகாசம் வேண்டியிருக்கின்றன. ஆனால் பார்ப்பனர்களோ தங்கள் குழந்தைகளை 5-வது முதலே வீட்டில் கொஞ்சம் சொல்லிக் கொடுத்து ஆறாவது வயதிலோ அல்லது ஏழாவது வயதிலோ பள்ளிக் கூடத்திற்குக் கொண்டுபோய் முதல் பாரத்தில் சேர்த்து விடுகின்றார்கள். தலைமை உபாத்தியாயர்கள் பார்ப்பனர்களானதால் கணக்கில் சாதாரண 2 கேள்வியும் இங்கிலீஷில் இரண்டு வார்த்தைக்கு அர்த்தத்தையும் கேட்டுவிட்டு "முதல் பாரத்திற்கு லாயக்கு" என்று சொல்லி விடுகின்றார்கள். இதில் அவர்களுக்கு ஐந்து வருடப் படிப்பும் காலமும் செலவும் மீதியாகி விடுகின்றன. 14 வயதுக்கு கீழ்பட்ட பிள்ளைகளை எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு எடுப்பதில்லை. என்கின்ற நிபந்தனையினால் பார்ப்பனர்கள் தங்கள் பிள்ளைகளை முதல்



பாரத்தில் சேர்க்கின்றார்கள். அந்த நிபந்தனையும் இல்லாதிருக்குமானால் மூன்றாவது பாரத்தில் கூட சேர்த்து விடுவார்கள். தவிர 18, 19-ல் அவர்கள் பி.ஏ.பாசு செய்து விடுவதால் 25-வது வயது வரைக்கும் 5 அல்லது 6 வருட காலம் உத்தியோகம் தேட அவர்களுக்குச் சாவகாசமிருக்கின்றது. ஆகவே அவர்கள் பி.ஏ. படித்து விட்டால் எப்படியும் யாரையாவது பிடித்து என்ன செய்தாவது உத்தியோகம் சம்பாதித்துக்கொள்ள போதிய சௌகரியம் இருக்கின்றது.

நம்முடைய பிள்ளைகளோ சிறு வயதில் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பினால் தலைமை உபாத்தியாயராயிருப்பவர், "இவன் ரொம்பவும் சின்னப் பையன். இன்னும் ஒன்று இரண்டு வருடம் பொறுத்து அப்புறம் கூட்டிக் கொண்டு வாருங்கள்" என்று சொல்லுவதும், "குழந்தைகள் நன்றாய் ஆடிப்பாடி விளையாடட்டுமே, நன்றாய் எட்டு வருடம் ஆன பின்பு பள்ளியில் வைத்தால் போதாதா? ஏன் இப்படிக் குழந்தைகளை வதைக்கின்றீர்கள்" என்று "பரிதாபப் பட்டு" திருப்பி அனுப்பி விடுகின்றார்கள். தவிர, நாம் நிர்ப்பந்தப்படுத்தி சேர்த்தாலும் அவன் தகுதியைவிட ஒரு வகுப்பு கீழாகவே சேர்க்கிறார்கள். அன்றியும் பள்ளிக்கூட பரீட்சைகளில் கூடுமானவரை ஒவ்வொரு வருடமும் அழுத்தி வைக்கவே பார்க்கின்றார்கள்.

பிறகு பல வழிகளிலும் அதாவது உனக்கு படிப்பு வராது, வேறு வேலை பார்த்துக் கொள், வீணாய்ப் பணம் செலவழிக்காதே, பெஞ்சுக்கு வாடகை கொடுக்காதே என்று பேசி பிள்ளையின் ஊக்கத்தையும் உற்சாகத் தையும் கெடுப்பதிலேயே கவலை கொள்ளுகின்றார்கள். பையன்களைச் சர்க்கார் பரீட்சைக்கு அனுப்புவதிலும் உபாத்தியாயர்களுக்கே அந்த உரிமை இருப்பதால் சட்டத்தின் மூலம் எவ்வளவோ தகராறு செய்து பார்த்தும் மீறினால் வேறு வழியில் தகராறும் சொல்லி நிறுத்திவிடவே பார்க்கின்றார்கள். இவ்வளவும் தாண்டிப் பரீட்சைக்கு போய் எழுதினாலும் பரீட்சை பரிசோதகர், மார்க்கு கொடுப்பவர், முடிவு சொல்வதில் முக்கியமானவர் ஆகியவர்கள் எல் லோரும் பார்ப்பனர்களே. கடைசியாக பாசானாலும் சர்க்கார் உத்தியோகத் திற்கு போவதற்கு வேண்டிய வயது தாண்டிவிடுகின்றது. ஒரு சமயம் மீதி இருந்தாலும் ஒரு வருடம் அல்லது ஆறு மாதமே இருக்குமாதலால். அவசரத் தில் எங்காவது போய் குழியில் விழுவது போல் சிறிய உத்தியோகந்தான் சம்பாதிக்க முடிகின்றது. பரீட்சையில் தவறிப்போனாலோ அதோ கதிதான். வெளிப்படையாய் இவ்வளவு கஷ்டம் நமக்கு இருப்பதுடன் மறைமுகமாய் செய்யக் கூடிய கொடுமைகள் எவ்வளவோ இருக்கின்றன. எனவே இந்த நிலையில் நமது கல்வி சாதனம் இருந்து வருகின்றது. ஆதலால் சட்டசபையில் இந்த விஷயங்களை விளக்கி இதற்காக ஒரு கமிட்டி ஏற்பாடு செய்து இக்கஷ்டங்கள் உண்டா, இல்லையா என்று விசாரித்துப் பார்த்து உண்மை என்று பட்டால் இதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டும் என்று ஜனப்பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளும் சட்டசபை அங்கத்



RangaRakes
tamilnavarasam.com

தினர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம். பார்ப்பனரல்லாத மாணவர்களும் நமக்கு எழுதிக் கொண்டிருப்பதைவிட இதற்காக ஒரு மாணவர் மாகாநாடு ஏற்பாடு செய்து தங்கள் குறைகளை அதில் விளக்கிக்காட்டி பரிகாரத்திற்குச் சில தீர்மானங்கள் செய்து அதை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று யோசனை சொல்லுகின்றோம். மற்றபடி பிள்ளைகளுக்கு தனிப்பட்ட முறையில் இருந்துவரும் கொடுமைகளை மற்றொரு சமயம் விளக்குவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 07.07.1929**



# அனுதாபம்

நாடார் மகாஜன சங்கத்து மாஜி தலைவரும், பிரபல செல்வந்தரும் பழம் பெருங்கீர்த்தி வாய்ந்தவரும் தற்போது நாடார் சங்கத்துத் தலைவர் திரு.கனகசபை நாடார் அவர்களின் சகோதரருமான, பொறையார் பாலகுரு சாமி நாடார் 5-ந் தேதி வெள்ளிக்கிழமை இரவு தனது 32-ம் வயதில் காலஞ்சென்ற விவரம் அறிந்து துக்கமடைவதுடன் அவரது குடும்பத்தாருக்கும் சகோதரருக்கும் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**( பா. )**

**குடி அரசு - இரங்கல் செய்தி - 07.07.1929**



RangaRakes tamilnavarasam.com

# திரு. சொ.முருகப்பர்

உயர்திரு. சொ.முருகப்பர் அவர்களுக்கும் திரு.மரகதவல்லிக்கும் மணம் நடந்த செய்தி மற்றொரு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

திரு.முருகப்பர் அவர்கள் இம்மணம் செய்து கொண்டதன் மூலம் பெண்கள் உலகத்திற்கு ஓர் பெரிய உபகாரம் செய்தவராவார். நாட்டில் உள்ள கஷ்டங்களை எல்லாம்விட பெண்களின் விதவைத் தன்மையின் கொடுமையை பெரிய கஷ்டம் என்று சொல்லுவோம்.

நமது நாட்டு நாகரிகம், ஒழுக்கம், சமயப் பற்று, கடவுள் பற்று என்பவைகள் எல்லாம் நன்மையான காரியங்களைப் பற்றி சற்றும் கவலை செய்யாமல் அடியோடு அலட்சியமாய் விடப்பட்டிருப்பதோடு கெடுதலானதும் நியாயத்திற்கும் மனிதத் தன்மைக்கும் விரோதமானதுமான காரியங்களைக் கெட்டியாய்க் குரங்குப் பிடியாய் பிடித்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் இவைகளைத் திருத்துவது என்பது சுலபத்தில் முடியக்கூடிய காரியமல்ல. அன்றியும் அதில் பிரவேசிப்பவர்களுக்கு ஏற்படும் கஷ்டம், நஷ்டம், பழிச்சொல் ஆகியவைகளும் கொஞ்ச நஞ்சமல்ல. அப்படிப்பட்ட கஷ்டமான காரியத்தில் திரு.முருகப்பர் அவர்கள் பிரவேசித்து திருத்த முற்பட்டது பெருத்த தியாக புத்தியும் வீரமுமான காரியம் என்றுதான் சொல்ல வேண்டும். இந்தக் கல்யாண ஏற்பாட்டுச் சங்கதியை நாம் முதன் முதல் கேள்விப்பட்டவுடன் சிறிதும் நம்பவே இல்லை. உதாரணமாக **எந்த முருகப்பர்** என்று தெரிவதற்கு மாத்திரம் நாம் மூன்று நான்கு தந்திகள் திருச்சிக்கும், மதுரைக்கும், காரைக்குடிக்கும், சென்னைக்குமாக கொடுத்து பிறகு **நம் முருகப்பர்** என்று பதில் தந்தி கிடைத்த பின்புதான் நம்பினோம் என்றால் மற்றபடி அதில் உள்ள கஷ்டங்கள் எவ்வளவு என்பதை நாம் பிறருக்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. இவ்விஷயத்தில் திரு.பிச்சப்பா சுப்பரமணியம் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி மிகுதியும் போற்றத்தக்கதாகும். திரு.முருகப்பர் அவர்கள் திரு.மரகதவல்லியைப் பெண்கள் விடுதலைக்கான வழியில் உழைக்க பெரிதும் துணை புரிவாராக.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 07.07.1929**



RangaRakes

# தமிழர் சங்கம்

சென்னையில் சீர்திருத்தத்திற்காகத் தமிழர் சங்கம் என்பதை திருத்தி அமைக்கப்பட்டு இருக்கின்றது. இச்சங்கத்தை ஆதியில் தோற்றுவித்தவர் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர். திரு.மணி திருநாவுக்கரசு முதலியார் ஆவார். இவர் சைவ சமயப்பற்றுடையவர். தமிழ்ப் பாஷை, கலை இலக்கிய, இலக்கணம் ஆகியவைகளில் வல்லவர் எனினும் சமயமும், கலையும், பாஷையும் நாட்டிற்கும் பொதுமக்களுக்கும் பயன்படாமல் ஒரு சிறு துறையாகிய அதுவும் ஜாதி மத சமயத் துறையையே முக்கியமாய் பற்றிக் கொண்டிருப்பதால் நாட்டில் அவர்களின் வளர்ச்சி குன்றிவருவதை அறிந்து, அவைகள் உண்மையில் வளர்ச்சி பெறவும் நாட்டின் பொது நலத்திற்கும் பயன்படவும் ஏற்றவாறு செய்ய எண்ணி அச்சங்கத்தை முன் குறிப்பிட்டபடி சமூக சீர்திருத்தத் துறைக்குத் திருத்தி அமைத்து அதற்கு தற்கால தேவைக் கேற்றபடி கொள்கைகளையும் வகுத்து அக்கொள்கைகளைப் பரப்புவதற்கேற்ற நிர்வாக சபையையும் அமைக்கப்பட்டிருக்கின்றதாக அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

சங்கத்தின் முக்கியக் கொள்கைகள் தீண்டாமை ஒழிப்பது, மது பானத்தை விலக்கச் செய்வது, சுகாதாரத்தை ஏற்படுத்துவது, தமிழ் மொழியை வளர்ப்பது, வாழ்க்கை சுப, அசுப காரியங்களில் போலிச் சடங்குகளை ஒழித்து சிக்கன முறையில் நடத்தச் செய்வது. கலப்பு மணம், மறுமணம் ஆகியவைகளை ஆதரிப்பது முதலிய சமூக சீர்திருத்தக் காரியங்களைச் செய்வதே முக்கியமாகக் கொண்டது.

## நிர்வாகஸ்தர்கள்

திரு.டாக்டர் எம்.மாசிலாமணி முதலியார் போஷகராகவும். திரு.மணி திருநாவுக்கரசு முதலியார் தலைவராகவும், பண்டிதர் எஸ்.எஸ்.ஆனந்தம். உபதலைவராகவும், திருவாளர்கள் ஜகந்நாதப்பிள்ளை, பக்கிரிசாமி செட்டியார் காரியதரிசிகளாகவும் மற்றும் பத்து கனவான்கள் நிர்வாக அங்கத்தினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

“சமய”ப் பற்றில் மூழ்கி, “பரலோகத்திற்கும்” “பரலோகக் கடவுளுக்கும்” பாடுபட்ட பெரியார்கள் பிரத்தியட்ச லோகத்திற்கும் பிரத்தியட்ச கடவுள்களுக்கும் பாடுபட முன் வந்ததை நாம் மனதாரப் போற்றி



tamilnavarasam.com

வரவேற்கின்றோம். மற்றும் ஆங்காங்கு சமயத்தின் பேராலும், ஜாதி வகுப்புகளின் பேராலும் அமைக்கப்பட்டிருக்கும் சங்கங்கள் தமிழர் சங்கத்தைப் பின்பற்றி நாட்டிற்குப் பயன்படத்தக்கவண்ணம் திருத்தியமைத் தால் அது மிகவும் போற்றத்தக்கதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 07.07.1929**



# வரதராஜுலுக்கும் ஒரு கட்சி

திரு.பி.வரதராஜுலுக்கு தனக்கு ஒரு கட்சி இருக்கவேண்டுமென்று அவர் பொது வாழ்வில் இறங்கினது முதல் வெகுகாலமாய் பிரயத்தனப் பட்டுக் கொண்டுவரும் விஷயம் யாவரும் அறிந்ததேயாகும். இதற்கு ஏற்ப அவரால் அது முதல் இதுவரை பெற்றெடுக்கப்பட்டு சாகக் கொடுத்த கட்சிகள் இவ்வளவென்று அவருக்கே ஞாபகமில்லாமல் இருக்கலாம். திருப்பூரிலும், சேலத்திலும், சென்னையிலும் மற்றும் வெளியிடங்களிலும் எத்தனையோ கட்சிகள் அவரால் உற்பத்தி செய்யப்பட்டு அழுவாரற்று அழிந்துபோனது கணக்கு வழக்கிலடங்கக் கூடியதல்ல. கட்சி ஏற்படுத்துவதற்காக திரு.வரத ராஜுலுவால் கூட்டப்படும் கூட்டங்களுக்கே ஜில்லாவுக்கு இத்தனை பேர்தான் வரவேண்டும் என்று பொதுவாக பத்திரிகையில் விளம்பரப் படுத்துவதும், ‘தமிழ் நாடு’ ஆபீசில், ஆபீஸ் சிப்பந்திகளையும், சில பிரசாரக் காரரையும் வைத்து கூட்டம் நடத்தினதாக ஏற்பாடு செய்து தான் தலைவ ராகவும், மற்றும் சிலர் தனது சகா நிர்வாகக் கூட்டத்தார்களாகவும் பத்திரிகை களுக்குச் செய்தி அனுப்பி பிரசுரிக்கச் செய்வதும் தவிர, இதுவரை ஒரு கட்சியாவது ஏற்பட்டதற்கு மறுநாள் உயிருடனிருந்து எந்த வேலை யாவது செய்ததாக அவராலேயே சொல்ல முடியாது. திரு.வரதராஜுலு கட்சி ஏற்பாடு செய்வதும் விளம்பரப்படுத்துவதும் முக்கியமாய் வேறு ஒருவர் செய்யும் காரியத்தை தடைப்படுத்தவும் அல்லது தன்னை லட்சியம் செய்து எந்தக் கட்சியாராவது வந்து கூப்பிடவும் கருத்துக் கொண்டே செய்வதல் லாமல், இன்ன காரியம் செய்வதற்கென்றோ அல்லது இன்ன கொள்கைக் கென்றோ ஒருநாளும் கட்சி ஏற்படுத்த அவர் நினைத்ததுமில்லை; அந்தப்படி ஏற்பட்டதும் இல்லை.

சென்ற வருடமும் அதே தமிழ்நாடு ஆபீசில் ஏற்பாடு செய்த கட்சியில் சில பார்ப்பனர்களையும் சேர்த்துக் கட்சி யமைத்தார் என்றாலும் அது பிறக்கும்போதே பிரசவ வேதனையால் செத்து பிறந்ததாதலால் பிறந்த உடனேயே புதைக்கப்பட்டாய் விட்டது. இப்போதைய கட்சியோ கர்ப்பத்தில் இருக்கும்போதே செத்துவிட்டதால் உள்ளுக்குள் அழுகி தாய்க்கே ஆபத்து வரும்படியான நிலையில் நிர்ப்பந்தத்தில் ஆபரேஷன் செய்து வெளியாக்கப்பட்டிருக்கின்றது. இந்த பிரசவத்தில் தாய் பிழைத்தாலே போதும் என்கின்ற நிலைமையில் கட்சி செத்து அழுகி வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது. ஆதலால் புதுக்கட்சியின் பிறப்பு நிலைமையைப் பற்றி நாம்



RangaRakes tamilnavarasam.com

அதிகம் எழுத வேண்டியதில்லை. திரு.வரதராஜுலு இவ்வளவு கஷ்டப்பட்டு உண்டாக்கிய கட்சியின் யோக்கியதையை ஒரு வார்த்தையில் பொது ஜனங்களுக்கு தெரிவிக்க வேண்டுமானால் அக்கட்சியின் நிர்வாகசபை அங்கத்தினர்கள் காரியதரிசிகள் ஆகியவர்களைப் பார்த்தாலே தெரிந்துவிடும். திரு.வரதராஜுலு தலைவர் அதைப்பற்றிக் குற்றமில்லை. ஏனெனில் அவர் தலைவராக இருக்கவே இக்கட்சி உண்டாக்கப்பட்டது. ஆனால், உப தலைவர் தேர்ந்தெடுக்கவில்லை என்றாலும் அது மிக்க கௌரவமானதாகும். மற்றபடி காரியதரிசியோ திரு. குழந்தை. இவர் அய்யங்கார் சிஷ்யராயிருந்து இப்போது அவரோடு கோபித்துக் கொண்டிருக்கும் சமயம் தெரிந்து திரு.வரதராஜுலுவால் அழைக்கப்பட்டிருப்பதாய் தெரிகின்றது. எந்த புதுக் கக்ஷியிலும் அவரைக் கூப்பிட்டால் போதும், என்றாலும் அய்யங்காரின் காங்கிரசு கட்சிக்கு திரு.பஷீர் அகமதும், திரு.சத்தியமூர்த்தியும் காரியதரிசிகளாக இருக்கும்போது திரு.வரதராஜுலு கட்சிக்கு திரு.குழந்தை காரிய தரிசியாய் இருப்பதில் அதிக மோசம் ஒன்றுமில்லை. மற்ற மெம்பர்களோ நமக்கு இன்னார் என்றே தெரியவில்லை. அது மத்திரமல்லாமல் வாசகர்களில் அநேகருக்கும் தெரிந்திருக்காதென்றே நினைக்கின்றோம். அய்யோ பாவம்! இம்மாதிரி நிலைமையில் திரு.வரதராஜுலு, திரு.அய்யங்காருக்குப் போட்டியாய் ஒரு கட்சியை நியமித்ததாக பேர் செய்து தலைவர் பட்டம் தாங்க வேண்டிய அவசியம் வந்துவிட்டதுதான் மிக்க பரிதபிக்கத்தக்க தானாலும் வெளியிடங்களில் இதை விளம்பரம் செய்ய பிரசாரத்திற்கு திரு.அய்யங்காரைப் போல் பணம் செலவு செய்ய வேண்டி இருப்பதற்கு என்ன மார்க்கம் செய்வாரோ தெரியவில்லை. திரு.அய்யங்கார் எவ்வளவு பெரிய தேசீயவாதியானாலும், காங்கிரசுவாதியானாலும், பூரண சுயேச்சைவாதியானாலும் வக்கீல் வேலையில் மாதம் 10,000 (பத்து ஆயிரம்) ரூபாய் வரும்படிக்குக் குறைவில்லை. வேறு வகையிலும் சொந்த சொத்தினாலும் தக்க வரும்படி வருகின்றது. எப்படி திரு.காந்தி அவர்களுக்கு அவர் வசம் பணமும், சஞ்சாரத்தில் வரும்படியும் இருக்கும்வரை எந்த கொள்கையைக் கொண்டானாலும் ஒரு மடமும் சிஷ்யர்களும் இருந்துதான் தீருமோ அதுபோல் திரு.அய்யங்காருக்கும் வக்கீலில் சம்பாதித்த பணமும் வரும்படியும் உள்ளவரை எந்தக் கொள்கையானாலும் ஒரு கட்சியும், பின்பற்றுவதற்கும், பிரசாரத்திற்கும் நான்கு ஆள்களும் இருந்துதான் தீரும். அதுபோல திரு.வரதராஜுலுக்கும் ஒரு கட்சி இருக்க வேண்டுமானால் பணத்திற்கு முதலில் வழி செய்து கொள்ள வேண்டும். அஃதில்லையானால் கட்சி ஏற்பட்ட தினத்திலேயே அது இறந்து போனதற்காக அவர் அழுது இருக்க வேண்டும்.

நிற்க, அக்கட்சிக்குக் கொள்கைகள் என்ன என்பதை அவ்விளம்பரத்தில் நிர்ணயிக்க முடியவில்லை. ஒரு சமயம் இனியும் அதில் சேர்க்கப்படும் ஆசாமிகளைப் பொறுத்துக் கொள்கை ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்று கருதி இருக்கலாம் என்று நினைக்கின்றோம். தவிரவும் பார்ப்பனர்களைச் சேர்க்கலாமா இல்லையா என்னும் விஷயம் இன்னமும் தீர்மானம் செய்து கொள்ளவில்லை என்பதாகவும் தெரிய வருகின்றது. திரு.வரதராஜுலு நிலைக்கு அவர் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்தாலும் கஷ்டம். ஏனெனில் சேர்க்க ஒப்புக் கொண்டால் 3-வது 4-வது வகுப்புப் பார்ப்பனர்கள் தான் இவருடன் வந்துசேரக்கூடும். சேர்க்காவிட்டாலும் கஷ்டம். ஏனெனில் பார்ப்பனர்கள் வெகு சுலபத்தில் இவரை பூ பூ செய்து விடுவார்கள். ஆதலால் அதை ரகசியமாய் வைத்திருக்கின்றார் என்றாலும் எப்படியாவது ஒரு 5-வது வகுப்பு பார்ப்பனரையாவது சேர்த்துத் தான் தீரவேண்டிவரும்.

இந்த லட்சணத்தில் திரு.வரதராஜுலு இந்த மாதிரி கட்சி பேரைச் சொல்லிக் கொண்டு சென்னைக் கார்ப்பொரேஷன் தேர்தலுக்கு ஆள்களை நிறுத்தப்போவதாய் வெளியிட்டு இருப்பதுதான் மிகவும் வேடிக்கையான விஷயம். “அரைக்காசில் கல்யாணம் அதிலொரு வாண வேடிக்கை” என்பது போல் கட்சிக்கே இன்னும் சரியானபடி ஆள்கள் சேரக் காணோம். அதற்குள்ளாக தேர்தல்களுக்கு ஆள்கள் நிறுத்துவதென்றால் இது கட்சிக்கு ஆள்களைச் சேர்க்க உபாயமே ஒழிய தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்கின்ற எண்ணமில்லை என்றுதான் சொல்ல வேண்டும். சமீபத்தில் கார்ப்பொரேஷனில் 10 ஸ்தானம் காலியாகப் போகின்றது. இவரது கட்சியில் இப்போது தலைவர் உள்பட ஐந்து கனவான்கள்தான் இருக்கின்றார்கள். இவ்வைந்து பேரும் தேர்தலுக்கு நிற்பதானாலும் ஐந்து ஸ்தானங்களுக்குத் தான் நிறுத்தலாம். மற்ற ஐந்தை என்ன செய்வார் என்பது விளங்கவில்லை. சுயராஜ்யம் கட்சியாரும் காங்கிரஸ்காரரும் சென்னைக் கார்ப்பொரேஷன் தேர்தல்களில் போட்டி போட்டுப் பார்த்து சளைத்துப்போன சமயத்தில் திரு.வரதராஜுலு ஜஸ்டிஸ் கட்சியுடன் போட்டி போடப் புறப்பட்டிருப்பது மெச்சத்தக்கதேயாகும்.

**குடி அரசு - கட்டுரை - 07.07.1929**


RangaRakes

tamilnavarasam.com

## திரு. ஆர்.எஸ். நாயுடுவின் பெருந்தன்மை.

மதுரை முனிசிபல் சேர்மென் திரு.ஆர்.எஸ். நாயுடு அவர்களைத் தமிழ்நாட்டவர்கள் நன்கு அறிவார்கள். அவர் பழம் பெரும் கீர்த்தி வாய்ந்த நாயுடு குடும்பத்தில் தோன்றி மேல் நாட்டுக்குச் சென்று படித்து பாரிஸ்டர் பரீட்சையில் தேறி மதுரை ஜில்லாவில் ஒரு பிரபல வக்கீலாக இருந்தவர். அவருடைய நாணயத்தையும் பெருந்தன்மையையும் சாமார்த்தியத்தையும், அறிந்த மதுரைவாசிகள் அவரை மதுரை நகர முனிசிபல் கவுன்சிலுக்குச் சம்பளம் பெறும் சேர்மெனாகத் தெரிந்தெடுத்து அவரிடம் முனிசிபல் ஆட்சியைப் ஒப்புவித்தார்கள். அவர் சற்று பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியு டையவராதலால் மதுரைப் பார்ப்பனர்கள் அவருக்கு பலவிதத்திலும் தொல்லை விளைவித்து வந்தும் அதாவது சென்னை கார்ப்பரேஷனில் திரு.ஜெ. வெங்கிட்ட நாராயண நாயுடு அவர்களைச் சுயராஜ்ஜியக் கட்சியின் பெயரால் சென்னை பார்ப்பனர்கள் நசுங்குச் சேட்டைகள் செய்து வந்தது போல் செய்து வந்தார்கள். திரு.ஆர்.எஸ். நாயுடு அவர்கள் அவ்வளவையும் சமாளித்து தைரியமாய் நின்று மேற்படி பார்ப்பனர்களுடைய சூழ்ச்சி களுக்கும் விஷமங்களுக்கும் சற்றும் சளைக்காமல் ஒரே முகமாய் நின்று அம்முனிசிபாலிட்டியை முன் இருந்த நிலைமையை விட பொருள் வரும் படியிலும், நிருவாக கண்டிப்பிலும், சுகாதாரத்திலும், செலவு சிக்கனத்திலும், இம்மாகாணத்திலுள்ள மற்ற முனிசிபாலிட்டிகளுக்கு ஒரு மாடல் முனிசி பாலிட்டியாக அதாவது, வழிகாட்டி முனிசிபாலிட்டியாக ஆக்கி வைத்தார் என்பதை அவரது விரோதிகளும் ஒப்புக் கொண்டாகவேண்டும். அன்றியும், மதுரையில் உள்ள எந்தப் பார்ப்பனராவது அவர்கள் வலையில் சிக்கிய பார்ப்பனரல்லாதாராவது திரு. ஆர்.எஸ். நாயுடு அவர்களின் கண்ணியத்தைப் பற்றியோ, நாணயத்தைப் பற்றியோ, நாளது வரையில் ஒரு சிறு வார்த்தை கூட சொன்னதாக நாம் கேள்விப்பட்டதே இல்லை. ஆனால் திரு. நாயுடு அவர்கள் ஆபீசு நிர்வாகத்தில் பெரிதும் பார்ப்பனரல்லாதார்களுக்கே உத்தி யோகம் முதலானவைகள் வழங்கிவருவதால், பார்ப்பனர்கள் தங்கள் பரம்பரைக்கொள்கைப்படி அவரை கவிழ்க்க சூழ்ச்சி செய்ய வேண்டியதும், பார்ப்பனரல்லாதார்களிலும் சொந்த அதிர்ப்தியும் அபிப்பிராயபேதமும் ஏற்பட்டவர்களுடன் சேர்ந்து கொண்டு தங்கள் காரியத்தை சாதித்துக் கொள்ள அவர்களை உபயோகித்துக் கொள்வதும் சாதாரணமாய் எதிர்பார்க் கக்கூடிய காரியமே ஆகும். ஆகையால் இக்காரணங்களால் திரு. நாயுடு அவர்களுக்கு விரோதமாக அங்கு ஒரு கட்சி இருந்து கொண்டு அவரது நல்ல நிர்வாகத் திற்கு முட்டுக்கட்டையாக இருந்து வருவது யாவருமறி வார்கள். மதுரைப் பட்டணமானது சுமார் 150000 ஜனத் தொகையும் சுமார் 10, 15 - லட்ச ருபாய் வரும்படியுமுள்ளதும் சென்னை மாகாணத்தில் சென் னைக்கு அடுத்தபடி ஜனத்தொகையிலும் வரும்படியிலும் இரண்டாவது முனிசிபாலிடியும் ஆகும். அப்பேர்ப்பட்ட முனிசிபாலிடியை திறமையாக நிர்வாகம் செய்து தக்க அளவுக்கு வரும்படியையும் சிக்கன செலவையும் காட்டி அதன் பயனாக மக்களுக்கு அதிகமான சௌகரியத்தையும் செய்யக் கூடிய ஒருவருக்கு அக்கம்பக்கத்திலுள்ள சம்பளம் பெறும் சேர்மெனுடைய வும் முனிசிபாலிடி களுடையவும் நிலையையும் தன்மையையும் அனுசரித்து அதற்கு தக்கபடி சம்பளம் கொடுக்க வேண்டியதும் மிகவும் அவசியம் என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்காதென்று நினைக்கின்றோம். அன்றியும் அவருக்கு இப்போது கொடுக்கப்பட்டு வரும் மாதம் 1000 சம்பளம் நமது நாட்டின் பொது நிலையை பார்த்தால் ஒருக் காலமும் குறைந்ததல்ல வென்று சொல்லுவோம். ஆனாலும் மற்ற முனிசிபாலிடிகளில் இருந்து வரும் சம்பளம் அதே மதுரை முனிசிபாலிடியில் திரு நாயுடு அவர்களின் கீழ் வேலைபார்க்கும் உத்தி யோகஸ்தர்களுடைய சம்பளம் முதலியவைகளைப் பார்க்கும்போது மதுரை முனிசிபாலிடியின் யோக்கியதைக்கு தகுந்தபடியும் சிப்பந்தி சம்பளத்தை விட எஜமான சம்பளம் அதிகமாயிருக்க வேண்டும் என்பதையும் யாவரும் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். சம்பளம் இல்லாத கௌரவ சேர்மெனாக யிருந்தால் இந்தக் கணக்கு பார்க்க வேண்டிய தில்லை. சம்பள சேர்மென் என்று வைத்த பிறகு முக்கியமாய் அந்த முனிசி பாலிட்டியிலுள்ள எந்த சிப்பந்தியினுடையவும் சம்பளத்திற்கும் குறையாத சம்பளம் தான் சேர்மெ னுடைய சம்பளமாக இருக்க வேண்டும். நிற்க, மற்ற சம்பளம் முனிசிபாலிடிகளின் யோக்கியதைகளையும், சம்பளத்தையும் கவனித்து அந்த விகிதாசாரம் தமக்கும் கிடைக்க வேண்டும் என்று எதிர் பார்க்கவும் திரு நாயுடு அவர்களுக்கு உரிமை உண்டு. ஏனெனில் அதிக சம்பளம் வாங்கும் ஒரு உத்தியோகஸ்தருக்கு தம்மை விட குறைந்த சம்பளம் வாங்கும் சேர்மெனிடம் தக்க மதிப்பும் மனப்பூர்வமான கீழ்ப்படிதலும் இருக் கும் என்று எதிர்பார்க்க முடி யவே முடியாது. ஒரு சமயம் வார்த்தை அளவில் வேண்டுமானால் தர்க்கம் பேசலாமேயொழிய காரியத்தில் அந்தந்த சம்பளத் திற்கேற்ற இயற்கைத் தன்மை மாறவே மாறாது. இதை உத்தேசித்தே மதுரை முனிசிபல் மெஜாரிடி கவுன்சிலர்கள் சேர்மென் ஸ்தானத்தின் கவுரவத்தை காப்பாற்றக்கருதி சிப்பந்தி சம்பளத்தைவிட சேர்மேனுக்கு அதிகச் சம்பளம் இருக்க வேண்டும் என்கின்ற நியாயமான எண்ணத்தின் மீது சமீபத்தில் சேர்மெனுக்கு ஒரு சம்பளத் திட்டம் முனிசிபல் கவுன்சில் கூட்டத் துக்குக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டு வந்தார்கள். ஆனால் சில கவுன்சிலர்கள் பார்ப்பன சூழ்ச்சியாலும் சில கவுன்சிலர்கள் சொந்த அபிப்பிராயபேதத்தாலும் சில கவுன்சிலர்கள் உண்மையிலேயே முனிசிபாலிட்டியின் நன்மையைக் கோரி என்கின்ற எண்ணத்தின் பேரிலும் இத் தீர்மானத்தின் மீது அதிருப்தி கொண்டு தங்களுடைய சம்மதமின்மையைக் காட்டினார்கள். அந்தப்படி காட்டிக் கொள்ள அவர்களுக்கு தாராளமாய் உரிமையுண்டு. என்றாலும் பார்ப்பனர்கள் வழக்கம்போல் இந்த சம்பவத்தைத் தங்களுக்கு அனுகூலமாக கொண்டு பாமர மக்களிடம் விஷமப்பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். என்றாலும் நியாயபுத்தியுள்ள மெஜாரிட்டி கவுன்சிலர்கள் இதைப்பற்றி தீர கவனித்து இவ்விஷமப் பிரசாரத்திற்கு சிறிதும் பயப்படாமல் சேர்மென் ஸ்தானத்தின் பெருமையைக் காப்பாற்ற வேண்டி ஏதாவது சிறிதானாலும் சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்கின்ற தீர்மானத்துடன் தயாராய் வந்திருந்தார்கள். ஆனால் இதைச் சேர்மென் திரு. நாயுடு அவர்கள் நன்றாய்த் தெரிந்திருந்தும் யார் எதிர்த்தாலும் பிரேரேபணை பெருமித ஓட்டுகளால் நிறைவேறும் என்பதை உணர்ந்திருந்தும் தாம் அதை ஏற்றுக் கொள்ளாமலும் ஓட்டுக்கு விடாமலும் தைரியமாய் பெருந்தன்மை யுடன் எழுந்து மறுத்துவிட்டதுடன் தீர்மானம் கொண்டு வந்தவர்களையும் வாப்பீசு வாங்கிக்கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். உடனே அங்குள்ள வர்கள் சேர்மெனுடைய பெருந்தன்மையைப் பாராட்டிக் கரகோஷம் செய்தார் கள். ஆனால் இந்த பெருந்தன்மையான காரியத்தை பாராட்டாமல் சில பார்ப்பனர்களும் அவர்களது வாலுகளும் மற்றும் சில பொறுப்பற்றவர்களும் இதைப் பற்றி பரிகாசம் செய்யக்கூடும். அதாவது “சேர்மென் பயந்து கொண் டார்” என்றும் கலகக் காரர்கள் “பொதுஜனங்கள் வெற்றிபெற்று விட்டார்கள்” என்றும் யோக்கிய பொறுப்பற்ற முறையில் பேசவும் எழுதவும் கூடும். ஏனெனில் நமது நாட்டில் சிலருக்கு இதைத்தவிர வேறு வழியில் பிழைப்பு மார்க்கமில்லாமல் போய்விட்டது. யாரையாவது குத்திவிடுவதும், எவருக்காவது கோபம் வரச்செய்வதும், அப்படிச் செய்யப்பட்டவர்கள் கோபத்தில் ஏதாவது செய்ய மாட்டார்களா அதைப் பிடித்துக் கொண்டு மேலே போகலாமென்பதும் ஆகியவைகளே இப்போது இவர்களால் செய்யக்கூடுமான நிர்மாண காரியங் களாக இருக்கின்றன. ஆதலால் மதுரை முனிசிபல் கவுன்சிலர்கள் அப் பொறுப்பற்றவர்களின் எழுத்தையும் பேச்சையும் பிரமாதமாகக் கருதக்கூடா தென்றே சொல்லுவோம். தவிர நாம் மேலே காட்டிய சம்பள வித்தியாசங்களைச் சரிபடுத்தி சேர்மென் ஸ்தானத்தின் கவுரவத்தைக் காப்பாற்ற மதுரை முனிசிபல் கவுன்சிலர்கள் ஒன்று கூடி ஏதாவது ஒரு மார்க்கம் செய்தாக வேண்டும் என்றும் வேண்டிக் கொள்ளுகின்றோம். இதற்காகச் சேர்மென் அவர்கள் சம்பளத்தை உயர்த்தியே ஆக வேண்டுமென்பதாகவே நாம் சொல்ல வரவில்லை. சேர்மென் அவர்கள் சம்பளத்தை உயர்த்துவதை விட சிப்பந்தி சம்பளத்தைக் குறைப்பது நல்ல காரியமாகும் என்றும் சொல்லுவோம். அது முடியாவிட்டால் உயர்த்தி தான் ஆகவேண்டும் என்பதையும்



RangaRakes

வலியுறுத்தாமலிருக்க முடியவில்லை. ஆதலால் மதுரை முனிசிபல் கவுன்சிலர்கள் விஷமக்காரர்களின் வீண்கூச்சலுக்குப் பயந்து கொள்ளாமல் ஏதாவது ஒரு மார்க்கத்தை சீக்கிரம் செய்ய வேண்டியது அவசியமான காரியமாகும்.

**குடி அரசு – கட்டுரை – 07.07.1929**



tamilnavarasam.com

# திருவாங்கூரில் பத்மநாப சுவாமி ராஜ்யம்

திருவாங்கூர் அரசாங்கம் வரவர அசல் ராமராஜ்யமாக மாறி சுயராஜ்ய தேசமாகி வருகின்றது. எனவே, இனி உலகத்தில் யாருக்காவது ராமராஜ்யத்தில் வசிக்கவோ, சுயராஜ்யத்தில் வசிக்கவோ வேண்டுமென்கின்ற ஆசையிருக்குமானால், அவர்கள் தயவு செய்து மற்ற இடங்களை ராமராஜ்யமாக்கவோ, சுயராஜ்யமாக்கவோ முயற்சிக்காமல் பெண்டுபிள்ளைகளுடன் திருவாங்கூர் ராஜ்யத்திற்கு போய்க் குடியிருந்து கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம். ஏனெனில், திருவாங்கூர் சமத்தானம் ராம ராஜ்யத்திலும் நம்முடைய பழைய சுயராஜ்ஜியத்திலும் இருந்தது போலவே சாதிகளைக் காப்பாற்ற மிக்க முயற்சி எடுத்துக் கொண்டு வருகின்றது. திருவாங்கூர் ராஜ்யமானது இன்றைய தினம் "சாட்சாத் மகாவிஷ்ணு"வினால் ஆளப்பட்டு வரும் ராஜ்யமாகும். எப்படியென்றால், திருவாங்கூர் ராஜ்யம் பத்மநாப சாமிக்குச் சொந்தமானது. இப்போதிருக்கும் திருவாங்கூர் ராஜாவும் ராணிகளும் பத்மநாப சுவாமியின் தாசர்களாய் (அடிமையாய்) அவருக்குப் பதிலாக ஆளும் பிரதிநிதிகளாவார்கள். பத்மநாம சுவாமி என்பதோ "மகா விஷ்ணு"வாகும். எனவே "மகாவிஷ்ணு"வின் அவதாரமாகிய ராம ராஜ்யத்தைவிட மகாவிஷ்ணுவே நேராகத் தமது தாசர்களையும் தாசிகளையும் விட்டு அரசாட்சி செய்யும் ராஜ்யமானது ராமராஜ்யத்தைவிட எவ்வளவோ பங்கு மேலானதும், அசல் தேசீயம் நிறைந்த சுயராஜ்யமானதுமாகும். அதோடு வெள்ளைக்கார ஆட்சி சம்பந்தமில்லாத பூரண சுயேச்சை தேசமுமாகும். இந்த முறையில் திருவாங்கூர் ராஜ்யம் பத்மநாப சுவாமி ஆளத் தொடங்கிய பின்னும் ராமராஜ்யத்தைப் போலவே - தேசீய சுயராஜ்யத்தைப் போலவே ஆளத் தொடங்கிய பின்னும் அந்த ராஜ்யத்திற்கு ஏற்பட்டிற்கும் பெருமை என்னவென்று பார்ப்போமானால் அது மிக்க அதிசயிக்கத்தக்கதாகவே இருக்கும். முதலாவது உலகத்தாரால் திருவாங்கூர் ராஜ்யம் பெற்றிருக்கும் நற்சாட்சிப் பத்திரமென்னவென்றால் "திருவாங்கூர் ராஜ்யம் ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரிபோல் இருக்கின்றது" என்பதாகும்.

இரண்டாவது இந்தியாவிலுள்ள கிறிஸ்தவர்களில் மூன்றில் ஒரு பாகம் தனது நாட்டில் ஏற்படுத்திக் கொண்ட பெருமையுடையதாகும். அதாவது 1881 ஆம் வருஷத்தில் சுமார் நான்கு லட்சம் கிறிஸ்தவர்களை யுடையதாயிருந்த திருவாங்கூர் சமஸ்தானம் இப்போது 16.$^1/_2$ லட்சம் கிறிஸ்துவர்களை உண்டாக்கியிருக்கின்றது. திருவாங்கூர் சமஸ்தானம் 40 லட்சம் ஜனத்தொகை கொண்டதாகும். இதில் 16 $^1/_2$ லட்சம் கிறிஸ்துவர்களும் சுமார் 4 லட்சம் மகமதியர்களும் இருக்கின்றார்கள். பகுதிக்கு மேலாக பத்மநாத சாமியைப் பரிகாசம் செய்யும் ஜனங்களாக இருக்கின்றார்கள். மீதியுள்ள 19 $^1/_2$ லட்சம் ஜனங்களிலும் பத்து லட்சத்திற்கு மேலாகவே பத்மநாப சாமியைப் பார்க்கவும் பத்மநாபசாமி கோவிலின் திரு மதிலைத் தொடவும் மதில் தெருவிலும் "பத்மநாப சாமி எழுந்தருளும்" தெருவிலும் நடக்க முடியாதவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இனி, அடுத்த இரண்டாவது அல்லது மூன்றாவது ஜனகணிதத்திற்குள் (சென்சஸ் கணக்கு எடுக்கும் காலத்திற்குள்) இந்த பத்து லட்சம் ஜனங்களும் பத்மநாபசாமியைக் கும்பிடுவதையே விட்டுவிட்டு மேற்கண்ட 20 லட்சம் கிறிஸ்துவர்கள், மகமதியர்கள் ஆகியவர்களுடன் சேர்ந்து கொண்டு விடுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இந்த நிலையில் திருவாங்கூர் ராஜ்யமானது இப்போது தனது சமஸ்தானத்தில் ஜாதியைக் காப்பாற்றிக் கொண்டு வருகின்றது. இந்த மாதிரியான சுதேச தேசீய சமஸ்தானங்களை நாம் வைத்துக் கொண்டு சுயராஜ்யம் கேட்பதும், தேசீய ராஜ்யம் கேட்பதும், பூரண சுயேச்சை கேட்பதும், ராமராஜ்யம் வேண்டும் என்பதும் எவ்வளவு மூடத்தனமும் யோக்கியப் பொறுப்பற்றதுமான காரிய மென்பதை வாசகர்களே தெரிந்துகொள்வார்கள் என்று நினைக்கின்றோம்.

இப்பொழுது நமது காங்கிரசானது அதிலும் சிறப்பாக திருவாளர்கள் கல்யாணசுந்தர முதலியாரும். வரதராஜுலுவும் காப்பாற்றும் நமது தமிழ் நாட்டுக் காங்கிரசானது பெரிதும் ராமராஜ்யத்தையே அடிப்படையாகக் கொண்டு, காங்கிரஸ் தொண்டில் புராண பிரசாரமும், ராமாயண பாரத பிரசாரமும், அதை ஆதாரமாய்க் கொண்ட சனாதன இந்து தர்மப் பிரசாரமும் சேர்ந்ததென்று சொல்லித் தங்கள் தங்கள் பத்திரிகையில் எழுதுவதுடன் ஊர் ஊராக செல்லும் இடங்களிலும் இதே பிரசாரம் செய்தும் வருகின்றார்கள். மற்றபடி காங்கிரஸ் தலைவர்களும், பூரண சுயேச்சைத் தலைவர்களும், தேசீயப் பத்திரிகைகளும் இவற்றையே எழுதியும் வருகின்றனர்.

நாளைய தினம் சுயராஜ்யம் வந்துவிட்டதாகவோ, அல்லது வெள்ளைக்காரர்கள் பெண்டு பிள்ளை துப்பாக்கி மருந்து முதலியவைகளுடன் ஓடி விட்டதாகவோ வைத்துக் கொள்ளுவோம். அதன் பிறகு நடப்பது எந்த தேசீய ராஜ்யம் என்று தான் தேசீய வீரர்களைக் கேட்கின்றோம்? திருவாங்கூர் சமத்தானத்தைப் போல் சாதியைக் காப்பாற்றும், சனாதன தர்மமும், ராமராஜ்யமும் நடைபெறுவதைத் தவிர வேறு வழியிருக்கின்றதா என்றுதான் மறுபடியும் கேட்கின்றோம். அல்லது வக்கீல் ராஜ்யமானால் அது பகற்கொள்ளை ராஜ்யமல்லவா? என்று கேட்கின்றோம். அல்லது வியாபாரிகள் முதலாளிகள் ராஜ்யமானால் அது இப்போதைப் போலவே வழிப்பறிக் கொள்ளை ராஜ்யமா அல்லவா என்று கேட்கின்றோம். எந்தக் காரணத்



RangaRakes

tamilnavarasam.com

தாலாவது பார்ப்பன ராஜ்யமும், வக்கீல் ராஜ்யமும், முதலாளி ராஜ்யமும் ஒழியும்படியான திட்டம் கொண்ட சுயராஜ்யமோ, தேசீய ராஜ்யமோ ஏற்படுத்த இப்போது நம் நாட்டில் ஏதாவது இயக்கம் இருக்கின்றதா? என்று கேட்கின்றோம். பார்ப்பனர் மோட்சத்தின் பேராலும், காலிகள் ஆதிக்கத்தின் பேராலும், வக்கீல்கள் நீதி வாதத்தின் பேராலும், பண்டிதர்கள் சமயத்தின் பேராலும் வயிறு வளர்ப்பதுபோல் சில போலிகளும், போக்கற்றவர்களும் இப்போது சுயராஜ்யத்தின் பேராலும், தேசீயத்தின் பேராலும், சுயேச்சையின் பேராலும் வாழ நினைத்துப் பாமர மக்களை ஏய்த்துப் பிழைப்பதல்லாமல் மற்றபடி இவற்றில் கடுகளவாவது உண்மை இருக்கின்றதா? என்று கேட்கின்றோம்.

தாடியில் நெருப்புப் பிடித்து எரியும்போது அதில் சுருட்டுப் பற்ற வைக்க நெருப்பு கேட்கும் கொடிய கிராதகர்களைப்போல் நாடு மானமிழந்து, அறிவிழந்து, செல்வமிழந்து, தொழிலிழந்து, கொடுங்கோன்மையால் அல்லற்பட்டு நசுங்கி சாகக்கிடக்கும் தருவாயில் சற்றாவது ஈவு, இரக்கம், மானம், வெட்கம், மனிதத்தன்மை ஆகியவை இல்லாது சாண் வயிற்றுப் பிழைப்பையும் தமது வாழ்வையுமே பிரதானமாக எண்ணிக் கொண்டு சுயராஜ்யம், ராமராஜ்யம், தேசீயம், புராணம், சமயம், கலைகள், ஆத்தீகம் என்கின்ற பெயர்களால் மக்களை ஏமாற்றிப் பிழைக்க நினைப்பது ஒரு பிழைப்பா? என்று கேட்கின்றோம். இப்படிப்பட்ட மக்களையுடைய நாடு மானமுடைய நாடு என்று சொல்லிக் கொள்ள முடியுமா என்றுங் கேட்கின்றோம்.

குழந்தையைத் துராக்கிருதப் புணர்ச்சி செய்ய வேண்டாமென்றால் ஒரு கூட்டம் மதம் போச்சு என்கின்றதும், பணத்தைப் பாழாக்காதே, கோயிலை விபசார விடுதி ஆக்காதே என்றால் மற்றொரு கூட்டம் கடவுள் போச்சு என்கின்றதும், பொய்யும், புளுகும், ஜாதி மதத்துவேஷமும் கொண்ட புஸ்தகங்களைப் படியாதே என்றால் மற்றொரு கூட்டம் கலை போச்சு என்கின்றதும் பார்ப்பன ஆதிக்கத்திற்குக் கையாளாக இருக்க வேண்டா மென்றால் இன்னொரு கூட்டம் தேசீயம் போச்சுது என்கின்றதும், ஏழை களைக் காட்டிக் கொடுத்து ஏழைகள் வயிறெரிய வரி வசூலிக்க உள் உளவா யிருந்து மாதம் 1000, 2000, 5000 ரூபா உத்தியோகத்திற்கு ஆசைப்படாதே அதுவும் பிள்ளைகுட்டிகளே கொள்ளை கொள்ள வேண்டுமென்று கருதாதே என்றால் ஒரு தனிக்கூட்டம் தேசத்துரோகமென்கின்றதும், மனிதனை மனிதன் தொட்டால் தீட்டு, தெருவில் நடக்கக்கூடாது, கோயிலுக்குள் போகக் கூடாது, குளத்தில் இறங்கக்கூடாது, பக்கத்தில் வரக்கூடாது என்று சொல்லுவது அக்கிரமம், மானக்கேடு, கொடுமை என்று சொன்னால் அதே கூட்டம் ஜாதித் துவேஷம், வகுப்புத் துவேஷம், பிராமணத் துவேஷம் என்கின்றதுமாயிருக்கின்றன. இவ்வளவும் போதாமல் இப்போது திருவாங் கூர் ராஜ்யம் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க வேண்டுமென் கின்றவர்களைத் தனது நாட்டுக்குள்ளாகவே வரக்கூடாது என்கின்றது. எனவே இந்தியாவின் தேசபத்திக்கும், சுயராஜ்யக் கிளர்ச்சிக்கும், தேசீய உணர்ச்சிக்கும் இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

**குடி அரசு - தலையங்கம் - 14. 07.1929**



RangaRakes tamilnavarasam.com

# தமிழ்நாடு மாகாண மகாநாடு

தமிழ்நாடு மாகாண மகாநாடு வேதாரண்யத்தில் கூடுவதாக இரண்டு மூன்று மாதமாக பத்திரிகைகளில் பெருத்த விளம்பரங்களும், ஆடம்பரங்களும் நடைபெற்றன. தமிழ்நாடு மாகாண மகாநாடு சென்னையில் 1926-ல், கோகலே ஹாலில் நடந்த பிறகு 27லும் 28லும் நடைபெற முடியாமலே போய்விட்டது வாசகர்களுக்குத் தெரியும். ஆனால் இந்த வருஷம் தேர்தல் வரக்கூடும் என்று கருதி, அதுவும் கனம் திரு.முத்தையா முதலியார் அவர்களை எப்படியாவது தோற்கடிக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீது தனியாகவே பார்ப்பனர்களால் வேதாரண்யத்தில் மகாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக கூலிகளை விட்டும் எவ்வளவோ பிரசாரமும் செய்யப்பட்டது என்றாலும், அந்த மகாநாட்டுத் தலைமைப் பதவியை ஏதாவது ஒரு பார்ப்பனரல்லாதார் தலைமை வகிக்க ஏற்பட்டு விட்டால் தங்கள் ஜில்லாவின் பெருமைக்கு ஹானி வந்துவிடும் என்றும், அவர்களால் ஏதாவது வகுப்பு விஷமம் புகுத்தப்பட்டு விடுமென்றும் கருதி ஒரு பார்ப்பனரைத் தலைவராக்கக் காங்கிரசு ஆபீஸ் சிப்பந்திகளும், காங்கிரசு பார்ப்பனத் தலைவர்களும் ஊர் ஊராய்ச் சென்று விஷமப் பிரசாரம் செய்து திரு.சத்தியமூர்த்தியைத் தேர்ந்தெடுத்தாய் விட்டதாக ஏற்பாடு செய்தாய் விட்டது. ஆனால் இந்தச் செய்தியை இன்னும் இரகசியமாக வைத்திருக் கின்றார்கள். வரமுடியாத ஒருவர் பெயரை முதலில் சொல்லி பொது ஜனங்களை ஏமாற்றி பிறகு திரு.மூர்த்தியின் பெயரை வெளியிடு வார்கள். திரு.வரதராஜுலுவைத் தெரிந்தெடுக்க சில பார்ப்பனரல்லாத காங்கிரஸ் தொண்டர்களும் சில பொது ஜனங்களும் பாடுபட்டார்கள். ஆனால், பார்ப்பனர்களும், காங்கிரஸ் ஆபீசுகளும், சிப்பந்திகளும் யோக்கியமாய் தங்கள் பிரசாரத்தைச் செய்திருந்தால் திரு.வரதராஜுலுவே தெரிந்தெடுக் கப்பட்டிருப்பார். ஆனால் பார்ப்பன சூழ்ச்சியால் அவர் பெயர் இரண்டொரு கமிட்டி தெரிந்தெடுத்தும், திருப்பி அனுப்பி திரு.சத்தியமூர்த்தியைத் தெரிந்தெடுக்கப்பட வேண்டியதாயிற்று. இதன் பலனாய் மகாநாட்டின் போது பெருத்த கலகமேற்படும் போல் தெரிய வருகின்றது. ஆனால் இருதிறத்தாரும் கலகத்திற்குக் காரணம் சுயமரியாதைக் கட்சியார்கள் என்று சொன்னாலும் சொல்லக்கூடும். அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. யார் பேரில் வந்தாலும் சரி, எப்படியும் காங்கிரசுக்குத் தமிழ் நாட்டில் உள்ள யோக்கியதை எவ்வளவு என்பதும், அதில் உள்ள நாணயம் எவ்வளவு என்பதும், அதில்



எவ்வளவு தூரம் வகுப்புவாதம் இல்லை என்பதும் ஆகியவைகளை மாத்திரம் பொதுஜனங்கள் இனியும் அறிந்து கொள்ள இதை ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக் காட்டுகின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 14.07.1929**



RangaRakes tamilnavarasam.com

# ஈரோடு ஆலயப் பிரவேசம்

ஈரோடு சர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டியார் 30-3-29 ல் செய்த தீர்மான மானது இதுவரையில் மாற்றப்படவில்லை. ஆனால் "தமிழ்நாடு" பத்திரி கையாலும், அதன் நிருபர்களாலும் திரு. வரதராஜுலுவாலும் இவ்விஷயத் தில் தங்களுக்கு ஏற்பட்ட பொறாமையால் எவ்வளவு தூரம் கேவலமான முறைகளில் மேற்படி தீர்மானத்திற்கு எதிரிடையாக விஷமம் செய்யப்பட முடியுமோ அவ்வளவும் விடாமல் செய்யப்பட்டு வருகின்றது. முதலாவதாக இத்தீர்மானம் செய்யப்பட்டபொழுதே இதைத் திரித்துக்கூறி தலையங்கம் எழுதிற்று. பிறகு சென்ற மாதத்தில் திருப்பூரில் கூடின தேவஸ்தான கூட்டத் தில் இத்தீர்மானம் நீக்கப்பட்டு விட்டதென்றும், சுயமரியாதைக்காரர்கள் குட்டிக்கரணம் போட்டுவிட்டார்கள் என்றும் மனதறிந்த பொய்யை வேண்டு மென்றே திரு. ராமசாமி மீது மக்களுக்கு ஒருவித வெறுப்பை உண்டாக்க பிரசாரம் செய்தது. இதை நாம் மறுத்து எழுதிய பிறகும், அது மனிதத் தன்மை முறையில் நடைபெறும் பத்திரிகையாயிருக்குமானால் அது தனது தவறு தலுக்கு வருந்தியிருக்கும். அப்படிக்கில்லாமல் மேலும் அதே காரியத்தை செய்யும் துறையில் முனைந்து நிற்கின்றது. அதாவது 8-7-29 ல் "தமிழ்நாடு" பத்திரிகையில் "ஆலயப்பிரவேச தீர்மானத்தின் கதி" என்ற தலைப்பிட்டு "பழைய தீர்மானம் ரத்தாகலாம் என்று தெரியவருகின்றது" என்பதாக எழுதி யிருக்கின்றது.

இதிலிருந்து "தமிழ்நாடு" பத்திரிகையும் அதன் ஆசிரியர் திரு. வரதராஜலுவும் ஆங்காங்கு நியமிக்கப்பட்டுள்ள அதன் நிருபர்கள் என்பவர் களும் எவ்வளவு தூரம் சமதர்மத்திற்கும், சமூக விடுதலைக்கும், தீண்டாத வர்கள் என்பவர்களின் நன்மைக்கும் உழைக்கின்றார்கள் என்பதை பொது ஜனங்கள் நன்றாய் அறிந்து கொள்ளலாம் என்றே நினைக்கின்றோம்.

அரசியல் பிழைப்புக்காரர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்குக் கொள்கையோ, நாணயமோ, யோக்கியப்பொறுப்போ ஒன்றும் இருக்க முடி யாது என்பதாக நாம் சுமார் ஆயிரந்தடவை பேசியும், எழுதியும் வந்திருக் கின்றோம். அதற்கிலக்காக திரு. வரதராஜுலுவும் திரு. கல்யாணசுந்தர முதலியாரும் தமிழ்நாட்டில் விளங்குவது கண்கண்ட காட்சியாகும். .இவர்



களது விஷமப்பிரசாரத்தால் இவ்வித முயற்சிகளுக்கு ஒரு சிறு இடையூறுகூட விளைவித்துவிட முடியாதானாலும், சமூகத்துறையில் தங்களுக்கு ஏதோ மிக்க கவலையிருப்பதுபோல் மக்களை ஏமாற்றும் பித்தலாட்டத்தை வெளிப் படுத்தவே இவைகளை எழுதுகிறோம்.

நிற்க, உண்மையில் ஈரோடு தேவஸ்தான கமிட்டியின் தீர்மானத்தின் தன்மை என்ன என்பதை அறிய பலர் ஆவலாயிருப்பார்கள். ஆதலால் அதைப்பற்றி சிறிது விளக்குகின்றோம்.

ஈரோடு தேவஸ்தானக் கமிட்டியில் திரு.ஈ.வெ.ராமசாமி 25 வருட காலமாய் அங்கத்தினராகவும் 'காரியதரிசியாகவும்',சிலகாலம் தலைவராகவும் இருந்து வருபவர். அவர் கமிட்டி மெம்பராக வரும்போது அக்கமிட்டிக்கு யாதொரு மூலதனமும் கிடையாது. ஒழுங்கான நிர்வாகமும் கிடையாது. சர்க்காரிடமிருந்து டிரஸ்டிகள், தஸ்திக (மோகினி) தொகையை வாங்குவதும் தங்களின் இஷ்டப்படி செலவு செய்து கொள்ளுவதும் சிப்பந்திகளுக்கு சௌகரியப்பட்டபோது ஏதாவது கொடுத்து சம்பளம் தீர்ந்ததாக கையெழுத்து வாங்கிக் கொள்வதும் வழக்கம். (இன்னும் அநேக தேவஸ்தானங்களில் இப்படியே நடைபெறுகிறது). எப்படியெனில் சிப்பந்திகளும் சரியாக வர மாட்டார்கள். பூசைகளும் சரிவர நடக்காது. நடந்ததா இல்லையா என்கின்ற கவலையும் டிரஸ்டிக்கு இருக்காது. டிரஸ்டி என்பவர்கள் அநேகமாக அந்தந்த கிராம பெரியதனக்காரர் அல்லது செல்வாக்குள்ள கலகக்காரர் ஆகியவர் களாகவே பெரிதும் இருப்பார்கள். ஆதலால் இவர்களை யாரும் கணக்கு வழக்கும் கேட்கமுடியாது. கமிட்டி மெம்பர்களுக்கும் இவர்களைக் கண்டிக்க அதிகாரம் கிடையாது. வேண்டுமானால் ஏதாவது டிரஸ்டிகளிடம் பங்கு வாங்கிக் கொள்ள மாத்திரம் இடமுண்டு. இந்நிலையில் திரு.ஈ.வெ.ராமசாமி ஈரோடு தேவஸ்தானக் கமிட்டிக்கு மெம்பரானவுடன் தேவஸ்தானத்திற்கு பழைய டிரஸ்டிகள் இருக்க மற்றும் ஒவ்வொரு தேவஸ்தானத்திற்கு ஒவ் வொரு டிரஸ்டியாக தங்களுக்கு நம்பிக்கை உள்ளவர்களை நியமித்து மோகினி தொகைகளைச் சர்க்காரில் வாங்கி பாங்கியில் வட்டிக்குப் போட்டு விட்டு கௌரவமாயும் சம்பளமாயும் செக்கிங் ஆபீசர்களை வைத்து பூஜை நடக்காத நாள்களையும் சிப்பந்திகள் கோவிலுக்கு வராத நாள்களையும் குறிக்கச் செய்து அவர்களின் சம்பளங்களை பிடிப்பதன் மூலமும் வருஷத் திற்கு இரண்டு தடவை பட்டுவாடா செய்வதன் மூலமும் பணப்பிடித்தமும் வட்டிவரவும் ஏற்பட்டு ஒவ்வொரு வருஷத்தில் ஒன்று இரண்டு கோயில்களை 2000, 3000 ரூபாய் வீதம் செலவு செய்து பிரித்துக் காட்டியதன் மூலமும் மற்றும் பல செலவுகளும் செய்ததில் சுமார் லட்ச ரூபாய்கள் வரை செலவும் செய்து விட்டு மீதி ரொக்கமாகவும், பாங்கியில் சுமார் 35 ஆயிரம் ரூபாய் வரை இருப்பும் சேர்த்து வைத்து இருந்தார். இவற்றிற்கெல்லாம் தம் கூட இருந்த கமிட்டி



RangaRakes tamilnavarasam.com

கனவான்கள் மிக்க நாணயமுள்ளவர்களும் கௌரவமுள்ளவர் களுமாக இருந்ததும் அவ்வப்போது வந்த கலெக்டர்களும் ரிவினியூபோர்டு மெம்பர்களும் அநுகூலமாக இருந்ததுமே காரணமாகும். இந்த அனுபவங் களைக் கொண்டுதான் திரு.ஈ.வெ.ராமசாமியும் தேவஸ்தான மசோதாவை ஆதரித்ததுமாகும்.

பிறகு புதிய சட்டப்படி கமிட்டி நியமிக்கப்பட்டபோது பழைய மெம்பர் களில் திரு. ஈ.வெ.ராமசாமியையும், மற்றும் இரண்டொருவர்களையும் மாத்திரம் வைத்துக் கொண்டு மற்றவர்களைப் புதிதாக நியமித்தார்கள். அதுசமயம் திரு. ராமசாமி தான் கமிட்டியில் இருக்க இஷ்டமில்லாதிருந்தும் போர்டு கமிஷனர் ஒருவரின் இஷ்டத்தின் பேரில் இருக்க வேண்டியதாயிற்று. இதன் மேல் பல பார்ப்பனர்கள் ஒன்று கூடி திரு.ராமசாமி பூஜை உற்சவம் முதலியவைகளுக்கு விரோதி என்றும் பார்ப்பனத் துவேஷி என்றும் இரண்டு முறை சிறைக்குப் போனவரென்றும் எழுதி ஆயிரக்கணக்கான கையெழுத்து வாங்கி போர்டுக்கு அனுப்பினார்கள். அது கமிட்டிக்கு வந்த போது திரு.ராம சாமியே தலைவராயிருந்ததால் அம்மகஜரின் மீது அதில் கண்ட விஷயங் களை ஒப்புக் கொண்டதோடு மேல் கொண்டும் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் துவேஷி அல்ல மற்றும் பார்ப்பனீயத்தை ஆதரிக்கின்றவர்களுக்கும் துவேஷி என்றும் இருமுறைமாத்திரம் சிறைக்குப் போகவில்லை. அதற்கு மேலாகவும் போயிருக்கிறார் என்றும் எழுதி இனியும் அந்த கொள்கையைத் தான் அனுசரிக்க முடியும் என்றும் குறிப்பிட்டு மகஜர் திருப்பி அனுப்பப் பட்டது. பிறகும் அவர் நியமிக்கப்பட்டதால் அவர் கமிட்டிக்கு வேறு தக்க கன வானைத் தலைவராக வைத்து கோயில்கள் சம்பந்தமாக தனது எண்ணங் களை ஈடேற்றிக் கொள்ள எண்ணி திரு பழைய கோட்டை பட்டக்காரர் அவர் களை அவரது இஷ்டத்திற்கு விரோதமாய்க் கட்டாயப்படுத்தி தலைவராக்கி இதுவரை ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு காரியங்கள் செய்யக்கூடுமோ அவ்வளவு தூரம் கொஞ்சங் கொஞ்சமாய் செய்யப்பட்டு வருகிறதென்றே சொல்லலாம். மற்ற கமிட்டி கனவான்களும் கூடியவரை ஒத்துழைத்து வரு கின்றார்கள் என்றே சொல்லலாம்.

கடைசியாக கோயில் பிரவேசத்தீர்மானம் கொண்டுபோன காலத்தில் இத்தீர்மானத்தை நிறைவேற்றிவிடலாம் என்கின்ற எண்ணத்தின் மீதே கொண்டு போகப்பட்டதாகச் சொல்லிவிட முடியாது. நிறைவேற்றினாலும் சரி நிறைவேறாவிட்டாலும் சரி, நிறைவேறினால் கமிட்டியில் இருக்கலாம், நிறைவேறாவிட்டால் ராஜிநாமா செய்துவிடலாம் என்கின்ற எண்ணத்தின் மீதே கொண்டுவரப்பட்டதாகும். கமிட்டியில் இப்போதும் தலைவர் உள்பட மெஜாரிட்டி மெம்பர்களுக்கு இத்தீர்மானத்தின் கொள்கையைப் பற்றி ஆட்சேபணை இல்லை என்றே சொல்லுவோம். இதற்கு ஆதாரம் இத் தீர்மாணம் வாதத்திற்கு வந்த போது ஒருவர் தவிர வேறு யாரும் வந்து எதிர்க்காததும் எந்த விதத்திலும் தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவிக்



காததுமே போதுமானதாகும். ஆனால் அத்தீர்மானத்தை அமுலுக்கு கொண்டு வரும் விஷயத்தில் சிலர் பொறுப்பற்ற தன்மையால் அவசரப்பட்டு விட்டதும், அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு சில பார்ப்பனர் சூழ்ச்சி செய்ததும் அதற்கேற்றார்போல் சர்க்காருக்கும் பார்ப்பனர்களுக்கு ஆக்கம் கொடுக்கும் முறையில் ஒழுங்கற்ற தன்மையில் நடந்து கொண்டதும், தேவஸ்தான போர்டிலிருந்தும் அத்தீர்மானத்தை மாற்றி விடவேண்டும் என்பதாக ஒரு குறிப்பு வந்திருப்பதும் ஆகிய காரியங்கள் இத்தீர்மானத்தை புனராலோசனை செய்ய இடம் கொடுத்து விட்டது. சர்க்கார் நியாமற்ற நடவடிக்கைகளுக்கும், அமலுக்கு கொண்டுவந்தவர்களின் பொறுப்பற்ற தன்மைக்கும், இரண்டொரு கமிட்டி மெம்பர்களின் அதிருப்திக்கும் நாம் ஏதாவது சமாதானம் செய்யலா மானாலும் தேவஸ்தான போர்டிலிருந்து வந்திருக்கும் அதாவது “கோயில் பிரவேசத்தில் வழக்கத்திற்கு விரோதமில்லாமல் இருக்கும்படி தீர்மானத்தை மாற்றவேண்டும்” என்கின்ற உத்தரவுக்கு என்ன சமாதானம் சொல்லமுடியும்? என்றுதான் கமிட்டி கனவான்களில் சிலர் இன்னமும் யோசித்துக் கொண்டிருக் கின்றார்கள்.

என்றாலும், திரு.ஈ.வெ.ராமசாமியார் கமிட்டி மெம்பர் பதவியையும், உபதலைவர் பதவியையும் இராஜிநாமா கொடுத்தாய்விட்டது. சில கமிட்டி மெம்பர்கள் தேவஸ்தான போர்டுக்கு மறுபடியும் எழுதிக் கேட்கலாம் என்ப தாகவும் கருதியிருக்கிறார்கள். எனவே “தமிழ்நாடு” பத்திரிகை இந்த நிலையில் மேற்கண்ட தீர்மானம் இன்ன விதமாய்த் தான் முடியும் என்று ஜோசியம் சொல்ல முன்வந்தது அதனின் யோக்கியதையை ஊரார் அறிய போதுமானதாக ஆயிற்றே அல்லாமல் அது உண்மை நிலைமையை உணர்ந்த தாக ஏற்பட்டுவிடவில்லை.

ஒரு சமயம் மேற்படி தீர்மானம் நீக்கப்பட்டு விடுமேயானால் ஒன்றும் முழுகிப்போய்விட்டதாகவோ அல்லது பரிகாசம் செய்யும்படியாகவோ ஒன்றும் ஏற்பட்டுவிடாதென்றும் உறுதி சொல்லுவோம். ஏனெனில் ஆலயப் பிரவேச விஷயம் மிக்க சாமான்யமான காரியமானாலும் அவ்வளவு சுலபத்தில் நிறைவேற்றக்கூடிய காரியம் என்று நாம் நினைக்கவில்லை. அது அநேக பெரிய தியாகங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது. அதாவது ஒன்றா சட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும். அல்லது வகுப்பு துவேஷங்கள் ஏற்பட்டு பலாத்காரத்தால் மண்டை உடைவதன் மூலம் ஏற்பட வேண்டும். அல்லது ஆயிரக்கணக்கான பேர் சத்தியாக்கிரகத்தின் பேரால் சிறை செல்லுவதன் மூலம் ஏற்பட வேண்டும். இவற்றுள் பலாத்காரத்தைத் தவிர்த்து மற்ற இரண்டு விதிகளையும் நாம் பின்பற்றித்தானாக வேண்டும். இதில் திரு. வரதராஜுலுவோ, திரு.கல்யாணசுந்தர முதலியாரோ மற்றும் யார் குறுக்கே விழுந்தபோதிலும் ஒரு சிறு தூசியையாவது தடுத்துவிடமுடி யாதென்றே தைரியமாய்க் கூறுவோம்.

இப்போது வங்காளத்திலும் காளிகோயிலுக்குள் தீண்டாதவர்கள்



RangaRakes tamilnavarasam.com

எனப்பட்டவர்கள் பிரவேசிப்பதற்காக சத்தியாக்கிரகம் துவக்கப்பட்டிருப் பதாய்த் தெரியவருகின்றது. இதுவரை ஆறுபேர்கள் கைது செய்யப்பட்டி ருப்பதாய்த் தெரிகின்றது. எனவே நாட்டின் பல பாகங்களிலும் இவ் வுணர்ச்சிதோன்றி இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் வீண் விஷமப் பிரசாரத் தில் இதை அடக்கிவிடலாம் என்பது பைத்தியக்காரத்தனமாகுமென்றே சொல்லுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 14.07.1929**



# காங்கிரசின் யோக்கியதை

இந்திய தேசீய காங்கிரசின் யோக்கியதைக்கும் கட்டுப்பாட்டிற்கும் தேசத்தில் எவ்வளவு மதிப்பும் செல்வாக்கும் பின்பற்றுபவர்களும் இருக்கின்றார்கள் என்பதற்குக் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியினுடையவும், திரு.காந்தியவர்களுடையவும் தீர்மானங்களின் கதியும் பின்பற்றுபவர்களின் யோக்கியதையும் பார்த்தால் விளங்காமற் போகாது. முதலாவது சர்வ கட்சி மகாநாட்டு தீர்மானம் என்பதை முஸ்லீம்களில் நூற்றுக்கு 97 பேர் மறுத்தும், தாழ்த்தப்பட்ட மக்களில் 100-க்கு 99 முக்காலே மூன்று வீசம் பேர் மறுத்தும், பார்ப்பனர்களில் 100-க்கு 95 பேருக்கு மேலாகவே வைதீகர்கள் என்பவர்களும் மறுத்ததோடு மற்றும் பார்ப்பனரல்லாதவர்களிலும் இந்து மகாசபையின் மூலமும் பார்ப்பனரல்லாதார் சபையின் மூலமும் அது மறுக்கப்பட்டு விட்டது. பொதுவாகச் சொல்ல வேண்டுமானால் 33 கோடி இந்தியர்களில் அரசியல் பேரால் பிழைக்க இருக்கும் சிலராகிய விரல் விட்டெண்ணத் தக்கவர்கள் தவிர மற்றவர்கள் எல்லோரும் ஆட்சேபித்துவிட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். அதுவும் எந்தக் காரணத்தால் மறுத்தார்கள் என்று பார்ப்போமானால் அது எல்லாவற்றையும் விட வேடிக்கையான சங்கதியாகவே தோன்றும். உண்மையில் அரசியல் திட்டம் என்பதாகிய குடியேற்ற நாட்டு சுதந்திரத்திட்டம் என்பதை யாவருமே மறுத்ததாகக் காணப்படவில்லை. மற்றென்னவென்றாலோ வகுப்புவாதத்தை அடிப்படையாகக் கொண்டே சர்வகட்சி மகாநாட்டுத் திட்டத்திற்கே இவ்வளவு எதிர்ப்பும் மறுப்பும் ஏற்பட்டு இருக்கின்றது. ஆனால் நமது நாட்டுப் பெரிய பெரிய தேசீயவாதியும், காங்கிரசுவாதியும், பார்ப்பனரல்லாதார்கள் பிரதிநிதிகளாகக் காங்கிரசில் இருப்பதாகத் தங்களாலேயே சொல்லிக் கொள்ளப்படும் திருவாளர்கள் வரதராஜுலு, கல்யாணசுந்தர முதலியார், பஷீர் அகமது சையது சாயபு, குழந்தை, ஜயவேலு ஆகிய கனவான்கள் மாத்திரம் வகுப்பு வாதம் கூடாது என்றும், வகுப்பு வாதத்திற்கு நாட்டில் செல்வாக்கில்லை யென்றும் வகுப்புவாதிகள் தேசத் துரோகிகள் என்றும் சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள். ஆனாலும் இப்படிப்பட்ட தேசீயவாதிகள் கூட இப்போது காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டித் தீர்மானத்தையும், திரு.காந்தி தீர்மானத்தையும் ஒப்புக் கொள்ள முடியாது என்று சொல்லி காங்கிரசில் ராஜீனாமா கொடுத்துவிட்டு வேறுவேறு கட்சி ஏற்படுத்த தீர்மானித்துவிட்டார்கள்.

மற்றும் இப்போது உண்மையான ஜனப் பிரதிநிதிகள் என்று



RangaRakes tamilnavarasam.com

சொல்லப்படும் மாகாண சட்டசபை, இந்திய சட்டசபை, ராஜாங்க சபை அங்கத்தினர்களும் 100 -க்கு 90 பேர்களுக்கு மேலாக காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானம் ஒப்புக் கொள்ள முடியாதென்றும், காங்கிரஸ் தீர்மானித் தாலும் ஒப்புக்கொள்ள முடியாது என்றும், அப்படித் தீர்மானித்தாலும் காங்கிரசுக் கட்டுப்பாட்டை மீறி கலகம் செய்வோமென்றும் சொல்லி விட்டார்கள். இனி காங்கிரசுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள் யார் என்று பார்ப்போமானால் காங்கிரசினிடம் பணம்பெற்று பிரசாரம் செய்பவர்கள் என்று சொல்லலாமானாலும், அவர்களும் அதிகக் கூலி கொடுத்தால் எதையும் மீறிக் கலகம் செய்யத் தயாராயிருக்கின்றார்கள்.

"காங்கிரசுதான் தேச மகாஜனங்கள் சபையாகும். அதன் தீர்மானத் திற்கு விரோதமாயிருப்பது தேசீயத்திற்கு துரோகம் செய்ததாகும்" என்று "ஸ்ரீமுகம் அனுப்பிய பெரியோர்கள்" இனி என்ன சொல்லுவார்கள்?

**குடி அரசு - கட்டுரை - 14.07.1929**



# தேவஸ்தானக் கமிட்டி

## ஈ.வெ.ராமசாமியார் ராஜிநாமா

திரு. ஈரோடு சர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டி பிரசிடெண்டு அவர்களுக்கும், மெம்பர் கனவான்கள் அவர்களுக்கும், மேற்படி கமிட்டி வைஸ் பிரசிடெண்டு ஈ.வெ.ராமசாமி வணக்கமாய் எழுதிக் கொண்டது:-

கனவான்களே! மேற்படி கமிட்டியின் பொது மீட்டிங்குக்கும் ஸ்பெஷல் மீட்டிங்குக்கும் 4. 7. 29 ம் தேதி போடப்பட்டிருக்கும் அஜண்டா நோட்டீஸ் எனக்கு சென்னையில் கிடைத்தது. மேற்படி நோட்டீசானது என் கைக்குக் கிடைப்பதற்கு முன்பாகவே அந்த தேதியில் ஒரு முக்கியமான காரியத்திற்காக நான் சென்னையில் இருக்க வேண்டியதாய் ஏற்படுத்திக் கொண்டுவிட்ட படியால் குறிப்பிட்ட மீட்டிங்குகளுக்கு ஆஜராக முடியாததற்கு வருந்துகிறேன். நிற்க, மேற்படி 4-ந் தேதியில் ஏற்பாடு செய்திருக்கும் மற்றொரு மீட்டிங்கான ஸ்பெஷல் மீட்டிங்கில் குறிப்பிட்ட தீர்மானமானது சற்று முக்கியமானதென்றும், ஒரு தடவை இதே கமிட்டியாரால் செய்யப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கான்சல் செய்யத்தக்கதாய் இருப்பதால் அப்படி கான்சல் செய்யப்படுவதானது எனது முக்கிய கொள்கையை பாதிக்கக் கூடியதென்றும், மேலும் தேசத்தின் பொதுநல முற்போக்குக்கும், மனிதத்தன்மையின் உரிமைக்கும் நீதிக்கும் விரோதமானதென்றும் நான் அபிப்பிராயப்படுவதாலும் அத்தீர்மானம் கமிட்டியில் ஒரு சமயம் நிறைவேறி விடும்பட்சம் என் போன்றவர்கள் கமிட்டியிலிருந்து விலகிக் கொள்வது தவிர வேறு வழியில்லாததாலும், அது கமிட்டியில் விவாதத்திலிருக்கும் சமயத்தில் நான் ஆஜராகி இருந்து எனது அபிப்பிராயத்தை மற்ற கமிட்டி அங்கத்தவர்கள் முன்னிலையில் தெரிவித்துக் கொள்ள வேண்டியது எனது கடமையாகும். ஆனால் எதிர்பாராத சம்பவங்களால் அந்த சந்தர்ப்பம் எனக்கில்லாமல் போய்விட்டது. ஆதலால், இந்த நிலையில் நான் இந்தக் கமிட்டியில் என்னுடைய மெம்பர் பதவி யையும், வைஸ் பிரசிடெண்டு பதவியையும் ராஜிநாமா கொடுத்து கமிட்டியிலுள்ள எனது தொடர்பை நீக்கிக் கொள்வது தவிர வேறு வழியில்லை. எனவே திரு பிரசிடெண்டு அவர்களும், கமிட்டி மெம்பர் கனவான்கள் அவர்களும் தயவு



RangaRakes tamilnavarasam.com

செய்து எனது ராஜிநாமாவை அங்கீகரித்துக் கொள்ள வேணுமாய் தாழ்ந்த வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

*குறிப்பு : ஈரோடு தேவஸ்தானக் கமிட்டியில் தாம் வகித்து வந்த வைஸ்பிரசிடெண்ட் பதவியை ராஜினாமா செய்து எழுதிய கடிதம் .*

**குடி அரசு - அறிவிப்பு - 14. 07. 1929**



# சம்மத வயது கமிட்டி

## மதமும் சீர்திருத்தமும்

இளங்குழந்தைகளின் கலியாணங்களைத் தடுப்பதற்காக நமது நாட்டில் வெகு காலமாகவே முயற்சிகள் செய்யப்பட்டு வந்தாலும் அவை பயன்படாதிருக்க எதிர்முயற்சிகளும் செய்யப்பட்டு காலம் கடத்திவரும் விஷயம் தமிழ் மக்கள் அறிந்ததாகும். ஆனால் சமீப காலத்தில் மற்ற மேல் நாடுகளின் முற்போக்கைப் பார்த்த சிலர் இப்போது இதுவிஷயமாய் தீவிர கிளர்ச்சி செய்ய ஆரம்பித்ததன் பலனாகவும், தேக தத்துவ சாஸ்திரத்தின் முறைப்படியும், வைத்திய சாஸ்திர முறைப்படியும், குழந்தை மணங்களினு டையவும், குழந்தைச் சேர்க்கைகளினுடையவும், குற்றங்களை மக்கள் அறியத் தொடங்கியதன் பயனாகவும், பாமர மக்களுக்குச் சற்று கல்வியும் உலக அறிவும் எட்டுவதற்கு இடமேற்பட்டதன் பலனாகவும், குழந்தைகள் விவாகத்தைத் தடுக்க வேண்டுமென்கின்ற முயற்சியோடு குழந்தைகளின் சேர்க்கையையும் அதாவது சரியான பருவம் அடைவதற்கு முன் ஆண் பெண் சேர்க்கை கூடாது என்பதாகவும் கருத இடமேற்பட்டு, அவற்றைத் தடுக்க சட்டங்கள் செய்யவும் முற்பட்டு, சட்டசபைகளில் மசோதாக்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. நமது அரசாங்கத்தார் என்பவர்கள் நம் நாட்டைப் பொறுத்தவரை நமது நாட்டுப் பார்ப்பனர்களைப் போலவே சுயநலக்காரரும் பொறுப்பற்றவர்களுமாய் இருக்க வேண்டியவர்களாய் விட்டதால் அவர்கள் இவ்விஷயத்தில் மனிதத் தன்மையுடன் நடந்து சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரும்படி செய்யாமல் பொறுப்பற்ற தன்மையில் இவ் விஷயங்களில் பொதுஜன அபிப்பிராயத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள்போல வேடம் போட்டு இதற்காக ஒரு கமிட்டியை நியமித்து அக்கமிட்டியை பொதுஜனங்களை விசாரித்து அறிக்கைச் செய்யும்படி ஏற்பாடு செய்துவிட்டார்கள். அக்கமிட்டியும் மாதக் கணக்காக பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து பொதுஜனங்கள் என்பவர்களை விசாரணை செய்து ஏகோபித்து ஒரு முடிவுக்கு வந்து கலியாணம் செய்ய பெண்களுக்கு 14 வயதாக வேண்டுமென்றும் உடல் சேர்க்கை வைத்துக் கொள்ள கலியாணமான பெண்களுக்கு 15 வயதாக வேண்டுமென்றும் கலியாணமாகாத பெண்கள் விஷயத்தில் உடல்சேர்க் கைக்கு 18 வயதாக வேண்டுமென்றும் அறிக்கைச் செய்திருக்கின்றார்கள். இவ்வறிக்கையில் உடல் சேர்க்கை விஷயமாய் செய்திருக்கும் வயது



RangaRakes
tamilnavarasam.com

கிரமமானது கலியாணமான பெண்ணுக்கு ஒருவிதமாகவும், கலியாணமாகாத பெண்ணுக்கு ஒரு விதமாகவும் குறிப்பிடப்பட்டிருப்பது சிறிது விவாதத்திற் கிடமானதாயிருந்தாலும் கலியாண வயது 14 என்று குறிப்பிட்டிருப்பதும் அவ்வளவு போதுமானதா இல்லாததாய் இருந்தாலும், ஒரு அளவுக்கு நாம் இந்த அறிக்கையை வரவேற்கின்றோம்.

முதலாவதாக, கலியாணமான பெண்ணுக்கும் ஆகாத பெண்ணுக்கும் உடல் சேர்க்கை விஷயத்தில் வித்தியாசம் கற்பிக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்பதே நமது அபிப்பிராயம். ஆனால் பார்ப்பனர்கள் அந்தக் கமிட்டி முன் சாட்சியம் கொடுத்ததில் அநேகர் தங்கள் சமூகப் பெண்கள் பக்குவமாய்விட்டால் பரிசுத்தமாய் இருக்க முடியாதென்றும், அவர்களுக்குக் கலவி உணர்ச்சி சிறு வயதிலேயே ஏற்பட்டு விடுகின்ற தென்றும் அவர்களைக் காவல் காக்க வேண்டிய பொறுப்பு தங்கள் தலையில் விழுந்து விடுமென்றும் ஏதாவது சிறிதளவாவது பேர் கெட்டுவிட்டால் பிறகு அதன் வாழ்க்கை கஷ்டமாகிவிடுமென்றும் சொல்லியிருப்பதால் அவர் களின் குறைகளைத் திருப்தி செய்ய வேண்டி கலியாணமாகாத பெண்களை 18 வயதுக்கு முன் யாராவது கூடினால் கூடின ஆண்களுக்குத் தண்டனை விதிப்பதற்காக இம்மாதிரி விதித்திருக்கின்றதாக நாம் கருதுகின்றோம். ஆனால் இம்மாதிரி நடவடிக்கைக்குக் கட்டுப்பட்ட பெண்களுக்குத் தண்டனை ஒன்றுமில்லை. தவிரவும், பெண்கள் மீது வேறு எவ்வித அபவாத மும் ஏற்படாமலிருக்கவும் இந்த விதி உபயோகப்படலாமென்று கருதி யிருக்கக் கூடுமென்றும் நினைக்கின்றோம். தவிர 14-ல் கலியாணம் செய்து கொண்டு 15 வயது வரையில் அதாவது ஒரு வருடம் வரை காத்திருக்க முடியுமா? என்றும், ஏன் கலியாண வயதையே 15- ஆக தீர்மானித்திருக்கக் கூடாதென்றும் சிலர் கேட்கலாம். ஏகோபித்த அபிப்பிராயமாக இந்த அறிக்கை இருக்க வேண்டு மென்பதை உத்தேசித்து ஒரு கட்சியார் இதில் ஒரு வருடம் விட்டு கொடுத்திருக்கின்றார்கள் என்பதாகக் கருதுகின்றோம். அதாவது கலியாண வயதை பிரவிடையாவதற்கு முன்னாகவே கலியாணம் செய்யத்தக்கதாய் இருக்கும்படி செய்ய மெஜாரிட்டிகள் விரும்பியிருப் பதாகத் தெரியவருகின்றது. அம்மாதிரி செய்துவிடும் பட்சத்தில் சேர்க்கை வயது இன்னும் குறைந்தாலுங் குறையும். ஆனால் தங்கள் முக்கிய கொள்கைக்கு விரோதமில்லாமல் ஒரு ஏகோபித்த அறிக்கை அனுப்ப இடங்கிடைத்தால் தனிக்குறிப்பெழுத வேண்டிய அவசியம் வேண்டிய தில்லை என்பதை உத்தேசித்தே மெஜாரிட்டியாரும் இதற்குச் சம்மதித்திருக் கின்றார்கள் போல் காணப்படுகின்றது. அதாவது நமக்கு முக்கியமானது கலியாண வயதே யொழிய சேர்க்கை வயதல்ல. ஏனெனில் 8 வயதிலும் 10 வயதிலும் கலியாணம் செய்து கொள்ள அனுமதித்து விட்டு ஒருவருக் கொருவர் சேரக் கூடாது என்று சட்டம் செய்து ஒருவரையொருவர் சேராமல் காவல் பார்த்துக் கொண்டிருப்பது சுத்தப் பைத்தியக்காரத்தனம் என்பதும்,



சாத்தியப்படாதது என்பதும், இயற்கைக்கு விரோதமென்பதுமே நமது அபிப்பிராயம். ஆதலால் நமக்குக் கலியாண வயதே பிரதானம் என்கிறோம். அதில் கமிட்டியார் 14 வயது என்று தீர்மானித்தது ஒரு சமயம் சிலர் போதாது என்று கருதினாலும் நாம் அதுவே போதுமென்று சொல்லுவோம் ஏனெனில் கலியாண வயது 10 என்றாலும், 13 என்றாலும் ஒன்றேதான் என்பதுபோல் 14 என்றாலும் 18 என்றாலும் ஒன்று தான் என்பது நமதபிப்பிராயம். எனவே இங்குள்ள முக்கிய விஷயமென்ன வென்றால் பெண்கள் பிரவிடையாகும் முன்புதான் கலியாணம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் மதத்திற்கு விரோதம், பாவம், நரகம் சம்பவிக்கும் என்கின்ற பூச்சாண்டிகள் கொல்லப் பட்டுவிட்டார்கள். ஆதலால் இந்தக் கமிட்டி அறிக்கையில் மதச் சம்பந்தமான நிர்ப்பந்தமும் கட்டுப்பாடும் ஒழிக்கப்பட்டிருப்பது பெருத்த அனுகூலமாகும். பக்குவமானபின் கலியாணம் செய்வதாயிருந்தால் பெண் விஷயத்தில் யாரும் அவசரப்பட்டுக் கொண்டு கலியாணம் செய்துவிட மாட்டார்கள். சௌகரியப்படி எதிர்ப்பார்ப்பார்கள். பெண்களும் தாராளமாய் படிக்கவும், உலகத்தைத் தெரிந்து கொள்ளவும் சந்தர்ப்பமேற்படும். பிறகு தகப்பன் சொன்ன புருஷனைத்தான் கட்டிக் கொள்ள வேண்டுமென்கின்ற நிர்ப்பந்தமுமிருக்காது. தனக்கும் புருஷனைத் தேர்ந்தெடுக்கத்தக்க யோக்கியதை உண்டாய் விடும். பிறகு நாள் போகப் போக சுயம்வரமும் காதல் மணமும் ஏற்பட இடமேற்பட்டுவிடும். எனவே 14 வயதுக்கு மேற்பட்டுத்தான் கலியாணம் செய்யப்பட வேண்டுமென்று செய்த அறிக்கையைப் பெண்கள் விஷயத்தில் கவலையுள்ளவர்களும், சீர்திருத்தத்தில் கவலையுள்ளவர் களும் வரவேற்பார்கள் என்றே எண்ணுகின்றோம். தவிரவும், இந்த ஒரு விஷயத்தில் மத நிர்ப்பந்தம் நீங்கினால் மற்ற விஷயங்களிலும் மனித சமூகத்தின் இயற்கைக்கும் அறிவிற்கும் விரோதமான காரியங்களிலுமுள்ள மத நிர்ப்பந்தங்கள் விலகவும் சற்று அனுகூலமாயிருக்குமாதலால் அந்த அளவுக்கு நாம் இதை ஒப்புக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றோம். உடன்கட்டை ஏறும் விஷயமும் நீக்கப்பட்டபோது, அது மதக்கட்டுப் பாட்டிற்கு விரோதமென்றுதான் சொல்லிக் கொள்ளப்பட்டதானாலும் தைரியமாய் சட்டம் செய்த பிறகு முன் புருஷனுடன் கட்டையில் வைத்து எரிக்கப்பட வேண்டிய பெண்கள் இப்போது புருஷன் இறந்தபிறகு மறுமணம் செய்து கொள்ள அருகதையுடையவர்களாகச் செய்து கொண்டும் வாழுகின்றார்கள். அதுபோலவே இப்பொழுது இந்த அளவுக்குச் சட்டம் செய்துவிட்டால் நாளைக்கு உண்மையிலேயே 18 வயது வரையில் கூட கலியாணத்திற்கு காத்திருக்கும் நிலைமை தாராளமாய் ஏற்படும். அன்றியும் பெண்கள் பலர் தங்களுக்கு கலியாணமே வேண்டாம் என்றுகூட சொல்லிக் கொண்டு பெண் பிரமச்சாரிகளும், மடாதிபதிகளும், சந்நியாசிகளும், சுவாமிகளும் ஆகவும் கூடிய நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆகையால் இப்போது சீர்திருத்தக்காரர்கள் செய்ய வேண்டிய வேலை என்ன வென்றால் அறிக்கையைப் பற்றி குணதோஷம் பேசாமல் அவ்வறிக்கை



RangaRakes tamilnavarasam.com

அப்படியே இந்தியா சட்டசபையில் நிறைவேறும்படி செய்ய வேண்டியதே முக்கிய கடமையாகும்.

இவ்வறிக்கை சர்க்கார் முறையில் வெளியாவதற்கு முன்பே பார்ப் பனர்கள் இவ்வறிக்கைக்கு விரோதமாய் மதத்தின் பேராலும், வருணாசிரம தருமத்தின் பேராலும் எதிர்ப்பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். சாதாரணமாக இந்த அறிக்கையின் கருத்து வெளியான இந்த 20, 25 நாள்களுக்குள்ளாக தமிழ் நாட்டிலும், ஆந்திர நாட்டிலும் தினம் ஒன்று இரண்டு இடங்களில் கூட்டம் போடப்பட்டதாக ஏற்பாடு செய்து அவ்வறிக் கையைச் சர்க்கார் ஒப்புக் கொள்ளப்படாதென்றும், சட்டசபை பிரதிநிதிகள் ஓட்டு கொடுக்கப்படாது என்றும் தீர்மானங்கள் செய்ததாக பேர் செய்து தீர்மானங்களைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வருகின்றார்கள்.

நமது நாட்டுப் பார்ப்பனர்கள் ஒவ்வொரு சீர்திருத்தத்தின் போதும் இப்படியே கூச்சல் போடுவது வழக்கமானதால் நாம் இவற்றிற்குப் பயப் படாமல் தெரியப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் எதிர்க் கூட்டங்கள் போட்டு அறிக்கையை ஆதரித்து தீர்மானங்கள் செய்து தீர்மானங்களை சர்க்காருக் கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் தகவல் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

தேவஸ்தான சட்டத்தின் போதும் இந்தப் பார்ப்பனர்கள் இம்மாதிரி தான் கூச்சல் போட்டார்கள். ஆனாலும் சட்டம் நிறைவேறி விட்டது. ஆனால், அந்தச் சட்டத்தினால் யாருக்கும் ஒருவித பலனும் இதுவரை ஏற்பட்டதாக சொல்வதற்கில்லாமலிருக்கின்றது. வீணாக கமிட்டிகளும் உத்தியோகங்களும் ஏற்பட்டதுதான் மீதியே ஒழிய மற்றபடி வீணாய் செலவாகும் பணம் ஒரு காசு கூட மீதியாவதற்கு இல்லாமலும், வேறு நல்ல வழியில் செலவிடுவதற்கு இல்லாமலும் இருப்பதுடன் முன் சாப்பிட்டவர்கள், சாப்பிட்டுக் கொண்டும், முன் கோயிலின்பேரால் இழிவுபடுத்தப்பட்டவர்களும், தாழ்ந்த சாதி ஆக்கப் பட்டவர்களும் அதே நிலையில் தான் இருந்து வருகின்றார்கள். ஓட்டு மூலமும் சட்டசபை மூலமும் நிர்வாகம் செய்யும் அரசாங்கம் நமது நிலைக்குச் சிறிதுகூட பொருத்தமற்றதென்றே சொல்ல வேண்டி இருக்கின் றது. இதுசமயம் நமக்கு கமால் பாட்சாவுடையது போன்ற ஒரு வீர எதேச்சை அரசாங்கமே வேண்டி இருக்கின்றது. ஏனெனில், மேல் பதவியிலும் முன்னிலையிலும் குறைவற்ற தன்மையிலும் இருக்கின்றவர்களே அநேக மாய் ஓட்டர்களாகவும் பிரதிநிதிகளாகவும் இருக்கின்றார்கள். இவர்களை ஆதாரமாகக் கொண்டே அரசாட்சி ஓட்டென்னும் தந்திரத்தாலும் பிரதிநிதித் துவம் என்னும் சூழ்ச்சியாலும் அரசாளப்பட்டு வருகின்றது. இந்நிலையி லுள்ள ராஜ்யபாரத்தில் கஷ்டப்படுகின்ற ஓட்டுரிமை இல்லாத மக்களுக்கு நன்மை கிடைப்பதென்றால் சிறிதும் எதிர்பார்க்கக் கூடியதல்ல என்றாலும், ஒரு பெரிய ஆற்றைக் கடப்பது போன்ற இந்த அறிக்கையை ஒருவாறு சட்டமாக்கிக் கொண்டால் பின்னால் வேலை செய்பவர்களுக்குச் சற்று





அனுகூல மேற்படுமாதலால் ஆங்காங்குள்ள மக்களைத் தயவு செய்து பொதுக் கூட்டம் கூட்டி விஷயங்களை விளக்கி அறிக்கையை ஆதரிப் பதாகத் தீர்மானங்களைச் செய்தனுப்பும்படியாக மறுபடியும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 21.07.1929**



RangaRakes
tamilnavarasam.com

# சென்னை ஆதிதிராவிடர் சுயமரியாதை மகாநாடு

சகோதரர்களே!

ஆதிதிராவிட சமூகத்தின் பேரால் சுயமரியாதை மகாநாடு கூட்டப் பட்டிருப்பதைக் கண்டு நான் மிகுதியும் மகிழ்ச்சி அடைகின்றேன். சிலர் சுயமரியாதை என்கின்ற பெயர் தங்களுக்குப் பிடிக்கவில்லை என்றும், ஆனால் அதன் கொள்கைகள் எல்லாம் சரியென்றும் மிக்க அவசியமான தென்றும் சொல்லுகின்றார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் அந்த பெயரிலிருந்து தங்களுக்குச் சுயமரியாதை இல்லை என்று அர்த்தம் ஏற்படுகின்றதாம். இதற்கு நான் சொன்ன பதில் என்ன வென்றால் நமக்குச் சுயமரியாதை இருக்கின்றதா இல்லையா? என்பது வேறு விஷயம் என்றும் சுயமரியாதை சங்கம் என்று பெயரிடுவதாலேயே அதில் சேர்ந்தவர்கள் சுயமரியாதை அற்றவர்கள் என்கின்ற அருத்தமாகாதென்றும் அப்படியானால் இப்போது பலர் சன்மார்க்க சங்கம் என்பதாக பல சங்கங்கள் ஏற்படுத்து கின்றார்களே அச்சங்கங்களில் அங்கத்தினர்களாயிருப்பவர்களுக்குச் சன்மார்க்கமில்லை யென்பது பொருளா? என்றும், அச்சங்கம் ஏற்படுத்துபவர் கள் துன்மார்க்கர்களா? என்றும்தான் பதில் கேட்டேன். தவிர உண்மை யிலேயே நமக்குச் சுயமரியாதை உணர்ச்சி இருக்கின்றதா என்பதையும் சற்று யோசித்துப் பாருங்கள். முதலாவது உங்களைப் பற்றியே பேசுகின்றேன்.

நீங்கள் சமூகத்தில் மனிதர்களால் கீழ் மக்களாய் கருதப்பட்டு தீண்டத்தகாதவர்களாய் ஒதுக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்குக் கோயிலில் பிரவேசிக்க உரிமையில்லை.

அநேக தெருக்களில் நடக்கவும் உரிமை இல்லை. அநேக குளங்களில் குட்டைகளில் ஏரி, ஆறு, வாய்க்கால், படித்துறைகளில் தண்ணீர் மொள்ளவோ குடிக்கவோ உரிமை இல்லை. சில பள்ளியில் சேர்ந்து படிக்க உரிமை இல்லை. சிற்சில இடங்களில் நீங்கள் மனிதர்களின் கிட்ட வரவோ, அவர்களின் கண்களில் தென்படவோ கூடாதவர்களாயிருக்கின்றீர்கள். இவை முதலிய கொடுமைகளை மனிதர்களின் கைபலத்தால் என்று மாத்திரம் அல்லாமல், கடவுள், மதம், சட்டம், பழக்கம், வழக்கம் என்பவைகளின் பேரால் அனுபவித்து வருகின்றீர்கள். இந்நிலையில் உள்ள நீங்கள் சுயமரியாதையுடன் வாழும் சமூகம் என்று சொல்லிக் கொள்ளக் கூடியவர்களா என்று கேட்கின்றேன். உங்கள் நிலை இப்படி என்றால் எங்கள் நிலையைச் சற்று யோசித்துப் பாருங்கள்.



மனித சமூகத்தில் நாங்களும் இழிமக்களாக அதாவது பிறவி அடிமையாகவும் மற்றொருவனுக்குத் தாசி மகனாகவும் இருக்கத்தக்கதான "சூத்திரர்" என்னும் பெயரால் அழைக்கப்பட்டு உங்களைப் போலவே நாங்களும் மற்றொரு கூட்டத்தாருக்குத் தீண்டப்படாதவர்களாகவும், சில பொது இடங்களுக்குப் போகக் கூடாதவர்களாகவும், சிலப் படித்துறைகளில் தண்ணீர் மொள்ளக்கூடாதவர்களாகவும், சில பள்ளிக் கூடங்களில் படிக்கக் கூடாதவர்களாகவும், பொதுக் கோயிலிலும் சில இடங்களுக்கு போகக் கூடாதவர்களாகவும், பொது ஓட்டல் முதலியவைகளிலும் உள்ளே போய் சாப்பிட முடியாதவர்களாகவும், கருதப்பட்டும் அநுபவத்தில் அவ்விழிவு களையும், கொடுமைகளையும், அனுபவித்தும் வருகின்றோம். நீங்கள் தீண்டாதவர்கள், தாழ்ந்த ஜாதியார், கடைக்குலத்தார் என்று சொல்லப்பட் டாலும் உங்களுக்கு ஒரு தகப்பன் உண்டு என்று சொல்லிக் கொள்ள உரிமை உண்டு. நாங்கள் உங்களைவிட சற்று உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளலாமே தவிர, நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற மதப் பிரகாரம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் குல தர்மங்களுக்கு எங்களுக்குத் தகப்பன் இருக்க நியாயமில்லாமல் தான் இருக்கின்றது. ஆனால் சிற்சில இடங்களில் இது அமுலிலில்லை என்று சொல்லலாமேயொழிய கொள்கையிலும் மத சட்ட ஆதாரத்திலும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. மலையாளத்தில் உயர்ந்த சாதிக்காரர்கள் என்பவர்களுக்கு இன்னமும் மற்றொரு வகுப்பார் உயர்ந்தார் என்பவரின் தாசி மகனாய், வைப்பாட்டி மகனாய் இருப்பதுதான் அடையாளமாக இருந்து வருகின்றது. ஆகவே எங்கள் சமூகமானது சுயமரியாதை உள்ள சமூகம் என்று சொல்லிக் கொள்ள முடியுமா என்று கேட்கின்றனர்.

தவிர, இன்றைய தினம் நாம் எல்லோரும் எப்படி சமூகத் துறையில் இழிவுபடுத்தப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றோமோ, அதற்கு நேர் விரோதமாய் நமது நாட்டில் மற்றொரு வகுப்பு சமூகத் துறையில் தாங்கள் மிக்க உயர்ந்த ஜாதி என்று சொல்லிக் கொண்டு மேன்மையாகச் சந்தோஷத்துடன் நோகாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அன்றியும், நாம் எப்படி இம்மாதிரியான கூட்டங்கள் கூட்டி நம்மீது சுமத்தப்பட்ட இழிவையும் கொடுமையையும் நீக்கிக் கொள்ள இம்மாதிரி மகாநாடுகளால் முயற்சி செய்து வருகின்றோமோ அதற்கு நேர் விரோதமாய் மற்றொரு வகுப்பார் இந்த நிலைமையை எப்போதும் நிலைத்து இருக்கும்படி செய்ய வர்ணாசிரம மகாநாடு, பிராமண தர்ம மகாநாடு, ஆரிய தர்ம மகாநாடு முதலிய மகாநாடுகளின் பேரால் பலமான முயற்சிகள் செய்து வருகின்றார்கள்.

அதோடு மாத்திரமல்லாமல் நம்மீது மனதறிந்த பொய்க்கூற்றுகளை



RangaRakes tamilnavarasam.com

கற்பித்தும், அபாண்டமான பழிகளைச் சுமத்தியும், பாமரமக்களிடம் விஷமப் பிரசாரம் செய்து வருகின்றார்கள். நம்மவர்களிலேயே சிலரைக் கூலியாக அமர்த்தி எதிர்ப்பிரசாரமுஞ் செய்து வருகின்றார்கள். இவைகளை யெல்லாம் நாம் சிறிதும் லட்சியம் செய்யாமல் தைரியமாகவும் விடா முயற்சியாகவும் இருந்து வேலை செய்தால்தான் நமக்குள்ள கொடுமைகளும் இழிவுகளும் நீங்குமே ஒழிய மற்றபடி சும்மா இருந்து கொண்டு நாம் எடுத்ததற்கு எல்லாம் கடவுள் செயல் அவனன்றி ஓரணுவும் அசையாது என்று சோம்பேறி ஞானம் பேசிக் கொண்டிருந்தால் ஒரு காரியமும் ஆகாது என்பதை ஞாபகத்தில் வையுங்கள். உதாரணமாக "எல்லாம் கடவுள் பார்த்துக் கொள்ளுவார். நாமாக ஏதாவது செய்தால் கடவுள் கோபித்துக் கொள்வார் பாபம் வந்துவிடும். நரகம் சம்பவிக்கும்" என்று பேசிக் கொண்டிருக்கும் எந்த சாதுவும், தன்னை ஒரு சிறு எறும்பு கடித்தாலும் உடனே அந்த எறும்பை நசுக்கி விட்டுத்தான் வலிக்காக கஷ்டப்படுகின்றான். அது போலவே ஒரு தேள் கடித்து விட்டால் உடனே அதைக் கொன்று விட்டுத்தான் பிறகு அழ ஆரம்பிக்கின்றான். கடித்த தேள் கொல்லப்படவில்லையானால் கடிபட்டவனுக்கு வலி அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே அவைகளுக்குக் கஷ்டம் ஏற்படும்போது எவனும் கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டு சும்மா இருப்பதாக நாம் கண்டதே இல்லை. மற்றொருவன் கஷ்டத்திற்கும் தன்னால் முடியாத காரியத் திற்கும் மற்றவர்களை ஏமாற்றுவதற்கும் தான் ஒருவன் கடவுளை இழுக் கின்றானே தவிர காரியத்தில் கடவுளுக்காக எவனும் விட்டுக் கொடுப்பதே இல்லை. நமது சுயமரியாதை இயக்க மேற்பட்டு 2, 3 வருடங்களேயானாலும் அது நமது நாட்டில் ஒருவித உணர்ச்சியை உண்டாக்கி இருக்கின்றது. அநேக விஷயங்களில் கடுமையான எதிர்ப்புகள் மறைந்துவிட்டன. சாமியையும் சாத்திரத்தையும் தொட்டதற் கெல்லாம் முட்டுக்கட்டையாகக் கொண்டு வந்து போட்டுக் கொண்டிருந்தவர்கள் இப்போது அதை ஒருவிதத்தில் மறைத்துக் கொண்டு பழக்கம் வழக்கம் என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். சாமி, மதம், சாத்திரம் என்கின்ற முட்டுக்கட்டைகளை இன்னமும் தைரியமாக உடைத்தெறியத் துணிந்து விட்டோமேயானால் பழக்க வழக்க முட்டுக் கட்டைகளை பஞ்சாய் பறக்கச் செய்துவிடலாம்.

இம்மாதிரி பழக்க வழக்கம் ஏற்படுவதற்கு ஆதாரமாய் இருந்தவைகள் சாமியும் மதமுமேயாகும். ஆகையால் நீங்கள் செய்ய வேண்டிய முதல் வேலை என்ன வென்றால் உங்கள் முன்னேற்ற விஷயத்தில் சற்றாவது சாமி, மதம், சமயம், பட்டம், சாத்திரம் ஆகிய பூச்சாண்டிகளுக்குச் சற்றும் பயப்படக் கூடாது. சாமியும் மதமும் பொய் என்று சொன்னால்தான் சமத்துவம் கிடைக்கும் என்பதாகத் தோன்றினால் தைரியமாக சாமியும் மதமும் பொய், நாங்கள் அதை ஒப்புக் கொண்டு கீழ்ஜாதியாக இருக்கச் சம்மதிக்கமாட்டோம் என்று சொல்லுங்கள். உண்மையான சாமியும் மதமுமாயிருந்தால் நீங்களும் நானும் சொல்வதற்குப் பயந்து கொண்டு ஓடிவிடாது. ஒரு சமயம் அப்படி ஓடிப்போகும் சாமியாலும் சமயத்தாலும் நமக்கு ஒரு காரியமுமே



ஆகிவிடாது. நமக்குக் கடவுள் பேரிலும் சமயத்தின் பேரிலும் விரோதமோ போட்டியோ சிறிதும் கிடையாது. ஆனால் எந்தக் கடவுள் பேராலும் எந்த சமயத்தின் பேராலும் நீங்களும் நானும் தீண்டாதவர்களாகவும், காணப் படாதவர்களாகவும், தாசி மக்களாகவும் சொல்லப்படுகின்றோமோ, அந்தச் சமயத்தையும் கடவுளையும் ஒழித்தாக வேண்டும் என்கின்றோம். அதனால் நரகமே கிடைப்பதானாலும் இப்போதே சாவதானாலும் அக்கரையில்லை என்று சொல்லுகின்றேனே அல்லாமல் மற்றபடி கோயில்களிலுள்ள கடவுள்களை எடுத்தெறிந்து விட்டு அந்த ஸ்தானத்தில் நான் இருந்து கொள்ளலாம் என்கின்ற எண்ணமல்ல.

கோவிலில் உள்ள சாமிகளுக்கு கடுகளவு சுயமரியாதை கூட கிடை யாது என்பது எனக்குத் தெரியும். அது இரவும் பகலும் பூட்டிக் கிடக்கின்றது. பூசாரி சோறுபோட்டால் தான் உண்டு. இல்லாவிட்டால் பட்டினிதான்.

ஈரோடு சாமிகள் 2 மாதம் பட்டினிகிடந்ததுகள். யார் என்ன செய்தாலும் ஏன் என்று கூட கேட்காமல் வாயை மூடிக் கொண்டு தான் இருக்க வேண்டும். இந்த நிலையில் உள்ள சாமிப்பட்டம் எனக்கும் வேண்டாம் இன்னும் நம்முடைய எதிரிகளுக்கும் வேண்டாம் என்றுதான் சொல்லுவேன். ஆகையால் இம்மாதிரி கடவுள் பூச்சாண்டிகளுக்கு பயப்படாதீர்கள்.

தவிர, இந்த மகாநாட்டில் ஒரு தீர்மானம் கொண்டுவரப் போவதாகக் குறிப்பிட்டு என்னிடம் கொடுத்து அதன் மீது பேசும்படி தலைவர் கட்டளையிட்டு இருக்கின்றார் அதாவது :–

"ஆறரைக் கோடி மக்களடங்கிய எங்களுடைய பெரும் சமூகமானது இந்து மதத்தில் சேர்க்கப்பட்டிருப்பதன் நிமித்தம் தீண்டப்படாதவர்களா யிருப்பதாலும் அம்மதத்தில் சமத்துவ உரிமை இல்லாதிருப்பதாலும் இனி, அடுத்து வருகின்ற சென்சஸ் கணக்கில் எங்களை 'இந்துக்கள்' என்று பதியாமலிருக்கும்படிக்கும் சர்க்காரிலும் எங்களை இந்துக்கள் என்கின்ற பதவியிலிருந்து நீக்கிவிடும்படிக்கும் செய்யும்படி சர்க்காரையும் சபை அங்கத்தினர்களையும் இம்மகாநாடு வேண்டிக் கொள்ளுகின்றது" என்ற தீர்மானமாகும். இத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். நான் அநேக தடவைகளில் இதைப் பற்றி எழுதியும் பேசியும் இருக்கின்றேன். சமீபத்தில் கூட எந்த சமயத்தில் எந்தக் கூட்டத்தில் மக்களுக்கு சமத்துவம் அளிக்கப் படுகின்றதோ, அந்தக் கூட்டத்தில் சமத்துவமளிக்கக் கூடாத மக்களை கொண்டு போய் சேர்க்க முயற்சி செய்யப் போகின்றேன் என்று எழுதியிருந் தேன். சமத்துவம் வேண்டுமென்கின்ற மனிதனுக்குச் சமத்துவம் உள்ள மதம் எல்லாம் சம்மதமாகும். சமத்துவமில்லாத மதம் எல்லாம் ஆணவ மதமாகும். ஆதலால் இந்தக் கொடுமையான இந்து மதத்திலிருந்து பிரிந்து கொள்ளுகிறவர்களை நான் மிகுதியும் பாராட்டுகின்றேன். முதலாவது, இந்து மதம் என்பதாகவே ஒரு தனி மதம் இல்லவே இல்லை. சிலரின் சுயநலத் திற்கும் வயிற்றுப் பிழைப்புக்குமான ஆதாரமில்லாமல் போலியாய்



RangaRakes tamilnavarasam.com

வாயளவில் சொல்லிக் கொள்ளப்படுவதே தவிர மதம், சமயம் என்கின்ற முறைப்படி இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லை. இதை வெளியில் எடுத்துச் சொன்னால் நம்மை மதத்துவேஷி தேசத்துரோகி நாஸ்திகன் என்று கூப்பிடச் செய்ய கூலி கொடுத்து பிரசாரம் செய்விக்கின்றார்கள். நம்மைக் கொன்றுவிடுவதாய்ப் பயமுறுத்திக் கடிதம் எழுதுகின்றார்கள். அப்படி அவர்கள் செய்வதிலோ, கொன்றுவிடுவதிலோ அதிசயம் ஒன்றும் இல்லை. இது ஒரு கூட்டத்தாரின் பரம்பரைத் தொழிலேயாகும். இம்மாதிரி வெகுபேரைக் கொன்றும் இருக்கின்றார்கள். இதனால் நமக்கு ஒன்றும் முழுகிப் போய்விடாது. நான் செத்துப்போவதால் அவர்களுடைய ஆதி சேஷனுக்கு கூடப் பாரம் குறையப் போவதில்லை. நாம் மனப்பூர்வமாக தேசத்தினுடையவும் எல்லா சமூகத்தினுடையவும் நன்மையை உத்தேசித்தே இவ்வியக்கம் தோற்றியுள்ளோமாகையால் அதற்காக – உயிர் விட நேரு வதை மனப்பூர்வமாக வரவேற்கின்றேன். இன்னும் என்னைப் போல அநேகர் இவ்வியக்கத்திற்கு உயிர்விடக் காத்திருக்கின்றார்கள் என்றே நம்புகிறேன். அந் நம்பிக்கை இல்லாவிட்டால் நான் இவ்வளவு தீவிரமாக இருக்க மாட்டேன்.

சுயமரியாதை இயக்கம் ஜனங்களுக்குச் செய்த கெடுதி என்ன என்று யாராவது சொல்ல முடியுமா? மனிதனை மனிதன் இழிவுபடுத்துவதும் உயர்வு தாழ்வு கற்பிப்பதும் ஒழிய வேண்டுமென்பது நாஸ்திகமும் தேசத் துரோகமுமானால், அந்த ஆஸ்தீகமும் தேசமும் எதற்காக உலகத்தில் இருக்க வேண்டும். சாதி வித்தியாசம் இல்லாத அந்நிய ஆட்சியில் நாம் இருக்கும் போதே நமது சமத்துவத்திற்கு விரோதமாய் நம்மில் ஒரு கூட்டம் வருணா சிரம பிரசாரம் செய்து நமது சமத்துவத்தைக் கெடுக்கும் போது சாதி வித்தியாசம் உள்ளவர்களின் ஆட்சி வந்துவிட்டால் நம் கதி என்னாவது? "பசுவை வண்டியில் கட்டினால் பாவம்; சூத்திரனையும் பஞ்சமனையும் வண்டியில் கட்டி ஓட்டு" என்று அல்லவா உத்தரவு போடுவார்கள். இவ்வித உத்தரவு இப்போது பன்றி, நாய், கழுதை, மலவண்டி போகும் வீதியில் நடக்கக்கூடாது என்பதற்கும், பள்ளிக்கூடத்தில் படிக்கக் கூடாது என்பதற்கும், கிணற்றில் தண்ணீர் மொள்ளக்கூடாது என்பதற்கும், சாமியைக் கண்டு கும்பிடக் கூடாது என்பதற்கும் காலில் விழுந்து கும்பிட்டால்தான், காலைக் கழுவி தண்ணீரைக் குடித்தால்தான் மோட்சம் என்பதற்கும் மற்றும் இதுபோன்று இப்போது இருப்பவைகளுக்கும் சற்றும் கடினமானதென்று நான் நினைக்கவில்லை. மற்றபடி தேசாபிமானிகள் என்பவர்களுக்கு வெள்ளைக்காரர்கள் ஆட்சி நம் நாட்டைவிட்டு நாளைக்குப் போய்விடட்டும் என்றாலும் எனக்கு இன்றே போய்விடுவது சம்மதம்தான். ஆனால் அதற்குப் பிறகு எங்கள் கதி என்ன எங்களை என்ன செய்யப்போகின்றீர்கள்! எப்படி நடத்துவீர்கள் என்பதில்தான் நமக்கும் தேச பக்தர்களுக்கும் இருக்கும் அபிப்பிராய பேதமேயொழிய வேறில்லை. "முதலில் அவர்கள் வெளியில் போகட்டும் பிறகு பார்த்துக் கொள்ளுவோம்" என்றால் அந்தக் காரியம் இனி



RangaRakes

நம்மிடம் பலிக்காது என்று சொல்லுகின்றோம். இதனால் நாங்கள் தேசத்துரோகியாவதானால் குஷாலாகச் சம்மதிக்கின்றோம்.

இப்போது நமது நாட்டில் எங்கு பார்த்தாலும் ஜனங்கள் வரவர இந்து மதம் என்பதையும், இந்து சமூகம் என்பதையும் விட்டுப் பிரிந்து போகவே துணிவு கொண்டுவருகின்றார்கள்.

சமீபத்தில் திருவாங்கூரில் கூடிய ஈழவ சமுதாய மகாநாட்டில் திரு மாளவியா இந்து மதப் பெருமையைப் பற்றி பேசும்போது அச்சமுதாயத்தார் இந்து மதம் வேண்டாம் அது தொலையட்டும் என்று ஒரே அபிப்பிராயமாகச் சொல்லிவிட்டார்கள். அம்மகா சங்கக் காரியதரிசி திரு.கோவிந்தன் பி.ஏ. பி.எல்., மாஜி ஜில்லா ஜட்ஜ் இதோ இங்கே உட்காந்திருக்கிறார் பாருங்கள் அவரை நான் கண்டவுடன் ஆச்சரியப்பட்டு, தாங்கள் எங்கு வந்தீர்கள் என்று கேட்டதும் அவர் நானும் தீண்டப்படாதவன் தானே ஆதலால் இந்தக் கூட்டத்திற்கு வந்தேன். என்னையும் ஆதிதிராவிடரில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார். எனக்கு அதுக்கேட்டதும் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. அவர் முனிசீப்பாக இருந்து ஜில்லா ஜட்ஜாகி நாணயமும் பரிசுத்தமும் உள்ள ஜில்லா ஜட்ஜு என்று பேர் பெற்று பென்ஷன் வாங்கினவர். இப்போது அவரும் அநேக தெருக்களில் நடக்க முடியாது. பிறகு கோயிலைப் பற்றி கேட்கவே வேண்டியதில்லை. எனவே இவ்வளவு கொடுமையுள்ள ஒரு கட்டுப்பாட்டிலிருந்து விலகிக் கொள்ள நீங்கள் ஆசைப்படுவது மிகவும் நியாயமும் அவசியமுமாகும். ஆனால் விடாமுயற்சியாய் வேலை செய்ய வேண்டும். இடைவிட்டால் மோசம் போய்விடும்.

*குறிப்பு : 13.07.1929 ஆம் நாள் சென்னை நேப்பியர் பார்க்கில் (தில்லை வனத்தில்) நடைபெற்ற சென்னை ஆதி திராவிட மகா ஜனங்களின் சுயமரியாதை மாநாட்டில் சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 21.07.1929**



tamilnavarasam.com

# சென்னை காங்கிரஸ் கமிட்டி

இந்த வருஷம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டங்கள் கூடுமிடங்களிலெல்லாம் தகராறு இல்லாமல் நடைபெறுவதாகக் காணவில்லை. வேதாரண்ய மகாநாட்டுத் தலைவர் தேர்தல் சூழ்ச்சிகள் தமிழ்நாடு பத்திரிகையில் இருந்து தெரிந்திருக்கலாம்.

சென்னை காங்கிரஸ் கமிட்டி கூட்டம் சென்னை மவுண்ட்ரோட் மகாஜன சபை மண்டபத்தில் திரு. சீனிவாசய்யங்கார் காலிகளைக் கொண்டு போய் வைத்துக் கொண்டு கூட்டங்கூட்டியிருப்பதாய்த் தெரிகின்றது. அப்படி இருந்தும் அய்யங்காருக்கு விரோதமான கூட்டமே மெஜாரிட்டியாக வந்து கூடிவிட்டார்கள். திரு.சத்தியமூர்த்தி அக்கிராசனம் வகித்து, நமக்கு வேண்டியவர்கள் போக, மற்றவர்கள் ஓட்டுச் செய்யாமலிருக்கும்படியாக தந்திரமாய் இத்தனையாந் தேதிக்குமேல் அங்கத்தினரானவர்கள் தவிர மற்றவர்கள் ஓட்டுக் கொடுக்கக் கூடாது என்று ரூலிங் கொடுத்துவிட்டாராம். அதன் பேரில் திரு.சத்தியமூர்த்தி, திரு. கிருஷ்ணசாமிப் பாவலர் என்பவரை ஏவிவிட்டுக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை கன்னா பின்னா என்று வையச் சொன்னாராம். கூட்டம் தைரியமாய் எதற்கும் தயாராயிருந்து எதிர்க்கவே திரு.அய்யங்காரும் அவரது தாசர்களும், கூலிகளும் எழுந்து ஓடிப்போய் விட்டார்களாம். பிறகு மற்றவர்கள் இருந்து தேர்தலை நடத்தி இருக்கின்றார்கள். வழக்கம்போல் அய்யங்கார் கூட்டம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி நிர்வாக சபையார் என்கின்ற முறையில் அத்தேர்தலை செல்லுபடி அற்றது என்று சொல்லப் போகின்றார்கள் என்பது உறுதி. எனவே காங்கிரஸ் என்பது திரு. சீனிவாசய்யங்காருக்கும் அவர்களின் தாசர்களுக்கும் கூலிகளுக்கும் மாத்திரம்தான் சொந்தமேயன்றி மற்றபடி பொது ஜனங்களுக்கு அதில் ஒன்றும் சம்பந்தம் இல்லை என்பதற்கு இனியும் என்ன சாட்சி வேண்டும்.

**குடி அரசு - கட்டுரை - 21.07.1929**



# கோவில் பிரவேசம்

வங்காளத்தைச் சேர்ந்த குல்னாகாளி கோவிலுக்குள் தீண்டாதார் எனப்படுவோர் செல்ல வேண்டுமென்று சத்தியாக்கிரகம் செய்து வந்ததும், அதனால் சிலர் கைதியானதும் சென்ற வாரப் பத்திரிகையில் தெரிந்திருக்கலாம். இப்போது இந்துக்கள் என்பவர்கள் எல்லோரும் தீண்டாதார் எனப்படுவோர் உள்பட தாராளமாய் கோயிலுக்குள் சென்று சாமி தரிசனம் செய்யலாம் என்பதாக மேல் ஜாதியார் என்பவர்கள் ஒப்புக் கொண்டு ராஜி ஏற்பட்டு கைதியாக்கப்பட்டவர்களையும் விடுதலை செய்துவிட்டார்கள்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 21.07.1929**



RangaRakes tamilnavarasam.com

# ஆதிதிராவிடர் சுயமரியாதை மகாநாடு

சென்னை நேபியர் பார்க்கில் (தில்லை வனத்தில்) ஆதி திராவிட சுயமரியாதை மகாநாடு கூடிய விபரம் மற்ற பக்கத்தில் வெளியாயிருக் கின்றது. அதில் ஒரு முக்கியத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம். அதாவது:-

**"ஆறரைக் கோடி மக்கள் அடங்கிய எங்களுடைய பெரும் சமூகமானது இந்து மதத்தில் சேர்க்கப்பட்டிருப்பதன் நிமித்தம் தீண்டப்படாதவர்களாயிருப்பதாலும், அம்மதத்தில் சமத்துவ உரிமை இல்லாதிருப்பதாலும் இனி அடுத்து வருகின்ற சென்சஸ் கணக்கில் எங்களை இந்துக்கள் என்று பதியாமலிருக்கும்படியும், சர்க்கார் தஸ்தாவேஜுகளிலும் எங்களை இந்துக்கள் என்கின்ற பதவியிலிருந்து நீக்கிவிடும்படிக்கும் செய்யும்படி சர்க்காரையும், சட்டசபை அங்கத்தினர்களையும் இம்மகாநாடு வேண்டிக் கொள்ளுகின்றது."**

என்பதாக தீர்மானித்திருக்கின்றது. திருவாங்கூர் ராஜ்யத்திலும் சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக முதுகுளத்தூர் என்கின்ற இடத்தில் கூடிய ஒரு எஸ்.என்.டி.பி. யோகத்தில் அதாவது ஈழவ சமுதாய மகாநாட்டில் இதை அநுசரித்து ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதாவது "இந்து மதத்தில் மனித சுதந்திரம் இல்லாததால் இம்மதத்தை விட்டு வேறு மதத்திற்கு போய்விட வேண்டும்" என்பதாகும்.

இத்தீர்மானம் ஒன்று வரப்போவதாகத் தெரிந்து சில கிறிஸ்தவப் பாதிரிகளும், ஆரிய சமாஜிகளும், புத்தமத பிரமுகர்களும் அக்கூட்டத்திற்கு வந்திருந்து தங்கள் தங்கள் மதத்தின் பெருமையை எடுத்துச் சொன்னார்கள்.

திரு. ஈ.வெ.ராமசாமியும், அம்மகாநாட்டிற்கு போயிருந்தார். அந்த சமயத்தில் திரு.ராமசாமி அத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசியபோது இதுசமயம் வேறு மதத்திற்குப் போக வேண்டியதில்லை என்றும், இனியும் சிறிது காலம் பார்க்கலாம் என்றும், அப்படி மதமாறுவதாயிருந்தால் மகமதிய மதத்திற்குப் போவது நல்லதென்றும், ஏனெனில், மதத்தின் பேரால் மக்கள் இப்போது மகமதிய மதத்தைக் கண்டால்தான் பயப்படுகின்றார்கள் என்றும், அதில் பெண்கள் விஷயம் தவிர மற்ற வழிகளில் உண்மையான சர்வ சுதந்திரமும் இருக்கின்றதென்றும், நமது நாட்டிலுள்ள கிறிஸ்தவ மதம் வர வர பார்ப்பன மதம் மாதிரியாகி வருகின்றதென்றும், அதிலும் ஜாதி உயர்வு



பாராட்டப்படுகின்றதென்றும், ஆரிய சமாஜம் என்பது பார்ப்பன மதத்தின் வேறு ஒரு ரூபமே ஒழிய வேறில்லை என்றும், பௌத்த கொள்கைகள் இப்போதுள்ள மற்றயெல்லா மதங்களின் கொள்கைகளைவிட மேலானது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை என்றும், ஆனாலும் பார்ப்பன மதத்தை அடக்கி நமது நாட்டிற்கு உண்மையான விடுதலை தேடிக் கொடுக்க வேண்டுமானால் இது சமயம் மகமதிய மதத்தால் தான் முடியும் என்றும் பேசினார். பிறகு அவர் சொன்னபடியே. இப்போது மதம் மாற வேண்டிய தில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. இப்போது ஆதிதிராவிட மகாநாட்டிலும் சரியாக அதேபோல் இல்லாவிட்டாலும், இந்து மதத்திலிருந்து விலகிக் கொள்ளுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அப்படியானால் இனிமேல் அவர்கள் என்ன பெயரால் அழைக்கப்படுவது என்று சிலர் கேட் கலாம். ஒரு பெயராலும் அழைக்க வேண்டியதில்லை என்றும், அவசியமா னால் இந்தியன் என்று அழைக்கலாம் என்றும் சொல்லுவோம். மேலும் சர்க்காரில் குறிக்க ஏதாவது ஒரு பெயர் வேண்டாமா என்றால் அதற்காக இப்போது இந்தியாவில் உள்ள 20 கோடி இந்துக்கள் என்பவர்களை எப்படி அரசியல் முறையில் மகமதியரல்லாதவர்கள் என்று அழைக்கப்படுகின்றதோ அதுபோல் $6^1/_2$ கோடி தீண்டப்படாத மக்கள் என்பவர்களை இந்துக்களல் லாதவர்கள் என்று அழைக்கலாம் என்று சொல்லுவோம்.

பார்ப்பனரல்லாதவர்களும், மகமதியரல்லாதவர்களும் இருக்கும் போது இந்துக்களல்லாதவர்கள் என்று ஒரு கூட்டம் இருப்பதால் ஒன்றும் முழுகிப் போய்விடாதென்றும், அதனால் எவ்வித இழிவும் ஏற்பட்டு விடா தென்றும் சொல்லுவோம். அப்படி ஒரு இழிவு ஏற்படுவதாயிருந்தாலும் இந்துக்கள் என்கின்ற பெயரை வைத்துக் கொண்டிருப்பதன் மூலம் ஏற்பட்டி ருக்கும் இழிவைவிட அதிகமான இழிவாய் விடாதென்பதே நமது அபிப் பிராயம். இந்து மதம் என்பதாக ஒரு மதமே இல்லாத நிலையில் அதன் பேரில் மக்கள் அழைக்கப்படுவதை மிகவும் அக்கிரமமான செய்கையாகும். அப்படி இருக்க அதன் பேரால் மனிதனின் உரிமைகளை மறுத்து கோயில், குளம், தெரு, பள்ளிக்கூடம் முதலியவைகளின் உரிமைகளை மறுப்பது எல்லாவற் றையும்விட அக்கிரமமும் அயோக்கியத்தனமுமாகும்.

சாதாரணமாக இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்பதை பற்றி நாமே தனித்து சொல்லுவதாகவும், அதைப் பற்றிய படிப்பு சிறிதும் இல்லை என்றும், அதுவும் பார்ப்பனர்கள் மீதுள்ள துவேஷத்தால் சொல்லுவதாயும் சிலர் சொல்லுகின்றார்கள்.

ஆனால் இப்போது நமது நாட்டில் ஆங்கிலத்திலும் தமிழிலும் வல்லவர் என்றும், சமய ஆராய்ச்சியில் தேர்ந்தவர் என்றும், மிக்க நுண்ணிய அறிவுடையவரென்றும் பல்லோரால் மதிக்கப்படும் உயர்திருவாளர் திருநெல் வேலி கா.சுப்பிரமணிய பிள்ளை எம்.ஏ.எம்.எல்., அவர்கள் சுமார் 7, 8 வருடங்களுக்கு முன் செந்தமிழ்ச்செல்வி என்னும் புத்தகத்தில் எழுதி



RangaRakes tamilnavarasam.com

இருப்பதை இங்கு அப்படியே எழுதுகின்றோம்.

“முதல் முதல் மக்கள் உள்ளத்தே பதிக்க வேண்டியது யாதெனில் இந்து மதம் என்ற ஒரு சமயம் உண்மையில் கிடையாது என்பதும் இந்துமதம் என்பது இந்திய நாட்டிலுள்ள மக்களின் சமயம் என்று கொள்ளப்படும் சிந்து நதிக் கரையில் உள்ளவர்களைக் குறிக்கும் ஹிந்து என்ற பாரசீக சொல்லை கிரேக்கர் “இந்து” என வழங்க அவர்களை பின்பற்றி மேலை தேசத்தார் யாவரும் இந்நாட்டிலுள்ளாரை இந்துக்கள் எனவும் இந்நாட்டை இந்தியா எனவும் வழங்கலாயினர். இந்து என்ற சொல் இப்பொருளில் ஆரியம், தமிழ் என பண்டைய இரு மொழி நூல்களிலும் கிடையாது.

இந்நாட்டிலே சமயங்களைப் பற்றி சிறிதும் அறியாதவர்கள் தங்கள் மதத்தை இந்துமதம் என்று கூறுவார்கள்.... ஐரோப்பியம், அமெரிக்கம், ஆங்கிலம் என்ற சொற்கள் வாயிலாக அன்னோரது சொற்களும் நாகரிகங்களும் குறிக்கப்படுவதே யல்லாது சமயம் குறிக்கப்படாமை போல இந்து என்ற சொல்லும் இமயம் முதல் குமரி வரையிலுள்ள மக்களின் நாகரிகத்தைக் குறிப்பதேயன்றி சமயத்தைக் குறிப்பதன்று. இக்கருத்தை சுவாமி விவேகானந்தரும் தமது சொற்பொழிவு பலவற்றில் சுட்டியுள்ளார்..... ஒரு சமயத்திற்குப் பெயர் அதன் கடவுளை வைத்தாதல், தலைமை ஆசிரியரை வைத்தாதல், அருள் நூலை வைத்ததால் எழுதுவது முறை..... கிறித்துமதமும் மகம்மதிய மதமும் தங்கள் தலைவரது பெயரைத் தமக்குப் பெயராகக் கொண்டுள்ளன. அவ்வாறே புத்த மதமும் ஆருகதமுமாம். ஆனால் ‘இந்து’ என்ற சொல்லோ சமயக்கருத்து யாதொன்றையும் குறித்தில்லை.”

இக்குறிப்பில் திரு. பிள்ளை அவர்கள் சுவாமி விவேகாநந்தரும் இதே அபிப்பிராயம் கொண்டதாகக் கூறி இருக்கின்றார். எனவே இப்படி ஒரு அர்த்தமே இல்லாத வார்த்தையின் பேரால் மதம் என்று ஒன்றைக் கற்பித்துக் கொண்டு சமயத்திற்கேற்றபடி யெல்லாம் தங்கள் தங்கள் சுயநலத்திற்கேற்றபடி யெல்லாம் கொள்கைகளைச் சொல்லிக்கொண்டு 20 கோடி மக்களையும், பல வளப்பமுள்ள ஒரு பெரிய தேசத்தையும் பாழாக்கி வருவதை இனியும் எத்தனை காலத்திற்கு மக்கள் பொறுத்துக்கொண்டிருப்பது என்பது விளங்கவில்லை.

இதைப்பற்றி மற்றொரு சமயம் டாக்டர் எஸ். சுப்பிரமணிய அய்யரான ஒரு பார்ப்பனர் அவர்களை “ காமன்வீல்” என்ற பத்திரிகையில் எழுதி இருப்பதாவது :-

“ இந்துக்களின் தற்கால நிலைமையைக் கவனித்துப் பார்த்தால் தாறுமாறாக சீர்குலைந்து அலங்கோலப்பட்டு இடிந்து பாழாகக் கிடக்கும் இந்து மதம் என்னும் பழைய கோட்டை அங்கே சிறிது இங்கே சிறிதாக எவ்வாறு ஒழுங்குபடுத்தி முட்டுக்கொடுத்து பழுதுபார்த்தாலும் பயன்படாது. தயவு தாட்சண்ணியமின்றி வெட்டித்தள்ளி ஒதுக்கிவிட்டு ஆதி அடிப்படைகளின் மீது நமது தற்கால அவசியத்திற்கும் உபயோகத்திற்கும் ஏற்றதாகச் சாதாரணமான புதுக் கட்டிடம் ஒன்று கட்டுவதே உத்தமம் என்று தோன்றுகின்றது” என்று எழுதி இருக்கின்றார்.

இன்னும் அநேக பெரியோர்களும், ஆராய்ச்சியாளர்களும் இதே அபிப்பிராயம் கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையில் குழந்தை மணத்தைத் தடுக்கவும் மக்கள் தெருவில் நடக்கவும், சாமிகளின் பேரால் கோயில்களில் நடக்கும் விபசாரித்தனத்தைத் தடுக்கவும், சிறு குழந்தைகளைப் படுக்கை அறையில் தள்ளுவதை ஒழிக்கவும் செய்யப்படும் முயற்சிகளை இம்மாதிரி ஒரு பொய் மதம் தடுப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கும் மக்கள் எந்த விதத்தில் மானமும், வீரமும், யோக்கியமும் உடையவர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியும்.

எனவே, ஆதிதிராவிட மக்கள் தங்களை எப்படி இந்துக்கள் என்கின்ற பதிப்பில் பதியக்கூடாது என்கின்றார்களோ அதுபோலவே நாமும் சொல்ல வேண்டியவர்களா யிருக்கின்றோம். ஏனெனில் இந்துக்கள் என்கின்ற பதிப்பில் நம்மை பதிந்து கொள்ள நாம் சம்மதிப்பதனால் நமக்கு ஆதிதிராவிடர்களை விட கீழான நிலையான “சூத்திரன்” என்கின்ற பதவிதான் கிடைக்கின்றது. அதை நீக்கிக் கொள்ள இதுவரை எந்த சீர்திருத்தக்காரரோ, சட்டசபை பிரதிநிதியோ, வேறு எந்த சமூகத் தலைவரோ இதுவரை முயற்சித்ததாகத் தெரியவில்லை. “ஆஸ்திகம் போச்சு” “கடவுள் போச்சு” “மதம் போச்சு” “சமயம் போச்சு” “புராணம் போச்சு” “கலை போச்சு” என்று கூப்பாடு போட்டு கூலிபெற நமது நாட்டில் ஆள்கள் மலிந்து கிடக்கின்றதே யல்லாமல் மானம் போச்சு, மனித உரிமை போச்சு, மிருகத்திலும் கீழாச்சு என்று சொல்லி மனிதத் தன்மைபெற யாரையும் காணோம். எனவே நாமும் ஆதிதிராவிட சகோதரர்கள் போலவே நம்மையும் இந்து என்னும் தலையில் இருந்து பிரித்து விடுஎன்று கேட்கும் நாள் சீக்கிரத்தில் வரும் என்றே கருதுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 21.07.1929**



RangaRakes

tamilnavarasam.com



10 குடி அரசு

குடி அரசு

சென்னை 1929 ஜூலை 28ம்

கடவுளும் மதமும்

(1)

# கடவுளும் மதமும்

## (1)

இவ்வாரத்திய தலையங்கம் கடவுளும் மதமும் என்று தலைப் பெயர் கொடுத்து எழுதப்புகுந்ததன் முக்கிய நோக்கம் என்னவெனில், சுயமரியாதை இயக்கம் நாட்டில் பரவ ஆரம்பித்தபிறகு அதிலும் அவ்வியக்கம் நாட்டில் சற்று செல்வாக்குப் பெறத் தொடங்கிய பின்பு மக்களுக்குள் தானாகவே ஒருவித குழப்ப உணர்ச்சி தோன்றியிருப்பதை உணர்கின்றோமாத லினாலேயாம். அதோடுகூட பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாதார்களில் அரசியல், தேசீயம் ஆகியவைகளின் பேரால் பிழைக்கும் பிழைப்புக்காரர் களும், சமயம், புராணம், பிரசங்கம் ஆகியவைகளின் பேரால் பிழைக்கும் பிழைப்புக்காரர்களும் இவ்வியக்கத்தை எதிர்க்கக் கடவுளையும் மதத்தை யும் பற்றிய பொது மக்களின் குழப்பத்தைத் தங்களுக்கு ஆதாரமாய் வைத்துக் கொண்டும், மற்றும் திரித்துக் கூறிக் கொண்டும் விஷமப் பிரசாரம் செய்து வருவதானாலும், நமது இயக்கத்தில் உண்மையான பற்றுக் கொண்ட உண்மை நண்பர்களில் சிலர் இவ்விஷமப் பிரசாரத்தைக் கண்டு பயப் படுவதாகத் தெரிவதாலும், மற்றும் சில பெரியோர்களும், சமய சம்பந்தமாக மனத் துடிப்புக் கொள்வதாலும் நமது நிலையையும், கடவுள் மதம் என்பது பற்றி நாம் கொண்டுள்ள கருத்தின் நிலையையும் சற்று விளக்கிவிட வேண்டுமென்பதாகக் கருதி இந்தத் தலைப்புக் கொடுத்து எழுதப் புகுந்தோம். இவைகளைப் பற்றி இதற்கு முன்னும் பலதடவை எழுதியுள்ளோம். ஆயினும் அவைகளையும்விட இது சற்றுத் தெளிவாக இருக்கலாம் என்கின்ற எண்ணத்தின் மீதே இதை எழுதுகின்றோம். வாசகர்கள் தயவு செய்து இதைச் சற்று நிதானமாகவும் கவனமாகவும் படித்துப்பார்க்கும்படி வேண்டுகின்றோம். இக்கட்டுரையானது இதே தலைப்பின் கீழ் திருநெல் வேலி ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் முடிவுரையின்போது நம்மால் எடுத்துச் சொல்லப்பட்டதை அனுசரித்தும், சில நண்பர்கள் அதை விளக்கித் தலையங்கமாக எழுதும் படி சொன்னதை அனுசரித்தும் எழுதப்பட்டதாகும்.

முதலாவதாக, நமக்குக் கடவுளைப் பற்றியாவது, மதத்தைப் பற்றியா வது சிறிதும் கவலை இல்லை என்பதாகவும், கஷ்டப்படும் மக்களின் துன்பம் நீங்கி அவர்களுக்கு அறிவு, ஆற்றல், இன்பம் ஆகியவைகளில் உள்ள





RangaRakes
tamilnavarasam.com

கட்டுப்பாட்டை உடைத்து விடுதலையை உண்டாக்க வேண்டும் என்பதே முக்கிய கவலை என்பதாகவும் அநேக தடவைகளில் வெளியிட்டிருக் கின்றோம். அதுவும் பலர் நம்முடைய இம்முயற்சியில் கடவுளையும் மதத்தையும் கொண்டுவந்து குறுக்கே போட்டுவிட்டதால் தான் நாம் அதைப் பற்றி கவலையில்லை என்று சொல்ல வேண்டியதாயிற்றே யொழிய உண்மையில் கடவுளையும் மதத்தையும் பற்றி பேச வேண்டும் என்கின்ற அவசியத்தையோ, ஆசையையோ கொண்டு நாம் அதில் பிரவேசிக்க வில்லை. அது போலவே தான் சைவ சமயத்தைப் பற்றியும் நாம் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டதும் என்போம். எப்படி எனில் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் நமக்கு எதிராகத் தம்மால் கூடிய சூழ்ச்சிகள் எல்லாம் செய்து பார்த்தும் ஒன்றிலும் பயன் பெறாததால் கடைசியாகச் சமயமென்றும், சமயப் பெரியார் என்றும் கூறிக் கொண்டு அவ்வார்த்தை களையே தமது ஆயுதமாகவும், சமய சம்பந்தமான சில பைத்தியக் காரர்களைத் தமக்குப் படையாகவும் வைத்துக் கொண்டு அவர்களைத் தெருவில் இழுத்து நம்மீது உசுப்படுத்திவிட்டுச் சூழ்ச்சிப் போர் தொடுக்க ஆரம்பித்ததன் பலனாய் சைவசமயம் என்பதும் சமயாச்சாரியார்கள் என்பவர்களும் சந்திக்க வரவேண்டியவர்களானதோடு சைவப் பெரியார்கள் என்பவர்களின் சாயமும் வெளுக்க வேண்டியதாய் விட்டது. எனவே இன்றைய தினம் பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், ராமாயணம், பாரதம் ஆகியவைகளிலுள்ள கதைகளை நம்பி முக்கிய கதாநாயகர்களைக் கடவுள்களாக மதித்து வணக்கம், பூஜை, உற்சவம் செய்ய எவனெவன் சம்மதிக்கின்றானோ அவன் மாத்திரமே கடவுள் நம்பிக்கையும் சமயப் பற்றும் கொண்டவன் என்றும், மற்றவர்கள் நாத்திகர்கள், சமயத் துரோகிகளெனவும் தீர்மானிக்கப்பட்டு அதுவே முடிந்த முடிவாகவும் சொல்லப்பட்டுவிட்டது. இது எப்படி இருந்தபோதிலும், கடவுள் மதம் என்பது என்னவென்பது பற்றியும், இவை எப்படி உண்டாயிற்று என்பது பற்றியும் இவற்றை உண்டாக்கியவர்கள் கெட்ட எண்ணத்தோடு உண்டாக்கினார்களா? அல்லது நல்ல எண்ணத்தோடு உண்டாக்கினார்களா? அல்லது அறியாமையினாலுண் டாக்கினார்களா? என்பவைகளைப் பற்றியும் இவற்றில் நமது அதாவது மக்கள் கடமை என்ன என்பதுபற்றியும் சற்று ஆலோசித்து பார்க்கக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

முதலாவதாக, இங்கு குணம், உருவம், பெயரற்ற தன்மையுடைய கடவுள் என்பதைப் பற்றியும், மக்களின் வாழ்க்கை நலத்திற்காக ஏற்படுத்தப் பட்ட கொள்கைகள்தான் மதம் என்று சொல்லப்படும் மதத்தைப் பற்றியுமே, இங்கு விவரிக்க கருதியுள்ளோமே தவிர மற்றப்படி பல கடவுள்களின் தன்மையையும், மதப் பிரிவுகளான கிறிஸ்து, மகமதியம், ஜைனம், பௌத்த சீக்கிய, சைவ, வைணவ, நிரீச்சுவாத, உலகாயுத, சாக்கிய, வாம முதலிய பல உள் மதங்களைப் பற்றியும் நாம் இங்கு தனிதனியாகப் பிரஸ்தாபிக்க உத்தேசமில்லை. ஏனெனில், அவற்றிற்கு ஏற்கனவே மறுப்புகள் தாராளமாய்



வெளிப்பட்டு ஒருவருக்கொருவர் பதில் சொல்ல முடியாமல் தத்துவார்த்தம் என்கின்றதற்குள் அடைக்கலம் புகுந்தும் நம்பித்தான் ஆகவேண்டும் என்கின்ற நிர்பந்தத்திற்குள் புகுந்துமே தான் ஒவ்வொருவர்களும் அவரவர்கள் கடவுளையோ, கடவுள் தூதர்களையோ, அவதாரங்களையோ, சமயங்களையோ, சமயாச்சாரிகளையோ காப்பாற்றிக் கொள்ள முடிந்ததே ஒழிய அறிவின் மீதோ, ஆராய்ச்சியின் மீதோ, நியாயத்தின் மீதோ, நிலை நிறுத்த முடியாமல் போய்விட்ட விஷயம் உலகமறிந்ததாகும். ஆதலால் இத்தலையங்கத்தில் நாம் அவற்றில் பிரவேசிக்கவில்லை.

முதலாவது மக்களுக்குக் கடவுள் எப்பொழுது எப்படி ஏற்பட்டது என்பதைப் பற்றி ஆராய்வோம். மனிதன் பிறந்து வளர்ந்து நினைக்கப்பட்ட பிறகுதான் கடவுள் என்கின்ற ஒரு வஸ்து நிச்சயம் ஏற்பட்டு இருக்க வேண்டும். அதை யாரும் மறுக்கமுடியாது. ஏனெனில் இப்போது கூட மக்களுக்குப் பிறர் சொல்லிக் கொடுத்த பிறகுதான் கடவுள் என்கின்ற பேச்சும் நினைப்பும் ஏற்படுகின்றதே தவிர தானாக ஏற்படுவதில்லை. எப்படி எனில், சிறு குழந்தைகளை நாம் கட்கத்தில் இறுக்கிக் கொண்டு ஒரு உருவத்தையோ, வஸ்துவையோ காட்டி, சாமி என்றும், அதைக் கைக்கூப்பி கும்பிடு என்றும் சொல்லிக் கொடுத்த பிறகே குழந்தை சாமியையும் கும்பிடவும் அறிகின்றது. அதுபோல ஆதியிலும் மனிதன் பிறந்த பிறகுதான் அவன் மனதிற்கு கடவுள் நினைப்பு தோன்றியிருக்கவேண்டும். அது எப்படி என்றும், எப்போதென்றும் பார்ப்போமானால் சாதாரணமாக மனிதனுக்கு அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சி வளர்ச்சியும் இல்லாத காலத்தில் தான் கடவுள் நினைப்பு தோன்றி இருக்க வேண்டும். கடவுள் என்பது – கடவுள், தெய்வம், அல்லா, காட், என்ற தமிழ், சமஸ்கிருதம், துலுக்கு, ஆங்கிலம் முதலிய பல பாஷைகளில் பல சொற் களாக இருந்தாலும் குறியில் அர்த்தத்தில் உலகத் தோற்றத்திற்கும், நடப் பிற்கும், அழிவிற்கும் காரணமாகிய ஒரு சக்தியையே குறிப்பிடுவதாகவும் அதாவது சிலரால் இயற்கை என்று சொல்லப்படுமானால் அவ்வியற்கையின் இயங்குதலுக்கும், பஞ்சபூதக் கூட்டு என்று சொல்லப்படுமானால் அக்கூட்டின் சேர்க்கைக்கும் ஏதாவது ஒரு சக்தி இருந்துதானே ஆக வேண்டும் என்பதுவும், அந்த சக்திதான் கடவுள், எல்லாம் வல்ல ஆண்டவன் – அல்லா, காட் என்று சொல்லப்படுகின்றதென்று சொல்வதானாலும், அந்த சக்தி என்னும் கடவுளே எப்படி மக்கள் மனத்திற்கு வந்தார் என்பதுதான் இங்கு விசாரிக்கத்தக்கதா யிருக்கின்றது. ஆகவே அந்த சக்தி மனிதனுக்குத் தோன்றிய காலம் எது என்பதாகவும், அது நம் நாட்டைப் பொறுத்தவரை எப்படியிருந்தது என்பதாகவும் பார்க்க வேண்டுமானால், நம் நாட்டிலுள்ள கடவுள்களைக் கொண்டுதான் அதைத் தாராளமாய் உணர முடியும். அதாவது இப்போது நமது நாட்டிலுள்ள கடவுள்கள் எவை யென்றால் பூமி, மலை, காற்று, நெருப்பு, நதி, சூரியன், சந்திரன், நட்சத்திரம், மழை, இடி, மின்னல், மேகம், நோய்கள், அவை தீர்க்க வேண்டியவைகள் முதலிய அநேக விஷயங்கள் கடவுளாகக் கருதப்படுகின்றது, இவைகளெல்லாம் இவற்றின்



RangaRakes tamilnavarasam.com

உண்மையை அறிய ஆற்றல் இல்லாத காலத்தில் கடவுளென்று ஒப்புக் கொள்ளப்பட்டவைகள், அதிலும் இமய மலையே கைலையங்கிரியாகவும், அதுவும் வெள்ளிமலையாகவும் அங்கு கடவுள் இருப்பதாகவும், அங்கிருந்து வரும் நீர் அம்மலையிலுள்ள கடவுளின் தலையிலிருந்து வருவதாகவும், கருதப்பட்டு இமயமலைக்கு அப்பால் ஒரு நாடும் கண்டுபிடிக்க முடியாதிருந்ததும், மேல் நாட்டை மேல் லோகமென்றும், கீழ்நாட்டை பாதாள லோகம், நரகலோகம் என்றும் இப்படி பலவாறாகக் கடவுள் தன்மையைச் சொன்னதற்குக் காரணமென்னவென்று பார்க்கும் போது அவற்றின் உண்மையை அறிய முடியாததாலேயே அவை கடவுளென்றும், அவற்றின் இயங்குதல் கடவுள் சக்தி என்றும் சொல்ல வேண்டிய அவசியம் தானாக ஏற் பட்டது. இப்போதும் மனிதனை தன்னால் முடிந்தவைகள் போக முடியாத வைகளுக்கே கடவுள் சக்தி என்று சொல்லி விடுகின்றான். உதாரணமாக, சிறு குழந்தைகள் ஒரு ஜால வேடிக்கைக்கார னுடைய செய்கையை மந்திர சக்தி என்றும், தெய்வசக்தி என்றும், உபாசனாச் சக்தி என்றும் குட்டிச் சாத்தான் சக்தி என்றும் கருதுகிறார்கள். அப்பையனாயிருந்து அப்படியே கருதியிருந்த நாம் இப்போது அறிவு வளர்ச்சி பெற்ற பின் அந்த ஜால வேடிக்கைகளை மந்திர சக்தி என்று எண்ணாமல் தந்திரம், கைத்திறம் என்றும் சொல்லுகின் றோம். மற்றும் அந்த ஜால வேடிக்கைக்காரன் செய்யும் ஜாலத்தின் வழி இன்னதென்று நமக்குத் தெரியாவிட்டாலும் கூட நாம் அவற்றை ஒரு காலமும் மந்திர சக்தி என்றோ, தெய்வ சக்தி என்றோ சொல்லாமல் “இது ஏதோ தந்திரம் தானே ஒழிய வேறில்லை. ஆனால் அது இன்னது என்று கண்டுபிடிக்க முடியவில்லை” என்று சொல்லி விடுகின்றோம். எனவே, ஒரே காரியம் நமக்கே ஒரு காலத்தில் மந்திரமாகவும், தெய்வ சக்தியாகவும் தோன்றியது. பிறகு அது தந்திரம் என்று தோன்றக் காரணம் என்ன வென்றால் அது அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சிப் பலனுமேயாம். அது போலவே நமக்கு இப்போது தெய்வசக்தி, கடவுள் சக்தி என்று தோன்றுகின்ற காரியமெல்லாம் மேல் நாட்டாருக்கு கடவுள் சக்தியாகத் தோன்றுவதில்லை. உதாரணமாக சூரிய சந்திரகிரகணம் இன்னது என்று கண்டுபிடிக்க முடியாத காலத்தில் நாம் அவைகளுக்கு ஒரு தெய்வ சக்தியைக் கண்டுபிடித்து சூரியன் என்கின்ற தெய்வத்தை ராகு என்கின்ற பாம்பு பிடிப்பதாகவும், அது சூரியன் என்கின்ற கடவுளுக்கு ஏற்பட்ட சாபம் என்றும் சொல்லி அச்சாபம் தீர நாம் மந்திரங்கள் ஜெபித்து அத்தோஷம் தீர ஸ்நானமும் செய்து வருகின்றோம். இது வானசாஸ்திரம் தெரியாத காலத்தில் ஏற்படுத்திக் கொண்ட கருத்தாகும். இப்போது வானசாஸ்திரம் தெரிந்தவர்கள் பூமி, சூரியன், இவற்றின் இயங்கு தல் அதன் கால அளவு ஆகியவைகளைக் கண்டு பிடித்த பின் சூரியனைப் பாம்பு கடிப்பதில்லை என்பதையும் ஒருவாறு நன்றாய் உணருகின்றோம்; அது போலவே எங்கிருந்து எப்படி தண்ணீர் வருகின்றதென்பது தெரிந்தவுடன் நதிக் கடவுளும், மேகக் கடவுளும், வர்ண பகவானும் சிறிது சிறிதாக நம்மனதில் மறையத் தொடங்கி விட்டன. அது போலவே வியாதிகள் எப்படி



வருகின்றன என்கின்றதான சுகாதார ஆராய்ச்சியும், உடற்கூறு ஆராய்ச்சியும் நமக்கு தெரியப் புறப்பட்ட பின்பு பேதி, மாரி அம்மை முதலிய தெய்வங் களின் உணர்ச்சியும் மதிப்பும் சிறிது சிறிதாக மறையத் தலைப்பட்டன. இதுபோலவே காற்று, கருப்பு, பேய் முதலியவைகளும் மறைந்து வருகின்றன. இந்த முறையில் இனியும் நமக்குள் மீதி இருக்கும் கடவுள் உணர்ச்சிகள் எவை என்று பார்ப்போமானால் காரண காரியம் முதலிய விவரங்கள் கண்டுபிடிக்க முடியாதவைகளையே கடவுள் செயலென்றும், கடவுள் சக்தி என்றும் சொல்லி வருகின்றோம். இவைகளும் நாளுக்கு நாள் மனிதன் அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சியும் முதிர முதிர மறைந்து கொண்டே தான் வரும். மேலும் இப்போது ஒருவருக்குக் கடவுள் சக்தி என்று தோன்றப்படும் காரியங்கள் மற்றொருவருக்குக் கடவுள் சக்தி என்று தோன்றப்படாம லிருப்பதையும் பார்க்கின்றோம். அது அவ்விருவருடைய அறிவு ஆராய்ச்சி ஆகியவற்றின் வித்தியாசமேயாகும்.

இப்போதும் நம் மனத்திற்கு எட்டாத, காரியங்களை மேனாட்டார் செய்யும் போது நாம் அதிசயப்பட்டாலும் அதை மந்திர சக்தி என்று நாம் சொல்லத் துணிவதில்லை. இந்த அளவுக்கு நாம் தைரியமாக வந்து விட்டோமென்றாலும் நமக்குப் பூரண அறிவும் ஆராய்ச்சி முடிவும் ஏற்படும் வரை கடவுள் உணர்ச்சி நம்மை விட்டு விலக முடியாது. அன்றியும் வாழ்க் கையின் பக்குவமடையாதவர்களுக்குக் கடவுள் உணர்ச்சி இருந்தே தீர வேண்டியதாயுமிருக்கின்றது. அதாவது கஷ்டப்பட்டு ஏமாற்ற மடைந்த வனுக்கும் ஈடு செய்ய முடியாத நஷ்டமடைந்தவனுக்கும் கடவுள் செயல் என்பதைச் சொல்லித்தான் ஆறுதலையும் திருப்பதியையும் அடையச் செய்ய வேண்டியிருக்கின்றது. நல்ல அறிவும் ஆராய்ச்சியும் உடையவர்களும் தங்களுக்கு காரண காரியம் எட்டாத இடத்திலும், ஈடு செய்ய முடியாத இடத்திலும் கடவுள் செயல் என்பதைக்கொண்டுதான் திருப்தி அடைகின் றார்கள். அப்போது தங்கள் அறிவுக்கு மேல் ஒன்று இருப்பதை எண்ணித் தீர வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் உறுதியான பக்குவ மடைந்தவர்கள் எந்த விஷயத்திற்கும் தங்களுக்குத் தெரிந்த காரணத்தைக் கொண்டு சமாதானமடைவதும் தெரியாததாயிருந்தால் நமக்கு எட்டவில்லை என்றோ அல்லது இதுதான் இயற்கை என்றோ கருதி திருப்தியடைவதுமாய் இருக்கின்றார்கள். எனவே சாதாரண மக்கள் கடவுளுக்கும், சற்று அறிவு டைய மக்கள் கடவுளுக்கும், ஆராய்ச்சிக்காரர்கள் கடவுளுக்கும், பக்குவ மடைந்தவர்கள் எண்ணத்திற்கும் அநேக வித்தியாசமுண்டு. ஒருவொருக் கொருவர் கடவுள் வணக்கத்திலும், கடவுள்மீது சுமத்தும் பொறுப்பிலும் அநேக வித்தியாசமுண்டு.

(மற்ற விவரம் கடவுளும் மதமும் என்னும் இரண்டாவது வியாசத்தில் வரும்.)

**குடி அரசு - தலையங்கம் - 28.07.1929**



RangaRakes tamilnavarasam.com

## வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

நமது இந்திய நாடானது சுதந்திரமும் சுயமரியாதையும் பெற வேண்டுமானால் முதலாவது இந்திய மக்களுக்குள் ஒற்றுமையும் பரஸ்பர நம்பிக்கையும் ஏற்பட வேண்டும் என்பதும், அவ்வித ஒற்றுமையும் பரஸ்பர நம்பிக்கையும் ஏற்படுவதற்கு இடமில்லாமலிருக்கும்படியான அளவுக்கு இந்தியாவானது பல்வேறு மதங்களாகவும், தேசத்தார்களாகவும், ஜாதி களாகவும், அவற்றுள் அளவற்ற வகுப்புகளாகவும் பிரிந்திருக்கின்றது என்பதும் யாவருமே அறிந்த விஷயமாகும். இவ்வித்தியாசங்களை ஒழிப்ப தற்கென்று வெகு காலமாகவே அநேக பெரியார்கள் அரசியலில் பேராலும், சமூக இயலின் பேராலும் எவ்வளவோ பாடுபட்டுப் பார்த்தும் சிறிதும் பயன்படாமல் நாளுக்குநாள் புதிது புதிதாக மதங்களும் ஜாதிகளும், வகுப்பு களும் வளர்ந்து கொண்டு போவதல்லாமல் குறைந்து வந்ததாகவோ, அல்லது குறைவதற்குள்ள குறிகள் காணப்படுவதாகவோ சொல்லுவதற்கில்லாமலும் இருந்து வருகின்றது. இவைகளை யாரும் மறைத்துப் பேச முடியாதென்பதே நமது அபிப்பிராயம். அதிலும் என்று முதல் அரசாங்கத்தாரிடம் இந்தியர்கள் அரசியல் சுதந்தரம் கேட்பதென்றும், அரசாங்கத்தார் நமக்குச் சிறிது சிறிதாய்ச் கொடுப்பதென்றும் ஏற்பட்டதோ, அன்று முதல் அப்படிக் கொடுப்ப தென்பதும் பெருத்த பணவருவாயுள்ள உத்தியோகங்களாகவும், பதவிகளா கவும் ஏற்பட்டதோடு அவைகள் தந்திரத்திலும் சூழ்ச்சியிலும் வலுத்தவ னுக்கு மாத்திரம் கிடைக்கக் கூடியதாய் போய்விட்டதால் இனி சுலபத்தில் நம்பிக்கையும் ஒற்றுமையும் ஏற்படுமென்று எதிர்பார்ப்பதற்கில்லாமலே போய்விட்டது. இவற்றை உணர்ந்தே உண்மையிலேயே நாட்டினிடம் பற்றுக் கொண்ட பல பெரியவர்களும் தொண்டர்களும் நாட்டின் முன்னேற்றத் திற்குப் பரஸ்பர நம்பிக்கையும் ஒற்றுமையுமே பிரதானமெனக் கருதி பரஸ்பர நம்பிக்கை ஏற்படுவதற்கு ஒவ்வொருவர் மனதிலுள்ள வேறுபாடான அபிப்பிராய பேதத்தை விலக்கச் சமூகத்துறையிலும் மூடநம்பிக்கைத் துறை யிலும் எல்லா வகுப்பாருக்குள்ளும் ஒற்றுமை ஏற்படுவதற்குக் கூடுமான வரை எல்லோருக்கும் சமசந்தர்ப்பமும் சம உரிமையும் கிடைக்கும் படியாக அரசியல் துறையிலும் பாடுபட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இதைப் பலர் தெரிந்தோ தெரியாமலோ அல்லது தங்கள் சுயநலம் காரண மாகவோ அல்லது எதிரிகளின் கூலிகளாகவோ பலவழிகளிலும் இம்முயற்சியை எதிர்த்து வந்திருக்கின்றார்கள் என்பதும் மறுக்கக் கூடியதல்ல. ஆனாலும் என்ன எதிர்த்தும் இப்போது அவ்வெதிர்ப்புகள் அடியோடு சிறிதுகூட



இல்லாமல் பயனற்றுப் போனதுடன் ஓர் அளவுக்கு முன் சொல்லப்பட்ட அப்பெரியார்களின் முயற்சி இவ்வளவு எதிர்ப்புக்களையும் தாண்டி பலன் கொடுத்து வருகின்றதென்றே சொல்லலாம்.

உதாரணமாக, சமூக சீர்திருத்தங்களுக்குச் சட்டங்கள் செய்யக் கூடாதென்றும் சம உரிமைக்கும் சம சந்தர்ப்பத்திற்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவங்கள் கூடாதென்றும் பலர் சொல்லியும் எதிர்ப் பிரசாரமும் செய்து வந்ததும் யாவரும் அறிந்ததேயாகும்.

இப்போது சமூக சம்பந்தமான எல்லாச் சீர்திருத்தங்களுக்கும் சட்டங் கள் ஏற்படுத்த முயற்சி செய்துவருவதும் பல சட்டங்கள் ஏற்பட்டுவிட்டதும் பிரத்தியட்சத்தில் பார்த்து வருகின்றோம். அது மாத்திரமல்லாமல் சாஸ்திரி களும் வைதீகர்களும் வருணாசிரமக்காரரும் மகாநாடுகள் கூட்டி சமூகச் சீர்திருத்தத்திற்குச் சட்டங்கள் வேண்டுமென்று தீர்மானிப்பதுவும் பார்த்து வருகின்றோம். நிற்க வகுப்புவாரி உரிமை - பிரதிநிதித்துவம் ஆகிய விஷயங் களில் சட்டசபை முதலிய ஸ்தாபனங்களுக்கு வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை தேர்தல்களிலும் சர்க்கார் நியமனங்களிலும் சட்டப்படி ஏற்படாகி வந்திருப்பதுடன் அவைகள் அனுபோகத்திலும் பயனளித்து மேலும் அதைப் பின்பற்ற உறுதி செய்தும் ஆகிவிட்டது. மற்றபடி சர்க்கார் உத்தியோகங்க ளிலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கை சர்க்காராலும் ஜனப்பிரதிநிதி கள் பெரும்பான்மையாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு அமுலுக்கு வரும் படியாக உத்தரவும் போடப்பட்டு இப்போது அவை அமுலிலும் வந்து விட்டன. இந்தத் திட்டம் சரியானதா? சரியில்லாததா? என்கின்ற ஆட்சே பனை சிலருக்கு இருந்தாலும் கொள்கைகள் நமது நாட்டில் ஒப்புக் கொள்ளப் பட்டு வரவேற்கப்பட்டுமாய் விட்டது.

உண்மையில் பொது நலத்திற்காக உழைத்து வந்தவர்கள் அரசாங்க உத்தியோகங்கள் விஷயத்தில் எம்மாதிரியான வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்டு வந்தார்களோ அது போலவே சர்க்கார் ஒப்புக் கொண்டுவிட்டார்கள். அதாவது இப்போது நமது நாட்டைப் பொறுத்த மட்டில் வகுப்புகள் என்பதில் பெரும்பான்மையான வித்தியாசங்கள் அதாவது ஒருவருக்கொருவர் சமூக வாழ்வில் லட்சியத்தில் ஒற்றுமைப்படாத வகுப்பு கள் சாதாரணமாக 5 பிரிவினைகள் கொண்டதென்றே சொல்லலாம். என்ன வெனில், ஹிந்து, முஸ்லீம், கிறிஸ்தவம் என்கின்ற மூன்று மதப்பிரிவும், இந்துக்களில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்கின்ற மூன்று பிரிவும் பிரிக்கப்பட்டு இந்தியரல்லாதார் என்கின்ற மூன்று பிரிவுகளுமாக ஐந்து பிரிவுகளாகப் பிரித்து அவ்வைந்துக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஒதுக்கப்பட்டாய் விட்டது. விவரம் எப்படியெனில் மொத்தத்தில் சர்க்காருக்கு 12 உத்தியோகஸ்தர்கள் தேவையிருந்தால் அவற்றுள் பார்ப்பனரல்லாத இந்துக்கள் என்பவர்களுக்கு 5-ம், பார்ப்பனர்களுக்கு 2-ம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 1-ம் முஸ்லிம்களுக்கு 2-ம், கிறிஸ்தவர்களுக்கு 2-ம்



RangaRakes tamilnavarasam.com

என்கின்ற வீதமாகவும், முறையில் முதலாவது பார்ப்பனரல்லாதார், இரண்டாவது முஸ்லீம், மூன்றாவது பார்ப்பனரல்லாதார், நான்காவது கிறிஸ்தவர், ஐந்தாவது பார்ப்பனர், ஆறாவது பார்ப்பனரல்லாதார், ஏழாவது தாழ்த்தப்பட்டவர், எட்டாவது பார்ப்பனரல்லாதார், ஒன்பதாவது முஸ்லீம், பத்தாவது பார்ப்பனரல்லாதார், பதினோராவது கிறிஸ்தவர். பன்னிரெண்டாவது பார்ப்பனர் என்கின்ற முறைப்படி உத்தியோகங்கள் கொடுத்து வருவதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு சமயம் தேர்தல் பிரதிநிதித்துவம் விஷயமாக பொது ஜனங்களிடம் பிரசாரம் செய்வதன் மூலம் பிரதிநிதித்துவம் உரிமை பெறலாம் என்று சொல்லுவ தானாலும் சர்க்கார் உத்தியோக விஷயத்தில் கண்டிப்பாக சர்க்கார் சட்டம் மூலமாக அன்றி வேறு விதமாகப் பெற்று விடக்கூடும் என்று சொல்லுவது சுலபமான காரியமல்ல. ஆகையால் அப்பேர்ப்பட்ட ஒரு பெரிய காரியத்தை பலவிதத் திலும் அதாவது சூழ்ச்சியிலும் விஷமப் பிரசாரத்திலும் கூலியிலுமாகப் பார்ப்பனர்கள் செய்து வந்த பலமான எதிர்ப்புகளைத் தகர்த்து இம்முடிவைப் பொது மக்கள் அடைந்ததற்கு முக்கிய காரணஸ்தராயுள்ளவர் நமது சுகாதார மந்திரியாகிய கனம் திரு.முத்தையா முதலியாரேயாவார். அவர் முதலில் தமது ஆட்சிக்குக் கட்டுப்பட்ட உத்தியோகங்களில் இம்மாதிரி முறையைக் கையாளச் சௌகரியம் செய்து கொண்டு பிறகு அதையே சர்க்கார் உத்தி யோகம் எல்லாவற்றிற்கும் என்று சட்டம் செய்தார். இதற்கு நமது முதல் மந்திரி கனம் சுப்பராயன் அவர்களும், முற்போக்கு மந்திரிகனம், சேது ரத்தினமய்யர் அவர்களும் மிகுதியும் பாராட்டக் கூடியவர்களேயாவார்கள். ஆனால், எல்லா வற்றையும் விட நமது மாகாண கவர்னர் மேன்மை தங்கிய கனம் மார்ஷ் பாங்ஸ் துரையும் நாம் பெரிதும் பாராட்டுவதற்கும், நன்றி செலுத்துவதற்கும் உரியவர் என்பதை நாம் மறக்க முடியாது. ஏனெனில், வெள்ளைக்காரர்கள் பெரும்பாலும் நமக்குள் ஒற்றுமையில்லாமல் இருப்பதற்கு ஆதாரமான காரியங்களைச் செய்வதிலேயே கருத்துள்ளவர்கள். ஏனெனில் நமது ஒற்றுமை ஈனத்தினாலேயேதான் அவர்கள் இங்கு வாழக்கூடுமே ஒழிய வேறு யோக்கியமான காரியங்களால் வாழ முடியாது என்று நினைக்கின்றவர்கள். அவர்களுக்கு அவர்களின் குழந்தைப் பருவத்திலேயே இந்தியர்களைப் பிரித்து வைத்தால்தான் வெள்ளைக்காரர்கள் வாழ முடியும் என்கின்ற வார்த்தைகளைக் கரைத்துப் பாலுடன் சேர்த்து பால் பெட்டியில் ஊற்றி பால் கொடுத்து வளர்க்கப்படுகின்றார்கள். ஆனால் நமது மேன்மை தங்கிய மார்ஷ்பாங்ஸ் துரை முழுதும் அந்தப் பாலே குடித்தவர் அல்லர். அவர் என்னதான் ஐரோப்பி யரானாலும் இந்தியா விஷயத்தில் மற்ற பெரும்பான்மை வெள்ளைக் காரர்களைப்போல் அவ்வளவு கல் நெஞ்சம் படைத்தவரல்லர். ஆதலால் அவர் செய்த காரியத்திற்குத் தகுந்த அளவாவது நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம். எனவே, நமது லட்சியம் ஒருவாறு வெற்றி பெற்று விட்டதால் இவற்றிற்கு விரோதமில்லாத அரசியலில் நாம் கலந்துழைக்கக் கடமைப்பட்டிருக்கின்றோமானாலும் உண்மையுடன் ஒத்துழைக்கவும், போலியுடன் போர் செய்யவும் கடமைப்பட்டிருப்பதை யும் தெரிவித்துக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. முடிவாக பொது ஜனங்களுக்கு நாம் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் உறுதியுடனும், பிடிவாதத்துடனும் ஒரே கொள்கையுடன் வேலை செய்தால் மத்தியில் இவ்வளவு இடையூறும் கஷ்டமும் ஏற்பட்டாலும் முடிவில் வெற்றி பெறலாம் என்பதேயாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 04.08.1929**





RangaRakes
tamilnavarasam.com

# செங்கற்பட்டு ஜில்லாவில் பார்ப்பனீய மகாநாடு

செங்கற்பட்டில் மாகாண சுயமரியாதை மாநாடு நடந்த பிறகு சில பார்ப்பன தாசர்களுக்கு அடியோடு செல்வாக்குப் போய்விட்டபடியால் அதை மறுபடியும் சம்பாதிப்பதற்கென்று சமீபத்தில் காங்கிரசின் பேரால் ஒரு மகாநாடு கூட்டினார்கள். அம்மகாநாடு கூட்டுவதற்கு சில நாளைக்கு முன்பிருந்தே திரு.இராஜகோபாலாச்சாரியாரைக்கொண்டு அவர் தனது தாசர்களுடன் அச்சில்லாவில் பல பாகங்களிலும் மதுவிலக்கின் பேரால் சுயமரியாதை இயக்கத்தையும் ஜஸ்டிஸ் கட்சியையும் நினைத்தபடிக்கெல்லாம் தூஷித்தும் பழி சுமத்தியும் விஷமப்பிரசாரம் செய்தும் பார்த்தார்கள். என்னசெய்தும் வழிவழியாக வந்த பார்ப்பனதாசர்களைத் தவிர வேறுயாரும் அம்மகாநாட்டிற்கு செல்லவில்லை என்றே தெரிய வருகின்றது. சென்னையில் இருந்து திரு. எஸ். சீனிவாசய்யங்கார் மாத்திரம் தன் சொந்த செலவில் ஒரு கூலிப்படையைத் திரட்டிக் கொண்டு போனார். மற்றபடி அம்மகாநாட்டில் நடந்த பிரசங்கங்களும் தீர்மானங்களும் பெரிதும் ஜஸ்டிஸ் கட்சியையும் சுயமரியாதை இயக்கத்தையும் செங்கற்பட்டு ஜில்லா போர்டு பிரசிடெண்ட் திரு. ராவ்பகதூர் எம்.கே. ரெட்டியையும் அய்யங்கார் மெச்சும்படி வைததைத் தவிர வேறு ஒன்றும் செய்ததாக அவர்களாலேயே சொல்ல முடியாது என்று நினைக்கின்றோம்.

பரிசுத்த பார்ப்பன தாசராகிய திரு.முத்துரங்க முதலியார் சுயமரியாதை மகாநாட்டைப்பற்றி நூற்றுக்கணக்கான கேள்விகள் சட்ட சபையில் கேட்டு நல்ல நல்ல பூசை வாங்கித்தோளின் மேல் போட்டுக் கொண்டது யாவருக்கும் தெரியும். தோளின் மேல் தொண்ணூறு அடி அடித்தாலும் துடைத்துவிட்டால் ஒன்றுமில்லை என்கின்ற பழமொழிக்கு இணங்க அவ்வளவையும் மறந்துவிட்டு மறுபடியும் அதேபாடம் படித்து இருக் கின்றார்.

திரு. முத்துரங்க முதலியாருக்கு இந்த உலகத்தில் ஆக வேண்டிய காரியமெல்லாம் ஒன்றே ஒன்று என்று தான் சொல்ல வேண்டும். அதுவே தான் அவரது மோக்ஷமும் சுயராஜ்யமும் பூரணசுயேச்சையுமாகும். அது என்னவென்றால் எப்படியாவது திரு.எம்.கே. ரெட்டியாருக்கு ஜில்லாபோர்டு பிரசிடெண்டு பதவி இல்லாமல் செய்து யாராவது ஒரு பார்ப்பன தாசருக்குக்



RangaRakes

கிடைக்கும்படி அதை செய்வித்து அவருக்கு இவர் சிஷ்யராய் இருந்து பாத தீர்த்தம் சாப்பிட்டால் அதுவே போதுமானதாகும். ஐயோ பாவம் ஒரு தாலூகா போர்டு மெம்பர் ஸ்தானம் பெறுவதற்குக் கூடச்சக்தியில்லாமல் போன அவ்வளவு 'செல்வாக்கு'டைய இப்பெரியார் மேற்கண்ட காரியத்தைத் தமது முடிவான லக்ஷியமாய் வைத்திருப்பதில் ஒன்றும் அதிசயமில்லை என்றே சொல்லுவோம். ஆனால், அதற்கு ஆக திரு. ரெட்டியார் மீது சொல்லும் புகார்கள் என்னவென்று பார்ப்போமானால் அதுவும் ஒரே காரியம் தான். அதென்னவென்றால் திரு.எம்.கே. ரெட்டியார் ஆட்சிஎல்லையில் உள்ள ஒரு ஆற்றிற்கு அதாவது ஊத்துக்கோட்டை ஆற்றிற்கு பாலம் கட்டியதில் அது கட்டி முடிந்த சில நாட்களில் பழுதாய்ப் போய்விட்டதாம். இதனால் அனேக ரூபாய்கள் நஷ்டமாய் விட்டதாம். இது வேண்மென்றே செய்யும் விஷமப் பிரசாரம் என்றும் அப்பாலம் பழுதுபட்டதற்கு திரு. ரெட்டியாரோ அவரது ஜில்லா போர்டாரோ பொறுப்பாளிகள் அல்லவென்றும் சர்க்காரே அதற்கு பொறுப்பாளிகள் என்றும் பல தடவை எடுத்துக் காட்டப் பட்டிருக்கின்றது. அப்படி இருக்க அதைச்சற்றும் கவனிக்காமல் திரும்பத் திரும்ப அதையே சொல்லுவதால் திரு. ரெட்டியார் மீது சுமத்துவதற்கு உண்மையான குற்றம் வேறு ஒன்றும் இல்லை என்பது நன்றாய் விளங்கும்.

இந்த பாலம் பழுதுபட்டதற்குயார் பொறுப்பாளி என்பதை வெளியிட சர்க்கார் இன்னமும் விழிப்பதைப்பார்த்தாலே அதன் உண்மை விளங்கி விடும். பிரஸ்தாப பாலம் கட்டுவதற்காக ஜில்லா போர்டாரால் போடப்பட்ட ஒரு பிளானையும் எஸ்டிமேட்டையும் சர்க்காரார் அப்படியே ஒப்புக் கொள்ளாமல் பிளானைத்திருத்தியதுடன் எஸ்டிமேட்டிலும் சுமார் 35000 ரூ. வரை குறைத்து விட்டார்கள். இதைப்பற்றி ஜில்லா போர்டார் எவ்வளவு வாதாடியும் சர்க்கார் இஞ்சினீர் இலாக்காதாரர்கள் பிடிவாதமாய் இருந்து விட்டதால் சர்க்கார் உத்திரவுப்படி கட்ட வேண்டியதாயிற்று. அப்படிக் கட்டிய பாலம் எதிர்பாராத வெள்ளம் வந்து விட்டதால் சிறிது பழுதாக வேண்டிய தாய் விட்டது. இவற்றிற்குத்தக்க ஆதாரங்கள் சர்க்காரிலும் ஜில்லா போர் டிலும் இருக்கின்றன. இப்போது வேண்டுமானாலும் உண்மை உணர வேண்டுமென்கின்ற யோக்கியமான எண்ணமுடையவர்கள் யாரும் போய்ப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். ஜில்லா போர்டாருடைய பழைய பிளான் படியும் எஸ்டிமேட்டின்படியும் இப்போதும் வேலை செய்ய சௌகரியமிருக்கின்றது. அந்தப்படி செய்யவும் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறதாக தெரிய வருகின்றது. புதிதாக கட்டுவதில் பழைய கட்டிடத்தையும் அடியோடு உபயோகித்து கொள்ளலாம். எனவே அப்படிச்செய்வதில் எந்தக் காரணத்தை முன்னிட்டும் இரண்டு செலவும் சேர்ந்து முன்னைய எஸ்டிமேட் செலவுக்கு உள்ளாகவே தான் வேலை முடிவடையக்கூடும். ஆகவே, அந்தப் பால விஷயமாய்ப் பணம் போச்சு, பணம் போச்சு என்று நீலிக்கண்ணீர் விடுவதெல்லாம் பாமா மக்களை ஏமாற்றச்செய்யும் சூழ்ச்சியே அல்லாமல் அதில் ஏதும் நாணயப் பொறுப்பு இருப்பதாய்ச் சொல்வதற்கில்லை.



tamilnavarasam.com

சென்ற வருஷத்திலும் இதேமாதியாகவே ஒரு அபாண்டமான பழியை இக் கூட்டத்தார்களே திரு.எம்.கே. ரெட்டியார் மீது சுமத்தி விஷமப்பிரசாரம் செய்தார்கள். அதாவது ஒரு மோட்டார் பஸ்ஸானது மற்ற ஒரு ஆற்றுப்பாலத்தின் மீது செல்லுகையில் தவறி ஆற்றில் விழுந்து விட்டதற்கு அந்த பாலத்திற்குச் சரியானபடி அடைப்பு அடைக்கவில்லை என்றும் அதற்கு ஜவாப்தாரி திரு. ரெட்டி யாரென்றும் இந்து சுதேசமித்திரன் முதலிய பார்ப்பனப் பத்திரிகைகளும் பார்ப்பன தாசர்களும் போலிக் கூச்சலிட்டார்கள். பிறகு உண்மையை விசாரித்த போது அந்தப் பாலமும், ரோட்டும் ஜில்லா போர்டிற்கு சம்மந்தப் பட்டதல்லவென்றும் அதற்கு செங்கற்பட்டு ஜில்லா போர்ட்டும் சிறிதும் பொறுப்பாளிகள் அல்லவென்றும் ஏற்பட்டுவிட்டதுடன். எதிரிகள் வெட்கப் படும்படியாகவும் ஆகிவிட்டது. ஆகவே, இக்கூட்டத்தார்கள் இது போலவே திரு.ரெட்டியார் மீது இம் மாதிரியாகவே வீண்பழி சுமத்தி அவரை ஒழிக்க வேண்டுமென்பதில் கவலை எடுத்துக் கொள்ளுகின்றார்களே தவிர மற்று பொதுஜனங்களுக்கு ஏதாவது நன்மை செய்து அவர்களில் செல்வாக்குப் பெறும் விஷயத்தில் சற்றும் கவலை எடுத்துக்கொள்வதே கிடையாது.

இந்த முறையிலேயே பார்ப்பனர்கள் இது வரை நம் பாமர ஜனங்களை ஏமாற்றிக்கொண்டு வந்திருப்பதால் இனியும் இது போலவே நடத்தலாம் என்கின்ற ஆசையின் பேரில் இம்மாதிரி தங்கள் தாசர்களைவிட்டு விஷமப் பிரசாரம் செய்கின்றார்கள். ஆனால் இனி அந்த வித்தை பலிக்கும் என்று எதிர்பார்ப்பது வீண்கனவேயாகும். நிற்க, திரு.எம்.கே. ரெட்டியார் ஜில்லா போர்டு நிர்வாக விஷயத்தில் இம்மாகாண ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்திற்கு ஒரு வழிகாட்டியாக இருப்பது போல் கிராம சீர்திருத்தங்களும், பாதை போக்கு வரவு சாதனம் முதலிய சீர்திருத்தங்களும் மற்றும் ஜில்லா நன்மையை உத்தேசித்து சர்க்காரிடம் மற்ற ஜில்லா போர்டுகளைவிட அதிகமான உதவித் தொகை பெற்று அநேக முன்னேற்ற வசதிகளும் செய்திருப்பதுடன் மேல் நாட்டு முறைகளை அனுசரித்து ஸ்தலஸ்தாபன நிர்வாகிகள் சங்கம் ஒன்று ஏற்படுத்த வேண்டிய முயற்சி எடுத்து பாடுபட்டு வருவது யாவரும் அறிந்த தொன்றாகும். கடைசியாக திரு. எம்.கே. ரெட்டி மாகாண சுயமரியாதை மகாநாடு கூட்டி அதை இது வரை இந்த மாகாணத்தில் எந்த மகாநாடும் இது போல் நடத்தப்பட்டதில்லை என்று சொல்லும் படியான மாதிரியில் வெற்றி பெற நடத்தினதினால் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட பொறாமையானது அவரு டைய நன்மைகளையெல்லாம் வேண்டுமென்றே மறைத்துவிட்டு தப்பான காரியங்களைக் கற்பனை செய்து தங்கள் தாசர்களை பிடித்து இம்மாதிரி விஷமப் பிரசாரம் செய்ய வேண்டியதாய் விட்டது. என்றாலும் பொது மக்கள் இந்த புரட்டுகளை அறிந்து கொள்வார்கள் என்றே சொல்லுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 04.08.1929**



RangaRakes

# திரு. தண்டபாணியின் தொல்லை

**சென்னை, ஆகஸ்டு, 2**

'திராவிடன்' பத்திரிகைக்கு விளம்பரம் பிடித்துக்கொடுக்கும் ஏஜண்டாயிருந்த திரு.என். தண்டபாணிபிள்ளை திராவிடன் பத்திரிகைக்கு விளம்பரம் பிடித்துக்கொடுத்ததன் சம்பந்தமாக தமக்கு கமிஷனாகவும் தம் ஏஜண்ஸியை நிறுத்தித் தம்மை நீக்கியதன் சம்பந்தமாகத் தமக்கு மூன்று வருட நஷ்ட ஈடாகவும் மொத்தத்தில் பன்னீராயிரத்துச் சொச்சம் ரூபாய் சேர வேண்டுமென்று ஐகோர்ட்டில் திரு.ஈ.வெ.ராம சாமியார் மீது அசல் தரப்பில் கொண்டு வந்துள்ள வழக்கு சம்பந்தமாய் திரு. ராமசாமியார் திரு.ஸி.ஜெயராம் நாயுடுவுக்கு 13 ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்க வேண்டுமென்று பலவாறு புகார் சொல்லி அவ்வழக்கில் தீர்ப்பு சொல்லுமுன் திராவிடன் ஆபீஸ் சொத்துக்களை உடன் ஜப்தி செய்து வைக்க உத்தரவாக வேண்டுமென்றும், இல்லாவிட்டால் சொத்துக்களை பராதீனம் செய்து விட்டு ஊரைவிட்டு ஓடி விடுவாரென்றும் திரு. தண்டபாணி போட்டி ருந்த மனு நீதிபதி பண்டலே முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் சம்பந்தமாக செங்கல்பட்டு ஜில்லா போர்டு உபதலைவரான திரு.ஸி.ஜெயராம் நாயுடு அவர்கள் கோர்ட்டில் தாக்கல் செய்த பிரமாண வாக்கு மூலமொன்றில், திரு. தண்டபாணி பிள்ளை தமது வழக்கில் தீர்ப்பு சொல்லப்படுமுன் ஜப்திக்கு உத்தரவாக வேண்டுமென்று கொடுத்திருந்த மனுவில் கண்ட விஷயங்கள் தமக்கு படித்துக்காட்டப்பட்டதாயும், அதில் தமக்கு திரு.ஈ.வெ. ராமசாமியார் 13ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்க வேண்டி யிருப்பதாய்த் திரு. தண்டபாணி குறிப்பிட்டிருப்பது சரியல்ல வென்றும் தமக்கும் திரு. ராமசாமியாருக்கும் திராவிடன் சம்பந்தமாய் எத்தகைய கொடுக்கல் வாங்கல்களும் கிடையாதென்றும், திரு. ராமசாமியார் தமக்குக் கடன் ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை என்றும், திரு. தண்டபாணியின் புகார் பொய் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

மற்றும் திரு. தண்டபாணி தமது ஜப்தி மனுவுக்கு ஆதரவாய் திரு.ராம சாமியார் திராவிடன் சொத்துக்களை சுயமரியாதைச் சங்கத்திற்கு மாற்றப் போவதாய் புகார் சொல்லியிருந்ததன் சம்பந்தமாய் "திராவிடன்" காரியா



tamilnavarasam.com

லயத்தையும் சொத்துக்களையும் திரு.ஈ.வெ. ராமசாமியிடம் ஒப்புவித்து, பத்திரிகையைச் சிறப்புடன் நடத்தும்படி விடுத்துள்ள தென் இந்திய மக்கள் சங்கத்துக் காரியதரிசி திவான்பகதூர் டி.வரதராஜுலு நாயுடு அவர்கள் ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மற்றொரு பிரமாண பத்திரத்தில் மேற்படி சங்கத்து 8-7-27 ல் கூடிய டைரெக்டர்கள் கூட்டமொன்றில் நிறைவேற்றப் பட்ட தீர்மானப்படி திரு.ஈ.வெ. ராமசாமியிடம் சங்கத்தின் தமிழ் தினசரிப் பத்திரிகையான 'திராவிடன்' பத்திரிகையை அத்தீர்மானத்தில் கண்ட நிபந்தனைகளின்படி மூன்றாண்டுகளுக்கு நடத்தி வருவதற்காக அதன் காரியாலயச் சொத்துக்கள் இயந்திரங்கள் முதலியவற்றோடு ஒப்புவிக்கப் பட்டதாயும் திராவிடன் பத்திரிகை சம்பந்தமான இயந்திரங்கள், அச்சு, மரச் சாமான்கள் முதலிய சகல சொத்துக்களும் மேற்படி சங்கத்திற்குச் சொந்த மானவைதான் என்றும், அவற்றைக் கொண்டு பத்திரிகையைச் சிறப்பாய் நடத்தும் உரிமையைத் தவிர மற்றபடி திரு.ராமசாமியாருக்கு அவற்றின் மீது ஸ்வாதீன உரிமையொன்றும் கிடையாதென்றும் எடுத்துக் காட்டியிருந்தார்.

## திரு.ராமசாமியாரின் எதிர்மனு

திரு.தண்டபாணி பிள்ளையின் மனுவில் என்னைக் குறித்தறிவிக்கப் பட்டுள்ள புகார்களனைத்தும் பொய்யாயும் ஆதாரமற்றதாயும் இருப்பதோடு அவை சமுதாய, ராஜீயத்துறைகளிலுள்ள எனது விரோதிகளின் தூண்டு தலால் பொது உழைப்பாளியாகிய என்மீது இக்கோர்ட்டாருக்கும், பொது ஜனங்களுக்கும் ஒருவித துர் அபிப்பிராய மேற்படச் செய்யும் கெட்ட நோக்கத்தோடு வேண்டுமென்றே விஷமத்தனமாய் சொல்லப்பட்டவை.

நான் 8-7-27-ல் தென்னிந்திய மக்கள் சங்கத்து டைரெக்டர்கள் கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின்படி திராவிடன் பத்திரிகையை மூன்று வருடங்களுக்கு நடத்தும் பொறுப்பேற்று நடத்து கின்றேன். அப்பத்திரிகை சம்பந்தமான இயந்திரம் முதலான சகல சொத்துக் களும் அச்சங்கத்தைச் சேர்ந்தவையாயினும் அத்தீர்மானப்படி பத்திரிகையை நடத்தும் சௌகரியத்தை முன்னிட்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றனவேயன்றி அவற்றின் மீது எனக்கு எத்தகைய ஸ்வாதீன உரிமையுமில்லை.

மற்றபடி 5-4-28-ல் எனக்கும் தண்டபாணி பிள்ளைக்கும் ஏற்பட்டதாய்ச் சொல்லப்படும் ஒப்பந்தத்தின் சம்பந்தமாகவும், அவரை ஏஜென்ஸியிலிருந்து நீக்கியதன் சம்பந்தமாயும் அவர்கோரும் நஷ்ட ஈடு முதலிய விவகாரங்களைக் குறித்தமட்டில் சந்தர்ப்பம் ஏற்படும்போது நான் அதற்குச் சமாதானம் சொல்லத் தயாராயிருக்கிறேன். ஆயினும் தற்போது அவர் தமக்குச் சேர வேண்டுமெனச் சொல்லும் தொகையைக் கொடுக்க நான் கடமைப்பட்டிருக்கவில்லை என்றும், அவர் ஏதோ ஆதாரமின்றி கண்டபடி



RangaRakes

கணக்குப்போட்டிருப்பதற்கு நான் உத்தரவாதமல்ல என்றும், அவருடைய புகார்கள் குறும்புத்தனமாக என்னை மற்றவர்கள் முன்னிலையில் கேவலப் படுத்திவிடலாம் என்கின்ற நோக்கத்தோடுதான் செய்யப்பட்டது என்றும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

நான் ஒரு சமயத்தில் ஈரோடு முன்சிபல் சேர்மனாயிருந்திருக்கிறேன். என் பேருக்கே சுமார் ஒரு லட்ச ரூபாய் பெறுமான சொத்துக்களிருப்பதோடு, கோயம்புத்தூரிலும், சேலம் ஜில்லாவிலும் என் தந்தைக்குச் சொந்தமான சுமார் 10 லட்ச ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களிருக்கின்றன. நான் வருடவாரி சராசரியில் 2500 ரூபாய் வீட்டுவரியும், 700 ரூபாய் நிலவரியும், 300 ரூபாய் வருமான வரியும் செலுத்தி வருகின்றேன். நான் ராஜீய, சமுதாயத் துறையிலு ழைத்து வரும் பொது ஊழியன். அன்றியும் 9000 சந்தாதாரர்களையுடைய "குடி அரசு" என்னும் தமிழ் வாரப் பத்திரிகைக்கும், "ரிவோல்ட்" என்னும் மற்றொரு ஆங்கில வாரப் பத்திரிகைக்கும் ஆசிரியனாயுமிருந்து வருகின்றேன்.

திரு.தண்டபாணி பிள்ளை நான் கடனில் மூழ்கியிருப்பதாய்ச் சொல்லியிருப்பதைப் பலமாய்க் கண்டித்து மறுப்பதோடு ஸி.ஜெயராம் நாயுடு உட்பட நான் யாருக்கும் எத்தகைய கடனும் கொடுக்க வேண்டியதில்லை என்றும் தெரிவிக்க விரும்புகின்றேன். வாதி எனக்குக் கடன் கொடுத்ததாய்ச் சொல்லுவதற்குப் பதிலாக நான் வாதியின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கும் அவருடைய கஷ்டகாலத்திலும் பலதடவைகளில் பண உதவி செய்திருக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கடன் கொடுத்தவர்களை மோசம் செய்யும் கருத்துடன் நான் சென்னையிலுள்ள என் சொத்துக்களை எல்லாம் சுயமரியாதைச் சங்கத்திற்கு எழுதி வைக்கப் போவதாய் சொல்லப்பட்டிருப்பது முழு மோசமான பொய். அத்தகைய ஆலோசனை ஏதாவதிருந்ததாய் வைத்துக் கொண்டாலும், அது "திராவிடன்", "குடி அரசு" பத்திரிகைகளின் செல்வாக்கை மிகுதிப்படுத்தி சிறப்புடன் நடத்திவைப்பதன் பொருட்டு செல்வாக்கும் செல்வமுமுள்ள சில கௌரவஸ்தர்களான டைரெக்டர்களடங்கிய கமிட்டியாரிடம் பத்திரிகளை நடத்தப்படுவதற்கு ஒப்புவிப்பதான கருத்தே ஒழிய என் சொத்துக்களின் உரிமையை மாற்றுவதாகவோ, அல்லது சாமான்களை அவர்களுக்குக் கொடுத்து விடுவதாகவோ எத்தகைய உத்தேசமுமிருந்ததில்லை.

வாதி தமது புகார்களெல்லாம் சுத்தப்பொய் என்பதை உணர்ந்திருந்தும் என் பொது ஊழியத்தைக் கேவலப்படுத்த வேண்டும் என்பதில் ஊக்கமுள்ள விரோதிகளால் தூண்டப்பட்டு என்மீது இத்தகைய ஆதாரமற்ற வழக்குக் கொண்டு வந்ததோடு, எனது சொத்துக்களை உடன் ஜப்தி செய்ய ஜப்தி மனுவும் தாக்கல் செய்யத் தூண்டப்பட்டிருக்கின்றார் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



tamilnavarasam.com

இத்தகைய பொய்யான சூழ்ச்சி காரணமான மனுப் போட்டிருப்பதனால் என்மீது பொது ஜனங்களிடத்திலுள்ள மதிப்பு பாதிக்கப்பட்டிருப்பதால், இதன் சம்பந்தமாக நான் பின்னால் தக்க பரிகாரத்தைத் தேடிக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு : நீதிபதி பண்டலே முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு திரு. தண்டபாணி பிள்ளையின் மனுவை ஆதாரமற்றது எனக் குறிப்பிட்டு நீதிபதி செலவுத் தொகையுடன் தள்ளிவிட்டார்.*

**குடி அரசு - நீதிமன்ற மனு - 04.08.1929**



# காந்தியின் கண் விழிப்பு

கதர் விஷயத்தில் இப்போது இருக்கும் திட்டம் பயன்படாதென்றும், இது ஒரு பெண்மணிக்கு ஒரு மணி நேரம் வேலை செய்தால் ஒரு பை வீதம் தான் கூலி கிடைக்கக் கூடியதாய் இருக்கின்றதென்றும், அதுவும் அக்கதர்த் துணியை வாங்கி கட்டுகின்ற மக்கள் ஒன்றுக்கு இரண்டாகவோ மூன்றாகவோ அதிகப் பணம் கொடுத்து வாங்கினால் தான் முடியுமென்றும் மற்றபடி மில் துணி களுடனும் வெளிநாட்டுத் துணிகளுடனும் போட்டி போடுவதாயிருந்தால் நூற்கின்ற பெண்மணிகள் தங்கள் நூற்புக் கூலியையும் விட்டு மேல் கொண்டு மணிக்கு ஒரு பை வீதம் கையிலிருந்து காசு கொடுத்தால் தான் கட்டுமென்றும் சொல்லி வந்ததைச் சிலர் கதரின் மீதுள்ள மூடப்பக்தியால் நம்மீது ஆத்திரங் கொள்ளத் தொடங்கினார்கள். சிலர் நம்மீது பொது மக்களுக்குத் துவேஷம் உண்டாக்கக் கருதி தங்கள் விஷமப் பிரசாரத்திற்கு இதை ஒரு ஆயுதமாகவும் உபயோகித்தார்கள். நாம் எதற்கும் பின் வாங்காது உண்மையை தைரியமாய் எடுத்துச் சொல்லி கதரின் பயனற்ற தன்மையை எடுத்துக் காட்டிய பிறகு இப்போதுதான் திரு.காந்தி அவர்கள் கண்விழித்து இதற்கு ஏதாவது வேறு ஏற்பாடு செய்யலாமா? என்று யோசிக்கத் தொடங்கி இருக்கின்றார். அதாவது சன்னமானதும் அதிக நீளமானதுமான நூல் நூற்கும்படியான புதிய கையந் திரங்களை கண்டுபிடிப்பவர்களுக்கு சன்மானங்கள் செய்வதற்கு ஆக ஒரு லக்ஷ ரூபாய் ஒதுக்கி வைத்திருப்பதாக வெளியிட்டிருக்கிறார். இது பயன்பட்டாலும் பயன்படாவிட்டாலும் எப்படியாவது இப்போதைய கதர் நிலை இப்படியே தான் இருக்க வேண்டும் என்றும், இதனாலேயே தான் சுயராஜ்யம் கிடைக்குமே ஒழிய வேறொன்றினாலும் முடியாது என்றும் சொல்லிக் கொண்டிருந்த முரட்டுப் பிடிவாதம் சற்று அசைவு கொடுக்க நேர்ந்ததோடு "சரக்கு பிரதானமே ஒழிய செட்டி பிரதானமல்ல" என்கின்ற பழமொழிப்படி காரியத்தின் பலனைத் தான் பொது ஜனங்கள் கவனிப்பார்களே ஒழிய "மகாத்மா சொல்லுகின்றார்" என்றால் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றும் காலம் மலையேறிவிட்டதென்பதையும் இக்கண்விழிப்பு நன்றாய் எடுத்துக் காட்டுகின்றது. தவிர இப்போதுள்ள கதர் திட்டத்தில் கண் மூடி நம்பிக்கை உள்ளவர்கள் தங்களின் குருட்டுப் பிடிவாதத்தை விட்டுவிட்டு அதில் உள்ள அனுபவத்திற்கும் இயற்கைக்கும் ஒத்துவராத தன்மைகளை மாற்ற முயற்சிப்பதோடு திரு.காந்தி அவர்களின் இந்தப் பிரயத் தனத்திற்கு சற்று உதவி செய்வார்களாக.

**குடி அரசு - கட்டுரை - 11.08.1929**



RangaRakes tamilnavarasam.com

# கண்ணப்பர் வாசக சாலைத் திறப்பு விழா

நேரம் மிகுதியாகி விட்டதால் நான் உங்களை அதிகமாகக் காத்திருக்கச் செய்ய விரும்பவில்லை. எனினும், நீங்கள் என்னை முக்கியமாய் பேசும்படி வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதை முன்னிட்டு உங்களுக்கு ஒன்றை மட்டும் குறிப்பாக எடுத்துக்காட்டிப் பேச விரும்புகின்றேன். ஆதி திராவிட மக்களாகிய நீங்களும் மனிதர்களேயாயினும் சமூக வாழ்க்கையில் மிருகங்களைவிடக் கேவலமாகத்தான் நடத்தப்படுகின்றீர்கள் என்பதை நீங்களே ஒப்புக் கொள்வீர்களென்று நம்புகின்றேன். உங்களுள் சிலர் ராவ் பகதூர்களாயும், ராவ்சாகிப்களாயும், மோட்டார் வாகனங்களிலும், கோச்சுகளிலும் செல்லத்தக்க பணக்காரர்களாயுமிருக்கலாம். மற்றும் உங்களுள் ஞானமுள்ள அறிவாளிகளும், படிப்பாளிகளுமிருக்கலாம். எவ்வாறிருந்தாலும் அத்தகையவர்களையும் பிறந்த ஜாதியை யொட்டித் தாழ்மையாகத் தான் கருதப்பட்டு வருகின்றதென்பதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள். அதற்கு ஒரே ஒரு காரணந்தான் இருக்கிறதென்று சொல்ல வேண்டும். அது ஜாதி வித்தியாசக் கொடுமையே யாகும். ஆதிதிராவிடர்கள் என்றால் கோயிலருகிலும் வரக்கூடாதென்கிறார்கள். அவர்களும் இந்துக்கள் தாமென ஒப்புக் கொள்ளப்பட்டபோதிலும் அவர்களை இழிவுபடுத்திக் கொடுமை செய்வதில் ஒரு சிறிதும் பின் வாங்குவதில்லை. இந்து வென்று சொல்லப்படும் திரு. முனிசாமி என்னும் ஆதிதிராவிடரும் மனிதர்தான். அவர் ஆலயத்தருகில் வந்தால் ஆலயம் தீட்டுப்பட்டு சாமி செத்துப் போகுமாம். ஆனால், பிறவியில் மிருகமாய்ப் பிறந்ததும் ஜாதியில் நாய் என்று அழைக்கப்படுவதுமான மலம் உண்ணும் கேவலமான ஐந்துவையும் தாராளமாக விட்டு விடும்போது ஆறறிவுள்ள மனிதனாய்ப் பிறந்து இந்துவென்றும் சொல்லிக் கொள்ளும் ஆதிதிராவிடர் எனப்படும் முனிசாமியை அவர் பிறப்பின் காரணமாக ரஸ்தாவிலும் விட மறுக்கப்படுவது என்ன கொடுமை? இக் கொடுமையைத் தடுத்துக் கேட்டால் அவர்கள் இந்துக்களாய்ப் பிறந்து விட்டார்கள், அவர்களைக் குறித்து மனுதர்ம சாஸ்திரத்தில் இப்படிச் சொல்லுகிறது, வேதத்தின் கர்ம காண்டத்தில் அப்படிச் சொல்லுகின்றது என்று சாஸ்திரக் குப்பைகளின் மீது பழியைப் போடுவதோடு, மதத்தையும் தங்கள் கொடுமைகளுக்கு ஆதரவாக்கிக் கொள்ளுகின்றார்கள். இவ்வாறு மதத்தின் பேராலும் சமயநூல்கள், சாஸ்திரங்கள், புராணங்களின் பேராலும், செய்யப்படும் கொடுமைகளுக்கு அளவில்லை. மற்றும் “பெரியவர்கள் சொல்லி விட்டார்கள்: கடவுளால் வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் எழுதி வைக்கப்பட்டுவிட்டது. அதைப் பற்றி அதிகமாய்க் கேட்காதீர்கள்” என்று கொடுமைகளுக்குச் சாக்கு சொல்லிக் கொண்டும், ஆயிரக்கணக்கான வருடங்களாய் மக்களில் சில சார்பாரைப் பெரும் கொடுமைக்குள்ளாக் கப்பட்டும் வருகின்றது. ஆயிரக்கணக்கான வருடங்களாய் மதத்தின் பெயராலும், சாஸ்திர புராணங்களின் பெயராலும் ஒரு பெரிய சமூகம் கொடுமைக்குட்படுத்தப்பட்டு வருகின்றது. ஆதிதிராவிடர்களாகிய உங்களைவிட சற்று உயர்ந்த ஜாதியார் எனப்படும் எங்களையும் கேவலப் படுத்தாமல் விட்டார்களா? அதுவுமில்லை. எங்களைவிட உயர்ந்த ஜாதியார் என்பவர்கள் போகுமிடத்திற்கு எங்களை விடக்கூடாதென்ற ஏற்பாடில்லாமல் போகவில்லை. உங்களைத் தொட்டால் தீட்டுப்பட்டுவிடும், குளிக்க வேண்டும் என்பது போலத்தான் எங்களைத் தொட்டாலும் குளிக்க வேண்டுமென்கிறார்கள். அதோடு எங்களைச் சூத்திரர்கள், வேசி மக்கள், பார்ப்பனனுக்கு அடிமை செய்யப் பிறந்தவர்களென்ற இழி பெயர்களுமிட்டழைக் கிறார்கள். இக்கேவலச் செயலுக்குக் கடவுளால் எழுதி வைக்கப்பட்ட சாஸ்திரம் ஆதாரமென்கிறார்கள். நம் மக்களுள் அநேகர் எவர் எப்படிச் செய்தாலென்ன? நம் ஜீவனத்துக்கு வழியைத் தேடுவோமென்று இழிவையும் சகித்துக் கொண்டு உணர்ச்சியில்லா வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பதனால்தான் ஆயிரக்கணக்கான வருடங்களாய் இக்கொடுமைகள் ஒழிய வழியில் லாதிருந்து வந்திருக்கின்றது. இதற்கு முன்னால் பல பெரியவர்கள் தோன்றி ஜாதிக் கொடுமைகளையும், வித்தியாசங்களையும் ஒழிக்கப் பாடுபட்ட போதிலும் அவர்களும் மதத்தின் பெயராலும் வேறு சூழ்ச்சி களாலும் அடக்கித் துன்புறுத்தப்பட்டுமிருக்கின்றனர். ஒவ்வொருவரும் நமக்கென்ன? நம்ஜீவனத்துக்கு வழியைப் பார்ப்போமென்ற இழிவுக்கிடங்கொடுத்துக் கொண்டு போகும்வரை சமூகம் ஒரு காலத்திலும் முன்னேறாது. ஜாதிக் கொடுமைகள் ஒரு போதும் ஒழிய மார்க்கமேற்படாது என்பது திண்ணம். கேளுங்கள்! (கரகோஷம்) ஜாதிக் கொடுமைகளை ஒழித்துச் சமத்துவத்தை நிலைநாட்டும் பொருட்டுத்தான் தென்னாட்டில் சுயமரியாதை இயக்கம் தோன்றியது. (கரகோஷம்) சுயமரியாதை இயக்கத்தைக் குறித்து நமது விரோதிகள் என்ன சொல்லுகின்றார்கள் என்பதைக் குறித்து நமது நண்பர் பால குருசிவம் சிறிது நேரத்திற்கு முன் தெளிவாய் எடுத்துச் சொல்லி யிருக்கிறார். அவர் இவ்வியக்கத்தில் மக்களுக்கு யோசித்துப் பார்க்கும் தன்மையாவது வந்திருக்கின்றதெனக் கூறியது முக்கியமாய்க் குறிப்பிடத் தக்கது. சுயமரியாதைக்காரர்கள் கோயில், குளம், சாமி இல்லை என்கிறார்கள்; மதமில்லை என்கிறார்கள்; இவர்கள் நாஸ்திகர்கள்; இவர்களால் மேல்ஜாதி, கீழ்ஜாதி என்ற கட்டுப்பாடு போய் விடும் போலிருக்கிறது, சுவாமி போய் விடும் போலிருக் கின்றது என்று பலவாறு நம் விரோதிகள் அலறிக் கூக்குரலிடுகின்றார்கள். பலர் கிளம்பி கூலிகளுக்கும் காலிகளுக்கும் பணம் கொடுத்தும் நமக்கு விரோதமாய் விஷமப் பிரசாரம் செய்வதற்காகத் தூண்டிவிட்டுமிருக்



RangaRakes tamilnavarasam.com

கிறார்கள். அவர்கள் சூழ்ச்சிகளையும் கூலிப் பிரசார மோசத்தையுமுணராது அவர்கள் பிதற்றல்களை நம்பி நமது பாமர மக்கள் ஏமாறி அவர்கள் சொல்லுவது போல சிலர் சுயமரியாதை இயக்கம் கடவுள் இல்லை என்னும் இயக்கமெனவும் சொல்லுகிறார்கள். சுயமரியாதை இயக்கம் நாஸ்திகர்கள் இயக்கமென்று சொல்வது அற்பத்தனமான செய்கை என்பதை அறிவுறுத்து கின்றேன். உண்மையில் ஆஸ்திக நாஸ்திகம் என்பவைகளைப் பற்றி நாம் கவலைப்படுவதில்லை. உலகத்தில் அவன் உயர்ந்தவன், இவன் தாழ்ந்தவன் என்று பந்தயம் போட்டுக் கொண்டு ஜாதி வித்தியாசக் கொடுமை களை நிலை நாட்டி சமூக முன்னேற்றத்திற்கும் விடுதலைக்கும் தடையா யிருக்கும் எந்த சாஸ்திர, புராணங்களையும் சுட்டெரிக்கச் சுயமரியாதைக் காரர்களாகிய நாங்கள் தயாராயிருக்கிறோம், (கரகோஷம்) மக்கள் முன்னேற்றத்தில் மதம் வந்து தடை செய்தால் அது எந்த மதமாய் இருந்தாலும் அதனை ஒழித்துத் தானாகவேண்டும். (கேளுங்கள்) கடவுள் உன்னைப் பறையனாய்ப் படைத் தார்; சுவாமி என்னைச் சூத்திரனாய்ப் படைத்தார்? அவனை பார்ப்பனனாய்ப் படைத்தார் என்று கடவுள் மேல் பழிபோட்டுக் கொடுமைகள் நிலைக்கச் செய்வதை விட்டுக் கொடுத்துக் கொண்டு அக்கொடுமைகளுக்கு ஆதரவா யும் அக்கிரமங்களுக்கு அனுகூலமாயுமிருக்கும் கடவுளைத்தான் ஒழிக்க வேண்டுமென்கிறோம். சும்மா கிடக்கும் கடவுளையும், மதத்தையும், சாஸ்திரத் தையும் நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. (பெருத்த கரகோஷம்) கொடுமை செய்யும் மதத்தையும் சாஸ்திரத்தையும் கடவுளையும் ஒழிப்பதற்கு பயந்தோ மானால் நாம் நிரந்தரமாய்ப் பறையனாயும், சூத்திரனாயும், தாழ்ந்தவனாயும் பல கொடுமைகளுக்குட்பட்டுக் கேவலமாகத் தானிருந்தாக வேண்டும். நம்மை இத்தகைய கேவலமான நிலைமைக்குக் கொண்டுவந்த கடவுளும் மதமும் போக வேண்டியதுதான். இதை ஒளித்துப் பேசுவதில் பயனில்லை. (கரகோஷம்) சமீபத்தில் நேப்பியர் பார்க்கில் கூடிய ஆதிதிராவிடர் சுய மரியாதை மகாநாட்டில் இந்துக்கள் எனச் சொல்லிக் கொள்ளப்படும் 6 கோடி மக்களாகிய ஆதிதிராவிடர்களை ஜாதிக் கொடுமையால் ஆலய உரிமை யின்றி கொடுமைப்படுத்தப்படுவதால் இந்து மதத்தில் அவர்களுக்குச் சம உரிமையில்லாவிட்டால் வேறு மதத்தில் சேருவதுதான் உசிதமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சம உரிமையில்லாதிருப்பதை விட சாவதே மேல் என்று நினைப்பவர்களின் சுதந்திரத்திற்கு ஒன்றும் தடையாயிருக்க முடியாது. அதற்குத் தடையாயிருக்கும் கடவுளும், மதமும், மோட்சமும், நரகமும் அவர்களுக்கு அக்கரையில்லை. ஜாதிக் கொடுமைகளை ஒழிக்க நமது பெரியோர்கள் எவ்வளவோ பாடுபட்டு வந்தார்கள். சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னிருந்த கபிலர் காலத்திலும், திருவள்ளுவர் காலத் திலும், அதற்குப் பின்னரும் ஜாதியில்லை. ஒழுக்கத்தினால்தான் உயர்வு தாழ்வு என்று எவ்வளவோ வற்புறுத்தப்பட்டு வந்தும் ஜாதிக் கொடுமைப் பேய்கள் ஒழிந்தபாடில்லை. ராமானுஜர் ஜாதியில்லை என்றும், சமத்துவத் திற்காகவும் பாடுபட்டார். தேவாரம் பாடியவர்களும் ஜாதியில்லை என்பதை



RangaRakes

விளக்கினார்கள் என்று சொல்மாத்திரத்தில் நிற்கின்றதேயன்றி உண்மையில் அக்கொடுமைகள் ஒழிவதற்கு மார்க்கமில்லாமல் தானிருக்கின்றது. நமது பெரியார்கள் சொல்லியவை ஆயிரக்கணக்காகப் பிறரால் வாயளவில் பாராயணம் செய்யப்படுகின்றனவேயன்றி செய்கையில் அதனால் ஒரு பலனு மேற்பட்டதாய்த் தெரியவில்லை. இன்றைக்கும் ஜாதிக் கொடுமையினால், இவன் இந்தத் தெருவில் வந்தால் தீட்டுப்பட்டுவிடும்; அந்தத் தெருவில் போனால் சாமி செத்துவிடுமென்ற அநியாயங்கள்தான் தலைவிரித்தாடு கின்றன. இதற்குச் சாஸ்திரம் இப்படிச் சொல்லுகின்றது; மதம் அப்படி மறுக் கின்றதென்று சாக்குச் சொல்லிக் கொண்டிருப்பதை எவ்வளவு காலத்திற்குத் தான் விட்டுக் கொண்டிருக்க முடியும்? ஒருவர், ஆதி திராவிடர்களை இழிவு படுத்தப்படுகிறதா? இல்லை, இல்லை. நந்தனாரை நாங்கள் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராய் பூசித்தும் வரவில்லையா? என்று வாய் வேதாந் தம் பேசுகின்றார். பறையனாய் இருந்த நந்தனார் திருநாளைப் போவாராகி விடவில்லையா? அப்படியிருக்க புராணத்தை ஏன் குற்றம் சொல்ல வேண்டும் என்கிறார் அந்த அறிவாளி. அந்த நந்தனுடைய பின் சந்ததி யாராகிய பேரப் பிள்ளைகளை அந்த திருநாளைப் போவாராகிய நந்தனிருக் குமிடத்தைக் கூடப்போய் ஏன் பார்க்க விடுவதில்லை? என்றுதான் கேட்கின் றோம். (கரகோஷம்) அப்படிக் கேட்டால் அந்த நந்தன் வேறு ஜென்மம், இவர்கள் வேறு என்று பல புராணப்புரட்டுகள் பேசுகின்றார்கள். (நகைப்பு) இதுபோலவே தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த திருப்பாணாழ்வார் ஆழ்வாராக வில்லையாவென்று வைணவர்கள் சாக்குச் சொல்லுகின்றனர். அவர்களையும் அந்த ஆழ்வாரின் பின் சந்ததியாரை அவர் இருக்குமிடத்தையாவது போய் பார்க்க ஏனையா விடவில்லை என்று கேட்டால், அவர்கள் அப்போதுதான் கண் விழித்துக் கொண்டு அந்த ஆழ்வார் வேறு இவர்கள் ஜாதி வேறு என்று மதப்புரட்டுகள் பேசுகிறார்கள். ஆதலால், இத்தகைய புராணப் புரட்டுகளும் மதப்புரட்டுகளும் வயிற்றுப் பிழைப்பு அயோக்கியர்களால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதென்பதில் என்ன சந்தேகம்? என்னைக் கேட்டால் இவ் வுலகில் பல மதக் கொடுமைகளுக்கு ஜாதி வித்தியாச இழிவுக்கு முட்பட்டு கேவலமான மிருகத்திலும் இழிவாகக் கருதப்பட்டு பின்னால் மோட்சமடை வதைவிடச் சமத்துவம் பெறுவதுதான் பிரதானமென்று சொல்லுவேன். (பெருத்த கரகோஷம்) ஜாதிக் கொடுமையை ஒழித்து இங்கு சமத்துவத்தைக் கொடுக்காத சாமி அங்கு மோட்சத்தையும், ரம்பை, ஊர்வசி நடனத்தையும், தங்க மெத்தையையும், சுகபோகத்தையும் கொடுக்கிற தென்றால் அதை நம்புகிறதற்கு மடையனாவென்றுதான் கேட்கின்றேன். (பெருத்த கரகோஷம்) உண்மையாகவே அப்படி சாதிப்பதாயிருந்தாலும் இங்கு இழிவையும் கொடுமைகளையும் பொறுத்துக் கொண்டிருந்து இறந்த பின் அந்தச் சுகங் களைப் பெறலாமென்று யாரும் சொல்ல மாட்டார்கள் என்பது திண்ணம். ஆலயங்களின் பெயரால் செய்யப்படும் அக்கிரமங்களுக்கும் கொடுமை களுக்கும் எல்லையில்லை. உதாரணமாய் மதுரை மீனாட்சிகோயிலை



tamilnavarasam.com

எடுத்துக் கொள்ளுவோம். அக்கோயிலின் ஒரு கோபுர வாசலிலிருந்து மற்றொரு கோபுர வாசலுக்குக் குறைந்தது அரை மைலுக்கு அதிகமான தூரமிருக்கும். இவ்வழி சாதாரண ரஸ்தாவைவிட அகன்று வண்டிகள் தாராளமாய்ப் போய்வரத் தக்கதாயிருக்கின்றது. இவ்வழியாய்ப் பிற மதத்தின ரான முஸ்லீம்களும் கிறிஸ்தவர்களும் மிதியடி போட்டுக்கொண்டும், பீடி பிடித்துக் கொண்டும், துவஜஸ்தம்பம் வரையிலும் தாராளமாகப் போக அனுமதிக்கப்படுகிறது. ஆனால், இந்துக்களாகிய நாடார்கள் என்னும் வகுப்பாரும், மற்றைய தாழ்த்தப்பட்ட வகுப்பாரும் மட்டும் அந்த கோயில் மதில்சுவர் அருகில் வந்தாலும் சாமி செத்துப் போகுமென்கிறார்கள். (நகைப்பு) அது சாமியா? போக்கிரித்தனமாவென்று நான் கேட்கின்றேன். (கரகோஷம்) நம்முடைய உதவி வேண்டும்போது இந்து மதத்தைச் சேர்ந்தவர்களென்று நம்மையும் சேர்த்துப் பேசுவதும், நமது சுதந்திரத்தையும் உரிமையையும் கேட்டால் சாமி செத்துப் போகுமென்பதும் என்ன அயோக்கியத்தனமானது என்றுதான் கேட்கிறேன். தீண்டப்படாதார், தாழ்ந்தவர்கள் என்று கொடுமை யாக ஒதுக்கி ஒடுக்கப்பட்டு துன்புறும் மக்களுக்கும் உயர்ந்த ஜாதியார் கடவுள் முகத்தில் பிறந்தவர்களென்று சொல்லிக் கொள்பவர்களுக்கும் குணத்தி னாலும், உருவத்தினாலும், அறிவினாலும், ஏதாவது வித்தியாசமிருக்கின்றதா வென்று கேட்கிறேன். இவ்வாறிருக்க, மக்களில் பெரும்பான்மையோரை ஜாதிக் கொடுமைகளுக்கும் இழிவுக்கும்உட்படுத்தி வைக்க மதப்புரட்டுகளும் புராணப் புரட்டுகளும் தான் ஆதாரமாயிருக்கின்றன. மக்கள் சுதந்திரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பெருந்தடையாயிருக்கும் இம்மதத்தையும் புராணங் களையும் ஒழிக்காமல் பின் என்ன செய்வது?

ஒருவர் தாழ்த்தப்பட்ட மக்கள் 7 கோடியாயிற்றே இவர்களுக்கு மதம் வேண்டாமாவென்றும் கேட்டார். இவர்கள் வாழ்விற்கும் முன்னேற்றத்திற் கும் சுதந்தரத்திற்கும் மதம் அவசியமானால் இவர்கள் இந்துக்களல்லா தவர்கள் என்ற மதத்தை வைத்துக் கொள்ளட்டுமென்று சொல்லுகிறேன். இது எவ்வாறு பொருந்தும் என்றும் கேட்கலாம். தற்போது அரசியல் துறையில் கொடுமைகளை ஒழித்துச் சுதந்தரம் பெறுவதற்குப் பார்ப்பனரல்லாதார் என்ற பெயருடன் பெரிய சமூகம் வேலை செய்து பல நன்மைகளைப் பெற வில்லையா? என்று தான் கேட்கிறேன். அவ்வாறிருக்க, சமுதாயக் கொடுமை களை ஒழிக்கப் பரிகாரம் தேடுவதற்கும் சுதந்தரமும் முன்னேற்றமுமடை வதற்கும் மதம் அவசியமெனத் தோன்றினால் அப்போது இந்துக்களல்லா தவர்கள் என்ற பெயர் வைத்துக் கொள்வதும் முற்றும் பொருத்தம்தான். அன்றியும் சட்டசபைக்குத் தேர்தல்களில் நின்று சட்டசபை மெம்பர்களான சீனிவாச அய்யங்கார்களும், வருணாசிரம ஆச்சாரிகளும், வைதீக இந்துக் களும், மகமதியர் அல்லாத் தொகுதியின் பெயரால் நின்று சட்டசபை களுக்குள் சென்றார்களேயன்றி மற்றபடி முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் முதலானவர்களைப் போல இந்துக்கள் என்று சட்டசபைக்குள் செல்ல வில்லை என்பதையும் முக்கியமாய் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.



இந்துக்கள் என்று சொல்லிக் கொண்டு எத்தகைய சுதந்திரமுமில்லா திருப்பதைவிட இந்துக்களல்லாதாராக கோயிலுக்குள் போகும் உரிமையும், குளத்தில் குளிக்கும் சுதந்திரமும் இருப்பது எவ்வளவோ மேலென்று தான் சொல்லுவேன் (கரகோஷம்) நான் சாவதற்குச் சில நிமிஷமிருக்கும் வரையிலும் இந்த ஜாதி மத புராணப் புரட்டுகளை ஒழிக்கப் போராடிச் சாகுந் தருணத்தில் முஸ்லீமாகத்தான் சாவேன். (கரகோஷம்) ஏனென்றால், நான் செத்த பிறகு என் சொத்துக்களை என்னை மோட்சத்திற்கு அனுப்புவதான புரட்டுகளால் என் சந்ததியாரை ஏமாற்றி பறிக்கப் படாமலும் அவர்கள் மூடநம்பிக்கையிலீடுபடாமலிருக்கச் செய்யவும் தான் நான் அவ்வாறு செய்யத் தீர்மானித்திருக்கின்றேன். (கரகோஷம்)

நான் செத்த பிறகு என் சந்ததியார் என்னை மோட்சத்திற்கனுப்பப் படுமென்ற மூட நம்பிக்கையினால் பார்ப்பனன் காலைக்கழுவிச் சாக்கடைத் தண்ணீரைக் குடிக்காமலிருக்கச் செய்ய வேண்டுமென்பதற்காகவும்தான் நான் முஸ்லீமாகச் சாவேன் என்கிறேன். (பெருத்த கரகோஷம்) சுமார் 20 வருஷங்களுக்கு முன் வெள்ளைக்காரர்கள் தீண்டப்படாதார், அவர்களைத் தொட்டால் குளிக்க வேண்டுமென்ற ஒரு ஜாதியார் இன்று அவர்களைப் போல பிள்ளைகளைப் பெற்றால் போது மென்கின்றார்கள். (பெருத்த நகைப்பு) மதம் புராணம் முதலிய புரட்டுகளுக்கு ஆளாகி முட்டாள்தனத் திலும் அடிமைத்தனத்திலும் ஆழ்ந்திருப்பவர் யாரென்றால் இந்துக்கள்தான் என்று சொல்ல வேண்டும். அதிலும் இந்நாட்டில் இழிவுபடுத்தப்படும் மக்கள் யாரென்றால் நாம்தான். பிறமதங்களில் பல பாராட்டத்தக்க சீர்திருத்தங்க ளேற்பட்டு அவர்கள் நாளுக்கு நாள் முன்னேறி வருகின்றனர். கிறிஸ்து மதத்தில் அவர்களுடைய கிறிஸ்துவைத் தூக்கிப் போட்டு விட்டு சுதந்தரத் திற்கு வழியான விஞ்ஞான ஆராய்ச்சியிலிறங்கியிருக்கிறார்கள். மதத்தையும் கடவுளையும் நம்பி இருந்தது போதுமென்று அவர்கள் சுயமுயற்சியிலும் ஆராய்ச்சியிலும் இறங்கியிருப்பதனால் தான் ஆகாசத் தந்திகளையும் இறந்தவர்களை எழுப்பி ஆறு மணி நேரம் நடமாட வைப்பதுமான பல அற்புதங்களைக் கண்டுபிடித்து வருகிறார்கள். அவர்கள் தற்போது கடவுள் செயலாகிய மனித சிருஷ்டியையும் செய்யத்தக்க வல்லமை உடையவர் களாயிருப்பது அவர்களுக்கிருந்த மதபுராண மூடக் கொள்கைகளை ஒழித்து ஆராய்ச்சித் துறையிலிறங்கியதினாலல்லவா? (கரகோஷம்) அதுபோலவே மகமதியர்களும் இந்துக்களை விட பல வகையிலும் மேலானவர்களாகத் தானிருக்கின்றார்கள். முஸ்லீம்களுள் ஜாதி வித்தியாசமும் மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வென்ற கேவல உணர்ச்சியும் காணப்படவில்லை. ஆலயத்தில் அரசனாயினும் சாதாரண மனிதனாயினும் சமத்துவமாகத் தானிருந்து தொழுகின்றார்கள். அவனுடைய மதம் அவனுக்கு ஒற்றுமை யையும் வீரத்தையும் கொடுப்பதாயிருக்கின்றது. தென்னாட்டைக் குறித்தமட்டில் மலையாளத்தில் தான் ஜாதிக்கொடுமை சகிக்க முடியாத தாயிருக்கின்றது. அங்கு மற்ற உயர்ந்த வகுப்பார் இருக்கும் இடத்திற்கு அரை



RangaRakes tamilnavarasam.com

மைல் தூரத்திற்கு அப்பால்தான் தாழ்ந்த வகுப்பார் எனப்படுவோரும், தீண்டாதாரும் இருக்க வேண்டும். அவர்களுக்குச் சர்க்கார் ரஸ்தாவில் நடக்கும் சுதந்தமுரமில்லை. அவர்கள் கழனிகளில் விழுந்துதான் போக வேண்டும். மலையாளத்திலுள்ள 40 லட்சம் ஜனங்களில் 20 லட்சம் பேர் வேறு மதத்தினராயிருக்கின்றனர். மற்ற 20 லட்சத்தில் குறைந்தது 13 லட்சம் தாழ்த்தப் பட்ட வகுப்பார்தான். அங்கு ஆறு ஏழு லட்சம் பேர் இருந்து கொண்டு தங்களைவிட இருமடங்கு ஜனத் தொகையுள்ள சமூகத்திற்கு மதம், புராணம், பழக்க வழக்கமென்பதன் பெயரால் செய்து வரும் கொடுமைக ளுக்கு எல்லையில்லை. திருவாங்கூரில் இந்துக்களை விட அதிகமாய் படித்தவர்கள் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்தவ பாதிரிமார்கள் ஜாதி மதக் கொடுமைகளுக்கு உட்பட்டு துன்பமடைந்து வந்த தாழ்த்தப்பட்ட வகுப்பி னரை ஆங்கு கிறிஸ்தவர்களாக்கி கல்வியளித்து விசேஷ முன்னேற்ற மடையச் செய்துவிட்டனர். அவர்கள் போல என்றைக்கும் இந்துக் கள் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களும், இன்றைக்கும் இந்துக்க ளென்று நினைத் துக் கொண்டுள்ளவர்களுமான ஏழை மக்களோ மதத்தின் பெயராலும், இன்னும் பல கொடுமைகளுக்குட்பட்டுக் கொண்டும் ரஸ்தாக்களில் வருவதற் கும் உரிமையின்றி மிருகங்களிலும் கேவலமாய் நடத்தப்பட்டு வருகின்றனர். திருவாங்கூரில் இந்து ராஜ்யமிருப்பதாகச் சொல்லப்பட்டாலும் ஆங்கு பெரும்பான்மையோர் கிறிஸ்தவர்கள்தான். அதற்குக் காரணம் ஜாதிக் கொடுமையும் சமயப் புரட்டுகளும் தான். இன்னும் கொஞ்ச காலத்தில் திருவாங்கூரும் கிறிஸ்துவ ராஜ்யமாகிவிடுமென்பது திண்ணம். துருக்கியில் மதத்தையும் புராணத்தையும் மூட்டை கட்டி கடலில் போட்டுவிட்ட பின் தற்போது எவ்வளவு முன்னேற்ற மேற்பட்டிருக்கிற தென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. மதத்தை நம்பி கிலாபத் பாட்டுப் பாடிக் கொண்டிருந்த போது வெள்ளைக்காரன் துப்பாக்கி முனைக்குப் பயந்திருந்த துருக்கி தற்போது வெள்ளையரையும் நடுங்கச் செய்யும் நிலைமைக்கு வந்திருப்பதன் காரணமென்ன? இங்கு முஸ்லீம்கள் இன்னும் மதப்பித்து பிடித்து ஒன்றரை அங்குல தாடி வேண்டுமா, அல்லது இரண்டங் குலமாவென்று அளவு பார்த்து தாடியைக் கத்தரித்துக் கொண்டிருக்கும்போது துருக்கியில் முஸ்லிம்கள் மழுங்க சிறைத்து விடவேண்டுமென்றும், இல்லாவிட்டால் தண்டிக்கப்படு மென்றும் சொல்லப்படுகின்றது. இங்கு எந்த வர்ண லுங்கி கட்டுவது, எப்படி குல்லாய் போடுவது என்று விவாதித்துக் கொண்டிருந்தாலும், அங்கு வெள்ளைக்காரர்களைப் போல உடைதரிக்கா விட்டால் அபராதம் விதிக்கப் படுகின்றது. இங்கு கோஷா முறையின் கொடுமை மிகுதிப்பட்டு திரையைக் கனமாகப் போடும்போது துருக்கியில் தங்க விக்ரகம் போன்ற பெண்களைத் தனித்து ஐரோப்பாவுக்குப் படிக்க அனுப்பி வருகிறார்கள்.(கரகோஷம்) சுய ராஜ்யப் பேச்சு வரும்போது மட்டும் ஒற்றுமை சமத்துவம் முதலிய எல்லாம் வருகிறது. ஆனால் அது பெரும் பித்தலாட்டமென்பது தெருவில் நடக்க உரிமையிருக்க வேண்டுமென்னும் போது வெட்ட வெளிச்சமாகிவிடுகிறது.



மிருகங்களிலும் மிக இழிவான ஜந்துக்களுக்கு இருக்கும் உரிமையுமின்றி மனிதர்களுள் ஒரு சாராருக்கு அம்மிருகங்களைப் போல தெருக்களில் போகும் உரிமையிருக்கக் கூடாதாவென்றால் மதவிஷயத்தில் பிரவேசிப் பதான பித்தலாட்டத்தை என்ன அயோக்கியத்தனமென்று சொல்லுவது? பித்தலாட்டமான மதத்தில் சிக்கி இதனால் பல இழிவுக்கும் துன்பத்திற்கும் கொடுமைக்கும் உட்படுவதை விடஅம்மதத்தை ஒழிப்பதே மேலாகும். மதத்தை அழிக்கச் சுயமரியாதை இயக்கம் வந்ததா என்று சிலர் கேட்கலாம். ஜாதிக் கொடுமைகளையும் விபரீத வித்தியாசங்களையும் நிலைநாட்டுவதா யிருந்தால் அந்த மதத்தை ஒழிக்கத் தான் சுயமரியாதை இயக்கம் இருக்கின்ற தென்றுதான் சொல்லுவேன். (கரகோஷம்) உண்மையில் சுயமரியாதை உணர்ச்சி உங்களுக்கு இருக்குமானால் உங்கள் முன்னேற்றத்திற்கும் சுதந்தி ரத்திற்கும் தடையாயிருக்கும் மதக் கட்டுப்பாடுகளையும் சுவாமி பூதமென்ப தனையும் உடைத்தெறியப் பின்வாங்க மாட்டீர்களென்பது திண்ணம். (கரகோஷம்) மிருகத்திலும் கேவலமான வாழ்க்கையிலிருந்து விடுபட்டு நீங்களும் மனிதரோடு மனிதரான சமத்துவ வாழ்வடைந்து மற்றையோரைப் போல சுதந்தரமும் சுகமுமடைய வேண்டுமென்ற உணர்ச்சி உங்களுக்கு இருக்குமாயின் நீங்கள் உங்கள் முன்னேற்றத் தடைகளாயிருக்கும் எதனை யும் தகர்தெறியத் தயங்கக் கூடாது. உங்கள் சுதந்தரத்திற்கு எது தடையா யிருந்தாலும் அதனை ஒழிக்க முற்படுவீர்களானால் தீண்டாமை என்பது அரை நிமிஷத்தில் தானாய் பறந்துவிடுமென்பது திண்ணம். (கரகோஷம்) வடநாட்டில் மதம் ஒழிந்தாலும் மற்றென்ன ஒழிந்தாலும் ஒழியட்டும், சுதந்தரம் தான் பெரிதெனப் போராட முற்பட்டதனால்தான் நேற்றுகூட ஒரு ஆலயத் தில் சகல வகுப்பாரும் தாராளமாகச் சென்று கடவுளை வழிபடுவதற்குக் கதவுகள் திறந்துவிடப் பட்டன. உங்களுக்குக் கோயிலுக்குள் செல்லும் உரிமையும், குளங்களில் குளிக்கும் உரிமையும் கிடைத்து விட்டால் அதனு டன் நீங்கள் திருப்தியடைந்துவிடவும் முடியாது. நீங்கள் சுதந்திரமடைய விரும்புவது போலவே உங்கள் பெண்களுக்கும் சுதந்தரமளிக்க நீங்கள் தயாராக முன்வர வேண்டும். அப்போதுதான் உங்களுள் உண்மையான முன்னேற்றமேற்படும். உங்கள் பெண்களுள் மறுமணத்தை விரும்பும் விதவைகளுக்கெல்லாம் மறுமணம் செய்ய வேண்டும். இவ்வழக்கம் உங்களுள் இல்லாதிருக்க வில்லை. அறுத்துக்கட்டும் ஜாதி இழிந்த ஜாதி என்று சொல்லப்பட்ட போதிலும் அறுத்துக் கட்டுவதால் அறுத்துக்கட்டாத உயர்ந்த ஜாதியில் நடக்கும் பல கேவலமான சிசுக் கொலைகளும், கழுத்தைத் திருகிக் கள்ளியில் போடுவதான கொடுமைகளில்லாதிருப்பது எவ்வளவோ உசிதமல் லவா? (கரகோஷம்) ஒழுக்கத்திலும் படிப்பிலும் முன்னேற்றமடைந்திருந்தால் உங்கள் பெண்களை நாங்கள் பெற்றுக்கொண்டு, குணமும், படிப்பும், ஒழுக்க முமுள்ள உங்கள் பிள்ளைகளுக்கு எங்கள் பெண்களைக் கொடுக்கவும் பின்வாங்க மாட்டோம். இத்தகைய கலப்பு மணத்தின் மூலமாகத்தான் சாதி வித்தியாசப் பேய் சீக்கிரத்தில் ஒழியும். (கரகோஷம்) ஆண்கள் எப்படியிருந்



RangaRakes
tamilnavarasam.com

தாலும் அக்கறையில்லை. பெண்களுக்குத் தான் எல்லாக் கட்டுப்பாடுகளு மிருக்க வேண்டு மென்ற மூட அறிவீனமான கொள்கைகளிருக்கும் வரையிலும் நீங்கள் முன்னேற முடியாது. சாப்பிட்டுக் கை கழுவினதும், கதவைச் சாத்திக் கொள்ளென்று கணவன் வெளியே சென்றால், சாப்பிடும் போதே மோர் விடுவதற்கு வேலைக்காரியைக் கூப்பிட்டு, அய்யாவுக்கு மோர் விடு, நான் போய்விட்டு வருகின்றேன் என்று மனைவி சொல்லிவிட்டு வெளியேறினால்தான் ஆண்களுக்கு அறிவு வரும். (நகைப்பும் கரகோஷம்) ஆண்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். பெண்களுக்குத் தான் பதிவிரதத் தன்மை அவசியமென்ற பல அர்த்தமற்ற கொள்கைகளினால்தான் ஆண்களுக்குள் ஒழுங்கீனங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கவும் இடமேற் படுகின்றது. மதத்தின் பெயராலும், மற்றதன் பெயராலும் செய்யப்படும் அநீதிகளையும், அக்கிரமங்களையும் ஒழிப்பதில் அம்மதங்களையே ஒழிக்க வேண்டுவது அவசியமானாலும் அதற்கும் தயங்கக்கூடாது. மக்கள் சுதந்தரமடைந்து சுகமாய் வாழ்வதற்கு வழி என்னவென்று எனக்குத் தோன்றியதைப் பிறர் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் அஞ்சாது உண்மையை எடுத்துச் சொன்னேன். என் உணர்ச்சிக்குட்பட்டதைச் சொன்னேனே தவிர, இவர் அவருக்குச் சொன்னார், அவர் எனக்குச் சொன்னார், நீங்கள் அதன்படி நடக்காவிட்டால் பாவம், நரகத்திற்குப் போவீர்களென்ற கட்டுப்பாடு ஒன்றும் சொல்லவில்லை. நான் சொன்னவற்றை நீங்கள் ஆராய்ந்து சரி எனப்படு வதைக் கொண்டு, சரி இல்லாததை ஒதுக்கி என் மீது அனுதாபங்காட்டும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். (கரகோஷம்)

*(குறிப்பு : 3.8.1929 ஆம் நாள் இராயபுரத்தில் கண்ணப்பர் வாசக சாலைத் திறப்புவிழா - சொற்பொழிவு..*

**குடி அரசு - சொற்பொழிவு - 11.08.1929**



# வைதிகர்களின் இறக்கம்

பெண்களுக்குக் கல்வி கற்பிக்கக்கூடாது. ஒரு பெண் தனது கணவனையே தெய்வமாக மதித்துக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். அவர்களுக்குச் சுதந்தரமே கிடையாது என்று சனாதன தருமத்தின் பேராலும், சாஸ்திரத்தின் பேராலும், கடவுளின் பேராலும் இதுவரை கண்மூடித்தனமாகக் கூச்சல் போட்டுவந்த வைதிகர்களுக்கு இப்போதுதான் சிறிது சிறிதாகப் புத்தி உதயம் ஆகி வருவதாகத் தெரிகிறது. நமது சுயமரியாதை இயக்கத்தைப் பார்ப்பனர் களும் அவர்களுடைய கூலிகளும், “நாஸ்திக” இயக்கம் என்று கூறி பாமர மக்களை ஏமாற்றி வந்தாலும், நமது கொள்கைகளும், தீர்மானங்களும், பிரசாரமும் அவர்களை நேர் வழியில் நடக்கும்படி நிர்ப்பந்தித்து வருகின்றன என்பதிற் சந்தேகமில்லை. நாம் ஒவ்வொரு கூட்டத்திலும் மகாநாட்டிலும் பெண் மக்களின் பொருளாதார உரிமை, பாலிய விவாகம் ஒழித்தல், விதவா விவாகம் செய்தல் முதலிய நியாயமான உரிமைகட்காக பேசியும் தீர்மானங் கள் செய்தும் போராடி வருவது எல்லாருக்கும் தெரியும். சில நாட்களுக்கு முன்னர் திருவல்லிக்கேணியில் பெரிய பெரிய சாஸ்திரிகள் என்பவர்களும் பண்டிதர் என்பவர்களும் ஒன்று கூடி பெண்மக்கள் முன்னேற்றத்திற்கான சில தீர்மானங்கள் செய்திருக்கின்றனர். அவையாவன :-

1. அவிபக்தமாகவோ, விபக்தமாகவோ உள்ள நமது ஹிந்துக் குடும்பங்களில் சாஸ்திரியமாக விவாகம் செய்யப்பட்ட பெண்களுக்கு விவாக சமயத்திலிருந்து புருஷனது குடும்பச் சொத்திலும் அவனது ஸம்பாதனத்திலும் அப்படியே ஸ்திரிகளின் சொத்திலும் அவர்களின் சம்பாதனத்திலும் புருஷர்களுக்கு சமபாகமும், ஏற்படுத்துவதற்கு வேண்டிய முறையை நமது ஆரியர்கள் யாவரும் சமூகக் கட்டுப்பாட்டின் மூலம் ஏற்படுத்திக் கொள்ளுவது அவசியம்.

2. சாஸ்திரீயமாக விவாகம் செய்து கொண்ட பெண்ணைத் தகுந்த காரணமின்றித் தள்ளிவிட்டு மறு விவாகம் செய்பவரைச் சமூகப் பகிஷ்காரம் செய்வதற்கு வேண்டிய கட்டுப்பாட்டை அமைத்துக் கொள்ளுவது அவசியம்.

3. ஒரு குடும்பத்தில் புருஷர்களுக்குப் போலவே ஸ்திரிகளுக்கும் குடும்பச் சொத்தில் பாகம் கிடைக்குமாறு வழி தேட வேண்டும்.

4. ஒரு குடும்பத்தில் ஒரு பிதாவுக்கு ஒரு ஆணும் பெண்ணுமாக இரண்டு குழந்தைகள் பிறந்து பெண்ணுக்குக் கல்யாணமாகிப் புத்திரனுக்கு



RangaRakes tamilnavarasam.com


கல்யாணமாவதற்குள் பிதா முதலியோர் இறந்த சில நாளைக்கெல்லாம் அந்த ஆண்பிள்ளை இறப்பானானால் பிதா மூலம் கிடைத்த அவனது சொத்தும் ஸ்வார்ஜித சொத்தும் அவனது தாயாதிகள் அடைவது என்ற கெட்ட முறையை மாற்றி அவனது சகோதரியும், அவளது குழந்தைகளும் அனுபவிக்கும்படிக்கான முறையை ஏற்படுத்தி அதை அனுபவத்தில் கொண்டு வர வேண்டும்.

ஆகவே இவ்வழியை ஆரியர் யாவரும் சமூகக் கட்டுப்பாடு மூலம் ஏற்படுத்திக் கொள்ளத் தவறினால் அதன் மூலம் ஸ்திரீகளுக்கு நேரும் கஷ்டங்களைப் போக்க வேண்டி நமது காருண்யக் கவர்ன்மெண்டாரை அவ்வழியில் கடுமையான சட்டமியற்றி அதை உடனே அனுஷ்டானத் துக்குக் கொண்டுவந்து ஸ்திரீகளைக் காக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானங்களேயாகும்.

குறுகிய கால அளவில் இவ்வளவு தூரம் பெண் மக்கள் விஷயத்தில் வைதிகர்களின் விடாப்பிடியைத் தளரச் செய்த நமது சுயமரியாதை இயக்கம் இன்னும் கூடிய விரைவில் பாலிய விவாகம் ஒழித்தல், விதவா விவாகம் செய்தல் முதலியவற்றிற்கும் எவ்வித எதிர்ப்பும் நாட்டில் இல்லாமற் செய்து தக்க ஆதரவு தேடிவிடும் என்று உறுதி கூறுகின்றோம்.

**குடி அரசு – கட்டுரை – 11.08.1929**

10 குடி அரசு



குடி அரசு

சென்னை 1929 ஆகஸ்டு 11௳

## கடவுளும் மதமும்

—0—

2





RangaRakes

tamilnavarasam.com

# கடவுளும் மதமும்

# ( 2 )

இத்தலைப்புக் கொண்ட முதலாவது வியாசத்தில் கடவுளைப் பற்றி அதாவது கடவுள் என்கின்ற உணர்ச்சி மக்களுக்கு எப்போது எப்படி உண்டாயிற்று என்பதைப்பற்றியும், அவ்வுணர்ச்சி மக்களுக்கு எதுவரையில் இருக்க முடியும் என்பதைப்பற்றியும் சுருக்கமாகச் சிறிது எழுதி இருந்தோம். அதாவது மனிதன் உலகத் தோற்றத்திற்கும் நடப்பிற்கும் சம்பவங்களுக்கும் காரணம் கண்டுபிடிக்க முடியாத நிலையில் கடவுள் சக்தி என்றும், கடவுள் செயல் என்றும் நினைத்துக் கொள்ளுவதும், உதாரணமாக அவற்றிற்குக் காரண காரியம் தோன்றிய பின்பு அந்நினைப்பு கொஞ்சம் கொஞ்சமாக மாறி விடுவதும் சகஜம் என்பதாக குறிப்பிட்டு இருந்தோம். இந்த முறையிலேயே கொஞ்ச காலத்திற்கு முன் அநேக விஷயங்கள் கடவுள் செயல் என்று எண்ணியிருந்த மக்கள் விஞ்ஞான (சையன்ஸ்) ஆராய்ச்சி ஏற்பட்ட பிறகு அவ்வெண்ணத்தை மாற்றிக் கொண்டு அநேக விஷயங்களை மனிதன் செயல் என்று சொல்ல தைரியம் கொண்டுவிட்டார்கள். உதாரணமாக, கம்பியில்லாத் தந்தி விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம். கம்பியில்லாத் தந்தி ஏற்படுத்தி இருக்கும் விஷயமும், அது எப்படிச் செய்யப்படுவது என்கின்ற சையன்ஸ் உணர்ச்சியும் நமக்குத் தெரியாமல் இருக்குமானால் நாம் இன்னமும் அதை "ஒரு தெய்வீக சக்தி" என்றும் பழைய காலத்து ரிஷிகள் பேசிக் கொண்டிருந்ததாய் சொல்லப்படும் "ஞான திருஷ்டி சம்பாஷணை" என்றுமே சொல்லித் தீருவோம். ஆதலால் மக்களுக்கு அறிவும் ஆராய்ச்சி யும் வளர வளர கடவுள் உணர்ச்சியின் அளவு குறைந்து கொண்டே போகும் என்பது திண்ணம். அதுபோலவே அறிவும் ஆராய்ச்சியும் குறையக் குறைய கடவுள் உணர்ச்சி வளர்ந்து கொண்டே வரும் என்பதும் ஒப்புக் கொண்டாக வேண்டும். இப்போதும் பகுத்தறிவு குறைந்த மக்களிடமே தான் அநேகமாக தொட்டதற்கெல்லாம் கடவுளும், அவர்தம் செயல்களும் தாண்டவமாடு வதைப் பார்க்கின்றோம். அவர்கள் மேலேயே "கடவுள் வருவதை"க்கூடப் பார்க்கின்றோம். காட்டுமிராண்டிப் பக்குவமுடையவர்களிடமே அநேகமாக கடவுளைப் பற்றிய கதைகள் என்பவைகளும், புராணங்கள் என்பவைகளும் மதிப்புப் பெற்று இருப்ப தையும் பார்க்கின்றோம்.

கொஞ்ச காலத்திற்கு முன் அக்கதைகளை அப்படியே அதாவது



கடவுள் சக்தியில் நடைபெற்றது என்று நம்பிக் கொண்டிருந்தவர்கள்கூட இப்போது அப்படியே நம்புவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு தங்களுக்குள்ள அறிவு வளர்ச்சியில்லாத் தன்மையை மறைத்துக் கொண்டு சையன்சின் மூலம் அக்கதைகளை மெய்ப்பிக்க முயற்சி எடுத்துக் கொண்டு கஷ்டப் படுகின்றார்கள்.

இதிலிருந்து என்ன ஏற்படுகின்றதென்றால், மக்கள் வரவர இப்போது சையன்ஸுக்கு பொருத்தமில்லாததை ஏற்க மறுக்கக்கூடிய நிலைமைக்கு வந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது விளங்குகின்றது. மழையை வரச் செய்வதும், செத்தவனை மறுபடியும் பிழைக்கச் செய்வதும், பேச்சுகளையும், நாட்டியங்களையும் யந்திரங்களில் பிடித்துக் காட்டுவதும் போன்ற காரியங் கள் மனிதனால் செய்யக்கூடும் என்கின்ற நிலை ஏற்பட்ட பிறகு மிக்க பாமர ஜனங்களுக்குக்கூட இவையெல்லாம் கடவுள் செயல் என்கின்ற குருட்டு நம்பிக்கை மறைந்து வருவதில் ஆச்சரியமொன்றுமில்லை. எனவே ஒரு காலத்தில் அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சிக் கவலையும் இல்லாதபோது ஏற்பட்ட கடவுள் சம்பந்தமான எண்ணங்கள் இனியும் இருந்துதான் தீர வேண்டுமா என்றால், எப்படியும் அது ஒரு அளவுக்காவது இருந்துதான் தீரும் என்றே சொல்லுவோம்.

ஏனெனில், மனிதன்தான் எல்லாம் அறிந்தவன் என்கின்ற ஆணவத்தை உடையவனாதலால் தன் புத்திக்கு எட்டாததைத் தனக்குத் தெரியவில்லை என்று கண்ணியமாய் ஒப்புக் கொள்ள சுலபத்தில் சம்மதிக்க இஷ்டப்படமாட்டானாகையால், அங்கு அதாவது தனக்கு அறிவு கட்டை யாயப் போனபோது அவனுக்கு கடவுள் நம்பிக்கையும் கடவுள் செயலும் வந்துதான் தீரும். இதை மாற்றுவது சுலபமான காரியமல்ல. பூரண அறிவு வளர்ச்சி பெற்றால்தான் முடியும். அன்றியும் சிலர் உண்மை அறிந்திருந் தாலும் சுயநலமோ, மூடப்பிடிவாதமோ காரணமாக தங்களுக்கே புரியாத வற்றைப் பேசி பாமர மக்களை மயக்கிக் கொண்டும் இருப்பார்கள். ஏனெனில் மக்களுக்கு கடவுள் நம்பிக்கை இருப்பதாலேயே அவர்கள் பிழைக்கக் கூடியவர்களாய் இருப்பதால்தான். எது எப்படி இருந்த போதிலும் உலகத்தில் கடவுள் சம்பந்தமான குருட்டு நம்பிக்கைக்கு இருந்த மதிப்பு குறைந்து விட்டதால் கடவுள் உணர்ச்சியும் எப்படியும் மக்களுக்கு வரவர குறைந்து கொண்டு தான் போகும் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக வருத்தப் படுவதிலோ, யார் மீதாவது குற்றம் சொல்லுவதிலோ பயனில்லை ஆனால், அவ்வித குருட்டு நம்பிக்கையும் மூடப்பிடிவாதமும் ஒழிந்த காலத்தில் தான் உலகத்தில் ஒழுக்கமும் சமத்துவமும் நிலைபெறும் என்பது மாத்திரம் உறுதி.

## மதம்

மதம் என்னும் விஷயமும் ஆராயத் தகுந்ததேயாகும். மனித வர்க்கம் விலங்குகளைப்போல் தனித்தனியே காடுகளில் வாசஞ்செய்து வந்த நிலைமை



RangaRakes tamilnavarasam.com

மாறி குடிசைக்கட்டிக் கூடிக் குலவி வாழ ஆரம்பித்தபோதே அவற்றிற்கு சில கொள்கைகள் தேவையாகிவிட்டது. எப்படியெனில், எப்படி தனியே இருக்கும் மக்கள் ஏதாவது ஒரு பொது நன்மையை உத்தேசித்து தங்களுக்கென்று ஒரு சங்கத்தை நிறுவினால் உடனே அதற்குக் கொள்கைகள் நிர்ணயிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகின்றதோ அதேபோல் மனிதர்களின் கூட்டு வாழ்க் கைக்கு கொள்கைகளை நிர்ணயிக்க வேண்டியதாகிவிட்டது. அக்கொள்கைகள் தான் இப்போது மதம் எனப்படுவதாக இருக்கிறது. அம்மாதிரியான கொள்கை நிர்ணயங்களை மீறக் கூடாது என்பதற்கு நிபந்தனைகள் ஏற்படுத்தி அந்நிபந்தனைகளை மீறி நடப்பவர்களைத் தண்டிக்க முடியாத நிலையிலோ, அல்லது தண்டிக்க வேண்டாம் என்று தோன்றிய சமயத்திலோ, அல்லது சிலரின் சுயநலத்திற்காகவோ, வேறு விதத்தில் ஏமாற்றிப் பிழைப்பதற்காகவோ வேண்டி அக்கொள்கைகளைக் கடவுள் என்பதுடன் சம்பந்தப்படுவதனால்தான் மக்கள் ஏமாறுவார்கள் என்கின்ற எண்ணம் கொண்டு அவற்றைக் “கடவுள் உண்டாக் கினார்” என்றும் அவற்றிற்கு மீறி நடந்தால் “கடவுள் தண்டிப்பார்” என்றும் சொல்ல வேண்டியதாய்விட்டது. (இந்த இடம்தான் முதன்முதலாக மனிதன் தவறு செய்த இடமாகும்) ஆனால் இக்கொள்கைகள் நிர்ணயம் செய்யப்பட்டது எப்படி? எந்த ஆதாரங்களைக் கொண்டு? என்று பார்ப்போமேயானால், அது அந்தக் காலத்திய நிலைமை, சீதோஷ்ண ஸ்திதி, மக்களின் அறிவு நிலை, அதாவது பாமர மக்களின் அறிவீனம், சிலரின் சூழ்ச்சித்திறம் முதலாகிய நிலையில் அதாவது காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்பச் செய்யப்பட்டவைகள் என்றே சொல்ல வேண்டும். மேலும் ஒரு குறிப்பிட்ட கொள்கை பிற்கால தேச வர்த்தமானத்திற்கோ சிலரின் சுயநலத்திற்கோ, ஏற்றதாயில்லாவிட்டால் யாராவது அறிஞர் அல்லது தந்திரக்காரர் அதைமாற்ற நினைக்கும்போது பாமர மக்கள் மூடநம்பிக்கையின் பலனாய் தங்கள் பிடிவாதங்காட்டி மாற்ற சம்மதிக்காத காலத்தில் பிரிந்து போய் புதிய கொள்கைகள் வகுத்து அதாவது முன்னையதை திருத்தியோ, அல்லது சில மாற்றியோ, அல்லது சில புதியதுகளைச் சேர்த்தோ செய்ய நேரிடும்போது அது ஒரு புதிய மதமாக ஏற்பட்டு விடுகின்றதும் உண்டு. இதனால் பாமர மக்கள் அதாவது குருட்டுப் பிடிவாதமுள்ளவர்கள் “என் மதம் பெரிது” “உன் மதம் சிறிது” என்கின்ற மத சண்டைக்கு ஆளாகிவிடவும் நேரிட்டு விடுகின்றது.

இந்தச் சண்டையில்லாமல் திருத்தப்பாடு செய்யலாமா என்று நினைத்த பெரியவர்கள் கொள்கைகளை மாற்றாமல் பழைய கொள்கை களுக்கே புதிய வியாக்கியானங்களைச் செய்து திருப்தி செய்ய முயற்சித்தும் இருக்கின்றார்கள். ஆனாலும் அம்முயற்சிகளின் பலனும் முடிவில் உட்சமயங்களாகவும் சார்புச் சமயமாகவும் மாறிற்றேயொழிய கொள்கை களின் முக்கியங்களை அறிய முடியாமலேயே போய்விட்டது. இப்படியே தான் மதங்கள் வெகுகாலமாய் மாறிமாறியும் திரிந்து திரிந்தும் பெருகிக் கொண்டும் வந்ததனாலேயே மதங்களின் உண்மைத் தத்துவமும் அவசிய மும் அறிவதற்கில்லாமற் போனதோடு அதை ஒரு சடங்காகவே கொள்ள வேண்டியதாகியும் விட்டது. இன்றைய தினம் எந்த மதக்காரனையாவது



கண்டு உன் மதமென்ன? அதன் தத்துவமென்ன? என்றால் சில சடங்கையும் குறிகளையும் மாத்திரம் தான் சொல்லுவானே ஒழிய அதன் உண்மைத் தத்துவம், அதாவது எந்தக் கருத்தைக் கொண்டு ஆதியில் மதத்தை உண்டாக்கினார்களோ அந்தக் கருத்து சற்றும் அறிந்திருக்க மாட்டான். அதோடு அதற்கு நேர் விரோதமாக அறியாமையும் ஒழுக்கயீனங்களும் ஏற்பட்டுவிட்டது. அன்றியும் சிலர் இவற்றைத் தங்கள் சுயநலத்திற்கு உப யோகப்படுத்திக் கொள்ளவும் கருவியாய்விட்டது. சிறப்பாக இப்போதைய முக்கிய மதங்கள் என்று சொல்லப்படுபவைகள் எல்லாம் பாமர மக்களை ஏமாற்றி கொடுமைப்படுத்தி பணம் பறித்து புரோகிதக் கூட்டமும் அரசாங்கமும் செல்வந்தனும் பிழைக்க மார்க்கங்களாக இருக்கின்றனவே யன்றி பொதுவாக மனித வர்க்கத்திற்கு எவ்வித பலனும் இல்லாமற் போய்விட்டது. மற்றும் மதத்தினால் ஏற்பட்டுவரும் கெடுதிகள் என்ன என்று பார்ப்போமானால் முதலாவது மதம் மனிதனின் அறிவையே அடியோடு கெடுத்து விடுகின்றது. எப்படியெனில், ஒவ்வொரு மதக்காரனும் தனது மதப்படி ஒரு கடவுள் உண்டு என்று நினைப்பதோடு தனது மதத்தையும் கடவுள் உண்டாக்கினார் என்று நம்புவதாகக் காணப்பட்டாலும் மற்றொரு மதக்காரனும் அப்படித்தானே சொல்லுகிறான். ஆதலால் அவர்களுக்கு வேறு மதத்தையும் நமக்கு வேறு மதத்தையும் கடவுள் செய்திருப்பார் என்று சிறிதாவது யோசிக்கவோ, அல்லது நம் மதத்தை வையும்படியோ அன்றி ஏற்காதபடியோ அவர் மற்றொரு மதத்தை உண்டாக்கி இருப்பாரா? அப்படி யானால் இது ஒன்றுக்கொன்று முரண்பாடல்லவா? என்று எவருமே நினைப்பதில்லை எவருமே என்றால் மத ஆச்சாரியார்கள், மத அபிமானி கள் என்பவர்கள். முதலாக எவருமே கருதுவதில்லை.

இந்த ஒரு காரணத்தாலேயே மதம் மக்களின் அறிவை எவ்வளவு தூரம் கெடுத்திருக்கின்றது என்பது விளங்கும் இரண்டாவது, மனிதர்களின் ஒற்றுமைக்குப் பதிலாக மனிதனை மனிதன் பிரித்துக்காட்டவே மதம் உதவுகின்றது. மூன்றாவது, மதமானது மனிதனை வேடத்திலேயே திருப்தி யடையச் செய்கின்றதேயொழிய ஒழுக்கத்தில் சிறிதும் கவலை செலுத்த நிர்ப்பந்திப்பதில்லை. நான்காவது, எந்த மதத்திலும் பகுத்தறிவிற்குச் சிறிதும் இடமில்லை. ஏனென்றால், எவ்வளவு நல்ல மதமானாலும் முதலில் ஏதாவ தொன்றையாவது நமது புத்திக்கும் அறிவிற்கும் கண்ணுக்கும் படாததைக் குருட்டுத்தனமாய் நம்பித் தானாக வேண்டுமென்று சொல்லாமலிருப்ப தில்லை. அப்படியானால் அம்முறையில் ஒன்றை நம்பிவிட்டு அதேபோன்ற மற்றொன்றை நம்பாமலிருப்பதற்குக் காரணமும் இல்லை. ஐந்தாவது மதமானது கடவுளுக்கும் நமக்குமிடையில் தரகர்களை உண்டாக்கி, அத் தரகர்களின் நடவடிக்கையையும், வார்த்தையையும் அது எவ்வளவு அசம்பா விதமானாலும் நமது சொந்த அறிவைவிட, பிரத்தியட்ச அனுபவத் தைவிட மேலானதாக நினைக்கச் செய்கின்றது. அன்றியும் மதமானது பணம் செலவு செய்யும் அளவுக்கு மோட்சமும் பாவ மன்னிப்பும் இருப்பதாகவும், எவ்வித



RangaRakes tamilnavarasam.com

அக்கிரமங்களுக்கும் வணக்கத்தின் மூலம் மன்னிப்பு இருப்பதாகவும் நம்பச் செய்வதால் மனிதனை அக்கிரமம் செய்யவும், செய்வதன் மூலம் பணம் சம்பாதிக்கவும் தூண்டுகின்றது. சோம்பேறிப் பிழைப்புக்குத் தாராளமாய் மதம் இடம் கொடுக்கின்றது. மக்களைக் கோழைகளாக்குகின்றது. மதத்தினால் இவ்வளவு அநீதிகள் ஏற்பட்டும் உலக சம்பவங்களின் உண்மைக் காரண காரியங்கள் உணருவதற்கில்லாமல் நிர்பந்தமாய் மக்கள் மதத்தினால் தடுக்கப்படுகின்றார்கள். இவ்வளவும் தவிர ஒருவனுடைய உழைப்பில் மற்றும் ஒருவனை சாப்பிடச் செய்கின்றது. நிற்க, உண்மைச் சைவன் என்பவன் ஒருவன் எவ்வளவு அயோக்கியனானாலும் ஒரு துளி சாம்பல் அவன் மேலே பட்டு விட்டால் உடனே அவனுடைய சகல பாபமும் தீர்ந்து நேரே “கைலயங்கிரிக்கு”ப் போய்விடலாம் என்கின்றான். சுருக்கமாகச் சொன்னால் வக்கீல் தொழில் செய்பவனும் பொய்ப்புராணப் பிரசங்கம் செய்பவனும் விபூதி பூசிக் கொள்ளுகிற காரணத்தாலேயே தன்னை ஒரு சைவன் என்று எண்ணிக் கொண்டிருக்கிறான். பிறரும் அப்படியே எண்ண வேண்டுமென்று ஆசைப்படுகின்றான் என்றால் சைவனின் யோக்கியத்திற்கும் சைவ சமயத்தின் பெருமைக்கும் வேறு சாட்சியம் தேவையா? அது போலவே ஒரு உண்மை வைணவன் என்பவனும் ஒரு தடவை ராமா என்று சொல்லிவிட்டடால் சகல பாபமும் தீர்ந்துவிட்டது என்கின்றான். ராமனை விட உலகில் வேறு தெய்வமில்லை என்கின்றான். அதுபோலவே ஒரு உண்மைக் கிறிஸ்தவன் என்கிறவனும் ஏசுவை அடைந்தால் சகல பாபமும் தீர்ந்துவிடும் என்கின்றான். அன்றியும் ஏசுவின் மூலம் அல்லாமல் பாவமன்னிப்பு என்பது கிடையவே கிடையாதென்கின்றான். அதுபோலவே ஒரு முகம்மதியனும் குரான் வாக்கெல்லாம் கடவுள் வாக்கு, அது எந்த தேசத்திற்கும் எந்தக் காலத்திற்கும் பொருந்தியது, அதில் உள்ள ஒரு சிறு கேடாவது மாறினால் இஸ்லாம் மதமே போய்விட்டது என்கின்றான். இப்படியே ஒவ்வொரு மதத்திற்கு ஒவ்வொரு பெருமையும் அதுவேதான் உண்மையான மதம், முறையே-கடவுள் அவதாரம், கடவுள் குமாரன், கடவுள் தூதன் ஆகியவர்களால் ஏற்பட்டது என்றும் சொல்லுகின்றார்கள். மற்றது பின் வியாசத்தில்.

**குடி அரசு - தலையங்கம் - 11.08.1929**



RangaRakes

## ஒரு பாலிய விதவையின் பரிதாபம்!

### “ஹிந்து தருமத்தின் மகிமை”

17.7.29 ந் தேதி அலகாபாத் ஹைகோர்ட்டில் நீதிபதிகள் எங், பெனட் ஆகிய இருவர் முன்னிலையிலும் ஒரு அப்பீல் வழக்கு வாதிக்கப்பட்டது.

தீதுவானி கிராமம் நாராயணசிங்கர் மகள் இருபத்திரண்டு வயதுள்ள பீபியா என்னும் ஒரு பெண்ணுக்கு 5-வது வயதிலேயே மணம் முடிக்கப் பட்டது. அடுத்து ஆண்டில் புருஷன் இறந்து போனான். இவளுடைய ஜாதியில் விதவாவிவாக அநுமதி இல்லாமையால் பீபியா மரண பரியந்தம் விதவையாகவே காலம் கழிக்கும்படி நேரிட்டது. அவள் தன்னுடைய புருஷன் குடும்பத்திலேயே வாழ்ந்து வந்தாள். சென்ற ஆண்டில் கருத்தரித்து விட்டாள். இவள் மாடு மேய்த்துக் கொண்டிருக்கும் போது பிரசவ வேதனை கண்டு குழந்தையைப் பெற்றுக் குழி தோண்டிப் புதைத்துவிட்டாள். மாடு மேய்ப்பவர்கள் மூலம் பரவின செய்தி போலீசாருக்கு அறிவிக்கப்பட்டதும் அவர்கள் பீபியாவை சிசுக் கொலை செய்ததாக நீதிபதி முன்பாக நிறுத்தி னார்கள்.

பீபியாவுக்கு நீதிபதிகள் தீவாந்திர சிட்சை விதித்து மாகாண அரசாங் கத்தார் கருணைக்கும் சிபார்சு செய்திருக்கின்றனர். இந்து தருமத்தின் மகிமையே மகிமை!

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 11.08.1929**



tamilnavarasam.com

# மதுவிலக்குப் பிரசாரக் கமிட்டி

சென்னை மாகாணத்தில் மதுவிலக்குப் பிரசாரம் செய்வற்குச் சென்னை அரசாங்கத்தாரைச் சம்மதிக்கும்படியான நிலைமைக்குக் கொண்டு வந்த பெருமை நமது கலால் மந்திரி கனம் எஸ்.முத்தையா முதலியார் அவர்களுக்கே உரியதாகும். அதுபோலவே. அப்பிரசார திட்டத்திற்கு வேண்டுமென்றே துர் எண்ணம் கற்பித்து மதுவிலக்குப் பிரசாரம் செய்தால் மதுபானம் அதிகமாகுமென்று சொல்லி அதை நிறைவேறாமல் செய்ய முயற்சித்த "புண்ணிய கைங்கர்ய"த்தின் பெருமை காங்கிரஸ் சுயராஜ்ய கட்சிக்கும் தேசீயக் கட்சிக்குமே முழுவதும் போய்ச்சேர வேண்டியதாகும். அது போலவே இவ்விஷம முயற்சியை வெற்றிபெற வொட்டாது தலையிலடித்து ஒழித்து, மந்திரியின் திட்டத்தை நிறைவேற்றிய பெருமை ஜஸ்டிஸ் கட்சியாருக்கே உரித்தானதாகும்.

கலால் மந்திரி கனம் திரு.முத்தையா முதலியார் அவர்கள் மது விலக்குப் பிரசாரத்திற்காக நான்கு லட்ச ரூபாய் ஒதுக்கி வைத்து அப் பிரசாரத்திற்கென்று மத்திய கமிட்டியைத் தாமாகவே ஏற்படுத்தியிருந்தாலும் அக்கமிட்டி நியமனத்தில் மிக்க கவலையுடனும் பொறுப்புடனும் நடுநிலைமை வகித்து உண்மையான பொறுப்புள்ள கனவான்களாகவும், பொதுநலத்திற்குழைக்கும் சகல ஸ்தாபனங்களுக்கும் வகுப்புகளுக்கும் பிரதிநிதித்துவம் உள்ளதாகவும், யாராலும் எவரை பற்றியும் ஆட்சேபனை சொல்ல முடியாததாகவும் பார்த்து நியமித்தவுடன் அவர்கள் வசத்திலேயே பூராப் பணத்தையும் சகல அதிகாரத்தையும் ஒப்புவித்துவிட்டார். மற்றும் கனம் மந்திரியின் நல்ல எண்ணத்திற்கும் மாகாண நிர்வாக கமிட்டியின் நேர்மைக்கும் உதாரணம் சொல்ல வேண்டுமானால் இக்கமிட்டியினால் நியமிக்கப்பட்ட ஜில்லா கமிட்டிகளில் இத்திட்டத்தை அடியோடு எதிர்த்தவர் களும் இத்திட்டத்திற்கு துர் எண்ணம் கற்பித்தவர்களுமான சுயராஜ்யக் கட்சிக்காரரும், சுயேச்சைக் கட்சிக்காரரும், சகல வித தேசீயக் கட்சிக்காரரும், ஒத்துழையாதாரும் அங்கம் பெற ஆசைப்பட்டதும், நியமனத்தை ஏற்று, கமிட்டியின் தத்துவத்தை நிறைவேற்ற வேலை செய்ய சம்மதித்திருப் பதுமான காரியம் ஒன்றே போதுமானதாகும். மாகாண மதுவிலக்கு பிரசார போர்டிலும் அதன் நிர்வாக சபையிலும் அங்கம் பெற்ற திவான்பகதூர் எம்.ராமச்சந்திரராவ் எம்.எல்.ஏ. அவர்கள் எல்லா இந்திய மதுவிலக்கு கமிட்டி காரியதரிசி ஆவார். அது மாத்திரமல்லாமல் எல்லா இந்திய காங்கிரஸ்



மதுவிலக்கு கமிட்டியிலும் அங்கத்தினராவார். மற்றும் திருவாளர்கள் கே.ஆர். வெங்கிட்டராமய்யர் எம்.எல்.சி, சூரியநாராயண ராவ் மற்றும் இரண்டு மூன்று பார்ப்பனர்களும் அதாவது வருணாச்சிரம தர்மம், பார்ப்பன ஆதிக்கம், சீர்திருத்தம் ஆகிய சபைகளின் பிரதிநிதிகள் என்றே சொல்ல வேண்டும் என்றாலும், இப்படிப்பட்டவர்களாகவே கமிட்டியில் 100-க்கு 20 வீதத்திற்கு குறையாமல் பார்ப்பன பிரதிநிதித்துவம் கொடுத்தே கமிட்டி நியமிக்கப்பட்டிருப்பதையும், அதுவும் சரியான பார்ப்பன ஆதிக்கத்தில் கவலையுள்ளவர்களாகவே மிகுதியும் நியமிக்கப்பட்டிருப்பதும் காணலாம். மற்றபடி ஜில்லா பிரசாரக் கமிட்டி நியமன விஷயத்திலும் கனம் மந்திரி தாம் எவ்வித எதேச்சதிகாரமும் எடுத்துக் கொள்ளாமல் அதையும் ஒரு சப் கமிட்டிக்கு விட்டு அக்கமிட்டியிலும் திரு.எம். ராமசந்திரராவ் உள்பட பார்ப் பனர் இரண்டு பேரும், பார்ப்பனர்களுக்கு அநுகூலமான அதாவது பார்ப்பனீயத்தில் மிகுந்தப் பற்றும் பார்ப்பனர் அல்லாதார் கட்சிக்கு விபரீத மான மனப்பான்மையும் கொண்ட திரு.வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர் களையும் திரு.குழந்தைவேல் முதலியார் அவர்களையும் ஜஸ்டிஸ் கட்சி சார்பாக காங்கிரஸ்காரரான திரு.முனுசாமி நாயுடு அவர்களையும் சேர்த்து இவ்வைந்து கனவான்கள் வசமேவிட்டு அவர்களால் பொறுக்கி எடுத்து சிபார்சு செய்யப்பட்ட கனவான்களையே மிகச் சிறிய திருத்தத்துடன் நிய மனம் செய்யச் செய்திருக்கிறார்.

இந்நியமனங்களிலும் மிக்க ஜாக்கிரதையாய் கூடிய வரையில் ஒரு பார்ப்பனர், ஒரு கிறிஸ்தவர், ஒரு மகமதியர், ஒரு தாழ்த்தப்பட்டவர், ஒரு சர்க் கார் உத்தியோகஸ்தர் (இவர் பெரும்பாலும் பார்ப்பனரே) இருக்கிறார்களா? எனப் பார்த்துவிட்டு பிறகு தான் மீதி நான்கு பேர்களே பார்ப்பனர் அல்லாத வர்கள் என்னும் வகுப்பு பிரதிநிதித்துவமும் ஒவ்வொரு கமிட்டியிலும் கக்ஷி பிரதிநிதித்துவமும் முக்கியக் கொள்கையாய் வைத்துக் கவனித்தே போடப் பட்டு இருக்கிறதா? என்பதையும் கவனித்து இருக்கிறார். இந்தப்படி சிபார்சு செய்யப்பட்ட கனவான்களின் பெயர்கள் எல்லாம் ஓட்டு எடுக்காமல் ஏகமனதாய் தெரிந்து எடுக்கப்பட்டதேயொழிய மாகாணம் முழுமைக்கும் ஓட்டு மொத்தம் சுமார் 300 கனவான்கள் நியமிக்கப்பட்டதில் ஒன்று, இரண்டு கனவான்கள் பெயர்கூட ஓட்டுக்கு விட்டிருக்கப்பட்டிருக்காது என்று உறுதி கூறலாம். தவிர ஜில்லா கமிட்டிகளில் சுயராஜ்ய கட்சியார் பெயர்கள் நியமனம் செய்யப்பட்டதைப் பார்த்த கனவான் ஒருவர் அந்தப் பெயர்களை எடுத்து விட வேண்டும் என்றும், அவர்கள் இந்தத் திட்டத்திற்கு விரோதமான மனப் பான்மையைக் காட்டினவர்கள் என்றும், அவர்களை நியமித்தால் ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்றும், ஒப்புக் கொண்ட போதிலும் திட்டத்தின் தோல்விக்கு உதவியைக் கருதுவார்களே ஒழிய வெற்றிக்கு உதவி செய்ய மாட்டார்கள் என்றும் எடுத்துச் சொன்ன காலையில் சப்கமிட்டியில் இருந்த ஒரு முக்கியமான பார்ப்பன அங்கத்தினர் சுயராஜ்யக்காரர்கள் இக்கமிட்டி யில் இருக்க ஆசைப்பட்டதாகவும் தான் இரண்டொருவருடன் கலந்து



RangaRakes tamilnavarasam.com

பேசியதில் அவர்கள் இக்கமிட்டியுடன் ஒத்துழைத்து இத்திட்டத்தை நிறைவேற்றச் சம்மதித்ததாகவும் வாக்கு கொடுத்து அக்கனவான்களின் பெயர்களைக் கமிட்டியில் இருக்கச் செய்ததாக தெரிகின்றது. கடைசியாக ஒத்துழையாதார் என்பவரும் எல்லா இந்தியக் காங்கிரஸ் மது விலக்கு சங்கத்தின் தலைவருமான திரு.சி.ராஜகோபாலாச்சாரியாருடைய பெயரை ஜில்லா கமிட்டியில் பிரேரேபித்த போதும் விளம்பரக் கமிட்டியில் பிரேரே பித்தபோதும் இதேபோல் கேள்விகள் கேட்கப்பட்டதில் அவரும் சம்மதித்தி ருப்பதாகச் சொன்னதின் பேரிலேயே விளம்பரக் கமிட்டியில் அவர்களைப் போட கமிட்டி சம்மதித்திருப்பதாகத் தெரிகின்றது. ஆகவே, மது இலாக்கா மந்திரி மதுவிலக்கு விஷயத்தில் செய்திருக்கும் வேலையானது இந்தியாவில் இதுவரை எந்த சர்க்காரும் மந்திரியும் செய்யாத ஒரு பெரிய காரியத்தைச் செய்தார் என்றே சொல்ல வேண்டும்.

இவரது ஆட்சியில் சர்க்கார் உத்தியோகத்தில் வகுப்புவாரி பிரதிநிதித் துவ உத்திரவும் சர்க்காரின் மதுவிலக்கு பிரசாரத் திட்டமும் சென்னை மாகாண அரசியல் சரித்திரத்தில் ஒரு முக்கியமான பாகத்தைப் பெற வேண்டியவைகள் என்றே சொல்லுவோம்.

## ஜில்லா கமிட்டிக்கு ஒரு விண்ணப்பம்

இத்திட்டத்தை ஏற்பாடு செய்த கனம் மந்திரி அவர்களும், இவர்களால் நியமிக்கப்பட்ட பொதுக் கமிட்டியும் கூடியவரையில் அவர்களது கடமையைச் செய்துவிட்டார்களென்றே சொல்லலாம். ஆனாலும் இத்திட்டத்தின் வெற்றியும், பலனும் இனி ஜில்லா பிரசாரக் கமிட்டியிடம்தான் அதிகமாய் இருக்கிறதென்று சொல்லுவோம். என்னவென்றால், இத்திட்டத்திற்கு ஒதுக்கி வைத்த பணம் பெரும்பாகம் ஜில்லா கமிட்டியாரிடம் ஒப்படைக்கப்படப் போகின்றது. ஆதலால் அவர்கள்தான் தக்கபடி அதைச் செலவு செய்து பிரசாரம் செய்யக் கடமைப் பட்டிருக்கின்றார்கள். இதற்குக் கமிட்டியில் அங்கத்தினர்கள் கூட்டுறவுடன் சரியான பிரசாரகர்களை நியமித்து ஒழுங்கான முறையில் பிரசாரம் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றார்களென்பது மிகையாகாது. பிரசாரகர்களை முதலில் தக்கபடி கமிட்டியார் தர்ப்பீத் செய்யவேண்டும். பிரசாரத்தின் போது வார்த்தைகளை அளந்து பேசும்படியும், குடிப்பவர்களையோ கடைக்காரர் களையோ மதுபான வியாபாரிகளையோ, மரம் வைத்திருப்பவர்களையோ அதிக்கிரம வார்த்தைகளால் பேசாமலிருக்கும்படியும் திட்டம் செய்ய வேண்டும். மறியல் செய்ய வேண்டிய விஷயம் சில சமயங்களில் அவசியமானாலும் முதலிலேயே அதாவது எடுத்த எடுப்பிலேயே அதை ஆரம்பித்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். முதலில் கள் சாராயக்கடைகள் சர்க்கார் சட்டப்படி நடைபெறுகின்றதா? காலா காலங்களில் திறக்கப்பட்டும் மூடப்பட்டும் இருக் கின்றதா? என்பதைக் கவனித்துப் பார்த்து அப்போதைக்கப்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், மாகாண பிரசார காரியாலயத்திற்கும் அறிக்கை செய்ய வேண்டும் மற்றும் உரிமை இல்லாத இடங்களில் விற்கப்படுகின்றதா? என்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டும். உரிமை இல்லாமல் உற்பத்தி செய்யப்படு கின்றதா? என்பதையும் பார்க்க வேண்டும். இவைகளினால் மதுவிலக்கு லட்சியத்திற்கு அதிக நன்மையுண்டு என்பது நமது அபிப்பிராயம். இவை சரிவர கவனித்துப் பிரசாரம் செய்த பிறகே மறியல் செய்யவேண்டும். தவிர வும் மது விலக்குக்காக முழுதும் சம்பளப் பிரசாரகர்களாகவே இல்லாமல் கௌரவ பிரசாரகர்களையும் நியமித்து அவர்களுக்குச் செலவு மாத்திரம் கொடுப்பதாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்பிரசாரத்தில் பெண்களை அதிகமாகக் கௌரவப் பிரசாரகர்களாக நியமிக்க வேண்டும். முனிசிபாலிடி, தாலூகா போர்டு ஆகியவைகளிலுள்ள பெண் உபாத்தியாயர்களை சனி, ஞாயிற்று கிழமைகள் தோறும் பிரசாரம் செய்ய கேட்டுக் கொண்டு கிராமங்களுக்கு அனுப்பி அவர்களுக்கு வழிச் செலவு கொடுத்துப் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். மது இலாகா அதிகாரிகளால் ஏதாவது இடையூறு நேரிடுமானால் பிரசாரகர்கள் அவர் களிடம் நேரில் எவ்வித வர்த்தமானங்களும் வைத்துக் கொள்ளாமல் சாட்சி களுடன் ஜில்லா கமிட்டி மூலம் மாகாண சபை காரியாலயத்திற்கு அனுப்பி விட வேண்டும்.

ஜில்லா கமிட்டியார்களும் தங்கள் பிரசாரகர்கள் பெயர்களைச் சம்பந் தப்பட்ட போலீஸ் அதிகாரிகளுக்கும் மது இலாகா அதிகாரிகளுக்கும் அனுப்பிவிட வேண்டும். ஆகவே, இவை முதலாகிய அநேக விஷயங்கள் பிரசாரக் கமிட்டியார் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இந்த முறையில் ஒரு ஐந்து வருஷங்களுக்குக் கட்டுப்பாடாகவும், கட்சிப் பிரதி கட்சி இல்லாமலும் மதுவிலக்குப் பிரசாரம் நடைபெறுமானால் சென்னை மாகாணத்தில் மதுபானத்தில் ஒரு பகுதி பாகத்தையாவது ஒழித்து விடலா மென்கின்ற நம்பிக்கை இருக்கின்றது. ஆகவே, ஜில்லா கமிட்டி யார்களும், பொதுஜனங்களும் நமது மந்திரி கனம் முத்தையா முதலியாரவர்களின் இவ்வரிய முயற்சிக்குத் தக்க உதவி செய்வார்களாக.

**குடி அரசு - தலையங்கம் - 18.08.1929**



RangaRakes

tamilnavarasam.com

## திரு.நடராஜன்

தஞ்சை திரு. த.நா. நடராஜனைத் தமிழ் உலகம் நன்கறிந்திருக்கும். அவர் "எனது திடம்" என்னும் தலைப்பின் கீழ் "நேர்வழிகண்டது" என்ற உள் தலைப்பிட்டு எழுதியிருக்கும் ஒரு பகிரங்க அபிப்பிராயத்தை மற்றொரு பக்கம் வெளியிட்டிருப்பதைப் பார்த்தால், அவரது தேச தொண்டின் ஆர்வமும், பொதுநலத் தியாகமும் நன்றாய் தெரியவரும். சுமார் 20 வருடகாலமாய் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டுழைத்திருக்கும் அவர், மற்ற இயக்கங்களோடு கலந்து இருந்து ஒவ்வொன்றையும் கவனித்துப் பார்த்துக் கடைசியாக சுயமரியாதை இயக்கத்தில் ஒருவாறு பற்றுக் கொண்டு அக் கொள்கைகளில் பலவற்றையும் ஏற்றுக் கொண்டு அவற்றிற்காக தனது வாணாளை உபயோகிக்கத் தீர்மானம் செய்து கொண்டிருக்கின்றார் என்பது விளங்கும். இவ்வித உறுதி கொண்ட மக்களையே இதுபோது உலகம் சிறப்பாக நமது நாடு எதிர்பார்ப்பதுடன் லட்சியம் கைகூடும்வரை ஒரே உறுதியுடன் நின்று அதற்காக சகலவிதமான தியாகத்தையும் எதிர்ப்பார்க் கின்றது. நிற்க அவரது கடிதத்தில் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தையும், அரசியல் கொள்கையையும் தம்மால் ஒப்புக் கொள்ள முடியவில்லை என்கின்ற குறிப்பும் காணப்படுகின்றது. எனினும் அவர் மனதில் உள்ளதை ஒளிக்காமல் வெளியிட்டதற்கு நாம் அவரைப் பாராட்டுவதுடன், அதற்குச் சமாதானமும் சொல்லக் கடமை பட்டிருக்கின்றோம், பொதுவாக இந்தியாவானது எந்தக் காரணத்தாலோ யாருடைய சூழ்ச்சியாலோ பல மதக்காரர்களாகவும், பல ஜாதி வகுப்பார் களாகவும் உள்ள மக்களைக் கொண்ட தேசமாக இருக்கின்றது என்பதை யாவரும் மறுக்கமாட்டார்கள். அன்றியும் பல மதமும் பல வகுப்பும் ஒன்றுக் கொன்று மகா கொடூரமான ஏற்றத்தாழ்வு, துவேஷம், வெறுப்பு ஆகிய உணர்ச்சியோடு இருக்கின்றன. பல மதமும் பலஜாதி வகுப்பும், துவேஷமும் வெறுப்பும், உயர்வு தாழ்வும் ஒழிந்து ஒன்றாக வேண்டும் என்பது சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய கொள்கையானாலும் – அதுவரையிலும் இந்த மதப் பிரிவுக்கும் ஜாதி வகுப்புப் பிரிவுக்கும் ஏதாவது ஒரு ஏற்பாடு வேண்டியது அவசியமா அல்லது அவரவர்கள் தன் தன் கையாலானபடி நடந்து கொள்ள ஒருவருக்கொருவர் துவேஷத்துடனும் வெறுப்புடனும் மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டியதுதானா என்பதே நமது முக்கிய கேள்வி.



கையில் வலுத்தவன் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் என்று அவர் சொல்ல வருவாரானால் நமக்கு இப்போதைய ஆட்சி முறையே மேலானது என்றுதான் சொல்லுவோம். அப்படிக்கில்லாமல் வலுத்தவனை யும் இளைத்தவனையும் ஒன்றுபோல் பாவிக்கப்பட வேண்டுமானால் ஒருவனை ஒருவன் மோசம் செய்யாமல் அவனவன் பங்கை அவனவன் அடைய ஒரு ஏற்பாடு செய்துதான் ஆகவேண்டும் என்போம். இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நமக்கு நன்மையா அல்லது இந்த ஆட்சிக்கும் பார்ப்பனருக்கும் நன்மையா என்பதற்கு ஒரே ஒரு பரீட்சை சொல்வோம். என்னவென்றால், அரசியலில் எந்தெந்த காரியம் பார்ப்பனனும் வெள்ளைக் காரனும் கூடாது என்கின்றார்களோ அவையெல்லாம் நமக்கு மிக்க அவசிய மானது என்பது பொதுவாக எல்லாப் பெரியோர்களும் ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய விஷயமாகும். ஏனெனில், இந்த நாட்டின் மீது இப்போதுள்ள கொடுமையான ஆட்சி முறைக்கு இந்த இரு கூட்டத்தார்களே அவர்களது சுயநலம் காரணமாக பொருட்டானவர்களாவார்கள். ஆகவே அவர்கள் ஒரு கொள்கையை வேண்டாம் என்று சொல்வார்களானால் அது அவர்களுக்கு விரோதமும் நமக்கு நம்மையும் என்றுதான் அறிவுள்ளவர்கள் கருதுவார்கள். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை. இதுதான் போகட்டும், என்றாலும் திரு. ஜவஹர்லால் நேருவைப் பின்பற்றுவதாகச் சொல்லும் திரு.நடராஜன் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பிடிக்கவில்லை என்று சொல்வது மிகவும் அதிசயமாய் இருக்கின்றது. ஏனெனில் திரு.ஜவஹர்லால் அவர்கள் நாட்டில் ஏழை பணக்காரன் என்கின்ற வித்தியாசங்கூட இருக்கக்கூடாது என்றும் பணக்காரனுடைய பூமிகளை ஏழைகளுக்குப் பங்கிட்டு கொடுக்க வேண்டும் என்றும் கூட கருதி இருப்பதாக ஜாடைகாட்டியிருக்கின்றார். அப்படி ஒரு சமயம் பங்கிடும் சந்தர்ப்பம் வந்தால் அவர் எல்லோருக்கும் விகிதாச்சாரப்படி பங்கிட்டு கொடுப்பாரா? அல்லது கையில் வலுத்தவன் பார்த்துக் கொள்ளட்டும் என்று சண்டை போட்டு மண்டை உடைத்துக் கொள்ள விடுவாரா? என்றுதான் கேட்கின்றோம். அவனவன் உரிமை அவனவன் வகுப்புரிமை – அவனவன் மத உரிமை – அவனவன் நாட்டுரிமை – அவனவன் தேச உரிமை என்கின்ற முறைப்படி வந்தால்தான் உலகம் உண்மையான உரிமையை காண முடியுமே ஒழிய மற்றப்படி தலைகீழாய் போவதாய் ஒரு உரிமையும் பெற முடியாதென்று உறுதியாய்ச் சொல்லுவோம். ஏனெனில் தன்னுரிமை பெற முடியாதவன் தன் வகுப்புரிமை பெற முடியாது. தன் வகுப்புரிமை பெற முடியாதவன் தன் மத உரிமை பெற முடியாது. தன் மத உரிமை பெற முடியாதவன் தன் நாட்டுரிமை பெற முடியாது. தன் நாட்டுரிமை பெறமுடியாதவன் தன் தேச உரிமை பெற முடியாது. இதுவே நமது முடிந்த முடிவு. ஆதலால் தான் நமது சுயமரியாதை இயக்கம் முதலில் தன் உரிமைக்கும் பிறகு தனது வகுப்புரிமைக்கும் பாடுபடுகின்றதை முக்கிய கொள்கையாய் கொண்டிருக்கின்றது. ஒருவனுக்கு முதல் முதலாக தான்



RangaRakes tamilnavarasam.com

என்பதும் பிறகு தனது வகுப்பு என்பதும் பிறகு தனது நாடு என்பதும் பிறகு தனது தேசம் என்பதும் படிப்படியாக மறைந்து கடைசியாக எல்லாம் ஒன்று என்கின்ற சம நோக்குவரும் காலத்தில் தான் பொது உலக உரிமையை நாட முயற்சிக்க முடியும். அப்படிக்கில்லாதபோது தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் எங்கேயோ நடுவில் புகுந்து கொண்டு தன் உரிமை வேண்டாம் தனது வகுப்பு உரிமை வேண்டாம் தனது நாட்டு உரிமை வேண்டாம் என்று சொல்லிவிட்டு தேச உரிமையே பெரிது என்றால் இதில் ஏதாவது அர்த்தமுண்டா? என்றுதான் கேட்கின்றோம்.

உலகத்தில் மற்ற மனிதரைப் போல் திரு.நடராஜனும் ஒரு மனிதராய் இருக்கும் போது உலகத்தில் மற்ற தேசங்களைப் போல் இந்தியாவும் ஒரு தேசமாய் இருக்கும்போது, இந்தியா தேச உரிமையைப் பற்றி மாத்திரம் இவருக்கு என்ன இவ்வளவு அக்கரை என்று கேட்டால் அதற்கு அவர் என்ன பதில் சொல்லக் கூடும்? “இந்தியாவென்றும், இங்கிலாந்து என்றும் துருக்கி என்றும் ஏன் பாகுபடுத்த வேண்டும்? தேசவாரி உரிமை என்பது உலகத்தின் ஒற்றுமையைக் கெடுக்காதா? உலக முன்னேற்றத்திற்குத் தேசவாரி ஒற்றுமை முட்டுக் கட்டையல்லவா?” என்று யாராவது கேட்டால் இதற்கு தேசியவாதி களின் பதில் என்ன என்று கேட்கின்றோம்.

“தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடு வோம்” என்று பாரதி சொன்னாரே அதுபோலவே தனி ஒரு வகுப்புக்கு உரிமை இல்லை என்றால் எவ்வித தேசீயத்தையும் அழித்திடுவோம் என்பதே சுயமரியாதை இயக்கத்தின் தத்துவமாகும்.

வகுப்புரிமை கிடைத்தவுடன் இனி கிடைக்கவேண்டிய உரிமை என்ன என்பது படிப்படியாக சுயமரியாதை இயக்கத்திற்குத் தெரியும் என்றே சொல்லுவோம். ஆதலால் நாட்டின் நலமானது வகுப்புரிமையில் கெட்டுப் போகாதென்றும் அதில்லாவிட்டால் தான் கையில் வலுத்தவன் பாடு என்ப தானால் தான் கெட்டுப்போகும் என்றும் திரு.நடராஜனுக்குச் சொல்லு கின்றோம்.

தவிர அரசியல் கொள்கை பிடிக்கவில்லை என்கின்றார். அரசியல் என்றால் இன்னது என்பதை உணராத காரணத்தாலேயே இவ்விதம் சொல்ல நேரிடுகின்றதே ஒழிய வேறில்லை. திரு.நடராஜன் மாத்திரமல்லாமல் மற்றும் அநேக வாலிபர்கள் இப்படிச் சொல்லுவதைக் கேட்கின்றோம். வெள்ளைக் கார ஆட்சிக்கும் நமக்கும் உள்ள அபிப்பிராய பேதம் இன்னது என்பதை முதலில் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த இடத்தில் திரு.நடரா ஜனின் அபிப்பிராயம் வெள்ளைக்காரர்களின் ஆட்சி கூடாது என்பது அபிப்பிராயமா? அல்லது உலகத்திற்கு ஒரு அரசாட்சியே தேவையில்லை என்பது அபிப்பிராயமா? என்பது முதலில் விளங்க வேண்டும். உலகத்திற்கு அரசாட்சியே வேண்டாம் என்று சொல்வதானால் சுயமரியாதை இயக்கம் அதை ஒரு விதத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடும். ஏனெனில் மதம் கடவுள் அரசு



முதலியவைகள் எல்லாம் மனிதனின் சுயமரியாதையை ஒழித்து எப்படியாவது அடிமைப்படுத்துவதற்கு ஏதுக்களானவைகளே ஒழிய அவை ஒரு விதத்திலும் சுதந்தரம் அளிப்பவைகளல்ல. அன்றியும் மேற்கண்ட மூன்றும் அயோக்கியத்தனம் ஒழுக்கவீனம் ஏமாற்றல் ஆகிய கல், மண், மரம் முதலியவைகளால் கட்டப்பட்ட கோட்டைகளாகும். அதற்குள் அகப்பட்ட வன் சுதந்தரமாக இருக்கவே முடியாது. ஆகவே அம்மூன்றையும் இடித்து எறிவதில் சுயமரியாதை இயக்கத்திற்கு ஆட்சேபணை இருக்க நியாய மில்லை. ஆனால் “இந்தக் கடவுள் வேண்டாம் அந்தக் கடவுள் வேண்டும். இந்த ராஜா வேண்டாம் அந்த ராஜா வேண்டும் என்பது போன்ற வார்த்தைகள் மாத்திரம் அறிவற்றதும் பயனற்றதுமேயாகும்” என்று சுய மரியாதை இயக்கம் சொல்லுகின்றது. அரச ஆட்சியை அடியோடு விலக்க முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம் என்பதை ஒப்புக்கொள்ளு வதானால் வெள்ளைக்கார அரசாட்சி வேண்டாம் என்று ஒரு நிறத்தின் பேரால் ஆட்சேபிப்பதில் அர்த் தமே இல்லை என்று தான் சொல்லுவோம். ஆதலால் அரசியல் விஷயங் களை அவர்கள் மிக்க ஜாக்கிரதையோடும் நுட்பத்தோடும் கவனித்துப் பார்க்க வேண்டும். திரு. நடராஜனோ அல்லது மற்ற நண்பர்களோ இந்த முறையில் பார்த்து பிறகு நமது அரசியல் கொள்கையில் என்ன தப்பு இருக் கின்றது? என்பதை நமக்கு விளக்குவார் களானால் அவசியம் நாம் சமாதா னம் சொல்ல முயற்சிப்போம். மற்றபடி திரு.நடராஜனை மனமார வர வேற்கிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 18.08.1929**



RangaRakes tamilnavarasam.com

## மதிப்புரை - "விமோசனம்"

திரு.ராஜகோபாலாச்சாரியவர்களால் புதிதாக வெளியிடப்படும் "விமோசனம்" என்னும் மாத வெளியீட்டு முதற்பகுதி ஒன்று நமது பார்வைக்கு வந்திருக்கிறது. அதைப் பற்றி "திராவிடன்" எழுதியிருக்கும் தலையங்கமே "விமோசன"த்தைப் பற்றிய மதிப்புரையாகக் கொண்டு கீழே எடுத்துக் காட்டுகின்றோம். (ப-ர்)

திரு.சி.ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் காந்தி ஆச்சிரமத்தில் இருந்து "விமோசனம்" என்னும் ஒரு மாதப் பத்திரிகையை ஆரம்பித்திருக் கிறார். அதன் இப்போதைய உத்தேசம் மதுவிலக்கையே உறுதி கொண்டதாய் காணப்படுகின்றது. ஆனாலும் மிஸ் மேயோ அம்மையார் இந்தியத்தாய் என்னும் புத்தகத்தை எழுதியிருப்பதில் அதில் உள்ள விஷயங்கள் எவ்வளவு சரியாயிருந்தாலும், இந்தியாவின் மீது வெளிநாட்டார் தப்பர்த்தம் கொள்ள வும், இந்தியா "சுயராஜ்ஜியத்திற்கு" அருகதை இல்லை என்று பிறர் நினைக் கவும் கருதி எழுதப்பட்டதாய் எப்படி சொல்லப் படுகின்றதோ, அப்படிப் போலவே, திரு.ஆச்சாரியாரின் "விமோசனம்" என்னும் பத்திரிகையையும் அதில் உள்ள விஷயங்களை எல்லாம் சரி என்றே வைத்துக் கொள்வதா னாலும் - அது பார்ப்பனரல்லாதார் சிறிதளவாவது இப்போது அரசியலில் பெற்று இருக்கும் ஆதிக்கத்தை அடியோடு ஒழித்து மறுபடியும் பூரண பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் நோக்கத் துடனேயே பாமர ஜனங் களை ஏமாற்ற ஒரு ஆயுதமாக உபயோகிப்பதற்காகச் செய்யப்படும் முயற்சி என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏனெனில், குடிகாரர்களானாலும், கள் உற்பத்தி செய்கின்றவர்களா னாலும் அவர்கள் பார்ப்பனர்களாயிருந்தால் அவர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க முயற்சி செய்வதும், அவர்களை அரசாங்க ஆதிக்கத்தில் வைக்க முயற்சிப்பதுமான காரியங்கள் செய்வதும், மேலும் சட்டசபை தேர்தல் நெருங்குகின்ற காலங்களில் மாத்திரம் மதுவிலக்கு என்று கூச்சல் போட்டு அதன் மூலம் பார்ப்பனரல்லாத மந்திரிகளின் ஆட்சியைப் பற்றி விஷமப் பிரசாரம் செய்து தேர்தல்களில் தோல்வி உண்டாக்கப்பார்ப்பதும், தேர்தல்கள் முடிந்தவுடன் சிறிதும் கவலையற்று வேறுவழியில் தொல்லை விளைவிப் பதும் கொஞ்ச காலமாக நமது திரு.ஆச்சாரியாரிடம் பார்த்து வருகின்றோம். தவிர, இப்போது ஒரு பார்ப்பனரல்லாத மந்திரியினால் சர்க்காரையே





மதுவிலக்குப் பிரசாரம் செய்யும்படி சம்மதிக்கச் செய்திருப் பதை மக்களிடம் திரித்துக் கூறி, அது நடைபெறாமல் செய்ய தந்திரம் செய்து கொண்டு, மற்றொரு புறத்தில் தங்கள் இனத்தார்களுக்கே மதுவிலக்குப் பிரசாரப் பெருமை ஏற்பட்டு அதனால் அவர்கள் ஓட்டு சம்பாதிக்க வேண்டு மென்று காங்கிரசின் பேரால் சூழ்ச்சி செய்வதும் பார்த்து வருகின்றோம். எப்படி இருந்தபோதிலும் மிஸ் மேயோவின் புத்தகத்தை அலட்சியஞ் செய்யாமல், அதை வாங்கிப் படித்து அந்தம்மையின் எண்ணத்தைப் பற்றிச் சிறிதுங் கவலைப்படாமல் அந்தம்மாளால் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும். நம் நாட்டிடை உள்ள குற்றங்களை ஒழிக்க நாம் எப்படி முயற்சி செய்கின் றோமோ, அதுபோலவே திரு. சி.ராஜகோபாலாச்சாரியார் எந்த எண்ணத்தைக் கொண்டு "விமோசனம்" என்னும் பத்திரிகையை போட்டாலும் அவரின் எண்ணத்தைப் பற்றி நாம் சிறிதும் கவலைப்படாமல் அப் பத்திரிகையை ஒவ்வொருவரும் வாங்கி அவர் கூறும் குற்றங்கள் ஒழிய பாடுபட வேண்டியது அவசியம்.

**குடி அரசு - மதிப்புரை - 18.08.1929**

RangaRakes
tamilnavarasam.com

## காங்கிரசும் - தேசியமும்

சென்னை மாகாணத்தில் காங்கிரசின் யோக்கியதையும், தேசியத்தின் யோக்கியதையும் எவ்வளவு தூரம் வெளியாகிவிட்டது என்பதும் அதை பொதுஜனங்கள் எவ்வளவு தூரம் மதிக்கின்றார்கள் என்பதும் சமீப காலமாக சென்னை நகரிலும் வெளியிடங்களிலும் நடந்துவரும் நடவடிக்கை களிலிருந்து நன்றாய் அறியலாம். உதாரணமாக “காங்கிரசின் முக்கிய கொள்கைகள் எல்லா ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றுவதுதான்” என்பதாக இருந்தும் மற்றும் எல்லாக் கட்சிகளும் அதாவது சுயராஜ்ஜியக் கட்சி, சுயாட்சி கட்சி, தேசப் பிரதானக் கட்சி, உத்தியோகப் பிரதானக் கட்சி, தேசியக் கட்சி, சுயேச்சை கட்சி என்கின்ற இத்தனை கட்சிகளும் கூட இதையே அதாவது தேர்தல் ஸ்தாபனங்களை கைப்பற்ற வேண்டியதே முக்கிய கடமை என்பதாக இருந்தும் கூட இவ்வளவு கட்சிகளும் சேர்ந்து ஒரே அடியாய் ஜஸ்டிஸ் கட்சியை அழிக்க வேண்டும் என்றும் அதன் ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டும் என்றும் இரவு பகலாய் எழுதியும் தொண்டை கிழிய கத்தியும் போதாக் குறைக்கு கூலி ஆட்களையும் காலி ஆட்களையும் விட்டு கத்தும்படி செய்தும் கலகம் செய்யும்படி செய்தும் மற்றும் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தும் அதாவது ஜஸ்டிஸ் கட்சி சுயமரியாதைக் கட்சியில் அடங்கிவிட்டது என்றும் சுயமரியாதைக் கட்சி நாஸ்திகம் பரப்பி நாட்டைக் கெடுக்கின்றது என்றும் இவை இரண்டும் சேர்ந்து சாமிக்குப் பணம் செலவு செய்ய வேண்டாம் என்றும் ஜாதி இல்லை என்றும் கோயில் கட்ட வேண்டாம் என்றும் கடைசியாக சாமியே இல்லை என்று சொல்லுகின்ற தென்றும் மற்றும் எவ்வளவோ விஷமப் பிரசாரம் செய்தும் கடைசியாக தேர்தல்கள் வரும் சமயங்களில் காங்கிரஸ் அடியோடு மறைந்து கொள்ளுவதும் போலீசாரை வைத்துக் கொண்டு பொதுக் கூட்டம் நடத்துவதும், காலிகளை வைத்துக் கொண்டு கமிட்டிக் கூட்டம் நடத்துவதுமான நிலைமைக்கு வந்துவிட்டதை அறியாதாரில்லை, உதாரணமாக சென்னையில் மகாஜன சபை மண்டபத்தில் நடந்த மாகாணக் கமிட்டி கூட்டமும் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி கூட்டமும் நடத்தப்பட்ட வைபவங்கள் “தமிழ்நாடு” “சுதேசமித்திரன்” முதலிய தேசீயப் பத்திரிகைகள் என்பனவற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம். இன்னமும் தெளிவாய் யாருக்காவது அவற்றின் யோக்கியதைகள் தெரிய வேண்டுமானால் அக்கமிட்டிகளிலும் மற்றும் வெளியிடங்களில் உள்ள கமிட்டிகளிலுமுள்ள அங்கத்தினர்களைப் பற்றி அறிவதன் மூலமும் தெரிந்து கொள்ளலாம். அன்றியும் இந்த ஒரு வருஷ காலமாக எங்காவது காங்கிரஸ் கமிட்டி எந்த தேர்தலுக்காவது அபேட்சகர்களை நிறுத்தி இருக்கின்றதா என்பதன் மூலமாகவும் நிறுத்தி எங்காவது வெற்றி பெற்றிருக்கின்றதா என்பதன் மூலமாகவும் நன்றாய்த் தெரிந்து கொள்ளலாம்.

சமீபத்தில் சென்னை நகரில் காலமான காங்கிரஸ் கட்சி சட்டசபை அங்கத்தினர் திரு.பக்தவச்சலம் அவர்களுக்கு பதிலாக ஒரு அபேட்சகரை நிறுத்த காங்கிரஸ் கட்சி முதலியவைகள் தங்களால் கூடுமான வரை பாடு பட்டுப் பார்த்தும் அக்கட்சித் தலைவர்கள் செலவுக்குப் பணம் கொடுப்பதாய் சொல்லியும் ஒருநபர் கூட கிடைக்காமல் போய்விட்டதும் பிறகு ஆந்திர காங்கிரஸ் கமிட்டியின் பேரால் நிறுத்தப் பாடுபட்டுப் பார்த்து, அதற்கும் ஆட்கள் கிடைக்காமல் போய்விட்டதும், கடைசியாக ஜஸ்டிஸ் கட்சி ஆட்களிலாவது ஒருவரைப் பிடித்து தங்கள் கட்சி பேரால் நிறுத்த முயற்சித்து எவ்வளவோ சூழ்ச்சி செய்து பார்த்தும் ஒன்றும் முடியாமல் கடைசியாக ராவ்பகதூர் சி.நடேச முதலியார் அவர்களைப் போய் “நீங்கள் ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் நிற்காதீர்கள். தனியே நில்லுங்கள் நாங்கள் உதவி செய்கின்றோம்” என்று சொல்லிப் பார்த்தும் ஒன்றும் பிரயோசனப் படாமல் முக்காடு போட்டு மூலையில் உட்கார்ந்து கொண்டார்கள். ஆனாலும் சிலருக்கு ஜஸ்டிஸ் கட்சியில் ஏதாவது பிளவு ஏற்பட்டு அக்கட்சியின் பேரால் யாரையும் நிறுத்தாமல் போனால் அதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு மற்றபடி வேறு யார் நின்றாலும் அவர்களை தங்கள் கட்சிக்காரர் என்று சொல்லிக் கொள்ளலாமா என்றும் பார்த்தார்கள். இந்த முயற்சியில் திரு.வரத ராஜுலு வெகு பாடுபட்டு பார்த்தார். திரு. ராமசாமி முதலியார் வீட்டுக்கு டஜன் கணக்கான முறை நடந்தும் பார்த்தார். கடைசியாக திரு.நடேச முதலியார் தாம் ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகராய் நிற்பதாக வெளிப்படுத்தினவுடனும் ஜஸ்டிஸ் கட்சியாரும் தங்கள் கட்சிக்காக திரு.நடேச முதலியாரை ஒப்புக் கொண்டு திரு.ராமசாமி முதலியாரால் பிரேரேபிக்கப்பட்ட நியமனச் சீட்டை தாக்கல் செய்தவுடனும் மற்ற எல்லாக் கட்சிகாரர்களுக்கும் சுவாசம் அடங்கி விட்டது. திரு.நடேச முதலியார் அவர்களும் போட்டியன்னியில் சென்னை நகரத் தொகுதிக்கு சட்டசபை அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டாய் விட்டது.

காங்கிரஸ்காரர்கள் ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்கென்று வேறு மார்க்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆஸ்திக சங்கத்தின் பேரால் செய்யும் விஷமப் பிரசாரக் கூட்டத்திற்கு திரு.நடேச முதலியாரை தலைமை வகிக்கச் செய்து பார்த்தும்கூட, திரு. முதலியார் கடைசியாக அதன் யோக்கியதையையும், சூழ்ச்சியையும் தெரிந்து அவர் முகத்தில் கரியைப் பூசிவிட்டது மிகவும் பாராட்டத்தக்கதாகும். என்றாலும் மறுபடியும் காங்கிரஸ்காரர்களும் அவர்களது உட்கட்சிகாரர்களும் தங்களுக்கு நாட்டில் செல்வாக்கு இல்லை என்பதையும் தங்களிடம் நாட்டின் நன்மைக்கு ஏற்ற எவ்வித கொள்கையும்



RangaRakes tamilnavarasam.com

இல்லை என்பதையும் நன்றாய் அறிந்திருந்தாலும் இனியும் அவர்களுக்கு சிறிதாவது நம்பிக்கை எதனால் இருக்கின்றது என்று பார்ப்போமானால் ஒரே ஒரு விஷயம் தான் என்று உறுதியாய்ச் சொல்லுவோம். அதென்னவெனில் ஜஸ்டிஸ் கட்சியாருக்கும் சுயமரியாதைச் சங்கத்தாருக்கும் ஏதாவது மனஸ் தாபம் வந்ததா என்பதிலும் அல்லது ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களுக் குள்ளாகவோ ஏதாவது பிரிவினை ஏற்பட்டதா என்கின்ற நம்பிக்கையிலுமே அவர்கள் உயிர் வைத்திருக்கின்றார்கள்.

சுமார் ஐந்து மாத காலமாக சென்னை நகர் முழுவதும் ஆஸ்திகப் பிரசாரம் செய்து கடவுள்களையும் புராணங்களையும் தெருத் தெருவாய், திண்ணை திண்ணையாய்க் காப்பாற்றியும் காங்கிரசின் யோக்கியதையும் தேசியத்தின் யோக்கியதையும் அதன் தலைவர்களின் யோக்கியதையும் ஐயோ பாவம்! அழுவாரற்ற பிணமாய் போனதைத் தவிர வேறொன்று மில்லை. இனியும் பார்ப்போம்.

**குடி அரசு – கட்டுரை – 25.08.1929**



RangaRakes

# திரு. மகமது நபி பிறந்த நாள் கொண்டாட்டம்

எனது அன்பார்ந்த இந்து முஸ்லீம் சகோதரர்களே! இன்றைய தினமானது ஒரு பெரிய மகானின் பிறந்த தினமாகக் கொண்டாடப்படும் தினமாகும். ஆனால், அம்மகான் முகமதியர்களுக்கு மாத்திரம் சொந்த மானவர் என்றும், ஆதலால் அவர்கள் மாத்திரம்தான் அம்மகானின் பிறந்த நாள் கொண்டாட உரிமையுடையவர்களென்றும் நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கலாம். அவ்வளவோடு மாத்திரமல்லாமல் அக்கூட்டத்தில் ஒரு இந்து என்பவனாகிய நான் எப்படித் தலைமை வகிக்கக் கூடுமென்றுகூட பலர் கருதலாம். மேலும் இவற்றிற்கு நான் சமாதானம் கூறும்போது எனது இந்து சகோதரர்கள் என்பவர்கள் பலர் என் மீதும் சந்தேகப்பட்டு நான் மகமதியர் களுக்கோ, மகமதிய மதத்திற்கோ வக்காலத்து வாங்கிப் பேசுவதாகவும் கருதலாம் என்றாலும் இந்துக்கள் என்பவர்கள் என்னைப் பற்றி எப்படிக் கருதுகிறார்கள் என்பதைப் பற்றி நான் சற்றும் கவலைப்படாமல் எனது மகமதிய சகோதரர்கள் என்னை இவ்விழாவில் கலந்து கொள்ள சந்தர்ப்ப மளித்ததுடன், மிகப்பெருமையான இவ்விழாவிற்குத் தலைமை வகிக்கும் கௌரவத்தையும் எனக்களித்ததற்கு முதன் முதலாக நான் என் மனப்பூர்வ மான நன்றியறிதலை எனது முஸ்லீம் சகோதரர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## மதம்

சகோதரர்களே! நான் மதங்கள் என்பவைகளை யெல்லாம் மக்களின் இவ்வுலக வாழ்க்கை நலத்திற்கும், இன்ப அனுபவத்திற்கும் அனுகூலமாக இருக்க வேண்டும் என்னும் எண்ணத்தோடு அவ்வக்காலத்திய அறிஞர் களால் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள் என்றுதான் கருதுகின்றவனேயல் லாமல், அவற்றை ஒரு "ஆத்மார்த்த சாதனம்" என்றோ, "தெய்வீகத் தன்மை" யுடைய தென்றோ, இவ்வுலக வாழ்க்கைக்கு மேற்பட்ட ஏதோ ஒரு கதிக்கு மார்க்கமென்றோ நான் சிறிதும் கருதுவதும் இல்லை; அதைப் பற்றி நான் சிறிதும் கவலை கொள்ளுவதுமில்லை. அப்படி வேறு யாராவது கருதுவதாய் இருந்தாலும் கூட இவ்வுலக வாழ்க்கையின் அனுபவத்தைப் பொறுத்துத்தான் அத் "தெய்வீக கதிகள்" என்பவைகளின் பலன்களும் இருக்கக் கூடுமே



tamilnavarasam.com

ஒழிய அதற்கு விபரீதமாய் இருக்க முடியாது. ஆதலால் அதற்கென்று வேறு முயற்சிகள் வேண்டாம் என்றே அப்படிப்பட்டவர்களுக்கு நான் சொல்லுவது வழக்கம். மற்றும் அது போலவே தான் எந்த மதக் கொள்கைகளையும் ஒரு கடவுள் உண்டாக்கினார் என்றோ அது எப்போதைக்கும் பொருத்தமான தென்றோ, அவற்றில் ஒரு சிறிது கூட கால தேச வர்த்தமானத்தை அனுசரித்து மாற்றக்கூடாதது என்றோ நான் ஒருபோதும் ஒப்புக் கொள்ளுவதுமில்லை. அது போலவே எல்லா மதத் தலைவர்கள் என்பவர்களைப் பற்றியும் கூட நான் அவர்களை ஒரு பொதுநல சேவைக்காரர் என்றும், மக்களிடம் அன்பும் இரக்கமும் கொண்ட பெரியார் என்றும் உலக நன்மைக்காக தன்னலம் விடுத்து பிறர் நலத்திற்காகவே உழைத்த உத்தமத் தியாகிகள் என்றும்தான் நான் கருதுவதே தவிர, மதத் தலைவர்களை எல்லாம் கடவுள் என்பவர் என்றோ, கடவுளால் அனுப்பப்பட்டவர் என்றோ, கடவுள் அவதாரம் என்றோ, நான் சிறிதும் கருதுவதில்லை. ஏனெனில், உலகில் பல மதங்களும், பல மதக் கொள்கைகளும் ஒன்றுக்கொன்று முரணாகவும், ஒருவருக்கொருவர் ஒப்புக் கொள்ள முடியாமலிருக்கும்போது ஒரே கடவுள் இத்தனை மதங்களையும் உண்டாக்கி இருப்பாரென்று எப்படி ஒப்புக் கொள்ள முடியுமென்று தோன்று வதாலேயேதான், இது ஒருபுறமிருந்தாலும், மற்றொரு புறத்தில் இந்துமதத் தலைவர்கள் மாத்திரம் கடவுளாலேயே அனுப்பப்பட்டவர்களென்று கருதுகின்றவர்களுக்கு வேறு சமாதானம் என்ன வென்றால், “எல்லா படைப்பும் எல்லா தோற்றமும் எல்லா மக்களும் கடவுளால் உண்டாக்கப் பட்டது” என்று சொல்லப்படுகையில் ஒரு சிலருக்கு மாத்திரம் கடவுள் அவதாரம், கடவுளால் அனுப்பப்பட்டவர்கள் என்கின்ற பேர் எப்படிப் பொருந்தும் என்பதே நமது பதிலாகும். இப்படி இருக்க ஒரு சிலரை மாத்திரம் மக்கள் தெய்வத்தன்மை பொருந்தியவர்கள் என்றும், அவதாரபுருஷர்கள் என்றும், கடவுளால் அனுப்பியவர்கள் என்றும் ஏன் சொல்லுகின்றார்கள் என்று பார்ப்போமானால், அதற்கும் ஒரு சமாதானம் இருக்கின்றதென்பதே நமது அபிப்பிராயம். என்னவெனில் நாம் பொதுவாக மக்களின் சக்தியும் குணமும் இவ்வளவுதான் என்று ஒரு அளவுக்குட்படுத்தி நிர்ணயம் செய்து வைத்திருக்கின்றோம். அந்த அளவுக்கு மேற்பட்ட சக்தியையும் குணத்தை யும் எங்காவது கண்டு அது மனிதத்தன்மைக்கு மீறியது என்பதாக நாம் முடிவு செய்யும்போது, சாதாரணமாக நமது வாழ்வில் மனிதத்தன்மைக்கு மீறினதாகக் கருதும் எதையும் நாம் ‘தெய்வத்தன்மை’ என்று கருதுகின்ற வழக்கமாய் விட்டதால் இதையும் “தெய்வத்தன்மை” என்று சொல்ல வேண்டியவர்களாகிவிடுகின்றோம். எப்படியானாலும் அப்படிப்பட்டவர்கள் பெரியார்கள் என்பதிலும், பாராட்டப்படவும், கொண்டாடவும், மரியாதை செய்யப்படவும் உரியவர்கள் என்பதிலும் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் அவர்களைக் கொண்டாடுவது என்பது அவர்களைப் போன்ற உருவத்தை ஊர்வலம் செய்வதற்கோ, பூஜை, அபிடேகம், உற்சவம் செய்வதற்கோ, அவர்கள் மீது பாட்டு, பஜனை பாடுவதற்கோ, கொண்டாட்டம் செய்வது



RangaRakes

என்பது பைத்தியக்காரத்தனம் என்பதே நமது அபிப்பிராயம். மற்றபடி வேறு எதற்கு என்போமானால் நாம் பெரியார் என்றும், மனிதத்தன்மைக்கு மீறினவர் என்றும் ஒப்புக்கொண்ட ஒருவரை பின்பற்றவும், அவரது உபதேசப்படி நடக்கவும் மற்றும் அந்தப்படி மக்களை நடப்பிக்கச் செய்ய முயற்சிக்கவுமான காரியங்களுக்கேதான் அவ்வித பெரியாரின் கொண்டாட்டங்களை உபயோ கிக்க வேண்டும் என்பேன்.

எனவே, இன்று நாம் கொண்டாடும் திரு.மகமது நபி அவர்களின் பிறந்த நாள் கொண்டாட்டமானது நான் முன்சொன்ன முறையில் கொண் டாடத்தக்க ஒரு ஒப்பற்ற பெரியாரின் கொண்டாட்டம் என்றே சொல்லுவேன். இன்னமும் விளக்கமாகச் சொல்வதானால் இப்போது நம்மால் மதத்தலைவர் கள் என்று சொல்லப்படும் பெரியார்களில் எல்லாம் திரு.மகமது நபி அவர்கள் மேலானவர்கள் என்றும், எல்லா மக்களும் பொதுவாகப் பெரிதும் அவரைப் பின்பற்ற உரியார் என்றும் கூட தைரியமாய்ச் சொல்லுவேன். ஏனெனில் திரு.மகமது நபி அவர்களின் மதமே (கொள்கைகளே) மற்ற எல்லா மதத்தைவிட பிந்தியதும் சமீபமானதுமான மதமாகும். ஆதலால் அது மற்ற மதங்களில் உள்ள குற்றம் குறைகளை எல்லாம் நீக்கிச் சற்றேறக்குறைய எல்லோராலும் ஒப்புக்கொள்ளக் கூடிய அளவு சீர்திருத்தமுடையதென்றும் சொல்லுவேன். எப்படியெனில் சுமார் இரண்டு மூன்று ஆயிர ஆண்டுக ளுக்கு முன்பு உலகத்தில் எங்கும் இந்து மதக் கொள்கைகள், அதாவது, ஆரிய மதக் கொள்கைகளே பரவி வந்திருந்ததாகத் தெரிய வருகின்றது. அது எப்படியெனில், பல தெய்வ வணக்கமும், விக்கிரக வணக்கமும், ஜீவபலி யிடுவதும் முதலான காரியங்களே ஒரு காலத்தில் உலகத்தில் மதக் கொள்கை யாய் இருந்து வந்திருக்கின்றது. அதிலிருந்து ஒருபுறம் புத்தரும் மற்றொரு புறம் கிறிஸ்துவும், மற்றும் பல பெரியாரும் சீர்திருத்தம் செய்யப் புறப்பட்டு மிகக் கஷ்டத்துடன் முயற்சி எடுத்து வந்திருக்கின்றார்கள்.

அவர்கள் முயற்சியானது அந்தக் காலத்திற்குப் புதியதாய்த் தோன்றிய தாலேயே அவர்கள் நாத்திகர்கள் என்று பழிக்கப்படவும், துன்பத்திற்காளா கவும் நேர்ந்ததுடன், கிறிஸ்து நாதர், சாக்கரடீஸ் முதலியவர்கள் கொல்லவும் பட்டார்கள். அதற்கும் வெகுகாலத்திற்குப் பிறகு அக்கொள்கைகளிலிருந்தும் சீர்திருத்தம் செய்யப் புறப்பட்டவரே நமது திரு.மகமது நபி அவர்களா வார்கள். எனவே, நபி அவர்கள் உயரிய புதுக்கொள்கைகளை, அதாவது மிக்க மனிதத்தன்மை வாய்ந்ததாகவும், மனித வர்க்கத்திற்கு ஏற்றதும், அவசியமானதும், பெரிதும் அறிவிற்குப் பொருந்தியதாகவும் கண்டுபிடித்துப் பரப்பினார். இவ்வித உயரிய கொள்கைகள் அவருக்கு மாத்திரம் எப்படி தோன்றிற்று என்போமானால், அவர் மற்ற மதங்களின் குணதோஷங்களை எல்லாம் நன்கு அறிந்து கடைசியில் பிந்திய காலத்தில் ஏற்படுத்தின மதமாதலால் அது கூடுமானவரை திருத்தத்துடன் செய்ய முடிந்தது. ஆனால் அப்பொழுதும் பழைய கொள்கைக்காரர்கள் திரு.நபி அவர்களையும்



tamilnavarasam.com

நாஸ்திகர் என்றும், கடவுள் துரோகி என்றும் சொல்லி பலவிதத்திலும் துன்புறுத்தி இருக்கின்றார்கள்; கொல்லவும் முயற்சித்திருக்கின்றார்கள். என்றாலும், திரு.நபி அவர்கள் எதற்கும் அஞ்சாமல் உறுதியுடன் நின்று தமது கொள்கையை மக்களிடம் நன்றாய் பதியும்படி செய்திருக்கிறார். எனவே, அவரை அக்காலத்திற்கேற்ற ஒரு பெரிய சீர்திருத்தக்காரர் என்றும், தன்னல மற்ற பெரிய தியாகி என்றும், தீர்க்கதரிசி என்றும் சொல்லியாக வேண்டும். நான் இப்படிச் சொல்லுவதற்கு ஆதாரமாக இன்றையதினம் அப்பெரியாரின் கொள்கைகளின் பெருமைகளைப் பற்றியும், அவற்றிற்கும் நமது இந்து மதக் கொள்கைகள் என்பவற்றிற்கு முள்ள தாரதம்மியத்தைப் பற்றியும் தங்கள்முன் எனக்குத் தோன்றியதை எடுத்துச் சொல்வதில் நீங்கள் சற்று கவனம் செலுத்தி நடு நிலைமையில் இருந்து கேட்க வேண்டும் என்று இந்து முஸ்லீம் சகோதரர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## தத்துவார்த்தமும் பிரத்தியட்ச அனுபவமும்

சகோதரர்களே! நான் அந்தப்படி சொல்லுவதில் குரானில் என்ன சொல்லியிருக்கின்றது என்பதைப் பற்றியோ, இந்து வேதம் என்பதாகிய நான்கு வேதங்களில் என்ன சொல்லி இருக்கின்றது என்பதைப் பற்றியோ சொல்லப் புறப்பட்டு அவ்வம்மத ஆதாரங்களான புத்தகங்களில் எழுதப் பட்டவைகளைப் பற்றி நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை. ஏனெனில், நான் அவைகளை எல்லாம் படித்தவனல்ல; அன்றியும் புத்தகங்களில் இருப்பதாகச் சொல்லும் பெருமைகள் நமக்கு ஒரு பலனையும் தரமுடியாது. ஒரு காகிதத்தில் சர்க்கரை என்று எழுதிக் கொண்டு நக்கினால் இனிக்குமா? அன்றியும் அவற்றிற்கு எப்படி வேண்டுமானாலும் “தத்துவார்த்தம்” செய்யக்கூடும். ஆதலால் அதைப்பற்றி பிரஸ்தாபிக்காமல், இரண்டு மதத்தின் பேராலும், பிரத்தியட்சத்தில் நாம் காணும் விடயங்களைப் பற்றியும் அவ்வம் மதக்காரர்கள் அனுபவிக்கும் பலனைப் பற்றியும் எடுத்துப்பேசுகின்றேன். ஏனெனில், எந்த மதத்தின் கொள்கையின் பெருமையும் அந்தந்த மதத்தைப் பின்பற்றுகின்ற மக்களுக்கு நாட்டிற்கு உண்டாக்கி இருக்கும் பலன்களைக் கொண்டுதான் நிச்சயிக்க வேண்டுமேயல்லாமல், அது ஒரு காலத்தில் செய்ததாகச் சொல்லப்படும் கதைகளைக் கொண்டோ, அம்மதத் தலைவர்கள், ஒரு காலத்தில் செய்ததாக சொல்லப்படும் அற்புதங்களைக் கொண்டோ, வியாக்கியானம் செய்வதால் ஏற்படும் அழகிய கருத்துக்களைக் கொண்டோ நிச்சயித்து விடமுடியாது. அப்படி நிச்சயிப்பதால் உலகத்திற்கு ஒரு பலனும் ஏற்பட்டு விடாது. ஆதலாலேயே தான் பிரத்தியட்ச அனுபவத்தைச் சொல்லுகின்றேன்:-

மகமதிய மதம் என்பது ஒரு தேசீய மதமாகும். அம்மதத்தின் முக்கிய தத்துவம் என்னவென்றால், அம்மதத்தைப் பின்பற்றும் சமூகம் கொண்ட தேசங்களை அச்சமூக நன்மைக்கேற்றதான, ஆட்சிக்குள் இருக்கச் செய்வதென்பது முக்கியமானதாகும். அன்றியும் அம்மாதிரியான ஆட்சி நன்மைக்கே மதத்தைக் காப்பதுமாகும். மேலும் அது ஒரு சமத்துவக் கொள்கைக் கொண்ட மதமாகும். அதாவது மகமதிய மதத்தில் மக்களுக்குள் பிறவியில் உயர்வு தாழ்வு என்பது கிடையவே கிடையாது. பணக்காரன், ஏழை, படித்தவன் படியாதவன்; இளைத்தவன் பலசாலி என்கின்ற வித்தியாச மில்லாமல் சகலருக்கும் வாழ்வில் சகல உரிமையும் அளிக்கின்றது. மேலும் மகமதிய மதம் ஒற்றுமையையே அதிகமாய்க் கொண்டிருக்கிறது. அதாவது அந்த மதத்தைச் சேர்ந்த ஒரு தனி மனிதனுக்கு ஒரு சிறு தீங்கு அந்நியனால் செய்யப்பட்டாலும், உடனே அவர்கள் எல்லோரும் ஒன்று கூடி, தங்களுக்கு வந்ததுபோல் கருதி அவனுக்கு உதவி செய்ய அவசரமாய் முந்துகின்றார்கள். அன்றியும், அது அன்பையும் சகோதரத்துவத்தையும், அடிப்படையாகக் கொண்ட மதமாகும். என்னவென்றால், ஊர்பேர் தெரியாதவர்களானாலும், மகமதியர் என்று தெரிந்தால், ஒரே இலையில் சாப்பிடும்படியான அன்பும் சகோதரத்துவமும் கொண்டிருக்கிறது. அது “சண்டாளர்களையும்” ரட்சிக்கும் சமயமாகும். ஏனெனில் நம்மால் சண்டாளர்கள் என்று ஒதுக்கித் தள்ளப்பட்ட மக்களைத் தங்கள் சமயத்தில் சேர்த்து அவர்களுக்குச் சகல உரிமையையும் கொடுக்கின்றார்கள். மற்றும் மகமதிய மதமானது வீரத்தையும் ஆண்மை யையும் கொடுக்கும் மதமாகும். எப்படியெனில் அவர்களுக்கு மற்றவர் களைவிட துணிவு அதிகம்; அவர்களைக் கண்டால் மற்றவர்கள் பயப்படு கின்றார்களே ஒழிய அவர்கள் யாருக்கும் பயப்படுவதில்லை.

மகமதிய மதத்தில் பெண்களுக்கு உரிமை இருக்கின்றது. அதாவது பெண்களுக்குச் சொத்துரிமை உண்டு; விதவா விவாகம் உண்டு; கணவனும் மனைவியும் ஒத்துக் கொள்ளாவிட்டால் விலகிக் கொள்ளச் சுதந்தரம் உண்டு; படிக்கச் சுதந்தரம் உண்டு; ஆனால் கோஷா முறையைப் பற்றி குற்றம் சொல்லலாம். ஆனாலும் வரவர அதுவும் விலக்கப்படுகின்றது. உதாரணமாக துருக்கியில் பெண்கள் உத்தியோகம் வகிப்பதும், ஆப்கான் தேசத்திலிருந்து பெண்களை வெளிநாட்டிற்குப் படிக்க அனுப்பி இருப்பதும், ஹைதராபாத், நைசாம் அவர்கள், தனது புத்திரிகளுடன் தாராளமாய்ச் சென்னையில் உலவினதுமான காரியங்களைக் கவனித்தால் அதுவும் சீக்கிரத்தில் மாற்ற மடையக் கூடும். மகம்மதிய மதம் தெய்வ வணக்கத்தில் மிக்க கண்டிப் பையும் செலவு சுருக்கத்தையும் உடையதாகும். அதாவது, ஒரே கடவுள் என்பதும் அதுவும் நாமம், ரூபம், குணம், குறி முதலியவைகள் அற்றது என்பதும், அதற்கு விரோதமாய்ப் பல கடவுள்களை சொல்லுவதோ, அல்லது கடவுளுக்கு ரூபம், பெண்டு, பிள்ளை, வைப்பாட்டிகளை ஏற்படுத்துவதோ, பூசை, உற்சவம் முதலியவைகளில் செலவு செய்வதோ மிக்கதோஷம் என்றும் அப்படி கருதுகின்றவர்களையும் செய்கின்றவர்களையும் தங்கள் எதிரிகள் என்றும் கருதும்படி கற்பிக்கின்றது. மகம்மதிய மதம் தர்ம விஷயத்தில் மிக்க பிரயோஜனமான காரியத்தைச் செய்விக்கிறது. அதாவது ஒரு முஸ்லிம் தனது சொத்தில், அல்லது தனது வரும்படியில் இன்ன பாகம் தர்மத்திற்குக்



RangaRakes tamilnavarasam.com

கொடுக்கவேண்டும் என்று இருப்பது அமுலில் இல்லாவிட்டாலும், கொடுக்கும் பணத்தை ஏழைகளுக்கும் கஷ்டப்பட்டு சம்பாதித்து சாப்பிட முடியாதவர்களுக்கும் அநாதைப் பிள்ளைகளைக் காப்பாற்றி, கல்வி, தொழில் கற்றுக் கொடுப்பதற்கும் உபயோகப்படுத்தப் படுகின்றதே ஒழிய தர்மத்தின் பேரால் சோம்பேறிகளை உற்பத்தி செய்வதில்லை. மகமதிய மதம் மற்ற மதங்களை விட, மிகவும் நாகரிகம் கொண்டது என்றுகூட சொல்லலாம். அதாவது மகமதியர்கள் உணவில் சத்துள்ள உணவு கொள்ளுகின்றார்கள். ஒரே வகை சாப்பாடு ருசி, பலம், சத்து, திருப்தி ஆகியவைகளைக் கொடுக்கும், நல்ல நல்ல பழ வர்க்கங்களும், சத்துள்ள விதை வர்க்கங்களும் பெரிதும் அவர்களாலேயே நமது நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. வைத்தியத்தில் மிக்க மேன்மையான முறையையுடையவர்கள். அல்வா விலும் சர்ப்பத்தி லுமே எம்மாதிரியான வியாதிக்கும் மருந்து உண்டு. சங்கீதமோ மற்ற சங்கீதத்தை விட மேன்மையானது. கட்டிடங்கள் கட்டுவதிலோ மற்றவர்களைவிட அலங்காரமாக சித்திர வேலைகளமைந் ததாகவும் கட்டுவார்கள். வாசனைத் திரவியங்களில் மற்றவர்களை விட சிறந்தவர்கள். அரசியல் ஆட்சிமுறையில் அவர்கள் மிக்க ஞானமுடைய வர்கள்; நீதி உடையவர்கள் என்றும் சொல்லலாம். எப்படி எனில், அரசியல் அதிகாரங்களுக்கு அநேகமாய் மகமதிய பெயர்களே இப்போதும் வழங்கு கின்றது. அன்றியும் அவர்களுடைய மூர்தண்ணியமான ஆதிகாலத்திலும் இந்தியாவின் செல்வத்தை அந்நிய நாட்டிற்குச் சுறண்டிக் கொண்டு போகவில்லை. அந்நியர் கொண்டு போக இடம் கொடுக்கவும் இல்லை. மற்றபடி ஏதாவது இரண்டொரு விஷயங்கள் மாறுபட்டதாகக் காணப்பட லாமாயின், அவைகள் மகமதிய கொள்கைகள் ஏற்படுத்தப்பட்ட அந்தக் காலத்திற்கும் இடத்திற்கும் இப்போதைய நிலைமைக்கும் உள்ள தார தம்மியத்தைப் பொறுத்திருக்கலாமே ஒழிய வேறில்லை. மற்றும் முல்லாக்களால் ஏதாவது சில மூட நம்பிக்கைகளைப் புகுத்தியிருக்கலாம். ஆனாலும் அது அவர்கள் தேசீயத்தையாவது வாழ்க்கைச் சுதந்தரத்தை யாவது கெடுக்கக்கூடிய அவ்வளவு கேடானதாக இல்லை. அன்றியும், அது இப்போதைய நிலைமைக்கு காலதேசவர்த்தமானத்திற்கு ஏற்றபடி சீர்திருத்தம் செய்து மாற்றிக் கொள்ளத் துணிந்தும் இருக்கின்றது. உதாரணமாக, துருக்கி சீர்திருத்தமும் ஆப்கான்ஸ்தான் சீர்திருத்தமும், அச்சீர்திருத்தம் செய்த அவ்வரசாங்கங்களை இந்திய மகமதியர்கள் ஆதரிப்பதும், ஆகியவைகளைக் கவனித்தால் அதன் பெருமை விளங்கும்.

மேலும் மகமதிய மதம் மிக்க சுயமரியாதை உணர்ச்சியுடையது என்றும் சொல்லுவோம். எப்படி என்றால், அது இனி உலகத்திற்கு கடவுள் அவதாரங்களோ, நபிமார்களோ, தீர்க்கதரிசிகளோ வரக்கூடும் என்பதை ஒருக்காலும் ஒப்புக் கொள்ளுவதில்லை. மனிதனை மனிதன் வணங்குவதையோ, அவன் காலில் விழுவதையோ, அதுசிறிதும் சம்மதிப்பதில்லை. இனியும் இதன் பெருமைகள் அனந்தம் உண்டு. இவ்வளவு பெருமைகளுக்கும் காரணம் என்னவென்றால், முன் சொன்னபடி இது சமீபகால சீர்திருத்த மதமானதாலும், மகமது நபி அவர்கள் நல்ல அனுபவ மும், ஞானமும், தீர்க்க தரிசனமும், உறுதியும் கொண்டவரானதாலும், உலகத்தில் உள்ள மதங்களில் எல்லாம் சிறந்த மதம் என்று சொல்லத்தக்க தாயிருக்கின்றது. இதற்கு நேர் விரோதமாக நமது மதம் என்பதில் உள்ள குறைகளை எடுத்துச்சொல்ல இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ள எனக்கு இஷ்டமில்லாததால் அவற்றை மற்றொரு சமயம் சொல்லலாம் என்று இருக்கின்றேன். கடைசியாக, நான் இந்து மகம்மதிய சகோதரர்களுக்குச் சொல்லுவதென்னவென்றால், மதத்தின் காரணமாக இந்து முஸ்லீம்களுக்குத் துவேஷம் சிறிதும் இருக்கக் கூடாது என்பதேயாகும். எக்காரணத்தை முன்னிட்டோ, மதங்கள் என்றாலே முதலாவது, மற்றொரு மதத்தினிடத்தில் துவேஷம் கொள்ளுவதே முக்கிய கடமையாயிருக்கின்றது. உதாரணமாக இந்துக்கள் என்பவர் மகமதியர்களை வெகு இழிவாய்க் கருதுவது எனக்குத் தெரியும். அதாவது மகமதியனைத் தொட்ட அளவுக்கு சரீரத்திலுள்ள தசையை அறுத்தெறிய வேண்டும் என்று இந்துக்கள் சொல்லிக் கொண்டிருந்தது எனக்குத் தெரியும். இப்போதும் துலுக்கர் என்றால் மிலேச்சர் என்று சமஸ்கிருதங்களிலும் அதைச் சார்ந்த தமிழ் அகராதிகளிலும் அர்த்தம் எழுதப்பட்டிருக்கின்றது. துலுக்க பாஷையைக் கூட தமிழ் பாஷையைப் பார்ப்பனர்கள் சொல்லுவதைப் போலவே மிலேச்சபாஷை என்றே பார்ப்பன நிகண்டுகளிலும் அகராதிகளிலும் இன்னமும் இருக்கின்றது. இவ்வித துவேஷ உணர்ச்சி உள்ளவர்களிடம் மகமதியர்கள் எப்படி ஒற்றுமையாய் இருக்க முடியும்? ஆதலால் இந்துக்கள் தான் முதன் முதலாக மகமதியர்களிடம் சகோதரபாவம் காட்டி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக வேண்டும். கூட்டத்தில் ஒன்றாய் உட்காந்திருப்பதாலேயே ஒற்றுமை இருக்கின்றது என்று நினைத்துவிடக் கூடாது. இந்நாட்டில் உள்ள 8 கோடி மகமதியர்களை அலட்சியம் செய்தோ, அவர்கள் கூட்டுறவில்லாமலோ, நமது நாட்டிற்கு நல்லரசாட்சியை உண்டாக்கிவிடவோ திருப்திகரமான வாழ்க்கையை ஏற்படுத்தவோ முடியவே முடியாதென்றே சொல்லுவேன். அன்றியும் அவர்களை இருந்த நாட்டைவிட்டுத் துரத்தி விட முடியாதென்றும் சொல்லுவேன். இந்த நாட்டிலுள்ள 8 கோடி மகமதியர்களின் பலமானது 16 கோடி இந்துக்களின் பலத்திற்குச் சமானமானதென்றுகூட சொல்லுவேன். எப்படியென்றால், இந்துக்களிடத்தில் மகம்மதியர்களுக்கு அவநம்பிக்கை இல்லாமலிருந்திருந்தால் இந்தியாவுக்கு ஜவாப்தாரியான ஆட்சி வெகு காலத்திற்கு முன்பே ஏற்பட்டு அனுபவித்துக் கொண்டிருக்குமென்பதில் சிறிதும் எனக்குச் சந்தேகமில்லை.

இப்பொழுதும் நமது நாட்டில் தீண்டாதவர்கள் என்னும் ஆறரைக் கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் நாளைக்கு மகமதியர்களாகிவிட்டால் மறுநாளே இந்தியாவின் நன்மைக்கேற்ற அரசாங்கம் ஏற்பட்டுவிடும் என்று உறுதியாய்ச் சொல்லுவேன். நிற்க, இந்தியாவுக்கு ஏதாவது ஒரு காலத்தில் பொறுப்பாட்சி ஏற்பட யோக்கியதை உண்டாகிவிட்டது என்று சொல்லப்படும் காலம்



RangaRakes tamilnavarasam.com

வருமானால், அந்தக் காலத்தில் இந்தியாவில் 15 கோடி மகம்மதியர்களாவது இருப்பார்கள். ஏனெனில், அந்தப்படி 15 கோடி மகம்மதியர்கள் இருந்தால் தான் இந்தியாவுக்கும் பொறுப்பாட்சி அடைய யோக்கியதை வரக்கூடும் என்பதாகவும் சொல்லுவேன். ஏனெனில் பொறுப்பாட்சி அடைவதற்கு விரோதமான கொள்கைகள் மகமதிய மதத்தில் கிடையவே கிடையாது என்பதுதான் நான் இவ்வளவு தூரம் எடுத்துச் சொன்னதன் தத்துவமாகும். அது போலவே மகமதியர்களும் கவனிக்க வேண்டிய விடயமும் உண்டு. மகமதியர்கள் இனி இந்தியாவை விட்டு வெளியேறிவிடலாம் என்றோ, அல்லது இந்துக்களை இந்தியாவில் இல்லாமல் இருக்கும்படி செய்யலாம் என்றோ கருத முடியவே முடியாது. எப்படியானாலும் இந்த நாட்டில் இருவர்களும் இருந்துதான் ஆக வேண்டும். பொதுவாக இந்தியாவுக்கு ஏற்பட்ட லாப நஷ்டத்தில் இருவர்களுக்கும் பங்கு உண்டே தவிர மகம்மதி யர்கள் எவ்விதத்திலும் விலக்கப்பட்டவர்கள் அல்ல. நாட்டின் நன்மையைக் கருதி இந்துக்களுடன் ஒத்துழைத்துத் தீர வேண்டிய அவசியம் அவர்களுக் கும் உண்டு. கூடிய சீக்கிரத்தில் இந்துக்கள் என்பவர்களுக்குள் இருக்கும் அநேக குறைபாடுகள் விலகிவிடக்கூடும் என்றே நினைக்கின்றேன். அப்பொழுது இந்துக்கள் முஸ்லீம்கள் என்கின்ற வித்தியாசம் இவ்வளவு காணப்படமாட்டாது. இந்து யார்? முஸ்லீம் யார்? என்று சுலபத்தில் பிரித்துக் காண முடியாத அளவு ஒற்றுமை ஏற்படப் போகின்றது என்பதில் எனக்கு மிக்க நம்பிக்கை இருக்கின்றது. மதத்தின் பேரால் உள்ள வெளி வேடங்கள் எல்லாம் மறைந்து மனிதவர்க்கத்தின் நன்மைக்கு ஏற்ற அவசியமான ஒழுக்கங்களுடன் மக்கள் எல்லோரும் ஒரே மாதிரியாய்க் காணப்படும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்றே நினைத்துக் கொண்டிருக்கின்றேன். ஆதலால் மகம்மதிய சகோதரர்கள் மதத்தைவிட, தேசத்தைவிட முதலாவது நாம் எல்லோரும் மனிதர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு மனித சமூகத்தின் நன்மைக்கு ஏற்ற மார்க்கத்தில் ஒன்றுபட்டுழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். மூடப்பழக்கவழக்கங் களையும் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் விரோதமானவைகளையும் உதறித் தள்ள மனிதர்கள் என்பவர்கள் எல்லாம் தயாராயிருக்க வேண்டும். கொள்கை கள்தான் மதமே ஒழிய, சடங்குகள், வேடங்கள் மதம் அல்ல என்கின்ற உணர்ச்சி தாராளமாய் ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டும். இவைகளே இப்போது எனக்குத் தோன்றிய கருத்துக்களாகும். இவற்றை ஒளிக்காமல் உங்கள் முன்னிலையில் சொல்லிவிட்டேன். ஏதாவது தவறுதல்கள் இருந்தால் அதை தள்ளிவிட்டு தங்களுக்கு சரி என்று பட்டதை மாத்திரம் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

*குறிப்பு : 18.08.1929 ஆம் நாள் சத்தியமங்கலத்தில் நடைபெற்ற மகமது நபி பிறந்தநாள் விழா சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 25.08.1929**



RangaRakes

## சுயமரியாதை இயக்கம்

சுயமரியாதை இயக்கமானது அரசியல்களின் பேரால் நமது நாட்டி லுள்ள பல கட்சிகளைப் போலல்லாமல் அன்னியர்களிடம் இருந்து யாதொருவிதமான சிறு விஷயத்தையும் எதிர்பாராமல் மக்களின் அறிவை விளக்கி அவரவர்களின் மனப்பான்மையை மாற்றுவதன் மூலமே உண்மை யான விடுதலையையும், சமத்துவத்தையும் தன் மதிப்பையும் உண்டாக்கக் கூடியதான ஒரு இயக்கமாகும். இவ்வியக்கத்தின் முக்கிய கொள்கை யெல்லாம் கட்டுப்பட்டு அடைப்பட்டிருக்கும் அறிவுக்கு விடுதலையை உண்டாக்குவதேயாகும். ஆதலால் சுயமரியாதை இயக்கம் என்பதை அறிவு விடுதலை இயக்கம் என்றே சொல்லலாம். இதன் உண்மை விளங்க வேண்டுமானால், ஒரு நேர்மையான மனிதன் தனது அறிவுக்கும் ஆராய்ச்சிக் கும் உள்ள கட்டுப்பாட்டையும் நிர்ப்பந்தத்தையும் நினைத்துப் பார்ப்பானே யானால் இவ்வியக்கத்தின் பெருமை தானாக விளங்கும். சாதாரணமாக இவ்வியக்கம் தோன்றி மூன்று நான்கு வருடங்களுக்குள்ளாக மக்களுக்கு அது உண்டாக்கி இருக்கும் உணர்ச்சியைப் பார்த்தாலும் கூட, இவ்வியக்கம் அறிவு விடுதலை இயக்கமா அல்லவா என்பது நன்றாய் விளங்கும். நிற்க,

தங்களுடைய சொந்த அறிவினாலும் ஆற்றலினாலும் பிழைக்க முடியாமல் அன்னியர்களின் முட்டாள் தனத்திலேயே பிழைத்துக் கொண்டி ருந்தவர்களான அரசியல் தேசீயக் கூட்டத்தார்கள் என்பவர்களும் சமய இயல்பில் வைதீகப் பண்டிதக் கூட்டத்தார்கள் என்பவர்களும், இவ்வியக்கத் தால் தங்களுடைய வாழ்விற்கும் பெருமைக்கும் ஆபத்து வந்துவிட்டதாய்க் கருதி இவ்வியக்கத்தைப் பாமர மக்களுக்குத் திரித்துக் கூறி, அதாவது சுயமரியாதை இயக்கம் தேசத்துரோக இயக்கம் என்றும், சமயத் துரோக இயக்கம் என்றும், நாத்திக இயக்கமென்றும், சொல்லிக் கொண்டு, எவ்வ ளவோ முயற்சியும் கட்டுப்பாடுமான சூழ்ச்சிகள் செய்துங்கூட, இவ்வளவுக் கும் சுயமரியாதை இயக்கம் ஒரு சிறிதும் பின்னடையாமல் அடிக்க அடிக்க பந்து எழும்புவதுபோல், விஷமப் பிரசாரம் செய்யச் செய்ய இப்போது இந்தியா தேச முழுவதும் பஞ்சில் நெருப்பு பிடிப்பது போல் மக்களிடம் பரவிக் கொண்டே போகின்றது.

இவ்வியக்கம் ஆரம்பித்த காலம் முதல் இதற்கு எதிரிடையாக நமது நாட்டில் வேலை செய்த பத்திரிகைகள் எவ்வளவு என்பது யாவருக்கும்



tamilnavarasam.com

தெரியும். அதாவது அந்தக் காலத்தில் நாட்டில் செல்வாக்காயிருந்த 'சுதேச மித்திரன்', 'இந்து', 'சுயராஜ்யா', 'தமிழ்நாடு', 'நவசக்தி', 'லோகோபகாரி', 'ஊழியன்' முதலிய தேசீயப் பத்திரிகைகள் என்பவை களும், மற்றும் பல குட்டிப் பத்திரிகைகளும், கூலிப் பத்திரிகைகளும் மனதார நடந்தவைகளைத் திரித்துக் கூறுவதும், கருத்துக்களை மாற்றிக் கூறுவதும், பொதுமக்களுக்குத் துவேஷமும் வெறுப்பும் உண்டாகும்படி எழுதுவதுமான காரியங்களில் வெகு மும்முரமாக ஈடுபட்டிருந்தன. மற்றும் பிரசாரம் செய்வதிலும், தேசீயத் தலைவர்கள், பிரசாரகர்கள் என்பவர்கள் எல்லோரும் ஒரே முகமாய் திருவாளர்கள் சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ராஜகோபாலாச்சாரியார், கலியாணசுந்தர முதலியார், வரதராஜுலு, குழந்தை, ஷாபி முகம்மது, அண்ணாமலை, குப்புசாமி, பாவலர் என்பவர்களும் மற்றும் தேசீயம் என்பதன் பேரால் நாட்டில் பாமர மக்களிடம் செல்வாக்குள்ள அனைவரும் அடியோடு பார்ப்பனக் கூட்டமும், காப்பிக்கடை தாசி வீடு வரையில், சட்ட சபை முதல் சந்து பொந்துகள் எல்லாம் சென்று சுயமரியாதை இயக்கம் தேசத் துரோக இயக்கமென்றும், நாத்திக இயக்கமென்றும் இதைக் கொல்வதற்கு "ஆண்டவன் அருள் கொண்டு" துணிந்து விட்டோம் என்றும், "கடவுள் துணை கொண்டு இறங்கிவிட்டோம்" என்றும், "கிருஷ்ண பகவானே துணை" என்றும் கர்சித்துக்கொண்டு தொண்டை கிழியப் பேசியும், பார்த்தார் கள். அவர்களுக்குள் வர்ணாசிரம மகாநாடு, சைவ மகாநாடு முதலிய மகா நாடுகள் கூட்டி தீர்மானித்தும் பார்த்தார்கள். மற்றும் புராணப் பண்டிதர்கள், புத்தகக் கடைக்காரர்கள், பூசாரிகள், குருக்கள், மடாதிபதிகள் முதலிய கூட்டத் தார்களும் தேசீய மேடையிலும், சமய மேடையிலும் "சுயமரியாதை இயக்கம் சமயத்தைப் பாழ்பண்ணி வருகின்றது, இதை ஒழிக்க வேண்டும்" என்று கூட்டங்கள் போட்டுக் கூவிப்பார்த்தார்கள்.

இவ்வளவும் போதாமல் வெளிநாடுகளிலிருந்து திருவாளர்கள் காந்தி, மாளவியா, மூஞ்சே ஆகியவர்களைக் கொண்டுவந்து இதற்கு எதிரிடையாகப் பிரசாரம் செய்தும் பார்த்தார்கள். இனியும் இரகசியமாகச் செய்த இழிதகைப் பிரசாரத்திற்கு அளவே இல்லை. என்னவெனில், நம்முடைய தனிப்பட்ட நாணயத்தைப் பற்றியும், நடவடிக்கைகளைப் பற்றியும், ஒழுக்கங்களைப் பற்றியும், எவ்வளவோ கேவலமாகப் பேசியும் கூலி கொடுத்து காலிகளை ஏவிவிட்டு பேசச் செய்தும், செய்யப்பட்ட இழி பிரசாரத்திற்கும் அளவே இல்லை. இவ்வளவும் போதாமல் நம்மைக் கொன்றுவிடுவதாகவும், குத்தி விடுவதாகவும், சுட்டுவிடுவதாகவும், மற்றும் பலவிதமாய் அவமானப் படுத்துவதாகவும், கண்டு எழுதிய அநாமதேயக் கடிதங்களுக்கும், பொய்க் கையெழுத்திட்ட கடிதங்களுக்கும் கணக்கே இல்லை. மற்றும் நமக்குள் இருந்த தொண்டர்களைக் கொண்டு செய்வித்த குறும்புகளுக்கும் அளவே இல்லை. இவ்வளவு தொல்லைகளையும் சங்கடங்களையும் தாண்டி இவ் வியக்கம் இன்றையதினம் ஒருவாறு தமிழ் நாட்டில் உள்ள பொது மேடைகளை எல்லாம் கைப்பற்றி, தேசீயத் தலைவர்கள் என்பவர்களை



எல்லாம் முக்காடிட்டு மூலையில் உட்கார வைத்தும் பெரிய பெரிய பண்டிதர்கள், சாஸ்திரிகள், சமயவாதிகள், சமயத் தலைவர்கள், சண்டப் பிரசண்டவாதிகள் என்பவர்களை எல்லாம் வெளியில் தலைகாட்டுவதற் கில்லாமல் செய்தும் விட்டதுடன், ஜாதி இறுமாப்பையும், சமய இறுமாப் பையும், பண்டித இறுமாப்பையும் கசகசவென்று நசுக்கிக் கொண்டு வருகின் றது. இன்றைய தினம் தமிழ்நாட்டில் நமது இயக்கத்திற்கு விரோதமாக ஏதா வது ஒரு அரசியல் கட்சி என்பதற்குச் செல்வாக்கு கடுகளவாவது இருக் கின்றதா என்று யாராவது பரீட்சை பார்க்க விரும்பினால் இப்போது நாட்டில் நடந்து வரும் தேர்தல்களையும், அவற்றின் முடிவுகளையும் கவனித்துப் பார்த்தாலே போதுமானதாக இருக்கும்.

உதாரணமாக, சமீபத்தில் சென்னையில் நடந்த தேர்தல்கள் பெரிதும் "தேசீயத்திற்கும்" "ஆஸ்திகத்திற்கும்" நல்ல தோல்வியைக் கொடுத்து, "தேசத்துரோகத்திற்கும்" "நாஸ்திகத்திற்கும்" நல்ல வெற்றியைக் கொடுத் திருப்பதானது யாவரும் அறிந்ததாகும். அது மாத்திரமல்லாமல், தேசீயத்தின் பேராலும் ஆஸ்திகத்தின் பேராலும் தேர்தல்களுக்கு நிற்க ஆள்களே கிடைக்காமற் போனது. "நாஸ்திகத்தின்" செல்வாக்குக்கும் வெற்றிக்கும் ஒரு பரீட்சையாகும். "காங்கிரசே பெரிது" என்ற காங்கிரஸ் தலைவர் திரு. அய்யங்கார் தேர்தலைப் பற்றித்தான் ஒன்றுமே கவனிக்கப் போவதில்லை என்று சொல்லிவிட்டார். "தேசமே பெரிது" என்ற கட்சித் தலைவர், வேலை போன திரு.வெங்கிட்டராம சாஸ்திரியார், வேலை போன மந்திரிகள் ஆகியவர்கள் இருக்குமிடமே தெரியவில்லை. உத்தியோகமே பெரிது என்று பின்பற்றுவோர் இல்லாத குட்டி தேசீயக் கட்சி ஸ்தாபகரும் தானே தலைவரு மான திரு.வரதராஜுலு, காங்கிரஸ் தோல்வியுற்ற சந்தோஷத்திலும் அய்யங் கார் மூலையில் அடங்கிய சந்தோஷத்திலும் மூழ்கிக்கிடக்கின்றாரே அல்லாமல், தன்னைப் பற்றி நினைக்கவோ, உலகம் என்ன பேசிக் கொள்ளு கின்றது என்பதைக் கேட்கவோ, நாட்டில் தனது நிலைமை என்ன என்பதை பார்க்கவோ, தனது கட்சியின் யோக்கியதை என்ன என்பதைப் பற்றி கவனிக்கவோ, சிறிதும் நேரமில்லாமல் இருக்கின்றார். மற்றும் "சைவ சமயமே பிரதானம், சமய ஆச்சாரிகளே தனது உயிர் என்ற திரு.கல்யாண சுந்தர முதலியார் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களிடம் சென்று சுயமரியாதைக் கட்சியில் சேர்ந்தால் உங்களுக்கு ஓட்டு கிடைக்காது என்று மிரட்டுவதும் ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாய் ஓட்டர்கள் வீட்டுக்கு இரகசியமாய் நடந்து "நாஸ்திகக் கட்சிக்கு ஓட்டுச் செய்யாதீர்கள்" என்று சொல்லி பார்ப்பனர் களுக்கு சில ஓட்டுகளை வாங்கிக்கொடுத்துவிட்டதுடன் அவர் வேலை முடிந்துவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கின்றார். மற்றபடி ஆஸ்திகக் கூலிகளோ வாங்கின பணம் சரிவர ஜீரணமாயிற்றா இல்லையா என்பதைக் கூட கவனிக்காமல் இனியும், பணம் பணம் என்று கூவிக்கொண்டு கொடுக்கின்றாயா அல்லது எதிர்க்கட்சியில் சேர்ந்து கொள்ளட்டுமா என்று திரு.ஐயங்காரை மிரட்டிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே இந்த நிலையில் இன்றைய தினம் நமது



RangaRakes

tamilnavarasam.com

நாட்டில் சுயமரியாதை இயக்கமும் அதன் எதிர்ப்புகளும் இந்நிலையில் இருந்து வருவது ஒரு புறமிருந்தாலும், அவ் வியக்கத்தின் உண்மையான கொள்கைகள்தான் என்ன என்பதைப் பற்றிச் சற்று கவனிப்போம். சுய மரியாதை இயக்கம் அரசியலில் பிற்போக்காய் இருக்கின்றது, மற்றபடி சமூக சீர்திருத்தத் துறையில் எல்லாம் சரி என்று பார்ப்பனரல்லாத தேசீயவாதிகள் என்பவர்கள பலர் நமக்கு எழுதியிருக் கின்றார்கள். அதாவது, அரசியலில் சைமன் கமிஷனை பகிஷ்கரிக்காததும், சட்டசபையில் ஒத்துழைப்பதும் அரசியலுக்கு விரோதம் என்பது அவர்கள் கருத்து. ஆனால் இப்போது சைமன் கமிஷனை பகிஷ்கரித்தது பைத்தியக் காரத்தனம் என்று அவர் களுக்கே தோன்றிவிட்டதைப் பார்த்தால் சுயமரியாதை இயக்கம் எவ்வளவு தீர்க்க தரிசனமுள்ளது என்பது விளங்கும். அதாவது காங்கிரசைச் சார்ந்த திரு.ஆர்.கே.ஷண்முகம் எம்.எல்.ஏ., அவர்களும், சுயாட்சி சங்கத்தைச் சார்ந்த டாக்டர் பெசண்ட் அம்மை அவர்களும், நமது குறைகளை பார்லிமெண்டு முன்பாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்றும் பார்லிமெண்டை நம்ப வேண்டுமென்றும், அதைப் பகிஷ்கரிக்கக் கூடாதென்றும் சொல்லி விட்டார் கள். இதை எந்த காங்கிரஸ்வாதியும், சுயாட்சிவாதியும், தேசீயவாதியும் நாளிதுவரை ஆட்சேபிக்கவில்லை. தவிர, காங்கிரஸ்காரர்களும் இவ்வரு ஷத்திய காங்கிரஸ் தலைவர்களை தேர்ந்தெடுப்பதில் சீமைக்குப் போய் பார்லிமெண்டாரிடம் நமது குறைகளை எடுத்துச் சொல்லி வாதம் செய்து அவர்களிடம் சுயராஜ்ஜியம் பெறத் தகுதியுடையவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் பேசி இருக்கின்றார்கள். இதையும் எந்த பகிஷ்கார வாதியும் இதுவரை ஆட்சேபிக்கவே இல்லை. எனவே, பார்லிமெண்டிடம் நமது கட்சியையோ குறைகளையோ சொல்லிக் கொள்ள நமக்கு இஷ்டம் இருக்கும்போது, சீமைக்குச் சென்று பார்லிமெண்டிடம் போகச் சௌகரியமும் சக்தியும் இல்லாத ஜனங்கள் பார்லிமெண்டாரால் நியமிக்கப்பட்டு இவ்விடத் திற்கு அனுப்பி இருக்கும் பார்லிமெண்டு பிரதிநிதிகளிடம் நமது கட்சி யையோ, குறைகளையோ எடுத்துச் சொன்னதில் தேசீயத்திற்கோ, தேசீய சுயமரியாதைக்கோ என்ன கெடுதி நேர்ந்துவிட்டது என்று கேட்கின்றோம். அடுத்தாற்போல் சர்க்காரோடு ஒத்துழைப்பதாகச் சொல்லுவதில் ஏதாவது அர்த்தம் இருக்கின்றதா என்று பார்ப்போம். முதலாவது, இப்போது ஒத்துழை யாமை என்பது எவ்வித தேசீயத் திட்டத்திலும் இல்லவே இல்லை. சட்ட சபையில் ஏதாவது செய்வதற்கு இடமிருப்பதாகச் சொன்னாலும் அதுவும் ஓட்டர்களை ஏமாற்றுவதற்கு மாத்திரம் தான் சொல்லி கொள்ள முடியுமே ஒழிய மற்றபடி சட்டசபைக்குள் புகுந்துவிட்டால் எந்த விதத்திலும் ஒத்துழை யாமையோ, முட்டுக் கட்டையோ சிறிதும் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றோம். ஏனெனில் சட்டசபைக்குப் போனவர்களுக்கு சில நிபந்த னைகள் இருக்கின்றன. அந்நிபந்தனைப் படி அவர்கள் கண்டிப்பாய் இருக்க வேண்டியவர்களாயிருக்கும்போது அங்கு எவ்விதத்தில் ஒத்துழையாமை செய்ய முடியும்? நமக்கு வேண்டிய எவ்வித அரசியல் சட்டங்களும், சமூக



சீர்திருத்தச் சட்டங்களும், சமத்துவ சட்டங்களும் சட்டசபைகளின் மூலம் தான் செய்து நிறைவேற்றிக் கொள்ள வேண்டியிருக்கின்றது. அப்போது சர்க்காரிடம் போகாவிட்டால், சர்க்கார் சம்மதமில்லாவிட்டால் எப்படி சட்டங்கள் செய்து அவைகளை அமுலுக்குக் கொண்டு வரமுடியும்? அன்றியும், சர்க்காரால் செய்யப்பட்டிருக்கும் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு சர்க்கார் தயவை எதிர்ப்பார்ப்பதற்குத் தகுந்த படி நடந்து கொள்ளாமல் இருக்கச் சட்டசபையில் எப்பேர்ப்பட்ட தேசீய அமிதவாதிக்கும் சிறிதும் இடமே இல்லை. இப்போதும் திரு.நேரு உட்பட ஒவ்வொரு தேசீயவாதியும் அப்படித்தான் நடந்து கொள்ளுகின்றார்கள். உதாரணமாக, இப்போது சர்க்கார் செய்யும் மதுவிலக்குப் பிரசாரத்தில் காங்கிரஸ் சட்டசபைக் கட்சித் தலைவர் திருவாளர்கள் சாமி. வெங்கடாசலம் செட்டியார், வெங்கிடபதிராஜு, நாகேஸ்வரராவ் பந்துலு ஆகியவர்களெல் லாம் சர்க்கார் நியமனம் பெற்றுச் சர்க்காருடன் ஒத்துழைத்துக் கொண்டுதான் வருகின்றார்கள். சென்னை மாகாண ஒத்துழையாமை தலைவர் என்பவர், அதாவது காந்தியார் கண்ணுக்கு இந்தியா முழுவதற்கும் ஒத்துழையாமை தத்துவத்தை உள்ளபடி உணர்ந்த ஒரே ஒரு உண்மை ஒத்துழையாதாராகத் தோன்றும் திரு.சி.ராஜ கோபாலாச்சாரியாரும், மதுவிலக்குப் பிரசாரம் சம்பந்த மாய் சர்க்கார் நியமனத்தைப் பெற்று சர்க்காருடன் ஒத்துழைக்க சம்மதித் திருக்கின்றார். எனவே, இனி யார் எவ்விதத்தில் சர்க்காரை பகிஷ்கரித்திருக் கின்றார்கள் என்பது விளங்கவில்லை. வேண்டுமானால், திரு.சத்தியமூர்த்தி போன்றவர் கள், குடிகாரர், வெறிகாரர்போல் காலித்தனமாய் சட்டசபை பார்ப்பனரல்லாத அங்கத்தினர்களையும், மந்திரிகளையும், நிர்வாகசபை அங்கத்தினர்களையும் வைதுவிட்டு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம். ஆகவே, இவ்வித நிலைமையில் பகிஷ்காரத்திற்கும் ஒத்துழையாமைக்கும் என்ன அர்த்தம் என்பது விளங்காதவர்களோ, அல்லது வேண்டும் என்றே பாமர மக்களை ஏமாற்ற வேண்டுமென்பவர்களோதான் சுயமரியாதை இயக்கம் அரசியலில் பிற்போக்கானதென்றோ, தேசீயத்திற்கு விரோதமான தென்றோ சர்க்காருடன் ஒத்துழைக்கின்றதென்றோ சொல்லிக் கொள்ள முடியுமே தவிர, மற்றபடி அறிஞர்களும் யோக்கியர்களும் ஒருக்காலும் சொல்ல முடியாது என்று உறுதி யாய்ச் சொல்லுவோம். அடுத்தாப்போல் சுயமரியாதை இயக்கம் தேசீயத் திட்டம் என்னும் நேரு திட்டத்தை ஏற்றுக் கொள்ளாதது ஒரு பெரிய காங்கிரஸ் துரோகம் என்று யாராவது சொல்ல வரலாம். ஆனால் நேரு திட்ட மானது இதுபோது இந்தியாவில் அழுவாரற்ற பிணமாய் அழுகி நாறிக் கிடப்பதை யாரே மறுக்கவல்லார். அதன் நாற்றம் இந்தியா மாத்திரமல்லாமல் இங்கிலாந்திலும் நாறுவதும், வெள்ளையர்கள் இந்த நாற்றம் பொறுக்க மாட்டாமல் மூக்கைப் பிடித்துக் கொண்டு இந்தியா வைப் பற்றி நினைப்பதும் இரகசியமா என்று கேட்கின்றோம். நேரு திட்டத் திற்கு அதை ஆட்சேபிக்கும் விரோதிகள் யார் யார் என்று எண்ணுவதை விட, அதை ஆதரிக்கும் அனுகூலமானவர்கள் யார் என்று எண்ணுவதே சுருக்கமான வேலை



RangaRakes tamilnavarasam.com

என்போம். ஏனெனில் அதை அப்படியே ஒப்புக் கொள்ளுகின்ற கட்சியோ, மதமோ, வகுப்போ எது என்று பார்த்தால் ஒரு சுண்டுவிரலை மடக்குவதற்குக் கூட ஒன்றையும் காணவே முடியவில்லை. இந்து மகாசபை, முஸ்லீம் சபை, கிறிஸ்தவ சபை ஆகிய மத சபைகள் தீண்டப்படாதார் முதலியவர்கள் என்கின்ற சமூக சபைகள் ஆகிய எல்லாம் ஆதி முதலிலிருந்தே ஆட்சேபித்துக் கொண்டிருக்கின்றன. இந்துக்கள் என்பவர்களுக்குள் பார்ப்பன சமூகசபை, பார்ப்பனரல்லாத சமூக சபை ஆகியவைகளும் எதிர்க்கின்றன. எனவே, நேரு திட்ட விஷயத்திலும் சுயமரியாதை இயக்கத்தின் மீது பழி சுமத்த ஏதாவது இடமிருக்கின்றதா? என்று கேட்கின்றோம். அதுபோலவே சமய சமூக விஷயங்களிலும் சுயமரியாதை இயக்கம் எந்த விதத்தில் நாத்திகமும் சமூகக் கட்டுப்பாட்டிற்கு விரோதமானதென்பது அடுத்தாப் போல் யோசிக்க வேண்டிய விஷயமாகும். சுயமரியாதை இயக்கத்தின் சமய சமூக விஷயமான கொள்கைகள் என்ன என்பதற்கு செங்கற்பட்டில் கூடிய முதலாவது மாகாண சுயமரியாதை மகாநாட்டில் செய்த தீர்மானங்களே போதிய அத்தாட்சியாகும். அதைக் கொண்டேதான் தேசீயவாதிகள், மத வாதிகள் என்பவர்களும் கூட்டம் போட்டு பேசிவருகின்றார்கள். ஆகவே அதைப் பற்றி சிறிது யோசிப்போம்.

1.செங்கற்பட்டு தீர்மானங்கள் என்னவென்று பார்ப்போமானால் அவைகளில் மக்கள் பிறவியில் சாதிபேதம் கிடையாது என்பது.

2. சாதி பேதம் கற்பிக்கும் மதம், வேதம், சாத்திரம், புராணம் முதலியவைகளைப் பின்பற்றக் கூடாது என்பது.

3. வருணாச்சிரமப் பிரிவுப்படி பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் என்கின்ற பிரிவுகளை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பது.

4. மக்களுக்குள் தீண்டாமை என்பதை ஒழித்து பொதுக்குளம், கிணறு, பாடசாலை, சத்திரம், தெருவு, கோயில் முதலியவைகளில் பொது ஜனங்களுக்குச் சம உரிமை இருக்க வேண்டும் என்பது.

5. இவை பிரசாரத்தால் நிறைவேற்றிவைக்க முடியாதபடி சில சுயநலக் கூட்டத்தார் தடை செய்வதால் சர்க்கார் மூலம் சட்டம் செய்து, அச்சட்டத்தின் மூலம் அமுலில் நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும் என்பது,

6.ஜாதிமத வித்தியாசங்களால் மக்களின் ஒற்றுமையும் பொது நன்மை உணர்ச்சியும் பாதிக்கப்படுவதால் அதை உத்தேசித்து சாதிமத வித்தியாசத்தைக் காட்டும் பட்டம், குறி முதலியவைகளை உபயோகிக் காமலிருக்க மக்களைக் கேட்டுக் கொள்ளுகின்றது என்பது,

7. பெண்கள் விஷயத்தில் பெண்கள் கலியாண வயது 16-க்கு



RangaRakes

மேல் இருக்க வேண்டும், மனைவிக்கும் புருடனுக்கும் ஒற்றுமையின் மேல் பிரிந்து கொள்ள உரிமை வேண்டும். விதவைகள் மறுவிவாகம் செய்து கொள்ள வேண்டும். கலப்பு மணம் செய்து கொள்ளலாம். ஆண் பெண் தாங்களே ஒருவரை ஒருவர் தெரிந்தெடுத்துக் கொள்ள லாம் என்பது.

8. சடங்குகள் விஷயத்தில் கலியாணம் முதலிய சடங்குகள் சுருக்கமாகவும், அதிக செலவில்லாமலும், ஒரே நாள் சாவகாசத்திற்கு மேற்படாமலும், ஒரு விருந்துக்கு மேற்படாமலும் செய்ய வேண்டும் என்பது.

9. கோயில் பூசை விஷயத்தில் கோவில்களின் சாமிக்கென்றும் பூசைக்கென்றும் வீணாகக் காசைச் செலவழிக்கக் கூடாது. சாமிக்கும் மனிதனுக்கும் மத்தியில் தரகனாவது மொழி பெயர்ப்பாளனாவது கூடாது.

புதிதாகக் கோவில் கட்டுவதில் பணத்தைச் செலவழிக்கக் கூடாது. கோவிலுக்கும் சத்திரத்திற்கும் வேதம் படிப்பதற்கு என்று விட்டிருக்கும் ஏராளமான சொத்துக்களை கல்வி ஆராய்ச்சி கைத் தொழில் கற்றுக் கொடுத்தல் முதலாகிய காரியங்களுக்கு செலவழிக்க முயற்சி செய்யும்படி கேட்டுக் கொள்ளுவது.

உற்சவங்களில் செலவழிக்கப்படும் பணத்தையும், நேரத்தையும் அறிவு வளர்ச்சி, சுகாதார உணர்ச்சி, பொருளாதார உணர்ச்சி ஆகியவைகளுக்கு உபயோகமாகும்படியான கட்சி, பொருட்காட்சி ஆகியவைகளில் செலவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுவது என்பது.

10. மூடப் பழக்கவழக்கங்களை ஒழிப்பது; அதற்கு விரோத மான புத்தகம், உபாத்தியாயர் ஆகியவர்களை பஹிஷ்கரிப்பது என்பது.

11. பெண் உரிமை விஷயத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை அளிப்பது; உத்தியோக உரிமை அளிப்பது; உபாத்தியாயர் வேலை முழுதும் அவர்களுக்கே கிடைக்கும்படி பார்ப்பது என்பது.

12."தீண்டப்படாதார்" விஷயத்தில், "தீண்டப்படாதவர்" களுக்கு உண்டி, உடை, புத்தகம் ஆகியவைகளைக் கொடுத்து கல்வி கற்பிப்பது; தர்க்காஸ்து நிலங்களை அவர்களுக்கே கொடுப்பது என்பது.

13. பார்ப்பனரல்லாத இளைஞர்களுக்கு கல்வி விஷயத்தில் இருக்கும் கஷ்டங்களையும், தடைகளையும் நீக்க ஏற்பாடு செய்வது என்பது.



tamilnavarasam.com

14. கல்வி விஷயத்தில் தாய் பாஷை, அரசாங்க பாஷை ஆகிய இரண்டைத் தவிர மற்ற கல்விக்குப் பொதுப் பணத்தை செலவிடக் கூடாது. அதுவும், ஆரம்பக் கல்விக்கு மாத்திரம் பொது நிதியை செலவழித்து கட்டாயமாய் கற்பிக்க வேண்டும். உயர்தரக் கல்விக்கு பொது நிதி சிறிதும் செலவழிக்கக் கூடாது. சர்க்கார் காரியத்திற்கு தேவை இருந்தால் வகுப்புப் பிரிவுப்படி மாணாக்கர்களை தெரிந் தெடுத்து படிப்பிக்க வேண்டுமென்பது.

15. சிற்றுண்டி ஓட்டல் முதலிய இடங்களில் வித்தியாசம் கூடாது என்பவைகளாகும்.

மேலும் இவைகளும் அநேகமாக சிபார்சு செய்வது, கேட்டுக் கொள்ளுவது, முயற்சிக்க வேண்டியது என்கின்ற அளவில் தீர்மானிக்கப் பட்டிருக்கின்றதே அல்லாமல் திடீரென்று நிர்ப்பந்தமாய் தீர்மானிக்கப் படவில்லை. எனவே, இவற்றுள் எவை எவை நாத்திகம் என்றும், எவை எவை அந்நிய சர்க்காரை ஆதரிப்பது என்றும் எவை எவை தேசீயத்திற்கும், காங்கிர சிற்கும் விரோதமானவை என்றும் எந்த யோக்கியமான தேசீயவாதியோ, அல்லது ஆத்திகவாதியோ, வீரத்துடன் வெளிவரட்டும் என்றுதான் அறை கூவி அழைக்கின்றோம். உண்மை விஷயங்களைச் சொல்லாமல் பொதுப்பட சுயநலப்பார்ப்பனர்கள் சொல்லிக் கொடுத்தபடி கிளிப்பிள்ளையைப் போலும் பிறவி அடிமையைப் போலும், கூப்பாடு போடுவதனாலேயே சுயமரியாதை இயக்கத்தின் எதிர்ப்பு கோழைத் தன்மை உடையது என்றும், சுயநலமும் கூலித் தன்மையும் கொண்ட இழிதகைமையது என்றும் அறிவினர்க்கு தெற்றென விளங்கவில்லையா என்று கேட்கின்றோம். எது எப்படி இருந்த போதிலும் விதவை மணம், கலப்பு மணம், கல்யாண ரத்து, தக்கவயது மணம், பட்டம் குறிவிடுதல், பெண் கல்வி, தீண்டாமை விலக்கல், சுருக்கக் கல்யாணம், வகுப்பு உரிமை, மூடப்பழக்கங்கள் ஒழிதல், கோவில் கட்டுவதையும் உற்சவங்கள் செய்வதையும் நிறுத்தி அந்தப் பணத்தை கல்விக்கும் ஒழுக் கத்திற்கும் செலவிடுதல் முதலாகிய காரியங்கள் சுயமரியாதை இயக்கத்தின் பலனாய் சமீப காலத்திற்குள் எவ்வளவு தூரம் காரியத்தில் பரவி வந்திருக் கின்றது, வருகின்றது என்பதும், இவ்விஷயங்களில் பொதுமக்களுக்கு எவ்வளவு தூரம் மனம் மாறுதல் சமீப காலத்தில் ஏற்பட்டிருக்கின்றது என்ப தும்; இவைகளுக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் எவ்வளவு தூரம் தானாகவே அழிந்துபட்டு வருகின்றது என்பதும் பொது வாழ்க்கையைக் கவனித்து வருபவர்களுக்கு நாம் எடுத்துச் சொல்லாமலே விளங்கிவருகின்றது. அன்றியும் இவ்வியக்கத்திற்கும் கொள்கைகளுக்கும் நாட்டில் இருக்கும் ஆதரவை பரீட்சிப்பதற்கும் இவ்வியக்க சம்பந்தமான பத்திரிகைகள் வளர்ச்சியையும், ஜில்லாக்கள் தோறும் தாலூக்காக்கள் தோறும் நடைபெறும் மகாநாடுகளும், அங்கு கூடும் கூட்டங்களும், அக்கூட்டங்களுக்கு வரும் மக்களின் யோக்கியதைகளும், அவற்றில் ஏகமனதாய் நிறைவேறும் தீர்



மானங்களும் ஆகியவற்றையும் இவைகளுக்கு எதிரிடையாய் இருக்கும் கட்சிகளுடைய, கூட்டங்களுடைய, தீர்மானங்களுடைய, அதிலிருக்கும் மக்கள்களுடைய யோக்கியதைகளையும், நிலைமைகளையும் கவனித்து நடுநிலையிலிருந்து சீர்தூக்கிப் பார்த்தால் எது மதிக்கப்படுகின்ற தென்பதைச் சிறு குழந்தையும் அறிய முடியும்.

நிற்க, தற்போது உலகத்தில் முன்னேறிவரும் எந்த தேசத்திலாவது மேலே குறிப்பிட்ட கொள்கைகள் இல்லாமல் இருக்கின்றதா? யாராவது சொல்ல முடியுமா? அன்றியும் மேற்கண்ட கொள்கைகள் நமது நாட்டில் இதற்கு முன் பல பெரியார்களாலும் சீர்திருத்தக்காரர்களாலும் சொல்லப் பட்டும், உபதேசம் செய்யப்பட்டும் வந்தது தானா, அல்லது நம்மால் மாத்திரம் இப்போது புதிதாய் சொல்லப்படுவதா என்றும் கேட்கின்றோம். பொதுவாக இப்போது புதிதாக உள்ள வித்தியாசமெல்லாம் முன்னுள்ளவர்கள் வாயினால் சொன்னார்கள்; புத்தகங்களில் எழுதினார்கள். ஆனால், நாம் இப்போது அவைகளைக் காரியத்தில் கொண்டு வர முயற்சிக்கின்றோம். நம்முடைய ஆயுளிலேயே இவைகள் முழுவதும் அமுலில் நடைபெற வேண்டுமென்று உழைக்கின்றோம். அவற்றுள் சிறிது பாகமாவது நடைமுறையில் காணப் படுகின்றது. இவைகளைத் தவிர வேறு எவ்வித வித்தியாசங்கள் சொல்லக் கூடும் என்று கேட்கின்றோம். ஆகவே, பொது ஜனங்கள் தயவு செய்து இவைகளை எல்லாம் நன்றாய் கவனித்து, தங்கள் தங்கள் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து, இதன் குணதோஷங்களை உணர்ந்து, ஒரு முடிவுக்கு வரவேண்டுமாயும், வந்த முடிவை காலந்தாழ்த்தாமல் அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமாயும் ஆசைப்படுகின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 25.08.1929**



RangaRakes tamilnavarasam.com

# தேசீய இயக்கம்

சென்ற வாரம் சுயமரியாதை இயக்கம் என்னும் தலைப்புக்கொடுத்து, அவ்வியக்கத்தின் கொள்கைகளைப் பற்றியும், திட்டங்களைப் பற்றியும், அதன் நிலையைப் பற்றியும், செல்வாக்கைப் பற்றியும், இதுவரை அது செய்திருக்கும் வேலையைப் பற்றியும் ஒருவாறு குறிப்பிட்டிருந்தோம். இவ்வாரம் தேசீய இயக்கம் என்னும் தலைப்புப் பெயர் கொடுத்து அதன் கொள்கை, திட்டம், நிலைமை, செல்வாக்கு, அது இதுவரை செய்திருக்கும் வேலை ஆகியவைகளைப் பற்றியும் ஒருவாறு விவரிப்போம்.

## அதன் பொருள்

சாதாரணமாக யோசித்துப் பார்த்தோமானால் இந்தியாவில் தேசீயம் என்கின்ற பதமே தப்பான வழியில் மக்களை ஏமாற்றி பிழைக்க ஒரு கூட்டத் தார், அதாவது மேல் ஜாதியார் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களால் கற்பனை செய்யப்பட்டு, அவர்களுக்குத் தாசர்களாக இருந்தால்தான் பிழைக்க முடியும் என்று கருதிய சில பார்ப்பனரல்லாத படித்தவர்கள் என்பவர்களால் ஆதரிக்கப்பட்டு, இவ்விரு கூட்டத்தாரின் சூட்சியாலும் பாமர மக்களை ஏமாற்றி சிலர் பிழைக்க உபயோகப்பட்டு வரும் ஒரு பாதக மும் அபாயகரமுமான அர்த்தமற்ற ஒரு வார்த்தையாகும்.

இன்னும் விளக்கமாக சொல்ல வேண்டுமானால் தேசீயம் என்பது மக்களின் 'ஆத்மார்த்த - இயல்' என்பதில் கடவுள், மோட்சம், நரகம் என்கின்ற வார்த்தைகள் எப்படி அர்த்தமற்றதாகவும் புரோகிதக் கூட்டமும், பாதிரிக் கூட்டமும், முல்லாக் கூட்டமும், சன்யாசிக் கூட்டமும், பாமர மக்களிடம் சமயத்திற்கு ஒரு அர்த்தமும் சந்தர்ப்பத்திற்கு ஒரு கருத்துமாய்ச் சொல்லி அவர்களை ஏமாற்றி பிடுங்கித்தின்று சோம்பேறிகளாய் இருந்து நோகாமல் வாழ்வதற்காகச் செய்து கொண்டிருக்க உபயோகிக்கப்பட்டு வருகின்றதோ, அதேபோல் தேசீயமென்னும் பதமும் சரீரப் பிரயாசை ஒரு சிறிதும் எடுத்துக் கொள்ள இஷ்டமில்லாமல் நெஞ்சத்தில் அழுக்குப் படாமல் பாமரர்களை ஏமாற்றிப் பிழைக்கவும் கீர்த்தி பெறவும் கண்டு பிடிக்கப்பட்ட சாதகமாகும்.

இந்தப் பதமானது ஆங்கில பாஷையில் "நேஷனல்" என்கின்ற பதத்தின் மொழி பெயர்ப்பு என்கின்ற முறையில் ஏற்பட்டதே தவிர மற்றபடி



அது இந்தியாவின் வேறு எந்த பாஷையிலும் எந்த கருத்திலும் இருந்ததல்ல வென்றே சொல்லலாம்.

அன்றியும் ஒரு சமயம் பத அர்த்த உணர்ச்சியானது தேசத்தின் பொதுவான நன்மைகளை உத்தேசித்ததாகக் காணப்படுவதாயிருந்தாலும் அப்பதத்தின் பேரால் நடைபெற்று வரும் முயற்சிகள் முழுவதும் அரசியல் சம்பந்தமான துறையில் சில உத்தியோகங்களையும், அதிகாரங்களையும் மாத்திரம் கருதி அவைகளை அரசாங்கத்தாரிடமிருந்து அடைவதற்காக செய்யும் முயற்சிகளாகவே இருந்து வருகின்றதேயல்லாமல் வேறில்லை. உதாரணமாக தேசியம் (அதாவது இந்திய தேசியக் காங்கிரஸ்) ஏற்பட்டு இன்றைக்குக் கிட்டத்தட்ட 50, 60 ஆண்டுகளாகி, அது இன்றைய தினம் செய்திருக்கும் வேலை என்ன வென்று பார்த்தால், அரசாங்க சம்பந்தமான உத்தியோகங்களை ஒன்றுக்கு 10 ஆகப் பெருக்கி அவ்வுத்தியோகங்களுக் கெல்லாம் சதா வேலை இருக்கும்படியாக அநேக புதிய புதிய அதிகாரங் களை உண்டாக்கி அவ்வுத்தியோகங்களும் அதிகாரங்களும் மக்களுக்கு சதா தேவையாய் இருக்கும்படியாக, மனித வாழ்க்கையையும் குணங்களையும், ஒழுக்கங்களையும் திருப்பி இதன் பயனாய் முன் சொல்லப்பட்ட உயர்ந்த ஜாதியார் என்னும் எல்லாப் பார்ப்பனர்களும் படித்தவர்கள் என்றும் பார்ப்பனரல்லாதாரும் போட்டி போட்டு வாழும் படியாக ஏற்பட்டதல்லாமல், நாட்டிற்கோ, நாட்டுப் பெரும்பான்மையான மக்களுக்கோ ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கின்றதா என்பதை சிறிதாவது கவனித்தால் நாம் கூறுவதில் உண்மை நன்றாக விளங்கும். அன்றியும் இன்றைய தினமும் தேசியம் என்பதின் பேரால் உள்ள காங்கிரஸ் என்னும் கூட்டத்திற்கோ இயக்கத் திற்கோ தேசியம் என்னும் தேச சம்பந்தமான நன்மைகளைப் பொறுத்த கொள்கைகள் என்ன என்று பார்ப்போமானால் கூட அவை பெரிதும் உத்தி யோகங்களையும், அதிகாரங்களையும் பொறுத்ததாகவே இருக்கின்றதே தவிர, வேறு என்ன என்று பார்த்தால் அதன் மூலமும் உண்மை விளங்கும். ஒரு தேசத்தின் தேசியம் முக்கியமாய் எதைப் பொறுத்திருக்க வேண்டும் என்று பார்ப்போமானால் குறைந்த பக்ஷம் ஒரு தேச மக்கள் தங்களது மனத்தையும் மனசாக்ஷியையும் விற்காமலும் விட்டுக் கொடுக்காமலும் வயிறு வளர்க்கும்படியாகவாவது இருக்க வேண்டும். ஈதன்றி அதற்கு மேற்பட்ட தேசியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அறிவு வளர்ச்சி வேண்டும், கல்வி வேண்டும், ஆராய்ச்சி வேண்டும், கண்ணியமானத் தொழில் வேண்டும், சமத்துவம் வேண்டும், ஒற்றுமை வேண்டும், தன் முயற்சி வேண்டும், உண்மை உணர்வு வேண்டும், ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைக்காமலிருக்க வேண்டும், சோம்பேறிகள் இருக்கக்கூடாது, அடிமைகள் இருக்கக் கூடாது, தீண்டாதவர்கள் தெருவில் நடக்கக் கூடாதவர்கள் முதலிய வர்கள் இருக்கக்கூடாது, இனியும் இது போன்ற எவ்வளவோ காரியங்கள் செய்யப்பட வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

## தேசியம் செய்ததென்ன?

ஆனால் இவைகளில் எதனையேனும் இந்த ஐம்பது வருஷத்திய தேசியம் செய்திருக்கின்றதா? என்று பொது தேசியத் தலைவர்களையும், தனித்தனி தேசியக் கட்சித் தலைவர்களையும் இவைகளில், சம்பந்தப்பட்ட தேச பக்தர்களையும், தேசத் தொண்டர்களையும் கேட்கின்றோம். இந்த ஐம்பது வருஷ காலமாக உத்தியோகப் பெருக்குக்கும், அதிகாரப் பெருக்குக் கும் அவற்றிற்கு ஏற்பட்ட யோக்கியதா பட்ச பெருக்குக்கும், சம்பளப் பெருக்குக்கும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான திட்டங்கள் கொண்ட சட்டங்கள் தேசியத்தின் பேரால், நிறைவேற்றப் பட்டிருப்பது போல், உண்மையாகவே தேச நன்மைக்கேற்றதான மேலே குறிப்பிட்டவைகள் விஷயத்தில் ஏதாவது சட்டம் செய்ய இந்த தேசிய இயக்கமோ, தேசியத் தலைவர்களோ, ஒரு சிறிது முயற்சியாவது செய்து சட்டம் செய்தார்களா? செய்ய முற்பட்டார்களா? என்று கேட்பதுடன், அவ்வித சட்டம் செய்ய முன் வந்த வேறு கனவான்கள் முயற்சிக்காவது முட்டுக்கட்டை போடாமலிருந்தார் களா? என்று கேட்கின்றோம். பட்டினங்களில் உள்ள பொதுக்கிணறுகளில் சக்கரவர்த்தியின் குடிகளும், இந்நாட்டுப் பழங்குடிகளும், பொதுமக்களின் வாழ்க்கைக்கு மிக்க அவசியமான சமூகமுமான ஆதித்திராவிட மக்கள் என்போர் தாகத்திற்குத் தண்ணீர் மொள்ளுவதற்கு இந்த நாட்டில் இனியும் சட்டம் செய்துதான் அமுலில் கொண்டுவர வேண்டியிருப்பதுடன் அவ்வித சட்டம் இதுவரை எந்த தேசியவாதியாலும் கொண்டு வரப்படாமல் இருப்ப துடன் தேசியவாதி அல்லாதவர் என்பவரால் (திரு.வீரையன் அவர்களால்) கொண்டுவரப்பட்ட சட்டத்திற்கு தேசியவாதிகளின் எதிர்ப்பில்லாமலும் இருக்க முடியவில்லை. சென்ற மாதத்திலும் சென்னை சட்டசபையில் கிராமப் பொதுக் கிணறுகளில் பொதுமக்கள் யாவருக்கும் தாகத்திற்கு தண்ணீர் மொண்டு குடிக்க உரிமை வேண்டுமென்று ஒரு தேசியவாதி அல்லாதார் என்கின்றவரால்தான் சட்டம் கொண்டுவர முடிந்ததே தவிர வேறில்லை. அப்படியிருந்தும் அந்த சட்டத்தையும் தேசியவாதிகள் எதிர்க்காமலிருக்க வில்லை. தேசியவாதிகள் தயவால் மந்திரியாகி தேச மக்கள் பணத்தில் தேச மக்கள் பேரால் மாதம் ஒன்றுக்கு 5000 ரூபாய் சம்பளம் வாங்கினவரும், சுயாட்சி சங்கத்தைச் சேர்ந்தவரும், ஜாதி வித்தியாசமே இல்லாததும் "தினம் தினம் கடவுள் களுடனும் மகாத்மாக்களுடனும் சம்பாஷனை செய்து கொண்டிருக்கும்" சங்கமாகிய பிரம்மஞானச் சங்கத்தைச் சேர்ந்தவருமான திரு.ரங்கநாத முதலியாரால் ஆட்சேபிக்கப்பட்டதுடன், அவ்வாட்சேப னைக்கு அவர் சொன்ன காரணம் என்னவென்றால் இந்தச் சட்டம் நிறை வேறினால் தேசத்தில் அடிதடி கொலைகள் முதலியவைகள் ஏற்பட்டுவிடும், ஆதலால் கூடாது என்று சொன்னாராம். இதைத் திருவாளர் சத்தியமூர்த்தி முதலிய பச்சைத் "தேசியவாதிகள்" ஆதரித்தார்களாம். தேசிய இயக்க யோக்கியதைக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும் என்றுதான் கேட்கின்றோம். தவிரவும், குழந்தைகள் விவாகங்களையும், குழந்தைகளைப் புணர்ச்சி செய்வதையும் தடுக்க இதுவரை எந்த தேசியவாதியும் சட்டம் செய்யவே இல்லை. தேசியவாதி "அல்லாதவரால்"தான் இதற்கும் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. அப்படியிருந்தும் அந்த சட்டத்தையும் எதிர்க்க பச்சைத் தேசியவாதிகளான திருவாளர்கள் சத்தியமூர்த்தி, சீனிவாச அய்யங்கார், வெங்கிட்டரமணய்யங்கார், சேஷய்யங்கார், எம்.கே.ஆச்சாரி யார், துரைசாமி அய்யங்கார் முதலாகிய "இந்திய தேசிய பிரதிநிதிகளே" இன்று கச்சை வரிந்து கட்டிக் கொண்டு முன்னணியில் நிற்கின்றார்கள். மக்கள் ஜாதிப் பேதத்தையும், மத பேதத்தையும் ஒழிக்க தேசியவாதிகள் கவனிக்காமலிருப்பது மாத்திரமல்லாமல் அவற்றை நிலை நிறுத்தவும் வலுப்படுத்தவும் முயற்சிக்காமலிருப்பதில்லை. இன்றைய தேசிய வாழ்வில் தேவஸ்தான மசோதாவை எதிர்த்தவர்கள் யார்? சாமிகள் பேரால் பெண் மக்கள் விபசாரத்தைத் தடைபுரியும் மசோதாவை எதிர்த்தவர்கள் யார்? மக்கள் எல்லோருக்கும் சமப் பிரதிநிதித் தத்துவமும் சமசந்தர்ப்பமும் அளிக்கவேண்டும் என்னும் கொள்கைகளை எதிர்ப்பவர் யார்? இவைகளை முந்தியவர்கள் யார்? என்ற விவரங்களைக் கவனிப்போமானால் "தேசத்துரோகி"கள் என்பவர்களால் மசோதாக்கள் கொண்டு வரப்படுவதும், "தேசியவாதிகள்" என்பவர்களால் எதிர்க்கப்படுவதுமாயிருக்கின்றதே யல்லாமல் வேறு என்னவென்றுதான் கேட்கின்றோம்.

## 'தேசியம்' ஓர் முட்டுக்கட்டையே

கடைசியாக செங்கற்பட்டு மகாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள் யாரால் கொண்டுவரப்பட்டது? இப்போது அவைகள் யாரால் எதிர்க்கப் படுகின்றது? என்று பார்த்தால் அவ்வளவும் தேசியவாதிகள் என்பவர்களா லேயே எதிர்க்கப்படுவதைக் காணலாம். இவைகள்தான் போகட்டுமென்று பார்த்தாலும் இந்திய தேசிய முன்னேற்றத்திற்கு ஒத்துழையாமையைத் தவிர வேறு வழியில்லை என்று திரு.காந்தியால் சொல்லப்பட்டு இந்திய தேசீய இயக்கங்களும், ஒப்புக் கொள்ளப்பட்டு நடைமுறையில் கொண்டுவந்து பல ஆயிரக்கணக்கானவர்கள் ஜெயிலுக்கும் போய் தங்கள் உடலையும், பொருளை யும், ஆவியையும் விடத்தயாராயிருந்த காலத்தில் அதைப் பாழ்படுத்தினவர்கள் யார்? என்று கேட்கின்றோம்.

இன்றைய தினம் தேசியத் தலைவர்களாயிருக்கும் திருவாளர்கள் மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு முதலிய இந்தியத் தலைவர்களும் சென்னை தேசியத் தலைவர்கள் என்னும் திருவாளர்கள் சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார், கலியாணசுந்தரமுதலியார், வரத ராஜுலு முதலாகியவர்களும், ஒத்துழையாமை சட்ட விரோதமென்றும் ஒத்துழையாமை அசட்டுத்தனமென்றும் இராட்டையைச் சுழற்றினால் சுயராச்சியம் வந்துவிடாதென்றும், வகுப்பு வித்தியாசமுள்ள இடத்தில் ஒத்து ழையாமை பலியாதென்றும், காந்திக்கு மூளையில்லை, காந்தி தேசியத்திற்கு


RangaRakes tamilnavarasam.com

லாயக்கில்லையென்றும் சொல்லிக் கொண்டு, ஒத்துழையாமையை அழிப்பதற்கென்றே தோற்றுவிக்கப்பட்ட சுயராஜ்யக் கட்சியை ஆதரித்து, அதில் சிலர் திருட்டுத்தனமாய் சேர்ந்து கொண்டு, சிலர் கைக்கூலி வாங்கிக் கொண்டு ஆதரித்து ஒத்துழையாமையை ஒழித்துவிடவில்லையா என்று கேட்கின்றோம்.

இப்படிப்பட்ட யோக்கியவர்கள் தானே இன்று நம்மையும் சுய மரியாதை இயக்கத்தையும் சர்க்காருடன் ஒத்துழைப்பவரென்றும் தேசியத் திற்கு விரோதமான கட்சியென்றும், சொல்லுகின்றார்களேயொழிய வேறு உண்மையான யோக்கியர்கள் யாராவது சொல்லுகின்றார்களா? அன்றி யும் இமயமலை முதல் கன்னியாகுமரி வரையில் தேசத்தின் பேரால் தேசீயத் தின் பேரால் ஏதாவது ஒரு ஒத்த யோக்கியமான தலைவர் இருக்கின்றாரா? என்று கேட்கின்றோம்.

## தலைவர்களின் 'பெருமை'

திரு.காந்தியின் நிலைமையோ அவர்தானே தன்னை மனப்பூர்வமாக யோக்கியர் என்று சொல்லிக் கொள்ள முடியவே முடியாது. தேசியம் என்பதின் பேரால் அவர் போட்ட குட்டிக்கரணங்கள் எண்ணித் தொலையாது. அவருடைய வியாக்கியான வித்தியாசங்கள் கணக்கிலடங்காது. இன்றையத் தினம் எந்த விதமான அயோக்கியத்தன்மையும் நாணய மற்றதுமான தீர்மானங்களைக் காங்கிரசிலும், மற்ற கூட்டங்களிலும் நிறைவேற்ற வேண்டுமானாலும் தேசியத் தலைவர்களுக்கு திரு.காந்தியைத்தான் உபயோகப்படுத்திக் கொள்ள முடிகின்றது. ஆனால், அவர் பேச்சையும் கேட்க ஆட்களைக் காணோம். திரு.மோதிலால் நேருவோ அரசியலை சூதாட்டம் என்றே கருதி இருப்பதோடு சட்டசபைகளில் காலிகளைவிட மோசமாய் நடந்து கொள்ளுகின்றவர். எந்தக் காரியம் செய்வதானாலும் அவருக்கு உத்தியோகத்திலும் அதிகாரத்திலும், கட்சித் தலைமையிலும் கண்ணே தவிர நாட்டின் நன்மைக்கேற்ற திட்டம் இன்னது என்பதை அவர் தேசியத்தில் கிடையாது. அவர் குமாரர் ஜவகர்லால் நேருவோ வாயளவில் பூரண சுயேச்சை, காரிய அளவில் காங்கிரஸ் தலைமை, மற்றபடி நடைமுறைக்கு அவரிடம் யாதொரு கொள்கையும் கிடையாது. பம்பாய் மாகாணத்துத் தலைவர்களான மராட்டியப் பார்ப்பனர்கள் சங்கதி யாவருக்கும் தெரிந்ததேயாகும். கல்கத்தா மாகாணத்துத் தலைவர்கள் திருவாளர்கள் சென்குப்தா, போஸ் முதலியவர்கள் நம் நாட்டுத் திரு. ஆதிநாராயணஞ் செட்டியாரை தோற்கடிக்கக் கூடிய தேசியவாதிகளாவார்கள். பஞ்சாப் மாகாணத் தலைவர்கள் யோக்கியதை காங்கிரஸ் வரவேற்புக் கூட்டத்தில் தலைவர் தேர்தலில் நடந்து கொண்ட மாதிரியிலேயே அவர்கள் யோக்கியதையும் அவர்களுக்கு அங்கிருக்கும் மதிப்பும் நன்றாய் விளங்கும். மற்றும் சென்னை மாகாணத் தேசியத் தலைவர்கள் யோக்கியதை சொல்லவே வேண்டியதில்லை. வகுப்புவாரியாக தலைவர்கள் இருந்தாலும் அதாவது பார்ப்பனரில்;





அய்யங்காருக்கு பிரதிநிதி திருவாளர்கள் எஸ்.சீனிவாசய்யங்கார், ஏ.ரங்கசாமி அய்யங்கார், அய்யருக்கு திரு.எஸ்.சத்தியமூர்த்தி; பார்ப்பனரல்லாதாருக்கு திருவாளர்கள் திரு.வி. கலியாணசுந்தர முதலியார், ஓ.கந்தசாமி செட்டியார், பி.வரதராஜுலு, முத்துரங்க முதலியார், மயிலை ரத்தினசபாபதி முதலியார்; மகமதியர்களில் ஜனாப்கள் அமித்கான் சாயபு, ஷாபி மகமது சாயபு; கிறிஸ்து வர்களுக்கு திரு. குழந்தை, தீண்டாதவர்கள் என்பவர்களுக்கு திரு.ஜயவேலு ஆகிய இவ்வளவு பேர்களுடனேயே சென்னை தேசியத் தலைமை அடங்கிவிட்ட போதிலும் இவர்கள் ஒவ்வொருவர்களின் யோக்கியதையும் நிலைமையும் நாம் சொல்லுவதைவிட அவர்கள் ஒருவருக் கொருவர் சொல்லிக் கொள்வதைக் கொண்டு அறிவதே கூடுமானவரை உண்மை யாகவும் சுலபத்தில் அறிந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்குமென்றே கருதி விட்டு விடுகின்றோம். இவர்களது கொள்கைகளோ, திரு.சீனிவாசய்யங் காருக்குப் பூரண சுயேச்சை; அதற்குள் உத்தியோகம் வேண்டாமென்பதற்கு ஒரு கட்சியும், உத்தியோகங்கள் எல்லாவற்றையும் கைப்பற்ற ஒரு கட்சியும் வேண்டும். ஆனால் தானும் தன் மகனும் வக்கீல் வேலையில் மாதம் 15,000 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதித்துக் கொண்டுமிருக்க வேண்டும். திரு.ஏ.ரெங்கசாமி அய்யங்காருக்கோ நேரு திட்டத்தை ஆதரிப்பது என்பது வாய் வார்த்தையில்; எப்படியாவது பார்ப்பனரல்லாதார் ஆதிக்கம் தொலைய வேண்டுமென்பது; உள் எண்ணத்தில் 'இந்து' பத்திரிகையும் 'சுதேசமித்திரன்' பத்திரிகையும் தேசியத்தின் பேரால், பார்ப்பனப் பிரசாரமும் செய்து மாதம் 1-க்கு ஐயாயிரம், ஆறாயிரம் ரூபாய் சம்பாதிப்பதுடன், தங்கள் பிள்ளைகுட்டி, அண்ணன், தம்பி, மாமன், மருமகன், எல்லோருக்கும் பெரிய பெரிய உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பது ஆகியவைகள் காரியத்தில்.

திரு.சத்தியமூர்த்திக்கோ திரு.சீனிவாசய்யங்கார் சொற்படி ஆறுமாதம், திரு.ரங்கசாமி அய்யங்கார் சொற்படி ஆறு மாதம்; ஓய்வு நாட்களில் பார்ப்பனீயத்திற்குக் கெடுதி இல்லாமல் பார்த்துக் கொண்டு மற்றபடி பணம் கொடுப்பவர்கள் சொற்படியெல்லாம் நடப்பதேயாகும். மற்றும் பணத்தின் அளவுக்குத் தகுந்தபடி யாரையும் காலித்தனமாக வைதுவிட்டு அடிக்கடி மன்னிப்புக் கேட்டு கொள்வதும் ஆகியவைகளைத்தவிர வேறொன்றும் கிடையாது.

திரு.கலியாணசுந்தர முதலியாருக்கு வாயில் காந்தியடிகள் திட்டம், மனதில் புராண புஸ்தக விற்பனை, காரியத்தில் பார்ப்பனரல்லாதாருக்கு இடையூறாக பார்ப்பனருக்கு பிரசார வேலை செய்வதுமேயாகும்.

திரு.வரதராஜுலுவுக்கோ வாயில் (குறிப்பிட்ட கொள்கையில்லாத) தேசியம் என்கின்ற கூச்சலும் அதற்கு சகல உத்தியோகத்தையும், கைப்பற்ற வேண்டும் என்கின்ற திட்டமும் மனதில் தான் ஒரு மந்திரியாக வேண்டும் என்கின்ற கனவும், காரியத்தில் பத்திரிகையும், மின்சார ரசம் விற்பனையில் பணம் தேடுவதுமேயாகும். மற்றவர்களுக்கோ சொந்தத்தில் ஒரு அபிப்பிராய

RangaRakes tamilnavarasam.com

முமில்லாமல் திரு.அய்யங்கார் வீசிய கல்லை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டே இருப்பது. இவர்கள் இத்தனை பேர்களும் தனித்தனி யாகவோ சேர்ந்தோ சுயமரியாதை இயக்கத்தையும், சீர்திருத்தத்தையும் எதிர்த்து பொதுவில் பார்ப்பன பிரசாரம் செய்வதில் மாத்திரம் அபிப்பிராய பேதமே கிடையாது என்று சொல்லலாம். மற்றபடி நாட்டில் தேசியத்திற்கு யோக்கியதையோ; அகில இந்திய காங்கிரசுக்கு தலைவர் தேர்தல்களில் ஏற்பட்ட சம்பவங்களும், தலைவர் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் யோக்கிய தையும் அவர்கள் மறுப்பதும் ஆகியவைகளோடு திரு.காந்தி தலைமைப் பதவி வேண்டாம் என்பதற்குச் சொல்லும் காரணங்களும், ஆகியவைகளைக் கவனித்தால் அதன் யோக்கியதை விளங்காமல் போகாது. திரு.காந்தியவர்கள் காங்கிரசு யோக்கியமான நிலையில் இல்லை என்றும், தான் சொல்வதை யாரும் கேட்க மாட்டார்கள் என்றும், காங்கிரசு விளையாட்டுப் பிள்ளைகள் கூட்டமாகவும் நடவடிக்கையாகவும் போய்விட்டதென்றும், தான் தலைமை வகிப்பதால் யாதொரு பலனும் ஏற்படாதென்றும் சொல்லி இருக்கிறார். மற்றபடி திரு.காந்தியால் சிபார்சு செய்யப்படும் தலைவர் திரு.ஜவகர்லாலோ மூன்றா வதாக குறைந்த ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அன்றியும் மற்றொரு காங்கிரசிற்கு தலைமை வகித்தவரும், சென்னைக் காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், எல்லா இந்தியத் தலைவர்களில் ஒருவருமான திரு.சீனிவாச அய்யங்காரால் முட்டாள் என்றும், அதிகப் பிரசங்கி என்றும் பட்டம் பெற்றவர். அடுத்தாப்போல மாகாண காங்கிரஸ் மகாநாடுகளைப் பற்றியோ வென்றால், தமிழ்நாடு காங்கிரஸ் மகாநாடு மூன்று வருடங்களாய் கூட்டப்படுகின்றது. இன்னும் முடிந்தபாடில்லை. இந்த வருடம் நடத்துவதிலும் அதற்கு இந்த மாகாணத்தில் தலைவர் கிடைக்கவில்லை. சட்டத்திற்கு விரோதமாக வெளி மாகாணத்திலிருந்து கொண்டுவரப்பட வேண்டியதாகி விட்டதென்றாலும் அதற்கும் ஆள் கிடைக்காமல் திரு.சி.ராஜகோபாலாச்சாரி சூட்சியின் பேரில், திரு.காந்தியின் பிரயத்தனத்தின் பேரில் திரு.பட்டேல் அனுப்பப்பட்டிருக் கின்றார் என்றாலும் அவரும் ஒப்புக் கொள்ளுவதில்லை என்று மறுத்துவிட்ட பிறகு தங்களது சொந்த கௌரவம் போய்விடுமே என்று தனிப்பட்ட முறையில் சிலர் கெஞ்சி கூத்தாடி அழைத்து வந்திருக்கிறார். ஆனால், மகாநாட்டிற்கு மற்ற "தேசியத் தலைவர்கள்" போவதில்லை என்று இப்போதே சொல்லிவிட்டார்கள். அப்படியிருந்தும் தலைவர்கள் வந்தால் தக்க மரியாதை கிடைக்குமே என்று "தேசியத் தொண்டர்கள்" எச்சரிக்கையும் செய்து மிரட்டியிருக்கின்றார்கள். காங்கிரசுக்குத் தலைமை வகிக்க திரு.காந்தியால் பிரேரேபிக்கப்பட்ட திரு.ஜவஹர்லாலின் கொள்கையான பூரண கட்சித் தீர்மானத்தை தமிழ்நாடு தேசிய மகாநாட்டில் யாரும் பிரேரேபிக்கக் கூடாது என்று தலைவர் திரு.படேல் வாக்குத்தத்தம் வாங்கிக் கொண்டு பிறகுதான் வந்திருக்கின்றார். இதனால் திரு.சீனிவாசய்யங்கார் மகாநாட்டுக்கு வருவதில்லை என்று சொல்லிவிட்டார். திரு.வரதராஜுலு ஆதலால் நானும் வருவதில்லை என்று சொல்லிவிட்டார். இந்த நிலைமையில்தான் இன்றைய தமிழ் மாகாணம் இருக்கின்றது. இவ்வளவும்



RangaRakes

நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தும் திரு.காந்தியோ 1929 வருஷம் டிசம்பர் மாதம் 31 ந் தேதி இரவு பன்னிரெண்டு மணி ஒரு நிமிஷத்திற்கு மறுபடியும் ஒத்துழையாமை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லுகின்றார் !!!

எனவே, இந்த விவரங்களுக்கு மேல் தேசியத்தினுடைய, தேசிய இயக்கத்தினுடைய, தேசியத் தலைவர்களுடைய நிலைமை செல்வாக்கு ஆகியவைகளினுடைய யோக்கியதையை அறிய வேண்டுமென்று யாராவது ஆசைப்பட்டால் அவைகளை மறுபடியும் ஒரு முறை எழுதுவோம்.

**குடி அரசு – தலையங்கம் – 01.09.1929**



tamilnavarasam.com

## "சித்தாந்தம்" ஆசிரியரின் கொடுமை

சென்னை மணலி விடுதியில் நடந்த அக்கிரமம் நம் மனத்தைப் புண்படுத்துகின்றது. இவ்விடுதியிலுள்ள ஒரு பார்ப்பனரல்லாத மாணவன் தன்னை அறியாமல் ஒரு பார்ப்பன மாணவன் சாப்பாட்டுப் பேழையை (டிபன் பாக்ஸ்)த் தொட்டுவிட்டான், உடனே பார்ப்பனரல்லாதார் தருமத்திலிருந்து தெண்டச் சோறு சாப்பிடும் அப்பார்ப்பன மாணவனுக்கு கோபம் வந்துவிட்டது. என் சாப்பாட்டைத் தொடவா நேர்ந்தது என்று பலவாறு அரற்றி சாப்பாட்டை கீழே கொட்டிவிட்டு, பிராமண சூப்பரின்டெண்டெண்டிடம் போய் முறை யிட்டான். அவர் பார்ப்பனரல்லாத மாணவனைப் பார்ப்பனச் சாப்பாட்டைத் தொட்ட குற்றத்திற்காக வாயால் வசை புராணம் பாடி அனுப்பிவிட்டார். ஆனால், இது அப்பார்ப்பன மாணவனுக்கு ஒப்பவில்லை. தன் சாப்பாட்டைத் தொட்ட பார்ப்பனரல்லாத மாணவனுக்கு வெறும் வசை புராணம் மட்டுமா என்று ஆத்திரம் அவனுக்கு அடங்காது கிளம்பிவிட்டது. ஆகையால் அப் பார்ப்பன சூப்பரின்டெண்டெண்டுக்கு மேல் அதிகாரியாய் உள்ள "சித்தாந்தம்" ஆசிரியரும் ஒரு வக்கீலுமான திரு "பாலசுப்ரமண்யம்" அவர்களிடம் சென்று முறையிட்டான், முறையிட்டதுதான் தாமதம். நம் பார்ப்பன முதலியாராய திரு.பாலசுப்பிரமணியத்திற்கு பெரும் சீற்றம் உண்டாய்விட்டது. அவருடைய பெருத்த கொழுத்த உடம்பு துடித்தது. "கொண்டுவா பார்ப்பன மாணவனின் சாப்பாட்டுப் பேழையைத் தொட்ட பார்ப்பனரல்லாத மாணவனை" என்றார். பழைய காலத்து அயோத்தி ராமன் காட்டில் தவம் செய்த சூத்திரனை எவ்வாறு கொன்றானோ, அவ்வாறே சித்தாந்தப் பார்ப்பன முதலியாரும் பார்ப்பன மாணவன் சாப்பாட்டைத் தொட்ட பார்ப்பனரல்லாத மாணவனைக் கடிந்து வெருட்டி ஆறு அடி அடித்தாராம். பாவம் ஏழைப் பார்ப்பனரல்லாத மாணவன் என்ன செய்வான்? அடி பொறுத்துக் கொண்டான்; கோர்ட்டிற்குச் சென்று சித்தாந்த ஆசிரியர் மேல் கிரிமினல் வழக்குத் தொடுக்கலா மென்றாலோ, வயிற்று சாப்பாட்டில் இடி விழுந்துவிடும், கையிலோ பணம் இல்லை, ஆகையால் சித்தாந்த ஆசிரியர் தப்பித்துக் கொண்டார். இல்லாமல் போனால் ஒரு கை பார்த்து விடலாம்.

சித்தாந்த ஆசிரியர் பி.ஏ.பி.எல். படித்திருந்தும், தமிழில் பெரிய புலவர் என்று சொல்லிக் கொண்டு இருந்தும் என்ன பயன்? சிறிதாவது



சுயமரியாதையாவது, உணர்ச்சியாவது அன்றி பகுத்தறிவாவது இருந்தால் இவ்வண்ணம் செய்வாரா? ஒரு பார்ப்பனரல்லாத மாணவன் பார்ப்பான் சாப்பாட்டுப் பேழையைத் தொட்டால் என்ன தீட்டு வந்து விட்டது? இதை ஆய்ந்து நோக்கினாரா? சித்தாந்த ஆசிரியர் சரியான பார்ப்பனரல்லாதாராய் இருந்தால் அப்பார்ப்பனரல்லாத மாணவனுக்கு நேர்ந்த அவமானம் தனக்கும் தன் வகுப்பாருக்கும் நேர்ந்ததென்று கருத வேண்டாமா? இத்தகைய சுயமரியாதையற்ற அறிவுகெட்ட பார்ப்பனரல்லா பாலசுப்பிரமணியங்கள் இருந்தால் ஏன் பார்ப்பனர்கள் வருணாச்சிரமக் கொழுப்பு பிடித்தாட மாட்டார்கள்? என்று தான் இவருக்கு சுயமரியாதை உணர்ச்சி உண்டாகுமோ? அன்றுதான் இவரை நாம் அசல் பார்ப்பனரல்லாதார் என்று கருதுவோம்.

இனி மணலி விடுதியில் மட்டுமல்ல. எங்கும் பார்ப்பனரல்லாத மாணவர்கள் இவ்வாறுதான் துன்புறுகின்றார்கள். இவர்கட்கு எப்பொழுதுதான் விடுதலை பிறக்குமோ? நம் சுயமரியாதை அரசாங்கம் வந்தால் விடுதலை! விடுதலை!! என்று திராவிடன் 28. 8. 29 வெளியீட்டிற் கூறப்பட்டுள்ளது.

பார்ப்பனனின் சோற்றைத் தீண்டிய பார்ப்பனரல்லாத மாணவர் இந்நாகரிக காலத்தில் சைவசித்தாந்தப் பேராசிரியர் சட்டதுரந்தரர் திருவிலாப் பாலசுப்பிரமணியத்தின் கசையடிக்கிலக்காயினார். இவரது சித்தாந்தமும், சட்டப்பயிற்சியும், ஒரு மாணவரை இச்செயல் பொருட்டுக் கசைகொண்டடிக் கும் முடிவைப் பற்றியதெனில், அந்தோ, இவரது சைவசித்தாந்தத்திற்கு நாம் மிகவும் இறங்குகின்றோம். மாட்டு மலத்தை உண்டு, மாட்டுச் சிறுநீர் பருகி, மாட்டு மலத்தைச் சாம்பராக்கி அங்கம் முழுதும் பூசி, கொட்டையணிந்து, லிங்கத்திற்குப் பூசை புரியும் இச்சித்தாந்த ஆசிரியரிடம், வயிற்றுக்குச் சோறின்றி இவ்விடுதியில் அபயம் புகுந்த ஒரு மாணவர் மீது, கருணையினையும், நீதியினையும் நாம் எதிர்பார்ப்பது மிகவும் மடமையே. பூணூல் தரித்த பார்ப்பனனிலும், பூணூல் தரியா இப்பார்ப்பனனை நாம் கல்லென்போமா, மரமென்போமா, இரும்பென்போமா, அல்லது காடு வாழ் விலங்கென்போமா? என்னென்போம்? மதவெறிகொண்ட சித்தாந்திகளிடம் நாம் கருணையை எதிர்பார்க்கவில்லை. ஆயின் சட்டம் பயின்ற ஓர் மனிதரிடம், ஆண்பிள்ளை யினிடம், நற்குடும்பத்தில் உதித்தாரிடம் நடுநிலைமையை எதிர்பார்க்கின்றோம். நடுநிலைமையற்று, ஆண் தன்மையற்று தன் பயிற்சியெல்லாம் இரண்டு எழுத்துக்கள் என்னும் முடிவிற்கே ஒப்படைத்துவிட்டதன் பயனாய், பரவிய எண்ணம் அற்று, பார்ப்பனியத்தையும், அதனைப் பாதுகாக்கக் கசை அடியையும் கைக்கொண்ட, 'சித்தாந்தம்' ஆசிரியர் இனியேனும் தம் மூளையில் சிறிது அறிவும், மனதில் கருணையும் பிறக்குமாறு இவர் தன் வழிபடு கடவுளாகிய லிங்கத்தை வணங்கித் துதிப்பாராக. பார்ப்பனரல்லாத ஒரு மாணவர் கசையடியேற்ற ஒரு கொடுமையை ஏனைப் பார்ப்பனரல்லாத மாணவர்கள் கண்டும் வாளாவிருந்திருக்கின்றனர். பொறுமை கடலினும் பெரிதென்பர். ஆயினும் சுயமரியாதை இவ்வண்டத்தினும் பெரிது; சித்தாந்தத்திலும்



RangaRakes tamilnavarasam.com

பன்மடங்கு பெரிது; இவ்வாசிரியர் அறிவிலும் ஒழுக்கத்திலும் ஓராயிரம் மடங்கு பெரிது என்பதை நாம் நம் வகுப்பு மாணவர்கட்கு நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

இக்கொடுமையை எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும், நாம் அமைதியை இழப்போம் என்றஞ்சுவதனால், இதைப் பற்றி விரித்துரை வரையாது விடுக்கின்றோம். பார்ப்பனரல்லாதார்கள் இத்தகைய செயல்களைக் கண்டும், கேட்டும் எத்துணை நாட்கள்தாம் சும்மாவிருக்கப் போகின்றனர் என்று கேட்கின்றோம்.

**( ப - ர். )**

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 01.09.1929**



RangaRakes

# திருவாங்கூரில் கோஷா விலக்கம்

வைதீகச் செருக்கும். பார்ப்பனீயக் கொடுமையும் இராமராச்சிய பரிபாலனமும் தலைவிரித்தாடும் திருவாங்கூரில், முதற்றரப் பார்ப்பனர்களாகிய நம்பூதிரிகளின் பெண்டிர் படுதாவைக் கடந்து வெளியேறி இருக்கின்றனர். படுதா என்பது ஒரு சமூகத்தின் மடமைக்கும் அம் மடமைக்கு அடிப்படையாய் உள்ள மதக் கோட்பாடுகள், சமூகக் கட்டுப்பாடுகள், பழக்க வழக்கங்கள் இவைகளின் அறிகுறியாய் நிலவுகின்றது. ஆடுமாடுகளும் வெளிச் செல்லும் உரிமை பெற்றிருக்கையில் மானுடப் பெண்கள் தம் கொழுநர்தம் வீடுகளில் சிறகிலாப் பறவைகளைப்போல் அடைக்கப்பட்டு வருகின்றனர். இதனைக் கடந்து வெளிச் செல்வதென்றால், மடமையே உருவமாக விளங்கும் ஒரு சமூகத்தில் எளியதோர் செயலன்று. நம் இயக்கத்தின் நற்பயனாக நம் தலைவர் அடிக்கடி அந்நாட்டுக்குச் சென்று சமத்துவக் கொடியை பறக்கச் செய்துவரும் அரும்பெரும் அறிவுரை மாரிகளின் பயனாக நம்பூதிரிப் பெண்களின் சமூகத்தில் சுயேச்சையும், சமத்துவமும் காட்டுத் தீப்போல் பற்றிக் கொண்டது. நம்மியக்கக் கதிரொளியால் அறியாமைப்பனி அக்கணமே அகன்று வருகின்றது. ஏனைப் பெண்டிரும் இதனைத் தமக்கோர் வழி காட்டி என மதித்து முன்வருமாறும், ஆடவர்கள் தடைபுரியினும், அதற்கிடம் கொடாமல் தமது சுயமரியாதையை நிலைநாட்டுமாறும் நாம் மகிழ்வுடன் எதிர்பார்க்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 01.09.1929**



tamilnavarasam.com

# வேதாரண்யத்தில் தேசிய (பார்ப்பனர்) மகாநாடு

## திரு. பட்டேலின் யோக்கியதை

கடந்த மூன்று வருட காலமாக நமது பார்ப்பனர்கள் விடா முயற்சியுடன் பிரயத்தனப்பட்டு வந்த தமிழ் மாகாணத் தேசிய மகாநாடு சென்ற மாதம் 31-ந் தேதி வேதாரண்யம் என்னும் ஓர் கிராமத்தில் கூடிக் கலைந்ததாக பேர் செய்து விளம்பரமும் செய்தாய்விட்டது.

ஆனாலும் அம்மகாநாடு நடைபெற்றதன் யோக்கியதைதான் என்ன என்று பார்ப்போமானால், சுருங்கக் கூறுமிடத்து பார்ப்பனரல்லாதார் பணத்தையே இரண்டு பார்ப்பனத் தலைவர்கள் செலவு செய்து, பார்ப்பன ரல்லாதாருக்கு விரோதமாய் இருவரும் படை திரட்டிக் கொண்டு போய் ஒருவருக்கொருவர் தங்கள் சாமர்த்தியத்தை வெளியாக்கிக் கொண்டதுதான் வேதாரண்ய மகாநாட்டின் தத்துவம் என்று சொல்ல வேண்டும். அதாவது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் திரு.எஸ்.சீனிவாசய்யங்கார் அவர்கள் காங்கிரசின் பேரால் பொதுப் பணத்தை அள்ளிக் கொடுத்துச் சேர்த்து வைத்திருக்கும் படைகளான திருவாளர்கள் பழனியாண்டி பண்டாரம், சாமிநாத செட்டியார், அண்ணாமலை பிள்ளை, சத்தியமூர்த்தி, கிருஷ்ண சாமிப் பாவலர் முதலிய தேசீயத் தொண்டர்களாகிய திரு.அய்யங்கார் படைகள் ஒருபுறமும்; கதரின் பேரால் பார்ப்பனரல்லாதார் கொடுத்தப் பொதுப்பணத் தையே பார்ப்பனர்களுக்கே அள்ளிக் கொடுத்து சேர்த்து வைத்திருக்கும் படைகளான திருவாளர்கள் சந்தானம், என்.எஸ்.வரதாச்சாரி முதலிய 'கதர் தொண்டர்'களான திரு.சி. ராஜகோபாலாச்சாரியாரின் படைகள் ஒருபுறமும் இருந்து போர் செய்து முடிவில் திரு.சி.ராஜகோபாலாச்சாரியார் வெற்றி மாலை சூடி இப்போதிக்கு விஜயமும் செய்து வருகிறார். திரு. அய்யங்காரை விட திரு. ஆச்சாரியார் சூழ்ச்சியில் தேர்ந்தவர் என்பதை அய்யங்கார் தெரிந்திருந்தும் தனது பணத்திமிறினாலும் பேராசையினாலும் ஆணவம் கொண்டு வேதாரண்யத்தில் ஆச்சாரியாரிடம் நல்ல அடிபட்டுத் திரும்பிவிட்டார். இது ஒரு புறமிருக்க, தமிழ்நாடு என்னும் 14 ஜில்லாக்களின் பேரால் மூன்று வருடம் பொறுத்துக் கூட்டப்பட்ட இந்த மாகாண மகாநாட்டிற்குச் சென்றிருந்த பிரதிநிதிகள் எத்துணை பேர்கள் என்று பார்ப்போமானால் சுமார் நூறு பேர்களேதான் இருக்கக்கூடும் என்று தெரிகின்றது. அதாவது பூரண சுயேச்சை தீர்மானம் சம்பந்தமாய் இரண்டு கட்சியிலும் தீவிரப் பிரசாரம் செய்து சேகரித்த ஓட்டுக்களின் எண்ணிக்கை 240 என்பதாக மித்திரன் பத்திரிகையில் தெரிய வருகின்றது. இதில் வரவேற்புக் கழக அங்கத்தினர்களும் ஓட்டு கொடுத்திருப் பதாயும், அவர்களுக்கும் ஓட்டுரிமை அளிக்கப்பட்டதாயும் கண்டிருக்கின்றது. இதில் வரவேற்புக் கழகத்தினர் நூறு கனவான்களுக்கு மேலாகவே இருந்திருக் கிறார்கள். பிறகு தஞ்சை ஜில்லா பிரதிநிதிகள் என்று சுமார் 50, 60 கனவான்க ளுக்கு மேலாகவே அந்த ஜில்லாக்காரர்கள் இருந்திருக்கிறார்கள். இவைபோக. வெளி ஜில்லாக்களில் இருந்து வந்திருந்த பிரதிநிதிகள் சுமார் 70, 80 பேர்களே இருந்திருக்கக் கூடும் என்பதாக நன்கறியலாகும். அந்த 70, 80 பேர்களும் அய்யங்கார் தன் பணமும் காங்கிரசு பணமும் போட்டு டிக்கட் வாங்கிக் கொடுத்து, சாப்பாடும் போட்டு அழைத்துக் கொண்டு போன கூட்டம் முக்கால் பகுதியும் ஆச்சாரியாரால் கதர் பணத்தைச் செலவு செய்து டிக்கட் வாங்கிக் கொடுத்து அழைத்துக் கொண்டு போகப்பட்ட திரு. ஆச்சாரியர் கூட்டம் கால் பகுதியும் சேர்ந்ததாகத்தானிருக்க முடியும்.

ஈதன்றித் தனிப்பட்ட முறையில் மகாநாட்டிற்கு (வேடிக்கை பார்க்க வாவது) தனது சொந்தப் பணத்தைச் செலவு செய்து போயிருந்தவர்கள் சுமார் 5,6 பேர்களாவது இருக்க முடியுமா? என்று தீர்மானிப்பதுகூட கஷ்டமா யிருக்கின்றது. எனவே, இந்தக் கூட்டம்தான் இப்போதைய தமிழ்நாடு தேசிய வாதிகள் கூட்டமென்றும் அதிலும் பூரண சுயேச்சைக் கூட்டமென்றும், ஒத்துழையாதார் கூட்டமென்றும் சொல்லிக் கொள்ளப்படுவதாகும். நிற்க;

காங்கிரசுக்காக உழைக்கவே உடலை விடுவேன் என்று சொல்லும் காங்கிரஸ் பக்தர் திரு.வி.கலியாணசுந்தர முதலியாருடையவும் தேசியத்திற் காகவே உடல், பொருள், ஆவி மூன்றையும் விடுவேன் என்று சொல்லும் "தேசிய வீரரும், தேசியக் கட்சித் தலைவரு"மான திரு.வரதராஜுலு உடையவும் அவர்களைப் பின்பற்றுபவர்கள் (இருந்தால்) அவர்களுடையவும் வாசனையே "மகாநாட்டில்" இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், காஞ்சிபுரம் மகாநாட் டில் மேற்கண்ட இருகனவான்களும் அய்யங்காருக்கும், ஆச்சாரியாருக்கும் நல்ல பிள்ளைகளாக ஒருவருக்கொருவர் போட்டி போட்டு வகுப்புவாரி உரிமைத் தீர்மானத்தை கொண்டுவர வொட்டாமல் செய்த "புண்ணிய காரியத் திற்கு"ப் பிறகு இருகனவான்களையும் எந்த மாகாண மகாநாட்டாரும் மதித்த தாகவாவது இவர்களாக அங்கு போனதாகவாவது தெரியவில்லையாதலால் இவ்விரு கனவான்களைப் பொறுத்தவரை, மாகாண மகாநாட்டைப் பொறுத்த அளவுக்கு அவரவர்கள் "கருமத்தின் பலனை" அவரவர்கள் அடைந்து விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். மகாநாட்டுத் தலைமைக்கு தமிழ் மாகா ணத்தில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற போட்டியில் திருவாளர்கள் சத்திய மூர்த்தியும், வரதராஜுலுவும் ஆகிய இருவர்களும் தாங்கள் தாங்கள் வர வேண்டும் என்று இரு கட்சிகளுக்கும் பல சூட்சி பிரசாரம் செய்தும் கடைசியாக ஒருவரும் வர முடியாமல் போனதோடு வடநாட்டிலிருந்து ஒரு



RangaRakes

tamilnavarasam.com

பொம்மையைக் கொண்டு வந்து ஆட்டிவைத்து, அதன் மூலம் வழக்கம் போல் பார்ப்பனப் பிரசாரம் செய்ய உபயோகப்படுத்திக் கொள்ளப்பட்டது. இது எப்பொழுதும் இந்த மாகாணப் பார்ப்பனர்கள் செய்து கொண்டு வரும் வழிவழிச் சூட்சியேயாகும். அதாவது, தமிழ்நாட்டில் பார்ப்பன சூட்சிகள் வெளியாகி அவர்களுடைய யோக்கியதை குறைந்துவிட்டால் வெளி மாகாணத்தில் இருந்து ஒரு பார்ப்பனரல்லாதாரைக் கூட்டி வந்து அவர் வாய் மூலம் பார்ப்பனப் பிரசாரம் செய்வதாகும். வெளியில் இருந்துவரும் பார்ப்பனரல்லாதாரும் அநேகமாய் பார்ப்பனர் கைக்குழந்தைகளாகவே இருந்து அவர்கள் சொல்லிக் கொடுத்ததை அப்படியே கிராம போன் மிஷின் மாதிரி ஒப்புவித்துவிட்டு அவர்கள் ஆட்டின படி பயாஸ்கோப் மிஷின் போல் ஆடிவிட்டு போய் விடுவது வழக்கம். அதுபோலவே இப்போதும் திரு.பட்டேலைக் கூட்டி வந்து ஆட்டுகின்றார்கள்.

திரு. பட்டேல் பார்ப்பன தாசராய் இருந்து பாடினார், ஆடினார் என்பதற்கு நாம் அதிகமாகக் கஷ்டப்பட்டு ஆதாரம் தேட வேண்டியதில்லை. அவர் வேதாரண்யத்தில் பார்ப்பனரல்லாதாரைப் பற்றிப் பேசி இருக்கும் பேச்சுக்களைப் பார்த்தாலே தெரியவரும். அதாவது, இங்கு 'பிராமண வகுப்புக்கே விரோதமாய்ப் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது. இந்தப் பிரசாரமானது பிராமணர்களைத் தாக்குவதாக மாத்திரமல்லாமல் நம்முடைய ஆரிய நாகரிகத்தில் சிறந்த வற்றையெல்லாம் தாக்குவதாக இருக்கின்றது. பிராமணரல்லாதாரில் ஒரு சிலர் சுயநலத்தினால் அறியாத ஜனங்களைக் குத்திவிட்டு குரோதத்தை உண்டாக்கி உத்தியோக வேட்டையாக இந்த இயக்கத்தை செய்துவிட்டார்கள். கதர் இயக்கத்தின்மேலும் பிராமண இயக்கமென்று தோஷம் கூறப்படுகிறது. மாசற்றவரும் பார்ப்பனீயப் பிற்போக்கில் எதுவும் தம்மிடம் காணப்படாதவரும், பிராமணரல்லாதாருக்கு ஊழியம் செய்யவென்றே தமது ஆயுள்காலம் முழுவதையும் அர்ப்பணம் செய்துவிட்டவருமான ஒரு பிராமணரை (திரு.ராஜகோபாலாச்சாரியாரை) 'சைத்தான் சொரூபம்' என்று ஒரு சாரார் தூஷிக்கின்றார்கள். இது தேசிய தற்கொலையே யாகும். வகுப்பு துவேஷத்தை எதிர்த்து பிரசாரம் செய்வதைக் காட்டிலும் சிறந்த தேசிய வேலை வேறு கிடையாது" என்பதாகும், மற்றும் அவர் தனது முடிவுரையில்,

> "இந்த மாகாணத்தில் சுயராஜ்யக் கட்சியினருக்கு அவர்கள் கோரும் உதவியை செய்துவரும்படி மாறுதல் வேண்டாதவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்"

என்றும், மற்றும் பூரண சுயேச்சைத் தீர்மானத்தை தான் எதிர்த்துப் பேசுகையில்,

> "நான் வைதீக ஒத்துழையாதாராயினும் இந்த மாகாணத்தின் நிலையைக் கவனிக்கும்போது அதிகாரத்தைக் கொடுக்கக் கூடிய எல்லாப் பதவிகளையும் (சுயராஜ்ஜிய கட்சியார்) கைப்பற்றிக் கொள்வது சாத்தியமாகும்படி இங்கு ஒரு தனி வழியைப் பின்பற்ற வேண்டும் என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அதற்கு மாறாக நீங்கள் சொல்வது தற்கொலைக்கு ஒப்பாகும்"

என்றும் சொல்லி இருக்கிறார். பின்பு மிராசுதார் மகாநாட்டில் பேசும்போது,

> "உங்களுடைய அரசியல் பிரசினைகள் எனக்குப் புரியவில்லை. இங்கு பிராமணர் பிராமணரல்லாதார் தகராறுக்கு காரணம் என்னவென்று இன்னும் நான் விசாரித்துக் கொண்டிருக்கிறேன்"

என்று சொல்லி இருக்கிறார். இவைகளிலிருந்து திரு.பட்டேல் கிராமபோன் மிஷினாயிருந்திருக்கின்றாரா இல்லையா? என்பதை யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டுகிறோம்.

முதலாவதாக, இங்கு பிராமணர்களுக்கு விரோதமாக பிரசாரம் செய்யப்பட்டு வருவதாகச் சொல்லி வருவதற்கு திரு.பட்டேல் தனது பிரசங்கத்தில் என்ன ஆதாரம் கூறியிருக்கிறார்? அல்லது என்ன ஆதாரம் கூறக்கூடும்? என்பதை யோசித்தால் இது பார்ப்பனர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு பார்ப்பனரல்லாதார்மீது சுமத்தும் யோசனையற்றதும் அக்கிரமமுமானதுமான வீண் பழி அல்லவா? என்று கேட்கின்றோம். அன்றியும் பார்ப்பனர்கள் மீதுள்ள துவேஷத்தால் ஆரிய நாகரிகத்தில் எது எது சிறந்ததோ அதை எல்லாம் பார்ப்பனரல்லாதார் தாக்குவதாக சொல்லி இருக்கிறார். இதில் எந்த சிறந்த ஆரிய தர்மமானது தாக்கப்படுகிறது என்பதற்கு ஒரு உதாரணத்தையாவது திரு. பட்டேல் எடுத்துக் காட்டியிருக்கிறாரா? அல்லது காட்டக்கூடுமா? திரு.பட்டேல் எதைச் சிறந்த ஆரிய தர்மம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பதும் நமக்கு சிறிதும் விளங்கவில்லை. திரு.ராஜகோபாலாச்சாரியின் பூநூலையும், உச்சிக் குடுமியையும், கொண்டி நாமத்தையும், சிறந்த ஆரிய தர்மமென்று நினைத்துக்கொண்டிருக்கிறாரா? அல்லது புராணங்களையும், இதிகாசங்களையும் மநுதர்ம சாஸ்திரம், பராசர ஸ்மிருதிகளையும் அவற்றினால் ஏற்பட்ட கோயில்களையும் உற்சவங்களையும், பார்ப்பன பூசாரிகளையும், சிறந்த ஆரிய தர்மமென்று நினைத்துக் கொண்டிருக்கிறாரா? அல்லது விக்கிரகங்களையும் அதன் பூஜை உற்சவங்களுக்காக பல கோடி ரூபாய்கள் செலவு செய்யப்படுபவைகளையும் சிறந்த ஆரிய தர்மமென்று கருதிக் கொண்டிருக்கிறாரா? அல்லது வர்ணாச்சிரம தர்மத்தையும், சமஸ்கிருத பாஷை "உயர்வையும்" சிறந்த ஆரிய தர்மம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாரா? என்பது நமக்கு விளங்கவில்லை. திராவிட தேசத்துக்கு வந்த இவருக்கு ஆரிய தர்மத்தைப் பற்றிய பிரசாரத்தில் கவலை எதற்காக ஏற்படவேண்டும்? திராவிட தர்மம் இன்னது என்று இவர் அறிந்தாரா? திராவிடர்களுக்கும் ஆரியர்களுக்கும் உள்ள வேற்றுமை என்ன? ஆரியர்கள் திராவிடர்களை எவ்விதம் மதித்திருக்கிறார்கள், எவ்விதம் நடத்துகிறார்கள் என்பது இவருக்குத் தெரியுமா? ஆரிய பிரசாரம் என்பது அரசியல் தர்மத்துடன் சேர்ந்ததா? பார்ப்பன தர்மத்துடன் சேர்ந்ததா? என்பதையாவது இவர் உணர்ந்தாரா? இந்த நாட்டில் ஏற்பட்டிருக்க வேண்டிய சீர்த்திருத்தங்கட்கு எல்லாம் இதுவரையில் முட்டுக் கட்டையாக



RangaRakes tamilnavarasam.com

இருந்து வந்திருப்பது ஆரிய பிரசாரமா? அல்லது "பார்ப்பனத் துவேஷ" பிரசாரமா? முதலாவது இந்த நாட்டிலுள்ள பார்ப்பனரல்லாதார் யோக்கியதையும், அந்தஸ்தும், இன்னது என்பது இவருக்குத் தெரியுமா? பார்ப்பனர்களில் திருவாளர்கள் சி.ராஜகோபாலாச்சாரி, சீனிவாசய்யங்கார், சந்தானம், சத்திய மூர்த்தி, வரதாச்சாரி, ஏ.ரெங்கசாமி ஐயங்கார், எம்.கே.ஆச்சாரியார் முதலியோர் களுடைய யோக்கியதை திரு.பட்டேலுக்குத் தெரிந்தது சரியாயிருக்குமா? அல்லது திரு.ராமனாதன், திரு.ராமசாமி முதலியோர்களுக்குத் தெரிந்தது சரியாயிருக்குமா? தேசாபிமானம் என்பதும், தேசியமென்பதும் தென்னாட்டுப் பார்ப்பனருக்கும், வடநாட்டுப் பார்ப்பனரல்லாதார்களுக்கு மட்டும் தான் சொந்தமா? அல்லது திரு.பட்டேலுக்குத் தெரிந்த தென்னாட்டுப் பார்ப்பனரல் லாதார் யாருக்கும் சொந்தமாயிருக்க முடியாதா? தென்னாட்டில் வந்து திரு.பட்டேல் பார்ப்பனரல்லாதாரைப்பற்றி பேசுவதற்கு முன்பு, எந்த பார்ப்பனரல்லாதாரிடத்திலாவது பேசி எந்த விஷயத்தையாவது தெரிந்து கொண்டாரா? ஒன்றுமில்லாமல் அங்கிருந்து தடதட என்று வந்தவுடன் மேளத்தையும், தாளத்தையும், பாண்டையும், மாலையையும் பார்த்ததும் திடீரென்று பார்ப்பனர்கள் மகா உத்தமர்கள், பார்ப்பனரல்லாதார்கள் சுயநலக் காரர்கள், துவேஷக்காரர்கள் என்று சொல்லி விடுவதென்றால் இது ஒரு யோக்கியப் பொறுப்புடைய தலைவருக்கு ஏற்றதாகுமா? இவர் சத்தியாக் கிரகமோ, வரிகொடா இயக்கமோ ஆரம்பித்தால் இவரை நம்பி எந்த பார்ப்பன ரல்லாதாராவது பின்பற்ற முடியுமா? தவிர, பார்ப்பனரல்லாதார் இயக்கம் சுயநலக்காரர்கள் செய்யும் உத்தியோக வேட்டை இயக்கமென்று சொல்லி இருக்கிறார். இது யோக்கியமான பேச்சாகுமா? இந்த மாகாணத்தில் பெரும் பான்மையான உத்தியோகத்தில் இருப்பவர்கள் யார் என்றும் பரம்பரையாக உத்தியோக வேட்டையாடிக் கொண்டிருப்பது யார் என்றும் கடுகளவாவது புத்தியையும் நேரத்தையும் செலவு செய்து பார்த்திருப்பாரானால், இம்மாதிரி சொல்லி இருக்க முடியுமா? இதிலிருந்தாவது வடதேசத்திலுள்ள அரசியல் தலைவர்களென்பவர்கள் எவ்வளவு தூரம் புத்தியிலும், பொறுப்பிலும் கட்டையானவர்கள் என்பது விளங்கவில்லையா? அன்றியும், மற்றோர் இடத்தில் இந்த நாட்டின் அரசியல் பிரச்சினை தனக்குப் புரியவில்லை என்றும், இங்கு பிராமணர் பிராமணரல்லாதாருக்கு இடையிலுள்ள தகராறுக்கு மூல காரணம் இன்னதென்று தனக்கு இன்னும் தெரியவில்லை என்றும் சொல்லி இருக்கிறார். அப்படி இருக்கையில் இவர் எப்படி பார்ப்பனரல்லாதாரை உத்தியோக வேட்டைக்காரர்கள் என்று சொல்வதுடன் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்ய வேண்டியது அவசியம் என்று சொல்லக்கூடும்? இதிலிருந்தாவது இவர் வேண்டுமென்றே இந்த நாட்டுக்கு பார்ப்பனர் பேச்சைக் கேட்டுக்கொண்டு பார்ப்பன பிரசாரம் செய்ய வந்தவரே யல்லாமல் வேறல்லவென்பது விளங்கவில்லையா? தவிர, இந்த மாகாணத்தில் சுயராஜ்யக் கட்சியாருக்கு வேண்டிய உதவி எல்லாம் செய்ய வேண்டுமென்றும்,



இந்த மாகாணத்து நிலைமையை பொறுத்தவரையில், அதிகாரம், பதவிகள் ஆகியவைகளையெல்லாம் சுயராஜ்யக் கட்சியாரே கைப்பற்றும்படி ஒரு தனி வழி ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிட்டால் அது தேசத் துரோகம் என்றும் சொல்லி இருப்பது எவ்வளவு தூரம் பார்ப்பனர் மாய்கையில் சிக்கி, அவர்களால் ஊட்டப்பட்டதை அப்படியே கக்கி இருக்கிறார் என்பது வாசகர்களுக்கு விளங்கவில்லையா. இதற்குமுன் திருவாளர்கள் எஸ்.சீனிவாச ஐயங்கார், சத்தியமூர்த்தி, ராஜகோபாலாச்சாரியார் ஆகியவர்கள் சேர்ந்து "ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்"காக மந்திரி பதவியை கைப்பற்றவோ அல்லது ஆதரிக்கவோ வேண்டி இருக்கிறது என்று சொல்லி, ஒரு (பினாமி) மந்திரி சபையை உற்பத்தி செய்து, அதை இவர்கள் சுயநலத்திற்கு ஆட்டி வைத்துக்கொண்டிருந்ததைச் சரி என்று ஒப்புக்கொள்வதோடு, இனியும் அப்படியே செய்யவேண்டும் என்பதற்கு இவர் ஒரு தூண்டு கோலா அல்லவா? வாயில் வைதீக ஒத்துழையாதார் என்று பேர் சொல்லிக் கொண்டு காரியத்தில் சர்க்கார் அதிகாரங்களையும், பதவிகளையும் கைப்பற்ற வேண்டியது அவசியம் என்று சொல்லுகிற ஒத்துழையாதார்கள் திரு.காந்தியுட்பட எவ்வளவு யோக்கியர் களாக இருக்கக்கூடுமென்பதும் ஒத்துழையாமை தோற்றுப் போனதற்குக் காரணமென்ன வென்பதும் தாராளமாக இதிலிருந்து விளங்கவில்லையா என்று கேட்கிறோம். இந்த மாகாணத்தில் சுயராஜ்யக்கட்சி என்பதும் ஜஸ்டிஸ் கட்சி என்பதும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் கட்சியே தவிர வேறல்ல என்று ஆயிரம் தடவை திரு.காந்தியுட்பட வடநாட்டுத் தலைவர்கள் என்பவர்களுக் கெல்லாம் பலமுறை விளக்கப்பட்டிருந்தும், மறுபடியும் சுயராஜ்யக் கட்சிக்காரர்களுக்கு ஒத்துழையாதார்கள் உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பதற்கு உதவி செய்ய வேண்டியது தேசிய தர்மமென்று சொல்லவந்தால், ஒத்துழையாமைக் கட்சியை பார்ப்பனக் கூலிக்கட்சி என்று சொல்லாமல் வேறு என்னவென்றுதான் சொல்லுவது? இவைகளிலிருந்து அரசியலின்பேரால், எந்தக்கட்சி ஏற்பட்டாலும், எந்தக் கனவான் புறப்பட்டாலும், அவை அயோக்கிய கட்சி என்றும், அயோக்கியர்களின் கூட்டமென்றும், இதற்கு முன் சொல்லிக் கொண்டு வந்தவர்களெல்லாம் பெரிய தீர்க்கதரிசிகள் என்றும், அநுபவசாலிகள் என்றும் ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது. முடிவாக, திரு.பட்டேல் அவர்களின் தென்னாட்டு விஜயம் ஆரிய தர்ம பிரசாரமும், சுயராஜ்யகட்சி பிரசாரமும் பார்ப்பன ஆதிக்க பிரசாரமும் ஆகியவைகள் தான் என்பதோடு முடிவுகட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறோம். சென்ற ஆண்டில் திரு.காந்தி தென்னாட்டுக்கு வந்த பிறகு "வர்ணாச் சிரமம்" இருக்க வேண்டும் என்றும், பிறவியிலேயே "பிராமணர்கள்" "சூத்திரர்கள்" உண்டென்றும், மநுதர்ம சாஸ்திரப்படி அவரவர்கள் அவரவர்களுக்கேற்பட்ட வேலையை செய்ய வேண்டுமென்றும், பிரசாரம் செய்துவிட்டுப் போனார். அதற்குப் பிறகு திரு. மாளவியா வந்து, ஜாதி இருக்கவேண்டுமென்றும், கோயிலில் அந்தந்த ஜாதிக்குத் தகுந்த இடம் பிரிக்க வேண்டுமென்றும், சொல்லி "ராமாயண பிரசங்கம்" செய்து விட்டுப்போனார். இப்பொழுது திரு.பட்டேலோ வந்தவர்



RangaRakes tamilnavarasam.com

களையெல்லாம் விட ஒரு அடி முன்னால் வந்து பார்ப்பனரல்லாதார் சுயநலக்காரர்கள் என்றும், அவர்களது கட்சி உத்தியோக வேட்டைக் கட்சி என்றும் சொன்னதோடு, பார்ப்பனர் கட்சியாகிய சுயராஜ்யக்கட்சிக்கு உத்தியோ கங்களும் அதிகாரங்களும் பதவிகளும் கிடைக்கும்படி செய்ய வேண்டியதே தேசிய வேலை என்று சொல்லி ஆரிய தர்ம பிரசாரம் செய்துவிட்டுப் போகிறார். எனவே, எந்தக் காரணத்தை முன்னிட்டும், தென்னாட்டுப் பார்ப்பனரல்லாதார் "சுயராஜ்யம்" "தேசீயம்", "காங்கிரஸ்", "ஒத்துழையாமை" ஆகிய பார்ப்பனீய விஷயங்களில் கலந்து கொள்ளக் கூடாதென்றும், அப்படிக் கலந்து கொள்வது பார்ப்பனரல்லாத சமூக முன்னேற்றத்தின் தற்கொலையும், பார்ப்பனரல்லாத சமூகத் துரோகமும் ஆகுமென்றும்தான் நாம் கூற வேண்டி இருக்கின்றதே தவிர வேறொன்றும் சொல்ல முடியவில்லை.

**குடி அரசு - தலையங்கம் - 08.09.1929**



# கதர் புரட்டு

## இராட்டின் இரகசியம்

கதர் இயக்கம் என்பது பார்ப்பனர்கள் தங்கள் பிழைப்புக்கும் ஆதிக்கத்திற்கும் மோட்சம் என்றும், சுயராஜ்ஜியமென்றும், தேசியம் என்றும் பாமர மக்களை ஏமாற்றி வயிறு வளர்த்து வாழ்ந்து வருவது போலவே, ஏழைகளுக்கு மொத்த உதவி செய்கின்றவர்கள் போல் வேஷம் போட்டுக் கதர் என்னும் பெயரால் பாமரமக்களை ஏமாற்றி வருகின்றதற்கு உபயோகப் படக்கூடியதே தவிர அதனால் உண்மையான பலன் ஒன்றும் கிடைக்காதென்று பலதடவை புள்ளி விவரங்களுடன் எழுதியும் பேசியும், மெய்ப்பித்தும் வந்திருக்கின்றோம். ஆனால் பார்ப்பனரல்லாதார்களிலேயே பலர் நாம் எழுதி வந்ததைச் சரிவர பகுத்தறிவை உபயோகித்துக் கவனித்துப் பார்க்காமல் மேலாக நுனிப் புல்லை மேய்வதுபோல் அலட்சியமாய் இருந்து கொண்டு பார்ப்பனர் களும் அவர்களது பத்திரிகைகளும் சொல்லுவதையே கிளிப்பிள்ளைபோல் திருப்பிச் சொல்லிக் கொண்டு மிக்க பொதுநலக் கவலை இருப்பவர்கள்போல் வேஷம் போட்டு நம்மைக் கண்டித்து வந்தார்கள். இப்பொழுது வேதாரண்யம் மகாநாட்டில் திரு.ராஜகோபாலாச்சாரியார் கதர் கண்காட்சியை திறந்து வைக்கும் போது அவர் செய்த பிரசங்கத்தில் நமது அபிப்பிராயம் முழுதினையும் தாராளமாய் ஒப்புக் கொண்டுவிட்டார். அதாவது "இராட்டினால் கிடைப்பது தினம் ஒரு அணா கூலிதான்" "இதில் கிடைக்கும் வருமானம் சொற்பம்தான்". "ஒரு அணாகூட சம்பாதிக்க முடியாதவர்கள் இந்த வேலை செய்யட்டும்; மேற்கொண்டு சம்பாதிக்கக் கூடியவர்கள் வேறு வேலை செய்யட்டும்; வேறு வேலையில் அதிகக்கூலி கிடைக்கும் வரை இதைச் செய்வோம்" என்று சொல்லி இருக்கின்றார். இதிலிருந்து "இராட்டினமே சுயராஜ்யம் சம்பாதித்துக் கொடுக்கக் கூடியது, அதை தான் எல்லோரும் செய்ய வேண்டியது. சுயராஜ்ஜியத்திற்கு மார்க்கம் ராட்டினம் சுற்ற வேண்டியது என்று சொல்லிக் கொண்டிருந்த "அருள்வாக்கு" இப்போது திரு.ராஜகோபாலாச்சாரியார் சொல்வதிலிருந்தே மருள்வாக்காய் விட்டதை நன்றாய் உணரலாம். தவிரவும், கதர் சம்பந்தமான புள்ளி விபரங்கள் காட்டி அதனால் பொதுஜனங்களுக்கு ஏற்பட்ட நன்மையை எடுத்துச் சொல்லி இருப்பதில் 1928ம் வருஷத்தில் 60 லட்சம் சதுரகெஜம் கதர் துணி உற்பத்தி செய்து சுமார் 25 லட்ச ரூபாய்க்கு விற்பனை செய்திருப்பதாக எடுத்துக்காட்டி மிக்க பெருமை பாராட்டிக் கொண்டிருக்கின்றார்.



RangaRakes tamilnavarasam.com

இதன் யோக்கியதையை சற்று கவனிப்போம். 60 லட்சம் ச. கஜம் 25 லட்ச ரூபாய் ஆனால் ஒரு சதுர கஜத் துணி 0-6-8. ஒரு ச. கஜம் 0-6-8பை. ஆனால் ஒன்றரை கஜ அகலமுள்ள துணி கஜம் ஒன்றுக்கு 0-10-0 அணா ஆகின்றது. எனவே இந்த அறுபது லட்சம் சதுரகஜம் துணிக்குப் பதிலாக இந்தியாவில் இந்தியக் கூலிகளைக் கொண்டு யந்திரத்தில் நூற்கப்பட்ட நூலால் நெய்த மில் துணியை வாங்கினால், கஜம் ஒன்றுக்கு 0-3-4 பை வீதம் கிடைக்கும். அதாவது ஒன்றரை கஜ அகலமுள்ள மில் துணி கதரைவிட நல்ல நைசும் கெட்டியும் உள்ள துணி கஜம் ஒன்றுக்கு 0-5-0 அணாவுக்கு கிடைக்கும். இதற்குக் கிரையம் 12 $^1/_2$ லட்சம் ரூ. தான் ஆகிறது. எனவே, 1928 வருஷம் உற்பத்தி செய்த 60 லட்சம் ச. கஜம் கதர்த் துணியை பொது ஜனங்கள் வாங்கினதின் பயனாய் ஒரு வருடத்தில் பன்னிரண்டரை லட்சம் ரூ. நஷ்மடைந்திருக்கின்றார்கள் என்பதை திரு. ராஜகோபாலாச்சாரியாரும் திரு.காந்தியும் மற்றும் "கதர் தொண்டர்களும் அன்பர்களும்" எந்தக் காரணத்தைக் கொண்டு ஆட்சேபிக்க முடியாது.

ஆனால் அந்த நஷ்டப்பட்ட ரூபாய் ஏழைகளுக்குப் போய் சேர்ந்தது என்று ஒரு சமாதானம் சொல்ல வருவார்கள். அதன் யோக்கியதையையும் சற்று கவனிப்போம். அதை பிரசங்கத்தில் திரு.ராஜகோபாலாச்சாரியார் 1928-ம் வருடத்தில் கதர் நூல் நூற்றதற்கு கூலியாக 98000 பேருக்கு 6 லக்ஷம் ரூபாய் நூற்புக் கூலி கொடுத்ததாக சொல்லி இருக்கின்றார். இதில் நெசவுக் காரர்களைப் பற்றி நாம் கவனிக்க வேண்டியதில்லை. ஏனெனில், நெசவுக் காரர்கள் கதர் நெய்வதால் சரியான கூலி கிடைப்பதில்லை என்றும் மில் நூலினால் அதிகக்கூலிக் கிடைக்கின்றதென்றும் சொல்லுகின்றார்கள். அவர்களுக்கு எப்படியும் வேலை கிடைத்துத்தான் தீரும். ஆதலால் அவர் கள் விஷயத்தை விட்டுவிட்டு நூற்புக்காரர் விஷயத்தைக் கவனிப் போமானால் 98000 அல்லது ஒரு லட்சம் பேர் ஒரு வருடத்திற்கு ஆறு லட்சம் ரூபாய்க் கூலி சம்பாத்தியத்திற்காக அதுவும் தினம் ஒன்றுக்கு ஒரு அணா - ஒரு மணிக்கு ஒரு பைசா வீதம் சம்பாத்தியத்திற்காக பொது ஜனங்களிடமிருந்து அதிகக் கிரயம் 12 $^1/_2$ லட்ச ரூபாயும், இவ்வியக்கத்தை நடத்தப் பொது ஜனங்களின் வசூல் பணம் சுமார் ஒன்றரை லட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 14 லட்ச ரூபாயும் செலவு செய்து, மேல் கொண்டு இந்த தொண்டுக்காக "மகாத்மா" காந்தி "உத்தமப் பிராமணர்" ராஜகோபாலாச்சாரி மற்றும் சர்தார் பட்டேல் முதலிய "மகான்களும்" மாதம் 150, 200, 250 வீதம் "குறைந்ததொகை" வாங்கிக் கொண்டு வேலை செய்யும் பல "உத்தமப் பிராமணர்" கதர் தொண்டர்களும் வருடமெல்லாம் தியாகம் செய்தாக வேண்டியிருக்கிறது என்றால், கதரினால் இந்தியாவுக்கு ஏற்பட்ட லாபம் என்ன என்றுதான் கேட்கின்றோம். மேலும் கதர் இயக்கம் இனியும் சற்று வெற்றி பெற்று இன்னும் ஒரு லட்சம் பேருக்கு இன்னும் ஒரு ஆறு லட்ச ரூபாய் ஒரு வருடத்திற்குக் கிடைக்க வேண்டுமானால், பொது ஜனங்கள் இனியும் மேற்கொண்டு ஒரு 12$^1/_2$ லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டாமா என்றும் கேட்கின்றோம். அன்றியும் நமது கிராமத்துப் பெண்மணி ஒருவர் ஒரு மணிக்கு ஒரு பைசா கூலி கிடைக்கும்படி இரவும் பகலும் வேலை செய்து மொத்தத்தில் வருடத்திற்கு ஆறு ரூ. சம்பாதிக்கும், இயக்கத்தில் ஈடுபட்டிருக்கும் "உத்தமப் பிராமணர்கள்" மாதம் ரூபாய் 250 முதல் 50 ரூபாய் வரையில் குறைந்த சம்பளத்திற்கு ஈடுபட்டிருந்து கொண்டு, நம்மை என்ன கேட்கின்றார்கள் என்றால், "இந்த மணிக்கு ஒரு பைசா கூலியாவது கிடைக்கும்படி வேறு வேலை காட்டு பார்ப்போம்" என்று கேட்கின்றார்கள். அப்படியாவது உண்மையிலேயே இந்தத் தொண்டில் மணிக்கு ஒரு பைசாவாவது கிடைக்கின்றதா என்று பார்ப்போம். நூற்புக்காரர்கள் இந்தக் கதரை வாங்கி கட்டி விட்டார்களேயானால் அவர்கள் கொடுத்த அதிக விலைக்கும் அவர்களுக்குக் கிடைத்த கூலிக்கும் சரியாய் போகின்றது. மற்றும் வீட்டிலுள்ளவர்களுக்கு வாங்கிக் கொடுத்து விட்டால் வேலை செய்த பணமும் போய் மேல் கொண்டும் கையிலிருந்த பணமும் போய் விடுகின்றது. ஆனால் இந்தத் தொண்டில் ஈடுபட்ட "தியாகி களான" உத்தமப் பிராமணர்களுக்கு மாதம் 250 முதல் 50 ரூபாய் வரை மீதியா வதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. எனவே சில "உத்தமப் பிராமணர் களின்" வயிற்றுப் பிழைப்புக்காக எத்தனை ஏழை மக்கள் நஷ்டமடைவது என்று கேட்கின்றோம். ஒருவனிடம் தேச மென்றும், ஏழை என்றும், தர்மம் என்றும் சொல்லி மனதார ஏமாற்றி அடித்துப் பிடுங்கி மற்றொருவனிடம் நன்றாய் வேலை வாங்கிக் கொண்டு அரைக்கூலி கொடுப்பதென்றால், இதில் தேசியமோ, கைத்தொழில் லாபமோ என்ன இருக்கின்றது என்றுதான் கேட்கின் றோம். இதற்காக வேலை வாங்காமல் இந்தக் கூலிகொடுப்பதாயிருந்தால்கூட பொது ஜனங்களுக்கு இவ்வளவு நஷ்டம் உண்டாகாதென்றே சொல்லுவோம். இந்தப் பெரிய தர்ம கைங்கரியத்திற்கு ஆச்சிரமம் வேண்டியதில்லை; மகாத்மாக்கள் வேண்டியதில்லை; உத்தமப் பிராமணத் தொண்டர்களும் வேண்டியதில்லை என்பதோடு இது கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கும் வேலையைவிட மோசமானதா இல்லையா? இந்தக் காரியம் என்றுதான் பொது ஜனங்களை கேட்கின்றோம். ஆகவே கதர் இயக்கமென்பது சிலர் தங்களுக்கு ஆதிக்கமும், சிலர் தங்களுக்கு வயிற்றுப் பிழைப்பும் இருக்கட்டும் என்று கருதிப் பொது ஜனங்கள் பணத்தில் அனுபவிக்கும் ஒரு பதவியே தவிர, அதனால் உண்மையான வருமானமோ, தர்மமோ ஒன்றும் இல்லை என்றும், தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பார்ப்பன ரல்லாதாருக்குத் தொல்லை விளைவிக்கப் பார்ப்பனர்களால் உபயோகப் படுத்தப்படும் ஒரு சாதனமென்றும் தைரியமாய்ச் சொல்லுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 08.09.1929**





RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனப் புதிய தந்திரம்

**உஷார்! உஷார்!!**

பார்ப்பனர்கள் பொது ஜனங்களை ஏமாற்றி தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்காக பொது ஜன நன்மைக்குப் பாடுபடுகின்றவர்கள் போல் வேஷம் போட்டு, பொதுமக்களுக்குப் பயன்படாத அற்ப காரியங்களை பிரமாதப்படுத்திப் பேசி, அதுவே மகா முக்கியமானதென்று நம்பும்படி செய்து, அது தங்களால்தான் முடியுமே தவிர மற்றவர்களால் முடியாதென்றும், கடவுள் தங்களை அதற்காகவே படைத்திருக்கிறாரென்றும் சொல்லிக் கொண்டு, அந்த “பொதுத் தொண்டு” தொழிலையே தங்கள் ஜீவனத்திற்கும் ஆதிக்கத்திற்கும் உபயோகப்படுத்திக்கொண்டு, நகத்தில் சிறிதுகூட அழுக்குப் படாமல் சௌக்கியமாயிருந்து வாழ்ந்து வருவது யாவரும் அறிந்த விஷயமாகும். மேலும், இம்மாதிரியான ஏமாற்றும் பிழைப்பை யாராவது தெரிந்து அதை வெளிப்படுத்தி ஒழிக்க முயற்சி எடுத்துக் கொண்டால் உடனே நமது பார்ப்பனர்கள் அவர்கள் மீது சற்றும் ஈவு இரக்கமில்லாமல் பாய்ந்து கடுமையான பழிகளைச் சுமத்தி அவர்களை இராட்சதரென்றும், நாத்திகரென்றும், தேசத்துரோகி என்றும் சொல்லி, பொதுமக்களிடம் அவர்கள் மீது வெறுப்புண்டாகும்படி செய்து எப்பாடு பட்டாவது அவர்களது செல்வாக்கையும் ஒழித்துத் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளுவது பரம்பரை வழக்கமாக இருந்துவருவதை சுருதி மூலமாகவும் அனுபவ மூலமாகவும் தினமும் பார்த்து வருகின்றோம்.

உதாரணமாக, கடவுளை இன்ன இன்ன மாதிரி இன்ன இன்ன பதார்த்தங்களால் பூஜை செய்தால் இன்ன இன்ன புண்ணியம் என்றும்; ஆனால், அந்தப் பூஜை தங்கள் மூலியமாகத்தான் செய்து தீரவேண்டும் என்றும்; இன்ன இன்ன குளத்தில், நதியில், குளித்தால் புண்ணியம் என்றும்; ஆனால், இந்த குளிப்பும் தங்கள் மூலமாக குளித்தால்தான் புண்ணியம் என்றும்; இறந்தவர்களுக்கு என்று இன்ன இன்னது செய்தால், கொடுத்தால், அவர்களுக்கு மோட்சம் கிடைக்குமென்றும்; ஆனால் அவைகள் முழுவதும் தங்களுக்குச் செய்தால், கொடுத்தால் தான் அந்த மோட்சம் கிடைக்கும் என்றும்; கல்யாணம், பிள்ளைப் பேறு வாழ்வு, நோவு, சாவு ஆகியவைகளுக்கு இன்ன இன்ன சடங்குகள் செய்தால் தான் அவைகள் செல்லுபடியும் பலனும் நன்மையும் உண்டாகும் என்றும்; ஆனால் அவைகள் முழுவதும் தங்களைக் கொண்டு செய்தால் தான் பலிக்குமென்றும் சொல்லி வெகுகாலமாக ஏமாற்றி வருவதுடன், இவற்றையும் ஒன்று பத்து நூறு ஆயிரமாக, அதாவது, ஆயிரக்கணக்கான கடவுள்களும்



ஆயிரக்கணக்கான தீர்த்தங்களும், பல உலகங்களும், சடங்குகளும், பலன்களும், பதவிகளும் கற்பித்து அவைகளை அப்படியே நம்பும்படியும் செய்ய, வேதமென்றும், சுருதி என்றும், சாஸ்திரமென்றும், புராணமென்றும், இதிகாசமென்றும் எழுதி, அவைகளை எழுதியவர்கள் ரிஷிகளென்றும், முனிவர்களென்றும், தேவர்களென்றும், கடவுள்களென்றும் சொல்லியும்; அவைகளை அப்படியே நம்பி பின்பற்றி நடந்து அநேகர் முக்தி பெற்றதாகவும் கதைகள் கட்டி, அப்படி முக்தி பெற்றவர்கள் ஆழ்வார்கள் என்றும், நாயன்மார்கள் என்றும், சிரஞ்சீவிகள் என்றும் சொல்லி, அவற்றிற்கும் கதைகள் எழுதி, இவைகளுக்கு ஆத்மார்த்தம் என்று பெயரும் கொடுத்து பாமரமக்களை நம்பச் செய்து அதன் பேராலும் தங்களுக்கு வரும்படியும் வாழ்வும் ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருப்பதையும், இவைகளையெல்லாம் இன்றைய தினமும் “மகாத்மாக்கள்” உட்பட கோடிக்கணக்கான மக்கள் மூடத்தனமாய் நம்பி அவைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து வருவதோடு அவற்றை பல பார்ப்பனரல்லாதார்களும் பிரசாரம் செய்து வருவதையும் பார்த்து வருகின்றோம்.

ஆத்மார்த்தம், பரலோக சாதனம் என்பவைகளாகிய, அதாவது, நமக்கு பிரத்தியட்சத்தில் தெரியக் கூடாத விஷயங்களில்தான் இந்தப்படி மூடத்தனமாக நாம் ஏமாற்றப்பட்டு வருகின்றோம் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், லௌகீகம் என்பதாக, அதாவது, இந்த உலகத்திலேயே நாம் பிரத்தியட்சமாக அனுபவிப்பது என்பதாக சொல்லிக் கொண்டு ஜோசியம், பேய், பிசாசு, மந்திரம், சூனியம், பிராயச்சித்தம், சாந்தி, ஓமம், இன்னும் பல்வேறுபட்ட எத்தனையோ விஷயங்களைக் கற்பித்து மக்களுக்குப் பேராசையையுண்டாக்கி அவைகள் மூலமாகவும் ஏமாற்றிப் பிழைத்து வருவதையும் பார்த்து வருகின்றோம்.

இவ்வளவும் போதாமல் அரசியல் என்றும், சுயராச்சியம் என்றும், தேசியம் என்றும், ஒத்துழையாமை என்றும், இம்மாதிரி பல அர்த்தமற்ற வார்த்தைகளைச் சொல்லி, அவற்றின் மூலமும் தங்களோடு சில பார்ப்பனரல்லாதார்களையும் சேர்த்துக் கொண்டு, பொதுஜனங்களை ஏமாற்றிப் பிழைத்து வருவதையும் நேரில் பார்த்து வருகின்றோம். இவைகள் தவிர, மேற்கொண்டு இதே கூட்டத்தார்கள் தேச சேவை செய்கின்றோம் என்பதாகச் சொல்லிக் கொண்டு கதர் என்றும், மதுவிலக்கு என்றும், தீண்டாமை ஒழித்தல் என்றும், ஜனங்களுக்குப் பிடித்தமான சில காரியங்களின் பெயர்களைச் சொல்லிக் கொண்டு அதன் மூலமும் பாமர மக்களை தங்கள் வயப்படுத்திக் கொள்வதன் மூலமும் தங்களுக்கு வேண்டிய காரியங்களை நிலை நிறுத்திக் கொள்ளலாம் என்பதாகக் கருதி, புதிய புதிய சூட்சிகள் செய்து கொண்டு வருவதையும் பார்க்கின்றோம். ஆனால், இவ்வளவு புரட்டுகளும், சூட்சிகளும், தந்திரங்களும் சமீபத்தில் நமது நாட்டில் ஏற்பட்ட சுயமரியாதை இயக்கத்தாலும் மற்றும் பல காரணங்களாலும் நமது நாட்டில் ஏற்பட்ட கண்விழிப்பால் ஒருவாறு வெளியாக நேர்ந்துவிட்டதால் இனி இதிலிருந்து சமாளிக்க இப்போது புதிதாக ஒரு தந்திரம் கண்டு பிடித்து அதைக் கொண்டு கரையேறப் பார்க்கின்றார்கள். அதுதான் “நிலத்தீர்வை குறைத்தல்” என்னும் ஒரு பெரும் சூழ்ச்சி! இந்தப் புதிய சூட்சியை



RangaRakes

tamilnavarasam.com

இவ்விடத்துப் பார்ப்பனர்களோ அல்லது அவர்களுடைய வால்களோ கூலிகளோ கைக்கொண்டால் செல்லுபடியாவது முடியாத காரியம் எனத் தீர்மானித்து, இதற்கு வழக்கம்போல் வடநாட்டிலிருந்து ஒரு ஆசாமியைப் பிடித்துக் கொண்டுவந்து அவர் மூலம் பிரசாரம் செய்விக்கக் கருதி, சுற்றுப் பிரயாணமும் செய்கின்றார்கள். அந்த வடநாட்டு ஆசாமி யார் என்றால் அவர் தான் திரு. வல்லவபாய் படேல் என்பவர். இவர் திரு.காந்தியின் அந்தரங்க சபை சிஷ்யர்களில் ஒருவர். திரு.காந்தியைப் போலவே இவரும் சுயராஜ்ஜியத்திற்கு ஒவ்வொரு வருஷ வாய்தா போடுபவர். ஆனால் திரு.காந்தி ராட்டினத்தில் சுயராஜ்யம் என்றால் இவர் நிலத்தீர்வையில் சுயராஜ்யம் என்பவர். ராட்டினத்தில் சுயராஜ்யம் என்பதின் யோக்கியதை நமது நாட்டில் வெளியாகி இப்போது ராட்டினத்திற்கும் ஜீவநாடி அடங்கிவிட்டதால் இனி ராட்டினப் புரட்டால் யாரையும் ஏமாற்ற முடியாது என்று நமது பார்ப்பனர்கள் கருதி, “ராட்டின வீரரை” விட்டுவிட்டு புதிய தந்திரமாகிய நிலவரியில் சுயராஜ்யம் என்கின்ற புரட்டால் நம்மை ஏமாற்ற இப்போது “நிலத்தீர்வை வீரரை” கூட்டி வந்திருக் கின்றார்கள். இந்த நிலத்தீர்வை வீரர் தென்னாட்டில் கால் வைத்தது முதல் ஆரிய தர்மத்தைக் காப்பாற்ற வேண்டிய பிரசாரத்தையும், சுயமரியாதை இயக்கத்தை அழிக்கவேண்டிய பிரசாரத்தையும் பார்ப்பனரல்லாதார் இயக்கத் தைக் குறைகூறும் பிரசாரத்தையும் தான் சென்ற இடமெல்லாம் செய்து வருகின் றார். இதே மாதிரி இவருக்கு முன்னால் வந்த திரு.மாளவியாவும் இதே போல் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தையும், சுயமரியாதை இயக்கத்தையும் நன்றாய் வைதுவிட்டு, ஜாதி இருக்க வேண்டும் என்றும் சொல்லிவிட்டு, ராமாயணப் பிரசாரம் செய்து ராமருக்கு ஜே போடும்படி சொல்லிவிட்டுப் போனார். அதற்கு முன் வந்த திரு.காந்தியோ கதரின் பேரால் பார்ப்பனரல்லாதாரை வைதுவிட்டு, வருணாச்சிரம பிரசாரம் செய்துவிட்டு, வருணாச்சிரமத்தைக் காப்பாற்றும் கீதையை எல்லோரும் படிக்க வேண்டுமென்றும் சொல்லிவிட்டுப் போனார். ஆனால் கடைசியாக வந்த திரு.படேல் முந்தியவர்களையெல்லாம் விட ஒரு படி தாண்டி சுயமரியாதை இயக்கம் அவமரியாதை இயக்கம் என்றும், பார்ப்பன ரல்லாதார் இயக்கம் உத்தியோக வேட்டை இயக்கம் என்றும் சொன்னதோடு, திரு.மாளவியாவைப்போல் ராமாயணப் பிரசாரம் செய்யாமலும், திரு.காந்தியை போல் கீதை பிரசாரம் செய்யாமலும், இவர் ஒரே அடியாய் ஆரிய தர்மப் பிரசார மும், திருவாளர்கள் ராஜகோபாலாச்சாரி, சீனிவாசய்யங்கார், சீனிவாச சாஸ்திரி ஆகியவர்களை பெரியார்கள் என்றும், உத்தமப் பிராமணர்கள் என்றும், பெரிய சீர்திருத்தக்காரர்கள் என்றும், தியாகிகள் என்றும் சொல்லி பார்ப்பனர்கள் பிரசாரமே செய்து வருகிறார். இந்தக் கனவான்களைப் பற்றி தென் இந்தியாவில் ராமநாதபுரத்திலும், வலங்கைமானிலும், சேலத்திலும் பிறந்த இந்தப் பார்ப்பனர் களின் யோக்கியதையை பம்பாய் மாகாணத்திலிருந்து வேதாரண்யத்திற்கு வந்த ஒருவர் அதுவும் தென் இந்திய மக்களுக்கு எடுத்துச் சொல்லுவதென்றால் சொல்லப் புறப்பட்டவரின் புத்திசாலித் தனத்தை கூட்டிக் கொண்டு வந்தவர்கள் தான் மெச்சிக் கொள்ளவேண்டும். இதற்கு எதை ஒப்பிடலாமென்றால் தன் தகப்பன் வீட்டுப் பெருமையைப் பற்றி அண்ணனுக்கு தங்கை எடுத்துச்



சொல்லவருவது எவ்வளவு புத்திசாலித்தனமுடையதோ அதுபோலவே சாஸ்திரிகளையும், அய்யங்கார்களையும், ஆச்சாரியார்களையும் பற்றி திரு.படேல் சொல்வது என்று கூற வேண்டியிருக்கிறது. இதிலும் மற்றொரு விசேஷம் என்னவென்றால், திரு.படேல் “சுயமரியாதையைவிட நிலவரி முக்கியமானது” என்று சொல்லுவதேயாகும். எனவே, இது எவ்வளவு பைத்தியக்காரத்தனமான வாசகம் என்பதை வாசகர்கள்தான் முடிவு செய்து கொள்ள வேண்டும். இந்த மாகாணத்தில் ஆயிரக்கணக்கான பதினாயிரக் கணக்கான ஏக்கர் பூமிகள் வைத்துக் கொண்டு, பதினாயிரக்கணக்காக லட்சக் கணக்காக ரூபாய்கள் நிலவரி கொடுத்துக் கொண்டிருக்கின்றவர்களைவிட திரு.படேல் நிலவரியை பற்றின கஷ்டம் அதிகம் அனுபவிப்பவர்போல் கண்ணீர் விடுகின்றார். ஆனால் அவர் அந்தப்படி எதற்காக கண்ணீர் விடுகின் றார் என்றால், ஒரு வருஷத்திற்கு சுயமரியாதை இயக்கத்தை மூட்டைக் கட்டி ஒரு வீட்டில் போட்டுப் பூட்டி வைத்துவிட வேண்டுமாம். அப்படிச் செய்தால் ஒரு வருஷத்தில் நிலவரி குறைந்துவிடுமாம். பிறகு இதுவே சுயராச்சியமாய் விடுமாம்! என்னே திருபடேலின் புத்திசாலித்தனம்! சாதாரணமாய் நமது நாட்டில் பார்ப்பனர்க்களிக்கும் வரிகளில் பத்தில் ஒரு பங்குகூட இருக்காது நமது நிலவரிக்கொடுமை என்று கோபுரத்தின் மீதிருந்து கூவுவோம். அன்றியும் இந்த பார்ப்பனப் புரட்டிலும், பார்ப்பனக் கொடுமையிலும் பதினாயிரத்தில் ஒரு பங்குகூட இருக்காது இந்த அரசாங்கப் புரட்டும் கொடுமையும் என்று ஆங் காங்கு எழுதி வெற்றி ஸ்தம்பம் நட்டு வைக்க நம்மால் முடியுமென்று உறுதி கூறுவோம். மேலும் இந்தப் பார்ப்பனர்களால் நமக்கு தினமும் ஏற்படும் சுயமரி யாதைக் குறைவுகளில் லட்சத்திலொரு பங்குகூட வெள்ளைக்காரர்களால் நமக்கு சுயமரியாதைக் குறைவு இல்லையென்று தூக்குமேடையிலிருந்து கொண்டும் சொல்லுவோம். வெள்ளைக்கார அரசாட்சியால் வரிப்பளுவும், புரட்டும், கொடுமையும், மரியாதைக் குறைவும் உண்டென்பதை நாம் மறுக்கவில்லையானாலும் இவைகளுக்கும் காரணம் இந்தப் பார்ப்பனர்களின் சுயநலமும் தேசத் துரோகமுமென்றுதான் சொல்லுவோம். என்றாலும், இவைகள் பார்ப்பனர்களால் ஏற்படும் வரிப்பளுவு, புரட்டு, கொடுமை, மரியாதைக் குறைவு, இழிவு ஆகிய இவைகளுக்கு உரை போடக்கூட கட்டாது என்று சொல்லு வோம். எப்படியானாலும் ஒரு மனிதன் அரசாங்கத்திற்கு வரிக்கொடுத்தேயாக வேண்டும். ஆனால், ஒரு சமயம் அரசாங்கம் வசூல் செய்யும் வரி அதிகமென்று சொல்லலாம். ஆனால், அந்த அதிகவரி எப்படி, யாரால் உயர்ந்தது என்பதைக் கவனித்தால் இதே பார்ப்பனர்கள் தங்களுக்கு மீ 1 க்கு 5,500 ரூபாய் சம்பளம் வேண்டும் என்று கேட்டதினால்தான் சர்க்கார் குடியானவர்கள் தலையில் கையைவைத்து நிலவரி முதலியவைகளை உயர்த்தி வசூல் செய்து பார்ப்பனர்களுக்கு அழுது வந்தார்கள். ஆனால், இப்போது அந்தப் பணம் முழுவதும் பார்ப்பனர்கள் கைக்குப் போகாமல் இருக்கும்படியான மார்க்கத்தை பார்ப்பனரல்லாதார் இயக்கம் செய்யப் புறப்பட்ட உடனே, பார்ப்பனர்களுக்கு “நில வரிப் பளுவு” அதிகமாய்ப் போய்விட்டதுடன் பார்ப்பனரல்லாதார் இயக்கம் உத்தியோக வேட்டை இயக்கமாகவும் போய் விட்டது. திருவாளர்கள்



RangaRakes tamilnavarasam.com

வி.கிருஷ்ணசாமி அய்யரும், சிவசாமி அய்யரும், ராஜகோபாலாச்சாரியும், சி.பி.ராமசாமி அய்யரும், வெங்கிட்டராம சாஸ்திரியும், பி.என். சர்மாவும் மாதம் 5,500, 6,500 ரூபாய்கள் வீதமும், பாஷ்யம் அய்யங்காரும், மணி அய்யரும், சதாசிவ அய்யரும், சுந்திரமய்யரும், குமாரசாமி சாஸ்திரியாரும் ஆகிய அய்யர், அய்யங்கார், சாஸ்திரி, சர்மாக் கூட்டங்கள் மாதம் 1-க்கு 4,000, 5,000 ரூபாய்கள் வீதம் வாங்கிக் கொண்டிருந்தபோது இந்த "நில வரிப் பளுவு" எங்கு போயிருந் தது என்று கேட்கின்றோம். அன்றியும், திரு.காந்தியை அராஜகரென்றும், அவரை ஜெயிலில் பிடிக்காவிட்டால் இந்தியா முழுகிப் போய்விடுமென்றும் சொல்லி ஜெயிலில் அடைக்க உதவி செய்து மகாகனம் பட்டம் வாங்கிய திரு.சீனிவாச சாஸ்திரி இந்தப் படேல் கண்களுக்கு உத்தமப்பிராமணராயும், தியாக புருஷராயும் காணப்படுகின்றார்! அன்றியும், திரு.காந்திக்கு மூளை இல்லை என்றும், ஒத்துழையாமை சட்டவிரோதமென்றும், திரு.ஜவகரிலால் முட்டாள், அதிகப்பிரசங்கி என்றும் சொன்ன திரு.சீனிவாசய்யங்கார் இந்த திரு. படேல் கண்களுக்கு உத்தமப்பிராமணராகவும், தியாகப் புருஷராகவும் காணப் படுகின்றார்! கடைசியாக மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லையென்று ஒரு தீர்மானம் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேறியவுடன் தனது மெம்பர் ஸ்தானத்தை ராஜிநாமா கொடுத்ததோடு திருவாளர்கள் சந்தானம், வரதாச்சாரி, டாக்டர் ராஜன் ஆகியவர்களையும் கமிட்டியிலிருந்து ராஜிநாமா செய்யச் செய்ததுடன், இது சரியா என்று திரு. காந்தி கேட்டதற்கு, அது என் சொந்த அபிப்பிராயம் என்று சொன்னவரும், மற்றும் பார்ப்பனரல்லாதாருக்கு........ எவ்வளவோ மோசமாய் நடந்து கொண்டவருமான திரு.ராஜகோபாலாச்சாரியார் திரு.படேல் கண்ணுக்கு உத்தமோத்தம பிராமணராயும், பெரிய தியாகியாயும், பிராமணரல்லாதாருக்கே உழைக்கப் பிறந்தவராயும் காணப்படுகின்றார் என்றால், நமது திரு.படேலின் கண்கள் எவ்வளவு பரிசுத்தமானவை என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும் என்று நாம் கேட்கின்றோம். நிற்க, இப்போது எப்படியாவது நமக்கு ஒரு அரசன் இருந்துதான் ஆக வேண்டும், அவனுக்கு நாம் வரிகொடுத்துத்தான் ஆகவேண்டும் என்பதில் யாருக்கும் ஆட்சேபமிருக்காது. ஆனால், பார்ப்பனீயம் இப்போது நமக்கு அவசியமா? அதற்கு நாம் வரிக்கொடுக்க வேண்டியது அவசியமா என்று திரு.படேலை கேட்கின்றோம். அன்றியும், ஆரிய தர்மத்திலுள்ள ஏதாவது ஒரு புரட்டுக்கும், மனு தர்மத்திலுள்ள ஏதாவது ஒரு புரட்டுக்கும் சமானமாக அரசாங்கப் புரட்டில் எதையாவது சொல்ல முடியுமாவென்றும் திரு.படேலைக் கேட்கின்றோம். மேலும் பார்ப்பான் தன்னை பூதேவன் என்றும், நம்மை அவனது அடிமை, தாசிமகன், சூத்திரன் என்றும் சொல்லுவது போல் எங்காவது அரசாங்கத்தார்கள் சொல்லுகின்றார்களா? அல்லது எழுதிவைத்திருக்கின்றார்களா என்று திரு.படேலைக் கேட்கின்றோம். தவிர, பார்ப்பனர்கள் நமக்கு யாதொரு உபகாரமும் செய்யாமல் நம்மை இழிவு படுத்தி, தங்கள் காலிலும் நம்மைப் பெண்டு பிள்ளைகளுடன் விழச் செய்து நம்மிடம் கொள்ளையும் அடித்து அதனால் நமக்கு யாதொரு பிரயோசனமும் செய்யாமல் இழிவுபடுத்திக் கொண்டு இருப்பதுபோல் அரசாங்கம் நம்மிடம் வரி வசூலிப்பதில் அவ்வளவு கொடுமையாயும் வசூலித்த பணம் அவ்வளவையும் சுயநலமாயும் உபயோகித்துக் கொள்ளுகின்றார்களா என்றும் கேட்கின்றோம். ஆகவே முதலில் நாம் எந்த வரிப்பளுவைக் குறைக்க வேண்டும் என்றும், எந்தப்புரட்டை ஒழிக்க வேண்டும் என்றும், எந்த அவ மரியாதையில் இருந்து மீள வேண்டுமென்றும் திரு.படேலை கேட்கின்றோம்.

கடைசியாக, நமக்கு சுயமரியாதை பெரிதே ஒழிய, மோட்ச ராச்சியம், சுயராச்சியம் ஆகியவைகள் பெரிதல்லவென்றும்; பார்ப்பனப்புரட்டும், பார்ப்பனக் கொடுமையும், பார்ப்பன வரியும் ஒழிய வேண்டியதைவிட அரசாங்கப்புரட்டும், அரசாங்கக் கொடுமையும், அரசாங்க வரியும் ஒழிய வேண்டியது அவ்வளவு அவசரமல்லவென்றும் திரு. படேலுக்கு வெளிப் படையாயும், தைரியமாயும் சொல்லுவதோடு, எந்தக் காரணத்தை முன்னிட்டா வது நிலவரிப் புரட்டை தமிழ்நாட்டிற்குள் கால்வைக்க இடம் கொடுத்துவிடக் கூடாது என்று பார்ப்பனரல்லாத மக்களுக்கு எச்சரிக்கையும் செய்கிறோம். பார்ப்பனீயத்தை ஒழித்து, பார்ப்பனக் கொடுமையிலிருந்து மீண்டு, சுயமரி யாதை பெறுவதற்கு நாம் உயிர், பொருள், ஆவி, தேசம், "தேசியம்", "சுயராச்சியம்", "நிலத்தீர்வை" ஆகிய எதையும் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம். உதாரணமாக இதே அரசாங்கம் நம்மிடம் வந்து " இனியும் அதிகமாக ஏக்கராவுக்கு, பத்து ரூபாய் அதிகவரி கொடுக்கின்றாயா அல்லது பார்ப்பான் காலில் விழுவதைப் பற்றி கவலைப்படாமல் இருக்கின்றாயா" என்று கேட்டால் அதிக வரியாவது கொடுப்போமே ஒழிய, இனி பார்ப்பான் காலில் விழுவதைப் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டோம் என்றுதான் சொல்லுவோம். இதனால் நம்மை யார் என்ன சொன்னாலும் நாம் பயப்படமாட்டோம். எனில், இதற்குப் பெயர்தான் சுயமரியாதையே ஒழிய, பிச்சைக்காரப் பார்ப்பான் காலில் விழுந்து கும்பிட்டு அவனுடைய அழுக்குப் பிடித்த காலைக் கழுவிய தண்ணீரைத் தலையில் தெளித்துக் குடித்து மோட்சத்திற்குப் போவதோ, சுயராச்சியம் பெறுவதோ, நிலவரி குறைவு படுவதோ சுயமரியாதை அல்ல வென்று மறுமுறையும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகின்றோம். ஏனென்றால் உண்மையான சுயமரியாதையை அடைந்தோமானால் சுயராச்சியமும், நில வரிக்குறைவும் தானாக ஏற்பட்டுவிடும் என்கின்ற உறுதி நமக்கு இருக்கின்றது. எனவே திரு.படேல் அவர்கள் நிலவரி குறைவதற்காக சுயமரியாதை இயக்கத்தை கட்டிவைக்கும் படி சொல்லுவது "புருஷனைப் பலி கொடுத்தால் பிள்ளைவரம் கிடைக்கும்" என்கின்ற பழமொழிபோல் இருக்கின்றது. ஆகையால் இந்த நிலவரிப்புரட்டுக்கு யாரும் ஏமாந்து விடக்கூடாது என்றும், இது நமது நாட்டுப் பார்ப்பனர்களுடைய ஒரு புதிய சூட்சி என்றும் சொல்லி மறுபடியும் உஷார்ப் படுத்துகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 15.09.1929**



RangaRakes
tamilnavarasam.com

# ‘சித்தாந்தம்’ ஆசிரியரின் சூன்ய நிலை

மணலி விடுதியில் தருமச் சோறு உண்ணும் ஒரு பார்ப்பனரல்லாத மாணவர் குற்றம் செய்ததாகக் கருதி, அத்தகைய குற்றத்திற்குக் கசை கொண்டு தாக்கிய சைவம் பழுத்த ‘சித்தாந்தம்’ ஆசிரியனார் பாலசுப்ரஹ்மண்யம் “சைவக் குறும்பு” என்னும் தலைப்பொடு தம் அழகிய ‘சித்தாந்தம்’ என்னும் மாசிகையில் ஓர் கட்டுரை வரைந்திருக்கின்றார்.

இவ்வாசிரியனார் மரக்கறி தின்று மகாதேவனைத் தினம் இறைஞ்சி நிற்கும் ஓர் சைவம் பழுத்த திருமேனியுடையார். சீவகாருண்ய வள்ளல். பிறரை தன்வழிப்படுத்த அருனெறியில் தண்டனை புரிவதில் சிறிதும் பின்னடையார். சட்டம் கற்றவர்; பி.ஏ.பி.எல்., பட்டம் பெற்றவர்; மரக்கறி உண்டு உடல் பருத்தவர்; அறச்சாலையை மேல் பார்த்தும், உள்பார்த்தும் வருபவர். இவர் கட்டுரையை ஆராய்வோம்:-

> (1) “ ‘திராவிடன்’ ‘குடி அரசு’ பத்திரிகைகளில் வெளிவரும்...... பொருந்தாமை பொய்மை முதலியவற்றை ஆராய்ந்து நாம் (சித்தாந்தம்) வெளியிடத் தொடங்கிய நாள்தொட்டு நமது பத்திரிகை தமிழ் நாட்டுக்குச் செய்துவரும் பணியைப் போற்றி **நூற்றுக்கணக்கான சந்தாதாரர்கள் நமது பத்திரிகையை வாங்கத் தொடங்கி ஆதர வளித்து வருகின்றனர்**”

என வரைகின்றார்.

ஆராச்சியில் வலிமை மிக்க ஆசிரியர் கூற்றை நாம் மேம்போக்காக நோக்குவது நேர்மையல்ல. எனவே, இதனைத் துருவியே ஆராய்வோம்:-

திராவிடனும், குடிஅரசும், பொருந்தாமையும் பொய்ம்மையும் கூடிய கட்டுரைகளை வெளியிடுகின்றன. இதற்குச் சான்று, இப்பொய்மையின்மையும் பொருந்தாமையின்மையும் தெள்ளத் தெளிய மக்கட்கு விளக்கிக் காட்டும் பேரறிவுறுத்துகின்ற ‘சித்தாந்தம்’ பத்திரிகையை **நூற்றுக்கணக்கான** சந்தாதாரர்கள் வாங்கி ஆதரிக்கின்றார்கள் என்பதே. நாம் வெளியிடும் கட்டுரைகள் மெய்மையைப் பற்றி நிற்கின்றனவாகவே நாம் இற்றைக்கும் கருதுகின்றோம். நமது பொய்யை விளக்கி மெய்யை நிலைநாட்டி அறிவுச் சுடர் கொளுத்தும் ‘சித்தாந்தம்’ பத்திரிகைக்கு எத்தனை சந்தாதாரர்கள் உள்ளனர் என்பதை இவ்வாசிரியர் நமக்கும் பொது சனங்கட்கும் அருள் கூர்ந்து எடுத்துரைத்தல் வேண்டும். செங்கற்பட்டு மகாநாட்டு நிகழ்ச்சியின் பின்னர், இவ்வாசிரியர் கூற்றுப்படி ‘சித்தாந்தம்’ இவ்வாறுமாத காலத்தே குறைந்த தொகையில் 500 சந்தாதாரர்களால் மிகுந்தும் பரவி இயங்குதல் வேண்டும். 500 ஏன்? “தன் பத்திரிகைக்கு ஒரு சிறிய நூறு சந்தாதாரர்களாயினும் சேர்ந்திருக் கின்றனரா என்பதை இவ்வாசிரியர், இவர் நாள்தோறும் வணங்கியேத்தும் மகாதேவன் மீது ஆணையிட்டு மெய்ப்பிக்க முன் வருகின்றனரா” என்று கேட்கின்றோம். மேலும் இப்பத்திரிகைக்கு ஒரு தொள்ளாயிரம் சந்தாதாரரும் மொத்தத்தில் உளரோ? யார் பொய்யர்? பொய்ம்மை இருக்கும் இடமும் மெய்ம்மை இருக்கும் இடமும் இவர் கூறும்விடையில் இனிது புலனாகும்.

> (2) **நாஸ்திகத்தையும் உண்மைச் சைவத்தையும்** பரப்பு வதற்காக ஏனைய உயரிய பத்திரிகைகளோடும் ஆசிரியன் மாரோடும் நாம் ஒத்துழைக்கத் தலைப்பட்ட நாள் முதல்.......... அழுக்காறு உண்டாயிற்று.

நாத்திகத்தையும் உண்மைச் சைவத்தையும் பரப்பும் ஏனைய உயரிய பத்திரிகைகள் யாவை? நாத்திகமும் உண்மைச் சைவமும் ஒன்றே என்று நிலைநாட்ட ‘சித்தாந்தம்’ பேராசிரியர் முன் வந்தமை வியத்தற் பாலதே! இவர் நா, நாவென்று நாத் தடமாறி ‘ஆவை’, ‘நாவாகத்’ தம் பத்திரிகையில் வெளியிட இவர் நாத்திகத் தியானத் தடிப்பு எத்துணை நிறை பெற்று நிற்கின்றது என்பதை இவர் நம்மைத் தூற்றப்புறப்பட்ட கட்டுரையே நன்கெடுத்துக் காட்டுகின்றது. குடியன் மயக்கெய்துவான்; வெறியன் மயக்கெய்துவான்; ‘சைவத்’ திருமேனிகள் இவ்வாறு மயங்கித் திரிவடைதல் ஏனைய உயரிய பத்திரிகைகள் தம் வாசனையின் பலன் போலும்! அற்றன்று; சினம் பொங்கி அதன் வயப்பட்டு நாம் கருத்தழிந்தோம் என்பரேல், இத்தகைய சீர் குலைவை இவரது மகாதேவ வழிபாடு காப்பாற்றவில்லையே என்று நாம் வருந்துகின்றோம். திராவிடனையும், குடியரசையும் ஆராய்ச்சியென்ற ஓர் செயலின் பேரில் படித்துப் பொருமை படைத்துத் தட்டழிந்த இவரை நாம் என்னென்போம்? அழகிய, அரிய அறிவின் வினை முற்றிய ஆராய்ச்சிக்கு நாத்திகத்தையும் உண்மைச் சைவத்தையும் பரப்ப முற்பட்ட இவ்வாசிரியர் குழு இத்தமிணாடு எங்கணும் மலிக!

> (3) “குடி அரசு” “திராவிடன்” பத்திரிகைகளைப் படிப்பதின் பயனாக அவ்விடுதியில் உள்ள பார்ப்பனரல்லாத மாணவர்கள் பார்ப்பன மாணவர்களைப் பெரிதும் உபத்திரவப்படுத்துகின்றார்கள்.

குடியரசும், திராவிடனும் பார்ப்பன மாணவர்கள் மீது பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குப் பகைமை விளைக்கின்றது என்பதாம். இவ்விடுதியிலுள்ள பார்ப்பனரல்லாத மாணவர்கள் எல்லோருமாகவே இத்தகைய பகைமைப் பயன் நம் பத்திரிகைகளைப் படித்துக் காண்கின்றனராம்! இவ்வாசிரியர் சில மாணவர் கள் என்றாயினும் பல மாணவர்கள் என்றாயினும் கூறாது விடுதியிலுள்ள பார்ப்பனரல்லாத மாணவர்கள் (அனைவருமே) என்றார். அவ்விடுதியில்



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனரல்லாத இம்மேற்பார்வையாளரும் பார்ப்பனரல்லாத மாணவர்களும் தாம் பார்ப்பனரல்லாதார். இவ்வகுப்பு மாணவர் அனைவரும் குடியரசுத் திராவிடனால் வேறுபட்டனர் என்பது முழுப் பொய்யாக இருத்தல் வேண்டும். இல்லையேல் நமது பத்திரிகைகளின் சிறப்பை இவர் தன்னறிவின்றியே ஒப்புக் கொள்ளுகின்றார். இவ்விடுதியில் 40 பார்ப்பனரல்லாத மாணவர்கள் இருப்ப ரேல் அவர்கள் அனைவரும் ஒருங்கே குடியரசு திராவிடன் வயப்பட்டனர் எனில் யாம் எய்தும் உவகை அம்மம்ம! மிகப் பெரிதே!! இவ்வுண்மை அறிவுடையவர் யாவர் என்பதை விளக்கிக்காட்டி குடியரசு, திராவிடனின் நற்பணியை நிலைநாட்டிப் போதருகின்றது. பகைமை என்பது தீயதன்றோ எனின்? நாஸ்திகம் பழுத்த சைவப் பேராசிரியர் கண்களில் உரிமை நாடல் பகைமையாகத் தோற்றுகின்றது போலும்!

(4) "பார்ப்பன மாணவர்களையும் பார்ப்பனரல்லாத மாணவர்களையும் நாம் தண்டித்த துண்டு" என்றனர்.

குறும்புகள் செய்தமைக்கு 'டசன்' கணக்கில் பிரம்பு கொண்டிருக்கும் இக்கருணாகரவள்ளல், திருஞான சம்பந்தன் கழுவேற்றிய செயலை நம் மனத்தோற்றத்திற்கு முன் கொண்டு வருகின்றனரே யன்றி பிறிதொன்றில்லை. சமணரையும், உலகையும், நல்வழிப்படுத்த முன்வந்த அஞ் ஞானசம்பந்தனை உபாசனாமூர்த்தியாகக் கொண்ட இவர் மணலி விடுதியில் தம் ஆசிரியரைப் பின்பற்றிச் செல்லத் துணிந்திருக்கின்றார். இதன் கொடுமை விலங்குகளிடத்தும் காண்பதரிது என்று நாம் முன்னரேயே விளக்கிக் கூறியுள்ளோம். எனினும் சித்தாந்தத்தின் போக்கைப்பற்றி மீண்டும் கூர்ந்து நோக்குதல் ஈண்டு கடனாயின்றது.

(5) "இத்தகைய பொய்ப் பிரசாரப் பலனாற்றான் சுயமரியாதைத் தலைவர் பிறந்து வளர்ந்த ஈரோட்டை விட்டு 'தரும மிகு' சென்னையில் தஞ்சம் புகுந்தனர் போலும்! தமிழ் நாடெங்கணும் பேசித் திரிந்தவர் ஒரு மூலையில் உட்கார நேர்ந்தது போலும்!"

என்றனர்.

'தருமமிகு சென்னை' என்னும் பதங்களை எடுத்தாள இவர் நெஞ்சும் துணிவு கொண்டதே; மண்கட்டி ஒன்று சிதைந்தமை கேட்டு மூர்ச்சையடைவான் ஒருவன் எவனோ அவனே சீவகாருண்யம் பழுத்தான் என்று கூறிய சீவகாருண்ய வள்ளல் எச்சிலையும் நுகர அருகராக சித்தாந்த ஆசிரியர் வடலூர் இராமலிங்க சுவாமிகளின் பதப்பிரயோகத்தைக் கொண்டு தம் கட்டுரைக்கு வலிமை ஊட்டத் துணிந்தார். வடலூரார் தன் இளம்பிராயத்தே, மாணவர்கட்குக் கல்வி பயிற்றிய காலத்து அவர்களைச் சிலகால் அடித்தமைப்பற்றிப் பிற்காலத்தே அழுதழுது கண்ணீர் உகுத்திருக்கின்றார். சித்தாந்த ஆசிரியர் தனது தடித்த உடலையும் தடித்த மனதையுங்கொண்டு சிறு பிள்ளைகளை சோற்றுக்குத் தஞ்சம் என்று அடைக்கலம் புகுந்த பிள்ளைகளை, அபயம் கூறாது



கசை கொண்டு தாக்கி 'ஏம' தண்டனை அளிக்கின்றார். மேற்புல்லைக்கடிக்கும் இவரது ஆராய்ச்சியும் மேற்கோளும் இனிதினிதே!

நிற்க, ஈரோடு என்ற பெரும் பட்டினத்தைவிட்டு சுயமரியாதைத் தலைவர் சென்னையெனும் ஓர் மூலையில் ஏன் வந்தார் என்பது கடா. இவர் பூகோள சாத்திரத்தையும் சிறிது பயிலுதல் வேண்டும். இத்தகைய மதியிலார்க்கு மதி கொடுக்கும் பொருட்டே சுயமரியாதைத் தலைவர் தமிழ்நாட்டுத் தலைமைப் பட்டினத்தில் வீற்றிருந்து சுயமரியாதை என்னும் சமரச சன்மார்க்க தனிச் செங்கோல் ஒச்சுகின்றார். வேற்றுமைத் துன்மார்க்க சித்தாந்திகள் நடுக்குறின் நாம் என்ன செய்வோம்?

மேலும் மந்திரிகளும் மதிக்கும் பெருமைத்து நம் பத்திரிகை என்பதை இவர் ஒப்புக்கொள்கின்றார். நாமும் உவக்கின்றோம்.

(6) "மாமிசத்தை உண்டு மந்திரி வழிபாடு செய்யும் சுயமரியாதை வீரர்கள் மரக்கறி உண்டு மகாதேவனை வழிபடும் சைவர்கட்கு (?) இரக்க மில்லை என்பது எள்ளிநகையாடுதற்கே உரியது" என்றார் :–

நகையாடி இவரும் ஓர் திரிபுரம் எரிக்கும் விரிசடைக் கடவுளாயின் ஆகுக. ஆனால் மாமிசத்தை உண்டு மந்திரி வழிபாடு செய்வதும் மரக்கறி உண்டு மகாதேவ பூசை செய்வதும் என்பன பற்றி சிறிது நோக்குவாம். புலால் உணவு மேன்மையைப் பற்றியும், மரக்கறி உணவு மேன்மையைப் பற்றியும், நாம் இக்கட்டுரையில் சீர் தூக்கிப் பார்க்கப் போவதில்லை என்றாலும் இச் 'சித்தாந்தம்' பத்திரிகை வெளியிடப்படும் கடிதங்களை கண்டுபிடித்தவர்; அதற்குரிய மை, அச்சியந்திரம் முதலியவைகளைக் கண்டு பிடித்தவர்; இவருக்கு பி.ஏ.பி.எல். பட்டமளித்தவர் அனைவரும் புலால் உண்டவர்களே! மேலும் ஆகாய விமானம், ஆகாயத் தந்தி, ஆகாய ரயில் முதலியனவும்; உலகத்தில் உள்ள பல அரிய விஞ்ஞான உண்மைகள் பலவும் புலால் உண்பவர் களாலேயே கண்டுபிடிக்கப் பெற்று நிற்கின்றன. சுவாமி விவேகாநந்தர், ராமகிருஷ்ணர் முதலியவர்களெல்லாம் புலால் புசித்திருக்கின்றனர். இவர் வணங்கும் மகாதேவன் புசித்த புலால் மலையனவெனப் புராணங்கள் கூறுகின்றன. எனவே புலால் உண்பது இழுக்கென்பது இவர் வாய்ப்பிறப்பில் அறிவுறுத்தும் தரத்தன்று. பன்றி ஓர் மரக்கறி, மரக்கறியிலும் உயர்ந்ததென்னக் கருதப் பெற்ற கந்த மூலங்கள் உண்டு. உயிர் வாழ்வது. மரக்கறி உண்ணுவதால், புலாலையே புசிக்கும் சிங்கம், புலி முதலிய அழகிய, வீரம் வாய்ந்த, பெருந் தன்மை உள்ள விலங்கினங்களைப் பார்க்கிலும் பன்றி உயர்வுபடுவதின்றே! இப்புலால் புசிக்காத திருவிலாச் சுப்ரஹ்மண்யம் இம்மெய்ம்மையை ஊன்றிச் சிந்திப்பாராக. பன்றியும் திருவிலாச் சுப்ரஹ்மண்யம் போன்ற ஓர் சித்தாந்த சைவப் பெரியார் போலும்! இவரை நாம் உண்மைச் சைவர் என்றே ஒப்புக் கொள்ளவில்லை.

மேலும் இம்மாமிச பிண்டம் மாமிசத்தை உண்ணாமல் மாமிசமே



RangaRakes

tamilnavarasam.com

உணவாய் விலங்குகளிலும் கொடுமையைச் செய்யத் துணியுமேல், புலால் உண்ணாமைக்குச் சிறப்பு உளதேல், அச்சிறப்பு இவர் ஓம்புதலினாலேயே இவர் மட்டில் சீர்குலைகின்றது என்பது திண்ணம். மகாதேவனை வழிபட்டு, நாம் இக்கட்டுரையில் விளக்கிய அளவில் இவர் அறிவிழந்து, ஆராய்ச்சி இழந்து, உண்மை இழந்து, பொறுமை இழந்து நிற்பாராயின், மகாதேவ வழிப்பாட்டினும் மந்திரி (மதியின் மிக்கார்) வழிபாடு பன்மடங்கு சிறப்புடையதன்றே!

மகாதேவனை வழிபட்டு வழிபட்டு சூன்ய நிலையடைந்தாராயின், இனி அறிவுடைமையில் உயர்வு பொருந்திய குடியரசு, திராவிடனின் வளர்ச்சியில் அழுக்காறு கொண்டு குடிவெறியில் புலம்புவது போல் ஓலமிடுவது சித்தாந் தத்தின் சீரிய செயல் போலும்!

நிற்க. இவர் சுயமரியாதை இயக்கம் முக்காற்பங்கு ஒடுங்கிவிட்டது என்று கூறுகின்றார்; எஞ்சிய காற்பங்கையும் துகைக்கக் கங்கணம் புனைய சுற்றம் சேர்க்கின்றார். இச்சுயமரியாதை இயக்கம் சூரியமண்டலத்தை மட்டும் எட்ட வில்லை; இவரது இச்சித்தாந்தப் பேராசிரியரது மதி மண்டலத்தையும் (அறிவு மண்டலம்) எட்டி, அங்கு கேவல இருளே காணப்படுவதால் அம்மண்டலத் தையும் துளைத்துச் சென்று அங்கும் அறிவுச்சுடர் கொளுத்துகின்றது! கொளுத்துகின்றது!! கொளுத்துகின்றது!!! அக்கொளுத்துதலில் இவர் அறியாமையும், போலிச் சைவமும் ‘பிரப்பம் பழம்’ பூசையால் இவர் ஆற்றும் மகாலிங்க வழிபாடும் கடிதில் அழியும்! அழியும்!! அழியும்!!!

இவர் கட்டுரையின் பொருந்தாக் கூற்றை அறிவிலாக் கூற்றை நாம் மேற்கொண்டும் விளக்க விரிவஞ்சி விடுக்கின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 15.09.1929**



# சுயமரியாதைத் திருமணங்கள்

சமீப காலத்தில் எங்கும் சுயமரியாதைத் திருமணங்கள் நூற்றுக்கணக் காய் நடந்ததாக செய்திகள் வந்து கொண்டிருப்பதைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சி யடைகின்றோம். அவைகளைப் பூரணமாய்ப் பிரசுரிக்கமுடியா மைக்கும் வருந்துவதுடன் அனேக திருமணங்களுக்குப் போகமுடியாமைக் கும் விசனிக்கின்றோம். ஒவ்வொரு திருமணத்திற்கும் நம்மை அழைத்த தற்காக நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருந்தாலும் அவ்வளவுக்கும் நம்மால் போகக்கூடியது சாத்தியமின்மையால், வராமைக்கு மன்னிக்கும்படி யும் கேட்டுக்கொள்ளுகின்றோம். இவ்வியக்கம் தோன்றிய இவ்வளவு சீக்கிரத்தில் பார்ப்பனர்களை நீக்கிய திருமணங்களும், மூடச்சடங்கை நீக்கிய செய்கைகளும் சந்தோஷமடையத்தக்க அளவு நடந்து வந்தாலும், விதவா விவாகம், கலப்பு மணம் முதலியவைகள் நாம் எதிர்பார்த்த அளவுக்கு 100 ற்கு 1 - பங்கு கூட நடத்தப்பட்டதாய் சொல்வதற்கில்லை. ஆதலால், நமது நண்பர்கள் ஆங்காங்கு முயற்சித்து விதவைகளுக்கு மணம் செய்விக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டிக்கொள்ளுகின்றோம். மணமக்களுக்கு உத்தியோகங்கள் சம்பாதித்துக்கொடுக்கக் கூட பல நண்பர்கள் முன்வந்தி ருக்கின்றார்கள். சுயமரியாதைத் தொண்டார்கள் இந்தாண்டில் சற்று கவலை செலுத்த விரும்புகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 15.09.1929**



RangaRakes

tamilnavarasam.com

## ஐய வினாவுக்கு விடை

### மோட்சம், நரகம் என்பன யாவை?

ஸ்ரீரெங்கநாதபுரம் அ.வெ.சுப்பையா அவர்கள் மோட்சம் நரகங்களைப் பற்றிக் கூறுவதின் உண்மையை அறிய விரும்புகின்றார். மோட்சம் என்பது இன்ப வீடும், நரகம் என்பது துன்ப வீடுமாம். இவைகளை இவ்வுலகத்தில் இவ்வாழ்க்கையில் நாம் என்றும் அநுபவிக்கின்றோம். இதற்கு மாறுபாடாக எங்காயினும் மோட்சம் நரகம் உளவோயின், அவைகளை அநுபவிக்க விரும்புபவர்கட்கும் நமக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. நாளை கிரகம் என்று ஒன்றுள்ளது என்று ஒரு நூலில் நாம் காண்போமாயின், அது எங்குள்ளது என்று தேடப் புறப்படுவது, கிரகம் என்ற ஒன்றை புகுத்திய அறிவிலாச் செயலிலும் தேடப்புறப்படுவோர் செயல்மிக்க அறிவிலாததாகும்.

( ப-ர்.)

குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 15.09.1929



RangaRakes

## நெல்லூர் மகாநாடு

தென் இந்திய நல உரிமைச் சங்க, அதாவது ஜஸ்டிஸ் கட்சி மாகாண மகாநாடு அடுத்த மாதம் முதல் வாரத்தில் (அக்டோபர் மாதம் 5,6 தேதிகளில் சனி, ஞாயிறு கிழமைகளில்) நெல்லூரில் நடத்தப்படப்போகின்றது. இம்மகா நாடானது 1927-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் மதுரையில் கூட்டப்பட்ட பிறகும், அதே வருஷம் மத்தியில் கோயமுத்தூரில் விசேஷ மகாநாடாகக் கூட்டப்பட்ட பிறகும், சுமார் இரண்டு வருஷம் கழித்து இப்போது கூட்டப்படுகின்ற தென்றாலும், இவ்வியக்கத்தலைவர் திரு.பனகல் அரசர் காலமாகி சுமார் 9 மாதத்திற்குப் பிறகு தலைவர் தேர்தலையே முக்கியக் காரியமாய்க் கொண்டு கூட்டப்படுகின்றதாகும். தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்னும் ஜஸ்டிஸ் இயக்கமானது ஆதியில் மக்களின் எல்லா சமூக சமத்துவத்தையும், சம உரிமையையும் சம சந்தர்ப்பத்தையும் அடிப்படையாகக் கொண்டு துவக்கப்பட்டது என்பது யாவருக்கும் தெரியும். எனினும் இவ்வியக்கம் வெற்றி பெற்றால் இந்தியாவில் சமூகத்துறையிலும், அரசியல் துறையிலும் உயர்வு பெற்று ஏகபோக ஆதிக்கம் செலுத்தி வரும் பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஆபத்து வந்து விடுமே என்ற ஆத்திரத்தால் பார்ப்பனர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இவ்வியக்கத்தின் கொள்கைகளை திரித்துக் கூறி, இவ்வியக்கத்தினிடம் பாமர மக்களுக்கு துவேஷமும் வெறுப்பும் உண்டாகும்படி செய்து இவ்வியக்கத் தலைவர்களுக்கும் பலவித தீங்குகள் செய்து மிக்கத் தொல்லை விளைவித்து வந்தார்கள்; வருகிறார்கள். ஆன போதிலும் இவ்வியக்கத் தலைவர்கள் எதற்கும் பயப்படாமல் உறுதியுடன் நின்று இயக்கத்தை அழியவிடாமல் காப்பாற்றி வந்ததுடன் அதன் மூலம் மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியையும் ஊட்டிவந்தார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வியக்கம் வெறும் அரசாங்க உத்தியோகத்தை மாத்திரம் கைப்பற்றுவதற்காக ஏற்பட்ட உத்தியோக வேட்டை இயக்கம் என்றும். தேசத் துரோக இயக்கம் என்றும், சர்க்கார் தாசர்கள் இயக்கம் என்றும் எவ்வளவோ தூற்றப்பட்டும் தென்னிந்தியாவிலுள்ள பாமர மக்களினுடையவும் மற்றும் பொது ஜனங்களுடையவும் செல்வாக்கையும் மதிப்பையும் பின்பற்றுதலையும் பெற்று விளங்கி வருகின்றது. இதற்கு உதாரணம் வேண்டுமானால் தென்னாட்டில் சட்டசபை மந்திரிகள் முதல் ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர்கள் தலைவர்கள் ஆகியவர்களும், கிராம பஞ்சாயத்து கூட்டுறவு முதலிய சாதாரண ஸ்தாபனங்களும் இவ்வியக்கம் ஏற்படுத்தப் படுவதற்கு முன் எல்லாம் பார்ப்பன மயமாகவே இருந்ததானது, இப்போது



tamilnavarasam.com

இவ்வியக்கத்திற்குப் பிறகு பார்ப்பனரல்லாதார்கள் அதாவது மகமதியர்கள் கிறிஸ்துவர்கள் ஆதிதிராவிடர்கள் ஆகிய எல்லோரும் அவரவர்கள் ஜனத் தொகை விகிதாச்சாரப்படிக்கு இல்லையானாலும் சற்றேறக் குறையவாவது பங்கு பெற்று ஆதிக்கம் பெற்றிருப்பதே போதுமானதாகும். இதிலிருந்து அரசாங்க தயவிலேயே இந்த இயக்கம் இருப்பதாக நமது எதிரிகள் சொல்லுவது எவ்வளவு புரட்டு என்பது இனிது விளங்கும்.

எப்படியெனில், அரசாங்கத் தயவால் அரசாங்க உத்தியோகம் மாத்திரம் தான் கிடைக்குமே ஒழிய தேர்தலில் பொது ஜன ஓட்டுக்கள் பெற்று அடையும் படியான பதவிகள் பெற ஒருக்காலமும் முடியவே முடியாது. அன்றியும் இவைகள் தாராளமான பொதுஜன ஆதரவும் அனுதாபமும் இருந்தால் தான் கிடைக்கும். எனவே இவ்வியக்கம் இப்படிப்பட்ட பொதுஜன தேர்தல் ஸ்தாபனங்களைப் பெற்று அந்த ஸ்தாபனங்களையெல்லாம் கைப்பற்றி இருப்பதிலிருந்தே பொது ஜன ஆதரவு முழுவதும் இவ்வியக்கத்திற்கு இருப்பது தானாக விளங்கும். ஆகவே ஜஸ்டிஸ் இயக்கம் அதன் எதிரிகள் சொல்வதுபோல் சர்க்கார் தாசர் இயக்கமாயிருந்தால் இவ்வித பொதுஜன ஆதரவு கிடைத்திருக்குமா என்பதையும் இவ்வளவு பொது ஸ்தாபனங்களைக் கைப்பற்றி இருக்குமா என்பதையும் யோசித்தால் அறிவாளிகளும் யோக்கியர் களும் இதை சர்க்கார் தாசர் இயக்கம் என்று சொல்ல ஒரு போதும் முன் வரமாட்டார்கள். சென்னை மாகாணத்து 25 ஜில்லா போர்டுகளில் உள்ள 25 ஜில்லா போர்டு பிரசிடெண்டுகளும் இது சமயம் பார்ப்பனரல்லாதார் களாகவே இருக்கின்றார்கள். நூற்றுக்குத்தொண்ணூறு தாலூக்கா போர்டு பிரசிடெண்டு களும் நூற்றுக்குத் தொண்ணூறு முனிசிபல் சேர்மென்களும் நூற்றுக்குத் தொண்ணூறு மேல் கண்ட ஸ்தாபன அங்கத்தினர்களும் பார்ப்பனரல் லார்களாகவே இருக்கின்றார்கள்.

பார்ப்பனரல்லாதார் என்பதிலும் இவ்வியக்கத்தின் கொள்கைப்படி இந்துக்கள், கிறிஸ்துவர்கள், முகமதியர்கள் ஆதிதிராவிடர்கள், ஐரோப்பியர்கள் ஆகிய எல்லா மதவகுப்புப் பிரிவுகளும் சற்று ஏறக்குறைய எல்லாவற்றிலும் பிரதிநிதித்துவம் பெற்றும் இருக்கின்றார்கள். இவ்வியக்கத்திற்குப் பிறகு ஆதிதிராவிடர்களும் மற்றும் பிற்பட்ட வகுப்பார்களும் குறிப்பிடத் தகுந்த அளவு அரசியலிலும் சமுதாயத்திலும் முன் வந்திருப்பதையும் யாராலும் மறுக்க முடியாது. மற்றும் இவ்வியக்கம் தோன்றி பார்ப்பனரல்லாத மக்களைத் தட்டி எழுப்பி அவர்களது சுயமரியாதை உணர்ச்சியை கிளப்பிவிட்டிருக்காதிருந் தால், சமத்துவத்திற்கும் முன்னேற்றத்திற்கும் மக்களை ஊக்கப்படுத்தாமல் இருந்தால், இன்றைய தினம் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜிகளில் நான்கு கனவான்களும் சென்னை சர்க்கார் நிர்வாக சபையில் இரண்டு கனவான்களும், மந்திரிகளில் இரண்டு கனவான்களும், ரெவினியூ போர்ட் மெம்பர்களில் ஒரு கனவானும் இடம் பெற்று இருக்க முடியுமா என்பதை யோசித்தால் இவ்வியக்கத் தின் பலன் இனிது விளங்கும். மேலும் இவ்வியக்கமானது சர்க்காரிடம் அரசியல் சுதந்திரம் கேட்பதிலும் அதன் மூலம் கிடைத்ததைப் பெற்று, அரசாங்கத்திற்கும்



நாட்டிற்கும் திருப்தி உண்டாகும்படி அவைகளை நடத்திக்காட்டி மேற் கொண்டும் சுதந்திரம் கேட்பதிலும் இந்தியாவில் வேறு எந்த மாகாணத்திற்கும் சமூகத்திற்கும், இயக்கத்திற்கும் இவ்வியக்கம் எந்த விதத்திலும் பிற்பட்ட தல்லவென்றே சொல்லுவோம். மற்றும் வெள்ளைக்கார அரசாங்க மேற்பட்டு 150 வருஷ காலத்தில் நமது பார்ப்பனரல்லாத மக்களில் எவ்வளவு பேர் படித்திருந்தார்களோ அந்த எண்ணிக்கையை ஒரு பத்து வருஷத்தில் நமது இயக்கம் இரட்டிப்பாக்கி இருக்கின்றது. பெண்கள் விஷயத்திலும் அது போலவே கல்வி விஷயத்தில் பன்மடங்கு அதிகமாக்கி இருக்கின்றது. இவைகள் மற்றெல்லாவற்றையும் விட முக்கியமானதாகும். இவ்வியக்கமானது ஏற்பட்டு 10 வருஷ காலத்திற்குள் இவ்வளவு பலனையும் சகலத் துறைகளிலும் முன்னேற்றத்தையும் கொடுத்து எவ்விதத்திலும் அசைக்க முடியாமல் மேற் போய்க் கொண்டிருப்பதற்கு எவ்வளவோ காரணங்கள் இருந்தாலும் மற்ற காரணங்கள் எல்லாவற்றையும் விட ஒரே ஒரு காரணம் தான் மிகமிக முக்கிய மானதாகும் என்போம். அதென்னவெனில் இவ்வியக்கம் தோற்றுவிக்கப்பட்ட காலம் முதல் இதுவரை பார்ப்பனர்களை இவ்வியக்கத்தில் சேர விடாமல் வெகு ஜாக்கிரதையாக கவனித்துப் பாதுகாத்துக் கொண்டு வந்ததும் பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று இவ்வியக்க விதிகளில் ஒரு விதியை முக்கிய விதியாக ஏற்படுத்திக் கொண்டிருப்பதுமேயாகும். இவ்வியக்கம் தோற்றுவித்த தலைவர்களை இவ்வியக்க சம்பந்தமாக எதற்காகப் போற்ற வேண்டுமென் றால் இவ்வியக்கம் ஆரம்பித்தபோதே பார்ப்பனர்களை இதில் சேர்க்கக் கூடா தென்று கருதியதற்கும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் சேர்த்துக் கொள்ளா திருக்கும்படி சட்டம் செய்ததற்கும் தான் முக்கியமாய் போற்றிப் பாராட்ட வேண்டும். இப்படிப்பட்ட அருமையான ஒரு காரியம் இப்போது சில தலை வர்கள் என்பவர்களால் மாற்றப்படப் போவதாகத் தெரிய வருவதைக் கண்டு நாம் மிகவும் வருந்துகின்றோம்.

இவ்வளவு காலம் இவ்வளவு எதிர்ப்பையும் சமாளித்து நிலைத்து இவ்வளவு உச்ச ஸ்தானம் பெற்று முற்போக்கடைந்து வரும் இவ்வியக்கத்திற்கு இப்போது பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டிய அவசியம் என்ன வந்தது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்தத் தலைவர்கள் என்பவர்கள் வேறு எந்தக் காரணத்தைக் கொண்டு பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதாக சொல்ல வந்தாலும், பார்ப்பனர்களை தென் இந்திய நல உரிமைச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளுவது என்கின்ற முடிவுக்கு வந்தால் அன்றே இந்த இயக்கம் தோல்வி அடைந்துவிட்டது. செத்து போய் விட்டது என்பதை மாத்திரம் ஒவ்வொருவரும் கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நமது நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களுக்கு இப்போது இந்த மகாநாட்டில் தலைவர் யார் என்பதைப் பற்றிய கவலை சிறிதும் வேண்டிய தில்லை என்பதே நமது அபிப்பிராயம், ஏனெனில் எந்தத் தலைவர் வந்தாலும் பொது ஜனங்களை மீறி அவர்கள் இஷ்டத்திற்கு விரோதமாய் ஒன்றையும் செய்து விடமுடியாது. ஆதலால் அதைப் பற்றி அதிகக் கவலைப்பட



RangaRakes tamilnavarasam.com

வேண்டியதில்லை.

ஆனால், பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ளுவது என்கின்ற விஷயம் நிறைவேறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் மிகவும் முக்கியமான தாகும். இந்த ஆபத்தான பிரச்சனை வருகின்ற முக்கியமான காலத்தில் இம்மகாநாடு தெலுங்கு நாட்டில் கூடுவது நமக்கு மிக்க பலவீனமென்றே தோன்றுகின்றது. ஏனெனில் தெலுங்கு நாட்டு மக்களுக்கு இவ்விஷயம் அவ்வளவு தூரம் கவலைப்படத்தக்கதாக இல்லை. அவர்களுக்கு இன்னும் சரியானபடி பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்கின்ற விஷயம் அர்த்தமான தாகவே சொல்வதற்கில்லை. இதற்கு முக்கிய உதாரணம் என்னவென்றால். ஆந்திரதேசத்தில் இன்னும் காங்கிரசுக்கு மதிப்பும் ஆதரவும் இருப்பதேயாகும். காலம் சென்ற தலைவர் பனகல் அரசர் மதுரை மகாநாட்டில் பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் கொண்டு வந்ததும் கோயம் புத்தூர் மகாநாட்டில் பார்ப்பனரல்லாதார் காங்கிரசில் சேரவேண்டும் என்கின்ற தீர்மானம் கொண்டு வந்ததும் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் விஷயத்தின் உண்மைத் தத்துவத்தை உணராததேயாகும். காரணம், என்னவெனில், மத சம்பந்தமான வலையில் சிக்கியிருந்ததுடன் புராணங்களிலும், மூடப்பழக்க வழக்கம் ஆகியவைகளிலும் அவருக்கு குருட்டு நம்பிக்கை இருந்து வந்ததேயாகும். அன்றியும் அவர் தன்னை க்ஷத்திரியர் என்று நம்பிக் கொண்டிருந்தவர்! ஆனால் அவர் சுயமரியாதை இயக்கத்தின் தத்துவத்தை உணர்ந்த பிறகும் பார்ப்பனரல்லாத வாலிபர் இயக்கத்தின் தத்துவத்தை உணர்ந்த பிறகுமேதான் பார்ப்பன பார்ப்பனரல்லாத வித்தியாசத்தையும் அறிந்ததுடன் பார்ப்பனர்களை இவ்வியக்கத்தில் ஏன் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பதற்கு தக்க காரணங்கள் இருப்பதையும் ஒருவாறு உணர்ந்தார். ஆந்திர தேசத்து பார்ப்பனரல்லாதார்கள் இனியும் மதசம்பந்தமான புராணங் களிலும் குருட்டு நம்பிக்கைகளிலும் ஈடுபட்டவர்களாவார்கள். எவ்வளவுக் கெவ்வளவு குருட்டு நம்பிக்கையிலும் புளுகுப் புராணங்களிலும் ஈடுபட்டிருக் கின்றார்களோ; அவ்வளவுக் கவ்வளவு அவர்களை மேதாவிகள் என்றும் பெரியவர்கள் என்றும் நினைத்துக் கொண்டிருப்பவர்கள் மதசம்பந்தமாய் எப்படி அவர்கள் குருட்டு நம்பிக்கையில் ஈடுபட்டு பார்ப்பனர்களையும் அவர்களது கட்டுப்பாடான சூட்சி இயக்கங்களையும் வழிகாட்டியாகவும் ஆதாரங்களாகவும் கொண்டு பின்பற்றுகின்றார்களோ; அதேபோல் அரசியல் விஷயத்திலும் குருட்டு நம்பிக்கை உடையவர்களாகி அவர்களது கட்டுப் பாடான கொள்கைகளிலும் சூழ்ச்சி இயக்கங்களிலும் நம்பிக்கை வைத்து அவர்களை வழிகாட்டியாக ஏற்றுக் கண்மூடித்தனமாகப் பின்பற்றி வருகின்றார் கள். எனவே மூடநம்பிக்கைகளிலிருந்தும், கண்மூடி பின்பற்றும் குருட்டு நடவடிக்கைகளிலிருந்தும் என்று ஆந்திர தேசத்தார்கள் விடுதலை பெறுகின் றார்களோ அன்றுதான் அவர்கள் பார்ப்பனர் களின் மதப்புரட்டுகளிலிருந்தும் அரசியல் புரட்டுகளிலிருந்தும் விடுதலைய டையமுடியும். ஆதலால் அது



வரையில் நாம் எந்த வகையிலும் ஆந்திர தேசத்தார்களை பின்பற்றுவது மறுபடியும் குழியில் போய்விழுவதையே ஒக்கும்.

பத்துப் பன்னிரண்டு வருஷமாக எவ்வளவோ ஆபத்துக்களினிடை யிலும் தொல்லைகளினிடையிலும் காப்பாற்றப்பட்ட இந்த அருமையானதும், ஒப்பற்றதானதும் இன்றியமையாததானதுமான இயக்கத்தை நெல்லூரில் சாவடிக்காமல் காப்பாற்றவேண்டியது தமிழ்நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களின் முக்கிய கடமையாகும். இந்த பத்து வருஷகாலமாய் இவ்வியக்கத்தை தோற்றுவித்து அதிலேயே இரவும் பகலும் உழைத்து வந்த ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களைவிட இந்த நான்கைந்து வருஷமாக இவ்வியக்கத்தில் மேல் மினுக்கியாய் கலந்து கொண்டிருக்கும் ஒருவருக்கு எப்படி அதிகமாகத் தெரியக் கூடும் என்றும் எப்படி உபதேசம் செய்ய யோக்கியதை உண்டாகும் என்றும் சில நண்பர் நம்மை கேள்வி கேட்கலாம். அது சரியான கேள்வியேயாகும்.

ஆனாலும், அதைப் பற்றி நாம் இங்கு அதிகம் விவரிக்கும் வேலையில் ஈடுபடாமல் நமக்குச் சிறிதளவாவது பாத்தியமுண்டு என்று பொதுவாக சொல்லிக் கொள்வதுடன், எந்தக்காரணத்தை முன்னிட்டும் பார்ப்பனர்களை இவ்வியக்கத்தில் சேர்த்தால் இவ்வியக்கம் அன்றே தேன் கூட்டில் நெருப்பு வைக்கப்பட்டதுபோல் இயக்கம் செத்து பார்ப்பன ஆதிக்கத்திற்கு மற்றொரு சாதனமாய் மாறிவிடும் என்பதை மட்டும் அழுத்தம் திருத்தமாக உறுதியாய்ச் சொல்லுவோம். பார்ப்பனரல்லாத தலைவர்களில் சிலர் இவ்வியக்கத்தில் பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ள வேண்டியதற்கு பல விதமான அரசியல் காரணங்களைச் சொல்லி நம்மை வசப்படுத்த முயற்சிக்கக் கூடும். அரசியல் காரணங்களே நமக்கு முக்கியமல்ல. அன்றியும் பார்ப்பனர்களுக்குள்ள அரசியல் பங்கை மோசம் செய்ய வேண்டும் என்றும் நாம் சொல்வதில்லை. நமது கொள்கைக்கும் நன்மைக்கும் விரோதமில்லாத பார்ப்பனர்களுக்கு அவர்களது பங்கைக் கொடுக்க நாம் தயாராகவே இருக்கின்றோம். அரசியலில் நன்மையான காரியங்களுக்கு அவர்களுடன் ஒத்துழைக்கவும் அவர்களது ஒத்துழைப்பை ஏற்றுக் கொள்ளவும் தயாராயிருக்கின்றோம். எந்தக் காரணத்தைக் கொண்டும் நமதியக்கத்தில் பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ளாததாலேயே அரசியல் தத்துவம் கெட்டுப் போவதாயிருந்தால் நமக்கு அதைப் பற்றி சிறிதும் கவலையில்லை. அவர்கள் இல்லாமல் அரசியலைக் கைப்பற்ற முடியுமா முடியாதா என்பதை ஒரு கை பார்த்துவிடலாம்.

வெள்ளைக்காரன் இல்லாமல் அவர்களுடைய சம்பந்தமே இல்லாமல் அரசாங்கத்தை நடத்தலாம், நடத்த வேண்டும் என்கின்ற கொள்கை உடையதான காங்கிரசில் சேர வேண்டும் என்று கருதுகின்ற பார்ப்பனரல்லாத தலைவர்கள், பார்ப்பனர்கள் இல்லாமல் அவர்களைச் சேர்க்காமல் அரசியலை நடத்த முடியாது. அரசியலைக் கைப்பற்ற முடியாது என்று சொல்ல வருவார்களானால் அதை நாம் எப்படி நம்பவோ ஏற்கவோ முடியும் என்று கேட்கின்றோம். அன்றி யும் 12 வருஷ காலமாக இந்தக் கொள்கையுடனேயே இந்த மாகாணத்தில் எவ்வ



RangaRakes tamilnavarasam.com

ளோ எதிர்ப்புக்கிடையில் அரசியலை சரிவர நடத்தியாய் விட்டது. அன்றியும் இந்த மாகாணத்தைப் போல் இந்தியாவில் வேறு எந்த மாகாணமும் அரசியலை நடத்தவில்லை என்கின்ற பெருமையும் பெற்றாய்விட்டது. இதற்கு விரோதமாய் இருந்த இயக்கங்களின் சமூகங்களின் ஆதிக்கங்களையெல்லாம் அடக்கியுமாய் விட்டது.

இன்னிலையில் இனி வரப்போகும் காலத்தில் இதற்கு மேற்கொண்ட எதிரியும் சூட்சியும் யாராலாவது செய்ய முடியும் என்று நினைப்பதற்கில்லாத மாதிரியான எதிர்ப்பை அனுபவித்து தேர்ச்சியும் பெற்றாய் விட்டது. எனவே இனி எதற்காக பயப்படவேண்டும் என்பது நமக்கு புலனாகவில்லை. ஆகையால் இது விஷயத்தில் இனி விவாதித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. தமிழ்நாட்டு மக்கள் நெல்லூர் மகாநாட்டுக்கு பிரதிநிதிகளாக தாராளமாய் ஆயிரக்கணக்காய் செல்ல வேண்டியதும், அங்கு சென்று இவ்விஷயத்தை தலைகாட்டாமல் ஒரே அடியாய் அடிக்க வேண்டியதும் தவிர வேறு எவ்வித யோசனையும் செய்ய வேண்டியதில்லை என்றே தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இப்போது அலட்சியமாய் ஏமாந்து இருந்துவிட்டு பிறகு கவலைப்படுவதிலேயோ, அப்படி மீறித் தீர்மானிக்கப்பட்டு விட்டால் இயக்கத்திலிருந்து பிரிந்து போய்விடலாம் என்று எண்ணிக் கொண்டிருப்பதிலேயோ எவ்வித புத்திசாலித்தனமும் ஏற்பட்டுவிடாது. ஏனெனில், இப்போதே அந்தத் தொல்லை ஏற்படாமல் தடுக்க சவுகரியமான வழி இருக்கும்போது அதைவிட்டு நாளைக்கு ஒருவழியைக் கண்டுபிடித்துக் கொள்ளலாம் என்று கருதுவது மிக்க மதியீனமான காரியமாகும்.

கடைசியாக நாம் ஒன்று சொல்லுகின்றோம். அதாவது பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டுவிட்டால் அது தென் இந்திய நலவுரிமைச் சங்கத்தை மாத்திரம் பாதிப்பதென்பதல்லாமல் சுயமரியாதை இயக்கத்தையும் பார்ப்பனரல்லாத வாலிபர் இயக்கத்தையும் சிறிதாவது பாதிக்காமல் போகாது என்பதே. மேற்கண்ட இவ்விரண்டு இயக்கங்களிலும் பற்றுள்ளவர்களும் நெல்லூர் மகாநாட்டுக்குச் சென்று பார்ப்பனர்களை சேர்க்காமல் பார்த்துக் கொள்ளுவதுடன் மேற்கண்ட இரண்டு இயக்கக் கொள்கைகளையும் அதாவது சுயமரியாதை இயக்கக் கொள்கைகளையும் வாலிப இயக்க கொள்கைகளையும் இதில் நிறைவேற்ற முயற்சிக்க வேண்டியது முக்கிய கடமையாகும்.

நெல்லூர் மகாநாட்டில் ஜில்லா வாரியாக ஓட்டு எடுக்கப்படுமாதலால் ஒவ்வொரு ஜில்லாவிலும் நூற்றுக்கணக்கான அங்கத்தினர்கள் இப்பொழுதே தங்களை அங்கத்தினர்களாக பதிவு செய்து கொண்டு கூட்டம் கூட்டமாக வர வேண்டியது அவசியத்திலும் அவசியமே.

**குடி அரசு - தலையங்கம் - 22.09.1929**



RangaRakes

# மீண்டும் படேல்

திரு.படேல் அவர்கள் தமிழ்நாட்டிற்குள் வந்து செய்துவந்த பார்ப்பனப் பிரசாரத்தைப் பற்றி 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' 'குடி அரசு' 'குமரன்' 'தமிழ்நாடு' 'தமிழன்' 'சென்னை வர்த்தமானி' 'நாடார் குலமித்திரன்' முதலிய பல பத்திரிகைகள் கண்டித்தெழுதி இருந்தது வாசகர்களுக்குத் தெரிந்த விஷயமாகும். ஏறக்குறைய இவைகளெல்லாம் நமது பார்ப்பனர்கள் திரு.படேல் தகவலுக்குக் கொண்டு போகப்படாமல் சூழ்ச்சிகள் செய்திருந்தாலும் ஆங்காங்கு சென்ற இடங்களிலெல்லாம் கேட்கப்பட்ட கேள்விகளாலும் ஆங்காங்கு இவருக்கு விநியோகிக்கப்பட்ட பத்திரிகைகளாலும் ஒருவாறு அறிந்துதான் இருக்க முடியுமென்று சொல்லுவோம். எப்படியெனில் திரு.படேல் மேற்கண்ட பத்திரிகைகள் மீது பாய்ந்து தனது முழு விஷத்தையும் கக்கி அவைகளை யாரும் படிக்கக் கூடாதென்று சொல்லி வருவதால் அவற்றிலுள்ளது இன்னது என்பதை உணராமல் இப்படிச் சொல்லியிருப்பாரென்று நினைப்பதற்கில்லை. தவிரவும் தமிழ்நாட்டில் பல இடங்களில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சமாதானம் சொல்ல முடியாமல் கஷ்டப்பட்டு தனது வருத்தத்தை தெரியப்படுத்தியிருப்பதாலும் ஒருவாறு விஷயங்கள் தெரிந்திருக்கலாம். தவிரவும் மதுரையில் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த பல நண்பர்களைக் கண்டு சம்பாஷித்திருப்பதுடன், சுயமரியாதை இயக்கத்தின் ஆங்கிலப் பத்திரிகையாகிய "ரிவோல்ட்" பத்திரிகையின் பிரதிகளில் 10, 15 வாரப் பிரதிகளையும் வாங்கிப் பார்த்ததாகவும் தெரியவருகிறது. இவ்வளவும் தெரிந்த பிறகு தமிழ்நாட்டைவிட்டு வெளியேறி மைசூர் ராஜ்யத்திற்குச் சென்றதும் பெங்களூரில் ஒரு பெரிய கூட்டத்தில் பழையபடியே பேசியிருக்கின்றார்.

> "தாழ்த்தப்பட்டவர்களின் நன்மைக்கு உழைப்பதாகச் சொல்லிக் கொண்டு ஒரு சிலர், சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒன்றை ஆரம்பித்து இந்திய நாட்டிற்குப் புனிதமானவைகளை அழிப் பதும், ஸ்திரீகளின் மேன்மைக்குப் பங்கம் விளைவிப்பதும் இந்து மதத்தைத் தாக்குவதும், கோடிக் கணக்கான மக்களால் பூஜிக்கப்படும் இராமனையும் சீதையையும் குற்றம் சொல்லுவதும், பிராமண சமூகத்தின்மீது துவேஷம் உண்டு பண்ணுவதுமான காரியங்களைச் செய்து வருகிறார்கள். இதை யோக்கியமான அரசாங்கம் பொறுத்துக் கொண்டிருக்கக் கூடாது."



tamilnavarasam.com

என்றும்,

"பிராமணர் மற்றும் பிராமணரல்லாதார் பிளவுகளை சர்க்காரே உண்டாக்கி யோக்கியதையும் சக்தியுமற்றவர்கள் தலையில் சுயராச்சியப் பொறுப்பு பெறுமாறு செய்து தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ளப் பார்க்கின்றார்கள்"

என்றும்,

"தற்போது தென்னிந்தியாவில் ஏற்பட்டிருக்கும் பிராமண - பிராமணரல்லாத சச்சரவுக்கு மேற்கண்ட இரு சமூகத்தாரைச் சேர்ந்தவர்களின் அதிகாரப் பதவி போட்டியே மூல காரணம்"

என்றும்,

"ஜனத் தொகையில் சிறுபான்மையான பிராமணர்களைக் கொண்டு பெரும்பான்மை ஜனத் தொகையாளரான பிராமணரல்லாதார் அச்சப்படுவது அவமானம்"

என்றும்,

"பிராமணரல்லாதார் இயக்கம் தென் இந்தியாவில் முதல் முதல் மைசூரில்தான் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகின்றது"

என்றும்,

"சர்க்கார் ஊழியம் சுயமரியாதைக்கு ஏற்றதல்ல"

என்றும்,

"யோக்கியதையும், திறமையுமுடையவர்கள் சர்க்கார் உத்தியோகம் பெறவேண்டும்"

என்றும், மற்றும் ஏதேதோ உளறியிருக்கின்றார். இவைகள் அநேகமாக திரு.படேல் தமிழ் நாட்டில் இருக்கும்போதே சொன்ன வார்த்தைகளே தவிர, பெங்களூருக்குச் சென்ற பிறகு புதிதாகச் சொன்னவைகளல்ல. இவைகளுக்கெல்லாம் முன்னமேயே பதில் சொல்லப்பட்டிருப்பதை திரு.படேல் சிறிதாவது கவனித்து அதற்கு எவ்வித சமாதானமும் சொல்லாமல் திருப்பித் திருப்பி அதையே சொல்லிக் கொண்டிருப்பது யோக்கியப் பொறுப்புடைய செய்கையாகுமா? என்பதைக் கவனித்து செய்யக்கூடிய முடிவை வாசகர்களுக்கே விட்டுவிடுகின்றோம்.

சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் இன்னது என்பது செங்கற்பட்டு மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களாலும், ஆங்கு நிர்ணயிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கைகளினாலும் யாவரும் தெளிவாக உணர்ந்திருக்கலாம். அப்படியிருக்கும்போது சுயமரியாதை இயக்கத்திலுள்ள குற்றம் இன்னது என்பதாக ஏதாவது ஒன்றை திரு. படேல் குறிப்பிட்டுக் காட்டி தூஷித்து வந்திருக்கின்றாரா? என்று கேட்கின்றோம்.

இவ்வியக்கம் இதுவரை தாழ்த்தப்பட்டவர்கள் விஷயத்தில் எவ்வித கவலையும் எடுத்துக் கொள்ளவில்லையா? என்று கேட்கின்றோம். இதை திரு.படேல் அறிய முடியாமற்போனாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் உணர்ந்திருப்பார்களென்பது மாத்திரம் உறுதி. அதாவது தென்னாட்டிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் இது சமயம் தங்களை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ள மறுத்து தீர்மானங்கள் நிறைவேற்றிக் கொண்டிருப்பதும், வேறு மதத்தில் சேர வேண்டுமென்பதாக தீர்மானித்துக் கொண்டிருப்பதும் சுயமரியாதை இயக்கத்தினாலல்லவா? என்பதைப் பொது ஜனங்களே சிந்தித்துப் பார்க்கட்டும்.

மற்றும் இந்து மதத்தையும், இந்திய நாட்டிற்குப் புனிதமானவைகளையும், ஸ்திரீகளின் மேன்மைகளையும், இராமனையும் சீதையையும் தாக்குவதாக அவர் சொல்லுவதற்கு ஒரு ஆதாரத்தையும் அவர் எடுத்துக் காட்டவே இல்லை.

'இந்து மதம் என்றால் என்ன?'

'இந்து மதம் என்றால் என்ன?'

'இந்து மதம் என்றால் என்ன?'

என்று மும்முறை திரு. படேலைக் கேட்கின்றோம். இதற்கு திரு.படேல் பதில் சொன்னாலும் சரி அல்லது அவர் தலைவர் திரு.காந்தி பதில் சொன்னாலும் சரி, இதைப் பற்றி திரு.காந்தியையே பெங்களூரில் நேரில் கேட்டதற்கு, "இந்து மதம் என்பதாக குறிப்பிட்டுச் சொல்வதற்கு ஒன்றும் இல்லையானாலும், இந்துமதம் என்று சொல்லிக் கொண்டு நமக்கு வேண்டியபடி சீர்திருத்தங்கள் செய்வதற்கு வசதி இருப்பதால் அப்படி ஒன்றை வாயளவில் சொல்லிக் கொள்வது நல்லது" என்று அவரே பதில் சொன்னார். இதைச் சொல்லும்போது திரு.எஸ்.இராமநாதன் அவர்களும் பக்கத்தில் இருந்ததுடன் திரு.காந்தி ஆங்கிலத்தில் சொன்னதை திரு.ராமனாதன்தான் தமிழில் மொழி பெயர்த்துச் சொன்னார். அப்பொழுதே நாம், அப்படியானால் இந்துமதம் என்பதாக ஒரு போலி பெயரைச் சொல்லிக் கொண்டு திரு.காந்தி ஒரு சீர்திருத்தத்தைச் செய்வதும், கொஞ்சநாள் பொறுத்து அதே இந்து மதம் என்பதாகச் சொல்லிக் கொண்டு, திருவாளர்கள் சத்தியமூர்த்தி, எம்.கே.ஆச்சாரி போன்றவர்கள் மற்றொரு "சீர்திருத்தத்தைச் செய்வதுமாயிருந்தால், மக்களுக்கு என்றைக்குத்தான் உண்மைச் சீர்திருத்தம் ஏற்படுவது? ஆதலால் இந்து மதம் என்று சொல்லிக் கொண்டு யாரும் எவ்வித புரட்டும் செய்யாமலிருக்கச் செய்வதற்காக இந்துமதப் புரட்டையே வெளியாக்கி அதை அடியோடு ஒழித்துவிட வேண்டும்" என்பதாக பதில் சொன்ன காலத்தில் திரு.காந்தியவர்கள் ஒன்றும் மறுமொழி பேசாமல் "மறுபடியும் சந்தித்துப் பேசலாம்" என்று சொன்னார். இதை உடனே அங்கேயே திரு.சி. இராஜகோபாலாச்சாரியாரிடம் சொல்லிவிட்டு வெளிவந்ததுடன் இனியும் இதைப் பற்றி திரு.காந்தியுடன் பேசுவதில் பயனில்லை என்று திரு.எஸ்.இராம


RangaRakes
tamilnavarasam.com

னாதனிடமும் சொல்லி விட்டு ஈரோட்டிற்குத் திரும்பி விட்டோம். அவர்களை இன்றும் எழுதிக் கேட்டுக் கொள்ளலாம். ஆகவே, அன்று முதல் இன்று வரை திரு.காந்தி முதல் வேறு யாரும் பதில் சொல்லாமலே இருந்துவிட்டு "சுயமரியாதை இயக்கம் இந்து மதத்தை தாக்குகின்றது" என்று சொல்வதில் கடுகளவாவது யோக்கியப் பொறுப்போ நாணயமோ இருக்க முடியுமா? என்று கேட்கின்றோம். மற்றும் "இந்தியாவுக்கு புனிதமான" எதை நாம் காப்பாற்ற முயற்சிக்கின்றோம் என்பதைப் பற்றியாவது திரு.படேல் ஆதாரம் எடுத்துக் காட்டியவரல்ல. திரு.காந்தி இந்தியாவுக்கு வந்தபோது வருணாசிரம தர்மம் இந்தியாவுக்குப் புனிதமானது என்றார். திரு.மாளவியா ஜாதி வித்தியாசமும், அதற்கேற்ற இட வித்தியாசமும் இந்தியாவிற்குப் புனிதமானது என்றார்.

டாக்டர் மூஞ்சி "வைத்திய சாஸ்திரப்படி 18 வயதில்தான் பெண்களுக்குக் கலியாணம் செய்ய வேண்டியது அவசியமானாலும் பெண்களை 12 வயதில் கலியாணம் செய்வதுதான் இந்தியாவுக்குப் புனிதமானது" என்றார்.

திருவாளர்கள் எம்.கே. ஆச்சாரியாரும் சி.ராஜகோபாலாச்சாரியாரும் 'மனுதர்ம சாஸ்திரமே இந்தியாவுக்குப் புனிதமானது' என்றார்கள்.

"திரு.எஸ்.சத்தியமூர்த்தி சாஸ்திரியோ பராசர ஸ்மிருதியும், பெண்களுக்கு பொட்டுகட்டி சாமிகள் பேரால் விபசாரத்திற்கு விட்டு அதன் தரகு மூலம் கோயில் குருக்கள் வயிறு வளர்ப்பதுதான் இந்தியாவுக்கு புனிதமானது" என்றார். எனவே இவைகளில் திரு.படேலுக்குத் தெரிந்தவரையில் இந்தியாவுக்குப் புனிதமானது என்ன என்று கேட்கின்றோம்.

திருவாளர்கள் எஸ்.சீனிவாசய்யங்கார் மகாகனம் சீனிவாசசாஸ்திரி, சி.ராஜகோபாலாச்சாரி ஆகிய மூவர்களும் இந்தியாவுக்கு புனிதமானது என்பதை உலகம் ஒப்புக் கொள்ள வேண்டுமென்கிறாரா? என்று கேட்கின்றோம்.

இந்தப் புனிதங்களைத் தவிர வேறு எந்தப் புனிதத்தை சுயமரியாதை இயக்கம் தாக்கிற்று; அல்லது தகர்க்குகின்றது என்று திரு.படேல் தைரியமாய் வெளியிலெடுத்துச் சொல்வாரானால் அவருக்கு திரு.காந்தியால் அளிக்கப் பட்டதாகச் சொல்லப்படும் சர்தார் பட்டத்திற்கு உண்மையான யோக்கியதை உண்டு என்று சொல்லுவோம். தவிர இராமனையும் சீதையையும் சுயமரியாதை இயக்கம் இழித்துச் சொல்லுகின்றது என்று திரு.படேல் சொல்லி இருக்கின்றார். எந்த இராமனையும் சீதையையும் என்று திரு.படேல் சொல்லி இருந்தால் யோக்கியமாக இருந்திருக்கும். பார்ப்பனன் காலில் விழுந்த ராமனையா – மாமிசம் சாப்பிட்ட ராமனையா – கொலை செய்த ராமனையா –பார்ப்பனரல்லா தவனாகிய "சம்பூகன் என்னும் சூத்திரன்" கடவுளை தோத்திரம் – தபசு செய்ததற்காகக் கொன்ற இராமனையா? சுயநலத்திற்காக தம்பி பேச்சைக் கேட்டுக் கொண்டு நியாய அனியாயம் பார்க்காமல் பாரபட்சமாய் அண்ணனைக் கொன்ற ராமனையா? வருணாசிரமத்தை ஆதரித்த ராமனையா? தன் பெண் ஜாதியை ஒரு பாமரன் பேச்சைக் கேட்டு கர்ப்பத்துடன் காட்டில் கொண்டுபோய் விட்டு விட்டுவந்த ராமனையா? கடைசியாக பெண் ஜாதி நடவடிக்கை மீது சந்தேகப்பட்டு நெருப்பிலும், குழியிலும் இறக்கிய இராமனையா? எந்த ராமனை? எந்த ராமனை? என்று திரு.படேலைக் கேட்கின்றோம். திரு.காந்தி ஒரு சமயத்தில் மேற்கண்ட ராமன்களையெல்லாம் ஒப்புக் கொள்ளுவதில்லை என்றும் தன்னுடைய ராமன் வேறு என்றும் சொன்னார். ஆனால் திரு.படேல் சொல்லும் ராமன் மேல் கண்ட ராமாயண ராமனா அல்லது திரு.காந்தி சொல்லும் வேறு ராமனா? என்று சொல்லிவிட்டாரானால் ராமனைப் பற்றிய தகராறு ஒரு வார்த்தையில் ஒழிந்து போகும். அதுபோலவே நாம் குற்றம் சொல்லும் சீதையும் ராமாயண சீதையா? அல்லது திரு.காந்தியுடைய "வேறு சீதையா" என்பதையும் சொல்லி விட்டால் சீதை விஷயமும் ஒரு வரியில் தீர்ந்து போகும். அது வரை ராமர் இழிவும் சீதை குற்றமும் மூடிவைக்க முடியாதென்று கண்டிப்பாய்ச் சொல்லுவோம். இதைச் சொல்லிப் பாமர மக்களை கிளப்பி விடுவதற்காக சுயமரியாதை இயக்கம் சிறிதும் பயப்படாது என்றும் சொல்லுவோம். சுயமரியாதை இயக்கம் கோயில்களை இடிக்கவேண்டுமென்று சொல்வதாக ஒரு இடத்தில் சொன்னதாகத் தெரிகின்றது. எந்தக் கோயிலை சுயமரியாதை இயக்கம் இடிக்க வேண்டுமென்கின்றது என்பதைச் சொன்னாரா? திரு.காந்தியே கோயில்களை விபசாரிகள் வீடுகள் என்று சொல்லியிருக்கிறார். திரு.காந்தியால் போற்றப்படும் இயேசுநாதர் கோயில்களை கள்ளர் குகை என்று சொன்னதாக சொல்லுகிறார்கள். மற்றும் மகமது நபி விக்கிரகங்கள் வைத்து வணங்கும் கோயில்களை இடித்தால் புண்ணியமுண்டு என்று சொல்லி இருக்கிறாராம்.

இன்னும் எத்தனையோ பெரியோர்கள் சித்தர்கள் ஞானிகள் என்பவர்கள் கோயில்களைப் பற்றி எவ்வளவோ கண்டித்திருக்கின்றார்கள். அப்படியிருக்க திரு.படேல் காப்பாற்ற ஆசைப்படும் கோயில் எது? சுயமரியாதை இயக்கத்தால் இடிக்கும் கோயில் எது? என்று சொன்னால் நலமாயிருக்கும். நிற்க, சர்தார் படேல் சுயமரியாதை இயக்கத்தை அழிக்க சர்க்காரை தஞ்சமடைகிறார். சர்தார் படேலின் வீரமே வீரம்! இவர் சர்தார் படேலா அல்லது கோழை, பேடி படேலா என்பதை முடிவு செய்யும் பொறுப்பை அவரை இங்கு அழைத்து வந்த பார்ப்பனர்களுக்கே விட்டுவிடுகின்றோம். இது முன் ஒரு சமயம் இதே மாதிரி பேசிய திருவாளர்கள் சத்தியமூர்த்தி, சீனிவாசய்யங்கார் ஆகியவர்களின் செய்கைக்கு ஒரு உதவி படேலின் செய்கையாயிற்றே ஒழிய மற்றபடி இதில் சர்தார்தனம் எங்கே என்று கேட்கின்றோம். தவிர, ஒரு இடத்தில் பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார் சண்டைக்கு இரு வகுப்பாரினுடையவும் உத்தியோகப் போட்டியே காரணம் என்று சொல்லிவிட்டு மற்றொரு இடத்தில் பார்ப்பனரல்லாதார் சுயநலத்தினால் ஏற்பட்ட இயக்கம் என்றும், மற்றொரு இடத்தில் சர்க்காரால் பார்ப்பனரல்லாதாரை தூண்டிவிட்டு ஏற்படுத்தப்பட்ட இயக்கமென்றும், முன்னுக்குப் பின் விரோதமாய் உளறிக் கொட்டி இருக்கிறார். இதிலிருந்து இவ்வியக்கத்தைப் பற்றி திரு. படேல் எவ்வளவு தூரம் தெரிந்து கொண்டிருக்கின்றார் என்பது விளங்குகின்றது. கடைசியாக திரு.படேல் தன்னை, பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக் கொண்டு பார்ப்பனரல்லாதார்


RangaRakes
tamilnavarasam.com

அரசியலை நடத்தவும், உத்தியோகம் பெறவும் யோக்கியதை இல்லையென்று சொல்லிவிட்டதுடன் இந்த மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் உத்தியோகம் பார்க்காமலும் அரசியலை நடத்த விடாமலும் தாங்கள் பார்த்துக் கொள்வதாய் பந்தயம் கூறுகிறார். இதிலிருந்து அவரது பார்ப்பனரல்லாதார் தன்மையும் அவருக்கு இருக்கும் பார்ப்பனரல்லாதார் வகுப்பு அக்கரையும் தானாகவே விளங்கும். இதுவே வடநாட்டுத் தலைவர்களின் யோக்கியதையை தாராளமாய் விளக்குகின்றது.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 22.09.1929**



# சர்க்காருக்கு ஜே!

## சீர்திருத்தம் வாழ்க! பார்ப்பனீயம் வீழ்க!

இந்திய நாட்டில் சற்றேறக் குறைய ஐம்பது வருட காலமாக சீர்திருத்தக் காரர்கள் உள்ளத்தில் கொதித்துக் கொண்டிருந்ததும் அந்நிய நாட்டு மக்களால் இந்திய சமூகத்தையே ஏளனம் செய்துகொண்டிருக்க இடம் தந்து கொண்டிருந்ததுமான "குழந்தை மணம்" என்னும் நகரும் பொம்மைக் கலியாணக் கொடுமையானது கடைசியாக இந்தியாவை "ஏக போகமாய் ஆட்சி புரியும் அந்நிய அரசாங்கமாகிய" பிரிட்டிஷ் அரசாங்க உதவியாலேயே அதுவும் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டு விட்டதற்கு பிரிட்டிஷ் சர்க்காருக்கு சந்தோஷத்தோடு மனப்பூர்வமாய் ஜே! சொல்லித் தீர வேண்டிய நிலைமையில் இருக்கின்றோம். எனவே இந்திய சர்க்கார் நீடூழி வாழ விரும்புகின்றோம். சர்க்காரின் ஒத்துழைப்பும் அவர்களது மனப்பூர்வமான ஆதரவும் உதவியும் இல்லாதிருக்குமானால் சாரதா மசோதாவானது கண்டிப்பாய் நிறைவேறி இருக்காது என்று உறுதியாய்ச் சொல்லுவோம். ஆனால் சிலர் தேசியம் சுயராச்சியம் என்பவைகளின் பேரால் சர்க்காருடன் ஒத்துழைக்கக்கூடாது என்றும்; சர்க்கார் தயவை எதிர்பார்க்கக் கூடாது என்றும்; சீர்த்திருத்தங்களுக்கு சட்டம் செய்யக் கூடாது என்றும்; வெகுசுலபமாய் பேசி மக்களை ஏமாற்றி வீரர்கள் ஆகிவிடலாம் ஆனால், இந்த சாரதா மசோதா விஷயத்தில் சர்க்கார் தயவு, சர்க்கார் ஒத்துழைப்பு, சர்க்காரால் கையாளப்பட வேண்டிய சட்டம் ஆகியவைகள் இல்லாமல் ஏதாவது ஒரு சிறிய விஷயத்தையாவது அமுலுக்குக் கொண்டுவரச் செய்ய முடியுமா என்று கேட்கின்றோம்.

சுயராச்சியம் பெற்ற பிறகு நமக்கு வேண்டிய சீர்திருத்தங்களை யெல்லாம் செய்து கொள்ளலாமென்றும், இப்போது இந்த சர்க்காருடன் ஒத்துழைத்து சீர்த்திருத்தம் பெறுவது அவமானமென்றும் சொல்லும் காங்கிரஸ் தலைவர்கள் இந்த மசோதா விஷயத்தில் எப்படி நடந்து கொண்டார்களென் பதை யோசித்துப்பார்த்தால் இந்த சர்க்கார் இருக்கும்போது சீர்த்திருத்தமடைய முடியுமா? அல்லது இது "ஒழிந்த" பிறகு அடைய முடியுமா? என்பது விளங்கா மற் போகாது. உதாரணமாக இந்தக் குழந்தைமணத் தடுப்பு விஷயமானது சுமார் 20 வருடத்திற்கு முன்பிருந்து சட்டசபைகளில் பிரஸ்தாபித்து வந்திருப்பது யாவருக்கும் தெரியும். ஆனால் ஒவ்வொரு சமயத்திலும் வைதீகர்கள் என்பவர்களும், இந்து மதத்தைப் பின்பற்றுகின்றவர்கள் என்பவர்களும்



RangaRakes tamilnavarasam.com

தேசியவாதிகள் என்பவர்களும், ஆட்சேபனை செய்து கொண்டேதான் வந்திருக்கின்றார்கள். இந்த சமயத்திலும் தேசியவாதிகளே பெரும் முட்டுக் கட்டையாய் நின்று எவ்வளவோ சூட்சிகளுடன் ஆட்சேபித்துப் பார்த்திருக் கின்றார்கள்.

"பழுத்த தேசாபிமானிகளும் பிரபல தேசியத் தலைவர்" களுமாகிய திருவாளர்கள் மாளவியா, கேல்கார், மூஞ்சி, எம்.கே.ஆச்சாரியார், கே.வி.ரங்க சாமி ஐயங்கார், ஏ.ரெங்கசாமி ஐயங்கார், மோதிலால் நேரு ஆகியவர்கள் எல்லோருமே இந்த இருபதாவது நூற்றாண்டில் இடையூறாயிருந்திருக் கின்றார்கள் என்றால், இனி எந்த தேசியவாதியின் ஆதரவை எந்தக் காலத்தி லாவது எதிர்பார்க்கக்கூடுமா என்பதுதான் கேள்வி. இதில் மற்றொரு விஷய மென்னவென்றால், மேல் கூறிய எல்லா தேசியவாதிகளும் மசோதாவின் தத்துவத்தை ஒப்புக் கொள்வதாகச் சொல்லிக் கொண்டே ஆட்சேபித்திருக்கின் றார்களென்றால் இனி ஒப்புக் கொள்ள முடியாத விஷயத்தில் இவர்கள் ஆட்சேபனை எப்படியிருக்கும் என்பதை யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

திரு.மாளவியா அவர்கள் தனது ஆட்சேபனைக்கு சொல்லப்பட்ட காரணமென்ன வென்றால் "14-வயதுக்கு மேற்பட்டு கல்யாணம் செய்வது நல்லது தான். ஆனாலும், ராஜியை முன்னிட்டு 12 வயதாக இருக்க வேண்டும்" என்றார். திரு.மூஞ்சே சொன்ன ஆட்சேபனையைக் கவனிப்போம். இவர் பார்ப்பனர் - பார்ப்பன மாணவர்களை மாமிசம் சாப்பிடவேண்டுமென்று சொல்பவர் - வைத்தியர் - இத்துடன் வைத்திய சாஸ்திரப்படியும் உடற்கூறு சாஸ்திரப்படியும் பெண்களுக்கு 18 வயதுக்கு முன் விவாகம் செய்வது கெடுதி என்கின்ற அபிப்பிராயம் கொண்டவர். அப்படி இருந்தும் இந்த மசோதா விஷயத்தில் 12 வயதுக்கு மேல் கலியாண வயது இருக்கக்கூடாது என்று வாதம் செய்தவர். திரு.மோத்திலால் நேரு எந்த மாமிசமும் சாப்பிடுவார், எந்தப் பானமும் செய்வார், 20 வயதுக்கு முன்னால் தங்கள் குழந்தைகளுக்கு கல்யாணம் செய்வதில்லை என்றும் சொன்னார். அப்படி இருந்தும் அந்த மசோதாவின் ஜீவநாடியை பிடுங்கி விடக்கருதி சூட்சி செய்தவர். அதாவது அவசியமிருக்கின்றவர்கள் 14 வயதுக்குள்ளாகவும் கல்யாணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் ஒரு திருத்தம் கொண்டு வந்து மசோதாவை அடியோடு கவிழ்த்து விடப்பார்த்தார். திரு.கேல்கார், திரு.திலகரின் ஸ்தானத்துக்கு வந்தவர். அவரோ மசோதாவின் தத்துவத்தை ஒப்புக்கொள்ளுவதாய்ச் சொல்லி, ஆனால் வைதீகர்கள் இஷ்டத்திற்கு விரோதமாய் சட்டம் செய்யக்கூடாது என்றனர். இனி சென்னைத் "தலைவர்களைப்" பற்றி நாம் சொல்ல வேண்டிய அவசியமிருக்காதென்றே நினைக்கின்றோம். எனினும் திருவாளர்கள் சேஷய்யங்கார், கே.வி.ரங்கசாமி அய்யங்கார், எம்.கே. ஆச்சாரியார், எ.ரங்கசாமி ஐயங்கார் போன்ற "பரம்பரை தேசியவாதி"களின் யோக்கியதை இம்மசோதா விஷயத்தில் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைக் கூர்மையாய் கவனித்து



வந்தவர்களுக்கு விளங்காமல் போகாது. எனவே, நமது நாட்டிற்கென்றோ சமூகத்திற்கென்றோ எவ்வித திருத்தம் கொண்டு வந்தாலும் இந்தக் கூட்டத்தவர்களே அதாவது பார்ப்பனர்களே ஒருபுறம் தேசியத்தின் பேராலும், மற்றொரு புறம் மதத்தின் பேராலும், மற்றொரு புறம் சாஸ்திரத்தின் பேராலும், மற்றொரு புறம் மனச்சாட்சியின் பேராலும் தொல்லை விளைவித்து வருவதை வெகுகாலமாக பார்த்து வருகின்றோம். சாதாரணமாய் வினாவறியாக் குழந்தைகளை கடவுள் பேரால் பொட்டுக்கட்டி விபசாரிகளாக்குவதையும், மக்களை விபசாரத் தொழிலால் ஜீவனம் செய்யக்கூடாதென்றும் கருதி கொண்டு வரப்பட்ட சட்டங்கள் கூட மதத்தின் பேராலும், சாஸ்திரங்களின் பேராலும், சாமிகளின் பேராலும் ஆட்சேபிக்கப்படுமானால், அதுவும் பூரண சுயேச்சை விரும்பும் சங்க காரியதரிசியும் கற்ற பண்டிதர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட வருமான திரு.சத்தியமூர்த்திப் பார்ப்பனராலேயே எதிர்க்கப்படுமானால், இனி சாதாரண பார்ப்பனர்களாலும் அவர்கள் கலந்த இயக்கங்களாலும் நாம் எந்த விதமான சீர்திருத்தத்தை சுயராஜ்யத்தில், ராம ராச்யத்தில் எதிர்பார்க்கக் கூடுமென்பது நமக்கு விளங்கவில்லை. பொதுவாக இந்த பார்ப்பனர்கள் சர்க்காருக்கு விரோதமாகவும் சர்க்காருடன் ஒத்துழைக்கக்கூடாது; சர்க்காரை ஒழிக்க வேண்டுமென்று சொல்லுவதின் இரகசியம் எல்லாம், எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த சர்க்கார் பார்ப்பனரல்லாத மக்களுக்கு வசமாகக் கூடாதென்றும், பார்ப்பனரல்லாத மக்களுக்கு அனுகூலமாக ஏதாவது நன்மையோ சீர்திருத்தமோ செய்ய இடம் கொடுத்து விடக்கூடாது என்பதுமான கெட்ட எண்ணமே தவிர மற்றபடி சர்க்காரோடு ஒத்துழைக்கக் கூடாது என்பதில் ஏதாவது யோக்கியப் பொறுப்போ, தேசியமோ, நாணயமோ இருக்கின்றதா? என்று கேட்கின்றோம்.

ஒத்துழையாமை என்பதற்கும், சர்க்கார் தயவு என்பதற்கும் ஏதாவது ஒரு குறிப்பிட்டதும் நிலையானதுமான கொள்கைகளை ஏற்படுத்திக் கொண்டு பிறகு அதை யோக்கியமாய் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதானால், அதைப் பற்றி யோசிக்க வேண்டியது அவசியமாகும். அப்படிக்கில்லாமல் தங்களுக்கு இஷ்டமானதும். தேவையானதுமான காரியமெல்லாம் ஒத்துழையாமையில் சேர்ந்ததென்றும் தேசியத்தில் சேர்ந்தது என்றும் சொல்லுவதும் நமது மக்க ளுக்கு இஷ்டமானதும், தேவையானதுமான காரியங்கள் எல்லாம் சர்க்கார் தயவானதும் தேசதுரோகமானதுமான காரியங்கள் என்று சொல்லப்படுவதுமா னால் அம்மாதிரி தேசியத்தை நாம் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? தேசியத்திற்கும் ஒத்துழையாமைக்கும் சர்க்கார் தயவுக்கும் இந்த உலகத்தில் பார்ப்பனர்கள் மாத்திரம் தான், பாஷ்ய கர்த்தாக்களா, மற்றொருவருக்கும் இவற்றில் உரிமை இல்லையா? என்றுதான் கேட்கின்றோம்.

முன் காலத்தில் அதாவது 'இந்து' (மூட) ராஜாக்கள் அரசாங்கத்திலும் இப்படியே செய்துவிட்டு இப்பொழுது வெள்ளைக்கார (அறிவாளிகள்) அரசாங்கத்திலும் இப்படியே செய்து நமது சமூகத்தை மிதித்துவைத்துக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டிருக்க கருதுவதை இனி அரை நிமிஷமும் நம்மால் சகித்திருக்க முடியாது என்பதை வெளிப்படையாயும் உறுதியாயும் சொல்லித் தீர வேண்டி இருக்கின்றது. அதற்காகவே **சர்க்காருக்கு ஜே** என்றும், **பார்ப்பனீயம் வீழ்க**! என்றும் சொல்லுகின்றோம்.

எந்தவிதமான அரசியல் கஷ்டங்களை பொறுத்துக் கொண்டானாலும் நமது நாட்டில் பார்ப்பனீயம் அடியோடு ஒழியுமட்டும் இந்த பிரிட்டிஷ் சர்க்காருக்கு "அன்னிய" சர்க்காருக்கு பகுத்தறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சி அறிவு வளர்ச்சியும் பெற்ற "நாஸ்திக" சர்க்காருக்கு "ஜே" சொல்லித் தீருவோம். இதனால் நாம் தேசத்துரோகியானாலும் சரி, சிலுவையிலும் அறையப்பட்டாலும் சரி, கழுவில் ஏற்றப்பட்டாலும் சரி அவற்றிற்கு சிறிதும் கலங்க மாட்டோம் என்பதையும் தைரியமாய்ச் சொல்லுகிறோம். அஃதோடு இந்த சர்க்கார் எந்த நிலைமையில் எந்தக் காலத்தில் எப்படியானால் எந்த முறையில் எதிர்ப்பது என்பதுவும் நமக்கே தெரியும் என்று உறுதி கூறுவோம். நிற்க.

சாரதா மசோதாவானது இப்போது இந்திய சட்டசபையில் நிறைவேறி விட்டதாலேயே இந்தியாவுக்கு வேண்டிய சீர்த்திருத்தங்கள் எல்லாம் முடிந்துவிட்டது என்பதாகக் கருதி நாம் மகிழ்ச்சிப் பெருக்கடைவதாக யாரும் நினைத்து விடக்கூடாது என்றும் கேட்டுக் கொள்ளுகிறோம். மற்றென்ன வென்றால் எந்த விதமான சீர்திருத்தத்திற்கும் வழக்கமாய் முட்டுக்கட்டையாய் உபயோகித்து வந்த மதம், சாஸ்திரம், கடவுள், கோபம் என்கின்ற புரட்டுகளும் பூச்சாண்டிகளும் இம்மசோதா விஷயத்தில் குப்பைத் தொட்டிக்குப் போக நேர்ந்ததையே எண்ணி எண்ணி மகிழ்ச்சிப் பெருக்கடைகின்றோம். ஏனெனில் இதன் மூலம் இந்தப் பார்ப்பனர்கள் மேற்கண்ட மதப்பூச்சாண்டிக்கும் சாஸ்திரப் புரட்டுக்கும் எவ்வளவு மரியாதை வைத்திருக்கின்றார்கள் என்பதையும் இவைகளைக் காப்பாற்ற என்ன தியாகமோ வீரமோ காட்டப்போகின்றார்கள் என்பதையும் பார்க்கப் போகின்றோம்.

தவிர, சில பார்ப்பனர்கள் இந்த சட்டம் நிறைவேறிவிட்டால் சத்தியாக் கிரகம் செய்து சட்டத்தை மீறித் தண்டனை அடைந்து இந்த சட்டத்தை ஒழிக்கப் போகின்றார்களாம். இந்த செய்தியைக் கேட்ட மாத்திரத்தில், இந்த சட்டம் நிறைவேறிய சேதியைக் கேட்ட மாத்திரத்தில் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தோமோ அதைவிட எண்மடங்கதிகமான மகிழ்ச்சியை அடைந்தோம்.

ஏனென்றால் அவர்களது சத்தியாக்கிரகத்தையும் தியாகத்தையும் பார்த்து அவை வெற்றி பெற்றால் நம்முடைய தேவைகளுக்காக நாமும் அதுபோலவே நடந்து வெற்றி பெறலாம் என்றும், அந்தபடி அவர்கள் வெற்றி பெறாவிட்டால் இப்போதைப் போலவே சர்க்காருக்கு "ஜே" போட்டு அதன்மூலம் வெற்றி பெறலாம் என்றும் கருதியே மகிழ்ச்சியடைகின்றோம்.

நிற்க; இனி சம்மத வயதைப் பற்றிய விஷயம் ஒன்றுண்டு, ஆனால் நமக்கு அதைப் பற்றி அவ்வளவு கவலையில்லை. அது வயித்தியர்களுடைய



RangaRakes

விஷயமும் அவர்களது கடமையுமாகும். ஆனால் குழந்தை மணமே சுயமரியாதையை பொறுத்ததாகும். தவிர பார்ப்பனர்களும், சம்மத வயதைப் பற்றி தங்களுக்கு அதிக கவலை இல்லையென்று சொல்லிவிட்டார்களாதலால் அது எக்கதியை வேண்டுமானாலும் அடையட்டுமென்றே சொல்லுவோம். அன்றியும் அது ஒரு இயற்கை உணர்ச்சியாகும். அதை எப்படி நடத்துவதென்று மனோதத்துவ ஆராய்ச்சியை சேர்ந்த விஷயமுமாகும். அதை வைத்தியர்களும் அரசாங்கமும் கவனித்து ஒழுக்கத்திற்கும் சுயமரியாதைக்கும் உண்மையான சுதந்திரத்திற்கும் மாறுபாடில்லாத வகையில் எப்படிச் செய்து கொண்டாலும் நமக்கு ஆட்சேபனை இல்லை.

இனி அடுத்தாற்போல் சட்டம் செய்ய வேண்டிய விஷயம் பிறவியில் ஆண் பெண், ஆகிய பல வித்தியாசம், உயர்வு, தாழ்வு ஆகிய ஜாதி வித்தியாசங் களையும் ஒழிப்பதற்கு வேண்டிய சட்டம் ஏற்படுத்த வேண்டியதேயாகும். இதை எல்லாவற்றிற்கும் முன்பாகவே செய்திருக்க வேண்டியதானாலும் இதற்கும் மதமும் சாஸ்திரமும், கடவுளுமே முட்டுக் கட்டையாய் இருந்து வருவதால் ஏதாவது ஒருவகையில் மேற்கண்ட முட்டுகட்டை ஒழிந்தால் மற்றவைகளுக்கும் அவைகளை ஒழிப்பது சுலபமாகி விடுமாதலால் அதையும் ஒருவிதத்தில் நன்மையாகவே கொள்ளலாம். பெண்களுக்கு வாழ்க்கையிலும் சொத்துக்கள் அனுபவத்திலும் சம உரிமை வழங்கப்பட வேண்டியது அறிவும் மனிதத்தன்மையுமுள்ள மக்களுக்கு மிகவும் யோக்கியமான காரியமாகும். ஆகையால் அதை உடனே கவனிக்க வேண்டுமாயும் தீண்டாமையைப் பற்றிக் கவனிக்க வேண்டுமாயும் இந்திய சட்டசபை அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்வதுடன் சர்க்காரையும் சாரதா மசோதாவுக்கு அனுகூலம் செய்தது போலவே நல்ல பெயர் வாங்க வேண்டுமாகவும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 29.09.1929**



tamilnavarasam.com

# நமது மாபெருந்தலைவர்களின் உருவப்படத் திறப்பு விழா

## தியாகராயர் ஞாபகக் கட்டிடத்தில் பெருங்கூட்டம்

தலைவரவர்களே! சகோதரர்களே! பெரியோர்களின் கட்டளையை ஏற்று கௌரவமடைய மனம் ஆசைப்படுகிறது. சர். தியாகராயருடன் நான் நட்பு பாராட்டியிருக்கவில்லை. ஆயினும் அவரையே தக்க பெரியார் எனக் கொண்டு அவர்பால் பக்தி கொண்டுள்ளேன். அவரை உண்மைத் தியாகி, வீரர் என்றே கூறுதல் பொருந்தும். உண்மையான தலைவர் என்று ஒருவரை குறிக்கவேண்டுமானால் அது செட்டியாரையே குறிக்கும் என்று நான் சொல்லுவேன். உண்மைத் தியாகி, தேசத் தொண்டர், தலைவர் என்று கூறுவதற்கு என்ன அடையாளம் என்றால், சாபங்களையும், வைதல்களையும், இழிவுரைகளையும் பார்த்து பயப்படாமலும் தங்கள் கொள்கைகளை வாபஸ் வாங்காமலும் தைரியத்துடன் தங்கள் காரியங்களை நடத்துபவர்களே உண்மைத் தலைவர்கள். சர். தியாகராயரை இங்கு தமிழ்நாட்டு ‘டயர்’ என்று கூட எதிரிகளால் கூறப்பட்டது. அவரை தேசத்துரோகி என்றெல்லாம் கூறினர். அவரின் வீடு புகுந்தும் அடிக்கத் தலைப்பட்டனர். இவ்வளவு கஷ்டங்களை யும் அவர் நேரில் அனுபவித்தனர். தேசத்துரோகி, டயர் என்ற இழிவுரை கட்கும், அடித்தல் போன்றவைகட்கும் சர். தியாகராயர் பயப்படாமல், பின் வாங்காமல், சிரித்துக் கொண்டே தம் காரியாதிகளை நடத்திக் கொண்டு போனார். இவ்வித தலைவர் தோன்றுவது அரிது. ஆனால் இப்படியில்லாமல் சமயத்துக்கேற்றபடி நடக்கும் தலைவர்களும் உண்டு. அவர்கள் தோன்றுவது சாதாரண இயற்கை. அவர்கள் வசவு வந்த காலத்தில் ஒளிவதும், புகழுரை வந்த காலத்தில் தலையை யசைத்தசைத்து அநுபவிப்பதும் சாதாரண இயற்கையே. இவர்களின் பேர் இவர்கள் காலமானதற்குள் காற்றோடு காற்றாகி விடும். ஆனால், மேற்கண்டபடி எதற்கும் பயப்படாமல் தான் கொண்ட கருமத்தை முடிக்கும் செயலானது இறந்த பின்னர் கூட இத்தகைய திறப்பு விழா போன்ற ஞாபகார்த் தக் காரியங்களைச் செய்யத் தூண்டுகிறது.



மக்களின் முன்னேற்றத்திலும், நாட்டின் நலனிலுமே அவர் தன் காலத்தைக் கடத்தினார். எவரும் தமக்கு வரும் பிரதியுபகாரங்களை ஒதுக்கித் தள்ளுவது வெகு கடினம்; ஆனால், அவர் அத்தகைய பிரதியுபகாரங்களைத் தள்ளி அதையும் தம் நண்பர்கட்கே அளித்து வந்தார். பிரதியுபகாரங்களை அலட்சியம் செய்வதும் தியாக புத்தியேயாகும். தென்னாட்டு மக்களுக்கென எடுத்த முயற்சியில் அவரைப் போன்றவர்கள் எவருமேயில்லை. அத்தகைய பெரியாரின் உருவப் படத்தைத் திறந்து வைக்கக் காரணம் என்ன? கற்பூர தீபம் காட்டி பூஜை செய்வதற்காகவாகவோ, அவரின் நன்மைக்கென பிரார்த்தனை கள் செய்வதற்காகவாவோ அன்று. அதையும் மூட பழக்க வழக்கம் என்றே நான் கருதுகிறேன். அப்படியிருக்க இவ்விழா ஏன்? அவரை நினைப்பதற் கும், அவரைப் பார்த்து நாம் முன்னேறவும், அவரின் பெருந்தொண்டுகளை ஞாபகத்திற்குக் கொணர்ந்து அவரைப் பின்பற்றி பாக்கி விட்ட வேலைகளைச் செய்வதற்கு மேயாகும். எனவே அத்தகைய பெருந்தியாகியின் படத்தை திறந்து வைக்கின்றேன்.

*குறிப்பு:- 24.09.1929 ஆம் நாள் தியாகராயர் ஞாபகக் கட்டிடத்தில் முப்பெருந் தலைவர்களாகிய சர்.தியாகராயர், பனகால் அரசர், நாயர் பெருமான் ஆகியவர்களின் உருவப்படத் திறப்புவிழாவில் சர்.தியாகராயர் படத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 29.09.1929**



RangaRakes
tamilnavarasam.com

## சுயமரியாதை

ராமனாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டையில் நாடார் சகோதரர்களின் நிர்வாகத்திலும் அவர்களது பொதுப் பணத்திலும், வெகு காலமாக ஒரு உயர்தரப் பாடசாலை நடந்துவரும் விபரம் அனேகருக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் அப்பள்ளியில் இதுவரை ஆதிதிராவிடர் பிள்ளைகளைச் சேர்ப்பதில்லை என்ற நிர்ப்பந்தம் இருந்து வந்ததுடன் அந்தப் படிக்கே சேர்க்காமலும் இருந்துவந்தார்கள். சில மாதங்களுக்கு முன்பு திரு. சௌந்திரபாண்டியன் அவர்களுக்கு ஜில்லா போர்ட் தலைவர் பதவி கிடைத்ததற்காக அருப்புக்கோட்டை மகாஜனங்களும் மற்றும் பல தனித் தனி வகுப்பாரும் அவரை பாராட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததில் அருப்புக் கோட்டை நாடார் சமூகத்தாரும் ஒரு தனியான விருந்தும் பாராட்டுக் கூட்டமும் செய்து உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தார்கள். அவ் வுபசாரப் பத்திரங்களுக்கு திரு.சௌந்திரபாண்டியன் பதிலளிக்கையில் மனித சமூகத்தில் சில வகுப்பாரைத் தாழ்த்தி கொடுமைப்படுத்தி வரப்படுவதை அடியோடு ஒழிக்க வேண்டியதே இது சமயம் மனிதனின் முதல் கடமை என்றும் அந்த வேலைக்கே பெரிதும் தனது எல்லாப் பதவிகளையும் உபயோகிக்கப் போவதாயும், ஆனால் அதில் தனக்கு சில கஷ்டங்கள் நாடார் சமூகத்தாராலேயே இருப்பதாகவும் சொல்லி, உதாரணமாக அருப்புக் கோட்டையில் உள்ள நாடார் ஹைஸ்கூலில் ஆதிதிராவிடப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளுவதில்லை என்கின்ற நிர்ப்பந்தமிருப்பதேதான் முக்கியமான தடையென்றும் கூறி, அதனால் தான் மிகுதியும் வெட்கமடைவதாயும் தன்னுடைய சமூகத்திலேயே இவ்வித கொடுமையிருந்தால் தன்னுடைய உத்தியோக ஓதாவில் மற்ற சமூகத்தாருக்குள் இருக்கும் கொடுமைகளை நீக்கும் படி சொல்ல தனக்கு எப்படி தைரிய முண்டாகுமென்றும், ஆகவே எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரத்தில் இவ்வருப்புக்கோட்டை பள்ளிக்கூடத்தில் இக்கொடுமை நீக்கப்படுகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு தனது வேலை சுலபமாகு மென்றும் அவசியம் செய்யவேண்டும் என்று தனது சமூகத் தலைவரை அடிபணிந்து கேட்டுக் கொள்ளுவதாகவும் சொன்னார். அதற்கிசைய அன்று அப்பள்ளிக்கூட நிர்வாகிகள் அவ்வித நிர்ப்பந்தத்தை நீக்கிவிட்டு ஆதி திராவிட மக்களை அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொண்டார்கள் . இது நமது நாட்டில் உள்ள தீண்டாமையும் உயர்வுதாழ்வும் ஒழிய ஒரு பெரிய அறிகுறியாகும் என்றே சொல்ல வேண்டும். இவ்வித அரிய காரியத்தைச் செய்த அருப்புக் கோட்டை நாடார் தலைவர்களை மனமாரப் பாராட்டுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 29.09.1929**



RangaRakes

## கதர் புரட்டு

கதர் துணியின் விலை விஷயமாகவும், கதர் போர்டார் அதிக விலை வைத்துக் கொள்ளை லாபம் சம்பாதிப்பதின் மூலமாகவும் 'தமிழ்நாடு' பத்திரிகையில் ஒரு கதர் தொண்டருக்கும், திரு.ஸி.ராஜகோபாலாச்சாரிக்கும் வாதம் நடந்து வருவதை, ஒரு நண்பர் நமக்கு அனுப்பி நமது அபிப்பிராயத்தை கேட்டிருக்கின்றார். நமக்குத் தெரிந்த வரையில் மேற்படி இரு கனவான்கள் கணக்கிலும் பிசகு இருக்கின்றதென்பதே நமது அபிப்பிராயம். அதாவது இரண்டு பேர்களுக்கும் உண்மையான அசலுக்கு மேல் அதிகப்படுத்தி கணக்கு போடப்பட்டிருக்கின்றது. அதாவது பஞ்சு நூல் நூற்பதற்கு ராத்தல் ஒன்றுக்கு 5 அணா தான் கூலி கொடுக்கப்பட்டு வருகின்றது. சில இடங்களில் 4 அணாவும் கொடுக்கப்பட்டு வருகின்றது. நெய்வதற்கும் 54 இஞ்சுக்கு கெஜம் ஒன்றுக்கு 2 $^{3}/_{4}$ முதல் 3 அணாவே கொடுக்கப்பட்டு வருகின்றது. கெஜத்திற்கு 2$^{1}/_{2}$ அணாவும் கொடுக்கப்பட்டு வருகின்றது. 2$^{1}/_{2}$ அணா அல்லது 2 $^{3}/_{4}$ அணா வீதம் கொடுப்பதாயிருந்தால் இப்பொழுது ஈரோட்டைச் சுற்றிலும் கோபியைச் சுற்றிலும் சுமார் 1000, 2000 தரிகள், தரி ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் அட்வான்ஸ் கட்டிவிட்டு வருஷக்கணக்காக நெய்து கொடுக்க ஒப்பந்தம் பேசிக் கொள்ள காத்திருக்கின்றார்கள். இந்தப்படிக்கே சுமார் இரண்டு வருஷம் நெய்து கொண்டும் வந்தார்கள்.

கரூருக்கு பக்கத்தில் சில கிராமங்களில் ராத்தல் ஒன்றுக்கு 4-அணா வீதம் நூற்றுக் கொடுத்துக் கொண்டும் இருக்கிறார்கள். லாபம் அதிகமாய் வருவதை உத்தேசித்து நெசவுக்குக் கூலி அதிகமாய் கொடுத்து வருகின்றார்கள். சாதாரணமாக 54 இஞ்சு கதர் 10 கெஜம் கொண்ட பீசு அதிக கஞ்சி இல்லாமல் கண்டிப்பாய் 4 ராத்தல் இடைக்குமேல் இருக்கவே இருக்காது. இதற்கு ஆதாரமாக படியூர் புளியம்பட்டி, ஊத்துக்குளி முதலிய இடங்களில் நெய்யப்படும் துணிகளை இன்றும் பார்க்கலாம்.

இன்று கருங்கண்ணி சாதாரண பஞ்சு விலை அதாவது திருப்பூர் கதர் வியாபாரிகள் வாங்கும் விலை 520 ராத்தல் பாரம் 1-க்கு, 215, 220-க்கு மேல் போவதே இல்லை. அப்படியானால் ராத்தல் ஒன்றுக்கு ரூ. விலை 0-6-8$^{1}/_{4}$ அடக்கமாகும்.

எனவே 54 இஞ்சு 10 கெஜம் பீசு ஒன்றுக்கு பஞ்சு சேதாரம் உள்பட ராத்தல் 4$^{1}/_{4}$ க்குக் கிரயம் ரூ. 1-12-6 மேல்படி நூலுக்கு நூற்புக்கூலி ராத்தல்



tamilnavarasam.com

ஒன்றுக்கு 5 அணா ரூ. வீதம் 1-5-3. நெசவுக்கூலி கெஜம் 1-க்கு $2\,^{3}/_{4}$ 1-11-6 அணா வீதம் ஆக ரூ.4-13-3. கெஜம் 1-க்கு 3அணா கூலி வீதமானால் 1-14-0. எனவே 54 இஞ்சு அகலம் 10 கெஜம் பீசு ஒன்றுக்கு ரூ. 4-13-3 அல்லது ரூ. 4-15-9 அசலாகும். ஒரு சமயம் ஆள் கூலி, கணக்குப்பிள்ளைக் கூலி மற்றும் சில்லரை செலவு போட்டாலும் கண்டிப்பாய் பீசு ஒன்றுக்கு ரூ. 5-4-0 மேல் அடங்குவதற்கு நியாயமே கிடையாது. ரூபாய்க்கு ஒரு அணாவீதம் செலவு போட்டு வெளி ஊர்களில் விற்பதானாலும் ரூ.5-9-0 அல்லது அதிக லாபம் வைத்தாலும் ரூ. 5-12-0க்கு மேல் விற்க வேண்டிய அவசியமே இல்லை. ஆனால் சென்ற வாரத்தில் நாம் ஈரோட்டில் கதர் இல்லாமல் சேலத்திற்கு சொல்லியனுப்பி கதர் வாங்கிக் கொண்டு வந்ததில் 54 இஞ்சு அகலம் 5 கெஜம் ஒரு ஜதை வேஷ்டிக்கு சேலம் காங்கிரஸ் கதர் டிப்போவில் ரூ.3-11-0 கொடுத்து வாங்கிவர வேண்டியதாயிற்று அப்படியானால் 10 கெஜத்திற்கு ரூ.7-6-0 வீதம் விற்கின்ற விலையாகின்றது. ரூ.5-12-0க்கு விற்க வேண்டிய வேஷ்டி ரூ. 7-6-0 வீதம் விற்றால் ஒரு பீசுக்கு ரூ. 1-10-0க்கு மேல் மனதார அதிக லாபம் கொடுக்க வேண்டியதாக இருக்கின்றது. ஏற்கனவே மில் துணி 54 இஞ்சு கெஜம் 5 அணாவுக்கும் 6 அணாவுக்கும் தாராளமாய் கிடைக்கும் போதும் இந்தப்படி விற்றும் இந்திய மில் வியாபாரிகள் தங்கள் முதலுக்கு 100-க்கு 20, 25 வீதம் லாபம் சம்பாதிக்கும் போதும் கதருக்கு ஊரார் பணங்களை 10, 20 லட்சக்கணக்காக வசூல் செய்து அவற்றிற்கு வட்டியில்லாமலும் அசலிலும் கதர் இலாகா நிர்வாகத்திற்கென்று வருஷம் ஒரு லட்சம் 50 ஆயிரம் ரூபாய்கள் என்று கைமுதல் நஷ்டமுமடைந்து கொண்டு மக்களை கெஜம் ஒன்றுக்கு 11 அணா 12 அணா வீதம் கிரயம் போட்டு வாங்கிக் கட்டும்படி சொல்வதென்றால் இதில் ஏதாவது பகுத்தறிவு இருக்கின்றதா என்றுதான் கேட்கின்றோம். நூற்கின்றவர்களுக்கு கூலி கட்டவில்லை என்று ரூபித்தால், அப்போது "கூலிக்கு நூற்பதுவல்ல கதர் திட்டம். ஒவ்வொருவரும் ஓய்ந்த நேரத்தில் சொந்தத்தில் நூற்க வேண்டும் என்றும் அந்த அர்த்தத்தில்தான் கதரில் சுயராச்சியம் இருக்கின்றது" என்றும் சொல்லுவதும், சொந்தத்தில் நூற்க முடிவதில்லை என்று ரூபித்தால் "ஒரு அணா கூலியாவது கிடைப்பதற்கு வேறு வேலையில்லை. ஆகையால் நடந்தவரை நடக்கட்டும்" என்பதும், இம்மாதிரி சமயத்திற்கேற்ற விதமாகப் பேசி மக்களை ஏமாற்றுவதாயிருக்கின்றதே ஒழிய வேறில்லை. அன்றியும் திரு.காந்தியும் திரு.பஜாஜும் தென் இந்தியாவிற்கு வந்திருந்த பொழுது சில சோம்பேறிப் பார்ப்பனர்களை சாஸ்திரிகள் என்னும் பேரால் ஒன்று சேர்த்துக் கூட்டி திரு.காந்தி முன் உட்காரவைத்து அவர்களுக்கு சாஸ்திரி என்றும், கனபாடிகள் என்றும் பெயர் சொல்லி கையினால் துடையில் நூல் திரித்துக் காட்டி "சாஸ்திரிகள் எல்லாம் காந்தியின் கதர் திட்டத்தைப் பின்பற்றுகின்றார்கள்" என்று திரு.காந்தியையும் பஜாஜையும் நினைக்கும்படி செய்து வசூலான தொகைகளை இங்கேயே தட்டிப் பிடுங்கிக் கொண்டதல்லாமல், வேறு ஏதாவது அனுபோக சாத்தியமான காரியமோ யுத்திக்கு பொருத்தமான கருத்தோ இதில் இருக்கின்றதா என்றுதான் கேட்கின்றோம். தவிர திரு. காந்தியவர்கள் இனியும் தனக்கு கதரிலும் ராட்டினத்திலும் நம்பிக்கை



இருக்கின்றது. அதன் மூலம்தான் சுயராச்சியம் வரும் என்று சொல்லிக் கொண்டே இருப்பதைப் பார்த்தால் இனியும் இந்த மாதிரி எத்தனை நாளுக்கு மக்கள் 5 அணா துணிக்கு 12 அணா விலை கொடுத்து வாங்கிக் கட்டிக் கொண்டு இருப்பது என்பது நமக்கு விளங்கவில்லை. தேசிய நேரமும், தேசிய பணமும், தேசிய ஊக்கமும் இந்தக் கதர் திட்டத்தினால் பாழாய்ப்போய்க் கொண்டிருப்பதை இனியும் எத்தனை நாளைக்கு பார்த்துக் கொண்டிருப்பது என்பதுவும் நமக்கு விளங்கவில்லை. விலையில் 5 அணா துணிக்கு 11 அணாவும் துணி நயத்தில் 40 நெம்பருக்கு பதில் 10 நெம்பரும் உபயோகத்தில் 5 மாதம் வருவதற்கு பதில் 3 மாதத்தில் கிழியும் மாதிரியாகவும், சுமையில் ஒன்றுக்கு மூன்றாகவும், பிரயாணத்திற்கு பெருத்த அசௌகரிய மாகவும் இருப்பதை ஆதரிப்பது தான் தேசியம் என்றால் திரு.காந்தியைப் போலும், திரு.ராஜகோபாலாச்சாரியைப் போலும் உள்ள 'மகாத்மாக்களும், மகான்களும்' தவிர மற்றபடி வேறு யாராலாவது இந்த தேசியத்தை பின்பற்ற முடியுமா என்றும் கேட்கின்றோம். நம்மைப் பொருத்தவரை பழக்கத்தினாலும் உயர்ந்த வேஷ்டி வாங்கும்படி நேரிடுவதில் ஏற்படும் செலவினாலும் கதரை விடமுடியாத நிலைமையில் இருக்கின்றோம். ஆனாலும் நம்மைப் போன்ற மற்ற நடுத்தர மக்களுக்கும் மூன்றாந்தர மக்களுக்கும் இது சாத்தியமாகுமா? என்பதை யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம். இதில் உள்ள பொருளாதாரத் திட்டமும், வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கின்றதென்பதும் இந்த இலாகா நிர்வாகத்தில் கலந்திருக்கும் ஆசாமிகளுக்கு பொருளாதார வரவும் வேலையில்லாத பார்ப்பனர்களுக்கு வேலை கிடைத்துத் தின்று கொழுப்பது மல்லாமல் வேறு ஒன்றும் இல்லை என்பது நமது உறுதியான அபிப்பிராயமாகும். எனவே திரு.காந்தி அவர்களும் அவரது பிரதம சிஷ்ய கோடிகளும் கண்ணியமாய் இந்த மாதிரி கதர் இலாக்காவை மூடிவிட்டு இந்தப் பணச் செலவைக் கொண்டும் நேரச் செலவைக் கொண்டும் வேறு ஏதாவது பொது மக்களுக்கு நஷ்டமில்லாத கைத் தொழில் வளர்ச்சியில் ஈடுபடவோ அல்லது தீண்டாமை ஒழிவு, விதவைகள் துயரம் ஒழிவு என்பது போன்ற துறைகளில் ஈடுபடவோ செய்தால் நாட்டிற்கும், மனித சமூகத்திற்கும், நாணயத்திற்கும் நல்ல பயனை அளிக்கும். அப்படிக்கில்லாமல் எல்லா குற்றமும், பலவீனமும், நஷ்டமும் மனதாரத் தெரிந்தும் மேற்கொண்டும் அதையே செய்து கொண்டு இருப்பதென்றால் இவ்வியக்கத்தை வேண்டுமென்றே செய்யும் வெறும் புரட்டு என்று சொல்லுவதுடன் கதர் இயக்கம் என்பதை சங்கராச்சாரி மடம் பண்டார சன்னதி மடம் என்றும் சோம்பேரி மடங்கள் போன்ற திரு.காந்தி மடம் என்றுதான் சொல்ல வேண்டும் என்று சொல்லுவதற்கு வருந்துகின்றோம். ஏனெனில் 1922 முதல் 1925 முடிவு வரையில் கதரில் முழுநம்பிக்கை வைத்து திரு.காந்தி சொன்னவைகளையெல்லாம் அப்படியே நம்பி நாமும் சென்ற விடங்களுக்கெல்லாம் ராட்டினத்தைத் தூக்கிக் கொண்டு இரவும் பகலுமாய் நூற்றதுடன் படுக்கைக்குப் பக்கத்தில் இராட்டினத்தையும் மெழுகு திரி விளக்கையும் வைத்துக் கொண்டு மத்தியில் விழிப்பானால் மறுபடியும் தூக்கம் வரும்வரை நூற்றதுடன் நூல்



RangaRakes tamilnavarasam.com

சந்தாவையும் தவறாமல் அனுப்பிவந்ததோடு அதிகமாக நூற்றதால் கையில் இரத்த ஓட்டம் கெட்டு வலியெடுத்து அதற்காக திரு.காந்தியவர்களுக்கெழுதி, 2, 3 மாதத்திற்கு நம்மை நூல் சந்தா மெம்பரிலிருந்து விதிவிலக்கு செய்யும்படி கேட்டு அந்தப்படியே விதிவிலக்கும் வாங்கி சென்னைக்குச் சென்று டாக்டர் குருசாமியிடம் வைத்தியம் செய்து மறுபடியும் ஊரெல்லாம் சுற்றி சர்க்கார் சங்கங்கள் ஏற்படுத்தி கதர் கடைகளும் ஏற்படுத்தி உற்பத்தி சென்டர்களும் கண்டுபிடித்து ஏற்படுத்தி, திருப்பூர் காங்கிரஸ் காதி வஸ்திராலயத்தையும் நாமே உண்டாக்கி நேரில் மேற்பார்வை பார்த்து மற்றும் புதுப்பாளையம் காந்தி ஆச்சிரமத்தையும் நமது கையாலேயே திறந்து வைத்து அதற்கு வேண்டிய உதவியையும் கூடுமான அளவு செய்து, மற்றும் தனிப்பட்ட நபர்களுக்காக பல கதர் ஸ்தாபனங்களையும் கதர் கடைகளையும் திறந்து வைத்து, ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களை எல்லாம் அதாவது பனகல் அரசர், ராமசாமி முதலியார், எம்.டி. சுப்பிரமணிய முதலியார் முதலியவர்களையெல்லாம் கதர் கட்டச் செய்து மற்றும் இது போன்ற பல காரியங்களை கதருக்காகவென்றே செய்து கதர் விஷய பிரசாரத்தால் 124 ஏ முதலிய பிரிவுகள்படி சர்க்காரால் வழக்கும் தொடரப்பட்டு மற்றும் எவ்வளவோ விதத்தில் மனதார உழைத்துப் பார்த்த பிறகே அதிலுள்ள பலனற்ற தன்மையையும் சிலர் தங்கள் சுய நலத்திற்காக அந்த ஸ்தாபனத்தை உபயோகித்துக் கொண்டிருப்பதுடன் பொதுவில் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு நேர் விரோதமாக அந்த ஸ்தாபனத்தை உபயோகப்படுத்தப்பட்டு வருவதையும், இவ்வளவிற்கும் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதார் பணமே வீணாவதையும் மனதாரப் பார்த்த பிறகே கதர் புரட்டைப் பற்றி வெளியில் தைரியமாய் எடுத்துச் சொல்லத் துணிந்தோமே தவிர, மற்றபடி ஒன்றும் அறியாமலோ, பிறர் சொல்வதைக் கேட்டுக் கொண்டோ அனுபவமில்லாமலோ, ஒன்றும் சொல்ல வரவில்லை என்பதையும் பொதுஜனங்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆனால் இதைப் பார்த்தவுடன் பார்ப்பனரல்லாத சில கிளிப்பிள்ளை தேசியவாதிகள் ஆத்திரம் பொங்கி நம்மீது பாய்ந்தாலும் பாய்வார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆனாலும் அப்படிப்பட்டவர்கள் தங்கள் சுயபுத்தியை கொண்டு நடுநிலைமையிலிருந்து யோசித்துப் பார்க்கும் சந்தர்ப்பத்தை அடையும்போது நாம் சொன்னது சரி முற்றும் சரி என்பதை உணர்வார்கள் என்கின்ற தைரியம் நமக்கு உண்டு. எப்படி எனில் முதன்முதல் ஒத்துழை யாமையை அழிக்க ஆரம்பித்த - சுயராஜ்யக் கட்சியையும் அதற்காக பார்ப்பனர் கையாளாக இருந்த திரு.சி.ஆர்.தாசையும் மற்றும் சில பார்ப்பனர்களையும் நாம் தாக்கும்போது பலருக்கு வெகு ஆத்திரம் வந்ததானாலும் ஒரு வருஷம் பொறுத்து யோக்கியர் எல்லோரும் நாம் சொன்னது முற்றிலும் சரியென்று உணர்ந்தார்கள். பிறகு பெல்காம் காங்கிரசில் ஒத்துழையாமையை காங்கிரஸ் கைவிட்டதிலிருந்து காங்கிரசை தாக்க ஆரம்பித்த போதும் “காங்கிரஸ் இருப்பதா? இறப்பதா?” என்று பெரிய எழுத்தில் விளம்பரம் செய்து பார்ப்பனர் கள் நம் மீது பாமர மக்களை ஏவி விட்டதும் பிறகு ஒரு வருஷத்திற்குள் முக்கியமான மனிதரெல்லாம் நாம் சொன்னது சரியென்று ஒப்புக்கொண்டு





காங்கிரசை விட்டு ஓடிவிட்டார்கள். மற்றும் ஜஸ்டிஸ் கட்சியை நாம் ஆதரிக்கத் தொடங்கிய போதும் இதே மாதிரி நம்மை ‘ஜஸ்டிஸ்’ கட்சியில் தேசத் துரோக கட்சியில் சேர்ந்துவிட்டதாகத் தூற்றி கடைசியாக திருவாளர்கள் கலியாணசுந்தர முதலி யார், வரதராஜுலு, சிதம்பரம் பிள்ளை போன்றவர்கள் எல்லாம் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து விட்டதாக பொதுக் கூட்டத்தில் சொன்னதும் மற்றும் அநேகர் படல் படலாய் சேர்ந்து வருவதும் மற்றும் திரு.காந்தி தென்னாட்டில் வருணாச் சிரமப் பிரசாரம் செய்த காலத்தில் அவரைத் தாக்கின காலத்திலும் இதே மாதிரி நம்மீது பலர் குற்றம் சொல்லியதும் இப்போது வெகுபேர் நாம் சொன்னதை ஒப்புக்கொண்டதோடு தாங்களும் அதைப் போல சொல்லி வருவதும் கடைசியாக மதவிஷயத்திலும் இந்து மதம் என்பதின் புரட்டையும் அது சம்பந்தமான சாஸ்திரம், புராணம், இதிகாசம் ஆகிய புரட்டுகளையும் வெளியாக் கினபோதும் கடவுள் போச்சு, கடவுளைக் கண்டவர் போச்சு, மதம் போச்சு, மத ஆச்சாரிகள் போச்சு, சமயம் போச்சு, சமய ஆச்சாரிகள் போச்சு என்று கூப்பாடு போட்டவர்கள் இப்போது வாய் திறவாமல் மூலையில் பதுங்கி யிருப்பதும், லட்சக்கணக்கான மக்கள் அதையே சொல்லுவது வகுப்புவாரி பிரதிநிதித்து வத்தைப் பற்றி சொன்ன காலத்திலும், தேசம் போச்சுது, தேசியம் போச்சுது, ஒற்றுமை போச்சுது என்று கத்தினவர்கள், இப்போது வகுப்பு வாரித் தொகுதி களில் தேர்தலுக்கு நிற்க ஆசைப்படுவதும், உத்தியோகத்திலும், வகுப்பு விகித சுதந்திரத்தில் உத்தியோகம் பெறுவதும் அதுவே சர்க்கார் கொள்கையாயிருப்ப தும் மற்றும் செங்கல்பட்டு மகாநாட்டைக் கண்டு பயந்தவர்கள் அம் மகாநாட்டுத் தீர்மானங்களில் பலவற்றை தங்கள் தங்கள் சொந்த காரியங்களில் நடத்தி வைக்க முயற்சிப்பதும், சிலவற்றை பிரசாரம் செய்வதும் சில சுதேச அரசாங்கங்கள் அவற்றிற்காக சட்டம் செய்ய வேண்டும் என்று எதிர் பார்ப்பதும் செய்ததைப் பார்த்து பாராட்டுவதையும் பார்த்து வருகின்றோம்.

எனவே, இதுவரை நாம் சொல்லிவந்த எவற்றையும் ஆரம்பத்தில் தப்பாய் கருதியிருக்கலாமானாலும் மொத்தத்தில் பொது மக்கள் ஆட்சேபித் ததாகவோ தள்ளிவிட்டதாகவோ எதிர்பிரசாரம் செய்து மக்களிடை நம்மீது வெறுப்பை உண்டாக்குவதில் வெற்றி பெற்றதாகவோ சொல்வதற்கில்லாமல் இருந்து வந்திருக்கின்றோம். ஆகவே இதே முறையில் கூடிய சீக்கிரத்தில் இந்த கதர் புரட்டையும் மக்கள் மனமார அறிந்து நாம் சொல்லுவதை ஒப்புக் கொள்ளுவதுடன் இதுவரை தாங்கள் ஏமாந்து இருந்ததற்கும் வருந்துவார் களென்றே நினைக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 06.10.1929**

RangaRakes

tamilnavarasam.com

# காந்தி ஜயந்தி புரட்டு

இவ்வாரம் 2-10-29 தேதி புதன்கிழமை தமிழ்நாட்டில் பல இடங்களில் திரு.காந்தியின் சஷ்ட்டி பூர்த்தி தின திருவிழா என்னும் காந்தி ஜயந்தி புரட்டு ஒன்று பார்ப்பனர்களால் வெகு அக்கரை உள்ளவர்கள் போல் கொண்டாடப் பட்டது. அவைகளை ஒன்றுக்கு இரண்டு பத்து வீதம் பத்திரிகைகளில் விளம்பரமும் செய்யப்பட்டு இருக்கின்றது. இதன் இரகசியம் என்ன வென்று பார்த்தால் கடுகளவு அறிவுள்ளவர்களுக்கும் உண்மை விளங்காமல் போகாது. அதாவது இந்தப் பார்ப்பனர்கள் காந்தி ஜயந்தியை திரு.காந்தி மீதுள்ள அன்புக்கும் பக்திக்கும் மரியாதைக்கும் அறிகுறியாக கொண்டாடினார்களா அல்லது திரு.காந்தியின் பெயரைச் சொல்லிக் கொண்டு தங்கள் ஆதிக்கத்திற்கு ஆதாரமாக பார்ப்பன விஷயத்தை பாராட்டக் கொண்டாடினார்களா? என்பது விளங்காமல் போகாது. தென்னாட்டுப் பார்ப்பனர்களுக்கு எப்போதாவது திரு.காந்தியிடம் மரியாதையோ பக்தியோ இருந்ததாக யாராவது சொல்ல முடியுமா? எந்தப் பார்ப்பனர் திரு. காந்தியைப் பிடித்து சிறையில் அடைக்கும் படிக்கும் அந்தப்படி அடைக்காவிட்டால் அராஜகம் பெருகி நாடும் சர்க்காரும் அழிந்துபோகும் என்று சர்க்காருக்குச் சொல்லி சர்க்காரிடம் மகாப்பட்டம் வாங்கினாரோ, அந்தப் பார்ப்பனராகிய திரு.சீனிவாச சாஸ்திரியாரும், எந்தப் பார்ப்பனர் காந்தி அரசியலுக்கு லாயக்கில்லை என்று சொன்னாரோ அந்தப் பார்ப்பனராகிய திரு.சத்தியமூர்த்தியும், எந்தப் பார்ப்பனர் திரு.காந்தியை பயித்தியக்காரர் என்று சொன்னதோடு அவரது இயக்கம் சட்டவிரோதமானது என்று சர்க்காருக்கு யோசனை சொன்னாரோ அந்தப் பார்ப்பனராகிய திரு.சீனி வாசய்யங்காரின் உண்மை சிஷ்யராகிய திரு. முத்துரங்கமும், திரு.காந்தியின் கொள்கையை ஒழிக்கப் புறப்பட்ட எதிரிகளுக்கு அடிமையாயிருந்தவரும் திரு.காந்திக்கு மண்டையில் மூளையில்லை என்று சொன்னவருமான திரு.வரத ராஜுலுவும் மற்றும் இவர்களது சிஷ்யகோஷ்டிகளும் முக்கியமாயிருந்து காந்தி ஜயந்தியை சென்னையில் கொண்டாடி இருப்பதுடன் வெளியிடங்களிலும் மேல்கண்ட கூட்டத்தைச் சேர்ந்த வக்கீல் பார்ப்பனர்களும் அவர்களது குமாஸ்தாக்கள் கட்சிக்காரர்களுமே முக்கியமாயிருந்திருக்கின்றார்கள். இந்த கூட்டத்திற்கு இப்போது திரு.காந்தியிடம் ஏற்பட்ட அபிமானத்திற்கும் பக்திக்கும் காரணம் என்ன என்பது வேடிக்கை விஷயமாகும்.

இவர்கள் ஒன்றாய் திரு.காந்தி செல்வாக்கில் இருந்த காலத்தில் அவர்களை உண்மையில் பின்பற்றினவர்களாகவாவது இருந்திருந்தாலும் அல்லது அவர் இப்போது மூலையில் அடங்கிவிட்டாலும் அவருடைய அப்போதைய கொள்கையையாவது அல்லது இப்போதைய கொள்கையை யாவது பின்பற்றுகின்றவர்களாகவாவது இருந்தாலும் ஒரு விதத்தில் காந்தி ஜயந்தி கொண்டாட யோக்கியதை உடையவர்கள் என்று சொல்லலாம்.

அப்போதும் கீழ்ப்படியாமல், இப்போதும் ஏற்றுக் கொள்ளாமல் மூலையில் உட்கார வைத்து ஜயந்தி கொண்டாடுவது எதற்கு சமானம் என்று பார்க்கப் போனால் புத்தரை நாஸ்திகர் என்று பழி சுமத்தி அவர் கொள்கையை அடியோடு அழித்து நாட்டில் செல்வாக்கில்லாமல் செய்துவிட்டு புத்தர் 'மகா விஷ்ணு'வின் பத்தாவது அவதாரம் என்று புராணங்கள் எழுதிவைத்து வணங்கி வந்ததைத்தான் சமானமாகச் சொல்லலாம். இந்தத் தமிழ் நாட்டில் ஒரு பார்ப்பனராவது திரு.காந்தி அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளுகின்றார் என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம். உதாரணமாக சாரதா மசோதாவுக்கு ஆதரவளித்ததில் பெண்களுக்கு 18 வயதும் ஆண்களுக்கு 24 வயதும் கல்யாண வயதாயிருக்க வேண்டும் என்று சொன்னதை எந்தப் பார்ப்பனர் ஒப்புக் கொண்டார் என்று கேட்கின்றோம். தீண்டாமை ஒழிந்தா லல்லாது நமக்கு சுயராச்சியம் கிடைக்காதென்றும், தீண்டாமையை அடியோடு ஒழிக்காவிட்டால் நாம் சுயராச்சியத்திற்கு அருகரல்லவென்றும் சொன்னதை எந்தப் பார்ப்பனராவது ஒப்புக்கொண்டு தீண்டாமையை ஒழிக்க முயற்சித்தாரா? முயற்சிக்கிறாரா? முயற்சிக்கப்போகிறாரா? என்று கேட்கின்றோம். கோவில் களில் தீண்டப்படாதாரை விடாவிட்டால் அது மிகவும் அக்கிரமம் என்று சொன்னாரே, அதை எந்தப் பார்ப்பனராவது ஒப்புக் கொண்டு கோயிலுக்குள் விட்டார்களா என்று கேட்கின்றோம். விதவைகளுக்கு மறுமணம் செய்யுங்கள் என்றும் மறுமணம் செய்யப்படாத விதவைகள் வீட்டைவிட்டு ஓடிப்போய் யாரையாவது கல்யாணம் செய்து கொள்ளுங்கள் என்றும் சொன்னதை எந்தப் பார்ப்பனராவது கேட்டார்களா என்று கேட்கின்றோம்.

மற்றும் காங்கிரஸ் விளையாட்டுப் பிள்ளைகள் கூட்டம் என்றும், பூரண சுயேச்சை என்பது பயித்தியக்காரத்தனமென்றும் சொன்னதை யாராவது எந்தப் பார்ப்பனராவது மதித்தார்களா? அன்றியும் கோயில்களில் கடவுள்கள் இல்லை என்றும், கோயில்கள் விபசார விடுதிகள் என்றும் சொன்னதை யாராவது மதித்து எந்தக் கோயில்களை யாராவது இடித்தார்களா அல்லது அடைத்தார்களா என்று கேட்கின்றோம். அன்றியும் லாகூர் காங்கிரசில் ஒரு காரியமும் ஆகப் போவதில்லை; காங்கிரசியக்கமும் ஒழுங்காயில்லை; ஆதலால் நான் காங்கிரஸ் தலைமை ஒப்புக் கொள்ளமாட்டேன் என்று சொன்னதற்கு யாராவது பதில் சொல்லவோ அல்லது காங்கிரசை விட்டு வெளிவரவோ அல்லது காங்கிரசின் கொள்கைகளைத் திருத்தவோ ஒப்புக் கொண்டார்களா என்று கேட்கின்றோம். கடைசியாக திரு.காந்தி இன்னமும் தனக்கு ஒத்துழையாமையில்தான் நம்பிக்கை இருக்கின்றது என்று அடிக்கடி சொல்லி வருகின்றாரே! இதையாவது எந்தப் பார்ப்பனராவது கேட்டு உத்தியோகத்தை விடவோ சட்டசபையை விடவோ,



RangaRakes

tamilnavarasam.com

பட்டத்தை விடவோ, பள்ளியை விடவோ, வக்கீல் வேலையை விடவோ, சம்மதித்தார்களா என்றும் கேட்கின்றோம். திரு.காந்தி சொல்வதில் ஒன்றைக்கூட கேட்காமல் அவரை பயித்தியக்காரரென்றும், முட்டாள் என்றும், மூளை இல்லை என்றும், அரசியலுக்கு லாயக்கில்லை என்றும், அராஜகன் என்றும், சட்ட விரோதி என்றும் மற்றும் அயோக்கியன், மடையன், போக்கிரி (கும்பகோணம் பம்பாய் முதலிய இடங்களில்) என்றும் சொல்லிவிட்டு அதுவும் சென்ற வாரத்தில் சொல்லிவிட்டு இந்த வாரத்தில் அதே பார்ப்பனர்களும் அவர்களது அடிமைகளும் கூலிகளும் சேர்ந்து காந்தி ஜயந்தி கொண்டாடுவதென்றால், இதைப் போன்ற வஞ்சகமும் சூட்சியும் வேறு உண்டா என்றுதான் கேட் கின்றோம்.

ஒரு காரியத்திற்காக காந்தி ஜயந்தி கொண்டாடப்பட்டது என்றால், அதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியது தான். அதாவது தென்னிந்தியாவில் வருணாச்சிரமப் பிரசாரம் செய்ததற்கும் இந்த ஜென்மத்தில் “சூத்திரன்” தனது வருண தர்மத்தைச் செய்தால் அடுத்த ஜன்மத்தில் “வைசியனாக”, அடுத்த ஜன்மத்தில் “க்ஷத்திரியனாக”, அடுத்த ஜன்மத்தில் “பிராமண”னாகலாம் என்று சொன்னதற்கும், மற்றும் ராமாயண, பாரத பிரசாரம் செய்ததற்கும் கதரின் பேரால் லட்சக்கணக்காக பணம் பிடுங்கி பார்ப்பனாதிக்கத்திற்கு செலவு செய்ய பார்ப்பனர்கட்கு இடம் கொடுத்துவிட்டுப் போனதற்கும் வேண்டுமானால் பார்ப்பனர்கள் காந்தி ஜயந்தி கொண்டாடலாம் என்பதை நாம் ஒப்புக் கொள்ளு கின்றோம். ஆனால் சுயமரியாதை உள்ள பார்ப்பனரல்லாதார்கள் அதில் கலந்து கொண்டதற்கு நாம் வெட்கப்படாமலிருக்க முடியவில்லை. இன்றைய தினமும் நமது நாட்டில் நடக்கும் அனேக ஜயந்திகளும் பண்டிகைகளும் திருநக்ஷத் திரங்களும் உற்சவங்களும் பார்ப்பனாதிக்கத்திற்கும் பார்ப்பனரல்லாதார் இழிவுக்கும் அறிகுறியாக நடத்தப்படுகின்றது என்பதை பலர் அறிந்தும் அவ்வித பண்டிகைகளையும் உற்சவங்களையும் இன்னமும் அறிவும் உணர்ச்சி யுமற்ற பார்ப்பனரல்லாதார்கள் செய்து கொண்டுதான் வருகின்றார்கள். அது போலவே காந்தி ஜயந்தியும் கொண்டாடப்பட்டது என்றுதான் நாம் வருத்தத் துடன் சொல்ல வேண்டியிருக்கின்றது. எனவே இனியாவது பகுத்தறிவும் சுயமரியாதை உணர்ச்சியும் உள்ள பார்ப்பனரல்லாதார்கள் இம்மாதிரியான பார்ப்பன சூட்சியிலும் வஞ்சகத்திலும் விழாமலிருக்க எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.10.1929**



# நெல்லூர் மகாநாடு

இம்மாதம் 5, 6-ந் தேதிகளில் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நெல்லூரில் பார்ப்பனரல்லாதார் மகாநாடு என்னும் தென் இந்திய நல உரிமைச்சங்க இயக்கத்தின் 11-வது மாகாண மகாநாடு, கூடிக்கலைந்து விட்டது. இந்த மகாநாடானது 1927வது வருடம் ஜனவரியில் மதுரையில் கூடிய 10-வது மகாநாட்டுக்குப் பிறகும், அதையடுத்து கோயமுத்தூரில் கூடிய மாகாண விசேஷ மகாநாட்டிற்கு பிறகும், இரண்டு வருஷ காலம் பொறுத்து நெல்லூரில் கூட்டப்பட்டதாகும் என்றாலும் இந்த இரண்டு வருஷம் பொறுத்தாவது இம்மகாநாடு இப்போது கூட்ட வேண்டிய அவசிய மேற்பட்டதின் காரணம் முக்கியமாக இரண்டு விஷயத்தைப் பொறுத்ததாகும். அதாவது ஒன்று; பார்ப்பனரல்லாதார்களுக்குள் பிரிந்து நிற்கும் கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற கருத்துக் கொண்டு மந்திரி கட்சியாராகிய இன்டிபெண்டெண்டு என்னும் சுயேச்சைக் கட்சியையும், கான்ஸ்டிடியூஷனிலிஸ்ட் என்னும் டாக்டர் நடேசன் கட்சியாரையும் ஒன்று சேர்க்கவும்; இரண்டாவதாக:- கட்சிக்குத் தலைவராய் இருந்த பனகால் அரசர் இறந்து போய்விட்டதால் அவருக்கு பதிலாக ஒரு தகுதியான தலைவரை ஏற்படுத்தவும் கருதி மகாநாடு கூட்டப்படவும் வேண்டியதாயிற்று. மேலும் பனகால் அரசர் காலமானதும், கட்சியின் தலைவர் காலமாய்விட்டதால் இனி கட்சிக் கொள்கையை ஒப்புக் கொள்ளும் பார்ப்பனரல்லாதார் எல்லோரும் தங்களுக்குள் இருக்கும் அபிப்பிராய பேதங்களை மறந்து ஒருவருக்கொருவர் சற்று விட்டுக்கொடுத்து (அதாவது தங்களுடைய முக்கிய கொள்கைக்கு விரோதமில்லாமல்) ஒன்று சேர வேண்டும் என்று கருதி மந்திரி கட்சியாரையும், திரு.நடேசன் கட்சியாரையும் கூப்பிட்டு பேசுவது என்கின்ற எண்ணத்தின் மீது தியாகராய ஞாபகக் கட்டிடத்தில் எல்லாக் கட்சியாரும் கொண்ட ஒரு பொதுக் கூட்டம் கூட்டி அவரவர்கள் கட்சிக் கொள்கைளையும் குறைகளையும் அறியவும், அவற்றிற்கு பரிகாரம்தேடி ரிபோர்ட்டு செய்யவும் என்று கட்சி ஒன்றுக்கு மூன்று போர்கள் வீதம் மூன்று கட்சிக்கு ஒன்பது போர்களைத் தெரிந்தெடுப்பதென்றும், அவர்கள் விசாரித்து அறிக்கை செய்ய ஒரு மாதம் வாய்தா கொடுப்பதென்றும் தீர்மானித்து 3 கட்சியின் சார்பாக ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டி அவரவர்கள் கட்சிக்குறைகளை விசாரித்தறிந்து ஒரு முடிவுக்கு வந்ததின் பேரில் சுயேச்சைக் கட்சியார் என்னும், மந்திரிக்கட்சியார் நம்முடன் சேர்வதானால் பார்ப்பனர்களை நமது கட்சியில்



RangaRakes tamilnavarasam.com

சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், அது முடியாவிட்டால் குறைந்த அளவு இப்போது அவர்களுடன் கூட இருக்கும் பார்ப்பன மந்திரியாகிய கனம் சேது ரத்தினமய்யர், தாங்கள் மந்திரியாய் இருக்கும்வரை தங்களுடன் மந்திரி யாயிருப்பதற் கனுகூலமாகவாவது ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், அதா வது சட்டசபை நடவடிக்கைகளைப் பொறுத்தவரை பார்ப்பனர்களுடன் கலந்து இருக்கும் படியான மாதிரியில், சட்டசபைக் கட்சியில் சேர்த்துக் கொள்ளும்படி இடம் கொடுக்க வேண்டும் என்றும், திரு.நடேசன் கட்சியார் நம்முடன் இருப்பதானால் அவர்கள் அபிப்பிராயத்திற்கு மதிப்பு இருக்கும்படியாக நிர்வாக சபையில் போதிய பிரதிநிதித்துவம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டு அவற்றை தென் இந்திய நல உரிமை நிர்வாக சபை கூடி கவனித்து சட்டசபைக் கட்சியில் மாத்திரம் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ள சம்மதிப்பதாய் ஒப்புக்கொண்டு அதற்காக நிர்வாக சபையில் ஏக மனதாக ஒரு தீர்மானமும் செய்வித்து அதை மந்திரி கட்சியாருக்கு தெரிவித்து, அதை அடுத்த மகாநாடு கூட்டி நிறைவேற்றிக் கொடுப்பதாயும் ஒப்புக்கொள்ளப் பட்டது. இதை நம்பியே மந்திரிகளும் தென் இந்திய நல உரிமைச் சங்கத்தில் நூறு நூறு ரூபாய் கொடுத்து ஆயுள் மெம்பராகவும் சேர்ந்தார்கள். இந்த நிலையில் இந்த மகாநாட்டை நெல்லூரில் போடப்பட்டது. ஆனால் சட்டசபைத் தேர்தல் ஒத்திப் போய்விட்டதாலும், வேறு ஏதேதோ காரணங்களாலும் மகாநாடும் ஒத்திப் போட்டுக் கொண்டே வரப்பட்டது. என்றாலும் கடைசியாக ஊராரின் பழிப்புக்கு பயந்து மகாநாட்டை நடத்தியே காட்டப்பட்டுவிட வேண்டியதாயிற்று.

## மகாநாட்டுத் தலைவர்

மகாநாட்டுத் தலைவராய் தெரிந்தெடுக்கப்பட்ட திரு.முனிசாமி நாயுடு அவர்கள் காங்கிரஸ் உணர்ச்சி உள்ளவர் என்பதையும், பார்ப்பனர்களை தென் இந்திய நல உரிமைச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்கின்ற மனப்பான்மை கொண்டவர் என்பதையும் தவிர மற்ற எந்த விதத்திலும் தகுதியானவரும் பனகால் அரசர் காலமானவுடன் இவரே அடுத்தபடியாக தலைவராகலாம் என்று பலரால் சொல்லப்பட்டவருமாவார். ஆனால், அவர் சித்தூரிலிருப்பதனாலும், “பெரிய பணக்காரராக இல்லை” என்பதனாலும் வக்கீல் தொழிலில் இருக்கிறபடியாலும், கட்சிக்குத் தலைவராயிருக்க மறுத்து விடுவார் என்று சிலர் பேசிக்கொண்டதும் உண்டு. அது எப்படி இருந்த போதிலும் திரு. முனிசாமி நாயுடு அவர்களின் மகாநாட்டு அக்கிராசனப் பிரசங்கமானது பொது ஜனங்கள் நினைத்தது போலவே பார்ப்பனீய காங்கிரசு சார்பாகவும், பார்ப்பனர்களை தென் இந்திய நல உரிமைக் கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையே பூராவாகக் கொண்டதாகவும் தான் இருந்ததே தவிர பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் தத்துவத்தை அனுசரித்தோ அல்லது இப்போது உலகமெங்கும் கொழுந்துவிட்டெரியும் சமத்துவ உணர்ச்சியையும்



சீர்திருத்த தத்துவத்தையும் அனுசரித்தோ ஒருவார்த்தையும் காணக்கிடைக்காத தாயிருப்பதற்கு எவரும் வருந்தாமல் இருக்க முடியாது. உபன்யாசக் கடைசி பக்கத்தில் ஒரு வரியில் யதீந்தரதாஸ் மரணத்திற்கு அனுதாபம், கிராம புனருத்தாரணம், கதர், நிலத்தீர்வை, மதுவிலக்கு என்கின்ற காங்கிரஸ்காரர்களின் பரிபாஷைப் புரட்டு வார்த்தைகள் மாத்திரம் காணப்படுகின்றதே தவிர, இவற்றிற்கான வேலைத்திட்ட முறைகள் ஒன்றுகூட சொல்லப்படவே இல்லை. அன்றியும் தீண்டாமை விலக்கு, ஜாதி வித்தியாசம் விலக்கு, ஆலயப்பிரவேசம், பெண்மக்கள் கொடுமை நீக்கம், தொழிலாளர் கஷ்டம், நிவாரணம் முதலாகிய முக்கிய சீர்திருத்த விஷயங்களான எதுவும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கே உயிராய் உள்ள கொள்கைகளைப் பற்றி ஒரு சிறிதும் குறிப்பிடவே இல்லை. எனவே இவ்வளவு மோசமான அபிப்பிராயங் கொண்ட தலைமைப் பேருரை தென் இந்திய நல உரிமைச் சங்கம் தோன்றிய நாள் முதல் இதுவரை எந்த மகாநாடும் வழங்கி இருக்காதென்றே தைரியமாய்ச் சொல்லலாம். இந்தக் காரணத்தைக் கொண்டுதான், ‘இந்து’, ‘சுதேசமித்திரன்’ ‘சுயராஜ்ஜியா’ முதலிய பார்ப்பனப் பத்திரிகைகள் தலைவர் பிரசங்கத்தை வானமளாவப் புகழ்ந்திருக் கின்றதென்பதே நமது முடிவு. ஆயினும் திரு. முனிசாமி நாயுடு அவர்கள் பெருந்தன்மையும், யோக்கியப் பொறுப்பும் உடையவர் என்பதில் எவருக்கும் ஆட்சேபனை இருக்காது என்றே சொல்லுவோம். ஆதலால் இவரது தலைமைப் பதவி காலத்தில் எப்படியாவது தீண்டாமை விலக்கு, ஆலயப் பிரவேசம், பெண்ணுரிமை, தொழிலாளர் கஷ்டம், நிவாரணம், மூடப்பழக்க வழக்கங்கள் ஒழிதல் ஆகியவைகளுக்கு அனுகூலம் ஏற்படவேண்டும் என்கின்ற ஆசையின் பேரிலும் நம்பிக்கையின் பேரிலும் மனப்பூர்வமாய் பின்பற்றவும் ஒத்துழைக்கவும் தயாராயிருக்கின்றோம். ஆனால் எந்தக் காரணத்தைக் கொண்டாவது பார்ப்பனர்களைக் கொண்டுவந்து இச்சங்கத்தில் சேர்த்து விடலாம் என்கின்ற எண்ணத்தை மாத்திரம் அடியோடு மறந்து விடும்படியும் அதற்காக தலைமைப் பதவியை உபயோகிக்கக் கூடாது என்பதையும் பலமாக எச்சரிக்கை செய்கின்றோம்.

## வரவேற்புத் தலைவர்

திரு. ராமச்சந்திர ரெட்டியவர்கள் தன்னால் கூடியவரை பிரயாசை எடுத்து மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வேண்டிய சவுகரியம் செய்து கொடுத்ததுடன் மகாநாட்டைப் பெருமையாய் நடத்திய பெருமையும் அவருக்கே உரியதாகும். அவரது வரவேற்பு உபன்யாசம் சுருக்கமாயிருந்தாலும் கட்சிக் கொள்கையை தைரியமாக நன்றாக விளக்கிக் காட்டி பல இடங்களில் உண்மையை எடுத்துக் காட்டி இருக்கின்றதற்கு நாம் அவரைப் பாராட்ட வேண்டும். அதாவது:–

“இந்தியாவில் எல்லா சமூகமும் சமூக விஷயத்திலும் அரசியலிலும் சமத்துவம் பெறவேண்டும். அரசியல் ஆதிக்கத்தை நேராய் பாமர மக்களுக்கு பிடுங்கிக் கொடுக்கவேண்டும். அதற்கேற்ற உணர்ச்சியையும் அறிவையும்



RangaRakes
tamilnavarasam.com

அவர்களுக்கு உண்டாக்க வேண்டும். ஏகபோகமாய் எல்லா அதிகாரத்தையும் அனுபவிக்கும் கூட்டத்தாரின் ஆதிக்கத்தை அடியோடு அழித்து, எல்லோரையும் சமமாக்க வேண்டும். ஆகிய இவைகளே பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் கொள்கைகள்" என்றும், "சமுதாய சீர்திருத்தத்தில் பம்பாயில் திரு.ஜோதிராவ்பூலே ஏற்படுத்திய சத்திய சோதக இயக்கக் கொள்கைகளும், சென்னையில் திரு.ஈ.வெ.ராமசாமி ஏற்படுத்திய சுயமரியாதை இயக்கக் கொள்கைகளும் சிலருக்கு அபிப்பிராய பேதமேற்பட இடந்தந்த போதிலும் அவ்விரு இயக்கங்களிலும் மக்களுக்குள் அன்பை உண்டாக்கி இருக்கின்றன" என்றும்,

"வகுப்பு நியாயம் கேட்பதாலும் வாழ்க்கையில் ஒரு பார்ப்பனனுக்கு உள்ள உரிமை ஒரு பார்ப்பனரல்லாதாருக்கும் இருக்கவேண்டும் என்று சொல்வதாலும் சுயராச்சியம் ஒருக்காலும் தடைபட்டு விடாது. அதிலும் பார்ப்பனரல்லாதார் தங்கள் மனித உரிமையைக் கேட்பது கூட தேசியத்திற்கு விரோதமென்றால் அவ்வித தேசியத்தின் தன்மையை என்னால் அறியவில்லை" என்றும் பேசியிருக்கின்றார்.

இவ்வார்த்தைகள் பொன்னே போல் போற்றத்தக்கதாகும்.

## தீர்மானங்கள்

தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சர்.பாத்ரோ கொண்டுவந்த தீர்மானமானது, திரு.ஆர்.கே.ஷண்முகத்தாலும், திரு.ஈ.வெ.ராமசாமியாலும் எதிர்த்துக் 'கச கச'வென்று நசுக்கிக் கொல்லப்பட்டுவிட்டதானது, மிகவும் பாராட்டக்கூடியதாகும். பார்ப்பனர்களை தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில் சேர்க்கப் போகின்றார்கள் என்கின்ற விஷயம் பரப்பப்பட்டதாலேயே மகாநாட்டிற்கு தமிழ்நாட்டிலிருந்து இவ்வளவு பிரதிநிதிகள் வந்து சேர நேர்ந்ததே ஒழிய மற்றபடி மகாநாட்டை உத்தேசித்தோ, தலைவர் தேர்தலை உத்தேசித்தோ பெரும்பாகம் அதாவது நூற்றுக்கு எழுபத்தைந்து பேர்கள் வரவில்லை என்றே சொல்லலாம். திரு.பாத்ரோ அவர்கள் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்கின்ற தீர்மானத்தை இங்கிலீஷில் பிரேரேபித்து, தெலுங்கில் ஒருவரை ஆமோதிக்கச் செய்து பின்பு தமிழில் ஆதரிக்க ஒரு தமிழரை அக்கிராசனாதிபதி கூப்பிட்டபொழுது ஒரு தமிழராவது எழுந்து வரவேயில்லை. இந்தச் சாட்சியானது மகாநாட்டில் இருந்த எல்லோருக்கும் வெகு ஆச்சரியமாகவே இருந்தது. ஆகவே இதிலிருந்து பார்ப்பனர்களை பார்ப்பனரல்லாதார் கட்சியில் அங்கத்தினர்களாய் சேர்த்துக் கொள்வது என்கின்ற பேச்சு இனிவெகு காலத்திற்கு மூச்சு காட்ட முடியாதென்ற உறுதி ஏற்பட்டுவிட்டது.

## அடுத்த தீர்மானம்

திரு.பாத்ரோ அவர்களின் தீர்மானம் அடைந்த கதியினால் ஜனங்களுக்கு ஏற்பட்ட உற்சாகமானது அடுத்தத் தீர்மானமாகிய முதலில் சொல்லப்



பட்ட ராஜித் தீர்மானமானது அதாவது நிர்வாக சபையில் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்ட தீர்மானமும், காரியத்தில் எவ்வித குந்தகமில்லாததும், இப்போதும் அமுலில் இருப்பதும் இதற்கு முன்னும் தனி ஜஸ்டிஸ் கக்ஷி மந்திரிகள் அதிகாரத்தில் இருந்த காலத்தில் அமுலில் இருந்ததுமான தீர்மானமும், மற்றும் பார்ப்பனரல்லாத தலைவர்கள், பிரமுகர்கள் ஆகிய எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு வாக்குக் கொடுத்திருந்த ஜஸ்டிஸ் பத்திரிகையில் கலம் கலமாய் ஆதரித்து எழுதிவந்த தீர்மானமும் ஆகிய "பார்ப்பனர்களை சட்டசபைக் கக்ஷியில் சேர்த்துக் கொள்வது" என்கின்ற தீர்மானத்தை யோசித்துப் பார்த்து முடிவு சொல்வதற்கில்லாமல் செய்துவிட்டதுடன், அளவுக்கு மீறின உற்சாகம் சில சமயங்களில் அறிவை மழுங்கச் செய்து விடுகின்றது என்பதற்கும் உதாரணமாயிருந்தது. அன்றியும் இத்தீர்மானம் தோற்றுப்போனதானது தென்னிந்திய நல உரிமைச் சங்க நிர்வாக மெம்பர்களின் மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியதாக ஏற்பட்டு விட்டதோடு பொதுவாக தலைவர்கள் என்பவர்களின் நாணயப் பொறுப்பையே அடியோடு பாதித்துவிட்டது. எப்படியெனில், சங்கத்தின் அங்கத்தினர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபையாரால் சங்கத்தின் நன்மையைக்கோரி சங்கத்தின் பிரதிநிதிகளாக மற்றக் கட்சித் தலைவர்களுடன் ஒப்பந்தம் செய்து சங்க மெம்பர்களின் ஆமோதிப்பை எதிர்பார்த்து அமுலில் கொண்டு வந்துவிட்ட ஒரு தீர்மானத்தை சங்க அங்கத்தினர்களால் ஒப்புக் கொள்ள மறுத்துவிடுவதென்பது நிர்வாகச் சபையின் மீது அங்கத்தினர்களுக்கு நம்பிக்கையில்லை என்பதேயாகும். மேலும் மற்றக் கட்சியாருடன் ராஜி பேசி வாக்குக் கொடுத்து அவர்களைச் சேர்த்துக் கொண்ட தலைவர்கள் ராஜி நிபந்தனையை நிறைவேற்றிக் கொடுக்க முடியாமல் போனதும், அதற்கு அனுகூலமாயில்லாமல் போனதும், இவ்வளவும் போதாமல் எதிரிடையாய் பிரசாரம் செய்ததுமான காரியங்கள் அவர்களது நாணயத்தையே பாதிக்கத்தக்கதாகும்.

நிற்க, நாம் ஏன் பிரதிநிதிகளின் அறிவு மழுங்கிபோய் விட்டது என்று மேலே சொன்னோம் என்றால், பிரஸ்தாபத் தீர்மானத்தில் உள்ள கெடுதி என்ன என்பதையோ நமது உண்மையான கொள்கைக்கும் நடந்துவரும் அனுபவத்திற்கும் இதனால் விரோதம் என்ன என்பதையோ யாரும் உணர முடியாமற் போனதேயாகும். எப்படியெனில், பார்ப்பனர்களை கவுன்சில் பார்ட்டியில் சேர்த்துக் கொள்ளுவது என்பதில் உள்ள நிபந்தனைகள் என்ன யென்பதைப் பற்றி வெளிப்படையாகவும் விளக்கமாகவும் மகாநாட்டிலும் வெளியிலும் நன்றாக எடுத்துச் சொல்லப்பட்டது, எப்படியென்றால், பார்ப்பனர் களைச் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்க்கக் கூடாது என்பது ஒன்று; பார்ப்பனர்களைச் சங்கத்தின் சார்பாக சட்டசபைக்கு நிறுத்தக் கூடாது என்பது இரண்டு; பார்ப்பனர்களை சங்கத்தின் சார்பாக சட்டசபை தேர்தலில் ஆதரிக்கவும் கூடாது என்பது மூன்று ஆகிய இம்மூன்று நிபந்தனைகளுக்கு அடங்கியது என்றும் சொல்லப்பட்டது. மேலும். இப்போது திரு.சேதுரத்தினமையர் மந்திரியாய் இருப்பதை



RangaRakes tamilnavarasam.com

ஜஸ்டிஸ் கட்சி சட்டசபை அங்கத்தினர்கள் ஒன்றரை வருஷ காலமாய் ஆதரித்து வருவதுபோலவும் முதல் ஆறு வருஷம் ஜஸ்டிஸ் மந்திரிகளே முழு ஆதிக்கமாயிருந்து வந்த காலத்தில் திரு.டி.எம். நரசிம்மாச்சாரியார், திரு.டி.சி.தேசிகாச்சாரியார் முதலிய பார்ப்பனர்களைத் தங்களுடன் சேர்த்து ஓட்டு வாங்கிக் கொண்டு அவருக்கும் ஜில்லா போர்டு பிரசிடெண்டு முதலிய பதவிகள் கொடுத்துக் கொண்டும் வந்தது போலவும் இருக்குமென்றும், இப்போது இருந்து வந்த நிலைமையைவிட வேறு எந்த விதத்திலும் மாற்றமுடையதல்ல என்றும் எடுத்துச் சொல்லப்பட்டது. இன்னும் தெளிவாய் விளக்குவோமானால் ஒரு பார்ப்பனர் தனது தனி ஹோதாவில் சட்டசபைக்கு நின்று நாமும் அவருக்கு எதிராக ஒருவரை நிறுத்தி அவருடன் போட்டியும் போட்டு அதற்காக அவர் வேண்டிய பணம் தன் சொந்தத்தில் செலவழித்து நமது போட்டியையும் சமாளித்து வெற்றி பெற்று சட்டசபைக்கு வந்தபிறகு சட்டசபை யில் ஒத்துழைப்பதாகவோ நமக்குப் பின்னாலிருந்து கைதூக்குவதாகவோ அந்த பார்ப்பனர் சொல்லுவதாக இருந்தால் அதை ஒப்புக் கொள்வதில் நமது கொள்கைக்கோ, கட்சிக்கோ அல்லது நமது விரதத்திற்கோ ஏற்பட்ட அல்லது ஏற்படும் பங்கம் என்ன என்பதுதான். இதை ஏன் நாம் இவ்வளவு விளக்கி எழுதுகின்றோம் என்றால், மகாநாடு முடிந்து நாம் சென்னைக்கு வந்தவுடன் "என்ன அய்யா! நீர் பார்ப்பனர்களைக் கட்சியில் சேர்க்கக் கூடாது என்று பத்திரிகையில் கலம் கலமாய் எழுதிவிட்டு, மேடையில் வாய்வலிக்குமட்டும் சண்டப்பிரசண்டமாய் பேசிவிட்டு நெல்லூருக்குப் போய்ப் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமாய்ப் பேசினீர்களாமே! இது சரியா? இதன் இரகசியம் என்ன?" என்று கேட்பதுடன் நமது மரியாதைக்கும் பக்திக்கும் உரியவருமான பெரியார் ஒருவர் வந்து நம்மீது கோபித்துக் கொண்டதாலும், இதைப் பொது ஜனங்கள் அறிய வேண்டி விளக்க வேண்டியதாயிற்று.

கடைசியாக நாம் இது விஷயத்தில் சொல்வதென்னவென்றால், இவ்வளவு சங்கதியும் தெரிந்து எந்த விதத்திலும் பார்ப்பனர் சங்காத்தமே கூடாது என்பதாகக் கருதி யாராவது எதிரிடையாக ஓட்டுக் கொடுத்திருப்பார் களானால், அவர்களையெல்லாம், நாம் பாராட்டுவதுடன், இவ்வித உணர்ச்சிப் பெருகி இருப்பதற்கு நாம் மகிழ்ச்சியடைவதோடு அவ்வுணர்ச்சி அவ்வளவு தூரம் பரவி இருப்பதற்கு உண்டான பெருமையில் நமக்கும் ஒரு சிறு பங்காவது இருக்கட்டும் என்று பெருமையும் அடைகின்றோம். ஆனால், அர்த்தம் தெரியாமலும் கேட்பார் பேச்சைக் கேட்டுக் கொண்டும் அலட்சியம், அசூயை, பொறாமை முதலிய வேறு காரணங்களைக் கொண்டும் வேண்டுமென்றே தோற்கடிக்கப் பட்டதாயிருந்தால் அது விசனப்பட வேண்டிய காரியமேயாகும்.

## தலைவர் தேர்தல்

இந்த இயக்கத்திற்கு ஒரு தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று மகாநாட்டில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு இயக்கத்தை நடத்த ஒரு



கமிட்டி நியமிக்க வேண்டும் என்று கொண்டு வரப்பட்ட திருத்தமானது காலநிலைமையை உணர்ந்து ஏற்கனவே முடிவு செய்து கொண்டு வரப்பட்ட தாகும். ஏனெனில், தலைவர் தேர்தலில் யாரையும் ஏகமனதாய் தெரிந்தெடுக்க முடியவே முடியாத நிலைமையில் இருந்ததோடு, யார் தெரிந்தெடுக்கப்பட்டி ருந்தாலும் சிலர் தலைவர் தேர்தல் காரணத்தைச் சொல்லிக் கொண்டே கட்சியை விட்டு வெளியேறி கட்சிக்குக் கெடுதி செய்யக்காத்துக் கொண்டிருந்தார்கள் என்பதும் நாம் நன்றாய் அறிந்திருந்ததோடு, தலைவர் தேர்தலுக்கு ஆசைப் பட்டவர்களில் பெரும்பான்மையோர் தங்களுக்கு தலைமைப் பதவி கிடைக்கா விட்டாலும், வேறு ஒருவருக்கு ஆகக்கூடாது என்பதிலேயே அதிகக் கவலை வைத்திருந்தவர்களாகவும் காணப்பட்டார்கள். இவைகளையெல்லாம் உத்தேசித்தே கமிட்டியை வலியுறுத்தப்பட வேண்டிய தாயிற்று. ஆனால், திரு.பி.டி.ராஜன் அவர்கள் தலைவர் ஸ்தானத்திற்கு அபேட்சகராய் தான் நிற்பதில்லை என்றும், மகாநாட்டுத் தலைவர் என்கின்ற முறையில் திரு.முனிசாமி நாயுடுவை தலைவராய் இருக்கட்டும் என்றும் மிக்க பெருந்தன்மையோடும், கட்சியின் நன்மையில் கவலை கொண்டும் சொல்ல முன் வந்ததே தலைவர் தேர்தல் சம்பந்தமாக ஏற்படக்கூடும் என்று எதிர்பார்த்த கஷ்டங்கள் எல்லாம் திடீரென மறைந்ததற்கு முக்கிய காரணமாகும். அந்த விஷயத்தில் திரு.ராஜன் அவர்களை யாரும் பாராட்டியே ஆக வேண்டும். பிறகு டாக்டர். சுப்பராயன் முதல் கொண்டு மற்ற தலைவர்களும் அந்த முடிவை ஒப்புக் கொண்டதும் போற்றக் கூடியதேயாகும். இவற்றால் மகாநாட்டுத் தலைவர் கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதினாலும் எல்லாத் தலைவர்களும் ஒப்புக் கொண்டதாலும் பிரதிநிதிகள் எல்லோரும் இதை ஏகமனதாய் ஒப்புக் கொண்டு தீர்மானித்த தாலும், நெல்லூர் மகாநாட்டின் முடிவு எதிர்பாராத வெற்றியைக் கொடுத்ததோடு, நெல்லூர் மகாநாட்டில் ஏற்படப் போகும் பிளவினால் தமது காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்று கருதி எதிர்பார்த்துக் கொண்டு இருந்த நமது இயக்க எதிரிகளுக்கும் சுயநலக்காரர்களுக்கும் ஜீவ நாடி ஒடுங்கிப் போய் விட்டதுடன் இன்னது செய்வது என்று தோன்றாமல் ஸ்தம்பித்து போகும்படி நேரிட்டுவிட்டது. எனவே நெல்லூர் மகாநாடானது பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்குப் பல விதத்திலும் ஒரு பெரிய வெற்றிக் குறியேயாகும்.

எல்லாவற்றையும் விட நமது கட்சிக்கு ஒரு பெரிய கவுரவம் என்னவென்றால், இதுவரை நமது கட்சியைப் பற்றி குறை கூறி ஜஸ்டிஸ் கட்சி தேசத்துரோக கட்சியென்றும் அதை எப்போதும் எதிர்த்தாக வேண்டும் என்றும் எப்படியாவது ஒழித்தாக வேண்டும் என்று எழுதி வந்த 'தேசிய பத்திரிகை' களாகிய பார்ப்பனப் பத்திரிகைகளும் "தேசிய வீரர்களாகிய" பார்ப்பனர்களும் மற்றும் அவர்கள் வால்களும் இன்று நமது கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ள வக்காலத்துப் பேசுவதும் கட்சியின் கொள்கைகளைப் பற்றி பேச்சு மூச்சுக் காட்டாமலிருப்பதும் கட்சியின் வெற்றியாகும். ஒரு சமயம் பார்ப்பனர்களில் சிலர் "எந்தப் பார்ப்பனன் ஜஸ்டிஸ் கட்சியில் சேரப் போகிறான். இவர்கள் கூப்பிட்டால்தான் யார் வரப்போகிறார்கள்" என்று



RangaRakes tamilnavarasam.com

சொல்லக்கூடும். அப்படியானால் இந்து பத்திரிகை முதல் திரு.சத்தியமூர்த்தி வரை பார்ப்பனர்களை இக்கட்சியில் சேர்த்துக் கொள்ளாததற்கு வருத்தப் படுவானேன்? மற்ற "தேசீயப் பத்திரிகை"களும் தலைவர்களும் பார்ப்பனர் களுக்கு வக்காலத்துப் பேசுவானேன்? என்பதுதான் நமக்கு விளங்கவில்லை.

**குடி அரசு - தலையங்கம் - 13.10.1929**



# எனது தோல்வி

நெல்லூர் மகாநாட்டில் பார்ப்பனர்களை சட்டசபைக்கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்கின்ற தீர்மானம் தென் இந்திய நல உரிமைச்சங்க நிர்வாக சபையின் பேரால் பிரேரேபிக்கப்பட்டு என்னால் ஆமோதிக்கப்பட்டு அது விஷயாலோசனைக்கமிட்டியில் ஒரு ஓட்டில் தோல்வியடைந்துவிட்டது. ஒரு ஓட்டில் தோல்வியடைந்தாலும் அது சரியான தோல்வியே என்பதில் யாதொரு ஆட்சேபனையுமில்லை. ஓட்டு சேகரித்த முறை எவ்வளவு ஒழுங்கற்றதென்று சொல்லுவதானாலும் முடிவை மாற்றிக் கொள்வதற்கு அந்த சமாதானம் சிறிதும் பயன்படாதாகையால் அது உபயோகமற்ற சமாதானமாகும். அன்றியும், ஒரு கட்சியார் மாத்திரம் தான் ஓட்டு சேகரிக்கும் முறையில் சரியாக நடக்கவில்லை என்று சொல்லவும் முடியாது. தீர்மானம் ஒரு சமயம் வெற்றி பெற்றிருந்தாலும் தோல்வியுற்றவர்களும் இதே சமாதானத்தைத்தான் சொல்லக்கூடும்; ஆதலால் தோல்விக்கு சரியான சமாதானம் சொல்ல வேண்டியது எமது கடமையாகும்.

முதலாவது இந்தத் தீர்மானமானது அவசியமில்லாததும் அர்த்த மற்றதுமான தீர்மானமாகும். எப்படியெனில் இத்தீர்மானம் நிறைவேறினாலும் நிறைவேறாவிட்டாலும் தீர்மானத்தின் உண்மையான தத்துவம் அமுலில் தானாகவே நடந்துதான் தீரும். அதாவது, இது நிறைவேறினால்தான் பார்ப்பனர் சட்டசபையில் நம்முடன் இருக்கக் கூடுமென்றோ நிறைவேறாவிட்டால் நம்முடன் இருக்க முடியாமல் போகுமென்றோ சொல்லிவிட முடியாது. மந்திரிசபையை நாமாகவே நடத்திக் கொண்டு போக முடியும் என்கின்ற உறுதியான பலம் கொண்ட நிலைமை நமக்கு வரும்போது பார்ப்பனர்களை நாம் சேர்க்கவே மாட்டோம். நமக்கு பலமில்லை என்று தெரியும்போது பார்ப்பனர் களை சேர்த்துக் கொள்ளவும் அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கவும், சிறிதும் பின் வாங்கவும் மாட்டோம். சில சமயத்தில் நமக்குப் பலமும் கட்டுப்பாடும் இருந்தாலும் தைரியக்குறைவு ஏற்பட்டால் பார்ப்பனர்களை நாமாகவே தேடிக் கொண்டும் போகின்றோம். இதுதான் ஜஸ்டிஸ் கட்சியின் அனுபவமுமாகும்.

உதாரணமாக, எத்தனையோ பார்ப்பனர்கள் தேவஸ்தான சட்டத்தை எதிர்த்தும் மற்றும் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தும் அது நிறைவேறிய பின் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் தேவஸ்தான போர்டு தலைமைப்பதவியை ஒரு பார்ப்பனருக்கும் தேவஸ்தானக் கமிஷனர் பதவிகளில் ஒன்றை ஒரு



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனருக்கும் வலிய கொண்டுபோய் கொடுத்தார்கள். இதன் காரணம் என்னவென்றால் அந்தப் படி செய்திருக்காத பட்சம் அதுசமயம் கக்ஷி நிர்வாகம் கஷ்டமானதாயிருந்திருக்கும் என்பதுதான். ஆனால் ஜஸ்டிஸ் கட்சி தோல்வியடைந்து பார்ப்பனக் கட்சி மந்திரி அதிகாரத்திற்கு வந்த சமயத்தில் அதே போர்டு தலைவர் பதவி காலியானதும் பார்ப்பனக் கக்ஷி மந்திரிகளா லேயே அதை ஒரு பார்ப்பனரல்லாதாருக்குக் கொடுக்கப்பட்டது. இதைக் குறித்து ஒரு பார்ப்பனராவது சத்தம் போடவே இல்லை. இதன் காரணம் என்ன? இந்தப்படி செய்திருக்கவில்லையானால் அந்த மந்திரிகளின் நிர்வாகமானது அப்போது சற்று கஷ்டமானதாயிருந்திருக்கும். தவிர, காங்கிரசின் சார்பாக பார்ப்பனரல்லாத மந்திரிமார்களே மூவர் இருந்த காலத்தில் தான் ஜஸ்டிஸ் கட்சி அந்த மந்திரிகளை கவிழ்க்க முயற்சி செய்தது. காரணமென்னவென்றால், அந்த மந்திரிகளின் நிர்வாகமானது பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு கஷ்டத்தை உண்டாக்கும் என்பதுதான். தவிர, அந்த பார்ப்பனரல்லாத மந்திரி சபையை கவிழ்த்த பார்ப்பனரல்லாதார் கட்சியானது ஒரு பார்ப்பனரல்லாத மந்திரியை ஒழித்து அந்த ஸ்தானத்தில் ஒரு பார்ப்பன மந்திரியை வைத்து ஆதரித்து அதற்கு எவ்வித ஆபத்தும் நேரிடாமல் இன்றும் காப்பாற்றிக் கொண்டுதான் வருகின்றது. இதன் காரணமென்னவென்றால் இந்தப்படி செய்யாவிட்டால் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு போதிய அனுகூலம் கிடைக்காது என்கின்ற கவலைதானே ஒழிய, கனம் சேதுரத்தினம் அய்யரைக் காப்பாற்றாவிட்டால் பார்ப்பனரல்லாதார் கட்சியே அடியோடு அழிந்து போகும் என்கின்ற பயம் அல்லவே அல்ல. அன்றியும் சென்னை அரசாங்க நிர்வாக சபையில் மெம்பரா யிருந்த திரு.கே.சீனிவாசய்யங்கார் காலம் சென்றதும் அந்த ஸ்தானத்திற்குத் திருவாளர்கள் எஸ்.சீனிவாசய்யங்காரும், சர்.சி.பி.ராமசாமி அய்யரும் சர்.தியாக ராயர் வீட்டிற்கு நடந்ததில் சர்.தியாகராயர், சர்.சி.பி. அய்யரையே சர்க்காருக்கு சிபார்சு செய்தார். அந்தக் காலத்தில், சர்.தியாகராயர் செல்வாக்கு அவ்வளவு பலமாயிருந்தும் ஏன் ஒரு பார்ப்பனரை சிபார்சு செய்தார் என்றால், அந்த காலத்தில் அது ஒரு பார்ப்பனருக்குக் கொடுத்துத்தான் தீர வேண்டிய நிலையில் சர்க்கார் இருந்ததுதான். அதே வேலை மறுபடியும் காலியானதும் பார்ப்பன ரல்லாதார் கட்சி அபிப்பிராயத்தை எதிர்பாராமலே ஒரு வருணாச்சிரம சாஸ்திரிக்குக் கொடுக்கப்படுவானேன்? அவர் கோபித்து வேண்டாம் என்ற பிறகுகூட அந்த வேலை பார்ப்பனரல்லாதார் கட்சியைத் தேடிக் கொண்டு வந்து சரண் புகுவானேன்? அன்றியும் அந்த சமயம் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு அவ்வளவு பலமிருந்தும் கனம் சேதுரத்தினமாகிய ஒரு பார்ப்பனருக்கு மந்திரி பதவியை கொடுப்பானேன்? நம்மில் ஆள்கள் இல்லையா? அல்லது யாரும் ஆசைப்படவில்லையா? எனவே, மேற்கண்ட இந்த நடவடிக்கைகளை யெல்லாம் கவனித்துப் பார்த்தால் மேலே சொல்லப்பட்ட தீர்மானத்தின் தத்துவம் என்ன? என்பது ஒரு சாதாரண மனிதருக்கும் விளங்காமல் போகாது. நிற்க, இதற்காக நான் ஏன் இந்தத் தீர்மானத்தில் இவ்வளவு கவலை கொண்டு ஆமோ தித்தேன்? நான் ஏன் நிறைவேற்ற வேண்டும் என்றும் ஆசைப்பட்டேன்? என்று



பொதுஜனங்கள் அறிய ஆவல் கொள்வார்களானதால் அதற்கும் பதில் சொல்லியாக வேண்டியவனாக இருக்கின்றேன். அதாவது பனகால் அரசர் இறந்த காலத்தில் மந்திரி கட்சியார் நம்முடன் சேர வேண்டுமென்று ஆசைப் பட்டதற்கு அவர்கள் நம்மைக் கேட்டுக் கொண்ட குறைந்த நிபந்தனை இதுவாக இருந்ததும், அதாவது சட்டசபைக் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்பதும், இந்தக் குறைந்த நிபந்தனையும், அது சமயம் தென் இந்திய நல உரிமைச் சங்க பிரமுகர்களும் அடியேனைக் கேட்டே முடிவு சொல்ல வேண்டியிருப்பதாக சொன்னதாலும், மந்திரி கட்சியாரும் அடியேன் ஒப்புக் கொள்ளும் தைரியத்தாலேயே நம்பி சம்மதிக்கப் போவதாக சொன்னதாலும், அடியேனும் ஒப்புக்கொண்டு சம்மதமும் வாக்குத்தத்தமும் செய்ய வேண்டியதாய்விட்டதால் அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு எனது தலையிலும் சிறிது விழுந்துவிட்டது. எதிர்பாராத கஷ்ட சம்பவம். இரு கட்சியின் தனித்தனி நன்மையோ அல்லது இருகட்சியில் உள்ளவர்களின் தனித்தனி நன்மையோ நெல்லூர் மகாநாட்டில் இந்த நிபந்தனையின் முடிவைப் பொறுத்தே இருப்பதாக இரு கட்சியாரும் தெரியா மல் நினைத்துக் கொண்டதால் இத்தீர்மானத்தை நிறைவேற்ற ஒரு கட்சியும், தோற்கடிக்க ஒரு கட்சியும் முனைந்து முயற்சி செய்ய வேண்டியதாய் ஏற்பட்டு விட்டது. ஆகையால் முனிசிபல் தேர்தல்களில் ஓட்டு சேகரிப்பது போலவே சேகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படடுவிட்டது என்றாலும் இந்த நிலையில் எனது கடமை என்ன என்பதை பொது ஜனங்கள் யோசித்துப் பார்க்க வேண்டுமாய் ஆசைப்படுகின்றேன். நடு நிலைமை வகிக்க முடியாத கஷ்டத்தில் சிக்கிக் கொண்டதால் ஏதாவது ஒரு கட்சியின் நிஷ்டூரத்தை சம்பாதித்துக் கொள்ள வேண்டியதாய்ப் போய்விட்டதில் எந்தப்படி நடந்தால் நிஷ்டூரம் வந்தாலும் நாணயத்தைப் பாதிக்காது என்று நினைத்தேனோ, அந்தப்படி செய்ய வேண்டிய தொண்டில் இறங்க முடிவு செய்துவிட்டேன். அன்றியும் இந்த முடிவானது என்னை நன்றாய் அறிந்த எனது நண்பர்களின் கருத்துக்கு விரோதமாயிருந்தாலும் என்னை அன்னியனாய்க் கொண்டு இருந்து பிறகு துணிந்து நம்பியவர்களுக்கு தாங்கள் நம்பின நபரிடத்தில் மோசமில்லை என்று கருதும் படியாகவும் இருந்ததால் நிறைவேற்றி வைக்க மனதார முயற்சி செய்தேன். ஆனால் முயற்சி பலிக்கவில்லை; தோல்வியே அடைந்தேன். என்றாலும் இந்த தோல்வி எனது நாணயத்தையாவது நான் செய்த முடிவையாவது சிறிதும் பாதிக்கவில்லை. ஏன் தோல்வி அடைந்தேன் என்றால் முதலாவது மகாநாட்டுத் தலைவர் ஒழுங்காய் காரியங்களை நடத்தவில்லை. விஷயாலோசனைக் கமிட்டி நியமன விதியை அடிக்கடி மாற்றிக் கொண்டார். அவர் வாக்குக் கொடுத்தது போல் நடக்க முடியாமல் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. ஆதலால் தலைவருக்கு மன உறுதி போய்விட்டது. அப்படி இருந்தாலும் இந்தத் தீர்மானம் விஷயாலோசனைக் கமிட்டியில் ஒரு ஓட்டில் தோற்றுப் போயிருந்தும் அந்த முடிவை மகாநாட்டிற்குக் கொண்டு வர காலையில் சம்மதித்தவர், பிறகு கொண்டு வரவில்லை. அன்றியும் இத் தீர்மானத்தைப்



RangaRakes tamilnavarasam.com

பற்றியும் ஓட்டுச் சேகரித்தவர்கள் செய்வித்தக் குழப்பங்களால் ஏற்பட்டக் குழப்பங்களையும் விளக்க சந்தர்ப்பம் கொடுப்பதாய் வாக்குக் கொடுத்து அதற்காகவே கமிட்டியை ஒத்திப்போட்டவர். மறுபடியும் கமிட்டிக் கூடினதும் அக்குழப்பத்துடனேயே ஓட்டு எடுத்து விட்டார். இவைகள் ஒருபுறமிருக்க, இத்தீர்மான விஷயத்தில் எனக்கு உள் எண்ணம் கற்பித்து பிரசாரம் செய்ததும் என்னை 'குரு' என்றும் 'தலைவர்' என்றும் சொல்லிக் கொண்டிருந்தவர்களே இவ்விதப் பிரசாரத்தில் பலமாக ஈடுபட்டிருந்ததும், அதிலும் சிலருக்கு தீர்மானத்தைப் பற்றிக் கவலையே இல்லாமல் எனக்கு விரோதமாய் முயற்சி செய்வதை தங்களுக்கு ஒரு பெரிய உற்சாகமாய்க் கொண்டதும் ஆகிய காரியங்கள் எனது நம்பிக்கைக்கு விரோதமான பலனைக் கொடுக்க நேர்ந்துவிட்டது. இந்தத்தீர்மானத்தில் தமிழ் ஜில்லாக்கள் 13-ல் 10 ஜில்லாக்கள் எனக்கு விரோதமாக ஓட்டு செய்ததும், அனுகூலமாக ஓட்டு செய்த 3 ஜில்லாக்களில் இரண்டு ஜில்லா நமது சம்பந்தமில்லாமல் எதிர்க்கட்சிப் பிரசாரத்தால் ஓட்டுச் செய்ததும், ஒரே ஒரு ஜில்லா அதுவும் கோயமுத்தூர் ஜில்லா மாத்திரம் எனக்கு அனுகூலமாய் எனது சொந்த தாட்சண்யத்திற்காக ஓட்டு செய்ததுமான நடவடிக்கையைப் பார்க்கும் போது எனக்குத் தமிழ்நாட்டில் உள்ள செல்வாக்கு எவ்வளவு என்பதும் எனது "தலைமை" ஸ்தானத்தின் யோக்கியதை எவ்வளவு என்பதும் குருடனுக்கும் விளங்காமல் போகாது. மேலும், "குதிரை கீழே தூக்கிப் போட்டது மட்டுமல்லாமல் புதைப்பதற்குக் குழியும் பறித்தது" என்கிற பழமொழிபோல், நமது தீர்மானத்தையும் விருப்பத் தையும் இக்கெதியாக்கியதுமல்லாமல் "ஈ.வெ.ராமசாமியும், கண்ணப்பரும் மந்திரிகளுடன் சேர்ந்து கொண்டு பார்ப்பனர்களை தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ள நெல்லூர் மகா நாட்டில் முயற்சி செய்தார்கள். நாங்கள் ஒரே அடியாய் அடித்து விட்டோம்" என்றும் மற்றும் சில கற்பனை களைக் கொண்டும் திண்ணைப் பிரசாரமும் செய்வதில் சிலர் ஊக்கமாக இருப்பதைப் பார்த்தால், அவர்களைப் பற்றி ஒரு புறம் வேடிக்கையும் மற்றொரு புறம் பரிதாபமும் படவேண்டியிருக்கின்றது. ஏனெனில் கட்சியின் நலத்தைத் தவிர வேறு எந்தக் காரியத்தை உத்தேசித்தும் பார்ப்பனர்கள் சம்பந்தம் நமக்கு வேண்டியதில்லை என்றும், அதனால் எனது சொந்தத்திற்கு எவ்வளவு கெடுதி ஏற்படுவதாயிருந்தாலும் நமக்கும் கவலை இல்லை என்றும் நினைத்துக் கொண்டிருக்கும் நான், பார்ப்பனர்களைத் தென்னிந்திய நலஉரிமைக் கட்சியில் சேர்க்க வேண்டுமென்று நினைத்து விட்டால், கட்சியின் நன்மை தீமைகளைப் பற்றி கவலை இல்லாமல் தமது சொந்த நன்மை தீமையை உத்தேசித்தே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கருதிக் கொண்டிருக்கும் தலைவர்களும் பின்பற்றுபவர்களும் பெரும்பான்மையாய் உள்ள கட்சியில் அது எப்படி நிறைவேறாமல் போகும் என்பது பரிகாசமாயிருப்பதுடன், இம்முயற்சியில் எவ்விதம் வெற்றி அடைவார்கள் என்பதில் பரிதாபமாயுமிருக்கின்றது. நானும் திரு.ராஜன் அவர்களும் தமிழ் ஜில்லாக்களில் சமீபத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த காலத்தில் ஒவ்வொரு ஜில்லாக்காரர்களும் இவ்விஷயத்தில் அவர்கள்



கொண்ட அபிப்பிராயம் நமக்கும் நான் கொண்ட அபிப்பிராயம் அவர்களுக் கும் நன்றாய் தெரிந்ததும், பிறகு கடைசியாக இருவருக்குள்ளும் ஏற்பட்ட முடிவும், நடுநிலைமையில் உள்ள யாவருக்கும் இதற்குள் மறந்து போயிருக்காது. ஏதோ சமய சந்தர்ப்பத் தினால் இம்மாதிரி நடக்க முடிந்தது என்றும், இவ்வித முடிவு ஏற்பட வேண்டியிருந்ததென்றும் உண்மையை ஒப்புக்கொண்டு இருப்ப வர்களைப் பற்றி எவ்விதத்திலும் நமக்கும், நம்மைப் பற்றி அவர்களுக்கும். கடுகளவு அபிப்பிராய பேதமும் ஏற்பட நியாயம் கிடையாது என்பதும்; இவ் விதம் ஒரு சம்பவம் நடந்ததாகவே ஒருவருக் கொருவர் மறுபடியும் ஞாபகத் திற்கே கொண்டுவர வேண்டியதில்லை என்பதும் முடிவான காரியமாகும். ஆனால் இந்த விஷயத்தை பொறுப்பற்ற சிலர்கள் ஆயுதமாக வைத்துக் கொண்டு கூலிப்பிரசாரம் செய்வதாக தெரிய வருவதால் பாமர மக்களுக்கு இதை விளக்காமல் இருக்க முடியவில்லை. ஆதலால், இதை இவ்வளவு தூரம் எழுதித் தீர வேண்டியிருந்ததற்கு நானே வருந்துகின்றேன். மற்றபடி நான் ஏன் தென் இந்திய நல உரிமைச் சங்கத்திற்கு ஒரு தலைவரை நியமிப்பதற்குப் பதிலாக கமிட்டி நியமிக்கவேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தேன் என்பதற்கு உள்ள காரணத்தை பின்னால் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**ஈ.வெ.ரா**

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.10.1929**



RangaRakes
tamilnavarasam.com

# ஈரோடு உண்மை நாடுவோர் சங்கம்

## மதம் மாறுதல் சரஸ்வதி பூஜை

தலைவரவர்களே! சகோதரர்களே! இன்று மூன்று விஷயங்களைப் பற்றி பேச நான் தலைவரால் கட்டளை இடப்பட்டிருக்கின்றேன். ஒன்று சீலையம் பட்டியில் 69 பேர்கள் மகம்மதியரானது, இரண்டு சரஸ்வதி பூஜை, மூன்று நெல்லூர் மகாநாடு.

முதலாவது விஷயமாகிய ஆதிதிராவிடர்கள் மதம் மாறி மகம்மதியரான விஷயத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன்.

முதலில் மத சம்பந்தமான என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், எந்த மதமானாலும் அதன் கொள்கைகள் எவ்வளவு மாறுபட்ட அபிப்பிராய முடையவையானாலும் அம் மதமும் கொள்கைகளும் மனிதனுடைய இவ்வுலக வாழ்க்கைக்கு அவனுடைய பிரத்தியட்ச அனுபவத்திற்காக வகுக்கப்பட்ட கொள்கைகளுடையவைகள் என்றால் அதைப்பற்றி யோசிக்க நான் எப்போதும் தயாராயிருக்கின்றேன். அப்படிக்கின்றி மதமும் அதன் கொள்கைகளும் "மேல் லோகத்திலோ" அல்லது "கீழ் லோகத்திலோ" அல்லது செத்த பிறகு "சூட்சும" சரீரத்துடனேயோ அனுபவிக்கும் அனுபவத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டது என்றால், அது எப்படிப்பட்ட மதமானாலும் யார் செய்ததானாலும் அதற்கு என்ன ஆதாரம் சொல்லுவதானாலும் அதனால் என்ன விளைவதானாலும் நான் அதைக் கடின நேரம் கூடத் திரும்பிப் பார்க்கமாட்டேன். இது விஷயத்தில் என்னைப் பற்றி யார் எப்படி நினைத்துக் கொண்டாலும் எனக்கு அதைப் பற்றி கவலையில்லை, ஏனெனில் இந்தப்படி நினைப்பதற்கு எனக்குப் பூரண சுதந்திரம் இருக்கின்றது என்று நினைத்திருகிறேன். அதோடு எந்த லோகத்திலானாலும் இந்த உலகவாழ்க்கை அனுபவத்திற்கு விபரீதமான பலன் இருக்க முடியாதென்றுங் கருதுகின்றேன். இதை அனுசரித்தே தான் இவ்வாரத்தில் சீலையம்பட்டியில் 69 பேர்கள் மகமதியரான விஷயத்தைப் பற்றி எனது மகிழ்ச்சியை தெரிவிக்க சில வார்த்தைகள் பேசப் போகின்றேன், சகோதரர்களே! 69 ஆதிதிராவிடர்கள் மகம்மதியர்களாகி விட்டதால் அவர்களுடைய பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டு விட்டதென்றோ, அவர்களுக்கு "மோட்சலோகம்" கூப்பிடும் தூரத்திற்கு வந்துவிட்டதென்றோ "கடவுளோடு கலந்துவிட்டார்கள்" என்றோ கருதி நான் மகிழ்ச்சி அடையவில்லை. இவைகளை நான் ஏற்றுக் கொள்ளுவதும் இல்லை. மற்றவர்கள் நம்பும்படி



RangaRakes

சொல்வதும் இல்லை. அன்றியும் ஒரு மனிதன் மதம் மாறுவதால் அவனுடைய செய்கைக்கும், எண்ணத்திற்கும் தகுந்த பலன் அடைவதில் வித்தியாச முண்டென்பதை நான் ஒப்புக் கொள்வதில்லை. எந்த மதக்காரனாயிருந்தாலும் தனது செய்கைக்குத் தகுந்த பலன் ஒன்றாகவேதான் இருக்கும். இந்துவாயிருந்து பசுவைக் கொன்றால் பாவம் என்றும் மகம்மதியனாயிருந்து பசுவைக் கொன்று தின்றால் பாவமில்லை என்றும் மதத்தின் காரணமாகக் கருதுவது மூடநம்பிக்கையே ஒழிய இரண்டுவித அபிப்பிராயத்திலும் அர்த்தமே இல்லை. உலகத்தில் உள்ள சகல மதங்களும் மூடநம்பிக்கையின் மீதே கட்டப்பட்டிருக்கின்றது. ஆகையால் பாவபுண்ணியத்தையும் மோட்ச நரகத்தையும் ஆதாரமாய் வைத்தும் நான் மகிழ்ச்சியடையவில்லை மற்றென்னவென்று கேட்பீர்களேயானால் இந்து மதம் என்பதிலிருந்து மதம் மாறினதாக சொல்லப்படும் 69-ஆதிதிராவிடர்களும் பிறவியின் காரணமாக அவர்களுக்குள்ள இழிவிலிருந்து விடுதலை அடைந்ததோடு பாமரத்தன்மையும் காட்டுமிராண்டித்தனமுமான மிருகப் பிராயத்திலிருந்தும் அறியாமையிலிருந்தும் சிறிது விடுதலை அடைந்தவர்களானார்கள் என்பதற்காகவே மகிழ்ச்சியடைகின்றேன்.

அதாவது, மேற்கண்ட 69 பேர்களுக்கும் தீண்டாமை என்பது போய்விட்டது. இனி ஒருவன் அவர்களை பறையன், சக்கிலி, சண்டாளன் என்று இழிவாய்க் கூறமுடியாது. அவர்களும் மற்றவர்களை 'சாமி' 'சாமி' 'புத்தி' என்று கூப்பிட்டுக் கொண்டு தூர எட்டி நிற்க வேண்டியதில்லை. மற்ற மனிதர்களின் காலில் விழுந்து கும்பிட வேண்டியதில்லை. ஊரை விட்டு வெளியில் குடி இருக்க வேண்டியதில்லை. குளிக்கத் தண்ணீரில்லாமல் குடிக்க தண்ணீரில்லாமல் திண்டாட வேண்டியதில்லை. வண்ணான் நாவிதன் இல்லாமல் அழுக்குத் துணியுடனும் கரடி போல் மயிர் வளர்த்துக் கொண்டும் பார்ப்பவர்களுக்கு அசிங்கமாகத் தோன்றும்படி வாழ வேண்டியதில்லை. இனி எந்த பொது தெருவிலும் நடக்கலாம்; எந்த வேலைக்கும் போகலாம்; யாருடனும் போட்டி போடலாம்; அரசியலில் சமபங்கு பெறலாம்; மதசம்பந்தமாகவும் இனி அவர்கள் தங்கள் கோயிலுக்குள் போகத் தாராள உரிமை உண்டு; வேதம் படிக்க உரிமையுண்டு.

இவ்வளவையும் விட, இனி அவர் கல்லையும், செம்பையும், கூடையையும், முறத்தையும்; விளக்குமாற்றையும் கடவுள் என்று வணங்க வேண்டியதில்லை.

மற்றும், அவர்கள் பாடுபட்டுச் சம்பாதித்த சிறிது பணத்தையும் கடவுளுக்கென்றும், கல்லுக்கென்றும் கருமாதிக்கென்றும் செலவு செய்யவேண்டியதில்லை. எனவே, இவர்கள் பொருளாதாரக் கஷ்டத்திலும் அறிவு வளர்ச்சித் தடையிலும் சமூக இழிவிலும் சுயமரியாதைக் குறைவிலும், அரசியல் பங்கு குறைவிலிருந்து ஒருவாறு விடுதலை அடைந்துவிட்டார்கள் என்பது போன்றவைகளை நினைக்கும்போது மகிழ்ச்சியடையாமலிருக்க முடியவில்லை. ஏனெனில், தீண்டாமை நெருங்காமை, பார்க்காமை, பேசாமை முதலாகிய சகிக்க



tamilnavarasam.com

முடியாத கொடுமைகள் முதலாவதாக மதத்தின் பேரால், வேத சாஸ்திரங்களின் பேரால், கடவுள்களின் பேரால் உள்ளவைகள் எல்லாம் அடியோடு நீங்க வேண்டும் என்கின்ற தீவிர ஆசையே இம்மாதிரி நினைக்கச் செய்கின்றது. இம்மாதிரி சுமார் ஆயிரம் வருஷங்களாக நினைத்துக்காரியத்தில் நடந்த பெரியவர்கள்தான் இன்றைய தினம் இந்தியாவில் 8 கோடி மகமதியர்களாகவும் ஒரு கோடி கிறிஸ்தவர்களாகவும் இருக்கின்றார்கள். இல்லாவிட்டால் இந்தியாவில் இவ்வளவு மகம்மதியர்களும் கிறிஸ்தவர்களும் எங்கிருந்து வந்தார்கள்? இந்த எண்ணிக்கையை பார்த்து பயந்தே நானும் திருவாளர்கள், தங்கபெருமாள், ஈஸ்வரன், மாரியப்பன் முதலியவர்களும் கோயம்புத்தூர் ஜெயிலிலிருக்கும் போதே ஜெயிலில் இருந்து விடுதலையானதும் தீண்டாமையை அடியோடு ஒழித்து விடுவதுடன் இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்குப் போனவர்களை எல்லாம் திரும்பவும் இந்துக்களாக்கும் முயற்சியில் வேலை செய்வது என்று முடிவுகட்டிக் கொண்டு வந்தோம்.

நாங்கள் வெளிவந்ததும் திரு.காந்தி கைது செய்யப்பட்டு சிறைசென்று விட்டதால் இந்த சமயத்தில் ஒத்துழையாமை விட்டுப் போகக் கூடாது என்று சில பார்ப்பனத் "தலைவர்கள்" கேட்டுக் கொண்டதால் மறுபடியும் காங்கிரஸ் வேலையை செய்தோம். பிறகு "குருகுல நடவடிக்கையையும் அது சம்பந்தமாக பார்ப்பனத் தலைவர்கள் மனப்பான்மையையும் அவர்களது உள் எண்ணத்தையும் தெரிந்த பிறகு "இந்து" மதமே அடியோடு அழிக்கப்படவேண்டும் என்கின்ற முடிவுக்கு வந்துவிட நேர்ந்தது. அதன் பேரில் இந்து மதத்தை விட்டாலும் பிறகு தங்களுக்கு ஏதாவது ஒரு மதம் இருந்துதான் தீர வேண்டுமென்று கருதும் மக்களுக்குக் கிறிஸ்துவ மதத்தை சிபார்சு செய்யலாமா? மகம்மதிய மதத்தைச் சிபார்சு செய்யலாமா என்று கருதி யோசித்து பார்த்தேன். கடைசியாக கிறிஸ்தவ மதமும் நமது நாட்டில் நான் பார்த்தவரை அதுவும் மற்றொரு பார்ப்பனீய மதமாகவே காணப்பட்டது. கிறிஸ்துவ மதப் பிரசாரத்தின் கருத்தெல்லாம் அரசியல் விஷயத்தை அடிப்படையாகவும், அந்தரங்க லட்சியமாகவும் கொண்டு செய்யப்படுகின்றதே ஒழிய மக்கள் சமத்துவத்தையோ ஒற்றுமையையோ கொண்டதாகத் தெரியவில்லை என்கின்ற முடிவிற்கு வரவேண்டியதாயிற்று. எப்படியென்றால் இன்றைய தினமும் கிறிஸ்துவ மதத்தில், 'பறக் கிறிஸ்தவன்', 'சக்கிலிக் கிறிஸ்தவன்', 'வேளாளக் கிறிஸ்தவன், 'உடையார் கிறிஸ்தவன்', 'நாயுடு கிறிஸ்தவன்', 'நாடார் கிறிஸ்தவன்', 'பார்ப்பனக் கிறிஸ்தவன்' என்கின்ற பாகுபாடுகளும் குடியிருப்பு வசதி வித்தியாசங்களும் சர்ச்சு முதலிய பிரார்த்தனை இடங்கள் வித்தியாசம் காணப்படுவதைப் பார்த்தால் நன்றாய் தெரியவரும். ஆகையால் மகம்மதிய மதத்தை தழுவுவதினால் தான் தீண்டாதவர்களுக்கு இதுசமயம் சீக்கிரத்தில் உடனேயே சமூக சமத்துவத்தை அளிக்க முடியும் என்று கருதுகிறேன். இந்த நிலை நமக்கு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக நான் எவ்வளவோ பாடுபட்டு பார்த்தேன்.



RangaRakes

ஈரோடு தேவஸ்தானத்தில் சகல இந்துக்களுக்கும் கோயில் நுழைவு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதின் பேரில் சில மேல் ஜாதிக்காரர்கள் என்பவர்களும், வெள்ளைக்கார அதிகாரிகளும் பார்ப்பன அதிகாரிகளும் கொண்ட மாதிரியானது எனக்குத் தீண்டப்படாத மக்களுக்கு சமத்துவம் கொடுப்பதற்கு அவசரமாய் இதைவிட வேறு வழியில்லை என்கின்ற முடிவு ஏற்படுத்தச் செய்துவிட்டது. நமது நாட்டில் ஜாதி வித்தியாசம் ஒழியவும் சமத்துவம் ஏற்படவும் வெள்ளைக்காரர்களும் சிறப்பாக பாதிரிமார்களும் சுலபத்தில் சம்மதிக்கமாட்டார்கள்.

ஆகையால் தீண்டாமை முதலிய கொடுமை ஒழிய வேண்டும் என்கின்ற கருத்துள்ளவர்களுக்கும் ஒற்றுமையை எதிர்பார்க்கும் கருத்து உள்ளவர்களுக்கும் மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியை ஊட்ட வேண்டும் என்னும் கருத்து உள்ளவர்களுக்கும் நமது நாட்டில் இப்போது உள்ள முக்கிய வேலை முதலில் தீண்டப்படாதவர்கள் மகம்மதியாராவதை ஆக்ஷேபியாதிருப்பதேயாகும் என்பது எனது தாழ்மையானதும் கண்ணியமானதுமான அபிப்பிராயம். நிற்க, சிலர் மகம்மதிய மதம் முரட்டுச் சுபாவத்தை உண்டாக்குகின்றது என்று எனக்கு எழுதி யிருக்கிறார்கள். அது வாஸ்தவமானால் தீண்டப்படாதவர்களுக்கு அவர்களது தீண்டாமை ஒழிய மகமதிய மதத்தை சிபார்சு செய்வதற்கு அதுவே ஒரு நல்ல காரணம் என்று கருதுகிறேன்.

இப்பொழுது நமது தீண்டப்படாதவர்கள் தங்கள் தீண்டாமை நிலை நிற்கும்படி தாங்களாகவே அளவுக்கு மீறி ஒடுங்குகிறார்கள். காலில் விழுந்து கும்பிடுகிறார்கள். அடிக்க அடிக்க ஓடுகிறார்கள். கீழ்ப்படியவே தங்களை கடவுள் பிறப்பித்திருப்பதாய் கருதுகிறார்கள்; எவ்வளவு திட்டினாலும் ரோஷப்படுவதே இல்லை; கோபிப்பதேயில்லை; "முரட்டு சுபாவம் இல்லாத இந்துமதம்" இவர்களை இப்படிச் செய்துவிட்டதால் தங்களைப் பிறர் இழிவுபடுத்துவது தங்களுக்குத் தெரிவதில்லை.

ஆதலால், மகம்மதிய மதம் முரட்டு சுபாவத்தை உண்டாக்குவது உண்மையானால் அதில் சேர்ந்த இவர்கள் இனிமேலாவது இவ்வளவு தாழ்மையாக நடந்து கொள்ள மாட்டார்கள் அல்லவா? மற்றவர்களும் அவர்களது முரட்டு சுபாவத்தைக் கண்டு பயந்து மரியாதையாய் நடந்து கொள்ள இடமேற்படும் அல்லவா? அன்றியும், மகம்மதியர்களைப் பற்றி இந்து மதத்தின் சார்பாய் இந்துக்கள் நினைத்துக் கொண்டிருந்ததென்னவென்றால், துருக்கியர் மிலேச்சரென்றும் மிக்க தாழ்ந்தவர்கள் என்றும் கருதிக் கொண்டிருந்தார்கள். அதற்கு ஆதாரமாய் இப்போதும் இந்து சாஸ்திரமும் நிகண்டும் இருக்கிறது. ஆனால், தீண்டப்படாதவர்களைப் போலவே மகம்மதியர்களும் ஒடுங்கி இருந்திருப்பார்களானால் இந்தியாவில் இந்திய தீண்டப்படாதார் 6 கோடியும், மகம்மதியர் தீண்டப்படாதார் 8 கோடியும் என்று சொல்ல வேண்டியதாய் இருந்திருக்கும். இப்போது அந்த நிலை மாறியிருப்பதற்கு மகம்மதியர்களின் முரட்டு சுபாவம் என்று சொல்லக் கூடாதானாலும், ஒடுங்க முடியாத, தாழ்மையையும்



tamilnavarasam.com

இழிவையும் ஒப்புக் கொள்ள இஷ்டமில்லாத தைரிய சுபாவம் என்றாவது சொல்லியாக வேண்டும். அந்த சுபாவம் இப்போதுள்ள தீண்டப்படாதவர்கள் என்பவர்களுக்கு வந்துவிட்டால் கூடப் போதுமானது என்றும், மதம் மாற வேண்டிய அவசியமில்லை என்றும் சொல்லலாம். ஆனால் அவர்கள் இந்துக்களாக இருக்கும் வரை சுலபத்தில் அவர்களுக்கு அந்த சுபாவம் வராது என்பதோடு மேல் வகுப்புக்காரர்கள் என்பவர்கள் சுலபத்தில் வர விடமாட்டார்கள் என்றே சொல்லுவேன்.

ஆகையால் இந்து சமூகத்தில் உண்மையான சமத்துவமும் ஒற்றுமையும் ஏற்படும் வரை தீண்டப்படாதவர்கள் கும்பல் கும்பலாய் மகம்மதியர் ஆவதை தவிர வேறு மார்க்கமில்லையாதலால் நாம் அதை ஆக்ஷேபிக்க முடியாதவர்களாய் இருக்கின்றோம். தவிரவும், மதத்தினிடத்திலோ, இந்து சமூகத்தினிடத்திலோ கவலையுள்ளவர்களுக்கு இதனால் ஏதாவது சங்கடம் இருப்பதாயிருந்தால் அவர்கள் தாராளமாய் வெளிக்கிளம்பி வந்து தீண்டப்படாத மக்களுக்கிருக்கும் கொடுமையையும் இழிவையும் நீக்க முன் வரட்டும்: அவர்களோடும் எப்போதும் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறேன். மற்றபடி வீண் சோம்பேறி ஞானம் பேசிக் கொண்டிருப்பதனால், இனி யாதொரு நன்மையும் அடைய முடியாது. அந்தக் காலம் மலையேறிவிட்டது. ஆதலால் 'உண்மை நாடுவோர் சங்கத்' தின் இன்றைய கூட்டமானது சீலையம்பட்டியில் இந்துக்களில் உயர்ந்த வகுப்பார் என்பவர்களின் கொடுமையைச் சகிக்க மாட்டாமல், மகம்மதிய மதத்தை தழுவினதின் மூலம் தங்கள் இழிவிலிருந்து விலகிய 69 ஆதிதிராவிடர்களை மனமாரப் பாராட்டுகின்றது என்கின்ற தீர்மானத்தை நான் பிரேரேபிக்கின்றேன்.

பிறகு திருமதி. இலட்சுமி அம்மாள் அவர்கள் மகமதிய மதத்தில் பெண்களுக்கு உள்ள பெருமையையும் சுதந்திரத்தையும் எடுத்துச் சொல்லி ஆமோதித்தார்கள். மத்தியில் ஒருவர் மகம்மதிய மதத்தில் உள்ள கோஷா முறையைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன என்று ஒரு சீட்டு எழுதி அனுப்பினார்கள். அதற்கு திரு.ஈ.வெ. ராமசாமி தான் பதில் அளிப்பதாக முன் வந்து "கோஷா முறையை தான் ஒப்புக் கொள்ளுவதில்லை என்றும் சில படித்த மகம்மதிய கனவான்கள் கோஷா முறை குரானில் இல்லை என்று சொன்னார்கள் என்றும், தான் இங்கு குரானைப் பற்றி ஒரு வார்த்தையும் பேசவரவில்லை என்றும், தனக்கு அதைப் பற்றி தெரியாது என்றும், இந்த நாட்டில் கோஷா இல்லாத மகம்மதிய பெண்கள் அநேகர் இருக்கிறார்கள் என்றும், மலையாளத்தில் 100-க்கு 75 மகம்மதிய பெண்களுக்கு கோஷா இல்லை என்றும், தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி, ராமநாதபுரம் இந்த பக்கங்களில் காடுகளில் வேலை செய்வதைப் பார்த்ததாகவும் தனக்குத் தெரிந்தவரை கோஷா ஒரு அந்தஸ்தாக கருதப்படுகின்றதே தவிர முழுதும் மதக் கட்டளையாகக் கருதுவதாகச் சொல்ல முடியாது என்றும், இப்பொழுது அந்த மதத்தில் சேர்ந்த பெண்கள் கோஷாவாயில்லாவிட்டால் தள்ளிவிட மாட்டார்கள் என்றும்,



விதவாவிவாகம், கல்யாணரத்து, பெண்கள் படிப்பு, சொத்துரிமை ஆகியவைகள் பெண்களுக்கு அந்த மதத்தில் இருப்பதால் கோஷா ஒரு சமயம் இருந்தாலும் அந்த கஷ்டத்தை விட பல பங்கு மேல்பட்ட அதிக லாபமிருக்கின்றது என்றும், அன்றியும், துருக்கியைப் போலும் ஆப்கானிஸ்தானத்தைப் போலும் இங்கும் சமீபத்தில் சீர்திருத்தம் ஏற்படலாம் என்கின்ற நம்பிக்கை இருக்கின்றதென்றும் சொன்னார். கரகோஷத்தினிடையே தீர்மானம் நிறைவேறியது.

## சரஸ்வதி பூசை

சரஸ்வதி பூஜை என்பது ஒரு அர்த்தமற்ற பூஜை, கல்வியையும், தொழிலையும், ஒரு பெண் தெய்வமாக்கி அதற்கு சரஸ்வதி என்று பெயர் கொடுத்து அதை பூஜை செய்தால் கல்வி வரும், வித்தை வரும் என்றும் சொல்லி நம்மை நமது பார்ப்பனர்கள் ஏமாற்றி கல்வி கற்க சொந்த முயற்சி இல்லாமல் சாமியையே நம்பிக்கொண்டு இருக்கும்படி செய்துவிட்டு நாம் அந்த சாமி பூஜையின் பேரால் கொடுக்கும் பணத்தைக் கொண்டே அவர்கள் படித்துப் பெரிய படிப்பாளிகளாகிக் கொண்டு நம்மை படிப்பு வரமுடியா மக்குகள் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். முதலாவது சரஸ்வதி என்னும் சாமியின் சொந்த யோக்கியதையை கவனித்தால் அது பார்ப்பனர்கள் புராணக் கதைகளின்படியே மிக்க ஆபாசமானதாகும். அதாவது சரஸ்வதி என்கிற ஒரு பெண் பிரம்மனுடைய சரீரத்தில் இருந்து உண்டாக்கப்பட்ட பிறகு அவளுடைய அழகைக் கண்டு அந்த பிரம்மனாலேயே மோகிக்கப்பட்டு அவளைப் புணர அழைக்கையில், அவள் பிரம்மனைத் தகப்பன் என்று கருதி, அதற்கு உடன்படாமல் பெண்மான் உரு எடுத்து ஓடவும், பிரமன் தானும் ஒரு ஆண் மான் உருவெடுத்து அவளைப் பின் தொடர்ந்து ஓடவும், சிவன் வேட உருவெடுத்து ஆண் மானைக் கொல்லவும், பிறகு சரஸ்வதி அழுது சிவ பிரானால் மறுபடியும் உயிர்ப்பிக்கச் செய்து, பிரம்மனுக்கு மனைவியாக சம்மதித்ததாக சரஸ்வதி உற்பவக் கதை சொல்லுகிறது. அதாவது தன்னைப் பெற்றெடுத்த தன் தகப்பனையே மணந்து கொண்டவள் என்று ஆகிறது. மற்றொரு விதத்தில் பிரம்மாவுக்கு பேத்தி என்று சொல்லப்படுகின்றது. அதாவது, பிரம்மா ஒரு காலத்தில் ஊர்வசியின் மீது ஆசைப்பட்டபோது வெளியான இந்திரியத்தை ஒரு குடத்தில் விட்டுவைக்க அக்குடத்திலிருந்து அகத்தியன் வெளியாக அவ்வகத்தியன் சரஸ்வதியைப் பெற்றான் என்று சொல்லப்படுகின்றது. இதனால் பிரம்மனுக்கு சரஸ்வதி மகன் வயிற்று பேத்தி ஆகிறாள். எனவே சரஸ்வதியின் பிறப்பும் வளர்ப்பும் நடவடிக்கையும் ஷை பார்ப்பனப் புராணப்படி மெத்த ஆபாசமும் ஒழுக்க ஈனமுமானதாகும்.

நிற்க, இந்த யோக்கியதையுடைய அம்மாளை எதற்காக மக்கள் பூசை செய்கிறார்கள் என்பது இதைவிட மிகவும் வேடிக்கையான விஷயமாகும். அதாவது சரஸ்வதி வித்தைக்கு அதிபதியான தெய்வமாதலால் வித்தையின் பயன் தொழிலென்றும், தொழிலுக்கு ஆதாரமானது ஆயுதங்கள் என்றும் கருதிக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டு, சரஸ்வதி பூஜை என்றும், ஆயுத பூஜை என்றும் ஒரு நாளைக் குறித்துக் கொண்டு அந்த நாளை விடுமுறையாக்கி புஸ்தகங்களையும் ஆயுதங்களையும் வைத்து பூசை செய்கிறார்கள். இந்தப் பூசையில் அரசன் தனது ஆயுதங்களையும், வியாபாரி தனது கணக்குப் புத்தகங்கள், திராசு, படிக்கல், அளவு மரக்கால்படி, உழக்கு, பெட்டி முதலியவைகளையும் தொழி லாளிகள் தங்கள் தொழில் ஆயுதங்களையும் இயந்திரச் சாலைக்காரர்கள் இயந்திரங்களையும், மாணாக்கர்கள் புத்தகங்களையும், குழந்தைகள் பொம்மை களையும், தாசிகள் தங்கள் ரவிக்கைகளையும், சீலைகளையும், நகைகளையும், வாத்தியக்காரர்கள் வாத்தியக்கருவிகளையும் மற்றும் இதுபோலவே ஒவ்வொரு வர்களும் அவரவர்கள் லட்சியத்திற்கு ஆதாரமாக வைத்திருக்கும் சாமான் களை வைத்து பூஜை செய்கின்றார்கள். இதனால் அந்த தினத்தில் தொழில் நின்று அதனால் வரும் வரும்படிகளும் போய் பூஜை ஒய்வு முதலிய ஆடம்பரங் களுக்காக தங்கள் கையில் இருக்கும் பணத்திலும் ஒரு பாகத்தை செலவு செய்தும் போராவிட்டால் கடன் வாங்கியும் செலவு செய்வதைவிட யாதொரு நன்மையும் ஏற்படுவதாக சொல்லுவதற்கே இல்லாமல் இருக்கின்றது. ஆயு தத்தை வைத்து பூசை செய்து வந்த வருகின்ற அரசர்கள் எல்லாம் இன்றைய தினம் நமது நாட்டில் ஆயுதத்தை வைத்து பூஜை செய்யாத வெள்ளைக்கார அரசனுடைய துப்பாக்கி முனையில் மண்டி போட்டு சலாம் செய்து கொண்டு இஸ்பேட் ராஜாக்களாக இருந்து வருகின்றார்களே ஒழிய ஒரு அரசனாவது சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை ஆகிய பூஜையின் பலத்தால் தன் காலால் தான் தைரியமாய் நிற்பவர்களை காணோம்.

சரஸ்வதி பூஜை செய்யும் வியாபாரிகளில் ஒரு வியாபாரியாவது சரஸ்வதிக்கு பயந்து பொய்கணக்கு எழுதாமலோ, தப்பு நிறை நிருக்காமலோ குறை அளவு அளக்காமலோ இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அதுபோலவே கைத்தொழிலாளிகளும் தங்கள் ஆயுதங்களிடத்தில் வெகு பக்தியாய் அவைகளைக் கழுவி விபூதி சந்தனம் குங்குமப் பொட்டு முதலியவைகள் போட்டு விழுந்து கும்பிடுவார்களே தவிர ஒருவராவது நாணய மாய் நடந்து கொள்கின்றார்கள் என்றாவது அல்லது அவர்களுக்குத் தாராளமாய் தொழில் கிடைக்கின்றது என்றாவது சொல்லுவதற்கு இல்லாமலே இருக்கின் றார்கள். அதுபோலவே புஸ்தகங்களையும் பென்சிலையும் கிழிந்த காகிதக் குப்பைகளையும் சந்தனப் பொட்டுப் போட்டு பூசை செய்கின்றார்களே அல்லாமல் காலோ கையோ பட்டுவிட்டால் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கும்பிடு கின்றார்களே அல்லாமல் நமது நாட்டில் படித்த மக்கள் 100க்கு 5 பேர்களுக் குள்ளாகவே இருந்து வருகின்றார்கள். இவ்வளவு ஆயுத பூஜை செய்தும், சரஸ்வதி பூஜை செய்தும் இவ்வளவு விரதங்கள் இருந்தும், நமது அரசர்கள் அடிமைகளாக இருக்கின்றார்கள். நமது வியாபாரிகள் நஷ்டமடைந்து கொண்டு வருகிறார்கள். நமது தொழிலாளர்கள் தொழிலில்லாமல் பிழைப்பைக் கருதி வேறு நாட்டிற்கு குடிபோகின்றார்கள். நமது மக்கள் நூற்றுக்கு ஐந்து பேரே படித்திருக்கிறார்கள். சரஸ்வதியின் ஜாதியைச் சேர்ந்த பெண்கள் ஆயிரத்திற்கு



ஒன்பது பேரே படித்திருக்கிறார்கள்.

இதன் காரணம் என்ன?

நாம் செய்யும் பூசைகளை சரஸ்வதி தெய்வம் அங்கீகரிக்க வில்லையா? அல்லது சரஸ்வதி தெய்வத்திற்கும் இந்த விஷயங்களுக்கும் ஒன்றும் சம்பந்த மில்லையா? அல்லது சரஸ்வதி என்கின்ற ஒரு தெய்வமே பொய்கற்பனையா? என்பவையாகிய இம்மூன்றில் ஒரு காரணமாகத்தான் இருக்கவேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இவைகள் சுத்த முட்டாள்தனமான கொள்கை என்பதே எனது அபிப்பிராயம்.

வெள்ளைக்கார தேசத்தில் சரஸ்வதி என்கின்ற பேச்சோ கல்வி தெய்வம் என்கின்ற எண்ணமோ சுத்தமாய் கிடையாது.

அன்றியும் நாம் காகிதத்தையும் எழுத்தையும் சரஸ்வதியாய்க் கருதித் தொட்டு கண்ணில் ஒத்திக் கொண்டும், நமக்குக் கல்வி இல்லை. ஆனால் வெள்ளைக்காரன் மல உபாதைக்குப் போனால் சரஸ்வதியைக் கொண்டே மலம் துடைத்தும், அவர்களில் நூற்றுக்கு நூறு ஆண்களும் நூற்றுக்கு அறுபது பெண்களும் படித்திருக்கிறார்கள். உண்மையிலேயே சரஸ்வதி என்ற ஒரு தெய்வமிருக்குமானால் பூசை செய்பவர்களை தற்குறிகளாகவும் தன்னைக் கொண்டு மலம் துடைப்பவர்களை அபார சக்தி வாய்ந்த அறிவாளிகளாகவும். கல்வி வான்களாகவும் செய்யுமா என்பதை தயவு செய்து யோசித்துப் பாருங்கள்.

உண்மையிலேயே யுத்த ஆயுதம், கைத் தொழில் ஆயுதம், வியாபார ஆயுதம் ஆகியவைகள் உண்மையிலேயே சரஸ்வதி என்னும் தெய்வ அம்சமாயிருக்குமானால் அதை பூசை செய்யும் இந்த நாடு அடிமைப்பட்டும் தொழிலற்றும் வியாபாரமற்றும், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கவும், சரஸ்வதியை கனவிலும் கருதாததும் சரஸ்வதி பூசை செய்கின்றவர்களைப் பார்த்து முட்டாள்கள், அறிவிலிகள், காட்டுமிராண்டிகள் என்று சொல்லிக் கொண்டிருக் கும் நாடு சுதந்திரத்துடனும், வியாபாரிகள் அரசாக்ஷியுடனும் தொழிலாளர் ஆதிக்கத்துடனும் இருக்க முடியுமா என்பதையும் யோசித்துப் பாருங்கள். இந்த பூஜையின் மூலம் நமது முட்டாள்தனம் எவ்வளவு வெளியாகின்றது பாருங்கள்.

ராஜாக்கள் கொலுவிருப்பது, பொம்மைகள் கொலுவிருப்பது, சாமிகள் கொலுவிருப்பது. இதற்காக ஜனங்கள் பணம் செலவு செய்வது, நேரம் செலவு செய்வது, அறிவு செலவு செய்வது, பத்து லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு பொம்மைகள் சந்தனம், குங்குமம், கற்பூரம், சாம்பிராணி கடலை பொரி சுண்டல் வடை மேளவாத்தியம் வாழைக் கம்பம், பார்ப்பனர்களுக்கு தட்சணை, சமாரா தனை, ஊர்விட்டு ஊர்போக ரயில் சார்ஜு ஆகிய இவைகள் எவ்வளவு செலவா கின்றது என்பதை எண்ணிப்பாருங்கள். இவைகள் எல்லாம் யார் வீட்டுப் பணம்? தேசத்தின் செல்வமல்லவா என்று தான் கேழ்க்கின்றேன். ஒரு வருஷத்தில் இந்த ஒரு பூஜையில் இந்த நாட்டில் செலவாகும் பணமும் நேரமும் எத்தனை கோடி



RangaRakes tamilnavarasam.com

ரூபாய் பெறுமானது என்று கணக்குப் பார்த்தால் மற்ற பண்டிகை, உற்சவம், புண்ணியதினம், அர்த்தமற்ற சடங்கு என்பவைகளின் மூலம் செலவாகும் தொகை சுலபத்தில் விளங்கிவிடும். இதை எந்த பொருளாதார இந்திய தேசிய நிபுணர்களும் கணக்குப் பார்ப்பதே இல்லை.

## புரட்டாசி சனிக்கிழமை

இனி அடுத்தாற்போல் வரும் புரட்டாசி சனிக்கிழமை உற்சவங்களும், திருப்பதி முதலிய நூற்றுக்கணக்கான சனிக்கிழமைப் பெருமாள்கள் உள்ள ஊர்களின் உற்சவங்களும், சனிக்கிழமை பிடிப்பதன் மூலம் அவரவர்கள் வீட்டில் ஏராளமாய் சமைத்துக்கொண்டு சோம்பேறிகளையும் அயோக்கியர் களையும் மெனக்கட்டுத் தேடிப் பிடித்து வந்து அவர்களுக்கு வயிறு நிறையவும் போட்டு மற்றும் மூட்டை கட்டிக் கொண்டும் போகக்கூடிய அளவு மேல் கொண்டும் போட்டு கஞ்சாவுக்கோ கள்ளுக்கோ சூதாடவோ கையில் பணமும் கொடுத்து, இவ்வளவும் போராமல் அந்த நாளெல்லாம் பட்டினி கிடந்து அந்த சோம்பேறிகளின் காலிலும் விழுந்து மாலை 3 மணி 4 மணி சுமாருக்கு சாப்பிடும் பண்டிகையிலோ விரதத்திலோ கடுகளவு அறிவு இருக்கின்றதா என்று கேழ்க்கின்றேன். புரட்டாசி சனிக்கிழமை வந்தால் எத்தனை பேர்கள் தங்களுக்கும் பட்டை நாமம் போட்டுக் கொண்டு சொம்புக்கும் நாமத்தை குழைத்து போட்டுக் கொண்டு, துளசியை அரளிப்பூவையும் அந்த சொம்புக்கு சுத்திக் கொண்டு "வெங்கிடாசலபதி கோவிந்தா" என்றும் "நாராயணா கோவிந்தா" என்றும் கூப்பாடு போட்டு அரிசியோ காசோ வாங்கிக் கொண்டு போவதில் ஏதாவது பலனுண்டா என்றுதான் கேட்கின்றேன்.

மற்றும் திருப்பதிக்குப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டு தலை மயிரும் தாடி மயிரும் வளர்த்து வெறும் மஞ்சள் நனைத்த துணிக்கட்டிக் கொள்ளுவதும் மேளம் வைத்துக் கொள்வதும் பெண்டுபிள்ளைகள் சுற்றத்தார் களை அழைத்துக் கொள்வதும் வருஷமெல்லாம் பணம் போட்டு மொத்தமாய் பணம் சேர்ப்பதும் அல்லது வேண்டுதலையின் மேல் இவ்வளவு பணம் என்று கடன் வாங்கியாவது எடுத்துக் கொள்வதும் அல்லது வியாபாரத்திலோ வேறு வரும் படியிலோ லாபத்தில் இத்தனை பங்கு என்று கணக்கு வைத்து சேர்த்து எடுத்துக் கொள்வதும் ஆன பணமூட்டை கை கட்டிக்கொண்டு கடைவாயிலும் நாக்கிலும் வெள்ளி கம்பியை குத்திக் கொண்டு போதாக்குறைக்கு தெருவில் கூட்டமாய் "கோவிந்தா" "கோவிந்தா" "கோவிந்தா" என்று கூப்பாடு போட்டுவிட்டு வீட்டு வீட்டுக்கு, கடைகடைக்கு காசு பணம் வாங்கி ஒருபகுதியை ரயிலுக்கு கொடுத்து திருப்பதி போவதும், அங்கு முழங்கால் முறிய மலையேறுவதும் ஆண்களும் பெண்களும் தலைமொட்டை அடித்துக் கொள்வதும் அந்த மலைச்சுனைத் தண்ணீரில் குளிப்பதும் அந்த பட்டை நாமம் போட்டுக் கொள்வதும் கொண்டுபோன பணத்தை கடாரத்தில் காணிக்கையாக கொட்டுவதும், ஆண்களும் பெண்களும் நெருக்கடியில் இடுபடுவதும்,



பிடிபடுவதும் வெந்ததும் வேகாததுமான சோற்றை தின்பதும் மற்றும் பல சோம்பேறிகளுக்கும் மேக வியாதிகாரர்களுக்கும் வேக வைத்தோ விலைக்கு வாங்கியோ போடுவதும் விறகு கட்டையிலும் வேர்களிலும் செய்த மரமணி மாலைகளை வாங்கி கழுத்தில் போட்டுக் கொள்வதும். மலைக்காய்ச்சலோடு மலையைவிட்டு இறங்கி வருவதும் வீட்டுக்கு வந்து மகேஸ்வரபூசை "பிராமண சமார்த்தனை" செய்வதும் தவிர மற்றபடி இவைகளால் ஏதாவது செய்த வனுக்கோ, கூடப்போன மக்களுக்கோ, நாட்டுக்கோ, ஒழுக்கத்திற்கோ, மதத் திற்கோ கடுகளவு நன்மை உண்டாகுகின்றதா என்று கேட்கின்றேன்.

திருப்பதிக்கு போய் வந்த பிறகாவது யாராவது தங்கள் துர்க்குணங் களையோ கெட்ட செய்கைகளையோ விட்டுவிட்டதாகவாவது அல்லது திருப்பதி யாத்திரையானது இம்மாதிரி குணங்களை விடும்படி செய்ததாக வாவது நம்மில் யாராவது பார்த்திருக்கின்றோமா என்று கேட்பதுடன் இம்மாதிரி அறிவீனமான காரியத்திற்காக நமது நாட்டில் வருஷத்திற்கு எத்தனை கோடி ரூபாய் செலவாகின்றது என்பதை எந்தப் பொருளாதார இந்திய தேசீய நிபுணராவது கணக்குப் போட்டார்களா என்று கேட்கின்றேன்.

## தீபாவளி

இனி அடுத்த மாதம் தீபாவளி பண்டிகை என்று கஷ்டமும் நஷ்டமும் கொடுக்கத்தக்க பண்டிகையொன்று வரப்போகின்றது. அதிலும் ஏதாவது, அறிவுடைமை உண்டா என்று கேட்கின்றேன். தீபாவளி பண்டிகையின் கதையும் மிக்க ஆபாசமானதும், இழிவானதும், காட்டுமிராண்டித்தனமானது மாகும், அதாவது விஷ்ணு என்னும் கடவுள் பன்றி உருக்கொண்டு பூமியைப் புணர்ந்ததன் மூலம் பெறப்பட்டவனான நரகாசூரன் என்பவன் வருணனுடைய குடையைப்பிடுங்கிக் கொண்டதால் விஷ்ணு கடவுள் கிருஷ்ணாவதாரத்தில் கொன்றாராம். அந்த தினத்தைக் கொண்டாடுவதற்கு அறிகுறியாக தீபாவளி பண்டிகை கொண்டாடுவதாம்.

சகோதரி சகோதரர்களே! இதில் ஏதாவது புத்தியோ மனிதத் தன்மையோ இருக்கின்றதா என்று பாருங்கள். விஷ்ணு என்னும் கடவுள் பூமியை புணருவது என்றால் என்ன என்றாவது, அது எப்படி என்றாவது, நரகாசூரன் என்றால் என்ன? வருணன் என்றால் என்ன? வருணன் குடை என்றால் என்ன? என்பதாவது, அப்படி ஒன்று இருக்க முடியுமா என்றாவது, இவைகள் உண்மையா? என்றாவது கருதிப் பாருங்கள்! இப்படி பொய்யானதும் அர்த்தமற்றதுமான பண்டிகையினால் எவ்வளவு கஷ்டம்? எவ்வளவு ரூபா நஷ்டம்? எவ்வளவு கடன்? எவ்வளவு மனஸ்தாபம்? எவ்வளவு பிரயாணச் செலவு? என்பவைகளை ஒரு சிறிதுகூட நமது மக்கள் கவனிப்பதில்லையே! அப்பண்டிகையை உத்தேசித்து ஒவ்வொருவரும் தனது யோக்கியதைக்கும் தேவைக்கும் மேற்பட்ட பணம் செலவு செய்து, துணி வாங்க ஆசைப்படுகிறான்;

கடன் என்றால் வட்டி அல்லது ஒன்றுக்கு ஒன்றரை பங்கு கிரையம்



RangaRakes tamilnavarasam.com

ஏற்பட்டுவிடுகின்றன. இதுதவிர மாமனார் வீட்டு செலவு எவ்வளவு. தவிர சுத்தமுட்டாள் தனமான பட்டாசுக்கொளுத்துவது எவ்வளவு? மற்றும் இதனால் பலவித நெருப்பு உபாதை ஏற்பட்டு வீடு வேகுதலும், துணியில் நெருப்பு பிடித்து உயிர் போதலும், பட்டாசு சுடுவதாலும் செய்வதாலும் மருந்து வெடித்து உடல் கருகி கண், மூக்கு, கை, கால், ஊமையாவதுமான காரியங்கள் எவ்வளவு நடக்கின்றது? இவ்வளவும் அல்லாமல் இந்த பண்டிகை கொண்டாடுவதற்கு அறிகுறியாக எவ்வளவு பேர்கள் கள்ளு சாராயம் குடித்து மயங்கி தெருவில் விழுந்து புரண்டு, மானம் கெடுவது எவ்வளவு? மேலும் இதற்காக 'இனாம் இனாம்' என்று எத்தனை பாமர மக்கள் பிச்சை எடுப்பது அல்லது தொந்தரவு கொடுத்து பணம் வசூல் செய்வது ஆகிய இந்தக் காரியங்களால் எவ்வளவு பணம், எவ்வளவு நேரம், எவ்வளவு ஊக்கம், எவ்வளவு பணம் செலவாகின்றது என்று கணக்குப் பாருங்கள். இவைகளை எல்லாம் எந்த இந்திய பொருளாதார தேசீய நிபுணர்களாவது கவனிக்கிறார்களா? என்று கேழ்க்கின்றேன். துலாஸ் தானம் தவிரவும் இந்து மதத்திலேயே அய்ப்பசி துலாஸ்நானமென்று புதுத் தண்ணீர் காலத்தில் நதிகளில் போய் அழுக்குத் தண்ணீரில் தினம் தினம் காலையில் குளிப்பதும், புதுத்தண்ணீர் ஒத்துக் கொள்ளாமல் கஷ்டப்படுவதும் இதற்காக ஊரைவிட்டுவிட்டு ஊர் பணம் செலவு செய்து கொண்டு போய் கஷ்டப்படுவதும். ஒன்று இரண்டு தண்ணீர் இழுத்து கொண்டு போகப்படுவதும், குளித்து முழுகிவிட்டு நதிக்கரையில் இருக்கும் பார்ப்பனர்களுக்கு அரிசி பருப்பு பணம் காசு கொடுத்து அவன் காலில் விழுவதுமான காரியங்கள் செய்வதும், ஆதிமுதல் அந்தம் வரை அத்தனையும் பொய்யும் ஆபாசமுமான காவிரிப்புராணம் படிக்க கேட்பதும் அதற்காக அந்த பொய்யையும் கேட்டு விட்டு பார்ப்பானுக்கு சீலை வேஷ்டி சாமான் பணம் கொடுத்து காலில் விழுவது மான காரியம் செய்கின்றோம். காவேரியை பெண் தெய்வமென்பதும் அதில் ஆண்கள் குளிப்பதுமான காரியம் ஆபாசமல்லவா?

## கார்த்திகை தீபம்

இனி அதற்கு அடுத்த மாதமாகிய கார்த்திகை மாதம் வந்தால் கார்த்திகைப் பண்டிகை என்று வீணாக ஆயிரக்கணக்கான தீபம் கொளுத்துவ தின் மூலம் எண்ணெயையும், நெய்யையும் பாழாக்கி புகைப்பதும், மலைகளின் பேரில் கட்டைகளையும் விறகுகளையும் போராய் குவித்து அதில் நெய்யையும் வெண்ணெயையும் டின்னு டின்னாய், குடம் குடமாய் கொட்டி கொளுத்துவதும், இந்த வேடிக்கை பார்க்க திருவண்ணாமலை, திருச்செங்கோடு முதலிய மலைக் கோயில் உள்ள ஊர்களுக்கு ஜனங்கள் லட்ச லட்சமாய் பணம் செலவுசெய்து ரயில் சார்ஜ் கொடுத்து நெருக்கடியில் சிக்கிக் கஷ்டப்பட்டு கண்ட ஆகாரத்தை புசித்து வயிற்றைக் கெடுத்துக் கொண்டு ஊர் வந்து சேருவதும் விளக்கு நெருப்பில் பல பெண் குழந்தைகள் துணியில் நெருப்புப் பிடித்து உடல் வெந்து சாவதும் ஆகிய காரியங்கள் இல்லாமல் அவைகளால் வேறு ஏதாவது பலன் உண்டா என்று கேழ்க்கின்றேன். முன் போலவே இந்தப் பண்டிகை மூலமும்



வருஷம் ஒன்றுக்கு இந்த நாட்டில் எவ்வளவு ரூபாய்கள் செலவாகிறது என்றும் எவ்வளவு நேரமும் அதிலும் செலவாகின்றது என்றும் எந்த இந்திய தேசீய பொருளாதார நிபுணர்களாவது கணக்குப் பார்த்தார்களா? என்று கேழ்க் கின்றேன்.

## வைகுண்ட ஏகாதசி பூசம்

இனி அதற்கு அடுத்த மார்கழி மாதம் வந்தால் வைகுண்ட ஏகாதசி என்று கூட்டம் கூட்டமாய் சீரங்கம் முதலிய ஊர்களுக்குப் பணம் செலவு செய்து கொண்டு போவதும், தை மாதம் வந்தால் பூசம் என்று காவடிகளைத் தூக்கிக் கொண்டு பழனி முதலிய மலைகளுக்குப் போவதும், பொய்யையும் புளுகை யும் காவடிக் கதையாய்ச் சொல்வதும், அறுத்துச் சமைத்த பாம்பும் மீனும் கோழியும் உயிர் பெற்றுவிட்டது என்பதும், மண்ணு சர்க்கரையாகி விட்டது என்பதும், வெட்டித் துண்டாக்கப்பட்ட குழந்தை உயிர் பெற்று எழுந்துவிட்ட தென்பதும், இன்னும் இதுபோல பல பொய்களை வெட்கமில்லாமல் சொல்லுவ தும், அழுக்கு குளங்களில் குளித்து அழுக்கு தண்ணீரை சாப்பிட்டு பஞ்சாமிர்தம் என்னும் ஒரு அசிங்கமான வஸ்துவை கண்டபடி சாப்பிட்டு வயிற்றுப் போக்கெடுத்து காலரா ஏற்பட்டு திரும்பிப் போகும் போது வழியில் சாவதும், சிலர் அந்த கால்ராவை தங்கள் தங்கள் ஊருக்குக் கொண்டுபோய் பரவவிட்டு அங்குள்ளவர்களை கொல்லுவதும், அவர்கள் நதி வாய்க்கால் ஓரங்களில் குடி இருந்தால் அந்த கால்ரா அசிங்கம் வாய்க்கால்களில் கலந்து கரை ஓரங்களில் இருக்கும் ஊர்களிலெல்லாம் பரவி மக்கள் நூற்றுக்கணக்காக சாவதுமான காரியங்கள் வருஷந்தோறும் நடைபெறுகின்றது. சாதாரணமாக சீரங்கம் வைகுண்ட ஏகாதசி உற்சவத்திலும் பழனி தைப்பூச உற்சவத்திலுமே ஏற்பட்ட சுகாதாரக் கெடுதியால் ஒவ்வொரு வருஷமும் முதல் முதல் அங்கு கால்ரா உற்பத்தியாகி பிறகு இரண்டு மூன்று மாதம் தென்னாடெல்லாம் பரவி ஒரு 1க்கு இரண்டு, மூன்று ஆயிரம் பேருக்கு குறைவில்லாமல் கொள்ளை கொண்டு போகின்றது. இதன் உண்மையை ஒருவரும் அறியாமல் 'பேதியாயி' 'மாரியாயி' 'ஓங்காளியாயி' ஊருக்கு ஒருகுடம் எண்ணெய் கொண்டு வந்து ஆளுக்கு அரை கரண்டி கொடுத்துவிட்டாள் என்று சொல்லி ஊரிலுள்ள மக்களில் சில பாகம் செத்து கால்ரா தானாக ஒடுங்கியபின் ஓங்காளியின் பொங்கலும் காளி பூசையும் செய்து பேதியை நிறுத்திவிட்டதாக வெட்கமில் லாமல் பேசிக் கொள்வதும், அன்றியும்,

## கிராம தேவதை

கிராமங்களிலெல்லாம் மார்கழி, தை மாதங்களிலேயே மாரியம்மன் பண்டிகை கொண்டாடி வெந்தும் வேகாதப் பொங்கலும், பச்சைமாவும், சரியாய் சுத்தம் செய்யாத வேகாத மாமிசமும் கண்டபடி புசிப்பதால் அஜீரணம், கால்ரா முதலிய வியாதிகள் உண்டாவதையும் பார்க்கின்றோம். பொதுவாகவே நமது



RangaRakes
tamilnavarasam.com

நாட்டில் கூட்டம் சேர்ந்தாலே அசுத்தம் உண்டாகி வியாதிகள் ஏற்படுவதை அனுபவத்தில் பார்த்து வருகின்றோம்.

## சிவராத்திரி

இனி அதற்கடுத்த மாசி மாதம் வந்தால் சிவராத்திரி என்று கண்டபடி கிழங்கு வகைகளையும், தானியவகைகளையும், பலகார வகைகளையும் ஒரே நாளில் செய்து அளவுக்கு மேல் தின்று குழந்தைகளையும் தின்னச் செய்து அஜீரணத்தையும் வயிற்று வலியையும் உண்டாக்கிக் கொள்வதோடு இதனால் ஏற்படும் செலவு எவ்வளவு என்பதை யாராவது யோசித்துப் பார்க்கின்றார்களா? என்று கேழ்க்கின்றோம். இப்படியே ஒவ்வொரு மாதமும் உற்சவமும் பண்டிகைகளும், விரதங்களும், சடங்குகளும் ஏற்பட்டு மொத்தத்தில் வருஷத் தில் எவ்வளவு கோடி ரூபாய்கள் செலவு, எவ்வளவு வியாதிகள் வரவு, எவ்வ ளவு உயிர்கள் போக்கு என்பவைகளை யார் கவனிக்கின்றார்கள். இந்தப் பணம் எல்லாம் தேசீய பணமல்லவா? ஏழைதேசம், தரித்திர தேசம், அடிக்கடி பஞ்சம் வரும் தேசம், வேலையில்லாமல் தொழிலில்லாமல் கூலிக்காரர்கள் கும்பல் கும்பலாய் பட்டினி கிடந்து மடிவதுடன் பெண்டு பிள்ளை குழந்தைகளுடன் வெளிநாட்டிற்கு கூலிக்காக கப்பலேறும் தேசம் என்று சொல்லி கொண்டிருக்கின்ற நாம், எத்தனை நாட்களை, எத்தனை ரூபாய்களை, எத்தனை ஊக்கங்களை இந்தப் பாழும் அர்த்தமற்ற பொய்யான ஒரு காசுக்கும் உதவாததான நமக்கு இழிவையும் அவமானத்தையும் தருவதான பண்டிகைக்கும் உற்சவத்திற்கும் பூசைக்கும் சடங்குக்குமாக ஒவ்வொருவரும் செலவு செய்கின்றோம் என்பதை கவனித்தால் இந்த நாடு பணமில்லாத நாடா அல்லது புத்தி இல்லாத நாடா என்பது நன்றாய் விளங்கும்.

## இது யார் சூட்சி

எனவே, இப்படிக்கெல்லாம் சொல்வதைப் பார்த்தால் இந்த பண்டிகைகளையும் உற்சவம் முதலியவைகளையும் ஏற்படுத்தியவர்கள் எல்லோரும் அறிவில்லாதவர்களா என்கின்ற கேள்வி பிறக்கலாம். நான் அவர்களை அறிவில்லாதவர் என்று சொல்ல இஷ்டப்படமாட்டேன். மற்றப்படியோ, என்றால் பெரும்பாலும் அவர்கள் சுயநலக்காரர்களும், தந்திரக்காரர்களும் அதிகார ஆசை உடையவர்களுமாயிருக்க வேண்டுமென்றே சொல்லுவேன்.

என் புத்திக்குட்பட்ட வரையில் இந்த பண்டிகை உற்சவம் முதலியவைகள் எல்லாம் புரோகிதர்களான பார்ப்பனர்களும் ஆக்ஷிக்காரர்களான அரசர்களும் கலந்து கண்டுபிடித்து செய்த தந்திரமென்பதே எனது அபிப்பிராயம். உலகத்தில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அறியாமைக்கும் கொடுமைக்கும் புரோகிதர்களும் அரசர்களுமே சேர்ந்து கூட்டுப் பொறுப்பாளர்களாவார்கள்.

சாதாரணமாக உலக சரித்திரத்தில் கொடுமைக்காரர்களும் சூக்ஷிக்காரர்களுமாய் இருந்தவர்களே புரோகிதர்கள் என்கின்ற உயர்ந்த ஜாதிக்காரர்களாகவும் கொள்ளைக்காரர்களும் மூர்க்கர்களுமாயிருந்தவர்களே அரசர்களாகவும் ஏற்பட்டு இருக்கிறார்கள்.





இவ்விருவர்களும் ஜனங்களை ஏய்த்து ஆதிக்கம் செலுத்த வகை கண்டு பிடிக்கவேண்டிய அவசியமுடையவர்கள்.

அந்தப்படி மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வாழ வேண்டுமானால், அந்த மக்களை அறிவினாலும் செல்வத்தினாலும் தாழ்மைப்படுத்தி வைத்திருந்தால்தான் முடியும். ஒரு மனிதன் அறிவுடையவனா யிருப்பானானால் புரோகிதனுக்கு ஏமாற மாட்டான். செல்வமிருக்குமானால் அரசனுக்கு பயப்படமாட்டான். ஆகையால் அறிவும் செல்வமும் இல்லாமல் செய்வதற்கே கோயில் உற்சவம் பண்டிகை சடங்கு ஆகியதான செலவுக்கு ஏற்றவழிகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். மக்கள் சம்பாதிக்கும் பணங்களில் கணக்குப் பார்த்தால் பெரும்பாகமும் இவைகளுக்கே செலவு செய்யும் படியாகவும் மேல்கொண்டு மீதி ஆவதெல்லாம் இவர்கள் சமூகத்திற்கே பயன்படும்படியாகவும் மற்றும் மேல்கொண்டு ஒவ்வொரு குடும்பமும் அதாவது நூற்றுக்கு தொண்ணூறு குடும்பங்கள் இவைகளின் பயனாய் கடன்காரர்களாக இருக்கவுமே இருந்து வரப்படுகின்றது. எனவே, நமது நாடு என்றைக்காவது அறிவுள்ள நாடாகவும், செல்வமுள்ள நாடாகவும், சுயமரியாதை உள்ள நாடாகவும் இருக்கவேண்டுமானால் முதலில் உற்சவம், பண்டிகை, சடங்கு, கோயில், பூசை ஆகியவைகள் ஒழிந்தாக வேண்டும். இவைகளை வைத்துக் கொண்டு மலைகளை எல்லாம் தங்கமும் வைரமுமாக ஆக்கினாலும் சமுத்திரங்களையெல்லாம் பாலும் நெய்யும் தேனுமாக ஆக்கினாலும் மேல் கண்ட உற்சவம் சடங்கு கோவில் பூசை பண்டிகை ஆகியவைகளே சாப்பிட்டு விடும். ஆதலால் இனி மேலாவது இம்மாதிரியான காரியங்களுக்கு அடிமையாகி வீண் செலவு செய்யக் கூடாது என்பதே எனது ஆசை.

*குறிப்பு : ஈரோடு உண்மை நாடுவோர் சங்கத்திலும் வளையக்காரத் தெரு பார்ப்பனரல்லாதார் வாசக சாலையிலும் நடைபெற்ற வாராந்தரக் கூட்டத்தில் சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 20.10.1929**

RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனரின் தேசீயம்

குழந்தை விவாகத்தை தடைப்படுத்தும் சாரதா மசோதா இந்திய சட்டசபைக்கு வந்தது முதல் அது நிறைவேறும் வரை நமது பார்ப்பனர்கள் செய்த தடைகளும் சூழ்ச்சிகளும் கொஞ்ச நஞ்சமல்ல என்பது யாவரும் அறிந்ததாகும். இவ்வளவு தடைகளையும் சமாளித்து சர்க்கார் தயவினாலேயே அது நிறைவேற்றப்பட்டு ராஜப் பிரதிநிதி அனுமதியும் பெற்று சட்டமான பிறகு மறுபடியும் நமது பார்ப்பனர்கள் ஊர் ஊராய் கூட்டங் கூடி அச்சட்டத்தைக் கண்டித்து கூட்டம் போட்டு பேசி வருகின்றார்கள். நூற்றுக்கு தொண்ணூறு பார்ப்பனர்களுக்கு இனிமேல் தாங்கள் இவ்விஷயத்தில் ஒன்றும் செய்ய முடியாது என்பது தெரிந்திருந்தும் கூட அடுத்த தேர்தலில் பார்ப்பனர்கள் ஒன்று சேர்வதற்கும் தேர்தல் கிளர்ச்சிக்கு ஒரு வழிகண்டுபிடிப்பதற்கும் இதை உபயோகித்துக் கொள்ளலாமா என்கின்ற சூழ்ச்சியின் பேரிலேயே இந்த சாரதா மசோதா கண்டனம் என்னும் செத்த பாம்பை ஆட்டி வருகின்றார்கள். தங்களுக்கு உதவியாக மகமதியர்களையும் கிளப்பிவிட்டு அடுத்த தேர்தலுக்கு அவர்களை தங்களுடன் சேர்த்துக் கொள்ளலாமா என்றும் சூழ்ச்சி செய்கின்றார்கள். இதுகடைசியாக கிலாபத்து கமிட்டியினால் பார்ப்பனர்கள் எவ்வளவு லாபம் அடைந்தார்களோ. அதுபோலவும், அது கிலாபத்திற்கு எவ்வளவு பயனளித்ததோ அதுபோலவும் தான் முடியுமே ஒழிய, ஜாக்கிரதையும் முன் யோசனையும் உள்ள மகமதிய மக்கள் இதினாலெல்லாம் ஏமாந்து போக மாட்டார்கள். இவர்களாகவே வேண்டுமானால் கூட்டங்கள் கூடி வானமளாவப் பேசியதாகவும், அபிப்பிராயங்கள் கொடுத்ததாகவும், சத்தியாக்கிரங்கள் செய்வதாக தீர்மானித்ததாகவும் பத்திரிகையில் எழுதிக் கொள்ளலாமே தவிர, மற்றப்படி இவர்களுக்கு காரியத்தில் ஒரு காரியமும் செய்ய யோக்கியதை இல்லை என்பது நமக்கு நன்றாய்த் தெரியும். ஏனென்றால், இந்தக் கூட்டத்தார்களும் திரு.சத்தியமூர்த்தி முதலிய சாஸ்திரிகளும் மூன்று வருடத்திற்கு முன் இந்து தேவஸ்தான சட்டம் செய்யப்படும்பொழுது "மதத்திற்கு ஆபத்து வந்துவிட்டது" "மதத்தில் சர்க்கார் பிரவேசித்துவிட்டார்கள்" "இந்த சர்க்காரை ஒழித்துவிட வேண்டும்" ஆதலால் "எங்களுக்கு ஓட்டுக் கொடுங்கள்" என்று கூக்குரல் போட்டு, அந்த சட்டத்திற்கு விரோதமாக பாமர மக்களின் கையெழுத்து வாங்கி அனுப்பும்படி அச்சுப் பாரங்களை பார்ப்பனப் பத்திரிகைகள் மூலம் ஊர் ஊராய் அனுப்பி, பொய்க் கையெழுத்துகள் லட்சக்கணக்காய் போட்டு வைசிராயிக்கனுப்பி மடாதிபதிகள் பணத்தையும் லட்சக்கணக்காய் கொள்ளையடித்து வயிறு வெடிக்கத் தின்றுவிட்டு மேடை மீது ஏறி எவ்வளவோ வீரம் பேசிய கூட்டத்தார், இப்போது அந்த சட்டத்திற்கும் அந்த இலாக்காவுக்கும் குலாம்களாய் இருப்பதோடு சிறிதும் மான வெட்கமில்லாமல் நேற்றைய சட்டசபை கூட்டத்தில் திரு.சத்தியமூர்த்தி சாஸ்திரியாரே 'தேவஸ்தானக் கமிட்டிக்கு ஏன் பார்ப்பனர்களை நியமிக்கவில்லை" என்று அந்த இலாக்கா மந்திரியை கேள்வி கேட்டு, தகுந்த யோக்கியதையுடைய பார்ப்பனர்கள் கிடைக்கவில்லை என்று மந்திரி பதிலும் சொல்லி, இந்தக் கேள்வி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தத்துவத்தைக் கொண்டு கேட்கப்படுகின்றதா? என்று கேட்டதற்கும் பதில் சொல்லாமல் மந்திரியைக் கொண்டு ஆம் என்று சொல்லச் செய்த வீரராகிய திரு.சத்தியமூர்த்தி அவர்கள் மறுபடியும் சாரதா மசோதாவைப் பற்றி சென்னையில் பேசியிருப்பதைப் பார்க்கும்போது நாளைக்கு இவரே ஏன் அது சம்பந்தமான உத்தியோகங்கள் தங்கள் கூட்டத்தாருக்கு கொடுபடவில்லை என்று கேட்பதில் சந்தேகப்பட இடமுண்டா? என்று கேட்கின்றோம். எனவே, இப்பொழுது இவர் என்ன பேசியிருந்த போதிலும் இந்த சத்தியமூர்த்தி கூட்டத்தாரே ஆண், பெண் அடங்கலும் நாளைக்கு இந்த சட்டத்தை அமுலில் கொண்டுவரும் உத்தியோகங்களுக்கு பல்லைக் கெஞ்சப் போகிறார்கள் என்பதிலும் இவர்களே சட்டத்தை சரிவர நடத்திவைக்கப் போகிறார்கள் என்பதிலும் நமக்கு சிறிதும் சந்தேகமில்லை.

நிற்க. திரு.சத்தியமூர்த்தி சாரதா மசோதா விஷயமாகப் பேசியிருப்பவைகளை கவனிப்போம்.

அதாவது. சர்க்கார் சமூக சம்பந்தமான சட்டம் செய்யக் கூடாதென்றும், பார்ப்பனர்களின் ஒத்துழைப்பை சர்க்கார் இழந்துவிடக்கூடும் என்றும், பார்ப்பனர்கள் இச்சட்டத்திற்கு பணிந்து விடாமல் மீறி சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என்றும் பேசி இருக்கின்றார். இந்தப் பேச்சுக்கு தலைமை வகித்தவர் சென்னை மாகாண வருணாசிரம கமிட்டி தலைவர் திரு.டி. ஆர். ராமச்சந்திர அய்யர் ஆவார். திரு.சத்தியமூர்த்தியோ பூரண சுயேச்சைக்கட்சி காரியதரிசியாவர். எனவே, பூரண சுயேச்சைக்கும் வருணாசிரம தருமத்திற்குமுள்ள இரகசிய சம்பந்தமும் சூழ்ச்சியும் இந்தக் கூட்டுறவால் நன்கு விளங்கும். தவிரவும் திரு. சத்தியமூர்த்தி பேசும்பொழுது அதுவும் ஒரு கட்டிடத்திற்குள் பேசும்பொழுது கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டு போலீசுக்கு சொல்லி அனுப்பி இரண்டு போலீஸ் சேவகர்களைத் தருவித்து வைத்துக்கொண்டு பேசி இருக்கிறார். இதிலிருந்து இவருடைய சமூக சீர்த்திருத்தமும் தேசியமும் சுயராச்சியமும் வெள்ளைக்காரர் நீங்கிய சுயேச்சையும் எவ்வளவு வீரமுள்ளது என்பதை வாசகர்களே உணர்ந்து கொள்ளலாம்.

மிருகப் புணர்ச்சியைவிட மிகக் கேவலமான குழந்தை புணர்ச்சியைத் தடுக்க இவர்களாலும், இவர்கள் மதத்தாலும், இவர்கள் காங்கிரசாலும் தேசியத்தாலும், பூரண சுயேச்சைப் பிரசாரத்தாலும், ஆயிரக்கணக்கான வருஷங்களாக செய்துவரும் சீர்திருத்தத்தாலும், முடியாத ஒரு காரியத்தை சர்க்கார் செய்தால், சர்க்கார் செய்யக் கூடாதென்றும், அதற்கு மக்கள் கீழ்ப்படியக்



RangaRakes tamilnavarasam.com

கூடாதென்றும், அந்தச் சட்டத்தை மீற வேண்டும் என்றும், சர்க்காரோடு பார்ப்ப னர்கள் ஒத்துழைக்கக் கூடாதென்றும் சொல்லும் இவரின் ஒத்துழையாமையும் தேசியமும் என்ன கருத்துக் கொண்டது என்பதை வாசகர்களையே யோசித்துப் பார்க்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இந்தக் கூட்டத்தாரின் தேசியத்தின் கீழும் காங்கிரசின் கீழும் இந்திய மக்கள் என்றைக்காவது மனிதத் தன்மையை அடைய முடியுமா என்பதையும் யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம்.

தேவஸ்தான மசோதா மத விரோதம், தேவதாசிகளை ஒழிக்கும் மசோதா மதவிரோதம், விபசாரிகளை ஒழிக்கும் மசோதா மதவிரோதம், பச்சைக் குழந்தைகளைப் புணரும் கொடுமையை ஒழிக்கும் மசோதா மத விரோதம் என்பதானால் அப்படிப்பட்ட அயோக்கிய ஒழுக்க ஈனமான இழிவான மதங் களை இந்த பிரிட்டிஷ் சர்க்கார் தயவில்லாமல் அழிக்கவோ ஒழிக்கவோ முடியுமா என்றுதான் தேசீய வீரர்களையும், காங்கிரஸ் பக்தர்களையும், ஒத்துழை யாமை தியாகிகளையும், சீர்திருத்த மகாத்மாக்களையும் கேட்கின்றோம்.

உலகம் போய் கொண்டிருக்கின்ற வேகத்தில் அதாவது ஆகாயத்தில் பறப்பதற்கு சட்டமும், தண்ணீருக்குள் பறப்பதற்கு சட்டமும் செய்து கொண்டி ருக்கின்ற காலத்தில், மனிதனையும் குதிரைகளையும் யந்திரத்தினால் செய்து கொண்டிருக்கும் காலத்தில், ஒரு அவுன்சு எடை சூரணத்தினாலும் ஒரு அவுன்சு எடை திராவகத்தினாலும் பதினாயிரக்கணக்கான மக்களை கொல்ல வழி கண்டு பிடித்திருக்கின்ற காலத்தில், பதினான்காயிரம் மையிலுக்கு அப்பால் இருந்து மத்தியில் கம்பி இல்லாமல் பேசவும் கம்பியில்லாமல் விளக்கு எரிய வைக்கவும் வேலை செய்து கொண்டிருக்கும் காலத்தில், ஆணை பெண்ணாக்கி, பெண்ணை ஆணாக்கி பரீக்ஷை பார்க்கின்ற காலத்தில், நமது நாட்டில் குழந்தைகளை புணரக்கூடாது என்று சட்டம் செய்யும் வேலையில் ஒரு கூட்டம் ஈடுபடவும், அதை மீறி நடக்க ஒரு கூட்டம் வீரர்கள் அதுவும் "தேசீய வீரர்கள்" ஒத்துழையாமைக்குத் தயாராகவும் இருந்தால் நமது நாட்டின் பெருமையை என்ன என்று சொல்லுவது? என்பது நமக்கே விளங்கவில்லை! இந்த வீரர்களை எப்படி மதிப்பது? எப்படி பின்பற்றுவது என்பதும் நமக்கு விளங்கவில்லை. நம்மைப் பொறுத்தவரை இந்த மாதிரி வீரர்களைப் பற்றி கவலை இல்லையா னாலும் "சுயமரியாதை இயக்கத்தின் எல்லாக் கொள்கைகளையும் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் சர்க்காரோடு ஒத்துழைப்பதாக மாத்திரம் ஒப்புக் கொள்ள முடியவில்லை" என்று சொல்லும் ஒத்துழையாமை தியாகிகளு டையவும்,

"சுயமரியாதை இயக்கக் கொள்கையெல்லாம் சரிதான் ; ஆனால் அதில் தேசியமில்லை' என்கின்ற தேசீய வீரர்களுடையவும்,

"சுயமரியாதை இயக்கம் நாட்டுக்கு நல்லதுதான்; ஆனால், அது மதத்தை எதிர்க்கின்றது" என்கின்ற மதப் பக்தர்களுடையவும்,



"சுயமரியாதை இயக்கம் வேண்டியதுதான்; ஆனால் அது தனது கொள்கையை நிறைவேற்ற சர்க்கார் தயவை எதிர்ப்பார்க்கின்றது" என்கின்ற தேசீய சீர்த்திருத்த மகான்களையும் உடைய அறிவையும் யோக்கியதையையும் எண்ணத்தையும் நினைக்கும்போது தான் நமது நாட்டின் அயோக்கியத்தனமும் வெளியாவதோடு, இந்த மாதிரியான கூட்டத்தாரை விட திருவாளர்கள் சத்தியமூர்த்தி, எம்.கே.ஆச்சாரி, ஏ.ரங்கசாமி அய்யங்கார். சி.இராஜகோபாலாச் சாரி, டி.ஆர். ராமச்சந்திரய்யர் முதலியவர்கள் யோக்கியர்கள் என்றே தோன்று கின்றது. ஏனெனில் சர்க்கார் இல்லாமல் சட்டம் செய்ய முடியுமா? சட்டமில்லா மல் காரியம் நடக்குமா? காரியம் நடக்கும்போது மதங்களையும் மனுதர்ம சாஸ்திரங்களையும் பராசர ஸ்மிருதிகளையும் கொண்டு வந்து குறுக்கே போட்டால் எடுத்து எறியாமல் சும்மா இருந்தால் அனுபவத்தில் நடத்த முடியுமா என்று கேட்கின்றோம். அது மாத்திரம் அல்லாமல் திரு.சத்தியமூர்த்தி அவர்கள் இந்த சட்டம் கொண்டு வந்த சாரதா அவர்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று பேசி இருக்கிறார். எனவே திரு.சாரதா அவர்கள் திரு.சத்திய மூர்த்தியின் கடவுளுக்கு பயந்து இருந்தால் இந்த சட்டம் முடிந்து இருக்குமா என்றும் கேட்கின்றோம். நிற்க,

இது விஷயத்தில் "பச்சை தேசிய" பத்திரிகையாகிய அதாவது சர்க் காரை கண்ணால் பார்த்தால் கண்ணை லோஷன் போட்டு கழுவ வேண்டும் என்றும், சர்க்காரைப் பற்றி காதில் கேட்டால் காதில் புருஷை விட்டுத் துடைக்க வேண்டும் என்றும் மனதில் நினைத்தால் மனதை விளக்குமாற்றால் தேய்த்து கழுவ வேண்டும் என்றும் கருதிக் கொண்டு இருக்கும் தேசீய பத்திரிகையாகிய தமிழ்நாடு பத்திரிகை திரு.சத்தியமூர்த்தியின் இந்த தேசீயப் பிரசங்கத்தை பற்றி எழுதுவதாவது:-

"சமூகங்களுக்கு ஏற்பட்டுள்ள கொடுமைகளை நீக்க சர்க்கார் சட்டமும் சவுக்கடியும் இல்லாமல் முடியாது."

"புத்தபகவான் சர்வத் தியாகங்கள் செய்து நாடெங்கும் சுற்றிப் பிரசாரம் செய்தும் முடியாமல் போன அநேக காரியங்கள் சர்க்கார் சட்டத்தினாலேயே நடத்த முடிந்து இருக்கிறது."

"விதவைகளை உயிருடன் நெருப்பிலிட்டுக் கொளுத்தியதும், உயிர் இருக்கும்போதே கங்கையில் தூக்கிப் போட்டதும், குழந்தைகளையும், கர்ப்பிணிகளையும் கோயிலில் நரபலியிட்டதும், கீழ் ஜாதியாரை மேல் ஜாதியார் கொன்றாலும் கேள்வியில்லை என்று இருந்த சாஸ்திர நீதியும் பிராமணனைத் தவிர மற்றவன் படித்தால் பாபம் என்று இருந்த தடையும் சர்க்கார் சட்டம் செய்த பிறகே நீங்கின".

"வழக்கங்களிலும் மதக் கொள்கைகளிலும் சர்க்கார் தலையிடக் கூடாது என்று வைதீகர்கள் வாதிப்பது முற்றிலும் தவறாகும்."

"இந்தியா சுயராஜ்ஜியம் அடைய வேண்டும் என்பதில்



RangaRakes tamilnavarasam.com

முன்னிலையில் இருக்கும் சத்தியமூர்த்தி சமூக தர்மத்தை தடுக்க அடிக்கடி கிளம்பிவிடுவது ஆச்சர்யமாயிருக்கின்றது"

என்பதாக எழுதி இருக்கின்றது. இனி மற்ற தேசீய வீரர்களுக்கும் தேசாபி மானிகளுக்கும் ஒத்துழையாமை தியாகிகளுக்கும் என்று இந்த மாதிரி புத்திவருமோ தெரியவில்லை. முடிவாக நாம் ஒன்று சொல்லுகின்றோம். அநேகமாக இந்த பிரச்சினையையே ஒரு சமயம் அடுத்த தேர்தல் பிரச்சினை யாகக் கொண்டு வரலாமா என்று நமது பார்ப்பனர்கள் கருதிக்கொண்டு இருப்ப தாக தெரிகின்றது. ஏனெனில், இது சமயம் அவர் கைவசம் எவ்வித திட்டமும் இல்லாமல் போய்விட்டது. அதாவது கதர் சங்கதியும், தீண்டாமை சங்கதியும், மதுவிலக்கு சங்கதியும் வெறுத்துப் போய்விட்டது. சர்க்காரை எதிர்ப்பதும் உத்தியோகம் ஏற்றுக்கொள்ளாததும் முட்டுக்கட்டை போடுவதுமான சங்கதி களும் போன தேர்தல் முடிவில் அதாவது மந்திரிகளை நியமித்ததில் வெளியாய் விட்டது.

சைமன் கமிஷன் பகிஷ்காரமும், திருவாளர்கள் காந்தியும், நேருவும், எல்லோரையும் சட்டசபையை விட்டு வெளியேறும்படி கேட்டும் எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்தும் யாரும் வெளியேறாததினாலும் சென்னையில் தேசீய பூசை நடந்ததினாலும், அதற்கும் யோக்கியதை இல்லாமல் போய் விட்டது. மற்றப்படி வகுப்புவாதத்தைப் பற்றிச் சொல்வதற்கும் யோக்கியதை இல்லாமல் போய்விட்டது. ஏனெனில், பார்ப்பனர்களே வகுப்புவாதம் பேச வேண்டி வந்துவிட்டதால் அதுவும் போய்விட்டது. கடைசியாக சுயமரியாதை இயக்கம், நாஸ்திக இயக்கம், மத துரோக இயக்கம், சாஸ்திர மறுப்பு இயக்கம் என்று சொல்லி வெளியில் புறப்படலாம் என்று கூலி கொடுத்து ஆஸ்திக சங்கம் ஏற்படுத்தி காங்கிரஸ் பணம் இரண்டு மூன்று ரூபாயும் கொடுத்து பிரசாரம் செய்து பார்த்து, அதுவும் நரிதின்ற கோழி கூப்பிடுவது போல் ஆகிவிட்டது.

இனி அவர்களுக்கு இதைத் தவிர வேறு ஒரு கதியும் இல்லை. ஆகையால் பொது ஜனங்கள் ஜாக்கிரதையாய் தேர்தலில் இந்த கூப்பாடு பலிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமாய் எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 20.10.1929**



## கார்ப்பொரேஷன் தேர்தல்

ஜஸ்டிஸ் கட்சி முனிசிபல் கவுன்சில் பார்ட்டியின் கூட்டம் ஒன்று 16.10.29 தேதி இரவு 8 மணிக்கு தியாகராய மெமோரியல் கட்டிட மேல் மாடியில் கூடிற்று. 19 அங்கத்தினர்கள் விஜயமாயிருந்தார்கள். திருவாளர்கள் ஜி.நாராயண சாமி செட்டியாரும், அவர் குமாரரும் மற்றுமிரண்டொருவரும் வரவில்லை, என்பதாகத் தெரிகின்றது. கூட்டத்தில் இரகசியமாய் ஓட்டு எடுத்ததில் திரு.ராம சாமி முதலியாருக்கு 15 ஓட்டும், டாக்டர் நடேச முதலியாருக்கு 2 ஓட்டும் கிடைத்தன. அப்படி இருந்தும் இருவரும் தேர்தலை போட்டிபோடப் போவ தாகவே முடிவு செய்து கொண்டு போயிருக்கிறார்கள். ஏறக்குறைய இருவருமே சுயராஜ்ஜியக் கட்சி கவுன்சிலர்களின் ஓட்டுகளை நம்பிக் கொண்டிருப்பதோடு சுயராஜ்ஜியக் கட்சி கவுன்சிலர்கள் வீட்டுக்கும் தலைவர்கள் வீட்டுக்கும் இரு அபேட்சகர்களும் நடந்த வண்ணமாய் இருக்கின்றார்கள். வெள்ளைக்காரர்கள் ஓட்டுகளையும் இருவரும் நம்பிக் கொண்டிருக்கின்றார்கள். ஜஸ்டிஸ் கட்சி கவுன்சிலர்கள் ஓட்டு அநேகமாய் சரிசமமாய்ப் பிரியாவிட்டாலும் இரண்டு பேருக்குமாகத்தான் பிரியக் கூடும் போல் தெரிகின்றது. சுயராஜ்ஜியக் கட்சி ஓட்டுகளும் அதேமாதிரிதான் பிரியும் போல் தெரிகின்றது. வெள்ளைக்காரர் களின் ஓட்டுகள் நாலில் மூன்று பாகம் ஒருவருக்கும் ஒரு பாகம் ஒருவருக்கு மாகப் பிரியலாம். மற்ற ஓட்டுகளும் சரிசமமாகப் பிரியலாம். எனவே, தேர்தலில் இருவர் போட்டியும் பலமாக இருக்கக் கூடும் நம்மைப் பொறுத்தவரை முடிவைப் பற்றி கவலையில்லாவிட்டாலும், அதன் பயனாய் ஏற்படக் கூடிய கக்ஷிப்பிளவு பார்ப்பனரல்லாதார் கட்சியையும் அக்கட்சியின் அடுத்த சென்னை சட்டசபைத் தேர்தல்களையும் பாதிக்காமல் இருக்க முடியாதென்றே கருதி கவலைப்படுகின்றோம். தேர்தல்கள் வரும்போதெல்லாம் நிலைமையை யும் நியாயத்தையும் உரிமையையும் சிறிதும் லட்சியம் செய்யாமல் பலத்தையும் தந்திரத்தையும் சண்டித்தனத்தையும் ஆதாரமாக வைத்தே முடிவு செய்வதா யிருந்தால், அந்தக்கட்சிக்கு எந்த விதத்தில் யோக்கியதையும் நம்பிக்கையும் இருக்க முடியும் என்பது நமக்குப் புரியவில்லை. அநேகமாக 5, 6 மாதத்திற்குள் சட்டசபை தேர்தல் வரக்கூடுமாதலால் திரு.ராமசாமி முதலியாரைப் போன்றவர் கள் கார்ப்பொரேஷன் தலைவராயிருந்தால் கக்ஷி தேர்தலுக்கு அனுகூலமா யிருக்கக் கூடும் என்னும் காரணம் திரு.ராமசாமி முதலியாருக்கு அனுகூலமாக சொல்லிக் கொள்ளப்படுகிறது. டாக்டர். நடேச முதலியார் இந்த கட்சியில் சேர்ந்த காலம் முதல் கொண்டு கஷ்டப்படுகின்றவரானதினாலும் ஒவ்வொரு



RangaRakes tamilnavarasam.com

சமயத்திலும் இம்மாதிரி சாக்குகள் வந்தே அவருடைய உரிமை நழுவ விடப்படுவதாலும் அவரும் இதனாலேயே அடிக்கடி கோபித்துக் கொண்டு கட்சியில் கலகம் விளைவிப்பதும் வெளியில் போவதும் மறுபடி சமாதானமும் ஆசையும் சொல்லி அழைக்கப்படுவதாலும், ஏதாவது ஒரு தடவை அவருக்கும் விட்டுக் கொடுக்க வேண்டியது ஒற்றுமையை உத்தேசித்தாவது அவசியம் என்கின்ற விஷயம் டாக்டர். நடேச முதலியாருக்கு அனுகூலமான காரணமாக சொல்லிக் கொள்ளப்படுகிறது. இரண்டு காரணங்களும் சரி என்று வைத்துக் கொண்டாலும் திருநடேச முதலியாருக்கு விட்டுக்கொடுப்பது இந்தத் தடவையா அல்லது அடுத்த தடவையா என்பதை வேண்டுமானால் மற்ற தலைவர்களும் சேர்ந்து யோசனை செய்து ஒரு முடிவு கட்ட வேண்டியதான விஷயம். அப்படிக்கில்லாமல் எப்படியோ போகட்டும் என்று மற்ற தலைவர்களும் இயக்கத் தலைவரும் அலக்ஷியமாயிருப்பதும் சிலர் இருவருக்கும் நல்ல பிள்ளைபோல் நடந்து கொள்ளுவதும் உள்ளுக்குள் அவர்களுக்கு இஷ்டமானவர்களுக்கு வேலை செய்வதுமான காரியங்களானது அவற்றின் பலன் எப்படியானாலும், அவை தலைவர்களின் பொறுப்பற்ற தன்மையையும் கோழைத் தனத்தையும் சுயநலத்தையும் காட்டுவதாகும். நெல்லூர் மகாநாட்டு நடவடிக்கை ஒருவாறு நமது இயக்கத்தில் உள்ள கட்சிகள் இவ்வளவு என்ப தைக் காட்டிவிட்டது. ஆனால் அடுத்துவரும் கார்ப்பொரேஷன் தலைவர் தேர்தலானது அக்கட்சிகளின் தனித்தனி வேலை துவக்கத்தை காட்டக் கூடியதாகிவிடுமோ என்றே பயப்படுகின்றோம்.

ஆகையால் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் உடனே ஒரு கூட்டத்தைக் கூட்டி இருவரையும் தருவித்து இன்னார்தான் நிற்க வேண்டும் என்று தீர்மானம் செய்ய வேண்டியது அவருடைய முக்கியமானதும் கடமையானதுமான வேலையாகும். அப்படிக்கில்லாமல் அலட்சியமாயிருப்பதோ அல்லது தனது தலைவர் ஸ்தானம் கவுரவிக்கப்படமாட்டாது என்பதோ காரணம் கொண்டு சும்மா இருப்பதானால் அவரும் பொறுப்பை உணராத தலைவர் என்றுதான் சொல்லித் தீரவேண்டியிருப்பதற்கு வருந்துகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 20.10.1929**

# தீபாவளி பண்டிகை பார்ப்பன சூக்ஷி

தீபாவளிப் பண்டிகை என்பது அர்த்தமற்றதென்றும், அதற்கு ஆதாரமான கதைகள் பொய்யும் புளுகும் ஆபாசமுமானதென்றும், அதற்காக பண்டிகை கொண்டாடுவது பார்ப்பனனுக்கு நம்மை அடிமை ஆக்கவும் பார்ப்பனனின் ஆதிக்கத்தை பலப்படுத்தவும் ஏற்படுத்தப்பட்டதென்று சொல்லி வந்திருக்கின் றோம். அன்றியும் புராணங்களை பொய்யென்றும் ஆபாசமென்றும், பார்ப்பன சூக்ஷி என்றும் தீர்மானித்துவிட்ட மக்கள் மறுபடியும் அதே புராணக் கதையாகிய தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதென்பதும், பட்டாசு வாங்கி சுடுவதென் பதும், அறியாமையும் மூட நம்பிக்கையும், சுயமரியாதைக் கொள்கைகளுக்கு விரோதமுமாகும்.

உஷார்! உஷார்!! உஷார்!!!

**குடி அரசு - அறிவிப்பு - 20.10.1929**



RangaRakes
tamilnavarasam.com

# பூனாவில் ஆலயப்பிரவேசம்

## தமிழ்நாட்டிலும் சத்தியாக்கிரகம் துவக்க யோசனை

சகோதரர்களே! நமது தமிழ் நாட்டில் சுயமரியாதை மகாநாடு நடந்து 8, 9 மாதங்கள் ஆகிவிட்டன. அடுத்த பம்பாயில் சுயமரியாதை மகாநாடு நடந்து 3, 4 மாதமே ஆயின. ஆனால் பம்பாய்காரர்கள் இதற்குள் சத்தியாக்கிரகம் துவக்கிவிட்டார்கள். சத்தியாக்கிரகம் அன்றியும் வடநாட்டில் இல்லாமலும் பல கோயில்கள் எல்லோருக்கும் திறந்து விடப்பட்டுவிட்டன. நாமோ மற்றொருவர் செய்த சத்தியாக்கிரகத்தைப் பாராட்டுவதில் முனைந்திருக்கின்றோம். இதை நினைக்கும்போது நம்மை நாம் வாய்ப்பேச்சு வீரர்கள் என்றே சொல்லிக் கொள்ள வேண்டும். நிற்க, சிலர் நம்மை "உங்களுக்குத் தான் இந்தமாதிரி கடவுள்களிடத்தில் நம்பிக்கையே இல்லையே, அப்படி இருக்க எதற்காக கோயிலுக்குள் போக சத்தியாக்கிரகம் செய்யவேண்டும்" என்று கேட்கின்றார் கள். ஆனால் சகோதரர்களே! நாம் மாத்திரமல்ல; இப்போது எங்கு பார்த்தாலும் ஆஸ்திகர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள்கூட நம்மைப்போலவேதான். அதாவது, கோயில் இருப்பது கல்லும் செம்புமே ஒழிய அவை கடவுள்கள் அல்லவென்பதை தாராளமாய் ஒப்புக் கொள்ளுகின்றார்கள். ஆனால் கடவுளை மனிதன் நினைக்க ஞாபகம் வருவதற்காகவே கோயிலும் அதனுள் இருக்கும் கல், செம்பு, காரை, மரம், படம் முதலிய சிலை உருவங்களும், பெரியோர்களால் செய்துவைத்த ஏற்பாடுகளாகும் என்றும் பாமர மக்களுக்கு இதைச் சொன்னால் புரியாதென்றும், அதையே கடவுள் வீடு என்றும், உள்ளிருப்பவைகளே கடவுள்கள் என்றும் சொல்ல வேண்டியிருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது என்பதாக தத்துவார்த்தம் சொல்லுகின்றார்கள். இந்த தத்துவார்த்தம் சொல்லுகின்றவர்களைப் பற்றி நான் என்ன நினைக்கின்றேன் என்றால் ஒன்று இவர்கள் கடவுளை மிகக் கேவலப்படுத்துபவர்களாயிருக்க வேண்டும்; அல்லது கடவுள் தன்மை இன்னது என்பதை அறியாத மூடர்களாயிருக்க வேண்டும். இந்த இரண்டும் இல்லாவிட்டால் பொதுஜனங்களை ஏமாற்றும் அயோக்கியர்களாயிருக்க வேண்டும் என்பதேயாகும்.

ஏனெனில், எல்லாம் வல்லவரும் எங்கும் இருப்பவரும். சர்வ இயங்கு தலுக்கும் காரணமான கடவுள் என்பவரை ஆறறிவுள்ள மனிதனுக்கு ஞாபகப் படுத்த மற்றொரு மனிதன் முயற்சி வேண்டுமென்றால், அதுவும் அதற்கு ஒரு



RangaRakes

கட்டடமும் கல் உருவமும் வேண்டுமென்று ஒருவன் சொல்வானானால். அவன் கடவுள் என்பதற்கு மேல்கண்ட எல்லாம் வல்ல சக்தியும் எங்கும் உள்ள சக்தியும் ஒப்புக் கொண்டவனாவானா என்று கேட்கின்றேன். (சிரிப்பும் கரகோஷமும்) ஆதலால் ஒரு சமயம் கோயில்கள் மூடர்களால் கட்டப்பட்டது என்று சொல்வ தானால் நமக்கு ஆட்சேபனை இல்லை. அப்படிக்கில்லாமல் கோயில்கள் அறிவாளிகளால் கட்டப்பட்டது என்று சொல்வதானால் கண்டிப்பாய் அந்த அறிவாளி என்பவர்கள் சூழ்ச்சியும் வஞ்சகமும் நிறைந்தவர்களாகத் தானிருக்க வேண்டும். ஏனெனில், அந்தக் கோயில்கள் இப்போது அந்த பெரியோர்கள் என்பவர்களின் ஆதாரப்படி (ஆகமப்படி) நடந்து வருவதாகவே இருக்கின்றது. அந்த ஆகமங்கள் என்பவைகளே மனிதன் அந்தக் கோயிலுக்குள் போகவும் அங்குள்ள சாமியை வணங்கவும் பல நிபந்தனைகளைக் கொண்டதாக இருக் கின்றது. அந்த நிபந்தனைகள் மனிதத் தன்மைக்கு சிறிதும் பொருத்தமில்லாததா யிருக்கின்றன.

அதில் ஒரு சிறிதும் ஒழுக்கத்திற்கும் பக்திக்கும் ஆதாரமானதும் கடவுள் ஞாபகம் வருவதற்கு ஆதாரமானதுமான காரியங்கள் இல்லவே இல்லை. அங்குள்ள கடவுள்களைப் பார்த்தால் கடவுள் ஞாபகம் வருமென்றால் அங்குள்ள தாசிகளைப் பார்த்தால் தாசிகள் ஞாபகம் வராதா என்று கேட்கின் றேன். மற்றும் அங்கு கடவுளை வணங்க வரும் மற்ற பெண்களை பார்த்தால் பெண்கள் ஞாபகம் வராதா என்று கேட்கின்றேன். உணர்ச்சியற்ற குழவிக் கல்லை பார்த்த மாத்திரத்தில் கடவுள் ஞாபகம் வருவதானால், உயிருள்ள ஜீவன்கள், பெண்கள், தங்களை பிறர் பார்க்கவேண்டுமென்று அலங்கரித்துக் கொண்டுவந்து நின்றால் ஏன் அந்த ஞாபகம் வராது? அன்றியும் அங்கு கடவுளுக்கு நடக்கும் மற்ற காரியங்களையும் பார்த்தால் ஏன் பார்க்கின்ற மனிதனுக்கு மற்ற ஞாபகமும் வராது என்று கேட்கின்றேன். கோயிலைப் பற்றி என்னுடைய கண்ணியமான அபிப்பிராயமெல்லாம் கோயில்கள் கண்டிப்பாக பாதைக்கும் ஒழுக்கத்திற்கும் ஏற்பட்டது அல்லவென்றும் மக்களை மூடர்களாக அடிமைப்படுத்தவும் உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்கின்ற ஜாதி வித்தியாசத்தை நிலை நிறுத்தவும் ஒரு கூட்டத்தார் பாடுபடாமல் இருந்து கொண்டு சோம்பேறித்தனமாய் வயிறு வளர்க்க வேண்டி பொதுஜனங்கள் பாடுபட்டு சம்பாதித்த பணத்தை கொள்ளை அடிக்கவும் வசதி செய்து கொள்வதற்காகவே ஏற்பட்டதாகும். முன் காலத்தில் இருந்த அரசர்கள் மூடர்களும் அயோக்கியவர்களுமாயிருந்ததால் இம்மாதிரி கோயில் சூழ்ச்சிக்கு அவர்களும் அனுகூலமாயிருந்து வந்திருக்கின்றார்கள். சில அரசர்களுக்கு இம்மாதிரியான கோயில் மூலமாகவே ஆக்ஷியும் அனுகூலமும் ஏற்பட்டிருக் கின்றது. ஆகையால் கோயில்கள் என்பது சோம்பேறிக் கூட்டமும் அரசர்களும் சேர்ந்து தங்கள் சுயநலத்திற்காக பாமர மக்களை ஏமாற்றுவதற்கு செய்த சூழ்ச்சி யேயாகும். அவ்விதி சூழ்ச்சியை ஒழிக்கவே நாம் எல்லோருக்கும் கோயில் பிரவேசம் கேட்கின்றோம். இன்றைய ஜாதி வித்தியாசத்திற்கு ஆதாரமாயுள்ள ரோடு, கிணறு, சாவடி, பள்ளிக்கூடம் முதலியவைகள் எல்லாம் ஒரு விதமாக



tamilnavarasam.com

மாற்றப்பட்டு வந்து கொண்டிருந்தாலும் இந்த கோயில்கள்தான் சிறிது மாற்றுவதற்கு இடம் தராமல் ஜாதி வித்தியாசத்தை நிலை நிறுத்த உபயோகப் பட்டு வருகின்றது. ஆதலால்தான், நான் தீண்டாத மக்கள் என்போர் கண்டிப்பாய் கோவிலுக்குள் போய்த் தீர வேண்டுமென்கின்றேனே ஒழிய, பக்திக்காகவோ, மோட்சத்திற்காகவோ, பாவ மன்னிப்புக்காகவோ அல்லவே அல்ல. கோவிலில் சமத்துவமடைந்து விட்டால் மற்ற காரியங்களில் வித்தியாசம் இருக்க முடியவே முடியாது. கோவிலில் பிரவேசிக்க நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கச் செய்யும் முயற்சியே ஒழிய வேறில்லை. இன்றைய தினம் எல்லோரும் கோவிலுக்குள் ஜாதி வித்தியாசமின்றி விடப்பட்டு விட்டார்கள் என்று ஏற்பட்டு விட்டால், நாளைய தினமே நான் அங்கு எதற்காகப் போகின்றீர்கள்? அங்கு என்ன இருக்கின்றது? அங்கு போனதால் உங்களுக்கு என்ன பலன் ஏற்படுகின்றது? ஏன் உங்கள் பணத்தையும் நேரத்தையும் ஊக்கத்தையும் அறிவையும் பாழாக்குகிறீர்கள்? என்று சொல்லி தடுக்கவே முயற்சிப்பேன். ஏனென்றால் கோவிலில் உள்ள ஜாதி வித்தியாசம் காரண மாகவே சில மூடர்கள் கோயில்களை புனிதமான இடம் என்று கருதிக் கொண்டு தங்கள் பணத்தையும் புத்தியையும் பாழாக்கி வருகின்றார்கள். நம் நாட்டின் வறுமைக்கும் முட்டாள் தனத்திற்கும் கோயில் வரியும் புரோகிதர்கள் வரியும் ஆகமங்களுமே காரணமாகும் என்பது எனது உறுதியான எண்ணம். தரித்திர மும், ஜாதி வித்தியாசமும் ஒழிந்து நமது நாட்டில் அறிவும் செல்வமும், பெருக வேண்டுமானால் இந்தக் கோவில்களும் புரோகிதர்களும் அடியோடு அழிக்கப் பட்டாக வேண்டும். எனவே, இம்முயற்சிகள் பலாத்காரத்தின் மூலம் துவக்குவது என்பது எனக்கு ஒரு சிறிதும் நம்பிக்கை இல்லாததும் பிடிக்காததுமான காரியமாகும். ஏனெனில், நூற்றுக்கு தொண்ணூறு மனிதர்கள் உண்மையாகவே தீண்டாமையை நம்பிக் கொண்டு ஆட்சேபிக்கும்படியான பாமரத்தன்மையில் இருக்கின்றார்கள். அவர்களிடம் பலாத்காரம் செய்வது நியாயமற்றதும் பாதகமானதுமாகும். சத்தியாக்கிரகத்தின் மூலம் இவர்களுக்கு தானாகவே தீண்டாமை என்பது புரட்டு என்று வெளிப்பட்டுவிடும். பிறகு பொதுஜன அபிப்பிராயம் நமக்கு அனுகூலமாக திரும்பிவிடும். அப்போதுதான் எதிரிகள் பலாத்கார மேற்பட்டுவிடுமோ என பயந்துவிடுவார்கள். நாம் இப்போது பலாத்காரமாரம்பித்தால் பாமர மக்கள் தொல்லையும் சர்க்கார் தொல்லையும் எதிரிகள் சூழ்ச்சியும் நம்மை தோல்வியிலேயே கொண்டுபோய் விட்டுவிடும். நாம் சத்தியாக்கிரகம் செய்வதில் கூட மிக்க ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஏனெனில் நாம் எந்தக் கோவிலிலாவது சத்தியாக்கிரகம் ஆரம்பித்தால், அந்தக் கோயிலால் பொறுக்கித் தின்னும் படியான அர்ச்சகர்கள் கோயிலைப் பூட்டி சாவியைக் கொண்டுபோய் நமது மூட சிகாமணிகளாகிய தர்மகர்த்தாக்களிடம் கொடுத்து "உங்கள் பெரியவர்களால் கட்டப்பட்டு எவ்வளவோ சக்தியுடன் இருந்து வந்த கோயிலின் பெருமையை அழிக்க வந்துவிட்டார்கள்; அதை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும், இல்லாவிட்டால் உலகமே முழுகிப்போகும்" என்று சொல்லி அவனுக்கும் நன்றாக சாவி கொடுத்துவிட்டுப் போய் விடு



வார்கள், கடைசியாக தர்மகர்த்தாவாயிருப்பவன் பாமர மக்களை ஏவிவிடுவான். அவர்கள் முரட்டுத் தனமாய் பலாத்காரத்தில் இறங்கும் ஆத்திரத்துடன் வருவார்கள். அந்த சமயத்தில் நாம் ஜாக்கிரதையாய் இருந்து சிறிதும் பொறுமையை இழக்காமல் அவர்களால் ஏற்படும் துன்பங்களை சகித்துக் கொண்டு இருந்துவிட்டோமானால் நாம் வெற்றி அடைந்துவிடுவோம் என்பது உறுதி. நல்ல வேளையாய் நம்மில் ஒருவர் இருவர் பாமர மக்கள் பலாத்காரத் தால் உயிர்விட நேர்ந்துவிட்டால் கண்டிப்பாய் நமக்கு வெற்றி என்பது திண்ணம், வைக்கம் சத்தியாக்கிரக வெற்றிக்கு முக்கிய காரணம் எல்லாம் நமது பொறுமையும் சகிப்புமேயாகும். அங்குள்ள பாமர மக்கள் நம்மை அடித்தார்கள், கத்தியால் குத்தினார்கள், கண்களில் சுண்ணாம்பு பூசினார்கள், 2, 3 தடவை தண்டித்தார்கள். இவ்வளவுக்கும் சத்தியாக்கிரகிகள் பொறுமையாய் இருந்து சகித்துக் கொண்டிருந்ததால் நாம் வெற்றியடைந்தோம். ஆதலால் பொறுமையும் சகிப்பும் இல்லாத சத்தியாக்கிரகம் வெற்றி தராது. நாம் சாத்வீகத்துக்கும் உறுதியுடனிருந்தால் சர்க்காரும் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது. அவர்கள் எத்தனை பேர்களை ஜெயிலில் வைக்க முடியும்? நம்மில் ஒரு ஆள் பாமர மக்களால் அடிபட்டு இறந்தவுடன் சர்க்கார் நூற்றுக்கணக்கான போலீஸ் காரர்களைக் கொண்டு வந்து போட்டு நமக்கு அடி விழுகாமல் காப்பாற்ற அங்கு காவல் காப்பார்கள். இல்லாவிட்டால் நம்மை கைதி செய்வார்கள். எத்தனை பேரைதான் கைதி செய்ய முடியும் என்பதை பார்த்து விடலாம். ஆகையால், நாம் சாத்வீகத்துடன் சத்தியாக்கிரகம் தொடங்கினால் நமக்குப் பணமும் ஆள்களும் வந்து குவிந்தவண்ணமாய் இருக்கும். திருவாளர்கள் சவுந்திர பாண்டியன், சிவராஜ், பாலகுருசிவம், முனிசாமிப்பிள்ளை முதலியவர்கள் எல்லாம் இதில் முனைந்து நிற்பதாக வாக்குக் கொடுத்திருக்கையில் உங்களுக்கு பணத்திற்காவது ஆள்களுக்காவது பஞ்சம் இருக்க முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். ஆகையால் பம்பாய் மாகாண நமது சகோதரர் பூனாவில் சத்தியாக் கிரகம் ஆரம்பித்து நம்மைத் தட்டி எழுப்பியதற்காக நாம் அவர்களுக்கு நம்முடைய நன்றியறிதலை தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களுக்கு ஊக்கமும் தைரியமும் வரும்படி நாம் அவர்களை மனமார பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றோம் என்று பேசி முடித்தார். உடனே தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு பெருத்த கரகோஷத்துடன் நிறைவேறிற்று. அக்கிரா சனர் யாருக் காவது ஆக்ஷேபனை உண்டா என்றுக் கேட்டார். ஒருவர்கூட ஆக்ஷேபிக் கவே இல்லை.

பிறகு அக்கிராசனர் தனது முடிவுரையாக சில வார்த்தைகள் சாத்வீகத் தைப் பற்றி பேசினார்.

பிறகு கடைசியாக திரு.சாமி சகஜாநந்தம் தலைவருக்கும் உபன்யாச கர்களுக்கும் வந்தனோபசாரம் சொல்லுகின்றேன் என்று எழுந்து, சத்தியாக் கிரகம் உயர்ந்த சாதி இந்துக்களால் செய்ய வேண்டுமே ஒழிய நாம் செய்ய வேண்டியதில்லை என்றும், ஜெயிலுக்குப் போனால் பெண்டு பிள்ளை



RangaRakes tamilnavarasam.com

களுக்கு யார் சாப்பாடு போடுவார்கள் என்றும், திரு.ராமசாமி பல தடவை ஜெயிலுக்குப் போய் அனுபோகமிருப்பதாலும், அவருக்கு சாப்பாட்டிற்கு இருப்பதாலும், அவர் எத்தனை தடவை வேண்டுமானாலும் போகலாம் என்றும், வைக்கம் முதலிய சத்தியாக்கிரகத்தில் ஜெயிலுக்குப் போனவர்கள் இன்னமும் கஞ்சிக்கு அலைகின்றார்கள் என்றும், நாம் நன்றாகப் படித்த பிறகு தான் இவ்வித உரிமைக்கு யோக்கியதை உடையவர்களாவோம் என்றும், இவர்களுக்கு அக்கரை இருக்குமானால் சட்டசபையில் ஒரு சட்டம் செய்யட்டும் என்றும், சட்டசபையில் தனக்குப் பார்ப்பனர்களும், பார்ப்பனரல்லாதார்களும் ஆதரவாயில்லை என்றும், ஆதலால் முதலில் பார்ப்பனர்களுக்கும் அல்லாதவர்களுக்கும் போய் பிரசாரம் செய்யட்டும் என்றும் சொன்னார். அக்கிராசனர் இதற்கு விடை அளிக்கும்படி திரு.ஈ.வெ.ராமசாமியைக் கூப்பிட்டார்.

இறுதியில் பேசிய சாமி சகஜாநந்தம் அவர்களுக்கும் பதிலளிக்கும் வகையில் பேசியது:-

“சகோதரர்களே! சாமி சகஜாநந்தம் பேசி இருப்பது எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. உங்கள் சமூகத்திற்கு இழைக்கப்பட்டிருக்கும் இழிவை நீக்க வேறு சமூகத்தார், அதிலும் உங்களை கொடுமைப்படுத்தி அதினால் வாழும் சமூகத்தார் பாடுபட வேண்டும் என்று சொல்லுவது பரிகசிக்கத்தக்கதாகும். அந்தப்படி நீங்கள் எதிர்பார்ப்பதும் மிக்க அறியாமையேயாகும். மேல் ஜாதிக்காரர் என்பவர் எப்போதும் உங்களுக்கு நன்மை புரிய வரமாட்டார்கள். அன்றியும் உங்கள் முன்னேற்றத்தில் தடை செய்யாமல் இருக்கவும் மாட்டார்கள். தவிரவும் உங்கள் சுயமரியாதைக் குறைவுக்கு நீங்கள் பாடுபடாமல் வேறு யார் பாடுபடுவார்கள் ?

தவிர, நீங்கள் ஜெயிலுக்குப் போனால் உங்கள் பெண்டு பிள்ளைகளை யார் காப்பாற்றுவார்கள் என்று சொல்லுவது கோழைத்தனமே யாகும். தனது பெண்டு பிள்ளையைக் காப்பாற்றவே உலகத்தில் இருக்கும் மனிதன், ஒரு நாளும் சுயமரியாதை அடைய முடியாது. நமது நாட்டுப் பொது அடிமைத் தனத்திற்கே இதுதான் காரணம். “நாம் செத்துப் போனால் நமது பெண்டு பிள்ளைகளை யார் காப்பாற்றுவார்கள்” என்று எண்ணுவது அடிமைத்தனத்தி லெல்லாம் முதலாவது அடிமைத்தனம். நீங்களும் உங்கள் பெண்டு பிள்ளைகளும் வாழ வேண்டியது முக்கியமா அல்லது உங்களை ஈனஜாதி என்றும் சொல்லி கழுதைகளும் நாய்களும் மலம் தின்னும் பன்றிகளும் நடக்கும் தெருவில் உங்களை நடக்கக் கூடாதென்றும், மலம் கழுவும் குளங்களில் தண்ணீர் எடுக்கக் கூடாதென்றும், மலத்தை தொடுவதைவிட உங்களைத் தொடுவது கேவலமென்றும் பிறர் சொல்லுவதிலிருந்தும் அந்தப்படி இன்றும் நீங்கள் நடத்தப்படுவதிலிருந்தும் மீளுவது முக்கியமா என்றுதான் உங்களைக் கேட்கின்றேன். மேல்கண்ட இழிவை நீக்கிக் கொள்வதற்கு உதவாத உயிரும் அறிவும் எதற்காக உங்களுக்கு வேண்டும்? இந்த நிலையில் உள்ள உங்களுக்கு பெண்டுபிள்ளைகள்தான் எதற்காக வேண்டும். நீங்கள் ஒவ்வொரு வரும் என்ன இழிவும் அவமானமும் உங்களுக்கு இருந்தாலும் இருக்கட்டும். உங்கள் பெண்டு பிள்ளைகள் மாத்திரம் சவுக்கியமாய் இருந்தால் போதும் என்று நினைத்தீர்களானால் என்றுதான் நீங்கள் மனிதர்களாகப் போகிறீர்கள். சுயமரியாதை உணர்ச்சி கடுகளவாவது இருந்தால் பெண்டுபிள்ளைகளோடு வாழ வேண்டும் என்கின்ற எண்ணம் உங்களுக்குத் தோன்றுமா என்று கேட்கின்றேன். தவிர, ஜெயிலுக்குப் போகின்றவர்களின் பெண்டுபிள்ளைகளுக்கு வேறு ஒருவன் சாப்பாடு போடுவதாயிருந்தால் இன்றைய தினம் நமது நாட்டில் 100க்கு தொண்ணூறு பேர்கள் ஜெயிலிலேயே வசிக்க விரும்புவார்கள். பெண்டு பிள்ளைகளுக்கு வேறு ஒருவரின் சாப்பாட்டை எதிர்பார்த்து ஜெயிலுக்குப் போவதில் தியாகமென்ன இருக்கின்றது என்று கேட்கின்றேன். தவிர, நீங்கள் நன்றாகப் படித்த பிறகுதான் இவ்வித உரிமைக்கு அருகர்களாவீர்கள் என்று அவர் சொல்லுகிறார். இதைக் கேட்க எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கின்றது. இந்த நாட்டில் 100-க்கு 90பேர் கொஞ்சம் கூட படிக்காதவர்கள், அப்படியானால் அவர்கள் எல்லாம் நாயிலும் பன்றியிலும் கடையாய் இருக்கின்றார்களா என்று கேட்கின்றேன். இன்றைய தினம் உங்களை தெருவில் நடக்க வேண்டாம் என்று தடுத்துவிட்டு நடக்கும் மற்றவர்கள் எல்லாம் படித்தவர்களா? அன்றியும் உங்களைத் தவிர மற்றபடி நடக்கும் நாய் பன்றிகள் படித்தவைகளா என்று கேட்கின்றேன். தவிர உங்களில் ரிக்ஷாவண்டி இழுப்பவர்கள் முதல் மலம் எடுத்து ஜீவிக்க நிர்ப்பந்தப்பட்டிருப்பவர்கள் வரை எந்தக் காலத்திற்குப் படித்து முடிவது? நீங்கள் எந்த காலத்தில் தெருவில் நடப்பது? கோயிலுக்குள் போவது? எந்தக் காலத்திற்கு இழிவை விலக்கிக் கொள்வது என்பது எனக்குச் சிறிதும் விளங்கவில்லை. தவிரவும், ஒருவன், படித்ததினாலேயே யோக்கியனாய் விடுவானா? மேல்ஜாதியாய் விடுவானா? என்றே கேட்கின்றேன். என்னைப் பொறுத்த வரையில் நான் படித்தவர்களில் அநேகரை அயோக்கியர்கள் என்றே அறிகிறேன். பெரிய பண்டிதர்களும் பெரியவித்வான்களும் தேவாரபிரபந்தம் ஆகமம் சாஸ்திரம் திருக்குறள் முதலியவைகள் படித்த மதப் பித்தர்களும் அயோக்கியர்களாகவே காணப்படுகின்றார்கள். பெரிய பெரிய ஆங்கிலேயர் பட்டம் பெற்றவர்கள் அதைவிட மோசமாயிருக்கிறார்கள். மதப்படிப்போ ஆங்கிலப் படிப்போ சாஸ்திரப் புராணப் படிப்போ படித்தவர்களில் யாராவது ஒரு யோக்கியர் இருக்கிறார் என்று சாமி சகஜாநந்தம் அவர்கள் சொல்லுவாரா என்று வணக்கமாய்க் கேட்கின்றேன். படிப்புக்கும் சுயமரியாதைக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கின்றேன். மனிதன் சுயமரியாதை பெறுவதற்கு எதைப் படிக்கவேண்டும் என்று சாமி சகஜாநந்தம் சொல்லுகின்றார் என்பது எனக்கு விளங்கவில்லை. இந்த நிலையில் கணக்குப் போடவும் கையெழுத்துப் போடவும் தெரிந்துவிட்டால் வயிறு வளர்க்க அது ஒரு வழியாகுமே தவிர, இழிவை ஒழித்து விடுமா? சுயமரியாதையில் கவலையும் உணர்ச்சியும் இருந்தால் எந்தப் படிப்பு இல்லாவிட்டாலும் மனிதனாக இருக்க முடியும். அதில்லாதவன் எந்தப் படிப்பு படித்தாலும் நடைப்பிணமாகத்தான் சுயநலக்



RangaRakes tamilnavarasam.com

காரனாய்த்தான் வாழ முடியும். இதில் ஒன்றும் சந்தேகமில்லை. என்னுடைய அனுபவத்தையே நான் சொல்லுகின்றேன். தவிர தமக்கு அக்கரை இருக்குமானால் சட்டசபையில் ஒரு சட்டம் செய்யட்டுமே என்கிறார்.

சட்டசபையின் யோக்கியதையை அறிந்த இவர் இப்படிப் பேசுவது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. சட்டசபையில் யார் இருக்கிறார்கள்? சர்க்காருக்கும், அதிகாரிகளுக்கும் பார்ப்பனர்களுக்கும், நம்பிக்கை உள்ள அடிமையாக எவர் நடந்து கொள்ளுகின்றார்களோ அவர்களே பெரிதும் நியமனம் பெறுகிறார்கள். 22 ஆயிரம் 30 ஆயிரம் 50 ஆயிரம் ரூபாய் எவர் செலவு செய்கின்றார்களோ அவர்களே பெரிதும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தக் கூட்டத்திற்கு சுயபுத்தியோ, சுயமரியாதை உணர்ச்சியோ, பொதுநல ஆசையோ இருக்க முடியுமா? என்று கேட்கின்றேன். சாமி சகஜானந்தம் இந்தத் தடவை ஒரு சட்டம் கொண்டு போனால் அடுத்தத்தடவை இவரை சர்க்காரும் பார்ப்பன அதிகாரிகளும் பார்ப்பனரல்லாத மேல் ஜாதியார் என்னும் அதிகாரிகளும் கண்டிப்பாய் நியமிக்க மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். இவ்வளவையும் மீறி யாராவது சட்டம் கொண்டு போவதாயிருந்தாலும் அச்சட்டத்தை சட்டசபைக்குக் கொண்டுவர ராஜப்பிரதிநிதி அனுமதி கொடுப்பாரா என்கின்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஏனெனில் மக்கள் பல ஜாதிகளாய் உயர்வு தாழ்வாய் ஒருவரோடு ஒருவர் போராடிக்கொண்டு இருந்தால்தான் நமது சர்க்கார் நிம்மதியாய் இருக்க முடியும். இல்லாவிட்டால் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து சர்க்காரின் மீது பாய்ந்து விடுவோம் என்கின்ற பயம் சர்க்காருக்கு எப்போதும் உண்டு. ஆகையால், சுலபத்தில் சர்க்காரார் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். நாம் தகுந்த கிளர்ச்சி செய்து, தக்க தியாகம் செய்வதின் மூலம் பொதுஜன அபிப்பிராயத்தை நம் பக்கம் திருப்பிக் கொண்டு செல்வாக்குடன் இருக்கின்றோம் என்றால் சர்க்கார் ஒரு சமயம் இணங்கிவரக் கூடும். 25 வருஷமாய் விவகாரத்தில் இருந்த சாரதா மசோதாவுக்கு இதுவரை சாக்குப் போக்கு சொல்லி வந்த சர்க்கார் இன்று இணங்கியதின் கருத்து நம்முடைய கிளர்ச்சியேயாகும். மிஸ். மேயோ எழுதின புஸ்தகமும் சிவா என்கின்ற புஸ்தகமும் சைமன் கமிஷனை ஆதரித்ததற்கு கூலியும், வெளி அரசாங்கங்கள் நமது அரசாங்கத்தைப் பார்த்து நகைக்குமே என்கின்ற பயமும் "இனிமேல் நீங்கள் எங்களுக்கு விரோதமாயிருந்தால் உங்கள் சாஸ்திரத்தில் இதுவரை கை வைக்காமல் இருந்து உங்களுக்கு அனுகூலம் செய்து கொண்டு வந்ததிலிருந்து விலகிக் கொள்வோம்" என்பதை பார்ப்பனர்களுக்கு காட்டி, அவர்களை மிரட்டுவதற்காகவுமே சர்க்கார் அனுகூலமாயிருந்தார்கள் என்று நினைக்கின்றேன். ஆகையால் சட்டம் செய்வது என்பது சுலபமான வேலையல்ல. இன்றைய சர்க்கார் வெள்ளைக்காரர், பார்ப்பனர், பணக்காரர் ஆகிய மூவர்களுடைய கூட்டு வியாபாரமாய் நடைபெறுகின்றது. இம்மூன்று கூட்டமும் ஏழைகளுக்கு நன்மை செய்யவோ தீண்டாமையை விலக்கவோ சுலபத்தில் சம்மதிக்குமா என்று கேட்கின்றேன். தவிரவும் சீர்திருத்தமும் சுயமரியாதையும் சட்டம் கொண்டுவந்து ஓட்டு வாங்கி நிறைவேற்றி பெற்றுவிடலாம் என்று நினைப்பது ஒருநாளும் முடியாத காரியம். ஓட்டு என்பது கூட்டுக் கொள்ளையே தவிர வேறில்லை. என்னுடைய உரிமையை கொடுக்கின்றாயா அதற்காக உயிர்விடட்டுமா என்கின்ற கொள்கையுடைய மக்கள் தான் எங்கும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள். இந்தப்படி நடக்கின்றாயா? அல்லது ஜெயிலில் பிடித்து போடட்டுமா என்று சொல்லும் அரசாங்கம் தான் சீர்திருத்தங்கள் செய்திருக்கின்றது. அதை விடுத்து இம்மாதிரி காரியங்களுக்கு ஓட்டும் சட்டசபையும் ஜாலவேடிக்கையும் வேடிக்கை பார்க்கும் விளையாட்டுப் பிள்ளை நிலையங்களேயாகும்.

தவிர, இங்கு செய்யும் பிரசாரத்தைப் பார்ப்பனர்களுக்கும் அல்லாதவர்களுக்கும் போய் செய்யட்டும் என்று சொல்லுகின்றார். பார்ப்பனர்கள் நமது பிரசாரத்தினால் புத்தி திருந்தி விடுவார்கள் என்று எதிர்பார்ப்பது சுத்தப் பயித்தியக்காரத்தனமாகும். அவர்கள் தெரியாதவர்களாய் இருந்தால் நியாயம் சொல்லலாம். நன்றாய் தெரிந்தே எங்கு தங்கள் ஆதிக்கமும் சோம்பேறிப் பிழைப்பும் போய் விடுகின்றதோ என்று சுயநலங்கருதி குரங்குப் பிடிவாதமாய் இருப்பவர்களை நாம் எந்தப் பிரசாரத்தால் எப்படி மாற்றக் கூடும்? பார்ப்பனரல்லாதவர்களோ முக்கால் வாசிப்பேர் பார்ப்பனரைப் பின்பற்றுபவர்களாகவும் பார்ப்பனருக்கு தாசிமகனாயிருந்தாலும் சரி நாம் பறையனுக்கு மேலாயிருந்தால் போதும் என்று முட்டாள் தனமாய் கருதிக் கொண்டிருக்கின்றவர்கள் என்றாலும் நம்மால் கூடியதை செய்துதான் வருகின்றோம். எதற்கும் உங்கள் முயற்சியும் சுயமரியாதை உணர்ச்சியும் இல்லாவிட்டால் ஒரு காரியமும் நடவாது. தவிரவும் இத்தீண்டாமை ஒழிவதற்கு இது ஒரே ஒரு மார்க்கம் தான் என்று நான் சொல்லவரவில்லை. தீண்டாமை ஒழிய வேண்டுமானால் மதத்தைவிட்டு விடுங்கள், அல்லது ஏதாவது ஒரு மதம் வேண்டுமானால் தீண்டாமை இல்லாத மதத்தைத் தழுவலாம். உதாரணமாக மகமதிய மதத்தில் மனிதனில் உயர்வு தாழ்மையும் தீண்டாமையும் இல்லை. இனியும் உங்களுக்குத் தோன்றுகின்ற மதத்தை தழுவலாம். ஆகவே நீங்கள் தயவு செய்து நான் சொல்லுவதையும் சாமி சகஜானந்தம் சொல்லுவதையும் பொருமையுடனும் சுய புத்தியுடனும் ஆராய்ச்சி செய்து பார்த்து உங்களுக்கு சரி என்று தோன்றியபடி நடவுங்கள்.

*குறிப்பு : 22.10.1929 இல் சென்னை நேப்பியர் பூங்காவில் நடைபெற்ற பொதுக்கூட்டம் - சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 27.10.1929**


RangaRakes

tamilnavarasam.com

## இராஜகோபாலாச்சாரியின் தேசீயம்

சென்ற வாரம் பார்ப்பனர்களின் தேசியம் என்று தலையங்கமிட்டு திரு.சத்தியமூர்த்தி அய்யர் முதலிய பூரண சுயேச்சைவாதிகளுடையவும், காங்கிரஸ் வாதிகளுடையவும் தேசியத்தின் யோக்கியதையைப் பற்றி எழுதி இருந்தோம். இந்த வாரம் திரு.சி.இராஜகோபாலாச்சாரி போன்ற "ஒத்துழையா தியாகிகளின்" தேசியத்தைப் பற்றி எழுத வேண்டி நேரிட்டுவிட்டது. அதாவது, ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூக்கா காங்கிரஸ் மகாநாட்டிற்கு அக்கிராசனம் வகித்த திரு.சி.ராஜகோபாலாச்சாரியார் தமது தலைமை உபன்யாசத்தில் வழக்கம் போல் தேசியப் புரட்டு பரிபாஷையாகிய தீண்டாமை, கதர், மதுவிலக்கு ஆகிய மூன்று வார்த்தைகளை உபயோகித்துவிட்டு, பார்ப்பன தேசிய சூழ்ச்சி பரிபாஷை யாகிய சாதித் துவேஷத்தை ஒழிக்க வேண்டும் என்னும் வார்த்தையைச் சொல்லிவிட்டு சுயமரியாதை இயக்கம் தெய்வங்களையும், அவதாரங்களையும், புண்ணிய ஸ்தலங்களையும், பெரியோர் சாஸ்திரங்களையும் நிந்திப்பதாகச் சொல்லி பாமர மக்களை கிளப்பிவிடப் பார்த்து இருக்கின்றார். சமீபத்தில் இவரால் வடநாட்டிலிருந்து அழைத்துவரப்பட்ட திரு.பட்டேல் அவர்களுக்கு இவர் எதைச் சொல்லிக் கொடுத்து நம்மையும் சுயமரியாதை இயக்கத்தையும் வையச் சொன்னாரோ அதே வார்த்தைகளை அப்படியே, சற்று மெருகு கொடுத்து இப்பொழுது இவரும் சொல்லி இருக்கிறார். திரு.ராஜகோபாலாச்சாரி யார் தீண்டாமை விலக்கு தத்துவம் நாம் அறியாததல்ல. அவருடன் நாம் காங்கிர சிலும் ஒத்துழையாமையிலும் இருக்கும்போது அவரது தீண்டாமை விலக்கை நேரில் கண்டிருக்கின்றோம். அதாவது, தீண்டாமை ஒழிப்பதற்கென்று காங்கிரசில் ஒதுக்கிவைத்த பணத்தை முழுதும் தன்பேரில் பிரித்துவைத்துக் கொண்டு அதனால் ஒரு காரியமும் செய்யாமல், செய்யவும் விடாமல் காப்பாற் றிய வீரராவார். செய்கைதான் இப்படி என்றாலோ, காரியத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டம் பிறவியில் ஜாதி வித்தியாசம் கூடாது என்று தீர்மானித்த உடன் ராஜினாமா எழுதிக் கொடுத்து தனது சினேகிதர்களையும் ராஜினாமா கொடுக்கச் செய்தவர். கதர் விஷயத்தில் இவர்களது ஏழைகளைக் காப்பாற்றும் நாணயமும் கதரால் நாட்டிற்கு க்ஷேமமுண்டாகும் நாணயமும் கதரின் பேரால் பார்ப்பனரல்லாதார்களிடத்தில் பத்து லட்சக்கணக்காய் ரூபாய் வசூலித்து கதர் திட்டத்தில் 100க்கு 90பேர் திரு ராஜகோபாலாச்சாரியின் ஜாதியாரே உட்கார்ந்து கொண்டு வயிறு வளர்ப்பதும், தாங்கள் என்ன அக்கிரமம் செய்தாலும் தங்களை விலக்க முடியாமலும், யாரும் கணக்கு கேட்க



முடியாமலும் இருக்கும்படி செய்து கொண்ட சூழ்ச்சியும், அதில் நடக்கும் அக்கிரமங்களை அன்னியர் எழுதிக் கேட்டால் அதற்கு அவர்கள் சொல்லும் பதிலும் திரு.ராஜகோபாலாச்சாரிக்கும் திரு.எஸ்.ராமனாதனுக்கும் இந்த ஒருவாரமாக நடக்கும் கடிதப் போக்குவரத்தை கவனித்தவர்களுக்கே நன்றாய் விளங்கும். மற்றபடி இவரது மதுவிலக்கு கவலையைப்பற்றி தெரிய வேண்டுமானால், தேர்தல் வரும்போதெல்லாம் கள்ளுக்கு மரம் பதினாயிரக் கணக்காய் விட்டுக் கொண்டிருக்கும் திரு.சி.வி. வெங்கிட்ட ரமணய்யங்காருக்கு மதுவிலக்குப் பேரைச் சொல்லி ஓட்டு வாங்கிக் கொடுத்ததும் தனது இஷ்டப்படி நியமிக்கப்பட்ட மந்திரிகள் இருக்கும் காலத்தில் மதுவைப் பற்றி ஒரு வார்த்தையும் பேசாமல் இருப்பதும், மறுபடியும் தேர்தல் வரும்போது மாத்திரம் பார்ப்பனர்களும் அவர்களது அடிமைகளும் மாத்திரம் சட்டசபைக்கு வரும்படியாகச் செய்வதற்கு மது விலக்கை ஒரு சூழ்ச்சியாக உபயோகிப்பது மான தந்திரங்களைப் பார்த்தால் விளங்காமல் போகாது. தவிர, ஜாதித் துவேஷத்தை ஒழிக்க வேண்டும் என்பது.

"சிறந்த தேசத் தொண்டர்களில் சிலர் சமூக சீர்திருத்தம் செய்ய துவேஷத்தை சாதனமாகக் கொண்டது தேசத்தின் துரதிர்ஷ்டம்" என்கின்றார். இதில் தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்பவர்களிடத்தில் ஜாதித் துவேஷம் இருக்கக் கூடுமா? தீண்டாமை ஒழிக்க இணங்காதவர்களிடத்தில் ஜாதித் துவேஷம் இருக்க முடியுமா என்பதை வாசகர்கள் தான் உணரவேண்டும். தீண்டாமையை ஒழிப்பதானாலும் சமூகத்தில் ஏதாவது சீர்திருத்தம் செய்ய வேண்டுமானாலும் தீண்டாமையினால் பலன் அனுபவிப்பவர்களுக்கும் சமூகக் கொடுமையினால் நலமனுபவிப்பர்களுக்கும் நஷ்டமாவது மனத்தாங்கலாவது இல்லாதிருக்க முடியுமா? என்று கேட்கின்றோம். இந்த மனத்தாங்கலுக்குப் பயந்தால் ஒரு சிறு காரியத்தையாவது நடத்த முடியுமா என்பதை யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம். அயோக்கியர்களையும் சுயநலக்காரர்களையும் சூழ்ச்சிக்காரர்களையும் மக்கள் வெறுப்பதும், அவர்கள் மீது மக்களுக்கு துவேஷமேற்படுவதும், உலகம் அவர்களை நிந்திப்பதும் இயற்கை என்பதையும், "இயற்கையை வெல்ல யாராலும் முடியாது" என்று சொல்லும் திரு.இராஜகோபாலாச்சாரியாரே உணராமல் போனது "தன் குற்றம் தனக்குத் தெரியாது" என்கின்ற பழமொழிக்கு இரும்புப் பூண்போட்டது போலாகின்றது. "சீர்திருத்தக்காரர்கள் அந்தரங்க சுத்தியோடு வேலை செய்தால் யாருக்கும் எவ்வித தீமையும் விளையாது" என்கின்றார். இது பயனற்ற வார்த்தை என்றே சொல்லுவோம். ஏனெனில், எவ்வளவு நல்லெண்ணத்தோடானாலும் ஒரு கேட்டை விலக்க முயற்சித்தால் அக்கேட்டினால் பிழைப்பவனுக்கு கெடுதி ஏற்பட்டுத்தான் தீருமே ஒழிய அது கேட்டை விலக்குபவனின் நல்ல எண்ணத்தினால் மறைந்துவிடாது. ஒரு சமயம் அந்தக் கெடுதி அவன் நியாயமாய் அனுபவிக்க வேண்டிய கெடுதிதானா? அல்லது அநியாயமாய் அனுபவிக்கும் கெடுதியா? என்று வேண்டுமானால் யோசிக்கக் கூடியதாயிருக் கும். அதாவது, எவ்வளவு நல்லெண்ணத்தோடு காத்திருந்து ஒரு திருடனைப்



RangaRakes tamilnavarasam.com

பிடித்தாலும் பிடிபட்ட திருடன் நம்மை குத்திவிட்டு ஓடவோ, முடியாவிட்டால் வசைபாடவே செய்வானே ஒழிய நமது நல்லெண்ணம் அவனை “என்னைப் பிடித்துவிட்டாயே புண்ணியவானே” என்று புகழச் செய்யாது என்பதை உறுதியாய்ச் சொல்லுவோம். தவிர “ஜாதித் துவேஷம் ஒழிய வேண்டும் என்று எல்லோரும் தினந்தோறும் கடவுளை வேண்டிக் கொள்ள வேண்டும்” என்று உபதேசம் செய்கின்றார். திரு.ராஜகோபாலாச்சாரிக்கு உள்ள கடவுள் பக்தியும் அவருடைய இருதய சுத்தமும் நமக்கு நன்றாய்த் தெரியும். ஆதலால், இது விஷயத்தில் அவருக்கு நாம் ஒன்றும் சொல்ல வரவில்லை. ஆனால், அவர் யாரைப் பார்த்து இப்படிச் சொன்னாரோ அவர்களைப் பார்த்து ஒன்று கேட்கின்றோம். அதாவது கடவுளால் துவேஷத்தை ஒழிக்கக் கூடும் என்பதில் கடுகளவு நம்பிக்கையாவது திரு.ராஜகோபாலாச்சாரியார் முதலிய யாருக்காவது இருக்கு மானால் திரு.ராஜகோபாலாச்சாரியார் எதை துவேஷம் என்று கருதி இருக்கின்றாரோ அது சிறிது கூட துவேஷமல்லவென்றும், அறியாமை யினாலோ தந்திரத்திற்காகவோதான் இந்தப்படி சொல்லப்படுகின்றதென்றும், உண்மையாய் - உண்மையாய் - உண்மையாகவே சொல்லுகிறோம். ஏனெனில் துவேஷத்தை அழிக்க சக்தியுள்ள கடவுள் அறிவுடையவராய் இருந்தால் மக்களுக்கு கெடுதியைத் தரும் துவேஷத்தை உற்பத்தி செய்திருக்கவே மாட்டார். அவரில்லாமல் துவேஷம் ஏற்படவே முடியாது என்பதுதான். தவிர “மனிதன் தனக்கு எல்லாம் தெரிந்துவிட்டதாகக் கருதி அகம்பாவப் படக் கூடாது”என்கின்றார். இது எதற்கு ஆக சொல்கிறார் என்பது ஒருபுறமிருந்தாலும் மனிதன் தனக்கு “ஒன்றும் தெரியாது” “எல்லாவற்றிற்கும் வேறு காரண மிருக்கும்” என்று கருதுகிற காரணமே அடிமைத் தனத்தின் ஜீவநாடி என்பது நமது அபிப்பிராயம். அன்றியும் தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைப்பதை விட தனக்கு ஒன்றுமே தெரியாது என்பதினால் அதிகக் கெடுதியே உண்டாகுமே தவிர சிறிதும் நன்மை உண்டாகாது.

ஆதலால் இவைகள் எல்லாம் வெறும் அலங்கார வார்த்தைகளே தவிர காரியத்திற்கானவைகள் அல்ல. தவிர தெய்வங்களையும், அவதார புருஷர்களையும், புனித ஸ்தலங்களையும், குற்றம் கூறுவதாகவும் அது பெரிய பேடித்தனமென்றும் சொல்லுகின்றார்.

இங்கு வாசகர்களுக்கு ஒன்று சொல்லுகின்றோம். அதாவது, எவை தெய்வங்கள், அவற்றுள் எந்த தெய்வங்களை என்ன குற்றம் சொன்னோம்? யார் அவதார புருஷர்கள், அவர்களின் எந்த குணத்தை குற்றம் சொன்னோம்? எது புனிதஸ்தலம், அதை எப்படி குற்றம் சொன்னோம்? என்பதைப் பற்றி ஒரு வார்த்தையாவது கூறாமலும் நாம் சொன்னதாகச் சொல்லப்படும் குற்றங்களுக்கு ஒரு சமாதானமும் சொல்லாமலும் சும்மா பாமர மக்களின் முட்டாள்தனத் தையும் வெறியையும் தனக்கு ஆதாரமாய் வைத்துக்கொண்டு தனது மனதார சூதாய் பேசி பாமர மக்களை நம்மீது ஏவிவிட முயற்சிப்பது பேடித்தனமா? அல்லது நாம் உள்ளதை உள்ளபடி நினைத்து நினைத்தபடி வெளியில் ஆதாரங் களுடன் எடுத்துச்சொல்லுவது பேடித்தனமா என்று யோசித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம். தவிர, “பிராமணர் - பிராமணரல்லாதார் சண்டை இல்லாவிட்டால் தென்னாட்டு பிராமணர்கள் பாலிய விவாகத்தடை மசோதாவை எதிர்த்திருக்க மாட்டார்கள்” என்று சொல்லுகின்றார். இது உண்மையாய் இருக்குமானால், “பிராமணர்கள் மனப்பான்மையின் யோக்கியதையை அறிவதற்கு வேறு ஆதாரம் வேண்டுமா” என்று கேட்கின்றோம். அதாவது, நமது நாட்டில் என்ன காரியத்திற்காக பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் சண்டை இருக்கின்றதோ அதற்காகத்தான் பார்ப்பனர்களுடைய சீர்திருத்த எதிர்ப்பும் இருக்கின்றது என்று சொல்லுகிறார். நாமும் இதைத்தான் சொல்லுகின்றோம். பார்ப்பனரல்லாதார் பார்ப்பனருடன் போராடுவதின் முக்கிய தத்துவம் பார்ப்பனரல்லாதாரை விட பார்ப்பனன் பிறப்பினால் மேலானவன் என்கின்ற ஆதிக்கம் இருக்கக்கூடாது என்பதற்காகவே ஒழிய வேறல்ல. திரு.ராஜ கோபாலாச்சாரியார் சொல்லுகின்றபடியே பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே அதாவது, பார்ப்பனரல்லாதாருக்கு விரோத மாகவே எவ்வித சீர்திருத்தங்களையும் எதிர்க்கிறார்கள் என்றாகின்றது. இது தன்னை அறியாமல் சொன்ன உண்மை என்றே கருதுகிறோம். கடைசியாக பொது ஜனங்களுக்கு ஒன்று சொல்லுகின்றோம்.

நாட்டில் எந்த சீர்திருத்தமோ சீர்த்திருத்த இயக்கமோ புறப்பட்டாலும் பார்ப்பனர்கள் அதை நாஸ்திகம் என்றும், தெய்வ நிந்தனை என்றும், சாஸ்திர நிந்தனை என்றும், அவதார நிந்தனை என்றும், புண்ணியஸ்தல நிந்தனை என்றும், தேசத்துரோகம் என்றும், மதத் துவேஷம் என்றும், ஜாதித் துவேஷம் என்றும் பழிகளைச் சுமத்தி பாமர மக்களை ஏய்த்தே இதுவரை தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தி வந்திருக்கின்றார்கள். அந்தமுறையையே நமது திரு.ராஜகோபாலாச்சாரியார் பின்பற்றியது சிறிதும் அதிசயமல்ல. ஏனெனில் திரு.ராஜகோபாலாச்சாரியார் வருணாசிரம தர்மத்தில் மிக்க நம்பிக்கைக் கொண்டவர். பெரியவர்கள் செய்ததெல்லாம் நன்மையானதே என்று சொல்லு பவர். மூடர்களுக்கு மூடப்பிள்ளையும், புத்திசாலிக்குப் புத்திசாலிப் பிள்ளையும், யோக்கியனுக்கு யோக்கியப்பிள்ளையும், அயோக்கியனுக்கு அயோக்கிய பிள்ளையும் தான் பிறக்கும் என்றும் சொல்லி இருக்கிறார். ஆக தனது முன்னோர்களுடைய குணமே தனக்கு இருப்பதாகவும், குணமே மிகவும் மேலானதென்றும் கருதிக் கொண்டிருப்பவர். இப்படியெல்லாம் சொன்னதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனால் இவர் சொன்னதை யெல்லாம் பொது ஜனங்கள் நம்பி விடுவார்களா என்பதுதான் நாம் முடிவுகாட்ட வேண்டிய விஷயமாகும். முடிவாக பார்ப்பனர்கள் காங்கிரசும் தேசியமும் பூரண சுயேச்சை யும் ஒத்துழையாமையும் என்ன தத்துவத்தைக் கொண்டது என்பதை பொது மக்கள் அறிய வேண்டியே இதை எழுதினோம்.

**குடி அரசு - தலையங்கம் - 27.10.1929**



RangaRakes

tamilnavarasam.com

# விதவா விவாகம்

சகோதரிகளே! சகோதரர்களே!! உலகமானது இப்போது எம்மாதிரியான முன்னேற்றத்தில் போய்க் கொண்டிருக்கின்றதென்பதை நாம் பார்த்து வருகின்றோம். மனிதனது புத்திக்குப்படாத அற்புத சக்திகளெல்லாம் மனிதனிடமிருந்து வெளியாகிக் கொண்டு வருகின்றது. சையன்ஸ் அதாவது வஸ்து தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியின் பயனாக மகா அதிசயங்களை யெல்லாம் மனிதன் செய்கின்றான். சமீப முயற்சி என்னவென்றால், சந்திர மண்டலத்திற்குப் போக முயற்சிக்கத் தொடங்கி செவ்வாய் மண்டலத்திலிருந்து சமாச்சாரப் போக்குவரத்துகள் நடத்தப்பட்டு விட்டன. மற்றும் அடுத்த 500 வருடத்தில் மனிதன் அடையக்கூடிய முற்போக்கை இப்போதே நிர்ணயிக்கப்படுகின்றது. எனவே, நம்மைச் சுற்றியுள்ள உலகம் இந்நிலையிலிருக்க நாமோ நமது ஆராய்ச்சிக்காரர்களால் 3000 வருஷத்திற்கு முன்னால் நாம் இருந்த நிலையை அடைய வேண்டுமென்று தொல்காப்பிய ஆராய்ச்சி செய்யப்பட்டு பெருமைப் படுகின்றோம். அப்படிப்பட்ட தொல்காப்பியம் 2000 வருஷத்திற்கு முந்தியதா 3000 வருஷத்திற்கு முந்தியதா என்கின்ற ஆராய்ச்சி இன்னமும் நமக்குள் முடியவில்லை. ஆராய்ச்சிக்காரர்கள் யோக்கியதை இப்படி என்றால், நமது பண்டிதர்களுடைய யோக்கியதையோ சமணர்கள் கழுவேறப்பட்டார்களா அல்லது தானாக கழுவேறினார்களா என்பதற்கு சமயம் போல் பேச ஆதாரம் தேடிக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களில் தேசீயப் பண்டிதர்களின் யோக்கியதையோ தேசீய மேடையில் ஏறி தாயைப் புணர்ந்தும் தகப்பனைக் கொன்றும் மோட்சத்திற்குப் போன புராணத்தையும் பெண்ஜாதியைக் கூட்டிக் கொடுத்து மோட்சத்திற்குப் போன புராணத்தையும் படித்தால் சுயராச்சியம் வந்து விடுமென்று தேசியப் பிரசாரம் செய்கின்றார்கள்.

இவ்வளவும் போதாமல் இந்த 20வது நூற்றாண்டின் இன்றைய தினத்தில் நாம் கூட்டம் கூடி விதவைகள் கலியாணம் செய்து கொள்ளலாமா, வேண்டாமா என்கின்றதற்கு உள்ள மதத்தின் தடைக்கும் சாஸ்திரத்தின் ஆட்சேபத்திற்கும் பதில் சொல்ல இங்கு உட்கார்ந்திருக்கின்றோம்.

சகோதரர்களே! நமது நாட்டு நிலையைக் குறிக்க நமக்கு இதைவிட வேறு யோக்கியதை என்னவேண்டும்.

நமது ஆராய்ச்சியும், அறிவும், ஊக்கமும், முயற்சியும் நமது காலமெல்லாம் இந்த மாதிரி காரியங்களுக்கே உபயோகித்துக் கொண்டிருந்



தோமானால் நாம் என்றுதான் மனிதர்களாவது?

விதவைகளுக்கு விவாகம் செய்யலாமா என்பதற்கும் சாஸ்திரத்திற்கும் என்ன சம்பந்தம் என்பது எனக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் விவாகம் எந்த மாதிரி செய்வது என்பதைப் பற்றி யோசிப்பது என்றாலும் சமாதானம் சொல்லலாம். அப்படிக்கின்றி விவாகம் செய்யலாமா? வேண்டாமா? என்பதற்கே சமாதானம் சொல்லுவதென்றால் அது சுத்த முட்டாள்தனமென்று தோன்றவில்லையா? என்னைக் கேட்டால் இந்தக்கொடிய நாட்டில் விதவைக ளுக்கு துன்பத்தை இழைத்தவர் நமது ராஜாராம் மோகன்ராய் அவர்கள் என்பதே எனது அபிப்பிராயம். ஏனெனில், அவரால்தான் நமது விதவைகள் இருக்கவும் கஷ்டப்படவும் ஏற்பட்டுவிட்டது. எப்படியென்றால், ராய் மோகன் அவர்கள் உடன்கட்டை ஏற்றும் வழக்கத்தை நிறுத்தாதிருந்திருப்பாரானால் ஒவ்வொரு பெண்டும் புருஷன் இறந்த உடனே அவனோடு கூடவே அவன் பக்கத்தில் "மாங்கல்ய ஸ்திரீ" யாகவே உயிருடன் கட்டையில் வைத்து சுடப்பட்டு "கற்பு லோகத்தை" அடைந்து "மோட்சத்தி"லிருந்திருப்பாள். கற்பு லோகமும் மோட்சமும் எவ்வளவு புரட்டாயிருந்தாலும் ஒன்று மாத்திரம் நிச்சயம். அதாவது உயிருடன் சுடப்பட்ட பெண்ணுக்கு ஒரு மணி நேரந்தான் கஷ்டமிருந்திருக் கக்கூடும். ஆனால் அந்தப்படி சுடாமல் காப்பாற்றப்பட்ட பெண்ணுக்கு அதன் ஆயுள் கால முழுவதும் அங்குல அங்குலமாக சித்திரவதை செய்வது போன்ற கஷ்டத்தை வினாடிதோறும் அனுபவித்து வர நேரிடுகின்றதா இல்லையா என்றுதான் கேட்கின்றேன். இப்பொழுதும் விதவைகளுக்கு உடனே மணம் செய்யவேண்டும். மணமில்லாத பெண் இருக்கக்கூடாது என்ற நிர்ப்பந்தம் கொஞ்சகாலத்திற்காவது இருக்க வேண்டும். இல்லையானால் உண்மையான ஜீவகாருண்யத்தை உத்தேசித்து பழைய உடன்கட்டை ஏற்றும் வழக்கத்தை யாவது புதுப்பிக்கவேண்டும் என்பதுதான் எனது அபிப்பிராயம். ஏனெனில், விதவைத் தன்மையை நினைத்தால் வயிறு பற்றி எரிகிறது; நெஞ்சம் கொதிக்கிறது. மனிதனுக்கு தன் பெண்ஜாதி சமீபத்தில் இல்லாத காலங்களில் போக இச்சை ஏற்பட்டால் உடனே போக மாதர்களை கொண்டு அவ்விச்சை தணிக்க வேண்டியதும், மிருகங்களுக்கு ஏற்படும் தினவை தீர்த்துக் கொள்ள மைதான வெளியில் சொரி கல் நட்டு வைக்க வேண்டியதும், 32 தர்மங்களில் இரண்டு தர்மமாகக் கொண்டு கோயில்களில் தாசிகளை வைத்தும் கிராமங்கள் தோறும் நத்தங்களில் சொரி கல் நட்டு வைத்தும் இருக்கிறார்கள். ஆனால், இப்போப்பட்ட ஜீவகாருண்ய அறிவு நமது பெண் மக்களிடம் மாத்திரம் ஏன் காட்டமுடியாமல் போய்விட்டது? என்பதை நினைக்கும்போது ஜிவகாருண்ய புரட்டும் 32 தர்மங்களின் புரட்டும் நன்றாய் விளங்கும்.

அதோடு மாத்திரமல்லாமல் அம்மாதிரி ஜீவகாருண்யம் கூடாது என்பதற்கு சாஸ்திரம் இருப்பதாயும், அந்த சாஸ்திரம் கடவுளால் சொல்லப்பட்ட தாகவும் மனிதர்கள் என்பவர்கள் சொல்ல வருவார்களானால் அப்படிப்பட்ட சாஸ்திரத்தையும் கடவுளையும் மனிதர்களையும் என்ன செய்வது என்பதை நீங்கள்தான் யோசித்து முடிவு கட்டவேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

ஒரு பெண்ஜாதியை இழந்த ஆண், கலியாணம் செய்து கொள்ளலாமா வேண்டாமா என்பதைப் பற்றி எந்தப் பெண்ணாவது அபிப்பிராயம் சொல்ல வருகிறார்களா? அப்படிக்கிருக்க புருஷனை இழந்தவள் கலியாணம் செய்து கொள்ளலாமா? வேண்டாமா? என்பதைப் பற்றி அபிப்பிராயம் சொல்ல புருஷனுக்கு என்ன பாத்தியம்? என்பது நமக்கு விளங்கவில்லை. நாட்டில் சிறப்பாக, நமது சமூகத்தில் விதவைகள் கர்ப்பமடைந்து கர்ப்பத்தை அழிப்பதும், பிள்ளைகளைப்பெற்று கொலை செய்வதும், வீடுகளைவிட்டு பெற்றோர் அறியாமல் நினைத்த புருடர்களுடன் ஓடுவதும், பிறகு பொது விபசாரிகளாகி குச்சுகள் மாறுவதும் முதலான காரியங்களை தினமும் கண்ணால் பார்த்தும் தாங்களாகவே துன்பங்கள் அடைந்தும் வரும்போது விதவா விவாகம் சாஸ்திர சம்பந்தமா? ஜாதி வழக்கமா? என்று பார்க்கும் மூடர்கள் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களா என்று கேட்கின்றேன். சாஸ்திரத்தில் இடம் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? ஜாதியில் வழக்கம் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? அதைப்பற்றி கவனிப்பதில் பலன் என்ன? புருஷனிழந்த பெண்ணுக்கு புருஷ இச்சை இருக்குமா? இருக்காதா? அவளுக்கு புருஷன் வேண்டுமா? வேண்டாமா? என்பதைத் தானே கவனித்து முடிவு கட்ட வேண்டும். அமாவாசையில் பிறந்த பிள்ளை திருடும் என்று ஜோசியத்திலிருந்து விட்டால் அந்த பிள்ளை திருடின திருட்டையெல்லாம் ஜோசியம் நம்புகிறவன் சும்மாவிட்டு விடுவானா? என்று கேட்கின்றேன்.

தினம் புருஷனுடன் வாழ்ந்து கொண்டு புருஷன் என்பதாக தனக்கு ஒரு எஜமான் இருக்கிறான் என்று நினைத்துக்கொண்டு அடிமைத்தனத்தில் இருந்து குழந்தை குட்டிகளைப் பெற்று கொண்டு இருக்கும் மாங்கலியப் பெண்களின் போக உணர்ச்சியைவிட மேல்கண்ட கவலையில்லாத பெண்களின் உணர்ச்சி எத்தனை மடங்கு அதிகமாயிருக்கும் என்பதை நீங்களே நினைத்துப் பாருங்கள்! ஒரு ஜீவனை பட்டினியாகப் போட்டு கொல்லுவதிலும், ஒரு பெண்ணை விதவையாக வைத்து சாகாமல் காப்பாற்றுவது கொடுமை அல்லவா? என்பதை யோசித்துப் பாருங்கள்! ஒரு பெண் எதற்காக விதவையாய் இருக்க வேண்டும் என்பதற்கு இதுவரை யாராவது காரணம் சொன்னார்களா? அல்லது எந்த மதமாவது, எந்த ஜாதியாவது காரணம் சொல்லியிருக்கின்றதா? காரணமில்லாமல் இவ்விதக் கொடுமையான ஜீவஹிம்சையை செய்து கொண்டிருக்கும் சமூகம் வடிகட்டின முட்டாள்தனமுடையது என்பதற்கு என்ன ஆட்சேபனைகள் சொல்லப் போகின்றீர்கள்.

விதவைகளாயிருப்பது கடவுள் கட்டளை என்று கருதுவீர்களானால் விதவைகளுக்குப் போக உணர்ச்சியும், அதனால் ஏற்படும் கவலையும், சில சமயங்களில் கர்ப்பமுண்டாக்கப்படுவதும், அது அழிக்கப்படுவதும், பெற்ற குழந்தையை கழுத்தைத் திருகுவதுமான காரியங்கள் நடைபெறமுடியுமா? என்று யோசித்துப் பாருங்கள்.



விதவைத் தன்மை நாட்டில் இருப்பதாலேயே சாஸ்திரங்களும் கடவுள் செயல் என்பவைகளும், சோதிடம் என்பவைகளும் பொய் என்பதாக உங்களுக்கு விளங்குகின்றதா? இல்லையா? ஏனெனில், நம்மில் ஒவ்வொரு வனும் கலியாணம் செய்வது கடவுளை பூ வைத்தோ, கருட தரிசனமோ, குறியோ கேட்டுத் திருப்தி அடைந்தும், ஜோசியம் பொருத்தம் பார்த்து திருப்தி அடைந்தும் சாஸ்திர விதிப்படியும் செய்கிறான். அப்படியிருக்க இந்த கதி நேர்ந்தால் மேற்கண்டவைகள் நிஜமாயிருக்க முடியுமா? இந்த அஸ்திவாரப் புரட்டை நாம் நம்பி மதம், ஜாதி, வழக்கம் என்று சொல்லுகின்றோமே? நமக்கு வெட்கமில்லையா? அல்லது புத்தியில்லையா? என்று கேட்கின்றேன்.

பெரும்பாலும் மதப்படியும் ஜாதி வழக்கப்படியும் நடக்காதவர்களேதான் மதம் என்றும், சாஸ்திரமென்றும், ஜாதி வழக்கம் என்றும் தொல்லைபடுத்துகிறார்கள்.

தங்களைப் பொறுத்தவரை தாங்கள் நம்பும் மதக்கொள்கைப்படியும் சாஸ்திரப்படியும் நடக்க முடியாதவர்களேதான் நாம் செய்யும் காரியத்திற்கு இடையூறாக மதத்தையும் சாஸ்திரத்தையும் வழக்கத்தையும் கொண்டு வந்து போடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களால் தங்களுக்காக கொண்டு வந்து போடப்படும் மதத்திற்கும் சாஸ்திரத்திற்கும் கடுகளவு புத்தியுள்ள எந்த மனிதனாவது மதிப்பு கொடுக்க முடியுமா? என்று பாருங்கள்.

உதாரணமாக, சாரதா மசோதாவை எடுத்துக் கொள்ளுங்கள். பெண்கள் பருவமடைந்ததற்குப் பின்னால் கல்யாணம் செய்தால் சாஸ்திரம் விரோதமாம்! பாவமாம்! நரகம் கிடைக்குமாம்! இதற்காக சத்தியாக்கிரகம் செய்து உயிர்விட வேண்டுமாம்! நீங்கள் இந்த வீரர்களை உண்மையானவர்கள் என்று நம்புகிறீர்களா?

இந்த வீரர்களின் ஆண் பெண் கடவுள்களுக்கும் அவர்களது சொந்த காரருக்கும் எப்போது கலியாணம் நடந்தது? கல்யாணம் நடந்ததை இவர்கள் பார்க்காவிட்டாலும் எப்போது நடந்ததாக இவர்கள் சாஸ்திரம் கூறுகின்றது என்பதை சற்று நினைத்துப் பாருங்கள்.

சீதைக்கும், ருக்குமணிக்கும், சத்தியபாமைக்கும், பார்வதிக்கும் வள்ளியம்மாளுக்கும், தெய்வயானைக்கும், மீனாட்சிக்கும், ஆண்டாளுக்கும், நாச்சியாருக்கும், திரௌபதைக்கும் எப்போது கல்யாணம் நடந்தது? இவர்கள் பருவமடைந்த பிறகா? அதற்கு முந்தியா? என்று கேட்கின்றேன். பழைய ராஜாக்கள் என்பவர்கள் காலத்திலும் மதசம்பந்தமான புராணங்களிலும் எங்காவது மைனர் பெண்களையோ பத்து வயதுக்குட்பட்ட பெண்களையோ கலியாணம் செய்து கொடுத்ததாக இவர்கள் சொல்லக்கூடுமா? என்று கேட்கின்றேன். தவிரவும், மேற்கண்ட ஆண்பெண் கடவுள்கள் தாங்களாகவே கலியாணம் செய்து கொண்டார்களா அல்லது அவர்களின் தாய் தகப்பன்மார் கட்டு சாத மூட்டையை தோளில் சுமந்து திரிந்து மாப்பிள்ளை தேடி சகுணம்,



RangaRakes tamilnavarasam.com

குறி, சோதிடம், பொருத்தம் முதலியவை பார்த்து கலியாணம் செய்து கொடுத்தார்களா என்று யோசித்துப்பாருங்கள்.

இந்து சாஸ்திரத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் "சாஸ்திரத்தில் பருவமடைந்த பிறகு கலியாணம் செய்வதற்கு இடமில்லை" என்று சொல்ல வருவார்களானால் அதிலும் அதற்காக இவர்கள் சத்தியாக்கிரகம் செய்வே னென்று சொல்வார்களானால், இவர்கள் நம்மை எவ்வளவு முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். எனவே, சகோதரர்களே! உங்களுக்கு ஒரு காரியம் சரி என்று பட்டால் அது சாஸ்திர சம்மதமா? விரோதமா என்று எதிர்ப்பார்ப்பது அறியாமையும் அடிமைத்தன முமாகும். இந்த லோகத்திற்கு அவசியமான காரியம், மேல் லோகத்தில் என்ன பலனைத் தரும் என்பது மற்றொரு அடிமைத்தனமாகும்.

இவ்வளவும் தவிர இப்படிச் செய்தால் அவர்கள் என்ன பேசுவார்கள் இவர்கள் என்ன சொல்லுவார்கள் என்று நினைப்பது எல்லாவற்றையும் விட சுய அறிவும் சுய உணர்ச்சியும் அற்ற அடிமைத்தனமாகும்.

சகோதரர்களே! கடைசியாக உங்களுக்கு ஒன்று சொல்லுகின்றேன். அதாவது எந்தக் காலத்திலோ எங்கிருந்தோ யாராலோ எதற்காகவோ யாருக்கோ எழுதிய ஒரு புஸ்தகத்தை இந்தக் காலத்திற்கு இந்த இடத்திற்கு நமது நன்மைக் காக நமது நன்மையில் கவலை கொண்டவர்களால் எழுதப்பட்டதென்றும், அதன்படி நடந்து தீர வேண்டுமென்றும் கருதுகின்றவன் மனிதனல்ல என்பது தான் எனது மாற்ற முடியாத உறுதியான அபிப்பிராயமாகும்.

*குறிப்பு : விதவா விவாக சகாய சபையின் ஆதரவில் சென்னை பிரம்ம சமாஜ கட்டடத்தில் 19.10.1929ல் நடந்த கூட்டத்தில் ஆற்றிய தலைமைச் சொற்பொழிவு*

**குடி அரசு - சொற்பொழிவு - 27.10.1929**



# இந்தியாவில் மிஷனெரி உலகம்

திருவாளர் ஏ.ஜே.அன்பையன் அவர்களால் வெளியிடப்பெற்ற இந்தியாவில் 'மிஷனெரி உலகம்' என்னும் பெயரிய நூலொன்று எம் மதிப்புரைக்கு அனுப்பப் பெற்றோம்.

மிகப்பரந்த நோக்கத்துடன் வரையப் பெற்ற இந்நூலின் கண், இந்தியா விலுள்ள மேனாட்டுக் கிறிஸ்துவப் பிரசாரகர்களின் நிலைமையைப் பற்றித் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அவர்கள் செந்நெறியில் செல்லாது, தீநெறியாம் சூழ்ச்சியிலும், சுயநலத்திலும், பிரித்தாளும் வழியிலு மேயே செல்லுகின்றனர் என்று, இம்மேனாட்டு மதப் பிரசாரகர்களின் புரட்டை திரு. அன்பையன் பிறர் மனதில் எளிதிற் பதியுமாறு கூறியிருக்கின்றார். ஆங்காங்கே எல்லா மனிதர்களும் வேறுபாடின்றி பாராட்டற்குரிய அரிய உண்மைகள் மிளிர்கின்றன.

ஒரு உண்மையை ஒரு மதம் என்று பெயரிட்டு வரையறுக்கும் போதே, அம்மதம் பொது மதமாய் இருப்பதற்குரிய இலக்கணத்தை இழந்து விடுதலால், எம்மதத்திற்கும் புரோகிதப்புரட்டு வேண்டுவது அவசியமாயிருக்கின்றது. இதுபோலவே வரையறுக்கப்பட்ட இக்கிறிஸ்துவ மதத்திலும் இப்புரோகிதர்கள் செய்யும் புரட்டை திரு. அன்பையன் வெளிப்படுத்துவதனால், மிஷெனரி களைத் தெய்வங்கள் என்று கருதி ஏமாற்றமடையும் அநேகர் நல்வழிப்படுதல் கூடும் என்று கருதுகின்றோம்.

'நம்மிடம் பெருமை, அறியாமை, தன்னலம் என்னும் வியாதிகள் இருந்து வரும் வரை நாம் சகோதர ஐக்கியம் பெற முடியாது' என்றும், 'கிறிஸ்துவைப் போலிருந்து உன்னையே முற்றிலும் அறிந்து உலகத்துக்குப் பயன்படு என்னும் உண்மையை அறிந்திருப்பரேல் மேனாட்டுப் பாதிரிகள் 70,000 பேர்கள் இருந்தும் பெரும் போர் நடக்கச் சும்மாயிருந்திருப்பரோ' என்று திரு. அன்பையன் அவர்கள் கிறிஸ்துவின் அடிப்படையான கொள்கைகட்குப் பாதிரிகளின் கொள்கைகள் எவ்வாறு முரண்படுகின்றனவென்பதை எடுத்துக் காட்டிப்போதருவது பெரிதும் பாராட்டற்குரியதே. இந்நூலைக் கிறிஸ்துவர்கள் மட்டுமின்றி எல்லா மக்களும் படித்து இன்புற வேண்டுகின்றோம். பொதுநலம் பற்றித் துணிவுடன் வெளிவந்த திரு.அன்பையனுக்கு இக்கிறிஸ்துவ உலகம் மிகவும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளது என்பது எமது துணிபு.

**குடி அரசு - மதிப்புரை - 03.11.1929**



RangaRakes tamilnavarasam.com

# மதப்பித்து

நமது நாட்டில் ஒரு மனிதனுக்கு எப்படி பிறவியின் காரணமாகவே, ஜாதி கற்பிக்கப்பட்டு, அந்த ஜாதியின் பேரால் அவன் அழைக்கவும் பட்டு அந்த மனிதனும் அதை ஒப்புக் கொண்டு தன்னை இன்ன ஜாதியான் என்று எண்ணிக் கொள்கின்றானோ, அதுபோலவே மதமும் ஒரு மனிதனுக்கும் பிறவி காரணமாகவே கற்பிக்கப்பட்டு, அவனும் அந்த மதத்தின் பேரால் அழைக்கப்பட்டு தானும் அதை ஒப்புக் கொண்டு தன்னை இன்ன மதத்தான் என்றே எண்ணிக்கொண்டு வருகின்றான்.

ஆனால், ஜாதியானது பிறவியின் காரணமாக ஏற்படுகின்றதென்று, ஜாதியைக் கற்பிக்கும் சாஸ்திரங்கள் என்பவைகளால் சொல்லப்பட்டு வருவதால், பிறவியின் காரணமாக ஜாதி நிர்ணயிக்கிறவர்களுக்கு மேல்கண்ட ஆதாரங்களை சொல்லிக் கொள்ள இடமுண்டு. ஆனால் மதமானது பிறவியின் காரணமாக ஏற்படுவதாக இன்றுவரை எந்த மதமும் அது சம்பந்தப்பட்ட சாஸ்திரமும் சொல்லவே இல்லை. மதம் என்பது கொள்கை என்றும், அந்தக் கொள்கையானது எந்த மனிதனாலும், எப்பொழுது வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ளவும், தள்ளவும் உரிமையுடையது என்றுமே தான் சொல்லப்பட்டு வருவதுடன், அந்தப்படியே அநேக மனிதர்கள் அடிக்கடி மதம் மாறிக் கொண்டும் வருகிறார்கள். அதாவது இந்துக்கள் என்பவர்கள் கிறிஸ்தவர்களாகவோ, மகமதியர்களாகவோ, பௌத்தர்களாகவோ, பிரம்ம சமாஜிகளாகவோ, நாஸ்திகராகவோ மாறுவதும்; ஒரு கிறிஸ்தவர் மகமதியராகவோ, இந்துவாகவோ, பௌத்தராகவோ, நாஸ்திகராகவோ மாறுவதும், ஒரு மகமதியர் கிறிஸ்துவராகவோ, இந்துவாகவோ, பௌத்தராகவோ, நாஸ்திகராகவோ மாறுவதும், ஒரு பௌத்தர் இந்துவாகவோ, மகமதியராகவோ, கிறிஸ்துவராகவோ, நாஸ்திகராகவோ மாறுவதும்; ஒரு நாஸ்திகர் இந்துவாகவோ, மகமதியராகவோ, கிறிஸ்துவராகவோ, பௌத்தராகவோ மாறுவதும் இவர்கள் அடிக்கடி உள்பிரிவு மதக்காரர்களாக அதாவது சைவன் வைணவனாகவும், வேளாளன் சைவனாகவும், சைவன் சமணனாகவும், சமணன் சைவனாகவும், மற்றும் இது போலவே அடிக்கடி மாறுவதும், சர்வ சாதாரணமாக பார்த்து வருகின்றோம். இந்த முறையில்தான் இன்றைய தினம், உலகத்தில் சுமார் 2000 வருஷத்திற்கு முன் ஏற்பட்டதான பௌத்தமதத்தில் 55 கோடி மக்களும், 2000 வருஷத்திற்கு முன் ஏற்பட்ட கிறிஸ்தவ மதத்திற்கு 50 கோடி மக்களும், 1300 வருஷத்திற்கு முன் ஏற்பட்ட மகமதிய மதத்திற்கு 23 கோடி



மக்களும் காலமே குறிப்பிட முடியாததான அவ்வளவு பழைய இந்து மதத்திற்கு 20 கோடி மக்களும் பௌத்த, கிறிஸ்தவ, மகமதிய ஆகிய மதங்களுக்கு முன்னால் இருந்து வந்த யூத மதத்திற்கு ஒரே ஒரு கோடி மக்களும், மதம் குறிப்பிட இயலாத மக்கள் 17 கோடியுமாக இருந்து வருகின்றார்கள். இவர்கள் இந்தப்படி எப்படி உண்டாயிருக்க முடியும்? அநேகமாக இவ்வளவு ஜனங்களும் ஏதோ ஒரு மதத்திலிருந்தோ, அல்லது மதமே இல்லாதவர்களாயிருந்தோ தான் புதிதாக ஏற்பட்ட மதப்பிரசாரங்களின் மூலமாக, அந்தந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இன்றையதினம் இருக்கவேண்டும். இந்தக் கொள்கைப்படி பார்த்தாலே, மக்களுக்கு மதம் பிறவியின் காரணம் அல்லவென்றும், அவரவர்கள் மனப்பான்மையும், மற்றவர்கள் பிரசாரமும் காரணமென்றும் விளங்கும். அன்றியும் இந்தக் கொள்கைப்படியே இனியும் உலகத்தில் எத்தனை மதம் வேண்டுமானாலும் உற்பத்தியாகலாம் என்பதும் அவைகளுக்கெல்லாம் இப்போதிருக்கும் மக்களே தான் பெரும்பகுதியும் போய் அப்புது மதங்களில், சேர்ந்தாக வேண்டுமென்பதும் நன்றாய் விளங்கும். எனவே, மதத்தையும் ஜாதியையும் இரண்டையும் பார்க்கும் போது மதத்தைவிட ஜாதியே அதிக பலமுடையதாகும். ஏனெனில் ஜாதி பிறவியில் உண்டாவது, அது மாற்றமுடியாதது என்று சொல்லப்படுவது. ஆனால் மதமோ கொள்கையின் மூலம் ஏற்படுவது; அது மன உணர்ச்சிக்கும், அறிவு உணர்ச்சிக்கும் தக்கபடி அடிக்கடி மாற்றிக் கொள்ள உரிமை உடையது என்பதாகும். ஆகவே, பிறவியினால் ஏற்படுகின்றது என்று சொல்லும்படியான ஜாதியை அடியோடு அழித்து எல்லா மக்களையும் ஒன்று சேர்த்து, ஒற்றுமையையும் சகோதரத் தன்மையையும் உண்டாக்க வேண்டுமென்பதாகக் கூறப்படும் மக்களின் முயற்சியை ஒப்புக் கொண்டு ஆதரவளிக்கச் சம்மதிப்பதாகச் சொல்லும் மக்கள், கேவலம் கொள்கையாலும் அறிவு உணர்ச்சியாலும் இருக்கும் மதத்தை அழித்து, மக்களை ஒன்று சேர்க்க முயற்சிப்பதில் என்ன ஆட்சேபணை இருக்கக் கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை. மனிதன் அறிவு வளர்ச்சியின் மூலமும் ஆராய்ச்சித் தெளிவின் மூலமும், அசௌகரியத்தின் மூலமும், சுயநலத்தின் மூலமும் அடிக்கடி மாற்றிக் கொள்ள சுதந்திரம் இருக்கும் மதத்தைப் பற்றி பிடிவாதம் காட்டுவதற்கு யாருக்கு உரிமை உண்டு என்பதும் நமக்கு விளங்கவில்லை. அநேகமாக மதங்களை இன்றைய தினம் வலியுறுத்துபவர்களில் அநேகர் தங்கள் மதத்திற்குச் சொல்லும் ஆதாரங்கள் எல்லாம், மதத்தை உண்டாக்கின மதத் தலைவர் பெரியார் என்றும், அவர்கள் அநேக அற்புதங்கள் செய்த பெரியார்கள் என்றும், தங்கள் தங்கள் மதம் இன்ன இன்ன பரீட்சைக்கு நின்று வெற்றிபெற்றது என்றும் சொல்வதன் மூலம் அவைகளைப் பெருமைப்படுத்திப் பேசுகின்றார்களே அன்றி, அவைகளில் ஏதாவது ஒன்று இன்றைய தினம் நடைபெறமுடியுமா? என்பதைப் பற்றி கேட்போமானால், கோபித்துக் கொள்ளுகின்றார்களே ஒழிய வேறு சமாதானம் கிடையாது. அதுதான் போகட்டும் என்றாலோ, அம்மதக் கொள்கைகளைப் பற்றியும் அதே மாதிரி மதத்திற்காக கொள்கைகள் என்று சொல்லப்படுவதல்லாமல்



RangaRakes
tamilnavarasam.com

கொள்கைக்காக மதமென்றோ, சௌகரியத்திற்காகக் கொள்கைகள் என்றோ, பகுத்தறிவுக்கு ஒப்புகின்றதா என்றோ ஒருக்காலமும் சொல்ல முடியாதவை களாகவே இருக்கின்றது.

இந்த நிலையில் மதத்திற்காக கொலைகளும், கொள்ளைகளும், யுத்தங்களும், உயிர்விடத்தக்க வீரங்களும், நாட்டில் மலிந்து கிடக்கின்றன. அதுதான் போகட்டுமென்றாலோ, மதத்திற்காக செலவாகும் பணங்களும், நேரங்களும், அறிவுகளும், ஊக்கங்களும், கணக்குக்கடங்காதவைகளாகவே இருக்கின்றன.

இந்துமதம் என்பதைப் பொறுத்தவரை ஏற்படும் செலவுகள் சகிக்க முடியாததாயிருப்பதோடு அதனால் நாட்டிற்கு ஏற்படும் தொல்லைகள் அளவிடமுடியாததாகவும் இருக்கின்றன.

மற்ற மதக்காரர்கள் எல்லாம் மதத்தின் பேரால் பணங்களை வசூல் செய்து, மதத்தில் உள்ள மக்களுக்கு ஒற்றுமை, கல்வி, தொழில், ஒழுக்கம், ஆகியவைகளை உண்டாக்குவதற்கும், மேற்கொண்டு அன்னிய மதத்தில் இருக்கும் மக்களை தங்கள் மதத்தில் சேர்ப்பதற்கும் உபயோகப்படுத்துகின்றார் கள். ஆனால் இந்து மதக்காரர்கள் என்பவர்களோ, மற்ற மதக்காரர்கள் எல்லோரையும் விட அதிகமான பணம் சம்பாதித்து ஒற்றுமையில்லாமலும், கல்வியில்லாமலும், தொழில் இல்லாமலும், ஒழுக்கமில்லாமலும் செய்து வந்திருப்பதுடன், அன்னிய மதத்தில் போய் சேரவும் தாராளமாய் நிர்ப்பந்தமும் இடமும் தந்து வந்திருக்கிறார்கள்.

உதாரணமாக இன்றைக்கு 50 வருஷ ஜனகணிதப்படி இந்துக்கள் 50 வருஷத்திற்கு முன்னுள்ள ஜனத் தொகைப்படி 100க்கு 10 பேர்கள் வீதம் ஜனத் தொகையில் குறைந்திருக்கிறார்கள். மற்ற மதக்காரர்களோ நூற்றுக்கு 25 முதல் 40 வரை உயர்ந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் யாரென்று பார்த்தால், "தெய்வீகத் தன்மை பொருந்தியதும், ஆத்மார்த்தம் நிரம்பியதும், தெய்வத் தன்மை பொருந்திய ரிஷிகளாலும், முனிவர்களாலும், ஆச்சாரி யர்களாலும், சமய குரவர்களாலும், அவதார புருஷர்களாலும், கடவுள் அவதாரங்களாலும் உண்டாக்கப்பட்ட ஒப்புயர்வற்ற சனாதன வேத இந்து மதத்திலிருந்து இதர மக்களால் இழைக்கப்பட்ட தங்களுடைய கொடுமை களிலிருந்து தப்புவிப்பதற்காக என்றே ஓடிப் போனவர் களாவார்கள்".

எந்த மத ஆச்சாரியனும், மத பக்தனும், இது விஷயத்தைப் பற்றி கிஞ்சிற்றாவது ஆலோசித்து கடுகளவு கண்ணீராவது கொட்டினவன் இல்லை. இப்படிப்பட்ட தானாகவே தேய்ந்து போய்க்கொண்டிருக்கும் மதத்திற்காக ஏற்படும் செலவுகளையும், மேனிக் கேட்டையும், அறிவுத் தடையையும் நீக்கவோ, கடுகளவாவது குறைக்கவோ எவனும் வெளிவந்தவனுமல்ல. ஆனால், இப்படிப்பட்ட, இந்து மதத்திலிருந்து இப்படிப் பட்ட இந்துக்களின் கல்நெஞ்சம் படைத்த ஒழுக்க ஈனங்களிலிருந்து விலகிக் கொள்ளக் கருதி,



சென்ற காலத்தில் சிலர் மகமதியர்களாகி விட்டதாலும், கிறிஸ்தவர்களாகிவிட்ட தாலும் அவற்றை நாம் பாராட்டியதாலும் சில நண்பர்களுக்கு மிக்க மனத்தாங்கல் ஏற்பட்டு நம் மீது காய்ந்து விழுந்து சுமார் 15 -ம் கடிதம் வரையில் எழுதியிருக் கின்றார்கள். அவைகள் மலேசியா நாட்டி லிருந்தும், பர்மா தேசத்திலிருந்தும், கொழும்புச் சீமையிலிருந்தும், இந்திய உள்நாட்டிலிருந்தும் வந்தவைகளாகும். அப்படி எழுதியிருப்பவர்களில் அநேகம் பேர், "நீர்தான் மதம் வேண்டிய தில்லை என்று பேசவும் எழுதவும் செய்கின்றீரே? அப்படியிருக்க மகமதிய மதத்தை ஏன் ஆதரிக்கிறீர்? அதில் போய்ச் சேர்ந்தவர்களை ஏன் பாராட்டுகிறீர்?" என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் இப்படி எழுதியவர்கள் எல்லோரும் மதமே வேண்டாம் என்கின்ற கொள்கையை ஒப்புக் கொண்டு, நமக்குப் புத்திமதி கூறினவர்களா? அல்லது இந்து மதத்தை விட்டு மக்கள் வேறு மதத்திற்குப் போகின்றார்களா என்கின்ற மதப்பித்துக் கொண்டு எழுதினவர் களா? என்று பார்ப்போமானால் ஏறக்குறைய அதிகம் பேர் மதப் பித்துக் கொண்டு இந்துமதம் போய்விடுமே என்றோ அல்லது மகமதிய மதம் மாத்திரம் என்ன உயர்ந்தமதம் என்றோ, கருதித்தான் எழுதியிருக்க வேண்டும் என்பதாகவே நினைக்கின்றோம்.

அவர்களுக்கு ஒரு பதில் சொல்ல விரும்புகின்றோம். அதாவது இந்து மதத்தைவிட மகமதிய மதம் மேலானதே. ஏனென்றால், அதில் ஒற்றுமை, சமத்துவம், விக்கிரக ஆராதனை மறுப்பு ஆகியவைகள் இருக்கின்றது. அந்த மதம் இன்று துருக்கி, ஆப்கானிஸ்தானம், ஈஜிப்டு முதலிய நாடுகளை ஆட்சி கொண்டு வருகின்றது. துணிகரமான சீர்திருத்தத்திற்கு முனைந்து நின்று வெற்றி பெற்று வருகின்றது. இவைகளை எல்லாம் ஒருபுறம் ஒதுக்கித் தள்ளுவதா னாலும், இந்துவாக இருப்பதின் காரணத்தால் தீண்டப்படாதவராகவும், காணப் படாதவராகவும், தெருவில் நடக்கப்படாதவராகவும் "கடவுள் சன்னிதானத்தில்" நிற்கப்படாதவராகவும், இருக்கின்ற ஆறறிவு படைத்து "ஆண்டவனு டைய தூய திருக்கோயிலாக உடைய" சரீரத்தைத் தாங்கி நிற்கும் ஒரு மனிதன் இந்து மதத்தைவிட்டு மகம்மதியமதம் புகுந்தானானால் அப்போதே சூரியனைக் கண்ட குமரி இருட்டுப் பறந்தோடுவதைப் போல் மறைந்து போகின்ற தென்பது மட்டும் உறுதி! உறுதி!! உறுதி!!!

இதை யாராவது மறுக்கின்றார்களா என்று கேட்கின்றோம். மற்றபடி 'மேல் லோகமும்' 'ஆண்டவன் சன்னிதானமும்', 'பாவமன்னிப்பும்' இந்து மதத்தைவிட, மகமதிய மதத்தில் மிக்க சமீபமென்றோ, மிக்க சுலபமென்றோ நாம் ஒரு சிறிதும் ஒப்புக்கொள்ளுவதில்லை. தவிர இந்துமதத்திலிருக்கின்ற ஒரு 'சக்கிலியோ' 'பறையனோ' 'பள்ளனோ' இன்றைய தினம் இந்து மதத்தை விட்டுவிட்டேன் என்று சொல்லுவானானால் அவனை ஒருக்காலமும் தொட்டுக் கொள்ளவோ, தெருவில் நடக்கவிடவோ, பக்கத்தில் வர சம்மதிக்கவோ எவரும் ஒப்புக் கொள்ளுவதில்லை. இந்த நிலையில் உள்ள மக்களிடம் தாழ்த்தப்பட்டவர்கள் மதத்தைவிட்டு விடுவதினால் மாத்திரம் எப்படி சுதந்தர



RangaRakes tamilnavarasam.com

மடையக் கூடியவர்களாகி விடுவார்கள்? ஆனால் மகமதியர்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ ஆகிவிடாமல் கண்டிப்பாக சட்டத்தில் ஆட்சேபணை இல்லை என்பதுடன் சிறப்பாக மகமதியர்களாகிவிட்டால் சட்டத்தில் ஆட்சேபனை இல்லாததோடு, அனுபவத்திலும் ஆட்சேபணை இல்லாமல் போய் விடுகின்றது. பொதுவாக நமது லட்சியம் ஜாதிமத, வித்தியாசம் ஆகிய இரண்டும் ஒழிந்து அவைகளால் ஏற்படும் மூடநம்பிக்கைகளும் ஒழிய வேண்டுமென்பதாகும். மத வித்தியாசம் ஒழிகின்ற வரையிலும், ஜாதி வித்தியாசம் காத்துக் கொண்டிருக்க முடியாது. ஆதலால், மத வித்தியாசம் ஒழியப் பாடுபட்டுக் கொண்டிருப்பதுடன், ஜாதி வித்தியாசம் ஒழியச் செய்ய வேண்டிய காரியங்களையும் கூடச் செய்து கொண்டுதான் இருக்க வேண்டி இருக்கின்றது. ஆகவே அம்முயற்சியிலொன்று தான், நாம் இப்போது மகமதிய மதத்தைத் தழுவியவர்களை ஆதரிப்பதும், பாராட்டுவதுமே ஒழிய வேறில்லை. பார்ப்பனர்கள் சமீபகாலமாய்ச் செய்துவரும் சூழ்ச்சிகளை உணர்ந்தவர்கள், இந்து மதத்திற்காகவோ, இந்துக்கள் பிறமதம் புகுவதற்காகவோ, சிறிதும் அதிருப்தி அடைய முடியாதென்பதே நமது நம்பிக்கை.

குழந்தை மணங்களைத் தடுக்கும் மசோதாவிற்கு இந்து மதத்தின் பேரால் ஆட்சேபணையும், சாஸ்திரத்தின் பேரால் சத்தியாக்கிரகமும் செய்வதற்கு புதிய ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொண்டு, பிரசாரமும் பத்திரிகையும் நடத்த பணமும் சேகரித்து வருகின்றார்கள்.

இதுமாத்திரமல்லாமல் இந்துக்களுக்கு சிறப்பாக பார்ப்பனர்களுக்கு தங்கள் ஆதிக்கத்திற்கு ஆதாரமான ( ப-ர்.) மதத்தைக் காப்பாற்ற காங்கிரசே நல்ல சாதனம் என்று திரு.எஸ்.சத்தியமூர்த்தி அய்யரவர்கள் பார்ப்பனர்களுக்குச் செய்தி விடுத்து எல்லோரையும் காங்கிரசில் சேரும்படி அழைக்கிறார். அதாவது, அவர் சர்க்காரை மத சம்பந்தமான காரியங்களில் பிரவேசிக்க வொட்டாமல் செய்யவேண்டுமானால் காங்கிரசைக், கைப்பற்றியாக வேண்டும் என்று வியாக்கியானமும் செய்திருக்கிறார். இதிலிருந்து என்ன விளங்குகின்றது என்று பார்த்தால் மதத்தின் பேரால் உள்ள கொடுமைகளை ஒழிக்க சமூகத் துறையிலும், சம்மதிக்க மாட்டோம்; அரசியல் துறையிலும் சம்மதிக்க மாட்டோம் என்று பார்ப்பனர்கள் வைதீக கோலத்துடனும், தேசீயக் கோலத்துடனும் சொல்லுவதாக ஏற்படுகின்றதா இல்லையா என்று கேட்கின்றோம்.

தவிரவும், நாமும் இந்த ஜாதி வித்தியாசத்தைப் போக்க பிறமதம் புகுவது என்பதையே பிரதானமாகக் கொண்டிருக்கவில்லை. அப்படிச் செய்பவர்களை ஆதரிப்பது ஒருபக்கமும், கோயில் பிரவேசம் ஒரு பக்கமும், கோர்ட்டுகளில் விவகாரம் இன்னொரு பக்கமும், சமபந்தி ஒருபக்கமும், கலப்பு மணம் மற்றொருபக்கமும், பிரசாரம் இன்னொரு பக்கமும், சட்டம் செய்ய முயற்சி இனி ஒரு பக்கமும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு சமஉரிமையும், சமசந்தர்ப்பமும் கிடைக்க வேறொரு பக்கமும் இப்படிப் பல வழிகளிலும் முயற்சி எடுத்துக் கொண்டுதான் இருக்கின்றோம். இவைகளுக்கு இடையூறாக ஏற்பட்டுள்ள எதிர்ப்புகள், தொல்லைகள், விஷமப் பிரசாரங்கள், பழிசுமத்தல்கள், மிரட்டல்கள், ஆபத்துக்கள், மொட்டைக் காகிதங்கள் முதலாகிய தடைகளின் பக்கத்திலிருந்து கவனித்துப் பார்க்கின்றவர்களுக்குத் தெரியுமே ஒழிய, தூரத்திலிருந்து கொண்டு பத்திரிகைகளை மேல் வாரியாய் பார்த்துக்கொண்டு குற்றம் சொல்லப் புறப்படுபவர்களுக்கு அவ்வளவு நன்றாய் உண்மை முழுவதும் ளுவிளங்கி விட முடியாதென்றே சொல்லுவோம். தவிர, கடைசியாக ஒன்று சொல்லி இதை முடிக்கின்றோம்.

இனி சமீப காலத்திற்குள், அதாவது கால் நூற்றாண்டுகளுக்குப் பின், இப்போது இந்துக்களாயிருக்கின்றவர்கள், கண்டிப்பாய் இந்துக்களாக இருக்க முடியவே முடியாதென்பதை ஒவ்வொருவரும் மனதில் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். வேண்டுமானால் சூழ்ச்சிக்காரர்களும் சோம்பேறிகளும் இதை ஒப்புக் கொள்ளாமல் வெறும் வாய் வேதாந்தம் பேசக் கூடும். அதாவது "புத்தரால் அழிக்க முடியாத இந்துமதம், மகமதியரால் அழிக்க முடியாத இந்துமதம், வெள்ளைக்காரர்களால் அழிக்க முடியாத இந்துமதம், எத்தனையோ ஆயிரம் வருடங்களாக எத்தனையோ ஆபத்துகளுக்கு தப்பி வந்த இந்துமதம் இனிதானா அழியப் போகின்றது?" என்று பஞ்ச கச்சத்தையும், உச்சிக்குடுமியையும், தொந்தி வயிற்றையும் கொண்ட ஊரார் உழைப்பில் வயிறு வளர்க்கும் சோம்பேறிகள், கால் மேல் கால் போட்டுக் கொண்டு வயிற்றைத் தடவிக் கொண்டு பேசலாம். ஆனால் அதில் சிறிதும் உண்மை இருக்க முடியாது. ஏனெனில் அந்தக் காலம் வேறு இந்தக் காலம் வேறு; என்னவென்றால் அப்போதைய சவுகரியம் வேறு, இப்போதைய சவுகரியம்வேறு என்பதையும், அது மூடநம்பிக்கைக்காலம் இது அறிவு ஆராய்ச்சிக்காலம் என்பதையும் கவனித்தால் விளங்கும். அவ்வளவிற்கு கூட நாம் போக வேண்டியதில்லை. நம்மில் அநேகர் இன்றைக்கு ஐந்து வருஷங்களுக்கு முன் 70, 50, 20 வருஷங்களாக என்ன மனப்பான்மையில் இருந்தோம்: படிப்படியாக 5,6 வருஷத்திற்குள் இன்றைக்கு என்ன மனப்பான்மையில் இருக்கின்றோம்? இந்த வீதாசாரத்தை இன்னும் ஒரு இருபத்தைந்து வயதுக்குப் பின் வட்டியுடன் வட்டிக்கு வட்டியுடன் சேர்த்துப் பங்கிட்டுக் கொடுத்தால் என்ன பலன் ஏற்படும் என்பதை யோசித்துப் பாருங்கள். ஆகவே மதத்தை நேர்முகமாகக் கட்டிக் கொண்டழுதாலும், மறைமுகமாகக் கட்டிக் கொண்டழுதாலும், விளையும் பலன் ஒன்றே யாகும். இதற்காக யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. இதன் பின்னால் ஏற்படப்போகும் லாபத்தைப் பார்க்கச் சம்பளம் வாய்ந்தவர்கள் தாங்களும் முயற்சி செய்யாததற்கு வருந்துவார்கள் என்றே நம்புகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 03.11.1929**





RangaRakes

tamilnavarasam.com

# சுயமரியாதை இயக்கத்தின் பலன்

சுயமரியாதை இயக்கம் தோன்றிய பிறகு பார்ப்பனர்களும் புராணப் பண்டிதர்களும், புஸ்தகக் கடைக்காரர்களும், புரோகிதக் கூட்டத்தார்களும் எவ்வளவுதான் பழிகள் கூறி விஷமப் பிரசாரம் செய்து வந்தும் நாட்டில் தோன்றியிருக்கும் உணர்ச்சிகளையும் அதனால் ஏற்பட்டிருக்கும் பலன்களை யும் பற்றி, இரண்டொரு நிகழ்ச்சிகளை குறிப்பிடுகின்றோம்.

பார்ப்பனர்களை எந்தக் காரணங்கொண்டும் நம்புவதென்பதோ, அவர்களோடு ஒத்துழைப்பதென்பதோ, அவர்கள் கலந்துள்ள கூட்டங்களில் சேர்வதென்பதோ, தேர்தல்களில் அவர்களுக்கு ஓட்டுச் செய்வதென்பதோ முதலாகிய காரியங்கள் அடியோடு மறுக்கப்பட்டு வருகின்றது. கோயில்கள் சம்பந்தமான விஷயங்களில் பூஜைகள் அபிஷேகங்கள் உற்சவங்கள், புதுக்கோயில்கள் கட்டுதல் ஆகிய காரியங்களில் அலக்ஷியம் காட்டப்பட்டு வருவதுடன், பல கோயில்கள் அரைகுறை வேலையில் இருந்தவைகளும் நிறுத்தப்பட்டுவிட்டன.

பண்டிகைகள், விரதங்கள், சடங்குகள் முதலியவைகள் அநேகமாக, சில இடங்களில் அடியோடு விடப்பட்டும், சில இடங்களில் மிக்க அலக்ஷியமாக ஏதோ நிர்ப்பந்தத்திற்கு நடத்துபவைகளாகவும் காணப்படுகின்றன.

விதவைகள் மணம் என்பதும், கலப்பு மணம் என்பதும், தினம் தினம் நடக்கும் விஷயங்களும், நடத்தத் தேவை விளம்பரங்களும் வெளியான வண்ணமாய் இருந்து வருகின்றன. ஜாதி வித்தியாசம் ஒழித்தல், தீண்டாமை ஒழித்தல் முதலிய வித்தியாசங்கள் குறிப்பிடத் தகுந்த அளவுக்குப் பயன்கொடுத்து வருகின்றன. அதாவது தினமும் மக்கள் மகமதியராவதும், கிறிஸ்தவராவதுமான செய்திகள் வெளியாகின்றன. கோயில் பிரவேசம் பல இடங்களில் நடக்கின்றன.

புரோகித விலக்கு சங்கங்கள் புதிது புதிதாக ஏற்படுத்தப்படுகின்றன.

மதத்தைப் பற்றிய புரட்டுகள் வெகுதாராளமாய் வெளிப்படுத்தப் படுவதோடு மதப் புரட்டர்கள் எல்லாம் மூலையில் முக்காடிட்டு ஒடுங்கி உட் கார்ந்து கொள்ள வேண்டியதாகிவிட்டன. அன்றியும் அவர்களின் உண்மை யான தோல்வியைக் காட்ட அறிகுறி என்னவென்றால் தாங்கள் வாய் திறக்க



யோக்கியதை அற்றுப்போய், புத்தியில்லாத பாமர மக்களை ஏவிவிட முயற்சியில் இறங்கியிருப்பதேயாகும்.

இந்துமதப் புரட்டு தேசமெல்லாம் பரவி வருவதுடன், அடுத்த ஜனகணித்தில் ஒவ்வொருவரும் இந்தியன் அல்லது இந்துவல்லாதவன் என்று சொல்ல வேண்டும் என்றும், எந்தக் காரணம் கொண்டும் ஜாதியையும், ஜாதிப் பட்டத்தையும் சொல்லக் கூடாதென்றும், நூற்றுக்கணக்கான சங்கங்களும் மகாநாடுகளும், தீர்மானங்கள் செய்தனுப்புவதுகளுமேயாகும்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், தேசத்துரோகம், தேசியத்திற்கு விரோதம் என்று எவ்வளவோ தூரம் பார்ப்பனர்களும் அவர்களது வால்களும், கத்தியும் இப்போது சட்டசபையிலும், சர்க்கார் உத்தியோகத்திலும் ஏற்பட்டு நிலைத்து அனுபவத்திற்கு வந்துவிட்டதோடு, பார்ப்பனர்களே தங்கள் வகுப்புக்குள்ள உரிமையை கெஞ்சி கேட்கவேண்டிய அளவுக்கு, தைரியமாய் வெளியில் வந்து விட்டார்கள். உதாரணமாக சர்க்கார் மதுவிலக்குப் பிரசார ஜில்லா கமிட்டிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு பார்ப்பனர் என்கின்ற கணக்கு வைத்து நியமிக்க வேண்டும் என்று திவான்பகதூர் திரு. ராமச்சந்திரராவே முயற்சி எடுத்துக் கொண்டதோடு தேவஸ்தானக் கமிட்டிகளில், பார்ப்பனர்களுக்கு உண்டான பங்கு ஏன் கொடுக்கவில்லை? என்று சட்டசபையில் திரு.சத்தியமூர்த்தியே பல கேள்விகள் கேட்கவும், இந்தக் கேள்வியை திரு.சத்தியமூர்த்தி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமையை ஒப்புக்கொண்டு கேட்கின்றாரா? என்று திரு.சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார் கேட்கவும் சர்க்காரார் ஆம் என்று பதில் சொல்லவுமான நிலைமைக்கு வந்துவிட்டது.

மற்றும் ராமேஸ்வரம் கோயில் தேவஸ்தான சம்பந்தமான ஒரு உத்தியோக அறிக்கையில் “சுயமரியாதை இயக்கம் தோன்றிய பிறகு, கோயில் வரும்படி குறைந்து வருகின்றது. ஆதலால் முன்போல இனி வரும்படி எதிர்பார்க்க முடியாது” என்று காணப்பட்டிருக்கின்றது.

மற்றும் ரிஜிஸ்திரேஷன் இலாக்கா வருஷாந்திர ரிபோர்ட் ஒன்றில் “இப்போது ரிஜிஸ்டர் கல்யாணங்கள் அதிகப்பட்டு வருவதால், கலியாணங் களை ரிஜிஸ்தர் செய்ய ஒவ்வொரு இடத்திலும், அதிகமான ரிஜிஸ்டிரர்களை நியமிக்க வேண்டும்” என்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

வைதீகக் குடுக்கைகளுக்கும் புராண அழுக்கு மூட்டைகளுக்கும் வருணாச்சிரம புராணங்களுக்கும் அடியோடு பொதுமேடைகள் இல்லாமல் செய்துவிட்டது.

காஞ்சீபுரம் சங்காராச்சாரி மடத்தில் இருந்து வந்த பள்ளிக் கூடத்தில் “தீண்டப்படாத”வர்களைச் சேர்த்துக் கொள்ளாததற்காக கிராண்டு மறுக்கப்பட்டு பள்ளிக்கூடம் மூடப்பட்டு விட்டது.

சென்னை பச்சையப்பன் காலேஜில் ‘தீண்டப்படாதவர்களை’ சேர்த்துக்



RangaRakes tamilnavarasam.com

கொள்ளப்பட்டுவிட்டது. அருப்புக்கோட்டை நாடார் பள்ளிக் கூடத்திலும் சேர்த்துக் கொள்ளப்பட்டாய்விட்டது. திருப்பதி தேவஸ்தான சமஸ்கிருத பள்ளிக்கூடத்தில் பார்ப்பனரல்லாதார்களை சேர்த்துக் கொள்ள வேண்டுமாய் சர்க்கார் உத்திரவு போட்டு அந்தப்படி சேர்த்துக் கொண்டும் ஆய்விட்டது.

பெண்களுக்கு மூன்றாவது பாரம் வரை சம்பளம் இல்லாமல் சொல்லிக் கொடுப்பதாக சர்க்கார் ஒப்புக் கொண்டு அந்தப் படி அமுலிலும் வந்துவிட்டது.

பெண்களுக்குப் போதனா முறை பாடசாலைகள் முக்கிய தாலூக்காக் கள் தோறும் ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டு வேலை நடந்து வருகின்றது.

விதவைகள் ஆச்சிரமம் வெளி ஜில்லாக்களில் ஏற்படுத்த யோசனை களும் ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றது.

இவ்வளவும் அல்லாமல் முனிசிபாலிடிக்குச் சம்பந்தப்பட்ட பொதுக் கிணறுகளில் "தீண்டப்படாதார்" உள்பட எல்லோரும் தண்ணீர் எடுக்கலாம் என்றும் யாராவது ஆக்ஷேபித்தால் ஆக்ஷேபிப்பவர்களுக்கு 50 ரூபாய் அபராதம் என்றும் சட்டம் செய்தாகிவிட்டது. ஜில்லா போர்டு, தாலூக்கா போர்டு சம்பந்தப்பட்ட கிணறுகளுக்கும் அதே மாதிரி சட்டம் செய்ய ஏற்பாடு செய்யப் பட்டு வருகின்றது.

பதினாறு வயதிற்குட்பட்ட பெண்களுக்கு கல்யாணம் செய்யக் கூடாது என்றும் பதினெட்டு வயதுக்கு மேற்படாத கல்யாணமில்லாத பெண்களை புணரக் கூடாது என்றும் சட்டம் செய்தாகிவிட்டது.

விதவைகள் சொத்துரிமைக்கும் பெண்கள் சொத்துரிமைக்கும் சட்டங்கள் கொண்டு வரப்படப் போகின்றன.

சாமிபேரால் பெண்களுக்குப் பொட்டுக் கட்டி விபசாரிகளாக்கப் பட்டுவருவதை நிறுத்த சட்டங்கள் செய்யப்பட்டுவிட்டன. பட்டணங்களில் விபசார விடுதிகளை ஒழிக்க சட்டம் செய்யப்படுகின்றது. இப்படியாக இன்னும் அநேக விஷயங்கள் இந்தியா முழுவதும் புற்றில் இருந்து ஈசல்கள் புறப்படுவதுபோல் தினத்திற்குதினம் புதிதாக இந்த இரண்டு வருஷத்தில் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றதை கண்ணில் பார்த்துக் கொண்டு வருகின்றோம். இன்னமும் அடுத்த வருஷத் துவக்கத்தில், சில விஷயங்களுக்கு சத்தியாக் கிரகம் என்பவைகள் தாராளமாய் நடைபெறக் கூடிய நிலைமைக்கு நாடு வந்து விடும் என்கின்ற பலமான நம்பிக்கை நமக்குண்டு என்பதையும் தைரியமாய் வெளிப்படுத்துகின்றோம். அன்றியும் அதற்குள் பார்ப்பனர்கள் சாரதா சட்டத்தை மீறி செய்யப் போவதாய்க் கூறும் சத்தியாக்கிரகம் பார்ப்பனர்கள் இப்போது சொல்லுகின்ற படி நடக்குமானால், அதுவும் நமது சுயமரியாதை இயக்கத்தின் பலன் என்பதோடு அதை நம்மவர்கள் நடத்தப்போகும் சத்தியாக்கிரகத்திற்கு அனுகூலமாய் தேசத்தில் உணர்ச்சி உண்டாக்கவும் கூடும்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 03.11.1929**



# "இராமாயணத்தின் ஆபாசம்"

உலகத்தில், ஒரு சமூகத்தை மற்றொரு சமூகம் ஆழ்த்தி வைப்பதற்குரிய சான்றுகள் ஆழ்த்தும் சமூகத்திற்றான் காணப்படுவது வழக்கம். ஆனால் தமிழ் மக்களை மிருகங்கள், குரங்குகள், பேய்கள், இராக்கதர்கள், கொடியவர்கள், குடிகாரர்கள், சோரம் புரிபவர்கள், கொலை நிகழ்த்துபவர்கள், அநாகரிகர்கள், வரன்முறையற்றவர்கள், தாசி மக்கள், அடிமைகள், குரூபிகள் என்ற வகையில் திரித்துக் கூற ஆரியர்கள் இராமாயணம் என்னும் ஒரு கட்டுக் கதையை வரைந்து, அது ஒரு மதியின்மிக்க ஆரிய முனிவனால் எழுதப்பட்டது என்று அதனைப் போற்றி, அண்டமுகடு முட்டும் வரையிற் புகழ்ந்து, அதற்கோர் மொழி பெயர்ப்பு போன்ற கம்பராமாயணத்தையும் வரைந்து இத் தென்னிந்தி யாவில் புதுக்கியதும், இத்தென்னிந்திய மக்கள் தம் இழிவையே அடிப்படை யாகக் கொண்டு வரையப் பெற்ற இராமாயணத்தை ஒரு இதிகாசம் என ஏற்று அதனை மெய் என்று நம்பி அவ்விதிகாச கதாநாயக, நாயகிகளை தெய்வங்களாக ஏற்றதும் வருந்தத்தக்கதோர் உண்மையாகும். அறிவுடைய திராவிட மக்கள் சூழ்ச்சியில் மிகுந்த ஆரியக் கதையாம் இராமாயணத்தை நம்பி பார்ப்பனர் வலையிற் சிக்கியதற்குக் காரணம், சிந்திக்குந்தோறும் சிந்திக்கும் தோறும் எளிதில் தோற்றக் கூடியதாயில்லை.

என்றாலும் பொருள் காப்பாளன் அறிவிலும் வலிவிலும் மற்றும் உள்ள எல்லாத் துறைகளிலும் மிகுந்த ஆற்றல் உடையவனாய் இருப்பினும், அறிவிலும் சீலத்திலும் குன்றிய ஓர் கள்வன், அப்பொருளை ஏகதேசம் கவர்ந்து செல்லுவது போல, அறிவுடைய நம் திராவிட மக்கள் இப்பார்ப்பன ஆபாசக் கதையாகிய இராமாயணக் கதையை ஏற்று மதிமோசம் போயினர். பார்ப்பனர் சூழ்ச்சியை பத்து கோடி முறை வலியுறுத்தினும் நாம் ஏமாற்றம் அடைந்தது அடைந்ததுதான்.

எனவே, நம்மை இப்பார்ப்பனர்கள் இற்றை வரையில் ஆழ்த்தி அவர் நாகரிகத்தையும், ஒழுக்கத்தையும், கடவுள்களையும் நம்மவை என்று ஏற்று நடக்குமாறு செய்ததற்கு இத்தகைய கதைகளே சீவநாடிகளாய் இருக்கின்றன.

பார்ப்பன வேதங்களையும் வேதாந்தங்களையும் பார்ப்பனரே அறியாத வர்களாய் இருக்க, நம்மவர்கள் பெரும்பாலும் அறிவதற்கு இல்லை. நம்மவர்கள் தெய்வங்கட்கும்; சமூக ஒழுக்கங்கட்கும்; மற்றும் எல்லாவிதமான இயல்கட்கும் இப்பொழுது நமக்கு ஆதாரமாய் உள்ளவை பார்ப்பனப் புத்தகங்களேயாம்



RangaRakes tamilnavarasam.com

என்பதில் தடையுளதோ? இல்லை.

எனவே, நாம் நம்முடைய உண்மை நிலைமையை அறியவும், பார்ப்பனர்கள் நம்மை தாழ்மைப்படுத்த இன்று வரை நம்மை அடர்ந்தரசு புரியும் சூழ்ச்சி முறையை தெரிந்து அதனை கத்தரித்து சுயமரியாதை உணர்ச்சிப் படைக்கவும், இராமாயணத்தில் உள்ள ஆபாசங்களை "இராமாயணத்தின் ஆபாசம்" என்னும் நூல் நமக்கு கண்ணளிக்கும் என்பதில் ஐயமின்று.

இந்நூலில் நம் அறிய குடியரசில் வாரந்தொறும் வெளிப் போந்த கட்டுரைகளே மிளிர்வதனால், கட்டுரை ஆசிரியர் திரு.சந்திரசேகரப் பாவலரின் ஆராய்ச்சிக்கு, நாம் ஒரு ஆராய்ச்சி வெளியிடுதல் மிகையாகும்.

ஆதலின் உண்மை திராவிட மக்கள் தொடர்ச்சியாக நம் பதிப்பகத்தால் வெளியிடப்படும் 'இராமாயணத்தின் ஆபாசம்' என்னும் அரிய ஆராய்ச்சி நூலை வாங்கிப் படித்து உண்மை உணர்ந்து எதிரிகட்குத் தக்க ஆப்பிறுத்துவது இன்றியமையாததாகும்.

**குடி அரசு - நூல் மதிப்புரை - 03.11.1929**



# விமல போதம்

ஸ்வாமி விமால நந்தா அவர்களால் தொகுக்கப்பெற்ற 'விமல போதம்' என்னும் நூலொன்று கிடைக்கப் பெற்றோம். இந்நூலின்கண் சித்த மதத்தை விளக்கி உரைப்பதற்கு, நூலாசிரியர் அவர்கள் அரும்பாடு பட்டிருப்பர் என்றே யாம் கருத வேண்டி இருக்கின்றது. இதிற் காயசித்தி, மனோசித்தி, அறிவு சித்தி என்னும் மூவகைச் சித்தியின் தன்மைகளையும் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளை ஒட்டிய பல ஆராய்ச்சிகளையும் தெள்ளத் தெளிய, மந்த தரத்தாரும் உணரும் வண்ணம் ஆசிரியரவர்கள் பரந்த விஷயங்களை சுருங்க விளக்கியிருப்பது பாராட்டற்பாலதாம்.

நூலிற் கூறும் உண்மைகள் உண்மைகளா என்பதைப் பற்றி நூலை வாங்கிப் படிப்பவர்களே தங்கடங்கள் அறிவைச் செலுத்திப் படித்துத் துணி புறுதல் சிறப்புடைமையாதலால், இவ்விடயத்தைப் படிப்பவர்கட்கே விட்டு விடுகின்றோம்.

நூல் மிகத் தெளிவாகப் பதிக்கப் பெற்றுள்ளது என்றும் நூலைப் பதிப்பிக்க ஆசிரியர் எடுத்துக் கொண்ட முயற்சி சிறிதன்று என்றும், இதன் விலை அணா இரண்டே என்றும் மட்டும் வாசகர்கட்கு எடுத்துரைக்க விழை கின்றோம்.

நூல் சென்னை கோல்டன் கம்பெனி அச்சியந்திர சாலையில் மிக அழகுபடப் பதிக்கப் பெற்றுள்ளது.

**குடி அரசு - நூல் மதிப்புரை - 03.11.1929**



RangaRakes tamilnavarasam.com

# இர்வின் பிரசங்கம்

ராஜப் பிரதிநிதியாகிய லார்ட் இர்வின் அவர்கள் சீமைக்குப் போய்விட்டு வந்து வெளியிட்ட அரசியல் அறிக்கையை இந்தியாவில் உள்ள எல்லா அரசியல் வாதிகளும் ஒப்புக்கொண்டு பாராட்டி இருப்பதோடு, பலர் அதற்காக தங்களுடைய நன்றியறிதலையும் காட்டிவிட்டார்கள்; காட்டிக் கொண்டும் இருக்கிறார்கள் என்றாலும் இதிலிருந்து முக்கியமாக இரண்டு காரியங்கள் நிறுத்தப்பட்டுவிடும் என்பது உறுதியான செய்தியாகும். அதாவது 1929 வது வருஷம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி இரவு ஒரு மணிக்கு திரு.காந்தியார் மறுபடியும் துவக்கப்படத் "தயாராயிருந்திருக்கும்" ஒத்துழையாமையையும் அதற்கொரு மூன்று நாளைக்கு முன் அதாவது டிசம்பர் 28-ந் தேதி லாகூர் காங்கிரசில் திரு.ஜவகரிலால் நேருவால் வெளிப்படுத்த இருக்கும் பூரண சுயேச்சை விளம்பரமும் நிறுத்தப்பட்டு போகும் என்பதேயாகும். எனவே, வைசிராய் அறிக்கை அவ்விரு கனவான்களுக்கும் பெரிய விடுதலையையும் வெற்றியையும் கொடுத்தது என்பதில் நமக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. மற்றபடி அவ்வறிக்கையில் உள்ள விஷயம் என்னவென்று நிதானமாய் நடுநிலையிலிருந்து பார்ப்போமானால், எவ்வளவு சிறுகண் உள்ள சல்லடை யைப் போட்டு சலித்துத் தேடிப்பார்த்தாலும் சத்துள்ள வார்த்தை ஒன்றுகூட அதில் இருப்பதாக நமக்குப் புலப்படவில்லை.

அதாவது, அதிலுள்ள விஷயங்கள் என்னவென்று பார்ப்போமானால் "எந்தவித நெருக்கடி ஏற்பட்டாலும், யார் என்ன கூப்பாடு போட்டாலும், இந்தியாவில் ராஜிய நோக்கமில்லாத ராஜவிசுவாசிகள் எல்லா வகுப்பிலும், எல்லா மதத்திலும், எல்லா கட்சியிலும் தாராளமாய் இருக்கிறார்கள் என்பது எனக்கு நன்றாய் தெரியும். சைமன் கமிஷன் நியமனத்தைப் பற்றியும் அதனால் ஏற்பட்ட பலனைப் பற்றியும் இனி பேசுவதில் யாதொன்றும் பயன்படாது. சைமன் விசாரணையும் முடிந்து போயிற்று. இந்திய கமிட்டி விசாரணையும் முடிந்து போயிற்று. எவ்விதத்திலும் அவர்களுடைய ரிபோர்ட்டு பார்லி மெண்டுக்கு வந்துதான் தீரும். அவர்கள் என்ன சொல்வார்கள் என்பதைப்பற்றி இப்போது சொல்லுவது சாத்தியமல்ல. சாத்தியமானாலும் நாங்கள் இப்போது சொல்ல மாட்டோம். பார்லிமெண்டார் தங்கள் இஷ்டப்படிதான் செய்வார்கள். மற்றும் தக்க ஆதாரத்துடனும் அதிகாரத்துடனும் இந்தியாவின் அபிப்பிரா யத்தை எடுத்துச் சொல்ல யோக்கியதையுடையவர்களின் ஒத்துழைப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறோம். இதைப்பற்றி இந்திய சட்டசபையில் 8- மாதத்திற்கு முந்தியே பேசியதைத்தான் இப்போதும் பேசுகின்றேன். இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுப்பதைப் பற்றி பார்லிமெண்ட்டுக்கு இருக்கும் சுயேச்சை அதிகாரத்தை நீங்கள் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். அதை மறுப்பது பயனற்றதாகும். ஆனால், இந்தியாவின் அதிகாரம் பெற்ற தலைவர்களுடைய அபிப்பிராயத்தையும் தெரிய பார்லிமெண்டு முயற்சி செய்யும். படிப்படியாக இந்திய சீர்திருத்தம் பெற்று பொறுப்பாட்சி பெற வேண்டுமென்பதே 1917 வருஷத்திய அறிக்கையின் கருத்தாகும். 1919 - ம் வருஷத்திய சீர்திருத்தத்தின் கொள்கையே குடியேற்ற நாட்டுப் பொறுப்பாட்சி பெறுவதற்கு ஏற்றதாகும். சைமன் கமிஷன் வகுக்கும் திட்டம் தான் குடியேற்ற நாட்டுப் பொறுப்பாட்சிக்கு ஏற்றதாகும் என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தினர்கள் தீர்மானித்திருக்கின்றார்கள். சைமன் அறிக்கையும் இந்திய தலைமைக் கமிட்டி அறிக்கையும் கிடைத்த பிறகு இந்திய சர்க்காரை ஆலோசித்துக் கொண்டு இந்திய பிரதிநிதிகளை அழைத்து தனியாகவோ சேர்ந்தோ விவாதிக்க ஒரு மகாநாடு கூட்டுவார்கள். அந்த முடிவையும் பார்லிமெண்டுக்கு அனுப்புவார்கள்" என்பது போன்று 'ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாட்பாள்' என்கின்ற பழமொழிப்படி முன் சொன்னவைகளையே சற்று மெருகு கொடுத்த பாஷையில் பேசி இருக்கிறார். எனவே, இந்த அறிக்கையிலிருந்து இந்திய அரசியல் தலைவர்களும் ஒத்துழையாதாரும் பூரண சுயேச்சைக்காரரும் ஆனந்தக்கூத்தாட என்ன அற்புதம் இருக்கின்றது என்பது நமக்கு விளங்கவில்லை. நன்றாக கவனித்து பார்த்தால், லார்ட் இர்வின் முன்னைவிட இப்போது மிக்க நிமிர்ந்து பேசி இருக்கின்றார் என்றுதான் கொள்ளவேண்டுமேஒழியவேறில்லை. என்ன வென்றால், இந்தியாவின் பெரும்பாகம் மக்கள் அரசியல் நோக்கமென்பதே இல்லாமல் சர்க்காரையே நம்பிக் கொண்டிருப்பவர்கள் என்றும் நிபந்தனை இல்லாத ராஜ விசுவாசிகள் என்றும் கூப்பாடு போடுபவர்கள் மிக்க சுருங்கின எண்ணிக்கை உள்ளவர்கள் என்றும் சொல்லி, எடுத்த எடுப்பில் எல்லா அரசியல் வாதிகளையும் ஒரே அடியாய் மண்டையில் அடித்து அவமானப் படுத்தி இருக்கிறார்.

இரண்டாவதாக, சைமன் கமிஷன் நியமனத்தைப்பற்றி ஒன்றும் பேசக்கூடாது; அதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும் என்கின்றார்.

மூன்றவது, இந்தியாவுக்கு சீர்திருத்தமோ சுயராஜ்யமோ வழங்க பார்லிமெண்டுக்குத்தான் அதிகாரமுண்டு என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும் என்கின்றார்.

நான்காவதாக, சைமன் கமிஷன் ரிப்போர்ட்டின் மீதுதான் பார்லி மெண்டு யோசனை செய்யும் என்றும் சொல்லிவிட்டார். வேண்டுமானால் இந்திய தலைவர்களைக் கூட்டி அவர்கள் அபிப்பிராயம் கேட்கப்படும் என்றும் ஒரே ஒரு வார்த்தை சொல்லி இருக்கிறார். ஆனால், அதுவும் நிபந்தனை மீதே சொல்லுகின்றார். அதாவது, இந்தியாவின் அதிகாரம் பெற்ற



RangaRakes tamilnavarasam.com

பிரதிநிதிகளாகவும் தக்க ஆதாரத்துடன் பேசுபவர்களாகவும் இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். இதில் தான் ஜீவ நாடி இருக்கின்றது. இந்தியாவின் அதிகாரம் பெற்றவர்கள் யார் என்பது நமது கேள்வி. இந்திய ஜனத்தொகையில் கிட்டத்தட்ட சரிபகுதி மகமதியர்களும் தீண்டப்படாதவர் களும் ஆவார்கள். இவர்களுக்குப் பிரதிநிதியாக யார் போகக்கூடும்? காங்கி ரஸ்காரர்களும் மிதவாதிகளும் இவர்களுடைய பிரதிநிதிகளாகி விடுவார் களா? நேரு திட்டமானது காங்கிரசு மிதவாதி, ஒத்துழையாவாதி, சுயேச்சை வாதி, தேசியவாதி ஆகிய எல்லாவாதிகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்டது என்று எவ்வளவோ பறையடித்தும் அதை மறுத்த இயக்கம் எத்தனை? வகுப்பு எத்தனை? மனிதர் எத்தனை? என்பது உலகம் அறியாததா? அல்லது சர்க்கார் தெரியாததா? என்று கேட்கின்றோம்.

நிற்க, சைமன் கமிஷனை பகிஷ்காரம் பண்ணினதாக மேற்கண்ட இத்தனை கட்சியின் பேராலும், பூனை தன் கண்ணை மூடிக் கொண்டு பாலைக் குடித்தால் உலகமே இருட்டாக இருக்கும் என்று நினைத்துக் கொண் டது போல் ஒரேயடியாய் ‘பகிஷ்காரம்’, ‘பகிஷ்காரம்’ என்று கத்தினார்களே, அதற்கு இந்திய மக்கள் எவ்வளவு மதிப்பு கொடுத்தார்கள் என்பது உலகமறி யாததா? அல்லது சர்க்கார் தெரியாததா? என்று கேட்கின்றோம். அன்றியும் காங்கிரசு தனது யோக்கியதையை இழந்து விட்டதென்றும், அது விளை யாட்டுப் பிள்ளைகள் கூட்டம் என்றும், காங்கிரசு இந்திய பொதுஜனப் பிரதிநிதித்துவ முடையதல்ல வென்றும், அது தனக்கே குழிவெட்டிக் கொண்டதென்றும் திரு.காந்தி உள்பட, திரு.பெசண்டம்மை உள்பட, தலைவர்கள் என்பவர்கள் எல்லோரும் சொன்னதை இதற்குள் உலகம் மறந்திருக்குமா? என்று கேட்கின் றோம். இந்தியாவின் அதிகாரம் பெற்றது என்பது ஒரு பக்கமிருந்தாலும் தக்க ஆதாரத்துடன் வரவேண்டும் என்பதற்கு இந்தியத் தலைவர்கள் எந்த ஆதாரத்தைக் காட்டக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை. உதாரணமாக, சைமன் கமிஷன் ராஜாங்க சபை பிரதிநிதி களுடனும் இந்திய சட்டசபை பிரதிநிதிகளுடனும், மாகாண சட்டசபை பிரதிநிதிகளுடனும் இந்தியாவெல்லாம் சுற்றித் திரிந்து இந்திய பிரமுகர்கள், பிரதிநிதிகள் என்பவர்களை எல்லாம் விசாரித்து வைத்து இருப்பதோடு அந்தந்த மாகாண அரசாங்கத்தார் மூலமும் மாகாண மக்களின் பிரதிநிதி சபையாகிய சட்டசபைகளின் மூலமும் நிறைவேற்றியதும் தனித்து எழுதிக் கொடுத்திருப்பதுமான ஆதாரங்கள் ஒப்புக்கொள்ளக் கூடியதா? அல்லது நாங்கள் தான் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு தங்கள் காலைத் தாங்களே தொட்டுக் கும்பிட்டுக் கொண்டு என்னைக் கூப்பிடு! உன்னைக் கூப்பிடு! என்று கெஞ்சி உள்போகும் யாரோ நான்கு பெயருடைய வார்த்தை களை தக்க ஆதாரம் என்று ஒப்புக் கொள்ளக் கூடியதா? என்று கேட்கின் றோம். தவிரவும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தங்கள் பார்லிமெண்டால் நியமிக்கப்பட்ட கமிட்டி என்றும், சைமன் கமிஷன் மூலமும், சட்டசபை பிரதி நிதிகள் மூலமும், சர்க்கார் ஸ்தாபனங்கள் மூலமும், சேகரித்து வைத்திருக்கும்



உண்மைகளுக்கு விரோதமாய் இப்போது ஒரு புதிய “இந்தியப் பிரதிநிதிகள்” வந்து ஏதாவது ஒன்றைச் சொல்லி, இதுதான் இந்தியாவின் அபிப்பிராயம் என்று திரு.காந்தியே சொல்வதானாலும், சர்க்கார் எதை நம்புவார்கள் என்று பொது ஜனங்களையே யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம். அன்றியும் ஒரு சமயம் இதே சர்க்காரே தாங்கள் விசாரித்து அறிந்த உண்மைகளுக்கு விரோதமாகவும் சட்டசபைப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்ட உண்மை களுக்கு விரோதமாகவும் ஏதோ தங்களால் அழைக்கப் படுகின்றவர்களுடை யவோ அல்லது தாங்களாகவே தலைவர்கள் என்று வருகின்றவர்களு டையவோ வார்த்தைகளை ஏற்றுக் கொள்வார்களே யானால், இந்த சர்க்காரி டத்தில் நாளைய தினம், பொது ஜனங்களுக்கு எவ்வளவு நம்பிக்கை இருக்கக் கூடும் என்பதையும் நாளையும், பின்னையும் இந்த சர்க்காருக்கோ, சட்டசபை பிரதிநிதிகளுக்கோ மதிப்பு இருக்க முடியுமா என்பதையும் யோசித்தால் எந்த அபிப்பிராயம் மதிக்கப்படும் என்பது இப்பொழுதே விளங்கிவிடும்.

பொதுவாக சைமன் கமிஷன் பகிஷ்காரம் என்பதன் மூலமாகவும், நேரு அறிக்கை என்பதன் மூலமாகவும், இந்திய அரசியல் ஸ்தாபனங்களு டையவும் அவற்றின் தலைவர்களுடையவும் யோக்கியதையும் செல்வாக்கும் நன்றாய் விளங்கிவிட்டது. ஏதோ தலைவர்களுடைய மானத்தைக் காப்பாற் றிக் கொள்ள வேண்டி “கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை’ என்று சொல்லிக் கொள்ளும் வஸ்தாதிபோல் லார்ட் இர்வினின் அறிக்கையை இந்தத் தலைவர்கள் உபயோகித்துக் கொள்ளலாமே தவிர, மற்றபடி அதனால் அவர்களுக்கு எவ்வித யோக்கியதையும் வந்துவிடவில்லை என்பதே நமது அபிப்பிராயம்.

தவிர இந்த அறிக்கையின் மீது தலைவர்கள் அறிக்கை என்று திரு.காந்தி அவர்களால் சில நிபந்தனைகள் குறிப்பிட்டு ஒரு அறிக்கை தயார் செய்யப்பட்டு அதில் “தலைவர்கள்” கையொப்பம் வாங்கப்பட்டு வருகின்றது. இது மிகவும் கேலிக்கூத்தேயாகும். அவைகளில் 1. சமரச நோக்கத்தை உண்டாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பது. 2. அரசியல் குற்றவாளிகளை விடுதலை செய்ய வேண்டும் என்பது 3. முற்போக்கான ராஜீய ஸ்தாபனங்களுக்கெல்லாம் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும். குறிப்பாக காங்கிரசுக்கு அதிக ஸ்தானம் கொடுக்க வேண்டும் என்பவைகளாகும். இவற்றுள் முதலாவது நிபந்தனை யானது அர்த்தமற்றதாகும். இரண்டாவது நிபந்தனை பிரமாதமான நிபந்தனை அல்ல. இதை சர்க்காரே ஏற்றுக் கொள்ளவும் கூடும் அல்லது “தலைவர்” களே தள்ளிவிடவும் கூடும். இதனால் இலாபமும் இல்லை; நஷ்டமும் இல்லை. ஏனென்றால் இதை எதிர்பார்த்து எந்த தேச பக்தரும் ஜெயிலுக்குப் போக வில்லை. எனவே, இவற்றுள் மூன்றாவது நிபந்தனைதான் சற்று விஷமத்தன மான நிபந்தனையாகும். அதாவது, முற்போக்கான ராஜீயஸ்தாபனம் என்றால் என்ன என்பதும், காங்கிரசுக்கு அதிக பிரதிநிதித்துவம் வேண்டுமென்பது எதற்காக என்பதுவும் சூழ்ச்சியை உள்ளடக்கிக் கொண்டிருப்பவைகளாகும்.



RangaRakes
tamilnavarasam.com

நமது தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பார்த்தாலுமே காங்கிரசின் யோக்கியதை என்ன என்பதை நாம் எடுத்துக் காட்டவேண்டுமா என்று கேட்கின்றோம்.

அதாவது தமிழ்நாட்டுக் காங்கிரஸ் திருவாளர்கள் முத்துரங்க முதலியார், சத்தியமூர்த்தி, குழந்தை, பஷீர் அகமது, ஏ.ரங்கசாமி அய்யங்கார், ஜயவேலு, எம்.கே. ஆச்சாரியார் போன்றவர்களுக்குள் அடங்கி விட்டதாகும். இவர்களுடைய பிறப்பு, வளர்ப்பு, வாழ்க்கை அறிந்தவர்களுக்கு இந்திய மக்களிடம் எந்தவிதமான கவலை இவர்களுக்கு இருக்கக்கூடும் என்பதும், இவர்கள் எப்படி தமிழ்நாட்டு இரண்டரைகோடி மக்களுக்கு பிரதிநிதிகளாவார்கள் என்பதையும் நாம் எடுத்துக் காட்டாமலே தெரிந்து கொள்வார்கள். ஆகவே, இதைக் கவனித்தால் காங்கிரஸ் பிரதிநிதித்துவத்தின் யோக்கியதை விளங்காமல் போகாது. மற்றபடி "தேசம் முதல்" கட்சி, "தேசியம் முதல்" கட்சி முதலாகிய உத்தியோகம் முதல் என்கின்ற தத்துவம் கொண்ட கட்சிகளின் யோக்கியதையைப் பற்றி நாம் சிறிதும் சொல்ல வேண்டியதில்லை என்று நினைக்கின்றோம். இன்னிலையில் இவைகளிலிருந்தே எந்தக்கட்சி உண்மையான இந்தியப் பிரதிநிதிக் கட்சியாக இருக்க முடியும் என்பதையும் எந்தத் தலைவர் உண்மையான இந்தியத் தலைவராக இருக்க முடியும் என்பதையும் யோசித்தால் விளங்காமல் போகாது.

பொதுவாகப் பார்க்கப் போனால் லார்ட் இர்வின் அறிக்கையானது திரு.காந்திக்கும், திரு.ஜவகர்லால் நேருக்கும் ஆபத்தின் நெருக்கடியான சமயத்தில் எதிர்பாராத ஒரு பெரிய உதவி செய்ததாக மாத்திரம் ஏற்பட்டதே அல்லாமல் மற்றபடி இந்தியா அரசியல் தன்மையின் தாழ்மையை விளைக்க ஏற்பட்டது என்றுதான் சொல்லி ஆகவேண்டும். ஏனெனில் எந்த விதத்திலும் தலைவர் மகாநாடு உண்மையான பிரதிநிதித்துவம் பெற்ற ஸ்தாபனமோ தலைவர்களையோ கொண்டதாக ஏற்படப் போவதில்லை என்பதும் அப்படியாவது ஏற்பட்டதாக வைத்துக் கொண்டாலும் அதை இந்திய பொதுமக்கள் ஒப்புக் கொள்ளப் போவதில்லை என்பதும் உறுதியான விஷயமாகும்.

நம்மைப் பொறுத்தவரை திரு.காந்திக்குக் கூட இந்தியாவின் பிரநிதியாக இருக்க யோக்கியதை இல்லை என்பதே நமது அபிப்பிராயமாகும். ஏனெனில், திரு.காந்தி அவர்கள், பிறவியிலேயே "பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன்" என்பதான ஜாதிகள் உண்டு என்கின்ற வருணாசிரம தர்மத்தை ஒப்புக் கொள்ளுவதோடு, அந்தந்த வருணக்காரன் அவனவனுக்கு சாஸ்திரத்தில் ஏற்பட்ட தொழிலையே செய்யவேண்டும் என்று சொல்லி பிரசாரமும் செய்து கொண்டிருப்பவர். அது மாத்திரமல்லாமல் "இந்த ஜன்மத்தில் சூத்திரனாய் பிறந்தவன் அவனது ஜாதிக் கேற்றதான பிராமண பணிவிடை செய்வதாலேயே அடுத்த ஜன்மத்தில் படிப்படியாய் மேலாகி கடைசியாக பிராமணனாகப் பிறப்பான்" என்று சொல்லுபவர். அன்றியும் ராமாயணமும பாரதமும் நடந்ததாகவும், அதுவே மேலான தர்ம சாஸ்திரமென்றும், அந்த ஆட்சியே, அதாவது இராம ராஜ்ஜியமே வேண்டுமென்றும் சொல்லுபவர். எனவே இப்படிப் பட்டவர் நமக்கு நம் தமிழ்நாட்டு மக்களுக்கு பிரதிநிதியாய் இருக்க முடியுமா என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை என்றே நினைக்கின்றோம். தவிர இந்திய தேசம் விவசாயிகளுடையவும், தொழிலாளிகளுடையவும், கூலிக்காரர்களுடையவும் தேசமாகும். ஏனெனில், நூற்றுக்கு 95-மக்கள் இந்த இனங்களைச் சேர்ந்தவர்களே யாவார்கள். அன்றியும் ஜாதியினாலும் மதத்தினாலும் கொடுமை அனுபவிக்கும் மக்களாவார்கள். ஆகவே, இவர்களுக்கேற்ற பிரதிநிதிகள் இப்போது வெளிவந்திருக்கும் தலைவர்களில் யாராவது இருக்கின்றார்களா? என்று கேட்கின்றோம்.



திரு.மோதிலால் நேருவுக்கும், திரு.ஜவகர்லால் நேருவுக்கும், திரு. முகமதபாத் ராஜாவுக்கும், திரு.ஜின்னாவுக்கும் இவர்கள் போன்ற மற்றவர்களுக்கும் விவசாயிகள் என்றால் என்ன? ஏழைகள் என்றால் என்ன? தொழிலாளிகள் என்றால் என்ன? என்பது தெரியுமா என்று கேட்கின்றோம். இவர்களுக்குள் பொதுமக்கள் கஷ்டம் இன்னது என்பதை உணர்ந்தவர்கள் எத்தனை பேர் இருக்கக்கூடும்?

பொதுவாக, இந்தத் தலைவர்கள் எல்லாம் சர்க்காரிடமிருந்து என்ன உத்தியோகம் பெறலாம்? என்ன அதிகாரத்தை பிடுங்கி நாம் அனுபவிக்கலாம்? என்கின்ற கருத்தல்லாமல் இந்த ஏழை மக்களுக்கு என்ன செய்யலாம் என்று கருதுகின்றவர்கள் எத்தனை பேர்கள் இருக்கக்கூடும்? என்று கேட்கின்றோம். இப்போது சர்க்கார் கூட்டும் இந்திய தலைவர்கள் மகாநாடு என்பது உண்மையிலேயே பிரதிநிதித்துவம் பொருந்திய மகாநாடாய் இருக்க வேண்டும் என்று சர்க்கார் கண்ணியமாய் கருதுவார்களானால், விவசாயம், வியாபாரம், கைத்தொழில் ஆகிய மூன்று சமூகத்தின் பிரதிநிதிகளை மாத்திரம் அழைத்து அவர்களுடன் கலந்து யோசித்து, இவைகளுக்கேற்ற சீர்திருத்தத்தையும், சமூக விஷயத்தில் தாழ்த்தப்பட்ட கொடுமைப்படுத்தப்பட்ட மக்களையும், பிறவி அடிமையாய் கருதும் பெண் மக்களையும், கல்வியில் பிற்பட்டிருக்கும் மக்களையும் கவனித்து, அவர்களுடைய உண்மையான பிரதிநிதிகளையும் அழைத்து அவர்கள் முறைகளையும் கேட்டு அதற்கேற்ற சீர்திருத்தத்தையும் செய்ய வேண்டியது அவர்களுடைய கடமையாகும். இரண்டும் இல்லாமல் ஏழைகள் என்றால் அது ரூபாய்க்கு எத்தனை படி என்று கேட்பவர்களாகிய மாதம் ஆயிரம் பத்தாயிரம் ரூபா வீதம் வக்கீல் வேலையில் கொள்ளை யடித்து அரசபோகம் அனுபவிப்பவர்களையும், சங்கராச்சாரி போல் ஊர் ஊருக்கு லட்சக்கணக்காய் ஏழைகளின் பேரால் ரூபாய் வசூலித்து மடாதிபதிகள் போல் சுகமனுபவித்துக் கொண்டிருப்பவர்களையும், பொதுமக்கள் பேரால், மாதம் நாலாயிரம், ஐயாயிரம் சம்பளம் பெற்று சுகவாழ்வு வாழ்ந்து கொண்டும் நெல்லு காய்க்கிற மரம் எது என்று கேட்டுக் கொண்டிருப்பவர்களையும், வேறு வேலையில் தினம் காலணா கூட சம்பாதிக்க யோக்கியதையில்லாமல் தேசம், தேசியம், சுயராஜ்யம் என்று கத்திக் கொண்டு மேற்கண்ட கூட்டத்தாரிடம் கூலி வாங்கியும் பாமர மக்களை ஏய்த்தும் வயிர் வளர்த்துக் கொண்டிருப்பவர்



RangaRakes tamilnavarasam.com

களையும் இந்தியாவின் 25 கோடி ஏழை மக்களின் பிரதிநிதியாக அழைத்துப் பேசுவதென்றால் இது உண்மையானதும் நாணயமானதுமான பிரதிநிதித்துவமா குமா என்று கேட்பதுடன், இதனால் விளையும் சீர்திருத்தமோ சுதந்திரமோ குடியேற்ற நாட்டு அந்தஸ்தோ பொதுமக்களுக்கு பயன்படக் கூடியதாயிருக் குமா என்பதையும் நினைத்தால் சர்க்கார் புரட்டும் தலைவர்கள் புரட்டும் ஒன்றுக்கொன்று இளைத்ததல்லவென்றே கருத வேண்டியதாயிருக்கின்றது. எந்தக் காரணத்தை முன்னிட்டாவது இங்கிலாந்து வெள்ளைக்கார அரசாங்கத்தைவிட இந்திய பார்ப்பன அரசாங்கமோ, ஜமீன்தார் அரசாங்கமோ, முதலாளி அரசாங்கமோ, ஆங்கிலப் படிப்பு அரசாங்கமோ எந்த விதத்திலாவது மேலானதாக இருக்கும் என்கின்ற நம்பிக்கை நமக்கு சிறிதுகூட இல்லை என்பதை மாத்திரம் தைரியமாய் சொல்லுகின்றோம். எனவே, எதற்கும் ஏழை மக்களும், கூலிக்காரர்களும், தாழ்த்தப்பட்டவர்களும், பெண்மக்களும் எதையும் தலைகீழாய்க் கவிழ்ப்பதற்கு தயாராயிருந்தா லொழிய அவர்கள் கஷ்டம் நீங்காது என்பதே நமது முடிவு.

**குடி அரசு - தலையங்கம் - 10.11.1929**



# புதிய சகாப்தம்

திரு.கோகலே, ரானடே, தாதாபாய் நௌரோஜி முதலிய தலைவர்கள் நம் இந்தியாவில் ஒரு சுதந்திர தாகத்தை உண்டுபண்ணிவிட்டார்கள் என்று பொதுவாக நாமறிவோம். இது முதற்கொண்டுதான் நம் நாட்டில் சுதந்திர கிளர்ச்சியும் ஒரு பொது உணர்ச்சியும் ஏற்பட்டது என்பதையும் மறக்கமுடியாது. ஆனால் அது செயற்கைக் கிளர்ச்சியாகவும், இயற்கைக்கு மாறுபாடானதாகவும் இருந்ததனாற்றான், இருப்பதனாற்றான் இன்று வரையில் இவ்விந்தியா சுதந்திரம் அடையமுடியாமல், பெர்க்கன் ஹெட் பிரபுவின் இழிதகையான பழிச் சொற்கட்கும், ஆதிக்க வெறிச் சொல்லுக்கும் இலக்காய் இருக்கிறது.

ஏனெனில், நம்மிடை பிரசாரத்தின் பயனாய் பரவுதல் செய்யப்பட்ட சுதந்திர உணர்ச்சியானது 'தேசியம்' என்று கூறப்பட்ட போதிலும்கூட ஒரு மிகக் குறுகிய வகையில் இயக்கப்பட்டு வந்தது உண்மையானதாகும். என்னை? இதுவரையில் நடைபெற்ற கிளர்ச்சி, சுதந்திரப் போராட்டம், ஒத்துழையாமை, வரிகொடாமை, பகிஷ்காரம் இவைகட்கு எல்லாம் அடிப்படையாய் இருந்தது நிறவேற்றுமை என்பதில் ஐயமில்லை.

எப்பொழுது வெள்ளையர்கள் நம்மை அதிக ஈனமாய் நடாத்துகின்றார்கள் என்று நாம் நினைக்கின்றோமோ, அப்பொழுதெல்லாம் ஒரு கிளர்ச்சி செய்வதும், பின்னர் இக்கிளர்ச்சி ஓய்ந்து விடுவதும் வழக்கமாகவே இருந்து வந்ததே யொழிய, சுதந்திரத்தாகம் தைல தாரையைப் போல் நம்மக்களின் மனத்தில் நிலவவே இல்லை.

இதுதான் நமது இந்தியாவின் பரிதாபிக்கத்தக்க நிலைமை; இதை மாற்றி நினைத்தாலும் நினைவளவில் ஏற்படும் சுதந்திரக் கனவு கூட நிலவரமாய் இருக்காது என்பதும் உண்மை.

இதற்குக் காரணம், நம்மக்களின் அறியாமையே என்று கூற வேண்டும். அறிவு உதயமாய், உச்சத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற மேனாட்டு மக்கள் கையில் சிக்குண்டிருக்கும் நாம், அவர்களிடமிருந்து நமது நாட்டை அடைய நமக்குத் தலைமையாக வேண்டியது அறிவுடைமையே தவிர சுதந்திரத் தாகமன்று, அறிவுடைய மக்கட்குச் சுதந்திரத் தாகம் ஏற்பட்டிருப்பின் அத்தாகம் நிலவரமாக ஒரேமுறையாக ஓங்கிப்படர்ந்து செழித்து சுதந்திரக் கனி உதவியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அறிவில்லாத மக்கள் கையில் உள்ள சுதந்திரத் தாகம், பேடி ஒருவன் மணந்த பெண்ணையே ஒக்கும். இதனாற்



RangaRakes tamilnavarasam.com

பயனில்லை. அதனாற்றான் தாதாபாய் நௌரோஜி காலத்தில் துவக்கப்பட்ட நமது சுதந்திரப்போராட்டம் வெள்ளையர்களின் நகைப்புக்கும் கேலிக்கும் ஏமாற்றுப் பேச்சுக்கும் இலக்காயிற்றே தவிர, ஒரு சிறிய துறையிலும் வெற்றி அளிக்கவில்லை. இச்சுதந்திர தாகம் பழைய மூட வைதிக சகாப்தத்தின் இறுதியில் எழுந்தது.

ஆனால், இப்பழைய சகாப்தம் அழிந்துவிட்டது என்றே சொல்லலாம் இனிமேல்தான் இந்தியாவின் சுதந்திர உணர்ச்சிக்கு வெற்றி ஏற்படும் காலம் அணுகிவிட்டது. இப்பொழுதுதான் மக்கள் மனதில் பண்டைய மூடப்பழக்க வழக்கங்களும், உயர்வு தாழ்வுக் கற்பனைகளும் தகர்க்கப்படுதல் அவசிய மென்றும், பகுத்தறிவுக்கு முரணாக மதம் வந்து எதிர் நின்றாலும், முதலில் அந்த மதத்தை ஒழித்துவிட்டு மறுவேலை பார்ப்பதும் என்றும் தோன்றி விட்டது. இதன் அறிகுறியாய் தென்னிந்தியாவில் சுயமரியாதை இயக்கம் என்னும் பெயர்கொண்டு ஒரு அறிவு இயக்கமும், பம்பாய் மாகாணத்தில் புரோகித எதிர்ப்பு இயக்கம் என்னும் பெயர் கொண்டு ஒரு அறிவு இயக்கமும், பஞ்சாப் மாகாணத்தில் யுக்தி வாத சங்கம் என்னும் ஒரு அறிவு இயக்கமும் தோன்றி இப்பொழுது அந்தந்த மாகாணங்களில் இவ் வியக்கக் கொள்கைகள் காட்டுத்தீ போல் பரவி வருகின்றன. வங்காளத்திலும் முல்லாக்கள் எதிர்ப்புச் சங்கம் என்று ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இவ்வியக்கத் தலைவர்களெல்லாம் பழுத்த தேசிய அமிதவாதிகளாய் இருப்பதும் மிகவும் குறிப்பிடற்பாலது. உதாரணமாக நமது சுயமரியாதை இயக்கத் தலைவர்களின் தேசிய உணர்ச்சியும் அவர்கள் தேசியத்திற்கு ஆற்றி வந்த தொண்டும் இம்மாகாணம் அறியும் - பார்ப்பனரறி யாவிடினும் இதேபோல் பம்பாயில் புதிதாகத் தோன்றி இருக்கும், 'புரோகித எதிர்ப்புச்' சங்கத்துத் தலைவராக, திரு.நாரிமன் அவர்களே இருந்து வருகின்றார். மற்றும் திரு.டயர்சி, அம்பேத்கார் முதலான முதிர்ந்த அறிவாளிகளும் இச்சங்கத்தில் சார்பு கொண்டிருப்பதும் கவனித்தற்பாலது. எனவே, இப்பொழுது இந்தியா முழுதும் அறிவு இயக்கங்கள் தோன்றி வருவதும், இவ்வியக்கங்கள் தேச பக்தி உடைய பெரியார்களையே தலைவர்களாகக் கொண்டிருப்பதும், இவ்வியக்கங்கள் தீவிரமிக்க மன எழுச்சி படைத்த இளைஞர்களைக் கவர்ந்து ர்ப்பதுவும், இந்தியாவில் உதயமாயிருக்கும் ஒரு புதிய சகாப்தத்தின் அறிகுறி களாகவே தோன்றுகின்றன. இச்சகாப்தத்தில் நமது மக்களின் சுதந்திரக் கோரிக்கை ஈடேறும் என்பதை நாம் மீண்டும் எடுத்துக்கூற வேண்டுமோ?

ஆனால், பழைய மூட மதி புதிதாகத் தோன்றிய அறிவு இயக்கத்தைப் பார்த்து, "நான் நெடுநாளாக, பன்னூற்றாண்டுகளாக கடவுள், மதம், புரோகிதம், சடங்கு, கலை இவைகளின் பேரால் இவ்விந்தியாவில் வளர்ந்து வந்தேனே; நீ தோன்றியதும்; என் விருத்தாப்பிய திசையில் என்னை மக்கள் கைவிட்டு விட்டனரே; நான் இறந்துதான் போவேன்; பழைமை பொருட்டு, கிழவன் என்று என்மீது மனமிரங்கி என்னைக் காப்பாற்ற மாட்டாயா?" என்கின்றது. நமது அறிவியக்கம் "கிழப்பிணமே! நீ இது வரையில் இழைத்த கொடுமைகளுக்கும்



தீமைகளுக்கும் அறிகுறி இவ்விந்தியாவின் அடிமைத் தன்மைதான்; அதை நினைக்குந்தோறும் உன்னை ஏன் இன்றே கழுத்தை முறித்துக் கொன்று விடக்கூடாது என்று நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த சமயத்தில் உன்னைக் காப்பாற்றுவதாவது. செயற்கை மரணம் நேரிடுவதற்கு முன்பாக நீயாகவே தற்கொலை செய்து கொள்" என்கின்றது. இந்நிலையில் பண்டைய சகாப்தத்தின் பிரதிநிதிகளாய காசி கிருஷ்ணமாச்சாரி, எம்.கே, ஆச்சாரி, சத்திய மூர்த்தி, சேஷ அய்யங்கார், சங்கராச்சாரிகள் முதலானவர்களின் கதி என்னாகும் என்பதையும், உண்மைத் தேசியமும் இத்தேசியத்திற்கு உண்மை வெற்றியும் யாரால் ஏற்படக்கூடும் என்பதையும் நம்மக்களே உணர்ந்து கொள்ளக்கடவர்.

**குடி அரசு - கட்டுரை - 10.11.1929**



RangaRakes tamilnavarasam.com

# இந்தியக் கடவுள்கள்

இந்த வாரம் அதாவது நவம்பர் மாதம் 11-ம் தேதி வெளியான "சுதேசமித்திர"னின் பதினோராவது பக்கத்தில் "திருப்பதி வெங்கிடாசலபதி" என்கின்ற கடவுளின் தேவஸ்தான வருஷாந்திர வரவு செலவு (பாலன்ஸ் ஷீட்) கணக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது. அதில் இந்த ஒரு வருஷத்திற்கு, அதாவது, 1337ம் பசலிக்கு மேற்படி தேவஸ்தானத்திற்கு ஒட்டு மொத்தம் இருபத்திரண்டே முக்காலே அரைக்கால் லட்ச ரூபாய் வசூலாயிருக்கின்றது. இந்த ரூ.22,82,695 - 8-9 பைசாவுக்கும் செலவும் காட்டப்பட்டிருக்கின்ற விவரமென்ன வென்றால், ஆறு லட்சத்துச் சில்லறை ரூபாய் நிலுவை மொத்தம் என்று காட்டப்பட்டிருப்பது போக மீதி பதினாறு லட்சத்து சில்லறை ரூபாய்க்கும் காட்டப்பட்டிருக்கும் செலவுகளைப் பார்த்தால், இந்து மதமும், இந்துமதக் கடவுள்களும் நமது இரத்தத்தை எப்படி உறிஞ்சுகின்றது என்பது முழு மூடர்களுக்கும் எளிதில் விளங்கும்.

அதாவது :-

| | | |
|---|---|---|
| கோயில்களுக்குக் கொடுத்தது | ரூ. | 23,515 |
| படித்தர சாமான் வாங்க | ரூ. | 1,38,932 |
| பழுதுகள் | ரூ. | 4,55,701 |
| சமஸ்கிருத ஆங்கில வித்யாசாலை | ரூ. | 1,07,941 |
| சிப்பந்திகள் | ரூ. | 2,51,045 |
| எஸ்டேட் நிர்வாக செலவு | ரூ. | 3,57,229 |
| இந்த கோயில்களுக்கு கண்டிரிபியூஷன் | ரூ. | 60,600 |
| எண்டோமெண்ட் போர்டுக்கு | ரூ. | 14,613 |
| இதர சில்லரைச் செலவு | ரூ. | 1,21,360 |
| டிரஸ்ட் பண்டு செலவு | ரூ. | 3,527 |
| இதர சில்லரைச் செலவு | ரூ. | 70,838 |

என்றவாறு, பதினாறு லட்ச ரூபாய்களுக்குச் செலவு காட்டப்பட்டிருக்கின்றது.



தவிர திருப்பதி தேவஸ்தானத்தின் மொத்த சொத்துக்களை காட்டும் ஜாப்தாவில் மேற்படி தேவஸ்தான சொத்து பெறுமானம், ஏழு கோடியே பத்தொன்பது லட்சத்து எண்பத்தையாயிரத்து தொள்ளாயிரத்து எண்பது ரூபாய், மூன்று அணா, பத்துபைசா என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. இந்த 7,19,85,980 ரூபாய் பெறுமான சொத்துக்களில் ஆறரைக்கோடி ரூபாய்க்கு கட்டிடங்களும் நிலங்களும் நகைகள், துணிகள் வாகனங்களுமாக 21 லட்ச ரூபாயும், இரும்பு சாமான் முதலியவை 4 லட்ச ரூபாயும், டிக்கிரி மொத்தம் 9 லட்ச ரூபாயும் கடன் பத்திரங்கள் 33 லட்ச ரூபாயும், கிஸ்தி பாக்கி 7 $\frac{1}{2}$ லட்சரூபாயும் மற்றும் ஏதேதோ சில்லரை வகையில் மீதியுமாய், கணக்குக் காட்டப்பட்டிருக்கின்றது. இந்த ஒரு கோயில் கணக்கை மாத்திரம் பார்த்தால் நமது நாடு தரித்திரமடைந்து கல்வியற்று சுதந்திரமற்று அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருப்பதற்குக் காரணம் வெள்ளைக்கார அரசாங்கமா அல்லது நமது மதமும் கடவுள்களுமா என்பது விளங்காமல் போகாது. இந்தக் கோயிலுக்கு வரும் வருஷ வருமானத்தின் மேற்கண்ட பத்து லட்சக்கணக்கான ரூபாய்கள் எத்தனை மக்கள், எவ்வளவு தொலை தூரங்களிலிருந்து கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போகிறார்கள் என்பதையும், அவர்களுடைய போக்குவரவு செலவையும் மற்ற செலவுகளையும் சேர்த்துப் பார்த்து, அது எத்தனை லட்ச ரூபாய் ஆகுமென்பதையும் வாசகர்கள் கணக்குப் போட்டுப் பார்த்தால், இதைப் போன்று இன்னமும் பத்துப் பதினைந்து லட்ச ரூபாய்க்குக் குறையாதென்றே சொல்லுவோம். அன்றியும் இந்த தேவஸ்தான மொத்த சொத்தாகிய ஏழு கோடியே இருபது லட்ச ரூபாயை ரொக்கமாக்கி நூற்றுக்கு ஆறு வட்டிக்கு போட்டு கணக்குப் பார்த்தால் வருஷத்திற்கு வட்டி மாத்திரம் 43,20,000 ரூபாய் ஆகின்றது. இந்த நாற்பத்தி மூன்று லட்சத்து இருபதினாயிரம் ரூபாயும் யாத்திரைக்காரர்கள் காணிக்கை வரும்படியான சுமார் பதினைந்து லட்சரூபாயும் இதற்காக ஏற்பட்ட யாத்திரைக் காரர்களின் ரயில் சார்ஜ், வழிப்பயணச் செலவு குறைந்தது ரூபாய் பத்து லட்சமும் சேர்த்தால் மொத்தம் 65 அல்லது 70 லட்ச ரூபாய் ஆகும். இந்த ஒரு கோயில் சொத்தும் வரும்படியும் இவ்வளவானால், இன்னும் இது போன்ற ஸ்ரீரங்கம், மதுரை, இராமேஸ்வரம், திருவாரூர், அழகர்மலை முதலிய கோயில்களுடைய சொத்தும் வரும்படியும் மற்றும் சில்லரை கோயில்கள் ஒரு கோடி முதல் ஐம்பது லட்சம் வரை சொத்துக்கள் உள்ளவைகளும், வருஷம் பதினாயிரம் முதல் ஒரு லட்சம் வரும்படி உள்ளவைகளுமான நூற்றுக்கணக்கான கோயில்களின் வரும்படியும் அதற்காக மக்களுக்கு ஏற்படும் செலவுகளும் கணக்குப் போட்டால் தென் இந்தியாவில் மாத்திரம் நம் சராசரி வருஷம் குறைந்தது மூன்று கோடி ரூபாய்களுக்கு குறையாது என்றே சொல்லலாம். இந்த மூன்றுகோடி ரூபாய்களுக்கு எத்தனை சர்வ கலாசாலைகள், எத்தனை ஆராய்ச்சி சாலைகள், எத்தனை தொழிற் சாலைகள் ஏற்படுத்தக்கூடும். இந்தமாதிரி ஒரு இருபத்தைந்து வருஷங்களுக்கு நடத்தினால் இந்தியாவில் கையெழுத்துப் போடத் தெரியாத தற்குறிகளாவது, வேலையில்லாத ஒரு தொழிலாளியாவது கூலி கிடையாமல் கப்பலேறும் ஒரு கூலியாவது தென்னாட்டில் இருக்க முடியுமா என்று யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

ஓ! மதப்பித்தர்களே! இப்பொழுதாவது யோசித்துப் பாருங்கள்! இந்தியரை மூடர்களாக்கியது யார்? தரித்திரர்கள் ஆக்கியது யார்? அடிமைகளாக்கினது யார்? அன்னிய ஆட்சிக்கு உள்படுத்தியது யார்? மக்களை தொழிலில்லாமல் அன்னிய நாட்டிற்கு ஓட்டினது யார்? நமது மதமும் கடவுள்களும் அல்லவா என்று கேட்கின்றோம். நமக்கு என்ன சுயராஜ்ஜியம் வந்துதான் என்ன பயன்? நமது செல்வத்தையும் நேரத்தையும் அறிவையும் இந்த மாதிரி மதமும் கடவுள்களும் கரையான்கள் போலவும் க்ஷயரோகங்கள் போலவும் நமது நாட்டின் இரத்தத்தையும் சதையையும் உறிஞ்சிக்கொண்டு இருப்பதிலிருந்து மீள வகையறியாமல் இருக்கும் நிலையில் இன்றையத் தினமே வெள்ளைக்காரர்கள் ஓடிவிட்டாலும் நாம் எந்த வகையில் முன்னுக்கு வரக்கூடும்? சென்ற வாரத்தில் கூடின தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பொதுக்கூட்டத்தில் மத விஷயத்தில் சாக்கார் பிரவேசிக்கக் கூடாதென்றும், அது மாத்திரமல்லாமல் காங்கிரசும் பிரவேசிக்கக் கூடாதென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இது தவிர, பூரண சுயேச்சை விரும்பும் திருவாளர்கள் சீனிவாசய்யங்காரும் சத்தியமூர்த்தி சாஸ்திரியும் சேர்ந்தே மதத்தில் சர்க்காரும் காங்கிரசும் பிரவேசிக்கக் கூடாதென்றும், பிரவேசித்தது தப்பென்றும் பேசி முடித்திருக்கின்றார்கள். வாசகர்களே! இது திரு.சத்தியமூர்த்தியின் தனி அபிப்பிராயமென்று கருதுகிறீர்களா? ஒருக்காலமும் கருத முடியாததே! அவர் சென்னை மாகாண கல்வியாளர்களின், அதாவது, ஆங்கில பண்டிதர்களின் பிரதிநிதி அல்லவா? திரு.சத்தியமூர்த்தியின் அபிப்பிராயம் தானே அவரது தொகுதியாளர்களின் அபிப்பிராயமாக இருக்கவேண்டும்? எனவே நமது நாட்டு கல்வியாளர்களும் பூரண சுயேச்சை விரும்பும் அரசியல் தலைவர்களுமா யிருக்கின்றவர்களின் அபிப்பிராயமே, இப்போது நமக்கு இருந்துவரும் மதக் கொடுமையிலும் சமூகக் கொடுமையிலும் கடவுள்கள் கொள்ளைகளிலும் கைவைக்கப்படாது என்ற தீர்மானம் ஆயின், பிறகு நமக்கு எங்குதான் விடுதலை இருக்கின்றது என்பதை யோசித்துப் பாருங்கள். எந்தக்காரணத்தைக் கொண்டாவது இந்தக் கடவுள்களின் கொள்ளைகளையும் மதக்காரர்களின் கொடுமைகளையும் ஒழிக்காமல் எந்த விதத்திலும் நமது நாட்டுக்கு விடுதலையும் விமோசனமும் இல்லை என்றே உறுதி கூறுவோம்.

நிற்க, இந்த விதத்தில் நமது பணம் கொள்ளை போவதோடு மத சம்பிரதாயத்தின் மூலம் நமது அறிவு எவ்வளவு கொள்ளைபோகின்றது என்பதை யாராவது கவனிக்கின்றார்களா? ஒரு சிறிதும் இல்லையே? நமது குறை களுக்கும் கஷ்டங்களுக்கும் நமது ஆத்திரங்கள் எல்லாம் அர்த்தமில்லாமல் கல்லில் முட்டிக்கொள்வது போல், வெள்ளைக்காரன் மேல் செல்லுகின்றதே அல்லாமல் உண்மைக் காரணமாயிருக்கின்ற புரோகிதன் மீதோ, மதச்சாரியர்கள் என்பவர்கள் மீதோ, மத சாஸ்திர புராணங்களின் மீதோ யாருக்காவது புத்தி செல்லுகின்றதா என்று கேட்கின்றோம்.

இந்த நாட்டுக்கு இந்த கடவுள்களும் மதங்களும் தானே பெரிய ஆபத்தாய் இருக்கின்றதென்பதை ஒருவருமே உணருவது இல்லையென்றால்,


RangaRakes

எப்படித்தான் நாம் மற்ற நாட்டாரைப் போல் முன்னுக்கு வரமுடியும் என்று கேட்கின்றோம்? மதக்கொடுமைகளையும், கடவுள் கொள்கைளையும் பார்க்கும்போது, கள்ளுக்கடையும், சாராயக்கடையும், தாசி வீடுகளும், சூதாடு மிடங்களும், கள்ளர் குகைகளும் நமக்கு ஒரு கெடுதியென்றோ, கஷ்டமான தென்றோ சிறிதுகூட தோன்றுவதில்லை.

ஒரு கோயில் ஒழிவதன் மூலம் இனியும் நூறு கள்ளுக்கடைகள் வைப்பதானாலும், தாராளமாய் சம்மதிக்கலாம் என்றும், ஒரு உற்வசம் ஒழிவதின் மூலம் நூறு தாசி வீடுகள் இருப்பதானாலும், தாராளமாய் அனுமதிக்கலாம் என்றுமே தோன்றுகின்றது. ஏனெனில், இந்தக் கோயில்களும் உற்சவங்களும் நமது மக்களை அவ்வளவு மூடர்களாகவும், தரித்திரர்களாகவும் ஆக்கிவிடு கின்றன. நம்மில் அநேகர் நம் நாட்டில்தான் இம்மாதிரி பெருந்தொகை தர்மங்கள் நடைபெறுகின்றன; மற்ற நாடுகளில் இல்லை என்று கருதுகின்றார்கள். நம்மைவிட எத்தனையோ மடங்கு அதிகமான தொகைகளை மேல் நாட்டார்கள் தருமம் செய்கின்றார்கள். ஆனால், இந்த மாதிரி, செலவு கேட்காமலும் பணம் என்ன ஆகின்றது என்று யோசிக்காமலும் சமுத்திரத்தில் கொண்டு போய் கொட்டுவது போல் மூடத்தனமாய் செலவு செய்வது கிடையாது. உதாரணமாக இந்த நாட்டில் இருக்கும் பல காலேஜுகளும், பல மருத்துவ சாலைகளும் மற்றும் பல உபயோகமுள்ள ஆராய்ச்சி சாலைகளும் மேல் நாட்டார் தர்மத்தாலேயே நடைபெறுகின்றதை பார்க்கின்றோம். நாமும் அதன் பயனை அனுபவிக்கின்றோம். ஆனால், நமக்கு மாத்திரம் சிறிது கூட இதைப் பார்த்த பின்பும் புத்தி சீர்பெறுவதில்லை. சமீபத்தில் வெளியான ஒரு பத்திரிகையால் அமெரிக்கா தேசத்தில் ஒரு கனவான் சுமார் பத்து கோடி பவுன்களுக்கு மேலாகவே, கல்விக்காகவும், சயன்சு ஆராய்ச்சிக்காகவும், மருத்துவ சாலைக்காகவும் தர்மம் செய்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் ஒரு காசாவது கோயில் கட்டவோ, சாமிக்கு உற்சவம் செய்யவோ, பூஜை செய்யவோ, அவர் கொடுக்க வில்லை. இதனால் மேல் நாட்டவர்கள் தர்ம எண்ணம் இல்லாதவர்கள் என்று சொல்லிவிட முடியுமா? அல்லது மேல் நாடுகளில் “கடவுள் கடாட்சம்” இல்லை என்றாவது சொல்லிவிட முடியுமா என்று கேட்கின்றோம். எனவே நமது நாட்டில் நாடு விடுதலை அடைய வேண்டும் என்றும் உண்மையாய்க் கருதிக் கொண்டிருப்பவர்களுக்கு முக்கியமான வேலை எல்லாம், மதக் கொடுமைகளையும் கடவுள்கள் கொள்ளைகளையும் அடியோடு ஒழிக்க வேண்டியதே ஒழிய, பூரண சுயேச்சையோ, குடியேற்ற நாட்டு அந்தஸ்தோ, மாகாண சுயாட்சியோ அல்ல என்பதாக உறுதி கூறு கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 17.11.1929**


tamilnavarasam.com

# இந்தியாவின் பிரதிநிதிகள் யார்?

மேன்மைதங்கிய ராஜப்பிரதிநிதியாகிய லார்ட் இர்வின் அறிக்கை யானது இந்தியாவுக்கு முதன் முதல் செய்த நன்மை என்னவென்றால், இந்தியாவின் உண்மையான பிரநிதித்துவம் பொருந்திய தலைவர் யாரும் இல்லை என்பதை நன்றாய் வெளிப்படுத்தி விட்டமையே.

லார்ட் இர்வின் அறிக்கை வெளியாகாதிருந்திருக்குமானால், இந்தியா வின் கவுரவம், (இல்லையானாலும்), சற்றாவது காப்பாற்றப்பட்டிருக்கலாம். ஆனால், அது வெளியான பிறகு இப்போது மிகவும் கேவல நிலைமைக்கு வந்துவிட்டது. அறிக்கை வெளியானவுடன் வெகு அவசர அவசரமாய் 'தலைவர்' ஒன்று கூடி அதை பாராட்டுவதாகவும், ஒப்புக் கொண்டதாகவும் தீர்மானித்து பல 'தலைவர்'களிடம் அவசர அவசரமாக கையெழுத்தும் வாங்கி ஆய்விட்டது. இவ்வறிக்கையை லண்டனுக்கு அனுப்பி இருந்தாலும் அவர்களும் குப்பைத் தொட்டியில்தான் போட்டிருப்பார்கள். ஆனால், நல்ல சம்பவமாய், அது இந்தியக் குப்பைத் தொட்டிக்கே போய்ச் சேரும்படி ஆகி விட்டது. என்னவென்றால், வழக்கம்போல் அறிக்கைக்கு கையெழுத்தான மறு நாளிலிருந்தே ஒவ்வொரு தலைவர்களும் வியாக்கியானம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். திரு.காந்தி, நான் இன்ன கருத்தின் மேல்தான் அறிக்கையை தயார் செய்தேன் என்று சொல்லி வெளிவந்துவிட்டார். கையெழுத்துப் போட்டவர்களோ, 'நான் இன்ன கருத்தின் மேல்தான் கையெழுத்துப் போட்டேன்' என்று சொல்ல வந்துவிட்டார்கள். பலர் வாபீசு வாங்கிக் கொள்ளவும் முன்வந்து விட்டார்கள். பலர் அப்படியே இருக்க வேண்டும் என்று சொல்லி விவகாரம் பேசுகிறார்கள், இந்தியா மந்திரியோ வைசிராய் அறிக்கைக்கு இதுதான் அர்த்தம் என்று வியாக்கியானம் சொல்லி விட்டார். சர். சைமனோ வைசிராய் அறிக்கைக்கு யார் என்ன அர்த்தம் சொன்னாலும் எனக்கு அக்கரை இல்லை; நான்தான் இந்தியாவுக்கு 'ஜாதகம்' எழுதப்போகிறேன் என்று சொல்லிவிட்டார். எனவே இந்திய அரசியல் தலைவர்கள் என்பவர்களும் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் மெம்பர் என்பவர் களுக்கும் இந்தியாவைக் கொள்ளையடிக்கும் கூட்டுக் கொள்ளைக்காரர்களே தவிர, இந்தியாவைப் பற்றின கவலையுள்ளவர்கள் என்று சிறிதும் சொல்ல முடியாதென்றே சொல்லுவோம். சாதரணமாக, நமக்கு வினா தெரிந்தது முதல், இந்திய காங்கிரசின் யோக்கியதை, டிசம்பர் மாதத்தில் கூட்டம் கூடி ஏதாவது ஒரு தீர்மானம் செய்வதும், ஜனவரி முதல் அடுத்த டிசம்பர் வரை அத்தீர்மானத்திற்கு வியாக்கியானம் செய்து கொண்டு ஆளுக்கொருவித மாய் தங்கள் தங்கள் நன்மைக்கு ஏற்றவிதமாய் நடந்து கொள்ளுவதும் வழக்கமாகவே வந்திருக்கின்றது. இந்தியாவில் உள்ள மற்ற அரசியல் கட்சி கள் என்பவையும் ஏறக்குறைய காங்கிரசையே பின்பற்றி வந்திருக்கின்றன. அரசியல் தலைவர்கள் என்றால் நாணயமற்றவர்கள் என்றும், சுயநலக் காரர்கள் என்றும், அகராதியில் எழுதிவிட வேண்டிய நிலையில் வந்து விட்டது. ஏற்கனவே, அரசியல் என்றால் பித்தலாட்டம் என்று ஆங்கிலத்தில் சொல்லிக் கொள்ளப்பட்டிருந்தாலும், தமிழில் தெளிவாய் நாணயமற்றவர்கள் என்றும், சுயநலவாதிகள் என்றும் பொதுமக்களுக்கு தெரிந்துவிடவேண்டியது மிகவும் முக்கியமான காரியமாகும். இந்தியாவின் வட மாகாணத்து அரசியல் மகமதியர், மகமதியரல்லாதார் என்கின்ற விஷயத்தையும், தென்னாடானது பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்கின்ற விஷயத்தையுமே அடிப்படை யாகக் கொண்டே, அதற்கேற்ற காரியங்களை அரசியல் என்னும் போர்வை யைப் போட்டுக்கொண்டு நடைபெறுகின்றதே அல்லாமல், வேறுகாரியங்கள் சிறிதாவது இருப்பதாக நமக்கு விளங்கவில்லை. இந்து முஸ்லிம் தகராறும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் தகராறும் இந்தியநாட்டு அரசியல் லட்சியமாக இல்லாமலிருந்திருக்குமானால் இன்றைய தினம் இந்தியாவின் நிலைமை வேறாய் இருக்கும் ஒரு வகுப்பை அமுத்தி அதன்மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீதே அரசியல் போர் நடத்துவதும், அவ்விதம் ஆதிக்கம் செலுத்த முற்பட்டவர்களின் கொடுமையில் இருந்து தப்புவதற்கு மற்ற வகுப்பார்கள் அதற்கு எதிரிடையாயிருப்பதும், இவ் விரண்டுவித சம்பவத்தின் பயனாய் அன்னிய அரசாங்கம் தனது ஆதிக் கத்தை நிலைநிறுத்திக்கொள்ளுவதும் இந்தியாவுக்கு இயற்கையாகவே இருந்துவருகின்றது.

இந்தியாவுக்கு இதுவரை வெளிநாட்டில் இருந்துவந்த படைஎடுப்பு களும், அரசாங்கங்களும் இந்த தத்துவத்தின் மீதுதான் வரப்பட்டதே அல்லாமல் மற்றபடி வேறுவழியில் அல்ல என்பது சரித்திரம் படித்தால் நன்றாய் விளங் கும். இன்றைய தினம் அரசியல் பிரச்சனைகளாய் இருக்கும் நேரு ரிப்போர்ட்டும், சைமன் ரிப்போர்ட்டும் எதை ஆதாரமாய்க் கொண்டிருக்கின்றது என்பதைப் பார்த்தாலே நாம் சொல்லுவதின் உண்மை விளங்காமல் போகாது.

அதாவது, நேரு ரிப்போர்ட்டை மகமதியர்களும், 'தீண்டாதார்களும்' நம்நாட்டில் பார்ப்பனரல்லதாரும் ஆட்சேபிப்பதன் காரணமும், வடநாட்டு மகமதியரல்லாதாரும் தென்னாட்டுப் பார்ப்பனர்களும் நேரு ரிப்போர்ட்டை ஆதரிப்பதன் காரணமும், வகுப்பு பிரச்சனையே அல்லாமல் மற்றபடி வேறு எவ்வித அரசியல் விஷயமான ஆட்சேபனையோ சமாதானமோ இதுவரை யாரும் சொல்லவே இல்லை. அதுபோலவே, சைமன் கமிஷனைப்பற்றியும் உள்ள ஆட்சேபனைகள் எல்லாம் நேரு ரிப்போர்ட்டை அப்படியே





RangaRakes tamilnavarasam.com

ஒப்புக்கொள்ளாமல் நேருக்கு நேராக பொது மக்களை விசாரித்து அவர்களு டைய கஷ்ட சுகங்களை சர்க்கார் அறிய சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டதே என் கின்ற ஆத்திரமல்லாமல் வேறு சரியான காரணம் எதாவது சொன்னார்களா என்று பார்த்தால் ஒன்றுமே இல்லை. தவிர, இந்திய நாட்டில் பெரும்பான்மை யான மக்களின் கஷ்டத்திற்கும் தரித்திரத்திற்கும் முக்கிய காரணமாய் இருப் பது மதக்கொடுமைகளும், சமூகக்கொடுமைகளுமேயாகும் என்பது இப் போது எல்லா அறிவாளிகளாலுமே ஒப்புக்கொள்ளப்பட்டாய்விட்டது. ஆனால், அந்த விஷயத்தில் மாத்திரம் இந்திய அரசியல் தலையிடுவதென் றால் ஒரே பிடிவாதமாக மறுத்துவருகின்றார்கள். ஆகவே, வட்டமேஜை மகாநாடோ, தலைவர்கள் மகாநாடோ கூடினாலும் ஒன்றுதான்; கூடாமல் சைமன் கமிஷன் அறிக்கைப்படியே சீர்திருத்தம் வந்தாலும் ஒன்றுதான். இந்த இரண்டிலும் இந்தியாவின் உண்மையான தேவைக்கு எவ்வித மார்க்கமும் ஏற்படாதென்பது நமது உறுதியான முடிவாகும்.

**குடி அரசு - கட்டுரை - 17.11.1929**



# இராமாயணமும் பார்ப்பனீய தந்திரமும்

இராமாயணம் என்னும், ஒரு பார்ப்பனீயத்திற்கு ஆதாரமான புராணத்தை பார்ப்பனர்கள் சர்வ வல்லமையுள்ள "கடவுளாகிய" மகாவிஷ்ணு என்பவரின் அவதாரமாகிய ராமன் என்னும் ஒரு கடவுளின் சரித்திரமென்றும், அதில் கண்ட விஷயங்கள் எல்லாம் அப்படியே நிகழ்ந்தது என்றும், அந்த ராமன் நடந்து கொண்டதாக அப்புராணத்தில் சொல்லப்பட்ட விஷயங்கள் எல்லாம் கடவுளால் உலக நன்மையின் பொருட்டு துஷ்ட நிக்கிரகம் சிஷ்ட பரிபாலனத்திற்காக நடத்தப்பட்ட உண்மையான நடவடிக்கைகள் என்றும், இந்திய மக்களுக்குப் பார்ப்பனர்களால் போதிக்கப்பட்டு பழைய காலத்தில், ஒரு பார்ப்பனரல்லாத வித்துவானைக் கொண்டு அந்த புராணத்தை அதுபோலவே, அதாவது ராமன் கடவுள் அவதாரம் என்ற கொள்கைப் படியே, ஒரு காவியம் பாடச்செய்து, அதை வழக்கத்திலும், நித்திய வாழ்க்கையிலும் இராமாயணம் படிப்பதும் கேட்பதும் "புண்ணியம்" என்றும், "மோட்சம்" தரத்தக்கதென்றும் சொல்லி ஏமாற்றி, இந்திய மக்களைத் திண்ணைகள்தோறும் இராமாயண காலட்சேபமும், சீதா கல்யாண உற்சவமும், பட்டாபிஷேக உற்சவமும் செய்யச் செய்து, அதனால் ஏற்படும் வருமானம் எல்லாம் பார்ப்பனக் குதிருக்கே போய்ச் சேரும் படியும் செய்துக்கொண்டு வந்திருப்பதுடன், அந்த இராமாயணக் கதையில் சொல்லியுள்ளபடியே இராமாயணத்தில் வரும் ராமனுக்கு ஒரு ஆயிரம் கோயில்களும், சீதைக்கு ஒரு ஆயிரம் கோயில்களும், லட்சுமணன், பரதன், சத்துருக்கன் ஆகியவர்களுக்கு ஆளுக்கொரு ஆயிரமாயிரம் கோயில்களும், அனுமாராகிய 'குரங்குக்கு' ஒரு பதினாயிரம் கோயில்களும், மற்றும் இவைகளுக்கு நகை என்றும், வாகனம் என்றும், மண்டபம், சப்பரம், தேர் என்றும், மேளம், தாளம், தாசி, பூசை உற்சவம் என்றும், மற்றும் இவை போன்ற வைகளுக்கு என்றும் முதலாகியவைகளுக்கு வருஷம் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்வதும் இவற்றில் பெரும்பகுதி பார்ப்பனத் தொந்தியில் விழும்படியாகவும் செய்து, மற்றும் வீடுகள் தோறும் ராமன் படமும், சீதை படமும், அனுமான் படமும், சுவர்களில் தொங்கவிட்டு, அதற்கு புஷ்பம், கர்ப்பூரம், தேங்காய், பழம் பூசையும் நடந்து வரும் படியாகவும் செய்யப்பட்டு இன்றைய தினமும் வழக்கத்தில் நடந்தும் வருவதை எவரும் மறுக்க முடியாது. இது மாத்திரமல்லாமல் ராமன் பிறந்த ஊர் என்றும், அவன் ஆண்ட ஆட்சிகள், தர்மம் என்றும், அவன் கட்டின பாலமென்றும், அவன் கும்பிட்ட சாமி என்றும், பல இடங்களையும் கற்பனை செய்து, அவற்றிற்கும்



RangaRakes
tamilnavarasam.com

மகத்துவம் கொடுத்து மக்கள் அணுகிச் செல்வதும், அவைகளைப் பார்ப்பதும் புண்ணியம் என்றும் மோட்சம் என்றும் இஷ்ட சித்தியாகும் என்றும் சொல்லி நம்பச் செய்து, அதன் மூலமாகவும், மக்களுக்கு கோடிக்கணக்கான ரூபாயும் செலவு உண்டாக்கப் பட்டு வருகின்றதையும் யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. இவை மாத்திரமல்லாமல், ராமன், லட்சுமணன், சீதை முதலியவர்களுக்கு பார்ப்பன அடையாளமும், மற்ற, அதாவது இராவணன், கும்பகர்ணன், தாடகை, சூர்ப் பனகை முதலியவர்களுக்கு பார்ப்பனரல்லாதார் அடையாளமும் பெயர்களும், அதுபோலவே, அருவருக்கத்தக்கதாவும் கெட்ட கருத்துக்கள் கொண்டதாகவும் கற்பித்து அவற்றை “தேவர்” “அசுரர்” என்பது போலவும், “பிராமணர்” “சூத்திரர்” என்பது போலவும் கருத்துக்களையும் ஏற்றி, அதாவது இப்போது பார்ப்பனர்கள் என்பவர்கள் எல்லாம் தேவர்களாகக் கருதும் படியும், இப்போது அவரொழிந்தவர்கள் அசுரர்களாகக் கருதும்படியும் சூழ்ச்சி செய்து, அதையும் மக்கள் மனத்திற்கு புகுத்திவிட்டார்கள், எனவே இப்பேர்ப்பட்ட புரட்டுகளையும் அயோக்கியத் தனங்களையும் பெரும்பான்மையான நம்மக்களுக்கு ஏற்பட்ட இழிவையும் ஒழிக்கக் கருதி, மேற்கண்ட மாதிரியான மூடநம்பிக்கையிலும், பாமரத் தன்மையிலும் ஈடுபட்டு நஷ்டமடைந்து மானமற்று மிருகங்களிலும் கேவலமாய் பிழைக்கும் மக்களின் மடமையை நீக்க வேண்டுமென்பதாய் இராமாயண ஆராய்ச்சி என்றும், இராமாயணப்புரட்டு என்றும், இராமாயண ஆபாசமென்றும், இராமாயண இரகசியமென்றும் மற்றும் பலவிதத் தலைப்புகளின் கீழ் அப்புரட்டுகளை சுயமரியாதை உணர்ச்சியுள்ள பல பெரியோர்களும் அறிஞர்களும் கொஞ்சகாலமாய் வெளிப்படுத்தி வரும் விஷயங்கள் யாவரும் அறிந்ததாகும்.

இவ்வித வெளியீடுகளுக்கு நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்புகளும், தடைகளும் கொஞ்சமல்லவென்பதும் பொதுமக்கள் உணர்ந்ததேயாகும்.

அவர்கள் இதுவரை இராமாயணத்தினால் ஆதிக்கம் பெற்று வயிறு வளர்த்து வரும் பார்ப்பனர்களும் அவர்களது புல்லுருவிகளும் கூலிகளும் செய்து வந்த எதிர்ப்புகள் என்ன என்றால், “இராமாயணத்தைக் குற்றம் சொல்லுவது மகாபாதகம்” என்றும், அது “கடவுள் நிந்தனை” என்றும் மதத்துரோகம் என்றும், இராமனை கடவுளாக வணங்கும் இந்துக்கள் மனம் புண்படுகின்றது என்றும், மற்றும் பலவிதமான தந்திரவார்த்தைகளையும், மருட்டு வார்த்தைகளையும் சொல்லி பாமர மக்களை ஏமாற்றிவந்தார்கள். இந்நிலையில் அவைகளுக்கு சமாதானம் சொல்ல வேண்டுமென்று கருதியே இராமாயணம் நடந்த கதை என்று நம்புபவர்களுக்கு அப்படி நடந்திருக்க முடியாது என்பதற்குள்ள பல காரணங்களையும், இராமன் கடவுள் என்று நம்புபவர்களுக்கு, அவன் கடவுளாயிருக்க முடியாது என்பதற்கு பல காரணங்களையும், இராமாயணம், தேவர்கள், அசுரர்கள் சண்டை என்று நம்புகின்றவர்களுக்கு அது தேவர்கள் அசுரர்கள் கதை அல்லவென்பதற்கு பல காரணங்களையும், சொல்லி வருவதோடு, எதற்கும் அசையாமல், குரங்குப்



பிடியாய் இராமன் கடவுள், இராவணன் அசுரன் என்றும், மற்றும் அதில் கூட ராமன் வடதேசத்தைச் சேர்ந்தவன் என்றும், இராவணன் தென்தேசத்துக்காரன் என்றும், வடக்கே இருந்து தெற்கே வந்து சண்டை போட்டான் என்றும், மற்றும் இதிலிருந்து வடதேசத்து ஆரியர்கள் தேவர்களாயிருக்கக்கூடும் என்றும், தென்தேசத்துத் திராவிடர்கள் அசுரர்களாயிருக்கக்கூடும் என்றும், நம்பிக் கொண்டிருப்பவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தி, அவர்களது மடமையைப் போக்க வேண்டி அதற்குத் தகுந்தபடி பல காரணங்களையும் காட்டிப் பேசியும் எழுதியும் வரப்படுகின்றது. அன்றியும், ராமனையும் அவனைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களையும் வட தேசத்தியராகவும், ஆரியராகவும் கடவுள்களின் தனித்தனி அவதாரங்களாகவும், அவர்கள் எல்லாம் தர்மத்தைக் காட்டவந்த தர்ம தேவதைகளாகவும் போற்றப்பட வேண்டியவர்களாக கற்பித்து, இராவணனையும் அவனது கோஷ்டியாரையும் ராட்சதர்களாகவும், தென் தேசத்தியர்களாகவும், திராவிடர்களாகவும், அதர்மம், கொடுமையுமே உருவாய் வந்தவர்களாகவும் அவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்களாகவும், இழித்தும், பழிக்கப்பட வேண்டியவர்களாகவும் கற்பித்து, உலகில் உள்ள நன்மைகள் உயர் குணங்கள் ஆகியவை எல்லாம் ராமனுடையதாகவும் அவனது கோஷ்டியாருடையதாகவும், அவற்றிற்கு எல்லாம் அவர்களே உருவமென்றும், தீமைகளும், தீக்குணங்களும், ராவணனுடையதும் அவனது கோஷ்டியாருடையதும் என்றும், தீமைக்கும், தீக்குணத்திற்கும் இவர்களே உருவமென்றும் கற்பித்து இருக்கின்றதை அடியோடு ஒழிப்பதற்கு, அதற்குத் தகுந்த பல காரணங்கள் காட்டியும் எழுதியும் பேசியும் வரப்படுகின்றது. சுருக்கமாகச் சொன்னால் பார்ப்பனர்கள் இராமாயணத்தை மக்களுக்கு எந்த விதத்திலாவது புகுத்தி அதன் பயனாய் தங்கள் ஆதிக்கத்திற்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் ஆதரவு தேடிக் கொண்டு மற்றவர்களை ஏமாற்றி இழிவுபடுத்தி வருகின்றார்கள் என்று கருதி அதை எந்த விதத்திலும் மக்கள் மதிக்காமல் இருக்கவேண்டும் என்கின்ற எண்ணத்துடனேயே இராமாயணம் இப்போது பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது என்பதேயாகும்.

ஆகவே, இது சம்பந்தமான எல்லாவித எதிர்ப்புகளுக்கும் அநேகமாக சமாதானம் சொல்லி, பார்ப்பனர்களின் வாய்க்கும் புராணீகர்கள் வாய்க்கும் ஒருவாறு ஆப்புக்கடாவின பிறகு இப்போது சில பார்ப்பனர்கள் தோன்றி வேறு விதமான தந்திரத்துடன் இராமாயணத்தை நிலைக்கவைக்க வெளிப்பட்டிருக்கிறார்கள். அதாவது “இராமாயணம் என்பது அடியோடு பொய்க் கதையாயிற்றே. அதை ஏன் கிளறிக்கொண்டிருக்கிறீர்கள்? அதில் உள்ள பாத்திர அழகு, வர்ணனை அழகு, கவி அழகு ஆகியவைகளுக்கு மாத்திரம் மதிப்புக் கொடுத்து எடுத்துக் கொள்ளுங்கள்” என்றும், மற்றபடி அதை கவனிக்காதீர்கள்; அப்படி மீறி கவனிப்பது மடமை மூடநம்பிக்கை என்றும், சுயமரியாதை அற்ற தன்மைகள் என்றும் சொல்லி நம்மை வேறு வழியில் ஏய்க்க வந்திருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தார்களை நாம் ராமனையும் இராமாயணத்தையும் கடவுள் என்றும் கடவுள் நடவடிக்கை என்றும் சொல்லுகின்றவர்களைவிட மூடர்கள்



RangaRakes
tamilnavarasam.com

என்றும், பித்தலாட்டக்காரர்கள் என்றுமே தான் சொல்லுகிறோம். ஏனென்றால், ராமனை கடவுள் என்று சொல்லுகின்றவர்கள் எல்லாம் ராமனை பூஜித்துக் கொண்டு நம்மைக் குற்றம் சொல்லுகின்றார்கள். இப்படிப்பட்டவர்களில் சிலராவது உண்மையில் மூடநம்பிக்கையில் ஈடுபட்ட யோக்கியர்களாக இருந்தாலும் இருக்கலாம். ஆனால், ராமன் கடவுள் அல்ல; இராமாயணம் நடந்ததல்ல; என்று சொல்லிக் கொண்டு நம்மைக் குற்றம் சொல்லுகின்றவர்களில் ஒருவராவது யோக்கியர்களாக இருக்க முடியாது என்றே சொல்லுவோம். இதற்கு என்ன காரணம் என்றால், இவர்கள் உண்மையிலேயே இராமாயணம் நடந்த கதை அல்ல என்று மற்ற மக்களுக்கு எடுத்துச் சொல்லி அதை மெய்ப்பிக்கின்றவர்களாயிருந்தால் இவர்களுக்கு இப்போது நம்மிடத்தில் சிறிதும் வேலை இல்லை. மற்று யாரிடத்தில் என்றால், ராமனைக் கடவுளாக வைத்து கும்பிடுகின்றவர்களிடத்திலும், பூசை உற்சவத்திற்கு கோடிக்கணக்கான பொருள்களை பாழாக்குபவர்களிடத்திலும், கோடிக்கணக்கான பொருள்களைப் பாழாக்கி கோயில்களை கட்டுபவர்களிடத்திலும், முதலில் போய் இவர்களது புத்திசாலித்தனத்தையும் ஆராய்ச்சித் திறத்தையும் மூடநம்பிக்கையை ஒழிக்கும் தன்மையையும், மடமையை நீக்கும் தன்மையையும் சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டும் வேகத்தையும், காட்டியிருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இராமாயணப் புரட்டை வெளியாக்குபவரிடத்தில் வந்து முட்டிக் கொள்பவரிடத்தில் கடுகளவாவது உண்மையோ, யோக்கியமோ இருக்க முடியுமா? என்று கேட்கின்றோம். உதாரணமாக நாட்டுக் கோட்டை செட்டி நாட்டில் உள்ள ஒரு புராணப் பிரசார பத்திரிகையில் காரைக்குடி விநாயகர் மண்டபத்தின் ஹிந்துமத அபிமான சங்க சார்பாய் திரு.பி. ஆச்சாரியார் என்கின்ற ஒரு பார்ப்பனர் “இராமாயணத்தின் இரகசியம்” என்று ஒரு பிரசங்கம் செய்ததாக காணப்படுகின்றது. அதில் உள்ள விஷயங்கள் இந்துமத அபிமானத்தின் மீது செய்யப்பட்ட பிரசங்கமாகவே வைத்துக் கொள்ளப்பட்டாலும், இராமாயணத்தைக் காப்பாற்றுவதற்கு திருட்டுத் தனமான முறையில் தந்திரம் புரிகின்றார் என்று தான் சொல்ல வேண்டி இருக்கின்றது. இப்படி செய்வது பார்ப்பனர்களுக்கு குல தர்மம் என்று ஒருபுறம் சொல்லக் கூடுமானாலும் நாம் அதை அந்தப்படியே குலதர்மம் என்று விட்டுவிட முடியாததற்கு வருந்துகின்றோம். ஏனெனில், அது பாமர மக்களை ஏய்க்கவே நமது முயற்சிகளுக்கு இடையூறாக செய்யப்படும் சூழ்ச்சி என்று நாம் கருதுவதால் அதன் புரட்டை வெளியாக்க வேண்டியது நமது கடமையாகின்றது. அதாவது, திரு.ஆச்சாரியார் அதில் இராமாயணம் ஆரியர் திராவிடர் என்கின்ற பாகுபாட்டிற்கு உடையதல்ல என்கின்றார். ஆனால், கம்பர் ராமனை ஆரியன் என்றும் இராவணனை தென்னாட்டவன் என்றும் பல இடத்தில் சொல்லி இருக்கிறார் என்பதற்கும், வால்மீகியும் வடக்குப் பக்கத்தில் உள்ளவர்கள் தேவர்கள் என்றும் தென் பாகத்தில் உள்ளவர்களை அரக்கர்கள் என்றும் சொல்லி இருப்பதாக மொழி பெயர்ப்புக்களில் இருக்கின்றது என்பதற்கும், இவர் என்ன பதில் சொல்லுகின்றார் என்று கேட்கின்றோம். அதுமாத்திரமல்லாமல் இராமன் பார்ப்பனர்களின் காலில் விழுந்து கும்பிட்டதாகவும், அவர்களுக்கு பொருள்கள் தானங்கள் செய்ததாகவும், பார்ப்பனருக்கு திதி கொடுத்து தனது தந்தையை மோட்சத்திற்கு அனுப்பியதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. அது மாத்திரமல்லாமல், ‘சூத்திரன்’ தவம் செய்ததற்காக (கடவுளை வணங்கியதற்காக) அவன் ராமனால் கொல்லப்பட்டதாகவும் சொல்லப் பட்டிருக்கின்றது. அது மாத்திரமல்லாமல், மாமிசம் சாப்பிடுபவனும் குடிகாரர்களுடைய நேசம் கொண்டவனுமான ராமன் செய்த கெட்ட காரியங்களையெல்லாம் கூட நல்ல காரியங்களாகவும் வேதம் படித்து கோடிக்கணக்கான வருஷம் தவம் செய்து, கடவுள் அருள் பெற்றவனை எது செய்தாலும் கெட்டவனாகவே பாவிக்கப்பட்டிருக்கின்றது. இவைகளில் எதற்கு திரு.ஆச்சாரியார் சமாதானம் சொல்லுகின்றார் என்று கேட்கின்றோம். (தொடரும்)

*(தொடர்ச்சி 24.11.1929 குடி அரசு)*

**குடி அரசு - கட்டுரை - 17.11.1929**





RangaRakes

tamilnavarasam.com

# பெண்கள் விடுதலைக்கு

# ஜே! ஜே!! ஜே!!!

## பஞ்சரத்தினம்

உலகத்தில் எங்குமே பெண்கள் தாழ்த்தப்பட்டிருக்கின்றார்கள். நமது நாட்டில் அவர்கள் மனிதப் பிறவியாயிருந்தும் மிருகங்களிலும் கேவலமாய் நடத்தப்படுவதும் அவர்கள் ஆண்களின் காம இச்சை தணிக்கும் கருவியாகவும், பிள்ளைபெறும் யந்திரமாகவும், ஆண்களுடைய சொத்துக்களில் ஒன்றாகவும், தகப்பன் என்பவனாலும் சகோதரன் என்பவனாலும் புருஷன் என்பவனாலும் பெண்கள் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கவோ விற்கவோ வாடகைக்கு விடவோ தனது சுயநலத்துக்காக மற்றவர்களுக்குக் கூட்டிக் கொடுக்கவோ கூட சுவாதந்தரியமுள்ள வஸ்துக்களாகவும் பாவிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களை விலைக்கு வாங்கியவர்கள் மற்றவர்க்கு கூலிக்கு விபசாரத்திற்கு விட்டு பணம் சம்பாதிக்கும் ஒரு யந்திரமாகவும் உபயோகப்படுத்தி வருகின்றனர். இத்தகைய கொடுமைகள் அநேகமாய் மதத்தின் பேராலும் தர்ம சாஸ்திரத்தின் பேராலும் கடவுள் பேராலும் நடைபெற்றுவருவதும் மிகவும் கவனிக்கத்தக்கதாகும். ஆனால் நமது நாட்டைத் தவிர மேல் நாடுகளில் இக்கொடுமைகள் வரவரக்குறைந்து அவர்களுக்குச் சுதந்திரம் வளர்ந்து வருகின்றது. உதாரணமாக அமெரிக்க நாட்டில் பெண்கள் ஆண்களைப்போலவே கோடிக்கணக்கான ரூபாய்கள் சொத்துக்களுடனும் சுதந்திரத்துடனும் ஆயிரக்கணக்காக வாழ்கின்றார்கள். இவைகளை அறிந்த இந்திய நாட்டு பெண்மணிகள் தங்கள் சுய மரியாதையை எண்ணி இப்போது விடுதலை அடைந்து முற்போக்கடைய முயற்சித்துவிட்டார்கள். உதாரணமாக சென்ற வாரத்தில் சென்னையில் கூடிய பெண்கள் முன்னேற்ற மகாநாட்டில் நடைபெற்ற விஷயங்களும் அங்கு செய்யப்பட்ட தீர்மானங்களும் மற்றொரு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. அதை பார்க்கின்றவர்கள் பெண்கள் விடுதலை விஷயத்தில் கடுகளவும் கவலை உள்ளவர்களாயிருந்தாலும் ஆனந்தக் கூத்தாடாமல் இருக்க மாட்டார்கள். ஏன் என்றால் அம்மகாநாட்டுத் தீர்மானங்களில் முக்கியமாக அய்ந்து தீர்மானங்கள் மகிழ்ச்சிப் பெருக்குடன் பாராட்டக் கூடியவைகளாகும். அவ்வைந்தையும் பஞ்சரத்தினம் என்றே சொல்ல வேண்டும். அதாவது. 1. பெண்களுக்கு விவாக சுதந்திரம், 2. சொத்து சுதந்திரம், 3. கண்கள் சுதந்திரம் (கோஷாமுறை) 4. ஒழுக்க சுதந்திரம், 5. விவாக விலக்கு சுதந்திரம் ஆகிய ஐந்து விஷயங்களைப் பொறுத்த தீர்மானங்களேயாகும். இப்போது நமது நாட்டு விவாக சுதந்திரமானது மிருகங்களை உடையவனிடம் சென்று விலைக்கு வாங்குவது போல் பெண் பிள்ளைகள் உள்ளவர்களிடம் சென்று "உன்னுடைய பெண்ணை எனக்குக் கொடுக்கின்றாயா" என்று கேட்பதும், தகப்பன் பெண்ணின் கையைப் பிடித்துக் கொடுக்க புருஷன் பெண்ணின் கழுத்தில் கயிறு கட்டி அழைத்துக் கொண்டு போவதுமாயிருக்கின்றது. மேலும் புருஷன் வீட்டிற்குப் போகும்போது பெண்ணுக்குத் தாய் தகப்பன் சொல்லி அனுப்பும் புத்திமதியோ ஒரு மிருகத்திற்குக் கூட சொல்லியனுப்ப யோக்கியதை யில்லாததானதாகும். அதாவது "ஓ பெண்ணே! இன்று உன்னை இன்னாருக்குக் கொடுத்து விட்டேன். நீ அங்கு போய் மிக்க கீழ் படிதலாய் நடந்து கொள்ள வேண்டும்; மாமன், மாமி, நாத்தி, மைத்துனர் மார்களுக்கு அடங்கி நடக்கவேண்டும். கல் என்றாலும் கணவன் புல் என்றாலும் புருஷன் ; அவன் அடித்தாலும் உதைத்தாலும் பட்டினி போட்டுக் கொன்றாலும் அவனை தெய்வம் போல் கருத வேண்டும். புருஷனுக்கு மிஞ்சிய தெய்வம் கிடையாது. நீ ஏதாவது உன் இச்சைப் படி நடந்து எனக்கு கெட்ட பெயரைக் கொண்டு வந்து விட்டுவிடாதே; ஆனால் உன் புருஷன் என்ன சொன்னாலும் கிணற்றில் விழு என்றாலும் உடனே விழுந்துவிடவேண்டும். புருஷன் என்ன சொன்னாலும் அந்தப்படி நடப்பது தான் கற்பு. அவன் என்ன செய்தாலும் நீ அதைப்பற்றி ஒன்றும் கேட்காதே" என்று சொல்லி பெண்ணின் கையைப் பிடித்து புருஷன் கையில் கொடுத்து புருஷனைப் பார்த்து "இன்று முதல் இது உன்னுடைய சொத்தாய் விட்டது. நீ இதை எப்படி வேண்டுமானாலும் உபயோகித்துக் கொள்; அதற்கு தகுந்தபடி எல்லாம் அடங்கி நடப்பாள்" என்று ஒப்படைக்கின்றான். அநேகமாக இதுவே கல்யாண மந்திரமாகவும், சடங்காகவும், சாஸ்திர சம்மதமாகவும், கடவுள் நீதியாகவும் இருந்துவருகின்றது. அன்றியும் எந்தப் புருஷனுக்கு தன்னைக் கொடுக்கின்றார்கள் என்கின்ற விஷயம் பெண்ணுக்கு கழுத்தில் கயிறு கட்டும் வரை தெரிவதே கிடையாது. அன்றியும் புருஷன் தன்னை தனது உபயோகத்திற்கு வாங்கிக் கொண்டு போகின்றானா மற்றவர்கள் உபயோகத்திற்கு வாங்கிக் கொண்டு போகின்றானா என்பது கூடத் தெரியாது! நமது நாட்டில் அநேக இடங்களில் இன்றும் பெண்களை கல்யாணம் செய்வது என்பது புருஷனுக்கு என்ற அர்த்தம் இருந்தாலும் மாப்பிள்ளையின் தகப்பன் உபயோகத்திற்கும் தமையன் உபயோகத்திற்குமே பெண் ஜாதியாய் இருக்க கல்யாணங்கள் நடைபெறுகின்றது. மற்றும் சில இடங்களில் புருஷனின் உத்தியோகத்திற்கும் தொழில் விருத்திக்கும் அந்நியருக்கு உபயோகப்படுத்த என்றே கவனித்து கல்யாணம் செய்யப்படுகின்றது. பெண் மிக்க சிறு பருவமுடையதாதலால் அதுவும் இதுதான் கல்யாணத்தின் தத்துவமோ என்று கருதி சிறிதும் யோசனை கூட இல்லாமல் எதற்கும் கட்டுப்பட்டு நடக்கின்றது. இதுவே தாய் தகப்பன் செய்விக்கும் கல்யாணத்தினுடையவும் ஸ்மிருதி சுருதிகளினுடையவும் தெய்வீகத்தினு



RangaRakes tamilnavarasam.com

டையவும் உயர்ந்த தத்துவங்களாய் இருக்கின்றன. இன்னும் சில இடங்களில் கல்யாணப் பெண்ணை விலைபேசி தகப்பனிடம் விலைகொடுத்து கயிறு கட்டி இழுத்து போவதாகவும் இருக்கின்றது. இன்னும் சில இடங்களில் ஒரே பெண்ணை மாற்றி மாற்றி இரண்டு மூன்று பேருக்கு விலைக்குக் கொடுத்து ஏமாற்றி பணம் வாங்குவதுமாயும் இருக்கிறது. மற்றும் சில இடங்களில் விபசாரத்தின் மூலம் வயிறு வளர்க்கவும் பணம் சம்பாதிக்கவும் உபயோகப்படவுமே பெண்களை வளர்க்கப்படுகிறது. எனவே, இதிலிருந்து கல்யாண விஷயத்தில் பெண்களுக்கு இப்போது இருக்கும் வழக்கம் மேலானதா அல்லது பெண்கள் சீர்திருத்த மகாநாட்டில் பெண்களுக்கு கல்யாண விஷயங்களில் தாங்களாகவே புருஷர்களை தெரிந்தெடுத்துக் கொள்ள கேட்கும் சுதந்திரம் மேலானதா என்பதும் இது பெண்கள் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத முதல் படியல்லவா என்பதும் விளங்காமல் போகாது. கல்யாண விஷயத்தில் இவ்வித சுதந்திரம் அளிக்க நமது சமூகமோ மதமோ சாஸ்திரமோ எந்தக் காரணத்தைக் கொண்டாவது மறுக்குமானால் இனி நாம் கண்டிப்பாய் பெண்கள் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்றும் அந்தப்படி மீறி பெற்றோர்களால் செய்யப்படுமானால் அவ்வித கல்யாணங்களை விலக்கிக் கொள்ள சட்டத்தில் இடமேற்படும் வரை தங்களை "தாங்கள் இனிமேல் குடும்பப் பெண்கள் அல்ல" என்றாவது விளம்பரப்படுத்திக் கொண்டு விடுவது மேலேன்றுமே சொல்லுமாறு நிர்பந்தப்படுவதற்கு மிகவும் வருந்துகிறோம். ஏனெனில் மேல் கண்ட "தெய்வீக" கல்யாண முறையானது நமது நாட்டில் உள்ள 'குடும்பப்பெண்' அல்லாதவர்களுடைய நிலைமையைவிட மிக்க மோசமானதாயிருக்கிறது எப்படியெனில் ஒரு பெண் கல்யாணம் செய்து கொள்வதை விட "குடும்பப் பெண் அல்லாதவராக" இருக்க சம்மதிப்பதிலோ அல்லது இம்மாதிரி கல்யாணமான புருஷனிடமிருந்து விலகி வெளிப்பட்டுப் போய் தனியாக வாழ்வதிலோ அதிக சுதந்திரமும் சவுகரியமும் இருக்கின்றதைப் பார்க்கலாம். அதாவது ஒரு பெண் குடும்பப் பெண் அல்லாதவள் ஆகி விட்டால் அந்தப் பெண்ணுக்கு ஒழுக்கமுடன் வாழ உரிமையுண்டு. இஷ்டப் பட்ட கணவனை மாத்திரம் சேர்த்துக் கொள்ள உரிமையுண்டு. இஷ்டமில்லாத போது எந்தக் கணவனையும் விலக்கவோ மறுக்கவோ சுதந்திரம் உண்டு. தன் இஷ்டப்படி தொழில் செய்து பணம் சம்பாதிக்க சுதந்திரம் உண்டு. அந்தப் பணத்தை தன் இஷ்டப்படி செலவு செய்ய உரிமையுண்டு. இயற்கை இன்பங்களை இயற்கை உணர்ச்சிக்கேற்ப அனுபவிக்க சுதந்திரமுண்டு. தனது பிள்ளைக்குட்டிகளை இஷ்டப்படி வளர்க்க சுதந்திரமுண்டு. தனக்கு வேண்டிய அளவு மாத்திரம் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள சுதந்திரமுண்டு. தனது நியாயமான இஷ்டப்படி நகைகள் அணியவும் ஆடைகள் அணியவும் உரிமை உண்டு. ஆனால் நமது "தெய்வீக கல்யாணத்தில்" இவை ஒன்றுமே கிடையாது. வெறும் சாப்பாட்டிற்கும் துணிக்கும் அதுவும் தனது இஷ்டத்திற்கு ஒத்ததாக இல்லாத சாப்பாட்டிற்கும் துணிக்கும் மாத்திரம் அவன் (புருஷன்) ஆயுள் அளவும் ஒரு புருஷனின் காம இச்சையை அவனுடைய தேவைக்கும் சமயத்திற்கும் தகுந்தபடி தணிக்கக் கூடிய ஒரு கருவியாய் இருப்பதைத் தவிர



வேறு ஒன்றுமே இல்லை. ஒருபெண் சரீர சவுக்கியத்தில், தான் எந்த நிலையில் இருந்தாலும் எவ்வளவு தேவை இல்லாத உணர்ச்சியுடன் இருந்தாலும் புருஷனுக்கு இஷ்டப்பட்ட போது சம்மதித்துத் தான் ஆக வேண்டும். அவன் மூலமாய் அவன் வேறு எங்கெங்கே சம்பாதித்துக் கொண்டு வந்த வியாதிகளையும் தனது சரீரத்தில் ஏற்றுமதி செய்து கொள்ள வேண்டும். ஆனால் பெண்ணுக்கு இஷ்டமேற்பட்ட போது தனது உணர்ச்சியை வெளியில் காட்டுவது கூட "உத்தமப் பெண்களின் தர்மத்திற்கு" விரோத மானதாகும். இதுவேதான் இப்போது இந்தியாவில் உள்ள பெண்மணிகளில் நூற்றுக்கு 90 பேர்களுக்கு மேற்பட்ட நிபந்தனைகளின் பேரில் கடவுள் கட்டளையாக சுமத்தப்பட்டு வருகின்றது. ஆகவே இவ்வித கொடுமையை ஒழிக்க முதற்படியாக பெண்கள் சீர்திருத்த மகாநாட்டில் கல்யாண சுதந்திரம் கேட்டு தீர்மானித்திருப்பது நல்ல அறிகுறியே ஆகும்.

இரண்டாவதாக சொத்துரிமை, இது இப்போது இந்திய நாட்டில் இந்து மதத்தில் மாத்திரம் இல்லாமலிருக்கின்றது. இந்து மதப்படி பெண்கள் தாங்களே தங்களுக்குச் சுதந்திரமல்லாதவர்கள் என்று தீர்மானிக்கப்பட்ட பிறகு மதத்தை வைத்துக் கொண்டு அவர்களுக்குச் சொத்துரிமை என்று பேசுவது பிறவிக் குருடன் சித்திரமெழுதப் புறப்பட்டது போலவேயாகும். என்றாலும் இவ் விஷயத்தில் துணிந்துத் தீர்மானம் செய்தது போற்றற்குரியதே யாகும்.

மூன்றாவதாக கண்கள் சுதந்திரம், அதாவது கோஷா முறை விலக்கு. இது இந்துக்கள் என்பவர்களுக்குள் நம் நாட்டில் இல்லையானாலும், மற்றவர் களிடமும் வடமாகாணத்தில் பல வகுப்பு இந்துக்களுக்குள்ளும் இருக்கின்றது. நம் நாட்டில் கோஷா என்பதான பெண்களுக்குத் தலையணை உறை போல அடியோடு உறை போட்டு மூட்டை மாதிரிக் கட்டிவிட்டாலும், அநேகம் பேர்கள் மேல்மக்கள் என்பவர்களில் நூற்றுக்கு 90 பேர்களும் படித்தவர்கள் என்பவர்களில் நூற்றுக்கு 75 பேர்களும் பெண்களை வெளியில் போகாமலும் மற்ற மக்களுடன் பழக முடியாமலும், வீதிக்குக் கூட வர முடியாமலுமே சிறை வாசம் போல் அடைத்து வைத்திருக்கின்றார்கள். ஆகவே இந்த கோஷா முறையும் சிறைவாசமும் பெண்களின் சுயமரியாதைக்கு மிகவும் கேடானது என்பதே நமது அபிப்பிராயம். பெண்கள் தாங்களாகவே தங்கள் புருஷனிட முள்ள உண்மைக் காதலினால் புருஷனைத் தவிர வேறு எந்த வஸ்துக்களைக் கூடப் பார்க்க மாட்டேன் என்று சொல்வதானாலும், நமக்கு அதில் அதிக கவலை இல்லை. புருஷன் நிர்ப்பந்தத்திற்காகவும், பயத்திற்காகவும் உறைபோட்டுக் கொள்வதும், அவர்களை அடைத்து வைப்பதும் மகா கொடுமையானது என்றே சொல்லுவோம். இதற்கு ஜீவ இம்சை நிவாரண சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். ஒரு சமயம் நாம் இப்படிச் சொல்வதால் பலருக்கு வருத்தமுண்டாகலாம். அதாவது, பெண்களை மிருகம் போல், ஆடு மாடுகள் போல், ஆணும் பெண்ணும் ஒன்றாய்த் திரிய விடும்படி சொல்வது யோக்கியமா என்றும், முறை துறை வரையறையில்லாமல் மிருகங்கள் போல் நடந்து கொள்ள விடுவது சரியா என்றும் கூட கேட்கலாம்.



RangaRakes
tamilnavarasam.com

உலக சுபாவத்தில் நூற்றுக்கு 80 பெண்களுக்கு மேலாகவே கோஷா இல்லை. சிறை அடைப்பும் இல்லை என்பதையாரும் மறுக்க முடியாது. எனவே இந்த நூற்றுக்கு 80 பெண்கள் மிருகங்கள்போல நடக்கின்றவர்களா அல்லது நடத்தப்படுகின்றவர்களா என்று கேட்பதுடன் மேல் கண்ட 100-க்கு 80 பெண்களுடைய காதலர்களும் நாயகன்மார்களும் தாய் தந்தை சகோதரன்மார்களும் மிருகங்கள்போல நடக்க சம்மதிக்கிறவர்கள் என்றோ சொல்லக் கூடுமா என்றும் கேட்கின்றோம். ஆகவே கோஷா முறையை நீக்க மகாநாட்டில் தீர்மானித்ததை நாம் பாராட்டுகின்றோம். அதோடு இதே சமயத்தில் கோஷா முறை உள்ள நாடுகளிலும் அங்குள்ள அரசாங்கத்தார் சட்ட பூர்வமாயும் நீக்கி இருப்பதையும் மேலும் நீக்க முயற்சித்து வருவதையும் இச்சமயத்தில் ஞாபக மூட்டிப் பாராட்டுகின்றோம்.

நான்காவதாக, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம ஒழுக்கம் சுதந்திரம். ஒழுக்கம் என்னும் பேரால் பெண்களை கொடுமைப்படுத்துவது மாத்திரமல்லாமல், ஆண்களில் நூற்றுக்கு தொண்ணூறுபேர்கள் அயோக்கியர்களாகவும் கொடுமையாளர்களாகவும் ஏற்பட இடமேற் பட்டுக் கொண்டு வருவதே இங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. அதாவது மனித வாழ்க்கையில் ஒழுக்கம் என்பதே எல்லாவற்றிலும் உயர்வு என்ற கொள்கை ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் அவ்வொழுக்கத்திற்கு போடப்பட்டிருக்கும் திட்டங்கள் மிகவும் இயற்கைக்கும் அறிவிற்கும் நியாயத்திற்கும் நேர் எதிர் மறையானதென்றே சொல்ல வேண்டியிருக்கின்றது. உதாரணமாக ஆண் பெண்களின் மாற்ற முடியாத இயற்கை உணர்ச்சியில் பிரவேசித்து ஒழுக்கம் என்பது நிர்பந்தத்திற்குக் கட்டுப் பட்ட காதலும் பலவந்தத்திற்கு கட்டுப்பட்டாலும் அன்பும் கொண்டது என்றும், அதுவும் புருஷர்களுக்கு ஒரு விதம் பெண்களுக்கு ஒரு விதம் என்று பாரபட்சமாகவும் வழக்கத்தில் புருஷன் எவ்வளவு ஒழுக்க ஈனமாகவும் கொடுமையாகவும் நடந்து கொண்டாலும் பெண்கள் அதைப் பற்றி சிறிதுகூட சிந்திக்கக் கூடாதென்றும், அந்தப் படி சிந்திக்காமல் இருப்பது மாத்திரமல்லாமல் தான் ஒரு சிறிதுகூட அப்படிப்பட்ட அவனைப் போல் நடக்க எண்ணக் கூடாது என்றும், அந்தப் படி நடந்தால் பாவம் நரகம் அடுத்த ஜன்மத்தில் இழிபிறப்பு என்பவைகளோடு உலகத்தில் இழிவு, அவமானம், சமூக பஹிஷ்காரம், அடி, உதை, இம்சை முதலியவற்றிற்கும் கட்டுப்பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டும் சில விஷயங்களில் அதன்படி செய்யப்பட்டும் வருகின்றது. இந்த திட்டங்களின் தன்மை எப்படிப்பட்டது என்பதைப் பற்றி யோசிக்கும் முன், இதனால் ஏற்படும் பயன் என்ன என்று பார்த்தால் இவ்விஷயங்களால் ஆண்கள் ஒழுக்கத்தவறுதலாக நடந்து தீர வேண்டியதற்கு இந்த திட்டமே காரணமாயிருக்கின்றது என்றும் சொல்ல வேண்டியிருக்கின்றது. ஏனெனில் ஒரு ஆண், தான் என்ன செய்தாலும் குற்றமில்லை என்று நினைத்துவிடச் செய்கின்றது. அதனால் விபசாரப் பெண்கள் ஏற்பட இடமுண்டாகின்றது. அன்றியும் இம்மாதிரி தைரியமுள்ள புருஷர்களின் நிர்ப்பந்தத்தால் பலாத்காரத்தால் பலபெண்கள் விபசாரிகளாக வேண்டிநேரிடுகின்றது. இன்னும் அநேக



கெடுதிகள் ஏற்படுகின்றது. ஆதலால் மேல்கண்ட புருஷனுக்குள்ள ஒழுக்க சுதந்திரம் போலவே பெண்ணுக்கும் ஒழுக்க சுதந்திரம் என்று சொல்லி விட்டால் பெண்களில் ஒழுக்க ஈனமாக எத்தனை பேர் ஏற்பட்டுவிடும் என்று மக்கள் கருதுகின்றார்களோ, அதைவிட இரட்டிப்பான ஆண்கள் ஒழுக்க ஈனம் என்பதிலிருந்து திருந்துவார்கள் என்பது நமது உறுதியான முடிவு. ஆதலால் இதைப் பற்றி பொது ஒழுக்கம் என்பதில் கவலையுள்ள யாரும் பயப்பட வேண்டியதில்லை என்றே சொல்லுவதுடன் இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டதற்கு பாராட்டுகின்றோம்.

கடைசியாக கல்யாண ரத்துக்கு சட்டம் செய்ய வேண்டும் என்பதாகும். இது எல்லாத தீர்மானத்தைவிட மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில், கல்யாணக் கொடுமையைப் பற்றி முன்னமேயே சொல்லி இருக்கின்றோம். அன்றியும் பெண்ணின் பெற்றோரும் மாப்பிள்ளையின் பெற்றோரும் சேர்ந்து செய்து கொண்ட ஒரு காரியத்திற்காக யாதொரு தகவலுமில்லாத தம்பதிகள் என்பவர்கள் தங்களுக்கு இஷ்டமிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒருவரால் ஒருவர் கொடுமைபடுத்தப்பட்டாலும், இழிவுபடுத்தப்பட்டாலும், வதைக்கப் பட்டாலும் பிரிந்து போக மார்க்கமில்லாமல் கட்டுப்பட்டுக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கவேண்டும் என்பது என்ன நியாயம் என்று நமக்கு விளங்கவில்லை. கலியாணம் என்பதை ஒரு ஒப்பந்தமாகக் கொண்டு இருவரும் சம்மதித்து செய்து கொண்டதாயிருந்தால் ஒப்பந்தத்தையும் கட்டுப்பாட்டையும் காப்பாற்ற வேண்டியது தம்பதிகளின் சமமான கடமையாகும். அப்படிக்கில்லாமல் யாரோ செய்த காரியத்திற்கு யாரோ எதற்காக கட்டுப்படுவது என்பது நமக்கு விளங்கவில்லை. அன்றியும் ஒரு புருஷனுக்கு அவனுடைய பெண்ஜாதி வியாதியுடையவர்களாகவோ, அழகில்லாதவளாகவோ, பிள்ளை பெறாதவளாகவோ, இஷ்டமில்லாதவளாகவோ போய்விட்டால் அவள் செலவுக்கு பணம் கொடுத்துவிட்டுவிடவும், அவளை விபசாரி என்று பேராக்கி அச்சிலவு கொடுப்பதிலிருந்து கூட தப்புவித்துக் கொள்ளவும் செய்துவிட்டு, சில சமயங்களில் சிலவுக்கு பணமும் கொடாமல் தள்ளிவிட்டு, சில சமயங்களில் அடித்தும் உதைத்தும் அடக்கி அடைத்துவைத்து தனது இஷ்டப்படி மறுபடியும் ஒரு பெண்டாட்டியோ, பல பெண்டாட்டிகளோ, அல்லது தாசிகளோ, வைப்பாட்டிகளோ வைத்துக் கொள்ளத்தக்க விதமாக ஆண்களுக்கு கல்யாண உரிமை இருக்கும்போது; பெண்களுக்கு புருஷன் கொடுமை சகிக்க இஷ்டமில்லையானால், சோறும் சேலையும் கூட கேட்காமல் வேறு ஒரு புருஷனைக் கட்டிக் கொள்ளவோ அல்லது அதுகூட இல்லாமல் சும்மா இருக்கவோ ஏன் உரிமை இருக்கக் கூடாது என்று கேட்கின்றோம். உண்மையாய் கல்யாணமான பெண்களில் நூற்றுக்கு ஐம்பத்தொரு பெண்கள் படும் கஷ்டத்தைப் பார்த்தால் விதவைத் தன்மை மேலென்றே தோன்றுகின்றது. விதவைகளுக்கு இன்ப நுகர்ச்சிக்கு மாத்திரம் இடமில்லாமல் போகலாமே தவிர, அடி உதை ஆகிய கொடுமைகள் கிடையாதென்றே சொல்லலாம். இதற்கு உதாரணங்கள் ஆயிரக்கணக்காக நாம் பார்த்து வருகின்றோம். ஒரு நாட்டில் பெண்களுக்கு



RangaRakes
tamilnavarasam.com

எந்த வழியிலாவது முன்னேற்றம் என்பது சிறிதாவது ஏற்படவேண்டுமானால் கல்யாண ரத்துக்கு மார்க்கமிருந்தால்தான் முடியுமே ஒழிய வேறில்லை. அன்றியும் உண்மையான அன்பும் காதலும் அப்பொழுது தான் இருக்க முடியும். அஃதில்லாமல் "கல்யாணம் செய்தாய்விட்டது ஆதலால் சாகும் வரை ஒருவருக்கொருவர் கட்டி அழுதுதான் தீரவேண்டும்" என்கின்ற நிலைமை அறிவீனமுள்ள வாழ்வேயாகும். இயற்கை இன்பம் ஒருக்காலும் கட்டுப்பாட்டினாலும் நிர்பந்தத்தினாலும் ஏற்படவே ஏற்படாது. ஆண் பெண் என்பது இயற்கை இன்பநுகர்ச்சிக்கே ஒழிய புருஷன் பெண்ஜாதியாய் குடும்பம் நடத்த பிள்ளைகள் பெற்று சொத்துக்கள் சம்பாதித்து பிள்ளைகளுக்கு வைத்துவிட்டு போவதற்கு அல்ல என்பதை உணர்ந்தவர்களே உண்மை இன்பம் நுகருகின்றவர்களாவார்கள். மனிதன் பாடுபட்டு சம்பாதிக்கப் பிறந்தான் என்றும், அந்த சம்பாதனைக்கு அதிக சௌகரியம் செய்ய பெண்கள் பிறந்தார் களாதலால் செய்து கொடுக்க ஒரு பெண் ஜாதி வேண்டுமென்று நினைத்தே கல்யாண காரியங்கள் நடக்கின்றன. மக்கள் வாழ்வின் பயனை உயர்த்த வேண்டுமானால் இந்த எண்ணத்தையும் இந்த முறையையும் ஒழித்தே தீர வேண்டும். ஆகையால் கல்யாண ரத்து சட்டம் செய்த இத்தீர்மானமானது மிகமிக போற்றற்குரியதாகும்.

இத்தீர்மானங்கள் எல்லாம் சென்ற வருஷம் கூடிய செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாட்டில் செய்யப்பட்டவைகளேயாகும். அன்றியும் ஐரோப்பா, அமெரிக்கா, ஜெர்மனி முதலிய நாடுகளில் நடைபெறும் சட்டங்களும் வழக்கங்களுமாகும். நமது இந்தியாவிலும் பரோடா அரசாங்கத்தில் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட சட்டமேயாகும். நமது மாகாணத்திலும் அநேக வகுப்புக் களிலும் மலையாள தேசத்தில் எல்லோருக்குள்ளும் இருந்துவரும் வழக்கமே யாகும். ஆதலால் இதில் ஏதும் அதிசயம் இருக்க நியாயமில்லை. ஆனால் செங்கல்பட்டு மகாநாட்டில் இத்தீர்மானம் நிறைவேறியவுடன் பலர் இந்த காரணத்தாலேயே மகாநாட்டைக் குற்றம் சொன்னார்கள். சுயமரியாதை இயக்கத் தையும் குற்றம் சொன்னார்கள். அப்படிச் சொன்னவைகளில் முக்கியமான காரணம் இத்தீர்மானத்தை பெண்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும், இது பெண்களுக்கு மிக்க ஆபத்து என்றும் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது பெண்களே தாங்கள் மகாநாட்டில் தீர்மானித்துவிட்டார்கள். அதுவும் மிக்க கல்வியும் அறிவும் ஆராய்ச்சியும் பொறுப்புள்ள உத்தியோகங்களும் பெற் றுள்ள பெண்மணிகள் ஒன்று கூடிய கூட்டத்திலேயே நன்றாய் எடுத்துப் பேசி நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. ஆகவே, அம்மகாநாட்டில் இத்தீர்மானங்கட்கு ஆதரவாயும் இருந்த பெண்மணிகளாகிய திருமதிகள் மாலதி பட்டவர்த்தன அம்மாள், லட்சுமி அம்மாள், ருக்மணி லக்ஷிமிபதி அம்மாள் முதலியவர்களை நாம் மனதாரப் பாராட்டுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 24.11.1929**



RangaRakes

## சென்னை மந்திரிகளை பின் பற்றுதல்

சென்னை மாகாண சுகாதார மந்திரி திரு.எஸ்.முத்தையா முதலியார் அவர்கள் மதுவிலக்கு விஷயமாய் கவர்ன்மெண்டாரின் கொள்கையை திட்டப்படுத்தவும் மக்களுக்கு மதுவிலக்கில் அதிக முயற்சி உண்டாக்கவும் வருஷம் ஒன்றுக்கு நாலு லட்ச ரூபாய் போல் செலவு செய்து நாட்டில் மதுவிலக்குப் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்தது யாவருக்கும் தெரிந்ததாகும். அதை இந்நாட்டுப் பார்ப்பனர்கள் கண்டு உண்மையில் நமது நாட்டில் மதுவிலக்கு ஏற்பட்டுவிட்டால் எங்கு அதனால் பிழைக்கும் தங்களது உத்தியோகத் தொழிலும் வக்கீல் தொழிலும் மற்றும் மதுபானத்தின் பலனாய் ஏற்படும் பலவிதத் தொழிலும் நின்றுவிடுமோ எனக்கருதி பலவித தந்திரத்தாலும் மந்திரி கனம் முத்தையா முதலியாருக்குக் கெட்ட எண்ணம் கற்பித்தும், கவர்ன்மெண்டை தூண்டி முத்தையா முதலியாரின் கொள்கையை ஒப்புக்கொள்ளாமல் இருக்கச் செய்ய முயற்சித்தும் பயன்படாமல் போய் இப்போது சென்னை மாகாணம் முழுவதும் மதுவிலக்கு பிரசாரம் நடை பெறுவதும் யாவருக்கும் தெரிந்ததாகும். தவிர, காந்தி மடத்தின் சட்டாம் பிள்ளையாகிய திரு. இராஜகோபாலாச்சாரியார் தினமும் இந்தக் கொள்கை யையும் பிரசாரத்தையும் தூற்றிக் கொண்டு வருவதும் யாவருக்கும் தெரியும். மந்திரி கனம் முத்தையா முதலியார் அவர்களின் இந்தக் கொள்கையை இப்போது இந்தியாவில் பல பாகங்களும் மேல்நாடுகளில் பல பாகமும் பின்பற்ற துடங்கிவிட்டன. அதாவது, ஐக்கிய மாகாணமாகிய அலகாபாத் மாகாண அரசாங்கத்தால் இந்தக் கொள்கையைப் பின்பற்றி அந்த மாகாணம் முழுதும் இப்பிரசாரம் செய்யத் துடங்கிவிட்டார்கள். மைசூர் அரசாங்கத்தாரும் இக்கொள்கையை பின்பற்றி பல ஆயிரம் ரூபாய்கள் ஒதுக்கிவைத்து பிரசாரம் துவக்கி விட்டார்கள். அமெரிக்கா அரசாங்கத்தார் இதைப் பின்பற்றி ஐம்பதா யிரம் டாலர்கள் ஒதுக்கிவைத்து பிரசாரம் துவக்கிவிட்டார்கள்.

நியூசிலெண்ட் தீவு அரசாங்கத்தாரும் இதே முறையில் மதுவிலக்குப் பிரசாரம் துவக்கிவிட்டார்கள். இவ்வளவு பேர்கள் ஒப்புக் கொண்டாலும் நமது நாட்டு பார்ப்பனர்களுக்கும். அவர்கள் சிஷ்யர்களுக்கும், காந்தி சிஷ்யர்களுக் கும் மாத்திரம் இது பிடிக்கவில்லையாம். ஏன்? மதுவிலக்குப் பிரசாரத்தின் பெயர் சொல்லி பார்ப்பனர்களுக்கும் அவர்களது கூலிகளுக்கும் ஓட்டு வாங்கிக் கொடுக்க முடியாமல் போனதும் மதுபானத்தால் பிழைக்கும் பார்ப்பனர்களின் வயிற்றில் மண் விழுவதாலும் தான்.



tamilnavarasam.com

ஆகவே இனியாவது ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாத பொது மக்கள் இந்த அருமையான சந்தர்ப்பத்தை விட்டுவிடாமல் மதுவிலக்குப் பிரசாரத் திற்கு வரும் தொண்டர்களுக்கு வேண்டிய உதவி புரிந்து கூட்டம் கூட்டியும் மற்றும் பல விதத்திலும் பிரசாரம் செய்வதற்கு வேண்டிய ஆதரவுகளளிக்க வேண்டுவதுடன் ஜில்லா தாலூகா போர்டு தலைவர்களும், முனிசிபல் சேர்மென்களும், ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் திரு.சௌந்தர பாண்டியன் அவர்களை பின்பற்றி தங்கள் ஆதிக்கத்திற்குள் உள்ள அதிகாரிகளும் மற்றும் சம்பந்தப்பட்ட அங்கத்தினர்களும் இந்த பிரசாரத்துடன் ஒத்துழைத்து ஆதரவு செய்து கொடுக்க வேண்டுகின்றோம்.

**குடி அரசு - செய்தி விளக்கக் குறிப்பு - 24.11.1929**



## கார்ப்பொரேஷன் தலைவர் தேர்தல்

சென்னை கார்ப்பொரேஷனுக்கு இம்மாதம் 12-ந் தேதி நடந்த தலைவர் தேர்தலில் திருவாளர் ஏ.இராமசாமி முதலியார் அவர்கள் பெருவாரியான ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டது கேட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். சென்ற வருஷத்தேர்தல் போலவே இவ்வருஷமும் ஜஸ்டிஸ் கட்சிக்குள்ளாகவே இரு கனவான்கள் போட்டி போட்டு ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்குள்ளும் பிரிவினை ஏற்பட்டு அவர்களில் இரு கட்சிக்கு வேலை செய்யப்பட்டு தேர்தல் நடந்தேறியதை குறித்து விசனப்படாமலிருக்க நம்மால் முடியவில்லை. தேர்தலுக்கு இரண்டு வாரத்திற்கு முன்னால் நாம் எழுதியது போல ஜஸ்டிஸ் கட்சிக்கு நெல்லூரில் புதியதாய் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இவ்விஷயத்தில் சிறிது தலையிட்டு யாராவது ஒருவர் தான் நிற்க வேண்டுமென்பதாக முடிவு செய்தோ அல்லது மற்ற பிரமுகர்களையும் சேர்த்து ஒரு முடிவு செய்தோ இருப்பாரானால் இச்சம்பவம் நேர்ந்திருக்காதென்பது நமது துணிபு. அபேட்சகர்கள் இருவரும் தலைவருடைய தீர்ப்பை எதிர்பார்க்கவில்லை என்பதற்காக தலைவர் தனது முடிவை தெரியப்படுத்தவில்லை என்பதாக சொல்லப்படுவதானாலும் இம்மாதிரியான முக்கிய விஷயங்களில் நெருக்கடியான நிலைமையைக் காப்பாற்ற தலைவர் தானாகவேனும் முயற்சித்திருக்க வேண்டியது பொறுப்புள்ள தலைவர் என்பவரின் கடமை என்பதை நாம் சொல்லித் தீரவேண்டியிருப்பதற்கு வருந்துகின்றோம். இத்தேர்தலானது அபேட்சகர்களுக்கும் சென்னையில் உள்ள சில தனிப்பட்டவர்களுக்கும் தங்கள் தங்கள் தனிப்பட்ட வெற்றி தோல்வியாகக் காணப்படினும் சென்னைக்கு வெளியிலுள்ளவர்களுக்கு தோல்வியைவிட கஷ்டமான பலனையும் வருத்தத்தையும் தரக்கூடியது என்பது நமது அபிப்பிராயம்.

ஏனெனில், வெற்றி தோல்வியை விட அதனால் ஏற்படும் பலனேதான் மிகவும் கவனிக்கத்தக்கதாகும். ஆகவே, இத்தேர்தலின் வெற்றி தோல்வியைப் பற்றி கவனிப்பேயில்லாமல் இதனால் ஏற்பட்ட கட்சிப் பிரதிக்கட்சியார் பலனே ஜஸ்டிஸ் கட்சியில், புதிதாக வெளிப்படையாய், மேலும் அதிகமான பிளவு ஏற்பட்டு அது வெளி ஜில்லாக்கள் எல்லாம் தொத்து நோய் போல் பரவ ஆரம்பித்துவிட்டது. அன்றியும், நாம் தேர்தலுக்கு முன் எழுதியது போலவே அதாவது நெல்லூர் மகாநாட்டு நடவடிக்கை ஒருவாறு நமது இயக்கத்தில் உள்ள கட்சிகள் இவ்வளவு என்பதை காட்டி விட்டது. ஆனால் "அடுத்து வரும் கார்ப்பொரேஷன் தலைவர் தேர்தல் அக்கட்சியின் தனித்தனி வேலைத் துவக்



RangaRakes tamilnavarasam.com

கத்தை காட்டிவிடக் கூடியதாகிவிடுமோ என்று பயப்படுகின்றோம்” என்று எழுதியது போலவே ஏற்பட்ட கட்சிகளின் வேலைகள் துவக்கப்பட்டுவிட்டது. உதாரணமாக அவைகளில் முதலாவது வேலையாக திரு.கண்ணப்பர், தியாகராய மிமோரியல் கட்டிடத்தின் மேல்மாடியில் இதுவரை ஜாகை வைத்துக் கொண்டு இருந்த ஒரு சிறு அறையை 30-ந் தேதிக்குள்ளாக காலி செய்யும்படி வக்கீல் மூலமாக நோட்டீஸ் கொடுக்கப்பட்டாய்விட்டது. (அது மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது) இதில் இரண்டு உண்மையை நாம் மறைக்க முயலவில்லை. அதாவது திரு.கண்ணப்பர் (திரு.கண்ணப்பர் மறுப்பதானாலும் சரி) கார்ப்பொரேஷன் தேர்தலில் ஒரு கட்சியில் சேர்ந்தாரோ இல்லையோ என்பதில் ஆட்சேபனை இருந்தாலும் திருநடேச முதலியாருக்கு அனுகூலமாக வேலை செய்தார் என்பதையும் தேர்தல் நடந்த மூன்றாம் நாளிலேயே நேரில் ஒரு வார்த்தைகூட சொல்லாமல் வக்கீல் மூலமாக நோட்டீசு கொடுக்கப்பட்டது என்பதையும் நாம் மறைக்க முயலவில்லை. இந்த நிலைமையானது இவ்வியக் கத்தைச் சேர்ந்த இங்கிலீஷ், தமிழ் பத்திரிகைகளையும் பாதிக்கக் கூடும் என்றும் தோன்றுகின்றது. இதற்குமேல் நடக்கக் கூடியவைகளை நாமாக ஊகத்தின் மூலம் எழுதிய காரணத்தாலேயே அவைகள் உண்மையாய் நடக்க இடம் கொடுத்து விட்டது என்று சொல்லப்பட்டு விடுமோ என்கின்ற எண்ணத்தாலும், அவை களை இந்த அளவிலே அதாவது, வெளியில் உள்ள மற்றவர்களுக்கு தெரியா ததற்கு முன்னமே அடக்கிவைக்க முயலலாமா என்கின்ற எண்ணத்தின் மீதும் வெளிப்படுத்தாமல் விட்டுவிடுகின்றோம். முடிவாக நாம் இரு கட்சி யாருக்கும் எச்சரிக்கை செய்வது என்னவென்றால், முக்கியமாக காங்கிரசின் ஊழல்கள் வெளியாக நேரிட்டதாலாயேதான் ஜஸ்டிஸ் கட்சிக்கு மக்களின் ஆதரவும் செல்வாக்கும் கிடைத்துவந்தது. ஆகையால் இது போலவே ஜஸ்டிஸ் கட்சியின் ஊழல்களால் காங்கிரசுக்கும் மற்றும் அது போன்ற ஸ்தாபனங்களுக்கும் நமது நாட்டில் மக்களின் செல்வாக்கும் ஆதரவும் இருக்கும்படி செய்துவிடக் கூடாதென்று எச்சரிக்கை செய்கின்றோம். கடைசியாக திரு.இராமசாமி முதலியார் அவர்கள் சென்ற வருஷம்போலவே யாரும் எவ்வித குற்றமும் சொல்வதற்கில்லாமல் கார்ப்பொரேஷன் வேலையில் மிக நெருக்கடியான சமயங்களில் கூடமிக்க பொறுமையாயும் சாமர்த்தியமாயும் நடந்து வெற்றி பெற்றது போலவே இவ்வருஷமும் கார்ப்பொரேஷன் வேலையில் பொதுஜன செல்வாக்கையும் ஆதரவையும் பெறுவார் என்று உறுதியாய் நம்புகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 24.11.1929**



# மணமுறையும் புரோகிதமும்

ஆண்பெண் வாழ்க்கை இன்பத்திற்கு இவ்விருபாலார்க்கும் இயற்கை ஒப்பந்தம் ஒன்று, என்று மனித சமூகம் உற்பத்தியானதோ அன்று முதல் தானாகவே இருந்து வருகின்றது. மனித சமூகம் பரவி விரிந்து நெருக்கமானதும், பெண்கள் கருப்பவதிகளாய் இருக்கும் காலத்து அவர்கட்கு ஒரு பாதுகாப்பு ஏற்படவேண்டும் என்ற முறையிலும், மனித சமூகத்தில் சிக்கன நெருக்கடி ஏற்பட்டு அதனால் பேராசை, வஞ்சகம், சோம்பேறித்தனம் முதலியவைகள் உட்புகுந்துவிட்டமையாலும் பொதுசனங்கள் அறிய இவ்விருபாலர்க்கும் மணவினை ஏற்படுதல் அவசியமாயிற்று. இன்றேல், பெண்கள் ஏமாற்றப் படுவார்கள் என்பது திண்ணம். மேலும் குழந்தைகள் சதிபதிகட்கும் பொது வாதலால், குழந்தைகளைப் பொறுத்தவரையிலாவது தந்தையின் பொறுப்பு விளக்கமாகத் தெரிய வேண்டிய அளவிலும் மணவினை பொது சனங்கள் அறிய நிகழ்த்தப்பட வேண்டியது அவசியமாயிற்று. எனவே, உலகத்தில் மிகச் சாதாரணமானதும் அதே சமயத்தில் மிகப் பெரியதுமான இவ்வாண் பெண் இணக்கம் மணம் என்ற பெயருடனும், பொது நிகழ்ச்சி என்ற நிபந்தனையுடனும் நாகரிகம் முதிர்ந்த சமூகங்களால் கையாளப்பட்டு வருகின்றன. ஆதித்தமிழர் கள் தங்கள் மணவினைகளை காதல் வயப்பட்டு நடாத்தினார்கள். ஆண் பெண் இணக்கம் ஏற்பட்ட பின்னரேயே தாய் தந்தையர்கட்கும் ஊர்த் தலைவர்கட்கும் தெரியப்படுத்தி விழாச் செய்வது வழக்கமாய் இருந்தது. இவ்வொப்புயர்வற்ற அறிவுடைய மணமுறையைப் பற்றி நாம் நமது சங்க நூல்களில் பரக்கக் காண்பதுடனின்றி, இற்றைக்கும் பர்மா தேசத்திலும், இந்தியாவுடன் ஒரு காலத்தில் ஒன்றுபட்டிருந்த சுமத்ரா, ஜாவா, வாலி முதலிய தீவுகளிலும் காணக்கூடும். ஆதலின் மணமுறைக்குப் புரோகிதருக்கும் யாதொரு சம்பந்தமு மில்லை. எல்லா நிகழ்ச்சிகளிலும் புரோகிதத்தைப் புகுத்திய, பிறந்தது முதல் இறக்கும் வரையில் பார்ப்பனரல்லாத குடும்பங்களில் கடவுள் பெயரைச் சொல்லிக் கொண்டு அவர்கள் காசைப் பறிக்க சூழ்ச்சி செய்த பார்ப்பனர்கள் மணவினையினையும் தமது மகசூலில் சேர்க்காமலாயிருப்பார்கள் எனவும் தமிழர் மணவினையிலும் பார்ப்பன புரோகிதர் புகுந்து கொண்டனர். இது சொற்ப காலமாக அனுசரிக்கப்படும் ஒரு வழக்கமாகும். ஆனால் பார்ப்பன புரோகிதனோ வேறு எந்த புரோகிதனோ இல்லாமல் மணவினை நிகழ்த்தக் கூடுமா? அவ்வாறு நிகழ்த்தினால், அத்தகைய மணங்கள் சட்டப்படி அங்கீகரிக்கக் கூடுமா? என்பது கேள்வி. இத்தகைய கேள்விக்கே நாம்



RangaRakes tamilnavarasam.com

வருந்துகின்றோம். இத்தகைய கேள்வி ஏற்படும் ஒரு நிலைமைக்கும் நாம் மிகவும் துக்கிக்கின்றோம். பார்ப்பனர் அர்த்தமற்ற, தனக்கே விளங்காத சிலவார்த்தைகளை மந்திரம் என்னும் பெயரால் உச்சரித்து; மணமக்கள் முகத்தை சுட்டுப் பொசுக்கி கண்களிலிருந்து நீர்வடியச் செய்து அம்மியை மிதிப்பதும் அருந்ததி பார்ப்பதுமான மூடச் சடங்குகள் சிலவற்றைப் புரிவித்து, ஒவ்வொரு சடங்கிற்கும் "சுவர்ண புஷ்பம்" பெற்று மூட்டை கட்டிக்கொண்டு போனாற்றான் விவாகம் முடிந்ததாக அருத்தம் என்று மதியுள்ளவர்கள் கூறுவார்களா? இடைக்காலத்தில் சில காலம் மாறுதற்கேற்ப ஒரு குருட்டு வழக்கம் பீடித்ததானால் இவ்வழக்கத்தை பின்பற்றித்தான் ஆக வேண்டும் என்பது ஒரு அறிவுடைய நிர்பந்தமா? இந்த நிர்பந்தத்தை நாம் ஏன் அங்கீகரிக்க வேண்டும்? அரசாங்கச் சட்ட மூலமாக பார்ப்பனரை வைத்துத்தான் விவாகம் புரிந்து கொள்ள வேண்டும் என்ற வரையறையை வற்புறுத்துவது, மூடச் சடங்காகிய புரோகிதத்தை அரசாங்கமே ஆதரவு செய்வதாகும். பெரும்பான்மையான தமிழ்மக்கள் பார்ப்பனர்களையே வைத்து விவாகம் செய்து கொள்ளுவது இல்லை. சில காலமாய் நடைபெறும் சீர்திருத்த விவாகங்களிலும் பார்ப்பனர்களும் பார்ப்பனீயமும் நீக்கப் பெற்றுள்ளது. மேலும் தமிழர்களில் பிரம்ம சமாஜம் போன்ற இயக்கங்களைத் தழுவி நிற்பவர்களும் புரோகித முறையை அநுட்டிப்பவர்களன்று. எந்த விதத்தாலும் புரோகிதம் என்ற ஒரு விலாசம் இருக்க வேண்டுமென்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே, விவாக முறையில் புரோகிதர்கள் குறுக்கிடுவதை தமிழ் மக்கள் சுயமரியாதையுடன் நீக்குவார்களாயின், இம்முறையில் நிகழ்ந்த மணங்களை இவ்வரசாங்கமும் சரி, எவ்வரசாங்கமாயினும் சரி அங்கீகாரம் செய்துதான் ஆக வேண்டும். இதை ஒழித்து மலாய் நாட்டில் பார்ப்பனரின்றி செய்த ஒரு மணத்தை மணமாக அங்கீகரிக்க மறுத்த செயலை நாம் வன்மையாய் கண்டிப்பதுடனின்றி திரு.எஸ். வீராசாமி அவர்கள் மேற்கூறிய முறையில் தமிழரின் மனப்பான்மையை எடுத்துக் காட்டி, தமிழர் மணங்கட்கு புரோகிதன் அவசியமில்லை என்று குறிப்பிட்டதையும், நாம் பாராட்டுகின்றோம். திரு.எஸ்.வீராசாமி அவர்களைப் போன்றே நமது கூற்றை ஆதரித்து புரோகிதத்தைக் கடிந்து வெளியிட்டுள்ள திரு.சுப்பையா நாயுடுவின் செயலையும், நாம் மும்முறையும் போற்றுகின்றோம்.

இந்நிலையில் மலாய் நாட்டுக்குச் சென்று தமிழர் உதவியால் வயிறு வளர்க்கும் ஒரு ஐயங்கார் பத்திரிகையாய "தமிழ்நேசன்" புரோகிதத்தை ஆதரிப்பதும், சுயமரியாதை கொள்கைக்கு எதிராகப் பிரசாரம் புரிவதும் வியப்பன்றே.

**குடி அரசு – கட்டுரை – 24.11.1929**



RangaRakes

# திருப்பதி வெங்கிடாசலபதியின் நன்றி கெட்ட தன்மை

திருப்பதி வெங்கிடாசலபதி என்னும் கடவுளால் நமது நாட்டிற்கு உள்ள நஷ்டத்தைப் பற்றி சென்ற வாரம் தெரியப்படுத்தி இருந்தோம். அதாவது, மக்களுக்கு வருஷத்தில் சுமார் ஒரு கோடி ரூபாய் போல் செலவு ஆவதைப் பற்றியும் சுமார் 7,8 கோடி ரூபாய் சொத்து வீணாகிறது என்பது பற்றியும் எழுதி இருந்தோம்.

தேசத்துக்கு இவ்வளவு நாசத்தை உண்டாக்கி இவ்வளவு பூசையும், உற்சவத்தையும், நகையையும், வாகனங்களையும், பூமியையும், கட்டிடங்களையும், ஜமீன்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் கடவுள் சற்றாவது யோக்கியப் பொறுப்பின்றியும் நன்றி அறிதலின்றியும் நடந்து கொள்வதைக் கண்டால் அந்த மாதிரிக் கடவுளை நமது நாட்டில் வைத்திருப்பது முட்டாள் தனமும் பேடித்தனமும் ஆகும் என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில், இவ்வளவு போக, போக்கியத்தையும் அனுபவித்துக் கொண்டு அந்தக் கடவுளின் வேலையை பார்த்து வருபவரும், கடவுளுக்கே தந்தை என்றும், மகன் என்றும் சொல்லத் தகுந்தவருமான மகந்து என்பவருக்கு டைத்தியம் பிடிக்கச் செய்து அவருடைய சிஷ்யர்களையும் ஜெயிலில் அடைக்கச் செய்து போலீசாரால் மகந்துவைப் பிடித்து சென்னை டைத்திய சிகிச்சைக்கு பலாத்காரமாய் கொண்டு போகும்படி செய்திருக்கின்றதென்றால் வெங்கிடாசலபதி கடவுளின் நன்றிகெட்ட தன்மைக்கு வேறு சான்று என்னவேண்டும்?

**குடி அரசு – கட்டுரை – 24.11.1929**



tamilnavarasam.com

# இராமாயணமும் பார்ப்பனீய தந்திரமும்

முதலாவது திரு.ஆச்சாரியார் இராமாயணத்தை ஒரு மத சம்பந்தமான புஸ்தகமாய் கருதுகின்றாரா? அல்லது இலக்கிய சம்பந்தமான ஒரு பொது கதை புஸ்தகமாய் கருதுகின்றாரா? என்பதே நமது கேள்வி. ஒரு சமயம் அவர் அதை இலக்கிய நூலாகக் கருதுவதாயிருந்தால் அந்தப்படி கம்பராமாயணத்தை மாத்திரம் கருதுகிறாரா? அல்லது வால்மீகி இராமாயணத்தையும் சேர்த்து கருதுகிறாரா? அல்லது இரண்டையுமே கருதுகின்றாரா என்பதே இரண்டாவது கேள்வியாகும். நிற்க, திரு.ஆச்சாரியார் தனது பிரசங்கத்தில் "இராமாயணம் நடந்த கதை அல்ல" என்று ஒப்புக் கொண்டுவிட்டார். ஆனால் அதைப் பற்றி மற்றவர்கள் விவகரிப்பது தப்பு, மூடத்தனம் என்கின்றார். இந்த புத்தி இவர்களுக்கு இவ்வளவு நாளாக எங்கு போயிற்று என்று கேட்கின்றோம். இராமாயணம் பொய் என்று நாம் சொன்ன காலத்தில் நம்மை நாஸ்திகர்கள் என்று சொன்ன இந்தக் கூட்டத்தார்கள் இப்போது தாங்களாகவே இராமாயணம் பொய், அதைப்பற்றி ஒன்றும் பேசாதீர்கள் என்று சொல்ல வேண்டிய அவசியம் இப்போது இவர்களுக்கு ஏன் வந்தது? என்று பார்ப்போமானால். இராமாயணக் கதை பூராவையும் வெளியில் இழுத்து, அதன் வண்டவாளத்தை வெளிப்படுத்த தைரியம் கொண்டதால் இப்போது "போதும் போதும் இராமாயணம் நடந்ததல்ல பொய்" என்று சொல்ல வந்துவிட்டார். ஏன் அப்புத்தகத்தில் இருப்பதாக நாம் வெளிப்படுத்தி வந்த விஷயங்களில் ஒரு வார்த்தையைக் கூட ஆக்ஷேபிக்க முடியாமல் போய்விட்டதேதான் என்பதை மாத்திரம் இனி யாரும் ஒப்புக் கொள்ள வேண்டிய விஷயமாய்விட்டது.

"காலானிக்கி வேஸ்தே மூலானிக்கி வொஸ்துரு" என்கின்ற ஆந்திரப் பழமொழிப்படி (பத்துக்கு அடிப்போட்டால் தான் அய்ந்துக்காவது வருவார்கள்) இராமாயணம் ஆரியர் திராவிடர் சரித்திரம் என்று ஆராய்ச்சிக்காரர்கள் சொல்ல வந்த பிறகே தான் இராமாயணம் பொய் என்று பார்ப்பனர்கள் சொல்லித் தீரவேண்டிய அவசியத்திற்கு வந்துவிட்டார்கள். இல்லாவிட்டால் இராமாயண ஆராய்ச்சியால் பார்ப்பனக்கொடுமை வெளியாகி விடும் என்கின்ற பயம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. தவிரவும் திரு.ஆச்சாரியார் 'ராமனை போற்றுகின்றவர்களை எப்படி மூடர்களாகக் கொள்ளுகின்றேனோ அவ்வாறே இராவணனை போற்றுகின்றவர்களையும் மூடர்களாக கருதுகின்றேன்' என்று சொல்லுகின்றார். அப்படியானால் இந்தப் புத்தியும் இவருக்கு இத்தனை நாளாக



எங்கு போய் இருந்தது என்று கேட்கின்றோம். இராவணனை யாரும் கடவுள் என்று சொல்லிப் போற்றுவதே இல்லை. ஆனால், இராமனை கடவுள் அவதாரம் என்றும், கடவுளே என்றும் சொல்லிபோற்றி வணங்குகின்றார்கள். அதுவும் வெகுகாலமாய் அப்படிச் செய்து வருகின்றார்கள். இராவணனையோ என்றால் நேற்று முதற்கொண்டுதான் போற்ற ஆரம்பித்தார்கள். அதுவும் ஏனென்றால் ராமன் கடவுள் அவதாரமல்ல என்று சொன்னவர்களை நாத்திகர்கள் என்றும், மதத்துரோகிகள் என்றும் திரு.ஆச்சாரியார் கூட்டம் சொன்னதால், "சரி அப்படியானால் இராமாயணக் கதைப்படியே இராவணன் யோக்கியன், அவன் போற்றப் பட வேண்டியவன். இராமன் அயோக்கியன், அவன் இழித்துப் பழிக்கப்பட வேண்டியவன்" என்று மெய்ப்பிக்க மக்கள் துணிந்து ஆரம்பித்த பிறகே இப்போது திரு ஆச்சாரியார் "பிச்சை போடாவிட்டாலும் பரவாயில்லை நாயை பிடித்துக் கட்டு" என்கின்ற பழமொழிப்படி யார் ராமனை வணங்கா விட்டாலும் பரவாயில்லை ராவணனைப் போற்ற வேண்டாம் என்று சொல்லித் தீரவேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டார். மற்றும், இராமனுக்கும் இராவணனுக்கும் பெயரளவில் வியாக்கியானம் செய்வதில் இராமன் என்கின்ற பெயரை விட இராவணன் என்கின்ற பெயருக்கு அதிக மதிப்பு கொடுக்கவும் வந்துவிட்டார். ஆனால் அதை பித்தலாட்டமான முறையில் சொல்லுகின்றார். என்னவென்றால் இராமன் என்பது இரா – மன் = இராமன் – இல்லாத அரசன் என்றும் இராவணன் என்பது இராமனின் அண்ணன் என்றும் பொருள்படுவதாக வடமொழியை தென்மொழியில் அர்த்தப்படுத்தி காட்டி ஏய்க்கப்பார்க்கிறார்.

தவிரவும் "இராமாயணம் பொய்க்கதை ஆகையால் இராவணன் பெருமையைப் பற்றிப் பேசுவது மூடநம்பிக்கை" என்கின்றார்.

உண்மையிலேயே திரு. ஆச்சாரியார் மூட நம்பிக்கைக்காக பரிதாபப் படுபவரானால் அவருடைய முதல் வேலை இராமாயண ஆராய்ச்சிக்காரரை யும் இராமாயண இரகசியம் வெளிப்படுத்துபவர்களையும் திருத்துவதல்ல என்றும், மற்றென்னவெனில் ராமாயணத்தின் பெயரையும் ராமன் பெயரையும் சொல்லிக் கொண்டு செட்டிநாட்டில் கொள்ளை அடிக்கும் சோம்பேறி அயோக்கியர்களையும், இராமாயணத்தையும் ராமனையும் உண்மை என்று நம்பிக்கை கொண்டு மேற்படி அயோக்கியர்களுக்கு அள்ளி அள்ளி கொடுக்கும் முழு மூடர்களையும் திருத்த வேண்டியதே முதல் வேலையாகும் என்று மறுபடியும் திரு. ஆச்சாரியாருக்கு சொல்லுகிறோம். மற்றபடி அந்த வேலையை விட்டுவிட்டு "இராமனுக்கு கொடுத்தால் இராவணனுக்கும் கொடுங்கள்" "இராமன் யோக்கியனென்றால் இராவணன் அவனை விட யோக்கியன்" என்று சொல்லுகிறவர்களிடம் வந்து இவர் பரிதாபப்பட வேண்டியதில்லை என்பதே நமது கருத்து. தவிரவும் "ராமன் க்ஷத்திரியனே தவிர பிராமணன் அல்ல" என்கின்றார். இராமன் பிராமணனானாலும், க்ஷத்திரியனானாலும் தவம் செய்ததற்காக ஒரு சூத்திரனைக் கொன்றான் என்று எழுதியிருப்பதால் அவன் பிராமணத் தன்மை கொண்டவனும் பிராமணனை



RangaRakes tamilnavarasam.com

விட அதிகமான அயோக்கியனும் என்று தான் கொள்ள வேண்டியதே தவிர அதில் ஒன்றும் விதிவிலக்கு இருப்பதாகவும் நமக்கு சிறிதும் தோன்றவில்லை.

இனி கம்பரைப் பற்றி திரு. ஆச்சாரியார் மிகப் புகழ்ந்து அவருக்கு வக்காலத்து பேசுகிறார். திருவள்ளுவரை தலைகாட்டாமல் அடித்த இந்தப் பார்ப்பனர்களுக்கு கம்பர் மீது இவ்வளவு கருணை வந்ததற்குக் காரணம் என்னவென்றுப் பார்த்தாலே கம்பர் யோக்கியதை நன்றாய் விளங்கும். கம்பரை ஷேக்ஸ்பியர், ஹோமர், ஷெல்லி முதலிய மேல்நாட்டு கவிகளுக்கு ஒப்பிட்டு ஷேக்ஸ்பியர் வேண்டுமா? இந்தியா வேண்டுமா? என்று ஒரு ஆங்கிலேயனைக் கேட்டால் அவன் ஷேக்ஸ்பியர் வேண்டுமென்றுதான் சொல்வான் என்று இதற்கு உதாரணங்காட்டி கம்பராமாயணம் என்கின்ற காவியம் இந்திய நாட்டை விடசிறந்தது என்று சொல்லுகின்றார். அதாவது இந்தியாவை இழந்தாவது ராமாயணத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கிறார். இது சிறிதாவது பொருத்தமுள்ள உதாரணம் என்றோ அறிவுள்ள உதாரணம் என்றோ யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம். ஷேக்ஸ்பியரையும் ஷெல்லியையும் ஆங்கிலேயர்களில் எந்த முட்டாளும் கடவுளாகக் கும்பிடுவதில்லை என்பதையும் ஷேக்ஸ்பியரிலும் ஷெல்லியிலும், வரும் நாடக பாத்திரர்களுக்கு ஆங்கிலேயரில் எந்த மடையனும் கோயில்கட்டி, கல்யாண உற்சவமும், தெப்ப உற்சவமும், வைரத்திலும் செகம்பிலும் நாமமும் நகையும் போடுவதில்லை என்பதையும் திரு.ஆச்சாரியார் அறியாரா? அல்லது அறிந்தே ஏய்க்கிறாரா? என்று கேட்கின்றோம்.

தவிரவும் நமக்கு இராமாயணத்தில் உள்ள தகராரெல்லாம் ராமனையும் சீதையையும் அநுமாரையும் கடவுளாகக் கும்பிடுவதிலேயே ஒழிய கவி நயத்தில் அல்ல என்பதை திரு.ஆச்சாரியார் தெரிந்து கொள்ளாதது விசனிக்கத் தகுந்ததேயாகும். தவிரவும் திரு ஆச்சாரியார் கம்பரானவர் உலக நன்மையை கோரி பொருள், போகம், வேகம் ஆகியவைகளை மக்களுக்கு ஊட்டுவதற்காக ஒரு வீரனது கதையை எழுதியதாக சொல்லுகின்றார். இந்த இடத்தில் திரு.ஆச்சாரியாரின் கருத்து கம்பராமாயணமானது மக்கள் ஒழுக்கத்திற்கேற்ற கதைச்சுவை உடையது என்பதேயாகும். இங்குதான் கம்ப இராமாயணத்திற்கும் நமக்கும் தகராறு இருக்கின்றது என்கின்றோம். அதாவது ஆச்சாரியார் கருத்தில் கம்பர் ராமனை வீரனாகக் கொண்டு எழுதினாரா அல்லது இராவணனை வீரனாகக் கொண்டு எழுதினாரா என்றும் கேட்பதோடு கம்பர் ராமனைத் தான் வீரனாக்க கொண்டு எழுதி இருப்பார் என்றே எண்ண வேண்டியிருக்கின்றது என்றும் ஏனெனில் அதற்கு பெயர் ராமாயணம் என்று ஏற்பட்டிருப்பதால் இராவணனைக் கொண்டல்ல என்பது வெள்ளிடை மலையாகும். திரு. ஆச்சாரியாரின் இராமாயண ஆராய்ச்சி அறிவுப்படி இராமாயண இராமன் வீரனாவானா? என்பதே நமது கேள்வி. சரி கம்பர்தான் ராமாயணத்தை வீரர் கதையாகக் கொண்டெழுதினார் என்று வைத்துக் கொண்டாலும் வால்மீகி உலக நன்மைக்காக ராமாயணத்தை வீரர் கதையாக எழுதினாரா? அல்லது பார்ப்பனர்



களின் வயிற்றுப் பிழைப்பு கதையாக எழுதினாரா என்று கேட்கின்றோம்.

தவிர திரு.ஆச்சாரியார் "ஷேக்ஸ்பியர் ஆங்கிலேயராயிருந்தும் டென்மார்க்குஅரசரைப் பற்றி ஒரு நாடகம் எழுதினது போல் கம்பரும் இராமர் கதையை எழுது முறையா" என்று சொல்கின்றார்.

இதை எதற்காக எடுத்துச் சொன்னார் என்பதற்கு ஆதாரம் அப்பிரசங்கத்தில் காணப்படவில்லையானாலும் ஒரு திராவிட கவி ஆரிய (வடநாட்டு) அரசன் கதையை ஏன் எழுதினார் என்பதற்கு சமாதானம் சொல்லவே இதைச் சொல்லி இருக்கின்றார். ஆகவே, அக்கதை வடநாட்டு அரசன் கதை என்பது திரு.ஆச்சாரியாரை அறியாமலே வெளியாய்விட்டது பற்றி மகிழ்ச்சி ஒருபுறமிருந்தாலும், ஆச்சாரியார் விஷயத்தில் பரிதாபப் படாமலுமிருக்க முடியவில்லை. கம்பர் ஒரு வீரன் கதை எழுதுவதாக கருதி எழுதியிருப்பாரானால் இந்து மத வருணாச்சிரம தர்மங்கள் அதில் புகுந்திருப் பதற்கு என்ன காரணம் என்பதற்கு திரு.ஆச்சாரியார் ஒரு சமாதானமும் சொல்லவே இல்லை. தவிர ராமன் உண்மை, நன்மை, அழகு என்கின்ற மூன்று லட்சியங்களின் பிரதிநிதி என்று சொல்லுகின்றார். ஆனால் ராமனிடம் என்ன உண்மை, என்ன நன்மை, என்ன அழகு இருந்தது என்று மாத்திரம் எடுத்துச் சொல்லவில்லை. ஆகவே, திரு.ஆச்சாரியார் கூட்டத்தினிடம் உள்ள இந்த மனப்பான்மையின் யோக்கியதையை வெளிப்படுத்தத்தான் இராமாயண ஆபாசம், இராமாயண இரகசியம், இராமாயண ஆராய்ச்சி ஆகியவைகள் வெளியாக வேண்டியிருக்கின்றது என்பதை பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டுகின்றோம். தவிரவும் ராமன் என்பதற்கு மகிழ்விப்பவன் என்றும் ராவணன் என்பதற்கு அழச் செய்பவன் (கஷ்டப்படுத்துபவன்) என்றும் பொருள் கூறுகின்றார். இது எந்த அகராதியில் இருக்கின்றதோ தெரியவில்லை. எப்படி இருந்தாலும் இராமாயணக் கதைப்படி இராமன் யாரை மகிழ்வித்தான்? இராவணன் யாரை அழ வைத்தான்? என்பது வெளியாக வேண்டாமா என்று கேட்கின்றோம். தவிரவும் இராவண ராஜ்யத்தில் பொருள் செருக்கு, கல்வி செருக்கு இருந்ததாக திரு.ஆச்சாரியார் சொல்லுகின்றார். இதற்கு ஆதாரம் இலங்கை 700 யோசனை தூரமும் உலகில் உள்ள உயர்ந்த பொருள்கள் எல்லாம் அங்கு இருந்தனவாம். ஆனால் ராமராஜ்யத்தில் என்ன இருந்தது என்பதே இவர் காட்டவே இல்லை. அங்கிருந்த பார்ப்பன செருக்கையும், அறுபது ஆயிரம் பெண்டாட்டியை கட்டிக் கொண்டு பிள்ளையில்லாமல் யாகம் செய்து பிள்ளை பெற்ற ஆண்மையற்ற பார்ப்பனியச் செருக்கையும், பெண்டாட்டி மீது சந்தேகப்பட்டு கர்ப்பத்துடன் காட்டில் கொண்டு போய் விட்டுவிட்ட அற்ப புத்தி செருக்கையும், கொடுமைப் புத்திச் செருக்கையும் அடியோடு மறைத்து விட்டார். மொத்தத்தில் ராமாயணம் நடந்த கதையா? பொய்க்கதையா? என்பது நமது கவலையே அல்ல. ஆனால் எந்தக் காரணத்தைக் கொண்டாவது ராமாயணக் கதை மனிதத் தன்மையும் ஒழுக்கமும் படிக்கத் தகுந்ததுமான கதையா என்பதே நமது கேள்வி. இதற்கு ஒரு வார்த்தையில் பதில் சொல்லுவதற் கில்லாமல் வெறும்



RangaRakes tamilnavarasam.com

தந்திரமும் சூழ்ச்சியும் பித்தலாட்டமும் செய்வதில் என்ன பலன் அடையக்கூடும் என்று இந்தக் கூட்டத்தார்கள் நினைக்கிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

தவிர கம்பராமாயணத்தை கவி அழகுக்காக காப்பாற்ற வேண்டும் என்கின்றார். அப்படியானால் வால்மீகி ராமாயணத்தை என்ன அழகுக்காக காப்பாற்ற வேண்டும் என்றோ அல்லது அதை ஒழிக்க வேண்டுமென்றோ திரு.ஆச்சாரியார் ஒரு வார்த்தைகூட சொல்லவே இல்லை.

சாதாரணமாக இந்தக் கூட்டத்தார் நாம் வால்மீகி ராமாயணத்தைக் குற்றஞ் சொல்லும்போது கம்பர் “கவி நயத்தைக்” கொண்டு வந்து போட்டுத் தப்பித்துக் கொள்ளுவதும் கம்பர் கவிநயத்தைக் குற்றம் சொல்லும் போது வால்மீகி ராமாயணத்தின் “தத்துவார்த்தத்தை”ச் சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பதும் குலதர்மமாகப் போய்விட்டது.

தவிர கம்ப ராமாயணத்தை உண்மைக் கதை என்று நினைத்திருந்தால் வால்மீகி எழுதியிருப்பதற்கு மாறுபாடாக எழுதி இருப்பாரா என்று திரு.ஆச்சாரி யார் கேட்கின்றார். நாமும் கம்பராமாயணத்தை உண்மைக் கதை என்று நம்பினார் என்று சொல்ல வரவில்லை. ஆனால் கம்பரும் பார்ப்பனர்களும் சேர்ந்து மற்ற மக்களை ராமாயணம் உண்மைக் கதை என்றும் ராமன் கடவுள் என்றும் நம்பச் செய்வதற்காக செய்த சூழ்ச்சி என்று தான் சொல்கின்றோம். தவிரவும் கம்பருக்கு சமஸ்கிருதம் தெரியாது என்றும், வால்மீகி ராமாயணத்தை பார்ப்பனர் மொழி பெயர்த்துச் சொல்ல அதை அனுசரித்து கவி உண்டாக்கியதாகவும், நினைத்தபடி சிலபுரட்டுகள் இருப்பதால் கம்பருக்கு வால்மீகி ராமாயணத்தில் இன்னது இருந்தது என்று தெரியுமா என்று நினைப்பதற்கில்லாமல் இருக்கின்றது என்று சொல்லி சில கம்பதாசர்கள் தப்பித்துக் கொள்வதையும் பார்த்திருக்கிறோம். தவிர திரு.ஆச்சாரியார் கடவுள் உண்டா இல்லையா என்கின்ற விவகாரமே இந்து மதத்தில் இல்லை என்றும் ஒவ்வொருவனும் தன்னைத் தானே கடவுள் என்று நினைத்துக் கொள்வதே வேதத்தின் முடிவான கொள்கை என்றும் ஒவ்வொருவருடைய உயர்ந்த லட்சியங்களே கடவுள் என்றும் சொல்லுவதோடு மற்றும் அதற்கு நேர் விரோதமாய் ரசாயன ஆராய்ச்சியில் கடவுள் இல்லையென்றும், வான சாஸ்திர ஆராய்ச்சியில் கடவுள் இல்லையென்றும் இதை ஒப்புக் கொள்ளாதவர்களே நாஸ்திகர்கள் என்றும் சொல்லுகின்றார். இது கடவுள் சம்பந்தமாக மக்களை குழப்பத்திற்குள்ளாக்குவதையும் சமயம் போல் பேசத் தக்கபடியான முன்னுக்குப் பின் முரணையும் காட்டுகின்றது. இதைப் பற்றி நமக்கு கவலை இல்லை. ஏனெனில், சயன்சுக்கும் அதாவது விஞ்ஞான சாஸ்திரத்திற்கும் கடவுளுக்கும் சண்டை துடங்கியாய் விட்டது.

கடவுளை நிலை நிறுத்த எவ்வளவு பெரிய அவதாரங்கள் வந்தாலும், மதங்களை நிலை நிறுத்த எவ்வளவு பெரிய கடவுள் தன்மை வாய்ந்தவர்கள் வந்தாலும் யார் தவங்கிடந்தாலும் அதுவே பார்த்துக் கொள்ளும். கடைசியாக, ராமாயணம் என்பது எந்த முறையிலும் எந்த அர்த்தத்திலும் நாட்டுக்கு மனிதத் தன்மைக்கு ஏற்றதல்ல என்பதை எடுத்துக்காட்டவும் இதற்கு விரோதமாய் கிளம்பும் எதிர்ப்புகளுக்கு சமாதானம் சொல்லவும், இந்த வியாசமானது இவ்வளவு நீட்டி எழுதப்பட்டது என்பதோடு இதை முடிக்கின்றோம்.

*குறிப்பு :- 17.11.1929 குடி அரசு தொடர்ச்சி*

**குடி அரசு - கட்டுரை - 24.11.1929**



RangaRakes

tamilnavarasam.com

# இந்திய ராஜாக்களும் மடாதிபதிகளும்

சென்ற வாரத்திற்கு முந்திய வாரத்தில் "இந்தியக் கடவுள்கள்" என்பதைத் தலையங்கப் பெயராகக் கொண்டு ஒரு தலையங்கம் எழுதியிருந்தோம். அதாவது இந்தியாவில் உள்ள பதினாயிரக்கணக்கான கோயில்களில் ஒன்றாகிய திருப்பதி கோயில் என்கின்ற ஒரு கோயிலுக்கு மாத்திரம் வருடம் ஒன்றுக்கு 20 லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட வரும்படி உள்ளதென்றும், இந்த வருமானம் பெரிதும் யாத்திரைக்காரர்களால், அதாவது, இமயமலை முதல் கன்னியாகுமரி வரையிலிருந்து செலவு செய்து வரும் யாத்திரைக்காரர்களால், காணிக்கையாகவும் வேண்டுதலை என்னும் பெயரால், தங்கம், வெள்ளி, ரத்தினங்கள் ஆகிய நகைகள் முதலிய அரும் பொருள்களாகவும் மற்றும் பலவாறாய் கொடுக்கப்படுகின்றதென்றும், மேலும் திருப்பதி என்கிற இந்த ஒரு வேதஸ்தானத்திற்கு மாத்திரம் கட்டிடம், நகை, வாகனம், சாமான், பூமி ஆகியவைகளில் ஏழு கோடி ரூபாய்க்கு மேல்பட்டும் மதிப்பிடக்கூடிய சொத்துக்கள் முடக்கமாய் இருக்கின்றதென்றும், இவைகளால் மொத்தத்தில் கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு ஒருகோடி ரூபாய் போல் திருப்பதி வெங்கிடாசலபதி சாமியால் மாத்திரம் ஏழை இந்திய தேசப்பணம் வீணாகின்றதென்றும், இன்னும் இதுபோல் இந்தியாவில் எத்தனையோ கடவுள்களும், புண்ணியஸ்தலங்களும் இருக்கின்றன வென்றும் அவைகளுக்கும் இது போலவே வரவு செலவு கணக்குகள் போட்டுப் பார்த்தால் மேற்கொண்டும் இத்துடன் இனி எத்துணையோ கோடி ரூபாய்களாகும் என்றும் அதாவது இப்போது நாம் கொடுமையான அரசாங்கம் என்று சொல்லும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நம்மிடம் "மிகக் கொடுமையாய்" வசூலிக்கும் வரியைவிட குறையாத தொகையாகும் என்றும், ஆகவே இந்தியாவின் தரித்திரத்தையும், கல்வி, பகுத்தறிவு, தொழில்திறம், ஆராய்ச்சி ஆகியவைகள் இல்லாமையையும், அடிமைத்தனத்தையும் ஒழிக்க வேண்டுமானால், முதலாவது இவ்வித கடவுள்களும், புண்ணியஸ்தலங்களும் பூகம்பத்தின் மூலமோ, புயல் காற்றின் மூலமோ, சமுத்திரம் பொங்கி வருதல், மண்மாரி, கல்மாரி, பேரிடி, எரிமலைக் கொந்தளிப்பு இவைகள் மூலமோ, அடியோடு அழிந்து பாழாகி மண்மூடிப் போனாலொழிய வேறு மார்க்கமில்லை என்பதாகவும் பொருள்பட எழுதி இருந்தோம்.

ஆனால், அந்த வியாசம் எழுதி எழுதுகோலை கீழேவைக்கும் முன்னரேயே, வியாசம் எழுதிய எழுத்துக்களின் இங்கியின் ஈரம் புலர்வதற்குள்ளாகவே, இந்திய மடாதிபதிகள், அரசர்கள் என்னும் தலைப்புப் பெயர்கொடுத்து ஒரு தலையங்கம் எழுத நேர்ந்ததற்கு நாம் மிகவும் வருந்துகின்றோம். என்னை? திருப்பதிக் கடவுளுக்கு அடுத்தபடியாக திருவாங்கூர் அரசாங்கம் என்பது பற்றியும், சங்கராச்சாரிகள் என்பது பற்றியும் நாம் எழுத நேர்ந்ததால் திருவாங்கூர் அரசாங்கம் என்பது சுதேச சமஸ்தானங்கள் என்று இந்திய அரசர்களால் ஆளப்படும் தேசங்களில் இது ஒரு நடுத்தர அரசாங்கமாகும். இந்த அரசாங்கத்தின் எல்லை சென்னை மாகாண ஜில்லாக்களில் இரண்டு ஜில்லாக்களுக்கு அதாவது சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களுக்கு சமானமானதாக இருக்கும். இதன் சனத்தொகை சுமார் நாற்பது லட்சமாகும். இதன் பரப்பு 7500 சதுரமைல்களாகும். இந்த நாற்பது லட்சம் சனத்தொகையில் ஏறக்குறைய சரி பகுதி சனங்கள், அதாவது இருபது லட்சம் பேர்கள் இந்துக்கள் அல்லாதவர்களான கிறிஸ்துவர்களும், மகமதியர்களுமே யாவார்கள். எஞ்சி உள்ள இருபது லட்சத்திலும் சுமார் பன்னிரண்டு லட்சம்பேர்கள் தீண்டக்கூடாதவர்கள், தெருவில் நடக்கக்கூடாதவர்கள், கண்ணில் தென்படக்கூடாதவர்கள் ஆகிய மிருகங்களிலும் கீழானவர்கள் ஆவார்கள். இப்படியாக முப்பத்தியிரண்டு லட்சம் சனங்கள் போக எஞ்சியுள்ள சுமார் எட்டு லட்சம் பேர்களே, "ஜாதி இந்துக்கள்" அதாவது, மனித உரிமையுடையவர்கள் ஆவார்கள். இதில் 50,000 பேர்கள் பார்ப்பனர்கள். இப்படியாக 40 லட்சம் சனத்தொகை கொண்ட இந்த அரசாங்கத்திற்கு வருஷாந்திர (ரிவினியூ) வருமானம் சுமார் எழுபது லட்ச ரூபாயாகும். எனவே, இந்த நிலையில் உள்ள மேற்படித் திருவாங்கூர் ராச்சியத்தில் தேவஸ்தான சம்பந்தமாக செலவு செய்யும் தொகையோ பதினேழு லட்ச ரூபாயாகும். இந்த 17 லட்ச ரூ. தொகையானது இந்து மத சம்பந்தமான தேவஸ்தானங்களில் செலவு என்று சொல்லப் பட்டாலும், இவைகள் ஏறக்குறைய, ஏன் முழுவதும், மேலே காட்டப்பட்ட 50 ஆயிரம் பார்ப்பனர்களுக்கே அவர்களது சாப்பாட்டிற்கே செலவு செய்யப்பட்டு வருகின் றது. ஒரே அரசன் தனது ராச்சியத்தில் உள்ள எல்லா மக்களிடத்திலிருந்தும் வரிவசூலித்து ஒரு 'ஜாதி'க்கு மாத்திரம் அதுவும் அநேகமாக வரி கொடுக்கக் கூடாத ஜாதியும், கஷ்டப்படாமல் பிறர் உழைப்பில் தேகம் நோகாமல் வாழ் கின்ற ஜாதியும், தங்களைத் தவிர மற்ற மக்களெல்லாம் கீழ்ஜாதி, இழிகுலத்தவர் கள், தங்களது வைப்பாட்டி மக்களாய் இருக்கத் தகுந்தவர்கள் என்று கருதிக் கொண்டிருக்கும் ஜாதியுமாகிய பார்ப்பனர்களுக்கே போய் சேருகின்றது என்றால், அந்த ராச்சியத்தின் நீதிக்கும் புத்திக்கும் வேறு எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை. அந்த ராச்சியத்தில் உள்ள பார்ப்பனர்கள் எத்தனை பேர்களானாலும் மற்றும் வெளி நாட்டிலிருந்து அந்நாட்டுக்குச் சென்று குடியேறும் பார்ப்பனர்கள் எத்தனை பேர்களானாலும் அவர்கள் அத்தனைப் பேருக்கும் ஆண், பெண், குழந்தை, குட்டிகள் சகிதம் அவர்கள் எந்த வேலையில் எவ்வளவு சம்பாதித்தாலும், எந்த உத்தியோகத்தில் எவ்வளவு சம்பளம் பெற்றாலும், எந்த வியாபாரத்தில் எவ்வளவு லாபம் அடைந்தாலும், அதைப் பற்றி சிறிதும் கவலையில்லாமல் பார்ப்பனர் என்கின்ற பேருக்கு மாத்திரம் தினம் இரண்டு



RangaRakes tamilnavarasam.com

வேளை கோயிலிலும் ஊட்டுப்பரை என்னும் சாப்பாட்டு சத்திரங்களிலும் தாராளமாகவும் நிரந்தரமாயும் சாப்பாடு போடப்பட்டு வருகின்றது. இது நிற்க; மற்றபடி, "பண்டிகை நாட்களிலும் "புண்ணியநாள்"கள் "விரதநாள்கள்" என்பவைகளிலும் சிராத்த நாள்களிலும் மிகுதியும் விசேஷமான சாப்பாடும், தவிர பணமும் கால், அரை, ஒன்று என்பதாக தட்சணையும் கொடுக்கப்பட்டு வருகின்றது. இதுதவிர, மாதம் தவறாமல் உற்சவங்களுக்கும் இப்படியே நடக்கின்றது. இவைகள் தவிர அந்த நாட்டு பார்ப்பனரல்லாத உயர்ந்த ஜாதிபெண்கள் என்பவர்கள் பார்ப்பனர்களை புணருவது மோட்ச சாதனம் என்றும் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. இதை தவிர ஆறு வருஷத்திற்கு ஒரு முறை ஜபம் என்னும் பெயரால் சுமார் எட்டு லட்ச ரூபாய் செலவில் ஒரு சடங்கும் கொண்டாடப்படுகின்றது. இச்சடங்கானது 56 நாள்களுக்கு தொடர்ச்சியாய் நடத்தப்படுவதாகும். இந்த ஐம்பத்தியாறு நாள்களுக்கும் சுமார் பதினையாயிரம் பார்ப்பனர்கள் வரை மூன்று வேளை உணவுகளும், ஒவ்வொரு வேளைக்கும் பத்து இருபது வகை காய்கறிகளுட னும், 5, 6 வகை பலகாரங்களுடனும், 2, 3 வகை பாயாசங்களுடனும், 2, 3 வகை அப்பளங் களுடனும் விருந்துகள் நடக்கும். இவ்விருந்து செய்வதற்காக சமையல் காரர்கள் மாத்திரம் தினம் ஆள் ஒன்றுக்கு இரண்டு, மூன்று ரூபா கூலியில் 600, 700 பேர்கள் அமர்த்தப்படுவார்கள். தவிரவும் மேற்கண்ட பதினை யாயிரம் பேர்களுக்கும் தினம் இவ்வித விருந்தளிப்பதுடன் நபர் ஒன்றுக்கு நாலணா எட்டணா ஒரு ரூபாய் வீதம் தட்சணையும் கொடுப்பார்கள். மற்றும் ஆயிரக்கணக்கான பார்ப்பனரல்லாதார் குழந்தைகளை உடன் கூட்டிக் கொண்டு போய் அவைகளையும் பார்ப்பன பிள்ளைகள் என்று காட்டி அவைகளுக்கும் தட்சணை வாங்கிக் கொள்ளுவார்கள். அன்றியும் தூர தேசங்களில் இருந்து வரும் பதினாயிரக்கணக்கான நம்பூதிரி பார்ப்பனர்க ளுக்கு போக வர பிரயாணச் செலவும் சாப்பாடு, தட்சணையும் கொடுத்து ஆள் ஒன்றுக்கு ஒவ்வொரு கட்டில் மெத்தை, இரண்டு தலையணை, சால்வை நான்கு, நான்கு ஜோடி வேஷ்டிகள் முதலியவைகளும் கொடுப்பார்கள். மற்றும் இவை போன்ற பல செலவுகளுக்காக மேற்கண்ட எட்டு லட்ச ரூபாயும் 56 நாள்களில் பஞ்சு பஞ்சாய்ப் பறந்து செலவாகிவிடும்.

இப்படி செலவு செய்து நடத்தப்பட்டும். இந்த முறை ஜபமானது எதற்காக என்றால், சுமார் 200 வருஷத்திற்கு முன் இருந்த ஒரு ராஜா அந்நாட்டில் செய்த ஏதோ ஒரு சிற்றரசர்கள் யுத்தத்தில் சில பார்ப்பனர்கள் இறந்து போனதால் அந்தப் பாவம் தீர்ந்து தங்களுக்கு சந்ததி விர்த்தியா வதற்கு பிராயச்சித்தமாக இப்படி இந்த இருநூறு ஆண்டுகளாக ஆறு வருஷத்திற்கு ஒருமுறை எட்டு லட்ச ரூபாய் (அதாவது, அந்த பார்ப்பனர் களின் குடும்பத்திற்கு போய் சேரும்படி) செலவு செய்து முறை ஜபம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த மாதிரியான முட்டாள்தனமான கொள்கை கள் உடையவர்களாகிய இந்து அரசர்களால் இந்தியா ஆளப்பட்டு வந்து இருந்ததினால்தான் இன்றைய தினம் இந்தியா ஆயிரக்கணக்கான



வருஷங்களாக அந்நியநாட்டு நன்மையின் பொருட்டு அன்னியர்களால் ஆளப்படுவதில் ஏதாவது ஆச்சரியமிருக்க முடியுமா என்று கேட்கின்றோம். நிற்க இந்தப்படி ஆறு ஆறு வருஷத்திற்கு ஒருமுறை எட்டு எட்டு லட்ச ரூபாய் செலவு செய்து முறை ஜெப பிராயசித்தம் செய்து வந்தும், அந்த ராஜாங்கத்திற்கு சந்ததி இல்லாமல் அடிக்கடி சுவீகாரம் செய்துதான் பிள்ளைகள் உண்டாக்கி பட்டம் கட்டி ஆளப்பட்டு வருகின்றது. இதை அந்த ராஜியத்திலுள்ள ஒவ்வொரு ராஜாக்களும் ஆண்டு வந்திருந்தும், இம் மாதிரியான மூடநம்பிக்கை இவர்களை விட்டுப் போகவில்லையானால், இவர்கள் ஒரு நாட்டை ஆள யோக்கியதை உடையவர்களா என்று கேட்கின் றோம். நமது இந்து கடவுள்களைவிட இந்து ராஜாக்களால் இந்திய நாட்டு செல்வங்கள் இம்மாதிரி மதத்தின் பேராலும், சடங்கின் பேராலும் வருஷம் வருஷம் பல கோடிக்கணக்கான ரூபாய்களாக பாழ்படுத்தப் பெறுகின்றன.

திருவாங்கூர் ராஜாங்கம் வருஷம் வருஷம் இந்தப்படி இவ்வளவு லட்சரூபாய்கள் மத சம்பந்தமாகவும், சடங்கு சம்பந்தமாகவும் செலவு செய்து வந்தும் இன்றைய தினம் தோட்டத்தில் பகுதி கிணறு என்பது போல் அந்த ராஜாங்கத்தில் உள்ள மக்களில் அரைவாசிப்பேர் கிறிஸ்துவர்களும் மகமதியர் களுமாக இருக்கவும், மீதியிலும் அரையே அரைக்கால் வாசிப்பேர் "சண்டாளர்" அதாவது நிழல் கூட மேல்படக்கூடாதவர்களாக இருக்கவும், ஆன நிலையில் இருக்கின்றதென்றால் இந்த மதமும் சடங்கும் ஒரு காதறுந்த ஊசிக்காவது உபயோகப்பட்டிருக்கின்றதா என்று தான் கேட்கின்றோம். கடந்த ஒரு ஆயிர வருஷ காலமும் இந்தியாவின் மற்றபாகமும், சுதேச அரசர்களால் ஆளப்படும் சுயராஜ்ஜிய தேசமாய், ராம ராஜ்ஜிய தேசமாய் இருந்திருக்கு மானால், இந்தியாவிலுள்ள மலைகள் எல்லாம் உடைக்கப்பட்டு கோயில் களாகவும், பாறைகள் எல்லாம் உடைக்கப்பட்டு சாமிகளாயும், சொத்துக்கள் எல்லாம் அந்த சாமிகள் பேரில் எழுதிவைக்கப்பட்ட மானியங்களாகவும், பெண்களில் அரை வாசிப் பேருக்கு மேலாக அந்த சாமிக்கு பொட்டுக்கட்டி விடப்பட்டு தாசிகளாகவும், மற்றும் அரைவாசிப்பேர் பார்ப்பனர்களைப் புணர்ந் தால் மோட்சம் என்று கருதிக் கொண்டிருக்கின்றவர்களாகவும், இருப்பதோடு, இன்றைய தினம் காப்பிக்கடையில் எச்சில் கிண்ணம் கழுவும் பார்ப்பனர் முதல் தாசித் தெருவில் தரகுக்கடை வைத்திருக்கும் பார்ப்பனர் வரை ஒருவர் தவறா மல், ரிஷிகளாகவும், முனிவர்களாகவும் சங்கராச்சாரிகளாகவும், மடாதிபதி களாகவும், ஜீயர்களாகவும் குலகுருக்களாகவும், மகந்துகளாகவும் இருந்திருப்ப தோடு பார்ப்பனர் தவிர மற்றவர்கள் எல்லாம் அந்தப் பார்ப்பனர்களுக்கு தொண்டு செய்து கொண்டு அவர்கள் எச்சிலையில் மீதி விட்டதைப் பொறுக்கி சாப்பிட்டு கொண்டும், அவர்கள் கட்டி கிழித்து தெருவில் எறிந்து விட்ட கந்தைகளை கட்டிக்கொண்டு பார்ப்பனர்கள் வீட்டு வாயில்களில் மேல் வேஷ்டியில்லாமல் முழங்காலுக்குக் கீழாக துணி தொங்காமல் சுருட்டிக் கட்டிக் கொண்டு, இடதுகையை மடக்கி வலது கச்சத்தில் வைத்து வலது கையால் வாயைப் பொத்தி நின்று கொண்டிருக்க வேண்டி இருக்குமா? அல்லவா



RangaRakes tamilnavarasam.com

என்பதை இன்றையதினம் திருவாங்கூரைப் பார்த்த எந்த தேசியவாதியாவது, மதத்தைக் காப்பற்ற தவம் கிடக்கும் மிதவாதியாவது, சடங்கைக் காப்பாற்ற உயிரைவிடும் ஆஸ்திகவாதியாவது ஆட்சேபிக்க முன்வரக் கூடுமா என்று கேட்கின்றோம். இந்த இருபதாவது நூற்றாண்டில் உலகமே விஞ்ஞான சாஸ்திர ஆட்சியில் இருக்கும்போது நமது, நாட்டை இம்மாதிரி கடவுள்களும், சுயராஜ்ய அரசர்களும் பாழாக்குவதைப் பற்றியும் இழிவு படுத்துவதைப் பற்றியும், ஒருவருக்காவது வயிறுபற்றி எரியவில்லையானால், நெஞ்சம் குமுரவில்லையானால், இந்நாட்டுக்குத் தேசிய உணர்ச்சியோ தேசியச் சுயமரியாதையோ கடுகளவாவது இருக்கின்றதா என்று கேட்கின்றோம். தேசியம், தேசியம் என்று கடந்த அய்ம்பது வருடகாலமாய் அடிப்பட்ட நாய்கள் தங்கள் வீட்டு வாசற்படியில் நின்று கொண்டு குரைப்பது போல், நாம் எல்லோரும் தான் குரைத்து வருகின்றோம். சந்து பொந்துகளில் எல்லாம் தேசீய உணர்ச்சியை ஊட்ட வேண்டும் என்று வானத்துக்கும் பூமிக்குமாக துள்ளித் துள்ளி குதித்து நமது தேசீயவீரத்தைக் காட்டுகின்றோம். பூரணசுயேச்சை வேண்டுமென்கின்றோம். எப்படி இருந்தும் இந்து சாமிகளின் கொள்ளைகளையும், இந்து அரசர்களின் முட்டாள் தனங்களையும், இந்து மதத்தின் அயோக்கியத்தனங்களையும், ஒரு மயிர்க்கால் கூட அசைக்க நம்மால் முடியவில்லையே என்றால், இப்படிப்பட்ட நம்மால் இனி எப்படி 20 மைல் பீரங்கியையும், மணிக்கு 500 மைல் வேகம் போகும் ஆகாயக்கப்பல் வெடிகுண்டையும், விஷப்புகைத் துப்பாக்கியையும் சிறிதாவது அசைக்க முடியும் என்றுதான் கேட்கின்றோம்.

பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்து ராணுவச் செலவைப் பற்றி பிரமாதமாய்ப் பேசுகின்றோம்: செலவு சற்று அதிகமென்பதை நாம் ஒப்புக் கொள்ளுகின்றோம். ஆனாலும் அந்த ராணுவ பலத்தின் ஒரு பாகத்தால்தான் இன்று நாம் 'எமது சொத்து', 'எமது பெஞ்சாதி', 'எமது அபிப்பிராயம்' என்று சொல்லிக் கொள்ள வசதியுடையவர்களாய் இருக்கின்றோம் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டி இருக்கின்றது. அன்றியும், அது இல்லாவிட்டால் இன்றைய தினம், நமது ஜமீன்களும் பாளையங்களும் மற்றும் அதுபோன்ற பாச்சா சாக்கோக்களும் மனுதர்மிகளும் நம்மை என்ன செய்திருப்பார்கள் என்பது நமக்குத் தெரியும். எனவே இப்படியே யின்றியமையாத செலவைக் கூட அடியோடு கண்டித்து ராணுவமே வேண்டியதில்லை என்கின்ற நமது தேசியம், இந்த சாமிகள் கொள்ளையையும் மதத்தின் கொள்ளையையும், இந்திய அரசர்கள் முட்டாள்தனக் கொள்ளையையும் சிறிதுகூட கண்டிக்க முன் வருவதில்லையே. அன்றியும் இவற்றைப் பற்றிப் பேசுவது தேசியமல்ல என்பதாக நமது பூரண சுயேச்சைவாதிகளால் வேதக்கட்டளையும், வெளிப்படுத்தப்பட்டாய்விட்டது. நிற்க; இம்மாதிரி முட்டாள் அரசாங்கத்தையும், அக்கிரமத்தையும் அயோக்கிய தேசியத்தையும் இனியும் வைத்துக் கொண்டு வெறும் பார்ப்பனர்களை மாத்திரம் குற்றம் சொல்வதில் ஏதாவது பொருள் இருக்க முடியுமா என்றும் கேட்க வேண்டி இருப்பதற்கு வருந்துகின்றோம். இன்றைய தினம் திருவாங்கூர் பார்ப்பனர்களுக்கு நாம் என்ன புத்திமதி கூறுவது என்பது



நமக்கு விளங்கவில்லை இதற்காக அவர்கள் மீது, என்ன குற்றம் சொல்லுவது என்று நமக்குத் தோன்றவில்லை. உதாரணமாக, "ஓ பார்ப்பனர்களே! எங்கள் ராஜா பைத்தியக்காரர் ஆதலால் அவர் ஏதாவது பணம், கட்டில், மெத்தை, வேஷ்டிகள் கொடுத்தால் வாங்காதீர்கள், சாப்பாடு போட்டால் சாப்பிடாதீர்கள், எங்கள் பெண்கள் அறிவில்லாதவர்கள் ஆதலால் அவர்கள் கூப்பிட்டால் போகாதீர்கள் என்று சொல்ல முடியுமா" என்று கேட்கின்றோம். அப்படிச் சொல்லுவதானாலும் அது ஒருவன் மற்றொருவனைப் பார்த்து "ஓ! அய்யாவே! எங்கள் வீட்டுப் பெண் சற்று ஒரு மாதிரி நடவடிக்கை உள்ள பெண் ஆதலால் தங்கள் வீட்டுப் பையன் எங்கள் வீதிப் பக்கம் நடக்கவிடாமல் அடக்கி வையுங்கள்" என்று சொல்லுவது போல்தான் இருக்கும்.

இன்னும் அநேக பார்ப்பனர்கள் நம்மை இதே கேள்விகள் தான் கேட்கின்றார்கள். பல மொட்டைக் கடிதங்களும் எழுதுகின்றார்கள். அதாவது! "ஓய் குடி அரசு ராமசாமியாரே! நீர் ஏங்காணும் பார்ப்பனர்களை வீணாய் திட்டுகின்றீர்? உங்கள் ஜனங்கள் புத்தி இல்லாமல் முட்டாள் தனமாய் எங்கள் வீடு தேடிவந்து கூப்பிட்டுக் கொண்டுபோய் எங்கள் காலில் விழுந்து, பணம் காசு வேஷ்டி கொடுத்து சோறும் போட்டால் அதற்கு நாங்கள் என்ன செய்வோம்? நீர்தானாகட்டும் யாராவது சும்மா ஒரு காசு கொடுத்தால் வேண்டாம் என்று சொல்லி விடுவீரா? அப்படி இருக்கும்போது எங்கள் காலிலும் விழுந்து காசும் கொடுத்தால் வேண்டாம் என்றால் அது எங்கள் முட்டாள்தனமாகாதா" என்று எழுதி இருக்கிறார்கள். திருவாங்கூர் போன்ற அரசாங்கத்தை வைத்துக் கொண்டு இதற்கு என்ன பதில் சொல்வது என்பது நமக்கு புலனாகவில்லை. நமது நாட்டு ஏழைகள் கூலிகள் முதல் செல்வவான்கள், கற்றவர்கள், பெரும் அதிகாரிகள், அரசர்கள் ஆகிய எல்லோருமே பெரிதும் இப்படிப்பட்ட மூடர்களாயிருப்பதோடு "தேசீய வீரர்கள்" "பூரண சுயேச்சைக்காரர்கள்" ஆகிய "பொது நலத் தொண்டர்கள்" என்பவர்களும் அவர்களுக்கு உதவியாய் இருந்தால் இந்த நாட்டுக்கு எப்படிதான், என்றுதான் விடுதலையும் சுயமரியாதை யும் உண்டாக்க முடியும் என்பது நமக்கு விளங்கவில்லை. மனிதர்கள் பணம் சம்பாதிக்கும் போது எவ்வளவு தந்திரமாய், எவ்வளவு புத்திசாலித்தனமாய், எவ்வளவு சாமர்த்தியமாய், எவ்வளவு கன்னெஞ்சமாய் எவ்வளவு புரட்டு பித்தலாட்டம், அயோக்கியத்தனம் ஆகியவைகள் செய்து ஒன்றுக்கு இரண்டு விலை, ஒன்றுக்கு இரண்டு கூலி, ஒன்றுக்கு இரண்டு சம்பளம், ஒன்றுக்கு இரண்டு வட்டி ஆகிய முறையில் நாட்டு மக்களைக் கசக்கிப் பிழிந்து சம்பாதித்து அந்தப் பொருளை சிறிதாவது கவலை இல்லாமலும் அறிவில்லாமலும் ஆராய்ந்து பார்க்காமலும் சிக்கனமில்லாமலும் கண்ணை மூடிக் கொண்டு குடிகாரன் தனது அதிக போதையினால் கையிலிருந்தும் மடியிலிருந்தும் கீழே விழும் பணங்களை கவனிக்காமல் அந்த போதையை அனுபவிப்பது போல் இந்த மாதிரி சாமி என்றும் சடங்கு என்றும் பாழாக்குவதாயிருந்தால் எப்படி ஒரு நாட்டின் பணம் ஒரு நாட்டின் ஏழைகளின் நம்மைக்கு உபயோகப்படும் என்பது நமக்கு விளங்கவே இல்லை. இந்த நாட்டுக்கு தொழிலாளிகள் முன் வரவேண்டுமானால்



RangaRakes tamilnavarasam.com

ஏழைகளின் கஷ்டம் நீங்க வேண்டுமானால் நாட்டின் தரித்திரம் தொலைய வேண்டுமானால் - முதலில் இந்த நாட்டு பணக்காரர்களும் பெரும் பணம் சம்பாதிக்கின்ற முதலாளிகளும் அதிகாரிகளும் அரசர்களும் யோக்கியர்களாக வேண்டும். அறிவாளிகளாக வேண்டும் இல்லாதவரை இவர்கள் அடியோடு முதலில் அழிக்கப்படவேண்டும். அந்தப்படி இவர்கள் யோக்கியர்களாகவோ அழிக்கப்படவோ, வேண்டுமானால் முதலில் இந்த மாதிரியான கடவுள்களும், மதமும் ஒழிந்தாக வேண்டும், அப்படிக்கில்லாமல் எந்தப் பேராலாவது எந்த மாதிரியிலாவது இப்படி கடவுள்களையும் மதங்களையும் வைத்துக் கொண்டிருக்கின்றவரையில் என்ன தேசீயம் பேசினாலும் ஒருக்காலும் நமது நாடு நாடாகாது என்றுதான் சொல்லுவோம். அதாவது காடுபோல் வலுத்து இளைத்ததை ஆதாரமாய்க் கொள்ளும் இடமாகுமென்றுதான் சொல்லு வோம். நிற்க, இனி இந்திய மடாதிபதிகள் என்று சொல்லிக் கொண்டு இந்திய செல்வங்களை கொள்ளை யடித்து பாழாக்குகின்றவர்கள் எத்தனை பேர்கள் என்பதை சற்று யோசித்துப் பார்க்க வேண்டுகின்றோம். சங்கராச்சாரிகள் என்று ஒரு ஏழு எட்டு பார்ப்பனர்கள் இந்தியாவிற்குள் தினமும் கிராமம் கிராமமாய் பட்டணம் பட்டணமாய்ச் சுற்றிசுற்றி அடிக்கும் பகற்கொள்ளைக்கு ஏதாவது அளவு கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கின்றதா? ஒவ்வொரு சங்கராச்சாரி களும் அரண்மனை போல் மடமும், யானை, குதிரை, பல்லக்கு, படைகள், நகை கள், கூட்டங்களுடனும் தளங்களுடனும் சுற்றுப் பிராயணங்கள் நடப்பதைப் பார்த்தால் மனம் பதைக்கின்றது. இரத்தங் கொதிக்கின்றது. இவர்களுக்கு ஒவ்வொரு ஊர்களிலும் உள்ள பணக்காரர்கள் பதினாயிரம், ஐயாயிரம், ஆயிரம், ஐந்நூறு, இருநூற்றைம் பது ரூபாய்கள் என்கின்ற கணக்குப்படி காணிக்கைகளும் 108-1008 ரூபாய்கள் என்கின்ற கணக்குப்படி பாதபூசைகளும், தினம் ஒரு வேளை பிச்சைக்கு என்று 427-436 ரூபாய்களும் கொடுக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு அவர்கள் காலிலும் விழுந்து கால் கழுவின பாத தீர்த்தம் அருந்தப்படுகின்றது. இப்படியாக ஆயிரக் கணக்கான வருஷங்களாக நாளெல்லாம் நடந்து வருகின்றது. ஆனால் இப்படிப்பட்ட சங்கராச்சியாரிகளைப் பற்றி பணம் கொடுக்கின்றவர்களில் எந்த மூடர்களாவது சிந்தித்துப் பார்த்து பணம் கொடுக்கின்றார்களா! என்று பார்த்தால் அது ஒரு சிறிதும் தென்படுவ தில்லையே. சங்கராச்சாரி என்றால் என்ன? அவர் யார்? யாருக்கு குரு? எதற்காக குரு? அவரால் யாருக்கு என்ன பிரயோஜனம்? எதற்காக பணம் கொடுக்க வேண்டும்? அந்தப் பணம் என்ன ஆகின்றது? என்பது போன்ற விஷயங்களில் ஏதாவது ஒன்றைப் பற்றி கவனித்துப் பார்த்து யாராவது பணம் கொடுக்கின் றார்களா? ஒரு சிறிதும் இல்லவே இல்லையே. அந்தோ! அந்தோ! வெகுபணம் வீணாய்ப் போகின்றதே. இதனால் நமது மானமும், மனிதத் தன்மையும் வீணாய்ப் போகின்றதே. உதாரணமாக எந்த சங்கராச்சாரியும் ஸ்நானம் செய்வதற்கு முன்தான் நம்மைப் பார்ப்பார். ஏனெனில் நம்மை பார்த்தால் சூத்திரனைப் பார்த்த தோஷமும், நமது நிழல் பட்டால் சண்டாள நிழல் ஸ்பரிசமும், நம்முடன் பேசினால் நீச்ச பாஷை உச்சரித்த பாதகமும், அவரை



சூழ்ந்து கொள்ளுகின்றன. ஆதலால் இவற்றிற்காக அவர் தோஷப்பரிகார பிராயச்சித்தம் செய்யவேண்டி இருக்கிறது. இதன் நிமித்தம் அவர் ஸ்நானம் செய்வதற்கு முன்பாகவே நம்மை பார்த்து, நம்மிடம் பேசி நமக்கு தீர்த்தம் கொடுத்து, பணம் பெற்று, அந்தப் பணத்தைக் கொண்டே மேல்கண்ட பிராயச்சித்தங்களும் செய்துவிட்டு பிறகு பூஜை செய்து சாப்பிடு கின்றார். தவிரவும் இந்தப் பணங்களால் சமையல் செய்து ஆயிரக்கணக்கான வெறும் பார்ப்பனர்களுக்கே சாப்பாடு போடுகின்றார். எஞ்சியதை ஊருக்கு அனுப்பு கின்றார். இந்தப்படி இனியும் குட்டி ஆச்சாரிகள் மடம் எத்தனையோ? ஆகவே இப்படிப்பட்ட சங்கராச்சாரிகள் கொள்ளை எத்தனை கோடி என்பதை வாசகர் கள்தான் கணக்குப்போட்டுப் பார்த்துக்கொள்ளவேண்டும். மற்றபடி ஜீயர்கள், பட்டர்கள், சுவாமிகள், குலகுருக்கள் என்கின்ற சில்லரைப் பார்ப்பனக்குருக்கள் கொள்ளைகள் ஒரு புறமிருக்க, இனி பார்ப்பனரல்லாத பண்டார சன்னதிகள் என்ற மடாதிபதிகள் கொள்ளைக்கும் கணக்கு வழக்கில்லை. சாதாரணமாய் தஞ்சை சில்லாவில் மாத்திரம் உள்ள இரண்டு மூன்று பண்டார சன்னதிகளின் வரும்படி ஆண்டு ஒன்றுக்கு 24 லட்ச ரூபாய்களுக்கு குறையாது என்று சொல்லலாம். இது போல் மற்றும் நம் நாட்டில் எத்தனையோ மடாதிபதிகளும் பண்டார சன்னதிகளும் ஆயிரக்கணக்கான பேர்கள் நமது கண்களுக்கு தென்படாமல் இருக்கின்றார்கள். இவர்கள் சொத்தும் வரும்படியும் எவ்வளவு ஆகும்? அது என்ன ஆகின்றது? யாருக்கு பலன் கொடுக்கின்றது? இவைகளால் நாட்டிற்கு என்ன பலன்? என்று யாராவது எந்த தேசியவாதி களாவது, மதவாதிகளாவது, ஆஸ்திகவாதிகளாவது கவனிக்கின்றார் களா என்று கேட்கின்றோம். எனவே, நமது நாட்டின் தேசியமும் மதவாதமும் ஆஸ்திகமும் எவ்வளவு புரட்டின் பேரிலும் அயோக்கியத்தனத்தின் பேரிலும் கட்டப் பட்டிருக்கின்றன என்பதை இப்போழ்தாயினும் மக்கள் உணர முடிந்ததா என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 01.12.1929**



RangaRakes tamilnavarasam.com

# திருவல்லிக்கேணியில் யதீந்திரதாஸ் வாசக சாலை திறப்பு விழா

தலைவரவர்களே! அன்புள்ள நண்பர் அவர்களே! இன்று திறப்பு விழா கொண்டாடும்படி இந்த பல பாஷை சொல்லிக் கொடுக்கும் முதலிய காரியங்கள் செய்யும் வாசக சாலையை நான் திறந்து வைக்கவேண்டும் என்று எனது பழைய நண்பர்கள் பலர் கேட்டுக் கொண்டதை நான் ஒரு பெருமையாய்க் கருதி அத் தொண்டாற்றவே இங்கு வந்துள்ளேன். எனினும் இத்திறப்புக் கொண்டாட் டத்தை நான் நடத்துவதின் மூலம் எனக்குக் கிடைத்த பெருமையைவிட நான் இங்கு வந்து எனது பழைய நண்பர்களை சந்தித்து அளவளாவ சந்தர்ப்பம் கிடைத்ததே எனக்கு மிகுதியும் பெருமகிழ்ச்சியைக் கொடுக்கத்தக்கதாகும். இந்த விழாவிற்கு இன்னார் வந்து சொற்பொழிவாற்றுவார்கள் என்று சொன்னவுடன், யான் எவ்வித யோசனையும் செய்யாமல் உடனே வருவதாக ஒப்புக் கொண்டேன். இந்தப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்க வேண்டுமே என்கின்ற ஆசை எனக்கு வெகு நாளாகவே இருந்து வந்தது. என்னுடைய ஆசையும் அக்கிராசனர் ஆசையும் இவ்விழாவுக்கு முக்கியஸ்தர்களான திருவாளர்கள் ராமசந்திர சர்மா, மதுரை சுப்பிரமணிய அய்யர் ஆகியவர்கள் ஆசையும் ஒன்றுபட்டு வெற்றி பெற்றிருப்பதைப் பார்க்கும் போது சிருங்கார ரசத்தில் உள்ள ஒரு இடம் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. அதாவது ஒரு நாயகியும் நாயகனும் தங்களது ஒத்த காதலின் பெருக்கினால் ஏற்பட்ட ஊடல் பிரிவைச் சகிக்கமாட்டாமல் ஒருவரை ஒருவர் சமாதானம் செய்து கொள்ள ஒருவருக் கொருவர் முந்த வெட்கத்தினால் தடைபட்டிருந்தவர்களை சந்திர உதயம் வந்து இன்னார்தான் முதலில் சமாதானத்துக்கு வந்தார்கள் என்பதை இருவர்களும் அறிய முடியாதபடி கூட்டிவைக்கும் இடம் ஒன்று உண்டு. அதுபோலவே தேசத் தொண்டு வேகச் செருக்கால் ஏற்பட்ட ஊடலினால் பிரிந்து இருந்தவர்களை இப்போது நாட்டில் தோன்றி இருக்கும் உண்மை விடுதலை அவா உணர்ச்சி என்னும் சந்திர உதயமானது நம்மில் யார் முதலில் சமாதானத்திற்கு முயற்சித்தார் கள் என்று சொல்ல முடியாத மாதிரியில் இன்று இங்கு கூடி இருக்கின்றோம்.

இந்த சந்தர்ப்பத்தை நான் எனது தொண்டுக்கு அனுகூலமாக அதை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற ஆசையால் இவ்விழாவில் ஏதாவது அபிப்பிராயத்திற்கு இடம் ஏற்பட்டு ஒழுங்காக நடைபெற முடியாமல் போவதன் மூலம் அபிப்பிராய பேதத்திற்கு அதிக இடம் ஏற்பட்டு விடுமோ என்கின்ற



எண்ணம் தோன்றிற்று. எனினும் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் எப்படியாவது உபயோகித்துக் கொள்ளப் பார்ப்போம் என்கின்ற ஆசையுடனும் உறுதியுடனுமே எப்படியாவது உள்ளே நுழைந்து கொள்ளலாம் என்று வந்து விட்டேன்.

நண்பர்களே! அக்கிராசனரவர்களே! நான் காங்கிரசை விட்டு விலகி விட்டதாகத் தோன்றினாலும் நான் உண்மையிலேயே விலகவில்லை என்று தான் நினைத்திருப்பதாகச் சொன்னார். காங்கிரசை நான் விடவில்லை என்பது உண்மையே. ஆனால் காங்கிரசு என்னைவிட்டுவிட்டது என்பதை நான் மறைக்க முயலவில்லை. காங்கிரசு என்பது ஒரு கூட்டம் என்கின்ற அர்த்தமா னால் இப்போது காங்கிரசின் பேரால் கூடும் கூட்டம் என்னை சேர்த்துக் கொள்ள முடியாது. மற்றபடி காங்கிரசு என்பது தேசிய முற்போக்கு, தேசிய விடுதலை, தேசிய சுயமரியாதை என்றால் அது என்னை ஒருக்காலும் விட்டுத் தனித்திருக்க முடியவே முடியாது. நான் எங்கு சென்றாலும் அது என்னை தொடர்ந்தே தீரும். எனக்கு அந்த தைரியமும் நம்பிக்கையும் உண்டு.

நான் காங்கிரசை விட்டுவிட்டதாகத் தலைவர் நினைக்கவில்லை யானாலும் அநேகர்கள் அந்தப்படியே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பொது வாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வளவு அபிப்பிராய பேதமுடைய கொள்கைகளை உடையவர்களாயிருந்தாலும் அவ்வபிப்ராய பேதமுடையவர் களின் உட்கருத்தை கவனித்து இவ்வித அபிப்பிராயம் அவர்கள் கொள்ள காரணமென்ன? இதனால் அவருக்குள்ள லாபம் என்ன? எந்த சுயநலத்திற்கு எதிர்ப்பார்த்து இப்படி செய்கின்றார்? முன்பின் இந்த மனிதனுடைய நட வடிக்கை என்ன? என்கின்ற விஷயங்களைக் கவனித்துப் பார்த்து பிறகு ஒரு வித அபிப்பிராயம் கொள்ளுவதானால் உண்மையான தொண்டர்களுக்குள் அபிப்பிராய பேதம் காரணமாக பிரிவினையோ மனஸ்தாபமோ விரோதமோ ஒருக்காலமும் ஏற்படவே ஏற்படாது.

எவ்வளவு அபிப்பிராய பேதமிருந்தாலும் இருவர்களும் ஒன்றுபட்டே தீருவார்கள்.

இந்தப்படி ஒன்றுபட முடியாமல் பொதுத் தொண்டர்கள் என்பவர் களுக்குள் ஏதாவது சொந்த மனஸ்தாபமிருக்குமானால் அது கண்டிப்பாய் அபிப்பிராய பேதத்தால் ஏற்பட்டதல்லவென்றும் தேசத்தொண்டு என்னும் போர்வையைப் போட்டுக் கொண்டு சுயநலத்தொண்டு செய்கின்றார்கள் என்று கருதி அந்நபர்கள் மீது ஏற்பட்டிருக்கும் சந்தேகமும் அல்லது தீர்மானமுமே அல்லாமல் வேறில்லை என்றுதான் சொல்ல வேண்டும். எதிரியின் நல்ல எண்ணத்தில் சந்தேகமில்லாவிட்டால் வெறும் அபிப்பிராய பேதத்திற்காக யாரும் பிரியமாட்டார்கள். சொந்த மனஸ்தாபமும் கொள்ளமாட்டார்கள் என்பது உறுதி.

ஆதலால், நாம் சுயநலமில்லாதவர்களாயிருந்தால் நமது அபிப்பிராயங்



RangaRakes tamilnavarasam.com

களைக் கொட்டி கலந்து ஒருவருக்கொருவர் தங்கள் தங்கள் கொள்கைக்குச் சற்றுவிட்டுக் கொடுத்தோ அல்லது விரோதமில்லாதவைகளை ஏற்றுக் கொண்டோ அந்த அளவுக்கு இருவரும் கலந்து ஏன் வேலை செய்யக்கூடாது? ஆதலால் ஒத்து வருகின்ற கொள்கைகளில் கலந்துவேலை செய்ய ஒருவருக் கொருவர் முந்துவது மேலான குணமாகும். அவ்வித குணத்திற்கு இன்றைய சம்பவம் ஒரு அறிகுறியாக இருக்குமென்று நினைக்கின்றேன்.

நண்பர்களே! யதீந்திரதாஸ் பெயரால் இன்றைய வாசக சாலை திறக்கப் படுவதை நான் பாராட்டுகின்றேன். ஆனால், இதன் மூலம் நாம் அவருக்கு பெருமையும் மரியாதையும் செய்கின்றோம் என்று கருதினால் இப்பாராட்டிற்கு அர்த்தமே இல்லை; அல்லது இவ்வாசக சாலையில் அவரது படத்தை வைத்து அதற்கு தேங்காய் பழம் உடைத்து கற்பூரம் கொளுத்தி வைத்து கும்பிடுவ தென்றால் அது மிகவும் மூடத்தனம் என்று தான் சொல்லுவேன். ஆனால் மற்றென்ன செய்வது அறிவுடைமையானது என்று கேட்பீர்களானால் அவர் விட்டுப்போன வேலையைச் செய்வதும் அவரது தியாகத்தையும் கொள்கை களையும் பின்பற்ற அடிக்கடி ஞாபகப்படுத்த அவரது பெயரை உபயோகிப் பதும்தான். திட்டத்தில் அபிப்பிராயபேதமிருக்கலாம். வாசக சாலைகள் இப்போது எங்கும் அதிகமாக ஏற்பட்டுக் கொண்டு வருவதானது . நமது நாட்டின் அறிவு வளர்ச்சிக்கு அறிகுறி என்றே கருதுகின்றேன். கொஞ்ச காலத்திற்கு முன்பாக நமது நாட்டில் வாசக சாலைகள் அதிகம் இல்லை. காரணம் என்ன வென்றால் அப்போது மக்களுக்கு எழுத்து வாசனை கிடையாது. ஆனால் இப்போது அதிகம் மக்கள் படித்திருப்பதால் இன்னும் அதிகமாக படித்துக் கொண்டு வருவதால் நாளுக்கு நாள் வாசக சாலைகள் அதிகரிக்கின்றன.

இம்மாதிரி வாசக சாலைகள் எங்கும் ஏற்பாடு செய்வது மிகவும் மேலான தேசத்தொண்டாகும். இதனால் மக்களுக்கு உலக அனுபவம் ஏற்படும்.

ஏனெனில், உலக அனுபவம் தான் உண்மையான கல்வியாகும். அதுவே அறிவின் திறவுகோலாகும். பண்டித பரீட்சையில் தேறுவதும் மகாமகோ உபாத்தியாயராகிவிடுவதும் அரசாங்கத்தில் டாக்டர் அதாவது பண்டிதப் பட்டம் பெறுவதும் ராஜாக்களிடத்தில் வித்வான்களாயிருப்பதும் உண்மையான கல்வி ஆகிவிடாது. ஏனெனில் செருப்புத் தைத்தல், க்ஷவரம் செய்தல், சலவை செய்தல், சித்திரம் எழுதுதல், வியாதிக்கு மருந்து கண்டுபிடித்தல், கவிபாடுதல், கதை எழுதுதல், ஒரு பாட்டுக்கு நூறு அர்த்தம் சொல்லுதல், ஒரு சுலோகத்திற்கு இருனூறு தத்துவார்த்தம் செய்தல், பெரும் பெரும் கணக்குப் போடுதல், உலகத்தை எல்லாம் ஒரு குடைக்கீழ் ஆளுதல் முதலியவை எல்லாம் வித்தைகளாகுமே தவிர வேறில்லை. அதாவது ஒவ்வொரு தொழிலில் ஒவ்வொருவர் கெட்டிக்காரர்கள் என்று தான் சொல்லலாம். எனவே முன் சொல்லப்பட்ட உலக அனுபவத்திற்கு முக்கிய கல்வியாக முன் காலத்தில் தீர்த்த யாத்திரையை வசதியாக இருந்தது.

ஒரு அரசன் அல்லது ஒரு பிரபு தன் மகனுக்கு உபாத்தியாயர்களிடம் விட்டு "நாலு வேதம் ஆறு சாஸ்திரம், பதினெண்புராணம், அறுபத்தி நாலு கலைக்யானம், யானை ஏற்றம், குதிரை ஏற்றம், வில்வித்தை, கத்தி விளையாட்டு மற்றும் கூடுவிட்டுக் கூடுபாய்தல்" என்பனவாகிய வித்தைகள் எல்லாம் கற்பிக்கப்பட்ட பிறகு தீர்த்த யாத்திரைக்கு அனுப்பி திரும்பிவந்த பிறகுதான் அம்மக்களிடம் பொறுப்பை ஒப்பித்துவிடுவது வழக்கம் என்று சொல்லப் படுவதை நாம் பார்க்கிறோம். ஆனால் தீர்த்த யாத்திரை என்பது புராணங்களில் சொல்லப்படும் குளங்கள் நதிகள் ஆகிய குழந்தை குட்டி, மூட்டை முடிச்சு களுடன் போய் அழுக்குப் பிடித்த தண்ணீரில் எருமைமாடும் தவளையும் முழுகுவது போல் வெறும் முழுக்குப் போட்டு நோயுடன் வீட்டுக்குத் திரும்பி வருவதல்ல. மற்றென்னவென்றால் உலகமெல்லாம் சுற்றி ஆங்காங்கு நடை பெறும் விஷயங்களையும் உள்ள இயற்கை குணங்களையும் அறிந்து வந்து தனது வாழ்வை அந்தப்படி நடத்துவதுதான். அதனால்தான் இக்கருத்தையே "உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பலகற்றும் கல்லார் அறிவிலாதார்" என்று திருவள்ளுவர் சொல்லியும் இருக்கின்றார். ஆனால் இதுவும் அக்காலங்களில் யாரோ ஒரு சிலருக்குத்தான் சாத்தியமாக இருந்ததாக பார்க்கின்றோம். ஆனால் இப்பொழுதோ மேல்கண்ட உலக அனுபவம் என்பதற்கு வாசக சாலைகள் மற்றெல்லா வசதிகளைவிட மேன்மையானதாக இருக்கின்றன. யாவருக்கும் சாத்தியமானதாகவும் உலகத்தில் உள்ள செய்திகளையெல்லாம் பத்திரிகைகள் கொண்டு வந்து கொட்டுகின்றன. பலமனிதர்களுடன் தாராளமாய் பழகி அவர வர்கள் சுபாவம் அறியலாம். ஆதலால் வாசக சாலை நிருவுதல் மிகவும் நன்மை யான பொது தர்மம் என்று சொல்லுவேன். தவிர, இங்கு பல பாஷைகள் கற்பிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டது. பல பாஷைகள் கற்பது நன்மைதான். ஆனால் அது ஒவ்வொருவருடையவும் வயிற்றுப் பிழைப்புக்காக கற்பிக்கப்படுவதென்றால் அவ்வளவு சுலபமான காரியமென்று நமக்குத் தோன்றவில்லை. ஏனென்றால் ஒரு பாஷையே கற்காத மனிதர்கள் நூற்றுக்கு தொண்ணூறு பேர்கள் இருக்கும்போது அதற்குள் நாம் பல பாஷைகள் கற்றுக் கொடுப்பது என்பது சுலப சாத்தியமானதல்ல. ஆனால் பொதுநலத் தொண்டு செய்பவர்களுக்கு பயன்படும் மாதிரியாக பல்வேறு பாஷை பேசும் தேசத்து சங்கதிகளை அறிந்து அதை தாங்கள் பொது நலத்திற்கு உபயோகித்துக் கொள்வதற்காக என்றால் அப்படிப்பட்டவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க முயற்சிப்பது நல்ல காரியமாகும். அந்த முறையில் நான் இதைப் பாராட்டுகின்றேன்.

## தேசீயம்

தவிர, தேசியப் போராட்டத்திற்கு பல பாஷைகள் கற்பது அத்தியா வசியம் என்று தலைவர் கூறினார். இந்த இடத்தில் தேசியம் என்பதைப் பற்றி சில வார்த்தைகள் கூறுவது பொருத்தமற்றதாகாது என்று எண்ணுகின்றேன். ஏனெனில் இப்போதைய பொதுத் தொண்டில் அநேக தொண்டர்களின் மனவேறுபாட்டிற்கும் தப்பபிப்பிராயத்திற்கும் இந்த வார்த்தையே முக்கிய



RangaRakes tamilnavarasam.com

காரணமாயிருக்கின்றது. முதலில் தேசீயம் என்றால் என்ன என்பதை ஒவ்வொருவரும் நன்குணரவேண்டும். இதைப் பற்றி உள்ள அபிப்பிராய பேதங்களில் இன்னது சரி இன்னது தப்பு என்று நான் முடிவு கட்டவரவில்லை. ஆனால் என் அபிப்பிராயத்தைச் சொல்லுகின்ற முறையில் சொல்லுகின்றேன். இப்போது மிகுதியும் ஊக்கமுள்ள தொண்டர்கள் பலரின் மனதில் அரசியல் சம்பந்தமான பேச்சுக்கள் தான் தேசிய வேலையாக கருதப் படுகின்றது. தேசீயம் வேறு, இப்போதைய அரசியல் வேறு என்பதை நாம் நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தியாவை ஒரு தேசமாக்க வேண்டியதுவே இப்போதைய தேசபக்தர்களின் முதல் வேலையாகும். இப்போது இந்தியா பல தேசமாய் இருக்கின்றது. அதாவது பல பாஷை, பல மதம், பல ஆச்சாரம், பல ஜாதி வகுப்பும், பல வித வித்தியாசமும், பல வகுப்புகளுக்கு பலவிதமான தனித்தனி லட்சியம் ஆகியவைகளாகப் பிரிந்து, அன்னியர்களே, அதாவது இந்தியாவின் லட்சியத்தைக் கருதாதவர்கள் என்னும்படியான அன்னியர்களே ஆளுவதற்கு அனுகூலமான முறையில் இருந்து வருகின்றது. ஆதலால் முதலா வதாக நாம் நமது நாட்டை மேல்கண்ட பிரிவினைகளையும் வித்தியாசங் களையும் தனித்தனி இலட்சியங்களையும் போக்கி ஒன்றுபடுத்தி அன்னிய ஆட்சிக்கு கஷ்டமான மாதிரியில் கொண்டு வந்து விட்டுவிட வேண்டும். பிரிவினைகளைப் போக்க சற்று கஷ்டமாயிருந்தாலும் தனித்தனி இலட்சியங் களை மாற்றி ஒரு லட்சியத்திற்கு ஒன்றுபட்டுழைக்கும்படி ஒருவருக்கொருவர் நம்பிக்கையையும் கூட்டுப் பொறுப்பையும் ஏற்படுத்தித் தீரவேண்டியதே முக்கியமான வேலையாகும். முக்கியமாக நாம் இந்நாட்டு மக்கள் என்பவர் களுக்குள்ளாக எவ்வளவு வித்தியாசத்தையும் உயர்வு தாழ்வையும் நம்பிக்கை யின்மையையும், ஒற்றுமையின்மையையும் பார்க்கின்றோம். இதில் ஏதாவது அதிகப்படுத்தியோ கூட்டியோ குறைத்தோ சொல்வதாக நீங்கள் நினைக் கின்றீர்களா? வித்தியாசமும் உயர்வு தாழ்வும் பரஸ்பர நம்பிக்கைக்கும் கூட்டுப் பொறுப்புக்கும் எவ்வளவு இடையூறாய் இருக்கின்றது என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

மேற்கண்ட குணமுள்ள இவர்கள் அதாவது சமூக வாழ்வில் உயர்ந்த வர்கள் என்று சொல்லப்படுபவர்களும் தாழ்ந்தவர்கள் என்று சொல்லப்படுபவர் களும் ஒன்றுபடுவதென்றால் ஒருவருக்குப் பெரிய நஷ்டமும் மற்றவர் களுக்குப் பெரிய லாபமுமாயிருப்பதால் சுலபத்தில் ராஜி செய்யமுடியாமல் இருக்கிறது. ஏனெனில் வகுப்பு உயர்வு என்பது யாதொரு பொருளும் ஆதாரமும் இல்லாமல் தங்களுடைய வெறும் சுயநலத்தையே ஆதாரமாய்க் கொண்டிருப்பதால் அதாவது பிறர் உழைப்பில் சாப்பிட்டுக் கொண்டு சுகமாயிருக்க அனுகூலமாயிருப்பதால் எவ்வித நீதியும் தர்மமும் இங்கு பயன்படுவதில்லை.

தாழ்வு என்பதும் எவ்வித ஆதாரமும் பொருளும் இல்லாமல் வைக்கும் கஷ்டத்தை அடிப்படையாகக் கொண்டதாயிருப்பதால் அதாவது பாடுபடு



வதைக் கடமையே ஒழிய, அப்பாட்டின் பலனை வேறு ஒருவர் அனுபவிக்கக் கூடியதாய் இருப்பதால் அங்கும் எவ்வித பொறுமையும் சமாதானமும் சிறிதும் பயன்படுவதில்லை. ஆதலால், இதை எவ்வித அரசியலாய் நினைக்க முடியும்? எந்தவித நம்பிக்கை மீது இம்மாதிரியாக மக்கள் இருவருக்கும் கூட்டுப் பொறுப்பு ஏற்படுத்த முடியும் என்பதை சற்று யோசித்துப் பாருங்கள்.

மற்ற நாடுகளிலும் இவ்வித தனித்தனி லட்சியம் இருக்கக்கூடும் என்று நீங்கள் சொல்ல வரலாம்.

ஆனால் அங்கெல்லாம் ஏதோ ஒரு தொழில் முறையை ஆதாரமாய்க் கொண்டு லட்சியம் பிரிக்கப்படுகின்றதே தவிர ஜாதியையோ வகுப்பையோ பிறவியையோ கொண்டு பிரிக்கப்படுவதில்லை. ஆதலால் நாம் முதலில் இந்நாட்டு மக்களுக்கு கூட்டுப் பொறுப்பை ஏற்படுத்த வேண்டும். அதுதான் தேசீயம் என்பது. இவ்விரு வகுப்பாரையும் சமநிலைக்குக் கொண்டுவர வேண்டியதுதான். இது மிகக் கஷ்டமானது என்று இப்பொழுது தோன்றினாலும் மற்ற வேலைகளை கட்டி வைத்துவிட்டு தேசத் தொண்டர்கள் தியாகத்திற்கு தயாராயிருந்தால் வெகுசீக்கிரத்தில் சரிப்பட்டுப் போகும். அந்த சமயம் தானா கவே அன்னிய ஆட்சிக்குக் கஷ்டம் ஏற்பட்டு விடும். ஆதலால் அப்பேர்ப் பட்ட தேசியத்திற்குப் பல பாஷை கற்று வைப்பது அவசியம் தான் என்று கருதுகிறேன்.

## நூல் நூற்றல்

நூல் நூற்றல் தொழிலும் இங்கு கற்றுக் கொடுக்கப்படும் என்று சொல்லப் பட்டது. இது மக்களுக்கு அவசியமானதே. ஏனெனில், அது ஒரு நாட்டுக்கு இன்றியமையாத தொழிலாகும். தொழிலில்லாமல் கஷ்டப்பட்டு தரித்திரத்தில் மூழ்கி இருக்கும் மக்களுக்கு ஜீவனத்திற்கு மார்க்கத்தைக் கொடுக்கும்.

ஆனால் அது என்றைக்கும் எல்லோரும் கைராட்டினத்தால் நூற்றுக் கொண்டிருப்பதற்கு என்று சொல்லுவதானால் அது ஒப்புக் கொள்ளக் கூடியதல்ல. ஏனெனில் இதைவிட தரித்திரத்தைப் போக்க வேறு வித கருவி களும் தொழில்களும் ஸ்தானங்களும் கண்டு பிடிக்கப்பட்ட காலத்தும் கை ராட்டினம் சுற்றித்தான் ஆக வேண்டும் என்று சொன்னால் இதை யார் ஒப்புக் கொள்ளுவார்கள்? மனிதனுடைய எண்ணம் விரிவடைந்து முன்னேறிக் கொண்டுபோவதே இயற்கையாய் இருப்பதால் முற்போக்குக்கு அவசியமான மார்க்கங்களை கைப்பற்றவும் கண்டு பிடிக்கவும் முயலவேண்டும்.

## தேகாப்பியாசம்

தேகாப்பியாசமும் இந்த வாசக சாலையில் கற்றுக் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. இதுவும் நல்ல காரியம் தான். ஆனால் தேகாப்பியாசத்தின் லட்சியத்தை இங்கு தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் தேகாப்



RangaRakes tamilnavarasam.com

பியாசம் என்பது போர் வீரர்களுடன் சண்டை செய்து தேசத்தைக் கைப்பற்று வதற்கு என்றால் இது உதவாது. ஏனென்றால் இப்போது நமது நாட்டை ஆளுகிற வர்கள் ஒரு பீரங்கி குண்டு மூலம் 20 மைல் தூரத்தில் உள்ள ஊரைத் தூளாக்க முடியும்படியானவர்களும் ஒரு வெடிகுண்டின் மூலம் ஒரு பெரிய பட்டணத்தை சாம்பலாக்க முடியும்படியானவர்களும், ஒரு துப்பாக்கி புகையின் மூலம் பதினாயிரக்கணக்கான மக்களைக்கொன்றுவிட முடியும்படியானவர்களுமாய் இருக்கின்றார்கள். இன்னும் மேலும் மேலும் இது விஷயத்தில் அற்புதங்களைக் கண்டு பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இப்பேர்ப்பட்டவர்களுடன் சண்டைபோட நாம் வெறும் தேக பலத்தை எவ்வளவு ஏற்படுத்திக் கொண்டா லும் இதற்கு என்ன பயன் விளையும்? நமது தேகாப்பியாசத்தால் ஒரு யானையை தூக்கி மூன்று பர்லாங்கு தூரம் வீசி எறியும் படி செய்து கொண்டா லும் பாக்கி 19 மயில் 5 பர்லாங்குக்கு நாம் என்னசெய்ய முடியும்? ஆதலால் யுத்த வீரர்களுடன் போர் புரிவதற்கு என்று கருதுவது அர்த்தமற்றதாகும். ஆனால் மனிதனுக்கு தேகாப்பியாசத்தால் சரீர சுகம் ஏற்படும், மன உறுதி ஏற்படும், ஊக்கம் முயற்சி முதலியவைகள் ஏற்படும் என்கின்ற லட்சியத்தில் அது பயிலப்பட வேண்டியதேயாகும். அன்றியும் மேல் கண்ட அதிசய பலம் பொருந்திய ஆட்சியின் கொடுமையை ஒழிக்க மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டி எவ்வித தியாகத்திற்கும் தயாராகும் படியான உபதேசங் களைச் செய்ய ஊர் ஊராய்ச் சுற்றவும், மன உறுதியும் தன்னம்பிக்கையும் கொள்ளவும் தேகபலம் அவசியமானதே. உதாரணமாக, நூற்றுக்கணக்கான நாள் பட்டினி கிடக்கவும், ஜெயிலில் கஷ்டப்படவும் வேலை செய்யவும் உதவும். நமது தேசத்தொண்டர்கள் அநேகருக்கு மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்ய சரீரத்தில் பலமில்லை. கைப்பெட்டியைக் கூட தூக்க முடிவதில்லை. ஒரு வேளை சாப்பாடு சற்று நேரமாய் விட்டால் பிறகு அந்த பக்கமே போவதில்லை. ஒரு அரை பர்லாங்கு கூட நடக்க முடிவதில்லை. ஆனால் கால அட்டவணைப் படி வேலை செய்வதாக சொல்லிக் கொள்ளுகின்றார்கள். 6 மணிக்கு எழுந் திருப்பது 6.30 மணிக்கு பஸ்கி எடுப்பது, 7 மணிக்கு நடப்பது, 7.30 மணிக்கு தண்டால் எடுப்பது, 8 மணிக்கு காப்பி சாப்பிடுவது, 9 மணிக்கு பிரசங்கம் என்று அட்டவணை போட்டுக் கொள்வார்கள். இவர்களுடைய அட்டவணை பஸ்கியானது ஒரு பர்லாங்கு நடக்க முடியவில்லையானால் இந்த பஸ்கியும் தண்டாலும் வெள்ளைக்காரனிடம் என்ன செய்ய முடியும் என்பதை யோசித்துப் பாருங்கள். ஆதலால் தேகாப்பியாசமானது சரீர கஷ்டம் பார்க்காமல் உழைப்ப தற்கும் மனோதிடத்திற்கும் என்கின்ற லட்சியத்தின் மீது செய்ய வேண்டும் என்று சொல்லுகின்றேன்.

## பாரதி பாடல்

பாரதியார் பாட்டுகளில் பல மனஉற்சாகத்தையும் சுயமரியாதை உணர்ச்சி யையும் முற்போக்கான கருத்துக்களையும் கொண்டதாகும். ஆதலால் அவை களைப் படிப்பது மிக்க நன்மையாகும். அன்றியும் ஒரு கொள்கையை பாட்டு



RangaRakes

மூலமாக பதியவைப்பது நன்மையானதாகும். நன்றாய் ஞாபகத்தில் இருக்கும்படி இப்புஸ்தகம் இல்லாத காலத்தில் பல பண்டிதர்கள் இருந்ததற்குக் காரணம் பாட்டு முறையேயாகும். எனக்குக் கூட 40 வருடங்களுக்கு முன் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படித்த கோலாட்டப் பாட்டு இன்னும் ஞாபகமிருக்கின்றது. அப்பாட்டில் ஒரு வார்த்தை ஞாபகத்திற்கு வந்தால் முன் உள்ளதையும் பின் உள்ளதையும் தானாக இழுத்துக் கொண்டு வந்து விடும். ஆதலால் பாட்டு படித்து ஞாபகத்தில் வைக்கும் முறை மிகவும் நல்லதாகும்.

ஆகவே, இத்தியாதி காரியங்கள் கொண்ட இந்த வாசக சாலையை தேச முன்னேற்றத்தைக் கருதி இன்று ஆரம்பித்தது மிகவும் பாராட்டத் தக்கதென்றும் இதை நான் இருந்து நடத்த ஏற்பட்ட சம்பவம் எனக்கு பெரு மகிழ்ச்சியையும் பெருமையையும் கொடுக்கக் கூடியது என்றும் கொள்வதோடு வாசக சாலையை ஏற்படுத்தியவர்களுக்கு நன்றியறிதலை தெரிவித்து இந்த வாசக சாலையைத் திறந்து வைக்கிறேன்.

*குறிப்பு : 21.11.1929 ஆம் நாள் சென்னை திருவல்லிக்கேணி பைகிராப்ட் சாலை திரு கடுவூர் துரைசாமி அய்யங்கார் வீட்டு மேல் மாடியில் யதீந்திரதாஸ் இலவய வாசக சாலையை திறந்து வைத்து சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 01.12.1929**



tamilnavarasam.com

# சுயநல வெறியர்கள் மகாநாடு

சென்னை ஒற்றைவாடை நாடகக் கொட்டகையில் சென்ற மாதம் 30-ந் தேதியன்று சனாதன தர்மிகள் மகாநாடு என்பதாக சுயநல வெறியர்கள் மகாநாடு ஒன்று கூட்டப்பட்ட விஷயத்தை யாவரும் தெரிந்திருக்கலாம். அதில் முக்கிய மாய் மனு தர்ம சாஸ்திரத்தை நிலைநாட்டுவதையே கவலையாகக் கொண்டு அதற்கு வேண்டிய முயற்சிகளும் செய்யப்பட்டு அதை அனுசரித்த பல தீர்மானங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. இதை நினைக்கும் போது இன்றைய தினம் நாம் வெள்ளைக்காரர்களுடைய அரசாட்சியிலும் அவர்களுடைய ராணுவக் காப்பிலும் இருப்பதற்கு நம்மை நாமே பாராட்டிக் கொள்ள கடமைப் பட்டவர்கள் ஆவோம். இந்தப்படி நாம் சொல்லுவதைப் பற்றி பொறுப்பும் கவலையுமற்ற சிலர் நம்மீது ஆத்திரப்பட்டாலும் படுவார்கள். ஆனால், உண்மையிலேயே துணிந்தவர்கள் யாரோ சில பொறுப்பற்றவர்களுடைய ஆத்திரத்துக்குப் பயப்படுவார்களேயானால் அது முன்னுக்குப் பின் முரணாகத் தான் முடியும். ஆகையால், அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. நிற்க; மேற்படி மகாநாட்டுக்குத் தலைமை வகித்த கல்கத்தாவிலுள்ள ஒரு "தேசியவாதி" யாகிய திரு.சியாம்சந்திர சக்கரவர்த்தி என்னும் ஒரு வங்காளத்துப் பார்ப்பனர் செய்திருக்கும் அக்கிராசனப் பிரசங்கத்தைப் பார்த்தால் இந்தியப் பார்ப்பனர்களுடைய யோக்கியதையும், அவர்களது மதபக்தி தேசியம் என்பதான சுயநல வெறியும் தாராளமாய் விளங்கிவிடும். ஆதலால் அவற்றை முதலில் சுருக்கமாக எழுதி பிறகு தீர்மான சுருக்கத்தையும் எழுதி பிறகு அதைப் பற்றிக் கவனிப்போம்.

## அக்கிராசனர் உபந்நியாசமாவது

"மதம் கெட்டுப்போய்விட்டது! நமது பழைய சனாதன தர்மத்தை மறுபடியும் நிலை நிறுத்த வேண்டும். ஒரு உண்மையான ஹிந்து என்பவனுக்கு அடையாளம் சனாதன தர்மத்தை நம்புவதேயாகும்.

வேதத்தை நம்பி அதன்படி நடப்பதுதான் ஆஸ்திகனுக்கு அறிகுறியாகும். நமக்கு வேதமே ஆதாரமானது.

வேதத்தின் தத்துவமும், உள்பொருளுமே மனுதர்ம சாஸ்திரமாகும். மனுதர்ம சாஸ்திரம் பகவானால் சொல்லப்பட்டதாகும்.

கடவுள் உண்டாக்கிய சட்டம்தான் மனுதர்ம சாஸ்திரமென்பது.



RangaRakes

விஞ்ஞான சாஸ்திரமும் இயந்திர சக்திகளும் மனித சமூகத்திற்கு மிகவும் கேடானது. மேல்நாட்டு கொள்கை நமக்கு உதவாது.

சாரதா சட்டம் சோதனை காலமாகும். அதை ஒழித்தாக வேண்டும்.

சிறு வயதில் கல்யாணம் செய்தால் தான் பெண்கள் ஆண்களுக்கு வணங்கிக் கட்டுப்பட்டிருப்பார்கள்.

அதனால்தான் சாஸ்திரங்களில் பாலிய விவாகம் வற்புறுத்தப் பட்டிருக்கிறது. பெண்கள் பூப்பு ஆனபிறகு அவர்கள் உடனே கருத்தரிப்பதை தடுத்தால் அது சிசுக் கொலைக்கு சமானமாகும்" என்று பேசி இருக்கிறார்.

## தீர்மானங்கள்

1. சாரதா சட்டத்தை ஒழித்துவிட வேண்டும்.

2. அதற்காக சத்தியாக்கிரகம் செய்யவேண்டும்.

3. சனாதான தர்மத்திற்காக ஒரு பத்திரிகை நடத்த வேண்டும்.

4. மதத்தில் அரசாங்கமாவது அரசியல் ஸ்தாபனங்களாவது பிரவேசிக்கக் கூடாது.

5. சட்டசபையில் வர்ணாச்சிரம தர்மத்திற்கு விரோதமாகவும் எவ்வித சட்டமும் செய்யக் கூடாது.

6. மனுதர்மத்தைக் காப்பாற்றுகிறதாக வாக்களிப்பவர்களுக்கே சட்ட சபைக்கு ஓட்டுக் கொடுக்க வேண்டும்.

7. கலப்பு விவாக சட்டத்தையும் சம்மத வயது சட்டத்தையும் கண்டிப்ப தோடு சட்டங்களையும் மாற்றிவிட வேண்டும்.

8. விவாகங்களை ரத்து செய்யக் கூடாது.

என்பவை போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த மகா நாட்டில் இருந்தவர்கள் திருவாளர்கள் எஸ்.சத்தியமூர்த்தி, கோவை சி.வி.வெங் கட்டரமணய்யங்கார், டி. ஆர். ராமசந்திர அய்யர், வி.வி. ஸ்ரீனிவாசய்யங்கார் முதலிய "தேசியவாதி"களாவார்கள்.

இந்த இருபதாவது நூற்றாண்டில் இந்திய தேசத்தில் மாத்திரம் இந்திய ஜனத் தொகையில் 100-க்கு 3வீதம் ஜனத் தொகையுள்ள ஒரு சிறு கூட்டத்தாரர்கள் இவ்வளவு தைரியமாக சுமார் 2000 - வருடத்திற்கு முன் ஏற்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் கொள்கைகளை இன்றைய தினம் புதுப்பித்து மக்களின் மீது சுமத்தி ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று நினைப்பார்களேயானால் அவர்களது மூடத்தனத்திற்கும் பேராசைக்கும் வெட்கம் கெட்டதனத்திற்கும் எதை உதாரணமாய்ச் சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை. மேல்கண்ட நூற்றுக்கு மூன்று பேர் கொண்ட பார்ப்பனர்கள்



tamilnavarasam.com

தங்கள் சமூகத்திற்கு மாத்திரம் எந்த விதமான கொள்கைகளையோ சாத்திரங்களையோ மதங்களையோ வைத்துக் கொள்ளுவதானால் நமக்கு அதைப்பற்றி சிறிதும் கவலை இல்லை, அப்படிக்கில்லாமல் எங்கோ நாடோடிகளாகவும், மிலேச்சர்களாகவும் காட்டு மிராண்டிகளாகவும் மலைச் சார்பில் வரன் முறை இல்லாமல், லம்பாடிகள் போல் திரிந்து கொண்டிருந்த ஒரு சிறு கூட்டத்தார்கள் வயிறு வளர்ப்பதற்காக நமது நாட்டிற்குள் வந்து குடியேறி இந்நாட்டு மக்களை ஏமாற்றி மதம் என்றும், வேதம் என்றும், சாஸ்திரம் என்றும், தர்மம் என்றும், தங்கள் ஆதிக்கத்திற்கும் சோம்பேறி வயிற்றுப் பிழைப்புக்கும் ஏற்றபடி என்ன என்னமோ ஏற்பாடுகளை செய்து கொண்டு அவைகளுக் கெல்லாம் தாங்களே அதிகாரிகள் என்றும், தங்களுக்குத்தான் அவ்வித யோக்கியதை உண்டென்றும், ஆதலால் தாங்கள் மேன்மையான ஜாதியார்கள் என்றும், மற்றவர்கள் இழிவான ஜாதியார்கள் என்றும், தங்களுடைய வாழ்வுக் காகவே உலகத்தில் மற்றவர்கள் அடிமைகளாக சிருஷ்டிக்கப்பட்டிருக் கின்றார்களென்றும், இவை அனைத்தும் கடவுள் கட்டளை, கடவுள் செயல் என்றும் சொல்லிக் கொண்டு வாழ்ந்து வந்ததல்லாமல், இனியும் அந்தப்படியே இருக்க வேண்டு மென்பதாகவும் முயற்சி செய்வதென்றால், கடுகளவு சுயமரியாதையோ, அறிவோ உள்ள மக்கள் இதை சகித்துக் கொண்டிருக்க முடியுமாவென்று கேட்கின்றோம். முதலாவது, மதம் என்பதில் இந்து மதம் என்றால் என்ன என்கின்ற கேள்விக்கு ஒரு சனாதன தர்மியாவது, சாஸ்திரியாவது பதில் சொன்னவர்களே அல்ல எனவே, அஸ்திவாரத்திலேயே அடியோடு வெறுமையாய் இருக்கின்ற மதத்தைச் சொல்லி ஏமாற்றுவதல்லாமல் அந்த மதத்திற்கு ஆதாரம் வேதம் என்று ஒரு ஆபாசக் களஞ்சியத்தை சொல்லிக் கொண்டு அதை அவர்களை (அந்தப் பார்ப்பனர்களை) தவிர மற்றவர்கள் பார்க்கவோ, படிக்கவோ, கேட்கவோ கூடாதென்று சொல்லிக் கொண்டு இருப்பதுடன் அதை எவன் நம்புகின்றானோ எவன் ஒப்புக் கொள்கின்றானோ அவன்தான் இந்துவென்றும், அப்படிப்பட்ட இந்துவுக்கு ஏற்பட்ட கொள்கைகளே சனாதன தர்மமென்றும், அச்சனாதன தர்மமே மனுதர்ம சாஸ்திரமென்றும், அம்மனுதர்ம சாஸ்திரமே வேதத்தின் தத்துவமும் உள் பொருளுமாகு மென்றும் சொல்லி அதற்கு 20 கோடி மக்களை கட்டுப் படுத்தி அதில் 6 கோடி மக்களை கண்ணில் காணக்கூடாதவர்கள், தெருவில் நடக்கக் கூடாதவர்கள், தீண்டாதவர்கள் என்கின்ற கொடுமைக்கு உள்ளாக்கி மீதி 14 கோடியில் 13 கோடி மக்களை சூத்திரர்கள் என்று அதாவது, பார்ப்பானின் தாசி மகன், பரம்பரை அடிமை, படிக்கக் கூடாதவன், சொத்து வைத்திருக்க கூடாதவன். பார்ப்பனர்களின் எச்சிலை சாப்பிட்டுக் கொண்டு அவன் கிழித்து கழித்த கந்தலை கட்டிக் கொண்டிருக்க வேண்டியவன் என்பதாக இழிவு படுத்தி வைத்துக் கொண்டு இருப்பதுடன் இந்தக் கொள்கையை நிலை நிறுத்த இன்றையதினம் மகாநாடு கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றுவதென்றால் இந்த நாட்டில் கடுகளவு சுயமரியாதை உடையவர்கள் கூட ஒருவரும் இல்லையென்று தானே பொருளாகின்றது. இவ்வளவு கொடுமையுள்ள மக்கள் ருஷியா போன்ற



நாட்டில் இருப்பார்களேயானால் சாலை மரங்களில் கழுத்துக்கு சுருக்கு போட்டு தொங்கவிட்டு உயிருடன் கழுகுகளும் காக்கைகளும் கொத்தி, கொத்தி தின்னும் படியாக அல்லவா செய்யப்பட்டிருப்பார்கள் என்பதில் சிறிதாவது சந்தேகம் கொள்ள முடியுமா? என்று கேட்கின்றோம். மனுதர்ம சாஸ்திரம்தான் வேதம் என்றும், வேதம் தான் இந்து மதத்திற்கு ஆதாரம் என்றும், இப்போது இந்துக்கள் என்று சொல்லப்படும் 20 கோடி மக்களில் தங்களைத் தவிர பாக்கி 19 கோடி மக்களும் மனுதர்ம சாஸ்திரப்படிக்கு தான் நடக்க வேண்டும் என்றும் இந்த படிக்கே சட்டமும் ஆட்சியும் இருக்க வேண்டுமென்றும் கோரு கின்ற ஒரு கூட்டத்தார்களைவிட உலகில் அயோக்கியர்களும் கொள்ளைக் கூட்டத்தார்களும் கொலைபாதகர்களும் வேறு யாராவது இருக்க முடியுமா என்பதை யோசித்தால் சனாதன மகாநாட்டின் யோக்கியதை இன்னதென்று தெளிவாய் விளங்கும். இந்து மதத்தின் அயோக்கியத்தனமான கொள்கைகள் இப்பார்ப்பனர்களால் இந்நாட்டில் அமுல்படுத்தாமல் இருந்திருக்குமானால் இந்துக்களில் பார்ப்பனர்களில் மாத்திரம் 100க்கு $22\frac{1}{4}$ பேர்கள் ஆங்கில பாஷை கற்றவர்களாகவும், பார்ப்பனரல்லாதவர்களில் 100க்கு $\frac{3}{4}$ பேர்கள் மாத்திரம் ஆங்கிலம் கற்றவர்களுமாக இருக்க முடியுமா என்பதை யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம்.

அதுபோலவே இந்து மதம் இந்தியாவில் உள்ள பார்ப்பனரல்லாதார்களை எவ்வளவு இழிவுத் தன்மையிலும் ஈன ஸ்திதியிலும் வைத்திருக்கின்றது என்பதை மற்ற இந்நாட்டு பொது மக்களுடன் நம்மை ஒப்பிட்டு பார்த்தால் விளங்காமல் போகாது. சனாதன தர்மம் அழிவுப்பட்டதற்கு காரணம் விஞ்ஞான அறிவும் (அதாவது, சைன்ஸ் அறிவும்) இயந்திர சக்தி தொழிலுமே காரணம் என்றும் அவைகளை வளரச் செய்யக் கூடாதென்றும், தலைவர் சொல்லுவ தென்றால் அக்கூட்டத்தின் வஞ்சக தனத்திற்கும் கெடுதல் புத்திக்கும் நாம் வேறு எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை. விஞ்ஞான சாஸ்திரமும் இயந்திர சக்தி தொழில்முறையும் உள்ள அமெரிக்கா தேசத்தி லுள்ள ஜனங்கள் சராசரி நபர் ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு 2000 ரூபாய் வீதம் வரும்படி சம்பாதிக்கின்றார்கள். அதாவது, நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 166 ரூபாய் வீதம் சம்பாதிக்கின்றார்கள். சனாதன தர்மம் தோன்றிய இந்த நாட்டில் வருஷம் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு சராசரி 72 ரூபாய் அதாவது மாதம் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 6 ரூபாய் வீதம்தான் சம்பாதிக்கின்றார்கள். மற்றும் உயர்ந்த தத்துவங் களும் பகவானால் வேத கட்டளைகளும் மனுதர்ம சாஸ்திரங்களும் உண்டான இந்த நாட்டில் 100-க்கு 7 பேர்களே படித்திருக்கின்றார்கள். ஆனால் "நீச்ச நாடாகிய" மேல் நாட்டில் நூற்றுக்கு நூறுபேரும் படித்து நமது நாட்டிலும் சிலர் படிக்க மேல் நாட்டார்ப் பணமும் முயற்சியும் மதமும் வேலை செய்கின் றது. அன்றியும், அங்கு மக்களின் சராசரி ஜீவிய வயது 52ஆக இருக்கின்றது. பகவான் தர்மத்தை நேரில் வந்து உபதேசித்த இந்த நாட்டில் சராசரி ஜீவிய வயது 25 ஆக இருந்து வருகின்றது. எனவே, பகவானின் சனாதன தர்மம் உள்ள இந்திய நாட்டிற்கும் அதில்லாத மேல் நாட்டிற்கும் கல்வியிலும் செல்வத்திலும்



RangaRakes
tamilnavarasam.com

ஜீவவாழ்விலும் மாத்திரம் இவ்வளவு வித்தியாசமிருக்குமானால் மற்றவை களைப் பற்றி நாம் சொல்ல வேண்டுமா என்று கேட்கின்றோம். ஆகவே, இவ்வித வித்தியாசத்திற்கு இச்சனாதன தர்மிகள் என்ன காரணம் சொல்லுகின்றார்கள் என்பதே நமது முக்கிய கேள்வியாகும்.

ஒரு பகவானும் ஒரு மதமும் ஒரு தர்மமும் அப்பகவானையும் தர்மத்தையும் மதத்தையும் சேர்ந்த எல்லா மக்களுக்கும் ஒன்று போன்ற கொள்கையையோ, நீதியையோ, பலனையோ கொடுக்கவில்லையானால், அப்பகவானும் மதமும் தர்மமும் யோக்கியமானதா அல்லது அயோக்கிய மானதா என்பதைப் பற்றி வாசகர்களே அறிந்து கொள்ளவிட்டு விடுகின்றோம். அன்றியும் அப்பகவானையும், மதத்தையும், தர்மத்தையும் அடியோடு அழிக்க வேண்டியதா அல்லது ஒருசிறு வேளையாவது விட்டுவைக்க வேண்டியதா என்பதையும் முடிவு செய்யும் பொறுப்பையும் வாசகர்களுக்கே விட்டுவிடு கின்றோம்.

இனி அம்மகா நாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை பற்றி சிறிது கவனிப்போம்.

முதலாவதாக சாரதா சட்டம் ஒழிக்கப்படவேண்டுமாம். அதாவது பெண்கள் புருஷர்களுக்கு அடங்கி நடப்பதற்காகவே சிறுவயதில் குழந்தைப் பருவத்திலேயே கல்யாணம் செய்யும் வழக்கத்தை பெரியோர்கள் ஏற்படுத்தி னார்களாம். ஏனெனில், பெரிய பெண்களான பிறகு கல்யாணம் செய்தால் புருஷர்களுக்கு அடங்கி நடக்க மாட்டார்களாம். ஆகவே பெண்களை ஆண் கள் அடிமை கொள்ளவே இம்மாதிரியான சாஸ்திரங்களை எழுதி வைத்துக் கொண்டு அவைகளை "பகவான் சொன்னார்" "ரிஷிகள் கேட்டுக் கொண்டிருந் தார்கள்" "பாராசர் பரப்பினார்" என்று சொல்லி இதுவரை மக்களை ஏமாற்றி வந்திருக்கிறார்கள் என்பது இப்போதாவது மக்களுக்கு விளங்கி இருக்கும். இந்த சூதை எப்படியோ தன்னை அறியாமல் தலைவர் கக்கிவிட்டார் என்றாலும் பாலியவிவாகம் கூடாது என்பதற்கு காரணமாக தவிர பெண்கள் பக்குவமான வுடன் புணர்ச்சிக்கு அனுமதிக்காவிட்டால் அதனால் அநேக குழந்தைகள் உற்பத்தியாவது தடுக்கப்பட்டு சிசுக் கொலையாகிவிடுமாம். ஒரு பெண் 14 வயதில் பூப்பு எய்தி 45 வது வயதில் சாந்தி முகூர்த்தமாவதற்குள் குழந்தை பிறப்பது தடைப்படுவதால் சிசுக் கொலை ஏற்படுமானால் 10 வயது முதல் 50 வயது வரை உள்ள விதவைகள் என்னும் பேரால் பத்து லட்சக்கணக்கான பெண்களை கர்ப்பமுண்டாகாமல் தடுப்பதாலும் தப்பித் தவறி தெரியாமல் கர்ப்பமுண்டாகி விட்டால் ஒரு மாதம் முதல் பத்து மாதம் வரை அக்கர்ப்பங் களை அப்பெண்களும் தாய் தகப்பன்மார்களும் அழிப்பதாலும் பெற்ற குழந்தைகளை கழுத்தை திருகுவதினாலும் எத்தனை சிசுக் கொலை ஏற்படுகின்றது என்பதை உலகம் அறியாதா? என்று கேட்கின்றோம். தவிர, சனாதன தர்மத்திற்கு சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என்றும், பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும் என்றும் தீர்மானித்திருக்கின்றார்கள். இவ்விரண்டையும் நாம் மேள தாளத்துடன் வரவேற்கின்றோம். ஏனெனில், நாம் இதைதான் சொல்லி வந்திருக்கின்றோம். அதாவது, பெண்களுக்கு உண்மையான விடுதலை ஏற்பட வேண்டுமானால் பாலிய விவாகம் கூடாது என்பதும். பெண்ணுக்கும் ஆணுக் கும் அதிக வயது வித்தியாசம் கூடாது என்பதுமேயாகும். சனாதன தர்மத்தை நாம் பத்து வருஷத்தில் ஒழிப்பதானால் பார்ப்பனர்கள் சத்தியாக்கிரகமும் பத்திரிகையும், நடத்துவதினால் சனாதன தர்மம் ஐந்து வருஷத்திலேயே ஒழிந்து போகும் என்கின்ற தைரியம் நமக்கு இருக்கின்றது. தவிர மனுதர்ம சாஸ்திரத்தை ஆதரிக்கின்றதாக வாக்குக்கொடுக்கின்றவர்களுக்கே சட்டசபை ஓட்டுக் கொடுக்க வேண்டுமென்கின்ற தீர்மானமும் நமக்கு மகிழ்ச்சியையே கொடுக் கின்றது. ஏனெனில், சுயராஜ்யம் என்பதும் தேசியம் என்பதும் பார்ப்பன ராஜியம் தான் என்றும், அதுவும் மனுதர்ம ராஜியம்தான் என்றும் நாம் சொல்லி வந்ததின் உண்மை இந்த சனாதன மகாநாட்டின் இந்த தீர்மானத்தால் வெளியானதற்கு யாரால்தான் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியும்? அன்றியும் தீவிர தேசிய வாதியும் பூரண சுயேச்சைவாதியும் "சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை" என்ற கொள்கையுடையவருமான திரு.சத்தியமூர்த்தி அவர்களின் சுயராஜ்ஜியமும் தேசியமும் பூரண சுயேச்சையும் பிறப்புரிமையும் இன்னதுதான் என்றும், அவரை சட்டசபைக்கு தெரிந் தெடுத்தனுப்பும் யோக்கியர்களின் கருத்து இன்னதுதான் என்றும் நன்றாய் விளங்க சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது.

தவிரவும், மனுதர்மவாத தேசீயவாதிகளே சட்டசபைக்கு போகும் படியான ஒரு காலம் வருமானால் அந்த சந்தர்ப்பமானது ஒரு ஐந்து வருஷத்திற்குள் நம் நாட்டிற்கு பொது உடைமைக் கொள்கையும் அபேதவாதக் கொள்கையையும் சம சொத்துக் கொள்கையையும் கொண்டு வந்து விட்டு விடவோ, அல்லது இராணுவ ஆட்சியை கொண்டு வந்து விடவோதான் செய்யுமே ஒழிய, ஒருக்காலமும் நமது நாட்டில் மனுதர்ம ஆட்சி ஒரு ஐந்து நிமிடம் கூட இருக்க முடியாது என்று தைரியமாய் உறுதி கூறுவோம்.

கடைசியாக நமது நாட்டிற்கு சுயமரியாதை இயக்கம் எவ்வளவு அவசி யம் என்பதும் வேதங்களும், மனுதர்ம சாஸ்திரங்களும் அவைகளை மக்களுக் குக் கொடுத்த பகவான்களும் அழிந்து தீரவேண்டியது எவ்வளவு அவசிய மென்றும் பொதுமக்கள் உணர ஒரு அருமையான சந்தர்ப்பத்தைக் கொடுத்த சுயநல வெறியர்கள் மகாநாடான சனாதன தரும மகாநாட்டிற்கு நமது நன்றி யறிதலை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 08.12.1929**





RangaRakes tamilnavarasam.com

## சோமசுந்திரம் செட்டியார்

கோயமுத்தூர் காளிஸ்வர மில்லை ஏற்படுத்தினவரும், மற்றும் பல பெரிய மில்லுகளையும் நிர்வாகம் செய்து வந்தவருமான திருவாளர் தேவ கோட்டை திவான் பகதூர் பி.சோமசுந்திரம் செட்டியார் அவர்கள் திடீரென்று மரண மடைந்ததைக் கேட்டு நாம் மிகுதியும் துயர் உறுகின்றோம். திரு.சோம சுந்தரம் அவர்கள் தென் இந்தியாவில் ஒரு ஒப்பற்ற மனிதராவார். அவருக் குள்ள நிருவாக சக்தி வேறு ஒருவரிடமும் காணமுடியாது. மேல்நாட்டு நிருவாக நிபுணர்களை விட சிறந்தவர் என்றே சொல்லலாம். ஒரு இந்தியர் எவ்வளவு பெரிய தொழில் வேண்டுமானாலும் செய்ய சக்தி உள்ளவர் என்பதை தென்னிந் தியாவுக்கு அவரே வெளிப்படுத்தினார். ஆகவே, அவரது பிரிவால் தென் இந்தியா ஒரு பெரிய வியாபார நிர்வாக நிபுணரை இழந்ததென்றே சொல்ல வேண்டும். அவரது குமாரரான திரு.சாத்தப்ப செட்டியாருக்கு நமது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடி அரசு - இரங்கல் செய்தி - 08.12.1929**



## நமது மலாய் நாட்டு விஜயம்

நாம் இவ்வாரம் மலாய் நாடு போகும் விஷயம் பத்திரிகைகள் மூலம் வெளிவந்திருப்பதை வாசகர்கள் அறியலாம். மலாய் நாட்டிலுள்ள சுயமரியாதை இயக்கத்திலீடுபட்ட அன்பர்களும் தொண்டர்களும் வெகு நாட்களாக விரும் பியதற்கும் நாமும் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையான கொள்கைகள் உலகிலுள்ள எல்லா மக்களிடையிலும் பரவி நன்மை பயக்க வேண்டுமென எதிர்பார்த்திருந்ததற்கும் ஏற்ப, நாம் மலாய் நாடு செல்கிறோம். நாம் இப்போது அங்கே போவது நமது நாட்டிலுள்ள வேலைகளையெல்லாம் நாம் முடித்து விட்டோம் என்ற கருத்திலல்ல. பின் என்னவெனில், இந்த 5, 6 ஆண்டுகளாக சுயமரியாதை இயக்கத்தின் மூலமாய், மக்களிடையிலிருக்கின்ற புரட்டு களையும் மூடநம்பிக்கைகளையும் எப்படி இங்கு எடுத்துரைத்தோமோ அதே போல், மலாய் நாட்டில் குடியேறியுள்ள தமிழ் மக்களிடத்திலும் நமது இயக்கத்தின் கொள்கைகளை நேரில் எடுத்துச் சொல்ல வேண்டுமென்னும் ஆசையினால்தான் நாம் இப்போது மலாய் நாடு செல்கின்றோம். தாய் நாட்டி லிருந்து இதர இடங்களாகிய மலேயா, தென் ஆப்பிரிக்கா முதலான அயல் நாடுகளுக்கு ஜீவனத்திற்காகக் குடியேறிய நமது ஏழை மக்களோடு கூடவே பார்ப்பனீயமும் குடியேறியிருக்கிறது என்பதை வாசகர்கள் ஞாபகத்தில் வைக்கும்படி கோருகிறோம். தேக உழைப்பினால் பாடுபட்டு சம்பாதித்தும் பாமர மக்களுடைய ஊதியத்தை மதம், கடவுள், வேதம், சாஸ்திரம், புராணம் என்ற பெயர்களினால் கொள்ளையடித்து நகத்தில் அழுக்குப்படாமல் ஏமாற்றி வயிறு வளர்க்கக் கூடிய பார்ப்பனர்கள் நமது நாட்டில் எவ்வளவு தீங்குகளை இழைத் திருக்கின்றார்களோ அதேமாதிரி ஏனைய நாடுகளில் குடியேறிய மக்களையும் முன்னேறவிடாமல் அழுத்திக் கொண்டிருக்கிறார்களென்பதை நாம் நன்கு அறிவோம்.

உதாரணமாக, நாம் இப்போது போகக்கூடிய மலேயா நாடுகளில் மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக பார்ப்பனர்கள் செய்துவரும் இடைஞ் சல்களை நாம் அடிக்கடி கடிதங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் தெளிவாய் அறிந்திருக்கிறோம். சுயமரியாதை இயக்கத்தின் தத்துவங்களையும் அதன் முற்போக்கான கருத்துக்களையும் மக்கள் நன்குணர்ந்து அதன் படி நல்லறிவு பெற்று மூடநம்பிக்கைகளையும், குருட்டுத்தனமான பழக்கங் களையும் கொஞ்சங்கொஞ்சமாய் ஒழித்து சகல சாதி மக்களும் ஒற்றுமைப்பட்டு வருவதைப் பொறாத பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் சில மாதங்களாக



RangaRakes tamilnavarasam.com

தவறான முறைகளிலெல்லாம் சுயமரியாதை இயக்கத்தை எதிர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். உதாரணமாக, பார்ப்பனீயமும் புரோகிதமும், அர்த்தமற்ற சடங்குகளும் இல்லாமல் சுயமரியாதை இயக்கத்தின் முறைப்படி நடக்கும் எண்ணிறந்த திருமணங்கள் சட்டப்படி சொல்லாதவைகள் என்று ருசுப்படுத்துவதற்கும் தங்களுடைய ஆதிக்கத்தை எப்போதும் போல மக்களிடத்தில் நிலை நாட்டுவதற்கும் பார்ப்பனர்கள் செய்துவரும் முயற்சிகள் கொஞ்சமல்ல; அவர்களுடைய முயற்சிகள் பலன் பெறலாம் என்று எதிர்பார்த்த நாட்களெல்லாம் போய் மக்களுக்குப் பகுத்தறிவு உணர்ச்சி ஏற்பட்டிருப்பதால், இத்தகைய சூழ்ச்சிகளை மக்களே எதிர்த்துப் போராடி வென்று விடுவார்கள் என்ற பூரண நம்பிக்கை நமக்குண்டு. ஏனெனில், வெகு நாட்களாக ஏமாற்றிக் கொண்டே வந்த ஒருவன், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த பின்னுங் கூட, மேலும் ஏமாறிக் கொண்டே, இருப்பதற்கு அவனது அறிவு இடங்கொடாது என்பது நமக்குத் தெரியும்.

இந்த மாதிரி சூழ்ச்சிகள் ஒரு பக்கமிருக்க, சுயமரியாதை இயக்கத்தை அழிப்பதற்கென்றே சில "இந்துமத சங்கங்கள்" எனப்படுபவைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றால் சுயமரியாதை இயக்கம் எவ்வளவு தூரம் மலாய் நாட்டுப் பார்ப்பனர்களையும் அவர்களது கூலிகளையும் பாதித்திருக்கிறது என்பதை நன்கு உணரலாம். இதர தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளை விட மிகவும் அதிகமாக நமது "குடிஅரசு" மலாய் நாடுகளில் பரவியிருந்தாலும்கூட, அது மாத்திரம் போதாமல் அவ்விடத்திலேயே "முன்னேற்றம்" போன்ற பத்திரிகைகளை நமது அன்பர்கள் ஆரம்பித்து, அவைகளும் ஏற்பட்ட சில மாதங்களுக்குள்ளாகவே ஆயிரக்கணக்காய் பரவ ஆரம்பித்திருக்கின்றன வென்றால், சுயமரியாதை உணர்ச்சி மக்களிடத்தில் எவ்வளவு தூரம் செலாவணி ஆகியிருக்கிறது என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம்.

நமது இயக்கத்திற்கு இத்தகைய எதிர்ப்புகள் வருவதால் நமக்கு சற்றும் கவலையில்லை. அவைகளினுடைய கதி என்னவாகும் என்பது நமது நாட்டில் செவ்வாய்க்கிழமை தாலிகட்டி புதனன்று அறுத்துப் போன "ஆஸ்திக சங்கத்"தை உணர்ந்தவர்களுக்கு நன்கு தெரியும். செங்கற்பட்டில் கூடிய முதலாவது சுயமரியாதை மகாநாட்டின் தீர்மானங்களையும் அவைகளை நடைமுறையில் நடத்தி ஆதரவளித்த எண்ணிறந்த மக்களையும் பார்த்துத் திகிலடைந்த பார்ப்பனர்கள் சில கூலிகளைப் பிடித்து "ஆஸ்திக சங்கம்" என்பதாக ஒன்று ஸ்தாபித்து அவர்களது கைகள் ஓயும் வரையும் நம்மையும் நமது அன்பர்களையும் கண்டவாறெல்லாம் தூஷித்தும், தூற்றியும் பார்த்து ஒருவாறாக அடங்கி ஒடுங்கி அமிழ்ந்துவிட்டார்கள். "கடவுள்" உண்டு என்பதை ஸ்தாபிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு சங்கத்தின் நிலைமை இவ்வாறு ஆயிருக்கிறது என்பதை வாசகர்கள் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்குமாறு விரும்புகிறோம். இதே மாதிரியாகத்தான் மலாய் நாட்டிலும் "இந்து மதம்" என்பதைக் காப்பாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சங்கங்களைப் பற்றியோ அவைகளின் கர்த்தாக்களைப் பற்றியோ நமக்குச் சற்றேனும் கவலையில்லை.

ஏனெனில், 'இந்துமதம்' யாருக்காக ஏற்பட்டது, யார் ஏற்படுத்தியது, எப்போது எந்தக் கருத்தினால் ஏற்படுத்தப்பட்டதென்பதை நமது மக்கள் வெட்ட வெளிச்சமாக அறிந்து விட்டார்களாதலால், "மதம் போச்சு" என்ற பொய்க் கூச்சலின் மூலியமாய் இனி மக்களை ஏமாற்றவோ அடிமைப் படுத்தவோ ஒருவராலும் முடியாது என்ற உறுதியான நம்பிக்கை நமக்குண்டு. பராசர ஸ்மிருதி, மனுஸ்மிருதி முதலியவைகளிலும் "இந்து மதத்திற்கு" ஆதாரமான வேதங்களிலும் தற்காலத்திற்கு ஏலாததும், மனிதனது பகுத்தறிவுக்கு முரண்பட்டதுமான கருத்துக்களே அடங்கி யிருக்கின்றன என்பதை நிச்சயமாய் அறிந்து கொண்ட நமது மக்களிடம் "இந்து மதம்" என்ற பூச்சாண்டியைக் காண்பித்து இனியும் ஏமாற்றலாம் என்று யாராவது எண்ணியிருப்பார்களானால், அவர்களுக்காக நாம் பெரிதும் இரங்குகின்றோம். "இந்து மதம்" என்பதற்கு அடிப்படையாகச் சொல்லப்படுகின்ற வேதங்கள், ஸ்மிருதிகள் இவைகளின் நிலைமையே தத்தளித்துக் கொண்டிருக்கும்போது, அவைகளின் மேற்கட்டிடமாகிய "இந்து மதத்"தின் கதி என்னவாகுமென்று நாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆகையால் இந்து மதத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக் கொண்டு மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்கப் புறப்பட்டிருக்கும் கூட்டத்தார்கள் இனியாகிலும் காலதேச வர்த்தமானத்தை உணர்ந்து, யோக்கியமான முறைகளில் உழைத்து தங்கள் வாழ்க்கையைப் பரிசுத்தமான வழிகளில் நடத்தத் தவறுவார்களானால், மக்களுக்குள் அனாவசியமான வேறுபாடுகளும் மதப் பூசல்களும் சாதிச் சண்டைகளும் உண்டாகி அதனால் மனித சமூகத்தின் முன்னேற்றமும் தடைப்படும் என்றும் எச்சரிக்கை செய்கிறோம்.

கடைசியாக, நமது மலாய் நாட்டுப் பிரயாணத்தைப் பற்றிய விஷமப் பிரசாரங்களைப் பற்றியும் சிறிது உறுதியாய்க் கூற விரும்புகிறோம். நாம் மலாய் நாடு போவதாலும் அவ்விடத்தில் நமது இயக்கத்தின் கொள்கைகளை எடுத்து மக்களுக்குச் சொல்வதாலும் சில சுய நலக் கூட்டத்தாருக்கு ஏற்படக் கூடிய கஷ்ட நஷ்டங்களை உணர்ந்த சிலர் தங்களுடைய ஆதிக்கத்திற்கு அழிவு காலம் கிட்டிவிட்டதென்று பயந்து நம்மை அவ்விடம் வர வொட்டாது தடுக்க வேண்டிய முயற்சிகளை பல வழிகளிலும் செய்யத் தொடங்கியிருப்பதாகவும் அறிகிறோம். இந்த நாட்டிலுள்ளது போலவே அங்கும் சர்க்காருக்கு உள் உளவாயிருக்கின்ற பார்ப்பனர்கள் சர்க்கார் மூலமாக நம்மைப் பற்றி பொய்யும் புரட்டும் சொல்லி நம்மை தடுப்பதற்கு வேண்டிய சூழ்ச்சிகளெல்லாம் செய்து வருகிறார்களென்றும் கேள்விப்படுகின்றோம். இவைகளெல்லாம் உண்மையாயிருக்குமாயின், இத்தகைய வீண் மிரட்டல்களால் நமது இயக்கத்தின் லட்சியங்களை நாம் சொல்லாமலோ, அல்லது அதன் நன்மைகளை மக்களுக்கு விளக்காமலோ இருக்க போவதில்லை என்பதை மாத்திரம் உறுதியாய்க் கூறுவோம். ஆனால், நாம் வெகு நாட்களாகச் சொல்லிவந்தபடி அரசியலைவிட சமூக மத விஷயங்களையே பிரதானமாகக் கொண்டு நமது சுற்றுப்

பிரயாணத்தை முடித்து வருவதாக நாம் உத்தேசித்திருக்கிறோம். அரசியல் சம்பந்தமான பிரச்சினைகளைப் பற்றி நமக்குத் தற்போது அதிகக் கவலையில்லையாதலால் அது சம்பந்தமாக நாம் ஒன்றும் பேசப் போவதும் இல்லை. ஆனால் சமூக மத சீர்திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்போகும் நமது பிரசாரத்திற்கு மாத்திரம் பார்ப்பனர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு மலேயா கவர்ன்மெண்டார் ஏதேனும் முட்டுக்கட்டையாக இருக்க முயலுவார்களேயானால், அதற்காக நாம் நமது வேலையில் சற்றேனும் பின்வாங்கப் போவதில்லையென்பதை மாத்திரம் நிச்சயமாய்க் கூறுவதோடு அதனால் ஏற்படக் கூடிய எவ்வித கஷ்ட நஷ்டங்களுக்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம் என்பதையும் வாசகர்களுக்கு வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 15.12.1929**

# திரு. குருசாமி - குஞ்சிதம் திருமணம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை 8-ம் தேதியன்று ஈரோட்டில் எமது இல்லத்தில் நடைபெற்ற 'ரிவோல்ட்' உதவி ஆசிரியர் திரு.குருசாமியின் திருமணத்தைப் பற்றிய முழு விவரங்களை மற்றொரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம். இந்தத் திருமணமானது பல வழிகளிலும், ஏனைய திருமணங்களைவிட சிறந்தது என்பதற்கு சற்றும் சந்தேகமில்லை. முதலாவதாக இது ஒரு காதல் மணம். மணமகனும் மணமகளும் ஒத்த கல்வியும், ஒத்த அன்பும், ஒத்த குணமும், ஒத்த உடல் நலனும் உடையவர்களாகையால் அவ்விருவரும் ஒருவரையொருவர் காதலித்து செய்து கொண்ட திருமணமாகையால் இதைக் காதல் திருமணம் என்றோம். இரண்டாவதாக ஒரு வகுப்பிலுள்ள மணமகன் மற்றொரு வகுப்பைச் சார்ந்த மணமகளை மணந்து கொண்டதால் இது ஒரு கலப்பு மணமாகும். இந்தச் சீர்திருத்த மணத்திற்கு முக்கியமாய் மணமகன் திரு.குருசாமி அவர்களுக்கு பல இடையூறுகள் நேர்ந்தன. இந்தத் திருமணத் தின் சிறப்பைக் கூறுமுன் மண மகனது சாதியாராகிய "முதலியார்" எனப்படு வோர்கள் இவ்விதக் காதல் மணங் களுக்கு எவ்வளவு இடையூறாக இருக்கிறார்கள் என்பதைப் பற்றி சிறிது கூறாமல் இருக்க முடியவில்லை. திருமணத்தின் முதல் நாளன்று அவரது தங்கையார் கிணற்றில் விழுந்து விட்டதாகவும், இன்னும் இது போன்ற பலவாறான பொய்த் தந்திகளையனுப்பியதோடும் சாதியை விட்டு விலக்கி விடுவதாகவும் பல பயமுறுத்தல் கடிதங்களையும் எழுதினார்களென்றால், இந்த சீர்திருத்த உலகத்தில் இந்த வகுப்பாரது மனப்பான்மை எவ்வளவு தூரம் தாழ்ந்த நிலையிலிருக்கிறது என்பதை வாசகர்களே யோசித்துக் கொள்ளும்படி விட்டு விடுகின்றோம். ஆனால், இந்த சமூகத்திலுங் கூட முற்போக்கான அபிபிராயங் களைக் கொண்ட சில பிரமுகர் களைக் குறிப்பிட வேண்டியதாயிருக்கிறது. உதாரணமாக, இந்தத் திருமணத்தை ஆதரித்து வாழ்த்துச் செய்திகளனுப்பிய திருவாளர்கள் சீர்காழி சிதம்பரநாத முதலியார், பி.டி, ராஜன், கனம் மந்திரி முத்தையா முதலியார், திருநெல்வேலி சிதம்பரநாத முதலியார் போன்றவர் களின் ஆதரவானது நமக்கு பெரிய ஊக்கத்தைக் கொடுப்பதோடு அந்த சமூகத்திற்கே முற்போக்கடையும் படியான சந்தர்ப்பமும் கிட்டியிருக்கிறது என்று உறுதியாய்க் கூறுவோம்.

இரண்டாவதாக, மணமகள் செல்வி குஞ்சிதம் அவர்களின் கல்விய றிவையும், அவர்களது சீர்திருத்த கொள்கைகளையும், அவர்கள் "ரிவோல்டில்" ஆங்காங்கு எழுதி வந்திருக்கின்ற கட்டுரைகளிலிருந்து இனிதறியலாம்.

RangaRakes
tamilnavarasam.com

மேலும் குஞ்சிதம் அவர்கள் திருமணத்தன்றைய தினமே மாலையில் கூடிய ஒரு பொதுகூட்டத்தில் மேடையின் மீதே முதன்முதலாக செய்த ஆங்கிலப் பிரசங்கமே எவ்வளவு சிறப்பாக இருந்தது என்பதை நேரில் பார்த்த அன்பர்களுக்கு அவர்களது பிற்கால ஆற்றலைப் பற்றி நாம் சற்று அதிக மாகவே எதிர்பார்க்கக்கூடியவர்களாயிருக்கிறோம். மேலும் மணமகள் தெலுங் கிலும் சொற்பொழிவாற்றக்கூடிய தேர்ச்சி பெற்றிருப்பதால் நமது சுயமரியாதை இயக்கம் தெலுங்கு நாடுகளிலும் பரவவேண்டிய ஒரு நல்ல சந்தர்ப்பம் நமக்குக் கிடைத்து விட்டதற்காக நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். இந்த சந்தர்ப்பத்தில் பெண் கல்வியின் உயர்வை நன்குணர்ந்து மணமகளை உயர்ந்த கல்வி பயிற்றுவித்த அவரது பெற்றோர்களை வாழ்த்தாமலிருக்க முடியவில்லை. இதர தாய் தந்தைமார்களும் இவர்களைப் பின்பற்றி தங்கள் பெண்களையும் பல துறைகளிலும் தேர்ச்சிபெறக் கூடிய கல்விகளைப் போதிப்பார்களானால், இத்தகைய காதல் மணங்கள் நம் நாட்டில் பெருகும் என்பதற்கு ஐயமில்லை. மணமகனும் மணமகளும், சுயமரியாதை இயக்கத்துக்குத் தக்க ஊன்று கோலாக இருந்து தங்களது சந்தோஷமான வாழ்க்கையாலும் நடத்தையாலும் பிற் போக்குள்ள மக்களுக்கு ஒருவழி காட்டிகளாக இருந்து இத்தகைய திருமணங் கள் நமது நாட்டில் பெருகி மக்களது அறிவும் வளர்ச்சி பெற்று, தங்களைப் போலவே பிறரும் கலக்கமற்ற வாழ்க்கை வாழ்வதற்கு உதவி புரிவார்களென்று நம்புகிறோம். இளைஞர் உலகத்துக்கு ஒரு பேரூக்கம் அளிக்கத்தக்க செயலை தம் மணவினையால் நிகழ்த்திக் காண்பித்த திரு.குருசாமி அவர்களையும் திருமதி. குஞ்சிதம் அவர்களையும் நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

**குடி அரசு - வாழ்த்துரை - 15.12.1929**



RangaRakes

# துன்பத்தில் துயருறும் பெண்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டும்

சகோதரிகளே! சகோதரர்களே! சீர்திருத்தம் என்பது பற்றி இதற்குமுன் நண்பர்கள் பேசினார்கள். அவர்கள் பிரசங்கத்தில் உற்சாக மிகுதியினால் சொன்ன மிக உயர்ந்த பொருள்களையெல்லாம் பெரும்பாலும் நீங்கள் விளையாட்டாக எண்ணக் கூடும். இதுவரையில் அவர்கள் நமதியக்கத்தின் முற் போக்கின் பொருட்டு பட்ட கஷ்டங்களையும் எடுத்துக் கொண்ட சிரமங்க ளையும் அவர்கள் எண்ணி இன்றைய சீர்திருத்த மண வைபவத்தின் உற்சாகத் தில் பேசினார்கள். அவர்கள் ஒவ்வொருவர் கூறிய சொற்பொழிவுகளிலும் மிக உயர்ந்த பொருள்கள் விளங்கியது. இவைகளை எல்லாம் கேட்ட நீங்கள் சில மாறுதல்களை அடையக்கூடும்.

இதுவரையில் பார்ப்பனனையும், அவன் கொள்கைகளையும், அவனது பழக்கவழக்கங்களையும் கண்டித்து வந்தோம். நீங்களும் பார்ப்பனனை திட்டுகிறவர்கள் என்று எங்களை எண்ணி இருந்தீர்கள். பார்ப்பனனை திட்டிய காலம் மலையேறி போய்விட்டது. ஏனெனில் முதலில் பார்ப்பனனை திட்டிய பின்பே புத்தி சொல்லக் கூடிய நிலையில் இருந்தீர்கள். பார்ப்பான் இன்னின் னவை செய்கிறான், அதில் தீது இவைகள் என்பதை எடுத்துக் காட்டி பின்பு நீங்கள் அவனது ஏமாற்றத்தில் சிக்கக்கூடாது என்பதை எச்சரிக்கை செய்ய வேண்டிய காலம் இன்றில்லாமல் போய்விட்டது.

இனிமேல் உங்கள் முட்டாள் தனத்தைப் பற்றியே பேசவேண்டும். இதுவரையில் பார்ப்பனனை எடுத்துக்காட்டாக எடுத்துக்காட்டி அதன் மூலிய மாய் சொன்னதில் உள்ள உண்மையான உங்கள் நிலையை நீங்கள் நன் குணர்ந்து விட்டீர்கள். உணர்ந்ததிற்கு உதாரணமாகவே இன்று காரியத்தில் செய்ய காலம் வந்துவிட்டது. இன்றுவரை தமது நாட்டையும் நம்மையும் பாழ்படுத்தி வந்த பார்ப்பனனைப் பற்றி நான் கூறியதற்கு, பார்ப்பனனை நான் திட்டுவதால்தான் எனக்கு பிள்ளை குட்டி இல்லை என்றும், சிலர் பிள்ளைக் குட்டி எதுவும் இல்லை, அவனுக்கு பொறுப்பேது, அதனால்தான் பார்ப்பானைத் திட்டுகிறான், சாமியை பழிக்கிறான் என்றவர்களும், நாட்டிற்குக் கெட்டகாலம் பொல்லா காலத்துக்கு பிராமண தோஷமும் ஆகாத வேளைக்கு அன்ன துவேஷமும் என்று சொல்லி வந்தவர்களும் இன்று இதுவரை நம்மால்



tamilnavarasam.com

சொல்லப்பட்டது யாவும் சரிதான் என்று ஒப்புக் கொண்டது போலவே, இத்திருமணத்தை பார்த்த பின்பும் இதுவரையில் நண்பர்கள் பேசியதின் அருமையான உரைகளைக் கேட்ட பின்பும், சில உண்மைகளை உணர்ந்திருக்க கூடும். சென்னையில் இத்திருமணத்தை நடத்த முதலில் முடிவு செய்யப் பட்டிருந்தது. ஆனால், இத்தகைய சீர்திருத்த மணம் நடைபெறுவதால் உண்டா கும் உற்சாகத்தை இங்கு உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடிய அளவு சென்னையில் பயன்படாது போகும் என்பதாலேயே இத்திருமணத்தை இங்கு நடத்த நேர்ந்தது.

அங்கு எத்தகைய உண்மை உணர்ச்சியையோ, உற்சாகத்தையோ, காணமுடியாது. எதுவும் வெறும் வெளி வேஷமாகத்தான் மாறக்கூடும். நகரங் களில் எழும் எந்த ஊக்கமும் மக்களுக்கு உண்மையை உணர்த்தக் கூடிய தாகவோ, நல்ல பலனை உண்டாக்கக் கூடியதாகவோ இருக்க முடியவில்லை. ஆதலால் தான் கலியாணத்தை இங்கு நடத்தினோம்.

காலையில் நடந்த திருமணத்திற்கு 50, 60 – க்கு மேற்பட்ட தந்திகளும், 150, 200க்கு மேற்பட்ட கடிதங்களும் வாழ்த்துச் செய்திகள் மூலமாய் கிடைத்தன. இதை அனுப்பியவர்கள் வேஷக்காரர்களல்ல. பொறுப்பற்றவர்களும் சாதாரண மானவர்களுமல்ல. நமது மாகாணத்தில் அறிவாளிகள் என்பவர்களாலும், பொறுப்புள்ளவர்கள் என்பவர்களாலும் அச்செய்திகள் அனுப்பப்பட்டது. உதாரணமாக திவான், மந்திரி, இவர்களிடமிருந்தும், ஜில்லா போர்டு தலைவர் கள், கட்சி தலைவர்கள் இவர்களிடமிருந்தும், இன்றைய திருமண முறையை ஆதரிக்கு முறையில் வாழ்த்துச் செய்திகள் கிட்டியது. அவைகள் காலை மணம் நடைபெறும் போது படித்துக் காட்டியதும் உங்களுக்குத் தெரியும். மைசூர் திவான் ஜனாப் மகமத் மிர்ஸா இஸ்மாயில், நமது மாகாண மந்திரிகள் கனம் எஸ்.முத்தையா முதலியார், டாக்டர் சுப்பராயன், கவர்ன்மெண்டு நிர்வாக மெம் பர் பெரியார் ஜனாப் ஸர் முகமது உஸ்மான், சௌந்திரபாண்டியன் இவர்களிடமிருந்து வாழ்த்துத் தந்திகள் கிடைத்தது. இது எதைக் காட்டுகிறது?

இதுவரையில் நாம் சொல்லி வந்த நமது லட்சியங்கள் காரியத்திலும் நடத்த ஆரம்பித்து விட்டதால் மிக பெரியவர்கள் எல்லாம் இதை ஆதரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். சென்றவாரம் குடி அரசில் பெண்களைப் பற்றிய வரை கூறும்போது சமூகக் கட்டால் கஷ்டப்படும் பெண்கள் தங்கள் கஷ்டத்தை நிவர்த்தித்துக்கொள்ள விரும்பினால் வீட்டைவிட்டு ஓடிப்போக வேண்டு மென்று கூறினேன். ஒன்றைப் பற்றி நன்கு சிந்தித்து அதன் லாப நஷ்டங்களை அனுபவ முறையிலும் சிந்தித்து பின் முடிவு செய்த பின் அதை அனுபவ முறையில் செய்து காட்ட பின்வாங்கக் கூடாது. காதல், காதல் என்று பேசப் படுகிறது, காதலைப் பற்றியும் அதை வளர்ப்பதைப் பற்றியும் நமது நாட்டில் உள்ள நூல்கள் அளவு கடந்ததாகும். ஆனால் காதல் என்பதில்லை. என்னைப் பொறுத்தளவில் கூறுகிறேன்; கலியாணமாகிய 5 – 6 வருடங்களுக்கு பின்பே எனது மனைவியுடன் நிற்பயமாய் என்னால் பேச முடிந்தது.



கலியாணமென்பது, வேஷ்டி தோய்ப்பது போலவும், குளிப்பது போலவும், பல் விளக்குவது போலவும் இன்று கருதப்பட்டுவருகிறது. ஆனால். இந்த அளவுக்கு அனுபவத்தில் கலியாணத்தை நடத்துபவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டம் மிக அதிகமாகும். 10–18 பொருத்தங்களும், 1,8,9 –வீடு கட்டிய ஜாதகங்களும் இவைகளுக்காக பார்ப்பானுக்கும் ஜாதகக்காரனுக்கும் கொடுக் கும் பணங்களும், இவைகளுக்கெல்லாம் செலவிடப்படும் காலம், அறிவு இவைகளும் சொல்ல முடியாதனவேயாகும். இத்தகைய மனிதத் தன்மையற்ற மனப்பான்மை தொலைய வேண்டும்.

குருசாமி தனது திருமணத்தைப் பற்றி பேசும்போது கஷ்டமில்லை என்று சொன்னார். அது தவறு அவருக்கு கலப்புமணம் நடத்த வேண்டும் என்ற செய்தி வெளிவந்ததிலிருந்து வந்த கஷ்டங்கள் சொல்லக் கூடியதல்ல. கடைசியாக அவர் மணக்காலம் நெருங்க ஆரம்பித்ததும் அவரது டிரஸ்டி அவருக்கு சேர வேண்டிய இவ்வருட நெல் விற்ற பணம் அனுப்பாதிருக்குமாறு அவர் ஜாதியார்கள் தடுத்தார்கள். அவருக்கு நெருங்கிய பந்துக்களில் ஆண் களும் பெண்களும் பலர் சென்னைக்கு வந்து அவருக்கு இனியேற்பட விருக்கும் கஷ்டங்களை கூறினார்கள். அவரின் தங்கை கிணற்றிலிருந்து விழுந்து மிக அபாய நிலையில் இருப்பதாகவும், வந்தால் முகதரிசனம் கிடைக் குமென்றும் ஒரு தந்தி 7–தேதி அவருக்குகிட்டியது. இன்னும் வெளியில் சொல்வதற்கில்லாத பல கஷ்டங்களுக்கு இடையிலேயே அவர் இத் திருமணத்தை நடத்திக் கொள்ள முடிவு செய்தார்.

அடுத்தபடியாக தனக்கு தனது சமூகத்தில் தக்கபடிப்பும் ஒத்த வயதும் உள்ள பெண் கிடைக்கவில்லை என்றார். அது தவறு அவருக்கு 50 ஆயிர ரூபாய்க்கு மேல் சொத்துடன் ஒரு பெண் கிடைக்க இருந்தது. அதை அவர் விவாகம் செய்து கொண்டிருக்கலாம். பணத்துடன் ஓர் பெண் கிட்டிவிட்டால் இவர் பின் ஒத்த வயது ஒத்த படிப்பு இவைகளுக்காக கஷ்டப்பட வேண்டிய தில்லை. இதற்கு எத்தனையோ வழிகளுண்டு, இன்றைய ஜன சமூக வாழ்க்கை யில் பெரும் தனவந்தர்களில் பலர் இதற்கு உதாரண புருடர்களாகவும் விளங்கு கிறார்கள். ஒரு நாடு சுபிக்ஷமுற்று வாழ வேண்டுமானால் அந்நாட்டு மக்கள் ஒரே ஒழுக்க முள்ளவர்களாக இருத்தல் அவசியம். ஒழுக்கமென்பதோ, கற்பென் பதோ, ஆண் பெண் இருபாலருக்கும் சொந்தமானதேயன்றி பெண்களுக்கு மட்டுமல்ல. இன்றைய சீர்கேடான நிலைக்கு பெண்மக்கள் மிருகங்களிலும் கேவலமாகக் கருதப்பட்டதும், அவர்கள் பிள்ளை பெறும் இயந்திரங்களாக எண்ணப்பட்டதும், மனித ஜென்மத்துக்கும் பெண்களுக்கும் சம்பந்தமே இல்லையென ஆண்கள் மதித்து வந்ததும், இவைகளின் சவுகரியத்தினால் இவன் ஒழுக்கம் என்பதைவிட்டு நாளாவட்டத்தில் வெகு தூரம் விலகி அதற்கும் இவனுக்கும் சம்பந்தமில்லாது இன்று வாழ்வதே காரணமாகும். இவைகட்கெல்லாம் தெய்வீகம், மதக்கட்டளை என்ற விவாக முறைகள் இருந்ததே காரணமாகும். இன்று நடந்த கலியாணத்தில் பழைய பழக்க



RangaRakes tamilnavarasam.com

வழக்கங்கள் என்பது கூடுமானவரையில் அறவே நீக்கியே நடைபெற்றது. இதில் தெய்வீகத்துக்கு இடமில்லை. ஆனால், ஒழுக்கத்திற்கும் ஒத்த குடும்ப வாழ்க்கைக்கும் இதிலிடமுண்டு.

ஒரு கடவுளும், அதன் மதமும் அதன் மேல் பின்பற்றும் மக்களை சரிசமமாக பாவிக்க வில்லையானால், அம் மதமும் அக்கடவுளும் யோக்கிய முடையதாக இருப்பதற்கில்லை. அதைச் சொல்லி பிழைப்பவர்களும், அதை நம்பி கட்டி அழுபவர்களும் கூட யோக்கியர்களாக இருப்பார்களா? இருக்க முடியுமா? என்பதை நீங்களே யோசித்து முடிவுசெய்யுங்கள். மற்றும் கலப்பு மணங்களும், விதவா மணங்களும் நாட்டில் வரவர மிக அதிகமாகி வருவது பற்றியும், சாரதா சட்டத்தின் அவசியத்தை நன்குணர்ந்த பார்ப்பனர்கள், அது நல்லதேயானாலும் அதனால் இதுவரையில் சாத்திரத்தின் பேரால் ஏமாற்றிய மதப்புரட்டுக்கு ஆபத்து வந்துவிடுமே என்ற பயத்தினால்தான் அதை எதிர்க்கிறார்கள்.

*குறிப்பு : 08.12.1929 இல் ஈரோடு காரைவாய்க்கால் கரையில் நடைபெற்ற குருசாமி - குஞ்சிதம் திருமண ஆதரவு கூட்டம் - சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 22.12.1929**



# “தீண்டப்படாதார்”கள் நிலைமை

“இந்து மதத்தில்” தீண்டப்படாதவர்கள் என்பவர்களின் பரிதாபகரமான நிலமையைப் பற்றி நாம் அடிக்கடி எழுதி வந்திருக்கிறோம். இன்றைய தினம் நமது நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களது கேவலமான நிலையை உணர்ந்து தாங்கள் பார்க்கக் கூடாதவர்களாகவும் நெருங்கக் கூடாதவர்களாகவும், தொடக் கூடாதவர்களாகவும் இதர “இந்திய” மக்களால் ஒதுக்கிவைக்கப்பட்டும் கொடுமைப்படுத்தப்பட்டும் வருவதிலிருந்து தங்களை மீட்டுக் கொள்ள வேண்டும் என்ற ஆசையினால் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். சமீபத்தில் பூனாவில் கோயில் பிரவேசம் சம்பந்தமாக சத்தியாக்கிரகம் நடைபெற்று அதன் வேகம் இன்னும் குறையாமல் அவ்விடத்திய மக்களது உணர்ச்சியைத் தட்டி யெழுப்பியிருக்கிறது. வட இந்தியாவில் காசி முதலிய பல இடங்களிலும் இதே மாதிரியாக தாழ்த்தப்பட்டவர்களின் கிளர்ச்சி அதிகமாகும் அடையாளங்களும் காணப்படுகின்றன. தென் இந்தியாவில், அதிலும் முக்கியமாக தமிழ் நாட்டில் நமது சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்து வேரூன் றிய சில வருஷங்களுக்குள்ளாகவே, சிறிது காலமாக தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்தில் பொது ஜனங்களுக்கு சிறிது கவலை ஏற்பட்டிருப்பதோடு கூட அவர்களுக்கும் தங்கள் கேவலமான நிலைமையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசையும் உண்டாயிருக்கிறது.

“தீண்டாதார்” விஷயத்தில் சைவர்கள் என்போர்களும் வைஷ்ணவர் கள் என்போர்களும் இதுகாறும் மக்களை ஏமாற்றி நந்தனார் கதையையும், திருப்பாணாழ்வார் கதையையும் மாத்திரம் காண்பித்து விட்டுத் தப்பித்துக் கொண்டது போல் இனி செய்ய முடியாதென்பதையும் நன்கு உணர்ந்து கொண்டார்கள். மேலும் ஆதிதிராவிடர்களும் ஏனைய தாழ்த்தப்பட்ட மக்களும் அவரவர்கள் சமூக மகாநாடுகள் கூடி தங்களது அபிவிருத்திக்கு வேண்டிய எற்பாடுகளையும் செய்துகொண்டே வருகிறார்கள். ஆகவே, தற்போது தமிழ் நாட்டிலும் சிதம்பரம், ஈரோடு, விழுப்புரம், திருச்சி போன்ற இடங்களில் கோயில் நுழைவு சம்பந்தமான கிளர்ச்சிகளோ, அல்லது உணர்ச்சியோ நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அறிகிறோம். திருவாங்கூர் சமஸ்தானத்திலும் தீண்டப்படாதார் என்று ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கும் லட்சக்கணக்கான “ஈழுவர்களும்” “புலையர்களும்” கோயில் நுழைவு சம்பந்தமாக மிகப் பிடிவாதமான கிளர்ச்சிகள் செய்து கொண்டு வருவதாகவும் அறிகிறோம். இவர்களது கிளர்ச்சிகள் முழுதும் வெற்றி பெறுவதும் இயலாததும் வேறு



RangaRakes tamilnavarasam.com

விஷயமானாலும், இவர்களது முயற்சியின் தத்துவத்தை கூர்ந்து கவனிப்போருக்கு நமது “இந்து மதத்திற்கு” முடிவு காலம் நிர்ணயிக்கக் கூடிய சந்தர்ப்பம் நெருங்கிக்கொண்டு வருகிறது என்பதை மாத்திரம் யாரும் மறுக்க முடியாது.

கோயில் நுழைவு சம்பந்தமாக நமது அபிப்பிராயத்தை அடிக்கடி தெரிவித்திருக்கிறோம். “தீண்டப்படாதவர்கள்” கோயிலுக்குள் போய் விடுவதால் உடனே அவர்களுக்கு “மோட்சமோ” அல்லது “கடவுள் அனுக் கிரகமோ” கிட்டிவிடும் என்பதல்ல. பின் என்னவெனில், கோவில்களில் தான நமது கடவுள்கள் என்பவைகள் வசிப்பதாக “இந்து மதம்” கூறுகிறது. அதேதான் நடவடிக்கையிலும் மக்கள் சொல்லிக் கொண்டிருப்பதையும் பார்க்கிறோம். “தீண்டப்படாதவர்கள்” கோயிலுக்குள் நுழைவதாலோ, அல்லது “கடவுள் களின்” சிலைகளின் பக்கத்தில் போவதாலோ, அந்தக் “கடவுள்கள்” செத்துப் போகுமென்றும், அதனால் “இந்து மதத்”திற்கே அழிவு வந்து விடுமென்றும் கூக்குரல் போடுகின்ற சனாதன தர்மக் கூட்டத்தார்களுக்கும், சைவக் கூட்டத் தார்களுக்கும், வைஷ்ணவக் கூட்டத்தார்களுக்கும், அவ்விதம் அது உண்மை யானால் அத்தகைய லேசான உயிரை வைத்துக் கொண்டிருக்கிற “கடவுள்கள்” இருப்பதைவிட ஒழிந்து போவதே நலம் என்பதையும், இதைப் பொறுக்க முடியாத “இந்து மதமும்” இருப்பதைவிட அழிவதே மேல் எனவும் நிரூபித்துக் காண்பிக்க வேண்டியே இந்தக் கோயில் நுழைவு இயக்கம் தோன்றியிருக்கிறது என்று சொல்வோம். இதர பொது இடங்களைவிட கோயில்களை முக்கியமாக எடுத்துக் கொண்ட கருத்தின் உண்மையை இது சமயம் வெளியிட்டு விடவேண்டுமென்று நினைக்கிறோம். தாழ்த்தப்பட்டவர்கள், “இந்து மத”க் கோயில்களுக்குள் செல்ல உத்தேசிப்பது “கடவுள்” மேலிருக்கும் பக்திப் பெருக்கினால் அல்ல என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். ஏனெனில், அவரவர்களை அடிமைப்படுத்துவதற்கும், அவரவர்கள் பகுத்தறிவை உபயோகத்திலிருந்து தடுப்பதற்கும் போதுமான “கடவுள்களும்” தரகர்களும், பூசாரிகளும், அவரவர்கள் சமூகத்திலேயே போதுமானவரையில் இருப்பதால் மேலும் நம்முடைய “கடவுள்களும்” தரகர்களும் வந்துதான் அவர்களை வீணாக்க வேண்டும் என்ற அவசியமில்லை, அல்லது அவர்களது “கடவுள்க ளுக்கு” இருக்கும் சக்தியை விட நமது “கடவுள்களுக்கு” அதிகமாக இருக் கிறது என்ற நம்பிக்கையுமல்ல. பின் என்ன வெனில், கோயில்கள்தான் நமது தேசத்தில் சாதிப்பிரிவையும் சமயப் பிரிவையும் உண்டாக்குவதற்குக் காரணமா யிருந்தன வென்பதற்கும், இன்றும் அவைகள் தான் காரணமாயிருக்கின்றன வென்பதற்கும் அத்தாட்சிகள் தேட வேண்டிய அவசியமில்லை. சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற பொது இடங்களாகிய தபால் ஆபீஸ், ரயில்வே ஸ்டேஷன், கோர்ட்டுகள் முதலானவைகள் எப்படி ‘தீண்டப்படாத’ மக்களை ஒன்றுபடுத்த உபயோகப்பட்டு வருகின்றனவோ அதேபோல் ‘இந்துமதத்’ தினால் ஏற்படுத்தப்பட்ட கோயில்களும், சத்திரங்களும் தீர்த்தங்களும், ஸ்தலங்களும்தான் தீண்டாமையை நிலை நிறுத்தவும் அதிகப்படுத்தவும்



உபயோகப்பட்டு வருகின்றன. ஆதலால்தான் இதர பொது இடங்களை விட கோயில்களிலேயே முதன் முதல் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களது உரிமையை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டியது அவசியம் என்று கருதுகின்றோம்.

அதுவுன்றி, பார்ப்பனப் புரட்டை அப்படியே கண்ணுக்கெதிராகக் காட்டக் கூடியது கோயில்களே என்பது நமது அபிப்பிராயம். எப்படியெனில், எங்கோ மூலையில் கிடக்கும் கல்லை எடுத்து வந்து உருவமாக்கி, அதை நட்டு வைத்து, அதற்கு மந்திரம் மூலமாக உயிர் உண்டாக்கி வெறும் கல்லை “கடவுளாக்”கக் கூடிய சக்தியானது, ஆறறிவுடைய மக்களின் ஒரு பெரும் பகுதியாரை, அவர்களுடைய தீண்டப்படாத தன்மையிலிருந்து விலக்கி இதர மக்களோடு சமமாகச் சேர்க்க முடியவில்லையென்றால், அந்த சக்தியோ, அல்லது மந்திரமோ எவ்வளவு தூரம் புரட்டு என்பதும், இந்த அயோக்கியத் தனமான புரட்டு எத்தனை ஆயிர வருஷங்களாக நமது நாட்டில் கேட்பாரில் லாமல் நடந்து வந்திருக்கிறதென்பதும் பொது ஜனங்களுக்கு நன்கு விளங்கும். இன்னும் கடவுள் என்பதற்கும், அதை வணங்குகிறவனுக்கும் மத்தியில் தரகர்கள் இருந்து கொண்டு பாமர மக்களை ஏமாற்றிப் பணம் பறித்து சோம்பேறித் தனமாக வயிறு வளர்த்துவரும் கூட்டத்தாரினுடைய சூழ்ச்சிகளும் கோயில் நுழைவு மூலியமாய் பொது ஜனங்களுக்கு வெட்ட வெளிச்சமாக விளங்கிவிடும் என்பதும் நமது கடைசி முடிவு. மேலும் “இந்து” மதமானது ஆதி முதல் இதுவரையில் சாதிப் பாகுபாட்டின் மீதே நடைபெற்று வருகிறது என்பதையும் நிரூபிக்க வேண்டிய காலமும் கிட்டிவிட்டது. சாதியையும், சில்லரை சமயப்பிரிவுகளையும் அடிப்படையாகக் கொண்ட “இந்து” மதமானது சாதிவேரையும், பார்ப்பனீய வேரையும் வெட்ட ஆரம்பித்தவுடனேயே உச்சியிலிருக்கும் இலை, தழைகளோடு அடிமரமும் சேர்ந்து ஆட்டங்காண ஆரம்பிக்கும் காட்சியையும் மக்கள் காண வேண்டிய காலமும் கிட்டிவிட்டது. இன்னும் “ஸ்ரீராமானுஜர் சகல ஜாதியாரையும் ஒன்றுபடுத்தியதும் திருப்பாணாழ் வாரை வணங்கக் கூடியதுமான எங்கள் வைஷ்ண மதத்தில் தீண்டாமை வித்தியாசம் கிடையாது. அது மிகவும் உயர்ந்தது” என்று வாய் வேதாந்தம் பேசி தப்பித்துக் கொண்டு வந்த வைஷ்ணவர்களும், “நந்தனாருக்கு மோட்சம் கொடுத்ததும் அவரையும் 63 நாயன்மார்களுள் ஒருவராய் வணங்கி வருவது மாகிய எங்கள் சைவ மதத்தில் தீண்டாமை வித்தியாசம் கிடையாது” என்று வீண்வாய்மிரட்டல் மிரட்டி ஏமாற்றி வந்த சைவர்களும் இனி இந்த விஷய மானது நடைமுறையில் வந்தபின் எவ்வாறு நடந்து கொள்ளப்போகிறார்கள் என்பதையும் நேருக்கு நேர் பார்க்க வேண்டிய சந்தர்ப்பமும் கிட்டிவிட்டது. மேலும் காங்கிரஸ் என்பதின் பெயரால் தீண்டாமை விலக்குக்காக கோடிக்கணக் கான ரூபாய்கள் வசூலித்து இதுவரையில் மேடையின் மீது கர்ஜித்து வந்த கூட்டத்தார்களும் ‘சுயராஜ்யம்’, ‘சுயராஜ்யம்’ என்று கூக்குரல் போடும் “தேசபக்தர்”களும் இனி இவ்விஷயத்தில் எவ்வளவு தூரம் உண்மையாக நடந்து கொள்ளப்போகிறார்கள் என்பதையும் பொது மக்கள் அறியவேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் தீண்டாதார் விஷயத்தில் பாடுபடு



RangaRakes
tamilnavarasam.com

வதாக வாக்களித்து சட்டசபை முதலிய பொது ஸ்தாபனங்களில் “தீண்டாதாரின்” பிரதிநிதியாக இடம் பெற்றும் இன்னும் அதே காரணமாக பட்டங்கள் உத்தியோகங்கள் பெற்றும் உள்ளவர்களாய் தீண்டப்படாதார்களுக்காகவே பத்திரிகைகள் நடத்தி வருபவர்களும் ஆகிய இவர்களெல்லாம் இத்தகைய நெருக்கடியான நிலைமையில் எவ்வளவு தூரம் முன்னணியிலிருந்து ஊக்கத்துடன் வேலை செய்யப் போகிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஆகவே, இப்போது நமது நாட்டில் வீறு கொண்டெழுந்திருக்கும் இவ்வுணர்ச்சியானது - அதன் வெற்றி தோல்வி ஒரு பக்கமிருக்க, அதற்கு உண்மையில் தடையாக இருப்பவர்கள் யார் யார் என்பதையும், என்னென்ன காரணங்களினால் தீண்டப்படாதவர்கள் நிலைமை கேவலமாய் இருக்க நேர்ந்தது என்பதையும், அக்காரணங்களை எந்தெந்த வழிகளில் ஒழிக்க வேண்டும் என்பதையும் ஜனங்கள் அறிந்து கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்தையும் அளித்திருக்கிறது. இந்தக் கோயில் நுழைவு இயக்கத்திற்கு ஆதாரமாக அநேக சம்பவங்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருவதையும் நாம் பார்த்து வருகின்றோம். உதாரணமாக திரு.ஜெயகர் அவர்கள் தீண்டாமையை ஒழிக்கக்கூடிய ஒரு தீர்மானத்தை பம்பாய் சட்டசபையில் சமீபத்தில் கொண்டு வரப் போவதாகவும் அறிந்து மகிழ்கின்றோம். அந்தத் தீர்மானத்திற்கு டாக்டர் அம்பேத்கார் போன்ற பிரமுகர்கள் உதவியாயிருந்து வேலை செய்வார்களெனவும் தெரிகிறது.

இவர்களுடைய முயற்சி வெற்றிபெற்று சட்டமும் செய்யப்படுமேயானால், பெண்கள் சமூகத்திற்கு சாரதா சட்டம் எவ்வித பலத்தையளித்திருக்கிறதோ அதே மாதிரி, தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்தில் இந்த சட்டமும் பெரிய பலமாக இருக்கும் என்பதற்கு ஐயமில்லை. பம்பாய் மாகாணத்தைப் பார்த்தாகிலும் நமது மாகாண சட்டசபையில் உள்ளவர்கள் தங்கள் கடமையைச் சிறிது நினைத்துப் பார்க்க ஆரம்பிப்பார்களா என்பது நமக்கு சந்தேகமாகவே இருக்கிறது.

இந்த நிலைமையில், பொது மக்களின் கடமை என்ன என்பதை மாத்திரம் நாம் விளக்க வேண்டியது அவசியம் என்று நினைக்கின்றோம்.

‘இந்து மதத்’தைக் காப்பாற்றுவதாகச் சொல்லுபவர்களெல்லாம் இந்த விஷயத்தில் அதிக சிரத்தையெடுத்து தங்கள் கடமையைச் செய்யாவிடில் நாளுக்கு நாள் ஆயிரக்கணக்கான ‘தீண்டப்படாதவர்கள்’ முஸ்லிம்களாகவும் கிறிஸ்துவர்களாகவும் மாறிக் கொண்டிருப்பது மேலும், மேலும் பெருகிக் கொண்டே வரும் என்பதற்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை. பெண்கள் விதவைகளாயிருந்து கஷ்டப்படுவதைவிட உடன்கட்டை ஏறுவதாயிருந்த பழைய வழக்கங்கூட எவ்வளவோ மேலானது என்று சொல்லுகிறோமோ அதேபோல், மக்கள் தீண்டப்படாதவர்களாயிருந்து, குளம், ரஸ்தா முதலிய பொது இடங்களின் சௌகரியத்தை அனுபவிக்க முடியாமல் கஷ்டப்படுவதைப் பார்க்கிலும், முகம்மதியர்களாகவாவது மாறி மனிதர்களாக வாழ்வது மேலானது



என்று தைரியமாய் கூறுவோம். அவ்வித அவசியம் நேர்ந்து அதைத் தவிர தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கு வேறு மார்க்கம் இல்லையென்று முடிவாய்க் காண்போமானால் நாம் அதை வற்புறுத்திக் கூறியாவது அவர்களது துன்பங்களை இந்த க்ஷனமே ஒழிக்க வேண்டிய மார்க்கத்தில் இறங்கிவிட வேண்டியதாகத்தான் வரும். இதில் ஒன்றும் இரகசியமோ மறைபொருளோ கிடையாது. மனிதனுக்கு ஒரு மதமுமே அவசியமில்லை யென்ற கொள்கையை யுடையோமாயினும் கொடுமைப்பட்டு அறியாமையில் அழுந்திக் கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு கைகண்ட பலனாக விடுதலையளிக்கக் கூடியது முகம்மதிய மதம் என்ற கருத்தில்தான் சொல்கிறோமே யொழிய இதர மதங்களில் இல்லாத “மோட்சமோ” “புண்ணியமோ” முகம்மதிய மதத்தில் கிடைத்துவிடும் என்ற எண்ணத்தினால் அல்ல. அப்படிச் செய்வதால் பிறகு எல்லோரையும் சேர்த்து மதம் என்ற சேற்றிலிருந்து விடுவிப்பதற்கு ஏற்படும் கஷ்டத்தையும் நாம் உணராமலில்லை. ஆனால், “தீண்டப்படாதவர்கள்” நிலைமையில் இதர ஜாதி இந்துக்கள் எனப்படுவோரும் இருந்தால் இந்த நிலையில் வேறு என்னதான் செய்யக் கூடும் என்பதை வாசகர்கள் சற்று பொறுமையோடு யோசித்துப் பார்க்கும்படி கோருகிறோம். ஆகவே, இத்தகைய நிலையை நமது நாட்டில் உண்டாக்கிவிடாமல் தீண்டாமைக் கொடுமையை உடனே தாமதமன்னியில் ஒழிப்பதற்குப் பொது ஜனங்கள் எவ்வளவு கடமைப்பட்டிருக்கின்றார்கள் என்பதை அறிவுறுத்தும் பொருட்டே இதை எழுதினோம். ஆதலால் கோயில் நுழைவு விஷயத்தில் பொது மக்கள் தங்கள் கடமையைச் செய்வதோடு முக்கியமாக சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்ட அன்பர்கள் அனைவரும் தீவிரமாக வேலை செய்யக் கடமைப்பட்டிருக்கின்றார்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 22.12.1929**



RangaRakes tamilnavarasam.com

# மேயோ கூற்று மெய்யா- பொய்யா?

கோவை திருவாளர் அ.அய்யாமுத்து அவர்களால் இயற்றப் பெற்ற மேற்கண்ட நூலின் பிரதி ஒன்று வரப் பெற்றோம்.

கன்னி மேயோ கருத்தைப் பற்றியோ, அவர் கூறியது இன்சொல்லா புன்சொல்லா என்பது பற்றியே நமக்கு கவலையில்லை. கூறிய கூற்று மெய்க்கூற்றா பொய்க்கூற்றா என்பதை நாம் அறிந்து கொள்ள கடமைப் பட்டிருக்கின்றோம். சிலர் மேயோ ஆதிக்க வெறி கொண்ட வெள்ளையர்களால் கூலிக்கு வேலை செய்ய வந்த குப்பைக்காரி என்கின்றனர். குப்பைக்காரி என்றால் என்ன? மேயோவின் கூடையில் குப்பை நிறைந்ததா? இல்லையா? குப்பை திரட்ட வந்து வெறுங்கூடையுடன் சென்றாளா? வெறுங்கூடையுடன் சென்றுதான் நிறை கூடையுடன் இந்தியாவிலிருந்து திரும்பி வந்ததாகத் திரித்துக் கூறினளா? என்பன நமது கடா.

இக்கடாவிற்கு, வைக்கம் வீரர், மாசற்ற நெஞ்சுடையார், தூய வாழ்க்கையினர், துகளிலாப் பொது நோக்குடையார், தேசத் தொண்டில் திளைத்த திண்மையினார், அத்தேசத் தொண்டை கதர்தொண்டில் ஈடுபடுத்தித் திகழும் திருவுடையார், திராவிடன், குடியரசு பத்திரிகைகளில் பழந்தமிழ் மக்களிடை பாரறிய மெய்ஞ்ஞானக் கட்டுரைகள் வரைந்த பயிற்சி மிக்கார், கோவை திருவாளர் அ. அய்யாமுத்து அவர்கள் “மேயோ கூற்று மெய்யா- பொய்யா?” என்னும் தலைப்போடு ஒரு நூலை வெளியிட்டு தக்க விடையிறுத்துகின்றார். இதனைப் படிக்குந்தோறும் இப் பெருந்தகையாரின் மதிநுட்பமும் மனத்திலுதித்த கருத்தை உதித்தவாறு எடுத்தியம்பும் திறனும், நடு நிலைமையும் இனிய செந்தமிழ்ச் சுவையோடு பால், தேன், பழம் கலந்தவாறு இனிப்ப தென்பதில் ஐயமின்று, உண்மையை அறிய அவாக் கொண்டவர்கள் இந்நூலை அவசியம் ஒரு முறையேனும் படித்தல் தகைமையாகும். இத்தகைய நூலை வெளியிட்ட அறிஞர்க்கு இத்தமிழுலகம் எஞ்ஞான்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது. குமரன் அச்சு நிலையத்தில் அழகு பெறப் பதிப்பிக்கப் பெற்ற இந்நூல் விலை அணா - 0-4-0

**குடி அரசு - மதிப்புரை - 22.12.1929**



# விவாகரத்து

சமீபத்தில் சென்னையில் நடந்த ஸ்திரீகள் மகாநாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களை வாசகர்கள் அறிந்திருக்கலாம். அவைகளில் முக்கியமாக இரண்டு தீர்மானங்கள் மாத்திரம் அதிகமான விவாதத்திற்குக் காரணமாயிருந்தன. “ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சரிசமானமான ஒழுக்க முறைகள் ஏற்படுத்த வேண்டும்” என்பது ஒன்று. “கலியாணமானப் பெண்கள் தகுந்த காரணமிருப்பின் தங்களுக்கிஷ்டமான போது தங்கள் விவாகத்தை ரத்து செய்து கொள்ளலாம்” என்பது இரண்டு. இந்த இரண்டு தீர்மானங்களும் பெரிய படித்த மனிதர்கள் என்பவர்களையும் பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுகிறவர்கள் என்பவர்களையும் சரியான பரீட்சை பார்த்துவிட்டது என்றே சொல்வோம். நமது தென்னிந்தியாவிலுள்ள பத்திரிகைகள் எல்லாம் ஒன்றுவிடாமல் “விவாகரத்து” தீர்மானத்தை கண்டித்துவிட்டன.

இத்தீர்மானம் சம்பந்தமாக பத்திரிகைகளில் நடந்த வாக்குவாதங்களும், மறுப்புகளும், கண்டனங்களும் அவைகளுக்கு எழுதப்பட்ட பதில்களும் நமது வாசகர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். வயது சென்ற ஸ்திரீகள் என்று சொல்லக்கூடியவர்களில் சிலர் தீர்மானத்தின் உண்மையை உணராமல் இதை எதிர்த்த விஷயம் நமக்கு மிகவும் ஆச்சரியமாகவே இருக்கிறது.

ஸ்திரீகள் மகாநாடு நடைபெற்ற அன்றைய தினமே, இவ்விதமான தீர்மானங்கள் கொண்டு வருவது தனக்கு இஷ்டமில்லையென்று சொல்லி, அக்கிராசனர் ஸ்ரீமதி சீனிவாசய்யங்கார் அவர்கள் தன்னுடைய அக்கிராசனப் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்கள். பிறகு வேறு ஒருவருடைய அக்கிராசனத்தில் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு மேற்சொன்ன தீர்மானங்களும் இன்னும் இதர தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. பிறகு இது சம்பந்தமாக பிரபல ஸ்திரீகள் சிலருக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு பத்திரிகைகள் மூலியமாக இரு சாரார்களுடைய அபிப்பிராயங்களையும் வெளியிட்டு வந்தார்கள். இன்னும் அத்தீர்மானங்களின் சம்பந்தமான அபிப்பிராயங்கள் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. ஆதலால்தான் இந்த முக்கியமான விஷயத்தைப் பற்றி நமது அபிப்பிராயத்தையும் வெளியிட விரும்புகிறோம். மேலும் சென்னை மாகாணத்தின் முதலாவது சுயமரியாதை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மேற்கண்ட இதே இரண்டு தீர்மானங்களுக்கு இப்போதிருக்கும் எதிர்ப்புக்களைவிட பலமான எதிர்ப்புகள்



RangaRakes
tamilnavarasam.com

தோன்றியதும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்த சந்தர்ப்பத்தில் இதைவிட "வேகமானதும்" "புரட்சியானதும்" என்று பிறரால் அநாவசியமாக தூற்றப்பட்ட சில இதர தீர்மானங்களைப் பற்றி நாம் எழுத வேண்டியதா யிருந்ததால், ஸ்திரீகளைப் பற்றி மேற்கண்ட இரண்டு தீர்மானங்களைப் பற்றி அதிகமாக விவரித்து எழுத அவகாசமில்லாது போயிற்று. ஆகையால் இந்த சந்தர்ப்பத்திலாவது இது சம்பந்தமாக நமது கருத்தை விளக்கிவிட வேண்டு மென்று எண்ணுகிறோம்.

முதலாவதாக, ஆண், பெண், இருபாலாருக்கும் சமமான ஒழுக்க முறைகள் இருக்க வேண்டுமென்பது, இது விஷயமாக அபிப்பிராய பேதமே இருக்காது என்று எதிர்பார்த்தோம். ஆனால், இதில்கூட படித்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும் கூட மாறுபாடான அபிப்பிராயத்தைக் கொண்டி ருக்கிறார்கள் என்பதை அறிந்தவுடன் நமக்கு, பெரிய அதிசயமாகவே இருந்தது. உதாரணமாக பார்ப்பனரல்லாதாருக்காக உழைக்கும் "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் ஆண், பெண்ணுக்கு சமமான சட்டம் இருக்க வேண்டு மென்று சென்னை ஸ்திரீகள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் கண்டித்துத் தலையங்கம் எழுதியிருந்ததைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனோம் ஏழை மக்களுக்காகவும், நியாயத்திற்காகவும், சகோதரத்துவத்திற் காகவும், சமத்துவத்திற்காகவும் உழைப்பதாகச் சொல்லும் "ஜஸ்டிஸ்" பத்திரி கையானது சாஸ்திரங்களை உதாரணமாகக் காட்டி இத்தீர்மானத்தை கண்டித்த தானது நாம் என்றும் எதிர்பாராததும், ஏமாற்றமுமான விஷயமேயாகும். பகுத்தறிவுக்கு ஏற்றதான காரணங்களைச் சொல்லாமல் "ஜஸ்டிஸ்" பத்திரிகையானது, "பொதுவாகவே பெண்கள் இயக்கம் சரிவர நடத்தப்படுவ தில்லை"என்ற பெரும் குற்றத்தைச் சுமத்துகிறது. இந்த அபிப்பிராயம் உண்மையா? இல்லையா என்பதைப் பற்றி நமக்கு அதிகக் கவலையில்லை. ஆனால், நமக்கு வேண்டியதெல்லாம் இது மாதிரி விஷயங்களில் பெண் பாலருடைய முடிவான அபிப்பிராயம் என்னவென்பதே. ஏனெனில், பெண் கள் சம்பந்தமான விஷயங்களைப் பற்றி ஆண்கள் முடிவு செய்வதை விட பெண்களது அபிப்பிராயத்தையே பின்பற்றுவதுதான் முறையான வழியாகும். இன்று நமது நாட்டிலும் பிற நாடுகளிலும் பெண்கள் நிலைமை சற்று தாழ்மை யாகவே இருப்பதற்குக் காரணம் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதிகள் சட்டதிட்டங்களெல்லாம் பெண்மக்கள் படித்திராத காலத்தில் ஆண் மக்களால் ஏற்படுத்தப்பட்டதால் தான். பார்ப்பனரல்லாதார் படிக்காத காலத் தில் எப்படி நம்மைப் பற்றி தூஷித்து நம்மை 'அடிமைகள்' என்பது புராணம் முதலானவைகள் எழுதி வைத்தார்களோ அதே மாதிரியாகத்தான் ஆண் மக்களும் தங்களுக்கு ஏற்றவாறு பாரபட்சமான சட்ட திட்டங்களை ஏற்படுத்தி னார்கள். உதாரணமாக புருஷன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏற வேண்டுமென்ற கட்டாயத்திற்கு பெண்கள் சம்மதித்திருப்பார்களா என்று யோசித்துப் பாருங்கள். அப்படி சம்மதித்திருந்தாலும் அதே மாதிரி மனைவி இறந்த புருஷனையும் உடன்கட்டை ஏற்ற வேண்டு மென்றாவது கேட்டிருக்க



மாட்டார்களா என்பதும் சற்று யோசித்துப் பார்க்க வேண்டிய விஷயமாகும்.

ஆகவே, இம்மாதிரியாக பலவழிகளிலும் பெண் மக்களை அடிமைப் படுத்தி வைத்திருப்பதற்கு ஆண்களுடைய சுயநலமே காரணம் என்பது "ஜஸ்டிஸ்" போன்ற பத்திரிகைகளுக்கு இன்னும் இவை தெரியாமலா இருக்கிறது என்பது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சொத்துரிமை, ஒழுக்கம் முதலிய விஷயங்களில் சமமான சட்டங்கள் இருத்தலே அவசியம் என்பதை "ஜஸ்டிஸ்" போன்ற பத்திரிகைகள் மறைத்தாலும் அல்லது எதிர்த்தாலும் நமது நாட்டுப் பெண்கள் ஆயிரக் கணக்காய்ப் படிக்க ஆரம்பித்து விட்ட இக்காலத்தில் ஆண் மக்களது சுயநல அபிப்பிராயங்களுக்கு எவ்வித செல்வாக்கும் மதிப்பும் இருக்காது என்பது நமக்கு நன்றாக தெரியும். ஆகவே இந்த அடிப்படையான முக்கிய கொள்கையிலேயே நமது சகோதரப் பத்திரிகையின் அபிப்பிரா யத்துக்கு நாம் மாறுபட வேண்டியிருக்கும் என்று எதிர்ப்பார்க்கவே இல்லை.

இரண்டாவதாக உள்ள "விவாகரத்து" விஷயந்தான் சற்று கூர்ந்து கவனிக்கவேண்டிய விஷயமாகும். இது சம்பந்தமாக செங்கற்பட்டு சுய மரியாதை மகாநாட்டிலும் சென்னை ஸ்திரீகள் மகாநாட்டிலும் நிறைவேற்றப் பட்ட தீர்மானமானது பொறுப்பற்றவர்களால் செய்யப்பட்டதல்லவென்பது வாசகர்களுக்குத் தெரியும். ஆண் மக்களே நூற்றுக்கு 95க்கு மேல் கூடி யிருந்த செங்கற்பட்டு மகாநாடும், பெண்மக்களே நூற்றுக்கு நூறு கூடியிருந்த சென்னை ஸ்திரீகள் மகாநாடும் ஒரே தீர்மானத்தை நிறைவேற்றியிருக் கின்றனவென்றால் இதில் ஏதாவது தவறு இருப்பதற்கு மார்க்கமிருக்கிறதா என்று கேட்கின்றோம்.

இதைப் பற்றி ஆராய்வதற்கு முன்பு இது சம்பந்தமாக அநேக தப்ப பிப்பிராயம் கொண்டுள்ளார்கள் என்பதை விளக்க வேண்டியது அவசியமா கின்றது. "விவாகரத்து" சட்டமானால் உடனே எல்லாப் பெண்களும் தங்கள் கணவர்களை விட்டு ஓடிப்போவார்கள் என்றும், "கற்புநிலை" அடியோடு கெட்டுப் போகுமென்றும் பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பாதுகாப் பிற்கும், அவசியத்திற்கும் ஒரு சட்டம் செய்தால் ஜனங்கள் எல்லோரும் அதே வேலையாயிருப்பார்களென்பதே நியதியல்ல. அவசியமான சந்தர்ப் பங்களில் மாத்திரம்தான் ஜனங்கள் அதனைக் கையாளுவார்கள். ஏனெனில், அதனால் ஏற்படக்கூடிய கஷ்டநஷ்டங்களுக்கு தாங்களே பாத்தியப்பட்டவர் கள் என்பது அநுபவத்தினால் மக்களுக்கு நாளடைவில் விளங்கிவிடும். ஆகவே "விவாகரத்து" அனுமதிக்கப்படுமானால் ஏதோ ஆபத்து வந்துவிடு மென்று சிலர் நினைத்துக் கொண்டிருப்பது அவர்களது சுயநலத்தினால் ஏற்படக்கூடிய பயம் என்றுதான் சொல்லுவோம்.

"விவாகரத்து" சட்டமாவது பெண்கள் சமூகத்திற்கு ஒரு இன்றியமையாத பாதுகாப்புக்கருவி என்பது நமது முடிவான அபிப்பிராயம். புருஷனுக்கும் மனைவிக்கும் பரஸ்பர அன்பும் சமமான வாழ்க்கையும் ஏற்படவேண்டுமானால்



RangaRakes tamilnavarasam.com

இருவருக்கும் தனித்தனியாக உரிமையிருந்தால்தான் முடியும். இப்போதிருக்கும் "இந்திய" சமூகத்திலுள்ள மணவாழ்க்கையானது பல வழிகளிலும் பெண் மக்களுக்கு பாதகமான முறையிலேயே நடைபெற்று வருகிறது. ஒரு புருஷன் தனக்குத் தேவையில்லாதபோது தனது மனைவி அளித்திருக்கும் நமது சட்டமானது, பெண்களுக்கு அதே உரிமையைக் கொடுக்காமலிருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். இந்த உரிமை மனிதனுக்கு இருப்பதால், எல்லாப் புருஷர்களும், இதே வேலையாகவா இருக்கிறார்கள் என்று தான் கேட்கிறோம். ஆகவே, இதே உரிமையை பெண் மக்களுக்கும் அளிக்கவேண்டியது நியாயமும் சமமும் ஆகும் என்பதை இன்னும் ஏன் ஆண்மக்களில் சிலர் அறியவில்லை என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. இந்த விவாகரத்துத் தீர்மானத்தை வைதீகப் பத்திரிகைகள் தான் கண்டித்தனவென்றால், நமது "ஜனநாயக"த் தினசரியான "ஜஸ்டிஸ்" பத்திரிகையும் கண்டித்ததுதான் நமக்கு விளங்கவில்லை. எது எப்படியாயினும், இந்தத் தீர்மானத்தின் அவசியத்தை நமது சுயமரியாதை இயக்கத்து அன்பர்கள் நன்கு அறிவார்களாகையால், இம்மாதிரி சமத்துவமான நோக்கமுடைய விஷயங்களில் எவ்வளவு எதிர்ப்பு இருந்தாலும், அதற்காக நாமோ அல்லது நமது இயக்கத்தைச் சேர்ந்தவர்களோ எங்கள் கடமையினின்றும் பின்வாங்க மாட்டோம் என்பதை மாத்திரம் உறுதி கூறுகிறோம். கடைசியாக "ஜஸ்டிஸ்" பத்திரிகைக்கு ஒன்று கூற விரும்புகிறோம். பொது மக்களின் உணர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்ட அப்பத்திரிகையானது இனியாகிலும் மக்களின் அபிப்பிராயத்தை ஒட்டி சீர்த்திருத்தத்தில் முன்னணியில் நின்று தனது பழைய குருட்டு நம்பிக்கைகள் ஏதேனும் மிஞ்சி இருக்குமானால் அவைகளை உடனே ஒழித்து சமூகத் தொண்டையே பிரதானமாகக்கொண்டு வேலை செய்யும் என்று எதிர்பார்க்கிறோம். மற்றொரு சந்தர்ப்பத்தில் இதுசம்பந்தமாக இன்னும் விவரமாக எழுதுவோம்.

**( சா.கு.)**

**குடி அரசு - தலையங்கம் - 29.12.1929**



RangaRakes

# திரு.வேணுகோபால் நாயுடுவின் மரணம்

பட்டுக்கோட்டையில் திரு, வேணுகோபால் நாயுடு அவர்கள் இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் எமது மனம் துடித்த துடிப்பைச் சொல்லிவிட முடியாது. சில நிமிஷங்கள் வரை நிம்மதியில்லாமல் மனது தத்தளித்துக் கொண்டிருந்தது. இப்போதும் இச்சம்பவத்தை நினைக்குந்தோறும் மனம் திடுக்கிடுகிறது. திரு.வேணுகோபால் நாயுடு அவர்கள் பார்ப்பனீயம் நிறைந்த பட்டுக்கோட்டையில், நமது மக்களுக்கு, அதுவும் முக்கியமாக இளைஞர்களுக்கு எவ்வளவு ஆதரவாகவும் உதவியாகவும் இருந்தார்கள் என்பது அவ்விடத்தில் இன்று இளைஞர்கள் படும் துயரத்தை நேரில் பார்ப்பவர்களுக்கு நன்கு தெரியும். மாணவர்களுக்கு நற்புத்தி புகட்டக்கூடிய பிதாவும், ஏழைமக்களுக்கு வேண்டுவன அளித்து அவரது துயர்நீக்கி வந்த அண்ணலும், பார்ப்பனீயமும் புரோகிதப்புரட்டு கண்டு அஞ்சும்படியான சுயமரியாதை வீரரும், வக்கீல் தொழிலில் ஒரு பிரபலஸ்தரும், பொதுவாக, பார்ப்பனரல்லாதார்களுக்கே தஞ்சை ஜில்லாவிற்கு ஒரு தலைவருமாக விளங்கிய திரு. வேணுகோபால் அவர்களை இழந்தது நமக்கு ஒரு பெரிய நஷ்டம் என்றே சொல்வோம். அவர்களது முற்போக்கான கொள்கைகளும், தன்னலமற்ற சமூகத்தொண்டும், தைரியமாய் தனது அபிப்பிராயத்தை யாரிடத்திலும் எந்த சந்தர்ப்பத்திலும் வெளியிடக்கூடிய தைரியமும் நமக்கும் நமது இயக்கத்திற்கும் எவ்வளவு பக்க பலமாயிருந்தது என்பதை நினைக்குந்தோறும் அற்றொணாத் துயரம் மேலிடுகிறது. இனி பொதுவாக தஞ்சை ஜில்லாவாசிகளும் குறிப்பாக பட்டுக்கோட்டைவாசிகளும் செய்ய வேண்டியது யாதெனில், காலஞ்சென்ற நமது அன்பர் திரு.வேணுகோபால் அவர்களைப் பின்பற்றி, அவர்கள் செய்துவந்த வேலையை நாமும் செய்வதோடு, அவர்களது ஊக்கமும் உற்சாகமும் என்றும் நமக்கும் இருக்குமாறு நமது சமூகத் தொண்டை செய்வதுதான். திரு.வேணுகோபால் அவர்களின் குடும்பத்தாருக்கும், இதர பார்ப்பனரல்லாத சமூகத்தார்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 29.12.1929**



tamilnavarasam.com

## அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அதிக்கிரம | - | நெறி தவறிய, வரம்பு மீறிய |
| அவிபக்தம் | - | பிரியாதது ( கூட்டுக்குடும்பம் ) |
| அனந்தம் | - | அளவற்றது, எல்லையற்றது |
| அனுஷ்டானம் | - | நடைமுறை, ஒழுக்கம், வழக்கம் |
| ஆப்புக்கடாவின | - | ஆப்பு வைத்தல், ஆப்பு அடித்தல் |
| இஷ்ட சித்தி | - | விரும்பியது கைகூடல், எண்ணிய வண்ணம் நடைபெறல் |
| ஓதா ( ஹோதா ) | - | அமைவு, இருப்பு, நிலைமை |
| குமரி இருட்டு | - | கன்னி இருட்டு, விடியற்கு முன் உள்ள இருள் |
| கெம்பு | - | சிவப்பு இரத்தினக்கல் |
| சங்காத்தம் | - | தோழமை, இணக்கம் |
| சிட்சை | - | தண்டனை |
| சிஷ்ட பரிபாலனம் | - | நல்லோரைக் காத்தல் |
| சீதோஷ்ண ஸ்திதி | - | தட்பவெப்ப நிலை |
| சுவாதந்திரியம் | - | சுதந்திரம், தன்விருப்பம், விடுதலை, விடுபாடு |
| தங்கடங்கள் | - | தங்கள் தங்கள் |
| தர்க்காஸ்து | - | தரிசு |
| தாரதம்மியம் | - | ஏற்றத் தாழ்வு |
| தர்ப்பீத் | - | பயிற்சி |
| துராக்கிருதம் | - | வல்லாந்த கற்பழிப்பு, பலாத்கார கற்பழிப்பு |
| துவஜ ஸ்தம்பம் | - | கொடி மரம் |
| துரந்தரர் | - | பொறுப்பாளி, தாளாளர் |
| துஷ்ட நிக்கிரகம் | - | தீயோரை அழித்தல் |
| தேசவர்த்தமானம் | - | நாட்டு நடப்பு |
| நிர்பயமாய் | - | பயமில்லாமல் |
| நிஷ்டூரம் | - | கொடுமை, வெறுப்பு |
| பட்டாபிஷேகம் | - | முடிசூட்டுதல் |
| பரியந்தம் | - | எல்லை |
| பிரவிடை | - | பூப்படைதல் |
| பிரஸ்தாபித்தல் | - | சொல்லுதல், தெரியப்படுத்துதல் |
| போஷகர் | - | புரவலர், காப்பாளர் |
| விருத்தாப்பியம் | - | முதுமைக்காலம் |
| விபக்தம் | - | மிகுந்தது ( தனிக்குடும்பம் ) |
| ஜதை | - | இணை, ஜோடி |
| ஹானி | - | ஊறு, கேடு |
| ஸ்தம்பம் | - | தூண் |

# குடி அரசு

# 1930-1

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

### தொகுதி 10

பெரியார் திராவிடர் கழகம்

29 இதழியலாளர் குடியிருப்பு

திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்

சென்னை - 600 041

## நாகர்கோவில் மகாநாடு

சுயமரியாதை இயக்கத்தின் ஆதரவின் கீழ் திருவாங்கூர் சமஸ் தானத்தைச் சேர்ந்த நாகர்கோவிலில் டிசம்பர் 27, 28-ல் கூடிய அகில திருவாங்கூர் சமுதாயச் சீர்திருத்த மகாநாட்டின் சுருக்கமான நடவடிக்கை களை மற்றோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம். இம்மகாநாட்டைப் பற்றி எழுத ஆரம்பிக்கும் முன், நாம் அதற்குப் போகக் கூடாமல் போனதற்காக நமது சமாதானத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம். இம் மகா நாட்டை நடத்துவதற்காக மாதக் கணக்காய் பெருமுயற்சி எடுத்து ஏற்பாடு செய்து வந்த திருவாளர் பி. சிதம்பரம் பி. ஏ. பி. எல். அவர்களின் விருப்பத் திற்கிணங்க நாமும் வருவதாக ஒப்புக் கொண்டதோடு நமது சவுகரியத்தை உத்தேசித்தே மகாநாடும் 2, 3 தடவை ஒத்திவைக்கப் பட்டதாயினும், திடீ ரென்று எதிர்பாராமல் மலேயா நாட்டிலிருக்கும் நமது சகோதரர்கள் பெருஞ் செலவில் ஒரு மகாநாட்டை நடத்துவதாக ஏற்பாடு செய்து கொண்டதோடு, நமது சுற்றுப் பிரயாணத்தைப் பற்றிய நீண்ட அறிக்கையையும் வெளியிட்டு விட்டு, நமக்கு அவசரமாக உடனே புறப்படுமாறு தந்திச் செய்தி அனுப்பி விட்டதால், தள்ளமுடியாத நிலையில் நாம் அவர்களைத் திருப்தி செய்யும் பொருட்டும், நமது திருவாங்கூர் சகோதர சகோதரிகளுக்கு நமது நிலைமை யைச் சொல்லிக் கொள்ளலாமென்ற எண்ணத்தினாலும் உடனே புறப்பட்டுப் போகும்படி நேர்ந்து விட்டது. ஆகையால், நாகர்கோவில் மகா நாட்டில் நாம் கலந்து கொள்ள வேண்டிய நல்ல சந்தர்ப்பத்தை இழக்க நேர்ந்தமைக்காக மிகுதியும் வருந்துகிறோம். நிற்க,

நாகர்கோவிலில் நடந்த வரவேற்புத் தலைவர் உபந்நியாசத்தையும் நடவடிக்கைகளையும் நாம் படித்துப் பார்த்த வரையில் இந்தியாவில், சிறப்பாக இந்து சமூகம் என்பதில் ஏதாவது சிறிது சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்கிற ஆசை உள்ளவர்களுக்கு முதலாவதாக வேலை செய்ய வேண்டிய இடம் சுதேச சமஸ்தானங்களே ஒழிய பிரிட்டிஷ் அரசாங்கமுள்ள இடமல்ல என்றும், அதிலும் முதல் முதலாகச் செய்ய வேண்டிய இடம் சுவாமி விவேகா நந்தரால் "பைத்தியக்காரர் நாடு" என்று சொல்லப்பட்ட மலையாள ராஜ்ஜியமா கிய திருவாங்கூர் சமஸ்தானமென்பதே நமது அபிப்பிராயமாகும். ஏனெனில், திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நடக்கும் மனிதத் தன்மையற்ற சமூகக்

RangaRakes

tamilnavarasam.com

கொடுமைகளைப் பற்றியும், அவ்விடத்திய ராஜாங்கம் எவ்விதம் "ராம ராஜ்யமாகவே" இன்றும் இருந்து வருகிறது என்பதைப் பற்றியும், பார்ப்பன ஆதிக்கம் எவ்வளவு தூரம் அரசாங்க உதவியோடு செலுத்தப்பட்டு வருகிறது என்பதைப் பற்றியும் நாம் அடிக்கடி எழுதி வந்திருப்பதுடன் மகாநாட்டு நடவடிக்கைகளாலும் வாசகர்கள் அறிந்திருக்கலாம். இந்த நிலையில் இப்போது நடந்த மகாநாடானது எவ்வளவு முக்கியமும் அவசியமுமானது என்பதை நாம் அதிகமாய் வலியுறுத்த வேண்டியதில்லை என்றே நினைக் கிறோம்.

மேற்படி மகாநாட்டின் நடவடிக்கைகளில் முதலாவதாக வரவேற்புத் தலைவர் திருவாளர் பி. சிதம்பரம் அவர்களின் பிரசங்கத்தைப் பற்றி சிறிது எடுத்துக் கூறவேண்டியது அவசியமாகத் தோன்றுகிறது. அவர்களது பிரசங்கத்தினின்றும் இதுவரையில் பலர் அறிந்திருக்க முடியாத சில ரகசியங்களும் சில உண்மைகளும் வெளியாகியிருக்கின்றன. நாகரீக உலகம் ஏளனம் செய்யக் கூடியதும், பகுத்தறிவுடைய எந்த மனிதனும் வெறுக்கக் கூடியதுமான பல செய்திகளுக்கு திருவாங்கூர் சமஸ்தானம் காரணமாக இருக்கிறது என்பது அப்பிரசங்கத்திலிருந்து அறியக் கிடக்கின்றது. உதாரணமாக, பெண்கள் தங்கள் அரையின் மேல்பாகத்தைத் துணியால் மூடிக் கொள்வதைப் பற்றி எழுதியிருப்பதைக் கவனித்து வாசிப்போருக்கு, திருவாங்கூர் சமஸ்தானத்தின் சமூக ஊழல்கள் நன்கு விளங்காமற் போகாது. அதாவது, மேற்குக் கரையிலுள்ள பெண்கள் தங்கள் அரைக்கு மேற் பாகத்தைத் துணியால் மூடிக்கொள்வது முகமதிய நாகரீகத்தில் ஏற்பட்ட தென்று கூறப்படுகின்றது. திருவனந்தபுரத்தைக் கைப்பற்றிய ஒரு முஸ்லிம் சர்தார் ஆங்குள்ள 'சூத்திரப் பெண்கள் ஆண்களைப் போலவே உடுத்திக் கொள்ள வேண்டுமென்றும் வட மலையாளத்துப் பெண்களைப் போல் மேலா டையின்றி வெளிச் செல்லலாகாதென்றும் கட்டளை விதித்தார். "சூத்திரர் களில்" உயர் வகுப்புப் பெண்கள் தங்கள் மேற் பாகத்தை அன்று முதல் ஆடையால் மறைத்துக்கொள்ளும் வழக்கத்தைக் கைக் கொண்டனர் என்று சரித்திரம் கூறுகிறது. கீழ்த்தர "சூத்திரர்கள்" தங்கள் மேற் பாகத்தை மூடிச் செல்லல் கூடாது; மேற் பாகத்தைத் துணிகொண்டு மறைத்துக் கொள்ள தங்களுக்கு மாத்திரம்தான் உரிமையுண்டு என்று உயர்தர "சூத்திரர்கள்" வற்புறுத்தி வந்தார்கள். மேலாடையால் பல சச்சரவுகள் நேர்ந்தன. தென் திருவிதாங்கூரில் லண்டன் கிறிஸ்தவப் பிரசாரச் சங்கம் ஒன்று வேலை செய்து வந்து, நாஞ்சில் நாட்டில் தனது மதத்தைப் பரப்பி நிலை நாட்டியது நாடார் கிறிஸ்தவப் பெண்கள் உயர்தர "சூத்திரப்" பெண்களைப் போல் மேலாடை அணியத் துவங்கிவிட்டார்கள். இதனைக் கண்ட உயர்தர வகுப்பைச் சார்ந்த நாயர்கட்கும் மற்ற "சூத்திரர்" கட்கும் கோபம் உதித்தது. அவர்கள் பலாத்கா ரத்தை பிரயோகிக்கலாயினர். "சூத்திரர்கள்" தெருவில் வரும் மேலாடை தரித்த நாடார் பெண்டிரைத் தாக்கினர். 1858-ல் இச்சச்சரவு மிகவும் முதிர்ந்து விட்டது.



திரு. சிதம்பரம் அவர்கள் பின்னும் விளக்கமாகக் கூறுகிறதாவது:-

"இதன் பேரில்தான் திவான் சர். டி. மாதவராவ் பழக்க வழக்கத்தை மீறக்கூடாதென்றும், இதில் மாறுதல் விரும்பினால் சர்க்காருக்கு விண்ணப்பம் செய்து கொண்டு சர்க்காரால் இதற்கெனச் சட்டச் சீர்திருத்தம் செய்து கொண்ட பிறகே அவ்வாறு செய்தல் வேண்டுமென்றும் உத்தரவு போட்டு விட்டார்". இவ்வுத்திரவைக் கிறிஸ்தவப் பிரசாரகர் நியாயமான தென்று கருதவில்லை. திவான் உயர்தர வகுப்பாரை வெளிப்படையாக ஆதரிப்பதாகவே கருதினர். பிறகு, முதலாக மகாராஜாவுக்கும் பின்னர் சென்னை அரசாங்கத்திற்கும் இக்கிறிஸ்தவப் பிரச்சாரகர்கள் மனு செய்து கொண்டனர். இதன் பேரில் அக்காலத்தில் சென்னை கவர்னராயிருந்த **சர். சார்லஸ் டிரவிலின்** என்பவர் பிரிட்டிஷ் ஸ்தானீகருக்கு பின் வருமாறு எழுதினார் :-

"உண்மை, நியாயம், மனித அபிமானம் எல்லாமுமே இதில் நம் புரமிருக்கின்றன. இச்சமயம் நாம் உறுதியாக நிற்காவிட்டால் நாகரீக உலகம் நம்மைத் தூற்றும். பிரிட்டிஷ் குடிகட்கும் **திருவிதாங்கூரில்** எல்லாவிதமான சுதந்திரங்களும் அளிக்கப்படும் என்னும் மகாராஜாவின் விளம்பரத்தைக் கொண்டே ஒரு வகுப்பினரை மிகவும் கொடுமையாக நடத்த சூழ்ச்சி செய்யப்படுகிறது. நீர் இந்தக் காலத்திற்கு இது ஏற்றதல்ல வென்றும் ஒரு அறிவுடைய சிற்றரசர் இவ்வாறு செய்தல் கூடாதென்றும் அவருக்கு எடுத்துரைப்பீராக".

இதன் பேரில் ஸ்தானீகர் மகாராஜாவை வற்புறுத்தி, மகாராஜா மீண்டும் ஓர் விளம்பரம் மூலமாக மேலாடை தரித்துக் கொள்ளுவதில் எல்லோருக்கும் சுயேச்சை உண்டென்றும் ஆனால் கீழ்த்தர வகுப்பினர் உயர்தரப் பெண் களைப் போலவே மேலாடை தரிக்கலாகாது என்றும், பிரசுரம் செய்தார். இதுவே இன்று வரை திருவிதாங்கூரில் சட்டம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இவ்விதமாக, உடையணிவதில் கூட சாதி உயர்வு தாழ்வு பாராட்டி வரும் திருவாங்கூர் சமஸ்தானத்தை சுவாமி விவேகானந்தர் "பைத்தியக்காரர் வாழும் நாடு" என்று சொன்னதில் ஏதாவது ஆச்சரியமிருக்கிறதா என்று கேட்கிறோம்? இதர இடங்களில் இருப்பதைப் போலவே, திருவாங்கூரிலும் பார்ப்பனர்களையன்றி சாதி இந்துக்கள் என்று சொல்லப்படுபவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களிடத்தில் எவ்வளவு கொடுமையாகவும் மன இரக்க மின்றியும் நடந்து கொள்கிறார்கள் என்பதையும் விளக்கமாகச் சொல்லி யிருக்கிறார். இந்து மதத்தில் உண்மையாக அக்கரை இருப்பவர்களோ, அல்லது இந்துக்களின் ஒற்றுமையிலும் முன்னேற்றத்திலும் கவலையிருப் பவர்களோ, அல்லது "இந்து மதத்தை"க் காப்பாற்றுவதற்காக இருப்பதாகச் சொல்லப்படும் கொள்ளைக் கூட்டத்தாரைப் போன்ற சங்கராச்சாரிகளோ, ஜீயர்களோ, மடாதிபதிகளோ, பண்டார சன்னிதிகளோ தாழ்த்தப்பட்ட மக்கள்



RangaRakes tamilnavarasam.com

விஷயத்தில் மனிதத் தன்மை இல்லாமல் கொடுமையாகவும் காட்டு மிராண்டித் தன்மையாகவும் நடந்து கொள்கிறார்களேயன்றி சிறிதாவது மனிதத் தன்மையோடு நடக்கிறார்களாவென்று நமது வாசகர்களைக் கேட்கிறோம். இத்தகைய தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வளவோ ஆயிர வருஷங்களாக எவ்வளவோ கொடுமைகளை அனுபவித்துக் கொண்டு "இந்து" மதத்திலிருந்து வந்துங்கூட, கிறிஸ்தவ மிஷனெரிகள் என்பவர்களும் மகம்மதியர்களும் இல்லாவிட்டால் இப்போதிருக்கும் இந்த நிலைமையைக் கூட அடைந்திருக்க மாட்டார்களென்பதில் சந்தேகமில்லை. இந்தியாவில் நடைமுறையிலிருக்கும் கிறிஸ்தவ மதத்திலுங்கூட சாதி வித்தியாசம் பாராட்டப்பட்டு வருகிறது ஒரு அளவுக்கு உண்மையே யாயினும், "இந்து" மதத்திலிருக்கும் கொடுமையிலிருந்தும் தாழ்த்தப்பட்ட மக்களை விடுவித்து அவர்களையும் மனிதர்களாக ஆக்கிவிட்ட பெருமை முற்றிலும் கிறிஸ்தவர்களையும் மகமதியர்களையுமே சாருமென்பதை ஒருவரும் ஆட்சேபிக்க முடியாது. இது சம்பந்தமாகச் சரித்திரக்காரர்கள் எழுதி வைத்திருக்கும் பல உண்மைகளையும் எப்படி திருவாங்கூர் சமஸ்தானம் முற்றிலும் பார்ப்பனர்களுடைய வாழ்விற்காகவே இருந்து வருகிறது என்பதையும் திருவாளர் சிதம்பரம் அவர்கள் புள்ளி விவரங்களோடு நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

பிறகு இரண்டாவதாக மகாநாட்டுத் தலைவர் சொற்பெருக்கிலும் சில அரிய விஷயங்கள் வெளியாகி இருக்கின்றன. சுயமரியாதை இயக்கம் என்னவென்பதையும் அதன் தத்துவம், இலட்சியம் முதலியவைகளைப் பற்றியும் எப்படி இது முற்றிலும் ஒரு புதிய இயக்கம் அல்லவென்பதைப் பற்றியும், எப்படி பார்ப்பனர்கள் எவ்வகையான சீர்திருத்தத்திற்கும் எந்தக் காலத்திலும் எதிரிகளாகவே இருந்திருக்கிறார்கள் என்பதைப் பற்றியும் உண்மையான "கடவுள்" "உண்மையான கோவில்" இவைகள் எது என்பதைப்பற்றியும், சுயமரியாதை இயக்கம் என்பது முற்றிலும் பகுத்தறிவு இயக்கமே தவிர வேறல்ல என்பதைப் பற்றியும், சமூகக் கொடுமை நிறைந்து சாதி வேற்றுமையும் தீண்டாமையும் தலைவிரித்தாடும் திருவாங்கூர் ராஜ்யத்திற்கு, எப்படி சுயமரியாதை இயக்கம் மிகவும் அவசியம் என்பதைப் பற்றியும் தலைவர் திரு. திவான்பகதூர் எம். கிருஷ்ணசாமி அவர்கள் வெகு தெளிவாகவும் சுருக்கமாகவும் எடுத்துக் காண்பித்திருக்கிறார்.

கடைசியாக மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் பற்றியும் நமது அபிப்பிராயத்தைச் சொல்ல விரும்புகிறோம். தீண்டாமையை ஒழிப்பதற்காக கோவில் முதலிய பொது ஸ்தாபனங்களில் இந்துக்களெனப் படுவோர்கள் எல்லாரையும் அனுமதிக்கப்பட வேண்டியதற்காக பொது ஜன அபிப்பிராயத்தைப் பலப்படுத்துவதன் பொருட்டு பல பெரியோர்கள் சேர்ந்த ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருப்பதுடன் அதையே அரசாங்கம் மூலமாய் அமுலுக்குக் கொண்டு வருவதற்காகத் திருவாங்கூர் சட்டசபையிலும் ஒரு மசோதாக் கொண்டு வருவதாகத் தீர்மானித்திருப்பதை நாம் பெரிதும்



போற்றுகின்றோம். எப்படி, பெண்களின் கல்யாண வயதை உயர்த்துவதற்காகப் பல வருஷங்களாக, பல பெரியோர்கள் முயற்சி செய்தும் அது சமயத்தில் சட்டமாகச் செய்யப்பட்ட பின்பே அது நடைமுறையில் வருவதற்கு மார்க்கம் ஏற்பட்டிருக்கிறதோ அதுபோலவே, தீண்டப்படாதார் விஷயத்திலும் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் பல சீர்திருத்தக்காரர்கள் முயற்சி செய்தும் இன்று வரை ஒரு பலனையும் அளித்ததாக நாம் பார்க்க முடியவில்லையாதலால் அது சம்மந்தமாக உடனே சட்டம் செய்தாலன்றி பார்ப்பனர்களுக்கும் ஜாதி இந்துக்களுக்கும் சற்றாவது இரக்க புத்தியோ நல்லறிவோ வராதென்று உறுதியாய் கூறுவோம்.

தவிர, குற்றங்களுக்கு தண்டனை விதிக்கும் பீனல் கோடில் கொலைக் குற்றம் செய்தால் மற்றவர்களைத் தண்டிப்பது போலவே பார்ப்பனர்களையும் தண்டிக்க வேண்டும் என்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது மிகவும் முக்கியமானதாகும்.

ஏனெனில், பார்ப்பனர்கள் யாரைக் கொன்றாலும் எத்தனைப் பேர்களைக் கொன்றாலும் மற்றவர்களைப் போல் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கக் கூடாது என்பதாக இப்போது திருவாங்கூரில் சட்டமிருக்கின்றது. ஏனெனில் மனுதர்ம சாஸ்திரத்தில் உள்ளபடி திருவாங்கூர் ராஜ்யம் அரசாளப்படுவதால் இம்மாதிரியான சட்டம் அங்கு இருக்க வேண்டியிருக்கிறது. இதனால் திருவாங்கூரில் பார்ப்பனர்கள் யாரைக் கொலை செய்தாலும் செய்யலாம். ஆனதால் அம்மாதிரி இனி நடவாமல் இருக்கும்படி கொலைக் குற்றம் செய்தால் பார்ப்பனராயிருந்தாலும் மற்றவர்களுக்கு விதிப்பது போல மரண தண்டனை விதிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. இது சுயமரியாதையை உத்தேசித்து அவசியம் செய்து தீர வேண்டியதாகும். தவிர பார்ப்பனர்களுக்கு மாத்திரம் சாப்பாடு போடவும் முறை ஜெபம் (அரசருக்கு பிராமணனைக் கொன்ற தோஷம் தீர என்று) செய்யவும், திருவாங்கூர் ராஜ்யத்தின் பணத்தை செலவழிக்கக் கூடாது என்கின்ற தீர்மானம் மற்றெல்லாவற்றையும் விட முக்கியமான தீர்மானமாகும். ஏனெனில், இதே ராஜாங்கத்தில் இரண்டு நாளைக்கு ஒரு வேளை கஞ்சி இல்லாமலும் தொழில் இல்லாமலும் லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடி மடியவும், நாட்டை விட்டுக் கூலிகளாக கடல்கடந்து ஓடவுமானக் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது பார்ப்பான் என்று பிறந்தவர்களுக்கெல்லாம் தினப்படி அரசாங்கப் பணத்தில் மூன்று வேளை வெட்டிச் சாப்பாடும் ஐம்பத்தாறு நாளில் எட்டு லட்ச ரூபாய் பாழாகும்படியான முறை ஜெபமும் ("வைதீகச் சடங்கும்") ஒரு அரசாங்கம் செய்வதென்றால் அது எவ்வளவு காட்டுமிராண்டித்தனமும் முட்டாள்தனமுமான காரியமுமாய் இருக்கும் என்பதை வாசகர்களே யூகித்துக் கொள்ளலாம்.

ஆகவே திருவாங்கூரில் கூடிய சீர்திருத்த மகாநாடானது மிகவும் அவசியமும் முக்கியமுமானதென்பதைப் பற்றியும் அது மிகவும் அவசிய



RangaRakes tamilnavarasam.com

மான தீர்மானங்களைச் செய்தது பாராட்டுதற்குரியது என்பதும் மகாநாட்டின் வேகத்தை அநுசரித்து இப்போது அங்கு ஏற்பட்டிருக்கும் கோவில் பகிஷ்கார நடவடிக்கையாலும் தெரிந்து கொள்ளலாம்.

கடைசியாக, இவ்வளவுக்கும் காரணமாயிருந்தது உயர்திருவாளர் பி. சிதம்பரம் அவர்களுடையவும் அவர்களது உண்மை நண்பர்களுடையவும் முயற்சியும் ஊக்கமும் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

**குடி அரசு - தலையங்கம் - 19.01.1930**



# தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்

தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் இம்மாதம் 27 உ நடைபெறக் கூடும் என்று தெரியவருகின்றது. அத்தேர்தலில் நமது நண்பரும் சுய மரியாதை இயக்க சங்கத்தின் உப தலைவருமான ராவ்பகதூர் உயர்திரு. எ. டி. பன்னீர் செல்வம் அவர்களே அநேகமாய் மறுபடியும் தேர்ந்தெடுக்கப் படுவார் என்றே எதிர்பார்க்கின்றோம். ஆயினும் அவரது வெற்றிக்கு விரோதமாய் ஒரு உணர்ச்சிமிக்க முயற்சியாய் வேலை செய்து வருவதாயும் தெரியவருகின்றது. திரு. செல்வம் அவர்கள் வெற்றிக்கு விரோதமாய் வேலை செய்கின்ற உணர்ச்சிக்கு நியாயமான தகுந்த காரணங்கள் ஏதாவது இருந்தாலும் இருக்கலாம். ஆயினும் நாம் திரு. செல்வம் அவர்கள் வெற்றியையே மன, மொழி, மெய்களால் கோர வேண்டியவர்களாகவே இருக்கின்றோம். ஏனெனில், பொதுவாக தஞ்சை ஜில்லா பொதுமக்களைப் பொறுத்த வரையிலும் குறிப்பாக பார்ப்பனரல்லாதார் நன்மையைப் பொறுத்த வரையிலும், சிறப்பாக சுயமரியாதை இயக்கத்தின் நன்மையைப் பொறுத்த வரையிலும் திரு எ. டி. பன்னீர் செல்வம் அவர்களே தஞ்சை ஜில்லா போர்டுக்கு இது சமயம் மறுபடியும் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது அவசியமான தென்பதே நமது அபிப்பிராயமாகும். அன்றியும், இந்த அபிப்பிராயத் தையே தஞ்சை ஜில்லாவில் சுயமரியாதை இயக்கத்தில் பற்று கொண்ட சில செல்வந்தர்களும் ஆயிரக் கணக்கான தொண்டர்களும் கொண்டுள்ளார்கள்.

தவிர, பார்ப்பனரல்லாத சமூகப் பிரமுகர்களில் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளப்பட்ட பொறுப்பும் நாணயமும் அற்ற சிலர் தங்கள் சுயநலம் காரணமாக ஒருவரை ஒருவர் கெடுக்க எண்ணியதும் அதனால் ஒருவருக்கொருவர் தற்காப்பிற்கு பத்திரங்கள் தேடிக்கொள்ள ஏற்பட்டது மான காரியங்களால் இனி தென்னாட்டில் நடந்தேறும் ஒவ்வொரு தேர்தல் களிலும் நியமனங்களிலும் இவ்விதமான எதிர்ப்புகளையும் தொல்லை களையும் எதிர்பார்த்துத் தீரவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டதைக் குறித்து நாம் வருந்தாமலிருக்க முடியவில்லை. அன்றியும் இந்நிலைமை காரணமாக பார்ப்பன ஆதிக்கத்தை மறுபடியும் வளர்க்க ஒருவருக்கொருவர்




RangaRakes tamilnavarasam.com

போட்டி போடுவதைப் பார்த்து நாம் வெட்கப்படாம லிருக்கவும் முடிய வில்லை.

நெல்லூர் மகாநாடானது எப்படியோ நமக்கு இந்நிலைமையை அளித்து விட்டது. நம்மைப் பொறுத்தவரை பார்ப்பனரல்லாத சமூகத்திற்குள் ஜஸ்டிஸ் கட்சி என்பவர்களிடமிருந்தாவது அதற்குள் ஏற்பட்ட உள் கட்சியாகிய ஒழுங்கு முறைக்கு உட்பட்ட ஜஸ்டிஸ் கட்சியார் என்பவரிட மிருந்தாவது மந்திரி கட்சியாரிடமிருந்தாவது மற்றும் இவைகளின் சார்புக் கட்சியாரிடமிருந்தாவது அவரவர்கள் கட்சிக் கொள்கைகள் முழுமையுமோ, அல்லது, அதிலுள்ளவர்களின் நடத்தைகள் முழுவதையுமோ அடியோடு ஒப்புக் கொண்டு நாம் அதில் கலந்திருக்கவில்லை என்பதையும் அல்லது வேறு எந்த விதமான சுயநல லட்சியத்தைக் கொண்டோ அல்லது யாருக் காவது பயந்தோ நாம் அவற்றை ஆதரிக்கவில்லை என்பதையும் தெரிவித் துக் கொள்ளுகிறோம். ஆனால் நமது சுயமரியாதைக் கொள்கைகளுக்கு மற்ற கட்சியார் மற்ற ஸ்தாபனங்கள் ஆகியவைகளை விட இவைகள் எத்த னையோ மடங்கு மேலானது என்பதாகவும், வசதியுள்ளது என்பதாகவும் கருதி நமது இயக்கத்தின் நன்மையை உத்தேசித்தே நாம் அவற்றில் களங்கமறக் கலந்திருந்ததுடன் கூடுமானவரை ஒத்துழைத்தும் வந்தோம். எனவே, இந்த முறையில் தான் தஞ்சை ஜில்லா போர்டு தலைமைப் பதவியானது திரு பன்னீர் செல்வம் கையை விட்டுப் போக நேருமானால் கண்டிப்பாய் அது பார்ப்பன ஆதிக்கத்திற்குப் போய்ச் சேர்ந்து விடுமே அல்லாமல் மற்றப்படி அதற்கு இடையில் வேறு இடமில்லை என்று கருதுவதுடன் திரு. பன்னீர் செல்வம் தோல்வியானது பார்ப்பனரல்லாத மக்கள் தோல்வியாகுமென்றும் கருதுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 19.01.1930**


16 குடி அரசு

தமிழரசு.
ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை.
சென்னையினின்று வெளிவருகின்றது.
ரூ. 3—0—0
ரூ. 4—0—0
தமிழரசு காரிய நிலயம்,
81 வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்
(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)
சேர்மன்:—
சர்: டோராப் ஜே டாட்டா. Kt.
மூலதனம்:
...ரூ. 6,00,00,000.
...ரூ. 3,56,05,275.
...ரூ. 71,21,055.
பிராஞ்சு மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம்.
0—4—0
0—2—0
0—2—0
0—2—0
0—2—0
மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

பேர்பெற்ற ஊதுவத்திகள்.

அன்டையன்ஸ் கேம்பிரிட்ஜ்.
இன்ஸ்டிடியூட் நாசரேத் S. I. R.
ஸ்தாபன 1920.

கலப்பு மணத்தால்தான்
ஜாதி ஒழியும்.




RangaRakes
tamilnavarasam.com

# பூரண சுயேச்சைப் புரட்டு

அரசியல் புரட்டுகள் நாளுக்கு நாள் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறி, மக்களை ஏமாற்றி நாட்டைப் பாழாக்கிக் கொண்டு வருகின்றது என்பதற்கு உதாரணம் இந்திய தேசிய காங்கிரஸ் என்பது. "இந்தியா பூர்ண சுயேச்சை அடைய வேண்டும் என்பது காங்கிரஸ் லட்சியம்" என்பதாக தீர்மானிக்கப்பட்டிருப்பதே போதுமான அத்தாட்சியாகும். மத சம்மந்தமான புரட்டுகளுக்கு மதிப்பு குறைந்த பின்பே தந்திரக்காரர்களும் சுயநலக் காரர்களும் ஏமாற்றி வயிரு வலிப்பவர்களும் இந்த அரசியல் புரட்டை இவ்வளவு ஆதிக்கத்திற்கு கொண்டு வர வேண்டியதாகி விட்டது.

இன்றைய தினம் இந்தியாவிலுள்ள மக்களில் லக்ஷத்தில் ஒருவருக்குக் கூட பூர்ண சுயேச்சை என்றால் என்ன? அதற்கு என்ன செய்ய வேண்டும்? அதனால் நமக்கு என்ன பலன் உண்டு என்பன போன்ற விஷயங்கள் சிறிதும் தெரிந்திருக்காதென்றே சொல்லலாம். அது மாத்திரமல்லாமல் பூரண சுயேச் சைத் தீர்மானம் கொண்டு வந்தவர்களும் கொண்டு வர வேண்டுமென்று நினைத்தவர்களுமே அதற்கு ஏதாவது ஒரு அர்த்தம் கற்பித்துக் கொண்டு அல்லது தங்களுக்குள்ளாகவே விளக்கிக் கொண்டு அதைக் கொண்டு வந்தார்களா? என்று கூட சொல்ல முடியாது. ஆனால் பூரண சுயேச்சைத் தீர்மானம் நிறைவேறியவுடன் காங்கிரசிலிருந்து ராஜினாமாக் கொடுத்த சில தேசீயவாதிகளுக்காவது தெரியுமா என்று கேட்கலாம். அவர்களுக்கும் தெரியாதென்றே சொல்லுவோம். பின்னை ஏன் ராஜினாமாக் கொடுத்தார்கள் என்றால், சர்க்கார் அடக்கு முறை வந்தால் ஜெயிலுக்குப் போக வேண்டுமே என்று பயந்து சைமன் கமிஷன் வந்தபோது சர்க்கார் இரண்டொருவரைப் பிடித்தவுடன் பயந்து கொண்டு காங்கிரசை ராஜினாமாக் கொடுத்து "நான் தான் ஹர்த்தால் செய்வதில்லை என்று முன்னமேயே சொல்லி விட்டேனே" என்று விளம்பரப்படுத்திய போது என்ன நாணையம் இருந்ததோ அந்த நாணையம் கொண்டு தான் அநேகர் இப்பொழுதும் ராஜினாமாக் கொடுத்தார்களே ஒழிய பூரண சுயேச்சையின் தத்துவம் தெரிந்து தேசீய வெறி கொண்டோ அல்லது பூரண சுயேச்சை வேண்டாமென்றோ அது சரியல்லவென்றோ தோன்றி ராஜினாமாச் செய்தவர்கள் அல்ல.



எனவே, சுயராஜ்ஜியம் என்பதற்கு எப்படி இது வரை அர்த்தமே இல்லாமல் இருந்ததோ அது போலவே இன்னும் அதைவிட மேலாகவே அர்த்தமில்லாமல் இது செலாவணியாய்க் கொண்டிருக்கின்றது. இந்த பூரண சுயேச்சைத் தீர்மானம் சென்னை காங்கிரசில் வந்தபோது திரு. காந்தி அதை விளையாட்டுப் பிள்ளைகள் நடவடிக்கை என்று சொல்லி விட்டுச் சென்றார். ஆனால் 2 வருஷம் கழித்து அந்த வார்த்தை விளையாட்டுப் பிள்ளை களிடமிருந்து "மகாத்மாக்களிடம்" சென்று விட்டது. இந்த இரண்டு வருஷ இடையில் பூரண சுயேச்சைக்கு எப்படி அவ்வளவு பெரிய அந்தஸ்து வந்து விட்டது என்பது "சிதம்பர" இரகசியமாய் இருக்கின்றது. அன்றியும் இன்றைய தினம் பூரண சுயேச்சை என்கின்ற வியாபாரத்திற்கு இன்றைய தினம் யார் யார் கூட்டாளிகள் என்று பார்த்தால் "ஜாதி மதங்களையெல்லாம் ஒழிக்க வேண்டும்" "சொத்து வித்தியாசங்களை யெல்லாம் ஒழிக்க வேண்டும்" என்கின்ற திரு. ஜவாரிலால் நேரும், ஜாதி மத வர்ணாசிரம தர்மங்களை யெல்லாம் காப்பாற்ற வேண்டும் என்கின்ற திரு. காந்தியும் முக்கிய கூட்டாளி களாவார்கள்.

இவர்களுக்கு எதிரியாக சின்ன நேருவுடன் போட்டிப் போட்டுக் கொண்டு எதிர்க்கும் "இந்த அரசாங்கத்தில் எவ்வித சம்மந்தமும் வைத்துக் கொள்ளக் கூடாது. பள்ளிக் கூடம், கோர்ட்டு, சட்டசபை ஆகியவைகளை பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் அதிகமாக பூமி சொத்து வைத்திருப்பவர்கள் இடம் உள்ள சொத்துக்கள் எல்லோருக்கும் போய்ச் சேரும்படி பார்க்க வேண்டும்" என்றும் சொல்லும் திரு. சுபாஷ் சந்திரபோசும், பெரிய நேரு விடம் போட்டிப் போட்டு எதிர்க்கும் அரசாங்கத்தின் தயவாலேயே தங்கள் வாழ்வை நடத்திக் கொண்டு எல்லோரிடமும் இருக்கும் சொத்தும் தனக்கே வந்து சேரும்படியான காரியம் நாணயமற்ற முறையில் அனுபவத்தில் செய்து கொண்டிருக்கும் திரு. சீனிவாசய்யங்காரும் பூரண சுயேச்சை வியாபாரத் திற்கு போட்டி வியாபாரக் கூட்டாளிகளாவார்கள். மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு உண்டு அதற்கு ஆதாரமான எந்த காரியங்களும் யாரும் பிரவேசித்து எவ்வித மாறுதலும் செய்யக் கூடாது என்று மதத்தின் பேரால் மனுதர்ம சாஸ்திரத்தின் பேரால் வாதாடும் திரு. சத்தியமூர்த்தியும் அந்த மனுதர்ம சாஸ்திரமே உலக வாழ்க்கைக்கு கடவுளால் அளிக்கப்பட்டது என்கின்ற திரு. ராஜகோபாலாச்சாரியும் மேற்கண்ட இரண்டு வியாபாரக் கம்பெனிகளுக்கும் கஷ்டக் கூட்டாளிகளாவார்கள், (மற்றவர்களைப் பற்றி இப்போது சொல்லாமல் நிறுத்தி விடுகின்றோம்) இதிலிருந்து பூரண சுயேச்சை வியாபாரம் எவ்வளவு புரட்டானது என்பதை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். நிற்க, இதற்கு இப்போது அவசரமான திட்டம் ஒன்று அதாவது சட்டசபை பகிஷ்காரம் இதற்கு பூரண சுயேச்சைக்கு ஓட்டுக் கொடுத்தவர்களுக்குள்ளாகவே மூன்று வித அபிப்பிராயம். அதாவது ஒன்று சட்ட சபை பகிஷ்காரம் என்பது; இரண்டு சட்டசபை, பள்ளிக் கூடம், கோர்ட் ஆகிய மூன்றும் செய்தால்தான் ஒப்புக் கொள்வோம் இல்லாவிட்டால் ஒன்றும் வேண்டாம் என்பது; மூன்று



RangaRakes tamilnavarasam.com

பகிஷ்காரம் எல்லாம் பார்த்து தோல்வி அடைந்தாய் விட்டது. ஆதலால் பகிஷ்காரம் இல்லாமல் இருக்க வேண்டும் என்பது. இன்னமும் இது போல பலதுமிருக்கலாம். எப்படி இருந்தாலும் சிலர் சட்டசபை ராஜீநாமா கொடுத்து விட்டார்கள் என்றாலும் ராஜீநாமாவில் நூற்றுக்கு தொண்ணூருக்கு மேல் பட்டது இரண்டு காரணங்களாலேயே கொடுக்கப்பட்டு இருக்கின்றது. அதாவது ஒன்று வழக்கம் போல் சட்டசபைகளுக்கு காலாவதி ஆகும் போது ராஜீநாமாவோ வெளியேற்றமோ செய்து விட்டு தேசீய வீரர்களாகி பாராட்டப் பட்டு அடுத்த தேர்தலில் அதிக ஓட்டு சம்பாதிக்கலாம் என்று நம்பிக் கொடுப்பது போல் ராஜீநாமா கொடுத்தது. இரண்டு, சென்ற தேர்தலின் போது திரு. சீனிவாசய்யங்கார் சுயராஜ்யக் கட்சிக்கு ஆள்கள் சேர்க்கையில் "எப்படியாவது காங்கிரசில் உத்தியோகம் ஒப்புக் கொள்ளும்படி செய்து விடுகின்றேன்" என்று ரகசியமாய் உறுதி கொடுத்ததை நம்பி பல ஆள்கள் போய் அதில் சேர்ந்தது போல் சமீபத்தில் வைசிராயுடன் ராஜி பேசி ஏதாவது ஒரு முடிவு ஏற்பட்டு நமக்கு அதிக ஓட்டு கிடைக்கும்படியும் சிரமமில்லாமல் சட்டசபை ஸ்தானம் கிடைக்கும்படியும் திரு. காந்தி செய்து விடுவார் என் கின்ற ஜாடை அவரது சிஷ்யர் காட்டியதை நம்பி ராஜினாமாக் கொடுத்து விட்டுக் காத்திருப்பது என்பது. மற்றபடி இச்சட்டசபை கலைக்கப்பட்ட தேதி முதல் தங்களது ராஜினாமா அமுலுக்கு வரத்தக்கது என்பது போன்ற ராஜினாமாக்களைப் பற்றியும் "நான் காங்கிரசின் பேரில் வந்ததால் காங்கிரசு கட்டளையை ஏற்று ராஜினாமா செய்து விட்டு நாணயத்தைக் காப்பாற்றி தனி உரிமையில் நிற்கின்றேன்" என்பவர்களைப் பற்றியும் நாம் சொல்லித்தான் வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதாக நாம் நினைக்கவில்லை. ஆகவே இவ்வளவுதான் தீர்மானமானதற்குப் பின் ஏற்பட்ட நிலைமையாகும். இது எப்படியோ இருக்கட்டும். இந்த தீர்மானத்திற்கு என்னதான் அர்த்த மென்று பார்க்கலாம் என்றாலோ திரு. காந்தியார் திரு. ரவீந்திரநாதருடன் பேசியதில் தனக்கு ஒரு கொள்கையும் சொல்ல முடியவில்லை என்றும் என்ன செய்வது என்பது தனக்கு சிறிதும் இன்னும் ஜாடைகூட தோன்றவில்லை என்றும் சொல்லிவிட்டார். திரு. ஜவாரிலால் அவர்களோ ருஷ்யாவிற்கு போய் விட்டு வந்தவர் என்கின்ற ஒரு அரட்டலைத் தவிர வேறொரு காரியத்தையும் அவரிடம் காண முடியவில்லை. இந்த யோக்கியதை உள்ள இவர்கள் தான் இந்தியா அரசியலை நடத்துகின்றவர்களாக இருக்கின்றவர்கள். இது திரு காந்தியை எந்த விதத்திலாவது பின்பற்றலாமா என்பதிலும் அவருக்கு ஏதாவது ஒரு இயக்கத்தை நடத்த ஆற்றலுண்டா என்பதிலும் கவனம் செலுத்திப் பார்ப்போமானால் நம்மைப் பொருத்தவரையில் அதாவது அவருக்கு பரம பக்தனாகவும் சிஷ்யனாகவும் இருந்த அனுபவத்தைக் கொண்ட வரையில் மேல் கண்ட இரண்டு விஷயத்திலும் அவரிடம் நமக்கு நம்பிக்கை கிடையாது என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் முதலாவ தாக அவர் ராம ராஜ்யத்தை விரும்புபவர். அதாவது ஒவ்வொரு மனிதனும் அவனவன் பிறவிக்கு உரித்தான தொழிலையே செய்ய வேண்டுமென்பவர்.



தவிர ஆயிரம் வருஷத்திற்கு முன் மக்கள் இருந்த நாகரீக நிலைமைக்கு போக வேண்டும் என்பவர். புதிய ஆராய்ச்சி உலகம் இன்னது என்பதைப் பற்றி கவலையே இல்லாமலிருப்பவர். இரண்டாவதாக மண் குதிரையை நம்பினதுபோல் நடுத்தூக்கில் விட்டுவிட்டு ஓடிப் போகின்றவர். இந்த இரண்டு காரியமுமே அவரை பின்பற்றுவதற்கு அனுகூலமில்லாதது என்போம். ஆனால் அவரிடம் பணம் உள்ளவரையிலும், அவருக்கு பணம் வசூல் செய்ய சக்தியும் வழியும் சௌகரியமும் இருக்கும் வரையிலும், அவர் பெயரைச் சொன்னால் ஓட்டும் செல்வாக்கும் கிடைக்கும் என்கின்ற மயக்க முள்ள வரையிலும் அவருக்கு சிஷ்யர்களும் பின்பற்றுகின்றவர்களும் இருந்து தான் தீருவார்கள். அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய தில்லை. ஏனெனில் மோசமும் விவசாரமும் சிறந்து விளங்கும் இடங்கள் புண்ணிய ஸ்தலங்களாகவும் பித்தலாட்டங்களும் அயோக்கியத் தனங்களும் கூடா ஒழுக்கங்கள் என்பவைகளும் தலை சிறந்து விளங்கும் நபர்கள் ஆச்சார்ய சுவாமிகளாகவும் மடாதிபதிகளாகவும் விளங்கி சிஷ்யர்களையும் பின்பற்றுபவர்களையும் ஏராளமாகக் கொண்டு பணம் ஏராளமாய் வசூலிக் கும் சக்தி இருக்கும் போது திரு. காந்திக்கு அவ்வித அனுகூலங்கள் இருப்ப தில் யாரும் ஆச்சரியப்படவேண்டியதில்லை என்று சொல்ல வேண்டும்.

(தொடரும்)

*குறிப்பு : தொடர்ச்சி 23.02.30 இதழ் தலையங்கம்*

**குடி அரசு – தலையங்கம் – 02.02.1930**



RangaRakes tamilnavarasam.com

# செங்கல்பட்டு ஜில்லா போர்டு தேர்தல்

செங்கல்பட்டு ஜில்லா போர்டுக்கு 30-1-29 தேதியில் தலைவர் தேர்தல் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் தேர்தல் அடுத்த மார்ச்சு மாதம் 31 தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டதாக ஒரு சேதியும் தேர்தல் நடந்து ராவ் சாகிப் திரு. ஜெயராம் நாயுடு அவர்கள் தலைவராக தேர்தல் ஆகிவிட்டதாக ஒரு சேதியும் கிடைத்திருக்கின்றது. எப்படியானாலும் தேர்தல் முடிவு நமது உண்மை நண்பர்களான திரு. திவான்பகதூர் எம். கே. ரெட்டியாருக்காவது அல்லது திரு. ராவ் சாகிப் சி. ஜெயராம் நாயுடுகாருக்காவது ஆகாமல் அதற்கு விரோதமாய் வெளியாருக்கு அதாவது பார்ப்பன அடிமைகளுக்குப் போய் விடக் கூடாது என்பதே நமது ஆசை. இருவரும் சுயமரியாதை வீரர்களே ஆவார்கள். நிற்க நாம் கொஞ்ச காலத்திற்கு முன் "பார்ப்பனர்களும் பார்ப்பனக் கூலிகளும் அடிமைகளும் அவர்களது யோக்கியதை வெளியாக அடங்கிப் போய் விட்டார்கள். ஆனாலும் மறுபடியும் தலைகாட்ட நமக்குள் ஏதாவது சண்டை ஏற்பட வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னபடிக்கு இச்சிறு விஷயங்களை கண்டே பார்ப்பனர்களும் அடிமைகளும் தலைநீட்ட புறப்பட்டு விட்டார்கள். ஆனாலும் ஜாண் நீட்டினால் முளம் கத்தரிக்க நமக்கு சக்தி உண்டு. பழய ஆயுதங்கள் எண்ணை இட்டு உரையில் வைத்திருக்கின்றதே தவிர மழுங்கிப் போய்விட வில்லை. யாரும் பயப்படத் தேவையில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 02.02.1930**



# ஈரோடு ஆலயப் பிரவேசம்

ஈரோடு ஆலயப் பிரவேச விஷயமாய் தமிழ்நாடு என்னும் பத்திரிகையில் சில விஷயமும் காணப்படுகின்றது.

அது விஷமத்தனமானதாகும். ஈரோடு தேவஸ்தானக் கமிட்டியில் ஆலயப் பிரவேச தீர்மானம் செய்யப்பட்டது முதல் "தமிழ்நாடு" பத்திரிகை செய்து வந்த விஷமத்தனமும் பொய்ப் பிரசாரமும் நாம் அவ்வப்போது அவைகளைப் பலமாய் கண்டித்ததும் நேயர்களுக்கு நினைவிருக்கும். அத்தீர்மானம் நிறைவேறிய பின் நாம் ஊரிலில்லாத காலத்தில் நமக்குச் சிறிதும் தகவல் அன்னியில் சிலர் திடீரென்று ஆலயப் பிரவேசம் செய்து வீண் கலாட்டா செய்து விட்டார்கள் என்றாலும், நாம் ஊரிலிருந்து வந்து விஷயம் தெரிந்து இம்மாதிரி நம் பேரால் நம்மைக் கேட்காமல் திடீரென்று கலாட்டா செய்ததைப் பற்றி கண்டித்தபோது சிலர் ஆலயப் பிரவேசத்திற்கு "நீதான் அதிகாரியா? உன்னைக் கேட்டுத்தான் செய்ய வேண்டுமா? எங்கள் இஷ்டப்படியே நடக்க எங்களுக்கு உரிமை உண்டு. ஆதலால் அதைப் பற்றி நீ கேழ்க்க வேண்டியதில்லை" என்று சொன்னார்கள். இதை அனுசரித்து திரு. ஈஸ்வரனும் பத்திரிகைகளுக்கு அப்போதே ஒரு குறிப்பு அனுப்பி விட்டார். இருந்த போதிலும் ஆலயப் பிரவேசம் செய்தவர்களைக் கவனிக்காவிட்டாலும் அக்கொள்கையைக் காப்பாற்ற வேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீதே நாம் கேசு விஷயத்தில் நாம் செய்ய வேண்டிய காரியங்கள் எல்லாம் செய்தோம். இந்த கேசுக்கு சுமார் நானூறு ரூபாய்கள் இதுவரை செலவாகி இருக்கின்றது. (இது திரு. ஈஸ்வரன் சொன்ன கணக்குப் படி) இவற்றுள் சுமார் நூறு ரூபாய்கள் வரை நாம் கொடுத்திருக்கிறோம். மலாய் நாட்டுக்கு போன நமது ஏஜன்டு திரு. காளியப்பன் அவர்களால் நூறு ரூபாய்களுக்கு மேலாகவே வசூல் செய்தனுப்பப்பட்டது. நமது மைத்துனர் திரு. மாப்பிள்ளை ராமசாமி ஈஸ்வரனிடத்தில் 45 ரூபாயிக்கு மேலாகவே கொடுக்கப்பட்டதாக அவர் சொன்னார். இது தவிர இக்கேசு சம்மந்தமாய் வெளியூர்களிலிருந்து வருகின்றவர்கள் எல்லோருக்கும் ஜாகை சௌகரியம் சாப்பாடு ஆகியவைகள் நமது வீட்டிலேயே நடந்து வந்திருக்கின்றது. திரு. ஈஸ்வரனுக்கும் அவரது சினேகிதர்களுக்கும் கேசு ஆரம்பித்த காலம் முதல் கேசு முடிந்த நாள் வரையில் - கேசு முடிந்து பணம் கட்டி விடுதலையாகி வெளி வந்த மறுநாள் வரை



RangaRakes tamilnavarasam.com

சாப்பாடு நமது வீட்டில் தான் நடந்து கொண்டு வந்தது; வருகிறது. "அதற்கு முன்னும் வருஷக்கணக்காய் பல வருஷங்கள் நமது வீட்டில்தான் சாப்பிட்டு வருகிறார்". தவிர கேசுக்கு ஆஜரான இரண்டு மூன்று வக்கீல்களும் யாருக்காக வந்தார்கள் என்பதையும் அவ்வக்கீல்களையே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இன்னும் இது விஷயமாக செய்த காரியங்கள் சுருக்கமாகச் சொல்வதானால் வக்கீல் கடைசியாக ஆர்க்குமெண்டுக்கு வந்து விட்டுப் போன தற்குக் கூட நாம் தான் மலாய் நாட்டிலிருந்து வந்ததும் முதல் வேலையாக ரயில் சார்ஜ் கொடுத்தோம். மலாய் நாட்டுக்கு புரப்படும்போதும் ரயிலேறிய பின் கட்சி வேலையாக வக்கீலுக்கு ரயில் சார்ஜ் கொடுத்து விட்டுத்தான் பயணம் சொல்லிக் கொண்டோம், இந்த கேசுக்கு என்று வந்திருந்த திரு. கிரித்திவாசுக்கும் சில சமயம் ரயில் சார்ஜ் கொடுத்தோம். இவர்கள் கோயில் பிரவேசம் செய்யப்போகும் போதும் நமது வீட்டில் தான் சாப்பிட்டுவிட்டுப் போனார்கள். கோவிலுக்குள் இருந்த போது கூட நாம் ஊரில் இல்லா விட்டாலும் நமது மனைவியார் சாப்பாடு அனுப்பி இருக்கிறார் கள். இவ்வளவு காரியங்களையும் பெற்றுக் கொண்டும் நாம் வழக்கிற்கு விரோதமாய் நடந்து கொண்டதாகவும் யாரையும் உதவி செய்ய விடாமலும் தடுத்ததாகவும் சொல்வதற்கு எவ்வளவு தூரம் துணிந்திருக்கிறார்கள் என்பதையும் புதைபட்ட திரு. பி. வரதராஜுலு இக்கூட்டத்தைப் பிடித்து மறுபடியும் கரையேர நினைப்பதும் எவ்வளவு யோக்கியமான காரியம் என்பதையும் வாசகர்களே தெரிந்து கொள்ளட்டும். செய்து விட்டுச் சொல்லிக் காட்டுவதற்கு இதை எழுதவில்லை. நமது மீது சுமத்தப்படும் பழிப்புக்கு பதில் சொல்ல வேண்டியிருப்பதால் எழுதுகிறோம். ஆனால் நாம் ஒன்று ஒப்புக் கொள்ளு கின்றோம். அதாவது இக்கேசுக்கு பணம் கொடுக்கும்படி பொது ஜனங்களுக்கு எனது மனைவியின் பேரால் ஒரு அப்பீல் வெளியிட ஆரம்பித்தார்கள். அதை நான் பத்திரிகையில் போட மறுத்ததுண்டு. காரணம் கேசுக்கு அதிக பணச் சிலவில்லை. ஏனெனில் சாப்பாடு நம்முடையது வக்கீல்களுக்கு பீசு கிடையாது. சார்ஜ் சத்தமும் ஸ்டாம்பும் தான் வேண்டியது. இதற்கு அதிகமான பணம் தண்ட வேண்டியதில்லை. நம்மைக் கேட்ட போதெல்லாம் மேல்கண்டபடி ஒரு தடவை கூட இல்லை என்று சொல்லாமல் பணம் கொடுத்திருக்கின்றோம். அடிக்கடி பொது ஜனங்களை பணம் கேட்பதால் கொள்கையில் அபிமானம் குறைந்து விடும் என்று சொல்லியே நமது பேரை உபயோகிக்க வேண்டாம் என்று சொன்னோம். மற்ற காரணங் களையும் மற்றும் இப்படி ஒரு கூட்டம் பொருப்பில்லாமல் நடந்து கொள் வதால் நமக்கு அடிக்கடி ஏற்பட்டு வந்த இடையூருகளையும் நஷ்டங்க ளையும் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு வந்த நமது சகிப்புத் தன்மை யையும் பின்னால் விவரமாய் எழுதுகிறோம். ஆனால் ஒன்று, இன்றைய தினம் வெகு வீரமாய் ஈரோடு ஆலயப் பிரவேசத்தைப் பற்றி எழுதும் தமிழ்நாடு திரு. பி. வரதராஜுலு, திரு. ஈஸ்வரனைப் பாராட்டி ஒரு தந்தி கொடுத்து ஏமாத்தினதல்லாமல் ஒரு காதொடிந்த ஊசி அளவு உதவி செய்தாரா என்றாவது இது மாத்திரமல்லாமல் வேறு எந்த சத்தியாக்கிரகத்திலாவது கையெழுத்தும் வாக்குத்தத்தமும் செய்து நாணையமாய் நின்று அதை நிறைவேற்றாமல் ஏமாற்றி விட்டு நடு சந்தர்ப்பத்தில் விட்டு விட்டு ஓடின நடவடிக்கைகள் ஒன்றுக்கு மேல்பட்ட தடவை இல்லையா என்றாவது நினைத்துப்பார்த்தால் இவ்வளவு விஷமத்தனம் செய்ய வெட்கப்படு வாரென்றே சொல்லுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 02.02.1930**



RangaRakes

tamilnavarasam.com

# மலேயா நாட்டு சுற்றுப்பயணம்

## எதிர்ப்பிரசாரத்தால் ஏற்பட்ட நன்மைகள்

தனக்கும் தனது நண்பர்களுக்கும் இந்தப் பினாங்கில் செய்த வரவேற்பும் உபசாரமும் பத்திரங்களில் கண்ட புகழ் மொழிகளும் மற்றும் தன்னைப் பற்றிப் பேசிய புகழ் வார்த்தைகளும் தனது ஊர்வலத்தில் ஜனங்கள் நடந்து கொண்ட மாதிரியும் பார்த்து தான் மிகுதியும் வெட்கமடைவதாயும் இவைகளில் அனேகம் தனது தகுதிக்கும் தனது கொள்கைக்கும் சிறிதும் பொருத்தமற்றதென்றும் மலாய் நாட்டு மக்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் தான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருந்தாலும் அதைக் காட்டிய மாதிரி தனக்கு மிக்க சங்கடத்தை கொடுத்ததென்றும் இனியும் இம்மாதிரி இந்த நாட்டில் யாரும் செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மலாய் நாட்டு பிரமுகர்கள் கடமையென்றும் சொல்லிவிட்டு தனது மலாய் நாட்டு வரவைப் பற்றி இங்கு ஏற்பட்டிருந்ததாய் சொல்லிக் கொள்ளப்பட்ட சில எதிர்ப்பு பிரஸ்தாபங்களைக் கேட்டு தனக்கே தனது தொண்டில் சிறிது சந்தேகம் ஏற்பட்டு தாம் ஏதாவது பெரிய தப்பிதம் செய்கின்றோமா என்றுகூட யோசித்ததாகவும் ஆனால் பினாங்கைப் பார்த்த பிறகு அந்த எண்ணமே அடியோடு மறைபட்டு தனது கொள்கைகளுக்கும் தொண்டுக்கும் முன்னிலும் அதிகமான உறுதியும் ஊக்கமும் ஏற்பட்டுவிட்டதென்றும் யோக்கியமான எவ்வித அரசியல்காரர்களும் மத இயல்புக்காரர்களும் அரசாங்கத்தார்களும் தன்னைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை என்றும் சுயமரியாதையும் சமத்துவமும் அறிவு வளர்ச்சியுமே தனது தொண்டின் லட்சியமென்றும் ஆதலால் தன்னால் யாருக்கும் எவ்வித ஆபத்தும் வந்துவிடாதென்று தான் உறுதியாய் கருதி இருப்பதாயும் சொல்லி முடித்தார்.

*குறிப்பு : 20-12-1929ஆம் நாள் ஐக்கிய இந்திய சங்கத்தாரின் வரவேற்புப் பத்திரத்திற்கும் பினாங்கு தமிழ்மக்கள் கழகத்தாரின் வரவேற்புப் பத்திரத்திற்கும் மறுமொழியாக நன்றி கூறி பேசியதன் சுருக்கம்.*



நாங்கள் இங்கு எந்த கோவிலையும் இடிக்க வரவில்லையென்றும் எந்த மதத்திற்கும் ஆபத்தையோ ஆதரவையோ உண்டாக்க வரவில்லையென்றும் மற்றவர்களைப் போல் பணம் வசூல் செய்து மூட்டைக் கட்டிப் போக வரவில்லையென்றும் உங்கள் அறிவையும் ஆற்றலையும் ஊக்கத்தையும் தட்டி எழுப்ப வந்து இருக்கிறோமென்றும் அதற்கு தக்க உதாரணங்கள் காட்டி பேசினார்.

*குறிப்பு : 20-12-1929 ஜனாப் முகமது ராவுத்தர் அவர்களின் மாளிகையில் விருந்துக்குப் பின் மலாய் நாட்டிற்கு வந்ததின் பேச்சு சுருக்கம்.*

கடவுளைப் பற்றியோ, சமயங்களைப் பற்றியோ பிரசாரம் செய்வது தனது வேலை அல்லவென்றும் தான் எதிர்பார்க்கும் சீர்திருத்தங்களுக்கு அதன் எதிரிகள் தக்க சமாதானம் சொல்ல யோக்கியதை இல்லாமல் பயங்காளித் தனமாயும் பாமர மக்களை ஏமாற்றும் சூழ்ச்சியும் கடவுள்கள், மதங்கள், வேதங்கள், புராணங்கள் என்பவைகளைக் கொண்டு வந்து முட்டுக் கட்டையாய்ப் போடுவதால் அவைகளை எடுத்து எறிந்து விட்டு முன் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு ஏற்படுகின்றதென்றும் ஆனாலும் கடவுளும், உண்மையான மதமும் உண்மையான வேதமும் கடவுள், மதம், வேதம் ஒன்று இருக்குமானால் அது தன்னால் அழிந்து போகுமோ அல்லது மறைந்து போகுமோ என்று யாரும் பயப்பட வேண்டிய தில்லை என்றும் சொன்னார்.

*குறிப்பு : 20-12-1929 கப்பல் பிரயாணிகளின் குறை நிவாரணச் சங்கத் தலைவர் திரு. ஏ. சிங்காரம் பிள்ளை, காரியதரிசி எம். துரைராஜு, கப்பல் பிரயாண இன்ஸ்பெக்டர் எம்.எம்.எஸ். முதலியார் ஆகியோரின் ஆலோசனைக்கு மறுமொழியாக பேசியதன் சுருக்கம்.*

*குறிப்பு : 20, 21 . 12. 1929 பினாங்கு சொற்பொழிவு.*

### கடவுள் உண்டா?

இடையில் ஒரு மலையாளி தங்கள் நாட்டைப்பற்றி இங்கு பேசக் கூடாது என்று அக்கிராசனரைக் கேட்டுக் கொள்வதாகச் சொன்னவுடன் ஆவேசத்துடன் மலையாளச் சங்கதிகள் ஒன்று விடாமல் சொல்லி இது பொய்யா? இது பொய்யா? என்று கேட்டு, இது மக்களுக்குத் தெரிய வேண்டாமா? மற்றும் பல விஷயங்களையும் விளக்கி இதற்காகத் தான் சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது என்றும் சொல்லி அமர்ந்தார்.

*குறிப்பு : 21-12-1929 ஈபோ இந்தியர்களால் கொடுக்கப்பட்ட வரவேற்பில் பேசிய சொற்பொழிவின் இடையில் பேசியது.*

**குடி அரசு - சொற்பொழிவு - 02.02.1930**



RangaRakes tamilnavarasam.com

# சிங்கப்பூர் டவுன் ஹாலில் மலேயா இந்தியன் அசோசியேசன் மகாநாடு

தான் மலேயா நாட்டிற்கு வந்து ஒரு வாரமே ஆகின்றபடியாலும் இரண்டு மூன்று ஊர்களே பார்த்திருக்கின்றபடியாலும் அதற்குள் மலேயா நாட்டைப் பற்றி ஒன்றும் சொல்ல முடியாதென்றும், மதுவிலக்கைப்பற்றியும் இம்மகாநாட்டைப் பற்றியும் பேசுவதாகவும் சொல்லி மதுவிலக்கு என்பது இன்றைய நிலையில் இந்துக்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் சுலபத்தில் விலக்கு செய்யக் கூடியதல்லவென்றும், இவர்களிடம் கடவுள் மூலமாகவும் மதக்கொள்கை மூலமாகவும் மதுப்புகுந்திருக்கின்ற தென்றும் அவ்விரண்டு அபிப்பிராயமும் தளர்த்தப்பட்டாலல்லாமல் பொதுவாக பூரண மது விலக்கு முடியாதென்றும் சிறப்பாக நூற்றுக்குத் தொண்ணூறு மக்களாகிய பாமர மக்களுக்குள் சிறிதுகூட முடியாதென்றும் இந்துக்களுடைய கடவுள்களில் பாமர மக்கள் கடவுள்களாகிய முருகன் காட்டேரி கருப்பன் வீரன் முனியாண்டி காளி பராசக்தி முதலாகிய கடவுள்களும் மற்றும் பல பார்ப்பன கடவுள்களும் யாகம் சாந்தி முதலிய வைதீகச் சடங்குகளுக்கு வழிபடும் இந்துக்களில் மதுவை கட்டாய வஸ்துவாக கொண்டிருக்கின்றது என்றும் அனேகம்பேருக்கு மதுபானம் மதசம்பிரதாயத்திலும் மரியாதை சம்பிரதாயத்திலும் கட்டாய வஸ்துவாக கருதப்பட்டு வருகின்றது என்றும் அதனாலேயே தான் மதுவிலக்குக்குமிதக்குடி (டெம்பரன்ஸ்) என்றும் பேர் ஏற்பட்டதென்றும் இதில் நம்பிக்கை உள்ள சமூகத்திற்கு மதுவிலக்கு என்பது சுலபசாத்தியமல்ல என்பதே தமது அபிப்பிராயமென்றும் மலாய் நாட்டில் உள்ள தோட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கள்ளுக்கடையும் கள்ளுள் வைத்து நைவேத்தியம் செய்ய ஒவ்வொரு சாமி கோவிலும் இந்து மக்கள் சம்மதத்தின் பேரிலேயே கட்டப்பட்டிருப்பதாக கேள்விப்பட்டதாகவும் அக்கோவில்களை யெல்லாம் இடித்து அச்சாமிகளை யெல்லாம் ஒழித்தாலொழிய மதுவிலக்கைப் பற்றி பேசுவது யோக்கியமாகாதென்றும் இப்படியே அனேகமான ஒழுக்கமற்ற காரியங்கள் மதத்தின் பேராலும் சாமியின் பேராலும் மக்களுள் புகுத்தப்பட்டிருக்கிறதென்றும் அதனாலேயே தான் நமது ஒழுக்கமும் முன்னேற்றமும் தடைப்பட்டு வருகின்ற தென்றும் ஆதலால் அதை ஒழிக்கவேண்டுமென்றால் முதலில் அதற்கு அஸ்திவாரத்தைக்கண்டுபிடித்து



அது ஏதுவானாலும் அதை இடித்தெறிய தயாராக வேண்டுமென்றும் சொல்லி மகாநாடு விஷயத்தில் எதோ தனது அனுபோகத்தை தெரிவிப்பதாகச் சொல்லி பேசியதாவது:-

சகோதரர்களே!

இன்று இங்கு நடந்த மகாநாட்டு நடவடிக்கையைப் பார்த்தேன். இது எங்கள் நாட்டில் காங்கிரசின் ஆரம்ப கால நடவடிக்கைகளை ஒத்திருக்கின்றது. அதாவது இந்தியப் பொது மக்களுடையவும் பாமர மக்களுடையவும் நன்மைக்காகவென்றுதான் ஆதியில் காங்கிரசு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இதை ஆரம்பித்தவர்களில் அரசாங்க உத்தியோகத்தை நம்பி ஆங்கிலம் படித்து விட்டு உத்தியோகத்திற்கும் தங்கள் சொந்த வயிற்றுப் பிழைப்புக்கும் வகை எதிர்பார்த்த மக்களே முதன்மையாயிருந்தார்கள். அம்மகாநாடுகளில் தங்கள் உத்தியோகத்திற்கேற்ற பல தீர்மானங்கள் செய்து விட்டு பாமர மக்களை ஏமாற்ற ரோட்டுகள் போட வேண்டும், வரி குறைக்க வேண்டும், காடு திருத்த வேண்டும் என்பது போன்ற சில காகிதத் தீர்மானத்தையும் செய்வார்கள். காரியத்தில் சீர்திருத்தம் என்னும் பேரால் கொழுத்தச் சம்பள முள்ள சில உத்தியோகங்களை அந்த படித்தக் கூட்டத்தினர் அனுபவிக்கவும், அதற்காக வரிகள் உயர்த்தவும் நேர்ந்ததைத் தவிர அதற்குத் தகுந்தபடி வரிகளும் உத்தியோகங்களும் அரசாங்க அதிகாரங்களும் மற்றும் தொல்லைகளும் பெருகினதை தவிரவும், வேறு யாதொரு பலனும் ஏற்படவில்லை,

சம்பளமும் உத்தியோகமும் பெருகினதின் காரணமாய் கட்சிகளும் உட்பிரிவுகளும் ஏற்பட வேண்டியதாய் விட்டது. ஏனென்றால் ஸ்தாபனங்களில் முக்கியஸ்தர்களாயிருக்கின்றவர்கள் அதனால் ஏற்படும் உத்தியோகங்கள் எல்லாம் தாங்களே சுயமாக அனுபவிக்க ஆசைப்படுவதாலும் மற்றவர்களுக்கு பங்கு கொடுக்காமல் ஏமாற்ற சூழ்ச்சி செய்வதாலும் மற்றவர்கள் பிரிந்து போய் வேறு ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக் கொண்டு தாங்கள் தலைவர்களாவதும் பிறகு அது போலவே அதிலிருந்து பலர் பிரிந்து போவதும், சாத்தியப்படாதவர்கள் சாதி மத வகுப்புகளின் பேரால் ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொண்டு பாத்தியம் கேட்பதுமாகிய நிலைமை ஏற்பட்டு விட்டது. எங்கள் நாட்டில் உள்ள இவ்வளவு அரசியல், மத இயல், ஜாதி வகுப்பு இயல், சமூக இயல் ஆகியவைகளின் பேரால் ஏற்பட்டதான கட்சிகளும் ஸ்தாபனங்களும் காங்கிரசு ஏற்பட்டதினாலும் அதிலுள்ளவர்களின் சுயநல சூட்சியா லும் அவர்களைப் பின்பற்றியும் ஏற்பட்டதே ஒழிய வேறில்லை. ஆகையால் இந்த மகாநாடு எங்கள் நாட்டு காங்கிரசை பின்பற்றாமல் அரசாங்கத்தாரை உத்தியோகமும் பதவியும் கேட்காமல் நாட்டின் நலனுக்கும் பொது மக்களின் நலனுக்குமான முறையில் ஆட்சி செலுத்தும்படி அவர்களை கட்டாயப் படுத்தும்படியான மாதிரியில் நடந்து கொள்ள வேண்டும். அதற்கு மார்க்கம் மக்களை ஒன்றுபடுத்தி அவர்களுக்கு அறிவையும் சுயமரியாதையையும்



RangaRakes
tamilnavarasam.com

உண்டாக்குவதே தவிர உத்தியோகங்களை இந்திய மயமாக்க வேண்டு மென்பதல்ல என்பதே எனதபிப்பிராயம்.

இந்தியர்களென்பவர்களாகிய நாம் ஒரு மதம், ஒரு ஜாதி, ஒரு வகுப்பு, ஒரு கொள்கை, ஒரு லட்சியம் என்று சொல்லிக் கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. முதலாவது லட்சியத்தை ஒன்றுபடுத்திக் கொண்டாலொழிய ஒரு காரியமும் செய்ய முடியாது. ஆதலால் நீங்கள் அதாவது எங்கள் காங்கிரசைப் பின்பற்றி எங்கு இந்த நாட்டையும் இந்தியாவைப் போல பாழாக்கி ஏழைகளை வதைத்து, இனி இங்கிருக்கும் ஏழைகளுக்கும் தொல்லை விளைவித்து அவர்கள் இங்கிருந்து இனி வேறு வெளிநாட்டிற்கு அனுப்பி விடுவீர்களோ என்று பயப்படுகிறேன் (மேடையில் இருந்த சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் 'சபாஷ், சபாஷ்', 'உண்மை, உண்மை' என்று கைதட்டி ஆரவா ரம் செய்தார்கள். ஆனரபிள் வீராசாமி அவர்கள் திரு. ராமசாமியாரின் கையைப் பிடித்து தாங்கள் பயப்பட வேண்டியதில்லை என்று உறுதி கூறுகின்றோம் என்பதாகச் சொன்னார்).

*குறிப்பு : 26.12.1929 இல் சிங்கப்பூர் டவுன்ஹாலில் நடைபெற்ற மலேசியன் இந்தியன் அசோசியேசன் மாநாட்டில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 02.02.1930**



# உதிர்ந்த மலர்கள்

1. நமது நாடு பார்ப்பனீய ஆதிக்கத்திலும் பணக்கார செல்வாக்கிலும் இருக்குமட்டும் பிரிட்டிஷ் அரசாங்கம் இருந்துதான் ஆகவேண்டும்.

2. பூரண சுயேச்சை என்பது ஒரு மனிதன் எந்த விதத்திலும் எதற்கும் அடிமைபட்டிறாத விடுதலை என்றால் நான் அதை மனப்பூர்வமாய் வரவேற்கின்றேன்.

அப்படிக்கில்லாமல் பிரிட்டிஷார் இந்த நாட்டைவிட்டு போவதும் (திரு. காந்தி சொல்லும்) ராம ராஜ்ஜியம் ஏற்படுத்துவதும் என்றால் ருஷிய அரசாங்கத்தையே நான் கூவி அழைக்க முந்துவேன்.

3. இந்த நாட்டிற்கு சீர்திருத்த உணர்ச்சி ஏற்பட்டு அதை அமுலில் நடத்திவைக்கும் ஆசை பொது மக்களுக்கு ஏற்பட்டதற்காக யாருக்காவது நன்றி செலுத்த வேண்டுமானால் அது முதலில் திருமதி மேயோ அம்மைக்கு உரியதாகும்.

**( ஈ. வெ. ரா.)**

**குடி அரசு - துணுக்குகள் - 02.02.1930**



RangaRakes tamilnavarasam.com



16 குடி அரசு

தமிழரசு.

ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை,

சென்னையிலிருந்து வெளிவருகின்றது.

மாதிரி பிரதி இனாம்.

| | |
|---|---|
| உள்நாடு | ரூ. 3—0—0 |
| வெளிநாடு | ரூ. 4—0—0 |

தமிழரசு காரியாலயம்,
31 வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

குடி அரசு புத்தகாலயம்.

| | |
|---|---|
| ஞானசூரியன் | (அணா) |
| இராமாயணத்தின் ஆபாசம் | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு. | 0—2—0 |
| சோதிடப் புரட்டு. | 0—2—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

அன்டையன்ஸ் கேம்பிரிட்ஜ்.

இன்ஸ்டிடியூட் நாசரேத் S. I. R.

ஸ்தாபனம் ௵ 1920.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

சர்: டோராப் ஜெ டாட்டா. Kt.

மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ... | ரூ. 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ... | ரூ. 3,56,05,275. |
| வசூலான ,, | ... | ரூ. 71,21,055. |

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை.

சுவாச காச நிவாரணி.

தபால் கூலி அணா 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9—0—0
6 டின் விலை ரூ. 5—4—0 3 டின் விலை ரூ. 3—0—0.
F. M. S. முதலிய ஊர்களுக்கு முன்பணம் ரூ. 2—8...0.

# மலாயா பிரயாணம்

மலாயா நாட்டுக்கு "சென்ற வருஷம்" டிசம்பர் ௴ 15 ௨ கப்பலேறி, "இவ்வருஷம்" ஜனவரி மாதம் 16 தேதி இந்திய நாடு சுகமே வந்து சேர்ந்தோம். இந்த சுற்றுப் பிரயாணத்தில் மலாய் நாட்டில் நடந்த விஷயங்கள் ஒருவாறு சென்ற வாரப் பத்திரிகையிலும், இவ்வாரப் பத்திரிகையிலும் பிரசுரித்திருக்கும் மலாய் நிருபரின் சுற்றுப் பிரயாண நிருபத்தில் காணலாம்.

மலாய் பிரயாணத்தைப் பற்றி நாம் சிறிதும் நினைத்திருக்காத நிலையில் திரு. சாமி அற்புதாநந்தா அவர்களால் எழுதப்பட்ட ஒரு கடிதம் வந்தது. அக்கடிதத்தில் மலாய் நாட்டில் சுயமரியாதை இயக்கக் கொள்கை உணர்ச்சி விசேஷமாய் பரவி வருகின்றதெனினும், சில விஷமக்காரர்கள் சுயநலத்தின் காரணமாய் இந்து மதத்தின் பேரால் தொல்லை விளைவிக்கின்றார்கள் எனவும், சுயமரியாதைக்காரர்களுக்கு, "இந்துக்களைப் புதைக்கும் சுடுகாட்டில் கூட இடம் கொடுக்கக் கூடாது" என்று இந்து மத சங்கத்தில் தீர்மானங்கள் கொண்டு வந்ததாகவும், சுயமரியாதைக் கல்யாணங்களை சர்க்கார் ஒப்புக் கொள்ளக்கூடாது என்று விஷமம் செய்கின்றார்கள் எனவும், ஒரு முறை வந்து போனால் மிக்க அனுகூலமாயிருக்குமென்றும் பொருள்பட எழுதியிருந்தார்.

இதைப் பார்த்ததும் அது சமயம் போய்த்தான் பார்க்கலாமா என்பதாக ஒரு எண்ணம் தோன்றியதால் இது சமயம் சிறிது வேலை இருக்கின்றதென்றும் ஒன்று இரண்டு மாதம் பொருத்து வர முயற்சிப்பதாகவும் ஆனால் அங்குள்ள முன்னேற்றம் பத்திராதிபரையும் திரு. காளியப்பனையும் கலந்து அவர்களைக் கொண்டு எழுதும்படியும் பதில் எழுதினோம். இப்படியிருக்க ஒரு மாதம் கழித்து திடீரென்று 15 நாள் சாவகாசத்தில் புறப்படும்படி நிகழ்ச்சிக் குறிப்புடன் ஒரு கடிதம் வந்தது. அக்கடிதத்திற்கு, "வர முடியாது" என்று எழுதியதுடன் அந்நிகழ்ச்சிக் குறிப்புகள் மற்ற பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பட்டதாய் தெரிந்ததால் அதை பிரசுரிக்க வேண்டாம் என்று தகவலும் அனுப்பிவிட்டோம். தவிர திருவாளர்கள் சாரங்கபாணி, காளியப்பன் இவர்கள் கடிதமும் இதை அனுசரித்து புறப்படும்படியாகவே கிடைத்தது. எல்லாவற்றிற்குமாக ஒரு நீண்ட தந்தி ஒன்றை சென்னையில் இருந்து "குடி



RangaRakes tamilnavarasam.com

அரசு” ஆபீசு ஈரோட்டிற்கு மாற்றப்படவேண்டி இருப்பதற்காகவும், நாகர்கோவில் மகாநாட்டுக்காகவும், பார்ப்பனரல்லாதாருக்குள்ளாகவே கட்சிப் பிளவு தகராருகள் இருப்பதாலும் இது சமயம் கண்டிப்பாய் வருவதற்கு சௌகரியமில்லை என்பதாக தந்தி கொடுத்தோம். இதற்கு பதிலாக, “6000 டாலர்கள் (பதினாயிரம் ரூபாய்கள்) செலவழித்துச் செய்த மகாநாட்டு ஏற்பாடுகளும் வரவேற்பு ஏற்பாடுகளும் வீணாய் விடும், வராவிட்டால் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டவர்களுடைய நிலைமை நெருக்கடியாகி விடும்” என்று திருவாளர்கள் சாரங்கபாணியும், காளியப்பனும் தந்தி அடித்தார்கள். அதைப் பார்த்த இவ்விடத்திய நமது நண்பர்கள் கண்டிப்பாய் போக வேண்டும் என்றும் இவ்விடத்திய காரியங்களை எல்லாம் தாங்கள் சரியாய்ப் பார்த்துக் கொள்ளுவதாகவும் சொன்னதோடு கைவல்லிய சாமி யாரும் கண்டிப்பாய் போக வேண்டுமென்று சொன்னார்கள். இவைகளை அனுசரித்துப் போவதாக தீர்மானித்து, ஒரு தந்தியை சிங்கப்பூருக்கு திரு சாரங்கபாணிக்கு கொடுத்துவிட்டோம். அதற்குப் பதிலாக திரு. சாரங்கபாணி அவர்களால் நமது வருகைக்கு அவ்விடம் இந்து சபையார் பெரிய எதிர்ப்பு செய்கிறார்கள் என்றும் அதனால் அவ்விடத்திய சர்க்கார் நம்மை கப்பல் விட்டு இறங்க அனுமதிக்க மாட்டார்கள் போல் இருக்கின்றதென்றும் இறங்க விட்டாலும் பேச விடமாட்டார்கள் என்றும், தகுந்த ஏற்பாட்டுடன் கண்டிப் பாய் வரவேண்டுமென்றும் தந்தி கொடுத்திருந்தார். இது டிசம்பர் மாதம் 9 தேதி கிடைத்தது. அதைப் பார்த்த பிறகு கப்பல் ஏறும் நாள் மிக சமீபத்தில் இருந்ததால் அதாவது 11 தேதியாயிருந்ததால் ஒன்றும் செய்ய முடியாமல் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். இந்த நிலையில் “மகா நாடு ஒத்தி வைக்கப்பட்டு விட்டது. கப்பல் ஏற வேண்டாம்; கடிதம் பார்” என்பதாக மகாநாட்டு வரவேற்புத் தலைவரான திரு. அய்யாரு அவர்கள் பேரால் பினாங்கிலிருந்து ஒரு தந்தி கிடைத்தது. இதைப் பார்த்ததும் கஷ்டம் ஒழிந்தது என்று மெத்த சந்தோஷமாக இருந்தோம். ஆனால் இங்குள்ள நண்பர்களும் நமது தமையனாரும் இந்த தந்தி பொய்யாயிருக்குமென்றும்; மறுபடியும் தந்தி கொடுத்து கேட்க வேண்டும் என்றும் சொன்னதால் மறுபடியும், “இப்படி ஒரு தந்தி கிடைத்தது; அது உண்மையா” என்று கேட்டோம். அதற்கு பதில் “பினாங்கு தந்தி பொய், கண்டிப்பாய் புறப்படு, பயணத்தை உறுதிப்படுத்து” என்று பதில் 11-ந் தேதி கிடைத்தது. இதை பார்த்தபிறகு மறுபடியும் கவலை ஏற்பட்டது. ஏனெனில் அவ்விடத்திய சர்க்கார் நம்மை கப்பலைவிட்டு இறக்காமல் பாரிஸ்டர் திரு மணிலால் அவர்களை செய்தது போல் செய்து விட்டால், நாம் என்ன செய்வது என்கின்ற கவலை தவிர வேறில்லை. இதன் பேரில் சென்னை அரசாங்க பிரதம அதிகாரிகளை கேட்கச் செய்ததில் அவர்கள் மலாய் அரசாங்கத்தில் தாங்கள் பிரவேசிக்க முடியாது என்று ஒரே வார்த்தையில் முடித்து விட்டார்களாம். பிறகு எப்படியானாலும் சரி இவ் வியக்கம் காரணமாக வந்ததை அனுபவிப்போம் என்றே புறப்பட்டோம். நாள் சுருக்கமாயிருந்ததால் 11 தேதி சென்னையில் கப்பலேர முடியாமல் 13 ந்



தேதியே நாகைக்கு புறப்பட்டு அங்கிருந்து 15 உ கப்பலேறி விட்டோம். கப்பலில் கம்பி இல்லாத தந்தி மூலமாய் பல வரவேற்பு தந்திகள் கிடைத்துக் கொண்டிருந்தாலும் சற்று கவலையுடனேயேதான் கப்பல் பிரயாணம் செய்தோம். நாங்கள் பினாங்கு துறைமுகத்திற்கு 4 மைல் தூரத்தில் கப்பல் நின்று இருக்கும் போதே ஒரு வெள்ளைக்கார சாதாரண அதிகாரியும் மற்றொரு ராணுவ உடை தரித்த வெள்ளைக்கார அதிகாரியும் சில போலீசு காரரும் நம்மிடம் வருவதைப் பார்த்ததும் சரி, “நமக்கு தடைவுத்திரவு வந்து விட்டது” என்று முடிவு செய்து கொண்டு மனதில் நம்மை அறியாமல் ஏற்பட்ட ஒரு விதத் திகிலுடன் முகத்தை மாத்திரம் சிரிப்பாகக் காட்டிக் கொண்டு நின்றோம். அவர்கள் இருவர்களும் கிட்ட வந்ததும் சலாம் செய்து, ஒருவர் அசிஸ்டெண்ட் கண்ட்ரோலர் என்றும் மற்றவர் சார்ஜண்ட் என்றும் தாங்களே அறிமுகம் செய்து கொண்டார்கள். பிறகு பேச ஆரம்பித்ததும் என்னிடம் பேச வேண்டியவைகளை திரு. ராமநாதன் அவர்களிடம் சொல்லும்படி சொன்னோம். பிறகு அவர் பேசும் போதே ஒரு வித தைரியம் வந்தது. அதற்குள் பினாங்கிலிருந்து சில சங்கத்து நண்பர்கள் வந்து ஒரு கடிதம் கொடுத்தார்கள். அதில் இதைப் பற்றிய காரியம் ஒன்றுமில்லாமல் நிகழ்ச்சிக் குறிப்பு இருந்ததால் அந்தக் கவலை நீங்கிவிட்டது. இதற்குள் மற்றொரு படகில் சாமி அற்புதானந்தா, சுப்பிரமணியம் முதலியவர்களும் மற்றும் சில இந்து, மகமதிய கனவான்களும் வருவதைப் பார்த்தோம். இறங்க விட மாட்டார்களோ என்று நினைத்த எண்ணம் போய் இவ்வளவு ஆடம்பரம் வேண்டாம் என்று சொல்ல வேண்டிய நிலைமை வந்து விட்டது. பினாங்கில் இறங்கியவுடன் பலவிதமான விஷயங்கள் காதுக்கு வந்தன. அவற்றுள் ஒன்று நம்மை கத்தியால் குத்துவதற்கு ஒரு நபருக்கு 500 வெள்ளி பேசி ஏற்பாடு செய்திருப்பதாகவும், நாம் போகுமிடங்களிலெல்லாம் கலகம் செய்வதற்கும் துண்டு பிரசுரங்கள் போட்டு வழங்கி வருவதற்கும் 500 வெள்ளி பேசி பலரை நியமித்திருப்பதாகவும், மற்றும் கிருஸ்துவுக்கு விரோதமாய் பேசினதாகவும், சொன்னதாகவும், மகமது நபிக்கு விரோதமாய் பேசினதாகவும், இந்து மதத்தை ஒழித்து இந்துக்களை மகமதிய மதத்தில் சேர்ப்பிக்க மகமதியரிடம் பணம் வாங்கிக் கொண்டு மலாய் நாட்டுக்கு வருவதாகவும், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விரோதமாய் ஒத்துழையாமை பிரசாரம் செய்ய வருவதாக வும், போல்ஷிவிசம் பிரசாரம் செய்ய வருவதாகவும் இன்னும் பலவிதமாக துண்டுபிரசுரங்கள் மூலமாகவும் பத்திரிகை மூலமாகவும் பிரசாரம் செய்தி ருந்த விஷயம் நேரில் பார்த்தோம். தவிரவும் அவ்விடத்திய ஒரு ஆங்கில தினசரிப் பத்திரிகை, அரசாங்கத்திற்கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் நாம் பெரிய கலகக்காரரென்றும் நம்மை மலாய் நாட்டில் விட்டால் ஜனசமூகத் தின் சாந்த குணம் கெட்டு சர்க்காருக்கு தொல்லையேற்படுமென்றும் எச்ச ரிக்கை செய்வதாக ஒருவாரம் தவறாமல் தலையங்கமும் உப தலையங்கமும் எழுதி வந்தது. இது நிற்க “தமிழ் நேசன்” பத்திரிகைக்காரரான ஒரு அய்யங் கார் ஊர் ஊராகச் சுற்றி பிரசாரம் செய்ததுடன் தனது பத்திரிகையில்,



RangaRakes tamilnavarasam.com

கடவுளுக்கும் மதத்துக்கும் ஆபத்து என்று தினப்படி எழுதிக் கொண்டே வந்தது. தவிர இவ்வளவும் போதாமல் திரு வரதராஜுலு நாயுடுவின் பேப்பரும் மருந்தும் விற்கும் ஆள்களும் கூலிகளும் விஷமப் பிரசாரம், அதாவது தோட்ட கூலிகளை கிளப்பி விட்டு தோட்டக்காரருக்கு தொல்லை விளைவிப்பான். இவன் "காந்தி மனிதன்" என்றும் சொல்லிவந்தார்களாம் மற்றும் ஒரு விசேஷம் அதாவது இந்து மகாசபைத் தலைவர், அவ்வூர் போலீஸ் கமிஷனரிடம் ஒரு விண்ணப்பம் கொடுத்துப் பேசுகையில், இந்தியாவிலிருந்து வரும் ஈ.வெ. ராமசாமி என்பவர் எங்கள் கடவுளான இராமரை விவசாரத்தில் பிறந்தவன் என்று சொல்லுகின்றார். ஆதலால் அவரை இங்கே வரவிடக் கூடாது என்றாராம். அதற்கு அந்த போலீஷ் கமிஷனர், "அதற்கு நாம் என்ன செய்யலாம் எங்கள் வெள்ளைக் காரர்களில் சிலபேர் ஏசுகிருஸ்துவையும் இப்படித்தான் அதாவது அவர் தாயார் விவாகமாவதற்கு முன் அவரைப் பெற்றதால் விவசாரத்தில் தான் பிறந்து இருக்க வேண்டுமென்று சொல்லுகின்றார்கள். கேட்டால் சைன்சுபடிக்கு ஒரு ஆள் கூடாமல் எப்படி பிள்ளை பிறக்கும் என்கின்றார்கள். ஆகவே மத விஷயங்களில் இப்படிப்பட்ட அபிப்பிராயங்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே இருந்து வருகின்றது. அதற்காக யாரையும் தூக்கில் போட முடியாது" என்றும் சொன்னாராம். இப்படியாகப் பல விதத்திலும் எதிர்ப் பிரசாரங்கள் செய்தார்கள் என்பது மாத்திரம் நமது காதுக்கு எட்டியதே தவிர காரியத்தில் பலன் ஒன்றும் காண முடியவே இல்லை. "தமிழ் நேசன்" பத்திராதிபர் "ஒரு அய்யங்கார்" சர்க்காரார் நம்மை மலாய் நாட்டில் இறங்கக் கூடாதென்று உத்திரவு போட்டு விட்டதாகக் கட்டுக்கதை கட்டி விட்டதால் அதை நம்பி அனேகம் பேர் கப்பலிலிருந்து நாம் இறங்க மாட்டோம் என்று நினைத்துக் கொண்டு இறங்கினால் குத்தி விடுவதாயும் கலகம் செய்வதாயும் பேசி விட்டார்கள். நாம் பினாங்கில் இறங்கியதும் அங்கு துறைமுகத்தில் ஜனங்கள் நடந்து கொண்டதை பார்த்த பிறகுதான் யாரும் எவ்வித எதிர்ப் பிரசாரமும் செய்யாமல் இருந்து விட்டார்கள்.

நிற்க, எதிர்ப் பிரசாரம் செய்வதற்கு ஏற்பட்ட காரணங்கள் என்ன என்று பார்த்ததில், பினாங்கில் இந்து மகாசபை என்று ஒரு சபை இருப்பதாகவும், அதை சர்க்கார் இந்துக்களுடைய பிரதிநிதி சபை என்று ஏற்றுக் கொண்டிருப் பதாகவும் அச்சபைப் பிரமுகர்களுக்கு அங்குள்ள இந்துக்களால் சில மரியாதைகளும் வரும்படிகளும் இருப்பதாகவும், நமது இயக்கத்தால் அவற்றிற்கு மரியாதை குறைந்து வரும்படி குறைவதாகவும், அதனால் நமது இயக்கத்திற்கு விரோதமாய் வேலை செய்ய வேண்டி வந்ததாகவும் தெரிய வந்தது. ஆனால் அந்த "இந்து மகாசபை"யில் இந்துக்கள் என்பவர்களி லேயே பல வகுப்பாரை அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளுவதில்லை, என்கின்ற நிபந்தனை உண்டு. அதாவது ஆதி திராவிடர்கள், மருத்துவர்கள் முதலியவர்களை மாத்திரமல்லாமல் சமீப காலம் வரை நாடார்களையும் சேர்க்க மறுத்து வந்தார்களாம். முதல் முதலில் நாடார்களைச் சேர்க்கும்



போதும் அதிகமான பணம் கொடுத்ததால் தான் சேர்த்தார்களாம். இந்த யோக்கியதையுள்ள இந்து மகாசபை கெட்டுப் போகுமென்று சிலர் சத்தம் போட்டதால்தான் அதை யாரும் அந்நாட்டில் மதிக்கவில்லை. தவிர "தமிழ் நேசன்" அய்யங்கார் நாம் போகும் ஒவ்வொரு ஊருக்கும் முதல் நாள் போய் வரவேற்புக்கு எவ்வளவோ இடையூறு செய்து கொண்டு போனதாக அனேகமாய் ஒவ்வொரு ஊர்களிலும் பிரஸ்தாபம் வந்து கொண்டே இருந் தது. இது தவிர மலாய் நாட்டில் உள்ள சங்கங்களில் எதில் எதில் பார்ப்பனர்கள் அங்கத்தினர்களாக இருந்தார்களோ அதிலெல்லாம் வரவேற்புக்கும் பத்திரத்திற்கும் கூடியவரை எதிர்ப்புகள் செய்து பலமான தோல்விகள் அடைந்ததுடன் இரண்டொரு சங்கத்தில் இது விஷயமாய் செய்த விஷமத் திற்கு பார்ப்பனர்களிடம் மன்னிப்புக் கடிதம் வாங்கியிருந்ததை எங்களுக்குக் காட்டினார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் நமது மலாய் நாட்டுச் சுற்றுப் பிரயாணம் நாம் எதிர்பார்த்ததற்கு மேலான அளவு வெற்றிகரமாகவே முடிந்தது. மகமதிய கனவான்களும் கிருஸ்தவ கனவான் களும் அவர்களில் ஐரோப்பியர்களும் மற்றும் இந்து கனவான்களும் இந்த சுற்றுப் பிரயாணத்தில் சிறிதும் வித்தியாசம் பாராட்டாமல் எல்லோரும் கலந்து கொண்டதும் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் போல் தலைமை வகித்து உபசாரங்கள் செய்ததும் நடவடிக்கைகளைப் பார்த்தால் நன்றாய்த் தெரியவரும். திருவாளர்கள் சுவாமி அற்புதானந்தா, கே. சுப்பிரமணியம், காளியப்பன், அய்யாரு, சாரங்கபாணி, ஒ. ராமசாமி நாடார், கோவிந்தசாமி, தாமோதிரம், பழனியப்ப செட்டியார், ஜனாப்புகள் முகம்மது ராவுத்தர், சீனி ராவுத்தர், முகம்மது யூசுப் முதலிய கனவான்கள் சிங்கப்பூரிலும் பினாங்கிலும் செய்த ஏற்பாடுகள் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இந்த இரண்டு ஊர்களில் மாத்திரம் 7500 ரூபாய்க்கு மேலாகவே செலவு செய்து இருக்கின்றார்கள். எவ்வளவு சொல்லியும் அவர்கள் சிறிதும் லட்சியம் செய்யாமல் எதிர்ப் பிரசாரக்காரர்களுக்கு புத்தி கற்பிக்க வேண்டுமென்கின்ற காரணத்தைச் சொல்லிக்கொண்டே வீண் செலவு செய்தார்கள். எனவே நமது மலாய் நாட்டு சுற்றுப்பிரயாணம் வெற்றிகர மாக முடிந்தது என்பது வாசகர்களுக்கு மகிழ்ச்சி யுடன் தெரிவிப்பதுடன் மலாய் நாட்டிலுள்ள இந்திய சகோதரர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியறி தலை செலுத்துகின்றோம். இந்திய கூலிகள் விஷயமாகவும் இந்திய பிரதிநிதித் துவ விஷயமாகவும் பின்னால் எழுதுவோம்.

**குடி அரசு – தலையங்கம் – 09.02.1930**



RangaRakes tamilnavarasam.com

# மலேயா நாட்டு சுற்றுப் பிரயாணம்

## "எதிர் பிரசாரத்தினால்" ஏற்பட்ட நன்மைகள்

### கோலாலம்பூர் விவேகானந்தா ஆசிரமத்தின் வரவேற்பு

சுவாமி விவேகானந்தாவின் பெயரினால் சென்னையில் பார்ப்பனர்கள் செய்யும் ஏமாற்றத்தையும் வஞ்சகத்தையும் பற்றியும் ராம கிருஷ்ணா மிஷினில் சேர்ந்திருக்கும் பார்ப்பனர்களில் 100-க்கு 90 பேர் யோக்கிய மற்றவர்கள் என்றும் உதாரணமாக சென்னையில் உள்ள ராமகிருஷ்ணா ஹோம் என்கின்ற இடத்தில் நடக்கும் அக்கிரமம் கணக்கு வழக்கில்லையென்றும் அங்கு நடக்கும் பணம் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பார்ப்பனரல்லாதாருடையதென்றும், வருஷம் 20000, 30000 ஆயிரம் அந்த ஹோமின் பேரில் பார்ப்பனரல்லாதாரிடமிருந்து கொள்ளை அடிக்கப்படுகின்றதென்றும், இதை அறிந்த தனது நண்பரும் சுயமரியாதை சங்கத் தலைவருமான உயர்திரு டபிள்யூ, பி.ஏ. சௌந்திரபாண்டியர் சட்டசபையில் கூட கேள்வி கேட்டு அக்கொள்ளையை நிறுத்த முயற்சித்தார் என்றும், ஆனாலும் அரசாங்கத்தில் முக்கிய உத்தியோகத்தில் இருக்கும் பார்ப்பனர்கள் செல்வாக்கால் பார்ப்பனரல்லாத பயங்காளிப் பெரியவர்கள் அவர்களுக்கு அடிமையாகி சிறிதும் சுயமரியாதை உணர்ச்சி இல்லாமல் பொது மக்கள் பணத்தை வசூல் செய்து கொடுக்கின்றார்கள் என்றும், இங்கும் அதுபோல் இருக்கக்கூடாதென்றும் ஆசைப்படுவதாகவும் விவேகாநந்தர் அமெரிக்காவுக்கு இந்து மதப் பிரதிநிதியாய் அனுப்பப்பட்டிருந்தாலும் அவர் உண்மையான பிரதிநிதியாய் இல்லாமல் இந்து மதத்திற்கு ஒரு வக்கீலாய் போய் கேசை ஜெயித்துக் கொண்டு வந்தாரென்றும் ஆகையால் அதனாலேயே இந்து மதம் என்பதற்கு யோக்கியதை வந்து விடாதென்றும் அவர் இந்தியாவையும் இந்துக்களையும் பற்றி இந்தியாவில் பேசி இருப்பதை பாருங்கள் என்றும், பார்ப்பனர்களைப் பற்றி கண்டித்துச் சொல்லி இருப்பதும், வருணாசிரமம் ஜாதி வித்தியாசம் ஆகியவைகளைப் பற்றி கண்டித்துச் சொல்லி இருப்பதையும், இந்து அரசாங்கமாகிய மலையாளத்தைப் பற்றி சொல்லி இருப்பதையும், அவர் விக்கிரகங்களைப் பற்றி சொல்லும் போது அவை பாமர மக்களுக்கு வேண்டி ஏற்பட்டதே ஒழிய மற்றவர்களுக்கு அல்ல என்றுதான் சொன்னாரென்றும், ஆனால் இப்போதைய விக்கிரகங்களை பாமர மக்களுக்கு உபயோகப்படாமலும் கண்ணில் பார்க்கக்கூட இடம் தராமலும் பண்டிதர்கள் பிரமஞானம் உடையவர்கள் கடவுளாலேயே அறிவாளிகளாய் பிறப்பிக்கப்பட்ட மக்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்களுக்கும் அவர்களது வயிற்றுப் பிழைப்புக்கும் தான் சாதனமாயிருக்கின்ற தென்றும் மற்றும் தென் இந்தியாவுக்கு வேண்டியதெல்லாம் உண்மையான சுயமரியாதையே என்று சொல்லி அவர் இருக்கின்றார் என்றும் மற்றும் இப்படி அவர் சொன்ன அனேக விஷயங்களை புஸ்தகத்தைப் பார்த்தே எடுத்துச் சொல்லி 2 மணி நேரம் கூட்டத்தையே ஆச்சரியப்படும்படி செய்து விட்டார்.

*குறிப்பு : 03.01.1930 இல் கோலாலம்பூர் விவேகானந்தா ஆசிரமத்தில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 09.02.1930**


RangaRakes

tamilnavarasam.com

# "சித்திரபுத்திரன்"

**சைவன் :** - அய்யா, தாங்கள் இப்போது மலேயா நாட்டுக்குப் போய் வந்த பிறகு சைவமாய் விட்டீர்களாமே உண்மைதானா?

**வைணவன் :** - ஆம் அய்யா, நான் நாலுகால் பிராணிகளில் கட்டில், மேஜை, நாற்காலி ஆகியவைகளையும், இரண்டு கால் பிராணிகளில் ஏணி வகையராவும், ஆகாயத்தில் பறப்பவைகளில் பட்டம், ஏரோபிளேன் வகையராக்களையும், நீரில் வாழ்பவைகளில் கப்பல், படகு, கட்டு மரம் முதலியவைகளையும், பூமியில் நகருபவைகளில் வண்டி, மோட்டார் கார் முதலியவைகளையும் நான் சாப்பிடுவதில்லை. இவைகளைச் சாப்பிடுவது பாவம் என்று எனக்குப் பட்டதினாலும் சைனாக்காரர்களைப் பின்பற்றுவதாலும் இம்மாதிரி முடிவு செய்துவிட்டேன்.

**சைவன் :** - அப்படியா, இது நல்ல சைவம் தான். எனக்குச் சற்று வேலை இருக்கின்றது. சீக்கிரம் போக வேண்டும் நான் போய் விட்டு வருகிறேன். (என்று சொல்லிக் கொண்டே தன்னை எங்கு சாப்பிட்டு விடுவானோ என்று நினைத்து ஓடிவிட்டார்.)

**குடி அரசு - உரையாடல் - 09.02.1930**





8 குடி அரசு

குறிப்பு.

குடி அரசு

1930 பிப்ரவரி மீ 16-உ.

மானக்கேடான காரியம்.



RangaRakes tamilnavarasam.com

# மானக்கேடான காரியம்

லாகூர் காங்கிரஸ் தீர்மானத்தை அனுசரித்து என்று திருவாளர்கள் டாக்டர் யூ. ராமராவ் அவர்களும் ராமதாஸ் பந்தலு அவர்களும் ராஜிநாமா கொடுத்துவிட்ட ராஜாங்க சபை (ஸ்டேட் கவுன்சில்) ஸ்தானங்கள் இரண்டிற் கும் இரண்டு கனவான்கள் போட்டி இன்றி தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாய் தெரிந்தோம். இவர்களில் ஒருவர் திருவாளர் எ. ராமசாமி முதலியாரும் மற்றவர் திருவாளர் டி. ஆர். ராமச்சந்திர அய்யரும் ஆவார்கள். சென்னை ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் எதற்காக திரு. டி. ஆர். ராமச்சந்திரய்யரை ராஜாங்க சபைக்கு அனுப்பினார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. திரு. டி. ஆர். ராமச்சந்திரய்யர் இந்து வருணாசிரம தர்ம ஸ்தாபனத்தின் தலைவர். மனுதர்ம சாஸ்திரத்தையும் அதில் சொல்லுகின்றவைகளையே சனாதன தர்ம மென்றும் சொல்லுகின்ற வருணாசிரம தர்மத்தை நிலைநாட்ட முயற்சி செய்யும் சங்கத்திற்கும் தலைவர். இதை அனுசரித்து தினமும் வருணாசிரம மகாநாடு, பிராமண தர்ம மகாநாடு, சனாதன தர்ம மகாநாடு, ஆரிய தர்ம மகாநாடு ஆகியவைகள் கூட்டி தீர்மானங்கள் செய்து பிரசாரமும் செய்பவர் அன்றியும்.

உயர்திரு ராமசாமி முதலியார் பெரிதும் பாடுபட்டு உதவி செய்து உருப்படி செய்த சாரதா மசோதாவை அடியோடு கவிழ்க்கவும் ஒழிக்கவும் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர். இவ்வளவும் இல்லாமல் ஜஸ்டிஸ் கட்சி கொள்கைகளுக்கும் விரோதி. அதை அழிக்க கங்கணம் கட்டிக் கொண்டிருப் பவர். அப்படிப்பட்டவரை சென்னை ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் போட்டி யின்றி தேர்ந்தெடுக்கப்பட விட்டிருப்பதைப் பார்த்தால் இது ஜஸ்டிஸ் கட்சிக்கு மாத்திரமல்லாமல் சென்னை மாகாண பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே பெருத்த அவமானமென்றே சொல்லுவோம்.

ஏனெனில் ராஜாங்க சபைக்கு சென்னை மாகாணத்தார் சிறப்பாக தமிழ் நாட்டார்கள் திரு. டி. ஆர். ராமச்சந்திரய்யரை தங்கள் பிரதிநிதியாய் ஒரு மனதாய் தேர்ந்தெடுத்தனுப்பி இருக்கிறார்களென்பதும் இந்த நாட்டின் பொது ஜனஅபிப்பிராயம் ஒரு மனதாய் அவரது கொள்கைக்கே சாதகமாய் இருக்கின்றது என்பதும் அல்லது குறைந்த அளவு பெரும்பான்மையான



RangaRakes tamilnavarasam.com

ஜனங்கள் வருணாசிரமத்திற்கும் சனாதன தர்மத்திற்கும் இவற்றை வலியுருத்தும் மனுதர்மத்திற்கும் அனுகூலமாயிருக்கின்றார்கள் என்றாவதும் முடிவு செய்ய வேண்டியதாக இருக்கின்றது.

திரு. பனகால் அரசர் அவர்கள் சென்ற தேர்தலில் சட்ட சபைக்கு நிற்கும் போது பார்ப்பனர்களும் சிறப்பாய் சனாதன தர்ம வருணாசிரமக் காரர்களும் நடந்து கொண்டதற்கு சென்னை ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்கள் இம்மாதிரி நடந்து கொண்டால் அவர்களது சுயமரியாதைக்கு நாம் வியாக்கியானம் சொல்லாமலே வாசகர்கள் தெரிந்து கொள்வார்களென்று நினைக்கின்றோம். நிற்க மேற்படி ஸ்தானங்களுக்கு திரு. எ. ராமசாமி முதலியாரும் திரு. எம். கே. ரெட்டியாரும் நிற்பதாய் முதலில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. பிறகு ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் பிரவேசித்து ராஜி செய்து திரு. ரெட்டியாருக்கு பதிலாக திரு கோபதி நாராயணசாமி செட்டியாரை நிற்கும்படி ஏற்பாடு செய்திருப்பதாக செய்தி தெரியவந்தது. ஆனால் கடைசியாக அந்த ஸ்தானத்தில் திரு. டி. ஆர். ராமச்சந்திரய்யர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டார் என்று பார்த்தோம். இதிலிருந்து அதாவது திரு. எம். கே. ரெட்டி விலக்கப்பட்டதற்கும் திரு. டி. ஆர். ராமச்சந்திரய்யர் புகுத்தப்பட்டிருப் பதற்கும் இடையில் ஏதாவது சூழ்ச்சியோ தந்திரமோ புகுந்திருக்கவேண்டுமே அல்லாமல் ஒரு சிறிது கூட நியாயமோ நாணையமோ இருக்க இடமில்லை என்றே கருத வேண்டியிருக்கின்றதற்கு வருந்துகின்றோம். நிற்க, தஞ்சை ஜில்லாவுக்கும் இது போலவே திரு. சர். பி. ராமசாமி அய்யர் அவர்களைச் சுலபமாய் தெரிந்தெடுக்கப்பட சில ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் ஒப்புக் கொண்டாய் விட்டதாகவும் தெரிந்தோம். இது முன் விஷயத்தைக் காட்டிலும் அதிகமான மானக்கேடான விஷயமாகும். பார்ப்பனரல்லாதார் நன்மையையோ ஜஸ்டிஸ் கட்சியின் (தனிப்பட்ட நபர்களின் நன்மைகள் தவிர) பொது நன்மையையோ கருதிப் பார்ப்போமானால் மேல் கண்ட இரண்டு பார்ப்பனர்களிலும் திரு. சர். சி. பி. அய்யரே பெரிய ஆபத்தும் சரியான எதிர்ப்புமானவர். எப்படியென்றால் முன்னவர் வாயில் சத்தம் போடுகின்றவர் அவரால் ஒன்றும் பிரமாதமான ஆபத்து வந்து விடாது. ஏதோ சில பணக்காரர்கள் பட்டை நாமத்தையும் விபூதிப் பூச்சையும் பூசிக்கொண்டு பார்ப்பனர்கள் பின்னால் சாமி சாமி என்று கும்பிடவும் ஏழைகளைப் பார்த்தால் சீறி விழவும் முடியும். அன்றியும் வெளிநாட்டு மக்கள் நம்மை இழிவாய் நினைப்பார்கள். மற்றபடி பின்னவரோ என்றால் அவர் காரியத்தில் கழுத்தை அறுப்பவர். திரு. சர். சி. பி. அய்யர் சென்னை அரசாங்கத்தில் அதிகாரத்தில் இருக்குமட்டும் சென்னை அரசாங்கத்தில் உத்தியோகம் ஒப்புக் கொள்ள மாட்டோம் என்று கோயமுத்தூர் மகாநாட்டில் சொன்னோம். அன்றியும் அவர்களாலேயே ஜஸ்டிஸ் கட்சியார்கள் உத்தியோகம் பதவி அதிகாரம் ஆகியவைகள் இழந்து பரிதவிக்க நேர்ந்தார்களென்றும் ஜஸ்டிஸ் கட்சிக்கு அவர் செய்த கொடுமையையும் துரோகத்தையும் வண்டி வண்டியாய் எடுத்துச் சொன்னதோடு அவர் நாணையத்தைப் பற்றியும் குற்றம் கூறி ஆகாயத்திற்கும் பூமிக்குமாக பிரசாரம்



செய்தோம். அப்படிப்பட்ட ஜஸ்டிஸ் கட்சியார் இப்போது அவரை (சர். சி. பி. யை) இந்தியா சட்டசபைக்கு கஷ்டமின்றி சற்று ஏறக்குறைய போட்டியின்றி அனுப்பப்படுகிறாரென்றால் பொது ஜனங்கள் என்ன நினைப்பார்கள்? எனவே இதற்கு அனுகூல மாயிருக்கும் கட்சிப் பிரமுகர்கள் சிலரின் நாணையத்தைப் பற்றி என்ன சொல்வது என்பது நமக்கே விளங்கவில்லை. அதிலும் சர். சி. பி. அவர்கள் இந்திய சட்டசபைக்கு தான் போவதற்காக சொல்லும் காரணம் என்ன வென்றால் ரவுண்டேபிள் கான்பரன்சுக்கும் புதிய சீர்திருத்தத்தில் விதிகள் செய்வதற்கும் தனக்கு சௌகரியம் இருக்குமென்று கருதியே இப்போது தான் ஆசைப்படுவதாக சொல்லி கேட்டுக் கொண்டாராம். அப்படியானால் இந்த சமயத்தில் அவர் அங்கு போக நாம் விடலாமா? என்று யோசித்தால் கடுகளவு சுயமரியாதை இருந்தாலும் அவர் அங்கு போகாமல் இருப்பதற்கு தன்னால் கூடியவரை முயற்சி செய்வதே உண்மையான பார்ப்பனரல்லாதாருக்கோ ஜஸ்டிஸ் கட்சியாருக்கோ கடனாகும். அப்படிக்கு இல்லாமல் அவரைச் சுலபமாய்ப் போக விடுவது என்பது நினைக்க நினைக்க பதறக்கூடிய காரியமாய் இருக்கின்றது.

தவிர சென்னை நகரத்தில் காலியாயிருக்கும் ஒரு சென்னை சட்டசபை ஸ்தானத்திற்கு ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் ஒருவரும் நிற்காமல் அதையும் ஒரு வருணாசிரமக்காரராகிய திரு. சாமி வெங்கிடாசலம் செட்டியாருக்கு போட்டியின்றி விட்டு விட்டதாகத் தெரிகின்றது. இதுவும் ஜஸ்டிஸ் கட்சிக்கு பெரிய அவமானமும் அதன் பலக்குறைவைக் காட்டக் கூடிய அறிகுறியும் ஆகும் என்றே சொல்லுவோம். ஜஸ்டிஸ் கட்சி உண்மை வீரர் எனத்தகும் திரு. சுந்திரராவ் நாயுடு அவர்கள் அந்த ஸ்தானத்திற்கு நிற்பதாக தெரிவித்து விட்டு கடைசியாக வருணாசிரமத்திற்கு போட்டியின்றி விடுவதென்றால் இதிலும் எந்தத் தலைவர் புகுந்து என்ன புரட்டுப் பண்ணினார்களோ என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறதும் தவிர இது மிகவும் வருந்தக்கூடிய காரியமாகும்.

இவைகள் தவிர சென்னை நகரத் தொகுதியில் இந்திய சட்டசபைக்கு காலியான ஒரு ஸ்தானத்திற்கு ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் இரண்டு கனவான்கள் நிற்கின்றார்கள். ஒன்று பி. டி. குமாரசாமி செட்டியார், இரண்டு திரு. சிவப் பிரகாச முதலியார் ஆவார்கள். இதில் ஏன் இந்தப் பிரமுகர்கள் போட்டிப் போடுகின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. ராஜாங்க சபைக்கு ஒரு பார்ப்பனர் போட்டி இன்றிப்போக பைசல் செய்த தலைவர்களுக்கு இதை போட்டியில்லாமல் செய்யத்தக்க யோக்கியதை இல்லையா என்று கேட்கின்றோம். ஆகக் கூடி இந்தப் போட்டி சுயநலப் போட்டியே தவிர இதில் சிறிதாவது பொதுநலப் போட்டி இருப்பதற்கு இடமிருப்பதாய்த் தெரியவில்லை. ஏனெனில் திருவாளர்கள் டி. ஆர். ராமச்சந்திர அய்யரையும் சாமி வெங்கிடாசலம் செட்டியாரையும் போட்டி அன்றியில் விட்டவர்கள் இதில் போட்டிபோடுவது பொது நலத்தை உத்தேசித்ததாய் இருக்க முடியுமா என்று



RangaRakes tamilnavarasam.com

கேட்கின்றோம். அந்தப்படி இதில் இந்திய சட்டசபையில் பொது நலப் போட்டிக்கு கடுகளவாவது இருப்பதாக யாராவது காரணம் சொல்ல வரக் கூடுமானால் அப்போது சென்னை சட்டசபையும் இராஜாங்க சட்டசபையும் மனுதர்மத்திற்கும் வருணாச்சிரம தர்மத்திற்கும் போட்டி இல்லாமல் விட்டதில் கண்டிப்பாய் சுயநலத்தைத் தவிர வேறு ஒன்றுமே இருக்க முடியாது என்று தான் சொல்லித் தீர வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட கனவான்களாலேயே ஜஸ்டிஸ் கட்சியானது ஜாண் உயரவும் முழம் தாழவுமாய் கஷ்டப்பட்டுக் கொண்டு வருகின்றது. இனியும் அதே நிலைமை நிலைத்திருக்கப் பாடு படுவது சென்னையில் உள்ள சிலருக்கு ஏதாவது பலன் விளைவிக்கக் கூடியதாயிருந்தாலும் சென்னை மாகாணத்தில் சென்னைக்கு வெளியில் சிறப்பாக தமிழ் நாட்டில் அது பொது ஜனங்களுக்கு பெருத்த ஆபத்தையும் அவமானத்தையும் கொடுக்கக் கூடியதாகவே முடிவதாகும் என்று மிகுதியும் வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 16.02.1930**



# சுயமரியாதை மாகாண மகாநாடு

சுயமரியாதை மாகாண மகாநாடு முதல் முதலாக சென்ற வருஷம் செங்கல்பட்டில் கூடியதும் அதை அடுத்த வருஷத்திற்கு ஈரோட்டிற்கு அழைக்கப்பட்டதும் யாவரும் அறிந்த விஷயமாகும்.

சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒன்று தோன்றி 4, 5 வருஷ கால மானாலும் அது ஒரு விதமாக அதாவது சாதகமாகவோ அன்றி பாதக மாகவோ எப்படியோ ஒரு விதத்தில் பொது மக்களின் கவனத்தை இழுத்து எங்கு பார்த்தாலும் இவ்வியக்கத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் படியான நிலைமையை பெற்றுவிட்டது.

மற்றும் இவ்வியக்கம் வேகமானது. இன்றையதினம் அரசியல் விஷயங்களிலும் மத விஷயங்களிலும் சமூக விஷயங்களிலும் புகுந்து அவைகளையெல்லாம் சற்று ஆட்டி விட்டதோடு இதன் பேரால் பிழைத்து வந்தவர்களின் பிழைப்பில் மண் போடும்படியான நிலைமை ஏற்பட்டு இருப்பதை யாரும் மறுக்க முடியாது. இவைகளுக்கு ருஜுவு வேண்டுமானால் நமது எதிரிகளின் வாக்கு மூலங்களிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். அதாவது சட்ட சபைகளில் திரு. முத்துரங்க முதலியார் போன்றவர்கள் மூலமாய் சுயமரியாதை இயக்க விஷயமாய் கேட்கும் கேள்விகளாலும், வெளியில் திருவாளர் சத்தியமூர்த்தி, பி.வரதராஜுலு போன்றவர்கள் தேசியத்திற்கு ஆபத்து என்னும் பேரால் பிரசவ வேதனைப்படுவதாலும், இந்து கிறிஸ்தவ மகமதிய முதலிய மதப் புரோகிதர்கள் இதைப் பற்றி ஆவலாதி கூறுவதாலும், சைவ சமாஜக்காரரும், வைஷ்ணவ மண்டலக்காரர்களும் கூடிக் கொண்டு மூலை மூலையாய் ஒப்பாரி வைத்து அழுவதாலும், பண்டிதர்கள் சாஸ்திரிகள் தங்களுக்கு மரியாதை இல்லாமல் பரிதபிக்கின்றதாலும் பல மடாதிபதிகள் இதை எதிர்க்க பணம் கொடுத்து கூலிகளைப் பிடித்து உளரச் சொல்லு வதாலும், சில அதாவது சிருங்கேரி போன்ற பெரிய மடாதிபதிகள் நம்மையே ராஜி பேச “ஸ்ரீ முகத்தின்” மூலம் கூப்பிடுவதாலும் மற்றும் சனா தன மகாநாடுகளும், ஆஸ்திகர்கள் மகாநாடுகளும் தினமும் நடப்பதாலும், கோவில் அதிகாரிகள் தங்கள் கோவில்களுக்கு ஆபத்து என்றும் வரும்படி குறைந்து விட்டதென்றும் “கோவிலுக்குள் தாழ்ந்த வகுப்பார் பிரவேசித்து



RangaRakes tamilnavarasam.com

விடுவார்கள்" என்று சொல்லி நாம் போகின்ற ஊர்களில் எல்லாம் போலீஸ் உதவியுடன் கதவுகளைச் சாற்றிக் கொண்டிருப்பதாலும் ஒருவாறு இதன் வேகத்தை உணரலாம். மற்றும் ஆங்காங்கு நடைபெறும் சடங்கு புரோகிதம் பகிஷ்காரத்தாலும், கலப்பு மணம் விதவை மணம் ஆகியவைகளின் மலிவாலும் கூட உணரலாம். அன்றியும் இவ்வியக்கம் நமது நாடு மாத்திரமல்லாமல், வெளிநாடுகளிலும் கானலில் நெருப்பு பிடிப்பது போல் படர்ந்து கொண்டேயும் போகின்றது.

உதாரணமாக நாம் இவ்வியக்க விஷயமாய் மலாய் நாட்டுக்குப் போகும் போது தமிழ்நாடு பத்திரிகை செய்த விஷமம் யாவருக்கும் தெரிந்திருக்கும். மலாய் நாட்டிலுள்ள இவரது கூலிகளையும் மருந்து விற்கும் ஏஜண்டுகளையும் ஏவிவிட்டு விஷமம் செய்ததும் தெரிந்திருக்கலாம். நாம் மலாய் நாடு போகின்றோம் என்று தெரிந்ததும் நம்மை "தடுத்து விட்டார்கள்" "நாயக்கர் கோஷ்டி பகிஷ்காரம்" என்றும் "நாயக்கருக்குத்தடை உத்தரவு" என்றும் அது பலவிதமாய் எழுதி வந்ததும் யாவரும் அறிந்ததே. ஆனால் நாம் மலாய் நாடு போய் வந்த பிறகு அதே தமிழ்நாடு பத்திரிகையும் அதன் பத்திராதிபரான திரு. வரதராஜுலுவும், அதன் கூலிகளும் பொறாமைப்படும் அளவையும் தன்னை அடியோடு ஒழிக்க முயற்சித்த ஆட்களின் காலுக்குள் புகுந்து கூலி கொடுத்துக் கூட்டிவைத்து அழுகும் ஒப்பாரி அழுகையும் ஆத்திரப்படும் மாதிரியும் அவர் பத்திரிகையில் பார்த்தாலே குடியேற்ற நாடுகளிலும் இவ்வியக்கத்தில் மக்களுக்குள்ள ஆர்வம் இன்னதென விளங்கும்.

இவற்றிற்குக் காரணம் என்னவென்றால் எவ்வளவு எதிர்ப்பு ஏற்பட்ட காலத்தும், எவ்வளவு சூழ்ச்சி ஏற்பட்ட காலத்தும் அவைகளையெல்லாம் லட்சியம் செய்யாமல் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆரம்பித்த கொள்கைகளிலிருந்து ஒரு சிறிதும் பின் வாங்காமல் உறுதியாய் நின்றதோடு மேலும் மேலும் முன்போகவே முயர்ச்சித்ததாலுமே தான் எவ்வித குறைவோ தடையோ இல்லாமல் இவ்வியக்கம் முன்னேறிக் கொண்டுபோகின்றது.

நிற்க, எப்படி எல்லா இயக்கங்களையும் ஒரு கூட்டம் தங்கள் சுய நலத்துக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் சோம்பேரி வாழ்வுக்கும் உபயோகப் படுத்தி வாழ்வது போலவே இவ்வியக்கத்தையும் சிலர் தங்கள் வாழ்வுக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் உபயோகப்படுத்திக் கொண்ட முறையில் ஏதாவது சிறு சிறு தடையோ பொது ஜனங்களுக்கு சிறு அதிருப்தியோ உண்டாகும் படியான காரியங்கள் சில சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருக்கக் கூடும் என்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை. உதாரணமாக ஈரோட்டில் நடந்த இரண்டொரு காரியங்களைச் சொல்லலாம். ஆனாலும், அவைகளைக் கண்டு நாம் பயப்படாமலும் சளைக்காமலும் அதற்குத் தகுந்த பரிகாரங்களைச் செய்துவிட்டு மேல் போக வேண்டியது அறிவுடைமையே ஒழிய, அதற்காக இயக்கத்தை குற்றம் சொல்லிவிடக் கூடாது. இப்போதும் கூட வயிற்றுப் பிழைப்புக்காக சுயமரியாதை இயக்கத்தின் பேரை வைத்துக் கொண்டு திரிபவர்களில் சிலர் திருடுவதையும், நம்பிக்கை துரோகம் செய்வதையும், பொய் சொல்லி மக்களை ஏமாற்றுவதையும், சிறு பிள்ளைகளை வஞ்சிப்பதையும், சமயத்திற்குத் தகுந்தபடி வேஷம் போட்டு பேசி மக்களை ஏமாற்றிப் பொருள் பறிப்பதையும், துர்செய்கைகளையும் செய்துவிட்டு சுயமரியாதை என்று சொல்லிக் கொண்டு திரிந்து வயிறு வளர்ப்பதையும் நாம் பிரத்தியட்சத்தில் பார்க்கின்றோம். இதற்காகவும் நாம் இயக்கத்தை குற்றம் சொல்லவோ நிறுத்தி விடவோ முயற்சிப்பதும் மடமையேயாகும். வேண்டுமானால் எதிர்காலத்தில் இவ்விதமான காரியங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியதை முன்னிட்டு சற்று ஜாக்கிரதையாயும் கண்டிப்பாகவும் இருக்க வேண்டும் என்பதை நாம் மனப்பூர்த்தியாய் ஒப்புக் கொள்ளுகின்றோம். இவ்வியக்கம் ஏற்பட்டு இன்றைக்கு 4, 5 வருஷகாலம் ஆகியிருந்தாலும் இதன் பேரால் நம்மால் வெளிப்படுத்தப்படும் பத்திரிகைகளுக்கும் கொள்கைகளுக்கும் நாமே பொறுப்பாளியாயிருந்து வந்ததோடு பொது ஜனங்களிடமிருந்தோ அல்லது வேறு நண்பர்களிடமிருந்தோ இன்றைய வரையில் ஒரு சின்னக் காசாவது இவைகளுக்காக நாம் வாங்கவில்லை என்பதையும் இந்த சமயத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். இவ்விஷயத்தில் நாம் வேண்டுமென்றே ஜாக்கிரதையாய் இருந்து வந்திருக்கிறோம். ஏனெனில் பணம் கொடுத்த காரணத்தாலோ அல்லது வேறுவித உதவி செய்த காரணத்தாலோ நமது அபிப்பிராயத்தின் மீது அதிகாரம் செலுத்த ஏற்பட்டு விட்டால் அது நமது இயக்கத்திற்கு தொல்லை விளைவிக்கக் கூடியதாகி விடக் கூடுமென்று பயந்தே, நமது அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்பவர்கள் எல்லாம் நமக்கு வேண்டியவர்கள் என்றும், ஏற்றுக் கொள்ளாதவர்களானால் அவர்களிடத்தில் நமக்கு வேலையில்லை என்றும் மாத்திரம் முடிவு செய்து கொண்டு நடந்து வந்திருக்கின்றோம். இந்த முறையில் இன்றையதினம் வேண்டாதவர்களாயிருப்பவர்கள் நாளை வேண்டியவர்களாகலாம்; வேண்டியவர்களாயிருப்பவர்கள் நாளை வேண்டாதவர்களுமாகலாம். ஆதலால் அப்படிப்பட்ட சமயங்களில் நாமும் மற்ற யாவரும் மனவருத்தப்படாமல் இருப்பதற்கு எவ்வித உதவியும் யாரிடமிருந்தும் பெறாமலிருந்தால்தான் முடியும். அன்றியும் இந்தப்படி தைரியமாயும் உறுதியாயும் இருக்க வசதி இருந்தால்தான் நமது அபிப்பிராயத்தை நிலைநிறுத்தப் பாடுபடமுடியுமே ஒழிய தாட்சண்ணியம் இருந்தால் முடியவே முடியாது.

இவ்வியக்கத்தை ஆரம்பிக்கும் போதும் கூட நாம் "என்னையே எண்ணி இப்பெரும் பழி ஏற்றேன்" என்று ஒரு பாட்டில் சொல்லப்படுவது போல் நம்மையே நாம் பொருப்பாளியாகவும் உதவியாளனாகவும் எண்ணியும் நம்பியுமே தான் இக்காரியத்தில் இறங்கினோமே யொழிய நமக்கு "தொண்டர்கள் உண்டு, தலைவர்கள் உண்டு, சினேகிதர்கள் உண்டு பண உதவி செய்பவர்கள் உண்டு" என்று நினைத்து அவர்கள் உதவி கிடைக்கும் என்று நம்பிக்கை வைத்து இவ்வியக்கத்தில் நாம் இறங்கவில்லை. ஆதலால்


RangaRakes
tamilnavarasam.com

நமது கொள்கைகளை உத்தேசித்து வருகின்றவர்களை வரவேற்க வேண்டியதும் போகிறவர்களைப் போகச் சொல்ல வேண்டியதும், ஒழுக்கமற்றவர்கள் என்று கருதப்பட்டவர்கள் தள்ளப்பட வேண்டியதும் இவ்வியக்கத்தின் கடமையாகிவிட்டது. இவ்விஷயத்தில் நமக்கு உள்ள உறுதிதான் இவ்வியக்கத்திற்குச் சொத்தும் அஸ்திவாரமுமேயொழிய வேறொன்றுமில்லை. இது சமயத்தில் இதை ஏன் எழுதவேண்டி வந்ததென்றால் சில தலைவர்களும் சில தொண்டர்களும் எதிரிகளாயும் எதிரிகளின் ஆள்களாயும் இருக்கின்ற இந்த சமயத்தில் மகாநாடு நடத்துவது சற்று கஷ்டமாயிருக்காதா? என்று சில நண்பர்கள் கவலைப்படுவதால் இதை எழுத வேண்டி வந்ததே தவிர வேறில்லை.

செங்கல்பட்டில் சிலர் ஏற்றுக் கொண்டபடி, மகாநாடு இவ்வருஷம் மார்ச்சு அல்லது ஏப்ரலில் நடத்த வேண்டியது அவசியமானது. அதற்கு இது வரை ரூ. 3000 போல் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. இனியும் இரண்டாயிரம் ரூபாய் ஒன்று அல்லது இரண்டு வாரத்தில் கிடைத்து விடலாம். இது ஆனதும் மகாநாட்டின் வேலை துவக்கமாகிவிடும். பிறகு மேல் கொண்டு கிடைப்பதையும் வெளி வசூல்களையும் உத்தேசித்தே மகாநாட்டை எத்தனை நாட்களுக்கு நடத்துவது என்பது பற்றி யோசிக்கப்படும். ஏனெனில் சென்ற மகாநாடு 10-ஆயிர ரூ. வரை செலவு செய்து இரண்டு நாளில் முடித்து விட்டதானது பலருக்கு ஏமாற்றமாயும் பொசுக்கென்றும் போயிருக்கும். ஆதலால் ஈரோட்டில் ஒரு வாரமாவது மகாநாடு நடத்த வேண்டும் என்று கருதுகின்றோம். ஏனெனில் ஒவ்வொரு தினமும் இயக்க சம்மந்தமான வேறு மகாநாடுகளும், தனித்தனி உபன்னியாசங்களும், கண்காட்சிகளும், நாடகங்களுமாக நடத்திக் காட்ட வேண்டுமென்று சில நண்பர்கள் ஆசைப்படுகின்றார்கள். அதுபோலவே சில வடநாட்டுப் பெரியார்களை இங்கு வரவழைக்கவும் உத்தேசித்திருக்கின்றோம். அநேகமாய் இம்மாதக் கடைசி வாரத்தில் இங்கு சுயமரியாதை மகாநாடு ஆபீசு ஒன்று திறக்கப்படும். திரு ராமநாதன் அவர்கள் அதன் முக்கிய நிர்வாகஸ்தராய் இருப்பார். அது சம்பந்தமான கடிதப் போக்குவரத்துகள் அவ்வாபீசுக்கே வைத்துக் கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்வதோடு மகாநாட்டில் வேலை செய்ய இஷ்டமுள்ள கட்டுப்பாட்டில் நிலை உள்ளவர்களும், உண்மையிலும் ஒழுக்கத்திலும் லட்சியமுள்ளவர்களுமான தொண்டர்கள் கடித மூலமாய் இப்போதே தெரிவித்துக் கொள்ளக் கோருகிறோம். அநேகமாய் மார்ச்சு முதல் வாரத்தில் தொண்டர்களுக்கு அழைப்பு வந்து விடும். உடனே வரத் தயாராய் இருப்பவர்களே எழுதவும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 16.02.1930**



# "குடி அரசு"

## சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு

"குடி அரசு" பத்திரிகை சந்தாதாரர்களால் தங்களுக்குப் பத்திரிகை சரியாய் வருவதில்லை என்பதாக தினம் ஏராளமான ஆவலாதிகள் வந்து கொண்டிருக்கின்றன. அவைகளில் பல பத்திரிகையின் மீதுள்ள வெறியினாலும் (சில பணத்தை உத்தேசித்ததாகவும் இருக்கலாம்) பலவாராக பொருமை இழந்து எழுதப்பட்டவைகளாக காணப்படுகின்றன. பத்திரிகை சென்னைக்கு மாற்றப்பட்டதாலும் சென்னையில் ஏற்பட்ட பலவிதத் தொல்லையாலும் நாம் மலாய் நாட்டுக்கு போய் இருந்த காலையில் பத்திரிகை நிருவாகத்தை ஏற்றுக் கொண்டவர்களின் நடத்தையாலும் பத்திரிகைகள் 3 வாரம் சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகின்றோம். ஆனால் நாம் சரியாய் அனுப்பிய காலங்களில் கூட தங்களுக்கு சரியாய் பத்திரிகை கிடைக்கவில்லை என்பதாக வரும் ஆவலாதிகளே அநேகமாய் காணப்படுவதால் நாம் அவற்றிற்கு ஒரே பதில் தான் சொல்லக்கூடிய நிலையில் இருக்கின்றதற்கு வருந்துகின்றோம். அதாவது, நாம் வாரம் 9000 காப்பிகள் அச்சடித்ததற்கு காகித செலவும், அச்சடித்தவைகளை தபாலில் அனுப்பியதற்கு ஸ்டாம்பு செலவும், ரயிலில் பார்சலாய் 47 பார்சல்கள் அனுப்பியதற்கு பார்சல் செலவும், இரசீதுகளும் நமது சந்தாதாரர்களுக்கு மெய்ப்பிக்க தயாராயிருக்கிறோம். மற்றபடி அது சந்தாதாரர்களுக்குப் போய்ச் சேராததற்கு நம்மால் காரணம் சொல்லி முடியாது. வருஷ சந்தா 3ரூ. க்கு பதிலாக 4 ரூபாயாகவும் வெளிநாட்டுக்காரர்கள் 4ரூபாயுக்குப் பதிலாக 5 ரூபாயாகவும் அனுப்பினால் அப்பேர்ப்பட்ட சந்தாதாரர்களுக்கு பத்திரிகையை நாம் தபாலாபீசில் போட்டதற்காக தபாலாபீசில் ஒரு அத்தாட்சி வாங்கி ஒப்புவிக்க ஏற்பாடு செய்யப்படும். இதைத் தவிர மற்றபடி நம்மால் வேறு ஒன்றும் செய்யமுடியாது என்பதை வணக்கமாய் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஏனெனில் குடி அரசு ஆபீசுக்கு வாரம் ஒன்றுக்கு சராசரி 150 ரூபாய் வீதம் மாதம் 600 ரூபாய்க்கு மேற்பட்டு ஸ்டாம்பு விற்கும் தபால் இலாகாவும் வாரம் 47 பார்சல் வீதம் குடி அரசுக்கு பார்சல் சார்ஜ் வாங்கும் ரயில் இலாக்காவும் குடி அரசு விஷயத்தில் நடந்து கொள்ளும் மாதிரியைப் பார்த்



RangaRakes tamilnavarasam.com

தால் நாம் இவ்வளவு பொருப்பு தான் ஏற்றுக் கொள்ள முடியும் என்று கண்டிப் பாய் சொல்ல வேண்டி இருக்கின்றது. ஏனெனில் நமது பத்திரிகையின் தொண்டு அப்படிப்பட்டதாய் ஏற்பட்டுவிட்டது. ஆகையால் இந்த நிபந்த னைக்குக் கட்டுப்பட்டவர்களே சந்தாதாரர்களாய்ச் சேர்ந்தால் போதுமானது.

**குடி அரசு - அறிவிப்பு - 16.02.1930**



# ஓர் வேண்டுகோள்

## 50 வருஷத்திற்கு முன் சுயமரியாதை இயக்கம்

சுமார் 40, 50 வருஷத்திற்கு முன் பதிப்பித்ததும், **இந்து மத ஆச்சார ஆபாச தரிசினி** என்ற பெயர் கொண்டதும், 762 பாடல்களை உடையதும். கிரௌவுன் ஒண்ணுக்கு எட்டு சைசில் 120 பக்கங்களை உடையதுமான ஒரு தமிழ் புத்தகம் எங்கேயாவதும், யாரிடத்திலாவதும் கிடைக்குமானால் தயவு செய்து வாங்கி உடனே நமக்கு அனுப்பிக்கொடுக்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஏனெனில் அப்புத்தகம் ஒன்று நமக்கு ஒரு மாதத்திற்கு முன் ஒரு நண்பரால் அனுப்பப்பட்டிருக்கின்றது. ஆனால் அது மிக்க பழயதாகவும் முதலிலேயே சில பக்கங்கள் இல்லாமலும் சில பக்கங்கள் கிழிந்தும் சரிவரத் தெரியாமலும் இருப்பதால் கிழியாத புத்தகம் ஒன்று வேண்டியிருக்கிறது. அப்புத்தகம் நமது இயக்கக் கொள்கைகளையே முக்கியமாய் வைத்துப் பாடின பாட்டுகள் அனேகம் அதில் இருக்கின்றன.

**ஈ.வெ.ரா.**

**குடி அரசு - வேண்டுகோள் - 16.02.1930**



RangaRakes tamilnavarasam.com

# உதிர்ந்த மலர்கள்

புராணங்களுக்கு மதிப்பு ஏற்பட்டதற்கு காரணம் என்னவென்றால் அவைகள் எவ்வளவு ஆபாசமாகவும் காட்டு மிராண்டித்தனமாகவும் எழுதி இருந்தாலும் முதலிலும் கடைசியிலும் "இப்புராணத்தைப் படித்தோருக்கு மோட்சம், படிக்க வைத்தோருக்கு மோட்சம், கேட்டோருக்கு மோட்சம், கேட்டவரைக் கண்டோருக்கு மோட்சம், கண்டவரைக் கண்டவரைக் கண்டால் மோட்சம் கிடைப்பதுடன் வாழ்கையில் பணமும் பொருளும் சேரு மென்றும் செத்த பிறகு இராஜாவாய் பிரபுவாய் மறு ஜன்மம் எடுக்கப்படும்" என்றும் எழுதி வைத்ததே காரணமாகும்.

* * *

எவனொருவன் கடவுளிடத்திலும் அதைப் பற்றிச் சொல்லும் மதக் கொள்கைகளிடத்திலும் பூரண நம்பிக்கை வைத்து எல்லாக் காரியங்களும் அவைகளுடைய செயல்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றானோ அவன் பூரண சுயேச்சை என்னும் பதம் வாயினால் உச்சரிக்கக் கூட யோக்கி யதை அற்றவனாவான்.

* * *

புராணங்களின் ஆபாசங்களை நன்றாய் உணர்ந்தவர்கள் எல்லாம் அவற்றை வெளியில் சொல்லுவதற்கு பயப்பட்டுக் கொண்டிருந்ததற்குக் காரணம் என்ன வென்றால் பார்ப்பனர்கள் தனக்கு நாஸ்திகன் என்று பட்டம் கட்டி ஒழித்துவிடுவார்கள் என்கின்ற பயம்தான்.

* * *

ஜாதி மத வித்தியாசங்களும் அவற்றின் உயர்வு தாழ்வு நிலைகளும் சிறிதும் அழியாமல் அப்படியே இருக்க வேண்டும் என்று சொல்லுகின்ற வர்கள் ஜாதிகளின் பேராலும் மதங்களின் பேராலும் கேட்கப்படும் விகிதாச்சார உரிமைகளை ஏன் ஆக்ஷேபிக்கின்றார்கள் என்றும் அப்படி ஆட்சேபிப்பதில் ஏதாவது நல்ல எண்ணமோ நாணயமோ நியாயமோ இருக்க முடியுமா என்றும் தான் கேட்கின்றேன்.

**– ஈ.வெ.ரா.**

**குடி அரசு – துணுக்குகள் – 16.02.1930**



# "தமிழ் நாடு"

"தமிழ் நாடு" பத்திரிகையில் ஆலயப் பிரவேசம் என்ற தலைப்பில் வரும் விஷயங்களும் திரு. தண்டபாணி பிள்ளையின் பேரால் வரும் சுயமரியாதைச் சரித்திரம் என்னும் விஷயங்களுக்கும், திரு. கிருத்திவாசய்யர் நாம் குடி அரசில் ஆலயப் பிரவேசம் என்னும் தலைப்பின் கீழ் எழுதின வைகளில், தான் ரயில் சார்ஜ் வாங்கினதை மாத்திரம் மறுத்திருக்கும் விஷயத் திற்கும், பொதுவாக இப்படி ஒரு கூட்டம் ஏன் இந்த மாதிரி வேலையில் தலைப்பட்டது என்பதற்கும், திரு. வரதராஜுலு மறுபடியும் தலையெடுப் பதற்கு எந்தவிதமான தந்திரத்தின் மூலம் இக்கூட்டத்தை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கின்றார் மற்றும் பலரும் எப்படி ஒன்றானார்கள் என்பதையும் தக்க காரணங்களுடன் ரிக்கார்டுகளுடன் பின்னால் தெரிவிக்கிறோம். ஏனெனில் தொடர்ச்சிகளும் மற்றும் திரைமறைவில் இருக்கும் இரண்டொரு வர்களுடைய மறுப்புகளோ எதிர்ப்புகளோ கண்டனங்களோ கொண்ட கட்டுரைகளும் முடிவு பெற்று வெளியாகி விட்டால் பிறகு ஒரே தடவையில் எழுதிவிடலாமென்பதே நமது கருத்தாகும். ஆனால் ஒரு விஷயம் இப் போதே எழுத வேண்டியது அவசரமென தோன்றுகின்றது. அதாவது திரு. கிரித்திவாசய்யர் ரயில் சார்ஜுக்கு பணம் நம்மிடம் வாங்கவில்லையென்று எழுதியிருப்பதில் அவர் அந்தப்படி எழுதுவதற்கு நாம் ஆச்சரியப்பட வில்லையானாலும் பொதுஜனங்கள் உண்மையை அறியவேண்டி மறுபடியும் ஒரு தடவை நாம் "கிருத்திவாசய்யருக்கு ரயில் சார்ஜ் கொடுத்தது உண்டு" என்று எழுதுகின்றோம். அதுவும் நாம் சென்னையில் குடி அரசு ஆபீசின் முன் கொட்டியிருந்த மணல் மேட்டில் இருக்கும்போது இந்த கேசு விசாரணைக்கு மிகச் சமீபத்த முந்திய நாள் கேசு வாய்தாவைச் சொல்லி ஈரோட்டுக்கு போக வேண்டுமென்று கேட்டு நாம் 5 ரூ. நோட்டாக ஒன்று எடுத்துக் கொடுத்தோம் என்று உறுதியாகச் சொல்லுகின்றோம். இந்த தடவை யும் அவர் மறுப்பாரானால் அது சமயம் திரு. கிருத்திவாசய்யருடன் கூட வந்த மற்றொரு அய்யருடையவும் அவர் கேட்டு வாங்கிக் கொண்டு போகும்போது நம்முடன் கூட இருந்த அய்யர் அல்லாதவர்களுடையவும் பெயர்களையும் வெளிப்படுத்துகின்றோம். அப்பொழுதும் இல்லையென்று சொல்லுவாரா னால் பிறகு பொது ஜனங்கள் எதை வேண்டுமானாலும் நம்ப உரிமையுடை யவர்களாவார்கள்.



RangaRakes tamilnavarasam.com

தவிர இது சம்பந்தமாக சில நிரூபங்களும் சில கண்டனக் கூட்ட நடவடிக்கைகளும் பிரசுரிக்க சற்று தாமதமேற்படுவதற்கு ஆக நேயர்கள் பொறுத்துக் கொள்ளவேண்டுகின்றோம். சிறப்பாக திருச்சி, மதுரை நிரூபர் களுக்கு இவ்விஷயத்தில் நன்றி செலுத்துகிறோமாயினும் அவர்களின் ஆத்திரத்தின் உணர்ச்சியில் காட்டியிருக்கும் மிதமிஞ்சிய வேகத்தை ஆதரிக்க முடியாததற்கு வருந்துகின்றோம்.

**குடி அரசு - செய்தி விளக்கக் குறிப்பு - 16.02.1930**



# பூரண சுயேச்சைப் புரட்டு

## II

1929 - ம் வருஷம் காங்கிரசானது "இந்திய தேசியப் போராட்டம்" என்பதின் இரகசியத்தை வெளியாக்கி விட்டது ஒரு புறமிருக்க இப்போது ஏதோ சத்தியாக்கிரகப் போர் சமீபத்தில் தொடுக்கப் போவதாக பெரிய ஆர்ப் பாட்டங்கள் விளம்பரப்படுத்தப்படுகின்றன. ஆனால் இவ்வார்ப்பாட் டங்கள் காங்கிரசுக்கோ காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கோ ஒரு சிறிதும் சம்மந்த மில்லாமல் திரு காந்தி அண் கோ கம்பெனியாருக்கு கன்ட்றாக்ட்டு விடப் பட்டு விட்டதாய்த் தெரிகின்றது. இதன் கருத்து என்ன வென்றால் திரு. காந்தி யால் ஏதாவது வெற்றி (ஏற்படப்போவதில்லை உறுதி உறுதி) ஏற்படு மானால் உடனே அதை தேசிய வெற்றி என்று கொட்டை எழுத்தில் போட்டு பெருமை பாராட்டிக் கொள்ளவும் தோல்வி அடைந்தால் "முன்னமேயே தெரிந்து தான் அதன் பொருப்பை காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளாமல் திரு. காந்தி யின் தலையில் போட்டு விட்டது" என்று சொல்லவும் இடம் வைத்துக் கொள்ள செய்த காரியமே யாகும்.

அன்றியும் மேற்படி சத்தியாக்கிரகத்தையோ சட்டம் மீறுவதையோ சர்க்கார் மதித்து ஏதாவது நடவடிக்கை எடுத்து எந்த தனிப்பட்ட நபரையாவது அல்லது எந்த ஸ்தாபனத்தையாவது கைது செய்ய ஆரம்பித்தால் "காங்கிரசுக் கும் சத்தியாக்கிரக சட்ட மறுப்புக்கும் யாதொரு சம்மந்தமில்லை" என்று சொல்லி தப்பித்துக் கொள்ள இடம் இருக்கவும் வழி செய்து கொண்ட காரிய மாகும்.

முதலாவது காங்கிரசின் லட்சியம் பூரண சுயேட்சை என்றவுடன் ராஜிநாமா கொடுத்து விட்டு காங்கிரசை விட்டு ஓடின வீரர்களைப் பற்றி நாம் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. அதோடு காங்கிரசில் இருந்து கொண்டே "காங்கிரஸ் கொள்கைக்கு நாங்கள் கட்டுப்படுகின்றோம். ஆனால், அதின் திட்டத்திற்கு நாங்கள் கட்டுப்பட மாட்டோம் என்று சொல்லிக் கொண்டு காங்கிரஸ் வீரர்களாய் இருந்து வந்தவர்களைப் பற்றியும் நாம் இப்போது



RangaRakes tamilnavarasam.com

அதிகமாய் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஏனெனில் இப்படி ஒரு கூட்டம் காங்கிரசில் வெகுநாளாகவே இருந்து வருகின்றது. அதாவது எவ்வித தியாகத்திற்கும் கஷ்டத்திற்கும் தயாராயில்லாமல் பாமர ஜனங்களை ஏமாற்றி வயிர் வளர்ப்பதற்கு காங்கிரசை உபயோகித்துக் கொள்ள வேண்டிய நிர்பந்த முள்ள கூட்டத்திற்கு இதை விட வேறு வழி கிடைப்பது கஷ்டமானதால் இப்படி ஒன்று அதாவது "காங்கிரஸ் சுயராஜ்ய கட்சி" "காங்கிரஸ் தேசீயக் கட்சி" "காங்கிரஸ் சுயேச்சைக்கட்சி" "காங்கிரஸ் ஒத்துழையா கட்சி" என் கின்ற கட்சிகளின் பெயர்களின் நிழலில் இருந்து வந்த பெரும்பான்மை யானவர்களின் யோக்கியதைகளைக் கவனித்தாலே இந்த உண்மை விளங்கி விடும். ஆனால் இப்போது காங்கிரசுக்கு ஆதிக்கத்திலும், நிர்வாகத்திலும் இருந்து வருகின்ற காங்கிரஸ் தலைவர்கள் என்கின்றவர்கள் இந்தமாதிரி தப்பித்துக் கொள்ளப் பார்ப்பது காங்கிரசின் உண்மைத் தோற்றத்தின் பரிதாப நிலையையும் பயங்காளித் தனத்தையுமே காட்டுகின்றதே யல்லாமல் வேறில்லை. அன்றியும் ஒரு சமயம் சத்தியாக்கிரகமோ சட்ட மறுப்போ நடந்து யாராவது ஜெயிலுக்குப் போக நேர்ந்தால் அப்படிப் போனவர்களையும் இந்த காங்கிரஸ் தலைவர்கள் திரு. சி. ஆர். தாஸ் அவர்கள் முன் ஒரு சமயம் கயாவில் சொன்னது போல் "சாப்பாட்டுக்கு வகையற்றவர்களும் வேறு வேலை செய்து பிழைக்க முடியாதவர்களும் தான் வயிற்றுப் பிழைப்பை உத்தேசித்து ஜெயிலுக்கு போனார்கள்" என்று சொல்லுவதற்கும் இடம் வைத்துக் கொள்ளுவார்கள்.

இவ்வளவும் தாண்டி நாட்டில் சத்தியாக்கிரகத்திற்கோ சட்ட மறுப் பிற்கோ ஏதாவது ஒரு செல்வாக்கு (வராது) ஒரு சமயம் வந்து விடுமேயானால் அப்போதும் அதன் பலன் முழுவதையும் தாங்களே அடைவதற்கும் இடம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே பல விதத்திலும் காங்கிரஸ் வெளிப்படையான பித்தலாட்டத்தில் தான் இனி இருக்க முடியும் என்பது வெளியாய் விட்டது.

இந்தியாவில் தேசீயப் போராட்டம் என்கின்ற ஏமாற்றமும் பித்தலாட்ட மும் இனி யாராலும் மறைவாய் செய்ய முடியாது. ஏனெனில் இந்திய ஜனங்கள் ஒருவாறு மூடநம்பிக்கையிலிருந்து கண் மூடித்தனமாய் யாரையும் பின்பற்று வதிலிருந்தும் விடுதலை அடைய ஆரம்பித்து விட்டார்கள். மனித னுடைய லட்சியம் எனப்படும் அர்த்தமும் பலனுமற்ற வார்த்தைகளான மோட்ச மென்பதும் சுயராஜ்ஜியம் என்பதும் ஏமாற்றம் என்கின்ற ஒரே அஸ்தி வாரத்தின் மீது தான் கட்டப் பட்டிருக்கின்றது. மோட்சத்திற்கு இதுவரை அர்த்தம் விளங்காவிட்டாலும் அதன் பேரால் வயிறு வளர்ப்பவர்கள் மக்கள் நம்பி பின்பற்றி அதற்காக எப்படி கஷ்டப்பட்டு நஷ்டமடைந்து வந்தார்களோ அது போலவே தான் சுயராஜியம் தேசீயம் என்பதற்கும் விடுதலை என்பதற் கும் அர்த்தம் விளங்காமலும் பலன் இன்னதென அறியாமலும் அதன் பேரால்





வயிறு வளர்க்கும், வாழும் கூட்டத்தாரை மூடநம்பிக்கையால் கண்மூடித்தன மாய்ப் பின்பற்றி இதுவரை வீண் கஷ்டமும் நஷ்டமும் அடைந்து வந்தார்கள். ஆனால் இப்போது மூடநம்பிக்கையும் கண்மூடித்தனமும் ஒழிய ஆரம்பித்து விட்டதால் இனி அது பலியாது என்பது முடிவான காரியமேயாகும்.

உண்மையாய் அறிவுடன் இருந்து பேசுவோமேயானால் நமது நாட்டில் இந்தமாதிரி தேசீயக் கிளர்ச்சி என்கின்ற ஒரு புரட்டு ஏற்படாமலிருந்து இருக்குமானால் நம்முடைய நாட்டு நிலைமை இவ்வளவு கேவலமாக இருந்தி ருக்கவே முடியாது. தேசீய கிளர்ச்சி புரட்டானது மக்களின் உண்மையான தேச நன்மை சமூக நன்மை ஆகிய விஷயங்களில் உள்ள பகுத்தறிவை பாழ்படுத்திவிட்டது. அதன் காரணமே கேட்ட வரியை கொடுத்து விட்டு கண்ட அதிகாரிகளுக்கு கீழ்ப்பட வேண்டிய மிருகத்தன்மை ஏற்பட்டு விட்டது, இதற்கு உளவாளியாய் இருந்து வந்தது "நமது தேசீயக் கிளர்ச்சி"யே யாகும்.

நல்ல சம்பவமாய் இந்த வருஷம் நமது நாட்டில் ஒருவாறு தேசீயக் கிளர்ச்சி என்னும் காங்கிரஸ் முதலிய ஸ்தாபனங்கள் அடியோடு மறைய இருந்ததானது சிலர் சூட்சியினால் மறுபடியும் கொஞ்ச காலத்திற்குத் தொல்லை இருக்கும்படி ஏற்பட்டுவிட்டது "குடியேற்ற நாட்டு அந்தஸ்தை" ஒப்புக் கொண்டு "வட்ட மேஜை மகாநாட்டுக்கு போவது" என்பதையும் ஒப்புக் கொண்டிருந்தால் அவ்வளவுடன் காங்கிரசு தீர்ந்தது. ஏனெனில் உலகில் உள்ள மற்ற அரசியல் சமூக இயல் ஸ்தாபனங்கள் எல்லாம் மேற்படி இரண்டையும் ஒப்புக் கொள்வதால் காங்கிரஸ் என்ற ஒரு தனி ஸ்தாபனத் திற்கு தனி யோக்கியதை இருக்க அவசியமில்லாமல் போயிருக்கும். அதனா லேயே புதிய வழி கண்டு பிடித்து பூரண சுயேச்சை என்கின்ற புரட்டைக் கொண்டு காங்கிரசை நிலை நிறுத்தக் கருதி இந்த சூட்சி செய்தார்கள். என்றா லும் இனி அது செத்த பாம்பு ஆட்டுவதுபோல தானே ஒழிய நாட்டில் அதை மதிப்பதற்கு சிலர் கூட இல்லை என்பது வெளிப்படை. மற்றபடி சத்தியாக் கிரகமும் சட்ட மீறுதலும் அதற்கு உபகருவியாய் வந்ததற்குக் காரணம் திரு. காந்தி நிலைக்க வேண்டுமானால் அதற்கும் ஏதாவது ஒரு வழி கண்டு பிடிக்க வேண்டியதாய் விட்டது. அதுதான் சட்ட மறுப்பு சத்தியாக்கிரகம் என்பவை கள். ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் இவைகளை சண்டித்தன மென்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் சட்ட மறுப்புக்கு நாடு தயாரில்லை என்றும் சத்தியாக்கிரகத்திற்கு மக்கள் தயாரில்லை யென்றும் ஒப்புக் கொண்டதுடன் ஒரு தடவை செய்து பார்த்துத் தோல்வி அடைந்த தையும் ஒப்புக் கொண்ட பிறகு மறுபடியும் சட்ட மறுப்பு சத்தியாக்கிரகம் என்றால் அதில் ஏதாவது பொருளோ நாணயமோ இருக்க முடியுமா? இவை எதற்காக செய்வது என்பதாவது சரிவர முடிவு செய்யப்பட்டதா? ஒன்று மில்லாமல் இம்மாதிரி கிளர்ச்சி செய்வதின் கருத்து ஒன்று சண்டித்தனமாக

RangaRakes tamilnavarasam.com

இருக்க வேண்டும். அல்லது திரு. காந்தி அவர்களுக்கு "நமக்கு இந்த தகராரே வேண்டாம் போய் ஜெயிலில் சௌக்கியமாய் உட்கார்ந்து கொண்டிருக் கலாம்" என்கின்ற சுயநலமாவது இருக்க வேண்டும். இது இரண்டில் ஒன்று இல்லாமல் வேறு ஒன்றும் இருக்க இடமில்லை என்பதே நமது அபிப்பிராயம். அன்றியும் சாத்வீக சட்ட மறுப்பு என்பதற்கு போடப்படும் திட்டங்களும் சர்க்காருக்கு ஏதாவது ஒரு வழியில் தொந்திரவு கொடுப்பதின் மூலம் விளம் பரம் ஏற்படவேண்டும் என்கின்றது போல் இருக்கின்றதே தவிர ஜனங்க ளுக்கு கஷ்டம் நீங்குவதற்கு என்கின்ற முறையில் எந்தத்திட்டமும் போடப் படுவதாய் இது வரையில் எந்த சேதியும் வெளிவரவில்லை, தவிர "சாத்வீகத் தில் நம்பிக்கை உள்ளவர்களும் காங்கிரசில் இருப்பதால் அவர்கள் இஷ்டப் படி செய்ய காங்கிரஸ் இடங்கொடுக்கின்றது." என்பதாகக் காரியக்கமிட்டித் தீர்மானித்திருப்பதால் தெரிகின்றது. இந்த சமயத்தில் காங்கிரசில் சாத்வீகத்தில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு வேலை என்ன என்பது வாசகர்களே யோசித்துப் பார்க்க வேண்டிய காரியமாகும்.

சாத்வீகத்தில் மக்களுக்கு அல்லது காங்கிரசிலிருப்பவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்று தெரிந்தபிறகும் சாத்வீக சட்ட மறுப்புக்கு காங்கிரஸ் எப்படி உத்திரவு கொடுக்கலாம்? நிற்க காங்கிரசானது சாத்வீக சட்ட மறுப்பை திரு. காந்தியார் சொந்த சொத்தாக விட்டிருப்பதாயும் தெரிகின்றது. திரு. காந்தி அவர்களுக்கு நமது மாகாணத்தைப் பொருத்தவரை திரு. ராஜாகோபாலாச் சாரியும் கதர் இயக்கத்தின் மூலம் ஜீவனம் நடத்தும் பார்ப்பனர்களும் தான் மந்திரிகளும் சிஷ்யர்களுமாய் இருக்கின்றார்கள். இந்த நிலையில் தமிழ் நாட்டுத் தொண்டர்கள் நடந்துகொள்ள வேண்டிய விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியவர்களாவார்கள். அவர்கள் சிறை செல்லு வதையாவது தியாகம் செய்து, கஷ்ட நஷ்டங்களை அனுபவிப்பதையாவது நாம் தடுக்க வரவில்லை. இந்த இரண்டு தான் நமது இயக்கத்திற்கும் ஆதா ரமே ஒழிய அதிகாரமோ பதவியோ அல்ல என்பதை நாம் நன்றாய் உணர்ந்தி ருக்கிறோம். ஆனால் அவைகளை பலனுள்ள காரியங்களுக்கு உபயோகிக்க வேண்டும் என்றுதான் சொல்லுகின்றோம். ஜாதிகளை அழிக்க கோவிலை ஒழிக்க உற்சவங்களைத் தடுக்க மற்றும் மக்களுக்கு செலவைக் கொடுப்பதும் அறிவைக் கெடுப்பதும் இழிவைத் தருவதுமான காரியங்களை ஒழித்தல் முதலாகிய ஏதாவது காரியங்களுக்கு நாம் சிறை செல்வதையோ அடிபடு வதையோ இறப்பதையோ அனுபவிக்கத் துணிவதை கடமையான காரிய மென்றே சொல்லுவோம். அப்படிக்கில்லாமல் வீணான காரியங்களில் "உப்பளங்களை முற்றுகை போடுவது" என்கிற அர்த்தமற்றதும் பைத்தியக் காரத்தனமானதுமான காரியங்களில் தலையிட்டு நமது ஆற்றல்களை எல்லாம் வீணாய் செலவழித்து விடக் கூடாது என்பதுடன் இது தமிழ் நாட்டில் உள்ள பார்ப்பனரல்லாத தொண்டர்களுக்கு இது சமயம் இருக்கும் ஊக்கத்தை



யும் ஆற்றலையும் ஒருவாறு மாற்றி அவைகளை வேறு வழிகளில் திருப்பி வீணாக்கவே திரு. காந்தியின் "தமிழ்நாடு" சிஷ்யர்கள் செய்த சூழ்ச்சியாய் இருக்கக்கூடும் என்று தொண்டர்களுக்கு ஞாபக மூட்டுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 23.02.1930**



RangaRakes
tamilnavarasam.com

# ஸ்தல ஸ்தாபன மசோதா

சென்னை சட்டசபையில் ஸ்தல ஸ்தாபன மசோதா ஒன்று ஸ்தல ஸ்தாபன மந்திரி கனம் டாக்டர். சுப்பராயன் அவர்களால் கொண்டுவரப் பட்டதானது இவ்வாரம் நிறைவேற்றப்பட்டு விட்டது. அநேகமாக மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் சம்மதமும் கவர்னர் ஜனரல் அவர்கள் சம்மதமும் பெற்று இவ் வருஷத்திலேயே அமுலுக்கு வந்துவிடும் என்றே நினைக்கிறோம்.

இந்த சட்டம் செய்யப்பட்டதின் மூலம் சில நன்மைகள் ஏற்படக் கூடும் என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகின்றோமாயினும் பலன் கொடுக்கும் முக்கியமான நன்மைகள் எதுவும் பிரமாதமாய் ஏற்பட்டு விடும் என்பதாக நம்மால் நினைக்க முடியவில்லை.

ஸ்தல சுயாட்சி போன்ற ஸ்தாபனங்களில் ஏதாவது சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமானால் அச்சீர்திருத்தங்கள் மிகுதியும் அந்த ஸ்தாபனங் களின் நல்ல ஆட்சிக்கும் நாணயத்திற்கும் வரிப்பொருளை சரியானபடி செலவழிப்பதற்கும் உபயோகப்படக்கூடியதாய் இருக்க வேண்டும். இப்போது நமது நாட்டில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இந்த மூன்று குணங்களையும் காப்பாற்றும்படியான சக்தி இல்லை என்று பல தடவை அழுத்திச் சொல்லு வோம். அதுவும் 1920-ம் வருஷம் ஏற்பட்ட ஸ்தல ஸ்தாபன சட்டத்திற்குப் பிறகு ஏதோ கொஞ்சம் நஞ்சம் இருந்த நல்லரசாட்சியும் நாணையமும் அடியோடு போய்விட்டது. பணவிஷயம் 100-க்கு 10 ஸ்தாபனங்களில் ஸ்தாபனத் தலைவர்கள் கையாடல் செய்வதில்லை என்று சொல்லலாமே தவிர மற்றபடி 100-க்கு 90 ஸ்தாபனங்கள் ஸ்தாபன தலைவர்களால் நேரிலும் நண்பர்கள் சுற்றத்தார்கள் மூலமும் கையாடல் லஞ்சம் கன்றாக்ட்டு முதலாகி யவைகளின் மூலம் ஸ்தல ஸ்தாபன பொருள்கள் பாழாக்கப்பட்டு வருகின்றது. மேல்கண்ட குணங்கள் இல்லாத சில ஸ்தல ஸ்தாபனத்திலும்கூட தாங்களோ தங்களது பந்துமித்திரர்களோ அடையாவிட்டாலும் தாங்கள் அந்த ஸ்தாபனத் தில் இருந்து நடத்தும் ஆட்சிக்கு முட்டுக்கட்டை ஏற்படாமலிருப்பதற்கும் தாங்களே அடுத்த தடவையும் அந்த ஸ்தாபனத்தில் நிலைத்திருப்பதற்கும் மற்ற மெம்பர்கள் இஷ்டப்படி நடக்க வேண்டிய நிர்பந்தங்களிலிருந்து தப்ப



முடியாததின் காரணமாய் மேல் கண்ட மூன்று குணங்களால் அந்த ஸ்தாபனங் களுக்கு ஏற்படும் கஷ்ட்ட நஷ்டத்திற்கு குறையாத பலனை உண்டாக்கிவிட வேண்டியவர்களாகி விடுகிறார்கள். மற்றும் அநேக யோக்கியர்கள் கூட நிர்வாகத்தில் செரிப்படுத்திக் கொள்ளலாம் என்கின்ற எண்ணத்தின் பேரி லேயே தேர்தல்களில் கண்மூடித்தனமாய் பணம் செலவு செய்து விட்டு பிறகு அதைச் சரிப்படுத்த முயர்ச்சிப்பதில் ஸ்தாபனங்களின் நல்ல ஆட்சிக்கும் பொருளாதாரத்திற்கும் கேடு உண்டாகும்படியான மாதிரியில் நடந்து தீர வேண்டியவர்களாகி விடுகிறார்கள். இத்தியாதி குணங்கள் இந்த புது சட்டத்தால் அடியோடு மறைந்து விட்டது என்று சொல்லுவதற்கு இல்லை. ஆனால் இரண்டொரு காரியங்களில் நன்மை ஏற்பட்டிருப்பதற்கு அதை பொருத்தவரையாவது பாராட்டாமலிருக்க முடியவில்லை. அதாவது தேர்தல் விஷயங்களில் சிறிது தொல்லைகள் குறைந்திருக்கின்றது. முனிசிபாலிட்டி களில் அந்தந்த வருஷத்திய வரியை செலுத்தியவர்களுக்குத்தான் ஓட்டு ரிமை உண்டு என்கின்ற நியதி முன் இருந்ததின் காரணமாக சேர்மேன்கள் பொது ஜனங்களிடம் வரிவசூலிக்காமலே இருந்தும் தங்களுக்கு வேண்டிய சில ஆள்கள் இடம் மாத்திரம் வசூலித்துக் கொண்டும் தாங்களாகவே தொழில் வரி என்று 10 அணா வீதம் 40, 50 மூன்றாந்தர ஆள்களுக்கு கட்டி அவர்களை ஓட்டர்களாக்கி வைத்துக் கொள்ளுவதுமான முறையில் ஓட்டர் லிஸ்ட்டு தயாரித்து வைத்துக் கொண்டு தாங்களும் தங்களது நண்பர்களும் அடிமை களுமே முனிசிபாலிட்டியை பிதுராஜ்ஜித சொத்தாக அனுபவித்து வந்த வழக்கம் இனி தடைப்படும் மாதிரியில் சிறிது மாற்றமடைந்திருக்கின்றது. அதாவது பணம் கட்டினாலும் கட்டாவிட்டாலும் வரி செலுத்தும் ஜாப்தாவில் பெயர் இருந்தால் போதும் என்கின்ற அளவில் ஓட்டர்களின் யோக்கி யதாபக்ஷம் முன்னேற்றமடைந்திருக்கின்றது. இரண்டாவதாக தேர்தல்கள் அதாவது எலக்ஷன்களில் நடந்து வரும் அக்கிரமங்கள் ஒருவாறு மாற்ற மடைந்திருப்பதாகவும் தெரிகின்றது. இப்போது இருக்கும் ஸ்தல ஸ்தாபனத் தலைவர்களிலும் அபேக்ஷகர்களிலும் நூத்துக்கு 10பேர் கூட இந்த தேர்தல் விஷயத்தில் நாணையமாய் நடந்து கொண்டு வருகிறார்கள் என்று சொல்ல முடியாத நிலையிலேயே தேர்தல்கள் நடந்து வருகின்றது. உதாரணமாக நூத்துக்கு 50 தேர்தல்கள் கோர்ட்டுக்கும் 100-க்கு 75 தேர்தல்கள் கவர்மெண் டுக்கும்போய் விவகாரங்களும் தகராறுகளும் செய்த வண்ணமாகவே இருந்து வருகின்றன.

நமக்கு நம்பிக்கை உண்டாகும் மாதிரியில் சில ஸ்தல ஸ்தாபன தலைவர்கள் நாமினேஷன் (ஸ்லிப்) சீட்டை கிழித்து விட்டு வரவில்லை என்று சொன்னவர்களும் போர்ஜரியாய் வித்திட்றா கடிதம் எழுதிக் கொண்டவர் களும் 'சட்டப்படிக்கு இல்லாததால் ஸ்லிப் செல்லாது' என்று நிராகரித்து விட்டவர்களும் தேர்தல் விஷயம் யாருக்கும் தெரியப்படுத்தாமல் இரகசிய மாய் செய்து கொண்டவர்களும் ஓட்டுப் பெட்டியைத் திறந்து திருத்திய வர்களும் போலிங் ஆபீசர் மூலம் தப்பாய் மார்க்கு செய்யச் செய்தவர்களும்



RangaRakes tamilnavarasam.com

நல்ல ஓட்டுகளை செல்லுபடி அற்றதென்று தள்ளி கணக்கு பார்த்தவர்களும் எலக்ஷன் தேதியில் நடத்தாமல் செய்தவர்களும் ஓட்டுப் பெட்டியில் இங்கியை ஊற்றச் செய்து ஓட்டுகளை தள்ளி குறைத்து எண்ணியவர்களும் ஓட்டுப் பெட்டியில் பாஸ்பரஸ் என்னும் நெருப்பு திராவகம் ஊத்தினவர்களும் மற்ற அபேக்ஷகரின் ஓட்டுகளை பதிவு செய்யாமல் நேரமாய் விட்டது என்று சொல்லி ஆபீசை மூடி விட்டவர்களும் ஓட்டுச் சீட்டுகளை பெட்டிக்குள் போடாமல் பக்கத்தில் ஆள்கள் இருந்து வாங்கி தங்கள் இஷ்டப்பட்டபடி செய்தவர்களும் பணம் கொடுத்தும் மிரட்டியும் நேரில் இருந்து கொண்டு ஓட்டு போட அனுமதித்தவர்களும் மற்றும் இம் மாதிரி அனேக காரியங்கள் எலக்ஷனில் தலைவரால் நடந்தது நன்றாய் தெரியும். மற்றும் போலீசார் இல்லாமல் எலக்ஷன் நடத்த முடியாததும் ஆன காரியங்கள் முதல் இம் மாதிரியான காரியங்கள் சற்றுத் தடைபடும்படியாக புதிய சட்டத்தில் எலக் ஷன்களை சர்க்கார் அதிகாரிகள் நேரில் இருந்து நடத்தும்படியான திருத்தங் கள் ஏற்பட்டிருப்பது சந்தோஷிக்கத் தக்கதேயாகும்.

மற்றும் ஒரு விஷயம். அரை சந்தோஷத்திற்கு இடமானதையும் குறிப்பிட விரும்புகின்றோம். அதாவது வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பதாகும். இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்னும் விஷயத்தில் நாம் சுமார் பத்து வருட காலமாக எடுத்து வந்த முயற்சி வாசகர்கள் அறிந்ததே யாகும். அதாவது 1919 ம் வருஷம் சென்னை மாகாண சங்கம் முதல் திருச்சி திருநெல்வேலி தஞ்சை திருப்பூர் சேலம் திருவண்ணாமலை காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் கூட்டப்பட்ட காங்கிரஸ் மாகாண கான்பரன்ஸ்கள் வரை அவைகளில் இருந்து கொண்டும், கடைசியாக அதே காரணத்தால் காஞ்சீபுரம் கான்பரன்சில் இருந்து வெளியேறி குடி அரசு, திராவிடன் பத்திரிகை மூலமும் சுயமரியாதை இயக்கத்தின் மூலமும் நாம் பார்ப்பன அடிமைகளின் எவ்வளவோ எதிர்ப்புக்கிடையில் முயற்சித்து வந்திருக்கின்றோம். அந்த முயற்சி முழுதும் கை கூடா விட்டாலும் அரசாங்க அதிகாரி உத்தியோகங் களில் ஒரு அளவும் ஸ்தல ஸ்தாபனங்களில் ஒரு அளவும் வெற்றி பெற முடிந்ததற்கு நாம் மகிழ்ச்சியடைந்தேயாக வேண்டும். சாதாரணமாக நாம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்டது முக்கியமாய் கிருஸ்தவர்கள் மகமதியர்கள் இந்துக்கள் என்பவர்களில் பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாத வர்கள், பார்ப்பனரல்லாதவர்களில் “தீண்டத்தக்கவர்கள்” “தீண்டப்படாத வர்கள்” என்கின்ற பிரிவுப் படி இருக்க வேண்டுமென்றே முயற்சி செய்தோம். ஆனால் இவற்றுள் ஒன்று தவிர அதாவது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதவர் என்கின்ற பிரிவு தவிர மற்ற பிரிவுகளுக்கெல்லாம் பிரதிநிதித்துவம் இந்தப் புதிய சட்டத்தின் மூலம் ஏற்பட்டுவிட்டது. அதுமாத்திரமல்லாமல் அளவுக்க டங்கா மகிழ்ச்சி அடையுமாறு மற்றும் ஒரு புதிய பிரிவாருக்கும் ஏற்படுத்தப் பட்டாய் விட்டது. அதாவது ஸ்தல ஸ்தாபனங்களில் பெண்களுக்கும் தனி பிரதிநிதித்துவம் என்பது. ஆனாலும் பார்ப்பன பார்ப்பனரல்லாத பிரிவு இல்லாமல் போய் விட்டதற்கு காரணம் என்ன வென்றால் அது தப்பான



கொள்கையென்றோ அல்லது தேச நன்மைக்கு விரோதமென்றோ இல்லாமல் இப்போது நாடு இருக்கும் நிலைமையில் அதாவது சுயமரியாதை இயக்கம் வேலை செய்ததின் பயனாய் அனேக ஸ்தல ஸ்தாபனங்களிலும் பார்ப்பனர்களின் ஆதிக்கம் அடியோடு ஒழிந்து விட்ட படியால் அவர்களால் இனி பயமில்லை என்கின்ற நம்பிக்கையின் பேரில் அந்த விஷயத்தை பார்ப்பனரல்லாத சில பிரமுகர்களே நழுவவிட்டு விட்டதால் அப்பிரிவு நிறுத்தப்பட்டு விட்டது. நிற்க இப்போது இந்த சட்டத்தில் ஏற்படுத்தப் பட்டிருக்கின்ற வகுப்புவாரி பிரதிநிதித்துவ விஷயத்திலும் நாம் தேர்தலுக்கு தனித் தொகுதியே வேண்டுமென்றும் கேட்டு வந்தோம். ஆனால் புதிய சட்டத்தில் தனித் தொகுதிக்குப் பதிலாக பொதுத் தொகுதியிலேயே ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டு வைத்து இருக்கின்றது. இது முதல்படியாகவும் பரீட்சார்த்தமாய்ப் பார்ப்பதாகவும் என்று சொல்லி ஏற்பாடு செய்திருப்பதால் இதன் மூலம் தக்க பிரதிநிதித்துவம் கிடைக்காத பட்சம் தனித் தொகுதியே ஏற்பாடு செய்வதாகக் கருதி இருப்பது மெத்த அனுகூலமானதேயாகும்.

ஆகிய இந்த நன்மைகள் ஒரு புறமிருந்தாலும் ஸ்தல ஸ்தான நிர்வாகம் நல்ல ஆட்சியாக சீர்பட வேண்டிய வரையில் ஒரு சிறு மாறுதலும் ஏற்பட்டி ருப்பதாய் தெரியவராததற்கு வருந்தாமலிருக்க முடியவில்லை. இப்போதைய தலைவர்களின் ஆட்சிக்கு நூத்துக்கு ஐந்து பேருடையது கூட ஒழுங்கான தென்று சொல்ல முடியாதென்பதே நமது கருத்து. எவ்வளவு நாணயமுள்ள வரும் நடுநிலைமையுள்ளவருமான தலைவர்களா யிருந்தாலும் இப்போ துள்ள நிலைமையில் சிறிதும் அந்த ஸ்தல ஸ்தாபனங்களின் நன்மையைக் கோரி ஒழுங்காய் நடந்து கொள்ள முடியாத நிலையிலேயே இருந்து வரு கின்றார்கள். மெம்பர்களுடைய தாட்சண்யங்களும் ஓட்டர்களுடைய தாட்சண்யங்களும் தலைவர்களின் கைகளைக் கட்டிப் போட்டு விடுகின்றன. அனேகமாய் ஸ்தாபனங்களின் உத்தியோகங்கள் முழுதும் மெம்பர்களின் சிபார்சுப்படியே வினியோகிக்க வேண்டியதாய் இருக்கின்றது. அவர் களுடைய ஒழுக்கவீனமானதும் நாணயக் கேடானதுமான காரியங்களைப் பற்றி கவனிப்பது என்பது ஸ்தாபன தலைவர்களுக்கு சிறிதும் முடியாத காரியமாயிருக்கிறது. கான்ட்ராக்ட் விஷயங்களோ பெரும்பாலும் மெம்பர் களுக்கே வேறு பெயரின் பேரால் கொடுத்துத் தீர வேண்டியதாகும். அந்த வேலை ஊழல்களை எந்த உத்தியோகஸ்தனும் கவனிக்க முடியாது. கவனித் தாலோ மெம்பர்களால் தலைவர்களிடம் சொல்லப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டு விடும். இதுவே தமிழ் நாட்டில் மிகவும் நாணயமாய் உள்ள தலைவர்களின் நிலை. மற்றபடி அந்த தலைவர்கள் என்பவர்கள் நாணயத் திலும் யோக்கியப் பொறுப்பிலும் கவலையில்லாமலும் இதைகொண்டே ஜீவனம் பண்ண வேண்டியவர்களுமாய் இருந்து விட்டாலோ அதன் நிலையைப் பற்றி கேட்க வேண்டுமா? உதாரணமாக ஈரோடு முனிசிபாலிட் டியை எடுத்துக் கொண்டால் அந்த முனிசிபாலிட்டி ஒரு 3 வருஷத்திற்கு முன்னால் இருந்த தலைவரின் நடத்தையில் அதன் பொருளாதார விஷயம்



RangaRakes tamilnavarasam.com

இன்னும் 10 வருஷங்களுக்கு தலையெடுக்க முடியாத நிலையில் இருக்கின்றதை இன்றும் பார்க்கலாம். எவ்வளவோ திருட்டுகளும் புரட்டு களும் கைப்பிடியாய் பிடித்துக் கொடுத்தும் முனிசிபல் சட்டமும் இந்தியன் பினல் கோடும் அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. குதிரை திருட்டுப் போனதிற்கப்புறம் லாயத்தைப் பூட்டினதைப் போல் இப்போது மிக்க நாணயமாயும் யோக்கியப் பொறுப்பாயும் இருக்கும் தலைவர்களை சர்க்காரார் மிரட்டுவதைத் தவிர வேறு ஒரு காரியமும் செய்ய முடியவில்லை.

ஈரோடே (அதாவது சர்க்காருக்கும் மந்திரிகளுக்கும் சுலபத்தில் உண்மை தெரியக் கூடியதும் தங்கள் கட்சி காரணமாக மந்திரிகள் பாரபட்சம் காட்ட வேண்டிய அவசியமில்லாததுமான ஈரோடே) இப்படி இருந்தால் மற்ற ஊர்களின் நிலைமையை நாம் சொல்லிக்காட்ட வேண்டுமா? எனவே இந்த நிலை மாறுவதற்கு நாம் ஒவ்வொரு ஸ்தாபனங்களுக்கும் ஒரு நிர்வாக அதிகாரியை நியமிக்க வேண்டும் என்று யோசனை கூறி இருந்தோம். ஆனால் இந்த யோசனை சட்டசபையில் பரிகசித்து காற்றில் பரக்க விடப் பட்டது.

ஏனெனில் அந்த சட்ட சபையானது பெரிதும் ஸ்தல ஸ்தாபன தலைவர்கள், ஸ்தல ஸ்தாபனத்தில் செல்வாக்குள்ள அங்கத்தினர்கள் ஆகிய வர்கள் ஆதிக்கத்தையே கொண்டதாயிருப்பதால் அவர்கள் தங்களின் நன்மையையோ அதிகாரத்தையோ செல்வாக்கையோ விட்டுக் கொடுக்க முடியாததினாலும் விட்டுக் கொடுத்தால் அவர்கள் மறுபடியும் ஸ்தல ஸ்தாபனத் தலைமையையும் - ஏன்? சட்டசபை ஸ்தாபனத்தையும் இழந்துவிட வேண்டியவர்களாய் விடுவார்களானதால் அந்த யோசனையை கனம் மந்திரி ஆதரித்தும் அங்கத்தினர்களால் அவ்வளவு அலட்சியப்படுத்தப்பட்டு விட்டது. ஆனாலும் மறுபடியும் ஒரு சமயம் இந்த சட்டம் திருத்தவரும் சமயத்தில் இந்த யோசனை இப்போதையைப் போல் அவ்வளவு அலட்சியப் படுத்தப்படாமல் சிறிது மாறுதலுடனாவது அனுமதிக்கப்படும் என்கின்ற தைரியம் நமக்கு இருப்பதால் இப்பொழுது இவ்வளவுடன் நிறுத்தி இந்த சட்டத்திற்காக முயற்சி எடுத்து விடாப்பிடியாய் உழைத்து நிறைவேற்றின கனம் முதல்மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கு நமது பாராட்டுதலும் ஏழை வரி செலுத்துவோரின் நன்றியறிதலும் உரியதாகுக.

**குடி அரசு - தலையங்கம் - 02.03.1930**



# "ஸ்ரீமுகம்"

சிருங்கேரி மடாதிபதி உயர்திரு "ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள்" அவர்களிடமிருந்து நமக்கு வந்த "ஸ்ரீமுக;" அழைப்பை, இவ் விதழில் வேறு ஒரு பக்கத்தில் பிரசுரித்திருக்கின்றோம். திரு. மடாதிபதி அவர்கள் அந்த "ஸ்ரீ முகம்" நமக்கு அனுப்பியதற்காகவும் மற்றும் அதில் நம்முடையவும் நமது மனைவியாருடையவும் ஒரு சிறு தொண்டை மிகுதியும் பாராட்டித் தங்களது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்காகவும் நாம் நம் சார் பாகவும் நமது மனைவியாரின் சார்பாகவும் நமது மனப் பூர்த்தியான நன்றி யறிதலை தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றோம். நிற்க அந்த "ஸ்ரீமுக"த்தில் "சனாதன தர்மத்தை கெடுக்காமல்;" "கரும காண்டத்தில் உள்ள அவரவர்கள் கடமைகளைச் செய்து" "சாஸ்திரங்கள் இடம் கொடுக்கும் வரையில்" என்கின்ற நிபந்தனைகள் கண்டு அதற்கு விரோதமில்லாமல் "சில சுதந்திரங்கள் அளிக்கப்படும்" என்கின்ற வாசகங்கள் காணப்படுகின்ற படியால், நாம் அங்கு செல்வதால் ஏதாவது பயன் ஏற்படுமா என்கின்ற விஷயம் நமக்கு சந்தேகமாகவே இருக்கின்றது. ஆயினும் பொருப்புள்ள ஒரு பதவியை வகிப்பவரும் பல கொள்கைகளுக்கு "அபிப்பிராய கர்த்தாவாய்" இருப்பவரும் பல மக்களால் வணங்கிக் கொண்டாடி மதிக்கத்தக்கவராக இருப்பவருமான ஒரு பெரியாரின் அழைப்பை மதித்து அதற்கு இணங்கி அங்கு சென்று வரவேண்டியது மிக்க நியாயமாகு மென்றே நமக்குத் தோன்று கின்றது, ஆயினும் நமது நண்பர்களின் விருப்பத்தை அறிந்து சென்று வரலாமென்றே கருதியிருக்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 02.03.1930**



RangaRakes tamilnavarasam.com

# திரு. ஈ. வெ. ராமசாமியாருக்கு "ஸ்ரீ ஜக்த்குரு சங்கராச்சாரியார் ஸ்ரீமுகம்"

**"ஸ்ரீ சங்கராச்சாரி சமஸ்தானம்"**
**நிஜசிருங்கேரி**
**க. நெ. 53.**
**( முகாம் புஷ்பவனம் )**

"அஸ்மத் பிரிய முக்கிய சிஷ்யரான கோயமுத்தூர் ஜில்லா ஈரோடு கஷ்பா வெங்கிட்டசாமி நாயுடு குமாரர் ஸ்ரீமான் ராமசாமி நாயுடுவினுடைய சமஸ்த்த ஐஸ்வரிய ஆரோக்கிய அபிவிருத்தியின் பொருட்டு திரிகால அனுஷ்டானத்திலும் பகவத் பிரார்த்தனையுடன் ஆசிர்வதித்து எழுதி வைத்தனுப்பிய ஸ்ரீமுகம். இங்கே ஆர்காடென்னும் சடாரண்ண க்ஷேத்திரங்களில் ஒன்றாகிய புஷ்பவனம் என்னும் புதுப்பட்டி கிராமத்திய ஸ்ரீ பரத்துவாஜ மஹாரிஷி ஆசிரத்தில் லோகத்தில் எல்லோருடைய க்ஷேமத்தைக் குறித்து தபஸ் செய்து கொண்டு இந்த மரியாதையை அனுப்பியிருக்கிறோம்.

சம்பாதி - லோககுரு ஸ்தானமாகிய இதில் பரதகண்டத்திலுள்ள சனாதன தர்மத்தை கெடுக்காமலும் எல்லோருக்கும் க்ஷேமம் உண்டாகும் படிக்கும் பாரபக்ஷம் இல்லாமல் படிக்கும் சாஸ்திர எல்லைகள் கடவாமல் படிக்கும் பிபீலகாதி பிரம்மம் பரியந்தம் (எரும்பு முதல் பிரம்மாதிகளிலும்) எல்லாவற்றிலுமிருப்பது ஒரே பிரம்மமென்று எல்லோருக்கும் பிரம்மானந்தத்தை அடையச் செய்யவே ஜெகத்குரு பீடம் இருக்கிறது. கர்ம காண்டத்தில் அவரவர்கள் நன்றாய் கடமைகளைச் செய்து நடந்து அதனால் சித்தமானது சுத்தமாகி அகண்ட பிரம்மானந்த சாக்ஷாத்தாரம் அடையச் செய்வதே விரதமாகக் கொண்ட இந்த குருபீடமானது ஸ்ரீ ஆதிசங்கர பகவான் அவதாரம் பரம்பரைக் கிரமமாய் வந்து கொண்டும் குருவாயிருக்கும் போதே சிஷ்யர்களை ஏற்படுத்தி சன்மார்க்க சதாச்சாரத்தில் பழக்கி பீடாதிபத்யம் சன்யாசம் அளிப்பது வழக்கமாயிருக்கிறது......................காலதேச வர்த்த மானத்தை அனுசரித்து சாத்தியமானவரையில் சிஷ்யர்களை சன்மார்க்கத்திலும் சதாச்சாரத்திலும் நடத்திச் சந்தோஷமாயிருக்கச் செய்து கொண்டு வருகிறது. இன்னம் காலதேச வர்த்தமானத்தை யோசித்து சாஸ்திரங்கள் இடம் கொடுத்திருக்கும் வரையிலும் தற்கால நிலமையை அனுசரித்து சிஷ்யர்களுக்கு சில சுவதந்திரங்களையும் இந்த ஜகத்குரு சமஸ்தானம் கொடுக்க வேண்டியது அவசியமாகத் தோன்றியிருக்கிறது.

**நீங்கள் நெடுநாளையப் பாரபக்ஷமின்றியிலும் தாக்ஷன்யங்களுக்கு உட்படாமலும் ஜீவகாருண்யமுள்ளவராயும் சுவய நன்மையைக் கருதாமல் லோக நன்மையையே முக்கியமாகக் கருதி சுக துக்கங்கள் பாராமல் மாணவமானத்தைக் கவனியாமல் ஜன்மமெடுத்தற்கு பரோபகாரமே சாதனமென்று கருதி உங்கள் தர்மபத்தினி சமேதராய் பாடுபட்டு வருவது எங்களுக்கு மிகவும் சந்தோஷத்தை உண்டாக்கி இருக்கிறது.** உங்களை நேரில் பார்த்து உற்சாகப்படுத்தி எங்கள் அபிப்பிராயங்களையும் உங்களுக்குச் சொல்லி **தக்க சஹாயமும்** செய்து அனுக்கிரஹிக்க வேண்டுமென்று குரு தேவதாப் பிரேரணை உண்டாயிருப்பதால் விவேகியாகிய நீரும் உங்கள் தர்மபத்தினியும் அனாதியாய் உங்களுக்குச் சொந்த பாத்தியமான இந்த ஜகத்குரு பீடத்தை சிறப்புவிப்பதற்காக இந்த சமஸ்தானத்திற்கு வந்து ஸ்ரீ சாரதா சந்திர மௌளீதரஸ்வாமிகள் பிரசாத் அனுக்கிரகம் பெற்று இப்போதிலும் அதிகமான சிரேயசை அடைவீர்கள் என்று நம்பி இந்த ஸ்ரீமுகம் எழுதி வைத்து அனுப்பலாயிற்று. விவேகிகளுக்கு என்ன எழுத வேண்டியிருக்கிறது."

**ஸ்ரீபிரஸ்தாவித்தியானந்தநாத பாரதஸ்வாமி சங்கராச்சாரியூ**

**பு.அ. வெங்கட்டரமணம் சர்வாதிகாரி**

(என்று கன்னடத்தில்)



RangaRakes
tamilnavarasam.com

# இரண்டு வைத்தியர்கள்

**– சித்திரபுத்திரன்**

## பார்ப்பன ஆயுர்வேத வைத்தியருக்கும் பார்ப்பனரல்லாத சித்த வைத்தியருக்கும் சம்பாஷனை

**ஆ. வே. வை:–** ஓய் சித்த வைத்தியரே; இந்த சட்ட சபைக்குள் திரு. முத்துலட்சுமி அம்மாள் போன பின்பு நமது வைத்தியத் தொழில்களுக் கெல்லாம் ஆபத்து வந்து விட்டது போல் இருக்கின்றதே. இதைப்பற்றி கேள்வி கேட்பாடு இல்லையா!

**சி. வை:–** என்ன ஆபத்து?

**ஆ. வே. வை:–** என்ன ஆபத்தா! இவ்வளவுதான் சித்த வைத்தியத்தின் புத்தி.

**சி. வை:–** சரி, ஆயுர்வேத வைத்தியர்களே மகா புத்திசாலிகளாய் இருக்கட்டும். அந்த அம்மாளால் என்ன ஆபத்து வந்துவிட்டது?

**ஆ. வே. வை:–** பொட்டுக்கட்டக் கூடாதாம், தேவதாசிகள் கூடாதாம். இந்த இரண்டும் நின்றுபோய் விட்டால் நமது ஜீவனம் எப்படித்தான் நடக்கும்.

**சி.வை:–** அடேயப்பா இதுதானா பெரிய ஆபத்து. இதற்கும் நமக்கும் என்னய்யா சம்மந்தம். தாசிகள் இல்லாவிட்டால், கோவில் அர்ச்சகப் பார்ப்பனர்களுக்குத்தான் ஜீவனம் கெட்டுப்போகும். ஏனென்றால் கோவிலுக்கு தாசிகள் வராவிட்டால் ஜனங்கள் கோயிலுக்குப் போக மாட்டார்கள். அதனால் அவர்களுக்கு பூசை பண்ணுவதிலும் வரும்படி குறையும். தரகிலும் வரும்படி குறையும். அப்படி குறைந்தாலும் சிலருக்குத் தான் குறையும். நல்ல அழகான பெண்டாட்டியோ அக்கா தங்கையோ இருக்கிற பூசாரிகளுக்கு வரும்படி ரெட்டிக்குமே தவிர குறையாது. ஆகவே இதனால் நமக்கு என்ன ஆபத்து?

**ஆ.வே.வை:–** சித்த வைத்தியரே உமக்குக் கண்டது கண்டபடி உளரத்தான் தெரியும். உள்ளுக்குள் இருக்கும் தத்துவம் இன்னதென்று தெரியாது.



RangaRakes

**சி.வை:–** ஆயுர் வேத வைத்தியருக்கே உள் தத்துவம் தெரியட்டும். நமக்குத் தெரியவேண்டாம். சங்கதி என்ன? சற்று சொல்லும் பார்ப்போம்.

**ஆ.வே.வை:–** சங்கதி என்னவென்றால் குருக்கள் அர்சகர்கள் பூசாரி இவர்கள் சங்கதி எப்படியோ நாசமாய் போகட்டும். தாசி இல்லாததினால் அவர் வரும்படியோ தரகோ நின்றுபோகாது என்பது உண்மைதான். அன்றியும் எப்படியும் ஏதாவது சரி பண்ணி அதாவது சாமியை கீழே தள்ளியோ அல்லது ஆட்டி புரட்டியோ அஷ்ட பந்தன கும்பாபிஷேகம் பண்ணச் செய்து வயிரை வளர்த்திக்கொள்வார்கள். இல்லாவிட்டால் விக்கிரகம் செய்பவனை கைக்குள் போட்டு இரண்டு விக்கிரகங்களை வாங்கிக் கொண்டு போய் எங்கேயாவது ஒரு காட்டில் புதைத்து விட்டு வந்து சாமி கனவில் வந்து சொன்னதாக எந்த பணக்கார முட்டாளிடமாவது அல்லது ஒரு பார்ப்பன தலைவனிடமாவது சொல்லி ஆர்ப்பாட்டம் செய்து ஜனங்களை கூட்டிக் கொண்டுபோய்காட்டி புதிதாய் எடுப்பது போல் தோண்டி எடுத்து அதற்கு கோவில் கும்பாபிஷேகம் உர்சவம் செய்து ரம்பவும் சக்தி இருக்கிறதாக காட்டி பிழைத்துக் கொள்வார்கள். அவர்களைப் பற்றி நமக்குக் கவலை இல்லை.

**சி.வை:–** அப்படியானால் பின்னை நமக்கு என்ன ஆபத்து வந்துவிடும்?

**ஆ.வே.வை:–** சொல்லவும் வெட்கமாக இருக்கின்றது.

**சி.வை:–** என்னதான் சொல்லுமே பார்ப்போம். நமக்கு நாமே பேசிக் கொள்வதில் வெட்கமென்ன?

**ஆ.வே.வை:–** நோயில்லாவிட்டால் வைத்தியன் எப்படி பிழைப்பான். இதை ஒத்துக் கொள்ளுகிறீர்களா இல்லையா?

**சி.வை:–** ஆம், உண்மைதான்.

**ஆ.வே.வை:–** தாசிகள் இல்லாவிட்டால் நமக்கு பணம் கிடைக்கும் படியான நோய் எப்படி பரவும்?

**சி.வை:–** அடேயப்பா இதுதானா பெரிய சங்கதி. வருகிற நோய் எப்படியும் வந்துவிடும். அதெல்லாம் கடவுள் செயல்.

**ஆ.வே.வை:–** உன் கடவுள் தலையில் நெருப்பை வாரிக் கொட்டு. வேறு நோய்களுக்கெல்லாம் இங்கிலீஷ் வைத்தியமாய்விட்டது. இந்த மேக சம்மந்தமான அதுவும் இரகசியமான இடங்களில் வருகின்ற நோய்களுக்குத் தான் இப்பொழுது ஜனங்கள் டாக்டர்களை கூப்பிடவும் அவர்களுக்கு காட்டவும் வெட்கப்பட்டுக் கொண்டு நம்மை கூப்பிட்டு காட்டுகின்றார்கள். இனி தாசிகள் இல்லாவிட்டால் மேக வியாதி எப்படி அதிகமாக உண்டாகும்.



tamilnavarasam.com

ஒரு சமயம் உண்டானாலும் அது எப்படி பரவும்?

**சி.வை:-** தாசிகள் இல்லாவிட்டால் மனிதர்கள் எல்லாம் பரிசுத்தவான் களாகி விடுவார்களாக்கும். அப்பவும் போகிறவன் எப்படியாவது போய்த்தான் தீருவான்.

**ஆ.வே.வை:-** எப்படிப் போய்த் தீருவான். மற்றொருவன் சம்சாரத் தினிடம் போனால் அவன் உதைப்பான். திருட்டுத்தனமாகத்தான் போக வேண்டும். அது சாதாரணமாய் தாசிகளிடம் நடக்கும் மாதிரிக்கு நூற்றில் ஐந்து பங்குகூட நடக்காது. அதிலும் இந்தமாதிரி நடவடிக்கைகளால் வியாதி அதிகமாய் உண்டாகிவிடாது. அவர்கள் அவசரமும் பயமும் வியாதி உண்டாவதற்கு நேரமே இருக்காது. ஆதலால் இதனால் நமக்கு பெரிய நஷ்டம் தான்.

**சி.வை:-** தாசிகள் எடுபட்டுப் போனாலும் குச்சுக்காரிகள் என்னும் பேரால் எத்தனையோ பேர்கள் இருப்பார்களேயொழிய அடியோடு விவசாரத் தனம் இல்லாமல் போய் விடுமென்று பயப்பட வேண்டாம்.

**ஆ.வே.வை:-** குச்சுக்காரிகள் இருப்பார்கள் என்றே வைத்துக் கொள்வோம். அந்த இடங்களுக்கு 4 - நம்பர் 5 - நம்பர் பேர் வழிகள் தான் போவார்கள். அவர்கள் காசு கொடுக்கவும் சக்தி அற்றவர்கள். அவர்களால் வியாதி பரவுவதற்கும் இடமிருக்காது. பெரிய மனிதர்கள், பணக்காரார்கள், உத்தியோகஸ்தாள், மரியாதைக்காரன் என்பவர்கள் போன்ற இந்த மாதிரியான ஆள்கள் கண்டிப்பாக அந்த மாதிரி இடங்களுக்குப் போக மாட்டார்கள். ஏன் என்றால் கண்டவர்கள் கேவலமாய் மதிப்பார்கள். தாசி வீடானால் தாராள மாய்ப் போவார்கள். பார்க்கின்றவர்களும் மதிப்பார்கள். அன்றியும் இப்படிப் பட்டவர்கள் போனால்தான் இவர்களுக்கும் சுலபமாய் நோய் வரும். அதை தங்கள் வீட்டில் உள்ள பெண்களுக்குப் பரப்பவும் சௌகரியமாகும். இந்த இரண்டு பேராலும் நம் இஷ்டப்படி பணம் வரும். தவிரவும் இந்த குச்சுக் காரிகள் வியாபாரத்திற்கும் கூட ஆபத்து வந்து விட்ட சங்கதி உனக்குத் தெரியாதா?

**சி. வை:-** அதென்ன சங்கதி.

**ஆ.வே.வை:-** நீ எந்த உலகத்தில் இருக்கிறாய் என்று எனக்குத் தெரிய வில்லை. விவசாரிகள் தடுப்பு மசோதா என்று ஒன்று இப்போது சட்ட சபை யில் பாசாகி இருக்கின்றது உனக்குத் தெரியாதா? அதனால் அதுவும் குறைந்து தான் போகும். அதுவும் தவிர குச்சுக்காரிகள் லைசென்ஸ் வாங்க வேண்டு மாம். நோயில்லையென்று டாக்டர் சர்டிபிகேட் கொடுக்க வேண்டுமாம். இவ்வளவும் தப்பியல்லவா நமது வயிற்றுப் பிழைப்பை நடத்த வேண்டி யிருக்கிறது.



**சி.வை:-** அப்படியா சங்கதி. ஆனால் ரொம்பவும் நல்ல காரியமாச்சுது. ஒருவருக்கொருவர் இஷ்டப்பட்டு திருட்டுத் தனமாய்ப் போகிறவர்கள் எப்படியோ நடந்து கொள்ளட்டும். பணம் காசு கொடுத்து போவது என்கின்ற விவசார வியாபாரம் ஒழிந்தால் போதும். நாம் நமக்கு வரும்படி இல்லா விட்டாலும் வேறு வேலை பார்த்துக் கொள்ளுவோம்.

**ஆ.வே.வை:-** அந்த தர்ம ஞானமெல்லாம் வாயில் பேசிவிடலாம். உங்களுக்கு இப்பொழுது சற்று நல்ல காலம். இந்த மந்திரிகள் காலத்தில் எப்படியும் வேலை கிடைத்து விடும். இல்லாவிட்டால் மண் வெட்டி யெடுத்து மண் சுமந்தானாலும் பிழைத்துக் கொள்வீர்கள். எங்கள் கூட்டத்திற்கு இந்த மாதிரி பிழைப்பைத் தவிர வேறு பிழைப்பு என்ன இருக்கின்றது. சொல்லும் பார்ப்போம்.

**சி. வை:-** அதற்கு என்ன செய்யலாம். நீங்களும் மண்வெட்டி எடுக்க வேண்டியது தான். எத்தனை காலத்திற்குத்தான் மக்களை ஏமாற்றி துன்புறுத்தி வாழமுடியும்? தாசியும் வேசியும் ஒழிந்ததால்தானா நமது பிழைப்பு போயிற்றென்று சொல்லுகின்றீர். அதற்கு முன்னாலேயே போய்விட்டது.

**ஆ.வே.வை:-** அதற்கு முன்னாலேயே எப்படிபோய் விட்டது என்கின்றீர்.

**சி.வை:-** யூனியன் பஞ்சாயத்து தாலூக்கா ஜில்லா போர்டு முனிசிபா லிட்டி சட்டசபை முதலான ஸ்தானங்களுக்கு எலக்ஷன் வந்ததொன்று. அதிலும் ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டதிலிருந்து இந்த ஸ்தானங்களில் பார்ப்பன ரல்லாதாரும் இருக்க இடம் கிடைத்து எலக்ஷன் கிராமங்களுக்குப் போக ஆரம்பமானவுடன் பணக்காரர் வீட்டு பிள்ளைகள் யெல்லாம் தாசி, வேசி நாடகம், சதுர், ஆடு கோழிச் சண்டை, கச்சேரி ஆகிய வேலைகளில் இருந்த மோகத்தை எலக்ஷனில் திருப்பி விட்டார்கள். முன் சொன்ன காரியங்க ளுக்கு செலவழித்த பணங்களையெல்லாம் எலக்ஷன்களில் செலவு செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஆதலால் தாசிகள் இருந்தாலும் கூட அவர்களுக்கு முன் போல் தொழில் நடப்பதும் கஷ்ட்டம். வைத்தியர்களுக்கும் முன் போல் பணம் வருவதும் கஷ்ட்டம். ஏனென்றால் இந்த எலெக்ஷன் மூலமாக அவர் களுக்குக் கொஞ்சம் இங்கிலீஷ் நாகரீகம் பிடிபட்டு விடுகின்றது. அதனால் இங்கிலீஷ் வைத்தியத்தில் ஆசை விழுந்து விடுகின்றது. இது மாத்திரமா இன்னும் ஒரு காரணம் சொல்லுகின்றேன் கேளும்.

**ஆ.வே.வை:-** அது என்ன சொல்லும் பார்ப்போம்.

**சி.வை:-** சுயமரியாதை இயக்கம் வந்த பிறகு பெண்களை அதிகமாகப் படிக்க வைக்க ஆரம்பித்து விட்டார்கள். பெண்களுக்கு சுதந்திரம் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். படிப்பும் சுதந்திரமும் கிடைத்த பெண்கள் புருஷர்



RangaRakes tamilnavarasam.com

களை தாசி வீட்டுக்கு சுலபத்தில் அனுப்புவார்களா? தாசிகளுக்கு மேலாக சிங்காரித்துக் கொள்ளுகிறார்கள்; தாசிகளுக்கு மேலாக பேசத் தெரிந்து கொள்ளுகிறார்கள்; தாசிகளுக்கு மேலாக மற்ற காரியங்களும் செய்து கணவன்மார்களை அடக்கி ஆள ஆரம்பித்து விட்டார்கள். இவைகளினால் வாலிபர்களுக்கும் தங்கள் யெண ஜாதிகளிடம் அதிகமான அன்பு காதல் ஏற்பட்டு விடுகின்றது. தவிரவும் முன்போல் மாமி மாமன் நாத்தி அதிகாரங் களும் குடும்ப வீடுகளில் குறைந்து போய் விட்டதால் புருஷன் பெண் ஜாதிமார்கள் அடிக்கடி பேசவும் கொஞ்சவும் தாராளமாய் சௌகரியம் கிடைத்துவிட்டது. இத்தனையும் அல்லாமல் சாரதா மசோதா வேறு வந்து விட்டது. கல்யாணம் ஆனதும் பெண் எதற்கும் தயாராய் இருக்கின்றது. அதிலும் சுயமரியாதை இயக்கம் ரொம்பவும் முத்திப்போய் புருஷன் பெண் ஜாதிகள் ஒருவரையொருவர் தாங்களே தெரிந்தெடுத்துக் கொள்ளுகின்ற வழக்கம் ஏற்பட்டுவிட்டது. இப்படிப்பட்டவர்கள் வேறு புருஷனையோ வேறு பெண்ணையோ கவனிப்பது என்பது மிக்க அபூர்வமாகத்தான் இருக்கும். ஆகவே பல வழிகளிலும் இந்த மாதிரி பிழைப்புக்காரர்களுக்கு இனி ஆபத்து தான். அதற்கு யார் என்ன செய்வார்கள். இத்தனை பேர்களுக்கு நல்ல காலம் வந்தது போல் நமக்கும் வரும். இதைப் பற்றி ஏன் கவலைப் படுகிறீர்கள்.

**ஆ.வே.வை:–** நீ சொல்வதைப் பார்த்தால் இனி தாசி வேசிகளிருந் தாலும் பிரயோஜனப்படாது என்றுதான் எனக்குத் தெரிகின்றது. ஏனென்றால் காலமோ கலிகாலம். ஆளுக்காள் தலைவிரித்து ஆடத் துடங்கி விட்டார்கள். கட்டுப்பாடெல்லாம் போய்விட்டது, இப்படி யெல்லாம் நடக்குமென்று வெகு நாளைக்கு முன்னமேயே பரமசிவன் பார்வதிக்குச் சொல்லி பார்வதி நந்திக்குச் சொல்லி நந்தி நாரதருக்குச் சொல்லி நாரதர் ரிஷிக்குச் சொல்லி ரிஷி முனிவர்களுக்குச் சொல்லி முனிவர்கள் பெரியோர்களுக்குச் சொல்லி பெரியவர்கள் நமக்குச் சொல்லி இருக்கிறார்கள்.

**சி.வை:–** நல்ல காரியமாச்சுது. பின்னையேன் அழுகிறீர். பகவான் முதல் பெரியோர்கள் வரை சொன்ன வாக்கு தவருமா? முதலில் பகவான் தலையில் நெருப்பை வாரிக் கொட்டு என்றீர். இப்போது பகவான் வாக்கு என்கிறீரே. என்ன சங்கதி.

**ஆ.வே.வை:–** என்னமோ சொன்னேன். உண்மை பேச வைத்தது. நம்மை கேழ்க்க வைத்தது. நான் போய் வருகிறேன்.

**சி. வை:–** நல்ல காரியம்.

**குடி அரசு – உரையாடல் – 02.03.1930**



# "சித்திரபுத்திரன்"

**ஆஸ்த்திகப்**

**பெண்:–** என்ன அய்யா நாஸ்த்திகரே, மனுதர்ம சாஸ்திரத்தில் மற்ற விஷயங்களைப் பற்றிய ஆட்சேபனைகள் எப்படி இருந்தாலும் பெண்களை கடவுளே விவசாரிகளாய் பிரப் பித்து விட்டார். ஆதலால் அவர்கள் விஷயத்தில் ஆண்கள் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமென்று சொல்லி இருப்பது மாத்திரம் பெரிய அயோக்கியத்தனம் என்பதே எனது அபிப்பிராயம். அது விஷயத்தில் நான் உங்களுடன் சேர்ந்து கொள்ளுகிறேன்.

**நாஸ்திகன்:–** அம்மா, அப்படித் தாங்கள் சொல்லக் கூடாது. மனுதர்ம சாஸ்திரத்தில் மற்ற எந்த விஷயங்கள் அயோக்கியத்தனமாக இருந்தாலும் இந்த விஷயத்தில் மனுதர்ம சாஸ்திரம் சொல் வதை நீங்கள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

**ஆ.பெண்:–** அதென்ன அய்யா, நீங்கள் கூட அப்படிச் சொல்லுகின் றீர்கள்? இதுதானா உங்கள் அறிவு இயக்கத்தின் யோக்கி யதை? எல்லாப் பெண்களுமா விவசாரிகள்?

**நா:–** ஆம் அம்மா, எல்லாருமே தான் "விவசாரிகள்". இதற்காக நீங்கள் கோபித்துக் கொள்வதில் பயனில்லை.

**ஆ. பெண்:–** என்ன அய்யா உலகத்தில் உள்ள பெண்கள் எல்லோரை யுமா நீங்கள் விவசாரிகள் என்று நினைக்கிறீர்கள்.

**நா:–** ஆம். ஆம். ஆம். இந்த உலகத்தில் உள்ள பெண்கள் மாத்திரமல்ல மேல் உலகத்தில் உள்ள பெண்களையும் கூடத்தான் நான் "கற்பு உள்ளவர்கள்" என்று சொல்லுவ தில்லை.

**ஆ.பெண்:–** இப்படிச் சொல்லுவது தர்மமாகுமா!



RangaRakes tamilnavarasam.com

**நா:-** கடவுளால் உண்டாக்கப்பட்ட வேதத்தின் சாரமான மனுதர்ம சாஸ்திரம் சொல்வது எப்படிப் பொய்யாகும் - அதர்மமாகும் சொல்லுங்கள் பார்ப்போம். வேண்டுமானால் அது சரியென்று நான் ருஜுப்படுத்தவும் தயாராயிருக்கிறேன்.

**ஆ.பெண்:-** என்ன ருஜு, நாசமாய்ப் போன ருஜு சற்று காட்டுங்கள் பார்ப்போம்.

**நா:-** நமது பெரியவர்கள் கற்பைப் பரீக்ஷிக்கத்தக்க பரீக்ஷைகள் வைத்திருக்கின்றார்கள். ஆதலால் அவர்களை நாம் சுலபத்தில் ஏமாற்றிவிட முடியாது.

**ஆ.பெண்:-** என்ன பரீக்ஷை ஐயா அது.

**நா:-** சொல்லட்டுமா! கோவித்துக் கொள்ளக் கூடாது.

**ஆ.பெண்:-** கோபமென்னையா, மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம். தாராளமாய்ச் சொல்லுங்கள்.

**நா:-** "தெய்வம் தொழாள் கொழுணனைத் தொழுவாள்

பெய்யெனப் பெய்யுமழை" என்கின்ற பொய்யா மொழிப் புலவரின் வேத வாக்கைக் கேட்டிருக்கிறீர்களா?

**ஆ.பெண்:-** ஆம். கேட்டிருக்கின்றேன்.

**நா:-** கற்புடைய மங்கையர்கள் மழை பெய்யென்றால் பெய்யும் என்கின்ற வேத வாக்கையும் கேட்டிருக்கின்றீர்களா?

**ஆ.பெண்:-** ஆம். கேட்டிருக்கின்றேன்.

**நா;** சரி. . . .ஊரில் மழை பெய்து மூன்று வருஷமாச்சுது. குடி தண்ணீர் கிடையாது. தயவு செய்து ஒரு இரண்டு உளவு (2 அங்குலம்) மழைப் பெய்யச் சொல்லுங்கள் பார்ப்போம்.

**ஆ.பெண்:-** இது நம்மாலாகின்ற காரியமா! தெய்வத்திற்கு இஷ்டமிருந்தாலல்லவா முடியும். இந்த ஊர்க்காரர்கள் என்ன அக்கிரமம் பண்ணினார்களோ! அதனால் இந்தப் பாவிகள் மழை இல்லாமல் தவிக்கின்றார்கள்.

**நா:-** எந்தப் பாவி எப்படித் தவித்தாலும் நீங்கள் கற்புள்ளவர்களாயிருந்தால் மழை பெய்யென்றால் பெய்து தானே ஆக வேண்டும். அல்லது இந்த ஊரில் ஒரு கற்புள்ள பெண்ணாவது இருந்தால் மழை பெய்து தானே தீரவேண்டும். எப்போது பெண்கள் சொன்னால் மழை பெய்வதில்லையோ அப்போதே பெண்கள் எல்லாம் கற்புள்ளவர்கள் அல்ல. - "விபசாரிகள்" என்று ருஜுவாக வில்லையா? பொருமையாய் யோசித்துப் பாருங்கள். ஆகையால் இனிமேல் சாஸ்திரங்களைப் பற்றி சந்தேகப்படாதீர்கள். அதிலும் ரிஷிகளும் முனிவர்களும் சொன்ன வாக்கியமும் கடவுள் சொன்ன வேதத்தின் சத்தாகியதும் இந்து மதத்திற்கு ஆதாரமானதும் மோக்ஷத்திற்கு சாதனமானதுமான மனுதர்ம சாஸ்திரம் பொய்யாகுமா அம்மா? அதனால் தானே நான் கூட கல்யாணமே செய்து கொள்ளவில்லை.

**ஆ. பெண்:-** எதினால்தான்?

**நா: -** பெண்களை கல்யாணம் செய்து கொண்டால் புருஷன்மார்கள் அவர்கள் விவசாரித்தனம் செய்யாமல் ஜாக்கிரதையாய்க் காப்பாற்ற வேண்டுமென்றிருக்கிறதினால்தான்.

**ஆ.பெண்:-** பின்னை என்ன செய்கின்றீர்கள்.

**நா:-** கடவுளோ பிறவியிலேயே பெண்களை விவசாரிகளாய் பிறப்புவித்துவிட்டார். யார் காப்பாற்றிப் பார்த்தும் முடியாமல் போய்விட்டது. ஒரு சொட்டு மழைக்கும் வழியில்லை. ஆதலால் எவனோ கட்டிக் கொண்டு காப்பாற்றட்டும். கடவுள் செயல் பிரகாரம் நமக்குக் கிடைப்பது கிடைக்கட்டும் என்பதாகக் கருதி சிவனே என்று உட்கார்ந்து கொண்டிருக்கின்றேன். மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்ற மாட்டானா? என்கின்ற தைரியம் உண்டு.

**ஆ.பெண்:-** அப்படியானால் நீங்கள் முன் சொல்லிக் கொண்டிருந்ததில் ஒன்றும் குற்றமில்லை. இந்த மனுதர்ம சாஸ்திரமும் வேதமும் பொய்யா மொழியும் நீதியும் இவற்றை உண்டாக்கியதோ அல்லது ஒப்புக் கொண்டதோ ஆன கடவுள்களும் நாசமாய்ப் போகட்டும். இனிமேல் இந்த ஆஸ்திகம் நமக்கு வேண்டவே வேண்டாம். நமது எதிரிகள் நாட்டுக்கும் வேண்டாம்.

**குடி அரசு - உரையாடல் - 02.03.1930**



RangaRakes tamilnavarasam.com

# உதிர்ந்த மலர்கள்

எந்த மதத்தில் இருப்பதினால் ஒரு மனிதன் தீண்டப்படாதவனாய் கருதப் படுகின்றானோ அவன் தனக்கு ஒரு சிறிதாவது சுயமரியாதை உணர்ச்சி இருக்குமானால் அவன் தான் எந்த மதத்தைச் சார்ந்தால் உடனே தீண்டப்படாதவனாக கருதப்பட மாட்டானோ அந்த மதத்தை சார வேண்டியது அவனது முதற்கடமையாகும்.

* * *

ஏதாவது ஒரு குறிப்பிட்ட மதத்தில் இருந்தால்தான் " கடவுள் அருளோ" "மோக்ஷமோ" கிடைக்கும் என்கிற விஷயத்தில் எனக்குச் சிறிதும் ஒப்புதலும் நம்பிக்கையும் கிடையாது. அவ்விரண்டு வார்த்தைகளும் அர்த்தமற்றதும் மோசமும் பரிகாசத்திற்கு இடமானதும் என்பதே எனது அபிப்பிராயம்.

* * *

மனுதர்ம சாஸ்திரத்தையும் அதற்கு ஆதாரமான வேதத்தையும் (மத ஆதாரத்தையும்) ஒரு கடவுள் சிருஷ்டித்திருப்பாரானால் முதலில் அந்தக்கடவுளை ஒழித்து விட்டுத் தான் தாகசாந்தி செய்ய வேண்டும்.

* * *

மனுதர்ம சாஸ்திரத்தையும் அதை ஆதரிக்கும் வேதத்தையும் ஒரு மதம் ஆதாரமாய்க் கொண்டிருக்குமானால் முதலில் அம்மதத்தை அழித்து விட்டுத் தான் மனிதன் வேறுவேலை பார்க்க வேண்டும்.

* * *

இந்து மதம் போய்விடுமே! இந்து மதம் போய்விடுமே!! என்று சொல்லிக் கொண்டும் இந்துமத தர்மங்களை ஒன்று விடாமல் காப்பாற்ற வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டும் வந்தவர்களாலேயே இன்று இந்தியாவில் இந்தியர்களில் மூன்றில் ஒரு பாகத்தினர்கள் வேறு மதத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்கள்.



மதத்தைக் காப்பதற்கு என்றும், மதக் கொள்கைகள் சிறிதும் விட்டுக் கொடுக்க முடியாதென்றும் இதுவரை செய்து வந்த முயற்சிகளும் கிளர்ச்சிகளும் எல்லாம் இரண்டொரு வகுப்புக்களுடையவும் சில தனிப்பட்ட நபர்களுடையவும் சுயநலத்திற்காகச் செய்யப்பட்ட முயற்சிகளாகவே முடிந்ததல்லாமல், எவ்விதப் பொது நலனும் ஏற்படவேயில்லை.

* * *

"மேல் நாட்டாருக்கு ஒரு மாதிரியும் கீழ் நாட்டாருக்கு ஒரு மாதிரியுமான சுதந்திரங்கள், வித்தியாசங்கள் இருக்கக்கூடாது" என்று சொல்லும் இந்திய தேசிய வாதிகள் தங்கள் நாட்டாருக்குள்ளாகவே பார்ப்பனருக்கு ஒரு மாதிரியும் பார்ப்பனரல்லாதாருக்கு ஒரு மாதிரியும் இடமும் தெருவும் குளமும் ஏன் பிரிக்கின்றார்கள்? பிரித்திருப்பதை ஏன் இன்னமும் சகித்துக் கொண்டிருக்கிறார்கள்? இது யோக்கியமாகுமா?

* * *

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவுக்கு இந்து மதத்திற்கு பிரதிநிதியாய் போகவில்லை. ஆனால் அவர் ஒரு "வக்கீலாய்" போனார்.

* * *

உன்னை க்ஷத்திரியன் என்றோ வைசியன் என்றோ நீ சொல்லிக் கொள்ளும் போது நீ பிராமணன் என்பவனுக்கு கீழ்ப் பட்டவனென்பதை நீயே ஒப்புக் கொண்டவனாகின்றாய்.

* * *

சென்ற வருஷத்திய ரயில்வே கெய்டை பார்த்துக் கொண்டு ரயிலுக்குப் போனால் வண்டி கிடைக்குமா?

* * *

சுயமரியாதையும் சமத்துவமும் விடுதலையும் வேண்டிய இந்தியாவுக்கு இப்போது வேண்டியது சீர்திருத்த வேலை அல்ல; மற்றென்னவென்றால் உறுதியும் தைரியமும் கொண்ட அழிவு வேலையேயாகும்.

* * *

இதுவரை நமது நாட்டில் செய்யப்பட்டு வந்த சீர்திருத்தம் என்பதெல்லாம் பாமர மக்களை படித்தவர்களும் பணக்காரரும் ஏய்ப்பதற்கு கண்டு பிடித்த ஒரு சூட்சியே ஒழிய உண்மை சீர்திருத்தமல்ல.



RangaRakes tamilnavarasam.com

குருட்டு நம்பிக்கையின் பயனாய் ஏற்பட்ட கடவுளிடத்தில் மூட பக்தியால் ஏற்பட்ட மதத்தின் மூலம் சுயநலக்காரர்களால் வகுக்கப்பட்ட கொள்கைகளை வைத்து நமது வாழ்க்கையை நடத்துகின்றோம்.

* * *

குருட்டு நம்பிக்கையையும் மூட பக்தியையும் சீர்திருத்த வேலையினால் ஒழிக்க முடியாது. ஆனால் அவற்றை அழிவு வேலையினால் தான் ஒழிக்கமுடியும். அழிவு வேலை செய்பவர்களுக்கு மகத்தான மன உறுதியும், சிறிதும் சந்தேகமற்ற தெளிவும், பழிப்புக்கும் சாவிற்கும் துணிவும் இருக்க வேண்டும்.

* * *

அழிவு வேலைக்காரர்களுக்கு நிதானமும் சாந்தமும் சகிப்புத் தன்மையும் அவசியம் வேண்டுமென்பதையும்; வெறுப்பும் பிடிவாதமும் கண்டிப்பாய்க் கூடாது என்பதையும் நான் ஒரு போதும் ஒப்புக் கொள்ள மாட்டேன்.

* * *

அன்னியர்கள் நம்மை மதிக்க மாட்டார்களே பழிப்பார்களே எதிர்ப்பு பலமாய்விடுமே நமது செல்வாக்கு குறைந்து போகுமே என்கின்ற பயமும் பலக்குறைவும் உள்ளவர்கள் ஒரு காலமும் சீர்திருத்த வேலைக்கு உதவ மாட்டார்கள்.

* * *

சீர்திருத்தத்திற்கு விரோதமான கட்டுப்பாட்டை உடைத் தெறிவது தான், சீர்திருத்தத்தில் பிரவேசிப்பதற்கு உற்ற பாதையாகும்.

* * *

ராம ராஜியத்தையும், வருணாசிரமத்தையும் ஆதரிக்கும் திரு. காந்தியினால் இந்தியாவுக்கு விடுதலை சம்பாதித்துக் கொடுக்க முடியாது.

**– ஈ.வெ.ரா.**

**குடி அரசு – துணுக்குகள் – 02.03.1930**



RangaRakes

# சென்னை அரசாங்க உள் நாட்டு மெம்பர் பதவி

சென்னை அரசாங்க நிர்வாக சபையில் இம்மாதக் கடசியில் ஒரு மெம்பர் ஸ்தானம் அதாவது கடந்த 5 – வருஷ காலமாக டாக்டர் கனம் சர் மகமது உஸ்மான் அவர்கள் வகித்து வந்த உள்நாட்டு மெம்பர் ஸ்தானம் 5 வருஷ காலாவதியின் காரணமாக காலி ஆகக் கூடுமென்பதாய் தெரிய வருகின்றது. அதை உத்தேசித்து அநேக கனவான்கள் அதை அடைய முயற்சி செய்து வருவதாகவும் தெரிய வருகின்றது. அரசாங்கத்தாரும் அந்தப் பதவியை யாருக்குக் கொடுக்கலாம் என்பதாக யோசனை செய்து கொண்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தாருக்கு இது விஷயமாக நாம் நமது அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிட வேண்டியது நமது கடமை என்று நினைக்கின்றோம். ஆதியில் அதாவது சுமார் 20 வருஷத்திற்குமுன் மேன்மை தங்கிய கவர்னரவர்களின் நிர்வாக சபையில் இரண்டு அங்கத்தினர்கள் இருந்ததை மூன்றாக மாற்றியதின் முக்கிய காரணமே இந்தியர்களுக்கும் அதில் இடமிருக்க வேண்டும் என்கின்ற எண்ணமே யாகும். பிறகு மூன்றை நான்காக்கியதும் அவைகளில் இந்தியர்களில் ஜாதி மதப் பிரிவுக்குத் தக்கபடி தாராளமாய் பிரித்துக் கொடுக்க சவுகரியப்படுத்திக் கொண்டு வரப்பட்டது. அதன் காரணமாகவே சட்ட மெம்பர் ஸ்தானத்தை பார்ப்பனர்களுக்கும் மற்றொன்றாகிய உள்நாட்டு மெம்பர் ஸ்தானத்தை ஒரு மகமதியருக்கும் கொடுத்து வரப்பட்டது. சென்ற வருஷத்தில் சட்ட மெம்பர் ஸ்தானம் காலியாக நேரிட்டதும் அதை பார்ப்பனருக்கென்றே முடிவு கட்டிவிடக் கூடாதென்றும் மற்ற சமூகத்தாருக்கும் வரிசைக் கிரமமாய் மாறிவர வேண்டும் என்றும் வாதாடி அதை ஒரு பார்ப்பனரல்லாதவருக்குக் கிடைக்கும்படி செய்யப் பட்டது. அதுபோலவே இப்போது 10 – வருஷ காலமாய் மகமதிய கனவான் கள் பார்த்து வந்த ஸ்தானமும் காலியாவதால் அதை நிர்வாக சபையில் இதுவரை இருந்து வராத ஒரு சமூகத்திற்கே அதை வினியோகிக்க வேண்டும் என்பதாக வலியுறுத்துகின்றோம். அதாவது நாம் அரசியலில் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவம் கேட்கும் போதெல்லாம் ஆதியில் இருந்தே இந்தியர்களில் 5



tamilnavarasam.com

பிரிவுகளைத்தான் பிரித்துக் காட்டி கேட்டு வந்திருக்கின்றோம். அதாவது,

இந்தியர்களுக்கு என்று கொடுக்கப்படும் பதவிகள் ஸ்தானங்கள் முதலியவைகளை இந்துக்கள் அதாவது இந்துக்களில் பார்ப்பனர், பார்ப்பன ரல்லாதார், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் மகமதியர்கள், கிறிஸ்தவர்கள் என்கின்ற ஐந்து பிரிவுகளாகப் பிரித்தே பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி வந்திருக்கின்றோம். அவற்றுள் பார்ப்பனர், பார்ப்பனரல்லா தார் என்கின்ற பிரிவுகளைப் பற்றி இந்த சமயம் அவசியமில்லை என்று பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவர்கள் சொல்வதனாலும் சென்ற வருஷம் சர். சி. பி. அய்யர் ஸ்தானம் காலியானதும் இந்த முறையைக் கொண்டேதான் வற்புறுத்தி அதை இதுவரை பார்ப்பாருக்கே கொடுக்கப்பட்டு வந்திருந்தாலும் அதை மாற்றி சர். கிருஷ்ணன் நாயர் அவர்களுக்குக் கிடைக்கும்படி செய் தோம். அது போலவே இது சமயம் காலியான சர். மகமது உஸ்மான் அவர்கள் ஸ்தானமும் மகமதிய கனவான்களே பார்த்து வந்திருந்தாலும் இதுவரை பார்த்திராத வகுப்பாரான தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கே கொடுக்க வேண்டி யது நியாயமாய் இருக்கின்றது என்று சொல்ல வேண்டியதாயிருக்கின்றது. ஏனெனில் இதுவரை அப்படிப்பட்ட பதவிகளை மற்ற வகுப்பார்கள் எல்லாம் அனுபவித்து வந்ததுடன் இன்றைய தினமும் அது போன்ற செல்வாக்கும் அதிக சம்பளமும் உள்ள உயர்ந்த பதவிகளில் எல்லாம் அவ்வகுப்பாரை (தாழ்த்தப்பட்ட வகுப்பாரை) தவிர மற்ற வகுப்பார்கள் எல்லாரும் இருந்து கொண்டு வருகின்றார்கள். எங்ஙனமெனில்,

ஒரு பார்ப்பனர் மந்திரியாகவும், மூன்று பார்ப்பனரல்லாதார்கள் அதா வது சட்ட மெம்பராக ஒரு பார்ப்பனரல்லாத மலையாள கனவானும், மந்திரி யாக இரண்டு பார்ப்பனரல்லாத கனவானும் இருப்பதோடு மற்றும் பப்ளிக் சர்விஸ் கமிஷனில் ஒரு மகமதியரும், ஒரு கிருஸ்தவரும் இருப்பதோடு ஏரக்குறைய இரண்டு வருஷகாலம் ஒரு கிருஸ்தவ கனவான் மந்திரியாகவும் இருந்திருக்கிறார்.

ஆகவே தாழ்த்தப்பட்ட வகுப்பு என்பது ஒன்றைத் தவிர மற்ற வகுப்புகள் எல்லாம் "சீர்திருத்தத்தின்" பலனாய் ஏற்பட்ட ஒவ்வொரு பெரும் பதவிகளையும் அனுபவித்தே வந்திருக்கின்றார்கள். மற்றும் இந்து மத பரிபாலன போர்டிலும் இந்துக்கள் என்பவர்களில் பார்ப்பனரும் பார்ப்பன ரல்லாதாருமே அனுபவித்து வந்திருக்கிறார்களே ஒழிய இந்துக்கள் என்கின்ற தலைப்பின் கீழ் இருந்தும் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு எவ்வித பிரதிநிதித் துவமும் பதவியும் இதுவரை கிடைத்ததாக யாரும் சொல்ல முடியாது என்றே நினைக்கின்றோம். ஆகையால் இந்த நிர்வாக சபை மெம்பர் பதவியை கண்டிப்பாய் அந்த, அதாவது தாழ்த்தப்பட்ட வகுப்பார் என்பவர்களுக்கே கொடுக்க வேண்டியது நியாயமும் யோக்கியமும் ஆன காரியம் என்பதே நமது அபிப்பிராயம்.



தாழ்த்தப்பட்ட வகுப்பார் என்பது இந்தியாவிலாகட்டும் சென்னை மாகாணத்தில் ஆகட்டும் ஒட்டு மொத்த ஜனத்தொகையில் சற்றேரக்குறைய 5ல் அல்லது 6ல் ஒரு பங்குள்ள ஜனத்தொகை கொண்ட சமூகமாகவும் வெகுகாலமாகவே தாழ்த்தப்பட்டு வந்ததாகவும் மிக்க கொடுமையையும் கஷ்டத்தையும் அனுபவித்து வந்ததாகவும் இருப்பதுடன் இன்றைக்கும் பிரிட்டிஷ் கவர்ண்மெண்டு இந்தியாவில் இருக்கவே கூடாது என்று யாராவது சொல்லுவார்களேயானால் அதை மறுத்து கண்டிப்பாய் அந்தக் கவர்ண் மெண்டு இருந்துதானாகவேண்டும் என்று சொல்லுவதற்கு தகுந்த காரணஸ் தர்களாயுமிருக்கின்ற சமூகத்தார்களுமாவார்கள். ஏனெனில் அரசாங்கத்தார் கள் இந்தியாவில் அரசியல் கிளர்ச்சி ஏற்பட்ட காலங்களிலெல்லாம் தாங்கள் இந்தியாவின் நன்மையைக் கோரியும் இந்திய மக்களில் இளைத்தவர்களை வலுத்தவர் துன்புறுத்தாமலும் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்கள் தாழ்ந்த ஜாதிக்காரர் என்பவர்களை கொடுமைப்படுத்தாமலும் இருப்பதற்காகவும் எல்லோரையும் சமமமாகப் பார்ப்பதற்காகவும் இருப்பதாய்ச் சொல்லிக் கொண்டு இருப்பதை மெய்ப்பிக்கவும் சந்தர்ப்பத்தை கொடுக்கக் கூடிய சமூகத்தார்களாயிருப்பதேயாகும். அன்றியும் சைமன் கமீஷன் இந்தியாவுக்கு வந்த காலத்தில் இந்தியர்களில் சிலர் அதை பகிஷ்கரித்ததற்கும் பலர் அதை வரவேற்கச் செய்ததற்கும் முக்கிய காரணஸ்தர்களுமாவார்கள். அதாவது தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் முன்னேற்றமடைவதற்கும் சமத்துவம் அடை வதற்கும் பிரதிநிதித்துவம் பெருவதற்கும் இந்திய அரசியல் காரர்க ளின் சூட்சியிலகப்படாமல் இந்த அரசாங்கம் நியாயமாகவும் யோக்கியமாக வும் நடந்து கொள்ளுமென்றும், மேலும் எந்தப்படி நடந்து கொள்ள சைமன் கமிஷன் வழி செய்யுமென்றும் நினைத்தே நம்பியே ஆதரித்தவர்களா வார்கள். அன்றியும் நாமும் நமது சுயமரியாதை இயக்கமும் இந்த தத்து வத்தை அடிப்படையாகக் கொண்டுதான் சைமன் கமீஷனை உயர்ந்த ஜாதிக் காரர்கள் என்பவர்கள் தங்கள் சுயநல எண்ணத்தைக் கொண்டு அதற்கு விரோதமாகச் செய்த கிளர்ச்சிகளின் சூட்சிகளை வெளியாக்கி அவைகளை அழித்து ஆதரித்ததுமாகும். அன்றியும் இன்றைய தினமும் பலருக்கு காங்கிரசினிடம் ஏன் திரு காந்தியாரிடமும் கூட நம்பிக்கையில்லாமல் போன தும் காங்கிரசை விட்டும் திரு காந்தியின் சத்தியாக்கிரகம் பூரண சுயேச்சை ஆகிய சம்பந்தமான காரியங்களை விட்டும் விலகிக் கொண்ட தற்கும் (சிலருக்கு ஜெயில் பயமிருந்தாலும் மற்ற பெரும்பான்மையோர்களுக்கு) இந்த சமூகத் தாரும் இவர்களின் முற்போக்கு விஷயத்தில் கவர்ண்மெண்டாரிட முள்ள நம்பிக்கையுமாகும். ஆகவே சென்னை அரசாங்கத்தாரும் இந்திய அரசாங் கத்தாரும் இந்த நம்பிக்கைக்கு விரோதமோ துரோகமோ செய்யாமல் தங்க ளுக்கு கிடைத்த இந்த நல்ல சமயத்தை ஒழுங்காய் உபயோகித்துக் கொள்வார் கள் என்று நினைக்கின்றோம்.

தாழ்த்தப்பட்டு கொடுமை செய்யப்பட்ட மக்களை விடுதலை செய்ய வேண்டுமானால் அவர்களுக்கு அதிகாரங்களில் உயர் பதவி கொடுப்பதன்



RangaRakes tamilnavarasam.com

மூலமே தான் சீக்கிரத்தில் செய்யக்கூடுமே தவிர வேறு காரியங்களாலல்ல. உதாரணமாக பார்ப்பனர்களால் மற்றப் பார்ப்பனரல்லாதார்களை சூத்திரன் இழிந்த பிரப்பான் என்றும் மகமதியர்களை மிலேச்சர்களென்றும், கிருஸ்தவர்களை நீச்சர்களென்றும் சொல்லிக் கொண்டிருந்த கொடுமைகள் எல்லாம் இன்றைய தினம் வேகமாய் மறைந்து மறைந்து போய்க் கொண்டிருப்பதற்கு காரணம் அந்தந்த சமூகங்கள் அரசியல் அதிகாரங்களில் ஆதிக்கம் பெற்றதினாலேயே ஒழிய மற்றபடி வேறு எந்தக் காரணங்களாலாவது என்று சொல்லி விட முடியாது.

ஆகவே அரசாங்கத்தார் தங்கள் பொருப்புகளையும் நாணயங்களையும் காலதேச நிலைமையையும் உணர்ந்து கண்டிப்பாய் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கே இந்தப் பதவியை வழங்க வேண்டுமென்று மற்றுமொரு முறை வேண்டுகின்றோம்.

மற்றபடி அந்தச் சமூகத்தில் அந்தப் பதவியை வகிக்கத் தகுந்த கனவான்கள் இல்லை என்று ஏதாவது சாக்குச் சொல்ல வருவார்களே ஆனால் அதை நாம் சிறிதும் ஒப்புக் கொள்ள முடியாது என்பதோடு அதில் சிறிதும் உண்மையும் நாணயமும் இருக்க முடியாது என்றே சொல்லுவோம்.

ஏனெனில் இன்றைய தினம் சென்னை மாகாணத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக இந்திய சட்ட சபையில் இருக்கவும் சென்னை மாகாண மக்களின் பிரதிநிதியாக இந்தியாவுக்கே அரசியல் பரீட்சை செய்தும் மேல்கொண்டு சீர்திருத்தம் வழங்கத் திட்டங்கள் ஏற்படுத்தும் சைமன் கமிஷன் கமிட்டியில் ஸ்தானம் வகித்து இருக்கவும் மேற்படி சமூகத்தில் கனவான்கள் இருக்கும் போது, சென்னை அரசாங்கத்தில் அதுவும் சுமார் இரண்டொரு வருஷத்திற்குள் மறைந்துபோக இருக்கும் ஒரு நிர்வாக சபையில் நால்வரில் ஒருவராக இருக்கும் ஒரு மெம்பர் ஸ்தானத்திற்கு அந்த சமூகத்தில் நபர்கள் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும் என்றுதான் கேழ்க்கின்றோம். அன்றியும் நாமாகவே உயர்திரு ராவ்பகதூர் எம். சி. ராஜா, எம். எல்.ஏ., அவர்கள் பெயரையும் ஞாபக மூட்டுகின்றோம். கடைசியாக அரசாங்கத்தார் இந்த விஷயத்தில் நியாயம் செய்யாமல் அலட்சியமாக இருந்து விடுவார்களேயானால் சர்க்காரின் நல்ல எண்ணத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்கும் அவர்களிடம் அனுதாப முள்ளவர்களுக்கும் சிறிதாவது உள்ள நம்பிக்கையும் ஆட்டம் கொடுத்துவிடு மென்பதையும் வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 09.03.1930**



# காங்கிரஸ்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் அதன் தலைவரும் சென்னையில் நடந்த காங்கிரசின் போது வரவேற்புத் தலைவராய் இருந்தவரும் பார்ப்பனர்களின் தாசானுதாசராய் இருந்தவருமான திரு. முத்துரங்க முதலியாரும் மற்றும் அதன் காரியதரிசியாய் இருந்த திரு. கே. பாஷ்யம் ஐயங்காரும் மற்றும் நிர்வாக அங்கத்தினர்களான திருவாளர்கள் எஸ். சத்தியமூர்த்தி சாஸ்திரி ஆர்.சீனிவாசய்யங்கார் முதலியவர்கள் நிர்வாக சபையில் ராஜீனாமா செய்து விட்டார்கள். காங்கிரஸின் நிலைமை எங்கு பார்த்தாலும் இதே கதியாகத்தான் இருந்து வருகின்றது. ஏனெனில் கொஞ்ச காலமாய் காங்கிரசில் இந்த மாதிரி ஆள்கள்தான் அதில் இருக்க முடிந்தது. அதாவது சட்டசபை மந்திரி முதலிய ஸ்தானங்களுக்கு அபேட்சை உள்ளவர்கள் மாத்திரம் அதில் இருக்கும்படி இருந்தது. இப்போது அதற்கு இடமில்லாமல் ஒரு சமயம் ஜெயிலுக்கும் போகும் படியான சந்தர்ப்பம் ஏற்படக் கூடும் என்று தெரிவதால் அப்படிப்பட்ட ஆள்கள் அதை விட்டு ஓடி வேறு கட்சிகளின் பெயர்களைச் சொல்லிக் கொண்டு வாழவேண்டியதாய் விட்டது. இதனாலேயே காங்கிரசை பார்ப்பனர்கள் வளர்த்து வந்த உத்தேசம் இன்னது என்பது நன்றாய் விளங்கும்.

நிற்க, இன்றைய தினம் சென்னை மாகாணத்தில் காங்கிரசிலிருந்து ராஜீனாமா கொடுத்து ஓடுகின்ற ஆள்கள் எல்லாம் சென்னையில் காங்கிரஸ் கூடியபோது லாகூர் தீர்மானமாகிய பூரண சுயேச்சை தீர்மானத்தை வெகு வீரத்துடன் ஆதரித்த ஆசாமிகளாவார்கள். ஆனால் அத்தீர்மானம் லாகூரில் நிறைவேற்றி அதற்கு ஆரம்பவிழா நடத்தப் போவதாக பிரஸ்தாபம் வெளிப்பட்டவுடன் ராஜினாமா கொடுத்து ஓடிவிட்டார்கள். இதற்கு அவர்கள் சொல்லும் காரணம் என்ன வென்றால் அதிகாரமுள்ள எல்லா ஸ்தாபனங்களையும் கைப்பற்ற வேண்டும் என்பதேயாகும். எனவே உத்தியோகமும் தேர்தல் ஸ்தாபனங்களை கைப்பற்றுவதுமேதான் இந்த பார்ப்பனர் களுடையவும் அவர்களது அடிமைகளுடையவும் தேசீய லட்சியம் என்ப தையும் அதற்கு வழி இருந்தால் தான் பூரண சுயேச்சையில் கலந்திருப்பார் கள் என்பதையும் மற்றவர்கள் யாராவது அப்படிச் செய்தால் அவர்களை குலாம் என்றும் சர்க்கார் தாசர்கள் என்றும் சிறிதும் மானம் வெட்கம் இல்லாமல் எழுதுவார்கள் என்பதையும் ஒரு சமயம் ஜெயிலுக்கு போக வேண்டிய



RangaRakes tamilnavarasam.com

தாயிருந்தால் இராஜினாமா கொடுத்து விட்டு ஓட்டம் பிடிப்பார்கள் என்பதையும் நாம் நம் வாசகர்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டியதில்லை என்றே நினைக்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.03.1930**



# பட்ஜட் என்னும் வரவு செலவு திட்டம்

சமீபத்தில் சென்னை சட்ட சபையில் நிகழப்போகும் பட்ஜட் வரவு செலவு திட்ட நடவடிக்கையில் மூன்று காரியம் செய்ய பணம் ஒதுக்கி வைக்கவேண்டும் என்னும் விஷயத்தில் கவலை எடுத்து அனுகூலப் படுத்திக் கொடுக்க வேண்டுமாய் சட்டசபை அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம். அதாவது,

1. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு புஸ்தகம் துணி சாப்பாடு ஆகியவைகள் சாக்கார் பணத்திலிருந்து செலவு செய்து கல்வி கற்றுக் கொடுப்பது.

2. மாகாணத்தில் சென்னையை விட்டு வெளியில் தமிழ்நாட்டில் ஒன்றும் ஆந்திர நாட்டில் ஒன்றுமாக விதவைகள் ஆச்சிரமம் வைத்து அவர்களுக்கு சௌகரியப்பட்ட பெற்றார் உற்றார்கள் இடமிருந்து செலவுக்கு துகை பெற்றும் முடியாதவர்களானால் சர்க்காரிலிருந்தே செலவு செய்தும் சாப்பாடு துணி கொடுத்துக் கல்வியோ தொழிலோ கற்றுக் கொடுத்து ஜீவனத்திற்கு வழியேற்படுத்திக் கொடுப்பது.

3. இப்போது மது விலக்குப் பிரசாரம் செய்வதுபோலவே சர்க்கார் செலவில் மாகாணமெங்கும் தீண்டாமை விலக்குப் பிரசாரம் செய்வது. இம் மூன்று காரியங்களுக்கும் பணம் ஒதுக்கிவைக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ஆகவே சட்டசபை அங்கத்தினர்களும் மந்திரிகளுமான கனவான்கள் இவ்விஷயங்களை கவனிப்பார்களாக.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.03.1930**



RangaRakes tamilnavarasam.com

# மகா விஷ்ணுவுக்கும் லட்சுமிக்கும் நடந்த சம்பாஷணை

**- சித்திரபுத்திரன்**

**மகா விஷ்ணுவான ஸ்ரீரங்கம் ரங்கநாதர்:-** அடீ என் அருமைக் காதலியாகிய லட்சுமி! இந்த உலகத்திலும் மேல் உலகத்திலும் உள்ளவர்களுக் கெல்லாம் ஐசுவரியம் கொடுத்துவரும் செல்வ தெய்வமாகிய உன்னையே நான் மனைவியாகக் கொண்டு இருந்தும் என்னையே நீ சாப்பாட்டிற்கே லாட்டரி சீட்டு போடும்படியாய் செய்து விட்டாயே இது யோக்கியமா?

**லட்சுமியான ஸ்ரீரங்க நாயகி:-** நாதா என் பேரில் என்ன தப்பு? நீங்கள் என் ஒருத்தியோடு மாத்திரம் இருந்தால் பரவாயில்லை. இன்னமும் எத்தனையோ பேர்களை மனைவியாகக் கொண்டிருக்கிறீர்கள். இதெல்லாம் நீர் நன்றாய் நெய்யும் தைரும் சாப்பிட்டதால் உமக்கு கொழுப்பு ஏறியதினால் தானே? உங்கள் பக்தர்களுடைய பெண்களையெல்லாம் கூட கை வைத்து விட்டீர். இப்படிப்பட்ட உம்மை சாப்பாட்டுக்கே லாட்டரி போடும்படியாக ஏன் செய்யக்கூடாது?

**விஷ்ணு:-** ஐய்யய்யோ அதனாலா இப்படி செய்து விட்டாய்! நான் இதை ஒரு தப்பாக நினைக்கவே இல்லையே. அப்படி செய்வதும் ஒரு லட்சுமிகடாக்ஷம் என்று தானே நினைத்திருந்தேன். உனக்கு கோபமாயிருந் தால் நாளைய தினமே அவர்களையெல்லாம் விரட்டி அடித்து விடுகிறேன்.

**லட்சுமி:-** விளையாட்டுக்குச் சொன்னேன். கோபித்துக் கொள்ளா தீர்கள். இன்னம் எத்தனை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளுங் கள். எனக்கு அதைப்பற்றி கவலையில்லை.

**விஷ்ணு:-** பின்னையேன் லாட்டரி சீட்டு போடச் செய்தாய்?

**லட்சுமி:-** வேறு சிலருக்கு அதாவது லாட்டரி சீட்டு போடுபவர் களுக்கு செல்வத்தை கொடுப்பதற்காக லாட்டரி சீட்டின் மூலமாய் செல் வத்தை சேர்ப்பதற்கு அப்படிச் செய்யச் சொன்னேன்.



RangaRakes

**விஷ்ணு:-** அப்படியானால் அது எனக்கல்லவா அவமானமாய் இருக்கின்றது. எங்கு பார்த்தாலும் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் லாட்டரி சீட்டு, ரங்க நாதர் லாட்டரி சீட்டு என்று அல்லவா பணம் வசூல் செய்கின்றார்கள். இந்த அவமானத்தில் உனக்கும் பங்கில்லையா?

**லட்சுமி:-** அடேயப்பா இதில்தானா உமக்கு பெரிய அவமானம் வந்துவிட்டது? உங்கள் பேருக்கு முன்னால் பொட்டுகட்டி உங்கள் தாசி யென்று பெயரும் செய்து கண்ட கண்ட பசங்கள் எல்லாம் கொளுத்துகிறார் களே, அதிலில்லாத அவமானம்தானா உமக்கு லாட்டரி சீட்டில் வந்து விட்டது? பக்தர்களின் பெண்களை தாங்கள் கைப்பற்றுவதும் தங்கள் தாசி களை பக்தர்கள் அனுபவிப்பதும் தங்களுக்கும் பக்தர்களுக்கும் உள்ள பந்துத்துவமாகும்.

**விஷ்ணு:-** அதெல்லாம் தான் இப்போது நமது உண்மை பக்தர் களாகிய சுயமரியாதைக்காரர்கள் தோன்றி சட்டசபை மூலமும் குடிஅரசு மூலமும் நிருத்தி நமது மானத்தைக் காப்பாற்றி விட்டார்களே. இனி என்ன பயம். ஏதோ சில கெழடுகிண்டு இன்னம் கொஞ்ச நாளைக்கு இருக்கும் அப்புரம் நம்ம பேரால் இந்த அவமானமான காரியமாகிய அக்கிரமங்கள் நடக்காது.

**லட்சுமி:-** அப்படியானால் அது போலவே இந்த காரியமும் (அதாவது லாட்டரி சீட்டு போட்டு நமக்கு சோரு போடும் காரியமும்) அவர்களாலேயே சீக்கிரம் நிறுத்தப்பட்டு விடும் கவலைப்படாதீர்கள், இன்னம் கொஞ்ச நாளைக்குப் பொருத்துக் கொண்டிருந்தால் போதும்.

**குடி அரசு - உரையாடல் - 09.03.1930**



tamilnavarasam.com

# காந்திப் போர்

இந்தியாவில் இப்போது எங்கு பார்த்தாலும் பேசிக் கொண்டிருக்கும் படியானதும் ஏதோ ஒரு பெரிய கிளர்ச்சியை உண்டு பண்ணப் போகின்றது என்று பாமர மக்களுக்குள் பிரமாதமாகப் பிரசாரம் செய்யப் படுவதற்கு உபயோகித்துக் கொண்டிருப்பதும், திரு. “காந்தியின் கடைசிப் போர்” என்று சொல்லப்படும் சத்தியாக்கிரக சட்ட மறுப்பு கிளர்ச்சியேயாகும். இந்த சத்தியாக்கிரக சட்ட மறுப்பு என்பதை உப்புக் காய்ச்சுவதன் மூலமும் உப்பளத்தில் இருந்து உப்பை அள்ளிக் கொண்டு போவதன் மூலமும் செய்து பார்ப்பதாக சொல்லிக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இம்மாதிரி திரு. காந்தியவர்கள் செய்வது இந்தியாவில் இது இரண்டாவது தடவையாகும். அதாவது, இதுபோலவே 1920, 21 - ம் வருஷத்தில் ஒரு தடவை பஞ்சாப் அநீதியைச் சொல்லிக் கொண்டு மது பானத்தின் பேரால் ஒரு கோடி ரூபாய் கை முதலாக வைத்து கள்ளுக்கடை மறியல் மூலமாய் ஒரு சட்ட மருப்பும் சத்தியாக்கிரகமும் தொடங்கப்பட்டு சுமார் நாலு மாத காலம் வெகு மும்முரமாய் நடந்தது. அதனால் சுமார் 20, 30 ஆயிரம் பேர்கள் வரை சிறைசென்று சிறைவாசமும் செய்தார்கள். அப்படி இருக்கையில் திடீரென்று அந்தச் சட்ட மருப்பு நிருத்தப்பட்டது. திரு. காந்தியும் அது சமயம் ஒரு பார்ப்பனரின் சூட்சியால் சிறையிலடைபட நேர்ந்தது. பிறகு படித்த கூட்டத்தாரால் அவ்வியக்கத்தையும் அவ்வுணர்ச்சிகளையும் அடியோடு நசுக்கப்பட்டு விட்டது. இதை யாவரும் அறிவார்கள். அது முதல் கொண்டு திரு. காந்தியார் விடுதலையாகி வெளியில் வந்து இந்த 5, 6 வருஷ காலமாய் அவருக்கு இன்னதுதான் செய்வது என்று தோன்றாமல் கதரின் பெயரைச் சொல்லி ஏராளமாக பணம் வசூலித்து அந்த பணத்தினால் தன்னுடன் கூட இருக்கும் சிஷ்யர்களையும் செல்வாக்குகளையும் கொண்டு அரசியல் புரட்டர்களின் இஷ்டப்படி யெல்லாம் அரசியல் இயக்கத்தை அவர்களுக்கு இணங்கச் செய்து கொடுத்துக் கொண்டு அரசியலில் தனக்கென ஒரு கொள்கையும் இல்லாமல் சமயத்திற்குத் தகுந்தபடியெல்லாம் பேசியும் நடந்தும் கொண்டு வந்தார். இதனாலேயே மனப்பூர்வமாய் அவரிடம் பக்திகொண்டு சுயநலமில்லாமல் உழைத்து வந்தவர்கள் பலர் அவரை விட்டு நீங்கினார்கள். இவைகளைப் பற்றி விவர விவரமாக நாம் அவ்வப்போது



தெரிவித்து வந்திருக்கின்றோமாதலால் இப்போது அவைகளை விவரிக்கவில்லை.

## நமது நிலை

நிற்க, நம்மைப் பொருத்தவரை அந்தக் காலத்தில் திரு. காந்தியிடம் நமக்கு இருந்த பக்தியும் கண்மூடித்தனமாய் குடும்ப சகிதமாய் அவரைப் பின்பற்றி வந்த தன்மையும் பிரருக்கு விளக்கிக்காட்டித்தான் தெரியச் செய்ய வேண்டியிருக்குமென்று நாம் நினைக்கவில்லை.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் 1922 ல சத்தியாக்கிரகம் மும்முரமாய் நடக்கும்போது பம்பாயில் சர் சங்கரன் நாயர் தலைமையில் கூட்டப்பட்ட வட்ட மேஜை (ரவுண்டேபிள்) மகாநாட்டின்போது திரு காந்தியவர்கள் பேசிய பேச்சிலிருந்தே நமது விஷயத்தை அறிந்து கொள்ளலாம்.

அதாவது **“சத்தியாக்கிரகத்தை நிறுத்துவதென்றால் அது என்னுடைய கையில் இல்லை, ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்மணிகளைக் கேட்டுச் செய்யவேண்டிய காரியமாகும்”** என்பதாக சொல்லி இருக்கிறார். மற்றும் அந்த சத்தியாக்கிரகத்திலும் சட்டமறுப்பிலும் நமக்கு இருந்த நம்பிக்கைகளைப் பற்றியும் அதில் நமக்கிருந்த துணிவுகளைப் பற்றியும் நாம் வாசகர்களுக்கு விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை என்றே கருதுகின்றோம். அதையும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் சர்க்காரின் அடக்கு முறைக்கு நாம் ஆளாக வேண்டியிருந்த அய்ந்து முக்கிய சந்தர்ப்பங்களிலும் வீடு சோதனை போடப்பட்ட பல சமயங்களிலும் மற்றும் 10 லும் 20 லும் தண்டிக்கக்கூடிய வழக்குகளிலும் நாம் எதிர் வழக்காடாமல் அடியோடு மறுத்து விட்டதன் மூலமும் பல தடவை சிறை சென்றதன் மூலமும் “தண்டிப்பதால் இவன் பயப்பட மாட்டான்” என்று கருதி இரண்டொரு தடவை சர்க்காரரே நம்மீது கொண்டு வந்த வழக்குகளை திருப்பி வாப்பீஸ் வாங்கிக் கொண்டதன் மூலமும் நன்றாய் உணரலாம். கடைசியாய் சொல்ல வேண்டுமானால் தமிழ்நாடு முழுமைக்கும் ஈரோட்டில் போடப்பட்ட 144 வது பிரிவு உத்திரவு மாத்திரம் தான் 50, 60 பேர்கள் கைதியான பின் ஆயிரக்கணக்கான மக்கள் சட்டத்தை மீறினதால் செல்லுபடி அற்றதாகிற்று. அதாவது அந்த உத்திரவு மீறினவர்களை சர்க்கார் அரஸ்ட் செய்யாமல் விட்டு விட்டார்கள். ஆகவே இவ்வளவு தூரம் நாம் கண்மூடித்தனமாய் திரு. காந்தியை பின்பற்றியதும் எதற்கும் தயாராய் இருந்து கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கத் துணிந்ததும் எதற்காக என்பதை இந்த சமயம் வாசகர்கள் சற்று கவனித்துப் பார்க்க வேண்டும். இதன்மூலம் நாம் ஏதாவது உத்தியோகத்தையோ பெருமையையோ வரும்படியையோ வயிற்றுப் பிழைப்பையோ அல்லது ஏதாவது ஒரு விதமாய் இதன் பேரால் வாழலாம் என்றோ உத்தேசித்து இதில் இறங்கினோமா? அல்லது தேசத்தின் நன்மையையும்



RangaRakes tamilnavarasam.com

கஷ்டப்பட்டும் மக்களின் பரிதாபத்தை ஒழிப்பதையும் எதிர்பார்த்து இறங்கினோமா? என்பதை வாசகர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சாதாரணமாக நாம் இத்தொண்டில் ஈடுபடும்போது ஈரோட்டில் உள்ள பிரபல வியாபாரிகளில் ஒருவனாகவும், முனிசிபல் சேர்மனாகவும், தாலூக்கா ஜில்லா போர்டுகளில் குறிப்பான அங்கத்தினராகவும், தேவஸ்தானக் கமிட்டி ப்ரசிடெண்டாகவும் மற்றும் ஜில்லாவில் உள்ள பொது ஸ்தாபனங்களில் எல்லாம் அனேகமாய் ஒவ்வொன்றிலும் தலைவனாகவும் அல்லது காரிய தரிசியாகவும் அல்லது நிர்வாக மெம்பராகவும் இருந்து வந்தோம். இந்நிலை யில் இருக்கும்போது தான் திரு. சி. ராஜகோபாலாச்சாரியாருடையவும் திரு. வரதராஜலுவுடையவும் நட்பினால் அவ்வேலைகளை திடீரென்று ராஜிநாமா கொடுத்து விட்டு சென்னைக்குச் சென்றோம். இது இப்போதைய நமது நண்பர்களுக்கும் எதிரிகளுக்கும் நன்றாய் தெரிந்த விஷயமாகும். ஆகவே நாம் இந்த சேவையில் இறங்கினது ஜீவனத்தையோ உத்தியோகத்தையோ பெருமையையோ வயிற்றுப் பிழைப்பையோ வாழ்க்கையையோ உத்தேசித்து இறங்கினோமா அல்லது உண்மையில் இறங்கினோமா? என்பதை யோசித்து முடிவு செய்து கொள்ள வாசகர்களுக்கே விட்டு விடுகின்றோம்.

## இதை ஏன் சொல்லுகிறோம்

நிற்க, நாம் ஏன் இதை இப்போது சொல்ல வந்தோமென்றால் “தேசத்தில் இது சமயம் நடக்கும் இவ்வளவு தீவிரக் கிளர்ச்சியில் மகாத்மா முதல் அனேக தேச பக்தர்கள் ஜெயிலுக்கு போய்க் கொண்டிருக்கையில் நீ இதில் சேராமல் இருப்பது “சரியா” என்று நமக்கே பல நண்பர்கள் எழுதி இருப்பதாலும் மற்றும் சர்க்காரினுடையவோ அல்லது மந்திரிகளினு டையவோ ஸ்தல ஸ்தாபனங்களின் தலைவர்களினுடையவோ தயவில் நாம் ஏதோ சுயநலம் கருதி சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு வகுப்பு பூசல்களைக் கிளப்பிவிட்டு தேச நன்மைக்கு இடையூறு செய்வதாக சிலர் விஷமப் பிரசாரம் செய்வதாக தெரிய வருவதாலும் அவைக ளுக்கு சமாதானம் சொல்ல இவற்றை முதலில் எழுதிவிட வேண்டியதா கின்றது. ஏனெனில் பொது ஜனங்கள் என்பவர்கள் பெரிதும் நமது நாட்டில் பாமர மக்களாகவே இருக்கின்றார்கள். இன்னமும் நல்லது கெட்டது இன்னது என்று அறிய முடியாத நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள் (ஏனெனில் 100 – க்கு 10 பேருக்குத்தான் கையெழுத்துப் போடத் தெரியும்) ஆதலால் இவைகள் சில சமயங்களில் நமது இஷ்டத்திற்கு விரோதமாகவே சொல்ல வேண்டியதாகிவிடுகின்றது. அன்றியும் நாம் கீழே சொல்லப் போகும் விஷயங்களுக்கும் இவைகளை முதலில் சொல்லிவிட்டால் தான் வாசகர்கள் ஏமாறாமல் உண்மையை உணரக்கூடும் என்றும் கருதியே சொன்னோம்.



RangaRakes

## போரில் நம்பிக்கை இல்லை

நிற்க, முதலாவதாக காந்திப்போர் என்பதில் எனக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை. அதாவது முதலாவது இதன் கொள்கைகளிடமும் நடத்துகின்ற தலைவர்களின் சொந்த கொள்கைகளிடமும் சில தலைவர்களின் நல்ல எண்ணத்தினிடமும் நமக்கு நம்பிக்கை இல்லை. ஏனெனில் இவர்கள் தேசத்தை விட தேச மக்களை விடத் தங்களின் நிலையையும் தங்களின் அந்தஸ்தையும் கவுரவத்தையும் பிரதானமாய்க் கருதி இருப்பவர்களும் சிலர் தங்கள் மதத்தின் ஆதிக்கத்தையும் வருணாச்சிரம தரும ஆதிக்கத்தையும் தங்கள் வகுப்பின் ஆதிக்கத்தையும் சிலர் பிரதானமாய்க் கருதி இருப்பவர் களுமாய் இருக்கின்றார்கள் என்று நாம் நினைக்கின்றோம். அன்றியும் இந்தியாவின் இன்றைய நிலைக்கு பூரண சுயேச்சை வேண்டு மானால் – விடுதலை வேண்டுமானால் சுயராஜ்யம் என்பது வேண்டுமானால் வெள்ளைக் காரர் சுயநல ஆட்சி ஒழிய வேண்டுமானால் முதலில் மத ஆதிக்கமும் அதன்குருட்டு நம்பிக்கைகளும் ஒழிய வேண்டும். தீண்டாமை ஒழிய வேண்டும். பெண்கள் கட்டுப்பாடு ஒழிய வேண்டும். ஜாதி ஒழிய வேண்டும். பார்ப்பனர் ஆதிக்கம் அடியோடு ஒழிய வேண்டும். முதலாளித் தன்மை ஒழிய வேண்டும். இவ்வளவும் நடந்த பிறகுதான் வெள்ளைக்கார கொடுங் கோன்மை (தானாய் ஒழிந்து விடும். அல்லது) நம்மால் ஒழிக்கப்பட வேண்டும். ஒழிக்கப்படவும் முடியும் என்பது நமது முடிவு.

அப்படிக்கில்லாமல் இப்போது வெள்ளைக்கார ஆட்சியைப் பற்றி யோ இந்தியாவின் தரித்திரத்தைப் பற்றியோ பேசுவதென்பது வெரும் (ஹம்பக்) மோசடி அல்லது மடமையான காரியமாகும் என்பதுதான் நமது முடிவு. ஏனெனில்,

## இந்தியா சரித்திரம்

இந்தியாவானது நமது புத்திக்கும் மனதிற்கும் எட்டக்கூடிய காலத்தி லிருந்து ஒரு நாளாவது யோக்கியமான அரசாட்சியில் இருந்ததாக இதுவரை எந்த சரித்திரத்திலிருந்தும் அறியக் கூடவே இல்லை. பாரத ராமாயண காலம் என்று சொல்லப்பட்ட கால ஆட்சியும் சேர, சோழ, பாண்டிய காலம் என்று சொல்லப்பட்ட கால ஆட்சியும் மகமதியர், நாயுடு, மராட்டியர் ஆகியவர்கள் காலம் என்று சொல்லப்பட்ட கால ஆட்சியும் ஆகிய இவைகளில் எதை எடுத்துக் கொண்டாலும் யோக்கியமான ஆட்சி நடந்ததென்று பெரும் பான்மை யோராலாவது ஒப்புக் கொள்ளக் கூடிய சரித்திரமோ உண்மையோ இருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

எந்தக் காலத்திலும் பாமர மக்களை ஏய்க்க ஒவ்வொரு கூட்டத்தார் அவ்வப்போது தோன்றி தங்களது முரட்டு பலத்தையும், தந்திரங்களையும், வஞ்சகங்களையும் கொண்டு ஒவ்வொரு வழியில் கிளர்ச்சி செய்து



tamilnavarasam.com

ஆதிக்கமும் சுயநலமும் பெற்றிருப்பதாகவே சரித்திரங்களில் மிகுதியும் காணப்படுகிறது. எல்லா தேசங்களை விட, "கலை ஞானத்தில்" சிறந்ததாகச் சொல்லப்படும் இந்தியாவிற்கு அதன் பழய கலைகளையும், ஆட்சிகளையும் பார்த்தால் இக்காலத்தில் காட்டுமிராண்டிகள் என்பவர்களிடத்திலும் காண முடியாததும் வெரும் கொள்ளைக் கூட்டத்தாரிடத்திலும் காணமுடியாதது மான செய்திகளைக் கொண்டதாகவே இருக்கிறது.

## வலுத்தவன் இளைத்தவனை ஆளுவான்

எது எப்படி இருந்தாலும் "இளைத்ததை வலுத்தது அடக்கி ஆண்டு அனுபவித்து வரும்" என்னும் இயற்கைச் சட்டம் யாராலும் எந்தக் கிளர்ச்சி யாலும் ஒரு காலமும் மாற்றிவிட முடியாதென்பதே நமது முடிவான அபிப்பிராயமாகும். ஆதலால் இளைத்தவன் தன்னை வலுத்தவனாக்கிக் கொள்ள முயற்சி செய்து கொண்டால் மாத்திரம் வெற்றி பெறலாமே யொழிய மற்றபடி வெரும் கிளர்ச்சியினால் வலுத்தவனை வென்று விட முடியவே முடியாது.

## நமது நாடு

நடு நிலையில் நின்று பேசுவோமேயானால் இன்றைய தினம் கல்வி, அறிவு, செல்வம், ஆயுள், தொழில், மனிதத் தன்மை, மானம், தைரியம், முன்னேற்றம், பொது நலம் முதலியவைகளில் மற்றெந்த நாட்டாரையும் விட நமது நாடு மிகுதியும் வலுவிழந்திருக்கின்றது.

உதாரணமாக இந்தியாவில் 100க்கு 10 பேர் படித்திருக்கிறார்கள்.

மேல் நாட்டில் 100 க்கு 90 பேர் படித்திருக்கிறார்கள்.

இந்தியர்களின் அறிவு அவர்களது "தலைவிதியில்" அடங்கி இருக்கின்றது.

மேல்நாட்டார் அறிவு அவர்களது விடா முயற்சியால் தூண்டப்பட்டு வருகின்றது.

இந்தியர்களின் ஆயுள் சராசரி 25 வயது.

மேல் நாட்டாரின் ஆயுள் சராசரி 50 வயது.

இந்தியர் வருவாய் ஆள் 1 க்கு சராசரி தினம் 0 – 2 – 8 பை.

மேல் நாட்டார் வருவாய் ஆள் ஒன்றுக்கு சராசரி தினம் 2 – 8 – 0 அணா.



RangaRakes

இந்தியாவில் புதுப்பிக்கப்படும் தேசீயத் தொழிலின் வரும்படி ஒரு மணிக்கு 0 – 0 – 1 தம்படி (இராட்டினத்தில் 1 மணிக்கு ஒரு காசு) கிடைக்கின்றது.

மேல் நாட்டில் புதுப்பிக்கப்படும் தொழில்களில் ஒரு மணிக்கு ஒரு ரூபாய் கிடைக்கின்றது.

இந்தியாவில் 100க்கு 93 பேர்கள் இழிமக்கள் "சூத்திரர்" சண்டாளர் (தீண்டார்) மிலேச்சர் (துலுக்கர்) நீச்சர் (கிறிஸ்தவர்) முதலானவர்களாக இருக் கின்றார்கள்.

மேல் நாட்டில் எல்லோரும் சரிநிகர் சமானமான மனிதர்களாக இருக் கின்றார்கள்.

இந்தியாவில் தைரியம் ஒரு துப்பாக்கி சத்தம் கேட்டால் குழந்தை களுக்கு காய்ச்சல் வந்து விடுகின்றது.

மேல் நாட்டில் குழந்தைகள் ஆகாயத்திலிருந்து வெடிகுண்டு எறிய ஆசைப்படுகின்றது.

இந்தியாவின் முன்னேற்றம் "ராம ராஜ்ஜியத்திற்கும் தொல்காப்பிய காலத்திற்கும்" ஆசைப்படுகிறது.

மேல் நாட்டின் முன்னேற்றம் அரசாட்சியையே வேண்டாமென் கின்றது.

இந்தியாவின் ஆராய்ச்சி சாக்கடை நீரைக் குடித்து தலையிலும் தெளித்துக் கொண்டால் வியாதி சவுக்கியமாகி மோட்ச லோகத்திற்குப் போக லாமென்கின்றது.

மேல் நாட்டு ஆராய்ச்சி இமயமலை உச்சிக்கும் சந்திர மண்டலத்துக் கும் போக முயர்ச்சிக்கின்றது. 10,000 மைல் 15,000 மையில் தூரம் தந்தியில் உருவம் போகின்றது.

இந்தியர்களின் தர்மம் வருஷம் பல கோடிக்கணக்கான பொருளை கோவில் கட்டவும் கும்பாபிஷேகம் செய்யவும் சாமிக்குப் பூசை செய்யவும் உற்சவம் செய்யவும் வாகனம் நகை செய்யவும் சோம்பேரிகளுக்கும் அயோக்கியர்களுக்கும் பிழைப்பை ஏற்படுத்தவும் செலவு செய்யப்படு கின்றது.

மேல் நாட்டார் தர்மம் படிப்புக்கும் தொழிலுக்கும் கொடிய வியாதியின் சிகிச்சைக்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஆராய்ச்சி செய்து அற்புதம் கண்டு பிடிப்பதற்கும் "இழி மக்களை" சரிசமான மனிதனாவதற்கு எல்லாம் மக்களும் சம இன்பமடைவதற்கும் செலவு செய்யப்படுகின்றது.



tamilnavarasam.com

இன்னும் இப்படியே நூத்துக்கணக்காக சொல்லிக் கொண்டே போகலாம்.

இவைகளுக்கு யார் பொருப்பாளி? வெள்ளைக்கார அரசாங்கமா? அல்லது நமது தேசீயமா? என்று தான் கேட்கின்றோம்.

மேலும் இவைகளில் அனேக விஷயங்கள் இந்தியாவில் இன்று மாத்திரமல்லாமல் நம் அறிவுக்கு எட்டாத சரித்திர காலம் முதலாகவே இப்படியே தானே இருந்து வருகின்றது. அன்றியும் இந்த நிலைமை தானே இந்தியாவுக்கு அடிக்கடி மனிதத் தன்மைக்கு விரோதமான கொடுங் கோன்மை ஆட்சியையும் அன்னிய ஆட்சியையும் உலகிலுள்ள மற்று யாவருக்கும் இளைத்த தன்மையையும் அளித்துக் கொண்டே வந்தது, வருகிறது.

## இதற்கு என்ன பரிகாரம்?

இந்த நிலையை மாற்ற இதுவரையில் யார் என்ன முயர்ச்சி செய்தார் கள்? இத்துறைகளில் யார் என்ன முன்னேற்றம் அடைந்தார்கள்? அல்லது அடைந்து வருகிறார்கள்? இதுதான் போகட்டும் என்றாலோ இன்றைய தினம் நடைபெரும் "காந்தி போரை" யாவது எடுத்துக் கொண்டால் அது மேற் சொன்னவைகளில் ஏதாவது ஒரு காரியத்தை மாற்ற உதவுமா என்று பந்தயம் கட்டி கேழ்க்கின்றோம். இந்தியாவுக்கு இன்றையத்தினம் உண்மையாய்ச் செய்ய வேண்டிய தொண்டு உப்புக் காச்சுவதா? உப்பு களங்களில் உப்பை வாரிக் கொண்டு வருவதா? அதற்காக மக்கள் ஜெயிலுக்கு போவதா? என்பதை வாசகர்களே நீங்கள் நடு நிலையில் இருந்து நன்றாய் கூர்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

## வைசிராய் சம்பளம்

இந்தியாவின் செல்வம் ஏழைகளின் வரிப்பணம் ஆகியவை "வெள்ளைக்காரர்கள் கொள்ளைஅடிப்பதற்கு"த் தகுந்த அளவுப்படி ஏன்? அதற்கு மேலாகவும் கூட இந்திய தேசியவாதிகள் என்பவர்கள் கொள்ளை அடிப்பதில்லையா? வெள்ளைக்காரர்கள் கொள்ளைக்கும் இந்தியர்களே ஆதாரமாய் இருந்து அவர்களுக்கு உளவு சொல்லிக் கொடுத்து அவர் களிடமிருந்து பங்கு வாங்குவதில்லையா? என்பதை யோசித்து பாருங் கள். இதற்கு வெள்ளைக்காரன் என்ன செய்வான். "எனக்கு வேண்டாம்" என்று சொல்லுவானா. திரு. காந்திக்கு வைசிராய் சம்பளமும் கவர்னர் சம்பளமும் பார்த்து சகிக்க முடியவில்லையாம். சத்தியாக்கிரகத்திற்கு இதை ஒரு காரண மாய் எழுதி இருக்கிறார். இந்திய தேசீய வாதிகளும் காங்கிரஸ் தலைவர் களுமான திருவாளர்கள் ஸின்ஹா சம்பளமும் சீனிவாச சாஸ்திரி சம்பளமும் அபிபுல்லா சம்பளமும் சிவசாமி அய்யர் சம்பளமும் சர்.சி. பி. அய்யர்



சம்பளமும், கிருஷ்ணன் நாயர் சம்பளமும் வெகு தர்மமானதும் நாணைய மானதுமான சம்பளமா என்று கேழ்க்கிறோம். இவர்களுக்கு இந்த சம்பளத்தை ஏற்படுத்தினவர்கள் இந்த திரு காந்தியும் அவர் கொஞ்சி விளையாடும் திரு. தேசீய காங்கிரசும் அல்லவா என்று கேழ்க்கின்றோம். 1920 ம் ஹிந்திய சீர்திருத்தம் இந்த திரு "மகாத்மா" காந்தியால் ஒப்புக் கொள்ளப்பட்டதும் வரவேற்கப்பட்டதும்தானா? அல்லவா? என்று கேழ்க் கின்றோம். நாம் நாலு திராம் சாராயம் குடித்துக் கொண்டு வெள்ளைக்காரனை ஒரு திராம் சாராயம் குடிக்க வேண்டாம் என்றால் இதில் நாணையமோ யோக்கி யமோ எப்படி இருக்க முடியும்? கஞ்சி வெள்ளம் சாப்பிட்டுக் கொண்டு மாதம் 2ரூ செலவில் வாழும் மக்கள் தேசத்து சர். சங்கர நாயருக்கு 6333 – 5 – 4 காசு சம்பளம் எதற்கு? பஞ்சாங்கம் சொல்லி பிச்சை எடுத்து வாழும் சர்மாவுக்கும் சாஸ்திரிக் கும் மாதம் 6333 – 5 – 4 காசு சம்பளம் எதற்கு? இதை ஏன் "மகாத்மா" வின் தேசீயமும் மனசாட்சியும் ஏழைகளிடமிருக்கும் அன்பும் தரித்திர நாராயண னும் ஆக்ஷேபிக்கவில்லை என்றுதான் கேட்கின்றோம். தினம் ஒன்றுக்கு ஆள் ஒன்றுக்கு 0 – 2– 8 பை வீதம் சம்பாதனை சம்பாதிக்கும் (இந்திய) தேசத்தானுக்கு மாதம் 1க்கு 6333 – 5 – 4 பை சம்பளம் வேண்டியிருந்தால் அதை தேசிய காங்கிரசும் அனுமதித்து அந்த காங்கிரசின் தலைவரே அந்தப்படி வாங்கிக் கொண்டும் வந்தால் நாள் ஒன்றுக்கு ஆள் 1 க்கு 2 – 8 – 0 அணா வரும்படியுள்ள (இங்கிலாந்து) தேசத்தானுக்கு என்ன சம்பளம் கொடுக்க வேண்டும்? மாதம் ஒன்றுக்கு 95000 தொண்ணூற்றய் யாயிரம் ரூ. அல்லவா நாம் கொடுக்க வேண்டும். இப்போது நாம் வைசிராய்க்கு 21, 000ரூ. தானே கொடுக்கின்றோம். ஆகவே, இந்த ஒருவர் சம்பளத்திலேயே ஏழை இந்தியாவுக்கு *மீ* 74,000 ரூ. மீதிதானே? இதுபோலவே சர் .சி. பி. ராமசாமி அய்யர் சம்பளம் வாங்கிய 5333 – 5 – 4 வீதம் கணக்கு பார்த்தால் சென்னை கவர்னருக்கு *மீ* 80,000 என்பது ஆயிர ரூ. கொடுக்க வேண்டாமா? இப்போது அவருக்கு 10 ஆயிரம் தானே கொடுக்கின்றோம். இதில் ஏழை இந்தியாவுக்கு *மீ* 70 ஆயிரம் மீதி இல்லையா? இது போலவே நாம் உப்பு வாங்குவதில் சர்க்காருக்கு கிடைக்கும் வரிப்பணத்தையும் திருப்பவும் சம்பள ரூபமாக நமது தாஸ், நேரு, போஸ், பட்டேல், சாப்ரூ, ஸின்ஹா, அய்யர், அய்யங்கார், ஆச்சாரி, சர்மா, சாஸ்திரி, சாயபு, நாயர், முதலியார், நாயுடு, ரெட்டியார், செட்டியார், கவுண்டர், (வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படி)ஆகிய தேசிய வாதிகளும் காங்கிரஸ் தலைவர்களும் காந்தி சிஷ்யர்களும் *மீ* ஒன்றுக்கு 2000, 3000, 5000, 6000, 7000 வீதம் பங்கு போட்டுக் கொள்கிறார்களே ஒழிய யாராவது வேண்டாமென்று சொல்லி வாப்சு செய்து சம்பளத்தை குறைத்துக் கொண்டார்களா? குறைத்தார்களா? குறைக்கவாவது திட்டம் வைத்திருக்கிறார்களா? இந்தப்படியே மற்ற இந்திய தேசாபிமானிகள் வாங்கும் சம்பளத்திற்கும் "கொள்ளைக்கார வெள்ளைக்காரர்கள்" வாங்கும் சம்பளத்திற்கும், யார் வாங்குகின்ற சம்பளம் அவர்களது தகுதிக்கும் தேவைக்கும் மேல் கொண்டது என்று கேழ்க்கின்றோம். ஆகவே இந்தியர்



RangaRakes tamilnavarasam.com

களின் வரி உயர்வுக்கும் அவ்வரி கொள்ளை அடிக்கப்படுவதற்கும் இந்திய தேசியவாதிகளும் தேசீய காங்கிரசும் அவைகளை ஆதரித்த மகாத்மாக் களும் ஜவாப்தாரிகளா அல்லது வெள்ளைக்காரர்கள் ஜவாப்தாரிகளா? என்று இப்போது யோசித்துப் பாருங்கள்.

## இதுவரை செய்தது என்ன?

ஆகவே இந்தப்படி போகும் கொள்ளையை நிருத்த இதுவரை "மகாத்மா" என்ன செய்தார். இந்திய தேசியம் என்ன செய்தது என்று கேட்கின்றோம்,

இந்த வரியினால் கஷ்டப்படுகின்றவர்கள் குடியானவர்களேயாவார் கள். அவர்களுக்கு கஷ்டப்பட்டு உழைப்பவர்கள் தீண்டாத வகுப்பார்களான "சண்டாளர்" களாவார்கள். இந்த இரு வகுப்புக்கும் காந்தி கடைசிப் போரில் "மகாத்மா" என்ன வழி செய்தார் அல்லது செய்கின்றார் என்று கேழ்க் கின்றோம். குடியானவர்கள் வரி குறைய வேண்டுமானால் முதலில் வரி மறுப்பு செய்வதா அல்லது சம்பள மறுப்பு செய்வதா என்றுதான் கேட்கின் றோம். அது போலவே சண்டாளர்களை மனிதர்களாக்க வேண்டுமானால் முதலாவது கட்டுப்பாடுகளை உடைப்பதா அல்லது கட்டுப்பாடுகளான ராமாயணம் பாரதம் வருணாசிரமம் ஆகியவைகளை நிலை நிறுத்த பிரசாரம் செய்வதா என்று கேட்கின்றோம். இவைகளை யெல்லாம் விட்டு விட்டு உப்புக் காய்ச்சுவதால் மக்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டுவிடும். வேண்டுமானால் பாமர மக்களில் சிலர் ஏமாந்து ஜெயிலுக்குப் போகக் கூடும். இதனால் நமக்கு லாபமும் இல்லை நஷ்டமுமில்லை. ஆனாலும் தேச முற்போக்கு வெகுதூரம் தடைப்பட்டு விடும் என்றே பயப்படுகின்றோம். அன்றியும் வெள்ளைக்கார னுக்கும் தனது கொள்ளைக்குத் தக்க நியாயம் கிடைத்துவிடும் என்றும் கருதுகின்றோம். ஆகையால் காந்திப் போரால் நாட்டிற்கு நன்மை இல்லை என்றும் கெடுதியே அதிகம் ஏற்படும் என்றும் சொல்ல வேண்டியிருக்கிறது.

## கல்லுச் சாமியும் அயோக்கிய மத ஆச்சாரிகளும்

இந்தியப் பாமரக் குடியானவர்களும் கொடுமைப்படுத்தப்பட்ட வாயில்லாப் பூச்சிகளான கூலிகளும் தீண்டப்படாதவர்களும் பாடுபட்டும் கஷ்டப்பட்டும் சம்பாதித்த பணத்தை நமது நாட்டு கல்லுச் சாமிகளும், அயோக்கிய மத ஆச்சாரிகளும், அக்கிரம மடாதிபதிகளும், சூழ்ச்சிக்காரப் பார்ப்பனர்களும் சுயநலப் படித்தவர்களும் மூட பணக்காரர்களும் கொடிய முதலாளிகளும் மற்றொருபுரம் கொள்ளையடித்துக் கொண்டு நாட்டைக் கொடுமைப்படுத்திக் கொண்டு இருப்பதை விட உலகத்திற்கே முன்னணியில் இருந்து கொண்டு உலக முற்போக்கில் கவலை எடுத்து உழைக்கின்ற முயற்சியும் தகுதியுமுடைய மக்களுக்குப் போவதில் உலகத்திற்கு என்ன



கஷ்டம் வந்து விடும் என்று கேட்கின்றோம். "தகுதியுடையவனே அடை வான்" என்கின்ற இயற்கை சட்டம் யார் தடுத்தாலும் செலாவணியாய்க் கொண்டு தான் இருக்கும்.

மதத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கூச்சல் போடும் சூழ்ச்சிக் காரர்கள் மக்களை தெருவில் நடக்கவிட மாட்டேன் என்கின்றார்கள்.

கடவுளைக் காப்பாற்ற வேண்டும் என்னும் கசடர்களோ, அக்கடவு ளைக் காண மனிதனை அனுமதிக்க மாட்டேன் என்கின்றார்கள்.

மறைகளையும் கலைகளையும் காப்பாற்ற வேண்டும் என்னும் சுயநல தூர்த்தர்களோ அம்மறைகளையும் கலைகளையும் மக்கள் கற்க - அதன் உண்மையை அறிய .இடம் கொடுக்க மாட்டேன் என்கின்றார்கள்.

இந்த மாதிரி மக்களைக் கொண்ட ஒரு நாட்டில் உள்ள ஒரு அரசாங் கத்தை அல்லது வெள்ளைக்காரர்களை ஒழித்துவிடுவதால் யாருக்கு என்ன பலன் கிடைக்கும் என்பது நமக்கு விளங்கவில்லை.

வெள்ளைக்காரர்களையோ அல்லது அரசாங்கத்தையோ ஒழித்து விட்டு இந்த பாமர மக்களையும் ஏழைக் கூலிகளையும் தீண்டக் கூடாத "சண்டாளர்களையும்" பிரகு யாரிடம் ஒப்புவிப்பது என்பதும் நமக்கு விளங்க வில்லை.

## ஒத்துழையாமையும் பார்ப்பனரும்

ஒத்துழையாமையின் போது சர்க்கார் மீது மக்களுக்கு எவ்வளவோ வெறுப்பை உண்டாக்கினோம். அதனால் சர்க்காரும் சற்று கலங்கினார்கள். ஆனால் அது சமயமும் ஒரு பார்ப்பான்தான் திரு. காந்தியைப் பிடித்து சிறையில் வைக்க யோசனை கூறி சர்க்காருக்கு உதவி செய்தார். அதன்பிறகு அந்த பலனை யார் அனுபவித்தார்களென்றால் அந்தப் பார்ப்பனர்களே யாவார்கள். உதாரணமாக ஒத்துழையாமை ஒடுங்கின உடனே திரு. இராஜ கோபாலாச்சாரியார் பார்ப்பனர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்கவும் பார்ப் பன ஆதிக்கத்திற்கு ஏற்ற மந்திரிகளை நியமிக்கவும் கோவைக்கும் சென் னைக்கும் ஓடி வந்து விட்டார். மற்றும் ஒத்துழையாமையை வைத, ஒழித்த பார்ப்பனர்கள் எல்லாம் உடனே காங்கிரசுக்காரர்களாகவும், தேசீயவாதி களாகவும் ஆகி பார்ப்பனரல்லாதார் கட்சியை ஒழிக்க ஆளுக்கொரு கல்லைத் தூக்கிப் போட்டார்கள். அது போலவே இப்போதும் தமிழ்நாட்டில் இந்த காந்திபோரின் பேரால் ஒரு ஆயிரம் இரண்டாயிரம் பேரையாவது நாம் ஜெயிலுக்கனுப்பி வைத்தோமேயானால் அடுத்து வரும் ஆகஸ்டு செப்டம்பர் மாதம் சட்டசபை தேர்தலில் பார்ப்பனர்களுக்கு அல்லது அவர்கள் அடிமை களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுத்து பார்ப்பனரல்லாதார் கட்சியை அழித்து



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஏற்ற மந்திரிகளை நியமிக்க இதே திரு. இராஜ கோபாலாச்சாரியார் மறுபடியும் சென்னைக்கு ஓடிவந்து விடுவாரென்பதில் யாருக்கு என்ன சந்தேகம். அதற்காகவே திருவாளர்கள் சத்தியமூர்த்தி, வெங்கிட்டரமணய்யங்கார், சீனிவாசய்யங்கார், முத்துரங்க முதலியார், வரதராஜுலு நாயுடு, ஆதிநாராயண செட்டியார் முதலாகியவர்கள் காங்கிரசில் ராஜினாமா கொடுத்து விட்டு திரு. ராஜகோபாலாச்சாரியார் வசம் காங்கிரசை யும் ஒப்புவைத்து விட்டு தயாராய் நாக்கில் ஜலம் சொட்ட காத்துக் கொண் டிருக்கிறார்கள்.

## தேர்தல் சூழ்ச்சி

இந்த பார்ப்பனர்களும் அவர்களது அடிமைகளும் சட்ட சபைக்குப் போவதுதான் காந்திப் போரின் சட்ட மறுப்பும் சத்தியாக்கிரகமும் என்பதானது தேர்தல் சூழ்ச்சியாய் முடியுமே அல்லாமல் வேறு ஏதாவது காரியம் தமிழ் நாட்டில் நடக்குமா என்று கேட்கிறோம். மேலும் சர்க்கார் மது விலக்குப் பிரசா ரத்தைப் பரிகாசம் செய்து கெட்ட எண்ணம் கற்பிக்கும் இதே திரு. ராஜ கோபா லாச்சாரியாரின் சென்ற தேர்தலுக்கு முந்திய மதுவிலக்குப் பிரசாரத்தின் யோக்கியதை என்ன ஆயிற்று?

வருணாச்சிரமக்காரரான ஒரு திரு. வெங்கிட்டரமண அய்யங்காருக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்கவும் பார்ப்பனரல்லாத கட்சி மந்திரிகளை அழிக்கவும் தானே உபயோகப்பட்டது. இந்த திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் தானே ஒத்துழையாமையை அழிக்க சூழ்ச்சி செய்து காங்கிரசையும் அய்யங்கார் வசம் ஒப்புவித்து அவருக்குத் தலைவர் பட்டம் சூட்டினார்.

## நமது சபதம்

டில்லி காங்கிரசில் சூட்சி செய்து காக்கினாடா காங்கிரசில் வெளிப் படையாக நமது மனம் பதறப்பதர திரு. ராஜகோபாலாச்சாரியார் தானே ஒத்துழைமைக்கு கருமாதி செய்தார்? அப்போதே நாம் காங்கிரசை எதிர்த்துப் பிரசாரம் செய்வதாய் சபதம் செய்துவிட்டு வந்தோம். அந்தப்படியே செய்தோம். பிரகு பெல்காம் காங்கிரசில் திரு. காந்தியைப் புரோகிதராய் வைத்து திதியும் செய்துவிட்டார். அப்போதும் திரு. காந்தியிடம் நாம் இந்த கெதி ஆகுமென்று சபதம் கூறிவிட்டுத்தான் வந்தோம். அடுத்தாப் போல் காஞ்சீபுரத்திலும் பைத்தியக்கார திரு. கல்யாணசுந்திர முதலியாரைக் கொண்டு எம் போன்றவர்களைத் தைரியமாய் வெளியாக்கினார். அப்போதும் பொதுஜனங்களிடம் இந்த விஷயங்களைச் சொல்லிச் சபதம் கூறிவிட்டே வெளியேறினோம்.

கடைசியாக பெங்களூர் சென்று திரு. காந்தியவர்களிடம் தனித்து உண்மைகளைச் சொல்லி விட்டு வந்துதான் நமது தொண்டை தீவிரமாய் ஆரம்பித்தோம். ஆகவே அன்றுமுதல் இன்றுவரை நாம் ஒரே கொள்கை யுடன் ஒரே தொழிலைத்தான் செய்து வருகின்றோம். இதனால் நம் நாட்டுக்கு இதுவரை என்ன கெடுதல் ஏற்பட்டுவிட்டது என்பது நமக்கு விளங்கவில்லை. நமது தொண்டுக்கு வேறு விதமாக சமாதானம் சொல்ல முடியாதவர்கள், கடவுளும் மதமும் கலைகளும் போய்விட்டது என்றுதான் சொல்கின்றார் களே அல்லாமல் வேறு ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே கடவுளுக்காகவும் மதத்திற்காகவும் கவலைப்படுவது போன்ற ஒரு முட்டாள்தனம் உலகில் வேறு ஒன்றும் இருக்கக்கூடுமென்று நம்மால் கருதமுடியவில்லை. இதைப் பற்றி அநேக தடவை எழுதி இருக்கின்றோம். ஆதலால் இப்போது மறுபடியும் விரிக்கவில்லை.

நம்மைப் பொருத்தவரை நமது மக்களுக்குச் சுயமரியாதை ஏற்பட்டு மனிதத் தன்மையுடன் எல்லோரும் சரிசமமாக வாழவேண்டு மென்பதுதான் நமது ஆசையே ஒழிய வெள்ளைக்காரன் போவதோ இருப்பதோ நமது கவலையல்ல. உலகத்தில் நமது பாழும் இந்தியாவைத் தவிர மற்ற எந்த நாட்டிலும் இது சமயம் சமதர்மக் கொள்கைகளே தலைவிரித்து ஆடுகின்றன. இந்தியா மாத்திரம் பார்ப்பன ஆதிக்கத்திலும் முதலாளிகள் ஆதிக்கத்திலும் நசுக்குண்டு அன்னிய ஆட்சிக்கு உளவாளியாகவும் கூட்டாளியாகவும் இருந்து வருகின்றது. இந்த நிலையை மாற்ற திரு. காந்தியின் உப்புக் காச்சும் சத்தியாக்கிரகமோ சட்ட மறுப்போ ஒருக்காலும் பயன்படாது என்று நாம் கருதுவதால் நாம் அதில் கலந்து கொள்ள முடியாமைக்கு வருந்துகின்றோம். மற்றபடி உண்மையான விடுதலைக்கும் சமத்துவத்திற்கும் என்று எந்த வேலை ஆரம்பித்தாலும் நமது உயிரையும் கொடுக்க நாம் எப்போதும் தயாராகவே இருக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 16.03.1930**


RangaRakes
tamilnavarasam.com

# தேவதாசி ஒழிப்புச் சட்டம்

கோயில்களில் பெண்களை பொட்டுக்கட்டுவதைத் தடுக்க சட்டம் செய்யவேணுமாய் திரு. முத்துலக்ஷிமி அம்மாள் அவர்களால் சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும் சட்டத்தை சர்க்கார் நமக்கு அனுப்பி அதன் மீது நமது அபிப்பிராயம் கேட்டிருக்கின்றார்கள்.

இதற்காக சர்க்கார் பொதுஜனங்களின் அபிப்பிராயம் கேட்பது என்பது கோமாளித்தனம் என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில் கோவில்களில் கடவுள்கள் பேரால் பெண்களுக்கு பொட்டுக்கட்டி அவர்களையே பொது மகளீர்களாக்கி நாட்டில் விவசாரித்தனத்திற்கு செல்வாக்கும் மதிப்பும், சமய சமூக முக்கிய ஸ்தானங்களில் தாராளமாய் இடமும் அளித்து வரும் ஒரு கெட்ட வழக்கம் நமது நாட்டில் வெகுகாலமாய் இருந்து வருகின்றது. அன்றியும் நாளாவட்டத்தில் இது ஒரு வகுப்புக்கே உரியது என்பதாகி, இயற்கையுடன் கலந்த ஒரு தள்ளமுடியாத கெடுதியாய் இந்த நாட்டில் நிலைபெற்றும் விட்டது. ஒரு நாட்டில் நாகரீகமுள்ள அரசாங்கமாகவாவது அல்லது நாட்டின் சுயமரியாதையையோ, பிரஜைகளுடைய ஒழுக்கத்தையோ, நலத்தையோ, கோரின அரசாங்கமாகவாவது ஒன்று இருந்தால் இந்த இழிவான கெட்ட பழக்கம் கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் சமூகத்தின் பேராலும் தேசிய வழக்கத்தின் பேராலும், இருந்து வர ஒரு க்ஷண நேரமும் விட்டுக்கொண்டு வந்திருக்காதென்றே சொல்லுவோம்.

ஆனால் நமது இந்தியாவில் வெள்ளைக்கார ஆட்சி குடி புகவும் நிலை பெறவும், நம் நாட்டுச் சுயநலப் பார்ப்பனர்கள் உளவாளிகளாகவும் உதவியாகவும் இருந்து வந்ததால் அப்பார்ப்பனர்களுக்கு அனுகூலமாக வெள்ளைக்காரர்களும் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருந்ததால் அந்தப் பார்ப்பனர்கள் சொல்லுகின்றபடியே நடந்து (வெள்ளைக்காரர்கள்) தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தில் பட்டு விட்டார்கள். இந்தக் காரணங்களால் அவர்கள் பார்ப்பனர்களுக்கு விரோதமாய் சீர்திருத்தத் துறையிலாவது, மனிதத்தன்மைத் துறையிலாவது இதுவரை ஒருவித முற்போக்கான காரியமும் செய்யாமலே இருக்க வேண்டியவர்களாகி விட்டார்கள். ஆனால் இப்போது கொஞ்ச காலமாய் அப்பார்ப்பனர்களின் தந்திரத்தையும் சூழ்ச்சியையும் கண்டுபிடித்து அவர்களது யோக்கியதைகளை அடியோடு வெளியாக்கி சீர்திருத்தங்களை உத்தேசித்து நாமும் வெள்ளைக் காரர்களை மிரட்டக்கூடிய சமயம் மிரட்டியும், ஆதரிக்கக் கூடிய சமயம் ஆதரித்தும் பார்ப்பனர்களின் செல்வாக்கை ஒழித்து நமது சத்தியத்தையும் தீவிர ஆசையையும் காட்ட ஆரம்பித்துவிட்டதால், இப்போது ஏதோ சிறிது அளவுக்காவது சர்க்காரார் சீர்திருத்தத் துறையில் நமது இஷ்டத்திற்கும் இணங்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நிலைமையின் பலனேதான் இப்போது நமது கொள்கைகள் சிலது நாட்டில் பிரசாரம் செய்யவும் செல்வாக்குப் பெறவும் இடம் ஏற்பட்டதும்; சட்டசபையில் இது சமயம் ஒரு முடிவை பெற்று தீரவேண்டிய அவசியம் ஏற்பட்டுப் பொதுஜன அபிப்பிராயத்திற்கு வர நேர்ந்ததுமாகும்.

நிற்க, இப்போது திருமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்களால் சென்னை சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும், "பொட்டுக் கட்டுவதை ஒழிக்கும்" இந்த மசோதாவானது வெகு காலமாகவே ஜனப் பிரதிநிதிகள் என்பவர்களால் பொதுக்கூட்டங்களிலும் பொதுமகாநாடுகளிலும் கண்டித்துப் பேசப்பட்டிருப்பதுடன் இம்மாதிரி ஒரு சட்டம் செய்ய வேண்டுமென்று இந்திய சட்டசபைக் கூட்டங்களிலும் அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்டும் வந்திருக்கின்றது. இது சம்மந்தமாக, திருமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்கள் ஒரு துண்டு பிரசுரம் வெளியிட்டு இருக்கிறார். அதன் சுருக்கமாவது.

## தேவதாசி மசோதா

இந்த சமூகக் கொடுமையை ஒழிக்க ஆரம்பித்த கிளர்ச்சியானது 1868 வருஷ முதல் நடைபெற்று வருகிறது. 1906, 1907 வருஷம் உலக தேசீய மகாநாட்டில், இந்தக் கொடிய கெட்ட வழக்கத்தை ஒழிப்பதற்காகப் பல மாகாண சர்க்கார் அபிப்பிராயங்களையும் அறிந்து தம்மால் கூடியவரை ஒழிப்பதென முடிவு செய்ததினின்று, இந்தியா கவர்ன்மெண்டும், இந்த தேவதாசி மசோதாவில் அதிக சிரத்தைக் காட்டி வந்தது.

1912 வருஷம் பழைய இம்பீரியல் சட்ட நிரூபண சபையில் மூன்று இந்திய அங்கத்தினர்கள், கனம் மாணிக்ஜிதாதாபாய், முதோல்கர், மேட்கித் ஆகியவர்கள், இந்த கொடிய பழக்கத்தை ஒழிப்பதற்கு இதே எண்ணத்தோடு வேறே மூன்று மசோதாக்கள் கொண்டு வந்தனர். இந்திய சர்க்கார் உள்நாட்டு சர்க்காருக்கு இந்த மசோதாவை அனுப்பி, அவர்களது அபிப்பிராயம் தந்த உடன் 1913 வருஷம் செப்டம்பர் மாதம் தாங்களாகவே ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார்கள். மீண்டும் அம்மசோதா ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு அவர்களது ரிப்போர்ட்டையும் 1914 வருஷம் மார்ச்சு மாதம் பெற்றார்கள். அந்த ரிப்போர்ட் மறுபடியும் இப்போதைப் போலவே பொதுஜன அபிப்பிராயத்துக்கு விடப்பட்டது. இம்மசோதாவை நிறைவேற்றுவதில்



RangaRakes tamilnavarasam.com

எல்லோருக்கும் பூரண எண்ணமிருந்த போதிலும், அத்தகைய பெண்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பது போன்ற சில சில்லரை விவாதங்கள் கிளப்பிவிடப்பட்டதால் அம்மசோதா தானாகவே அது சமயம் மறைந்து விட்டது. அதன் பின்னர் மகாயுத்தக் கிளர்ச்சியினால் அது கவனிக்கப்பட முடியாமல் போயிற்று. பிறகு 1922 வருஷம் டாக்டர் கோர் மீண்டும் அதை இந்திய சட்டசபையில் கொண்டு வந்தார். ஷை தீர்மானத்தின் மேல் விவாதம் நிகழ்ந்து கடைசியாக அது மறுபடியும் பொது ஜன அபிப்பிராயத்திற்கு பிரசுரிக்கப்பட வேண்டுமென்ற பிரரேபனை அதிகப் படியான ஓட்டுகளால் தோற்கடிக்கப்பட்டது. பிறகு மேல்படி 1922 -ம் வருஷத்திய தீர்மானத்தின் மீது 1924 -ம் வருஷம் அதை சட்டமாக்கப் பட்டதோடு, அதை அனுசரித்து இந்தியன் பினல்கோடு 372, 373 செக்ஷன்கள் திருத்தப்பட்டன. அதன் சட்டம் 1925 -ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதியன்று அமுலுக்கு வந்தது. ஆதியில் 14 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்குப் பொட்டுக் கட்டுதல் கூடாதென்றே சாஸ்திரத்தால் தடுக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் பொட்டுக் கட்டப்பட வேண்டிய பெண் சாஸ்திரப்படி கன்னிகையாயிருக்க வேண்டு மாதலால் 14 வயதிற்குள்தான் இந்த சடங்கு செய்வது வழக்கமாக இருந்து வந்தது. அதாவது எந்தப் பெண்ணையும் 14 வயதிற்கு மேல் பொட்டுக்கட்ட எந்தக் கோயில் அதிகாரி யும் அனுமதிப்பதில்லை. ஆனால் இப்பொழுது மேற்படி சட்டம் வந்தபிறகு 16 வயதிற்குக் கீழ்ப்பட்ட பெண்களுக்கு பொட்டுக்கட்டப் பட்டால் கோயிலதிகாரிகள் குற்றவாளிகள் ஆவதோடு அந்த விதமாக அனேக கேஸ்கள் நடந்து அந்த 25வது சட்டப்படி தண்டனை யும் பெற்றிருக்கிறார்கள். ஆகவே வைதீகர்களது அபிப்பிராயப்படி பார்த் தாலும்கூட, சாஸ்திரப்படி 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு கோவில் களில் பொட்டுக்கட்ட மத அனுமதியில்லையென்று தெரிகிறது. இந்தியன் பினல்கோடுபடி ஒரு மைனர் பெண்ணைப் பொட்டுக் கட்டுவது குற்ற மென்றாலும், பேராசையுள்ள பெற்றோர்கள் சிலர் தங்கள் பெண்களுக்குப் பொட்டுக் கட்ட கோவிலினிடமிருந்து உத்திரவு பெற்று விடுகிறார்கள். இது வியபசாரத்துக்கு அனுமதி கொடுத்ததாகு மேயன்றி வேறில்லை. பொதுஜன அபிப்ராயம் இதை சட்டமாக்க அனுகூல மாயேயிருக்கிறது. பத்திரிகைகளில் இதை ஆதரித்து எழுதியும் பொதுக் கூட்டங்களில் ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியும், சுமார் 13 வருஷத்துக்கு மேற்பட்ட ஆண் பெண் சங்கங் களில் அதை ஆதரித்து தீர்மானங்கள் நிறைவேற்றியும் இந்தக் கொடிய பழக்கத்தினால் அல்லலுறும் சமூகத்தினரே இதை சட்டமாக்க வற்புறுத்தி எழுதியும் இருக்கின்றனர். டிஸ்டிரிக்டு போர்டு முனிசிபாலிட்டிகளிலும் தங்களது ஆதரவைத் தெரிவித்திருக்கின்றனர். இவ்வாறெல்லாமிருக்க இச்சட்டத்திற்குப் பொது ஜன அபிப்ராயத்தை அறிய விரும்புவானேன்? என்பது விளங்கவில்லை. இந்த நாள்பட்ட கொடிய சமூகக் கொடுமையை ஒழிக்க யாருக்கும் ஆட்சேபனையோ எதிர் அபிப்பி ராயமோ இருக்கவே முடியாது. இந்தியத் தலைவர்கள் கூறியிருப்பது போல் தேவதாசி என்று ஒரு



வகுப்பு இருப்பது இந்து சமுதாயத்திற்கே இழிவானது மல்லாமல் இந்து மதத்திற்கே பெரும் பழியுமாகும். ஒரு தனிப்பட்ட பெண்ணுக்கு ஏற்படும் இழிவு, பெண்ணுலகிற்கே ஏற்பட்டதாகுமாகையால் இவ்வழக்கம் பெண் களின் அந்தஸ்தையும் கௌரவத்தையும் பெரிதும் பாதிக்கக்கூடியதாயிருக் கிறது. அன்றியும் ஒரு குறிப்பிட்ட ஜாதியையோ, சமூகத்தையோ விபசாரத் திற்கு அனுமதி கொடுப்பதும், பின்னர் அவர்களை இழிந்த சமூகமாகக் கருதுவதும் பெரும் சமூகக் கொடுமையாகும். சிறு குழந்தைகளிலிருந்தே இத்தகைய துராசார வழிகளில் பயிற்றுவிப்பது ஜனசமூக விதிகளையே மீறியதாகும். எனவே இப்படிப் பட்ட நிலைமையில் இனி இதைப்பற்றி பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிய வேண்டிய அவசியமே இல்லை.

தவிர இதுவிஷயத்தில் சாஸ்திர சம்மந்தமான வைதீகர்களின் ஆட்சேபணைக்கும் இடமில்லை. ஏனெனில் சாஸ்திரத்தில் 14 வயதுக்கு முன் கன்னிப் பெண்ணாய் இருக்கும் போதுதான் பொட்டுக் கட்ட வேண்டும் என்று இருக்கின்றது. இந்தியன் பினல்கோட் 372, 373 செக்ஷன்களின்படியோ 18 வயதுக்குள் பொட்டுக் கட்டக்கூடாது என்றும், கட்டினால் ஒரு வருஷக் கடினக் காவல் தண்டனையும் அபராதமும் என்றும் இருக்கின்றது. ஆகவே இது விஷயத்தில் வைதீகமும் இந்து மதமும் 1924 வருஷத்திலேயே ஒழிந்துவிட்டது. இந்நிலையில் இப்போதைய வைதீகர்கள் என்பவர்கள் இதை ஆட்சேபிப்பதானால் ஒன்று அவர்களது சாஸ்திரம் அவர்களுக்குத் தெரியாமல் இருக்க வேண்டும்; அல்லது தாசிகள் மூலம் தங்கள் வகுப்பார் களில் சிலர் வயிறுவளர்ப்பது கெட்டுப் போகுமே என்கின்ற ஜாதி அபிமான மாக இருக்க வேண்டும்.

அடுத்தாப்போல் பொது ஜனங்கள் எந்த விதத்திலாவது இந்தச் சட்டத்தை ஆட்சேபிப்பார்களா என்று எண்ணுவதும் ஒன்று முட்டாள்தன மாகவோ அல்லது யோக்கியப் பொறுப்பற்றத் தன்மையாகவோதான் இருக்க வேண்டும். ஏனெனில் இந்து சமூகத்தில் கடவுள் பேரால் மதத்தின் பேரால் விவசாரிகளை ஏற்படுத்த வேண்டும் என்று எந்த சமூகத்தாரோ, தேசத்தாரோ கருதுவார்களானால், அவர்களைப் போல் காட்டுமிராண்டிகளோ கெட்டவர் களோ இருக்கவே முடியாது. மற்றபடி எந்த சமூகமாவது இம்மாதிரியான தொழில் தங்கள் வகுப்புக்கு இருக்க வேண்டுமென்று கேட்பார்களேயானால் அவர்களைப் போல் சுயமரியாதையற்றவர்களும் இழிகுலமக்களும் வேறு யாரும் இருக்க முடியாது. எந்தப் பெண்களாவது இந்தத் தொழிலில் ஜீவிக் கலாம் என்று கருதி அதற்காக சுவாமியையும் மதத்தையும் உதவிக்கு உப யோகப்படுத்த நினைத்தால் அவர்களைப் போல் ஈனப்பெண்கள் வேறு எங்கும் இருக்கவே முடியாது. ஆகவே இந்தச் சட்டம் சென்ற சட்டசபைக் கூட்டத்திலேயே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டியது மிக்க அவசியமும் யோக்கியமுமான காரியமுமாகும். ஆனால் அந்தப்படி நிறைவேற்றப்படாமல்



RangaRakes tamilnavarasam.com

இருக்க சட்ட மெம்பர் ஆட்சேபணைகளைக் கிளப்பி இதைப் பொது ஜன அபிப்பிராயத்திற்கு அனுப்புவது என்னும் பேரால் தடைப்படுத்தி விட்டது மிகவும் வருந்தத்தக்கதாகும். அதற்கு அனுகூலமாய் ஜஸ்டிஸ் கட்சி அங்கத் தினர்கள் ஓட்டுக் கொடுத்தது அவர்களுக்கு மிகுதியும் மானக்கேடான காரியமாகும். அக்கட்சியார்கள் இந்த காரியத்தைகூட செய்ய முடியவில்லை யானால் பின் என்ன வேலை செய்யத்தான் அந்த சட்ட சபையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குப் புலனாகவில்லை. "காங்கிரஸ்காரர் கள் சட்டசபையில் இல்லாததால் இச்சட்டம் நிறைவேற்றாமல் போயிற்று" என்று திருமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் நமக்கு எழுதி இருப்பதைப் பார்க்க நமக்குத் தாங்க முடியாத அவமானமாகவே இருந்தது.

எப்படியானாலும் அடுத்த சட்ட சபைக் கூட்டத்திலாவது இச்சட்டம் நிறைவேறாமல் போகுமேயானால் சர்க்காரின் யோக்கியத்திலும் ஜஸ்டிஸ் கட்சியாரின் சுயமரியாதையிலும் தெருவில் போகின்றவனுக்குக் கூட மதிப் பும் நம்பிக்கையும் இருக்காதென்றே சொல்லுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 23.03.1930**



# ஓர் மறுப்பு

சுயமரியாதை இயக்கத் தலைவர் திரு. ஈ.வெ. இராமசாமி அவர்கள் கீழ்க்கண்ட மறுப்பை பத்திரிகைகளுக்கு தந்தி மூலம் அனுப்பியிருக்கிறார். அதாவது :-

இருபதாந்தேதி வெளிவந்த சென்னை தினசரிப் பத்திரிகைகளில் ஆயிரக்கணக்கான சுயமரியாதைச் சங்க அங்கத்தினர்கள் உப்பு வரியை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்யப் போவதாக ஒரு செய்தி வெளி வந்திருப் பதைப் பார்த்தேன். யாராவது தன் சொந்த ஹோதாவிலோ அல்லது வேறு ஹோதாவிலோ உப்புச் சட்டத்தை மீறுவதைப் பற்றி எனக்கு ஆட்சேப மில்லை. ஆனால் சுயமரியாதை இயக்கத்தின் பெயரால் யாராவது உப்புச் சட்டத்தை மறுப்பு செய்யத் தொடங்கினால் அம்முயற்சி சுயமரியாதை இயக்கத்தாரால் ஆதரிக்கப்பட்டதாகாது. அவ்வியக்கத்தின் முக்கிய அங்கத்தி னர்களில் ஒருவர் என்கின்ற முறையில் எனக்காவது சுயமரியாதை சங்கத் தலைவருக்காவது அதில் சம்பந்தமே கிடையாது. உப்புச் சட்டத்தை மீறுவ தென்பதை இது சமயம் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். உப்புச் சட்டத்தை மீறுவதனால் சுயமரியாதை இயக்கத்துக்கு எத்தகைய நன்மையும் உண்டாகாது.

**குடி அரசு - அறிக்கை - 23.03.1930**



RangaRakes tamilnavarasam.com

# ஜஸ்டிஸ் கக்ஷி

ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்கின்ற தீர்மானம் ஒன்றை நிர்வாகக்கமிட்டி தலை வருக்கு திருவாளர்கள் பி.எஸ். குருசாமி நாயுடு அவர்களும் எம்.தாமோதர நாயுடு அவர்களும் அனுப்பியிருக்கின்றார்கள். அதாவது

"தற்கால நிலைமை மாறுதல்களை உத்தேசித்து பார்ப்பனர்களை தென்இந்திய நலவுரிமைச்சங்கத்தில் அங்கத்தினர்களாக சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், இதற்காக ஒரு விசேஷ மகாநாடு (ஸ்பெஷல் கான்பரன்ஸ்) கூட்டவேண்டுமென்றும் இக்கமிட்டி தீர்மானிக்கின்றது" என்பதாகும்.

இப்பொழுது மேல்கண்ட இந்த தீர்மானத்தை அனுப்பியிருக்கும் கனவான்களே நெல்லூரில் பார்ப்பனர்களை சட்டசபை நடவடிக்கை கட்சி யில் சேர்த்துக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை என்கின்ற தீர்மானத்தை எதிர்த்தவர்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் இப்போது பார்ப்பனர்களை ஜஸ்டிஸ் கட்சியிலேயே சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்திருப்பதற்குக் காரணம் "தற்கால நிலைமையை உத்தேசித்து" என்று தான் சொல்லுகின்றார்கள். பார்ப்பனர்களைச் சேர்த்துத் தான் ஆக வேண்டும் என்கின்ற அளவுக்கு தற்கால நிலைமை எப்படி மாறுதல் அடைந் திருக்கின்றது என்பது நமக்கு விளங்கவில்லை. சென்ற சட்டசபை தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியில் பலர் தோல்வி அடைந்து மந்திரி பதவியை இழக்க நேர்ந்தது முதல் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணமும் காங்கிரசில் சேரவேண்டும் என்கின்ற எண்ணமும் அக்கட்சி பிரமுகர்கள் ஒவ்வொருவர் மனதிலும் துடித்துக் கொண்டேதான் இருந்தது. காங்கிரசில் சேர்ந்தால் சாதித்துவிடலாம் என்கின்ற எண்ணத்தைப் பரீட்சித்துப் பார்க்க கோயமுத்தூர் மகாநாட்டில் தாராளமாய் இடம் கொடுத்தோம், அது போலவே பலர் காங்கிரசுக்கும் போய் அதன் பலனையும் அனுபவித்துப் பார்த்து விட்டு இரண்டாம்பேர் அறியாமல் வீடுவந்து சேர்ந்தார்கள்.

அதுபோலவே இதற்காக கூடும் மகாநாட்டில் நாம் இந்த தீர்மானத் தையும் மகாநாட்டில் ஆட்சேபிக்கப்போவதில்லை. மற்றவர்கள் ஆட்சே



பிப்பதையும் நாம் தடுக்கப்போவதில்லை. அதன் சம்பவத்தை அதுவே அடையட்டும் என்று தான் விட்டுவிடப்போகின்றோம். ஏனெனில்,

சமீபத்தில் தான் கோயமுத்தூரில் திருவாளர்கள் பி,முனுசாமி நாயுடு, பி.டி.ராஜன், ஆர்.கே.ஷண்முகம், சி.எஸ்.ரத்தினசபாபதி முதலியார், எ.ராம சாமி முதலியார், ஈ.வெ.ராமசாமி ஆகியவர்கள் கூடி பார்ப்பனர்களை அங்கத்தினர்களாக சேர்ப்பதா என்கின்ற விஷயமாய்ப் பேசி "வேண்டுமா னால் அரசியல் சட்டசபை நடவடிக்கைகளில் (பொலிட்டிக்கல் கவுன்சில் பார்ட்டியில்) சேர்த்துக் கொள்ளலாம்" என்றும் "ஜஸ்டிஸ் கட்சியில் கண்டிப் பாய் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளக்கூடாது" என்றும் பேசி முடிவு கட்டிக்கொண்டு அதை அடுத்தாப்போல் ஒரு விசேஷ மகாநாடு கூட்டி தீர்மானிப்பதென்றும் ஒப்புக் கொண்டுபோனார்கள். ஆனால் அத்தீர்மானம் இனியும் ஒரு மாதம் ஆவதற்குள் "தற்கால நிலையை உத்தேசித்து"என்று மறுபடியும் அந்த விஷயத்தைக் கிளப்பியிருப்பதானது ஆச்சரியப்படக் கூடியதேயாகும். அன்றியும் இப்போது கொஞ்ச காலமாய் ஜஸ்டிஸ் கட்சிக்கு சற்று அதிக செல்வாக்கு ஏற்பட்டு இதுசமயம் அதில் கொஞ்சம் அதிகமான மெம்பர்கள் சேர்ந்து கட்சியின் கூட்டம் தாங்கமுடியாத அளவுக்கு கும்பலாகி நெருக்கம் ஏற்பட்டு விட்டதாலும் அந்த நெருக்கத்திற்குத் தகுந்தபடி போட்டிகளும் பலமாய் விட்டதாலும் எப்படியாவது அதன் கூட்டத்தைச் சற்று கலைத்து சிலரைவெளியாக்கி நெருக்கத்தைக்குறைத்து போட்டியைக் கம்மிப்படுத்தவேண்டும் என்கின்ற எண்ணம் சில " தலைவர்களுக்கு" ஏற் பட்டுவிட்டதால் இது சமயம் அக் கட்சிக்கு ஒரு கொள்கையில் நிற்பதோ அல்லது ஒரு ஒழுங்குக்குக் கட்டுப்பட்டிருப்பதோ மிக்கமுடியாத நிலை மைக்கு போய்க்கொண்டிருக்க வேண்டியதாகிவிட்டது. ஆதலால் அடிக்கடி நாமேமுட்டுக்கட்டையாய் இருந்ததாகக் காட்டிக்கொள்ள இஷ்டமில்லை. இந்த நிலையில் அந்தத் தீர்மானம் கொண்டுவந்திருக்கும் கருத்தைப் பார்க்கும்போதும் திருவாளர்கள் சி,பி.ராமசாமி அய்யருடன் டி.ஆர். ராமச் சந்திர அய்யரும் போட்டியன்றி தெரிந்தெடுக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும்போதும் அனேகமாய் விசேஷ மகாநாட்டில் இத்தீர்மானம் நிறைவேறவிடலாமென்றே நாம் நினைக்கின்றோம். எப்படியானபோதிலும் அது விஷயத்தைப் பற்றி நாம் இப்போதே நமது அபிப்பிராயத்தை சிறிதும் ஒளிக்காமல் சொல்லிவிடுகின்றோம். அதாவது பார்ப்பனர்களை தென் இந்திய நலவுரிமைச்சங்கத்தில் அங்கத்தினர்களாய்ச் சேர்த்துக்கொள்ளப்படு மானால் பார்ப்பனரல்லாதார் கட்சி என்று வழங்கும் ஜஸ்டிஸ் கட்சி துலைந்தது என்பதேதான் நமது முடிவு. அதாவது இத்தீர்மானத்தின் பயனால் ஏதாவது இரண்டொரு பணக்காரர்களோ சூட்சிக்காரர்களோ சில பெரிய உத்தியோகங் களையும் பதவிகளையும் அனுபவிக்கலாமே யொழிய பதினாயிரக்கணக் கான படித்த வாலிபர்களின் கதியும் சமூக சமத்துவ முற்போக்கின் கதியும் இனி அதோகதிதான் என்பதும்.



RangaRakes tamilnavarasam.com

வெகு கஷ்டப்பட்டு நிதானமாய் முன்னேறிவந்த இம்மாகாண பார்ப்பனரல்லாத சமூக நிலை இனி வெகுவேகமாய் பின்னோக்கி விடு மென்பதுவும் உறுதி! உறுதி!! அன்றியும் அக்கட்சியில் கொள்கையோ நாணயமோ யோக்கியப் பொருப்போ சிறிதும் கூட இனி இருக்கவும் முடியாது என்பதும் நமது உறுதி.

**குடி அரசு - கட்டுரை - 23.03.1930**



# சாரதா சட்டம்

சாரதா சட்டம் இந்தியசட்டசபையில் திருத்தப்படும் என்றும் ஏப்ரல் முதல் அமுலுக்கு வருவது ஒத்திவைக்கப்படும் என்றும் ஒரு வதந்தி கிளப்பி விடப்பட்டிருக்கிறது.

ஆனால் சென்னை சர்க்கார் அச்சட்டத்தின் பிரதிகளை பொது ஜனங்களுக்கு வினியோகித்திருப்பதுடன் பத்திரிகைகளிலும் வெளியிட்டி ருக்கிறார்கள். எனினும் எப்படி நடக்கும் என்று சொல்வது முடியாத காரியமா யிருந்தாலும் இவ்விஷயத்தில் சர்க்கார் ஏதாவது பின் வாங்கினார்களே யானால் அதன் பலனை கண்டிப்பாய் அடைவார்கள் என்பதை மாத்திரம் நாம் உறுதியாய் நம்பி இருக்கிறோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 23.03.1930**



RangaRakes tamilnavarasam.com

# ஆதி திராவிடர்களுக்கு பிரைஸ்

இவ்வார சென்னை சட்டசபை வரவு செலவு திட்டத்தில் திரு. வி.ஐ. முனுசாமி பிள்ளை அவர்கள் ஆதிதிராவிடர்களுக்கு அவர்கள் எண்ணிக் கைக்கு தகுந்தபடி உத்தியோகமளிப்பதில்லை என்று குறை கூறியதற்கு பதிலாக அரசாங்கத்தார் சார்பாக சீப் சிக்கர்ட்டரி அவர்கள் அந்தப்படி உத்தி யோகங்கள் கொடுக்கும் விஷயமாக அரசாங்கத்தாரால் யோசனைகள் செய்யப்பட்டு வருவதாகவும் உத்தியோகங்களைப் பெற்றுக்கொள்ள ஆதி திராவிடர்கள் முன் வரவேண்டுமென்றும் பதில் கூறினார்கள். இது மனப் பூர்வமாய் சொல்லப்பட்ட பதிலானால் இதிலிருந்து இப்போது எல்லா விதத் திலும் தகுதியுடன் இருந்து முன் வந்திருக்கும் திரு. ராவ் பகதூர் யம். சி. ராஜா அவர்களுக்கு சமீபத்தில் காலியாகும் நிர்வாகசபை மெம்பர் பதவி கிடைக் கக்கூடும் என்று எதிர்பார்ப்பது ஏமாற்றமாகாது என்று நினைக்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 23.03.1930**



# ஈரோட்டில் மகாநாடுகள்

இரண்டாவது சுயமரியாதை மகாநாடு ஈரோட்டில் மே மாத முதல் வாரத்தில் கூட்டப்படுவதற்கு வேண்டிய முயர்ச்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அதே சமயத்தில் மற்றும் பல மகாநாடுகள்அதாவது பெண்கள் மகாநாடு, மதுவிலக்கு மகாநாடு, சங்கீத மகாநாடு முதலிய மகாநாடுகளும், விவசாயம் கைத்தொழில் முதலிய பொருள் காட்சிகளும் நடத்தப்பட வேண்டும் என்று பல நண்பர்கள் அபிப்பிராயப்பட்டிருப்பதற்கு இணங்க அவைகளையும் நடத்த வேண்டும் என்னும் உத்தேசத்துடன் வேலைகள் நடந்து வருகின்றன.

மகாநாட்டிற்கு இதுவரை சுமார் 5000 ஐயாயிரம் ரூபாய்களே வாக்களிக் கப்பட்டிருக்கின்றது என்றாலும் ஒட்டு மொத்தம் சுமார் 10000 ரூ பதினாயிரம் ரூபா வரையில் வசூலில் எதிர்பார்க்கலாம் என்றே கருதி இருக்கின்றோம். மகாநாடுகள் அதிகமாய் இருப்பதாலும் குறைந்தது 4, 5 நாள்களுக்காவது நடத்த வேண்டுமென்று கருதியிருப்பதாலும் மேல்கண்ட பதினாயிரம் ரூ.போருமென்று சொல்வதற்கு இடமில்லை. ஆகவே வரவேற்பு கமிட்டி போஷகர்களுக்கு 25ரூ. என்றும் வரவேற்பு கமிட்டி அங்கத்தினர் களுக்கு 5ரூ. என்றும் பிரதிநிதிகளுக்கும் மூன்று ரூபா என்றும் மேல்கண்ட மூன்று வகைக்கும் சாப்பாட்டு கட்டணமில்லாமல் போடுவதென்றும் விசிட்டர் களுக்கு கட்டணம் ஒரு ரூபாய் என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. நிற்க, திருவாளர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் வரவேற்புக் கமிட்டி தலைவராகவும், திருவாளர் கோவை சேர்மென் அண்டு ஜில்லா போர்டு பிரசிடெண்டு, ராவ் பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், ஈரோடு சேர்மென் K. A. ஷேக் தாவுத்து சாயபு, எஸ். ராமநாதன் ஆகிய கனவான்கள் பொது காரியதரிசிகளாகவும் இருந்து மகாநாட்டை சிறப்புடன் நடத்திக் கொடுக்க தயவுடன் ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள். மற்றும் மகாநாட்டுக்கு வாலண்டியர்களாக இருந்து மனப்பூர்வமாய் தொண்டு செய்வதற்கும் அனேகத் தொண்டர்கள் முன் வந்து தாங்களாகவே தினம் பல கடிதங்கள் எழுதியும், நேரில் வந்தும் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டும் இருக்கின்றார்கள். மற்றும் பொது ஜனங்கள் அன்பாகவும் ஆவலாகவும் மகாநாட்டு விஷயத்தில் பல யோசனைகளையும் ஊக்கங்களையும் அளித்துக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டு வருகின்றார்கள். ஆகவே மகாநாடுகள் ஒரு விதத்தில் திருப்தி கரமாயும் வெற்றிகரமாயும் நடைபெறுமென்றே முழு நம்பிக்கையுட னேயே இருக்கின்றோம் என்றாலும் மகாநாட்டுக்கும் அதன் கொள்கை களுக்கும் எதிர்ப்புக்கூட்டம் சில இருந்து கொண்டு, அவை தடங்கலான விஷமங்களை செய்து கொண்டிருக்கின்றன என்பதையும் நாம் மறைக்க முயலவில்லை.

உதாரணமாக இவ்வார சட்டசபையில் சைவ சித்தாந்த ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் கேட்ட கேள்விகளில் இருந்தே ஒரு வாறு அறியலாம். அதாவது சுயமரியாதை இயக்கத்தார்களை மதசம்பந்தமான உத்தியோகத்தில் நியமிக்கலாமா என்றும், சுயமரியாதைக்காரர்கள் விக்கிரக ஆராதனைக்கு விரோதிகள் அல்லவா என்றும் மற்றும் பல கேள்விகள் கேழ்க்கப்பட்டதிலிருந்து இந்து மதமும், இந்து பரிபாலன போர்டுகளும், ஸ்தாபனங்களும் விக்கிரக ஆராதனைக்காரர்களான கூட்டத்தார்களுக்கே சொந்தமானதென்றும் கருதிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதும், அவர்க ளால் கூடிய இடையூறுகளை யெல்லாம் செய்யத் தயாராயிருக்கின்றார்கள் என்பதும் நன்றாய் விளங்குகின்றது. மற்றொரு புறம் ஒரு கூட்டம், 'சுயமரி யாதை இயக்கம் சர்க்காருக்கு அடிமைப்பட்ட கூட்டமென்றும் உத்தியோகங் களுக்கு ஆசைப்பட்ட கூட்டமென்றும்' சொல்லிப் பிரசாரம் செய்வதும், மற்றொரு புறம் சுயமரியாதை இயக்கம் மந்திரிகளை ஆதரிக்கின்ற இயக்க மென்றும் விஷமப் பிரசாரம் செய்யப்பட்டு வருவதும் மறைக்கக் கூடிய தல்ல. இவைகள் ஒருபுறம் இப்படியிருக்க இதுசமயம் திரு. காந்தி அவர்களால் துவக்கப்பட்டிருக்கும் உப்புக் காச்சும் சத்தியாக்கிரகத்தின் கிளர்ச்சியினால் தென்னாட்டில் ஒரு கூட்டம் "உலகமே திரண்டு திரு. காந்தியாரைப் பின் பற்றி இந்த சர்க்காரை ஒழிக்கப் போகும் சமயத்தில் சுய மரியாதை இயக்கத்தார் சர்க்காரை ஆதரித்து விடுதலைக்கும் பூர்ண சுயேச்சைக்கும் எதிரியாய் இருக்கின்றார்கள்" என்று பாமர மக்களை விஷமத் தனமாய் கிளப்பி விட்டுக் கொண்டும் இருக்கின்றார்கள். இவை இப்படி யிருக்க,

மற்றொரு புறம் ஆதாரமில்லாமல் சிலர் சுயமரியாதை இயக்கத்தின் பேரால் திடீர் திடீர் என்று தங்களுக்குத் தோன்றியக் காரியங்களைச் செய்வதும் தோன்றிய அபிப்பிராயங்களை வெளியிடுவதுமான காரியங் களால் பொது ஜனங்களின் மனதை குழப்பத்திற்குள்ளாக்குவதுமாகச் செய்து வருவதும் யாரும் அறியாததல்ல. ஆகவே இப்படியாகப் பலவித எதிர்ப்புகளும் சங்கங்களும் இருந்து வருகின்றது.

எது எப்படி இருந்த போதிலும் நமது கொள்கைகளையே நாம் உலக விடுதலைக்கும் சிறப்பாக நமது நாட்டுக்கும், குறிப்பாக பார்ப்பனரல்லாத கூட்டத்தாருக்கும் பூரண ஆதாரமாகக் கருதி இருப்பதால் அதன் பலா பலனைத் தனித்து நின்றாவது அனுபவித்து தீரவேண்டிய உறுதி கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோமாதலால் பின்வாங்கமுடியாத நிலையில் எதற்கும் தயாராய் இருக்கின்றோம் என்பதை பொது ஜனங்களுக்கு வணக்க



RangaRakes

மாய்த் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிற்க, இவ்வியக்கம் ஏற்பட்ட பிறகு தமிழ் நாட்டில் அடிக்கடி சுய மரியாதை மகாநாடுகள் கூடுவதும், இது சம்பந்தமாகப் பல ஆண்டு விழாக் கள், கொண்டாட்டங்கள் முதலியவைகள் நடப்பதுமாய் இருப்பதின் மூலம் அன்பர்களுக்கு அடிக்கடி செலவுகள் ஏற்பட்டு வருவதும் நமக்கு நன்றாய்த் தெரியுமானாலும், பலவித எதிர்ப்புகளுக்கும் பார்ப்பனர்களின் சூழ்ச்சிக்கும் இம்மாதிரி அடிக்கடி மக்கள் கூடி இக்கொள்கைகளை ஒப்புக் கொண்டு அமுலில் நடத்த முயற்சிகள் செய்வதுதான் தகுந்த பதிலே ஒழிய வேறு இல்லை. ஆதலால் இம்மாதிரியான காரியங் களைப் பிரசாரத்தை முன்னிட்டுச் செய்து தீரவேண்டியதா யிருக்கின்றது. அன்றியும் அரசியல் விஷயங் களுக்காக இதுவரை மக்கள் அடைந்த நஷ்டத்திற்கும் பட்ட கஷ்டத்திற்கும் அதனால் நாட்டிற்கு ஏற்பட்ட பலப்பல கெடுதிகளுக்கும் கணக்குப் போட்டுப் பார்த்தால் இந்த சமூக இயக்கத்திற்கு செலவாகும் நஷ்டமும், கஷ்டமும் பதினாயிரத்தில் ஒரு பங்குக்கூட இருக்கா தென்றே சொல்லுவோம். ஆதலால் தமிழ்நாட்டு இளைஞர்கள் கவனித்து, தமிழ் மக்களுக்கு இன்றியமையாத இந்த இயக்கத்திற்காக நடைபெறும் மகாநாட்டை சிறப்புற நடத்தி பலன் பெற உதவி செய்ய வேண்டிக் கொள்ளு கின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 30.03.1930**



tamilnavarasam.com

# 5 ரூபாய் இனாம்

**– சித்திரபுத்திரன்**

திரு. காந்தியின் கடைசிப்போர் என்னும் உப்புச் சத்தியாக்கிரகக் கிளர்ச்சியில் தென்னிந்தியாவில் எங்கு பார்த்தாலும் பெரிதும் பார்ப்பனர்களே கலந்து அவர்களே முழுவதும் தலைவர்களாக வேண்டிய காரணமென்ன?

திரு. காந்தி இந்த சத்தியாக்கிரகப் போருக்கு பணமே வேண்டிய தில்லை என்று சொல்லி இருந்தும், திரு. ராஜகோபாலாச்சாரியார் பணம் வேண்டுமென்று கேட்பதின் இரகசியமென்ன?

அப்படி கேட்கப்படும் பணத்தையும் திருவாளர்கள் மைலாப்பூர் வக்கீல் பாஷ்யம் அய்யங்கார், திருச்சி டாக்டர். ராஜன், மதுரை வக்கீல் வைத்தியநாதய்யர் ஆகிய பார்ப்பனர்களுக்கே அனுப்பும்படி சொல்வதின் சூட்சி யென்ன?

இந்த சத்தியாக்கிரகப் போருக்குப் பிரசாரகர்களாக மாத்திரம் சம்பளம் கொடுத்துப் பார்ப்பனரல்லாதார்களையே ஏற்படுத்தி பிரசாரம் செய்யச் செய்திருப்பதின் தந்திரமென்ன?

இக்கேள்விகளுக்கு முதலில் கிடைக்கும்படி தக்க காரணங்களுடன் சரியான விடையளிப்பவர்களுக்கு 5 ரூபாயும் இரண்டாவது கிடைக்கும்படி விடையனுப்பியவர்களுக்கு குடி அரசு பத்திரிகை ஒரு வருஷத்திற்கு இனாமாகவும் அளிக்கப்படும்.

குறிப்பு : – முதலில் அல்லது இரண்டாவதாக எது வந்து சேர்ந்தது என்பதற்கும் சரியான விடை எது என்பதை நிர்ணயிப்பதற்கும் நானே தான் ஜட்ஜு எனக்கு மேல் அப்பிலோ கேழ்வியோ கிடையாது.

**– சித்திரன் –**

C/o **குடி அரசு . ஈரோடு**

**குடி அரசு – அறிவிப்பு – 30.03.1930**



# பொட்டுக்கட்டு நிறுத்தும் சட்டம்

## டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி மசோதா

டாக்டர். முத்து லட்சுமி ரெட்டியின் பொட்டறுப்பு மசோதா விஷயமாக அபிப்பிராயம் தெரிவிக்க வேண்டுமென்று சென்னை சர்க்கார் கேட்டுக் கொண்டதற்கிணங்க திரு. ஈ. வெ. ராமசாமியார் சென்னை சட்ட சபை காரியதரி சிக்கு அனுப்பி இருக்கும் ஒரு கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது

1. ஹிந்துப் பெண்களை ஹிந்து ஆலயங்களில் பொட்டுக் கட்டு வதினால் அவர்கள் வியபிசாரம் செய்யும்படி தூண்டப்படுகிறார்கள்.

2. பண ஆசையினால் தேவதாசிகள் வியபிசாரம் செய்வதினால் அவர்களது வாழ்க்கை இயற்கைக்கு விரோதமாகவும், ஆபாசமாகவும் இருக்கிறது. இந்த வியபிசாரிகளால் மேக வியாதிகள் பரப்பப்படுவதினால் அந்நோய் அந்நியர்களுக்குப் பரவாமல் தடுக்க வேண்டியதும் முக்கிய மானதாகும்.

3. டாக்டர். முத்துலட்சுமி மசோதாவின் நோக்கம் வியபிசாரத்தை அடியோடு ஒழிப்பதல்லவானாலும் வியபிசாரம் விருத்தியாவதற்குள்ள ஒரு முக்கியமான வழியை அடைப்பதுதான் அதன் நோக்கம். வியபிசாரத்தை அடியோடு ஒழிக்கத்தக்கவாறு இந்திய சமூகம் இன்னும் முன்னேற்றமடைய வில்லை. வெளிநாட்டு நிலைமையும் இவ்வாறே இருந்து வருகிறது. பணத்துக் காகப் பெண்கள் வியபிசாரம் செய்வதைத் தடுக்க சட்டம் இயற்றும் காலம் இன்னும் வரவில்லை. ஆனால் சமயத்தின் பேரால் மதக் கடமையாகப் பெண் கள் வியபிசாரம் செய்வதைத் தடுக்க நாம் முன்னாடியே சட்டம் இயற்றி இருக்க வேண்டும். தற்காலச் சட்டப்படி 18 வயதிற்குப் பிறகு பொட்டுக் கட்டப் படும் பெண்களுக்கும் கூட இள வயது முதலே பெற்றோராலும் வளர்ப் போராலும் வியபிசாரம் செய்யத் தூண்டப்பட்டும் தயார் செய்யப்பட்டும் வருகிறார்கள். பொட்டுக் கட்டி வியபிசாரம் செய்வது மோட்ச்ச சாதனமான தென்றும், பணம் சம்பாதிக்க நல்ல வழி என்றும், சிறு வயது முதலே அப் பெண்களுக்குப் போதிக்கப்பட்டு வருகிறது. பெண்களை வியபிசாரத்தில் ஈடு



RangaRakes tamilnavarasam.com

படுத்தாமல் சட்டம் ஏற்படும் வரை பெற்றோரும் வளர்ப்போரும் அவர்களை வியபிசாரம் செய்யப் பழக்கிப் பணம் சம்பாதிக்கத் தான் செய்வார்கள்.

4. மைனர் பெண்களுக்குப் பொட்டுக் கட்டக் கூடாதென்று ஏற்கனவே சட்டம் ஏற்படுத்தி மதவிதிகள் அப்போதே மீறப்பட்டு விட்டது. எனவே இம்மசோதா விஷயத்தில் மதத்துக்கு ஆபத்து என்னும் வாதத்தைக் கிளப்ப இடமே இல்லை. பருவமடைந்த பெண்களுக்குப் பொட்டுக்கட்ட சாஸ்திரங்களில் அனுமதி இல்லை. ஆதலால், சாஸ்திரங்களுக்குப் பயந்து பருவமடைந்த பெண்கள் பொட்டுக் கட்டைத் தடுக்க சட்டமியற்ற சர்க்கார் பயப்படத் தேவையில்லை. டாக்டர். முத்து லட்சுமி மசோதா விரும்பும் சீர்திருத்தம் இந்து சமூக சுயமரியாதையை உத்தேசித்து எவ்வளவோ காலத்துக்கு முன்னாடியே அமுலில் வந்திருக்க வேண்டும். எனவே அம்மசோதாவை நான் பூர்ணமாக ஆதரிக்கிறேன்.

**குடி அரசு - கடிதஅறிக்கை - 30.03.1930**



# கர்ப்பத்தடை

கர்ப்பத்தடை என்பது பற்றி சுமார் 2 வருஷங்களுக்கு முன் நாம் எழுதியது அநேகருக்கு திடுக்கிடும் படியான சேதியாயிருந்தது. ஆனால் இப்போது சிறிது காலமாய் அது எங்கும் பிரஸ்தாபிக்கப்படும், ஒரு சாதாரண சேதியாய் விட்டது. வர வர அது செல்வாக்குப் பெற்றும் வருகின்றது. பெரிய உத்தியோகத்தில் இருந்த சர். பி. சிவசாமி அய்யரும் பெரிய உத்தியோகத்தில் இப்போதும் இருக்கும் ஜஸ்டிஸ் ராமேசம் அவர்களும் மற்றும் பலரும் இது விஷயமாய் அடிக்கடி பேசி வருகின்றதையும் எழுதி வருகின்றதையும் பத்திரிகையில் பார்த்தும் வருகின்றோம். சமீபத்தில் சென்னை சட்டசபையிலும் கர்ப்பத் தடை விஷயமாய் பிரசாரம் செய்ய வேண்டுமென்று பிரஸ்தாபிக்கப் பட்டதையும் நேயர்கள் கவனித்து இருக்கலாம்.

ஆனால் கர்ப்பத் தடையின் அவசியத்தைப் பற்றி நாம் கருதும் காரணங்களுக்கும் மற்றவர்கள் கருதும் காரணத்திற்கும் அடிப்படையான வித்தியாசம் இருக்கின்றன. அதாவது பெண்கள் விடுதலையடையவும் சுயேச்சை பெறவும் கர்ப்பத்தடை அவசியமென்று நாம் கூறுகின்றோம். மற்றவர்கள் பெண்கள் உடல் நலத்தை உத்தேசித்தும் பிள்ளைகளின் தாஷ்டீகத்தை உத்தேசித்தும், நாட்டின் தரித்திர திசையை உத்தேசித்தும், குடும்ப சொத்து குலையாமல் இருக்க வேண்டுமென்பதை உத்தேசித்தும், கர்ப்பத் தடை அவசியமென்று கருதுகிறார்கள். இதை மேல் நாட்டினர் பலர்கூட ஆதரிக்கின்றார்கள். ஆனால் நமது கருத்தோ இவைகள் எதையும் பிரதானமாய்க் கருதியது அல்ல. மற்றெதைக் கருதி யென்றால் முன் சொன்னது போல் பொதுவாக பெண்களின் விடுதலைக்கும் சுயேச்சைக்குமே கர்ப்பம் விரோதியாய் இருப்பதால் சாதாரணமாய் பெண்கள் பிள்ளை பெறுவது என்பதையே அடியோடு நிறுத்தி விட வேண்டும் என்கிறோம், அது மாத்திரமல்லாமல் பல பிள்ளைகளை பெருகின்ற காரணத்தால் ஆண்களும் கூட சுயேச்சையுடனும், விடுதலையுடனும் இருக்க முடியாதவர்களாகவேயிருக்கிறார்கள். இதன் உண்மை சாதாரணமாய் ஒவ்வொரு மனிதனும் ஸ்திரீயும் தங்கள் சுதந்திரங்களுக்குக் கஷ்டம் வருகின்ற காலத்தில் பேசிக் கொள்வதைப் பார்த்தாலே தெரியும்.

ஒரு மனிதன் தான் கஷ்ட நிலையில் பேசும் போது "நான் தனியா



RangaRakes tamilnavarasam.com

யிருந்தால் ஒரு கை பார்த்து விட்டு விடுவேன். 4, 5 குழந்தையும் குட்டியும் ஏற்பட்டு விட்டதால் இவைகளைக் காப்பாற்ற வேண்டுமே என்கின்ற கவலையால் பிறர் சொல்லுவதையெல்லாம் கேட்டுக் கொண்டு ஆளாயிருக்க வேண்டி இருக்கின்றது" என்றே சொல்லுகின்றான். அது போலவே ஒரு ஸ்திரீயும் புருஷனாலோ அல்லது வேறு எதனாலோ சங்கடம் ஏற்படும் போது "நான் தனியாய் இருந்தால் எங்காகிலும் தலையின் மேல் துணியைப் போட்டுக் கொண்டு போய் விடுவேன்; அல்லது ஒரு ஆற்றிலாவது குளத்திலாவது இறங்கி விடுவேன். இந்தக் கஷ்டத்தை சகித்துக் கொண்டு அரை நிமிஷமும் இருக்க மாட்டேன். ஆனால் இந்த குழந்தைகளையும் குஞ்சுகளையும் நான் எப்படி விட்டு விட்டு போகமுடியும்" என்றே சொல்லு கின்றாள். ஆகவே இந்த இருவர்களுக்கும் அவர்களது சுயேச்சையையும் விடுதலையையும் கெடுப்பது இந்த குழந்தைகளும் குஞ்சுகளும் என்பவை களேயாகும்.

உலகத்தில் மக்கள் கஷ்டப்பட்டு தன் தன் ஜீவனத்திற்கு பொருள் தேடுவதற்கே சுதந்திரத்தை விற்று அடிமையாக வேண்டிய நிலையில் இருக்கும்போது பிள்ளைகளையும் குட்டிகளையும் காப்பாற்ற வேண்டிய அவசியமும் தலை மேல் இருக்குமானால் அந்த இடத்தில் எப்படி சுயேச்சை இருக்க முடியும்? ஆகையால் ஆண் பெண் இருவர்களின் சுயேச்சைக்குமே கர்ப்பமாவதும் பிள்ளைகளைப் பெறுவதும் இடையூறான காரியமாகிறது. அதிலும் பெண்கள் சுயேச்சைக்கு கர்ப்பம் என்பது கொடிய விரோதியா யிருக்கிறது. அதனால் தான் நாம் கண்டிப்பாய் பெண்கள் பிள்ளை பெருவதை நிருத்தியே ஆக வேண்டும் என்கின்றோம். அன்றியும், பெண்கள் வியாதிஸ் தர்கள் ஆவதற்கும் சீக்கிரம் கிழப்பருவம் அடைவதற்கும், ஆயுள் குறைவ தற்கும் இந்த கர்ப்பம் என்பதே மூல காரணமாயிருக்கின்றது. தவிரவும் ஆண் களில் பிரம்மச்சாரிகளும், சன்யாசிகளும், சங்கராச்சாரியார்களும், தம்பிரான் களும், பண்டார சன்னதிகளும் ஏற்பட்டிருப்பது போல் பெண்களில் பிரம்மச் சாரிகளும் சங்கராச்சாரி முதலியவர்களும் ஏற்படுவதற்கும் இந்த கர்ப்பமே தடையாயிருந்து வருகின்றது. இந்நிலையில் தான் பெண்கள் விடுதலைக்கும் சுயேச்சைக்கும் முன்னேற்றத்திற்கும் அவர்கள் பிள்ளை பெறுவது என்பதை நிறுத்த வேண்டும் என்று நாம் சொல்லுகின்றோம். இந்தப்படி நம்மில் ஒருவருக்கொருவர் கருதும் காரணம் எப்படி இருந்த போதிலும் நமக்கும் மற்ற கர்ப்பத் தடைக்காரருக்கும் கர்ப்பத்தடை அவசியம் என்பதில் அபிப் பிராய பேதமில்லாதிருப்பது குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆனால் இந்த முக்கிய காரியங்களில் சமீபகாலத்தில் சட்ட சபையில் அரசாங்கத்தினர் சார்பாய் சுகாதார மந்திரி கர்பத்தடை பிரசாரத்தை எதிர்த் தும், பெண்கள் சார்பாய் சட்ட சபைக்கு சென்ற டாக்டர். முத்து லக்ஷ்மி அம் மாளும் அவருக்கு அனுசரணையாய் இருந்ததும் நமக்கும் மிக்க ஏமாற்றத் தையே கொடுத்து விட்டது. இந்த தேசத்தில் பிறக்கும் குழந்தைகளை



யெல்லாம் இந்த தேசத்து அரசாங்கமே வளர்த்து அவைகளுக்கு கல்வி கொடுத்து மேஜர் ஆக்கி விட வேண்டும் என்கின்ற ஒரு நிபந்தனை இருந் திருக்குமானால் சுகாதார மந்திரி அரசாங்கத்தின் சார்பாய் கர்ப்பத்தடையை எதிர்த்திருக்க மாட்டார். அப்படிக்கில்லாமல் யாரோ பெற்று யாரோ வளர்த்தி மக்களைப் பெருக்கி அடிமைக்கு விடுவதனால் சர்க்கார் அதை எப்படி வேண்டாம் என்று சொல்ல முன் வருவார்கள். உண்மையான சுகாதாரத்தில் பிள்ளைப் பேற்றை தடுப்பது முக்கியமான சுகாதாரம் என்று சுகாதார மந்திரிக் கும் பெண்மணியாய் இருந்தும் டாக்டர் பட்டம் பெற்ற வைத்திய அம்மா ளுக்கும் தெரியாமல் போனது வருந்தத்தக்க காரியமேயாகும். இந்த விஷயத்தில் அரசாங்கத்தார் விபரீதமான அபிப்பிராயப்பட்டு விட்டாலும் கூட பொது ஜனங்கள் அதை லக்ஷியம் செய்யாமல் ஒவ்வொருவரும் இதை கவனித்து அவரவர்களே தக்கது செய்து கொள்ள வேண்டியது மிக்க அவசியமான காரியமாகும்.

மது விலக்கு பிரசாரத்தை விட, தொத்து வியாதிகளை ஒழிக்கும் பிர சாரத்தை விட, இந்த கர்ப்பத்தடை பிரசாரம் மிகவும் முக்கியமான தென்பதே நமது அபிப்பிராயம்.

ஆதலால் இந்த கர்ப்பத் தடைக்கு நமது நாட்டில் ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தி அதன் மூலம் பிரசாரம் செய்ய பொது ஜனங்களில் சிலராவது இது சமயம் முன் வரவேண்டுமென்றே வேண்டிக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 06.04.1930**



RangaRakes tamilnavarasam.com

# இரட்டை வெற்றி

## பன்னீர்செல்வம்

உயர் திருவாளர் றாவ் பகதூர் ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் தஞ்சை ஜில்லா போர்டு தலைவராக மூன்றாம் முறை தேர்ந்தெடுக்கப்பட்ட விஷயம் முன்னமேயே வாசகர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம். ஆனால் அந்த தேர்தலின் மேல் சில சட்ட சம்மந்தமான ஆட்சேபனைகளைக் கிளப்பி எதிர் அபேட்சகர்கள் அரசாங்கத்திற்கு செய்து கொண்ட விண்ணப்பத்தால் இரண்டு மாத காலம் அந்த தேர்தல் முடிவை கிரமப்படி அரசாங்கத்தார் ஒப்புக் கொண்டு கெஜட்டில் பிரசுரம் செய்யாமல் காலம் கடத்தி வந்தார்கள். ஆனாலும் முடிவாக தேர்தல் செல்லுபடியானதை சென்ற வாரத்தில் பிரசுரம் செய்து விட்ட சேதி யாவருக்கும் மகிழ்ச்சியைத் தரும். இதனால் திரு. பன்னீர் செல்வம் அவர்கள் உத்தியோகக் காலம் மற்றும் சிறிது காலம் வளர்வதற்கு இடமுண்டாகி இரட்டை வெற்றி ஏற்பட்டதே தவிர வேறொரு கெடுதியும் ஏற்பட்டு விடவில்லை. ஆனால் மேற்படி தேர்தலின் மீது அது செல்லத் தக்கதல்லவென்று எதிர் அபேக்ஷகர் கோர்ட்டில் ஒரு வியாஜியம் தொடுத்து இருக்கின்றார்கள். அதன் கதிரிம் அனேகமாய் முடிவில் இப்படியே தான் ஆகி மூன்று வெற்றி ஏற்படக் கூடுமென்று இப்போதே முடிவு கட்டி விடலாம்.

எலக்ஷன்கள் நடந்ததும் எதிர் அபேக்ஷகர் தனது திருப்திக்கும் தனது கட்சியார்களின் திருப்திக்கும் இம் மாதிரி ஆக்ஷேபங்கள் கிளப்புவதும் அநேகமாய் எங்கும் இயற்கையாகவே இருந்து வருகின்றது. ஆனால் 100 – க்கு தொண்ணூற்றுக்கு மேற்பட்ட தேர்தல் ஆக்ஷேபங்கள் தோல்வி அடைந்தே வருவதும் சகஜமாகவும் இயற்கையாகவுமே இருந்து வருகின்றது. எனினும் இம் மாதிரி சம்பவங்கள் வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றி மகிழ்ச்சியடைய இரண்டு சந்தர்ப்பங்களையும் தோல்வி அடைந்தவர்கள் ஏமாற்றம் அடைய இரண்டு சந்தர்ப்பங்களையும் அளித்து வருவதும் அனுபவத்தில் கண்டதேயாகும். சுகமும் துக்கமும் மாறி மாறியும் தொடர்ந்து தொடர்ந்தும் வருவது இயற்கையேயாகுமன்றோ!

## எம். கே. ரெட்டி

உயர் திருவாளர் திவான்பகதூர் எம். கே. ரெட்டியவர்களும் செங்கல் பட்டு ஜில்லா போர்டு தலைவராக மூன்றாம் முறை தேர்ந்தெடுக்கப் பட்டார் என்கின்ற சேதியைக் கேட்க வாசகர்கள் மிகுதியும் மகிழ்ச்சியும் அடைவார்கள்.

திரு. எம். கே. ரெட்டி அவர்களின் ஜில்லா போர்டு நிர்வாகமும் திரு. பன்னீர்செல்வத்தின் நிர்வாகமும் பார்ப்பனரல்லாதார் சமூக நன்மையையும் சுயமரியாதைக் கொள்கையையே பெரிதும் தழுவி நடந்துவந்த காரணமே அவ்விரு போர்டு தலைவர் தேர்தலுக்கும் சற்று எதிர்ப்பும் சூக்ஷியும் பலமாய் இருக்க நேரிட்டது. ஆனாலும் அவ்விரு போர்ட் தலைவர்களும் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டதானது நமது இயக்கத்திற்கு வெற்றி என்றே சொல்ல வேண்டும்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 06.04.1930**


RangaRakes tamilnavarasam.com

# பூரண வெற்றி

சாரதா சட்டம் அமுலுக்கு வந்து விட்டது. சாரதா சட்டம் என்பது:

14 வயதுக்குக் கீழ்பட்ட பெண்களுக்கும் 18 வயதுக்கு கீழ்பட்ட ஆண்களுக்கும் விவாகம் செய்யக் கூடாது. செய்தால் தண்டனை என்ற நிபந்தனையைக் கொண்டது. மற்றபடி இதைத் தவிர இந்த சட்டத்தில் வேறு எவ்வித ஆபத்தும் கிடையாது என்பது யாவருக்கும் தெரிந்ததே. ஆனால் இந்தசட்டத்திற்கு இருந்துவரும் எதிர்ப்பு பெரிதாயிருந்தாலும், சிறிதாயிருந் தாலும் மதம் என்னும் பேரால் அல்லது வேறு எதையும் இது வரை யாரும் சொன்னதில்லை. மதத்தின் பேராலும் கூட ஆக்ஷேபணை சொல்லுகின்ற வர்களும் இருமதங்களின் பேராலேயே சொல்ல முன் வந்திருக்கிறார்கள். ஒன்று மகமதிய மதம். மற்றொன்று இந்து மதம், மகமதிய மதத்தின் பேரால் ஆக்ஷேபம் சொல்லுகின்றவர்கள் 14 வயதுக்கு மேற்பட்ட பெண்ணை கலியாணம் செய்வது கூடாது என்றோ அல்லது அது மத விரோதம் என்றோ சொல்வதில்லை. அன்றியும் 14 வயதுக்குக் கீழ்பட்ட பெண்ணைத்தான் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்கின்ற மத நிர்பந்தமிருப்பதாக வும் அவர்கள் சொல்லுவதில்லை. ஆனால் "கலியாணத்திற்கு வயது நிர்ணயம் கூடாது" என்று மாத்திரம் தான் சொல்லுகின்றார்கள். இதற்கு மற்ற ஜனங்கள் எவ்வளவு மதிப்புக் கொடுப்பார்கள் என்பது விளங்கவில்லை. ஆதலால் இதைப்பற்றி நமக்கு லட்சியமில்லை. ஆனால் இந்து மதத்தின் பேரால் சொல்லுகின்றவர்கள் பெண்களுக்கு 12 வயதுக்குள் கலியாணம் செய்தாக வேண்டும் என்றும் பெரிய மனுஷியானப் பெண்ணை கலியாணம் செய்து கொள்ளக் கூடாது என்றும், இவைகளுக்கு விரோதமாய் செய்தால் மத விரோதமென்றும், பாவமென்றும், நரகம் கிடைக்குமென்றும் சொல்லு கின்றார்கள்.

இது சரீர சாஸ்திரக் கூற்றுப்படி எப்படி இருந்த போதிலும் பெண்களை அடிமை என்றும் பெண்களுக்கு எந்த நிலையிலும் சுதந்தரம் கொடுப்பது கூடாதென்றும் சொல்லுகின்றவர்களுக்கும் அதை அனுமதிக்கும் மதத் திற்கும் வேண்டுமானால் சரியான நியாயமாய் இருக்கலாமே யொழிய, ஆனால் பெண்களுக்கு சுதந்தரம் கொடுக்க வேண்டும் என்றும் அவர்களும்



நம்மைப் போல் மனித ஜன்மம் தான் என்றும் கருதுகின்றவர்களுக்கும் ஒரு சிறிதும் நியாயமாய் தோன்றாது? மக்களை நரகத்திற்காவது அனுப்பலாமே யொழிய, அடிமையாய் இருக்க விடக் கூடாது என்றுதான் தோன்றும். அன்றியும் இந்து மதத்தின் கல்யாண ஒழுங்கு முறை இந்த மார்ச் *மீ* 1 உ முதல் 31 தேதி வரை நடந்த கல்யாணங்களைப் பார்த்தால் அதிலிருந்தே தெரிந்து கொண்டிருக்கலாம். சாதாரணமாக நமது நாட்டில் மட்டும் ஒரு வருஷ வயதிற்கு கீழ்பட்ட பெண் குழந்தைகளுக்கு மாத்திரம் நூற்றுக்கணக்கான கல்யாணங்கள் நடந்திருக்கின்றன. மற்றும் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 வருஷங் களுக்கு உள்பட்ட கல்யாணங்கள் பல பல ஆயிரங்களாக இருக்கலாம். இவற்றுள் பி. ஏ. பி. எல்., எம். ஏ. எம். எல்,. பட்டம் பெற்றவர்களும் இங்கிலாந்து முதலிய மேல் நாடுகளுக்கு யாத்திரை சென்று வந்த சீர்திருத்தவாதிகளும், சரீரக் கூற்று அறிந்த டாக்டர்களும், மேடையில் சீர்திருத்தத்தைப் பற்றி பேசு கின்றவர்களும் ஆகிய கூட்டத்தார்களின் வீட்டுக் கலியாணங்களே எண்ணிறந்தனவாயிருக்கின்றன. இவைகளை எல்லாம் பார்க்கும் போது இந்த சட்டம் எவ்வளவு அவசியம் என்பது மக்களுக்கு இப்பொழுதாவது விளங்கி இருக்கும்.

இந்த மாதிரி நிலைமை நமது நாட்டில் வெகு காலமாய் இருந்து வந்தும், இந்த அக்கிரமங்களைக் கவனித்து இவ்விதமாக ஒரு சட்டம் செய்யப் படுவதற்கு இந்திய அரசியல் வாதிகளாலேயே சுமார் 25 வருஷ காலமாக தடை செய்யப்பட்டு வந்திருக்கும் விஷயம் இந்திய சட்ட சபை நடவடிக்கை களைக் கவனித்து வந்தவர்களுக்கு நன்றாய் விளங்கும். சிறிது காலமாக நமது நாட்டில் அரசியல் புரட்டுகள் வெளியாக்கி அரசியல் சீர்திருத்த இயல் ஆகிய இயக்கங்களை தங்களுக்கே சொந்தமாக்கிக் கொண்டிருந்த பார்ப்பனர்களின் யோக்கியதையும் சூட்சியையும் வெளியாக்கி இந்நாட்டுக்கு வேண்டியது அரசியலா? அல்லது மதப் புரட்டு பார்ப்பனப் புரட்டு ஆகியவைகள் ஒழிபட வேண்டிய சமூக சீர்திருத்த இயலா? என்பதை பாமர மக்களை நன்றாய் உணரச் செய்த பிறகே பாலிய விவாகத்தை ஒழிக்கும் சாரதா சட்டத்தின் அவசியமும், பொட்டுக் கட்டும் வழக்கத்தை ஒழிக்கும் டாக்டர். முத்து லட்சுமி அம்மாள் சட்டத்தின் அவசியமும் 'தீண்டாமை ஒழிக்கவும்' பெண்களுக்கு சொத்துரிமை கொடுக்கவும், விதவைகளுக்கு சொத்துரிமை கொடுக்கவும் கொண்டு வரப்பட்டிருக்கும் ஜெயகர் முதலியவர்கள் சட்டத்தின் அவசியமும் ஜனங்கள் உணரவும், அவை வெளி வரவும் செல்வாக்கு பெறவும் இடம் கிடைத்து வந்திருக்கின்றன.

ஆனாலும் இவைகளுக்கு பலமான எதிர்ப்புகள் இல்லாமலும் இல்லை. இருந்தாலும் சீர்திருத்தக்காரர்கள் ஒருவாறு பூரண வெற்றி பெற்று வருகின்றார்கள் என்றே சொல்ல வேண்டும். எப்படி எனில் சீர்திருத்தக் காரர்கள் 100க்கு 10 விஷயத்தில் வெற்றி பெற்றால் அதுவே பூரண வெற்றி யான 100க்கு 100 பாகம் வெற்றி பெற்றதாகும்.



RangaRakes tamilnavarasam.com

ஏனெனில் உண்மை சீர்திருத்தக்காரர்கள் எண்ணிக்கை நமது நாட்டில் 1000 -க்கு ஒன்று கூட இருக்க மாட்டார்கள். சீர்திருத்த விரோதிகள் எண்ணிக்கை பகுதிக்கு மேற்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள். மீதியுள்ள பாமர மக்களோ தனக்கும் தெரியாமல், பிறர் சொல்வதையும் அறிய சக்தியற்ற மூடர்களாக வைக்கப் பட்டிருப்பவர்கள். இந்த நிலையில் உள்ள ஒரு நாட்டில் ஒரு சிறு வெற்றி ஏற்பட்டாலும் அது முழு வெற்றியேயாகும். உதாரணமாக, சீர்திருத்தங்களுக்கு விரோதமாய் இருந்து, சீர்திருத்தங்களை எதிர்த்து வெற்றி பெற்றவர்களைப் பற்றி வெற்றி மகிழ்ச்சி கூறுகின்ற உணர்ச்சியுள்ள மக்கள் அடியோடு மறைந்து வருகிறார்கள். ஆனால் சீர்திருத்தத்தில் ஒரு சிறு பாகம் வெற்றியானாலும் அதை புகழ்ந்து வெற்றி மகிழ்ச்சி அடைகின்றவர்கள் தாராளமாயும், வெளிப்படையாயும் ஏற்பட்டுவிட்டார்கள்.

இந்த நிலை மிகவும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் அடையத் தக்க நிலையாகும். ஆதலால் சீர்திருத்தக்காரர்கள் தங்களது தோல்விக்கும் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்புகளுக்கும் சிறிதும் கவலைக் கொள்ளக் கூடாது. ஆனால் வெற்றியில் எவ்வளவு மகிழ்ச்சி அடைவதாய் இருந்தாலும் அதோடு திருப்தியும் அடைந்து விடக்கூடாது என்று சொல்லுவோம். பொட்டு கட்டு மசோதா சென்ற மாதம் சென்னை சட்டசபையில் நிறைவேறி இருக்க வேண்டியதானது அனாவசியமாய் ஒத்திப் போட நேர்ந்ததானது விசனிக்கத்தக்கதாகும். ஆனாலும் அடுத்த கூட்டத்திலாவது அது நிறைவேறி விடக்கூடும் என்றே கருதி இருக்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.04.1930**



# விரதப் புரட்டு

## உமாமகேஸ்வர பூஜை விரதம் "நைமிசாரண்ய வாசிகளைக்கு சூத புராணிகர் சொன்னது"

**- சித்திரபுத்திரன்**

ஆனந்த தேசத்தில் வேத விரதன் என்னும் பிராமணனுக்கு சாரதை என்று ஒரு பெண் இருந்தாள். அந்த ஊரில் மனைவியை இழந்த பத்மநாபன் என்னும் கிழப் பார்ப்பான் அந்தப் பெண்ணின் தகப்பனுக்கு நிறைய பணம் கொடுத்து தனக்கு அந்த பெண்ணை இரண்டாவது பெண்ஜாதியாக விவாகம் செய்து கொண்டான். அந்த கிழப் பார்ப்பான் மணக் கோலம் முடியும் முன்பே விஷம் தீண்டி இறந்து போனான். பிறகு அந்த பெண் தகப்பன் வீட்டிலேயே இருந்தாள். சில நாள் பொருத்து ஒரு முனிவர் சாரதையின் வீட்டிற்கு வந்தார். சாரதை அவருக்கு மரியாதை செய்தாள். உடனே அந்த முனிவர் சாரதையை "நீ புருடனுடன் இன்பமாய் வாழ்ந்து நல்ல பிள்ளைகளை பெறக் கடவாய்" என்று ஆசீர்வாதம் செய்தார். அதற்கு சாரதை "பூர்வ ஜன்ம கருமத்தின் பலனாய் நான் விதவையாகி விட்டதால், தங்களின் ஆசீர்வாதம் பலியாமல் வீணாய் போய் விட்டதே" என்றாள். அதற்கு அந்த ரிஷி "நான் கண் தெரியாத குருடனானதால் அறியாமல் அந்தப்படி ஆசீர்வாதம் செய்ய நேரிட்டு விட்டது. ஆனாலும் அது பலிக்கும் படி செய்கிறேன் பார்" என்று சொன்னார். "என் புருஷன் இறந்து வெகு நாளாய் விட்டதே. இனி அது எப்படி பலிக்கும்"? என்று சாரதா கேள்க்க அதற்கு அவர் "நீ உமாமகேஸ்வர விரதம் அனுஷ்டித்து வந்தால் கண்டிப்பாய் நீ உத்தேசித்த காரியம் கை கூடுமென்று"கூறினார்.

"அவ்விரதம் அனுஷ்டிப்பதெப்படி?" என்று சாரதா கேட்டாள். அதற்கு முனி சொல்லுவதாவது:-



RangaRakes tamilnavarasam.com

"சித்திரை அல்லது மார்கழி மாதத்தில் ஒரு பிராமணனை அவன் மனைவியுடன் நல்ல பீடத்தில் உட்கார வைத்து அவர்களைப் பார்வதி பரமசிவனாகப் பாவித்து மலர்களால் அர்ச்சித்து தினமும் அன்ன ஆகார மிட்டு வருஷக் கணக்காய் பூசை செய்து பார்வதி பரமசிவ உருவத்தை மனதில் நினைத்து அதற்கு விரத அபிஷேகம் செய்து ஆராதித்து பஞ்சாக்ஷ ரத்தை தியானித்துக்கொண்டிருந்தால் நினைத்த காரியமெல்லாம் கைகூடும்" என்றார்.

அது கேட்ட சாரதை யானவள் அந்தப் படியே அதுமுதல் தனக்கு முனிவரின் ஆசீர்வாதம் பலிக்க வேண்டுமென்று கருத்தில் கொண்டு முனிவர் சொன்னபடி உமாமகேஸ்வர விரதத்தை கிரமமாய் அனுஷ்டித்து வந்தாள். உடனே பார்வதி தேவி சாரதைக்கு பிரத்தியட்சமாகி. "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டாள்.

சாரதை, "எனக்கு புருஷன் வேண்டும்" என்றாள். பார்வதி "அப்ப டியே உன்னை ஒரு புருஷன் தினமும் வந்து சொற்பனத்தில் புணருவான். அதனால் நல்ல ஒரு குழந்தை பிறக்கும்" என்று வரம் கொடுத்தாள். அது முதல் சாரதையின் சொற்பனத்தில் தினமும் ஒரு புருஷன் வந்து புணர்ந்து கொண்டே இருந்தான். அதனால் சாரதைக்கு கர்ப்பமும் உண்டாயிற்று. அதைக் கண்ட அவ்வூரார் எல்லோரும் சாரதை சோரம் போய் கர்ப்பம் ஆய் விட்டாள் என்று பழித்தார்கள். இதைக் கண்டு சாரதை துக்கப்பட்டாள். பிறகு பழித்தவர்கள் வாய் அழுகி அதில் புளுவுதிரும்படி பார்வதி செய்து விட்டாள். 10 மீ பொருத்து சாரதை ஒரு புத்திரனைப் பெற்றாள். அதற்கு சாரதேயன் என்று பெயர் சூட்டி மகா மகிமை பொருந்திய சிவராத்திரியன்று தாயும் பிள்ளையும் கோகர்ணத்திற்கு யாத்திரை சென்றார்கள். செல்லும் வழியில் சொர்ப்பனத்தில் வந்த புருஷன் நேரில் வந்து சாரதையுடன் கலந்து கொண் டான். பிறகு கொஞ்ச காலம் சாரதையும் புருஷனும் சந்தோஷமாய் வாழ்ந்து இன்பமனுவித்து புருஷன் இறந்து போனான். புருஷன் இறந்ததும் உடனே சாரதை உடன் கட்டையேறி இருவரும் சிவபத மடைந்தார்கள் என்று நைமி சாரண்யவாசிகளுக்கு சூதக முனிவர் வியாசரிடம் கேட்டுத் தெரிந்ததை சொல்லுகிறேன் என்று சொன்னார்.

இந்த சரிதை பிரமோத்திர புராணத்தில் உமாமகேஸ்வர விரத மகிமை யும் விரதத்தின் பலனும் என்கின்ற தலைப்பில் சொல்லப் பட்டிருக்கிறது. இதை கவனிப்போம்.

இந்த கதையின் ஆபாசம் எவ்வளவு மோசாமாயிருக்கிறது என்பதை வாசகர்களே யோசித்துப் பாருங்கள். ஒரு சிறு பெண்ணை ஒரு கிழவன் அந்தக் காலத்திலும் கட்டிக் கொள்ளுகின்ற வழக்கமும், தகப்பன் பணம் வாங்கிக் கொண்டு சாகப் போகும் கிழவனுக்கு தனது சிறு பெண்ணை கட்டிக்



RangaRakes

கொடுக்கும் வழக்கமும், பார்ப்பனர்களுக்குள் இருந்ததாக வைத்துக் கொண் டாலும் புருஷன் இறந்தவுடன் உடன்கட்டையேராமல் பெண்ஜாதியான (சாரதை) சிறு பெண் இருந்திருக்க முடியுமா? என்பதை நினைத்துப் பாருங்கள். ஒரு சமயம் உடன்கட்டையேராமல் இருந்திருந்தாலும், ஒரு ரிஷிக்கு இந்தப்பெண் விதவை என்ற சங்கதி தெரியாமல் போகுமா? ரிஷிக்கு ஒரு சமயம் அந்தப்படி தெரியாமல் போயிருந்தாலும் ஒரு குருட்டு ரிஷி தெரியா மல் சொல்லிவிட்ட காரியம் ஒரு விரதம் அனுஷ்டிப்பதால் கைகூடிவிடுமா? அந்தப்படி கூடுமானாலும் பார்ப்பனனையும் அவன் பெண்ஜாதியையும் பார்வதி பரமசிவன் போல் எண்ணி பூசை செய்தால் பார்வதி வந்து விடுவா ளா? அப்படி வருவதாயிருந்தாலும் பார்வதி நேரில் புருஷனை கொடுக்காமல் தூக்கத்தின் போது கனவில் வந்து வந்து புணர்ந்து விட்டு போகும்படி கட்டளை யிடுவாளா? அப்படி கட்டளையிடுவதானாலும் கனவில் புணர்ந்ததற்கு கனவில் கற்பமுண்டு பண்ணாமல் விழித்த பிறகுங்கூட அந்தகற்பம் இருக்கும்படி செய்வாளா? அப்படித்தான் செய்தாலும் அதன் காரணத்தை பொது ஜனங்களுக்கு தெரியப்படுத்தாமல் இரகசியமாய் இருக்கச் செய்து இந்த இரகசியம் தெரியாத பொது ஜனங்கள் சாரதையின் கர்ப்பத்தைப் பற்றி சந்தேகப்பட்டால் அதற்கு பார்வதி திருப்தி அடையும்படி சமாதானம் சொல்லாமல் சந்தேகப்பட்டவர்கள் வாய் அழுகிப்புளுவு தள்ளும்படி செய்வது யோக்கியமாகுமா? அன்றியும் கோகர்ணத்திற்கு போகும் வழியில் அந்த சொர்பனப் புருஷனை வரும்படி செய்த பார்வதியும் பரமசிவனும் பொது ஜனங்கள் சந்தேகப்படும் போது வரும்படி செய்திருக்கப்படாதா? அன்றியும் அந்தப் புருஷனும் சாவானேன்? அப்படியே காலம் வந்து செத்து இருந்தாலும் முன்னைய கிழப்புருஷனுக்கு உடன் கட்டை ஏராத குமரி சாரதை இந்தப் புருஷனுக்கு ஏன் கிழவி ஆன பின் உடன் கட்டை ஏறினாள்?

வாசகர்களே! வேதப்புரட்டு, இதிகாசப் புரட்டு, புராணப் புரட்டு என்பது போல் இந்த விரதப் புரட்டும் எவ்வளவு முட்டாள் தனமானதும் அயோக்கியத் தனமானதும் சுய நல சூக்ஷி கொண்டதுமாய் இருக்கின்றது என்பதை நன்றாய் கவனித்துப் பாருங்கள். விரதம் என்றால் ஒரு பார்ப்பனனையும் பார்ப்பனத்தியையும் பார்வதி பரமசிவன் போல் பாவித்து, அபிஷேகம் பூசை ஆராதனை செய்தால் விதவைகளுக்கு புருஷன் சுவர்ப்பனத்தில் வருவான் என்பது எவ்வளவு அயோக்கியத்தனமான கதை?

இப்படித்தானே இப்போதுள்ள விதவைகள் புருஷ ஆசைக்கு விரத மிருந்து "சொர்ப்பனத்தில்" புருஷருடன் புணர்ந்து கொண்டிருப்பார்கள். சாரதையைப்போல் அநேக விதவைகள் இப்போதும் கற்பமானாலும் பழி சொல்லுகின்றவர்கள் வாயில் பார்வதி புழுக்கள் தள்ளச் செய்யாததால்தான் அந்த விரதமிருக்கும் விதவைகளெல்லாம் கர்ப்பங்களை தாங்களாகவே அழித்து விடுகின்றார்கள் போலும். பார்ப்பன சூக்ஷி எவ்வளவு மோசமானது



tamilnavarasam.com

என்பதை இதிலிருந்தாவது விரதமிருக்கும் வைதீகர்களும் விரதமிருக்கும் பெண்களும் புருஷர்களும் அறிந்து கொள்ளுங்கள்.

மற்ற விரதங்களைப்பற்றி பின்னால் சமயம் நேர்ந்தபோது எழுது கிறேன்.

**குடி அரசு - கட்டுரை - 06.04.1930**



# தமிழ் நாட்டில் உப்புக் காய்ச்சுதல் சத்தியாக்கிரகம்

திரு. காந்தி "கடைசிப்போர்" துவக்கப்பட்டாய் விட்டது. மும்முரமாக ஆங்காங்கு வேலைகள் நடைபெறுவதாக பத்திரிகைகளில் காணப்படு கின்றன. தொண்டர்களும் வந்து குவிவதாக பத்திரிகைப் பிரசாரங்கள் பக்கம் பக்கமாய் பறக்கின்றன. பத்திரிகைப் பிரசாரங்களை பார்க்கும் வாலிபர்க ளுக்கு ரத்தம் துடிக்கின்றது. அவர்களுக்கு தாமும் போய்ச் சேர்ந்து கொள்ள லாமா என்கின்ற பதட்டம் நாக்கில் தண்ணீர் ஊறுகின்றது, "இந்த போர் சீக்கிரம் அடங்கிப் போகும்" "தோல்வி ஏற்பட்டு விடும்" என்று கருதி இதிலிருந்து விலகியவர்களும் பரிகாசம் செய்தவர்களும் இந்த பத்திரிகை ஆர்ப் பாட்டங்களைப் பார்த்து "ஜெயித்து விடும் போல் இருக்கின்றதே. நமக்கு நோகாமல் கிடைக்கக்கூடிய தேசபக்தன் பட்டமும் தேசீய வீரன் பட்டமும் வீணாய்ப் போய் விடும் போல் இருக்கின்றதே இனி எப்படியாவது உள்ளே புகுந்து கொள்ளலாமா" என்று பலர் மன விசாரத்துடன் கஷ்டப்படுகின்றனர். இந்த நிலையில்,

நமக்கும் பல மிரட்டுதல் மொட்டைக் கடிதங்களும் யோசனை கூறும் நண்பர்கள் கடிதங்களும் வந்த வண்ணமாய் இருக்கின்றன. இந்த இயக்கத்தில் நாம் ஈடுபடாததாலும் அதைப் போற்றியாவது எழுதாமல் இருப்பதாலும் மற்றும் அதைக் கண்டித்து எழுதுவதாலும் இத்துடன் எனது செல்வாக்கு ஒழிந்து சுயமரியாதை இயக்கமே அடக்கிப் போகும் என்றும் நமது எதிரிகள் சந்தோஷப்பட்டுக் கொண்டுமிருக்கின்றனர்.

எப்படி இருந்தாலும் சரி. உப்புக் காய்ச்சும் சட்ட மறுப்பு வெற்றி பெற்று தெருத் தெருவாய் உப்பு மலை மலையாய்க் குவித்துக் கிடந்தாலும் சரி, அதோடு வெள்ளைக்கார ராஜாங்கமே ஒழிந்து இந்திய 'பூரண சுயேச்சை' அடைந்து இங்கிலாந்து தேசமும் நமது கைக்கு வருவதாயிருந்தாலும் சரி. இந்த உப்புக் காய்ச்சும் காரியத்தையோ இது சம்பந்தமான சட்டமறுப்புக் காரியத்தையோ நாம் சிறிதும் ஒப்புக்கொள்ளவே மாட்டோம் என்பதை தைரியமாய்ச் சொல்லுவதோடு இதனால் இந்தியாவுக்கு ஒரு வளைந்து போன



RangaRakes tamilnavarasam.com

குண்டு ஊசியளவு நன்மை கூட ஏற்படாது என்றும் கோபுரத்தின் மீதிருந்து கூறுவோம்.

மேலும் இம்மாதிரி வெறும் அர்த்தமற்ற ஆவேசக் கிளர்ச்சி எவ்வளவு வெற்றி பெற்றாலும் பாமர மக்கள் தினம் தினம் பத்திரிகைகளில் எழுச்சியான சேதிகளை படித்து அவ்வப்போது ஆனந்தமடைந்து கொண்டிருப்பதைத் தவிர வேறொன்றும் ஏற்படாது என்று நாம் இப்போது சொல்லுவதை பத்திரமாய் ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்திருந்து பரீட்சித்து பார்க்கப் பிரார்த்திக்கின்றோம்.

மேலும் இக்கிளர்ச்சியானது வெறும் வாண வேடிக்கை போல் நடக்கும் போது அடையும் மகிழ்ச்சியோடு முடிந்து விடப்போவதுடன் கிளர்ச்சி அடங்கிய பிறகு ஒரு ஆயிரக்கணக்கான தேசபக்தர்கள் புதிதாகவோ அல்லது இரண்டு தரம் மூன்று தரம் சிறை சென்ற தேசீய வீரராகவோ ஏற்பட்டு அடுத்து வரும் தேர்தல்களுக்கு ஏஜண்டுகளாக ஆவதைத் தவிர வேறு எவ்வித பலனையும் அளித்து விட முடியாது.

ஒவ்வொரு சீர்திருத்தம் வரும் போதும் ஏதாவது ஒரு கிளர்ச்சி ஏற்பட்டு அதன் பயனை ஒரு சிலர் அடுத்து வரும் தேர்தலில் உபயோகித்துக் கொள்ளுவது இயற்கையாகி இதுவரை நடந்து வந்த சம்பவமுமாகும். அது போலவே இப்போதும் நடப்பதில் ஆச்சரியமில்லை. அன்றியும் பொதுவாகவே நாம் ஒன்று சொல்ல விரும்புகின்றோம், அதனால் பலருக்கு கோபமும் ஆத்திரமும் உண்டாகலாம். எனினும் நமக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை. சைமன் கமிஷனை இந்தியா ஒட்டுக்குமே பஹிஷ்க்கரிக்க வேண்டுமென்று கூச்சல் போட்டபோது, நாம் மாத்திரமே தான் அதை எதிர்த்து நமது அபிப்பிராயத்தை வலியுறுத்தினோம். தென்னாட்டு மக்களை பதினா யிரக்கணக்காக கூட்டி வைத்து மகாநாடு கூட்டி வரவேற்பு தீர்மானமும் செய்தோம். பிறகு எல்லா சட்டசபைகளும் எல்லா சமூக சபைகளும் ஒன்று இரண்டு தவிர மற்ற எல்லா அரசியல் சபைகளும் அதை வரவேற்று உபசாரமும் செய்து தங்கள் குறைகளையும் தேவைகளையும் தெரிவித்துக் கொண்டன. ஆனாலும் அந்த சமயத்திலும் நமக்கு பல மொட்டைக் கடிதங்கள் மைலாப்பூர் தபாலா பீசிலிருந்தும் திருவல்லிகேணி தபாலாபீசிலிருந்தும் கும்பகோணம் தபாலா பீசிலிருந்தும் சுட்டு விடுவதாகவும், குத்தி விடுவ தாகவும் கண்டு எழுதி வந்தன. அவற்றில் சில இரத்தத்தினால் கையெழுத்தும் செய்யப்பட்டிருந்தன. அதுபோலவே ஜாதி மதபேத விஷயங்களிலும் பிரவேசித்து நமக்குப் பட்டதை வெளியில் எடுத்துச் சொல்லி வருவதில் பலர் ஆத்திரப்பட்டு கண்டபடி கடிதம் எழுதினார்கள். இப்பொழுதும் அது போலவே தான் பல இதைப் பார்த்து பிரமாதமாய்க் கோபித்து மொட்டைக் கடிதம் எழுதவோ அல்லது உண்மையிலேயே ஏதாவது காரியத்தில் செய்யவோ ஆன காரியங்கள் நடைபெறலாம். அன்றியும் நமது மகாநாட்டிற்கும் சற்று சங்கடம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். எப்படி ஆனாலும் சரி நமக்கு அதைப் பற்றிக்



RangaRakes

கவலையில்லை. நமக்குத் தோன்றியதைச் சொல்லிவிட்டு வந்ததை அனுபவிக்கத் தயாராயிருக்கிறோம்.

அதாவது திரு. காந்தியவர்களால் இந்தியா ஒருநாளும் ஒரு நன்மையையும் அடைய முடியாது என்பதே. அவர் காரியமெல்லாம் வாண வேடிக்கையைத் தவிர வேறொன்றுமே இல்லை என்பது நமது அனுபவ ஆராய்ச்சி முடிவு. உதாரணமாக இந்த 10 ௵காலமாக இந்திய மக்கள் திரு காந்தியை மகாத்மாவாக – ஏன் அவதாரமாகவும் வணங்கி மரியாதை செய்தார்கள். அவர் கேட்டபடி யெல்லாம் ரூபாய்கள் கொடுத்தார்கள், சொன்னபடி யெல்லாம் கூட்டம் கூட்டமாக கூடி ஜெயில் சென்றார்கள். கதர் முதலிய விஷயங்களில் கண்மூடித் தனமாய் பின்பற்றினார்கள். சர்க்காரும் அவரைக் கண்டு சிறிது அஞ்சினார்கள். இவ்வளவையும் கொண்ட அவரால் இந்தியாவுக்கு இதுவரை ஏற்பட்ட நன்மை என்ன? என்று கேள்க்கின்றோம். காந்தியார் ஆச்சிரமம் ஒரு பெரிய மடமாயிற்று. அதற்கு ஆதாரமாக 2 லக்ஷம் 3 லக்ஷம் 10 லக்ஷம் என்கின்ற தொகை கொண்ட முதலுடன் ஆங்காங்கு கிளை மடங்கள் ஏற்பட்டது. இவைகளைத் தவிர மற்றபடி திரு. காந்தியார் அரசியல் தலைமை இந்தியாவில் ஏற்பட்டது முதல் இதுவரை ஏற்பட்ட லாபம் என்ன? என்று மறுபடியும் கேள்க்கின்றோம். இந்த 10 ௵ முயற்சியில் இந்தியாவின் வரி ஒரு தூசியளவாவது குறைந்த தென்று சொல்ல முடியுமா? மற்றும் அதற்கு எதிரிடையாக வரி அதிகமாயிற்று என்று நாம் புள்ளிகளுடன் ரூபிப்போம். உத்தியோகங்களோ சம்பளங்களோ குறைந்ததாகவாவது சொல்ல முடியுமா? மேலும் மேலும் அவைகள் ஒன்றுக்கு ஒன்றரையாகவும் இரட்டிப்பாகவும் ஏற்பட்டது என்று நம்மால் சொல்ல முடியும்.

பொருளாதார விஷயத்திலாவது இவரைச் சுற்றித் திரிந்த உத்தியோகஸ்தர்கள் வக்கீல்களைத் தவிர வேறு பாமர மக்கள் இந்த 10 வருஷத்தில் ஒரு சிறிதும் முற்போக்கடைந்ததாக சொல்வதற்கும் இல்லை. இவைகள் தான் இப்படி என்றால் மற்றப்படி சமூக துறையிலாவது ஏதாவது தக்க பலன் ஏற்பட்டதாக யாராவது சொல்ல முடியுமா? என்று கேள்க்கின்றோம். ஒருவித முன்னேற்றமும் ஏற்படா விட்டாலும் இவ்விஷயங்களாகிய அரசியல் பொருளாதாரம் சமூகத் துறை ஆகிய மூன்று இனங்களிலும் திரு. காந்தியார் அபிப்பிராயமாவது சரியானது என்று யாராவது சொல்ல முடியுமா? என்று கேள்க்கின்றோம்.

அரசியலில் அவரது கொள்கைகள் எல்லாம் அதாவது பஹிஷ்காரமும் சட்ட மறுப்பும் தோல்வி அடைந்து கொண்டே வந்திருக்கின்றது. பொருளாதாரத்திலோ கதர், கதர் என்று கதரிக் கொண்டிருப்பதைத் தவிர அதனால் பல பேர் அதிக நஷ்டமடைவதன் மூலம் சிலருக்கு தினம் 0 – 0 – 6, 0 – 0 – 9 பைசா வீதம் அற்பக்கூலி கிடைத்ததைத் தவிர வேறு ஒன்றையுமே காணோம். சமூகத் துறையிலோ வருணாசிரமும் புராணங்களும் காப்பாற்றப்



tamilnavarasam.com

படுவதற்கு ஆதரவளிக்கப் பட்டதைத் தவிர மடங்கள் ஏற்படுத்தப் பட்டதைத் தவிர வேறு ஒரு பலனும் ஏற்பட முடியவில்லை. இந்த நிலையில் 10 வருஷம் கடந்து 11 வது வருஷத்தில் "நான் இரண்டிலொன்று பார்த்து விடுகின்றேன். இனித் திரும்பி வருவதில்லை" என்று தனது மனசலிப்பு மேலும் தோல்விகளின் மேலும் தவறுதல்களின் மேலும் கோபித்து கொண்டு சண்டி யுத்தத்திற்கு புறப்பட்டிருப்பதானது தற்கொலை செய்து கொள்ளப் போவது போலல்லாமல் வேறு என்ன பலனுக்கு அனுகூலமானதாயிருக்கின்றன.

திரு. காந்தியாரின் 11 நிபந்தனைகளை வெள்ளைக்காரர்கள் சுலபத்தில் ஒப்புக் கொண்டு விடுவார்களா? ஏதோ ஒரு விதத்திலாவது செல்வாக்கு இருக்கும் ஒருவரை திடீரென்று கைதி செய்தால் வீண் கலாட்டா ஏற்பட்டு விடுமோ என்கின்ற யோசனையின் பேரில் விட்டுப் பார்க்கலாம் என்பதைத் தவிரவும் திரு. காந்தியாரும் தானாகவே ஜெயிலுக்கு போகப் பிரயத்தனப் படுவதால் நாம் அதற்கு அனுகூலம் செய்யலாமா என்கின்ற யோசனையின் பேரிலும் சர்க்கார் சற்று வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தாலும் இருக் கலாம். அல்லது நாளை மறுநாள் பிடித்தாலும் பிடிக்கலாம். அல்லது விட்டுவைத்துக் கொண்டு அரசாங்கத்தார் ஏதோ பயந்தவர்கள் போல் வேஷம் போட்டு யோக்கியப் பட்டம் பெறலாமா என்று சும்மா இருந்தாலும் இருக்கலாம். இவைகளினாலெல்லாம் இந்த சட்ட மறுப்பும் சத்தியாக்கிரகமும் யாருக்கு என்ன பயன் விளைவித்து விடும் என்பதுதான் இங்கு கவனிக்கத் தக்கதாகும்.

தவிறவும் மற்றொருபுறம் இவ்வளவு பெரிய தேசீயப் போரில் மக மதியர்களையாவது தாழ்த்தப்பட்ட வகுப்பாரையாவது கலந்து ஆலோசிக்கப் பட்டதா? அல்லது இந்து முஸ்லிம் பிரச்சனையைப் பற்றியாவது அல்லது "தீண்டாதார்" "உயர்ந்த ஜாதியார்" என்ற பிரச்சினையைப் பற்றியாவது யோசித்து ஏதாவது பரிகாரமோ சமாதானமோ செய்யப்பட்டதா? ஒன்றுமே இல்லையே! "முஸ்லீம்கள் பின்பற்றினாலும் பின்பற்றாவிட்டாலும் சரி, தாழ்த்தப்பட்டவர்கள் பின்பற்றினாலும் பின்பற்றாவிட்டாலும் சரி, நான் எனது காரியத்தை நடத்தித்தான் தீருவேன் என்று முடிவுகட்டி விட்டார்". இதனால் முஸ்லீம்கள் திரு. காந்தியும் காங்கிரசும் வகுப்பு வாதிகள் என்றும் ஒரு வகுப்பை மற்றொரு வகுப்பு அடக்கியாள நினைப்பதே தேசீயமாயிருக் கிற தென்றும் உப்பு சத்தியாக்கிரகம் என்பது திரு. காந்தியாரின் சூதாட்டம் என்றும் அதில் எந்த முஸ்லீமும் ஏமாந்து போய் விழுந்து விட வேண்டாம் என்றும், சில முஸ்லீம்கள் தங்கள் விளம்பரத்திற்கு ஆக அதில் கலந்திருந் தாலும் அது முஸ்லீம் பிரதிநிதித்துவ மாகாதென்றும் உருப்படியான வேலை கள் ஒன்றும் அதில் இல்லை யென்றும் ஆகிய இந்த விபரங்களைக் கண்டு அகில இந்திய சென்ட்ரல் கிலாபத் கமிட்டி ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கின்றது.



இது 8 கோடி முஸ்லீம் மக்களில் பெரும்பான்மையானவர்களின் அபிப்பிராயமல்லவா என்று கேள்க்கின்றோம். அது போலவே தாழ்த்தப் பட்ட மக்கள் சார்பாக பம்பாய் முதலிய இடத்து தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்கு இருக்கும் இழிவை முதலில் நீக்கிவிட்டு பிறகு சத்தியாக்கிரகம் நடத்தலாம் என்று வழி மறிக்கின்றார்கள். இது 6 கோடி தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும்பான்மையானவர்கள் அபிப்பிராயமல்லவா என்று கேள்க் கின்றோம்.

இந்தப்படி 14 கோடி மக்களின் சமூக ஆசைகளையும் குறைகளையும் அலட்சியம் செய்து விட்டு "நான் கடைசிப் போர் ஆரம்பித்து விட்டேன், தேசத்தின் மானத்தைக் காப்பாற்ற எல்லோரும் வாருங்கள்" என்றால் பொறுப் புள்ள மக்கள் யாராவது வருவார்களா? மற்றும் இந்தியாவில் உள்ள பல்வேறு அரசியல் சமூக இயல் ஸ்தாபனங்களை யெல்லாம் தூசி போல் அலட்சிய மாய் மதித்துக் கொண்டு ஒன்றையும் லட்சியம் செய்யாமல் "இரண்டில் ஒன்று பார்த்து விடுகின்றேன்" என்று சொன்னால் அதை யார் மதிப்பார்கள்? யார் அதில் கவலை செலுத்துவார்கள்? ஏதோ ஆவேசத்தில் பலவீனமுள்ள வாலிபர்கள் சிலர் அல்லது பலர் ஒரு 10 நாளைக்குக் கூட இருந்து கூச்சல் போடலாம். இதனால் ஏற்படும் பலன் என்ன? என்பதை யோசித்துப் பாருங்கள். பொதுவாக இந்தக் கிளர்ச்சி பாமர மக்களுக்குப் பெருத்த சங்கடத் தையும் நெருக்கடியான நிலைமையையும் கொண்டு வந்து விடப் போகின்ற தென்பதையும் இதனால் இன்னம் ஒரு 10 வருஷத்திற்கு நாட்டின் முன்னேற் றம் தடைப்பட்டு, நாடு எல்லாத் துறையிலும் பிற்போக்கடைய நேரிடும் என்பதையும் தெரிவித்துத் தீர வேண்டியிருப்பதற்கு வருந்துகின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 13.04.1930**



RangaRakes tamilnavarasam.com

# “கடைசிப் போரின்” முதல் பலன்

திரு. காந்தியார் ஆரம்பித்திருக்கும் “கடைசிப் போரினால்” இந்தியாவுக்கு அரசியல் துறையிலும் சமுதாயத் துறையிலும் பல கெடுதல்கள் ஏற்பட்டு நமது நாட்டின் முன்னேற்றம் தடைப் பட்டுப் போகும் என்று நாம் எழுதியும் பேசியும் வருவது நேயர்களுக்கு நன்றாய் தெரிந்திருக்கும். அதற்கு இப்போதே ஒரு தக்க ரூஜுவு ஏற்பட்டு விட்டது.

அதாவது சாரதா சட்டம் சிறிது ஆட்டம் கொடுத்து விட்டதேயாகும். பார்ப்பனர்கள் பெரும்பாலும் திரு. காந்திக்கு உதவியாயிருப்பதாகவும் காந்திப் போரில் மிக்க அக்கரை இருப்பதாகவும் இது சமயம் காட்டிக் கொண்டிருப்பதின் பல இரகசியங்களில் முக்கியமானது இந்த சாரதா ஆக்டை ஆடச் செய்வதற்காகவேயாகும்.

உப்பு சத்தியாக்கிரகத்திற்கு பயந்து கொண்டுதான் சர்க்கார் சாரதா சட்டத்தில் பின் வாங்கக் கூடுமே ஒழிய மற்றபடி சாரதா சட்டம் தப்பு என்றோ சர்க்காரால் தாங்கள் செய்தது பிசகு என்றோ கருதி அல்ல. உப்பு சத்தியாக்கிரகம் முடிவு பெறுவதற்குள் வைதீகர்கள் இதுபோல் அநேக காரியங்கள் சாதித்துக் கொள்ளப் போகின்றார்கள் என்பது நமக்குத் தெரியும். இவ்வித கெடுதியை திரு. காந்தியைப் போன்ற தலைவர்களைக் கொண்ட இந்திய மக்கள் அடைவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

எப்படி இருந்தாலும் நமது நாட்டில் அரசாங்கத்தார் சீர்திருத்தம் செய்ய இசைந்தாலும் கூட அதை நடைபெற வொட்டாமல் தடுப்பவர்கள் இந்தியர்கள் தானா அல்லவா? பொது மக்கள் பிரத்தியட்சத்தில் அறிந்து கொள்ள இதனாலாவது ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டதைக் குறித்து ஒரு விதத்தில் நமக்கு மகிழ்ச்சியேயாகும். ஏனெனில் நமது நாட்டில் சில போலி தேசீய வீரர்கள் சமுதாய முன்னேற்றத்திற்கு சர்க்காரே காரணம் என்று பேசி மக்களை ஏய்ப்பதற்கு சரியான பதிலாகும். ஆனாலும் இது விஷயத்தில் இது உண்மையாயிருக்குமானால் சர்க்காருடைய நடவடிக்கையை நாம் அழுத்தமாகக் கண்டிக்கின்றோம். கண்டிக்கின்றோ மென்பது போலி தேசீய வீரர்களைப்போல்



வாயினாலும் எழுத்தினாலும் மாத்திரம் அல்ல என்றும் அதற்கு அறிகுறி காரியத்திலேயே காட்டப் போகின்றோமென்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். உணராமல் சாரதா சட்டத்தை சர்க்கார் திருத்துவார்களேயானால் வைதீகக் கூச்சலுக்குப் பயப்படுவார்களே யானால் அது கடைசிப் போரின் முதல் பலனாகுமே ஒழிய வைதீகர்களின் வெற்றி என்பதாக நாம் ஒரு காலமும் ஒப்புக் கொள்ள மாட்டோம். இது மாத்திரமல்லாமல் கடைசிப் போர் முடிவு பெறுவதற்குள் இது போல் இன்னம் அனேகம் கெடுதிகள் ஏற்படப் போவதையும் எதிர்பார்த்து தான் ஆக வேண்டும்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 13.04.1930**



RangaRakes tamilnavarasam.com

# உதிர்ந்த மலர்கள்

1. நாட்டின் முன்னேற்றத்திற்கு மக்களின் ஒழுக்கமே முக்கியமானது. ஆனால் நமது நாட்டில் மதமும் மூட நம்பிக்கையும் ஒழுக்கத்திற்கு நிரந்தர விரோதியாயிருக்கிறது.

2. சுயமரியாதை இயக்கமானது வெறும் நம்பிக்கையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட எந்த மதத்திற்கும் விரோதமானதுதான்.

3. சுயராஜ்யம் கேட்பதற்குமுன் அது ஏன் நமக்கு இல்லாமல் போய் விட்டது என்பதை அறிந்தாயா? என்றைக்காவது இந்து அல்லது இந்தியன் என்கின்ற முறையில் நீ சுயராஜியத்துடன் வாழ்ந்திருக்கின்றாயா?

4. ராமராஜ்யமென்றால் அது இந்துக்கள் ராஜ்யமல்ல. கடவுள் ராஜ்யம் என்று திரு. காந்தி இப்போது புரட்டிக் கொண்டார். ஆனாலும் பரவாயில்லை. அது எந்தக் கடவுள்? அந்தக் கடவுளின் ராஜ்ஜிய தர்மம் எது? அன்றியும் அவர் "என்னுடைய ராமன் வேறு ராமாயண ராமன் வேறு" என்கின்றார். சரி யென்றே வைத்துக் கொள்ளுவோம், ஆனால் அந்த இராமனை அவர் எங்கிருந்து கண்டு பிடித்தார். ராமாயணத்திலா அல்லது வருணாச்சிரமத்திலா?

5. "தீண்டாமை விலகினால் ஒழிய இந்தியா சுயராஜ்யம் பெற முடியாது. பெறுதவற்கும் அருகதை இல்லை" என்று சொன்ன திரு காந்தியார் இன்று சுயராஜ்யத்திற்கு ஆக உப்புக் காய்ச்சப் போவதின் காரணம் என்ன? தீண்டா மையை விலக்கவா அல்லது அது விலகிவிட்ட தென்று நினைத்தா அல்லது சுயராஜ்யம் பெறவா?

6. ஒரு மனிதன் தனக்கு மோக்ஷத்தில் இடம் பிடிப்பதற்கு ஆக வெகு பேர்களை நரகத்தில் (துக்கத்தில்) அழுத்துகிறான்.

7. மாடுகள் தினவெடுத்துக் கொண்டால் உரஞ்சிக் கொள்வதற்கு, தேப்புக்கல் அடித்து நட்டுவைக்கும் இந்து மக்கள் விதவைகளுக்கு என்ன செய்திருக்கின்றார்கள்?



8. மண மென்பது மணமக்களின் மன மொத்ததேயாகும்.

9. வருணாசிரமத்தையும் பிறவியில் ஜாதியையும் தகப்பன் வேலை யையே மகன் செய்ய வேண்டுமென்னும் வகுப்பு பிரசாரத்தையும் செய்யும் திரு. காந்தியின் தீண்டாமை விலக்கு பிரசாரத்தை விட அரசாங்கத்தின் மது விலக்குப் பிரசாரம் மோசமானதல்ல.

10. ஒரு குறிப்பிட்ட பண்டிதனை விபசாரிமகன் என்று ஒரு காவியம் எழுதி அதில் அவனையே தன் தாயின் விபசார வியாபாரத்திற்கு தரகனாய் வைத்து அருமையான கற்பனைகளைக் கொண்டு பாடியிருந்தால் அந்த பண்டிதன் அந்தக் காவியத்தின் இன்பத்திற்கும் பொருள் சுவைக்கும் கற்பனை அலங்காரத்திற்கும் ஆசைப்பட்டு அக்காவியத்தை படிப்பானா காப்பாற்றுவானா? ஓ கவிச்சுவைக்காரர்களே பதில் சொல்லுங்கள். கம்பராமா யணம் அதில் சேர்ந்ததா அல்லவா?

11. பெரிய புராணமும் ராமாயணமும் பாரதமும் உள்ள வரை ஜாதி பேதமும் வருணாசிரமமும் ஒழியவே ஒழியாது.

12. சைவமும் வைணவமும் வருணாசிரம மதமே ஒழிய சமரச சமயமல்ல. எப்படி எனில் விபூதி பூசினால் தான் சைவன். நாமம் போட்டால் தான் வைணவன். தீக்ஷையும் சமாசனமும் (முத்திரையும்) பெற்றால் தான் உயர்ந்தவன் என்று மேற்படி இரு மதமும் நிபந்தனை கொண்டிருக்கிறது.

13. கல்லைக் கடவுள் என்று கும்பிடும் மனிதன் பார்ப்பனனைச் சுவாமீ என்று கும்பிடுவதில் அதிசயமொன்றுமில்லை.

14. சுயமரியாதைக்காரர்கள் கடவுளை ஒழிப்பதில்லை. என்றைய தினம் மனிதனுக்கு ஆராய்ச்சி அறிவு ஏற்பட்டதோ அன்றே கடவுள் செத்துப் போய் விட்டது.

ஆனால், நமது நாட்டில் அந்த செத்த பிணம் அழுகி நாறிக் கொண்டிருப்பதை எடுத்து புதைத்து நாறின இடத்தை லோஷன் போட்டு கழுவி சுத்தம் செய்கின்ற வேலையைத் தான் சுயமரியாதைக்காரர்கள் செய்கின்றார்கள்.

15. நமது புராணக்காரர்களுக்கு பாரதத்தில் திரிதராஷ்டிரனும் பாண்டு வும் அவர்களின் தகப்பனுக்கு பிறந்தவர்கள் அல்ல என்று சொன்னால் யாரும் கோபித்துக் கொள்ளுவதில்லை. ஆனால் ராமாயணத்தில் ராமன் பிறந் தது அவனது தகப்பனுக்கா என்பது சந்தேகமாயிருக்கின்ற தென்றால் உடனே கோபித்துக் கொள்ளுகின்றார்கள். இதன் ரகசியம் தெரியவில்லை.

16. மார்ச்சு மாதம் 31 தேதியின் ரயில்வே கைடானது ஏப்ரல் மாதம் 1-ந்



RangaRakes tamilnavarasam.com

தேதி பிரயாணத்தில் ரயில் தப்பும்படி செய்துவிட்டது. ஆனால் நாம் "திரேதாயுகத்"து கெய்டைப் பார்த்து "கலியுகத்தில்" பிரயாணம் செய்ய வேண்டுமென்கின்றோம்.

17. ஒரு திராவிடன் (தமிழ் மகன்) பார்ப்பன மதத்தில் இருப்பதைவிட மகமதிய மதத்திலோ கிறிஸ்தவ மதத்திலோ இருப்பது கொஞ்சம் கூட தப்பாகாது.

18. பத்து மாதத்துக் குழந்தையைக் கக்கத்தில் வைத்துச் சாமியைக் காட்டி அதைக் கும்பிடு என்று கைகூப்பச் செய்வதைவிட இருபது வருஷத்து மனிதனைப் பார்த்து நீ கடவுளைக் கும்பிடுவது முட்டாள்த்தனம் என்று சொல்வது குற்றமாகாது.

19. நம்மைப் பார்ப்பனர்கள் சூத்திரர்கள் என்று கூப்பிட்டால் நாம் அவர்களை மிலேச்சர்கள் என்று கூப்பிட்டு வழக்கப்படுத்த வேண்டும்.

20. மேல் நாட்டானுக்குப் பொருளாதாரத் துறையில் மாத்திரம் சுயமரியாதை வேண்டும். நமக்கு மதம் சமூகம் கல்வி, அறிவு ஆராய்ச்சி, கைத்தொழில், அரசியல், பொருளாதாரம் முதலாகிய பல துறைகளிலும் சுயமரியாதை வேண்டும்.

21. அரசியல் இயக்கம் "முதலில் நாங்கள் இந்தியர்கள் பிறகுதான் பார்ப்பனர்கள், பறையர்கள் என்று பார்க்க வேண்டும்" என்று சொல்லுகின்றது. ஆனால் சுயமரியாதை இயக்கமோ முதலில் நாங்கள் மனிதர்கள், பிறகுதான் இந்தியர்கள் அய்ரோப்பியர்கள், என்று பார்க்க வேண்டும் என்பதாகச் சொல்லுகின்றது.

22. வெள்ளைக் காரர்களை ஆதரிக்க இந்தியாவில் சட்டைக் காரர்கள் இருப்பது போலவே, ஆரியர்களை ஆதரிக்க சைவ, வைணவ மதக்காரர்கள் இருக்கிறார்கள்.

23. ஸ்தல புராணங்கள் என்பதெல்லாம் அன்னிய நாட்டு சரித்திரங் களையும் ஆராய்ச்சி சக்திகளையும் அறியும் ஆற்றல் கொண்டதாய் இருக்க வேண்டுமே யொழிய "எவ்வளவு பாபம் செய்தாலும் ஸ்த்தலத்தின் தூசி மேலே பட்டால் மோட்சத்திற்கு போகலாம்" என்பதாக இருக்கக் கூடாது.

24. மேல் நாட்டு வித்துவான்களும் பண்டிதர்களும் புதிய கருத்துக் களையும் புதிய காட்சிகளையும் கண்டு பிடிப்பதில் தங்கள் அறிவைச் செலுத்தி வருகிறார்கள். இந்தியப் பண்டிதர்களோ, முன் ஒருவன் எழுதி வைத்ததை குருட்டு உருப்போட்டு புதிய தத்துவார்த்தம் கூறுவதிலும், கொங்கை,



அல்குல், துடை, உதடு, கூந்தல் ஆகியவைகளை வர்ணிப்பதுகளிலும் கடவுளைப் பற்றி போராடுவதிலும், கண்ணில் நீர் பெருகப் பாடுவதிலும் கருத்தைச் செலுத்தி வருகிறார்கள்.

25. ஒரே வஸ்துவைத் தலையில் இருக்கும் போது கூந்தல் என்று அழைக்கின்றோம் எண்ணை போட்டு சீவுகின்றோம். வாசனை கட்டுகின் றோம். ஆனால் அது அந்த இடத்தைவிட்டு நழுவி விட்டால் நேரே அதை குப்பைத் தொட்டியிலேயே கொண்டு போய்ப் போட்டு விடுகின்றோம். அதற்கு தலைக்கும் குப்பைத் தொட்டிக்கும் மத்தியில் ஒரு ராஜியோ சமாதானமோ செய்யத் தகுந்த வேறு இடம் எதுவுமே கிடையாது.

26. இந்தியாவுக்கு ஜனநாயகக் கொள்கை கூடவே கூடாது? ஏனென் றால் ஜனங்களில் 100க்கு 90 பேர்கள் பாமர (மூட) மக்கள். 100க்கு 97 பேர்கள் "இழி மக்கள்". இவர்களது நாயகத்துவம் நாட்டைச் சீர்படுத்துமா?

27. ஒரு பார்ப்பான் தன்னை இந்தியா முழுமைக்கும் 33 கோடி மக்களுக்கும் பிரதிநிதி என்று சொல்லும் போது நான் ஒரு மூலையில் ஒரு வகுப்பாருக்கு பிரதிநிதி என்று சொன்னால் இதில் எவ்வளவு நஷ்டம் வந்து விடும்?

28. மனிதன் ஒரு நாளைக்கு இரண்டு தடவை மலத்தைத் தொடு கின்றான் - அதற்காக உடனே குளிப்பதில்லை - சதா றோட்டில் மலம் எச்சில் மூத்திரம் ஆகியவைகளை மிதித்துக் கொண்டு நடக்கிறான். அதற்காக வும் உடனே குளிப்பதில்லை. நதிக்கும் குளத்திற்கும் குளிக்கப் போய் குளித்து விட்டு தண்ணீர் கொண்டுவரும் ஸ்ரீகள் றோட்டில் மலம் எச்சில் மூத்திரம் முதலியவைகளை மிதித்துக் கொண்டு வருகிறார்கள். அதற்காகவும் குளிப்ப தில்லை. ஆனால் ஒரு "பறையரையோ" ஒரு "சூத்திரனையோ" தொட்டு விட்டால் - அவன் வேஷ்டி மேலே பட்டு விட்டால் - அவன் தண்ணீர் குழாயிக்கு பக்கத்தில் நின்று தண்ணீர் பிடித்த ஈரத்தை மிதித்து விட்டால், உடனே குளிக்க வேண்டுமென்கிறான். இவனுக்கு சுயராஜியம் வேண்டுமாம்.

29. வீதியில் மல மூத்திரம் எச்சில் மிதித்துக் கொண்டு நடந்து நமது வீட்டுக்கு பிச்சைக்கு வந்த பார்ப்பான், நமது பட்டுப் பாயைக் கண்டால் தாண்டிக் குதிக்கிறான் - அதை தொட்டால் தீட்டு என்கின்றான்.

30. பூணூல் போட்டதின் கருத்து இன்ன இன்னார் தான் படிக்கத் தகுந்தவர்கள் என்பதை காட்டுவதற்காகவும் "சூத்திரன்" இன்னான் என்று கண்டு பிடிப்பதற்கு ஆகவும் தான். அதனால் தான் மேலே வேஷ்டி போடு வது கூட மரியாதைக் குறை வென்று செய்யப்பட்டிருக்கிறது.

31. பார்ப்பனர்களைத் தவிர மற்றைய பெரும்பாலும் தொழிலாளிகளே



RangaRakes tamilnavarasam.com

பூணூல் போட்டுக் கொண்டிருப்பதின் காரணம் அக்காலத்தில் தொழிலாளிக ளுக்கு ஏற்பட்ட ஒரு வித சுயமரியாதை உணர்ச்சியேயாகும்.

32. பார்பார்கள் எவன் பெண்ணுக்கோ பொட்டுக் கட்டி சிங்காரித்து கோவிலில் நிறுத்தி ஆள்களைத் தருவித்து கொள்ளை அடிக்கிறார்கள். இந்த வழக்கத்தை நிறுத்த வேண்டுமென்றால் இந்து மதம் கெட்டுப் போகுமாம்.

33. இரண்டாயிரம் வருஷமாக இந்திய மக்களுக்கு இருக்கும் இழிவை யும் அவமானத்தையும் விட உப்புச் சட்டம் அவமானம் என்று ஒரு தேசிய வாதி சொல்வதானது உண்மை அவமானத்தை மறைப்பதற்கு செய்யும் சூக்ஷியேயாகும்.

34. உப்புச் சட்டம் தேசத்திற்கு பெரிய அவமானம் என்று திரு மாளவியா இப்போது சொல்லுகிறார்.

ஆனால் சூத்திரப் பட்டம் தேசத்திற்கு பெரிய கவுரவமா என்று அவரை வணக்கமாகக் கேட்கின்றோம்.

இந்த நாட்டில் ஒரு "சூத்திரன்" உப்பு சத்தியாக்கிரகம் செய்வதைப் போன்ற சுயமரியாதை அற்ற தன்மை வேறு ஒன்றுமே இல்லை யென்று உறுதியாகச் சொல்லுவேன்.

35. பார்ப்பனர்களுக்கு அடிமையாய் இருக்கும் அரசர்கள் "மகா விஷ்ணுவின் அவதாரமாவார்கள்". "சூத்திரர்களுக்கும்" "பறையர்களுக்கு" அனுகூலமாயிருக்கும் அரசர்கள் இராக்ஷதர்கள், நீச்சர்கள், கெடுங்கோன்மை காரர்கள், அன்னியர்கள் ஆவார்கள். இதுதான் பார்ப்பன தர்மம்.

36. சீதையின் கற்பு விஷயத்தைப் பற்றி நான் என்ன சொல்லுகிறேன் என்பதைக் கவனிக்காதீர்கள். அந்தம்மாளுடன் நெருங்கிப் பழகிய புருஷ னாகிய "திரிகாலக்கியானி சாக்ஷாத் ஸ்ரீராம பிரானே" என்ன சொல்லி இருக்கி றார் என்பதைத் தேடிப் பாருங்கள்.

37. ஒருவருடைய எவ்வித அபிப்பிராயத்தையும் மறுப்பதற்கு யாருக் கும் உரிமை உண்டு. ஆனால் அதை வெளியிடக் கூடாது என்று சொல்வதற்கு எவருக்கும் உரிமை கிடையாது.

**- ஈ.வெ.ரா.**

**குடி அரசு - பொன்மொழிகள் - 13.04.1930**



RangaRakes

## சங்கீத மகாநாடு

ஈரோட்டில் மே மாதம் 24, 25 முதலிய தேதிகளில் நடக்கும் இரண்டா வது சுயமரியாதை மகாநாட்டின் ஆதரவில் வேறு பல மகாநாடுகளும் நடைபெறும் என்பது நேயர்கள் அறிந்ததாகும். அவற்றுள் சங்கீத மகாநாடு என்பதும் ஒன்றாகும்.

சங்கீத மகாநாடு கூட்டும் விஷயத்தில் நமக்குள்ள ஆர்வமானது, சங்கீதம் என்னும் ஒரு கலையானது மிக்க மேன்மையான தென்றோ அல்லது இன்றைய நிலையில் மனித சமூகத்துக்கு அது மிக்க இன்றியமையாத தென்றோ கருதியல்ல. உலகத்தில் மக்களுக்குள்ள அனேகவிதமான உணர்ச்சி தோற்றங்களில் இதுவும் ஒன்றே தவிர இதற்கு எவ்விதத்திலும் ஒரு தனி முக்கியத்துவம் கிடையாதென்பதே நமதபிப்பிராயம். உதாரணமாக சங்கீதம் என்பது தேசத்திற்குத் தகுந்த படியும் அங்குள்ள சீதோஷ்ண நிலைக்கு தகுந்தபடியும் அவரவர்களது அறிவு வளர்ச்சிக்குத் தகுந்தபடியும் இருப்பதே தவிர, ஒரே சங்கீத முறையானது உலகத்திற்கெல்லாம் பொறுத்த மானதென்று சொல்ல முடியாது. ஒரு நாட்டு சங்கீத உணர்ச்சிக்காரனுக்கு இன்பமாயி ருப்பது மற்றொரு நாட்டு வித்வானுக்கு புரியாததாகவே இருக்கும். மேல் நாட்டு சங்கீத இன்பம் கீழ் நாட்டான் அனுபவிக்க முடியாது. அதுபோலவே, கீழ்நாட்டு சங்கீத இன்பம் மேல் நாட்டானுக்கு இன்பமாக இருக்க முடியாது. ஆனால் பொதுவில் சங்கீதம் என்னும் ஒரு கலை விஷயத்தில் உலக மக்களுக்கெல்லாம் ஒரு வித போக்கிய அனுபவமிருக்கின்றதை மாத்திரம் காணலாம். ஆனாலும் அதை ஒருவர் அதிகமாக அனுபவிக்க ஆசைப் படுவார். மற்றொருவர் அதை சாதாரணமாகக் கருதுவார். எப்படி இருந்தாலும் உலகில் உள்ள பல கலைகளில் அதுவும் ஒன்றாய் இருக்கின்றது.

நம்மைப் பொருத்தவரை நாம் இம்மகாநாட்டில் கலந்து கொள்வதானது அக்கலையில் உள்ள மேன்மையை உணர்ந்தல்ல வென்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மற்றென்னவெனில் சங்கீதத் துறையிலும் நமது பார்ப்பனரல்லாத மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காகவேதான் சுயமரியாதை மகாநாட்டை அனுசரித்து இதை நடத்த வேண்டுமென்று கருதி நாம் அதில் கலந்து கொள்ள ஆசைப்பட்டதாகும்.



tamilnavarasam.com

எப்படியும் நமது நாட்டில் மற்ற எல்லாத் துரைகளையும் பார்ப்பனர்கள் கைபற்றி தங்கள் ஆதிக்கத்திற்குள்ளாக்கி அத்துரையில் மற்ற மக்களைத் தலையெடுக்க ஒட்டாமல் அழுத்தி வைத்திருக்கிறார்களோ அதுபோலவே சங்கீதத் துறையும் முழுதும் பார்ப்பனராதிக்கமாகி அதன் மூலம் நமது பொருள்கள் கொள்ளை போவதுடன் அதைக் கொண்டிருக்கும் நமது மக்க ளின் சுயமரியாதையும் கொள்ளை போயிருக்கின்றது; போய்க் கொண்டும் வருகிறது. உதாரணமாக நமது தமிழ் நாட்டில் சங்கீத விஷயத்தில் தேர்ச்சி யுள்ள பார்ப்பனரல்லாத வித்வான்கள் அனேகர் இருக்கிறார்கள். அதிலும் சங்கீத சம்மந்தமான பல கலைகளிலும் தமிழ் நாட்டிற்கே சிறந்தவர்கள் முதன்மையானவர்கள் – இணையில்லாதவர்கள் – என்று சொல்லப்படுபவர் கள் எல்லாம் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதார்களேயாவார்கள். இப்படி இருந்தாலும் இவர்களது வாழ்வும் அந்தஸ்தும் பெரிதும் மிக்க சுயமரியாதை யற்றத் தன்மையாகவே இருந்து வருகின்றது. பார்ப்பனரல்லாத சங்கீத வித்வான்கள் – அதாவது வாய்ப்பாட்டு, வீணை, புல்லாங்குழல், பிடில், நாகசுரம், மிருதங்கம், தவுல் முதலாகிய வாத்தியங்களில் முதன்மையான பார்ப்பனரல்லாத வித்வான்கள் தங்களிலும் எவ்வளவோ கீழ்த்தரப் பார்ப்பன வித்வான்களால் மிக்க இழிவாகவே நடத்தப்படுகிறார்கள். அது மாத்திரமல் லாமல் இதன் பயனாய் பிரபுக்கள் என்று சொல்லப்படும் பார்ப்பனரல்லாத பணக்காரார்கள் பலரும் கூட பார்ப்பனரல்லாத வித்வான்கள் என்றால் மிக்க இழிவாகவே கருதும் உணர்ச்சியைக் கொண்டு இருக்கின்றார்கள்.

உதாரணமாக சென்ற இரண்டு மூன்று வருஷத்திற்கு முன் நாட்டுக் கோட்டை நகரத்தில் ஒன்றான கானாடுகாத்தானுக்கு நாம் போயிருந்த காலத்தில் தென் இந்தியாவுக்கே முதன்மையான நாகசுர வித்வான் திரு. பொன்னுசாமி அவர்கள் ஒரு நாளைக்கு 500 ரூபா கொடுத்து ஒரு பிரபு வீட்டு விஷேசத்திற்கு வாத்தியத்திற்காக வரவழைக்கப்பட்டிருந்தார். அப்படிப்பட்ட அவர் நின்று வாசிக்கும் போது தனது வேர்வையைத் துடைத்துக் கொள்ள ஒரு சிறு வெள்ளைத் துவாலை தன் தோளின் மேல் போட்டுக் கொண்டு வாசிக்கத் துடங்கினதும் அவ்வூர் பிரபுக்கள் சிலர் "மேளக்காரன் தோளில் துண்டுப் போட்டுக் கொண்டு வாசிக்கலாமா" என்று குற்றம் சொல்லி வாசிப்பதைத் தடுத்தார்கள். அதற்கு அந்த வித்வான் பதில் சொல்லமாட் டாமல் விழித்தார். அப்போது சமீபத்தில் இருந்த நமது நண்பர் ஒருவர் அவ்வித்வானை நோக்கி "நீங்கள் மேல் துவாலை எடுக்காதீர்கள் அவர்க ளுக்கு கேழ்க்கப் பிரியமில்லாவிட்டால் போய் விடட்டும் அல்லது நீங்களா வது போய் விடுங்கள் " என்று சொன்னார். சேரமாதேவி குருகுல நிகழ்ச்சி போராட்ட சம்மந்தமாக கானாடு காத்தான் வைசு சண்முகம் வீட்டில் நடந்த கமிட்டி கூட்டத்திற்கு தந்தை பெரியாருடன் சென்றிருந்த பட்டுக்கோட்டை கே.வி. அழகிரிசாமி அவர்கள் இசை ஆர்வம் காரணமாக ஷை நிகழ்ச்சிக்கு சென்றிருந்த போது அக்கொடுமை கண்டு சகிக்க முடியாது தான் விசிறியால் அக்கலைஞனுக்கு விசிறிவிட்டு தோல் துண்டை எடுக்க வேண்டாம் என்று



உரத்த குரலில் முழங்கினார். இதைக் கேட்ட வீட்டுக்கார பிரபு தனது விஷேச காலத்தில் இந்தப்படி ஒருசம்பவம் நடந்தது, வாத்தியக்காரர் போய் விட்டார் என்கின்ற கெட்டப் பெயர் வருமே என்று பயந்து சீக்கிரத்தில் வாசிப்பை முடித்துக் கொண்டார். இம்மாதிரியான சம்பவம் அனேக இடங்க ளில் இன்றும் நடக்கின்றது. மற்றும் பார்ப்பனரல்லாதப் பெண் வித்வான்களா யிருந்தால் உட்கார்ந்து பாடும்போது சபைக்கு ஒவ்வொரு மனிதன் வரும் போதும் எழுந்து எழுந்து கும்பிட்டு விட்டுத்தான் உட்கார வேண்டியிருக் கிறது. ஆண் பாட்டுக்கார வித்வான்களோ பிரபுக்களிடம் பேசும்போதும் இடுப்பில் மேல் வேட்டியை எடுத்து சுருட்டிக் கட்டிக் கொண்டும் முழங்காலுக்கு மேல் இடுப்பு வேஷ்டியைக் கட்டிக் கொண்டும் இடக்கையை வலகட்கத்தில் வைத்து வலக் கையால் வாயைப் பொத்தி குனிந்து, "மகா ராஜா", "எஜமான்", "ஸ்வாமி", "சமூகம்" என்று மேல் மரியாதை வைத்து பேச வேண்டியிருக்கின்றது. இப்பிரபுக்களும், இவ்வித்வான்களிடம் பேசும் போது, நீ, அவன், டேய் என்கின்ற ஒருமை அடிமை முறையில் பேசுவதும் வழக்கமாய் இருக்கின்றது. இதே தொழிலிலிருக்கும் பார்ப்பனர்களும் தங்கள் சகோதரத் தொழிலாளிகள் பார்ப்பனரல்லாதவர்களாயிருந்தால் அவர்களிட மும் இப்படியேதான் நீ, அவன், அடே என்கிற வரிசை வைத்து தான் பேசுகிறார்கள். ஒரு இரண்டு மூன்று ஜான் உயரம் உள்ள பையனாயிருக்கும் பார்ப்பன வித்வானும் கூட எட்டரை ஜான் இருக்கும் பார்ப்பனரல்லாத வித்வானை ஒருமையிலேயே தான் அவன், நீ, அடே என்று பேசுகிறான். அந்த சிறு பைய வித்துவானிடம் இந்த பெரிய வித்துவான்கள் பேசும் போதும் "ஸ்வாமிகள்" என்று மரியாதை வைத்து பேசுகின்றார்கள். நிற்க நமது பிரபுக் கள் என்பவர்கள் பார்ப்பன வித்வான்களிடம் பேசும் போதெல்லாம் மரியா தையாகவே பேசுவதும், தாங்களாகவே முதலில் கும்பிடுவதும் இதற்கு பார்ப் பனர்கள் இடதுகையை தங்கள் இடுப்பிற்கு கீழாகக் காட்டி "ஆசிர்வாதம்" என்று சொல்லுவதுமான காரியங்கள் தினமும் நடந்து வருகின்றது. ஆனால் சதுர் முதலிய கச்சேரி களில் தாசிகளுக்குப் பின்னால் நின்று கொண்டு அவர்களை ஆட்டு விப்பவராயிருந்தாலும் தாளம் போடுகிறவராயிருந்தாலும் அல்லது அப் பெண்களுக்கு மாமாக்களாய் கூட இருப்பவர்களாய் இருந்தா லும் அவர் களைக் கண்டால் நமது பிரபுக்கள் கும்பிடுவதும் சுவாமிகளே என்று கூப்பிடு வதும் ஆன காரியங்கள் முக்கியமாக எல்லா கிராமந்திரப் பிரபுக்களிடமும் இன்னமும் பார்க்கலாம். இவைகள் ஒருபுறமிருக்க பார்ப்பன பிரபுக்கள் தங்கள் வீட்டு விஷேசங்களுக்கும் சடங்குகளுக்கும் மேளம் வாசிப்பதற்குத் தவிர மற்றபடி சபைக்கச்சேரிகளுக்கு பாடவோ, கதைகள் செய்யவோ கண்டிப்பாய் பார்ப்பனரல்லாதார்களை கூப்பிடுகின்ற வழக்கமே ஒரு சிறிதும் இல்லை. அதுமாத்திரமல்லாமல் பார்ப்பனரல்லாதார் பாடுவ தையோ கதை செய்வதையோ புராணம், உபன்யாசம் முதலியவை செய்வதையோ பார்ப்பனர்கள் கேள்ப்பது மத சம்பரதாயப்படி தோஷம் என்றே கருதி இருக்கிறார்கள். ஏனெனில் "சூத்திரன் வாக்கை கேள்க்கக் கூடாதாம்."



RangaRakes
tamilnavarasam.com

அன்றியும் பார்ப்பன பக்க வாத்தியக்காரர்களில் அனேகர் பார்ப்பனரல்லாத வித்வான்களுக்கு பக்கவாத்தியம் வாசிப்பதையும் இழிவாய் கருதுகிறார்கள். பார்ப்பனரல்லாத பக்கவாத்தியக்காரர்கள் கூட ஒரு பார்ப்பனச் சிறு வித்து வானுக்கு வாசிப்பதை பெருமையாய் கருதுகின்றார்களேயொழிய பார்ப்பன ரல்லாத வித்வான்களுக்கு வாசிப்பதைக் கவுரவக் குறைவாகவே கருதுகின் றார்கள். அன்றியும் ஒரு பார்ப்பனச் சிறுவன் பாடினாலும், கருவி களால் வாசித்தாலும் சுற்றிலும் பார்ப்பனர்கள் உட்கார்ந்து கொண்டு “பலே” “பலே” “பேஷ்” “பேஷ்” என்று கைத்தட்டுவதும் தலையை ஆட்டுவதும் மெய் மறந்தது போல் கண்கள் மேலே சொருகும்படி வேஷம் போடுவதும் அதை ஒன்றுக்கு இரண்டாக விளம்பரம் செய்து அவனுக்கு பிரக்யாதி சம்பாதித்துக் கொடுப்பதிலும் அதிக கவலையாய் இருக்கிறார்கள்.

ஆனால் பார்ப்பனரல்லாத வித்வான்களாயிருந்தால் அவர்கள் எவ்வளவு பெரிய வித்துவான்களாயிருந்தாலும் வேண்டுமென்றே ‘கட்டை சாரீரம்’ என்பதும், ‘கணக்கு போராது’, என்பதும், ‘மேல் ஸ்தாயில் சுகப் படாது’ என்பதும் மற்றும் ஏதேதோ பொருத்தமற்றவைகளைச் சொல்லி விஷமப் பிரசாரம் செய்வது எங்கும் வழக்கமாக இருக்கின்றது.

இவைகளை நாம் சுமார் 40 வருஷத்திற்கு மேல்பட்ட நமது பிரத்தி யக்ஷ அனுபவத்தில் கண்டு வந்திருக்கின்றோம்.

ஆகவே நாம் சங்கீத மகாநாட்டில் கலந்துகொள்ள ஆசைப்பட்டதின் முதல் காரணம் சங்கீத ஞானத்திற்கு ஆகவோ சங்கீத கலை வளர்ச்சிக்கு ஆகவோ மாத்திரம் அல்ல என்றும் மேல்கண்ட பார்ப்பனர் பார்ப்பனரல்லா தார் என்னும் உயர்வு தாழ்வு விஷம் சங்கீதத்திற்குள்ளும் புகுந்து அதன் மூலம் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கு விரோதமாயிருக்கும் கொடு மையை அழிப்பதற்கே ஒழிய வேறில்லை என்றும் தெரிவித்துக் கொள்ளு கின்றோம்.

இதை உத்தேசித்தே சில சங்கீத சம்மந்தமான சபைகளில் நாம் பேச நேர்ந்த போது கூட சங்கீதத்தில் இச்சை வைத்ததிற்காகவும் சங்கீதத்தை தொழிலாகக் கொண்டதற்கு ஆகவும் பார்ப்பனரல்லாதார் என்கின்ற காரணத் திற்காக இவ்வளவு கேவலமாயும் இழிவாயும் நடத்தப்படுவதாயிருந்தால் சங்கீதக் கலையே அடியோடு அழிந்து போவதே மேல் என்றும் அதனால் யாருக்காவது ஜீவனத்திற்கு கேடு வருமானால் அப்படிப்பட்டவர்கள் இச்சங்கீதத்திற்கு “கருமாதி” செய்துவிட்டு றோட்டில் கல் உடைத்து வயிறு வளப்பதே மேல் என்றும் அத்தொழிலும் ஜீவனமும் சங்கீதத்தை விட கவுரவமும் மேன்மையுமான வேலை என்றும் சொல்லி வந்திருக்கிறோம்.

ஆகவே சமீபத்தில் ஈரோட்டில் நடக்கும் சங்கீத மகாநாட்டில் மற்ற சங்கீத மகாநாடுகளைப் போல் சங்கீத சாஸ்திரம் என்பதைப்பற்றி பேசியே



காலம் போக்காமல் சங்கீதத்தை கைக்கொண்ட பார்ப்பனரல்லாத மக்களு டைய சுயமரியாதையை காப்பாற்றும் விஷயத்திலும் அதிகமான கவனம் செலுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். நிற்க இன் றய தினம் தமிழ் நாட்டில் சங்கீத விஷயத்தில் வாய்ப்பாட்டு, புல்லாங்குழல், பிடில், மிருதங்கம், கஞ்சிரா, ஜலதரங்கம், கடம், கொன்னக்கோல், நாகசுரம் முதலிய அனேகம் துறைகளில் நிகரில்லாதவர்களும் மிக்க விற்பத்தி பெற்ற வர்களுமாக சுமார் 400, 500 பேர்கள் வரையில் பார்ப்பனரல்லாதார்களில் இருந்தும் அவர்களைப் பற்றிய பெயர்கள் கூட அனேகருக்குத் தெரிய முடியாமல் அடக்கி வைக்கப் பட்டிருக்கின்றது. அவர்களில் சிலரின் பெயர்களையும் திரு. ராமசுப்ரமணியம் அவர்கள் கொடுத்த லிஸ்டுப்படி மற்றொரு பக்கத்தில் காணலாம். மற்றப் பெயர்களும் பின்னால் வெளிவரும். இந்த சமயத்தில் நாம் இந்த வித்துவான் எல்லோரையும் அவசியம் இம்மகாநாட்டுக்கு வரும்படி இதன் மூலம் அழைக்கின்றோம்.. அவர்களில் அனேகர் அவசியம் வரவும் கூடும் என்று எதிர்பார்க்கின்றோம். அனேக விதமான சிறோன்மணிகள் வருவதாகவும் வந்து பாடவும் வாசிக்கவும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நாம் மனப் பூர்த்தியான நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்வதோடு பொது ஜனங்களிலும் சங்கீத கலை யிலும் சுயமரியாதையிலும் கவலையுள்ள மக்கள் பெருந்திரளாகக் கூடி வந்து இம்மகாநாட்டைச் சிறப்பிக்கச் செய்து அதை கைக்கொண்ட பார்ப்பன ரல்லாத மக்களுக்கு மேன்மையும் சுயமரியாதையும் ஏற்படுவதற்கு உதவி யாய் இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 20.04.1930**

** சேரமாதேவி குருகுல நிகழ்ச்சி போராட்ட சம்மந்தமாக கானாடு காத்தான் வைசு சண்முகம் வீட்டில் நடந்த கமிட்டிக் கூட்டத்தில் தந்தை பெரியாருடன் சென்றிருந்த பட்டுக்கோட்டை கே.வி.அழகிரிசாமி அவர்கள் இசை ஆர்வம் காரணமாக ஷெ நிகழ்ச்சிக்கு சென்றிருந்தபோது அக் கொடுமை கண்டு சகிக்க முடியாது தான் விசிரியால் அக்கலைஞனுக்கு விசிரிவிட்டு தோல் துண்டை எடுக்க வேண்டாம் என்று உரத்த குரலில் முழங்கினார்.*



RangaRakes
tamilnavarasam.com

# புதியமுறை விவாகம்

உலகத்தில் விவாகம் செய்து கொள்ளுவதில் ஒவ்வொரு மதத்திற்கு ஒவ்வொரு விதமான முறைகள் பார்த்து விவாகம் செய்து கொள்ளுவது வழக்கமாய் இருந்து வருகின்றதே ஒழிய எல்லா நாட்டிலும் எல்லா மதத்திலும் ஒரே விதமான சொந்தங்களை கையாளுவதில்லை என்பது யாவரும் அறிந்த தாகும்.

உதாரணமாக மகமதியர்களுக்குள்ளும் ஐரோப்பிய கிரிஸ்தவர் களுக்குள்ளும் தங்கள் தகப்பனுடன் பிறந்த சகோதரர்களான சிறிய தகப் பனார் பெரிய தகப்பனார் பெண்களை விவாகம் செய்து கொள்ளுகின்ற வழக்கம் உண்டு. இந்துக்கள் என்பவர்களில் தகப்பனுடன் பிறந்த சகோதரி களான அத்தை பெண்களையும், தனது சகோதரி பெண்களையும், தனது தாயுடன் பிறந்த மாமன் சிறிய தாயார் பெரிய தாயார் பெண்களையும் விவாகம் செய்து கொள்ளுகின்ற வழக்கம் உண்டு. சையாம் தேசத்தில் தன்னுடன் கூடப் பிறந்த சொந்த தங்கையை விவாகம் செய்து கொள்ளும் வழக்கம் உண்டு.

அந்த தேசத்தில் வேறு யார் செய்து கொண்டலும் செய்து கொள்ளா விட்டாலும் அந்த நாட்டு அரசன் கண்டிப்பாய் தனது தங்கையைத் தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். இது ஆரிய முறைப்படி அரசானா யிருப்பவன் அவசியம் செய்து கொள்ளவேண்டும் என்கின்ற பழக்கம் இன்றும் அங்கு இருந்து வருகின்றது. சையாம் நாட்டு அரசர்களுக்கு அநேக மாய் முதலாவது ராமன் இரண்டாவது ராமன் என்றே பெயர் இடுவது வழக்கம். இப்போதய ராஜாவுக்கு நாலாவது ராமன் என்று பெயர்.

சையாம் நாட்டு பௌத்த ராமாயணத்தில் ராமன் தனது தங்கையாகிய சீதையை கல்யாணம் செய்து கொண்டான் என்றே கண்டிருக்கின்றது. திரு.சீனிவாசய்யங்கார் எழுதி இருக்கும் பால ராமாயணம் என்றும் புத்தகத் தில் இந்த சரித்திரம் காணலாம். ஆனால் இந்தியாவில் அதிலும் தமிழ் நாட்டில் இவ்விஷயம் மிகவும் தோஷமாய் கருதப்பட்டு வரும் விஷயம் யாவரும் அறிந்ததாகும். என்றாலும் பார்ப்பன ஆதிக்கம் தலைவிரித்தாடும் மலையா ளத்தில் இந்துக்கள் என்பவர்களுக்குள்ளும் சிறிய தகப்பனார் பெண்களை பெரிய தகப்பனார் குமாரர்கள் கட்டிக் கொள்ளுகின்ற வழக்கம் உண்டு



என்பது சமீபத்தில் நடந்த ஒரு நாயர் சமூக விவாகத்தில தெரிய வருகின்றது.

அதாவது :– சென்னை அரசாங்க நிர்வாக சபை லா மெம்பர் உயர்திரு திவான்பகதூர் எம்.கிருஷ்ணன் நாயர் அவர்களின் குமாரர் திரு. பி. அச்சுத மேனன் ஐ.சி.எஸ். அவர்கள் தனது சிறிய தகப்பனாரான தஞ்சை ஜில்லா போலீசு சூப்பிரண்டெண்டு திருவாளர் யம். கோவிந்த நாயர் அவர்கள் குமாரத்தி திருமதி பத்மினி அம்மாளை விவாகம் செய்து கொண்டிருக்கிறார். அவர்களின் உருவப் படமும் பிரசுரித்திருக்கின்றோம்.

ஆகவே சொந்தம், முறை, பந்துத்துவம் என்பவைகள் எல்லாம் அந்தந்த நாட்டுப் பழக்க வழக்க மென்பதைப் பொருத்தே அல்லாமல் கடவுள் கட்டளை என்றோ அல்லது வேதகட்டளை சாஸ்திரக் கட்டளை என்றோ சொல்வதெல்லாம் அறியாமை அல்லது புரட்டு என்கின்ற இரண்டில் ஒன்றே தவிர வேறில்லை. இது இப்படி இருக்க அத்தை பிள்ளையையும் அக்காள் பிள்ளையையும் சிறிய தாயார் பிள்ளையையும் கட்டிக்கொள்ளுகின்ற இந்துக் களைப் பார்த்து கிருஸ்தவர்களும் மகமதியர்களும் பரிகாசம் செய்வதும் சித்தப்பன் பிள்ளையையும் சொந்தச் சகோதரியையும் கலியாணம் செய்து கொள்ளும் கிருஸ்தவர் மகமதியர் சையாம் அரசர் ஆகியவர்களை இந்துக் கள் பார்த்து பரிகாசம் செய்வதும் கிணத்துத் தவளை குணமே யொழிய வேறில்லை என்பதே நமது அபிப்பிராயம்.

**குடி அரசு – கட்டுரை – 27.04.1930**



RangaRakes tamilnavarasam.com

# ஆறாவது ஆண்டு

நமது " குடி அரசு" ஐந்து ஆண்டு நிறைவு பெற்று ஆறாவதாண்டு முதல் மலராய் இவ்வாரம் வெளியாகின்றது.

"குடி அரசு" தான் ஏற்றுக் கொண்ட ஆரம்பக் கொள்கையில் இருந்து சிறிதும் பின் வாங்காமலும் விருப்பு, வெருப்புக்கு கொள்கைகளை மாற்றிக் கொள்ளாமலும் ஏதோ தன்னால் கூடிய தொண்டை மனப் பூர்வமாய் செய்து கொண்டு வந்திருக்கின்றது. அன்றியும் குடி அரசானது ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இது வரை மக்களிடம் செல்வாக்கும் மதிப்பும் பெற்று வந்ததுடன் நாளுக்கு நாள் முற்போக்கடைந்தும் வந்திருக்கின்றது.

இவ்வாறாவது ஆண்டும் அந்தப்படி முடியும் என்கின்ற விஷயத்தில் நமக்கு அதிக நம்பிக்கை இல்லை. ஏனெனில் அது இனிச் செய்யக் கருதி இருக்கும் தொண்டானது கொஞ்ச காலத்திற்கு பாமர மக்களிடம் நமக்குள்ள செல்வாக்கையும் பணக்காரர்கள் பண்டிதர்கள் பெரிய அதிகாரிகள் பதவியாளர்கள் என்பவர்களிடம் நமக்கு உள்ள செல்வாக்கையும் இழக்க நேரிடுவதுடன் "குடி அரசை" இது வரை ஆதரித்து வந்தவர்களாக காணப்பட்டவர்களின் எதிர்ப்பையும் அனுபவிக்க வேண்டிய நிலையைக் கொண்டு வந்துவிடும் என்றே நினைக்கிறோம். அதாவது நாம் சென்னைக்கு போகும் போது ஒரு தலையங்கத்தில் தெரிவித்தது போல "குடி அரசு" பார்ப்பனர்களை வைது அவர்கள் செல்வாக்கை ஒழித்து பார்ப்பனர்களிடம் இருக்கும் உத்தியோகங்களைப் பிடுங்கிப் பார்ப்பனரல்லாதார் வசம் ஒப்புவிக்க மாத்திரம் ஏற்பட்டதல்ல என்றும் பாமர மக்களை ஏய்த்துப் பிழைக்கின்றவர்கள் எல்லோரையும் வெளியாக்கி மத இயலில் உள்ள மூட நம்பிக்கையை ஒழிக்க முயற்சிப்பது போலவே அரசியல், உத்தியோக இயல், பொருளாதார இயல், சமூக இயல், பத்திரிகை இயல், பண்டித இயல், வைத்திய இயல், பணக்கார இயல், பார்ப்பனரல்லாதார் இயக்க இயல் என்பன முதலாகியவைகளில் உள்ள மூட நம்பிக்கைகளையும் புறட்டுகளையும் வெளியாக்கி அவைகளையும் ஒழிக்க வேண்டிய வேலைகளை மேற்போட்டுக் கொள்ளும் போது இவ்வளவு இயல்களின் எதிர்ப்பும் நமக்கு மிக்க கஷ்டத்தை கொடுத்து தான் தீரும். சிற்சில சமயங்களில் அவ்வெதிர்ப்புகளை சமாளிக்க நமக்கு சக்தி



இல்லாமல் போனாலும் போகலாம். அதனால் பத்திரிகை முற்போக்கும் செல்வாக்கும் சற்று, ஏன்? அதிகமாகவும் குறைந்தாலும் குறையலாம்.

ஆன போதிலும் அவைகள் இந்நாட்டிற்கு அதிலும் பார்ப்பன ஆதிக்கம் குறைந்த இந்த சந்தர்ப்பத்திற்கு முக்கியமாய் தேவையானதாய் இருப்பதால் நமது செல்வாக்கையும் பத்திரிகை முன்னேற்றத்தையும் பிரதானமாய்க் கருதாமல் மக்களின் மூட நம்பிக்கைகளையும் சுயநலக்காரர்களின் புறட்டுகளால் மக்கள் ஏமாறுவதையும் ஒழிப்பதையே பிரதானமாய்க் கருதி அதில் இறங்கித் தீர வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

ஏனெனில் நாம் காங்கிரசிலிருந்து தொண்டாற்றிய காலத்தில் நம்முடன் கூட உழைத்து வந்த திருவாளர்கள் வரதராஜுலு, ராஜகோபாலாச்சாரியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் போன்றவர்களிடம் இருந்து நாம் பிரிந்ததும் அவர்களோடு அபிப்பிராய பேதங்கொண்டு சண்டை போட்டதும் எதற்காக? மற்றும் நாம் தலைவராய்க் கொண்டு கண் மூடித்தனமாய் பின்பற்றி வந்த திரு. காந்தியாரையும் கண்டித்து வருவது எதற்காக?

சொந்த விரோதத்திற்காகவா? அல்லது சொந்த சுய நலத்திற்காகவா? என்பதை யோசித்துப் பார்த்தால் உண்மைக் காரணம் விளங்காமல் போகாது. அவர்களது கொள்கை பிடிக்கவில்லை. அவர்களது தொண்டு நாட்டிற்கு நலந்தருவதல்லவென்கின்ற காரணங்களையே முக்கிய ஆதாரங்களாய் வைத்து அவர்களோடு போராடி அவர்களிடம் நமக்கு காணப்படும் குறைகளை வெளிப்படுத்தி வந்தோம். இன்றும் வருகின்றோம். அதே போல் இப்போது சுயமரியாதை இயக்கத்தின் பேராலோ ஜஸ்டிஸ் கட்சியின் பேராலோ சீர்திருத்தத்தின் பேராலோ நம்முடன் உழைத்து வந்தவர்களின் அபிப்பிராய பேதத்தையும் அவர்களது கொள்கைகளால் நாட்டின் நலத்திற்கோ நமது தொண்டிற்கோ விபரீதம் ஏற்படும் என்கின்ற நிலை தோன்றும் போது அவர்களுடன் போராட வேண்டியது நமது கடனாகி விட்டது. ஆகையால் இந்த ஆறாவது ஆண்டு பலருக்கு இன்பத்தை கொடுக்காததானாலும் நமது உண்மை நண்பர்களுக்கு பூரண திருப்தியையே அளிக்கும் என்கின்ற நம்பிக்கையின் மீது இறங்கி விட்டோம்.

**குடி அரசு – தலையங்கம் – 04.05.1930**



RangaRakes tamilnavarasam.com

# கேட்டால் கேளுங்கள்

## கேட்காவிட்டால் போங்கள்

இந்திய நாட்டில் இது சமயம் தேச விடுதலையின் பேரால் ஒரு குழப்பம் ஏற்பட்டு, அதனால் எங்கு பார்த்தாலும் கலவரமும் அடிதடியும் சிறைவாசமும் உயிர்ச்சேதமும் நடந்து வருவதாகத் தெரிகின்றது. பொது மக்களுக்குள்ளாகவும் பலருக்கு ஒரு வித உணர்ச்சி தோன்றி இக்குழப்பத்தில் கலந்து கொள்ள வேண்டியது பெரிய தேசாபிமானம் என்றும், இதனால் தங்களுக்கு பிற்காலத்தில் ஏதோ ஒரு பெரிய லாபமும், கீர்த்தியும் ஏற்படும் என்றும் கருதப்பட்டு வருகின்றது. இந்த நிலைக்கு பொதுவாக டாக்டர் சுப்பராயன் அவர்கள் சென்ற வருஷம் செங்கல்பட்டு முதலாவது சுயமரியாதை மகாநாட்டில் சொன்னது போல், அதாவது "மக்கள் மத விஷயத்தில் பெரிதும் மூட நம்பிக்கையில் ஆழ்த்தப் பட்டிருப்பதால் அது போலவே அரசியலிலும் ஆராய்ச்சியில்லாமலும், பகுத்தறிவு இல்லாமலும் கண்மூடித் தனமாய் நடந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்" என்று சொன்னதும், மற்றும் சமீபத்தில் ஸ்ரீமதி பெசண்டம்மையும் "இந்தியர்களுக்குள் இருந்து வரும் மூட நம்பிக்கையின் பலனே இக்குழப்பத்திற்கு காரணமாயிருக்கின்றது" என்று சொன்னதும் மிகவும் பொருத்தமானதாகும்.

ஏனெனில் இந்தியர்களில் அதாவது இப்போதைய குழப்பத்தில் கலந்து கொண்டிருக்கும் மக்களிலும் இக்குழப்பத்தை ஆதரிக்கும் மக்களிலும் 1000க்கு ஒன்று இரண்டு பேருக்காவது இப்போது நடைபெற்று வரும் குழப்பத்திற்கு ஆஸ்பதமான தேசீயத்தைப் பற்றியோ தேச விடுதலையைப் பற்றியோ அதற்காகவென்று செய்யப்படும் உப்புக் காய்ச்சுவதைப் பற்றியோ ஏதாவது தெரியுமா என்று கவனித்துப் பார்த்தால் அதாவது எப்படி பார்ப்பனர்கள் மோட்சம் என்றும் சொர்க்கம் என்றும் பாவ விமோசனமென்றும் சொல்லுவதை நம்பி அதற்காக அவர்கள் சொல்லுகின்றபடியெல்லாம் கேட்டு கண்மூடித் தனமாய் நடப்பதும் கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருள்களை செலவு செய்வதுமான காரியத்தில் மக்கள் நாசமடைவதும் சகஜமாயிருக்கிறதோ அதே போல் "தேச பக்தி" "தேசீய விடுதலை" என்கின்ற பேரால் மக்கள் பாழாகின்றார்கள் என்பது தெரியவரும்.



அன்றியும் யாராவது இம்மூடக் காரியங்களை வெளியாக்கி தடுத்துச் சொன்னால் எப்படி மதவிஷயத்தில் கண்மூடித்தனமாய் நடப்பதை எடுத்துச் சொல்லுகின்றவர்கள் நாஸ்திகர்களென்று குற்றம் சாற்றப்படுகிறார்களோ அதே போல் தேசீய விஷயத்தில் உள்ள மூடநம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றவர்கள் தேசத்துரோகிகள் என்று குற்றம் சாட்டப்படுகின்றார்கள். ஆகவே இவற்றிற்கு முக்கிய காரணம் மேல் சொல்லப்பட்டது போல் நமது மக்களின் மூடநம்பிக்கையும் குருட்டு பக்தியுமேயாகும்.

பார்ப்பனர்களுக்கு கொடுப்பதற்கும் மோட்சத்திற்கும் எப்படி சம்பந்தமிருக்கக் கூடும்? என்கின்ற விஷயத்தை ஒரு மனிதன் யோசித்துப் பார்த்தானானால் உப்புக்காய்ச்சுவதற்கும் தேச விடுதலைக்கும் எப்படி சம்பந்தமிருக்கக் கூடும்? என்பதும் மோக்ஷம், சொர்க்கம் என்பது என்ன என்று அதன் புறட்டுகளை சற்று யோசித்து பார்ப்பார்களேயானால் அவருக்கு தேசீயம் சுயராஜ்ஜியம் என்பதின் புறட்டுகள் என்ன என்பதும் சுலபத்தில் விளங்கிவிடும்.

எதற்கும் பகுத்தறிவை உபயோகிக்க விடாமலும் ஆராய்ச்சி செய்யவோ ஆலோசனை செய்து பார்க்கவோ இடம் கொடுக்காமலும் அடக்கி வைத்த பலனே நமது நாட்டின் இன்றைய இழிந்த நிலைக்கும் இக் குழப்பத்திற்கும் காரணமாயிருக்கிறது.

ஆகவே நமது நாட்டில் ஏதாவது ஒரு துறையில் மூட நம்பிக்கைக்கு அனுமதியும் அதை காப்பாற்ற நிர்ப்பந்தமும் இருக்கும் வரை இம்மாதிரி குழப்பநிலை அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டு தான் வரும். அதற்காக விசனப் படுவதில் யாதொரு பலனும் உண்டாகப் போவதில்லை. மேலும்,

தட்டிச் சொல்லுபவர்கள் மீது கோபமும் ஆத்திரமும் பாமர மக்களுக்கு உண்டாய்க் கொண்டு தான் வரும். ஆகவே அக்கோபத்திற்கும் ஆத்திரத்திற்கும் ஆளாகத் துணிந்தவர்கள்தான் தட்டிச் சொல்ல யோக்கியமுடையவர்களாவார்கள். மற்றவர்கள் பயந்து கொண்டு கூட்டத்தில் கோவிந்தா போட வேண்டியவர்களாகவேதான் இருப்பார்கள்.

ஏனெனில் மதத்தின் பேரால் நடைபெறும் காரியங்களால் எப்படி ஒரு கூட்டத்திற்கு வயிறு வளர்க்க வசதி ஏற்பட்டு அவ்வசதியை நிலைநிறுத்திக் கொள்ள அக்கூட்டத்தார் மதத்தைக் காப்பாற்ற வேண்டியவர்களாகி விட்டார்களோ அது போலவே "தேசீயத்தின்" பேரால் ஏற்படும் காரியங்களால் மாத்திரம் வயிறு வளர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் நமது நாட்டில் ஒரு கூட்டம் ஏற்பட்டு விட்டபடியால் அக்கூட்டத்தார் "தேசீயத்தை" காப்பாற்ற வேண்டிய அவசியமுடையவர்களாகி விட்டார்கள்.

வயிறு வளர்ப்பை உத்தேசித்து மோட்சத்தில் நம்பிக்கை உண்டாகும்



RangaRakes tamilnavarasam.com

படி பிரசாரம் செய்வது போலவே வயிறு வளர்ப்பை உத்தேசித்து "தேசீயத்தில்" நம்பிக்கை உண்டாகும்படி பிரசாரம் செய்ய வேண்டியது அவர்களுக்கு அவசியமாகிவிட்டது. எனவே இவ்விரு துறையிலும் உள்ள மூடநம்பிக்கைகளை அடியோடு அழித்து மக்களைக் காப்பாற்ற வேண்டியது தான் இது சமயம் இந்நாட்டிற்கு மிகவும் அவசியமான காரியமாகும். ஆதலால் மூட நம்பிக்கையை ஒழிக்க வேண்டும் என்னும் துறையில் கவலை கொண்ட நாம் பாமர மக்களுடன் கூடிக் கொண்டு கூட்டத்தில் கோவிந்தா போட முடியாத நிலையில் இருக்கின்றதுடன் மூட நம்பிக்கையால் ஏற்படும் பலனை விளக்கவேண்டியவறாகவும் இருக்கின்றோம்.

சுமார் 10, 12 வருஷங்களுக்கு முன்பு இதைப் போல் ஒரு குழப்பம் இந்த "மகாத்மா" வினாலேயே பஞ்சாப்பில் ஏற்படுத்தப்பட்டது. பிறகு அது ஒத்துழையாமையாக மாறிற்று. அது இப்போதிருக்கும் குழப்பத்தை விட எத்தனையோ மடங்கு அதிகமாக இந்தியா நாடு முழுவதிலும் குழப்பம் ஏற்பட்டது. அதனால் ஆயிரக்கணக்கான மக்கள் அடி, உதை, உயிர்ச்சேதம் ஆகியவைகளால் துன்பப்பட்டார்கள். பதினாயிரக் கணக்கான மக்கள் சிறை வாசம் செய்தார்கள். கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவாயின. இவைகளால் ஏற்பட்ட பலன் என்ன? செத்தவர்கள் "வீர சுவர்க்கம்" புகுந்தார்கள் என்று சொல்லப்பட்டது. சிறை சென்றவர்கள் பெரிய பெரிய "தேசீய வாதி"களானார்கள்.

பணம் கொடுத்தவர்கள் "தேச பக்தர்களானார்கள்". இதில் கலந்து மேடையில் நின்று பேசிய வக்கீல்களும் டாக்டர்களும் "தேசீய வாதி" களாகி முன்னிலும் அதிகமான பணம் வரும்படி உடையவர்களானார்கள்.

"தலைவர்கள் என்பவர்கள் அசைக்க முடியாத மகாத்மாக்கள்" ஆனார்கள். தங்களுக்கென்று ஆச்சிரமங்களும், மடங்களும் ஏற்படுத்திக் கொண்டார்கள். மற்றபடி பொது ஜனங்களுக்கு இதனால் ஏற்பட்ட நன்மை என்னவென்று கேட்கின்றோம்?

மேல் கண்டபடி பஞ்சாபில் ஏற்பட்ட குழப்பத்தால் குழந்தைகளும் நிரபராதிகளும் கொல்லப்பட்டதைத் தவிர, பெண்கள் மானபங்கம் செய்யப்பட்டதைத் தவிர, பல இடங்களில் ராணுவச் சட்டம் அமுல் நடத்தப்பட்டதுடன் பாமர மக்களுக்கு வரி அதிகப்படுத்தப்பட்டது. பார்ப்பனர்களுக்கும் அவர்களை பின்பற்றின பார்ப்பனரல்லாதவர்களுக்கும் பெரிய பெரிய உத்தியோகங்கள் கற்பிக்கப்பட்டது. அதற்காக ஆயிரக் கணக்கான ரூபாய்கள் சம்பளமாக உயர்த்தப்பட்டது.

இவைகளைத் தவிர வேறு என்ன நடந்தது?

1920 ஸு த்தில் பிராட்வே 8ம் நெம்பர் கட்டிடத்தில் திரு. காந்தியாரை ஒருவர் ஒரு கேள்வி கேட்டார். அதாவது: –



"பஞ்சாப் அக்கிரமத்திற்கும் கிலாபத் அநீதிக்கும் ஒத்துழையாமை நடத்த வேண்டும் என்று சொல்லுகிறீர்களே அரசாங்கத்தார் பஞ்சாப் அக்கிரமத்திற்காக இனி ஒன்றும் செய்ய முடியாது. ஏதோ சிறிது ஜட்ஜ்மெண்ட் தவறிவிட்டதால் இப்படி நேர்ந்து விட்டது. ஆதலால் மறந்து விடுங்கள் என்று சர்க்கார் தரப்பில் சொல்லிவிட்டார்கள், கிலாபத் விஷயத்திலோ துருக்கியிலேயே ஒரு வித சமாதானம் ஏற்பட்டு துருக்கி அரசரே உடன்படிக்கையில் கையெழுத்து செய்து விட்டார். மற்றபடி ஒரு சமயம் சுயராஜ்ஜியத்திற்காக ஒத்துழையாமை என்று சொல்லுவீர்களேயானால், அதற்காகவும் சர்க்கார் ஒரு சீர்திருத்தம் வழங்கிவிட்டார்கள். தாங்களும் அதை நடத்திக் காட்டவேண்டும் என்று ஏற்றுக் கொண்டு விட்டீர்கள். இனி எதற்காக ஒத்துழையாமை ? " என்று கேட்டார், அதற்கு திரு காந்தியார் சொன்ன பதில் என்ன வென்றால் "இந்திய மக்களின் சுயமரியாதைக்காக ஒத்துழையாமை செய்ய வேண்டியிருக்கின்றது" என்று பதில் சொன்னார்.

ஆகவே மேற்படி ஒத்துழையாமை நடத்தியதின் பலனாக காந்தியார் அபிப்பிராயப்படி இந்தியாவுக்கு ஏற்பட்ட சுயமரியாதை எவ்வளவு என்று இப்போதே கேட்கின்றோம். ஒத்துழையாமையின் பலனாக ஏற்பட்ட கஷ்ட நஷ்டத்திற்கு உண்டான பலன் எவ்வளவு? என்று கேட்கின்றோம்

மற்றும் தீண்டாமை ஒழியாமல், ஜாதி மத வித்தியாச உயர்வு தாழ்வு ஒழியாமல், சுயராஜியம் அடைய முடியாதென்றும், அதைப் பெற நினைப்பது கூட முட்டாள் தனமென்றும், இதே திரு. காந்தியார் பேசியதின் எதிரொலி இன்னமும் அடங்கவில்லை. எழுதியதின் இங்கி இன்னமும் காயவில்லை. அப்படி இருக்க இப்போது சுயராஜ்யம் பெற உப்புக் காச்சுவதும் சர்க்கார் சட்டத்தையும் மீறுவதும் எதற்கு என்று மறுபடியும் கேட்கின்றோம்?

சட்டம் மீற வேண்டும் என்று சொல்லி மக்களை ஏவி விட்டு விட்டு "இது சட்டத்திற்கு விரோதம்" "அது நீதிக்கு விரோதம்" என்று பேசுவது எதற்கு என்றும் கேட்கின்றோம்?

"மக்கள் மண்டை உடைபட வேண்டும்", "மக்கள் உயிர் சுட்டுக் கொல்லப்பட வேண்டும்", "இந்த சர்க்காருக்கு என்னை பிடிக்க சக்தியில்லை", "கை முறிக்கப்படும் வரை விடாதீர்கள்", "ஆங்காங்கு என்ன என்ன சட்டம் மீறக் கூடுமோ அதையெல்லாம் மீற வேண்டியது தான்" என்பவையெல்லாம் பேசி மக்களுக்கு போதையை உண்டாக்கி விட்டு மக்களையும் கண்மூடித்தனமாய் கண் கொண்ட மாடு போல் நடந்து கொள்ளச் செய்துமாய் விட்டது. இதனால் பலர் சிறை சென்றாய் விட்டது. இனியும் பலர் செல்லக்கூடும். பலர் உயிர் மாய்ந்தாய் விட்டது. இனியும் பலர் மாளக் கூடும். அடக்கு முறை சட்டங்கள் கிளம்பிவிட்டது. ராணுவச் சட்டம் முதலிய கொடுமைகளின் நிழல் தெரிகின்றது. மற்றும் பொது ஜனங்களின் சொத்துக்கள் உயிர்கள் பெண்டு பிள்ளைகள் காப்பாரற்று பரிபோகவும் கூடும் போல் தெரிகின்றது.



RangaRakes
tamilnavarasam.com

இவைகளுக்கெல்லாம் யார் பொறுப்பாளி? என்ன பரிகாரம்?

ஒரு புரத்தில் "சுயராஜ்யம் பெற என்னமாவது செய்து சட்டம் மீற வேண்டியதுதான் என் கடமை" என்று திரு. காந்தி சொல்லவும், மற்றொரு புறம் "மக்களைக் காப்பாற்ற நீதியையும் சமாதானத்தையும் நிலைநிருத்த எப்படியாவது சட்டத்தைக் காப்பாற்ற வேண்டியது தான் எமது கடமை" என்று அரசாங்கம் சொல்லவும், இருவரின் பலமும் ஒன்றோடொன்று முட்டிக் கொள்ளும் போது நிரபராதிகளும், யோசனையற்ற பாமர ஜனங்களும், கஷ்டப்படுவதுவான சத்தியாக்கிரகமா? என்று கேட்கின்றோம். இருவருக்கும் ஆள் கூட்டமும் பணப் பொழக்கமும் தாராளமாயிருக்கின்றது.

பாமர மக்கள் இருவரையும் நம்புகிறார்கள்.

ஒரு புறம் "அரசாங்கத்தை ஒழித்து விட்டால் நமக்கு வரியே போய் விடும். வேண்டிய சாமான்களை கடைகளிலிருந்து சும்மா அள்ளிக் கொண்டு வந்து சாப்பிடலாம். நம்மை யார் கேட்கப் போகிறார்கள்" என்று அநேகர் நம்புகிறார்கள்.

மற்றொரு புறம் "அரசாங்கம் போய் விட்டால் நமது கதி என்ன ஆகும்? பிறகு கையில் வலுத்தவன் காரியம் தானே? மதக் கொடுமை ஜாதிக் கொடுமை காலிகள் கொடுமை ஏமாற்றுக்காரர்கள் கொடுமை ஆகியவை களிலிருந்து எப்படி மீளுவது?" என்றும் அநேகர் கருதுகின்றார்கள். இன்றைய குழப்பத்தில் இவைகளுக்கெல்லாம் என்ன பரிகாரம் இருக்கிறது? என்று தான் கேட்கின்றோம்.

ஏழைகளையும் பாமர மக்களையும் ஏமாற்றுவதில் யார் கெட்டிக் காரர்கள் என்பதில் தான் தேசீய போராட்டமும் சர்க்கார் சமாளிப்பும் இருக் கின்றதே ஒழிய நாணையமும் யோக்கியப் பொறுப்பும் சற்றாவது இவைகளில் தென்படுகின்றதா என்பது நமக்கு விளங்கவில்லை.

சென்ற வருஷத்தில் நமது நாட்டில் ஏற்பட்ட தொழிலாளர் போராட்டங் களிலாவது இப்போது நமது நாட்டில் பல இடங்களில் நடந்து வரும் தொழி லாளர் போராட்டங்களிலாவது இந்த தேசிய வீரர்களுக்கோ தேசியத் தலைவர் களுக்கோ எவ்வளவு கவலை இருந்தது – இருக்கின்றது? நமது நாட்டு தொழி லாளர்களை காட்டிக் கொடுத்து அவர்கள் போராட்டத்தை அழித்தவர்கள் யார்?

ஜாதி உயர்வு தாழ்வு கொடுமைக்கு தேசீய வீரர்கள் என்ன செய் தார்கள்? அதை ஒழிக்க தலைவர்கள் என்ன உதவி புரிந்தார்கள்?

கஞ்சிக்கு இல்லாமல் மக்கள் கஷ்டப்படுவதையும், ஜாதிக் கொடுமை யால் இழிவு படுத்தி கொடுமைப் படுத்தப்படுவதையும் விட இந்த "சுயராஜ்ஜி



யம்" எந்த விதத்தில் மேலானது? யாருக்கு வேண்டியது?

தொழிலாளர் போராட்டத்தையும் ஜாதிக் கொடுமை போராட்டத் தையும் கண்டு ஒளிந்து கொண்ட கோழைகள் சுயராஜ்ஜியத்திற்கு சாதிக்கப் போகின்றோமென்றால் இவர்களை மடையர்கள் தானே நம்புவார்கள்.

உப்பு போராட்டத்திற்கு ஓடி ஓடி மீட்டிங்கி போடும் வக்கீல்கள், டாக்டர்கள் (பார்ப்பனர்) ஏழைகள் கொடுமைக்கும் ஜாதிக் கொடுமைக்கும் என்ன செய்தவர்களாயிருப்பார்கள்?

அல்லது இவர்கள் காங்கிரஸ் கட்டளையில் எந்த பாகத்தை காரியத்தில் ஏற்றுக்கொண்டு நடந்தவர்களாயிருப்பார்கள்; அல்லது இவர்கள் வரும்படியில் எந்த பாகத்தை கொடுத்து உதவினவர்களாயிருப்பார்கள்? வருணாச்சிரமத் தலைவரான உயர் திரு. டி. ஆர். ராமச்சந்திரய்யர் தலைமை வகித்துத் தேசீயத்திற்கு அனுதாபம் காட்டியிருந்தால் அந்த தேசீயம் எவ்வளவு நாணையமானதாயிருக்க முடியும்?

இன்றைய போராட்டத்தில் தமிழ் நாட்டில் தலைமை வகித்து நடத்து கின்றவர்கள் யார்? எல்லோரும் பார்ப்பனர்கள் அல்லவா? அவர்கள் இந்த போராட்டம் உண்மையில் ஏழைகளுக்கு நன்மையாயும் ஜாதிக் கொடுமை ஒழியக் கூடியதாயும் இருந்தால், இதில் கலந்து கொண்டிருப்பார்களா? அறிவுள்ள மக்களுக்கு இது விளங்க வேண்டாமா? என்று கேட்கின்றோம்.

நமது மக்கள் நிலை மற்றவர்களை விட நமக்கு நன்றாய்த் தெரியும்.

கழுத்தில் ருத்திராட்சமோ துளசி மணியோ கட்டிக் கொண்டு சாம்ப லையோ நாமத்தையோ பூசிக் கொண்டு வருகின்றவர்கள் காலிலெல்லாம் விழுகின்றவர்கள் தானே ஒழிய வேறில்லை. அதிலும் சென்னையில் இருப்பவர்களோ இந்த விஷயத்தில் மிகவும் மோசமானவர்கள். ஒரு கிழவி மஞ்சள் நூலை மொத்தமாக கழுத்தில் போட்டுக் கொண்டு ஒரு முரத்தை ஏந்திக் கொண்டு ஆ! ஊ!! மாரியாயீ!!! என்று கத்தினால் காலுக்கு தண்ணீர் ஊற்றி தேங்காய் பழம் உடைத்து வைத்து கற்பூரம் பற்ற வைத்து விழுந்து கும்பிட்டு வாக்கு கேட்கும் புத்திசாலிகளேயாவார்கள். இந்த அறிவு தானே இவர்களது மற்ற வாழ்விலும் பரிணமிக்க முடியும், இவர்களே இப்படியானால் மற்றும் நமது கிராமவாசிகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? என்று கேட்கின்றோம்.

ஆகவே இன்றையதினம் நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் குழப்பம் பாமர மக்களின் அறியாமையின் பலனாலும் மூட நம்பிக்கையின் பலனாலுமே ஒழிய ஒரு சிறிதும் நாட்டின் நலத்தை உத்தேசித்தல்ல வென்றே நாம் துணிந்து கூறுகின்றோம். இதிலீடுபட்டு கஷ்டமனுபவிப்பவர்களிடம் நமக்கு அனுதாபமிருக்கின்றது, அவர்கள் கஷ்டங்களைப் பற்றி கேள்க்கும்



RangaRakes tamilnavarasam.com

போதும் பார்க்கும் போதும் துக்கம் உண்டாகின்றது. ஆனால் இதற்காக நாம் என்ன செய்ய முடியும்? இமயமலை பனியால் குளிரால் விரைத்துப் போகின்றது வாஸ்தவமாய் இருக்கலாம். ஆனால் அதற்கு நம்மால் போர்வை போட்டு மூடி குப்பை செத்தைகள் அரித்து குளிர் காய வைக்க முடியுமா என்று கேட்கின்றோம். எலியை பூனை பிடித்து சாப்பிடும் போது மனம் பதறுகின்றது. இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? அதனதன் இயற்கைப் பலனை அது அது அடைந்துதான் ஆக வேண்டும். அதிலும் "எல்லாம் ஆண்டவன் செயல் அவனன்றி ஓரணுவும் அசையாது" என்று கற்பித்து மக்கள் அறிவைக் கெடுத்து முயற்சியைக் கெடுத்து வந்த ஞானோப தேசத்தின் பலனை இந்த தேசம் அடையாமல் செய்ய யாராலும் முடியவே முடியாது.

கடைசியாக தமிழ்நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களுக்கு பார்ப்பனரல் லாதான் என்கின்ற முறையில் ஒன்று கூறிவிட்டு இதை முடிக்கின்றோம்.

சகோதரர்களே!

இந்திய நாட்டில் சமூக வாழ்வில் நமது நிலை என்ன? நமக்கு சுய ராஜியம் ஒரு கேடா? அதாவது பிறவியில் நாம் "சூத்திரர்களாய்" இழி மக்களாய்க் கருதப்படுகின்றவர்களல்லவா? புனிதமான ஸ்தானங்கள் என்ப வைகளில் நாம் செல்லக் கூடாதவர்களல்லவா? நம்மால் பார்க்கப்படும் ஆகா ரமும் தொடப்படும் தண்ணீரும் தோஷமடைகின்றதல்லவா? நாம் தீண்டப் படாதவர்கள் அல்லவா? ஒவ்வொரு ஓட்டலிலும் வெளியில் நிற்க வேண்டியவர்களல்லவா? அயோக்கிய மனிதனை சுவாமி! என்று கூப்பிட வேண்டியவர்களல்லவா? நம் பின்னால் கோடிக்கணக்கான சகோதரர்கள் தெருவில் நடக்கவும் அருகில் வரவும் யோக்கியதை அற்றவர்களாக நம்மா லும் கருதப்படுகிறார்களா இல்லையா? நமது நாட்டில் நமது சகோதரர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களிலேயே 100க்கு 3 பேர் உள்ள ஜனத் தொகையினரால் இந்த கொடுமை இழைக்கப்படுவதைச் சகித்துக் கொண்டி ருக்கின்றோம். இந்த இழிவுக்கு நாம் இதுவரை என்ன செய்தோம்? செய்யத் துணிந்தோம்? இவர்களால் செய்யப்பட்ட சட்டத்தில் இருக்கும் இழிவை யாவது புராண புஸ்தகங்களில் இருக்கும் இழிவையாவது நீக்கிக் கொண் டோமா? வாழ்வில் வழக்கத்தில் இருக்கும் இழிவையாவது நீக்கிக் கொண் டோமா? இந்த ஈன நிலையில் நாம் இருந்து கொண்டும் நம்மை ஈனப் படுத்தினவர்களையே சாமி! சாமி! யென்று கூப்பிட்டுக் கொண்டும் இருக்கும் படி வைக்கப்பட்டிருக்கும் நமக்கு உப்புச் சட்டம் மீறுவது ஒரு கேடா? அதற்காக சத்தியாக்கிரகம் செய்வது ஒரு கேடா? சகோதரர்களே நாயினும் கேடாய் மலத்தினும் கேடாய் புழுத்த புழுவினும் கேடாய் சமூக வாழ்வில் தினமும் அனுபவித்து வரும் இழிவைப் பொருத்துக் கொண்டு ஒருவன் சுயமரியாதைக்காக நாட்டின் விடுதலைக்காக உப்புக் காய்ச்சுகிறேன், உப்புச்



சட்டம் மீறுகிறேன் என்று சொன்னால் அவனிடம் நாணையமாவது யோக்கியப் பொறுப்பாவது அறிவுடைமையாவது இருக்க முடியுமா? சமூக வாழ்வில் நமது நிலையை நினைத்துப் பார்த்த சுயமரியாதை உள்ளவர்கள் உப்புக் காய்ச்சப் போக முடியுமா? அதை நினைக்கவாவது நேரமிருக்குமா? இன்றைய தினம் தமிழ் நாட்டில் உப்புக் காய்ச்சும் வேலையிலும் உப்புச் சட்டத்தை மீறும் வேலையிலும் பார்ப்பனர்கள் இவ்வளவு மும்முரமாய் கலந்திருப்பதின் இரகசியம் என்ன என்று யோசித்துப் பாருங்கள். பணம் வசூல் பண்ணும் காரணம் என்ன என்று யோசித்துப் பாருங்கள். இந்த நாட்டு மக்களுக்கு "சூத்திரர்களுக்கு" தங்கள் சமூக வாழ்வில் உள்ள இழிவும் மனிதத் தன்மையற்ற நிலையும் ஞாபகத்திற்கு வராமலிருக்கட்டும் என்றும் வேறு யாராவது ஞாபகத்திற்கு கொண்டு வர முயற்சித்தாலும் அம்முயற்சி அழிக்கப்படட்டும் என்று கருதி செய்த சூக்ஷியல்லவா இது?

ஆகவே இது சமயம் நாம் கண்டிப்பாய் சொல்லுவது என்ன வென்றால் இப்போது நமக்கு மோக்ஷமோ சுயராஜ்ஜியமோ கண்டிப்பாய்த் தேவை யில்லை. இவை இரண்டும் ஏமாற்றுத் தன்மையுடையதான புறட்டும் சூக்ஷி எண்ணங்களும் கொண்டு கற்பித்த அர்த்தமற்ற வார்த்தையாகும்! அர்த்தமற்ற வார்த்தையாகும்!! அர்த்தமற்ற வார்த்தையாகும்!!! அதில் கவலை செலுத்துவது நமது அறிவற்றத் தன்மையும் சுயமரியாதையற்ற தன்மையுமாகும் என்பதே யாகும்.

ஆகையால் இதைக் கேட்டால் கேளுங்கள் கேள்க்காவிட்டால் போங் கள். கேட்காமற் போனதற்காக வருந்தும் காலம் ஒன்று வரும் என்கின்ற நம்பிக்கை நமக்குண்டு.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 04.05.1930**



RangaRakes tamilnavarasam.com

# திரு. சி. ராஜகோபாலாச்சாரியாரின் சாமர்த்தியம்

திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் சட்டத்தை மீறினாரென்று அரஸ்ட் செய்யப்பட்டு 6-மாத வெருங்காவல் தண்டனையும் 200 ரூ. அபராதமும் அடைந்தார். சிறைக்குப் போகும் போது தமது தலைமைஸ்த்தானத்தை வெகு ஜாக்கிரதையாக திரு.சந்தானஅய்யங்காரிடமே ஒப்புவித்து விட்டுப் போயி ருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில் திருவாளர் திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் “திரு ஆச்சாரியர் சிறைசெல்லநேர்ந்தால் தான் அந்த ஸ்தானத்தை ஏற்று நடத்துகிறேன்” என்று ஒப்புக்கொண்டிருந்தும் கூட அவரிடம் தலைமை ஸ்த்தானத்தை ஒப்புவிக்காமல் ஒரு அய்யங்காரி டமே ஒப்புவித்து விட்டுப் போனது மிகவும் சாமர்த்தியமேயாகும்.

ஒத்துழையாமை காலத்திலும் கூட திரு. ஆச்சாரியார் தனது தலைமை ஸ்த்தானம் காலி செய்ய நேர்ந்தபோதெல்லாம் திரு. ஸ்ரீனிவாசய்யங்காரி டமோ திரு. ராஜனிடமோ தான் ஒப்புவிப்பதில் கவலையாகவே இருந்தவர்.

ஆதலால் இப்போதும் ஜாக்கிரதையாகவே இருந்தது பாராட்டத் தக்கதே,

**குடி அரசு - செய்தி விளக்கம் - 04.05.1930**



# சென்னையில் நிரபராதிகள் கொல்லப்பட்டனர்

திரு.காந்தியின் உப்பு சத்தியாக்கிரக குழப்பத்தின் பயனால் பல நிரபராதிகள் போலீசாரால் அடிபட்டும், சுடப்பட்டும் கஷ்டப்பட்டதற்கும், கொல்லப்பட்டதற்கும் நாம்மிக்க துக்கத்துடன் அநுதாபப்படுகின்றோம். இம்மாதிரியான சம்பவங்களில் சர்க்கார் தங்களுடைய புத்திசாலித்தனத்தை உபயோகித்துத் தக்க பொருப்பு எடுத்து நிரபராதிகளுக்குத் துன்பம் நேராமல் படிக்கு இயக்கத்தைச் சமாளிக்காமல் வெரும் துப்பாக்கி பலத்தையும், தடிப்பலத்தையும் கொண்டே அடக்க நினைத்ததானது கவலையற்ற தன்மை என்பதும், கடமையைச் சரியாய் உணராத தன்மை யென்பதும் நமது அபிப்பிராயம்.

இச்சம்பவத்திற்கு தேசீயவாதிகள் சர்க்காரை கண்டபடி வைது விடுவதினாலேயே பரிகாரம் தேடிவிட்டவர்களாகி பெரிய பெரிய தேசீய வாதிகளாகி விடலாம். சர்க்காராரும் சட்டத்தையும் அமைதியையும் காப் பாற்றுவதற்கு இதைவிட வேறு மார்க்கங்கள் பயன்படாமல் போய்விட்டது என்று சொல்வதினாலேயே “சர்வ வல்லமையுள்ள” அரசாங்கத்தாராகி விடலாம்.

இந்த இரண்டினாலும் கஷ்டப்பட்ட- மாண்ட- பரிகொடுத்த நிரபராதி களான மக்களுக்கு என்ன சமாதானம் ஏற்படும் என்று கேட்கின்றோம்?

அரசியல் சாமார்த்தியம் இல்லாமல் இம்மாதிரியாக நிரபராதிகள் கஷ்டப்படும்படி தடியையும். துப்பாக்கியையும் உபயோகிப்பதின் மூலமே சட்டத்தையும் சமாதானத்தையும் காப்பாற்றுவது இன்றைய அதாவது 20வது நூற்றாண்டின் அரசியல் முறையானால் - அதிலும் நாகரீகம் பெற்று முன்னணி யில் நிற்கும் மக்களின் அரசாட்சி முறையானால் மனுராஜ்யத்தையும், ராமராஜ்யத்தையும், கூன்பாண்டியன் ராஜ்யத்தையும் நாம் எப்படி குற்றம் சொல்ல முடியும்? என்று கேட்கின்றோம். ஆகவே சர்க்காரார் இதற்கு என்ன தான் சமாதானம் சொல்லுவதானாலும் தங்கள் கடமையைச் சரியான படி சரியான காலத்தில் செலுத்தவில்லை என்பதே நமது அபிப்பிராயம்.

**குடி அரசு - செய்தி விமர்சனம் - 04.05.1930**



RangaRakes tamilnavarasam.com

## உதிர்ந்த மலர்கள்

1. பரம், ஆத்மார்த்தம், விதி, அல்லது கடவுள் செயல் – என்று சொல்லப் படும் இம்மூன்றையும் அழிக்க தைரியமும் சக்தியும் உடையவர்களே மனிதனுக்கு விடுதலை சம்பாதித்துக் கொடுக்க அருகராவார்கள்.

ராஜ வாழ்த்தும் கடவுள் வாழ்த்தும் மனிதனின் அடிமைத்தனத்திற்கு அஸ்திவாரக் கல் நடுவதாகும்.

2. திரு. காந்தியவர்கள் தனது சத்தியாக்கிரகம் தோல்வியுற்றால் "இந் தியா விடுதலை பெற கடவுளுக்கு விருப்பமில்லை போல் இருக்கின் றது" என்று ஒரு வார்த்தையில் ஜனங்களுக்கு சமாதானம் சொல்லி விடுவார். அல் லது உண்மையில் அப்படியே அவர் நினைத்தாலும் நினைப்பார்.

3. தொட்டதெற்கெல்லாம் கடவுள் செயல் கடவுள் செயல் என்று சமா தானம் சொல்லுகின்றவர்கள் தங்கள் தப்பிதத்தின் காரணத்தை உணரா தவர்கள் அல்லது தங்கள் தவறுதல்களை உணர்ந்து அதிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிக்கின்றவர்கள் ஆவார்கள்.

4. எப்படியோ பல மதங்கள், பல தெய்வங்கள், பல வேதங்கள், பல சமயங்கள் கற்பிக்கப் பட்டாய் விட்டது. அவைகள் ஒவ்வொன்றினாலும் மக்களை அடிமைப்படுத்தியாய் விட்டது. குரங்குப் பிடியாய் இவற்றைப் பிடித்துக் கொண்டு சமய ஞானம் பேசுகின்றவர்களிடம் காலத்தைக் கழிப்பது வீண் வேலையாகும். மக்கள் மிருகப் பிராயத்திற்குப் போய் கொண்டே யிருக் கிறார்கள்.

மண்ணையும் சாம்பலையும் குலைத்து பூசுவதே சமயமாய் விட்டது.

5. பார்ப்பானுக்கும், பாளாண்டிக்கும் அழுவதே தர்மமாகி விட்டது.

கூடா ஒழுக்கங்களும், அண்டப் புரட்டுகளும், ஆகாயப் புரட்டுகளும் நிறைந்த புராணக் குப்பைகளைத் திருப்பித்திருப்பிப் படிப்பதே காலட் சேபமாகி விட்டது.

ஒழுக்கத்தினிடத்திலும், சத்தியத்தினிடத்திலும் மக்களுக்குள்ள



RangaRakes

கவலையே அடியோடு போய் விட்டது.

வலிவுள்ளவன் வலிவில்லாதவனை இம்சிப்பதே ஆட்சியாய் விட்டது.

பணக்காரன் யேழைகளை அடிமைப் படுத்துவதே முறையாய் விட்டது.

தந்திரசாலிகள் சாதுக்களை ஏமாற்றுவதே வழக்கமாய் விட்டது.

அயோக்கியர்கள் யோக்கியர்களை உபத்திரவப்படுத்துவதே நீதியாகி விட்டது.

வலிவுள்ளவனாகவோ, பணக்காரனாகவோ, தந்திர சாலியாகவோ, அயோக்கியனாகவோ இல்லாதவன் வாழ்வதற்கு இந்த உலகத்தில் இடமே இல்லாமல் போய்விட்டது.

இவைகளை சீர்திருத்த ஒரு காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா?

இதனால் கலகம் உண்டாகுமானால் அதற்காகப் பின் வாங்க வேண்டுமா?

திருந்தினால் திருந்தட்டும், இல்லாவிட்டால் அழியட்டும் என்கிற இரண்டிலொன்றான கொள்கையிலேயே இறங்கி இருக்கின்றோம். மானங் கெட்ட மத்திய வாழ்வு இனி வேண்டுவதில்லை.

**– ஈ.வெ.ரா.**

**குடி அரசு – துணுக்குகள் – 04.05.1930**



tamilnavarasam.com

## சிவகாமி - சிதம்பரனார்

# திருமண அழைப்பு

திருவாளர் தமிழ்ப்பண்டிதர் **சாமி சிதம்பரனார்** அவர்கட்கும் கும்ப கோணம் திரு. குப்புசாமிபிள்ளை அவர்கள் குமாரத்தி திருமதி. **சிவகாமி** அம்மாள் அவர்கட்கும் 5-5-30 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு திரு. ஈ. வெ. ரா. அவர்கள் தோட்டத்தில் போடப்பட்டிருக்கும் சுயமரியாதை மகா நாட்டுப் பந்தலில் திருமணம் நடைபெறும்.

திருமதி ஈ. வெ. ரா. நாகம்மாளவர்கள் திருமண வைபவத்தை நடத்தி வைப்பார்கள்.

**- ஈ.வெ.ராமசாமி**

**குடி அரசு - அழைப்பிதழ் - 04.05.1930**



# திரு. காந்தியார்

திரு. காந்தி அவர்கள் சர்க்காரால் பந்தோபஸ்த்தில் வைக்கப்பட்டு விட்டார்கள். இதனால் திரு. காந்தி ஏமாற்றமடைந்தாரே தவிர எவ்விதத்திலும் திருப்தி அடைந்தார் என்று சொல்லமுடியாது. ஏனெனில் தான் உப்பு சட்டம் மீறுவது என்று கிளம்பியவுடன் தன்னை சர்க்கார் கைது செய்து விடுவார்கள் என்றும் இதனால் சர்க்காருக்கு ஏதோ பிரமாதமான கெட்ட பெயர் ஏற்பட்டு விடும் என்றும் கருதி வெளிக் கிளம்பினார். ஆனால் சர்க்காருக்கு இந்த விஷயம் ஆரம்பத்திலேயே தெரிந்து விட்டபடியால் அந்தப்படி செய்து விடாமல் திரு. காந்தியாரை அவரது இஷ்டப்படி செய்ய விட்டு, அவரது கொள்கைகளாலும் செய்கைகளாலும் ஏற்படும் பலன்களை உலகம் அறியும்படி செய்து தாங்கள் செய்யப்போகும் காரியத்திற்கு நியாயமும் தேடிக் கொண்டு பிறகு வெகு சாதாரணமாய் பிடித்து பந்தோபஸ்த்தில் வைத்து விட்டார்கள். "காந்தியைப் பிடிப்பார்கள்" "காந்தியைப் பிடிப்பார்கள்" என்று பொது ஜனங்கள் பிரமாதமாய்க் கருதி எதிர் பார்த்துக் கொண்டிருந்த காலத்தி லெல்லாம் பேசாமல் அசரப் போட்டு விட்டு பொசுக்கென்று பிடித்ததாலும், அவரைப் பிடிக்கு முன்பு ஆங்காங்கு பல கலகங்களும் குழப்பங்களும் ஏற்பட்டிருந்த சமயமாயிருந்ததாலும் திரு. காந்தியைப் பிடித்தது அவ்வளவு பெரிய உணர்ச்சி ஏற்படத்தக்க காரியமாய் இல்லாமல் போய் விட்டது. இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயமென்னவென்றால் திரு. காந்தி 1921-ல் அஹிம்சா தர்ம மந்திரத்துடன் சத்தியாக்கிரகம் ஆரம்பித்து அதனால் பல பல கலகங்களும் உயிர் சேதங்களும் கஷ்ட நஷ்டங்களும் மக்களுக்கு ஏற்பட்டு, அதை சமாளிக்க முடியாமல் திடீரென்று சத்தியாக்கிரகத்தை நிறுத்தி "தோல்வியடைந்து விட்டேன்" என்று அவராலேயே ஒப்புக் கொள்ளப்பட்டு இருந்தும், இந்த அனுபவத்தை வேண்டுமென்றே புரக்கணித்து விட்டு மறு படியும் அதே காரியத்தைச் செய்து அதே பலனை அடைவது என்பது சிறிதும் பாராட்டக் கூடிய காரியமாகாது. ஆனாலும் அவரைப் பொருத்தவரையில் அவருக்கு ஒரு ஓய்வு ஏற்பட்டு விட்டது என்பதைப் பொருத்தவரையில் அவரைப் பாராட்ட வேண்டியதேயாகும்.

நிற்க, திரு. காந்தியார் பந்தோபஸ்த்தில் வைக்கப்பட்ட பிறகும் கூட சில இடத்தில் குழப்பமேற்பட்டு உயிர்ச் சேதங்களும் பொருள் நஷ்டங்களும்



RangaRakes tamilnavarasam.com

ஏற்பட்ட சேதியைக் கேள்விப்படும் போது இம்மாதிரியான காரியங்களில் திரு. காந்தியாருக்கு பங்கு இல்லை என்று சொல்லிவிட முடியாதென்றே சொல்லுவோம். இச்சம்பவங்களில் பொது ஜனங்கள் மீது குற்றம் சொல்ல நமக்கு சிறிதும் மனம் வரவில்லை. ஏனெனில் பொது ஜனங்கள் 1000க்கு 990 பேர்கள் பாமர மக்கள், தங்கள் செய்கைகளின் பலன்களில் சிறிதும் ஞானமில் லாதவர்கள். இதை யாவரும் ஒப்புக் கொள்ள வேண்டியதேயாகும். ஆகவே இப்படிப்பட்டவர்கள் காரியத்திற்கு அவர்களையே பொருப்பாளிகளாக்குவது சிறிதும் நியாயமாகாது. அவர்களை நடத்துகின்றவர்களே பொருப்பாளிகளா வார்கள். சர்க்காரின் மீதே முழு குற்றமும் சொல்லுவதும் போதிய சமாதானம் ஆகிவிடாது. ஏனெனில் சர்க்கார் புதிதாக ஒன்றும் செய்து விடவில்லை. இதற்கு முன் இப்பேர்ப்பட்ட கலவரங்கள் ஏற்பட்ட போதெல்லாம் என்ன செய்து வந்தார்களோ அதையே தான் இப்போதும் செய்து இருக்கிறார்கள். இது மாதிரி சந்தர்ப்பங்களில் இனியும் இதையேதான் செய்வார்கள். ஏனெனில் அவர்களது "மிருக பலத்தினிடமும்" "அசுர பலத்தினிடமும்" திரு. "காந்தியின் அஹிம்சா தர்ம" பலம் தலைகாட்ட முடியவில்லை என்பது நிதர்சனமாகி விட்டது.

ஆகவே திரு. காந்தியாரின் ஓய்வுக்காகவும் அவரது தோல்விகளும் தவறுதல்களும் மறைபடுவதற்காகவும் பாமர மக்கள் பலி கொடுக்கப்பட் டார்கள் என்பதைத் தவிர இச்சம்பவங்களுக்கு வேறு பெயர் கொடுக்க நமக்கு ஆதாரம் கிடைக்கவில்லை.

தவிர, சர்க்காரால் சட்டம் மீறுகின்றவர்களை எல்லாம் கைதி செய்யா மல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று பார்ப்போமானால் சர்க்காருக்கு அதிகமாக "தேச பக்தர்களை" உண்டாக்கிவிட இஷ்டமில்லை என்பது ஒன்று. மற்றொன்று என்ன வென்றால் முன் போல் இல்லாமல் இப்போது தண்டிக்கப்படுகின்றவர்களுக்கு ஜெயிலில் சற்று சௌகரியம் முன்னிலும் அதிகமாய் செய்து கொடுக்க வேண்டியிருக்கின்றதாகும். இந்த இரண்டு காரியங்களுக்காகவேதான் தொண்டர்களை அடித்தோ விரட்டியோ துரத்தி விடுகின்றார்கள் என்று கருதுகின்றோம். எது எப்படி இருந்தாலும் தொட்ட தற்கெல்லாம் அடிப்பது, சுட்டு வீழ்த்தி பயமுறுத்துவது என்பது போன்ற காரியங்களை நம்மால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. நம்மைப் பொருத்த வரை சட்டம் மீறுவது என்பது குற்றமான காரியம் என்பதாக நாம் கருத வில்லை. நமது சுயமரியாதைக்கு விரோதமான காரியங்களுக்கு சட்டம் மீற வேண்டியதுதான், அடிபட வேண்டியதுதான், உயிர் மாள வேண்டியது தான், அதை அடக்க சர்க்கார் தன்னால் ஆனதைப் பார்க்க வேண்டியது தான். ஆனால் இந்த கடைசி ஆயுதம் வீணாய்ப் போகும்படி அனாவசியமாய் பொருப்பற்ற தன்மையில் உபயோகப்படுத்தக் கூடாதென்பதே தான் நமது அபிப்பிராயம். இப்போது நடந்து கொண்டிருக்கும் சுயமரியாதை மகாநாட்டில் மனிதத் தன்மையை மனிதன் பெருவதற்காக அதாவது வழி நடை பாத்தியம்,



RangaRakes

தண்ணீர் பாத்தியம் முதலியவை பெறுவதற்கு என்று ஒரு தீர்மானம் செய்து அதற்கு ஒரு கமிட்டியும் போட்டு 6 மாதத்திற்குள் ஏதாவது ஒரு சத்தியாக் கிரகம் துடங்க வேண்டும் என்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஆசைப் படுகின்றோம். மகாநாட்டிற்கு வந்திருக்கும் வாலிபர்களும் வாலிபர் மகா நாட்டில் இதை கவனித்து தக்கது செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 11.05.1930**



tamilnavarasam.com

# சிவகாமி - சிதம்பரனார் புனர் விவாஹம்

## தாலிகட்டுதல் என்னும் சடங்கு ஒழிந்தது. திருமதி ஈ.வெ.ரா நாகம்மையார் அவர்கள் நடத்திவைத்தனர்.

இத்திருமணமானது மணமக்கள் மனமொத்து மெய்க் காதல் கொண்டு தாங்களாகவே தைரியமாய் முன்வந்து சீர்திருத்த முறையில் ஆண் பெண் இருவரும் சம உரிமையோடு வாழ்க்கையை நடத்துவதற்கேற்றதோர் சுயமரியாதைத் திருமணமாகும். இதைப் பலர் அதிசயமாக நினைக்கலாம். இதில் ஒன்றும் அதிசயமில்லை. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சேர்ந்து செய்து கொள்ளும் திருமணம்தான் இது. ஆனால் நம் நாட்டில் வெகு காலமாக வேரூன்றி கிடக்கும் அர்த்தமற்ற சடங்குகள் இல்லாமலும் பெண்ணை ஆண் அடிமையாக்குதற் கறிகுறியாகிய தாலிகட்டுதல் என்னும் சடங்கு இல்லாம லும் சீர்திருத்த உலகத்துக்கேற்ற முறையில் இத்திருமணம் நடந்திருக்கிறது.

பெண்கள் விடுதலையடைந்து ஆண்களோடு சம சுதந்திரத்துடன் வாழ வேண்டும் என்ற அடிப்படையான கொள்கையுடைய சுயமரியாதை இயக்கம் தோன்றி யிற்றைக்கு 4, 5 வருஷங்களேயாயினும் இதுவரை இம்மாதிரி பல சுயமரியாதைத் திருமணங்கள் நடந்தேறியிருப்பது உங்களுக் குத் தெரியும். இம்மாதிரி புதுமுறைத் திருமணத்தில் கர்னாடகப் பிடுங்கல் களால் பலவித இடைஞ்சல்கள் ஏற்படுவது சகஜமே. அதைப் பொருட்படுத்தா மல் இளைஞர்கள் தைரியமாய் முன் வர வேண்டும்.

இத்திருமணத்தில் தாலி கட்டுதல் என்னும் சடங்கு நீக்கப்பட் டிருக்கிறது.

கலியாண காலத்தில் பெண்ணுக்கு மாப்பிள்ளை தாலி என்னும் ஒரு கயிற்றைக் கழுத்தில் கட்டித் தனக்கு அடிமை என்று நினைத்து கேவலமாக கடித்து வருவதானது எருமை மாடுகளை விலைக்கு வாங்கி அதன் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டி இழுத்து வந்து நடத்துவது போலவேதானாகும்.





பெண்களுக்குக் கழுத்தில் தாலி கட்டுவதின் கருத்து கலியாணம் ஆனது ஆகாதது என்ற அடையாளத்தைக் காட்டுவதற்கும் இன்னான் பெண்டாட்டி என்ற உரிமையை நிலை நாட்டுவதற்கும் பிறத்தியான் அப்பெண்ணைக் காதலிக்காதிருப்பதற்குமென்றே கருதப்பட்டு வருகிறது. அப்படியானால் ஆண்களில் கலியாணம் ஆனவன் ஆகாதவன் என்பதற் கும், இன்னாளுடைய புருஷன் என்பதற்கும், பிற மாதர் காதலிக்காதிருக்கும் பொருட்டு அடையாளம் வேண்டியதவசியமல்லவா? அதற்காக கல்யாண காலத்தில் ஆண்கள் கழுத்திலும் ஒரு தாலி கயிறு கட்ட வேண்டும். அப்படியல்லாமல் பெண்களை மட்டும் ஏமாற்றிக் கழுத்தில் தாலிக் கயிற்றைக் கட்டி அடிமைப் படுத்தி வருவது கண்டித்து ஒழிக்கத் தகுந்ததோர் சடங்காகும் என்பதில் கடுகளவும் சந்தேகமில்லை. அதோடு மனைவியிழந்த புருஷன் மறுமணம் செய்து கொள்ளலாம். கணவனையிழந்த கன்னிகை தான் ஆயுள் மட்டும் தன் காலத்தை விதவை என்ற கட்டுப்பாட்டில் கழிக்க வேண்டும் என்ற மூடப்பழக்கம் ஒழிந்து நமது மணமகள் செல்வி சிவகாமி போல தைரியமாய் முன் வர வேண்டும். இதற்குத் தோன்றும் இடையூறும் எதிர்ப்பும் அர்த்தமற்ற அநாகரீகமான செய்கையென்றுதான் சொல்ல வேண்டும். அத்தகைய எதிர்ப்பையும் இடைஞ்சலையும் மூடக் கட்டுப்பாடுகளையும் உதறித் தள்ளி தம் பகுத்தறிவை உபயோகித்து அர்த்தத்தோடு கூடிய செய்கைகளையும் நடவடிக்கைகளையும் நமது வாழ்வின் லட்சியமாகக் கொள்வதே மக்களின் சுயமரியாதைக் கடையாளமாகுமென்பதை உங்களுக்குக் கூறி மணமக்களை மனமாற வாழ்த்துகிறேன்.

**குறிப்பு:- 5. 5. 30 தேதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு கும்ப கோணம் பிரபல மிராஸ்தாரும், முனிசிபல் கவுன்சிலரும் ஆனரரி மேஜிஸ் திரேட்டு மாகிய உயர்திரு. குப்புசாமி பிள்ளை அவர்கள் செல்வி திருமதி சிவகாமி அம்மைக்கும் தமிழ் பண்டிதர் சாமி சிதம்பரனார் அவர்கட்கும் ஈரோடு திரு. ஈவெ.ரா. அவர்கள் தோட்டத்தில் 2-வது சுயமரியாதை மகாநாட்டுக் கென அமைத்திருந்த சிங்காரக் கொட்டகையில் திருமணம் மிகச்சிறப்பாக நடந்தேறியது. திருமதி ஈ.வெ.ரா. நாகம்மையார் அவர்கள் நடத்தி வைத்த திருமணத்தில் பேசியது.**

**குடி அரசு - சொற்பொழிவு - 11.05.1930**

RangaRakes
tamilnavarasam.com

# புரட்டு

பாமர மக்களை ஏமாற்றப் படித்த மக்கள் பல புரட்டுகள் செய்வதுண்டு. அவ்வக் காலங்களில் மக்கள் மனதைப் பற்றி நிற்கும் வார்த்தைகளை வாயால் சொல்லி மக்கள் நன்மதிப்பைப் பெற முயல்வது வழக்கமாகி விட்டது. கதர் எப்படியிருக்குமென்று அறியாதவர்களும் பல கூட்டங்களில் கதர் உடுத்த வேண்டுமென்று சொல்வதுண்டு நாட்டில் செய்யப்படும் வஸ்துக்களில் ஒன்றையேனும் பார்த்தறியாதவர்கள் சுதேசியத்தைப் பற்றி வானளாவப் பேசுவதுண்டு. அவ்வாறாகவே "பஞ்சமர்கள்" என்போர் யார்? அவர்கள் துயரென்ன? அவற்றைப் போக்கும் வழியென்னவென்று ஒரு நாளேனும் சிந்தித்துப் பார்த்து ஒரு சிறிய காரியத்தையேனும் அவர்களுக்காகச் செய்தறியாத தலைவர்களும் கூட்டங்களும் தீண்டாமை விலக்குத் தீர்மானத்தை நிறைவேற்றி வருகின்றன. இத்தகைய புரட்டுத் தீர்மானமொன்று கடந்த வாரம் திருப்பூரில் நடைபெற்ற அரசியல் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இத்தீர்மானப் புரட்டை ஆண்மையோடு எதிர்த்த வீரர் திரு. அய்யாமுத்து அவர்களை நாம் மனமாரப் போற்றுகிறோம். தீர்மானத்தை சபையின் முன் வற்புறுத்திய தலைவர் திரு. ராஜன், அரசியல் சுதந்திரம் பெற்ற பின்னர் தீண்டாமை ஒரே நொடியில் பறந்து விடும் என்ற புரட்டுச் சொல்லை வழக்கம் போலச் சொல்லிவிட்டார். மானமிழந்து, உரிமையிழந்து, அடிமை வாழ்வு பெற்று நிற்கும் காலத்தில் தோன்றாத சுயமரியாதை உணர்ச்சியும், காரியத்தில் பற்றும் ஊக்கமும் அரசியல் சுதந்திரம் பெற்று அரசாங்க மாளிகையில் (வர்ணாச்சிரமிகள்) வீற்றிருக்கும் போது ஏற்படுமா? என்ற உண்மையை நண்பர்கள் ஆராய வேண்டுகிறோம்.

"கஷ்டமுற்ற காலத்தில் கடவுளை நினையாத மக்கள் சுகப்படும் காலத்தில் நினைப்பதில்லை" என்பதுபோல அந்நிய ஆதிக்கத்தால் நசுக்குண்டு கிடக்கும் காலத்திலே சாதி சமய வேற்றுமை களைந்து ஒற்றுமையடைய மனதில்லாத மக்களா சுயராஜ்யப் போரை நடத்தப் போகிறார்கள்?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 11.05.1930**



# ஈரோடு மகாநாடு

## I

இம்மாதம் 10, 11, 12, 13 தேதிகளில் ஈரோட்டில் இரண்டாவது சுயமரியாதை மகாநாடும் அதை அனுசரித்து வாலிபர் மகாநாடு, பெண்கள் மகாநாடு, மதுவிலக்கு மகாநாடு, சங்கீத மகாநாடு ஆகிய ஐந்து மகாநாடுகள் முறையே திருவாளர்கள் பம்பாய் எம். ஆர். ஜயகர், நாகர்கோயில் பி. சிதம்பரம், டாக்டர் முத்துலட்சுமி அம்மாள், சிவகங்கை எஸ். ராமச்சந்திரன், தஞ்சை பொன்னையா ஆகியவர்கள் தலைமையில் நடைபெற்றன. இம் மகாநாடுகளுக்கு வரவேற்புக் கழக அக்கிராசனர்களாக முறையே திருவாளர்கள் ஆர். கே. ஷண்முகம், ஜே. எஸ். கண்ணப்பர், லட்சுமி அம்மாள், கார்குடி சின்னையா, காரைக்குடி சொ. முருகப்பர் ஆகியவர்கள் இருந்து வரவேற்புக் கழக சார்பாய் வரவேற்று இருக்கின்றார்கள். இவை தவிர மேற்படி 4 நாட்களிலும் இரவு 9 மணி முதல் நடு ஜாமம் 2 மணி 3 மணி வரையில் கொட்டகையில் சொற்பொழிவுகளும் நடைபெற்று வந்தன. மகாநாட்டு காரியங்களை நிர்வகிக்க திருவாளர்கள் ஈரோடு சேர்மென் கே. ஏ. ஷேக்தாவுத் சாயபு, கோவை ஜில்லா போர்டு பிரசிடெண்ட் சி.எஸ்.ரத்தினசபாபதி, எஸ்.ராமநாதன் முதலியவர்கள் பொது காரியதரிசிகளாகவும் திருவாளர்கள் மு. ச. முத்துக் கருப்பஞ் செட்டியார், ஈ. வி. நஞ்சப்ப செட்டியார், எம்.சிக்கையா, கே.என். நஞ்சப்பகவுண்டர், ஏ.ஆர்.சிவாநந்தம், கி.அ.பெ. விஸ்வநாதம், மா.ராமசாமி, மாயவரம் சி.நடராஜன், சாமி சிதம்பரனார், கேசவலால், காளியப்பன், மு. ச. சுப்பண்ணன், சுப்பராய ஆச்சாரி, அழகிரிசாமி, எஸ்.வி.லிங்கம், எஸ். குருசாமி, ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கர் முதலிய பலர் தனித்தனி இலாகா காரிய தரிசிகளாகவும் திருவாளர்கள் வரதப்பன், ஆறுமுகம் ஆகியவர்கள் தொண்டர்படைத் தலைவர்களாகவும் இருந்து மகாநாட்டுக் காரியங்களை எவ்விதத்திலும் குறைவு படாமல் இனிது நடத்திக் கொடுத்தார்கள். மகாநாடு கூடின காலமானது சென்ற வருஷத்திய செங்கல்பட்டு மகாநாட்டைப் போலவே, அதாவது சைமன் கமிஷன் வரவினால் ஏற்பட்ட கிளர்ச்சி சந்தர்ப்பத்தைப் போலவே இவ்வருஷமும் நாட்டில் அதை விட பல மடங்கு அதிக கிளர்ச்சியும் நெருக்கடியுமான சமயம் என்று சொல்லப்படும் உப்புச் சட்டம்



RangaRakes tamilnavarasam.com

மீறும் கிளர்ச்சி சமயத்திலும் திரு காந்தி முதலிய பல நூற்றுக்கணக்கான கனவான்கள் சிறையிலடைப்பட்டும் அடி,சுடு, தள்ளு முதலிய பலாத்காரச் செய்கைகள் இருதரப்பிலும் நடந்து கொண்டு இருக்கும் படியான சமயத்தி லும் மகாநாடு கூட நேர்ந்ததோடு பார்ப்பனரல்லாத பிரமுகர்களுக்குள்ளும் அவர்களது கட்சிகளுக்குள்ளும் அபிப்பிராய பேதங்களும் மனத்தாங்கல் களும் ஏற்பட்டிருக்கும் சமயத்திலும் சுயமரியாதை இயக்கத் தலைவர்கள் தொண்டர்கள் என்று சொல்லப்படுபவர்களுக்குள்ளும் அபிப்பிராய பேத மேற்பட்டிருக்கின்றதாக வதந்திகள் கட்டி விட்டுக் கொண்டிருக்கும் சமயத்தி லும் மூட நம்பிக்கையின் பலனால் அரசியல் கிளர்ச்சி என்பதில் பெரிதும் மக்கள் மனம் திருப்பப்பட்டு சுயமரியாதை இயக்கம், நாஸ்திக இயக்கம், பார்ப்பன துவேஷ இயக்கம், சர்க்கார் ஆதரிப்பு இயக்கம், படியாத மக்களால் நடத்தப்படும் இயக்கம், பணக்காரர்களுக்கு விரோதமான இயக்கம், பண்டிதர்களை அழிக்கும் இயக்கம், போல்ஸ்விக் இயக்கம் என்று கிருத்திரப் புத்தியுடன் பலர் விஷமப் பிரசாரம் செய்து கொண்டிருக்கும் காலத்திலும் அரசாங்கத்தாராலும் சுயமரியாதை இயக்கமானது அரசியல் சம்பந்தமான இயக்கமாதலால் அதில் சர்க்கார் ஒத்துழைக்க முடியாது என்று கருதப்பட்டு அந்தப்படியே நமக்கும் பல இலாக்காக்களுக்கும் தெரிவித்துவிட்டதுடன் அந்தப்படியே பல இலாக்காக்கள் ஒத்துழைக்காமலும் சில இலாக்காக்கள் விஷமங்களுக்கு இடம் கொடுத்துக் கொண்டும் இருந்த காலத்திலும் மற்றும் நான்கு நாள் இரவும் பகலும் இடைவிடாமல் மழை பெய்து கொண்டே இருந்த காலத்திலும் நடைபெற வேண்டியதாகிவிட்டதுடன் ஏற்பாடு செய்திருந்த தேதியை விட 15 நாள் முன்னதாக வைத்தே நடைபெற வேண்டியதாகி விட்டது. இவ்வளவு அசௌகரியங்களுடன் நடத்த வேண்டியிருந்தாலுங் கூட சென்ற வருஷத்தை விட எவ்விதத்திலும் குறைவில்லாமலும், சில விஷயங்களில் அதற்கு மேலாகவும் சிறப்புடனும் வெற்றியுடனும் மகாநாடு நடந்தேறிற்றேயல்லாமல் எவ்விதத்திலும் குறைவு படவில்லை என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். அன்றியும் திரு. யம். ஆர். ஜயகர் அவர்களை நாம் இம்மகாநாட்டுக்கு தலைமை வகிக்க அழைக்க வேண்டுமென்று முதல் முதல் கருதிய காலத்தில் முதலாவதாக எந்த காரணத்தைக் கொண்டு கருத நேர்ந்ததென்றால் நெல்லூர் மகாநாட்டு நடவடிக்கைகளின் காரணமாக பார்ப் பனரல்லாத தலைவர்கள் என்பவர்களுக்குள் அபிப்பிராய பேத மேற்பட்டு மூன்று நான்கு கட்சிகளாகி ஒருவரையொருவர் நசிக்கி விட வேண்டுமென்று கருதி அதற்காக ஒழுங்கையும் நியாயத்தையும் மீறி சில சமயங்களில் பார்ப்பனரல்லாதார் நன்மைகளையும் கூட பலிகொடுத்து மூர்த்தண்ணியமாக நின்று தங்கள் தங்கள் சுயநலப் பிரசாரம் செய்து வருகையில் சென்னை மாகாணத்தில் யாரைத் தலைவராகத் தெரிந்தெடுத்தாலும் அசௌகரியம் நேரிடுமென்று கருதியே வெளி மாகாணங்களில் இருந்து ஒரு கனவானை தெரிந்தெடுக்க நேர்ந்தது. இரண்டாவதாக வெளி மாகாணத் தலைவர்களும் இங்கு வந்து நமது இயக்கத்தின் நிலைமையும் மக்களின் கருத்தையும் அறிந்து போவது நலம் என்பதாகவும் தோன்றிற்று. இந்த இரண்டு காரணங்கள் முக்கியமானதாகும். இந்த நிலையில் திரு. ஜயக்கர் அவர்கள் பெயரை நாம் உச்சரித்ததும் அவர் இந்து மகாசபைத் தலைவர் என்றும் வேத சாஸ்திரப் புராணப் பற்றுடையவரென்றும். நமக்குப் பலர் தெரிவித்தார்கள். இதேபோல் திரு. ஜயக்கருக்கும் நமது இயக்கம் கடவுள் மறுப்பு இயக்கமென்றும் மத எதிர்ப்பு இயக்கமென்றும் அவர் வருவதற்குள் கொட்டகை தீப்பற்றி எரிக்கப்பட்டு விடுமென்றும் வழியிலேயே அவர் கொல்லப்பட்டு விடக் கூடுமென்றும் பல மாதிரியான மிரட்டுக் கடிதங்களும் எழுதினார்கள். இதன் காரணமாக திரு. ஜயக்கர் அவர்கள் நமது சுயமரியாதை இயக்க சம்பந்தமான கொள்கைகள் நடவடிக்கைகள் ஆகிய பிரசுரங்களை அனுப்பும்படி தந்தி அடித்தார். அதற்கு நாம் உடனே “ரிவோல்ட்” பத்திரிகைகளில் சென்ற மகாநாட்டுத் தீர்மானம் தலைவர்கள் உபன்யாசம் நமது போக்கு ஆகியவை கள் அடங்கிய சில பிரதிகளை அவருக்கு அனுப்பியதில் திரு. ஜயக்கர் அக்கொள்கைகளையும் தீர்மானங்களையும் போக்கையும் ஒப்புக் கொண்டு சந்தோஷ மடைந்ததுடன் அதை அனுசரித்தே தான் தமது பிரசங்கம் இருக்குமென்று தந்தி அடித்தார். நாமும் அவரது மற்ற கொள்கைகளைப் பற்றிய விபரம் தெரியாதிருந்தாலும் தீண்டாமை விலக்கிலும் ஜாதிமுறை அழிவிலும் பெண்கள் சம சுதந்திரத்திலும் சைன்சும் மதமும் ஒத்து இருக்க வேண்டும் என்ற கருத்திலும் அவர்கள் செய்யும் காரியங்களும் பேசும் பேச்சுகளும் பத்திரிகை மூலமாகவும் நண்பர்கள் மூலமாகவும் தெரிந்திருந் ததால் அவர் வந்து தென் இந்தியா நிலைமையையும் நமது கொள்கை களையும் தெரிந்து போக ஒரு சந்தர்ப்பம் கொடுப்போம் என்றே கருதி அவரை அழைத்தோம்.

நிற்க இவ்வருஷம் மகாநாடு நடத்த ஏற்பாடு செய்திருந்த நமது வயல் பூமியில் வெள்ளாமைப் பயிர் இருந்ததாலும் வேறு சில அதாவது சித்திரா பௌர்ணமி, சித்திரைத் திருவிழா, பக்ரீத் பண்டிகை மற்றும் சிலருக்கு ஏற்பட்ட துக்க சம்பவம் ஆகிய முதலியவைகளால் 10, 15 நாள் மகாநாட்டை தள்ளி வைக்கத் தீர்மானித்து 25, 26 தேதிகளுக்கு மாற்றி தந்தி கொடுத்ததில் ஒரு வாரத்திற்கு பிறகே அந்த தேதி தங்களுக்கு சவுகரியப் படாதென்று திரு. ஜயக்கர் தெரிவித்ததால் மறுபடியும் மகாநாடு 10 நாள் இருக்க பழயபடி 15 நாள் முந்தி 10, 11 தேதிகளிலேயே நடத்த ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஆகவே இத்தனை வித எதிர்ப்புகளும் அசௌகரியங்களும் போதிய சாவகாசமில்லாமையும் இருந்தும் மகாநாடானது சுமார் 2000 பெண்களும் 4000 ஆண்களும் அடங்கிய கூட்டமாகவே கடைசிவரையில் இருந்து வந்தது. இதனால் பொது ஜனங்கள் கடவுள் மறுப்புக்கும் மத எதிர்ப்புக்கும் போல்ஸ்விஷத்திற்கும் படியாத மக்கள் தலைமைக்கும் பணக்காரர்கள் ஒழிவுக்கும் பண்டிதர்கள் அழிவுக்கும் சர்க்கார் ஆதரிப்புக்கும் பயப்படாத மக்களாகி விட்டார்கள் என்பது நன்றாய் வெளியாய் விட்டது.


RangaRakes
tamilnavarasam.com

உதாரணமாக ஒத்துழையாமை கிளர்ச்சி நடந்த காலத்தில் பல தாலூகா ஜில்லா மகாநாடுகளிலும் மாகாண மகாநாட்டிலும் தலைமை வகித்தல் ஆஜ ராகி பேசுதல் பிரமுகராயிருத்தல் ஆகிய பல காரியங்கள் நடத்தி யிருக்கின்றோம்.

மற்றும் பார்ப்பனரல்லாதார் இயக்க மகாநாடுகள் பலதையும் சென்று பார்த்திருக்கின்றோம். அவைகள் அவ்வளவிலும் அதிகமான ஜனங்கள் வந்த மகாநாடென்று சொல்லிக் கொள்ளப்படும் மதுரை மகாநாட்டை விட குறைந்தது மிகவும் நான்கு ஐந்து பங்கு மக்கள் அதிகமாக இம்மகாநாட்டிற்கு அதுவும் நெருக்கடியும் அசௌகரியமுமான இந்த சந்தர்ப்பத்தில் வந்திருந் தார்கள் என்பது கவனிக்கத்தக்கதாகும். கொட்டகையானது 50 அடி அகலத் திலும் 120 அடி நீளத்திலும் போடப்பட்டிருந்ததானாலும் மக்கள் அக்கொட் டகை முழுவதும் நிறைந்து இருந்தார்களென்றால் மழையும் உற்சவமும் மற்ற அசௌகரியங்களும் இல்லாதிருந்திருக்குமானால் கொட்டகை இடம் போதாதென்றே சொல்ல வேண்டும். அன்றியும் இதே சமயத்தில் நான்கு நாள் முன்னதாக திருப்பூரில் டாக்டர் ராஜன் தலைமையில் நடந்த அரசியல் மகா நாட்டுக்கு வந்திருந்த ஜனக் கூட்டத்தின் எண்ணிக்கைக்கும் ஈரோடு மகாநாடு ஜனங்கள் எண்ணிக்கைக்கும் கணக்குப் பார்த்தால் பல பூஜ்ஜியங்கள் தான் வித்தியாசமிருக்குமே யொழிய வேறில்லையென்று சொல்லலாம். ஆகை யால் இவ்வியக்கம் பொதுஜன ஆதரவைப் பெற்றுவிட்டதா இல்லையா? என்பதை வாசகர்களே உணர்ந்து கொள்ளலாம். நிற்க மற்றொரு விசேஷ மென்னவென்றால் இதுவரை நமது இயக்க வெளிப்படை எதிரிகளும், ரகசிய எதிரிகளும் நம்மீது ஒரு குற்றம் சொல்லி வந்தார்கள். அது என்னவென்றால் தாலூகா ஜில்லா போர்டு மெம்பர்களும் தலைவர்களும் வேறுதலை உத்தே சித்து நம்மை சுற்றிக் கொண்டு திரிவதாகவும் அவர்களது நலத்திற்காகவே இந்த இயக்கம் வேலை செய்வதாகவும், அரசாங்க அதிகாரிகளும் அவர் களை நாம் ஆதரிப்பதற்காக நமக்கு அனுகூலமாயிருப்பதாகவும் சொல்லி வந்தார்கள். இந்த மகாநாட்டில் அப்பேர்பட்ட கூட்டம் சென்ற மகாநாடு கூட்டத்தில் இருந்தவர்களில் 10-ல் ஒரு பங்கு கூட வரவே இல்லை. இவ்வியக் கத்தால் தங்களுக்கு உதவி ஏற்படாது என்பதை அப்பேர்பட்டவர்கள் நன்றாய் உணர்ந்து கொண்டார்கள். சில தேர்தல் பிரியர்கள் இவ்வியக்கத்துடன் சேர்ந்தால் நமக்கு தேர்தல் ஆகாமல் போகுமோ என்றும் பயந்து கொண்டு தங்கள் பயத்தையும் நமக்கு காட்டி விட்டார்கள்.

ஆதலால் அந்தவித பழியிலிருந்தும் நமதியக்கம் மீண்டுவிட்ட தானது குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றபடி தீர்மான விஷயங்களிலும் தீண்டாமை விலக்கு, ஜாதி அழிப்பு, புராண ஒழிப்பு, பெண்கள் விடுதலை, கல்யாணரத்து, கடவுள் செலவு, மதக்குறி பட்டம், சடங்கு ஒழிப்பு, பெண்களுக்கு உத்தியோகம் முதலாகிய வைகளைப் பற்றி தீர்மானங்கள் செய்யப்பட்டிருப்பதுடன் சென்ற வருஷத் தைவிட இவ்வருஷம் ஒரு படி முன்னேறி வழிநடை பாதை, குளம், பள்ளிக் கூடம், சத்திரம், சாவடி, ஓட்டல், கோவில் முதலாகியவைகளில் எல்லோருக் கும் சம உரிமை கிடைக்க சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்று தீர்மா னித்து அதற்காக ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க தோடு கூடிய சீக்கிரத்தில் அக்கமிட்டி செய்யும் வேலையிலிருந்து சுய மரியாதைச் சங்கத்தார் வாய்ப்பேச்சு வீரர்களா? கர்ம வீரர்களா? என்பதும் பயங்காளிகளா? தியாகிகளா? என்பதும் நன்றாய் விளங்கிவிடும்.

அன்றியும் சுயமரியாதை வாலிபர் மகாநாட்டில், கூட்ட ஆரம்பங் களிலாவது முடிவிலாவது கடவுள் வணக்கம், ராஜ வணக்கம், தலைவர் வணக்கம் முதலியவைகள் பாடக்கூடாது என்று தீர்மானித்திருப்பதிலிருந்தும், சர்க்கார் சம்மந்தமான எந்த உத்தியோகத்திற்கும் ஆயிர ரூபாய்க்கு மேல் பட்ட சம்பளம் இருக்கக்கூடாது என்று தீர்மானித்திருப்பதிலிருந்தும் சுய மரியாதை இயக்கக்காரர்கள் அடிமைகளா? பண ஆசை உத்தியோக ஆசை உடையவர்களா? என்பதும் தானாகவே விளங்கிவிடும். அன்றியும் ஜாதி வித்தியாசம் ஒழிய வேண்டுமென்னும் கொள்கையைக் காங்கிரசில் புகுத்தக் கூடாதென்று சொன்ன காங்கிரசும் பிறவியில் உயர்வு தாழ்வு கூடாதென்ற தீர்மானம் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேறியவுடன் ராஜினாமாக் கொடுத்த திருவாளர்கள் சி. ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், டாக்டர் சாஸ்திரி, சந்தானம், வரதாச்சாரி முதலிய பார்ப்பனர்களும் அவர்களது சிஷ்ய கோடிகளும் மக்கள் விடுதலையும் மக்கள் சமத்துவமும் சம்பாதித்துக் கொடுக்கும் தேசபக்தர்களா? அல்லது ஜாதி வித்தியாசம் ஒழிவதோடு அதை நிலை நிறுத்தும் மதம் வேதம் சாஸ்திரம் புராணம் சாமி ஆகியவைகள் எல் லாம் அடியோடு அழிக்கப்பட வேண்டும் என்று சொல்லுகின்றவர்கள் தேச பக்தர்களா? என்பதையே யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

தவிர இந்த மகாநாட்டில் ஒரே ஒரு தீர்மானம் மாத்திரமே விவாதத் திற்கு இடமாகி தள்ளப்பட்டு விட்டது. மற்றொரு தீர்மானம் கேட்டுக் கொள்ளப்பட்டு நிறுத்தப்பட்டு விட்டது. அதாவது, திரு. காந்தியின் உப்புச் சட்ட மீறுதலை ஆதரித்து அதனால் துன்பமுற்றவர்களுக்கு அனுதாபம் காட்டி ஸர்க்காரை கண்டனம் செய்வது.

மற்றொன்று திரு. காந்தியாரின் உப்பு சட்ட மறுப்பு சத்தியாக்கிரகம் ஆகியவைகளில் நம்பிக்கை இல்லை என்று கண்டனம் செய்வது. பிந்தியதை கொண்டு வந்த நண்பர் கேட்டுக் கொண்டதின் பேரில் நிறுத்திக் கொண்டார். முந்தியதைக் கொண்டு வந்த நண்பர் பிரேரேபித்ததில் அக்கிராசனர் அரசியல் (அதாவது பொலிட்டிகல்) விஷயத்தை சம்மந்தப்படுத்திக் கொள்ளக் கூடாது என்கின்ற நிபந்தனை உள்ள இந்த மகாநாட்டில் அந்த விஷயம் கொண்டுவருவது நியாயமாகாது என்ற காரணம் சொல்லி தள்ளப்பட்டு விட்டது. அவைகளை தவிற வேறு எல்லா வித தீர்மானமும் அநேகமாய் ஏகமனதாகவே நிறைவேறிற்று.





RangaRakes tamilnavarasam.com

## இனி செய்ய வேண்டியது

மற்றபடி மகாநாடு இனிது நிறைவேறிய மகிழ்ச்சியோடே இதை முடிக்க நாம் விரும்பவில்லை. இனி அடுத்த மகாநாடு வரையில் நாம் செய்ய வேண்டிய வேலையை நிர்ணயித்து அதில் ஈடுபட வேண்டியதே முக்கிய மான காரியமாகும்.

முதலாவதாக கடவுளைப் பற்றியும், சமயத்தைப் பற்றியும், ஆழ்வார் நாயன்மார்கள் என்பவர்களைப் பற்றியும் மக்கள் பேசிக் கொண்டு திரியாம லிருக்கும் படி செய்ய வேண்டும். அவைகளின் மீது பழிபோட்டு மக்களை ஏமாற்றி சோம்பேறிகளாக்கி வயிறு வளர்ப்பவர்களின் தொழிலையும் செல்வாக்கையும் அடியோடு ஒழிக்க வேண்டும். ஆக இவ்விரண்டு காரிய மும் நமது சுயமரியாதைத் தொண்டர்களுக்கு முக்கிய பிரசாரமாயிருக்க வேண்டும்.

இரண்டாவதாக விதவை மணமும், கலப்பு மணமும் எங்கும் நடக்கும் படியாகப் பிரசாரம் செய்ய வேண்டும்.

புராணங்களிலும் புராண மதங்களிலும் நம்பிக்கையுள்ள – அல்லது அவற்றை ஜீவனமாகக் கொண்ட பண்டிதர்களை எங்கும் பகிஷ்கரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்களே தான் மக்களுக்கு மூட நம்பிக்கை என்னும் விஷத்தைச் செலுத்துகின்ற கொடிய ஜந்துக்களாய் இருக்கிறார்கள்.

மேற்கண்ட சுயமரியாதைக் கொள்கைகளில் நம்பிக்கை இல்லாத தலைவர்களையும் தொண்டர்களையும் சுயநலத்திற்காகவே இதில் வந்து சேரும் சுயநலப் புலிகளையும் கூடுமானவரை ஒதுக்கியே நமது காரியத்தைச் செய்துகொண்டு போக நாம் சக்தியுடையவர்களாக முயற்சிக்க வேண்டும்.

சுயமரியாதை இயக்கத்தில் கலந்து கொண்டு இருக்கும் தலைவர்கள் தொண்டர்கள் என்பவர்களின் மூட நம்பிக்கையை வெளிப்படுத்த யாரும் தயங்கக் கூடாது.

திருவிழாக்கள் புண்ணியஸ்தல யாத்திரை முதலிய காரியங்களுக்குச் செல்லுகின்றவர்களை நிறுத்தவும் திருவிழாப் புரட்டுகளையும் புண்ணிய ஸ்தலப்புரட்டு முதலியவைகளை வெளியாக்கவும் திருவிழாக் காலங்களில் ஆங்காங்கு பிரசாரம் செய்யவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

இவைகள் ஒரு புறம் நடக்கச் செய்வதோடு மற்றொரு புரம் பொது வான வழிநடை பாதை, குளம், கிணறு, சத்திரம், சாவடி, பள்ளிக் கூடம், ஓட்டல், கோயில் முதலியவைகளில் பிறப்பின் காரணமாய் இருக்கும் வித்தியாசங் களை ஒழிக்க ஆங்காங்கு பிரசாரங்களும் சத்தியாக்கிரகமும் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.



மக்களுக்கு துன்பத்தையோ, கஷ்டத்தையோ, நஷ்டத்தையோ இழிவையோ கொடுக்கும்படியான ஒழுக்கக்கேடுகளான காரியங்கள் மக்கள் செய்யாமலும் நாணையமாய் இருக்கும்படியும், மதுபானம் முதலிய தீய காரியங்கள் செய்யாமல் இருக்கும்படியும் பிரசாரங்கள் நடைபெற வேண்டும்.

சட்டத்தை எதிர்பாராமல் ஒவ்வொரு பெற்றோர்களும் சகோதரர்களும் கணவன்மார்களும் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும்படியான பிரசாரத்தையும் செய்ய வேண்டும். எல்லாவற்றையும் விட அரசியல் என்கின்ற பார்ப்பன ஆதிக்க சூக்ஷியில் மக்கள் சிக்கி அறிவையும் தைரியத் தையும் வீணாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியதும் முக்கிய வேலை யாகும் யாதொரு கொள்கையும் இல்லாமல் வெறும் வயிறு வளர்ப்புக் காகவும் வியாபாரத்திற்காகவும் புஸ்தகம், மருந்து, சில்லரைச் சாமான், ஷாப்பு சாமான்கள் முதலியவைகளை நூற்றுக்கு 200, 300, 400 ஆக லாபம் வைத்து விற்று மக்களை ஏமாற்றி கொள்ளை அடிப்பதற்காகவும் செல்வாக்குள்ள ஸ்தாபனங்களின் பேரையும் கொள்கைகளையும் சொல்லிக் கொண்டு புறப்பட்டு மக்களை ஏமாற்ற நடத்தும் பத்திரிகைகளின் யோக்கியதையை வெளியாக்கி அவைகளிடம் மக்கள் ஏமாறாமல் இருக்கும்படியும் செய்ய வேண்டும்.

இது போன்ற காரியங்களில் முனைந்து நிற்பதையே இவ்வருஷத் தொண்டாய் ஏற்றுக்கொள்ள வேண்டியது சுயமரியாதைத் தொண்டர்களின் முக்கிய கடமையாகும்.

இத்தொண்டில் ஈடுபடுபவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் நமக்குத் தெரியும். அதாவது நாம் மேற்கூறிய காரியங்களைச் செய்யும்போது இத்தொண்டின் பலனால் பாதகமடையும் கூட்டத்தாரால் நமது இயக்கத்தை யும் நம்மையும் நமது தொண்டர்களையும் பற்றி பலவித குற்றம் சுமத்தி பழியுரைகள் கட்டிவிடப்படும்.

அதாவது முதலில் நம்மை நாஸ்திகர் என்பார்கள். அதற்கு நாம் சிறிதும் அஞ்சக்கூடாது. ஏனெனில் கடவுள் என்கின்ற ஒன்றை இல்லை என்று சொல்லுகின்றவன் தான் நாஸ்திகன் என்றால் அந்த தன்மையில் நாம் நாஸ்திகர் அல்ல. ஏனெனில் கடவுள் என்கின்ற வார்த்தையே அர்த்தமற்றதும் விளங்காததும் ஆனதென்று சொல்லும் நாம் அது உண்டா இல்லையா என்கின்ற வேலையில் பிரவேசிப்பது முட்டாள்தனம் என்றே கருதி இருக்கின்றோம்.

அதோடு கூடவே கடவுள் இல்லை என்று சொல்லும் வாதமும் பயன் படக் கூடியது என்பதை நாம் ஒப்புக் கொள்வதில்லை. ஏனெனில் கடவுள் என்கின்ற வார்த்தைக்கு இன்னதுதான் அர்த்தம் அது இன்ன பொருளைத் தான் குறிக்கிறது என்று தெரிந்தாலல்லவா அந்த வஸ்து உண்டு இல்லை என்கின்ற வாதங்கள் பயன்படக்கூடியதாய் இருக்கும்? உதாரணமாக ஒரு



RangaRakes tamilnavarasam.com

மனிதனைப் பார்த்து உங்கள் வீட்டில் கீக்கிரி மூக்கிரி இருக்கின்றதா? என்று கேட்டால் அவன் அது இன்னது என்று தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றது என்று சொன்னாலும் இல்லை என்று சொன்னாலும் அவன் எவ்வளவு மூடனாவானோ அது போலவேதான் கடவுள் விஷயத்திலும் உண்டு இல்லை என்று சொல்லும் இருவர்களுமே யாவார்கள். ஆனால் இந்த விஷயத்தில் யாரை நாம் அயோக்கியர்கள் என்று சொல்லுகின்றோம் என்றால் கடவுள் ஒருவர் உண்டு. அவரே உலகத்தையும் அதில் உள்ள சகல வஸ்துகளையும் உண்டாக்கி அவைகளின் சகல நடவடிக்கைகளையும் தானே நடத்திவிப்ப வராய் இருந்து கொண்டு நடத்தி வருகின்றார் என்று சொல்லிக் கொண்டு தனக்கு இச்சையில்லாத காரியங்களின் மீது வெருப்பையும் சிலர் மீது தூஷணை யையும் செய்து கொண்டு இருப்பவர் கசடன் அல்லது அயோக்கியன் ஆகிய இரண்டில் ஒன்று என்று தான் சொல்லுகின்றோம். அன்றியும் அப்படிப்பட்டவர்கள் சுய நலம் பிடித்த பித்தலாட்டக்காரர்கள் என்றும் சொல்லுகின்றோம். மற்றபடி வேதத்தையும் சாஸ்திரத்தையும், புராணத்தையும் தர்க்கிக்கின்ற வனும், நிந்திக்கின்றவனும், நாஸ்திகன் என்றும் சொல்வதனால் நாம் நாஸ்திகர்களே யாவோம்.

ஏனெனில் மேல் கண்ட மூன்றும் பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஏற்ற ஆட்சி என்றும் அவைகள் பெரிதும் மனிதத் தன்மை அற்றது என்றும் அனேகமாய்க் காட்டுமிராண்டிகளாலும், அயோக்கியர்களாலும் தங்கள் சுய நலத்திற்கென்று ஏற்படுத்தப்பட்டதென்றும் சொல்லுவதுடன் அவை ஒழிந்தாலல்லது மக்களுக்கு விடுதலையும் சுயமரியாதையும் ஏற்படாது என்றும் சொல்லுகின்றோம். இது நமது இயக்க ஆரம்ப காலத்திலேயே சொல்லியும் இருக்கின்றோம்.

இனி சுயமரியாதை இயக்கத்தார்கள் எழுத்து வாசனை அற்றவர்கள் என்று இகழப்படுவது நம்மைப் பொருத்தவரை நமக்கு எழுத்து வாசனை அதிகமாக இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறோம். ஆனால் மனிதன் எழுத்து வாசனை இருந்தால்தான் அறிவுடையவன் ஆவான் என்பது ஒரு காரியத்தை செய்ய ஆற்றல் உடையவனாவான் என்று சொல்லப்படுவதும் மடத்தனம் அல்லது அயோக்கியத்தனம் என்பதே நமது முடிவு. ஏனெனில் எழுத்து வாசனை இல்லாத பலரை பெரியார்கள் என்று மக்கள் வணங்கு வதைப் பார்க்கின்றோம். எழுத்து வாசனை அதிகமாக கற்ற பண்டிதர்கள் என்பவர்கள் அனேகர்கள் மூடர்களாகவும் இணையற்ற அயோக்கியர்களாக வும் இருந்து வருவதையும் பார்க்கின்றோம். ஆகவே எழுத்து வாசனை இல்லாதவர்கள் அறிவற்றவர்கள் அயோக்கியர்கள் என்பதானது எழுத்து வாசனையுள்ள மூடர்களும் அயோக்கியர்களும் தாங்கள் பிழைப்பதற்காக சொல்லும் சூழ்ச்சியே தவிர அதில் சிறிதும் யோக்கியமும் நாணயமும் கிடையாதாகையால் சுயமரியாதை இயக்கத்தார் அதற்கும் பயப்படக்கூடாது என்றே சொல்லுவோம்.



சுயமரியாதைக்காரர் மற்றும் பெரியோர்களை குற்றம் சொல்லுகின் றார்கள் என்பது. இதற்கும் சுயமரியாதைக்காரர்கள் பயப்படக்கூடாது என்றே சொல்லுவோம். ஏனென்றால் அனேகர்கள் கஷ்டப்படாமல் சோம்பேரியாய் இருந்து பிச்சை வாங்கித் தின்பதற்கும் பிரசங்கம் பண்ணிப் பிழைப்பதற்கும் புஸ்தகம் அச்சுப்போட்டு விற்பதற்கும் பலரை அதுவும் கடைந்தெடுத்த அயோக்கியர்களை பெரியவர்களாக்கி மக்களை ஏமாற்றுகின்றார்கள். அப் பெரியார் என்பவர்கள் அனேகர்களை ஒவ்வொருவருடைய யோக்கியதை களையும் பட்டவர்த்தனமாக பல தடவை வெளியிட்டிருக்கிறோம். ஒரு "பெரியாரின்" அயோக்கியத்தனத்திற்கும் அக்கிரமத்திற்கும் கூட சமாதானம் சொல்ல யோக்கியதையும் தைரியமும் இல்லாத வீணர்களே சுயமரியாதைக் காரர்கள் பெரியாரைப் பழிக்கின்றவர்கள் என்று பேசுகிறார்கள், எழுதுகின் றார்கள். ஆகையால் அதைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை.

தவிரவும் ராமாயணம் - பாகவதம், பாரதம், விஷ்ணு புராணம், திருவிளையாடல் புராணம், பெரிய புராணம், கந்த புராணம், சிவபுராணம் முதலாகிய புஸ்தகங்களையும் அவற்றில் வரும் பாத்திரங்களையும், அவர் களின் நடவடிக்கைகளையும் சுயமரியாதைக்காரர்கள் ஒப்புக் கொள்வதில்லை என்பதோடு அவற்றின் ஊழல்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் இந்தியர்களின் விடுதலைக்கும் சுயமரியாதைக்கும் அவைகளே முட்டுக்கட்டையாய் இருந்து வந்தன, வருகின்றன என்றும் முடிவு செய்து இருக்கின்றோம். அன்றியும் அதற்காகவே சுயமரியாதை இயக்கத்தின் பெரும்பகுதி நேரத்தையும் பத்திரிகைகளின் பெரும்பகுதி பாகத்தையும் ஒதிக்கிவைத்தும் இருக்கின்றோம். அவ்வளவோடு இல்லாமல் சில புராணங் களும் மநுதர்மம் போன்ற சாஸ்திரங்களும் மனிதத் தன்மைக்கும் ஒழுக்கத் திற்கும் மக்கள் சுயமரியாதைக்கும் இடையூறாய் இருப்பதால் அவைகளை கொளுத்த வேண்டுமென்று சொல்லுவதுடன் சில இடங்களில் அவைகளை கொளுத்தியும் இருக்கின்றோம். ஆதலால் இம்மாதிரியான குற்றங்கள் சுமத்தப்படுவதற்கும் பழி சுமத்தப்படுவதற்கும் சுயமரியாதைக்காரர்கள் பயப்பட கூடாதென்றே சொல்லுவோம்.

மற்றபடி சுயமரியாதைக்காரர்கள் மீது அரசியல் சம்பந்தமாக சொல்லப் படும் குற்றங்களுக்கும் பயப்பட வேண்டியதில்லை என்பதைப் பற்றி அடுத்த வியாசத்தில் விவரிப்போம்.

**குடி அரசு - தலையங்கம் - 18.05.1930**



RangaRakes tamilnavarasam.com

# உதிர்ந்த மலர்கள்

1. கடவுள் ஒருவர் உண்டு என்று சொல்லிக் கொண்டு தொட்டதற் கெல்லாம் கடவுள் மீது பழி போட்டுக் கொண்டு திரிகின்றவன் ஒரு மூடன்.

2. கடவுள் ஒருவர் உண்டு அவர் உலகத்தையும் அதிலுள்ள வஸ்த்துக் களையும் உண்டாக்கி அவற்றின் நடவடிக்கைகளுக்கெல்லாம் காரணமா யிருந்து நடத்துகிறார் என்று சொல்லிக்கொண்டு ஒவ்வொரு காரியத்தையும் தான் இச்சையால் புத்தியால் செய்து கொண்டு தனக்கு இஷ்டமில்லாத காரியங்களில் பிரரைத் தூஷித்துக் கொண்டு திரிபவன் அயோக்கியன்.

பார்ப்பன பிரசாரம்

3. ஆழ்வார்கள் கதைகளும் நாயன்மார்கள் சரித்திரங்களும் பார்ப்பன பிரசாரத்திற்கென்றே கற்பிக்கப்பட்டு பார்ப்பன அடிமைகளை கொண்டு பரப்பப்பட்டதாகும்.

4. புராணக் கதைகளை பார்ப்பன சூழ்ச்சியென்று அறிந்து கொள்ளா மல் அவைகளையெல்லாம் உண்மையென்று கருதுகின்றவர்கள் பக்கா மடையர்களாவார்கள்.

5. வயிறு வளர்க்க வேறு மார்க்கமில்லாத தமிழ்ப் பண்டிதர்கள் என்றைக்கு இருந்தாலும் தங்கள் புத்தியைக் காட்டித்தான் தீருவார்கள். ஏனென்றால் அவர்கள் படித்தது எல்லாம் மத ஆபாசமும் புராணக் குப்பை யுமேயாகும். ஆகவே பார்ப்பனர்களைவிட பண்டிதர்கள் நமது இயக்கத்திற்கு பெரும் விரோதிகளாவார்கள்.

6. எந்த முறையிலாவது புராணப் பண்டிதர்களைப் பொதுமக்கள் ஆதரிப்பது கொள்ளியை எடுத்து தலையைச் சொரிந்து கொள்வது போ லாகும்.

7. நமது பண்டிதர்கள் அநேகர்கள் ஆரம்பத்தில் யோக்கியர்கள் போல் வேஷம் போட்டுக் கொண்டு நம்மிடம் வந்து நானும் சுயமரியாதைக் காரன் தான் என்னிடம் மூடப்பழக்க வழக்கம் கிடையாது புராணங்களெல்லாம் பொய் என்றும் சமயங்களெல்லாம் ஆபாசம் என்றும் பேசி மேடையில் இடம்



RangaRakes

சம்பாதித்துக் கொண்டு, பிறகு தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு புராண பிரசாரத் தையே செய்பவர்களாயிருக்கிறார்கள்.

ஏனென்றால் அவர்களுக்கு வேறு மார்க்கமில்லை. ஆகையால் பண்டிதர்களை கிட்ட சேர்க்கும் விஷயத்தில் வெகு ஜாக்கிறதையாக யிருக்க வேண்டும்.

**- ஈ.வெ.ரா.**

**குடி அரசு - பொன்மொழிகள் - 18.05.1930**



tamilnavarasam.com

# ஒரு யோசனை

**ஈ.வெ.ரா.**

"குடி அரசி"ன் ஆறாவது வருஷ வேலை முறைகளைப் பற்றி வாசகர்களையும் அபிமானிகளையும் ஒரு யோசனை கேட்க விரும்பு கின்றேன். அது விஷயத்தில் வாசகர்களும் அபிமானிகளும் தயவு செய்து ஆர அமர நிதானமாய் யோசனை செய்து தங்கள் அபிப்பிராயங்களை தெரிவிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகின்றேன். "குடி அரசு" ஆரம் பித்த இந்த ஐந்து வருஷ காலத்தில் அது இந்தியாவிற்கும் சிறப்பாக தென் இந்தியாவிற்கும் செய்திருக்கும் வேலை யைப் பற்றி பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல நான் விரும்பவில்லை.,

சரியோ, தப்போ அது தனக்குத் தோன்றியதைத் துணிவுடன் வெளி யிட்டு வந்திருக்கின்றது என்பதையும், அதன் கொள்கைகள் ஒவ்வொன்றும் பொது ஜனங்களிடையில் பெரிய கிளர்ச்சியை உண்டாக்கிப் படித்தவர்கள் என்பவர்கள் முதல் பாமரர்கள் என்பவர் வரையிலும் அவர்களது உணர்ச்சி களைத் தட்டி எழுப்பி இருப்பதுடன், பொது மக்களிடையில் பெரிய மன மாறுதலையும் ஏற்படுத்தி இருக்கிறது. "குடி அரசி"ன் கொள்கைகளால் பாதிக்கப்படும் சுயநலக்காரர்கள் கூடத் தைரியமாய் மறுக்கவோ எதிர்க்கவோ முடியாமல் சிலர் மறைமுகமாகப் பிரசாரம் செய்வதும் சிலர் "குடி அரசு" க் கொள்கைகளோடு கலந்து கொண்டு வேஷம் போட்டு உள்ளே இருந்தே ஏமாற்றப் பார்ப்பதுமான வகைகளில்தான் எதிர்க்க முடிந்ததே தவிர வேறில்லை. இதற்கெல்லாம் காரணம் அதனுடைய கொள்கைகளின் சக்தியே தவிர வேறில்லை என்பதை மனப்பூர்த்தியாய்த் தெரிவித்துக் கொள்ளு கிறேன். ஆனால் அது இன்னமும் இந்தியாவுக்கும், உலகத்திற்கும் செய்ய வேண்டிய வேலைகள் நிரம்ப இருக்கின்றன. அவைகளை செய்வதற்கு "குடி அரசி" ற்கு இனியும் சற்று சுயேச்சை அதிகமாக வேண்டியிருக்கிறது.

இது வரையிலும் "குடி அரசு" சுயேச்சையோடு இருந்தது என்று சொல்லுவதானாலும் அது சில சமயத்தில் அரசாங்கத்தையும், சில சமயத்தில் செல்வவான்களையும் சில சமயத்தில் ஜனப் பிரதிநிதிகள் என்பவர்களையும், சில சமயத்தில் பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவர்கள் என்பவர்களையும், சில சமயத்தில் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களையும், சில சமயத்தில் மந்திரி களையும், சில சமயத்தில் தொண்டர்கள் என்பவர்களையும் ஆதரித்தும், அவர்களிடம் தாட்சண்யங்கள் காட்டியும், அவர்களின் குற்றங்களைத் தைரிய மாய் வெளியில் எடுத்துக் காட்டாமலும் இருந்து வந்திருப்பதை நான் மறைக்க முயற்சிக்கவில்லை. நமது கொள்கைகள் சற்று கடினமாய் இருந்தாலும், எதிர்ப்புகள் மிக்க பலமாயிருந்ததாலும் பொது ஜனங்களில் பெரும்பாலோர் மிகப் பாமர மக்களாய் இருந்ததாலும் அவைகள் பரப்பப்படுவதற்கு பாமர மக்களின் அறிவுக்கும் நிலைமைக்கும் தகுந்தபடி, நமது நிலைமையைச் சரிபடுத்திக் கொள்ள வேண்டி இருந்ததால் மேல் கண்டவர்களுக்கு நாம் தாட்சண்யம் காட்ட வேண்டி இருந்தது. இந்த ஐந்து வருஷ வேலையின் பலனாகவும் பொது மக்களிடம் காணும் உணர்ச்சியாலும் நிலைமையினாலும் இனியும் அவ்வித தாட்சண்யங்களுக்கு ஆளாக வேண்டியதவசியமென்று தோன்றவில்லை. ஆதலால் நடைபெறும் வருஷம் சற்று நிர்தாட்சண்ய மாகவே இருக்க வேண்டுமென்று ஆசைப்படவேண்டி இருக்கின்றது.

அதற்காக பாமர மக்களின் ஆதரவு அதிகம் உண்டாக்கிக் கொள்வதற்கு பத்திரிகை இன்னமும் சற்று அதிகமாய் பரவத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டியதவசியமாகும். "குடி அரசு" ஏற்பட்டதின் பலனாயும் அது மிக்க குறைந்த சந்தாவோடு அரிய விஷயங்களைக் கொண்டு வெளியானதின் பலனாயும் நானும் வாரந்தோறும் இரண்டு நாள் மூன்று நாள் "குடி அரசின்" கொள்கைகளைப் பரப்புவதற்கு ஆங்காங்கு பிரசாரத்திற்குச் சென்று வந்ததன் பலனாயும், தமிழ் நாட்டில் தமிழ் வாரப் பத்திரிகைகளுக்கு இதுவரையில் சேர்ந்திராத அளவு சந்தாதாரர்கள் சேரும்படியானதோடு பத்திரிகைப் படிக் கும் மக்களையும் அதிகமாக உண்டாக்கி இருக்கிறது. இப்பொழுது எனது உடல் நிலையானது அதிகமாகப் பிரசாரங்களுக்கு வெளிச்செல்ல முடியா திருக்கிறபடியாலும் புதிய வருஷ வேலை முறைகளின் பயனாய் எதிர்ப்புகள் பலமாக கூடுமானதாலும் பத்திரிகை விஷயத்தில் அடியில் கண்டபடி மாறுதல் செய்ய விரும்புகிறேன். ஆதலால் சந்தாதாரர்களும் அபிமானிகளும் யோசித்து தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். அதாவது. "குடி அரசு" வாரப் பத்திரிகையின் வருஷ சந்தா மூன்று ரூபாயாக விருப்பதை இரண்டு ரூபாயாக ஆக்கலாமென்பது. 2. பத்திரிகையை இப்பொழுதிருந்து வரும் 20 பக்கத்திற்கு பதிலாக தற்காலம் பன்னிரண்டு பக்கமாகவும் பதினையாயிரம் சந்தா சேர்ந்த பிறகு அதாவது ஆறு மாதத்தில் பதினாறு பக்கமாகவும், பன்னிரண்டு பக்கமாயிருக்கும் போது நாலு பக்கத்திற்குள்ளாகவே விளம்பரமும், பதினாறு பக்கமாயிருக்கும் போது சுமார் 5 பக்கத்திற்குள்ளாகவே விளம்பரமும் வைத்துக் கொள்ளுவது.

இந்தப்படி இது தொடங்கும் போதே பகுத்தறிவு என்னும் மாதப் பத்திரிகையும் வருஷத்திற்கு எட்டுஅணா சந்தாவில் தொடங்குவது. ஏஜண்டு களும் பத்திரிகைகளை, முக்காலணாவிற்கு விற்று காலணா கமிஷன் எடுத்துக்



RangaRakes

tamilnavarasam.com

கொள்வது, மற்றொரு விஷயம் அதாவது:-

பத்திரிகையின் மேல் பக்கத்திய இதழ்கள் வர்ண காகிதமாயில்லாமல் வெள்ளைக் காகித மாகவே இருக்க வாசகர்கள் சம்மதித்தால் ஆரம்பத்தி லிருந்தே வருஷம் ரூ 2 - 0 - 0 சந்தாவிற்கு 16 பக்கம் போடுகிறதென்பது. இந்தப்படி செய்வதற்கு சந்தாதாரர்கள் ஆசைப்பட்டு அனுமதி கொடுப்பதா யிருந்தால் தங்களுக்கு இருக்கிற பொறுப்பையும் கவனித்துக் கொள்ள வேண்டுமென்று நினைப்பூட்டுகிறேன்.

அதாவது இந்தப்படி செய்ய அநுமதியளிக்கும் ஒவ்வொரு அபிமானி களும் மேற்கண்ட மாதிரியில் பத்திரிகை தொடங்கிய கால முதல் ஒரு மாதத்திற்குள்ளாக குறைந்தது 25 சந்தாதாரர்களுக்கு குறையாமல் 50 சந்தா தாரர்கள் வரையில் சேர்ப்பதற்கு உறுதி கொண்டு, உறுதிவாக்கும் கூடவே அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இவ்வாறு தொடங்கப் போகும் புதிய முறைப் பத்திரிகைகளில் செய்தி களுக்கு இடமிருக்காது என்பதையும் கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இதை ஏன் எழுத நேருகிறதென்றால் இப்பொழுது "குடி அரசு" க்கு வரும் செய்திகள் ஒரு தினசரிக்குக் கூட வர முடியாத அளவு வந்து கொண்டிருக்கிறது. ஆதலால் அவைகளை எல்லாம் பத்திரிகையில் போட முடியாமல் மூட்டைக் கட்டி பையில் போட்டுக் கொண்டு வரப்படுகிறது என்பதை மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### எச்சரிக்கை

பத்திரிகையின் கொள்கைகளைப் பற்றி முன்னமே "குடி அரசில்" தெரிவித்திருக்கிறதானாலும், சுருக்கமாக முக்கியமான கொள்கையை மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன்.

அதாவது இப்போதுள்ள சமயங்களென்பவைகளைக் கண்டிப்பாக ஒப்புக் கொள்வதில்லை என்பதும் சாமிகள் என்பவைகளின் சங்கதிகளைத் தாட்சண்யமில்லாமல் வெளிப்படுத்தி விடுவதென்பதும், செல்வவானாயிருப் பதும், ஏழையாயிருப்பதும் கடவுள் செயலால் என்கின்ற எண்ணத்தை மக்களி டமிருந்து அடியோடு போக்கி செல்வத் தன்மையின் கொடுமைகளையும் புரட்டுகளையும் தெளிவுபடுத்தி விடுவதும் அதுபோலவே அரசாங்கமும் கடவுளுடைய கட்டளை என்பதை மாற்றி ஜனங்களுக்காக எல்லாரையும் சம மாய் நடத்தும் சமதர்ம ஆட்சிதான் நிலைபெறவேண்டிய ஆட்சி என்பதை நிரூபிப்பதுமாகும். இதற்கு இடையூறாய் வரும் சமையக்காரனையோ, சாமி பக்திக்காரனையோ, பண்டிதனையோ, பணக்காரனையோ, அரசாங்கத் தையோ, ஆட்சியையோ முடிவு வரையில் எதிர்த்து நிற்பதேயாகும்.



ஆகவே இவைகளை ஆதரிக்கக் கூடிய அபிமானிகள் தயவு செய்து தங்களது இஷ்டத்தை சீக்கிரத்தில் அறிவிப்பார்களானால் அநுகூலமாயி ருக்குமென்று தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்.

**குடி அரசு - தலையங்கம் - 25.05.1930**



RangaRakes tamilnavarasam.com

# ஈரோடு மகாநாடு

## II

ஈரோடு மகாநாடு விஷயமாய் சென்ற வாரம் எழுதி இருந்த தலையங்கத்தில் அரசியல் விஷயமாய் நம்மீது சுமத்தப்படும் குற்றங்களுக்கு அடுத்த வாரம் சமாதானம் சொல்லுவோம் என்று எழுதி இருந்தோம்.

அதைப் பற்றிய நமது அபிப்பிராயத்தை பல தடவைகள் சொல்லியும் எழுதியும் இருந்தாலும் மகாநாட்டின் நடவடிக்கை விஷயமாய் பொறாமை கொண்டவர்களுக்கும் வேறு மார்க்கம் இல்லாமல் இந்த சமயத்தில் அதாவது.

> "வெள்ளைக்காரர்கள் இந்திய ராஜ்ய பாரத்தை மகாத்மாவிடம் ஒப்பு வித்துவிட்டு மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு பெண்டு பிள்ளை களைக் கூட்டிக் கொண்டு கப்பல் ஏறுகின்ற சமயத்தில் சுய மரியாதைக் காரர்கள் அவர்களை (வெள்ளைக்காரர்களைப்) போகாதீர்கள்! போகாதீர்கள்!! என்று கையைப் பிடித்து இழுத்து தேசத் துரோகம் செய்கிறார்கள்".

என்று சுமத்தப்படும் குற்றத்திற்கு சமாதானம் சொல்ல வேண்டி இருக்கிறதால், சிலவற்றை அதாவது முன் சொல்லி வந்தவைகளையே திரும்பவும் சொல்லுகின்றோம்.

அதாவது இந்த சத்தியாக்கிரகமாகிய உப்புச் சட்டத்தை மீறுவது என்பதே அர்த்தமற்றதும் மூடத்தனமானதுமாகும் என்பது நமது அபிப்பிராயம். இதை திரு. காந்தியே ஒப்புக் கொண்டு விட்டார். இதை 24-5-30 உ தினசரி பத்திரிகைகளில் காணலாம்.

அன்றியும் மேற்கொண்டு இதற்கு ஏதாவது சமாதானம் சொல்லக்கூடுமென்றால் இதனால் சர்க்காருக்கு ஏதோ ஒரு விதத்தில் தொந்தரவு கொடுக்கலாம் என்பதைத் தவிர வேறொன்றும் ஞாயமிருப்பதாக ஒரு மேதாவியும் இதுவரையிலும் சமாதானமும் சொல்லவரவில்லை.

வாசகர்களே! இரண்டு வருஷத்திற்குமுன் பூர்ண சுயேச்சையை



RangaRakes

முட்டாள்தனம் என்றும், விளையாட்டுப் பிள்ளைத்தனம் என்றும் சென்னையில் சொன்ன திரு. காந்தி லாகூரில் பூரண சுயேச்சைத் தீர்மானத்தை ஆதரித்தார் என்பதை ஒரு பக்கத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நேரு திட்டம் என்பதாகிய குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்பதைப் பற்றி எட்டுக் கோடி மகமதியர்களும் ஆறு கோடி தீண்டாதவர்கள் என்பவர்களும் ஒப்புக் கொள்ளவில்லை என்பதையும் வாசகர்களே மற்றொரு பக்கத்தில் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

மற்றபடி திரு. காந்தியின் இறுதிக் கடிதத்தில் கண்ட பதினொருத் திட்டங்களும் அனுபவசாத்தியமா? என்பதை நன்றாய் யோசித்துப் பார்த்து முடிவு செய்யுங்கள்.

மேற்கண்ட மூன்றிலும் தீண்டாமை விலக்குவதற்கும், மக்கள் ஒற்றுமைக்கும் சகலருக்கும் சம சந்தர்ப்பம் கிடைப்பதற்கும் ஏதாவது வழி இருந்ததா? இருக்கிறதா? என்பதையும் யோசியுங்கள். இது நிற்க இந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டிருப்பவர்களைப் பற்றிக் கவனிப்போம்.

வடநாட்டுத் தலைவர்கள் தொண்டர்கள் என்பவர்களில் ஒவ்வொருவரையும் பற்றி தெரியாவிட்டாலும் நன்றாய்த் தெரிந்த தென்னாட்டு தேச பக்தர்கள் என்பவர்களையும் தேசீயவாதி களென்பவர்களையும் எடுத்துக் கொள்ளலாம். அதாவது தென்னாட்டில் சத்தியாக்கிரகத்தை இப்போது நடத்துவது கதர் இயக்கமாகும்.

கதர் இயக்கத் தென்னாட்டுத்தலைவர் திரு. ராஜகோபாலாச்சாரியாவார். இவர் மனுதர்ம சாஸ்திரத்திற்கு வக்காலத்து பேசியவர். காங்கிரஸ் கொள்கை யில் ஜாதி வித்தியாசம் ஒழிய வேண்டும் என்பது இருக்கக்கூடாது என்பவர். இதற்காக ராஜிநாமா கொடுத்தவர். சென்ற வருஷ வேதாரண்ய மகாநாட்டில் பூரண சுயேச்சையை எதிர்த்து தோற்கடித்தவர். இது தவிர கதர் இயக்கத்தில் உள்ளவர்கட்கெல்லாம் ஜெயிலில் இருந்தாலும் சம்பளம் உண்டு. அந்தச் சம்பளப் பணமும் கதருக்கென்று பொது ஜனங்களிடத்திலிருந்து வசூல் செய்த பணமாகும். மற்றபடி திருவாளர்கள் குப்புசாமி, அண்ணாமலை........ போன்ற தேசபக்தர்கள் காங்கிரஸ் நிதியிலிருந்து பயன்பெற்று வந்தவர்கள். இது தவிர சில வக்கீல்களும், டாக்டர்களும், மருந்து வியாபாரிகளும், ஷாப்பு சாமான் வியாபாரிகளும் பத்திரிகையிலேயே ஜீவனக்காரர்களுமாவார்கள். இவர்கள் உண்மையான தேச பக்தர்களாயிருந்தால், தேசீயவாதிகளாய் இருந்தால், முதலில் தங்கள் தொழிலில் இருக்கிற மோசத்தை நிறுத்திவிட்டு, வந்து பிறகு தேச பக்தியைக் காட்டலாம். ஒரு வக்கீல் தன்னை தேசபக்தன் என்று சொல்லுவானேயானால் அவனைவிட கொள்ளையடிக்கிற அரசாங்கம் ஆயிரம் பங்கு தேசபக்தராயிருக்க முடியும். ஒரு பேட்டண்டு மருந்து விற்கிற மருந்து வியாபாரி தேசபக்தனாக ஆவானேயானால், அவனை விட ஜனங்களை "நாய் போல் சுட்டு வீழ்த்துகிற" "ராட்சஷ



tamilnavarasam.com

அரசாங்கம்" ஆயிரம் பங்கு நீதியுடையதாகும். ஒரு டாக்டர் ஒரு நாளைக்கு இரண்டு அணா வரும் படிக்கு லாயக்கில்லாத மக்கள் வாழும் தேசத்திலே மாதம் இரண்டாயிரம், மூவாயிரம், கொள்ளையடிக்கும் ஒரு வைத்யன் பெரிய தேசபக்தர் ஆவானேயானால் அந்த நாட்டில் எந்த அன்னிய அரசாங்கமும் நீதியுள்ளதாகவே இருக்க முடியும்? உதாரணமாக திரு. நாகேஸ்வரராவ் என்கின்ற தேச பக்தர் இந்திய ஜனங்களிடத்திலேயே மருந்துவிற்று மாதம் பதினாயிரக்கணக்கான ரூபாய் லாபம் சம்பாதிக்கிறார் என்றால், இந்த தேச பக்தர் இந்த நாட்டின் ஏழை மக்களிடத்தில் காட்டிய பக்தியினாலா? அல்லது இந்த தேசத்து மக்களுடைய தரித்திரத்தை அறிந்து அவர்கட்கு நன்மை செய்கிற மாதிரியில் குறைந்த விலைக்கு இந்த மருந்து விற்கிற தயாள குணத்தினால் தேச பக்தரானாரா? இப்படியே இப்பொழுது இருக்கும் தேசபக்தர், தேசீயவாதிகள், தேசியப் பத்திரிகையாளர் என்கிறவர்கள் நிலைமைகளை எல்லாம் அவர்கள் சொந்தத் தொழிலைக் கொண்டும், சொந்த நடவடிக்கைகளை கொண்டுமே இது போலவே சொல்லிக் கொண்டு போகலாம். இவைகளிலிருந்து ஒருவர் இருவர் மிச்சப்படுவாரானால் அவர்கள் அடுத்தத் தேர்தலுக்கு அஸ்திவாரம் போடப் போனவர்களே தவிர மற்றபடி அவர்கள் நாணயம் நாம் அறியாததல்ல.

இதிலும் தவறி ஒன்றிரண்டு பேர் மீதிப்படுவாரேயானால், அவர்கள் மாரியம்மன் உத்சவத்திற்கு செடில் குத்திக் கொண்டு ஆடுகின்றவர்களை சேர்ந்து கொள்வார்களே தவிர உண்மையில் பெரிய தேசீயவாதிகள் ஆகி விடமாட்டார்கள். இந்த இருபதாவது நூற்றாண்டில் இந்த அர்த்தமில்லாத ஒரு காரியத்திற்கு ஒருவர் பேரை வைத்துக் கொண்டு எத்தனையோ பேர்கள் செய்கிற சூழ்ச்சிகளை அறியாமல் கோவிந்தா! போடுகிற மக்கள் இருக்கும் போது இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னால் சாமியின் முகத்தில் ஒருவன் பிறந்தான், தோளில் ஒருவன் பிறந்தான், காலில் ஒருவன் பிறந்தான் என்று சொன்னதும் அதை மக்கள் நம்பினதும், இன்னும் நம்பிக் கொண்டிருப்பதும் ஆச்சரியம் என்று நமக்குத் தோன்றவில்லை. அதிலுள்ள ஏமாற்றமும், மூடநம்பிக்கையுமே இந்த அரசியலிலும் அரைக்கால் மாற்றுக் கூட குறையாமல் பிரதிபலித்துக் கொண்டு வருகிறது. அவைகளைச் சொன்ன முனிவர்களுடையவும், ரிஷிகளுடையவும் யோக்கியதையே அரசியல் தத்துவங்களைச் சொல்லும் மகாத்மாக்களிடத்தும் பிரதிபலித்துக் கொண்டு வருகிறது. ஆகையால் இன்றைய உண்மையான கஷ்டத்திற்கும் இந்த நாட்டின் அவசியமான தேவைக்கும் அந்த ரிஷிகளின் தத்துவங்களும், இந்த மகாத்மாக்களின் உபதேசங்களும் கடுகளவு கூட பயன்படாது என்பதே நமது முடிவான அபிப்பிராயமாகும். நமக்கு வேண்டியதெல்லாம் மனிதன், மனிதனாகப் பாவிக்கப்பட வேண்டும் என்பதே. இதற்கு நேர் விரோதமாய் மனிதனை மனிதன் நாய், கழுதை, பன்றியிலுங் கேடாய் மதிப்பதும், தெருவில் நடக்க மறுப்பதும், தண்ணீர் அருந்தத் தடுப்பதும் சர்வ வல்லமையும், சர்வ தயாபரத்துவத்தையும் கொண்ட கடவுள் என்பவர் இருப்பதாய் சொல்லப்படும்



இடத்திற்குச் செல்ல எதிர்ப்பதும் இந்த நாட்டு மக்களாலேயே நடைபெறுவதை பார்த்துக் கொண்டிருக்கிற ஒருவர், "உப்பு இயற்கைப் பண்டம், எல்லார்க்கும் பொதுவான சொத்து, அதற்காக உயிரைவிட வேண்டும்" என்று சொல்வாரானால் அதில் கடுகளவு உண்மையாவது யோக்கியப் பொறுப்பாவது இருக்க முடியுமா? என்பதை வாசகர்கள்தான் யோசித்து முடிவு கட்ட வேண்டும்.

அன்றியும் அந்த நிலையான பழைய இழிவை மறைக்கத்தான் புது இழிவைப் பற்றிப் பிரமாதமாக தென்னாட்டில் பேசப்படுகிறதென்றும் சொல்லுவோம். இரண்டாயிரம் வருஷமாகவே நமக்கு இருந்து வருகிற இழிவும் வாழ்க்கையில் நிமிஷத்திற்கு நிமிஷம் அவமானப்படுத்தும் கொடுமையுமான காரியங்கள் எல்லாம் 1999 வருஷத்துக்கு முன்னேயே அறிந்திருந்தும் அதைப்பற்றிச் சிறிதும் லட்சியஞ் செய்யாமல் அதற்கு ஆதாரமான சாமியையும், மதத்தையும், சாஸ்திரத்தையும், கோயில் கட்டி வைத்து வலம் வந்து பூஜை செய்து கும்பிட்டுக் கொண்டு இருக்கிற சுயமரியாதையற்ற மனிதர்களாகிய நமக்கு, உப்புக்கு விலை கொடுப்பதும், உப்புச் சட்டத்திற்கு கீழ்படிவதும் நஷ்டமும் அவமானமும் என்றால் எந்த அறிவாளி இதை நம்புவான் என்று தான் கேட்கின்றோம். இந்த நாட்டில் உள்ள மக்களுக்கு இந்த நாட்டு மக்களால் இழைக்கப்படும் இழிவும் கொடுமையும் நீங்குவதற்கு முன்னால், இந்த இழிவை கொள்கையாகக் கொண்டிராத எந்த அரசாங்கமானாலும் இந்த நாட்டைவிட்டுப் போக வேண்டுமென்றால் ஒருக்காலும் நாம் அதில் கலந்து கொள்ள முடியாது.

நம் நாட்டு மக்களே நம்மை மதத்தின் பேராலும் சமூகத்தின் பேராலும் செய்யும் இழிவைப் பற்றி நமக்கு கவலை இல்லை என்று யாராவது நம்மிடம் சொல்லுவார்களேயானால், அவர்கட்கு நாம் சொல்லும் பதில் என்னவென்றால், அப்படியானால் வெளிநாட்டு மக்கள் அரசியலின் பெயரால் ஒற்றுமையற்றவர்களும் மூட மதியர்களுமான நம்மை செய்யும் இழிவைப்பற்றி நமக்கு இப்போது கொஞ்சங்கூட கவலை இல்லை என்பதேயாகும். இன்றைய நமது நிலையில் அதைப் பற்றி இப்போது கவலைப்படுவதும் முட்டாள்தனமும் பயனற்றதும் என்பதுமாகும்.

ஆகவே யார் என்ன சொல்லுவதாயிருந்தாலும், உப்புச் சத்தியாக்கிரகம் வெற்றி பெறுவதின் மூலம், நாளைய தினமே வெள்ளைக்காரர்கள் அரசாங்கம் நாட்டைவிட்டு கொடியையும், முத்திரையையும், கஜானா சாவியையும் திரு. காந்தியிடமே கொடுத்து விட்டு பெண்டு பிள்ளைகளுடன் கப்பல் ஏறுவதாயிருந்தாலும் ஒருக்காலும் நாம் அதில் பங்கு பெற முடியாது என்றுதான் மறுபடியும் சொல்லுகிறோம். ஏன் இவ்வளவு தூரம் நாம் இந்தப்படி எழுதுகிறோம் என்றால், நமது நாட்டு மக்களைப் பிடித்திருக்கும் அரசியல் மூடநம்பிக்கை வியாதிக்கும், அதனால் போகும் கொள்ளைக்கும் இவ்விதம்



RangaRakes tamilnavarasam.com

எழுதினால்தான் கொஞ்சமாவது உணர்ச்சி கொடுக்கக் கூடும் என்று கருதியே தவிர வேறல்ல. இதற்காக வழக்கம் போல் நம்மை திட்டுகிறவர்களோ, தூற்று கிறவர்களோ அல்லது வேறு ஏதாவது செய்கிறவர்களோ செய்து கொள்ளட் டும். அதைப்பற்றி ஒரு சிறிதும் நமக்குக் கவலை என்பதே இல்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 25.05.1930**



RangaRakes

# தேவஸ்தான போர்டும் துணிகர மந்திரியும்

தேவஸ்தான போர்டு நிர்வாக கமிஷனர்கள் நியமனமும் சர்க்கிள் கமிட்டி அங்கத்தினர் நியமனமும் ஒருவாறு முடிவு பெற்றது. இந்த நியமனங் களை பொறுத்தமட்டில் ஏற்பட்ட விசேஷம் என்ன வென்றால் தேவஸ்தான போர்டு தலைவர்கள் ஐந்து பேரும் பார்ப்பனரல்லாதவராக நியமிக்கப்பட்டி ருக்கின்றனர். அதோடு நீலகிரி ஜில்லா தேவஸ்தான கமிட்டிக்கு ஒரு ஆதி திராவிட கனவானும் அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த நியமனங்கள் உறுதியாகி சர்க்கார் கெஜட்டிலும் பிரசுரமாகிவிட்டது.

“தேவஸ்தானம்” என்னும் பதம் பார்ப்பனருக்கும் அவரைச் சுற்றித் திரியும் சில ஆஸ்தீகக் கூலிகளுக்குமே உரியது, மற்றையோர் குறிப்பாக ஆதிதிராவிடர் போன்ற தாழ்த்தப்பட்ட மக்கள் அப்பதத்தை நினைக்கவும் உச்சரிக்கவும் கூடாதென்ற கட்டுப்பாட்டைக் கொண்டு இருந்த காலத்தையும் ஒரு கூட்டத்தாரின் மனப்பான்மையும் விரட்டி அடித்து அவ்வித சுயநல துர் எண்ண ஆதிக்கத்துக்குச் சாவு மணி அடித்து மக்களில் உயர்வு தாழ்வு பேதம் ஒழிய வேண்டும் என்னும் சுயமரியாதைக்கு வழி காட்டியாக முன்வந்து ஷ நியமனங்களைத் துணிகரமாகச் செய்துள்ள மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களுடைய தைரியத்தையும் நிர்வாகத்தையும் சுயமரியாதை உலகம் பாராட்டற்பாலது.

தொட்டதற்கெல்லாம் தன் இஷ்டப்படி கைத்தூக்க இரட்டை மெஜா ரிட்டி வைத்திருந்த ஜஸ்டிஸ் மந்திரிகள் காலத்திலும் செய்வதற்குப் பயப்படும் படியான காரியங்கள் இந்தக் காலத்தில் வெகு தாராளமாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 25.05.1930**



tamilnavarasam.com

## அறிவிப்பு

இரண்டு ஆண்டுகட்கு முன்னர் திருநெல்வேலி திரு. கே. சுப்ரமண்யம் என்பவர் இந்தியாவில் நமது இயக்கத்தின் பெயரையும் நம்முடைய பெயரையும் உபயோகப்படுத்தி அதன் பயனாய் அநேக தவருதல் செய்த தாக தெரியவந்து, அதை பத்திரிகையில் வெளிப்படுத்தி இருந்தோம். பின்னர் திரு. சுப்ரமண்யம் அவர்கள் இந்தியாவிலிருந்து மலாய் நாடு சென்று அங்கிருந்து நமக்குதான் ஏதோ தவருதலாய் சில காரியம் செய்து விட்டதற்கு வருந்துவதாகவும், அதை மன்னிக்க வேண்டுமெனவும் இனி இந்த மாதிரியான எந்த குற்றங்களும் செய்வதில்லை என்றும் நீண்டதொரு மன்னிப்புக் கடிதம் எழுதியிருந்தார். நாமும் அவர் இனிமேல் திருந்திவிடுவாரென நம்பியே இருந்தோம். ஆனால் நாம் மலாய் நாடு சென்று திரும்பிய பின் நமக்கு பினாங்கிலிருந்து ஒரு முக்கிய நண்பரிடமிருந்து வந்திருக்கும் கடிதவாயிலாக திரு. சுப்ரமண்யம் அவர்கள் மீண்டும் மலாய் நாட்டில் தவறுதலானவும் மோசடியானதுவுமான குற்றங்கள் பல செய்துவிட்டு வேறு எங்கேயோ சென்று விட்டதாகத் தெரிய வருகிறது. ஆதலால் திரு. சுப்ரமண்யம் அவர்கள் இந்தியாவிற்கு வந்திருந்தாலும் அல்லது வேறு எந்த நாட்டிலிருந்தாலும் இதைப் பற்றி நமக்கு சரியான சமாதானம் எழுதாவிட்டால், அவசியம் அடுத்த வாரம் அக்கடிதம் பிரசுரிக்க வேண்டி வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - அறிவிப்பு - 25.05.1930**



## 5 ரூபாய் இனாம்

திருவாளர்கள் எஸ். சீனிவாச அய்யங்கார், எஸ். சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் இவர்கள் விலாசம் முதலில் தெரிவிப்பவர்கட்கு ஐந்து ரூபாய் இனாம் பரிசு அளிக்கப்பெறும்.

**- சித்திரன்**

**குடி அரசு - அறிவிப்பு - 25.05.1930**



RangaRakes tamilnavarasam.com

# சேலம் வன்னியகுலக்ஷத்திரியர் மகாநாடு

## உங்களை நீங்களே தாழ்த்திக்கொள்ளாதீர்கள்

சகோதரர்களே!

உங்கள் சமூகமானது தென்னிந்தியாவில் ஒரு பெரிய சமூகமாக இருக்கிறது. உங்கள் சமூகம் பொதுவாக நாட்டிற்கு பெரிதும் பிரயோஜனமுள்ள விவசாயத்தொழில் முதலிய வேலைகளைச் செய்யக் கூடியதாகவும் இருக்கிறது. உங்கள் சமூகத்தில் அனேக பெரியார்களும் இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு பெரிய சமூக மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டதற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சந்தர்ப்பத்தை எனக்கு ஒரு பெருமையாகவும் கருதிக் கொள்ளுகிறேன். ஆனால் இதைத் திறந்து வைக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் நான் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். அதாவது புராணக் குப்பைகளிலிருந்து ஆதாரம் தேடி நான் உங்கள் குலப் பெருமையைப் புகழ்ந்து கூறி ஆகாயமளாவ உங்களை மகிழ்வித்து ஏமாற்றிவிட்டுப்போக நான் இங்கு வரவில்லை. மற்றபடி நான் எந்தத் துறையில் ஈடுபட்டு வேலை செய்து கொண்டு இருக்கிறேனோ எந்தக் கொள்கைகள் நாட்டின் முன்னேற்றத்திற்குச் சாதகம் ஆனவைகள் எனக் கருதி தொண்டாற்றுகின்றேனோ அதைப்பற்றியேதான் இப்பொழுதும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லப்போகிறேன். நான் சொல்லுவனவற்றில் பல உங்கள் மனதிற்குச் சங்கடத்தைக் கொடுத்தாலும் கொடுக்கலாம். பல உங்களுக்குப் பிடிக்காமலிருந்தாலுமிருக்கலாம். எப்படி இருந்த போதிலும் என் சொற்கள் முழுவதையும் அப்படியே ஒப்புக் கொள்ள வேண்டுமென்று நான் கூறப் போவதில்லை. நான் கூறுவனவற்றை நீங்கள் நன்றாக ஆராய்ந்து பார்த்து உங்கள் புத்திக்குச் சரியெனப்பட்டால் ஒப்புக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் தள்ளி விடுங்கள் என்ற முறையில்தான் சில சொல்லுகிறேன்.

சகோதரர்களே

பொதுவாக இதுபோன்ற ஜாதி மகாநாடுகள் இனி கூட்டுவதாயிருந்தால் தங்கள் ஜாதிப் பெருமையைப் பற்றி பாட்டிக் கதைகள் பேசி



அர்த்தமற்றதுமான பெருமைப் பாராட்டிக் கொள்ளுவதற்காகக் கூட்டுவதாய் இருக்கக் கூடாது என்றும் தங்கள் ஜாதியோ சமூகமோ இன்னும் தனியாகவே பிரிந்திருக்கும்படி வெறும் தங்கள் ஜாதி உயர்வையே பேசிக்கொண்டிருக்கக் கூட்டப்படக் கூடாது என்றும் முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இம் மகாநாட்டின் பயனாகவாவது நீங்கள் உங்களுக்கு மேல்ஜாதி ஒன்று இருக்கின்றது என்று எண்ணிக் கொண்டிருப்பதையும் நீங்கள் சில ஜாதிக்கு மேலானவர்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பதையும் அடியோடு ஒழித்து விடவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஏனெனில் நீங்கள் சில ஜாதிக்குப் பெரியார்கள் ஆக வேண்டுமென்றும் ஆசையால் செய்யும் முயற்சியானது மற்றொரு ஜாதியைவிட நீங்கள் கீழ் ஜாதியென்று நீங்களாகவே ஒப்புக் கொண்டவராகிறீர்கள். இதனால் உங்களாலேயே உங்களுக்கு கீழ் ஜாதி பட்டம் நிலைத்து விடுவதோடு நீங்கள் மேல் ஜாதி என்கின்ற தத்துவம் தகராறில் இருந்து விடுகின்றது.

உதாரணமாக இப்பொழுது நீங்கள் உங்களை வன்னியகுல க்ஷத்திரியரென்றும் சொல்லிக்கொள்ளுகிறீர்கள். இதனால் நீங்கள் தங்களை பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு கூட்டத்தாராகிய பார்ப்பனர்களுக்கு கீழ்பட்ட ஜாதியார் என்பதை சிறிதும் எதிர்வாதமில்லாமல் ஒப்புக் கொண்டவர்களாகி விட்டீர்கள். ஆனால் உங்கள் க்ஷத்திரியத் தன்மையாலோ தகராறுகளுக்கு குறைவில்லை. நீங்கள் வன்னியர் குல க்ஷத்திரியரென்றால் நாடார்கள் தங்களை அக்கினி குல க்ஷத்திரியர்களென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய பூணூல் கயிறும் உங்கள் பூணூல் கயிற்றை விட கொஞ்சமும் இளைத்ததல்ல. ஆனால் நாடார்களை க்ஷத்திரியர்கள் என்று ஒப்புக் கொள்ளாமல் இழி வார்த்தை என்று நீங்கள் கருதும் ஒரு பெயரை சொல்லி உங்களை கூப்பிடுகிறார்கள். நீங்களும் அதுபோலவே நாடார்களை க்ஷத்திரியர்கள் என்று ஒப்புக் கொள்ளாமல் இழிவார்த்தை என்று அவர்கள் கருதும் ஒரு பேரைச் சொல்லி அவர்களை நீங்கள் கூப்பிடுகிறீர்கள். கடைசியில் கேசு ஏற்பட்டு பணச்செலவு செய்து யாராவது ஒருவர் தண்டனையும் அடைய நேருகின்றது. நாயுடு ஜாதி என்றும் எங்கள் ஜாதிக்காரர்கள் உங்கள் இரண்டு பேரையும் க்ஷத்திரியர்கள் அல்ல என்று சொல்லி விட்டு தாங்கள் தான் க்ஷத்திரியர்கள் என்கிறார்கள். ராஜா என்கின்ற மற்றொரு ஜாதிக்காரர்கள் நீங்கள் மூன்று பேரும் க்ஷத்திரியர்கள் அல்ல. நாங்கள் தான் க்ஷத்திரியர்கள் என்கின்றார்கள். சிங்கு மராட்டியர் ஆகியவர்கள் நீங்கள் நால்வரும் க்ஷத்திரியர்கள் அல்ல; நாங்கள் தான் சரியான க்ஷத்திரியர்கள் என்கிறார்கள். இது போல் இன்னமும் குடகு க்ஷத்திரியர்கள் எத்தனையோ பேர் க்ஷத்திரியப் பட்டத்திற்கு இத்தனைப் பேர்கள் ஒருவருக்கு ஒருவர் போட்டியும், சண்டையும் போட்டுக் கொள்ளுகின்றார்களே ஒழிய இதன் பலனாய் எச்சில் கிண்ணம் கழுவுபவனுக்கும், பிச்சை எடுத்து வாழுபவனுக்கும் தரகு வேலை செய்பவனுக்கும் நோகாமல் பிராமணப் பட்டம் கிடைத்து விட்டது. அப்படி கிடைக்கப்பெற்ற அந்தப் பிச்சைத் தொழில் பார்ப்பான் உங்களிடம் பணமும் வாங்கிக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டு மகாநாடு கூட்டி, க்ஷத்திரியன் உலகத்திலேயே கிடையாது என்று விளம்பரப்படுத்தி சொல்லி விடுகிறான். அப்படி இருந்துங்கூட அவனிடம் உங்கள் ஒருவருக்கும் சிறிதும் தகராறு கிடையாது. அன்றியும் அவர்களுக்கு முத்தமிட்டு காலைக்கழுவி தண்ணீரைக் குடிக்கப் போட்டி போடுவதில் குறைச்சலுமில்லை. உங்கள் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் அனேகமாய் அவன் குருவாக இருக்கிறான். ஆகவே இந்த மாதிரி ஒரு இழி வானதும் முட்டாள்தனமானதும் அர்த்தமற்றதுமான காரியங்களுக்கு இம் மாதிரி மகாநாடுகள் இனியும் கூட்டுவதாயிருந்தாலும் இம்மகாநாடுகள் அழிந்து போவதே மேல் என்று மிக்க வருத்தத்துடன் சொல்லிக் கொள்ளுகி றேன். தங்கள் ஜாதி உயர்ந்த ஜாதி என்று சொல்லிக் கொள்ளுவதற்கு மாத்திரமே நாட்டில் இப்போது எங்கும் ஜாதி மகாநாடுகள் கூட்டப்படுவதும், அதோடு பிற ஜாதிகளை சாடையாயும் வெளிப்படையாயும் இகழ்வதும் சாதி மகாநாடு களின் சுபாவமாய் விட்டது. இதன் பலனாகவே சக்கிலியர்கள் என்பவர்கள் தங்களை அருந்ததியர்கள் என்பதும், பள்ளர்கள் என்பவர்கள் தங்களை தேவேந்திரகுல வேளாளர்கள் என்பதும், ஆசாரிகள் என்பவர்கள் தங்களை விஸ்வப் பிராமணர்கள் என்பதும், சௌராஷ்டிரகள் என்பவர்கள் தங்களை சௌராஷ்டிரப் பிராமணர்கள் என்பதும், தேவாங்கர்கள் என்பவர்கள் தங்களை தேவாங்கப் பிராமணர்கள் என்பதும், குயவர்கள் தங்களை குலால விஸ்வ பிராமணர்கள் என்பதும், சாலியர்கள் என்பவர்கள் தங்களை சாலிய பிராம ணர்கள் என்பதும், இவ்வளவு சமூகத்தார்களும் தங்கள் தங்கள் உடலினால் கஷ்டப்பட்டு தொழில் செய்து பிற ஜனங்களுக்கு உதவியும் செய்து நியாயமான வழியில் வாழ்க்கை நடத்திக் கொண்டு தங்களை பிராமணன், இந்திரன், அருந்ததி, சந்திரன் என்று பல ஒழுக்கமற்ற சோம்பேரிப் பட்டங்களை வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றதை பார்க்கின்றோம்.

ஆனால் பார்ப்பான் பிச்சை எடுத்து சாப்பிட்டும் நோகாமல் மற்றொருவன் உழைப்பில் சாப்பிட்டுக் கொண்டும் இருந்து கொண்டு நீங்கள் யாரும் பிராமணர்கள் அல்ல க்ஷத்திரியர்கள் கூட அல்ல பேசப்போனால் வைசியர் கூட அல்ல, நாங்கள்தான் பிராமணர்கள், நீங்கள் எல்லோரும் எங்களுக்குத் தொண்டு செய்ய எங்கள் வைப்பாட்டி மக்களாய் இருக்க கடவுளால் பிறப்புவிக்கப்பட்ட சூத்திரர்கள் என்று தைரியமாய் சொல்லி சிவில் கிரிமினல் சட்ட புஸ்தகத்திலும் அதை ஸ்தாபித்து விட்டு மற்றும் சில உரிமைகளையும் தனக்கு வைத்துக் கொண்டு சௌகரியமாய் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். அந்த சோம்பேரி சௌக்கிய நிலை நிலைப்பதற் கேதான் இப்பேர்ப்பட்ட நமது ஜாதி மகாநாடுகள் பெரிதும் உபயோகப்படத் தக்கதாய் இருக்கின்றன என்பதே எனது முடிவான அபிப்பிராயம். ஆகையால் சகோதரர்களே இனி இந்த மாதிரியான சமூக மகாநாடுகளில் இம்மாதியான சாதி உயர்வு தாழ்வுகளைப் பற்றிய பேச்சே இருக்கக் கூடாது என்றும் மற்ற சாதியார் என்பவர்களுடன் நாம் எப்படி கலப்பது? நாம் எவருக்கும் கீழ் ஜாதி அல்ல என்கின்ற தன்மை எப்படி அடைவது? நமக்குக்



கீழும் நமது நாட்டில் எந்த சாதியும் இல்லை. நாம் எல்லோரும் சமமே என்கின்றதான சமதர்ம நிலையை எப்படி உண்டாக்குவது என்கின்ற காரியத்திற்கே பாடுபட வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

சகோதரர்களே! இந்தியா ஒரு நாடு ஆக வேண்டாமா?

இந்தியா ஒரு நாடு என்று ஆனால்தானே இந்தியா முழுமையும் பற்றிபேச நமக்கு உரிமை உண்டு. இப்போது இந்தியா ஒரு நாடாய் இருக்கின்றதா?

நீங்களே யோசித்துப் பாருங்கள். சாதிகள் காட்சி சாலையாக, மத கண் காட்சி சாலையாக, பாஷைகள் கண்காட்சி சாலையாக, சாமிகள் காட்சி சாலையாக இருக்கின்றதே ஒழிய வேறு என்னமாயிருக்கின்றது?

இந்த நிலையிலுள்ள இந்தியா விடுதலையோ முன்னேற்றமோ அடைவது என்பது சாத்தியமானதாகுமா? என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். மற்ற நாட்டார்கள் தங்கள் நாட்டை ஒரு நாடாக்கி நம்ம நாட்டை யும் அதோடு சேர்க்கப் பார்க்கிறார்கள். யார் எந்த நாட்டோடு சேர்த்துக் கொள்ளுவதென்று போட்டிப் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அதிசயிக்கத்தக்கபடி முன்னேறுகிறார்கள். ஆச்சரியமானதும் அற்புதமானதுமான காரியங்களைச் செய்கின்றார்கள்.

நாம் இன்றையதினம் யார் க்ஷத்திரியர் என்று பூதக் கண்ணாடி வைத்து ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றோம்.

க்ஷத்திரியன் என்கின்ற வார்த்தைக்கும் நமக்கும் என்ன சம்மந்தம்? அந்த பெயரினால் என்ன லாபம். அந்த பட்டம் வைத்துக் கொண்டால் நம்மிடம் என்ன மாறுதல் ஏற்பட்டு விட்டது? எந்த தேசத்தைப் பிடித்தோம். எதை ஆளுகிறோம் யாரிடத்தில் கூறித் தரம் காட்டினோம். ஏதோ சிலர் பூணூலைப் போட்டுக் கொண்டதைத் தவிர காரியத்தில் 100க்கு 90 பேர்கள் கூலிகளாயிருப்பதைத் தவிர வேறு ஒன்றையும் காணோமே. எனது நாடார் நண்பர்கள் அநேகர் இப்போது பூணூலை அறுத்தெறிய ஆரம்பித்து விட்டார்கள். ஆதலால் ஜாதி விஷயத்தை இனி மறந்துவிட்டு உலகப் போக்கில் கலந்து கொள்ள முன்வாருங்கள் என்று கூப்பிடவே இங்கு வந்தேன். உலகப்போக்கு இப்போது எப்படி இருக்கிறது. ஆகாயத்தில் மனிதன் மணிக்கு 250 மயில் வேகம் பறக்கிறான். தண்ணீருக்குள் முழுகும் மனிதரை மணிக்கு 50 மயில் வேகம் ஓடுகிறான். நீங்கள் இமயமலைமேல் ஏறமுடியாமல் அதுதான் கைலாயம், அதுதான் வெள்ளிமலை. அங்குதான் பரமசிவன் கால்மேல் கால்போட்டுக்கொண்டு துடைமேல் பார்வதியை உட்கார வைத்துக் கொண்டு தலையில் ஒரு பெண்ணை வைத்துக் கொண்டு அதன் மூலம் கங்கை வருகிறது என்று சொல்லிக் கொண்டிருந்த புளுகுக்



RangaRakes tamilnavarasam.com

கதைகள் எல்லாம் இப்போது தவிடுபொடி ஆகும்படியும் வெள்ளைக்காரன் "கைலாயத்திற்கு" போய் " பரமசிவனின் தலையைப் பிடித்து" ஆட்டி அங்கு ஒன்றுமில்லை என்பதை ருஜுப்படுத்திவிட்டான். ஆணைப் பெண்ணாக் கவும், பெண்ணை ஆணாக்கவும், செத்தவர்களை பிழைக்க வைக்கவும் முயற்சிக்கிறார். கிழவனைக் குமரனாக்குகிறான். ஆண் குழந்தை வேண்டு மானால் ஆண் குழந்தையையும் பெண் குழந்தை வேண்டுமானால் பெண் குழந்தையும் பெற்றுக் கொள்ள வழிகண்டு பிடிக்கிறான். செவ்வாய் மண்டலம் போகிறான். தந்தியில் சேதி அனுப்பி பாட்டு அனுப்பி இப்போது ஆட்டம் அனுப்புகிறான். பொம்மைகள் எல்லாம் கம்பியில்லாத தந்தியில் உருவங்கள் எல்லாம் ஆகாய தந்தியில் வருகின்றது. (நமக்கு யார் க்ஷத்திரியர் என்பதும், க்ஷத்திரியர் உலகத்தில் இருக்கிறாரா இல்லையா என்பதும் இன்னமும் நமது ஆராய்ச்சி யில் முடிவு பெறவில்லை) ஆகவே அந்தமாதிரி உலகப் போக்கை நீங்களும் தயவு செய்து திரும்பிப் பாருங்கள் என்று வேண்டிக் கொள்ளத்தான் இங்கு வந்தேனே ஒழிய இவ்வளவு காயலாவுடன் உங்கள் மனம் நோகும் படியே நான் இங்கு வரவில்லை. மற்றபடி இந்த நாட்டில் இருக்கும் உங்கள் சமூகம் ஒற்றுமையுடன் பாடுபடாவிட்டால் நீங்கள் எவ்வளவோ மேன்மை பெற்று இந்த நாட்டுக்கு எவ்வளவோ நன்மை செய்யலாம். சட்டசபை ஸ்தல ஸ்தாப னம் இவைகளை கைப்பற்றி அதன் மூலம் ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் உதவி செய்து நாட்டை உயர் நிலைக்கு கொண்டு வாருங்கள். வெறும் நாமமும் பூணூலும் ஒன்றையும் அளித்து விடாது. மூடப்பழக்க வழக்கங்களை விட்டு ஓட்டி அறிவை பயன்படுத்தி முன்னேற முயற்சி செய்யுங்கள். சட்டசபை முதலிய தேர்தல்களில் நீங்கள் தைரியமாய் முன் வாருங்கள். கட்சி பேதங்களை விட்டு ஒழியுங்கள். முதலில் உங்கள் சமூகம் முழுவதும் ஒன்றானால்தான் மற்ற சமூகங்களுடன் நீங்கள் சரிசமமாக ஒத்துவாழமுடியும் என்பதை தெரியப்படுத்திக் கொண்டு நான் இதுவரை சொன்னவைகளை அப்படியே நம்பிவிடாமல் உங்கள் சொந்த அறிவைக் கொண்டு நன்றாய் ஆராய்ந்து பாருங்கள் என்று கேட்டுக் கொண்டு இம் மகாநாட்டை திறந்து வைத்ததாகச் சொல்லி அமர்கின்றேன்.

**குடி அரசு - சொற்பொழிவு - 01.06.1930**



# சுயமரியாதை மகாநாடு முடிவு

சகோதரி சகோதரர்களே!

நான் மகாநாட்டில் அதிகமாக பேசக் கூடாது என்று கருதியிருந்தேன். ஆகிலும் இந்தக் காரியத்தை நானே செய்ய வேண்டுமென்று நண்பர் R.K. ஷண்முகம் அவர்கள் என்னை கட்டாயப்படுத்தியதால் சில வார்த்தைகள் சொல்லி எனது கடமையைச் செய்கிறேன்.

இந்த மகாநாட்டை பிப்ரவரி மாதத்திலேயே நடத்தியிருக்க வேண்டி யது. நானும் என் நண்பர்களும் மலேயா நாடு சுற்றுப் பிராயணஞ் சென்று இருந்ததால் அங்கிருந்து வந்த பிறகு போதிய சாவகாசத்தோடு இப்போது தான் நடத்த முடிந்தது.

மலேயா நாட்டிலிருந்து வந்ததும், மகாநாடு நடத்த எண்ணி மகா நாட்டுக்கு யாரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கலாம் என்று நண்பர்களோடு கலந்து பேசுகிற போதே முதலில் திரு. ஜயக்கர் அவர்கள் பெயர்தான் மனதுக்குப்பட்டது. உடனே திரு. ஜயக்கர் அவர்களைக் கேட்டு சம்மதிக்கும் படிச் செய்யும் படியாக திரு. ஷண்முகம் அவர்கட்கு டில்லிக்கு தந்தி கொடுத்தேன். அதற்கு திரு. ஜயக்கர் அவர்கள் ஊருக்குப் போய் விட்டார். எழுதியிருக்கிறேன் என்று பதில் வந்தது. பிறகு திரு. ஷண்முகம் அவர்கள் கோவைக்கு வந்தபிறகு கோவையிலிருந்து திரு. ஜயக்கர் அவர்கள் சுயமரியாதை இயக்க சம்பந்தமான கொள்கைகளையும் அதன் சம்பந்தமான பிரசுரங்களையும் தெரிய ஆசைபடுவதாக தந்தி வந்தது. வந்தவுடன் அதற்குப் பதிலாக சென்ற மகாநாட்டின் நடவடிக்கைகள் கொண்ட ரிவோல்ட்டு பத்திரிகை பிரதிகளில் சிலவற்றையனுப்பியதும், திரு. ஜயக்கர் அவர்கள் சந்தோஷத்துடன் ஒப்புக் கொண்டு, தன் சம்மதத்தைத் தெரிவித்து விட்டார். அதற்குள்ளாக நண்பர்கள் பலர் இந்த நாஸ்திக இயக்கத்துக்கு திரு. ஜயக்கர் அவர்கள் தலைமை வகிக்க ஒப்புக் கொள்ள மாட்டார் என்றும் வர மாட்டார் என்றும் இங்கிருந்தே சில விஷமக் கடிதங்கள் போயிருப்பதாகவும் பல நண்பர்கள் பேசிக் கொண்டார்கள். அவர் ஒப்புக் கொண்டதான சங்கதி பத்திரிகைகளில் வெளியானதும் இவ்விடமிருந்து நமது இயக்கத்தின்



RangaRakes tamilnavarasam.com

விரோதிகள் சிலர் திரு. ஜயக்கருக்கு அவரை வர வேண்டாமென்றும் வந்தால் கொல்லப்பட்டு விடுவார் என்றும் அவர் வருவதற்குள் கொட்டகையில் தீ வைக்கப்பட்டு விடுமென்றும் பல மாதிரியாகவெல்லாம் எழுதினார்கள். (இந்த மொட்டைக் கடிதம் ஈங்கூர் தபாலாபீசில் முத்திரையிடப்பட்டதாக திரு. ஜயக்கர் அவர்களால் காட்டப்பட்டது) இவ்வளவையும் பார்த்த பிறகு திரு. ஜயக்கர் அவர்கள் சற்றும் யோசியாமலும் தான் இது வரையிலும் போகாத ஒரு புது ஊருக்கும் அதுவும் முன்பின் கேட்டிராத ஒரு சிறு ஊருக்கு வரத் துணிந்ததென்றால் அது மிகவும் ஆச்சரியப் படத்தக்கதும் பாராட்டப்படத் தக்கதுமேயாகும்.

திரு. ஜயக்கர் அவர்கள் தனது முடிவுரையில் மொட்டைக் கடிதாசி களைப் பற்றியும் மிரட்டுதல் கடிதாசிகளைப் பற்றியும் சொல்லும் போது, இந்த கடிதங்களைப் பார்த்த பிறகுதான் தனக்கு இவ்வியக்கத்தின் பெருமை விளங்கிற்றென்றும் அப்படிப்பட்ட ஊருக்கு என்ன நேருவதா யிருந்தாலும் போய்விட்டுத் தான் வர வேண்டுமென்கின்ற எண்ணம் தனக்கு தோன்றிய தாகவும் சொன்னதிலிருந்து அம்மாதிரியான கடிதம் எழுதியவர்கட்கும் நம் மகாநாட்டின் சார்பாக முதலில் நன்றி கூறுவதற்குக் கடமை பட்டிருக்கிறோம்.

இரண்டாவதாக இவ்வளவுக்கும் துணிந்து வந்து மகாநாட்டை இவ்வளவு கௌரவமாய் நடத்திக் கொடுத்ததற்கு திரு. ஜயக்கர் அவர்கட்கு நமது என்றும் மறக்கமுடியாத நன்றியறிதல் உரித்தாகுக.

சகோதரர்களே! திரு. ஜயக்கர் அவர்கள் மகாநாட்டிற்கு வந்து தலைமை வகித்து நடத்திக் கொடுத்தது மாத்திரமல்லாமல் அவர் நமது இயக்கத்தை பற்றியும், அதன் ஒவ்வொரு கொள்கையைப் பற்றியும், புகழ்ந்து பேசி யிருக்கும் ஒவ்வொரு வார்த்தையும் நாம் என்றும் மறக்கமுடியாததும், நமக்கு எவ்வளவோ பின்பலமானதுமான வார்த்தைகளுமாகும். அதோடு அவர் எத்தனை வித எதிரிகள் ஏற்படுவார்கள் என்றும் அவர்கள் எவ்வெவ் விதமான பழி வார்த்தைகளால் எதிர்ப் பிரசாரம் செய்வார்களென்றும் சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றும் இந்த நாட்டிலே இருந்தவர் போல அவ்வளவு முன் யோசனையுடன் சொன்னது மிகவும் ஆச்சரியப்படத்தக்கது. எல்லாவற் றையும் விட ஒன்றுக்கும் பயப்படாமல் தைரியத்துடனும் ஊக்கத்துடனும் தொடர்ந்து இந்த இயக்கத்தை நடத்திக் கொண்டு போக வேண்டுமென்றும் எவ்வித எதிர்ப்பையும் லட்சியம் செய்யக் கூடாதென்றும் இதுதான் இந்தியா வுக்கு முக்கியமாகச் செய்ய வேண்டிய காரியமென்றும் அவர் எடுத்துச் சொன்னதிலிருந்து நமது மனம் எவ்வளவு உற்சாகத்தையடைந்திருக்கிற தென்பதையும் நம் எதிரிகள் மனம் எவ்வளவு வெட்கப்பட்டிருக்கும் என்பதையும் தங்கட்கு எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. எல்லாவற்றையும் விட அவர் சொன்ன மற்றொரு விஷயத்தைப் பற்றி உங்கள் எல்லாரையும் விட நானே அதிகமாகப் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறேன்.



என்ன வென்றால், **"இந்த உலகத்திலுள்ள எல்லா அகராதிகளையும் கொண்டு வந்து போட்டு ஏடு ஏடாய் புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும் அழகும், பொருளும், சக்தியும் நிறைந்த வார்த்தையாகிய சுயமரியாதை என்கின்ற வார்த்தைக்கு மேலானதாகவோ ஈடானதாகவோ உள்ள வேறு ஒரு வார்த்தையை யாராலும் கண்டு பிடிக்க முடியாது"** என்று சொல்லி யிருப்பதாகும்.

இந்த வார்த்தையானது நமது நண்பர்களிலேயே சிலர் **"கொள்கைக ளெல்லாம் நமக்குப் பிடிக்கின்றன. ஆனால் சுயமரியாதை என்கிற சொல் மாத்திரம் பிடிக்கவில்லை"** என்று சொல்லுகிற மேதாவிகளுக்குத் தக்க பதிலாகும்.

பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கும் ஆரம்பத்தில் இப்படித்தான் சொன்னார்கள். ஆயினும் இப்பொழுது அதைத் தவிர வேறு பெயர் வைப்பது பொருந்தாதென்று அவர்களே ஒப்புக்கொண்டு விட்டார்கள். அது போலவே தான் இந்தப் பெயரும் இப்பொழுது யாராருக்கு பிடிக்கவில்லையோ அவர்க ளெல்லாம் கூடிய சீக்கிரத்தில் இந்தப் பெயரைத் தங்களுடைய பிள்ளைகட்கும் வைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

இந்த இயக்கமானது இன்றைய தினம் பார்ப்பனரையும், மதத்தையும், சாமியையும், பண்டிதர்களையும் வைத்து கொண்டு மூடப்பழக்க வழக்கங்க ளையும் எடுத்துக் காட்டிக் கொண்டு மக்களைப் பரிகாசம் செய்து கொண்டி ருப்பதுபோலவே என்றைக்கும் இருக்குமென்றோ அல்லது இவைகள் ஒழிந்தவுடன் இயக்கத்திற்கு வேலையில்லாமல் போய் விடுமென்றோ யாரும் கருதி விடக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்சொன்னவைகளின் ஆதிக்கங்கள் ஒழிவதோடு ஒருவன் உழைப்பில் ஒருவன் நோகாமல் சாப்பிடுகிறது என்கின்ற தன்மையிருக்கும் வரையிலும் ஒருவன் தினம் ஒரு வேளைக் கஞ்சிக்கு மார்க்கமில்லாமல் பட்டினிக்கிடந்து சாவதும், மற்றொருவன் தினம் ஐந்து வேளை சாப்பிட்டு விட்டு வயிற்றைத் தடவிக் கொண்டு சாயுமான நாற்காலியில் சாய்ந்து கொண்டிருக்கிற தன்மை இருக்கிற வரையிலும் ஒருவன் இடுப்புக்கு வேஷ்டி இல்லாமல் திண்டாடுவதும் மற்றொருவன் மூன்று வேஷ்டிப் போட்டுக் கொண்டு உல்லாசமாகத் திரிவதான தன்மை இருக்கின்ற வரையிலும், பணக் காரர்கள் எல்லாம் தங்களது செல்வம் முழுமையும் தங்களுடைய சுய வாழ்வுக்கே ஏற்பட்டது என்று கருதி கொண்டிருக்கிற தன்மையிருக்கின்ற வரையிலும் சுயமரியாதை இயக்கம் இருந்தே தான் தீரும். மேற்கண்ட தன்மைகள் ஒழியும் வரை இவ்வியக்கத்தையும் ஒழிக்க இந்த உலகத்தில் யாராலும் முடியாதென்பதே நமது உறுதி. ஆகையால் இதைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை.



RangaRakes tamilnavarasam.com

மற்றொரு எதிர்பாராத நன்மை என்னவென்றால் நல்ல கோடை காலத்தில் அதிலும் கோடை மூர்த்தண்யமான மத்திய காலமாகிய அக்கினி நட்சத்திரம் என்று சொல்லப்படும் கொடிய உஷ்ண காலத்தில் இந்த மகாநாடு இங்கு கூட்ட நேர்ந்தது பற்றி நான் வெகு கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன், வருகிற ஜனங்கள் வெயிலின் கொடுமையினால் உஷ்ணந் தாங்காமல் கஷ்டப்படுவார்களென்றும் ஸ்நானஞ் செய்து கொள்வதற்குக் கூட வாய்க் காலில் தண்ணீரில்லாமல் சர்க்காரால் நிறுத்தப்பட்டு பெரிய கஷ்டம் ஏற்பட்டு விட்டதே என்றும் கவலைப்பட்டு தண்ணீர் சௌகரியத்திற்காக எவ்வளவோ கஷ்டமெடுத்துக் கொண்டிருந்தேன். அதற்காக சாமான்கள் எவ்வளவோ வாங்கிப் போட்டுமிருந்தேன். அப்படியிருக்க மகாநாடு நான்கு நாளிருக்கு முன் மழை ஆரம்பித்து இரவு பகலாய் ஒரு மணி நேரங்கூட சாவகாசமில் லாமல் பெய்து கொண்டிருந்ததைப் பார்த்து நான் மிகக் கவலைப்பட்டு விட் டேன். மழைப் பெய்வதைப் பார்த்து ஊரில் பலர் பரிதாபப்பட்டிருந்தாலும் அதாவது இவ்வளவு பெரிய முயற்சிகள் எடுத்துச் செய்கிற இந்தக் காரியம் நன்றாய் நடப்பதிற்கில்லாமல் போய் விடுகிறதே என்று பரிதாபப் பட்டிருந் தாலும் சிலர் சந்தோஷப் பட்டுக் கொண்டு "சாமியையும் மதத்தையும் பெரி யார்களையும் வைதவர்கள் இதுவரையில் யாராவது உருப்படியாகியிருந் தாலல்லவா சுயமரியாதைக்காரர்கள் காரியமும் உருப்படியாகு"மென்றும் "மகா நாட்டை நடத்த விடாமற் செய்யவே கடவுள் இம்மாதிரி மழையைக் கொண்டு வந்து விட்டுவிட்டார்" என்றும் பல மாதிரி பேசினார்கள். இந்த வூரில் அநேகப் பெண்களும் இதை உண்மையென்றே நம்பி இதேப் பேச்சாக பேசிக்கொண்டுமிருந்தார்கள். ஆனால் நேற்று பகல் 11 மணியுடன் மழை நின்று ஈரோடு பட்டணத்தை நீலகிரி மலை போல் குளிர்ச்சியாக்கி வந்திருந்த ஜனங்கட்கெல்லாம் எத்தனை ஆயிரம் ரூபாய் செலவு பண்ணியிருந்தாலும் செய்ய முடியாத அவ்வளவு குளிர்ந்த காற்றையும் சௌகரியத்தையும் உண்டாக்கி விட்டது. தண்ணீர்க்காக கொண்டு வந்த பானைகள் அப்படியே கவிழ்த்து வைக்கப் பட்டிருக்கின்றன. தண்ணீர் குழாய்களெல்லாம் மூடி வைக்க வேண்டிய வேலையே சரியாய் இருக்கின்றது. ஐஸ் கட்டிகள் எல்லாம் திரும்பிப் பார்ப்பாரற்று கரைகிறது. நமது எதிரிகள் சொல்வது போல் ஒரு சாமியே இருந்து அது இந்த மகாநாட்டையே நடக்க ஒட்டாமல் செய்ய வேண்டுமென்று கருதி மழையைப் பெய்யச் செய்திருக்குமேயானால் இன் றைய நிலையைப் பார்க்கிற போது அது ஒன்றா ஏமாந்து போயிருக்க வேண்டும் அல்லது அதற்கு புத்தி வந்து நாம் என்ன செய்தாலும் மகாநாடு நடந்து தான் தீரும் என்று கருதி நம்முடன் ஒத்துழைக்க முடிவு செய்து கொண்டிருக்க வேண்டும்.

பொதுவாக மழையினால் நமக்கேற்பட்ட நன்மை இவ்வளவு அவ்வ ளவு என்று சொல்ல முடியாது. தவிர அநேக காரியங்களில் வந்திருந்த பிரதிநிதிகளை சரியானபடி கவனிக்க முடியாமல் எவ்வளவோ குறைகள் ஏற் பட்டிருக்கலாம். (ஒன்றுமில்லை என்கிற சப்தம்) என்ன இருந்தாலும் மன்னித் துக் கொள்ள வேண்டும். திடீரென்று மகாநாட்டை பதினைந்து நாள் முன் கூட்டியே நடத்த வேண்டி நேர்ந்ததால் சரியானபடி விளம்பரமும் செய்யாத தால் வேறு பல உத்சவம், பண்டிகை, கல்யாணம் ஆங்காங்கு நேர்ந்திருந் தாலும் எவ்வளவு ஜனங்கள் வரக்கூடுமென்று எதிர் பார்த்திருந்தோமோ அதற்கு இரட்டிப்பாகவே வந்து விட்டதால் எங்களால் சரியானபடி கவனிக்கப் பட்டிருக்க கூடுமென்ற நம்பிக்கையில்லை. ஆனால் எங்களுடைய அன்பிலா வது, ஆசையிலாவது, கவலையிலாவது ஒரு சிறிதும் குறைவில்லாமல் நடந்து கொண்டிருக்கிறோமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் மகாநாட்டுக்கு நன்கொடையளித்தவர்களுக்கும் நன்றியறிதலை செலுத்து கிறோம். இரண்டு மூன்று நாள்தான் வெளியில் வசூலுக்கு போனோமானாலும் போன இடங்களில் நாங்கள் எதிர்பார்த்த தொகைக்கு ஒரு சிறிதும் குறை யாமல் எங்கட்கு தாராளமாகக் கிடைத்தது. முன்றே ஊர்களில் தான் நாங்கள் வசூல் செய்தோம். அவ்வளவும் உயர்திரு வாளர்கள் சி.எஸ். இரத்தினசபாபதி அவர்களாலும் கே.ஏ. ஷேக் தாவூத் அவர்களாலும் பழனிச்சாமி அவர் களாலேயுமே வசூல் செய்யப்பட்டதாகும்.

சில இடங்கட்கு நாங்கள் வசூலுக்கு வரவில்லையென்று மனஸ்தா பப்பட்டு கொண்டதாகவும் கேள்விப்பட்டோம். இந்த காரியத்துக்கு எவ்வளவு போதுமென்று கருதினோமோ அவ்வளவுடன் நின்று கொண்டோம். திரு. பி. எஸ்.ஜி. அண்டு சன்ஸ் வெங்கட்டசாமி நாயுடு அவர்கள் நெற்றியில் பெரிய நாமத்தை போட்டுக் கொண்டு கொட்டகைக்குள் வரும் போது நீங்கள் எல்லோரும் அவரைப் பார்த்து சிரித்தீர்கள். அவர்கள் இந்த ஜில்லாவில் ஒரு பெரிய குடித்தனக்காரரும், மில் மானேஜரும் அதாவது நூல்யந்திர சாலை மானேஜருமாவார். அவர்கள் பல பள்ளிக் கூடங்களையும் தர்ம கைத் தொழிற் சாலைகளையும் அநாதை ஆசிரமங்களையும் வைத்து நிர்வகித்து வருகிறவர். நமது மகாநாட்டுச் செலவுக்கு வசூலுக்கு போனவுடன் என்ன தொகை கேட்டோமோ அதை யாதொரு பதிலும் சொல்லாமல் ரூ. 250க்கு கையெழுத் துப் போட்டு ரூபாயை கொடுத்து விட்டார்கள். நமது கொள்கைகளில் அனேக விஷயங்களில் மிகப் பற்று கொண்டவர். காரியத்திலும் நடத்திக் கொண்டு வருகிறார். சத்தியாக்கிரகம் முதலிய காரியங்கட்கு இன்னும் எவ்வளவு பணம் வேண்டுமென்றாலும் கொடுப்பார்கள், இந்த ஜில்லாவில் இவர்களைப் போலவே இன்னும் அநேக கனவான்கள் கொடுக்க காத்துக் கொண்டி ருக்கிறார்கள். ஆனதினால் பெரிய நாமத்தைப் பார்த்து அவர் ஏதோ அந்த நாமத்தால் ஏமாந்தவர் என்று கருதி விடாதீர்கள். உங்களை ஏமாற்றத்தான் அவர் அவ்வளவு பெரிய நாமம் போட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் முடிவாக இம்மகாநாட்டிற்கு உதவி செய்து பெரிதும் கஷ்டப் பட்டு உழைத்த பல பெரியார்களைப் பற்றியும் இந்த சமயத்தில் சில வார்த்தை கள் சொல்லி அவர்களுக்கும் எனது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



RangaRakes
tamilnavarasam.com

முதலாவதாக நமது இயக்க ஸ்தாபனத் தலைவராகிய உயர்திரு டபுளியூ. பி. ஏ. சௌந்திரபாண்டியன் அவர்கள் இம்மகாநாடு விஷயத்தில் செய்த உதவிக்கும் அடிக்கடி இங்கு வந்து ஒவ்வொரு விஷயத்தையும் கவனித்து எடுத்துக் கொண்ட முயற்சிக்கும் அளித்த ஊக்கத்திற்கும் இயக்கத்தின் சார்பாக அவருக்கு நன்றியறிதல் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அது போலவே வரவேற்புத் தலைவர் திரு. ஆர்.கே. ஷண்முகம் அவர்களும் அடிக்கடி இங்கு வந்து விஷயங்களை கவனித்து அப்போதைக் கப்போது நமக்கு வேண்டிய யோசனைகளை சொல்லி வந்ததுடன் தலைவர் சம்பந்தமான காரியங்கள் கடிதப்போக்குவரத்துகள் முழுவதையும் ஏற்றுக் கொண்டு வரவேற்பு கமிட்டியை நடத்தி கொடுத்ததற்கு அவருக்கும் நமது நன்றியறிதல் உரியதாகும்.

பிறகு இம்மகாநாட்டுக்கு காரியதரிசிகளாய் இருக்க சம்மதித்து முழுப் பொறுப்பையும் தங்கள் மீது போட்டுக் கொண்ட உயர்திருவாளர்கள் கோவை சேர்மேன் C.S. இரத்தினசபாபதி ஈரோடு சேர்மேன் கே. ஏ. ஷேக்தாவூது சாயபு ஆகியவர்களின் உதவிக்கு தக்க நன்றியறிதல் செலுத்த எனக்கு வார்த்தைகளே கிடைப்பது அருமையாயிருக்கின்றது.

சுருக்கமாகச் சொல்வதனால் இந்த மகாநாட்டைப் பொருத்த வரையில் அவ்விரு கனவான்களும் இல்லையானால் இந்த மகாநாடே இவ்வளவு வெற்றிகரமாய் நடந்திருக்காது என்றே சொல்ல வேண்டும். இதில் கொஞ்சங் கூட முகஸ்துதியோ கூட்டிச் சொல்வதோ இல்லை என்பதை நம்புங்கள். அவர்கள் செய்த ஒவ்வொரு காரியத்தையும் சொல்வதனால் சட்ட சபையில் கேள்விகள் சரமாரியாய் புறப்பட்டு விடும். ஆனால் அதற்கெல்லாம் இவ்விருவர்களும் பயந்தவர்கள் அல்ல. டிஸ்ட்ரிக்ட் போர்டு உதவி இன்ஜினியர் திரு. மகா வீரப்பா அவர்களும் ஓவர்சியர் திரு. விஸ்வநாதய்யர் அவர்களும் 15, 20 நாட்களாக தங்கள் ஒழிவு நேரங்களையெல்லாம் இரவும் பகலும் இக் கொட்டகைக்கே செலவிட்டார்கள். கொட்டகை விஷயத்தில் நான் சிறிது கூட கவலை எடுத்துக் கொள்ளவேயில்லை. அவர்கள் கைப்பட பந்தல் கால்கள் நட்டதும் மற்ற வேலைகள் செய்ததுமான காரியங்கள் எப்போதும் மறக்க முடியாததாகும்.

அது போலவே முனிசிபல் அதிகாரிகளும் செக்ரிடெரி திரு. ராமசாமி முதலியார், ஓவர்சியர் திரு. நாராயணசாமி முதலியார், பிட்டர் திரு. பொன்னுசாமி, சுகாதார இன்ஸ்பெக்டர்கள் திருவாளர்கள் ராமசாமி அய்யர் வேலுச்சாமி பிள்ளை ரோட்டு ஓவர்சியர் சேஷய்யங்கார் முதலியவர்களும் மற்றும் முனிசிபல் சிப்பந்திகளும் கழனியாயிருந்த இந்த இடத்தையும் மிக்க புதராயிருந்த பாதைகளையும் மிக்க ஆபாசமாயிருந்த அசிங்கங்களையும் இவ்வளவு தூரம் சிங்காரத் தோப்பு போல ஆக்கி வைத்ததுடன் ரோட் விஷயங்களிலும் சுகாதார விஷயங்களிலும் அவர்கள் எடுத்துக் கொண்ட



முயற்சிகளும் கவலைகளும் மிகவும் மிகவும் போற்றக் கூடியதாகும்.

மற்றபடி சாப்பாட்டு விஷயமாய் முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு மிக்க திருப்திகரமாய் நடத்திக் கொடுத்த திருவாளர் எம்.எஸ். முத்துக் கருப்பஞ் செட்டியாரவர்கள் செய்த உதவியைப் பற்றி நான் உங்களுக்கு அதிகமாய் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

பிரதிநிதிகள் எல்லோரும் அவர்கள் பெயரையே புகழ்ந்து சொல்லிக் கொண்டிருப்பதை நான் காதாரக் கேட்டேன். மகாநாட்டு நடவடிக்கைகள் எப்படி இருந்தாலும் வந்த பிரதிநிதிகளுக்கு தக்க ஜாகையும் நல்ல சாப்பாடும் போட்டால் போதுமென்றுதான் நான் முதலில் நினைத்தேன். அந்த காரியம் அவர் ஒப்பு கொண்டதால் எனக்கு ஒருபெரிய விடுதலை ஏற்பட்டது. இந்த ஊரில் நடக்கும் எந்த காண்பரன்சிலும் கொள்கை அவருக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் சாப்பாட்டு வேலையை அவர் ஒப்புக் கொள்வதே வழக்கம். அதற்குத் தகுந்தபடி கஷ்டப்பட்டு அதை குறைவில்லாமல் நடத்திக் கொடுப்பதும் அவர்கள் வழக்கம். அதுபோலவே இந்த மகாநாட்டில் ஏற்பட்ட வேறு குறைகள் ஏதாவது இருந்திருந்தாலும் கூட அவைகளையெல்லாம் திரு. முத்துக் கருப்பஞ் செட்டியாருடையவும் இவரது நண்பர்களுடையவும் முயற்சி மறைத்து விட்டதென்றே சொல்லுவேன்.

ஆதலால் அவருக்கு நமது நன்றியறிதல் என்றும் உரியதாகுக. வாலண்டியர்கள் தொண்டர்கள் விஷயத்திலும் அது போலவே திரு. முத்து கருப்பஞ் செட்டியார் அவர்களின் தம்பி மு. ச. சுப்பண்ணன் அவர்கள் தொண்டர் இலாக்கா காரியதரிசியாகவும் திருவாளர்கள் வரதப்பன் ஆறுமுகம் தொண்டர் தலைவராகவும் இருந்து தொண்டர்களை அன்பாய் நடத்தினதும், தொண்டர்களும் அதற்கு கட்டுப்பட்டு சிறிதும் சோம்பலும் எவ்வித வேலையிலும் வெறுப்பில்லாமலும் நடந்து கொண்டதற்கு மிக மிக பாராட்டக்கூடியதாகும். இவ்விஷயத்தில் நான் எதிர்பார்த்ததற்கு மேல் பல வழிகளிலும் அதிகமான உதவிகளையே அவர்களிடமிருந்து அனுபவித்திருக்கிறோம்.

மற்றபடி பந்தல் சிங்காரிப்பு, லைட்டுகள், கண்காக்ஷி முதலியவைகளின் பொறுப்பு முழுவதையும் ஏற்றுக் கொண்டு நடத்திக் கொடுத்த திருவாளர்கள் மாயவரம் நடராஜன், சாமி சிதம்பரனார், ராமையா, சின்னையா, லிங்கம், அழகிரிசாமி, காளியப்பன், பல்லடம் ராமசாமி, சிவானந்தம், செகப்பண்ணன், கேசவ ஐயா, சிக்கய்ய நாயக்கர், N. ராமசாமி நாயக்கர், முதலியவர்களின் உதவி குறிப்பிட்டு ,இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாததாகும். திரு. அய்யாமுத்து, S. ராமநாதன் இவர்களின் உதவி தனியாக போற்றத்தக்கதாகும். சமையல் வேலைக்கென்று விருது நகரிலிருந்து உயர்திரு செந்தில்குமார நாடார், V.V. ராமசாமி, திருவண்ணாமலை ஆகியவர்களால் அனுப்பிக் கொடுக்கப்பட்ட நாடார் சமையல்காரர்கள் செய்த



RangaRakes
tamilnavarasam.com

சமையல் பெருமையும் ருசி பாகமும் நீங்களே நேரில் அறிந்ததாதலால் அதைப்பற்றி நான் பேசாமல் அச்சமையற் காரர்களுக்கு உங்கள் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றி செலுத்துகிறேன். சமையல் பரிமாறின பண்டாரங்கள், ஆதிதிராவிடர்கள், கிருஸ்துவ மகமதியர்களும், மாசிலாமணி, மாரிமுத்து நாடார், மாரிமுத்து செட்டியார் ஆகியவர்களுக்கும் நமது நன்றி உரியதாகுக. மற்றும் மகாநாட்டிற்கு தங்கள் மனைவியார்களை அழைத்துக் கொண்டு வந்த கனவான்களுக்கும் நன்றி செலுத்துகின்றேன். கடைசியாக நமது இயக்கத் தையும் இதன் உணர்ச்சிகளையும் நேரில் இருந்து பார்த்த திரு. ஐயகர் அவர்கள் இதை வெளி மாகாணங்களிலும் பரவ முயற்சிப்பார்கள் என்று உங்கள் சார்பாய் வேண்டிக் கொண்டு என் வார்த்தையை முடிக்கின்றேன்.

*குறிப்பு: 11.05.1930 இல் ஈரோடு சுயமரியாதை மாநாட்டு நிறைவு நன்றியறிதல் உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 01.06.1930**



# சுசீந்திரத்தில்
## சுயமரியாதைப் போர்

சுசீந்திரம் என்பது திருவாங்கூர் ராஜியத்தைச் சேர்ந்த ஒரு “க்ஷேத்திர” ஸ்தலமாகும். அது திருநெல்வேலிக்கு 40-வது மயிலில் உள்ள நாகர்கோயி லுக்கு 2, 3 மயில் தூரத்தில் உள்ள கிராமம். நாகர்கோவிலிலிருந்து கன்னி யாக்குமரிக்குப் போகின்ற வழியில் இருக்கின்றது. அந்த ஊரில் உள்ள ஒரு கோவிலைச் சுற்றியுள்ள ரோட்டுகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர் கள் செல்லக்கூடாது என்ற நிர்ப்பந்தம் இப்பொழுதும் இருந்து வருகின்றது. அந்த ரோட்டுகள் திருவாங்கூர் சர்க்காரால் பொது ஜனங்களின் வரிப்பணத் திலிருந்து பாதுகாக்கப்பட்டு வருவதாகும். அந்த ரோட்டுகளுள்ள திருவாங் கூர் ராஜியமானது ஒரு இந்து அரசரால் அதுவும் ஒரு இந்து கடவுளாகிய பத்மநாபஸ்வாமி என்பதின் (தாசரால்) பிரதிநிதியால் அரசாட்சி செய்யப்பட்டு வருகின்றது. அந்த ரோட்டில் நடக்கக் கூடாது என்று சொல்லப்படும் ஜனங் கள் யாரென்றால் இந்துக்கள் என்று சொல்லப்படுபவர்களும் அந்த பத்பநாப சாமியின் பக்தர்களுமேயாவார்கள். மற்றபடி அந்த சாமியின் பக்தர்களல் லாதவர்களும் இந்துக்கள் அல்லாதவர்களுமான கிருஸ்தவர்களுக்கோ, மகமதியர்களுக்கோ, அவ்வழியில் நடப்பதற்கு யாதொரு ஆக்ஷேபணையும், தடங்கலும் சிறிது கூட கிடையாது. இது தவிர மேற்கண்டபடி இந்துக்கள் என்பவர்களில் பெரும்பான்மையான மக்களாகிய சில சமூகத்தாரைத்தவிர மற்றபடி மனிதர்கள் அல்லாத எந்த ஜெந்துவும் மலம் முதலிய எந்த வஸ்துவும் அந்த தெருவில் மேள வாத்தியங்களுடனும் பல்லக்குச் சவாரியுடனும் கூடப்போகலாம். அப்படிப் போவதில் யாருக்கும் ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் அந்த சுவாமியின் பக்தர்களான சில மனிதர்களுக்கு மாத்திரம் தான் அதுவும் இந்து என்று சொல்லிக் கொள்பவனுக்கு மாத்திரம் தான் ஒரு இந்து ராஜா ஆளும் ராஜ்யத்தில் உள்ள ஒரு தெருவில் நடப்பது மதவிரோதம் என்று இந்த 20 வது நூற்றாண்டில் மறுக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் காரியத்திற்காகவே அதாவது அதுபோன்ற ஒரு தெரு வழி நடை பாத்தியத்திற்காகவே சென்ற 1923 ம் வருஷத்தில் அதே திருவாங்கூர் ராஜியத்தைச் சேர்ந்த **வைக்கம்** என்னும் ஊரில் ஒரு தடவை சத்தியாக்கிரகம்



RangaRakes tamilnavarasam.com

செய்ய வேண்டி ஏற்பட்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்த சத்தியாக்கிரகம் சுமார் 5, 6 மாத காலம் நடைபெற்று பலர் பலதடவை சிறை சென்றும் வேறு பல கஷ்டங்களும் அனுபவித்த பிறகு அந்த வழி நடைப் பாதை எல்லோருக்கும் பொது உரிமையுடையதாக ஆக்கப்பட்டது. இப்போதும் அதுபோலவே இந்த சுசீந்திரம் வழிநடைப் பாதையும் வைக்கத் தைப் போலவே சத்தியாக்கிரகம் செய்ய வேண்டியதாகி ஏற்பட்டு இப்போது சிறிது நாளாக சத்தியாக்கிரகமும் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த சத்தியாக்கிரகத்தின் பயனால் இது வரை சுமார் 10, 15 பேர்கள் வரை சிறை சென்று இருப்பதாகவும் இனியும் 10, 12 பேர்கள் மீது கேசு நடப்ப தாகவும் சர்க்கார் மிகவும் கடுமையான அடக்கு முறையைக் கொண்டு சத்தியாக்கிரகத்தை அடக்கிவிடத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிய வருகின் றது. அதற்கேற்றாப்போல் அந்த ராஜ்ஜியம் இது சமயம் ஒரு வருணாசிரம பார்ப்பனரும் பார்ப்பன ஆதிக்கத்தில் வெறிப்பிடித்தவருமான ஒரு திவானின் ஆக்ஷியிலும் அந்த குறிப்பிட்ட இடமானது ஒரு பார்ப்பன ஜில்லா மேஜிஸ்ட் ரேட் ஆட்சியிலும் ஒரு பார்ப்பன ஜில்லா போலிசு சூப்பிரண்டு ஆட்சியிலும் இருந்து வருகின்றது. இந்த பார்ப்பன போலீசு சூப்பிரண்டு யார் என்றால் வைக்கம் சத்தியாக்கிரகத்தின் போது அரசாங்கம் திகைத்த காலத்தில் தனக்கு பூரண அதிகாரம் கொடுத்தால் 5 நிமிஷத்தில் வைக்கம் சத்தியாக்கிரகத்தை அடக்கிவிடுவதாகச் சொல்லி அரசாங்கத்தினிடம் பூரா அதிகாரம் பெற்று வந்து ஆக்ஷி செய்தவர். இவர் காலத்தில் தான் தொண்டர்களை அடித்தல் குத்துதல், கண்ணில் சுண்ணாம்பு பூசுதல், இராட்டினங்களையெல்லாம் ஒடித்து நொறுக்குதல், காலிகளை ஏவிவிட்டு சத்தியாக்கிரகிகளுடன் கலகம் செய் வித்தல், சத்தியாக்கிரகம் செய்யும் பெண்களிடம் மிக்க நீச்சத்தனமாக நடந்து கொள்ளுதல், எதிர்பிரசாரம், எதிர் பத்திரிகைகள் முதலியவைகள் செய்தல் முதலாகிய காரியங்கள் எல்லாம் நடைபெற்றதோடு திருவிதாங்கூர் ராஜ்யத் தின் இந்த மாதிரியான பெருமையை உலகத்திற்கெல்லாம் வெளிப்படுத்தி னவர். அந்த அனுபவத்தைக் கொண்டுதான் இப்போதும் திருவிதாங்கூர் அரசாங்கத்தார் அவரையே சுசீந்திரம் சத்தியாக்கிரகத்திற்கும் போட்டு இருப் பதாய் தெரிகின்றது. திருவிதாங்கூர் ராஜ்யத்தின் பெருமை மற்றொருதரம் உலகமறிய ஒரு சந்தர்ப்பம் இந்த மகானாலேயே ஏற்பட நேர்ந்தது பற்றி நமக்கு மிக்க மகிழ்ச்சியேயாகும்.

நிற்க, எது எப்படி ஆன போதிலும் சத்தியாக்கிரகம் வெற்றியான போதிலும் தோல்வியான போதிலும் இந்திய மன்னர்கள் அரசாங்கத்தில் பொதுத் தெருவில் மக்கள் நடக்க அனுமதிக்கப்படுவதில்லை என்கின்ற சேதி உலகத்திற்கு எட்டினால் போதும் என்பதே நமது ஆசை. ஆதலால் பொது மக்கள் கண்டிப்பாக அந்த சத்தியாக்கிரகத்தை ஆதரிக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொள்ளுகிறோம்.



தவிரவும் ஈரோடு சுயமரியாதை மகாநாட்டில் சம உரிமைக்காக இவ்வருடம் சத்தியாக்கிரகம் ஆங்காங்கு துவக்கப்பட வேண்டுமென்று தீர்மா னம் செய்து அதற்காக ஒரு கமிட்டியையும் நியமித்து இருப்பது யாவரும் அறிந்த விஷயமாகும். அக்கமிட்டியும் அதே சமயத்தில் ஈரோட்டில் கூடி தமிழ் நாட்டிலாவது கேரள நாட்டிலாவது சத்தியாக்கிரகம் தொடங்க வேண்டு மென்றும் அதுவும் முதலில் தெருவு, குளம், பள்ளிகூடம் முதலியவை களிலேயே தொடங்க வேண்டுமென்றும் தீர்மானித் திருப்பதையும் ஏற்கனவே பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம். ஏனெனில் தெரு, குளம், பள்ளிக்கூடம் முதலியவைகளைவிட கோயில் அவ்வளவு அவசரமானது அல்லவென்றும், கோயில் நுழைவு சத்தியாக்கிரகமானது உயர்வு தாழ்வு என்கின்ற வித்தியாச எண்ணத்தை நீக்குவதற்குத் தான் செய்யக் கூடியதே தவிர மற்றபடி கோவிலுக்குள் போவதினால் வேறு எவ்வித பயனும் இல்லை என்றும் எல்லோரும் கோயிலுக்கு போகலாம் என்றும் ஏற்பட்டு விட்டால் கோயில் பிரவேசத்தைத் தடுக்க மறியல் கூட செய்ய வேண்டிவருமென் றெல்லாம் பேசி நன்றாய் யோசனை செய்தே தான் முதலில் தெருப் பிரவேச சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதை அநுசரித்து நமது முயற்சி இல்லாமலே நமக்கு வலிய கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை நாம் நழுவ விடாமல் உபயோகப்படுத்திக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம். இதிலும் வெள்ளைக்கார சர்க்காரிடம் செய்யும் சத்தியாக்கிர கத்தை விட ஒரு ஹிந்து அரசாங்கத்தில் சத்தியாக்கிரகம் செய்ய சந்தர்ப்பம் கிடைப்பதற்கு நாம் நம்மையே மிகவும் பாராட்டிக் கொள்ள வேண்டும். ஏனெனில் நமது நாட்டு முன்னேற்றத்திற்கும் சமூக சீர்திருத்தத்திற்கும் மக்களின் சம உரிமைக்கும் இன்றைய தினம் நமது எதிரிகள் வெள்ளைக் காரர்களா? அல்லது பார்ப்பனர்களும் அவர்களைப் பின்பற்றும் நமது மூடமக்களுமா? என்பது ஒருவாறு விளங்கிவிடுவதுடன் அரசியல் மூடநம் பிக்கைக்கும் இதிலேயே நமக்கு ஆதாரம் விளங்கி விடும். ஆகையால் இதை சத்தியாக்கிரக கமிட்டியார் தயவு செய்து ஆதரித்து அதைமேல் போட்டுக் கொண்டு நடத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறோம். இன்றைய தினம் “சுசீந்திரத்தில்” தெருவில் நடக்கத் தடைப்படுத்தப்படும் மக்கள் முன் தெரிவித்தபடி இந்துக்கள் என்பதோடு அந்த நாட்டில் பெரும் ஜனத் தொகையைக் கொண்டவர்களும் கல்வி, நாகரீகம் முதலியவைகளில் முன்ன ணியில் நிற்கின்றவர்களுமான ஈழுவ சமுதாய மக்களுமாவார்கள். அவர்க ளோடு ஆசாரிகள் நாடார்கள் முதலிய பல கைத்தொழில் வியாபார மக்களு மாவார்கள். இப்படிப்பட்ட ஓர் பெரும் செல்வாக்கும் நாகரீகமும் படைத்த ஒரு கூட்டத்தாரைப் பொதுத் தெருவில் நடக்க விடுவதில்லை என்று இன்னொரு கூட்டம் ஆக்ஷேபணை செய்ய அதைச் சுயமரியாதையுள்ள எந்த மனிதன் தான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? இதை இந்த இழிவை நிவர்த்தித்து இந்த கொடுமையிலிருந்து இந்த நாட்டையும் இந்த நாட்டு மக்களையும் விடுதலை செய்ய முடியாதவர்கள் வெள்ளைக்காரர்களின்



RangaRakes
tamilnavarasam.com

சட்டத்தை மீறி அவர்களைத் தோற்கடிப்பதென்பது திரு. காந்தி சொன்னபடி விளையாட்டு பிள்ளைகள் பேச்சேயொழிய சிறிதும் கவலையும் கருத்து முள்ள பேச்சாகாது. ஆகையால் சுயமரியாதை இயக்க சத்தியாக்கிரகக் கமிட்டி யார் சீக்கிரத்தில் அதாவது அடுத்த மாதம் முதல் வாரத்திலேயே சத்தியாக்கிரக கமிட்டி கூட்டத்தை நாகர்கோவிலிலாவது திருநெல்வேலியிலாவது கூட்டி சுசீந்திரம் சத்தியாக்கிரகத்தை ஏற்று நடத்துவதோ அல்லது அதற்கு வேண்டிய உதவி செய்வதோ ஆன காரியத்தை நிச்சயித்து அதை நடத்துவிக்க வேணுமாய் கேட்டுக் கொள்ளுகின்றோம். சுசீந்திரம் சத்தியாக்கிரகம் வெற்றி பெற்றால் நமக்கு இரண்டுவித லாபமுண்டு. அதென்னவென்றால் வழி நடை சுதந்தரம் ஒன்று. பார்ப்பன ஆதிக்க அரசாங்கத்தின் கொடுமையை அடக்கிய பலன் ஒன்று. ஆகிய இரண்டு காரியங்களில் நாம் வெற்றி பெற்றவர்களா வோம். இந்த சத்தியாக்கிரகமானது 1925-வது வருஷத்தில் ஒரு தடவை ஆரம்பித்து நடத்தி திருவாங்கூர் அரசாங்கத்தாரால் சில வாக்குறுதிகளும் செய்யப்பட்டு அதனால் நிறுத்தப்பட்டதாகும். அவ்வாக்குறுதி ஏமாற்றப் பட்டதின் பயனாக இப்போது ஆரம்பிக்கப்படுகின்றதாதலால் இதற்கு முன்னையவிட இரட்டிப்பு பலம் இருக்க நியாயமிருக்கின்றது. அன்றியும் பொது ஜன ஆதரவும் அபிமானமும் அதிகமாக ஏற்படவும் இடமுண்டு. திருவாங்கூர் சட்டசபையிலும், திருவாங்கூரிலுள்ள எல்லா பொது ரஸ்தாக் களிலும், பொது சத்திரங்களிலும் பொது நீர்த்துரைகளிலும் சமஸ்தானத்தைச் சேர்ந்த எல்லா வகுப்பாருக்கும் சம பிரவேசமளிக்க வேண்டும் என்கின்ற தீர்மானமுமாயிருக்கின்றது. ஆதலால் இவைகளுக்கு விரோதமாக திருவாங் கூர் சர்க்கார் நடப்பார்களேயானால் முதலில் ஒழிய வேண்டிய ஆக்ஷி இந்திய ஆக்ஷியா? பிரிட்டிஷ் ஆக்ஷியா? என்பதும் விளங்கிவிடும்.

ஆகையால் சுயமரியாதை தொண்டர்களே! சமதர்ம தேசீயவாதிகளே! சத்தியாக்கிரகக் கமிட்டியின் முடிவை தயவுசெய்து எதிர்பாருங்கள் எதிர்பா ருங்கள் என்று மறுபடியும் மறுபடியும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 01.06.1930**



# ருஷியா விடுதலை அடைந்த விதம்

ருஷியா தேசம் விடுதலை அடைந்த விதத்தைப் பற்றி அமெரிக்கா விலுள்ள திரு. சுசீந்திர போஸ் என்னும் இந்திய கனவான் ஒருவர் எழுதி "ருஷிய மதப்புரட்சி" என்னும் வியாசத்தின் சுருக்கத்தை மற்றொரு புறம் பிரசுரித்திருக்கின்றோம்.

அதை வாசகர்கள் சற்று ஊன்றிப் படித்தால் மத சம்பந்தமாகவும், மதக்குருக்கள், மடாதிபதிகள், புரோகிதர்கள் ஆகியவர்கள் சம்மந்தமாகவும் நாம் 4, 5 வருஷ காலங்களாய் குடி அரசில் எழுதி வரும் விஷயங்களில் அநேகங்களை ஒத்து இருப்பதைக் காணலாம்.

பழய ருஷியாவில் உள்ள மத நிலைமை மத ஆச்சாரியார்கள் மடாதிபதிகள் ஆகியவர்கள் நிலைமையே தான் இன்றைய நமது இந்தியா விலும் இருந்து வருகின்றது. ஆகவே ருஷியாவின் அந்த பழய நிலை நீங்கிய பிறகு தான் எப்படி ருஷியா சுவாதீன நாடு ஆவதற்கு இடம் ஏற்பட்டதோ அது போலவே இந்தியாவும் மதக் கட்டுப் பாட்டிலிருந்தும் மத ஆச்சாரியார் கள் மடாதிபதிகள் ஆதிக்கத்தில் இருந்தும் புரோகிதர்கள் புரட்டில் இருந்தும் அடியோடு விடுபட்டால் ஒழிய உண்மையான சுவாதீன நாடாகாது என்பது நமது அபிப்பிராயமாகும்.

மதக்கட்டுப்பாட்டை ஏற்படுத்தினவர்களெல்லாம் ஒருவர்களாவது சமாதான முறையிலோ அகிம்சா தர்மத்திலோ மனச்சாட்சிப்படி நடக்க விட்டோ ஏற்படுத்தினதாகவும் அவைகளை காப்பாற்றும் முறையிலாவது நீதியையோ நியாயத்தையோ சமாதானத்தையோ கொண்டு காப்பாற்றி வந்ததாகவும் யாவராலும் கொள்ள முடியாது. எந்த மத சரித்திரத்தைப் பார்த்தாலும் யுத்தம் செய்து அடித்து, குத்தி, மிரட்டி, கொன்று, கழுவேற்றி குடலைப் பிடுங்கி மற்றும் எவ்வளவோ சித்திரவதை முதலிய கொடுமை களும் தந்திரம் புரட்டு பொய் முதலிய காரியங்கள் செய்தேதான் அவைகள் உண்டாக்கப்பட்டு இருப்பதோடு யாராவது தட்டிப்பேசினால் தர்க்கம் செய் தால், நியாயம் கேட்டால் அவர்களையும் அது போலவே அடித்தும் நாக்க ருத்தும் கண்ணைப் பிடுங்கியும் சித்திரவதை முதலியவைகள் செய்தும்



RangaRakes
tamilnavarasam.com

தண்டித்து மற்றும் பல வகையில் மிரட்டியும் பயப்படுத்தியுந்தான் காக்கப் பட்டு வந்தது, வருகின்றதே தவிர வேறில்லை. இவற்றிற்கெல்லாம் அந்த அந்த மதஸ்தர்கள் சரித்திரங்களும் மதபிரசாரம் செய்த சரித்திரங்களும் அதற்கு முன் இருந்த மதக்காரர்கள் நடந்து கொண்ட சரித்திரங்களும் இப்போதும் சில சமயங்களில் சில இடங்களில் நடந்து வருகின்ற பிரத்தியட்ச நடவடிக்கைகளும் யாவர்க்கும் நன்றாய் விளங்கும்.

ஆதியில் உலகத்தில் ஏற்பட்ட ஆட்சிகள் எல்லாம் பெரிதும் மக்களைக் காப்பதற்கல்லாமலும் நாட்டை எதிரிகளிடமிருந்து தப்புவிப்பதற் கல்லாமலும் முக்கியமாய் மதத்திற்காகவென்றே ஆதிக்கம் பெற்று பிறகு அதை ஆட்சி முறை ஆக வைத்து அரசாட்சி ஆரம்பிக்கப் பட்டு வந்ததுடன் அதையே மதத்தின் பேராலேயே நடத்தி மக்களை அடிமைப்படுத்தியதோடு அதன் பேராலேயே மக்களிடமிருந்து பணமும் பறித்து வந்து பிறகு அது மெள்ள மெள்ள தனி அரசாட்சியாக மாறினதாகவே பெரிதும் சரித்திரம் காண முடிகின்றது.

இந்திய நாட்டு சரித்திரமும் அநேகமாக மகமதியர்கள் இந்தியாவுக்கு வரும் வரை மத ஆக்ஷியாகத் தான் ஆங்காங்கு கையில் வலுத்தவன் ஆண்டு கொண்டிருந்ததாக அறியலாம். மகமதியர்களும் கிருஸ்துவர்களும் இந்தியாவுக்கு வந்து இன்றைக்கு சுமார் ஆயிரம் வருஷகாலம் ஆகியிருந் தாலும் இந்துக்கள் என்பவர்கள் மீதுள்ள பழய மத ஆதிக்கம் சிறிதும் குறைவடையாமல் இருக்கவே அன்னிய ஆதிக்கத்திற்கு இடம் கொடுத்து அரசாக்ஷியின் பேரில் அப்படியே இருந்து வர ஏற்பாடு செய்து தாராளமாய் மனம் ஒப்பியே மத ஆதிக்கமும் சிறிதும் குறைவுபடாமல் காப்பாற்றப்பட்டு வருகின்றது. ஆதலால் தான் மற்ற நாடுகளையெல்லாம் விட இந்தியாவுக்கு இன்றைய நிலையில் இரண்டு வித ஆதிக்கம் ஒழிய வேண்டி இருக்கின்ற தென்றே சொல்லுகிறோம். எனினும் மேலே சொன்னபடி மத ஆதிக்கமே அன்னிய ஆதிக்கத்திற்கு இடம் கொடுத்துக் கொண்டிருக்கிறபடியால் முதலில் மத ஆதிக்கம் ஒழிந்தால் பிறகு அன்னிய ஆதிக்கம் தானாக ஒழிய ஆரம்பித்துவிடும் என்பதே நமது கருத்து. (இன்றையத்தினம் நாம் அன்னிய ஆதிக்கம் என்று சொல்லுவது எதைஎன்றால் இந்தியர்கள் அல்லாதவர்கள் ஆதிக்கம் என்பதல்ல என்பதையும் அன்னிய நாட்டின் நன்மையை பிரதான மாய்க் கருதி ஆக்ஷி செய்யப்பட்டு வருகின்ற ஆதிக்கம் என்பதையும் ஒவ்வொருவரும் நன்றாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்)

மத ஆதிக்கமும் அன்னிய ஆதிக்கமும் ஆகிய இரண்டும் ஒரே அஸ்திவாரத்தின் மீதே கட்டப்பட்டிருக்கும் விஷயம். நன்றாய் கவனமாய் யோசித்துப் பார்த்தால் தான் விளங்கும்.

எப்படியெனில்:- மதத்தின் பேரால் நம் மக்கள் மீது இப்போது இருந்து வரும் ஆதிக்கமானது சிறிதாவது நமது நன்மையைக் கருதியது அல்லவென்



பது சிறிதாவது நமக்கோ நமது நாட்டின் நன்மைக்கோ பயன் படக்கூடியது அல்லவென்பதும் அவை சிறிதாவது நமது அறிவுக்கோ சமூக உணர்ச்சிக்கோ ஜவாப்தாரித்தனமுடையது அல்லவென்பதும் அதைப்பற்றி ஏதாவது தட்டிப் பேசுவது கூட மதத்துரோகமும் ஜனங்களின் சமாதானக் குறைவு உண்டாக்கத் தக்கதாவதும் வகுப்புத் துவேஷத்தை உண்டு பண்ணுவது ஆகும் என்பதும் ஆக எப்படி சொல்லப்படுகின்றோமோ அப்படியே தான் அன்னிய ஆதிக்கத்திலும் நாம் ஏதாவது தட்டிப் பேசினால் கண்டிக்கப்படுகின்றோம். அதாவது அன்னிய ஆக்ஷி சிறிதாவது நமது நாட்டு நன்மைக்காகவல்ல வென்பதும் அதனால் நமக்கும் நமது நாட்டுக்கும் சிறிதும் நன்மையில்லை என்பதும் நமக்கு ஜவாப்தாரித்தனமுடையதல்ல என்பதும் தட்டிப் பேசுவது ராஜத் துரோகமும் சமாதான பங்கமும் வகுப்புத் துவேஷமும் ஆகும் என்பது மாகும். ஆதலால்தான் மத ஆதிக்கத்தை நாம் முதலில் அழித்துவிட்டால் பிறகு அன்னிய ஆதிக்கத்திற்கு வலுவு தானாக குன்றிவிடும். நமக்காகவே ஆளப்படக்கூடிய ஆக்ஷி தானாக ஏற்பட்டுவிடும் என்று சொல்லுகிறோம். எனவே இந்த மேல் காட்டிய நமது தத்துவத்திற்கு ருஷியாவில் மதப் புரக்ஷி யானது ஒரு சரியான உதாரணம் ஆகும் என்று கருதித்தான் அதை வாசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

தவிரவும் ருஷியாவில் அந்தக் காலத்தில் இருந்து வந்த பணக்கார ஆதிக்கமே தான் சற்றேறக்குறைய இந்த நாட்டிலும் இப்போது இருந்து வருகின்றது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. என்னவென்றால் பணக் காரனுடைய பணம் நாட்டின் நன்மைக்கும் ஏழைகளின் கஷ்டம் நீங்குவதற் கும் பயன்படுவதாயிருந்தால் நாம் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய தில்லை. ஏனெனில் எப்படி ஒரு இராஜ்ஜியத்தின் ஆக்ஷி அந்த நாட்டு மக்களுக்கு சொந்தமான தென்றும் அது அந்த நாட்டு மக்களின் நலத்துக் காகவே பயன்படத்தான் ஆளப்பட வேண்டுமென்றும் நாம் சொல்லுகின் றோமோ அது போலவே ஒரு நாட்டின் செல்வமும் பூமியும் மலையும் ஆறும் அந்த நாட்டு மக்களுக்கு சொந்தமென்றும் அந்த நாட்டு மக்களின் நன்மைக் காக பயன்படத்தான் அவை இருக்க வேண்டியது என்பது நியாயமும் அவசியமுமாகும். அப்படி இல்லாமல் “ஆக்ஷி மாத்திரம் மக்களுக்கு பொது வானது, சொத்து மாத்திரம் எனக்கு சொந்தமானது, அதை நான் என்ன வேண்டுமானாலும் என்னிஷ்டப்படி செய்து கொள்ள எனக்கு பாத்தியமுண்டு நாட்டு நன்மையைப் பற்றியோ ஏழைகள் நன்மையைப் பற்றியோ எனக்கு கவலை இல்லை” என்று ஒரு செல்வவான் சொல்லுவானேயானால் அது சிறிதும் நம்மால் ஒப்புக் கொள்ளக்கூடிய நியாயமாகாது. ஏனெனில், பொது வாக நமது நாட்டின் வறுமை நிலைக்கு நமது நாட்டு பெரும் பெரும் செல்வவான்களும் பெரும் மிராசுதாரர்களும் பிரபுக்களும் காரணஸ்தர்கள் என்பதை நாம் சொல்லாமலிருக்க முடியாது. மத ஆக்ஷிக்காரர்கள் எப்படி தங்கள் மத உணர்ச்சி உதவியினால் மக்களை அடிமைகளாக்கி ஆக்ஷி செலுத்துகின்றார்களோ அது போலவேதான் செல்வ ஆக்ஷிக்காரர்களும்



RangaRakes
tamilnavarasam.com

தங்கள் செல்வநிலை உதவியால் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தி அடிமை களாக்கி கஷ்டப்படுத்துகின்றார்கள்.

ஆகவே மதம், அரசாங்கம், பிரபுத்துவம் ஆகிய மூன்றும் சேர்ந்து தான் நாட்டை (அதாவது நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்களாகிய) ஏழைகளை வருத்துகின்றது. ஆதலால் நாட்டுக்கு உண்மையாக விடுதலை வேண்டுமானால் இம்மூன்று துறையிலும் முறைப்படி பெரும் புரட்சி ஏற்பட் டால் தான் விடுதலையடைய முடியுமேயல்லாமல் வெறும் அரசியலைப் பற்றி அதன் அஸ்திவாரத்தை விட்டு விட்டு கூச்சல் போடுவதாலும் அரசாங்க ஆதிக்கத்தின் மீது கண்மூடிக்கொண்டு குறை கூறுவதாலும் ஒரு காரியமும் நடத்து விடாது. நிற்க மேற்கண்ட இம்மூன்று விஷயத்திலும் புரட்சி ஏற்படும் போது இம்மூன்றிற்கும் உதவியாய் இருக்கின்ற ஆயுதங்களையும் முதலில் நாம் பிடுங்கிக் கொள்ள வேண்டும். அதென்னவென்றால் அது தான் கடவுள் என்பதாகும். எப்படியெனில் ஆட்சி ஆதிக்கக்காரன் “உங்களை ஆளும்படி கடவுள் எங்களை அனுப்பினார்” என்கின்றான். மத ஆதிக்கக்காரன், உங்க ளுக்காக “உங்களை மோட்சத்திற்கு அனுப்ப கடவுள் இந்த மதத்தை ஏற் படுத்தி அதைக் காப்பாற்ற எங்களை அனுப்பினார்” என்கின்றான். செல்வ ஆதிக்கக் காரன் “முன் ஜென்மத்தில் நான் செய்த புண்ணியத்தினால் இந்த செல்வத்தை கடவுள் எனக்குக் கொடுத்தார்” என்கின்றான். ஆகவே இம் மூன்று கொடியவர்களுக்கும் (மக்கள் விரோதிகளுக்கும்) ஆயுதங்களாக இருப்பது கடவுளாகும். ஆகவேதான் அதை நாம் முதலில் ஒழிக்க வேண்டி இருக்கின்றது. ஏனெனில் அம்மூவர்களுக்கும் கடவுள் அனுகூலமாயிருப் பதால் அக்கடவுளை அவர்கள் எப்படி காப்பாற்ற முயலுகின்றார்களோ அது போலவே நமக்கு அக்கடவுள் விரோதமியிருக்கிறபடியால் நாம் விடுதலை பெற கடவுளை முதலில் ஒழிக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம். அதாவது அம்மூவரையும் பார்த்து நாம் “உங்களை கடவுள் அனுப்பினாரோ கடவுள் உண்டாக்கினாரோ உங்களுக்குக் கடவுள் கொடுத்தாரோ என்பதைப் பற்றி எங்களுக்கு கவலையில்லை. எங்களுக்கு இல்லாமல் செய்து கஷ்டப்படுத்தி உங்களுக்குக் கொடுத்து இருக்கும் கடவுளை நாங்கள் அரை நிமிஷமும் ஒப்புக் கொள்ள மாட்டோம், கால் வினாடியும் அந்தக் கடவுளை இருக்கவும் விட மாட்டோம்” என்று சொல்லி விட்ட பிறகு தான் உங்கள் ஆதிக்கங்க ளையும் ஒப்புக் கொள்ள மாட்டோம் என்று சொல்லி ஆக வேண்டும் என்கின்றோம். இந்தக் கொள்கையைக் கொண்டுதான் ருஷியர்களும் சம தர்மம் ஏற்பட வேண்டுமானால் முதலாவது கடவுள் ஒழிய வேண்டுமென்று நினைத்து அதற்காக முதல் முதலாக கடவுளைக்காட்டும் மதத்தின் பேரில் போர் புரிந்து வெற்றிபெற்று பிறகே அவர்கள் மற்ற காரியங்களும் செய்து கொள்ளத் தக்கவர்களானார்கள் என்பது விளங்குகிறது.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 01.06.1930**



RangaRakes

# கண்ணனூர் செவ்வாய் தரும சமாஜத்தின் எட்டாவது ஆண்டுவிழா

சகோதரர்களே! சகோதரிகளே!

இந்தக் கண்ணனூரிலுள்ள பழமையானதும் மிக்க பொதுஜன சேவை செய்து வருவதுமான உங்களுடைய செவ்வாய் தரும சமாஜத்தின் தலைமை வகிக்கும் பெருமையை எனக்குக் கொடுத்ததற்காக முதலில் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சமாஜத்தின் மூலமாக நீங்கள் செய்திருக்கும் பொது நல சேவைக்கும் உங்களை மிகவும் பாராட்டு வதோடு இங்குள்ள பொது ஜனங்களையும் இன்னும் அதிகமாக ஒத்துழைத்து உங்கட்கு வேண்டிய சகாயஞ் செய்து இச்சமாஜத்தால் மக்களுக்கு இன்னும் அதிகமான நன்மை ஏற்படும் படியாய் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள் கிறேன். இவ்வாண்டு விழாவுக்கு நான் தலைமை வகித்ததன் மூலம் எனது சொந்த அபிப்பிராயமாக நான் ஏதாவது சொல்ல வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்ப்பதோடு நானும் சொல்ல வேண்டியதும் எனது கடமையாக இருக்கிறது. அப்படிச் சொல்லுவதில் உங்களுடைய சமாஜத்தின் பெயராகிய தர்மம் என்பது பற்றியும் இரண்டு பெரியார்கள் உபன்யாசம் செய்த விஷயங் களாகிய பெண்கள் சுதந்தரம், தர்மம், கடவுள் என்பது பற்றியும் முறையே பேசுவது பொருத்தமானதென்று கருதுகிறேன். ஆகையால் அவைகளைப் பற்றியே சில வார்த்தைகள் சொல்லுகிறேன். முதலாவதாக தர்மம் என்பது பற்றி சொல்கிறேன்.

## தர்மம்

சகோதரர்களே! தர்மம் என்றால் என்ன? மனித வாழ்க்கையில் தர்மம் என்கின்ற வார்த்தை பெரிதும் உபயோகப்படுத்தப்படுகிறது. அதைப் பற்றி பலர் பலவிதமாக சொல்லவும் எழுதவும் படுகிறது. ஆனால் சாதாரணமாக தர்மம் என்பதற்கு பொருள் கூறும்போது தர்மம் என்பது ஒரு மனிதனின் கடமைக்கும் மனிதனின் இயற்கைத் தன்மைக்கும். ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடம் செய்ய வேண்டிய உதவிக்கும் மற்றும் ஒரு மனிதன் ஆத்மார்த்த சாதனம் என்னும் நலமடைவதற்குச் செய்ய வேண்டிய கடமை என்பதற்கும்



tamilnavarasam.com

பொதுவாக இயற்கை என்பதற்கும், உபயோகப்பட்டு வருவதோடு பெரும் பாலும் பிச்சைக்காரர்களும், சோம்பேறிகளும் ஏமாற்றுக்காரர்களும் பிழைப்ப தற்கும் ஒரு சாதனமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. எது எப்படி இருந்த போதிலும் நான் அதை நீங்கள் எந்த வழியில் உபயோகப்படுத்து கிறீர்கள் என்று கருதுகிறேனோ அதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லு கிறேன்.

அதாவது ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு செய்கிற உதவியை தர்மம் என்று கருதி அதையே உங்கள் கடமையாகவும் கொண்டு நடந்து வருகிறீர்கள் என்பதாகவே நினைத்து அதைப் பற்றியே சில வார்த்தைகள் சொல்லுகிறேன். ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்குச் செய்யும் உபகாரம், கடமை என்பவைகள் காலதேச வர்த்தமானத்துக்கேற்றது போலும் அவ்வப் போது மாறுதலடையக் கூடிய ஒரு தன்மையுடையதேயல்லாமல் மற்றபடி தர்மம் என்பது ஏதோ ஒரு காலத்தில் யாராலோ யாருக்கோ குறிப்பிடப்பட்டு அதேபடிக்கு நடந்து கொண்டிருக்கவேண்டியது அல்லவென்பதை உணர்ந்து கொண்டால் தான் நாம் உண்மையான தர்மம் செய்தவர்கள் ஆவோம் என்ப தோடு நமது தர்மமும் மக்களுக்கும் நாட்டிற்கும் பயன்படக் கூடியதாகும். அப்படிக்கில்லாமல் நமது பெரியோர்கள் செய்து வந்தார்கள்; முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள்; அவதாரங்களும் ஆச்சாரிகளும் எழுதிவைத் தார்கள்; வெகுகாலமாக நடந்து வருகிறது; அனேகம் பேர்களும் செய்து வரு கிறார்கள் என்கின்றதான காரணங்களை வைத்துக் கொண்டு கண்மூடித்தன மாக அதன் பலாபலன்களை கவனியாமல் செய்து கொண்டிருப்பது வீண் வேலையாகும்.

ஏனெனில் ஒரு காலத்தில் தருமம் என்று சொல்லப்படுவது மற்றொரு காலத்தில் முட்டாள் தனமாகத் தோன்றப்படுவதை நேரில் பார்க்கிறோம். உதாரணமாக மனிதன் கஷ்டப்பட்டு சம்பாதித்து பணம் சேகரித்து அவற றைப் பார்ப்பனர்கட்கு அள்ளிக் கொடுத்து ஆசிர்வாதம் பெறுவது மனிதனு டைய கடமையான தருமம் என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் அவை இன் றைய தினம் சுத்த மூடத்தனம் என்றும் ஏமாந்தத்தனம் என்றும் தோன்றி விட்டது. அதுபோலவே ஏழைகளை ஏமாற்றிக் கொடுமைப்படுத்திச் சம்பா தித்த பணத்தைக் கொண்டு கோயில் கட்டுவது, மோட்சத்தில் இடம் சம்பா தித்துக் கொள்வதற்காகச் செய்யப்படும் தர்மம் என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் இப்போது அதை முட்டாள் தனமென்றும், தேசத்திற்கு கெடுதியை விளைவிக்கத் தக்கதான தேசத்துரோகம் என்றும் தோன்றி அனேகர்களுக்கு, பள்ளிக்கூடம், தொழிற்சாலை, வைத்தியசாலை முதலியவைகட்கு உபயோ கப்படுத்த வேண்டியது முக்கியமான தர்மம் என்று தோன்றிவிட்டது. ஒரு காலத்தில் மூன்று வேளை குளித்து, நான்கு வேளை சாப்பிட்டு விட்டு சாம்ப லையும் மண்ணையும் பூசிக் கொண்டு உத்திராட்சத்தையும் துளசி மணியை யும் உருட்டுவது தர்மமென்று நினைக்கப்பட்டது. ஆனால் இப்போது அது



திருடர்களுடையவும் சோம்பேறிகளுடையவும் வேலையென்று நினைத்து அப்படிப்பட்ட மனிதர்களிடம் வெறுப்பு ஏற்பட்டு இரண்டு வேளையும் உடலை வருத்திக் கஷ்டப்பட்டு சாப்பிடுகின்றவர்களிடம் இரக்கமும், அன்பும், நம்பிக்கையும் ஏற்பட்டு விட்டது. ஒரு காலத்தில் கள்ளையும் சாராயத்தையும் குடிக்கக் கூடியதாகவும், ஆட்டையும் எருமையையும் பலி யாக சாப்பிடக் கூடியனதாகவும் உள்ள குணங்கள் கற்பிக்கப்பட்ட சாமி என்பதை கும்பிட்டுக் கொண்டு அவைகளை அதற்கு வைத்துப் படைத்துக் கொண்டு தாங்களும் சாப்பிடுவது கடவுள் வணக்கத் தருமமென்று கருதப் பட்டு வந்தது. இப்பொழுது அவைகள் காட்டுமிராண்டித்தனமென்று உணர்ந்து மக்களுக்கு உணர்த்தப்பட்டு வருகிறது. மற்றும் ஒரு கூட்டத் தாருக்கு ஆடும், பன்றியும் தின்பது தருமமாகயிருக்கிறது. மாடு தின்பது அதர்மமாய் இருக்கிறது. இன்னொரு கூட்டத்தாருக்கு மாடு தின்பது தருமமாக இருக்கிறது. பன்றி தின்பது அதர்மமாக இருக்கின்றது. வேறொருக் கூட்டத் தாருக்கு எந்த ஜெந்துவையும் சாப்பிடுவது தருமமாக இருக்கிறது. பிரிதொருக் கூட்டத்தாருக்கு எந்த ஜெந்துவையானாலும் சாப்பிடுவது அதர்ம மாயிருக்கிறது.

ஒரு மதக்காரருக்கே மதக் கொள்கைபடி கள்ளு, சாராயம் குடிப்பது தருமமாயிருக்கிறது. வேறொரு மதக்காரருக்கு அவைகளைத் தொடுவது அதர்மமாயிருக்கிறது. ஒரு கூட்டத்தாருக்கு மனிதனை மனிதன் தொடுவது தீட்டாகக் கருதப்படுகிறது. இன்னொரு கூட்டத்தாருக்கு யாரைத் தொட்டாலும் தீட்டில்லை என்று சொல்லப்படுகிறது. அதுபோலவே விவாக சம்மந்த முறையிலும் ஒரு கூட்டத்தார் அத்தைப் பெண்ணை மணக்கிறார்கள். மற்றொரு கூட்டத்தார் சித்தப்பன், பெரியப்பன் பெண்ணை மணக்கிறார்கள். பிறிதொரு கூட்டத்தார் சிறிய தாயார் பெண்ணை மணக்கிறார்கள். இனியொரு கூட்டத்தார் மாமன் பெண்ணை மணக்கிறார்கள். ஒரு வகுப்பார் தங்கையை மணக்கிறார்கள். வேறொரு கூட்டத்தார் யாரையும் மணந்து கொள்கிறார்கள். மற்றொரு கூட்டத்தார் விபசாரத்தனத்தை வெறுக்கிறார்கள். இன்னொரு கூட்டத்தார் விபசாரத்தனத்தை தங்கள் குல தருமமாக கொள்ளுகிறார்கள். வேறொரு கூட்டத்தார் பார்ப்பனர்களை யோக்கியமற்றவர்களென்று வெறுக் கிறார்கள். மற்றொரு கூட்டத்தார் பார்ப்பனர்களைப் புணருவது மோட்ச சாதன மென்று கருதுகிறார்கள். இப்படி எத்தனையோ விதமாக ஒன்றுக்கொன்று விபரீதமான முறைகள் தருமமாகக் காணப்படுகிறது. மேலும் இது போலவே சாஸ்திர விடயங்களிலும் ஒரு காலத்தில் மனித சமூகத்திற்கு கடவுளால் அளிக்கப்பட்ட தருமமென்று சொல்கிற மனுதரும சாஸ்திரம் வெகு பக்தி சிரத்தையோடு பின்பற்றப்பட்டு வந்தது. இப்போது அவை சுயநலக்காரர் களின் சூட்சிக்காரர்களின் அயோக்கியத்தனமான செய்கையென்று நெருப்பு வைத்து கொளுத்தப்படுகிறது. இது போலவே காலத்திற்கும் தேசத்திற்கும் அறிவிற்கும் தகுந்த படி தருமங்கள் மாறுவது சகஜமாக இருக்கிறது. உதாரணமாக உங்கள் சமாஜத்திலேயே ஒரு அதிசயமான மாறுதலைப்



RangaRakes
tamilnavarasam.com

பார்க்கிறேன். அதாவது மக்கள் இறந்துபோய்விட்டால் அவர்களை வைத்து சுடுகாட்டுக்கு எடுத்துக் கொண்டு போவதற்கு அழகான ஒரு பெட்டி செய்து வைத்திருக்கிறீர்கள். இந்த பெட்டியை அனேகருக்கு உதவி, அனேக பிணங்களை அதில் வைத்து வண்டியில் கொண்டு போனதாக உங்கள் ரிப்போர்ட்டில் வாசித்திருக்கிறீர்கள். இதை இந்துக்கள் என்பவர்கள் சற்றுக் கேவலமாகக் கருதுவதுண்டு. எனக்கு ஐந்தாறு வருடமாக இம்மாதிரி செய்ய வேண்டுமென்கிற ஆசை இருந்து வருகிறது. ஆனால் நீங்கள் செய்திருப்பது பலருக்குப் புதிதாகவும் அதர்மமாகவும் தோன்றினாலும் சீக்கிரத்தில் இந்த பழக்கம் எங்கும் தருமமாகி விடுமென்று கருதுகிறேன்.

ஆகையினால் தருமம் என்கிற விஷயத்தில் மிக அறிவைச் செலுத்தி உலகத்தையெல்லாம் நன்றாய் ஆராய்ந்தறிந்து மிக்க அவசியமென்றும் பயன்படத்தக்கது எதுவென்றும் தெரிந்து செய்வது தான் உண்மையான தருமமாகும். ஆகவே இது வரையில் நீங்கள் செய்து வந்திருக்கும் தருமங்களைப் பாராட்டுவதோடு இனியும் காலதேசவர்த்தனமானத்திற்குத் தகுந்தபடி எல்லா மக்களுக்கும் பயன்தரதக்க தர்மமாகவே செய்து வருவீர்களென்று கருதுகிறேன்.

அடுத்தாற்போல் பெண்கள் சுவாதந்திரியம்:-

## பெண்கள் சுதந்திரம்

பெண்கள் சுதந்திரம் என்பது பற்றி திருமதி. அலர்மேல் மங்கைத் தாயாரம்மாள் அவர்கள் பேசியதை நீங்கள் எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். பெண்கள் சுதந்திர விஷயத்தில் எனக்கு மிக்க ஆவல் உண்டு. என்னுடைய இயக்கத்தில் அதற்கு நான் முக்கிய ஸ்தானம் கொடுத்திருக்கிறேன். என்னுடைய அபிப்பிராயத்தில் ஒரு இந்து என்பவன் தன்னை ஒரு இந்து மதத்தான் என்று சொல்லிக் கொண்டு பெண்கட்கு சுதந்தரம் வேண்டுமென்று சொல்லுவதை ஒருக்காலும் ஒப்புக் கொள்ள முடியாது. ஏனென்றால் இந்து மதத்தில் பெண்களுக்கு சுதந்தரம் இல்லை என்பதே நீங்கள் நன்றாய் உணர வேண்டும். பெண்களுக்கு சுதந்தரம் வாங்கிக் கொடுக்க பிரியப்படுபவர்கள் அதற்கு தடையாய் உள்ளதை எதிர்க்கவும் அழிக்கவும் துணிந்தவர்களாயிருந்தால் தான் அவர்கள் உண்மையான சுதந்தரவாதிகள் ஆவார்களே தவிர மற்றபடி தடைகளை ஆதரித்து கொண்டு சுதந்திரம் பேசுகிறவர்கள் தந்திரவாதிகளே ஆவார்கள், அல்லது மூடர்களே ஆவார்கள்.

இந்து மத தருமத்தில் பெண்கள் ஈனப்பிறவி, கடவுளாலேயே விபச்சாரிகளாகப் பிறப்புவிக்கப்பட்டார்கள். சுதந்திரத்திற்கு அருகதையற்றவர்கள். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தாய் விபச்சாரம் செய்திருப்பாள் என்கிற நம்பிக்கையோடுப் பிராயசித்தம் செய்துக் கொள்ளக் கூடியவன். பெண்கள் கலியாணம் செய்து கொள்ளும் வரையில் தகப்பனுடைய பந்தோபஸ்தில்



இருக்க வேண்டும். கலியாணம் செய்து கொண்ட பிறகு புருஷனுடைய பந்தோபஸ்திலிருக்க வேண்டும். புருஷன் இறந்த பிறகு மகனுடைய பந்தோபஸ்திலிருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒழுக்க வீனர்களாய்ப் போய் விடுவார்கள். பெண்களுக்குச் சொத்து இருக்க கூடாது. அவர்களிடத்தில் புருஷர்கள் உண்மை பேசக்கூடாது, ரகசியம் சொல்லக் கூடாது. இன்னும் இவைபோன்ற எத்தனையோ நிபந்தனைகள் தரும சாஸ்திரத்திலும் கலியுகத்திற்கு ஆதாரமான பராசரஸ்மிருதியிலும் மற்றும் அவைகளை ஆதரிக்கும் இதிகாசப் புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவைகளை (இந்த புஸ்தகங்களையும் சாஸ்திரங்களையும்) ஒப்புக் கொள்ளுகிறவனும் உண்மையான சநாதன ஹிந்து என்று சொல்லிக் கொள்ளுகிற எவனுக்கும் பெண்கள் சுதந்திரத்தைப் பற்றி பேச உரிமை இல்லை என்பதே தான் எனது அபிப்பிராயம்.

இந்த விஷயத்தில் திராவிட தர்மமோ, சமண தருமமோ எல்லாம் ஒரேவித யோக்கியதைக் கொண்டதே என்பது எனது அபிப்பிராயம். தெய்வத் தன்மை பொருந்தியவரென்று சொல்லும் திருவள்ளுவர் என்பவர் கூட தம் பெண்சாதியை விபசாரியா பதிவிரதையா என்று பரிட்சித்துப் பார்க்க ஆசைப்பட்டு மணலை சோறாகச் சமைக்கச் சொல்லி அந்த அம்மாளும் அது போலவே சமைத்துப் போட்ட பிறகே தான் கலியாணம் செய்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இந்தப்படி பரீட்சை செய்து பார்த்தால் இன்றையதினம் உலகத்திலுள்ள பெண்கள் எல்லாம், இங்கு இருக்கிற பெண்கள் எல்லாம் விபசாரிகளென்று தான் நாம் தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் ஒரு சகோதரியாலும் மணலை அரிசி சாதமாக சமைக்கவோ, மழை பெய்ய சொல்லவோ, பச்சை வாழைத்தண்டுவைக் கொண்டு சமையல் செய்யவோ முடியாதென்று சொல்ல வேண்டியிருக்கிறது. வேறு எந்த காரியத்துக்காகவும் இந்து மதத்தை ஒழிக்காமல் தாட்சண்யம் பார்ப்பதாயிருந்தாலும் பெண்களுடைய சுதந்திரத்தை உத்தேசித்தாவது இந்து மதமென்பது அழிய வேண்டியது மிக்க அவசியமாகும். இந்து மத புராண இதிகாசங்களில் புருஷன் தாசி வீட்டுக்கு கூட்டிக் கொண்டு போனதாகவும், புருஷன் குஷ்டரோகியாகி விட்டதால் அவனைக் கூடையில் சுமந்துக் கொண்டு போனதாக நளாயினி முதலிய கதைகள் சொல்லப்படுகிறது. எவ்வளவு அக்கிரமும் கொடுமையுமானக் கொள்கை இது என்பதை யோசித்துப் பாருங்கள். என்னுடைய மகள் நளாயினியைப் போல் இருப்பாளானால் கட்டாயம் அவளை நான் விஷம் வைத்துக் கொன்று விடுவேனேயொழிய குஷ்ட ரோகியை சுமந்து கொண்டு தாசி வீட்டிற்குக் கொண்டுபோய் விடும்படிப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். பெண்கள் விபசாரிகள் என்பதை ஆதரிக்க எழுதி வைத்த ஆதாரங்களில் ஒன்று தான் பாரதம் என்பது எனது அபிப்பிராயம். ஏனெனில் பாரதத்தின் முக்கிய பாத்திரங்களில் ஒன்றான திரௌபதை என்பவள் தனக்கு ஐந்து புருஷன்மார்கள் உண்டு என்றும் அவ்வளவும் போதாமல் ஆறாவது



RangaRakes tamilnavarasam.com

புருஷன் ஒருவன் மீது தனக்கு ஆசையிருந்தது என்றும், ஆதலால் தான் விபசாரி என்றும் உலகத்தில் பெண் தன் புருஷனைத் தவிர வேறு ஆண்களே இல்லாமலிருந்தால்தான் பெண்கள் பதிவிரதையாய் இருக்க முடியுமென்றும் ஓர் உயர்குலப் பெண்ணேத் தன் வாயினால் சொன்னதாக எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அரிச்சந்திர புராணத்தில் தன் பெண் ஜாதியை பல சொத்துகளில் ஒன்றாகக் கருதி வேறு எவனுக்கோ விலைக்கு விற்றதாக வும், அவளும் தன்னை ஒரு உண்மையான அடிமை என்பதை ஒப்புக் கொண்டு வாங்கப்பட்டவனிடம் தொண்டு செய்ததாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. வேறு "புண்ணிய" புராணங்களில் அடியார்கட்கு பெண்சாதி மார்களைக் கூட்டிக் கொடுத்ததாகவும் அந்தப் பெண்களும் அப்புருஷர்கள் வாக்கைத் தட்டக்கூடாது என்று கருதி அடியார்களிடம் போய் படுத்துக் கொண்டதாகவும், சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும் சில நீதிக் கதைகளில் தங்கள் புருஷன்மார்களுடைய வைப்பாட்டிகளுக்குத் தொண்டு செய்ததா கவும் சொல்லப்பட்டிருக்கிறது. இராமாயணம் என்கிற இதிகாசத்தில் ஒருவன், ஒரு நீதியான சக்கரவர்த்தி அறுபதினாயிரம் பெண்சாதிகளை மணந்து கொண்டதாகவும் பட்டத்துக்கு தன் சொந்த அரண்மனையில் வேறு மூன்று பெண்டாட்டிகளை மணந்து கொண்டிருந்ததாகவும், யாகத்தில் அவர்களைப் பார்ப்பனர்களுக்குத் தன்னுடைய சொத்துவைப் போல கருதித் தருமமாக கொடுத்து விட்டதாகவும் அவர்களாலே பெண்களை வைத்து நிர்வகிக்க முடியாமல் திரும்பவும், பணம் வாங்கி கொண்டு ராஜாவுக்கேக் கொடுத்து விட்டதாகவும், இம்மாதிரி பண்ட மாற்றுதலுக்கு பெண்களை உபயோகப் படுத்தினதாகச் சொல்லப்படுகிறது. இன்னும் நம்முடைய பழைய அரசர்கள் ஒருவராவது ஒரு பெண்சாதியுடன் இருந்ததாகவோ, பெண்சாதிகளை சமமாகவோ காண்பதற்கில்லை. அப்படி எங்காவது காணப்படுவதாயிருந்தா லும் அது ஒருக்காலும் மேற்படி மததர்மங்கட்கு முரணானது என்று தான் சொல்ல வேண்டும். இது வரையிலும் மக்கள் பெண்கள் சுதந்திரம் என்று பேசிக் கொண்டு வந்ததெல்லாம் வெறும் புரட்டும் முன்னுக்கு பின் முரணுமாய் முடிந்திருக்கிறதே தவிர காரியத்தில் உண்மையாகப் பெண்கள் விடுதலைக்கு மார்க்கங்கூட கண்டுப்பிடிக்கப்படவில்லை என்பது தான் எனது அபிப்பிராயம். பெண்கள் விடுதலைக்கு வெளியில் வருபவர்கள் பெண் சம்மந்தமான இந்துமத தர்மத்தையும், சாஸ்திரத்தையும், புராணத்தையும், இதிகாசத்தையும் நீதிக் கதையையும் ஒதுக்கி வைத்து விட்டுத்தான் வர வேண்டும். அப்படிக்கில்லாமல் மேற்கண்ட அழுக்கு மூட்டைகளைச் சுமந்து கொண்டு யார் எங்கு போய் பெண்கள் சுதந்திரம் பேசினாலும் அது கட்டுப் பாடு உள்ள அடிமை பிரசாரமாகத்தான் முடியுமே தவிர அது சிறிதும் விடுத லையை உண்டாக்காது. மற்றும் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும் என்று சொல்லி எழுத்து வாசனையுண்டாக்கி அவர்கட்கு அரிச்சந்திர புராணத்தையும், நளாயினி கதையையும், இராமாயணத்தையும், பாரதத்தையும் படிக்க வைத்தால் பின்னும் அதிகமாக அடிமைகள் ஆவார்களா? சுதந்தர



மடைவார்களா? என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். இவற்றை எல்லாம் விட கற்பு என்கின்ற ஒரு பெரிய கற்பாறை அயோக்கியத்தனமாய் அவர்கள் தலைமீது வைக்கப்பட்டிருக்கின்ற வரையில் ஒரு நாளும் பெண் மக்களை உலகம் முன்னேற்றமடையவோ, சுதந்தரமடையவோ ஒருக்காலும் முடியவே முடியாது. கற்புக்கு லட்சணம் சொல்கிறபோது ஒரு பழமையான தமிழ் நூலில் காணப்படும் ஒரு வார்த்தை எவ்வளவு கடுமையான அடிமைத்தனத்தை மனதில் வைத்து உண்டாக்கப்பட்ட தென்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். அதாவது யாராவது ஒரு புருஷன் ஒரு பெண்ணைப் பார்த்து அவளை தன் மனதில் நினைத்து விட்டானேயானால் அந்த பெண்ணுடைய கற்புக் கெட்டுப் போய்விட்டதாம். ஏனெனில் அந்த பெண் கற்புடையவளாய் இருந்திருந்தால் மற்றொரு மனிதன் அவளை மனதில் நினைத்திருக்க முடியாதாம். எவ்வளவு (அ) நீதி என்பதை நினைத்துப் பாருங்கள்! எந்த நிர்ப்பந்தமானாலும், எந்தக் கட்டுப்பாடானாலும், எந்த தருமமானாலும், ஆணுக்கும், பெண்ணுக்கும், இருவருக்கும் சமமாக விருப்பதனால் அதைப் பற்றி நமக்குக் கவலை யில்லை. ( தொடர்ச்சி 29.06.1930 குடி அரசு இதழ் )

*குறிப்பு : 01.061930 இல் கண்ணனூரில் ( செவ்வாய் பாகத்தில் உள்ள தர்ம சமாஜ மண்டபத்தில்) நடைபெற்ற தர்ம சமாஜத்தின் எட்டாவது ஆண்டுவிழா – தலைமை – தொடக்கவுரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 08.06.1930**



RangaRakes
tamilnavarasam.com

# மறுபடியும் பார்ப்பனர் மகாநாடு

"குடி அரசு" ம் சுயமரியாதை இயக்கமும் ஏற்பட்டது முதல் தமிழ் நாட்டில், பார்ப்பனர்கள் பிராமண மகாநாடு என்றும் வருணாச்சிரம தரும மகாநாடு என்றும், ஆரிய தர்ம பரிபாலன மகாநாடு என்றும், சநாதந தர்ம மகாநாடு என்றும், ஆஸ்திக மகாநாடு என்றும் இந்து மத தர்மமகாநாடு என்றும் இப்படி பல்வேறு பெயர்களால் அடிக்கடி மகாநாடுகளைக் கூட்டுவதும் இந்து மதம், வேதம், சாஸ்திரம், புராணம், ஸ்மிருதி, இதிகாசம், மோட்சம், நரகம் என்பவைகளைப் பற்றிப் பேசி நிலைநிறுத்தித் தங்களை மிக்க உயர்ந்த ஜாதிக் காரர்கள் என்று தாங்களே நினைத்துக்கொண்டு, தங்களுக்கு தனி மரியா தையும் தனி சுதந்திரமும் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டு, பார்ப்பனர்கள் தவிர மற்றவர்களையெல்லாம் குறை கூறிக் கொண்டும், அவர்கள் முன்னேற்றத்தைப் பற்றி ஆத்திரமும் பொறாமையுங் கொண்டு அதற்குத் தடைகளைக் கற்பிப்பதும் ஆகிய காரியங்கள் செய்து வருவதோடு, ஸர்க்காரையும் தங்களிஷ்டப்படி நடக்க வேண்டுமென்றும், அதற்கு விரோதமாய் நடந்தால் ஸர்க்காருக்கு விரோதிகளாய் உள்ளவர்க ளிடம் சேர்ந்து கொள்ளுவோம் என்று பயப்படுத்துவதும் ஆகிய காரியங்க ளைச் செய்து கொண்டே வந்திருக்கிறார்கள். இந்த கொள்கையை அனுச ரித்தே சென்ற மே மாதம் 31 ம் தேதியில் கும்பகோணத்தில் "சென்னை மாகாண பிராமண மகாநாடு" என்னும் பேரால் ஒரு மகாநாட்டைக் கூட்டி சில பார்ப்பனர்கள் சேர்ந்து சீர்திருத்த சம்பந்தமான பல கொள்கைகளையும், சட்டங்களையும் எதிர்த்துப் பேசி கண்டித்துத் தீர்மானம் செய்திருப்பதோடு சர்வகட்சி மகாநாட்டில் பிராமணர்களுக்கென்று பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்றும், சாரதா சட்டத்தை எடுத்து விட வேண்டுமென்றும், டாக்டர் கவர் மசோதாவை நிறைவேற்றி வைக்கக் கூடாதென்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்த மகாநாட்டிற்கு ஸர்க்கார் உத்தியோகத் தில் வெகுகாலம் சேவை செய்து பென்ஷன் வாங்கிக் கொண்டிருக்கும் ஒரு ஐயங்கார் பார்ப்பனர் வரவேற்பு அக்கிராசனராகவும், சென்னை நீதி ஸ்தலத் தில் வெகுகாலம் வக்கீலா யிருந்தும் சென்னை ஹைகோர்ட்டில் சில காலம் ஜட்ஜ் ஆகயிருந்தும் லட்சக்கணக்கான ரூபாய்கள் சம்பாதித்து இப்பொழுதும் வக்கீல் உத்தியோகத்தில் மாதம் ஆயிரக்கணக்காக பணம் சம்பாதித்துக்



RangaRakes

கொண்டிருக்கும் திரு. வி. வி. சீனிவாசையங்காராகிய மற்றொரு ஐயங்கார் பார்ப்பனர் மகாநாட்டின் தலைவருமாவார். இவ்விரு ஐயங்கார்களும் மகா நாட்டில் வரவேற்பு அக்கிராசனர் என்ற முறையிலும், மகாநாட்டுத் தலைவர் என்கிற முறையிலும் செய்திருக்கும் பிரசங்கங்களைக் கவனித்துப் பார்த்தால் பார்ப்பனப் புரட்டுகள் என்பதும், அவர்கள் செய்துவரும் சூட்சிகள் என்ன வென்பதும், அவர்கள் நம்மை எவ்வளவு கேவலமாகக் கருதி ஏமாற்றப் பார்க்கிறார்களென்பதும், சீர்திருத்தங்களுக்கும், முன்னேற்றங்களுக்கும், மக்களின் ஒற்றுமைக்கும், சமத்துவத்திற்கும் விடுதலைக்கும் பார்ப்பனர்கள் எவ்வளவு விரோதிகளாய் இருந்து வந்திருக்கிறார்கள் என்பதும், இன் றைக்கும் இருக்கிறார்கள் என்பதும் நன்றாய் விளங்கும்.

உதாரணமாக வரவேற்பு அக்கிராசனர் திரு. இராமானுஜம் ஐயங்கார் "இந்த தேசத்தை நம்முடைய தேசத்தார் ஆளுவதாய் ஏற்பட்டால் அப்போது நமது நிலை என்னமாயிருக்கும் என்கின்ற விஷயத்தில் எனக்கு மிக பயமாயிருக்கிறது" என்று சொல்லி பிறகு "அதற்கு ஆதாரமாக இரண்டு சங்கதிகளை தெரிவிக்கிறேன். அதாவது சில மாதங்களுக்கு முன்னால் செய்யப்பட்ட கலியாணச் சட்டம் என்பது ஒன்று; அப்பிராமணர்களுக்கு நம்மிடத்தில் இருக்கும் விரோதபாவம் என்பது மற்றொன்று" என்று சொல்லி யிருக்கிறார். அந்த விரோதபாவத்துக்கு ஆதாரங்கள் காட்டும் போது எல்லா வகுப்பார்களுக்கும் சம சந்தர்ப்பம் உத்தியோகங்களில் கிடைக்கும் படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார். இதைக் காட்டுகிற முறையில் ஸர்க்காரார் நல்ல வேலைக்காரர்களாயும், பரீட்சையில் தேறினவர்களாயும் பார்த்து உத்தியோகங்களுக்கு நியமித்துக் கொண்டிருந் ததை மாற்றி இப்பொழுது மற்றவர்களை (அதாவது கெட்ட வேலைக்காரர் களையும் பரீட்சையில் தேறாதவர்களையும்) வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்திருப்பதாகச் சொல்லுகிறார்.

இந்த இரண்டு காரணங்களையே பிரிட்டிஷ் அரசாங்கம் மாறி இந்தியர்களால் இந்தியாவை ஆளப்படும் நிலைமை ஏற்பட்டு விட்டால் தங்க ளுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்கு முக்கிய உதாரணமாக எடுத்துக் காட்டி யிருக்கிறார். ஆகவே இந்த நாட்டிற்கு அந்நிய அரசாங்கம் தான் இருக்க வேண்டும் என்கின்ற விஷயத்தில் தங்களை உண்மையான பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களுக்கு எவ்வளவு கவலையிருந்து அந்த அந்நிய ஆட்சிக்கு அவர்கள் எவ்வளவு உதவி செய்து வந்திருக் கிறார்கள் என்பது நன்றாய் விளங்கும். இது தவிர வேதத்தை பிராமணர்கள் எல்லோரும் படித்து அதன் படியே எல்லோரும் நடக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். நிற்க, தீண்டாமை விஷயமும், ஆலய பிரவேச விஷய மும், வேதத்திலும் தர்ம சாஸ்திரத்திலும் கண்டிப்பாய் சொல்லியிருக்கிறபடி யால் அதற்கு விரோதமாக நடந்தால் மற்ற விஷயங்களில் வேதமும் தர்ம சாஸ் திரமும் அலட்சியஞ் செய்யப்பட்டு விடுமாதலால் தீண்டாமை விலக்குவ



tamilnavarasam.com

தற்கும் தீண்டாதார்களை ஆலய முதலியவைகளில் அனுமதிப்பதற்கும் கண்டிப்பாய் இடங்கொடுக்கக் கூடாதென்று சொல்லியிருக்கிறார். ஆகவே பார்ப்பனர்கள் வேதத்தையும் சாஸ்திரத்தையும் காப்பாற்றுவதற்காக தீண் டாமை விலக்குக் கூடாதென்றும், ஆலயங்களிலும், தெருக்களிலும் பிரவே சிக்க விடக் கூடாதென்றும் சொல்லப்படுவதானால் வேதமும், சாஸ்திரமும் காப்பாற்றப்பட்டுவிட்டால் வேதத்தின் படியும் சாஸ்திரத்தின் படியும் நமது நிலைமை என்னமாய் இருக்குமென்பதை வேத சாஸ்திரங்களில் நம்பிக்கை யுள்ள ஆஸ்திகர்களையும் இந்துக்களையும் யோசித்துப் பார்க்கும் படி வேண் டிக்கொள்ளுகிறோம். கடைசியாக மகமதியர்கள் செய்த பலாத்காரங்க ளுக்கும் கிறிஸ்தவர்கள் செய்த சூட்சிகளுக்கும் தப்பிப் பிழைத்த நாம் இனி எதற்கும் பயப்பட வேண்டியதில்லை என்பதாகச் சொல்லி தைரியமும் காட்டிக் கொண்டிருக்கிறார்.

நிற்க மகாநாட்டின் தலைவர் திரு.வி.வி. சீனிவாசையங்கார் அவர் களும் முன் பேசிய வரவேற்பு அக்ராசனரை தழுவியே பேசியிருப்பது குறிப் பிடத்தக்கதாகும். அதில் அவர் கொஞ்ச காலத்திற்கு முன்பு இந்தியாவில் பிரமுகர்களும் பாமர ஜனங்களும் பிரிட்டீஷ் கவர்ன்மெண்டார் செய்திருக் கும் நன்மைகளைப் பாராட்டி இந்தியாவிற்குப் பிரிட்டீஷ் ராஜ்யத்தை அனுப்பியதற்காகக் கடவுளுக்கு நன்றி கூறுவது வழக்கம் என்றும், ஆனால் இப்போது சுயேச்சையடைய பிரதிநிதி ஸ்தலங்கள் வேண்டுமென்று கருதி மேல் நாட்டு ஜனநாயக ஸ்தாபனங்களை ஏற்படுத்தும் நோக்கத்தை கொண் டிருக்கிறார்களென்றும் இது பெரிய தவறு என்றும் அதைவிட ஆபத்தான காரியம் வேறொன்றும் இல்லை என்பதாகத் தான் நினைப்பதாகவும் சொல்லி யிருக்கிறார். சீர்திருத்தக் கோரும் எவரும் ஜனங்களுடைய தன்மையையும் பழைய அனுபவங்களையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டு மென்றும் ஆதலால் நமக்கு சீர்திருத்தம் கூடாதென்றும் சொல்லியிருப்ப தோடு, அதற்கு உதாரணமாக இப்பொழுது இதுவரை கிடைத்த சீர்திருத் தங்களில் பெருத்த அதிகார நிருவாகம் மூன்றாந்தரமான மனிதர்களிடம் போய் விட்டதென்றும், ஆதலால் அது கூடாதென்றும், இத்தேசத்திற்கு அருகதையில்லாத சீர்திருத்தம் கொடுபட்டதால் இம்மாதிரி கஷ்டம் ஏற்பட்டதென்றும் சொல்லி யிருக்கிறார். ஆகவே அதனாலும் பார்ப்பனர் களினுடைய சுயராஜியம் என்ன என்பதும், எப்படியானால் அவர்களுக்கு சுயராஜியம் இஷ்டம் என்பதும், எப்படியானால் சுயராஜியம் வேண்டாமென் பதும் இதனால் நன்றாய் விளங்கி விட்டது. தவிர பிராமணர்களிடம் மற்றவர் கட்கு ஏற்பட்ட துவேஷத்தினால் மதம், கடவுள் பல நூற்றாண்டுகளாக பிராம ணர்கள் பாதுகாத்து வந்த கதைகள் பாரமார்த்தீக லட்சியங்கள் ஆகிய இவைக ளுக்கு விரோதிகளாக பிராமண ரல்லாதார் ஆகிவிட்டதாகவும் மிக்க வருந்து கிறார். ஆகையால் இவைகளைக் காப்பாற்றத் தங்களுக்குள் ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டுமென்றும் ஆசைப்படுகிறார். அதோடு சுயமரியாதை இயக்கம் செய்யும் வேலைகளைப் பார்த்துக் கொண்டு இனித் தூங்கிக் கொண்டிருந்தால் காரியங்கெட்டுப் போகுமென்றும் மிக்க வருந்துகிறார். அதோடு ருஷியாவின் உதாரணத்தைப் பின்பற்றுகிறவர்களும் பலர் இருக்கிறார்களென்றும் மிக்க ஓலமிடுகிறார். ஆகவே பிராமண மகாநாடு என்பதும் பிராமணியம் என்பதும் வேதம், கலை, ஆத்மார்த்தம் என்பதும் பார்ப்பனர்களால் எதற்காக காப்பாற்றப்படுகிறதென்பதும் இப்போதாவது பொது ஜனங்கள் அறியலாமென்று நினைக்கின்றோம்.

இதை நம்மவர்களிலேயே உள்ள சில பண்டிதர்களும் அழுக்கு மூட்டைகளும், வெறுந்தலைப் பணக்காரர்களும் தெரிந்திருந்தாலும் அப் பார்ப்பனர்களுக்கு அஞ்சித் தங்கள் வயிறு வளர்ப்பதையும் போலி கௌரவத்தையும் உத்தேசித்து அவர்களோடு கூடவே அவர்கள் ஆட்டத் திற்குத் தகுந்த தாளம் போடுகிறார்கள். ஆதலால் மற்றவர்களாவது இந்த சூட்சியையறிந்து பார்ப்பன ஆயுதங்களுக்குக் கழுத்தைக் கொடுக்க மாட்டார் களென்று நம்புகிறோம். தவிர பிராமணர்கள் தங்களுடைய பிராமணீயத்தை விட்டுவிட்டதினாலும் வேதம் படிக்காததினாலும், ஆத்மார்த்தத்தைக் கருதாததினாலும் தங்கட்கு இம்மாதிரி கஷ்டம் வந்திருப்பதாக இருவரும் சொல்லியிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் நாம் சிறிதும் ஆட்சேபனையோ தடங்கலோ செய்வதில்லை என்பதை நாம் உண்மையாகவே பார்ப்பனர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். ஒவ்வொரு பார்ப்பனரும் இப்போது அவர்கள் செய்யும் தொழிலை விட்டுவிட்டு வேதம் படிக்கப் போவதையும் மூன்று வேளை குளித்து விட்டு ஆறுகாலம் சந்தியாவந்தனம் செய்வதையும் காயத்ரீயை ஜபிப்பதையும் பிராணாயாமம் பண்ணுவதையும் நாம் சிறிதும் ஆட்சேபிக்கப் போவதில்லை. அது விஷயத்தில் நமக்கு எவ்வித நஷ்டமு மில்லை. ஆனால் அதற்காக நம்மை வந்து காசு கேட்கக் கூடாதென்றும் இந்தக் காரியங்களுக்காக இவர்களுக்கு நமது மூட சிகாமணிகள் பிச்சைக் கொடுக்கக்கூடாதென்றும் வெட்டியில் சோறு போடக்கூடாதென்றும் பார்ப்ப னரல்லாத மேற்படி மூடசிகாமணிகளை மாத்திரம் வேண்டிக் கொள்ளு கிறோம்.

இந்தப் பார்ப்பனர்களும் இந்தக் காரியங்களைத் தங்களுடைய மோட் சத்திற்கும், ஆத்மார்த்தத்திற்கும் செய்து கொண்டிருந்தால் போது மென்றும் நமக்காக நமது மோட்சத்திற்காக ஒன்றும் செய்ய வேண்டா மென்றும் கேட்டுக் கொள்ளுகிறோம். கடைசியாக நாம் சொல்லுவது என்ன வென்றால் இந்த இருபதாவது நூற்றாண்டில் ருஷியாவையும் ஜப்பானையும் சைனாவையும் துருக்கியையும் பார்த்த இந்த இரண்டு அய்யங்கார் பார்ப்பனக் குள்ளநரிகள் பிராமண மகாநாட்டைக் கூட்டிக் கொண்டு பாரமார்த்திகத்தையும் ஆத்மார்த் தத்தையும் பற்றிப் பேசி, நம்மை ஏமாற்ற நினைக்கிறார்களே என்றால் இதற்கு முன் இருந்தவர்கள், மூட ஜனங்கள் காலத்தில் எவ்வளவு மோசங்கள் செய்தி ருப்பார்கள்? என்பதை யோசித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 08.06.1930**



RangaRakes tamilnavarasam.com

## திருவாரூரில் ஈ. வெ. இராமசாமி

### சுயமரியாதை இயக்கம்

தலைவர் அவர்களே!

சகோதரர்களே! சகோதரிகளே!

முதலாவதாக இக்கூட்டத்திற்கு ஒரு மணிநேரம் தாமதப்பட்டு வந்ததற்கு வருந்துகிறேன். காரணம் நமது சிதம்பரனார் அவர்களுக்கு சற்று உடல் நலிவு ஏற்பட்டு அவருக்குக் காயலா 103 டிகிரி இருந்தபடியினால் கொஞ்சநேரம் அவருக்காக காத்திருக்கும்படி நேரிட்டது. அதனாலேயே தான் நீங்கள் மாலையில் ஏற்பாடு செய்திருந்த மற்றொரு ஊர்வலத்தைக் கூட நான் ஒப்புக் கொள்ள முடியாமற் போய் விட்டது. ஆகையால் அதற்காகவும் எனது வருத்தத்தைத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். அன்றியும் திரு. சிதம்பரனார் அவர்களுக்கும் – திருமதி சிவகாமி அம்மாள் அவர்கட்கும் ஈரோட்டில் சுயமரியாதை கலப்பு “விதவை” திருமணம் நடைபெற்றதை முன்னிட்டும் அவர் இந்த ஊர் பாடசாலைக்கு மாற்றப்பட்டதை முன்னிட்டும், அவர்கள் இருவரும் இந்த ஊருக்கு வரும் போது நானும் எனது மனைவியாரும் கூடவே வரவேண்டுமென்று இவ்வூர் நண்பர்கள் பலர் கேட்டுக் கொண்டதிற்கிணங்க இங்கு வந்தோம். ஆயினும் வந்த சமயத்தில் திரு. சிதம்பரனாருக்குக் காயலா ஏற்பட்டு விட்டதால், அவர் வரமுடியாமல் திருமதி சிவகாமி இக்கூட்டத்திற்கும் வந்திருக்கிறார்கள். திரு சிதம்பரனார் அவர்கள் நமது இயக்கத்துக்காக பாடுபடுபவர்களில் மிகவும் உண்மையான உழைப்பாளியாவார். அவருக்கு சீக்கிரம் காயலா குணமாகிவிடுமென்று நம்பியிருக்கிறேன். திருமதி சிவகாமி அம்மாளும் ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்து இந்த ஜில்லாவிலேயே ஒரு பெரிய குடும்பத்தில் புகுந்தவர். திருமதி சிவகாமியின் முதல் கணவர் பி. ஏ. படித்தவரும் சுமார் இரண்டு மூன்று லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட செல்வந்தரென்றும் உங்கள் எல்லோருக்கும் தெரியும். அப்பேற்பட்ட பெருங் குடும்பங்களில் கலப்பு மணம் முதலியன ஏற்படுவது நமக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. திரு. சிவகாமி பதினாறு பதினேழு வயதுள்ள சிறு பெண்ணாகயிருந்த போதிலும் நமது இயக்கத்தில் பற்றுள்ளவரும், நல்ல கல்வியுள்ளவருமான ஒரு கணவன் இருந்தால் போதும் என்கின்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்ததானது நமது இயக்கத்தின் பலனாய் பெண்கள் உலகம் எவ்வளவு முற்போக்கடைந்திருக்கிறதென்பதை நீங்கள் உணர்வீர்கள்.



சகோதரர்களே! இனி காலை முதல் இதுவரையிலும் எங்கட்குச் செய்த ஊர்வலம் விருந்து முதலிய உபசாரத்துக்கும், வாசித்துக்கொடுத்த வரவேற்பு பத்திரங்கட்கும், எனது நன்றியறிதலைச் செலுத்திக் கொண்டு சில வார்த்தைகளால் அதற்குப் பதில் கூற வேண்டியவனாக யிருக்கின்றேன். உண்மையிலேயே நீங்கள் செய்த இவ்வளவு பெரிய ஆடம்பரங்களும் புகழ்ச்சி உரைகள் கொண்ட பத்திரங்களும் எனக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லாததும், சிறிதும் பொருத்தமில்லாததுமென்பதோடு நினைக்க நினைக்க நான் வெட்கப்படக் கூடியதாகவேயிருக்கிறது. என்றாலும் இந்த இயக்கத்தில் உங்களுக்குள்ள அளவு கடந்த உணர்ச்சியாலும் ஊக்கத்தாலுமே என்னுடைய மறுப்பைக் கூட லட்சியஞ் செய்யாமல் இவ்வளவு ஆடம்பரம் செய்து விட்டீர்களென்றே நினைக்கின்றேன். ஆனாலும் இந்த ஆடம்பரங்களை எனக்காக நீங்கள் செய்கிறீர்களென்று நினைக்காமல் இவ்வியக்கத்தின் வெற்றிக்கு அறிகுறியென்று கருதிக்கொண்டு இன்னும் மேலும் நான் உறுதியுடனும் ஊக்கத்துடனும் நடப்பதற்கு இவைகளை ஒரு தூண்டு கோலென்றும் கருதிக்கொண்டு எனது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நண்பர்களே! இன்று நான் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றியே பேசுகிறேன். இரண்டு வருஷங்களுக்கு முன்னால் இங்கு நான் வந்து பேசியிருக்கிறேன். அப்பொழுது இதே இடத்தில் எனது நண்பரும், நமது இயக்கத்தின் பிரமுகரும், உங்கள் ஜில்லா போர்ட் தலைவருமான திருவாளர் ராவ்பகதூர் ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்களுக்கும் எனக்கும் ஒரு வரவேற்பளித்தீர்கள். அதற்கு முன்னும் இரண்டொரு தடவை கோவில் மண்டபத்தில் பேசியதாகவும் ஞாபகமிருக்கிறது. அதற்குப் பிறகு இங்கு வரச் சந்தர்ப்பப்படவில்லையானாலும் நமது இயக்கத்திற்கு முதல் முதலாக இந்த ஊரிலிருந்து தான் எதிர்ப்பும், எதிர் பிரசாரமும் பல துண்டுப் பிரசுரங்களும், வசைப் புராணங்களையும் கொண்டெழுந்ததென்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு அவ்வெதிர்ப்பை ஆரம்பித்தவர்கட்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் அவ்வெதிர்ப்புதான் நமது இயக்கத்தை இவ்வளவு வேகமாக நடத்தச் சந்தர்ப்பங்கள் கொடுத்தது. நிற்க நான் முன் இங்கு வந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் எதைப் பற்றி என்ன விஷயங்கள் பேசினேனோ அதையே தான் இப்போது பேசப்போகின்றேன். ஆனால் அந்த காலத்தில் இவ்வளவு தைரியமாகவும் விளக்கமாகவும் பேச முடியவில்லை. இப்பொழுது சற்று தெளிவாகவும் உறுதியாகவும் பேசுகிறேன். இதைத் தவிர என்னுடைய பேச்சிலோ கொள்கைகளிலோ பத்து வருஷங்கட்கு முன்னிருந்ததற்கும் இப்போதைக்கும் ஒன்றும் மாறுதலில்லை என்பதே என் அபிப்பிராயம்.

நிற்க. நமது எதிரிகள் நம்மைப் பார்த்து சுயமரியாதை இயக்கமென்பதாக ஒரு இயக்கம் எதற்காக வேண்டுமென்கிறார்கள். அன்றியும் இவ்வியக்கமானது தப்பான வழியில் மக்களைச் செலுத்துகிறதென்றும் ஒழுக்கத்தைக்



RangaRakes tamilnavarasam.com

கெடுக்கிறதென்றும், தேச நலத்துக்கும் கேடு சூழ்விக்கிறதென்றும் அரசாங்கத் துடன் நட்புக் கொண்டதென்றும் மற்றும் பலவாறாகப் பழிசுமத்தப்படு வதாகவும் கேள்விப்படுகிறேன். இவற்றிற்கு நான் சமாதானஞ் சொல்லு முன் நீங்களாகவே ஒரு விஷயத்தை யோசித்துப் பாருங்கள். அதாவது நாங்கள் யார்? எங்கள் முன்பின் தொழில் என்ன? இத்தொண்டின் மூலம் நாங்கள் எதிர் பார்க்கும் சுயநலமென்ன? என்பதையும் எங்களை ஆட்சேபிப்பவர்களின் யோக்யதையையும் அவர்களது முன்பின் வாழ்வையும் லட்சியங்களையும் யோசித்துப் பாருங்கள். முதலாவதாக என்னையும் நமது அக்கிராசனர் திரு. இராமனாதன் அவர்களையும் எடுத்துக் கொள்ளுங்கள். எங்களுக்கு இவ் வியக்கத்தின் பேரால் ஏதாவது உத்தியோகமோ பண வரும்படியோ ஏற்படுத் திக் கொண்டிருக்கிறோமா? இந்த இயக்கம் ஏற்பட்ட காலந்தொட்டு இன்றைய வரையில் யாரிடத்திலாவது ஒரு சின்னக் காசாவது இயக்கத்திற்காக வசூல் செய்திருக்கிறோமா? வேறு எந்த விதமான உதவியாவது இவ்வியக்கத் திற்கோ எங்கள் சொந்தத்திற்கோ இவ்வியக்கத்தின் பேரால், ஏதாவது எதிர் பார்த்திருக்கிறோமா? அல்லது நாங்கள் இம்மாதிரி பொது நலத்தின் பேரைச் சொல்லிக் கொண்டு பாமர மக்களை ஏமாற்றி அரசாங்க உத்தியோகத் திலிருந்து இருக்கிறோமா? எங்கள் பிள்ளைக் குட்டிகளுக்கு உத்தியோகத் துக்கு வேண்டியாவது, வேலை செய்கிறோமென்று சொல்வதானாலும் அப்படி யாவது எங்களுக்குப் பிள்ளை குட்டிகள் ஏதாவது இருக்கிறதா? அல்லது எங்களுக்கு ஜீவனத்திற்கு ஒரு மார்க்கமோ, ஒரு நிலைமையோ இல்லாதவர் களா? அல்லது பொது ஜன சேவையின் பேரால் கஷ்டப்படாமலாவது தியா கஞ்செய்யாமலாவது பயந்து கொண்டு வெறும் மேடையில் மாத்திரம் சாமர்த் தியமாய்ப் பேசி விட்டு கஷ்டம் வந்த போது ஒளிந்து கொள்ளுகிறது முதலாகிய பித்தலாட்டமான காரியங்கள் செய்திருக்கிறோமா? இவற்றை எல்லாம் நீங்கள் நன்றாய் யோசித்துப் பாருங்கள். பிழைப்புக்காக பொது ஜன சேவையில் இறங்கினவர்களல்ல, ஒரு ஒழுங்கும் நிலையும் ஆன தொழிலிலிறங்கி வாழ்வை நடத்திக் கொண்டிருந்து பொது ஜன சேவைக்காக திடீரென்று அவைகளை விட்டு விட்டு வந்தவர்களே யொழிய பொது நலத்துக்கென்று வந்த பிறகு ஜீவனத்துக்கு வழி தேடிக் கொண்டவர்களல்ல. இதை நீங்கள் சற்று கவலை எடுத்து ஆராய்ந்து பார்ப்பீர்களானால், எங்களுக் கும் மற்ற தேசபக்தர்கள், தேசீய வாதிகள், காங்கிரஸ் வீரர்கள், உப்புக் காய்ச் சிகள், சாமி சமயக் காப்பாளர்கள் முதலாகியவர்கட்கும் உள்ள வித்தியாசங் கள் நன்கு புலப்படும். தவிர, திரு. இராமநாதன் அவர்கள் எம். ஏ. பி. எல். ஹைகோர்ட் வக்கீலாகயிருந்து வந்ததும் அவர்கள் ஒரு பெரிய கல்வியாள ராகவுமிருந்து வக்கீல் தொழில் ஆரம்பத்திலேயே மாதம் முன்னூறு நானூறு சம்பாதித்துக் கொண்டிருந்ததை விட்டு விட்டு, திடீரென்று, துறவி போல் எல்லாவற்றையும் விட்டு விட்டுப் பொதுத் தொண்டிலிறங்கி ஜெயிலுக்கும் சென்று திருடர்கள், கொலைகாரர்கள், அயோக்யர்கள் போல் நடத்தப்பட்டு மண் வெட்டியையுங் கூடையையும் சுமந்து கொண்டு மண்வாரியும் தெருவில் கல்லுடைத்தும் கூனுக்கொட்டரையில் அடைபட்டும் மற்றும் பல தண்டனை



கள் அடைந்தும் வந்தவர். நானோ அவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்கா விட்டாலும், ஒழுங்கான வியாபாரத்திலிருந்து வெளியாகி பல தடவைகளில் சிறை சென்று பல கஷ்டங்களை அனுபவித்தவனே யாவேன். இன்னும் என்னோடு கூட ஒத்துழைக்கும் பல நண்பர்களும் தக்க செல்வமுடைய வர்களும் சிறை சென்று பல கஷ்ட நஷ்டங்கள் அடைந்தவர்களே தவிர இதனால் பிழைக்கக் கூடியவர்கள் அல்ல. தவிரவும் இன்றைய தினம் இந்த இயக்கத்தில் வேலை செய்யும் போது உங்களால் நாங்கள் எப்படி மதிக்கப்படு கிறோமோ கௌரவிக்கப்படுகிறோமோ அது போலவே காங்கிரஸிலுமிருந்து மதிக்கப்பட்டவர்களும் கௌரவிக்கப்பட்டவர்களுமேயாவோம். உதாரண மாக தமிழ் நாடு ஒத்துழையாமை காங்கிரஸ் கமிட்டியிலே நான் தலைவனா கவும் அக்கிராசனர் திரு. இராமநாதன் அவர்கள் காரியதரிசியாகவும் ஒத்துழையாமை காலம் பூராவும் இருந்திருக்கிறோம். இப்பொழுதும் அதாவது நாங்கள் இவ்வளவு பெரிய "தேசத் துரோகியும், கடவுள் துரோகியும்" ஆன பிறகுங் கூட, நாங்கள் விரும்பினால் தமிழ் நாடு காங்கிரஸ் தலைமையும், நிருவாகப் பொறுப்பும் எங்கள் கைக்குத் தாராளமாகக் கிடைத்து விடும். ஆனால் நாங்கள் அவ்வேலைகளை ஒரு தேசீய வஞ்சகம் என்று கருதிக் கொண்டிருக்கிறோம். ஆதலால் தான் நாங்கள் இத்துறையில் வேலை செய் கிறோம். இதில் நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட நேர்ந்தாலும் ஜெயிலுக்குப் போக நேர்ந்தாலும் நாங்கள் இன்னமும் தயாராகத்தான் இருக்கிறோமே தவிர நாங்கள் யாரையும் ஏமாற்றி விட்டு, மோசஞ் செய்து சுயநலம் அநுபவிப் பதற்காக நாங்கள் இத்தொண்டில் இறங்கவில்லை. நம்மைத் தூஷிக்கிறவர்கள் நமது கொள்கைகளின் குற்றங்களையெடுத்துச் சொல்லி மெய்ப்பிக்காமல் நமக்கு கெட்ட எண்ணம் கற்பிப்பதில் கவலையதிகமாக எடுத்துக் கொண்டி ருப்பதனாலேயே அவர்கள் யோக்யர்களல்லாதவர்களென்றும், பயங்காளிக ளென்றும் ஞாயமற்றவர்களென்றும் விளங்கவில்லையா? தவிர எங்கள் விஷயத்தைப் பற்றி சற்று எடுத்துச் சொன்னதினால் நாங்கள் தற்பெருமைக் காரர்கள் என்ற குற்றத்திற்காளாக வேண்டியவர்களாக இருந்தாலுமிருக்கலாம். ஆனபோதிலும் பொது ஜனங்களை ஏமாற்றத்திலிருந்து விடுவிப்பதற்காக அம்மாதிரியான குற்றங்கள் சில சமயங்களில் செய்ய வேண்டியே நேரிடு கிறது. தவிர நான் பொது நல சேவையில் இறங்கும் போது எந்தக் கொள்கை யோடு இறங்கினேனோ அந்தக் கொள்கையிலிருந்து இன்னம் மாறவில்லை, ஆனால் எங்கள் கொள்கையை நிறைவேற்ற எந்த ஸ்தாபனத்தை நாங்கள் கருவியாக உபயோகித்துக் கொண்டோமோ அந்த ஸ்தாபனம் தனது கொள் கையை விட்டு மாறிவிட்டதால் நாங்கள் அந்த ஸ்தாபனத்தை விட்டு மாறி எங்கள் கொள்கைக்காக வேறு ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உடையவர்களானோம்.



RangaRakes tamilnavarasam.com

## கொள்கை ஒன்றே.

நாங்கள் ஒத்துழையாமையில் சேர்ந்து தலையில் மூட்டையைச் சுமந்து கொண்டு கிராமம் கிராமமாய்த் திரிந்து தினம் இரண்டு மூன்றிடங்களில் கூட பிரசங்கங்கள் செய்து கொண்டிருந்த காலத்திலும், எங்களுடைய கொள்கைகள் வெள்ளைக்காரர்களை இந்தியாவை விட்டே அடியோடு விரட்டி விடுவது அல்லவென்பதை உங்கட்குத் தைரியமாகச் சொல்லுகிறேன், மற்றென்னையெனில் எல்லா மக்களையும் மானமுள்ளவர்களாக்கி சமத்துவமடையச் செய்வது, எல்லாருக்குள்ளும் ஒற்றுமையை உண்டாக்குவது, மக்களை அறிவாளிகளாக வாழச் செய்வது, பொருளாதார நிலைமையை உயர்த்துவது, ஜனங்களை சுகமாக சிக்கனமாக வாழவைக்க வேண்டியது முதலாகிய இந்தக் கொள்கைகளையே ஒத்துழையாமையின் போதும் வேறு பெயர்களால் அதாவது தீண்டாமை விலக்கு, ஹிந்து முஸ்லீம் முதலிய ஒற்றுமை, மதுவிலக்கு, கதர் என்னும் பெயர்கள் கொண்ட திட்டங்களாக ஏற்படுத்தப்பட்டிருந்ததே தவிர மற்றபடி சுயராஜியமென்பதாகவோ வெள்ளைக்கார ஆட்சியை விரட்டுதல் என்பதாகவோ வேறு தனிக் கொள்கைகள் எதுவும் நாங்கள் ஏற்படுத்தவேயில்லை. தவிரவும் சுயராஜியம் என்பதைப் பற்றி சில படித்த நபர்களும் உத்தியோக ஆசைக்காரர்களும் எங்களிடம் வந்து பேசின காலத்திலும் மேற்கண்டவைகள் தான் சுயராஜியமென்று சொன்னோமே தவிர இவைகளைத் தவிர சுயராஜியமென்பதாக தனியாக நாங்கள் எதையும் ஒப்புக் கொள்ளவுமில்லை, அதைப்பற்றி பேசவுமில்லை. அப்போது நாங்கள் தலைவராகக் கொண்டிருந்த திரு. காந்தி அவர்களும் மேற்கண்ட கொள்கைகளைத் தான் சுயராஜியம் என்று ஆயிரக்கணக்கான தடவை பேசினதும் எழுதினதும் இன்னமும் தக்க ஆதாரங்களுடன் இருந்து வருகிறது. ஆனால் திரு. காந்தி அவர்களுக்கு முதுகெலும்பு இல்லாது போனதினாலும், தாட்சண்யங்களினால் ஏற்பட்ட பலவீனத்தினாலும் ஒத்துழையாமையை நிறுத்திவிட்டு அந்தக் கொள்கைகளையும் அழித்து விட்டுக் காங்கிரஸை உத்தியோக வேட்டைக்காரர்கள் வசம் ஒப்பிவித்து விட்டு அர்த்தமற்ற கிளர்ச்சியில் இறங்க வேண்டியதாகப் போய் விட்டது. அர்த்தமற்ற கிளர்ச்சியில் இறங்கியதால் சர்க்காரோடு இராஜி பேசவேண்டிய நிலைமைக்கும் வந்து விட்டது. ஆனால் நாங்கள் ஒத்துழையாமைக் காலக் கொள்கைகளையேதான் பெரிதும் நடத்த சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறோம். எங்கள் சுயமரியாதை இயக்கத்தில் தீண்டாமை விலக்கு முக்கியமானது. மத சம்பந்தமான மூடக் கொள்கைகளையும், மூட நம்பிக்கைகளையும் ஒழிப்பதன் மூலம் இந்து முஸ்லீம் முதலிய ஒற்றுமைக் கொள்கை முக்கியமாயிருக்கிறது. பகுத்தறிவுடன் இருக்கச் செய்வதற்காக செய்யும் முயற்சியில் மது விலக்குக் கொள்கையும் ஆராய்ச்சிக் கொள்கையும் முக்கியமாக இருக்கிறது. அது போலவே சடங்குச் செலவுகளையும் உத்சவச் செலவுகளையும் நிறுத்தச் செய்வதன்மூலம் கதரைவிட சிக்கனமும் பொருளாதாரமுமான திட்டமும் எங்களுக்கு முக்கியமானதாயிருக்கிறது. ஆகவே இந்தக் காரியங்களைத்



தான் நாங்கள் நாட்டின் விடுதலைக்கும் மனித தர்மத்திற்கும் ஆதாரமாய்க் கொண்டு சுயமரியாதை இயக்கங் கண்டு நாங்கள் வேலை செய்து வருகிறோம்.

இதனால் எங்களை தேசத் துரோகியென்றோ கடவுள் துரோகியென்றோ யார் சொல்வதானாலும் நாங்கள் பயப்படவோ பின் வாங்கவோ போவதில்லை என்பதை வணக்கத்துடனும் உறுதியுடனும் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

## திட்டம் தான் வித்தியாசம்

## தீண்டாமை

சகோதரர்களே! ஒத்துழையாமையிலிருந்த தீண்டாமை விலக்குத் திட்டத்திற்கும் சுயமரியாதை இயக்கத்திலிருக்கும் தீண்டாமை விலக்குத் திட்டத்திற்கும் உள்ள வித்தியாசத்தை சற்றுக் கவனியுங்கள். ஒத்துழையாமையிலுள்ள தீண்டாமை விலக்கு திட்டமானது தீண்டாமையைக் கொண்டு மற்ற மக்களைத் தீண்டாதவர்களென்று சொல்லி ஒதுக்கித் தள்ளி வைத்து தீண்டாமையின் பயனாய் ஆதிக்கம் அடைந்து வருகின்றவர்களிடம் சென்று தீண்டாமையை ஒழியுங்களென்று சொல்லிக் கொண்டிருந்தோம். அன்றியும் தீண்டாமைக்கு ஆதாரக் கர்த்தாக்களான பார்ப்பனர்கள் கையிலேயே அவ்வேலையும் ஒப் படைக்கப்பட்டிருந்தது. அதனாலேயே அது சிறிதும் பயன் பெறாமல் பட்டபாடெல்லாம் வெறுங்காற்றாய்ப் போய்விட்டது. ஆனால் நாங்களிப் பொழுது சுயமரியாதை இயக்கத்தில் தீண்டாமை விலக்குத் திட்டத்திற்காக செய்யும் வேலை என்னவென்றால் தீண்டாதாரிடத்திலேயே நேரிற் சென்று,

"ஓ! தீண்டக்கூடாத சகோதரர்களே! சில சுயநல அயோக்யர்கள், சோம்பேறிகள், மதத்தின் பேராலும், சாமியின் பேராலும் வேத சாஸ்திரத்தின் பேராலும் உங்களை இழி பிறப்பாளர்களென்று ஏற்பாடுகள் செய்து உங்களைக் கண்டாலும் உங்கள் நிழல் மேலே பட்டாலும், உங்களோடு பேசினாலும் உங்கள் பாஷை உச்சரித்தாலும், உங்களைத் தொட்டாலும், நீங்கள் தொட்டதைத் தொட்டாலும், நீங்கள் நடந்ததின் மேல் நடந்தாலும் தீட்டு என்றும், தோஷமென்றும், பாவமென்றும் எழுதி வைத்து உங்களைக் கொடுமைப் படுத்துகிறார்கள். உங்களை வைப்பாட்டி மக்களென்று அழைக்கிறார்கள். தங்கட்கு அடிமை வேலை செய்யவே உங்களைக் கடவுள் சிருஷ்டித்தார் என்று சொல்லுகிறார்கள். நீங்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கவும் மற்றொரு கூட்டம் நோகாமல் உங்களை ஏய்த்துச் சாப்பிட்டு விட்டு ஏப்பம் விட்டுக் கொண்டு உங்களைப் பார்த்து சண்டாளர்களென்றும் சூத்திரர்கள் என்றும் சொல்லிக் கொண்டிருக்கவும் இன்னும் எத்துணை நாட்களுக்குப் பொறுத்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? நீங்களும் மனிதர்கள்தானா? உங்களுக்கு மானமில்லையா? வெட்கமில்லையா?"



RangaRakes tamilnavarasam.com

## இந்து முஸ்லீம் ஒற்றுமை

இ;நது முஸ்லீம் ஒற்றுமை என்று சொல்லிக் கொடுமைப்படுத்தப்பட்ட இழிவுப் படுத்தப்பட்ட மக்களைத் தட்டி எழுப்பி அவர்கள் மூலமாகவே தீண்டாமையை ஒழிக்க வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறோம். இதுதான் தீண்டாமை விலக்கு விஷயத்தில் சுயமரியாதை இயக்கத் திட்டத்துக்கும், ஒத்துழையாமை இயக்கத் திட்டத்துக்கும் உள்ள வித்தியாசமாகும்.

அது போலவேதான் இந்து முஸ்லீம் ஒற்றுமை விஷயத்திலேயும் ஒத்துழையாமை இயக்கமானது ஒவ்வொரு மதக்காரரிடத்திலும் சென்று ஒவ்வொரு மதத்தையும் சரியென்று சொல்லிப் புகழ்ந்து மதப் பிரசாரம் செய்வதின் மூலம் மக்களுக்கு அதிகமான மதப் பைத்தியத்தை உண்டாக்கி அதின் மூலம் இந்து முஸ்லீம் கிருஸ்தவர்கள் முதலியவர்களின் ஒற்றுமையை நிலைநாட்ட வேலை செய்து வந்தது. ஆனால் அவ் வேலையின் பயனாய் கலகங்களும் விரோதங்களும் ஏற்பட்டு முன்னிலுமதிகமான வேற்றுமைகள் உண்டானதுதான் கண்ட பலனேயன்றி வேறில்லை. ஆனால் சுயமரியாதை இயக்கத்தின் பேரால் நாங்கள் செய்யும் இந்து முஸ்லீம் கிருஸ்துவர் முதலிய வர்கள் ஒற்றுமைத் திட்டமென்னவென்றால்,

“ஓ! மதவாதிகளே! மதம் மனிதனுக்கேற்பட்டதே ஒழிய மதத்துக்காக மனிதன் ஏற்பட்டவனல்ல. எந்த மதமானாலும் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் கட்டுப்பட்டதே ஒழிய முரட்டுப் பிடிவாதத்துக்கும் மூட நம்பிக்கைக்கும் ஆதாரமானதல்ல. மதமானது மக்களை ஒற்றுமைப்படுத்தி சமத்துவம் அளிப் பதற்கு ஏற்பட்டதே ஒழிய வேற்றுமைப் படுத்தி வித்தியாசங் கற்பிப்பதற்கல்ல. எந்த மதமும் காலதேசவர்த்தமானத்திற்கும் மக்கள் சௌகரியத்திற்கும் சமாதான வாழ்க்கைக்கும் இணங்கி வர வேண்டியதே தவிர எந்த இடத்துக் கும் எந்தக் காலத்துக்கும் சிறிது கூட மாற்றக்கூடாதது என்று சொல்லப்படு வதல்ல. ஆகையால் இக்கொள்கைக்கு விரோதமாயிருப்பவைகளை மத மென்று கருதாதீர்கள். அது மனித சமூகத்தை அழிக்க வந்த விஷ நோய் களென்று கருதுங்கள்”

என்று சொல்வதன் மூலம் இந்து முஸ்லீம் முதலிய மத சம்பந்தமான வித்தியாசங்களையும் பிடிவாதங்களையும் மூட நம்பிக்கைகளையும் ஒழித்து மக்களுக்குள் ஒற்றுமையையும் அன்பையும் உண்டாக்கச் செய்ய சுய மரியாதை இயக்கம் பாடுபடுகிறது.

## பொருளாதாரம்

அது போலவே பொருளாதார சிக்கன விஷயத்திலும் ஒத்துழையாமை இயக்கமானது கதரின் பேரால் இராட்டினம் சுழற்றுவதால் மக்களுக்கு மணிக் கொரு பைசா வீதம் குறைந்த வரும்படியை உண்டாக்கி சிக்கனத்தின் பேரால்



அதிக விலையுள்ள கதரை வாங்கியுடுத்துவதின் மூலம் அதிகச் செலவையும் ஏற்படுத்தி மக்கள் நாகரீக உலகத்தில் கலந்து கொள்வதற்கில்லாமலும் செய்து சதா சர்வகாலம் கடவுள் செயல் கடவுள் செயல் என்று சொல்லி மக்களின் ஈனநிலைமைக்கும் தரித்திரத் தன்மைக்கும் கடவுளையே பொறுப்பாளியாய்க் காட்டி விட்டதால் மனிதன் மிருகமாகி கடவுளின் பேரால் அடிமையாகச் சம்மதிக்கச் செய்த கதர் என்னும் பொருளாதாரத் திட்டத்தால் மனிதர்களின் தன் முயற்சி யழிந்ததல்லால் வேறொரு பலனும் ஏற்பட்டதில்லை என்பதை யுணர்ந்து நாங்கள் சுயமரியாதை இயக்கத்தின் பேரால் மக்களிடத்திற் சென்று,

“ஓ மக்களே! பொருளாதாரத் திட்டத்திற்கு எல்லா மக்களுக்கும் எந்தக் காலத்துக்குமே கதர் பொருத்தமானதல்ல. இராட்டினஞ் சுற்றாததினாலேயே இந்த நாட்டிற்குத் தரித்திரம் வந்து விடவில்லை. பின் என்னவென்றால் பணக்காரன் தன் முயற்சியினால் மற்றவர்களிடம் உள்ள பணத்தை பல வழிகளில் கொள்ளையடித்துக் கொண்டு வேறொருவர் வந்து அதைக் கைப்பற்றாமல் இருக்கட்டுமென்றும் தான் பணம் சம்பாதித்த இழிவான முறைகளைப் பற்றி மற்றவர்கள் குற்றஞ் சொல்லாமலிருக்கட்டு மென்றும் கருதி முன்ஜாக்கிரதையாக இந்தப் பணமெல்லாம் எனக்குக் கடவுள் கொடுத்தார், அவர் தயவாலேயே நான் பணக்காரனானேன் என்று சொல்லி விட்டுத் தான் சம்பாதித்ததில் ஏதோ ஒரு பாகத்தைக் கடவுளுக் கென்று ஆடம்பரமாய்ச் செலவும் செய்து விட்டு அப்பணம் வேறு யாருக்கும் உதவாமல் தானே சுயநலமாய் ஒன்றுக்குப் பத்தாக வீண் செலவு செய்து கொண்டு வாழ்கின்றான். ஆனால் ஏழைகளோ தங்களுக்குப் பணமில்லாமல் போனதற்குக் காரணம் தங்கள் முயற்சிக் குறைவும் அறிவுக் குறைவும் என்பதையும் உணராமல் கடவுள் செயலென்றும், கடவுள் கொடுக்கவில்லை யென்றும் சோம்பேரி ஞானம் பேசிக் கொண்டு அடிமையாகவும், தரித்திர வானாகவும் இருப்பதோடு கொஞ்சம் நஞ்சம் ஏதாவது கையில் கிடைத்தால் அதையும் பணக்காரனைப் பார்த்துக் காப்பியடித்து தானுங் கடவுளுக்கும் சடங்குகளுக்கும் செலவு செய்தால் கடவுள் தனக்கும் அதிகப்பணம் கொடுப் பாரென்று நினைத்து உள்ளதையுங் கூடப் போட்டு விட்டு வெகு ஜாக்கி ரதையாக தரித்திரத்தையும் அடிமைத்தனத்தையும் காப்பாற்றிக் கொண்டு வரப்படுகிறது. ஆகையால் அதனாலேயே ஏழைகள் ஏழ்மைத்தனம் அதிகப் படுவதற்கும் நிலை நிற்பதற்கும் காரணமாகிறது”. என்பதை ஏழை மக்கட்கு எடுத்துச் சொல்லி அவர்களுடைய முயற்சியையும் அறிவையும் தட்டி எழுப்பி வீணாகப் பணத்தை சாமிக்கும் சடங்குக்கும் செலவு செய்யாமல் தடுப்பதின்மூலம் நாங்கள் பொருளாதார நிலையை உயர்த்திச் சிக்கனத் தன்மையை நிலை நாட்ட முயற்சிக்கிறோம். இதுபோலவே தான் மற்றும் பல துறைகளிலும் ஒத்துழையாமையின் போது நாங்கள் எந்தெந்தக் கொள்கைக்கு வேலை செய்தோமோ அதே கொள்கைகட்குத்தான் இப்பொழுதும் எங்கள் புத்திக்குத் தக்கபடி திட்டங்களை மாற்றிக் கொண்டு வேலை செய்து வருகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

எங்களுடைய இந்த முயற்சியில் இதற்கெல்லாம் காரணமாக அரசாங்கத்தார் மீது பழி சுமத்திக் கொண்டு அரசாங்கத்தாரை மாத்திரம் வைது கொண்டிருக்கிற வரையில் நாங்கள் பெரிய தேச பக்தர்களாகவும், வீரர்களாகவும், தியாகிகளாகவும் கருதப்பட்டோம். ஆனால் இப்பொழுது அவைகளில் மூலாதாரத்தைக் கண்டுபிடித்து அஸ்திவாரத்தில் கையை வைத்து அடியோடு சாய்க்க ஆரம்பித்தவுடன் இப்பொழுது நாங்கள் தேசத் துரோகிகளாகவும், பார்ப்பன துவேஷிகளாகவும், நாஸ்திகர்களாகவும், மதத் துரோகிகளாகவும் ஆய்விட்டோம். ஆகவே நாங்கள் இந்த தேசத் துரோகத்திற்கும் பார்ப்பன துவேஷத்திற்கும் நாஸ்திகத்திற்கும் மதத்திற்கும் பயந்தால் எங்களால் பலன் தரக்கூடிய எந்தக் காரியமும் செய்ய முடியாது என்பதை உணர்ந்துதான் துணிந்து இத்தொண்டில் இறங்கி இருக்கிறோம்.

சகோதரர்களே! பொருளாதார விஷயத்தில் பணக்காரர்களின் பணச் செருக்கை யொழித்து அவர்களது பணம் ஏழைகட்கும் நாட்டிற்கும் உபயோகப்பட வேண்டியதென்று சொல்லி அப்பணத்தை நாட்டிற்குப் பயன்படுத்துவதே எமது வேலையாகும். ஒருவன் ஒருவனை எஜமானனாய் ஒப்புக் கொள்வதற்கும் அடிமைத் தனமாயிருப்பதற்கும் அவனது மூடத்தனமே காரணமல்லாமல் மற்றபடி அது கடவுள் செயல் அல்ல வென்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். இந்நிலையில் தான் நாம் கடவுளையோ, மதத்தையோ, சாஸ்திரத்தையோ தாக்குவதாகச் சொல்லப்படுகிறது. அதைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். எங்களுடைய பொது வேலையின் அநுபவத்தையும் விடுதலை ஆராய்ச்சியையும் கொண்டுதான் இந்த வேலையில் இறங்கியிருக்கிறோம். என்னைப் பொறுத்தவரை அரசியலைப் பொறுத்த கவலையே நமக்குக் கிடையாது. முதலாவதாக நமக்குள் நாம் தள்ளி வைக்கப்பட்டிருக்கும் நிலைமையிலிருந்தும் நமக்குள் நாம் இழிவு படுத்தப்படும் இழிவிலிருந்தும் நம்மவர்களால் கொடுமைப் படுத்தப்படுவதிலிருந்தும் மீளவேண்டியதே முக்கியமான வேலையாகும். இந்த காரியங்களுக்கு அரசாங்கத்தார் அநுகூலமாயில்லாமல் நமது முயற்சிக்கு இடையூறாக யிருக்கும் போது மாத்திரம் தான் நாம் அரசாங்கத்தாரின் பக்கம் திரும்பவேண்டும். மற்றபடி இப்போது அரசாங்கத்தாரிடத்தில் நமக்கு வேலையில்லை. உதாரணமாக நமது முயற்சியையும் இயக்கத்தையும் குற்றஞ்சொல்லி ஆட்சேபிக்கும் பார்ப்பனர்கள் நூற்றுக்கு தொண்ணூறு பேர் நன்றாகப் படித்து அரசாங்கத்தாருடனே இருந்து கொண்டு நமது வரிப்பணத்தில் பெரும் பாகத்தை சம்பளமாக பீசாக............ அநுபவித்துக் கொண்டிருக்கிறதையும் நாம் பார்க்கிறோம். ஆனால் நமது இயக்கத்தை அரசாங்கத்தார் அடக்காமல் சும்மா விட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகப் பல பார்ப்பனர்கள் அரசாங்கத்தின் மீது வெறுப்புக்கொண்டு விஷமப் பிரசாரஞ் செய்வதும், அரசாங்கத்தாரைப் பார்த்து “நாங்கள் தானே பொது ஜனங்களை இராஜ வாழ்த்துப்பாட வைத்தோம், நாங்கள் தானே உங்கள் இஷ்டம் போல் எல்லாம் இந்த நாட்டின் செல்வத்தைக் கொள்ளை கொண்டு போக இடங் கொடுத்தோம். அப்படியிருக்க இப்போது நீங்கள் எங்களுக்கும் உங்களுக்கும் ஆபத்தைத் தரும் இந்த சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்கிறீர்களா? அல்லது நாங்கள் உப்புச் சத்தியாக்கிரகத்தில் சேர்ந்து கொள்ளட்டுமா?”

என்று அரசாங்கத்தாரை மிரட்டுகிறார்கள். இப்பொழுது நமது நாட்டில் கொஞ்சகாலமாக நடந்து வரும் பார்ப்பன மகாநாடுகளெல்லாம் இந்தத் தீர்மானத்தையே தான் செய்து கொண்டு வருவதை நீங்கள் பார்க்கலாம். ஆகையால் இப்பொழுது நாம் அரசாங்கத்தாரிடத்தில் சிறிது தகராறுக்குப் போவதாயிருந்தாலும் இந்தப் பார்ப்பனர்கள் உடனே உப்புச் சத்தியாக்கிரகத்தை நிறுத்திவிட்டு ஒவ்வொருவராக நம்மை யொழிப்பதற்கு சர்க்காருக்கு உளவு சொல்லிக் கொடுக்கப் போய்விடுவார்கள். உதாரணமாக கோயம்புத்தூர் மகாநாட்டில் நாம் சர்க்காரைக் கொஞ்சம் கண்டித்தவுடன் திரு. சத்தியமூர்த்தியும் அவர் கூட்டத்தாரும் கவர்னரிடமும் இராஜப் பிரதிநிதியிடமும் ஐரோப்பிய வர்த்தகர்களிடமும் சென்று “பார்ப்பனராகிய நாங்கள் அரசாங்கத்தாருக்கு ஒன்றும் கெடுதல் செய்யவில்லை.” என்றும் “பார்ப்பனரல்லாதார்கள் தான் இம்மாதிரி சேர்ந்து கோயம்புத்தூரில் தீர்மானஞ் செய்திருக்கிறார்க” ளென்றும் சொன்னதொன்றே போதுமானதாகும். இன்றைய தினம் சட்ட மறுப்பில் மிக்க அனுதாபத்தைக் காட்டும் திரு. டி. ஆர். இராமச்சந்திரய்யர் அவர்கள் யார் என்பது நமக்குத் தெரியாதா? அவர் தானே சென்னை மாகாண பார்ப்பன வருணாச்சிரமத் தலைவராவார். மற்றும் திரு. காந்தியை முட்டாள் என்று சொன்ன பார்ப்பனரும் வக்கீல் வேலையையும் பள்ளிக்கூடத்தையும் சட்டசபையையும் விட்டுவிலகுவது தேசத் துரோகமென்று சொன்ன பார்ப்பனரும் காங்கிரஸ் கொள்கையில் ஜாதி வித்தியாசம் ஒழியவேண்டுமென்பதாகத் திருத்தவேண்டுமென்று சொன்னவுடன் இராஜினாமாக் கொடுத்துக் காங்கிரசை விட்டுப் போன பார்ப்பனர்களும் தானே இப்பொழுது தலைவர்களாயிருக்கிறார்கள். உதாரணமாக சென்னையில் கூடிய காங்கிரசின் போது அனேகர் எங்களிடம் இராஜி பேச வந்தனர். கோஸ்வாமி முதலியவர்களே நாம் ஏன் காங்கிரசை விட்டு விட்டோம் என்றனர். நாம் நாளையே இக்காங்கிரசில் சேர்வோம். எங்கட்கு அது புதிதல்ல, இந்த ஜாதி முறை ஒழிய வேண்டுமென்று சமுதாய சம்பந்தமான ஒரு ஏற்பாட்டை காங்கிரசை ஒப்புக் கொள்ள வையுங்கள் என்றோம். அதற்குக் கல்கத்தா திரு. கோஸ்வாமி, டாக்டர் அன்சாரி, திருமதி சரோஜினி ஆகியவர்கள் ஆகட்டுமென்றார்கள். திரு. R.K. ஷண்முகம் அவர்கள் இதை அனுசரித்து ஒரு தீர்மானமும் கொண்டு வந்தார். அது விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்திற்குக் கூட கொண்டுவரப் படவில்லை. மத சம்பந்த சமூக சம்பந்த விஷயம் அரசியலியக்கத்தில் புகக்கூடாது என்று கூறிவிட்டனர். திரு. சரோஜினியும், டாக்டர் அன்சாரியும் முக்கியமாக இராஜி பேச முயற்சித்தவர்கள். அவர்கள் எங்கள் முன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டபிறகு மீண்டும் பேச வரவேயில்லை. இதுதான் காங்கிரசின் “சமூக வேலை”.



RangaRakes
tamilnavarasam.com

சேரமாதேவி குருகுலப் போராட்டத்தின் போது காங்கிரஸ் பணத்தில் சில பேரை வெளியில் வைத்தும் சிலரை உள்ளே வைத்தும் சோறு போட்டனர். காங்கிரஸ் சம்பந்தப்பட்ட வரையில் ஜாதி வித்தியாசம் கூடாதென திரு. S. இராமனாதன் அவர்கள் பிரரேபித்த வார்த்தையானது ஏற்றுக் கொள்ளப்பட்டு அரங்கேறியது. இதைக் கண்டதும், "உண்மை தேசாபிமானிகள்" எல்லாம் இராஜிநாமா செய்துவிட்டனர். நமது நண்பர் திரு. இராஜகோபாலாச்சாரி, டாக்டர் ராஜன், திரு. சந்தானம், திரு. வரதராச்சாரி, திரு. T.V. சாஸ்திரி இந்த "தியாகி" களும் "நல்லெண்ணம் கொண்டவர்களும்" ஆகிய எல்லாரும் ஒரே அடியில் இராஜிநாமா செய்தனர். ஆகையால் காங்கிரசினிடத்து மாத்திர மன்றி அதை நடத்தும் இந்த மனிதர்களிடத்தும் எங்கட்கு அவ நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. அதனாலேயே தான் புது "சுயமரியாதை" இயக்கம் தொடங்கப்பட்டது.

திரு. எஸ் இராமநாதன் அவர்கள் செட்டி நாட்டில் இந்த விஷயங்களை திரு. காந்தியிடம் சொன்னபோது அவர் அது மெய்யா? என்று கேட்டார். இந்த டாக்டர் ராஜனே அப்படிச் செய்தார் என்று திரு. எஸ். இராமநாதன் சொன்னார். திரு. காந்தி உண்மையா என்று திரு. ராஜனைக் கேட்டதற்கு அவர் ஆம் அது என் சொந்த அபிப்பிராயத்தைப் பொறுத்தது. அரசியல் ஸ்தாபனத்தில் சமூக விஷயம் புகுத்தப்படக் கூடாது! என்று பதில் சொன்னார்! திரு. காந்தியாரும் அது "அவரவர் அபிப்பிராயம்" என்றார்! அதற்கு முன் திரு. M.K. ஆச்சாரி திரு. காந்திக்கு இதைப் பற்றிக் கடிதம் எழுதி, இந்தமாதிரி காங்கிரசில் சமூகசம்பந்த விதி செய்யலாமா? வென்று கேட்டிருந்தார். அதற்கு திரு. காந்தி செய்யலாமென்று பதில் எழுதினார். பிறகு நாங்களெல்லோரும் காங்கிரசை விட்டுவிட்ட பிறகு அவர்கள் ஒவ்வொருவராக மீளவும் காங்கிரசில் சேர்ந்து விட்டார்கள். நாம் ஜாதி வேற்றுமையை ஒழித்தல் என்னும் புது இயக்கத்தைத் தொடர்ந்தோம். சாதியினால் ஏற்பட்ட கொடுமையையும் இழிவையும் ஒழிக்க வேண்டுவது அவசியம் என்று கருதினோம். நமது பாமர மக்களின் அறியாமையையும் ஏமாந்த தன்மையையும் உபயோகம் செய்து கொண்டு நம்மீது அவர்கள் இராமசாமி நாயக்கன் "தெய்வத்தை வைகிறான், சாஸ்திரத்தை வைகிறான், மதத்தை வைகிறான்" என்று இப்படி எல்லாம் தூற்ற ஆரம்பித்து விட்டனர். இந்தத் தூற்றுதலைக் கேட்ட பாமர ஜனங்கள் எங்களைக் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டனர். நாம் "உங்கள் மதத்தில் சாஸ்திரத்தில் பிரவேசியோம். ஆனால் எங்களுடைய வேலையில் அவை தடையாய் வந்தால் அவற்றைக் கண்டு நாம் பயப்படோம் என்றோம்". இதற்கு நியாயமுடன் பதில் கூறாமல் "மதம் அப்படிச் சொல்லுகிறது" என்றனர். ஒரு மனிதனைப் பறையனாக விருக்க ஒரு மதம் சொன்னால் அந்தமதம் வேண்டுமா? ஒருவனுக்குச் சூத்திரப் பட்டம் கொடுக்கவும் ஒரு மதம் இருப்பின் அந்தமதம் வேண்டுமா? என்று கேட்டால் "இந்தச் சூத்திரப் பட்டம் ஒழிய வேண்டும். இப்படிப்பட்ட இந்து மதம் வேண்டாம்" என்றே சுயமரியாதையுள்ள ஒவ்வொருவனும் சொல்லுவான். இப்போது ஒருவன் தன்னை "ஹிந்து"



என்று சொல்லிக் கொள்ள வேண்டுமானால் அவன் கண்டிப்பாக "சூத்திரப் பட்டத்தை" ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட மதம் எனக்கும் வேண்டாம் உங்களுக்கும் வேண்டாம். இந்த மாதிரியான இந்து மதத்தைக் கடவுள் உண்டாக்கினார் என்று சொல்லப்படுவதினால் அந்தக் கடவுளும் வேண்டாம்.

எனக்குக் கடவுளைப் பற்றியோ மதத்தைப் பற்றியோ, சாத்திரத்தைப் பற்றியோ அக்கரையில்லை. ஆனால் கெடுதியை நீக்கவும் கொடுமைகளைப் போக்கவும் முயற்சிக்கிற போது "கடவுள் தான் சாதிகளை ஏற்படுத்தினார். அதன்படி நடக்கத்தான் வேண்டுமென்றால் அந்தக் கடவுள் எத்துணைப் பெரிய கடவுளாயிருந்தாலும் அதைச் சுட்டுப் பொசுக்க வேண்டாமா? அதைப் புதைக்க வேண்டாமா? வென்றே உங்களைக் கேட்கிறேன். இந்த நிலைமையிலேயே நாம் எல்லாவற்றையும் தாக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் எங்கட்கு அவற்றில் என்ன வேலை? எவன் அவற்றை வைத்துக் கொண்டுப் பிழைத்தால் என்ன? நம்மைத் தாழ்த்தி அமுக்கிக் கொடுமைப் படுத்த அந்த மதம் சாத்திரம் கடவுள் ஆகிய மூன்றையும் கொண்டு வந்தால் நான் ஏன் சம்மதிப்பேன்? இதனாலேயே நாம் எல்லோருக்கும் அதிலும் பார்ப்பாருக்கும் விரோதிகளாய் போய் விட்டோம். இவற்றால் ஏமாற்றிக் கொண்டு வந்த கூட்டத்தாருக்கு விரோதிகளானோம். பிறப்பில் வித்தியாசம் பாராட்டக் கூடாது, ஒருவனை யொருவன் அடக்கியாளக் கூடாது என்று சொல்வதால் ஒன்றும் முழுகிப் போய்விடாது. யோக்கியமான மதமும் யோக்கியமான கடவுளுமாயிருந்தால் இதனாலெல்லாம் போய் விடாது. அப்படியே போய் விடக்கூடிய கடவுளால் என்ன நஷ்டம் வந்து விடும்.

## ஒரு கதை

ஒரு வேடுவனையும் ஒரு வேளாளனையும் பற்றி ஒரு கதை சொல்லுகிறேன். அதாவது ஒரு வேளாளன் ஒரு பிள்ளையாரைப் பக்தியாகப் பூசை செய்து கொண்டுவந்தான். ஒரு நாள் ஒரு வேடுவன் அந்தப் பிள்ளையாருக்கு நேராய்க் கால் நீட்டிப் படுத்துக்கொண்டிருந்தான். உடனே அந்தப் பிள்ளையார் வேடுவனை ஒன்றும் செய்ய முடியாமல் வேளாளனிடம் போய் "அந்த வேடுவனைக் காலை எடுக்கச் சொல்லுகிறாயா அல்லது உன் கண்ணைக் குத்தட்டுமா" என்றதாம். ஏன்! அந்தப் பிள்ளையார் கோபம் அந்த வேடனிடம் செல்லவில்லை? இதே மாதிரிதான் கடவுள்கள் எல்லாவிடத்தும் செய்வதாயிருக்கிறது. ஒரு கூட்டத்தில் மனுஸ்மிருதி நெருப்பில் கொளுத்தப் பட்டது. ஏனெனில் அதில் நமக்கு சகிக்கமுடியாத இழிவு கூறப்பட்டிருப்பதால் ஒரு சூத்திரனுடைய பணத்தைப் பலாத்காரமாகப் பிடிங்கிக் கொள்ளலாமென்றும், இதுதான் இந்து மத ஆதாரம் என்றும், இது கடவுள் சொன்னதென்றும் சொல்லப்படுவதை எண்ணி அந்த மனுஸ்மிருதி நெருப்பு வைக்கப்பட்டது. அப்பொழுது தற்போதைய தேசபக்தர்கள் திரு. இராஜகோபாலாச்சாரியார்



RangaRakes tamilnavarasam.com

உட்பட பலர் ஆட்சேபித்தார்கள். இதற்கு சர்க்காரையும் உதவிக்குக் கூப்பிட்டார்கள். (வெட்கம் வெட்கம்)

நீங்கள் சம்பாதித்து ஒரு கூட்டத்தாருக்கு கொடுப்பதும், "சூத்திரர் முதலியோர் படிக்கக் கூடாது அவர்கட்குச் சுயேச்சைக் கொடுக்கக் கூடாது" என்றால், அந்த மனுநூலைக் கொளுத்தி உங்களது இழிவைப் போக்கிக் கொள்வதா அல்லது அதை ஒப்புக் கொள்வதா? ஆகையாலேயே இந்த இயக்கத்தை விடாதீர்கள் என்று சொல்லுகிறோம். எனவே இவ்வளவு நேரம் நான் பீடிகையாகச் சொல்லிக் கொள்ள வேண்டியதாயிற்று. அதிக நேரமாய் விட்டாலும் இன்னும் ஒரு மணியில் ஏதோ கொஞ்சம் சொல்லி முடிக்கின்றேன். பெரிய கூட்டமாயிருப்பதால் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைய நிலையில் சுயேச்சையும் சுயாதீனமும் பெறப் பாடுபடுவது என்னமாய் முடியும்? இந்தத் தடைகளைப் போக்குங்கள். மற்ற மற்ற தேசத்தார்கள் தங்கள் நாட்டுக் குற்றம் நீங்கிய பிறகே சுயேச்சையடைய என்ன செய்தார்கள் என்பதையும் எப்படியடைந்தார்களென்பதையும் நினையுங்கள். நம் குற்றம் நீங்க வேண்டியதற்காக நாமும் அவர்களைப் போல செய்வதா? இல்லையா? அவர்களது வழியை விட்டு விட்டால் வேறு வழியில்லை. வெறும் வாய் வார்த்தையால் ஒன்றும் முடிந்து விடாது. பெரியோர் போன வழியில் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தால் ஒரு காரியமும் நடக்காது. நாம் இப்பிரிட்டன் முதலிய நாடுகளை எடுத்துக் கொள்ளுவோம். அவர்களுடைய கல்வி, விவசாயம், தொழில், அறிவு, மனிதத்தன்மை ஆகிய இவற்றிற்கும் நம்முடைய நிலைமைக்கும் வேற்றுமையைப் பாருங்கள்.

## நமது நிலை

இந்தியாவில் கல்வியை எடுத்துக் கொள்ளுங்கள். சென்ற தடவை ஜனன மரணக் கணக்கெடுத்த காலத்தில் இந்தியாவில் 100க்கு 7 பேர் படித்தவர்கள். இப்பொழுது ஏழுடன் மூன்று கூட்டி பத்து பேராக வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் மேல் நாட்டில் 100க்கு 90 அல்லது 99ம் படித்தவர்கள். அப்படியே பெண் கல்வியை எடுத்துக் கொண்டாலும் நம் நாட்டில் 1000க்கு 10 பேர்களே அதிகம். ஆனால் இங்கிலாந்தில் 1000க்கு 900 பெண்கள் படித்திருக்கிறார்கள். ஐரோப்பியர்களது நிலையையும் நம் நிலையையும் பாருங்கள். பிராமணர்களே மற்றவர்களை படிக்கக் கூடாதபடி செய்து இந்த நிலைமைக்கு ஆக்கி வைத்தார்கள். அதற்கு ஆதாரமாக சாஸ்திரங்களும் எழுதி வைத்திருக்கிறார்கள். மற்றவர்களைப் படிக்க வைக்கக் கூடாது. இதை ஆதரித்தால்தான் இடம் தருவோம் என்று மகம்மதியரிடம் பார்ப்பனர்கள் ஒப்பந்தமும் செய்து கொண்டதால் மகம்மதியர் காலத்தில் நமக்குச் சரியான கல்வியில்லாமற் போயிற்று. கடைசியாக மகம்மதியர்கள் அந்த ஒப்பந்தத்தை மீறவே வெள்ளைக்காரர்களுக்கு இடம் கொடுத்தார்கள். அதனாலேயே கோகலே அவர்கள் கட்டாய இலவசக் கீழ்தரக் கல்வி கொடுக்கப்படவேண்டுமென ஒரு



சட்டம் கொண்டு வந்தார். அப்போது தர்பங்கா போன்றவர்களும் மதத்தின் பேரால் ஆழ்த்திக் கொடுமை படுத்துவோரும், ஒரு தூது கூட்ட மூலமாக வைசிராயை பேட்டி கண்டு, சூத்திரன் படிக்கக் கூடாது. மதத்துக்கு ஆகாதென்றும், இது ஆதியில் நமக்குள் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு விரோதமென்றும், மீறினால் அரசாங்கத்தை எதிர்ப்பதாகவும் கூறினார். ஆகவே பல காரணங்களால் அரசாங்கத்தார் அந்தச் சட்டத்தை நிறைவேற்றக் கூடாமற் போயிற்று. சுயமரியாதை உணர்ச்சி நம் மக்கட்கு ஏற்பட்ட பிறகே இலவசக் கல்வியும் கட்டாயக் கல்வியும் ஏழைகட்கு சில இடங்களிலாவது இப்போது தரப்படுகிறது. நாம் மற்ற நாட்டாரை விட அதிகக் கடவுள் நம்பிக்கையையும் கல்விக்காக ஒரு கடவுளையும் வைத்து கும்பிடுவதையும் சரஸ்வதியென ஒரு படம் வைத்துப் பூஜித்தலையும் வருடத்தில் பல தடவை உற்சவம் கொண்டாடுவதையும் செய்கிறோம். அதிக மரியாதையும் செய்கிறோம். சரஸ்வதி என்று புத்தகங்கள், ஏடுகள், கடிதாசிகள் எல்லாவற்றையும் கும்பிடுகிறோம், கண்ணில் ஒற்றிக் கொள்ளுகிறோம். இத்தனை வருஷங்களாகச் செய்கிற இத்தனை பூஜைக்கும் நாம் 100க்கு 7 பேர்தான் படித்தவர் ஆனோம். ஆனால் இதே கடிதாசியை – இதே நமது சரஸ்வதியை வெள்ளைக்காரன் மலம் துடைக்கிறான். 100க்கு 90 பேர்கள் படித்துமிருக்கிறார்கள். நாம் 100க்கு 93 பேர்கள் தற்குறிகள். இந்த சரஸ்வதியை மறந்துவிட்டு உங்கள் அறிவு, முயற்சி, காரியம் இவற்றை நீங்களே கவனியுங்கள். எல்லோரும் படித்தவர் களாவோம்.

சிலர் வெள்ளைக்காரன் மேல் தப்பிதம் கூறி அவன் ஏன் படிக்க வைக்கவில்லை என்கிறார்கள். வெள்ளைக்காரன் என்ன செய்வான்? அவன் படிப்புக்காக இவ்வளவு என நம்மைக் கொண்டே ஒதுக்கி வைத்து விட்டான். நிர்வாகத்திற்கு இவ்வளவு என ஒதுக்கி வைத்து விட்டான். அதற்கு மேல் கேட்டால் வரி போடவேண்டுமென்கிறான். சீர்திருத்த அரசாங்கத்தில் இவ்வளவு தான் முடியும். இதற்கு மேல் வழியில்லை என்பது நமக்குத் தெரியும். ஏன் என்றால் நம் தேசீயவாதிகள் சம்பளமாகவே அவ்வளவு பணத்தையும் கொள்ளையடித்து விடுகிறார்கள். ஆனால் நம்மிடம் வேறு பணமோ யோக்யதையோ இல்லையா என்று பார்ப்போமானால் சர்க்கார் நம்மிடமிருந்து ஆட்சிக்காக வாங்கும் வரியை நாம் சிறிதும் பயனில்லாத சாமி சடங்கு வகையராக்களுக்கு மோட்ச வரியாகக் கொடுத்து வருகிறோம். நமது வாழ்க்கையில் மோட்சத்தைப் பிரதானமாய் கருதுகிறோமே யல்லாமல் கல்வியை பிரதானமாகச் சிறிதும் கருதவில்லை. அதன் பொறுப்பு முழுமையும் "பொறுப்பில்லாத" அரசாங்கத்தினிடம் விட்டுவிட்டு மோட்சத்திற்கு பணத்தை செலவழித்து விடுகிறோம். இப்படியாக நமது செல்வமும் கவலையும் மோட்சமென்கிற ஒரு ஓட்டையில் போய்க்கொண்டிருக்கிறது. அதை முதலில் மூடுங்கள். அவ்வோட்டை அடைபட்டால் நம்மெல்லோருடைய படிப்புக்கும் பணம் இருப்பதுடன் பிறரையும் சாப்பாடு போட்டு படிக்க வைக்க பணம் அகப்படும். சாதாரணமாக தமிழ் நாட்டில் மாத்திரம் ஒரு பத்து வருஷத்திற்கு மோட்சச் சடங்கையும், சுவாமி உற்சவங்களையும் நிறுத்திப்



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பீர்களானால் நீங்களெல்லோரும் படித்துவிட்டு இந்த நாட்டு மிருகங்களையும் பட்சிகளையும் கூட படிக்க வைக்க முடியும். மற்றும் சில்லரை தேவதைகளின் உற்சவங்களையும் வேண்டுதல்களையும் நிறுத்தி விட்டோமேயானால் அதில் மீதியாகும் பணத்தில் ஆகாயக்கப்பல் பள்ளிக்கூடமும் கம்பி இல்லாமல் உருவங்களையனுப்பும் தந்தி பள்ளிக் கூடங்களும், செத்தவர்களைப் பிழைக்க வைக்கும் பள்ளிக் கூடங்களும் வைத்து மக்களுக்கு கற்றுக் கொடுக் கலாம். நான் சொல்லுகிற விஷயத்தில் உங்கட்கு ஏதாவது அவ நம்பிக்கை யிருக்குமானால்

## திருப்பதி

திருப்பதி சாமி ஒன்றை எடுத்துக் கொண்டாலே சந்தேகந் தீர்ந்து விடும். அந்த சாமிக்கு வருஷம் ஒன்றுக்கு 17 லட்சம் ரூபாய் காணிக்கை வருகிறது. இதுதவிர அந்த சாமிக்கு ஏழரை கோடி ரூபாய் பெறுமான சொத்துமிருக்கிறது. அந்த சொத்துக்களை விற்று 100க்கு மாதம் எட்டணா வட்டிக்குக் கொடுத்து வாங்கினாலும் வருஷத்தில் நாற்பது லட்சம் ரூபாய் வட்டி வரும். இவை தவிர அந்தக் கோவிலுக்கும் உத்சவத்துக்கும் வேண்டுதலைக்கும் காணிக்கை செலுத்துவதற்கும் யாத்திரை போகும் ஜனங்களின் ரயில் சார்ஜ் முதலிய செலவுகளைக் கணக்குப் பார்த்தால் அதிலும் நாற்பது ஐம்பது லட்ச ரூபாய் கணக்கும் ஆக இந்த மூன்று இனங்களில் திருப்பதி வெங்கடாசலபதி என்கிற ஒரு சாமியால் மாத்திரம் வருஷம் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் வீணாகிறது. இது போலவே சற்றேறக்குறைய தமிழ் நாட்டில் மாத்திரம் திருச்செந்தூர், இராமேஸ்வரம், மதுரை, ஸ்ரீரங்கம், சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சீபுரம், திருவாரூர் முதலிய கோயில்களையும் சங்கராச்சாரி பண்டார சந்நதி ஆகிய மடங்களையும் கும்பகோணம் மகாமகம் போன்ற உத்சவங்களையும் மற்றும் 108 திருப்பதி 1008 சிவலிங்கம் வகையரா பாடல் பெற்ற ஸ்தலங்களையும் மற்றும் மாரியாயி ப்ளேகாயி, காளியாயி முதலிய கிராமதேவதை முதலியவைகளுக்கும் மற்றும் சடங்கு சிரார்த்தம் கருமாதி முதலியவைகட்கும் ஆகும் செலவு மெனக்கேடு வகையராக்களையும் சேர்த்தால் எத்தனை பத்துக்கோடி ரூபாய்கள் ஆகுமென்று சற்றுப் பொறுமையாயிருந்து கணக்குப் போட்டுப் பாருங்கள். இவையெல்லாம் மனிதனைக் கெடுக்கவும் அவனது அறிவைப் பாழாக்கவும் என்றும் தரித்திர வானாகவேயிருந்து அடிமையாயிருக்கவுமே அந்தச் சாமிகள் உத்சவங்கள் சடங்குகள் மோட்சங்கள் என்பவைகளெல்லாம் சுயநலக்காரர்களால் அயோக்ய எண்ணத்துடன் ஏற்படுத்தப்பட்டதாகும்.

## என்ன பலன்?

நிற்க திருப்பதி யாத்திரையால் மனிதனுக்கு என்ன பலன் ஏற்படுகிறது? அதனால் என்ன ஒழுக்கம் காண்கிறோம். ஒருவன் 2000 ரூபாயைக் கொண்டுபோய் திருப்பதி உண்டியலில் கொட்டிவிட்டு வருவானேயானால்



அவனுடைய அரையங்குலமாயிருந்த நாமம் இரண்டங்குலம் அகலமாவதும், சனிக்கிழமை பிடிப்பதும் மக்களைக் கண்டால் என்னைத் தொடாதே! எட்டிநில்! என்பதைத் தவிர வேறு ஒழுக்கமோ நாணயமோ அன்போ ஏற்படுகிறதா? தவிரவும் திருப்பதிக்குப் போனதினாலேயே அது வரையில் செய்த பாவமெல்லாம் ஒழிந்துவிட்டதென்று கருதி இனிப் புதுப்பாவமும் செய்யலாம் என்கிற தைரியம் உண்டாகிவிடுகிறது.

தவிர, இந்த மாதிரியான சாமிகளால், உத்சவத்தால் இதுவரை நாட்டிற்கு யாதொரு பலனும் ஏற்பட்டதில்லை என்பது கண்கூடு.

## விவசாயம்

விவசாய விஷயத்திலும் சாமிகளையும் விதியையும் பழய பழக்க வழக்கங்களையும் நம்பி எவ்வளவோ நஷ்டம் அடையும்படியான பிற்போக்கிலேயே யிருக்கிறோம். நம் நாட்டு விவசாயம் 2000 வருஷத்திற்கு முன் இருந்ததாகச் சொல்லப்படும் நிலைமையில் தான் இருக்கிறதே தவிர சிறிதும் முற்போக்கடையவில்லை. இந்த நாட்டில் ஒரு ஏக்கராவுக்கு நூறு ரூபாய் லாபம் வருவதானால் மேல் நாட்டில் ஏக்கராவுக்கு ஆயிரம் ரூபாய் வரும்படியாக வேலை செய்கிறார்கள். ஆனால் நாமோ விவசாயத்திற்கொரு கடவுளைக் கற்பித்து மாட்டையும் ஒரு கடவுளாக நினைத்து அதனது கொம்பில் ஒரு தெய்வத்தையும் வாலில் ஒரு தெய்வத்தையும் காலில் ஒரு தெய்வத்தையும், தொடையில் ஒரு தெய்வத்தையும், சாணியிலும் மூத்திரத்திலும் மோட்சங் கொடுக்கிற சக்தியையும் கற்பித்து மாட்டிற்குப் பூஜை செய்து பொங்கல் போட்டு சாணியையும் மூத்திரத்தையும் கலக்கிக் குடிப்பதோடு நமது விவசாய ஆராய்ச்சி முயற்சி முடிந்து விடுகிறது. இன்னுங் கொஞ்சம் அதிகமாகச் செய்ய வேண்டுமானால், ஏறு உழுவதற்கு முன் பார்ப்பானைக் கூப்பிட்டுப் பஞ்சாங்கம் பார்த்து, நல்ல நாள் கண்டுபிடித்து ஏறுக்கும், கொழுவுக்கும், நுகத்துக்கும், கருவத்தடிக்கும், உழவுகோலுக்கும், ஒவ்வொரு தெய்வங்களைக் கற்பித்து, சாம்பிராணி புகை போட்டு பார்ப்பானுக்குப் பணம் கொடுத்து ஏறு கட்டுவதோடு ஆராய்ச்சி முடிந்து விடுகிறது. இந்த பூஜையும் நல்ல நாளும் பார்ப்பானுக்குக் கொடுத்த காசும் கொஞ்சங் கூட நமது விவசாயத்துக்குப் பொறுப்பாளியல்லவேயல்ல. விளையாவிட்டால் விதியோடு பொறுப்பு நின்று போய்விடுகிறது. மேல் நாட்டானோ விவசாயத் தில் ஒரு கடவுளையும் லட்சியஞ் செய்யாமல் தன்னையும் தன் அறிவையும் முயற்சியையும் பொறுப்பாக்கி எந்தவிதமான பூமிக்கு எந்தவிதமான பயிர் செய்வது என்பதிலும் எந்தவிதமான பயிருக்கு எந்தவிதமான எரு விடுவது என்பதிலும் கவலையெடுத்து வேலை செய்கிறான். ஆஸ்திரேலியாவில் பழ விவசாயக்காரர்கள் புளிப்பான பழங் காய்க்கும் மரத்தை இனிப்பாக்கவும் நூற்றுக்கணக்காக பழம் காய்க்கும் மரங்களை ஆயிரக்கணக்கான பழங்கள் காய்க்கும் படி செய்யவும், பத்துநாட்களில் கெட்டுப்போகும்படியான



RangaRakes tamilnavarasam.com

பழத்தை ஒரு மாதத்திற்கு கெடாத படியான பழம் காய்க்கும்படி செய்யவும் வேண்டிய காரியங்கள் ரஸாயன கூட்டுகள் மூலமாகவும் திராவகங்களை செடிகளில் செலுத்துவதன் மூலமாகவும் பயிர் செய்கிறார்களென்று நமது நண்பர் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் தனது ஆஸ்திரேலியா யாத்தி ரையைச் சொல்லும் போது எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஒரு மனிதனுக்கு முப்பது ஏக்ரா நிலமிருந்தால், அதில் ஐநூறு பேர்களுக்கு சதா வேலையி ருக்கும் படியான ஒரு தொழிற்சாலை மாதிரி விவசாயஞ் செய்யலாமென்றும் சொல்லியிருக்கிறார். நாம் அந்த விதமான துறைகளில் சிறிது கூட விசாரமில்லாமல் அதிகமாக பயிர் பிடிக்க வேண்டுமானால் பிடிக்காததற்கு முன்னமே எங்கே கண் திருஷ்டிப் பட்டு விடுமோ என்று பயந்து கொண்டு பயிர் செய்திருக்கும் பூமியில் ஒரு கோலை நட்டு அதில் ஒரு விகாரமும் ஆபாசமுமான உருவத்தைக் குத்தி கையில் எதையோ கொடுத்து தலையில் சட்டியை கவிழ்த்து கரும்புள்ளி செம்புள்ளி குத்திவிட்டு வீட்டில் போய் உட் கார்ந்து கொள்ளுகிறோம். இந்த நிலையில் உள்ள உங்களை வெள்ளைக்கார அரசாங்கம் பாழாக்கிற்றா? உங்கள் கடவுளும் விதியும் பாழாக்கிற்றா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

## செல்வநிலை

தவிர நமது செல்வ நிலையை நினைத்தால் இன்னும் மோசமாயிருக் கிறது. நமது நாட்டில் ஒரு ஆளின் சராசரி வரும்படி ஒரு நாளைக்கு ஒரு அணா ஆறு பை என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்த நிலையிலுள்ள நமக்கு செல்வத்துக்குக் கூட லக்ஷ்மி என்ற ஒரு கடவுளை வைத்து தினமும் வணங்குகிறோம். அதற்காக செய்யும் செலவும் கணக்கு வழக்கில்லை. இவ்வ ளவு செலவும் ஏழையாயிருப்பதற்கு ஒரு சமாதானத்திற்குத் தான். அதாவது நமக்கு லக்ஷ்மி கடாட்சமில்லை, நாம் எவ்வளவுதான் ஆசைப்பட்டும் பாடு பட்டும் என்ன பிரயோஜனம் என்று நினைத்து சோம்பேறித் திருப்தி அடை வதற்குத் தான் உபயோகப்படுகிறதே தவிர முயற்சிக்கும் அறிவுக்கும் உபயோகப்படுகிறதில்லை,

## தொழில் முயற்சி

நம்மவர் ஏதோ சொற்ப முதல் கையிலிருக்கிறதென்று கருதி ஒரு புது தொழிலை செய்யலாமாவென்று நினைத்தால் முதலில் தன்னுடைய பேர் நாமத்திற்கு கால பலன் எப்படியிருக்கிறதென்று பார்ப்பானைக் கூப்பிட்டு பரிசோதிக்க வேண்டியதாய் விடுகிறது. அவன் வந்த உடனே இவரின் பேரைக் கேட்டு கோடுகிழித்து இன்ன வீட்டில் இன்ன கிரகம் இருப்பதனால் 6 மாதத்திற்கு தொட்டதே துலங்காது – ஒரு வேலையும் செய்யாதே என்று சொல்லிவிட்டு தனக்கு வரவேண்டிய பணத்தை வாங்கிக் கொண்டு போய் விடுகிறான். நம்மவரும் அதை நம்பிக் கொண்டு இந்த ஆறு மாத காலம் வெளியில் போனால் கூட ஏதாவது கிரகப் பிழைகள் ஏற்பட்டு விடுமோ எனக் கருதி பத்திரமாய் வீட்டிற்குள்ளேயே இருந்து கையிலுள்ளதும் போதாமல் கடனும் வாங்கி சாப்பிட்டு விடுகிறான். ஆறு மாதங் கழித்து நல்ல கிரகம் வருகிறபோது தொழிலுக்கும் ஜீவனத்திற்குமே கையில் காசு இல்லாமல் அறிவு பிழையை பெருக்கி கிரகப் பிழையை ஊர்ஜிதப்படுத்திக் கொள்கிறான். (சிரிப்பு) ஆகவே நமது அறிவைப் பறி கொடுத்து ஜோஸ்யர் அப்படிச் சொன் னார் குருக்கள் இப்படிச் சொன்னார் என்று கருதி இன்ன கிரகம் இன்ன மாதம் இத்தனையாந் தேதி இன்ன கிரகத்திற்கு போகிற தென்று எதிர்ப்பார்த் துக் கொண்டிருக்கிற நாம் முன்னுக்கு வரமுடியுமா? அல்லது கிரகத்தையும் சரஸ்வதியையும் லட்சுமியையும் விதியையும் லட்சியம் செய்யாமல் தோன்றி யவுடன் ஊக்கத்துடன் வேலை செய்யும் மேனாட்டார் முன் வருவார்களா? ஆகவே நம்மை இந்த கதியாக்கினது வெள்ளைக் காரர்களா? நமது மதமா விதியா என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

## மனிதத்தன்மை

நிற்க, நமது மனிதத் தன்மையிலாவது சுயமரியாதையிலாவது நாம் எப்படியிருக்கிறோ மென்பதை யோசித்துப் பாருங்கள். மேல் நாட்டில் பிறவி யில் மக்கள் எல்லோரும் சமம். நமது நாட்டிலோ நூற்றுக்கு 97 பேர்கள் பிறவிலேயே இழிபிறப்பானவர்கள். அதாவது கடவுளுடைய ஒரு இழிவான ஸ்தானத்திலிருந்து பிறந்தவர்கள். இவ்வளவு பெரிய நாட்டில் நூற்றுக்கு 3 பேர்கள் தான் சரியான மனிதர்கள். ஆகவே மேற்கண்ட உயர்ந்த ஜாதியாரான 100க்கு 3 பேர்களுக்கு 100க்கு 97 பேர்களான இழிபிறப்பு மக்கள் வைப்பாட்டி மக்களாயிருந்து அடிமையாகி தொண்டு செய்வதன் மூலமே மோட்சத்திற்குப் போக வேண்டியவர்களான சுயமரியாதையற்றவர்களாகவேயிருக்கின்றார் கள். இந்த இழிவும் மனிதத் தன்மையும் சுயமரியாதையற்ற தன்மையும் நமது கடவுளாலும் மதமாலும் ஏற்பட்டதா? அல்லது வெள்ளைக்காரர்களால் ஏற்பட்டதா? என்பதை யோசித்துப் பாருங்கள். இதிலிருந்து நீங்கள் செய்த கடவுள் பூசையும் புண்ணியமும் உங்களைத் தாழ்த்துகிறதா அல்லது உயர்த்துகிறதாவென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆகவே இந்தக் கடவுள் மதம், சாஸ்திரம், விதி இன்னான்கையும் அடியோடு ஒழிக்காமல் எந்த வெள்ளைக்கார இராஜியத்தையொழித்தாலும் ஒருக்காலும் மனிதத் தன்மை யும் சுயமரியாதையும் அடைய மாட்டீர்களென்பது நிச்சயம்.

## வலிமை

நிற்க உடல் வலியிலும் மன உறுதியிலும் மேனாட்டாருக்கும் நமக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தால் நமது நிலையின் உண்மை நன்றாய் விளங்கும், ஒரு மேனாட்டான் ஒரு ஆகாயக் கப்பலுடனும் சில வெடி குண்டு களுடன் இமய மலையிலிருந்து புறப்படுவானேயானால் 24 மணி நேரத்தில்



RangaRakes tamilnavarasam.com

கன்னியாகுமரி வரையில் சாம்பலாக்கி விட முடியும். ஒரு பீரங்கி வெடியினால் இருபது மைலுக்கு அப்பாலுள்ள பட்டணத்தைத் தூளாக்க முடியும். ஒரு துப்பாக்கி வெடிப் புகையினால் பதினாயிரக் கணக்கான மக்களை மயங்கி விழச் செய்யமுடியும். ஆனால் நாம் தட்டிப் பேச ஆளில்லாத சமயத்தில் மேடையிலேறிக் கூப்பாடு போடவும் துப்பாக்கி சப்தத்தைக் கேட்டால் நமது குழந்தைகளுக்குச் சுரம் வரவும் மற்ற நாட்டுக்காரனைக் கண்டால் பயப்படவும் தயாராயிருக்கிறோம். பலத்துக்கும் மனவுறுதிக்குங் கூட வீரன், கருப்பு, காட்டேரி என்பதாக பல சாமிகளை வைத்து கும்பிட்டும், ஓட்டம் பிடிப்பதில் தான் தயாராயிருக்கின்றோம்.

## ஆராய்ச்சி

நிற்க, நமது அறிவு ஆராய்ச்சி விஷயத்திலும் பழைய நிலைமையிலே தானிருக்கிறோம். ஏதாவது பெரிய விஷயங்களைப் பற்றிப் பேசினால் கலியுகம் இன்னும் என்னென்ன வேண்டுமானாலுஞ் செய்யுமென்று சொல்லிவிட்டு வெகு ஜாக்கிரதையாக பழைய நிலைமையைக் குரங்குப் பிடியாய் பிடித்துக் கொண்டிருக்கிறோம். வெள்ளைக்காரனோ நேற்றிருந்த நிலைமையிலிருந்து சிறிதாவது மாறுதலடையவே இன்றைக்கு ஆசைப் படுகிறான். 1930-ல் இருக்கும் நிலைமை 1940-ல் எவ்வளவு மாறுதல் அடைந் திருக்குமென்று நம்மாலேயே சொல்ல முடியாது. அவர்கள் கண்டுபிடிக்கும் அற்புதங்களும் செய்யும் அருமையான வேலைகளும், நமக்குச் சிறிதும் அர்த்தங்கூட ஆவதில்லை. ஆகாயத்தில் ஒரு மணிக்கு 200, 300 மைல் வீதம் பறக்கவும் பூமியில் ஒரு மணிக்கு 100, 150 மைல் வீதம் ஓடவும் தண்ணீருக்குள் ஒரு மணிக்கு 100, 120 மைல் நீந்தவும் கண்டு பிடித்திருக்கிறார்கள். கம்பி யில்லாமல் 5000 மைல் 10000 மைலுக்கப்பால் நிமிஷக் கணக்கில் சேதியனுப் பவும், உருவங்களை யனுப்பவும் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதெல்லாம் அவர்கள் சொந்த அறிவின் மீது பொறுப்பைப் போட்டுக் கண்டு பிடித்தவர் களேயொழிய, தெய்வத்தின் மீதா வது, விதியின் மேலாவது பழி போட்டுக் கண்டு பிடித்தவர்களல்ல. சாதாரண மாக ஆயிரத்தித்தொளாயிரத்தில் நாம் கண்ட போர்ட் மோட்டார் காரானது வருஷம்தோறும் முன்னேற்றமடைந்து வந்து செலவும் வேலையும் குறைந்து கொண்டே வருகிறது. 1940-ல் அது எவ்வளவு முற்போக்கடைந்திருக்கு மென்று சொல்ல முடியாது. விலையை குறைக்கவும் செலவைக் குறைக்கவும் வேகத்தை அதிகப்படுத்தவும் எண்ணை கூட இல்லாமல் ஓட்டவும் முயற்சி செய்துகொண்டு வருகிறார்கள். நாமோ இந்த அற்புதங்களையெல்லாம் காதி லும் கேட்டு கண்ணிலும் பார்த்து ஒரே வார்த்தையில் அதாவது "இவையெல்லாம் வெள்ளைக்காரர்கள் இங்கிருந்து திருடிக் கொண்டு போனதுதானே" என்பதாகச் சொல்லி விடுகி றோம். நமது நாட்டில் 200 வருஷத்திற்கு முன்னிருந்த ஒற்றை மாட்டு வண்டியும் இரட்டை மாட்டு வண்டியும் இன்னமும் அப்படியேதானி ருக்கிறது. பிரயாணம் செய்கிறவர்கட்கு சித்ரவதையாக யிருந்தாலும் சிறிதும்



மாறுதல் செய்ய நாம் முற்படுவதில்லை. ஏதாவது மாறுதல் செய்வதென்றால் இரும்பாணிக்குப் பதிலாக பித்தளை ஆணியும் பித்தளை ஆணிக்குப் பதிலாக வெள்ளி ஆணியையும் போட்டுக் கொஞ்சம் பாரத்தை அதிகமாக்கி விடுகிறோமே தவிர உட்காருவதற்கு சௌகரியமோ பாரத்தைக் குறைப்பதோ வேகத்தை அதிகப்படுத்துவதோ ஆன காரியங் களில் சிறிதும் கவலை யெடுப்பதில்லை.

## முற்போக்குக்கு யார்

மேல் நாட்டில் ஒவ்வொரு மனிதனும் அறிவாளிகள் சொன்னபடிக் கேட்டுத் தெரிந்திருக்கிறார்கள். இந்த நாட்டில் ஒவ்வொருவனும் ஐயர் என்ன சொல்லுகிறார்! சமயம் என்ன சொல்லுகிறது? சாஸ்திரமென்ன சொல்லுகிறது? என்று பார்த்துக் கொண்டிருப்பதோடு கடவுள் வந்து சொற்பனத்தில் சொல்லு வார் என்று காத்துக்கொண்டிருக்கிறான். இருபது வருஷத்திற்கு முன் ஒரு வெள்ளைக்காரப் பெண் அணிந்து வந்த உடை சுமார் இருபது கஜத்துக்கு மேலாகவே யிருக்கும். பெரிய வீட்டுப் பெண்கள் நடந்தால் துணி பூமியில் இழுபடாமல் தூக்கிக் கொண்டு போவதற்கு ஆள் வைப்பார்கள். அவயங் களைப் பெரிதாகக் காட்டுவதற்கு முயற்சிப்பார்கள். இன்றைய தினம் அவர்க ளுடைய உடை இரண்டு கஜம் துணியில் முடிந்துவிட்டது. எவ்வளவு குறுக்க வேண்டுமோ, எவ்வளவு சுருக்க வேண்டுமோ அவ்வளவுக்குக் குறைத்து விட்டார்கள். நாம் எதைச் சுருக்கினாலும் கடவுள் கோபித்துக் கொள்வாரோ வென்று நடுங்குகிறோம்.

## முற்போக்கு

வெள்ளைக்காரருடைய ஆராய்ச்சி அடுத்த ஔத்திற்கு என்ன மாறுதல் செய்வதென்று துடித்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய ஆராய்ச்சி 2000 வருஷங்கட்கு முன் எப்படியிருந்தோமோ அப்படியே இருக்க வேண்டுமென்று கருதி அதைக் கண்டுபிடிக்கத் தொல்காப்பிய ஆராய்ச்சி செய்யப்படுகிறது. எனவே வெள்ளைக்காரனுடைய முற்போக்குக் குதிரை முன்னாலும், நமது குதிரை பின்னாலும் போய்க் கொண்டிருக்கிறது. நம்மு டைய முட்டாள்தனமான காரியங்கட் கெல்லாம் அவசியத்தையும் காரணத் தையும் சொல்லாமல், பகவான் சொன்னார், மனு சொன்னார், ஆகமம் சொல் லிற்று, ஆழ்வார் சொன்னார், ஆச்சாரியார் சொன்னார் என்று சொல்வதைத் தவிர வேறு ஒன்றும் சமாதானமில்லை. ஆகவே நாம் எந்தக் காலத்திலோ எவனோ எதையோ எதற்கோ சொன்னான் அதைப்பற்றி நமக்கு என்ன கவலையென்று கருதி இந்தக் காலத்துக்குத் தகுந்ததை செய்யாமல் வாளா யிருப்போமானால் மனிதர்களாக வாழ முடியாது.



RangaRakes tamilnavarasam.com

## மூட நம்பிக்கை

எப்படி பஞ்சாட்சரம் ஜெபித்தால் விபூதி பூசினால் மோட்சம் வருமென்று மூட நம்பிக்கையால் கருதிக் கொண்டு துன்பப்படுகிறோமா அதுபோலவே தான் தக்ளி சுற்றினால் உப்புக் காய்ச்சினால் விடுதலை வருமென்று மூட நம்பிக்கையால் கஷ்டப்படுகின்றோம். பஞ்சாட்சரத்திலும் விபூதியிலும் நமக்குள்ள மூட நம்பிக்கை தான் தக்ளியிலும் உப்புக் காய்ச்சுவதிலும் திரும்பிவிட்டு விட்டதே தவிர வேறில்லை. அதில் நமது கடுகளவு ஆராய்ச்சி யாவது செய்திருப்போமானால் இதிலும் அணுவளவாவது ஆராய்ச்சி செய்யப் புத்தி புகுந்திருக்கும். பரம்பரையாய் நமக்குள்ளிருந்த மூட நம்பிக்கையே நம்மை ஆட்சி செய்து கொண்டு சிறிதும் முன்னேறவொட்டாமல் தடுக்கின்றது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

## நாஸ்த்திகம்

இப்போது நீங்கள் இந்தக் கூட்டத்திலிருந்து வெளியில் போகும் போது உங்களிற் சிலர் இராமசாமி சரியாய்த் தான் பேசினான். அதில் என்ன தப்பிருக்கிறதென்று ஒருவர்க்கொருவர் பேசிக் கொள்வீர்கள். ஆனால் பக்கத்தில் கேட்டண்டை ஒரு பார்ப்பான் நின்று கொண்டு உங்களைப் பார்த்து "நன்றாய் நாஸ்திகப் பிரசாரம் கேட்டீர்களா? பாகவதத்தில் இத்தனையாவது ஸ்காந்தத்தில் இந்த மாதிரி இன்ன இடத்தில் இத்தனை மணிக்கு இன்னான் வந்து இந்த மாதிரி நாஸ்திகம் பேசுவான், ஜனங்கள் ஞானமில்லாமல் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அதுதான் கலி வந்ததற்கு அடையாளம். அது சமயம் ஜாக்கிரதையாயிருந்து அதை மறக்கடிக்க ஒவ்வொருவராக முயல வேண்டுமென்று பகவான் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். ஆதலால் இவற்றை நம்பாதீர்கள்!" என்று சொல்லுவான். நீங்களும் திடுக்கிட்டு ஆ! என்ன பிசகு செய்தோமெனக் கருதி இந்த விஷயத்தைக் கேட்டதற்காக உங்கள் காதைக் கழுவிக் கொள்வீர்கள். இப்படியேதான் உங்களை ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஏமாற்றி வைத்திருக்கிறார்கள். ஆகையால் எந்த விஷயத்தையும் கண்மூடித்தனமாய் நம்பி விடாமல் உங்கள் அறிவைக் கொண்டு நன்றாக ஆராய்ச்சி செய்து பார்த்து அதன் முடிவின்படி நடவுங்கள் என்று கேட்டுக் கொண்டு இதை முடிக்கிறேன்.

*குறிப்பு:-05.06.1930 இல் நடைபெற்ற திருவாரூர் பொதுக்கூட்டச் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 15.06.1930**



RangaRakes

# திருடர் அல்லாவிட்டால் மூடர்

திருநெல்வேலி ஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாடு இம்மாதம் 7, 8, 9, 10 தேதிகளில் திருநெல்வேலியில் வெகுசிறப்பாய் நடந்தேறியது. அம்மகாநாடு அங்கு கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டவுடன் திருநெல்வேலி நெல்லையப்பர் சாமி கோவிலில் மாஜி தாசில்தார் திருவாளர் எம். வி. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் தலைமையில் ஆஸ்திக மகாநாடு என்பதாக ஒன்றைக் கூட்டி "சுயமரியாதைக்காரர்கள் தங்கள் பத்திரிகையில் 'திருடர்க்கழகு திருநீரடித்தல்' என்று எழுதியிருப்பதால் இது சைவ உலகத்தை அவமானப்படுத்தினதாகும். ஆகவே சுயமரியாதை மகாநாட்டுக்கு சகோதரர்கள் யாரும் போகக்கூடாது" என்று முடிவு செய்து பல கனவான்கள் கையொப்பமுமிட்டுத் துண்டு பிரசுரமும் வழங்கி இருந்தார்கள். அப்படி யிருந்தும் மகாநாட்டுக்கு ஏராளமான சைவர்கள் வந்திருந்ததோடு மகா நாட்டை ஒரு சைவப் பெரியாரும் தேவஸ்தான டிரஸ்டியும் போலீஸ் டிப்டி சூப்ரண்டெண்டெண்டாகயிருந்து பென்ஷன் பெற்றவருமான உயர்திரு. ராவ்சாகிப் கற்பக விநாயகம் பிள்ளை அவர்களே மகாநாட்டை திறந்து வைத்து திரு. ஈ. வெ. ராமசாமி வரும்வரை மகாநாட்டுக்கு அக்கிராசனராக வுமிருந்து நடத்திக் கொடுத்து திரு. இராமசாமி வந்தவுடன் அவர் வசம் அக்கிராசனத்தை ஒப்புவித்து விட்டுச் சென்றிருக்கிறார். மற்றொரு சைவப் பெரியாரான திரு. கடயம் சங்கரராயர் பி.ஏ.பி.எல். அவர்களே வரவேற்புத் தலைவராக இருந்து மகாநாட்டை நடத்தியிருக்கிறார்கள். இது தவிர மகா நாட்டில் காலையும் மாலையும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பிரதிநிதி களாகவும், காட்சியாளர்களாகவும் நாலுமணி நேரம், ஐந்து மணிநேரம் வந்திருந்து நடவடிக்கையில் கலந்திருக்கிறார்கள். இந்த ஆஸ்திகக் கூட்டத்தாருடைய சைவக் கட்டளையை எத்தனை சைவப் பெரியார்கள் மதித்தார்கள் என்பது நடவடிக்கைகளைக் கவனித்தவர்கட்குத் தெரிந்திருக்கும்.

தவிர திருநெல்வேலி சைவர்களின் கையாயுதமாயிருந்து கொண்டு பார்ப்பனப் பிரசாரஞ் செய்து கொண்டிருக்கும் 'லோகோபகாரி' என்னும் பத்திரிகையானது தனது ஜுன் 12 ம் நாள் பத்திரிகையில் "குடி அரசின் கூற்று" என்னும் தலையங்கத்தில் "திருடர்க்கழகு திருநீரடித்தல்" என்று குடி அரசில்



tamilnavarasam.com

எழுதியிருப்பதால் குடி அரசு பகிரங்கமாக மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டுமென்று எழுதியிருக்கிறது.

நாம் இதுவரையிலும் எவ்வித தப்பிதமும் செய்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டிய சமயம் நேரவில்லையானாலும் தவறுதல் என்று தோன்றி னால் மன்னிப்புக் கேட்க எப்பொழுதுமே தயாராய் இருக்கிறோம். ஆனால் இந்த விஷயத்தில் எவ்விதத்திலும் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டிய அவசியமிருப்பதாக சிறிதும் விளங்கவில்லை. அதாவது திருநீரு என்றால் என்ன? எதற்காக அதை நெற்றியில் இடுவது? இடுகிறவர்கள் அதை என்ன கருத்தோடு இடுகிறார்கள்? என்கின்ற விஷயங்களை யோசித்துப் பார்த்தால் "திருடர்க்கு அழகு திருநீரடித்தல்" என்பது நன்றாய் விளங்கும். இல்லா விட்டால் மூடர்க்கழகு யென்றாவது விளங்கும். எப்படி எனில் திருநீரு என்பது சாம்பல். அதை இடுவது கடவுளின் அருளைப் பெறவாம். அதை இடுகின்றவர்கள் கருதுவதும் தாங்கள் எவ்வளவு அக்கிரமக்காரர் ஆனாலும் திருநீரிட்ட மாத்திரத்திலே சகல பாவமும் போய் கைலாயம் சித்தித்துவிடும் என்பதேயாகும்.

இதற்கு ஆதாரமாக திருநீரின் மகிமையைப் பற்றி சொல்லுகின்ற பிரமோத்திர காண்டம் என்னும் சாஸ்திரத்தில் ஒரு பார்ப்பனன் மிக்க அயோக் கியனாகவும் கொலை, களவு, கள், காமம்,பொய் முதலிய பஞ்சமா பாதகமான காரியங்கள் செய்து கொண்டே இருந்து ஒரு நாள் ஒரு புலையனான சண்டாளன் வீட்டில் திருட்டுத்தனமாய் அவன் மனைவியை புணர்ந்த தாகவும், அந்த சண்டாளன் இதை அறிந்து அந்தப் பார்ப்பானை ஒரே குத்தா கக் குத்திக் கொன்று அப்பிணத்தை சுடுகாட்டுக்குப் பக்கத்தில் கொண்டு போய் எரித்துவிட்டதாகவும், அந்தப் பார்ப்பனனை அவன் செய்த பாவங்க ளுக்காக எமதூதர்கள் கட்டிப்பிடித்து கும்பிபாகம் என்னும் நரகத்திற்றள்ளக் கொண்டு போனதாகவும், அந்தச் சமயத்தில் சிவகணங்கள் ரத்தின விமானத்துடன் வந்து அந்தப் பார்ப்பனனை எமதூதர்களிடமிருந்து பிடுங்கி இரத்தின விமானத்தில் வைத்துக் கைலாயத்திற்கு பார்வதி இடம் கொண்டு போனதாகவும், எமன் வந்து "இவன் மா பாவம் செய்த கெட்ட அயோக்கியப் பார்ப்பனனாயிருக்க நீங்கள் கைலாயத்திற்கு எப்படி கொண்டு போகலாம்?" என்று வாதாடினதாகவும், அதற்கு சிவகணங்கள் இந்தப் பார்ப்பான் மீது சற்று திருநீறு பட்டு விட்டதால் அவனுடைய பாவம் எல்லாம் ஒழிந்து அவன் மோக்ஷத்திற்கு அருகனானதினால் பரமசிவன் எங்களை அனுப்பினார் என்று சொன்னதாகவும், இதற்கு எமன் சித்திரபுத்திரன் கணக்கைப் பார்த்து இந்தப் பார்ப்பான் ஒருநாளும் திருநீறு பூசவில்லை, ஆதலால் இவனுக்கு மோக்ஷ மில்லை என்று சொல்லி வாதாடி சிவகணமும், எமகணமும் எமனும் சிவனி டம் சென்று இவ்வழக்கை சொன்னதாகவும், பிறகு சிவன் இந்த பார்ப்பனன் உயிருடன் இருக்கும்வரை மகாபாதகங்கள் செய்திருந்தாலும் இவனைக் குத்திக் கொன்று சுடுகாட்டில் இவன் பிணத்தை எறிந்து விட்டபோது மற்றொரு



பிணத்தைச் சுட்ட சாம்பலின் மீது நடந்து வந்த ஒரு நாய் இவனது பிணத்தைக் கடித்துத் தின்னும்போது அதின் காலில்பட்டிந்திருந்த அந்த சாம்பலில் கொஞ்சம் பிணத்தின்மீது பட்டு விட்டதால் அவனுக்குக் கைலாயத்தில் இடம் கொடுக்க வேண்டியதாயிற்றென்று சொல்லி எமனைக் கண்டித்தனுப்பிவிட்டு பார்ப்பானுக்கு மோட்சம் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதலால் திருநீறு எப்படியாவது சரீரத்தில் சிறிது பட்டுவிட்டால் எப்படிப்பட்ட அயோக்கியர்களுக்கும் மோட்சம் கிடைக்குமென்று சிவன் சொல்லி இருப்பதைப் பார்த்து நமது சைவர்கள் திருநீறு அணிகின்றார்கள். அந்த சாஸ்திரத்தின் அடுத்த அத்தியாயத்தில் அத் திருநீறு அணியும் விதம், இடங்கள் எல்லாம் குறிப்பிட்டு அந்த முறைப்படி இட்டால் இதில் எழுதக் கூடாத மகாபாதகங்கள் செய்வதினால் ஏற்படும் பாவங்கள் எல்லாம் நீங்கும் என்றும், அவன் பிதிர்கள் செய்த பாவங்கள்கூட நீங்கி நரகத்திலிருந்தாலும் சிவனிடத்தில் சேர்வார்கள் என்றும் எழுதியிருக்கின்றது. இவை பிரமோத்திர காண்டம் 14வது, 15வது அத்தியாயத்தில் உள்ளது. இந்த ஆதாரத்தை நம்பி மோக்ஷ ஆசையால் திருநீறு அணிகின்றவர் திருடராகவாவது, அதாவது பேராசைக்காரராகவாவது, மூடராகவாவது இருக்காமல் வேறு என்னவாய் இருக்கக் கூடும்? என்பதை யோசித்துப் பார்க்கும் வேலையை வாசகர் களுக்கே விட்டு விடுகிறோம்.

தவிர நாம் முன் எழுதியதற்காக வருத்தமடைந்த திரு நெல்லையப்ப பிள்ளை அவர்கள் வேளாளன் திருநீறு பூசினால்தான் மோக்ஷத்திற்கருக னென்றும், மற்றவன் பூசினால் அருகராகாரென்றும் கருதிக் கொண்டிருப்பவர். உதாரணமாக திருநெல்வேலி ஜில்லா முதலாவது சுயமரியாதை மகாநாட்டில் திருநீறு பூசிய யாவரும் கோவிலுக்குள் போகலாம் என்ற தீர்மானம் வந்த காலத்தில் 2000 பேர் உள்ள கூட்டத்தில் ஆக்ஷேபித்தவர் இவர் ஒரே ஒருவ ராவார். ஆகவே "திருடர்க்கழகு திருநீறடித்தல்" என்று எழுதிய விஷயத்தில் இவருக்குச் சிறிது கூட கோபம் வர நியாயமே இல்லை. ஒரு சமயம் லோகோபகாரிக்கு மனவருத்தமிருக்குமானால் அது "திருடர்க்கு அல்லது மூடர்க்கு" என்று திருத்த ஒரு திருத்தம் கொண்டு வந்தால் ஒப்புக் கொள்ள நாம் தயாராக இருக்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 15.06.1930**



RangaRakes
tamilnavarasam.com

# சுயமரியாதை இயக்க அபிமானிகளுக்கு ஒரு வேண்டுகோள்

நமது இயக்கம் மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள உயர்வு தாழ்வை வெறுக்கிறது. ஆலய உருவ வழிபாட்டை வெறுக்கிறது; மனிதனை மனிதன் மதத்தின்பேராலும், கடவுளின் பேராலும், சமயத்தின் பேராலும், சடங்குகளின் பேராலும் அடிமைப்படுத்துவதையும் ஏமாற்றிப் பிழைப்பதையும் வெறுக்கிறது. இவ்வளவும் இந்து மதத்தால் நேரிட்ட தீமை என்று கருதி மதத்திலும் சாஸ்திரங்களிலும் உள்ள ஊழல்களை வெளிப்படுத்தி வருகிறது. மனிதனை மனிதன் எவ்வழியிலும் ஏமாற்றி பிழைக்கக்கூடாது. இதுவே நமது இயக்கத்தின் முக்கிய கொள்கை. இவைகளை வருணாசிரம தருமிகள் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் நன்கு படித்தவர்களும் உலக ஞானம் உள்ளவர்களும் ஒருவாறு ஒப்புக்கொள்ளவே செய்கிறார்கள். ஆயினும் இவர்களும் காரியத்தில் காட்ட அஞ்சுகிறார்கள், மனிதனுக்கு பிறப்பு, இறப்பு, கலியாணம் முதலியவைகளில் சடங்கு அவசியமா என்பதை நாம் சிந்திப்பதே கிடையாது. சடங்கு செய்ய வேண்டியது அவசியமானால் யார் செய்தாலும் நமக்கு ஒன்று தான். பிராமணன் நம்மால் பிழைப்பதுமன்றி நம்மை இழிவாகக்கருதி நடத்துகிறான் என்று நாம் சொல்லலாம். இதே மாதிரி நாமும் பலரை இழிவாகவே கருதி நடத்துகிறோம். நம்மவர்களில் சிலரை நாமே குரு என்று ஏற்படுத்தினால் இவர்கள் மட்டும் பிற்காலம் தாங்களே உயர்ந்தவர்களென்றும் தங்களுக்கே மத விஷயம் யாவும் தெரியும் என்று கருதி நடத்தமாட்டார்கள் என்பது தான் என்ன நிச்சயம், இவைகள் பண்டாரங்களை ஏற்று பிராமணனை நீக்கி சடங்குகள் செய்பவர்கட்கு மட்டுமே தெரிவிக்கிறேன், பண்டாரங்களிலும் பலபேர் சைவர்கள் வீட்டில் கூட சாப்பிடுவது கிடையாது. இவர்களும் நூலணிந்திருக்கிறார்கள். ஆதி சைவன் என்னும் குருக்கள் எப்படி தற்காலம் பிராமணனாக மதிக்கப் படுகிறானோ அதுபோல் இவனும் பிற்காலத்தில் பிராமணனாக மாறி விடுவான். வீணில் ஏமாறாதீர்கள். இவைகளும் நமதியக்கத்தால் ஒப்புக் கொள்ளக் கூடிய காரியமன்று, பிராமணன் சொல்லும் மந்திரங்களையும் ஏற்படுத்திய முறைகளுமே தான் இவன் ஒன்றையும் நீக்கிவிடவில்லை. நமக்கு இதனால் எவ்வகையிலும் ஆதாயம் கிடையாது, இதுவும் நம்மை ஏமாற்றும் பிழைப்பேயன்றி வேறில்லை, நமதியக்கக் கொள்கைகட்கு



இவைகளும் நேர்மாறானவைகளே. இவர்களையும் நம் இயக்க கொள்கைப் படி நாம் ஆதரித்தல் அறிவுடைமையாகாது. இவர்களும் பிற்காலம் பக்கா பிராமணர்கள் ஆகிவிடுவார்கள். நமது தலைவர்கள் உண்ண உணவின்றி கஷ்டப்படும் ஏழைகட்கு உதவிபுரியுங்கள் என்று சொல்லுகிறார்கள். இப்பாழும் இந்தியாவில் ஒருவகுப்பார் தங்கள் உடலை வருத்தாமல் சாம்பலையோ நாமத்தையோ போட்டு கொட்டையோ காவடியோ கழுத்தில் சுமந்து கையில் ஓடேந்தி சம்சாரம் குழந்தைகளுடன் பிச்சை யெடுப்பதே தொழிலாக அலைகிறார். இவர்களால் மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளோ அளவு கடந்தவைகள். இவர்கட்கு இடும் பிச்சையால் நமக்கோ நாட்டிற்கோ இது காறும் வந்த நன்மை என்ன. இவர்கட்கிடும் பிச்சையால் நாமே நாட்டிற்கு தீங்கு செய்தவர்களாகிறோம். இவ்வளவும் இந்துமதத்தினால் வந்த தீமையானால் நன்மை எவையென்று நமக்கு விளங்கவில்லை. நமது கண்களுக்கு புலப்படா நன்மைகள் பண்டிதர்கட்கும் நம் எதிரிகட்கும் மட்டும் எப்படி தோன்றுகிறது என்பது தான் எமக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது. வருணாசிரமதருமமும் இந்து மத சாஸ்திர புராணங்களும் நம்மை ஏமாற்ற எழுதப்பட்டவைகள் என்று நாம் நினைக்கையில் பிராமணனை நீக்கிமட்டும் சடங்குகள் செய்வது எதற்கு. பிராமணனை நீக்கிவிட்டதால் மட்டும் நம்மிடமுள்ள மூடநம்பிக்கைகள் ஒழிந்து விட்டதா? குடி அரசிலோ திராவிடனிலோ உங்கள் பெயர் புரோகிதத்தை ஒழித்த வீரர்கள் என்று வெளிவருவதால் மட்டும் திருப்தி அடைந்து விட முடியுமா? அர்த்தமற்ற சடங்குகளில் நம்பிக்கையற்ற சடங்குகளில் நம்பிக்கையற்றவர்கள் அறவே நீக்கிவிட வேண்டும். பிராமணனை நீக்குவதால் மட்டும் முழுதும் திருப்தி அடைந்து விட முடியாது. இதனால் நீங்களும் மூட நம்பிக்கையை முற்றும் விட்டு விட்டவர்கள் என்று சொல்லிக்கொள்ளவும் முடியாது. இந்தியாவில் பிறந்து இந்து மதத்தை பின்பற்றிய எவனும் மூட நம்பிக்கையை அறவே ஒழிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல, உதாரணமாக, என்னிடத்திலே குற்றம் பல இருக்கலாம். ஒரு மனிதனுக்கு பிராமணனிடம் மட்டும் வெறுப்பிருக்கலாம், அவன் பிராமணனை மட்டும் நீக்குவான் அல்லது சடங்குகளை மட்டும் செய்யமாட்டான். கடவுளிடம் போனவுடன் அவன் மனநிலை தன்னையும் அறியாமல் மூட நம்பிக்கையென்னும் சேற்றில் சிக்கிக் கொள்ளுகிறது, குடி அரசு கடவுளை தூஷிக்கிறதே அன்றி ராஜீய விஷயங்கள் ஒன்றுமே வெளிவருவதில்லை என்று குறை கூறுபவர்களும் பலர் தற்காலம் குடி அரசின் கொள்கைக்கும் ராஜீயங்களுக்கும் சம்பந்தமில்லை என்பதை இவர்கள் அறிந்து கொள்வது மில்லை. உண்மை கடவுள் என்று இருந்தால் குடி அரசு அதை தூஷிக்கவே இல்லை. பிறரை ஏமாற்ற மனிதன் சூழ்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்ட கடவுள்களையும் ஏடுகளையுமே தூஷிக்கிறது. தூஷிக்கவேண்டியும் நேரிடுகிறது. இந்திய மக்களின் திரேகமே மூடநம்பிக்கையால் உருவாக்கப்பட்டது. இந்திய மக்களின் மூட நம்பிக்கையை ஒழிப்பதற்கும் மூளையையும் இரத்தத்தையும் சுத்தி செய்வதற்கும்



RangaRakes tamilnavarasam.com

மேனாட்டு மருந்துக்கள் ஏராளமாய் வேண்டும். உண்மையில் சுயமரியாதையில் பற்றுள்ளவர்கள் யுக்தி கொள்ளாத அர்த்தமற்ற சடங்குகளை அறவே விட்டொழியுங்கள். இவர்களே நமதியக்கத்தில் பற்றும் தலைவர்களின் அன்புக்கும் பாத்திரமானவர்கள். நமது இயக்கத் தலைவர்களின் கோரிக்கையும் இதுவே. ஆளுக்கொருநீதியும் சாதி உயர்வு தாழ்வுகளும் ஏமாற்றும் கொள்கைகளுமே இந்து மத தத்துவங்களானால் இந்து மதம் இந்தியாவை விட்டு ஒழியும் நாள் எந்நாளோ அந்நாளே மக்கட்கு நன்னாளாகும்.

**குடி அரசு - கட்டுரை - 15.06.1930**



RangaRakes

# சுயமரியாதையும் சுய ஆட்சியையும் பற்றி ஒரு சுய ஆட்சிப் பார்ப்பானுக்கும் சுயமரியாதை பார்ப்பனரல்லாதாருக்கும் சம்பாஷணை

**- சித்திரபுத்திரன்**

**சுய ஆட்சி:-** என்ன சுயமரியாதை! உன்னை ஒரு வாரமாகக் கண்ணிலேயே காண முடியவில்லை. எங்கு போய் விட்டாய்?

**சுயமரியாதை:-** ஓ! சுய ஆட்சியே! நான் ஈரோட்டுக்குப் போயிருந்தேன்.

**சு. ஆ:-** ஈரோட்டில் ஒரு வாரமாக என்ன வேலை உனக்கு?

**சு. ம:-** ஈரோட்டில் சுயமரியாதை மகாநாடு நடந்ததல்லவா? அதற்காக ஒரு வாரம் முன்னேயே போய் மகாநாட்டு வேலையில் கலந்து கொண்டு என்னால் கூடியதைச் செய்து கொண்டிருந்தேன்.

**சு. ஆ:-** ஆமா! ஆமா!! நான் கூட கேள்விப் பட்டேன். சுயமரியாதை மகாநாடு நிரம்ப நன்றாய் நடந்ததாகவும் மூன்று நான்கு ஆயிரம் பேருக்கு மேலாகவே வந்திருந்ததாகவும், பெண்களும், ஆண்களும், ஆதி திராவிடர்களும் கூட ஏராளமாய் வந்திருந்ததாகவும் கேள்விப் பட்டேன்.

**சு. ம:-** ஆதி திராவிடர்கள் வந்திருந்தது மாத்திரம்தானா நீ கண்டாய்? சமையல் பரிமாறினதில் கூட ஆதி திராவிடர்கள் கலந்திருந்தார்கள். மற்றொரு சமையல் இடத்தில் 2, 3 ஆதி திராவிடர்களும் ஒரு ஆதி திராவிடப் பெண்ணும் மாத்திரமேதான் சமையல் செய்து பரிமாறினார்கள். மகாநாட்டுத் தலைவர் திரு. எம்.ஆர். ஜெயகருக்கும் அவருடன் கூட இறங்கி இருந்த கனவான்களுக்கும் ஆதிதிராவிட சமையல்தான் நடந்தது.

**சு. ஆ:-** பிரதிநிதிகளுக்கு சமையல் செய்த சமையல்காரர்கள் யார்? மதுரை, கோயமுத்தூர் கான்பரன்சுகள் போல சைவர்கள்தானே?

**சு. ம:-** இல்லவே இல்லை. ஒரு சைவனையாவது சமையல் வீட்டிற்குள் விடவே இல்லை.



tamilnavarasam.com

**சு. ஆ:-** பின்னை யார் சமையல் செய்தார்கள். பிராமணனா?

**சு. ம:-** சைவனுக்கு இடமில்லையென்றால், பார்ப்பானுக்கு அங்கு இடம் கிடைத்து விடுமா?

**சு. ஆ:-** பின் யார்தான் சமையல் செய்தார்கள்?

**சு. ம:-** விருது நகரிலிருந்து வரவழைக்கப் பட்டிருந்த முதல் தரமான நாடார் சமையல்காரர்களே சமையல் செய்தார்கள்.

**சு. ஆ:-** அவர்கள் சமையல் நன்றாயிருந்ததா? ஜனங்கள் சாப்பிட்டார்களா?

**சு. ம:-** நன்றாயிருந்ததா என்றா கேட்கின்றாய். மகாநாட்டிற்கு பார்ப்பன சமையற்காரனையாவது, சைவ சமையற்காரனையாவது வைத்திருந்தால் குறைந்தது ஒரு பத்து மூட்டை அரிசியாவது குறைந்திருக்கும். நாடார்களை வைக்கப் போக மூன்று நான்கு நாளில் 40, 50 மூட்டை அரிசியும் தீர்ந்து விட்டது.

**சு. ஆ:-** அது என்ன அப்படி சொல்லுகின்றாய்?

**சு. ம:-** அனேகமாய் ஒவ்வொரு ஆளும் ஒன்றரை ஆள் சாப்பாடு சாப்பிட்டார்கள். இது நான் சொல்லுவதல்ல, பிரதிநிதிகளே சொன்னது. ஏனென்றால் சாப்பாடு அவ்வளவு சுத்தமாகவும் ருஜியாகவும் இருந்ததோடு வெகு அன்பாகப் பரிமாறினார்கள் என்று சொல்லிக் கொண்டார்கள்.

**சு. ஆ:-** எல்லா பிரதிநிதிகளும் சாப்பிட்டார்களா?

**சு. ம:-** எல்லா பிரதிநிதிகளுமே சாப்பிட்டார்கள். இன்னம் ஒரு விசேஷம் என்ன தெரியுமா? ஆதிதிராவிட வாலண்டியர்கள் சாப்பாடு பரிமாறினார்கள். மற்றும் மகமதியர் வாலண்டியர்களும், கிறிஸ்தவ வாலண்டியர்களும் பரிமாறினார்கள். திருப்தியாகவே எல்லோரும் சாப்பிட்டார்கள்.

**சு. ஆ:-** அப்படித்தான் இருக்க வேண்டும். எனக்கு இந்த விஷயம் காதில் கேழ்ப்பதற்கு மிகவும் சந்தோஷமாயிருக்கின்றது.

சு. ம:- நீங்கள் எல்லாம் வாயில் சந்தோஷப்பட்டு விட்டு போகின்றவர்களே தவிர காரியத்தில் வரும் போது மறைந்து கொள்ளுகின்றவர்கள் தானே?

**சு. ஆ:-** அதென்ன அப்படிச் சொல்லுகின்றாய்

**சு. ம:-** சொல்லுவதென்ன. நீதான் சொல்லேன் பார்ப்போம். எந்த அரசியல் கான்பிரன்சிலாவது இன்றைய வரை பார்ப்பனர்களைத் தவிர வேறு வகுப்பார்களை வைத்து சமையல் செய்திருக்கின்றீர்களா?

முதலாவது சமபந்தியாய் வைத்து சாப்பாடு போட்டிருக்கின்றீர்களா?

ஒத்துழையாமையின் போதுகூட பார்ப்பன சமையற்காரார்கள் தான் –



RangaRakes

அதற்கு பிறகு கூட பார்ப்பன சமையற்காரார்கள் தான் – யாராவது கேட்டால் அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று சொல்லி ஏமாற்றிவிடுவீர்கள்.

காங்கிரஸ் முதலிய கூட்டங்களுக்கு வேறு மாகாணங்களுக்கு போனால் கூட அவ்விடத்திற்கும் இங்கிருந்தே பார்ப்பன சமையல்காரர்களைக் கூட்டிக் கொண்டு போய் அங்கும் வேறு வேறாக உட்கார வைத்துச் சாப்பாடு போட்டு அவமானப் படுத்துவீர்கள். வாயில் மாத்திரம் சமத்துவம், சுதந்திரம், சுயராஜ்ஜியம், பூரண சுயேச்சை பேசுவீர்கள்.

**சு. ஆ:-** கொஞ்சம் கொஞ்சமாகத் தானே ஆக வேண்டும். ஒரே நாளில் ஆய்விடுமா? அதன் பாட்டுக்கு அதுவும் நடக்க வேண்டியது தான். சுய ஆட்சி பாட்டிற்கு அதுவும் வரவேண்டியதுதான். சரிசமமாய் உட்கார்ந்து சாப்பிடுவதற்கும் சுய ஆட்சிக்கும் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தால் முடியுமா? இது இன்று நேற்று ஏற்பட்ட விஷயமா? ஏதோ ஒரு நன்மைக்காகத்தான் பெரியவர்கள் இந்த ஏற்பாடுகளெல்லாம் செய்து வைத்திருக்கிறார்கள். அதை அழிப்பது அவ்வளவு சரியான காரியமாய் விடாது. இருந்தாலும் மெள்ள மெள்ளச் சரிப்படுத்த முயற்சிக்க வேண்டியதுதான். அது எப்படியோ இருக்கட்டும். இப்பொழுது சாப்பாட்டிற்கு என்ன அவசரம் வந்து விட்டது? மகாநாட்டு மற்ற நடவடிக்கைகளைப் பற்றி பேசுவோம் – மகாநாடு ரொம்பவும் நன்றாய் நடந்ததென்று தான் சொன்னார்கள். ஆனால் என் அபிப்பிராயத்தில் ஒரே ஒரு தவறு தான் நடந்து விட்டது என்று படுகிறது.

**சு. ம:-** அதென்ன தவறு?

**சு.ஆ:-** உப்புச் சத்தியாக்கிரகத்தை பாராட்டியும் கஷ்டப்பட்டவர்களுக்கு அனுதாபம் காட்டியும் ஒரு தீர்மானம் போட்டிருந்தால் மற்ற காரியங்கள் எல்லாம் எப்படி இருந்தாலும் மறைந்து போயிருக்கும். அதில் தான் சற்றுத் தவறி விட்டீர்கள்.

**சு. ம:-** அப்படியா நினைக்கின்றாய்! எனக்கு அந்த காரியத்தினால் தான் மகாநாடு ரொம்ப சரியாய் நடந்து கொண்டது என்பதாகப் படுகின்றது. மகாநாடு அந்தத் தீர்மானங்களைச் செய்திருந்ததேயானால் கண்டிப்பாய் மகாநாட்டின் யோக்கியதையும் குறைந்திருக்கும். சுயமரியாதை இயக்கத்திற்கும் சாவுமணி அடித்திருக்கும்.

**சு. ஆ:-** அதென்ன அப்படிச் சொல்லுகின்றாய்?

**சு. ம:-** ஆம், அப்படித்தான் ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்தால் எப்படி அந்தக் கட்சிக்கு சாவு மணியோ அதுபோல் சுயமரியாதை இயக்கத்தில் அரசியல் சம்மந்தமான எந்தப் பிரச்சினையை கொண்டு வந்தாலும் இதற்கு சாவு மணியேயாகும். இவ்வியக்கத்தின் நாணயமே அடியோடு போய்விடும்.

**சு. ஆ;-** இதனால் என்ன கெடுதி வந்து விடும்?



tamilnavarasam.com

**சு. ம:-** சுயமரியாதை இயக்கத்திற்கு எப்படி கடவுளைப் பற்றி கவலை இல்லையோ அதுபோலவே சுய ஆட்சியைப் பற்றியும் கவலையே இல்லை. சுய ஆட்சி வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி. ஏனெனில் கடவுள் என்கின்ற வார்த்தையைப் போலவே சுய ஆட்சி என்கின்ற வார்த்தையும் அர்த்தமற்ற தாகும். வயிற்றுப் பிழைப்புக்கும், சுயநலத்திற்கும் கடவுள் பெயரைச் சொல்லிக் கொண்டு இருப்பது போலவே சுய ஆட்சி பெயரையும் சிலர் சொல்லிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு இல்லை. ஆகையால் சுய மரியாதைக் காரருக்கு எப்படி மக்களுக்கு கடவுள் உணர்ச்சியும் கடவுள் கவலையும் போக வேண்டும் என்கின்ற கவலை இருக்கின்றதோ, அது போலவே சுய ஆட்சி உணர்ச்சியும் கவலையும் போக வேண்டும் என்கின்ற கொள்கையும் உண்டு. ஆதலால் அவைகளைப் பற்றி மகாநாடு கவனிக் காததே நல்ல காரியமாகும்.

**சு. ஆ:-** அப்படி ஆனால் மகாத்மா காந்தி கூடவா அர்த்தம் தெரியாமல் செய்கின்றார் என்கின்றாய்?

**சு. ம:-** அதென்ன மகாத்மா செய்வதாயிருந்தால் எல்லாக் காரியமும் சரியானதாய் இருக்கும் என்பது உனது அபிப்பிராயமோ? மகாத்மாவை சுய மரியாதைக்காரர்கள் ஒப்புக் கொள்வதில்லை என்பது உனக்குத் தெரியாதா?

**சு. ஆ:-**அதென்ன இந்த சங்கதி எனக்கு அதிசயமாயிருக்கிறது?

**சு. ம:-** அதிசயமென்ன? மகாத்மா என்கின்ற பட்டத்தை கூட நாங்கள் சேர்ப்பதில்லை. அது உனக்குத் தெரியாதா?

அவர் உலகத்திற்கு பெரியவராய் இருக்கலாம் எங்களைப் பொருத்த வரை நாங்கள் அவர்கள் கொள்கையை ஒப்புக் கொள்ள முடியாது. வெள்ளைக்காரர்கள் வேண்டுமானாலும் அவரை ஒப்புக் கொள்ளும்படியான காலம் வரலாம். சுயமரியாதைக்காரரான நாங்கள் அவரை எங்கள் பிரதிநிதி என்று ஒரு காலமும் ஒப்புக் கொள்ளவே மாட்டோம். ஏனென்றால் எங்கள் கொள்கைப்படி அவரும் ஒரு மூட நம்பிக்கைக்காரரே யாவார். சுருக்கமாகச் சொன்னால் பார்ப்பன ஆதிக்கத்திற்கு தாசர் ஆவார். அவரது ராமன், சீதை, அரிச்சந்திரன், கிருஷ்ணன், நாராயணன் முதலியவர்கள் எல்லாம் நமக்கு பிடிக்காதவர்கள். அன்றியும் அவரது கடவுள், செயல், ஜாதி உணர்ச்சி, வரு ணாசிரமக் கொள்கை, மனுதர்ம சாஸ்திர பக்தி, கீதை உபாசனை முதலான வைகள் எல்லாம் எங்களுக்கு அடியோடு உதவாது. இந்த விஷயங்களில் அவர் எப்படி மூட நம்பிக்கையும் பார்ப்பனீயதாசத் தன்மையும் கொண்டு இருக்கிறாரோ அதே மாதிரிதான் ராஜீக விஷயத்திலும் மூட நம்பிக்கையும் பார்ப்பன ஆதிக்கதாசத் தன்மையும் கொண்டு இருக்கிறார் என்று எண்ணு கின்றோம். ஆதலால் அவரது கொள்கைகளை யெல்லாம் நாம் ஒப்புக்கொள் ளவும் முடியாது. பின்பற்றவும் முடியாது. அதோடு அதில் பாமர மக்கள் ஏமாந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதும் நமது கடனாகும்.



**சு. ஆ:-** நீ இப்படிச் சொல்லி விட்டதினாலேயே எல்லோரும் உன் பேச்சை கேட்டு விடுவார்களா?

**சு. ம: -** அது வேற சங்கதி. ஜனங்கள் கேட்பார்களா இல்லையா என் பதை நாங்கள் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. நாங்கள் சொல்வது சரியா தப்பா என்பதை யோசிக்க வேண்டியதைத் தவிர மற்றவர்கள் கேட்பார் களா? கேட்க மாட்டார்களா? என்பதல்ல நாங்கள் கவனிக்க வேண்டியது. உதாரணமாகச் சங்கராச்சாரியை நாங்கள் லோக குரு என்று ஒப்புக் கொள்வ தில்லை. இந்து மதம் என்று ஒரு மதம் இருப்பதாக நாங்கள் ஒப்புக் கொள்வ தில்லை. சாமி செயல், கோவில் உற்சவம் இவைகளை யெல்லாம் நாங்கள் ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் பத்துலட்சக்கணக்கான மக்கள் இவைகளை ஒப்புக் கொண்டு கூத்தாடுகிறார்கள். அதனாலேயே நாங்கள் ஒப்புக் கொள்ளாதது தப்பிதமாய் விடுமா? அல்லது அவர்கள் ஒப்புக் கொள்வது சரியானதாகி விடுமா?

**சு. ஆ: -** சுயராஜியமும் வேண்டாம். கடவுளும் வேண்டாம். சங்கராச் சாரியும் வேண்டாம். மகாத்மாவும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம். என்கின் றீர்களே பின்னை எதற்காகத் தான் இவ்வளவு ரூபாய் செலவு செய்து மகாநாடு நடத்தினீர்கள்.

**சு. ம: -** அப்படிக் கேள். எங்களுக்கு சுயமரியாதை வேண்டும். பகுத்தறிவு வேண்டும். சமத்துவம் வேண்டும்.

**சு. ஆ: -** இப்பொழுது சுயமரியாதை இல்லாமல் என்ன விதமான அவமரியாதை அனுபவிக்கிறீர்கள்?

**சு. ம: -** என்ன அவமரியாதை என்றா கேட்கிறாய்? உனக்கு உண்மை யிலேயே தெரிய வில்லையா?

**சு. ஆ: -** தெரியவில்லையே.

**சு. ம: -** தெரியச் சொல்லுகிறேன் கேள் - முதலில் நீ யார்? சொல்லு பார்ப்போம்.

**சு. ஆ: -** நான் ஒரு பிராமணன்.

**சு. ம: -** நான் யார்? சொல்லு பார்ப்போம்.

**சு. ஆ: -** நீ ஒரு பிராமணனல்லாதவன்.

**சு. ம: -** அப்படிச் சொன்னால் முடியாது. உனக்கு நீ பிராமணன் என்கின்ற பட்டம் வைத்துக் கொண்டது போல் எனக்கு அதே முறையில் இருக்கும் பட்டத்தைச் சொல்லு.

**சு. ஆ: -** அதற்கென்ன சூத்திரன் என்று சொல்லுவார்கள்.

**சு. ம: -** நான் சூத்திரனாயிற்று. சரி. திரு. எம். சி. ராஜா யார் சொல்



RangaRakes
tamilnavarasam.com

பார்ப்போம்.

**சு. ஆ :** – அவர் ஆதி திராவிடர்.

**சு. ம:** – அப்படிச் சொன்னால் முடியாது. நீ பிராமணன். நான் சூத்திரன் என்பது போல் அவருக்குள்ள பட்டத்தையும் சொல்லு.

**சு. ஆ:** – பறையர் அல்லது பஞ்சமர் என்று சொல்லுவார்கள்.

**சு. ம:** – சரி எங்களை நீங்கள் தொடுவீர்களா?

**சு. ஆ:** – தொட்டால் என்ன ஒட்டிக் கொள்ளுமோ?

**சு. ம:** – அதெல்லாம் தெரியாது. நீங்கள் அதாவது உங்கள் ஜாதியார் எங்களையும் எம்.சி. ராஜாவையும் தொடுவார்களா?

**சு. ஆ:** – பெரியவர்கள் தொடமாட்டார்கள்.

**சு. ம:** – ஏன் தொடமாட்டார்கள்?

**சு. ஆ:** – என்னமோ வெகுகாலமாக அப்படி ஒரு வழக்கம் ஏற்பட்டு விட்டது. அது நாங்கள் ஏற்படுத்தியதா நீங்கள் ஏற்படுத்தியதா?

**சு. ம:** – யாரோ ஏற்படுத்தி இருக்கட்டும் அதைப் பற்றி கவலையில்லை. ஏன் தொட மாட்டார்கள் அதைச் சொல்லு.

**சு. ஆ:** – பிராமணாள் சற்று மேல் ஜாதி. சூத்திரன் பஞ்மன் என்பது சற்று கீழ் ஜாதி என்று ஏற்படுத்தி விட்டார்கள். அதனால் தொடக் கூடாது என்றும், தொட்டால் தீட்டு என்றும் சொல்லப்படுகின்றது. ஆனால் எனக்கு அந்த வித்தியாசம் இல்லை.

**சு. ம:** – உனக்கு இருந்தாலும் சரி இல்லா விட்டாலும் சரி முன் சொன்ன அந்தக் கீழ் ஜாதியில் எங்களை சேர்க்கப் பட்டிருப்பதே தான் எங்களுடைய சுயமரியாதைக் குறைவுக்கு முதல் உதாரணம். இப்படி இன்னும் எத்தனை வேண்டுமானாலும் சொல்லுவேன்.

**சு.ஆ:**– அப்படியானால் உங்களுக்குள் அந்த வித்தியாசம்இல்லையா?

**சு. ம:** – இருந்தாலும் இருக்கலாம். அதுவும் உங்களால் வந்த வினை தான். இருந்தாலும் சுயமரியாதை இயக்கத்தில் அந்த வித்தியாசமே இருக்கக் கூடாது, என்பது தான் முதற் கொள்கை. அதற்கு உதாரணமாகவே தான் சாப்பாடு விஷயத்தில் எல்லோரும் சமமாயும் மேல், கீழ் என்கின்ற ஜாதி வித்தியாசம் இல்லாமலும் சாப்பாடு கொடுப்பனை கொள்வனை ஆகிய காரியங்கள் நடந்து வருகின்றது.

**குடி அரசு – உரையாடல் – 22.06.1930**



RangaRakes

# உதிர்ந்த மலர்கள்

1. “கண்ணுக்கும், மனதிற்கும், அறிவிற்கும் எட்டாததும், வாயினால் விவரிக்க முடியாததுமாக ஒன்று உண்டு. அது தான் கடவுள்” என்று சொல்லு வார்களானால் அவர்கள் தான் பகுத்தறிவற்றவர்கள் ஆவார்கள், ஏனெனில் அவர்கள் தாங்கள் சொல்லுவதிலிருந்தே முன்னுக்குப் பின் முரணாயிருப் பதை அறிகிறார்களில்லை.

2. தான் செய்யும் அக்கிரமங்களுக்கு பரிகாரமும் மன்னிப்பும் கிடைப் பதற்காகவும், அடுத்த ஜன்மத்தில் சுகமடைவதற்காகவும் என்று நினைத்துக் கொண்டு கடவுள் பக்தி செலுத்துகின்றவர்களும் சமயச் சின்னங்கள் அணிபவர்களும் திருடர்கள் அல்லது மூடர்களே ஆவார்கள்.

3. “மோட்சத்திற்காக நாமம், விபூதி தரித்து தாரகம், பஞ்சாட்சரம் ஜெபிப்பவர்களும், சுயேச்சையாக கதர் உடுத்தி, கதர்க் குல்லாய் போட்டுக் கொண்டு இராட்டினம், தக்ளி, நூல் நூற்பவர்களும் ஒரேவிதமான மூட நம்பிக்கையின் பாற்பட்டவர்களும், சுய அறிவற்ற செம்மறியாட்டுக் கூட்டத் தில் சேர்ந்தவர்களுமேயாவார்கள்”.

4. “கடவுள் தங்களுக்கு “நன்மை” செய்ததற்காக நன்றி செலுத்த வேண்டுமென்று சிலர் சொல்லுவதனால் கடவுள் பலருக்குத் “தீமை” செய்ததற்காக தீமையை அனுபவிப்பவர்கள் கடவுளை என்ன செய்ய வேண்டும்?”

5. “கடவுள் தன்னை பணக்காரனாகப் பிறப்பித்ததற்காக ஒரு பணக் காரன் கடவுளுக்குக் கோயில் கட்டினால் ஏழையாகப் பிறப்பித்ததற்காக அந்த ஏழை மகன் அக்கோயிலை இடித்துத் தகர்க்க வேண்டாமா? அல்லது அந்தச் சாமியை . . . . . வேண்டாமா?”

6. “நமது நாட்டில் வெள்ளைக்கார ஆதிக்கம் பார்ப்பனனின் தயவிலி ருக்கின்றது. பார்ப்பன ஆதிக்கம் மதத்தின் தயவில் இருக்கின்றது. மத ஆதிக்கம் சாஸ்திரத்தின் தயவிலிருக்கின்றது. சாஸ்திரத்தின் ஆதிக்கம் கடவுள் தயவிலிருக்கின்றது. ஆகவே கடவுளின் ஆதிக்கத்தை முதலில் ஒழித்தால்தான் மற்ற ஆதிக்கங்கள் குறைந்து நாட்டை நலமடையச் செய்ய முடியும்”.



tamilnavarasam.com

7. “அரசாங்க வரியையும், மதவரியையும் கணக்குப் பார்த்தால் அரசாங்க வரியைவிட மதவரியே அதிகமாகும்”.

8. “வெள்ளைக்காரர்களின் கொள்ளையையும், நமது கடவுள்களின் கொள்ளையையும் கணக்குப் பார்த்தால் நமது கடவுள்கள் கொள்ளையே வெள்ளைக்காரர்கள் கொள்ளையைவிட பல மடங்கு அதிகமாகும்”

9. “இந்த வைகாசி மாதத்தில் மாத்திரம் தென்னாட்டில் ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில் மூன்று கும்பாபிஷேகங்கள் நடந்திருக்கின்றன. இந்தக் கோயில்கள் மூன்றும் சுமார் 10 அல்லது 12 லட்சம் ரூபாய் செலவு செய்து கட்டப்பட்டவைகளாகும்”.

10. “இன்றைய தினம் நமது தமிழ்நாட்டில் மாத்திரம் சுமார் 2 கோடி ரூபாய்க்கு மேல் எஸ்டிமேட்டுகள் (திட்டம்) போடப்பட்ட பல கோவில்களின் திருப்பணி வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன”.

இவைகளுக்கு பல லட்ச ரூபாய் முதலாக வைத்து பல கடைகளில் லேவாதேவி முதலிய வியாபாரங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

11. “பணக்காரர்களிடம் போய்ச் சேரும் பணங்கள் பெரும்பான்மையும், கோயில் கட்டுதல் கும்பாபிஷேகம் செய்தல், உத்சவம் செய்தல், லட்சம் பார்ப்பன போஜனம் செய்தல் முதலாகிய இந்த தேசத்தின் நாச வேலைக்கே போய்ச் சேருவதால், பணக்காரர்களின் மீதும் போர் தொடுக்க வேண்டியது அவசரமான அவசியமாகின்றது”.

12. “பெண்கள் மீது சுமத்தப்பட்டுள்ள “கற்பு”த் தான் ஆண்களின், ஒழுக்கக் கேட்டிற்கும், மிருக சுபாவத்திற்கும் முதற்காரணமாயிருக்கிறது”.

13. “இந்தியாவில் சரியான கல்வி இல்லாமல் போனதற்குக் காரணம் மதக் கொள்கையும், கடவுள் செலவுமேயாகும்”.

14. “புருஷர்கள் தாசி, வேசி, வைப்பாட்டி வைத்துக் கொள்வது சகஜமாயிருப்பது போலவே, ஒவ்வொரு பெண்ஜாதிகளும் ஆசை நாயகன் வைத்துக் கொள்வது சகஜமென்று ஆகிவிட்டால் புருஷர்கள் தாசி முதலியன வைத்துக் கொள்வதை உடனே நிறுத்தி விடுவார்கள்”.

15. “தீண்டாமையை ஒழிக்கும் படி மேல் ஜாதியார் என்பவர்களிடம் 40 வருஷம் பணிந்து பணிந்து செய்த வேலையை விட “நீங்கள் தீண்டாதவர்கள்” அல்ல என்பதாக “தீண்டப்படாதவர்கள்” என்பவர்களிடம் ஒரு வருஷம் செய்த வேலையானது எத்தனையோ பங்கு அதிகமான பலனைக் கொடுத்திருக்கின்றது”.



16. “பெண்களுக்குச் சுதந்திரம் கொடுக்கும்படி ஆண்களிடம் 40 வருஷம் கெஞ்சிக் கெஞ்சி வேலை செய்ததின் பலனை விட பெண்களிடம் “நீங்கள் அடிமைகள் அல்ல, ஆண்களைப் போலவே உங்களுக்கும் எல்லா வித சுதந்திரமும் உண்டு” என்று ஒரு வருஷம் செய்த வேலையால் எவ்வளவோ பயன் விளைந்திருக்கின்றது”.

17. “இந்தியாவின் ஈன நிலைமைக்கு அர்த்தமற்ற முறையில் சமய சந்தர்ப்பமில்லாமல், தொட்டதற்கெல்லாம் அரசாங்கத்தையே வைது கொண்டிருக்கும் வரை நாங்கள் பெரிய தேச பக்தர்களாகவும், தியாகிகளாகவும் கருதப்பட்டோம். ஆனால் இப்போது அந்த ஈன நிலைமைக்கு உண்மையான காரணத்தைக் கண்டு பிடித்து அதன் அஸ்திவாரத்தில் கையை வைத்து அடியோடு சாய்க்க ஆரம்பித்தவுடன், பார்ப்பனர்களாலும், அவர்கள் தாசர்களான சமயப் பிழைப்புக்காரர்களாலும் நாங்கள் பார்ப்பன துவேஷிகளாகவும், நாஸ்திகர்களாகவும், மதத் துரோகிகளாகவும் தேசத்துரோகிகளாகவும் கருதப்படுகிறோம்”.

18. “இந்து மதம் என்பதற்கு ஆங்கில அகராதியில் “மகமதியர்கட்கு விரோதமானது” என்று அர்த்தம் எழுதப்பட்டிருக்கின்றது”.

தமிழ் அகராதியில் மகமதியர்கள் என்பதற்கு “மிலேச்சர்” என்று அர்த்தம் எழுதப் பட்டிருக்கின்றது.

வட மொழி நூல்களில் “ஒரு மகமதியனைத் தொட்டால், தொடப்பட்ட நமது பாகத்தை வெட்டித் துண்டித்து விட வேண்டும்” என்று குறிப்பிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மகமதிய மத ஆதாரங்களில், ஒரு கடவுளுக்கு மேல் வணங்குகிறவர்களையும், கடவுளுக்கு உருவம், பெண்டு பிள்ளைகளைக் கற்பிக்கின்றவர்களையும் “காபர்” என்றும், அவர்களைக் கொன்றால் கூடக் குற்றமில்லை என்றும் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

இந்த நிலைமையில் இரு மதத்தையும் வைத்துக் கொண்டு இந்து – முஸ்லிம் ஒற்றுமை ஏற்படுத்த முடியுமா?”

19. “கோவில் கட்டவும் தேர் செய்யவும் உத்சவம் நடத்தவும் பணம் கொடுக்கும் ஜனங்கள் எவ்வளவு பகுத்தறிவுடனும் நல்ல காரியம் என்கின்ற பிரதி பலன் உணர்ச்சியுடனும் கொடுக்கின்றார்களோ அந்த அளவு பகுத்தறிவும் அந்த அளவு பிரதி பலனுடைய உணர்ச்சியோடு தான் தேசீய காரியத்திற்கும் ஜனங்கள் பணம் கொடுக்கிறார்கள்”.

20. “கோவில் டிரஸ்டிகளின் உண்டிகையில் போடும் பக்தர்களின் காணிக்கைகள் என்ன பலன் அடைகின்றதோ அந்த பலன் தான் தேசீய



RangaRakes tamilnavarasam.com

"டிரஸ்டிகள் வைத்திருக்கும்" தேசிய நிதி" உண்டிகையில் போடும் காணிக் கைப் பணங்களும் அடைகின்றன".

21. "சாமி பேரால் கோவில் பூசாரிகளின் தட்டத்தில் போடப்படும் பணம் என்ன பலனடைகின்றதோ அந்தப் பலன் தான் தேசீயப் பூசாரிகளின் தட்டத்தில் (கையில்) போடும் பணமும் அடைகின்றது."

22. "கோவில் உர்ச்சவத்திற்கு என்றும், அபிஷேகத்திற்கென்றும், பஜனைக்கென்றும், கட்டளைக்கென்றும், வேல், மணி செய்வதற்கென்றும் பணம் கேட்கவும் வசூலிக்கவும் யாருக்கு வேண்டுமானாலும் எப்படி உரிமை யுண்டோ அப்படியே தான் தேசீயத்திற்கு பணம் வசூலிக்கவும் யாருக்கும் உரிமையுண்டு".

**- ஈ.வெ.ரா .**

**குடி அரசு - துணுக்குகள் - 22.06.1930**



RangaRakes

# பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு சாவுமணி

தென்னாட்டில் வெகுகாலமாக பார்ப்பனராதிக்கத்தினால் உத்தியோக விஷயத்திலும் சமூக விஷயத்திலும் கஷ்டமனுபவித்து வந்த பார்ப்பன ரல்லாதார்களில் சில பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து சுமார் 10, 13 வருஷங்களுக்கு முன்பாக தென் இந்தியர்களின் நல உரிமைச் சங்கம் என்னும் பேரால் பார்ப்பனரல்லாதார் ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தி அதற்கு சமூக சமத்துவத் தையும் உத்தியோக வகுப்புவாரி பிரநிதித்துவத்தையும் முக்கிய கொள்கை யாய் வைத்து பார்ப்பனர்களை அந்த ஸ்தாபனத்தில் சேர்த்துக் கொள்வ தில்லை என்கின்ற விதிகளையும் ஏற்படுத்தி பார்ப்பனரல்லாத பொது ஜனங்க ளின் ஆதரவையும் பெற்று "ஜஸ்டிஸ்" என்கின்ற ஒரு ஆங்கில பத்திரிகை யையும் "திராவிடன்" என்கின்ற ஒரு தமிழ் பத்திரிகையும் அந்த ஸ்தாபனத் தின் சார்பாக நடத்தி, காங்கிரசின் பேராலும் தேசீயத்தின் பேராலும் பார்ப்பனர் களும் அவர்கள் தாசர்களும் செய்துவந்த தொல்லைகளை எல்லாம் சமாளித்து அறிவாளி மக்களிடத்திலும் அரசாங்கத்தினிடத்திலும் ஒத்துழைத் ததின் பயனால் நாட்டில் அந்த ஸ்தாபனத்திற்கும் பத்திரிகைகளுக்கும் பெரும் பான்மையான பார்ப்பனரல்லாத மக்களின் சரியான பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்கின்ற கவுரவமும் பெற்று விளங்கி வந்ததானது யாவரும் அறிந்த விஷயமேயாகும்.

அப்படிப்பட்ட ஒரு நியாயமான ஸ்தாபனம் அதன் முக்கியஸ்தர் களுக்குள் ஏற்பட்ட சுயநல உத்தியோக வெறியினால் பிளவுபட்டு செல்வாக் கையும் அதிகாரப் பதவியையும் யிழந்துவிட்ட காலத்தில் சுயமரியாதை இயக்கத்தாருடையவும் வாலிபர்களுடையவும் முயற்சியாலும், மறுபடியும் அக்கட்சிக்குள் ஒற்றுமை ஏற்பட்டதின் பலனாகவும் பழைய நிலைமையை அடைந்தது என்றாலும் இப்போது சிலரின் அதாவது ஒரு கைபிடிக்குள் அடங்கக்கூடிய தலைவர்கள் என்பவர்களின் சுயநலத்திற்காக அப்பேர்பட்ட ஒரு ஸ்தாபனத்தின் கொள்கைகளும், விதிகளும், கௌரவங்களும் அழிக்கப் பட்டு இன்று சந்தி சிரிக்கக்கூடிய நிலைமைக்குப் போய் அந்த ஸ்தாபனமே அடியோடு மறையக் கூடிய நிலைமைக்குப் போகக் கூடிய மாதிரியில் சாவு மணி அடித்தாகி விட்டது. ஆகவே இவ் விஷயத்தைக் கேட்ட எந்த பார்ப்பன



tamilnavarasam.com

ரல்லாதார் மனமும் சிறப்பாக வாலிபர்கள் மனமும் சுயமரியாதை இயக்கத் தார்கள் மனமும் பதறாமல் இருக்க முடியாதென்றே சொல்லுவோம்.

அதென்னவென்றால் இம்மாதம் 15 உ சென்னையில் கூடிய பார்ப்பன ரல்லாதார் கட்சி (தென் இந்திய நலவுரிமைச் சங்க) நிர்வாக சபைக் கூட்டத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ திட்டக் கொள்கையையும் ஆட்டம் கொடுக்கச் செய்து பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் பார்ப்பனர்களையும் அங்கத்தினர் களாகச் சேர்த்துக் கொள்வது என்று தீர்மானமாகி இருக்கின்றது. ஆகவே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் ஆட்டம் கொடுத்து பார்ப்பனர்களையும் அந்த இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளுவது என்று ஏற்பட்டுவிட்டால் பிறகு பார்ப்பனரல்லாதார் என்கின்ற கட்சியோ அல்லது அதனுடைய கொள் கையோ ஏதாவது மீதி இருக்கமுடியுமா? என்றும் அப்படி ஏதாவது இருந்தா லும் அக்கட்சிக்கு இனி பார்ப்பனரல்லாதார் (Non - Brahmin Party) கட்சி என்று பேர் சொல்லத்தகுமா? என்றும், அப்படியே ஒரு சமயம் சொல்லிக் கொண்டி ருப்பதனாலும், வெறும் பெயரளவில் மாத்திரம் அப்படி ஒரு ஸ்தாபனம் இருக்க வேண்டுமா? என்றும் ஒரு சமயம் இருக்கச் செய்யலாமானாலும் அதனால் பார்ப்பனரல்லாதார் மக்களுக்கு ஏதாவது பயன் விளையுமா? என்றும் யோசித்துப் பார்க்கும்படி பார்ப்பனரல்லாத பிரமுகர்களையும் அக் கட்சிக்குப் புத்துயிர் கொடுத்த வாலிபர்களையும் வேண்டிக் கொள்ளு கின்றோம்.

அன்றியும் இனிமேல் அக்கட்சியானது அதன் தலைவர்கள் என்பவர் கள் பொதுமக்களை ஏமாற்றிப் பார்ப்பனரல்லாதாருக்கு நன்மை செய்யப் போகிறோம் என்று சொல்லி பார்ப்பனரல்லாத பாமர மக்களிடம் ஓட்டுப் பெற்று சட்டசபை முதலிய ஸ்தாபனங்களில் அங்கத்தினர்களாகி தங்கள் சொந்த வாழ்வுக்கு மந்திரியாவதும் அல்லது மற்ற ஏதாவது லாபகரமான பதவி பெறுவதுமான காரியங்களுக்கு அவற்றை உபயோகப்படுத்தப்படுவதைத் தவிர அதனால் மக்களுக்கு எவ்விதமான பலனும் கண்டிப்பாய் உண்டாகப் போவதில்லை என்பது உறுதியான காரியமாகும்.

பார்ப்பனர்களை இக்கட்சியில் சேர்க்கலாமா வேண்டாமா என்னும் விஷயமும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை தளரவிட வேண்டுமா என்னும் விஷயம் ஒருபுறமிருக்க; இவ்விஷயத்தில் தலைவர்கள் என்பவர் களின் நாணையம் எவ்வாறு இருக்கின்றது என்பது இதில் முதலாவதாக கவனிக்கத்தக்க விஷயமாகும் என்பதை வாசகர்களுக்கு முதலில் ஞாபக மூட்ட விரும்புகின்றோம்.

அதாவது பார்ப்பனரல்லாதார் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்ப்பது என்பதும் தள்ளுவது என்பதும் பற்றிய பிரச்சினை அடிக்கடி கிளப்பப்பட்டு வதும் கட்சியின் நன்மையைக் கோரின நல்ல எண்ணத்துடனா? அல்லது சுயநலத்தைக் கோரி சமயத்திற்கேற்றாற் போல் நடப்பது என்கின்றதான புரட்டு



எண்ணத்தைக் கொண்டா? என்பதே முக்கியமாய் யோசிக்கத்தக்கதாகும்.

சென்ற அதாவது 1926-ம் வருஷக் கடைசியில் நடந்த சட்டசபைப் பொதுத் தேர்தலில் பார்ப்பனரல்லாத கட்சிப்பிரமுகர்கள் பலர் தோல்விய டைந்து மந்திரி ஸ்தானம் தங்கள் கையை விட்டுப் போக நேர்ந்தவுடனே மதுரையில் கூடிய மகாநாட்டின் போதே பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தது யாவருக்கும் தெரிந்த விஷயமேயாகும். அது சமயம் சிலர் போட்ட கூச்சலினால் அப்போது அது வலியுறுத்தப்படாமல் மறைந்து போயிற்று.

மறுபடியும் அடுத்தாற் போல் கோயமுத்தூரில் கூடின ஸ்பெஷல் மகா நாட்டின் போதும் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வர முயற்சி செய்து பார்த்து பிரயோஜனப்படாது என்று தெரிந்த பிறகு அதை விட்டு விட்டு காங்கிரசி லாவது போய்ச் சேரவேண்டுமென்று அதாவது பார்ப்பனர்களைத் தாங்கள் சேர்த்துக் கொள்ள இடம் கிடைக்காமல் போனாலும் பார்ப்பனர்களுடனாவது தாங்கள் போய்ச் சேர்ந்து விடலாம் என்று கருதி அதற்காக ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். அந்தச் சமயத்தில் திருவாளர்கள் வரதராஜுலு கல்யாணசுந்தரம் முதலியவர்கள் தங்களுக்கு பார்ப்பன சூட்சி விளங்கி விட்டதாகவும், இனிமேல் ஞானம் வந்து விட்டதாகவும், பார்ப்பனர்களை காங்கிரசை விட்டு விரட்டி விடலாம் என்றும் சொல்லிக்கொண்டு அவர்களும் இதில் வந்து சேரும் தீர்மானத்துடன் வந்திருந்தபடியால் அவர்கள் ஆசைக் காகவும் அத்தீர்மானம் அனுமதிக்கப் பட்டது என்றாலும் ஜஸ்டிஸ் கட்சி தலைவர்கள் மூன்றே மாதத்தில் தங்கள் தங்கள் குற்றங்களை உணரும்படி யாக ஏற்பட்டு அதாவது தாங்களும் காங்கிரசில் சேர முடியாமலும் பார்ப் பனர்களையும் அதைவிட்டு விரட்ட முடியாமலும் போய் விட்டது கண்டு தங்கள் தவறுதலுக்காக வருந்தவும் செய்தார்கள். ஆனாலும் அதுமுதல் இதுவரை இவ்வியக்கத் தலைவர்கள் என்பவர்களின் புத்தி ஒரு நிலையில் இல்லாமல் என்ன செய்தால் மந்திரி ஆகலாம் என்கின்ற ஒரே கவலையின் மீது வகுப்புவாரி பிரதிநிதித்துவமே வேண்டாம் என்று ஒரு தடவையும், பார்ப்பனர்களைச் சேர்க்கலாம் என்று ஒரு தடவையும், சேர்க்க வேண்டாம் என்று ஒரு தடவையும், கவுன்சில் நடவடிக்கைகளில் மாத்திரம் சேர்க்கலாம் என்று ஒரு தடவையும், கமிட்டி ஏற்படுத்தி சேர்க்கலாம் என்று ஒரு தடவையும், சுவற்று மீது பூனையாக ஒரு தடவையும், இம்மாதிரியாக சமயத் திற்குத் தகுந்தபடி யெல்லாம் பேசிக் கொண்டே ஒரு நிலையும் இல்லாமல் இருந்து விட்டு இப்போது தேர்தல் சமீபித்து விட்டதினாலும், உப்புச் சத்தியாக்கிரகத்தின் பயனாய் பார்ப்பனர்களுக்கு ஆதிக்கம் வந்திருக்கும் என் கின்ற எண்ணத்தினாலும் பார்ப்பனர்களுக்கு பயந்து கொண்டு இப்போது பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் வகுப்புவாரி பிரதிநிதி திட்டத்தையும் தளர்த்தி பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்வது என்று முடிவு செய்து விட்டு அதை அமுலுக்கு கொண்டு வர மகாநாடும் சமீபத்தில் தஞ்சாவூரில்



RangaRakes tamilnavarasam.com

கூட்டத் தீர்மானிக்கப்பட்டு மாய் விட்டது. அந்த மகாநாடும் கூட நாணைய மான முறையில் கூட்டப்படுவதானால் கண்டிப்பாய் இந்த தீர்மானம் அதில் தோல்வியடைந்தே தீரும் என்றும், சூட்சி முறையில் கூட்டப்படுவதானால் அவர்களின் இஷ்டப்படி நிறைவேற்றப்பட்டு விடவும் கூடும் என்றும் கருதுகிறோம்.

எது எப்படியானாலும் இதன் பயனாய் இனிமேல் பார்ப்பனரல்லா தாரின் சமூக சமத்துவத்திற்கும் தீண்டாத மக்களின் கொடுமை நீங்குவதற்கும், முகமதியர் கிருஸ்தவர்கள் ஆகிய குறைந்த துகையினர் பாதுகாப்பிற்கும் பார்ப்பனரல்லாதார் கட்சியை நம்புவதில் பலனில்லை என்று ஏற்பட்டு விடுவ தோடு அத்தலைவர்களின் நாணையத்திலும் ஜனங்களுக்கு அடியோடு நம்பிக்கையற்றுப் போய் விடுமென்பதே நமது அபிப்பிராயமாகும். காரணம் என்னவென்றால் நெல்லூர் மகாநாட்டிற்கு முன்னும் இவ்விதமான ஒரு முயற்சி ஏற்பட்டு இதே தலைவர்களில் பலர் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளுவதற்கும் அனுகூலமாயிருந்து சுயமரியாதை இயக்கத்தாரின் பலமான ஆக்ஷேபனைகளுக்கு பயந்து மந்திரிகளுடைய தாட்சண்ணியத் திற்காகவும் சிநேகத்திற்காகவும் பார்ப்பனர்களை சட்டசபை நடவடிக்கை யிலாவது சேர்த்துக் கொள்ள அனுமதி கோரி மந்திரி கட்சியும் பார்ப்பனரல் லாதார் கட்சியும் ஒன்றாக வேண்டும் என்கின்ற சமாதானத்திற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தி அக்கமிட்டியில் ராஜித் தீர்மானமாகச் செய்து நிர்வாக சபை யிலும் இராஜியை உத்தேசித்து ஏகமனதாய் தீர்மானம் செய்யச் செய்து மற்றவர்களையும் ஒப்புக் கொள்ளச் செய்த பிறகு சிறிது நாள் பொருத்து அடுத்த தேர்தலுக்கு பிறகு நியமனம் செய்யப்படும் மந்திரி சபையில் யார் முதல் மந்திரியாயிருப்பது? என்கின்ற தகராரின் பேரிலேயே சிலருக்குள் ராஜி முறிந்து நெல்லூர் மகாநாட்டில் அத்தீர்மானத்திற்கு அதாவது சட்டசபை நடவடிக்கைகளில் பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ளலாம் என்று செய்து கொண்ட ராஜி ஒப்பந்த தீர்மானத்திற்கு விரோதமாய் பிரசாரஞ் செய்து ஒரே ஒரு ஓட்டில் ஒப்பந்தத்திற்கு விரோதமாக தீர்மானிக்கப்பட்டு விட்டது. இதைப் பற்றி சுயமரியாதை சங்கத் தலைவர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கூட "அரசியல் சூதாட்டத்தின் பலனாக இப்படி செய்ய நேர்ந்தது" என்று கண்டித்து அப்போதே எழுதியிருக்கிறார். இது ஒரு புறமிருக்க,

சட்டசபை நடவடிக்கையில் கூட பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று தீர்மானித்து 4 மாதம் ஆவதற்குள் நெல்லூரில் அத் தீர்மா னத்தை யார் எதிர்த்தார்களோ அந்த கனவான்களாலேயே (சென்னை கன வான்களால்) மறுபடியும் "தற்கால நிலைமையை உத்தேசித்து பார்ப்பனர்களை பார்ப்பனரல்லாதார் கட்சியிலேயே அங்கத்தினர்களாக சேர்த்துக் கொள்ள வேண்டும்" என்று ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு 2, 3 மாதமாய் அதை தள்ளித் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்து இப்போது ஆகஸ்ட் அல்லது செப்டம்பரில் சட்ட சபை தேர்தல் வருவது நிச்சயம் என்கின்ற சங்கதி தெரிந்த வுடன் பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ள வேண்டியது தான் என்கின்ற



தீர்மானம் ஒரு சிறு எதிர்ப்புக் கூட இல்லாமல் நிறைவேறும் படியாகச் செய்து கொண்டாய் விட்டது. எனவே இவற்றை யெல்லாம் கவனிக்கும் போது இவர்கள் நடவடிக்கைகளைப் பார்க்கும் போதும் தமிழ்நாட்டில் பார்ப்பன ரல்லாத மக்களின் "தலைவிதி" இதுவரை எப்பேர்ப்பட்டவர்கள் கையில் இருந்தது, இருக்கின்றது என்பதை நினைக்க நினைக்க மனம் கொதிக்கத்தக்க விஷயமாய் இருக்கின்றது.

இந்த சமயத்தில் பார்ப்பனப் பத்திரிக்கைகள் பரிகாசமாக பார்ப்பனரல் லாத கட்சியைப் போற்றுவதுபோல் எழுதுகின்றன. அதாவது கோயமுத்தூர் மகாநாட்டில் பார்ப்பனரல்லாத கட்சியைச் சேர்ந்தவர்கள் காங்கிரசில் சேரலாம் என்றவுடன் புகழ்ந்து எழுதிவிட்டு எப்படி காங்கிரசில் மெம்பராகவே சேர்க்க வொட்டாமல் செய்து எந்தப் பார்ப்பனரல்லாதாருக்கும் காங்கிரசில் மரியா தையும் இல்லாமல் செய்தார்களோ அது போலவே இப்போதும் போற்றி எழுதி விட்டு எந்த பார்ப்பனரும் விதியை திருத்தும்படி கேட்டுக் கொள்ள வில்லை யென்றும் யாரும் வந்து சேருதற்கு தயாராயில்லை என்றும் கேவல மாக இழிவு படுத்தி மற்றொரு பக்கத்தில் எழுதுகின்றன.

நிற்க இம்மாதிரியாக இப்போது ஒரு தீர்மானம் செய்யப்பட வேண்டிய அவசியம் என்ன? என்பதைப் பற்றி மறுபடியும் சற்று யோசிப்போம். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களில் ஒருவருக்கும் மந்திரிக்கட்சித் தலைவர் ஒருவருக்கும் அடுத்த தடவை யார் முதல் மந்திரியாக வருவது என்ற விஷயத்தில் தகராறு ஏற்பட்டவுடன் இரண்டு கட்சியிலுமிருந்த பின்பற்றுகிற வர்கள் தங்களுக்கு ஒன்றும் கிடைக்காமல் போகுமே என்கின்ற கவலையின் பேரிலும் பொறாமையின் பேரிலும் இவ்விரு தலைவர்களையும் இந்த சமயத்தில் பிரித்து வைத்து விட்டால் பிறகு இருவரும் நம்மை வந்து கெஞ்சு வார்கள், அப்போது நாம் மெதுவாய் உள்ளே புகுந்து பங்கு பெற்று விடலா மென்று கருதி முதல் மந்திரி ஆசைக்காரத் தலைவர்களைப் பிரித்து வைக்க தந்திரம் செய்து அதற்கு மார்க்கமென்ன என்று யோசித்துக் கடைசியாக முன்குறிப்பிட்ட ஒப்பந்தமாகிய அதாவது பார்ப்பனர்களை சட்டசபை நடவடிக்கைகளில் சேர்த்துக் கொள்ளுவது என்கின்ற இரு கட்சித் தலைவர் கள் செய்து கொண்ட இராஜி ஒப்பந்தத்தை முறித்து விடுவதின் மூலம் இருவருக்கும் விரோத முண்டாக்கி இருவரையும் ஒன்று சேர விடாமல் செய்து விடலாமென்று கருதி சூட்சி செய்யப்பட்டதின் பயனாய் நெல்லூர் மகாநாட்டில் ஒப்பந்தம் முறிந்து ஜஸ்டிஸ் கட்சித் தலைவருக்கும் மந்திரிக் கட்சி தலைவருக்கும் வெளிப்படையான விரோதமேற்பட நேர்ந்தது. இந்த மத்தியில் இம் மூன்று கட்சியும் தவிர அதாவது (மந்திரிகட்சி, ஜஸ்டிஸ் கட்சி, இவற்றைப் பிரித்து வைத்த சூட்சிக் கட்சி) வேறு ஒரு கூட்டம் தங்களுக்குள் யார் யார் எந்தெந்த பதவிகளைப் பங்கு போட்டுக் கொள்வது என்கின்ற ஒப்பந்தத்தின் பேரில் வேறு கூட்டம் ஒரு கட்சியாக முளைக்க ஆரம்பித்து விட்டது. இதனால் ஜஸ்டிஸ் கட்சிக்கு பயம் ஏற்பட்டு அந்தப் புதுக் கட்சி



RangaRakes tamilnavarasam.com

மந்திரிக் கட்சியுடன் சேர்ந்து விடாமல் இருப்பதற்காகவும், பார்ப்பனர்கள் மந்திரிக்கட்சியில் சேர்ந்து விடாமல் இருப்பதற்காகவும் யோசனை செய்து அவ்விருவர்களுக்கும் பயந்து கொண்டே பார்ப்பனரல்லாதார் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளுகிறது என்கின்ற நிபந்தனையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியதான நிர்ப்பந்தம் ஏற்பட்டுப் போய் விட்டது. ஆகவே பார்ப்பனரல்லாதார் தலைவர்களுக்குப் பார்ப்பனர்களைத் தங்கள் கட்சியில் சேர்த்துக் கொள்ளலாமென்பதும், சட்டசபை நடவடிக்கைகளிற் பார்ப்பனர்களுடன் கலந்து கொள்ளலாமா வென்பதும் அடுத்த தடவை மந்திரி உத்தியோகம் கிடைக்குமா கிடைக்காதா என்பதைப் பொறுத்துத்தான் இருக்கின்றதே தவிர கட்சி நன்மையையோ பார்ப்பனரல்லாதார் சமூக நன்மையையோ பொறுத்ததல்லவென்பதே நமது அபிப்பிராயம். பார்ப்பனர்களிலும் பலர் இந்த சண்டையில் தங்களுக்கும் ஒரு பங்கு கிடைக்கும் என்கின்ற ஆசையின் மீது பலர் வாலை ஆட்டி வாயைத் திறந்து கொண்டு வரலாம் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் இந்த சூக்ஷியானது இதுவரை பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்பட்ட சிறிது நன்மையும் பாழாய்ப் போய்விடும் படி செய்துவிடும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஆகவே இந்தவிதமாக யாரோ சில கனவான்களின் மந்திரிப் பதவி சூதாட்டத்திற்காகப் பார்ப்பனரல்லாதார் கட்சியின் அடிப்படையானதும் ஜீவநாடியானதுமான கொள்கைகளை அடியோடு ஒழிக்க விட்டு விடுவதா? என்றுதான் பார்ப்பனரல்லாத பிரமுகர்களையும் வாலிபர்களையும் கேட்கிறோம். இந் நிலையில் பொதுவாக பார்ப்பனரல்லாத பொது மக்கள் தங்கள் மனதில் ஒரு காரியத்தை மாத்திரம் நன்றாய் ஊன்றி வைத்துக் கொள்ள வேண்டியது. அதாவது ஜஸ்டிஸ் கட்சியின் இன்றைய போக்கை பார்க்கும் போது அது இனி பாமரமக்கள் கட்சியாய் இருக்க முடியாது என்பதையும் பார்ப்பனருக்கு அடுத்த நமது எதிரியாகிய பணக்காரக் கூட்டத்தின் ஆதிக்கமாகிப் பார்ப்பனரும் பணக்காரரும் சேர்ந்த பார்ப்பனரல்லாதாரை வதைக்கும் மற்றொரு பெரும் கொள்ளை நோயாய் மாறப்போகின்றது என்பது மாத்திரம் கருத்தில் நன்றாய் ஊன்றி வைத்துக்கொள்ள வேண்டிய விஷயமாகும். இனி இதோடு மாத்திரம் இல்லாமல் சமய பிழைப்புக்காரர்களும் பண்டித பிழைப்புக்காரர்களும் கண்டிப்பாய் அக்கட்சியில் சேர்ந்து உத்தியோக வேட்டையோடு புராண பிரசாரமும் தொடர்ந்து நடைபெறும் என்பதையும் கருத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமாய் குறிப்பிடுகின்றோம். மற்ற விஷயங்களை பின்னால் விவரிப்போம்.

**குடி அரசு - தலையங்கம் - 22.06.1930**



RangaRakes

# சைமன் கமிஷன் யாதாஸ்து

சைமன் கமிஷன் யாதாஸ்த்தின் முதல் பாகம் வெளியிடப்பட்டு விட்டது. அதைப்பற்றி நாம் இப்போது எவ்வித அபிப்பிராயமும் கூற முற்பட வில்லை.

அன்றியும் அதிலிருந்து இந்தியர்களுக்கு எம்மாதிரியான அரசியல் உரிமை கிடைக்கப் போகின்றது என்பதைப் பற்றியும் நாம் சிறிதும் கவலைப் பட வில்லை. ஏனெனில் அதெல்லாம் உத்தியோகமும் பதவியும் அனுபவிக்கக் கருதி அதற்காகவே பல ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொண்டு காத்திருப்பவர்களுக்கே விட்டு விடுகின்றோம். நம்மைப் பொறுத்தவரை சைமன் கமிஷன் முடிவான யாதாஸ்த்தில் தீண்டப்படாதவர்கள், பெண்கள், ஜாதி வித்தியாசத்தினால் இழிவுபடுத்தப்பட்டவர்கள் ஆகியவர்கள் விடுதலை விஷயத்திலும் முகமதியர்களும், கிருஸ்தவர்களும் "இந்து"க்களிடம் அவநம்பிக்கை கொண்டு எதிரிகளாயில்லாமல் ஒற்றுமையாய் வாழவும் பொதுவாக எல்லோருக்குமே சமமாக கல்வி கிடைக்கும்படி செய்யவும் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது என்பதைப் பற்றி யும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ விஷயத்தில் தீண்டாதார்கள், பெண்கள், கிருஸ்துவர்கள், மகமதியர்கள் ஆகியவர்களுக்கு எவ்விதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது என்கின்ற விஷயத்திலுமே தான் கமிஷனின் சிபார்சை அறிந்து அதன் மேல் அது மக்களின் சமத்துவத்திற்கும், விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் ஏற்றதா, அல்லவா என்பதைப்பற்றி யோசிக்கக்கூடும். அன்றியும் இந்தியாவில் உள்ள சகல அரசியல் ஸ்தாபனங்களும் சைமன் கமிஷனை எதிர்த்தும், நாம் மாத்திரமே ஆரம்பத்தில் இருந்தே அவ்வெதிர்ப்புகளை எதிர்த்து கமிஷனை வரவேற்றதுடன் மற்ற மக்களையும் வரவேற்றுத் தங்கள் குறைகளைத் தெரியப்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டது இக் கருத்தைக் கொண்டேயாகும். ஆதலால் முடிவு யாதாஸ்த்தை எதிர்பார்க்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 22.06.1930**



tamilnavarasam.com

# கண்ணனூர் செவ்வாய் தரும சமாஜத்தின் எட்டாவது ஆண்டுவிழா

## தெய்வம்

இனி அடுத்தாற்போல் திரு. கையாலக்கேல் அவர்கள் பேசிய கடவுள் என்னும் விஷயத்தைப் பற்றி இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தவன் என்ற முறையில் சில வார்த்தைகள் நான் சொல்ல வேண்டியது அவசியமாகும். திரு. கையாலக்கேல் அவர்கள் கடவுள் என்பதைப் பற்றி பேசியதில் இந்து மதக் கடவுள்களை எடுத்துக் கொண்டு அவைகளின் உருவங்களைப் பற்றியும், பெயர்களைப் பற்றியும், குணங்களைப் பற்றியும், குடும்பங்களைப் பற்றியும், ஒரு கடவுளுக்கும் மற்றொரு கடவுளுக்குமுள்ள சொந்தங்களைப் பற்றியும், அதன் பூசை உத்சவம் முதலியவைகளைப் பற்றியும், அதைச் செய்கிற தரகர்களின் யோக்கியதையைப் பற்றியும், செய்விக்கிற பக்தர்களின் மனோ பாவத்தைப் பற்றியும் வெகு விபரமாகவும், ஆரம்பமுதல் கடைசிவரை நீங்கள் எல்லோரும் சிரித்துக் கொண்டே இருக்கும் படியாக அவ்வளவு வேடிக்கையாகவும் பரிகாசமாகவும் பேசினார். அது அவ்வளவையும் விநய மாகவே எடுத்துக் கொண்டு பார்ப்போமானாலும், அவர் சொன்னவற்றுள் ஏதாவது ஒன்றை ஆட்சேபிக்கவோ மறுக்கவோ இடம் இருந்ததா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். திரு. கையாலக்கேல் அவர்கள் கடவு ளைப் பற்றிப் பேசிய பரிகாசங்களை எல்லாம் வெகு காலத்திற்கு முன்னிருந்தே நம்மவர்களில் சில பண்டிதர்களும், பக்திமான்களும் பாட்டாகவும் வசன மாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவைகளெல்லாம் சிலேடைப் படுத்துவதிலும் தத்துவார்த்த வியாக்யானஞ் செய்விப்பதிலும் அவைகளை சொன்னவர்களை பெரிய ஞானிகள் என்றும், சித்தர்கள் என்றும் சொல்லுவ தின் மூலமும் உண்மையை மக்கள் அறிய முடியாமல் மறைக்கப்பட்டு விட்டது. ஆனால் மனிதனுக்குத் தைரியமும், அறிவும் வரவர இன்னும் அதிக மான துணிவோடும், யுக்தியோடும் தானாகவே உண்மைகள் வெளியாய்க் கொண்டேதான் இருக்கும். திரு. கையாலக்கேல் அவர்கள் இந்துமதக் கடவுளைப் பற்றியே பெரும்பாலும் சொன்னார்களானாலும் உலகத்தில் மற்ற மதக்காரர்களுடைய கடவுள்களைப் பற்றி கவனித்துப் பார்த்தாலும் இவ்வளவு ஆபாசமாக இல்லாவிட்டாலும் யுக்திக்கோ, வாதத்திற்கோ நிற்க



முடியாமல் அவைகளும் பெரிதும் பரிகசிக்கத்தக்கதாய் தான் இருக்கின்றது. அதாவது உலக சிருஷ்டிக்கு கடவுளைப் பொறுப்பாக்கி அதனோடு கடவுளைப் பொறுத்துகிறபோது எல்லாக் கடவுள்களின் யோக்கியதைகளும் ஒரே மாதிரியாகத் தானிருக்கின்றன. உதாரணமாக இந்து மதத்தில் உலக சிருஷ்டிக்கும் கடவுளுக்கும் சம்மந்தம் சொல்லுகிற போது கடவுள் முதலில் தண்ணீரை உண்டாக்கி அதன் மீது இருந்து கொண்டு அதில் ஒரு விதையைப் போட்டு அந்த வித்திலிருந்து உலகத்தை உண்டாக்கி அவ்வுலகத்திலிருந்து பிர்மாவை சிருஷ்டித்து, அந்த பிர்மா அந்த உலகத்தை இரண்டாக்கி ஒன்றை சுவர்க்கமாகவும் மற்றொன்றை பூலோகமாகவும் செய்து அந்த பூலோகத்தில் பஞ்ச பூதங்களை யுண்டாக்கி பிறகு மனிதர், மிருகம், பட்சி முதலிய ஜாதி களைச் சிருஷ்டித்து என்று ஆரம்பித்து மற்றும் இவைபோல அடுக்கடுக்காக எப்படி சொல்லிக் கொண்டே போகின்றதோ, அதுபோலவேதான் கிருஸ்து முதலிய இதர மதங்களிலும், கடவுள் முதல் ஒன்றை சிருஷ்டித்தார், இரண்டாவது நாள் மற்றொன்றை சிருஷ்டித்தார், மூன்றாவது நாள் வேறொன் றைச் சிருஷ்டித்தார் என்பதுபோலவே சொல்லிக் கொண்டு போகப்படு கின்றன. ஆகவே அஸ்திவாரத்தில் கடவுள் சிருஷ்டியைப் பற்றிச் சொல்லுகிற விஷயம் எல்லா மதத்திலும் ஒன்றுபோலவே தானிருக்கின்றன. இவை ஏன் இப்படியிருக்கின்றன என்று பார்ப்போமேயானால் கடவுள் உண்டு என்பதற்கு சமாதானம் சொல்லும் போது உலக உற்பத்திக்கு ஒரு ஆதாரம் வேண்டாமா? என்று கேட்டுவிட்டு அதற்காக கடவுள் உலகத்தை உண்டாக்கினார் என்று ஆரம்பித்து, அந்த உண்டாக்கப் பட்டவைகளென்பதை முதலில் இன்னதை உண்டாக்கினார். இன்னார் என்பதாகச் சில மதமும், முதல் நாள் இன்னதை உண்டாக்கினார்; இரண்டாவது நாள் இன்னதை உண்டாக்கினார் என்பதாகச் சில மதமும் சொல்லுகின்றன. ஆகவே இந்த இடம் மாத்திரம் எல்லாம் ஒன்று போலாகவே தானிருக்கின்றன. இதில் ஏதாவது தகராறு ஏற்படுமானால் எல்லா மதக் கடவுளுக்கும் ஒரே கதிதான் நேரும்.

கடவுள் ஸ்தாபனத்திற்கு ஒரே மாதிரி அஸ்திவாரம் ஏற்படுவதற்கு காரணம் என்னவென்று பார்ப்போமானால் முதன் முதலாக ஆரிய மதத் திலிருந்தே சீர்திருத்தமாக கிருஸ்துவ மதம் ஏற்பட்டதும் அதிலிருந்து சீர்திருத்தமாக மகமதிய மதம் ஏற்பட்டதும், நமக்கு காணப்படுகிற படியால் எல்லா மதமும் அதையே பின்பற்றிக் கொண்டு வருவதாயிற்றே தவிர வேறில்லை என்றே தோன்றுகிறது.

ஆனால் நாம் ஒரு தமிழர் என்கின்ற முறையில் கடவுள் என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்வோமானால் "கடவுள்" என்கின்ற பதமே கட + உள் = (கடவுள்) என்பதான இரண்டு சொற்கள் சேர்ந்த பகுபதமாக இருக்கின்றதே தவிர வடமொழியினும் ஆங்கில மொழியினும் இருப்பதுபோன்று பகவான் (God) காட், அல்லா என்பது போன்ற ஒரு தனி வார்த்தையோ அல்லது அந்த விதங்களான வாக்கியமோ தமிழில் இல்லை என்பதை உணரவேண்டும். தமிழர்களுக்கு பாஷை தோன்றிய காலத்தில் "கடவுள்" உணர்ச்சி இருந்து



RangaRakes tamilnavarasam.com

இருக்குமானால் அதற்கு ஒரு தனி வார்த்தை இருந்திருக்கும். அது மாத்திரமில்லாமல் ஆங்கில முதலிய பாஷைகளில் கடவுள் இல்லை என்று சொல்லப்படுவதை உணர்த்துவதற்கு எப்படி எத்தீசம் - எத்தீஸ்ட்டு நாஸ்திகம் - நாஸ்திகன் என்கின்ற வார்த்தைகள் இருக்கின்றனவோ அவை போலவே தமிழிலும் "கடவுள்" இல்லை என்று சொல்லுவதை உணர்த்துவதற்கு "கடவுள்" இல்லை என்று சொல்லுபவனைக் குறிப்பிடுவதற்கும் அப் பொருள்கள் கொண்ட ஏதாவது ஒரு வார்த்தை இருந்திருக்கும். ஆகவே அவைகளிலிருந்தே தமிழர்களுக்கும் (அதாவது தமிழ் நாட்டாருக்கு) கடவுளுக்கும் ஆதியில் எவ்வித சம்மந்தமும் இருந்ததில்லை என்பது ஒருவாறு புலப்படும். இறைவன் என்கின்ற பதத்தை கடவுளுக்குள்ள தமிழ் பதம் என்று பண்டிதர்கள் சொல்லக்கூடுமானாலும் அது அரசனுக்கும் தலைவனுக் கும் ஏற்பட்டதே தவிர கடவுளுக்காக ஏற்பட்டத் தனிப் பொருள் அமைந்த சொல் அல்லவென்றே சொல்லுவோம். ஆனால் "கடவுள்" என்பது எப்பொருளுக்கும் தலைவன் என்கின்ற முறையில் வேண்டுமானால் இறைவன் பெரியவன் எனினும் பொருந்தும் என்று அப்புக்கட்டலாமேயொழிய அது அதற்கே ஏற்பட்ட தனிவார்த்தை ஆகாது.

நிற்க, தமிழ் நாட்டில் பலர் காலஞ்சென்ற பிதுர்க்களையும் செல்வாக்குள்ள பெரியார்களையும் அன்பினாலும், வீரர்களை கீர்த்தியாலும், வழிபட நினைத்து அவர்களை உருவகப்படுத்த என்று ஒரு கல் நட்டு அக்கல்லை வணங்கி வந்ததாக மாத்திரம் சொல்லப்படுவதை நான் கேட்டிருக்கிறேன். மற்றப்படி இப்போதைய கடவுள்களான சிவன், விஷ்ணு, பிர்மா, பிள்ளையார், சுப்ரமணியன் முதலிய கடவுள்களையோ மற்றும் அது சம்மந்தமான குட்டிக் கடவுள்களையோ தமிழ் மக்கள் வணங்கி வந்தார்கள் அல்லது நம்பி இருந்தார்கள் என்றாவது சொல்லுவதற்கு கூட இடமில்லை என்று கருதுகிறேன். இதற்கெனக்கு தோன்றும் ஆதாரம் என்னவென்றால் இப்பொழுது உள்ள கருப்பன், காத்தான் முதலிய பேர்கள் கொண்ட "நீச்சக் கடவுள்கள்" தவிர மற்ற "கடவுள்"கள் பெயர்கள் எல்லாம் வடமொழியிலேயே இருக்கின்றதென்பதே போதுமானதாகும்.

ஆனால் வடமொழிப் பெயருள்ள சில "கடவுள்"களின் பெயர்களை தமிழில் மொழி பெயர்த்து அந்த கடவுள்களைத் தமிழில் அழைப்பதை பார்க்கின்றோம். என்றாலும் இவை தமிழர்களுக்குள்ளும் ஆதியில் இருந்தது என்பதற்குத் தக்க சமாதானம் சொல்ல யாரும் முன்வருவதை நான் பார்க்கவில்லை. இது மாத்திரமல்லாமல், சைவம், வைணவம் என்று சொல்லப்படும் சமயங்களாகிய தமிழ் மக்களை பிடித்த நோய்களான சைவ வைணவ மதக் கடவுள்கள் எல்லாம் வடமொழி பெயர்களை உடையதாகவும் அவைகளின் ஆதாரங்கள் முழுவதும் வடமொழி வேத சாஸ்திரப் புராண இதிகாசங்களாகவும் தானே இருக்கின்றதே அல்லாமல் தமிழ் ஆதாரத்தால் ஏற்பட்டதாகச் சொல்லக் கூடிய கடவுள் ஒன்றையுமே நான் கண்டதும் கேட்டதும் இல்லை. இவைகளுக்கு செய்யப்படும் பூசை முதலியவைகளும் வடமொழி நூல்கள் ஆதாரப்படி வடமொழி பெயர்கள் கொண்ட வஸ்துகளும் செய்கைகளுமாகவே இருப்பதையும் காணலாம். அதாவது அருச்சனை, அபிஷேகம், பலி, கற்பூரம், சாம்பிராணி, காணிக்கை முதலியவைகளாகும். தவிரவும் மேற்கண்ட இரண்டு சமயங்களின் பேரால் சொல்லப்படும் நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலிய சமயாச்சாரியார்களும் பக்தர்மார்களும் கும்பிட்டதும், தேவாரம், திருவாசகம், திருத்தாண்டகம், பிரபந்தம் முதலாகியவைகள் பாடினதும் மற்ற மக்கள் வாழ்க்கையில் உபயோகப்படுத்துவதும் ஆகிய எல்லாம் வடமொழிப் பேர் கொண்ட கடவுள்களை பற்றியும் அவர்களது செய்கைகளைப் பற்றிச் சொல்லப்பட்ட வடமொழி புராண இதிகாசங்களிலுள்ள கதைகளைப் பற்றியுமே இருக்கின்றனவே அல்லாமல் மற்றபடி அவைகள் தமிழர்களோ அல்லது தமிழ் பண்டிதர்களோ தமிழர்களுக்கு ஆதியில் இருந்தது என்று சொல்லத்தக்கதாக ஒன்றையுமே ஒருவர் வாக்கையுமே நான் பார்த்ததும் இல்லை பிறர் சொல்லக் கேட்டதும் இல்லை. மற்றும் சமயக்குறிகள் என்று சொல்லப்படும் விபூதி, நாமம் முதலிய சின்னங்களின் பெயர்கள்கூட வடமொழியில் உள்ளதே தவிர தமிழில் உள்ளவையல்ல என்பதே எனது அபிப்பிராயம். வேண்டுமானால் அதை தமிழில் விபூதியை திருநீறு என்றும் திருமண் என்றும் சொல்லிக் கொள்ளுகிறோம். ஆனாலும் அது சரியான மொழிபெயர்ப்பல்லவென்று சொல்வதோடு விபூதி, நாமம் என்கின்ற பெயர்கள் எந்தக் கருத்துடன் சொல்லப்படுகின்றனவோ அந்தக் கருத்தும் பொருளும் அவற்றில் இல்லை என்றே சொல்லுவேன். விபூதி என்றும் நாமம் என்றும் சொல்லப்படும் வஸ்துக்கள் சாம்பலும், மண்ணுமாய் இருப்பதால் அந்த பெயரையே அதாவது சாம்பலுக்குள்ள மாறு பெயராகிய நீறு என்றும் மண்ணை மண் என்றும் திரு என்பதை முன்னால் வைத்து திருநீறு, திருநாமம் என்று சொல்லப்படுகின்றதே ஒழிய வேறில்லை என்றே தோன்றுகின்றது.

ஆகவே தமிழில் காட், அல்லா, பகவான் என்பவைகளைக் குறிப்பதற்கு ஒரே வார்த்தையாக ஒன்றுமே இல்லை என்பதும் அதன் சின்னங்களையும் குறிப்பிடுவதற்கு தமிழில் வார்த்தைகள் இல்லை என்பதும் அனுபவத்திலுள்ள கடவுள்களும் பெயர்களும் அவற்றின் நடவடிக்கைகளும் கூட தமிழில் இல்லை என்பதும் மற்றபடி இப்போது இருப்பவைகள் எல்லாம் வடமொழியிலிருந்து தமிழர்கள் எடுத்துக் கொண்டு தங்களுடையனவாக்கிக் கொண்ட மயக்கமே என்றும் எனக்குப் பட்டதை உங்களுக்குச் சொன்னேன். இனி கடவுள் உண்டு - இல்லை என்பதைப் பற்றியாவது பொது ஜனங்களுடைய அபிப்பிராயந்தான் என்ன என்பதைப் பற்றியாவது விசாரிப்போம்.

( 08.06.190 குடி அரசு - சொற்பொழிவு தொடர்ச்சி )

*குறிப்பு:- 01.06.1930 கண்ணனூர் தர்ம சமாஜத்தின் எட்டாவது ஆண்டுவிழா - தலைமை - நிறைவுரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 29.06.1930**


RangaRakes
tamilnavarasam.com

# சைமன் ரிப்போர்ட்டு

சைமன் கமிஷன் ரிப்போர்ட்டு வெளியாகி விட்டது. இதன்பேரில் ஏதாவது ஒரு அபிப்பிராயம் தெரிவிக்காதவர்களை பொது ஜனங்கள் தலைவர்களாகவோ முக்கியமான மனிதர்களாகவோ கருதுவதில்லை.

அன்றியும் தலைவர்களாகவோ முக்கியமான மனிதர்களாகவோ ஆக வேண்டும் என்கின்ற ஆசை இருப்பவர்களும் இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அபிப்பிராயங்கள் சொல்லுவதன் மூலமே தங்கள் ஆசை நிறைவேறும் என்று கருதுவதும் சகஜம். இவை ஒரு புறம் நிற்கப் பொது காரியங்களில் உழன்று கொண்டு இருப்பவர்கள் யாராவது இம்மாதிரி விஷயங்களில் அபிப்பிராயம் சொல்லாவிட்டால் அவர்களை பயங்காளி என்று சொல்லுவதும் வழக்கம். சுவற்று மேல் பூனை போலிருந்து வாழ வேண்டுமென்கின்றவர்களான, தங்களுக்கென்று யாதொரு கொள்கையுமில்லாத சிலர் சற்று சங்கடமான நிலைமையில் யாதொரு அபிப்பிராயமும் சொல்லாமல் நழுவவிடுவதும் சகஜம். ஆனால் நம்மைப் பொறுத்த வரை நாம் எந்த காரணத்தைக் கொண்டாவது ஏதாவது சொல்லித்தீர வேண்டிய நிலைமையில் இருக்கின்றோம்.

அந்தப்படி இப்போது ஏதாவது ஒரு அபிப்பிராயம் சொல்லுவதில் சைமன் கமிஷனை உபயோகமற்றது என்று ஒரே வார்த்தை சொல்லி விட்டால் அவன் எப்படிப்பட்டவனாய் இருந்தாலும் தேசீயவாதிகள் லிஸ்டில் தாக்கல் ஆகிவிடுவான். அதை எவனாவது ஆதரித்து விட்டாலோ அவன் எப்படிப் பட்டவனாய் இருந்தாலும் அவன் சர்க்கார் மனுசனாகவோ அல்லது பிற் போக்காளனாகவோ ஆகி விடுவான். ஏனென்றால் நமது ஜனங்கள் "கங்காதரா மாண்டாயோ" என்று ஒரு கிழவி அழுதக் கதையைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். அதாவது விஷயம் இன்னது என்று தெரிந்தாலும் தெரியா விட்டாலும் அவர்கள் ('தேசீயவாதிகள்') என்ன சொன்னார்கள் என்பதைப் பார்த்து பின்பாட்டுப் பாடுகின்றவர்களே ஆவார்கள். ஏனெனில் பெரும் பாலோர் சொந்த அறிவை உபயோகிக்க முடியாமலும் பிறர் அறிவை கேட்கச் சௌகரியமில்லாமலும் இருப்பவர்கள். ஆதலால் இவர்களுக்கு கமிஷனை அடியோடு நிராகரிக்காதவர்கள் எல்லாம் தேசத்துரோகிகளே யாவார்கள்.

இந்த நிலைமையில் நாம் நமது அபிப்பிராயம் சொல்லுவதற்கு முன்பே பொது ஜனங்களை, நம்மை "தேசத்துரோகி" லிஸ்டிலேயே தாக்கல் செய்து கொள்ளும்படி வேண்டிக் கொண்டே நமது அபிப்பிராயத்தை சொல்லுகின்றோம்.

ஏனெனில் நாம் அந்த ரிப்போர்ட்டில் அரசியல் சம்மந்தமாக என்ன சுதந்தரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது, எவ்வித சவுகரியம் அளிக்கப் பட்டிருக்கின்றது என்பன போன்றவைகளைப் பற்றி சிறிதும் கவலை எடுத்துக் கொண்டு கவனிக்கவில்லை. கவனிக்கவும் இஷ்டப்படவில்லை. ஏனெனில் அது சட்டசபைக்கு போகின்றவர்களுக்கும் மந்திரியாவதற்கும், பெரிய உத்தியோகம் பெறுவதற்கும் ஆசை உள்ளவர்களுக்கும் அவர்களது கூட்டுறவாளர்களுக்கும் விட்டு விடுகின்றோம். அதில் 8 மந்திரி இருந்தாலும் 10 மந்திரி இருந்தாலும் அவர்களை கவர்னர் நியமித்தாலும் சட்டசபை மெம்பர்கள் நியமித்தாலும் அவர்கள் தீர்மானங்களை எல்லாம் கவர்னர் ஏற்றுக் கொண்டாலும் தள்ளிவிட அதிகாரம் வைத்துக் கொண்டாலும் மற்றும் இதுபோன்ற விஷயங்களில் எப்படி ஆனாலும் நமக்கு அதைப்பற்றி கவலை இல்லை. ஏனெனில் "ஜனப்பிரதிநிதிகள்" என்பவர்களை விட சர்க்கார் யோக்கியமானவர்கள் என்றாவது சர்க்காரைவிட "ஜனப்பிரதிநிதிகள்" யோக்கியமானவர்கள் என்பதாகவாவது எல்லா அதிகாரங்களையும் சர்க்கார் "ஜனப்பிரதிநிதிகள்" வசம் கொடுத்துவிட்டுப் போய்விட்டால் நல்லது என்றாவது எல்லா அதிகாரங்களையும் சர்க்காரே வைத்துக் கொண்டு நடத்தினால் நல்லதென்றாவது நாம் இந்த நிலையில் கருதுவதில்லை. தவிர ஜனப் பிரதிநிதிகள் நடத்தும் நிர்வாகங்களும் அவர்களது அபிப்பிராயங்களும் சர்க்கார் நடத்தும் அதிகாரங்களும் அவர்களது அபிப்பிராயங்களும் பொது நலத்தை உத்தேசித்ததா? சுயநலத்தை உத்தேசித்ததா? என்பது நமக்கும் சற்று தெரியும்.

ஆதலால் அவைகளைப் பற்றிய கவலை இல்லாமல் சைமன் கமிஷனைப் பற்றி பார்ப்போமானால் சைமன் கமிஷன் ரிப்போர்ட்டு நிராக ரிக்க வேண்டியது அல்லவென்றும் எந்த "தேசியவாதி" யாலும் நிராகரிக்கப் போவதில்லை என்றும் நிராகரிக்கப்பட முடியாததென்றுமே நாம் சொல்லு வோம். எப்படி என்றால் இந்து தேவஸ்தான பரிபாலன மசோதாவை எதிர்த்த வருணாசிரம தர்மசபை காரியதரிசியான திரு. என். சீனிவாசாச்சாரியார் அம் மசோதாவை எதிர்க்கவும் அதை அழிக்கவும் சங்கம் ஏற்படுத்தி அதற்காகப் பணமும் வசூல் செய்து எதிர் பிரசாரமும் செய்து விட்டு இப்போது அச் சட்டத்தை நடத்திக் கொடுக்கத் தனக்கு வேலை கொடுக்கும்படி கெஞ்சினதும் எவ்வளவோ உள்தரமான வேலைகள் எல்லாம் செய்து அந்த வேலையை அடைந்து சட்டத்தின் திட்டத்தை இன்றைய தினம் நிறைவேற்றிக் கொண்டிருப்பதையும் பார்க்கின்றோம்.

ஆகவே நமது தேசீயவாதிகள் இன்று சைமன் ரிப்போர்ட்டை பலமான





RangaRakes
tamilnavarasam.com

வார்த்தைகளால் மறுப்பார்கள் - நிராகரிப்பார்கள் - வைவார்கள். ஆனாலும் நாளை அதனால் ஏற்படும். "உபயோகமற்ற" "பிற்போக்கான," "சுயமரியாதையற்ற" பதவிகளுக்கும் உத்தியோகங்களுக்கும் நாக்கில் தண்ணீர் சொட்ட விடுவார்கள் என்பது நமக்கு நன்றாய்த் தெரியும். நமது அசல் பார்ப்பன "தேசீயவாதிகளோ சிங்கத்தின் குகைக்குள் போய் அதன் பிடரியைப் பிடித்து ஆட்டுவதற்காக" என்றாவது சீர்திருத்த உத்தியோகத் தையும் பதவியையும் லாபத்தையும் கண்டிப்பாய் அடையப் போகிறார்கள் என்பதும் நமக்கு நன்றாய்த் தெரியும்.

அன்றியும் இப்போது சைமன் கமிஷனை ஆட்சேபித்து குற்றம் சொல்லுகின்ற "தேசீயவாதிகளில்" நூற்றுக்கு ஒருவர் கூட நாளைக்கு அத னால் லாபமடைய மறுக்க மாட்டார்கள் என்று உறுதியாய் சொல்லுவோம். ஆகவே இன்றையதினம் கமிஷனை வைவதெல்லாம் நாளைக்கு பாமர மக்களிடம் ஓட்டு வாங்கவே ஒழிய அதை நிராகரிப்பதற்கோ அல்லது அதனால் பயனில்லை என்று கருதியோ அல்ல என்பதே நமது அபிப்பிரா யம். நம்மை பொறுத்த வரையில் என்றாலோ நமக்கு ஓட்டுக்குப் போக ஆசையும் இல்லை, யோக்கியதையும் இல்லை. ஆதலால் அவ்வேஷக் காரர்களுடன் சேர வேண்டிய அவசியமில்லாத நிலைமையிலிருக்கின்றோம்.

ஆகவே சைமன் கமிஷனில் நாம் கவனிக்கத் தக்கதாய் உள்ள சில விஷயங்களைப் பற்றிய குறிப்புகளை வெளியிடுகின்றோம்.

முதலாவது முகமதியர்களுக்கு அதில் பெருத்த வெற்றி ஏற்பட் டிருக்கின்றது. எப்படி என்றால் முகமதிய சமூகம் இந்த பத்து இருபது வருஷ காலத்தில் எவ்வளவோ தூரம் முன்னேறி இருப்பதற்கு ஆதாரமான அவர்களது வகுப்பு வாரி பிரதிநிதித்துவ கொள்கையை அடியோடு அழிக்க "இந்திய தேசீய காங்கிரஸ் வாதிகள்" பட்ட பாடு வீணாகி பழையபடியே இருக்க ஏற்பட்டது குறித்து அவர்கள் சைமன் கமிஷனுக்கு முதலில் நன்றி செலுத்தி தீருவார்கள். ஆகவே இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் இந்த 4-ல் ஒரு பங்கு ஜனங்களின் விஷயத்தில் சைமன் கமிஷன் ரிப்போர்ட்டு வரவேற்கப்பட்டதாகும். இனி அடுத்தாற்போல் தீண்டப்படாதவர்கள் விஷயத்தில் சைமன் கமிஷன் ரிப்போர்ட்டானது கூடுமானவரை திருப்தி கரமானதென்றே சொல்லலாம். அதாவது தேசீயவாதிகளின் எவ்வளவோ எதிர்ப்புகளை மீறி அவர்களுக்கு அதில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருக்கின்றது. அதுவும் ஜனத்துகையை அனுசரித்தே கொடுக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் இந்துக்கள் என்பவர்களின் ஜனத்துகையில் 100000 ஜனங்களுக்கு ஒரு ஸ்தானம் வந்தால் தீண்டப்படாதார் என்பவர் களின் ஜனத்துகையில் 100000 பேருக்கு முக்கால் ஸ்தானம் வீதம் ஒதுக்கி வைக்க வேண்டும் என்று சிபார்சு செய்திருக்கிறார்கள்.

அடுத்த சீர்திருத்தத்திற்குள் தங்கள் ஜனத்துகைக்கு சரியான



விகிதாசாரமும் தனித் தொகுதித் தேர்தலும் அடையக் கூடிய நிலைமைக்கு அவர்களைக் கொண்டு வந்து விட இந்த சிபார்சு உதவிசெய்யும் என்றே நினைக்கின்றோம். ஆகவே ஓட்டு மொத்த ஜனத்துகையில் ஐந்தில் ஒரு பங்கு ஜனத்துகையினரான தீண்டப்படாதார்களும் சைமன் கமிஷன் ரிப்போர்ட் விஷயத்தில் அதை வரவேற்று நன்றி செலுத்தக் கூடியவர்களேயாவார்கள்.

பெண்கள் விஷயத்திலோ அவர்கள் எண்ணிக்கையை லக்ஷியம் செய்யாமல் மொத்த ஸ்தானங்களில் 100க்கு 5 அல்லது 10 வரையில் ஸ்தானங்கள் கொடுக்கலாம் என்று சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றது. இது போதுமானதா இல்லாமலிருந்தாலும் அவர்களது உரிமை ஒப்புக் கொள்ளப் பட்டதாய் விட்டதால் இதன் மூலம் இனி அடுத்த சீர்திருத்தத்திற்குள் முழு உரிமையை வாங்க சக்தி உடையவர்களாகி விடுவார்கள். ஆகவே மொத்த ஜனத்தொகையில் சரி பகுதிப் பேர் கொண்டதும் ஜாதி இந்துக்கள் என்பவர் களின் ஜனத்துகையாகிய 15 கோடியில் சரி பகுதி ஏழரைக் கோடி மக்களா கிய பெண்கள் விஷயத்திலும் சைமன் கமிஷன் வரவேற்கப்படவேண்டியதே யாகும். ஆகவே ஏழரைக் கோடி மகமதியர் 6 கோடி தீண்டப்படாதார் ஏழரைக் கோடி பெண்கள் ஆக 21 கோடி ஜனங்களுக்கு அவர்களது முக்கிய கோரிக் கைகள் கமிஷனால் கவனிக்கப்பட்டு ஒருவாறு திருப்தி செய்யப்பட்டிருக் கின்றன. இனி பாக்கி இருக்கும் ஏழரைக்கோடி மக்களிலும் 100க்கு 10 வீதம் உள்ள படித்தவர்களும், பணக்காரர்களும், பார்ப்பனர்களும் தான் "சைமன் கமிஷன் திருப்தியற்றது,போதாது, ஏமாற்றமானது" என்று சொல்லுவார்கள். இதன் கருத்து இன்னதென்றோ, சைமன் கமிஷன் இன்னதென்றோ 100க்கு 90பேருக்கு மேலாகவே தெரியாதவர்களும் தெரிய சௌகரியமில்லாதவர் களுமாக இருப்பவர்கள்.

எனவே இந்த நிலைமையில் சைமன் கமிஷனைப் பற்றி நாம் என்ன சொல்வது என்பதை யோசித்து முடிவு செய்யும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டு விடுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 29.06.1930**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனரல்லாதார் கட்சி

பார்ப்பனரல்லாதார் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று செய்யப்பட்ட தீர்மானத்திற்கு இதுவரை மூன்று காரணங் களே சொல்லப்படுகின்றன.

அவை ஒன்று, பார்ப்பனரல்லாதார் கட்சி ஒரு அரசியல் கட்சியாக இருக்க வேண்டுமானால் அது எந்த வகுப்பாரையும் தள்ளிவைத்த கட்சியா யிருக்கக் கூடாது என்பது.

மற்றொன்று, பார்ப்பனரல்லாதார் கட்சி எல்லோருக்கும் சமத்துவம் அளிக்கும் உத்தேசத்துடன் ஏற்படுத்திய கட்சியானதால் எல்லா வகுப்பாருக் கும் அதில் இடம் இருக்கவேண்டு மென்பது. வேறு ஒன்று பார்ப்பனரல்லாதார் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளா விட்டால் அக் கட்சியில் உள்ள தலைவர்கள் எல்லாம் போய் விடுவார்கள். பிறகு கட்சிக்குத் தலைவர் களே இருக்கமாட்டார்கள்; இதனால் கட்சியே செத்துப் போய்விடும் என்பது. ஆகிய இம்மூன்று காரணங்களே இப்போது பார்ப்பனரல்லாதார் கட்சியின் முக்கிய தலைவர்களாய் பாவிக்கப்பட்டு வந்த கனவான்களால் சொல்லப்பட்ட சொல்லி வருகின்ற காரணங்களாகும்.

இதில் கவனிக்கப்பட வேண்டிய காரியம் என்னவென்றால் மேற்கண்ட மூன்று காரணங்களும் உண்மையானவைகளா? அல்லது சுயநலத்தை உத்தேசித்து பொதுமக்களை ஏமாற்றுவதற்காக அவ்வப்போது சொல்லப் படுபவைகளா? என்பதைப் பற்றியதேயாகும்.

ஏனெனில் நமது அபிப்பிராயத்தில் இக்காரணங்கள் ஒன்றும் அதன் தலைவர்களுக்கு உண்மையான காரணங்கள் அல்லவென்றே சொல்லுவோம். ஏனெனில் மேற்கண்ட மூன்று காரணங்களையும் கண்டித்து திரு. B. முனுசாமி நாயுடு தவிர மற்றவர்கள் எல்லாம் அவ்வப்போது தங்கள் தங்கள் அபிப் பிராயங்களை பத்திரிகைகளிலும் பொதுக் கூட்டங்களிலும் பேசியும் எழுதி யும் இருப்பவைகளே போதுமானதாகும்.

ஜஸ்டிஸ் பத்திரிகையில் திரு. ஏ. இராமசாமி முதலியார் எழுதிவந்த கண்டனங்களுக்கு மேல் இனி யாராலும் எடுத்துக் காட்ட முடியாது. நெல்லூர் மகாநாட்டில் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் பேசியதற்கு மேல் பார்ப் பனர்களைச் சேர்த்துக் கொள்ளுவதால் ஏற்படும் கெடுதியைப் பற்றி இனி யாராலும் பேச முடியாது என்றே சொல்லுவோம். மேலும் திரு. பி. முனுசாமி நாயுடு அவர்கள் கக்ஷியை விட்டுப் போய் விட்டாலும் பாதகமில்லை என்றும், அவர் காங்கிரஸ் கொள்கை உடையவராதலால் போய் விடுவதே மேல் என்றுமே கருதித்தான் அவ்வளவு தைரியமாகவும் முரட்டுத்தனமாகவும் அத்தீர்மானம் தாக்கப்பட்டே வந்திருக்கின்றது. ஆனால் உப்பு சத்தியா கிரகத்தின் பலனாய் திரு. முனுசாமி நாயுடுவுக்கு ஆந்திரமெம்பர்களின் பலம் ஏற்பட்டு விட்டதாலும் ஜஸ்டிஸ் கக்ஷியில் உள்ள சிலரின் சூக்ஷிக்கு பயந்து அக்கக்ஷியிலுள்ள மற்றும் சிலர் திரு. முனுசாமி நாயுடுவுடனும் திரு. டாக்டர் சுப்பராயன் உடனும் சேர ஏற்பாடு செய்து கையெழுத்து முதலியவை கள் போட்டு விட்டதாலும் தங்களுக்கு எவ்வித யோக்கியதையுமே இல்லா மல் போய் விடுமே என்று கருதி இப்போது பல்ட்டி அடித்து எந்தக் கொள்கை யையோ விட்டுக் கொடுத்தானாலும் யாரையாவது தங்களுடன் சேர்த்து மந்திரி பதவி பிரைஸ் அடிக்க வேண்டியது இவர்களுக்கு அவசியமாய் விட்டது.

இந்த நிலையில் பார்ப்பனரல்லாத கக்ஷியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இப்போது இவர்கள் சொல்லுவது மந்திரி வேட்டைக்காகப் போடப்பட்ட ஒரு வலையே அல்லாமல் நியாயத்தையோ கட்சியின் நன்மையையோ கோரியது அல்லவென்பதே நமது முடிவான அபிப்பிராயம்.

மந்திரி வேலை அடைய ஆசைப்பட எல்லோருக்கும் பாத்தியமுண்டு என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகின்றோம். ஆனால் அதற்காக காங்கிரசுக் காரர்கள் பாமரஜனங்களை பலி கொடுத்து மந்திரி வேலை முதலிய உத்தி யோகங்கள் அடையப் பார்ப்பது போல் ஜஸ்டிஸ் கக்ஷி தலைவர்கள் என்பவர் களும் பார்ப்பனரல்லாத மக்களை பலி கொடுத்து மந்திரி வேலை அடையப் பார்ப்பதை நாம் பார்த்துக் கொண்டு இருக்க முடியவில்லை.

எந்தக் காரணத்திற்காக நாம் காங்கிரசிலும் ஒத்துழையாமையிலும் கலந்து இருந்து எவ்வளவோ வேலைகள் எல்லாம் அதில் செய்தும் நம்மை நம்பி - நம்மை பின்பற்றி சிலரையாவது அதில் சேரும்படி செய்து அவர்க ளையும் கஷ்ட நஷ்டங்களையும் அனுபவிக்கச் செய்து கடைசியில் அதை விட்டு வெளியில் வந்து அதன் சூக்ஷிகளையும் சுயநலங்களையும் வெளிப் படுத்தினோமோ, அந்தக் காரணங்களையே நாம் இப்போது ஜஸ்டிஸ் கக்ஷி என்பதில் காண நேருமானால் எப்படி அவைகளைப் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்க முடியும்? என்பதை வாசகர்கள் தான் யோசித்துப் பார்த்து பதில் சொல்ல வேண்டும்.





RangaRakes tamilnavarasam.com

திரு காந்தியை விட்டு நமது ஆயுட்காலம் வரை பிரிய சமயம் வாய்க்காதென்றே கருதி இருந்தோம். அவரது கட்டளையை தட்டிப் பேசுவது பெரிய தோஷம் என்று கூட எண்ணி இருந்தோம். அவர் காரியத்திற்காக உயிரை விட நேர்ந்தால் அதுவே நமது முடிவான பேறு என்றும் கருதி இருந்தோம். காங்கிரசைத் தவிர வேறு ஸ்தானபங்களே உலகில் இருக்கக் கூடாது என்றும் எண்ணி இருந்தோம்.

அப்படி யெல்லாம் கருதி இருந்தவைகளை அடியோடு விட்டு விட்டு வெளியேறி வந்து இப்போது தாராளமாய் அவை எல்லாவற்றையும் எதிர்க் கின்றோம். அவைகளின் சூட்சிகளையும் குற்றங்களையும் அறியாமை களையும் தாராளமாய் வெளிப்படுத்துகின்றோம்.

அப்படி இருக்க இந்த சூட்சிகளை மாத்திரம் நாம் எப்படி சகித்துக் கொண்டிருக்க முடியும்? என்பதை யோசித்து பாருங்கள். இதனால் நமக்கு கெட்ட பேர் வரலாம். தப்பெண்ணங்கள் கற்பிக்கப்படலாம். இவைகளைப் பற்றியெல்லாம் நமக்குச் சிறிதும் கவலை இல்லை. ஏனென்றால் நமது லட்சியம் இவைகளில் எதுவுமல்ல என்பதேயாகும்.

ஜஸ்டிஸ் கட்சிக்கும் சுயமரியாதைக் கட்சிக்கும் ஏதாவது சம்மந்த மிருக்க வேண்டுமானால் எதை உத்தேசித்து இருக்க வேண்டும் என்பது முதலில் கவனிக்கத்தக்கது. முதலாவது சுயநல சூக்ஷி இல்லாமல் இருக்க வேண்டும். காங்கிரஸ் தலைவர்கள் சூட்சிக்கும் ஜஸ்டிஸ் தலைவர் சூட்சிக்கும் கால்மாத்துக் கூட வித்தியாசமில்லாமல் இருக்கத்தக்க நிலைமைக்கு வந்து கொண்டிருக்கின்றதானாலும் காங்கிரசை விட இதில் சற்று நமக்கு அவசிய மான கொள்கைகள் இருக்கின்றது என்கின்ற சமாதானமும் இருந்தது. ஆனால் இப்போது அதன் கொள்கையே அழிக்கப்படும் போது அதன் தலைவர்கள் எவ்விதமான தாட்சண்யத்திற்கும் பாத்திரமானவர்களாவார்கள்?

ஜஸ்டிஸ் கட்சி இப்போது போகின்ற நிலைமையில் அதன் மூலம் ஜாதி வித்தியாசம் ஒழியும் என்கின்ற நம்பிக்கையைக் கொள்ள சிறிதும் இட மில்லை. ஏனெனில் தாழ்த்தப்பட்ட ஜாதியார் சமத்துவமடைவதற்கு அவர்க ளுக்கு அதிகமான சலுகை காட்டா விட்டாலும் அவர்களுக்கு உரிய உரிமை யாவது கொடுக்க வேண்டும் அல்லவா? அதற்கும் ஆபத்து வரும் படியாக வகுப்பு வாரிப் பிரதி நிதித்துவக் கொள்கையில் கையை வைத்தாகி விட்டது. அதோடு மாத்திரமல்லாமல் அதை ஒழிப்பதற்கு பார்ப்பனர்கள் சொல்லும் காரணத்தையே சொல்லப்பட்டாய் விட்டது.

பணக்காரர்கள் ஆதிக்கமாவது குறையுமா என்று பார்த்தால் அதற்கும் சிறிதும் இடமில்லாமல் இருக்க இருக்க பெரிய பணக்காரர் இடமே தலைமை ஸ்தாபனம் போகப் பார்க்கின்றது. படித்தவர் ஆதிக்கமாவது குறைகின்றதா என்று பார்த்தால் அதுவும் அதாவது ஜாதியும் பணமும் உள்ளவரிடம்



இருக்கும் படிப்புக்கார ஆதிக்கமேதான் வளரும்படியான நிலைமையில் போய்க் கொண்டிருக்கின்றது. இந்த மாதிரி படிப்புக்காரர்கள் ஆதிக்கமானது மற்ற சாதாரண படித்த மக்களுக்கு பெரிய ஆபத்தாவதோடு பார்ப்பனர் படிப்புக்காரர் ஏகபோக உரிமைகளைவிட இவர்களது ஆதிக்கம் தலைமுறை தலைமுறை ஏகபோக உரிமையாக நிலைநிற்க ஏற்பாடுகள் பலப்பட்டுவிடும். ஆகவே இதானது விலங்கைத் தரித்து குட்டையில் மாட்டிக் கொண்டது போலவேயாகும். பார்ப்பனர்கள் இக் கட்சியில் இல்லாமலிருந்தாலாவது இக் கட்சியார் பார்ப்பனர்களுக்கு பயந்து கொண்டாவது சற்று ஏழைகளையும் தாழ்த்தப்பட்ட மக்களையும் கிருஸ்தவ முகமதிய சமூகத்தையும் திரும்பிப் பார்க்க வேண்டியதாக இருக்கும். இனி ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளுவதன் மூலம் பணக்காரனும், பார்ப்பானும், படித்தவனும் ஒன்று சேர்ந்து விட்டால் பிறகு எதற்காக இவர்கள் மற்றவர்களைக் கவனிக்க வேண்டிய அவசியம் வரும்? என்பதை கவனித்துப் பாருங்கள். சீக்கிரத்தில் சர்க்காரும் இக் கக்ஷியில் சேர்ந்து விடப்போகின்றது. எப்படி என்றால் பல வெள்ளைக்காரர்களும் கவர்னரும் இந்த சூட்சிக்கு ஆசி கூறியாய் விட்டது. வயிற்றையும் வாயையும் கட்டி பார்ப்பனரல்லாத ஏழை மக்களும் தாழ்த்தப் பட்டவர்களும் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவும் வைத்து தங்கள் நன்மை யையும் கவனிக்கப்படும் என்று கருதி பார்ப்பனரல்லாதார் கட்சி என்பதையும் கண்ணை மூடிக் கொண்டு ஆதரித்து அதற்கு ஒரு யோக்கியதையும் உண்டாக்கி ஏதோ சற்று எல்லா, வகுப்புக்காரர்களுக்கும் சம சுதந்திரமும், சம அரசியல் பங்கும் சமத்துவமும் கிடைக்கும் படியான நிலைமை தேர்தல் களிலும் உத்தியோகத்திலும் ஏற்பட்டவுடன் தங்களுக்கே முழுவதும் கிடை யாமல் எங்கு எல்லோருக்கும் பங்கு போய் விடுகின்றதோ என்று கருதி அடியோடு அவர்கள் வயிற்றிலும் வாயிலும் மண்ணும் போடத் தீர்மானித்து இப்போது பார்ப்பனர்களுடன் உறவாடத் துணிந்தால் இக் கூட்டத்தாரிடம் இனி இதை விட வேறு சமூகத் துரோகமும் நம்பிக்கைத் துரோகமும் என்ன எதிர்ப்பார்க்க முடியும்? என்பதை வாசகர்களையே ஊகித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

தவிர இக்கட்சிக்கு ராஜா சர். அண்ணாமலை செட்டியாரை தலைவ ராக்க சென்னைத் தலைவர் ஆகாயத்திற்கும் பூமிக்கும் சூட்சி செய்வதாக பத்திரிகைகளிலும் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களிடமிருந்தும் தெரியவருகின் றது. இதானது குதிரை தள்ளினது மல்லாமல் புதைக்க குழியும் தோண்டிற்று என்ற உதாரணத்திற்குச் சரியான அத்தாட்சியாகும். ராஜா சர். அண்ணாமலை அவர்கள் பெரிய இந்து தர்மப் பிரபு - பணக்காரர் - பரம்பரை ராஜா பட்டம் பெற்றவர். இவற்றில் நமக்கு ஆட்சேபனை இல்லை. பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைமைக்கு இந்த யோக்கிதையே தான் அவசியமானதா? என்று கேட்கின்றோம்.

அவருக்கு மகாராஜா பட்டம் வருவதிலாவது செட்டி நாட்டு ஆளுகை



RangaRakes tamilnavarasam.com

யின் பூரா சுதந்திரமும் அவருக்கு கொடுக்கப்படுவதிலாவது அவரது சிலையை முக்கியமான இடங்களில் எல்லாம் நிறுத்துவதிலாவது நமக்குச் சிறிதும் ஆட்சேபனை இல்லை. அதற்குத் தகுந்த அறிவும் யோக்கியதையும் அவரிடம் உண்டு என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம்.

ஆனால் பார்ப்பனரல்லாத ஏழை மக்கள், இழிவு படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியவர்களின் நன்மைக்காக ஏற்பட்ட ஸ்தாபனங்களை அப்பேர்பட்டவர்கள் வசம் ஒப்புவிக்கிலாமா? என்பதை யோசித்துப் பாருங்கள். பார்ப்பனருக்கு விரோதமாக ஏதாவது செய்ய அவரால் முடியுமா? இந்து மதத்திற்கு விரோதமாக ஏதாவது செய்ய அவரால் முடியுமா? பணக்காரர்கள் நன்மைக்கு விரோதமாக ஏதாவது செய்ய அவரால் முடியுமா? சர்க்காருக்கு விரோதமாக ஏதாவது செய்ய அவரால் முடியுமா? என்பதை யோசித்துப் பாருங்கள். நமது நாட்டு பணக்காரர்கள் பார்ப்பனர்களைவிட இளைத்தவர்கள் அல்ல என்பதே நமது அபிப்பிராயமாகும். நமது நாட்டு ராஜாக்கள் பார்ப்பனர்களை மந்திரியாகக் கொண்டவர்கள்; நமது நாட்டு பணக்காரர்களோ பார்ப்பனர்களை மந்திரிகளாயும் ஆத்ம சினேகிதர்களாகவும் கொண்டவர்கள். நாட்டுக்கோட்டை பணக்காரர்களுக்கோ பார்ப்பனர்கள் இன்றியமையாதவர்கள். இப்படி இருக்கையில் பார்ப்பனரையும் இக் கட்சியில் சேர்த்துக் கொண்டு பணக்காரர்களையும் தலைவர் ஆக்கி அந்த ஸ்தாபனத்தையும் அவர்கள் கையில் ஒப்புவித்தும் விடுவதாய் இருந்தால் இதை பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு பார்ப்பனரை சேர்த்துக் கொள்ளுவது என்னும் நெருப்பை வைத்து பணக்காரரை தலைவராக நியமிப்பது என்னும் நெய்யை ஊற்றி ஓமம் வளர்த்து கட்சியை சாம்பலாக்கி அந்த சாம்பலை நெற்றியில் வைத்துக் கொண்டது போலத்தானே ஆகிவிடும். மற்றபடி இதனால் வேறு என்ன பலன் யாருக்கு ஏற்படப் போகிறது என்று கேட்கின்றோம்.

நிற்க, நாம் ஏதோ நெல்லூரில் பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னதாகவும் சில தலைவர்கள் பிரசாரம் செய்வதாகவும் கேள்விப்படுகின்றோம். இது மிகவும் இழிவான செய்கையாகும் என்று வருத்தத்துடன் சொல்லுகின்றோம்.

பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நாம் இவர்களுக்கு எப்போதும் சொன்னதில்லை என்பதை உறுதியாக சொல்லுகின்றோம். மனிதத் தன்மை உடையவர்களானால் நிரூபிக்க முன்வரட்டும்.

நாம் பார்ப்பனர்களை கவுன்சில் நடவடிக்கைகளில் மாத்திரம் கலந்து கொள்ள சம்மதம் கொடுத்ததுண்டு. ஏனெனில் ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களுடைய வேண்டுகோளுக்காகவே சம்மதம் கொடுத்ததே ஒழிய மற்ற எந்த காரியத்தையும் உத்தேசித்தல்ல.

அதுவும் எந்த நிபந்தனையின் மீது என்றால்; –



1. எப்படிப்பட்ட பார்ப்பனர்களையும் ஜஸ்டிஸ் கட்சியில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

2. எந்த பார்ப்பனரையும் கட்சியின் பேரால் எந்த தேர்தலுக்கும் நிறுத்தக் கூடாது.

3. பார்ப்பனர்களுக்கு கக்ஷியின் சார்பாய் ஓட்டு சேகரிக்கக் கூடாது.

என்பனவாகிய நிபந்தனைகளின் பேரிலேயே ஒழிய வேறில்லை. இவை 13-10-29 தேதி மாலை 5, மலர் 23 குடி அரசில் காணலாம். நெல்லூர் மகாநாட்டில் பார்ப்பனர்களை ஜஸ்டிஸ் கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதாக சர். ஏ. பி. பாத்ரோ தீர்மானம் கொண்டு வந்த பொழுது திரு. ஈ. வெ. ராமசாமி பேசியதாவது:–

> “பார்ப்பனர்களை தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில் சேர்க்க முடியாதென்றும் கமிட்டி வைத்து இஷ்டப்பட்டவர்களை மாத்திரம் கமிட்டியின் மூலம் தெரிந்தெடுக்கலாமென்பது அர்த்தமற்றதென்றும் இப்பொழுது இருப்பது போலவும் முன் நாம் ராஜியை முன்னிட்டு மந்திரி கட்சியாரிடமும் திரு. நடேசன் கட்சியாரிடமும் ஒப்புக் கொண்டு நிர்வாக சபை கூட்டத்திலும் ஏகமனதாய்ச் செய்த தீர்மானத்தின் படியும் மற்றவர்களுக்கு நமது இயக்கத்தின் சார்பாக வாக்குக் கொடுத்திருக்கின்ற படியும் சட்டசபையில் மாத்திரம் சேர்த்துக் கொள்ளலாம் என்றும், அப்படி சேர்த்துக் கொள்வதிலும் உறுதியானதும் வெளிப்படையானதுமான நிபந்தனை இருக்க வேண்டுமென்றும், அதாவது எந்தக் காரணம் கொண்டும், தென்னிந்திய நல உரிமை சங்கத்தில் சேர்ப்பதில்லை என்பதும், எந்த காரணத்தைக் கொண்டும் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் சார்பாக சட்டசபை தேர்தல்களில் பார்ப்பனர்களை நிறுத்தக் கூடாது என்றும் விவரமாய் தெரிவித்து விடவேண்டும் என்றும் தான் அந்த நிபந்தனையின் மேல் தான் இதை ஆமோதிப்பதாகவும், மற்றபடி சர். பாத்ரோ தீர்மானத்தை யாரும் கண்டிப்பாய் ஒப்புக் கொள்ளக் கூடாது என்றும், ஏனெனில் மக்கள் பிறவியில் ஜாதி உண்டென்கின்ற கொள்கை உள்ளவரையில் நமது கட்சியில் எந்த பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்வது முடியவே முடியாது என்றும், அதுவரை எந்த பார்ப்பனர் எவ்வித நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டாலும் நமக்கு பயன்படாதென்றும் பல காரணங்களையும் உதாரணங்களையும் எடுத்துக் காட்டினார்.

உடனே தலைவர் ஓட்டு எடுத்ததும், சர். பாத்ரோ தீர்மானத்திற்கு சுமார் 5, 7 ஓட்டுக்களும் எதிரிடையாக நூற்றுக்கணக்கான ஓட்டுக்களும் இருந்ததால் அது தோல்வியுற்றது என்று பேசி இருக்கின்றோம்.



RangaRakes
tamilnavarasam.com

இதுவும் கூட சில தலைவர்கள் மந்திரிகளைத் தங்கள் கக்ஷியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்கின்ற ஆசையின் பேரில் தான் அவர்களிடம் ராஜி பேசி ஜஸ்டிஸ் பத்திரிகை நடைபெற வேண்டிய பொறுப்பை அவர்கள் மீது சுமத்தி அந்தக் காரணங்களை எல்லாம் நமக்குச் சொல்லி நமது கக்ஷி விதிகளுக்கும் ஆதி கொள்கைகளுக்கும் எவ்வித விரோதமும் இல்லை என்று தெரிவித்துக் கொண்டதின் பேரில் நாம் சம்மதித்ததே தவிர வேறில்லை என்று உறுதி கூறுவோம். மறுப்பதனால் யாராவது வந்து மறுக்கட்டும், சமாதானம் சொல்லத் தயாராயிருக்கின்றோம்.

இந்த நிலையில் நம்மிடம் இஷ்டப்படி வேலை வாங்கிக் கொண்டது மல்லாமல் இப்போது இதை திருத்திக் கூறி நம்மீது குற்றம் சொல்லி விஷமப் பிரசாரம் செய்வதாய் இருந்தால் நாம் சும்மாய் இருப்பதா? என்று கேட்கின்றோம். இது சம்பந்தமாக இன்னும் பல இரகசியங்கள் கூட உண்டு. ஆனால் அவை இப்போது தேவையில்லை. நம் தலையில் அடிக்கப் பார்ப்பதால் இரண்டு கையையும் தூக்கி அடியை தடுத்துக் கொள்வதற்காக இதைச் சொல்லுகின்றோம்.

தவிர நம்மைப் பற்றி மற்றொரு பழிப்புப் பிரசாரம் செய்யப் படுகின்றது. அதைப் பற்றி பின்னால் விளக்குவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 29.06.1930**

## அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அப்பிராமணர் | - | பார்ப்பனர் அல்லாதார் |
| அப்புக் கட்டல் | - | சப்பைக்கட்டு பேச்சு |
| கிருத்திரம் | - | வஞ்சனை, பொய் |
| குச்சுக்காரிகள் | - | விலை மகளிர் |
| சர்வ தயாபரத்துவம் | - | மிக்க அருளுடைய |
| சுவாதந்திரியம் | - | சுதந்திரம், தன்விருப்பம், விடுதலை |
| தாக சாந்தி | - | நீர் வேட்கையைப் போக்குதல் |
| தாஷ்டீகம் | - | உடல் நலம், உடல் உறுதி |
| துராசாரம் | - | அறநெறிக்கு எதிராக |
| நிர்தாட்சண்யம் | - | இரக்கமின்மை |
| பிதுராஜ்ஜித | - | தந்தை வழி சொத்து, முன்னோர் சொத்து |
| போஷகர் | - | புரவலர், காப்பாளர் |
| மூர்த்தண்ணியமாக | - | ஊக்க மிகுதி |
| யாதாஸ்து | - | அறிக்கை, குறிப்பு |
| விநயமாக | - | பணிவாக, அவையடக்கமாக |
| விரோதபாவம் | - | எதிர்ப்பு மனப்பான்மை |
| க்ஷணம் | - | நொடி |

# குடி அரசு
# 1930-2

**பெரியாரின் எழுத்தும் பேச்சும்**

**தொகுதி 11**

**பெரியார் திராவிடர் கழகம்**

29 இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்
சென்னை - 600 041

## சோதிடம்

இந்தியாவில் இந்துக்கள் என்பவர்கள் சாமி ஆடுதல் வாக்குச் சொல்லுதல், பூதம், பேய், பிசாசு, மனிதனை அடித்தல், மனிதனைப் பிடித்தல், மந்திரம் மந்திரித்தல், பில்லி சூனியம் செய்து மக்களுக்கு துன்பம் சாவு முதலியவை உண்டாக்குதல், குட்டி சாத்தான், கருப்பு முதலியவைகளைக் கொண்டு சித்து விளையாடுதல், வசியம் செய்து மக்களை ஸ்வாதீனப் படுத்தல், முன் ஜன்மம் பின் ஜன்மம் உண்டெனல் இவை முதலாகிய விஷயங்களில் நம்பிக்கைக் கொண்டு தங்கள் வாழ்க்கை நலத்திற்கு என்றும், எதிரிகளின் கேட்டிற்கு என்றும் எப்படித் தங்கள் பணத்தையும் நேரத்தையும் உபயோகிக்கின்றார்களோ அதுபோலவே தங்கள் வாழ்க்கைக்கு ஜோசியம் என்னும் ஒரு விஷயத்திலும் அதிக நம்பிக்கை வைத்து பணத்தையும் நேரத்தையும் செலவு செய்து வருகிறார்கள். இதனால் மக்களின் வாழ்க்கைக்கு எவ்வளவோ கெடுதிகளும், பொருள் நஷ்டம், காலம் நஷ்டம், தப்பு அபிப்பி ராயம் முதலியவைகளும் ஏற்பட்டு வருவதை கண்கூடாய்ப் பார்க் கின்றோம். சாதாரணமாய் எப்போதுமே ஜோசியன், மந்திரவாதி, கோயில் குருக்கள் ஆகிய மூவரும் மக்களின் பேராசைக்கும் முட்டாள் தனத்திற்கும் சரிபங்கு தாயாதிகளேயாவார்கள். எப்படி எனில் முதலில் ஜோசியன் ஒருவனு டைய ஜாதகத்தைப் பார்த்து பலன் சொல்லுவதன் மூலம் கண்டம் நீங்க சாந்தி யும் கிரகதோஷ பரிகாரத்திற்கு சாமிகளுக்கு அர்ச்சனை அபிஷேகங்களும் செய்யும்படி சொல்லுவான். இதைக் கேட்ட அந்த மனிதன் தனது முட்டாள் தனத்தினால் ஏற்பட்ட பயத்திற்காகவும், ஆசைக்காகவும், மந்திரவாதியைக் கூப்பிட்டு சாந்தி கழிக்கச்சொல்லுவான். இந்த மந்திரவாதிகள் அனேகமாய் வைத்தியர் களாகவும் இருப்பார்கள். இவர்கள் சாந்தி கழிக்க கடைச்சாமான் பட்டியல் போடும் போதே ஒரு மண்டலம் (48 நாள்) அரைமண்டலம் நவகிரகங் களுக்கோ அல்லது குறிப்பிட்ட சனி செவ்வாய் முதலிய ஏதாவது ஒரு கிரகத்திற்கோ ஒருசாமிக்கோ, அர்ச்சனை, எள்ளு, பருத்திக்கொட்டை முதலிய தானம், விளக்கு வைத்தல் அபிஷேகம் செய்தல் ஆகியவை களையும், ஏதாவது புண்ணிய புராணம் படித்தல் முதலியவைகளையும் சொல்லிவிடுவான். இவைகளை எல்லாம் செய்வதால் மந்திரவாதிக்கும் அர்ச்சகனுக்கும் புராண பிரசங்கிக்கும் வரும் வரும்படியில் ஒரு பாகம் ஜோசியனுக்குச் சேர்ந்து விடும்.

RangaRakes
tamilnavarasam.com

இந்தப்படியே எங்கும் இப்போதும் நடப்பது வழக்கம். ஆகவே இந்த விஷயத்தில் மந்திரம் அர்ச்சனை ஆகியவைகளைப் பற்றி விசாரிக்குமுன் ஜோசியம் என்பதைப் பற்றியே முதலில் யோசிப்போம்.

அதாவது:- ஜோசியம் என்றால் என்ன? அது உண்மையா? அப்படி ஒன்று இருக்க முடியுமா? என்பன முதலாகிய விஷயங்களை ஆராய்ச்சி செய்து பார்ப்போம்.

ஜோசியம் என்பது உலக வழக்கில் அனுபவத்தில் ஒரு மனித ஜீவனுடைய பிறந்த காலத்தை ஆதாரமாய் வைத்து அந்த மனிதனின் வாழ்க்கை, அதன் சம்பவம், பலன் முதலாகியவைகளை மொத்தமாய் வருஷப் பலனாயும் மாதப் பலனாயும் தினப் பலனாயும் நிமிஷப் பலனாயும் சொல்லுவதும், அவற்றுள் துன்பம் வரத்தக்கது ஏதாவது நேர்ந்தால் அதற்கு ஏதாவது பரிகாரம் செய்து தடுத்துக் கொள்வதும், இஷ்ட சித்திக்கு ஏதாவது விரோதமாய் இருந்தால் அதற்கும் ஏதாவது பரிகாரங்கள் செய்வதன் மூலம் விரோதத்தை நீக்கி சித்தியடைய முயற்சிப்பதும் ஆகிய காரியங்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்வதாகும். இந்த ஜோசியம் முன் சொன்னது போல் பிறந்த காலத்தைக் கொண்டு சொல்வதோடு மற்றும் வேறு பல வழிகளிலும் அதாவது பேர் நாமத்தைக் கொண்டும் - கேள்க்கப்பட்ட நேரம், கேட்ப வரின் இருப்பு நிலை, கேட்ட சங்கதி, ஜோசியனுக்கு எட்டும் நேரம், கேட்பவ ரின் தாய், தகப்பன் சகோதரம் பந்து முதலானவர்களின் பிறந்தகால ஜாதகம் முதலியவைகளைக் கொண்டும் பலன் சொல்வது உண்டு. இன்னும் இது போன்ற பல வகை அதாவது ஏதாவது ஒரு எண், ஒரு புஷ்பம், ஒரு எழுத்து ஆகியவைகளைக் கேட்டல், ஒரு அங்கத்தை தொடுதல் முதலாகிய வைகளின் மூலமும் பலன் சொல்லுவதுமுண்டு. ஆகவே மேல்கண்ட எல்லாவற்றின் மூலம் பலன் சொல்ல முடியுமா? முடியாதா? என்பதைப் பற்றி யோசிப்பதில் முதலாவதாக ஜீவன் பிறந்த காலத்தை ஆதாரமாக வைத்துப் பலன் சொல்லக் கூடுமா? என்பதைப் பற்றி முதலில் ஆறாய்வோம்.

பிறந்த காலம் என்பது வயிற்றுக்குள் இருக்கும்போது ஜீவன் (உயிர்) ஏற்பட்ட காலமா? அல்லது வயிற்றிலிருந்து 7, 8, 9, 10 மாதங்களில் எப்பொழுதானாலும் பிறக்கும் காலமா? அப்படி பிறக்கும் காலத்தில் தலை வெளியில் தெரியும் காலமா? அல்லது ஒரு நாள் அரை நாள் அக்குழந்தை கீழே விழாமல் கஷ்டப்படும் காலத்தில் தலை வெளியாகி நிலத்தில் பட்டு கால் நிலத்தில் விழாமல் தாய் சரீரத்தில் பட்டுக் கொண்டிருக்கும் காலமா? அல்லது கால் தலை ஆகிய யெல்லாம் மருத்துவச்சி கையில் விழுந்த நேரமா? அல்லது மருத்துவச்சி கையிலிருந்து கீழே விழுந்த நேரமா? என்பனவாகிய கேள்விகள் ஒரு புறமிருக்க ஜீவனுடைய சரீரமெல்லாம் பூமியில் விழுந்த நேரம் என்பதாக வைத்துக் கொண்டே பார்ப்போ மானாலும் அந்த நேரத்தை சரியாக எப்படி கண்டு பிடிக்க முடியும் என்பதை யோசிப்போம். குழந்தை கீழே விழுந்ததும் அது உயிருட னிருக்கிறதா? இல்லையா? ஆணா பெண்ணா என்பன போன்றவைகளைப் பார்க்க சிறிது நேரமாவது செல்லும். பிறகு அந்தச் சேதியைக் கொண்டு வந்து வெளியில் இருக்கும் ஆண்களிடம் சொல்ல சிறிது நேரமாவது செல்லும். அந்த சேதியைக் கேட்டவன் நேரத்தை குறிக்க அங்கேயே அவனுக்கு கடிகாரம் வேண்டும். அந்த கடிகாரம் சரியான மணியா? என்பது தெரிய வேண்டும். கடிகாரமில்லாவிட்டால் வானத்தைப் பார்த்து நேரம் கண்டுபிடிப்பதாயிருந்தால் அதற்கு பிடிக்கும் நேரம் முதலியவை அல்லது அக்கம் பக்கம் கடிகார நேரம், அதுவுமில்லாவிட்டால் உத்தேச சுமார் நேரம் ஆகியவைகளின் தாமதங்களும் பிசகுகளும் எப்படி நேராமல் இருக்க முடியும்? இவை ஒரு புரமிக்க அந்த நேரத்தால் பலன் சொல்லுவதனால் அந்த நேரத்தில் உலகத்தில் பிறக்கும் ஜீவன்கள் எவ்வளவு இருக்கக்கூடும். மற்ற ஜீவன்களை எல்லாம் தள்ளிவிட்டு வெறும் மனித ஜீவனை மாத்திரம் எடுத்துக் கொண்டாலும் உலகத்தில் 170 கோடி மக்கள் இருக்கிறார்கள் என்ற கணக்குப்படி பார்ப்போமானால் சென்னை முதலிய பட்டணங்களின் சாதாரண அனுபவங்களின் படிக்கு உலகத்தில் நாள் ஒன்றுக்கு 226666 (இரண்டு லட்சத்து இருபத்தாராயிரத்து அறுநூற்று அறுபத்தாறு) குழந்தைகள் பிறப்பதாக கணக்கு ஏற்படுகின்றது. (இந்தக் கணக்கானது ஐந்து லட்சம் ஜனத்துகை உள்ள சென்னை நகரத்திற்கு தினம் ஒன்றுக்கு 70 - எழுபது குழந்தைகள் - பிறப்பதாக கணக்குப் போடப்பட்டிருக்கின்றது.) இதைத் தவிர கணக்குக்கு வராத விதவைகளின் குழந்தைகள், கல்யாணம் ஆகாத பெண்களின் குழந்தைகள், புருஷன் சமீபத்தில் இல்லாத ஸ்ரீகளின் குழந்தைகள் ஆகியவைகளைச் சேர்த்தால் இன்னமும் இந்தக் கணக்குக்கு அதிகமாகும். இது ஒரு புறமிருக்க மேல்படி சாதாரண கணக்குப் படிக்குப் பார்த்தாலே ஒரு நாளைக்கு பிறக்கும் குழந்தைகளைப் பங்கிட்டுப் பார்த்தால் ஒரு நிமிஷத்திற்கு சுமார் 160 குழந்தைகள் வீதம் பிறக்கிறதாக கணக்கு ஏற்படுகிறது. இதில் 33 கோடி ஜனத்தொகை கொண்ட நமது இந்தியாவுக்கு மாத்திரம் கணக்குப் பார்த்தால் நிமிஷத்திற்கு 33 குழந்தை வீதம் பிறக்கின்றதாக கணக்கு ஏற்படுகிறது. ஆகவே இந்த 33 குழந்தைகளுக்கு மாவது ஜாதகப் பலன் ஒத்து இருக்க முடியுமா? இவைகளுக்குச் சரியான நேரம் கண்டுபிடிக்க முடியுமா? என்பதை யோசிக்க வேண்டும்.

நிமிஷக் கணக்கே இப்படி நிமிஷத்துக்கு 33 குழந்தைகள் பிறப்ப தாயிருக்கும் போது ஒரு சோதிடம் சொல்லுவதற்கு போதுமான காலமாகிய ஒரு லக்கினம் நட்சத்திரம் ஆகியவைகளின் காலத்திற்குள் எத்தனை குழந்தைகள் பிறக்கக்கூடும் என்பதைப் பார்த்தால் இது சிறிதும் பொருத்த மற்றதென்பதாகவே காணலாம்.

சாதாரணமாய் ஒரு ஜாதகம் என்பது வருஷம், மாதம், தேதி, கிழமை, மணி (அல்லது நாளிகை) அந்த சமயத்தின் லக்கினம் நட்சத்திரம் ஆகிய



RangaRakes

tamilnavarasam.com

வைகளைக் குறித்துள்ளதேயாகும். உதாரணமாக பிரமாதி வருஷம் புரட்டாசி மாதம் 2-ந் தேதி புதன் கிழமை காலை சுமார் 10 $^1/_2$ மணிக்கு விருச்சிக லக்கினத்தில் அஸ்த நட்சத்திரத்தில் ஒருவன் பிறந்தான் என்பதாக ஒரு துண்டு சீட்டில் எழுதி ஒரு ஜோசியனிடம் கொடுத்து விட்டால் இதன் பேரில் அந்த ஜோசியன் பலன் சொல்லிவிடக் கூடும் என்பதே அநேகமாக ஜோசியத்தின் லட்சணம். ஆகவே இந்த விருச்சிக லக்கினம் என்பது 5 $^1/_4$ நாளிகை உடையதாகும். இந்த ஐந்தே கால் நாளிகைக்குள் அதாவது 126 நிமிஷ நேரத்திற்குள் உலகத்திலே 20160(இருபதாயிரத்து நூற்று அறுபது) குழந்தைகள் பிறந்திருக்க வேண்டும். இது ஒரு புறமிருக்க மேலும் இந்த லக்கினத்தில் நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன ஆகிய பூதக் கண் ணாடிப் பூச்சி முதல் யானை வரையில் உள்ள ஜீவன்களின் குழந்தைகள்பல நூறு கோடிக்கு மேல் பிறந்து இருக்க வேண்டும். இதுவுமொரு புறமிருக்க,

இந்தியாவில் மாத்திரம் அந்த விருச்சிக லக்கினத்தில் முன் சொல்லப் பட்ட கணக்குப் படிக்கு 4158 (நாலாயிரத்து நூற்று ஐம்பத்தெட்டு) குழந்தைகள் பிறந்திருக்க வேண்டும்.

ஆகவே அன்றைய தினம் இந்த விருச்சிக லக்கினத்தில் பிறந்த காரணத்திற்காக மேற்படி 4158 பேருக்கும் வாழ்க்கையில் ஒரு விதமான பலன் அனுபவமிருக்க முடியுமா? அந்தப்படி இருக்கின்றதா? என்பதை முதலில் யோசிக்க வேண்டும்.

தவிர இந்த பலன் அனுபவங்கள் மனிதனுக்குத் தானாக ஏற்படுவதா? அல்லது ரக்ஷிக்கிற கடவுள்களின் தன்மையால் ஏற்படுவதா? அல்லது முன் ஜென்மத்தில் செய்த கர்மத்தின் பலனாய் பலன் ஏற்படுவதா? அல்லது விதியின் பயனாய் பலன்கள் ஏற்படுவதா? என்பவைகளையும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இந் நான்கிலும் மனிதனுக்குப் பலன் அவனது சொந்த இஷ்டத்தால் செய்கையால் தற்சம்பவமாய் ஏற்படுமானால் மேல்காட்டியவைகளில் அது தவிர மற்றவைகள் மூன்றும் அடிபட்டுப்போகும். கிரகங்களின் தன்மை யினால் ஏற்படும் என்றால் இதைத் தவிர மற்ற மூன்றும் அடிபட்டு போகும். முன் ஜன்ம கர்மத்தின்படி என்றால் இது தவிர மற்ற மூன்றும் அடிபட்டுப் போகும். மூலைவிதிப்படி என்றால் இதுதவிர மற்ற மூன்றும் அடிபட்டுப் போகும். ஆகவே மனிதனுடைய அனுபவ பலனுக்கு இவற்றுள் ஏதாவது ஒன்றுதான் காரணமாய் இருக்க முடியுமே தவிர இன் நான்கும் சேர்ந்து குழப்பிக் கொண்டிருக்க முடியாது. இது ஒரு புறமிருக்க இந்த வியாசத்திற்கு அவசியமான பிறந்த நேர லக்கினத்தால் ஏற்பட்ட கிரகத் தன்மைப் பலனைப் பற்றியே மேலும் ஆராய்வோம்.

உதாரணமாக இன்ன இன்ன கிரகம் இன்ன இன்ன வீட்டில் இருப்ப



RangaRakes

தாலும் இன்ன இன்ன காலத்தில் இன்ன இன்ன கிரகங்கள் இன்ன இன்ன கிரகங்களைப் பார்ப்பதாலும் இந்த ஜாதகன் இன்ன இன்ன காரியம் செய்து இத்தனை தடவை சிறைக்குப் போவான் என்பதாக ஒரு சரியான பிறந்த காலத்தைக் கண்டு பிடிக்கப்பட்ட ஜாதகன் ஒருவனுக்கு சரியான கெட்டிக்கார ஜோசியன் ஒருவன் பலன் சொல்லுகின்றான் என்பதாக வைத்துக் கொள்ளுவோம். இவற்றுள் இந்த ஜாதகன் இன்ன வேளையில் இன்னாரைக் கொன்று ஜெயிலுக்குப் போவான் என்று இருந்தால் அந்தக் கொல்லப்பட்ட வனுடைய ஜாதகத்திலும் இன்ன வேளையில் இன்னாரால் கொல்லப்பட்டுச் சாவான் என்று இருந்தாலொழிய ஒருக்காலமும் பலன் சரியாய் இருக்கவே முடியாது என்பது உறுதியானதாகும். இந்த இரண்டு ஜாதகர்களுடைய பலனும் இருவருக்கும் தெரிந்து விட்டதாகவே வைத்துக் கொண்டாலும் இவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டாவது தப்பித்துக் கொள்ள முடியுமா? என்றால் ஒருக் காலமும் முடியவே முடியாது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் தப்பித்துக் கொண்டால் சோதிடம் பொய்யாய் விடும். அன்றியும் ஒரு சமயம் தப்பித்துக் கொள்வதாகவே வைத்துக் கொண்டால் அந்த இருவர்கள் ஜாதகத்திலும் "இந்த சங்கதி தெரிந்து இருவரும் ஜாக்கிரதையாய் இருப்பதின் மூலம் இருவருக்கும் அந்தக் காலத்தில் அந்த சம்பவங்களால் கொலையோ சிறைவாசமோ கண்டிப்பாய் ஏற்படாது" என்று தான் அந்த ஜாதகத்தின் முடிவு இருந்தாக வேண்டும். அப்படி இருக்கு மானால் இந்த விஷயத்தை அவ்விருவரும் தெரிந்து ஜாக்கிரதையாயிருந் தாலும் தெரியாமல் கவலையற்றே அஜாக்கிரதையாயிருந்தாலும் இருவருக் கும் கொலையும் சிறைவாசமும் கிடைக்க முடியவே முடியா என்பதிலும் சந்தேகமில்லை. ஏனெனில் ஜாதகத்தில் ஏற்கனவே இருக்கின்றபடி நடந்து தானே தீரும்.

இதற்கு சாந்தி தோஷ பகிஷ்காரம் என்பவைகள் செய்வதன் மூலமா வது ஏதாவது பலனை மாற்றி விட முடியுமா என்பதையும் யோசித்துப் பார்க்கலாம். அதாவது இன்ன கிரகம் இன்ன வீட்டில் இருப்ப தால் இன்ன கெடுதியான பலன் ஏற்படும். ஆதலால் இன்ன தோஷ பரிகார சாந்தியும் இன்ன கிரக தேவதைக்கு இத்தனை நாள் அர்ச்சனையும் செய்தால் நிவர்த்தி யாகும் என்று ஜோசியன் சொல்வானானால் அல்லது ஜாதகத்தில் இருக்கு மானால் இந்த சாந்தியின் மூலமாகவோ அர்ச்சனையின் மூலமாகவோ அந்த கிரகங்களை அந்த காலத்தில் அந்த வீட்டை விட்டு மாற்ற முடியுமா அல்லது அவைகள் மாறுமா என்பதைக் கவனிக்க வேண்டும். அது மாத்திர மில்லாமல் இம்மாதிரி சாந்தியோ பரிகாரமோ செய்வதன் மூலம் தப்பித்துக் கொள்வான் என்றும் அதில் இருந்தாக வேண்டாமா? அப்படிக்கில்லாத பக்ஷம் எந்தவித சாந்தியாலும் தோஷம் பரிகாரமாக முடியாது. முடிந்தால் ஜோசியம் பொய்யென்றே தீர்மானமாகி விடும்.

நிற்க, முடிவாக எந்தக் காரணத்தைக் கொண்டாவது ஜோசியம் நிஜம்



tamilnavarasam.com

என்றாகி விட்டால் எந்த மனிதன் மீதும் எந்தக் குற்றமும் சொல்வதற்கு இடமுண்டா?

ஜாதகபலன்படி நடவடிக்கைகள் நடந்தால் அதற்கு ஜாதகன் மீது குற்றம்சொல்லுவது மடமையும் யோக்கியப் பொருப்பற்றத் தன்மையும் ஆகாதா? என்று கேட்க்கின்றோம். ஒரு மனிதனுக்கு இன்ன காலத்தில் திருடரால் பொருள் நஷ்டம் ஏற்படும் என்று இருந்தால் அதே நேரத்தில் மற்றொரு மனிதனுக்கு திருட்டுத் தொழிலில் பொருள் லாபம் கிடைக்கும் என்று ஜாதகப் பலன் இருந்துதான் ஆக வேண்டும். அதுமாத்திரமல்லாமல் திருட்டுக் கொடுத்தவனுக்கு பணம் கொடுத்து யார் யார் நஷ்ட மடைந் தார்களோ அவர்கள் ஜாதகத்திலும் இன்ன காலத்தில் இன்னாருக்கு பணம் கொடுத்து அது திருட்டுப் போய் அதனால் நஷ்டமடைய வேண்டும் என்று இருந்தேயாக வேண்டும். அதுபோலவே திருடினவனிடமிருந்து பணம் வாங்கியவர்களுக்கும் இன்ன காலத்தில் இன்னான் இன்னாரிடம் திருடு வதால் இன்ன இன்னாருக்கு லாபம் வரும் என்று அவர்கள் ஜாதக பலனும் இருந்தாக வேண்டும்.

ஆகவே இந்தப்படி எல்லாம் ஜோசிய உண்மை இருந்துவிட்டால் பிறகு கடவுள் செயல் எங்கே? மோட்ச நரகம் எங்கே? தலைவிதி எங்கே? முன் ஜன்ம வினைப்பயன் எங்கே? இவைகளுக்கு வேலை ஏது? என்பதைப் பற்றி யோசித்தால் இவை அவ்வளவும் பொய்யாகவே முடியும்.

இவைகளுக்கெல்லாம் நேரமும் இடமும் சம்பாதித்து மெய்ப்படுத்தக் குழப்புவதாக வைத்துக் கொண்டாலும் கண்டிப்பாக ஒரு மனிதனின் நடவடிக்கைகளுக்கு அந்த மனிதனுடைய பொறுப்பையாவது அடியோடு விட்டுத்தானாக வேண்டும். இனியும் இதைப்பற்றிய விபரங்கள் மற்றொரு சமயம் விரிப்போம்.

**குடி அரசு - தலையங்கம் - 06.07.1930**



RangaRakes

## ஒரு யோசனை

சென்ற மே மாதம் 25 தேதியின் மாலை 6 மலர் 4 இதழில் “ஒரு யோசனை” யென்னும் தலைப்பின் கீழ் குடி அரசு பத்திரிகையை எட்டு பக்கங்கள் குறைத்து சந்தாத் துகை வருஷத்துக்கு மூன்று ரூபாயாக இருப் பதை இரண்டு ரூபாயாக ஆக்கலாம் என்று கருதியிருப்பதை வெளிப்படுத்தி வாசகர்களின் அபிப்பிராயத்தையறிய ஆசைப்பட்டிருப்பதை வெளியிட்டி ருந்தோம். அவற்றிற்கு வந்த பல அபிப்பிராயங்களில் சுமார் பத்துப் பேர் களேதான் அதற்குச் சம்மதம் கொடுத்திருக்கிறார்கள். சுமார் முன்னூற்றுக்கு மேற்பட்ட வாசகர்கள் பக்கங்களை எவ்வித காரணங் கொண்டும் குறைக்கக் கூடாதென்றும், சந்தா மூன்று ரூபாயாக இருப்பதைப் பற்றி கவலையில்லை யென்றும் தெரிவித்து வேறு சில யோசனைகளும் சொல்லி இருக்கிறார்கள். நிற்க,

மலாய் நாட்டுச் சந்தாதாரர்கள் கண்டிப்பாகப் பக்கங்களைக் குறைக் கக் கூடாதென்றும், சௌகரியப்பட்டால் அதிகப்படுத்தும் படியும் தெரிவித் திருக்கிறார்கள். ஆகவே வாசகர்களின் பெரும்பான்மையோர்களுடைய அபிப்பிராயம் மாறுபாடாயிருப்பதால் இது சமயம் அதாவது தற்காலம் குடி அரசு பத்திரிகையில் பக்கங்களையாவது சந்தாவையாவது மாற்றுவது என்கின்ற விஷயத்தை நிறுத்தி வைத்திருக்கிறோமென்பதை தெரியப் படுத்திக் கொள்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.07.1930**



tamilnavarasam.com

# விருதுநகரில், உண்மைச் சுயமரியாதை திருமணம்

தலைவரவர்களே! மணமக்களே! அவர்களது பெற்றோர்களே! மற்றும் சகோதரி, சகோதரர்களே! இந்தக் கூட்டத்தில் எனக்குப் பேச மிக்க ஆசையா யிருக்கிறது. ஆனால் நான் ஆசீர்வாதம் செய்யவோ வாழ்த்துக் கூறவோ எழுந்திருக்கவில்லை. மேல்கண்ட இரண்டும் முறையே புரட்டும் மூட நம்பிக்கையுடையதுமாகும்.

நமது நாட்டில் ஆசீர்வாதம் அனேகமாய் ஒரு ஜாதிக்கே உரிய தென்றும், அதுவும் அவர்களிடமிருந்து பணத்திற்கு விலைக்கு கிடைக்கக் கூடியதென்றும் கருதி இருக்கிறோம். அனேகமாக ஆசீர்வாத ஜாதி பிச்சை யெடுப்பதற்கு இந்த ஆசீர்வாதத்தை உபயோகப்படுத்துவதையும் பார்க்கின்றோம்.

நம்மை மகாராஜனாகவும் க்ஷேமமாகவும் இருக்கும்படி ஆசீர்வாதம் செய்து பணம் வாங்குகிறவனுடைய ஆசீர்வாதம் யோக்கிய முடையதும் உண்மை யுடையதுமானால் தன்னையே ஆசீர்வாதம் செய்து கொண்டு செல்வவானாய் சீமானாய் இருக்கும்படி செய்து கொள்ளலாமல்லவா? நம்மி டம் பிச்சைக்கு வருவானேன்? தவிர வாழ்த்துவதும் அர்த்த மற்றதேயாகும். ஒருவன் வாழ்த்துதலினாலேயே ஒரு காரியமும் ஆகி விடாது. வேண்டு மானால் மணமக்கள் இன்பமாய் வாழ ஆசைப்படலாம். ஆனால் அவ்வித ஆசைப்படுகின்றவர்களுக்கு ஆசைக்கேற்ற கடமை உண்டு. அக்கடமை என்னவென்றால் ஆசைப்படுகின்றவனது ஆசை நிறைவேற உதவியாய் இருப்பதுதான்.

அவ்விதம் நான் ஆசைப்பட்டாலும் அவ்வாசை நிறைவேற நான் எவ்வளவு தூரம் உதவியாய் இருக்கமுடியும் என்பது எனக்கே தெரிய வில்லை. ஆனால் எனது நரைத்த தலையைப் பார்த்து என்னை முதலில் கூப்பிட்டு விட்டார்கள் என்றே நினைக்கின்றேன்.

ஆகையால் இந்த சமையத்தை நிறைவேற்றிவைக்க சக்தி இல்லாது ஆசைப்படுவதை விட மணமக்களையும் மணமக்கள் வீட்டாரையும்



பாராட்டி மணமக்களுக்கு ஏதாவது இரண்டொரு யோசனை சொல்ல உபயோகித்துக் கொள்ளுகின்றேன்.

சகோதரர்களே! தென்னாட்டில் இதுவரை நடந்த சுயமரியாதை கல்யாணங்களுக்குள் இதுவே முதன்மையானது என்று சொல்லுவேன். என்னவெனில் இந்த கல்யாணத்தில் பெண்ணின் கழுத்தில் கயிறு (தாலி) கட்டவில்லை. மணமக்களைப் பெற்றவர்கள் இருவரும் மிக்க துணிச்சலான சுயமரியாதை வீரர்கள் என்பது அவர்களது உபந்நியாசத்திலிருந்தே பார்க் கலாம். தாலி கட்டுவது ஒழிந்தாலல்லது நமது பெண்கள் சமூகம் சுதந்திரம் பெற முடியவே முடியாது. பெண்கள் மனிதத் தன்மை அற்றதற்கும் அவர் களது சுயமரியாதை அற்ற தன்மைக்கும் இந்தப் பாழும் தாலியே அறிகுறி யாகும். புருஷர்களின் மிருக சுபாவத்திற்கும் இந்தத் தாலி கட்டுவதே அறிகுறியாகும். ஆனால் தங்களை ஈனப்பிறவி என்று நினைத்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு இந்த வார்த்தை பிடிக்காதுதான். இப்போது தாலி கட்டிக் கொண்டிருக்கும் பெண்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி வந்திருந்தால் அருத்தெறியட்டும். இல்லாவிட்டால் புருஷர்கள் கழுத்திலும் ஒரு கயிறு கட்ட வேண்டும். தங்களை தாங்களே அடிமை என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற சமூகம் என்றும் உருப்படியாகாது.

நம்மை நாம் சூத்திரர்கள் இந்துக்கள் என்று நினைத்துக் கொண்டி ருக்கும் கீழ்மைக் குணமே நம் நாடு அடிமையாய் இருப்பதற்குக் காரண மாயிருப்பது என்பது போலவே பெண்கள் புருஷனுக்குக் கட்டுப்பட்டி ருக்க வேண்டும். அதிலும் தாலி கட்டின புருஷனுக்கு கீழ் படிந்து நடக்க வேண்டும் என்னும் உணர்ச்சிகள் பெண்களை மிருகமாக்கி இருக்கின் றன. ஆதலால் அப்பேர்பட்ட மிருக உணர்ச்சியையும் அடிமை உணர்ச்சியையும் ஒழிக்க முயற்சித்த இந்த மணமக்களையும் அதற்கு உதவியாயிருந்த பெற் றோர்களையும் நான் மிகப் போற்றுகிறேன், பாராட்டுகிறேன். பெண்கள் முன்னேற்றத்தில் கவலை உள்ளவர்கள் பெண்களைப் படிக்க வைக்கும் முன் இந்தக் கழுத்துக் கயிற்றைத் (தாலியை) அருத்தெறியும் வேலையையே முக்கியமாய் செய்யவேண்டுமென்று சொல்லுவேன். நிற்க, இதுவரை மணமக்களுக்கு ஆசீர்வாதமோ வாழ்த்தோ என்பது மணமக்கள் நிறைய அதாவது 16 – பிள்ளைகள் பெற்க வேண்டுமென்று சொல்லுவார்கள். ஆனால் நான் மணமக்களுக்குச் சொல்லுவதென்னவென்றால் அவர்கள் தயவுசெய்து பிள்ளைகள் பெறக்கூடாது என்பதும், மிக்க அவசியமென்று தோன்றினால் ஒன்று அல்லது இரண்டுக்கு மேல் கூடாது என்றும் அதுவும் இன்னும் ஐந்து ஆறு வருடம் பொறுத்துத்தான் பெறவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகின்றேன். அன்றியும் அப்படிப் பெறும் குழந்தைகளை யும் தாய்மார்கள் குரங்குக் குட்டிகள்போல் சதா தூக்கிக் கொண்டு திரிந்து போகின்ற இடங்களுக்கெல்லாம் அழைத்துப் போய் அழ வைத்துக் கொண்டு கூட்டமும் நடவாமல் தங்களுக்கும் திருப்தியில்லாமல் சபை யோருக்கும்



RangaRakes tamilnavarasam.com

வெறுப்புத் தோன்றும்படியாய் செய்யாமல் குழந்தைகளை ஆயம்மாள் வைத்து வளர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவை களுக்கு ஒழுங்கும் அவசியமான கட்டுப்பாடும் பழக்கிக் கொடுக்க வேண்டும்.

இந்தக் கூட்டத்தில் நான் பேசமுடியாதபடி எத்தனை குழந்தைகள் அழுகின்றது பாருங்கள். அவற்றின் தாயார் முகங்கள் எவ்வளவு வாட்டத் துடன் வெட்கப்படுகின்றது பாருங்கள். அந்தத் தாய்மாரும் தகப்பன் மாரும் இந்தக் கூட்டத்தில் ஒருவரையொருவர் பார்த்து வெறுப்பதைத் தவிர அவர் களுக்கு இங்கு வேறு வேலையே இல்லாமல் இருக்கின்றது. இன்பமும் அன்பும் என்பது சுதந்திரத்தோடு இருக்க வேண்டுமே அல்லாது நிபந்தனை யோடும் தனக்கு இஷ்டமில்லாத சௌகரியமில்லாத கஷ்டத் தைச் சகித்துக் கொண்டு இருப்பதாய் இருக்கவே முடியாது. ஆகவே இப் போதைய குழந்தை இன்பம் என்பது ஒருக்காலமும் உண்மையான இன்பமாகாது. ஆகையால் அவைகளை மாற்றிவிட வேண்டும்.

தவிர அதிக நகை போடாமலும் தாலி கட்டாமலும் மூடச் சடங்குகள் இல்லாமலும் மாத்திரம் நடைபெற்ற திருமணம் சுயமரியாதைத் திருமண மாகி விடாது.பெண்ணின் பெற்றோர் இப்பெண்ணுக்கு தங்கள் சொத்தில் ஒரு பாகம் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். புருஷர்களைப் போ லவே பெண் களுக்கும் சொத்துரிமை உண்டு, தொழில் உரிமை உண்டு என்கின்ற கொள்கை ஏற்படாவிட்டால் எப்படி அவர்கள் சுயமரியாதை உடையவர் களாவார்கள்? ஆகையால் அவர்களுக்கு சொத்துரிமையும் அவசியமான தாகும். தவிர பெண்களுக்கு இப்போது பொது நல சேவை என்னவென்றால் எப்படியாவது ஒவ்வொரு விதவையையும் ஒவ்வொரு புருஷனுடன் வாழச் செய்ய வேண்டும். அதுவே அவர்கள் இப்போது செய்ய வேண்டியது.

தவிர பெண்களும் புருஷர்களைப் போலவே தினமுமோ அல்லது வாரத்திற்கு ஒன்று இரண்டு நாளோ ஒரு பொது இடத்தில் கூடி மகிழ்ச்சியாய் பேசி விளையாட வேண்டும். பத்திரிகைகளைப் படிக்க வேண்டும். படிக்காத பெண்களுக்குப் படித்தவர்கள் படித்துக் காட்ட வேண்டும்.

வீட்டு வேலை செய்வதுதான் தங்கள் கடமை என்பதை மறந்து விட வேண்டும். புருஷனுக்கு தலைவியாய் இருப்பதும் குடும்பத்திற்கு எஜமானி யாய் இருப்பதும் தங்கள் கடமை என்று நினைத்து அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ள வேண்டும். இந்த உணர்ச்சியோடேயே பெண்மக்களை வளர்த்தி அவர்களுக்கு தக்க பயிர்ச்சி கொடுக்க வேண்டும்.

*குறிப்பு : - 10.07.1930 இல் விருதுநகர் வன்னிய நாடார் இல்லத் திருமணத்தில் சொற்பொழிவு*

**குடி அரசு - சொற்பொழிவு - 13.07.1930**



RangaRakes

# வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

இந்தியாவில் முதல் முதலாக அரசியல் கிளர்ச்சி உண்டாக்கப் பட்டதின் உத்தேசமே, இந்திய ஆட்சி உத்தியோகம் முழுவதும் ஆங்கிலே யர் கையிலே இருப்பதால் இந்தியர்களுக்கும் இந்திய அரசாட்சியில் சரியான பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற கருத்தைக் கொண்டேதான் ஏற்படுத்தப்பட்டது என்பது எல்லா அரசியல்வாதிகளாலும் ஒப்பு கொள்ளப்பட்ட உண்மையாகும். யாராவது ஆக்ஷேபிப்பதாயிருந்தால் 45 வருஷத்திய அரசியல் ஸ்தாபனங்கள் என்பவைகளின் தீர்மானங்களைப் பார்த்தால் நன்றாய் தெரிய வரும். இப்படி அவர்கள் கேள்க்க வேண்டிய அவசியம் எப்படி ஏற்பட்டதென்றால் ஆங்கில அரசாட்சியின் பயனாக இந்திய மக்களுக்கு சற்று கல்வி, அன்னிய நாட்டு வர்த்தமானம் முதலியவை கள் மூலம் அரசியல் விஷயங்கள் அறிய வசதி ஏற்பட்டதேயாகும். ஆகவே அவர்களது ஆசையானது அரசாட்சி உத்தியோகங்களில் புகுந்து அதை அடைவதற்கு அரசியல் ஸ்தாபனம் என்பதை ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலமாய் தங்களுக்கு இன்ன இன்ன உத்தியோகங்களில் உரிமை கொடுக்க வேண்டுமென்றும், பிறகு அதில் இத்தனை இத்தனை ஸ்தானங்கள் தங்களுக்கே (இந்தியர்களுக்கே) வேண்டுமென்றும் அதற்கும் பிறகு அது இன்ன இன்ன மாதிரியில் கிடைக்கக் கூடியதாய் இருக்கவேண்டும் என்றும் கேட்கப்பட்டது போலவே அரசாங்கத்தாரும் இந்திய அரசாட்சியில் இந்தி யர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க சம்மதித்து அக் கொள்கையின் பேரி லேயே நாளா வட்டத்தில் கொடுக்கப்பட்டும் வந்திருக்கின்றன. என்றாலும் இன்னமும் அவைகள் போராதென்றும் அப்பிரதிநிதித்துவத்திற்குக் கொடுக்கப் படும் சுதந்திரங்களும் அதிகாரங்களும் சவுகரியங்களும் போராதென்றும் கேள்க்கப்பட்டு வருகின்றது.

எனவே மேல்கண்ட மாதிரியான பிரதிநிதித்துவமும் சுதந்திரமும் மக்களுக்கு கிடைத்ததில் அவைகள் பெரும் பெரும் பதவிகளாகவும், பெரும் பெரும் சம்பள வருவாயுள்ளதாகவும், பெரும் பெரும் அதிகாரங் களுள்ளதாகவும் மக்களுக்கு அவை கவுரவமும் கீர்த்தியு முடையவை களாகவும் ஏற்பட்டு விட்டதால் அவைகள் மீது எல்லா மக்களுக்கும் ஆசை ஏற்பட்டு ஒவ்வொருவரும் அதை அடைய முயற்சி செய்ய வேண்டியதாய்



tamilnavarasam.com

ஏற்பட்டுவிட்டது. இதன் பயனாய்ப் பதவிகள் எல்லாம் அரசியல் ஸ்தாபனங் களில் முன்னணியில் இருப்பவர்களுக்கே கிடைக்கக் கூடியவைகளாய் விட்டபடியால் அரசியல் ஸ்தாபனத்தின் மூலமாய் தங்களுக்கு கிடைக்காது என்று கருதினவர்களுக்கும் அந்த ஸ்தாபனங்களில் செல்வாக்குப் பெற முடியாமல் தடுக்கப்பட்டிருந்தவர்களுக்கும் தங்களுக்கென்று தனி ஸ்தாப னங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியங்கள் ஏற்பட்டு விட்டன. ஆனதினால் அதற்காக பதவி - அதிகாரம் உத்தியோகம் ஆகிய ஆசை கொண்டவர்கள் ஒரே ஸ்தாபனத்தை நம்பிக் கொண்டிருக்க முடியாமல் தனித்தனியாகப் பிரிந்து போய் தனித்தனியாக ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியவர்களானார்கள்.

இப்படி பிரிந்து தனியாக ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியவர்கள் தங்கள் தங்கள் ஸ்தாபனங்களுக்கு ஏதாவது ஒரு கொள் கையையும் கண்டுபிடிக்க வேண்டியவர்கள் ஆனார்கள். இதனால் அவசிய மில்லாத கொள்கைகளை உண்டாக்கவும் அவசியமான கொள்கை களை மறுக்கவும், மறைக்கவும் வேண்டிய அவசியம் அரசியல்வாதிகளுக்கு ஏற் பட்டது. ஆகவே இந்த வேலைகள் சற்று படித்தவர்களுக்கே வேண்டியிருந் ததாலும் படித்தவர்கள் பெரும்பாலோர் பார்ப்பனர்களாகவே இருந்ததாலும் பார்ப்பனரல்லாத படித்தவர்கள் மிகச் சுருக்கமாயிருந்ததாலும் பார்ப்பனரல் லாத பொது மக்கள் பாமரர்களாயிருந்ததாலும் பார்ப்பன சூழ்ச்சியை ஜெயித்து அரசியல் ஸ்தானத்தின் உத்தியோகங்களிலும் பதவிகளிலும் பங்கு பெற முடியாத பார்ப்பனரல்லாதார்கள் அரசியல் துறையை விட்டு சமூகத் துறையின் பேரால் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலம் மக்களை தங்கள் வசப்படுத்தி அரசியலில் பங்கு பெற முயற்சிக்க வேண்டியவர்களானார்கள்.

இந்தக் காரணத்தால் ஏற்பட்டதுதான் பார்ப்பனரல்லாதார் ஸ்தாபனம் என்பதாகும். இந்த ஸ்தாபனக்காரர்கள் முன் கூறியதுபோல் தங்களுக்கும் ஏதாவது ஒரு கொள்கையை கண்டு பிடிக்க வேண்டியிருந்ததால் தங்க ளுக்கு கிடைக்கும் உத்தியோகத்தையும் பதவியையும் எல்லா வகுப்பு மக்களுக்கும் எண்ணிக்கைப்படி பங்கு போட்டுக் கொடுப்பதாகவும் தங்களு டன் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்வதில்லை என்றும், சொன்னதோடு புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனமானதால் அதற்கு சற்று பலம் வேண்டு மென்றுங் கருதி பிரிட்டிஷ் ஆக்ஷிக்கு உள்பட்ட சுயராஜ் ஜியம் அடைவது என்கின்ற பேரையும் வைத்துக் கொண்டு ஒவ்வொரு கூட்டத்திலும் ராஜவிசுவாச பல்லவியும் பாடிவர வேண்டியதாயிற்று. ராஜ விசுவாசம் என்பது காங்கிரஸ் ஆரம்பித்த காலம் முதல் கொண்டு எந்தக் கூட்டத்திலும் முதல் முதல் செய்யும் தீர்மானமும் கூட்டமுடிவில் பாடும் ராஜ வாழ்த்துப் பாட்டுமாகும். ஆகையால் பார்ப்பனரல்லாதார் கக்ஷியாரும் அதையே பின்பற்ற வேண்டியதாயிற்று.



எனவே இந்தப் புதிய கக்ஷி எல்லோருக்கும் பங்கு கொடுக்க சம்மதித்துப் பார்ப்பனர்களை விலக்கியதாக தெரிவித்தவுடன் பாமர மக்க ளும் படித்த பார்ப்பனரல்லாதார் எல்லோரும் இதில் சேர ஆரம்பித்தார்கள்.

இதைக் கண்ட பார்ப்பனர்கள் இக்கக்ஷியை ஒழிக்கக் கருதி இது வகுப்புத் துவேஷக் கக்ஷியென்றும், தேசத்துரோகக் கக்ஷியென்றும், உத்தி யோக வேட்டைக் கக்ஷியென்றும் தூற்ற ஆரம்பித்தார்கள். என்ன தூற்றியும் புதுக்கக்ஷிக்குக் கூட்டம் அதிகமாகி விட்டதால் அதை வேறு விதத்தில் ஒழிக்கக் கருதி பார்ப்பனரல்லாதாரிலே சிலர் அவர்களை அதாவது உத்தி யோகத்திற்குத் தகுதி இல்லாத ஆள்களையும் தனி சுயநல வாதிகளையும் போதுமான புத்தியில்லாத ஆள்களையும் பிடித்து மற்றொரு பார்ப்பன ரல்லாதார் கக்ஷி ஒன்றை ஸ்தாபித்து அதாவது அவர்கள் தென் இந்தியர் நல உரிமைச் சங்கம் என்று பேர் வைத்தால் இவர்கள் அதை வேறு வார்த்தை யில் சென்னை மாகாண மக்கள் சங்கமென்று வைத்து இதிலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுப்பதாயும் பார்ப்பனர்களை சேர்ப்பதில்லையென்றும், கொள்கைகள் வைத்து ராஜ விசுவாசத்தை மாத்திரம் மாற்றி சங்கத்தை நடத்தினார்கள். கடைசியாக அந்தப் புதிய அதாவது சென்னை மாகாணச் சங்கத்தில் உள்ள பார்ப்பனரல்லாதார்களில் சிலர் வகுப்புவாரி பிரதிநிதித்து வத்தைப் பலமாக வலியுருத்த ஆரம்பித்தவுடன் அச்சங்கத்தைப் பார்ப்பனர் கள் தாங்களாகவே அழித்து விட்டு அதிலிருந்த சில ஆள்களைக் கொண்டே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு விரோதமாய் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். இதிலிருந்துதான் காங்கிரசில் ஒத்துழையாமை யில் இருந்த பார்ப்பனரல்லாதாருக்குள்ளும் அபிப்பிராய பேதம் வளரத் துடங்கிற்று.

சுருக்கமாகச் சொல்லுமிடத்து வகுப்புவாரி பிரதிநிதித்துவக் காரணத் தாலேயே காஞ்சீபுரம் மாகாண காங்கிரஸ் கான்பரன்சில் இருந்து நாமும் திரு எஸ். ராமனாதன் முதலியவர்களும் சண்டை போட்டுக் கொண்டு வெளி யேறி வந்ததாகும்.

அது முதல் இன்று வரை அவ்வகுப்பு வாதத்தை வலியுறுத்தி வந்திருக்கின்றோம். இதற்கு ஏற்பட்ட இடையூறு எவ்வளவு என்பது பொது ஜனங்களுக்கு நாம் சொல்ல வேண்டியதில்லை என்றே சொல்லுவோம். திருவாளர்கள் திரு. வி. கல்யாணசுந்திர முதலியார், பி. வரதராஜுலு, ஆதி நாராயண செட்டியார் முதலியவர்கள் கிருஷ்ணசாமி பாவலர், குப்புசாமி, அண்ணாமலை கூட்டம் முதலாகியவர்கள் போன்றவர்களுமான பார்ப்பன ரல்லாதார்களும், "நவசக்தி" "தமிழ்நாடு" "ஊழியன்" "லோகோபகாரி" முதலிய பார்ப்பனரல்லாத பத்திரிகைகளும், "சுதேசமித்திரன்" "இந்து" "சுய ராஜ்யா" முதலாகிய எல்லா பார்ப்பன பத்திரிகைகளும் சேர்ந்து செய்து வந்த எதிர்ப்பிரசாரமும் பழி சுமத்தியதும் இவ்வளவு அவ்வளவல்லவென்றே சொல்லி ஆக வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தேச முன்னேற்றத்திற்கும் மக்கள் ஒற்றுமைக்கும் சமத்துவத்திற்கும் மிக்க அவசியமென்று நாம் கருதியதாலேயே அதை முக்கியமாய்க் கொண்டு காங்கிரசை விட்டுப் பிரிந்து அதற்காக இந்த பத்திரிகையும் ஏற்படுத்தி, விடாமல் நாம் உழைத்து வந்ததாகும். இதற்காக வேண்டியே ஜஸ்டிஸ் கட்சியையும் ஆதரித்தோம். சைமன் கமிஷனையும் ஆதரித்தோம். அரசியல் கொள்கைகள் என்பது எதுவானாலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லையானால் வேண்டியதில்லை என்று எதையும் கண்டித்தோம்.

கடசியாக ஒரு வழியில் அதை அடைந்தோம். அதாவது தேர்தல்களில் மகமதியர், கிருஸ்தவர், மகமதியரல்லாதவர்களில் ("இந்து"க்களில்) ஜாதி இந்துக்கள் தீண்டப்படாத இந்துக்கள் என்கின்ற பிரிவுகளுக்கும் நாம் கேட்டதற்கு மேலாகவே பெண்கள் என்கின்ற பிரிவுக்கும் சேர்த்துக் கிடைக்கப்பட்டிருப்பதோடு சர்க்கார் உத்தியோகங்களிலும் மேல் கண்ட வீதம் கிடைத்தும் வருகின்றது. இந்த பிரிவுகளில் விகிதம் சற்று கூடுதல் குறைச்சல் இருந்தாலும் கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டாய் விட்டன.

ஆனால் எதிரிகளிடமிருந்து ஒரு வழியில் வெற்றி பெற்று விட்ட சந்தோஷம் அடைவதற்குள் இப்போது இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவமானது பார்ப்பனரல்லாதார் என்கின்ற கட்சியாராலேயே எங்கு அழிக்கப்பட்டு விடுமோ என்கின்ற பயம் நமக்கு பலமாய்த் தோன்றி கவலைப்பட வேண்டியதாய் இருக்கின்றது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கண்டு பார்ப்பனரல்லாதாரின் கட்சி முன்னணியில் இருப்பவர்களும் செல்வாக்குள்ளவர்களிலும் கல்வியுள்ளவர்கள் நடுங்க ஆரம்பித்து விட்டார்கள்.

உதாரணமாக ஒரு கிருஸ்தவர் தங்களுக்கு உள்ள வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப் பற்றிக் கண்டித்துப் பேசி எம்மையும் வைதார். ஏனையா? என்றோம். அதற்கு அவர் "கிருஸ்தவர்களில் அநேகர் படித்து இருக்கின்றோம், எங்களின் மொத்த ஜனத்தொகை மிகக் குறைவு. ஆகவே எங்கள் பங்குக்கு மிகக் குறைவான ஸ்தானங்கள் தான் கிடைக்கும். ஆதலால் உத்தியோகங்களில் இந்த முறையானது எங்களைக் கெடுத்துவிடும். வகுப்புவாரி கணக்கு பிரதிநிதித்துவம் இல்லாமல் இருந்திருந்தால் கிருஸ்தவர் என்கின்ற சலுகையில் அதிகப் பலன் அடையலாம் என்றார். பார்ப்பனர்களுக்கு அவர்கள் மதம் படிக்க சௌகரியம் செய்து கொடுத்திருப்பது போல், கிருஸ்தவர்களுக்கும் அவர்கள் மதம் படிக்கச் சௌகரியம் செய்திருப்பதால் மத மாற்ற பலனாகவும் பாதிரிகள் பள்ளிக்கூட பலனாகவும் தாராளமாய் படித்து விடுகின்றார்கள். ஆதலால் அவர்களுக்கும் இது விரோதமாய் காணப்படுகின்றது.

அது போலவே ஒரு பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவரைக் கண்டு ஏனையா வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தின் தலையில் கையை வைக்கப் பார்க்கின்றீர்? என்றதற்கு அவரும் மிக்க வருத்தத்துடன் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தால் தங்களுக்கு மிக்க கெடுதி ஏற்பட்டதாகச் சொன்னார். என்ன வென்றதில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வந்து எங்கெங்கோ சந்து பொந்தில் இருக்கின்ற வகுப்பாருக்கெல்லாம் பங்குபோய் விட்டது என்றும் "உதாரணமாக மந்திரி கனம் முத்தயா முதலியார் உத்திரவுப்படி 12 ஸ்தானத்தில் 2 பார்ப்பாருக்கு, 2 மகம்மதியருக்கு, 1 தீண்டதாருக்கு, 1 கிருஸ்தவர் முதலியவருக்கு, பார்ப்பனரல்லாதாருக்கு என்று ஏற்பட்டிருப்பதில் 6. பார்ப்பனரல்லாதார் பங்குக்கு பல வகுப்புக்காரர்கள் பங்குக்கு வந்து விடுகின்றார்கள், வன்னியர், வேளாளர், நாடார், நாயக்கர், பிள்ளை, செங்குந்தர், செட்டியார், வண்ணான், நாவிதன், குயவர் என்று அநேகர் கிளம்பி ஜாதி மகாநாடு கூட்டி ஒவ்வொருவரும் பங்குக்கு வரும் போது நமக்கு எங்கே இடமிருக்கின்றது? எங்கள் வகுப்பில் படித்த பிள்ளைகள் எவ் வளவோ இருக்கின்றனர். ஆதலால் இது நமக்கு பெரிய ஆபத்தாய் இருக்கின்றது. இதை எப்படியாவது ஒழிக்க வேண்டும்" என்றார். ஆகவே வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டாம் என்கின்றவர்கள் எவ்வளவு யோக்கியர்களாக இருக்க முடியும்? என்பதை யோசித்தால் இதிலிருந்து விளங்காமல் போகாது. இந்தக் கருத்தைக் கொண்டு தான் ஜஸ்டிஸ் கக்ஷி யில் செல்வாக்கிலுள்ள ஜாதித் தலைவர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித் துவத்தை ஒழிக்கக் கருதி "தகுதியானபடியும் பலன் தரத் தக்கபடியும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும்" என்று மாற்றி விட்டார்கள். இதன்படி தகுதியும் பலனும் தரத்தக்க ஒரே ஜாதியார் பிரதிநிதிகளாக இருக்கலாம்.

மற்ற ஜாதியாரை தகுதியும் பலனும் உடையவர்களாகக் கூட ஆக்க வேண்டியது அனாவசியமாகும் என்றே ஏற்படும். இந்த சூக்ஷி வார்த்தை உண்டாக்கப்பட்ட கதையைப் பற்றி இங்கு ஒரு சிறு விபரம் சொல்லி இதை முடிக்கின்றோம். 1920ம் வருஷம் திருநெல்வேலியில் திரு. எஸ். சீனிவாசய்யங்கார் தலைமையில் கூடிய மாகாண காங்கிரஸ் கான்பரஸ்சின் போது நாமும் திரு. V.O. சிதம்பரம் பிள்ளையும் திரு. தண்டபாணிபிள்ளையும் கலந்து தயாரித்து விஷயாலோசனை சபையில் வகுப்புவாரி தீர்மான மொன்று கொண்டுவந்து பிரேரேபித்தோம். அதை திரு. V.O. சிதம்பரம் பிள்ளை ஆமோதித்துவிட்டார். அப்போது அவருக்கிருந்த செல்வாக் கினால் அதை சுலபத்தில் தள்ளி விட முடியாமல் அவருக்கு லோக மான்ய திலகர் பேரால் திரு. கஸ்தூரி ரங்கய்யங்கார் எவ்வளவோ சமாதானம் சொல்லியும் நாங்கள் ஒப்புக்கொள்ளாததால் அது நிறைவேறி விடும் போல் தோன்றிற்று. உடனே திவான் மாதவறாவ் என்கின்ற ஒரு பார்ப்பனரை விட்டு அப்பொழுது தான் இந்த சங்கதி தெரிந்ததாக பாசாங்கு செய்யச் செய்து இது நிறைவேறினால் சில பார்ப்பனர்கள் காங்கிரசில் ராஜீனாமா செய்து விடுவார் கள் என மிறட்டச் செய்தார்கள். என்ன செய்தும் நாங்கள் சம்மதிக்காததால் பார்ப்பனர்கள் எல்லோரும் கூடி யோசித்து வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் அதாவது Communal representation என்பதற்கு பதிலாக தகுதியுள்ள பிரதிநிதித்துவம் adequate



RangaRakes
tamilnavarasam.com

representation என்று திரு. ராஜ கோபாலாச்சாரியார் திருத்தம் கொண்டு வந்து திரு.சத்தியமூர்த்தி ஆமோதித்தார். நாங்கள் எவ்வளவு பேசியும் எல்லா மகமதிய கனவான்களும் கைதூக்கி விட்டதால் திருத்தம் நிறைவேறிவிட்டது.

பிறகு தலைவர் திரு. சீனிவாசய்யங்கார் காஞ்சிபுரத்தில் கல்யாண சுந்தர முதலியார் செய்தது போலவே நாங்கள் மறுபடியும் பொது மகாநாட்டில் ஆக்ஷேபிப்போம் என்று கருதி மற்ற தீர்மானங்கள் எல்லாம் முடிந்ததும் "இது பொதுநலத்திற்கு விரோதமான தீர்மானமானதால் அதை நான் தள்ளி விட்டேன்" என்று சொல்லி முடிவுரை ஆரம்பித்து விட்டார். நாங்கள் வைதுகொண்டே வெளியேறிவிட்டோம். இப்போது பார்ப்பனரல்லாத தலைவர்களும் அதையே பின்பற்றி வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தில் சூக்ஷி செய்து அதை ஒழிக்க முன் வந்து வெற்றி பெற்று விட்டார்கள்.

அரசியல் கொள்கைகள் எது கேடுகெட்டாலும் வகுப்புவாரி பிரதி நிதித்துவ உரிமையைக் காக்கவாவது பார்ப்பனர்களை சேர்க்க மறுப்பதுடன் இத்தலைவர்களையும் கக்ஷியிலிருந்து நீக்க வேண்டியது பார்ப்பனரல்லாத பாமர மக்கள் நன்மையைக் கோரி மிக்க அவசியமென்று வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

தஞ்சையில் 2 தீர்மானம் முக்கியமானதாக இருக்க வேண்டும். ஒன்று முன் உள்ளபடியே எல்லா வகுப்புக்கும் எண்ணிக்கையின் பேரில் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்பது.

மற்றொன்று சுயநலத் தலைவர்கள், சூழ்ச்சித் தலைவர்கள் ஆகியவர் களின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அவர்களை கட்சி யில் இருந்து விலக்குவது என்பது. பிறகு தான் பார்ப்பனர்களைச் சேர்க்கக் கூடாது என்கின்ற தீர்மானத்தைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்பது நமது அபிப்பிராயமாகும். இது சமயம் ஏமாந்தால் பிறகு பார்ப்பன ரல்லாத சாது மக்கள் சுலபத்தில் தலையெடுக்க முடியாது என்பதை பொது ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்கின்றோம்.

எச்சரிக்கை! எச்சரிக்கை!!

**குடி அரசு - தலையங்கம் - 13.07.1930**



# சட்டசபை தேர்தல்

சட்டசபை தேர்தல்கள் வேலைகள் துவக்கமாகிவிட்டது. அபேக்ஷ கர்கள் ஆகஸ்ட் முதல் தேதியில் நியமனச் சீட்டுகள் தாக்கல் செய்தாக வேண்டும். செப்டம்பர் 9 தேதியில் தேர்தல் (எலக்ஷன்) ஆனதால் நியமனச் சீட்டு தாக்கல் செய்தவுடன் பிரசாரம் துவக்க வேண்டும். ஆதலால் அபேக்ஷ கர்களாய் நிற்பவர்களுக்கு இன்னம் சுமார் ஒன்னரை மாதங்களுக்கு ஓய்வு உரக்கம் இருக்காது. அது மாத்திரமல்லாமல் அவர்களிடம் நாணயமும் இருக்க முடியாது. அதோடு அவர்களுக்கு தங்கள் மனதிற்கும் வாக்குக்கும் செய்கைக்கும் சிறிதும் சம்மந்தமும் இருக்க முடியாது. யார் யாரிடம் எப்படி எப்படி நடந்து எந்த எந்த சமயத்திற்கு எதை எதைச் செய்தால் - சொன்னால் ஓட்டுக் கிடைக்குமோ அந்தபடியெல்லாம் நடந்தும் பேசியும் ஓட்டுச் சம்பாதிக்க வேண்டியதே அவர்களது எலக்ஷன் தர்மமாகும். ஏனென்றால் ஓட்டர்கள் பெரிதும் 100-க்கு 90 பேர்கள் மூடர்கள் ஆன தாலும், எஞ்சியுள்ள 100-க்கு 10ல் 7 பேர்கள் சுயநலக்காரர்கள் ஆனதாலும் மீதி 3 பேர்கள் தங்க ளால் ஒன்றும் செய்ய முடியாத நிலையிலிருப்பவர்களானதாலும் பணக் கொழுப்பு சமயோசித தந்திரம் ஆகிய இரண்டும் உடையவர்களுக்கு முதல் வெற்றியும், மேற்படி இரண்டு குணங்களை தனித்தனியே உடையவர் களுக்கு இரண்டாவது வெற்றியுமே கிடைத்து விடும். அதில் சிறிதும் சம் சயமே இருக்க முடியாது. ஏனெனில் அப்படிப்பட்ட வர்கள் மாத்திரமேதான் எலக்ஷனில் அபேக்ஷகர்களாய் நிற்க முடியும் படியாக தேர்தல் நிலைமை அமைந்திருக்கின்றது. 1920வது வருஷத்திய சீர்திருத்தம் வருவதற்குமுன் ஒருவாறு பெருமை வேண்டியவர்களும் படித்து உத்தியோகம் வேண்டிய வர்களும் மாத்திரமே அபேக்ஷகர்களாய் நிற்க தேர்தலில் இடமிருந்தது. ஆனால் 1920 வருஷத்திய சீர்திருத்தமோ பெருமையும் உத்தியோகமும் மாத்திரம் அல்லாமல் அதிகாரமும் லட்சக் கணக்கான பணம் வருவாயும் கிடைக்கக் கூடியதாக அமைக்கப்பட்டு விட்டதால் அதிகார ஆசையும் பணத்தாசையும் உள்ளவர்களும் சேர்ந்து அபேட்சகர்களாய் நிற்க வேண்டிய தாய் விட்டது.

இந்த ஆசைகளை அஸ்திவாரமாகவே வைத்தே தேர்தலுக்காக பல கட்சிகளை ஏற்படுத்திக் கொண்டு அதின்பேரால் மக்களுக்கு கூட்டு



RangaRakes tamilnavarasam.com

ஆசைக்காட்டி ஆள்களை சேர்த்துக் கொண்டு வேலை செய்ய வேண்டிய அவசியம் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்டு காங்கிரஸ் முதலிய ஸ்தாபனங் களின் மூலம் அப்பார்ப்பனர்கள் தேர்தலை உத்தேசித்தே தேசாபிமானம் காட்டி மக்களை வெகு காலமாய் ஏமாற்றி வந்தது யாவரும் அறிந்த விஷயமே யாகும்.

ஆனால் சமீபகாலமாய் தேசியத்தினுடையவும் தேசாபிமானத் தினுடையவும் யோக்கியதை வெளியாகிவிட்டதால் பார்ப்பனர்கள் தேர்தல் களில் தோல்வியையே அடைய நேரிட்டு விட்டதால் தேர்தலுக்கு நிற்க தைரியமற்று வரவர அவர்கள் தேர்தலை "சீ, அந்த பழம் புளிக்கும்" என்கின்ற முறையில் பகிஷ்காரம் செய்ய வேண்டியதாகி விட்டது. தமிழ் நாட்டைப் பொருத்த வரை காங்கிரசிற்கும் பார்ப்பனர்களுக்கும் அடியோடு செல்வாக்குக் குன்றி வேறு விதத்தில் ஏமாற்றமடைந்தவர்களும் மற்ற கட்சிகளில் வெறுப்புங் கொண்டவர்களும் மாத்திரமே போய்ச் சேரும்படி யான ஸ்தாபனமாகி விட்டது.

இந்தக் காரணத்தால் தமிழ் நாட்டில் காங்கிரசுக்கும் தேசீயத்திற்கும் பார்ப்பனர்களுக்கும் செல்வாக்கில்லாமல் போய் தேர்தல்களில் வெறும் சீர்திருத்தக் கொள்கையின் மீது மாத்திரம் பார்ப்பனரல்லாதார்களேபோட்டிப் போட வேண்டியதாகிவிட்டதால் அவர்களுக்குள்ளாகவே சுயநலத்தின் மீது அர்த்தமற்ற இரண்டு மூன்று கக்ஷிகளை ஏற்படுத்திக் கொண்டு இந்தத் தேர்தலிலும் போட்டிப்போட போகின்றார்கள். இப்போட்டியில் மேல்படி கக்ஷிகளுக்கு பெயர்கள் சொல்ல வேண்டுமானால் ஒன்று உத்தியோகத்திலி ருக்கும் மந்திரி கக்ஷியார் என்றும் மற்றொன்று அம்மந்திரி உத்தியோகத் திற்கு வர ஆசைப்படும் கக்ஷியார் என்றும் மற்றொன்று எந்த கக்ஷி ஜெயிக் குமோ அதில் சேரும் கக்ஷியார் என்றும் தான் பிரிக்க முடியுமே அன்றி மற்றபடி வேறு ஏதாவது சரியான கொள்கையை உத்தேசித்துப் பிரித்துச் சொல்ல இடமில்லை. ஒரு சமயம் ஒரு கக்ஷியை ஜஸ்டிஸ் கக்ஷியார் என்று ஏன் சொல்லக் கூடாது என்று கேட்கப்படுமானால் இப்போது மந்திரிகளாய் இருக்கும் இரு பார்ப்பனரல்லாதாரும் ஆளுக்கு 100, 100 ரூபாய் கொடுத்து ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்து அக்கக்ஷிக் கொள்கைகளை ஒப்புக் கொண்ட வர்களேயாவார்கள். ஆதலால் மந்திரிகளும் ஜஸ்டிஸ் கட்சி கொள்கையை உடையவர்களே தவிர அக்கட்சியின் எந்த கொள்கைக்கும் எதிரிகளல்ல.

மற்றும் மந்திரியாக வர ஆசைப்படும் கக்ஷி என்பதற்குப் பதிலாக பார்ப்பனரல்லாதார் கக்ஷி என்று சொல்லக்கூடாதோ என்று கேள்க்கப்படு மாயின் அதற்கும் இடமில்லை என்றே சொல்ல வேண்டி இருக்கிறது. ஏனெனில் அவர்களும் (மந்திரிக்கு ஆசைப்படும் கக்ஷியார்களும்) பார்ப்ப னர்களை சேர்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானம் செய்து கொண்டார்கள். அன்றியும் அத்தீர்மானத்தை ஒரு பொது மகாநாட்டில் ஊர்ஜிதம் செய்து



கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த எண்ணமும் போய் இப்போது தாங்கள் (நிர்வாக சபையில்) தீர்மானித்துக் கொண்டதே போதும் என்று தீர்மானித்துக் கொண்டதாலும் அதை பார்ப்பனரல்லாதார் கக்ஷி என்று சொல்லுவதற்கும் இடமில்லாமல் போய்விட்டது. ஆகவே இந்த கக்ஷி களுக்கு மேல் கண்டபடி மந்திரியாய் இருக்கும் கக்ஷி மந்திரியாய் வர ஆசைப்படும் கக்ஷி, எது எது ஜெயிக்குமோ அதில் சேரும் கக்ஷி என்று தான் பெயர்கள் சொல்ல வேண்டி இருக்கிறது. இந்த கக்ஷிகளில் இரு கக்ஷியார் மாத்திரம் தங்கள் தங்கள் வேலைத் திட்டங்களை ஒருவாறு வெளிப்படுத்தி இருக்கிறார்கள். அவ்விரண்டையும் அடுத்த வாரம் வெளி யாக்கி அதை பற்றிய நமது அபிப்பிராயத்தை பிறகு வெளியிடுவோம்.

பொதுவாகச் சொல்லுமிடத்து பார்ப்பனரல்லாதாரிலேயே இப்படியாக இரண்டு கக்ஷி பிரிந்திருக்க வேண்டியதில்லை என்பதே நமது அபிப்பி ராயம். பொதுநலப்பொறுப்பற்ற ஆள்களின் சூக்ஷிகளே பார்ப்பனரல்லாதார் களுக்கு இம்மாதிரி பிளவை உண்டாக்கிவிட்டது என்று சொல்வது மிகை யாகாது.

சென்ற தேர்தலில் ஜஸ்டிஸ் கக்ஷி தோல்வி அடைந்ததின் பயனாய் அது வெளிப்பட்டு பிரசாரங்கள் செய்து காங்கிரஸ் சார்பாய் இருந்த மந்திரி கக்ஷியை ஒழித்து ஜஸ்டிஸ் கக்ஷி சார்பான மந்திரி கக்ஷியை அமைத்து அதனிடம் பார்ப்பனரல்லாதார் கக்ஷிக் கொள்கைப் பிரகாரமே சரியானபடி வேலை வாங்கி வந்ததுடன் அம்மந்திரி கக்ஷி ஜஸ்டிஸ் கக்ஷிக்குள் அய்க்கி யமாகி விட்ட சமயத்தில் அதை அப்படியே ஜஸ்டிஸ் கக்ஷியாக ஆக்கி விடாமல் சிலரின் சுயநல சூக்ஷியானது மறுபடியும் மந்திரி கக்ஷியை தனிக் கச் செய்து அதற்குத் தனி பலமும் ஏற்படுத்திக் கொள்ள இடங்கொடுத்து இப்போது அதை ஒரு சரியான எதிரியாக ஆக்கிக் கொண்டது. இது மாத்திரமல்லாமல் ஜஸ்டிஸ் கட்சியானது (பார்ப்பனரல்லாதார் கட்சியானது) மந்திரி கட்சியை ஒழிப்பதற்கென்று செய்த முயற்சியில் மந்திரி கட்சிக்கு வெட்டின குழியில் தானே போய்விழுந்து விட்டது. அதாவது அவர்கள் மந்திரிகள் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்கின்றார்கள் என்று அதன் மீது பழி கிளப்பி விட்டு கடைசியாக அப்பழிக்குத் தாங்களே ஆளாகிப் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி பார்ப்பனரல்லாதார் கட்சி என்கிற பெயரையே கொன்று விட்டார்கள். இதிலி ருந்து ஜஸ்டிஸ் கட்சிக்குப் பெயரும் கெட்டு பலமும் குறைந்ததோடு நாணய மும் போய் மக்களிடம் மதிப்புமில்லாமல் போக வேண்டியதாகி விட்டது.

ஆகவே மந்திரிக் கட்சியும் மந்திரிக்கு ஆசைக் கட்சியுமாய் தேர்த லுக்கு போட்டி போடவேண்டியதாகி காங்கிரஸ் செய்தது போலவே தங்கள் தங்கள் கட்சியின் பேரால் நிற்கும்படி அபேட்சகர்களைக் கெஞ்ச வேண்டிய தாகிவிட்டது. அபேட்சகர்களும் "நீங்கள் ஜெயித்தால் எனக்கு என்ன உத்தி யோகம் கொடுக்கின்றீர்கள்?" "நீங்கள் ஜெயித்தால் எனக்கு என்ன உத்தி



RangaRakes tamilnavarasam.com

யோகம் கொடுக்கின்றீர்கள்?" என்று வியாபாரம் பேசி ஒப்பந்தம் செய்யப் பார்க்கின்றார்கள். ஒவ்வொரு கட்சியாரும் தங்கள் கட்சிக்கு ஆள்களை சேர்ப்பதற்காக கண்ணை மூடிக் கொண்டு கேட்டதெல்லாம் கொடுப்பதாய் வாக்களித்து ஏமாற்றி வருவதன்மூலம் தங்கள் தங்கள் கட்சிக்கு 40, 50 பேர்களுக்கு குறையாமல் வருவார்கள் என்று இருவரும் எதிர்பார்க்கின் றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் தந்திரக்காரர்கள் எல்லாம் தாங்கள் ஒரு கட்சிப் பேரும் சொல்லாமல் தனிக் கட்சியின் பேரால் பலர் நிற்கின்றார்கள். எது எப்படி இருந்தாலும் நமது ஆசையெல்லாம் பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவர்கள் நெல்லூரில் நாணயத் தவருதலாய் நடந்து கொண்ட போதி லுங்கூட அதனால் ஏற்பட்ட கெடுதியையும் சமாளித்து அக்கட்சியே வெற்றி பெற வேண்டும் என்றே ஆசைப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆனால் அது பார்ப்பனர்களையும் தங்கள் ஸ்தாபனத்தில் அங்கத்தினர்களாய் சேர்த்துக் கொள்வது என்ற தீர்மானத்தோடு தேர்தலுக்கு நிற்குமானால் அது சரியான தோல்வி அடையவேண்டும் என்பதே நமது மனப்பூர்வமான விருப்பமாகும். ஏனெனில் அந்தத் தோல்வியானது பார்ப்பனரல்லாத இயக்கத் தலைவர்கள் என்பவர்களுக்கு விரோதமாக முடிந்தாலும் பார்ப்பன ரல்லாத சமூகத்திற்கு இரட்டிப்பு பலனை தருவதோடு இனியாவது கண்டிப் பான கொள்கையோடு கட்சி பரிசுத்தமடையக் கூடும் என்றும் நினைக்கின் றோம்.

நிற்க, சுயமரியாதை இயக்கத்தைப் பொருத்தவரை வரப்போகும் தேர்தல்களில் சுயமரியாதைக் கொள்கைகளை ஆதரிப்பவர்களை ஆதரிப் பதைத் தவிர அதற்கு வேறு வழியில்லை. அவ்வியக்கத் தலைவர்களுக்கும் நிர்வாகஸ்தர்களுக்கும் தொண்டர்களுக்கும் யார் எக்கட்சியில் இருந்தாலும் இயக்கக் கொள்கைகள்தான் பிரதானமாக இருக்குமே ஒழிய கட்சி என்பது இரண்டாவதேயாகும் என்பதையும் வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்ளு கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 20.07.1930**



RangaRakes

# ஏன் பார்ப்பனர் கூடாது?

பார்ப்பனரல்லாதார் ஸ்தாபனத்தில் பார்ப்பனர்களை ஏன் சேர்க்கக் கூடாது என்னும் விஷயம் தஞ்சாவூர் ஜில்லா பாபநாசம் தாலூகா போர்டு தேர்தலைப் பற்றிய இரகசியத்தை தெரிந்தால் அதன் உண்மை ஒருவாறு விளங்கும். பாபநாசம் தாலூகா போர்டுக்கு சுமார் 15 அங்கத்தினர்கள் உண்டு. இதில் பார்ப்பனர்கள் 3 பேர் பார்ப்பனரல்லாதார் 12 பேர்கள். இந்தப் பன்னி ரண்டு பேர்களில் 6 பேர் திரு. பன்னீர்செல்வம் கட்சியைச் சேர்ந்தவர்கள். மற்ற ஆறு பேர் திரு. வீரய்யா வாண்டையாரைச் சேர்ந்தவர்கள். இதில் எந்தக் கட்சி ஜெயிக்க வேண்டுமானாலும் பார்ப்பனர் தயவில்லாமல் முடியாத நிலைமையாகிவிட்டது. ஆக திரு. பன்னீர் செல்வம் கட்சியார் எப்படியாவது திரு. வீரய்ய வாண்டையார் ஜில்லா போர்டுக்குள் நுழை யாமல் இருந்தால் போதும் என்று கருதி பார்ப்பனர் இடம் ராஜி பேசப் புறப் பட்டு மூன்று பார்ப்பனரில் ஒருவருக்கு தாலூகா போர்டு தலைமை ஸ்தானம் கொடுப்பதாகவும் அதற்கு பதிலாக தங்கள் கட்சியாருக்கே இரண்டு ஜில்லா போர்டு மெம்பர் பதவியையும் கொடுக்க வேண்டுமென்றும் பேசி முடிவு செய்து விட்டார்கள். இந்த சங்கதி திரு. வாண்டையார் கட்சியார் அறிந்து எப்படியாவது திரு. பன்னீர் செல்வத்தை ஜில்லா போர்டில் தோற்கடிக்க வேண்டுமென்று கருதி அதே பார்ப்பனர்களிடம் போய் தாங்கள் அந்தப் பார்ப்பனரில் ஒருவருக்கு தா. போ. தலைவர் பதவியும் மற்றொரு பார்ப்ப னருக்கு ஒரு ஜில்லா போர்டு பதவியும் கொடுப்பதாகவும் தங்களுக்கு ஒரு ஜில்லா போர்டு மாத்திரம் கொடுத்தால் போதுமென்றும் ஒப்பந்தம் பேசி பழைய ஒப்பந்தத்தை அதாவது பன்னீர் செல்வம் கட்சியாரிடம் செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தை இரகசியமாய் முரித்துவிட்டார்கள். இந்த சங்கதி திரு. பன்னீர்செல்வம் கட்சியாருக்கு தெரியாது. இந்த நிலையில் தாலூகா போர்டு முதல் மீட்டிங்கி கூடினதும் ஒரு பார்ப்பனனை தலைவராக பிரேரே பிக்க இரு கட்சியிலிருந்தும் பார்ப்பனரல்லாத இரு கனவான் எழுந்து பிரேரேபித்தார்கள்.

இதிலிருந்தே முதல் ஒப்பந்தக்காரரருக்கு சந்தேகம் ஏற்பட்டது. ஆனாலும் சற்று இருந்து பார்த்ததில் விஷயம் விளங்கிவிட்டது.



tamilnavarasam.com

பிறகு அந்தப் பார்ப்பனரே தலைவராய் தெரிந்தெடுக்கப்பட்டு விட்டார். இதோடு மறுபடியும் ஒரு பார்ப்பனரும் ஜில்லா போர்டு மெம்பராய் தெரிந்தெடுத்து விட்டார். பிறகு திரு. வாண்டையார் ஒரு ஜில்லா போர்டு மெம்பர் பதவியை பெற்றார்.

அன்றி இனியும் அந்த போர்டுக்கு இந்தக் காலாவதி வரையில் அந்த மூன்று பார்ப்பனர்களுக்கு இந்த 12 மெம்பர்களும் சதாகாலம் சலாம் போட்டுக் கொண்டு இருந்தால்தான் இவர்களது காரியம் பலிக்கும். இல்லா விட்டால் கஷ்டமான நிலையாகத்தான் போய் விடக்கூடும்.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்பதாக ஒன்று தோன்றி இருக்காமல் இருந்தால் இன்றையத் தினம் தஞ்சை ஜில்லாவில் திரு. பன்னீர்செல்வம் தலைவராயிருக்கவும் முடியாது, திரு. வாண்டையார் போட்டி போட்டி ருக்கவும் முடியாது. இந்த நிலை அடைந்ததை அடியோடு மறந்து விட்டு தங்களுக்குள் போட்டி போட்டு பார்ப்பனர் அடியில் விழுந்து இருவரும் தவிக்கும் படியான காலம் இப்பொழுதே வந்துவிட்டது. இனி பார்ப்பனர் களை உள்ளே சேர்ப்பதென்றாகிவிட்டால் என்ன கதியாகும் என்பதை திரு வாளர்கள் பன்னீர்செல்வமும் வாண்டையாரும் கவனிக்க முடியாமல் போனாலும், தஞ்சாவூர் வாசிகளான மற்ற பார்ப்பனரல்லாதார்களாவது கவனிக்க வேண்டுமாய் விரும்புகின்றோம்.

12 பார்ப்பனரல்லாதார்கள் போர்டில் இருந்தும் 3 பார்ப்பனர்கள் மாத்திரம் இருந்து கொண்டு ஒருவர் தலைவராகவும் ஒருவர் ஜில்லா போர்டு மெம்பராகவும் வந்து விட்டார்கள் என்றால் நம்மவர்களின் சுயமரியா தைக்கு நாம் வெட்கப்பட வேண்டாமா? என்று கேள்க்கின்றோம். நிற்க, மேல் படி மூன்று பார்ப்பனரில் மீதி உள்ள ஒரு பார்ப்பனரும் வைஸ்பிரசிடெண்ட் வேலையை இது வரை வாங்கி இருப்பார் என்றோ அல்லது வாங்கிவிடக் கூடுமென்றோ நினைக்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 20.07.1930**



# சாரதா சட்டம்

சாரதா சட்டம் பிறந்து அமுலுக்கு வந்து 3*மீ* ஆகி 4வது *மீ* முடிவதற்குள்ளாகவே அதற்குப் பாலாரிஷ்டம் வந்து விட்டது.

என்னவெனில் ராஜாங்க சபையில் அச்சட்டத்தின் ஜீவ நாடியை அருத்தெரியும் மாதிரியில் அதாவது பெண்களுக்கு 14 வயதுக்குள்ளும், ஆண்களுக்கு 18 வயதிற்குள்ளும் விவாகம் செய்ய மனச்சாக்ஷியோ குடும்பநிலையோ அவசியப்பட்டால் அந்தபடி செய்ய சட்டத்தில் இடம் கொடுக்க வேண்டும் என்று ஒரு திருத்த மசோதா கொண்டுவரப்பட்டு அதற்கு சர்க்கார் சலுகை காட்டி அம்மசோதாவை மாகாண கவர்மெண்டுக ளுடையவும் பொதுஜனங்களுடையவும் அபிப்பிராயம் தெரிவதற்காக வெளியில் விநியோகிக்க வேண்டும் என்று சர்க்காராரே ஒரு திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றி வைத்திருக்கின்றார்கள்.

இந்த பிரேரேபனை சர்க்காரார் கொண்டுவந்ததால் அவர்கள் அதற்கு அனுகூலமாய் ஓட்டுக் கொடுத்து நிறைவேற்றிக் கொண்டதில் அதிசய மொன்றுமில்லை.

ஆனால் இப்படிப்பட்ட திருத்தம் கொண்டுவர வேண்டிய அவசியம் சர்க்காருக்கு என்ன ஏற்பட்டது என்பதுதான் நாம் இப்போது யோசிக்க வேண்டியதாகும். ஏதோ ஒரு சாக்கைச் சொல்லி இந்த சந்தர்ப்பத்திலிருந்து தப்புவித்துக் கொள்ளலாம் என்பதே அவர்களது எண்ணமாய் இருந்திருக்க வேண்டும்.

சட்டத்திற்கு அனுகூலமாய் இருந்து திருத்த மசோதாவை தோற் கடிக்கச் செய்து விட்டால் இந்த ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் வைதீகர் கள் (பார்ப்பனர்கள்) சட்ட மறுப்புக்காரர்களுடன் சேர்ந்து விடுவார்கள் என்றும், அப்படிக்கில்லாமல் ஒரு சமயம் திருத்த மசோதாவை நிறைவேற் றும்படி செய்துவிட்டால் சீர்திருத்தக்காரர்கள் சட்டமறுப்பு இயக்கத்தில் சேர்ந்து விடுவார்கள் என்றும் கருதியே தந்திரமாக நெருக்கடியை சமாளித் துக் கொள்ளவே இந்த தந்திரம் செய்திருக்க வேண்டும் என்று நினைக்கின் றோம். நிற்க. மனச்சாக்ஷியை உத்தேசித்து நடக்க ஒவ்வொருவருக்கும் இடம்



RangaRakes tamilnavarasam.com

கொடுக்கும் படி சட்டத்தை திருத்துவதானால் இந்தியன் பினல்கோடும் சிறைச்சாலைகளும் அழித்து பொசுக்கவேண்டும் என்றுதான் சொல்லுவோம். திருடனுடைய மனச்சாக்ஷி திருடத்தான் சொல்லும். அயோக்கியனுடைய மனச்சாக்ஷி அயோக்கியத்தனம் செய்யத்தான் சொல்லும். மூடனுடைய மனச் சாக்ஷி முட்டாள்தனமான காரியத்தைத் தான்செய்யச் சொல்லும். ஆகவே இவர்களுடைய இஷ்டப்படி எல்லாம் நடக்க இடம் கொடுப்பதனால் சட்ட மும் தண்டனையும் எதற்காக வேண்டும்? என்று கேள்க்கின்றோம். ஆகவே சர்க்கார் சாரதா சட்ட விஷயத்தில் ஏதாவது தளர்ச்சியைக் காட்டுவார்களா னால் அது அவர்களது கேட்டிற்கே அறிகுறியாகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 20.07.1930**



# சட்ட மறுப்பு இயக்கம்

தலைவர்களுக்குள் எங்கும் ராஜிப் பேச்சும் ராஜிக் கோரிக்கையுமே முழங்குகின்றது.

ஆனால் சர்க்கார் ராஜிக்கு இடம் இல்லை என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார்கள்

குறைந்த அளவு ராஜி நிபந்தனையாக, சிறையிலிருப்பவர்களை விடுதலை செய்தால் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்துவதாக திரு. மாள வியா சொல்ல ஆரம்பித்துவிட்டார்.

தேசீயப் பத்திரிக்கைகளும் அதை வலியுறுத்தி ராஜி! ராஜி!! என்று கதர ஆரம்பித்து விட்டன. எனவே தோல்வி கண்ணுக்குத் தெரிய ஆரம் பித்து விட்டது.

ஜோசியப் புரட்டினாலாவது அதாவது திரு. காந்தி நாளைக்கு விடுதலை, நாளன்னைக்கு விடுதலை என்று எழுதி சிறு பிள்ளைகளையும் பாமர மக்களையும் ஏமாற்றி சிறைக்கனுப்பிக் கணக்குக் கூட்டி வந்ததும் கூட இப்போது சில ஜோசியர்களுக்கும் 144 போட்டுவிட்டதால் அவர்களும் அடங்கும்படியாய் விட்டது. மற்றபடி ஜவுளிக்கடை, கள்ளுக்கடை, பள்ளிக் கூட மரியல்களோ வென்றால் "தொண்டர்கள் எண்ணிக்கை போதாததால்" நிறுத்த வேண்டிதாய் விட்டது.

வேதாரண்யத்திற்கு யாத்திரைக்குப் போகும் ஜனங்கள் பெயர்களை கூட பத்திரிக்கைகளுக்கு வெளிப்படுத்த முடியாமல் போய்விட்டது.

மற்றும் எது எப்படியானாலும் சட்ட மறுப்பு இயக்கத்தால் ஒரு லாபம் ஏற்பட்டதை நாம் மறுக்க முடியவில்லை. அதாவது அது சர்க்காரை ஒன்றும் செய்யமுடியவில்லையானாலும் பணக்கார வியாபாரிகள் திமிர் சற்று அடங்கி விட்டது. அநேக வியாபாரிகள் இயக்கத்தை வைதுக் கொண்டே தூக்க மில்லாமலிருக்கின்றார்கள். பணக்கார விவசாயிகள் திமிரும் சமீபத் தில் அடங்கிவிடும். தவசங்கள் விலை மிகவும் இறங்கிவிட்டதால் வரும்படி குறைந்து திண்டாடுகிறார்கள். ஆனால் ஏழைகளுக்குச் சற்று உணவுப்



RangaRakes tamilnavarasam.com

பொருள்கள் சல்லீசாய் கிடைக்க ஆரம்பித்து விட்டது. ஆகவே இந்தக் காரணங்களைக் கொண்டு இந்தக் கிளர்ச்சி இன்னமும் ஒரு மூன்று மாதத் திற்கு ஆவது நடந்தால் இன்னமும் சற்று ஏழை மக்களுக்கு அனுகூலமாகும் என்றே ஆசைப்படுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 20.07.1930**



# கோடைக்கானல் காஸ்மாபாலிட்டன் வாசகசாலைத் திறப்பு விழா

பெருமை மிக்கத் தலைவர் அவர்களே! சகோதரிகளே!! சகோதரர் களே!!! இந்த சிறிய ஊரில் இவ்வளவு பெரிய கூட்டம் கூடியிருப்பது எனக்கு அதிசயமாயிருக்கிறது. நீங்கள் செய்த வரவேற்பு ஆடம்பரங்களுக்கும் நான் சிறிதும் தகுதியில்லை என்பதை யான் உணர்கிறேன். ஆனாலும் அவை களையெல்லாம் எனது கொள்கைக்கு நீங்கள் அளிக்கும் ஒரு நற்சாட்சிப் பத்திரமென்றே கருதுகிறேன். நீங்கள் இங்கு ஆரம்பித்திருக்கும் வாசக சாலையானது மிகவும் பாராட்டக்கூடியதாகும். நமது நாட்டில் கோயில் கட்டுவதற்கும், கும்பாபிஷேகம் செய்வதற்கும், பூஜை, உற்சவம் நடத்து வதற்கும் நாசமாகிற பணங்களும், இடங்களும், நேரங்களும் இம்மாதிரி வாசக சாலைகளுக்கு உபயோகப்படுத்தப் பட்டிருக்குமானால் மக்களுடைய அறிவு கல்வி இன்றைக்கிருப்பதைப் போல் நூறுமடங்கு அதிகமாக வளர்ச்சி பெற்று மக்கள் சுயமரியாதையோடு வாழ முடிந்திருக்கும்.

நமது நாட்டில் வாசகசாலையின் பெருமை மக்கள் அறியாமலிருப் பதற்கு இரண்டு காரணம். ஒன்று வாசகசாலையின் அவசியம் மக்களுக்கு இருக்கும்படியான அளவு கல்வியில்லாமலிருப்பது. மற்றொன்று மக்க ளுக்கு பகுத்தறிவில்லாமலிருப்பது. இந்த இரண்டும் வாசகசாலையை ஏற்படுத்தவிடாமல் குழவிக் கல்லை நட்டி கோயில் கட்டுகிற வேலையில் மக்களை திருப்பிவிட்டது. ஆனால் உங்கள் விஷயம் அப்படிக்கில்லாமல் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பகுத்தறிவு உணர்ச்சியானது இந்த அருமை யான காரியத்தை செய்யத் தூண்டிற்றென்றே கருதி இந்தக் காரியத்தில் ஈடுபட்டவர்களை எல்லாம் எனது மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

ஒரு நாட்டின் மதக்கொள்கைக்கும் ஆட்சியின் தன்மைக்கும் அளவுகோள், அந்த நாட்டு மக்களின் கல்வி யறிவேயாகும். நமது நாட்டில் நூற்றுக்கு 93 பேர் கல்வியில்லாத தற்குறிகள். நூற்றுக்கு 99 பேர் கல்லில் முட்டிக் கொள்ளும் மூடர்கள். இப்படிப்பட்ட இந்த நாடு எப்படி அறிவுள்ள ஒரு சுதந்திரமான நாடாகும்? இந்த நாடானது சமீபகாலம் வரை எல்லா



RangaRakes
tamilnavarasam.com

மக்களும் கல்வி கற்கக் கூடாது எல்லா மக்களும் அறிவாளிகளாகயிருக்கக் கூடாது, எல்லாமக்களும் சுதந்தரமாக இருக்கக்கூடாது என்கின்ற கொள்கை யையுடைய மத ஆதிக்கத்திற்கு அடிமையாயிருந்த அரசர்களாலேயே ஆளப்பட்டு வந்திருக்கிறது. அதனால்தான் 100க்கு 97 வீதமுள்ள மக்கள் தற்குறிகளாயிருக்க ஏற்பட்டது. இப்பொழுது அம்மாதிரி கொள்கை யில்லாமலும் எல்லாரும் படிக்கலாம் என்கின்ற கொள்கையுடைய அரசர் களுடைய ஆட்சியிலுமிருக்கிறபடியால் இப்போது கல்வி பரவ ஆரம்பித்து விட்டது. ஆனால் எல்லோரும் படிக்கலாம் என்று சொல்லக் கூடிய அரசாங் கம் வந்து 150 வருஷகாலமாயும் ஏன் இன்றைக்கு 100-க்கு 10பேர்தான் படித்திருக்கிறார்கள் என்கின்ற ஒரு கேள்வி பிறக்கலாம். அதற்குச் சமா தானம் என்ன வென்றால் இந்த 150 வருட காலமாய் வெள்ளைக்கார ஆட்சி இருந்து வந்தாலும் கூட அவர்கள் எல்லோரும் படிக்கக்கூடாது என்கின்ற கொள்கையையுடைய பார்ப்பனர்களின் இஷ்டப்படி நடந்து வந்ததால் பார்ப்பனர்கள் இஷ்டத்திற்கு விரோதமாகப் பார்ப்பனர்களைத் தவிர மற்றவர்கள் அதிகமாய்ப் படிக்கமுடியாமல் போய் விட்டது. இப்போது கொஞ்சங் கொஞ்சமாக அரசாங்கத்தினிடத்துள்ள பார்ப்பன ராதிக்கத்தை ஒழித்து பார்ப்பனரல்லாத ஆதிக்கம் பெருகுவதின் பலனாக அந்தக் கொள்கைகளை எல்லாம் மறந்து எல்லாரும் படிக்க ஆரம்பித்து விட்டார் கள். அடுத்து வரும் ஜனக் கணிதத்தில் 100-க்கு 15 பேராவது படித்தவர்களா யிருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே இந்த விகிதமானது சென்ற 150 வருஷத்திற்கு 7வீதமும் 1920லிருந்து 1930 - க்குள் 10 வருஷத்தில் அது இரட்டித்து 15 வீதமும் ஏற்பட்டிருக்கின்றது போலவே இந்த பார்ப்பனரல் லாதார் இயக்கம் இப்படியே நடைபெற்றுப் பார்ப்பனரல்லாதார் ஆதிக்கம் ஆட்சியில் இன்னுமதிகமாகப் பலப்படுமானால் குறைந்தது இருபத்தைந்து வருஷத்துக்குள்ளாக இந்த நாட்டில் தற்குறிகள் என்பவர்களே இல்லாமல் போகலாமென்று நினைக்கிறேன். இந்த நாட்டு பார்ப்பனராதிக்கமானது அரசாங்கத்தாராலும் மக்களைப் படிப்பிக்க முடியா மலும் சொந்தத்திலும் தங்கள் மக்களைப் படிப்பிக்க முடியாமலும் அவ்வளவு தரித்திர நிலையில் 100-க்கு 97 பேர் நிரந்தரமாயிருக்கும் படி பார்ப்பன மதச் சூட்சி செய்து விட்டது. இந்த மதச் சூட்சியை வெட்டிப் புதைத்தப் பிறகுதான் எல்லா மக்களும் படிக்க முடியும். அப்படிக்கில்லாத வரையில் எவ்வளவுதான் படிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாலும் சௌகரியமில்லாமலே போய் விடும். வெள்ளைக்கார அரசாங்கம் இந்தியர்களைப் படிக்க வைக்காமல் 100-க்கு 93 பேர்களை தற்குறிகளாக வைத்துவிட்டது என்று நமது பார்ப்பனர் களும், அவர்களது திருவடி சம்பந்திகளான பார்ப்பனரல்லாதவர்களும் மேடையில் நின்று கொண்டு சொல்லுவார்களானால் அந்தப் பார்ப்பனர்கள் மாத்திரம் ஆண், பெண் உள்பட காப்பிக்கடை, வேசித்தெரு முதலிய இடங்களில் பிழைக்கும் சகலர்களும் 100-க்கு 100பேர் படித்திருப்பதற்குக் காரணம் என்ன என்றால் என்ன சமாதானம் சொல்லுவார்கள்? இதிலிருந்து இந்தியர்களில்



பார்ப்பனர்கள் தவிர மற்றவர்கள் படிக்காமலிருப்பதற்குக் காரணம் வெள்ளைக்கார ஆட்சியா? அல்லது நமது முட்டாள்தனத்தின் பலனாய் நாம் சுமந்து கொண்டிருக்கும் பார்ப்பன மத ஆட்சியா? என்பதை யோசித்துப் பாருங்கள். நமது மக்களில் ஒரு பெரிய விவசாயி தன்னுடைய இரண்டு பிள்ளைகளைக் கூட படிக்க வைப்பதற்கு திணருகிறான். ஆனால் அன்றாடம் பிச்சை எடுக்கிற தொழிலையுடைய பஞ்சாங்கப் பார்ப்பான் தன்னுடைய 5 பிள்ளைகட்கும் படிப்புச் சொல்லி வைத்து பட்டதாரி யாக்கிவிட்டு தொப்பை போட்டுக் கொண்டு திண்ணையில் கொரட்டை விட்டுத்தூங்குகின்றான். இது எப்படிச் சாத்தியப்படுகிறது? ஆகவே இதற்கு வெள்ளைக்கார ஆட்சி காரணமா; பார்ப்பனராட்சி காரணமா வென்பதை யோசித்துப் பாருங்கள். ஒரு பள்ளிக்கூடத்தில் எல்லாப் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்ளலாமென்பதாகக் கூட பார்ப்பனரல்லாதார் ஆதிக்கம் அரசாங்கத்தில் ஏற்பட்ட பிறகுதான் உத்தரவு போடமுடிந்தது என்றாலும் கூட பார்ப்பனராதிக்கமும் பார்ப்பனத் திருவடி சம்பந்திகள் ஆதிக்கமும் இருக்கின்ற ஊர்களில் இன்னமும் இதை அமுலுக்குக் கொண்டுவர முடியவில்லை. இன்றையத் தினம் அதாவது பூரணச் சுயேச்சைக்கு மக்கள் கல்லில் முட்டிக் கொள்ளுகிற காலத்திலும் கூட தெருவில் நடப்பதற்கே பார்ப்பனர்களுடன் போராட வேண்டியும் பார்ப்பன தாசர்களிடம் அடிபட வேண்டியுமிருக்கின்றதென்றால் வெள்ளைக்காரன் பேரிலேயே எல்லாக் குற்றங்களையும் சொல்லிக் கொண்டு இருப்பதில் ஏதாவது பொருளிருக் கிறதா? ஆகவே நாம் முன்னேற வேண்டுமானால், மற்ற நாட்டாரைப் போல் சுதந்திரத்துடன் வாழ வேண்டுமானால், அவைகளுக்கு முட்டுக் கட்டையாகவுள்ள சகலத்தையும் ஒழித்தெறியத் தயாராயிருக்க வேண்டும். அவ்விதம் மக்கள் தயாராவதற்கும் அறிவு பெறுவதற்கும் இம்மாதிரி வாசகசாலைகள் மிகவும் அவசியமாகும்.

சாதாரணமாக கல்வி என்பதைப் பற்றி நமது மக்கள் பெரும்பாலும் புஸ்தகப் படிப்பையும் குருட்டு உருப்போட்டு பரிட்சைகளில் (பாஸ்)தேரி விடுவதையுமே கல்வி என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக ஆங்கிலத்தில் பி.ஏ.,எம்.ஏ. படித்துப் பட்டம் பெற்றவர்களையும், தமிழ்சங் கத்தில் படித்து வித்வான் பரிட்சை பாஸ் பண்ணி பட்டம் பெற்றவர்களையும் கல்வியாளர்கள் என்று சொல்லி விட முடியாது. அவர்கள் ஏதோ ஒரு வித்தையில் அதாவது குருட்டு உருப்போட்டு ஒப்புவிக்கக் கூடிய ஒரு வித்தை அல்லது ஒரு சாதனத்தில் தேர்ந்தவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அதாவது அலமாரியில் உள்ள புஸ்தகங்களைப் போல் இவர்களும் தங்கள் மனதில் பல விஷயங்களை “பதிய வைத்திருக்கும் ஒரு நகரும் அலமாரி” என்றுதான் சொல்ல வேண்டும்.

படிப்பு வேறு அறிவு வேறு என்பதை ஞாபகத்தில் பத்திரமாய் வைத்துக் கொள்ளுங்கள். படித்த மூடர்களுக்கு எத்தனை உதாரணம்



RangaRakes
tamilnavarasam.com

வேண்டுமானாலும் சொல்லலாம். உதாரணமாக ஒரு கோள பூகோள சாஸ்திரத்தில் எம். ஏ. (பண்டித) பட்டம் பெற்ற ஒரு உபாத்தியாயர் (ப்ரபசர்) பிள்ளைகளுக்கு சூரிய சந்திர கிரகணத்தைப் பற்றி வானசாஸ்திரப் பாடம் சொல்லிக் கொடுக்கும் போது பூமியும், சூரியனும், சந்திரனும் ஒன்றுக் கொன்று சுற்றுவதின் பயனாய் ஒன்றால் ஒன்று மறைக்கப்படுவதால் அதன் ஆகுர்தியும் ஒளியும் மறைவுபடும், அதைத்தான் சந்திரகிரகணம் என்றும் சூரியகிரகணம் என்றும் சொல்வது என்று பாடம் சொல்லி கொடுப்பான். ஆனால் சந்திர கிரஹணமோ சூரிய கிரஹணமோ வந்து விட்டால் சூரியன் என்கின்ற ஒரு தேவதையை ராகு, கேது என்கிற தேவதைகள் துன்பப் படுத்துவதாகவும், இது அவர்களுக்கு ஏற்பட்ட சாபத்தீடு என்றும், அதற்காக மக்கள் தோஷ பரிகாரம் செய்ய வேண்டுமென்றும் சொல்லிக் கொண்டு கிரஹணம் பிடிக்கும்போது ஒரு ஸ்நானமும், விடும்போது ஒரு ஸ்நானமும், மத்தியில் மந்திரங்களும், ஜெபங்களும் செய்வான். சாப்பிடாமல் பட்டினி யாகவும் இருப்பான். மற்றும் தான் பிறந்த நேர கிரக நக்ஷத்திரமும் கிரகண நேர கிரக நக்ஷத்திரமும் ஒன்றாயிருந்தால் நெற்றியில் பட்டங் கட்டிக் கொண்டு முழுகுவான். ஆகவே அவனது படிப்பானது வான சாஸ்திர பரிக்ஷையில் (பாஸ்) தேரத்தான் உபயோகப்பட்டதே தவிர அந்த எம்.ஏ. பட்டம் பெற்றவனுக்கு அது அறிவுக்கு சற்றும் பயன்படவே இல்லை. ஆனால் நமது தமிழ்பண்டிதர்கள் நிலையோ அப்படிக்கூட இருக்க முடிவ தில்லை. அவர்களுக்கு உள்ள படிப்பே முட்டாள்களாக்குவதற்கு முதல்தர மருந்து போன்றது. புராணங்களைத் தவிர அவர்களுக்கு வேறு படிப்பே கிடையாது. இலக்கணம் நீதிநூல் என்று சிலது படிப்பார்கள். ஆனாலும் அவைகளும் ஆரம்பமும் மூடத் தனமானதாகவே இருக்கும். முடிவும் மூடத்தனமானதாகவே இருக்கும். மத்தியபாகமோ உலக வாழ்க் கைக்கு பயன்படாததாகவும், அயோக்கியர்களின் வயிற்றுப் பிழைப்புக்கு ஆதார மானதாகவும் இருக்கும். ஆங்கிலம் படித்த பட்டதாரிகள் என்பவர்களுக் காவது அறிவாளர்களாவதற்கு ஏற்ற பல நூல்கள் உண்டு. தமிழ் பட்டதாரி களுக்கோ மடையர்களாவதற்கேற்ற நூல்களே உண்டு. அதாவது அவை பெரிதும் வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம் என்பன போன்றவை களைத் தவிர இலக்கணம், இலக்கியம் என்று சிலதும் கூட்டி இவைகளை உருப்போட்டு பரீட்சை கொடுத்தவர்களாவார்கள். ஆகவே ஆங்கிலப் பட்ட தாரிகளிடம் எதிர்பார்க்கும் அதாவது அறிவுஇயல் புஸ்தகங்கள் படிக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்த அளவு கூட தமிழ் பட்டம் பெற்ற பண்டிதர்கள் என்பவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே. மனிதன் முழு மூடனாக வேண்டுமானால் புராணங்களையும் இதிகாசங்களையும் படித்து பண்டித னாக வேண்டியதுதான் என்பதற் கிணங்கத்தான் நமது படிப்பும் அறிவும் இருக்கின்றது. தமிழ் பண்டிதர்கள் என்பவர்களுடைய யோக்கியதையை நான் பார்த்த பிறகு மக்களை அறிவுக்காக தமிழைப்படி என்று சொல்லுவது மிக்க மோசமான காரியம் என்றே எனக்குத் தோன்றுகின்றது. ஏனென்றால்



அவர்களுக்கு பொது அறிவு ஏற்படும் படியான படிப்புக்கு தமிழில் ஆதாரங்களே இல்லை என்பது தான். வடமொழி ஆதாரங்களே தான் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு பல வேஷங்களுடன் திகழ்கின்றனவேயன்றி மக்களுக்கு அறிவும், சுயமரியாதை உணர்ச்சியும் உண்டாகும்படியானவை கள் அல்ல. ஆகவே மக்களுக்கு அறிவு வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் உலகஇயல் அறிய சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும். அதற்கு ஆதாரங்கள் பத்திரிகைகள் படிக்கவும் பல மக்களிடம் சேர்ந்து பழகிப் பேசவும் சௌகரியமுள்ளதான வாசக சாலைகளே யாகும்.

நிற்க சுயமரியாதை இயக்கம் என்பதைப் பற்றி நான் பேசுவேன் என்று விளம்பரப்படுத்தி இருக்கின்றீர்கள்.

சுயமரியாதை இயக்கமானது நமது நாட்டு மக்களின் சமத்துவத் திற்காகவும் சகோதரத்துவத்திற்காகவும் சுதந்திரத்திற்காகவும் ஏற்படுத்தப் பட்ட ஸ்தாபனமாகும்.

அது முதலாவதாக மக்கள் பிறவியில் கீழ் ஜாதி, மேல்ஜாதி என்கின்ற வித்தியாசத்தையும் ஆண் மேலானவன், பெண் கீழானவள் என்கின்றதை யும், பணக்காரன் ஏழை – அரசன் குடிகள் – குரு சிஷ்யன் – கடவுள் அடி யார் என்கின்றவைகளில் இருந்து வரும் உயர்வு தாழ்வு வித்தியாசங் களையும் அடியோடு ஒழிக்க வேண்டுமென்பதே அதன் முக்கிய கொள்கை யாகும். மேல்கண்ட உயர்வு தாழ்வு வித்தியாச உணர்ச்சியே மக்களை அடிமைப் படுத்தி விட்டது. எல்லா நாடுகளிலும் இந்த வித்தியாச உணர்ச்சி கள் மாறுபட்டு சமத்துவவுணர்ச்சியும் சுதந்திர உணர்ச்சியும் பரவி வரு கின்றது.

நமது நாடு மாத்திரம் உலகத்திலேயே எல்லா வகைகளிலும் அடிமை நாடாக இருக்கின்றது. இந்த நாட்டு மக்களைப்போல் மனிதத் தன்மையற்ற மக்களை வேறு எந்த நாட்டிலும் காண்பதரிது. மக்களுக்கு சுய அறிவும் இல்லை, பிறர் அறிவையும் கேட்கவிடாமல் தடுக்கப்பட்டிருக்கின்றார்கள். அத்தடைகளை விலக்க முயற்சிக்கும் போதுதான் கடவுளும், மதமும், மதாச்சாரியர்களும் வந்து பார்ப்பனர் மூலமும் பண்டிதர்கள் மூலமும் குறுக் கிடுகின்றார்கள். அப்படிக் குறுக்கிடும்போது அவைகளைத் தூக்கித் தூர எறிந்து விட்டுப் போக வேண்டியதாகின்றது. அப்போது சுயநலக்காரார் களால் நம்மை மதத்துரோகிகள் என்றும் கடவுள் விரோதிகள் என்றும் சமயாச்சாரிகளை தூஷிக்கின்றவர்கள் என்றும் சொல்லப்படுகின்றார்கள். நமது நாட்டு மக்களில் 100–க்கு 90 பேர்களுக்கு மேலாகவே மூட நம்பிக்கை யிலும் குருட்டுப் பழக்க வழக்கத்திலும் ஈடுபட்ட பாமர மக்களானதினால் சுயநலக்காரர்கள் சூட்சியை சுலபத்தில் நம்பி ஏமாறுகிறார்கள். அவர்களை யெல்லாம் அறிவுள்ள மக்களாக்கி நாட்டை சுதந்திரமுள்ளதாகவும் செய்ய வேண்டுமானால் எவ்வித பழிப்புக்கும் தூற்றலுக்கும் பயப்படாமல் வேலை செய்தால்தான் முடியுமே ஒழிய அன்னியர் நம்மை குற்றம் சொல்லுவார் களே



RangaRakes tamilnavarasam.com

என்று பயந்தால் ஒரு காரியமுமே செய்யமுடியாது. நம்மை அன்னிய ஆட்சிக்கு அடிமைப் படுத்தினவர்கள் நமது நாட்டு வைதீகர்களும் பண்டிதர்களும் பணக்காரர்களுமே ஆவார்கள். இவர்களுக்கு உதவி செய்வது மதமும் கடவுளுமேயாகும். மதத்தின் கொள்கையையும் கடவுள் செயலையும் ஆயுதமாக வைத்துக் கொண்டே இந்த நாட்டு மக்களின் அறிவையும் சுயமரியாதையையும் நாசமாக்கி விட்டார்கள். போதாக் குறைக்கு தேசீயம் என்பதாக ஒரு புதிய புரட்டு சில காலமாய் புறப்பட்டு அது மதமும் கடவுளும் பாக்கிவைத்த கொஞ்ச நஞ்சங்களையும் ஒழிக்கத் தலைப்பட்டு விட்டது. 40 வருஷ காலமாய் நமது நாட்டில் ஏற்பட்ட தேசீயம் இதுவரை மக்களுக்கு என்ன நன்மை செய்திருக்கின்றது? என்பதை யோசித் துப் பாருங்கள். தேசீயத்தின் பலனாய் பலர் உத்தியோகம் சம்பாதிக்கவும் பலர் பதவி சம்பாதிக்கவும் ஏற்பட்டதே தவிர தீண்டாமை ஏதாவது ஒழிந்ததா பாருங்கள்.

*குறிப்பு : 20.07.1930 ஆம் நாள் கோடைக்கானல் காஸ்மாபாலிட்டன் வாசக சாலையைத் திறந்து வைத்து ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 27. 07. 1930**



# மலாய் நாட்டில் சுயமரியாதைச் சங்கம்

## உண்மைத் தர்மம்

மலாய் நாட்டின் முக்கிய பட்டணமாகிய சிங்கப்பூரில் "தமிழர் சீர்திருத்தக்காரர்கள் சங்கம்" என்பதாக ஒரு சுயமரியாதைச் சங்கம் ஏற்படுத் தப்பட்டிருப்பதைப் பற்றிய விவரம் மற்றொரு பக்கம் பிரசுரித்திருக்கின் றோம்.

இதற்காகக் கூட்டப்பட்டுள்ள முதல் கூட்டத்திற்கு அவ்வூர் பிரமுகர்கள் சுமார் 150 பேர்களுக்கு மேலாகவே கூட்டினதும், தலைமை வகித்த திரு. ராமசாமியார் பேசிய தலைமைப் பேருரைப் பேச்சுகளும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதாவது சங்கத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுகையில்,

**1. மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வருணாச்சிரம தர்மத் தையும், தீண்டாமையையும் ஒழித்தல்.**

**2. பெண்களுக்கு உரிமை அளித்தல்.**

**3. அறிவு விருத்திக்கான கல்வியைப் போதித்தல்.**

**4. சிக்கன முறையைக் கைக் கொள்ளுதல்.**

**5. அறிவிற்குப் பொருத்தமற்ற பழக்க வழக்கங்களை நீக்குதல்.**

என்று சொன்னதிலிருந்து அவைகள் சுயமரியாதைக் கொள்கைகளை எவ்வளவு நுட்பமாக உணர்த்திச் சொல்லப்பட்ட உரைகள் என்பது யாவருக் கும் எளிதில் விளங்கும்.

தவிரவும் "சிங்கப்பூரில் நிறுவப்பட்ட சங்கங்கள் அனேகம் உடனுக்குடன் மறைந்து போவதற்குக் காரணம் அச்சங்கங்களுக்கு ஒரு சொந்த இடம் இல்லாததே" என்று குறிப்பிட்டு விட்டு அதற்காக தானும் திருவாளர் பி. கோவிந்தசாமி செட்டியாரும் சேர்ந்து ஒரு கட்டிடம் வாங்கி உதவுவதாய் அக்கூட்டத்திலேயே வாக்களித்திருப்பதானது அவர்களின் பரோபகார



RangaRakes tamilnavarasam.com

எண்ணத்தையும் உண்மைத் தர்மத்தை உணர்ந்திருக்கும் உணர்ச்சியையும் காட்டுகின்றது.

மலாய் நாட்டில் எங்கு பார்த்தாலும் சீனர்களுக்கு ஒரு பொது இடம் இருப்பதை நமது சுற்றுப் பிரயாணத்தில் கண்டோம்.

ஆனால் அங்கு இந்தியர்களுக்கு எங்கு பார்த்தாலும் கோவிலும், பூஜையும் தான் பார்க்க முடிந்ததே ஒழிய ஒரு தனிப் பொதுக் கட்டிடம் நமது கண்களுக்குத் தென்படவே இல்லை. இதை எதற்காக எடுத்துக் காட்டுகின்றோமென்றால் இந்தியர்களின் அறிவே, பொது நலம் என்றால்– பொது தர்மம் என்றால் கோவிலைக் கட்டி குழவிக் கல்லை நட்டி கும்பாபி ஷேகம் செய்து அதில் முட்டிக் கொள்வதே தான் என்று கருதி இருக்கிறார்கள்.

ஆனால் நமது உயர் திருவாளர்கள் ஓ. ராமசாமி நாடார் அவர்களும், பி. கோவிந்தசாமி செட்டியார் (நாயுடு) அவர்களும் சேர்ந்து சுமார் 15 ஆயிரம் அல்லது 20000 ரூ.க்குள் ஒரு கட்டிடம் வாங்கி உதவுவதாய் தீர்மா னித்து இருப்பதிலிருந்து கோவிலுக்கு பணம் போடுவது முட்டாள்தனம் என்பதை நன்றாய் உணர்ந்து விட்டார்கள் என்றே தெரிகின்றது.

இக்கட்டிடமும் சங்கமும் நிரந்தரமாய் இருந்து அதன் கடமைகளைச் செய்ய வேண்டுமானால் அதற்கு சிறிது பண்டுத் துகையும் இருக்க வேண்டும் என்பதே நமது அபிப்பிராயமாகும். அதற்கும் திரு. நாடார் அவர்கள் முயற்சிப்பார்கள் என்றே நம்புகின்றோம்.

இவ்விஷயத்தில் பார்ப்பன சூட்சியும், அவர்களது தாசர்களது தொல்லைகளும் தடைகளாக ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆனால் அவர் களுக்கெல்லாம் நமது நாடாரவர்கள் சிறிதும் பயப்படமாட்டார் என்பது நமது உறுதியாகும். எப்படியெனில் திரு. நாடாரவர்கள் முடிவுரையில்,

"நமது இயக்கத்திற்கு எவ்வளவுக் கெவ்வளவு எதிர்ப்பு ஏற்படுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு பலமாகவும், வேகமாகவும் இயக்கம் பரவும்".

என்று சொல்லியிருப்பதிலிருந்து எதிர்ப்புகளையும், தடுப்புகளையும் வரவேற்கின்றார் என்பது நன்றாய் விளங்குகின்றது.

மற்றும் சுயமரியாதை வீரர்களான கோ. சாரங்கபாணி, அதிசயம், எஸ். கோபால், அ. ராஜகோபால் முதலியவர்களும் மற்றும் திருவாளர்கள் வெ. சோமசுந்திரம் செட்டியார், கோ. ராமலிங்கத் தேவர், அ. கி. சுப்பண்ணன், கா. தாமோதரனார், ரா. து. கோவிந்தசாமி, மு. ரெ. முத்துக்கண்டியார், த.வ. குமாரசாமி, ச. குப்புசாமி, பு. ரா. கோவிந்தசாமி, ரெ.திருவேங்கிடம், அ. க. நாராயணசாமி, எ. ஆ. சிவராய பிள்ளை ஆகியவர்களும் இம்முயற்சியில் ஈடுபட் டிருப்பதைப் பார்க்க இச்சங்கமானது சிங்கையில் தலைசிறந்து



விளங்கி ஒரு செல்வாக்குப் பொருந்திய பொது நல ஸ்தாபனமாக இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஆகவே வெகு சீக்கிரத்தில் அச்சங்கத்திற்கு கட்டிடம் முதலியவைகள் ஏற்பட்டு திறப்புவிழா நடந்து பிரசாரம் துவக்கப்படும் என்று உறுதியாய் நம்புவதுடன் இந்திய தாழ்த்தப்பட்ட – கொடுமைப் படுத்தப்பட்ட – இழிவு படுத்தப்பட்ட – மக்களின் சார்பாக மேல்கண்ட நண்பர்களுக்கு நமது மனம் நிறைந்த நன்றியறிதலைச் செலுத்துகின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 27.07.1930**



RangaRakes tamilnavarasam.com

## ராஜி

திருவாளர்கள் ஐயக்கர் அவர்களும், சாப்ரூ அவர்களும் திரு. காந்திக்கும் கவர்ன்மெண்டுக்கும் ராஜி ஏற்படுவதற்காக முயற்சி செய்கிறார்கள்.

இம் முயற்சியின் முடிவு எப்படி இருந்தாலும், தேசிய பத்திரிகைக் காரர்களும், பொதுஜனங்களும் வெகு மகிழ்ச்சியுடன் இம்முயற்சியைப் போற்றி ஏதாவது ஒரு வழியில் ராஜி ஏற்பட்டால் போதுமென்று ஆசைப்படுகின்றார்கள். இதிலிருந்து சட்டமறுப்பும், சத்தியாக்கிரகமும் மக்களுக்கு சலிப்புத் தோன்றிவிட்டது என்பது வெளிப்படை. திரு. காந்தி எவ்வளவு விட்டுக் கொடுத்தாகிலும் ராஜி செய்து கொள்ள வேண்டு மென்பதே தேசீய பத்திரிகைகளின் கவலையாகி விட்டது.

சத்தியாக்கிரகத்திற்கு இன்னும் சில நாள்களுக்குள்ளாக பலமான எதிர்ப்புகள் கிளம்பிவிடும் என்பதை "தேசீய வாதிகள்" உணரத் தலைப் பட்டு விட்டார்கள். அனேக வியாபாரிகள் கெட்டுப்போய் விட்டார்கள். கஷ்டத்தில் சிக்கி விழித்துக் கொண்டிருந்த வியாபாரிகளும் இனியும் நாலு இரண்டு வருஷங்கள் தாட்டலாம் என்று நினைத்துக் கொண்டிருந்த வியாபாரிகளும் சட்ட மறுப்பின் மீது பழிபோட்டு சீக்கிரத்தில் தீபாவளி ஆக இதை ஒரு சாக்காகக் கொண்டு விட்டார்கள். இதனால் பல மக்களுக்கு சத்தியாக்கிரகத்தின் மீது ஆத்திரம் உண்டாக இடம் ஏற்பட்டு விட்டது.

நிற்க, திருவாளர்கள் ஐயக்கரும் சாப்ரூவும் ராஜி முயற்சிக்கு வைசிராய்க்கு எழுதிய கடிதத்தில் தங்களுக்கு திரு. காந்தியின் நடவடிக்கையில் அனுதாபம் இல்லை என்று வெளிப்படையாகச் சொல்லி விட்டார்கள்.

திரு. வைசிராய் பதில் கடிதத்திலும் இந்தியர்களால் நிர்வகிக்க முடியாத காரியத்தை இந்தியர்கள் வசம் ஒப்படைக்க முடியாது என்பதாகச் சொல்லி, இந்தியர்கள் பூரண சுயாக்ஷிக்கு அருகர் அல்ல வென்றும், அவர்க ளது யோக்கியதைக்கு மேல் கொடுக்க முடியாதென்றும் பட்டவர்த்தனமாகச் சொல்லிவிட்டார். இந்த நிலையில் திரு. காந்தி ராஜிப் பேச்சுக்கு இடம் கொடுப்பது எவ்வளவு தன் மதிப்பு உள்ளது? என்பதை நாம் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. தவிரவும் இந்தியர்களால் நிர்வகிக்க முடியாத



காரியங்கள் எவை என்பதைப் பற்றிக் கூட இப்பொழுது கூற முடியாதென்றும், அது லண்டன் மகாநாட்டில்தான் முடிவு செய்யப்படும் என்றும் வைசிராய் பிரபு சொல்லியிருப்பதிலிருந்து வெகு காலமாகவே சொல்லிக் கொண்டு வருவதைத் தவிர லார்ட் இர்வின் கடுகளவாவது இரங்கி வந்தாரா? என்பது அறிவாளிகள் யோசிக்கத்தக்கதாகும். எனவே இந்த யோக்யதை உள்ள ராஜியில் மக்களும், தலைவர்களும் பத்திரிகைக் காரர்களும் காட்டும் உற்சாகத்திலிருந்து சத்தியாக்கிரகத்தின் குற்றத்தையும், வெற்றியற்ற தன்மையையும் இப்பொழுதாவது உணர்ந்துவிட்டார்கள் என்றே தெரிய வருகிறது. முன்னைய ஒத்துழையாமையை யாருடைய வேண்டுகோளும் விருப்ப மும் இல்லாமலே திடீரென்று நிறுத்தினார். இப்போது ஏதாவது ஒரு சாக்கைக் கொண்டு நிறுத்த வேண்டியதாயிருக்கின்றது. "எல்லாம் கடவுள் செயல்."

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 27.07.1930**



RangaRakes tamilnavarasam.com

# காந்தியார்

திரு. காந்தியார் சிறையில் மூன்று வேலைகள் செய்கிறார். அவற்றுள் ஒன்று தக்ளியில் நூல் நூற்பது. மற்றொன்று பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது. வேறொன்று இந்த இரண்டும் செய்து மீதி இருக்கும் நேரத்தில் ராமநாம பஜனை செய்வது. ஆகவே அவரது பகுத்தறிவுக்கு நாம் வேறு உதாரணம் காட்ட வேண்டியதில்லை யென்றே நினைக்கின்றோம். இம் மூன்று காரியங்களும் இந்தியாவின் பொது வாழ்க்கையையும் முன்னேற்றத் தையும் முன்னுக்குக் கொண்டு போகுமா? பின்னுக்குக் கொண்டு போகுமா வென்பதை யோசிக்கத்தக்கது. திரு. காந்தியிடம் குருட்டுப் பக்தியுள்ளவர் களுக்கு நாம் இப்படிக் கேட்பது சற்று கஷ்டமாக இருக்கலாம். தக்ளியில் நூல் நூற்பது எதை உத்தேசித்து என்று இதுவரை யாராவது தெரிந்தார்களா? தக்ளி நூல் வெள்ளைக்கார ஆட்சியின் கொடுமையையும் இந்தியாவின் பொருளாதார கொள்ளையையும் என்ன செய்து விடக்கூடும் என்பது நமக்கு விளங்க வில்லை. என்ன சொன்னாலும் தட்டிச் சொல்லாமல் கேட்பதற்குச் சில மக்கள் இருக்கின்றார்கள் என்பதைத் தவிற மற்றபடி அதில் என்ன உண்மை இருக்கின்றது. இரண்டாவதாக பகவத்கீதைக்கு ஆங்கில மொழி பெயர்ப்பு வேலை. இதுமுன் ஒரு தடவை டாக்டர் பெசண்டம்மையால் செய்தாய் விட்டது. இரண்டாவதாக திரு. திலகரால் ஒரு தடவை கீதா ரகசியம் என்பதாக ஒரு மொழி பெயர்ப்பும் செய்தாய்விட்டது. இப்போது திரு. காந்தியும் இதையே ஆரம்பித்து விட்டார். கீதையின் தத்துவம் என்ன? அதன் பயனென்ன? என்பதைப் பற்றிய உண்மை யாராவது தெரிந்து அதை மதிக்கின்றார்களா?

கீதையை ஒரு மனிதன் ஒப்புக் கொள்ளுவதானால் முதலாவதாக பாரதக் கதையை ஒப்புக் கொள்ள வேண்டும்.

பிறகு கிருஷ்ணனையும், அவனது செய்கைகளையும், அவனையே கடவுளாகவும் ஒப்புக் கொள்ள வேண்டும். இம்மூன்றிலும் சந்தேக முள்ளவர்கள் கீதையை “பகவான்” வாக்காகக் கொள்ள முடியாது. இது ஒரு புறமிருக்க அதிலுள்ள விஷயங்கள் வாழ்க்கைக்கு பொருத்தமானதாகவோ அல்லது அனுபவத்திற்கு சாத்தியமானதாகவோ இருக்கின்றதா? நிற்க



RangaRakes

மூன்றாவது காரியமாக பஜனை செய்து கொண்டிருக்கிறாராம்.

பஜனை என்பது புராணங்களில் உள்ள கடவுள்களை புராணக் கதைகளைச் சொல்லிக் கொண்டோ நினைத்துக் கொண்டோ இருப்பதாகும்.

ஆகவே இம்மூன்று காரியங்களும் எவ்வளவு பகுத்தறிவும், பொது நல நன்மையுமான காரியம் என்பதை முடிவு செய்யும் விஷயம் வாசகர் களுக்கே விட்டுவிடுகின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 27.07.1930**



tamilnavarasam.com

# க த ர்

கதர் பிரசாரத்தின் பலனால் வேஷக்காரர்கள் டெம்பரரியாய் கதர் கட்ட ஆரம்பித்து எப்போதும் வழக்கமாய் கதர் கட்டி வந்தவர்களுக்கும் கதர் கிடைக்க வழி இல்லாமல் போய் வேறு துணி கட்ட நிர்பந்தப்படுத்தி விட்டது.

இது ஒரு புறமிருக்க கதர் வியாபாரிகள் இந்த சமயத்தில் அடிக்கின்ற கொள்ளைக்கு அளவில்லை. துணியோ சாணித்துணிக்கும் உதவாது. விலையோ டக்கா மசிலினுக்கு மேல் விற்கப்படுகின்றது. பஞ்சு விலை கண்டி 1.க்கு 320 ரூபாயிலிருக்கும் போதும் நூற்புக் கூலியும் நெசவுக் கூலியும் அரிசி ரூ. க்கு இரண்டரை பட்டணம் படி விற்றுக் கொண்டும் இருந்த போது போட்ட விகிதப்படியே இப்போதும் விற்கின்றார்கள். இப்போது பஞ்சு பாரம் 150 முதல் 160ரூ. க்குள் மிக்க சவதமாக இருக்கின்றது. அரிசி ரூ. 4 பட்டணம் படிக்கு மேலாகவே விற்கின்றது.

520 ராத்தல் கொண்ட பாரம் பஞ்சு 160 ரூ. விலையானால் பவுன் ஒன்றுக்கு 8 அணாவே பஞ்சு விலை அடங்கும்.

10 கிராம் உள்ள 50 இஞ்சு பீசு 3 ராத்தல் அல்லது மூன்றேகால் ராத்தல் இடை இருக்கும். இந்த மூன்றேகால் ராத்தலுக்குக் கிரயம் ரூ 1 - 10 - 0 நூற்பு கூலி ரூ 1. நெசவு கூலி 1 - 14 ஆக 10 கஜத்திற்கு ரூ 4 - 8 - 0 ஆகும். சிலவும் லாபமும் 5 அணா சேர்த்தால் 4 - 14 - 0 க்கு விற்கவேண்டியது நியாயமாகும். இப்போது 10 கஜம் 6 ரூபாயிக்கு மேலாகவே விற்கப்படுகின்றது. ஈரோட்டில் 6-8-0க்கும் கூட கிடைப்பதில்லை.

ஆகவே தேசீய கிளர்ச்சியின் பயனாய் பல வியாபாரிகள் இன்சால் வென்டாகவும் பல வியாபாரிகள் கொள்ளையடிக்கவும்தான் வழியேற் படுவதைத் தவிர மற்றபடி உண்மையான பலன் ஒன்றையும் ஏழைகள் அனுபவித்ததாகத் தெரியவில்லை,

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 27.07.1930**



# மாயவரம் - சீயாழி மிராசுதாரர்கள் மகாநாடு

அக்கிராசனாதிபதி அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே! இன்றையதினம் இந்த பொதுக் கூட்டத்தில் தற்கால நிலைமையைப் பற்றி நானும் சில வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று இத்தாலூகா பிரபல மிராசுதாரர்களானவர்களால் அழைக்கப்பட்டு பேசக் கேட்டுக் கொண்டதற்கு மிக்க நன்றியுடையவனாக யிருக்கின்றேன்.

இதற்கு முன் இந்தக் கூட்டத்தில் பேசிய கனவான்களின் பேச்சை நீங்கள் கேட்டீர்கள். நாட்டின் தற்கால நிலைமையைப் பற்றி அவர்கள் பேசியதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் மனிதன் சட்ட மறுப்பு செய்யக் கூடாதென்பதையும், சட்டத்திற்கடங்க வேண்டியதென்பதையும் இராஜாவுக்கு பக்தியாய் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் நான் ஒப்புக் கொள்ள முடியவில்லை. இவ்விஷயத்தில் எனது கொள்கை உங்கள் எல்லோருக்கும் ஏற்கனவே தெரிந்தேயிருக்கலாம். சுயமரியாதை மகாநாட் டிலும் தீர்மானித்திருக்கின்றோம். அதாவது மனிதனுக்கு இராஜ பக்தியும், கடவுள் பக்தியும் கற்பிக்கப்படுவதானது மனிதனை அடிமைத் தனத்தி லாழ்த்தும் அறிகுறியேயாகும் என்பதாக வெகுநாளாகவே நான் பேசியும் எழுதியும் வந்திருக்கிறேன். ஆனால் இதிலிருந்து துரோகியாகவோ, துவேஷியாகவோ இருக்க வேண்டுமென்பதான பொருள் அதிலில்லை யென்பதை நான் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. ஆகவே மனிதன் கடவுளுக்கே பக்தி காட்ட வேண்டிய அவசியமில்லையானால், பிறகு இராஜாவுக்கு எதற்காக பக்தி காட்ட வேண்டுமென்பதை யோசித்துப் பாருங் கள். இராஜா என்பவர் பிரஜைகளாகிய நம்மிடமிருந்து ஒரு வேலையை ஒப்புக் கொண்டவராகிறாரே யொழிய வேறில்லை. ஆகவே அவ்வேலை யில் அவர் கடமையை அவர் செய்ய வேண்டியதும், நம் கடமையை நாம் செய்ய வேண்டியதும் தான் முறையாகும்.

ஒருவருக் கொருவர் தன் தன் கடமையைச் செய்வதில் ஒருவரிடம் ஒருவர் பக்தி காட்ட வேண்டிய அவசியமெங்கே யேற்படுகின்றது என்று



RangaRakes tamilnavarasam.com

கேட்கின்றேன். அப்படி காட்டுவதானால் அது வெறும் வேஷமேயாகும் கடவுள் பக்தி என்பதும் அப்படித்தான். கடவுள் என்பதாக நீங்கள் கருதுகிற படி ஒன்றிருந்தால் அதன் கடமையை அது செய்ய வேண்டியதுதான். அது போலவே மனிதன் தனது கடமையைத் தான் செய்ய வேண்டியதுதான். நமது பக்தியை எதிர்ப்பார்த்து நமக்கு நன்மை செய்யும் கடவுளும் நமக்கும் வேண்டாம் அம்மாதிரி ராஜாவும் நமக்கு வேண்டாம். பக்தி என்பதே அடிமையை விட மோசமான வார்த்தை என்று எண்ணுகின்றேன். அடிமை யென்பது சரீரத்தால் மாத்திரம் தொண்டு செய்யக் கடமைப்பட்டவனாவான். பக்தி என்பது சரீரத்தினாலும் தொண்டு செய்ய வேண்டியதுடன் மனத்தி னாலுஞ் செய்ய வேண்டும். இதனால் மனதை சுவாதீனமற்றதாக்கிக் கொள்ள வேண்டும். ஆகவே சுதந்திரத்தையும், சுயமரியாதையையும் எதிர்பார்க்கும் மனிதன் யாருக்கும் பக்தனாயிருக்கமுடியாது, யாரையும் பக்தியாயிருக்கச் சொல்லவு முடியாது.

அதுபோலவே சட்டமறுப்பென்பதும் தப்பிதமென்பதாக நான் ஒப்புக் கொள்ள முடியாது - சட்டமறுப்பு மனிதனுடைய இயற்கைக் குணங்களில் ஒன்றாகும். ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் எத்தனையோ சட்டங் களை மீற வேண்டியவனாகவேயிருக்கிறான். சாதாரணமாக ஒருவனை யொருவன் அடித்தால், வைதால், திருப்பியடிப்பதும் வைவதும் பெரும் பான்மையான மனித சுபாவமாயிருப்பதை நாம் காண்கின்றோம். ஒருவனை யொருவன் அடித்தால் சர்க்காரில் பிராது செய்து தண்டிக்க வேண்டியது சட்டமுறை. மற்றபடி திருப்பியடிப்பது அச்சட்ட முறையை மீறின தாகுமல்லவா?

ஆனால், மனித சுபாவம் எல்லாவற்றிற்கும் சட்டத்திற்கும் அடங்கி நடக்க வேண்டுமென்பதை ஒப்புக் கொள்ளமுடியாது. தன்னால் சாத்தியப் பட்டதற்கும், தனக்கு இழிவில்லாததற்கும் தான் நேரான மனிதன் அடங்கி நடக்க முடியும். மற்றவைகளை மீறத்தான் நேரிடும். இழிவை உத்தேசித்து சட்டத்தை மீறுகின்றவர்கள் அதனால் வரும் பலாபலனை அடைய தயாரா யிருக்கவேண்டும் - சட்டத்தை மீறி விட்டு பலன் அனுபவ விஷயத்தில் ஒளியப் பார்ப்பவனும், பயப்படுகிறவனும் உண்மையான சட்ட மறுப்புக் காரனாக மாட்டான். நாளை நான் தெருவில் நடக்க மறுக்கப் படுவது எனது சுயமரியாதைக்கு ஈனமென்று கண்டால் அதுசம்பந்தமான சட்டத்தை மறுக்கத்தான் செய்வேன். ஆனால் அதனால் வரும் பலனையடையத் தயாராயிருந்து கொண்டுதான் மறுப்பேன். நான் சட்ட மறுப்புக்குச் சிறிதும் பயந்தவனல்ல. நான் 4, 5 தடவை சட்டங்களை மறுத்துமிருக்கின்றேன். அதற் காகப் பல தடவை தண்டனையு மனுபவித்திருக்கின்றேன் என்றாலும் மீறப் படும் விஷயங்கட்கு தராதரம் தெரிய வேண்டும். எது மீற வேண்டியது, எது மீற வேண்டாதது என்பது போன்ற விஷயங்கள் மிகவும் கவனிக்கப்படத் தக்கதாகும். பிரஸ்தாப சட்டமறுப்பு என்பதை நான் அவ்வளவு அவசியமாய் மீற வேண்டியவைகளில் ஒன்று என்பதாகக் கருதவில்லை. சிலர் அவசியமான



தென்று கருதியிருக்கலாம். அதைப்பற்றி எனக்குக் கவலை யில்லை. ஏனெனில் என் அபிப்பிராயத்தை நான் சொல்லுகிறேன். உப்புச் சட்ட மறுப்புக்கு அனுகூலமாகச் சொல்லப்படுங் காரணமெல்லாம் சமுத்திரத் துத் தண்ணீர் பொது வென்றும், அதையெடுத்துக் காய்ச்சுபவர்களிடம் வரி கேட்கக் கூடாதென்றும் சொல்லப்படுகின்றது. இந்த வாதம் ஞானமற்ற தென்றே தான் சொல்லுவேன். அரசனே நமக்கு வேண்டியதில்லை யென்று சொல்லுவதானால் சமுத்திரத்துத் தண்ணீர் பொதுவாகும்.

அரசன் ஒருவன் வேண்டுமென்று ஒப்புக் கொண்டால் அரசாங்கத் திற்கு எப்படியாவது வரியைக் கொடுக்கத்தான் வேண்டும். அந்த வரி எப்படி வேண்டுமானாலும் விதிக்கலாம். ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு விதமாக ஒவ்வொரு பொருளின் மீதும், ஒவ்வொரு தொழிலின் மீதும் விதிக்கப்படும். குடிகளிடமிருந்து வரி வசூலிக்க ஏற்படுத்தும் வழிகளில் நமக்கு அதிகச் சண்டையில்லை. வேண்டுமானால் எவ்வளவு வரி வேண்டுமென்பதில் சண்டைபோடலாம். சமுத்திரத்துத் தண்ணீர் பொது வென்று கருதுகிறவர்கள் தென்னைமரத்துப் பாளைத் தண்ணீர் சமுத்திரத்துத் தண்ணீரை விட நமக்கே சொந்தமானதல்லவா? அது பொதுவானது கூட அல்லவே. அதற்கு ஏன் வரிகொடுக்கின்றோம்? சர்க்கார் தயவில்லாமல் நாமே காய்ச்சுகின்ற சாராயத் திற்கு ஏன் வரி கொடுக்கின்றோம்? நாம் கஷ்டப்பட்டு நாம் சம்பாதிக்கும் பணத்திற்கு ஏன் வருமானவரி கொடுக்கின்றோம்? இதுபோல் எத்தனை வரிகள் கொடுக்கின்றோம். இந்த வரிகளைவிட உப்புவரி எந்தவிதத்தில் அநியாயமானதென்பது நமக்கு விளங்கவில்லை. தவிர தாங்கமுடியாத வரியென்று சொல்லப்படுகின்றது. இது புரட்டுப் பிரசாரமேயாகும். நமது அரசியல் வாதிகள் தங்கள் யோக்கியதைக்கு மீறின சம்பளத்தையும் உதவித் துகையையும் செலவுத் துகையையும் பெறுகின்றார்கள். இன்னமும் அதிக மாய்ப் பெற ஆசைப்படுகின்றார்கள். அதனாலேயேதான் நமது யோக் கியதைக்கு மீறின வரியைக் கொடுக்க நேரிடுகின்றது. நமது வரி குறைய வேண்டுமானால் நமது மக்கள் தினம் ஒன்றரையணா வரும்படி கூட யில்லாமல் திண்டாடும் போது நமது மக்களே அந்த அரசாங்கத்தில் மாதம் 100, 500, 1000, 2000, 3000, 4000, 5000, 6000 என்பதாக அளவுக்கு மீறி சம்பளம் கொள்ளையடிக்கின்றார்களே, இதைப் பற்றி யாராவது கவனிக்கின் றீர்களா? நமக்குக் கல்விக்கு சர்க்காரிடம் பணம்போதாதற்குக் காரணம் கல்விக்கு ஒதுக்கப்படும் பணங்களெல்லாம் கல்வி அதிகாரிகளும், உபாத்தி யாருமே கொள்ளை கொள்ளையாய் சாப்பிட்டு விடுகிறார்கள். சுகாதாரப் பணமெல் லாம் டாக்டர்களும், சிப்பந்திகளும் சாப்பிட்டு விடுகிறார்கள். உபாத்தியாயர் கட்கும், அதிகாரிகட்கும், டாக்டர்களுக்கும், தொழிலாளர்கட்கும் என்ன வித்தியாசம்? தொழிலாளி சாதாரணமாக தினம் 8 அணாவுக்குக் கஷ்டப் படுகிறான். உபாத்தியாயரானால், டாக்டரானால், உத்தியோகஸ்தரானால் தினம் 8ரூ. 80ரூபாய் என்பதாக அனுபவிக்கிறார்கள். பிரஜைகளால் தாங்கமுடியாத



RangaRakes
tamilnavarasam.com

சம்பளம் வாங்கும் பிரதிநிதிகளுடைய, பிரதிநிதி ஸ்தாபனங் களுடைய பிரஜைகள் தாங்கமுடியாத வரியைக் கொடுத்துத்தானாக வேண்டும்.

நமது பிரதிநிதிகள் செய்யும் அக்கிரமத்திற்கு அறிவில்லாமல் சர்க்கார் மீது பாய்கின்றோம். இதுவரை நாம் பெற்ற சுதந்தரத்தையும், சுயராஜியத் தையும், சுயேச்சையையும் பார்க்கும்போது இனியும் வருகின்ற சுயராஜியம் நூற்றுக்கு 90 மக்களான ஏழைகளையும், குடியானவர்களையும் அடியோடு அழித்து விடுமென்றே நான் உறுதியாய்ச் சொல்லுவேன். சுயராஜியமென் பதே சிலரின் சுயநலமே தவிர வேறில்லை. எல்லாவற் றையும் விட "பூரண சுயேச்சை"யென்பது சுத்த ஹம்பக்கென்பதே என் அபிப்பிராயம். யாரோ சிலருக்கு உத்தியோகங் கிடைக்கவும் யாரோ சிலருடைய கீர்த்திக்கும் சத்தி யாகிரகம் செய்தால் நானும் அதில் சேர வேண்டுமா? இதை ஆரம்ப முதலே நான் ஆக்ஷேபித்து வந்திருக்கிறேன். சைமன் கமிஷன் வந்த காலமுதலே ஏன் 1927 - ஷ முதலே இந்த காங்கிரஸ் கொள்கைக்கும், பூரண சுயேச்சைக் கொள்கை என்பதற்கும் நான் விரோதமாகயிருந்திருக் கிறேன். முன்னையை விட இப்போது பின்னும் உறுதியாயிருக் கிறேன்.

இன்றைய தினம் இந்தச் சட்ட மறுப்பு முட்டாள்தனமானது, தேசத் துக்குக் கேடு சூழ்வது, ஏழைகளைக் கெடுப்பது என்று நான் மாத்திரம் சொல்லவில்லை. சாதாரணமாக இந்தியர்களில் 100-க்கு 90 பேர்களுக்கு மேலாகவே சொல்லுகின்றார்கள் என்பதே எனது அபிப்பிராயம்.

உதாரணமாக இந்தியாவிலுள்ள 30 கோடி மக்களில் மகமதிய சமூக மாகிய 4ல் ஒருபாகம் ஏழரைக் கோடி மக்களின் சமுதாய மகாநாடுகள் சட்ட மறுப்பைக் கண்டிக்கின்றன. 5 கோடி மக்களாகிய தீண்டாதார் என்பவர்கள் சட்ட மறுப்பைக் கண்டிக்கின்றார்கள். ஒரு கோடி கிறிஸ்துவர்கள் சட்ட மறுப் பைக் கண்டிக்கின்றார்கள். மீதியுள்ளவர்களில் அரசியல் ஸ்தாபனங்களி லேயே மிதவாதிகள், சுயேச்சைவாதிகள், தேசீய வாதிகளாகியவர்கள் எல்லோருமே சட்ட மறுப்பை ஒப்புக் கொள்ளவில்லை.

நமது தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால் எத்தனைபேர் சட்ட மறுப்பை ஆதரிக்கின்றார்கள் என்று யோசித்துப் பாருங்கள். சென்னையில் உள்ள "தேசீய பத்திரிகைகள்" இந்து பத்திரிகை ஒப்புக்கொள்ளவில்லை; தமிழ்நாடு ஒப்புக் கொள்ளவில்லை; சுதேசமித்திரன் ஒப்புக் கொள்ள வில்லை. அதன் ஆசிரியர்கள் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து ஆதியிலேயே இராஜினாமாக் கொடுத்து தப்பித்துக் கொண்டார்கள். சட்டமறுப்புக்கு விரோதமாகவே ஜாமீன் கட்டி நடத்துகிறதுடன் தாங்கள் அதில் சேரவில்லை யென்று விளம்பரமும் செய்துவிட்டார்கள். மற்றபடி பார்ப்பனச் சங்கங்கள், பார்ப்பனரல்லாதார் சங்கங்கள், பார்ப்பனரல்லாதார்களில் உள்ள பல வகுப்புச் சங்கங்கள் ஆகிய எல்லா ஸ்தாபனங்களும் சட்ட மறுப்பை ஒப்புக்



கொள்ளாததுடன் கண்டித்து மிருக்கின்றன. மிராசுதாரர்கள், வியாபாரிகள், ஜமீன்தார்கள் எல்லோரும் எதிர்க்கிறார்கள், இனி தனித்தனி தலைவர்கள் என்பவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். யார் ஆதரிக்கின்றார்கள் என்று பாருங்கள். திரு. சீனிவாஸையங்கார், திரு. சத்தியமூர்த்தி, திரு சர். சி.பி. இராம சாமி ஐயர், திரு. சர். சிவசாமி, திரு. சீனிவாச சாஸ்திரி, திரு. எம்.கே.ஆச்சாரி இவர்களெல்லாம் ஒரு காலத்தில் தலைவர்கள், தேச பக்தர்கள், தேசீய வாதிகள் என்று சொல்லிக் கொள்ளப்பட்ட பார்ப்பனர்கள் அல்லவா? இவர்களில் யாராவது ஆதரிக்கின்றார்களா? வெளி மாகாணங் களிலும் திருவாளர்கள் ஜயகார், ஜின்னா, சிந்தாமணி, கேல்கார், சாப்ரூ ஆகியவர்கள் ஆதரிக்கின்றார்களா? ஆகவே ஏதாவது ஒரு கூட்டத்தார், ஜாதியார், ஸ்தாபனத்தார் என்று சொல்லும்படியாக யாராவது ஆதரிக்கின்றார்களா? ஏதோ "திரு. காந்தி ஆரம்பித்தார். அவர் நல்லவர்; அவர் அவதார புருஷர்; அவர் மகாத்மா; அவரிடம் நமக்கு அதிக பக்தியுண்டு; அவர் எங்கள் ஜாதி" என்று சொல்லிக் கொள்வோரும், அவர் செல்வாக்கின் பலனாய் தங்கள் புரட்டுகளையும், பித்தலாட்டங்களையும் மறைத்துக் கொண்டிருப்பவர்களும் மற்றும் அவரிடம் தனிப்பட்ட சிநேகமோ, விசுவாசமோ உள்ளவர்களும் தவிர வேறு யார் இச்சட்ட மறுப்பில் கலந்துள்ளார்களென்று யோசித்துப் பாருங்கள். அவருடைய ஆதிக்கத்தில் பல லட்ச ரூபாய்கள் இருக்கின்றன. யாராவது இரண்டொரு உண்மையாளரிருந்தாலும் இருக்கலாம். அதற்காக எல்லோருமே யோக்கியவர்களென்று ஒப்புக் கொள்ளவேண்டுமா? தவிர நமது தமிழ் நாட்டிலுள்ள சமூக சீர்திருத்த வேலையின் பயனாய் அநேக சீர்திருத்த விரோதிகள் காங்கிரஸ் பெயரையும் சட்ட மறுப்புப் பெயரையும் சொல்லிக் கொண்டு சீர்திருத்தங்களுக்கு முட்டுக்கட்டைபோட அவைகளை உபயோகித்துக் கொள்ள நினைப்பதன் மூலம் அப்படி ஒரு கூட்டம் அத் துடன் சேர்ந்திருக்கின்றது. ஆகவே உப்புச் சட்ட மறுப்பை நான் மாத்திரமோ அல்லது பார்ப்பனரல்லாதார் கட்சியார் மாத்திரமோ ஆதரிக்கவில்லை யென்பதாகவும், கண்டிக்கின்றேன் யென்பதாகவும் நினைப்பது சுத்த முட்டாள் தனமென்றே சொல்லுவேன். இதுவரை சுமார் 5000, 6000 பேர்களே சட்டத்தை மறுத்திருக்கிறார்கள் என்று கணக்கு வெளியாயிருக்கின்றது. அடிபட்டவர்கள் அநேகர்களை நாமே நிரபராதிகளே ஒழிய சட்டமறுப்பில் சேர்ந்தவர்களல்ல என்று சொல்லி விட்டோம். கடைசியாக இந்த நாட்டி லுள்ள எவரையும் விட எனக்கு இந்த நாட்டு விடுதலையிலாவது, மக்கள் விடுதலையிலாவது கவலை குறைவென்று யாராவது கருதினால் அவர்கள் ஏமாந்து போவார்கள் என்றே உறுதியாய்ச் சொல்லுவேன். ஆனால் உப்புச் சட்ட மறுப்பும், போலி அரசியற் கிளர்ச்சியும் நாட்டின் விடுதலைக்கும், மக்கள் விடுதலைக்கும் கேடு சூழ்வதென்றே சொல்லுவேன். நாட்டு விடுதலைக்குச் செய்ய வேண்டிய வேலையும், மக்கள் விடுதலைக்குச் செய்ய வேண்டிய வேலையும் வேறு இருக்கின்றது. அதையே தான் நான் செய்து கொண்டுவருகிறேன். அதற்காக இன்னமும் செய்யத்தயாராயிருக் கிறேன். அந்த வேலை சர்க்காரை



RangaRakes
tamilnavarasam.com

"ஒழிப்பதாலோ" அவர்களை "ஸ்தம்பிக் கச்" செய்வதாலோ ஆகின்ற காரியமல்ல. எனது தொண்டிற்கு எதிரிகள் அரசாங்கமேயல்ல. அரசாங்கத்தைவிட மோசமானவர்கள், எதிரியானவர் கள் நம் நாட்டவர்களிலேயே இருக்கின்றார்கள். மக்களுக்கு அறிவை வளர்த்து மனிதத் தன்மையை அடையச் செய்தால் தான் அவர்கள் விடுத லைக்கு லாயக்காவார்கள். நமது மக்களுக்குப் பெரும் பாலும் பகுத்தறிவே பூஜியம். அடிமைத்தனத்தில் அவர்களுக்குச் சிறிது கூட வெறுப்புமில்லை. இந்த நிலையிலுள்ளவர்கள் பேரால் யாரோ சிலர் பூரண சுயேச்சையும் சுய ராஜ்யமும் கேட்பது முழுப் புரட்டேயாகும். அதில் சிறிதும் நாணயமில்லை என்று உறுதியாகச் சொல்லுவேன். உண்மையான தேசிய வாதிக்கு இப்போது அரசாங்கத்தோடு போர் கிடையாது. இந்த நாட்டில் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே தேசீயவாதிகள் கிடையாது. இந்த தேசம் பல ஆயிரக் கணக்கான வருஷங்களாக சுயராஜ்யத்துடனாவது பூரண சுயேச்சையுட னாவது இருந்ததென்று யாராலாவது சொல்ல முடியுமா? ஏன் அப்படியிருக்க முடியவில்லை யென்பதற்குண்டான குறைகளை கண்டு பிடித்து அவை களை நீக்க வேண்டாமா? ஒருவனையொருவன் தாழ்த்தி யடக்கிச், சுயேச்சை யில்லாமல் செய்வதே இந்த நாட்டு மத தர்மமாகவும், நீதி தர்மமாகவுமிருக் கின்றது. இந்த முறை யொழிந்தாலல்லது நாடு உருப்படாது. அதைக் கவனிக் காமல் நாம் ஒரே தவறுதலை 2000 வருஷமாகச் செய்து வருகின்றோம். இப்போதும் அதையே செய்கின்றோம்.

இந்தியாவில் வருடமொன்றுக்குப் பதினாயிரக்கணக்கான பட்ட தாரிகள் புதிது புதிதாகப் பெருகுகிறார்கள். இவர்கள் எல்லோருக்குமே உத்தியோகம் தான் வேண்டியிருக்கிறது. அதற்கெல்லாம் அரசாங்கத்தைத் தவிர வேறு மார்க்கமில்லாமல் செய்து கொண்டார்கள். ஆகவே அரசாங்க உத்தியோகம் அதிகப்படுத்த வேண்டுமானாலும், அரசாங்கப் பெரும் பதவி யாருக்காவது வேண்டுமானாலும் பாழும் தேசியத்தைத் தவிர வேறு வழியில்லை. கைத்தொழில் செய்வதென்றால் சில வகுப்புக்கு பழக்க முமில்லை, உரிமையுமில்லை. ஆகவே பெரும்பாலும் உடலினால் பாடுபட முடியாத சோம்பேரிகளாலேயே உத்தியோகங்களை எதிர்பார்த்து இன்றைய "தேசியம்" தலைவிரித்தாடுகின்றது. இதற்கும் இது போன்றவைகளுக்கு மிடம் கொடுத்துக் கொண்டே வந்தால், ஆட்சியின் இன்றைய முறை இன்னும் பலப்படத்தான் உதவுமே தவிர அதை முழுதும் நமது நன்மைக்கே அனுகூலமான ஆட்சியாக மாற்றமுடியாததாகிவிடும். சர்க்காரின் அடிமை களாயிருந்து அவர்களுக்கு அனுகூலமானபடியெல்லாம் ஆட்சியை நடத்திக் கொடுப்பது முதலில் ஒழிய வேண்டும். அதை யாரும் கவனிப்ப தேயில்லை. ஆகையால் தேசாபிமானிகள் என்பவர்கள் சர்க்காரை எதிர்ப் பதைவிட அதை கண்டிப்பதை விட அதை நடத்திக் கொடுப்பவர்களை எதிர்க்கவும் கண்டிக்கவும் செய்ய வேண்டும். தப்பிதத்தின் அஸ்திவாரத் தைக்



கவனியாமல் படும்பாடு வீணான பாடாகத்தான் முடியும் என்பதாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே, சகோதரர்களே! நன்றாய் ஆலோசித் துப் பாருங்கள். பிறகு உங்களுக்குச் சரியென்று பட்டதைச் செய்யுங்கள்.

*குறிப்பு : 27-07-1930 ஆம் நாள் மாயவரம் ஆனந்த தாண்டவ ஹாலில் ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு – சொற்பொழிவு – 03.08.1930**



RangaRakes tamilnavarasam.com

# தேர்தல்

## II

சட்டசபை தேர்தல்களுக்கு நிற்பவர்கள் தங்களது நியமனச் சீட்டுகளைத் தாக்கல் செய்து விட்டார்கள். அவர்களில் பெரும்பாலோரும் ஏதாவது ஒரு கட்சியின் பெயரைச் சொல்லிக் கொண்டே நியமனச் சீட்டுத் தாக்கல் செய்திருப்பார்கள். சிலர் ஜெயிக்கும் கட்சியை எதிர்பார்த்து எதில் வேண்டுமானாலும் சேருவதற்கு வசதி வைத்துக் கொண்டு நியமனச் சீட்டைத் தாக்கல் செய்திருப்பார்கள்.

பொதுவாக தேர்தல்களில் நிற்கப்படுபவர்களில் பெரும்பான்மை யோரின் யோக்கியதைகளையும் நாணயங்களையும் குறித்து முன் ஒரு தலையங்கத்தில் விவரமாய் கூறியிருக்கிறோம். கொள்கையும் நாணயமும் எப்படி இருந்தபோதிலும் தேர்தல் சமயங்களில் கட்சியின் பேரால் நிற்பவர் கள் தங்கள் கட்சிக்காக என்று கட்சியின் சார்பாய் பொதுமக்களின் மனதைக் கவரத்தக்க ஏதாவது சில கொள்கைகளை வெளியிடுவது என்பது எங்கும் நடைபெற்று வரும் வழக்கமாகும். அதுபோலவே இத்தேர்தலிலும் நமது மாகாண சட்ட சபைக்கு நிற்கும் இரண்டு முக்கிய கட்சியாரும் தங்கள் தங்கள் கொள்கைகள் என்பதாக சில விஷயங்களை அறிக்கையின் மூலம் வெளி யிட்டு விட்டார்கள். இவ்விரு கக்ஷி அறிக்கைக் கொள்கைகளும் நம்மைப் பொறுத்தவரை தேர்லுக்கு ஓட்டு வாங்குவதற்காக வெளியிட்ட அறிக்கைக ளாகும் என்பதே நமது அபிப்பிராயமாகும். ஆனபோதிலும் இருவர்களின் உண்மையான கொள்கைகளை நாம் அறிய முடியவில்லை என்று சொல்லி விடுவதற்கில்லை. ஜஸ்டிஸ் கட்சி 6 வருஷ காலம் அதிகாரத்தில் இருந்த போது செய்திருக்கும் வேலைகளையும் சுதந்திர தேசியக் கட்சி என்னும் இப்போதைய மந்திரி கட்சி நாலு வருஷ காலம் அதிகாரத்தில் இருந்து கொண்டு செய்து வந்திருக்கும் வேலைகளையும் கவனித்துப் பார்க்க பொது மக்களுக்கு தக்க சௌகரியம் கிடைத்தே இருக்கின்றது.

ஆதலால் இரு கட்சியாரும் விசேஷ சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் ஒழிய இனியும் அவைகளையே தான் - அவற்றை அனுசரித்தே தான் நடந்து கொள்வார்கள் என்பதாகவே அறிவுள்ள எவரும் முடிவு செய்து



கொள்வார்கள். இரண்டு கட்சியும் தனது அதிகார காலத்தில் அரசியல் வேலை களைக் காட்டிலும் சமூக சீர்திருத்த வேலைகளில் மிக்க கவனம் செலுத்தி தக்க வேலைகள் செய்திருக்கின்றன வென்பதை சீர்திருத்தவாதிகள் யாவரும் ஒப்புக் கொள்ளுவார்கள். இதற்கு உதாரணம் சுருக்கமாக வேண்டு மானால் இரு கட்சியும் சீர்திருத்த விரோதிகளான பார்ப்பனர்கள், விரோத மாகவே கருதி வருகின்றார்கள் என்பதினாலேயே அறிந்து கொள்ளலாம்.

இரு கட்சிகள் வெளியிட்டுள்ள அறிக்கைகளிலும் அரசியல் சம்மந்த மான கொள்கைகளைப் பற்றி வெளியிட்டிருப்பதற்கும், அக்கட்சியார்களின் மனதில் இருப்பதற்கும் உள்ள வித்தியாசம் நமக்கு நன்றாய் தெரியும். அரசியல் கிளர்ச்சிக்காரர்களின் வலையில் பட்டவர்களைச் சமாதானப் படுத்தவும் ஒரு கட்சி மற்றொரு கட்சியைக் குற்றம் சொல்வதன் மூலம் தோற்கடிக்கவும் எண்ணம் கொண்டு கோர்த்த வெறும் வார்த்தைகளேயாகும். ஆகவே அதைப்பற்றி நமக்கு சிறிதும் கவலையில்லை.

பொதுவாக இரண்டு கட்சியும் சைமன் கமிஷனை ஆதரித்தேயிருக் கின்றது; வரவேற்றுமிருக்கின்றது. அக்கட்சியார் இருவரும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை சைமன் கமிஷனுக்கு ஒரு முகமாக சமர்ப்பித்தவர்களே யாவார்கள். சட்ட மறுப்பியக்கத்தில் சேராதவர்கள் என்பதோடு மாத்திர மல்லாமல் சட்ட மறுப்பு இயக்கத்தை அடக்கும்படி சர்க்காருக்குத் தெரிவித் துக் கொண்டவர்களுமாவார்கள்.

ஆனால் சட்டமறுப்பு மூலமாய் நிரபராதிகள் கஷ்டப்பட்டதற்கு வருந்தினவர்களுமாவார்கள். இது சம்மந்தமாக உபயோகித்த வார்த்தை களில் மாத்திரம் வேண்டுமானால் ஒரு கட்சிக்கும் மற்றொரு கட்சிக்கும் சிறிது வித்தியாசமிருக்கலாம்.

இது சகஜமேயாகும். ஏனெனில் அதிகாரத்தில் இருப்பவர்கள் சில பொறுப்பை சுமந்து கொண்டிருப்பவர்களானதால் அவர்கள் சற்று அடக்க மாக பேச வேண்டியதும், அது இல்லாதவர்கள் சற்று துடுக்கமாகப் பேசுவ தும் இயற்கையானதேயாகும்.

நமது நாட்டைப் பொறுத்தவரை அதாவது தமிழ்நாட்டைப் பொறுத்த வரைப் பார்ப்பனரல்லாதார்களில் யார் அதிகாரத்திற்கு வந்தாலும் அவர்கள் சீர்திருத்தத் துறையில் வேலை செய்ய கட்டாயப்படுத்தப் படுபவர்களே யாவார்கள். ஏனெனில் இது சமயம் தமிழ்நாடு சீர்திருத்தத் துறையிலேயே செல்வாக்குப் பெற்றிருப்பதால் எவரும் அதை மதித்துத்தான் ஆக வேண்டும். அந்தப்படி அதை மதித்து அதற்கு இணங்காதவர்கள் எவ்வளவு மெஜாரிடியுடன் சட்டசபையில் வீற்றிருந்தாலும் வெளியில் தலைகாட்ட சிறிதும் செல்வாக்கு இருக்க முடியாது.



RangaRakes tamilnavarasam.com

ஆகையால் பொதுவாக இத்தேர்தலில் அடியோடு முடியா விட்டா லும் கூடுமானவரையாவது அவர்களது அளவுக்கு மேல் பார்ப்பனர்களை நுழைய விடாமல் செய்ய வேண்டியதைத் தவிர தேர்தலில் நம் போன்றவர் களுக்கு வேறு வேலை இருக்காது என்றே கருதுகிறோம். மற்றபடி இரண்டு கக்ஷியையும் நாம் பொதுவாக மதித்து வந்திருந்தும் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் நெல்லூரில் ஏமாற்றினதையும் நாணயத் தவறுதலாய் நடந்து கொண்டதையும் மக்களை மறக்கும்படி செய்ய அது ஒரு முயற்சியும் செய்யவில்லையானதினால் அதன் பலனை அவர்கள் அடைந்தே விட்டார்கள். இதற்கு ஆதாரம் என்ன வென்றால், அது **நெல்லூரில் சட்டசபைக்கே நடவடிக்கைகளில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொண்டால் ஜஸ்டிஸ் கக்ஷிக்கே ஆபத்து வந்து விடும்** என்று மாய்மால கூக்குரலிட்டு விட்டு மூன்று மாதத்திற்குள்ளாகவே **ஜஸ்டிஸ் கக்ஷியில் பார்ப்பனர்களை சேர்க்காவிட்டால் ஜஸ்டிஸ் கக்ஷியே அடியோடு போய்விடும்** என்று சொல்லவேண்டிய நிலைமைக்கு வந்து விட்டதே போதுமானதாகும்.

இதற்கு மேலும் அக்கக்ஷித் தலைவர்களுக்கு தங்கள் தவறுகளுக்கு புத்திக் கற்பிக்க வேண்டிய காரியம் ஒன்றை அவர்கள் எதிர்ப்பார்கள் என்று நாம் நினைக்கவில்லை. இது வினையின் பயனேயாகும்.

இவை நிற்க ஓட்டர்களுக்கு நமது அபிப்பிராயத்தை தெரிவித்துக் கொள்ள வேண்டிய முறையில் சில வார்த்தைகளைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றோம். அதாவது:- தேர்தல்களில் ஓட்டர்கள் எப்பொழுதும் கக்ஷிகளை கவனிக்கக்கூடாது என்பதேயாகும். இதை வெகுநாளாகவே நாம் சொல்லி வந்திருக்கின்றோம். நமது நாட்டில் காங்கிரசானது ஒரு காலத் தில் செல்வாக்காய் இருந்து அந்த செல்வாக்கின் பேரால் முனிசிபாலிட்டி முதலிய தேர்தல்களை காங்கிரஸ் கைப்பற்ற வேண்டும் என்பதாக தீர்மானித் துக் கொண்டு பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் காங்கிரஸ் கக்ஷி அபேக்ஷகர்களாய் நின்ற காலங்களில் நாம் காங்கிரஸ் கமிட்டித் தலைவராயும், காரியதரிசியாயும் அதில் முக்கிய அங்கத்தினராயும் இருந்த காலங்களிலும் கூட **"கக்ஷிப் பெயரைப் பார்க்காதீர்கள் நிற்கும் ஆசாமிகளின் யோக்கியதையையும், நாணயத்தையும் பார்த்து ஓட்டுச் செய்யுங்கள்"** என்றுதான் சொல்லியும், எழுதியும் வந்ததோடு இதை யனுசரித்து பல துண்டுப் பிரசுரங்களும் பதினாயிரக்கணக்காய் வெளிப்படுத்தியும் இருக் கின்றோம். கக்ஷிகள் என்பது அனேகமாய் மந்திரி பதவிக்கும் உத்தியோக ஆசைக்கும் தான் வேண்டியதாய் இருக்கும். தனிப்பட்ட நபர்களோ பொது நலக்காரியங்களுக்கு வேண்டியவர்களாய் இருப்பார்கள். உதாரணமாகச் சொல்லுவோமானால் திருவாளர்கள் W.P.A.சௌந்தரபாண்டியன், R.K.ஷண்முகம், A.T.பன்னீர்செல்வம் போன்றவர்கள் ஜஸ்டிஸ் கக்ஷியின் பேரால் நிற்பார்களானால் ஓட்டர்கள் ஜஸ்டிஸ் கக்ஷியினிடத்தில் எவ்வித அதிருப்தி உள்ளவர்களாயிருந்தாலும் மேற்கண்ட கனவான்களையும் அவர்கள்



போன்றவர்களையும் கக்ஷியின் காரணமாக தள்ளிவிட முடியாதென்றே சொல்லுவோம். அது போலவே திருவாளர்கள் S. முத்தய்யா முதலியார், Dr. சுப்பராயன் போன்றவர்களையும் சுதந்தர தேசியக் கக்ஷி என்பதின் சார்பாக நின்ற போதிலும் அக்கக்ஷியினிடம் திருப்தி இல்லாதவர்கள் அக்கனவான்களை தள்ளிவிட முடியாதென்றே சொல்லுவோம். ஏனெனில் அவரவர்கள் தங்கள் தங்கள் ஆதிக்கங்களின் கீழ் இருந்த ஸ்தாபனங்களின் மூலம் செய்திருக்கும் வேலைகளைப் பார்த்தே இதைச் சொல்லுகின்றோம். இவ்விஷயத்தில் நமது அளவுகோல் சீர்திருத்த விஷயத்திலும் பார்ப்பனரல்லாதார் விஷயத்திலும் அனுகூலமாயிருந் தார்களா? இருக்கின்றார்களா? என்பது வேயாகும். இவைகளைத் தவிர மற்ற விஷயங்களில் தங்கள் தங்கள் சவுரியங் காரணமாக தாக்ஷண்யம் காரணமாக கக்ஷி காரணமாக சில தந்திரங் கள் செய்திருந்தாலும் இருக்கலாம். அதாவது இரு கக்ஷியாரும் பார்ப்பனர் களை தங்கள் தங்கள் கக்ஷியில் சேர்க்க தங்களுக்கு உதவிசெய்ய அவர்களை மானமிழந்து கெஞ்சுகின் றார்கள். இரு கக்ஷியாரும் வருணாசிரம - புராண மூடக்கொள்கையுடைய ஜாதி மத ஆணவம் கொண்ட ஆசாமிகளை தங்கள் கக்ஷிகளின் பேரால் நிறுத்தி தங்களுக்கு அவர்களுடைய ஆதரவைத் தேடுகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் காங்கிரஸ் கொள்கைக்காரர்களையும் சுயமரியாதை கொள்கை விரோதிகளையும் தங்கள் தங்கள் கக்ஷியில் சேர்த்துக் கொண்டு தான் இருக்கின்றார்கள். அன்றியும் அப்பேர்ப்பட்டவர்களை உத்தேசித்து தங்கள் தங்கள் கொள்கைகளைக் கூட சிறிது விட்டுக் கொடுக்கவும் சம்மதிக்கிறார்கள். ஆகவே இவைகளையெல்லாம் நடு நிலைமையில் இருந்து பார்த்தால் இப்போதைய தேர்தல்களுக்கு இவை அவசியமான தந்திரங்களாகவே இருந்து வருகின்றது. ஆனாலும் ஓட்டர்கள் ஞானமுடையவர்களாகி யோக்கியமும் நாணயமும் உடையவர்களாகின்ற வரையில் மேற்கண்ட புரட்டுகளுக்கு நாட்டில் செல்வாக்கு இருந்து கொண்டுதான் இருக்கும். ஆதலால் இந்த தேர்தல்களில் ஓட்டர்கள் யாரும் கக்ஷிப் பெயர்களைக் கண்டு விருப்பு வெறுப்புக் கொள்ளாமல் அபேக்ஷகர்களின் தனிப்பட்ட யோக்கியதைகளையும் முன்பின் அவர்கள் செய்த காரியங்களையும் செய்யக் கூடிய சவுகரியம் இருப்பதையும், கவனித்து அபேக்ஷகர்களை தெரிந்தெடுக்க வேண்டுவதே தற்கால நிலையில் முறையாகுமென்று வற்புறுத்துகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 03.08.1930**



RangaRakes tamilnavarasam.com

# மலாய் நாட்டு வக்கீல்களின் 'தேசியம்'

மலாய் நாட்டில் மலாக்கர் என்கின்ற பட்டணத்தில் கள்ளிக்கோட்டை திருவாளர் கே.பி. கேசவமேனன் அவர்கள் சுமார் 3, 4 ஆண்டுகளாக பிரபல பாரிஸ்டராக இருந்து வருகின்றார்கள். அவர் இப்போது தன்னை F.M.S. பாரிலும் வக்கீலாக சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கோலாலம்பூர் சீப் ஜட்ஜிக்கு விண்ணப்பம் போட்டதில் அவரைச் சேர்த்துக் கொள்வதற்கு கோலாலம்பூர் வக்கீல்கள் ஜட்ஜிக்கு ஆட்சேபனை சொன்னதாகவும் அவ்வாட்சேபனை என்ன வென்றால் திரு. கே. பி. கே. மேனன் அவர்கள் ராஜத் துரோக விஷயமாய் சிறைசென்றவர் என்று சொன்னார்களாம். அதற்கு பாரிஸ்டர் திரு. கே. பி. கே. மேனன் அவர்கள் தான் வைக்கம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டதால் சிறை செல்ல நேரிட்டதென்றும் மதராஸ் ஹைகோர்ட்டில் மிக்க செல்வாக்குப் பெற்ற பாரிஸ்டர் என்றும் எடுத்துக் காட்டினாராம். இதற்காக கனம் ஜட்ஜி அந்த விண்ணப்பத்தை பைசல் செய்ய 2 *மீ* வாய்தா தள்ளிப் போட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. மலாய் நாட்டு வக்கீல்கள் இந்த விஷயத்தில் இவ்வித ஆட்க்ஷேபனை கொண்டு வந்ததை நாம் பலமாகக் கண்டிக்கின்றோம். வக்கீல்கள் அரசியல் சம்மதமான கிளர்ச்சிகளில் ஈடுபடுவதும், தண்டனைகள் அடைவதும் அவர்களின் இப்போதைய தொழில் முறையில் முக்கிய அம்சமாகி விட்டது. இந்தியாவில் அனேக வக்கீல்கள் தண்டனை அடைந்து இப்பொழுது வக்கீல்களாகவே இருக்கின்றார்கள். இது ஒருபுறமிருக்க, திரு. K. P. கேசவமேனன் அவர்கள் ராஜத் துவேஷ விஷயமாய்ச் சிறைச் சென்றவர் அல்லவென்று உறுதியாய்ச் சொல்லுவோம். சென்னை ஹைகோட்டில் அவர் மிக்க பிரபல வக்கீலாக இருந்தவர். இந்தியாவில் பிரபலமாயிருந்த கனவான்கள் யாராவது தேச சேவையின் பலனாய் உண்மையான தியாகம் செய்தவர்கள் இருப்பார்களானால் அவர்களில் திரு. K.P.K. மேனன் முதன்மையானவராவார். மலையாள தேச முழுமையும் K.P.K. மேனன் என்றால் கண்களில் நீர் விடுவார்கள். அப்பேற்பட்ட உண்மையான தியாகியானவர். திருவாங்கூர் ராஜியத்தில் வைக்கம் என்னும் ஒரு பிரபல கோயில் உள்ள ஊரில் உள்ள பொதுத் தெருவில் ஈழவர்கள் நாடார்கள் முதலியவர்கள் கூட நடக்கக் கூடாது என்று



தடைசெய்யப்பட்டத் தெருவில் அவர்களுக்குத் தெருப் பாத்தியம் வாங்கிக் கொடுக்கச் செய்யப்பட்ட முயற்சியில் திருவாங்கூர் அரசர் என்னும் சுதேச ராஜாவால் 6 *மீ* தண்டிக்கப்பட்டு ஜெயிலிலும் மிக்க மரியாதையாய் நடத்தப் பட்டவர். அத்தண்டனையின் போது நாமும் அவரும் திருவாங்கூர் ஜெயிலில் ஒன்றாகவே தண்டனை அனுப்பவித்தவர்களாவோம். கடைசியாக காலாவதி தீருமுன் எங்களை விடுதலை செய்து விட்டதோடு திரு. கே. பி. கே. மேனனை எதற்காகத் தண்டித்தார்களோ அந்த காரியமான வைக்கம் ரோட்டுகளை எல்லோரும் நடக்கும்படியாக உத்தரவு கொடுத்து விட்டார்கள். ஆகவே திரு. கே. பி. கே. மேனன் அவர்கள் செய்த காரியம் குற்றமா அல்லது திருவாங்கூர் அரசாங்கம் அவரை சிறைபடுத்தினது குற்றமா என்பதை யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

ஆகவே இப்படிப்பட்ட திரு. மேனன் அவர்களை மலாய் வக்கீல்கள் சிலர் ஆட்சேபிப்பதிலிருந்து அவர்கள் தேசீயமும், சமூக சீர்திருத்தமும், அரசியல் முற்போக்கு முயற்சியும் எப்படிப்பட்டதாயிருக்கும் என்பதை ஒருவாறு உணரலாம்.

நம்மைப் பொறுத்தவரை இவ்வித ஆட்சேபனைகள் அறியாமையினாலோ அல்லது பொறாமையாலோ தான் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று கருதுகின்றோம். இது வக்கீல் தன்மையின் பிறவிக் குணமாம் போலும்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 03.08.1930**



RangaRakes tamilnavarasam.com


10

குடி அரசு

1930 ஆகஸ்டு 10

ஆர். கே. ஷண்முகம்.



# ஆர். கே. ஷண்முகம்

உயர்திருவாளர் கோவை ஆர். கே. ஷண்முகம் அவர்களை இந்தியரில் அறியாதார் யாரும் இருக்க முடியாதென்றே கருதுகின்றோம். மேல் நாட்டவர்களும், அவரைப்பற்றி விசேஷமாக அறிந்திருப்பார்கள். சிறப்பாக தமிழ் நாட்டில் தெருவில் விளையாடும் குழந்தைகள் முதல் அரசர் வரை அவரைப் பற்றி நன்றாய் உணர்ந்திருக்கிறார்கள். அன்றியும் சுயமரியாதை உலகத்திலும், சீர்திருத்த உலகத்திலும் திருவாளர் சௌந்தரபாண்டியன் அவர்களைப் போலவே - சில விஷயங்களில் அவருக்கு மேலாகவே திரு. ஷண்முகம் அவர்கள் பெயரும் ஒவ்வொரு வீட்டிலும் சாதாரணமாக தங்கள் தங்கள் வீட்டு நபர்களைப் போலவே வழங்கப்பட்டு வருகின்றது என்பதைப் பற்றி நாம் யாருக்கும் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

திரு. ஷண்முகம் அவர்கள் அறிவு, திறன், ஆராய்ச்சி, அனுபவ ஞானம், முயற்சி, கல்வி, செல்வம் ஆகிய அருங்குணங்களும், தன்மை களும் ஒன்று போலவே அமையப் பெற்றவராவார். அப்பேர்ப் பட்டவரின் சேவையானது பொதுவாக சீர்திருத்த உலகத்திற்கும், அரசியல் என்கிற உலகத்திற்கும் மிக்க இன்றியமையாதது என்பதை எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

ஆகவே அவர் சமீபத்தில் நடைபெறப்போகும் இந்திய சட்ட சபைத் தேர்தலுக்கு (எம். எல். ஏ)க்கு மறுபடியும் ஒரு அபேக்ஷகராக நிற்கின்றார் என்ற சேதி கேட்டு இந்திய நாட்டில் மகிழ்ச்சியடையாதார் யாருமே இருக்க முடியாது.

சென்ற அதாவது நான்கு வருஷத்திற்கு முந்திய தேர்தலில் அவர் இந்தியாவில் இல்லாமல் இருக்கும் போதே அதாவது அவர் ஆஸ்ட் ரேலியா கண்டத்தில் இருக்கும் போதே போட்டியன்னியில் ஏகமனதாய் தெரிந்தெடுக்கப்பட்டவராவார். சமீபத்தில் காங்கிரஸ் கட்டளைப்படி தனது ஸ்தானத்தை ராஜினாமா கொடுத்துவிட்டு சுதாவில் மறுபடி நின்றபோதும் போட்டியன்னியில் தெரிந்தெடுக்கப்பட்டவராவார். அப்படிப்பட்டவருக்கு இம்முறை தேர்தலில் போட்டி ஏற்பட்டதானது வருந்தத்தக்கதேயாகும். அப்



RangaRakes
tamilnavarasam.com

போட்டியும் சாதாரணமாகப் பொது நலத்தை பொறுத்தோ ஸ்தானத்தைப் பொறுத்தோ அல்லது பதவியை அபேக்ஷித்தோ அல்லாமல் கக்ஷியையும், சொந்த அபிப்பிராய பேதங்களையும் கட்சி பேதத்தையும் கருதி திரு. ஷண்முகம் "போட்டியன்னியில் தெரிந்தெடுக்கக் கூடாது" என்கிற எண்ணத்தின் மீது அவருக்குத் தொந்திரவுக் கொடுக்க ஆசைப்பட்டு ஏற்படுத்தப்பட்ட போட்டியாக நமக்கு காணப்படுவதால் அதற்காக நாம் பெரிதும் வருந்த வேண்டியிருக்கின்றது. திரு. ஷண்முகம் அவர்கள் சீர்திருத்தத் துறையில் வேலை செய்ய வேண்டும் என்கின்ற ஆசையினாலேயே இந்திய அரசாங்கத்தில் பெரிய சம்பளமாகிய *மீ* 3000, 4000 ரூ, போன்ற வருமானம் கிடைக்கக் கூடிய டாரிப் போர்ட் (வரிவிதிக்கும் சபை) மெம்பர் பதவியையும் லக்ஷியம் செய்யாமல் தனக்கு வேண்டாமென்று விட்டு விட்டார். இந்த விபரங்களை பொது மக்கள் இந்து, சுதேசமித்திரன் ஆகிய பார்ப்பன பத்திரிகைகளிலும் பார்க்கலாம்.

நிற்க, சென்னை மாகாணத்திலிருந்தும் சிறப்பாக தமிழ் நாட்டிலிருந்தும் இந்திய சட்டசபைக்கு 10க்கு 9 ஸ்தானங்களுக்கு பார்ப்பனர்களாகவே அதிலும் அய்யங்கார்களாகவே சிறப்பாக சீர்திருத்த விரோதியும் வருணாசிரமக் கொள்கையுடையவருமான பார்ப்பனர்களாகவே போய்க் கொண்டிருப்பது வழக்கம். அவற்றுள் திரு. ஷண்முகம் ஒருவர் மாத்திரம் பார்ப்பனரல்லாதாராகவும், சிறப்பாக வர்ணாசிரம எதிரியாயும் சீர்திருத்தக் கொள்கை உடையவருமாக போய் கொண்டிருந்தார். அது மாத்திரமல்லாமல் நமது நாட்டுப் பார்ப்பனர்கள் சென்னை மாகாணத்துப் பார்ப்பனரல்லாதார்கள் "போதிய அறிவும், ஞானமும், செல்வாக்கும் இல்லாதவர்கள் என்றும் அவர்கள் தேசத்துரோகிகள், சிறப்பாக தேசீயத்திற்கு விரோதிகள்" என்றும் வெளி மாகாணக்காரருக்கு பிரசாரம் செய்து பார்ப்பனரல்லாதார் மீது அலக்ஷியமும் அசூயையும் ஏற்படும்படி செய்திருந்த விஷமக் கூற்றுகளையெல்லாம் திரு. ஷண்முகம் இந்திய சட்ட சபைக்குச் சென்ற பிறகு தான் உடைத்துப் பொடியாக்கி குழி வெட்டிப்புதைக்கப்பட்டதை பார்ப்பனர்களே ஒப்புக் கொண்டு அவர் மறுபடியும் இந்திய சட்டசபைக்கு செல்ல முடியாமல் முயற்சிக்கிறார்கள் என்றால் மற்றபடி பார்ப்பனரல்லாதார்க்குத் தெரியாமல் இருக்கும் என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம். திரு.ஷண்முகம் அவர்கள் இந்திய சட்டசபைக்கு சென்றதின் பயனாய் பார்ப்பனரல்லாதார் பெருமையையும், திறமையையும் இந்தியாவும் உலக மும் அறிய முடிந்தது என்பது மாத்திரமல்லாமல் சென்னை மாகாணத்துப் பார்ப்பனர்கள் தேசீயவாதி, மிதவாதி, அமிதவாதி உட்பட எல்லோருடைய யோக்கியதையும் வெளிப்படுத்தப்பட்டதானது எல்லாவற்றையும் விடப் போற்றத்தக்கதும் பாராட்டத்தக்கதுமான காரியமாகும். இன்றைய தினமும் திரு. ஷண்முகம் இந்திய சட்டசபையில் இருந்ததின் மூலம் வெளிமாகாணத் தலைவர்களின் சம்மந்தம் வைத்துக் கொண்டிருப்பதாலேயே தமிழ் நாட்டுப் பார்ப்பனர்களின் எல்லா இந்திய தேசியத் தலைமை ஸ்தானங்கள் எல்லாம்



RangaRakes

பறிக்கப்பட்டு அவர்களும் மூலையில் உட்காரப்பட வேண்டியவர் களாகி விட்டார்கள் என்பதை எவரும் நாம் சொல்லித் தெரிய வேண்டியவர்களாயிருக்க மாட்டார்கள் என்றே எண்ணுகின்றோம்.

இவ்விஷயங்கள் எல்லாம் பொது மக்கள் நன்றாய் உணர்ந்திருந்தாலும் இன்றைய தினமும் இந்திய சட்டசபைக்குத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பார்ப்பனரல்லாதார்கள் சிறிதும் ஆபேட்சிக்காமல் அலக்ஷியமாகவே இருந்து கொண்டு பார்ப்பனர்களே பெரிதும் அங்குப் போய்ச் சேரும்படி செய்வது முன்னும் வழக்கமாய் இருந்தாலும் இப்போதும் வழக்கமாய் இருக்கிறது.

உதாரணமாக கோவை, சேலம், வட ஆற்காடு ஆகிய மூன்று ஜில்லாக்களும் சேர்ந்த தொகுதி தவிர மற்றத் தொகுதிகளில் எல்லாம் பார்ப்பனர்களே இருந்துவருகின்றார்கள் என்பதோடு வரப்போகும் தேர்தல் களுக்கும் சென்னை, கோவைத் தவிர மற்றவைகளில் எல்லாம் பார்ப்பனர்கள் அபேக்ஷகர்களாய் இருக்கிறார்கள். அன்றியும் இதில் மற்றும் ஒரு ஆபத்து என்ன வென்றால் மேல் கண்ட பார்ப்பன அபேக்ஷகர்கள் எல்லாம் வருணாசிரமக் கொள்கையின் மீதும் சாரதா சட்டத்தை அழிப்பது அல்லது திருத்துவது என்கின்ற கொள்கையின் மீதுமே தான் நிற்கின்றார்கள். இது செங்கற்பட்டு, தென் ஆற்காடு ஜில்லாத் தொகுதிக்கு நிற்கும் பெரிய "சீர்திருத்தவாதி"யான திரு. டி. ரங்காச்சாரியின் விளம்பரத்தைப் பார்த்தால் தெரியும். ஆகவே வருணாசிரமத்தை அடியோடு எதிர்க்கும் பார்ப்பனரல்லாதார் அபேக்ஷகர்கள் இன்றைய தினம் சென்னை மாகாணத்திலாகட் டும், தமிழ் நாட்டிலாகட்டும் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்களைத் தவிர வேறு யாருமே இல்லை என்றும் உறுதியாகச் சொல்லுவோம்.

அது மாத்திரமல்லாமல் அவர் வருணாசிரமத் தருமத்திற்கு விரோதமாய் இருக்கின்றார் என்று சொல்லி அந்தக் காரணத்தால் அவரை பாமரமக்களிடம் குற்றமும், பழியும் சுமத்தி தோற்கடிக்கச் செய்து விடலாம் என்கின்ற எண்ணத்தின் மீதே திரு. ஷண்முகம் அவர்களுடன் போட்டிப் போட எதிர் அபேக்ஷகருக்கு தைரியம் ஏற்பட்டதென்பதே நமது அபிப்பிராயமாகும். ஆகவே அவரது தேர்தலில் அவர் வெற்றி அடைவதும், தோல்வி அடைவதும் தமிழ்நாடும் பார்ப்பனரல்லாத மக்களும் வருணாச் சிரமத்தை விரும்பி அதன் கொள்கைப்படி தாங்கள் சூத்திரர்களாக விரும்பு கிறார்களா அல்லது அப்பட்டத்தை வெறுக்கின்றார்களா என்கிற பரீக்ஷை முடிவாகத்தான் இருக்கின்றது. நிற்க திரு. ஷண்முகம் அவர்களுக்கும், போட்டி அபேக்ஷகருக்கும் உள்ள தாரதம்மியமும், வெற்றிக்குள்ள சவுகரியமும் இத்தேர்தலில் பொது மக்கள் கடமையும் பின்னால் தெரிவிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 10.08.1930**



tamilnavarasam.com

## கும்பகோணம் தாலுகா

# இரண்டாவது பார்ப்பனரல்லாதார் மகாநாடு

அன்புள்ள சகோதரிகளே! சகோதரர்களே!!

நான் இங்கு வந்தது முதல் இதுவரையிலும் எனக்காக வென்று செய்யப்பட்ட ஆடம்பரங்களையும், ஊர்வலங்களையும் என்னைத் தலைவனாக பிரரேபிப்பதன் முகத்தான் என்னைப் பற்றி பலர் பேசிய புகழுரைகளையும் எனக்காக என்று இப்போது வாசித்துக் கொடுத்த உபசாரப் பத்திரங்களில் எழுதப்பட்டிருக்கும் வாக்கியங்களையும் கவனித்துப் பார்த்ததில் நான் மிக்க வெட்கப்பட வேண்டியவனாய் இருக்கிறேன். ஏனெனில் எந்த மூட நம்பிக்கைகளையும், குருட்டு பக்தியையும் அடியோடு ஒழிக்க வேண்டுமென்று முயற்சி செய்கிறேனோ, அவற்றை அதை யொழிப்பதற்காகக் கூடிய இந்த மகாநாட்டில் உங்களாலேயே என் விஷயத்தில் உபயோகப் படுத்தப்படுவதை நான் பிரத்தியட்சமாகப் பார்க்கிறேன். இவற்றை அநுமதித்துக் கொண்டிருக்கிற நான் எந்த விதத்தில் இத் தொண்டில் வெற்றியடைய முடியும்? அல்லது என்னைப் பொறுத்த அளவிலாவது அவற்றிலிருந்து திருத்தமடைகிறேனென்று எப்படிச் சொல்ல முடியும்? ஆகவே இம்மாதிரியான செய்கைகளை தயவுசெய்து அடியோடு இனி விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மக்களுடைய உணர்ச்சிக்காகவும் பிரசாரத்திற்காகவும் செய்யப்படுகிறதென்று சொல்லப்படுவதனாலும் அதற்கும் சிறிதாவது அளவும், பொருத்தமும் வேண்டும். இப்படிச் சொல்வதற்கு என்னை மன்னிக்க வேண்டுமாய் கோருகிறேன்.

இந்த சிறிய கிராமத்தில் இவ்வளவு பெரிய எதிர்ப்புக்கிடையில் இத்துணை பெரிய கூட்டம் பெண்களும், ஆண்களும், தாழ்த்தப்பட்டவர்களுமாய்க் கூடி இருப்பதானது நமது கொள்கையிலுள்ள உணர்ச்சி சிறிதும் இந்தக் கிராமத்துப் பார்ப்பனர்களின் கிளர்ச்சிப் பெரிதுமாய்ச் சேர்ந்து தான் இவ்வளவுக் கூட்டங் கூட நேர்ந்தது என்று கருதுகிறேன்:

சகோதரர்களே! நான் மகாநாட்டுக்கு வரும் வழியில் கண்ட காட்சிகளானது எனது கொள்கையிலும் அபிப்பிராயத்திலும் என்னை மிக்க



உறுதிபடுத்தி விட்டது. வழி நெடுக போலீஸ் உதவியின் பேரில் ஒவ்வொரு கிளைப்பாதைக்கும் நூற்றுக்கணக்கானப் பார்ப்பனர்களும், பார்ப்பனரல்லாதார்களும் வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டு கையில் தடியுடன் நின்றதையும், திருவாவடுதுறை கோயிலுக்கு முன்னால் நூற்றுக்கணக்கான பார்ப்பனரல்லாத ஆட்கள் கழிகளுடன் நின்றுக் கொண்டிருந்ததையும், இவைகளுக்கெல்லாம் சர்க்கார் அதிகாரிகளும் பண்டார சந்நிதிகளும் உள்ளூர உடந்தையாயும், சகாயமாகவும் இருப்பதையும் பார்க்க இந்த நாடானது என்றென்றைக்கும் அன்னிய ஆட்சியிலிருப்பதற்கு தகுதியானதே யொழிய இந்த நிலையில் ஒரு நாளும் சுதந்திரத்திற்கு அருகதை இல்லையென்றே நினைக்கிறேன். இன்றைய தினம் இங்கு வெள்ளைக்கார ஆட்சியில்லாமல் பண்டார சந்நிதிகளாட்சியோ, பார்ப்பனராட்சியோ, இவர்களைக் குருவாய்க் கொண்ட இந்துக்கள் ஆட்சியோ இருந்திருக்குமானால் நான் இங்கு வந்து சேர்ந்திருக்க முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள். இந்த அதிகாரிகளும் ஏறக்குறைய எல்லாம் பார்ப்பனர்களாகவே யிருந் திருந்ததின் மூலம் வெள்ளைக்கார ஆட்சியின் பயம் அவர்கட்கு இல்லா திருக்குமேயானால் நம்மை ஒரு நாயை அடிப்பதுபோல் அடித்து இழுத் தெறிந்து இருப்பார்கள். என்னுடைய இந்தப் பத்துப்பதினைந்து வருஷத்திய பொது வாழ்வு சுற்றுப் பிரயாணத்தில் ஒரு இடத்திலாவது இந்த மாதிரி பார்ப்பனர்கள் வரிந்து கட்டிக் கொண்டு தடியுங் கையுமாய் நின்று கொண்டி ருந்ததை யான் எங்கும் பார்த்ததில்லை. நம்முடன் வந்த கூட்டமானது சற்று நிதானம் தவறியிருக்குமானால் என்ன நடந்திருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள். அதிகாரிகளுடைய சலுகை இல்லாதிருந்திருக்குமானால் அவர்களுக்கு இவ்வளவு துணிவு ஏற்பட்டிருக்க முடியுமா? நாம் என்ன அக்கிரமங்களை செய்ய இந்த மகாநாட்டைக் கூட்டியிருக்கிறோம்? அல்லது இதுவரையில் யாருக்கு எவ்விதமான அநீதி நமது தொண்டால் ஏற்பட்டது? நமது உரிமைகளை நாம் எதிர்பார்ப்பதும், நமது சுயமரியாதையை நாம் அடைய முயற்சிப்பதும், இவ்வளவு பெரிய ஆத்திரத்திற்கும், மூர்க்கத் தனத்திற்கும் இடங் கொடுக்குமானால் இந்த நிலையில் நமது நாட்டின் ஜனநாயக ஆட்சியை எதிர்பார்க்க முடியுமாவென்று யோசித்துப் பாருங் கள். இந்த நாட்டில் உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பித்த காலம் முதல் எனக்கு அதனிடம் சிறிதும் அனுதாபமில்லாதிருந்தது உங்கள் எல்லோருக் கும் தெரிந்ததேயாகும். அது விஷயத்தில் எனது அபிப்பிராயத்தையும் சிறிதும் மறைக்காமல் வெளியிட்டு வந்ததோடு அதனால் ஏற்படும் கெடுதிகளையும் துணிந்து விளக்கிக் கொண்டுதான் வந்திருக்கிறேன். அதன் மூலம் எனக்கு அனேக கஷ்டங்களும் நஷ்டங்களும் ஏற்பட்டிருப்பதையும் சகித்துக் கொண்டுதான் வந்திருக்கிறேன். எங்களூரில் மகாநாடு நடந்த காலத்தில் அதிகாரிகளால் எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டன. மற்றும் நான் செல்லுகிற இடங்களிலெல்லாம் பார்ப்பன அதிகாரிகள் இருக்குமிடங்களில் மிக்கத் தொல்லைகள் ஏற்பட்டு வருவதையும் பார்த்து வருகிறேன். பல மொட்டைக்



RangaRakes tamilnavarasam.com

கடிதங்களும் வந்து கொண்டு இருப்பதோடு பிரசாரத்துக்கும் பத்திரிகைக் கும் இடையூறுண்டாகும்படி பல முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஊருக்கு வருவதற்கு முன் எனக்கு ஒரு மிரட்டுதல் கடிதம் வந்தது. ஆகவே இந்த நாட்டுப் பார்ப்பனராதிக்கமும், பார்ப்பனீய உணர்ச்சி யும் ஒழியும் வரை இன்றைய அரசாங்கத்தை எப்படி எதிர்க்க முடியும்? அதன் உதவியை எப்படித் தள்ள முடியும்? இந்த நிலையில் நம்மைப் பார்ப்பன ராதிக்கத்தினிடமும், பண்டார சந்நிதிகளாதிக்கத்தினிடமும், பணக்கார ஆதிக்கத்தினிடமும் விட்டு விட்டு இந்த சர்க்கார் போய் விடு கிறோமென்று சொன்னால் தாழ்த்தப்பட்ட மக்கள் போக வேண்டாமென்று தான் சத்தியாக் கிரகம் செய்ய வேண்டுமே யொழிய போகச் செய்யும் சத்தியாக்கிரகத்தில் ஒருக்காலும் சேர்த்து கொள்ள முடியாது. இந்த கிராமத்து அக்கிரகாரமானது தஞ்சாவூர் மகாராஜாவால் தனது முன்னோர்களின் எலும்புகளைக் கங்கை யில் கொண்டு போய் போடுவதை விட பிராமணர்கள் என்பவர்களின் வயிற்றிற்போய் சேரும்படி அரைத்துக் குடிக்க செய்து விட்டால் அதிகப் புண்ணியமென்பதாகக் கருதி "பிராமணர்"களும் அப்படியே அரைத்துக் குடித்ததற்காக அக்காலத்தில் சில பார்ப்பனர்களுக்கு இந்த அக்கிரகாரங் களையும் கட்டிக் கொடுத்து நூறு வேலி (500 ஏக்கர்) நஞ்சை நிலமும் கொடுத்ததாக சொல்லப்படுவதுடன் ஏதோ ஒரு பிராமணன் என்பவன் தீண்டாதான் ஒருவனுக்குத் தன் வீட்டிலழைத்து சாப்பாடு போட்டதின் பயனாய் அவனை இந்த ஊர் "பிராமணர்கள்" எல்லாம் சேர்ந்து ஜாதியை விட்டு விலக்கி கங்கையில் போய் ஸ்நானம் செய்து விட்டு வரும்படி ஊரை விட்டு விரட்டினதாகவும் அந்தப்பிராமணன் கங்கையைத் தன் வீட்டுப் புழக் கடையிலேயே வருவித்துக் காட்டினதாகவும், பிறகு அவனைச் சேர்த்துக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே எப்படிப் பார்த்தாலும் இந்த ஸ்தலப் பெருமையின் படி ஒன்று இங்குள்ளவர்கள் எலும்பைத் தூளாக்கிக் கரைத்துக் குடித்தவர்களாயிருக்க வேண்டும், அல்லது பறையனை வீட்டில் வைத்து சாப்பாடு போட்டதின் பயனாய் கங்கை இந்த கிராமத்துக்கு வரத் தகுந்த அவ்வளவு நன்மையடைந்ததாகயிருக்க வேண்டும். அப்படியிருக்க இதை நம்புகிற பார்ப்பனர்கள் எப்படி வீதியில் பறையன் நடந்து விடுவான் என்று தடி எடுத்துக் கொண்டு தெருவில் நிற்கிறார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. இது மூர்க்கத்தனமா? அல்லது ஆச்சாரமா? அந்த வீதி யில் எல்லா மிருகங்களும் செல்வதைப் பார்க்கிறோம். இந்துக்களில் ஒரு சாரார் தவிர மற்றவர்கள் எல்லாரும் செல்வதையும் பார்க்கிறோம். மற்றத் தெருக்களில் நடக்கும் போது எவ்வளவோ அசிங்கியங்களை மிதித்துக் கொண்டேதான் காலைக் கழுவாமல் அத் தெருவில் யாவரும் நடப்பதைப் பார்க்கிறோம். அந்த தெருவிலுள்ள பார்ப்பனர்களுக்கு அவர்கள் வயலில் வேலை செய்து நெல் விளைத்துக் கொடுத்த அவர்களது மதத்தைச் சேர்ந்த மக்கள் போகக் கூடாதென்றும் அவர்களுடைய "மதத்திற்கெதிராயிருந்து அவர்களது கோயில்களையும், சாமிகளையும் சாஸ்திரங்களையும் உடைத்து இடித்து



கொளுத்திய" மகமதியர்களைத் தாராளமாகப் போக விட்டுக் கொண்டும் இருக்கிறார் களென்றால், இதானது மதத்தையும், சாத்திரத்தையும் ஆதாரமாகக் கொண்டு தடுக்கப் படுகிறதாவென்று ஆலோசித்துப் பாருங் கள். பறையன் சக்தியற்றவனாக இருக்கிறான். படிப்பில், செல்வத்தில், சுய மரியாதையில் கேவலமாக அழுத்தப்பட்டிருக்கிறான். மகமதியன் சகல சௌகரியத்துடனும் வீரியத்துடனும், சுயமரியாதையுடனுமிருக்கிறான். பறையனை வேண்டாம் என்று சொன்னால் பறையன் பயந்து கொள்வான். யோக்கியப் பொறுப்பற்ற சர்க்காரும் அதற்கு இடங்கொடுத்துக் காவலாளை அனுப்பிக் கொடுக்கும். மகமதியனோ தெருவில் நடக்க வேண்டாமென்று சொல்லி விட்டால் உடனே உதை கொடுப்பான். "வேண்டாம் என்று சொல்பவர்களின் பெண்டுபிள்ளைகளையும் கட்டியணைவதோடு மாத்திரம் நில்லாமல் தூக்கிக் கொண்டும் போய் விடுவான்." அப்போது சர்க்காரும் வாலையொடுக்கிக் கொள்ளும். ஆகவே தீண்டாமையும், தெருவில் நடக்கா மையும் எதிலே இருக்கின்றதென்று யோசித்துப் பாருங்கள். இந்து மதத் திலும் சுயமரியாதையற்றத் தன்மையிலுந்தானே தீண்டாமை இருந்து வரு கின்றது. இந்த கிராமத்தில் மகமதியர்களின் எண்ணிக்கை எவ்வளவு சுருக் கம். தாழ்த்தப்பட்டவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு அதிகம்? அப்படி யிருந்தும் மகமதியர்களுக்கு சுதந்திரமும், இந்துக்களுக்குத் தடையும் ஏற்பட்டிருப்பது மதம் காரணமா அல்லவா? அப்படிப்பட்ட மதம் எதற்காக இருக்கவேண்டுமென்றால் மக்களுக்கு வெறும் கோபம் வருகிறதே யொழிய மற்றபடி எவ்வித சமாதானமும் சொல்லுகிறவர்களைக் காணோம். இப்படிப் பட்டவர்களை நாம் மூடர்களென்றும், மூர்க்கர்களென் றும், அயோக்கியர்கள் என்றும் சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவது?

சகோதரர்களே! கண்டிப்பாக நான் ஒன்று சொல்லுகிறேன். இந்து மத மென்பது ஒழிகின்ற வரையில் குறைந்தது வெள்ளைக்காரனுடைய ஆட்சியாவது இருந்துதான் ஆக வேண்டும். இந்த நாட்டில் அநேகருடைய மனதை தேசீயக் கிளர்ச்சி கவர்ந்து இருப்பது எனக்குத் தெரியும். அவர்களில் பெரும்பாலோர் பொறுப்பற்றவர்களும், அறியாதவர்களும் சுயநலக்காரர் களும், சிலர் உண்மை யறியாதவர்களுமே யாவார்கள். இந்த ஒரு சிறு கிராமத் தில் தெருவில் நடப்பதைத் தடுப்பதற்காக பார்ப்பனர்களும் அவர்களு டைய கூலிகளாகிய பல பார்ப்பனரல்லாதார்களும் அவர்களைக் காக்க போலீசுகளும், மேஜிஸ்ட்ரேட்டுகளும் நூற்றுக்கணக்காக நின்று கொண்டி ருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த நாட்டு மக்களின் ஈனத்தன்மைக்கு வேறு என்ன சாட்சியம் வேண்டும்? இந்தியனும், ஐரோப்பியனும் அல்லாத ஒரு மனிதன் இன்றைய தினம் இந்தியாவுக்கு வந்து திருவிசலூர் அக்கிர காரத்துப் பார்ப்பனர்களின் காட்சிகளையும், நகரங்களிலும், பட்டினங் களிலும் நடக்கும் சட்டமறுப்பு மீட்டிங்குகளின் பேச்சுகளையும் காண்பா னேயானால் எள்ளி நகையாட மாட்டானாவென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். நான் ஏதாவது சத்தியாக்கிரகத்துக்குப் பயந்து கொண்டு பேசு கிறேன் என்று



RangaRakes tamilnavarasam.com

கருதுகிறீர்களா? நானும் ஒரு காலத்தில் சட்ட மறுப்பு மறியலும், சத்தியாக்கிரகமும் செய்து பார்த்து அதற்காக பல தடவை சிறை சென்றுமிருக்கிறேன். இந்நாட்டில் எல்லாரையும் விட பெரிய தேசப் பக்தனாகவுமிருந்து பார்த்துமிருக்கிறேன். வருணாசிரம தருமிகளெல்லாம் என்னை ராஜரிஷி யென்றும் பிரமரிஷி என்றும் சொன்னதோடு உற்சவங் களில் தேர்களில் கூட எனது படத்தை இழுத்திருக்கிறார்கள்.

ஆகவே ஒரு மாசமோ, மூன்று மாசமோ, ஆறு மாசமோ ஜெயிலுக்கு போவதால் எனக்கொன்றும் ஆபத்து வந்து விடாது. சத்தியாக்கிரகத்தில் சேர்ந்து கொள்வதால் எனக்கொன்றும் மரியாதையுங் குறைந்து விடாது. ஆதலால் நான் எவ்வித சத்தியாக்கிரகத்திற்கும் எந்த ஜெயிலுக்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. பின்னை ஏன் அதை ஆதரிக்கவில்லை என்றால், அதன் உண்மையும், அனுபவமும் எனக்கு சிறிதாவது தெரியும். சுமார் பத்து வருஷத்திற்கு முன் ஏற்பட்ட ஒத்துழையாமையின்போது முப்பதினாயிரம் பேர்கள் சிறை சென்றோம்; ஒரு கோடி ரூபாய் செலவுஞ் செய்தோம். ஒரு வளைந்து போன பின் (Pin) ஊசிக்கும் பயன்படவில்லை. நான் அவ்வளவு பாடுபட்டும், எவ்வளவோ தேசீயப் பிரசாரம் செய்தும் இன்றும் திருவிசலூர் அக்கிரகாரத்தில் தடியும் கையுமாய் பார்ப்பனர்கள் நின்று கொண்டிருப்பதை மாற்ற முடியவில்லையென்றால் யோக்கியனுக்கு வேலை அங்கா? இங்கா? என்று பாருங்கள். உண்மையில் எந்த வைதீகர் களும் வருணாச்சிரம தருமிகளும் என்னைப் பெரிய ராஜரிஷி என்றும், பிரமரிஷி என்றும், தேசப் பக்தன் என்றும், தேசியவீரனென்றும் அழைத்தார் களோ அவர்களேதான் இன்றைய தினம் என்னைத் தேசத்துரோகி என்றும், மதத் துவேஷி யென்றும் அழைக்கப்படுவதை நான் பார்க்கிறேன்.

ஆகவே இதிலிருந்தே நான் முன் செய்த தொண்டு வைதீகர்கட்கும், வருணாசிரமிகட்கும் அனுகூலமான தென்றும் இப்போது நான் செய்வது அவர்களுக்கு விரோதமானதென்றும் நன்றாய் விளங்கவில்லையா? இவற்றிலிருந்து தான் எனது தொண்டில் எனது அபிப்பிராயத்தில் நாளுக்கு நாள் உறுதிப்பட்டுக் கொண்டு வருகிறது. என்றையதினம் அரசியல் என்பதாக நம் நாட்டில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டதோ அன்றையதினமே படித்த மக்கள் என்பவர்களிடம் நாணயக் குறைவும் சுயநலமும் ஏற்பட்டு விட்டது. அதன் பயனாய் பாமரமக்கள் ஏமாற்றமடைந்து பழய அரசியல் நிலைமை யைவிட அதிக மோசமான நிலைமை ஏற்பட்டு விட்டது. நமது நாட்டைப் பொறுத்த வரையில் அன்னிய ஆட்சியையொழிக்கும் அரசியல் கிளர்ச்சி என்பது உதவவே உதவாது; முடியவே முடியாது. ஏனெனில் நமது நாடானது அந்நியராட்சிக்கு அநுகூலமாகவே ஆதியிலிருந்தே அமைக்கப்பட்டு விட்டது. அதற்கு உதாரணமாக நமது நாடு அன்னிய ஆட்சி இல்லாதிருந்த ஒரு காலத்தை நம்மால் கண்டு பிடிக்கவே முடியவில்லை.



உதாரணமாக இந்தியாவானது ஐரோப்பியராட்சிக்கு முன், துருக்கி யராட்சியிலேதான் சுமார் ஆயிரம் வருஷம் வரை யிருந்து வந்திருக்கிறது. அதற்குமுன் ஆட்சிக்கு சரித்திரங்களையோ புராணக் கதைகளையோ ஆதார மாய் எடுத்துக் கொள்வதாய் இருந்தால் ஆரியர்களுடைய ஆட்சி யாகத்தான் இருந்திருக்கிறது. அதற்குமுன், அல்லது அதன் மத்தியில் ஏதாவது ஆட்சி சொல்ல வேண்டுமானால் காட்டு ராஜாக்களும், ஆரியக் கொள்கைக்கு அடிமையாயிருந்த மூட ராஜாக்களும் இருந்த ஆட்சியில் தான் நாடு சின்னாபின்னப்பட்டு கிடந்திருக்கிறது. இந்த நிலையில் எப்பொழுது இந்தியா அந்நிய ஆட்சியின் கீழ் இருந்திருக்கவில்லையா யென்பதை யோசித்துப் பாருங்கள். இவைகளில் எந்த ஆட்சியை நாம் சுய ஆட்சி என்று சொல்லுவது. எந்த ஆட்சியை அந்நிய ஆட்சி என்று சொல்லுவது? என்பவைகளை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

நீதி வழுவாமல் நடந்த இராஜிய பாரங்கள் என்பது மநுதரும சாஸ்திர கொள்கைப்படிக்கு நடந்ததாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. தரும ராஜ்யங்கள் என்று சொல்லுவது இராமனும், அரிச்சந்திரனும் போன்றவர்கள் ஆண்ட இராஜ்ய பாரத்தையும் அவர்களின் கதைகளிலுள்ள கொள்கை களையும் தான் சொல்லப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக இராமனைக் கடவுளாக நம்பி இருப்பவர்களையும் இராமன் கதையை உண்மை யென்று கருதிக் கொண்டிருப்பவர்களையும் இராம ராஜ்யத்தை இன்றயதினம் ஒப்புக் கொள்ளுகிறார்களாவென்பதைக் கேட்கிறேன். இராம ராஜ்யம் வருணாசிரம ராஜ்யமா அல்லவா? இராமராஜ்யத்தில் மக்களுக்குச் சம சுதந்திரம் இருப்பதாக யாராவது சொல்ல முடியுமா? அதுபோலவே அரிச்சந்திரன் இராஜ்யத்தில் நீதியோ, நாணயமோ சிறிதாவது இருந்ததாக யாராவது சொல்ல முடியுமா? இந்தக் கதைகள் உண்மையாக இல்லாவிட்டாலும் இதைத்தானே நல்லரசாட்சிக்கு அறிகுறியாய்ச் சொல்லப்படுகிறது. அரிச்சந்திரன் தன் பெண் சாதியை மற்றொருவனுக்கு விலை கூறி விற்றான் என்பதினாலேயே பெண் கள் விற்கப்படும் சாதனம் என்பதும் அடிமை என்பதும் உறுதிப்பட வில்லையா? பறையனிடம் அரிச்சந்திரன் அடிமையானான் என்பதினா லேயே தீண்டாமையும் சாதி ஆணவமும், அடிமை விற்பனையும் உறுதிப் படுத்தப்படவில்லையா? யாகத்திற்காக முனிவர்களுக்குப் பணம் கொடுத் தார்கள் என்பதும், மற்றும் பிராமணர்கள் கேட்பதை எல்லாம் கொடுத்தான் என்பதும் பார்ப்பனராதிக்கத்தையும் அவர்களுக்கு எல்லா சொத்தும் உரிமை என்பதும் உறுதிப்படவில்லையா? (தொடரும்)

*குறிப்பு : 02-08-1930 ஆம் நாள் திருவிசலூரில் நடைபெற்ற கும்பகோணம் வட்ட இரண்டாவது பார்ப்பனரல்லாதார் மாநாடு- தலைமையுரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 10.08.1930**



RangaRakes tamilnavarasam.com

## கும்பகோணம் தாலுகா

# இரண்டாவது பார்ப்பனரல்லாதார் மகாநாடு

அதுபோலவே இராமராஜியமும், இராமாயணத்திலுள்ளபடி உண்மை யாயிருக்குமானால், அது வெறும் ஜாதி வித்தியாசத்தையும், பார்ப்பன உயர்வையும் கற்பிக்கின்றதல்லாமல் வேறு என்ன நீதி அதனுள் அடங்கி யிருக்கின்றதென்பதை யோசித்துப்பாருங்கள். பெண் கொடுமை இராமாய ணத்தைப் போல் வேறெதிலும் காண்பது அரிது. உதாரணமாகத் தாட கையைக் கொன்றது; சூர்ப்பநகையை மூக்கையும், முலையையும் அறுத்தது; கைகேசியையும் கூனியையும் இழிவுபடுத்தியது முதலிய வைகளும், சீதை கர்ப்பமாக இருக்கும் போது அவளினது கர்ப்பத்தில் சந்தேகம் ஏற்பட்டதற் காக அவளைக் கொண்டுபோய் வனாந்திரத்தில் தனியே விட்டுவிட்டு வரச்செய்தானென்பதும் கடைசியாக அவள் உயிருடன் புதைக்கப்பட்டது மான காரியங்களிலிருந்து பெண்களின் உயிரை எவ்வளவு அலட்சியமாகக் கருதப்பட்டிருக்கிறதென்பது விளங்கவில்லையா? அது போலவே ஒரு பார்ப்பனரல்லாதான் தவஞ்செய்ததற்காக அவனை இராமன் கொன்றானென் றால் அதில் ஜாதி ஆணவம் விளங்கவில்லையா? மற்றும் தசரதன் அறுபத னாயிரம் பெண்சாதிகளோடு இருந்தா னென்பதிலிருந்து பெண்களை எவ்வளவு கொடுமைப்படுத்தி இருக்கிறார் கள் என்பது விளங்கவில்லையா? மற்றும் பாதரட்சையை சிம்மாசனத்தில் வைத்து பரதன் பதினான்கு வருஷம் இராஜியபாரஞ் செய்தானென்பதிலிருந்து அந்த நாட்டு மக்களின் சுயமரியா தையைப் பற்றி சிறிதாவது அவ்வாட்சிக்கு கவலையிருந்ததா என்பனவா கியவை விளங்கவில்லையா? இதுபோலவே சேர, சோழ, பாண்டியர்களின் அரசாங்கத்தின் யோக்யதையும் சமணர் கழுவேற்றப் பட்டதிலிருந்து எவ்வளவு மூர்க்கத் தனமான காட்டு மிராண்டித்தனமான இராஜியமாயிருந் திருக்கின்றதென்பது விளங்க வில்லையா? ஆகவே வெள்ளைக்காரர்கட்கும் முகமதியர்கட்கும் முன்னால் இந்தியாவில் ஒரு நாளும் சுயேச்சையான இராஜியமோ யோக்கியமான இராஜியமோ இருந்ததில்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. மகமதிய அரசாட்சியும், ஆங்கிலேய அரசாட் சியும் இந்த நாட்டுக்கு யாரால் எப்படி கொண்டு வரப்பட்டது என்பது நாமெல்லோரும் அறியாத விஷயமா? பார்ப்பனீயமும் மத ஆதிக்கமும்



ஒழிந்தாலொழிய இந்தியாவில் யோக்கியமான ஆட்சியை ஒருக்காலும் நாம் எதிர்பார்க்க முடியாது. பார்ப்பனீய மதத்தாலும், ஆதிக்கத்தாலும் நமது நாட்டுக்கு ஏற்பட்ட கெடுதிகளை எவ்வளவு காலத்திற்கு எடுத்துச் சொன்னா லும் தீராது என்றுதான் சொல்ல வேண்டும். (அதிக நேரமாய் விட்டதால் மற்றதை முடிவுரையில் சொல்வ தாகச் சொல்லி சாப்பாட்டிற்காக மகாநாடு கலைக்கப்பட்டது).

“பார்ப்பனரல்லாதாருக்கு நன்மை செய்பவர்களுக்கே வோட் செய்ய வேண்டு”மென்ற தீர்மானம் குறித்து பேசுகிறேன். இப்படிப்பட்ட தீர்மானம் வரவேற்பு கமிட்டியால் ஏன் கொண்டுவரப்பட வேண்டும் என்று நினைக்கை யில், பொதுவாகப் பார்ப்பனரல்லாதாருக்குத் தற்சமயம் உள்ள எந்தக் கட்சி யாரிடமும் நம்பிக்கையில்லையென்றே தெரிகிறது. நமது நாட்டில் அநேக கட்சிகள் இருக்கின்றன. அவற்றில் இன்றைய தேர்தல்களில் இரண்டு கட்சி களே முக்கியம். மிதவாத கட்சி, காங்கிரஸ் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, சுயேட்சை கட்சி என இப்படிப்பட்ட பலகட்சிகளெல்லாம் இருந்தும், இப்போது ஜஸ்டிஸ் கட்சியார் என்பவரும், தேசீயக் கட்சியார் என்ற மந்திரி கட்சியா ரும் தேர்தலில் பெரும்பாலும் நின்று போட்டிபோடப் போகிறார்கள்.

அந்த இரண்டு கட்சியாரும் தம் தம் அறிக்கையை வெளியிட்டிருக் கிறார்கள். அவற்றில் எது உயர்வு எது தாழ்வு என்று கண்டுப்பிடிப்பது கஷ்டமான காரியம். இரு கக்ஷியாரும் தேர்தல் காலம் தவிர மற்ற காலங் களில் எந்தவித கொள்கையையும், ஒழுங்கையும் கொண்டு எவ்வித பிரசார மும் செய்தவர்கள் அல்ல.

அவர்கள் இரு திறத்தாரும் தம் தம் அறிக்கையை எழுதியபோது அதை எப்படி எழுதினால் பொது ஜனங்கள் ஏமாறுவார்களோ அப்படி எழுதவேண்டுமென யுக்தி செய்து எழுதியிருக்கிறார்கள். ஏனெனில் நமது மக்கள் தம் வோட்டுக்களைத் தகுதியானபடி உபயோகப்படுத்தப் போதிய அறிவு பெற்றில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். தேர்தல் நடக்கும் போது ஜனங்கள் தாக்ஷண்யத்திற்காகவும், பணத்திற்காகவும், நிர்பந்தத் திற்காகவும் கட்டுப்பட்டே வோட் பதிவு செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அறிக்கையில் கூறப்பட்ட கொள்கைகளில் உள்ள ரகசியத் தைக் கண்டுபிடிப்பது மிகக் கஷ்டமான காரியமல்ல. ஜஸ்டிஸ் கட்சியார் ஆட்சியில் இருந்த 6 வருஷத்திலும், மந்திரி கட்சியார் ஆட்சியில் இருந்த சென்ற 4 வருஷத்திலும் இரு வகையார்களும் தவறுதல் செய்திருக்கிறார்கள். இரண்டு வகையாரும் நன்மையும் செய்திருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியார் பார்ப்பன ஆதிக்கத்தைக் குறைக்கப் பாடுபடுகிறார்கள், மந்திரி கட்சியாரும் பாடுபட்டிருக்கிறார்கள், சிலசமயம் ஜஸ்டிஸ் கட்சியாரும் பார்ப்பனரல்லா தார் நலத்தை அலட்சியம் செய்திருக்கிறார்கள் என்றும், சில சமயம் மந்திரி கட்சியாரும் பார்ப்பனரல்லாதாரது நலத்தை அலட்சியம் செய்திருக்கிறார்



RangaRakes tamilnavarasam.com

களென்றும் சொல்லுவதற்கு இடம் ஏற்படக் காரணம் என்னவென்றால் அநேகமாக அவையெல்லாம் முதலில் தம் நிலைமைக்கு ஆபத்து வராமல் காப்பாற்றிக் கொள்வதற்குச் செய்து கொண்ட நடவடிக்கைகளேயாகும். அவர்கள் தம் நிலைக்குப் பந்தோபஸ்து தேடிக் கொண்ட பிறகுதான், மற்றவர்களுக்கு நன்மைகளை நாடிச் செய்ய முடியும். தனிப்பட்ட நபர்களின் சுயநலத்திற்காக கொள்கைகளை விட்டுக் கொடுத்து துரோகம் செய்த சங்கதியும் இரு கக்ஷியாரிடமும் ஏராளமாய்க் கண்டு பிடிக்கலாம். ஏதாவது நன்மை செய்ய வேண்டுமென்பவர் முழுவதும் பரிசுத்தமான வராகவே இருந்தாரென்பது இது வரைக்கும் செத்துப் போனவர்களுக் குள்ளும் இருந்திருக்க முடியாது. உயிரோடு இருக்கிறவர்களுக்குள்ளும் இருக்க முடியாது. “கடவுளே” அவர்களது ஸ்தானத்தில் வந்து அமர்ந்தாலும் அவரும் அப்படித்தான் செய்ய முடியும். யாரும் முதலில் தம் நிலைக்கு பந்தோபஸ்து செய்து கொள்வார் என்றே நான் சொல்லுவேன். இப்படி இரண்டு கட்சி மந்திரிகளும் பலரை சுயநலத்திற்காக ஆதரிக்கையில் அயோக்கியர்களையும், திருடர்களையும் கூட ஆதரிக்கிறார்கள். இதன் ரகசியத்தை நான் அறிந்திருக்கிறேன். பொறுப்பில்லாதாரும் ஆதரிக்கப் பட்டிருக்கிறார்கள். சுயநல உருக்கொண்டாரும் நாணயமும் பொறுப்பும் இல்லாதாரும் ஆதரிக்கப் பட்டிருக்கிறார்கள். நான் இங்கு இத்தீர்மானத்தின் மீது எந்த வகையான மந்திரிமார்களைப் பற்றியும் குற்றம் சொல்லவோ, தூற்றவோ வரவில்லை. நம்முன் இருப்பதைக் கொண்டு சரிப்படுத்திக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட தன்மையில் இரண்டு கட்சி மந்திரி களாலும் துன்ப முற்றவர்கள் எப்படியும் இருக்கத்தான் நேரும்.

இந்தத் தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் திரு. பன்னீர் செல்வத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர் கூட சில சமயம் தவறியிருக்கலாம். ஆயினும் அவர் பார்ப்பனரல்லாருடைய நன்மைகளைக் கவனிப்பதில் பிடிவாதமாக இருந்து காரியம் செய்தவர். இந்த மாகாணத்தில் எந்த ஒரு ஜில்லா போர்டின் தலைவரும் செய்யாத அவ்வளவு பெரிய அபூர்வமான வேலைகளை அவர் இந்த ஜில்லாவில் செய்திருக்கிறார். அவ்வளவுக்கு வேலை செய்ய வேண்டிய அவசியம் வேறு எந்த ஜில்லாவிலும் இல்லை. கூடுமான வரைக்கும் கஷ்டப்பட்டிருக்கிறார். மக்கள் அதை உணர வேண்டும். திரு. சௌந்திரபாண்டியரைப் பற்றியும் அப்படியே ஒப்பிட்டுச் சொல்லலாம். ஆகவே அவ்விருவரும் எந்தக் கட்சியிலிருப்பினும் நீங்கள் அந்த இருவருக்கும் “வோட்” செய்ய வேண்டியது உங்கள் கடமையாகும். இல்லாவிட்டால் நீங்கள் பொது நன்மைக்கும் பொது ஜனங்களுக்கும் விரோதம் செய்தவர்களாவீர்கள்.

இங்கு நம் நண்பர் ஒருவர் கனம் முத்தையா முதலியார் பற்றி பேசினார். அதாவது, அவர் கனம் முத்தையா முதலியார் நமக்கு பெருத்த நன்மை செய்திருக்கிறாரானாலும் ஒரு சமயம் ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாய்



நின்று காங்கிரஸ்காரர்களின் சார்பில் இருந்தார் என்று சொன் னார். அப்படிப் பார்த்தால் இங்கே இருக்கும் நம் சின்னையா அவர்களையும் கழுத்தைப் பிடித்துத் தள்ளி விடவேண்டும் என்றல்லவா ஆகும். ஏனெனில் அவரும் தாம் காங்கிரசிலிருந்த போது ஜஸ்டிஸ் கட்சியை வைதேன் என்று சொல்லியிருக்கிறார். நேற்று ஒரு மாதிரியாக இருந்தவர் இன்றைக்கு வேறு மாதிரியாக ஆகலாம். காங்கிரசில் டாக்டர். நாயர் அவர்களும், திரு. செட்டியார் அவர்களும் எவ்வளவு உழைத்து இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். கடைசியில் அவர்களும் ஏமாற்றமடைந்தவர்கள் தான். இதற்கு யார் என்ன செய்வது? ஜஸ்டிஸ் கட்சியார் தமது ஆட்சியில் செய்யாததும், செய்ய நினைக்காததுமாகிய அற்புதமான காரியத்தை நமது கனம் முத்தையா முதலியார் செய்திருக்கிறார். அதற்காக நீங்கள் உங்களுடைய பிள்ளைகளுக்கு “முத்தையா” என்று அவருடைய பெயரை இட வேண்டுமென்பேன். நமது எதிரிகள் பார்லிமெண்டிலும், இந்தியா சட்டசபையிலும் அவர் செய்த நன்மையை அழிப்பதற்காக பாடுபடுகிறார்கள். இந்தியா சட்டசபையிலுள்ள அங்கத்தினர்களில் 100-க்கு 99 பேர் பார்ப்பனர்களாக நம் மாகாணத்தினின்றும் போய் உட்கார்ந்து கொண்டு கனம் முதலியார் வீதாச்சாரமுறைப்படி உத்தியோகம் பிரித்த செயலைத் தாக்குகிறார்கள். அவர் பிரித்திருக்கிற முறையினால் எல்லாருக்கும் பங்குவீதம் கிடைத் திருக்கிறது. இதற்காகவே பார்ப்பனர்கள் இவருடையத் தலையில் கை வைக்கப் பெரிய முயற்சிகள் செய்கிறார்கள்.

நம் பிள்ளைகள் படிப்பது, வேலைகள் கிடைக்க வேண்டும் என்பதற்கே. பிள்ளைகளின் உத்தியோகத்தை நம்பியே பெற்றோர்கள் படிக்க வைக்கிறார்கள். கனம் முத்தையா முதலியார் உத்தியோகங்களை பங்கு பிரித்து கொடுக்க செய்திருக்கிற ஏற்பாட்டினால், ஒரு வகுப்பான் தன் கொள்கையை விட்டுக் கொடுத்தோ, நாணயமற்றத் தன்மையிலோ யோக்கிய தன்மைக்கு மீறியோ, உத்தியோகம் பெற முடியாது. வெகு காலமாய் தாழ்த்தப்பட்டு தீண்டாதார் ஆக்கப்பட்டவருக்கும் பங்குகிடைத்திருக்கிறது. முகமதியர்களுக்குப் போதிய பங்கு பெற முடிந்திருக்கிறது. கிறிஸ்தவர்களுக்கும் போதிய பங்கு பெற வாய்த்தது. கிறிஸ்தவர்களில் சிலர் இதற்கு விரோதமாக இருந்தார்கள். ஏனெனில் அவர்களில் படித்தவர் அதிகம். உத்தியோகம் எல்லாம் விகிதாச்சாரத்தில் வந்து விட ஏதுவாய் விட்டது. ஆகையால் அதை புதுப்பிக்காவிட்டாலும் சரி அதை அழிக்கவே கூடாது. ஒருவர் செய்த நன்றியை மறப்பது எல்லாவற்றைவிட இழிகுணமாகும். இதை கவனித்து கனம் முத்தையா முதலியார் எந்தக் கட்சியிலிருந்தாலும் அவருக்கு நீங்கள் வோட் செய்யுங்கள் என்று நான் சொல்லுகிறேன். அவர் செய்தது யாரோ ஒரு சில நண்பர்களுக்கு கெடுதலாக இருந்தால் அதைப் பொருட்படுத்தக் கூடாது.



RangaRakes tamilnavarasam.com

## கட்சி பிரதானமல்ல

ஜஸ்டிஸ் கட்சியார் ஆட்சியிலிருந்தபோது ஈரோடு முனிசிபாலி டியில் எவ்வளவோ திருட்டு புரட்டுகள் நடந்திருக்கின்றன. அதனால் பலருக்கு எவ்வளவோ கெடுதல்கள் நடந்திருக்கின்றன. அதற்கெல்லாம் அவர்கள் தெரிந்தும் உடந்தையாய் இருந்தார்கள். ஆனாலும் அவர்கள் (ஜஸ்டிஸ் கட்சியார்) அநேக துறைகளில் பொதுவாக நன்மைகள் செய்திருக் கின்றார்கள். இந்த காரணங்களையெல்லாம் கவனிக்கையில் நாம் கட்சியைப் பிரதானமாகக் கவனிக்காமல் தனிப்பட்ட நபர்களின் திறமையையும், உணர்ச்சியையும், அவர்கள் செய்யக் கூடிய சௌகரியத்தையும் பிரதான மாகக் கவனித்து வோட் செய்ய வேண்டும். மிகவும் கண்டிப்பாகப் பார்த் தால் ஒருவரும் மிஞ்சமாட்டார்கள். உதாரணமாக ராவ்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் தம் மகள் கலியாணத்தில் பார்ப்பன புரோகிதர் களைக் கொண்டு கலியாணம் நடத்தினார். ஆனால் அவரே முன் செய்த கலியாணத்தில் பார்ப்பனரல்லாதாரைக் கொண்டு நடத்தினார். அவர் இப்படி ஏதாவதொன்றில் தவறினார் என்று கருதி அவர் மக்களுக்குச் செய்கிற மற்ற நன்மைகளை தியாகங்களை எல்லாம் மறந்து விடுவதா? அவரைக் குற்றம் சொன்னால் அவர் “சுயமரியாதை” இயக்கத்தை விட்டு விடுவாரா? கனம் முத்தையா முதலியாரைப் பாருங்கள்; அவர் கூட திவசம் செய்து பார்ப்பனர் காலில் விழுந்தார். அவர் பண்டார சன்னதி ஒருவரையும் வணங்கினார். அவர் செய்த மற்ற காரியங்களுக்கு நாம் நன்றியறிதல் உடையவர்களாக இருக்க வேண்டாமா?

இப்போது நம் திரு. பன்னீர் செல்வம் சுயமரியாதைக் கட்சியில் உதவித் தலைவர் பதவியை ராஜினாமா செய்திருக்கிறார். காரணம் அவர் அதில் இருந்தால் தேர்தலில் பாதிரிமார்கள் அவருக்கு உதவி செய்ய மறுக்கின்றார்கள். ஏனெனில் பாமர மக்களுக்கு நன்மை தீமைத் தெரியாது. நாம் கட்சியின் பெயரைக் கவனிக்காமல் பார்ப்பனரல்லாதாருக்கு நன்மை செய்யக் கூடியவர் யாராயிருந்தாலும் அவருக்கு வோட் செய்தே தீர வேண்டும். யோக்கியர்களுக்கே வோட் செய்ய வேண்டும்.

நான் காங்கிரசில் இருந்தபோது, “காங்கிரஸ்காரர்களாயிருப்பினும், பார்ப்பனரல்லாத கட்சியாக விருப்பினும் யோக்கியர்களுக்கே வோட் செய்ய வேண்டும். கட்சியின் பெயரைக் கவனிக்க வேண்டாம்” என்றேன். இதற்காக,

> மதுரை காங்கிரஸ் கமிட்டியில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து என்னைக் கண்டனம் செய்தார்கள். என்னை ராஜினாமா செய்யும்படி கேட்டார்கள். நான் அதுதான் எனது கொள்கை என்று சொல்லி சும்மா இருந்து விட்டேன்.

இப்பொழுது காங்கிரசின் பேரால் நின்றால் வோட் கிடைக்கும் போல் இருந்தால் சிலர் அதன் பேராலும் தேர்தலுக்கு நின்றிருப்பார்கள். ஆனால் இப்பொழுது காங்கிரஸ் கட்சியாருக்கு இங்கு செல்வாக்கும், மதிப்பும் இல்லை. அந்த லேபில் ஒட்டிக் கொள்வதனால் அவர்களுக்குச் சவுகரியம் இல்லை. ஒவ்வொருவர் தத்தம் கடமையையும் சவுகரியத்தையும் உணரு கையில் ஒவ்வொரு கட்சியிலும் சேரத்தான் செய்வார்கள். கனம் முத்தையா முதலியார் காங்கிரஸ் டிக்கட்டினால் தேர்ந் தெடுக்கப்பட்டாரென்று குற்றம் சொன்னால் போதுமா? பொதுவாக அவர் அப்படிச் செய்தது நமக்கு நன்மையா? தீமையா? ஜஸ்டிஸ் கட்சியாரும் மற்ற கட்சியார்களையெல்லாம் ஜஸ்டிஸ் கட்சிக்கு இழுக்கத்தானே பாடுபட்டிருக்கிறார்கள். இதெல்லாம் அரசியல் தந்திரமாம். நான் எனக்குத் தோன்றியதைச் சொன்னேன். உங்க ளைக் கட்டாயப்படுத்தவில்லை. திரு. பன்னீர் செல்வத்தைப் பற்றியும், கனம் முத்தையா முதலியாரைப் பற்றியும் ஏதோ என் அபிப்பிராயத்தை தெரிவிக் கவே சொன்னேன். இவர்கள் மட்டுமல்ல இதுபோல இன்னும் மற்ற ஜில்லாக் களிலும் அநேகர் இருக்கிறார்கள். ஆகவே நான் இந்த தீர்மானத்தை உங்கள் அபிப்பிராயத்துக்கு விடுகிறேன்.

## முடிவுரை

சகோதரர்களே! அபிப்பிராயப் பேதம் இல்லாமலே எல்லாத் தீர்மா னங்களும் நிறைவேறிவிட்டன. முடிவுரையாக நான் என்ன சொல்லப் போ கிறேன் என்று எதிர்பார்க்கின்றீர்கள். இப்போதைய நிலைமை எப்படி இருக் கிறது? எப்படி நடந்தால் – என்ன முயற்சியில் ஈடுபட்டால் நம் நிலைமை மேன்மையாக இருக்கும்? உலகில் நம் நாடு தாழ்ந்த நிலையிலிருக்கிறது. கல்வி, செல்வம், விவசாயம், சுகாதாரம், அறிவு, மனிதத்தன்மை ஆகிய இந்த முக்கிய அங்கங்களில் நான் காலையில் சொன்னது போல் நம் நிலைமை மாற வில்லை. நாம் தெய்வத் தன்மை என்று எவ்வளவோ சொல்லிக் கொண்டு வாழ்கிறோம். ஆனால் நாம் காட்டுமிராண்டித் தனமாய்த் தான் இருக்கிறோம். நம் நாட்டு யோக்கியதையைப் பாருங்கள். முதலாவதாக,

## கல்வி

கல்வியை எடுத்துக் கொள்ளுங்கள். உலகத்தில் மேனாட்டாரெல்லாம் 100க்கு 100பேர் கல்வியறிவுடையவராக இருக்கிறார்கள். ஆனால் நம் நாட்டில் 100க்கு 7 பேர்தான். அடுத்த கணக்கில் அது 10 ஆகலாம். ஆனால் இந்த 100க்கு 7 பேர் என்றதும் பொய் கணக்கே. எப்படி என்றால் தீண்டாத வகுப்பாரில் 1000க்கு 5 பேர்தான். நாயுடு, செட்டியார், முதலியார், கவுண்டர் முதலியதாகிய சாதிப்படி பார்த்தால் 100க்கு ஒன்றரை, 2 அல்லது இரண்டரையாகத்தான் இருக்கும். இன்னும் நம் சகோதரிகள் கணக்கு 1000க்கு 1 அல்லது ஒன்றரை தான் இருக்கும், இதெல்லாம் எப்படி 100க்கு 7 வீதம் சராசரி கணக்கானது என்றால், அது 100க்கு 100 வீதம் படித்த பார்ப்பனர் கணக்கை நம்முடன்



RangaRakes tamilnavarasam.com

சேர்த்து கணக்குப் போட்டதால் வந்த விகிதமாகும். வண்ணார், பரியாரியார், இன்னும் மற்ற வகுப்பாரில் படித்தவர்கள் 100க்கு 2 பேர் கூட இருக்க முடியாது. இம்மாதிரி 100க்கு 7 பேர் படித்திருக்கும் நம்மிடை கல்வி பரவாததற்கு வெள்ளைக்காரர்கள் தான் காரணம் என்று நமது தேசீயவாதிகள் சொல்லுகிறார்கள். ஆனால் பார்ப்பனர் மட்டும் 100க்கு 100பேர் படித்ததற்கு யார் காரணம் என்பது அவர்களுக்கு புரிவதில்லை. பஞ்சாங்கப் பார்ப்பனர்கள் படித்து வாழவே நம்நாட்டில் தேசீயமும் பொது நல சௌகரியங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

## மதக் கொடுமை

நம் மதமும், நம் நீதிகளும், நம் தெய்வங்களுமே நமது கல்வியற்ற நிலைமைக்குக் காரணமாகும். உதாரணமாக வேத தர்ம சாஸ்திரங்களைப் பாருங்கள். அவற்றில் இன்னார்தான் படிக்கலாம், இன்னாருக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாது என்கின்றதான நிபந்தனையிருக்கிறது. இதனாலேதான் நம் நாட்டில் கல்வி இல்லை.

"சூத்திரன்" படிக்கக் கூடாது. அவனுக்குப் படிப்பு சொல்லிக்கொடுக் கக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிற இந்து மதத்திற்கு நாம் கட்டுப் பட்டதால் "சூத்திரர்" என்ற நாமத்தை நாம் ஏற்றுக் கொண்டதால் படிக்க முடியாமல் போய் விட்டது.

மிஸ் மேயோ பனகால் அரசரைக் கண்ட போது "பார்ப்பனரல்லாதா ருக்கு மூளையில்லையா? ஏன் படிக்கவில்லை" என்றார். அதற்கு பனகால் அரசர் "அது பார்ப்பனர் மூளையின் சூழ்ச்சியாலேயே" பார்ப்பனரல்லாதார் படிக்க முடியாமல் போயிற்று என்றார். அப்படியே மேயோ அம்மையாரும் எழுதி விட்டார்.

திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரி இந்தக் குற்றத்தை மறுக்கையில் மாட்டிக் கொண்டார். அவர் "சூத்திரர்கள்" வேத சாஸ்திரந்தான் படிக்கக் கூடாதே யொழிய மற்றவற்றைப் படிக்கலாம் என்று இருப்பதாகச் சொன்னார். முன் காலத்தில் வேதம், சாஸ்திரம் இவைதவிர வேறு படிக்க நூல் இல்லை. இங்கிலீஸ்காரன் வந்த பிறகு தான் புஸ்தகம் ஏற்பட்டது. முன் காலத்தில் படிப்புக்கு வேறு வசதி இல்லை. நீதி நூல்கள் தான் இருந்தன. புராணங்கள் தவிர வேறு இலக்கியம் இல்லை. அவைகளும் வடமொழியில்தான் இருந்தன. இப்படியெல்லாம் இருந்ததால் நாம் படிக்க முடியவில்லை. வெள்ளைக்காரர்கள் வந்த பின்பே நாம் இப்போது 100க்கு 7 வீதமாவது படிப்பு அனுபவிக்க முடிந்தது.

இக்காலத்திலும் பார்ப்பனர்கள் கேள்வியின்றி ஆட்சியிலிருந்ததால், அவர்கள் மாத்திரமே படிக்கச் சௌகரியமாக விருக்கும் படியாக வழிகளை வகுத்து வந்தார்கள்.



## வீண் செலவால் தரித்திரம்

பயனில்லாத வழியில் மதத்தின் பேரால் நமது பணத்தையெல்லாம் பாழாக்குகிறோம். ஒரு மனிதன் தினம் 8 அணா சம்பாதித்து 4 அணா மிச்சம் பிடித்தால் அவன் அதை பிதிர்களுக்கும், சடங்குகளுக்கும், சாமிகளுக்கும், பொங்கல்களுக்கும் செலவு செய்யவே வழி காட்டப்படுகிறான். அவன் ஒரு வாரத்தில் சேர்த்ததை குடியில் செலவு செய்கிறான். ஒரு மாதத்தின் மீதத்தை பண்டிகையில் செலவு செய்கிறான். ஒரு வருஷ மீதத்தைத் திதியில் செலவு செய்கிறான். 10 வருஷ மீதத்தை கலியாணம், கருமாதியில் செலவு செய்து விடுகிறான். இவையன்றி சில்லரைச் சடங்குகளும், சில்லரைத் தேவதை களும் உற்சவங்களும் நம் செல்வத்தை விழுங்கிவிடுகின்றன. மேற்கொண்டு கடனும் வாங்கச் செய்கின்றன. இவைகளே நாம் நிரந்தர கடனாளியாகவும் தரித்திரவான்களாகவும் இருப்பதற்குக் காரணங்களாகும். இதையெல்லாம் நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. படிப்புக்குப் போதுமான பணம் இல் லையா? நமது தஞ்சாவூர் ஜில்லாவை எடுத்துக்கொள்ளுங்கள். உற்சவங்கள் காரணமாய் வருடம் 40 ஆயிரம், 50 ஆயிரம், லட்சம் ரூ. வரை வருஷ வருமானமுடைய 30, 40 கோயில்கள் இருக்கின்றன. சமயங்கள் காரணமாய் வருடத்தில் 5 லட்சம், 10 லட்சம் வரும்படியை உடைய பல மடங்கள் இருக் கின்றன. கணக்குப் போட்டால் எவ்வளவு ரூபா மொத்த மதிப்பு ஆகிறது. உற்சவ செலவும் ஜனங்கள் போக்குவரத்து, ரயில் முதலிய செலவும் சேர்த்து எல்லாம் பார்த்தால் எந்தக் காரணத்தினாலும் 1 கோடிக்கு குறையாது. திருச்சிராள்ளி ரங்கநாதர், தென்னாற்காடு நடராஜர், மதுரை மீனாட்சி, ராமனாதபுரம் ராமலிங்கம் ஆகிய சாமிகளும், மற்றும் வட ஆற்காடு ஜில்லா அருணாசலம்; செங்கற்பட்டு வரதராஜ உடையவர்; சென்னப் பட்டினம் கபாலீசர்; சித்தூர் வெங்கிடாசலபதி ஆகிய சாமிகளின் உற்சவங்கள் கணக்கு எவ்வளவு. திருப்பதி கோயிலில் 20 லட்ச ரூ. காணிக்கை; ஏழரைக் கோடி ரூபாய் சொத்து, நகை, பாண்டுகள், வாகனங்கள், கட்டிடங்கள் இவற்றை எல்லாம் விற்றுக் கணக்குப் போட்டுப் பார்த்து 100க்கு 6 வட்டி வீதம் 40 லட்சம் ரூபாய் வட்டி அடையலாம். இந்த ஜனங்கள் காணிக்கைகள், உண்டி யலில் கொடுத்தல், போக வர செலவு எல்லாம் 60 லட்சம் ரூபாய் ஆகும். அவ்வளவும் நம் மக்கள் வீண் செலவு செய்து விடுகிறார்கள். திருப்பதிக்குப் போய் மொட்டை அடித்துக் கொள்ளுகிறவர்களின் செலவு எல்லாம் சேர்த்து மொத்தத்தில் 1 கோடி ரூபாய் ஆகிறது. இது போலவே இந்த இரண்டு ஜில்லாவிற்கு மாத்திரம் மேற்படி 2 கோடி ரூபாயாலும் எவ்வளவு கல்வி பரப்ப முடியும்? மற்ற சாமிகள் பணத்தாலும் எவ்வளவு கல்வி பரப்ப முடியும்? என்பதை யோசித்துப் பாருங்கள். இந்த ஜில்லாவிலுள்ள மடங்கள் என்ன போதிக்கின்றன? என்ன அறிவை வளர்க்கின்றன?

தலைக்கு நாள் ஒன்றுக்கு, 2, 5, 10, 15 ரூபாய் வரை, சராசரி சம்பாதிக்கக் கூடிய மக்களையுடைய ஐரோப்பிய தேசங்கள் இருக்கின்றன. நம் தேசத்தில்



RangaRakes tamilnavarasam.com

ஒருவன் சராசரி ஒன்றரை அணாதான் சம்பாதிக்கிறான். இது கூட இரண்டரை அணா செலவு செய்ய கற்ற பிறகுதான். இத்தனைக்கும் நாம் ஒரு செல்வக் கடவுளைக் கும்பிடுகிறோம். விளக்குமாறு, முறம், அம்மிக் குழவி, சாணிச் சட்டி உள்பட எல்லாம் லட்சுமி என்கிறோம். அப்படிக் கும்பிடும் நாம் இன்னும் ஏழையாகவே இருக்கிறோம். நம் மக்கள் சிங்கப்பூர், கொளும்பு, நெட்டால், தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களுக்குக் கூலி ஆட்களாகப் போகிறார்கள். இத்தனை லட்சுமிக் கடவுள்கள் இருந்தும் இந்த தரித்திர நிலைமையில் தான் இருக்கின்றோம். இதற்கு நம் சோம்பேறித்தனமும் நம் மக்கள் பணம் அனாவசியச் செலவு செய்யப்படுவதுமே காரணம். பணக்காரன் தொழில் துறையில் பணம் செலவு செய்வதில்லை. பணம் சேர்ந்தவன், "கடவுள் தந்தார்" என்கிறான். ஏழையானவன் "கடவுள் நமக்குக் கொடுக்கவில்லை" என்று நினைக்கிறான். ஏழை மக்கள் "கடவுள் கொடுக்க வில்லை" என்கின்றார்களே யொழிய அப்படிப்பட்ட கடவுளை ஒரு கை பார்ப்போம் என்று நினைப்பதில்லை. எதற்கும் "கடவுள் செய்வான்" என்ற கொள்கையே இருக்கிறது.

செல்வமானது கல்விக்கும் தொழிலுக்கும் உபயோகமாகும்படி செலவு செய்யப்படாமல் பணக்காரர்களால் சாமிக்கும், கோயில்களுக்கும் சடங்கிற்கும் போய்விடுகிறது. சாமிக்கு 3 வேளை 6 வேளை பூசை செய்தல், தாசி, மேளம் ஏற்படுத்தல், மரக்கட்டைகளின் மேல் பொம்மைகளை ஏற்றி தேர் என்று சொல்லி இப்படியாக 5000, 10000 பேர் இழுப்பதில் பணத்தைப் பாழ் செய்கிறார்கள். இது மோட்சமாம்! இப்படியெல்லாம் ஏழை மனிதன் தலையில் கை வைத்து மேனாட்டார் சாமிக்கு கொடுப்பதில்லை. அவர்கள் குழவிக் கல்லை நட்டுக் கும்பிடுவது மில்லை. ஒரு மேல் நாட்டான் தன் சொத்தைத் தர்மம் செய்ய எண்ணினால், மருத்துவ ஆஸ்பத்திரி கல்வி அபிவிருத்திக்குக் கொடுப்பான். ஒரு கண் ஆஸ்பத்திரிக்குக் கொடுப்பான். குஷ்டரோக ஆஸ்பத்திரிக்குக் கொடுப்பான். தொத்து வியாதிகள் வராமல் தடுக்கக் கூடிய ஆஸ்பத்திரிக்காகவும் கொடுப்பான். இத்துடனில்லாமல் அவன் தன் நாட்டையும் படிக்க வைத்தப் பின் நம் நாட்டிலுள்ள ஏழை களும், அனாதைகளும் உயர்த்தப்படுவதற்காக மிஷன் பாடசாலைகள் ஏற்படுத்தியிருக்கிறான். தொழிற்சாலை வைக்கிறான். நாமும் அதில் பங்கு அனுபவிக்கிறோம். நம் பிள்ளைகளையும் அவர்களுடைய பள்ளிக் கூடங்களுக்கு அனுப்புகிறோம். அவர்களது ஆஸ்பத்திரிகளுக்கும் செல்லுகிறோம். நாமோ தவறான வழியாகக் குழவிக் கல்லின் தலையில் நம் செல்வத்தைப் பாழாக்குகிறோம். நம்மிடம் அறிவு இல்லை. ஆகையினால் செல்வ விருத்தியும் இல்லை.

திருடனுக்கு திருடி பணம் வந்தாலும் அவன் காத்தானுக்கும், காளிக்கும் பொங்கல் போட்டு பாழாக்குகிறான். புதையல் எடுத்தாலும் சாமி தலையில் போட்டு விடுகிறான். இந்த நிலைமைக் கெல்லாம் நம் மூட



நம்பிக்கைகளே காரணம். மற்ற நாட்டான் நம் நாட்டின் இந்த நிலைமை யைக் கண்டு சிரிக்காமல் இருக்க முடியாது. கல்லுக்கு 15 தேவடியாள், 20 ஆயிரம் ரூபாய் செலவில் உற்சவம்! அது தினம் 10 வேளை தின்பது! இவை போன்றவைகளுக்கு நம் முட்டாள் தனமே காரணம். நம் முட்டாள் தனத்தை யெல்லாம் வெள்ளைக்காரன் உணர்ந்து கொண்டான். இந்த நிலையில் அவன் எப்படி நமக்குப் பயப்படுவான்? நாம் இப்படியிருக்க இருக்க வெள்ளைக்காரனுக்குத்தான் நன்மை. இப்பொழுது எங்கும் நூல் நூற்கப் படுகிறது. ஒரு கொட்டங்கச்சியில் உப்புத் தண்ணீரை முகந்து 2 அணா விறகைச் செலவு செய்து உப்பு காய்ச்சினால் வெள்ளைக்காரன் ஓடிப் போய் விடுவானா? தக்ளியில் நூல் நூற்பதால் வெள்ளைக்காரன் நடுங்கி விடுவானா? நமது குற்றங்களை உணர்ந்து நாம் பரிகாரம் செய்து கொள்ள வேண்டாமா?

## கடவுளைப் பற்றிக் கவலை வேண்டாம்

உங்களுடைய தெய்வமும், மதமும் விடப்பட்டொழிந்தாக வேண்டும். நான் கடவுளை உண்டு என்றோ, இல்லை என்றோ சொல்ல வர வில்லை. கடவுள் இருந்தால் அது இருக்கட்டும். அது இந்த ராமசாமிக்காக ஓடிப்போய் விடாது. அதற்கு எவனும் வக்கீலாக இருக்க வேண்டியதில்லை. "ராமசாமி கடவுள் இல்லை என்கிறான். பூசை வேண்டாம் என்கிறான்" என்றெல்லாம் பேசுகிறார்கள். நல்ல கடவுளாக இருந்தால் அது உங்களது பணச் செலவை எதிர்பார்க்குமா? அல்லது உங்கள் எண்ணெயையும், பாலையும், பஞ்சாமிர்தத்தையும் குளிப்பாட்டுதலையும் எதிர்பார்க்குமா? கடவுள் உண்டு, இல்லை என்ற சண்டை உலகம் தோன்றிய நாள் முதல் நடக்கிறது. நமக்கு அதை முடிவு செய்ய அவசியமில்லை. உன் அறிவையும் முயற்சியையும் உன் வாழ்க்கைக்கு உபயோகப்படுத்து. உன் செல்வத்தை வீணாக கடவுளுக்கென்று அழிக்காதே என்றே சுயமரியாதை இயக்கம் சொல்லுகிறதே தவிர வேறில்லை. உங்கள் தெய்வங்களது நிலைமையில் நான் இருக்க சம்மதிக்கமாட்டேன். ஏனெனில் நீ குளிப்பாட்டும் போது தான் குளிக்கவேண்டும். நீ வேஷ்டி கட்டிவிடும் போது தான் கட்டிக் கொள்ள வேண்டும். நீ எண்ணெய் தேய்த்து விடும்போது தான் தேய்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு யார் சம்மதிப்பார்கள்? கடவுள் உன் பூசையையும் உற்சவத்தையும் நகைகளையும் விரும்புகிறது என்று சொல்லுவது வெட்கக்கேடு.

## ஆலயங் கட்டியவர்கள் கதி

தஞ்சாவூர் ராஜாக்களை விட உலகத்தில் இன்னொருவன் கோயில் கட்டியிருக்கிறானா? சத்திரங்கள் கட்டியிருக்கிறானா? மான்யங்கள் விட்டி ருக்கிறானா? அந்த கடவுள் தர்மம் அந்த ராஜாக்களுக்கு என்ன செய்தது? வம்சம் இருந்ததா? அவர்கள் வாரிசுதாரர்களுக்குக் கடவுள் தர்மம் ஒன்றும்



RangaRakes tamilnavarasam.com

செய்யவில்லை. வெள்ளைக்காரன் தான் சொத்துகள் கொடுக்கிறான். அந்த சாஸ்திரங்களுக்கு மதிப்பு இருந்தால் அந்த தஞ்சாவூர் முதலிய அரசர்கள் இப்படி அழிந்து போயிருப்பார்களா?

பழனியில் குடம் குடமாய்ப் பாலைக் கொட்டுகிறார்கள். அது தொட்டியில் விழுந்து துர்நாற்றம் எடுத்துப் போய் காலரா ஏற்பட வழி யாகிறது. ஏழைகளின் குழந்தைகள் பால் இல்லாமல் குரங்குக் குட்டிப்போல் மெலிந்து தவிக்கையில் குழவிக்கல்லின் தலையில் அதைக் கொட்டி வீணாக்குகிறார்கள். “அந்தக் குழந்தைகளின் வாயில் கொட்டு என் தலை யில் கொட்டாதே” என்று தான் யோக்கியமான கடவுள் சொல்லுமே யொழிய எந்த கடவுளும் அதில்லை என்று கோபித்துக் கொள்ளாது. அப்படி கோபித்துக் கொண்டால் கோபித்துக் கொள்ளட்டுமே. அது நம்மை என்ன செய்ய முடியும்? (சிரிப்பு) இப்படி இருந்தால் மக்களுக்கு ஜீவகாருண்யம், பரோபகார சிந்தை, இரக்கம் இவை எப்படி ஏற்படும்? கைலாசம், வை குண்டம், சொர்க்கம் என்ற இவை கற்பிக்கப்பட்டது முதல் மனிதன் அயோக் கியனானான். இவற்றின் பெயரால் மனிதனை மனிதன் இம்சித்தான், கொடுமை செய்தான். ஒரு சிம்டா “விபூதி”க்காக எல்லாப் பாவமும் போக்கி மோக்ஷம் கொடுத்ததால் மனிதனது அறிவு மயங்கிப்போயிற்று. இந்த மோட்ச நம்பிக்கைகள் ஒரே அடியாய் ஒழிய வேண்டும். இவ்வுலக அனு பவங்கள் லட்சியம் செய்யாமல் நாம் எப்பொழுது மேல் உலகமே பெரிது என்று கருதினோமோ அப்பொழுதே ஜீவகாருண்யத்திற்கும் ஒழுக்கத் திற்கும் இடமில்லாமற் போய் விட்டது. தான் மோட்ச மார்க்கத்தை நாடு வதற்காக ஒருவன் அயோக்கியனாகவும், கொடுமைசெய்பவனாகவும் இருக்க வேண்டியதாயிற்று. இது ஒருக்காலும் உண்மையான நாகரீகம் அல்ல. அன்பு அல்ல, இரக்கம் அல்ல, பரோபகாரம் அல்ல.

*குறிப்பு : திருவிசலூரில் 02-08-1930-ல் நடைபெற்ற கும்பகோணம் தாலூகா இரண்டாவது பார்ப்பனரல்லாதார் மாநாட்டின் தலைமை உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 17.08.1930**



# கல்யாண விடுதலை

ஆண் பெண் கல்யாண விஷயத்தில் அதாவது புருஷன் பெண்சாதி என்ற வாழ்க்கையானது நமது நாட்டிலுள்ள கொடுமையைப் போல் வேறு எந்த நாட்டிலும் கிடையவே கிடையாது என்று சொல்லலாம். நமது கல்யாண தத்துவம் எல்லாம் சுருக்கமாகப் பார்த்தால் பெண்களை ஆண்கள் அடிமை யாகக் கொள்வது என்பதைத் தவிர வேறு ஒன்றுமே அதில் இல்லை. அவ் வடிமைத்தனத்தை மறைத்து பெண்களை ஏமாற்றுவதற்கே சடங்கு முதலிய வைகள் செய்யப்படுவதோடு அவ்வித கல்யாணத்துக்கு தெய்வீக கல்யா ணம் என்பதாக ஒரு அர்த்தமற்றப் போலிப் பெயரையும் கொடுத்து பெண் களை வஞ்சிக்கின்றோம்.

பொதுவாக கவனித்தால் நமது நாடு மாத்திரமல்லாமல் உலகத் திலேயே அநேகமாய் கல்யாண விஷயத்தில் பெண்கள் மிக்க கொடுமை யும், இயற்கைக்கு விரோதமான நிர்ப்பந்தமும் படுத்தப்படுகிறார்கள் என் பதை நடுநிலைமையுள்ள எவரும் மறுக்க முடியாது. ஆனால் நமது நாடோ இவ்விஷயத்தில் மற்ற எல்லா நாட்டையும் விட மிக்க மோசமாகவே இருந்து வருகிறது.

இக்கொடுமைகள் இனியும் இப்படியே நிலைபெற்று வருமானால் சமீப காலத்திற்குள்ளாக அதாவது ஒரு அரை நூற்றாண்டுகளுக்குள்ளாக கல்யாணச் சடங்கும், தொந்தமும் உலகத்தில் அனேகமாய் மறைந்தே போகும் என்பதை உறுதியாய்ச் சொல்லலாம். இதை அறிந்தே மற்ற நாடு களில் அறிஞர்கள் பெண்கள் கொடுமையை நாளுக்கு நாள் தளர்த்திக் கொண்டு வருகின்றார்கள். நம் நாடுமாத்திரம் குரங்குப் பிடியாய் பழய கருப் பனாகவே இருந்து வருகின்றது. ஆதலால் தலைகீழ் முறையான பெண்கள் கிளர்ச்சி ஒன்று நமது நாட்டில் தான் அவசரமாய் ஏற்பட வேண்டியிருக் கின்றது.

சென்ற வருஷம் செங்கல்பட்டு மகாநாட்டில் பெண்களுக்கும் ஆண் களுக்கும் தங்கள் தங்கள் கல்யாண விடுதலை செய்து கொள்ள உரிமை இருக்க வேண்டும் என்பதாக ஒரு தீர்மானம் செய்யப்பட்டவுடனும் சமீபத் தில் சென்னையில் கூடிய பெண்கள் மகாநாட்டில் கல்யாண ரத்துக்கு ஒரு



RangaRakes tamilnavarasam.com

சட்டம் வேண்டும் என்று தீர்மானித்தவுடனும் உலகமே முழுகி விட்டதாக சீர்திருத்த வாதிகள் என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்கள் உட்பட பலர் கூக்குரலிட்டார்கள். ஆனால் செங்கற்பட்டுத் தீர்மானத்திற்கு பிறகு வெளி நாட்டிலும், இந்தியாவிலும் பல விடங்களில் கல்யாண ரத்துச் சட்டங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. ருஷியாவில் கல்யாணமே தினசரி ஒப்பந்தம் போல் பாவிக்கப்பட்டு வருகிறது. ஜர்மனியில் புருஷனுக்கும் பெண் ஜாதிக்கும் இஷ்டமில்லையானால் உடனே காரணம் சொல்லாமலே கல்யா ணத்தை ரத்து செய்து கொள்ளலாம் என்பதாக சட்டம் கொண்டு வரப்பட்டது யாவருக்கும் தெரிந்த விஷயமாகும். சமீபத்தில் பரோடா அரசாங்கத்தாரும் கல்யாண ரத்துக்குச் சட்டசபையில் சட்டம் நிறை வேற்றிவிட்டார்கள். மற்ற மேல் நாடுகளிலும் இவ்விதச் சட்டங்கள் இருந்து வருகின்றது. நமது நாட்டில் மாத்திரம் இவ்விஷயம் சட்டம் செய்வதில் கவனிக்கப்படாம லிருந்து வருகின்றதானது மிகவும் அறிவீனமான காரியம் என்றே சொல்ல வேண்டும். சாதாரணமாக தென்னாட்டில் பத்திரிகைகள் மூலம் அனேக புருஷர்கள் தங்களது பெண் ஜாதிகளின் நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்டு என்பதாய் கொலைகள் செய்ததாக தினம் தினமும் செய்திகள் வெளியாவதை பார்த்து வருகின்றோம்.

சில சமயங்களில் ஒரு பெண்ஜாதியின் நடவடிக்கை சந்தேகத்திற்கு பல கொலைகள் நடந்ததாகவும் பார்க்கிறோம். தெய்வீக சம்மதமான கல்யாணங்கள் இப்படி முடிவடைவானேன் என்பதைப் பற்றி தெய்வீகத்தில் பிடிவாதமுள்ள எவருக்குமே யோசிக்கப் புத்தியில்லை. பெண்கள் உலகம் முன்னேற்றமடைய வேண்டுமானால் அவர்களுக்கும் மனிதத்தன்மை ஏற்பட வேண்டுமானால் ஆண்களுக்கும் திருப்தியும், இன்பமும், உண்மை யான காதலும், ஒழுக்கமும் ஏற்பட வேண்டுமானால் கல்யாண ரத்துக்கு இடமளிக்கப்பட வேண்டியது முக்கியமான காரியமாகும். அப்படிக்கில்லாத வரை ஆண், பெண் இருவருக்கும் சுதந்திர வாழ்க்கைக்கு இடமே இல்லாமல் போய்விடும்.

நமது "சீர்திருத்தவாதிகள்" பலர் ஒரு மனிதன் இரண்டு பெண்டாட்டி களைக் கட்டிக் கொள்வதை பற்றி மாத்திரம் குடி முழுகிப் போய் விட்டதாகக் கூச்சல் போடுகின்றார்கள். இவர்கள் எதை உத்தேசித்து இப்படி கூச்சல் போடுகின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. மதத்தை உத்தேசித்தா? அல்லது பகுத்தறிவை உத்தேசித்தா? அல்லது பெண்கள் நலத்தை உத்தே சித்தா? அல்லது மனித சுதந்திரத்தை உத்தேசித்தா? என்பது நமக்கு சிறிதும் விளங்கவில்லை. அல்லது மனித ஒழுக்கத்தை உத்தேசித்து இப்படி பேசு கின்றார்களா என்பதும் விளங்கவில்லை. இதைப் பற்றி மற்றொரு சமயம் விவரிப்போம்.

நிற்க, ஒரு பெண்சாதிக்கு மேல் மனிதன் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்று சொல்லுபவர்களை நாம் ஒன்று கேட்கின்றோம்.



அதென்னவெனில் கல்யாணம் என்பது மனிதன் இன்பத்திற்கும், திருப்திக் குமா? அல்லது சடங்குக்காகவா? என்று கேட்பதோடு இஷ்ட மில்லாத, ஒற்றுமைக்கு இசையாத, கலவிக்கு உதவாத, ஒரு பெண் எந்த காரணத் தினாலோ ஒருவனுக்கு பெண்ஜாதியாக நேர்ந்து விட்டால் அப்போது புருஷனுடையக் கடமை என்ன என்று கேட்கிறோம். அதுபோலவே ஒரு பெண்ணுக்கும் அப்படிபட்ட ஒரு புருஷன் அமைந்து விட்டால் அப் பெண்ணின் கதி என்ன என்று தான் கேட்கின்றோம். கல்யாணம் என்பது தெய்வீகமாகவோ, பிரிக்க முடியாததாகவோ உண்மையில் இருக்குமாயின் அதில் இவ்வித குணங்கள் ஏற்பட முடியுமா என்பதை யோசித்தாலே தெய்வீகம் என்பது முழுப் புரட்டு என்பது எப்படிப்பட்ட மனிதனுக்கும் புரியாமல் போகாது. ஆகவே நமது நாட்டிலும் மற்ற நாடுகளில் இருப்பது போன்ற கல்யாண ரத்துக்குச் சட்டம் சமீபத்தில் ஏற்படாமல் போகுமாயின் கல்யாண மறுப்புப் பிரசாரமும் கல்யாணம் ஆன புருஷர்களுக்கும், பெண்களுக்கும் பலதாரப் பிரசாரமும் தான் செய்ய வேண்டிவரும், அன்றியும் இது சமயம் ஒற்றுமைக்கும் திருப்திக்கும் இன்பத்திற்கும் உதவாத பெண்களை உடைய புருஷர்கள் கண்டிப்பாக தைரியமாக முன் வந்து தங்களுக்கு இஷ்டமான பெண்களை திரும்பவும் மணம் செய்து கொள்ளத் துணிய வேண்டும் என்றும் தூண்டுகின்றோம். ஏனெனில் அப்படி ஏற்பட்டால் தான் தெய்வீகம் என்கின்ற பெயரைச் சொல்லி கொண்டு புருஷர்களுக்கும் பெண்களுக்கும் சம்மதமும் முன்பின் அறிமுகமில்லாமல் செய்யப் பட்டுவரும் கல்யாணங்களில் மக்கள் அடையும் துன்பம் ஒழிபட முடியும். மனிதன் ஏன் பிறந்தானோ ஏன் சாகிறானோ என்பது வேறு விஷயம். ஆதலால் அது ஒரு புறமிருந்தாலும் மனிதன் இருக்கும் வரை அனுபவிக்க வேண்டியது இன்பமும் திருப்தியுமாகும். இதற்கு ஆணுக்கு பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் முக்கிய சாதனம்.

அப்படிப்பட்ட சாதனத்தில் இப்படிப்பட்ட துன்பத்திற்கிடமான இடையூறு இருக்குமானால் அதை முதலில் களைந்தெறிய வேண்டியது ஞானமுள்ள மனிதனின் கடமையாகும். மனித ஜீவ கோடிகளின் திருப்திக் கும் இன்பத்திற்கும் வேலை செய்பவர்கள் இதையே செய்ய வேண்டும். அப்படிக் கில்லாமல் "ஏதோ கல்யாணம் என்பதாக செய்து கொண்டோமே, செய்தாய் விட்டதே, எப்படி இருந்தாலும் சகித்துக் கொண்டுதானே இருக்க வேண்டும்" என்று கருதி துன்பத்தையும் அதிருப்தியையும் அனுபவித்துக் கொண்டிருப்பதும் அனுபவித்துக் கொண்டிருக்கச் செய்வதும் மனிதத் தன்மையும் சுயமரியாதையும் அற்ற தன்மையுமேயாகும் என்பதே நமதபிப் பிராயமாகும்.

**குடி அரசு – தலையங்கம் – 17.08.1930**



RangaRakes

tamilnavarasam.com

# தேர்தல் பிரசாரம்

செங்கற்பட்டு ஜில்லா சட்டசபைப் பிரசார நோட்டீசு அதாவது "செங் கல்பட்டு ஜில்லாவிலுள்ள சட்டசபை ஓட்டர்களுக்கு ஒரு விண்ணப்பம்" என்ற தலைப்புக் கொடுத்து பிரசுரிக்கப்பட்ட நோட்டீசு ஒன்று நமது பார்வைக்கு அனுப்பப்பட்டதைப் பார்த்தோம். அதில் 7 பிரிவுகள் இருக்கின் றன. அவற்றுள் 6 பிரிவுகளுக்கு போட்டி அபேட்சகர்களையே பதில் சொல்லும்படி விட்டு விடுகின்றோம்.

அதில் உள்ள மூன்றாவது பிரிவான ஒன்று நம்மை வலுவில் சண்டைக் கிழுப்பதால் வந்த சண்டையை விட மனம் வரவில்லை. அதாவது:-

> "சென்ற வருஷத்தில் செங்கற்பட்டில் நடந்த சுயமரியாதை மகாநாடு என்று ஒரு கூட்டம் நடத்தி, நம் தேவலாயங்களை அழிக்க வேண்டு மென்றும், நம் கோவில்களில் ஒரு பைசாகூடச் செலவு செய்யக் கூடாதென்றும், இராமாயணம், மகாபாரதம், தேவாரம், திருவாசகம் முதலிய நம் அரும் பெரும் நூல்களை ஒழிக்கவேண்டுமென்றும் ஆபாசத் தீர்மானங்களை அங்கீகரித்த சுயமரியாதை மகாநாட்டை நடத்தியவர்கள் திரு. ஜெயராம் நாயுடுவும், திரு. வேதாசல முதலி யாரும் என்பது நீங்கள் யாரும் அறிந்த விஷயமே. திரு. வேதாசல முதலியார் மேற்கண்ட மகாநாட்டுக் காரியதரிசி யாகவிருந்து அதை நடத்தியதையும், அவர் குடும்பத்தைச் சேர்ந்த திரு. அப்பாசாமி முதலியார் ராவ் பகதூர் பட்டம் பெற்றதையும்; திரு. ஜெயராம் நாயுடு ராவ்சாகிப் பட்டம் பெற்றதையும் நீங்கள் ஞாபகம் வைக்க வேண் டும். கேவலம் பட்டங்களுக்கு ஆசைப்பட்டு நம் மதத்தையும், தெய்வத்தையும் வாய்க்கு வந்தபடி தூஷிப்பவர்களுக்கு ஆதரவு அளித்த திரு. ஜெயராம் நாயுடுவுக்கும், திரு. வேதாசல முதலியாருக் கும் எதற்காக ஓட்டுக் கொடுக்க வேண்டும் என்று தெய்வ பக்தியும் உண்மைச் சுயமரியாதையுமுள்ள நீங்கள் நன்கு ஆலோசிக்க வேண்டும்" என்பதாகும்.

இந்தப்படி அவர்கள் எழுதியதற்காகவே எப்படியாவது திருவாளர் கள் ஜெயராம் நாயுடுவையும் வேதாசல முதலியார் அவர்களையும் தேர்த லில் வெற்றி பெறச் செய்ய வேண்டியது அந்த ஜில்லா சுயமரியாதை உணர்ச்சியுள்ள மக்களது கடமையாகும்.





சுயமரியாதை மகாநாடு நடத்தியதற்கு உதவி செய்ததற்காக அவ்விரு கனவான்களும் தோல்வியடைய வேண்டுமென்று அந்த நோட்டீசு போட்ட கனவான்கள் உண்மையாய்க் கருதுவார்களானால் செங்கல்பட்டுச் சுய மரியாதை மகாநாடு நடத்த ஆதி காரணமாய் இருந்து மகாநாட்டின் வர வேற்புத் தலைவராயுமிருந்த நமது நண்பர் சுயமரியாதை வீரர் திரு. திவான் பகதூர் எம். கே. ரெட்டி அவர்களை இவர்கள் என்ன செய்ய நினைத்தார்கள்? அல்லது என்ன செய்ய முடிந்தது? என்பதை யோசிக்க வேண்டியது உண்மைச் சுயமரியாதைக்காரர் கடமையாகும். திரு. எம். கே. ரெட்டியார் அவர்கள் போட்டியன்னியில் மறுபடியும் ஜில்லாபோர்ட்டு தலைவராய் தெரிந்தெடுக்கப் பட்டதுடன் திவான் பகதூர் பட்டமும் பெற்றார். இதற்காக அந்த ஜில்லாவில் "சுயமரியாதை உள்ள எந்த ஆஸ்திகரும்" உயிர்விட்டு விடவும் இல்லை. அல்லது திரு ரெட்டியாரை தூக்கில் போட்டு விடவு மில்லை. திரு.ஜெயராம் நாயுடுவைப் போல் ஆயிரம் ஜெயராம் நாயுடுகள் தோற்றுப் போனாலும் திரு வேதாசலத்தைப் போல் இரண்டாயிரம் வேதா சலங்கள் தோற்றுப் போனாலும் சுயமரியாதை மகாநாட்டில் தீர்மானம் செய்த காரியங்கள் ஒரு காலமும் நடக்காமல் போகப் போவதில்லை என்பதை மிக்க உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். மக்கள் மூடர்களாயிருக்கும் வரையில் தான் திரு. எம். பாலசுப்பிரமணியம் போன்ற வருணாச்சிரம அழுக்கு மூட்டைகளின் ஏமாற்றுதல்களும் ஆஸ்திகப் பிரசாரமும் பலிக்குமே ஒழிய வேறில்லை. திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் வெற்றி பெற்றால் நமது மக்களை இன்னும் மூடர்களாய் இருக்கிறார்கள். பகுத்தறி வற்றவர்களாயிருக்கிறார்கள் என்பது தான் உறுதிப்படுமே தவிர மற்றபடி சுயமரியாதைக் கொள்கையில் ஒரு அணுவளவும் அதற்காக அசைந்து விடாது. ஜாதியையும், கடவுள்களையும், மதத்தையும், கோவில்களையும் காப்பாற்றுவதற்காக திரு. பாலசுப்பிரமணிய முதலியார் சட்டசபைக்குப் போவதும் அவரை மக்கள் அனுப்புவதும் உண்மையானால் திரு. பால சுப்பிரமணியம் ஜாதிப்படி சூத்திரராகவும், மதப்படி பார்ப்பனர் அடிமை யாகவும் தான் இருக்கத் தகுதி உடையவரே தவிர அவர் சட்டசபையில் இருந்து ராஜரீக விஷயம் கவனிக்க சிறிதும் யோக்கியதை அற்றவர் என்று நம்மால் மெய்ப்பிக்க முடியும். திரு. கள்ளிப்பட்டி கிருஷ்ணசாமி நாயக்கராவது தன்னை க்ஷத்திரியன் என்று சொல்லிக் கொள்ளுகின்றார். திரு. பாலசுப்ரமணிய முதலியார் தன்னை சூத்திரன் அல்லது சற்சூத்திரன் என்று தானே தேவாரம், திருவாசகம் பெரியபுராணம், இராமாயணம் முதலிய "நம் அரும் பெரும் நூல்கள்" படி சொல்லிக்கொள்ள வேண்டும்.

திரு. பாலசுப்ரமணிய முதலியாரவர்கள் திவான் பகதூர், ராவ் பகதூர்,

RangaRakes
tamilnavarasam.com

ராவ்சாகிப் முதலிய பட்டங்களை புளிக்குமென்று தள்ளிவிட்டு சற்சூத்திரப் பட்டத்தை ஒப்புக் கொள்வதாயிருந்தாலும் அவரைத் தெரிந்தெடுக்கச் செங்கல்பட்டு ஜில்லா ஓட்டர் மகாஜனங்கள் அப்பட்டத்தை ஒப்புக் கொள் ளத் தயாராயிருக்கிறார்களா என்று கேட்கின்றோம். ஆகவே செங்கல்பட்டு ஜில்லா பார்ப்பனரல்லாத ஓட்டர்கள் தங்களுக்கு உண்மையான சுய மரியாதை இருக்கின்றது என்பதை காட்டிக் கொள்ள வேண்டுமானால் சற் சூத்திரர்கள் போன்ற கோடரிக் காம்புகளுக்கு ஓட்டுச் செய்யாமல் பார்ப்பன ரல்லாத சமூகத்திற்கே சுயமரியாதைக்காக உழைக்கும் பெரியார் களான அதாவது ஜாதி வித்தியாசத்தையும் உயர்வு தாழ்வையும் போலி மதத் தையும் பொய்ப் புராணங்களையும் பொல்லா (பணம்பிடுங்கி) தெய்வத்தை யும் ஒழித்து மக்களுக்குள் சமத்துவத்தையும் அன்பையும் இரக்கத்தையும், பரோபகாரத்தையும் சத்தியத்தையும் ஒழுக்கத்தையும் நிலைநிறுத்தி சுதந்திர மளிக்கப் பாடுபடும் சுயமரியாதை இயக்க வீரர்களுக்கே ஓட்டுக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 17.08.1930**



## சத்திய மங்கலத்தில்
# திரு. நபிகள் பிறந்த நாள்

அன்புள்ள சகோதரர்களே! பெரியோர்களே!!

இஸ்லாமிய உலகத்திற்கு மிகவும் முக்கியமானதும், மக்களின் நன்மைக்காக உலகத்தில் தோன்றிய பெரியார்களில் மிக ஒப்பற்ற சிறந்த வருமான ஒருவரின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காகக் கூட்டப்பட்ட இக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்க இரண்டாம் தடவையாகவும் அழைத் தது பற்றி நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக சென்ற ஆண்டிலும் என்னை அழைத்து தலைமை வகிக்கச் சொன்னீர்கள்.

நிற்க, இன்றைய நிலைமையில் நாம் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்குப் பாடுபட ஆசை கொண்டிருக்கின்றோம் என்றாலும் இந்தியாவை இந்தியர் களே ஆளுவது என்று ஏதாவது ஒரு காலத்தில் நடக்கக் கூடியதானாலும் ஆகலாம். ஆனால் இன்றைய நிலையில் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படுவதென்பது சுலபத்தில் முடியாதென்பதே எனது அபிப்பிராயம். நான் இப்படிச் சொல்லுவது பற்றி உங்களில் சிலர் திடுக்கிடலாம். இரு சமூக ஒற்றுமைக்கும், என்றைக்கும் மதக் கொள்கைகள் என்பது முட்டுக்கட்டை யாகவேதான் இருக்கிறது. மதத்தைவிட மோட்சத்தைவிட மக்கள் ஒற்றுமை முக்கியமும் அவசியமுமானதாகும் என்று பட்டால்தான் இரு சமூகமும் ஒற்றுமையடைய முடியும். அப்படிக்கில்லாதவரை இப்படியே வெறும் வாய்ப் பேச்சு ஒற்றுமையாகவே இருக்க வேண்டியது தான். மற்ற நாட்டின் மக்கள் நடந்து கொள்வதைப் பார்த்தாவது நாம் நடந்து கொள்ள முயற்சிப் பதில்லை. நமக்கு மதமெல்லாம் நடை, உடை, பாவனை முதலிய வேஷத் தில் இருக்கின்றதே தவிர மதம் எதற்காக என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக் கின்றதோ அதற்காக உபயோகப்படக்கூடியதாயில்லை. இன்றையதினமும் மதமும், சமயமும் ஒருவனுக்கு அவன் அணியும் வேஷம் என்றுதான் மதத்தில் பட்டவர்களில் 100க்கு 99 பேர்கள் நினைத்துக் கொண்டு அதன்படி நடந்து வருகிறார்கள். பொதுவாக அந்த உணர்ச்சியும், வேஷமும் ஒழிந்தா லொழிய உலக மக்களுக்கு ஒற்றுமையும், சாந்தமும் கண்டிப்பாய் கிடை யவே கிடையாது.



RangaRakes tamilnavarasam.com

நிற்க, சென்னையிலிருந்து வந்திருக்கும் ஜனாப் பஷிர் அகமது சையீது சாயபு அவர்கள் இப்போது சென்னை சட்டசபைக்கும் அபேட்ச கராக இருக்கிறார்; ஆதலால் அவர் இந்த பிராந்தியத்திற்கு வந்து தனது மகமதிய சகோதரர்களிடத்தில் பேசிப் போக வந்திருக்கிறார். ஆகவே அவர் கள் முதலில் சில விஷயங்களைப் பற்றிப் பேசுவார்கள். அவர்கள் பேசியப் பிறகு முடிவுரையாக கடைசியில் நான் பேசுகிறேன். (எனச் சொல்லி ஜனாப் பஷிர் அகமது சையீது சாகிப் அவர்களைப் பேசும்படி கேட்டுக் கொண்டார். அவர் பேசி முடித்த பின் கடைசியாக முடிவுரையாக)

சகோதரர்களே! பெரியோர்களே!

நிகழ்ச்சிக் குறிப்பில் மற்றொரு கனவான் பேசுவார் என்றிருந்தது. ஆனால் அது நிறுத்தப்பட்டு விட்டது. முதலாவதாக ஜனாப் பஷீர் அகமது அவர்கள் இன்றைய விசேடத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் ஆங்கிலத்தில் எம்.ஏ.பி.எல். படித்து பட்டம் பெற்றவர்கள். அவர்கள் பேசிய திலிருந்து மதத்தில் எவ்வளவு ஆராய்ச்சி செய்து வருகிறார்கள் என்பது தெரிகிறது. அவர்கள் இதுவரை சொன்னதை விட வேறு விசேடமாகச் சொல்ல எப்படித்தான் முடியும். அவர்கள் பொதுவாழ்வு முக்கியமானது. நான் எதிர்பாராமலே இங்கு வந்து நண்பர் எடுத்துச் சொன்னார்கள். அது மிகவும் சிலாகிக்கத் தக்கதேயாகும். ஆகையால் நான் இஸ்லாம் சமூகம் ஹிந்து சமூகமாகிய இருவருக்குமாக சில சொல்லுகிறேன். அதைப் பற்றிச் சொல்லுவது மிகையாகாது. இஸ்லாம் மத தத்துவம் அநேகமாய் உலக மக்கள் எல்லோருக்குமே பொருத்தமானது. ஏனெனில் அது சமீபத்தில் ஏற்பட்ட மதமானதினால் மிகவும் திருந்திய மதமென்றே சொல்லுதல் வேண்டும்.

உலகமெல்லாம் ஒரு காலத்தில் காட்டுமிராண்டித் தனமாயிருந்த பிறகு நாளாக நாளாக பல வழிகளிலும் சீர்திருத்தமடைந்து வந்திருக்கின்றது. இந்து மதத்திற்கும் இஸ்லாம் மதத்திற்கும் சரியான பெயர் சொல்ல வேண்டுமானால் பழயமதம் புதியமதம் என்றுதான் சொல்லவேண்டும். பழய மதக்காரரும் புது மதக்காரரும் சுலபத்தில் ஒற்றுமையாக முடியாது. இருவரும் மக்கள் நன்மைக்கு மதம் ஏற்படுத்தப்பட்டது என்று கருத வேண்டுமே ஒழிய மதத்திற்காக மக்கள் ஏற்பட்டார்கள் என்று கருதக்கூடாது. மதத்தைக் காப்பது என்கின்ற உணர்ச்சியே தப்பான உணர்ச்சியாகும். மக்கள் நன்மையையும் அவர்கள் க்ஷேமத்தையும் சாந்தியையும் காப்பாற்றுவது தான் பொது நல வாதிகள் கடமை என்கின்ற உணர்ச்சி இருக்க வேண்டும். இந்துக்களும், முகமதியர்களும் ஒரே நாட்டிலே ஒரே மாதிரி சுதந்திரத்துடன் வாழ வேண்டியவர்களேயாவார்கள். இதற்கு முட்டுக்கட்டையாக மதக் கொள்கைகளை போட்டுக் கொண்டிருந்தால் ஒரு நாளும் ஒற்றுமையாய் வாழ முடியாது. ஆகையால் இருவரும் வேஷத்தை விட்டு உண்மை மனித தர்மத்தையும், அன்பையும் அடிப்படையாய் வைத்து சகோதரர்களாக



வேண்டியது மிக்க அவசியமானது. முகமதியர்களை விட இந்துக்களே ஒற்றுமைக்கு அதிக இடையூறாக இருக்கின்றார்கள். இந்துக் கொள்கை மிக்க மூடக் கொள்கையும், அன்புக்கும் ஒற்றுமைக்கும் இடந்தராததுமாய் இருக்கின்றது. மகமதியர்களும் வேஷ வித்தியாசத்தை விட்டு அவர் மத முக்கிய தத்துவங்களைக் கடைபிடித்தால் யாருடனும் கூடி வாழ சவுகரியம் உண்டு. ஆகவே இருவரும் சீர்திருந்தி மக்களை சீர்படுத்தி ஒற்றுமையாக வாழ வேண்டும்.

*குறிப்பு : சத்தியமங்கலம் பழைய பள்ளி வாசலுக்கு எதிரிலுள்ள சவுக்கில் 08-08-1930 ஆம் நாள் நடைபெற்ற நபிகள் நாயகம் பிறந்த நாள் விழாவில் தலைமையேற்று பேசியது.*

**குடி அரசு – சொற்பொழிவு – 24.08.1930**



RangaRakes tamilnavarasam.com

# உண்மைப் பிரதிநிதிகள்

ராமனாதபுரம் ஜில்லா தேவஸ்தானக் கமிட்டியார் ஷை "தேவஸ்தானத்திற்கு கட்டுப்பட்ட குளம், கிணறு, ரோட்டு, பள்ளிக்கூடம் ஆகியவைகளில் யாரும் எவ்விதத் தடையுமில்லாமல் செல்லலாம்" என்பதாக ஒரு தீர்மானம் கொண்டு வந்து ஏகமானதாக நிறைவேற்றி இருக்கின்றார்கள்.

அது மாத்திரமல்லாமல் மேற்படி "தேவஸ்தானத்திற்கு கட்டுப்பட்ட எல்லா கோவில்களிலும் தேவதாசிகளின் ஊழியத்தை அடியோடு நிறுத்தி விட வேண்டும்" என்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

இவற்றிற்கும் மேலாக இன்னொரு முக்கியமான விஷயம் அக் கமிட்டியார் செய்திருப்பதென்னவென்றால் அக்கமிட்டியாரை ஸ்ரீவில்லிபுத்தூர் செங்குந்த வாலிப சங்கத்தாரும், ஜில்லா சுயமரியாதை சங்கத்தாரும் ஒரு விண்ணப்பத்தின் மூலம் அந்த "ஜில்லாக் கமிட்டியின் ஆதிக்கத்திற்குட்பட்ட எல்லாக் கோவில்களிலும் இந்து மதத்தைச் சேர்ந்த எல்லா வகுப்பினருக்கும் பிரவேச உரிமை வழங்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்ட விண்ணப்பங்களை கமிட்டி கூட்டத்தில் யோசனைக் கொடுத்து ஆலோசித்து அடியில் கண்ட விஷயங்களுக்கு பதில் தெரிவிக்கும்படி அக்கமிட்டிக்கு உட்பட்ட எல்லாக் கோவில்களின் டிரஸ்டிகளுக்கும் சுற்றுக் கடிதம் அனுப்பி இருக்கின்றார்கள். அவைகளாவன:-

1. இந்துக்கள் எல்லோரும் கோவிலுக்குள் செல்லுவதுண்டா?
2. செல்லுமிடத்திற்கு வரையரையுண்டா?
3. எல்லோரும் செல்லாவிட்டால் அதன் காரணமென்ன?
4. ஜாதி காரணமாக யாராவது தடுக்கப்படுகிறார்களா?
5. தடுக்கப்பட்டால் அதற்குக் காரணம் உண்டா?
6. அக்காரணங்களுக்கு எழுத்து மூலமான ஆதாரம் இருந்தால் அதன் விபரம் என்ன?



7. ஜாதி வித்தியாசம் இல்லாமல் கோவிலுக்குள் யாரையும் விடுவது உங்களுக்குச் சம்மதமா?

என்னும் விபரங்கள் கண்டு சுற்றுக் கடிதம் அனுப்பிக் கேட்டிருக்கிறார்கள். இவற்றிலிருந்து அத்தேவஸ்தானக் கமிட்டியின் மனோபாவம் மக்களுக்கு பிறவியினால் உள்ள தடைகளை நீக்க வேண்டும் என்கின்ற கவலையுடையதாயிருக்கின்றது என்பது நன்றாய் விளங்குகின்றது.

இதுபோல் தமிழ்நாட்டில் மற்றும் பல கமிட்டிகளிலும் இவ்விஷயங்கள் கவனத்திற்கு வந்து தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த கும்பகோணம் சர்க்கிள் கமிட்டியிலும் இம்மாதிரி ஒரு தீர்மானம் வந்து அதை அக்கமிட்டித் தலைவர் நிராகரித்து விட்டார்.

ஈரோடு சர்க்கிள் கமிட்டியிலும் இம்மாதிரி ஒரு தீர்மானம் வந்து நிறைவேறிற்றே ஒழிய அது அமுலுக்கு வர அக்கமிட்டியார்களில் சிலர் எதிரிகளாய் இருந்து விட்டார்கள். அத்தீர்மானப்படி கோவிலுக்குப் போன ஆதிதிராவிடர்கள் மீது ஏற்பட்ட கேசுங்கூட இன்னமும் ஹைகோர்ட்டில் பைசலாகாமல் இருக்கின்றது.

தமிழ் நாட்டில் இப்போது அநேகமாக எங்குமே இம்மாதிரியான ஒரு வித சமத்துவக் கிளர்ச்சி ஏற்பட்டிருப்பதை மறுக்க முடியாது. ஆனாலும் சமீபத்தில் ஏற்பட்ட அரசியல் கிளர்ச்சியினால் சமூக சமத்துவக்கிளர்ச்சி சற்று தளர்வுற்றிருக்கின்றதென்பதை நாம் மறைக்க முயலவில்லை. ஆயினும் பொதுவாகவே நமது நாட்டில் இவ்வித முற்போக்குகளுக்குப் பார்ப்பனர்கள் மாத்திரமே தடையாயிருக்கின்றார்கள் என்று நாம் சொல்லுவதற்கில்லை. மற்றபடி அவர்கள் சூக்ஷியில் பட்டவர்களும், அவர்களைப் பின்பற்றி தாங்களும் அவர்களைப் போலவே பொதுஜனங்கள் முன்னால் உயர்ந்த ஜாதியார் என்கிற பெருமையை அடையலாம் என்று கருதி இருப்பவர்களும், பார்ப்பனரைப் போலவே பாமர மக்கள் உழைப்பினால் வாழ்ந்து கொண்டே இருக்கலாம், அதாவது மற்றவன் உழைப்பில் வாழலாம் என்பவர்களும் மக்கள் சமத்துவத்திற்கும் சுதந்திரத்திற்கும் எதிரிடையாகவே இருக்கின்றார்கள். இக் கூட்டத்தார்க்கு இப்போதைய அரசியல் கிளர்ச்சி சற்று உதவியாயிருப்பதால் அவர்கள் துணிவாக தங்கள் ஆதிக்கத்தை காப்பாற்ற முன் வந்து விட்டார்கள். பாமர மக்களுக்கும் போதிய அறிவும் ஆராய்ச்சியும், இன்னமும் ஏற்படவில்லையாதலால் தங்களது சுதந்தரங்களுக்கும், சமத்துவத்திற்கும் சர்க்கார் காரணமென்று முட்டாள் தனமாய் நம்பிக்கொண்டு தங்களது முயற்சியையும் ஊக்கத்தையும் அத்துறையில் பாழாக்கிவருவதாலேயே இவர்களை ஏமாற்றுகின்றவர்களுக்கு சிறிது கூட பயமில்லாமல் போய் விட்டது. இன்றைய தினம் நமது நாட்டில் நடைபெறும் ஜனப்பிரதிநிதி தேர்தல்களிலும் நூற்றுக்கு ஒரு பத்துப் பேர்கள் கூட மக்களை சமத்துவமாய் பாவிப்பவர்களும் மனிதனுக்கு மனித சுதந்திரம் அளிக்க வேண்டும் என்ற



RangaRakes tamilnavarasam.com

நோக்கமுடையவர்களும் தெரிந்தெடுக்கப்பட முடிவதில்லை என்பதோடு ஜாதி ஆணவக்காரர்களும் ஆதிக்க வெறியர்களும் சுதந்திர எதிரிகளுமே பெருவாரியாய் தெரிந்தெடுக்கப்படுகின்றார்கள். இதிலிருந்தே இந்தியாவுக்கு உண்மையான சுதந்திர ஆவல் இல்லை என்றும் ஜனனாயக ஆக்ஷிக்குத் தகுதி அற்றதென்றும் தானாகவே விளங்கவில்லையா என்று கேழ்க்கின்றோம்.

நமது நாட்டு மக்களின் கவனம் எல்லாம் இப்போது இந்தியா முழுமைக்கும் "ஐயக்கர், சாப்ரூ ராஜித்தூது எவ்விதமாய் முடியும்?" என்பதிலும் "லண்டன் வட்டமேஜை மகாநாட்டில் என்ன முடிவு ஏற்படும்" என்பதிலும், தென் இந்தியாவைப் பொருத்தவரை "தேசியக் கக்ஷி ஜெயிக்குமா ஜஸ்டிஸ் கக்ஷி ஜெயிக்குமா?" என்பதிலும் இழுக்கப்பட்டிருக்கின்றதே தவிர மனிதனுக்கு மனிதத்தன்மை கிடைக்கின்ற விஷயத்தில் ஜனப் பிரதிநிதி என்பவர்களில் ஒருவருக்காவது கவலை இல்லை என்றே சொல்லு வோம். இக் கூட்டத்தினர்கள் எல்லோருக்கும் கூலிகளும் இக்கிளர்ச்சிகளால் வயிறு வளர்ப்பவர்களுமிருப்பதால் ஒவ்வொன்றையும் பிரமாதப் படுத்தி கூலிப் பிரசாரம் செய்பவர்களும் இல்லாமலில்லை என்றாலும் இரண்டு கக்ஷியாரும் தங்கள் தங்கள் அறிக்கையில் மக்களுக்கு சமூக சமத்துவ விஷயத்தில் பூர்ண சுதந்திரம் கிடைக்கப் பாடுபடுவதாக வெளிப்படுத்தி னார்களே ஒழிய அவர்களது உட்கருத்தெல்லாம் ஒருவரை ஒருவர் ஏமாற்றி ஏழைமக்களை வஞ்சிப்பது என்பதே என்பதாக யாரும் அறிவார்கள். சமீப தேர்தல்களில் நடக்கும் பிரசாரங்களில் ஒருவாறு இவ்வுண்மையைப் பலர் அறிந்திருக்கலாம். அதாவது ஒரு கக்ஷியார் திரு. W.P.A. சௌந்திர பாண்டியன் அவர்களை பலி கொடுத்ததும் டாக்டர் சுப்பராயன் அவர்களுக் கும் முத்தையா முதலியார் அவர்களுக்கும் விறோதமாக பார்ப்பனர்களை நிருத்தி அவர்களை ஆதரிப்பதும் தேசியக் கக்ஷியார் என்று சொல்லிக் கொள்ளும் மற்றொரு கட்சியார் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்களுக்கும், செங்கல்பட்டு திருவாளர்கள் வேதாசலம், ஜயராம் நாயுடு இவர்களுக்கும் எதிரிடையாக பார்ப்பனருக்கு இரண்டாவதான வருணாச்சிரமக்காரர்களை நிறுத்தி சமூக சமத்துவ சுதந்திரக் கொள்கைகளுக்கு விரோதமாக வருணாசிரம பிரசாரங்கள் செய்வித்து தோற்கடிக்கப் பார்ப்பதும், இவ்விரு கட்சியாரின் உண்மைக் கொள்கைகளை வெளியாக்கப் போதுமான ஆதாரம் என்றே நினைக்கின்றோம்.

முதலாவதாக தங்களை பிறவியில் எந்த மனிதனுக்கும் உயர்ந்த ஜாதியான் என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற - தங்களுக்கு இருக்கின்ற பொது உரிமைகளில் ஒரு சிறிதாவது தன்னைப் போன்ற மற்றொரு மனிதனுக்கு இருக்க நியாயமில்லை என்று கருதிக் கொண்டு கொடுக்க மறுத்துக் கொண்டுமிருக்கின்ற எந்த மனிதனும் அவன் எப்படிப்பட்டவனாக இருந்



தாலும் பொது ஜனப் பிரதிநிதித்துவத்திற்கு சிறிதும் அருகனல்ல வென்றே கோபுரத்தின் மீதிருந்து கூறுவோம்.

இன்றைய தினம் நமது நாட்டில் இருக்கும் பிரதிநிதித்துவ உரிமை எல்லாம் "எலிக்குப் பூனை பிரதிநிதித்துவம்" என்பது போன்றதே ஒழிய மனிதனுக்கு மனிதன் பிரதிநிதி என்பது போன்றவை அல்ல என்றே சொல்லுவோம்.

மதக் கொடுமைகளும், ஜாதி ஆணவமும் ஒழிய வேண்டுமென்றால் ஜாதி, மதங்களுக்கு ஆபத்து வந்து விட்டது என்று ஓலமிடுகிறவர்களையும் கூப்பாடு போடுகின்றவர்களையும் மக்கள் பிரதிநிதித்துவத்திற்குத் தகுந்தவர்கள் என்று எந்த மூடனாவது ஒப்புக் கொள்ள முடியுமா என்று கேட்கின்றோம்.

ஆகவே நமது பிரதிநிதிகள் என்று வருகின்றவர்கள் ராமனாதபுரம் தேவஸ்தானக் கமிட்டியார் போன்ற உண்மையான சமத்துவ நோக்கமும் தங்களுக்குக் கிடைத்த அதிகாரத்தையோ பதவியையோ சமத்துவ உரிமைக்கு தாராளமாய் உபயோகிக்கக் கூடியவர்களாகவே இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் பொதுமக்களுடைய கடமையாகும்.

எனவே மேற்கண்டபடி தீர்மானம் செய்த ராமநாதபுரம் ஜில்லா தேவஸ்தானக் கமிட்டி கனவான்களை நாம் மனதாரப் போற்றுவதுடன் இவர்களும் இவர்கள் போன்றார்களுமே மக்களின் உண்மையான பிரதிநிதிகளாய் ஆவதற்குத் தகுதியுடையவர்களென்று தைரியமாய்ச் சொல்லுகின்றோம். அதோடு மற்ற தேவஸ்தானக் கமிட்டியாரையும் பொதுப் பிரதிநிதிகளையும் இவர்களைப் பார்த்தாவது புத்தி வருவித்துக் கொள்ளக் கூடாதா என்று ஞாபகப் படுத்துகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 24.08.1930**



RangaRakes tamilnavarasam.com

# ஈரோடு
# நபிகள் பிறந்தநாள் கொண்டாட்டம்

அக்கிராசனாதிபதிகளே! சகோதரர்களே!

இந்த மாதிரியான முக்கிய சந்தர்ப்பத்தில் கூட்டப்பட்ட இப்பெரியக் கூட்டத்தில் என்போன்றவர்களது அபிப்பிராயத்தையும், தெரிவிக்கச் சந்தர்ப்பமளித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு முன் இங்கு பேசிய இருவர்களில் முதலில் பேசிய மௌலானா மௌல்வி அ. க. அப்துல் அமீது சாயபு (பாகவி) அவர்களைப் பற்றி நான் உங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. அவர்கள் இதற்குமுன் பலதடவை நம் ஈரோட்டிற்கு வந்திருந்தாலும் குறிப்பாக திரு. காந்திய வர்களும், மௌலானா அசாத் சோபானி அவர்களும் நம் ஈரோட்டிற்கு வந்திருந்தபோது மௌலானா அவர்கள், மௌலானா அசாத் சோபானி அவர்களின் உருது உபந்நியாசத்தைத் தமிழில் மொழி பெயர்த்ததோடு தமிழ்நாடு முழுவதும் அவர்கள் கூடவே இருந்தவர் என்பது உங்களனை வருக்கும் ஞாபகமிருக்கலாம். அவர்கள் இதுவரை பேசியதிலிருந்து எதையும் எந்த மதத்தையும் சரித்திரத்திலிருந்து தீர்மானிக்கக் கூடாது என்றும், அதன் பலனைக் கொண்டும், அது மக்களுக்கு என்ன நன்மை அளித்தது என்பதைக் கொண்டுதான் தீர்மானிக்க வேண்டுமென்றும், மதம் என்பது வெறும் வேஷத்திலில்லையென்றும், அது மக்களின் நன்மைக் காகவே இருக்க வேண்டுமென்றும், அத்தோடு அது எவருக்கும் நம்பிக்கை யில் மாத்திரம் இல்லாமல், பகுத்தறிவிற்கும், ஆராய்ச்சிக்கும், அனுபவத் திற்கும் ஏற்றதா யிருக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். இதை நான் முழு மனதுடன் ஒப்புக் கொள்கிறேன். மற்றும் உலகத்திலுள்ள மதக்காரர்களெல் லாம் இதை ஒப்புக் கொள்ளும்பட்சம் நாட்டில் மத சம்மந்தமான எவ்வித சண்டையும், அபிப்பிராயபேதமும், பிரிவும் பல மதங்களும் ஏற்பட இடமே இருக்காது. தவிர மௌலானா அவர்கள் இஸ்லாம் மதத்தில் பெண்க ளுக்கும், தீண்டாதார் என்பவர்களுக்குமுள்ள பல சுதந்திரங்களையும், இந்து மதத்தில் அவை இல்லாததையும் எடுத்துச் சொன்னார்கள். அதையும் நான் ஒப்புக் கொள்கிறேன். மேலும் அதைப் பற்றியே இரு சமூகத்திற்கும் பயன் படுமாறு சில வார்த்தைகள் பின்னால் பொதுவாகச் சொல்லுகிறேன். மதம் என்பது



மக்களின் வாழ்க்கைக்கு ஏற்பட்ட கொள்கைகள் என்பதாக எல்லா மத சம்பிரதாயக்காரர்களும் குறிப்பு எழுதி இருக்கிறார்கள். Darwin's Theory Evolution Theory (டார்வின் தியரி எவுலூஷன் தியரி) என்பவையான மிருகத் திலிருந்து மனிதன் வந்த ஆராய்ச்சி, மாறுதல் முற்போக்கு ஆகிய கொள்கை களின்படி பார்த்தால் மனிதனுக்குப் பகுத்தறிவு உணர்ச்சி இல்லாத காலத்தில் அதாவது மனிதன் எதைஎதைக்காண்கின்றானோ,எதைஎதைஅனுபவிக்கின்றானோ அதன் தத்துவத்தை அறிந்துகொள்ள அறிவில்லாமலிருந்த காலத்திலும்அறிந்தவர்கள் சொல்லுவதை உணர்ந்து கொள்ளப் போதிய ஆற்றலில்லாத காலத்திலும், தோன்றியத் தோற்றங்களைப் பற்றியும் மனிதன் நடந்துகொள்ள வேண்டிய விஷயங்களைப் பற்றியும் திருப்திக்கும், பயத்திற்கும் கட்டுப்பாட்டிற்குமாகப் பல கட்டுக்கதைகள் மூலம் புகுத்தி அவைகளைப் பயத்தின் பேரில் நம்பச் செய்தவைதான் இன்றையக் கடவுள் உணர்ச்சியின் ஆரம்பமும் மதக் கொள்கைகளின் உற்பவமுமாகும். அந்த ஆரம்ப முறைதான் ஒரே விதமாய் உலகமெங்கும் பரவியிருந்ததாகுமென் றாலும் பின்னால் உலகம் மாறுதலாக ஆக அனுபவம் முதிர முதிர கொள்கை களும் உணர்ச்சிகளும் மாற வேண்டியதாயிற்று. அந்த மாறுதல் கொள்கை கள்தான் இன்று நாம் பல மதங்களாகச் சொல்லிக் கொள்ளப்படுபவை களாகும்.

ஹெட்மாஸ்டர் திரு. இராஜகோபாலையர் அவர்கள் சொன்னது போல் ஒரு காலத்தில் மக்கள் எல்லோரும் ஒரே மாதிரியாக அநாகரீகர் களாகவும், அறிவில்லாதவர்களாகவும்தான் இருந்திருக்கிறார்கள். அதைப் பார்த்து அவ்வப்போது சீர்திருத்தஞ் செய்ய முயற்சித்தவர்கள்தான் மதத் தலைவர்களானார்கள். அவர்கள் பொதுவாக அந்தக் காலத்தில் அநேக மனிதர்களுக்கு மேற்பட்ட அறிவுடையவர்களாகயிருந்ததாகக் காணப் பட்டதால் அவர்கள் அந்த மக்களால் காலத்திற்கேற்றபடி கடவுள் அவதார மென்றும், கடவுள் புத்திரரென்றும் மற்றும் பலவாறாகக் கருதப்பட்டார்கள். அவர்கள் பின்னால் உள்ள ஜனங்களும் தங்களுடைய வழக்கமான மூடத்தனத்தை கொண்டும் மக்கள் மதிக்க வேண்டு மென்கின்ற ஆசையைக் கொண்டும் அப்பெரியார்கள் மீது அமானுஷிகமான கட்டுக் கதைகளைக் கட்டி அநேக "அற்புதங்கள்" செய்தார்கள் என்று பெருமைப்படுத்தி விட்டார்கள். அதனால்தான் இப்போது ஒவ்வொரு மதக்காரரும் தங்கள் தங்கள் மதத் தலைவர்களை மனிதத் தன்மைக்கு மேலாகவே மதித்து மனிதசக்திக்கு மீறினதும், அனுபவத்திற்கு ஒவ்வாததுமான குணங்களை ஏற்றிப் போற்றுகின்றார்கள். என்றாலும் காலமாறுபாட்டிற்குத் தகுந்தபடி பழைய கொள்கைகள் மாற மாற புதிய புதிய மதங்கள் ஏற்பட்டுக் கொண்டு தான் வரும். ஆனால் இனிமேல் தெய்வீகம் பொருந்தியவர்கள் மாத்திரம் ஏற்படமுடியாது.



RangaRakes tamilnavarasam.com

மிகப் பழைய காலத்தில் அதாவது இந்து மத காலத்தில் கடவுள்களே நேரில் வருவதாகச் சொன்னார்கள். அதற்கடுத்த கிறிஸ்தவ மத காலத்தில் கடவுள் குமாரர் (பிதாமகன்) வந்ததாகச் சொன்னார்கள். மகமதிய மதக் காலத்தில் கடவுளின் தூதர்கள் வந்ததாகச் சொன்னார்கள். இது மாத்திரமல் லாமல் "இனி தூதர்கள் வரமாட்டார்கள்" என்றும் சொன்னார்கள். தெளிவாக இன்னுந் தெரிய வேண்டுமானால் இந்துக்களில் 10 அவதாரங்களுடனும் 12 ஆழ்வார்களுடனும் 4 சமயாச்சாரிகள் உள்பட 64 நாயன்மார்களுடனும் அநேகமாய் அவதாரங்களும், தெய்வீகங்களும் நின்றே விட்டன. எத்த னையோ தடவை எதிர்பார்த்தும் எத்தனையோ பெயர்களைப் பழையபடி பொது ஜனங்கள், அவதாரமென்று கற்பித்தும் ஒன்றும் சிறிதும் பயன் பெறாமலே போய்விட்டது. அதுபோலவே கடவுளைப் பற்றியே தெரியா தென்று சொன்ன பௌத்த "அவதாரமும்" அத்துடனேயே நின்று விட்டது. கிறிஸ்துவ மதத்திலும் கிறிஸ்துவுடனும் அவர்கள் சிஷ்யர்களுடனுமே நின்று விட்டது. அவர் மறுபடியும் வருவார் என்று சொல்லி வெகுகாலமா கியும் இப்போது எதிர்பார்ப்பதே பரிகாசத்திற்கிடமாய் விட்டது. மார்டின் லூதர் முதலியவர்களும் மனிதர்களாகவே பாவிக்கப்பட்டு விட்டார்கள். அதனால் தான் கிறிஸ்து மதத்தில் கட்சிகள் ஏற்பட்டுவிட்டன. இஸ்லாம் மார்க்கத்திலும் மகமத் நபி அவர்களோடேயே நபிகள் தோற்றம் நின்று விட்டது. திரு. மகமது நபி அவர்கள் எல்லாத் தெய்வத்தன்மை பொருந்திய வர்கள் என்பவர்களிலும் பிந்தியவராதலாலும் எல்லோரையும் விட மிக்க பகுத்தறிவும், முன் யோசனையும் அனுபவ ஞானமும் உடையவரான தினாலும் " இனி உலகில் நபிகள் தோன்றப் போவதே கிடையாது" என்று சொல்லி விட்டார். அவர் இரண்டு காரணத்தால் அப்படி சொல்லியிருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றுகின்றது; அதாவது ஒரு சமயம் மறுபடியும் யாராவது புறப்பட்டு சில ஆட்களைச் சேர்த்துக் கொண்டு தன்னை தேவ அவதாரமென்றும், தெய்வாம்சம் என்றும் சொல்லி பழைய படி மக்களைப் பாழாக்கி விடாமலும் தனது கொள்கைகளை கெடுத்து விடாமலும் இருக்கட்டும் என்று மிக முன் ஜாக்கிரதையாகச் சொல்லி யிருந்தாலுமிருக்கலாம். அல்லது "இனி வரும் காலத்தில் மக்களை அறிவு டையவர்களாக இருப்பார்கள்; இம்மாதிரி ஒருவரை சுலபத்தில் தெய்வத் தன்மை பொருந்தியவர் என்று கருதிவிட இடமிருக்காது" என்று கருதி சொல்லியிருந்தாலுமிருக்கலாம். எப்படியிருந்தாலும் திரு. மகமது நபி அவர் கள் சொன்னது பலித்துவிட்டதுடன் அவரது கொள்கைக்கு மேலானதொரு கொள்கையை இது வரை வேறு எவரும் கொண்டு வந்து அமுலில் நடத்த வில்லை என்பது மாத்திரம் உறுதி. இதுவரைத் தோன்றிய எல்லா புது மதங் களும் கடைசியாக வந்த திரு. மகமது நபி அவர்களது கொள்கைகளுக்குப் பின் போகிறதேயல்லாமல் முன் போகவில்லை. கிறிஸ்தவர்கள் சீர்திருத்தம் செய்ய வேண்டுமானாலும் இந்துக்கள் சீர்திருத்தம் செய்ய வேண்டு மானாலும் புதியக் கொள்கைகளை திரு. நபி அவர்களிடம் தான் கடன் வாங்கியாக வேண்டும்.



அவரது கொள்கைகளுக்கு மேல் மக்கள் நலத்திற் குக் கொள்கைகள் வகுப்பதற்கு இப்போதுள்ள எந்த மதஸ்தருக்கும் தைரிய மில்லையென்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது. இஸ்லாம் மதக் கொள்கைகளுக்கு மேலாக ஒரு கொள்கை வகுக்க வேண்டுமானால் அது இப்போதைய ருஷிய மதமாகத் தானிருக்க வேண்டும். மற்றபடி அது கூடிய வரையில் மக்களுக்குத் தாராளமாக சுதந்திரத்தையும் சகோதரத்துவத்தையும் வீரத்தையும் கொடுத்திருக்கின்றது.

ஆனால் மற்ற மதங்களிலும் அவைகள் இருப்பதாய் சொல்லிக் கொள்ளலாமே தவிர அந்தப்படி கொடுக்கப்படுமாயின் - அமுலுக்கு வருமாயின் அம்மதங்களே மறைந்து போய்விடும்.

இந்து மதத்திற்கும் இஸ்லாம் மதத்திற்கும் கொள்கைகளில் தலைகீழ் வித்தியாசமிருக்கின்றது.

இந்து மதத்திற்கு அகராதிகளில் "மகமதிய மதத்திற்கு விரோதமான மதம்" என்று ஒரு பெயர் இருக்கின்றது. அதன் கொள்கைகள் பெரும்பாலும் இந்து மதக் கொள்கைகளைத் தான் கண்டித்திருக்கின்றன.

இன்றைய தினமும் இந்திய அரசியலில் இந்துக்களுக்கு மகமதியர் அல்லாதார் என்று தான், அதாவது பார்ப்பனீயத்திற்கு எதிரிடையான மக்க ளுக்கு பார்ப்பனரல்லாதார் என்கின்ற பெயர் இருப்பதுபோலவே மகமதியர் அல்லாதார் என்கின்ற பெயரே ஏற்பட்டிருக்கின்றது.

இந்து மதம் என்பது உலக மக்களின் ஆதி முதல் நிலைமையாகும். அது இதுவரையில் சிறிது கூட திருந்தவில்லை.

எனக்கு முன் பேசிய எட்மாஸ்டர் திரு. ராஜகோபாலய்யர் அவர்கள் சொன்னது போல் ஒரு காலத்தில் மக்கள் அநாகரீகர்களாய் பகுத்தறிவு இல்லாமல் இருந்த காலத்தில் ஏற்பட்ட கொள்கைகள் என்பதுதான் இன்றைய தினம் இந்து மதத்தின் பேறால் அப்படியே இருக்கின்றன. மத்தியில் பலர் பல விஷயங்கள் சொல்லி இருந்தாலும் அவைகள் புத்தக அளவில்தான் இருக்கின்றன. மற்றபடி கடவுள் விஷயத்தில் பல கோடி கடவுள்களும் - தொட்டதெல்லாம் கடவுளாயும், நினைத்ததெல்லாம் கடவுள்களாயும், தென் பட்டதெல்லாம் கடவுளாயும் இனியும் விளங்குகின்றன. இஸ்லாம் மார்க்கம் சமீப மார்க்கமானதால் அதில் அந்தக் காரியம் மாத்திரம் அதாவது கடவுள் காரியம் வெகு கண்டிப்பாய் இருக்கின்றது. எப்படியெனில் ஒரு கடவுளுக்கு மேல் நினைத்தால் பாவம் என்றும் நினைத்துக் கொண்டிருப்பவனைக் கொன்றால் புண்ணியம் என்கின்றவரை கூடவும் இருப்பதாய் தெரிகின்றது. நிற்க,

இந்துக் கடவுள்கள் உருவத்தை எல்லாம் இஸ்லாமியர்கள் உடைத்து



RangaRakes tamilnavarasam.com

சின்னாபின்னமாக்கப்பட்டதாகவும், ஒரு கையில் வாளையும், மற்றொரு கையில் குரானையும் வைத்து மதப் பிரசாரம் செய்ததாகவும் சொல்லப் படுகின்றது. அது உண்மையாய் இருந்தாலும் இருக்கலாம், பொய்யாயிருந்தா லும் இருக்கலாம். ஆனாலும் அது உண்மை யாயிருந்தால் அந்த கொள்கை கொண்ட மகமதிய அரசாங்கம் இதுவரை இந்தியாவில் இருந்திருக்குமாயின் இன்றைய இந்தியாவின் நிலை எவ்வளவோ மேன்மையாய் இருந்திருக்கும். தீண்டாதார்களாக ஆறு கோடியும் பயங்காளிகளும், கோழைகளும் ஒற்றுமையற்றவர்களும் சோம்பேறிகளுமாக இருபது கோடியுமுள்ள மக்கள் இன்று கண்டிப்பாய் இந்தியாவில் இருந்திருக்க மாட்டார்கள் என்பது கல்லு போன்ற உறுதி.

## குழவிக் கல்லுக்கு கோடி ரூபாய்

ஒரு பக்கம் நமது மக்கள் கஞ்சிக்கில்லாமல் அலையவும் - நாட்டைவிட்டு லட்சக்கணக்கான பேர்கள் கஞ்சிக்காக வெளி நாடுகளுக்கு ஓடவும் பார்த்துக் கொண்டே நமது கடவுள்கள் குழவிக் கல்லுகள் அவதாரத்திலிருந்து கொண்டு இவ்வளவு பெரிய கோவிலுடனும், இத்தனைக் கோடி ரூபாய்கள் நகையுடனும், இத்தனை வேளை பூசையுடனும், இத்தனை தாசி, வேசி, வைப்பாட்டி, பெண்டாட்டிகளுடனும் இருந்து கொண்டு பல்லக்கு, ரதம், தேர், ஆனை, குதிரை, ஆடு, மாடு, மயில், குரங்கு, கழுகு வாகனத்தில் சவாரி செய்து கொண்டு ஊர்வலம் வந்துகொண்டே இருக்குமா? இருக்கும் என்று நீங்கள் கருதுகின்றீர்களா? அல்லது இவ்வளவு பணம் நமது நாட்டை விட்டு வெளிநாட்டுக்கு கொள்ளை போய் கொண்டு இருப்பதற்கு நமது மக்களே அனுகூலமாய் இருப்பார்கள் என்று கருதுகின்றீர்களா?

இந்தியாவானது எத்தனையோ காலத்திற்கு முன் சுயராஜியத்துடன் உலகத்திலுள்ள நாடுகளில் எல்லாம் மேன்மையாக இருந்து கொண்டிருக் கும். ஆகையால் அதைப் பற்றி அதாவது வாள் கொண்டு இஸ்லாம் மதப் பிரசாரம் செய்ததைப் பற்றியும் நமது கோயில்களை இடித்து சாமிகளை ஊனப்படுத்தினார்கள் என்பதைப் பற்றியும் நான் சிறிதும் வருத்தமடையவில்லை. அன்றியும் அதுவேதான் அம் மாதிரியாகச் செய்வதுதான் மற்ற எல்லா மதத்தினுடையவும் பிரசார தர்மமாகவும் இருந்திருக்கின்றது. இன்றும் இருக்கின்றது.

## எல்லா மதமும் மூர்க்கப் பிரசாரமே

சங்கராச்சாரி மதம் பௌத்த மடங்களில் நெருப்பு வைத்ததும், சைவ மதம் சமணர்களைக் கழுவேற்றினதும், வைணவ மதம் புத்த விக்கிரகங் களை உடைத்து உருக்கினதுமான காரியங்கள் எல்லாம் நினைத்துப் பார்ப்போமானால் அந்தக் காலத்தில் மகமதியர்கள் செய்ததாகச் சொல்லப் படுபவைகள் எதற்கும் இக்காரியங்கள் இளைத்ததல்ல என்று தோன்றும் ஆனாலும் மகமதிய மதம் வாள் கொண்டு பிரசாரம் செய்யப்பட்டதா இல்லையா என்பதில் இன்னமும் தகரார் இருக்கின்றது. மகமதியர்கள் அதை ஒப்புக் கொள்வதில்லை. மற்றபடி அதை தங்கள் எதிரிகளால் தங்கள் மீது கற்பிக்கப்பட்ட ஓர் பழி என்று சொல்லுகின்றார்கள்.

ஆனால் சமணர்களை சைவர்கள் கழுவேற்றியதை சைவர்களே ஒப்புக் கொண்டு தங்களாலேயே எழுதி வைத்து புண்ணிய சரித்திரமாக இன்றும் பிரசாரம் செய்வதுடன் அதன் பெருமையைக் காட்டிக் கொள்ள வருஷந் தோறும் பல ஆயிரம் ரூபாய்கள் செலவில் பல இடங்களில் உற்சவங்கள் நடத்திக் காட்டப்படுகின்றன. அக்கோயில்களில் இன்றும் கழுவேற்றிய காட்சிகள் சித்திர ரூபமாய் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.

அது போலவே வைணவர்களும் புத்த மத விக்கிரகத்தை அழித்ததற்கு ஆதாரமாய் ஸ்ரீரங்கம் கோயில் இருப்பதுடன், அவ்விக்கிரகத்தை திருடி உடைத்த திருமங்கையாழ்வாரின் சரித்திரத்தில் இதையொரு பெருமையாகவும் எழுதி புண்ணிய சரித்திரமாகப் பாவித்து தினமும் படிக்கப் பட்டும் வருகின்றன. இவைகள் ஒரு புறமிருக்க இன்றைய தினமும் எனக்கு வரும் சில கடிதங்களையும், என்னைப் பற்றி பேசும் பல பேச்சுகளையும் பார்த்தாலும் எனது கொள்கைகளை எதிர்த்துப் பிரசாரம் செய்யும் சைவ வைணவர்களின் வார்த்தைகளைப் பார்த்தாலும் அவைகளும் மகமதியர் செய்ததாய்ச் சொல்லப்படும் வாள் பிரசாரத்திற்கு சிறிதும் இளைத்ததல்லவென்றே தோன்றும்.

கிறிஸ்து நாதர் ஏன் சிலுவையில் அறையப்பட்டார்? சாக்ரட்டீஸ் ஏன் விஷமருந்தச் செய்யப்பட்டார்? மகமது நபி ஏன் மலைக் குகைக்குள் ஒளியப்பட்டார்? என்பவைகளை எல்லாம் கவனித்தால் ஆரம்பகாலம் தொட்டே உலகத்தில் சிறப்பாக நமது நாட்டில் மதப் பிரசாரங்களின் கதி இப்படித்தான் இருந்து வந்திருக்கின்றன என்பது விளங்கும். இவைதவிர இன்றைய தினமும் இந்து மத தர்மத்தில் இருக்கும் தர்மங்கள் அதாவது "நாஸ்திகர்களை நாக்கருக்க வேண்டும், கண்ணைக் குத்த வேண்டும், சித்திர வதை செய்ய வேண்டும், நாட்டை விட்டுத்துறத்த வேண்டும்" என்பனவெல்லாம் எந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது? என்று கேட்கின்றேன்.

மற்றும் இந்து "வேத சாஸ்திரங்களைப் படித்தால் நாக்கருக்க வேண்டும், கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும், பார்த்தால் கண்ணைக் குத்த வேண்டும், மனதில் ஏறிவிட்டால் நெஞ்சைப் பிளக்க வேண்டும்" என்பன வெல்லாம் எந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது? என்று கேட்கிறேன்.



RangaRakes tamilnavarasam.com

மற்றும் "பெரியோர் வாக்கை புராண இதிகாசங்களை எவன் தர்க்க புத்தியால் விவகாரம் பண்ணுகின்றானோ அவன் நாஸ்திகனாவான். அப்படிப்பட்டவனை அரசன் தண்டிக்க வேண்டும்" என்பனவாகிய வெல் லாம் எந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது?

மற்றும் நந்தன் நெருப்பில் பொசுக்கப்பட்டது போன்ற கதைகள் எந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது?

ஆகவே உலகில் மதப் பிரசாரம் என்பதே மூர்க்கத்தனத்தையும் பலாத்காரத்தையும் கொண்டதே யொழிய அனுபவத்தில் அன்புமயமான மதம் உலகில் ஒன்றுமே இல்லை என்றே சொல்லுவேன்.

இந்து வேதத்தை எடுத்துக் கொண்டாலும் அந்தக் காலத்திய வேத மதக்காரர்களுக்கு தங்கள் எதிர் மார்க்கக்காரர்களை அடிக்கவும், கொல்லவும் செய்வதும், அப்படிச் செய்ய சக்தி இல்லாவிட்டால் அவர்களைக் கொல்ல வேண்டும் அழிக்க வேண்டும் என்று தங்களது கடவுள்களைத் தோத்திரம் பண்ணுவதுமான காரியங்கள் நிறையப் பார்க்கலாம்.

ஆகவே எப்பொழுதும் மத விஷயத்தில் கையிலானவர்கள் எல்லாம் பலாத்காரத்திலும் கையிலாகாதவர்கள் எல்லாம் கடவுளை வேண்டியும் சாபம் கொடுத்தும்தான் இருக்கிறார்கள். தவிர இந்து மதத்தில் உள்ள தீண்டாமையும், பெண் அடிமையும் சிறிதும் மனிதத் தன்மைக்கு ஏற்றதல்ல என்பதை உலகமே சொல்லுகின்றது.

## எல்லாருக்குமே அவமானம்

மனிதனை மனிதன் தொடக் கூடாது, பார்க்கக் கூடாது, தெருவில் நடக்கக் கூடாது என்கின்ற கொள்கையோடு ஒரு மதத்தை இன்னமும் உலகத்தில் வைத்துக் கொண்டிருப்பதானது அந்த மத மக்களுக்கு மாத்திர மல்லாமல் உலக மக்களுக்கே அவமான காரியம் என்று தான் சொல்லுவேன். அதோடு அந்த மதத்தை ஏற்படுத்தினதாகச் சொல்லப்படும் தெய்வத்திற்கும், தெய்வீகத் தன்மைக்கும் மிக மிக இழிவு என்றும் சொல்லுவேன். இந்து மதத்தில் ஒவ்வொருவனும் மற்றவனைக் கீழ் ஜாதியான் என்று சொல்லிக் கொள்வதில் உள்ள ஆணவத்தை அனுபவிக்கின்றானேயல்லாமல் தான் மற்றொரு ஜாதிக்கு கீழ் ஜாதியாய் இருக்கின்றோமே என்கின்ற இழிவை உணரும் உணர்ச்சியே கிடையாது. பொதுவாக இந்துக்களுக்கே சுய மரியாதை கிடையாது என்று சொல்லுபவர்களுக்கு இந்த ஒரு காரியமே போதுமான ஆதாரமாகும்.

அன்றியும் இந்து என்ற ஒவ்வொரு மனிதனும் தன்னை மற்றவன் கீழ் ஜாதியாக மதித்து இழிவு படுத்துவதையும் மனித உரிமை தடுக்கப்பட்டி



ருப்பதையும் ஈனமான அர்த்தம் கொண்ட சூத்திரன் என்ற பேரால் குறிக்கப் பட்டிருப்பதையும் கண்டு சிறிதும் வெட்கப்படுவதில்லை. யாராவது ஒருவர் இருவர் வெட்கப்படுவதாய் பாசாங்கு செய்தாலும் காரியத்தில் உதைத்த காலுக்கு முத்தம் வைப்பதுபோல் அந்தப்படி தன்னை இழிவு படுத்துவதற்கு அஸ்திவாரமாகவும், ஆஸ்பதமாக ஏற்படுத்தப் பட்டிருக்கும் மதத்தையும் கடவுளையும் போற்றுகின்றான். காக்கப் பாடுபடுகிறான். இப்படிப்பட்ட வர்களை எந்தக் கணக்கில் சேர்ப்பது என்பது நமக்கு விளங்கவில்லை. எவ்வளவோ அபிலாசைகளையும், பெருமைகளையும், கீர்த்திகளையும் ஆசைப்படுகின்ற மனிதன்தான் ஏன் கீழ் ஜாதியாய் மதிக்கப்படுகிறான். தன்னை ஏன் சமூக வாழ்வில் இழிவுபடுத்தப்பட்டிருக்கின்றது என்பதைப் பற்றிய கவலையே இல்லாமலிருக்கின்றான். தன்னுடைய சொந்த இழிவை யும், கொடுமையையும் நீக்கிக் கொள்ளக் கவலையும் முயற்சியும் ஆற்றலும் இல்லாத மனிதன் மற்றவர்களுக்கு சுதந்திரம் வாங்கித் தருகிறேன் சுய மரியாதை உண்டாக்கித் தருகிறேன் என்றால் அதில் ஏதாவது நாணயமோ பொருளோ இருக்க முடியுமா? இஸ்லாமிய மதத்தைப் பற்றி மக்கள் அசூசைப் படலாம், பொறாமைப்படலாம், அவர்களைப் பற்றி இழிவாய் நாம் எழுதி வைத்துக் கொள்ளலாம். ஆனால் காரியத்தில் அவர்கள் எந்த விதத் திலும் நம்மை விட இளைத்தவர்கள் அல்லாமலும் அநேக விதத்தில் மேலானவர்களாகவுமே இருக்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்கள் மதக் கொள்கைகளேயாகும். அதாவது சமத்துவமும், சகோதரத்துவமுமாகும். அந்த இரண்டும் இந்துக்களிடம் சுத்த சுத்தமாய்க் கிடையாது. ஒரு மகமதியச் சிறுவனை ஒரு இந்து பெரியவன் அடித்தால் அந்த ஊர் மகமதியர் எல்லோ ரும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பார்கள். ஆனால் ஒரு இந்து பெரியவனை ஒரு மகமதிய சிறுவன் அடித்தால் ஒரு இந்துவும் திரும்பிப் பாரான். முதலில் அடிபடுகிறவன் என்ன ஜாதி, என்ன வகுப்பு என்று தன் பக்கத்தில் இருக்கும் இந்து கவனிப்பான். பிறகு நமக்கு என்ன அவன் எப்படியோ போகட்டும் என்பான். மற்றும் தனது சிநேகிதர்களையும், இதரர்களையும், குழந்தை களையும் ஊர் வம்புக்கு ஏன் போகிறீர்கள் என்று சொல்லி வீட்டிற்குள் இழுத்துப் போட்டுக் கதவைச் சாத்துவான். இந்த குணம் தான் இந்துவுக்கு இந்து மதம் கற்பிக்கின்றது. ஆகவே மதக் கொள்கைகளின் உயர்வு, தாழ்வு களை பலனில் இருந்து பார்த்தறிகின்றதா? அல்லது நாமே எழுதிவைத்துக் கொண்டதிலிருந்து அறிகின்றதா?

இஸ்லாமிய மதம் மதிக்கப்படுவது போல் இந்து மதம் உலக மக் களால் மதிக்கப்படுகின்றதா? ஏன் நமது யோக்கியதை அப்படி இருக்கிறது? இந்துக்களில் 100-க்கு 90 பேர் வேதத்தில் சூத்திரர், சாஸ்திரத்தில் சூத்திரர், புராணத்தில் சூத்திரர், சட்டத்தில் சூத்திரர், தர்மத்தில் சூத்திரர், பழக்கத்தில் சூத்திரர், வழக்கத்தில் சூத்திரர் என்று சொல்லப்படுவர்களாய் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் இனி எதில் சூத்திரராக இருக்க வேண்டியது பாக்கி இருக்கின்றது என்பது நமக்குப் புரியவில்லை. முடவன் கொம்புத் தேனுக்கு



RangaRakes tamilnavarasam.com

ஆசைப்படுவது போல் இந்த யோக்கியதை உள்ள மக்கள் பெரிய விஷயங்களில் ஆசைப்படுவதில் என்ன பிரயோஜனம்? அது போலவே இந்து மதத்தில் இந்துப் பெண்களின் நிலை என்ன என்று பாருங்கள். ஒரு “வேசி”க்கு இருக்கும் சுதந்திரமும், சுயமரியாதையும், சுகமும் கூட நமது “பெண் தெய்வங்களுக்கு” இல்லை. சொத்தில்லை, படிப்பு இல்லை, விவாக சுதந்திரமில்லை, விதவை ஆகி விட்டால் மறுமண மில்லை. இதற்கு என்ன பெயர் சொல்லுவதென்று எனக்குத் தெரியவில்லை.

உயிருடன் கட்டையில் வைத்து எரிப்பதை நிறுத்தியதே அவர்களுக்கு பெரிய உபகாரம் செய்ததாய் கருதப்படுகின்றது. ஆனால் அதுவும் இப்போது அவர்களுக்கு பெரிய அபகாரமாய் முடிந்திருக்கிறது. இம்மாதிரி கொள்கைகளுடன் உலக மக்கள் முன்னால் நாமும் நம்மை எப்படி மனிதர்கள் என்று சொல்லிக் கொள்ள முடியும்? உயர்ந்த மதம் என்றால் மேலான சமூகமென்றால் உயர்ந்த கொள்கைகளும் மேன்மையான தன்மைகளும் இருக்க வேண்டும். அதில்லாமல் காட்டிமிறாண்டி நிலையில் இருந்து கொண்டு அதைத் தெய்வீகத் தன்மை பொருந்திய சடங்கு என்று சொல்லிக் கொள்வதால் உலகத்தை ஏமாற்றி விட முடியுமா? தவிர இந்த சமயத்தில் இஸ்லாமானவர்களுக்கும் சிறிது சொல்லவேண்டியிருக்கிறது. அவர்களது பழக்க வழக்கங்களிலும் இந்துக்களில் இருப்பது போலவே பல கெடுதல்கள் இருக்கின்றது. இந்துக் கோயில்களில் தப்புக் கொட்டுவது போலவும் இந்து சாமிகள் உற்சவம் செய்வது போலவும் வேஷம் முதலிய ஆபாசங்கள் இருக்கின்றன. சில இடங்களில் புரோகிதர்கள் ஆதிக்கமும் இருக்கின்றது. இதற்கு என்ன சமாதானம் சொல்ல முடியும்? வேண்டுமானால் “அவைகள் எங்கள் மார்க்க கொள்கைகள் அல்ல” என்றும் “சாவகாச தோஷத்தினால் மத்தியில் வந்து புகுந்த தவறுதல்கள்” என்றும் சொல்லலாம். அது போதிய சமாதானமாகுமா? எப்படியாவது அவைகளை எல்லாம் ஒழித்தாக வேண்டும். முஸ்லீம் பணக்காரர்களும் “இந்தப் பணமெல்லாம் ஆண்டவன் நமக்குக் கொடுத்தான்; ஆதலால் நமக்கு மோக்ஷம் தேடிக் கொள்ள நாம் யாத்திரைக்கும் நேர்ச்சைக்கும் சிலவு செய்தால் போதும்” என்று இந்துக்களைப் போலவே சுயநலக்காரர்களாய் இருக்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஒரு முஸ்லீம் பணக்காரன் ஒரு முஸ்லீமாவது பட்டினியாகவும் தொழில் இல்லாமலும் படிப்பு இல்லாமலும் இருக்கும்படி பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்றே சொல்லுவேன். அதுதான் யோக்கியமான பணக்காரனின் லக்ஷியமாகும். இந்தக் குணங்கள் இல்லாத பணக்காரன் கொள்ளைக்காரனுக்கு சமானமானவனே யாவான்.

தவிரவும் பணக்கார முஸ்லீம்களும் பொது ஜன சேவைக்காரர்களும் “தங்கள் மதம் உயர்ந்த மதம்” என்று சொல்லிக் கொண்டிருப்பதால் மாத்திரம்



RangaRakes

போதாது. கஷ்டப்படுகின்ற இழிவு படுத்தப்பட்ட மக்களைத் தங்கள் மார்க்கத்தில் சேர்த்து அவர்களை மேன்மைப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். தாங்கள் அனுபவிக்கும் சமத்துவ இன்பத்தையும், சகோதர இன்பத்தையும் மற்றவையில்லாத – கஷ்டப்படுகின்ற மக்கள் யாவரும் அனுபவிக்கும் படி பார்க்க வேண்டும். “யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டும்” என்கின்ற கொள்கை ஒவ்வொரு யோக்கியமான மனிதனுக்கும் தலையாயதாகும்.

அதை விட்டவர்கள் சுயநலக்காரர்களேயாவார்கள்.

ஆகவே சகோதரர்களே! இந்த சமயத்தில் எனக்கு அளித்த சந்தர்ப்பத்தில் என் அபிப்பிராயம் என்கின்ற முறையில் ஏதோ எனக்குப் பட்டதைச் சொன்னேன். நீங்கள் தயவு செய்து அவற்றை நன்றாய் யோசித்துத் தங்களுக்குச் சரி என்று பட்டதை எடுத்துக் கொண்டு மற்றதை தயவுசெய்து தள்ளி விடுங்கள் என்று கேட்டுக் கொள்வதோடு உங்களிடம் விடைபெற்றுக் கொள்கிறேன்.

*குறிப்பு : ஈரோடு முனிசபல் எலிமெண்டரி பாடசாலையில் நடந்த திரு. நபி அவர்கள் பிறந்த நாள் விழாவிலும் சத்தியமங்கலம் விழாவின் தலைவர் முடிவுரையிலும் பேசியது.*

**குடி அரசு – சொற்பொழிவு – 24.08.1930**



tamilnavarasam.com

## தேர்தல்கள்

சென்னை சட்டசபைக்குத் தேர்தல் பிரசாரங்களும் ஓட்டுச் சேகரிப்பும் தமிழ் நாட்டில் நடைபெறுகின்றதானாலும் கிளர்ச்சி உண்டாக்கத்தக்க அளவுக்கு அவ்வளவு மும்முரமாய் இல்லை என்பது யாவரும் அறிந்த விஷயமாகும். இதற்குக் காரணம் என்னவென்றால் பொது ஜனங்களுக்கு இப்போதைய தேர்தலில் சிறிதும் உற்சாகம் இல்லாதிருப்பதேயாகும். ஏனெனில் தேர்தல் கட்சிகளின் தத்துவமும் தேர்தலில் நிற்கும் அபேட்சகர்களும் பெரும்பாலும் தங்கள் தங்கள் சுயநலத்துக்கும் பெருமைக்கும் நிற்கின்றார்களே ஒழிய மற்றபடி அவற்றுள் உண்மையும், நாணயமும் பொது நல நோக்கமும் சிறிதும் இல்லை என்பதாக மக்கள் கருத நேரிட்டு விட்டதேயாகும்.

மற்றும் இரண்டாவதாக தேர்தலில் நிற்பவர்களில் 100க்கு 75 பேருக்கு மேலாகவே தங்கள் தங்கள் சாரும் கட்சித் தலைவர்களின் நன்மைக்காக அவர்களால் நிறுத்தப்படுபவர்கள் எனப்படுவது.

மூன்றாவதாக, தேர்தலில் பிரசாரம் செய்யும் கூலிப் பிரசாரகர்களும் பெரிதும் தங்கள் தங்கள் சொந்த விருப்பு வெறுப்பு சுயநலம் காரணமாக முக்கியமாய் இன்னின்னாருக்கு ஆகக்கூடாது என்று பிரசாரம் செய்யப்படுகின்றார்களே தவிர இன்னாருக்கு ஆக வேண்டும் என்கின்ற பிரசாரம் மிக்க குறைவாயிருப்பதால் பொது ஜனங்களுக்கு அப்படிப்பட்ட பிரசாரத்தி னிடம் அபிமானமில்லாமலிருப்பதுடன் அப்பிரசாரங்களையும் வெறுப்பது.

நான்காவதாக, தேர்தலில் நிற்கும் கனவான்கள் பெரும்பாலரும் முன்பின் பேர் கேட்டில்லாதவர்களாகவும் வெறும் பணக் கொழுப்பாலும் தாங்கள் உதவி பெற்ற கட்சியாருக்கு அடிமையாய் இருப்பதற்கே நிற்பவர்களாயுமிருக்கிறார்களே தவிர சொந்த செல்வாக்கும் பொது நல உணர்ச்சியும் சிறிதுமற்றவர்களாயிருக்கிறார்கள் என்று பொது ஜனங்கள் கருத நேர்ந்தது.

ஐந்தாவதாக, தேர்தல்களில் இதுவரை இருந்து வந்த பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி அடியோடு நழுவப்பட்டு இரு கட்சியாரும் பார்ப்பனர்களுக்கு அடிமைகளாகி இரு கட்சியாரும் பார்ப்பனர்களை நிறுத்தி அப்பார்ப்பனர்களுக்கு இரண்டு கட்சியாரும் பிரசாரம் செய்து ஓட்டு சேகரிக்க



முயற்சித்து வருவதாகத் தெரிவது.

ஆறாவதாக, நமது நாட்டு மக்களின் கவனம், பகுதி உப்புச் சத்தியாக்கிரகத்திலும், பகுதி சுயமரியாதை கிளர்ச்சியிலும் இழுக்கப்பட்டு விட்டதால் இரண்டு காரணங்களாலும் பொது ஜனங்களால் சட்டசபை கௌரவம் அலட்சியிக்கப்பட்டிருப்பது. ஆகவே இத்தியாதி காரணங்களால் இவ் வருஷ சட்டசபைத் தேர்தல்களில் அதிகமான கிளர்ச்சியோ உற்சாகமோ காணப்படாமலிருப்பது ஓர் அதிசயமல்ல.

இவை ஒரு புறமிருக்க இரு கட்சியாருடைய சொந்த நாணயப் பொறுப்பு எப்படி இருந்தாலும் அவர்களின் உள் எண்ணம் எப்படி இருந்தாலும் நமது சுயமரியாதைக் கொள்கைகளைப் பொறுத்தவரை ஒன்றுக்கொன்று மேல் கீழ் என்று சொல்வதற்கில்லையானாலும் இரு கட்சியாராலும் கிடைக்கக்கூடிய பயனையடையத் தவறிவிடக் கூடாது என்பதே நமதபிப்பிராயமாகும். பொது நலத்தை உத்தேசித்து இந்தப்படி எதிர்பார்ப்பதில் யாதொரு குற்றமும் இல்லை என்றே சொல்லுவோம். ஏனெனில் இந்த சர்க்காரைப் பற்றி யார் எவ்வளவு குற்றம் சொன்னாலும் அவர்களுடைய எண்ணத்திலும், நடவடிக்கைகளிலும் எவ்வளவு நாணயக் குறைவும், முரண்பாடுகளும் இருந்தாலும் நமது இயக்கக் கொள்கைகளுக்கு அவர்களால் கிடைக்கக் கூடிய அனுகூலத்தை அடைய நாம் எதிர்பார்க்கும் போது இன்றைய தேர்தலில் போட்டிபோடும் இரு கட்சியாராலும் இயக்கத்திற்குக் கிடைக்கும் பயனை அலக்ஷியம் செய்ய வேண்டியதில்லை என்றே யாருக்கும் தோன்றும். பொதுவாக நோக்கும் போது இரு கக்ஷியிலும் பார்ப்பனர்களை விட மோசமானவர்கள் அல்லாதவர்கள் பலர் இருக்கின்றார்கள். சுயமரியாதைக் கொள்கைகளை ஆதரிப்பவர்களும் இருக்கிறார்கள்.

என்றாலும் விரோதிகளும் இருக்கின்றார்கள் என்பதையும், விரோதிகளின் ஆதிக்கம் இரு கக்ஷியிலும் சிறிது இருக்கின்றது என்பதையும் நாம் மறைக்க முயலவில்லை. ஆனாலும் இவ்விரு கக்ஷியாரிடமும் நாம் இப்போது எதிர்ப்பார்ப்பதெல்லாம்.

1. உத்தியோகங்களிலும், பள்ளிக் கூடங்களிலும் படிப்பு கற்பிக்கப்படுவதிலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டும் என்பது.

2. ஜாதி வித்தியாசமும் தீண்டாமையும் அடியோடு ஒழிய வேண்டுமென்பது.

3. பெண்களுக்கு ஆண்களைப் போலவே எல்லாவித சுதந்திரமும் இருவருக்கும் கலியாண ரத்தும் வேண்டு மென்பது.

4. கடவுள் பேராலும், மதத்தின் பேராலும் சிலவு செய்யப்படும் பணமும், நேரமும், முயற்சியும் மக்கள் நலத்திற்கு அதாவது தொழி



RangaRakes tamilnavarasam.com

லுக்கும், கல்விக்கும், அறிவு வளர்ச்சிக்கும் திருப்பப்பட்டு அந்தப்படி உபயோகப் படுத்தப்பட வேண்டுமென்பது.

5. பள்ளிக் கூடங்களில் மத சம்மந்தமான விஷயங்களைப் படிப்பிக் கவோ அவற்றின்மூலம் பொதுக் கல்வி கற்பிக்கவோ மத சம்மதமான உணர்ச்சிகள் பள்ளிக் கூடங்களில் காட்டப் படவோ கூடாது என்ப தும், பொதுப் பணத்தில் எல்லோருக்கும் ஒரு அளவிற்காவது சம மான கல்வி கற்பிக்க வேண்டும் என்பது.

மற்றும் பல விஷயங்கள் இருந்தாலும் இவைகளையே முக்கியமாய் இப்போதைய சட்டசபை மூலமும், அதனால் ஏற்பட்டுள்ள மந்திரிகள் மூலமும் எதிர்பார்க்கின்றோம்.

இவைகளில் எதையும் அசாத்தியமானதென்றோ, அமிதமான தென்றோ நடு நிலைமையில் உள்ள யாரும் சொல்லி விடமுடியாது. இவை களில் அநேகம் உலகத்தில் மற்ற நாடுகளில் நடை பெற்று வருகின்றவை களாயுமிருக்கின்றன.

முதலாவது வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது நமது நாட்டில் அதிகமான வகுப்புகளும் உயர்வு தாழ்வு வித்தியாசங்களும் இருப்பதால் அது அநேகமாக நமது நாட்டில் மாத்திரம் இருப்பதாய்க் காணலாம். ஆனாலும் மைசூர் முதலிய சுதேச மன்னர்கள் தேசங்களில் கூட இக் கொள் கைகள் ஒப்புக்கொள்ளப்பட்டு அமுலில் நடக்கின்றது. நமது மாகாணத் திலும் ஒருவாறு அமுலுக்கு இப்போதைய மந்திரிகளால் கொண்டு வரப் பட்டு மிருக்கின்றது. வகுப்புவாரி கல்வி விஷயமும் நமது நாட்டில் நமது "மதத்தில்" சிலர் படிக்கலாம், சிலர் படிக்கக் கூடாது என்பதும், சிலர் படிக்க வசதி உள்ளவர்கள், சிலர் படிக்க வசதி இல்லாதவர்கள் என்பதுமான தத்து வங்கள் ஒரு சாராரால் வெகுகாலமாக வலியுறுத்தி வந்ததாலும் இனியும் வலி யுறுத்தப் படுவதாலும், இதற்கேற்ற சூழ்ச்சிகள் நிறைந்திருப்பதாலும் கல்வி யும் வகுப்பு வாரி பிரதிநிதித்துவப்படி கற்பிக்க வேண்டியதாகின்றது.

2 -வதான ஜாதி வித்தியாசமும், தீண்டாமையும் ஒழிய வேண்டும் என்கிற விஷயத்திலும் யாருக்கும் ஆக்ஷேபணை இல்லை என்றே சொல்லப்படுகின்றன.

பொது வாழ்க்கையில் திரு. காந்தியவர்களுக்கு மாத்திரம் ஜாதி வித்தி யாசத்தில் சற்று குழப்பம் இருந்தாலும் தீண்டாமை விஷயத்தில் இதுவரை எந்த அரசியற்காரராவது, சீர்திருத்தக்காரராவது ஆக்ஷேபித்ததே கிடை யாது. மற்றபடி வருணாச்சிரமக்காரரின் ஆக்ஷேபணைகளைப் பற்றி நாம் கவனிக்க வேண்டியதில்லை. அவர்கள் மனுதர்ம சாஸ்திரக் காரர்களா னதால் அவர்களைப் பற்றிப் பேசுவதே வீண் நேரக் கேடாகும்.



3-வதான பெண்கள் விஷயத்தில் சமவுரிமை வழங்க வேண்டு மென்ற கொள்கையையும் யாவரும் ஒப்புக் கொண்டாய் விட்டது. திட்டத் தில் மாத்திரம் சிறிது தகராறு இருப்பதால் அதுவும் பெண்கள் முயற்சியி லேயே சரிப்பட்டுவிடும்போல் தோன்றுகின்றது. கல்யாண ரத்து விஷயங் களிலும் மகமதியர்களுக்குள்ளும், கிருஸ்தவர்க்குள்ளும், இந்துக்களில் சில வகுப்புகளுக்குள்ளும் இப்போது அந்த வழக்கம் இருந்தே வருகின்றது. தவிரவும், இந்தியாவில் பரோடா சமஸ்தானத்தில் இதற்காக சட்டம் நிறை வேறி விட்டது. ஆதலால் இதுவும் அசாத்தியம் என்று சொல்லி விட முடியாது.

4-வதாக கடவுள் மதச் செலவு விஷயம். இது இதுவரை மக்களுக்கு பகுத்தறிவு வளர பார்ப்பனர்களும், "பண்டிதர்" களும் முட்டுக்கட்டையாய் இருந்து வந்ததால் ஜனங்கள் உண்மையறிய முடியாமல் போய் விட்டது. இப்போது அவர்களது ஆதிக்கமும் செல்வாக்கும் குறைந்து விட்டதால் அதனால் பிழைப்பவர்களை விட இனி யாரும் அதை ஆக்ஷேபிக்க முடி யாத நிலைமைக்கு வந்து விட்டது. எனினும் பார்ப்பனரல்லாத டிரஸ்டிகள் பலர் இதை ஒரு வியாபாரமாகக் கொண்டு கொள்ளை அடிப்பதால் அவர் களே முட்டுக்கட்டையாயிருக்கிறார்கள். ஆனாலும் பின்னால் வரப்பட்ட தேர்தல்களில் அவர்களும் புத்தி கற்பிக்கப்படுவார்களானாலும் சட்டங்கள் மூலம் இத்துறையில் பல திருத்தங்கள் செய்ய அவசியமிருக் கின்றன.

ஐந்தாவதாக மத சம்மந்தமான பாடங்கள் விஷயத்திலும் சர்க்கார் தலையிட வேண்டிய அவசியமில்லை யென்றே சொல்லுவோம். அவற் றிற்கு "மத ஆச்சாரிய பீடங்களும்", "மத சந்யாசிகளும்" இருப்பதால் அவைகளை அவர்களிடமே விட்டு விட வேண்டியது நியாயமாகும். பிறகு பொதுமக்கள் பார்த்துக் கொள்வார்கள். அப்படிக்கில்லாமல் பல மதக்காரரும் பல மத அவநம்பிக்கைக்காரரும் இருக்கும் போது எதற்காக சிறு பிள்ளை களுக்கு இவைகளை பொதுச் செலவில் போதிக்க வேண்டும்? மத சம்மந்த மும் கடவுள் சம்மந்தமும் மக்களுக்கு மூட நம்பிக்கையை வளர்த்து மக் களை மூடர்களாக்கி விட்டது என்று பலர் கருதும் போது அறிவுக்காக படிக்க வைக்கும் படிப்பில் மத சம்மந்தமான படிப்புப் படிக்க வைப்பது முட்டாள் தனங்களுக்கு எல்லாம் அரசனான முட்டாள் தனமாகும் என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள். தவிரவும் இக்கொள்கையை ருஷியா, ஜர்மனி, அமெ ரிக்கா, சைனா முதலிய தேசங்கள் ஒப்புக்கொண்டு நடத்தையில் கொண்டு வந்து விட்டன. ஆகவே நமது நாட்டில் மாத்திரம் இவை இருக்க வேண்டு மென்பது சிலரின் சோம்பேறி வயிற்றுப் பிழைப்புக் காரணத்தை விட வேறு காரணம் இல்லை.

பொதுப்பணத்தில் எல்லோருக்கும் சமமான கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பது. இது விஷயத்தில் கல்வி இலாகாவில் பொது அறிவுக்கு என்று ஒரு பிரிவும் சர்க்கார் உத்தியோகத்திற்கு என்று ஒரு பிரிவும், தனி



RangaRakes tamilnavarasam.com

அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் என்று ஒரு பிரிவும் ஏற்பாடு செய்து அந்தப்படி பிரித்து பொது அறிவுப் பிரிவில் இத்தனை வருஷத்தில் இந்தியாவில் தற்குறிகள் இல்லாமல் இருக்க வேண்டும் என்று திட்டம் போட்டு அந்தப் படிக்கு யார் யாருக்கு எந்த எந்த வகுப்பாருக்கு எவ்வித வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பவைகளைக் கண்டு திட்டம் போட்டு அதற்கு மாத்திரம் பொதுப்பணத்தை செலவு செய்ய வேண்டும். மற்றபடி உத்தி யோகத்திற்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டு விட்டதால் அந்தப் படியே மக்களைப் பொறுக்கி எடுத்து அதற்கு வேண்டிய படிப்பை வகுப்பு வாரி பிரதிநிதித்துவப்படி படிப்பிக்க வேண்டும். அதாவது மெடிக்கல்ஸ் (வைத்தியம்) இஞ்சினீரிங், சட்டம் (லா), ஐ. சி. எஸ். என்பது போன்ற பிரிவுகள் படி வகுக்க வேண்டும். அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் வேண்டிய படிப்பு அவரவர்கள் சொந்தப் பணத்தில் படித்து பயிற்சி பெறத்தக்கதாக வேண்டும். அந்த அறிவையும் ஆராய்ச்சியையும் வேண்டுமானால் அவர்கள் வியா பாரம் போல உபயோகித்துக் கொள்ளுவதில் ஆக்ஷேபணை இல்லை.

ஆகவே இவைகளை யாரும் அமிதம் அசாத்தியம் என்று கருதிவிட முடியாது. மற்றபடி அரசியல் திருத்தங்கள் ஏதாவது செய்ய வேண்டாமா அவற்றைப் பற்றி நமக்கு கவலை யில்லையா என்று சிலர் கருதக் கூடும். நமது அரசியல் திருத்தம் முதலாவது எவ்வித உத்தியோகத்திற்கும் மீ 1000 ரூபாய்க்கு மேற்பட்ட சம்பளம் இருக்கக் கூடாது என்பதாகும். அமுலுக்கு வந்துவிடுமானால் நாம் எதிர்பார்க்கும் மற்ற அரசியல் திருத்தங்களெல்லாம் அதற்குள் அடங்கிவிடும் என்பதே நமதபிப்பிராயமாகும். ஆனால் அதைப் பற்றி இப்போது பிரஸ்தாபிப்பதில் பயனில்லை என்று கருதி தற்காலம் இத்துடன் முடிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 31.08.1930**



# சமதர்மமும் நாஸ்திகமும்

அன்புள்ள தலைவர் அவர்களே! சகோதரர்களே!

இன்று திருச்சி மருத்துவகுல சங்கத்தாரால் எனக்குச் செய்த மரியா தைக்கும் வாசித்துக் கொடுத்த வரவேற்பு பத்திரத்திற்கும் நான் உண்மை யிலேயே அருகநல்லவனானாலும், உங்களுக்கு என்னிடமும் எனது சிறு தொண்டினிடமும், கொள்கையினிடமும் உங்களுக்கு இருக்கும் அன்பும், ஆர்வமும் இம்மாதிரி செய்யும் படி செய்தது என்று கருதிக் கொண்டு அவைகளுக்காக எனது மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்துகிறேன். எனக்கு முன்பு இங்கு பேசிய எனது நண்பர்களும் என்னைப் பற்றி மிகவும் புகழ்ந்து பேசியதற்கு நான் அவர்களிடம் மிக்க நன்றி காட்டுகிறேன். அன்றியும் நான் சமதர்மத்திற்கு உழைக்கிறேன் என்றும், என்னைப் பலர் நாஸ்தீகர் என்று சொல்லுகிறார்கள் என்றும், நான் நாஸ்தீகன் அல்லவென்றும் எனக்காக பரிந்து பேசினார்கள். அப்படிப் பரிந்து பேசியதற்காக நான் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். ஆயினும் என்னை நாஸ்தீகன் என்று சொல்லுகிறவர்கள் நாஸ்தீகன் என்பதற்கு என்ன அர்த்தம் கொண்டு சொல்லுகின்றார்களோ அந்த அர்த்தத்தில் நான் நாஸ்தீகன் தான் என்பதை வலியுறுத்திச் சொல்லுகின்றேன். நாஸ்தீகத்துக்கு பயந்தவனானால் ஒரு காரியமும் செய்ய முடியாது. அதிலும், சமதர்மக் கொள்கையை பரப்ப வேண்டுமானால் நாஸ்தீகத்தினால்தான் முடியும். நாஸ்தீகமென்பதே சம தர்மம் என்று பெயர். அதனால் ருஷியாவையும் நாஸ்தீக ஆக்ஷி என்கிறார் கள். பௌத்தரையும் நாஸ்தீகம் என்றதற்குக் காரணம் அவர் சமதர்மக் கொள்கையைப் பரப்ப முயற்சித்ததால் தான். நாஸ்தீகம் என்பது சமதர்மக் கொள்கை மாத்திரமல்ல. சீர்திருத்தம் அதாவது ஏதாவது ஒரு பழய கொள்கைகளை மாற்ற வேண்டுமானால் அந்த மாற்றத்தையும் ஏன் எவ்வித சீர்திருத்தத்தையுமே நாஸ்தீகம் என்று தான் யதாபிரியர்கள் சொல்லித்திரி வார்கள். எங்கு எங்கு அறிவுக்கு மரியாதை இல்லையோ, சமத்துவத்திற்கு இடமில்லையோ அங்கு எல்லாம் இருந்துதான் நாஸ்தீகம் முளைக்கின்றன. கிறிஸ்துவையும், மகமது நபியையும் கூட நாஸ்தீகர்கள் என்று யூதர்கள் சொன்னதற்கும் அவர்களது சமதர்மமும், சீர்திருத்தமும் தான் காரணமாகும். துருக்கியில் பாக்ஷாவும் ஆப்கானியஸ்தான் அமீரும் நாஸ்தீகர்கள் என்று



RangaRakes tamilnavarasam.com

அழைக்கப்பட்டதற்கும் அவர்களது சீர்திருத்தந்தான் காரணம். ஏனென்றால் இப்போது வழக்கத்தில் இருக்கும் கொள்கைகளும், பழக்கங்களும் எல்லாம் கடவுள் செய்ததென்றும், கடவுள் கட்டளை என்றும், கடவுளால் சொல்லப் பட்ட வேதங்கள், சாஸ்திரங்கள் ஆகியவைகளின் கட்டளையென்றுமே தான் யதாப்பிரியர்கள் சொல்லுகின்றார்கள். ஆகவே நாம் இப்போது எதெதை மாற்ற வேண்டுமென்கின்றோமோ அவைகள் எல்லாம் கடவுள் செய்ததாக வும் அல்லது கடவுள் தனது அவதாரங்களையோ, தனது தூதர்களையோ செய்யச் சொன்னதாகவுமே சொல்லப்படுவதால் அவைகளைத் திருத்தவோ அழிக்கவோ புறப்படுவது கடவுள் கட்டளையை மீறின அல்லது கடவுள் கட்டளையை மறுத்ததே யாகும்.

உதாரணமாக மக்களில் நான்கு ஜாதி கடவுளால் உற்பத்தி செய்யப் பட்டது என்று சொல்லப்படுகையில் மேற்படி ஜாதி ஒழிய வேண்டு மென் றால் அவன் கண்டிப்பாக கடவுளை மறுத்தோ அலட்சியம் செய்தேதான் ஆகவேண்டும். எல்லா மதங்களும், மதக் கொள்கைகளும் கடவுளாலோ அவதாரங்களாலோ கடவுள் தன்மையாலோ ஏற்பட்டது என்று சொல்லப் படுகையில் அம்மத வித்தியாசங்கள் ஒழிய வேண்டும் என்றும் மதக் கொள் கைகள் மாற்றப்படவேண்டும் என்று சொல்லும் போது அப்படிச் சொல்லு பவன் அந்தந்தக் கடவுள்களை கடவுள்களால் அனுப்பப்பட்ட தெய்வீகத் தன்மை பொருந்தினவர்களை அலட்சியம் செய்தவனே யாகின்றார். அத னால்தான் கிறிஸ்தவர் அல்லாதவர் அஞ்ஞானி என்றும், மகமதியரல்லாதவர் காபர் என்றும், இந்து அல்லாதவர் மிலேச்சர் என்றும் சொல்லப்படுகிறது.

அன்றியும் கேவலம் புளுகும், ஆபாசமும் நிறைந்த புராணங்களை மறுப்பதே இந்துமதக் கொள்கைப்படி நாஸ்திகம் என்று சொல்லப்படும் போது ஜாதியையும், கர்மத்தையும் மறுப்பதை ஏன் நாஸ்திகம் என்று சொல்ல மாட்டார்கள்.

ஜாதி, உயர்வு தாழ்வு, செல்வம், தரித்திரம், எஜமான், அடிமை ஆகிய வைகளுக்கு கடவுளும், கர்மமும் தான் காரணம் என்று சொல்லுவதானால் பிறகு மக்களுக்கு விடுதலையும் முன்னேற்றமும் எங்கே இருக்கின்றது? கடவுளையும், கர்மத்தையும் ஒழித்தாலொழிய அதற்காக மனிதன் எப்படி பாடுபட முடியும்? மேடும் பள்ளமும் கடவுள் செயலானால் மேட்டை வெட்டிப் பள்ளத்தில் போட்டு சமன் செய்வது கடவுள் செயலுக்கு விரோத மான காரியமேயாகும். மனிதனுக்கு முகத்தில், தலையில் மயிர் முளைப்பது கடவுள் செயலானால் க்ஷவரம் செய்து கொள்வது கடவுள் செயலுக்கு எதிராகவே செய்யும் அதாவது ஓரளவுக்கு நாஸ்திகமான காரியமேயாகும். அதிலும் க்ஷவரம் செய்யச் செய்ய மறுபடியும் மறுபடியும் மயிர் முளைப் பதைப் பார்த்தும் மேலும் க்ஷவரம் செய்வது வடிகட்டின நாஸ்திகமேயாகும். பிச்சைக்காரனுக்கு சோறு போடுவதும் நாஸ்திகமே யாகும். ஏனெனில் கடவுள்



பார்த்து ஒருவனை அவனது "கர்மத்திற்காக" பட்டினி போட்டி ருக்கும் போது நாம் அவனுக்கு சோறு போடுவது கடவுளுக்கு விரோதமான காரியமேயாகும். அதாவது கடவுளை நம்பாத, கடவுள் செயலை லட்சியம் செய்யாத தன்மை யேயாகும். இப்படியே பார்த்துக் கொண்டு போனால் உலகத்தில் ஆஸ்திகன் ஒருவரும் இருக்க முடியாது. ஆதலால் நம்மைப் பொருத்தவரை நாம் பல மாறுதல் ஏற்பட விரும்புவதால் அவை கடைசி யாய் நாஸ்த்திகமே யாகும். நாஸ்த்திகமும் சாஸ்திர விரோதமும் தர்மத்திற்கு விரோதமும் செய்யாமல் யாரும் ஒரு சிறிதும் உண்மையான சீர்திருத்தம் செய்ய முடியவே முடியாது. பொதுவாக நமது நாட்டில் உள்ள தரித்திரம் போக வேண்டுமானால் வெள்ளைக்காரனை வைவது மாத்திரம் போராது.

நமது நாட்டினர்களே ஏழைகளை வஞ்சித்துக் கொள்ளை அடிக்கிறார் கள். பாமர மக்கள் கடவுள் செயல் என்று கருதிக் கொண்டு தினமும் ஏய்த்து கொண்டே வருகின்றார்கள். அப்படிப்பட்ட பாமர மக்களை விழிக்கச் செய்து நீங்கள் ஏழைகளாய், தரித்திரர்களாய் இருப்பதற்கு கடவுள் செயல் காரணமல்ல, உங்கள் முட்டாள்தனம் தான் காரணம். ஆதலால் நீங்கள் கடவுள் செயலை லக்ஷியம் செய்யாதீர்கள் என்று சொன்னால்தான் செல் வந்தர்களின் அக்கிரமங்களை பாமர மக்கள் அறியக் கூடும். அப்பொழுது கடவுள் செயலையும் அதிக மூடர்களிடம் கடவுளையும் மறுத்துத்தான் ஆக வேண்டும். இந்த நாட்டில் ஒருபுரம் ஏழைகள் பட்டினிகிடக்க ஒரு புரம் சிலர் கோடீஸ்வரராய்கொண்டு தலை கொழுத்து டம்பாச்சாரியாய்த் திறிவது கடவுள் செயல் என்றால் இந்த நாட்டு செல்வத்தை வெள்ளைக்காரன் சுரண்டிக் கொண்டுபோவதும் அவன் இங்கு ஆடம்பரமாய் வாழ்வதும் கடவுள் செயல் என்றுதான் சொல்ல வேண்டும். ஆகையால் கடவுள் செயல் கள் ஒரு காரியத்திற்கும் மற்றொரு காரியத்திற்கும் மாறுபடுவது போலவே தர்மமும், நீதியும் கூட ஒரு சமயத்திற்கும் மற்றொரு சமயத்திற்கும் மாறுபட வேண்டியதேயாகும். ஒரு காலத்தில் அரசர்கள் விஷ்ணு அம்சமாய் இருந் தார்கள். ஆனால் இப்போது அரசர்கள் கொள்ளைக்காரர்கள் என்று சொல்லப் படுகிறார்கள். அதுபோலவே செல்வவான்கள் இந்தக் காலத்தில் "லக்ஷிமி புத்திரர்களாய் இருக்கிறார்கள்." இன்னொரு காலத்தில் அவர்கள் பெருத்த வஞ்சகப் பகற்கொள்ளைக்காரர்கள் என்று அழைக்கப்பட்டு பலாத்காரத்தில் அவர்களிடமிருக்கும் செல்வங்களை பிடுங்கிக் கொள்ளப்பட வேண்டிய வர்கள் ஆவார்கள். உதாரணமாக மனுதர்ம சாஸ்திரத்தில் "சூத்திரன் பொருள் சேர்த்து வைத்திருந்தால் பிராமணன் அதை பலாத்காரத்தினால் பிடுங்கிக் கொள்ளலாம்" என்று இருக்கிறதை இன்னும் பார்க்கின்றோம். கொஞ்ச காலத்திற்கு முன் இது அமுலிலும் இருந்திருக்கிறது. இனி கொஞ்ச நாள் போனால் பார்ப்பான் பணம் வைத்திருந்தால் பார்ப்பனரல்லாதார் பலாத்காரமாய் பிடுங்கிக் கொள்ளலாம் என்று தர்மம் ஏற்பட்டாலும் ஏற்படும். அப்படி ஏற்படுவது முன்னைய வழக்கத்திற்கு விரோதம் என்பதாக யாரும் சொல்லமுடியாது. காலம் போகப் போக நேரில் உழுது பயிர் செய்ய முடியா



RangaRakes
tamilnavarasam.com

தவனுக்கு பூமி இருக்க வேண்டியதில்லை என்றும் அப்படி யிருந்தாலும் சர்க்காருக்கு வரி கொடுப்பது போல் ஒரு சிறு அளவுதான் பாத்தியமுண் டேயொழிய இப்போது இருப்பது போல உழுகின்றவன் தன் வயிற்றுக்கு மாத்திரம் எடுத்துக் கொண்டு ஏன் சில சமயங்களில் அதற்கும் போராமலும் இருக்க பூமிக்குடையவனுக்கு பெரும்பாகம் கொடுப்பது என்கின்ற வழக்கம் அடிபட்டாலும் அடிபடலாம். அது போலவே இன்று கோவில் கட்டுவது தர்மமாக இருக்கின்றது. ஆனால் பிற்காலத்தில் கோ விலை இடித்து விக்கிரகங்களை உடைத்து பள்ளிக் கூடங்களும், தொழிற்சாலைகளும் ஏற்படுத்துவது தர்மம் என்றானாலும் ஆகலாம். இதுபோலவே அநேக விஷயங்களில் இன்றைய தர்மம் நாளைக்கு அதர்மமாகி தலை கீழாகி மாறக் கூடும் அப்பேர்ப்பட்ட நிலைமை வரும் போது இன்றைய நிலைமை எல்லாம் கடவுள் கட்டளை என்றால் அதை மாற்ற முற்படு கின்றவன் கடவுள் கட்ட ளையை மறுக்க ஏன் கடவுளையே மறுக்க துணிந்தாக வேண்டும். கடவுளை மறுக்கத் துணிந்தவனே தர்மத்தின் பேரால் உள்ள இன் றைய கொடுமைகளை ஒழிக்க முடியும். அப்படிக் கில்லாமல் கடவு ளுக்கும் மோக்ஷத்திற்கும் பயந்து கொண்டிருப்பவனால் ஒரு காரியமுமே செய்ய முடியாது என்பதுறுதி.

ஏனெனில் அரசியல், சமூக இயல், பொருளாதார இயல் ஆகியவை களில் உள்ள இன்றைய கொடுமையான நிலையும் முட்டாள் தனமான நிலை யும் அயோக்கியத்தனமான நிலையும் எல்லாம் கடவுள் கட்டளையாலும் மோக்ஷ சாரணங்களாலும் சாஸ்திர தர்மங்களாலுமே ஏற்பட்டவைகளாகும். ஆகையால் தான் அவ்விஷயங்களில் நான் அவ்வளவு உறுதியாய் இருக் கிறேன்.

*குறிப்பு :- 01.09.1930 ஆம் நாள் திருச்சி மருத்துவ சங்கத்தில் திரு.டி.பி.வேதா சலம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மருத்துவ சங்கத்தாரால் அளிக்கப்பட்ட வரவேற்பு பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு ஆற்றிய சொற்பொழிவு.,*

**குடி அரசு - சொற்பொழிவு - 07.09.1930**



# சுயமரியாதைக்காரருக்கும் புராண மரியாதைக்காரருக்கும் சம்பாஷணை

**- சித்திரபுத்திரன்**

**சுயமரியாதைக்காரன்:** -ஐயா இவ்வளவு கஷ்டப்பட்டு இந்தப் பண நெருக்கடியான காலத்தில் கடன் வாங்கிக் கொண்டு இத்தனை அவசரமாய் காசிக்குப் போகின்றீர்களே என்ன காரியம்?

**புராண மரியாதைக்காரன்:-** ஒரு காரணமும் இல்லை. இந்தப் பாழாய்ப்போன சுயமரியாதை இயக்கம் வந்து பிள்ளைகளையெல்லாம் கெடுத்துவிட்டது. அதனால் தான் இவ்வளவு கஷ்டத்துடன் காசிக்குப் போக வேண்டி இருக்கிறது.

**சு.ம:-** சுயமரியாதை இயக்கத்திற்கும் தாங்கள் காசிக்குப் போவதற் கும் என்ன சம்பந்தம் என்பது எனக்கு விளங்கவில்லையே?

**பு.ம:-** என்ன சம்மந்தம் என்றா கேட்கின்றீர்கள். நானோ வயது முதிர்ந்த கிழவன். ஒரு வேளை திடீர் என்று செத்துபோய்விட்டேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது என்னுடைய பிள்ளைகள் எனக்கு கர்மம் செய்வார்களா? திதி செய்வார்களா? எள்ளுந் தண்ணீர் இறைப்பார் களா? பிண்டம் போடுவார்களா? நீங்களே சொல்லுங்கள் பார்ப்போம். இந்த நாசமாய்ப் போன சுயமரியாதைக்காரர்களால் எவ்வளவு தொல்லை?

**சு.ம:-** சரி. அதைப் பற்றி பிறகு பேசுவோம். அதற்காக நீங்கள் காசிக் கேனையா போகின்றீர்கள்? என்றால் அதற்கு ஒன்றும் பதில் இல்லாமல் சும்மா சுயமரியாதைக்காரரையே வைகின்றீர்களே?

**பு.ம:-** சொல்லுகிறேன் கேளுங்கள். முதலாவது காசியில் செத்தால், திதி பண்ணினாலும் பண்ணாவிட்டாலும் பிண்டம் போட்டாலும் போடா விட்டாலும் மோக்ஷம் கிடைக்கும். இரண்டாவது அதில் ஏதாவது கொஞ்ச நஞ்சம் சந்தேகமிருந்தாலும் கயாவுக்குப் போய் நமக்கு நாமே பிண்டம்



RangaRakes tamilnavarasam.com

போட்டுக் கொண்டு விட்டால் பிறகு எவனுடைய தயவும் நமக்கு வேண்டிய தில்லை. ஆதலால் இப்போது நேரே கயாவுக்குப் போய் எனக்கே நான் பிண்டம் போட்டு விட்டுப் பிறகு காசிக்குப் போய் சாகப் போகின்றேன். அப்போது இந்த சுயமரியாதைகள் என்ன பண்ணுமோ பார்ப்போம்.

**சு.ம:-** சரி. அப்படியானால் நீங்கள் மறுபடியும் இங்கு திரும்பி வருவதில்லை போல் தோன்றுகிறதே.

**பு.ம:-** ஆம். இனி இங்கு எனக்கென்ன வேலை? பாடு பட்டு சம்பாதித்தேன். கடவுள் செயலால் ஒன்றும் குறைவில்லை. பிள்ளைகளை யும் நன்றாய் செலவு செய்து படிக்க வைத்தேன். அதிர்ஷ்டக் குறைவால் அதுகள் படிக்கவில்லை. கடைசியாக சுயமரியாதைக்காரர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு அதுகள் திரியறதைப் பார்த்தால் எனக்கு எள்ளுந் தண் ணீர் கூட இறைக்க மாட்டார்கள் என்பது உறுதி. ஆதலால் நான் வந்த காரியத்திற்கு நான் போக வேண்டாமா?

**சு.ம:-** என்ன காரியமாய் வந்தீர்கள். அதற்காக எங்கு போகின்றீர்கள்.

**பு.ம:-** மனிதன் எதற்காகப் பிறந்தான்? அந்த ஸ்ரீமந் நாராயணனை வணங்கி அவன் பாதார விந்தம் போய்ச் சேருவதற்குத்தானே.

**சு.ம:-** ஸ்ரீமந் நாராயணன் பாதார விந்தம் தாங்கள் சேருவதற்கும் உங்கள் பிள்ளைகள் எள்ளும் தண்ணீர் இறைப்பதற்கும் நீங்கள் கயாவுக்கும் காசிக்கும் போவதற்கும் என்னையா சம்பந்தம்? எனக்கு சற்று விளங்கும் படியாய் சொல்லுங்களே! நானும் தங்கள் கூடவே வந்து விடுகின்றேன்.

**பு.ம:-** இதெல்லாம் உங்களுக்கு சுலபத்தில் சொன்னால் புரியாது.

**சு.ம:-** பின்னை எப்படிப் புரியும்?

**பு.ம:-** நல்ல குரு கடாக்ஷம் வேண்டும், பெரியோர்கள் சாவகாசம் வேண்டும், முன்னோர்கள் நூல்களில் பரிக்ஷை இருக்க வேண்டும், புராணங் களை மரியாதை செய்ய வேண்டும், பக்தி சிரத்தையுடன் அவைகளைப் படிக்க வேண்டும், எதற்கும் பிராரப்த கர்மமும் இதற்கு அனுகூலமாய் இருக்க வேண்டும். பகவான் கிருபையும் வேண்டும்.

**சு.ம:-** அப்படியானால் அவைகளில் எனக்கும் ஆசையாய் தான் இருக்கின்றது. இனிமேல் நான் சுயமரியாதைக்காரர்களுடன் சேருவதில்லை. தாங்கள் சொன்னபடியே நடந்து நானும் ஸ்ரீமந் நாராயணனுடைய பாதத்தை அடைய முயற்சிக்கிறேன். தாங்களே எனக்கு நல்ல குருவாயிருந்து கடா க்ஷம் செய்து மற்ற விஷயங்களை சற்று உபதேசம் செய்யுங்கள். அதாவது பெரியோர்கள் என்று சொன்னீர்களே அவர்களில் ஏதாவது ஒரு நாலைந்து



பேர்களுடைய பெயர்களைச் சொல்லுங்கள். ஒருவரிடமாவது சாவகாசம் வைத்துக் கொள்ளப் பார்க்கிறேன். பிறகு முன்னோர்கள் நூல்கள் என்றீர் களே அதிலும் முன்னோர்கள் யார்? அவர்களுடைய நூல்கள் எவை? என்பனவற்றைச் சொன்னால் அதையும் அடைய முயற்சிக்கிறேன். பிறகு புராணங்களை மரியாதை செய்ய வேண்டுமென்கிறீர்களே எந்தப் புராணங் கள்? அவைகளின் பெயர்கள் என்ன? எப்படி மரியாதை செய்வது? என்ப தையும் பக்தி சிரத்தையுடன் படிக்க வேண்டுமென்றால் பக்தி காட்ட வேண் டிய விதம் என்ன? சிரத்தை என்றால் பணம் கொடுத்து வாங்கிப் படித்தால் போதுமா? அல்லது யாருக்காவது பணம் கொடுத்துப் படிக்கச் சொல்லிக் கேட்க வேண்டுமா? என்கின்ற விஷயத்தையும் தயவு செய்து சொல்லுங்கள். அன்றியும் பிராரப்தகர்மம் இதற்கு அனுகூலமாய் இருக்கா இல்லையா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது? இவ்வளவுக்கும் மீறி பகவான் கிருபை வேண்டுமென்று வேறு சொல்லுகிறீர்கள். அது எப்படி சம்பாதிப்பது ஆகிய காரியங்களைச் சற்று விளக்கித் தாருங்கள். இதோ நானும் கூடவே புறப்படுகிறேன்.

**பு.ம:-** சரி, சரி. உம்மைப் பார்த்தால் சரியான சுயமரியாதைக்காரராய்த் தெரிகிறதே! அவர்கள்தான் இப்படி எல்லாம் கேட்கின்றார்கள். அவர் களுக்குத் தான் இந்தக் குயுக்தி எல்லாம் தோன்றும்.

**சு.ம:-** என்ன அய்யா இவ்வளவு சந்தேகப்பட்டுவிட்டீர்கள். தெரியாத தினால்தானே நான் தங்களைக் கேட்டேன். தாங்கள் பெரியவர்கள் மோக்ஷத் திற்குப் போகிறவர்கள் என்று கருதித்தானே தங்களையே குருவாய்க் கேட்கின்றேன். தாங்கள் இப்படிச் சொல்லலாமா?

**பு.ம:-** வேண்டாமய்யா உம்ம சவகாசமே நமக்கு வேண்டாம். நீர் சரியான சுயமரியாதைக்காரர் என்பது தெரிந்துவிட்டது. உம்ம சங்கார்த்தமே நமக்கு வேண்டாம். நான் உமக்கு குருவாகவும் இல்லை. நம்ம கூட நீர் வரவும் வேண்டாம். போம் போம் இங்கே நில்லாதேயும்.

**சு.ம:-** சரி. உங்களுக்கு கோபம் வருவதானால் நான் பேசவில்லை போகிறேன். எனக்கு பிராரப்தகர்மம் உதவி செய்ய வில்லையோ? அல்லது பகவான் கிருபை இல்லையோ தெரியவில்லை. தங்களைப் போன்ற பெரி யாரை குருவாக அடைந்தும் பிரயோஜனமில்லை. ஆனாலும், ஒரே ஒரு சந்தேகம் அதை மாத்திரம் நிவர்த்தி செய்து விடுங்கள்.

**பு.ம:-** என்ன சங்கதி?

**சு.ம:-** இவ்வளவு தீர்மானத்துடனும் பிடிவாதத்துடனும் இந்த முதிர்ந்த வயதில் போகின்றீர்களே ஒரு சமயம் தாங்கள் வழியில் செத்துப் போய் விட்டால் என்ன செய்வீர்கள்? அப்புறம் கயாவும், காசியும் எப்படி தங்க ளுக்கு உதவும்?



RangaRakes tamilnavarasam.com

**பு.ம:-** செத்துப் போய்விட்டால் நல்ல காரியமாச்சுது. உம்மைக் கேட்க வரவில்லை. போ வெளியே புறப்படும் போது சகுனத்தடை மாதிரி வாயில் வருகின்ற வார்த்தைகளைப் பாருங்கள்!

**சு.ம:-** சரி. நான் போய் வருகிறேன். நீங்களும் உங்கள் புராணங் களும், அதற்கு நீங்கள் செய்யும் மரியாதைகளும் நன்றாயிருக்கின்றன. இனி உங்களைப் போன்ற புராண மரியாதைக்காரர்களே உலகத்தில் இருக்கட்டும்; நான் போகின்றேன்.

**குடி அரசு - உரையாடல் - 07.09.1930**



# தீண்டாதாரும் கல்வியும்

காஷ்மீர் மகாராஜா தனது சமஸ்தானத்தில் உள்ள மக்களில் தீண்டாதார் என்பதாக ஒரு பிரிவு இருக்கக் கூடாதென்றும் அவர்களுக்குக் குளம், கிணறு, பள்ளிக்கூடம், தெரு முதலியவைகளில் எவ்விதத் தடங்கலுமிருக் கக் கூடாதென்றும் ஒரு பொதுஉத்திரவு பிறப்பித்திருப்பதுடன் காஷ்மீர சமஸ்தானத்தில் தீண்டாதார் என்பவருக்கும் மற்ற வகுப்பாரைப் போலவே சமமான தகுந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட வேண்டு மென்றும் தீர்மானித்திருப்பதுடன், அவர்கள் கல்வியில் பிற்போக்காய் இருப்பதை உத்தேசித்து எல்லோருக்கும் கல்வி ஏற்படும்படி செய்ய இது வரை கல்விக் காக உபகாரச் சம்பளம் முதலியவைகள் கொடுத்து வந்ததை இவ் வருஷம் இரட்டிப்பாக்கிக் கொடுத்து வருவதாகவும் எல்லாவிதத்திலும் இதர பிரஜை களுக்குச் சமமாகவே அவர்களையும் பாவிக்க வேண்டு மென்றும் அரசாங்க அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்.

இவ்விஷயத்தைக் கேள்விப்பட்ட சீர்திருத்தவாதிகள் ஒவ்வொரு வரும் ஆச்சரியத்தோடு மகிழ்ச்சியடைவார்கள் என்பதில் ஐயமில்லை. என்றாலும் இந்த உத்திரவிலிருந்து நாம் அதிகமாக மகிழ்ச்சி அடைவது எதுபற்றியென்றால் தீண்டாதார் கல்வி அபிவிருத்திக்கு உபகாரத் தொகை யை தாராளமாகக் கொடுத்து உதவியதைப்பற்றியேயாகும். ஏனெனில் இப் போதைய நிலையில் நமது நாட்டுத் தீண்டாதார் எனப்படுபவருக்கு உத்தி யோகம் உரிமை முதலியவைகள் கொடுக்கப்படுவதற்கு அதன் எதிரிகளால் சொல்லப்படும் காரணம் பெரும்பாலும் இரண்டே யாகும். அதாவது ஒன்று அவர்களுக்குக் கல்வியில்லை என்பது. இரண்டு அவர்கள் சுத்தமாகயில்லை என்பது ஆகிய இவையாகும். இவற்றுள் கல்வி கற்கவோ அவர்களுக்குப் பணம் கிடையாது. சுத்தமாகவும், சுசியாகவுமிருக்கவோ குளம், கிணறு சுவாதீ னம் கிடையாது. அவர்கள் அதிகமான பணம் சம்பாதிக்கவோ, அவர்க ளுக்கு சில இடங்களில் தெருவில் நடக்கும் உரிமையும், வீடுகளில், கடை களில் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் உரிமையும் கிடையாது. மற்ற படி மூட்டை முடிச்சுகள் தூக்கிக் கூலி வேலை செய்யவோ அவர்களுக்கு அப்படிப்பட்ட சாமான் எதையும் தொடவுரிமை கிடையாது. காடுகளிலும், வயல்களிலும் அதுவும் வயிற்றுக்கு அரைக் கஞ்சிக்கும் போதாத அளவுக்கு



RangaRakes tamilnavarasam.com

வேலை செய்ய மாத்திரம் வழியுண்டு. ஆகவே இப்படிப்பட்ட நிலையில் இருக்கும் அவர்களை சுசியில்லை, படிப்பில்லை என்று சொல்லிப் பொது உரிமைகள் கொடுக்க மறுப்பதானது அவர்களுக்கு மனித உரிமையைக் கொடுக்க மறுப்பதானது அவர்களுக்கு மனித உரிமையைக் கொடுக்க அந்தரங்கத்தில் இஷ்டமில்லை என்பதைத் தவிர வேறல்லயென்பது அறிவாளிகளுக்கு நன்றாய் விளங்கும். ஆகவே இப்படிப்பட்ட நிலையில் காஷ்மீர அரசர் குளம் குட்டை முதலியவைகளை பொதுவாக்கினதோடு, படிப்புக்கு உதவித்தொகையும் கொடுத்தது தான் மிகவும் பாராட்டப்பட்ட தாகும். நாமும் சென்றவருஷம் செங்கற்பட்டில் கூடிய சுயமரியாதை மகாநாட்டில் தீண்டாதார் என்பவர்கள் படிப்பு விஷயத் தில் அரசாங்கத்தார் சாப்பாடும், துணியும், புஸ்தகங்களும் வாங்கிக் கொடுத்து அவர்களைப் படிக்க வைக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்திருக்கின்றோம். அதை தஞ்சாவூர் முதலிய இரண்டொரு சுயமரியாதை இயக்கத் தலைவர்களைக் கொண்ட ஜில்லா போர்டுகள் தங்களால் கூடிய வரை முயற்சி எடுத்து சிறிதள வுக்காவது அமுலுக்குக் கொண்டு வந்திருப் பதுடன் சுயமரியாதைக் கொள்கையில் பற்றுள்ள கல்வி மந்திரியும் அது விஷயத்தில் சற்று கவனம் செலுத்தி வந்திருக்கின்றார். எனவே காஷ்மீர ராஜா அவர்களும் தீண்டாதா ருக்கு கல்வி இல்லாததற்கு அடிப்படையான காரணம் என்ன வென்பதை உணர்ந்து அதற்காகப் பணம் தாராளமாய் ஒதுக்கி வைத்திருப்பதானது மிக மிகப் போற்றத் தகுந்த சுயமரியாதைக் கொள்கையாகும்.

நமது அரசாங்கமும் தீண்டாதார் கல்வி விஷயத்தில் ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று சொல்ல வேண்டுமானால் இனி அவர்களுடைய சம்பளத்தை மாத்திரம் குறைப்பதாலோ அல்லது அடியோடு தள்ளி விடுவதாலோ ஒரு காரியமும் நடந்து விடாது. மற்றபடி ஜில்லா ஒன்றிற்கு இத்தனை லக்ஷ ரூபாய் தீண்டாதார் கல்விக்கு என்று ஒதுக்கி வைத்து அதில் அவர்களுக்கு சாப்பாடு போட்டு படிப்புச் சொல்லி வைக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் தான் அவர்கள் படிக்க முடியும். ஏனென்றால் தீண்டாதவர்கள் என்பவர்களின் பிள்ளைகள் அவர்களது வயிற்றிற்கும், அவர்கள் பெற்றோர்களது வயிற்றிற் கும் சம்பாதித்துத் தீரவேண்டிய அவ்வளவு ஏழைகளாகவும், சம்பாதிக்க வழியில்லாத வர்களாகவும் இருக்கிறார்கள். ஆதலால் மேற்கண்டபடி பணம் ஒதுக்குவதுடன் அந்த இலாகா நிர்வாகத்தையும் கண்டிப்பாக பார்ப்பன உத்தியோகஸ்தரிடமும் பார்ப்பன உபாத்தியாயரிடமும் விடாமல் கூடுமான வரை தீண்டாதார் என்கின்றவர்களில் இருந்தே தெரிந்தெடுத்த கனவான் களிடமே ஒப்புவிக்கப் பார்க்க வேண்டும்.

தவிரவும், இந்தப் பணத்தையும், நிர்வாகத்தையும் ஸ்தல ஸ்தாபனங் களிடம் ஒப்புவிப்பது என்பதும் இன்றைய நிலைமையில் அவ்வளவு சரியானதென்று நாம் ஒப்புக் கொள்ளக்கூடவில்லை. ஸ்தல ஸ்தாபனங் களிலுள்ள தலைவர்கள் இதுவரை தங்கள் அதிகாரங்களை தீண்டாதார்கள் விஷயத்தில் எப்படி உபயோகித்தார்கள்; உபயோகிக்கின்றார்கள் என்று கவனித்துப் பார்த்தால் அதன் யோக்கியதைகளை ஒருவாறு அறிந்து கொள் ளலாம். சில இடங்களில் ஜில்லா போர்டு தலைவர்களாவது இவ்விஷயங் களில் சற்று யோக்கியமாய் நடந்து கொண்டிருக்கிறார்களென் னலாம். ஆனால் 100-க்கு 90 தாலூகா போர்டு தலைவர்கள் தீண்டாதார்கள் விஷயத் தில் மிகமிகக் கேவலமாகவே நடந்து கொண்டிருக்கின்றார்கள் என்று தைரிய மாகச் சொல்லுவோம். குறிப்பாய் கவனிப்போமானால் தீண்டப்படாதாருக் காக வெட்டும் கிணற்றுக் கிராண்டு பணங்களிலும் அவர்களுக்காகக் கட்டும் பள்ளிக்கூட கிராண்டு பணங்களிலும் கூட எத்தனையோ பேர்கள் நியாயத் தவறுதலாய் நடந்திருப்பதுடன் அவர்களது நாமினேஷன்களைப் பெரிதும் மறுத்தே வந்து இருக்கின்றார்கள். (பொது வாக நாடு சமூக சீர்திருத் தமடைய வேண்டுமானால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சந்தேகமற்ற நாண யங்கள் ஏற்பட வேண்டுமானால் முதலில் தாலூகா போர்டுகளை எடுத்துவிட வேண் டியது அவசியமாகும். ஆதலால் அடுத்த லோக்கல்போர்டு சட்டத் திருத் தத்திலாவது இந்த விஷயத்தை எதிர்பார்க்கலாமென்றேயிருக்கின்றோம்.)

இவ்விஷயத்தில் இவ்வளவு தூரம் நாம் எழுதுவதற்குத் தகுந்த ஆதாரங்கள் நம்மிடம் வந்து குவிந்து கொண்டிருப்பதேயாகும். அவை பெரிதும் என்னவெனில் கிராமங்களிலுள்ள பள்ளிக்கூடங்களில் அப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை என்றும், தீண்டாத வகுப்பு உபாத்தியாயர்களைச் சரியாய் நடத்துவதில்லை யென்றும், நமக்குப் புகார் வராத நாளே கிடையாதென்று சொல்லலாம். அது மாத்திரமல்லாமல் பார்ப்பன கல்வி உத்தியோகஸ்தர்களும், பார்ப்பன உபாத்தியாயர்களும், தாலூகா போர்டிலுள்ள பார்ப்பன குமாஸ்தாக்களும் செய்யும் சூட்சிகளை அறிய சக்தியில்லாமலும் அவர்களின் தாட்சண்ணியங்களை மீற யோக்கி யதையில்லாமலும் அவர்களது மாய்கையில் சிக்கி விடுவதும் மற்றும் தாலூகா போர்டு தலைவர்கள் பெரும்பாலும் கிராமவாசிகளாகவும் போதிய கல்வி அறிவில்லாதவர்களாகவும் ஜாதி ஆணவம் பிடித்திருப்பதுடன் உலக ஞானமில்லாதவர்களாகவும், வருணாசிரமக் கொள்கை மதக்காரர்களா கவுமி ருப்பதால் கண்டிப்பாய் அவர்களை இக்கொள்கையை ஏற்றுக் கொள் ளவோ, யோக்கியமாய் நடைபெறவோ சம்மதிக்கமாட்டார்கள் என் கின்ற உறுதி நமக்கு உண்டு. ஆகையால் தான் அப்படிப்பட்டவர்களிடம் இந்த வேலையை ஒப்புவிப்பது என்பது தீண்டாதார் என்பவர்களுக்குச் சிறிதும் நன்மையைப் பயக்கும் படியான காரியமாகாது என்கின்றோம். மற்றபடி ஏதோ இரண்டொருவர்கள் தாலூகா போர்டு நிர்வாகங்களில் சற்று ஞான முடையவர்களாகவும் பொது நோக்கமுடையவர்களாகவும் இருக்கலாம்.

ஆனால் அப்படிப்பட்ட அந்த இரண்டொருவரை உத்தேசித்து மற்ற எல்லோரையும் நம்பி அவர்களிடம் நிர்வாகத்தை ஒப்புவிப்பது ஆபத்தாய்



RangaRakes
tamilnavarasam.com

முடிந்து விடும். ஆதலால் தீண்டப்படாதார் என்பவர்கள் நிலைமையை உயர்த்துவதைப் பொறுத்த எல்லாக் காரியமும் சர்க்காரிடமேயிருக்க வேண்டுமென்பதும், அதன் பலனுக்கு அவர்களே பொறுப்பாளியாயிருக்க வேண்டுமென்பதும் நமது பலமான அபிப்பிராயமாகும். உதாரணமாக நம்மை ஒருவன் தாழ்ந்த ஜாதி என்று எண்ணிக் கொண்டிருக்கின்றான் என்றால் அவனிடம் நமது நன்மையை ஒப்புவிக்க முடியுமா என்று கவனித்தால் விளங்கிவிடும். ஆதலால் எந்தக் காரணத்தினாலாவது சர்க்கா ருக்கு இவ் விஷயம் தாங்களே பொறுப்பேற்று நடத்துவது கஷ்டமாயிருந் தால் இப்போது மதுவிலக்குக்கு ஒரு பிரசாரக் கமிட்டி ஏற்படுத்தி அதற்காக கொஞ்சம் பணமும் ஒதுக்கி வைத்து அக்கமிட்டி வசம் அந்த வேலை யையும் பணத்தையும் ஒப்புவித்திருப்பது போல் தீண்டாமை விலக் குக்கும் ஒரு கமிட்டி ஏற்படுத்தி அதில் பெரிதும் அவ் வகுப்பார்களையே நியமித்து அதன் வசம் அப்பொறுப்புகளை ஒப்புவித்து சர்க்கார் மேற்பார்வையி லேயே வேலை செய்யச் செய்வது மிக்கப் பயனளிக்கும். இப்போதுள்ள மதுவிலக்குக் கமிட்டியை விட இத்தீண்டாமை விலக்குக்கு கமிட்டி ஏற்படுத் தினால் அது மிக்க பிரயோஜனகரமாகவும் புத்திசாலித் தனமாகவும் நாணய மானதுமாகவும் கூட இருக்குமென்று சொல்லுவோம். இதுவும் முடியாத காரியமாகுமானால் கிறிஸ்துவ பாதிரிமார்களிடத்திலாவது இப் பொறுப்பை ஒப்புவிப்பது ஸ்தல ஸ்தாபனத்தினிடம் ஒப்புவிப்பதை விட மோசமானதா காது. ஆகையால் அடுத்த சட்டசபைக் காலாவதிக்குள் அடுத்த மந்திரி களாட்சியில் இவ் விஷயம் அவசியம் கவனிக்கப் படவேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 07.09.1930**



# தீண்டாமையும் பார்ப்பன உபாத்தியாயர்களும்

விருத்தாஜலம் தாலூகா பெண்ணாடம் போர்டு எலிமெண்டரி பாட சாலையில் ஒரு பார்ப்பன தலைமை உபாத்தியாயர் இருப்பதாயும் அப் பள்ளி கூடத்தில் வாசிக்கும் ஆதிதிராவிட பிள்ளைகளை மேற்படியார் அதிகக் கொடுமையாகவும், கொஞ்சமும் இரக்கமின்றியும் நடத்துவதாகவும் பலர் நமக்கு செய்திகளனுப்பி பத்திரிகையில் வெளியிடும்படி வேண்டினர். இவ்விஷயத்தை மேற்படி போர்டு அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்திப் பின்னர் தக்கது செய்யலாமென்ற முடிவின் பேரில் அவ்வாறே போர்டு அதிகாரிகளுக்கு நிலைமையை விளக்கி எழுதியிருந்தோம். அவர்களிட மிருந்து வந்த பதிலில் முன்னமே ஒரு தரம் அது சம்மந்தமாய் கவனித் திருப்பதாயும் மீண்டும் அதை விசாரித்து உண்மையறிந்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வதாயும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலையில் உண்மையாய் நடப்பவை என்ன? ஆதி திராவிடப் பிள்ளைகள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள், எவ்வளவு காலமாக இவ்விதம் நடைபெறுகிறது, அது சம்மந்தமாக மேலதிகாரிகள் எவ்விதம் கவனித்து என்ன பரிகாரம் செய்திருக்கிறார்கள் என்ற முழு விபரத்தையும் நமக்கு எழுதியனுப்பும்படி அவ்வூர் அன்பர்களைக் கேட்டுக் கொள்ளு கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 07.09.1930**



RangaRakes tamilnavarasam.com

# கோவை முனிசிபல் நிர்வாகம்

கோயமுத்தூர் முனிசிபாலிட்டியின் 1929 – 30ம் வருஷத்திய நிர்வாக ரிப்போர்ட் வரப்பெற்று அதை முற்றிலும் படித்துப் பார்த்தோம். சென்ற வருஷத்தை விட இவ்வருஷம் கல்வி, பொருளாதாரம், பொதுஜன சுகாதாரம் முதலிய எல்லாத் துறைகளிலும் முற்போக்கடைந்திருக்கிறது. வரி வருமானம் ரூ. 2, 74, 707-லிருந்து ரூ. 2, 96, 171க்கு உயர்ந்திருக்கிறது. பொது நிதி இருப்பிலிருந்து சிருவாணி தண்ணீர் சப்ளை வேலைத் திட்டத்திற்காக கொடுக்கப்பட்ட ரூ. 1,51,500ம் போக வருஷ முடிவில் ரூ 1. 64 லட்சம் இருப்ப தாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இம்முனிசிபாலிட்டியைப் பற்றி சர்க்கார் எழுதிய குறிப்பில் வெகுவாகப் புகழ்ந்து கோவை முனிசிபாலிட்டியின் நிர்வாகம் இம்மாகாண மற்றெல்லா முனிசிபல் நிர்வாகங்களை விட தலை சிறந்து விளங்குவதாய் குறிப்பிட்டு விட்டு அதன் தலைவர் திரு. இரத்தின சபாபதி முதலியாரவர்களையும் அவரது சகாக்களையும் பாராட்டி எழுதப் பட்டிருக்கிறது.

தக்க பலனளிக்கும் முறையில் பொது ஜனசேவை செய்து வரும் கோவை முனிசிபல் தலைவரவர்களையும் அவரது சகாக்களின் கூட்டுறவை யும் நாம் மிகுதியும் பாராட்டுகிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 07.09.1930**



# கேரள சீர்திருத்த மகாநாடு

சகோதரிகளே! சகோதரர்களே!!

இன்று இங்கு இவ்வளவு பெரிய கூட்டத்தையும், வாலிபர்களுடைய உற்சாகத்தையும் பார்க்க எனக்கு அளவிலா மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் உங்கள் பாஷையாகிய மலையாளத்தில் பேச எனக்குத் தெரியாம லிருப்பதற்கு வருந்துகின்றேன். எனினும் ஏதோ எனக்குத் தெரிந்த சாதாரண தமிழ் பாஷையில் என்னுடைய அபிப்பிராயத்தை வெளியிடுகிறேன். ஒருவாறாக உங்களுக்கு அது புரியக் கூடும் என்று கருதுகின்றேன்.

சகோதரர்களே! மகாநாட்டைத் திறந்து வைத்த பொழுது நமது நண்பர் திருவாளர் ராமவர்மாத்தம்பான் அவர்கள் செய்த பிரசங்கத்தில் அநேக விஷயங்கள் சொல்லி இருக்கின்றார்கள். அவைகள் நான் உங்களுக் குச் சொல்ல வேண்டுமென்று கருதி இருந்தவைகளுக்கும் மேலாகவே சொல்லப் பட்டிருப்பவைகளாகும். ஆகையால் இப்போது நானும் அதைத் தான் திருப்பிச் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றேன்.

இன்று இங்கு கூடிய இந்த மகாநாட்டிற்குக் கேரள சீர்திருத்தச் சங்க மகாநாடு என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் திருவாளர் தம்பான் அவர்கள் சொன்னபடிக்கு நமது லக்ஷியத்தின்படி பார்ப்போ மானால் சீர்திருத்தம் செய்யப்படவேண்டிய காரியம் ஒன்றுமே இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை. ஒரு பெரிய தலைகீழான புரட்சியே தான் நாம் செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றோம். ஆதலால் இச்சங்க மகா நாட்டில் இந்நாட்டுக்கு ஏதாவது பயன் ஏற்பட வேண்டுமானால் இதைக் கேரள புரட்சிச் சங்க மகாநாடு என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் நமது முன்னேற்றத்திற்கும், மனிதத் தன்மைக்கும், இயற்கைக்கும் விரோத மாய் இருக்கும் மதம் ஜாதி முதலிய காரியங்களில் சீர்திருத்தம் செய்யத்தக்க பாகமோ மீத்து வைத்துக் கொள்ளத் தக்க பாகமோ ஒரு சிறிதுமே கிடை யாது. ஆதலால் தான் அவைகளை அடியோடு அழிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். அதோடு இல்லாமல் அவைகளுக்கு அதிகமாக ஆதர வளித்து வரும்படியான கடவுள் உணர்ச்சியென்பதையும் நாம் அழித்துத் துலைக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். ஆகவே இந்த நாட்டு



RangaRakes tamilnavarasam.com

மக்களால் மாத்திரமல்லாமல் பொதுவாக உலக மக்களாலேயே மிக்கப் பிரதானமாய்க் கருதப்படும்படியானவைகளான மேற்கண்ட ஜாதி, மதம், கடவுள் உணர்ச்சி ஆகியவைகளையெல்லாம் அடியோடு அழிப்பது என்பதை யாரும் சீர்திருத்த வேலை என்று சொல்ல முடியாது. தைரியமாய்ச் சொல்வதானால் நாம் அவற்றை ஒரு அழிவு வேலை என்பதாகவே கருதி நம்மையும் அழிவு வேலைக்காரர்கள் என்றே சொல்லிக் கொள்ள வேண் டும். ஆகையால் தான் நமது சுயமரியாதை இயக்கம் இதையே தனக்கு தலையான கொள்கையாகக் கொண்டிருக்கின்றது. இந்தக் காரியங்களைச் செய்யப் பயந்தவர்களால் உண்மையான ஒரு முற்போக்குக் காரியமும் செய்து விட முடியாது.

இந்த நாட்டில் சீர்திருத்த வேலைகள் வெகுகாலமாக செய்யப்பட்டு வந்திருக்கின்றன. செய்தவர்களையெல்லாம் சாதாரண மனிதர்களாய் கூடக் கருதாமல் பெரிய "தெய்வத்" தன்மை பொருந்தினவர்களாகவும், விஷேச "அவதார" புருஷர்களாகவும் "மகாத்மா"க்களாகவும் கூடக் கருதப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் அவர்களால் ஆன வேலை என்னவென்று பார்ப்போமானால் குளிக்கப்போய் சேற்றைப் பூசிக் கொண்டு வந்த பலன் போலதான் ஏற்பட்டு வந்திருக்கின்றனவே அல்லாமல் வேறில்லை. இப்படி இருந்தும் இனியும் அதே துறையில் அநேகர் பாடுபடுகின்றார்கள் என்றா லும் அவர்களாலும் இன்று பலனுள்ள ஒரு காரியமும் நடத்த முடியவில்லை. நடைபெறுமென்ற நம்பிக்கையுமில்லை. காரணம் என்னவென்றால் அவர் கள் மக்களுக்கு எந்தெந்த பலன் ஏற்படவேண்டும் என்கிறார்களோ அந்தந் தப் பலன்களுக்கு எதிராயிருக்கும் அஸ்திவாரமான தடைகளை நீக்கும் விஷயத்தில் அவர்கள் சிறிதும் சம்மதிப்பதில்லை. அதன் கிட்டப் போவ தற்கே பயப்படுகின்றார்கள். மற்றும் பலர் அவைகளைக் காப்பாற்றிக் கொண்டே சீர்திருத்தம் அடைய வேண்டும் என்கின்றார்கள். ஆதலால் தான் அப்படிப்பட்டவர்களால் இதுவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒரு கானலை அதாவது காட்டை விவசாயம் செய்யும் படியான வயல்களாக ஆக்க வேண்டுமானால் முதலில் அதிலுள்ள புதர்களையும், முட்களையும், செடி கொடிகளையும் பிடுங்கி நெருப்பிட்டுக் கொளுத்தி ஆகவேண்டும். பிறகு மேடுகளை வெட்டி பள்ளத்தில் போட்டு நிரவவேண்டும், கல்லுக ளையும், பாறைகளையும் உடைத்து வெளியாக்க வேண்டும். இந்த காரியங்க ளெல்லாம் செய்த பிறகே அந்த பூமி எந்த விதமான வெள்ளாமை செய்யப் பயன்படும் என்று கருதி அதற்கேற்ற எருக்களிட்டு பயிர்களைச் செய்து பயன்பெற வேண்டும். அப்படிக்கில்லாமல் உள்ள நிலையிலேயே பயிர் செய்வதானது மனிதனது முயற்சியும் ஆற்றலும் விதைப் பண்டமும் வீணாய் போவதுடன் பயனற்ற கொடியும் செடியும் மேலும் வளர்ந்து துஷ்ட மிருகங்களும் விஷ ஜந்துக்களும் தாராளமாய்க் குடியிருக்கத்தகுந்த புதர் களாகத்தான் ஏற்பட்டு விடும். ஆகையால் நாம் இப்போது புதர்களிலுள்ள கொடி, செடி, முள், புல் பூண்டு ஆகியவைகளை அழித்து நெருப்பு வைத்துக் கொளுத்தும்



வேலையில் இருக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இந்த வேலை செய்யும் முன் பயிர்செய்யும் வேலையில் நாம் ஒருக்காலமும் புகக்கூடாது. மேடு பள்ளங்களைச் சமனாக்காமல் அதில் தண்ணீர் பாய்ச்சும் வேலையை நாம் தொடங்க மாட்டோம். ஏனெனில் நாம் பாய்ச்சும் தண்ணீ ரெல்லாம் ஏற்கனவே தண்ணீர் நிறைந்திருக்கும் பள்ளத்திற்கே போய்ச் சேர்ந்து விடும். மேட்டிற்கு எவ்வளவு தண்ணீர் பாய்ச்சினாலும் அங்கு கொஞ்சம் கூடத் தங்காது. ஆகவே தைரியமான அழிவு வேலை அதாவது காட்டைத் திருத்தி மேட்டை வெட்டி பள்ளத்தில் போட்டு சமனாக்கும் சமத்துவ வேலையைக் கைக்கொள்ள வேண்டும். அதற்கு பயப்படக் கூடாது.

இந்த வேலையில் நமக்குப் பெரிதும் கஷ்டமுண்டு என்பதையும் மனதில் வைக்க மறந்துவிடக் கூடாது.

புதர்களில் இருந்து கொண்டு சுகமாய் வாழ்ந்து வரும் ஜந்துக்களால் நமக்கு பல ஆபத்துகள் ஏற்படலாம். அதற்கும் துணிந்து தைரியத்தோடு தான் அழிவு வேலை செய்ய வேண்டியிருக்கின்றது.

ஆகவே, சகோதரர்களே இப்போது நமது நாட்டில் ஆக்க வேலை செய்வது என்பது சாத்தியப்படாதது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித் துக் கொள்ளுகின்றேன்.

பாழும் மதத்தின் பேரால் உலகமே பல பிரிவுகளாக பிரிந்து கிடக் கின்றது.

குறிப்பாக நமது நாடு மதத்தின் பேரால் பிரிந்தது மாத்திரமல்லாமல் ஜாதிகளின் பேரால் பல பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கின்றன.

இவை மாத்திரமல்லாமல் பணக்காரன் ஏழை படித்தவன் பாமரன் என்கின்ற பிரிவுகளும் நிரந்தரமாய் இருக்கும்படி ஏற்பாடுகள் ஆகிக் கொண்டும் வருகின்றன. இந்தப்படி நிரந்தரமாயிருக்கும் படியாக ஏற்பாடு செய்து கொண்ட மேல் ஜாதி, கீழ் ஜாதி முதலாகிய பிரிவுகளை அழிக்க ஆரம்பித்தால் இதை ஆதரவாய்க் கொண்டு மற்றொரு கெடுதி நமது நாட்டில் நிரந்தரமாய் இருக்கும் படியாக அதாவது பணக்காரன் ஏழை என்கின்ற பிரிவு நிரந்தரமாய் இருக்கும் படியாக ஒரு புது முயற்சி நமது நாட்டில் இப்போது அதிகமாகச் செய்யப்பட்டு வருகின்றது. முதலாளி, தொழிலாளித் தன்மையும் நிரந்தரமாய் இருக்க ஏற்பாடாகி வருகின்றது. இவைகள் எல்லாம் அரசியல் கிளர்ச்சியாலும் சீர்திருத்த முயற்சியாலுமே தான் செய்யப்படுகின்றது. அதாவது இவ்வேற்பாடுகளைத் தான் இன்றைய முன்னேற்றமென்றும், சீர்திருத்தமென்றும், சுதந்திரமென்றும் சொல்லப்பட்டு வருகின்றன. நமது பாமர ஜனங்கள் இதன் இரகசியத்தைத் தெரியாமல் அதில் விழுந்து விளக்கில் வீட்டில் பூச்சிகள் விழுவது போல் விழுந்து மடிந்து வருகின்றார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இதற்காகவே தான் கடவுளும், மதமும், ஜாதியும், அரசியலும் ஏற்படுத்தப் பட்டதென்றும், அந்தப்படியே பயன்படுத்தப்பட்டு வருகின்றதென்றும் நான் உறுதியாய்க் கூறுகிறேன். இவைகளையெல்லாம் அடியோடு ஒழிப்பது தான் நாம் மனித சமூகத்திற்குச் செய்ய வேண்டிய உண்மையான தொண்டாகும். இதை விட்டுவிட்டுச் செய்யும் படியான வேறு எந்தத் தொண்டும் மனித சமூகத்திற்கு கேடு விளைவிப்பதாகும்.

ஆகவே நாட்டிற்கு நன்மை செய்வதாய்க் கூறிக் கொண்டு மக்களை மீளாத அடிமையிலும், கொடுமையிலும் ஆழ்த்தப்போகும் பாதகமான வேலைகளை எல்லாம் கூட நாம் அழிக்க வேண்டியவர்களாய் இருக்கின் றோம். நாட்டுச் செல்வங்களை நாட்டிலுள்ள மக்களில் சிலர் தங்கள் தேவை களுக்கு மேலாகவும் தகுதிக்கு மேலாகவும் சேர்த்து வைத்துக் கொண்டு அவைகளையெல்லாம் அக்கிரமமான வழியில் செலவு செய்து கொண்டு மக்களை அடிமைப்படுத்தி ஆனந்தமாய் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற மக்களேதான் இன்று "இந்த நாடு தரித்திர நிலையில் இருக்கின்றது விடுதலை பெற வேண்டும்" என்று பாசாங்கு செய்கின்றார்கள். கஷ்டப்படும் மக்களும், ஏழை மக்களும் தங்கள் மீது திரும்பாமல் இருக்கட்டும் என்று அன்னிய நாட்டுக்காரர்களை நமக்குக் காட்டி நம்மை அந்தப் பக்கம் திருப்பி விடு கின்றார்கள்.

சாதாரணமாக நாம் குழந்தைகளிடம் இருந்து ஏதாவது சாமான்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் எப்படி அதற்கு வேறு ஒரு வேடிக்கையைப் பார்க்கச் சொல்லி ஆகாயத்தைப் பார், அந்தப் பக்கம் பார் என்பதாக பிராக்குக் காட்டி அது அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கும் போது நாம் அந்த சாமானை எடுத்துக் கொள்ளுகின்றோமோ அது போலவே பாமர மக்களை சுயராஜ்யம் பார் பூரண சுயேச்சையைப் பார் மோட்சம் பார் கடவுளை பார் என்று பிராக்கு காட்டி அவர்கள் வேலையின் பயனையும் அவர்களது செல்வத்தின் பங்குகளையும் சிலரே கொள்ளை அடித்துக் கொள்ளுகின்றார்கள். இந்தக் கூட்டத்தாரின் தந்திரமே தான் இந்த நாட்டில் தரித்திரம் என்பதற்கும் அடிமைத்தனம் என்பதற்கும் அறிவும் ஆராய்ச்சி யும் அற்றதனம் என்பதற்கும் ஆதாரமாய் இருக்கின்றன.

இந்த நாட்டின் செல்வத்தில் எவ்வளவு பெரிய பாகம் மதமும் கடவுளும் என்கின்ற பேரால் வேலை செய்யாத சோம்பேறிகள் அனுபவிக் கின்றார்கள் என்பதை நமது மூட ஜனங்கள் அறியாமலேயே இந்த நாடு தரித்திரமான நாடு என்று அழுகின்றார்கள். இந்த நாட்டில் உள்ள சந்நியா சிகள் துறவிகள் மதாச்சாரிகள் என்பவர்களுக்கு உள்ள சொத்துக்களும், வரும்படிகளும் வேறு யாருக்காவது இருக்கின்றதென்று யாராவது சொல்ல முடியுமா? அவர்களுக்கு எதற்காக அவ்வளவு சொத்தும் வரும்படியும் வேண்டி இருக்கின்றதென்று எந்த பொருளாதாரவாதியாவது கவனிக்



கின்றானா? ஒரு சந்நியாசி கோடிக்கணக்கான ரூபாய் சொத்தும் வருஷத்தில் லட்சக் கணக்கான ரூபாய்கள் வரும்படியும் உடையவனாக இருந்தால் அந்த நாடு ஏழை நாடு தரித்திர நாடு என்று யாராலாவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்றேன். ஒரு முழம் முக்கால் முழம் உயரமுள்ள குளவிக் கல்லுக ளுக்கு நமது நாட்டில் எத்தனை கோடி ரூபாய்கள் சொத்தும் எத்தனை லட்ச ரூ. வரும்படியும் இருக்கின்றன வென்று பாருங்கள். இப்படி எத்தனை நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான குளவிக்கல்லுகள் நமது நாட்டில் செல்வத்தோடு யானை ஒட்டகை குதிரை பல்லக்கு தேர், ரதம் முதலிய வாகனங்களோடு பல பெண்டாட்டிகளோடு பல கலியாணங்களோடு வாழ் கின்றன என்பவைகளை நேரில் பார்க்கும் ஒரு யோக்கியன் உண்மையில் நமது நாடு தரித்திரமுள்ள நாடு என்று சொல்ல வருவானா? இதை எந்த பொருளாதார நிபுணனாவது கவனித்து நமது நாடு தரித்திரமுள்ள நாடு என்று சொல்லுகின்றானா? மற்றும் பிரபுக்கள் செல்வவான்கள் லட்சுமி புத்திரர்கள் என்று சொல்லிக் கொண்டு எத்தனை ஆயிரக்கணக்கான ஏக்கர் பூமிகள் உடையவர்களும் எத்தனை ஆயிரக்கணக்கான ரூபாய்கள் இன்கம் டாக்ஸ் வரிகொடுக்கக் கூடிய லாபம் அனுபவித்துக் கொண்டு லட்ச லட்சமாய் கோடி கோடியாய் பொருள் சேர்த்து தாசி வேசி ராஜபோகம் அனு பவித்துக் கொண்டு நிரந்தர ராஜாவாகவும் நிரந்தர ஜமீனாகவும் நிரந்தர பிரபுவாகவும் நிரந்தர பாளையதாரராகவும் இருக்க முயற்சி மேல் முயற்சி செய்து கொண்டு இருக்கும் மக்கள் பல நூற்றுக்கணக்காக ஆயிரக்கணக்காக இருந்து கொண்டு இருக்கும் இந்த நாட்டை தரித்திரமுள்ள நாடு என்று யாராலாவது சொல்ல முடியுமா? மற்றும் நாள் ஒன்றுக்கு 100, 200, 500, 1000 ரூபாய்கள் வீதம் சம்பாதிக்கும் வக்கீல்களும் டாக்டர்களும் ஏராளமாய் இருந்து கொண்டு ஒவ்வொருவரும் ஐம்பதாயிரம் லட்சம் ஐந்து லட்சம் பெறும்படியான பங்களாக்களில் வாழ்ந்து கொண்டு நிலத்தில் கால் படாமல் நகத்தில் அழுக்குப் படாமல் சரீரத்தில் வேர்வை இல்லாமல் பிழைத்துக் கொண்டிருக்கும் மக்கள் பல ஆயிரக்கணக்காக, லட்சக்கணக்காக வாழும் இந்த நாட்டை தரித்திரமுள்ள நாடு என்று யாராவது சொல்ல முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். மற்றும் இந்தக் கூட்டத்தினர்கள் தானே இன்றையத் தினம் இந்த நாடு தரித்திர நாடு, ஏழை நாடு, அடிமை நாடு, சுதந்திர நாடு என்றும் ஆக வேண்டும் சுயராஜ்ஜிய நாடு ஆக வேண்டும் என்றும் பிரமாதமாய்க் கூப்பாடு போடுகின்றார்கள். ஒவ்வொரு காலத்திலும் வரு கின்ற சீர்திருத்தங்களில் எல்லாம் இந்த மாதிரி ஜனங்கள் தானே நமது பிரதிநிதிகளாய் இருந்து நமக்காக என்று ஆட்சி புரிந்து வருகின்றார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு தானே இன்னமும் அதிகாரமும் பெருமையும் கீர்த்தியும் பணமும் வரவும் ஏற்படவும் நாம் மதத்தையும் கடவுளையும் ஜாதி யையும் காப்பாற்ற முயற்சிப்பதோடு சுயராஜ்ஜியமும் பெற வேண்டுமென்று பெரிய பாடுகளைப்படுகின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

நமது நிலைக்கு காரணமென்ன? நமது தரித்திரத்திற்கு யார் காரணம்? நமது செல்வமும் பாடும் என்ன ஆகின்றது? என்கின்ற அறிவு நமக்கு இல்லாமல் இருக்கிற முட்டாள்தனமே நமது இன்றைய இழிவு நிலைக்கு காரணமாயிருக்கின்றது. மதத்தையாவது ஜாதியையாவது கடவுளையாவது உண்மையென்று நம்பி அவைகளைக் காப்பாற்ற முயர்ச்சிக்கும் எவனாலும் மக்களுக்கு சமத்துவமும் அறிவும் தொழிலும் செல்வமும் ஒருக்காலும் ஏற்படவே ஏற்படாது என்பது எனது உறுதி.

ஆனால் இவைகளை அழிக்க மக்கள் ஒருக்காலமும் சம்மதிக்க மாட்டார்கள். இவைகளைக் காப்பற்ற அனேக விதமான ஸ்தல ஸ்தாபனங்கள் ஆதியிலேயே ஏற்பாடு செய்யப்பட்டு வந்து குழந்தைப் பருவ முதலே நமக்குள் புகுத்தப்பட்டு வந்திருப்பதால் இது சுலப சாத்தியமான காரியமாக இருக்க முடியவில்லை. இவைகளில் எங்கு கைவைத்தாலும் நமது எதிரிகள் நம் மீது நாஸ்திகன் என்னும் ஆயுதத்தை வீசி எறிந்து நம்மை கொல்லப் பார்த்து விடுவார்கள். நமது மக்களும் பெரும்பாலும் மூடர்களாயிருப்பதால் அந்த நாஸ்திகம் என்னும் ஆயுதத்தைக் கொண்டே நமது எதிரிகளுக்கு உதவியாகவும் நமக்கு எதிராகவும் நின்று நமது முயற்சிகளுக்கு இடையூறு செய்வார்கள். ஆகையால் நாம் இன்றைய நிலையில் இருந்து ஒரு சிறு மாறுதல் செய்ய வேண்டுமானாலும் நமது எதிரிகளின் ஆயுதமாகிய நாஸ்திகத்திற்கு பயப்படாமல் “ஆமாம் நான் நாஸ்திகன் தான்” என்று சொல்லிக் கொண்டு அந்த நாஸ்திகத்தையே நாட்டில் எங்கும் மூலை முடுக்குகளில் கூட பரப்ப நாம் துணிய வேண்டும். அப்போது தான் நமது எண்ணம் ஈடேற முடியும். ஆதலால் நாம் இனிச் செய்ய வேண்டியது முக்கியமாய், நாஸ்திகப் பிரசாரமேயாகும். அதாவது “எனக்கு இந்த மதம் வேண்டாம், இந்த சாதி வேண்டாம், இந்த சாஸ்திரம் வேண்டாம், இந்தக் கடவுள் வேண்டாம் இவைகள் இல்லாமல் ஜீவிக்க என்னால் முடியும். எனக்கு வேண்டியதெல்லாம் சமத்துவமும் மனிதத் தன்மையுமேயாகும்” என்று தைரியமாய்ச் சொல்ல வேண்டும். அதுவும் இந்த நாட்டில் இந்த உலகத்திலேயே வேண்டுமே ஒழிய மேல் உலக சங்கதியை இதில் கலக்க வேண்டாம் என்று தைரியமான பிரசாரம் செய்ய வேண்டும். இன்றைய வாலிபர்களுக்கு இது தான் முக்கிய வேலை என்பது எனது உறுதியான அபிப்பிராயமாகும். இதற்கெல்லாம் முதலில் மனிதனை மோட்சத்தை சுவர்க்கத்தை மறக்கச் சொல்ல வேண்டும்.

மோட்சமும் சுவர்க்கமும் இன்றைய கள்ளு சாராயக் கடைகளை விட தாசி வேசிகள் வீடுகளைவிட மோசமானது என்பதை மக்கள் உணரும்படி செய்ய வேண்டும். மோட்ச நரகம் என்பது எப்படி திருடர்கள் பிரயாணி களை வழிப்பறி செய்வதற்கு தனி வழியில் ஆள் அடையாளம் தெரியாமல் வேஷம் போட்டுக் கொண்டு வந்து வழி மறித்து மண்டையை உடைக்க தடிக் கம்பையும் ஈட்டியையும் ஆயுதமாகக் கொண்டு பொருள் பறித்துச்



செல்லுகின்றார்களோ அது போலவே பகல் வழிப்பறிக்காரர்கள் மக்களின் வாழ்க்கைப் பிரயாணத்தில் வழி மறித்துப் பொருள் பரித்துப் போகச் செய்து கொண்ட ஆயுதங்களேயாகும். ஆகையால் அதை மனிதன் முதலில் மறந்தாகவேண்டும். இந்த உலக வாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் மக்களுக்கு உதவி செய்வதையும் தனது அளவுக்கும் தேவைக்கும் மேல் பட்டதை அடைய ஆசைப்படாமலுமிருக்க வேண்டியதையே மோட்சம் என்று லட்சியம் கருத வேண்டும். இந்தப்படி அளவுக்கும் தேவைக்கும்மேல் மக்களை அடையச் செய்யாமல் பார்த்துக் கொள்ளு வதையே மக்களை மோட்சத்திற்கு அனுப்பும் வேலையென்று நாம் கருத வேண்டும். மனிதன் இந்த நாட்டில் எப்படி தனது தேவைக்கும், அளவுக்கும், தகுதிக்கும் மேல் அடைய ஆசைப்படுகின்றானோ அதற்கு ஆதாரவாய் இருப்பதற்காகவே மூடர்களுக்கு மேல் உலகத்தில் அவரது தகுதிக்கும், அளவுக்கும், தேவைக்கு மேலாக அனுபவிக்க ஆசை காட்டி இங்கு தட்டிப் பிடுங்கிக் கொள்ளுகிறார்கள். மூடர்களும், பேராசைக்காரர்களும் தான் மோக்ஷத்தை விரும்பு வதை நாம் பல உதாரணங்களால் காணலாம். மோட்சத்திற்கும், சுவர்க்கத்திற் கும் பாமர மக்களுக்குச் சொல்லப்படும் கருத்துக்களைச் சற்றுக் கவனித்துப் பாருங்கள். மனிதனுக்கு எதெதில் சாதாரணமாய் ஆசை வரக்கூடுமோ அதையே தான் மோட்சத்தில் சிருஷ்டித்து இருக்கிறார்கள்.

அதாவது இங்குள்ள மனிதனுக்குப் பொருள் வேண்டும், பெண் வேண்டும், தேவையானதெல்லாம் நினைத்த மாத்திரத்தில் வேண்டும், நல்ல வாலிபப் பருவம் வேண்டும், சதா இடைவிடாமல் போக போக்கியம் வேண்டும், சாகாமல் இருக்க வேண்டும் ஆகிய இந்த விஷயங்கள் மனித னுக்கு சாகும் வரையிலும் செத்த பிறகும் அனுபவிக்கக் கூடியதாய் ஆசைப்படக் கூடியது என்பது யாரும் அறிந்ததாகும்.

ஆகவே இந்தக் காரியங்களையே மேல் உலகத்தில் இருப்பதாகவும் அதை அடையக் கூடும் என்றும் ஆசையுண்டாகும்படி அதாவது மேல் உலகத்தில் எங்கு பார்த்தாலும் பொன்னும் ரத்தனங்களும் இறைந்து கிடக்கு மென்றும் உலகமே பொன்னுலகமென்றும் அங்கு அரம்பை ஊர்வசி முதலாகிய தேவ கன்னிகைகள் என்பவர் என்றைக்கும் வாலிபமாய் நம் பக்கத்தில் இருந்து கொண்டு நமக்கு சதா போகம் கொடுத்துக் கொண்டிருப் பார்களென்றும், காமதேனு கற்பக விருட்சங்கள் நமக்கு எது தேவையோ அது உடனே கொண்டு வந்து கொடுக்குமென்றும், நரை, திரை மூப்பில்லை யென்றும், நாம் சாகாமல் சிரம் சீவியாய் இருப்போமென்றும் சொல்லி ஏற்பாடு செய்து விட்டதால் அவைகளை மனிதன் நித்தியமாய் நம்பி இந்த உலகத்தையும், இங்குள்ள போக போக்கியங்களையும் அநித்தியமாய் எண்ணி கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருள்களையெல்லாம் இந்த மோக்ஷத் திற்கு என்றே செலவு செய்வதுடன் நில்லாது இதற்காக என்று பலவிதமான அக்கிரமமான வழிகளிலும் மற்ற மக்களை வஞ்சித்தும், பட்டினி போட்டும்



RangaRakes tamilnavarasam.com

பொருள் பறித்தும் கூட இதற்காகச் செலவு செய்ய வேண்டியிருக்கின்றது. உதாரணமாக ஏழை மக்கள் கஞ்சிக்கு அலையும் போது குடம் குடமாய் பால் குடங்களைத் தினமும் கல்லின் தலையில் கொட்டி அவற்றை நாற வைப்பதின் கருத்து என்ன என்று பாருங்கள். குடியிருக்க நிழல் இல்லாமல் மக்கள் திரியும்போது மலைகளையும் பாறைகளையும் உடைத்து கோட்டை கள் போல் சந்திரகாந்த மண்டபங்கள் போல் மக்கள் கோவில்கள் கட்டுவ தின் கருத்து என்னவென்று பாருங்கள். எவ்வித தொழிலும் செய்வதற்கு மூலதனம் இல்லாமலும் தொழிலில்லாமலும் மக்கள் வயிறு வளர்க்கக் கப்பலேறி வேறு நாட்டிற்கு கூலிகளாய் போய் சொத்துப் பொத்தென்று மாண்டு மடிந்து கொண்டிருக்கும் போது பொம்மைகளை வைத்து உற்சவம் செய்வதும் அவற்றிற்கு பத்து லக்ஷம், ஒருகோடி, பத்துக் கோடிக் கணக்காக நகைகளும், பாத்திரங்களும், வாகனங்களும், துணிகளும் சேர்த்து வைப் பதின் கருத்தென்னவென்று பாருங்கள். நாளுக்கு நாள் வாழ்வு கஷ்டத்திற்கு வந்து ஏழைகள் மலிந்து வரும்போது லக்ஷம், ஐம்பதாயிரம், மூன்று லக்ஷம் ரூபாய்கள் செலவு செய்து கும்பாபிஷேகங்கள் செய்வதின் கருத்து என்ன வென்று யோசித்துப் பாருங்கள். பூமிகளை உழுது கஷ்டப்பட்டு பயிர் செய்யும் குடியானவர்கள் அரைவயிற்றுக்குக்கூட போதும்படியான ஆகார மில்லாமல் கஷ்டப்படும் போது குழவிக்கல்லுகளுக்கும், செம்பு, பித்தளை பொம்மைகளுக்கும் தினம் பத்து மூட்டை, இருபது மூட்டை, முப்பது மூட்டை போன்ற அரிசிகள் போட்டுப் பொங்கி நைவேத்தியம் செய்து பாடுபடாத சோம்பேறிகளுக்கு குடும்பத்துடன் போட்டுக் கொண்டிருக்கும் கருத்து என்ன என்று எண்ணிப்பாருங்கள். மக்களில் நூற்றுக்கு 10 பேர்களுக்குக் கூட அதாவது சாராசரி படிப்பு எழுத்து வாசனைகூட இல்லா மல் இருக்கும்போது வேத பாடசாலை, தேவார பாடசாலை முதலியவை களும் கல்லுகள், பொம்மைகள் பின்னால் நின்று கொண்டு ஆயிரத்திற்கு ஒருவருக்குக் கூட புரியாத வேத பாராயணம் முதலியவைகள் செய்யப் படுவதற்கும் லக்ஷக்கணக்காய் செலவு செய்யப்படுவதின் நோக்கம் என்ன என்பதை யோசித்துப் பாருங்கள். இப்படியாக நமது நாட்டில் இது போலவே எவ்வளவு காரியங்கள் நடைபெறுகின்றது என்பதை நோக்கினால் மற்ற மக்களை எவ்வளவு பாடுபடுத்தியாவது, அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலாவது சிறிதும் லக்ஷியமில்லாமல் நாம் மோக்ஷத்திற்குப் போக வேண்டும். நாம் பிரபுவாய் இருக்க வேண்டும். லக்ஷுமி புத்திரராய் ராஜாவாய் நிரந்தர செல்வவானாய் சிரம்சீவியாய் இருக்க வேண்டும் என் கின்ற பேராசையல்லாமல் வேறு தத்துவம் அதில் என்ன இருக்கிறது என் பதை யோசித்துப் பாருங்கள். இந்த மாதிரி மோக்ஷம் கற்பிக்கப்பட்டு அதை அடைவதே மனிதனின் முக்கிய லக்ஷியம் என்று போதிக்கப்பட்டிருக் கின்ற பேராசை ஜனங்கள் மலிந்திருக்கும் இந்த நாட்டில் இந்த உணர்ச்சியை அழிக்காமல் என்ன காரியம் நம்மால் செய்ய முடியும் என் பதை யோசித்துப் பாருங்கள். ஆதலால் தான் முதலில் மோக்ஷ உணர்ச்சி ஒழிக்கப்பட வேண் டியது அவசியம் என்று கருதுகின்றேன்.



சகோதரர்களே! இந்த மோக்ஷ உணர்ச்சி ஒழிக்கப்பட வேண்டியதைப் போலவே நரக உணர்ச்சியும் அழிக்கப்பட வேண்டும். மோக்ஷ உணர்ச்சி எப்படிப் பேராசையின் பிரதிபிம்பமோ அது போலவே நரக உணர்ச்சியும், அடிமைத்தனத்தினுடையவும், பயங்காளித்தனத்தினுடையவும் பிரதி பிம்பமாகும். நரகத்திற்கு பயப்படுவதாலேயே அநீதிகளுக்கு மனிதன் ஆளாகின்றான். தைரியமில்லாத கோழையாயிருக்கின்றான். இவைகளை யெல்லாம் விட மனிதன் சிறிதாவது முற்போக்கடைய வேண்டுமானால் சிறிதாவது இயற்கையின் இன்பத்தை நுகர வேண்டுமானால் யெல்லாவற்றை யும்விட மனிதனுக்கு விதி – கர்ம பலன் – என்கின்றதான உணர்ச்சிகள் கண்டிப்பாய் ஒழிய வேண்டும். விதியும் கர்மபலனும் என்கின்றவைகளான உணர்ச்சி இந்திய நாட்டிற்கு ஏற்பட்டிருக்கவில்லையானால் இன்றைய தினம் இந்தியா அநேக விஷயங்களில் ருஷியர்களுக்கு ஏன் இந்த உலகத் தில் உள்ள மற்ற எந்த நாட்டு மக்களின் நிலைமைக்கு மேலாக இருந்து அநேகமாக உலக மக்களுக்கே சமத்துவத்தையும் சம இன்பத்தையும் இயற்கை இன்ப நுகர்ச்சியையும் கொடுத்து சர்வ சுதந்திரத்துடன் வாழச் செய்திருக்கும் என்று தைரியமாய்ச் சொல்லுவேன். ஆகையால் இந்த கர்ம பலன் உணர்ச்சி மனிதத் தன்மைக்கு மிகவும் கேடான எதிரி என்பதை நீங்கள் நன்றாய் ஞாபகத்தில் வைக்க வேண்டும். நான் மேலே காட்டிய இந்த காரணங்கள் தான் இந்த உலகத்தில் நமது நாட்டை மாத்திரம் இந்த இழிவான நிலையிலும், மீளா அடிமைத்தனத்திலும் வைத்திருக்கின்றன. இவைகள் ஒழிந்தால் தானாகவே இந்தியா சுயமரியாதை பெற்று விடும்! சுதந்திரம் பெற்று விடும்! மனிதத் தன்மை அடைந்துவிடும். ஆகையால் சகோதரர் களே நீங்கள் இந்திய நாட்டின் முற்போக்குக்கும் விடுதலைக்கும் மனிதத் தன்மைக்கும் பாடுபட வேண்டுமானால் மேற்கண்ட காரியங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்றே கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதற்கு மாறுபாடான அபிப்பிராயமுள்ளவர்கள் சிலர் – ஏன் பலர் இருக்கலாம். இன்றைய உலகம் பெரிதும் அப்படிப்பட்டவர்களையே அதிகமாகக் கொண்டிருக்கின்றது. ஆதலால் இந்த எனது அபிப்பிராயம் அவர்களுக்கு மிக்க கஷ்டமானதாகத் தோன்றலாம். அவர்களால் நமக்குப் பல வித கஷ்டங்களும், தொல்லைகளும், தடைகளும், ஆபத்துகளும் ஏற்பட்டாலும் ஏற்படலாம். நாம் அவைகளைத் தாராளமாய் எதிர்பார்த்து அவைகளைப் பற்றி ஆச்சரியப்படாமல் பயப்படாமல் சமாளித்து நிற்க முனைந்து கொண்டு தான் இந்தத் தொண்டு செய்ய வேண்டும். சுயமரியாதை இயக்கத் தொண்டு என்பது மற்றத் தொண்டுகளைப் போல் அதாவது ஏதாவது, புராணங்களைப் படித்து விட்டு பக்தி ரசக் கீர்த்தனை பாடி விட்டு அல்லது மேடைகளில் நின்று "இந்த இராக்ஷச அரசாங்கத்தை அழிக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு மக்களிடத்தில் இருந்து பண்டிதன் என்றோ, பக்திவான் என்றோ, தேசீய வீரன் என்றோ சுலபத்தில் பெருமை பெற்றுவிடக் கூடிய



RangaRakes tamilnavarasam.com

காரியமல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள் ளுங்கள்.

போகிற இடத்தில் எல்லாம் கல்லடி படவும், வசவு கேட்கவும் கலகக் காரர்களாலும் நமது எதிரிகளின் கூலிகளாலும் தொல்லைப்படத் தயாரா யிருக்க வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஆகவே இவ்வளவு நேரம் எனக்கு சரி என்று பட்டதை நான் மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு என்று நினைத்ததை எனது நாடு என்று சொல்லப்படுவதை மற்ற நாடுகள் எதற்கும் இளைத்ததல்ல என்னும் படியான நிலைமைக்குக் கொண்டு வர வேண்டியதற்கு ஏற்ற சாதனம் என்று கருதியதை உங்களுக்கு எடுத்துச் சொன்னேன். உங்கள் அபிப்பிராயங்களை யும் என்னிலும் உங்களிலும் மாறுபட்டவர்களது அபிப்பிராயங்களையும் பொறுமையாய் கேட்டு எல்லாவற்றையும் நடுநிலையில் இருந்து யோசித்து உங்கள் புத்திக்கு எட்டிய முடிவுப்படி நடக்க முயலுங்கள். குற்றமிருப் பினும் அனுபவத்தில் சீக்கிரம் திருத்த மாகிவிடும்.

*குறிப்பு: திருவாங்கூர் ராஜ்யத்தில் சேர்த்தலையில் 7-9-1930 இல் நடைபெற்ற கேரள சீர்திருத்த மாநாட்டுத் தலைமையுரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 14.09.1930**



# ராஜி முறிவு

தற்காலம் இந்திய நாட்டில் நடைபெறும் அரசியல் கிளர்ச்சி சம்மந்தமான சட்டமறுப்பு சத்தியாக்கிரகம் முதலியவைகள் விஷயமாய் சர்க்காருக்கும், திரு. காந்தியாருக்கும் ராஜி செய்வதாக சில கனவான்கள் தோன்றி ஒரு மாத காலமாக மக்களின் கவனத்தை அதில் செலுத்தச் செய்து வந்தார்கள். ராஜி விஷயம் வெற்றி பெற்று விட்டால் அதன் பெருமை எங்கு தென்னாட்டுப் பார்ப்பனர்களுக்கு இல்லாமல் போய் விடுமோ என்று கருதி "ராஜிக்கு அஸ்தீவாரமானவர் மகாகனம் பட்டம் பெற்ற சீனிவாச சாஸ்திரி யவர்களே யாவார்கள்" என்று பார்ப்பனப் பத்திரிகைகள் பிரசாரம் செய்தன. அது மாத்திரமல்லாமல் சென்னையிலிருந்து திரு. எ. ரங்கசாமி ஐயங்கார் தனக்கும் அதில் பங்கிருக்கட்டும் என்று போய் உள்ளே கலந்து அநேக அசோசியேடட் பிரஸ் செய்தியும் பிரீபிரஸ் செய்தியும் "நமது நிருபர்" செய்தியும் கலம் கலமாய் வெளியிட்டு பிரபலப்படுத்தினார். கடைசியில் நடந்த காரியம் ரூ. 1க்கு 16 அணாவாக இருந்தது ரூ. 1க்கு 192 பையாக ஆனதைத் தவிர வேறில்லை.

ஏனெனில் உண்மையில் ஏதாவது விவகாரம் இருந்தால் பைசல் செய்ய யாருக்காவது வேலையிருக்கக்கூடும். அதுவோ, தற்கால கிளர்ச்சி யில் ஒன்றும் இல்லை என்றே சொல்ல வேண்டியிருக்கின்றது. இரண்டா வதாக பஞ்சாயத்தில் பிரவேசித்தவர்களும் சத்தியாக்கிரகத்திலும், சட்ட மறுப்பிலும் வெறுப்புக் கொண்டவர்கள். அதாவது அவைகள் அவசிய மற்றவை என்று கருதினவர்கள், நமது மாகாணத்தில் உள்ள பல அரசியல் தலைவர்கள் தேசீயவாதிகள் என்பவர்கள் எப்படி இந்த சட்ட மறுப்பும் சத்தியாக்கிரகமும் சரியானதல்ல என்று சொல்லி விட்டு அதை விட்டு விலகிக் கொண்டார்களோ அது போலவும் மற்றும் மிதவாதிகளும், ஜஸ்டிஸ் காரர்களும், சுதந்திர தேசீய வாதிகளும் சட்டமறுப்பும் சத்தியாக்கிரகமும் நாட்டிற்கும், மக்களுக்கும் கேடு சூழ்வதென்றும், உடனே அடக்கப்பட வேண்டியதென்றும் சர்க்காருக்கு யோசனை சொல்லி, அதற்காக தங்கள் உதவியையும் சர்க்கார் தேடுவதாயிருந்தால் தங்களுக்கு இன்னின்னது செய்ய வேண்டும் என்றும் சர்க்காருடன் வியாபாரம் பேசினார்களோ அது போன்றதான மற்ற மாகாணங்களிலுள்ள மக்களில் இந்த ராஜிக்குப் புலப்பட்ட சமாதானப்



RangaRakes tamilnavarasam.com

பெரியார்கள் என்பவர்களு மாவார்கள். அவர்கள் ராஜிக்குப் புறப்பட்ட காரணம் எல்லாம் சத்தியாக்கிரகமும் சட்டமறுப்பும் தேசத்திற்கு தொல்லை விளைவிக்கின்றது என்று கருதிதான் புறப்பட்டார் களே ஒழிய சுயேச்சை என்பதை வாங்கப் புறப்பட்டவர்கள் அல்ல. ஆதலால் அவற்றை நிறுத்த திரு. காந்தியிடமும் திரு. வைசிராயிடமும் தூது போனார்கள். திரு. வைசிராய் அவர்கள் "அரசியல் சுதந்திர விஷயத்தில் நான் சொல்ல வேண்டியவைகள் எல்லாம் 3, 4 மாதங்களுக்கு முன்னாலேயே சொல்லிவிட்டதைத் தவிர வேறு ஒன்றும் புதிதாக சொல்ல வேண்டிய தில்லை" என்று சொல்லிவிட்டார். திரு. காந்தியவர்களோ "என்னுடைய கருத்தெல்லாம் சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே அனுப் பின இறுதிக்கடிதத்தின் மூலம் 11 நிபந்தனைகள் போட்டு எழுதிக் கொடுத்து விட்டேன். வேண்டுமானால் தற்கால சாந்தியாக 11ல் பகுதி குறைத்துக் கொண்டு ஐந்தரை நிபந்தனைகளுக்கு சர்க்கார் கட்டுப் பட்டால் யுத்தத்தை நிறுத்தி விடுகிறேன்" என்று சொல்லி விட்டார். மற்றும் உப தலைவர்களும் அதற்கு மேலொப்பம் போட்டு விட்டார்கள். இந்த நிலை யில் இரண்டு கட்சியாருக்கும் இன்று யாதொரு கஷ்டமும் இல்லாம லிருக்கின்றது.

அதாவது இன்றைய அரசியல் யுத்தப்பலன் என்னவென்றால் திரு காந்தியாரும் அவரது பிரதம சகாக்களும் சௌக்கியமாகயிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு காசு நஷ்டமும், ஒரு சிறு தொந்திரவும் கூடயில்லை. அது போலவே வைசிராய் பிரபுவுக்கும் ஒரு கவலையும் இல்லை. தோள் தினவெடுத்த பலசாலிக்கு சரீராப்பியாச வேலை கிடைத்தது போல் நல்ல வேட்டை கிடைத்தது. திரு. காந்தியார் தேச மக்களைப் பார்த்து "சட்டங் களை மீறுங்கள், அடிபடுங்கள், சிறை செல்லுங்கள், தியாகமில்லாமல் ஒன்றும் வராது, உங்களைப் பாராட்டுகிறேன்" என்று சொல்லி உத்திரவு கொடுத்து உற்சாகப்படுத்துவதுடன் அவர் பொறுப்பு நீங்கி விட்டது. வைசிராய்க்கு, தேச மக்கள் பணத்தில் உத்தியோகம் பார்க்கும் - தேச மக்கள் பிரதிநிதிகளிடம் "சட்டத்தையும், சமாதானத்தையும் காப்பாற்ற உங்களாலானதையெல்லாம் செய்யுங்கள். பெரிய ஆபத்து காலத்தில் சிறிய தர்மத்தையும், நீதியையும் பார்த்தால் முடியாது. அடித்தாவது, மண்டையை உடைத்தாவது, சுட்டாவது நிலைமையை சமாளித்து மக்களைக் காப்பாற்றுங்கள். இதுவரை நீங்கள் செய்ததெல்லாம் நிரம்ப சரி உங்களைப் பாராட்டுகிறேன்" என்று சொல்லி விட்டார். இருவரும் இன்று பெருமையுடனும், கீர்த்தியுடனும் விளங்குகின் றார்கள். இவற்றால் நாட்டுக்கு ஏற்பட்ட பலன் என்ன என்று பார்த்தால் ஜனங்கள் கஷ்டப்படுகின்றார்கள். வெள்ளைக்கார வியாபாரிகளும், இந்திய வியாபாரிகளும் நஷ்டமடைகிறார்கள். வெள்ளைக்காரத் தொழிலாளிகளும், இந்தியத் தொழிலாளிகளும் தொழிலில்லாமல் ஜீவனத்துக்கு வகையின்றி கஷ்டப்படு கின்றார்கள். அதிகாரிகளும் சிலர் அடிபட்டுச் சுட்டுக் கொல்லப் பட்டு விட்டார்கள். ஜனங்களிலும் பலர் அடிபட்டு சுட்டுக் கொல்லப்பட்டு



விட்டார்கள். இதுவரை ஏற்பட்ட லாப நஷ்டம் இருவருக்கும் சமம் என்று தான் சொல்ல வேண்டுமேயொழிய யாருக்கும் கம்மி ஜாஸ்தி என்று சொல்வதற்கில்லை. இந்த யுத்தம் இனியும் இரண்டு மூன்று மாதத்திற்கு தொடர்ந்து நடந்தாலும் இந்தப் பலனைத்தான் அல்லது இதை அனுசரித்த பலனைத்தான் அடையக்கூடும் என்பதாகவே தோன்றுகின்றது. எப்படி இருந்தாலும் நம்மைப் பொறுத்தவரை அடிதடியும் உயிர்ச் சேதமுமில்லாமல் இன்னும், கொஞ்ச நாளைக்கு தொடர்ந்து இந்த யுத்தம் நடந்தால் ஏழை மக்களுக்கு அனுகூலம் என்பதாகத் தோன்றுகின்றது.

எப்படியெனில் வியாபார மந்தமானாலும், ஆகாரப் பொருள்களின் விலைவாசிகள் ஏழைகளுக்கு அனுகூலமாயிருக்கிறது. பணக்காரர்களின் திமிர் சற்றுக் குறைவு பட்டு வருகின்றது. பணமில்லாத வியாபாரிகளுக்கும் இயக்கத்தின் மீது பழியைப் போட்டுவிட்டு ஏதோ ஒரு விதத்தில் தங்கள் வரவு செலவை ஒழித்து கணக்குகளைச் சரிக்கட்டிவிட்டு கிளர்ச்சி முடிந்த பிறகு புதுக்கணக்குப் போட சவுகரியமாயுமிருக்கும். ஆகவே யுத்தம் தொடர்ந்து நடப்பதே நன்மையெனக் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆகையால் ராஜி முறிவுக்கு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். மற்றபடி நமது இந்தியர்கள் தங்களது சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளவும், இந்தியப் பிரதிநிதிகள் அரசாங்க உத்தியோகங்களையும், இலாக்காக்களையும் குறைத்து நிர்வாகத்தை சுருக்கிக் கொள்ளவும் சம்மதிக்கின்ற போது தானா கவே வரி குறைந்து விடும். அரசியல் உரிமையும் நாணயமாய் பயன்படும். ஆதலால் இப்பொழுது வரியைப் பற்றியோ, உரிமையைப் பற்றியோ கவலைப்படுவது பயனற்றதேயாகும் என்பது நமதபிப்பிராயமாகும்.

மற்றபடி பூரண சுதந்திரங்கள் என்பதும், நம் நாட்டிலுள்ள ஜாதிமத வித்தியாசங்களும், உயர்வு தாழ்வுகளும் நீங்கினால்தான் கிடைத்த சுதந்திரங் களை மக்கள் நலத்திற்கும் தேசத்தின் நலத்திற்கும் பயன்படுத்த முடியுமே யொழிய இந்த நிலைமையில் அவனவன் சுயநலத்திற்கும் சுய ஜாதி நலத்திற் கும்தான் ஒவ்வொருவனும் உபயோகிப்பான் என்கின்ற பயமிருப்பதால் யாராவது ஒருவன் அதிகாரம் வகிக்கவோ அரசாங்கம் நடத்தவோ நாம் கண்டிப்பாய் விடமுடியாதவர்களாய் இருப்பதால் பூரண சுதந்திரத்திலும், அதிக சீர்திருத்தத்திலும் நமக்கு இப்போது ஆத்திரமில்லை. ஆகையினால் இப்போது ஏதோ இரு கூட்டத்தாருக்கும் இருக்கும் செல்வாக்குகளை ஜமின்தார்கள் ஆட்டுக் கடாச் சண்டை, சேவல் சண்டை ஆகியவைகள் நடக்க விட்டு வேடிக்கை பார்ப்பது போல் இருப்பதால் அவ்விரு திறத்தா ருக்கும் எவ்வித கஷ்டமும், நஷ்டமும் இல்லை. நாட்டுக்கும் இந்த சண்டை யினால் பிரமாத லாப நஷ்டமும் இல்லை என்றாலும் இதிலிருந்தும் மக்கள் கற்றுக் கொள்ளத்தக்க படிப்பினைகள் அதிகம் உண்டாகி அதன் பின்னால்



RangaRakes tamilnavarasam.com

நமது இயக்கத்திற்கும் பல எதிர்பாராத நன்மைகள் ஏற்படக்கூடும் என்றும் நாம் நினைத்து கிளர்ச்சி தொடர்ந்து நடக்கும் வரை நடக்கட்டும் என்றும் மறுபடியும் ஆசை கொண்டு முடிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 14.09.1930**



# பெரிய அக்கிரகாரத்தில் சுகாதார வாரக் கொண்டாட்டம்

சகோதரர்களே!

இன்றைய கொண்டாட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகள் எல்லாம் நடந்தேறிவிட்டன. இனி இக்கொண்டாட்டத்திற்குத் தலைமை வகித்தவன் என்ற முறையில் என்னிடமிருந்து ஏதாவது சில வார்த்தைகளையாவது நீங்கள் எதிர்பார்ப்பீர்கள். இதனால் சுகாதார விஷயத்தைப் பற்றி அதிகம் சொல்ல எனக்கு சுகாதார விஷயத்தில் போதிய ஞானம் இல்லா விட்டாலும், அனுபவத்தைக் கொண்டு ஏதோ சில வார்த்தைகள் சொல்லுகிறேன். சுகாதாரம் என்பது மக்களுக்கு மிகவும் அவசியமானவைகளில் ஒன்றாகும். அதற்காகத்தான் இப்போது அரசாங்கத்தாரின் முயற்சியாலும், மற்றும் சில அறிவாளிகளின் முயற்சியாலும் சில வருஷங்களாக நமது நாட்டில் இந்தமாதிரி சுகாதார வாரக் கொண்டாட்டமென்பதாக பலவிடங்களில் நடை பெற்று வருகின்றனவென்றாலும், உலகத்திலேயே நாகரீகம் பெற்ற நாடுகள் என்று சொல்லப்படுபவைகளில் எல்லாம் நமது நாடே சுகாதார விஷயத்தில் மிக்கக் கவலையீனமாகவும், கேவலமாகவுமிருந்து வருகின்றது. இவ் விஷயங்கள் வெளிநாடுகட்குச் சென்று பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். வெளிநாட்டிற்கும் நமது நாட்டிற்கும் சுகாதாரக் கொள்கைகளும், அனுஷ் டிப்பு முறைகளும் நேர் தலை கீழாக யிருக்கின்றன. அதாவது நமது நாட்டு சுகாதாரமெல்லாம் ஒரு ஜாதி மனிதனை மற்றொரு ஜாதி மனிதன் தொட் டால் தோஷம், மற்றொரு ஜாதி மனிதன் பார்த்தால் தோஷம், வேறொரு ஜாதி மனிதன் நிழல் மேலே பட்டால் தோஷம், இன்னொரு ஜாதி மனிதன் தெருவில் நடந்தால் தோஷம் என்கிற முறையிலிருக்கிறதே தவிர மற்றபடி மனிதன் அசிங்கமாக இருக்கக் கூடாது, துர்நாற்றம் வீசக் கூடாது கெட்ட காற்று சுவாசிக்கக் கூடாது, தொத்து வியாதிக்கிருமிகள் இருக்கக் கூடாது, கெட்டுப் போன பதார்த்தமாயிருக்கக் கூடாது என்கிறது போன்ற கவலைகள் சுத்த சுத்தமாய்க் கிடையாது.

இதன் காரணமெல்லாம் மனிதனுக்குச் சுகாதார ஞானம் இல்லாத தேயாகும். ஒரு மனிதன் பணக்காரனாக வேண்டும், பெரிய உத்தியோகஸ்



RangaRakes tamilnavarasam.com

தனாக வேண்டும், பெரிய பண்டிதனாக வேண்டும், பெருமையுடையவனாக வேண்டும் என்கின்றது போன்ற விஷயங்களில் அதிக கவலை வைத்திருக்கின்றானே ஒழிய நல்ல திடகாத்திர திரேகத்துடனிருக்க வேண்டும். சுகஜீவியாயிருக்க வேண்டும் என்பன போன்ற விஷயங்களில் கவலைப்படுவதில்லை.

மேல்நாட்டார் முதலியவர்கள் தாங்கள் உலகத்தில் இருப்பதே சுகமாய் வாழ்வதற்கென்றும், சுகாதார முறைப்படி இருப்பதற்கே சம்பாதிப்பதென்றும் சுகாதார வாழ்க்கையை அனுசரித்தே தனது பொருளாதார நிலைமை என்று கருதி அதற்கே தனது கவனத்தில் பெரும் பாகத்தைச் செலவு செய்கிறான். அதனாலேயே மேனாட்டுக்காரன் நம்மைவிட இரட்டிப்புப் பலசாலியாக வும், சுக சரீரியாகவும், அதிக புத்தி கூர்மையும், மனோவுறுதியும் உடையவனாகவுங், நம்மை விட இரட்டிப்பு வயது ஜீவியாகவும் இருந்து வருகிறான். நமது மக்களின் சராசரி வயது 24 லேயாகும். வெள்ளைக் காரனின் சராசரி வயது 45 ஆகும். இதற்குக் காரணமென்ன என்பதை நாம் கவனிப்பதில்லை. சுகாதாரத்தினால் இன்ன பலனிருக்கின்றது என்பதே நமக்குத் தெரியாது. "எல்லாம் கடவுள் செயல்" என்கின்ற ஒரே ஒரு அறிவு தான் நமக்கு உண்டு. நமக்கு காலரா வந்தால் ஓங்காளியம்மனின் குற்ற மென்று பொங்கல் வைக்கவும், வேல் மிரவணை செய்யவும் தான் முயற்சி செய்வோம். வைசூரி வந்தால் மாரியம்மனின் குற்றமென்று மாரியாயிக்கு தயிர் அபிஷேகமும், இளநீர் அபிஷேகமும் தான் செய்வோம் வயிற்றுவலி வந்தால் திருப்பதி பொன்றாமத்தையனுக்கு வேண்டுதலை செய்து கொள்ளுவோம். நரம்புச் சிலந்தி வந்தால், சிலந்திராயனுக்கு அபிஷேகம் செய்வோம். நம் சங்கதிதானிப்படியென்றால் குழந்தைகளுக்குக் காயலா வந்தால் பாலாரிஷ்டம் என்போம், கிரகதோஷ மென்போம். செத்து விட்டால் விதி மூண்டு விட்டதென்போம். ஆகவே இந்த மாதிரி வழிகளில் தான் நமது புத்திகள் போகுமேயல்லாமல் ஏன் வியாதி வந்தது? ஆகாரத் திலாவது பானத்திலாவது காற்றிலாவது என்ன கெடுதி ஏற்பட்டது? சரீரத்தில் என்ன கோளாறு இருக்கின்றது என்கின்ற விஷயங்களில் கவலை செலுத்தும் படியான அறிவோ படிப்போ நமக்குக் கிடையாது. நமது நாட்டு சுகாதாரத்தின் யோக்கியதை தெரிய வேண்டுமானால் மிஸ் மேயோவின் "இந்தியத் தாய்" என்னும் புத்தகத்தைப் பார்த்தால் சிறிது விளங்கும். நமது நாட்டு மக்கள் தங்கள் வீட்டுக் குப்பைகளை பக்கத்து வீட்டுக்கு முன்புறமாகக் கொண்டுபோய்க் கொட்டுவதே வழக்கம். பக்கத்து வீட்டுக்காரன் நமது வீட்டுக்கு முன்புறத்தில் கொண்டு வந்து கொட்டி விட்டுப் போவது வழக்கம். நமது குழந்தைகளுக்குப் பொது வீதிகளேதான் கக்கூஸ்களாயிருக்கின்றன. பெரிய ஆட்களுங்கூட இராத்திரி நேரங்களில் ரோட்டு ஓரங்களில் ஜலமல வுபாதைக்கு இருப்பதே வழக்கம். வாய்க்கால், குளம், கிணறு, குட்டையாகியவைகளின் கரைகளையேதான் பொது ஜனங்கள் கக்கூசாக உபயோகித்து



RangaRakes

வருகின்றார்கள். அங்குளங்களிலேயே கால் அலம்புவது முதலிய அசிங்கியங்கள் செய்கின்றார்கள். நமது வீட்டு ஜலதாரைத் தண்ணீரெல்லாம் கிராமங்களில் தெரு நடுவில் ஓடுவதும், அதையே மக்கள் மிதித்து, மிதித்து நடப் பதும் மழை வந்தால் கரையிலுள்ளத் தண்ணீரும் தெருவிலுள்ள தண்ணீரும் வழிந்தோடி வாய்க்கால்களிலும் குளம் குட்டைகளில் விழுவ தும் அதையே மறுபடியும் ஜனங்கள் குடிப்பதும், குளிப்பதுமான காரியங் கள் செய்வதும், சர்வ சாதாரண வழக்கமாயிருக்கின்றது.

பட்டணங்களிலும் ஜலதாரைத் தண்ணீரெல்லாம் ரோட்டின் இரு மருங்குகளிலும் பள்ளம் வெட்டி ஓடச் செய்வதும் அப்பள்ளத்து ஓரத்திலேயே திண்ணைபோட்டு சதா அங்கேயே உட்கார்ந்து கொண்டு வியாபாரம் முதலியவைகள் செய்வதும், பலகாரக் கடை முதலியவைகள் அந்த டிச்சின் ஓரத்திலேயே சுடுவதும், அங்கேயே வைத்து விற்பதுமாகிய காரியங்கள் சர்வ சாதாரணமாக நடைபெறுகின்றன. நமது நாட்டு ஸ்தல ஸ்தாபனங்களிலோ அவற்றின் அங்கத்தினர்களுக்கும் தலைவர்களுக்குமே சுகாதாரம் என்றால் என்னவென்று தெரியாது. டிச்சின் மேல் வைத்து வியாபாரம் செய்வதற்கே லைசென்ஸ் கொடுப்பார்கள். சுகாதாரத்திற்கு ஏற்பட்ட பணத்தையெல்லாம் சுகாதார உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளுக்கும் சம்பளமாய் கொடுத்து நல்லபேர் வாங்குவதற்கே செலவு செய்து விடுவார்கள். அந்த உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும் தங்கள் எஜமானனுக்கு சுகாதார அறிவு கிடையாது என்பது நன்றாய்த் தெரியுமாதலால் அவர்கள் எஜமானர்களுக்கு சலாம் போட்டு அவர்களை புகழ்ந்து பேசி திருப்தி செய்வதிலேயே தங்கள் காலத்தைக் கடத்தி வாங்கிய சம்பளத்திற்குக் கடனைக் கழித்து விடுவார்கள். தெருவில் குப்பையைப் போட்டால் வீட்டுக்காரனைக் கேட்கமாட்டார்கள். கேட்டால் அவன் நாளைக்கு ஓட்டுப் போட மாட்டான். எச்சிலையையும், குழந்தைகள் மலத்தையும், சாம்பல் முதலிய குப்பைகளையும் தாராளமாய் வீதிகளில் கொட்டுவார்கள். அவர்களுக்குச் சிறிதும் அறிவும் இருக்காது, பயமுமிருக்காது. கேட்பதற்கு ஆளுமில்லை. ஊரைச்சுற்றிலும் தண்ணீர் தேங்கி நின்று கொசுக்களை உற்பத்தி செய்து கொண்டேயிருக்கும். அக்கொசுக்களினால் வீட்டிற்கு இரண்டொருவர் காயலாவாயிருந்து கொண்டேயிருப்பார்கள். இதற்கு என்ன காரணமென்பதே சுகாதார சிப்பந்திகளுக்குத் தெரியாது. அதன் பொறுப்பும் அவர்களுக்கில்லை. மேல் நாடுகளில் இவ்விஷயங்கள் கேட்பதற்கே ஆச்சரியப்படத் தக்க தாயிருக்கும். அவர்களின் சுகாதார அறிவே அற்புதமான பழக்க வழக்கங்களாயிருக்கும்.

ஒவ்வொரு வீட்டுக்காரனும் தனது வீட்டுக் குப்பைச் செத்தைகளைக் கொட்டிவைக்க அவனவன் வீட்டில் ஒரு மூடிபோட்ட குப்பைப் பெட்டியை வைத்திருப்பான். ஒவ்வொருவனும் அதில் கொட்டியே மூடிவிடுவான்.



tamilnavarasam.com

வீதியில் ஒரு கிழிந்தத் துண்டுக் கடிதத்தைக் கூட போட மாட்டான். எவ்வளவு தூரமானாலும் நடந்து போய் குப்பைத் தொட்டியிலிலேயே போடுவான். தெருவில் அசிங்கியம் செய்ய மாட்டான். எச்சில், மூக்குச்சளி முதலியவைகள்கூட துப்பமாட்டான். யாராவது செய்தாலும் அப்படிப் பட்டவனை மிக்க இழிவாயும் நாகரீகமும் மரியாதையும் தெரியாத முட்டா ளென்றே இழிவாய் கருதுவான். ஜலதாரைகளை ஜனங்கள் கண்களுக்குத் தெரியாமல் பூமிக்குள் ஓடும்படியாகச் செய்வார்கள். ஊரைச் சுற்றி தண்ணீர் தேக்கமில்லாமல் பார்த்துக் கொள்ளுவார்கள். ஏதாவது தேங்கி இருந்தாலும் அவற்றில் அடிக்கடி மருந்து போட்டு பூச்சிகளும், துர்நாற்றமும், கொசுவுமில்லாமல் செய்து விடுவார்கள். மக்களிடம் வாங்கும் வரியில் பெரும்பாகத்தை சுகாதாரத்திற்கென்றே ஒதுக்குவார்கள்.

வியாதிக்கும், கடவுளுக்கும் ஒருக்காலமும் சம்மந்தப்படுத்த மாட்டார்கள். நமது மக்களுக்கும் சுகாதார அறிவு வர வேண்டுமானால் கடவுள் செயல் என்கின்ற முட்டாள்தனம் முதலில் ஒழிய வேண்டும். சாதாரணமாக ஈரோட்டில் 1917வது வருஷத்திற்கு முந்தி வருஷம் ஒன்றுக்கு 200 பேருக்குக் குறையாமல் காலராவினால் செத்துக் கொண்டே இருப்பார் கள். சில வருஷங்களில் 300, 400 பேர் கூட சாவார்கள். அதற்காக எவ்வ ளவோ வேல் மிரவணையும், ஓங்காளியம்மன் பொங்கலும் வருஷா வருஷம் செய்வார்கள். சில சமயங்களில் வருஷத்திற்கு இரண்டு தடவைகள் கூட காலரா வந்து அநேகரை கொள்ளை கொண்டு போய் விடும். ஆனால் 1917ம் வருஷம் முதல் ஈரோட்டில் காலராவினால் வருஷம் பத்துப் பேர்கள் கூட சாவதில்லை. இதற்கு காரணமெல்லாம் கடவுள் தயவு அல்லவே அல்ல. மற்றென்னவென்றால் அந்தவூருக்குக் காவேரியிலிருந்து தண்ணீர் குழாய் வைத்து அதன் மூலம் நன்றாக வடி கட்டி மருந்து கலக்கின தண் ணீரை குடிக்கின்ற படியால் வழக்கமாக வரும் காலரா அங்கு வருவதே கிடையாது. இல்லாவிட்டால் ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசியானவுடன், மார்கழி மாதத்தில் ஒரு தடவையும், பழநித் தைப்பூசம் ஆனவுடன் ஒரு தடவையும் பங்குனி மாதத்தில் பழநி உத்திரம் ஆனவுடன் ஒரு தடவை யுமாக காலரா வருவதுடன் வாய்க்கால் கரையோரங்களிலுள்ள கிராமங் களில் எல்லாம் மாரியம்மன் பண்டிகை சாட்டுவதினால், பொங்கலினாலும், கூட்டங்கள் கூடி அசிங்கியங்கள் செய்வதினாலும் காலரா ஏற்பட்டு அந்த அசிங்கியங்கள் எல்லாம் வாய்க்காலில் கலந்து வந்து கரையோரங்களிலுள்ள மற்ற கிராமத்தார்கள் அந்த தண்ணீரை சாப்பிடுவதாலும் வழக்கமாக வரு ஷம் தவறாமல் காலரா வந்து கொண்டிருப்பது வழக்கமாயிருந்து வந்தது. ஆனால் இப்போது அது கிடையாது. இதனாலேயே மனிதன் தனது அறிவி னாலும், முன் ஜாக்கிரதையினாலும் வியாதி வராமல் தடுத்துக் கொள்ளலாம் என்பது தெளிவாகவில்லையா என்று கேட்கின்றேன்.



சென்னை, நாகப்பட்டினம், தஞ்சை முதலிய இடங்களில் குழாய்த் தண்ணீர் வந்த பிறகு கால், கைகள் முதலியவைகள் பெருப்பது குறைந்து விட்டதை நேரில் இன்றும் பார்க்கலாம். இப்படியே அநேக விஷயங்கள் கொஞ்ச காலத்திற்குமுன் கடவுள் செயல், விதியென்று எண்ணிக் கொண்டி ருந்தவைகள் எல்லாம் இப்போது சுகாதாரத்தை சரியாய் கவனித்து அநுஷ் டித்து வந்ததினால் அநுகூலமாய் இருக்கின்றது. ஆதலால் சுகாதார விஷயம் சொந்த அறிவைக்கொண்டு கவனித்து செய்யவேண்டிய ஒரு முக்கிய காரியமாகும்.

சிறுபிள்ளைகளே இக்கூட்டங்களில் அதிகமாயிருக்கின்றபடியால் அவர்களுக்கும் சில விஷயங்கள் சொல்லுகிறேன். சிறு பிள்ளைகளுக்கு சுகாதார விஷயங்கள் சரியாய் கற்பிக்க வேண்டியது உபாத்தியாயர்கள் கடனாகும். நமது நாட்டு உபாத்தியாயர்களோ பெரிதும் மூட நம்பிக்கையிற் பட்டவர்களானதால் அவர்களிடம் படிக்கும் பிள்ளைகளுக்கு அறிவும், சுகா தார உணர்ச்சியுமிருக்கும்; இருக்கக்கூடுமென்று எதிர்பார்ப்பது அறியாமை யாகும். நமது நாட்டில் அறிவாளிகள் கல்வி விஷயத்தில் செய்ய வேண்டிய வேலை முதலில் உபாத்தியாயர்களை படிப்பிவிக்கவேண்டும். 100ல் 5 உபாத்தியாயர்களுக்குக் கூட அறிவு என்பதாக ஒரு விஷயம் இருப்பதே தெரியாது. தொழிலாளி வயிற்றுப் பிழைப்புக்கு ஏதோ ஒரு வேலை பழகி யிருப்பது போல் உபாத்தியாயர்களும் வயிற்றுப் பிழைப்புக்கு என்ன வேலை பழகலாம் என்று கவலையெடுத்து கவனித்ததில் உபாத்தி யாயர் தொழில் சுலபமானது என்று கருதி அதில் பிரவேசித்தவர்களேயா வார்கள். உலக ஞானமற்ற சோம்பேறிகள் என்றால் உபாத்தியாயர்களைத் தான் சொல்ல வேண்டும். பொறுப்பில்லாத ஒரு வேலையென்றால் உபாத்தியாயர் வேலையைத்தான் சொல்ல வேண்டும். ஆதலால் இந்த மாதிரி உபாத்தியாய தொழிலாளிகளிடம் படிக்கும் பிள்ளைகள் மூடர்களாவதில் அதிசயமில்லை. பிள்ளைகளுக்கு ஒழுக்கம், கட்டுப்பாடு, அடக்கம் இம் மூன்றும் கிடையவே கிடையாது. வீதிகளில் பிள்ளைகள் கட்டுப்பாடின்றி திரிவதும் விஷமங்கள் செய்வதுமாகிய காரியங்களுக்கு உபாத்தியாயர் களின் பொறுப்பின்மையே காரணமாகும்.

நான் பார்த்தவரை ஒரு உபாத்தியாயருக்காவது பிள்ளைகளை அடக்கி வைக்க சக்தி கிடையாது. ஆகையால் பிள்ளைகளுக்குப் புத்தகப் படிப்பை விட அடக்கமும் ஒழுக்கமும் கட்டுப்பாடும் சொல்லிக் கொடுக்க வேண்டியது முக்கியமானதாகும். உலக இயற்கையையும் சுபாவத்தையும் சொல்லி வைக்க வேண்டும். பிள்ளைகள் முதலில் தினம் தவிராமல் காலையில் எழுந்தவுடன் வெளிக்குப் போக வேண்டும். கொஞ்சமாகவானா லும் நல்ல பதார்த்தங்களைச் சாப்பிட வேண்டும். ஒழுங்குப்படி, காலப்படி சாப்பிட வேண்டும். காலம் தவிரும்படியும், தவரி எதையும் செய்யும் படியும் விடக் கூடாது.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே சகோதரர்களே! பிள்ளைகளே! நான் ஏதோ எனக்குத் தெரிந்த சிலவற்றை உங்களுக்குச் சொன்னேன். இவற்றுள் உங்களுக்குச் சரியென்று பட்டதை எடுத்துக் கொள்ளுங்கள். மற்றதை விட்டு விடுங்கள். கடைசியாக நீங்கள் எனக்குச் செய்த கௌரவத்திற்காக நான் மறு முறையும் நன்றி செலுத்துகிறேன்.

*குறிப்பு: ஈரோட்டை அடுத்த பெரிய அக்கிரகாரத்தில் மத்திய தர பாடசாலையில் 27-8-1930 அன்று நடைபெற்ற சுகாதார வாரக் கொண்டாட்டத்தில் ஆற்றிய தலைமையுரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 21.09.1930**



RangaRakes

# நாகர்கோவிலில் சமதர்ம சொற்பொழிவு

சகோதரிகளே! சகோதரர்களே!

உலகத்தில் நமது நாட்டின் நிலை எப்படிப்பட்டதென்று நம்மில் அநேகருக்குத் தெரியாது. ஏனெனில் மற்ற நாடுகளின் நிலைமை எப்படி இருக்கின்றது என்று தெரிந்தால்தான் நமது நாட்டு நிலைமையின் தன்மை தெரியவரும். நமது நாட்டில் 100க்கு 90 பேர்களுக்கு கல்வி இல்லாமலும், அறிவு விருத்திக்கான ஆதாரமில்லாமலும், சமுதாய சம்மந்தமான விஷயங் களில் சுதந்திரமில்லாமலும் மத விஷயங்களில் மூடப் பழக்கங்களாலும், குருட்டு நம்பிக்கைகளாலும் கட்டுப்படுத்தப்பட்டுக் கிடக்கின்றபடியால் பெரும்பான்மையானவர்கள் உலக நிலையை அறிய சக்தியற்றவர்களாய் இருக்கின்றார்கள்.

உண்மையில் நடுநிலையிலிருந்து பார்ப்பீர்களானால் நமது நாட்டைப் பொறுத்தவரை ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே நமக்கு மனித சுதந்திரம் மறுக்கப்பட்டு நாய், கழுதைகளிலும் கீழாக மதிக்கப்பட்டு இழிவுபடுத்தப்பட்டு அடிமையாய் இருந்து வந்திருக்கின்றோம் என்று சொல்லலாம்.

(இந்த சமயத்தில் ஒருவர் சரித்திரத்தில் அப்படி இல்லை. சரித்திரம் படித்து விட்டு பிறகு பேசவேண்டும் என்று சொன்னார். அதற்கு பதிலாக திரு. இராமசாமி சொன்னதாவது.)

நான் சரித்திரம் படிக்கவில்லையானாலும் என் அறிவுக்கும் கேள்விக் கும் எட்டியதை நான் சொல்லுகிறேன். நான் சொல்லுவதை மறுக்கின்றவர்கள் இந்த இடத்திற்கு வந்து ஆதாரத்துடன் மறுக்கட்டும். ஆயிரம் வருஷமாக அல்ல, இப்பொழுது நான் இன்னும் அதிகமான காலமாகவே அடிமையாய் இருந்து வந்திருக்கின்றோம் என்று சொல்லுகின்றேன். அதாவது இந்தியாவுக்குப் பழைய சரித்திரம் எந்த காலத்திலிருந்து கிடைத்ததோ அது முதலும் அதற்கு முன்னால் புராண காலம் அதாவது இராமன், கிருஷ்ணன், அரிச்சந்திரன் முதலிய அரசர் காலம், மநுதரும காலம், வேத காலம் என்று சொல்லப்படுகின்ற காலம் முதலும் மற்றும் இந்து மதம் என்பதற்கு என்ன



tamilnavarasam.com

வயதோ அது முதலும் இந்திய பெரும்பான்மை மக்கள் உண்மையான அடிமையாய் இருந்து வந்திருப்பதோடு மற்றும் இன்றைய தினமும் நமது நாட்டில் உள்ள மக்கள் பலருக்கு ஒரு நாய்க்கும், கழுதைக்கும் உள்ள சுதந்திரம் கூட அளிக்கப்படாமல் கொடுமைப்படுத்தப்பட்டு வந்திருக் கின்றது என்று சொல்லுகிறேன். மற்றும் பேசப் போனால் சுதந்திரம், சமத்து வம் என்கின்ற பேச்சே இந்த நூற்றாண்டில்தான் நம் போன்றவர்கள் தைரிய மாய் பேச முடிந்தது என்று கூடச் சொல்லுவேன். இதற்கு மாறுபாடாய் சொல்ல தைரியமும், சரக்கும் இருக்கின்றவர்கள் இந்த மேடைக்கு வந்து சொல்லட்டும். ஆதாரங்கள் காட்டட்டும் நான் ஒப்புக் கொண்டு எனது அபிப் பிராயங்களைத் திருத்திக் கொள்ளத் தயாராயிருக்கிறேன் என்று சொன்னார். (மற்றொருவர் எங்களை நாயிலும், கழுதையிலும் கேவல மானவர்கள் என்று சொன்னது சரியல்ல என்று சொன்னார்.)

சகோதரர்களே நாயிலும் கழுதையிலும் மாத்திரம் கேவலமாய் நடத்தப்படுகின்றோம் என்று சொன்னதற்கு ஒருவர் வருத்தப்படுகின்றார். நான் அதற்கு நாயிலும் கழுதையிலும் மாத்திரம் கேவலமல்ல, மலம் தின்னும் பன்றியிலும் புழுத்த நாய் மலத்தினும் கேவலமாய் நடத்தப் படுகின்றோம் என்று சொல்லுகின்றேன்.

உதாரணமாக, சுசீந்திரம் தெருவில் நாய் மலம், கழுதை மலம் கிடக்கின்ற இடத்திற்கு இந்த நாட்டு இந்துக்கள் என்ற நம்மவர்களில் மூன் றில் இரண்டு பாகம் பேர்கள் போக முடியுமா என்று கேட்கின்றேன். இதற்கு யார் பதில் சொல்லத் தயாராயிருக்கிறீர்கள். உங்களில் இரண்டொருவர் வேறு காரண சம்மந்தமாய் உள்ள ஆத்திரத்தின் மீது பேசப்படுவதாகவே எனக் குக் காணப்படுகின்றது. உண்மையில் மனப்பூர்த்தியான ஆக்ஷேபத்தின் மீது பேசப்படுவதானால் அவர்கள் இந்த மேடைக்கு வந்து பேசட்டும். நான் இன்று இரவு 12 மணியானாலும் அவர்களது ஆக்ஷேபங்களுக்கெல்லாம் பதில் சொல்லிவிட்டே போகின்றேன். அப்படிக்கில்லாமல் கலகத்துக்காகப் பேசப்படும் பேச்சுகளுக்குப் பின்வாங்கிக் கொள்வது என்பது எனது பொதுத் தொண்டில் இதுவரை ஒரு நாளாவது நேர்ந்தது கிடையாது.

அன்றியும் மற்ற சகோதரர்களே! நீங்கள் அவர்களிடம் கோபத்துக்கு போகாதீர்கள். அவர்களை மேடைக்கு அழைத்து அவர்கள் சொல்லுவ தையும் பொறுமையாய்க் கேளுங்கள். பிறகு உங்கள் சொந்தப் பகுத்தறி வைக் கொண்டு ஆராய்ச்சி செய்து பார்த்து எது சரியென்று பட்டதோ அதை பின்பற்றுங்கள். ஆக்ஷேபத்தைத் தெரிவிப்பவர்களிடம் கோபப்படுவதானது நமக்குச் சமாதானம் சொல்ல சக்தியில்லை என்பதைத்தான் காட்டும். ஆகையால் நான் பேசுவதில் இங்கு யார் என்ன கேள்வி கேட்டாலும் பதில் சொல்ல நான் தயாராயிருக்கின்றேன். எனக்கு யாரும் சிபார்சு வேண்டிய தில்லை. கேள்வி கேட்பவர்களை தாராளமாய் விட்டு விடுங்கள். அவர்



களோடு மனஸ்தாபப்படாதீர்கள் (என்று சொல்லி, வந்து பேசும்படி அழைத் தார். கேள்வி கேட்டவர்கள் யாரும் வரவில்லை. கேள்வி கேட்டவர்கள் வந்து பேசியப் பிறகுதான் மேல்கொண்டு பேசப்படும் என்று சொல்லியதின் மீது நாகர்கோயில் வக்கீல் திரு. சிவதானு பிள்ளையவர்கள் மேடைக்கு வந்து பழைய சரித்திரங்களும், ஆதாரங்களும் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு வரால் எழுதப்பட்டதென்றும், எழுதினவர்கள் தங்கள் தங்கள் இஷ்டப் படியே எழுதப்பட்டதென்றும், ஆதலால் அதிலிருந்து எதையும் பிரமாண மாய்க் கொள்ள முடியாதென்றும், திரு. இராமசாமி யாருடன், தான் வைக்கம் சத்தியாக்கிரகத்தில் கலந்து உழைத்ததாகவும் அவர்களது தொண்டில் தனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை என்றும் அவர் சொல்லும் சமுதாயக் குறை களும் ஜாதி மதக் கொடுமைகளும் எல்லாம் உண்மையென்றும், ஆனால் அவை சட்டத்தின் மூலம் நீக்கப்பட வேண்டு மென்றும், அதற்காக சுயராஜ்யம் வேண்டுமென்றும், திரு. இராமசாமியாரும் இந்த சுயராஜ்யக் கிளர்ச்சியில் சேர்ந்திருந்தால் இதுவரை எவ்வளவோ பலன் ஏற்பட்டிருக்கு மென்றும் தெரிவித்துக் கொள்வதாகவும் மற்றபடி பெரியாரது தொண்டில் காங்கிரஸ் காரர்களாகிய தங்களுக்கு யாதொரு ஆக்ஷேபனையும் இல்லை யென்றும் பேசினார்.)

உடனே திரு. இராமசாமியார் எழுந்து, திருவாளர் சிவதானு பிள்ளைய வர்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்ள முடியவில்லை என்றும் சமுதாய சம்மந்தமான சீர்திருத்த சட்டம் செய்ய நமது பிரதிநிதிகள் என்பவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்றும் சாரதா சட்டம், மதபரிபாலன சட்டம் முதலியவைகள் படும் பாட்டைப் பார்த்தால் இதனுண்மை விளங்கும் என்றும், இன்றும் நமது தலைவர்கள் என்பவர்கள் 100க்கு 90 பேர்களுக்கு மேலாகவே மத விஷயத்தில் சமூக விஷயத்தில் சட்டம் கூடாது, பிரசாரத் தின் மூலம் தான் செய்யப்பட வேண்டும் என்றும் மற்றும் சில தலைவர்கள் அரசியலிலாவது காங்கிரசிலாவது சுயராஜ்யத் திட்டத்திலாவது மத விஷயம், சமுதாய விஷயம் புகுத்தப்படக் கூடாதென்று பேசி வருவதும் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பேரால் தீர்மானங்கள் செய்யப்பட்டிருப்பதும் நண்பர் திரு. சிவதானு பிள்ளையவர்களுக்கும் தெரியுமென்றும் ஆகை யால் இன்றைய நிலையில் நமது கொடுமை படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, இழிவுபடுத்தப் பட்ட மக்களுக்கு இப்போது கேட்கப்படும் சுயராஜ்யம் ஆபத்தென்றும் சொன்னார், பிறகு யாரும் பேச வரவில்லை.

*(10.09.1930 இல் சொற்பொழிவு)*

**அடுத்த நாள் நாகர்கோவிலிலும், பணக்குடி முதலியவிடங்களில் பேசியதன் சுருக்கம் :**

சகோதரர்களே! இன்று இந்தியாவில் பல பாகத்தில் சுயராஜ்யத்திற்கு என்று ஒருபுறம் மக்கள் போராட, அதற்காக பலர் பல கஷ்டங்களும்,



RangaRakes
tamilnavarasam.com

நஷ்டங்களும் அனுபவிக்க நாங்கள் ஏன் இன்று சுயமரியாதைப் பிரசாரம் செய்கின்றோம்? நாங்கள் ஏதாவது இன்று மற்றவர்கள் செய்யும் அவ்வளவு தியாகங்கள் செய்ய பயந்தவர்களா? அல்லது வேறு ஏதாவது சுயநல காரணமாய் நாங்கள் சுயராஜ்யத்திற்கு முட்டுக்கட்டைப் போடுகின்றவர்களா? என்று யோசித்துப் பாருங்கள். என்னைப் பொறுத்த வரை சுயராஜ்யத்திற் கென்று நம்மில் 100-க்கு 90 பேர்களுக்கு மேலாக மக்கள் செய்த முயற்சிக்கும், கிளர்ச்சிக்கும், பட்ட கஷ்டத்திற்கும், அடைந்த நஷ்டத்திற்கும் குறையாமல் நான் எனது பங்கிற்கு மேலாகவே செய்து பார்த்து விட்டேன்.

அது அவ்வளவும் பயனற்றதாகி விட்டது என்று முடிவும் செய்து விட்டேன். இந்தியாவில் குறிப்பாக இந்துக்கள் என்கின்ற மக்களில் 100-க்கு 90 பேருக்கு இப்போது முதலில் சுயராஜ்யம் வேண்டியதில்லை என்ப தோடு அது மிகவும் இந்த நிலையில் ஆபத்தானது என்றுங் கூட சொல்லு கின்றேன்.

ஆனால் பின்னை என்ன வேண்டுமென்றால் சுயமரியாதையே வேண்டும். இந்துக்கள் என்றாலே அதன் ஆதாரப்படிக்கு 100-க்கு 90 பேர்கள் சுயமரியாதை அற்றவர்கள், பிறவி அடிமைகள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அநேகக் காரியத்தில் அவ்விந்துக்கள் சுயமரியா தையற்ற தன்மையையும் இழிவான தன்மையையும் இன்னும் அனுபவத்தில் அடைந்து வருகின்றார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாதென்று தைரியமாய்ச் சொல்லுவேன். இன்றைய சுயராஜ்ய முயற்சியே இந்த அடிமைத்தனத்தையும், இழிவுத்தன்மையையும் பலப்படுத்தும் படியான ஒரு சூக்ஷி முயற்சி என்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள். அதாவது மேல்ஜாதிக்காரன் மேல்ஜாதியாய் இருக்கவும், பணக்காரன் பணக்காரனா யிருக்கவும், அதிகாரக்காரன் அதிகாரக்காரனாயிருக்கவும், முதலாளி முதலாளியாயிருக்கவும், பிரபு பிரபுவாயிருக்கவும், ஜமீன்தாரன் ஜமீன்தா ரனாயிருக்கவும், ஏழை ஏழையாகவே இருக்கவும், கூலி கூலியாகவே யிருக்கவும் செய்யப்படும் பந்தோபஸ்து தான் சுயராஜிய முயற்சியாய் இருந்துவருகின்றதை நான் பார்க்கின்றேன். இந்த முயற்சியில் ஏழைகள் நிலைமையாவது, கூலிகள் நிலைமையாவது, கீழ் மக்களென்று இழிவு படுத்தப்பட்ட மக்களின் நிலைமையாவது சிறிதுகூட மாறப்போவதில்லை என்பது உறுதி. ஏனெனில் அப்படிப்பட்ட மக்களுக்கு இன்னும் புத்தியோ சுயமரியாதை உணர்ச்சியோ, சுதந்திர உணர்ச்சியோ சிறிதும் வரவில்லை. அப்படிப்பட்ட ஏழை பாமர மக்களின் பேரால் தாங்கள் தங்கள் நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ளவும், இன்னும் மேல் போகவுமே நமது பிரதிநிதி என்பவர்களால் இக்காரியங்கள் செய்யப்படுகின்றன. இதுதான் இன்றைய சுயேட்சையின் சூட்சி. ஏழை மக்களும், இழிவு படுத்தப்பட்ட மக்களும் இன்று சுயேச்சையோ சுயராஜ்யமோ அடைய வென்று மேற்கண்ட கூட்டத் தார்களால் செய்யப்படும் முயற்சிகளை வெற்றியடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நமது கடமையாகும். நான் இரண்டு சீர்த்திருத்தங்



களைப் பார்த்துவிட்டேன். அதாவது 1910-ல் பெறப்பட்ட சீர்திருத்தங்களின் பலன்களையும் 1920-ல் பெறப்பட்ட சீர்திருத்தங்களின் பலன்களையும் பார்த்தாய் விட்டது. அவைகள் பெரிதும் ராஜாக்கள் என்பவர்களுக்கும், ஜமீன்தார்கள் என்பவர்களுக்கும், முதலாளி என்பவர்களுக்கும், பணக்காரர் கள் என்பவர்களுக்கும், உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்களுக்கும், படித்தவர்கள் என்பவர்களுக்கும், மத ஆச்சாரிகள் என்பவர்களுக்குமே உதவியும், அவர்கள் நிலைமையை ஸ்திரமானதாகவும் செய்திருக்கின்றதே தவிர வேறில்லை. இப்போதைய சுயராஜியத் திட்டத்திலோ, நேரு திட்டத் திலோ, குடியேற்ற நாட்டந்தஸ்து திட்டத்திலோ, பூரண சுயேச்சைத் திட்டத் திலோ இந்த நிலைகள் மாறுவதற்கு ஏதாவது திட்டங்கள் வகுக்கப் பட்டிருக் கின்றதா? என்று யோசித்துப் பார்க்கும்படி கேட்கின்றேன். இப்போது எங்கு பார்த்தாலும் புதுப்புது ராஜாக்கள் ஏற்படுகின்றார்கள். புதிய புதிய ஜமீன் தார்கள் தங்கள் சொத்துகளைப் பாகம் பிரிக்க முடியாமலும், விற்க முடியா மலுமான பந்தோபஸ்துடன் ஸ்திரமாயிருக்க ஏற்பாடு செய்துகொண்டு வருகிறார்கள். முதலாளிமார்கள் எவ்வளவு லாபம் சம்பாதித்தாலும் கேள்வி இல்லை. பணக்காரன் எவ்வளவு பூமிகள் சேர்த்தாலும் கேள்வி இல்லை. மேல் ஜாதிக்காரன் மற்றவர்களை எவ்வளவு இழிவாய் நடத்தினாலும் கேள்வி இல்லை. படித்தவர்கள் எவ்வளவு மூடர்களாகவும், அயோக்கியர்களாகவும் இருந்தாலும் அவர்களுக்கு மதிப்பு கொடுப்பதில் கேள்வி இல்லை. மதாச் சாரியர்கள் எவ்வளவு மூடர்களாகவும், மக்கள் நலனில் கவலையில்லாத அயோக்கியர்களாகவும் இருந்தாலும் கேள்வி இல்லை. ஆகவே இவ்வித மான சுயராஜ்ஜியம் வந்தாலும் எவ்வளவு பூரண சுயேச்சை வந்தாலும் மேற் கண்ட இக்கூட்டத்தார்கள்தானே நமது பிரதிநிதியாய் இருப்பார்கள்?

இவர்கள் சேர்ந்து செய்யும் அரசாங்கம் பகல் கொள்ளைக்கூட்ட அரசாங்கமா? ஜனப்பிரதிநிதி அரசாங்கமா? என்று நன்றாய் உங்கள் புத்தி யைக் கொண்டு நடுநிலைமையில் இருந்து யோசனை செய்து பாருங்கள்.

குடியேற்ற நாட்டந்தஸ்து வந்தாலும், பூரண சுயேட்சை வந்தாலும் நமது பிரதிநிதிகள் யாராய் இருப்பார்கள் என்று நினைத்துப்பாருங்கள். இன்று இருக்கும் பணக்காரனும், ஜமீன்தாரனும், முதலாளியும், உயர்ந்த ஜாதிக் காரனும்தானே பிரதிநிதியாய் வருவார்கள். இவர்கள் தம்மில் ஒருவருக் கொருவர் கொள்ளையடிக்கத்தானே ராஜரீகம் நடத்துவார்கள். இன்று நமது ரவுண்டேபில் பிரதிநிதிகள் யார்? என்று பாருங்கள். இன்று நமது சட்டசபை பிரதிநிதிகள் யார்? என்று பாருங்கள். இவர்கள் தானே இந்த இருபது வருட காலமாய் ஏழை விவசாயிகளின் தொழிலாளிகளின் (தீண்டப்படாத வர்களின்) தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாய் இருக்கின்றார்கள்.

அன்றியும் இதுவரை சுயராஜியக் கிளர்ச்சி ஸ்தாபனங்களில் நமது தலைவர்களாய் இருந்து வந்தவர்கள் யார்? இன்றும் இருந்துவருபவர்கள் யார்? என்று யோசித்துப் பாருங்கள். இந்த விதமான அரசியல் சீர்திருத்த



RangaRakes tamilnavarasam.com

ஸ்தாபனங்களிலும் சுயராஜிய ஸ்தாபனங்களிலும் இருக்கும் பிரதிநிதிகளும், தலைவர்களும் இரண்டு இடங்களிலும் வெற்றி பெற்று செய்துவந்த காரியங்கள் என்னவென்றும் 100-க்கு 90 பேர்களுக்கு மேற்பட்ட பகுத்தறி வில்லாத பாமர மக்களை இவர்கள் தங்கள் சுயநலத்திற்காக எப்படி நடத்தி வந்திருக்கின்றார்கள் என்றும், இந்த பாமர மக்கள் எப்படி நடந்து கொண்டிருக்கின்றார்கள் என்றும் சற்று யோசித்துப் பாருங்கள்.

வரப் போகின்றது என்று சொல்லப்படும் எந்த சீர்திருத்தத்திலும் கூட சுயநலக்காரர்களின் அதாவது ஜமீன்தார்கள், வியாபாரிகள், வட்டிக் கொள்ளைக்காரர்கள், படித்தவர்கள், பெரிய பெரிய தோட்ட முதலாளிகள் முதலானவர்களுக்கு பிரதிநிதித்துவமும் விருத்தியாவதற்கு வழியும், பந்தோபஸ்தும் இருக்கின்றதேயொழிய ஏழை மக்களுக்கு அவர்களது ஏழைத் தன்மையில் இருந்து விடுதலை பெற என்ன சௌகரியம் இருக் கின்றது? நாட்டுச் செல்வமும், நாட்டுத் தொழிலும், நாட்டு பூஸ்திதிகளும், சிலரே கொள்ளையடித்து, சிலரே தங்கள் சுவாதீனம் செய்துகொண்டு, சிலரே தங்கள் இஷ்டப்படி அனுபவிக்க வசதி இருக்கத்தக்கதான சுயராஜியம் யாருக்கு வேண்டும்? ஜனங்களுக்கு அறிவில்லாதபோது அவர்களுக்கு உரிமை வாங்கிக் கொடுப்பது குரங்கு கையில் கொள்ளிக்கட்டையைக் கொடுத்ததுபோலவேயாகும்.

இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாய் பகுத்தறிவும், கல்வியும் வளர்க்கப்படும் காலமாயிருக்கின்றபடியால் இந்தக் காலத்தில் தலைவர்கள் என்பவர்கள், இந்திய பிரதிநிதிகள் என்பவர்கள் பாமர மக்களை பகுத்தறி வுள்ள மக்களாக்குவதில் முயற்சி செய்யட்டும் என்றுதான் சொல்லுகின்றேன். இந்தியாவில் இந்தியர்களில் நடுநிலைமையுடன், பொதுநோக்குடன் அரசு புரியும் பிரதிநிதிகள் இன்று யாரும் இல்லை. இல்லவே இல்லை. திரு. காந்தி யானாலும் சரி, பண்டித நேரு ஆனாலும் சரி, மாளவியாஜி யானாலும் சரி இவர்கள் யாருக்கும் நெல்லு காய்க்கின்றது மரமா செடியா என்பதும், நெல்லாய்க் காய்க்கின்றதா, அரிசியாய்க் காய்க்கின்றதா என்பது போன்ற விஷயங்களும் தெரியாதென்றே சொல்ல வேண்டும். ஆரம்ப கால காங்கிரஸ் அதாவது படித்தவர்கள் தங்கள் நன்மைக்காக வக்கீல் வேலையில் செல்வாக்கும் கீர்த்தியும் பெறுவதற்காகவும் அரசாங்கத்தில் பெரிய உத்தி யோகம் பெறுவதற்காகவும் வக்கீல்களாலும் அவர்களது ஜூனியர்களாலும் அவர்களது கட்சிக்கார வியாபாரிகள், ஜமீன்தார்கள் முதலியவர்களின் உதவிக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இயக்கத்தில் விழுந்து அதன் அனு பவம் மாத்திரம் பெற்று அதே மனப்பான்மையிலிருந்து அதை வளர்த்து வந்து மக்களுக்கு எதைச் சொன்னால் தங்கள் கட்சியில் சேர்வார்கள் தங்க ளோடு கூட கோவிந்தா போட்டு கைதூக்குவார்கள் என்று கண்டுபிடித்து சுதேசியம், தீண்டாமை விலக்கு, கள்ளு விலக்கு, வரி குறைப்பு என்கின்ற வார்த்தைகளைத் திரு. சுப்பிரமணிய பாரதி அவர்கள் சொன்னது போல்



அதாவது, "உப்பென்றும் சீனியென்றும் உள்நாட்டுச் சேலை என்றும் செப்பித் திரிவாரடிக் கிளியே" என்பது போல் சொல்லி பாமர மக்களை ஏமாற்றிய கூட்டத்தில் விழுந்து கரையேற முடியாமல் தவிக்கின்றவர்கள் ஆவார்கள். இவர்களுக்கும் இந்திய மக்கள் விடுதலைக் கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று தைரியமாகச் சொல்லுவேன்.

ஏனெனில் திரு. காந்தியவர்களுக்குத் தீண்டாமை ஒழியாமல் சுயராஜி யம் அடைய முடியாது என்பதும், அது ஒழியாத சுயராஜியம் எதுவும் மக்க ளுக்குப் பயன்படக்கூடிய உண்மையான சுயராஜியமாய் இருக்க முடியாது என்பதும் நன்றாய் தெரியுமென்பது மாத்திரமல்லாமல் திரு. காந்தியவர்கள் திருவாக்காலேயே ஆயிரக்கணக்கான தடவை சொல்லப்பட்டிருப்பதும் யாவருக்கும் தெரிந்த காரியமாகும். யாருக்காவது சந்தேகமிருந்தால் அவரது "யங் இந்தியா" பத்திரிகையில் தீண்டாமை விலக்கைப் பற்றி அவர் எழுதிய வியாசங்கள் திரட்டிப் போடப்பட்டிருக்கும் "யங் இந்தியா" புத்தகத்தை வாங்கிப் பார்த்தால் நன்றாய்த் தெரியவரும். அப்படி இருக்க, இப்போது சட்ட மறுப்பும், சத்தியாக்கிரகமும் உப்புக்காகவும் சீமைச் சாமான் களுக்காகவும் எதற்காக செய்யப்படுகின்றது? தீண்டாமை ஒழியாமல் பூரண சுயேச்சை யாருக்கு? என்றும் அல்லது தீண்டாமை ஒழிந்து விட்டதா என் பன போன்ற விஷயங்களை நடுநிலைமையிலிருந்து பார்த்தால் உண்மை விளங்காமல் போகாது.

சகோதரர்களே! இந்தக் கேள்விக்கு சரியான பதில் சொல்லத் திரு. காந்தி அவர்கள் நழுவிக் கொண்டுவந்தாலும் அதில் சேர்ந்துள்ள மற்ற ஆட்கள் தங்கள் சுயநலத்தை முன்னிட்டு பொதுஜனங்களை ஏமாற்றித் தந்திரமாகப் பதில் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அதென்னவென்றால் சுயராஜியம் வந்த பிறகு தீண்டாமையானது சரிபட்டு விடுமாம். சட்டசபை களில் நாம் சட்டம் செய்து கொண்டால் சரியாய் போய்விடுமாம். இதை நீங்கள் நம்புகின் றீர்களா? அப்படியானால் இப்போது சட்டம் செய்வதை யார் தடுக்கின் றார்கள்? இதுவரை எந்த பிரதிநிதி இதற்குச் சட்டம் கொண்டு வந்தார். சட்டசபையில் எந்தச் சட்டப்படி இத்தீர்மானம் நமது பிரதிநிதியால் கொண்டு வர முடியாமல் செய்யப்பட்டிருக்கின்றது என்பன போன்ற விஷயங்களை யோசித்துப் பாருங்கள்.

இன்று நீங்கள் தீண்டாமை ஒழிக்கச் சட்டம் செய்யக்கூடிய பிரதிநிதி கள் சட்டசபைக்கு அனுப்பும்படியான புத்தியும், தகுதியும் வசதியும் உங்களுக்கு இருக்கின்றதா? உங்களால் முடியுமா? என்று யோசனை செய்து பாருங்கள்.

சாரதா சட்டத்தை அழிக்கின்றேன் என்று சொல்லிக் கொண்டு சட்ட சபைக்கு நின்ற இரண்டு பார்ப்பனர்களுக்குப் பார்ப்பனரல்லாதார் 100-க்கு 75 பேர்கள் ஓட்டு கொடுத்திருக்கிறார்கள். அவர்களை எதிர்த்து நிற்க



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனரல்லாதார்களில் யாருமில்லை. சுயமரியாதையுள்ள ஒரு மெம்பராவது சட்டசபைக்குப் போக முடிவதே இல்லை என்பதையும் ஞாபகத்தில் வையுங்கள். இந்துக்கள் என்பவர்களின் சட்டசபைத் தொகுதிக்கு மகமதியரல்லாதார் என்கின்ற பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும் என்கின்ற கவலையும் உணர்ச்சியும் உள்ளவர்களில் இந்தியா பூராவிலும் ஒருவர் கூட சட்டசபைக்குப் போக முடியவில்லை. அதுதான் போகட்டும், இந்து லாவி லும், இந்தியா சட்டசபையிலும், மாகாண சட்டசபையிலும் நம்மை சூத்திரர் கள் என்று குறிக்கப்பட்டிருப்பதையும், குறிக்கப்படுவதையும் இன்றும் சொல்லப்படுவதையும் மாற்றவும் தடுக்கவும் நீங்கள் ஒரு சுயமரியாதை யுள்ள பிரதிநிதியாவது சட்டசபைக்கு அனுப்ப இன்றுவரை உங்களால் முடியவில்லை.

சென்ற சட்டசபைக் கூட்டத்தில் நம்மையெல்லாம் சூத்திரர்கள் என்று தாராளமாய்ச் சொல்லப்பட்டதை எழுந்து ஆட்சேபிக்க மனித உடல் தாங்கிய ஒரு ஜீவன் கூட அந்தக் கூட்டத்தில் இல்லை.

சாதாரணமாக எனக்கு அதுசமயம் சட்ட சபையில் பல சிநேகிதர்கள் இருந்தார்கள். ஒவ்வொருவரிடமும் சொன்னேன். அதைக்கண்டிக்கும் படியும் இனிமேல் அப்படிச் சொல்லக்கூடாது என்று தீர்மானிக்கும் படியும் யார் யாரையோ கேட்டுக்கொண்டேன். பனகால் அரசர் முதல் யாராலும் முடியவில்லை. தங்களுடைய சுயநலத்திற்கு கெடுதிவரும் என்றே பயந்து கொண்டார்கள். “அத்திப் பூ பூத்தால் போல்” ஒரு பெண் நியமனம் செய்யப்பட்டது என்றால் அது சட்டசபைக்குப் போனதும் “பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு மதப்படிப்பு சொல்லிவைக்க வேண்டும்” என்று தீர்மானம் கொண்டு வரத்தான் முடிந்ததே யொழிய மக்களுக்கும் பெண்களுக்கும் விரோதமாய் இருக்கும் மதத்தை அழிக்கத்தகுந்த ஒரு பெண்ணை சட்டசபைக்கு அனுப்ப நம்மால் முடியவில்லை.

இன்றைய தினம் இந்து தேவஸ்தான பரிபாலன சட்டத்தில் எல்லா இந்துக்களும் கோவிலுக்குள் போகலாம் என்று சட்டம் செய்ய முடியாமல் போனதற்குக் காரணம் நாம் சுயமரியாதையுள்ள பிரதிநிதிகளை சட்ட சபைக்கு அனுப்பமுடியாமல் போனதா? அல்லது சுயராஜியம் இல்லாமல் போனதா? என்பதை உங்கள் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பாருங்கள்.

இன்றைய தினம் பூரண விடுதலையுள்ள அரசாங்கம் வந்து அதில் தேர்தல் நடைபெறுமானால் நானாவது என்னைப் போன்ற நண்பர்களாவது சட்டசபைக்குப் போகமுடியுமா என்று யோசித்துப் பாருங்கள். 10000, 20000, 30000 ரூபாய் செலவு செய்து தான் உங்கள் பிரதிநிதியாக வேண்டும். அதுவும் ஜாதியைக் காப்பாற்றுகின்றேன், மனுதர்மத்தை காப்பாற்றுகின்றேன், கோவிலைக் காப்பாற்றுகின்றேன், சாமியின் பெண்டு பிள்ளைகள் தாசிகள் ஆகியவற்றைக் காப்பாற்றுகின்றேன், மோட்சத்திற்கு கூட்டிவிடும் தரகர்



களைக் காப்பாற்றுகின்றேன் என்று சொன்னால்தான் அப்படிப்பட்டவருக் கும் ஓட்டு கிடைக்குமே அல்லாமல் எந்த யோக்கியனுக்காவது, அறிவாளிக் காவது, சுயமரியாதைக்காரனுக்காவது ஓட்டுக் கிடைக்குமா என்று யோசித் துப் பாருங்கள். இதற்கு வெள்ளைக்காரர்கள் முட்டுக்கட்டை போடுகின் றார்களா? அல்லது நமது மக்களுக்கு அறிவில்லையா என்று யோசித்துப் பாருங்கள்.

9-ந் தேதி எங்கள் மாகாணத்தில் சட்டசபை எலக்ஷன் நடந்தது. அதில் வெற்றி பெறப்போகும் பிரதிநிதிகள் யார் என்று கருதுகிறீர்கள். ஊர் மக்களிடம் 100க்கு 3, 4 வரையில் வட்டி வாங்கி பணம் சம்பாதித்து பார்ப்பானுக்கும், பாழும் கல்லுக்கும் அழும் கூட்டத்தார்களும், விளைந்தாலும், விளையாவிட்டாலும் உதைத்து வரி வசூலிக்கும் ஜமீன்தார்களும் 1000, 2000, 5000, 10000 கணக்கான ஏக்கர் பூமிகளை உடைய பெரிய மிராசுதாரர்களும் முனிசிபாலிடிகளும் ஜில்லா தாலூகா போர்டுகளைத் தங்கள் வியாபார தொழிலாய் உபயோகிக்கும் ஸ்தல ஸ்தாபன வியாபாரிகளும், மக்கள் ஒழுக் கங்களையும் குடும்பங்களைப் பாழாக்கிக் கொள்ளையடிக்கும் வக்கீல் களும் மற்றும் இவர்கள் போன்ற ஏழை மக்களைக் கொடுமை செய்பவர் களும், அவர்களது நன்மை, தீமையில் சிறிதும் கவலையில்லாதவர்களும் தவிர ஒரு சுயமரியாதையுடையவராவது, யோக்கியராவது அங்கு இருக் கின்றார்கள் அல்லது வரப்போகிறார்கள் என்று கருத முடியுமா? என்று உங்களைக் கேட்கின்றேன்.

நான் சட்டசபைத் தவிர எல்லா ஸ்தாபனங்களிலும் இருந்திருக் கின்றேன். அவைகளின் அனுபவங்கள் எனக்கு நன்றாகத் தெரியும், ஈரோடு கோவில் பிரவேச முயற்சி என்ன ஆச்சுது? என்பது உங்களுக்குத் தெரியாதா? இன்னும் தெருப்பிரவேச முயற்சிக்குக் கூட தைரியமாய் யாரும் வெளிவர முடியாமல் ஆளுக்காள் பழி சுமத்தி பொறுப்பை நழுவ விட்டு விடுவதில் தான் இருக்கின்றது. சுயமரியாதை இயக்கத்தில் கலந்து இருந்த பல பெரியார்களுக்குக் கூட சுயமரியாதை இயக்கத்திலிருந்து ராஜிநாமா கொடுத்த பிறகுதான் வெற்றி கிடைத்திருக்கிறது. சுயமரியாதை இயக்கத்தில் கலந்திருக்கின்ற பல பெரியார்களுக்கு அதற்காகவே போட்டிகள் உண்டா யிற்று. இவர்கள் எல்லோரும் சட்டசபைக்குப் போய் நமது பிரதிநிதிகளாக என்ன செய்யப்போகின்றார்கள் அல்லது என்ன செய்யக்கூடும் என்று கருது கிறீர்கள்? நமது வரி பணத்தை எப்படி வெள்ளைக்காரனைப் போலவே கூட்டுக் கொள்ளை அடிக்கிறது? அதில் இன்னும் யார் யாருக்கு எவ்வளவு பங்கு கொடுப்பது என்பது போன்று திருட்டு சொத்தைப் பங்கிட்டுக் கொள்வதில் திருடர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்வது போல் இன்று சண்டை போட்டு நாளைக்குக் கொள்ளை அடித்துப் புதுப்புது ஜமீன் தார்களாகவும் பாகம் பிரித்துக் கொள்ளவும், விற்கவும் முடியாத பிரபுகள் குடும்பக்காரர்களாகப் போவதைத் தவிர வேறு என்ன செய்யப்போகிறார்கள் என்று நினைக்கின்றீர்கள். மற்றும் நமக்கு ஏதாவது பாமர மக்களிடம்



RangaRakes tamilnavarasam.com

செல்வாக்கு இருக்கிறது என்று நினைத்தால் நம்மை பெரியாரென்றும், தலைவர் என்றும், சுயமரியாதை இயக்கமே மேலானதென்றும் கூறித் திரிவார்கள். நமக்கு செல்வாக்கு இல்லையென்று தெரிந்தால் "சுயமரியாதை என்கின்ற பேரே எனக்குப் பிடிக்கவில்லை." "மதத்தில் பிரவேசிப்பது தப்பு" "சாமிகளை குறைகூறுவது நன்றாய் இல்லை" என்றும் நமது பெரியார் "அரசியலில் பிரவேசித்து விட்டார்" என்றும் "நிரம்பவும் அவருக்குத் தலை கிருகிருத்து போய்விட்டது" என்பது போன்ற எதை யாவது சொல்லி விட்டு சுவாமிக்கு அபிஷேகம் செய்ய ஆரம்பித்து தான் சுயமரியாதைக் காரருடன் சேர்ந்தவரல்ல என்றும் சொல்லி விடுவார்கள்.

உதாரணமாக ஒரு கனவான் உண்மையாக சுயமரியாதைக் கொள்கை கள் எல்லாவற்றிலும் நம்பிக்கையுடையவர்களாயிருந்ததோடு, விக்கிரக ஆராதனையை மிகவும் வெறுப்பவராயிருந்தார். "விக்கிரகங்களை உதைத் தால் (இன்னும் பலமான வார்த்தையில்) என்ன செய்யும்" என்று கூட ஒரு கூட்டத்தில் சொன்னவர்கள். அப்படிப்பட்ட கனவான்கள் "விக்கிரகங் களைக் குற்றம் சொல்லாதீர்கள்" என்று எனக்குப் புத்திமதி சொல்ல வேண்டிய வரானார். காரணம் என்ன வென்று கருதுகின்றீர்கள். இப்படிச் சொன்ன காரணத்திற்காக அவரைச் சில பிரதிநிதி ஸ்தானங்களில் தோற் கடிக்க அவரது எதிரிகள் முயற்சி செய்தார்கள். உடனே இப்படி ஒரு கரணம் அடித்து அந்த ஸ்தானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியவராய் விட் டார். இந்தமாதிரி நிலையில் சிக்கிக் கொள்ள முடியாத பிரதிநிதிகள் இன்று நமக்கு இல்லவே இல்லை. இதை நம்புங்கள்! நம்புங்கள்!! யாராவது இருந் தால் அவர் நமக்கு பிரதிநிதியாய் வர முடியாது.

எங்கள் ஜில்லாவில் பார்ப்பனராதிக்கத்தை ஒருவாறு ஒழித்தோ மானாலும் அதற்குப் பதிலாக அவர்களைப் போன்ற வருணாசிரமத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புடைய ஒருவரைத்தான் பிரதிநிதியாகக் கொண்டு வரமுடிந்தது. அதுவும் வேண்டா மென்றால் இன்னமும் மோச மானவர்கள் தான் வருவார்கள்.

ஆகவே இந்தக் கூட்டம்தான் இன்றைய நிலையில் உங்கள் சுயராஜ்யத்திலும், பூரண சுயேச்சையிலும், குடியேற்ற நாட்டந்தஸ்திலும் இந்திய மக்களுக்குப் பிரதிநிதியாக வரமுடியும். ஒரு சமயம் காங்கிரஸ் காரர்களே சட்டசபைகளைக் கைப்பற்றுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளு வோம். அவர்கள் யார்? ஆகாயத்திலிருந்து குதித்து வரக்கூடியவர்களா? அநேகமாய் இதே ஆட்கள் தான் காங்கிரசின் பேரால் வருவார்கள் அல்லது இது போன்ற வேறு இரண்டொரு ஆட்களும் வரக்கூடும்.

ஆகவே இப்படிப்பட்ட ஆட்களை நமது பிரதிநிதிகளாக வைத்துக் கொண்டு எந்த சுயராஜ்யம் வந்தாலும் நமக்கு சிறிதும் பயனில்லை.



வெள்ளைக்காரனும் நமது பணக்காரர்களும், படித்தவர்களும் சண் டைப் போட்டுக் கொண்டிருப்பதாலாவது போட்டிக்காகவேனும் அல்லது தங்கள் சுயநலத்திற்காகவேனும் ஒவ்வொருவரும் "நாங்கள்தான் ஏழை களின் பிரதிநிதி, தாழ்த்தப்பட்டவர்கள் பிரதிநிதி" என்று போட்டிக்கு வாயி லாவது சொல்லிக் கொள்ளுகின்றார்கள். இந்தப்படி வெள்ளைக்காரர்களே இல்லாமல், இந்தப் பணக்காரர்களும், படித்தவர்களும், வியாபாரிகளும், பெரிய பெரிய மிராசுதாரர்களும், ஜமீன்தாரர்களும் மாத்திரமே ஆட்சியை நடத்துவார்களானால் ஆளுக்கு கொஞ்சவீதம் நம்மை அடிமையாகப் பங்கு போட்டுக் கொள்ளுவதுதான் இவர்களது அரசியலாக இருக்கும்

ஆதலால் இன்றைய நமது கேவலநிலை விர்த்தியாகும் படியான தாகவாவது அல்லது இப்படியே இருக்கும்படியானதாகவாவது எந்த சுயராஜியமும், சுயேச்சையும், மாறுதலும் சிறிதும் நமக்கு வேண்டாம். ஏமாற்றி ஏய்த்துக் கொள்ளையடித்தவர்கள் தங்கள் நிலையைப் பத்திரமாய் காப்பாற்றிக் கொள்ளைச் சுயராஜ்யம் பெற நாம் விடக்கூடாது. எல்லாவற் றையும் ஒன்றாய்ப் போட்டுப் பங்கிட்டுக் கொள்ளத்தக்கதாகவோ அல்லது எந்த நிலையையும் யாரும் அடையத்தக்கதாகவாவது உள்ள சீர்திருத்தமும், சுயராஜியமும், சுதந்திரமும்தான் நமக்கு வேண்டும். அதற்கு மக்கள் தயாரா கும் வரை மூன்றாவதான ஒருவன் இவர்களை மிரட்ட இருப்பதில் ஒன்றும் முழுகிப் போய்விடாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நம் முடைய மக்களிடம் நமக்கு நம்பிக்கை ஏற்படும் போது, மூன்றாவதானவன் தானாகவே மற்றவர்களைப் போலவே ஆய்விடுவான். அல்லது தானே மூட்டைக் கட்டிக் கொள்ளுவான். நாம் அதை மறந்து விட்டு "வெள்ளைக் காரனே நீ கொள்ளைக்காரன். ஓடிப்போ எங்கள் நாட்டைவிட்டு" என்று மாத்திரம் வாயில் சொல்லிக் கொண்டு கையில் தக்ளி சுற்றுவதனால் ஒரு காரியமும் முடிந்துவிடப் போவதில்லை.

அன்றியும் அவர்களிடமுள்ள அதிகாரத்தை நமது உயர்ந்த ஜாதியார் என்பவர்களிடமும் ஜமீன்தாரர்களிடமும், மிராசுதாரர்களிடமும், வக்கீல்களி டமும், வட்டி வியாபாரிகளிடமும், சந்நியாசிகளிடமும் வாங்கிக் கொடுக் கவும் முடியாது என்று கண்டிப்பாய் சொல்லி விடுங்கள். இந்தப் போலித் தேசீயப் பூச்சாண்டிக்குப் பயப்படாதீர்கள்.

*குறிப்பு : 11.09.1930 ஆம் நாள் நாகர்கோவில் ஆர்வாய் மொழி, பணக்குடி ஆகிய இடங்களில் ஆற்றிய சொற்பொழிவு*

**குடி அரசு – சொற்பொழிவு – 21.09.1930**



RangaRakes tamilnavarasam.com

## தேர்தல் முடிவின் பலன்

சென்னை மாகாணத்தில் நடைபெற்ற சட்ட சபையின் தேர்தல்களின் முடிவுகள் இந்த வாரத்தில் அநேகமாய் எல்லாம் வெளியாய் விட்டன.

இதில் முக்கியமாய் நாம் மகிழ்ச்சி அடையத்தக்கது இரு விஷயங்க ளாகும். அதாவது தேசம், தேசியம், காங்கிரசு என்பவைகளின் பேரால் மக்களை ஏமாற்ற பலருக்கு தைரியமில்லாமல் போய்விட்டது ஒன்று.

மற்றொன்று, பார்ப்பன சூட்சிக்கு செல்வாக்கில்லாமல் போய் விட்டதாகும். உதாரணமாக இதுவரை இந்திய சட்டசபைக்கு தமிழ்நாட்டி லிருந்து வெறும் அய்யங்கார்களே பெரும்பாலாய் போய்க் கொண்டிருப்பது வழக்கம். இவ்வருஷம் அது சற்று மாறிவிட்டது. அதாவது மதுரை இராம நாதபுரத்திற்கு திரு. சேஷயங்காருக்குப் பதிலாக திரு. ராஜாராம் பாண்டி யனும், சென்னைக்கு திரு. சீனிவாசய்யங்காருக்குப் பதிலாக திரு எ. இராம சாமி முதலியாரும், மலபார், தென் கன்னடத்திற்கு திரு. கே. வி. ரங்கசாமி அய்யங்காருக்குப் பதிலாக கொல்லங்கோடு வாசுதேவ ராஜாவும், சித்தூர், சென்னை வகையராவுக்கு துரைசாமி அய்யங்காருக்குப் பதிலாக திரு. இராம கிருஷ்ண ரெட்டியாரும் வந்திருப்பது குறிப்பிடத் தகுந்த மாறுதலாகும்

செங்கற்பட்டில் பார்ப்பனரல்லாதாருக்குள் கட்சி இல்லாதிருக்கு மானால் அங்கும் ஒரு அய்யங்காரை மாற்றி யாராவது பார்ப்பனரல்லாதாரே வந்திருக்கலாம். தஞ்சை, திருச்சி ஜில்லாக்களுக்கும் இந்திய சட்டசபைக்குப் போவதில் ஏதாவது சுயநலம் அடைய மார்க்கம் உண்டு என்று அறியத்தக்க நிலைமை யாருக்காவது இருந்திருக்குமானால் அங்கும் ஒரு பார்ப்பன ரல்லாதாரே வெற்றி பெற்றிருக்கலாம் என்றாலும் ஒரு தொகுதியாவது பார்ப்பனருக்கு விடப்பட வேண்டியது நியாயமானதால் அதற்காக தஞ்சை தொகுதி விடப்படுவதில் ஆக்ஷேபனை இல்லை. ஆனாலும் அந்த இரண்டு அய்யங்கார் பார்ப்பனர்களும் சாரதா சட்டத்தை ஒழிப்பதாகக் கூறிக் கொண்டு வெற்றி பெற்றது தான் நாம் வருந்தத்தக்க முடிவாகும். மற்றபடி சென்னை சட்டசபைக்கும் தமிழ்நாட்டிலிருந்து இவ்வருடத்தில் ஆறு பார்ப் பனர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவும் சென்ற வருஷத்தில் இருந்த



எண்ணிக்கைக்கு மிக்கக் கீழாகவே வந்து விட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

அதாவது சென்ற வருஷம் சென்னையில் இருவர், தென் ஆற்காட்டில் ஒருவர், தஞ்சையில் ஒருவர், திருச்சியில் இருவர், கோவையில் ஒருவர், மதுரையில் ஒருவர், இராமநாதபுரத்தில் ஒருவர், மலையாளத்தில் ஒருவர் ஆக பத்துப்பேர்கள் பார்ப்பனர்கள் இருந்தார்கள். இவ்வருஷம் சென்னை ஒரு ஸ்தானம், தென்னாற்காடு, கோவை, மலையாளம், திருச்சியில் ஒரு ஸ்தானமாக அய்ந்து இடங்களில் அவர்களது ஸ்தானங்கள் மாற்றப்பட்டு விட்டது. மற்ற இடங்களும் அநேகமாக தஞ்சையைத் தவிர பாக்கி யெல்லாம் மாற்றியே இருக்கலாம். ஆனாலும் அவைகளும் பார்ப்பனரல்லா தார்களுக்குள்ளாகவே மந்திரி கட்சி, ஜஸ்டிஸ் கட்சி என்கின்ற போட்டி களால் மாற்ற முடியாமல் போய்விட்டதே தவிர பார்ப்பனர்களின் செல்வாக் கால் அவர்களது சொந்த முயற்சியால் வரப்பட்டார்கள் என்று சொல்ல முடியாது. ஆகவே பார்ப்பனர் அல்லாத கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சி சென்ற தேர்தலில் வகுப்புவாதம் காரணமாக என்று தோல்வியுற்றும், வகுப்பு வாதத்திற்கு விரோதமாய் தேசீயப் பத்திரிகைகள் என்பவைகள் எல்லாம் ஒரே மூச்சாய் கூப்பாடு போட்டும் ஜஸ்டிஸ் கட்சியாரும் அதற்குப் பயந்து கொண்டு பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்வதாய்த் தீர்மானம் செய்தும் பார்ப்பனரல்லாதார் கட்சி பிற்போக்கான கட்சி யென்றும், அதை ஒழிக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் தீர்மானம் செய்தும், ஜஸ்டிஸ் கட்சியும், மந்திரி கட்சியும், நாஸ்திக இயக்கமும் தேச விடுதலைக்கு முட்டுக்கட்டையான இயக்கமும் ஆகிய சுயமரியாதை கட்சியோடு சேர்ந்து விட்டது என்று விஷமப் பிரசாரங்கள் செய்யப்பட்டும், இந்தத் தடவை இந்த மாதிரியான மாறுதல் ஏற்பட்டிருக்கின்றதென்றால் பார்ப்பனீயத்திற்கு எதிரான பிரசார மும் நாஸ்திகப் பிரசாரமென்பதும், வகுப்புவாதப் பிரசாரமும் பயன்பட்டி ருக்கின்றன வென்றே சொல்லுவோம். ஆனாலும் திருச்சி நகரத் தொகுதிக் கும், மதுரை நகரத் தொகுதிக்கும் பார்ப்பனர் வெற்றி ஏற்பட்டது அவ்விரு நகர பார்ப்பனரல்லாதார்களுக்கும் அவமானம் என்றே சொல்லுவோம். வட ஆற்காடு ஜில்லாவுக்கு ஒரு பார்ப்பனர் புதிதாக வந்ததானதும் வருந்தத் தக்கதானாலும் அதைவிட மோசமான திரு. ஆதிநாராயண செட்டியார் மாற்றப்பட்டு அந்த ஸ்தானத்திற்குத் தான் பார்ப்பனர் வரப்பட்டார் என்பது சிறிதே ஆறுதலளிக்கத் தக்கதாகும்.

திருச்சி சேதுரத்தினமையர் உபத்திரவமில்லாத பார்ப்பனர் என்று சொல்லப்பட்டாலும் திரு. நாராயணசாமி பிள்ளையை விட மோசமில்லை என்று சொல்லிக் கொள்ளப்பட்டாலும், ஜில்லாப் பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதையைக் காக்கவாவது இந்த நிலை ஏற்பட்டது ஒரு வழியில் நன்மையேயாகும். இராமநாதபுரம் ஜில்லாவானது இன்னமும் நாட்டுக் கோட்டையார் ஆதிக்கத்திலும் இராமநாதபுரம் ராஜா அவர்கள் ஆதிக்கத் திலும் இருக்கும்வரை அந்த ஜில்லாவில் பார்ப்பனர்களுக்குச் செல்வாக்கு



RangaRakes tamilnavarasam.com

இருந்து கொண்டு தான் இருக்கும். அவ்விருவருக்கும் உண்மையான சமூக உணர்ச்சி வரும்வரையிலும் அல்லது அந்த ஜில்லா மக்களுக்கு பூரண சுய மரியாதை உணர்ச்சி வரும் வரையிலும் இவ்வளவு தான் எதிர்பார்க்கலாம்.

தவிர தஞ்சை ஜில்லாவில் திரு. முத்தையா முதலியார் வராமல் போனது வருந்தத்தக்க விஷயமாகும், ஏனெனில் நாம் அவர் மறுபடியும் வந்திருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டதெல்லாம் ஒரே ஒரு காரியத் திற்காகத்தான். அதாவது அரசாங்க உத்தியோகத்தில் வகுப்புவாரிப் பிரதி நிதித்துவப்படி உத்தியோகம் பெற வசதியான உத்தரவு போட்டதற்கு ஆகவேதான். ஆனால் அந்தக் காரணத்திற்காகவே அவர் தோல்வியுற்றார் என்று சொல்லப்படுமானால் அதிலிருந்து பார்ப்பனரல்லாதார்களுக்குப் போதுமான சுய அறிவு இல்லை என்று சொல்லியாக வேண்டியதற்கு அந்த ஒரு காரணமே போதுமானதுடன் நமது மக்களுக்கு வோட்டை உபயோ கிக்கும் யோக்கியதை இல்லை என்றே சொல்லுவோம். அல்லது சென்ற தேர்தலில் காங்கிரசின் பேரால் நின்று விட்டு மந்திரி உத்தியோகம் பெற்றுக் கொண்டதால் தோல்வியுற்றார் என்று சொல்லுவதானால், அதுவும் யோக் கியப் பொறுப்பற்ற வார்த்தையென்று தான் சொல்லுவோம். எப்படி யெனில் காங்கிரசின் பேரால் நின்று, திரு. படேல் உத்தியோகம் பெற்று மாதம் 3000, 4000 ரூபாய் சம்பாதித்ததும், காங்கிரஸ் பேரால் நின்ற தலைவர் திரு நரசிம்மராஜு உத்தியோகம் பெற்று மாதம் 2000, 3000 ரூபாய் சம்பாதித்ததும் இன்னமும் பண்டித நேரு திரு. ரங்கசாமி அய்யங்கார் திரு. சத்தியமூர்த்தி ஆகியவர்கள் காங்கிரசின் பேரால் நின்று அரசாங்க கமிட்டியில் பதவி பெற்று அலுவல் பார்த்ததும் பணம் பெற்றது முதலான காரியங்கள் பிரத்தி யக்ஷத்தில் நடந்து இருக்கும் போலும். இந்த ஆசாமிகள் எல்லாம் இன்றைய தினமும் தேசபக்தர்களாகவும் தலைவர்களாகவும் இருக்கும் போதும் திரு. முத்தையா முதலியார் மந்திரி பதவி ஒப்புக் கொண்டது மாத்திரம் பாவ மென்றால் இதை அறிவுள்ளவர்கள் எப்படி ஒப்புக் கொள்ளமுடியும். ஏதோ பதவி போட்டியில் ஒருவருக்கொருவர் செய்த எதிர்ப் பிரசாரத்தால் தோல்வி ஏற்பட்டுவிட்டதென்றால் நமக்கு ஆக்ஷேபனை யில்லை.

ஆகவே பொதுவாக இந்தத் தடவை தேர்தலில் பார்ப்பன ஆதிக்கம் ஒருவாறு குறைவு பட்டது என்கின்ற வரையில் அது நமக்கு மகிழ்ச்சியைத் தரப்பட்ட சேதியேயாகும்.

மற்றபடி பார்ப்பனரல்லாதார்களில் ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், கொடுமை செய்யப்பட்ட மக்கள், தொழிலாளிகள், கூலிக்காரர்கள், சாதாரண குடியானவர்கள் ஆகிய 100க்கு 90க்கு மேற்பட்ட ஜனசமூகத்திற்கு இத் தேர்தல் முடிவானது சரியான "கூற்றுவன்"- அதாவது அவர்களது உயிரை வாட்டத் தகுந்த தன்மையது என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் இந்தக் குற்றம் பிரதிநிதித்துவ அமைப்பைப் பற்றியதே ஒழிய வோட்டர்களைப் பற்றியது என்று நாம் சொல்ல வரவில்லை.

வோட்டர்களுக்கு புத்தியும், நன்மை தீமை அறியும் சக்தியும், வோட்டுச் செய்யும் தன்மையின் நாணயமும் உண்டாக்கும் வேலைக்கு இதுவரை எந்த சீர்திருத்தத்திலும் இடமில்லை. எந்த தலைவரும் அதற்கு முயற்சி செய்யவும் இல்லை. ஆகையால் அது விஷயத்தில் நாம் வோட்டர் களைப் பயிற்றும் முயற்சியில் இருக்க வேண்டுமே ஒழிய அவர்களைக் குற்றம் சொல்வது மூடத்தனமேயாகும்.

தவிர உண்மையான ஒரு யோக்கியன் என்பவன் அதாவது சமதர்மத் தில் லக்ஷியமுள்ள ஒருவன் இன்றைய தினம் ஒரு கிராமப் பஞ்சாயத்து சபைக்கு நின்றால் கூட வெற்றிபெற முடியாத நிலையில் தான் இன்று இந்திய வோட்டர்களின் அறிவும், சமதர்ம பிரதிநிதியின் நிலைமையும் இருக் கின்றது.

தவிரவும், சட்டசபையின் மூலம், ஒருவனுக்குத் தனது சுய நலப்பயன் பெற ஆசையில்லையானால் அங்கு வேலையும் இல்லை; வெற்றியும் இல்லை என்று தான் சொல்லவேண்டும். ஏனெனில் ஒவ்வொரு தேர்தலுக்கும் 10, 20, 30, ஆயிரம் ரூபாய்கள் செலவு செய்ய வேண்டி யிருக்கின்றன. செலவு செய்யாமல் வோட்டர்களுக்குப் பெரிதும் பணம் கொடுக்காமல் வோட்டுபெற முடிவதில்லை. பொதுக்காரியத்திற்கு உண்மை யாய் உழைப்பவன் எதற்காக கையில் இருந்து பதினாயிரக்கணக்காகச் செலவு செய்யமுன் வருவான். அன்றியும் பணக்காரனுக்குத் தான் இப்படிச் செலவு செய்யமுடியும். பொது நலத்தில் ஈடுபடும் பணக்காரன் கிடைப்பதும் அருமை.

ஏழைகள் ஈடுபட்டாலோ அவர்களுக்குப் பணமில்லாததால் அவர் கள் வர முடிவதில்லை.

ஆகையால் இந்த சட்டசபைகளை நாட்டுக்கு பெரும்பான்மை மக்க ளின் பிரதிநிதித்துவம் என்று யாராலும் சொல்லவே முடியாது.

உதாரணமாக இப்போது வெற்றி பெற்று வந்திருக்கும் கனவான் களைப் பார்ப்போமானால் கூட உண்மை நன்றாய் விளங்கிவிடும்.

தமிழ்நாட்டை பொறுத்த வரையில் ஏற்பட்டுள்ள 30, 35 பொது ஸ்தானங்களுக்கு வெற்றி பெற்றிருக்கும் கனவான்கள் யாரென்றால் ஜமீன் தார்கள், லேவா தேவிக் காரார்கள், பார்ப்பனர்கள், வக்கீல்கள் 500, 1000, 10000 ஏக்கர் நிலங்கள் வைத்துக் கொண்டிருக்கும் பெரிய மிராசுதாரர்கள் ஆகிய வியாபாரிகள் இவர்களைத் தவிர வேறு யாருமே இல்லை. இந்தக் கூட்டத்தார் ஏழை மக்களுக்கு பிரதிநிதிகள் என்றால் இவர்களை விட வெள்ளைக் காரர்களே அரசாட்சியில் இருப்பதில் என்ன கெடுதி என்பது நமக்கு விளங்கவில்லை. ஏனெனில், மேற்கண்ட அத்தனை பேரும் ஏழைகளைப் பாமர மக்களைத் தாழ்த்திக் கொடுமைப்படுத்தி இம்சித்து வயிற்றிற் கில்லாமல்


RangaRakes
tamilnavarasam.com

அடித்துத் துரத்தி அந்த நிலை பெற்றவர்கள் ஆவார்கள் என்பதோடு இனியும் அதே நிலையில் மேலும் முற்போக்கடையக் கருதிக் கொண்டிருப்பவர்களும் ஆவார்கள். ஆகையால் இவர்களது ஆட்சியை விட மோசமான ஆக்ஷி உலகத்தில் வேறு எந்த ஆட்சியும் இருக்காதென்று தான் சொல்லுவோம். ஆதலால் தேர்தல் முடிவைப் பற்றி பொதுவாக நாம் சிறிதும் சந்தோஷப்படுவதற்கில்லை. ஆனாலும் இவர்களுள் ஏதாவது தனிப்பட்ட நபர்களைப் பிடித்துக் கெஞ்சிக் கூத்தாடி ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் கொடுமைப்படுத்தப்பட்டவர்களுக்கும் ஏதா வது நன்மை செய்து கொள்ள முடியுமா என்பதுதான் நாம் இனிச் செய்ய வேண்டிய வேலையாகும். இப்பொழுது வெற்றி பெற்றவர்களெல்லாம் பெரிதும் தேர்தல்களில் தாங்கள் செலவழித்த பணத்தை எடுப்பதற்குக் கூடிக் கூடி யோசனையும் முயற்சியும் செய்து கொண்டிருக்கும் வேலையில் முனைந்திருக்கின்றார்கள் ஆனதால் அவர்கள் யோசனை முடிந்து ஆய்ந்து ஓய்ந்த பிறகு நமது லட்சியத்திற்கு ஏதாவது வகை உண்டா என்று முயலு வோம்.

**குடி அரசு - தலையங்கம் - 21.09.1930**



# குழந்தைகளுடன் மணமக்கள் திருமணம்

சகோதரிகளே! சகோதரர்களே!!

இங்கு இன்று நடைபெறப்போகும் திருமணமானது நமது நாட்டில் இப்போது புதியதாய் தோன்றியிருக்கும் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளில் ஒரு அம்சமாகிய மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பதென் னும் திட்டத்தில் சேர்ந்ததாகுமே தவிர இதில் புதிதாய் புகுத்தும் கொள்கை ஒன்றுமே இல்லை. தீண்டாமை ஒழிப்பதென்பதற்கு முக்கியமாய் வேண்டி யது எப்படி வெறும் மனம் மாற்றம் என்பதைத்தவிர அதில் வேறு தத்து வமோ, தப்பிதமோ, தியாகமோ இல்லையோ அதுபோலவே தான் இந்த விதவா விவாகம் என்பதற்கும் எவ்வித தியாகமும் கஷ்டமும் யாரும் பட வேண்டியதில்லை. ஒரு பெண்ணையோ, பல பெண்களையோ மனைவி யாகக் கட்டி அனுபவித்தவனும் ஒரு பெண்ணையோ, பல பெண்களையோ வைப்பாட்டியாக வைத்தோ தற்காலிக விபசார சாதனமாக அனுபவித்தோ வந்துள்ள, அனுபவித்துக் கொண்டிருக்கின்ற ஒரு புருஷனை ஒரு புதுப் பெண் மணப்பது இன்று எப்படி வழக்கத்தில் தாராளமாய் இருந்து வரு கின்றதோ அதுபோலத்தான் அப்படிப்பட்ட ஒரு பெண்ணையும் ஒரு புருஷன் மணப்பது முறையாக வேண்டும் என்று சொல்லுகின்றோமே தவிர மற்றபடி காரியத்திற்கு ஒவ்வாததும் யுக்திக்கு ஒவ்வாததும் உலகத்தில் பெரும்பான்மையான மக்களின் நடப்புக்கு விரோதமாகக் கூட சில வகுப்பு களில் இருந்ததுமான தத்துவங்கள் எதுவும் அதிலில்லை.

நமது நாட்டிலுள்ள மூடப்பழக்க வழக்கங்களிலெல்லாம் இது மிகவும் முக்கியமான மூடப்பழக்கவழக்கமாகும். மற்றொருவர் அனுபவித்த பெண் ணை அல்லது அனுபவித்துக் கொண்டிருக்கிற பெண்ணை ஒரு புருஷன் பார்த்தால் அவளை அனுபவிப்பதற்கு திடீர் என்று ஆசை படுகிறான். அவற்றில் சிலது அனுபவிக்க கிடைத்து விட்டால் சிலசமயங் களில் தனது முழு வாழ்க்கையில் அடையாத ஒரு பெரும் பேற்றை அனுப வித்ததாக மகிழ்ச்சியடைவதோடு தனக்குள்ளாகவே ஒரு பெரும் பெருமை யையும் உற்சாகத்தையும் அடைகின்றான். அதிலும் தாசிகள், வேசிகள், பிரபல குச்சிக்காரிகள் ஆகியவர்கள் விஷயத்தில் மனிதன் கொள்ளும் ஆசைக்கு



RangaRakes tamilnavarasam.com

அளவே இல்லை. ஆகவே இம்மாதிரி தற்கால அவசியமாக செய்துவரும் காரியங்களில் உள்ள மனப்பான்மையைவிட இந்த மாதிரி விதவா விவாகத்தில் ஒரு மனிதனிடம் அதிகமான மனப்பான்மையோ மனமாற்றமோ நாம் ஒன்றும் எதிர்பார்க்கவில்லை.

ஆயிரம் பெண்களை அனுபவித்த புருஷனின் திருமண விஷயத்தில் இல்லாத குற்றம் ஒரு புருஷனை மாத்திரம் அனுபவித்த பெண்ணிடம் எப்படி வந்து விடும் என்று யோசித்துப் பார்த்தால், விதவா விவாகம் என்பது யாருக்கும் அதிசயமாய்த் தோன்றாது.

பெண்களுக்கு சுதந்திரம் இல்லை என்பதும் பெண்கள் அடிமைப் பிறவி என்பதும் தான் விதவை தன்மையின் அஸ்திவாரமாகும். பெண்களுக்குச் சுதந்திரம் ஏற்பட்டு விட்டால் விதவைத் தன்மை தானாகவே பறந்துபோய்விடும். உதாரணமாக மனைவி இழந்த புருஷனைக் குறிப்பிட நமக்கு வார்த்தையே இல்லை. ஏன் இல்லை? அவர்களுக்குள்ள சுதந்திரத்தினால் தங்களின் அப்படிபட்ட ஒரு நிலையைக் காட்ட ஒருபெயரை பழக்கத்தில் கொண்டு வருவதற்கில்லாமல் செய்து விட்டார்கள்.

சாதாரணமாக கணவனிழந்த பெண்ணை எப்படி விதவை என்று கூப்பிடுகின்றோமோ அதுபோலவே மனைவியை இழந்த புருஷனை விதவன் என்று கூப்பிடவேண்டும். ஆனால் நமது நாட்டில்தான் அப்படிக் கூப்பிடுவதில்லை. மேல் நாட்டில் விடோ, விடோயர் என்கின்ற பதங்கள் இருக்கின்றன. இந்த விடோ என்பதும் விதவை என்பதும் ஒரு சொல் மூலத்திலிருந்து தான் வந்திருக்க வேண்டும் என்று கருதுகிறேன். இதுவும் வடமொழியாகவே இருப்பதால் வடமொழிக்கும், மேல் மொழிக்கும் மற்ற வார்த்தைகளுக்குள்ள சம்மந்தம் போலவே இதற்கும் இருக்கின்றது. ஆனால் நமது புராணங்களில் கூட விதவன் என்கின்ற வார்த்தை இல்லாத தால் புராணகாலம் முதலே ஆண்கள் செய்த சூட்சிதான் விதவைத் தன்மைக்கு காரணமாக இருந்திருக்க வேண்டும். ஆகவே இவ்விதத் திருமணம் பகுத்தறிவுக்கும் நடு நிலைக்கும் ஒத்ததே தவிர இதில் குருட்டு நம்பிக்கையோ, ஏமாற்றமோ, கொடுமையோ ஒன்றுமில்லை.

அன்றியும் இன்றைய மணமகனுக்கு முந்திய மனைவியால் ஏற்பட்ட குழந்தை ஒன்று இருப்பது போலவே மணமகளுக்கும் முந்திய கணவனால் ஏற்பட்ட குழந்தை ஒன்று இருக்கின்றது. இதிலும் நியாயத்திற்கும், யுக்திக்கும் ஒவ்வாத குற்றங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆணும் பெண்ணும் சம உரிமை உள்ளவர்கள் என்று உணர்ந்தால் இது சரி என்று தோன்றும். தவிரவும் பெண்ணுக்கு ஆணுக்குள்ளது போன்ற தனிச் சொத்துரிமை இருக்க வேண்டும் என்கின்ற கொள்கையை அனுசரித்து மணமகன் இந்த மணமகள் பேருக்கு சர்வ சுதந்திரமாய் 5000 ரூ. பெருமான சொத்தை எழுதி வைத்ததானது மிகவும் பாராட்டத்தக்க காரியமாகும்.



தவிரவும் இம்மாதிரி பெண்களுக்கு மறுமணம் என்பது எங்கள் பக்கங்களில் அநேக வகுப்புகளுக்குள் இருக்கின்றது.

சாதாரணமாக விதவைமணம் என்பது மாத்திரமல்லாமல் நமது நாட்டில் விவாகரத்து செய்து கொண்டு மறுமணம் முடித்துக் கொள்வது என்கின்ற வழக்கம் இருந்து வருகிறது. எங்கள் பக்கத்தில் வன்னியர்கள் அதாவது படையாச்சி வகுப்பார், தெலுங்கு செட்டியார்கள், அகம்படியர், சணப்பர்கள் என்று சொல்லும் செட்டிமார்கள், சில வகுப்புப் பண்டாரங்கள் என்பவர்கள், சில வகுப்பு ஆண்டிகள் என்பவர்கள், தேவாங்கர்கள், செங்குந் தர்கள், கற்பூரச் செட்டிமார்கள், போயர்கள், கொத்தர்கள், ஒக்கிலியர்கள் முதலிய வகுப்புகளில் சிலவற்றில் இரண்டும் சிலவற்றில் ஒன்று மாத்திரமும் இருந்து வருகின்றன. ஆனால் இப்போது மேற்கண்ட வகுப்பார்களில் கூட பலர் அவ்வழக்கங்கள் கூடாதென்று கருதுகின்றார்கள் என்று தெரிந்து விசனிக்கிறேன். சில இடங்களில் அனுபவத்தில் இல்லாமலும் இருக்கின்றது என்றாலும் எங்கள் வகுப்பு அதாவது பலுஜ நாயுடு என்பது போன்றவைகளில் முன்னால் வழக்கம் இருந்ததோ இல்லையோ என்பதைக் கவனியா மல் இப்போது செய்யப்பட வேண்டும் என்று எங்கள் மகாநாடுகளில் தீர்மானமாய் இருக்கின்றது. எனது தங்கை பெண்ணுக்கே விதவை மணம் செய்யப் பட்டிருக்கின்றது.

ஆகவே இம்மாதிரி மணம் புதியதென்று சொல்வதற்கோ, அல்லது இயற்கைக்கும் மனிதத் தன்மைக்கும் விரோதமான தென்றோ யாரும் சொல்லிவிட முடியாது. இதை ஆட்சேபிப்பவர்களை நான் மனிதர்கள் என்றே ஒப்புக் கொள்ளமாட்டேன். அவர்களுக்குச் சுயமரியாதை இருக்கும் என்றும் நான் கருதமாட்டேன்.

சாதாரணமாக நமது நாட்டில் விதவைகள் உள்ள வீடுகளில் நடக்கும் காரியங்கள் எனக்கு நன்றாய்த் தெரியும். அநேகச் சிசு கொலைகளும் அநேக மன வருத்தங்களும் இயற்கைக்கு விரோதமான காரியங்களும் ஏதா வது ஒன்றும் நடந்த வண்ணமாகவே இருந்து வருகின்றது. இதனால் பல கொலைகளும் நடக்கின்றன. சில இடங்களில் பெண்கள் வெளியில் ஓட ஓட அழைத்து வந்து பந்தோபஸ்தில் வைக்கப்படுகின்றனர். சில இடங்களில் முறைகள் என்பது தவறியும் நடத்தப்படுகின்றன. இவற்றிற்கெல்லாம் காரணம் என்னவென்று பார்த்தால் இயற்கை உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி வைப்பதேயாகும். இயற்கை உணர்ச்சியைக் கட்டுப்படுத்தும் படியான எந்த கொள்கைகளும், சட்டங்களும் ஒரு நாளும் சரியாக நடைபெறவே நடைபெறாது. அப்படி எங்காவது நடை பெற்றாலும் அது நிலைத்திருக்கவே முடியாது. இந்தக் கொடுமைகள் இப்படி இருக்குமானால் 4 பெண்கள் 5 பெண்கள் கூடி ஒரு ஆணைத் தங்கள் இன்பத்திற்கென்று ஏற்படுத்தி அவனுக்கு நல்ல போஷனையும், அழகும் செய்து அடைத்து வைத்து அவனைத்



RangaRakes tamilnavarasam.com

தங்களது காம இச்சைத் தீர்க்கும் இன்பப் பொருளாய் அனுபவிக் கும் காலமும், வீட்டு அடிமையாய் நடத்தப்படும் காலமும் வந்துவிடும் என்று தான் கருதுகிறேன். அப்படி வந்தால் நான் ஆச்சரியப்பட மாட்டேன். ஆண்களினது கருமத்தின் பயன் என்றுதான் அதைக் கருதுவேன்.

தவிர சுயமரியாதைக் கலியாணம் என்பதில் புதிய முறையோ, புதிய சடங்கோ ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அர்த்தமற்றதும், பொருத்தமற்றதுமான சடங்குகள் வேண்டாம் என்பதும் அனாவசியமான அதிகச் செலவும் அதிகக் காலக் கேடும் இருக்கக்கூடாது என்பதும் தான் சுயமரியாதைக் கலியாணத்தின் முக்கிய தத்துவமாகும்.

ஆதலால் உள்ள சடங்குகளையும், பணச்செலவையும், காலச் செலவையும் குறைத்து நடத்துவதே இத்திருமணத்தின் முக்கிய கொள்கை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மற்றும் திருமணம் என்பது ஒரு பெண்ணுக்கும் ஒரு ஆணுக்கும் ஏற்பட்டக் கூட்டு வாழ்க்கையின் ஒப்பந்தம் என்பதும் இத்திருமணம் இந்த மணமக்களின் இந்த உலக மானுஷிக வாழ்க்கைக்கேதான் என்பதும் உணர்ந்து மணமக்கள் மணம் செய்துகொள்ளவேண்டும் என்பது சுய மரியாதைத் திருமணத்தில் மிகவும் முக்கியமானதாகும்.

அதாவது கலியாணம் மனிதத்தன்மைக்கு மேற்பட்டதென்றும் "ஆத்மார்த்த"த்திற்கு என்றும், அதில் ஏதோ "தெய்வீகம்" இருக்கிறதென் றும் கருதி வாழ்க்கையில் உள்ள சுதந்திரங்களையும், இயற்கை இன்பங்களை யும் அடையமுடியாமல் செய்யும் ஜீவனற்ற உணர்ச்சியை ஒழிக்க வேண்டு மென்பதே முக்கியமானதாகும்.

தெய்வீகம் என்கின்ற பதமே சாதாரணமாக நமக்குத் தெரியாது என்பதற்குத்தான் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதோடு ஆத்மார்த்தம் என்பதும் புலனறிவற்ற சூனியத்திற்குச் சமமானதற்கே பெரிதும் பயன்படுத்தப் படுகின்றது. ஆகவே மனித வாழ்க்கையின் முக்கியமான தத்துவமான இன்ப உணர்ச்சியின் இயற்கை அனுபவத்தை அடைய முடியாமல் தடைசெய்வதற்கு மாத்திரம் பயன்படும் படியாகத் தெரியாத, அர்த்தமற்ற தெய்வீகத்தையும் ஆத்மார்த்தத்தையும் இப்படிப் பட்ட விஷயத்தில் கொண்டு வந்து புகுத்தியதானது மனிதனை வெறும் பிணமாக்குவதற்கும் அடிமையாக்குவதற்குமே பயன்படுத்தச் செய்த புரட்டே யொழிய வேறில்லை. தெய்வீகக் கலியாணத்தில், ஆத்மார்த்த கலியாணத்தில் புருஷனுக்கும் பெண்ணுக்கும் வித்தியாச நிபந்தனைகளும் எஜமான் அடிமைத் தன்மைகளும் எதற்காக ஏற்படுத்த வேண்டும். தெய்வீகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் வித்தியாசமுண்டா? ஆத்மார்த் தத்தில் ஆண் ஆத்மா; பெண் ஆத்மாவென்கின்ற பிரிவுண்டா?



எவ்வளவு பெரிய புரட்டுகளை இந்த முக்கியமான காரியத்தில் கொண்டு வந்து போட்டு, இன்பமும், சுதந்திரமும் பாழாக்கப்பட்டுவிட்டது என்பதை யோசித்துப் பாருங்கள். ஆகையால் புருஷனுக்காகப் பெண்ணும், பெண்ணுக்காக புருஷனும் இரண்டு பேரும் சேர்ந்து இன்பமடைவதற்கு என்பதை தவிரத் திருமணத்தில் வேறு தத்துவமொன்றும் இல்லவே இல்லையென்பதுதான் திருமணத்தைப் பற்றிய நமது அபிப்பிராயம். இம் மாதிரி மணமக்கள் இருவரும் ஒரு பொது வாழ்க்கையை ஏற்படுத்திக் கொண்டதற்கு அவர்களுக்குள் செய்து கொள்ளும் ஒப்பந்தத்திற்குச் சாட்சியத்தைத் தவிர நமக்கு இதில் வேறு வேலை இல்லை. ஆகவே நாம் எல்லோரும் சாட்சியத்திற்காகவே அழைக்கப்பட்டிருக்கின்றோம், கூடி இருக்கின்றோமென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த மாதிரியான சமுதாய உதவி கூட்டு வாழ்க்கையில் கலந்துள்ள ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் செய்து கொள்ள வேண்டியதேயாகும். இதில் மணமக்கள் கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயம் என்ன வென்றால் தங்களில் எவருக்கும் எந்த விதத்திலும் வாழ்க்கை நடத்துவதில் பொருப்போ உரிமையோ ஜாஸ்தி கம்மியாய் இருக்கின்றது என்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாது என்பது தான். அதாவது பெண் தான் புருஷ னுக்கு அடிமையாயிருக்க கடவுளால் பிறப்பிக்கப்பட்ட ஒரு சுய உணர்ச்சி யற்ற ஜீவனென்றோ "கல்லென்றாலும் கணவன் புல்லென்றாலும் புருஷன்," அவன் அடித்தாலும், உதைத்தாலும் அன்னியருக்கு கூட்டிவிட்டு ஜீவித்தாலும் புருஷனே தெய்வம் என்று கருதுகின்ற அடிமை உணர்ச்சிக் கண்டிப்பாய் பெண்ணுக்கிருக்கவே கூடாது. நமது கணவனும் நம்மை போன்ற மனித ஜீவனேயாகும். பெண்ணிடம் அவன் எப்படி நடந்து கொள்ளுகிறானோ அப்படி தான் அவள் தன்னிடமும் நம்மை நடந்து கொள்ள எதிர்பார்க்க முடியும். ஒழுக்கத்திலோ, சுதந்திரத்திலோ, உணர்ச்சி யிலோ நமக்கும் அவனுக்கும் வித்தியாசம் கிடையாதென்று எண்ணவேண் டியது மாத்திரமல்லாமல் ஒவ்வொரு துறையிலும் அனுபவத்தில் கொண்டு வர வேண்டும். அப்படிப்பட்ட பெண்கள்தான் பெண்கள் நாயகம் என்று அழைக்கப்படத் தக்கவர்கள் ஆவதோடு பெண்கள் உலகத்திற்கும் பெரிய உபகாரம் செய்தவர்களாவார்கள். முக்கியமாய் இதற்காக வேண்டியேதான் ஆத்மார்த்தம் தெய்வீகம் என்பவைகளிலுள்ள புரட்டுகளை வெளியாக்கக் கட்டாயப் படுத்தப்படுகின்றோம். இது போலவே மணமகனும் தனக்குள்ள உணர்ச்சி, அவா, சுதந்திரம் ஆகிய காரியங்கள் எல்லாம் பெண்ணுக்கும் உண்டென்றும், தான் எவ்வளவு காரியம் பெண்ணிடம் எதிர்பார்க்கின் றோமோ அவ்வளவு காரியம் பெண்ணுக்கும் தன்னிடம் எதிர்பார்க்க முடி யும் என்றும் கருதி அனுபவத்திலும் அதுபோலவே நடக்கவிட வேண்டும். தனக்கு அடிமைக்காக ஒரு பெண்ணை மணம் செய்து கொண்டோமென் கின்ற உணர்ச்சியை அடியோடு மறந்து விட வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

இந்த நாட்டில் பொதுவாக ஒழுக்கம் சீர்பட வேண்டுமானால் விபசார மென்னும் காரியத்தில் உள்ள கெடுதிகள் நீங்க வேண்டுமானால் விதவைத் தன்மையும், ஆண்களுக்கு விபசார தோஷமில்லை என்கின்ற நடப்பையும் ஒழித்தாக வேண்டும். இவை ஒழிந்தால் உண்மையான காதலின்பமும், வாழ்க்கையில் திருப்தியும், சாந்தியும், ஒழுக்கமும், கட்டாயம் ஏற்பட்டு விடும்.

ஆகவே மேற்கண்ட இரண்டு காரியங்களே பெரிதும் மனிதத் தன்மைக்கும், இயற்கை இன்ப நுகர்ச்சிக்கும் இடையூராய் இருந்து வரு கின்றது.

பெண்களைப் பெற்றோர்களும் ஒரு விஷயத்தை முக்கியமாய் கவனிக்க வேண்டும்.

அதாவது பெண்களுக்கும் 16 வயது வரை நல்ல கல்வியைக் கொடுக்க வேண்டும். மனித இயற்கைக்கு விரோதமாக ஆணுக்கு ஒரு விதமும், பெண்ணுக்கு ஒரு விதமுமாக அடக்கத்தையும் அடிமை உணர்ச்சியையும் கற்றுக் கொடுக்கக்கூடாது.

பெண்ணின் தாய்மார்கள் பெண்களை அவர்களின் மாமியார்கள் வீட்டுக்கு அடிமைக்காக அனுப்புவதாய்க் கருதி, அதற்குத் தயார் செய்யும் வழக்கத்தைவிட்டுவிட வேண்டும். எந்தப் பெண்களையும் தான் ஆண் களுக்குக் கீழ்பட்ட ஒரு பெண் என்றும், தனக்கு ஆண்களைவிட சில அடிமை குணங்களோ, அடக்கக் குணங்களோ வேண்டுமென்று கருதும் படி கற்றுக் கொடுக்கக் கூடாது.

அநேகமாய்த் தானே தனக்கு வேண்டிய காதலனை தெரிந்தெடுத்துக் கொள்ள பெண்களைப் பழக்கப்படுத்த வேண்டும். இம்மாதிரியாகப் பழக்கினோமானால் பெண்கள் உலகம் தலைசிறந்து சுதந்திரம் பெற்று உலகத்திற்குப் பெருத்த உதவியாக இருக்கும்.

இப்போது பெரும்பான்மையான தெய்வீகத் திருமணங்கள் என்பது வெறும் அடிமைத் திருமணமாகவும் பிறர் இஷ்டத்திற்கே முழுப்பொறுப்பும் விடப்பட்டதாகவும், நிற்பந்தத்திற்கும், ஒரு கட்டுப் பாட்டிற்கும் கட்டிக் கொண்டு எப்படி இருந்தாலும் சரிப்படுத்திக் கொள்ள வேண்டியதாகவும் இருக்கின்றது. ஆகையால் அந்த முறைகளும் ஒழிய வேண்டும்.

இன்றையதினம் ஒரு குழந்தையுடனுள்ள ஒரு விதவைப் பெண்ணை மணம் செய்து கொள்ள ஏற்பட்டதால் பலர் விதவையானாலும் குழந்தை இல்லாத விதவை கிடைக்க வில்லையா என்று சொல்ல வந்து விட்டார்கள்.

இதற்கு முன் பக்குவமான “சாந்தி முகூர்த்தமான” விதவையைக் கலியாணம் செய்தபோது பக்குவமாகாத விதவை கிடைக்கவில்லையா என்றார்கள்.



வேறு ஜாதியில் ஒரு “விதவை”யைக் கல்யாணம் செய்து கொண்ட போது நமது ஜாதியிலேயே ஒரு விதவை இல்லையா என்றார்கள். ஆதலால் இவ்விஷயங்களில் நாம் பொது ஜன அபிப்பிராயத்தைக் கண்டு பயப்படக் கூடாது. நல்ல வார்த்தையில் மிதமான வழியில் செய்யப்படும் முயற்சி கைகூடவே கூடாது. ஏனென்றால் நமது மக்கள் பெரிதும் பாமர மக்களா கவே வைக்கப்பட்டிருக்கிறார்கள். அடிமைகளுக்கு லக்ஷணமே ஒரு சிறு மூட்டையைத் தூக்கச் சொன்னாலும் “முடியாது போ, உன் வேலையை பார்” என்றுதான் சொல்வார்கள். ஆனால் டவாலியைக் கழற்றி இரண்டு கொடுத் தால் பெரிய மூட்டையாய் இருந்தாலுங் கூட “தூக்குவதற்குள் என்னையா அவசரம்” என்பார்கள். ஆகையால் நாட்டைப் புதுப்பிக்க வேண்டுமானால் அமிதமான கொள்கையில் போய்க் கொண்டே இருக்க வேண்டும். அப் போது ஒருபடி நமது பின்னாலேயே மக்கள் வந்து கொண்டிருப்பார்கள்.

*குறிப்பு :- நாகர்கோவில் கோல்டன் தியேட்டரில் திரு. நல்லசிவனுக்கும் திருமதி. கமலாம்பாளுக்கும் 10-09-1930 காலை நடைபெற்ற விதவை மறுமணத்தில் தலைமை ஏற்று ஆற்றிய உரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 28.09.1930**



RangaRakes tamilnavarasam.com

# நாஸ்திகம்

உலகத்திலேயே நாஸ்திகம் என்று சொல்லப்படும் வார்த்தையானது அநேகமாய் பெரும்பான்மையான மக்களால் வெறுக்கப்படக் கூடியதாக இருந்து வருகின்றது. காரணம் என்னவென்று பார்ப்போமானால் அவ்வார்த் தையில் கடவுள் என்பது இல்லை என்கின்ற பொருள் அடங்கியிருப்பதாகக் கொள்வதேயாகும். மக்கள் கடவுள் இல்லை என்று சொல்லப்படுவதைப் பற்றி மாத்திரமே ஆத்திரப்படவும் வெறுப்புக் கொள்ளவும் புரோகிதர்கள், பாதிரிகள், மௌல்விகள், பண்டிதர்கள் என்பவர்களால் கற்பிக்கப்பட்டு விட்டார்களே தவிர கடவுள் என்பதைப் பற்றிய விளக்கம் யாவருக்கும் தெளிவாக்கப் படாமல் இருப்பதோடு அது (கடவுள் என்பது) மனதிற்கும் புத்திக்கும் எட்டாதது என்பதாகவும் அப்படிப்பட்ட ஒன்றை நம்பித்தானாக வேண்டும் என்று நிர்பந்தப்படுத்தப் பட்டுவிட்டது. இப்படியிருந்த போதிலும் என்றையதினம் கடவுள் என்கின்ற ஒரு வஸ்து உண்டு என்று கற்பிக்கப் பட்டதோ அன்று முதலே கடவுள் இல்லை என்கின்ற வாதம் ஏற்பட்டு வெகு காலமாகவே இவ்வாதப் பிரதிவாதம் நடந்து வருவதோடு நாளது வரை முடிவுபெற முடியாமலே இருந்து வருகின்றது.

உதாரணமாக, கடவுள் இல்லை என்று சொல்லும்படியான பல மதங்களும் கூட உதாரணமாக சூனிய மதம், நிரீஸ்வர மதம், உலகாயுத மதம், நாஸ்திக மதம் என்பது போன்ற பல உண்டு என்றாலும் கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்கின்ற ஒரு கிளர்ச்சி வலுத்து அதை அமுலுக்குக் கொண்டு வந்து மற்றும் உலகமெங்கும் அக்கொள்கையைப் பரப்ப, பிரசாரமும் செய்ய ஏற்பாடுகள் சாதாரணமாக இந்த இருபதாவது நூற்றாண் டில்தான் தைரியமாகவும், பலமாகவும் செய்ய முடிந்து வருகின்றதென்ப தாகவும் தெரியவருகின்றது.

ஏனெனில் இதுவரையில் உலகத்தில் எந்த நாடும் பெரிதும் புரோகிதக் கூட்டத்தாரின் ஆதிக்கத்திலும், கடவுள் பிரசாரத்தின் பேரால் கௌரவமும், வயிற்றுப் பிழைப்பும் நடத்தி வந்தவர்களின் ஆதிக்கத்திலும் இருந்து வந்ததாலும், உலகத்திலுள்ள அரசாங்கங்களும் மதத்துடனும், கடவுளு டனும் பிணைக்கப்பட்டே இருந்ததாலும் கடவுளை மறுக்கும் அபிப்பி ராயத்திற்கோ



கூட்டத்திற்கோ நாட்டில் ஆதரவு இல்லாமல் போனதோடு அவர்கள் மீது தோஷமும் கற்பிக்கப்பட்டு அந்த அபிப்பிராயம் வலுக்க முடியாமலும், பரவ முடியாமலும் போய் விட்டது. ஆனால் இந்த நூற்றாண்டில் கடவுள் மறுப்பு என்பது பாமர மக்களுக்குள் ஒருவித வெறுப் பும், அதிருப்தியும் தரக் கூடியதாயிருந்தாலும் மற்றும் கடவுள் பேரால் அல்லது கடவுள் சம்மந்தமான மோக்ஷம், சாஸ்திரம், கதை, புராணம், பிரசாரம் ஆகியவைகளின் பேரால் வாழ்வை ஏற்படுத்திக் கொண்டவர்களுக்கு மிகுதியும் ஆத்திரத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தாலும் நடுவு நிலையிலுள்ள அறிஞர்களால் இவ்விஷயம் ஆராய்ச்சி செய்யத் தொடங்கி ஆலோசிக்கப்பட்டு வருவதும் அவ்வித அபிப்பிராயக் காரர்களைப் பெரிதும் அறிவாளிகள் என்றும், ஞானவான்கள் என்றும் சொல்லுவதும் மதிப்பதுமாய் இருந்து வருகின்றன. மேல்நாட்டு அறிவாளிகள் என்று சொல்லப்படு பவர்களுக்குள் இன்றும் அநேகர்கள் நாஸ்திகர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். அது மாத்திர மல்லாமல் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, ருஷியா, சைனா முதலாகிய இடங்களின் முக்கிய பட்டணங்களில் கடவுளை நிலைப்படுத்தும் மதங்களை எதிர்க்கவும் நாஸ்திகத்தைப் பரப்பவும் என்றே பல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப் பட்டு அவற்றிற்காக பத்திரிகைகள் துண்டுப் பிரசுரங்கள் முதலியவைகள் செய்யப்பட்டும் வருகின்றன.

குறிப்பாக அமெரிக்காவில் நியூயார்க் என்கின்ற பட்டணத்தில் "நாஸ்திகத்தை உலகமெங்கும் வியாபிக்கச் செய்வதற்கான சங்கம்" என்னும் பெயரால் ஒரு ஸ்தாபனத்தை ஏற்பாடு செய்து அதன் மூலம் 3, 4 வருஷங் களாக நல்ல வேலைகள் மும்முரமாய் செய்யப்பட்டு வருகின்றன. அங்கி ருந்து நமக்கு அனுப்பப்பட்டிருக்கும் அறிக்கையின் படி அச்சங்கமானது பிரசாரத்திற்காகவும் துண்டு பிரசுர வினியோகத்திற்காகவும் வருஷம் ஒன் றுக்கு ஐம்பது ஆயிரம் ரூபாயுக்கு மேலாகவே செலவு செய்து வந்திருக் கின்றது. இப்போது இந்த வருஷத்தில் "கிறிஸ்துவ மதம் வெடிப்புக் கண்டு விட்டது" என்கின்ற பேராலும் "மதம் என்றால் என்ன?" "கடவுள் என்றால் என்ன?" "கடவுள் இல்லாத முற்போக்கு" ஆகிய இவை போன்ற தலைப்பு களால் பல லக்ஷக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியாக்கப் பட்டிருப்பதாகக் காணப்படுகின்றது. சங்க அங்கத்தினர்கள் வருஷத்திற்கு வருஷம் 100 க்கு 50 வீதம் உயர்ந்துக் கொண்டு வருவதுடன் பல இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் ஏற்பட்டு வெளிநாடுகளிலும் கூட பிரசாரங்கள் செய்யப்பட்டு வருவதாய்க் காணப்படுகின்றது. வேறு பாஷை கள் மூலமும் சைனா முதலிய இடங்களுக்கு ஆட்களை அனுப்பி இது போன்ற பிரசார மும் துண்டுப் பிரசுரங்களும் நடைபெற்று வந்திருப்பதாகவும் காணப்படு வதோடு ஒவ்வொரு கனவான் ஒவ்வொரு வேலையை ஏற்றுக் கொண்டு திருப்தி தரத்தக்க அளவு பிரசாரம் செய்திருப்பதாயும் காணப்படுகின்றது. இதன் தலைமை காரியஸ்தலம் அமெரிக்க நியூயார்க் பட்டனத்தில் 14 வது



RangaRakes tamilnavarasam.com

வீதி 307 – E நெம்பர் கட்டிடத்தில் நிருவப்பட்டிருக்கின்றது. இதில் சேரவிரும்பும் அங்கத்தினற்கு வருட சந்தா ஒரு டாலர் அல்லது மூன்று ரூபாயாகும் என்பதாகவும் காணப்படுகின்றது.

இப்படியே லண்டன் பட்டணத்தில் சில ஸ்தாபனங்கள் அதாவது "தாராள நினைப்புக்காரர்கள் சங்கம்" என்றும் "அறிவாளிகள் சங்கம்" என்றும் "உண்மை நாடுவோர் சங்கம்" என்றும் பல சங்கங்கள் ஏற்படுத்தி அது போலவே பிரசாரமும் செய்யப்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் சில துக்கு வயது 40, 50க்கு மேல் ஆயிருந்த போதிலும் அவைகள் இப்போது தான் மிக்க பிரபலமாயும், செல்வாக்காயும் நடைபெற்று வருகின்றதாக அறிவிக்கப்படுகின்றன.

இவற்றில் கலந்துள்ள நபர்களில் உலகத்திலே மிக்க அறிவாளிகள் ராஜதந்திரிகள் என்று சொல்லப்பட்ட பெரியார்களே அதிகமாயிருக்கின் றார்கள். ஆகவே நாஸ்திகப் பிரசாரம் உலகில் சகஜமாகவும் செல்வாக் காகவும் நடைபெறுகின்றன என்பதை தெரிவிக்கவே இவற்றை மேற் கோள்களாக குறிப்பிட்டோம்.

இனி அதனால் ஏற்படும் கெடுதி என்ன? நன்மை என்ன? என்பவைகளைப் பற்றி யோசிப்போம். சாதாரணமாக மனிதன் நாஸ்திகனா யிருந்தால் அதாவது கடவுள் நம்பிக்கை இல்லாதவனாயிருந்தால் ஒரு கட்டுப் பாட்டிற்கு அடங்கி நடக்க மாட்டான் என்றும் திருட்டு, பொய், மோசம், ஒருவன் சொத்தை ஒருவன் அபகரித்தல், முறை தவரி கலத்தல் மக்களை இம்சித்தல் முதலாகிய காரியங்கள் செய்யப் பயப்பட மாட்டான் என்றும் சொல்லப்படுகின்றது. இதைப்பற்றி கவனிக்குமுன்பு உண்மையான கருத்தில் இந்த கடவுள் நம்பிக்கை உள்ள மனிதன் எவனாவது உலகில் இருக்கின்றானா என்பதை முதலில் யோசிப்போம்.

சாதாரணமாக கடவுள் என்கின்ற பதத்திற்கு மக்களில் பெரும் பான்மையோர்கள் கருதிக் கொண்டிருக்கும் கருத்து என்ன வெனில் சர்வ சக்தியும் அதாவது உலகம் உலகத்திலுள்ள ஜீவராசிகள், புல் பூண்டு தாவரங் கள் முதலியயாவும் தனது இச்சையால் உண்டாக்கப்பட்டு தனது சக்தியால் இயங்கச் செய்யப்படுகின்றதானதும் எங்கும் வியாபித்திருப்பதானதும் சர்வ ஜீவராசிகளையும் ரக்ஷிக்கும் தன்மையுடையதானதும் எல்லாவற்றையும் சமமாய்ப் பார்ப்பதானதும் சுருக்கமாய் சொல்வதனால் அவனன்றி (அக் கடவுள் சித்தம் அன்றியில்) ஒரு அணுவும் அசையாததான சக்தியுடைத் தானது என்பதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இக் கருத்து சரியா, தப்பா என்று யோசிப்பதற்கு முன்னும் இப்படி ஒரு வஸ்த்து இருக்கின்றதா இல்லையா என்று முடிவு செய்வதற்கு முன்னும் இப்படி மக்கள் எண்ணிக் கொண்டிருப்பதானது உலகத்திற்கு நன்மையா? தீமையா? என்று முடிவு செய்வதற்கு முன்னும் இந்தப்படி உலகத்தில் எந்த மனிதனாவது உண்மை



யில் நம்பி இருக்கின்றானா? அந்தப்படி நம்பி இருப்பதற்குத் தகுந்த படி அவனது மனம், மெய், மொழி ஆகியவைகளால் ஏற்படும் நடவடிக்கைகள் காணப்படுகின்றனவா? அதாவது எந்த மனிதனு டைய நடவடிக்கையில் இருந்தாவது மேல்கண்ட சக்தியும் குணமும் கொண்ட ஒரு வஸ்துவை நம்பி நடக்கின்ற மனிதனின் நடவடிக்கைகள் இவை என்று கருதும்படியாக இருக்கின்றனவா? என்பதை யோசிப்போமானால் இதுவரை ஒரு மனித னையாவது அம்மாதிரி நம்பிக்கையின் மீது நடக்கின்றான் என்பதாகக் கண்டு பிடிக்க முடியவில்லை என்றும் அந்தப்படி ஒரு கடவுள் இருப்பதாக ஒரு மனிதன் கூட தனது வாழ்க்கையில் எண்ணி இருக்க முடிவதில்லை என்றும்தான் சொல்ல வேண்டி இருக்கின்றதே தவிர வேறில்லை என்று உறுதியாகச் சொல்லலாம்.

இது அதாவது இப்படிச் சொல்லுவதானது சாதாரண மக்களிடையே மாத்திரமல்லாமல் கடவுள் பிரசாரம் செய்பவர்களிலாவது கடவுளைக் கண்ட வர்களாக சொல்லப்பட்டவர்களிலாவது கடவுளுக்குச் சமமாகக் கருதும் சமயாச்சாரிகள், மதத்தைக் காப்பாற்றும் ஸ்தாபனத் தலைவர்கள் முதலாகிய வர்களுக்குள்ளாவது நாஸ்த்திகத்தைக் கண்டு பயந்து நடு நடுங்கித் துயரப் பட்டு கண்ணீர் வடிக்கும் ஆஸ்திகப் பண்டிதர்கள், சாஸ்திரி கள், வைதீகர்கள் முதலாகியவர்களுக்குள்ளாவது மற்றும் மகாத்மாக்கள் வேதாந்திகள் பெரி யோர்கள் முதலியவர்களுக்குள்ளாவது இதுவரை ஒருவராவது இருந்த தாகவோ, இருப்பதாகவோ சொல்லுவதற்கில்லையே.

ஒவ்வொரு மனிதனும் தன்னை ஒரு தனி மனிதனென்றும் தனக்காகத் தான் செய்யவேண்டிய காரியம் பல உண்டு என்றும் அவற்றை தினமும் செய்வதாகவும், அவனவன் இஷ்டப்பட்டபடி செய்து கொண்டும் அதனதன் பலனை அடைந்து கொண்டும், அது போலவே மற்றவர் களையும் செய்யும் படி தூண்டிக்கொண்டும் மற்றவர்கள் செய்வதில் குண தோஷம் கற்பித்துச் சொல்லிக் கொண்டும், அதற்காக விருப்பு வெறுப்புக் காட்டிக் கொண்டும், மகிழ்ச்சி துக்கமடைந்து கொண்டும் தான் இருக்கிறானே ஒழிய கடவுளின் சர்வசக்தியைப் பற்றியோ, சர்வவியாபகத்தைப் பற்றியோ, சர்வ தயாபரத்தைப் பற்றியோ, சர்வ சமத்துவத்தைப் பற்றியோ நம்பி இருப்பவன் ஒருவனும் இல்லை யென்று தான் சொல்ல வேண்டும்.

ஆகவே இதிலிருந்து அப்படிப்பட்ட ஒரு வஸ்து இல்லை என்றும் இருப்பதாகவும் யாரும் நம்பி இருக்கவில்லை என்றும்தான் முடிவு கட்ட வேண்டியிருக்கின்ற தென்பது ஒரு பக்கமிருந்தாலும் அப்படி ஒன்று இருப்பதாக கற்பித்து நம்பச் செய்வதினாலாகிலும் காரியத்தில் ஏதாவது, அதாவது கடவுள் நம்பிக்கையினால் ஏற்படக் கூடும் என்று கருதுகின்ற, முன் சொன்ன காரியங்களாவது நடக்கின்றதா என்று பார்த்தால் திருடாதவன், பொய் சொல்லாதவன் பிறர் பொருளை வஞ்சிக்காதவன் முறை தவறி கலவி செய்யாதவன், பிறருக்கு இம்சை கொடுக்காதவன் முதலான காரியங்கள்



RangaRakes
tamilnavarasam.com

செய்யாதவன் என்பவன் ஒருவனைக் கூட காண முடிவதில்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கின்றது. அன்றியும் திருட்டு, வஞ்சகம், பொய், முறை தவறிகலத்தல் முதலாகிய காரியங்கள் எவை என்று தீர்மானிப்பதே கஷ்ட மான காரியமாயிருக்கின்றது என்றாலும் மக்கள் எதை எதை மேல் கண்ட மாதிரிகுணங்கள் என்று கருதுகின்றார்களோ அதைச் செய்யாமல் இருக்க இந்த எண்ணத்தையும் நம்பிக்கையும் உண்டாக்குவதாலோ நிலை நிருத்து வதாலோ முடிகின்றதா? என்பதுதான் இங்கு யோசிக்கத் தக்கதாகும்.

இது ஒரு புரமிருக்க மேல்கண்ட அதாவது கடவுள் என்பதற்குக் கற்பிக்கப்பட்ட குணங்கள் உடையதான ஒரு கடவுள் என்பது இல்லை என்றும், அல்லது இருக்கமுடியாது என்றும் கருதுகின்றவர்களிடத்திலாவது அந்தப்படி கருதிக் கொண்டிருக்கின்றார்கள் என்று பிறரால் கருதப்படுகின்ற வர்களிடத்திலாவது முன் சொல்லப்பட்ட திருட்டு பொய் வஞ்சகம் பிறரை இம்சிப்பது முதலிய குணங்கள் கடவுள் நம்பிக்கைக் காரர்களை விட (ஆஸ் திகர்களைவிட) அதிகமாய் இருப்பதாகவாவது, அல்லது பிற மக்களுக்கு ஆஸ்திகர்களைப் போன்ற நன்மை செய்ய வில்லை என்றாவது சொல்ல முடியுமா என்று பார்த்தால் அதுவும் முடியாத காரியமாய்த்தான் காணப் படுகின்றதே ஒழிய வேறில்லை.

மக்களில் பலருக்கு ஆராய்ச்சி முயற்சியும், பகுத்தறிவும் இல்லாத காரணத்தால் கடவுள் என்னும் விஷயத்தில் மேல்கண்ட விதமான காரியங் களைப் பற்றியெல்லாம் யோசனை செய்து பார்ப்பதை விட்டு விட்டு தனக்கே புரியாத படி ஒன்றை நினைத்துக் கொண்டு

"கடவுள் உண்டா இல்லையா" என்று கேட்பதும்,

"கடவுளை ஒப்புக் கொள்ளுகின்றாயா இல்லையா" என்று கேட்பதும்,

"கடவுள் இல்லாமலிருந்தால் மக்களில் ஒருவருக்கொருவர் ஏன் வித்தியாசமாயிருக்க வேண்டும்?"

"ஒருவர் பணக்காரனாகவும் ஒருவர் ஏழையாகவும் ஏன் இருக்க வேண்டும்?"

"ஒருவர் கூன், குருடு, மொண்டி, குஷ்ட ரோகி முதலியவனாயும், ஒருவன் நல்ல திட சரீரியாகவும் ஏன் இருக்க வேண்டும்?"

"ஒருவனுக்கு ஏன் பத்துப் பிள்ளை? ஒருவனுக்கு ஏன் நாலு பிள்ளை? ஒருவனுக்கு ஏன் பிள்ளை இல்லை?" என்றும்

இருவர் ஒரே காலத்தில் தனித்தனியாக வியாபாரம் ஆரம்பித்தால் ஒருவர் நஷ்டமும், ஒருவர் லாபமும் ஏன் அடைவேண்டும்? என்பது போன்ற



கேள்விகள் கேட்டு அதன் மூலம் மேல்கண்ட குணங்கள் கொண்ட கடவுள் என்பதாக ஒன்று உண்டு என்று மெய்ப்பிக்க முயற்சி செய்கிறார்கள். இம்மாதிரி கேள்விக்காரர்களை பகுத்தறிவு இல்லாதவர்கள் ஆராய்ச்சி சக்தி இல்லாதவர்கள் என்று தான் சொல்ல வேண்டுமே தவிர வேறு ஒன்றும் சொல்லமுடியவில்லை.

இப்படிப்பட்ட கேள்வி கேட்பவர்களை ஒரே ஒரு பதிலில் வாயை அடைக்க வேண்டுமானால் இம்மாதிரியாக தோற்றங்களில் ஒன்றுக் கொன்று வித்தியாசங்கள் காணப்படுவதாலேயே (மேல் கண்ட குணமுடைய) கடவுள் என்பதாக ஒன்று இல்லையென்று சொல்லிவிடலாம்.

எப்படியெனில் சர்வ சக்தியுடைய கடவுள் ஒருவர் இருந்து சர்வத் திலும் புகுந்து சர்வத்தையும் ஒன்று போலப் பார்ப்பவராயிருந்தால் சர்வத் தையும் ஒன்று போலவே சிருஷ்டித்திருக்கலாமல்லவா? வேறு வேறாகக் காணப்படுவதாலேயே சர்வசக்தியும் சர்வ வியாபகமும், சமத்துவமும் கொண்ட கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்பது தான் பதிலாகும்.

ஏனெனில், மொண்டிக்கும், முடவனுக்கும், நல்லவனுக்கும், கஷ்டப் படுபவனுக்கும், கஷ்டப்படுத்துகிறவனுக்கும் "கடவுளே" காரணஸ்தனா யிருந்தால் கடவுளை சர்வ தயாபரத்துவமுடையவனென்றும், பாரபக்ஷ மில்லாத சர்வசமத்துவ குணமுடையவனென்றும் எப்படிச் சொல்லமுடியும்? இந்தப்படி பகுத்தறிவைக் கொண்டு சொல்லக்கூடிய சமாதானங்கள் ஒரு புறமிருக்க ஆராய்ச்சியைக் கொண்டு அறியக் கூடிய சமாதானங்களைப் பற்றி சற்று கவனிப்போம். ஒரே கையால் கை நிறைய அரிசியை அள்ளி அள்ளி வேறாய் வைத்து ஒவ்வொரு தடவை அள்ளிய அரிசியைத் தனித் தனியாய் எண்ணிப் பார்த்தால் அவற்றுள் ஒன்றுக் கொன்று எண்ணிக்கை வித்தியாசமிருப்பானேன்? அதே மனிதன் அதே கையால் அதே நிமிஷத் தில் அதே குவியலிலிருந்து அள்ளினவைகள் ஏன் வித்தியாசப்படு கின்றது? ஒரே பூமியில், ஒரே வினாடியில் விதைக்கும் ஒரே மாதிரி விதை கள் சில முளைத்தும், சில முளைக்காமலும் முளைத் தனவைகளில் சில வளராமல் கூளையாகவும், சில அதிக உயரமாகவும், சில அதிகமான மணி கள் கொண்ட கதிராகவும், சில குறைவான மணிகள் (தானியங்கள்) கொண்ட கதிராகவும், சில முளைத்து நன்றாய் தளைத்தும் ஒரு மணி கூட இல்லாத வெறும் கதிராகவும் இருக்கக் காரணம் என்ன? ஒருவினாடியில் ஒருபூமியில் நட்ட செடிகள் ஒன்று பல கிளைகளுடனும், ஒன்று சுவல்ப்ப கிளைகளு டனும் வளருவதும் ஒன்று பதினாயிரக்கணக்காக காய்ப்பதும், ஒன்று நூற்றுக் கணக்காக காய்ப்பதும், ஒன்று பூ விட்டு எல்லாம் கருகி உதிர்ந்து விடுவதும் ஒன்று பூ விடாமலும் பிஞ்சு விடாமலும் வரடாயிருப்பதும் என்ன காரணம்? கடவுள் ஒருவர் இருந்தால் இவைகள் எல்லாம் அதனதன் இனத்தில் ஏன் ஒன்றுபோல் இருக்கக் கூடாது?



RangaRakes tamilnavarasam.com

ஒரு சமயம் கடவுளே இந்தபடி செய்திருப்பார் என்று சொல்வதா னால் அம்மரம் செடி தானியம் முதலியனவைகள் இப்படி பலன் அடைவ தற்கு காரணம் என்ன? என்பது போன்ற கேள்விகளுக்கு என்ன சமாதா னமோ அதுதான் மனிதர்களைப் பற்றிய சம்மந்தமான கேள்விகளுக்கும் சமாதானம் என்பது தானாகவே புலப்படும். ( மறுபடியும் தொடரும்)

**குடி அரசு - தலையங்கம் - 28.09.1930**





# கலெக்டர் கவனிப்பாரா?

கோபிசெட்டிபாளையம் டிப்டி கலெக்டரவர்கள் தேவஸ்தான மரங் களை கள்ளுக்கு விடும்படி தர்மகர்த்தாக்களை நிர்பந்திக்கிறாரென்றும், கள்ளுக்கடைக்காரர்களுக்கு மரம் கிடைக்காவிட்டால் மணியக்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதாகச் சொன்னதாகவும் நம்பத்தகுந்த இடங்களிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. இது உண்மையானால் சர்க்காரிடத்தில் பொது ஜனங்களுக்கு துவேஷமும், பொது ஜனங்களு டைய வரிப்பணத்திலிருந்து வருடம் 4 லட்ச ரூபாய் செலவு செய்து சர்க்கா ரால் செய்யப்படும் மதுவிலக்கு பிரசாரத்தினிடத்தில் சந்தேகமும், கெட்ட எண்ணமும் ஏற்பட இடமுண்டாவதோடு சர்க்காருக்கு நல்ல பேர் கிடைக் கும் படியாகச் செய்யப்பட்டு வரும் பிரசார முதலியவைகளுக்கு இடஞ்சலும் ஏற்படுமாகையால் நமது ஜில்லா கலெக்டர் அவர்கள் தயவு செய்து இந்த விஷயத்தைக் கவனித்து இந்தப்படி நடப்பதை நிறுத்தவும். இந்தப்படிக் கில்லையானால் ஒரு அறிக்கை வெளியிடவும் முயற்சி செய்வாரென்று நம்புகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 28.09.1930**



RangaRakes

tamilnavarasam.com

ஆ, அவர்கள் பதிவு செய்யாமலிருக்க வேண்டுமென்றும் கட்டளை பிறப்பித்து இந்து சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அடிகோலுவீர்களென்று எதிர்பார்க்கிறோம்.



# வைசிறாய் பிரபுக்கு வேண்டுகோள்

லாகூரிலுள்ள ஜட்பட் ரோரக் மண்டலமென்னும் சங்கமானது ஹிந்து சமூகத்தில் காணப்படும் ஜாதி வித்தியாச மென்னும் உயர்வு, தாழ்வை ஒழிக்க மிகவும் பாடுபட்டு வருகின்றது. அடுத்த சென்சஸின் போது (ஜனத்தொகைக் கணக்கு கொடுக்கும் போது) ஹிந்துக்கள் தங்கள் ஜாதியைக் குறிப்பிடலாகா தென்பது அதன் கொள்கை. ஆகவே அச்சங்க நிர்வாகிகள், இந்திய சென்சஸ் கமிஷனரைக் கண்டு தங்கள் தங்கள் ஜாதியைக் குறிப்பிட விரும் பாதவர்களை கூறும்படி வற்புறுத்தலாகாதெனக் கேட்டுக் கொண்ட தற்கு அவர் வைசிராயிடம் அறிவித்துக்கொள்ளும்படி சொன்னதால் மேற்படி சங் கத்தார் வைசிறாய்க்குச் செய்து கொண்ட விண்ணப்பத்தின் சாராம்சமாவது:–

பற்பல மாகாணங்களிலுமுள்ள ஹிந்து சமூகத்தினரில் பலர் ஹிந்து மதத்துக்கு ஜாதி வித்தியாசம் அவசியமில்லை யென்றும் அத்தகைய வித்தியாசத்தால் தான் உயர்வு தாழ்வு ஏற்பட்டு இந்து சமயத்தினர் முன்னேற் றமடைய முடியாமல் போய்விட்டதென்றும் உணர்ந்திருக்கின்றனர். இத்த கைய ஜாதி வித்தியாசம் பண்டைக் காலத்தில் அவசியமாயிருந்த போதிலும் இன்றுள்ள நிலைமையில் அம்முறை தீமையே தரத்தக்கதாக இருக்கின்றது. அரசியல், சமூக விஷயங்களில் இப்போது தோன்றியிருக்கும் புத்துணர்ச் சியால், பழைய காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட சில ஆசாரங்கள் இப்போது அவசியமில்லையென்றும், அவற்றால் தற்காலம் கஷ்டங்களே ஏற்படுகின் றன வென்றும் பலர் நம்புகின்றனர். ஆதலின் அடுத்த சென்சசில் தங்கள் ஜாதியைக் குறிப்பிடலாகாதென்பது பலருடைய ஆவல். ஆதலின் தாங்கள் அப்படிப்பட்டவர்களை ஜாதியைக் கூறும்படி வற்புறுத்தலாகாதென அவ் விலாக்கா அதிகாரிகளுக்கு உத்திரவிடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். இத்தகைய அனுமதி முன்னரே சீக்கியர்களுக்கும், பாஞ்சாலத்திலுள்ள ஆதி இந்துக்களுக்கும் அளித்திருப்பதால் மற்ற இந்துக்களுக்கும் இந்த அனுமதி குற்றமாகாது. ஜாதி என்று கேட்டிருக்கும் இடத்தில் “ஒன்றுமில்லை” என்று குறிப்பிட்டுவிடுவதும் தவறாகாது. ஆதலின் தாங்கள் சென்சஸ் எடுக்கும் அதிகாரிகள், அல்லது குமாஸ்தாக்கள் ஜாதியை கூறும்படி கட்டாயப்படுத்த லாகாதென்றும், ஜனங்கள் சொல்லாமலிருக்கும் போது அவர்களாகத் தங்க ளுக்குத் தோன்றியதைப் பதிவு செய்யாமலிருக்க வேண்டுமென்றும் கட்டளை பிறப்பித்து இந்து சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அடிகோலு வீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

**குடி அரசு – செய்தி விளக்கம் – 28.09.1930**





RangaRakes

tamilnavarasam.com

## நீலாவதி - ராம சுப்ரமணியம்

# திருமண அழைப்பு

ஐயா:- "குடி அரசு", "திராவிடன்", "குமரன்" பத்திரிகைகளுக்கு வியாசம் எழுதிவரும் மதிநிறைச் செல்வி திருச்சி

**நீலாவதிக்கும்**

மதிநிறைச் செல்வன் கொத்தமங்கலம்

**ராம சுப்ரமணியத்திற்கும்**

பிரமோதூத ஹு ம் புரட்டாசி *மீ* 19-ம் (5-10-30) தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு திருச்சியில், தென்னூர் ரோட் 4 நெம்பர் இல்லத்தில் திருமணம் நடத்த ஏற்பாடாகி இருக்கிறபடியால், அதுபோது தாங்கள் தயவுசெய்து தங்கள் வாழ்க்கைத் துணையுடன் எழுந்தருளி சாக்ஷியளிக்க விழைகின்றோம்.

ஈரோடு — **ஈ. வெ. ராமசாமி**
1-10-30 — **ஈ. வெ. ரா. நாகம்மாள்**

**குடி அரசு - அழைப்பு - 05.10.1930**



# மந்திரிகள்

அக்டோபர் மாதம் 23 தேதி வரை இப்போதைய மந்திரிகளே ஆட்சி நடத்துவார்கள். பிறகு டாக்டர் சுப்பராயன் அவர்களே மந்திரிசபை அமைத்தாலும் அமைக்கக்கூடும். அல்லது ஜஸ்டிஸ் கட்சியார் என்பவர்கள் சார்பாக என்று திரு. பி. முனுசாமி நாயுடு அவர்கள் அமைத்தாலும் அமைக்கக்கூடும்.

யார் யார் "தலையில் பிரம்மா நீ மந்திரியாய் இரு என்று எழுதியிருக்கிறாரோ" என்பது இப்போது தெரியவில்லை. ஆனால் நியமனம் ஆனவுடன் தெரிந்துவிடும், அதோடு நியமனமான பிறகு மத்தியில் ஒரு சமயம் அது போய் விடுவதாயிருந்தாலும் அதுவும் "பிரம்மா எழுதின சங்கதி" உத்தியோகம் போன பிறகுதான் தெரியும்.

எனவே பிரம்மா இந்த விஷயங்களை இவ்வளவு இரகசியமாய் யாரும் அறிய முடியாமல் எழுதி வைத்திருப்பதிலிருந்து, இரகசியத்தைக் காப்பாற்றுவதில் பிரம்மாவானவர் நமது கவர்னர் பிரபுவை விட கெட்டிக் காரர் என்று தான் சொல்ல வேண்டும்.

இது ஒரு புறமிருக்க, நியமனமாகும் மந்திரிகளும் எதிர்பார்க்கும் நபர்களும் கூட தாங்கள் நியமனம் ஆன பிறகுதான் தங்களுக்கு இல்லை என்று முடிந்த பிறகும்தான் கவர்னரையும் பிரமாவையும் போற்றவோ, தூற்றவோ போகிறார்கள்.

இந்த மாதிரி மந்திரிகள் நியமனமாவதும் ஏமாற்றமடைவதும், வெறும் மந்திரி உத்தியோகத்திற்கு வருகிறவர்களுடையவும், ஏமாற்றமடைகிறவர்களுடையவும் "தலையெழுத்துக்களை" மாத்திரம் பொறுத்ததாய் இல்லா மல் இவர்கள் வரவேண்டுமென்று எதிர்பார்ப்பவர்களுடையவும் வரக் கூடாது என்று எதிர்பார்ப்பவர்களுடையவும், இவர்களால் பிழைக்கலாம், இவர்களால் கெட்டுப் போகக்கூடும் என்று கருதிக் கொண்டிருப்பவர்களு டையவும் "தலையெழுத்துக்களையும்" பொறுத்திருப்பதால் இந்த தலை யெழுத்துக்கள் எப்போதும் பலருக்கு மிக்க குழப்பத்தையே தந்து கொண்டே வருகின்றன.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 05.10.1930**



RangaRakes tamilnavarasam.com

# இனியாவது புத்தி வருமா?

## பெண்களுக்கு சொத்துரிமை

இந்திய நாட்டில் அநேகமாய் உலகத்தில் வேறு எங்கும் இல்லாததும் மனிதத்தன்மைக்கும் நியாயத்திற்கும் பகுத்தறிவுக்கும் ஒவ்வாததுமான கொடுமைகள் பல இருந்து வந்தாலும் அவற்றுள் அவசரமாய் தீர்க்கப்பட வேண்டியதும், இந்தியர்கள் காட்டுமிராண்டிகள் அல்லவென்பதையும், மனிதத் தன்மையும் நாகரீகமுடையவுமான சமூகம் எனவும் உலகத்தாரால் மதிக்கப்பட வேண்டுமானால் மற்றும் உலகிலுள்ள மற்ற பெரும்பான்மை யான நாட்டார்களைப் போலவே அந்நிய நாட்டினர்களின் உதவியின்றி தங்கள் நாட்டைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளவும், ஆக்ஷி நிர்வாகம் செய்யவும் தகுதியுடையவர்கள் என்று சொல்லிக் கொள்ள வேண்டுமானால் முக்கியமானதாகவும் அவசரமாய் தீர்க்கப்பட வேண்டியதாகவுமிருக்கும் கொடுமைகள் இரண்டு உண்டு என்று உறுதியாய்க் கூறுவோம். அவைகளில் முதலாவது எதுவென்றால் இந்திய மக்களிலேயே பல கோடி ஜன சங்கியையுள்ள பல சமூகங்களை பிறவியிலேயே தீண்டாதவர்கள் என்று கற்பித்து அவர்களை பகுத்தறிவற்ற மிருகங்களிலும் கேவலமாகவும் உணர்ச்சியற்ற பூச்சி புழுக்களிலும் இழிவாகவும் நடத்துவதாகும்.

இரண்டாவதானது எதுவென்றால் பொதுவாக இந்தியப் பெண்கள் சமூகத்தையே அடியோடு பிறவியில் சுதந்தரத்திற்கு அருகதையற்றவர்கள் என்றும் ஆண்களுக்கு அடிமையாகவே இருக்க "கடவுளாலேயே" சிருஷ் டிக்கப்பட்டவர்கள் என்றும் கற்பித்து அவர்களை நகரும் பிணங்களாக நடத்துவதாகும். ஆகவே மேற்கண்ட இந்த இரண்டு காரியங்களும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தியாவில் இனி அரை க்ஷணம் கூட இருக்க விடக் கூடாதவைகளாகும்.

இந்தக் காரணத்தாலேயேதான் நாம் மேற்கண்டவிஷயங்கள் இரண்டு கொடுமைகளும் அழிக்கப்படாமல் இந்தியாவுக்கு பூரண சுதந்திரம் கேட்ப தோ இந்தியாவின் பாதுகாப்பையும் ஆக்ஷி நிர்வாகத்தையும் இந்திய மக்கள் தாங்களே பார்த்துக் கொள்ளுகிறோம் என்று சொல்லுவதோ மற்றும் இந்தியாவுக்கு அந்நியருடைய சம்பந்தமே சிறிதும் வேண்டாமென்று



சொல்லுவதோ ஆகிய காரியங்கள் முடியாததென்றும் அவை சுத்த அறியாமைத்தனமானதென்றும் இல்லாவிட்டால் சுயநல சூக்ஷியே கொண்ட நாணயத் தவறான காரியமாகுமென்றும் சொல்லி வருகிறோம் என்பதோடு இப்படிச் சொல்லும் விஷயத்தில் நமக்கு பயமோ சந்தேகமோ கிடையாது என்றும் சொல்லுவோம். ஆதலால்தான் இவ்வித முட்டாள்தனமானதும் சூக்ஷி யானதுமான முயற்சிகளை நாம் எதிர்க்க வேண்டியவர்களாயு மிருக்கின்றோம்.

ஏனெனில் தங்கள் சமூகத்தாரென்றும் தங்கள் சகோதரர்களென்றும் ஜீவகாருண்யம் என்றும் கூட கருதாமல் தங்கள் நாட்டு மக்களையே சுதந்திரமளிக்காமல் மனிதர்கள் என்று கூட கருதாமல் அடிமைப்படுத்தி, கொடுமைப்படுத்தி, இழிவுபடுத்தித் தாழ்த்தி வைத்திருக்கும் மக்களிடம் மற்றும் அத்தாழ்த்தப்பட்ட மக்களின் நலத்தையோ, விடுதலையையோ ஒப்புவிப்பதென்றால் கசாப்புக் கடைக்காரரிடம் ஆடுகளை ஒப்புவித்த தாகுமே தவிர வேறல்ல என்று கருதுவதால்தானே ஒழிய வேறல்ல. இந்தத் தத்துவ மறியாத சில தீண்டப்படாதவரென்று தாழ்த்தப்பட்ட மக்களும் சுதந் திரம் அளிக்கப்படாதவர்கள் என்று அடிமைப்படுத்தப்பட்ட பெண்களும் தங்களுக்கு மற்றவர்களால் இழைக்கப்பட்ட கொடுமையையும் இழிவை யும் கருதிப் பாராமல் "இந்தியா சுதந்திரம்" "விடுதலை" என்னப்பட்ட கூப்பாடுகளில் கலந்து கொண்டு தாங்களும் கூப்பாடு போடுவதைக் காண் கின்றோம். ஆனாலும் அவர்களுக்கு உண்மை சுதந்திரம் விடுதலை என்ப வைகளின் பொருள் தெரியாததாலும் தெரிய முடியாமல் வைத்திருந்த வாசனையினாலும் அப்படி அறியாமல் திரிகின்றார்கள் என்றே கருதி இருக்கின்றோம்.

தீண்டாமை என்னும் விஷயத்தில் இருக்கும் கொடுமையும், மூடத் தனமும் மூர்க்கத்தனமும் யோசித்துப் பார்த்தால் அதை மன்னிக்கவோ, அலட்சியமாய் கருதவோ "நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் இப்போது அதற்கு என்ன அவசரம்" என்று காலந்தள்ளவோ சிறிதும் மனம் இடந் தருவதில்லை. ஒருவன் அதாவது பிறரைத் தீண்டாதார் எனக் கருதிக் கொடுமைப்படுத்துகின்றவர்களை அத்தீண்டாதார்களுக்கு இருக்கும் உண்மையான கஷ்டத்தை உணரச் செய்ய வேண்டுமானால் இப்போதைய வெள்ளைக்கார அரசாங்கத்தின் கீழ் அநுபவிக்கும் கொடுமைகள் என்ப வைகள் போதாது என்றும் சிறிதும் சுதந்திரமும் சமத்துவமும் அற்றதும் சதா ராணுவச் சட்டம் அமுலில் இருப்பதுமான ஏதாவது ஒரு கொடுங்கோல் ஆட்சி இருந்தால்தான் இம்மாதிரி கொடுமைப் படுத்துகின்ற மக்களுக்கு உணர்ச்சி வந்து புத்தி வருமென்றும் நமக்கு சிற்சில சமயங்களில் தோன்று வதுமுண்டு. ஆனால் இந்தியாவை இம்மாதிரி மூர்க்கத்தனமும் நாணயக் குறைவும் மாத்திரம் சூழ்ந்து கொண்டிருக்காமல் மூடத்தனமும் சேர்ந்து கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதால் இன்னமும் எவ்வளவு இழிவும்



RangaRakes tamilnavarasam.com

கொடுமையும் ஏற்பட்டாலும் இம்மாதிரியான மக்களுக்கு உண்மையான கஷ்டத்தை உணரத்தக்க நிலைமை வருவது கஷ்டமாக இருக்கும் என்றாலும் இந்நிலை மாறுதலடையக்கூடும் என்ற உறுதியை உண்டாக்கத் தக்க நம்பிக்கை கொள்வதற்கு இடமில்லாமல் போகவில்லை.

அடுத்ததான பெண்கள் விஷயத்திலும் அவர்களுடைய சுதந்திரத்தையும் உணர்ச்சியையும் கட்டிப் போட்டிருக்கும் கொடுமை யானது இது போலவே இந்தியர்களுக்குச் சுதந்திர உணர்ச்சியே இல்லை என்பதைக் காட்டவும் அவர்கள் அடிமைகளின் குழந்தைகள் என்பதை ஒப்புக் கொள்ளவும் ஆதாரமானதென்றுதான் சொல்ல வேண்டும்.

எப்படியெனில் இவ்விரண்டைப் பற்றி இந்திய விடுதலைவாதிகள், சுதந்திரவாதிகள், சுயேச்சை வாதிகள், தேசீய வாதிகள், மக்கள் நல உரிமை வாதிகள் என்கின்ற கூட்டத்தார்களுக்குச் சிறிதும் உண்மையான கவலை இல்லாவிட்டாலும் மேற்கண்ட கூட்டத்தார்களில் 100க்கு 99 பேர்களுக்கு மேலாக சுயநலங்கொண்ட நாணயமற்றவர்களாகவே காணப்படினும் இவர்களது முயற்சி இல்லாமலும் சில சமயங்களில் மேற்கண்ட சுயநல சூட்சிவாதிகளின் எதிர்ப்புக்கும் இடைஞ்சலுக்கும் இடையிலும் வேறு ஒரு வழியில் கொடுமைகள் அநுபவிக்கும் மேற்கண்ட இருவகையாருக்கும் விமோசனம் ஏற்படுவதற்கு அறிகுறிகள் ஆங்காங்கு காணப்படுகின்றதைப் பார்க்கச் சிறிது மகிழ்ச்சி அடைகின்றோம். அதாவது இந்திய சுதேச சமஸ்தானங்கள் என்று சொல்லப்படும் மைசூர், பரோடா, காஷ்மீர், திருவநந்த புரம் முதலிய சமஸ்தானங்கள் இந்த கொடுமைகளை ஒழிக்க ஒவ்வொரு துறையில் ஒவ்வொன்றுமாக முன் வந்திருக்கின்றன என்பதாகும்.

காஷ்மீர் சமஸ்தானத்தில் எந்த விஷயத்திலும் தீண்டாமையைப் பாவிக்கக் கூடாதென்றும், தீண்டப்படாதார் என்னும் வகுப்பாருக்கு மற்றவர்களைப்போல் சகல உரிமையையும் அளிக்கப்பட்டிருப்பதோடு கல்வி விஷயத்தில் அவர்களுக்கு சாப்பாடுப் போட்டு இலவசமாய் கற்றுக் கொடுப்பதென்றும் தீர்மானமாயிருக்கும் விஷயம் முன் தெரிவித்திருக்கிறோம்.

மற்றும் பரோடா சமஸ்தானத்தில் பெண்கள் கல்யாண ரத்து விஷயமாய் சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதைப் பற்றியும் முன்னர் தெரிவித்திருக்கிறோம். மற்றும் திருவாங்கூர் சமஸ்தானத்தில் பெண்களைக் கடவுள் பேரால் விபசாரிகளாக்கி கோவில்களின் ஆதரவுகளைக் கொண்டு அவ் விபசாரத்தன்மையை நிலை நிறுத்துவதையும் அநுபவத்தில் நடத்து வதையும் ஒழிக்கச் சட்டம் நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டு வந்ததை யும் முன்னமேயே தெரிவித்திருக்கின்றோம்.

இப்போது மைசூர் சமஸ்தானத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் விஷயமாக யோசனை செய்யப்பட்டு அவ் யோசனையை அரசாங்கமும் ஜனப் பிரதிநிதிகளும் ஒப்புக் கொண்டு அதற்காக ஒரு கமிட்டியும் நியமித்து அக்கமிட்டியார் பெண்களுக்குச் சொத்துரிமை அளிக்கலாம் என்ற தத்துவத்தை ஒப்புக் கொண்டு ஏகமனதான ரிபோர்ட்டு அனுப்பியிருப்பதாயும் "திராவிடனி"ல் வெளியாக்கப்பட்டிருக்கிறது.

அதன் முக்கிய பாகம் என்னவென்றால்:-

1. "பெண்கள் வாரிசு சொத்து உரிமை அநுபவிக்கத் தகுதியுடையவர்கள் அல்லவென்பது கொடுமையும் அநீதியுமாகும்.

2. பெண்கள் ஸ்ரீதனம், நன்கொடை முதலிய சொத்துக்கள் அடைந்து அவைகளை வைத்து நிர்வகித்து வரத்தக்கவர்கள் என்ற உரிமையும் வழமையும் இருக்கும்போது வார்சு சொத்து அடைய ஏன் தகுதி யுடையவர்களாக மாட்டார்கள்?

3. பெண்களுக்கு வார்சு சொத்துரிமை இல்லை என்பது பெண்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருப்பதோடு பொதுவாக இந்து சமூக முன்னேற்றத்திற்கே கேடாயுமிருக்கிறது.

4. ஆகவே இவற்றிற்கான சட்டம் செய்ய வேண்டியதும் பெண்கள் என்கின்ற காரணத்திற்காக அவர்களுக்கு எவ்வித சிவில் உரிமையையும் தடுப்பது கூடாது என்று திட்டமாய் முடிவு செய்து விட வேண்டியதுமான காலம் வந்து விட்டது.

5. எந்த விதமான ஸ்ரீதன சொத்தையும் பெண்கள் தங்கள் இஷ்டப்படி விநியோகித்துக் கொள்ளலாம்."

என்பவைகளாகும். இவைகள் ஒரு புறமிருக்க மற்றொரு விஷயத்திலும் பெண்களுக்கு சில சுதந்திரங்கள் அளிக்க அக்கமிட்டி சிபார்சு செய்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

அவை யென்னவெனில்:-

"புருஷன் மேக வியாதிக்காரனாகவாவது கொடிய தொத்து வியாதிக் காரனாகவாவது இருந்தாலும்,

வைப்பாட்டி வைத்திருந்தாலும், தாசி, வேசி வீடுகளுக்குப் போய்க் கொண்டிருப்பவனாயிருந்தாலும், மறு விவாகம் செய்து கொண்டவனாயிருந்தாலும்,

கொடுமையாய் நடத்தினாலும், வேறு மதத்திற்கு போய்விட்டாலும்,

புருஷனைவிட்டுப் பிரிந்திருக்கவும் புருஷனிடம் ஜீவனாம்சம் பெறவும் பூரண உரிமையுண்டு." என்பதாகும். அதோடு மேற்படி இந்த



RangaRakes tamilnavarasam.com

விஷயங்களை அநுசரித்து ஒரு மசோதாவும் தயாரிக்கப்பட்டிருக்கின்ற தாகவும் காணப்படுகின்றது.

ஆகவே இந்தச் சட்டம் அநேகமாக கூடிய சீக்கிரம் மைசூர் சமஸ் தான சட்டசபையில் நிறைவேறி சட்டமாக்கப்படுமென்றே நம்பலாம். இவற் றில் சொத்துக்களின் அளவு விஷயங்களில் ஏதாவது வித்தியாச மிருந்த போதிலும் பெண்களுக்கு சொத்துரிமை கொள்கையும் பெண்கள் புரு ஷனை விட்டு விலகி இருந்து கொள்ளும் கொள்கைகளும் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கும் விஷயம் கவனித்து பாராட்டத்தக்கதாகும்.

இந்தப்படி இந்தியாவிலுள்ள சுதேச இந்து சமஸ்தானங்களெல்லாம் ஒப்புக் கொண்டு சட்டம் செய்து கொண்டு வரும்போது பிரிட்டிஷ் இந்தியா விலுள்ள தேசீயவாதிகளுக்கும் பூரண சுயேட்சை வாதிகளுக்கும், ஜன நல உரிமைவாதிகளுக்கும் மாத்திரம் இக் கொள்கைகள் அவசியமானவைகள் என்றோ சட்டம் செய்யத்தக்கது என்றோ தோன்றப்படாமலிருப்பதானது இக்கூட்டத்தார்களின் நாணயக் குறைவையும் பொறுப்பற்றத் தன்மை யையும் நன்றாகக் காட்டுவதற்கு ஒரு அறிகுறியாகும்.

சாரதா சட்டம் (குழந்தை மணத் தடுப்பு சட்டம்) என்கின்ற ஒரு சட்டம் பிரிட்டிஷ் சர்க்கார் தயவினால் பாசாகியும் இந்திய தேசியவாதிகளாலும் பூரண சுயேட்சை முயற்சியாலும் அது சரியானபடி அமுலுக்கு வரமுடியா மல் முட்டுக்கட்டைப் போடப்பட்டிருக்கிறது மிகவும் வெட்கக் கேடான காரியமாகும்.

மற்றும் அச்சட்டத்தை ஒழிப்பதாக தெரியப்படுத்தினவர்களை ராஜாங்க சட்ட சபைக்கும் இந்திய சட்டசபைக்கும் மாகாண சட்டசபைக்கும் நமது பிரதிநிதிகளாக அனுப்பியது இன்னமும் மானக்கேடானக் காரிய மாகும்.

நமது தேசியவாதிகள் என்னும் அரசியல் வாதிகள் இம்மாதிரி காரியங்களைச் சிறிதும் கவனியாமல் இருப்பதோடு நாம் ஏதாவது இவற்றிற் காகப் பிரசாரம் செய்தால் “இது தேசியத்திற்கு விரோதம்” “சுயராஜ்யம் கிடைத்து விட்டால் பிறகு சட்டம் செய்து கொள்ளலாம்” என்று சொல்லு வதும் வேறு யாராவது இவைகளுக்காக சட்டம் செய்ய சட்டசபைக்கு மசோ தாக்கள் கொண்டு போனால் “சீர்திருத்தங்கள் சட்டங்களின் மூலம் செய்ய விட முடியாது. பிரசாரத்தின் மூலம்தான் செய்ய வேண்டும்” என்று சொல்லு வதுமான தந்திரங்களினால் மக்களை ஏமாற்றி காலம் தள்ளிக் கொண்டு வருகிறார்கள்.

ஆகவே இந்த நிலைமையில் முதலில் நமது கடமை என்ன என்பதை வாசகர்களே யோசித்துப் பாருங்கள்.

**குடி அரசு - தலையங்கம் - 05.10.1930**



# திருச்சியில்
# நீலாவதி - ராம சுப்ரமணியம் திருமணம்

சகோதரிகளே! சகோதரர்களே!!

இன்றைய தினம் நாம் நீலாவதி - ராமசுப்பிரமணியம் திருமணத்தை முன்னிட்டு இங்கு கூடியிருக்கிறோம். இடம் இல்லாததனால் மிக நெருக்க மாக இருக்கிறது. அநேகம் ஜனங்கள் கீழே நிற்கின்றனர். இம் மாதிரிக் கல்யா ணங்கள் நமது கொள்கைகளைப் பிரசாரம் செய்வனவாகவே இருக்கின்றன. அறிவு கொண்டு உண்மை நோக்கத்தோடு இவ்விருவரின் திருமணம் நடை பெறப் போகின்றது. திருமணம் நடந்த பிறகு நண்பர்கள் இரண்டொரு வார்த்தைகள் சொல்வார்கள். திருமணத்தை நடத்திக் கொள்ளு மாறு மண மக்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். (மணமக்கள் இருவரும் ஒருவருக் கொருவர் மாலையிட்டு மோதிரங்களை மாற்றிக் கொண்டனர்)

இங்கு எல்லோரும் விஜயம் செய்து இப்பொழுது நடைபெற்ற திருமணத்திற்குச் சாட்சி அளித்தோம். அது நமது கடைமையுமாகும். இப் பொழுது நடைபெற்று வரும் மற்ற மணங்கள் எப்படி நடைபெறுகிற தென்றால், ஒரு பெண்ணையும் ஆணையும் பிடித்து இருவரின் சம்மத மில்லாமலேயே கட்டாயப்படுத்திச் செய்யப்படுகிறது. அந்தப் பெண்ணா னவள் கொஞ்சமும் சுதந்தரமற்று மாமன், மாமி, நாத்தி, கொழுந்தன், புருஷன் ஆகியவர்களுக்கு என்றும் அடிமையாகவே இருந்து வரவேண்டியவளா யிருக்கிறாள். “கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருஷன்” என்று கூறிப் பெண்ணினுடைய வீரத்தையும், மனிதத் தன்மையும் அழிக்கப் பட்டிருக்கிறது. நளாயினி, சீதை, சந்திரமதி முதலியவர்களைப் போல இருக்க வேண்டுமென்று பெண்களுக்குச் சொல்லப்படுகிறது. சந்திரமதியைப் போல் இருக்கவேண்டுமென்றால், கடனுக்காக புருஷன் தன் மனைவியை விற்றுவிடலாமென்றுதான் அர்த்தம், புருஷன் தன் மனைவியை விற்பனை செய்ய உரிமையுள்ளவன் என்றால், இதை விடப் பெண்களுக்கு மரியாதை கெட்டதனம் வேறென்ன இருக்கிறது. சீதையைப் பற்றிய கதை ரொம்ப ஆபாசமானது. சீதை நிறை கர்ப்பமாய் இருக்கும் பொழுது காட்டுக்கு



RangaRakes tamilnavarasam.com

விரட்டப்பட்டாளென்றால், அது எவ்வளவு மூடத்தனம் என்பதை யோசித்துப் பாருங்கள். நளாயினி சரித்திரமும் ரொம்ப ஆபாசமானது. புருஷன் ரொம்பக் குஷ்டரோகி. அவன் தாசி வீட்டிற்குப் போக வேண்டு மென்று பிரியப் பட்டானாம். அவனைக் கூடையில் வைத்துத் தூக்கிக் கொண்டு போய் தாசி வீட்டில் விட்டாளாம். இது எப்படி யிருக்கிறதென்றால் தாசி வீட்டிற்குப் போக லைசென்ஸ் கொடுப்பது போலிருக்கிறது. புருஷனைத் தாசி வீட்டில் கொண்டு போய் விடுவது தான் பெண்ணின் கற்பா என்று கேட்கிறேன். புருஷன் தாசி வீட்டிற்குப் போக வேண்டுமென்று கூறினால், அவனை வெளியில் தள்ளி கதவைச் சாத்துவதுதான் சுயமரியாதையுடையவளின் செயலாகும்.

ஒருவர்:- ஒருதாரமிருக்கிற பொழுது மறுதாரம் கட்டலாமென்பது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையா? ஹிந்து மதக் கடவுள்கள் பல மனைவிகளையுடையவர்களாய் இருக்கின்றனர். அந்த மதம் தப்பிதமானது என்று கூறும் சுயமரியாதை இயக்கம் ஒரு மனைவியிருக்க மற்றொரு மனைவியை மணம் செய்ய அனுமதிக்கலாமா? என்று கேட்டார்.

திரு. இராமசாமி அவர்கள் பதில் கூறியதாவது:-

இப்பொழுது கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியது நமது கடமையேயாகும். சுயமரியாதை இயக்கம் என்ன சொல்லுகிறதென் றால், ஒவ்வொருவரும் எல்லா விஷயங்களிலும் தங்கள் பகுத்தறிவை உபயோகப் படுத்த வேண்டுமென்றும், ஆண், பெண் இருவருக்கும் சமத்துவம் இருக்க வேண்டுமென்றும் சொல்லுகிறது. சுயமரியாதை இயக்கத் தால் கண்டிக்கப்படுகிற தேவர்கள் செய்யும் காரியங்களையெல்லாம் செய்யக் கூடாதென்பது நோக்கமல்ல. தேவர்கள் சாப்பிடுகின்றார்கள். மூச்சு விடுகிறார்கள் என்பதால் நாமெல்லோரும் சாப்பிடக் கூடாது, மூச்சு விடக் கூடாது என்பது முட்டாள் தனமாகும். பகுத்தறிவிற்கு எது பொருத்த மாயிருக்கிறதோ அதைக் கைக் கொள்ளவேண்டுமென்பதுதான் சுய மரியாதை இயக்கத்தின் நோக்கமாகும். கல்யாணம் என்பது ஒரு மனிதனு டைய இன்பத்தைப் பொறுத்ததேயன்றி வேறொன்றுமில்லை. ஒரு ஆணுக் கும், பெண்ணுக்கும் வாழ்க்கையில் ஒத்துவராவிட்டால் வேறு கல்யாணம் செய்து கொள்வதில் பிசகொன்றுமில்லை. அதே உரிமையை பெண்ணுக் கும் கொடுக்க ஆண் தயாராயிருக்கிறார். கல்யாணத்தை கத்தரிக்காய், வாழைக்காய் போல நினைத்து பொருத்தமற்ற முறையில் கல்யாணத்தைச் செய்து வைத்து வாழ்க்கை முழுமையும் துன்பத்திலும் அடிமைத்தனத்திலும் இருக்கும்படி செய்வது அறியாமையாகும். சமீபத்தில் நகர் என்ற ஊரில் ஒரு சுயமரியாதை கல்யாணம் நடந்தது. மாப்பிள்ளை கிறிஸ்தவர். கிறிஸ்து மதச் சட்டப்படி ஒரு மனைவி யிருக்க மற்றொரு மனைவியை விவாகம் செய்து கொள்ள அனுமதியில்லை என்றாலும் அவரவர் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துதல் விரோதமாகும். எனவே அக்கல்யாணத்தைச் சிறப்பாக



RangaRakes

முடித்து வைத்தோம். இங்கு நடைபெற்ற திருமணத்தின் தம்பதிகள் மிகச் சிறந்தவர்கள் என்பது என் கருத்து. தகுதி வாய்ந்த இத்தம்பதிகள் சிறந்து வாழ விரும்புகிறேன்.

**குடி அரசு - சொற்பொழிவு - 12.10.1930**



tamilnavarasam.com

# மறுமணம் தவறல்ல

திருச்சியில் இம்மாதம் 5-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடந்த நீலாவதி-ராமசுப்பிரமணியம் திருமணத்தின் போது ஒரு கேள்வி பிறந்தது. அதாவது "ஒரு மனைவியிருக்க மறுமணம் செய்யலாமா?" என்று கூட்டத்தில் ஒருவர் எழுந்து கேட்டார். அதற்கு அப்போதே பதில் சொல்லப்பட்டதானாலும், இந்த விஷயத்தில் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டவருக்குள்ளாகவே பலருக்கு அம்மாதிரி மறுமணம் செய்து கொள்வது தவறு என்கிற அபிப்பிராயமும், சந்தேகமும் இருப்பதாலும் பொது ஜனங்களிலும் பலர், "மனைவியிருக்க மறுமணம் செய்துகொள்வது சீர்திருத்தக் கொள்கைக்கு விரோதம்" என்று கருதுவதாலும், இதைப் பற்றிய நமது அபிப்பிராயத்தை இவ்வாரம் தலையங்கமாக எழுதலாம் என்று கருதி தொடங்குகின்றோம்.

முதலாவது இந்தக் கேள்வியைப் பற்றிக் கவனிக்கும் முன்பு மணம் என்பது என்ன? என்பதை முதலில் விளக்கிக் கொள்ள வேண்டும். மணம் என்பதை நாம் மணமக்கள் சௌகரியத்திற்காக என்று செய்து கொள்ளப் படும் ஒரு ஒப்பந்த ஏற்பாடு என்றுதான் கருதுகின்றோம். அதில் இருவர் களுடைய சுயேட்சையும் சேர்ந்தோ அல்லது தனித்தனியோ கட்டுப் படுத்தும் எவ்வித கொள்கைகளும் இருக்கக் கூடாது என்றும் கருதுகின் றோம். இம்மாதிரி கருதுவது சரியா, தப்பா என்று முடிவு செய்வதிலிருந்தே மேற்கண்ட கேள்விக்குச் சிறிது சமாதானமும் கிடைத்துவிடும்.

நிற்க, இன்று உலகத்தில் இயற்கை உணர்ச்சியிலும், அநுபவத்திலும் மற்றும் கட்டுப்பாட்டுக் கொள்கையின் கீழும் மறுமணம் என்பது எங்காவது தடுக்கப்பட்டிருக்கின்றதா என்பதை நம்மால் அறியமுடியவில்லை. அது மாத்திரமல்லாமல் மண விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களிலும், எந்த மத விஷயமான கொள்கைகளிலும் மறுமணம் என்பது தடுக்கப்பட்டி ருப்பதாகவும் தெரியவில்லை. இந்து மதத்தில் அறுபதினாயிரம் பெண்கள் வரையிலும் மகமதிய மதத்தில் சுமார் 10 பெண்கள் வரையிலும், கிறிஸ்தவ மதத்தில் அளவு குறிப்பிடாமல் எவ்வளவு பெண்களை மணம் செய்து கொள்ள நேர்ந்தாலும் அதுவரையிலும் மணம் செய்து கொள்ள இடமிருக் கின்றது. இவற்றுள் கிறிஸ்து மதத்தில் மாத்திரம் திருமணத்தை ரத்து செய்து



விட்டு மறுமணம் செய்து கொள்ளலாம் என்பதாகவும், அந்தப்படி ரத்து செய்து கொள்வதிலும் இன்னின்ன நிபந்தனைகளின்படிதான் செய்து கொள்ளலாம் என்றும் காணப்படுகின்றது. அதாவது சமுதாய சம்மந்தமான ஒரு பந்தோபஸ்தை உத்தேசித்து மாத்திரமே அல்லாமல் கொள்கைக்காக அல்ல என்று புரியும் படியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே இவ்வளவுதான் மறுமண விஷயத்தில் மற்ற மதத்திற்கும் கிறிஸ்தவ மதத்திற் கும் உள்ள வித்தியாசம். எனவே ஒன்றுக்கொன்று நிபந்தனைகளிலும் திட்டங்களிலும் தான் வித்தியாசமே தவிர மற்றபடி மறுமணக்கொள்கையை மதங்களின் படி பார்த்தால் எந்த மதமும் ஆட்சேபித்திருப்பதாய் தெரிய வில்லை. அன்றியும் இந்து மதத்தில் கடவுள்களே பல மணங்கள் செய்து கொண்டதாகவும் மற்றும் வைப்பாட்டிகளை வைத்திருப்பதாகவும், மத ஆதாரங்களில் காணப்படுவதுடன் அக்கடவுள்களை அந்தப்படியே அதா வது பல மனைவிகள், வைப்பாட்டிகள் ஆகியவைகளுடன் பூசை உற்சவம் முதலியவைகள் செய்தும் வருகின்றார்கள். மகமதிய மதத்திலும் திரு. மகமது நபி அவர்களே பல மனைவிகளுடன் இருந்ததாக ஒப்புக் கொள்ளப்படு கின்றன. ஆகவே இதை மறுப்பவர்களோ இம்மாதிரி கடவுள்களையோ, திரு. நபிகளையோ குற்றம் சொல்லுகின்றவர்களோ ஒருக்காலும் தங்கள் மதத்தின் பேரால், மத சம்மந்தமான கட்டளைகளின் பேரால் மறுக்கின்றோம் என்று சொல்லிக் கொள்ள முடியாது. அந்தப்படி யாராவது ஒருவர் தன்னை இந்துவென்று சொல்லிக் கொண்டு இம்மாதிரி அதாவது ஒரு மனிதன் மனைவியிருக்க மறுமணம் செய்து கொள்ளலாமா என்று கேட்பாரேயானால் அப்படிப்பட்டவரை நாம் மதத்தை விட தன்னு டைய பகுத்தறிவையோ அல்லது அநுபவ சவுகரியத்தையோ அல்லது வேரேதாவது ஒரு கொள் கையோ முக்கியமாகக் கருதிக் கொண்டு இம்மாதிரி கேள்வி கேட்க வந் திருக்கிறார் என்று தான் கொள்ள வேண்டும்.

ஆகவே அக்கேள்விக்காரர் தன்னை இந்து என்று கருதிக் கொண்டு கேள்வி கேட்பதை விடப் பகுத்தறிவுக்காரர் என்றோ அநுபவக் கொள்கைக் காரர் என்றோ கருதிக் கொண்டு கேள்வி கேட்கிறார் என்று அறிந்தோ மானால் அது விஷயத்தில் நாம் மிகவும் மகிழ்ச்சி அடைவதுடன் அவருக்கு நியாயம் மெய்ப்பிக்கும் விஷயத்தில் நமக்குச் சிறிதும் கஷ்டமில்லை என்றே எண்ணுகின்றோம்.

நிற்க, பொதுவாக ஒரு மனிதனுக்கு தன் முதல் பெண்சாதி (1) செத்துப் போன காலத்திலும், (2) மற்றொரு கணவனிடம் ஆசை கொண்டு வெளிப் பட்டு விட்ட காலத்திலும் மறுமணம் செய்து கொள்ளுவதை யாரும் குற்றம் சொல்லுவதில்லை. அதுபோலவே (3) தீராத கொடிய வியாதிக்காரியா யிருக் கும் காலத்திலும் மறுமணம் செய்து கொள்ளுவதை யாரும் ஆட்சேபனை செய்வதில்லை (4) பயித்தியகாரியாய் புத்தி சுவாதீன மில்லாமல் போய் விட்ட காலத்திலும் யாரும் ஆட்சேபனை செய்வதில்லை. ஆகவே



RangaRakes tamilnavarasam.com

பகுத்தறிவுக்காரரும் அனுபவக் கொள்கைக்காரர்களும் மேற்கண்ட முதலாவது தவிர மற்ற 3 சந்தர்ப்பங்களில் மனைவியிருக்க மறுமணம் செய்யப்படுவதை ஆட்சேபிக்க மாட்டார்கள். இனி ஐந்தாவது, ஆறாவது முதலியவைகளாகப் பல விஷயங்களைக் கவனிப்போம். (5) மனைவி அறியாமையாலோ, முரட்டுத்தனமான சுபாவத்தாலோ புருஷனை லட்சி யம் செய்யாமல் ஏறுமாறாய் நடந்து கொண்டு வருவதாக வைத்துக் கொள்வோம். (6) புருஷன் பெண்ணின் மனத்திற்குத் திருப்திப்படாததாலோ அல்லது எந்தக் காரணத்தாலோ புருஷனிடம் பெண்ணுக்கு அன்பும் காதலும் இல்லாமல் வெறுப்பாயிருப்பதாக வைத்துக் கொள்வோம். (7) மேற்கண்ட குணங்களுடன் அடிக்கடி தாய் வீட்டுக்குப் போய் விடுவதாக வைத்துக் கொள்ளுவோம். (8) புருஷனுடைய கொள்கைக்கு நேர் மாற்றமான கொள் கையுடன் புருஷன் மனம் சதா சங்கடப்படும்படி பிடிவாதமாய் நடந்து கொள்ளும் சுபாவமுடையவர் என்று வைத்துக் கொள்ளுவோம். (9) செல்வச் செருக்கால் புருஷனைப் பற்றிய லக்ஷியமோ கவலையோ இல்லாமல் நடந்து கொள்ளுகிறவள் என்று வைத்துக் கொள்ளுவோம். இவைகள் மாத்திரமல்லாமல் மற்றும் இது போன்ற குணங்கள் உள்ள மனைவியிடம் அகப்பட்டுக்கொண்ட கணவன் கதி யென்ன ஆவது? என்பதைக் கவனிக்க வேண்டியது கேள்வி கேட்பவர்கள்(அதாவது அனுபவ கொள்கைக்காரர்கள் என்பவர்களின்) முக்கியக் கடமையாகும். இவை தவிர புருஷனுக்கு 12 வயதிலும் பெண்ணுக்கு 10 வயதிலும் மற்றும் மணமக்களுக்கு இதிலும் கீழான வயதிலும் பெற்றோர்களாலோ, மற்றோர்களாலோ திருமணம் செய்யப்பட்டிருப்பதால் அவைகள் மணமக்கள் அனுசரிக்க வேண்டிய தர்மங்களுக்கு கட்டுப்பட்ட மணங்களாகுமா? அல்லது திருமணங்கள் செய்து வைத்தவர் கள் அநுசரிக்க வேண்டிய தர்மங்களுக்கு கட்டுப்பட்டவைகளாகுமா? என்ப தும் கேள்வி கேட்கின்றவர்கள் அதாவது பகுத்தறிவுகாரர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்களாகும். இந்தக் காரணங்கள் தவிர மற்றும் எது எப்படி இருந்தாலும் மனதுக்குப் பிடிக்கவில்லை, அன்புக்குச் சிறிதும் பாத்திரமில்லை, காதலுக் குச் சிறிதும் இஷ்டமில்லை, வாழ்க்கைத் திருப்திக்கும் இன்பத் திற்கும் சிறிதும் பயன்படவில்லை என்று மணமகன் முடிவு செய்து கொள்ளத் தகுந்த மணமகளாய் அமைந்து விட்டால் அப்போது மணமகளின் கடமை என்ன? என்பதை மதக்கட்டுப்பாட்டுக்காரரும், அநுபவக் கொள்கைக் காரரும், பகுத்தறிவுக்காரரும், பாமர பொது ஜனங்களும் சேர்ந்து கவனித்துப் பார்க்க வேண்டிய காரியமாகும்.

கடைசியாக இவைகள் எல்லாம் ஒருபுறமிருக்க, இவைகளைப் பற்றிய யோசனையே சிறிதுமின்றி மற்றொரு புறம் "எப்படி இருந்தாலும் பொருத்துக் கொள்ளவும் சகித்துக் கொள்ளவும் தான் வேண்டும், ஒருக் காலமும் மனைவியிருக்க மறுமணம் செய்து கொள்ளக்கூடாது" என்று ஒருவர் சொல்லுவாரானால் அப்படிச் சொல்லுகின்றவர் எந்தக் கொள்கை யின் மீது அல்லது என்ன அவசியத்தைக் கோரி அல்லது என்ன நியாயத்தை



உத்தேசித்து எவ்வித அநுபவத்தை அனுசரித்து அல்லது எந்தப் பகுத்தறிவைக் கொண்டு இப்படிச் சொல்லுகின்றார்கள் அல்லது எதிர்பார்க்கின்றார்கள் என்பது விளக்கப்படவேண்டும். ஏனெனில் அப்பொழுதுதான் அது கவனிக்கப்படத்தக்கதாகும். ஏனெனில் சாதாரணமாகப் பேசுவோமானால் வெகு சாதாரண பாமர மக்கள் என்பவர்களும் கூட இக்காலத்தில் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசும் போது அது "சுருதி, யுக்தி, அநுபவம் ஆகிய மூன்றிற்கும் பொருத்தமாயிருக்கின்றதா" என்று கேட்பது எங்கும் சகஜமாயிருப்பதைப் பார்க்கின்றோம். அன்றியும் அம்மூன்று வார்த்தைகளின் அமைப்பும் முதலில் குறிப்பிட்ட சுருதிப்படி (அதாவது நமக்கு முந்தி இருந்த அநுபவசாலிகளின் அபிப்பிராயங்கள் என்கின்ற முறையில் கவ னிக்க வேண்டும் என்கின்ற தத்துவம் கொண்ட தானாலும் அப்படிப்பட்ட அநுபவசாலிகளின் அபிப்பிராயம் எவ்வளவு) சரியானதென்று சொல்லப் பட்டாலும் கூட மற்றும் அவ்விஷயமானது யுக்திக்கு (அதாவது நமது பகுத்தறிவுக்கு)ம் ஒத்ததாயிருக்கின்றதாவென்று கவனிக்க வேண்டும் என் கின்ற தத்துவத்தையே கொண்டு யுக்தி என்பதை இரண்டாவதாக வைக்கப் பட்டிருக்கின்றதையும் பார்க்கின்றோம். அப்படி யும் அதாவது யுக்திக்கும் பொருத்தமானதாகயிருந்து விட்டதாகச் சொல்லப் படுவதானாலும் அது அநுபவத்திற்கு (அதாவது நடைமுறையில் கொண்டு செலுத்த ஏற்றதாயிருக்கின்றதா? என்று கவனித்துப் பார்க்க வேண்டும் என்கிற தத்து வத்தை வைத்தே அநுபவம் என்பதை முடிவில் மூன்றாவதாக வைக்கப் பட்டிருக்கின்றது என்பது யாவருக்கும் விளங்கும். ஆகவே ஒரு மனிதன் "ஒரு மனைவி இருக்கும்போது மறுமணம் செய்து கொள்ளக் கூடாது" என்பது இந்த மேற்கண்ட மூன்று பரீட்சைகளில் எந்த பரீட்சைக்கு விரோதமானது என்று கேட்கின்றோம். நிற்க, திருமணத்தில் மணமகனுக்கு மணமகளை வாழ்க்கைத் துணையென்று கருதுகின்றோம். இன்னிலையில் மேலே ஆரம்பத்தில் சொல்லப்பட்ட 9 - வகையில் பட்ட குற்றமான குணங் கள் அமைந்த மணமகள் ஒரு மணமகனுக்கு அமையப்பட்டு விட்டால் அது வாழ்க்கைத்துணையா அல்லது வாழ்க்கைத் தொல்லையா என்பதை முதலில் கண்டிப்பாய்க் கவனிக்க வேண்டும். வேடிக்கையாக வெளியிலி ருந்து பேசுகின்றவர்களை உண்மையறியாமல் நிலையறியாமல் சிறிதும் பொறுப்பற்ற முறையில் பாமர மக்களின் ஞானமற்ற தன்மையை தங்க ளுக்கு ஆதாரமாய் வைத்துக் கொண்டு கண்மூடித்தனமாய் குற்றம் சொல்லக் கருதிக் கொண்டு "மனைவியிருக்க மறுமணம் செய்யலாமா" என்று யார் வேண்டுமானாலும் பேசிவிடலாம். அதாவது "மனைவியிருக்க மறுமணம் செய்து கொள்வது அக்கிரமம், அயோக்கியத்தனம்" என்பதாகச் சொல்லி விடலாம். ஆனால் அந்தப்படி செய்து கொண்டது தப்பா, அல்லது இந்தப் படி சொன்னது தப்பா என்பதையும் பகுத்தறிவைக் கொண்டாவது அநுபவத்தன்மையைக் கொண்டாவது இந்தப்படி பேசுகின்றோமா, நினைக் கின்றோமா- இவ் விஷயத்தில் நாம் பிரவேசிக்கின்றோமா என்று நினைத்துப்



RangaRakes
tamilnavarasam.com

பார்த்தால் கடுகளவு அறிவுடையவனுக்கும் ஒருக்காலமும் உண்மை விளங்காமற் போகாது என்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

கடைசியாக ஒன்று சொல்லுகின்றோம். ஒரு மனிதன் ஒரு விஷயம் தனக்கு இஷ்டமில்லை என்றோ அல்லது இஷ்டமாயிருக்கின்றதென்றோ இன்ன காரியம் செய்ய தனக்கு உரிமை இருக்க வேண்டுமென்றோ உரிமை இருக்கக்கூடாது என்றோ கருதுவதற்கு அருகதை உடையவன்தானா அல்லது மற்றவர்களா என்பதும் இம்மாதிரி விஷயங்களில் முடிவான அபிப்பிராயத்திற்கு வர அவனவனுக்கு உரிமை இல்லையா என்பதையும் கவனிக்க வேண்டியது உண்மையான விடுதலையும் சுதந்திரம் கோருகின்ற வர்களின் கடமையுமாகும்.

நிற்க, வாஸ்தவத்திலேயே அன்பும், காதலும் இல்லாத அல்லது தனக்கு ஏற்படாத ஒரு இடத்தில் மனிதன் எப்படி வாழ்வது? மக்களுடைய அன்புக்கும், காதலுக்கும், இன்பத்திற்கும், திருப்திக்கும் தான் ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணும், ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணும் சேர்ந்து மணம் (வாழ்க்கை ஒப்பந்தம்) செய்து கொள்வதா? அல்லது மணம் செய்து கொண்டதற்காக என்று அன்பையும், காதலையும், இன்பத்தையும், திருப்தி யையும் தியாகம் செய்வதா? என்பதை ஜீவசுபாவமுடைய ஒவ்வொரு வரையும் யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம். உலகில் உள்ள மூடப்பழக்கவழக்கங்களில், அர்த்தமற்ற கட்டுப்பாடுகளில் - சிக்கிக் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கும் மக்களை அவற்றிலிருந்து விடுவிப்பது என்பது சுலபமான காரியமல்லவானாலும் அவ்விதக் கட்டுப்பாடுகளையும், கஷ்டங் களையும் ஒழிக்கவென்றே ஏற்பட்ட ஸ்தாபன நடவடிக்கைகளையே மூடப் பழக்க வழக்கப்படியும் குருட்டு நம்பிக்கைப்படியும் செய்யவில்லை என்று குற்றம் சொன்னால் சொல்லுபவர்களுக்கு அறிவு என்பது ஏதாவது இருக் கின்றதாவென்று தான் கருத வேண்டியிருக்கின்றது. ஏனெனில் இவ்வியக்கம் அதற்காகவே ஏற்பட்டிருக்கும்போது அதன் நடவடிக்கை கள் வேறு எப்படி இருக்க முடியும். ஆகையால் இவ்வித யுக்திக்கும் அனுபவத்திற் கும், மனித சுதந்திரத்திற்கும், இன்பத்திற்கும், திருப்திக்கும் விரோதமான கொள்கைகள் எதற்காக காப்பாற்றப்பட வேண்டும் என்னும் விஷயங்களை அன்பர்கள் நடுநிலையில் இருந்து நேர்வழியில் சிந்தித்துப் பார்ப்பார்களாக.

நிற்க, சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ளாகவே மறுமண விஷயத்தில் உள்ள அதிர்ப்தியைப் பற்றிச் சற்றுக் கவனிப்போம்.

சுயமரியாதை இயக்கத்தில் கலியாண ரத்து என்பதும் ஒரு திட்ட மாகும். அந்தப்படியே செங்கற்பட்டு மகாநாட்டில் ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டு ஈரோடு மகாநாட்டில் அதற்காக ஒரு சட்டம் செய்ய வேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே மணம் செய்து கொண்ட மணமக்கள் அந்தப்படியே கணவன் மனைவியையோ, மனைவி, கணவனையோ கலியாண பந்தத்திலிருந்து நீக்கிவிட அல்லது நீங்கிக் கொள்ள உரிமை ஒப்புக் கொள்ளப்பட்டாய்விட்டது. இந்தப்படி ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கை அமுலில் கொண்டு வரச் சட்ட சம்பந்தமான இடையூறு யாருக்காவது எந்த மதத்திற்காவது இருக்குமானால் அதற்காக சட்டத்தை யுத்தேசித்துக் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதா? அல்லது சட்டங் களைக் கவனிக்காமல் நியாயம் என்று தோன்றிய படி நடந்து கொள்ளுவதா? என்பதைக் கவனித்துப் பார்த்தால் அவர்களது அதிர்ப்திக்குச் சிறிதும் இடமிருக்காது என்றே கருதுகின்றோம்.

உதாரணமாக சுயமரியாதைக் கொள்கைப்படி செய்யப்படும் திரு மணங்களிலும் சில சட்டப்படி செல்லக் கூடாதவைகளாகயிருந்தாலுமிருக் கலாம். அதாவது:-

“மணமக்கள் இருவரும் வேறு வேறு ஜாதிகள்” என்று சொல்லப் படும் கலப்பு மணங்களும், மூடப் பழக்க வழக்கங்களும் அர்த்தமற்றதும் அவசியமற்றதுமான சடங்குகள் செய்யப்படாத சில திருமணங்களும் செல்லுபடியற்றதாகவானாலும் ஆகலாம் என்று சட்ட வல்லவர்கள் சொல்லு வதாகக் கேள்விப்படுகின்றோம். அப்படியிருந்தாலும் கொள்கையிலிருக் கும் அவாவை உத்தேசித்து சட்டத்தைக் கவனியாமலும், அதனால் ஏற்படக் கூடிய பலன்களை லட்சியம் செய்யாமலும், எல்லாவற்றிற்கும் துணிந்து பலர் மணம் செய்து கொள்ளுவதை நாம் பார்க்கின்றோம். ஆகவே மறுமண விஷயத்தில் முதல் “மனைவி”யை சட்டப்படி கலியாண ரத்து செய்ய முடி யாமல் போய்விட்டதால் “கல்யாண ரத்து செய்யாமல் மறுமணம் நடத்தப் பட்டது” என்று சொல்லப்படுவதை விட இம்மாதிரி திருமணங்களில் சுயமரியாதைக் காரர்களுக்கு கொள்கைப் பிசகோ நியாயப் பிசகோ இருப்ப தாக நமக்குத் தோன்றவில்லை.

தவிரவும், முதல் மனைவி மணமகனுடன் ஒன்றாக வாழ்ந்து கொண்டு இருக்கும்போது கூட மறுமணம் செய்து கொள்ளப்படுவதையும் சுய மரியாதைக் கொள்கை ஆதரிக்கின்றது என்பதைப் பற்றியும் சற்று கவனிப் போம். மக்களின் அன்பும் காதலும் ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு அது இன்ன விதமாக இன்னாரோடு மாத்திரம்தான் இருக்க வேண்டும் என்பதாக நிர்ப்பந்திக்க எவ்வித நியாயமும் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை. ஏனெனில் காதல் என்பது ஜீவசுபாவமானது. அதை ஏதோ ஒரு நிர்ப்பந்தத் திற்காகத் தடுத்து வைப்பது என்பது ஒரு வகையான அடிமைத்தனமே யாகும். அன்பு, காதல் ஆகியவைகள் ஏற்படுவது ஜீவனுக்கு இயற்கை சுபாவம் என்றும் அது சுதந்திரமுடையதாயும் உண்மையுடையதாயும் இருக்க வேண்டுமென்றும் அதை ஒரு இடத்திலாவது ஒரு அளவிலாவது கட்டுப்படுத்துவது என்பது ஜீவ சுபாவத்திற்கும் இயற்கைத் தத்துவத்திற்கும் மீறினதென்றும் ஒப்புக் கொள்ளுகின்ற மக்கள் அன்பு ஒருவரிடம் தான்



RangaRakes tamilnavarasam.com

இருக்க வேண்டும்; காதல் ஒருவரிடம்தான் இருக்கவேண்டும் என்று சொல்ல முன் வருவது முன்னுக்குப் பின் முரண் என்றே சொல்லுவோம். ஆனால் அநுபவத்தில் உள்ள சில சவுகரிய அசவுகரியங்களை உத்தேசித்து அன்பும் காதலும் கட்டுப்பாட்டுக்குள் அடங்க வேண்டியதாக ஏற்படலாம் என்பதை நாம் மறுக்க வரவில்லை. அன்றியும் ஒப்பந்தங்களினால் கட்டுப் பட வேண்டியதாகவும் காதல் பெருக்கால் தானாகவே கட்டுப்பட்டு விட்ட தாகவும் போனாலும் போகலாம். அம்மாதிரி நிலைமைகளில் இம்மாதிரிக் கேள்விக்கே இடமில்லை. ஆதலால் அப்படிப்பட்ட காரியங்களை அவர வர்கள் இஷ்டத்திற்கே விட்டு விட வேண்டியது அவசியமாகும். முடிவாக ஒன்று சொல்லி இதை இப்போது முடிக்கின்றோம். அதாவது:-

இம்மாதிரியான கேள்விகளுக்கெல்லாம் ஒரேயடியாய் அடியோடு இடம் இல்லாமல் போக வேண்டுமானால், பொதுவாகப் பெண்கள் நிலைமை மாறியாக வேண்டும். ஏனெனில் மேற்கண்ட கேள்விகள் கேட்கப்படு வதற்குப் பெரிதும் அஸ்திவாரமாயிருக்கும் காரணமெல்லாம் "இப்படிச் செய்து விட்டால் முன் மணம் செய்து கொண்ட பெண்ணின் கதியென்ன ஆவது?" என்கின்ற கவலை கொண்டேதான் கேள்வி கேட்கப்படுகின்றது. எந்தெந்தக் காரணத்தால் புருஷனுக்குப் பெண் பிடிக்கவில்லையோ - ஒத்து வரவில்லையோ அந்தந்தக் காரணங்களால் பெண்ணுக்குப் புருஷன் பிடிக்காத போது இப்போது புருஷனுக்கு இருக்கவேண்டுமென்று சொல்லப் படும் சுதந்திரமும் சவுகரியமும் போல பெண்களுக்கும் ஏற்பட்டு விடுமா னால் பிறகு இந்த மாதிரியான அநுதாபமும் கவலையும் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட இடமேயிருக்காது என்பது தான். நம்மைப் பொருத்த வரை ஆண்களுக்குச் சொன்ன விஷயங்கள் எல்லாம் பெண்ணுக்கும் பொருந்துமென்றும், அவர்களுக்கும் ஆண்களைப் போலவே ஏற்பட வேண்டுமென்றும் அம்மாதிரியே அவர்களும் நடந்து கொள்ள வேண்டு மென்றும் அப்பொழுதுதான் பெண்களுக்கு உண்மையான சுதந்திரம் ஏற்பட்டதாகும் என்பதோடு உண்மையான திருப்திகரமான இன்பத்தையும் காதலையும் அடையமுடியுமென்றும் கருதுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 12.10.1930**



# கடவுளின் நடவடிக்கை

**- சித்திரபுத்திரன்**

உலகத்தை எல்லாம் உண்டாக்கி அதில் உள்ள எல்லாவற்றையும் நடத்தும் ஒரு சர்வசக்தியுள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார். அவரால் தான் (அவர் இஷ்டப்படி) உலகம் இயங்கு (நடைபெறு) கின்றது என்று சொல்லப் படுமானால் அவரை நடுநிலைமையுடையவரென்று சொல்லுவதைவிட பாரபக்ஷமுடையவரென்று சொல்வதற்கே மிக மிக இடமிருக்கின்றன.

அவரை கருணையுடையவரென்று சொல்லுவதைவிட கருணை யற்றவரென்று சொல்லுவதற்கே ஏராளமான பிரத்தியக்ஷ உதாரணங்கள் யிருக்கின்றன.

அவரை நீதிவான் என்று சொல்லுவதைவிட அநீதிவான் என்று சொல்லுவதற்கே தாராளமான ஆதாரங்கள் அதிகமிருக்கின்றன.

அவரால் உலகுக்கு நன்மை ஏற்படுகின்றது என்று சொல்லுவதைவிட அவரால் அதிக தீமையே ஏற்படுகின்றது என்று சொல்லுவதற்குப் போதுமான ஆதாரமிருக்கின்றது.

அவர் அறிவாளி என்று சொல்வதைவிட மூடர் என்று சொல்லுவதற்கே போதுமான ருஜுவு இருக்கின்றது.

(அதுவே முடிந்த முடிவானால்) அப்படிப்பட்டவரை யோக்கியர் என்று சொல்லுவதைவிட அயோக்கியர் என்று சொல்லுவதற்கே திருஷ்டாந்தங்கள் பல இருக்கின்றன.

அவர் ஜீவன்களுக்கு நன்மையை செய்கின்றாரென்பதை விட தீமையை செய்கின்றார் என்பதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன.

அவரால் நன்மையடைந்தவர்களைவிட தீமையடைந்தவர்கள் அதிக மாக இருக்கின்றார்கள் என்று சொல்லத்தகுந்த அத்தாக்ஷிகள் மிதந்து கிடக்கின்றன.



RangaRakes tamilnavarasam.com

அவர் நாகரீக முடையவரென்று சொல்லுவதைவிட அவர் காட்டு மிராண்டி என்று சொல்லுவதற்கே அளவுக்கு மீறிய அனுபவங்கள் காணப்படுகின்றன.

அவர் இருந்தால் நல்லது என்று சொல்லுவதைவிட அப்படிப் பட்டவர் ஒருவர் இல்லாமல் இருந்தால் நல்லது என்று ஆசைப்படுவதற்கு அனேக காரணங்கள் இருக்கின்றன.

அப்படி ஒருவர் இருக்கிறார் என்று எண்ணிக்கொண்டு வாழ்க்கை யை நடத்துவதைவிட அப்படி ஒருவர் இல்லை என்று வாழ்க்கை நடத்து வதே மனித சுதந்திரத்திற்கு அதிகமான நன்மை பயக்கத்தக்கது என்று கருதுவதற்கு வேண்டிய அவசியங்கள் பல இருக்கின்றன.

அறிஞர்களே ஆராய்ந்து பாருங்கள்.

**குடி அரசு - கட்டுரை - 19.10.1930**



# சிவநேயர் சிறுமை

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் என்னும் நாட்டுக் கோட்டைச் செட்டி யார்மார்கள் தென்னிந்தியாவிலுள்ள மற்ற சமூகத்தார்களை விட செல்வ வான்களாவார்கள். எல்லோருமே வியாபார பழக்கமுள்ளவர்களாதலால் சற்று புத்திக்கூர்மையாயும் இருக்கப்பட்டவர்களாவார்கள். அப்படிப்பட்ட சமூகத் தார் ஜாதி சமய விஷயத்தில் பிடிவாத குணமுடையவர்களாகவும், குருட்டு நம்பிக்கையும், மூடபக்தியும் உடையவர்களாகவும் இருந்து வருவ தால் அவர்களது செல்வங்கள் பெரிதும் கோடிக்கணக்காகப் பாழாக்கப் படுவது மல்லாமல் நாகரீக வளர்ச்சியில் மிகுதியும் பின்னடைந்தவர்க ளாகவே அநேகர் இருந்து வருகின்றார்கள். பல மக்களிடம் பழகும் சந்தர்ப் பங்களும், பல நாடுகள் சென்றுவரும் சவுகரியங்களும் அவர்களுக்கு ஏராளமாயிருந்தும் மேல்கண்ட ஜாதி சமய விஷயத்தில் உள்ள பிடிவாத குணத்தால் உண்மையான நாகரீகத்தின் புறமும் செல்வத்தின் கிரமமான செலவின் புறமும் சிறிது கூடத் திரும்பிப் பார்க்க முடியாமல் கண்ணைக் கட்டி பரந்த காட்டுக்குள் விடப்பட்ட சுயேச்சைக்காரர்கள்போல் வகை தொகை தெரியாமல் செலவு செய்து கொண்டிருக்கவேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். இந்த சமூகத்தார்களில் இப்படிப்பட்டவர்களே பெரும் பகுதியாய் இருந்து வருவதில் நாட்டின் முன்னேற்றம் பெரிதும் பாதக மடைய இவர்களே ஒரு காரணமாயுமிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டி இருக்கிறது. பணம் சம்பாதிப்பதை முக்கிய காரணமாகக் கொண்டு வெளி நாடுகள் சென்று ஏராளமான செல்வங்களை இந்த நாட்டுக்கு கொண்டு வரு கின்றார்கள் என்பது போற்றக் கூடியதானாலும் அந்த செல்வம் நாட்டின் நாசத்திற்கும், பெருத்த ஜனத்தொகை கொண்ட சமூகங்களின் கேட்டிற்கும் பயன்பட்டு வருவது பற்றி துக்கப்படாமல் இருக்கவும் முடியவில்லை.

ஏதோ அச்சமூகத்தில் சில செல்வவான்கள் உண்மை நிலை யறிந்த மக்களாய் இருக்கின்றார்கள் என்று சொல்லக் கூடுமானாலும் அவர்களுக் கும் போதிய தைரியமும், வீரமும் இல்லாமல் தங்கள் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு பழமையைப் பின்பற்றித் தீரவேண்டிய நிர்பந்த முடையவர்களாகவே இருந்து வருகின்றார்கள். மற்றபடி அச்சமூகத்தில் சில வாலிபர்கள் மாத்திரம் தைரியத்துடனும், வீரத்துடனும் வெளிவந்து



RangaRakes tamilnavarasam.com

மேல்கண்ட குற்றங்களிலிருந்து விலக தங்களாலானதைச் செய்கின்றார்கள் என்று சொல்லலாம். ஆனாலும் அவர்களுக்கும் எதிர்ப்பும் தொல்லையும் விளைவிக்கும் கூட்டம் அச்சமூகத்திலேயே இல்லாமலும் இல்லை. அப்படிப்பட்ட கூட்டத்திற்கு அச்சமூகத்தில் ஆதரவளிப்பவர்களும் இல்லாமலில்லை. பெரும் பெரும் செல்வங்களைக் கொண்ட இச்சமூகம் இந்தப்படியான பிற்போக்குடைய நிலையில் இருப்பது நாட்டு நன்மைக்கு விரோதமாயிருப்பதால் அதைப்பற்றியே இவ்வாரம் சிறிது குறிப்பிட எண்ணுகின்றோம். இதற்கு இப்போது என்ன சந்தர்ப்பம் நேரிட்டதென்றால் மேற்கண்ட செட்டியார்களின் நாட்டிலிருந்து “சிவநேசன்” என்னும் பெய ரால் வெளியாக்கப்பட்ட ஒரு வெளியீடு நமது பார்வைக்கு எட்டியதை பார்க்க நேர்ந்தது. இவ்வெளியீட்டில் ஒன்றை சுமார் ஒரு வருஷத்திற்கு முன்னும் ஒரு தடவை நாம் பார்க்க நேரிட்டபோது அதிலிருந்த ஒரு விஷயத்திற்கு அப்போதும் ஒரு குறிப்பு எழுதினோம். அதாவது அதில் விபூதி என்னும் சாம்பலை உயர்த்தியும் நாமம் என்னும் மண்ணைத் தாழ்த்தியும் எழுதப்பட்டிருந்தது. எப்படியெனில் கடவுள் மனிதனுக்கு நெற்றி கொடுத்திருப்பதே விபூதியிடுவதற்கென்றும் அதற்காகவே கடவுள் நெற்றியை குறுக்கு வசத்தில் அதிக நீளமாய் வைத்திருக்கின்றார் என்றும், இதை அறியாதவர்கள் நரகத்திற்கு போவார்கள் என்றும், நாமம் (கோபி சந்தனம்) என்பது ஒரு ஆணும் பெண்ணும் புணர்ந்து கழுவி விடப் பட்டதின் அறிகுறி என்பதுமாக எழுதப்பட்டிருந்தது. இதைப் பார்த்தவு டனே சிவனேசர்களின் யோக்கியதை இதை அநுசரித்ததாகத்தான் இருக்க வேண்டும் என்றும் கருதி அதற்குத் தகுந்தவாறு அறிவு கொளுத்தி குறிப்பு எழுதினோம். அதுபோலவே இப்போது பார்க்க நேரிட்ட வெளியீட்டிலும் சில விஷயங்கள் காண நேரிட்டன. என்னவெனில் சமீபத்தில் திருச்சியில் நடந்த திரு. நீலாவதி- ராமசுப்ரமணியம் திருமணத்தைப் பற்றியும் மற்றும் திரு. முருகப்பா-மரகதவல்லி திருமணத்தைப் பற்றியும், திரு. சுந்தரி-அருணகிரி திருமணத்தைப் பற்றியும் இழிமொழியில் இகழ்ந்து எழுதியிருப்பதுடன் மணமகளையும், மணமகனையும் குறைவுபடுத்தியும் எழுதப்பட்டிருந்தது.

எழுதிய முறை கோழைத்தனமும் இழி குணத்தன்மையும் கொண்ட தாகக் காணப்பட்டதேயொழிய ஒரு யோக்கியமான முறையில் எழுதப்பட்ட தாகவும் காணப்படவில்லை. ஏனெனில் அத்திருமணங்களால் ஏற்பட்ட குற்றமென்ன? அதனால் யாருக்கு என்ன நஷ்டம்? எந்தக் கொள்கைப்படி அது குற்றம்? அதில் உள்ள நாணயத் தவறுதல் என்ன? என்பன போன்றவை களைக் காட்டி எழுதியிருக்கப்படுமானால் அதில் மனிதத்தன்மை பொலிந் திருப்பதைக் காணலாம். அப்படிக்கில்லாமல் கல்யாணத்திற்கு வந்திருந்த வர்களில் இருவர் தவிர மற்றவர்கள் “ஜட்காவாலாக்களும் அன்னக் காவடிகளும், டெம்பரவரிகளும், போலிகளும், சில்லரைப் பேர் வழிகளும்” ஆவார்களென்றும் மற்றும் அவன் இவன், அவள் இவள் என்று கள்ளுக்கடை சாராயக்கடை பாஷைகளிலும் பெயர்கள் குறிப்பிடுவதில்



சிறிதும் மரியாதை இல்லாமல் காட்டுமிராண்டிகள் பாஷையிலும் எழுதப் பட்டிருப்பதுடன் மணப்பெண்களை சுண்ணாம்புக்காரி, வெற்றிலைப் பாக்குக் கடைக்காரி, எச்சில் படிக்கத்தில் கரித்தூவுபவள், தாசி, வேசி, சகண்ட், தேர்ட், போர்த் ஹாண்ட் என்றும் மற்றும் அதுபோன்று குச்சுக்காரத் தெருவில் பிறந்த குழந்தைகளின் பாஷையில் அற்பத்தனமாய் இழி துறையில் உபயோகிக்கப்பட்டுமிருக்கின்றன. இதில் மற்றொரு விசேஷ மென்னவென்றால் இந்த வெளியீட்டுக்கு சிவநேசன் என்ற பெயரும் இதில் சேர்ந்தக் கூட்டத்தார்களுக்குச் சிவநேசர்கள் என்ற பெயரும் வைத்துக் கொண்டிருப்பதாகும். அன்றியும் இந்தக் கூட்டத்தார் இப்படி எழுதுவதற்குச் சொல்லப்படும் காரணமாய் அவர்கள் குறிப்பிடுவது என்ன வென்றால் இத்திருமணங்களால் அவர்கள் சாதியும் சமயமும் போய்விடுகின்றன என்பதாகும். ஆனால் இந்த பேர்வழிகள் எந்த சாதி சமயத்தைப் பற்றி இவ்வளவு கவலை எடுத்துக்கொண்டு இப்படி எழுதினார்கள் என்பது மாத்திரம் அதில் இருந்து சரியாய் விளங்கவே இல்லை. இந்தப்படி எழுதும் சிவநேசர் ஜாதியும், சிவநேசர் சமயமும் போய்விட்டதென்று கவலைப் படுகின்றார்களோ அல்லது இப்படிப்பட்டவர்களை ஆதரிக்கும் ஜனங்க ளுடைய மூட நம்பிக்கை ஜாதியும், மடச்சமயமும் போய்விட்டதென்று கவலைப்படுகின்றார்களோ என்பதும் நாம் அறியக்கூடவில்லை. கடுகள வாவது மானம், வெட்கம், மனிதத்தன்மை, யோக்கியப் பொறுப்பு ஆகிய சாதாரண குணங்களாவது இந்த சிவநேசக் கூட்டத்திற்கு இருந்திருக்கு மானால் எவ்வித குற்றமும் செய்யாத நிரபராதிகளான மக்களை யாதொரு காரணமும் இல்லாமல் திருமணத்திற்கு வந்திருந்ததற்கு ஆகவே ஜட்கா வாலா, டெம்பர்வரி, அன்னக் காவடிகள், காலி, போலி, சில்லரை பேர்வழி என்றும், பெண் மக்களையும் தாசி, வேசி போன்ற அற்ப வார்த்தைகளாலும் வசைபாட சம்மதிக்க முடியுமா என்று கேழ்க்கின்றோம்.

இதுபோலவே திருப்பிச் சொல்ல வேண்டுமானால் இவர்கள் யோக்கியதைக்கும், நடத்தைக்கும் தகுந்த வார்த்தைகள் சுலபத்தில் கிடைக் காததாலும் அது அழகாயிராதென்றும் கருதி அதில் நேரம் செலவழிப்பதை விட்டு விட்டு அவ் வெளியீட்டின் மூலம் அவர்கள் கவலைப்படும் விஷயத்தில் பிரவேசிக்கின்றோம்.

அதாவது:- அதில் முக்கியமாய் குறிப்பிட்ட 1. கல்யாணம் கண்ட றாக்டா? என்பதும் 2. ஜாதி சமயம் போய்விடுகிறதே என்பதும் 3.பிள்ளை யார் பட்டி இரணிக்கோயில் கூட்டத்தார்கள் சேர்ந்து மணமக்களை ஜாதியை விட்டு விலக்கிவைக்க வேண்டும் என்றும் விரும்பும் விஷயங்களைப் பற்றிச் சிறிது கவனிப்போம்.

முதலாவது,

கல்யாணத்தை கண்டறாக்ட்டு (ஒப்பந்தம்) தான் என்றே நாமும்



RangaRakes tamilnavarasam.com

சொல்லுகின்றோம். அது ஒரு ஒப்பந்தமல்ல என்று சொல்வதானால் அறிவுக் கேற்ற ஆதாரங்களை காட்டட்டும் என்றே கேட்கின்றோம். அதுவும் மணம் செய்து கொள்ளுகின்ற மணமக்கள் செய்துகொள்ளும்படியான ஒப்பந்தம் கொண்டது தான் கல்யாணமே தவிர வேறொருவர் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்காக மணமக்கள் கட்டுப்படவேண்டும் என்பது கல்யாணம் அல்ல என்றே சொல்லுவோம். அதை இழவும் (துக்கம்) மனிதத்தன்மை யற்றதும் என்றுதான் சொல்லுவதோடு அப்படிப்பட்ட ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட்டு கஷ்டப்படுபவன் மூடன் அல்லது அடிமை என்றுதான் சொல்லுவோம். அதோடு அவ்வித ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றவர்களையும் அறிவிலிகள் அல்லது சுயநலத் தரகர்கள் என்றும் சொல்லுவோம். ஆண் பெண் சம்மதமின்றி அதுவும் அவர்களது தக்க பருவ உணர்ச்சியின் தேவை இன்றி மற்றும் தேவைக்குப் பொருந்தாத கல்யாணங்களின் யோக்கியதை இன்றைய தினம் அம்மாதிரி மணமக்கள் உள்ள வீடுகளில் நடக்கும் நடவடிக்கைகளைப் பார்த்து கேட்டு அறிந்து நடுநிலைமையில் இருந்து நினைத்துப் பார்த்தால் நாம் சொல்லுவதின் உண்மை விளங்காமல் போகாது. அதைப் பற்றி விரிக்கின் பெருகும்.

இரண்டாவதாக ஜாதி சமயம் என்பதைப் பற்றி பேசுவோம். இதில் நாட்டுக் கோட்டையார் ஜாதி என்பதையும் நாட்டுக் கோட்டையார் சமயம் என்பதையுமே எடுத்துக் கொள்ளுவோம். பிறகு சாவகாசமாய் மற்ற ஜாதி சமயத்தைப் பற்றி கவனிப்போம்.

நாட்டுக் கோட்டையார் ஜாதிக் கொள்கைகள் என்பது அச்சாதி மக்களுக்காவது அனுஷ்டிக்க முடிகின்றதா? நன்மையாயிருக்கின்றதா? உலக நாகரீகத்திற்கு ஏற்றதா? என்பனவாகிய முதலியவைகள் இங்கு கவனிக் கத்தக்கதாகும். இன்றைய தினம் பொதுவாக எங்கும் ஜாதி என்பதற்கு ஆதாரமாய் இருக்கும் கொள்கைகளில் பல வேஷத்திலேயே உடைய தாகும். அந்தப்படி பார்த்தால் நாட்டுக் கோட்டையாருக்கு உள்ள ஜாதி வேஷப்படி இன்றையதினம் யார் யார் இருக்கின்றார்கள். அவைகளில் 30 வயதுக்குக் கீழ்ப்பட்ட வாலிபர்கள் ஜாதிக் கொள்கைக்கு விறோதமாய் தலை யில் மயிர் வளர்த்துக் கத்தரித்துக் கொள்ளுகின்றார்கள். 30 வயதுக்கு கீழ் பட்ட பெண்கள் காது துவாரத்தை சிறிதாக்கி கம்மல் தோடு இட்டுக் கொள்ளு கிறார்கள். இரவிக்கையும் போட்டுக் கொள்ளுகிறார்கள். இனியும் இது போலவே பல விஷயங்கள் செய்த இந்த ஜாதிக் கொள்கை வேஷத்தில் இன்றும் பல மாறுதல் அச்சாதி, பிரபு வீடு முதல் ஏழை வீடு வரையிலும் இன்று புகுந்து விட்டன. சிவநேசர் கூட்டத்திலும் தாண்டவமாடுகின்றன. ஆகவே இம்மாதிரியான ஜாதி வேஷக் கொள்கைகளை தப்பு என்று இவர்கள் சொல்லுவார்களானால் பழய கொள்கை நியாயமும் நாகரீக முமானதா என்று கேட்கின்றோம். "பழைய கொள்கையைச் சேர்ந்த வேஷங்கள் தான் நியாயமானது. அதில் சிறிது மாற்றினாலும் ஜாதி கெட்டுப் போகும்" என்று



கருதுவார்களானால் கொஞ்ச காலத்துக்குள் நாட்டுக் கோட்டை ஜாதியாரெல் லாம் உலகத்திலுள்ள கண்காட்சி சாலைகளுக்கு விலை கொடுத்து வாங்கிக் கொண்டு போகப்பட வேண்டியவர்களாகத்தான் ஆய்விடுவார்களே தவிர நாட்டுக் கோட்டை நகரத்தில் வசிப்பதற்கு ஆளே கிடையாமல் போய்விடும் என்றே சொல்லுவோம்.

ஜாதியைக் காட்டுவதற்கு அடுத்தாப்போலுள்ளது சடங்கும் அது பற்றிய பழக்க வழக்கங்களுமாகும்.

ஆகவே அந்த விதமான ஜாதி சடங்குகள் பழக்க வழக்கங்கள் ஆகியவைகளைப் பற்றி சிறிது கவனிப்போம். அவை அறிவிற்கும், நாகரீகத்திற்கும், சௌகரியத்திற்கும் ஏற்றதா என்பதையும் கவனிப்போம்.

முதலாவது அவர்களுடைய கல்யாணம் என்பதில் உள்ள கஷ்டங் களே ஒரு மனிதன் காதினால் கேட்க சகிக்காததாகும். கல்யாணம் செய்த பிறகு அப்பெண்களுடன் வாழும் தன்மையோ மிகவும் பரிதாபகரமான தாகும். அதாவது ஒரு சாதாரண மனிதனுக்கு கல்யாணம் ஆக வேண்டு மானால் 35 ஆயிரம் ரூபாய் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை வேண்டும். ஒரு மனிதனுக்கு முதல் மனைவி இறந்துபோயோ, இருந்து எவ்வளவு நியாயமான காரணத்தால் பிடிக்காமல் போயோ மறுபடியும் வேறு கல் யாணம் செய்து கொள்வதானால் கண்டிப்பாய் 40, 50 ஆயிரம் முதல் அறுப தாயிரம் ரூபாய் வரை வேண்டும். இப்படி செலவு செய்தாலும் 25 வயதுக் காரனுக்கு 9 வயது பெண்ணும் 35 வயதுக்காரனுக்கு 11 வயது பெண்ணும் தான் கிடைக்கும். பெண் கொடுப்பவர்கள் பணக்காரர்களாய் இருந்தாலோ 20, 30, 50 ஆயிரம் ரூபாய் செலவு செய்துதான் தங்கள் பெண்ணைக் கட்டிக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட கல்யாணத்திலும் 16 வயது பெண் ணுக்கு 11 வயது மாப்பிள்ளை யும், மாப்பிள்ளை வீடும் பெண் வீடும் பணக் காரர்களாயிருந்தால் 14 வயது 16 வயது பெண்ணுக்கு 9, 10 வயது மாப் பிள்ளைகளைக்கூட கல்யாணம் செய்வதும் வழக்கத்திலிருக்கின்றன. மற்றும் இம்மாதிரி கல்யாணங்களும், கல்யாணப் பெண் மாப்பிள்ளைகளின் பொருத்தங்களை, அழகுகளை, குணங்களை, கல்விகளை, திரேக பொருத்தங்களைக் கவனியாமல் சம்மந்திகளின் சிநேக அவசியத்தையும், வியாபாரத் தேவைகளையும், கௌரவங்களையும் உத்தேசித்தே மணங்கள் நிச்சயிக்கப்படுபவைகளாகவும் இருப்பது வழக்கம்.

சமீபகாலத்தில் அந்த நாட்டில் 63 ஆயிரம் ரூ. சொத்துடையவர் ஒருவர் தனது 25 வது வயதில் 57 ஆயிரம் ரூபாய் செலவு செய்து கல்யாணம் செய்து கொண்டார். அக்கல்யாணம் சில்லரைச் செலவு வகையராக்களுக்கு விபரம் என்னவென்றால்:-



RangaRakes tamilnavarasam.com

| | |
|---|---|
| பெண்கிரயம் | 37500 |
| நகை | 10500 |
| கல்யாண செலவுக்காக | 5500 |
| கல்யாணம் முடித்த தரகுக்காரருக்கு | 3500 |
| ஆக | ரூ. 57000 |

செலவாகி விட்டது.

கல்யாண மாப்பிள்ளைக்கு அவர் செலவு போக மீதிப்பட்டது சுமார் ஐந்து ஆறு ஆயிரம் ரூபாயேயாகும். இதைக் கொண்டு தான் இனி அந்த மணமக்கள் பிழைக்க வேண்டும்.

இது தவிர அதே நாட்டில் மற்றொரு கனவான் முதல் பெண்ஜாதி இறந்துபோய் மறுமணம் செய்து கொள்வதற்கு தனது 36வது வயதில் 50ஆயிரம் ரூபாய் செலவு செய்து 8வயது பெண்ணைக் கட்டிக் கொண்டிருக்கின்றார்.

மற்றொரு கனவான் தனது நாணயத்தின் மீது பலரிடம் கடன்வாங்கி 50 ஆயிரம் ரூ. செலவு செய்து சிறு பெண்ணை கல்யாணம் கட்டி 2, 3 மாதம் இங்கிருந்து விட்டு கடன்காரர்கள் தொல்லைக்காக சம்பாதிக்க வெளிநாடு சென்று ஒரே மாதத்தில் இறந்துபோய் விட்டார். பணம் கொடுத்தவர்களுக்கு 4 *மீ* வட்டியுடன் பணம் போய்விட்டது. அந்த 10 வயது பெண்ணுக்கோ சாகும் வரை விதவையாய் இருக்க வேண்டியதாய்விட்டது.

இந்த மாதிரியாக ஜாதிக் கல்யாணப் பெருமை ஒரு புறமிருக்க கல்யாணம் செய்து கொண்ட பெண்களை தாய்வீட்டில் விட்டுவிட்டு 3 வருஷம் 4 வருஷம் கப்பல் பிரயாணம் போய் விடுவதென்பதும் நாட்டுக் கோட்டை செட்டியார்களில் எங்கும் நடைபெறக் கூடியதும் மிகவும் செல் வாக்குப் பெற்றதுமான ஜாதிக் கொள்கையாகும். பெண்சாதியைக் கூட அழைத்துக் கொண்டு போனாலோ ஜாதி கெட்டுப் போகும் என்பதும் அந்த ஜாதியின் ஒரு முக்கிய கொள்கையாகும். பிறகு அவர்கள் வீட்டிற்கும் நகைக்கும் சடங்கிற்கும் விருந்து முதலியவைகளுக்கும் முறைதலை என்பது போன்ற சமூகச் சடங்கிற்கும் அவர்கள் பணம் செலவு செய்வது முதலிய ஜாதி கொள்கைகளை விரித்தால் அதுவும் மிகப் பெருகிவிடும். நிற்க, இனி சமயக் கொள்கைகளைப்பற்றி சற்று கவனிப்போம்.

ஜாதிக் கொள்கைகளையாவது பெரிதும் பரிகாசத்திற்கும் துன்பத் திற்கும் இடமாயிருக்கின்றதே என்று மாத்திரம் சொல்லலாம். அவர்களு டைய சமயக் கொள்கைகள் என்பதோ மக்கள் கேட்டிற்கே ஆதாரமா யிருக்கின்றன.

என்னவெனில் நாட்டுக் கோட்டைச் செட்டியார்மார்களின் சமயக் கொள்கைகள் பெரிதும் என்னவென்றால் கோயில் கட்டுவதும் வெள்ளி, தங்கம் ரதம், தேர்வாகனம் செய்வதும் பூசைகள், கும்பாபிஷேகங்கள் உற்ச வங்கள் செய்விப்பதும் சத்திரங்கள் வேதபாடசாலைகள் கட்டிவைப்பதும் முதலிய வைகள் ஆகும். இவைகளுக்கு எவ்வளவு பணம் செலவாகும் என்று பார்ப்போமானால் பல கோடிக்கணக்கேயாகும். இச் செலவுகள் வீண் செலவும் தேசியப் பொருள் நஷ்டமுமல்லாமல் வேறு என்ன என்று சொல்லக் கூடும். செய்தவர்களும் நஷ்டமடைந்து சிலர் பாப்பராகி தாங்கள் கடன் வாங்கியவர்களுக்கும் முழுதும் கொடுக்க முடியாமல் இன்சால் வெண்டாகி தீர்த்துக் கொடுக்கப்பட்டு அழிகின்றதை நேரிலேயே பார்க் கின்றோம். இவைதவிர மற்றும் பார்ப்பனர் காலில் விழுவதும் அவர்களைக் குருவாய்க் கொள்ளுவதும் இவர்களது சமயமாயிருக்கின்றது. இந்த மாதிரி சமயம் காக்கப்படுவதில் யாருக்கு என்ன லாபம்? என்று கேட்கின்றோம். நாட்டுக் கோட்டைச் செட்டியார்களில் தேவகோட்டையில் ஒரு பிரபல கோடீஸ்வரர் ஒருவர் சமீப காலத்தில் நன்றாயிருந்தது யாவருக்கும் தெரியும். அவர் சுமார் 60, 70க்கு மேல்பட்ட கோயில்கள் கட்டினவர். பல கும்பாபி ஷேகங்கள் செய்து வேத பாடசாலை, அன்ன சத்திரம் முதலியவை கட்டி னவர் வியாபாரத்தில் நஷ்டமடையாமல் தாசி, வேசி, குடி, சூது ஆகியவை களில் செலவழிக்காமல் ஒழுங்காய் நடந்து வந்தும் தன் சொந்தப் பணம் முழுவதும் போய் கடன்காரருக்குப் பதில் சொல்ல வேண்டியவராய் விட்டார் என்றால் இந்த மாதிரியான சமயக் கொள்கை இனியும் காக்கப்பட வேண்டுமா என்று கேட்கின்றோம்.

மற்றும் திரு. தர்மபூஷணம் தி. நா. முத்தய்ய செட்டியார் என்கின்ற கனவான் 50, 60 லக்ஷத்திற்கு மேற்பட்ட ஸ்திதி உடையவராயிருந்தவர். இவரும் பல கோயில்களைக் கட்டி வெள்ளிரதம் முதலிய வாகனம் செய்து சத்திரம் வேதபாடசாலை பிராமண சமாராதனை, பிராமண தர்மம் முதலிய வைகள் செய்தவர். "லோககுரு சங்கராச்சாரி சுவாமி" களின் பாதத்திற்கு 1008 பவுன் கொண்டு ஒவ்வொரு பவுனாய் போட்டு அர்ச்சித்து (சஹஸ்திர நாமம் செய்து) அவரது பாத தீர்த்தம் சாப்பிட்டு "தர்மபூஷணம்" என்று கௌரவப் பட்டம் பெற்றவர். இவரும் இன்று கடன்காரருக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைக்கு வந்துவிட்டாராம். இவருடைய கணக்கையும் ஒரு தக்க ஆடிட்டரைக் கொண்டு பரிசோதித்துப் பார்த்தால் இவ்வளவு பணமும் கோவில் கட்டி வேத பாடசாலை வைத்து பார்ப்பனருக்கு கொடுத்துக் கொடுத்து இந்த நிலைக்கு வரவேண்டியவரானார் என்றே ரிப்போர்ட்டு எழுதுவாரே தவிர வேறு விதமாய் "தப்பு வழியில்" செலவு செய்ததாகவோ கொடுக்கல் வாங்கலில் நஷ்டமடைந்ததாகவோ எழுதமாட்டார். இதுபோல் கஷ்டப்பட்டவர்கள் கஷ்டப்படுகின்றவர்கள் குடும்பம் இனியும் எத்தனை இருக்கின்றது என்பது


RangaRakes tamilnavarasam.com

அச் சமூகத்திலேயே பலருக்குத் தெரியும். ஆகவே இம்மாதிரி ஜாதியும் சமயமும் காப்பாற்றப்பட வேண்டுமென்கின்ற அவசிய மென்னவென்றும் அதனால் அச் சமூகத்திற்கோ அல்லது நாட்டிற்கோ பலன் என்ன என்றும் கேழ்க்கின்றோம்.

இவைகள் ஒருபுறமிருக்க இச்சிவநேசக் கூட்டத்தாரின் ஒழுக்கங் களைப்பற்றிப் பேசுவோமானால் அங்குள்ள டாக்டர்களை, வைத்தியர்களை விசாரித்துப் பார்த்தால் அவர்களைக் கொண்டு என்ன விதமான வியாதியஸ் தர்கள் அதிகமாக ஆஸ்பத்திரிக்கு வருகின்றார்கள் என்பதைப் பற்றி ஒரு அறிக்கை வெளியிடச் செய்தால் உண்மை நன்றாய் விளங்கிவிடும். மற்றும் அவர்கள் தங்கள் தங்கள் சொந்த நடவடிக்கைகளையே ஞாபகப்படுத்திப் பார்த்துக் கொண்டாலும் விளங்காமல் போகாது. மற்றும் ஜாதி சமயத்தைக் காப்பாற்றும் சிவநேசக் கூட்டத்தாரின் பிள்ளைக் குட்டிகளைப் பற்றியோ வென்றால் அவர்கள் வெளியிடும் விளம்பரங்களைப் பார்ப்போமானால் பத்திரிகைகளிலெல்லாம் தங்கள் பிள்ளைகள் மைனர்களாக, சில்லரைப் பேர்வழிகளாக, டெம்பரவரிகளாக, காலிகளாகவும், எடுப்பார் கைப்பிள்ளை களாக புத்தி சுவாதீனமில்லாதவர்களாக ஆகிவிட்டதாகவும் அவர்களுக்கு யாரும் ஒரு பைசா அளவு கூட கடன் கொடுக்கக்கூடாது என்றும் கேட்டுக் கொள்ளும் - தெரிவிக்கும் விளம்பரங்களையே அநேகமாய் நாள்தோறும் பத்திரிகைகளில் பார்க்கலாம்.

தனித்தனியாய் அனுபவிக்கும் மாதிரியான இம்மாதிரி பலன்கள் ஒரு புறமிருக்க பொதுவாக அச் சமூகத்திற்கே அதாவது அச் சமூகம் இவ்வளவு கஷ்டப்பட்டு ஜாதியையும் சமயத்தையும் காப்பாற்றி தமிழ்நாட்டிலெங்கும் கோவில்கள் கட்டி இவர் கப்பலேறிச் சென்ற நாடுகளிலும் கோவில்கள் கட்டிப் பெரும் பெரும் சமய தர்மம் செய்து வந்தும் சிறிதும் ஜாதிக் கொள்கைகள் தவறவிடாது வந்தும் வாழ்க்கையில் பெரும்பான்மையான மக்கள் எவ்வித நன்மை அடைந்திருக்கிறார்கள் என்பதைக் கவனித்தால் இன்று அச் சமூகத்தில் ஆயிரக்கணக்கான ஆண்கள் 20 வயது முதல் 45 வயது வரையில் கல்யாணமில்லாமலும் கல்யாணம் செய்து கொள்ள மார்க்கமில்லாமலும் வெறும் ஒத்தை ஆட்களாகவே இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட இவர்கள் வேறு சாதியில் கல்யாணம் செய்து கொண்டால் மாத்திரம்தான் சாதி கெட்டுப் போகுமென்று ஓலமிடுகிறார்களே ஒழிய மற்றபடி கூத்தி, வைப்பு முதலியவைகள் வைத்துக் கொண்டு எவ்வளவு ஒழுக்கயீனர்களாகத் திரிந்தாலும் அவர்களுடைய சாதி சிறிதும் கெடுவதில்லை. அதைப்பற்றி சாதியிலோ, சமூகத்திலோ யாரும் சிறிதும் இழிவாய்க் கருதுவதும் இல்லை.

இந்த மாதிரி கல்யாணம் செய்து கொள்ள முடியாத ஆட்களுக்கு இக் கூட்டம் இதுவரை என்ன பரிகாரம் செய்திருக்கின்றது. அல்லது அவர்களை வேறு என்ன செய்யும்படி கட்டளை இடுகின்றது என்பதை அறிய விரும்பு கின்றோம்.



தவிர, மேல்கண்ட நாட்டுக் கோட்டைச் செட்டியார்மார்களின் இன் றைய பொதுநிலை பொருளாதார விஷயங்களிலும் கவலைக்கிடங் கொடுக் கக் கூடியதாகவே தான் பல கஷ்டங்கள் காணப்படுகின்றன.

எப்படியெனில் இவர்கள் பெரும் பெரும் பொருள்கள் கொண்டு போய் வைத்து தொழில் நடத்திவரும் வெளிநாடுகளிலெல்லாம் இப்போது கஷ்டமே ஏற்பட்டிருக்கிறது. பர்மா நாட்டில் பர்மா பிரிவினையும், பூகம்ப மும், கூலிச் சண்டையும், மலாய் நாட்டில் ரப்பர் விலை இறக்கமும், ஈய விலை இறக்கமும், சிலோன் நாட்டில் கொப்பரை, தேயிலை, ரப்பர் ஆகிய வைகளின் விலைகள் வீழ்ச்சியும், உள்நாட்டில் கோர்ட்டுக்கு போகாமல் பணம் வசூலிக்க முடியாத நிலைமையும் ஆகிய காரியங்களும் கவலைப் படும்படியாகவே செய்து வருகின்றன. இதுவரை இவர்கள் கட்டி வைத்த கோவிலும், செய்து வைத்த கும்பாபிஷேகமும், பண்ணிவைத்த பூசையும், தேர், ரதம், வாகனம் முதலானவைகளும் இந்தக் கவலைக்கு என்ன பரி காரம் செய்கின்றன என்று கேழ்க்கின்றோம்.

ஜாதிப் பெருமையும் சமயப் பெருமையும் விபூதிப் பெருமையும், பிராமண விசுவாசப் பெருமையும் இக்கஷ்டங்களுக்கு என்ன பரிகாரம் செய்யக் கூடும் என்றும் கேழ்க்கின்றோம். ஆகவே இவ்வளவையும் பார்த்துக்கொண்டு, அனுபவித்துக் கொண்டு இன்னமும், இம்மாதிரி கொள் கைகள் கொண்ட இந்த சாதியையும் சமயத்தையும் காப்பதற்கு முயற்சிப்பது அறிவுடைய செயலாகுமா என்றும் கேட்கின்றோம். எனவே இனியாவது மானமுள்ளவர்கள் இந்த மாதிரி ஜாதி சமயப் பேச்சே பேச மாட்டார்கள் என்றும் அவற்றை ஒழிக்கப் பாடுபடுபவர்களுக்கு உதவி செய் வார்களே தவிர, இடையூறு செய்யமாட்டார்கள் என்றுமே கருதுகின்றோம். மற்றும் இது விஷயமாய் அநேக விஷயங்களை நாம் மனதார மறைத்து விட்டோம்.

இப்படியெல்லாம் இருக்க வீணாய் நிரபராதிகளை "சில்லரை பேர்வழிகள்; போலிகள், டெம்பரவரி ஆள்கள், தாசிகள், வேசிகள்" என்பன போன்ற வார்த்தைகளால் இழித்துக் கூறியது யோக்கியர் செய்யும் வேலையா என்பதை சிவநேசர்களை யோசிக்கும்படியும் மற்றும் அச் சமூகத் தலை வர்களையும் இவர்களுக்கு புத்தி சொல்லும்படியும் வேண்டிக் கொண்டு இதை முடிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 19.10.1930**



RangaRakes
tamilnavarasam.com

# விபசாரம்

விபசாரம் என்னும் வார்த்தையானது அநேகமாய் ஆண் பெண் சேர்க்கை சம்பந்தப்பட்டதற்கே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. அதிலும் முக்கியமாக அதாவது ஒரு பெண் தனக்குக் கணவன் என்றோ, தன்னை வைத்துக் கொண்டிருக்கின்றவன் என்றோ வேசித் தொழிலிலிருப் பவளானாலும் யாராவது ஒரு புருஷனிடம் தற்கால சாந்தியாய் தன்னைக் குத்தகையாய் அனுபவிப்பவன் என்றோ சொல்லப்படும் படியான அந்தக் குறிப்பிட்ட ஆண் மகனைத் தவிர மற்றொருவரிடமோ, பல பேர்களிடமோ சேர்க்கை வைத்துக் கொண்டிருப்பதற்கே, கணவனாலும் வைப்புக்கார னாலும், குத்தகைக்காரனாலும் மற்றும் பொது ஜனங்களாலும் சொல்லப் படுகின்ற, அதாவது ஒரு பெரிய குற்றம் சாட்டுவதற்கும் பழி சுமத்துவதற்கும் உபயோகிக்கும் சொல்லாகும். ஆனால், அதே பெண்ணை அந்தக் கணவனோ வைப்புக்காரனோ மற்றொருவருக்குத் தன் சம்மதத்தின் பேரில் கூட்டி விடுவானானால் அதை அவர்கள் விபசாரம் என்று சொல்லுவதில்லை. இந்த சங்கதி பொது ஜனங்களுக்குத் தெரிந்தாலும் கணவனைத்தான் அவர்களும் வசை கூறி குற்றம் சொல்லுவதே தவிர பெண்ணை விசேஷ மாக முன் சொல்லப்பட்ட விபசாரியென்கின்ற முறையில் அநேக மாக குற்றம் சொல்லுவதில்லை. அன்றியும் இம்மாதிரி குற்றம் சாட்டுதலும் வச வுக்கும், பழிப்புக்கும் உபயோகப் படுத்துதலும் ஆண்களுக்குக் கிடையாது. அன்றியும் ஆண்களை விபசாரன் என்று வைக்கின்ற வழக்கமும் கிடை யாது. அப்படிச் சொல்லப் படுவதற்காக எந்த ஆணும் கோபித்துக் கொள்ளு வதும் கிடையாது.

ஆகவே விபசாரம் என்னும் வார்த்தையின் அநுபவ தத்துவத்தைக் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் “விபசாரம்” என்பது பெண்கள் அடிமைகள் என்பதைக் காட்டும் ஒரு குறிப்பு வார்த்தை என்று தான் சொல்ல வேண்டுமே யொழிய வேறல்ல. ஏனெனில் விபசார தோஷம் என்பதும் விபசாரம் செய்வதால் ஏற்படும் ஒழுக்கக் குறைவு என்பதும் இப்பொழுது வழக்கத்தில் பெண்களுக்கே தான் உண்டேயொழிய ஆண்களுக்கு அந்த மாதிரி கிடையவே கிடையாது.



உதாரணம் வேண்டுமானால் ஒன்றைக் குறிப்பிடுவோம். அதாவது நமது நாட்டில் இதுவரை விபசாரம் செய்ததற்காக வென்று பெண்களைத் தான் பழி சுமத்தி குற்றம் சொல்லி ஜாதியை விட்டுத் தள்ளி வைத்திருக் கின்றார்களே யொழிய – வீட்டை விட்டுத் துரத்தியிருக்கின்றார்களே யொழிய – அடித்தும், உதைத்தும், வைதும் துன்பப்படுத்தியிருக்கிறார்களே யொழிய – சில சந்தர்ப்பங்களில் கொலைகளையுங் கூட செய்திருக்கிறார் களே யொழிய, ஆண்களை இம்மாதிரியாகச் செய்திருப்பதாக நாம் கண்டதோ கேட்டதோ இல்லை. .

நிற்க, சில இடங்களில் விபசாரம் ஆண்களுக்குத் தற்பெருமை யாகவும் கீர்த்தியாகவும் கூடயிருக்கின்றதைப் பார்க்கின்றோம். சில ஆண் கள் அதைப் பெருமையாய் சொல்லிக் கொள்ளுவதையும் கேழ்க்கின்றோம்.

மக்களும் விபசாரிமகன் என்று சொன்னால் தான் கோபித்துக் கொள்ளுகின்றார்களே தவிர விபசாரனுடைய மகன் என்று சொன்னால் கோபித்துக் கொள்ளுகின்றவர்கள் இல்லை. ஆனால் எந்த சமயத்தில் ஆண்கள் கோபித்துக் கொள்ளுகின்றார்களென்றால் தங்கள் மனைவிகள் வைப்பாட்டிகள், குத்தகை தாசிகள் விபசாரம் செய்தார்கள் என்று சொன் னால் மாத்திரம் உடனே கோபித்துக்கொள்ளுகின்றார்கள். மேலும் மிகவும் அவமானமேற்பட்டு விட்டதாக பதருகிறார்கள். மற்றும் தங்கள் பெண் களைத் தங்களுடைய சம்மதத்தின் பேரில் தங்கள் சுய நலத்திற்காக விப சாரத்திற்கு விட இணங்குகிறான் என்றோ பெண்ணை அடக்க முடியாமல் “ஊர்மேல்” விட்டு விட்டான் என்றோ சொல்லுகின்ற போது அதிகமாய்க் கோபித்துக் கொள்ளுகின்றார்கள். ஆகவே இந்த அநுபவங்களையும் கொண்டு மேலே காட்டியபடி அதாவது விபசாரம் என்று சொல்லும் வார்த்தையின் தத்துவம் பெண்கள் ஆண்களின் அடிமைகள் என்றும், ஆண்களுடைய போக போக்கியப் பொருள் என்றும், விலைக்கு விற்கவும், வாடகைக்கு விடவும் கூடிய வஸ்து என்றும் கருதியிருக்கின்றார்கள் – என்பது இன்னும் தெளிவாய் விளங்கும்.

நிற்க, அது அதாவது விபசாரம் என்னும் வார்த்தையை வழக்கத்தில் ஏன் பெண்களை மாத்திரம் சொல்லப் பயன்படுத்தப்பட்டது? “ஆண்களைச் சொல்லுவதற்கு ஏன் அது பயன்படுத்தப்பட வில்லை? யென்று கவனிப்போ மானால் அதிலிருந்து மற்றொரு உண்மையும் புலப்படும். அதென்ன வென்றால் விபசாரம் என்று சொல்லப்படுவது சுபாவத்தில் உண்மைக் குற்றமுள்ள வார்த்தையாக இல்லை என்பதேயாகும். எது போலென்றால் எப்படி கற்பு என்னும் வார்த்தையையும் அது பயன்படுத்தும் முறையும் புரட்டானது என்றும், பெண்ணடிமைகொள்ள உத்தேசித்து ஏற்படுத்தியதாகு மென்றும் சொல்லுகின்றோமோ அது போலவே விபசாரம் என்னும் வார்த்தையும் அதன் பிரயோகமும் புரட்டானதும், பெண்களை அடிமை



RangaRakes tamilnavarasam.com

கொள்வதற் கென்றே ஏற்படுத்தப்பட்ட தென்றும் காணப்படுவதோடு அது முக்கியமாய் இயற்கைக்கு விரோதமான தென்றும் கூட விளங்கும். சாதாரண மாகவே இன்றைய கற்பு, விபசாரம் என்னும் வார்த்தைகள் சுதந்திர மும், சமத்துவமும் கொண்ட வாழ்க்கைக்குச் சிறிதும் தேவையில்லாததே யாகும்.. ஜீவசுபாவங்களுக்கு இவ்விரண்டு வார்த்தையும் சிறிதும் பொருத்தமற்றதே யாகும். வாழ்க்கை ஒப்பந்த நிபந்தனைக்கு மாத்திரம் தேவையுடையதாக யிருக்கலாம். ஆன போதிலுங் கூட அவையும் இயற்கைக்கு முரணானது என்பதை யாவரும் ஒப்புக் கொண்டுதானாக வேண்டும். அதற்கு ஆதாரம் என்ன வென்றால் மேலே சொல்லப்பட்டது போலவே அவ்விரண்டு வார்த்தையின் தத்துவங்களையும் பெண்கள் மீது மாத்திரம் சுமத்தப்பட்டு ஆண்கள் மீது சுமத்தப்படாமலும் ஆண்கள் அவற்றை ஏற்றுக் கொண்டு கட்டுப் படாமையும் அதைப் பற்றி லஷியம் செய்யாமையுமேயாகும்.

மற்றும் வேறொரு அத்தாட்சியும் என்ன வென்றால் மக்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கற்புத் தவறுதலும் விபசாரத்தனமும் கூடாது என்று பொதுவாக இருபாலர்களுக்குத் தானாகத் தோன்றாமலி ருப்பதோடு பலர் கற்பித்தும் அதற்காகப் பல நிபந்தனைகளைக் கூட ஏற்படுத்தியும் மற்றும் எவ்வளவோ பயங்களைக் காட்டியும் அதனால் சிலராவது அடிதடி விரோதம், கொலை, உடல் நலிவு முதலியவைகளால் கஷ்டப்படுவதை நேரில் காணக்கூடிய சந்தர்ப்பங்களிருந்தும் இவ்வளவை யும் மீறி மக்களுக்குக் கற்புக்கு விரோதமாகவும் விபசாரத்திற்கு அனுகூல மாகவும் உணர்ச்சியும் ஆசையும் ஏன் உண்டாக வேண்டுமென்பதைக் கவனித்தால் அது தானாக விளங்கும். இயற்கையோடு இயைந்த வாழ்வு எது என்பதையும் இயற்கைக்கு மாறுபட்ட வாழ்வு எது வென்பதையும் எவ்வித நாட்டுப்பற்று, நடப்புப் பற்று, பிறப்புப் பற்று என்பதில்லாமல் நடுநிலையிலிருந்து தன் அநுபவத்தையும் தன் மனதில் தோன்றிய, தோன் றும் உணர்ச்சிகளையும், ஆசைகளையும் ஒரு உதாரணமாகவும் வைத்துக் கொண்டு பரிசுத்தமான உண்மையைக் காணுவானேயானால் அப்போதும் கற்பு, விபசாரம் என்னும் வார்த்தைகள் வெறும் புரட்டு என்பதும், மற்றவர்களை அடிமையாகக் கட்டுப்படுத்த உண்டாக்கப்பட்ட சுயநல சூட்சி நிறைந்தது என்பதும் தானாகவே விளங்கிவிடும். மற்றும் விபசாரம் என்பது ஒருவனுடைய "பாத்தியதைக்கும்" ஏற்படுத்திக் கொள்ளும் கட்டுப்பாட்டிற்கும் மாத்திரம் விரோதமே தவிர உண்மையான ஒழுக்கத் திற்கு விரோதமல்ல என்பதற்கு மற்றொரு உதாரணம் கூறுவோம்.

மலையாள நாட்டில் இரண்டு மூன்று ஆண்கள் ஒரு பெண்ணை மனைவியாக ஏற்படுத்திக் கொள்ளுகின்ற வழக்கம் உண்டு. ஆனால் அந்தப் பெண் மேற்கண்ட இரண்டு மூன்று புருஷர்களைத் தவிர மற்ற ஆண்களிடம் அதுவும் தங்களுக்கு மனைவியாயிருக்கும் காலத்தில் பிற ஆண்களிடம்



RangaRakes

சம்பந்தம் வைத்துக் கொண்டால் மாத்திரம் தான் அதை விபசாரமாகக் கருதி சில சம்பவங்களில் கொலைகள் கூட நடக்கின்றன. மற்றும் சில வகுப்புகளில் தங்கள் இனத்தார் தவிர மற்ற இனத்தாரிடம் சாவகாசம் செய்தால் மாத்திரம் விபசாரமாய்க் கருதப்படுகின்றன. நமது நாட்டிலும் சில வகுப்புகளில் குடும்பத்தைச் சேர்ந்த மச்சாண்டார், கொழுந் தனார் (அதாவது புருஷன் சகோதரர்கள்) மாமனார் ஆகியவர்கள் சம்பந்த மானது விபசாரத்தனமாய் கொள்ளப்படுவதில்லை. இக் கொள்கைகள் நம் நாட்டுப் பழங்குடி மக்கள் மிகுதியும் கொண்ட சில சமூகங்களின் பழக்க வழக்கங்களுடன் கலந்து செல்வாக்குப் பெற்றிருப்பதை இன்றும் தாராள மாய்ப் பார்க்கலாம். இதுபோல் இன்னும் பல விஷயங்களும் உண்டு, ஆகவே இவைகளையெல்லாம் கவனித்துப் பார்த்தால் விபசாரம் என்பது ஒரு குறிப்பிட்ட கொள்கை மீது பொதுவான ஒழுக்கக் குறைவு என்கிற தத் துவத்தில் எப்போதும் பழக்கத்தில் அமுலில் இல்லை யென்பது விளங்கும். நிற்க,

மனித சமூகத்திற்கென்று பொதுவாக சில கட்டுப்பாடுகளும் ஒழுங் கும் வாழ்க்கைக்கு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதை நாம் அடியோடு ஆக்ஷேபிக்க வரவில்லை. ஆனால் அவை தனிப்பட்டவர்கள் அதாவது ஆண்டான் அடிமை முறை, எஜமான் கூலி முறை, முதலாளி காரியஸ்தர் முறை, சிநேகிதர்கள் முறை, கூட்டாளிகள் முறை, வாழ்க்கைத் துணைகள் முறை போன்ற தன்மைகள் கொண்ட அதாவது தனிப்பட்ட சம்மந்தங்க ளுக்கு ஏற்படுத்தப்பட்டிருப்பது போன்றதான ஒழுங்கு கட்டுப்பாடுகள் போல பொது வாழ்விற்கு பொதுக் கொள்கைகளாகியிருக்கக் கூடாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பொது வாழ்க்கைக்கு ஏற்படுத்தப்படும் கொள்கைகள் என்பன பொது ஜனங்களில் யாருடைய தனி சுதந்திரத்துக்கும் பாதக மேற்பட்ட தாகவும் அதுவும் பிரயோகத்தில் சிறிதும் பாரபக்ஷம் உயர்வு தாழ்வு தத்துவம் கொண்ட தல்லாததாகவும் இருக்கவேண்டு மென்பதோடு எல்லாவற்றையும் விட அவை முக்கியமாக இயற்கையோடியைந்ததாகவு மிருக்க வேண்டும். அப்படிப்பட்டவைகளும் மற்றவர்களுடைய நியாயமான உரிமைக்கும், சுதந்திரத்திற்கும் சிறிதும் பாதக முண்டுபண்ணாததாகவுமிருக்க வேண்டும். (நியாயமான என்றதினாலேயே எது நியாயம்? என்பதற்காக "தர்மசாஸ்திரங் களை"த் தேட வேண்டும் என்பது கருத்தல்ல. மற்றெப்படி கண்டு பிடிப்ப தென்றால் ஒருவன் தனக்கு நியாயம் என்று சொல்லப் படுவதானது பிறத்தி யானும் அதையே தனக்கும் நியாயமென்று சொன்னால் அவன் முதலில் சொன்னவன் ஒப்புக் கொள்ளு கின்றானா என்று பார்த்து நிர்ணயிப்பதே யாகும். அதாவது இருவருக்கும் ஒன்று போன்றது) அன்றியும் அறிவுக்கும் சாத்தியத்திற்கும், அநுபவத் திற்கும் ஏற்றதாகவும் அவசியம் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

இப்படிக்கெல்லாம் இல்லாமல் வெறும் நிர்ப்பந்தத்திற்கு நாணய



tamilnavarasam.com

மற்றதும் அறிவுக்கும் அநுபவத்திற்கும் ஒவ்வாததானதுமான விஷயங்களுக்காக வலுத்தவர்கள் தந்திரக்காரர்கள் தங்களுக்குத் தோன்றின படிக்கெல்லாம் கட்டுப்பாடுகள் செய்து கொண்டு போவதானது எவ்விதப் பயனையும் தராததோடு மனித சமூகத்திற்கு வீண் கஷ்டத்தை உண்டாக்கி வருவதோடு, அது வெறும் அடிமைத் தனத்தையும், அறிவுத் தடையையும் தான் உண்டாக்கும்.

சாதாரணமாக பொது வாழ்க்கையில் ஒருவன் செய்யக் கூடாதென்பதாக ஏற்பாடு செய்திருக்கும் திருட்டு என்பதான ஒரு குணத்தை எடுத்துக் கொள்ளுவோம். அது இன்றைய வழக்கில் ஒரு மனிதனுக்கு அதாவது திருட்டு கொடுத்தவனுக்கு கஷ்டத்தையும் மனவருத்தத்தையும் கொடுக்கக் கூடியதாயிருக்கின்றது என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகின்றோம். ஏனெனில் நம்ம சொத்தை ஒருவன் திருடினால் நமக்கும் அப்படித்தான் இருக்கும். ஆனால் எதனால் அந்த நஷ்டமும், சங்கடமும் ஏற்படுகின்ற தென்று பார்ப்போமானால் திருட்டுக் கொடுத்தவன் திருட்டுப் போன சொத்தை தன்னுடையது என்றும் அது தனக்கே சொந்தம் என்றும் எண்ணியிருப்பதால்தான். உலகில் பொருளியல் சமத்துவம் ஏற்படுகின்றவரை திருட்டு என்னும் குணமானது குற்றமாகத்தான் பாவிக்கப்படும். உலகத் திலுள்ள எல்லாச் சொத்தும் உலகத்திலுள்ள எல்லோருக்கும் சொந்தம். ஒவ்வொருவனும் பாடுபட்டுத் தான் சாப்பிட வேண்டும். தேவைக்கு மேல் எவனும் வைத்துக் கொள்ளக் கூடாது என்பன முதலிய கொள்கைகள் ஏற்பட்டு விட்டால் திருட்டுப் போவதும் திருட்டுப் போனதைப் பற்றிக் கவலைப்படுவதும் தானாகவே மறைந்துவிடும். ஆனால் இப்போதும் “நான் திருடுவது குற்றமல்ல. நீ திருடுவது தான் குற்றம். நான் பொய் சொல்வது குற்றமல்ல. நீ சொல்வது தான் குற்றம். நான் விபசாரம் செய்வது குற்றமல்ல. நீ செய்வதுதான் குற்றம்” என்பது போன்றதான பொது ஒழுக்கங்கள் என்பவைகளும் பொதுக் கட்டுப்பாடுகள் என்பவைகளும் ஒரு நாளும் பொது வாழ்வுக்கும், சமத்துவத்திற்கும், சுதந்திரத்திற்கும் சிறிதும் பயன் படாது. இன்று உலகத்தில் சிறப்பாக நமது நாட்டில் இருந்து வரும் ஒழுக்கம், கட்டுப்பாடு, தர்மம் முதலியவைகள் எல்லாம் பெரிதும் இயற்கைக்கு எதிராக வும் அடிமைத்தனத்திற்கு ஆதரவாகவும், தனிப்பட்டவர்கள் சுயநலத் திற்கேற்ற சூட்சியாகவும் செய்யப்பட்டவைகளாகவேயிருக்கின்றன.

கடைசியாக மனிதனின் ஜீவசுபாவம் என்னவென்றால் உணர்ச்சியும் இந்திரிய செயலும் ஆசையுமேயாகும். உணர்ச்சியின் காரணமாய் பசி, நித்திரை புணர்ச்சி மூன்றும் முக்கியமான இன்றியமையாத இயற்கை அனுபவமாய்க் காண்கின்றோம். இந்திரியங்களின் காரணமாய்ப் பஞ்சேந்திரியங்களும் அதாவது சரீரம், வாய், கண், மூக்கு, காது ஆகியவைகளின் செயல்களையும் முக்கியமான இன்றியமையாத இயற்கை அனுபவமாய்க் காண்கின்றோம்.



ஆகவே பொது உணர்ச்சியும் இந்திரிய செயலும் மனிதனுக்கு ஆசையை உண்டாக்கிக் கொண்டேயிருக்கின்றது. ஆசையின் காரணமாய் எதையும் ஆசைப்படுவதும் அதுவும் அனேகமாய் அளவுக்கடங்காமல் மேலும் மேலும் போய்க் கொண்டிருப்பதும் சுபாவமாகவே இருக் கின்ற தைப் பார்க்கின்றோம். ஆகவே உணர்ச்சியும் இந்திரிய செயலும் ஆசையும் மனிதனால் சாமான்யத்தில் கட்டுப்படுத்தக் கூடியதல்ல. யாராலாவது கட்டுப்படுத்தப் பட்டு விட்டது என்றால் அப்படிப்பட்டவரைப் பற்றி நாம் இங்கு பேச வரவில்லை. நாம் சொல்லுவதும் அவருக்குச் சம்பந்தப்பட்டதல்ல. (அவர்கள் பல லட்சத்திற்கு ஒருவர் இருப்பார்களோ என்னமோ) அந்தப் படிக்கில்லாத சாதாரண மனித ஜீவனின் உணர்ச்சியையும் இந்திரிய செயலையும் ஆசையையும் கட்டுப்படுத்தும் படியானதாகக் கொள்கைகளை ஒழுக்கங்களை கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினால் அது செலாவாணியாகுமா? செலாவாணியாவதாயிருந்தாலும் அதற்கு என்ன அவசியம் என்பன போன்றவைகளைக் கவனிக்க வேண்டாமா வென்று தான் கேட்கின்றோம். பொய் சொல்லக் கூடாது என்று வாயால் சொல்லி விடுகின்றோம். பொய் சொல்லுவதையும் ஒழுக்கக்குறை வென்று சொல்லி விடுகின்றோம். ஆனால் தொழில் முறைமைக்காகப் பொய்யை அவசியமாக வைத்து அதனால் பிறருக்குக் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் கொடுத்து வரும் வக்கீல் களையும் வியாபாரிகளையும் மனித சமூகத்தில் எவ்வித இழிவின்றி ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். அத்தொழிலில் சம்பாதித்த செல்வத்தைக் கொண்டு பெருமையைக் கொண்டு அம் மக்களை கௌரவ மாகவும் மதிக்கின்றோம். ஆனால் அது போலவே நடக்கும் மற்றொரு தொழில்காரரை உதாரணமாக தேவதாசிகள் போன்றார்களை இழிவாகக் கருதுகின்றோம்.

பொதுவாக இம் 3 பேர்களாலும் மனித சமூகங்களுக்குக் கெடுதியும் நஷ்டமும் இருந்தும் இருவரை ஏற்றுக் கொண்டு ஒருவரைத் தள்ளுவ தானது கேவலமும் சூட்சியும் சுயநலமுமேயல்லாமல் இதில் நியாய மிருப் பதாகச் சொல்லமுடியுமாவென்று கேட்கின்றோம். எந்தத் தொழிலானாலும் மற்றவர்களுக்குக் கெடுதியைக் கொடுக்கும் தொழில் எதுவானாலும் அது இல்லாமலே உலகம் நடக்கும் படியாகத்தான் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட விஷயத்தில் மாத்திரம் வேண்டுமானால் இயற்கையை மாற்றி கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவது அவசியமாகலாம். அப்படிக்கில்லாமல் ஒருவருக்கு ஒருவிதம் என்பதாக மாற்றுவது பயன்படாததாகவே முடியும். எனவே இப்போது நடைமுறையிலிருக்கும் விபசாரமென்பதும் அதன் தத்துவமும் பெண்களை அடிமைப் படுத்துவதற்காக பெண்கள் அடிமைகள் என்னும் கருத்தின் மீது ஏற்படுத்தப் பட்டவைகள் ஆதலாலும் அது ஆண்களுக்குச் சிறிதும் சம்பந்தமில்லாமலிருப்பதாலும் அது ஒப்புக் கொள்ள முடியாததாய் காணப்படுவதோடு பெண்கள் சுதந்திரம் பெண்கள் விடுதலை என்பவைகளுக்காக நடைபெறும் காரியங்களில் விபசாரம் என்னும் காரியம் வந்து முட்டுக்கட்டை போடுமானால் அதைத் தைரியமாய் எடுத்தெறிந்து



RangaRakes tamilnavarasam.com

விட்டு முன்னோக்கிச் செல்ல வேண்டியது உண்மையான உழைப்பாளிகளின் கடமையாகுமென்பதையும் குறிப்பிட்டு விட்டு இப் போதைக்கு ஒருவாறு முடிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 26.10.1930**



RangaRakes

# பெண்கள் சொத்துரிமை

இந்த வாரத்தில் பெண்கள் சொத்துரிமை விஷயமாய் ஒரு மகிழ்ச்சி அடையத்தக்க சேதி நமது தகவலுக்கு எட்டி இருக்கின்றதை மற்றொரு பக்கத்தில் காணலாம்.

3, 4 வாரங்களுக்கு முன் நாம் "இனியாவது புத்திவருமா" என்னும் தலைப்பின் கீழ் பெண்கள் சொத்துரிமையைப் பற்றி எழுதியிருந்தது வாசகர் கள் கவனித்திருக்கக் கூடும். அதற்கு அனுகூலமாக இவ்வாரம் சென் னையில் ஒய். எம்.சி.எ. கட்டடத்தில் நடந்த ஒரு மீட்டிங்கின் நடவடிக்கை யானது நமக்கு சிறிது நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் கொடுக்கின்றது. அதாவது,

பெண்களுக்கு ஆண்களைப் போலவே சொத்துரிமை கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி இரு கனவான்கள் தங்கள் அபிப்பிராயத்தை மிக வலிமையாய் வற்புருத்திப் பேசி இருக்கின்றார்கள். அவர்கள் பேசி யிருப்பவைகளில் முக்கியமானவை எவையெனில்,

மனிதருக்குள் ஆணுக்கும் பெண்ணுக்கும் எத்தகைய வித்தியாச மில்லை என்பதும்,

ஆண்கள் அடைய விரும்பும் சீர்திருத்தங்கள் போலவே பெண் களுக்கும் அளிக்க வேண்டும் என்பதும், ஆண்களைப் போலவே பெண் களுக்கும் சொத்துக்கள் அநுபவிப்பதென்பது சர்வ சுதந்திரமாய் இருக்க வேண்டும் என்பதும், இதைப் பற்றி இதுவரை யாரும் எவ்வித கிளற்சியும் செய்யவில்லை என்பதைப் பற்றியும், கணவன் அயோக்கியனாக இருந் தாலும், கெட்ட வியாதிக்காரனாய் இருந்தாலும் மனைவிகள் அவனை விட்டு விலகி வாழலாம் என்றும்,

இப்படி விலகி வாழ்ந்தாலும் புருஷன் ஜீவனாம்சமும் அவன் சொத்தில் பாத்தியதையும் இருக்க வேண்டும் என்றும் விதவைகள் மறு மணம் செய்து கொண்டாலும் முதல் புருஷன் சொத்தில் பங்கு பெற பாத்தியம் இருக்க வேண்டு மென்றும் உபந்நியாசகராகிய திரு. நாராயண குரூப் அவர்கள் பேசி இருக்கிறார்.



tamilnavarasam.com

அக் கூட்டத்திற்கு தலைமை வகித்த திரு. டி. ஆர். வெங்கிட ராம சாஸ்திரியார் என்பவர் மாஜி அட்வொகேட் ஜனரலும் சென்னை அரசாங்க மாஜி சட்ட மெம்பரும் ஆவார்.

இவரும் இந்தியாவில் எல்லா ஜாதி மதஸ்தர்களுக்கும் பொதுவாக ஒரு சட்டம் செய்ய வேண்டுமென்று பேசியிருப்பதோடு சீர்திருத்த விஷயத்தில் முஸ்லீம்கள் ஒத்து வர மாட்டார்கள் என்று பயப்படுவதாகவும் அதற்காதாரமாய் சாரதா சட்டத்தைப் பற்றிய முஸ்லீம்களின் ஆக்ஷேபனை யையும் எடுத்துக் காட்டிவிட்டு,

மேலும் பெண்கள் இப்போது ஆண்களைப் போலவே எல்லா வழிகளிலும் முன்னேறி இருப்பதாகவும் குறிப்பிட்டு விட்டு, அவர்களுக்கு சகல உரிமையும் கொடுக்க வேண்டும் என்பதை மனப் பூர்வமாய் ஒப்புக் கொண்டுமிருக்கிறார்.

எல்லாவற்றையும் விட அவர் பேசி இருப்பதில் குறிப்பிடத்தகுந்த ஒரு விஷயம் என்னவென்றால் "ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னால் பெரியோர்கள் செய்த ஏற்பாடு என்பதற்காக கண் மூடித்தனமாய் ஒன்றை பின்பற்ற வேண்டு மென்பது அறிவுடைமையாகாது" என்பதும் இந்த நாகரீக காலத்தில் அதாவது 20 வது நூற்றாண்டில் இருந்து கொண்டு 13 வது நூற்றாண்டு கதைகளைப் பற்றி பேசி அவற்றை மக்கள் வாழ்க்கைக்கு ஆதாரமாக்குவது மிகவும் பரிகசிக்கத்தக்கதாகு மென்று பேசியிருப்பது மாகும்.

இதை மற்றப் பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாத பழமை விரும்பி களும் கவனிக்க வேண்டுமாய் விரும்புகின்றோம்.

பெண்கள் ஆண்களுக்கு அடிமைகள் அல்ல வென்றும் அவர்களும் ஆண்களைப் போலவே சுதந்திரமாய் இருக்கத் தகுந்தவர்கள் என்றும் நாம் முதலில் தீர்மானம் செய்து கொண்டோமேயானால் பிறகு மேல் கண்ட சீர்திருத்த விஷயங்களும் மற்றும் ஒழுக்க சம்மந்தமான தென்றும் கட்டுப் பாட்டுக்காக இருக்க வேண்டும் என்று சொல்லப்படும் கொள்கைகளின் யோக்கியதைகள் எல்லாம் தானாகவே விளங்கி விடும். அந்த எண்ணம் ஆண்களுக்குச் சரியாக உண்டாகாததினாலேயே பெண்கள் சுதந்திரம் என் னும் விஷயங்களில் எதை எடுத்துக் கொண்டாலும் ஆண்கள் பெண்களுக் குத் தயவு செய்து பிச்சை கொடுப்பது போலவே கருதுகின்றார்கள். உண்மை யான சுதந்திரம் பெண்களுக்கு ஏற்பட வேண்டுமானால் வாழ்வில் அதாவது ஒரு பெண்ணும் ஆணும் வாழ்க்கைத் துணைகளாய் வாழும் வாழ்க்கையில் இருவருக்கும் ஒழுக்கத்திலும் கட்டுப்பாடுகளிலும் ஒரேமாதிரியான ஒழுக்க மும் கட்டுப்பாடும் இருக்கும்படி வாழ்க்கையையும் அது சம்பந்தமான அரசியல் சட்டங்களையும் திருத்திக் கொண்டாலொழிய உண்மையான



சுதந்திரம் ஏற்படவே முடியாது. மக்கள் மனதிலும் "இயற்கையிலேயே பெண்கள் பலவீனர்களாகவும் ஆண்களுடைய சம்ரக்ஷணையிலும் இருக் கும் படியாக படைக்கப்பட்டிருக்கின்றார்கள்" என்கின்ற உணர்ச்சி அடி யோடு மாறியுமாக வேண்டும். அந்த வுணர்ச்சி ஆண்களுக்கு மாத்திரமல் லாமல் இன்றைய நிலை பெண்களுக்கே பெரிதும் முதலில் மாற வேண்டி யதாக இருக்கின்றது.

ஏனெனில் அவர்களை அமுத்தி அடிமைப் படுத்திய கொடுமையான பலமானது பெண்கள் தாங்கள் மெல்லியலாளர்கள் என்றும், ஏதாவது ஒரு ஆணின் காப்பில் இருக்க வேண்டியவர்களென்றும் தங்களையே கருதிக் கொள்ளும்படி செய்து விட்டது. ஆதலால் அது முதலில் மாற வேண்டியது அவசியமாகின்றது.

ஆகவே அவர்களது சுதந்திரத்திற்கு சொத்துரிமை இல்லாததோடு தங்களின் அடிமையுணர்ச்சியும் பயமும் காரணமாயிருப்பதால் வாழ்க்கை யில் உள்ள ஒவ்வொரு துறையிலும் அவ்வடிமை உணர்ச்சியும் பயமும் அடியோடு மறையும்படியாகவும் பார்த்துக் கொள்ள வேண்டியது பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவர்களின் முக்கிய கடமை என்பதை ஞாபகப் படுத்துகின்றோம்.

தவிர பெண்களை ஆண்கள் எவ்வளவு கொடுமைப் படுத்தியிருக் கின்றார்கள் என்பதற்கு ஆதாரமாக சமீபத்தில் நடைபெற்ற மற்றொரு சம்பவத்தையும் இந்த சந்தர்ப்பத்திலேயே குறிப்பிட விரும்புகின்றோம்.

அதாவது மலையாள நாட்டு நம்பூதிரிப் பார்ப்பனர்கள் தங்கள் வகுப்புக்களில் ஆண்கள் குடும்பத்தில் மூத்தவர் யாரோ அவர் மாத்திரமே தங்கள் ஜாதியில் அதாவது நம்பூதிரி ஜாதியிலேயே ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வது என்றும் மற்ற ஆண்கள் வேறு ஜாதியில் அதாவது நாயர் ஜாதியில் உள்ள பெண்களை வைப்பாட்டிகளாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், அந்தப்படி வைத்துக் கொள்வதிலும் நாயர் பெண்கள் வயிற்றிலும் பிறக்கும் குழந்தைகளுக்கு அக் குழந்தைகளைக் கொடுத்த நம்பூதிரியின் சொத்தில் பங்கு இல்லை என்றும் ஒரு கொள்கை இன்றும் இருந்து வருவதுடன் இதை நாயர் பெண்களும் ஆண்களும் ஒரு பெருமையாகவும் கருதி வருகிறார்கள். இதனால் நம்பூதிரி வகுப்புப் பெண்கள் அநேகர் 40, 50 வருஷம் வரையில் கூட கல்யாண மில்லாமல் பேருக்கு மாத்திரம் சாகும்போது ஒரு நம்பூதிரிப் பார்ப்பனக் கிழவனால் தாலிகட்டச் செய்து விடுவதும் மற்றும் இதற்காகவே ஒரு கிழவனுக்கு 6, 7 மனைவிகளைக் கட்டுவதும் வழக்கமாயிருந்து வருகின்றது. இந்தக் கொடுமையை உணர்ந்த நம்பூதிரி வாலிபர்கள் தங்கள் சமூகத்தின் காட்டு மிராண்டித் தனமான இக்கொள்கைகளை அழிக்கத் தோன்றி இப்போது எவ்வளவோ தாராள நோக்கங்களுடன் வெளிக்கிளம்பி விட்டார்கள். இவைகளில் ஒன்றாகத்தான்



RangaRakes
tamilnavarasam.com

நம்பூதிரிப் பார்ப்பனர்கள் பூணூல் அணிவது முட்டாள்த் தனமென்றும் அவற்றை கழற்றி நெருப்பில் போட்டு கொளுத்த வேண்டும் என்றும் தீர்மானம் செய்து அவ்வாரே பலர் கழற்றி நெருப்பில் கொளுத்தியும் விட்டார்கள்.

பலர் தலையில் உள்ள முன் குடுமிகளை எல்லாம் சிறைத்து விட்டு கிராப் செய்து கொண்டார்கள். இப்போது தம்பியாய் இருக்கின்றவர்களும் கல்யாணமும் செய்து கொண்டார்கள்.

இந்தக் கல்யாணக் கொள்கை விஷயத்தில் நாம் முக்கியமாய் மகிழ்ச்சியடையும் விஷயம் ஒன்றேயாகும். அதாவது நம்பூதிரிப் பெண்கள் 40, 50 வருஷம் வரை பலர் புருஷனில்லாமல் இருக்கும் கொடுமைகள் ஒருவாறு ஒழியும் என்பதேயாகும். நம்பூதிரி ஆண்கள் கல்யாணமில்லாமல் இருக்கவேண்டும் என்றும் பெண்ஆசை இருந்தால் நாயர் பெண்களை வைப்பாட்டியாக வைத்துக் கொள்ளலாம் என்றும் செய்து கொண்ட கட்டுப் பாடுகளைப் போலவே நம்பூதிரிப் பெண்களிலும் கல்யாணம் செய்து கொள்ள முடியாதவர்கள் வேறு ஏதாவது ஒரு வகுப்பு ஆண்களை சம்மந்தக் காரனாக நாயகனாக வைத்துக் கொள்ளலாம் என்பதாக ஒரு திட்டம் செய்து கொண்டிருப்பார்களானால் அந்த வகுப்புப் பெண்களுக்குக் கஷ்டமே இருந்திருக்காது. அப்படிக்கில்லாமல் தங்கள் வகுப்பு பெண்களை வீட்டில் கல்யாண மில்லாமல் அடைத்து வைத்து விட்டு வேறு வகுப்புப் பெண்களை வைப்பாட்டிகளாக அனுபவித்துக் கொண்டு இருப்பதானதும் மிகவும் கொடுமையான காரியம் என்றே சொல்ல வேண்டும். இந்தக் கொடுமையை ஒழிக்க நம்பூதிரி வாலிபர்கள் முயற்சித்தால் அதற்கு இடையூ றாக நாயர் கனவான் பிரவேசித்து அந்த வாலிபரை பகிஷ்காரம் செய்வது என்பது மிகவும் மானக்கேடான காரியமாகும். சுயமரியாதை அற்ற ஜாதி யைச் சேர்ந்த பெண்கள் என்று அந்த ஜாதியைப் பற்றி நம்பூதிரி வாலிப சங்கத்தார் வெளியிட்ட சுற்று அறிக்கையில் குறிப்பிட்டது மிகவும் பொருத்த மானது என்றே சொல்லுவோம். ஆகவே பழமையின் பேரால் பெண்களை வெகு காலமாகக் கொடுமைப்படுத்தி வந்த காரியங்கள் இப்போது திடீர் திடீரென்று அழியும் படியாக ஆங்காங்கு முயற்சிகள் அதுவும் காரியத்தில் நடைபெறுவதை இந்த இரண்டொரு வருஷங்களாகத் தான் பார்க்க முடி கின்றன. இவற்றிற்கு ஏற்படும் எதிர்ப்புகளை மக்கள் எவ்வளவு கேவலமாக வும், அலட்சியமாகவும் கருதக் காலம் வந்து விட்டது என்பதை நினைக்கும் போது நமக்கு ஏற்படும் மகிழ்ச்சி அளவிட முடியவில்லை.

இந்த நிலையில் சமீபத்தில் ஹைகோர்ட்டில் நடந்த ஒரு அரசியல் சம்மந்தமான வழக்கில் பழமை விரும்பியான ஒரு வருணாசிரமப் பார்ப்பனர் அதாவது திரு. டி. ஆர். ராமச்சந்திரய்யர் என்பவர் “சில காலிகள் நாளைய தினம் பூணூல் போடக்கூடாது என்று சொன்னால் அதற்கும் கட்டுப்படுவதா?” என்று பேசி இருக்கிறார். இதை ஒரு தேசீயவாதியும் கண்டிக்கவே இல்லை.



இந்த திரு. டி. ஆர். ராமச்சந்திரய்யர் அவர்கள் மலையாளத்தில் பூணூலைக் கழட்டி நெருப்பில் போட்டு கொளுத்திய நம்பூதிரி பார்ப்பனர் களை என்ன செய்தார் என்றும் அந்த நம்பூதிரிப் பார்ப்பனர்கள் கூட்டத்தில் பூணூல் போடுவது முட்டாள்தனமென்று தீர்மானித்த தீர்மானத்தை பற்றி என்ன செய்தார் என்றும் கேழ்க்கின்றோம்.

அறிவு விஷயத்தில் உலகம் போகும் முற்போக்கை கவனிக்காமல் தங்களுடைய சுயநலத்தையே பிரதானமாய்க் கொண்டு பழைய கந்தல்களை புரட்டிக் கொண்டு கசுமாலங்களைக் கழுவி விட்டுகொண்டே இருந்தால் அதை இனி யார் மதிப்பார்கள் என்பதை இந்த கூட்டத்தின் சுயநல ஆத்திர மானது அவர்களை அறிய முடியாமல் செய்து கொண்டே வருகின்றன.

ஆகவே இனி பொது நல சேவைக்காரர்களும் மக்கள் பிரதிநிதிகள் என்பவர்களும் அரசாங்க நிர்வாகத்தைப் பற்றிய திட்டத்தை மாத்திரம் போட்டுக் கொண்டிருக்கும் யோசனையை விட்டுவிட்டு சமூக வாழ்க்கை நிர்வாக சம்மந்தமான விஷயத்திலும் அவசியமான திட்டங்களைப் போட வேண்டிய காலம் வந்திருப்பதை கவனிக்க விரும்புகின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 26.10.1930**



RangaRakes tamilnavarasam.com

## குருசாமி - குஞ்சிதம்

திருச்செல்வர்கள் எஸ். குருசாமி, எஸ். குஞ்சிதம் ஆகிய இருவர்களும் இவ்வருஷம் கடைசியாக நடந்த செப்டம்பர் மாதப் பரீட்சையில் பி. ஏ. வகுப்பில் தேறியிருக்கிறார்கள். திருமணம் நடக்கும் போது திரு. குரு சாமி பி. ஏ. வகுப்பில் ஒரு பாடம் மாத்திரம் தேறியிருந்தார். திரு. குஞ்சிதம் மாணவியாயிருந்தார். திருமணம் நடந்து "சதிபதி"களாக வாழ்ந்து கொண்டே இருவரும் படித்து பரீட்சையில் தேறியிருப்பதற்கு நாம் மிகவும் மகிழ்ச்சியடைவதோடு அவர்களது முயற்சியைப் பாராட்டுகிறோம்.

**குடி அரசு - பெட்டிச் செய்தி - 26.10.1930**



## நாடார் முன்சீப்பு

சென்னையில் ஹைக்கோர்ட் வக்கீலாக இருந்த உயர்திரு. நடராஜ நாடார் பி.ஏ.பி.எல் அவர்கள் ஹைகோர்ட் ஜட்ஜுகளின் தயவினால் விருத்தாசலம் (தென்னாற்காடு ஜில்லா) முன்சீப்பாய் இம்மாதம் நியமனம் பெற்று உத்தியோகம் ஒப்புக் கொண்டார். இந்த கனவான் சுமார் ஒன்றரை வருஷத்திற்கு முன்பாகவே முன்சீப் லிஸ்டில் தாக்கல் செய்யப்பட்டவர். இந் நியமனம் வகுப்புவாரி உரிமை வலியுறுத்தப்பட்டதன் மூலமே கிடைக்கப் பட்டதாகும். இல்லையானால் இதற்கும் ஒரு அய்யரோ, அய்யங்காராகவே தான் வந்திருப்பார். இந்த உத்தியோகத்தில் இவரைச் சேர்த்து இப்போது இரண்டே நாடார்கள் நியமனம் பெற்றிருக்கிறார்கள். சப் ஜட்ஜியாகவோ, ஜில்லா ஜட்ஜியாகவோ பிரிட்டிஸ் அரசாங்கம் ஏற்பட்டது முதல் இதுவரை யாரும் வந்ததில்லை என்று தான் சொல்ல வேண்டும். நாடார் சமூகத்திற் கென்று ஏதாவது உத்தியோகம் ஒதுக்கி வைக்கப்பட்டாலும் அதை சில கிறிஸ்தவர்கள் வந்து தாங்களும் நாடார் என்று சொல்லி கொள்ளை அடித்துக் கொண்டு போய் விடுகின்றார்கள். நாடார் மக்களும் ஏமாந்து விட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். இனியாவது நாடார் மக்கள் கண் விழித்து கிறிஸ்தவ நாடார்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களை கிறிஸ்தவர்களுக்குண்டான விகிதாச்சாரத்தில் பெற்றுக் கொள்ளும்படியும், தங்கள் சமூகத்திற்குண்டான விகிதாச்சாரத்தில் வேறு யாரும் பிரவேசிக்காத படியும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மதம் காப்பாற்றப்படவேண்டும். ஜாதி காப்பாற்றப்பட வேண்டும் என்றும் அதில் யாரும் பிரவேசிக்கக் கூடாதென்றும், இந்த நிபந்தனையின் மீதே சுயராஜ்யமும் சுயேச்சையும் பெற விரும்பும் ஸ்தாபனங்களும், கிளர்ச்சிகளும் நடக்கும் போது நாடார் சமூகம் போன்ற வகுப்பார்கள் தங்கள் உரிமை பெறுவதில் மிக்க கவலையாகவும், ஜாக்கிரதையாகவும் இருக்க வேண்டியதுடன் அந்தப்படி தாராளமாய் பல்லைக் கெஞ்சாமலும் மனச்சாட்சியையும் கொள்கைகளையும் விற்காமலும் தானாகவே கிடைக்கும் படியாக அரசாங்க யந்திரத்தில் தக்க மார்க்கம் செய்து கொள்ள வேண்டியது முக்கிய கடமையாகும். இது நிரந்தரமென்று நாம் சொல்ல வரவில்லை. எது வரையும் ஜாதிப் பிரிவும், மதப்பிரிவும் அவைகளுக்கு ஏற்ற தாழ்ச்சி



RangaRakes tamilnavarasam.com

உணர்ச்சிகளும் ஆதாரங்களும் காக்கப்படுகின்றனவோ அதுவரையில் கண்டிப்பாய் மேல் கண்ட கொள்கை இருந்தே ஆகவேண்டும் என்று சொல்லுகின்றோம். "சுயராஜ்ய அரசாங்கம் ஏற்பட்டால் எல்லாம் சரியாய் விடும். ஆகையால் அதுவரை யாரும் தங்கள் உரிமை கேட்கக் கூடா தென்று சிலர் அதாவது இப்போது தங்கள் உரிமைக்கு மேலாக பலன் அனுபவித்துக் கொண்டிருக்கின்றவர்களும் அவர்களைப் பின்பற்றி வாழ வேண்டியவர்களும் சொல்லுவார்கள். அதற்கு நாம் சொல்லும் சமாதானம் என்னவென்றால் இப்போது இருப்பதை விட சுயராஜ்ய அரசாங்கம் என்று சொல்லுவதில் வகுப்பு உரிமையும், மத உரிமையும் அதிகமாகத்தான் வலியுறுத்தி என்றும் மாராமல் இருக்கும்படி பந்தோபஸ்து செய்ய வேண்டி யிருக்குமேயொழிய இதை விட சிறிதும் குறைவாயிருக்காது என்று கோபுரத்தின் மீதிருந்து கூவுவோம். ஏனெனில் சுயராஜ்ய கவர்ன்மெண்டில் ஜாதியையும் மதத்தைப் பற்றியக் கொள்கை என்னவென்பதையும் அதற் காகப் பல மதக்காரர்கள் இடமும், பல வகுப்புக்காரர்களிடமும் இதுவரையும் இப்போதும் செய்து கொண்டு வந்திருக்கும் ஒப்பந்தத்தையும் ராஜியையும் பார்த்தால் நன்றாய் விளங்கும். நிற்க இம்மாதிரி வகுப்புவாரி உரிமைக்கு பார்ப்பனர்களைப் போலவே கிறிஸ்தவர்களும் ஒப்புக்கொள்ள மாட்டோம் என்று சிற்சில இடங்களில் சொல்ல வருவார்கள். ஏனென்றால் பார்ப்பனர் களைப் போலவே தாங்களும் (கிறிஸ்தவர்களும்) அதிகம் பேர் படித்திருப் பதாகவும் கிறிஸ்தவ ஜன சங்கைப்படி தங்களுக்கு உத்தியோகம் கொடுத் தால் அது மிகவும் போராததாகி விடும் என்றும் ஆகையால் தாங்கள் அரசாங்க மதத்தை சேர்ந்தவர்கள் என்னும் சலுகைமேல் அதிக உத்தியோ கம் பெறுவது இந்த வகுப்புவாரித் திட்டத்தினால் குறைந்து போய் விடு மென்றும் கருதி சொல்லுவார்கள். இதையே மற்றும் இம்மாதிரியான இரண்டொரு வகுப்பும் சொல்லக் கூடும். ஆனால் வெகு காலமாய் தாழ்த்தி கொடுமைப் படுத்தி வைத்திருக்கும் மக்களுக்குக் கண்டிப்பாய் இந்த வகுப்புரிமைத் தவிர வேறு கதியே கிடையாதலால், அவர்களும் மற்றவர் களைப் போல் வரும் வரையிலாவது இதை வலியுறுத்திக் கொண்டிருக்க வேண்டியது அவர்களது கடமையாகும். "சர்க்கார் உத்தியோகம் பெறுவது அடிமை தனம்" என்று கூட சிலர் சொல்ல வருவார்கள். அதையும் யாரும் கவனிக்கக் கூடாது. ஏனெனில் சுயராஜ்யமே உத்தியோகம் பெறுவதற்காகத் தான் கேட்கப்பட்டது. இன்று நாம் கேட்கும் சுயராஜ்யமும் உத்தியோகம் தான். அதாவது அதிகாரம் செய்வதும் அதன் மூலம் பணம் சம்பாதிப்பதும் தான். ஆதலால் இதை நம்பி முட்டாள்களாய் விடக் கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 26.10.1930**



# சட்டசபைக்குப் பார்ப்பனர் செல்வதின் ஆபத்து

திருவாளர் ராவ்பகதூர் கிருஷ்ணமாச்சாரியார் எம். எல். ஏ. இந்திய சட்டசபைக்கு நமது பிரதிநிதியாக அனுப்பப்பட்டவர். அவர் சமூக சட்டம் செய்ய சட்ட சபைக்கு அதிகாரம் இருக்க கூடாதென்றும் மத விஷயங்களில் எந்தச் சீர்திருத்தவாதியும் பிரவேசிக்கக் கூடாதென்றும் , கல்யாண வயதைப் பற்றி சாஸ்திரங்களில் என்ன கூறியிருக்கிறதோ அதற்கு சிறிது கூட மாற்றம் செய்யச் சீர்திருத்த வாதிகளையாவது சர்க்காரையாவது சட்டசபைகளை யாவது அனுமதிக்கக் கூடாது என்றும் பேசி அதற்காக கட்டுப்பாடான பிர சாரம் செய்ய வேண்டுமென்றும் தன்னால் கூடிய வரை தான் சட்ட சபையில் பார்த்துக்கொள்வதாகவும் கூறியிருக்கின்றார். சுயராஜ்யம் கிடைத்தப் பிறகு சமூக சட்டம் செய்து கொள்ளலாம் என்று மக்களை ஏமாற்றி அரசியல் குழியில் விழுகும்படி செய்யும் பார்ப்பன தேசீயவாதிகளும் அவர்களது பத்திரிகைகளும் இதற்கு யாதொரு பதிலும் சொல்லாமல் வாயை மூடிக் கொண்டேயிருக்கின்றன. நாம் இந்தப் பித்தலாட்டங்களை எடுத்துக் காட்டினால் அது தேசத் துரோகம் என்பதாகவும் சுய ராஜ்யத்திற்கு முட்டுக் கட்டையாகவும் போய் விட்டதாகக் கூக்குரல் போட்டு விஷமப் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள்.

ஆகவே எப்படியாவது சட்டசபை முதலிய ஸ்தானங்களுக்கு அரசி யல் கட்சிகளையும் அபிப்பிராயங்களையும் எதிர்பார்க்காமல் உண்மை யான சீர்திருத்தத்திற்கு போதிய உணர்ச்சியுள்ள மக்களாகப் போகும்படி பார்த்துக் கொள்ள வேண்டியதாகும். அதை விட்டு விட்டு அரசியல் கொள் கைகள் என்பதைக் கவனித்துக் கொண்டு எந்தக் காரணத்தை முன்னிட்டா வது பார்ப்பனர்களை நமது பிரதிநிதிகளாக அனுமதித் தோமானால் விதவைகள் கற்பம் உதிரக் கட்டியாகி திடீரென்று மறைந்து விடுவதுபோல் நமக்குத் தெரியாமலேயே அவர்கள் பார்ப்பனீயப் பிரதிநிதியாகவேதான் ஆகிவிடுவார்கள். அதில் சிறிதும் சந்தேகம் கொள்ளுவது அறியாமை யேயாகும்.

**குடி அரசு - செய்திவிளக்கக் குறிப்பு - 26.10.1930**



RangaRakes
tamilnavarasam.com

## சம்பளக் கொள்ளை

# திரு. சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார்

கோவையில் கூடிய நடு வகுப்பு உத்தியோகஸ்தர்கள் மகாநாட்டில் தலைமை வகித்த திரு. சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார் எம்.எல். சி. அவர்கள் செய்த தலைமை உபன்யாசத்தில் கண்ட ஒரு விஷயத்தை நாம் பாராட்டுகின்றோம். அதாவது "உயர்ந்த சம்பளம் வாங்குபவர்கள் சம்பளத் தைக் குறைத்து குறைந்த சம்பளம் வாங்குபவர்களின் சம்பளத்தை உயர்த்தி எல்லோருடைய சம்பளத்தையும் ஒருவிதமாய் நிர்ணயிக்கவேண்டும்" என்று பேசி இருக்கின்றதானது மிகுதியும் போற்றத்தக்கதாகும். குடிகளுக்கு வரிப்பளுவு அதிகமாயிருப்பதும் சர்க்கார் வேலையில் இருப்பவர்களில் அநேகருக்குச் சரியான ஜீவனத்திற்குப் போதாத சம்பளமிருப்பதற்குக் காரணம் சில உத்தியோகஸ்தர்களுக்கு ஏராளமான சம்பளங்களும் தகுதிக்கும் தேவைக்கும் அதிகமான சவுகரியங்களும் ஏற்பட்டிருப்பதே யாகும்.

என்றைய தினம் அரசியல் புரட்டு நமது நாட்டில் தோன்றிற்றோ அன்று முதலே பெரிய பெரிய உத்தியோகமும் அவற்றிற்குக் கொள்ளை கொள்ளை யான சம்பளமும் அதிகப் பட்டுக்கொண்டும் உயர்த்திக்கொண்டுமே வந்திருக்கின்றது. இனியும் உயருகின்றது. இவை முதலான கொடுமைகளை யெல்லாம் யோசித்தே ஈரோடு சுயமரியாதை மகாநாட்டில் எந்த உத்தி யோகத்திற்கும் அதாவது எவ்வளவு பொறுப்புள்ள உத்தியோகத்திற்கும் மாதம் 1000 ருபாயுக்கு மேற் பட்ட சம்பளம் இருக்கக்கூடாது என்பதாக ஒரு தீர்மானமும் நிறை வேற்றப்பட்டிருக்கின்றது. ஆனால் அது எப்போது அமுலுக்கு வரும் ?

**குடி அரசு - கட்டுரை - 26.10.1930**



## மந்திரி மார்கள்

சென்னை மாகாணப் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டபின் அமைக்கப் படவேண்டிய மந்திரிசபை அமைக்கப்பட்டாய் விட்டது.

அதாவது திவான் பகதூர் B. முனுசாமி நாயுடு அவர்கள் முதல் மந்திரியாகவும், திரு. P. T. இராஜன் பாரிஸ்டர் அவர்கள் இரண்டாவது மந்திரி யாகவும், திவான் பகதூர் S. குமாரசாமி ரெட்டியார் அவர்கள் மூன்றாவது மந்திரியாகவும் நியமனம் பெற்றிருக்கின்றார்கள்.

இவர்களைப் பாராட்டி வரவேற்கு முன்பாக பழைய மந்திரிகளை அவர்களது அருமையான தொண்டுக்காகப் பாராட்டி வழியனுப்ப வேண்டி யது அறிவும் நடுநிலைமையுமுள்ளோர் முறையாகும். அந்தப்படி பாராட்டி வழியனுப்புவதில் சிறிது கூட மிகைப்படுத்தாமல் உண்மையை உள்ளபடி சொல்லுவதானாலும் இதில் போதிய இடம் கிடைக்க மாட்டாது என்றே கருதுகின்றோம்.

முதலாவதாக, அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் அதாவது இராஜிநாமா கொடுத்த மூன்று மந்திரிகளின் நாணய விஷயம் மிக பரிசுத்தமானது என்பது அவர்களுடைய எதிரிகள் கூட இதுவரை அதைப்பற்றி எவ்வித சந்தேகமும் கொள்ளாததாலேயே நன்றாய் விளங்கும்.

இரண்டாவது, பார்ப்பனரல்லாதார் நன்மையின் பொருட்டு தங்களால் கூடிய அளவுக்கும், சில சமயங்களில் மேலாகவும் நன்மை செய்திருக்கின் றார்கள். உதாரணமாக முதன் மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் பெண்களும், தீண்டப்படாதவர்கள் என்பவர்களும் சொற்பத்துகையுள்ள மதக்காரர்கள் என்பவர்களும் ஸ்தல ஸ்தாபனங்களில் தேர்தல் மூலம் இடம் பெறும்படி செய்திருப்பதும், நாமினேஷன்களே அடியோடு இல்லாமல் எல்லா ஸ்தானங்களையும் தேர்தல்களுக்கே விட்டுவிட்டதும், பெண்கள் கல்வி விஷயத்தில் தாராளமான அளவுக்கு அதாவது 3வது பாரம் வரை இலவசமாக கிடைக்கும்படி செய்தது ஆகிய மூன்று காரியங்களும் மூன்று இரத்தினங்கள் என்றே சொல்ல வேண்டியதாகும். இந்தக் காரியங்கள் இந்தியா முழுவதிற்கும்



RangaRakes tamilnavarasam.com

பார்த்தாலே இவர் மாத்திரமே தான் இப்படிச் செய்தவராயிருப்பார்.

மற்றும் இரண்டாவது மந்திரியான திரு. முத்தையா முதலியார் அவர்கள் சர்க்கார் உத்தியோகங்களில் எல்லா மக்களுக்கும் பங்கு கிடைக் கும் படியாக ஏற்பாடு செய்தவராவார். இதைப் பார்க்கும் போது வகுப்பு மதத் திட்டமானது, கடுகளவு மனித சுபாவமுள்ளவனும் போற்றித் தீர வேண்டிய தோடு எதுவரையில் இந்த நாட்டில் வகுப்பு உயர்வு தாழ்வு பிரிவுகளும் மத உணர்ச்சியும் இருக்கின்றதோ அதுவரை அவருக்கு நன்றி செலுத்தித் தீர வேண்டியதாகும்.

இது தவிர சர்க்காரைக் கொண்டே மதுவிலக்குப் பிரசாரம் நடக்கும் படி ஏற்பாடு செய்ததானது உலகமே போற்றக் கூடிய காரியமாகும். உலகத்தில் இப்போது அநேக தேசங்கள் இதைப் பாராட்டி பின்பற்றி வருகிறது.

திரு. சேதுரத்தினமய்யர் அவர்களும் உத்தியோக வினியோக விஷயத்தில் பார்ப்பனர் அல்லாதார் விஷயத்தில் மிக்க மேன்மையாக நடந்து கொண்டதுடன் மற்ற மந்திரிகள் செய்யும் காரியங்களுக்கு யாதொரு இடையூறும் இல்லாமல் எதிர்பார்த்ததற்கு மேலாகவே ஒத்துழைத்து வந்தது பாராட்டத்தக்கதேயாகும்.

இவற்றையெல்லாம் விட ஸ்தல ஸ்தாபன மந்திரி இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் பதவிக்கு சுயமரியாதைச் சங்கத் தலைவர் திரு. சௌந்திரபாண்டியன் அவர்களை அநேக எதிர்ப்புக்கு இடையில் நியமனம் செய்ததும், கொடுமை செய்யப்பட்டுத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த திருவாளர்கள் சாமி சகஜானந்தம் அவர்களையும் முனுசாமி பிள்ளை அவர் களையும் தேவஸ்தானக் கமிட்டி அங்கத்தினர்களாக நியமனம் செய்ததை யும், தாழ்த்தப்பட்ட மக்களின் பிள்ளைகளைச் சேர்க்க மறுக்கும் பள்ளிக் கூடங்களுக்கு கிராண்டு உதவித்தொகை கொடுப்பதை மறுப்பதன் மூலம் எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் சேர்க்கும்படி செய்த காரியத்தையும் அவசியம் பாராட்ட வேண்டியதாகும். மற்றபடி பொதுவாகவே மூன்று மந்திரிகளும் தங்களாலான அளவுக்கு மனப்பூர்த்தியாய் தயவு தாக்ஷண்யம் என்பதில்லாமல் சுயமரியாதை இயக்கத்திற்கும், கொள்கைக்கும் உதவி புரிந்து வந்திருப்பதும் சட்டசபை முதலிய இடங்களிலும் பார்ப்பனர்களும் அவர்களது ஆயுதங்களும் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றியும் கொள்கைகளைப் பற்றியும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் தைரிய மாய் பதில் சொல்லி இயக்கத்தை ஆதரித்து வந்ததற்கும் சுயமரியாதை இயக் கம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டதாகும்.

மற்றும் இவர்களில் பார்ப்பனரல்லாத மந்திரிகள் இருவரும் ஜஸ்டிஸ் கட்சியில் கலந்து அதற்குத் தங்களால் கூடிய உதவி பல வகையிலும் செய்து



வந்ததும் குறிப்பிடாமல் விடக் கூடியவைகள் அல்லவென்றே சொல்லு வோம். கடைசியாக இம் மந்திரிகள் கட்சி காரணமாகவோ கொள்கை காரண மாகவோ அல்லாமல் தனிப்பட்ட முயற்சிகள் காரணமாகவே மறுபடியும் மந்திரிகளாய் வரக்கூடாமற்போய் விட்ட போதிலுங்கூட அவர்களுடைய முழு ஆதரவும் நமது இயக்கத்திற்கும், பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கும், சிறப்பாகத் தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லாமல் உறுதியாய் நம்பியிருக்கின்றோம்.

நிற்க, புதிய மந்திரிகளை வரவேற்பதிலும் மிகைப்படுத்திக் கூறாமலே உண்மையைச் சொல்ல வேண்டுமானால் மிகவும் பாராட்ட வேண்டியதே யாகும். மந்திரிகளையும் கட்சி காரணமாகவோ, கொள்கை காரணமாகவோ அல்லாமல் அதாவது வராமல் போனவர்களுக்கு சொல்லப்பட்ட காரணம் போலவே தனித்தனியான முயற்சி காரணமாகத் தான் வெற்றி பெற்றார்கள் என்பதை முதலில் சொல்லி விடுகின்றோம். ஏனெனில் இம்மந்திரிகளைக் கொள்கை காரணமாக பதவி பெற்றார்கள் என்று சொல்லுவோமேயானால் பழைய மந்திரிகள் கொள்கை காரணமாக பதவி இழந்தார்கள் என்று தான் சொல்ல வேண்டியதாகும். ஆகவே இந்த இரண்டையும் யாரும் ஒப்ப மாட்டார்கள். இன்றைய மந்திரிகளிலும் அதிகம் பெயர், யார் யார் எந்தக் கட்சி என்பது கூட அநேகமாய் தேர்தலின் போதும் மந்திரி நியமனத்தின் போதும் தான் பெரும்பாலோருக்கு அறிய முடிந்தது என்பது யாவருக்கும் தெரியும்.

நிற்க, ஜஸ்டிஸ் கட்சி என்பதாக ஒன்று இன்று இருக்கின்றது என்றும், அதன் பேரால் இன்று மூன்று கனவான்கள் மந்திரி பதவி பெற்றார்கள் என்றும் சொல்லப்படுவதற்கு யாராவது பொறுப்பாளி என்று ஒருவரைச் சொல்ல வேண்டுமானால் அது பெரிதும் திருவாளர்கள் சி.எஸ். இரத்தின சபாபதி முதலியார், பி. டி. இராஜன் ஆகிய இருவர்களையே சேரும். இந்த இரு கனவான்களே இக்கட்சியை குலையாமல் பார்த்து உருவாக்கிய வராவார்கள். எப்படியெனில் அக்கட்சியின் மெஜாரிட்டி அங்கத்தினர் என்பவர்கள் "எந்தக் கை வலுக்கும்" என்கின்ற "ஜோசியத்திலே"யே இருந்தவர்களாவார்கள்.

மேலும் சொல்ல வேண்டுமானால், இந்த இரு கனவான்களின் இவ் வளவு முயற்சியிருந்தும் கூட ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் சில அங்கத்தி னர்களின் பெயரை வெளியிடுவதற்குக் கூட அக்கட்சியின் முக்கிய அதா வது ஜீவாதாரமான கொள்கையைப் பலிகொடுத்த பிறகே தான் முடிந்து ஜஸ்டிஸ் கட்சி என்று ஒரு கட்சி இருப்பதாக வெளியில் காட்டிக் கொள்ள வேண்டியதாயிற்று. இதற்கு நெல்லூர் சம்பவம் காரணமாகிவிட்டது.

நிற்க, மந்திரி கட்சி அதாவது மந்திரிக்காக கொள்கையுடைய கட்சி வெற்றி பெற்றதா? ஜஸ்டிஸ் கட்சி அதாவது கொள்கைக்காக மந்திரியாகும் கட்சி வெற்றி பெற்றதா என்று பார்ப்போமானால் மந்திரி கட்சிதான் வெற்றி பெற்றதென்று சொல்லவேண்டும். அதாவது மந்திரிக்காக கொள்கையுடைய



RangaRakes tamilnavarasam.com

கட்சியாகத்தான் இன்று அது வெற்றிபெற்றது. ஏனெனில் நமது நாடு இன்று உள்ள நிலையில் நமது மக்களுக்குள்ள அறிவு உணர்ச்சியில் தேர்தலில் வெற்றி பெற்ற கனவான்கள் தன்மையில் இவ்வளவு தான் எதிர்பார்க்க முடியும். அன்றியும் இது இந்தியா முழுமைக்குமே அரசியல் என்னும் விஷயமும், தேசீயம் என்னும் விஷயமும் ஏற்பட்ட பிறகு அவைகளும், பார்ப்பனர்களும் காட்டிய வழியாகும். இதற்காக யாரையும் குற்றம் சொல்வதில் பயனில்லை. மக்களுக்கு அறிவுச் சுடர் கொளுத்தினால் கொள்கைக்காக என்னும் கட்சி வெற்றிபெறலாம்.

நிற்க, திரு பனகால் அரசர் காலமான உடனேயே திரு. முனுசாமி நாயுடு அவர்கள் தலைவராக வருவார் என்றும், வரவேண்டுமென்றும் எல்லோரும் எதிர்பார்த்ததுண்டு. பல காரணங்களால் அவருக்கு அன்று தைரியமும் சவுகரியமும் இல்லாமல் போய்விட்டது. அதுபோலவே திரு பி. டி. இராஜன் அவர்கள் தலைவராய் வரவேண்டுமென்று தமிழ் நாட்டு மக்கள் பெரிதும் விரும்பினதும் எதிர்பார்த்ததுமுண்டு. தவிரவும் ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் மந்திரி பதவி அடைய ஒருவருக்கு உரிமையுண்டு என்று சொல்லப்படுமானால் அது திரு. பி. டி. ராஜன் அவர்களுக்கே கிடைக்க வேண்டியதாகும். ஆந்திரநாட்டுப் பொதுமக்களில் இன்னமும் அநேகருக்கு ஜஸ்டிஸ் கட்சி என்றால் என்ன என்று கூட தெரியாதிருக்கும் நிலையில் எத்தனையோ எதிர்ப்புக்கும் பார்ப்பன சூட்சிக்கும் தலை கொடுத்துக் கொண்டு தமிழ் நாட்டுப் பொது மக்கள் பலத்தைக் கொண்டே கட்சியை நிலைநிறுத்தி அதற்காக வெகு பணமும் செலவும் செய்து வந்த குடும்பம் திரு. பி. டி. ராஜன் அவர்களுடைய குடும்பமேயாகும். ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் இதுவரை யாதொரு பதவியும், பட்டமும், அரைப் பைசா லாபமும் இல்லாமல் நஷ்டமும் அடைந்து கொண்டு வந்ததுடன் சென்ற மந்திரி நியமனத்தின் போதே தனக்கு வலுவில் தானாகவே வந்த மந்திரி பதவியை கட்சியின் சுய மரியாதையை உத்தேசித்து தனக்கு வேண்டியதில்லை என்று சொல்லி மறுத்துத் தள்ளி விட்டவர் திரு. ராஜனேயாவார். ஆதலால் அவருக் குக் கிடைத்ததில் அதிசயமோ, அதிக லாபமோ ஒன்றும் இல்லையென்றே சொல்லுவோம்.

அன்றியும் அவரும் அவரது குடும்பமும் சுயமரியாதை இயக்க விஷயத்தில் எவ்வளவோ அபிமானமும், உதவியும், ஆதரிப்பும் செய்து வந்தவர்களானதினால், இயக்கத்தின் பேராலும் முதலில் திரு. ராஜன் அவர்கள் வரவேற்கப்படவேண்டியவரேயாவர். ஏனெனில் முதல் முதலாக சுயமரியாதை இயக்கம் தமிழ் நாட்டில் பரவவும் ஆங்காங்கு கிளை ஸ்தாபனங்கள் ஏற்படுத்தவும், அவரது குடும்பத்தில் காலஞ்சென்ற பெரியார் திரு. எம். டி. சுப்பிரமணிய முதலியாரவர்களும், மற்றொரு பெரியார் திரு. டி. சோமசுந்திர முதலியாரவர்களும் ஊர் ஊராயும், கிராமம் கிராமமாயும் அலைந்தவர்களாவார்கள். மேலும் பார்ப்பனர்களும் தேசியப் பிழைப்புக்



காரரும் “ஜஸ்டிஸ் கட்சியை வெகு ஆழத்தில் வெட்டிப் புதைத்து ஆய்விட்டது” என்று ஆரவாரம் செய்த காலத்தில் “இல்லை, இல்லை அது முன்னிலும் அதிகமாக வலுவுடன் விளங்கப் போகின்றது” என்று காட்டு வதற்காக மதுரையில் சுயமரியாதை மகாநாட்டையே, ஜஸ்டிஸ் மகாநாடு என்னும் பெயரால் நடத்தி தமிழ்நாட்டு மக்கள் எல்லோரையும் தருவித்து தைரியமூட்டி அக்கட்சிக்கு புத்துயிர் அளித்தவர்கள் திரு. ராஜன் குடும்பத் தார்களேயாகும். ஆகவே புத்துயிர் அளித்தும், வளர்த்தும், காப்பாற்றியும் வந்த திரு. ராஜன் அவர்களே முதலில் அக்கக்ஷி சார்பாக மந்திரி பதவி அடையவேண்டியவராவார் என்பது யாவரும் ஒப்ப முடிந்ததாகும். நிற்க,

திரு. முனுசாமி நாயுடு அவர்கள் ஆந்திர நாட்டு அங்கத்தினர்கள் ஆதரவைப் பெரிதும் கொண்டவரானதினாலும் ஜஸ்டிஸ் கட்சிக்குத் தலைவராக ஏற்பட்டதினாலும், அவரும் கூட சென்ற தடவை மந்திரி நியமனத்தின் போது ஒரு ஸ்தானம் வலிய வந்ததை கட்சிக் காரணமாக மறுத்து விட்டவரானதினாலும், அவரும் ஒரு ஸ்தானம் அடையத் தக்கவ ரேயாவர். ஆனால் அவரது கொள்கைகள் நாட்டு நன்மைக்கு ஏற்றவைகள் அல்ல வென்பதை இங்கு நாம் மறைக்க முடியவில்லை. காங்கிரசின் செல்வாக்குக்கு மிகவும் பயந்தவர் பயப்பட வேண்டியவர் அதனாலேயே ஜஸ்டிஸ் கக்ஷியில் பார்ப்பனரைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், அடிக்கடி சொல்லுபவர். அதனாலேயே தேசியப் புரட்டை ஆதரிப்பவர். “சீர்திருத்த விஷயம் வேறு, அரசியல் விஷயம் வேறு” என்று கூட சொல்ல வேண்டிய அவசியமுடையவர். ஆனபோதிலும் இந்த அபிப்பிராயங்கள் எல்லாம் அவருக்கு ஏற்படக் காரணமென்ன என்போமானால் ஆந்திர நாட்டில் பார்ப்பனரல்லாத பிரசாரம் சரிவர செய்யாததாலே ஒழிய வேறல்ல. ஆகையால் நமது பிரசாரம் ஆந்திர நாட்டுக்கும், அங்குள்ள மக்களுக்கும் தேசியப் புரட்டு விளங்கி காங்கிரஸ் செல்வாக்கும் தமிழ் நாட்டைப் போல் குறைத்து விடுமானால் தானாகவே மாறிவிடக்கூடும் என்று உறுதியாய்ச் சொல்லுவோம். ஆகையால் அதற்காக சிறிது மார்ஜன் விடவேண்டிய தேயாகும்.

தவிர, திரு. எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்கள் ஒரு மந்திரியாக வந்ததும் பாராட்டத்தக்கதேயாகும். உலகப் பிரசித்தியான கோயமுத்தூர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த முதலே அவருக்கு உரிமை ஏற்பட்டு விட்டது. நன்றாய் பேசக் கூடியவர். இந்த ஸ்தானத்திற்கு ஜமின்தாரர்கள் ராஜாக்கள் பெயர்கள் அடிபட்டுக் கொண்டிருந்த சமயத்தில் திரு. ரெட்டி யாரவர்கள் வர நேர்ந்ததானது எவ்வளவோ மேலானதாகும். அவர்கள் நமது சுயமரியாதை இயக்கத்திற்கு எவ்வளவோ ஆதரவளித்தவர்களாவார்கள். சட்டசபையில் தைரியமாய் எந்தவித எதிர்ப்பையும் மறுப்பையும் சமாளித்து பேசத் திறமையுடையவர் இவர் என்றே சொல்லலாம். மற்ற இரு மந்திரிகளையும் கூட நடத்தக் கூடிய அளவு சக்தியுடையவர். ஆகவே



RangaRakes
tamilnavarasam.com

நியமன மந்திரிகள் மூவரும் பொதுவில் பாராட்டத்தக்கவர் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் இதிலிருந்தே வரவேண்டியவர்கள் எல்லாம் வந்து விட்டார்கள் என்று சொல்லிவிட முடியாது. இன்றைய தினம் இந்தப்படியாவது ஒரு கட்சியிருப்பதற்கு முக்கிய ஆதரவாயிருந்தவரான திரு சி. எஸ். ரத்தினசபாபதி முதலியாரவர்கள் ஒரு பதவி அடையாமல் போனதற்கு காரணம் அக்கட்சியின் பலக்குறைவேயாகும். பொது நல சேவைக்கு வந்ததன் மூலம் தனது கிரமமான வருவாயும் கெட்டு, கை முதலிலும் செலவு ஏற்பட்டு லக்ஷக்கணக்காய் பொருள் நஷ்டமடைந்த வரும் நாணய விஷயத்தில் எதிரிகளும் குற்றம் சொல்ல முடியாத மிக்க பரிசுத்தமுள்ளவருமானவர்கள் யாராவது தமிழ் நாட்டில் இருப்பார் களானால் அதில் முதன்மையானவர் திரு. சி.எஸ். ரத்தினசபாபதி முதலியா ரவர்களே ஆவார்கள். அவரே இன்றைய கட்சி அமைப்புக்கு பெரும் பொறுப்பாளியாவர். அவரில்லாதிருந்திருக்குமானால் இன்று மந்திரியா யிருக்கும் கனவான்களில் இரண்டொருவர் மந்திரியாக வந்திருக்கக் கூடுமென்று வைத்துக் கொண்டாலும் ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் மந்திரிகளாய் இருந்திருக்க முடியாது என்று தைரியமாய்ச் சொல்லுவோம். ஆகவே அப்படிப்பட்ட ஒருவர் மந்திரியாக இல்லா விட்டாலும் சட்டசபை பிரசிடெண்ட் ஆகவாவது இருக்கும் படியாக ஜஸ்டிஸ் கட்சியார் என்பவர் கள் பார்ப்பார்களேயானால் தங்கள் கடமையை சிறிதாவது உணர்ந்தவர்கள் ஆவார்கள். ஆனால் அரசியல் துறையில் பிரவேசித்து விட்டால் நன்றியும், நாணயமும், விசுவாசமும் தேய்வுபடுவது இயற்கை. ஆகையால் என்ன நடக்கும் என்று உறுதி கூற முடிவதில்லை.

நிற்க, ஜஸ்டிஸ் கக்ஷியாரின் இன்றைய நிலைமைக்கு அளவுக்கு மேல் பாடுபட்டதின் மூலம் தனது சட்டசபை அங்கத்தினர் பதவியையும் மனமார தியாகம் செய்தவரும் திரு. ராஜன் அவர்கள் கக்ஷி அமைப்பு இவ்வளவு வெற்றி பெறுவதற்கும் மிக்க உதவியாயிருந்தவரும் திருவாளர் W.P.A. சௌந்திரபாண்டியன் அவர்களேயாவார். ஆகவே அவரும் எப்படியாவது மறுபடியும் நியமன மூலமாவது ஸ்தானம் பெறும்படி பார்த்துக் கொள்ள வேண்டிய கடமையும் நன்றியறிதல் குணம் காட்டிக் கொள்வதும் அக் கட்சியின் முக்கியமான கடமையாகும். மற்றபடி கடைசியாக ஒரு விஷயம் சொல்லி இதை முடிக்கின்றோம். அதாவது இன்றையதினம் நமது நாட்டில் ஜஸ்டிஸ் கட்சியையும் அதன் கொள்கைகளையும், இன்று பதவி பெற்ற அதன் மந்திரிகளையும் பாராட்டாமல் யாராலும், எக்கட்சியாலும் இருக்க முடிய வில்லை என்பதானது வெள்ளைக்காரப் பத்திரிகைகளும், பார்ப்பனப் பத்திரிகைகளும், தேசீய வேஷப் பத்திரிகைகளும் எழுதுவதைப் பார்த்தாலே தெரியவரும். இதன் உண்மை என்ன வென்றால் நாட்டில் பார்ப்பனரல்லாதார் கிளர்ச்சிநிலை மிக்க மேன்மை அடைந்திருக்கின்றது என்பதுவேயாகும். சென்ற தேர்தலில் பதவியடைந்த மந்திரிகளின் கட்சியைவிட, அவர்களது எண்ணிக்கையைவிட, ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் வந்த அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகமாகவே இருந்ததும், அவர்கள் இந்தத் தடவை போலவே ஒரு கொள்கையை வெளியிட்டிருந் ததும் யாவருக்கும் தெரியும். அப்படியிருக்கப் பார்ப்பனப் பத்திரிகைகளும், தேசீயப் பிழைப்புக்காரர்களும், ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்காகக் காங்கிரஸ் கட்டளையை மீறியாவது தங்கள் வாக்குறுதிகளைத் தவிர்த்தாவது வேறு கட்சியை அதாவது கொள்கை இல்லையென்றும் எண்ணிக்கையில் குறைந்ததென்றும் இன்றைய தினம் அவர்களாலேயே சொல்லும் கட்சியை "இதை விட மோசமான" நிலையில் இருக்கும் போது ஆதரித்து அப்படிப் பட்ட கட்சியிலிருந்து மந்திரிகளை நியமிக்கச் செய்து அவர்களையும் மனமார, வாயார, கையாரப் பாராட்டிய காரணம் என்ன என்பதையும் இன்று அதை விட்டுவிட்டு முன்பு தாங்கள் ஒழிக்கப் பாடுபட்ட ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கும் காரணம் என்ன என்பதையும் கூர்ந்த அறிவுடன் யோசித்துப் பார்த்தால் அதில் ஒரு உண்மை ரகசியம் விளங்காமல் போகாது. ஒருசமயம் " ஜஸ்டிஸ் கட்சிக் காரர்கள் கொள்கையை மாற்றிக் கொண்டால் அதனால் நாங்கள் ஆதரிக்கின்றோம்" என்று அக்கூட்டம் சொல்ல வருமானால் அது சிறிதும் பொருந்தாது. ஏனெனில் இவர்கள் என்ன கொள்கை மாற்றிக் கொண்டார்கள் என்பதாக அவர்கள் சொல்லக்கூடும் என்று கவனித்துப் பார்த்தால் அதன் புரட்டும் வெளியாகி விடும். அதாவது "பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொண்டார்களே அந்தக் கொள்கைதான்" என்று ஒரு சமயம் சொல்ல வருவார்களேயானால் அக்கட்சியில் இதுவரை ஒரு பார்ப்பன ரையும் சேர்த்துக் கொள்ளவில்லை என்பதும், சேர்த்துக் கொள்ளும் படியாக தங்களால் விதிகளைக் கிரமப்படி மாற்றிக் கொள்ளவுமில்லை என்பதும், அதற்கு எதிர்ப்பு ஏற்பட்டவுடன் விட்டுவிட்டார்கள் என்பதும் அவர் களுக்கே தெரியும். அன்றியும் அதிலிருந்து சமயத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுகிறார்கள் என்று குறை கூறக் கூடுமே தவிர அதைத் தங்களுக்கு அனுகூலமாய் எடுத்துக் கொள்ளமுடியாது. அன்றியும் ஏற்கனவே மந்திரி களாய் இருந்தவர்கள் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொண்டும் இருக்கிறார் கள். அதில் ஒருவர் மந்திரியாயுமிருந்தார்.

ஆகவே அந்தச் சமாதானம் புரட்டு என்பதும், அதற்காகப் பார்ப்ப னர்கள், இந்த மந்திரிகளையோ, ஜஸ்டிஸ் கட்சியையோ பாராட்டவில்லை என்பதும் விளங்கும். மற்றென்னவென்றால் பழைய மந்திரிகள் சுய மரியாதை இயக்கத்தைப் பலமாய் ஆதரிப்பவர்களென்பதும், இவர்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்றும் அவர்களைவிட இவர்கள் தங்களுக்கு அதிக ஆபத் துக் காரர்கள் அல்லவென்றும் அவர்கள் நம்பியிருப்பதுமாகும். ஆனால் இந்த நம்பிக்கையிலும், இந்தக் கூட்டத்தார்கள் போன மந்திரிகளை நம்பினது போலவே வந்த மந்திரிகளையும் நம்பி ஏமாந்து போவார்கள் என்பது நமது "ஜோசியமாகும்."

நிற்க, திரு. சுப்பராயன் அவர்கள் மந்திரி பதவி கிடைக்காததி


RangaRakes tamilnavarasam.com

னாலேயே எதிர் கட்சியாய் இருந்து எதையும் ஆக்ஷேபிப்பது என்கின்ற அரசியல் (சிறுமை) குணத்தைப் பின்பற்றாமல் நல்ல காரியங்களுக்கு ஒத்துழைத்து தன்னாலான உதவி செய்வதும், தீய காரியங்களுக்கு தாக்ஷண்யப்படாமல் தைரியமாய் எதிர்ப்பதுமான சுயமரியாதைக் கொள் கையைக் கடைபிடித்து இந்த மந்திரி சபையால் நாட்டுக்கும், பார்ப்பன ரல்லாத சமூகத்திற்கும், ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்புக்கும் நன்மை உண்டாக்கும்படி பார்க்க வேணுமாய் ஆசைப்படுகின்றோம்.

ஆகவே மேற்கண்ட கொள்கைகளையே உத்தேசித்து ராஜினாமாக் கொடுத்த மந்திரிகளைப் பாராட்டி வழியனுப்பி - புதிதாய் வந்த மந்திரிகளை வரவேற்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 02.11.1930**



# பொது உடைகள்

## I

இந்திய மக்கள் எவ்வித முன்னேற்றமோ, விடுதலையோ, சுதந் திரமோ பெருவதற்குத் தங்களை அருகர்கள் என்று சொல்லிக் கொள்ளு வதற்கு முன்பாக இந்தியர்கள் ஒரே சமூகத்தார் ஒரே லக்ஷியமுடையவர் என்கின்ற நிலையை அடைய வேண்டியது மிகவும் முக்கியமானது என்ப தைப் பற்றி நாம் யாருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகின்றோம். இன்று முற்போக்கோ, சுதந்திரமோ, விடுதலையோ அடைந்திருக்கும் நாட்டார்கள் எல்லாம் முதலில் தங்கள் நாட்டாரெல்லாம் ஒரே சமூகத்தாரென்றும், ஒரே லக்ஷியமுடையவர்கள் என்றுமான பிறகுதான் அவர்கள் முன்னேறவும் விடுதலைப் பெற்று சுதந்திரமடையவும் முடிந்தது என்பதை யறியலாம்.

ஆனால் நமது இந்தியாவைப் பற்றி பேசப் புறப்படுவோமேயானால் இது ஒரே சமூக மக்கள் கொண்ட நாடு என்றோ, ஒரே லக்ஷியமுள்ள மக்களைக் கொண்ட நாடு என்றோ யாரும் சொல்ல முடியாது. ஏனெனில் இந்தியாவானது பல மதங்களாய் பல ஜாதிகளாய் பிரிந்திருப்பதோடு பல உள்வகுப்புகளாகவும் பிரிந்திருப்பதல்லாமல் பாஷைகளிலும், உடை களிலும், நடை பாவனைகளிலும் பல பல மாறுதல்களைக் கொண்டிருக் கின்றது. சாதாரணமாக மதம் என்பதைப் பொறுத்த வரையிலாவது அவை தனித் தனி மனிதனுடைய நம்பிக்கையையும் மன உணர்ச்சியையும் சேர்ந்தது என்பதாக ஒரு சமாதானம் சொல்லிக் கொள்ளலாம். ஆனாலும் பாஷைகளும் ஜாதிப் பிரிவுகளும் மக்கள் ஒருவருக்கொருவர் அன்னி யோன்னியம் பெற முடியாதபடி உயர்வு தாழ்வு கொடுமைகளுடன் எதற் காக இருக்க வேண்டும் என்பவற்றிற்கு என்ன சமாதானம் சொல்ல முடியும். பல பாஷைகள் மூலமும் மக்கள் பிரிவு படும்படியான பாஷை வேறுபாடு கள் ஏன் என்பதற்கும் இதுவரை யாரும் சமாதானம் சொல்லாததோடு ஒவ்வொரு ஜாதியாரும் தன் ஜாதி பெரிது, தன் ஜாதி பெரிது என்று சண்டை யிடுவதும், ஒவ்வொரு பாஷையாரும் தன் பாஷை பெரிது, தன் பாஷை பெரிது என்று வாதிடுவாருமாக இருந்து கொண்டு அவைகளுக்கு பிரதானம் தேடும் முறையில் வேற்றுமையையும் துவேஷத்தையும் வளர்த்திக் கொண்டு இருக்க



RangaRakes tamilnavarasam.com

வேண்டியுமிருக்கின்றன. இத்தியாதி வித்தியாசங்கள் எந்தக் காலத்திற்குத் தொலைவது? மக்கள் எந்த காலம் ஒன்றுபட்டு ஒரு சமூகமாகி ஒரு லக்ஷியம் கொள்ளுவது? என்பவைகளை நினைத்தால் மனம் ஒடிய வேண்டியிருக்கின்றதே தவிர நம்பிக்கைக்கு இடமில்லை என்றாலும் மக்கள் ஒன்றுபட்ட சாயலை அடைந்து பார்வையிலாவது அதாவது மனித னுக்கு மனிதன் பார்த்தவுடனே ஒரு வேற்றுமை உணர்ச்சி தோன்றுவதற் கில்லாமல் செய்து விட்டால் பிறகு ஒவ்வொருவரும் தன் தன் மதம் ஜாதி வகுப்புப் பாஷை ஆகியவைகளைக் காட்டிய பின்பு ஒரு சமயம் வேற்றுமை உணர்ச்சி உண்டானாலும் அதை அது முதலில் பார்த்தவுடன் தோன்றிய ஒற்றுமையுணர்ச்சியின் பலத்தால் தலை தூக்காதிருக்கும்படி செய்யலாம்.

ஆதலால் ஒரு நாட்டினருக்குள் இருக்கும் பல விதமான வேற்றுமை களை யொழித்து ஒரு சமூகமாக்க வேண்டுமானால் முதலில் சாயலுக்கும் பிரித்துக் காட்டுவதற்கும் ஆதாரமாயிருக்கும் உடையை ஒன்று படுத்த வேண்டியது முக்கியமானதாகும்.

உதாரணமாக மற்ற நாட்டினரான சைனாகாரரையோ, ஜப்பான்கார ரையோ இன்று எடுத்துக்கொண்டால் அந்த நாட்டாரில் அந்த நாட்டாருக் குள்ளாகவே ஒருவருக்கொருவர் எவ்வித வித்தியாசத்தையும் கண்டுபிடிக்க முடியாத சாயலையும், உடையையும் கொண்டிருப்பது யாவருமறியலாம்.

அதுபோலவே ஐரோப்பாக்காரருக்குள்ளும் மக்கள் சாயலையோ உடையையோ கொண்டு எந்தவித வித்தியாசத்தையும் கண்டுபிடிக்க முடி யாது. இதனால் அத்தேச மக்களுக்கு தங்களுக்குள் ஒரு ஒற்றுமை ஏற்பட்டு ஒரு லக்ஷியத்திற்கு பாடுபட முடிகின்றது.

இந்த உண்மையையும், இரகசியத்தையும் கண்டுதான் வீரர் கமால் பாக்ஷா அவர்கள் எல்லோரும் ஒரே வித உடையணிந்து ஒரே சாயலாகவே இருக்க வேண்டுமென்று உத்தரவு போட்டதின் மூலம் துருக்கி நாடு சிறிய தாக இருந்தாலும் அது தன்னையும் ஒரு வல்லரசென்று மதிக்கும் படி செய்து கொண்டது. இதைப் பின்பற்றியேதான் ஆப்கானிஸ்தானமும் முயற்சிக் கின்றது.

ஆகவே இந்த கொள்கையானது நமது இந்தியாவுக்கு உலகத்திலுள்ள மற்றெல்லா நாட்டைக் காட்டிலும் மிக்க அவசியமானது என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை என்றே கருதுகின்றோம்.

இத்தியாதி காரணங்கள் கொண்டு நமது நாட்டிற்கும் இப்போது வெகு அவசரமாக உடையும், சாயலும் மாற்றப்பட்டு ஒன்றுபோல் தோன்றும்படி செய்ய வேண்டியது அவசியமென்று கருதியே நாம் இதை எழுத முற்பட் டோம். இவ்வெண்ணம் நமக்கும், நமது நண்பர்களில் பலருக்கும் வெகு நாளாகவே இருந்து வந்தாலும் என்ன மாறுதல் செய்வது என்னும் விஷயத்



தில் யோசனையாகவே இருந்து வந்ததால் தாமதப்பட்டு விட்டது.

அதோடு நாம் சொல்லுவது மற்றவர்களுக்கும் சம்மதப்படும் படியாய் இருக்க வேண்டுமே, உடனே பின்பற்ற வேண்டுமே என்கின்ற யோசனை யும் இருந்து வந்தது.

சாயல், உடை, பழக்க உணர்ச்சி ஆகியவைகளில் மேல் நாட்டாரைப் போல் கட்டுப்படுகின்ற வழக்கமோ கவலையோ நம்மவர்களுக்கு சிறிதும் கிடையாததலினாலும் அவ்வித வித்தியாசங்களே இந்த நாட்டின் பெரு மைக்கும், இயற்கை வனப்பிற்கும் அணிகலனாயிருப்பதாக மக்கள் கருதி வருவதாலும் இது இப்போது பிரஸ்தாபிக்கக் கூடாததாகக் கூட பலருக்குத் தோன்றினாலும் தோன்றலாம்.

மேல் நாட்டார் கட்டுப்பாட்டுக்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டு மானால் அவர்கள் உடை, முன் இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் உள்ள மாறுதலும் அதை ஒரே அடியாய் ஐரோப்பா, ஆஸ்ட்ரேலியா, அமெரிக்கா முதலிய கண்டங்கள் உடனே பின்பற்றுவதும் அது போலவே அப்பெண்கள் தலைமயிர் முன் இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் உள்ள வித்தியாசமும் அதை எல்லா கண்டத்து வெள்ளைக்காரரும் பின்பற்றுவதும் பார்த்தாலே போதுமானதாகும்.

அவசியமென்றோ கட்டுப்பாடென்றோ அவர்களுக்குத் தோன்றிவிடு மானால் எந்த மாறுதலானாலும் அதை அரச ஆக்கினைப் போல் பாவித்து எல்லோரும் உடனே கீழ்படியும் வழக்கம் அவர்களுக்குள் உண்டு. கட்டுப் பாட்டிற்கு மற்றொரு உதாரணமாக ஒன்றை குறிப்பிடுகின்றோம். அதாவது ஐரோப்பாவில் பெண்கள் தலைமயிரைக் கத்தரித்து கொண்டதில் சில உயர் குடும்பம் என்று சொல்லப்படும் குடும்பப் பெண்கள் தாங்களும் தலை மயிரைக் கத்தரித்துக் கொண்டாலும் ஜார்ஜ் சக்கரவர்த்தியின் மனைவியான மேரி ராணியார் தலை மயிரைக் கத்தரித்துக் கொள்ளாததால் சற்று அதிருப்தி யுடன் கட்டுப்பாட்டிற்குப் பயப்பட வேண்டியவர்களாக இருந்தார்களாம். இதை அரச குடும்பத்தார் அறிந்ததும் இளவரசர் மனைவியாரான இளவரசி யை உடனே தலைமயிரைக் கத்தரித்துக் கொள்ளும்படி செய்தார்களாம். இப்போது அது பொது தேசாச்சாரமாய் விட்டது. ஆனால் நம்ம நாட்டிலோ எப்பேர்பட்ட மாருதலாயிருந்தாலும் அது எவ்வளவு சரியானதாயும், தேவையானதாயும், இருந்தாலும் பயனும் பொருளும் அற்ற பழய வழக்கம் என்னும் “பேயுக்கு” அதாவது மூட பயத்திற்கு அடிமையாகி உடனே அதை குற்றம் சொல்லவும் உள் எண்ணம் கற்பிக்கவும், எதிர் பிரசாரம் செய்ய வும் புறப்பட்டு விடுகிறார்கள். ஆதலால்தான் ஆயிரக் கணக்கான வருஷங் களாக இந்திய மக்கள் மாத்திரம் வேற்றுமைப்பட்டு பிரிந்து துவேஷங் கொண்டு அன்னியருக்கு அடிமைகளாய் இருக்க வேண்டியவர்களாகவே ஆகி விட்டார்கள்.



RangaRakes

tamilnavarasam.com

ஆகவே இதை ஒரு வழியில் போக்க முயர்ச்சிக்க வேண்டுமென்று கருதியே பல மாறுதல்களுடன் உடை மாறுதல்களைப் பற்றி துணிந்து ஏதாவது தெரிவிக்கலாமா என்ற எண்ணம் கொண்டு இதனை எழுத முற்பட் டோம். இப்போது நமக்கு அதாவது இந்தியர்கள் என்பவர்களுக்குள் பல வித உடுப்பும் சாயலும் இருப்பதை பார்க்கின்றோம் . பெண்களிலும் அப் படியே. சாதாரணமாக ஆண்களுக்கு இரண்டு பெரிய பெரிய வேஷ்ட்டி அவசியமாகின்றது. இதை தவிர ஒன்று அல்லது இரண்டு சட்டையும் அவசியமாகிறது. இது தவிர ஒரு துவாலும் அவசியமாகின்றது. இது தவிர பலருக்கு தலை உருமால் அல்லது குல்லாயும் தேவையாகின்றது. அது போலவே பெண்களுக்கும் 16 முழப் புடவையும், ரவிக்கையும், பாடி என் னும் உள் சட்டையும், உள் ஆடை என்று ஒரு பாவாடையும் வேண்டியிருக் கிறது. இவ்வளவு துணிகளும் உயர்ந்த தினுசில் வாங்கவேண்டுமானால் அதிகப் பணச் செலவுமாகின்றது. சாதாரணமாக ஒரு ஜதை உயர்ந்த தினு சானால் 100, 200, 300, 400 ரூ. கூட ஆகிவிடுகின்றது. இவ்வளவு செலவு செய்தும் வேற்றுமையையே காட்டுகின்றது. சாதாரணமாக யாராயிருந்தாலும் இடுப்புக்கு 4 முளத்தில் ஒரு வேஷ்டியை கைலி போல அதாவது இரு தலவும் மூட்டியதாகவும், ஒரு முக்கால் கை குடுத்துணி அதாவது Half harm என்று சொல்லக்கூடிய ஒரு சட்டையும், சட்டப்பைபயில் அடங்கக் கூடிய ஒரு சிறு துவாலும் இருக்கும் படியாக இந்திய உடையை ஏன் மாற்றக் கூடாது என்பதே நமது யோசனை. இந்தப்படிதான் இன்று மலையாள நாட்டில் மகமதியர்களும், கிறிஸ்தவர்களும் உடை அணிகிறார்கள். மற்ற இந்துக்களிலும் ஆண்களும் அநேகமாய் 100க்கு 90 பேர் இப்படித்தான் உடை அணிகிறார்கள். மற்றப்படி உடையில் செய்யும் மாறுதல் போலவே தலைமயிர் விஷயத்திலும் ஆண்கள் கிராப்பு செய்து கொண்டும் பெண்கள் வெள்ளைக்காரப் பெண்களைப் போல தலைமயிரை கீழ் காது அளவுக்குக் கத்தரித்துக் கொள்ளவும் செய்து விட்டால் அநேகமாக சாயலிலும் எல்லா மக்களுக்கும் சிறப்பாக ஆண் பெண்களுக்கும் ஒன்றுபட்ட காக்ஷி ஏற்பட்டுவிடும். வித்தியாச உணர்ச்சியும் தானாக மாறிவிடும். இப்போது பெண்களுக்குத் தலையில் மயிர் வளர்த்திருப்பதைப் போன்ற அசவுகரியமும், நேரக் கேடும், வீண் செலவும் போல வேறு எதிலுமில்லை என்றே சொல்லலாம். அதனால் அவர்கள் படும் கஷ்டம் நடுநிலையில் இருந்து பார்த்தால்தான் தெரியும். அவர்களது உடை, நகை, தலைமயிர், பெரிய சீலை ஆகியவைகளே பெண்களை பலவீனர்களாகவும், அவற்றின் பொருட்டு அடிமைகளாக ஆக்கி அவர்களை மெல்லியலார் பலமற்றவர்கள் என்று சொல்லும்படியும் ஆக்கிவிட்டது. தலைமயிரை ஒரு அழகாகப் பாவித்து உணர்ச்சி சரீரத்தில் ஊறிக் கிடப்பதால் இதைப் பற்றி நினைக்கும் போதும் சொல்லக் கேட்கும் போதும் மக்களைத் திடுக்கிடச் செய்வதாகத் தோன்றலாம். ஆனால் உண்மையை ஊன்றிப் பார்த்தால் அதன் உபத்திரவமும் கெடுதலும் தெரியவரும். இது போலவே நகை விஷயத்திலும் பல



மாறுதல்கள் காணப்பட்டாலும் அவைகள் இந்த மாதிரி அதாவது உடை மாற்றமாகிவிட்டால் தானாகவே மாறிவிடும். மலாய் நாட்டிலும், பர்மா நாட்டிலும், கண்டி நாட்டிலும் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், மகமதியர்கள், பவுத்தர்கள் உள்பட எல்லோரும் ஆண் பெண் அடங்கலும் இம்மாதிரி உடைதான் உடுத்துகிறார்கள். மற்றபடி ஆங்கில உடை உடுத்துவது பலருக்குப் பிடிக்கலாம். ஆனால் அது பெரிதும் குளிர்தேச உடையாதலாலும் உஷ்ண தேசத்திற்கு சவுகரியமில்லாததானதினாலும் அன்றியும் எல்லா மக்களாலும் சாத்தியப்படக் கூடியதல்லவானதாலும் அதை நாம் பொது மக்களுக்குள் புகுத்துவது சிரமமானதும் பொருத்தமற்றதுமாகும் என்று கருதுகின்றோம்.

மற்றபடி செல்வவான்களும் சவுகரியமுள்ளவர்களும் அணிவதில் நாம் ஆக்ஷேபிக்க வரவில்லை. ஏனெனில் அவ்வுடையின் காரணமாக இப்போது எவ்வித ஜாதி மத வகுப்பு வித்தியாசங்கள் ஏற்படுவதற்கில்லாமல் இருப்பது தான்.

நிற்க, வெறும் ஒரு கால் சட்டை அதாவது சாதாரண செராய் போட்டு குடுத்துணி மாத்திரம் போட்டுக் கொண்டால் என்ன ஆக்ஷேபம்? என்று சிலர் கேட்கக் கூடும். அந்த உடையும் ஏற்கக்கூடியதானாலும் அது எல்லோ ருக்கும் அவசரத்திற்கும் சாத்தியப்படாததாகி விடும் என்று பயப்படுகின் றோம். சிலருக்கு அது அசவுகரியமாகவும் இருக்கக்கூடும் என்றும் நினைக்கின்றோம். ஆனால் அந்தப்படி போட்டுக் கொள்வதை நாம் ஆக்ஷேபிக்க வரவில்லை. ஏனெனில் அதுவும் முன் சொன்னது போல ஜாதி மத வகுப்பு முதலிய பிரிவினைகளைக் காட்ட சாதனமாயில்லாதிருப்ப தால்தான்.

ஆகவே நாம் மேல் சொன்ன அதாவது 4 முளத்தில் ஓரம் இரண்டையும் சேர்த்து மூட்டி தைத்ததாக எந்த வர்ணம் உள்ள துணியாயிருந்தாலும் அதை இடுப்புக்கும், ஒரு முக்கால் கை சட்டையே மேலுக்கும் உடுக்கும் படியான மாதிரியை பொது உடையாக ஆக்கலாம் என்பது நமக்கு சரி யென்று தோன்றினதால் அதை இப்போது எழுதினோம். ஆனால் இதை அதாவது ஒரு மகாநாட்டில் வைத்துப் பேசிய பின்பே அமுலுக்குக் கொண்டு வர கருதி இருக்கிறோம். அதற்குள் அவசரப்பட்டு இஷ்டப்பட்டவர்கள் உடுத்திக் கொள்வதில் எவ்வித ஆக்ஷேபனையும் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இனி அடுத்தாப்போல் மக்களுக்கிடும் பெயர் கள் விஷயத்திலும் பலப் பிரிவுகளைக் கண்டு பிடித்து வேற்றுமை உணர்ச்சி கள் ஏற்பட இடமேற்படுகிறது. ஆகவே அவைகளையும் கவனித்து பெயரினால் ஒரு மனிதன் ஒரு மனிதனை பிரித்துக் காணாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இதைப் பற்றி மற்றொரு சமயம் விவரிப்போம்.

**குடி அரசு – தலையங்கம் – 09.11.1930**



RangaRakes tamilnavarasam.com

# இரண்டு கேஸ் விடுதலை

ஈரோடு ஆலயப் பிரவேச வழக்கில் 3 பேர் தண்டனை அடைந்து அவ் வழக்குகள் ஹைக்கோர்ட்டு அப்பீலில் இருந்தது நேயர்களுக்கு ஞாபக மிருக்கும். அதுபோலவே சுசீந்திரம் தெருப் பிரவேச வழக்கிலும் 12 பேர்கள் தண்டனை அடைந்து அவ்வழக்கும் திருவாங்கூர் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டிருந்ததும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கும்.

இவ்வாரம் மேற்படி இரண்டு வழக்குகளும் அப்பீலில் விசாரிக்கப் பட்டு தண்டனைகள் முழுவதும் தள்ளப்பட்டு கேஸ்கள் விடுதலையாகி விட்டன.

முதல் கேசு. அதாவது ஈரோடு கோவில் பிரவேச வழக்கு போலீசாரு டைய அக்கிரமத்தினாலேயே கொண்டு வரப்பட்டதாகும். அவர்களுக்குச் சலுகை காட்டினது ஜில்லா பெரிய அதிகாரியாகும். இவ்வழக்கை அதிகாரி கள் நியாயம் தெரியாமலோ, சட்டம் தெரியாமலோ நடத்தினார்கள் என்ப தாக யாரும் சொல்ல முடியாது. அவர்கள் வேண்டுமென்றே சிலரைத் திருப்தி செய்யத்தான் இப்படிச் செய்தார்கள் என்றே நாம் சொல்லவேண்டி யிருக்கிறது.

இரண்டாவது கேசாகிய சுசீந்திரம் வழக்கும் அக்கிரமாகவே நடத்தப் பட்டது என்பதில் யாருக்கும் சந்தேகமிருக்காது. அதன் ஜட்ஜுமெண்ட் கீழே குறிப்பிட்டிருக்கிறோம். திருவாங்கூர் போலீசு கமிஷனர் திரு. பிட் துரை இருந்திருந்தால் இன்றைய தினம் திருவாங்கூரில் ஒரு ரோட்டு கூட ஒரு நபருக்கும் உரிமை இல்லாததாக இருக்காது. கோவில் பிரவேசம் கூட அனுமதிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அங்குள்ள பார்ப்பன ஆதிக்க மானது இவ்வளவு தொல்லையை கொடுத்துவிட்டது. இம்மாதிரி சந்தர்ப்பங் களில் ஒவ்வொரு வழக்கு முடிவும் ஐகோர்ட்டுக்குச் சென்றே நியாயம் பெறவேண்டுமானால் சாதாரண ஜனங்களுக்கு சாத்தியப்படக் கூடியதா குமா என்பதை யோசித்தால் இம்மாதிரி விஷயங்களுக்கு வெளிப்படையா யும் தெளிவாயும் ஒரு சட்டம் ஏற்பட்டுவிட வேண்டியது அவசியமாகும். பொதுவாகவே இந்துக்கள் என்பவர்களுக்குள் ஜாதி வித்தியாசமும், உயர்வு தாழ்வும் ஒழிவதற்குப் பார்ப்பனர்கள் எப்படி சம்மதிக்க மாட்டார்களோ அது போலவே மகமதியர்கள், வெள்ளைக்காரர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியவர்கள் சம்மதிக்க மாட்டார்கள். ஆதலால் ‘இந்துக்கள்’ ஜாதி வித்தியாசம் உயர்வு தாழ்வு ஆகியவைகளை ஒழிக்கப் பாடுபடுகின்றவர்கள் மேல் கண்டவர் களின் விரோதத்தையும், அவர்களால் செய்யப்படும் தொல்லைகளையும் சமாளிக்க தயாராயிருந்து கொண்டுதான் பிரவேசிக்க வேண்டும் என்பதை உணர வேண்டும்.

நிற்க, இவ்விஷயங்களில் இனி மேல் நடக்க வேண்டிய விஷயங் களைப்பற்றி யோசித்து பின்னால் வெளியிடுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.11.1930**





RangaRakes tamilnavarasam.com

ஜஸ்டிஸ் கட்சியார் இவ்விஷயத்தில் யாருக்கும் பயப்படாமல் தங்கள் கொள்கையைத் தைரியமாய் வலியுறுத்தலாம் என்பதாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.11.1930**

# அரசியல் வியாபாரம்

டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் அடுத்துக் கூடும் சட்டசபைக் கூட்டத்திற்கு மூன்று தீர்மானங்கள் அனுப்பப்போவதாகத் தெரிகின்றது. அதாவது,

1. சில பாதுகாப்புகளுடன் குடியேற்ற நாட்டந்தஸ்துக்கு குறைந்த எந்தத் திட்டமும் திருப்தியளிக்காது என்று இச்சபை அபிப்பிராயப் படுவ தாக இந்த கவர்ன்மெண்ட் பிரிட்டிஷ் கவர்மெண்டாருக்குத் தெரிவிக்க வேண்டுமென இச்சபை சிபார்சு செய்கிறது.

2. பலாத்காரமற்ற குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட அரசியல் குற்றவாளிகளையெல்லாம் விடுதலை செய்யவேண்டுமென்று சம்மந்தப் பட்ட அதிகாரிகளுக்கு சிபார்சு செய்யும்படி இச்சபை சிபார்சு செய்கிறது.

3. அரசியல் கைதிகள் நடத்தப்படும் விதத்தைப் பற்றி விசாரணை செய்ய ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென்று இச்சபை கேட்டுக் கொள்ளுகிறது.

என்பவையாகும். ஆகவே, இம்மூன்று தீர்மானங்களையும் நம்மைப் பொறுத்தவரை நாம் இவைகளை அரசியல் வியாபாரத் தீர்மானங்களென்றே சொல்லுவோம்.

இதற்காக ஜஸ்டிஸ் கட்சியார்கள் பயந்து கொள்ளவோ திக்கு முக் கலாடவோ தேவையில்லையென்றும் சொல்லுவோம். ஏனெனில் இந்த மாதிரி காரியங்களின் நடவடிக்கைகளை ஆதாரமாய் வைத்துக் கொண்டு கூப்பாடு போடும் “தேசியப் பத்திரிகைகள்” என்பவைகள் எல்லாம் ஜஸ்டிஸ் கக்ஷிக்கு நிபந்தனையில்லாத அடிமைகளாய்ப் போய்விட்டபடி யாலும் “சென்ற தேர்தலின்” போது ‘தேசியக் கட்சியை’ விட ஜஸ்டிஸ் கட்சி மோசமானது என்று கருதி அதைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது போல் இப்போது ஜஸ்டிஸ் கட்சியை விட “தேசியக்கட்சி” மோசமானது என்று கருதி ஜஸ்டிஸ் கட்சியைக் காப்பாற்றித் தீரவேண்டிய பொறுப்புடையவைகளாகி விட்டபடியாலும் அவைகள் “கருவாடு திருட்டுக் கொடுத்த பார்ப்பனத்தி” போல் வெளியில் சொல்லாமல் வாயை மூடிக் கொள்ளும். ஆகையால்



RangaRakes tamilnavarasam.com

# ஜாதி மதப் பெயர் கொடுக்காதீர்கள்

## முக்கியமான வேண்டுகோள்

இவ்வருஷக் கோடியில் சர்க்காரால் ஜனங்களுடைய எண்ணிக்கையை எடுக்கும் சென்சஸ் வேலை நடைபெறும். அதில் கணக்கெடுப்பவர்கள் உங்களிடம் வந்து விசாரிக்கையில் நீங்கள் ஜாதி மதத்தைப் பற்றி கேட்கப்படுவீர்கள். அப்போது முறையே இந்தியன் என்றும் பகுத்தறிவுக்காரன் என்றும் மாத்திரம் தான் சொல்ல வேண்டுமே ஒழிய எவ்வித மதத்தின் பேராவது ஜாதியின் பேராவது சொல்லக் கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஏனெனில் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க இந்தியாவில் எல்லாப் பிரமுகர்களும் ஒரே முகமாய் நின்று மும்முரமாய் வேலை செய்யும் போது நாம் மறுபடியும் அதைச் சொல்லிக் கொண்டிருப்பது மூடத்தனமும் கவலையும் சுயமரியாதையும் அற்ற தன்மையுமாகும்.

அதுபோலவே இந்தியர்களில் யாராவது தன்னை இந்து என்று மதத்தின் பெயரைச் சொல்லுவதும் சுத்த முட்டாள் தனமாகும். இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லையென்றும் அப்படியிருப்பதாகச் சொல்லும் மதத்தின் தத்துவமும் மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு கற்பிப்பதும் 20 கோடி இந்துக்கள் என்பவர்களில் பார்ப்பனர்கள் தவிர மற்றவர்கள் எல் லோரும் பார்ப்பனருக்கு அடிமைகள், அவர்களது தாசிமக்கள் என் கின்ற மானமற்ற தன்மை கொண்ட பொருளே இருப்பதால் சுயமரியாதை யுள்ள எவரும் தங்களை இந்துக்கள் என்று சொல்லக்கூடாது. தவிரவும் இந்து என்னும் பதத்திற்கு திருடன், அயோக்கியன், மோசக்காரன் என்று அர்த்தம் என்பதையுமுணருங்கள் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஈ. வெ. ரா.

குடி அரசு – வேண்டுகோள் – 09.11.1930



# திரு. பன்னீர்செல்வம்

உயர்திரு ராவ் பகதூர் பன்னீர்செல்வம் தமிழ்நாட்டில் ஸ்தல ஸ்தாபனங்களில் இருக்கும் வெகு சில கண்ணியமான தலைவர்களில் முக்கியமானவர்களுக்குள் ஒருவராவர். அவர் மீது நாணையத் தவறுதலான வார்த்தைகள் இதுவரையிலும் யாருமே பிரஸ்தாபித்தது கிடையாது. அவரைப்போல் பார்ப்பனரல்லாத மக்கள் விஷயத்தில் தனது ஆதிக்கத்தில் உள்ள எல்லா இலாக்காக்களிலும் விகிதாச்சார உரிமை கொடுத்தவர்கள் மிக மிக அருமையாகும். அப்படிப்பட்டவரை சென்னை ஐகோர்ட்டார் ஏதோ ஒரு விண்ணப்பம் போட்டதின் காரணமாய் நாணையமற்றவர் என்றும், யோக்கியர் அல்லாதவர் என்றும் ஐக்கோர்ட்டு ஜட்ஜ்ஜிகள் பேசியதாக பத்திரிகைகளில் காணப்படுகின்றன. கோர்ட் விவகாரங்களில் விண்ணப்பம் போடும் விஷயங்களைக் கொண்டு ஒருவனை யோக்கியன், அயோக்கியன் என்று தீர்மானிப்பதாயிருந்தால் இந்த இந்தியாவில் கோர்ட்டு சம்மந்தமுள்ள மக்களில் 100க்கு வீசம் பேர் கூட இருக்கமாட்டார்கள் என்று நாம் உறுதி யாய்ச் சொல்லுவோம்.

கோர்ட்டு சட்டங்களே உண்மைக்கு நியாயமளிக்க முடியாதபடி தான் இருக்கின்றன. அவைகளைக் கையாளும் வக்கீல்கள் அவ்விண்ணப்பம் போடும் விஷயத்தில் செலுத்தும் புத்தியும் மனப்பான்மையும் நடுநிலையிலிருந்து பார்த்தால் அவர்களை விட நாணையக் குறைவானவர்களும் யோக்கியர்கள் அல்லாதவர்களும் வேறு யாரும் இல்லையென்று சொல்ல வேண்டிய அளவுக்கே இருப்பார்கள். அச்சட்டங்களின் மேல் ஆதிக்கம் செலுத்தி அவ்விண்ணப்பங்களை விசாரிக்கும் ஜட்ஜுகள் என்பவர்களும் ஏறக்குறைய பெரும்பான்மையான பேர்கள் இக்கூட்டத்திலிருந்தே தான் பொறுக்கி எடுக்கப்படுகிறார்கள். ஆகவே கோர்ட்டு விவகாரங்களில் பெரும்பாலும் இப்படிப்பட்ட வக்கீல்களுடைய யோசனைகளை அனுசரித்தே நடந்து கொள்ளுகின்ற கக்ஷிக்காரர்களைப் பற்றி ஜட்ஜிகள் திடீரென்று இம்மாதிரியான அபிப்பிராயத்திற்கு வருவதானது மிக்க அதர்மமானதென்றே கருதுகின்றோம்.

திரு. பன்னீர்செல்வத்தை நன்றாய் அறிந்தவர்கள் இந்த ஜட்ஜிகளின்



RangaRakes tamilnavarasam.com

அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதுடன் பொது ஜனங்களும் இந்த ஜட்ஜிகள் அபிப்பிராயத்தால் ஏமாந்து போகமாட்டார்கள் என்றும் நாம் உறுதியாய் நம்புகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.11.1930**



# கிருஷ்ணன் அர்ஜுனன் சம்வாதம்

**- சித்திரபுத்திரன்**

**அர்ஜுனன்:** - சகே சீனாம் நிகே சீனாம் காகதி புருஷோத்தமா?

**கிருஷ்ணன்:-** அஹம் சந்யாசி ரூபேணாம் புரோஷ்டிதாம் தனஞ்சயா! இதன் பொருள்.

**அர்ஜுனன்:** - ஹே புருஷோத்மா! தலையில் மயிருடனும், மயிரில்லாமல் மொட்டத் தலையுடனும் இருக்கும் (படியாய் நீ செய்திருக்கின்ற) விதவைகளுக்கு என்ன கதி?

**கிருஷ்ணன் :-** ஹே அர்ஜுனா! நானே சந்நியாசியாக பூமியில் அவதரித்து அவர்களின் ஆசையைப் பூர்த்தி செய்வேன்.

**அர்ஜுனன்:** - ஹே கிருஷ்ணா! உன்னை ஒரு பெரிய கடவுளென்று சொல்லிவிட்டு பிறகு நீ இப்படிச் செய்தாய், அப்படிச் செய்தாய், கண்ட ஸ்திரீகளுடன் கலந்தாய், உதைபட்டாய், அடிபட்டாய், அழுவாரற்ற பிணமாய் செத்தாய் என்றெல்லாம் எழுதி வைத்திருக்கின்றார்களே இதைப் பற்றி உனக்கு சிறிதும் அவமானமில்லையா?

**கிருஷ்ணன்:-** ஹே அர்ஜுனா! அதைப் பற்றி நீ சிறிதும் கவலைப் படவேண்டாம். இதெல்லாம் எனது திருவிளையாடலென்றும் இவற்றைப் படித்த கேட்ட ஒவ்வொருவரும் இதனைக் கொண்டாட வேண்டுமேயொழிய குற்றம் சொல்லக்கூடாதென்றும், குற்றம் சொன்னால் பாவமென்றும், நரகமென்றும் அவற்றை எழுதின அவர்களே எழுதி இழிவை அடக்கி விட்டார்கள். ஆதலால் நமக்கு ஏன் கவலை?

**அர்ஜுனன்:** - கிருஷ்ணா! அதுதான் போகட்டும், நம்ப முடியாத அநேகப் பொய்யையும் புளுகையும் சொல்லி நீ சின்னக் குழந்தையாயிருக்கும் போது பெரிய முலையை உருஞ்சி சூப்பையாக்கி விட்டாயென்றும் மலையை சுண்டு விரலால் குடையாய்ப் பிடித்தாய் என்றும் 10 ஆயிரம் பெண்களை ஏக காலத்தில் கலந்தாய் என்றும் இப்படி எல்லாம் எழுதி இருக்



RangaRakes tamilnavarasam.com

கின்றார்களே இந்தப் புளுகுகளை எவன் நம்புவான்?

**கிருஷ்ணன் :–** ஓ! அர்ஜுனா! அதைப் பற்றியும் நீ கவலைப்படாதே. ஏனென்றால் அந்தப் படியெல்லாம் எழுதினவர்கள் இவற்றையெல்லாம் எவன் நம்பவில்லையோ அவன் நாஸ்திகன் என்றும் அவனை அரசன் தண்டிக்க வேண்டுமென்றும் அரசன் தண்டிக்காவிட்டாலும் அவன் நரகத் துக்கு போகவேண்டும் என்றும் எழுதி மக்களை மிரட்டி பயப்படுத்தி வைத் திருக்கின்றார்கள். ஆதலால் எவனும் தைரியமாய் தான் இவற்றை நம்பு வதில்லை என்று வெளியில் சொல்லவரமாட்டான்?

**அர்ஜுனன்: –** அதென்ன கிருஷ்ணா! பாவம் என்றால் என்ன? நரகம் என்றால் என்ன? எனக்கு ஒன்றும் புரியவில்லையே,

**கிருஷ்ணன்:–** அந்தப்படி புரியாமலிருக்கின்றதாகவே பார்த்துதான் சொல்லி இருக்கின்றார்கள்.

**அர்ஜுனன்: –** அதென்ன புரியாததைச் சொன்னால் என்ன பயன்.

**கிருஷ்ணன் : –** ஒருவனுக்குத் தெரியாததையும் புரியாததையும் சொன்னால் தான் மனிதர்கள் பயப்படுவார்கள். புரியும்படியானதாக எதைச் சொன்னாலும் திருப்பிக் கேட்க ஆரம்பித்து விடுவார்கள். ஆதலால் தான் அது செய்தால் பாபம், இது செய்தால் பாபம், நினைத்தால் பாபம் என்றெல்லாம் மிரட்டி வைத்திருக்கின்றார்கள்.

**அர்ஜுனன்: –** இந்த மாதிரி எத்தனை நாளைக்கு ஏமாற்ற முடியும்?

**கிருஷ்ணன்:–** முடிந்தவரையில் முடியட்டும்.

**அர்ஜுனன்: –** இந்தப் புரட்டு வெளியாய் விட்டால் அப்புரம் என்ன செய்வது?

**கிருஷ்ணன் : –** அப்புரம் வேறு புரட்டை உண்டாக்கிக் கொள்ள அவர்களுக்குத் தெரியும்.

**அர்ஜுனன்: –** அதென்ன புரட்டு?

**கிருஷ்ணன் : –** அரசியல் புரட்டு.

**அர்ஜுனன்: –** அதுவும் வெளியாகிவிட்டால்?

**கிருஷ்ணன் : –** அதற்குள் பார்த்துக் கொள்ளுவோம். இந்த இரண்டு புரட்டும் மண்டுகள் நிறைந்த இந்தியாவுக்கு சுலபத்தில் வெளியாய் விடவா போகின்றது?



**அர்ஜுனன்: –** சுயமரியாதைக்காரர்கள் இந்த இரண்டையுமே சேர்த்து வெட்டவெளியாக்கிக் கொண்டு வருகின்றார்களே, சீக்கிரத்தில் வெளியாய் விடாதா?

**கிருஷ்ணன்:–** அவர்களால் சுலபத்தில் முடியாது. ஏனென்றால் அந்த இரண்டு புரட்டின் மேல் தாங்கள் வாழ்வையே ஏற்பாடு செய்து கொண்ட அநேகர் சுயமரியாதைக்காரர்களுக்குள்ளாகவே இருக்கிறார்கள். அந்தப்படி மீறி அவர்களெல்லாம் தங்கள் வாழ்க்கைக்குக் கேடு வந்தாலும் வரட்டும் என்று துணிந்து கட்டுப்பாடாய் வேலை செய்தாலும் கூட அது தமிழ் நாட்டிலும் மலையாளத்திலும் தான் செல்லும். இந்தியாவில் மற்ற பாகங்கள் எவ்வளவோ இருக்கின்றன.

**அர்ஜுனன்: –** எப்படியானாலும் என்றைக்கிருந்தாலும் இந்த இரண்டு புரட்டுக்கும் ஆபத்து ஆபத்துதான்.

**கிருஷ்ணன்:–** அந்தக் காலத்தில் பார்த்துக் கொள்ளலாம். நடந்த வரை நடக்கட்டும்.

## சைவ வைணவ சம்பாஷணை

**வைணவதாசன் : –** என்ன தேசிகர்வாள் உடம்பெல்லாம் இவ்வளவு சாம்பல் விபூதியை எடுத்து அப்பிக் கொண்டிருக்கிறீர்களே. இதுஎன்ன பார்வைக்கே அசிங்கமாக இல்லையா?

**சைவ பண்டாரம்: –** அசிங்கமென்னையா வந்தது. ஒரு சிம்ட்டா சாம்பல் மேலே பட்டால் பட்ட வஸ்து பிணமானாலும், கட்டையானாலும் அது எவ்வளவு பாவம் செய்திருந்தாலும் மோக்ஷத்திற்கு போய்ச் சேர்ந்து விடும் என்பதாக விபூதி மான்மியத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. நாம் நல்ல காரியம் செய்து மோக்ஷத்திற்கு ஒருக்காலமும் போக முடியாதபடி சைவநெறிகள் ஏற்பட்டு விட்டது. ஆதலால் விபூதி பூசியாவது. மோக்ஷத் திற்குப் போகலாமென்றால் இதில் உமக்கேன் இத்தனை பொறாமை.

**வைணவதாசன் : –** எனக்கு ஒன்றும் பொறாமை இல்லை. சந்தோஷ மாய் தாங்கள் மோட்சத்திற்குப் போங்கள். ஆனால் எனக்கு ஒரு சந்தேகம்.

**சைவ : –** என்ன சந்தேகம்.

**வைணவதாசன் : –** ஏ. ஒரு சிம்ட்டா சாம்பல் பட்ட வஸ்துக்கள் எல்லாம் மோட்சத்துக்கு போய் விடும் என்றீர்களே மக்கள் இங்கு அதிக மாக சாம்பலை மலத்தின் மீது கொட்டி கொட்டி மலமே தெரியாமல் மூடுகிறார்களே,



RangaRakes tamilnavarasam.com

சனியன் பிடித்த அந்த மலங்கள் எல்லாம் மோக்ஷத்திற்குப் போயிருக்குமே, அப்போது தாங்களும் அங்கிருந்தால் மோக்ஷத்திற்கு போய் அந்த எழவு நாற்றத்தை எப்படி சகிப்பது என்கின்ற சந்தேகம் தான்.

**சைவ:** – சரி சரி, நீர் சுயமரியாதைக்காரர் போல் தெரிகின்றது. உம்மு டைய யோக்கியதை பார்ப்போம். நீர் ஏனையா மண்ணை குழைத்து பட்டை பட்டையாய் வலிப்பு மாட்டுக்கு சூடுபோட்டது போல் போட்டுக் கொண்டி ருக்கின்றீர்.

**வை. தா:** – உம்மை கேட்ட சங்கதிக்கு பதில் சொல்லும். பிறகு நான் பதில் சொல்லுகிறேன்.

**சை :** – நாளைக்காவது சொல்லுவீரா?

**வை. தா:** – நான் நீர் சொன்ன பிறகு தான் சொல்லுவேன்.

## கடவுள் இருந்தால்

சர்வ வல்லமையுள்ள கடவுள் ஒருவர் இருந்தால் மனிதனுடைய தேவைக்கும் ஆசைக்கும் தகுந்தபடி நடந்து கொண்டிருப்பார் அல்லது கடவுளுக்கு இஷ்டமில்லாத விஷயங்களைப் பற்றி மனிதனுக்கு தேவை இல்லாமலாவது, ஆசையில்லாமலாவது அல்லது நினைப்புக்கே வராமலா வது செய்திருப்பார்.

உதாரணமாக மனிதன் தனக்கு முகத்தில் மயிர் வேண்டியதில்லை என்று கருதி தினம் தினம் சவரம் செய்து கொள்ளுவதை பார்க்கின்றோம். ஆனால் கடவுள் அனுக்கிரகத்தால் அது தினம் தவராமல் முளைத்துக் கொண்டே வருவதையும் பார்க்கின்றோம்.

இது என்ன கடவுளுடன் மனிதன் ஏறுக்கு மாறாய் நடந்து போட்டி போடுகிறானா அல்லது மனிதனுடன் கடவுள் ஏறுக்கு மாறாய் நடந்து போட்டி போடுகிறாரா அல்லது ஒருவருக்கொருவர் சம்மந்தமில்லாமல் அவரவர் காரியத்தை அவரவர்கள் பார்க்கின்றார்களா?

**குடி அரசு – உரையாடல் – 09.11.1930**



# உதிர்ந்த மலர்கள்

### அரசியல்

அரசியல் வாழ்வு என்பது அயோக்கியர்களின் வயிற்றுப் பிழைப்பு.

**ஈ. வெ. ரா.**

அரசியல் சீர்திருத்தம் என்பது அயோக்கியர்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை.

**ஈ. வெ. ரா.**

### கடவுள் அவசியம்

அறிவும், ஆராய்ச்சியும், மன உறுதியும் அற்றவர்க்கே கடவுள் உணர்ச்சி அவசியமாகும். வேஷக்காரர்களுக்கும் வஞ்சகர்களுக்கும் கடவுள் மிக அவசியமாகும். சோம்பேறிகளுக்கும், ஊரார் பிழைப் பில் உண்டு களித்திருப்பவர்களுக்கும் கடவுள் மிக மிக அவசிய மாகும்.

**ஈ. வெ. ரா.**

**குடி அரசு – துணுக்குகள் – 09.11.1930**



RangaRakes tamilnavarasam.com

# சித்திரபுத்திரன்

## கடவுள் கருணை

இந்த இரண்டு நூற்றாண்டுகளில் பூகம்பத்தால் கடவுள் தன்னடி சோதிக்குச் சேர்த்துக் கொண்ட மக்கள் கணக்கு.

| | |
|---|---|
| பெக்கிங் (சீனா) | 100000 |
| கெய்ரோ | 40000 |
| காஷான் | 40000 |
| லிஸ்பன் | 50000 |
| மொராக்கோ | 12000 |
| தென் அமெரிக்கா | 50000 |
| அலப்போ | 20000 |
| தென் இத்தாலி | 14000 |
| மென்சோடா | 12000 |
| பெரு எக்வாடா | 25000 |
| கராகாடோ | 37000 |
| ஜப்பான் | 30000 |
| இந்தியா | 20000 |
| பிரான்சிஸ்கோ, சிசிலி | 77000 |
| மத்திய இத்தாலி | 30000 |
| கான்சு சினா | 300000 |
| ஜப்பான் | 220000 |
| சில்லரையாக பல இடங்களில் | 100000 |

ஆக மொத்தம் சுமார் 10 லட்சத்திற்கு மேற்பட்ட ஜனங்களாகும். இது தவிர இடியாலும், மின்னலாலும், எரிமலை நெருப்பாலும், வெள்ளத்தாலும்,



புயல் காற்றாலும் தன்னடி சேர்த்துக் கொண்ட மக்களின் அளவு இதைப்போல் பல மடங்குகள் இருக்கும். இவ்வளவு ஜீவகாருண்யமுள்ள கடவுளின் கருணையை எப்படி புகழ்வது என்பது நமக்கு விளங்கவில்லை. ஆதலால் இதைப் பண்டிதர்களுக்கே விட்டு விடுவோம். ஏனெனில் அவர்கள் அதற்கே பிறந்தவர்கள். நிற்க.

## வினா - விடை

**வினா:-** நாம் பாடுபட்டாலும் வயிற்றுக்குப் போதும்படியான ஆகாரம் கூட கிடைப்பதில்லை. ஆனால் பார்ப்பனர்கள் பாடுபடாவிட்டாலும் அவர்களுக்கு வயிறு புடைக்கக் கிடைக்கின்றது. இதற்கு என்னகாரணம்?

**விடை:-** நமது மதமும் ஜாதியும்.

**வினா: -** நாம் பாடுபட்டு சம்பாதித்தும் நம்ம பிள்ளைகள் படிக்க முடியாமல் நம்மில் 100க்கு 90பேருக்கு மேலாக தற்குறியாயிருக்கிறோம்.

ஆனால் பாடுபட்டு சம்பாதிக்காமல் பிச்சை எடுக்கும் பார்ப்பனர்களில் 100க்கு 100பேர் படித்திருக்கிறார்கள். இதன் காரணம் என்ன?

**விடை: -** மதமும் ஜாதியும்.

**வினா:-** நமது பணக்காரக் குடும்பங்கள் வரவர பாப்பராய்க் கொண்டே வருவதற்குக் காரணமென்ன?

**விடை:-** வினையின் பயன். அதாவது நம்மவர்கள் தங்கள் சமூகத்தார் பட்டினி கிடப்பதையும், கல்வி அறிவு இல்லாமல் இருப்பதையும் சிறிதும் கவனியாமல் பார்ப்பானுக்கே போட்டு அவர்களுக்கே படிப்புக்கு பணமும் கொடுத்து வந்த ‘பாவமானது’ அந்தப் பார்ப்பனர்களே வக்கீலாகவும், ஜட்ஜிகளாகவும் வந்து மேல்படி பார்ப்பனரல்லாதார்களைப் பாப்பராக்குகிறார்கள். அதற்கு யார் என்ன செய்யலாம்.

**வினா : -** எந்த விதமான விபசாரம் குற்றம் சொல்லத் தகுந்ததாகும்?

**விடை :-** வெளியார்க்கு தெரியும்படியாகச் செய்த விபசாரம் குற்றம் சொல்லத் தகுந்ததாகும்.

**வினா:-** கிருஸ்தவனாகப் போவதில் என்ன கெடுதி?

**விடை: -** ஒரு கெடுதியும் இல்லை. ஆனால் மதத்தின் பேரால் குடிக்க வேண்டாம்.

**வினா:-** மகம்மதியானவதில் என்ன கெடுதி?



RangaRakes tamilnavarasam.com

**விடை :** – ஒரு கெடுதியுமில்லை. ஆனால் பெண்களுக்கு மூடி போடாதே.

**வினா:**– உண்மையான கற்பு எது?

**விடை:**– தனக்கு இஷ்டப்பட்டவனிடம் இணங்கி இருப்பதே உண்மையான கற்பு.

**வினா:** – போலி கற்பு என்றால் எது?

**விடை:**– ஊராருக்கோ, சாமிக்கோ, நரகத்திற்கோ, அடிக்கோ, உதைக்கோ, பணத்திற்கோ பயந்து மனத்திற்குப் பிடித்தமில்லாதவனுடன் தனக்கு இஷ்டமில்லாதபோது இணங்கி இருப்பதே போலிக் கற்பு.

**வினா :** – மதம் என்றால் என்ன?

**விடை:**– இயற்கையுடன் போராடுவதும் அதைக் கட்டுப்படுத்துவதும் தான் மதம்.

**வினா:**– நாட்டுக் கோட்டையார் சமூகத்தில் உள்ள சுயமரியாதை என்ன?

**விடை:**– பெண்ணுக்கு மாப்பிள்ளை தாலி கட்டுவது இல்லை என்பதாகும்.

**வினா:** – தொழிலாளர்களுக்கு பண்டிகை நாள்களில் ஏன் ஓய்வு (லீவு) கொடுக்கப்படுகின்றது.

**விடை:**– பாடுபட்டு சம்பாதித்து மீதி வைத்ததை பாழாக்குவதற்காக.

**வினா:**– பெண்களை படிக்கக் கூடாது என்று ஏன் கட்டுப்பாடு ஏற்படுத்தினார்கள்?

**விடை:**– அவர்களுக்கு அறிவு இல்லை, ஆற்றல் இல்லை என்று சொல்லி சுதந்திரம் கொடாமல் அடிமையாக்குவதற்காக.

**வினா:**– மனிதனுக்கு கவலையும் பொருப்பும் குறைய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

**விடை:**– பெண் அடிமையை ஒழித்து அவர்களுக்கு முழுச் சுதந்திரம் கொடுத்து விட்டால் ஆண்களுக்கு அநேக தொல்லைகள் ஒழிந்து போகும்.

**வினா:**– பெண்களுக்கு நேரம் மீதியாக வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?



**விடை:**– தலைமயிரை வெட்டிவிட்டால் அதிக நேரம் மீதியாகும்.

**வினா:**– பெண்கள் கைக்கு ஓய்வு கொடுக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

**விடை:**– அவர்களுக்கு ஒரு குப்பாயம் (மேல்சட்டை) போட்டு விட்டால் கைக்கு ஓய்வு கிடைத்து விடும் (இல்லாவிட்டால் அடிக்கடி மார்பு சீலையை இழுத்திழுத்துப் போடுவதே வேலையாகும்)

**வினா:**– எல்லோருக்கும் போதுமான அளவு ஆகாரம் இருக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்.

**விடை:**– ஒருவனும் தன் தேவைக்குமேல் எடுத்துக் கொள்ளாவிட்டால் எல்லோருக்கும் வேண்டியளவு கிடைத்துவிடும்.

**வினா:**– பெரிய மூடன் யார்?

**விடை:**– தனது புத்திக்கும் பிரத்தியக்ஷ அனுபவத்திற்கும் தோன்றுவதை நம்பாமல் எவனோ ஒருவன் எப்போதோ சொன்னதை நம்பி வாழ்வை நடத்துபவன் பெரிய மூடன்.

**வினா:**– ஒழுக்கம் என்பது என்ன?

**விடை:**– ஒழுக்கம் என்பது தனக்கும், அன்னியனுக்கும் துன்பம் தராமல் நடந்து கொள்ளுவதாகும்.

**வினா:**– சமயக்கட்டுப்பாடு, சாதிக்கட்டுப்பாடு என்றால் என்ன?

**விடை:**– மனிதனை தன் மனச்சாக்ஷிக்கும், உண்மைக்கும் நேராய் நடக்க முடியாமல் கட்டுப்படுத்துவது தான் சாதி சமயக்கட்டுப்பாடாய் இருக்கின்றது.

**வினா:**– உண்மையான கடவுள் நம்பிக்கை என்றால் என்ன?

**விடை:**– கடவுள் எங்கு மறைந்து போவாறோ என்று பயந்து அவ ரைக் காக்க பிரயத்தனம் செய்வதுதான் உண்மையான கடவுள் நம்பிக்கை யாகக் காணப்படுகிறது.

**வினா:**– இந்தியாவுக்கு ஏன் ஜனநாயக ஆக்ஷி கூடாது?

**விடை:**– இந்தியர்கள் 100க்கு 90பேர் கல்வி அறிவில்லாத எழுத்து வாசனை கூடத் தெரியாத பாமர மக்களாய் இருப்பதை முன்னிட்டு அவர்கள் நன்மை தீமை இன்னதென்று அறிய முடியாதவர்களாய் இருப்பதால் தான்.

**வினா:**– ஜனநாயக ஆக்ஷி என்றால் என்ன?

**விடை:**– தடி எடுத்தவன் தண்டக்காரனென்பதுதான் ஜனநாயக ஆட்சி.



RangaRakes tamilnavarasam.com

**வினா:-** இந்தியாவுக்கு ஜனசங்கை பெருக வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

**விடை:-** அதிகமாக பிள்ளை பெறுவதை நிறுத்தி விதவைகளுக்கு மறுமணம் செய்தால் நல்ல திடகாத்திரமுள்ள ஜன சங்கை பெருகும்.

**வினா: -** இந்தியா சீர்பட என்ன வேண்டும்?

**விடை:-** இந்தியா சீர்பட்டு இந்தியர்களும் மனிதர்கள் என்று உலகத்தோர் முன்னிலையில் சிறந்து நிற்க வேண்டுமானால் நாஸ்திகமும் நிபந்தனையற்ற பெண்கள் விடுதலையும் வேண்டியதாகும்.

**வினா: -** இந்தியா அடிமையானதற்குக் காரணம் என்ன?

**விடை:-** இந்தியா கெட்டு நாசமாய் என்றும் விடுபடமுடியாத அடிமையாய் போனதற்குக் காரணம் அவர்கள் மதமும் கடவுள்களுமே யாகும்.

**வினா:-** கிருஸ்தவ மதத்தில் சில ஆபாச கொள்கைகள் இருந்தும் அவர்கள் எப்படி உலகை ஆளுகிறார்கள்.

**விடை:-** கிறிஸ்தவ மதத்தில் எவ்வளவு ஆபாசமும் முட்டாள் தனமுமான கொள்கைகளும் இருந்த போதிலும் அதைப் பற்றி நமக்கு கவலை இல்லை. ஏனெனில் அவர்கள் பெரும்பாலும் பகுத்தறிவுக்கு மதிப்பு கொடுப்பவர்களாகிவிட்டார்கள். அவர்கள் வாழ்க்கைக்கோ, மன உணர்ச்சிக்கோ சிறிதும் மதத்தை லட்சியம் செய்வதில்லை. ஆதலால் அவர்கள் மதத்தைப் பற்றி நாம் பேசுவது பயனற்றதும் முட்டாள் தனமுமாகும்.

**வினா:-** பார்ப்பான் மாத்திரம் எப்படி இவ்வளவு பெரிய பதவிக்கு வர முடிந்தது?

**விடை:-** மத விஷயத்தில் அவர்களுக்கு கிடைத்துள்ள உயர்ந்த நிலையால் அவர்கள் (பார்ப்பார்கள்) எல்லோரையும் விட முன்னேறியிருக்க முடிந்தது. மத விஷயத்தில் பார்ப்பனர்களுக்குள்ள பெருமை போய்விட் டால் அவர்கள் இழிவான மனிதர்களுக்கும் இழிவான மனிதர்களாகி விடுவார்கள். ஏனெனில் அவர்களுக்குப் பாடுபடத் தெரியாது. ஆகவே சோம்பேறிகளின் கதியே அடைய வேண்டியவர்களாவார்கள்.

**வினா:-** ஆண் வியபசாரர்கள் விபூதி பூசுவதின் மூலம் மோக்ஷத்திற்குப் போக நேர்ந்து விட்டால் அங்கு போய் தங்கள் வியபசாரத்திற்கு என் செய்வார்கள்.

**விடை:-** அதற்காக எந்த வியபசாரகனும் விபூதி பூசுபவரும் பயப்பட



வேண்டியதில்லை. ஏனென்றால் அங்கு இந்த விபூதி பக்தர்களுக் கென்றே ஊர்வசி, மேனகை, திலோர்த்தமை முதலிய தேவ ரம்பையர்கள் இருக்கிறார்கள். அன்றியும் சமயல் செய்ய வேண்டிய வேலைகூட இல் லாமல் இதே வேலையாய் இருக்கலாம். ஏனென்றால் காமதேனு, கற்பக விருக்ஷம் கேட்டதெல்லாம் கொடுத்துவிடும்.

**வினா:-** பார்ப்பனர்களில் ஒரு வகையாருக்கு ஏன் முகம் சூப்பையாயிருக்கின்றது?

**விடை:-** அவர்கள் அனுமந்த தேவரை பூஜிக்கிறார்கள். படுக்கை வீட்டில் அனுமார் படம் வைத்திருக்கின்றார்கள். அதனால் அவர்கள் முகம் சூப்பையாய் இருக்கின்றது.

**வினா: -** பெண் விபசாரிகள் விபூதி பூசியதன் மூலம் மோட்க்ஷத்திற்குப் போய்விட்டால் அங்கு அவர்களுக்கு வழி என்ன?

**விடை:-** கடவுள் இருக்கிறார். போறாக்குறைக்கு அங்குள்ள மற்ற தேவர்களைக் கொண்டு சரிப்படுத்திக் கொள்ள வேண்டியது தான்.

## சும்மா சொன்னேன்

**வினா:-** கடவுள் ஏன் காண முடியாதவராயிருக்கிறார் தெரியுமோ? அவர் பண்ணும் அக்கிரமத்திற்கு யார்கைக்காவது கிடைத்தால் நல்ல உதை கிடைக்குமென்றுதான்.

**விடை:-** என்ன அக்கிரமம் என்றா கேட்கின்றீர்கள். மூட்டை, கொசு இரண்டையும் அவர் உற்பத்தி செய்த அக்கிரமம் ஒன்றே போராதா?

## கார்த்திகை தீபம்

பாலர் பாலுக்கழ
பட்னியால் பலர் மடிய
எத்திசையோரும் இகழும்படி
வெண்ணையும் நெய்யும் கொண்டு
கல்லிலும் நெருப்பிலும் கொட்டும்
கயமையே கார்த்திகை தீபமாகும்

நமது மதமும், தெய்வமும் உர்ச்சவமும் முட்டாள்தனமானதென்றும் அது செல்வத்தைப் பாழாக்குகின்றதென்றும் மக்களுக்கு யாதொரு பலனையுமளிக்கின்றதில்லை என்றும் சொல்லப்பட்டு வருவதற்கு உதாரணம் சமீபத்தில் திருவண்ணாமலையிலும் திருச்செங்கோடு முதலிய ஊர்களிலும் கார்த்திகை தீபம் ( கூம்பு - சொக்கப்பானை ) என்கின்ற உற்சவத்தின் போது குடம் குடமாய் டின் டின்னாய் நெய்யையும், வெண்ணையையும் கொண்டு



RangaRakes tamilnavarasam.com

போய் நெருப்பில் கொட்டப்போகும் முட்டாள் தனமும் வீண் செலவும், அதனால் செல்வம் பாழாவதும் போதாதா என்று கேழ்க்கின்றோம். இதற்கு பார்ப்பன தேசீயப் பத்திரிகைகள் என்ன சமாதானம் சொல்லப் போகின்றன என்பதை கவனிப்போம்.

**குடி அரசு - உரையாடல் - 16.11.1930**



# விபசாரமே ஜாதிக்குக் காரணம்

அடுத்து வருகிற சென்ஸஸ் கணக்கில் (ஜனக் கணிதத்தில்) இந்துக்கள் என்பவர்கள் ஜாதிப் பெயரைக் கொடுக்கக் கூடாதென்பதாக லாகூர் ஜட்பட் டோரக் மண்டலத்தாரும் மேலும் அநேகர்களும் தீவிர முயற்சியெடுத்து வருகிறார்களென்பது யாவர்க்குந் தெரியும். மற்றும் இந்தியாவிலுள்ள சீர்திருத்தவாதிகளென்பவர்களிலும் உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்கள் முதல் தாழ்ந்த ஜாதியார் என்று பிற மக்களால் சொல்லப்படும் ஆதிதிராவிடர்கள் என்கின்றவர்கள் முதலிய எல்லாராலும் அநேகமாக மேடைகளில் பத்திரிகைகளில் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றன.

இதைப் பற்றி நமது "குடிஅரசி"லும் அநேக அறிஞர்களால் கட்டுரைகள் எழுதப்பட்டிருப்பதோடு சுயமரியாதை மகாநாடு, பார்ப்பன ரல்லாதார் மகாநாடு, சீர்திருத்த மகாநாடு முதலிய மகாநாடுகளில் இதைப் பற்றி பல தீர்மானங்கள் செய்யப்பட்டு அதையநுசரித்தே அநேக கனவான் கள் ஜாதிக் குறிப்பைக்காட்டும் பட்டம் முதலியவைகளையும் விட்டிருப்பது யாவருக்கும் தெரியும். ஆகவே ஜாதிப் பிரிவும் வித்தியாசங்களும் இருக்கக் கூடாதென்பது இந்தியாவின் ஒரு முகப்பட்ட அபிப்பிராயமென்பதும், கோரிக்கையென்பதும் நாம் சொல்லாமலே விளங்கும். பொதுவாகப் பார்க்கும் போது போதிய உலக ஞானமற்ற மக்களுக்கு ஜாதிப் பிரிவுகளை ஒழிப்ப தென்றால் பிரமாதமாகத் தோன்றுவதும், சிலருக்கு ஏதோ முழுகிப் போவது போல் அவர்கள் மனதிற்குப் பெரிய திகில்கள் உண்டாவதும் சகஜமாகக் காணப்படுகின்றன. ஆனால் இவையெல்லாம் ஜாதி என்பதின் உண்மையும், உற்பவமும் இன்ன தென்றறியாத மயக்கத்தினால் தோன்றப் படுவதே தவிர வேறில்லை.

ஒரே நாட்டு மக்களை பிறவியில் பல ஜாதியாகப் பிரிக்கப்பட்டிருப் பது நமது இந்தியாவில் தான் இருக்கின்றதே தவிர வேறெங்கும் இல்லை என்பது உலகக் கல்வி ஞானமுடையவர்கள் யாவரும் அறிந்ததாகும். அந்தப்படி இந்தியாவில் பிரிக்கப்பட்டிருக்கும் ஜாதியும் எவ்வித கொள் கைக்கும் பொருத்தமில்லாமல் வெரும் பிரிவுக்கும் இழிவுக்கும் மாத்திரம்



RangaRakes tamilnavarasam.com

ஆதாரமாய் இருப்பதைத் தவிர மற்றபடி அவற்றால் யாதொரு பயனும் இல்லாமல் இருப்பதும் யாவரும் அறிந்ததாகும். எனவே இப்படிப்பட்ட ஜாதி உயர்வும் தாழ்வும் எப்படி ஏற்பட்டதென்றும் இதற்கு ஆதாரம் என்ன என்பதையும் சற்று கவனிப்போம்.

பொதுவாக ஜாதி என்பது இந்துக்கள் என்பவர்களுக்குள் ஆரியக் கொள்கைகளுக்கு அடிமைப் பட்டவர்களுக்குள் மாத்திரம்தான் “கடவு ளால் சிருஷ்டிக்கப்பட்டது” என்கின்ற கொள்கையின் மீது நான்கு வருணங் களாக அதுவும் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவை முறையே ஒன்றுக்கொன்று தாழ்ந்ததாகவும் கடைசி ஜாதி என்பது மிக்க இழிவானதாகவும் கருதப் படுவதாக குறிக்கப் பட்டிருக்கின்ற விபரம் யாவரும் அறிந்ததேயாகும். இப்படி இருந்தாலும் இப்போது அநேக ஜாதிகள் இருப்பதற்கு என்ன காரணம் என்று கவனித்துப் பார்ப்போமானால் அதற்குக் கிடைக்கும் சமாதானம் மிகமிக இழிவைத் தரத்தக்கதாகவே இருப்பதை உணரலாம். அதாவது “ஆதியில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட நான்கு வருணத்தாரும் தங்களில் ஜாதி முறை தவறி கலப்பு விவாகம் செய்து கொண்டதாலும் கலப்பு விபசாரம் செய்து கொண்டதாலும் ஏற்பட்ட பிரிவு”களென்றும், அப்படிப் பட்ட பிரிவுகளுக்கு பஞ்சம ஜாதியார்கள் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக் கின்றதென்றும் ஆதாரங்களில் இருக்கின்றன.

அப்படிச் சொல்லப்படுவதிலும் இப்பஞ்சம ஜாதிகள் என்பது இப்போது நமது நாட்டில் பெரும்பான்மையாய் இருக்கும் பல முக்கியமான ஜாதிக்காரர்கள் என்பவர்களே பெரிதும் இந்த விபசாரப் பெருக்கால் ஏற்பட்ட பஞ்சம ஜாதிகள் என்றே காட்டப்பட்டிருக்கின்றன. அந்த விப ரத்தை தமிழ் அகராதியில் உள்ளபடி மற்றொரு பக்கம் பிரசுரித்திருக் கின்றோம். ஆகவே அதில் உதாரணமாக, இன்று தமிழ் நாட்டில் பிரபல ஜாதியும் பிரமுக ஜாதியும் என்று சொல்லிக் கொள்ளப்படுவதான வேளாள ஜாதியார் எனப்படுபவர்களே பஞ்சம ஜாதியில் சேர்ந்தவர்கள் என்றும், பஞ்சம ஜாதியிலும், பிராமணன் க்ஷத்திரிய குலப்பெண்ணை சோரத்தால் கலந்ததால் பிறந்தவர்கள் என்றும் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களில் இந்தப்படியான வேளாளர் என்பவர்களில் விவசாயம் செய்பவர்களாயிருந் தால் அவர்களுக்கு காணியாளர் என்று பெயர் என்றும், மற்றபடி “சிற்றரசு, மந்திரித்துவம்” முதலிய பதவிகளில் இருப்பவர்களாயிருந்தால் அவர் களுக்கு வேளான் சாமந்தர் என்கின்ற பெயர் என்றும், குறிக்கப்பட்டிருப்பது டன் இவற்றிற்காதாரம் சுப்பரபோதகம், பிரம்ம புராணம், வைகாநசம், மாதவியம், சாதி விளக்கம் என்கின்ற நூல்கள் என்றும் குறிப்பிடப்பட்டி ருக்கின்றன.

தவிர மேல் கண்ட பிராமண ஜாதி ஆண், க்ஷத்திரிய ஜாதி பெண்ணை விவாகம் செய்து கொண்டதால் பிறந்த பிள்ளைகளே சவர்ணர் எனவும்



தெலுங்கர் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதாவது இது தெலுங்கு பாஷை பேசும் தெலுங்கு தேசத்தவரனைவரையும் குறிப்பிடத் தக்கதாகவே குறிக்கப்பட்டிருக்கிறது.

அதுபோலவே பிராமணன் வைசியப் பெண்ணுடன் கல்யாணத்தால் பிறந்த பிள்ளை அம்பட்டன் என்றும் சோரத்தால் பிறந்த பிள்ளைகள் குயவர் என்றும் நாவிதர் என்றும் குறிக்கப்பட்டிருக்கின்றது. அதுபோலவே பிராமணன் சூத்திரப் பெண்ணுடன் கல்யாணத்தால் பிறந்த பிள்ளை பரசவர் அதாவது செம்படவர் என்றும், சோரம் செய்ததால் பிறந்தவர் வேட்டைக் காரர் அதாவது வேடுவர் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

பிராமணப் பெண்ணுடன் சூத்திரன் விபசாரம் செய்ததால் பிறந்தவர் கள் சண்டாளர்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

பிராமண குலப் பெண்களுடன் சண்டாளர் கூடிப் பிறந்த பிள்ளைகள் சருமகாரர் அதாவது சக்கிலிகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. க்ஷத் திரிய குலப்பெண்ணுடன் சண்டாளர் முதலியவர்கள் சேர்வதால் பிறந்த மக்கள் வேணுகர், (அதாவது வேணுகானம் செய்பவர்களும்) கனகர் (அதா வது தங்க வேலை செய்பவர்களும்) சாலியர் (அதாவது சாலியர் முதலிய நெசவு வேலை செய்வோர்களும்) ஆவார்கள் என்றும் கூறப்பட்டிருக் கின்றன.

இந்த மாதிரி “கீழ் மேல்” ஜாதிகள் கலந்து கலந்து வந்ததால் ஏற்பட்ட ஜாதிகளில் ஒன்றாகிய அயோவகச் சாதிப் பெண் இடம் நிடாதனுக்குப் பிறந்த பிள்ளைகள் பார்க்கவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்தப் படியே இப்போது அமுலில் உள்ள சாதிகளையெல்லாம் குறிக்கும்படி யாகவே இன்னும் அநேக விஷயங்கள் காணப்படுகின்றன.

இதுபோலவே இன்னும் இரண்டொரு ஆராய்ச்சி நூல்களில் அதாவது அபிதான கோசம், அபிதான சிந்தாமணி முதலிய எல்லா இந்து பண்டிதர் களாலும் ஆதாரமாய் கொண்டாடும் புத்தகங்களில் மற்றும் பல ஜாதிகளை இதைவிடக் கேவலமாகவும் குறிக்கப்பட்டிருக்கின்றதோடு 4 ஜாதி தவிர மற்ற ஜாதிகள் எல்லாம் மேல் கண்ட நான்கு ஜாதிக்குள் மேல் கீழாகவும், கீழ் மேலாகவும் கல்யாணம் செய்தும், விபசாரம் செய்தும் பிறந்த பிள்ளை களாக ஏற்பட்டவர்கள் என்றே கூறப்பட்டிருக்கின்றன. செட்டியார்மார்களை யும் ஆசாரிமார்களையும் பற்றி மிக மிக இழிவாகவே கூறப்படு கின்றது.

ஆகவே ஜாதியை கட்டிக் கொண்டு அழுவது இவ்விழிவுகளை மறை முகமாய் ஏற்றுக் கொள்ளுவதையே ஒக்குமென்பதைத் தவிர வேறில்லை. உண்மையில் யாருக்கு யார் பிறந்திருந்தாலும் அதனாலேயே குற்றம் சொல்வதற்கில்லை என்பது நமது கொள்கையானாலும் ஒரு இழிவை கற்பித்து



RangaRakes tamilnavarasam.com

அதை நம் மக்கள் மீது சுமத்தி ஒரு பெரிய சமூகம் நிரந்தரமாய் அடிமையாயும் காட்டு மிராண்டியாயும் இருப்பதற்குச் செய்த காரியமே ஜாதிப்பிரிவும் பாகுபாடும் என்பதை எடுத்துக் காட்டவும் அவ்விதம் கொடுமையை ஒழிப்பதற்காகவுமே இதை எழுதுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 16.11.1930**





குடி அரசு

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

மகா வில்வாதி லேகியம்.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

குழந்தை மருந்துகள்



RangaRakes
tamilnavarasam.com

# “தேசீயக் கிளர்ச்சி”யும் “சீர்திருத்த” முயற்சியும்

இன்று இந்திய மக்களில் பெரும்பான்மையோருடைய உணர்ச்சி களை காங்கிரஸ் ‘தேசீயக் கிளர்ச்சி’யும் வட்ட மேஜை மகாநாட்டு “சீர்திருத்த” முயற்சியுமே கவர்ந்து கொண்டிருக்கிறது. கிளர்ச்சியில் சிறை சென்றும் அடிபட்டும் செல்வமிழந்தும் கஷ்டப்படும் மக்கள் பலர் இருக்கிறார்கள் என்பதில் ஆக்ஷேபணையில்லை. சீர்திருத்தம் அளிக்கும் முயற்சியில் சர்க்கார் பெரும் துகைகளைச் செலவு செய்து பெரும் எதிர்ப்பு களைச் சமாளித்து கமிட்டி விசாரணைகள் நடத்துவதும், வ. மே. மகா நாடுகள் கூட்டி யோசிப்பதுமான காரியங்கள் நடைபெற்று வருவதும் யாவ ரும் அறிந்ததாகும். என்றாலும் இவ்விரண்டினுடைய முடிவு என்ன என்ப தும் அதனால் நாட்டுக்கு நன்மை என்ன என்பதும் அநேகமாக ஏற்கனவே நம்மால் முடிவு செய்யப்பட்டு விட்ட விஷயங்கள் தானே யொழிய வேறில்லை.

அதாவது கிளர்ச்சியினால் அநேகர்கள் தேச பக்தர்களாகவும், தியாகி களாகவும் ஆகலாம். முயற்சியினால் பலருக்கு பெரிய பெரிய பட்டமும், பதவியும், உத்தியோகங்களும் கிடைக்கலாம். இதைத் தவிர நாம் எதிர் பார்க்கும் காரியம் கிடைக்குமென்று நம்புவதற்கில்லை. சைமன் கமிட்டியார் தெரிவித்தபடியும் சர்க்கரவர்த்தியார் தெரிவித்தபடியும் இந்தியாவில், “அனாதி” காலம் தொட்டு இருந்து வரும் மேல் ஜாதி, கீழ் ஜாதி வித்தியாசக் கொடுமையும் ஆண்-பெண் உயர்வு தாழ்வு வித்தியாசக் கொடுமையும், பணக்காரன் - ஏழை வித்தியாசக் கொடுமையும், மிராசுதாரன் - உழுகின்ற குடியானவன் வித்தியாசக் கொடுமையும், பொதுவில் மதக்கொடுமையும் ஆகியவைகளை நன்றாய்க் கவனித்து அஸ்திவாரத்தில் இருந்தே பரித்துக் களைந்து எறியும்படியான கிளர்ச்சியும் முயற்சியுந்தான் உண்மையில் ஏதாவது பயனளிக்கக்கூடியதாகுமே தவிர வேறல்ல.

இவ்விதக் கிளர்ச்சிக்கும் முயற்சிக்கும் மக்களை முந்த விடாமல் செய்வதற்காகவே தான் இன்றைய ‘கிளர்ச்சியும்’ ‘முயற்சியும்’ நடை பெறுகின்றன.



ஆகவே இவையிரண்டும் இந்தியாவின் உண்மையான விடுதலைக் கும், சுதந்திரத்திற்கும் விரோதமானதென்றே சொல்லுவோம். ஆனாலும் சீர்திருத்தம் அளிக்க முயற்சிக்கின்ற கூட்டத்தாராவது மேல்கண்ட கொடுமைகளை ஒப்புக் கொண்டதோடு அவற்றிற்கு ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டுமென்பதாக வாயாலாவது சொல்லுகின்றார்கள். ஆனால் கிளர்ச்சிக்காரர்களோ அந்தப் பக்கமே திரும்பிப் பார்க்கவில்லை. எல்லாம் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்கிறார்கள். ஆனால் சீர்திருத்தமளிக்க முயற்சிக்கின்றவர்கள் உண்மையாகப் பேசுகின்றார்களா அல்லது பொய்யாக வேஷத்திற்கு நொண்டிச்சாக்குக்காக பேசுகின்றார்களா என்பது வேறு விஷயமானாலும் அதுவும் அவசரத்தில் முடிவு செய்யக் கூடிய காரியமல்ல வென்றே சொல்லுவோம்.

ஏனெனில் எல்லா வகை பிரதிநிதிகளையும், அழைத்திருக்கின் றார்கள், எல்லா விஷயங்களையும் வெளிப்படையாய் எடுத்துச் சொல்லி யிருக்கின்றார்கள். இனி அவர்கள் அதற்கு விதாயம் செய்தாலும் செய்யா விட்டாலும் கொடுமைப்படுத்தப்படும் மக்கள் அந்த வார்த்தையைப் பிடித்துக் கொண்டே கிளர்ச்சி செய்யவாவது முயற்சி செய்யவாவது ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கி விட்டார்கள். எந்த விதத்திலோ ஒரு சீர்திருத்தம் வெளியாகி அமுலில் ஆரம்பிக்கப்பட்ட 10 வருஷத்திற்குள் மேல் கண்ட அதாவது கொடுமைப்படுத்தப்பட்டவர்களின் கிளர்ச்சி பலப்பட்டு அதற்காக வகை சொல்லித் தீரவேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கும் ஆதிக்கக்காரருக்கும் வந்து தீருமென்றே கருதுகின்றோம்.

அன்றியும் திரு. காந்தியவர்களும் தனது கிளர்ச்சியை ஆரம்பித்த தற்குக் காரணங்கள் சொல்லும்போது அவைகளில் ஒன்றாகக் குறிப்பிட்ட விஷயம் யாவருக்கும் ஞாபகம் ஓர் பக்கமிருக்கும். என்னவென்றால் “இந்தக் கிளர்ச்சி ஆரம்பிக்காதிருந்திருந்தால் இந்தியாவில் போல்சுவிசம் அதாவது சமதர்மக் கொள்கை ஆரம்பமாகிவிடும்” என்று பயந்து கொண்டு இக்கிளர்ச்சி சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பித்ததாகச் சொல்லி இருக்கிறார். இதன் தத்துவார்த்தம் என்ன வென்றால் திரு. ஜவார்லால் நேரு அவர்கள் பூரண சுயேச்சை கொள்கைக்காரர் என்றும் அவர் சமீபத்தில் ருஷியா முதலிய இடங்களுக்குப் போய் வந்தவர் என்றும் அவருடைய உணர்ச்சி அதில் இழுக்கப்பட்டிருக்கின்றதென்றும்தான். அதாவது திரு. காந்தியார் அதை தடுக்காதிருந்தால் காங்கிரசே அந்த வழியில் திரும்பி கடைசியாக சமதர்மக் கிளர்ச்சி புறப்பட்டுவிடும் என்றும் பயந்ததாக காட்டப்பட்ட தாகும்.

ஆகவே திரு. காந்தியவர்கள் சொல்லுவதை அப்படியே ஏற்றுக் கொண்டாலும் போல்ஸ்விசத்தை - சமதர்மக் கொள்கையை தடுப்பதற்காக இந்த தேசியக் கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டதென்பது விளங்கும். சமதர்மக் கிளர்ச்சி வந்து விட்டால் திரு. காந்தியாருக்கு முழுகிப் போவதென்ன என்பது



RangaRakes tamilnavarasam.com

நமக்கு புலப்படவில்லை. என்றாலும் அதைப்பற்றி நாம் இப்போது விவரிக்காமல் விட்டு விட்டு நமது மற்றைய அபிப்பிராயத்திற்கு போவோம்.

இன்றைய இந்தியாவின் வரிக் கொடுமைக்கு முக்கிய காரணங்கள் இரண்டாகும். ஒன்று வரி விதிப்பதில் அனுசரிக்கும் முறை. இரண்டு, இந்திய அரசியல் உத்தியோகங்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் சம்பளக் கொள்ளை. இந்த இரண்டும் சீர்திருத்தப்பட்டாலொழிய நாட்டின் வரிநிலை என்றுமே சீர்படப் போவதில்லை என்பதே நமது அபிப்பிராயமாகும். அதாவது பூமிகளுக்கு வரி (தீர்வை) விதிப்பதில் இன்கம்டாக்ஸ் என்றும் வருமான வரி விஷயத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் முறையே இதிலும் அனுசரிப்ப தாய் இருந்தால் வரிக் கொடுமை அநேகமாய் நீங்கிவிடும் என்றே சொல்லுவோம். எப்படி எனில் இத்தனை ஏக்கர் பூமி உடையவனுக்கு இன்ன விகிதம் வரி என்பதாக கணக்கு போட்டு வரிவிதிக்க வேண்டும். அதாவது 5 ஏக்கர் நஞ்சைக்கும் (தண்ணீர் பாயும் பூமிக்கும்) 25 ஏக்கர் புஞ்சை அதா வது மழையை எதிர்பார்த்து விளையும் பூமிக்கும் குறைவாக உடையவர் களுக்கு இப்போது இருக்கும் வரி தீர்வை விகிதத்தில் பகுதியாக்கி 500 ஏக்கர்காரருக்கு மேல்பட்டவர்களிடமிருந்து இப்போதிருப்பதில் இரட்டிப் புப் பாகம் வரி உயரும்படியாக படிப்படியாக உயர்ந்ததான ஒரு திட்டம் ஏற்பாடு செய்தால் அல்லது இந்தக் கொள்கையை அனுசரித்து சற்றேறக் குறைய திட்டம் ஏற்பாடு செய்தால் கண்டிப்பாக வரி கஷ்டம் நீங்குவதோடு பூமிகள் ஒரே பக்கத்தில் போய் சேர்ந்து விடாமல் இருப்பதற்கும் வரிமுறை கொடுமையில்லாமல் பயன்படுவதற்கும் அனுகூலமாயிருக்கும்.

அப்படிக்கில்லாமல் ஒரு ஏக்கர் காரனுக்கும் 5000, 100000 ஏக்கர் காரனுக்கும் ஒரே வரி விகிதம் இருப்பதால் பூமி எல்லாம் ஒரே பக்கம் போய்ச் சேரவும் மற்றும் அநேக கெடுதிகள் ஏற்படவும் அனுகூலமா யிருக்கின்றது.

நிற்க இரண்டாவது விஷயமான சர்க்கார் நடவடிக்கை சம்பள விஷயத்தில் இப்போது இருக்கும் திட்டம் ஒரு பெரும் பகல் கொள்ளை என்றே சொல்லக் கூடியதாயிருப்பதால் எப்போதுமே வரி போராமலேயே இருந்து வருகின்றது. அன்றியும் சம்பளம் போரவில்லை என்கின்ற கூக்குரலும் சதா இருந்து வருகின்றது. இதன் பயனாய் போராத அதாவது குறைந்த சம்பளக்காரரால் கையாளப்படும் பிச்சைக்காசு, லஞ்சம், ஒழுக்க ஈனம், நியாயம் தவறுதல் ஆகிய காரியங்கள் செல்வாக்குப் பெற்று இவை பெரிய சம்பளமுள்ள பெரிய உத்தியோகங்களிலும் தாராளமாய் தாண்ட வமாடுவது சகஜமாகி வந்துவிட்டது. ஆதலால் இனியாவது லஞ்சம் நியாயம் தவறுதல் ஆகிய காரியங்கள் பொது ஜனங்களால் வெறுக்கப்பட்டு உத்தி யோகங்கள் பரிசுத்தமும் நேர்மையும் அடையவேண்டுமானால் கண்டிப்பாய் சம்பளமுறை மாற்ற வேண்டியது மற்றொரு விஷயத்திலும் அவசியமாகும். அதாவது 20, அல்லது 25 (இடத்தை அநுசரித்து) ரூபாய்க்கு குறைவில்லாமல்



1000, 1250 ரூபாய்க்கு மேல்படாமல் இருக்கும்படியாகவே திட்டம் ஏற்படுத்தவேண்டும். உத்தியோகங்களின் எண்ணிக்கையும் இப்போது உள்ளதில் பகுதிக்குக் கொண்டு வந்து விட வேண்டும்.

மக்களுக்கு நாணயமும், ஒழுக்கமும் ஏற்படுத்துவதற்குத் தனி ஒற்றர் C.I.D இலாகா வைத்து சீர்படுத்த ஏற்பாடு செய்து இதில் சற்றும் தாட்சண்யமற்ற நடுநிலைமை கையாளும் பட்சம் 10 வருஷத்தில் மக்கள் சீரடைந்து உத்தியோகங்களின் சீர்கேடும் நாணயத் தவறுதலும் லஞ்சமும் ஒழிந்து விடக்கூடும்.

இன்றைய தினம் நமது நாட்டில் அரசியலிலாவது அரசாங்க உத்தி யோகங்களிலாவது, ஸ்தல ஸ்தாபன சுயாக்ஷி நிர்வாகத்திலாவது பொது வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் நடந்து கொள்ளும் குடித்தனப் பாங்கான வாழ்க்கையிலாவது, நாணயமும் ஒழுக்கமும் சிறிது காண்பது கூட மிகக் கஷ்டமாகவே இருந்து வருகிறது. ஆகவே இந்த விஷயம் மற்றெல்லா விஷயங்களைவிட முக்கியமாய்க் கவனிக்கப்படவேண்டியதாகும்.

இப்போது சில உத்தியோகங்களுக்குப் பெரிய பெரிய சம்பளங்கள் கொடுக்கப்படுவதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவையாவன.

ஒன்று. வெள்ளைக்காரர் தங்களுக்கு இந்தச் சம்பளம் ஏற்படுத்திக் கொண்டிருந்ததால் அந்த உத்தியோகங்கள் இந்தியர்க்கு வந்த காரணமாய் அந்த சம்பளமும் அப்படியே இந்தியர்களுக்குத் திருப்பப்பட்டதால் என்பதும்,

இரண்டு. பெரிய உத்தியோகங்களுக்கு, அதாவது, பொருப்பும், அதிகாரமுமுள்ள உத்தியோகங்களுக்கு அதிக சம்பளம் கொடுக்கா விட்டால் அலட்சியமும், நடுநிலைத் தவறுதலும் ஏற்பட்டுவிடும் என்பதோடு நாணயத் தவறுதலாக நடக்க வேண்டிய ஆசை உண்டாக்கப்பட்டு விடும் என்பதுமாகும். இவற்றை நாம் ஒப்புக் கொள்ள முடியாது.

ஐரோப்பியருடைய சம்பளத்தை குறைக்க நாம் ஏற்பாடு செய்ய வேண்டுமேயொழிய அந்தச் சம்பளம் நமக்கு வரவேண்டுமென்பது ஐரோப்பியர்களின் சம்பளத்தை நாமே ஆதரிப்பதாகும் என்பதோடு இதை பண ஆசையால் தேசத்தின் பெயரால் கொள்ளை அடிக்கும் அயோக்கியத் தனம் என்றும் சொல்ல வேண்டியதாகும். இந்த அயோக்கியத்தனத்தை இந்திய பொது மக்களுக்குள் புகுத்தியது தேசீய இயக்கமும், தேசீய கிளர்ச்சியும், அவைகளிரண்டும் சேர்ந்ததால் பிறந்த குழந்தையாகிய அரசியல் சீர்திருத்தமும் தான் என்று தைரியமாய்ச் சொல்லுவோம்.

“இரண்டாவதான அதாவது அதிகச் சம்பளம் கொடுக்கா விட்டால் நடு நிலைமை தவருவார்கள், பொருப்பை உணரமாட்டார்கள், லஞ்சம்



RangaRakes tamilnavarasam.com

வாங்குவார்கள்” என்பது. இதுவும் போதிய காரணமாகாதென்றே சொல்லு வோம்.

உத்தியோகஸ்தர்கள் நாணையமாய் பொருப்புடன் நடுநிலையில் நடந்து கொள்ளுவது என்பது அரசியல் அமைப்பில் இருக்கின்றதே ஒழிய சம்பளம் அள்ளிக் கொடுப்பதில் இல்லை என்பதை நன்றாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லுவோம்.

உதாரணமாக 5533 - 5 - 4 சம்பளம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மந்திரிகள் முக்கியமான காரியங்களில் நடுநிலையிலும் தங்கள் மனதில் நியாயம் என்று தோன்றிய வழியிலும் தேசத்திற்கும் மக்களுக்கும் நன்மையான காரியம் என்பதிலும் சிறிதும் நாணையமாய் நடந்து கொள்ள முடியாமல் எப்படியாவது உத்தியோகத்தை சம்பாதிக்கவும் அதை குரங்கு பிடியாய் பிடித்துக் கொண்டிருக்கவும் தான் நடந்து கொள்ளும்படி அரசியல் அமைப்பு ஏற்பட்டிருக்கின்றதே ஒழிய வேறில்லை. இப்படியான குணம் ஏற்பட்டதற்கு அதிகச் சம்பளமே காரணம் என்று கூட சொல்லுவோம்.

அதுபோலவே மற்ற உத்தியோகங்களிலும் மேல் கண்ட குணங்க ளோடு லஞ்சம் என்பதும் சேர்ந்து கடையில் பீடி, சிகரட்டு விலைக்கு வாங்குவது போல் நியாயம் விலைக்கு வாங்கத்தக்க அவ்வளவு சாதாரண நிலையில் இருந்து வருகின்றது. இவ்வளவும் போறாமல் இன்றைய அரசியல் கிளர்ச்சியும் சீர்திருத்தமளிக்கும் முயற்சியும் இந்த தன்மையை மேலும் விர்த்தி செய்ய அனுகூலமாயிருப்பதைத் தவிர இவைகளில் ஒரு சிறியதை யாவது குறைப்பதற்கு வழியில்லை.

தேசீயக் கிளர்ச்சியில் வரும் பூரண சுயேச்சையானாலும், சீர்திருத்த மளிக்க முயற்சி செய்யும் சர்க்காரால் வரும் முழு சீர்திருத்தமானாலும் இரண்டும் உயர்ந்த ஜாதிக்காரன், பணக்காரன், படித்தவன் ஆகிய மூவருக் கும் மாத்திரம் அனுகூலமும், முற்போக்குக்கான சுதந்திரமும் சீர்திருத்த முமாய் இருக்குமே தவிர 100க்கு 90 மக்களாய் இருக்கின்ற குடியானவனுக் கும் கூலிக்காரனுக்கும் தாழ்த்தப்பட்டவனுக்கும் வேண்டிய மார்க்கம் அதில் ஒன்று மிருக்காது என்றும் சொல்லுவோம்.

மற்றபடி கல்வி, நீதி முறை, அரசியல் தத்துவம் முதலியவைகளைப் பற்றி மற்றொரு சமயம் எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 23.11.1930**



# கல்வியும் கல்வி மந்திரியும்

சென்னை அரசாங்க கல்வி மந்திரி திவான்பகதூர் கனம் குமாரசாமி ரெட்டியாரவர்கள் திருநெல்வேலியில் முனிசிபாலிடியாரால் வழங்கிய ஒரு உபசாரப்பத்திரத்திற்கு பதிலளிக்கும் போது பேசியிருப்பதில் காணப் படுவதாவது: -

“இன்று தேசமிருக்கும் நிலையில் நமக்கு வேண்டியது ஆரம்பக் கல்வியேயாகும். உயர்தரக் கல்வியை நிறுத்தியாவது ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டியது இன்றியமையாதது. இந்தக் கவலைமீது இதுவரை கல்வி முறையில் சரியானபடி கவனம் செலுத்தப் படவில்லை. சரியான கொள்கையும் திட்டமும் ஏற்படுத்தாததே இதற்குக் காரணம். மக்களுக்கு வரவர அறியாமை அதிகரித்துக் கொண்டு வருவது யாவரும் அறிந்ததாகும். கல்வி விஷயத்திலாகும் வீண் பணச் செலவு அதிகம். செலவுக்குத் தகுந்த பலனில்லை. என்னுடைய உத்தியோக காலத்தில் கல்வி முறையை நேர்மையான வழியில் திருப்பி ஆரம்பக் கல்வியை நாட்டில் எல்லாப் பக்கமும் புகுத்தி எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் இந்த நாட்டில் இல்லையென்று ஏற்பட்டால் அதுதான் கல்வி விஷயத்தில் நான் செய்த நல்ல காரியமாகும்” என்று பேசியிருக்கிறார்.

இதை நாம் மிகுதியும் சரியான அபிப்பிராயம் என்று சொல்வதோடு திரு. ரெட்டியாரையும் மனதாரப் பாராட்டுகிறோம். கல்வி விஷயத்தில் நமது நாட்டிலுள்ள குறைகள் உலகத்தில் எங்குமேயிருக்காதென்று கூறலாம். இதற்கு முக்கிய அத்தாட்சிக்கு வெகுதூரம் போக வேண்டியதில்லை. சர்க்காரின் 1921 ம் வருஷத்திய ஜனகணிதப்படி பார்த்தால் 100க்கு இந்தியர்களில் 7 பேர்களே படித்தவர்களாகும்.

இந்தக் கணக்கிலும் 100க்கு 3 பேராயுள்ள பார்ப்பனர்களில் 100க்கு 100 பேர் படித்திருப்பதைக் கழித்து மற்ற மக்களில் மொத்தம் படித்தவர்கள் வீதாசாரம் பார்ப்போமானால் இந்தியர்கள் 100க்கு 4 பேரே படித்தவர்கள். அதாவது எழுத்து வாசனையுடையவர்களாயிருக்கிறார்கள். ஒரு தேசத்தின் இழிவுக்கும் அறியாமைக்கும் பாமரத்தன்மைக்கும் இதைவிட வேறு அத்தாட்சி என்ன வேண்டும் என்று கேட்கின்றோம். இந்த நிலைமை



RangaRakes tamilnavarasam.com

ஏற்பட்டதற்குக் காரணம் இந்த அரசாங்கத்தினால் கல்விக்காக செலவழிக் கப்படும் பணங்களும் முயற்சிகளும் பெரும்பாலும் முன் சொல்லப்பட்ட 100க்கு 3 பேராயுள்ள ஜன சமூகம் மாத்திரம் 100க்கு 100 பேராக படிக்கப்படு வதற்காகவே சூக்ஷி செய்து கொண்டு செலவழிக்கப்பட்டிருப்பதோடு இந்த இலாக்காவின் ஆதிக்கம் அந்த வகுப்பாரிடமே சிக்கிக் கொண்டிருந்ததே முக்கிய காரணமாகும். இந்த புரட்டை இதுவரை யாரும் கண்டுபிடிக்க வேயில்லை. இன்றைய தினமும் இந்தியாவில் தற்குறித்தன்மை ஒரு இருபது வருஷத்திற்குள்ளாவது இல்லாமல் ஒழிக்கப்பட வேண்டுமானால், கல்வி இலாக்காவிலிருந்து பார்ப்பனர்களை விலக்கி வைத்தோமானால் தான் கண்டிப்பாய் முடியக்கூடிய காரியமாகும். கல்வியிலாக்காவானது பார்ப் பனர்கள் கையில் இருந்ததினாலேயே அதற்காக ஒதுக்கிய பணங்கள் பெரும்பகுதி நிர்வாகிகள், உபாத்தியாயர்கள் சம்பளம் என்கின்ற பேரால் கொள்ளை போய்விட்டது. இப்போதும் கொள்ளை போகின்றது.

கல்வி இலாக்காவிலுள்ள சம்பளம், வேறு எந்த இலாக்காவிலும் இவ்வளவு தாராளமாயில்லை என்றே சொல்லலாம்.

உதாரணமாக, ஒரு பையன் பி. ஏ. படித்து விட்டு சர்க்கார் செலவில் ஒரு வருஷம் உபாத்தியாயர் வேலைக்கு எல். டி. படித்து விட்டு வந்து விட்டால் உடனே மாதம் 75 ரூபாய் சம்பளம் வாங்க அருகனாய் விடுகிறார். பிறகு வருஷம் 2 ரூபாய் முதல் 5 ரூபாய் வரை கிரேடு அதிகச் சம்பளம் பெற அருகராயிருக்கிறார். எதற்காக இவர்களுக்கு இவ்வளவு சம்பளம் என்பதைப் பற்றி யாருமே கவனிப்பதில்லை. இந்த சம்பளம் சாதாரணமாய் மூன்றாவது பாரம் வரை சொல்லிக் கொடுக்கக் கூடிய 3 உபாத்தியாயர் களுக்குக் கொடுக்கலாம். இன்னம் புரொபசர்கள், லெக்சரர்கள், எட்மாஸ்டர் கள், பிரின்ஸ்பால்கள் ஆகியவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் இதைப் போல் பலமடங்கு ஆகிறது. இந்தப் பணம் ஏழைகளிடமிருந்து வரி வசூலித்ததும், பிள்ளைகளின் பெற்றோர்களும் இதற்காக என்று மற்றவை களில் அதிகமாக சம்பாதித்ததுமாகும். இந்த மாதிரி சம்பளம் உபாத்தியாயர் களுக்குக் கொடுப்பதற்காக பிள்ளைகள் சம்பளங்களை உயர்த்துவதாலேயே எல்லாப் பிள்ளைகளும் படிக்க முடிவதில்லை. இது தவிர கல்வியிலாக்கா சர்க்கார் ஆதிக்கத்தில் சிக்கியிருப்பதால் சம்பளம் குறைப்பதற்குக் கூட அவர்கள் சம்மதிக்காததால் சர்க்கார் நிர்ப்பந்தத்திற்காகவே தனிப்பட்ட பள்ளிக்கூட நிர்வாகிகள் கூட அதிக சம்பளம் கொடுக்க வேண்டியிருக் கின்றது.

சாதாரணமாக இன்றைய நிலைக்கு B.A.L.T. கள் *மீ* ரூபாய் 40, சம்பளத் திற்கு தாராளமாய் கிடைக்கும்படி செய்யலாம். கிடைக்கவும் செய்யும். மற்ற உத்தியோகங்களைப் போல் சம்பளம் குறைந்தால் லஞ்சம் வாங்குவார்கள், நடுநிலையில் இருக்கமாட்டார்கள் என்று சொல்லவும் இதில் இடமில்லை. இந்த மாதிரி சம்பளத்தை அனுசரித்து பிள்ளைகள் சம்பளமும் மற்ற



செலவுகளும் குறைத்து விட்டால் 10000க்கணக்கான B.A.க்கள் தோன்றி விடுவார்கள். சாதாரண மக்கள் படிக்க முடியாத செலவுகள் வைத்திருப்பதால் அதிகமான பேர்கள் படிக்க முடியாமல் இருக்கின்றதே தவிர படிக்கத் தகுந்த புத்தி இல்லாததால் அதிகம் பேர் படிக்க முடியவில்லை என்று சொல்ல முடியாது. இது போலவே அந்த இலாக்கா அதிகாரிகளுக்கும் சிப்பந்திக ளுக்கும் கொடுக்கப்படும் சம்பளமும் இது போலவே ஒன்றுக்கு இரண்டாக வும் சில சமயங்களில் மூன்றாகவும் கொடுக்கப்படுகின்றன. இந்த அதிக செலவுகள் எல்லாம் மேல் வகுப்பு படிப்புகளை உத்தேசித்தேதான் செய்யப் பட்டு வருகின்றன. கல்வி இலாக்காவையே இரண்டாகப் பிரித்து ஆரம்பக் கல்விக்கு ஒரு இலாக்காவும், உயர்தரக் கல்விக்கு ஒரு இலாக்காவுமாக ஏற் பாடு செய்து ஆரம்பக் கல்வியை சர்க்கார் செலவிலும் உயர்தரக் கல்வியை முழுதும் மாணாக்கர்கள் செலவிலும் வைத்துவிட்டால் ஆரம்பக் கல்வியை நாமெல்லாம் பரப்புவதற்கு பணம் கிடைக்காமல் போகவே போகாது. அந்த உபாத்தியாயர்களுக்கும் வயிரார சாப்பாடு போடலாம். L.T. படித்து விட்டதி னாலேயே அவன் குடும்பத்திற்கு “ 75 ரூ.க்கு கம்மியாயிருந்தால் போதாது என்று சொல்லும் கல்வி இலாகா உத்தியோகஸ்தர்கள் ஆரம்பக் கல்வி சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர்களுக்கு *மீ* 15 ரூ. போராதா 20 ரூ. போராதா என்பதற்குக் காரணம் உபாத்தியாயர்களிலும் பெரும்பாலும் அது ஒரு ஜாதி, இது ஒரு ஜாதி என்று ஏற்பட்ட சூக்ஷியே தவிர வேறில்லை. ஆகையால் கல்வி மந்திரி கல்வியை பரப்ப வேண்டுமானால் பார்ப்பனர் களுக்கே ஏகபோக ஆதிக்கமாய் இருக்கும் அந்த இலாக்காவை விகிதாச் சாரம் எல்லா மக்களுக்கும் பொதுவான ஆதிக்கம் இருக்கும் படியாக்கி கூடுமான வரையில் பார்ப்பனர்கள் அதில் இல்லாமலே செய்வாரானால் அவ ருடைய உத்தேசத்திற்கு ஏதாவது ஆரம்ப விழாவாவது செய்தவராவார்.

தவிர மந்திரியார் எவ்வளவு தான் கல்வியை பரப்பினாலும் சாப் பாடும், புஸ்தகமும் சிலேட்டுமில்லாமல் படிக்க முடியாமல் இருக்கும் சமூகத்திற்குள் கல்வியை புகுத்தவே முடியாது என்பதை அவர்கள் நன்றாய் உணர்ந்து அதற்கு ஒருவகை செய்தாக வேண்டும் என்பதையும் ஞாபக மூட்டுகின்றோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சாப்பாடும், படிப்பு, சாதனப் பொருளும் கொடுப்பதால் தான் அவர்கள் ஆரம்பக்கல்வியாவது அடைய முடியுமே தவிர மற்றபடி வெறும் பேச்சிலும், உத்தரவிலும் ஆகிவிடாது என்பதை மறுபடியும் வலியுறுத்துகின்றோம்.

தவிர, கல்வியில் இருக்கும் பல நிர்பந்தங்கள் அனாவசியப் பாடங்கள் ஆகியவைகள் ஒழிக்கப்படவேண்டும்.

கல்விப்பாடங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும். தொழில்கல்வி பள்ளிக் கூடங்களென்பது ஒழுங்காய் நிர்ணயிக்கப் படவேண்டும்.

இப்போது பிள்ளைகளுக்கு தொழில் சொல்லிக் கொடுப்பது என்பது



RangaRakes tamilnavarasam.com

மற்றப் புரட்டுகளைப் போலவே இதுவும் ஒரு பார்ப்பனப் புரட்டு என்றுதான் சொல்ல வேண்டும். பள்ளிக் கூடத்தில் நெசவு வகுப்பும், தச்சு வகுப்பும் வைத்து வக்கீல்கள், வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள், மிராசுதாரர் ஆகிய வர்கள் பிள்ளைகளையும் மற்றும் மேல் கண்ட வேலைகளுக்குப் போகப் படிக்கும் பள்ளிக்கூடப் பிள்ளைகளை எல்லாம் அதில் படிக்கச் செய்து அதை கற்றுக் கொள்ளச் செய்வதாகிய பயனற்ற காரியமானது அந்த இலாகா தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் உள்ள ஞானத்தைக் காட்டுவதற்கும் போதுமான ஆதாரமாகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 23.11.1930**



# ஜாதி முறை

சாதியைக் காப்பாற்றும் பல சாதி அபிமானிகளே!

முன் 16 - 10 - 30ம் தேதி குடி அரசு தலையங்கம் ஒன்றில் "ஆதியில் ஏற்பட்ட நான்கு சாதிகள்" 4000 சாதிகளாகப் பிரிந்ததற்குக் காரணம் ஒரு சாதியும், மற்றொரு சாதியும் மாறி மாறி கலந்ததால் ஏற்பட்டதென்று சொல்லப்பட்டதோடு அந்த சாதிகளே தான் எல்லாப் பஞ்சம சாதியுமாகும் என்று பார்ப்பன ஆதாரங்களில் குறித்துள்ள சாதி ஆதாரங்களை எடுத்துக் காட்டினோம். அப்படி இருந்தும் இன்னும் நம்மவரிலேயே ஒரு கூட்டத்தார் அதாவது தங்களை வேளாளர் என்று சொல்லிக் கொள்ளுபவர்களில் ஒரு சிலர் ஷை சாதிக்கிரமத்தை அதாவது ஆதிசாதி என்பவைகளான பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கின்ற கிரமத்தை ஒப்புக் கொண்டு தங்களை மாத்திரம் சற்சூத்திரர் என்று அழைத்துக் கொண்டும், மற்றொரு சிலர் அச்சாதிக் கிரம வார்த்தைகளை வடமொழிப் பெயர்களால் சொல்லாமல் தென்மொழிப் பெயரால் சொல்லிக் கொண்டு அதாவது அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என நான்காகப் பிரித்து அவை தமிழ் நாட்டில் ஆதியிலேயே அதாவது ஆரியர் வருவதற்கு முன்னாலேயே இருந்ததென்றும் அவற்றிலும் தாங்கள் நாலாம் சாதி என்றும் ஒரு கற்ப னையைக் கற்பித்துக் கொண்டு அப்படிப்பட்டவர்களான தங்கள் நால்வ ருக்கும் தொண்டு செய்ய அடிமையாயிருக்க வேறு பல சாதிகள் ஏற்பட்டு இருப்பதாகவும் அவர்கள் தான் "பள்ளு பறை பதினெட்டு சாதிகள்" என்பது என்றும் ஒரு புதிய ஏற்பாட்டைச் சொல்லி ஒரு வழியில் திருப்தி அடைந்து வருகிறார்கள். ( இந்த இருவர் கூற்றின் உண்மை எப்படி இருந்தாலும், வட மொழிப்படி பார்த்தாலும் சரி, தென் மொழிப்படி பார்த்தாலும் சரி, வேளாளர் 4 வது சாதி என்பதை ஒப்புக்கொள்ளு கின்றார்கள் என்பது மாத்திரம் இதிலிருந்து அறியக் கிடக்கின்றது.)

அந்தப்படி கூறப்படும் பள்ளு, பறை பதினெண்குடி மக்கள் என்ப வர்களைக் குறிக்கும் முறையில் "பணி செய்யும் பதினெண் வகைச் சாதியார்" என்னும் தலைப்பின் கீழ் குறிக்கப்பட்டிருப்பது என்னவென்றால் இலை வாணிகன், உப்பு வாணிகன், எண்ணை வாணிகன், ஒச்சன் கல் தச்சன்,



RangaRakes
tamilnavarasam.com

கன்னான், குயவன், கொல்லன், கோயிற் குடியன், தச்சன், தட்டான், நாவிதன் பள்ளி, பாணன், பூமாலைக்காரன், வண்ணான், வலையன் என்பதாகக் கொண்டு குறிக்கப்பட்டிருக்கின்றன. (இது அகராதியில் குறிக்கப்பட்டதாகும்)

ஆனால் இதே பதினெண் மக்களை அபிதானகோசம் என்னும் ஒரு ஆராய்ச்சி நூலில் காண்கின்ற விவரப்படி குறித்திருப்பதென்னவெனில் ஏவலாள்களாக, சிவிகையர், (இவர்கள் ஆந்திர நாட்டிலிருந்து வந்தவர் களாம்) குயவர், பாணர், மேளக்காரர், பரதவர், செம்படவர், வேடர், வலையர், திமிலர், கரையார், சான்றார், சாலியர், எண்ணை வாணிகர், அம்பட்டர், வண்ணார், பள்ளர், புலையர், சக்கிலியர் என பதினெட்டு பெயர்கள் குறிக்கப் பட்டிருக்கின்றன. அப்படிக் குறித்திருப்பதிலும் தமிழ்நாட்டிலுள்ள தெலுங் கர்களை (ஆந்திரர்களை) குறிப்பிடுவதில் "கம்மவார் என்னும் கவரைகள் ஏவற் பரிசனங்களாகவும், உப்பமைப்பவர்களாகவும் அனுப்பப்பட்டவர் கள்" என்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

இவை ஒரு புறமிருக்க வேளாளர்களிலும் பல பிரிவுகளைக் காட்டி அதில் உயர்வு தாழ்வுகளை கற்பிக்கும் வரிசையில் குறிப்பிட்டிருப்பது என்னவென்றால் சூத்திரருள்ளே வேளாளர் தலையாயினார், அவருள்ளே முதலிகள் தலையாயினார், இவர்களுக்கு அடுத்தபடி வேளாள் செட்டிகள். இவர்கள் சோழபுரத்தார், சித்தக் காட்டார், பஞ்சுக்காரர் முதலிய பல திறப் பட்டவர்கள். இதற்கடுத்தப்படியிலுள்ளோர் கார்காத்தார். அடுத்த வரிசை யிலுள்ளோர் சோழிய வேளாளர். இவர்கள் சைவர்களாவார்கள். சமபந்தி போசனத்திற்கும் உரியவர்கள். இதற்கடுத்தப்படியில் உள்ளவர்கள் சோழிய, துளுவ கொடிக்கால் முதலிய பலவகை வேளாளர்களாவார்கள். (இவர்கள் மாம்ச போசனம் செய்பவர்கள்) இவரிற் றாழ்ந்தோர் அகம்படியர், அவரிற் றாழ்ந்தோர் மறவர். அவரிற் றாழ்ந்தோர் கள்ளர். அவரிற் றாழ்ந்தோர் இடை யர். இவர்கட்கடுத்த படியிலுள்ளோர் கவரைகள், கம்மவர்கள் என இந்தப் படியாக குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இவற்றுள் எதிலும் "பிராமணர்கள் விஷயத்தில் எவ்விதமான பாகு பாடும், தாழ்வுக் கிரமமும் சந்தேகமோ, ஆக்ஷேபனையோ சொல்லுவதற்குச் சிறிதும் இடமில்லாமல் செய்து கொள்ளப்பட்டிருப்பதைக் கவனித்தால் ஜாதியின் சூட்சித் தத்துவம் நன்றாய் விளங்கும். மற்றபடி க்ஷத்திரியர் களிலும் வைசியர்களிலும் இருக்கும் சண்டைகளும் ஆக்ஷேபனைகளும் க்ஷத்திரியர், வைசியர் என்று சொல்லிக் கொள்வதில் எவ்வித உயர்வு தத்துவமும் இல்லாமல் ஒருவருக்கொருவர் தங்களில் வீண் வழக்காடிக் கொண்டு பொது ஜனங்களாலும் ஒப்புக் கொள்ளப்படாமல் ஒருவரை ஒருவர் இழித்துரைத்து குறைவு படுத்திவருவதும் அநேக இடங்களில் பிரதிய க்ஷமாய் காண்கின்றோம். மற்றும் ஒவ்வொரு சாதியாரும் தங்கள் தங்கள் சாதிகளைப் பற்றிய எவ்வளவு மேன்மை ஆதாரங்கள் கற்பித்துக் கொண் டாலும், கண்டு பிடித்தாலும் எந்த விதத்திலும் பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்ளும்



பார்ப்பனர்களுக்கு மற்றவர்கள் எல்லாம் கீழ்பட்ட வர்கள்தான் என்பதை நிலை நிறுத்துவதற்கு மாத்திரம் அவ்வாதாரங்கள் பயன்படுகின்றனவே தவிர மற்றபடி எந்தக் கருத்தைக் கொண்டு கஷ்டப் பட்டு இவ்வித ஆதாரங்கள் கற்பிக்கப்பட்டதோ, கண்டுபிடிக்கப்பட்டதோ அவற்றிற்குச் சிறிதும் பயன்படுவதில்லை என்பதையும் பிரத்தியட்சத்தில் பார்க்கின்றோம்.

எனவே இந்த நிலையில் இன்று நமது நாட்டில் பார்ப்பான் ஒரு வனைத் தவிர மற்றவர்கள் தாழ்ந்த ஜாதியார்கள். அதாவது பார்ப்பனனால் தொடவும் சமபந்தி போஜனம் பண்ணவும் மற்றும் சில பொது உரிமைகள் பெறவும் கூடாத சாதியார்கள் என்பதும் அவனுக்கு அடிமையாகயிருக் கவும் ஒழுக்கத் தவறுதலால் அதாவது "விபசாரம்" "கீழ் மேல் ஜாதி கலப்பு" என்று சொல்லும் படியான "இழிதன்மை" யில் பிறந்தவர்கள் என்பதும், இன்றைய நம் ஜாதித் தத்துவமாயிருக்கின்றதை யாரும் மறுக்கமுடியாதென்று உறுதி கூறுவோம்.

மற்றபடி இவற்றிற்கு எவ்வித தத்துவார்த்தம் சொல்லுவதானாலும் அதை மூடர்கள் முன்னால் மாத்திரம் சொல்லிக் கொள்ளக்கூடுமே தவிர ஜாதிக்கும், ஜாதியை கற்பித்த மதத்திற்கும், இவ்விரண்டிற்கு ஆதாரமான வேதம், சாஸ்திரம், தர்மம் என்று சொல்லப்பட்ட ஆதார நூல்களில் இருக்கும் உண்மைகளுக்கும் எவ்வித ஆக்ஷேபனையும், எவ்வித தத்துவார்த்தமும் சொல்லமுடியாது என்பதையும் யாதொரு பதிலும் சொல்லாமல், பேசாமல் இழிவை ஒப்புக் கொண்டுதான் தீர வேண்டியதாகும் என்பதையும் கண்டிப் பாய்ச் சொல்லுவோம்.

இவை ஒருபுறமிருக்க இந்த ஜாதிக் கிரமத்தில் பார்ப்பனர்களைத் தவிர மற்றவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் யோக்கியதைகளையும், உரிமைகளையும் பார்ப்போமானால் கடுகளவு பகுத்தறிவோ, மானமோ இருக்கின்ற மனிதர்கள் ஒருக்காலமும் தங்கள் ஜாதிப் பேரை சொல்லிக் கொள்ள முடியாத படியும் அதை கனவிலும் நினைக்க முடியாதபடியும் இருப்பதை நன்றாய் உணரலாம். அதாவது "நாலாவது ஜாதியார்களாக சூத்திரர்கள் என்று சொல்லப்படும் வகுப்பாருக்கு பார்ப்பனர்கள் ஏற்படுத்தி இருக்கும் உரிமையானது எப்படி இருக்கின்றது" என்று பார்த்தால் இப் போது "பாரம்பரியமாய் குற்றம் புரியும் வகுப்பார்" (அதாவது கிரிமினல்ட் ரைப்ஸ்) என்று சொல்லக் கூடியவர்களுக்கு சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டி ருக்கின்ற நிர்ப்பந்தத்திற்கும் சட்டதிட்டங்களுக்கும் அவர்களை நடத்துகின்ற மாதிரிக்கும் சிறிது கூட குறைவில்லாமல் நடத்துகின்ற மாதிரியாகவே ஏற் படுத்தி இருக்கின்றார்கள். உதாரணமாக இரண்டொன்றைச் சொல்லுவோம்.

அதுவும் தர்ம சாஸ்திரங்கள் என்று சொல்லப்பட்ட சட்டங்களில் உள்ளதையே சொல்லுவோம்.

"ஸ்நாத மஸ்வம், கஜமத்தம்



RangaRakes tamilnavarasam.com

ரிஷபம் காம மோஹிதம்

**சூத்தரமக்ஷரசம்**

யுக்தம் தூரதப்

**பரிவர்ஜையேல்"**

அதாவது குளிப்பாட்டிய குதிரையையும் மதங் கொண்ட யானையையும் காமவிகாரம் கொண்ட காளை மாட்டையும் **எழுத்துத் தெரிந்த சூத்திரனையும்** பக்கத்தில் சேர்க்கக் கூடாது என்பது கருத்தாகும்.

"ஜப, ஸ்தப, தீர்த்தயாத்திர,

பிரவர்ஜ் ஜய, மந்தர சாதனம்

தேவதாரா தனம் சசய்வஸ்திரீ

**சூத்திர பத தானிஷள்"**

அதாவது ஜபம், தபசு, தீர்த்தயாத்திரை, சந்நியாசம், கடவுள் தோத்திரம், ஆராதனை இந்த காரியங்கள் பெண்களும் **சூத்திரர்களும்** ஒரு போதும் செய்யக் கூடாது என்பது கருத்தாகும்.

"நபடேல் சமஸ்கிருதம் வாணீம்"

(சூத்திரன்) சம்ஸ்கிருதம் படிக்கக் கூடாது என்பது கருத்தாகும்.

"நைவ சாஸ்திரம் படே நைவ
சுருணுயாத் வைதி காக்ஷரம்
நஸ்நாயாது தயால் பூர்வம்
தபோ மந்திரஞ் சுவர்ஜ்ஜயேல்"

(சூத்திரன்) சாஸ்திரம் படிக்கவோ, வேதத்தைக் கேட்கவோ ஒருக்காலும் கூடாது. அவன் சூரிய உதயத்திற்கு முன் குளிக்கவும், மந்திரம் ஜெபிக்கவும், தபசு செய்யவும் கண்டிப்பாய் கூடாது என்பது கருத்தாகும்.

"இதிஹாச புராணானி
நபடேச்ரோது மர்ஹசி"

இதிகாச புராணங்களும் கூட (சூத்திரர்கள்) **படிக்கக் கூடாது.** ஆனால் (பிராமணர்கள் படிக்க) காதால் கேட்கலாம்.

"சாதுர்வர்னியம்
மயாசிருஷ்டம்
பரிசரியாத் மகம்
கர்மம் சூத்ரஸ்ஸியாபி பாவனாம்" (கீதா ஸ்லோகம்)



நான்கு வர்ணங்களும் என்னால் சிருஷ்டிக்கப்பட்டவை. அவற்றுள் சூத்திரனுக்கு பிராம்மண சிசுரூஷைதான் தர்மம் என்பது கருத்து.

இது போல் ஆயிரக்கணக்காக எழுதிக் கொண்டே போகலாம். இவைகள் எல்லாம் தான் நமது ஜாதிமத ஆச்சார அனுஷ்டானங்களாக இருக்கப்பட வேண்டியவை என்று வேதங்கள், தர்ம சாஸ்திரங்கள் பகவான் வாக்குகள் என்று சொல்லப்படுபவைகளில் சொல்லப்பட்டவைகளாகும்.

எந்த காரணத்தாலோ இந்து மத தர்மத்தை அனுஷ்டித்துத் தீர வேண்டியதல்லாத ஒரு ஆக்ஷி இந்த நாட்டுக்கு ஏற்பட்டதின் பலனால் நம்மில் சிலராவது இந்த தர்மங்கள் முழுவதும் வலியுறுத்தப்படாமல் இருக்க முடிகின்றது. ஆனால் இந்த நிலையாலும் நாம் மறுபடி நமது ஜாதியையும் மதத்தையும் காப்பாற்றும் கவலைகொண்டு ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கென்று மதத்தையும், ஜாதியையும் சொல்லி, அவற்றை நிலை நிறுத்திக் கொண்டே போவோமானால் பின்னால் நமது நிலை என்ன ஆகும் என்பதை சற்று யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஏதோ "பொல்லாத விதிவசத்தினால்" இன்று ராம ராஜ்யத்தைக் கோரும் திரு. காந்தியாரும் வருணாசிரமத்தைக் கோரும் "தேசீய" தலைவர்களும் கேட்க்கும் சுயராஜியம் வந்துவிடுமேயானால் இன்று இம் மாதிரி ஜாதிகளைக் காப்பாற்றியவர்களின் கதி என்னவாகக் கூடும் என்பதையும் சற்று யோசித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

இந்துக்கள் என்பவர்களுக்குள் ஜாதிப் பிரிவு இருக்கும் வரை ஜாதி உயர்வு தாழ்வு வித்தியாசம் ஒருக்காலமும் போகவே போகாது என்பதை கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும்படி எச்சரிக்கை செய்கின்றோம்.

இன்றையதினம் தேசியவாதிகளாய் இருக்கின்றவர்கள் இந்தியா சுதந்திரம் அல்லது பூர்ண சுயேச்சை அடையவேண்டுமென்கின்ற உண்மையான ஆசையுடையவர்களாயிருப்பார்களானால் அவர்கள் வெள்ளைக்கார ஆக்ஷியிருக்கும் போதே ஜாதி வித்தியாசங்கள் எல்லாம் ஒழியும் படியான ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டியதுதான் அறிவுள்ள வேலையாகும். அதை விட்டு விட்டு முதலில் "நீ போய் விடு நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்" என்று சொன்னால் அது "தான் சாவதற்கு தானே மருந்து குடித்தது" போல்தான் ஆகுமே தவிர வேறொரு பயனும் தராது. ஏனெனில் இந்தியாவில் இந்துக்கள் என்பவர்களில் 1000க்கு 999 பேருக்கு குறையாமல் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க வேண்டும் என்கின்ற எண்ணமில்லாதவர் களாய் இருப்பதோடு ஒவ்வொருவரும் மேல்ஜாதி ஆகவேண்டும் என்று ஆசைப்படுவதும் தனக்கு கீழ் பல ஜாதிகள் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுவதுமான உணர்ச்சி உள்ளவர்களாகவே இருக்கின்றார்கள். இந்த



RangaRakes tamilnavarasam.com

நிலையில் இன்றையதினம் இருக்கும் பல சவுகரியங்களை ஒழித்துவிட்டு வருணாச்சிரம கொள்கையும், ஜாதி ஆதிக்கத் திமிரும் உடையவர்களான மக்களிடம் ஆக்ஷியும் பிரதிநிதித்துவமும் வந்து விட்டால் பிறகு எந்த விதத்தில் ஜாதிக் கொடுமைகளும், அதனால் ஏற்படும் தொல்லைகளும் ஒழியக்கூடும் என்பதையோசித்தால் அதன் கெடுதி விளங்காமல் போகாது.

இந்தியர்களுக்குள் ஜாதி வித்தியாசம் உயர்வு தாழ்வு கொடுமைகள் ஆகியவைகள் இல்லாதிருந்திருக்குமானால் இந்தியா ஒரு நாளும் அன்னியர் ஆக்ஷிக்கோ அடிமைத் தனத்திற்கோ, அடிமையாகி இருக்கவோ முடியவே முடியாது. ஆனால் "அம்பட்கார்களையும், ஜின்னாக்களையும், ராமசாமி முதலியார்களையும், ராதாபாய்களையும் ஏதாவது ஆசைக்காட்டி ஏமாற்றி தாங்கள் அனுபவிக்கும் கொடுமைகளையும், இழிவுகளையும் மறைக்க வைத்து "எங்கள் நாட்டு ஜாதி உயர்வு தாழ்வு விஷயமும் ஒருவரை ஒருவர் அடக்கி ஆண்டு இழிவு படுத்தும் சமூகக் கொடுமை விஷயமும் நாங்கள் எப்படியோ சரிபடுத்திக் கொள்ளுகிறோம். இப்பொழுது நீங்கள் போங்கள்" என்று சொல்லச் செய்து விடலாம். ஆனாலும் நமக்குள் இருக்கும் இழிவுகளில் நம்மால் கூடுமானதை யெல்லாம் நாம் ஒழித்து ஒற்றுமைப்பட்டு பின் அயலானை வெளியில் போகச் சொல்லலாம் என்று கருதியும் நடவாததின் பயனாய் ஏற்படும் அதாவது இன்றையதினம் உள்ள இழிவையும் கொடுமையையும், அடிமைத்தனத்தையும் அடையாமல் ஏமாற்றித் தப்பித்துக் கொள்ள முடியாது என்பதை மாத்திரம் கல்லின் மேல் எழுதி வைப்போம்.

ஆகவே எப்படியாவது ஜாதிப் பிரிவையும் அதற்கு ஆதாரமான மதத்தையும் ஒழிக்க முயற்சி செய்யுங்கள் என்றும் அதற்கு ஆரம்பவிழா செய்ய அடுத்து வரும் சென்சஸ் ஒரு சரியான சந்தர்ப்பம் என்றும் அதில் காணப்பட்ட ஜாதியையும் மதத்தையும் தெரிவிக்காதீர்கள் என்றும் தெரி வித்துக் கொண்டு இதை முடிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 30.11.1930**



RangaRakes

# கார்த்திகை தீபம்

கார்த்திகை தீபம் என்ற பண்டிகை வரப்போகின்றது. இதற்காக அருணாசலமென்னும் திருவண்ணாமலை முதலிய பல ஊர்களில் பெரும் பெரும் உற்சவங்கள் நடைபெறும். அதற்காக பதினாயிரக்கணக்கான மக்கள் யாத்திரை போவார்கள்.

இது மாத்திரமல்லாமல் பல பல குடங்கள் நெய்களை டின் டின்னாய் கல் பூரத்தைக் கலந்து நெருப்பில் கொட்டி எறிப்பார்கள். சில இடங்களில் கட்டைகளை அடுக்கி அல்லது தட்டுகளை போராகப் போட்டு நெருப்பு வைத்து சட்டிசட்டியாக வெண்ணைகளை அந்த நெருப்பில் கொட்டு வார்கள்.

இவைகள் தவிர வீடுகளிலும், கோவில்களிலும் 10, 50, 100, 1000, 10000, 100000 என்கின்ற கணக்கில் விளக்குகள் போட்டு நெய், தேங்காய் எண்ணை, நல்ல எண்ணை, இலுப்பை எண்ணை முதலியவைகளை ஊற்றியும், எள்ளுப் பொட்டணம், பருத்திவிதைப் பொட்டணம் ஆகியவைகளை கட்டியும், பெரும் பெரும் திரிகள்போட்டும் விளக்குகள் எரிப்பார்கள். இந்த சடங்குகள் செய்வதே மேற்படி பண்டிகையின் முக்கிய சடங்காகும்.

ஆகவே இந்தச் சடங்குகளுக்கு எத்தனை லக்ஷம் ரூபாய் செலவு என்பதையும் இதற்காக செல்லும் மக்களின் ரயில் செலவு, மற்ற வீண் செலவு, நேரச்செலவு ஆகியவைகளால் எத்தனை லக்ஷம் ரூபாய் செலவாகும் என்பதையும் கவனித்துப் பார்த்து பிறகு இப்படிப்பட்ட இந்த பெருந் துகைச்செலவில் நாட்டுக்கோ, மக்களுக்கோ, அல்லது மதத்திற்கோ, மக்களின் அறிவிற்கோ, சுகாதாரத்திற்கோ அல்லது வேறு எதற்காவது ஒரு அம்மன் காசு பொருமான பிரயோஜனமாவதுமுண்டா என்பதையும் யோசித்துப் பார்த்தால் நமது மக்களின் பாரம்பரியமான முட்டாள் தனம் விளங்காமற்போகாது. அர்த்தமற்ற தன்மையில் நமது செல்வம் கொள்ளை போகின்றதே, கொள்ளை போகின்றதே என்று கூச்சல் போடுகின்றோம். ஜவுளிக்கடையில் போய் மரியல் செய்து ஜெயிலுக்குப் போவதைப் பெரிய தேசபக்தியாய்க் கருதுகிறோம். ஆனால் இந்த மாதிரி நமது செல்வம் நாசம் போவதைப் பற்றி நமக்கு சிறிதும் கவலையில்லை. அதைப் பற்றி நினைப் பதுமில்லை. அதைப் பற்றிப் பேசுவதே மதத்துரோகமாகவும், நாஸ்திக மாகவும்



tamilnavarasam.com

சொல்லப்படுகின்றது. இம்மாதிரி செல்வம் நாசமாவதை விட்டுக் கொண்டு வருவதால் எத்தனை பத்து லக்ஷக்கணக்கான மக்கள் தலைமுறை தலைமுறையாக முட்டாள்களாகிக் கொண்டு வருகின்றார்கள் என்பதை நாம் கவனிப்பதில்லை.

ஆகவே ஆங்காங்குள்ள சுயமரியாதைத் தொண்டர்கள் இதை கவனித்து இம்மாதிரியான மூடத்தனங்களும், நாசகார வேலைகளும் சிறிதாவது குறையும்படியாக வேலை செய்வார்களானால் அது மற்ற எல்லா முயற்சிகளையும் விட எத்தனையோ மடங்கு பயன் தரக்கூடியதும் பல வழி களிலும் அவசியமானதுமான முயர்ச்சிகளாகும் என்பதை ஞாபக மூட்டுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 30.11.1930**



# கரூரில் சுயமரியாதைப் பிரசாரம்

கரூர் முனிசிபல் சேர்மென் அவர்களே! வைஸ் சேர்மென் அவர்களே! முனிசிபல் கவுன்சிலர் அவர்களே!! கரூர் நகர மகாஜனங்களே!!!

இன்று நீங்கள் இவ்வளவு ஆடம்பரத்துடன் வாசித்துக் கொடுத்த உபசாரப் பத்திரிகைக்கும் மற்றும் நீங்கள் ஏற்பாடு செய்திருக்கிற வரவேற்புக் கொண்டாட்டத்திற்கும் நான் சிறிதும் தகுதியுடையேன் அல்ல என்பது எனக்குத் தெரிந்திருந்தாலும், நீங்கள் உங்களுடைய அபிமானத்தையும், ஆமோதிப்பையும் கொண்ட ஒரு தொண்டனுக்கு நீங்கள் காட்ட வேண்டிய ஒரு அதிகமான அன்பையும் மரியாதையுமே பொருத்தமற்ற என் விஷயத் தில் காட்டியிருக்கின்றீர்கள் என்றே நான் கருதுகிறேன். ஆக இந்த அன் பையும் மரியாதையும் எனக்கு என்றோ அல்லது எனது தொண்டுக்கென்றோ கருதாமல் எனது கொள்கைக்கென்றே கருதுகிறேன். இதற்கு உதாரணம் என்ன வெனில் உங்கள் உபசாரப் பத்திரத்தில் கண்டிருக்கும் வாக்கியங் களேயாகும். ஆகவே அதற்காக என் என்றும் மறவாத நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கனவான்களே! இன்று இந்திய நாட்டின் பல பாகங்களிலும் தேச விடுதலையின் பேரால் ஒருவித கிளர்ச்சிகள் நடந்து கொண்டிருக்கும் போது நான் மனித சமூக விடுதலைக் கென்று ஒரு தனி வழியில் சென்று கொண்டி ருப்பதை நீங்கள் பாராட்டிப் புகழ்ந்திருப்பது எனக்கு மேலும் மேலும் ஊக்கத்தையும் உறுதியையும் கொடுக்கக் கூடியதாயிருக்கின்றது.

ஏனெனில் சிற்சில சமயங்களில் எனது தொண்டிற்கு ஏற்படும் எதிர்ப்புகளையும், பழிப்புகளையும் கண்டு நிதானித்து அயர்கின்ற சந்தர்ப் பங்களிலெல்லாம் உங்கள் போன்ற பொது ஜனங்களுடையவும், பொது ஜனப் பிரதிநிதிகள் என்பவர்களுடையவும் ஆமோதிப்பும் அன்பும் அனு கூலமாயிருப்பது அவ்வயர்வையும், நிதானிப்பையும் மாற்றி விடுகின்றது.

இது போது சமூக சமத்துவத் தொண்டே வேண்டற்பாலது என்கின்ற குறிப்பை நீங்கள் எடுத்துக் காட்டியது போலவே நானும் எனது 10, 20 வருஷத்திய பொது சேவையின் பலனாய் கண்டு பிடித்த ஒரு உண்மை



RangaRakes tamilnavarasam.com

யாகும். நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால், விடுதலை பெற வேண்டுமானால், ஒற்றுமையான லக்ஷியமும் ஒன்றுபட்ட அபிப்பிராயமும் வேண்டும். ஆகவே அதற்காக பாடுபடுவது தான் நாட்டு விடுதலை முயற்சி என்று நான் கருதுகிறேன்.

ஏனெனில் சரித்திர காலம் தொட்டே-புராணக்கதைகளின் கற்பனைக் காலந்தொட்டே இந்நாடு மடமையிலும் அடிமைத் தனத்திலும் ஆழ்த்தப் பட்டிருப்பதை உணர்ந்தவர்களுக்கு இப்போது நடைபெறும் சமூகத் தொண்டின் பெருமையும் அவசியமும் தானாக விளங்கும். ஆகவே இது விஷயங்களைப் பற்றிய விரிவுரைகளை இவ்வூர் பிரபல கனவான்கள் ஏற்பாடு செய்திருக்கும் வெளிப்பொதுக் கூட்டத்தில் நிகழ்த்தலாம் எனக் கருதி இத்துடன் நிறுத்தி விட்டு முனிசிபல் நிருவாக சம்பந்த விஷயமாக சில வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று நீங்கள் உங்கள் உபசாரப் பத்திரத் தில் கேட்டிருக்கின்ற படி அதைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லுகிறேன்.

நீங்கள் குறிப்பிட்டபடி நான் ஈரோடு முனிசிபல் சேர்மெனாயிருந் திருந்தாலும் சொர்ப்ப காலமாகிய இரண்டு வருஷ காலமே இருந்திருக் கிறேன். அதுவும் எனக்குப் பிடிக்காமல் நான் ராஜீனாமா செய்து விட்டு வந்தவன். அன்றியும் இன்றைய நிலைமை வேறு. ஆகவே நான் நிர்வாகத் தில் இருந்த கால சுவல்ப அனுபவத்தையும் வெளியில் வந்த பிறகு அறிந்த சில அனுபவத்தையும் அதைப்பற்றிய என் சொந்த அபிப்பிராயத்தையும் பற்றி ஏதோ சில வார்த்தைகள் சொல்லுகிறேன். அந்தப்படி நான் எடுத்துச் சொல்லும் விஷயங்களில் சிலது பச்சை உண்மையாகக் கூட இருக்குமாத லால் சிலருக்கு அது மன வருத்தமாயிருந்தாலும் இருக்கலாம். ஆன போதிலும் நம்நாட்டு விஷயங்களைச் சகோதரர்களாகிய நாம் நமக்குள் பேசிக் கொள்வது நமது நடப்புக்குப் பெரிதும் அனுகூலமாயிருக்குமே தவிர அதனால் எவ்விதக் கெடுதியும் ஏற்பட்டு விடாதாதலால் நான் அதற்காக கவலைப்படவில்லை.

நண்பர்களே! முனிசிபாலிட்டி, தாலூகா போர்டு, ஜில்லா போர்டுகள் என்பது நம் நாட்டு மக்களின் சுகாதாரம், போக்குவரத்து வசதி, வாழ்க்கை சௌகரியம், கல்வி முதலிய ஒரு சிறு நன்மையான விஷயங்களின் பொறுப்பு களை அரசாங்கத்தார் குடி ஜனங்களாகிய நம்மிடமே ஒப்புவித்து நடத்திக் கொண்டு போகும்படி செய்திருக்கும் காரியங்களின் ஸ்தாபனங் களாகும். இவற்றை நாட்டு நடப்பு மொழியில் சொல்லுவதானால் குடிமக்கள் பஞ்சாயத்து நிர்வாகம் என்று சொல்லலாம். இதை நாம் ஒழுங்காக நிர்வாகம் செய்யத் தெரிந்து கொண்டோமானால் நமக்கு மேற்பட்ட ஒரு அரசாட்சியே தேவையில்லாத சமதர்ம பஞ்சாயித்து ஆட்சியை நாமே நடத்திக் கொண்டு போகக் கூடிய நிலைமை அடையலாம். அவ்வாட்சியில் மேல் ஜாதி, கீழ் ஜாதி, ஏழை பணக்காரன், அரசன் குடிகள் என்கின்ற வித்தி யாசக் கொடுமைகள்



இல்லாமல் எல்லோரும் சமமான மனிதர்களே என்கின்ற கொள்கைதான் தலைசிறந்து விளங்கும்., அப்படிப்பட்ட ஆட்சிதான் மனித சமூகத்திற்கு சாந்தியைக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

ஆகையால் இன்று நம் வசமிருக்கும் முனிசிபாலிட்டி முதலிய பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மேல் குறிப்பிட்ட சுகாதாரம், போக்குவரவு சாதனம், வாழ்க்கை சௌகரியம், கல்வி முதலியவைகளுக்கு மாத்திரம் ஏற்பட்டது என்பது மாறி நீதி, குற்றவிசாரணை, நிர்வாகம், ராணுவம் ஆகிய விஷயங்களும், இப்பஞ்சாயத்துகளின் மூலமாகவே நடத்த நாம் முயற்சித்து வெற்றி பெற வேண்டும். அதுதான் நமது பஞ்சாயத்து ஆட்சியின் முடிவான லட்சியமாயிருக்க வேண்டும். அதற்குத் தயாராவதற்கே, இன்றைய தினம் நம் கைவசமிருக்கும் பஞ்சாயத்துகளை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் அக்காரியத்தை சுலபமான காரியம் என்று கருதிவிடக் கூடாது. அதற்கு அநேக கஷ்டப்படவேண்டும் என்பதோடு குறிப்பாய் நமது நாட்டில் அதிகக் கஷ்டமாயிருக்கும். ஏனெனில் இங்கு மற்ற நாடு களைப் போல பணக்காரன், எளியவன், வலுத்தவன், இளைத்தவன் என்கின்ற கொடுமை மாத்திரமில்லாமல் மேல் ஜாதி கீழ் ஜாதி என்ற பிறவி காரணமுமி ருக்கின்றது. இது எந்த நாட்டிலுமில்லாதது என்பதோடு இங்கு மிக்க மோச மான நிலையிலிருந்து கொண்டு எல்லாப் பொதுக் காரியத்தையும் எவ்வித முன்னேற்றமுமடையாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது. முன்னேற்றமடைந் துள்ள நாடுகள் என்பவை இவ்வித வித்தியாசங்கள் ஒழிந்தவைகளே யாகும். இந்த நாட்டு ஸ்தல ஸ்தாபன பஞ்சாயத்து ஆட்சிக்கு இந்த ஜாதி உயர்வு தாழ்வுகளே இன்று பல வழிகளில் தொல்லை விளைவிப்பதாக இருந்து வரு கின்றது. அதோடு மக்களின் மூட நம்பிக்கை முதலிய பல மடமைகளும் நமது நாட்டு நிர்வாகத்தை நல்வழிப்படுத்தி சமதர்மமடையத் தடைகல்லா யிருக்கின்றது. ஆகவே இவையிரண்டும் இப்போது முதல் முதலாக ஒழிக்கப் பட வேண்டும். பொதுவாக இன்றைய பஞ்சாயத்துக்கள் பெரிதும் சீர்கேடா கவே இருக்கின்றன.

முதலாவது பஞ்சாயித்து அமைப்பு முறைகளும் அதன் தேர்தல் எலக்ஷன் முறைகளும் அரசாங்கத்தின் பேரால் பஞ்சாயத்து ஸ்தாபனங் களின் மீது ஆட்சி செய்யும் முறைகளும் மிக்க கேவலமாக இருக்கின்ற வென்றே சொல்ல வேண்டியிருப்பதற்கு வருந்துகிறேன். அதிலும் எனக்கு சற்று அனுபவமுள்ள நமது மாகாணத்தைப் பொருத்தவரை இங்கு ஸ்தல ஸ்தாபன ஆட்சியென்பது ஒரு பஞ்சாயித்துப் பொது நல நிர்வாக ஆட்சி என்று சொல்வதற்கில்லாமல், கூட்டு வியாபார ஆட்சியென்றே சொல்ல வேண்டும். இதிலுள்ள ஓட்டர்கள், அபேட்சகர்கள், அங்கத்தினர்கள், தலைவர்கள் நிர்வாக மந்திரிகள் வரை ஒரே யோக்கியதை அதாவது சுயநலமே முக்கிய லட்சியமாயல்லாமல் பஞ்சாயித்தின் உண்மைத் தத்து வத்தை அறிந்து அதற்கு மரியாதை கொடுப்பவர்கள் மிக்க அபுரூபமாகவே



RangaRakes
tamilnavarasam.com

காணப்படுகின்றார்கள். பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் கடமை என்ன? எப்படிப்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்? யார் தலைவர்களா யிருக்க வேண்டும் முதலிய விஷயங்கள் மக்களுக்கு கற்பிக்கப்படவே யில்லை. அதற்கு இங்கு எவ்வித பள்ளிக் கூடமுமில்லை. எவ்வித யோக் கியர் பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்கு வந்தாலும் கடமை என்ன என்பதை அறிவதற்கு ஜனங்கள் விடுவதேயில்லை. சுய நலமும் கவுரவமும் தான் கடமையென்பதையே கற்றுக் கொள்ளக் கட்டாயப் படுத்தப்படுகிறார்கள். இன்றைய தினம் கௌரவத்திற்கும், கீர்த்திக்கும் தான் ஸ்தல ஸ்தாபனப் பதவி என்பது ஆக்ஷேபிக்க முடியாத உண்மையாயிருக்கிறது. இந்த லக்ஷனத்தில் தேர்தல் முறைகளோ மிக்க ஆபாசமானது. இப்படிச் சொல்லுவதற்காக நீங்கள் வருத்தப்படக் கூடாது.

உதாரணம் வேண்டுமானால் சொல்லுகிறேன். ஒன்று நம் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்கள் அநேகம் கோர்ட்டுக்குப் போவது. இரண்டு ஸ்தல ஸ்தாபனத் தலைவர்களுக்கு இருந்த அதிகாரங்களை அரசாங்கத்தார் பிடுங்கி அதிகாரிகளுக்கும் கொடுத்து விட்டது. மூன்று பணம் காசு புளக்கம் வெளிப்படையாயும் தாராளமாயும் ஏற்பட்டு விட்டது. இன்னும் என்ன உதாரணம் வேண்டுமென்பீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. நமது ஓட்டர்களுக்கு, பிரதிநிதிகளுக்கு வேண்டிய யோக்கியதைகள் என்ன என்பதே தெரியாது. சுய நல லட்சியம் கொண்ட பிரதிநிதிகளே தெரிந்தெடுக் கப்படுகின்றார்கள். கடமை உணர்ந்தவர்களையோ, போதிய சாவகாச மிருப் பவர்களையோ, பொது நலத்திற்கு நாணயமாயுழைக்க சக்தியும், சௌகரி யமும், அறிவும், ஆசையும் கொண்டவர்கள் தெரிந்தெடுக்கப்பட முடிவதே யில்லை. சிறு மீன் போட்டு பெருமீன் எடுக்கக் கூடியவர்கள் தான் தெரிந் தெடுக்கப்பட முடிகின்றது. பொறுப்பை உணர்ந்த பிரதிநிதிகளும் இல்லை. பொருப்பை வலியுருத்தி உணர்த்தும் ஓட்டர்களும் இல்லை. இந்த நிலை யிலுள்ள மக்களைக் கொண்ட எந்த ஸ்தாபனந்தான் என்ன செய்யும்.

இந்த லட்சணத்தில் ஜாதிச் சண்டையும் கட்சிச் சண்டையும் கலந்து கொண்டால் பிறகு சொல்லவும் வேண்டுமா? நான் கீழே உள்ளவர்களை மாத்திரம் குற்றம் சொல்லவில்லை, மேலே உள்ள நிர்வாக அதிகாரிகள் மந்திரிகள் ஆகியவர்களே இந்த மோசமான நிலையை வளர்ப்பவர் களா யிருக்கின்றார்கள். ஏனெனில் அவர்களும் நாணயமாய் நடந்து கொள்ள முடியாத நிலைமையில் அப்பதவிகளை அடைபவர்களாய் இருக்கின் றார்கள். அவர்கள் அப்பதவியில் இருக்க வேண்டுமானால் கீழே நடக்கும் அக்கிரமங்களை ஆதரித்து அநீதியாய் நடந்து கொண்டால் தான் முடியும் படியாய் அந்தப் பதவிகள் அமைக்கப்பட்டுவிட்டன. 20, 30 வருஷ கால மாய் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிகமான சுதந்திரங்கள் அளிக்கப்பட்ட தாகச் சொல்லப்பட்டாலும் முன் இருந்த நாணயமும் நல்ல ஆட்சியும் இப்பொழுதிருக்க முடிவதில்லை. இந்தக் காரணங்களால் சில சுதந்திரங்கள்



பிடுங்கப்படுவதும் நம்பிக்கையில்லை தீர்மானங்கள் பேரால் பல நிர்பந் தங்களும் அவநம்பிக்கைகளும் பாதுகாப்புகளும் ஏற்படுத்த வேண்டிய தாய் விட்டது. இன்னும் சில சுதந்திரங்கள் பரித்துக் கொள்ளவும் முயற்சிக் கப்பட்டது. ஆனால் அச்சுதந்திரங்களை அனுபவித்து அதனால் நன்மை அடைகின்றவர்களே ஜட்ஜிகளாயிருந்ததினால் அது சற்று சாத்தியப்படாது போயிற்று. அதாவது ஸ்தல ஸ்தாபன தலைவர்களின் நிர்வாக அதிகாரத்தை பரித்து விடுவது என்பது. ஆனால் அது ஏதாவது ஒரு காலத்துக்கு நடந்து தான் தீரும். இன்றைய நிலைமையில் நானும் கூட அந்த சுதந்திரங்களை தலைவர்களிடமிருந்து பரித்து அங்கத்தினர்களுடைய தாட்சண்ணியத் திற்கும், நிர்பந்தத்திற்கும் உட்படாத ஒரு நிர்வாக அதிகாரியிடம் ஒப்ப டைக்க வேண்டுமென்றுதான் விரும்பினேன், விரும்பு கிறேன்.

ஸ்தல ஸ்தாபனங்கள் இன்று வக்கீல்கள் கட்சிக்காரர்களை சம்பாதிப் பதற்கும், பணக்காரர்கள் சட்டசபைக்குப் போவதற்கும், கிராமத்து மிராசு தாரர்கள் விவசாயத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும், ஒரு முதல் படிக் கட்டா யிருக்கின்றன. அது மாறியாக வேண்டும். பொருப்பை உணர் கின்றவர்கள் வர வேண்டும். ஒரு 5 வருஷ காலமாவது ஒருவன் நிர்பய மாய்ப் பொது நன்மைக்குத் தாக்ஷண்ணியமில்லாமல் உழைக்கத்தக்க மாதிரி யில் இருக்க வேண்டும். அவர்களுக்கு ஸ்தல ஸ்தாபன விஷய அனு போகங்கள் இருக்க வேண்டும்.

தவிர சுகாதார விஷயம் முக்கியமாய்க் கவனிக்கப்படவேண்டும். பொது ஜனங்களுக்கும் சுகாதாரம் வாழ்க்கையில், நடைமுறையில் கொண்டு வரும் மாதிரியில் கற்பிக்கப்பட வேண்டும். இப்பொழுது ஜனங்களுக்குப் பெரிதும் சுகாதார அறிவே சூனியமாயிருக்கின்றது. தன் தன் வீட்டு குப் பையை அடுத்த வீட்டுக்குப் பக்கத்தில் கொட்டிவிடுகிறான். இந்த முறையில் எல்லா வீட்டுக்குப் பக்கத்திலும் குப்பைகள் நிறைந்து கிடக்கின்றது. ரோட்டின் இருமருங்கும் கக்கூசுகளாகவே பாவிக்கப்படுகின்றன. இதைப் பற்றி சேர்மென் கவனித்தால் கவுன்சிலர்கள் நிஷ்டூரப்படுகிறார்கள். கவுன் சிலர்கள் கவனித்தால் ஓட்டர்கள் கோபித்துக் கொள்ளுகிறார்கள். சேனிடரி சிப்பந்திகளுக்குச் சம்பளம் தாராளமாய் கொடுப்பதைத் தவிர அதிகாரம் நடத்த தாராளமாய் இடம் கொடுப்பதில்லை. பிறகு காரியம் எப்படியிருக்கு மென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆகவே இந்த அதிகாரமும் பறிக்கப்படவேண்டியது தான் என்று சொல்ல வேண்டி வருமோ என்று பயப்படுகிறேன். முதலில் சுகாதாரமும், பின்னது படிப்பாக வும் தான் ஸ்தல ஸ்தாபனங்கள் கவனிக்க வேண்டும். ரோட்டுப் போக்குவரத்தும் சாதனம் வேலை செய்வது சர்க்காருக்கே விட்டுவிட வேண்டும். சர்க்காரிடம் கண் டித்து வேலைவாங்க ஜனங்கள் பழக வேண்டும். பொருப்புகளையெல்லாம் நம்ம தலையில் போட்டுக் கொள்வதில் பயனில்லை. இன்னின்ன சாதனம் வேண்டுமென்று தீர்மானிக்கும் வேலை நம்முடையதாகவும், நடத்திக்



RangaRakes
tamilnavarasam.com

கொடுக்கும் வேலை சர்க்காருடையதாகவும் இருக்க வேண்டும். ஆனால் இப்போது அநேகமாய் சர்க்கார் நிர்ணயிக்கும் வேலை களை நாம் நடத்திக் கொடுக்கின்றோம். இந்த குற்ற இரகசியம் நாம் அறியவில்லை.

நிற்க, இப்போது நாமினேஷன்களே ஒழிந்து எல்லா ஸ்தானங்களும் எலக்ஷனானதை நான் ஒரு விஷயத்திற்காக சந்தோஷப்படுகிறேன். எதற்காக என்றால் பணக்காரன் பணம் சற்றாவது ஏழைகளுக்கு (ஓட்டர் களுக்கு) பங்கிப் போகின்றது என்பதற்காகத்தான். இதைத் தவிர மற்றபடி இதனால் இன்றைக்கு வேறு அதிகமான நன்மைகள் ஒன்றும் ஏற்பட்டு விடாது.

( தொடர்ச்சி 21.12.1930 குடி அரசு இதழ் )

*குறிப்பு : 28.11.1930 இல் கரூர் முனிசிபல் உபசாரப் பத்திரத்திற்கு பதில் அளித்து ஆற்றிய உரை*

**குடி அரசு - சொற்பொழிவு - 07.12.1930**



RangaRakes

# தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்

## கோட்டை விட்டாய் விட்டது

தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் இம்மாதம் முதல் தேதியில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தேர்தலில் அபேட்சகராக நிற்க உத்தேசித்திருந்தவர்கள் திருவாளர்கள் வாண்டையார், சாமியப்ப முதலியார், நாடிமுத்துப்பிள்ளை, மருதவனம்பிள்ளை, இராஜப்பா போன்ற பார்ப்பன ரல்லாதார்களும் 1000, 2000, 3000, 5000 ஏக்கர் நஞ்சை பூமியும், 10 லக்ஷம் 20 லக்ஷம் சொத்தும் பெருமானமுடையவர்களான பிரபுக்களுமாவார்கள். இப்படியிருந்த போதிலும் இவர்கள் எல்லோரும் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றங்களுக்கு என்று ஏற்பட்ட கிளர்ச்சியின் பயனாகவே மனிதர்கள் என்று வெளியானவர்கள். இந்தக் கனவான்கள் தாங்கள் தான் பார்ப்பன ரல்லாத சமூகத்திற்குப் பிரதிநிதியாய் இருக்கத் தகுந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு பொது வாழ்வில் இரங்கி பல கௌரவ ஸ்தானம் பெற்றவர்கள். இப்படிப்பட்ட இவர்கள் பார்ப்பனரல்லாதாரியக்கம், அதாவது சமதர்ம இயக்கத்தின் பெயரால் பதவி, பட்டம், அதிகாரம் சில விஷயங்களில் பணம் முதலியவைகளும் கூட்டுக் கொள்ளை போல் அடைந்தவர்கள். இப்படி யெல்லாம் இருந்தும் இவர்களுக்கு இந்தப் பதவிகள் கிடைத்தவுடன் யாருக்காக, யாரால் அடைந்தோமென்ற நன்றியறிதல் குணமும் நாணயமும் சற்றுமில்லாமல் இந்தப் பதவிகளும், பட்டமும், அதிகாரமும், பணமும் தங்கள் சொந்தத்திற்காகவே தங்கள் சொந்த முயற்சியாலேயே அடைந்ததாக சுயநலப்பித்துக் கொண்டு எல்லாக் கொள்கைகளையும் மறந்து தம் சொந்தப் பெரியவர்கள் வீட்டுச் சொத்து போல் பாவித்து ஒருவருக்கொருவர் சொந்தத் தில் சுயநலமே கொண்டு கொள்கையேயில்லாமல் சண்டை போட்டு அடி யோடு கோட்டையை விட்டு விட்டு பழைய குருடி கதவைத்திரடி என்கின்ற யோக்கியதையில் “சூத்திரர்” நிலைக்கே அதாவது பார்ப்பனர்களுக்கு அடிமையாயிருக்கவே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்கின்ற தன்மைக்கே வந்து விட்டார்கள். இன்றைய தினம் தஞ்சை ஜில்லா நிலைமை பழையபடி “பிராமண” ஆதிக்கத்திற்குப் போய்விட்டது. பார்ப்பனரல்லா தார் பிரதிநிதிகள் என்று சொல்லி அதிகாரம் பெற்ற பிரபுக்கள் தங்கள் அதிகாரப் பெருமையைச் செங்கற்பட்டு தீர்மானங்களை மறுத்து தாலூகா போர்டில்



tamilnavarasam.com

தீர்மானம் செய்ய ஒரு கூட்டமும், சுயமரியாதை இயக்கத்தை எதிர்த்து சைவப்பிரசாரம் செய்ய மற்றொரு கூட்டமும், சுயமரியாதை இயக்கங்களில் கலந்துள்ள உபாத்தியாயர்களை மாற்றவும், தண்டிக்கவும், நீக்கவும் ஒரு கூட்டமும், எது எக்கேடு கெட்டாலும் 'பகவான் கிருஷ்ண னைப்போல்' லீலை நடத்திக் கொண்டிருக்க ஒருகூட்டமும், மற்றும் சில கூட்டம் மற்றும் சில சில வேலைகளை செய்து கொண்டு அடியோடு கோட் டையை விட்டு விட்டார்கள். இதிலிருந்து பார்ப்பனரல்லாதாயிருந்தாலும், பணக்காரர்களாயிருந்தால் அவர்கள் பொதுஜன பிரதிநிதியாக லாயக்கற்ற வர்கள் என்றும் இந்த மாதிரி பணக்காரர்களை அழித்தா லொழிய பார்ப்பன ரல்லாதாரியக்கம் - சமதர்ம இயக்கம் உருப்படி ஆகாது என்பதுமான எண்ணம் வலுக்கவே இடம் கொடுத்து வருகிறது. என்ன சுயராஜ்யம் வந்தாலும் என்ன குடியேற்ற ஆட்சி வந்தாலும், என்ன பூரண சுயேச்சை வந்தாலும் இந்தக் கூட்டங்கள் தான் பங்கு போட்டுக் கொண்டு இந்தப்படி சந்தி சிரிக்க மானங்கெட்டுத்திரிய முடியுமே ஒழிய கஷ்டப் படுகின்ற தாழ்த்தப்பட்டு மிதிபட்டுக் கிடக்கின்ற இந்திய மக்களாகிய 100க்கு 95பேர்கள் கொண்ட மனித சமூகத்திற்கு ஒரு பயனும் உண்டாகப் போவ தில்லை என்பது உறுதியென்றே தோன்றுகின்றது. நினைத்தால் மனம் பதருகின்றது. கும்பகோணம் சேர்மென் ஒரு அய்யங்கார், கும்பகோணம் தாலூகா போர்டு பிரசிடெண்ட் ஒரு அய்யங்கார். பாபனாசம் தாலூகா போர்டு பிரசிடெண்ட் ஒரு அய்யர். மன்னார்குடி தாலூகா போர்டு பிரசி டெண்டு ஒரு அய்யர். கடைசியாக தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் ஒரு அய்யர். அதுவும் ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர். தஞ்சை தாலூகா போர்டு தலைவர், தாலுகா போர்டு மெம்பர் பதவிக்குக் கூட தேர்தலில் தோற்றுப் போகத்தக்க செல்வாக்கு உடைத்தானவர்.

இதுபோலவே இனி மற்றதுகளும் ஆட்டத்தில் இருக்கின்றன. ஆட்டத்தில் இல்லாவிட்டாலும் 'சூத்திரர்களாய்' அதாவது பார்ப்பன அடிமைகளாய் இருக்க வேண்டியவர்கள். ஏன் சற்றேரக்குறைய அந்தப் படியே இருக்கிறார்கள் என்று சொல்லத்தக்கவர்களை விட வேறில்லை என்று சொல்லப்படவேண்டியவர்களாக இருக்கின்றவர்கள். இந்த நிலை தஞ்சை ஜில்லாவுக்கு வந்து சேர வேண்டிய காரணமே தஞ்சைப் பிரபுக்கள் மாஜி மந்திரி திரு. முத்தையா முதலியாரை ஒழிக்கவேண்டும் என்று ஆரம்பித்த சூட்சியே இந்த கதிக்குக் காரணமாகும்.

அதில் தஞ்சை பிரபுக்கள் வெற்றி பெற்றார்கள். ஆனால் அதனால் அவர்கள் 'சற்சூத்திரர்'கள் பதவிக்கு வந்துவிட்டார்கள்.

இது அந்த ஜில்லா பார்ப்பனரல்லாத மக்களுக்கு ஏற்பட்ட ஆபத்தே யொழிய போட்டி போட்ட பிரபுக்களுக்கு ஒன்றும் மூழ்கிப் போகவில்லை. பார்ப்பனரல்லாத பாமர ஜனங்களுக்கு இந்தக் கதி நேரவேண்டியதும் ஒரு



விதத்தில் கிரமம்தான். ஏனெனில் அவர்களுக்கு பணக்காரர்களிடத்தில் இருக்கும் பக்தியும், மரியாதையும் என்றைக்கிருந்தாலும் இந்தப் பலனைத் தான் கொடுக்கும். ஆனால் இதனால் பிரபுக்களுக்கு ஒன்றும் முழுகிப் போகாது. ஏனெனில் அவர்களுக்கு தாலூகா போர்டாபீசிலும், ஜில்லா போர்டு ஆபீசிலும், முனிசிபாலிட்டியிலும் வேலை இல்லாமல் போய்விட்ட தினாலேயே அவர்களுக்கு வேலை இல்லாமல் போய் விடப் போவ தில்லை. லாபமில்லாமல் போய்விடப் போவதில்லை. வேறு எத்தனையோ வழி இருக்கிறது. ஆனால் பார்ப்பனரல்லாத சமூகம் இன்னும் 5 வருஷத் திற்குள் அந்த ஜில்லாவில் தலை தூக்க முடியாமல் போய்விடும் என்றே சொல்லுவோம். திரு பன்னீர் செல்வம் அவர்கள் செய்த வேலை எல்லாம் பாழாய் போகப் போகிறது என்பதில் யாரும் சந்தேகப்பட வேண்டிய தில்லை.

திரு. முத்தையா முதலியார் அவர்களை ஒழித்த பலன் தஞ்சாவூர் ஜில்லாவுடன் மாத்திரம் போகாமல் இந்த மாகாணமெங்குமே கஷ்டமான நிலையை உண்டாக்கி விட்டது. அதாவது மாஜி மந்திரி திரு. முத்தையா முதலியார் அவர்களது முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வகுப்பு வாரி உத்தியோக வினியோக சம்மந்தமான உத்திரவுகள் கூட மார ஆரம் பித்து சிலதுகள் மாறியும் விட்டன. நாணயமாய் இருந்த தலைவருக்கு திரு. பன்னீர் செல்வத்திற்கு ஹைகோர்ட்டில் அயோக்கியப்பட்டம் வாங்கிக் கொடுத்து அதை சீமையிலும் வினியோகிக்க தக்க இழிவான காரியங்கள் செய்யப்பட்டுவிட்டன. ஆகவே மிராசுதாரர்கள், பிரபுக்கள், ஜமீன்தார்கள் சண்டையும் பணக் கொழுப்புமானது இந்த நாட்டு மக்களுக்கு எவ்வளவு துன்பத்தை விளைவிக்கின்றன என்பதற்கு இவை உதாரணங்களாகும்.

இந்த மாகாணத்தில் 24 ஜில்லா போர்டு தலைமையும் பார்ப்பன ரல்லாதார்களிடமே இருந்து வந்ததானது நெல்லூர் நடவடிக்கையில் ஒவ்வொன்றாக நழுவ ஆரம்பித்துவிட்டது. மேலும் ஒவ்வொன்றாக நம்பிக்கை இல்லாத தீர்மானங்கள் வரவும் ஆரம்பித்து வந்தும் விட்டது. ஆகவே தமிழ்நாட்டில் தஞ்சாவூர் ஜில்லா இந்த கதி அடைந்தது பற்றி மனம் வேதனையடையாமல் இருக்கமுடியவில்லை. ஆனபோதிலும் உண்மை உணர்ச்சியுடைய திரு. காயாரோகனம் பிள்ளை அவர்கள் சற்று கவனிப் பார்களானால் மறுபடியும் தலைதூக்க இடம் ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்று கருதுகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 07.12.1930**



RangaRakes tamilnavarasam.com

# சிங்கப்பூர் கடிதம்

சென்ற வார இதழில் சிங்கப்பூரில் இருந்து தமிழ் மகன் எழுதிய ஒரு கடிதம் ஒன்று பிரசுரித்திருந்தது வாசகர்கள் படித்திருக்கக்கூடும்.

அதாவது சிங்கப்பூர் முன்னேற்றம் பத்திரிகையில் கண்ட விஷயங் களுக்காக மலாய் நாட்டிலுள்ள சில நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் சங்கடப்பட்டு முன்னேற்றம் பத்திரிக்கையை குறை கூறுவதாகவும் அதன் மீது நடவடிக்கை நடத்த முயற்சிப்பதாகவும் அக்கடிதத்தில் இருந்து தெரிய வருகின்றது.

நடவடிக்கை நடத்துவதில் யாரும் எவ்வித ஆக்ஷேபணையும் சொல்வதில்லை. பத்திரிகாசிரியர்கள் எந்த அபிப்பிராயத்தை தெரிவிக்கு முன்னும் அதனால் ஏற்படக்கூடிய பலன்களுக்கெல்லாம் தயாராயிருந்து சந்தோஷமாய் வரவேற்கக் கூடியவர்களாகவே இருப்பார்களே தவிர, இம்மாதிரி சிறு மிரட்டலுக்கெல்லாம் பயப்படுபவர்களாகவோ அல்லது தனது கொள்கையை மாற்றிக் கொள்ளக் கூடியவர்களாகவோ இருக்க மாட் டார்கள்.

ஆதலால் அதற்காக நாம் ஒன்றும் சிபார்சுக்கு வரவில்லை. ஆனால் செல்வமும் செல்வாக்கும் உள்ளதும், தமிழ்நாட்டிற்கு பிரதானமான தென்பதுமான ஒரு சமூகம் சமூக வாழ்வில் இவ்வளவு மோசமான நிலை யில் இருக்குமானால் தமிழ் மக்களின் அறிவிற்கும் மூட நம்பிக்கைக்கும் இதைத்தானே அளவு கருவியாக கருதப்படும் என்பதுதான் நமது கவலை.

இப்போது உலகத்தில் மேம்பாடும் நாகரீகமும் பெற்றிருக்கும் மக்கள் இந்தியர்களை எப்படி மதிக்கின்றார்கள் என்பது நாம் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயமல்ல.

இந்தியாவில் பார்ப்பன ஆதிக்கத்தை வளரச் செய்யும் முயற்சிகள் இருந்தவரை அதைத் தாங்கிக் கொண்டிருந்ததன் மூலம் நாட்டுக் கோட்டையர் சமூகமானது ஒரு பெரிய புகழுக்கும் கீர்த்திக்கும் உரிய சமூகமாகக் காணப்பட்டதையும், அந்தப்படி பார்ப்பனர்களால் பிரசாரம் செய்யப்பட்ட தையும், நாம் பார்த்துக் கொண்டுதான் இருந்தோம். இன்றைய தினம் அப்பார்ப்பனீயத்தை அடியோடு வீழ்த்த வேண்டிய முயர்ச்சி நடக்கும் போது அப்பார்ப்பனீயத்தைத் தாங்கிக் கொண்டிருப்பவர்கள் நிலைமையெல்லாம் சற்று கஷ்டமாகத்தானிருக்கும் என்பதும் தானாகவே விளங்கும்.





அந்த நிலையில் நாட்டுக் கோட்டையர்களுடைய பழய கீர்த்தியும் புகழும் நிலை நிற்க முடியாததுடன் அப்பார்ப்பனீயத்தை வளர்க்கவும் நிலை நிறுத்தவும் செய்த முயர்ச்சிகளின் பலன்களை மற்றவர்களைப் போலவே இவர்களும் விகிதாச்சாரம் அடையக் கடமைப்பட்டவர்களுமாவார்கள். கர்மத்தின் பலனை அடைந்து தீரவேண்டியது யாராய் இருந்தாலும் இயற்கையேயாகும். அவ்வித இயற்கையில் இருந்து தப்ப வேண்டுமே யானால் அதற்குத் தகுந்த “பிராயச்சித்தங்கள்” செய்தாக வேண்டும்.

அப்படிக்கில்லாமல் “நான் முன் செய்தபடியே இன்னும் செய்து கொண்டிருப்பேன். ஆனால் அதன் கருமபலன்கள் என்னைத் தொடரக் கூடாது” என்று ஒருவர் சொல்வாரேயானால் அவருக்கு விஷய ஞானமும்; பகுத்தறிவும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ்நாடு இன்றைய தினம் மௌடீகத்திலும் அடிமை வாழ்விலும் இருப்பதற்கு முக்கிய காரணம் பண்டிதர்களும் நாட்டுக் கோட்டையர்களுந்தான் என்றால் அவர்கள் வாய் பேசாமல் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

ஏனெனில் பண்டிதர்கள், பார்ப்பனர்களின் நூல்களைப் படித்துவிட்டு (ஏனெனில் அதைத் தவிர அவர்களுக்குப் படிக்க வேறு நூல்கள் கிடையா ததால்) அதில் உள்ள ஊழல்களும் புரட்டுகளும் சூட்சிகளும் தெரிந்தி ருந்தாலும், பார்ப்பனர்களுக்கு பயந்து அவற்றையே திருப்பித் திருப்பி பிரசாரம் செய்வித்ததாலும் நாட்டுக் கோட்டையர் சம்பாதித்ததைக் கொண்டு தங்களுக்கு புகழ் ஏற்படுவதற்கு பார்ப்பன உபதேசமும் அவர்கள் மூலமாயு மல்லாமல் வேறுவழி இல்லாததால் அவர்கள் கட்டளைப்படியே குட்டிச் சுவர்களாக இருந்த கோவில்களையெல்லாம் கற்கோட்டைகளாக்கி பார்ப்ப னீயத்தை நிலைக்க வைத்து விட்டார்கள். ஆகவே இவ்விரு கூட்டமும் நேராகும்வரை அவர்களை எதிர்த்துப் போராட வேண்டியது இன்னாட்டின் மௌடீகத்தையும் அடிமைத்தனத்தையும் ஒழிக்கமுன் வருபவர்கள் வேலையாகும். ஆனால் இவ்வேலையில் சற்று கஷ்டம் உண்டு என்பதை நாம் மறைக்க முயலவில்லை. எப்படியெனில் முன்னவர்கள் வாயாடிகளும் படிப்புத் திமிருடையவர்களுமாவார்கள். பின்னவர்கள் பிடிவாதமும் பணத் திமிருமுடையவர்களாவார்கள். இந்த நிலைமையுள்ளவர்களுடன், போராடி வாயாடித்தனத்தையும், படிப்புத் திமிரையும், பிடிவாதத்தையும், பணத் திமிரையும் நமக்கு அனுகூலமாய்ச் செய்து கொள்வதென்றால் அது லேசான காரியமல்ல. அதற்காக அவர்களால் பல கஷ்ட நஷ்டங்கள் அடைந்து தான் ஆக வேண்டும். அதற்குத் தைரியமுள்ளவர்கள்தான் இவ்வேலையில் இரங்க வேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

உதாரணமாக பண்டிதக் கூட்டத்தார்கள் பலர் இன்று சுயமரியாதை இயக்கத்தை அழிக்க வேண்டுமென்று பிரசாரம் செய்து வருவது இவ்வியக் கத்தாரை நாஸ்த்திகர் முன்னோர்களை வைது அவர்களது நூல்களை இகழ் பவர்கள் என்றும், சைவ சமயத்திற்கு ஆபத்து என்றும், மற்றும் பல விதமாய் கூச்சல் போட்டு மக்களைக் கிளப்புவதும், நாட்டுக் கோட்டையர்களில் சிலர் அதாவது சிவநேசன் திருக்கூட்டத்தார் என்பவர்கள் "சுயமரியாதை இயக்கத் தார், நமது சமயத்தைக் கெடுக்கின்றார்கள்; சாதியைக் கெடுக்கின்றார்கள்; சமூகக் கட்டுப்பாட்டை அழிக்கின்றார்கள்; இதற்கு கேள்வி இல்லையா? கேட்பாடு இல்லையா" என்று சத்தம் போடுவதும் இவ்வியக்கத்தில் சம்மந் தப்பட்ட மக்களை "காலிகள், போலிகள், சில்லரைகள், ஜட்கா வண்டிக் காரர்கள் (அதாவது பணமில்லாதவர்கள்)" என்பதும் மற்றும் தாருமாறாக பேசுவதும் எழுதுவதுமாயிருக்கின்றவைகளே போதுமான உதாரணமாகும்.

இச்சிவநேசர் யோக்கியதைக்கும் அவர்களது பணத்திமிருக்கும் மற்றும் ஒரு உதாரணம் கூறுவோம். அதென்னவெனில் நாம் 19 - 10 - 30 ம் தேதி குடிஅரசு தலையங்கத்தில் சிவநேசர் சிறுமை என்று தலையங்கமிட்டு எழுதிய 3 பக்கமுள்ள ஒரு வியாசத்திற்கு பதிலாக அச்சிவநேசர் திருக் கூட்டத்தார் சிவநேசர் திறமை என்னும் தலைப்பின் கீழ் எழுதிய ஒரு வெளி யீட்டில் குறிப்பிட்டது என்னவென்றால் **"இச் செல்வச் சமூகத்தின் சிறுவர் களுக்கு தங் குலச் சிறுமிகளை கூட்டிக் கொடுத்து . . . . . .. தன வணி கருக்கு சம்மந்தியாகிய இழி தகை பெரியார் ஈரோட்டு நாயக்கர்"** என் கின்ற ஒரு வாக்கியமும் குடிஅரசு தலையங்கத்தில் "சிவநேயர் சிறுமை" என்னும் கட்டுரையில் கண்ட விஷயங்களை "ஒரு குடியைக் கெடுக்கும் கோடாரி காம்புதான் தகவல் கொடுத்திருக்க வேண்டுமென்றும்" எழுதிய தையே அவ்வளவு பெரிய வியாசத்திற்கு பதிலாக்கினார்களே அல்லாமல் 3 பக்கம் 12 கலம் கொண்ட பல விஷயங்களில் ஒன்றுக்காவது உண்டு, இல்லை. அல்லது அதற்கு வேறு தத்துவார்த்தம் என்று கூட எழுதவில்லை.

ஒவ்வொரு சமூகங்களிலும் இப்படிப்பட்ட பிற்போக்காளர்கள் உண்டு என்றாலும் நாட்டுக் கோட்டையார் சமூகத்தில் இருப்பது நாட்டுக்கு ஆபத்தானதாகும். ஏனெனில் பணமுள்ள கூட்டம் இந்தப்படி பிற்போக்கான முறையைத் தழுவி அதில் முனைந்திருப்பது நாட்டின் விடுதலைக்குத் தடை யாகும் என்ற காரணத்தால்தான். ஆனாலும் இப்போது பல பண்டிதர்களும் பல நாட்டுக் கோட்டையாரும் உண்மை வழிக்குத் திரும்பி உண்மையான தொண்டு செய்து உதவி புரிந்து வருகின்றார்களாதலால் அதிகமாக பயப் படவோ கவலைப்படவோ வேண்டியதில்லை என்றே கருதுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 07.12.1930**



RangaRakes

# அறிவிப்பு

'குடிஅரசு' இது சமயம் 16 பக்கங்கள் கொண்டு வெளிவருவதால், பல அன்பர்களால் எழுதியனுப்பப்படும் நீண்ட கட்டுரைகள் பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகிறோம். வழக்கமாக எழுதிவரும் கட்டுரைகளே சில சமயங்களில் இடமின்மையால் நிறுத்தி வைக்கப்படுகின்றன. சமயம் வாய்க்கும் போது அவைகளை பிரசுரிக்க உள்ளோம். அன்பர்கள் மன்னிப் பார்களாக. தவிர நமது பத்திரிகை ஒரு கொள்கை பிரசார பத்திரிகை யாதலால் அதில் செய்திகளுக்கும், வர்த்தமானங்களுக்கும் இடம் ஒதுக்க முடிவதில்லை. ஆதலால் செய்திகள் போட முடியாமைக்கு வருந்துகிறோம். கொள்கை சம்பந்தமான செய்திகள் மிக மிக சுருக்கமாகவும், முக்கியமாகவும் இருந்தால் மாத்திரம் கவனிக்கக்கூடும் என்பதை வணக்கமாக தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**( ப - ர் . )**

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 07.12.1930**



tamilnavarasam.com

# சுயமரியாதை தொண்டர்கள் மகாநாடு

தமிழ்நாட்டு சுயமரியாதைத் தொண்டர்கள் விஷேச மகாநாடு என்னும் பேரால் இம்மாதம் முதல் தேதி கோயமுத்தூரில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் நான்கு தீர்மானங்கள் செய்ததாக நமக்கு செய்தி கிடைக்கின்ற விபரம் மற்றொரு இடத்தில் பிரசுரித்திருக்கின்றோம். இதற்கு முக்கியமாய் இருந்த கனவான்கள் மூவரும் அதாவது தலைமை வகித்த திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களும், வரவேற்பு கழகத் தலைவ ராயிருந்த கொங்குரபாளையம் பொன்னம்பலம் அவர்களும், காரியங்கள் பொறுப்பேற்று நடத்திய திரு. அய்யாமுத்து அவர்களும் உண்மைச் சுயமரியாதை வீரர்கள், தொண்டர்கள் என்பதில் ஆக்ஷேபனை இல்லை என்பதை நாம் முதலில் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அக்கூட்டத்திற்கு வந்திருந்தவர்களிலும் சில உண்மைத் தொண்டர்கள் இருந்திருப்பார்கள் என்பதையும் நாம் மறுக்க வரவில்லை.

ஆனால் அவர்களை எல்லாம் இம்மகாநாடு கூட்ட நிர்பந்தப் படுத்தியது தற்காலம் நடைபெறும் அரசியல் இயக்க நடவடிக்கைகளும் உணர்ச்சிகளும் தான் என்று நாம் கருதியிருக்கும் அபிப்பிராயத்தை வெளியிலெடுத்துச் சொல்லாமல் இருக்க நாம் ஆசைப்படவில்லை. இதற்கு ஆதாரம் வேண்டுமானால் அம்மூன்று கனவான்களின் பிரசங்கங்களை படித்துப்பார்த்தாலே விளங்கி விடும். அரசியல் இயக்க கிளர்ச்சி சம்மந்தமாக நடந்த சம்பவங்களும் நடவடிக்கைகளும் அவற்றைப் பற்றி பத்திரிகைகள் பிரசாரங்கள் செய்த முறைகளும் அவற்றின் மூலம் சில வாலிபர்களுக்கும் ஏற்பட்ட உற்சாகங்களும் ஆகிய எல்லாம் சேர்ந்து சுயமரியாதை இயக்கத் தைச் சேர்ந்த சில வீரர்களுடையவும், தொண்டர்களுடையவும் மனதைக் கவர்ந்து விட்டது.

இந்த நமது அபிப்பிராயத்திற்கு அனுகூலமாக திரு. எஸ். ராமநாதன் அவர்கள் ஷை மகாநாட்டுக்கு வர இயலாமை சிறிது எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதைக் குறிப்பிடுகிறோம்.

> "தற்சமயம் காங்கிரஸ் இயக்கத்தின் எழுச்சியில் சுயமரியாதைத் தொண்டர்களும் இழுக்கப்பட்டதை நான் உணர்கிறேன்" என்று எழுதியிருக்கிறார்.



மக்களுக்கு ஒரு எழுச்சியையோ, உற்சாகத்தையோ, ஆத்திரத் தையோ உண்டாக்கி விட்டுவிட்டு அவர்களுக்கு தகுந்த வேலை கொடுத் துக் கொண்டிருக்காவிட்டால் அது தாறுமாறாகக் கண்ட கண்ட பக்கங்களில் எல்லாம் போய் முட்டச் செய்யும் என்பது இயற்கையேயாகும்.

இந்த இயற்கையிலிருந்து மேற்கண்ட மூன்று கனவான்களும் தப்ப முடியாததாலேயே அவர்கள் அரசியல் இயக்கக் கவர்ச்சியில் விழுந்து விட வேண்டியவர்களாகி விட்டார்கள்.

நம்மைப் பொறுத்தவரை நாம் சுயமரியாதை இயக்கத்திற்கும் அரசி யல் சம்மந்தமான கிளர்ச்சிக்கும் மத்தியில் சரியான தடைச்சுவர் இருக்க வேண்டும் என்பது முடிவான அபிப்பிராயமாகும்.

இதற்கனுசரணையாக திரு. எஸ். ராமநாதன் அவர்கள் எழுதியிருக் கும்படி ஷை கடிதத்திலிருந்து மற்றும் ஒரு குறிப்பைக் குறிப்பிடு கின்றோம்.

> "சுயமரியாதை இயக்கம் மனித வர்க்கத்தின் பகுத்தறிவை அடிப் படையாகக் கொண்டது. காங்கிரஸ் இயக்கம் இந்திய மக்களின் தேச பக்தியை அடிப்படையாகக் கொண்டது. ஒன்றுக்கு அறிவே பிரதா னம்; மற்ற துக்கு பக்தியே பிரதானம்"

இதை உத்தேசித்தே சுயமரியாதை மகாநாடுகளில் எல்லாம் இது வலி உருத்தப்பட்டு வந்திருக்கின்றது. எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்த அபிப்பிராயம் மாறுதலையடையாமல் இருக்க வேண்டு மென்றே நாம் விரும்பிக் கொண்டிருக்கின்றோம்.

இதற்கனுசரனையாகத் திரு. எஸ். இராமநாதன் அவர்கள் அனுப்பி யிருக்கும் செய்திகளில் மற்றொன்றைக் குறிப்பிடுகின்றோம்.

> "காங்கிரசில் சேர்ந்து பணியாற்றுங் காலையில் சுயமரியாதைக் கொள்கைகளை கை நழுவ விடக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம்" என்று குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

நாம் இப்படிச் சொல்லுவதாலேயே இன்றைய அரசாங்கத்தைக் காப் பாற்றிக் கொண்டும் அதனிடம் வாலாட்டிக் கொண்டு அடிமையாய் இருக்க வேண்டுமென்று நாம் சொல்ல வரவில்லை. ராஜ விசுவாசம் என்பதும் ராஜ வாழ்த்து என்பதும் அடிமைக்கு அறிகுறி என்றும் எந்தக் கூட்டத்திலும் அது கூடாது என்றும் தீர்மானித்து இருப்பது இந்த தேசத்தில் சுயமரியாதை இயக்கமேயாகும்; கவர்னர்கள் பார்க்க விரும்பியும் நிர்வாக சபை காப்நெட் மெம்பர்கள் பார்க்க விரும்பியும் கலெக்டர்கள் சொல்லி அனுப்பியும் பார்க்க சவுகரியமில்லாமல் போனவர்கள் சுயமரியாதை இயக்கத் தொண்டர் களே யாகும். ஆதலால் சுயமரியாதை இயக்கம் இன்றைய அரசியல் இயக்கத்தை



RangaRakes

tamilnavarasam.com

வெருப்பதாலேயே அதில் பங்கு கொள்ளாததாலேயே அதை அடிமை இயக்கமென்றோ அதிலுள்ளவர்கள் அடிமைகள் என்றோ சொல்லுவது அறியாமையாகுமே தவிர அது உண்மையாயிருக்க முடியாது. அன்றியும் அரசியல் கலவரத்தினாலேயே ஒருவன் தன்னை மற்றவர் பேடி என்றோ, தேசத்துரோகியென்றோ சொல்லுவார்களே என்று பயப்பட்டு அதில் இறங்கி விடுவானேயானால் அவனும் ஒரு கோழையாவானே தவிர வீரனாகி விட மாட்டான். நம்மைப் பொறுத்தவரை நாம் திரு. எஸ். ராம நாதன் அவர்களை வைத்துக் கொண்டே திரு. காந்தியவர்களிடம் 1927 வருஷத்திலேயே "இந்தியா விடுதலையடைய வேண்டுமானால், சுய மரியாதை அடைய வேண்டுமானால் இந்து மதமும் காங்கிரசும் ஒழிந்தாக வேண்டும்" என்று சொல்லிவிட்டு வந்தவனாவோம் என்பதை இந்தச் சமயத்திலும் எடுத்துச் சொல்லுகின்றோம். அந்த நிமிஷமே இந்த செய்தியை திரு. காந்திக்கும் நமக்கும் 20 அடி தூரத்தில் நின்று கொண்டிருந்த திரு. ராஜகோபாலாச்சாரியாரிடமும் சொல்லிவிட்டே வாசல் கடந்தோம். அது முதலே அந்தப் பிரசாரமும் செய்தோம். காங்கிரஸ் ஒழிய வேண்டும் என் கின்ற நம்முடைய அபிப்பிராயம் இன்றைய கிளர்ச்சியில் ஏற்பட்டதல்ல. 1920 வருஷத்திய கிளர்ச்சி அனுபவத்திலேயே ஏற்பட்டதாகும். இந்து மதம் என்பது அழிய வேண்டும் என்கின்ற அபிப்பிராயமும் நமக்குச் சுமார் 25. 30 வருஷத்திற்கு முன்னாலேயே ஏற்பட்டதாகும். 5, 6 வருஷ காலமாகவே அரசியல் கிளர்ச்சியும், தியாகத்தின் பயனும், கஷ்டத்தின் பயனும் பாமர மக்களை - ஏழைகளை- தொழிலாளிகளை-கூலிகளை நசுக்கிப் பிழியவே உபயோகப்பட போகின்றது என்பதில் நமக்குச் சிறிதும் சந்தேகம் இருந்த தில்லை. இந்தியாவென்பது 100க்கு 93 பேர்கள் கொண்ட ஏழைகள் நாடேயொழிய 100க்கு 3, 4 அல்லது 5 பேர்கள் கொண்ட செல்வந்தர்கள் சூட்சிக்கார சோம்பேறிப் பிழைப்புக்காரர்கள் நாடல்ல என்பதை மனதில் வைத்துக் கொண்டு பார்த்தால் இன்றைய அரசியல் கிளர்ச்சியில் இந்தியா வுக்கு ஏதாவது பலனுண்டாகுமா என்பது விளங்கும். ஜாதித் திமிறும், பணத் திமிறும், ஜாதிக் கொடுமையும், பணக்காரன் கொடுமையும் இந்த நாட்டில் இருந்து எடுபடுவது தான் இந்தியாவின் விடுதலையாகுமே யொழிய வெள்ளைக்காரனிடம் இருக்கும் அதிகாரத்தைப் பணக்காரனிடமும், சோம் பேறிகளிடமும் ஒப்புவிப்பது விடுதலையாகாது. இந்தியாவுக்கு வெள்ளைக் கார ஆட்சி அதாவது முதலாளிகள் ஆட்சி கொண்டு வந்ததும் அதைக் காப்பாற்றி வளர்த்ததும், வளர்ப்பதும் ஜாதி ஆணவம் கொண்டவர்களும் பணத்திமிர் கொண்டவர்களுமேயாகும். ஆகவே அப்படிப்பட்ட அவர் களை இன்றும் கல்லுப்போல் வைத்துக் கொண்டு அவர்களை சிறிதுகூட அசைக்க முடியாமல் இருந்து கொண்டு வெள்ளைக்காரனைப் பற்றியே மாத்திரம் பேசுவதோ, அவனைக் குறைகூறுவதோ, எய்தவனை விட்டு விட்டு அம்பை நோகும் மூடர்களுக்கு சமமேயாகும். வருணாச்சிரமக் காரனும், பணக் காரனும் நம்மை வெள்ளைக்காரன் பக்கம்தான் திருப்பி விடுவான். நாம்



உஷாராய் இருந்து பகுத்தறிவோடு பார்ப்போமானால் அம்பு யாரால் எய்யப்பட்டது - கொடுமை எங்கிருந்து வருகின்றது என்பது நமக்கு விளங்கும்.

உதாரணமாக தேசீயக் கிளர்ச்சியால் செய்யப்படும் கள்ளுக்கடை மறியலால் மக்களுக்கு ஏதாவது கடுகளவு லாபம் உண்டா என்றும் அதில் ஏதாவது உண்மை இருக்கின்றதா என்றும் யோசித்துப் பாருங்கள். நமது சகோதரர்களில் அநேகர் கள்ளு இலாக்கா சிப்பந்திகள் முதலியவர்கள். கள்ளு வரும்படியை நம்பியிருக்கிறார்கள். அந்த உத்தியோகத்தை நம்பி நாம் பிள்ளைகள் பெற்று வளர்த்து படிக்க வைத்து கள்ளு வியாபாரம் நடத் திக் கொடுக்க சர்க்காருக்கு ஒப்படைத்திருக்கின்றோம். இன்றைய வரையில் இதில் ஒருவராவது இந்தத் தொழில் வேண்டாமென்று விட்டு விட்டு வரவில்லை. இன்றும் வரவில்லை. 1922லும் வரவில்லை.

மற்றும் கள்ளு வரும்படியை நம்பி வைத்திருக்கும் பள்ளிக் கூடத்தில் நமது குழந்தைகளைப் படிக்க வைத்துக் கொண்டிருக்கின்றோம். அதை நம்பி மரங்கள் வளர்த்து வைத்திருக்கின்றோம். அதற்காதாரமாக பல சாமிகளையும் வைத்திருக்கின்றோம். அந்த வரும்படியில் நடைபெறுகின்றது. இவ்வளவும் போதாமல் அந்த இலாக்காவை நடத்திக் கொடுக்க ஒரு மந்திரியையும் நாம் ஏற்படுத்தி அதற்கு மாதம் 5333-5-4 சம்பளம் ஏற் படுத்தி அந்த உத்தியோகமும் வெள்ளைக்காரனுக்கோ, பார்ப்பானுக்கோ போகவிடாமல் நாம் தடுத்து நம்மவர்களான பார்ப்பனரல்லாத சகோதரர் கையில் ஒப்படைத்து இருக்கின்றோம்.

ஆகவே நமது சகோதரராகிய அந்த மந்திரியும் அந்த சிப்பந்திகளும் கள்ளு வியாபாரத்தைக் காப்பாற்ற வேண்டிய கட்டளையும் கடமையுமு டையவர்கள். இந்த நிலையில் நாம் கள்ளு மறியல் செய்ய வேண்டிய தாயிருந்தால் கள்ளுக் கடையிலா, மந்திரிகள் சிப்பந்திகள் வீட்டிலா யோசித் துப் பாருங்கள். இந்த நிலையில் இந்தியர்கள் - தேசீயவாதிகள் மறியலில் ஏதாவது உண்மையோ, நாணயமோ இருக்கின்றதா என்பதை யோசித்துப் பாருங்கள்.

இப்படியே பல காரியங்களிலும் உண்மை தெரியாமல் வஞ்சகர் சூட்சிக்கும் அறியாமைக்கும் ஆளாகி அவஸ்தைப்படுகின்றோம். இது போலவே சுதேசிப் பொருள் பரதேசிப் பொருள் என்பதிலுமுள்ள புரட்டு களை நாம் அறிவதில்லை. இந்த நாட்டில் சுதேசிப் பொருள் ஆதரிக்க வேண்டும் என்பதின் பொருள் என்னவென்று சொல்லப்படுகிறதென்று பார்ப்போமானால் "சுதேசிப் பொருள்களை ஆதரித்தால் தொழில் கிடைக்கு மென்று சொல்லப்படுகின்றது" அந்த பேச்சில் சிறிது கூட நாணயம் இல்லவேயில்லை. ஏனெனில் இந்த நாட்டில் தொழிலாளிக்கு ஒரு வித பாதுகாப்பும் கிடையாது. பணக்காரன் முதலாளி ஆகியவர்கள் அடையும்



RangaRakes tamilnavarasam.com

லாபத்திற்கு ஒரு கணக்கோ எல்லையோ கிடையவே கிடையாது. 100க்கு 100 லாபமடைந்தாலும். 100க்கு 250 லாபம் அடைந்தாலும் அது அவனது "யோகமாய்" "அதிர்ஷ்டமாய்" போய் விடுகிறது. இன்ன லாபத்திற்கு மேல் முதலாளி லாபமடையக்கூடாது என்கின்ற நிபந்தனையே கிடையாது. ஆனால் தொழிலாளி வயிற்றுக்குப் போரவில்லை என்று வேலை நிறுத்தம் செய்தால் - கூலி போராது என்று கேட்டால் அவனை சர்க்காரிடம் சொல்லி துப்பாக்கியால் சுடச் செய்ய வேண்டியது, 10, 10 வருஷம் தண்டிக்கப்பட வேண்டியது அவர்களது வீடுகளில் நெருப்பு வைத்துக் கொளுத்த வேண்டியது ஆகிய காரியங்களே தொழிலாளிகளின் நிலை. இதற்குச் சமாதானம் "அவர்களது தலையெழுத்து" "துர் அதிர்ஷ்டவசம்" என்பதைத் தவிர வேறில்லை.

இந்த நிலையில் எதற்காக சுதேசிப் பொருளை ஆதரிப்பது? எதற்காக கள்ளுக்கடை மறியல் செய்வது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்த நிலையில் ஏழை மக்களுக்கு எது சுலபமோ அதை வாங்கிக் கொள்ள அனுமதி கொடுக்க வேண்டியது தான் சமதர்மமாகுமென்பது நமது சொந்த அபிப்பிராயமாகும்.

முதலாளி நிலையும், தொழிலாளி நிலையும் வரையறுத்த பிறகுதான் சுதேசி பொருள் பேச்சும் பிரசாரமும் பயன்படுமே தவிர இந்த நிலையில் ஒன்றும் பயன்படாது. முதலாளிகள் கொள்ளை அடிக்கத்தான் சுதேசி பிரசாரம் உதவும். இன்னம் உதாரணம் வேண்டுமானால் கதரை எடுத்துக் கொள்ளுவோம். கதர் பிரசாரம் நாமே செய்தோம். கதர் கட்டாதவன் "தேசத் துரோகி" "நரகத்துக்குப் போவான்" என்றெல்லாம் சொன்னோம். கதர்சாலை ஏற்படுத்தினோம். ஏழைகளையும் பிச்சையெடுத்தாவது வயிற்றை வாயைக் கட்டியாவது கதர் கட்டும்படி பிரசாரம் செய்தோம். கதர் சம்பந்தமான அனேக காரியங்களுக்கு நாம் பொறுப்பாளி என்று சொல்லிக் கொள்ள நமக்கு பல உரிமைகள் உண்டு. கடைசியாக என்ன பலன் ஏற்பட்டது. கோயம்புத்தூர் மால் மில்லின் நாலரை முழம் வேஷ்டி 4 வேஷ்டிகள் கொண்ட ஒரு தான் 1-12-0க்கு திரு. செங்கோட்டையா விற்கிறார். ஆனால் நாலரை முழம் கதர் வேஷ்டி 2 வேஷ்டிக்கு 1-12-0க்குக் கொடுத்து சுதேச கைத்தொழிலை ஆதரிக்க வாங்குகின்றோம். அதாவது 7 அணா வேஷ் டிக்கு 14 அணா கொடுத்து வாங்குகின்றோம். இப்படிப்பட்ட இந்த நிலையை ஆதரிப்பது தான் நம் சுதேசி கைத்தொழில் ஆதரிப்பு என்றால் கண்டிப்பாய் இந்த மாதிரி ஆதரிப்பு ஒழிந்து தானாக வேண்டும் என்று சொல்லுவோம். "இந்தப்படியாவது ஆதரிக்காவிட்டால் ஏழைகளுக்கு ஜீவனத்திற்கு மார்க்க மில்லை" என்று சொல்லுவார்களே யானால் அப்படி வேலையில்லாமல் இருக்கும் ஆட்கள் பட்டினி கிடந்து வேதனைப் பட்டு பணக்காரர்கள் மீது பாய்ந்து அவர்களது பணத்தை ஏழைகளுக்குப் பங்கீட்டுக் கொடுக்கும் திட்டத்தில் ஈடுபட்டு ஜெயிலுக்கு வேண்டுமானாலும் போய் உட்கார்ந்து கொண்டு அங்கு ஏதோ தன்னாலான வேலையைச் செய்து விட்டு ஜெயில் சாப்பாடு சாப்பிட்டுக்



கொண்டிருப்பது மொத்த நாணையமும் பொது நலமுயற்சியும் கொண்ட யோக்கியமான வேலையுமாகும் என்று பதில் சொல்லுவோம். அந்தப்படிக்கு இல்லாமல் பம்பாய் ஆமதாபாத் மில் சொந்தக்காரர்களான முதலாளிகள் சுதேசி பிரசாரமும் மாதம் 100, 150, 200 சம்பளம் வாங்கும் கதர் இலாக்காகாரர்கள் கதர்ப் பிரசாரமும் சட்டசபைக்குப் போய்க் கள்ளை நிறுத்துகிறவர்கள் கள்ளு பிரசாரமும் செய்வதென்றால் இதில் என்ன நாணையம் இருக்கின்றது என்பது நமக்கு விளங்கவில்லை. பெரிய, பெரிய மிராசுதாரர்கள் ஆளுக்கு 1000, 2000, 5000 ஏக்கர் பூமி வைத்துக் கொண்டு உழுகின்ற ஆட்களுக்கு வயிரார சோறு கிடைக்காமல் படி நசுக்கிப் பிழிந்து விவசாயம் செய்யச் செய்து பலன் அனுபவித்து மேலும் மேலும் 100, 200, 500 ஏக்கர்கள் வருஷாவருஷம் வாங்கிப் பூமி சேர்த்துக் கொண்டு மற்றவனுக்கு ஒரு ஏக்கரா பூமி கூட இல்லாமல் கொள் முதல் செய்து விட்டு ஒரு 2-8-0ரூ போட்டு ஒரு ஜதை கதர் வேஷ்டியை வாங்கிக் கட்டிக் கொண்டு வெளியில் வந்து கூலிகளிடம் பெரிய அனுதாபி உள்ளவன் போல் "கனவான்களே கதர் கட்டுங்கள் ஏழைகள் பிழைப்பார் கள்" என்று கதர்ப் பிரசாரம் செய்து விட்டால் அவனை நாம் பெரிய தேசாபி மானி, ஏழைப் பங்காளன், தர்மப் பிரபு என்று மதித்து விடுகின்றோம். திரு. எஸ். சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, முத்தரங்க முதலியார் முதல் நாம் அநேகரை இப்படியே நம்பி ஏமாந்தோம். நம்மைப் பார்த்து நமது ஏழை களும் ஏமாந்தார்கள். நமது தொழிலாளிகளும் நாச மானார்கள். சென்னை மில்கள் தொழிலாளிகளும், நாகை ரயில்வே தொழிலாளிகளும் நாசமடைந் ததற்கு இன்றைய 'தேசீயவாதிகள்' அல்லவா என்பதை சற்று ஞாபகப் படுத்திப் பார்த்தால் தேசீய இயக்கத்தின் யோக்கி யதை விளங்கிவிடும்.

நிற்க, இன்றைய தினம் நம்மை ஆளுவதும் இந்த மாதிரி பணக்காரக் கொள்கை தானே தவிர வெள்ளைக்காரர் என்பதும் ஒரு அன்னியன் என்பதுமான கொள்கை ஆளவில்லை. இந்த வித்தியாசம் இன்னும் சற்று தெளிவாய் தெரிய வேண்டுமானால் சுதேச சமஸ்தானங்களை எடுத்துக் கொள்ளுங்கள். என்ன கொள்கை அந்த நாட்டு மக்களை ஆளுகின்றது? எனவே ஜாதித் திமிரும், பணத்திமிரும் ஒழிக்கப்பட வேண்டியது தான். தேசீய இயக்கமானாலும். சுயமரியாதை இயக்கமானாலும், பூரண விடுதலை இயக்கமானாலும் அவை செய்ய வேண்டிய வேலைகளாகும். ஆகவே ஜாதித் திமிரும், பணத்திமிரும் ஒழிய மதமும் கடவுளும் ஒழிய வேண்டும். மதமும் கடவுளும் ஒழிக்கப்பட்ட நாட்டில்தான் ஜாதித் திமிரும், பணத் திமிரும் ஒழிந்து சமதர்மம் ஏற்பட்டு பணக்காரன் ஏழை என்கின்ற கொடுமை இல்லாமல் இருக்கின்றன என்பதை உணருங்கள். ருஷியாவை யாவது தள்ளி விடுங்கள். சைனா விடுதலையாகிக் கொண்டு வருகின்றதை பாருங்கள். கடவுள்களும் மதங்களும் முன்னால் ஒழிந்து கொண்டு வருவதும் பின்னால் சமதர்மம் வளர்ந்து கொண்டு வருவதும் பட்டப்பகல் போல் தெரிய வருகின்றது.



RangaRakes tamilnavarasam.com

ஆகையால் காங்கிரசு காப்பாற்றப்பட வேண்டுமானால், அது விடுதலைக்கு ஏற்பட்டது என்று சொல்லப்பட வேண்டுமானால் சுயமரி யாதை இயக்கம் காங்கிரசில் போய் சேர்ந்து வேலை செய்ய வேண்டுமானால் காங்கிரசு இந்த நிபந்தனைக்கு உள்பட்டால் மாத்திரம் ராஜி பேசுவோம். அதாவது,

"இந்தியா விடுதலை பெறுவதற்கு சமதர்மம் ஓங்குவதற்கு ஜாதியும், மதமும், கடவுள்களும் அழிக்கப்பட வேண்டியது முதன்மையான காரியம் என்பதை காங்கிரசு முக்கிய கொள்கையாய் கொள்ளு கின்றது."

என்று ஒப்புக் கொள்ளுமேயானால் அதில் சேருவோம். அதை உண்மையான தேசீயக்கிளர்ச்சி என்போம். அப்படிக்கில்லாமல் திரு. பாரதியார் அவர்கள் சொன்னது போல் 'உப்பென்றும் சீனியென்றும் உள் நாட்டுச் சேலை என்றும் செப்பித்திரிவாரடி கிளியே செய்வதரியாரடி" என்று கொக்குபிடிக்கும் வித்தை போல் 'காங்கிரஸ்' 'தேசீயம்' 'பொது எதிரி' 'அன்னியன்' என்பன போன்ற வார்த்தைகள் பேசி காலங் கடத்துவது பாமர மக்களை ஏய்க்க உதவுமே அல்லாமல் அதில் காரியம் ஒன்றும் காண முடியாது.

ஆகையால் எந்தக் காரணம் கொண்டும் சுயமரியாதை இயக்க உண்மைத் தொண்டர்கள் இன்றைய அரசியல் கிளர்ச்சியில் சம்மந்தப்படக் கூடாதென்றே கருதுகின்றோம். பக்ஷாத்தாபமிருக்கின்றவர்கள் இளகிய மனசுக்காரர்கள் முதலியவர்கள் அதில் சேர்ந்து வேலை செய்வதை நாம் தடுக்கவில்லை, ஆனால் சுயமரியாதை இயக்கத்தின் பேரால் மாத்திரம் வேண்டாம் என்று வேண்டிக் கொள்ளுகின்றோம்.

நிற்க, சுயமரியாதை இயக்கத்தார் எவ்வித சத்தியாக்கிரகமும் ஆரம் பிக்கவில்லை என்று ஒரு பெரிய பழி சொல்லப்படுவதற்கு நாம் பதில் சொல்ல வேண்டியிருக்கின்றதை ஒப்புக் கொள்கின்றோம்.

நம்மைப் பொருத்த வரை நாம் அந்த முயர்ச்சியை விட்டு விட வில்லை. பல காரணங்கள் குறுக்கிட்டுக் கொண்டு வந்ததையும் பல அபிப்பி ராயங்களையும் மதிக்க வேண்டியிருந்தாலும் சற்று நிதானிக்க வேண்டியதா யிற்று. ஆனாலும் அதற்கு அப்போது முன் வந்த அனேக தொண்டர்கள் இப்போதும் தயாராகவே இருக்கின்றார்கள். சமீபத்தில் துவக்கப்படும் என்றே நம்பி இருக்கின்றோம். ஆனால் காங்கிரசுடன் போட்டி போடுவதற் காக என்று ஏதாவது ஒரு காரியம் செய்தாக வேண்டுமென்பது நமக்கு உசிதமாய் தோன்றவில்லை.

இந்தியாவில் இன்று இருக்கும் ஆட்சி வெள்ளைக்கார ஆட்சியல்ல,



RangaRakes

ஜாதித்துவம், பிரபுத்துவம், முதலாளித்துவம் ஆகிய மூன்று ஆட்சிதான் இந்தியாவை ஆட்சி செலுத்துகின்றது. இம்மூன்றையும் ஒழிக்க வெள்ளைக் கார ஆட்சி ஒழிப்பது என்பதையோ அன்னியன் ஆட்சியை ஒழிப்பது என்பதையோ ஆதாரமாய் கொண்ட காங்கிரஸ் அல்லது தேசீயம் என்ப தான அரசியல் கிளர்ச்சியால் **முடியவே முடியாது! முடியவே முடியாது.**

ஆனால் சுயமரியாதை தொண்டர் மகாநாட்டின் முதல் தீர்மான மானதும் திரு. அய்யாமுத்து அவர்களாலும் திரு. ஜி. வேலப்ப நாயுடு அவர்களாலும் பிரேரேபித்து ஆமோதிக்கப்பட்டதுமான,

"ஜாதி மத பேதா பேதங்களும் முதலாளி தொழிலாளி என்ற பேதா பேதங்களும் ஏழை பணக்காரன் என்ற கொடுமையான சமூக நிலைமையும் மாறி உண்மையான சமதர்மம் ஏற்படுத்துவதே சுயமரியாதை இயக்கத்தின் முடிவான கொள்கை என்று இம்மகாநாடு ஊர்ஜிதம் செய்கின்றது"

என்று தீர்மானித்த தீர்மானத்தை ஆதாரமாய்க் கொண்ட இயக்கமாகிய சுயமரியாதை இயக்கத்தால் தான் முடியும். ஆகையால் தான் நமது பொது நல உணர்ச்சியும், உர்ச்சாகத்தையும், ஊக்கத்தையும், தியாகத்தையும் வீண் காரியத்தில் செலவழித்து விடக் கூடாது என்று எச்சரிக்கை செய்யவே இதை எழுதுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 07.12.1930**



tamilnavarasam.com

# இது சொன்னது சுயமரியாதைக்காரரா?

**- சித்திரபுத்திரன்**

"பர்த்தாவுக்கு ஏற்ற பதிவிரதை உண்டானால் எத்தாலும் கடைத் தேறலாம் - சற்றேனும் ஏறுமாறாய் இருப்பாளே யாமாகில் கூறாமல் சன்னி யாசம் கொள்ளு"

என்று "நீதி நூல்கள்" முறையிடுகின்றன. இதைச் சொன்னது சுயமரியாதைக்காரர்களல்லவே. இப்பொழுது சுயமரியாதைக்காரர்கள் ஏறுமாறாய் இருக்கும் "விரதை"களை விட்டுவிட்டு சன்யாசம் கொள்ளு என்பதற்குப் பதிலாக வேறு ஒரு பெண்ணை கொள்ளு. சன்னியாசம் கொள் ளாதே என்கிறார்கள். இதனால் புருஷனின் சன்யாசம் மாறிற்றேயொழிய பெண்ணின் விரதத்திற்கு யாதொரு மாறுதலும் ஏற்படவில்லை. இதற்காக ஏன் சிவநேயர்கள் வேப்ப எண்ணை குடிக்க வேண்டும்?

**குடி அரசு - விமர்சனம் - 14.12.1930**



# யந்திரங்கள்

"மனித வர்க்கத்திற்கு யந்திரங்கள் விரோதி" என்று நாம் கருதியிருந்த காலமும் அந்தப்படியே யந்திரங்களை எல்லாம் "பிசாசு" என்று பிரசாரம் செய்த காலமும் உண்டு. மனிதனின் இயற்கை முற்போக்கினுடையவும், அறிவு ஆராய்ச்சி வளர்ச்சியினுடையவும், தத்துவத்தை அறிந்த பிறகும் அவ்வளர்ச்சியை மேலும் மேலும் விரும்புகின்ற நிலையிலும் மக்களின் சரீர கஷ்டத்தை உணர்ந்து அதை குறைக்க வேண்டும் என்கின்ற ஆசையில் முயற்சி கொண்ட போதும் எந்த மனிதனும் யந்திரத்தை வெறுக்க முடியவே முடியாது. அன்றியும் வரவேற்றே ஆக வேண்டும்.

ஏன் என்றால் மனித அறிவின் சுபாவ அனுபவத்தைக் கொண்டும் ஆராய்ச்சியைக் கொண்டும் நாளுக்கு நாள் சுருக்க வழியை கண்டு பிடிப்பதே இயற்கையாகும். அது மாத்திரமல்லாமல் சரீரப் பிரயாசையை குறைத்துக் கொள்ள ஆசைப்படுவதும் இயற்கையாகும். இந்த இரண்டு சுபாவ குணங்களும் யந்திரங்களைக் கண்டு பிடித்து கையாடித்தான் தீரும். ஆகவே அறிவும், ஆராய்ச்சியும் இல்லாத இடங்களில் தான் யந்திரங்கள் அருமையாய் இருப்பதும் அலட்சியமாய் கருதுவதுமாய் இருக்குமே தவிர மற்ற இடங்களில் அதாவது அறிவு ஆராய்ச்சி முன்னேற்றமுள்ள இடங்களில் யந்திரத் தாண்டவமே அதிகமாயிருக்கும்.

வியாச ஆரம்பத்தில் நாம் குறிப்பிட்டதாகிய "மனித வர்க்கத்திற்கு யந்திரங்கள் விரோதி, யந்திரங்கள் "பிசாசு" என்று நாம் கருதியதாக குறிப்பிட்ட தானது அறிவும் ஆராய்ச்சியும் கூடாது என்கின்ற எண்ணத்தின் மீதோ இயற்கையோடு போராட வேண்டுமென்றோ அல்லது மனிதன் சரீரத் தால் கஷ்டப்பட்டு, இம்சைப்பட்டுதான் ஆகவேண்டும் என்றோ கருதியல்ல. ஆனால் மற்றெதைக் கருதி அவ்வபிப்பிராயம் கொண்டோம் என்றால் "யந்திரங்கள் பலபேர், பலநாள் செய்யும் காரியத்தை வெகு சிலபேர் சில நாளில் செய்து விட்டால் மற்ற ஆள்களுக்கும் மற்ற நாள்களுக்கும் ஜீவனத் திற்கு - கூலிக்கு மார்க்கம் எங்கே? அதன் மூலமாய் ஏற்படும் வேலையில்லா திண்டாட்டத்திற்கு என்ன சமாதானம்?" என்று சொன்னவர்களின் வார்த்தை களை நம்பினதாலேயே தவிர வேறில்லை.



RangaRakes tamilnavarasam.com

இந்தப்படியே இன்றும் இன்னும் அநேகர் நினைத்துக் கொண்டும், நம்பிக் கொண்டும் யந்திரங்களை ஆட்சேபித்து வெறுத்துப் பேசிக் கொண்டுமிருக்கின்றார்கள். ஆனால் இந்தப்படி எண்ணிக் கொண்டிருந்த நாம் அந்தக் காலத்திலும், இந்தப்படி இப்பொழுது எண்ணிக் கொண்டிருக் கின்ற அநேகர் இப்போதும் தங்கள் தங்களைப் பொருத்தவரை தங்கள் தங்கள் காரியத்திற்கு மனித சரீர வேலையைவிட யந்திர வேலையையே விரும்பி அதை உபயோகித்தே தான் வந்தோம், வந்தார்கள், வருகிறார்கள்.

உதாரணமாக கால்கள் இருக்க கட்டை வண்டிகள் இருக்க (கட்டை வண்டியும் இயந்திரம்தான் இருந்தாலும்) யந்திரத்தின் மூலமாய்த் தான் அதாவது ரயிலில் பிரயாணம் செய்தோம். யந்திர மூலமாய்தான் மோட்டா ரில் பிரயாணம் செய்தோம். யந்திர மூலமாய்த் தான் கப்பலிலும் பிரயாணம் செய்தோம். யந்திர மூலமாகவே ஆகாயக் கப்பலிலும் பிரயாணம் செய் தோம். அதையே எல்லா மக்களுடைய போக்குவரத்து சாதனமாக ஆக்க வும் ஆசைப்படுகின்றோம். மற்றவர்களும் ஆசைப்படு கின்றார்கள். ஆகவே இதை மனிதத் தன்மையுடன் கூடிய குற்றமற்ற இயற்கை உணர்ச்சி என்றுதான் சொல்லவேண்டுமே தவிர இது எவ்வித குற்றமுள்ளதும் அநியாயமானதும் என்று சொல்லி இதற்காக யாரையும் கண்டிக்கவும் முடியாது. ஜீவ சுபாவமே ஆசையின் உருவமாகும்.

ஆகவே யந்திரம் வேண்டாம் என்பது இயற்கையோடும் முற்போக் கோடும் போராடும் ஒரு அறிவீனமான - பிற்போக்கான வேலையாகுமே தவிர மற்றபடி பயனுள்ள வேலையாகாது. உதாரணமாக 10 மூட்டைகளை ஒரு வண்டியில் ஏற்றி முன்னே நான்கு பேர் இழுத்துக் கொண்டும் பின்னே நான்கு பேர் தள்ளிக் கொண்டும் உடல் வேர்க்க நெஞ்சொடிய மணிக்கு மூன்று மைல் தள்ளாடித் தள்ளாடி இழுத்துக் கொண்டு போவதும், அதே மாதிரியான 25 மூட்டைகளை ஒரு மோட்டார் லாரியில் ஏற்றி ஒரு மனிதன் நோகாமல் நாற்காலியில் உட்கார்ந்து இருப்பதுபோல் உட்கார்ந்து கொண்டு சுக்கானை மாத்திரம் பிடித்துத் திருப்பிக் கொண்டு மணிக்கு 25 மைல் போவதுமான இரண்டு வேலைகளையும் எடுத்துக் கொண்டால் இவற்றுள் சுயமரியாதைக்கு - ஜீவகாருண்யத்திற்கு - மனித சமூகத்திற்கு - முற்போக் கிற்கு மற்ற ஜீவன்களை விட மனிதனுக்கு பகுத்தறிவு என்பதாக ஒரு குணம் அதிகமாக உண்டு என்கின்ற "உயர்" குணத்திற்கு எது ஏற்றது என்று கேட்கின்றோம்.

மற்றும் பாஷைகள் ஆதியில் எழுத்துகள் கூட இல்லாமல் சப்த ரூபமாய் இருந்ததும், பிறகு எழுத்துக்கள் ஏற்படுத்தப்பட்டதும், அவை கூரிய ஆணிகளால் ஏடுகளில் எழுதப்பட்டதும், பிறகு காகிதம் ஏற்பட் டதும், அதில் நாணலில் எழுதினதும், உருக்குத் தகடுகளில் எழுதினதும், பிறகு பௌண்டன் பேனாவில் எழுதினதும், டைப்பில் அடிப்பதும், அச்சடிப்பதும் அந்த அச்சும் மணிக்கு 100 பிரதிகளாக இருந்து இப்போது 10000 பிரதிகள் வீதம் அச்சடிக்கும் படியானதும். அதுவும் 12 X 8க்குமாயிருந்த அகல காகிதத்தில் மாத்திரமிருந்து இப்போது 60 X 40க்குமாக அச்சடிக்கக் கூடியதானதுமான காரியங்கள் படிப்படியாய் விருத்தி ஆகி யிருக்கின்றதை பார்த்துக் கொண்டும் அதன் பலன்களை அனுபவித்துக் கொண்டும் ஏதாவது ஒரு வகையில் ஒவ்வொருவரும் அதை செய்து கொண்டும் இருக்கின்றோம். இவை யெல்லாம் யந்திர பலன்கள் அல்லவா? என்றும் இவற்றில் எது தள்ளுவதற்குரியது? என்றும் கேட்கின்றோம்.

இது தவிர மற்றொரு உதாரணத்தைக் கவனிப்போம். சங்கராச்சாரி மடாதிபதி என்று சொல்லப்படும் ஆட்கள் ரயிலில் ஏறுவது நீச்சத்தனம் என்றும், மாட்டுவண்டி, குதிரைவண்டி ஆகியவைகளில் ஏறுவது ஜீவ இம்சை என்றும் கருதிக் கொண்டும் மரக்கட்டையில் பல்லக்கு செய்து அதற்குத் தந்தம், வெள்ளி, தங்கம் முதலிய தகடுகள் போட்டு அதன்மீது தான் ஏறி உட்கார்ந்து கொண்டு தண்டு 1க்கு 4பேர் வீதம் 4தண்டுக்கு 16பேர் ம்கு ம்கு என்று முக்கிக் கொண்டு மணிக்கு 4மைல் வீதம் தூக்கி ஓடுவதை பார்க்கின்றோம். இது யந்திர சம்மந்தமில்லாதது என்று வைத்துக் கொண்டா லும் (கண்டிப்பாய் பார்த்தோமானால் பல்லாக்கு என்பதும் ஒரு யந்திரமே யாகும்) இந்த வாழ்வு காட்டு மிராண்டி உலக வாழ்வா? அல்லது நாகரீக உலக வாழ்வா? என்பதை யோசித்துப் பாருங்கள். மனிதன் தூக்கு வதை விட்டு மாடோ, கழுதையோ, குதிரையோ, ஒட்டகமோ, யானையோ சுமப்ப தாக வைத்துக் கொண்டாலும், அதுவும் அதற்கு சற்று அடுத்த காட்டு மிராண்டி வாழ்வா அல்லது நாகரீக - ஜீவகாருண்ய வாழ்வா என்றும் கேட் கின்றோம்.

ஆகவே இவைகளிலிருந்து யந்திரம் மனிதனுக்கு அவசியமென் றும் சௌகரியமானதென்றும், ஜீவகாருண்யமுடையதென்றும் முற்போக்குக் கும் நாகரீகத்திற்கும் ஏற்றதென்றும் இயற்கை உணர்ச்சியில் பட்டதென்றும் அறிவு ஆராய்ச்சியின் பயனென்றும் ஒப்புக் கொண்டுதானாக வேண்டும்.

## ஆனால்

ஆனால் முன்சொல்லப்பட்ட அதாவது "யந்திரங்கள் பெருகுவதால் தொழிலாளிகளுக்கு வேலையில்லாமல் போய் ஜீவனத்திற்கு கஷ்டப்பட வேண்டியதாகுமே" என்பதற்கு சமாதானம் சொல்லியாக வேண்டும். இதற்கு பதிலாக நாம் அவர்களைக் கேழ்ப்பதென்ன வென்றால்

"தொழிலாளி என்று ஒரு கூட்டம் ஏன் இருக்க வேண்டும்? முதலாளி என்று ஒரு கூட்டம் ஏன் இருக்க வேண்டும்? இது யாருடையக் கட்டளை? என்ன அவசியத்தைப் பொறுத்தது?" என்று அவர்களை நாம் முதலில் கேட்கிறோம்.

பிறகு பாடுபடுபவன், சோம்பேறி, கஷ்டப்படுபவன், சுகப்படுபவன்,





RangaRakes tamilnavarasam.com

வேலைசெய்பவன், வேலையின் பயனை அனுபவிப்பவன், ஏமாறுகிறவன் ஏமாற்றுகிறவன் என்பன போன்ற பிரிவுகள் மனித வாழ்க்கையில் இருக்கும் படியாகவே வாழ்க்கைத் திட்டத்தை வகுக்க வேண்டும் என்பதற்கு ஏதாவது அவசியமும் ஆதாரமுமுண்டா என்பது நமது இரண்டாவது கேள்வியாகும்.

மனிதன் தொழில் செய்வது என்பது மனித வாழ்க்கையின் சௌகரியம் அல்லது தேவையின் அவசியம் என்பதிற்காகவா? அல்லது முதலாளி, மிராசுதாரன் ஆகியவர்கள் வேலை செய்யாமல் சம்பாதிக்கவோ பணம் சேர்க்கவோ வேண்டிய அவசியத்திற்காகவா என்பது மூன்றாவது கேள்வியாகும்.

இம்மூன்று கேள்விகளுக்கும் பதில் அறிந்தோமானால் வேலை என்பதும், வேலையில்லாத் திண்டாட்டம் என்பதும் ஒருவனை ஒருவன் கொடுமைப் படுத்துவதுதான் இந்த முறைகள் என்பதும் விளங்கிவிடும்.

இவை ஒருபுறமிருக்க வேலைகளின் கூலிகளை உயர்த்தி, வேலை நேரத்தைக் குறைத்து, முதலாளிகளின் லாபத்தையும் குறைத்து, ஒரு வரையரை ஏற்படுத்தி, உள்ள நேரத்தையும் கூலியையும் எல்லா வேலைக்காரர்களுக்கும் பங்கு வரும்படியான ஒரு திட்டம் போடுவோமேயானால் அதாவது மோட்டார் பஸ்காரர்கள் யூனியன் வைத்து வருகின்ற பிரயாணி கள் சத்தத்தை உயர்த்தி கிடைத்த வாடகையை எல்லோரும் பங்கிட்டுக் கொள்வதுபோல் செய்தால் வேலையில்லாத் திண்டாட்டம் தானாகவே ஒருவாறு ஒழிக்கப்பட்டு விடுமா இல்லையா என்று கேட்கின்றோம்.

நிற்க, இன்றைய வாழ்க்கை நிலைமையைப் பார்த்தால் மனிதன் வேலை செய்வதற்காகவே பிறருக்கு அடிமையாய் உழைப்பதற்காகவே மனிதன் பிறந்திருக்கிறானேயொழிய சுகப்படுவதற்கில்லையென்றும் ஆதலால் அவன் வேலைசெய்வதற்காக ஒரு தொழில் கண்டு பிடித்துக் கொடுக்க வேண்டுமென்று தான் ஏற்படுகின்றது. இதுவும் தான் வயிற்றுக்கு வேண்டிய அளவு கூட கிடைக்க முடியாத கூலிக்கு முழுநேரத்தையும் செலவு செய்து பாடுபட வேண்டும் என்பதாகக் காணப்படுகின்றது. இது பகுத்தறிவில்லாத மிருக வாழ்வைவிட மிக மோசமான வாழ்வேயாகும். எப்படி எனில் அவற்றிற்காவது (ஒரு காரண்டி) உத்திரவாதம் இருக்கின்றது. அதாவது அதன் எஜமான் வயிறு நிறைய அதற்கு வேண்டிய ஆகாரம் கொடுக்கக் கட்டுப்பட்டிருக்கின்றான். மனித வேலைக்காரனுக்கோ உத்தரவாதமே கிடையாது. இன்னும் பட்சிகள், காட்டு மிருகங்கள் ஆகியவை களில் எதற்கும் எவ்வித வேலையும் செய்யாமல் வாழும் சவுகரியமிருக் கின்றது.

இப்படி இருக்க பகுத்தறிவு இருக்கும் காரணத்திற்காக மனிதன் 100க்குத் 90பேர் ஆகாரத்திற்கே வேலை செய்ய வேண்டியது என்பதும்



அதுவும் காரண்டி இல்லாத அடிமையாய் இருந்து வேலை செய்வது என்பதும், அதுவும் சரியாய் கிடைக்காமல் பட்டினியாய் கஷ்டப்படுவது என்பதும் இயர்க்கைக்கு மாறுபட்ட ஒரு பெரிய அக்கிரமமாகும். ஆகவே வேலையில்லாக் கஷ்டம் ஏற்பட்டு ஜனங்கள் பட்டினி கிடந்து பரதவிக்க ஆரம்பித்தால்தான் "தங்களுக்கு பகுத்தறிவும் வன்மையும் இருந்தும் தாங்கள் முட்டாள் தனமாய் பாடுபடுவதும் தங்களைப் போன்ற பிரரால் ஏய்க்கப்படுவதும் ஏன்?" என்கின்ற காரணத்தை உணர முடியும். உணர்ந்து சமநிலையை அடைய முயற்சிக்கவும் முடியும்.

அதை விட்டு விட்டு "முதலாளி தொழிலாளி நிலைமையும், மிராசுதாரர் உழவன் நிலைமையும் உலக வாழ்க்கையின் சௌகரியத்திற்கு அவசியம்" என்பதாகச் சொல்லி அதுவும் "கடவுள் செயலால் முன் ஜென்மத்தின் கர்ம பயனால் தலைவிதியால் ஏற்பட்டது" என்று சொல்லிக் கொண்டு அவற்றை நிலை நிறுத்திக் கொண்டே எவ்வளவு கூலி வாங்கிக் கொடுத்தாலும் மனித வர்க்கத்தினரில் பெரும்பான்மையானவர்களின் கவலையும், தொல்லையும், கொடுமையும் ஒழியவே ஒழியாது. எப்படியெனில் ஜாதி வித்தியாசத்தை வைத்துக் கொண்டு எவ்வளவு சமத்துவம் கொடுத்தாலும் அது எப்படி பயன்படாதோ அது போலவே முதலாளி தொழிலாளி முதலிய பாகுபாடுகளை வைத்துக் கொண்டு அவர்களுக்குக் கொடுக்கும் எவ்வித சுதந்திரமும் பயன்படாமலேயே போய்விடுவதோடு கீழ்நிலை மேல்நிலை என்பதும் மாற்ற முடியாததாகிவிடும். ஏனெனில் தொழிலாளி, முதலாளி, உழவன், ஜமீன், மிராசுதாரன் என்பவைகளும் ஒருவித வருணாச்சிரம தர்மமே தவிர வேரல்ல. ஆச்சிரமங்கள் என்றாலே படிகள் நிலைகள் என்பதுதான் கருத்தாகும்.

நமது நாட்டில் பிறவியிலேயே பல படிகள் இருப்பதாலும் அதனாலேயே நாம் சதா கஷ்டப்படுவதாலும் தொழில் வாழ்க்கையில் உள்ள படிகளை நாம் கவனிக்கவே நேரமும் ஞாபகமும் இல்லாதவர்களாய் இருக்கின்றோம். மனிதன் உண்மையான சமத்துவமடைய வேண்டுமானால் பிறவிப் படிகளையும் தொழில் படிகளையும் கடந்தவனாகத் தான் இருக்க வேண்டும். அவ்விரண்டு படிகளையும் ஒழித்த - அவ்விரண்டு படிகளையும் ஒழிந்த நிலைதான் சமதர்ம நிலையென்று சொல்லப்படுவதாகும்.

நிற்க, இவற்றிற்கெல்லாம் முக்கியமாக இன்னொரு விஷயமுண்டு. அதை சரியாக உணர்ந்து கவனித்தோமானால் மேல்கண்ட கஷ்டங்களைப் பற்றிய கவலைகள் கூட நாம் அதிகம் பட வேண்டிய அவசியமிராது. அதென்னவெனில், யோசனை யில்லாமல் கண்ட கண்டபடி ஜனத்தொகையை விர்த்தி செய்வதாகும்- பிள்ளைகளைப் பெருவதாகும். 2 ஏக்கரா பூமி உள்ளவன் 100 மாடுகளை வாங்கி வளர்ப்பானேயானால் எப்படி அவனால் அந்த மாடுகள் போதிய தீனி கிடைத்து ரக்ஷிக்கப்பட முடியாதோ அது



RangaRakes tamilnavarasam.com

போலவே மனித சமூகமும் தேவைக்கும் தன்னால் தாங்குவதற்கும் அதாவது காப்பாற்றக் கூடியதற்கும் அதிகமாகவும் தேசத்தின் கால நிலைமைக்கு மேலாகவும் பிள்ளைகளைப் பெற்று கஷ்டப்பட்டு தனது ஆகாரத்தில் பங்கு கொடுத்து கடைசியில் இருவருக்கும் போதுமான ஆகாரமில்லாமலும், போதுமான ஆதரிப்பு இல்லாமலும் கஷ்ட்டப்பட்டுக் கொண்டிருப்பதை ஒழிக்காமல் வீணாய் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதில் என்ன பயன் என்பது முக்கியமாய் கவனிக்கத் தக்கதாகும்.

இந்திய நாட்டு நிலைமை நமக்குத் தெரிய சுமார் 40, 50 வருஷ காலமாகவே மக்களுக்கு "வேலையில்லாமல்" வெளிநாடுகளுக்கு கூலியாகச் செல்வதே வழக்கமாக இருந்து வந்திருக்கின்றது. இது மாத்திரமல்லாமல் அடிக்கடி பஞ்சமும் கொள்ளை நோயும் வந்திருக்கிறது. இது இந்த நாட்டு சுயமரியாதைக்கே மிகவும் கேடானதாகும். அளவுக்கும், சக்திக்கும் மீறி பிள்ளைகளைப் பெருவதால் யாருக்கு என்ன லாபம்? என்று யோசிக்க வேண்டும்.

"உலகம் விர்த்தியாக வேண்டாமா" என்கின்ற சொல் சுத்த முட்டாள் தனமானதும் சிறிதும் பொருளற்றதுமான சொல்லே ஒழிய அது ஒரு கவனிக்கத்தகுந்த சொல் அல்ல வென்பதே நமது அபிப்பிராயம். சம்போக விஷயங்களில் கவலையற்றும், முரட்டுத்தனமாயும், அளவுக்கு மீறியும் நடந்து கொள்வதால் மனிதர்களுக்கு ஏற்படும் வியாதிகளைப் போலவே தான் குழந்தைகள் ஏற்படுவதும் என்பதே தவிர அதற்கும் இதற்கும் சிறிதும் வித்தியாசமே இல்லை. சம்போக உணர்ச்சி இந்த உலகத்தில் உள்ள ஜீவ ஜந்துக்களில் மனிதனைத் தவிர வேறு எந்த ஜீவனுக்கும் குழந்தை பெறுவதற்காக என்கின்ற எண்ணத்தின் மீது தோன்றுவதே கிடையாது. மனிதன் பகுத்தறிவுக்காரன் என்கின்ற ஆணவத்தால் அவனுக்கு ஏற்படும் அநேக முட்டாள் தனமான செய்கைகளைப் போல் குழந்தை பெற வேண்டும் என்ற முட்டாள் தனமும் ஏற்பட்டு அது ஒரு ஆசையாகி பிறகு அது ஒரு சொத்தாகி பிறகு "மோக்ஷத்திற்கு" உதவும் காரியமாகவுமாகி கடைசியாய் வீண் கஷ்டமும் தொந்தரவும் பட்டு மற்றவர்களுக்கும் தொந்தரவு கொடுத்த தைக் கொடுப்பதைத் தவிர வேறு ஒரு பயனும் இல்லாததாய் முடிந்து விடுகிறது.

மேலும் பிள்ளை பெருவதினாலேயே மொத்த ஜன சங்கியையில் பகுதியான பெண்கள் சமூகம் அடிமையாகி அனேக ஆபத்துகளுக்கும் வியாதிக்கும் உள்ளாகி அற்ப ஆயுளுடன் கஷ்டமும் படவேண்டியதாகி அவர்களது வாழ்வே மிக்க பரிதவிக்கத்தக்க வாழ்வாக முடிகின்றது. பெண் அடிமைக்கு காரணம் அவர்கள் பிள்ளை பெறுவதும், அதிலும் அதிகமான பிள்ளைகளைப் பெருவதும் அதனால் உடல் நலிந்து பலவீனமுடையவர்களாவதும், பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டிய பொருப்பு தங்களுக்கே என்று கருதுவதால் சுதந்திரமும் வீரமும் இன்றி அடிமையாவதுமான காரியங்களுக்கு ஆளாக வேண்டியவர்களுமாகிறார்கள். பெண்கள் விஷயம் இப்படி இருப்பதோடு பொதுவில் வேலையில்லா கஷ்டத்தை நீக்க வும் மக்கள் கவலையும் தொல்லையும் கஷ்டமும் இல்லாமல் இருக்கவும் பிள்ளைப் பேற்றைக் குறைப்பது என்பது ஒரு தக்க வழியாகும்.



ஒரு சமயம் இவையெல்லாம் யாருக்காவது பிடித்தமற்றதாகுமேயானால் வேறு இன்னம் ஒரே ஒரு வழிதான் உண்டு என்று சொல்லுவோம். அதென்னவெனில் எவனொருவன் தன் தேவைக்குமேல் சொத்தும் ஸ்திதியும் வைத்திருக்கின்றானோ அவனை குற்றவாளியாக்கி திருடனுக் குண்டான தண்டனையைக் கொடுப்பது என்கின்ற ஆக்ஷியை ஏற்படுத்து வதுதான்.

இந்த ஆக்ஷி ஏற்பட்டுவிட்டால் பிறகு யாருக்கு வேலை இருந்தா லும் யாருக்கு வேலை இல்லாவிட்டாலும் ஜீவனம் சரியாகும். இதற்காக அதிக கவலையும் படவேண்டியதில்லை. இந்தப்படிக்கெல்லாம் இல்லாமல் நாட்டு செல்வத்தை எல்லாம் ஒருவன் தன்னிடமே வந்து சேரும்படியான முறையை மனித வாழ்க்கைக் கொள்கைகளாக வைத்துக் கொண்டு பல பேர்கள் பட்டினி இருந்து கொண்டு இருப்பதும், ஏன் பட்டினியாயிருக் கிறார்கள் என்று கேட்டால் வேலைகள் கிடைக்காததால் பட்டினியாய் இருக் கின்றார்கள் ஆதலால் யந்திரங்களை எல்லாம் ஒழித்து விட்டு கடப்பாரை யும், சம்மட்டியும் வாங்கிக் கொடுத்து வேலை வாங்க வேண்டுமென்றும் சொல்வதானால் இது எவ்வளவு அக்கிரமமானதும் அயோக்கியத்தன மானதும் திருட்டுத்தனமானதுமான காரியம் என்பது யோசித்தால் விளங்காமல் போகாது. ஆகையால் நாட்டுக்கும் முற்போக்குக்கும் மனித சமூக நாகரீக வளர்ச்சிக்கும் யந்திரங்கள் மிகவும் முக்கியமானது என்று சொல்வ தோடு அவற்றின் மூலம் மக்கள் சரீரப் பிரயாசையில் இருந்து விடுதலையாக நினைப்பதுவும் இயற்கையும், அவசியமும் ஆனதென்றும் சொல்லுவதோடு எஜமான், வேலைக்காரன், முதலாளி, தொழிலாளி, ஜமீன்தாரன், குடியான வன் என்பவைகளான படிகள் நிலைத்திருக்க வேண்டுமானால் மாத்திரம் தான் ஒரு நாட்டுக்கு யந்திரம் எதிரியே ஒழிய மற்றபடி சமதர்மம் விரும் பும் நாட்டுக்கு யந்திரமே சரியான அவிழ்தமாகும் என்றும் தைரியமாய்ச் சொல்லுவோம்.

**குடி அரசு – தலையங்கம் – 14.12.193**



RangaRakes tamilnavarasam.com

# K. P. K. மேனனுக்கு ஜே!

## பார்ப்பனத் தொல்லைக்கு உதாரணம்

உயர்திரு பாரிஸ்டர் கே.பி.கேசவமேனனவர்கள் இந்தியாவில் சிறப்பாகத் தென்னிந்தியாவில் ஒரு பிரபல வக்கீலாகவும், ஒரு பெரிய தேச பக்தராகவும் தியாகியாகவும் இருந்து வந்ததும் அவரது தேசபக்தி காரணமாக மாதம் 1000 கணக்கான ரூபாய்கள் வரும்படி உள்ள தமது வக்கீல் தொழிலை நிறுத்தி தனது செல்வமெல்லாவற்றையும் இழந்து, மனைவியையும் இழந்து மிக்க கஷ்டமான பரிசோதனைக்கெல்லாம் ஆளான ஒரு உண்மை தேசபக்தர் என்பதும், திரு. காந்தியவர்களுக்கும் மிகவும் நம்பிக்கை உள்ள சகாவாகவும், கேரள காங்கிரசு ஸ்தாபனத்தின் டிக்டேட்டராகவும் இருந்த ஒரு யோக்கியமும், கீர்த்தியும் வாய்ந்தவர். அஹிம்சையில் மிக்க நம்பிக்கை யுமுடையவர். சமுதாய சீர்திருத்த விஷயத்தில் திருவனந்தபுரம் சமஸ்தானத் தில் தமது சமுகமான நாயர் சமுகத்திற்கே விரோதமாக வைக்கம் கோவில் தெருவில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிமை வாங்கிக் கொடுக்க தீர்மா னித்து மற்றும் சில பாரிஸ்டருடனும், பி. எ. பி. எல். வக்கீல்களுடனும் சத்தி யாக்கிரகம் துவக்கி அவ்வரசாங்கத்தாரால் 6 மாதம் காவலில் வைக்கப் பட்டாலும் சிறையில் மிக்க கௌரவமாய் நடத்தப்பட்டு தண்டனை காலம் தீருவதற்கு முன்பாகவே விடுதலை செய்யப்பட்டு அவர் கோரியபடியே திருவாங்கூர் அரசாங்கம் இணங்கி வந்து வைக்கம் தெருக்களை பொதுஜன நடமாட்டத்திற்கு எல்லோருக்கும் பொதுவாய் விட்டு விட்டதுடன் மற்றும் பல ரோட்டுகளையும் எல்லா ஜாதியாருக்கும் பொதுவாக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.

ஆகவே இவைகளிலிருந்து திரு. கே.பி. கேசவ மேனன் அவர்களின் யோக்கியமும், முயற்சியும் எப்படிப்பட்டதென்பது யாரும் நன்றாய் உணரலாம். அன்றியும் அவர் தென்னிந்தியாவிலுள்ள கௌரவமான கனவான்களில் ஒருவராகவும், எல்லா கௌரவமான கனவான்களின் சிநேகிதராகவும், ஐகோர்ட் ஜட்ஜ், திவான். நிர்வாக சபை மெம்பர்கள் முதலியவர்களுடன் நெருங்கிப் பழகினவராகவுமிருந்து வந்ததும் இம் மாகாணத்தாருக்கு நன்றாய் தெரியும். இந்தப்படி உள்ள இவர் இங்கு வக்கீல்



தொழில் நடத்துவது என்பது பிடிக்காமல் ஏனெனில் இவ்விடத்திய நியாயாதிபதிகள் பெரிதும் பார்ப்பனர்களாக ஏற்பட்டு வருகின்றபடியாலும், அவர்களில் பெரும்பாலோர் பார்ப்பனச் சலுகையிலிருப்பதாகவும் மற்றும் பல காரணங்களாலும் அவருக்கு ஏற்பட்ட சில குடும்ப துக்கத்தாலும் இந்தியாவிலிருக்க மனமில்லாமல் மலேயா நாட்டுக்குப் போய் தனது தொழிலை கண்ணியமாய் நடத்திவரலாமென்று கருதி அங்குள்ள நியாயாதி பதிகளின் நேர்மை குணத்தை நம்பி மலேயா நாட்டுக்குச் சென்றால் அங் கும் இவ்விடத்திய பார்ப்பனர்களே தொல்லை கொடுக்க ஆரம்பித்து அவருக்குப் பல உபத்திரவம் செய்து வருவதாகத் தெரிகிறது. இதைப்பற்றி முன்னொரு தடவையும் குறிப்பிட்டிருக்கின்றோம்.

அதாவது திரு. கே. பி. கேசவ மேனனவர்கள் மீது மலாய் நாட்டு வக்கீல்களில் சிலர் பொறாமை காரணமாக குறிப்பாய் சொல்ல வேண்டு மானால் ஒரு பார்ப்பனரின் கிருத்துருவத்தின் மீது அவரை F.M.S. கோர்ட்டு களின் வக்கீல்கள் சங்கத்தில் சேர்க்கக் கூடாதென்று பல முயற்சிகள் செய்யப் பட்டன. அதென்னவெனில் திரு. கே. பி. கே. மேனன் ராஜத்துரோகி என்றும், அவர் சிறை சென்றவர் என்றும், வக்கீலாயிருக்க லாயக்கற்ற வரென்றும், தொழிலாளர்களை தூண்டிவிட்டு கலகம் செய்பவரென்றும், பல மாதிரியான விஷமப் பிரசாரங்கள் செய்து அவரை அங்கு அனுமதிக்காமல் இருக்கும் படியாகச் செய்யப் பல விதத்திலும் பலமாக முயற்ச்சித்தார்கள். எவ்வளவு சூட்சி செய்தும் கடைசியாக திரு. மேனன் அவர்கள் ஆதியில் எதிர்பார்த் தது போலவே மலாய் நாட்டு ஜட்ஜிகளின் நேர்மை குணத்தால் வெற்றி பெற்று அந்த நாட்டு நீதிவாத வக்கீலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டார் என்ற சேதி கேட்டு மிக்க மகிழ்ச்சி யடைகின்றோம். திரு. கே.பி.கே. மேனன் அவர்களையும் பாராட்டுவதோடு மலாய் நாட்டுத் தலைமை நீதிபதி அவர் கள் பார்ப்பது போலவே நாமும் அவர் மலாய் நாட்டுத் திலகமாய் விளங்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 14.12.1930**



RangaRakes tamilnavarasam.com

# ஜாதி முறை

## ஜாதிப்பெயர் கொடுக்க வேண்டிய அவசியமில்லை

சமீபத்தில் வரப்போகும் சென்சஸில் ஜன கணிதமெடுக்கும் சந்தர்ப் பத்தில் கணக்கு எடுக்க வருபவர் ஜாதிப் பெயரைக் கேட்டால் அதற்கென்ன பதில் சொல்வதென்றும், அவர்களிடம் தனக்கு ஜாதி இல்லை யென்று யாராவது சொன்னால் அது சென்சஸ் சட்டப்படி குற்றமாகாதா என்றும் மற்றும் பலவிதமாக பல கனவான்களிடமிருந்து கடிதங்களும் பலர் கையொப்பமிட்ட மகஜர்களும் நமக்கு வந்திருக்கின்றன. இதைப் பற்றி அறிந்து கொள்ள லாகூர் ஜாதி ஒழிக்கும் சங்கத்தார் இந்திய கவர்ன்மெண் டுக்கு அனுப்பிய விண்ணப்பத்திற்கு கவர்ன்மெண்டார் அனுப்பிய பதிலை நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அப்பதிலில் குறிப்பிட்டிருப்பதென்ன வென்றால்,

> "ஜாதி வித்தியாசம் ஒழிபட வேண்டுமென்னும் விஷயத்தில் கவர்ன் மெண்டுக்கு மிக்க அனுதாபம் உண்டு. ஆனால் ஜாதி வித்தியாசப் பிரிவுகளை சென்சஸ் குறிப்பில் குறிப்பிடாததினால் மாத்திரமே ஏதாவது பலன் உண்டாய் விடும் என்று எண்ணுவதற்கில்லை. ஆன போதிலும் கல்யாண விஷயத்திலும் சாப்பாட்டு விஷயத்திலும் ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் ஜாதிக் கொள்கையை உண்மையாய் அடி யோடு விட்டு இருக்கின்றவர்கள் தங்களுக்கு ஜாதி இல்லையென்று சொன்னால் அதை ஜனக் கணக்கு எடுப்பவர்கள் (அதாவது என்யூமிரேட்டர்கள்) ஒப்புக் கொண்டு அந்தக் கலத்தில் ஜாதியில்லை அதாவது Nill என்று பதிவு செய்து கொள்ளலாம்."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இது தற்சமயம் நமக்குப் போதுமானதாகும். ஏனெனில் தங்களுக்கு ஜாதி இல்லையென்று கணக்குக் கொடுக்க இஷ்டமுள்ளவர்கள் சர்க்கார் நிபந்தனைக்குப் பயந்து அதாவது ஜாதிப்பெயர் கொடுக்கா விட்டால் ஏதாவது ஆபத்து வருமோ என எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு இது தைரியத்தைக் கொடுப்பதாகும்.



ஆதலால் ஜாதி வித்தியாசம் மனதில் மாத்திரமல்லாமல், அனுபவத் திலும் பாராட்டாமலிருக்கின்றவர்கள் தைரியமாய் என்யூமரேட்டர்கள் – கணக்கெடுப்பவர்களிடம் தங்களுக்கு ஜாதியில்லை அல்லது (Nill) நில் என்று சொல்லிவிடலாம் என்பது விளங்கும்.

அதுபோலவே மதம் என்ன என்று கேட்கும் போதும் தைரியமாய் தங்களுக்கு மதம் இல்லையென்று சொல்லிவிடலாம். இதை மீறிக் கணக்கெடுப்பவர்கள் ஏதாவது சொல்லித்தானாகவேண்டுமென்று கேட்டால் "பகுத்தறிவு மதம்" (Rationalist) என்று சொல்லி விடலாம்.

ஆதலால் யாரும் சர்க்காருக்கு பயந்து கொண்டு உண்மைக்கும், தங்கள் உணர்ச்சிக்கும் விரோதமாய் ஜாதிப் பெயரோ, மதப் பெயரோ கொடுக்க வேண்டும் என்கின்ற அவசியமில்லை.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 14.12.1930**



RangaRakes tamilnavarasam.com

# கரூரில் சுயமரியாதைப் பிரசாரம்

ஸ்தல ஸ்தாபனங்களில் நாமினேஷன் எடுபட்டதானது ஏழைகளுக்கு மிகவும் நன்மையானதாகும். கவுன்சிலர்கள் எண்ணிக்கை அதிகமாகி எலக்ஷன் காலாவதியும் குறைந்து அடிக்கடி எலக்ஷன் நடப்பதாயிருந்தால் இன்னமும் நல்லதென்றே ஏழைகள் சந்தோஷப்படுவார்கள். ஏனெனில் எலக்ஷன் வரும்போதெல்லாம் பணம் கிடைக்கும் என்ற ஆசைதான். எலக்ஷனில் நிற்பவர்களும் ஓட்டுக் கேள்க்கும் போது ஓட்டர்களை கெஞ்சுவதும், பார்ப்பதும் தவிர மற்ற காலங்களில் ஓட்டர்களை கவனிப்ப தேயில்லை. நமது எலக்ஷன்களால் அனேக பெரிய குடும்பங்கள் கெட்டுப் போய் இன்சால்வெண்டு கூட ஆகியிருக்கின்றன. அநேக குடும்பங்கள் கடனில் மூழ்கியிருக்கின்றன. எங்கள் ஜில்லாவில் ஒரு தாலூக்காவில் தாலுகா போர்ட் எலக்ஷனினாலேயே அத்தாலூக்கா பணக்காரர்களில் சுமார் 20, 30 குடும்பங்கள் வரையில் சுமார் 15 ஆயிரம் முதல் ஒண்ணரை லக்ஷ ரூபாய் வரையில் கடன்காரர்களாக ஆகி இருக்கிறார்கள்.

இந்தப் போட்டிக்காரர்களுக்குள்ளும் இந்த மாதிரி எலக்ஷனுக்கு செலவு செய்து பதவி பெற்றவர்களுக்குள்ளும் நூத்துக்கு 4, 5 பேர்களுக்குக் கூட ஸ்தல நிர்வாக விஷயம் சரியாய் தெரிந்து பொருப்புடன் நிர்வகிக்கக் கூடிய ஞானமும் சவுகரியமும் இருக்குமோ என்பது சந்தேகமான காரியமே யாகும். இதன் பயனாய் கட்சி இல்லாத ஜில்லாவோ, தாலூக்காவோ, டவுனோ, கிராமமோ மிகவும் அறிது என்றே சொல்லலாம். ஆன போதிலும் இந்த எலக்ஷன்களால் மற்றொரு நன்மை உண்டு என்பதையும் நான் மறைக்க வில்லை. அதாவது கிராமத்து மிராசுதாரர்களுக்கு இந்த எலக்ஷன்களில் ஊக்கம் ஏற்பட்டதாலும் அதனால் பட்டணங்களுக்கும், நகரங்களுக்கும் போய் பல பேர்களுடன் பழக வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதாலும், அவர்களுக்கு சற்று விஷய ஞானம், கல்வி, அறிவு முதலியவைகள் அடை வதற்கு இடம் ஏற்பட்டு முன்போன்ற காட்டு ராஜாத்தனமில்லாமல் சற்று நாகரீகமடைகின்றார்கள் என்பதும், மற்றும் தாசி, வேசி முதலிய காரியங் களும், கலகம், காலித்தனம் முதலிய காரியங்களும் அடியோடு விலக சந்தர்ப்பங்களும் அளிக்கின்றன. எலக்ஷன் இல்லாவிட்டால் இதில் செல வாகும் நேரமும், ஊக்கமும், முயற்சியும். பணமும் வேறு காரியங்களில்தான்



செலவாக வேண்டியதாகிவிடும்.

சாதாரணமாக சட்டசபை தேர்தல்களினாலேயே அநேக ஜமீன் தாரர்கள் யோக்கியர்கள் ஆகியிருக்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகையால் எலக்ஷன்கள் உத்தேசித்து பலன் கொடுக்கா விட்டாலும் வேறு பல நன்மைகள் கொடுப்பதால் அது இருக்கலாம் என்றே அபிப்பி ராயப்படுகின்றேன்.

தவிர ஸ்தல ஸ்தாபனப் புதிய சட்டத்தில் உள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைப் பற்றிச் சிலர் குறை கூறுகின்றார்கள். நம்பிக்கையில்லாத தீர்மானம் சற்று தொந்திரவு செய்வதாகக் காணப்படுவது உண்மையானாலும் ஸ்தல ஸ்தாபன இலாக்கா அரசாங்கம் பொருப்பற்றதும், சுய நலத்திற்காக நியாயத்தை தியாகம் பண்ணித் தீர வேண்டியதாயும் ஏற்பட்டுவிடுவதாய் இருப்பதால் இம்மாதிரி ஒரு தீர்மானம் இருந்தாலொழிய தலைவர்களை யோக்கியமாய் நடந்து கொள்ளும்படி செய்ய வேறு மார்க்கமே கிடையாது.

அயோக்கியர்கள் ஏதாவது சூட்சியின் பயனாய் தலைவர்களாக வந்து விட்டால் 5 வருஷ காலத்துக்கு அவரது அயோக்கியத்தனத்தில் இருந்தும் நாணையக் குறைவில் இருந்து தப்பி நிர்வாகம் ஒழுங்குப்பட வேறு வசதி யேயில்லாமல் இருப்பது மிகவும் அனியாயமாகும். எனது அபிப்பிராயம் பிரதிநிதியாய் தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் அதாவது கவுன்சிலர் கள், மெம்பர்கள் கூட ஓட்டர்களின் மெஜாரிட்டி ஓட்டர்களால் நம்பிக்கை இழந்து விட்டால் அல்லது அந்த தொகுதியின் மெஜாரிட்டி மெம்பர்கள் சம்மதமில்லையென்று தெரிவித்துவிட்டால் மெம்பர்கள் தங்களுடைய அந்த ஸ்தானத்தை காலி செய்து விடும்படியாக சட்டம் செய்ய வேண்டு மென்பதே யாகும். நான் ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால் அதனால் ஏற்பட்ட கஷ்டங்களை நான் நன்றாய்ப் பார்த்து இருக்கின்றேன். ஒரு உதார ணமாக எங்கள் ஊர் முனிசிபாலிட்டியையே வேண்டுமானாலும் காட்டுகின் றேன். முதலாவது எலக்ஷனிலேயே புரட்டுகளும் அனியாயங்களும் செய்து தன்னை தப்பாய் விளம்பரம் செய்து கொண்ட ஒரு சேர்மெனின் 3 வருஷ ஆட்சியில் மிக்க செல்வம் பொருந்திய ஈரோடு முனிசிபாலிட்டி பாப்பராகி முனிசிபல் சிப்பந்திகளின் சம்பளத்திற்கே கூட பணமில்லாமல் திண்டாட்டமாகிவிட்டது. அந்த சேர்மெனின் திருட்டுகளையும் புரட்டு களையும் பணங்களை கையாடியவைகளையும் தனது லாபத்துக்காக முனி சிபல் கவுன்சிலர்கள் சம்மந்தமில்லாமல் பல வேலைகளை உண்டாக்கிக் கொண்டு அதன் மூலம் கொள்ளை அடித்ததையும் கைப்பிடியாய் கவுன் சிலர்கள் பிடித்துக் கொடுத்தார்கள். மொத்தம் 20 கவுன்சிலர்களில் 12 கவுன் சிலர் ஸ்தல ஸ்தாபன மந்திரியிடம் நேரில் சென்று இந்த திருட்டுக்களையும், நாணயக் குறைவுகளையும் எல்லாவற்றையும் ஆதாரத்தோடு எடுத்துக் காட்டினார்கள். இது விஷயமாய் இவற்றிற்கு ஆதாரமாய் கணக்கு பரிசோத



RangaRakes tamilnavarasam.com

கர்கள் அறிக்கைகளில் காணப்பட்ட விஷயங்களை எல்லாம் எடுத்துக் காட்டப் பட்டது அவை மிக்க பலமான குற்றங்களாகும். 2 வருஷம் 3 வருஷம் தண்டிக்கக் கூடியவைகளாகும். மேலும் அதாவது முனிசிபல் ரிக்கார்டுகளில் திருத்தமும் நுழை வரியும் பொய் பில்லுகளும் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு எடுத்துச் சொல்லப்பட்டது. அப்படியெல்லாம் இருந் தும் அந்தக் காலத்திய ஸ்தல ஸ்தாபன அரசாங்கம் லட்சியம் செய்யவே இல்லை. அதோடு மாத்திரம் அல்லாமல் இம்மாதிரி யோக்கியதை உள்ள சேர்மன் விஷயத்தில் பச்சாதாபப் பட்டு "பிள்ளைக் குட்டிக்காரர் பிழைத் துப் போகட்டும்" என்றே கருதிவிட்டது. கவுன்சிலர்கள் நம்பிக்கை இல்லா தீர்மானம் அனுப்பிய காலத்திலும் அதை சேர்மென்டிஸ் அலவு (தள்ளி விட்டார்) செய்து விட்டார். கடைசியாக ஷை 12 கவுன்சிலர்களும் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தார்கள். அவர்களில் நியமனமான கவுன்சிலர் களும் உண்டு. ராஜினாமா செய்த பிறகும் ஸ்தல ஸ்தாபன அரசாங்கம் லட்சியம் செய்யவே இல்லை. இந்த நிலை அந்த சேர்மெனுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் ஆகி முன்னிலும் அதிகமாக அக்கிரமம் செய்து அந்த முனிசிபாலிட்டி பொருளாதார விஷயத்தில் ஒரு 10 வருஷத் திற்கு தலை எடுக்க முடியாதபடி அவ்வளவு பாப்பராகிவிட்டது. சர்க்கா ருக்கு கொடுக்க வேண்டிய வாய்தா கடன்கள் கொடுக்க முடியவில்லை. வட்டி கட்ட முடியவில்லை. ஜில்லா போர்டுகளுக்கு வருஷா வருஷம் கொடுக்கக்கூடிய விகிதாச்சார பாகம் கூட கொடுக்க முடியவில்லை. மேலும் தனித்தனி இலாக்காக்களுக்கு ஒதுக்கி வைத்த பணங்கள் எல்லாம் கண்டபடி வேறு இலாக்காக்களின் பெயரால் பாழாக்கப் பட்டும் கையாடியும் போய் விட்டது. அவசியமான காரியங்கள் செய்ய பணமே இல்லாமல் போய் விட்டது. இந்த அனியாயங்களை ஒழிக்க கவுன்சிலர்களாலாவது ஊர் மகா ஜனங்களாலாவது ஒன்றுமே செய்ய முடியவில்லை. கடைசியாக அந்த சேர்மெனை தேர்தல் சட்டமுறையில் கோர்ட்டு நடவடிக்கையால் சுமார் 4, 5 ஆயிரம் ரூபாய் செலவழித்து பிரகு ஒழிக்கப்பட்டது. இந்த மாதிரி ஆசாமிக்கு அனேக பெரிய மனிதர்கள் உத்தியோகஸ்தர்கள் சிபார்சுகள் வந்து பொது ஜனங்களுக்கு மிக்க கஷ்டத்தை உண்டாக்கி விட்டது. இப் போது ஒரு யோக்கியமான நாணயமான சேர்மென் இருக்கிற காலத்தில் பழய அக்கிரமங்களுக்காக இப்போது ஈரோடு முனிசிபாலிட்டியை ஏன் கலைத்து சர்க்கார் மேல்பார்வை யில் நடத்தக்கூடாது என்கின்ற மாதிரியில் கேள்வி கேள்க்கும்படியாய் இருக்கின்றது. இதை எல்லாம் பார்க்கும்போது நம்பிக்கை இல்லாத் தீர்மான சட்டம் சுமார் 10 ஷுங்களுக்கு முன்னாலேயே ஏற்பட்டிருக்குமானால் பொது ஜனங்கள் வரிப்பணம் எவ்வளவோ மீதியாகி ஸ்தல நிர்வாக தலைவர்களும் எவ்வளவோ யோக்கியர்களாக அமயக்கூடிய மாதிரியில் வந்திருப்பார்கள். ஆதலால் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் இருப்பது நல்லதென்றே சொல்லலாம். ஆனால் சில சமயங்களில் அது தப்பாய் உபயோகிக்கப்பட்டு யோக்கியமாய் இருக்கும் தலைவர்களுக்கும் தொந்திரவு ஏற்பட்டு விடலாம் என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனாலும் அது பெரும்பாலும்



அதற்கு தகுதியானவர்களுக்கே பிரயோகப் படும்படி சீக்கிரத்தில் திருத்தமடைந்து விடும் என்றே கருதுகிறேன். எப்படி எனில் சர்க்காராலோ ஜில்லாபோர்ட் தலைவர்களாலோ நாமினேஷன் செய்யப்படும் அங்கத்தினர்கள் இனிமேல் இல்லை. ஆகையால் ஜனப் பிரதிநிதிகள் பெரும்பான்மையோர் அக்கிரமம் செய்பவர்கள் என்று ஜன நாயக ஆக்ஷி விரும்புகின்றவர்கள் அதில் பங்கெடுக்க ஆசைப்படு கின்றவர்கள் சொல்ல முடியாது. ஒரு சமயம் சிலர் அப்படிச் சொல்ல வருவார் களானால் அப்படிப்பட்டவர்கள் ஜன நாயக ஆக்ஷியில் குற்றம் சொல்லு கின்றவர்கள் அதில் பங்கெடுத்துக் கொள்ளாமல் தாங்களாகவே விலகிவிட வேண்டியதுதானே ஒழிய ஒழுங்காய் நடந்து கொள்ளத் தெரியாதவர்களின் பிரதிநிதியாய் அந்த ஸ்தானத்தில் இருக்க விரும்புவது சுயமரியாதை அற்ற தன்மையே ஆகும். தவிரவும் தன்னை தெரிந்தெடுத்தவர்களே வேண்டாம் என்று சொல்வதை குற்றம் என்று சொல்லுவது நாணையமும் ஆகாது. அப்படி சொல்வது ஒழுங்காகும் என்று சொல்லப்படுமானால் அதே ஓட்டர் கள் முன் தெரிந்து எடுத்ததும் ஏன் தப்பாய் இருக்கக்கூடாது என்கின்ற கேள்வியும் புரப்படலாம். ஒரு நல்ல சேர்மெனையோ, தலைவரையோ மெம்பர்கள் அனாவசியமாக அடிக்கடி நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டு வந்து நீக்குவார்களேயானால் அவர்களை தெரிந்தெடுத்த ஓட்டர் கள் கவனித்து அடுத்தத் தடவை வேறு ஒரு கவுன்சிலரை தெரிந்தெடுப் பார்கள். அல்லது அவர்கள் அதை மெம்பர் மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவிக்கட்டும். அதற்காக நாம் ஏன் எந்த அங்கத்தினர்களால் தலைவரா னோமோ அதே அங்கத்தினரை நம்மை தலைவராக்கிய போது யோக்கியர் என்றும், புத்திசாலிகள் என்றும் சொல்லிவிட்டு நம்மை வேண்டாமென்று சொல்லும்போது மாத்திரம் அவர்களை அயோக்கியர் என்றும் முட்டாள்கள் என்றும் ஏன் சொல்ல வேண்டும் என்று கேட்க்கின்றேன். இந்த அதிகாரம் தெரிந்தெடுப்பவர்களுக்கு இருந்தால்தான் அபேக்ஷகர்கள் பணம் கொடுத்து ஸ்தானங்கள் பெற முயலமாட்டார்கள். ஏனெனில் இப்பொழுது கொடுத்தால் அடிக்கடி மாதா மாதம் பணம் கொடுக்க வேண்டுமே என்கின்ற பயம் இருக்கும். ஆதலால் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நல்ல முறையாகுமே தவிர, தவறல்ல என்பேன்.

*குறிப்பு:- கரூரில் சுயமரியாதைப் பிரசாரம் - குடி அரசு 07. 12. 1930 தொடர்ச்சி*

**குடி அரசு - சொற்பொழிவு - 21.12.1930**



RangaRakes tamilnavarasam.com

# மதங்கள் எல்லாம் செத்துப் போனவைகளே
## சித்திரபுத்திரன்

இன்று உலகில் எந்த மதத்திற்கும் உயிர் கிடையாது, எல்லா மதங்களும் செத்துப் போய் விட்டன. செத்தப் பிணங்களே சடங்கு ரூபமாகவும், வேஷ ரூபமாகவும் நாற்றமெடுத்து அதனால் மனித சமூகத்திற்கு பிற்போக்கு என்னும் வியாதியை கொடுத்துக் கொண்டு வருகின்றன.

உண்மையில் எந்த மதஸ்தனும் அந்தந்த மதக் கட்டளைப்படி நடந்து கொள்ளுவதில்லை, நடந்து கொள்ள முடிவதுமில்லை. உதாரணமாக பௌத்தர்கள், கிறிஸ்த்தவர்கள், இஸ்லாமானவர்கள், இந்துக்கள் என்பவர்கள் சமூகங்களில் எந்த ஒரு மனிதனையாவது மதக் கட்டளைப்படி கண்டிப்பாய் நடக்கின்றவனை காண முடிகின்றதா? முதலாவதாக வேஷத்திலும், சடங்கிலுமே சரியாக நடந்து கொள்ள முடிவதில்லை. மற்ற மக்களிடம் நடந்து கொள்ள வேண்டிய விஷயத்திலும் வாழ்க்கையில் அனுசரிக்க வேண்டிய நிபந்தனையிலும் 100க்கு ஒன்று வீதம் கூட நிர்ணயமாய் நடக்கவோ, ஆசைப் படவோ கூட முடிகின்றவர் காணப்படுவதில்லை. இந்த நிலையில் உள்ள மக்களேதான் இன்று தன், தன் "மதத்தைக் காப்பாற்ற வேண்டும்" "மதத்திற்கு ஆபத்து" என்று சொல்லிக் கொண்டு செத்த பிணத்தை எடுத்துப் போட்டு குழி தோண்டிப் புதைக்காமல் நாற்றத்தில் அழுந்திக் கொண்டு இருக்கிறார்கள். மலத்தில் இருக்கின்ற புழுக்கள் எப்படி மல நாற்றத்தை வெறுக்க முடியாமலும் மற்ற புழுவை இழிவாய்க் கருத முடியாமலும் இருக்கின்றனவோ அது போல் எல்லாம் மனிதர்களுமே மதப் பிண நாற்றத்தில் புரளுவதால் உண்மை உணர முடியாமல் அழுந்துகின்றனர்.

**குடி அரசு - கட்டுரை - 21.12.1930**



# மந்திரிகள் நிலை

**- சித்திரபுத்திரன்**

இனி எந்த மந்திரியும் சுயமரியாதைக்காரர்கள் தயவால் தான் வாழ முடியும், ஏனெனில் அவர்களிடமிருந்த இரண்டு முக்கியமான அதிகாரங்கள் ஒழிந்து விட்டன. என்னவெனில்,

1. நாமினேஷன் அதிகாரம், 2. உத்தியோகம் கொடுக்கும் அதிகாரம் இந்த இரண்டு அதிகாரமும் சாதாரணமாக ஒரு.................. இருந்தால் கூட மக்களில் பணக்காரரும், பிரபுவும், ஜமீன்தாரர்களும், ராஜாக்களும், மிராஸ்தாரர்களும், வியாபாரிகளும், பண்ணைகளும், பிரசிடென்டுகளும், சேர்மென்களும், ஹ க்ஷ ஊ னு படித்த வாலிபர்களும், மந்திரிகளின் வாலைப் பிடித்துக் கொண்டு தாசானுதாசனாகக் கும்பிடு போட்டுக் கொண்டு அவர்களது மூக்கு சளியை யும், கண் பீழையையும் வர்ணித்து சித்திரக் கவி பாடி பஜனை செய்து கொண்டு வலம் வருவார்கள்.

ஆனால், இப்பொழுதோ மேற்கண்ட அதாவது நாமினேஷன் அதிகாரமும் உத்தியோகம் கொடுக்கும் அதிகாரமும் " முண்டச்சிகள் கொப்பம் கரைவது போல்" நாளுக்கு நாள் கரைந்து கொண்டே போய் கடைசியாக உதிரக் கட்டியாக மாறி ஒன்றுமில்லாமல் போய் விட்டது. ஆதலால் அவர்களிடத்தில் இந்த மாதிரி கூட்டத்தார்களுக்கு இனி வேலையோ, மரியாதையோ கூட இருக்க அவசியமில்லை. ஆனாலும் சட்டசபை மெம்பர்கள் தயவு வேண்டும் என்கின்ற ஹோதாவில் சிலருடைய தயவு மந்திரிகளுக்கு வேண்டியிருக்கும் என்பதில் ஆக்ஷேபணை இல்லை.

அந்த சட்டசபை மெம்பர்களும், சுயமரியாதை இயக்கமும் கூடிய சீக்கிரத்தில் அதாவது "காங்கிரஸ்காரர்கள்" தேர்தல்களுக்கு நிற்க ஆரம்பமானவுடனே ஒன்றாய்விடுவார்கள், ஒன்றாகிதான் தீரும். ஆகவே வெகு வேகத்தில் சுத்த சுயமரியாதைக் கொள்கை ஆட்சியே பூரண மந்திரி ஆட்சியாகித் தீரும் என்பதில் சந்தேகமில்லை. அந்தப்படி ஆகும் போதுதான் நாட்டுக்கு, மனித சமூகத்திற்கு உண்மையான நன்மை ஏற்படும்.



RangaRakes tamilnavarasam.com

எப்படி எனில் தீண்டாமை ஒழித்தல், பெண்கள் விடுதலை, ஜாதி ஒழித்தல், எல்லோரும் படித்தல்., மூட பக்தியும் பழக்க வழக்கமும் ஒழித்தல், பகுத்தறிவை வளர்த்தல், சுயமரியாதை உணர்ச்சி ஏற்படுத்தல், பணக்காரர்கள் கொடுமை ஒழித்தல் முதலான காரியங்கள் நடைபெறும். இக்காரியங்கள் இந் நாட்டு மக்களில் 100க்கு 90 மக்களுக்கு பயன்படக் கூடியதும், அவசியமானது மாயிருப்பவைகளாகும்.

**குடி அரசு - கட்டுரை - 21.12.1930**



# கிருஷ்ணன், அர்ஜுனன் சம்பாஷணை

**- சித்திரபுத்திரன்**

**அர்ஜுனன் :** ஹே! கிருஷ்ணா! புராணங்களில் தேவர்களுக்கோ, இந்திரனுக்கோ, பரமசிவனுக்கோ கஷ்டமும் ஆபத்தும் வந்த காலங்களில் எல்லாம் நீ (அதாவது விஷ்ணு) பெண் வேஷம் போட்டுக் கொண்டு போய் அவர்களின் எதிரிகளை மயக்கி, வஞ்சித்து வசப்படுத்தினதாகவே காணப் படுகின்றனவே; அதுமாத்திரமல்லாமல் அந்த பெண் வேஷத்தோடேயே நீ ஆண்களிடம் சம்போகம் செய்ததாகவும் அதனால் உனக்குப் பிள்ளைகள் கூடப் பிறந்ததாகவும் காணப்படுகின்றதே. இது உண்மையா? அல்லது இதற்கு ஏதாவது தத்துவார்த்தம் உண்டா? தயவு செய்து சொல் பார்ப்போம்.

**கிருஷ்ணன் :** ஓ! அர்ஜுனா! நீ சொல்லுகிறபடி புராணங்களில் இருப்பது உண்மையே. ஆனால் நான் அந்தப்படி ஒருநாளும் செய்ததே இல்லை. அன்றியும் நானே பொய்யாக இருக்கும்போது பிறகு "நான்" பெண் வேஷம் எப்படிப் போடமுடியும். அப்படிப் போட்டாலும் எப்படி கலவி செய்ய முடியும். ஒரு சமயம் திரு. அ. இராகவன் சொல்லுவது போல் ஆண், ஆண் கலவி செய்ததாகவே வைத்துக் கொண்டாலும் பிள்ளை எப்படி பெற முடியும்? கேழ்வரகில் நெய் வடிகிறது என்று சொன்னால் கேட்ப்பவருக்கு மதி வேண்டாமா? சொல்லுகிறவன் சொன்னால் கேட்ப்பவனுக்கு புத்தி வேண்டாமா? பின்னை ஏன் புராணங்களில் அந்தப்படி எல்லாம் சொல்லப் பட்டு இருக்கின்றது என்று கேட்டால் அதற்குத் தத்துவார்த்தம் உண்டு.

**அர்ஜுனன் :** அந்த தத்துவார்த்தம் என்ன எனக்குச் சற்று சொல்லு பார்ப்போம்.

**கிருஷ்ணன் :** அந்தமாதிரி எழுதின தத்துவார்த்தம் என்னவென்றால் மனிதன் பெண் இச்சையில் கட்டுப்பட்டவன் என்பது நிச்சயம். நேர்வழியில் வேலை செய்து வெற்றி பெற முடியாத காரியங்களிலும் எதிரியை ஜெயிக்க போதிய சக்தி இல்லாத காலங்களிலும் ஒருவன் வெற்றி பெற வேண்டு மானால் இந்த வழி மிக சுலபமான வழி என்பது பெரியோரின் கருத்து. அதாவது ஒரு நல்ல அழகிய பெண்ணை கூட்டிப்போய் காட்டியோ, அல்லது அவனுக்கு கூட்டி விட்டோ அதன் மூலம் எவ்வித வெற்றியையும் பெறலாம்



RangaRakes
tamilnavarasam.com

என்பதே இதன் தத்துவார்த்தமாகும். இது முக்தி அல்லது வெற்றி பெறும் இரகசியங்களில் ஒன்று என்பதை காட்டுவதற்காக எழுதப்பட்ட தாகும். இப்பவும் உலக வழக்கில் சக்தியில்லாதவன், தகுதி இல்லாதவன் ஏதாவது ஒரு பதவியையோ, பொருளையோ அடைந்திருந்தால் அதற்கு பொதுஜனங்கள் திடீரென்று கற்பிக்கும், அல்லது நம்பியே சொல்லும் வழக்கச் சொல்லைப் பார்த்தால் நன்றாய் விளங்கும். அதாவது "சக்கரத்தின் மகிமையினால்" சம்பாதித்துதான் வெற்றி பெற்றான், பதவி பெற்றான் என்று சாதாரண பாமர மக்களை கூடச் சொல்லுவதைப் பார்க்கிறோம். சக்கரம் என்றால் என்(விஷ்ணு) ஆயுதத்திற்குப் பெயர்; பெண்கள. . . . . க்கும் பெயர். எவ்வளவோ பேருக்கு இந்தத் தத்துவார்த்தம் இப்போது உண்மையிலேயே பயன்படுவதையும் பார்க்கின்றோம்.

ஆதலால் வெற்றி பெறுவதற்கு ஒருவழி என்பதைக்காட்டும் தத்துவப் பொருளுக்காகவே 'பெரியோர்கள்' இப்படி எழுதி வைத்தார்கள். புராணங் களில் உள்ள ஒவ்வொரு வரிக்கும், எழுத்துக்கும் இது போலவே தத்துவார்த் தங்கள் உண்டு. அது தெரியாமல் நமது சுயமரியாதைக்காரர்கள் அவற்றை பரிகாசம் செய்கின்றார்கள். ஆனால் அந்த பழக்கமும் வழக்கமும் தத்து வார்த்தத்தை பின்பற்ற வேண்டிய அவசியமுமாகியவைகளெல்லாம் சுயமரியாதைக்காரருக்கு அல்ல. புராண மரியாதைக்காரருக்கு என்பதை மறந்துவிடாதே.

**அர்ஜுனன் :** சரி சரி. இப்போது எனக்கு விளங்கிற்று. ஆனால் இது போலவே இன்னும் ஒரு சந்தேகம். சற்று தயவு செய்து அதையும் விளக்கி னால் உனக்கு "புண்ணியம்" உண்டு.

**கிருஷ்ணன் :** அதென்ன சொல்லு பார்ப்போம்

**அர்ஜுனன் :** அதே மாதிரி மற்றும் பல புராணங்களில் சிவன் ஒரு சன்யாசி ரூபமாக, பக்தன் ரூபமாக வந்து ஒருவனின் பெண்சாதியை கேட் டான் என்றும் அந்தப்படியே அவன் கொடுத்தானென்றும் சொல்லப்படு கின்றதே அதன் ரகசியம் என்ன?

**கிரு :** இது தெரியவில்லையா?

**அர்ஜுனன் :** தெரியவில்லையே.

**கிருஷ்ணன் :** சன்யாசிகளுக்குச் சாப்பாடு போட வேண்டியது கிரகஸ் தன் கடமை. பிறகு பெண் வேண்டுமானால் சப்ளை செய்ய வேண்டியதும் கிரகஸ்தன் கடமையாகத்தானே இருக்க வேண்டும். அதனால்தானே 32 தர்மங்களில் பெண் போகமும் ஒன்று என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே அந்தப்படி சன்யாசிக்கு பெண்களைக் கொடுக்கும் போது மனதில் சங்கடம் இல்லாமல் தாராள மனதுடன் உதவுவதற்காகவே சிவன் சன்யாசி



ரூபமாய், ஒரு சிவனடியார் ரூபமாய் வந்து கேட்டார் என்று அதாவது சன்யாசியாகவோ, சிவனடியாராகவோ ஒருவன் வீட்டிற்கு வந்தால், அவன் கேட்டவுடனேயே கொடுக்க வேண்டும் என்பதற்காகவே. அதாவது "இந்த சன்யாசி – சிவனடியார் ஒரு சமயம் சிவபிரானே இந்த வேடம் தரித்து வந்தானோ" என்று எண்ணிக் கொண்டு பேசாமல் கொடுத்துவிடட்டும் என்றும் அதற்காக மனதில் எவ்வித விகல்ப புத்தியும் இருக்கக் கூடாது என்றும் கருதியே இந்தப்படி சொல்லப்பட்டிருக்கிறது. இது இப்போதும் சில புராண மரியாதைக்காரர்கள் வீடுகளில் நடைபெற்று வருகிறதை நான் அடிக்கடி பார்க்கின்றேன்.

தவிரவும், குரு, சாமியார், பாகவதாள், பரதேசி, அடியார்கள் இப்படிப் பட்டவர்கள் அநேக வீடுகளில் இருந்துக் கொண்டு நன்றாய் சாப்பிட்டுக் கொண்டு அந்த அந்த வீட்டுக்காரருக்கு இந்த "புண்ணியமும்" கொடுத்துக் கொண்டு வருவதைப் பார்க்கின்றேன். சிலர் தெரிந்தே விட்டுக்கொண்டிருக் கின்றார்கள். சிலர் தெரியாதது போலவே காட்டிக் கொண்டுமிருக்கிறார்கள். இதெல்லாம் அவரவர்கள் புராணங்களில் வைத்திருக்கும் பக்திக்கும் மரியாதைக்கும் தகுந்தபடி இருக்கும்.

**அர்ஜுனன் :** சரி, இந்த சந்தேகமும் ஒருவாறு விளங்கிற்று. இன்னமும் ஒரு சந்தேகம் இருக்கின்றது. அதை இப்போது விளக்குகின் றாயா?

**கிருஷ்ணன் :** என்ன அது, சொல்லு பார்ப்போம்.

**அர்ஜுனன் :** அதாவது புராணங்களில் அக்கிரமமான, வஞ்சகமான, புரட்டான காரியங்கள் செய்ய வேண்டிய பொழுதெல்லாம் கடவுள் பார்ப்பன வடிவமாகவே வந்ததாக காணப்படுகின்றதே, இதன் தத்துவமென்ன?

**கிருஷ்ணன் :** இந்த மாதிரி காரியங்கள் செய்வதற்கு அவனே (பார்ப்பனனே) தகுந்தவன் என்பதும், அது அவன் சுபாவம் என்பதும், அப்படிச் செய்வதினால் வேறு எவ்விதமான பாவமோ நரகமோ ஏற்படு மென்று எழுதி இருக்கும் சாஸ்திரங்கள் எல்லாம் பொய் புரட்டு சுயநலத் திற்காக எழுதப் பட்டவை என்பதை அவன் தெரிந்தவன் என்றும், இப்போ தும் யாருக்காவது இந்த மாதிரி அக்கிரமமான காரியங்கள் செய்து ஏதாவது ஒரு காரியத்தைச் சாதிக்க வேண்டுமானால் அவற்றிற்கு பார்ப்பனர்களே தகுந்தவர்கள் என்றும் அவர்கள் எவ்வித பாதகமான, அவமானமான காரியங்களையும் செய்ய பயப்படமாட்டார்கள் என்றும் அவற்றில் கை தேர்ந்தவர்கள் என்றும் காட்டு வதற்காகவே அந்தப்படி எழுதப்பட்டதாகும். இதை அறிந்தே அநேக புராண மரியாதைக்காரர்கள் இப்படி காரியங்கள் செய்வதற்காக பார்ப்பனர்களை தங்கள் காரியஸ்தராகவோ, மற்ற காரியங் களுக்கு பொருப்பாளிகளாகவோ வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். சம்பளத்துக்கு வைத்துக் கொள்ள சக்தி இல்லாதவர்கள் சிநேகிதர்க



RangaRakes tamilnavarasam.com

ளாகவாவது வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். கவனித்துப்பார்த்தால் இது நன்றாய் விளங்கும்.

**அர்ஜுனன் :** இன்னம் ஒரு சந்தேகம்.

**கிருஷ்ணன் :** என்ன சொல்லு.

**அர்ஜுனன் :** கடவுளை படைத்தார்களல்லவா மனிதர்கள்.

**கிரு :** ஆம்!

**அர்ஜுனன் :** அப்படிப் படைத்தவர்கள் கடவுள் மனிதனுக்குள் இருப்பதாகவோ அல்லது மனிதனுக்குள் இருக்கும்படியாக ஆவாகனம், கும்பாபிஷேகம் முதலியவைகள் செய்து மனிதனுக்குக் கொடுப்பதும், மனிதனுக்குச் செய்வதும், கடவுளுக்குச் செய்தது, கடவுளுக்குக் கொடுத்தது என்று கருதும்படி செய்யாமல் கல்லுக்குள் கடவுளை ஆவாகனம் செய்து, அதற்கு கும்பாபிஷேகம் செய்து கல்லைக் கும்பிடும்படி ஏன் செய்தார்கள்?

**கிரு:** அதன் இரகசியம் என்னவென்றால் மனிதனுக்குள் கடவுளை ஆவாகனம் செய்தால் நைவேத்தியம் செய்யும் சாமானையெல்லாம் மனிதன் சாப்பிட்டுவிடுவான், அணிந்து கொள்வான். அப்புரம் நடுவில் இருப்பவனுக்கு ஒன்றும் கிடைக்காமல் போய்விடும். ஆதலால் தான் கல்லி லும், செம்பிலும் ஆவாகனம் செய்து அதற்கு தனக்கு வேண்டியதை யெல்லாம் நைவேத்தியம் செய்யச்செய்து தான் எடுத்துக் கொள்வது. ஆகவே இந்த மாதிரி செய்ய வேண்டியது குறுக்கே இருப்பவர்களுக்கு அதாவது பூசாரிகளுக்கு அவசியமாயிற்று. அந்தப் பூசாரிகளுக்கே இந்த மாதிரி கடவுளை உண்டாக்க வேண்டிய அவசியமும் ஏற்படாது. ஆகவே பூசாரி ஆதிக்கம் குறைந்தால் கடவுள்கள் உற்பத்தியும் குறைந்து விடும். கடவுள் மஹிமைகளும் ஒழிந்து விடும்.

**அர்ஜுனன் :** சரி இவைகள் எல்லாம் எனக்கு ஒரு மாதிரி விளக்க மாயிற்று. இன்னும் சில விஷயங்கள் தெரிய வேண்டியிருக்கின்றன. ஆனால் அவைகளை சாவகாசமாய் பேசுவோம்.

**கிரு:** சரி.

## கேள்வி - விடை

**கே :** கட்சிகள் என்றால் என்ன?

**வி:** நல்ல லட்சியங்களைச் சொல்லி ஜனங்களை ஏமாற்றி தங்கள் வசம் செய்து சுயநல லாபம் அடைவது. உதாரணமாக காங்கிரஸ் கட்சி, தேசீயக் கட்சி முதலிய பல கட்சிகள்.



**கே:** அப்படியானால் சுயமரியாதைக் கட்சி இதில் சேராதோ?

**வி:** சேராது!

**கே:** ஏன்?

**வி :** அது யாரையும் ஓட்டுக் கேட்பதில்லை, பணம் கேட்பதில்லை, உத்தியோகம் கேட்பதில்லை, பதவி கேட்பதில்லை, பட்டம் கேட்பதில்லை. அது மாத்திரமல்லாமல் அதில் சேர்ந்தவர்கள் எல்லாம் தங்கள் சொந்த நேரத்தையும், பணத்தையும், செல்வாக்கையும் இக்கட்சிக்குச் செலவழித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

## எது அதிகக்கெடுதி

மக்களைக் கோவிலுக்குப் போகவேண்டாம் என்று சொல்லுகிறவர் களால் ஜனங்களுக்குக் கெடுதி என்று சொல்வதனால் கோவிலுக்குப் போகும் படி சொல்லுகின்றவர்களால் அதைவிட அதிகமான கெடுதி என்றே சொல்லலாம்.

கோவிலை இடிக்கின்றவர்களை விட, கோவில் கட்டுகின்றவர்களா லேயே மக்களுக்கு நஷ்டமும் கஷ்டமும் ஏற்படுகின்றன.

கடவுள் கல்லிலும், செம்பிலும், படத்திலும் இருக்கிறார் என்று சொல்லுகின்றவர்களை விட, கடவுள் இல்லை என்று சொல்லுகின்றவர்கள் நல்லவர்கள்.

## 100 ரூபாய் இனாம்

தானாக ஏற்பட்ட கடவுள் எங்காவது உண்டா?

## இந்த மூவரில் யார் நல்லவர்கள்?

கருப்பக் கவுண்டர் உதைப்பதாகச் சொல்லி மிரட்டி ஓட்டு வாங்கி னார்.

தனபாலு செட்டியார் பணம் கொடுத்து ஓட்டு வாங்கினார்.

பஞ்சாபகேச அய்யர் சுயராஜ்யம் வாங்கி கந்தாயம் தள்ளிப் போடுவ தாக ஆசைக்காட்டி ஓட்டு வாங்கினார்.

இம்மூவரில் யார் யோக்கியர்கள்?

## இவர்களில் யார் பதிவிரதைகள்?

1. சீதா, புருஷன் பந்தோபஸ்தினால் வேறு புருஷன் சாவகாசம் செய்ய முடியவில்லை.



RangaRakes tamilnavarasam.com

2. மீனாக்ஷி புருஷன் உதைத்து விடுவானே என்று உதைக்குப் பயந்து சோரம் செய்யவில்லை.

3. நாமகிரி ஜனங்கள் கேவலமாய் பேசுவார்களே என்று மானத்திற் குப் பயந்து வேறு புருஷனை இச்சிக்கவில்லை.

4. இரஞ்சிதம் தன் மனதிற்குப் பிடித்த கணவன் கிடைக்கவில்லை என்று கருதி யாருக்கும் இணங்கவில்லை.

5. சரஸ்வதி மேல் லோகத்தில் செக்கில் போட்டு ஆட்டுவாரென்ற கஷ்டத்திற்குப் பயந்து யாருக்கும் இணங்கவில்லை.

6. மேனகை தான் கேட்டளவு பணம் கொடுக்கவில்லை என்று கருதி யாருக்கும் சம்மதிக்கவில்லை.

7. கோகிலா தன் காதலனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு விரோதமே என்று கருதி வேறு யாருக்கும் ஒப்பவில்லை.

இவர்களில் யார் பதிவிரதைகள் ?

**குடி அரசு – உரையாடல் – 21.12.1930**



# ஸ்ரீரங்கம் ரங்கநாதரின் நன்றி கெட்டதனம்

ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாத சுவாமி சிறிது கூட நன்றி விஸ்வாசமில்லாமல் தனது பூஜைக்கும், உர்ச்சவத்திற்கும் பணம் சேகரித்து வைப்பதற்காக ரங்கநாதர் லாட்டரி சீட்டு என்னும் பெயரால் ஒரு லாட்டரி சீட்டு நடத்த முக்கிய ஏற்பாடு செய்தவரும், அந்த சீட்டு நடவடிக்கைக்கு பிரதம காரியதரிசியாய் இருந்தவருமான ராவ்பகதூர் சடகோபாசாரியாரை தபால் படித்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று கொன்று போட்டார். இந்தப் படுபாவி ரங்கநாதர் வைகுண்ட ஏகாதசிக்கு வருகின்ற பக்தர்கள் எத்தனை பேரைக் கொல்லப் போகின்றாறோ தெரியவில்லை. இப்போதே ஏகாதசி உர்ச்சவத்திற்கு வரும் பக்தர்களுக்கும் பிரசாதமாக ஸ்ரீரங்கத்திற்கும், திருச்சிக்கும் காலரா, மாரியம்மாளை அனுப்பிவிட்டாராம். இனி அங்கு வரும் எத்தனை பக்தர்கள் அந்தப் பிரசாதத்தைக் கொண்டு போய் எந்தெந்த ஊர் பக்தர்களுக்கு வினியோகிப்பார்களோ தெரியவில்லை.

**குடி அரசு – செய்தி விளக்கம் – 21.12.1930**



RangaRakes tamilnavarasam.com

# ஆஸ்திகர்களே எது நல்லது?

கல்லில் தெய்வம் இருப்பதாகக் கருதி, அதற்கு ஒரு கோவில் கட்டி, அந்த சாமியை வணங்க தரகர் ஒருவரையும் வைத்து அந்த கல்லுச்சாமிக்கு மனிதனுக்கு செய்யும் அல்லது மனிதன் தான் செய்து கொள்ளும் மாதிரி யாகவெல்லாம் செய்து, அதற்கு வீணாக பணத்தை பாழாக்கி நேரத்தை வீணாக்குவது நன்மையானதா?

அல்லது மனிதனிலேயே தெய்வம் இருப்பதாகக் கருதி அதற்கு அந்த மனிதனையே தரகராக வைத்து தனக்கு வேண்டியது போலவும் தான் பிறர் தன்னிடத்தில் நடக்க வேண்டுமென்று கருதுவது போலவும் அந்த மனிதனுக்கு செய்து அவனிடத்தில் நடந்து கொள்வது நல்லதா?

**குடி அரசு - கேள்விகள் - 21.12.1930**



# வேண்டியது என்ன?

இந்திய தேசிய காங்கிரசு என்பது எதற்காக ஆரம்பிக்கப்பட்ட தென்ற ரகசியம் இப்போதைய அனேக "தேசியவாதிக"ளுக்குத் தெரியாதென்றே சொல்லுவோம்.

அது ராஜ வாழ்த்துப் பாடி, முதலில் ராஜ விஸ்வாசத் தீர்மானம் செய்து பிறகு உத்தியோகங்களை உண்டாக்கி தங்களுக்கே கருணை கூர்ந்தளிக்க வேண்டும் என்று தீர்மானித்து பிறகு அவ்வுத்தியோகங்களை எப்படி எப்படி உற்பத்தி பண்ணுவது என்பதற்கு வழிகள் காட்டுவதும், இவைகள் எல்லாம் பொது ஜனங்களுக்காக, தேசியத்திற்காக, பொது ஜனங்கள் பேரால் கேள்ப்பதாய் இருக்க வேண்டுமென்பதற்காக பொது ஜனங்கள் ஏமாறும்படி யாக இரண்டொரு தந்திர வார்த்தை சொல்லி அவர்களை அழைத்து வைத்து கை தூக்கும்படி செய்து, அவர்கள் பேரால் சர்க்காருக்கு அறிக்கை செய்வ தற்குமே காங்கிரஸ் ஏற்படுத்தப்பட்டு நடை பெற்று வந்தது. இதன் உண்மை யை உணரவேண்டுமென்பவர்கள் காங்கிரசு நடவடிக்கைகள் என்ற புத்த கத்தை சுதேசமித்திரன் புத்தகக் கடையில் வாங்கிப் பார்த்தால் விளங்கும்.

இப்படிப்பட்ட இந்த காங்கிரசானது சர்க்காருக்கு மிகவும் அனு கூலமாயிருந்ததால் அதாவது தங்கள் குடி ஜனங்களில் பலரை அதுவும் எழுதப் படிக்கத் தெரிந்த சற்று அறிவுள்ளவர்களை எல்லாம் தாங்கள் குடிகள் பணத்தில் விலைக்கு வாங்கி தங்களுக்கு அடிமையாக்கிக் கொள்ளவும், அவர்களைக் கொண்டே தாங்கள் இங்கு நிலைத்திருப்பதர்க்கு வேண்டிய காரியங்கள் செய்து கொள்ளவும் அனுகூலமாயிருந்தது. அது மாத்திர மல்லாமல் அரசன் என்பவன் எந்தெந்த விதத்தில் குடிகளுக்கு பொறுப் பாளியாய் இருக்க வேண்டுமோ அந்த பொறுப்புகளுக்கெல்லாம் குடிகளை ஜவாப்புதாரியாக்கி விட்டு தன்னுடைய சுயநலகாரியமும் குடிகளின் பிரதிநிதிகளே போட்டி போட்டு செய்து கொடுக்கத் தயாராயிருக்கவும் செய்து விட்டது. அதோடு புதிய புதிய சீர்திருத்தக் கிளர்ச்சிகளும்; தேசியக் கிளர்ச்சி களும் அந்த காங்கிரசிலிருந்தே புறப்பட்டு வந்ததால், அவையெல்லாம் அரசாங்கத்தை ஆட்டி, ஆட்டி, கூறு குத்தி பலப்படுத்துவது போல், அரசாங் கத்துக்கு ஆக்கமளித்து அதை நிலையாக நிலை நிறுத்திக் கொண்டும் வந்தது.



RangaRakes tamilnavarasam.com

இப்படியான முயர்ச்சிகளிலேயே ஜனப் பிரதிநிதிகள் என்பவர்களும் இருந்து வந்ததால், மேலும் மேலும் அந்த நிலை வளர்வதற்கு இடம் ஏற்பட்டதே ஒழிய, பொது மக்களுக்கு நன்மை யுண்டாகும்படியான காரியம் ஒன்றுமே காணமுடியவில்லை. காணப்படாதது மாத்திரமல்லாமல் பொதுஜன நன்மைக்கு ஆன காரியம் என்ன என்பது கூட தெரியமுடிய வில்லை. உதாரணமாக இன்றைய தினம் பொது ஜனங்கள் பல காரணங் களால் எவ்விதத் தியாகத்திற்கும் தயாராயிருந்தாலும், அவர்கள் எதை வேண்டி என்ன காரியத்தை எதிர்பார்த்து தங்களது ஊக்கத்தை செலவழிப்ப தென்றே தெரியாமல் விழிக்கின்றார்கள். இதற்கு உதாரணம், இன்றைய தினம் இந்தியாவில் இருந்து சீமைக்குச் சென்றிருக்கும் வட்டமேஜை மகாநாட்டு பிரதிநிதிகளையும் அவர்களது வார்த்தைகளையும் பார்த்தாலே தெரிய வரும். மற்றபடி இங்குள்ள தேசியத் தலைவர்களோ தாங்கள் சீமைக்கு போவதற்கு சந்தர்ப்பம் ஏற்படாமல் போனதே தாங்களும் தங்கள் மூதாதை களும் "முன் ஜன்மத்தில் செய்த பூஜா பலன்" என்று கருதிக் கொண்டிருக் கின்றார்கள். திரு. காந்தி அவர்களும் வட்ட மேஜை மகாநாட்டுக்குப் போகாமல் தப்பித்துக் கொள்ள பிரயாசைப் பட்ட தெல்லாம், அங்கு போய் என்ன கேழ்ப்பது என்கின்ற கஷ்டமும், அதற்காக வெள்ளைக்காரர்கள் கேள்விக்கு என்ன பதில் சொல்லுவது என்கின்ற நடுக்கமுமேபோக வொட்டாமல் இருக்க வேண்டியதாய் விட்டது. மீறி ஏதா வது தங்களை சமாளித்துக் கொள்ளலாம் என்று தைரியமாய் போயிருந்தாலும், தங்களில் ஒருவருக்கொருவர் அடிதடி போட்டுக் கொள்ளும்படியாய் நேருமே, வகுப்புத் தகராறுக்கு என்ன செய்வது என்கின்ற பயமும் கண்டிப்பாய் அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கவே முடியாமல் செய்து விட்டது. இங்கிலாந் தில் இன்று இந்து முஸ்லீம் சண்டையே பலமாய் இருப்பதால் எல்லோரு டைய நேரத்தையும் அதுவே கவர்ந்து கொண்டதால் வேறு மற்ற வர்கள் சண்டையைப் பற்றி நினைக்கவே நேரமில்லை.

இது முடிந்த பிறகே, சுதேச மன்னர்களுக்கும், இந்திய சீர்திருத்தத் திற்கும் உள்ள சண்டைகள் புறப்படும். அதுவும் முடிந்த பிறகு பார்ப்பனர் அல்லாதார் முதலிய தத்துவ சூட்சிச் சண்டைகள் புறப்படும். ஆகவே இந்த சண்டைகளே பிரதானமாகவும் இது சம்மந்தமான சூட்சிகளே கவலை யாகவும் இருக்குமே ஒழிய இந்தியாவுக்கு பொதுவாக வேண்டியது எது என்பது ஒருவருக்கும் தெரியவும் தெரியாது. அது அவர்களுக்கு புலப்படப் போவது மில்லை.

போனவர்கள் போக இந்தியாவில் இருக்கும் தேசீயவாதிகளோ "ஓடினவனுக்கு ஒன்பதாமிடத்தில் சனி, இருந்தவனுக்கு எட்டாமிடத்தில் சனி" என்பது போல் திகைக்க வேண்டியதாயிருக்கின்றனர்.



அதாவது, என்ன செய்வது என்பதே தெரியாமல் "ஏதாவது ஒரு விதத்தில் சர்க்காருக்கு தொந்திரவு கொடுக்க வேண்டியது நமது கடமை" என்பதைத் தவிர வேறெவ்வித குறியும் இல்லை. உதாரணமாக பலசரக்குக் கடைக்காரனுக்குப் பைத்தியம் பிடித்தது போல் உப்புக் காச்சலாமா? பாரஸ்ட் சட்டம் மீறலாமா? கள்ளுக்கடை மறியல் செய்யலாமா? ஜவுளிக் கடை மறியல் செய்யலாமா? சர்க்கார் வாங்கிய கடனை மறுக்கலாமா? வரி கொடுக் காமல் இருக்கலாமா? சென்சஸ் பகிஷ்காரம் செய்யலாமா? சர்க்கார் ஏதாவது ஒன்று வேண்டாமென்று சொன்னால் அதை வேண்டுமென்றே மீறி செய்ய லாமா? கொடியேற்றலாமா? கொடியை வணங்கலாமா? தக்ளி சுற்றலாமா? என்பன முதலாகிய மற்றும் இவை போல ஏதாவதொன்றைச் செய்யலாமா என்பதைத் தவிர, ஜனங்களுடைய நன்மைக்கான காரியம் என்பதாக ஏதாவது ஒன்றைக் கண்டு பிடித்து அதைச் செய்யலாமா என்கின்ற கவலையோ லக்ஷியமோ இல்லாமல் வெறும் கலாட்டாவில் பத்திரிகை களில் பிரமாதப்படுகிறதே அல்லாமல், உருப்படியான காரியம் எதையும் காண எவராலும் முடியவில்லை. வீணான வழியில் ஊக்கமும் உணர்ச்சியும் போய்க் கொண்டிருக்கின்றன. படித்தவர்கள், படிக்காதவர்கள், அரசியல் வாதிகள், தேசீயவாதிகள், தேசபக்தர்கள் ஆகியவர்கள் காரியங்கள் தான் இப்படி இருக்கின்றனவே என்று நினைத்தால் இவர்கள் தவிர மற்றவர்களான பொதுநலத்தில் ஜீவகாருண்யத்தில் – தர்ம காரியத்தில் கவலை கொண்ட மற்ற கனவான்களின் செய்கைகளும் கைங்கரியங்களுமோ இதைவிட மோசமான காரியமாகவே இருக்கின்றன. பொதுக் காரியம் என்பதே நமது நாட்டில் கோவில் கட்டுவது, கும்பாபிஷேகம் செய்வது, பழய கோவில்களை பழுது பார்க்கும் திருப்பணி செய்வது, கும்பாபிஷேகம் செய்து அதிக நாளாய் விட்டதே சாமியின் சக்தி குறைந்து இருக்குமோ என்று சந்தேகத் திற்காக ஒரு கும்பாபிஷேகம் செய்து அந்த சாமிகளுக்கு வாகனம், ரதம், தேர், உற்சவங்கள் முதலியவைகள் செய்வது,சத்திரம் கட்டி வருகின்ற பக்தர் களுக்கு பிராமணர்களுக்கு சாப்பாடு போடுவது, வேதபாடசாலை, தேவார பாடசாலை முதலியவை கட்டுவது, லக்ஷப்பிராமண சமாராதனை, லக்ஷத் தீபம் முதலியவைகளை செய்விப்பது ஆகிய காரியங்களே பொது தர்மமாக நடைபெறுகின்றன.

ஏதாவது மக்களுக்கு பிரசாரம் செய்வது என்றாலோ ஆடு, கோழி, மீன் சாப்பிடக் கூடாது, சாப்பிட்டால் நரகம் என்றும், திருநீரு பூசினால் பாவமெல்லாம் போகும் என்றும், மற்றும் இதுபோல் பிரசாரம் செய்வதும், பொது ஜனங்களுக்கு ஏதாவது ஒழுக்கம் கற்பிக்க வேண்டுமானால் ராமாய ணம், பாரதம், பாகவதம், திருவிளையாடல் புராணம் முதலிய புராணங்கள் படிப்பதன் மூலம் ஒழுக்கங்கள் கற்பிப்பதும் ஆகிய காரியங்களே மற்றவர் கள் பிரபுக்கள் நாகரீகமடைந்தவர்கள் ஆகியவர்களின் பொதுநல சேவை யாக இருக்கின்றன.



RangaRakes tamilnavarasam.com

இந்த நிலையில் இந்தியாவுக்கு இன்று வேண்டியது இன்னது என்று அறிந்தவர்கள் யாராவது இருக்கின்றார்களா என்பதை வாசகர்களையே யோசித்து உணரவிட்டு விடுகின்றோம். ஆகவே தேசபக்தியும், கடவுள் பக்தியும் மனிதனை சுயநலஸ்தானாகவும், கண்மூடித்தனமாய் பின்பற்ற வேண்டியதாகவும் செய்கின்றதே தவிர மனித சமூகத்தின் நாட்டின் முன்னேற்றத்தின் ஏ, பி, சி, டி யைக் கூட காணச்செய்ய முடிவதில்லை. தேசபக்தி என்கின்ற வார்த்தையே வெள்ளைக்காரன் ராஜ்ஜியத்தில் உத்தியோகம் சம்பாதிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டதல்லால் வேறு எதற்காக வாவது ஏற்படுத்தப் பட்டு வேறு ஏதாவது பலன் கொடுத்தது என்று யாராவது ஒற்ற விரலை நீட்டமுடியுமா? என்று யோசித்துப் பாருங்கள். தேச பக்தியும் கடவுள் பக்தியும் மனித சமூகத்திற்கு என்ன பலனைக் கொடுக்கக் கூடியதாய் இருக்கின்றது? அல்லது கொடுத்தது என்றாவது யாராவது சொல்ல முடியுமா? மற்ற தேசத்தாரெல்லாம் விடுதலையடைய சுதந்தர மடைய இந்த மாதிரிதான் நடந்தார்களா? என்று கேள்க்கின்றோம். மக்கள் முன்னேற்றம் அடையவும் அவர்களது கஷ்டமும் சரீரப் பிரயாசையும், அடிமைத் தனமும், ஒழியவும் மனிதத் தன்மை இன்னது மனிதனுடைய இயற்கைத் தன்மை இன்னது என்பவைகளை உணர்த்தி அவைகளை அடையச் செய்வது கவலையற்று வாழச் செய்வதற்கு இதுவரை யார் என்ன கவலை எடுத்து என்ன காரியம் செய்திருக்கின்றார்கள். ஒவ்வொரு மனிதனும் பொது நலத்திற்குப் பாடுபடுகின்றேன் என்கின்ற ஏணியின் மூலம் சுயநலத்திற்கு போகின்றானே அல்லாமல் உண்மையான பொது நலத்துக்காக வேலை செய்வதற்கு யார் இருக்கின்றார்கள்? இருந்தார்கள்? அல்லது அதற்காக வேண்டியது என்ன என்றாவது யார் அறிந்தார்கள்? வீணே சுயநலமும் குருட்டு நம்பிக்கையும் கொண்டவர்கள் செய்கையானது பல வழிகளிலும் இன்றய தினம் நாட்டை, ஜன சமூகத்தை பாழாக்கிக் கொண்டு வருகின்றதை தவிர வேறு ஒரு காரியமும் காண முடியவில்லை. இந்த லக்ஷணத்தில் யாராவது உண்மையைச் சொல்ல வந்தால், அவர்களை தேசத்துரோகி என்றும் நாஸ்திகன் என்றும் மூளாவணம் பேசுவதிலும் குறைவில்லை.

ஆகவே இந்த சமயமானது பொது ஜனங்கள் நன்றாய் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து முடிவுக்கு வரவேண்டிய ஒரு முக்கிய சமயம் என்பதை மாத்திரம் குறிப்பிட்டு வலியுருத்தி விட்டு இதை முடிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 21.12.1930**



# கல்யாண ரத்து தீர்மானம்

ஆந்திர மாகாண பெண்கள் மகாநாட்டில் விவாகரத்து செய்து கொள்ளுவதற்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒன்றுபோலவே உரிமை இருக்கும் படியாக ஒரு தீர்மானம் பெண்களால் கொண்டு வரப்பட்டு, ஒரே ஒரு ஓட்டில் அத்தீர்மானம் தோல்வியடைந்து விட்டதாக தெரிய வருகிறது. அன்றியும் 3 மணி நேரம் அத் தீர்மானத்தின் மீது பல பெண்கள் கூடி பலமான வாதப் பிரதிவாதம் நடந்ததாக காணப்படுகின்றது. தீர்மானம் தோற்று விட்டாலும் கூட இந்த சேதி நமக்கு மிகவும் மகிழ்ச்சியையும் பெண்கள் விடுதலையில் நமக்கு நம்பிக்கையையும் கொடுக்கின்றது. ஏனெனில் கல்யாண விடுதலை, விவாகரத்து என்கின்ற வார்த்தைகளை காதினால் கேள்க்கவே நடுங்கிக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான ஆண்களுக்கு அடங்கி அடிமையாய் கிடந்து வந்து பெண்கள் கைதொட்டு தாலிகட்டின புருஷன் கல்லானாலும், புல்லானாலும், கெட்டவனானாலும், பிரருக்கு தன்னைக் கூட்டி விட்டு ஜீவனம் செய்யும் மானமற்ற பேடியாய் இருந்தாலும் அவர்களையெல்லாம் "கடவுள்" போலவே பாவிக்க வேண்டு மென்றும், கணவன் குஷ்ட்டரோகியாயிருந்தாலும் அவனைத் தலையில் தூக்கிக் கொண்டு போய், அவன் விரும்பும் தாசி வீட்டுக்கு அழைத்துப் போய் விடுவது தான் கற்புள்ள பெண்களின் லக்ஷணமென்றும். பெண்க ளுக்கு கர்ப்பத்தில் இருந்தே சரீரத்தில் ரத்தத்துடன் கலக்கும்படி செய்து வைத்திருக்கும் இந்த நாட்டில், கல்யாண ரத்து என்பதும், ஆண்களைப் போலவே பெண்களுக்கு சுதந்திரம் என்றும் சொல்லப்பட்டது போன்ற தீர்மானங்கள் மகாநாட்டுக்குக் கொண்டு வருவதும், அதுவும் பெண்க ளாலேயே அதைப் பற்றி பலர் பேசி வாதப்பிரதிவாதம் செய்ய இடம் ஏற்படு வதுமான காரியம் என்பது லேசான காரியமல்ல. அது மாத்திரமல்லாமல் அத்தீர்மானம் ஒரு ஓட்டு வித்தியாசத்தில் தோற்கும்படி அதற்கு ஓட்டு கிடைப்பது அதுவும் சாதாரண காரியமல்ல. ஆகவே இதிலிருந்து கூடிய சீக்கிரம் பெண்ணுலகு விடுதலை பெற்று விடும் என்று தைரியமாய் இருக்கலாம் என்றே நினைக்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 21.12.1930**



RangaRakes tamilnavarasam.com

# பெ. சி. சிதம்பர நாடார் தேவஸ்தானக் கமிட்டி மெம்பர்

ராமநாதபுரம் தேவஸ்தானக் கமிட்டிக்குக் காலியான ஒரு ஸ்தானத்திற்கு நாடார் கனவான் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று பொது ஜனங்கள் விரும்பியதும், மேற்படி தேவஸ்தானக் கமிட்டி தலைவர் சுயமரியாதை வீரர் திரு. எஸ். ராமசந்திரன் அவர்கள் கண்டிப்பாய் ஒரு நாடார் கனவானையே நியமிக்க வேண்டுமென்று தேவஸ்தானப் போர்டை வற்புறுத்தி நாடார் குல மித்திரன் பத்திராதிபர் திரு. சு. ஆ. முத்து நாடார் அவர்கள் பெயரை எடுத்துக் காட்டி இருந்ததும் நேயர்கள் அறிவார்கள். ஆனால் திரு. முத்து நாடார் அவர்கள் பெயர் ஓட்டர் லிஸ்டில் இல்லாததால் போர்ட் இலாக்கா மந்திரி அவர்கள் வேறு ஒரு நாடார் கனவான் பெயரை சிபார்சு செய்யும்படி கமிட்டித் தலைவர் திரு. ராமச்சந்திரன் அவர்களை கேட்டிருந்ததற்கு ஒப்ப அவர் விருதுநகர் பாத்திர வியாபாரம் திரு. பெ. சி. சிதம்பர நாடார் பெயரை தெரிவிக்கவே இலாக்கா மந்திரி அவர்கள் திரு. சிதம்பர நாடார் அவர்களை நியமித்திருப்பதாய் தெரிய நாம் மிகுதியும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

திரு. சிதம்பர நாடார் அவர்கள் ஒரு சுயமரியாதை வீரர். விருதுநகர் நாடார் சமூகத்திற்கே முதல் முதல் சுயமரியாதைக் கொள்கைகளை அனுஷ்டிக்க வழி காட்டியவர். 15, 20 ௵ காலமாகவே பொதுக்காரியங்களிலும் சமூக முன்னேற்ற விஷயங்களில் மிகவும் ஊக்கமாய் உழைத்து வருபவர். முனிசிபாலிட்டியிலும் மற்றும் சமூக விஷயங்களிலும் அறிய வேலை செய்தவர். ஆகவே இப்படிப்பட்ட கனவான் தேவஸ்தானக் கமிட்டிக்கு நியமிக்கப் பட்டதில் அதுவும் இராமநாதபுரம் ஜில்லா தேவஸ்தானக் கமிட்டிக்கு நியமனம் பெற்றதில் நமக்கு மிகவும் மகிழ்ச்சியேயாகும். எதை உத்தே சித்து? என்றால் இன்று நம் நாட்டில் உள்ள தேவாலயங்கள் எல்லாம் ஜாதி பிரிவையும், உயர்வு தாழ்வையும் நிலைநிறுத்தி அவற்றிற்கு ஆக்க மளிப்பதற்கு உரைவிட மாயிருப்பதால் அவ்வித ஜாதி வித்தியாசத்தையும், உயர்வு தாழ்வையும் அடியோடு அழிப்பதற்கு திரு. பெ. சி. சி. அவர்கள் இவ் வேலையை உபயோகித்து சுயமரியாதை வீரர் திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்களுக்கு பூரண உதவியாய் இருப்பார் என்பதை உத்தேசித்தேயாகும். இவரை நியமிக்க



உறுதி கொண்ட முன்னைய இப்போதைய இரண்டு மந்திரிகளையும் பாராட்டுகின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 21.12.1930**



RangaRakes tamilnavarasam.com

# நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் தலைவிரி தாண்டவம்

மதுரை சேர்மென் திரு. ஆர். எஸ். நாயுடு அவர்கள் மதுரை முனிசிபல் கவுன்சிலில் ஏற்பட்ட கக்ஷி பிரதி கக்ஷியினால் தனது சேர்மென் பதவியை ராஜினாமா செய்து விட்டார். அப்படியிருந்தும் அதை லக்ஷியம் செய்யாமல் எதிர்கக்ஷி கவுன்சிலர்கள் 19 பேர் கூடியிருந்து ஏகமனதாக அவர் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் நிறைவேற்றி விட்டார்கள். இவரின் கை மிகவும் சுத்தமானது என்றாலும் கக்ஷி பிரதிகக்ஷி அதை கவனிக்க முடி யாமல் செய்து விட்டது. இப்போது திரு. துளசிராம் பி.ஏ., பி.எல். அவர்கள் ஏக மனதாய் மதுரை முனிசிபல் சேர்மெனாக தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவருக்கு மீ 900 ரூபா சம்பளமும் 100 ரூ. அல்லவன்சும் உண்டு.

திண்டுக்கல் சேர்மென் திரு. சோலை நாடார் அவர்களும் கக்ஷி பிரதி கக்ஷி காரணமாக தனது சேர்மென் பதவியை ராஜினாமா செய்து விட்டார். இவரும் மிக்க பரிசுத்தமும் நாணயமும் உடையவர். நம்பிக்கையில்லாத தீர்மானச் சட்டம் ஏற்பட்டு கொஞ்ச காலமே ஆனதால் அது இன்னமும் சரியானபடி பிரயோகிக்கப் படத்தக்க யோக்கியதை அடைய முடிய வில்லை. யோக்கியர்களும் கை பரிசுத்தமுள்ளவர் களும், அதற்கு பலியாகி வருகிறார்கள். இதற்கு காரணம் நம்பிக்கையில்லாத் தீர்மான சட்டமல்ல. மற்றென்னவென்றால் மந்திரி பதவிகளின் போட்டியால் ஏற்பட்ட பலன் களேயாகும்.

இருந்த போதிலும் புதுச் சட்டப்படி அமைக்கப்படப் போகும் ஸ்தல ஸ்தாபனங்களில் அது தகுந்தபடி பிரயோகிக்கப்படும் என்று கருதுகின்றோம். இப்பொழுது மந்திரி பதவி அடைய போட்டி போடும் பலராலும் நாமி னேஷன் கவுன்சிலர்களே பெரிதும் கவுன்சிலுக்குள்ள கலகத்திற்கு காரண மாயிருப்பதால் இன்றைய நாமினேஷன் முறை இருக்கும் காரணம் சரியாய் பயன்பட முடியாமல் இருக்கின்றது. ஆதலால் சீக்கிரம் புதிய சட்டப்படி முனிசிபாலிட்டியும், போர்டும் அமைக்கப்பட ஆசைப்படுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 21.12.1930**



# சுயமரியாதைத் தலைவர்

சுயமரியாதைச் சங்கத்தின் தலைவர் உயர் திரு. W.P.A. சௌந்திர பாண்டியன் அவர்கள் ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் பதவியை க்ஷண நேரத்தில் ராஜினாமா செய்து உண்மைச் சுயமரியாதைக்கு உதாரண மாய் விளங்கிவிட்டார். திரு. பாண்டியன் அவர்கள் அந்த ஸ்தானத்தை ஒரு போதும் விரும்பினதேயில்லை. அவரது நண்பர்களின் வலியுறுத்தலுக் காகவும், ஒரு கொள்கைக்காகவும் அதாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்வதற்காகவுமே அதை ஒரு ஆயுதமாக ஒப்புக் கொண்டது முதல் அந்த வேலையை மிக்க நீதியுடனும், பொறுப்புடனும், சுயமரியாதை யுடனும் யாருடைய தயவு தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாமல், தனக்குச் சரியென்று தோன்றியபடி நடந்து வந்தார். முக்கியமாய் ஒடுக்கப்பட்ட சமூகத்தாருக்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்கும் தன்னால் கூடியவரையில் அதன் மூலம் நன்மை செய்து வந்தார். பணக்காரர் ஏழை என்கின்ற வித்தியாசமில்லாமல் அதிகாரத்தையும், சலுகையையும் பிரயோகித்து வந்தார். பணக்காரர்கள் குற்றத்தை எடுத்துச் சொல்லுவதிலும், அவர்களின் பணத்திமிரான காரியங்களைக் காண்பதிலும், சிறிதும் பின் வாங்காது ஜாதித்திமிர்காரரைக் கண்டிப்பது போலவே தைரியமாய் கண்டித்து நட வடிக்கை நடத்தி வந்ததோடு அவர்களுக்கு அடிக்கடி புத்தி புகட்டியும் வந்தார். அப்பதவியின் மூலம் சுயமரியாதைக் கொள்கையை பல விஷயங் களில் நடை முறையில் நடத்திக் காட்டினார். தனக்கென்று வேறு தொழில் ஒன்றும் வைத்துக் கொள்ளாமல் தனது முழு நேரத்தையும் அதிலேயே செலுத்தி வந்தார். இவை மாத்திர மல்லாமல் எந்த நிமிஷத்திலும் "நாளைக் கும் அந்த வேலையில் இருக்க வேண்டும்" என்றாவது மறுபடியும் அதை அடையவேண்டு மென்றாவது கருதாமல் ஒவ்வொரு நிமிஷமும் அந்தப் பதவியை அலட்சியமாய் கருதிக் கொண்டே நடுநிலையிலிருந்து பிசகாமல் தான் செய்ய வேண்டிய காரியங்களை துணிவுடன் செய்து வந்தார். (இவ் வளவு காரியங்களும் சர்க்கார் நியமனத்தின் மூலம் அப்பதவி கிடைத்ததி னாலேயே தான் செய்ய முடிந்தது என்பதையும் குறிப்பிட்டு விடுகின்றோம். ஏனெனில் தேர்தல் மூலம் பதவி பெற்றிருந்தால், அங்கத் தினர்களுக்கு விலை கொடுத்தோ, வியாபாரம் பேசியோ அடிமைப்பட்டோ அடைந்தி ருக்க



RangaRakes tamilnavarasam.com

வேண்டுமாதலால் இவ்வளவு சுயேச்சையோடும், சுயமரியாதை யோடும், நாணயத்தோடும், நீதியோடும் இருந்திருக்கவே முடியாது) இப்படிப் பட்ட ஒரு பெருமையும் நீதியும் வாய்ந்த கனவானின் நிர்வாகம் சிலருக் காவது தங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமில்லாமல் போவ தில் ஆச்சரிய மொன்றுமில்லை. அதுமாத்திரமல்லாமல் பார்ப்பனரல்லாதார் இயக்க அரசியல் வானம் கருத்து அடித்த சண்டமாருதத்தால் பொதுக் கட்டுப்பாடு நாணயம் ஆகியவைகள் சின்னாபின்னப்பட நேர்ந்து. சுயநலமும், பேராசை யும் நாட்டில் தாண்டவமாடியதின் பயனாய் நடந்த நிகழ்ச்சிகள் நம்பிக்கை யில்லாத் தீர்மானங்களுக்கு அதிகமான தலைவிரி கோலம் ஏற்பட்டு அதைச் சுலபமாய் யாரும் கையாடும்படி செய்து விட்டது.

ஆகவே அது உசிதா உசிதமில்லாமல் கையாடப்படும்படியாக ஆனதும் அதிசயமல்ல. இந்த நிலையில் சிலர் ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் மீது அதை பிரயோகிக்கக் கருதி அது வெளிப்பட்டால் தங்க ளுக்கு ஆமோதிக்கவும், ஆதரிக்கவும் கூட நபர்கள் கிடையாதென நினைத்து வெகு பத்திரமாக இரகசியத்திலேயே ஏற்பாடு செய்து திடீரென்று கொண்டு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

இத் தீர்மானம் வருமென்று தெரிந்திருந்தால், உடனே முன்னமேயே ராஜினாமா செய்திருப்பார். வெறும் மந்திரி சம்மதமான கட்சி காரணமாய் இத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தவிர திரு. பாண்டியன் அவர்கள் நிர்வாகத்தைப் பற்றி சிறிதாவது அதிர்ப்தி அடைந்து அதனால் கொண்டு வரப்பட்டது என்று யாராலும் சொல்லமுடியாது. அவரது நிர்வாகத்தில் யாரும் எந்தச் சமயமும் மீட்டிங்கில் அதிர்ப்தி பட்டதாக காட்டினதே கிடையாது.

உதாரணமாக சமீபத்தில் ராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் திரு. மெக்வீன் அவர்கள் மீட்டிங்கில் ஒரு காரியத்தில் பிரசிடெண்டின் நடவடிக் கைக்கு அதிர்ப்தி காட்டி ஒரு தீர்மானம் கொண்டு வந்தபோது, அதை ஆதரிக்கவோ ஆமோதிக்கவோ கூட அந்த கூட்டத்தில் ஒரு மெம்பரும் இல்லை. ஜில்லா கலெக்ட்டரை அனுசரித்துப் பேசக் கூட ஆளில்லை. இது வரை எந்தப் பத்திரிகைகளாவது அவரது நிர்வாகத்தை ஆக்ஷேபித்தோ, அதிர்ப்தி காட்டியோ அல்லது கட்சிவாதம் நடந்ததாகவாவது காட்டியோ ஒரு வரியும் எழுதப்பட்டதாக சொல்ல முடியாது. அவர் நிர்வாக நேர்மைக்கு ஒரு சிறிய உதாரணம் வேண்டுமானால் ஒன்றைக் காட்டுவோம். அதாவது "எந்த மோட்டார் பஸ் காரராவது தீண்டப்படாத மக்கள் என்பவரை பஸ் ஸில் ஏற்றிச் செல்ல மறுத்தால் அந்த பஸ் லைசென்ஸ் கேன்சில் செய்யப் படும்" என்று * உத்திரவு போட்டார். பள்ளிக் கூட விஷயங்களில் தாழ்த்தப் பட்ட மக்களைச் சேர்க்காத பள்ளிக்கூட உபாத்தியாயர்களையெல்லாம் மாற்றியும், தண்டித்தும் சர்வ சாதாரணமாக எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் யாரும் படிக்கும் படியாய் செய்தார். நாட்டுக் கோட்டை நகரத்தார் விஷயங் களில் பணக்காரர்களை விட



சாதாரண மக்களிடமே அதிக நேசம் வைத்தும் சீர்திருத்த வாலிப உலகத்திற்கு உர்ச்சாகத்தை தந்து அவ்வகுப்பில் அநேகருக்கு "பணமே எல்லாம் செய்யவல்லது" என்கின்ற உணர்ச்சியை மாற்றி, அன்பைப் பெருக்கி வந்தார். வைதீகர்களிடமும் பணக்காரர் களிடமும் பேசும் நேரமெல்லாம் தனக்கு மிக்க கஷ்டமாக இருப்பதாகவே இருக்கும். வாலிபர்களிடமும், சாதாரண மக்களிடமும், தாழ்த்தப்பட்ட மக்க ளிடமும் பேசும் நேரத்தையே மிக்க உர்ச்சாகமாகக் கருதுவார். இப்படிப் பட்ட குணமுள்ள ஆட்சியில் வைதீகர்களுக்கும், செல்வந்தர்களுக் கும், பிரபுத்தனக்காரருக்கும் அதிருப்தி ஏற்பட்டதும் நம்பிக்கை இல்லை என்று சொல்ல வேண்டி வந்ததும் திரு. பாண்டியன் அவர்களுக்கு ஒரு நற்சாட்சிப் பத்திரமாகும். இதன் மூலம் மற்ற மெம்பர்கள் போர்டிலிருந்து சீர்திருத்த உலகத்திற்கும், சுயமரியாதை உலகத்திற்கும், சமதர்ம உலகத்திற்கும் தொண்டு செய்ய திரு. பாண்டியனை உதவியது ஒரு பெரிய உபகாரமே யாகும். ஆதலால் இந்த நிலை ஏற்பட்டதற்கு நாம் உண்மையாகவே மகிழ்ச்சியடைகின்றோம்.

திரு. பாண்டியன் அவர்கள் பெரிய தனவந்தர். அதாவது வருஷம் 50 ஆயிரம் ரூபாய் முதல் லட்ச ரூபாய் வரை வருவாயுள்ள செல்வக் குடும் பத்தைச் சேர்ந்தவர். ஆகவே அவர் தனக்கு பணமில்லாததால் பணக்காரரை வெறுத்தார் என்று யாரும் சொல்லி விட முடியாது.

திரு. பாண்டியன் அவர்கள் ராமநாதபுரம் ஜில்லாபோர்டுத் தலைமைப் பதவியில் பட்டுக் கொண்டதாலும், மற்றும் அரசியல் தொல்லை யாலும் சுயமரியாதை இயக்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டதே தவிர, அதாவது அவர் வெளியில் இருந்தால் எவ்வளவு பலன் ஏற்பட்டு இருக்குமோ, அவ்வளவு பலன் ஏற்பட்டது என்று சொல்ல முடியாது.

இது நிற்க, ஸ்தல ஸ்தாபன சுயாட்சி என்பதும், சீர்திருத்தம் என்பதும், அரசியல் சுதந்திரம் என்பதும் நாட்டிற்கும், பாமர மக்களுக்கு ஏழை மக்க ளுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு எவ்வளவு தூரம் பயனளிக்கக் கூடியதா யிருக்கின்றது என்பதை பொது ஜனங்கள் அறிய இது ஒரு சந்தர்ப்பமாக ஏற்பட்டது மற்றொரு விதத்தில் மகிழ்ச்சியடையத் தக்கதாகும்.

ஆகவே இன்றைய தினம் இந்நாட்டில் பொதுஜனங்களுக்கு பிரதிநிதியாக பிரபுத்தனமும், வைதீகமும்தான் இருக்க யோக்கியதையுடைய அரசியல் சுதந்திரங்கள் இருக்கின்றனவே ஒழிய உண்மையான மக்களின் பிரதிநிதித்துவத்திற்கு எவ்வித சாதனம் இல்லை என்பது உறுதியாகிவிட்டது.

இது தவிர ஸ்தல ஸ்தாபன நிர்வாகங்கள் இந்த மாதிரி காரணங்களில் அடிக்கடி மாறி மாறித் தொல்லையடையாமல் ஒரே ரீதியில் நடைபெற வேண்டுமானால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சுதந்திரமாய் நடக்கக்கூடிய ஒரு நிர்வாக உத்தியோகஸ்தர் இருப்பாரானால் இம்மாதிரிக் காரியங்களால்



RangaRakes tamilnavarasam.com

கொள்கைகள் மாறுபடாமல் இருக்கலாம். ஆனால் இன்று சட்ட சபையிலும் ஸ்தல ஸ்தாபன நிர்வாகத் தலைமையிலும் ஒரே கனவான்கள் பெரிதும் இருப்பதால் அதை ஏற்படுத்த முடியவில்லை. ஆன போதிலும் இவை களுக்காக வெல்லாம் நம்பிக்கை இல்லாத் தீர்மானச் சட்டம் வேண்டாம் என்று நாம் சொல்ல வரவில்லை. அது இருந்துதான் தீர வேண்டும். இன்றைய தினம் கக்ஷி பிரதிக்கக்ஷிகளால் மந்திரி போட்டிகளால், அரசியல் தகராருகளால் தான் இது வரை ஷெ சட்டம் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றதே தவிர நிர்வாகக் குற்றத்திற்குத் திறமைக்கு பிரயோகிக்கப் படவில்லை. இம்மாதிரி காரியங்களால் உடனே தலைமை ஸ்தானம் காலிசெய்யப்பட வேண்டியதும் ஒரு விதத்தில் அவசியமாகும்.. இல்லாத வரை இக் கக்ஷிகள் நிர்வாகத்திற்குள் புகுந்து, ஸ்தாபனங்களை மிக்க கேவலமாக ஆக்கி விடும். இந்தக் குறிப்பிட்ட சம்பவம் கூட சுயமரியாதை உணர்ச்சியினால் ஏற்பட்ட தாகும். ஏனெனில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு போதிய மெஜாரிட்டி இல்லை என்பது உறுதியானாலும் இம்மாதிரி மனப்பான்மை உள்ள இடத்தில் இனி இருப்பது கொஞ்சமும் சுயமரியாதை அல்ல என்றே விலகி விட்டார். ஆனால் மற்ற சம்பவங்களில் மெஜாரிட்டி மெம்பர்கள் எந்தக் காரணத்தை கொண்டானாலும், ஒருவரை வேண்டியதில்லை என்று கருதிவிட்டால் அவர் மறுபடியும் அதிலேயே இருக்கும்படியாக இருந்தால் அந்த மெஜாரிட்டி மெம்பர்கள் தொல்லையால் நிர்வாகம் பாதிக்கப்படாதா என்று கேட்கின்றோம். மெஜாரிட்டிக்கு விரோதமாய் உள்ளே இருந்து எப்படி யாருடைய தயவின் மீது சமாளித்துக் கொண்டிருந்தாலும் அது சுய மரியாதை அற்ற தன்மையோடு, நிர்வாகம் பாழ் என்றே சொல்லுவோம். பொதுவாக பதவிகள் அடையும் மார்க்கமும் மந்திரிகளாய் வரப்பட்டவர் கள் நிலையும் இன்று இருப்பது போலவே என்றும் இருக்குமேயானால் கீழ் நிர்வாகங்களுக்கு எவ்வளவு பந்தோபஸ்து ஏற்படுத்தினாலும் இப்படித்தான் நடக்கும். சாதாரணமாக மந்திரிகளுக்குக் கூட இந்த நிபந்தனைகள் தானே இருக்கின்றது. அதாவது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தால் விட்டு விட்டுப் போய் விட வேண்டும் என்பதாகத் தானே இருக்கின்றது. ஆகவே மேலுள்ளது போலவே தான் கீழ் இருப்பதும் இருக்கின்றது. ஆதலின் நாம் இதை மாத்திரம் குற்றம் சொல்வது ஒழுங்காகாது.

இவைகளையெல்லாம் நினைப்பதற்கு முன் ஜனநாயகம் நல்லதா, தனி நாயகம் நல்லதா, அல்லது பஞ்சாயத்து குடிஅரசு நாயகம் நல்லதா, என்று முடிவு செய்வதில் தான் உண்மை நன்மை கிடைக்க முயர்ச்சி செய்ய முடியும்.

**குடி அரசு – தலையங்கம் – 28.12.1930**



## * உயர்திரு. சௌவுந்திரப்பாண்டியரின் உத்திரவு

### ராமநாதபுரம் ஜில்லா போர்டு மோட்டார் கம்பெனி முதலாளிகளுக்கு சவுக்கடி

ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர், மோட்டார் கம்பெனி முதலாளிகளுக்குப் பின்வருமாறு ஒரு சுற்றுக் கடிதம் அனுப்பியிருக்கி றார்கள். அது வருமாறு :–

“இந்த ஜில்லாவிலுள்ள சில மோட்டார் கம்பெனி முதலாளிகள் ஆதி திராவிடர்களை தமது “பஸ்களில்” ஏற்றிக் கொண்டு போவதில்லையென் றும் டிக்கட்டில், “ஆதிதிராவிடர்களுக்கு டிக்கட்டு கொடுக்கப்பட மாட் டாது” என்று நிபந்தனை ஏற்படுத்தியிருப்பதாயும் அறிகின்றோம். இவ் வழக்கம் பிரயாணிகளுக்கு இடைஞ்சல் உண்டு பண்ணத்தக்கதாகவும். மிக அக்கிரம மானதாகவும் இருக்கிறது. ஆகவே மோட்டார் கம்பெனி முதலாளிகள் ஏதேனும் ஒரு சமூகத்தாரை பஸ்சில் ஏற்றிச்செல்ல மறுக்கவோ டிக்கட்டு களில் மறுப்பு விதிகள் அச்சிடவோ செய்தால் அவர்களுடைய லைசென்சு, முன்னறிக்கை கொடாமலே ரத்து செய்யப்படுமென இதனால் எச்சரிக்கை செய்கிறோம். இந்தச் சுற்றுக் கடிதம் கிடைத்து ஒரு வாரத்துக்குள் அந்தத் தடை விதி நீக்கப்பட்டதா அல்லவா என்று சாம்பிள் டிக்கட்டுடன் ரிப்போர்டு செய்து கொள்ளவேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ் தலைவர்களின் யோக்கியதை

## வாலிபர்களுக்கு விருந்து

ருஷிய பொது உடமைக் கட்சிக்காரர் அன்னிய தேசப் பிரசாரத்திற்கென்று ஒரு இலாக்கா வைத்து தங்கள் கொள்கைகளை உலகமெல்லாம் பரப்ப உத்தேசித்து அந்தந்த நாட்டுக்குத் தகுந்தபடி திட்டங்கள் ஏற்படுத்தி, அதை அந்தந்த நாட்டில் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்து வருகின்றார்கள். அந்த முறையில் இந்தியாவிற்கு என்று அவர்கள் வகுக்கப்பட்ட திட்டங்கள், லண்டன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்ததின் சுருக்கம் சென்னை "இந்து" பத்திரிகையில் லண்டன் நிருபரால் தந்தியடிக்கப்பட்டு அப் பத்திரிகையில் பிரசுரமானதின் கருத்தை மொழி பெயர்த்து மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. அது வாலிபர்களுக்கு ஒரு விருந்தாகும், அதில் சில இன்றைய இந்தியாவுக்குப் பொருத்தமானதென்று காணப்படா விடினும் காங்கிரசையும் இன்றைய இயக்கத்தையும், அதன் இயக்கத் தலைவர்களையும் பற்றிக் கூறியிருக்கும் குறைகளில் பெரும்பான்மை நமது அபிப்பிராயமும் ஆகும் என்பதோடு அதையே நாமும் பல தடவை எழுதி வந்திருக்கின்றோம். திட்டத்திலும் பெரும்பான்மை நாம் எழுதி வந்தவைகளாகும். பொது ஜனங்களின் உண்மையான சுதந்திர உணர்ச்சி களைக் கெடுத்து தொழிலாளர்களுக்கும் உழுகின்ற குடியானவர்களுக்கும் துரோகத்தைச் செய்தது காங்கிரசேயாகும் என்று நாம் பல தடவை எழுதியும், பேசியும் இருப்பதை பொதுவுடமைக் கட்சியாரும் ஒப்புக் கொண்டிருப்பதிலிருந்தாவது இக்காங்கிரசினால் ஏழைகளுக்கும் குடியானவர்களுக்கும் பயனில்லை என்பதை எளிதில் உணரலாம்.

மற்றும் அதில் தலைவர்களைப் பற்றி எழுதியிருப்பவைகளுக்கோ நாம் அதிக வியாக்கியானம் எழுதத் தேவையில்லை என்று கருதி விட்டு விட்டோம்.

காங்கிரசின் குற்றத்தையும் துரோகத்தையும் உணர்ந்தால் தலைவர் கள் குற்றத்தையும் துரோகத்தையும் பிரித்துக் காட்ட வேண்டியதில்லை.

மற்றப்படி பணக்காரர்கள் சொத்துகளையும் பூமிகளையும் கோயில், மடங்கள் சொத்துகளையும் பறிமுதல் செய்ய வேண்டுமென்பது மற்ற நாட்டுக்கு பொருந்தாவிட்டாலும், நமது நாட்டுக்கு மிகவும் பொருந்தும். ஏனெனில் இங்கு சொத்துக்களை அடைவதற்கு பிறவியிலேயே ஜாதிகள் வகுத்து இருப்பதோடு, சிலர் பிறவியின் காரணமாகவே சொத்து அடைவதற்கில்லாமல் தடுக்கப்பட்டிருக்கின்றார்கள். சிலர் பிறவியின் காரணமாகவே சொத்துக்கள் தங்கள் வசம் வரும்படியாகவும் செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்தக் கொள்கைகள் மதத்தோடு சேர்க்கப்பட்டும் இருக்கின்றன. ஆகையால் இந்த மாதிரி நாட்டின் சொத்துக்களை பறிமுதல் செய்து பொதுச் சொத்தாக ஆக்க வேண்டிய கொள்கை ஆட்சியில் ஏற்பட வேண்டியது மிக மிக அவசியமாகும்.

ஒரு நாட்டு சொத்து அந்த நாட்டுக்கு சொந்தமாகும். அந்த நாட்டு மக்கள் எல்லோருக்குமே சொந்தமானதாகும். அப்படி இருக்க அதை தந்திரத்தாலும், கை பலத்தாலும், கடவுள் பேராலும், மதத்தின் பேராலும், கர்மத்தின் பேராலும், விதியின் பேராலும் ஒரு சிலரே அனுபவித்துக் கொண்டு பலர் ஜீவனத்துக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதும் அதுவும் பிறவி காரணமாய் தந்திரத்தால் புரட்டால் இக் கொள்கையை நிலை நிருத்தி வைத்திருப்பதும் அக்கிரமமேயாகும்.

இன்றைய தினம் தலைவிதியை நம்பாத உலக ஏழை மக்கள் எல்லாருடைய உள்ளத்திலும் இருக்கும் உணர்ச்சி இதுவேயாகும்.

முடிவாக மற்ற விஷயங்கள் எது எப்படி இருந்தாலும் இந்திய காங்கிரசானது இந்தியாவின் 100க்கு 90 மக்களாகிய குடியானவர்கள் தொழிலாளிகள் ஆகிய இந்தியாவின் உண்மை மக்களுக்கு விரோதமானது என் பது மாத்திரமல்லாமல், பொது துரோகமானது என்பதையும் இன்றைய தலைவர்கள் பொது விடுதலை எதிரிகள் என்பதையும் நம்மைப் போலவே சம தர்மவாதிகளும் கருதி இருக்கிறார்கள் என்பவற்றை மாத்திரம் அறிவிக்க விரும்புகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 28.12.1930**


RangaRakes

tamilnavarasam.com

## சாமிக்கு வெடிசத்தம் பிரார்த்தனை

திருவாங்கூர் ராஜியத்தில் கொல்லத்தில் இருந்து திருவனந்தபுரம் வரும் வழியில் சாஸ்த்தா கோவில் என்று ஒரு கோவில் இருக்கின்றது. அந்த சாமிக்கு அந்த பக்கத்திய ஜனங்கள் தாங்கள் உத்தேசித்த காரியம் நிறை வேறினால் வெங்காய வெடி வேட்டுகள் இத்தனை போடுகிறேன் என்பதாக வேண்டிக் கொள்வது வழக்கம். மோட்டார் பஸ்காரரும் அந்தப் பக்கம் பஸ் போகும் போதெல்லாம் வண்டியை நிருத்தி வெடி வேட்டுப் போட்டுச் செல் வது வழக்கம். இந்த வேண்டுதலையை நிறைவேற்றும் விதம் எப்படி என் றால் ரோட்டுக்கும் கோவிலுக்கும் சுமார் 100, 150 அடி இருக்கும். ரோட்டு கோவிலை விட கொஞ்சம் மேடானது. இந்தக் கோவில் பூசாரிகளில் இருவர் ரோட்டில் மோட்டார் பஸ் செல்லுகின்ற பக்கம் வந்து நின்று கொண்டு ஒவ் வொரூ பஸ் பிரயாணியையும் பார்த்து சாஸ்த்தா வெடி, சாஸ்த்தா வெடிகள் என்று கேழ்ப்பார். பிரயாணிகள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வேண்டு தலைக்கு தகுந்தபடி ஒன்று இரண்டு ஐந்து என்று இம்மாதிரி சொல்லி ஒவ்வொரு வெடிக்கும் ஒருச் சக்கரம் (திருவாங்கூர் நாணையம்) வீதம் அதாவது 7 பைசா வீதம் கணக்கு கொடுத்து விடுவார்கள். இதைப் பெற்றதும் அந்த பூசாரி அங்கிருந்து உரத்த குரலில் இத்தனை இத்தனை வெடி என்று கத்துவான் அந்தப்படி கோவிலில் இருந்து வெடி சப்தம் கேழ்க்கும். அதாவது கோவிலில் உள்ள மற்றொரு பூசாரி வெங்காய வெடி பட்டாசை ஓங்கி நிலத்தில் அடிப்பதால் பெரிய சப்தம் கேழ்க்கும். வேண்டுதலைக் காரர்கள் ஒவ்வொரு வெடிக்கும் ஒவ்வொரு கும்பிடு போட்டுவிட்டு பஸ்ஸில் ஏறிப் போய் விடுவார்கள். இந்தப்படி அந்தப் பூசாரிகளுக்கு தினம் 4, 5 ரூபாய்கள் வீதம் ஆதாயம் கிடைக்கும். ஆகவே பூசாரிகளின் ஆதாயத் திற்காக பக்தர்களின் பக்திக்கு எத்தனையோ மார்க்கங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

அவைகளில் பல இன்னமும் நம்நாட்டிலும் அநேகம் இருந்து வருகின்றன.

குடி அரசு - செய்தி விளக்கக் குறிப்பு - 28.12.1930

## அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அசூயை | - | பொறாமை |
| அபேக்ஷித்தல் | - | விரும்புதல் |
| அமிதம் | - | அளவுக்கு அதிகமாக |
| அத்தாக்ஷி | - | உறுதியான சான்று |
| அபுரூமாக | - | அபூர்வமாக, அரிதாக |
| அநித்தியம் | - | நிலையற்றது |
| அவிழ்தம் | - | மருந்து, ஒளடதம் |
| ஆகுர்தி | - | உருவம், உடல் |
| ஆக்கினை | - | கட்டளை, ஆணை |
| ஆவாகனம் | - | எழுந்தருளுமாறு மந்திரத்தால் தெய்வத்தை வேண்டி அழைத்தல் |
| ஆஸ்பதம் | - | இடம், பற்றுக்கோடு |
| இத்தியாதி | - | இவை போன்ற |
| கடாக்ஷம் | - | கடைக்கண் |
| கிருத்துருவம் | - | வஞ்சனை |
| சகோதரம் | - | குலம் |
| சம்சயம் | - | அய்யம், சந்தேகம் |
| சம்ரக்ஷணை | - | காப்பாற்றுகை |
| சவதமாக | - | விலை மலிவாக |
| சிம்டா | - | சிட்டிகை, பெருவிரல் ஆட்காட்டி விரல் சேர்த்து எடுக்கும் அளவு |
| சுசி | - | தூய்மை |
| சுதாவில் | - | தன் விருப்பாய், தானாக |
| தயாபரத்துவம் | - | அன்புடைமை, அருளுடைமை |
| தாரதம்மியம் | - | ஏற்றத் தாழ்வு |
| திருஷ்டாந்தம் | - | எடுத்துக்காட்டு |
| தொந்தம் | - | கட்டு, பந்தம், துயர் |
| நிர்பயமாய் | - | அச்சமின்றி |

RangaRakes
tamilnavarasam.com

# குடி அரசு

# 1931-1

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 12


## பெரியார் திராவிடர் கழகம்

29 இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்
சென்னை - 600 041


## தோன்றிவிட்டது சமதர்ம உணர்ச்சி

பீரார் நாட்டில் லேவாதேவிக்கார பணக்காரர்கள் வீட்டிலும் ஏராள மாக பூமிகள் வைத்திருக்கும் மிராசுதாரர்கள் வீட்டிலும் கைத்தொழி லாளிகளும் விவசாயத் தொழிலாளிகளும் கூட்டம் கூட்டமாகப் புகுந்து பணங்களையும், தானியங்களையும் கொள்ளையடித்ததோடு கடன் பத்திரங்கள், பாண்டுகள், கணக்குப் புஸ்தகங்கள் முதலிய கடன் கொடுத்த ஆதாரங்களையும், பூமிகள் குத்தகைக்குக் கொடுத்த ஆதாரங்களையும் தேடி எடுத்து அவைகளை நெருப்பிட்டுக் கொளுத்தி சாம்பலாக்கி விட்டதாகச் செய்திகள் தினசரிப் பத்திரிகைகளில் காணப்படுகின்றன. அவைகள் மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

இதுமாத்திரமல்லாமல் இந்தப்படி செய்ததற்கு மற்றொரு நோக்கமும் அதில் காணப்படுகின்றது. அதாவது,

இந்த மாதிரி ரொக்க சொத்துக்களும், பூமி சொத்துகளும் அநேகமாய் பார்ப்பனர் முதலாகிய உயர்ந்த சாதிக்காரர்கள் இடமும், லேவாதேவிக்காரர் கள் இடமுமே போய் சேரக்கூடியதாய் இருப்பதால் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்களையும் கண் வைத்துக் கொள்ளை அடிக்கப் பட்டிருப்பதாகத் தென்படுகிறது.

ஆகவே இவற்றிலிருந்து இந்த முறையை உயர்ந்த ஜாதி தத்துவத் தையும், பணக்காரத் தத்துவத்தையும் அழிப்பதற்கே கையாளப்பட்டதாக நன்றாய்த் தெரிய வருகின்றது. உலகத்தில் பொதுவாக யாவருக்கும் ஒரு சமாதானமும் சாந்தி நிலையும் ஏற்பட வேண்டுமானால் இந்த முறையைத் தான் கடைசி முயற்சியாக ஏதாவதொரு காலத்தில் கையாளப்பட்டே தீரும் என்பதில் நமக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

அன்றியும் இன்று இந்தியாவிற்கு வெளியில் உள்ள வேறுபல தேசங்களில் இம்முறைகள் தாராளமாய்க் கையாளப்பட்டும் வருகின்ற விஷயமும் யாவரும் அறிந்ததேயாகும். மற்றும் பல நாடுகளில் விடுத லைக்கு இம்முறைகளையே கையாள முயற்சிகள் செய்யப்பட்டும் வருகின்றன.

இங்கிலாந்து முதலிய நமக்கு முக்கியமான நாடுகளில்கூட இம்முறைகளை புகுத்த ஒரு பக்கம் பிரசாரமும், மற்றொரு பக்கம் அதைத்

RangaRakes tamilnavarasam.com

தடுக்க முயற்சிகளும் நடந்துவருகின்றன. இவற்றின் உண்மைகள் எப்படி இருந்தாலும் கொஞ்ச காலத்திற்கு முன் இம்முறைகளை பாவம் என்றும், நரகம் கிடைக்குமென்றும் மிரட்டி ஏய்த்துக் கொண்டிருந்த தெல்லாம் போய் இப்போது இது "நாட்டுக்கு நல்லதா?" "தீமை விளைவிக்காதா?" "நமது நாட்டுக்குப் பொருந்துமா?" "நல்வாழ்க்கை நடப்புக்கு விரோதமாய் இருக்காதா?" என்கின்றவை போன்ற "தர்ம ஞானம்" பேசுவதின் மூலம்தான் இம்முயற்சிகளை அடக்கப் பார்க்கிறார்களே ஒழிய இது சட்ட விரோதம், பாவம், கடவுள் செயலுக்கு மாறுபட்டது என்கின்ற புரட்டுகள் எல்லாம் ஒரு பக்கம் அடங்கிவிட்டன.

ஆனாலும் இந்த தர்ம சாஸ்திர ஞானமும் யாரால் பேசப்படுகின்றது என்று பார்ப்போமானால் பார்ப்பனராலும், பணக்காரராலும், அதிக நிலம் வைத்துக்கொண்டிருக்கும் பெரிய நிலச்சுவான்தாரர்களாலும் இவர்கள் தயவால் அரசு ஆட்சி நடத்தும் அரசாங்கத்தாலும் தானே தவிர உண்மையில் ஜாதி ஆணவக் கொடுமையால் தாழ்த்தப்பட்டும், முதலாளிகள், லேவாதேவிக்காரர்கள் கொள்ளையால் கஷ்டப்படுத்தப்பட்டும், நிலச்சுவான் தாரர்கள் கொடுமையால் துன்பப்படுத்தப்பட்டும் பட்டினி கிடக்கும் ஏழை மக்களுக்கு இம்முரையைத் தவிர வேறு முறையில் தங்களுக்கு விடுதலை இல்லை என்கின்ற உணர்ச்சி பெருகிக்கொண்டே தான் இருக்கின்றதே தவிர சிறிதும் குறைந்ததாகவில்லை.

தவிர பொதுவாகயிருக்கப்பட்ட ஒருபொது மனிதனிடம் இன்றைய நிலைமையை இரு தரப்பாரும் எடுத்துச் சொல்லி எது நல்லது? உலகம் எப்படி இருக்க வேண்டும்? என்று தீர்ப்புக் கேட்டால் இன்று பீரார் ஏழை மக்கள் செய்த காரியம் மிகச் சரியென்றும் இதை வெகு நாளைக்கு முன்னமே செய்து இருக்க வேண்டும் என்றும்தான் சொல்லுவானே தவிர இன்றைய பார்ப்பனத் தன்மையையும் பணக்காரத் தன்மையையும் ஒருநாளும் ஒப்புக் கொள்ளவே மாட்டான்.

அன்றியும் இம்முறையை நாமும், அதாவது நம் நாட்டு மக்களும் அநேகமாய் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் இன்றும் கையாடிக் கொண்டுதான் வருகின்றோம். உதாரணமாக இன்றைய சமூக சீர்திருத்தக் கொள்கையோ, ஜாதி ஒழிப்புக் கொள்கையோ, சுயமரியாதைக் கொள்கையோ, சுயராஜ்யம் கேட்கும் கொள்கையோ பூரண சுயேச்சைக் கொள்கையோ ஆகியவைகள் எல்லாம் இந்த சமதர்ம பொதுவுடைமைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதேயாகும். அதாவது இவையெல்லாம் பலத்தையும், கிளர்ச்சியையும், சண்டித்தனத்தையும் அடிப்படையாகக் கொண்டு, கொடுக்க இஷ்டமில்லாதவனிடத்தில், இணங்க இஷ்டமில்லா தவனிடத்தில் தட்டிப்பிடுங்குவதோ வலுக்கட்டாயமாய் பறிப்பதோ ஆகிய குறியைக் கொண்டதேயாகும். அதிலும் சுயராஜ்ஜியமோ பூரண விடுதலையோ



கேட்பதை விட –அடையக் கைக்கொண்டிருக்கும் இன்றைய முயற்சியைவிட ஜாதி ஒழிப்பது என்பது மிகுதியும் சமதர்மமும் பொது உடைமைத் தன்மையும் கொண்டதாகும்.

ஏனெனில் சுயராஜியமும், விடுதலையும் மனித சட்டத்தை மீறி மனித ஆக்ஷியை மீறி பலாத்காரத்தில் சண்டித்தனத்திலே அடையக் கருதுவதாகும். ஜாதி ஒழிப்பது என்பதோ கடவுள் கட்டளையையும், ஆக்ஷியையும், கடவுள் சட்டத்தையும் மீறி பலாத்காரம் சண்டித்தனம் ஆகியவைகளையும் அதற்கும் மேம்பட்டது ஏதாவது இருந்தால் அதையும் உபயோகப்படுத்தி அடியோடு ஒழிக்க முயற்சிப்பதாகும்.

ஆகவே மனிதன் ஒவ்வொருவனும் இன்று எந்த விதத்திலும் சம தர்மத்தையும், பொது உடமைத் தத்துவத்தையும் அடைய முயற்சித்துக் கொண்டுதான் இருக்கின்றான் என்பது நன்றாய் விளங்கும்.

எனவே, இன்று மனிதன் எப்படியும் சட்டம் மீறிவிட்டான். பலாத்காரத் துக்கும் துணிந்துவிட்டான். ஆனால் அம்மாறுதல்களாலும் துணிவுகளாலும் தோன்றப்படும் எண்ணங்களை மாத்திரம் செய்கையில் செய்ய தன்னால் ஆகுமா ஆகாதா என்று யோசித்துப்பார்த்து தன்னால் ஆகும் என்று நினைக்கின்ற முறைகளை எல்லாம் கையாடிக்கொண்டும் ஆகாது என்பவைகளை மாத்திரம் பிரயோகிக்க முடியாமல் தவித்துக் கொண்டும் இருக்கின்றானே ஒழிய சட்டத்திற்கு பயந்தோ நீதிக்கு பயந்தோ அவை தர்மமல்ல என்று கருதியோ ஒன்றையும் எவனும் செய்யாமல் விட்டுக் கொண்டிருக்கவில்லை.

ஆதிக்கத்தில் இருக்கின்றவன் தன் ஆதிக்கம் என்றைக்கும் நிலைத்திருக்க ஒரு சட்டம் செய்து கொண்டிருப்பானேயானால் அடிமைப்பட்டு, தாழ்த்தப்பட்டு, கொடுமை செய்யப்பட்டு, இழிவுபடுத்தப்பட்டு, பட்டினியால் கஷ்டப்படுத்தப்பட்டு இருக்கின்றவன் எத்தனை நாளைக்கு அவ்வாதிக்கக்காரன் செய்துகொண்ட அந்த சட்டங்களுக்கு பயந்து அடங்கியிருக்க முடியும்? என்பதை யோசித்துப்பார்த்தால் சட்டத்திற்கு அடங்கி நடந்து வந்த நாள்கள் எல்லாம் முட்டாள்த்தனமாய் வீணில் கழித்த நாள்கள் என்பது எவனுக்கும் விளங்காமல் போகாது. இன்றைய தினம் உலகில் எல்லா ஆதிக்கக்காரனுக்கும் நரகமும் சட்டமும் தன் ஆயுதமாயிருக்கின்றதே தவிர நியாயமும் நீதியும் யாருக்கும் ஆயுதமாயில்லை என்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

"அன்றியும், சட்டப்படிக்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு அரசாங்க ஆதிக்கத்தை அழிக்கக் கருதி சட்டம் மீறுகின்றோம்". என்பது உலகத்தாரால் குற்றமல்ல, அநீதியல்ல என்று குடிகளாலும், பணக்கார முதலாளிகளாலும் கருதப்படுமானால்

"சுதந்திரத்தை உத்தேசித்து" "விடுதலையை உத்தேசித்து" என்று தங்களுக்கு இஷ்டமில்லாத சட்டத்தை மீறி நடப்பவர்களை தடியால்



RangaRakes tamilnavarasam.com

அடிப்பதும், மண்டையை உடைப்பதும் குற்றமல்ல அநீதியல்ல என்று ஒரு அரசாங்கத்தால் கருதப்படுமானால்

இரு கூட்டத்தின் பயனாலும் ஒருவரை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட நேர்ந்தும் அதைப்பற்றி கவலையில்லாமல் பழய காரியங்களையே தொடர்ந்து நடத்துவது குற்றமில்லை அநீதி அல்ல என்று கருதப்படு மானால்,

"உயர்ந்த ஜாதிக்காரன் என்பவனை ஒழிப்பதும், பணக்காரன் என்பவனை கொள்ளை அடிப்பதும் கடன் கொடுத்தவன் என்பவனின் ஆதாரத்தை நெருப்பு வைத்துக் கொளுத்துவதும் ஏராளமான தானியம் வைத் திருப்பவனை கட்டிப்போட்டு தானியங்களை அள்ளிக்கொண்டு போய் வயிற்றுப்பசியை தீர்த்துக் கொள்வது" என்பதும் அந்நாட்டு ஏழை மக்களுக் குப் பட்டினியால் வாடுகின்றவர்களுக்கு, இழிவுபடுத்தப் பட்டவர்களுக்கு எப்படி குற்றமாகுமென்பது நமக்குத் தோன்றவில்லை.

அன்றியும் முன்னே குறிப்பிட்ட காரியங்கள் எல்லாம் அதாவது சுயராஜியம் பூரண சுயேச்சை என்பவைகள் கேட்கப்படுவதும், கொடுக்க முடியாது என்று சொல்லப்படுவதும் தின்றுகொளுத்து பேராசையால் பலத் திமிரால் நடைபெறப்படுபவைகளாகும். ஆனால் பின் குறிப்பிட்ட செய்கை கள் அதாவது பீரார் ஏழைமக்கள் செய்த காரியம் இழிவைப் போக்கவும், பட்டினியால் மடிபவர்களின் ஜீவனத்திற்கு ஆகவும் மனிதன் செய்து தீரவேண்டிய இயற்கை உணர்ச்சியைப்பற்றிய தாகுமென்றே நமக்குப் படுகின்றது.

எது எப்படி இருந்தாலும் கையில் வலுத்தவன் என்கின்ற முறையிலும் உயிருக்குத் துணிந்தவன் என்கின்ற முறையிலும், எவனுக்கும் எதுவும் செய்ய இன்றைய உலகத்தில் பாத்தியமிருக்கின்றதை நம்மால் மறுக்கமுடியவில்லை. ஆகவேதான் அது இன்று உலகதர்மமா யிருந்தும் வருகின்றது. ஆகவே அது தப்பு, இது தப்பு என்று பேசுவதெல்லாம் கையா லாகாத தன்மையாகதான், வீண் பேச்சாகத்தான் காணப்படுகின்றனவே ஒழிய அவற்றில் சத்தியம் இருப்பதாய் காணப்படவில்லை.

உதாரணமாக பரமார்த்திகம் என்று சொல்லப்படுவதும் 50 கோடி மக்கள் பின்பற்றுவதும் பூஜிப்பதுமாயிருக்கும் பைபிள் என்னும் கிறிஸ்தவ வேதத்தைப் பறிமுதல் செய்வதும், அதைப் படிப்பவர்களைத் தண்டிப்பதும், இவற்றிற்கு எதிராய் இருப்பவர்களை தூக்கில் போடுவதுமாய் இருக்கும் தன்மை இன்று உலகில் நடக்கப் பலர் பார்க்க கேட்க்க சர்வ சாதாரண மாகிவிடவில்லையா?

அதுபோலவே சுமார் 30 கோடி மக்கள் பின்பற்றுவதும், பூஜிப்பதும், கடவுள் வாக்கு என்று சொல்லப்படுவதுமான குர்ஆன் என்னும் இஸ்லாமிய வேதவாக்கியங்கள் பறிமுதல் செய்யப்படுவதும், தடுப்பவர்களை



தண்டிப்பதுமான தத்துவம் தாண்டவமாடுவதையும் பார்க்கவும், கேட்கவும் சாதாரணமாகி விடவில்லையா?

இவைகள் மனித சுதந்திரத்திற்காகவும், மனிதன் முற்போக்கிற்காகவும் என்று உண்மையாய் கருதியே செய்யப்பட்டு வருவதாக அநேகர் உணர்ந்து திருப்தி அடைந்தும் ஆய்விட்டதே.

உலகத்தில் இவைகள் எல்லாம் சர்வ சாதாரணமாகிவிட்ட பின்பு ஒருவன் பொருளை - ஒருவன் கஷ்டத்தை - ஒருவன் சட்ட சாக்காலும் தந்திர சக்தியாலும் அனுபவிப்பதென்றால் இனி அந்தத் தன்மைகள் எத்தனை நாளைக்கு இருக்கமுடியும்?

இனிமேல் அதாவது இன்றையதினம் எவ்வளவு பலவீனமான ஒரு அரசாங்கமாய் இருந்தாலும் அவ்வரசாங்கத்தை அழித்து வேறு அரசாங் கத்தை ஸ்தாபிப்பது என்கின்ற கொள்கையில் யார் என்ன திட்டம் ஏற் படுத்திக் கொண்டு வேலை செய்தாலும் இனி ஒருக்காலமும் அதில் எவரும் வெற்றி பெற முடியவே முடியாது என்று உறுதியாய்ச் சொல்லுவோம். ஏனெனில் அது ஒரு கூட்டத்தாரிடம் உள்ள ஆதிக்கத்தை மற்றொரு கூட்டத்தார் கைப்பற்றி ஆட்சி செலுத்தப்பார்ப்பதாகுமே ஒழிய அது பொதுஜனங்களுக்கு பயன்படுவதாகாது.

ஆதலால் அம்மாதிரி முயற்சியில் ஆக்ஷியில் பங்குபெற ஆசைப் படுபவர்களும், அவர்களது சிப்பந்தி சிஷ்யகோடிகளும் அவர்களால் ஏமாற்றப்பட்டவர்களும்தான் அதில் இனி ஈடுபட முடியுமே தவிர உண்மை யான பொது ஜனங்கள் ஒரு காலமும் ஈடுபடமாட்டார்கள்.

அப்படிக்கில்லாமல் அதிகமாய் அளவுக்கும், தகுதிக்கும் மீறி அனுப விப்பவனிடம்-வைத்துக் கொண்டிருக்கின்றவனிடம் உள்ளது எதையும் கைப்பற்றுவது, அதை எல்லோருக்கும் சமமாய்க் கொடுப்பது என்கின்ற கொள்கை மீது எந்தத் திட்டம் வைத்து வேலை செய்தாலும் எல்லாப் பொது மக்களும் அதில் சேரக்கூடும். சேருவதனால் பயனும் பெறக்கூடும். ஆனால் அது சாத்தியமா என்று பலர் கருதக்கூடும். இந்த இடத்தில் சாத்தியமா என்று கருதுவதற்கு முன் இது நியாயமா அல்லவா என்று யோசித்துப் பார்த்து நியாயம் தான் என்ற முடிவுக்கு வந்தார்களேயானால் அவர்களுக்கு உண்மை யான உணர்ச்சி இருக்குமானால் பிறகு அங்கு இது சாத்தியமா? என்கின்ற கேள்விக்கோ, யோசனைக்கோ இடமே இருக்க நியாயமில்லை. இருந்தாலும் அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. நம்மை அறியாமலே நமக்கு அந்த நியாய உணர்ச்சி வெற்றியடையச் செய்துவிடும். அன்னிலையில் - அத் தருமத்தில் இன்று வெற்றி பெற்றதேசங்கள் எல்லாம் இது சாத்தியமா என்று கருதிப்பார்த்து வெற்றி பெற்றவை அல்ல. மற்றெப்படி என்றால் நியாயமா என்று பார்த்து நியாயம்தான் என்று மனப்பூர்த்தியாய் திருப்திப்பட்ட



RangaRakes tamilnavarasam.com

பின்பேயாகும். ஆதலால் இங்கு சாத்தியமா என்ற யோசனைக்கு சிறிதும் வேலையில்லை.

ஆகவே இன்று வெள்ளைக்கார அரசாங்கம் விட்டால், அடுத்த அரசாங்கம் நமது சமதர்ம அரசாங்கமும் பொது உடமை அரசாங்கமு மாகவே தான் இருக்கவேண்டுமே ஒழிய வெறும் ராமராஜ்ஜிய - சுயராஜ்ஜிய - மோக்ஷ- நரகப் பூச்சாண்டி ராஜ்ய அரசாங்கமாக இருக்கக் கூடாது என்பதை எடுத்துக் காட்டுவதற்கே அந்த சேதியை ஆதாரமாய் வைத்து இதை எழுதினோம்.

**குடி அரசு - தலையங்கம் - 04.01.1931**



# புதிய பத்திரிகைகள்

செட்டியார் நாட்டில் திரு. அ. பொன்னம்பலனார் ஆசிரியத் தலைமையில் சண்டமாருதம் பத்திரிகையும், பிரஞ்சு இந்திய நாட்டில் திரு.எஸ். குருசாமி அவர்கள் ஆசிரியத் தலைமையில் புதுவை முரசுப் பத்திரிகையும் துவக்கப்பட்டிருப்பது தமிழ் மக்களுக்கு, உண்மைச் சுயமரியாதை உணர்ச்சி உள்ளவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

இன்று சுயமரியாதை இயக்கத்திற்கு சில பத்திரிகைகளே இருக்கின்றன.

அதாவது "குடி அரசு" "குமரன்" "நாடார் குலமித்திரன்" "முன்னேற்றம்" "தமிழன்" "புதுவை முரசு" "சண்டமாருதம்" ஆகிய வாரப் பத்திரிகைகளேயாகும். "திராவிடன்" தினசரி ஒன்று இருந்தாலும் அது இருக்குமோ, போய் விடுமோ; இருந்தாலும் சுயமரியாதைக் கொள் கைக்கே உழைக்குமோ என்பது பற்றி பலருக்கு சந்தேகமும் ஏற்பட்டு விட்டது. ஆனாலும் அதையும் சேர்த்தே பார்த்தாலும் இவை மாத்திரம் போதாதென் போம். சீக்கிரத்தில் சுயமரியாதைத் தொண்டனும் கிளம்பி விடுவான் என்றே தெரிகின்றது. ஏனெனில் அதன் ஆசிரியர் தனக்கு மறுபடியும் வேலையும் அவசியமும் வந்துவிட்டதாகக் கருதி முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றார். இனியும் ஜில்லாதோறும் ஒரு பத்திரிகை சுயமரியாதை இயக்கப்பிரசாரத்திற்கு ஏற்பட வேண்டும் என்பதே நமதாசை.

அன்றியும் நமதியக்கத்தால் பலருக்கு வயிற்றுப் பிழைப்புப்போய் புஸ்தக வியாபாரமும், கேட்லாக் வியாபாரமும் போய் யோக்கியதையும் போய் திண்டாட ஏற்பட்டு விட்டதாலும் அப்படிப்பட்டவர்களுக்கு நமது இயக்கம் "எமனாய்" தோன்றிவிட்டதாலும் தங்கள் ஜீவ வாழ்வை உத்தே சித்து எதிர்க்க வேண்டிய அவசியமுள்ள பத்திரிகைகள் பல இன்னும் தோன்றலாம் தோன்றியும் இருக்கின்றன. ஆதலால் அதனதன் யோக்கிய தைக்குத் தகுந்தபடி அதனதன் பாஷா ஞானத்தில் நடைபெற இன்னும் பல பத்திரிகைகள் வேண்டியது அவசியமுமேயாகும். ஆதலால் சுயமரியாதை மக்கள் இவைகளை ஆதரிப்பார்கள் என்றும் இன்னும் பல பத்திரிகைகள் தோன்ற உதவி அளிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 04.01.1931**



RangaRakes tamilnavarasam.com

# சுசீந்திரம் எச்சரிக்கை

சுசீந்திரம் தெருவில் நடக்கும் உரிமை சம்மந்தமாய் திருவாங்கூர் ஹைகோர்ட்டில், அந்த ஊர் பாதைகளில் யாவருக்கும் நடக்க உரிமை உண்டென்று தீர்ப்புக் கிடைத்து தண்டிக்கப்பட்ட சத்தியாக்கிரகிகள் விடுதலை அடைந்தும்கூட பார்ப்பன விஷமத்தனத்தின் பலனாய் மறுபடியும் பொது ஜனங்கள் நடக்க தடையேற்பட்டு மறுபடியும் சத்தியாக்கிரகம் நடக்க வேண்டிய அவசியம் வந்து கொண்டிருக்கிறது. இதற்கு நாம் என்ன செய்யலாம். வம்புச்சண்டைக்கு போகாமல் இருக்கலாமே ஒழிய வலிய வரும் சண்டையை எப்படி விட முடியும் என்று திருவாங்கூர் அரசாங்கத் திற்கு பணிவான எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 04.01.1931**



# மூன்றாவது சுயமரியாதை மகாநாடு

மூன்றாவது சுயமரியாதை மகாநாடு இவ்வருஷம் ராமநாதபுரம் ஜில்லாவில் நடத்தப்பட வேண்டுமென்று அந்த ஜில்லா வாசிகளால் ஈரோடு மகாநாட்டில் கேட்டுக்கொள்ளப்பட்டது யாவரும் அறிந்தாகும். அந்தப்படி இவ்வருஷம் மார்ச்சு மாதம் கடைசியிலாவது ஏப்ரல் முதலிலாவது நடை பெற வேண்டியது மிகவும் அவசியமாகும். ராமநாதபுரம் ஜில்லாவில் மகா நாடு நடத்துவதற்கு தகுந்த இடம் விருதுநகர் என்றே கருதுகின்றோம். ஏனெனில் ரயில் போக்குவரத்து சவுகரியமும் உர்ச்சாகமும், ஊக்கமும், செல்வமும் பொருந்திய சுயமரியாதை வீரர்கள் மிகுதியும் நிறைந்த நகரமும் மற்றும் அவ்வித வீரர்கள் மலிந்த சுற்றுப்பிரதேசங்களுக்கு மத்திய ஸ்தலமாகவும் மதுரைக்கு 25 மைல் தூரத்தில் மிக சமீபமாகவும் ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜ பாளையம், சிவகாசி முதலிய இடங்களுக்கும் அருப்புக் கோட்டை முதலிய இடங்களுக்கும் மத்திய பாகமாகவும் இருப்பதாகும்.

ஆகவே இந்த வருஷம் மாகாண மகாநாடு விருதுநகரில் நடை பெறுதல் மிக்க நலமென்றே கருதுகிறோம். மகாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவராய் திரு. W.P.A. சௌந்திர பாண்டியன் அவர்களும், மகாநாட்டு காரியதரிசிகளாய் திருவாளர்கள் செந்தில் குமார நாடார், V.V. ராமசாமி முதலியவர்களும் மற்றும் பல காரியங்களுக்கு திருவாளர் அருப்புக் கோட்டை கோபால கிருஷ்ணசாமி நாயக்கர், சிவகங்கை S. இராமச்சந்திரன், முருகப்பா முதலியவர்களும் பிரதானமாக இருந்து துவக்கப்பட்டால் மகா நாடு கண்டிப்பாய் இதுவரை நடந்து வந்ததைப் பார்க்கிலும் விசேஷமாக நடைபெறக்கூடும் என்பதில் நமக்கு எவ்வித ஐயமுமில்லை.

தலைவர் ஸ்தானத்திற்கு சென்ற வருஷம் போலவே வட நாட்டி லிருந்து ஒரு பெரும் சீர்திருத்தவாதியாகவும், தலைகீழ் கிளர்ச்சிக்காரரா கவும் பார்த்து ஒரு கனவானை திரு. ஆர்.கே. ஷண்முகம் அவர்கள் தயவால் அழைத்து வரலாம் என்கிற தைரியம் இருக்கிறது. இம்மகாநாட்டில் இன்னும் முற்போக்கான பல தீர்மானங்கள் செய்யப்பட வேண்டியதாகவும் அமுலில் நடத்த வேண்டியதாகவுமிருப்பதால் தமிழ்நாட்டு இளைஞர்கள் யாவரும் தவறாமல் பங்கு எடுத்து உழைத்து வெற்றி பெறச்செய்ய வேண்டியதவசி யமாகும். தண்ணீர் சௌகரியத்தை உத்தேசித்து அதே சமயத்தில் வேறு சில மகாநாடுகளும், 3, 4 நாட்களுக்கு நடத்த உத்தேசிக்கப் பட்டிருப்பதாய்த்



RangaRakes tamilnavarasam.com

தெரிய வருகிறது. விருதுநகர் கனவான்கள் சுலபத்தில் ஒரு காரியத்தில் தலையிடமாட்டார்கள் என்பதும், தலையிட்டு விட்டால் அவர்களைப் போல எடுத்துக்கொண்ட காரியங்களை ஒழுங்காகவும் வெற்றிகரமாகவும் முடிப்ப வர்கள் அரிது என்பதையும் நாம் தமிழ் நாட்டிற்கு எடுத்துக்காட்ட வேண்டிய தில்லை. இதை உத்தேசித்தே மேல் கொண்ட காரியங்களைப் பற்றி யோசிக்க ஈரோட்டில் இம்மாதம் கடைசி வாரத்தில் நிர்வாகக் கமிட்டி மீட்டிங்கை தலைவர் திரு. பாண்டியன் அவர்கள் கூட்டியிருக்கிறார்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 04.01.1931**



# சித்திரபுத்திரன்

மூடர்களே! மூடர்களே!! ஒரு சின்ன சங்கதி. கோவிலின் மீதிருக்கும் கலசம் திருட்டுப் போகின்றது, அம்மன்கள் விக்கிரகங்களின் கழுத்திலிருக் கும் தாலிகள் திருட்டுப்போகின்றது, விஷ்ணு விக்கிரகத்தின் நெற்றியில் இருக்கும் நடு நாமம் (தங்கத்தில் வைத்தது) திருட்டுப் போகின்றது, சிவன் விக்கிரகத்திலிருக்கும் நெற்றிப்பட்டை மற்ற விக்கிரகங்களை கீழே தள்ளி அதிலிருக்கும் தங்கம் முத்து ரத்தினம் திருட்டுப்போகின்றது. இவைகளின் வாகனத்தில் தேரில் நெருப்புப் பிடிக்கின்றது. அச்சு ஒடிகின்றது. இவைகளின் பயனாய் பலர் சாகின்றார்கள். மூடர்களே இவற்றைப் பார்த்தும் கேட்டும் கூடவா அந்த இடங்களில் அந்த விக்கிரகங்களில் அந்த தேர் வாகனங்களில் “புனிதத்தன்மை தெய்வத்தன்மை அருள் தன்மை ஆண்டவனை ஞாபகப் படுத்தும் தன்மை” முதலியவைகள் இருக்கின்றதாக நினைக்கின்றீர்கள். உங்க ளிலும் மூடர்கள் இனியும் எங்காகிலும் உண்டா தயவு செய்து சொல்லுங்கள்.

இன்னும் ஒரே குட்டி சங்கதி. வட்டி வாங்குகின்றவர்கள் கோடீஸ்வர னாகிறான். வட்டி கொடுப்பவன் நாசமாய் பாப்பராய்ப் போகிறான் என்பதைப் பார்த்தும் கேட்டும் இன்னமுமா பாழாய்ப்போன கடவுள் இருக்கிறார் என்று கருதுகின்றீர்கள்.

இன்னும் ஒன்றுதான், அப்புறம் ஒன்றுமில்லை. துளியூண்டு சங்கதி. காவடி எடுத்துக்கொண்டு போனவன் காலராவில் செத்த பிறகு கூடவா நாசமாய்ப் போன சாமி இருக்குதுண்ணு நினைக்கின்றீர்கள்.

**மூடர் :-** சும்மா இப்படியெல்லாம் பேசிவிட்டால் போதுமா? இந்த உலகத்தைப் படைத்ததற்கு ஏதாவது ஒரு காரணம் வேண்டாமோ? அது தான் கடவுள்.

**பதில் :-** சரி, அப்படியானால் அந்தக் காரணத்தை கடவுளை உண்டாக் கினதற்கு மற்றொரு காரணம் வேண்டாமா? அதுதான் சுயமரியாதை இயக்கம். (பகுத்தறிவு)

**மூடர் :-** கடவுளைப் படைப்பதற்கு ஒரு காரணம் கேட்பது முட்டாள் தனமாகும்.



RangaRakes tamilnavarasam.com

**பதில் :-** அப்படியானால் உலகப்படைப்புக்கு காரணம் தேடிக் கொண்டிருப்பது அதைவிட இரட்டிப்பு முட்டாள்தனமாகும்.

**மூடர் :-** உங்களோடு யார் பேசுவார்கள்.

**பதில் :-** சரி நல்ல காரியமாச்சுது. "சனியன்" தொலைந்தது. ஆனால் காணாத இடத்தில் குலைக்காதே.

**குடி அரசு - உரையாடல் - 04.01.1931**



# ஜாதி ஆதிக்க சுயராஜ்யம்

வட மாகாணத்தில் சுயராஜ்ஜியத்திற்காக என்று செய்யப்படும் சத்தி யாக்கிரக ஆர்ப்பாட்டம் பிரமாதமாக விளம்பரப்படுத்தப்பட்டாலும் ஜாதி ஆதிக்கத்தை நிலைநிறுத்த வருணாசிரம சுயராஜ்ஜிய சூட்சிகளும் அங்கு தாராளமாய் நடந்து கொண்டுதான் வருகின்றன. அங்கு வருணாசிரம சுயராஜ்ஜிய மகாநாடு என்பதாக ஒன்று பெருத்தமுறையில் ஏற்பாடு செய்து வருணாசிரமமும், ஜாதி உயர்வு தாழ்வும், மனுதர்ம சட்டங்களும் அவசியம் என்றும் அவைகளை நிலை நிறுத்த பிரசாரம் செய்ய வேண்டுமென்றும் பிரயத்தனங்கள் செய்யப்பட்டதை அறிந்து தாழ்த்தப்பட்ட மக்களாகிய ஆதி திராவிடர்கள் என்போர்கள் அம்மகாநாடு நடக்கமுடியாமல் சத்தியாக் கிரகம் செய்ததாகவும் அதற்காக, அவர்களில் பலரைச் சிறைப்படுத்தி இருப்ப தாகவும் பொது ஜனங்கள் எல்லாம் கூடி வருணாசிரமத்தை நிலை நிருத்துபவர் களைக் கண்டித்ததாகவும் காணப்பட்டிருக்கின்றன. வெள்ளைக்காரர் ராஜ்ஜிய மாகிய "பட்டப்பகலில்" இந்த அக்கிரமம் நடக்கும்போது இனி வருணாசிரம சுயராஜிய ராஜ்யத்தில் என்ன வித அக்கிரமம் நடக்காது என்பதை யோசித்துப் பார்க்கும்படி நினைப்பூட்டுகிறோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 04.01.1931**



RangaRakes tamilnavarasam.com

# "புதுவை முரசு"

"புதுவை முரசு" என்னும் வாரப்பத்திரிகை ஒன்று புதுவை (புதுச்சேரி)யில் இருந்து சில மாதங்களாக வெளிவருவது யாவருக்கும் தெரிந்த தாகும். அப்பத்திரிகை ஆரம்பித்ததின் னோக்கமே சுயமரியாதைக் கொள்கைகளைப் பறப்பவேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீதே துவக்கப் பட்டதாகும்.

அப்பத்திரிக்கைக்கு இப்போது திரு.எஸ். குருசாமி பி.ஏ., அவர்கள் ஆசிரியராய் இருக்கச் சம்மதித்து இருக்கின்றார்.

திரு. குருசாமியைப் பற்றி நாம் யாருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகின்றோம், அவர் பல நாள் குடி அரசு ஆபீசிலும், ரிவோல்ட் பத்திரிகை பிரசுரத்தில் முக்கியஸ்தராகவும் இருந்து வந்தவர். சுயமரியாதை இயக்க கொள்கைகள் முழுவதும் நன்றாய் உணர்ந்தவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் போதிய உலக ஞானப் பாண்டித்தியம் உடையவர். இவ்வியக்கத்திற்கே தனது வாழ்நாளை பயன்படுத்த கவலை கொண்டுள்ள ஒரு உண்மைச் சுயமரியாதை வீரர். அவர் தனது சுயமரியாதை உணர்ச்சிக்கேற்ற துணைநலம் கொண்டவர். ஆகவே அப்படிப் பட்ட ஒருவரால் நடத்தப்படும் பத்திரிகை சுயமரியாதை உலகத்திற்கு சிறந்த பயனளிக்கக் கூடியது என்பதில் யாவருக்கும் சந்தேகமிருக்காது.

ஆகவே அப்பத்திரிகையை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டியது நாட்டின் சுயமரியாதையில் பற்றுள்ளவர்கள் கடமையாகும்.

சந்தா வருஷம் 1-க்கு
உள்நாட்டுக்கு ரூ. 3-0-0
வெளிநாட்டுக்கு ரூ. 5-0-0
ஆயுள் சந்தா ரூ. 30-0-0

விலாசம் :- **"புதுவை முரசு"** காரியாலயம், நெ.4 லல்லி தொலாந்தா வீதி, புதுச்சேரி, S.I.

**குடி அரசு - மதிப்புரை - 04.01.1931**



# "சண்டமாருதம்"

## ஆசிரியர் அ. பொன்னம்பலனார்

கோட்டையூரிலிருந்து வெளிவரும் "சண்டமாருதம்" என்னும் தமிழ் வாரப்பத்திரிகையின் முதல் இதழ் வரப்பெற்றோம். இது சுயமரியாதைத் தொண்டர் பூவாளூர் அ.பொன்னம்பலனார் அவர்களால் எழுதப்பட்டு வெளியிடுவதாகும். இதன் கொள்கை அதன் பெயருக்கேற்ப சுயமரியாதைக் கொள்கைக்கு எதிரான எதையும் சிறிதும் அஞ்சாமல் எதிர்த்து அடிப்பதேயாகும். அதன் ஆசிரியரான திரு. அ. பொன்னலம்ப னாரைப்பற்றி நாம் சுயமரியாதை உலகத்திற்கு அதிகம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. அவர் முதலில் ஒரு பெரிய சைவ சித்தாந்த அழுக்கு மூட்டையாய் இருந்தவர். என்னேரமும் அடிக்கடி விபூதி பூசிக்கொண்டு ருத்திராக்ஷ மாலை பூண்டு தேவார திருவாசக, ராமலிங்கசாமி முதலாகிய பாடல்களை கண்களில் நீர் ஒழுகத் தேம்பித்தேம்பி அழுதுகொண்டு இசை யோடு பாடிப்பாடி சைவப் பிரசாரம் செய்தவர் - பூவாளூர் சைவசித்தாந்த கழகத்தின் முக்கிய பண்டிதர்களில் ஒருவராய் இருந்தவர். அப்படிப் பட்டவர் சுயமரியாதையில் திரும்பி "சண்டமாருதம்" போல் எதிரிகளைத் தாக்கி சுயமரியாதையைப் பரப்ப ஆசை கொண்டே "சண்டமாருதம்" என்ற பத்திரிகையின் ஆசிரியராயிருக்கிறார். ஆகவே தமிழ் மக்கள், சிறப்பாக சுயமரியாதையில் கவலையுள்ள மக்கள் யாவரும் அதற்கு சந்தாதாரராய்ச் சேர்ந்து ஆதரிக்க வேண்டியது கடமையாகும்.

அதன் வருட சந்தா ரூ. 3-0-0
வெளிநாட்டுக்கு ரூ. 4-0-0
விலாசம் :- "சண்டமாருதம்" ஆபீஸ்,
கோட்டையூர், ராமநாதபுரம் ஜில்லா.

**குடி அரசு - மதிப்புரை - 04.01.1931**



RangaRakes tamilnavarasam.com

## நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றி

## சுயமரியாதைத் தலைவர்

# திரு. சௌந்திரபாண்டியன் அபிப்பிராயம்

*"ஸ்தலஸ்தாபன சட்டத்தில் நம்பிக்கை இல்லாத தீர்மான விதி மிகவும் அவசியமாய் இருக்க வேண்டிய தொன்றாகும். அதை நான் நல்ல நிர்வாகத்திற்கு ஒரு முக்கியமான அம்சமென்று கருதுவதோடு அதை எந்தக் காரணம் பற்றியும் எடுத்து விடக்கூடாது என்று கருதுகின்றேன். அதோடு ஒவ்வொரு ஜில்லா போர்டுக்கும் ஒவ்வொரு நிர்வாக அதிகாரி (எக்ஸ் கூட்டிங் ஆபீசர்) இருக்க வேண்டுமென்று எனக்கும் இச்சட்டம் செய்யும் பொழுது தோன்றியது போலவே இப்பொழுதும் தோன்றுகிறது.*

*அவ்விதம் செய்யப்படுமானால் போர்டின் தலைவர்களுக்கு இப் பொழுது ஏற்படும் அநேக இயற்கைக் கஷ்டங்களும், தொல்லைகளும் நீங்கி தாக்ஷண்ணியமில்லாமல் தனது கடமையைச் செய்ய இடமுண்டாகும். ஆகையால் சர்க்கார் இந்த ஏற்பாட்டைச் சீக்கிரம் அதாவது அடுத்த வருஷத்திலாவது செய்வார்களென்று நம்புகிறேன்" என்றும்*

*தனது நிர்வாகத்தில் தனக்கும், மெம்பர்களுக்கும் நடந்து வந்த சம்மந்தத்தைப்பற்றி அவர் சொல்லும்போது,*

*"இந்த இருபத்தைந்து மாத காலத்தில் ராமநாதபுரம் ஜில்லா போர்ட் நிர்வாக நடவடிக்கைகளில் இது வரையும் ஒரே ஒரு விஷயம். அதாவது விதியின் அர்த்த சம்மந்தமான விஷயம் சம்மந்தப்பட்ட ஒரே ஒரு விஷயம் தவிர மற்றப்படி விஷய அட்டவணைகளில் கண்ட விஷயங்கள் எல்லாம் ஓட்டுக்கு விடாமல் ஏகமனதாகவே பைசலாகி இருக்கின்றது என்று கூறுகின்றேன்" என்று சொன்னார்.*

குறிப்பு :- நாமினேஷனில் வந்த தலைவர்கள், எலக்ஷனில் வந்த அங்கத்தினர்களின் நன்மதிப்பையும், நம்பிக்கையையும் இதற்குமேல் பெற்றவர்களை இத்தமிழ்நாட்டில் இதுவரை யாரும் பார்த்ததில்லை. இனியும் பார்க்க முடியுமா? என்பது சந்தேகமேயாகும். ஸ்தல நிர்வாகம், பொருப்பு பணக்கார ஆதிக்கத்தையும், ஜாதி ஆதிக்கத்தையும் விடுத்து ஏழை மக்களுக்கும்,



தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சம உரிமை இருக்கும் படியான ஆதிக்கத்திற்கு வருங்காலத்தில் திரு. பாண்டியன் அவர்கள் போன்ற சுயமரியாதை வீரர்களின் ஆட்சிக்குள் வந்து சேர முடியும். அவர்களைப் போன்றவர்களால் தான் ஸ்தல ஸ்தாபன ஆக்ஷி பயன்படத்தக்க தாகவும், நல்ல ஆக்ஷியாகவும் இருக்க முடியும்.

**( ப-ர். )**

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 04.01.1931**



RangaRakes tamilnavarasam.com

# இருகூர் திராவிட முன்னேற்ற சங்கம் முதலாவதாண்டு விழா

### ஜாதிக்கொடுமை, உயர்வு தாழ்வு ஒழிய, கடவுள் நம்பிக்கையையும், மத நம்பிக்கையையும், வினை, விதி நம்பிக்கையையும் அடியோடு ஒழிக்க வேண்டும்.

சகோதரர்களே! சகோதரிகளே!!

உங்கள் சங்க ஆண்டு விழாவில், சங்க சம்மந்தமாகவும் மற்றும் உங்கள் முன்னேற்ற விஷயமாகவும் பெரியோர்களான ராவ்சாகிப் ராமச்சந்திரம் செட்டியார், சின்னப்பாவு, சுப்பையா ஆகியவர்கள் பேசியது கேட்டிருந்தீர்கள். உங்களது குறைகளை யெல்லாம் எடுத்துக்காட்டினார்கள். உங்களைத் தெருவில் நடக்கவிடாததைப் பற்றியும், உங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கவிடாமல் தடுத்து கலகம் செய்ததைப்பற்றியும், உங்கள் பிள்ளைகள் படிப்பதனால் இந்த ஊர் உயர்ந்த ஜாதியார்கள் என்பவர்கள் தங்கள் பிள்ளைகளை நிறுத்திக் கொண்டதைப் பற்றியும், மற்றும் ராமநாதபுரம் ஜில்லாவில் ஆதிதிராவிட சமூகத்தை மற்ற சமூகத்தார் செய்யும் கொடுமைகளைப்பற்றியும் இங்கு பேசியவர்கள் எடுத்துச் சொன்னதை கேள்க்க எனக்கு மிக மிக ஆத்திரமாய் இருக்கின்றது. ஆனால் இதற்கு யார் ஜவாப்புதாரிகள் என்பதைப்பற்றி யோசித்துப் பார்க்கையில் உங்களை இக்கொடுமை செய்பவர்கள் ஜவாப்தாரியல்ல வென்றும் நீங்களும் இக் கொடுமை அனுபவத்தில் உங்கள் சமூகத்தை உத்தேசித்து பரிதாபப்பட நியாயமில்லை என்றும் எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் அவர்கள் தங்களது நம்பிக்கையின் பேரில் தங்களது பழக்க வழக்கங்களின் பேரில் தங்களது மத உணர்ச்சி, மத ஆதாரம் ஆகியவைகளில் உள்ள பற்றுதலின் பேரில் அவர்கள் நம்பும் – வணங்கும் கடவுளின் கட்டளை, செய்கை என்ற உறுதியின் பேரில் தங்கள் முன் ஜென்மத்தின் கர்மம் – பூர்வ புண்ணியம் – தலைவிதி என்கின்ற சுதந்திரத்தின் பேரில் ஒரு உரிமைப்பாராட்டி அம்மாதிரி செய்கின்றார்களே ஒழிய வேறில்லை. அதுபோலவே நீங்களும் பிறர் உங்களை நடத்துகின்ற அந்த மாதிரியான கொடுமைகளை நினைத்து மாத்திரம், அதுவும் அந்த சமயத்தில் மாத்திரம் சிறிது அக்கிரமமாகவும் கொடுமையாகவும் இருப்பதாக கருதுகின்றீர்களே ஒழிய இதற்கு காரணமென்ன? இப்படிப்பட்ட ஒரு கொடுமையானதும், அக்கிரமமானதுமான காரியம் ஏன் நடக்கின்றது? என்கிற விஷயத்திலும் இதை எப்படி அடியோடு ஒழிப்பது? இதற்காக என்ன செய்ய வேண்டியது? என்கின்ற விஷயங்களை நீங்கள் நினைப்பதுமில்லை. அப்படிப்பட்டவைகளை வேறு யாராவது எடுத்துச் சொன்னாலும் அவைகளை ஒப்புக்கொண்டு நடவடிக்கையில் நடப்பதற்கு துணிவதுமில்லை. வீணாய் இப்படிப்பட்ட ஏதாவது ஒரு சமயங்களில் உங்களில் தனிப்பட்டவர்களுக்கு ஏதாவது சங்கடம் வந்த காலத்தில் மாத்திரம், இரண்டொரு வார்த்தைகளால் அதுவும் இதன் அஸ்திவாரத்தை கவனியாமல் தனிப்பட்ட நபர் மீதோ வகுப்பார் மீதோ குற்றம் சொல்லி கூப்பாடு போடுவதும் பிறகு நாலுநாள் கடந்து விட்டால் அது மறைந்து போய் பழையபடி ஆய்விடுவதும் வழக்கமாக இருந்து வருகின்றது. பொதுவாழ்க்கையில் உள்ள சில கனவான்களும் உங்களுக்குப் பரிந்து பேசுவதுபோல் வக்காலத்து பேசுவதுபோல் சில வார்த்தைகளைப் பேசிவிட்டு பிறகு அவரவர்கள் சொந்தவேலையை அவரவர்கள் பார்ப்பதும், பிறகு என்றும் போல் சாதாரணமாயிருப்பதும் வழக்கமாக இருக்கின்றது. என்னுடைய சுமார் 20, 30 வருஷ– பொது வாழ்க்கைத் தொண்டில் இந்த சம்பவங்கள் அநேகம் எனக்கு அனுபவமுண்டு. உங்களிடத்தில் ரொம்பவும் அனுதாபமிருப்பது போல் பேசி கண்களில் கண்ணீர் வடித்துவிட்டுப்போவார்கள். பிறகு அவர்கள் வீட்டிற்குப் போனவுடன் பழைய உணர்ச்சிதான் அவர்களிடம் தாண்டவமாடும். இதற்கு உதாரணம் வெளியில் போய்த் தேடவேண்டியதில்லை உங்களிடத்திலேயே இருப்பதை ஞாபகப்படுத்திப் பார்ப்பீர்களானால் விளங்கும். அதாவது உங்களில் பலர் உங்களை விட உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக் கொள்ளும் அய்யர், கவுண்டர், நாயுடு முதலிய ஜாதியார் உங்களைத் தாழ்மையாகக் கருதுவதை மாத்திரம் நினைத்து வருத்தப்படுகின்றீர்களே யல்லாமல் பறையர் சக்கிலியர்கள் என்பவர்களை நீங்கள் உங்களிலும் தாழ்ந்த ஜாதியாகக் கருதி அவர்களை உங்களுக்குச் சமமாக நினைத்து சுதந்திரங்கள் கொடுக்க மறுக்கின்றீர்கள். இதற்கு எல்லாம் காரணம் உங்கள் மத உணர்ச்சியும், உங்கள் கடவுள் உணர்ச்சியும், உங்கள் விதி உணர்ச்சியுமேயாகும். மத சம்பிரதாயப்படி நீங்கள் சக்கிலியரை பறையர்களை விட உயர்ந்த ஜாதியாராகவும் கடவுள் அந்தப்படி உங்களைப் படைப்பித்ததாகவும் அதற்குக் காரணம் உங்களுடைய பூர்வஜன்ம கர்மத்தின் விதி யென்றும் கருதுகிறீர்கள். உங்களைத் தாழ்ந்த ஜாதியாய் கருதியிருப்பவர் களும் அப்படியேதான் மத ஆதாரத்தாலும் கடவுள் செயலாலும் பூர்வ ஜன்மாந்தர கர்ம விதியாலும் அப்படிப் பிறந்ததாகக் கருதியிருக்கின்றார்கள். இந்த மாதிரியான மதம் கடவுள் ஜென்மாந்திர விதி ஆகிய மூன்றையும் நம்பியிருக்கின்றவன் இம்மூன்றையும் பாதுகாக்க விரும்புகின்றவன் எப்படி மற்ற மக்களை சமமாகக் கருதக்கூடும்? பணக்காரனும் தான் பணக்காரனா யிருப்பதற்கு இதே காரணம்தான் கருதிக் கொண்டிருக்கிறான். திருடனும் தான் திருடனாய் இருப்பதற்கும், அயோக்கியனும் தான் அயோக்கியனாய் இருப்பதற்கும், அரசனும் தான் அரசனாயிருப்பதற்கும், கூலியும் தான் கூலியாயிருப்பதற்கும், ஏழையும் தான் ஏழை





RangaRakes tamilnavarasam.com

யாயிருப்பதற்கும், கொடுங்கோல் ஆட்சியில் கஷ்டப்படும் குடிகளும் (பிரஜையும்)தாங்கள் கஷ்டப்படுவதற்கும் மத சம்பிரதாயத்தையும் கடவுள் சித்தத்தையும் பூர்வ ஜன்ம கர்மவிதியையும் காரணமாய் கருதி தங்கள் நிலையில் திருப்தி கொண்டு இருக்கின்றார்கள். இந்த மாதிரி மக்களை உடைய தேசத்தில் எந்த மாதிரியான முன்னேற்றத்தைக் காணக்கூடும்? இந்த தேசத்தை மனிதத் தன்மையுடைய தேசமாகவும், மானமுள்ள தேசமாகவும், சுவாதீனமும் சமத்துவமுமுள்ள தேசமாகவும், ஆகச் செய்யவேண்டுமானால் மேல்கண்ட மூன்றும் அதாவது மதம், கடவுள், விதி ஆகிய மூன்றும் அடியோடு ஒழிக்கப் பட்டாக வேண்டும். அந்தப்படி யில்லாதபட்சம் வெறும் பேச்சுதான் நடை பெறுமே யொழிய காரியத்தில் ஒரு சிறிதும் பயனடைய முடியாது என்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன்.

சகோதரர்களே! உங்கள் இழிவு அதாவது தாழ்ந்த ஜாதித்தன்மை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. வேதகாலத்தில் இருந்திருக்கின்றது. அரிச் சந்திரன் காலத்தில் இருந்திருக்கின்றது. ராமன் காலத்தில் இருந்திருக் கின்றது. எல்லா ஆழ்வார், நாயன்மார் காலத்திலும் இருந்திருக்கின்றது. அதற்குமேல் இனி எப்போது இருந்திருக்க வேண்டும் என்று சொல்ல ஆசைப் படுகின்றீர்கள்?

மனிதனுக்கு கடவுள் உணர்ச்சி தோன்றிய காலந்தொட்டே இந்த நாட்டில் மேல் கீழ் ஜாதி உணர்ச்சி தோன்றிவிட்டது. கடவுள் பேராலேயே மேல் ஜாதி கீழ் ஜாதி உணர்ச்சிகளை காட்டப்பட்டிருக்கின்றன. இந்துமதம் என்பதில் வைணவத்திலாவது சைவத்திலாவது ஜாதிப்பிரிவு உயர்வு தாழ்வு தத்துவம் காணப்படாத கடவுள்களோ அவதாரங்களோ, திருவிளையாடல் களோ, கடவுளைக் காட்டிய பெரியார்களோ, புராணங்களோ, இதிகாசங்களோ ஏதாவது ஒன்றைக்காட்ட முடியுமா? என்று கேட்கின்றேன். 64 நாயன்மார் களுக்கும், 64 ஜாதிக்காரர்களாய் பிறந்திருக்கிறார்கள். 12 ஆள்வார்களும் 12 ஜாதிக்காரர்களாய் பிறந்திருக்கிறார்கள். இந்து மதத்திற்கு ஆதாரமான - சட்டமான மனுதர்ம சாஸ்திரம் முதலியவைகளை எடுத்துக்கொண்டால், அவைகளில் அளவில்லாத ஜாதியும் அதற்கு தாரதம்மியமும் காணப் படுவதை யாரும் மறுக்கமுடியாது. ஆகவே எந்த நிலையில் எந்த ஆதாரத் தைக் கொண்டு இன்று உங்கள் மத நம்பிக்கைக்காரனும், அதைச்சேர்ந்த கடவுள் நம்பிக்கைக்காரனும், அது சம்பந்தமான வேதம் சாஸ்திரம், புராணம், இதிகாச நம்பிக்கைக்காரனும் உங்களிடம் வந்து ஜாதி பாகுபாடும், ஜாதி வித்தியாசமும் இல்லை என்று சொல்ல முடியும்? என்று கேட்கிறேன்.

இந்து மத சம்பிரதாயப்படி ஜாதி இல்லை என்று உங்களிடம் யார் சொல்ல வந்தாலும் அவர்களை மூடர்கள் என்றோ மோசக்காரர்கள் என்றோதான் கருத வேண்டும். மற்றும் சிலர் தொழில் பாகுபாட்டைக் கண்டு ஜாதி வகுக்கப்பட்டதே ஒழிய பிறவியைக் கொண்டு பிரிக்கப்பட வில்லை. ஆதலால் தொழில் பிரிவு இருக்கத்தான் வேண்டும் என்று சொல்லி "கீதை



யில் பகவான் சொல்லுகின்றார்" என்று உங்களை ஏய்க்கக்கூடும். அவர் களும் அதுபோலவே அறியாதவர்களாகவோ, ஏய்க்க வந்தவர்களாகவோ தான் இருக்க வேண்டும். தொழிலுக்காக வந்தாலும் ஏன் பாகுபாடு இருக்க வேண்டும் என்றுதான் கேட்கின்றேன். ஒரு மனிதன் காலையில் தச்சனாகவும், மத்தியானம் வியாபாரியாகவும், இராத்திரியில் உபாத்தியராக வும், ஒருவனை ஒருவன் இம்சைப்படுத்துகின்ற காலத்தில் அவனை உபத்திரவத்தில் இருந்து மீட்பவனாகவும் ஏன் இருக்கக்கூடாது என்று கேட்கிறேன். மறுநாள் காலையில் உழுகின்றவனாகவும், பகலில் நெய்கின்ற வனாகவும், மாலையில் விற்கின்றவனாகவும், இரவில் காவல்காரனாகவும் ஏன் இருக்கக்கூடாது? என்று கேட்கின்றேன். ஆகவே பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்று சொல்லுகின்றவர்களும், அந்தணர், அரசர், வணிகன், வேளாளர், குடிமக்கள் என்று சொல்லுகிறவர்களும், இவர்கள் பிறவியினால் என்று சொல்லுகிறவர்களும், இவர்கள் தொழிலினால் என்று சொல்லுகிறவர்களும், ஒரே மாதிரியானவர்களே தவிர இவர்களில் அறிவாளி களோ அல்லது யோக்கியர்களோ இருக்க முடியாது என்றே சொல்லுவேன். இந்தப்படி ஒரு முறையும் நமக்கு வேண்டியதில்லை என்றும் சொல்லுவேன். அது மக்களுக்கு எந்த முறையிலும் எந்த அர்த்தத்திலும் பயன் விளைவிக்க வேயில்லை. இவை யெல்லாம் உயர்ந்தவன், தாழ்ந்தவன், பணக்காரன், ஏழை, எஜமான், அடிமை, முதலாளி, கூலி முதலிய கொடுமைத் தன்மைகளைத்தான் உண்டாக்க பயன்படுகின்றனவே ஒழிய மக்கள் சமத்துவத்திற்கும், சுதந்திரத் திற்கும் சிறிதும் பயன்படவில்லை. ஆகையால் மக்களில் எந்த வகையிலும் உயர்வு தாழ்வு உணர்ச்சி ஏற்பட முடியாத மாதிரியில் தான் உலக வாழ்க்கை நடப்பு ஏற்பட வேண்டும் அதற்கு தகுந்த மார்க்கமே செலாவணியாகப் பார்க்க வேண்டும். இல்லாதவரை இன்றைய கொடுமைகள் ஒழிய மார்க்கமே இல்லை. இத்தொண்டில் தயவு தாக்ஷண்ணியம் பார்ப்பதும் முன்னே செய்த வேலையை பின்னே அழித்துக் கொண்டு போவதாகும். இந்த விஷயங்கள் வரவர ரத்தக்களரியும் மண்டை உடையவும், உயிர்ச் சேதமும் ஏற்படத் தேவையான நிலைக்கே கொண்டுவந்து விட்டுக் கொண்டிருக்கின்றன. இதைக் கண்டு யாரும் பயந்து விடக்கூடாது. இன்றைய அஹிம்சா தர்மம் என்பவைகள் எல்லாம் பெரிதும் புரட்டுகளாகவே முடிந்துகொண்டு வருவதை நேரில் பார்க்கின்றோம். தந்திரசாலிகள் எல்லாம் அடிபடாமல் தப்பித்துக் கொள்ளவும் சாதாரண ஜனங்களும் யோக்கியர்களும் அடியும் உதையும் மண்டை உடைவும் துப்பாக்கி வெடியும் அடையவும்தான் அஹிம்சா தர்மமாய் இருக்கின்றது. அது எப்படியிருந்தாலும் மனிதன் மனித சுதந்திரம் அதாவது, தெருவில் நடப்பது, குளத்தில் தண்ணீர் மொள்ளுவது, மனிதனுக்கு மனிதன் தொடுவது, முதலிய சுதந்திரங்கள் கூட கொடுப்பதற்கு தன்தன் நாட்டினனாலேயே தன் இனத்தாலேயே தடைப்படுத்தப்பட்டிருக்கும் போது அதுவும் மதத்தின் பேராலும் கடவுள் பேராலும் நடக்கும்போது வேறு நாட்டானிடம் அரசாக்ஷி சுதந்திரம் என்று கேட்கப்படுவதைப் பார்த்தால் இதை



RangaRakes tamilnavarasam.com

எதற்கு ஒப்பிடுவது? என்பது எனக்கு புலப்படவில்லை. ஒன்றா உங்களுக்கு மனித சுதந்திரம் கிடைக்கவேண்டும். அல்லது நீங்கள் இந்த நாட்டிலாவது இதை மதத்திலாவது இந்த சமூகத்திலாவது இல்லாமல் இருக்கவேண்டும். இந்த முடிவைத் தவிர எப்படியோ உயிர்வாழ்ந்தால் போதும் என்று நினைத்துக்கொண்டு இப்படியே இருப்பது மிகவும் மானங்கெட்டத்தனமாகும். இவ்விஷயத்தில் பொருத்துப் பொருத்து பார்க்கலாம் என்பதும் பேடியின் கொள்கையேயாகும். எவ்வளவு நாள் பொருப்பது? எவ்வளவு மெள்ளப் போவது? இவற்றிற்கு ஏதாவது நாணையமோ யோக்கியப் பொறுப்பான அர்த்தமோ வேண்டாமா? இந்த நிலைக்காக இதற்கு முன் எத்தனையோ பேர் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் வக்காலத்துப் பேசியாய் விட்டது. எத்தனையோ பேர் தர்ம நியாயம் பேசியாய் விட்டது. அவ்வளவும் பழய நிலையை பலப்படுத்தவே முடிந்தது. "தோலைக்கடித்து துருத்தியைக் கடித்து வேட்டை நாய் ஆய்விட்டது" என்பதுபோல் தேசீயமானது ஒரு பக்கம் அரசியல் சுதந்திரம் கேட்டுக் கொண்டும் மற்றொரு பக்கம் வர்ணாசிரம சுயராஜ்ஜியமும் பெற முயற்சிகள் நடைபெறுகின்றன. இந்த விழிப்பாசை மயக்கத்தில் கூட "ஜாதி வித்தியாசம் இருக்கவேண்டும், பறையர் வேண்டும், தீண்டாமை வேண்டும், மனுதர்மம் வேண்டும்" என்று மகாநாடுகள் கூடிப் பேசப்படுகின்றன. இதை ஏன் என்று கேட்க ஆட்கள் இல்லை. தேசிய வீரர்களில் வெள்ளைக்காரன் ஓடிப்போகவேண்டும் என்று சொல்ல மாத்திரம் அனேக ஆட்கள் இருக்கின்றனர்.

சகோதரர்களே! இன்றைய தினம் வெள்ளைக்காரன் இருப்பதா? போவதா? என்பது நமது கவலையல்ல. உங்களுக்கும் அந்தக் கவலை வேண்டாம். நம்மீதும் உங்கள் மீதும் நமது மக்களால் சுமத்தப்பட்ட இழிவு களும் நடத்தப்படும் கொடுமைகளும் ஒழிவதாக வேண்டும் என்பதை முடி வான லக்ஷியமாய்க் கொள்ளுங்கள். அதற்காக உயிரைவிட நீங்களும் உங்கள் பெண்டு பிள்ளைகளும் தயாறாயிருங்கள். இன்றைய தினம் உலகத் தில் பல தேசங்கள் பணக்காரன், ஏழை என்கிற வித்தியாசமும் எஜமான் கூலிக்காரன் வித்தியாசமும் இருக்கக்கூடாது என்று முடிவு கட்டி வேலை செய்து வெற்றியடைந்து கொண்டு வருகிற காலத்தில் நீங்கள் பார்ப்பார ஜாதி பரச்சாதி ஒருவரை ஒருவர் பார்த்தால் தொட்டால் தெருவில் நடந்தால் தீட்டு என்ற கொள்கையை வைத்துக் கொண்டிருந்தால் நமக்கும் அவர்களுக்கும் எவ்வளவு தூரம் இருக்கின்றது என்கிறதை யோசித்துப் பாருங்கள். இந்த உணர்ச்சிகள் உங்களுக்கு தோன்றாமல் இருப்பதற்கு காரணம் உங்கள் முட்டாள் தனமும் அதற்கு ஆதரவான உங்கள் மத நம்பிக் கையும் தெய்வ நம்பிக்கையுமே ஆகும். ஆதலால் அதை முதலில்விட்டு விரட்டி அடியுங் கள். பிறகு தானாகவே சுயமரியாதை தோன்றி நியாயமும் சமத்துவமும் கிடைத்துவிடும்.

கடைசியாக சென்ற வருஷம் உங்கள் சங்கத்தை திறந்து வைத்து பல



உபன்யாசங்கள் புரிந்து பல உதவியும் புரிந்து உங்கள் முன்னேற்றத்தில் சதா கவலையும் கொண்டு உழைத்து வந்தவரும் இன்றும் இங்கு வந்து உங்களுக்கு அரிய உபன்யாசம் செய்தவருமான திரு. சி.எம். ராமச்சந்திரம் செட்டியார் அவர்களுக்கு அரசாங்கத்தில் ராவ் சாகிப்பட்டம் அளிக்கப் பட்டிருப்பதைக் கேட்க நீங்கள் எல்லோரும் மிக்க மகிழ்ச்சி அடைவீர்கள். ஆகவே அக்கனவானை உங்கள் சார்பாக நான் பாராட்டுகின்றேன். மற்றும் கோவை சிவிக் அசோசியேஷன் செகரட்டரி திரு. சின்ன அப்பாவு அவர்கள் உங்கள் முற்போக்கில் கவலை கொண்டு அடிக்கடி கவனித்து உங்களுக்கு அரிய புத்திமதிகள் சொல்லி வந்ததற்கும் உங்கள் சார்பாய் நான் மனப்பூர்வமாய் பாராட்டுகின்றேன். கோவை திரு. சுப்பன் அவர்கள் இன்று உங்களுக்கு முக்கியமான பிரசங்கம் செய்ததற்கும் அவரையும் பாராட்டுகிறேன். இந்த முதலாவது ஆண்டு விழாவுக்கு தலைமை வகித்து நடத்தும் பெருமையை எனக்குக் கொடுத்து எனக்கு செய்த வரவேற்புக்கும் நீங்கள் வாசித்துக் கொடுத்த வரவேற்புப் பத்திரத்திற்கும் எனது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு : கோவை, இருகூரில் 03.01.1931 அன்று நடைபெற்ற இருகூர் ஆதி திராவிட சமூகத்தினர்களால் நிறுவப்பட்ட திராவிட முன்னேற்ற சங்க ஆண்டு விழா தலைமையுரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 11.01.1931**



RangaRakes tamilnavarasam.com

# ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர்

இன்று நமது நாட்டில் நடைபெற்று வரும் ஸ்தல ஸ்தாபன நிர்வாகங்கள் சிறிதாவது நாணைய லட்சியத்தின் பேரிலோ, நாகரீக மக்களைக் கொண்ட நாடு என்ற தத்துவத் தன்மையிலோ நடைபெறுவதாகச் சொல்ல முடியாது என்பதே நமது அபிப்பிராயம்.

சில இடங்களில் நாகரீகமாயும் நாணையமாயும் நடக்கின்றது, நடந்தது, நடக்கலாம் என்பதையும் மறுக்கவில்லை. ஆனால் பெருவாரி யாக 100க்கு 75க்கு மேலாக நடைபெறும் நிர்வாகங்கள் பெரிதும் மோசனமானவைகளே யாகும். இதற்கு முழு பொறுப்பும் அவ்வவ்விடத் திய மக்கள் பேரிலேயோ, அல்லது ஸ்தாபன அங்கத்தினர்கள் மீதிலேயோ மாத்திரம் போடத்தகுந்தது அல்லவென்றும் சொல்லுவோம். இன்னமும் வெளிப்படையாய்ச் சொல்ல வேண்டுமானால் அநாகரீகமும் ஒழுக்கக் குறைவானதுமான ஸ்தல ஸ்தாபன நிர்வாகங்களுக்குப் பெரிதும் அந்த இலாகா மாற்றப்பட்ட இலாகாவாக இருப்பதும், ஸ்தல ஸ்தாபனங்களே மந்திரிப் பதவிக்கு படிகளாய் இருப்பதும், ஸ்தல ஸ்தாபனங்களே மந்திரிகளைக் காப்பாற்றத்தக்க ஆதரவுகளாய் இருப்பது மான ஒரு முறை முக்கிய காரணம் என்று சொல்ல வேண்டியிருப்பதற்கு வருந்துகின்றோம். மற்றும் வெரும், வெரும் ஆள்கள் எல்லாம் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் மாதம் 2000, 3000, 4000, 5000 கணக்காக பணம் சம்பாதிக்கத் தகுந்த உத்தியோகங்களை அடைந்து லாபம் அடைவதைப் பார்த்தே அதற்கு உதவி செய்தவர்கள், செய்யத் தகுந்தவர்கள் செய்பவர்களுக்குச் செய்ப வர்கள் ஆகியவர்களும் அதுபோல் சம்பாதிக்க ஆசைப்படுகின்றார்கள். ஆனால் இவர்கள் அந்தப் படி அடைவதற்கு சட்டத்தின் சாக்கால் யாதொரு மார்க்கமும் இல்லாமலி ருப்பதால் சட்டத்தின் சாக்கால் அதிகாரமிருக்கின்ற வர்களின் தைரியத்தால் சட்டத்தையோ, நாணையத்தையோ, ஒழுக்கத் தையோ லட்சியம் செய்யாமல் கொள்ளையடிக்க வேண்டியவர்களாகவும், கொள்ளையடிப்பவர்களை அனுமதிக்க வேண்டியவர்களாகவும் ஆகி விடுகின்றார்கள்.

ஆகவே இவ்வக்கிரமங்கள் இன்றைய சுயராஜியத்தினுடையவும், அரசியல் சீர்திருத்தத்தினுடையவும் பலன் என்றே சொல்லுவதோடு, பணக்காரர்களுக்கும் ஆங்கிலம் படித்தவர்களுக்குமே இவை போகக் கூடியதாகவும் இருப்பதால் ஏற்படுபவைகளேயாகும். இவற்றை அடியோடு மாற்றி யோக்கியமான நிலைக்கு கொண்டு வருவதானால் இன்றைய போக் கைப்பார்க்கும்போது சுலபமான காரியம் என்று நமக்குத் தோன்றவில்லை.

ஆயினும் எவ்வளவு தூரம் இவ்வித அக்கிரமங்களை குறைக்க முயற்சிக்கலாமோ அவ்வளவு காரியத்தை தற்கால சாந்தியாகச் செய்யக் கூடியதைச் செய்யலாம் என்று நமக்குத் தோன்றுகின்றன. அதாவது நாம் சில வருஷமாய் சொல்லிக்கொண்டுவரும் ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபனத் திற்கும் ஒவ்வொரு எக்ஸிகூட்டிங் ஆபீசர் (நிர்வாக உத்தியோகஸ்தர்) என்பவரை அரசாங்கத்தார் நியமிப்பது என்பதேயாகும். இன்றும் சென்னை கார்ப்ப ரேஷன் முனிசிபல் கவுன்சிலில் இருக்கும் கமிஷனர் எனும் உத்தி யோகஸ்தர் சென்னை முனிசிபாலிட்டியின் நிர்வாக உத்தியோகஸ்தரேயாவார். அவருக்குத்தான் அம்முனிசிபாலிட்டி நிர்வாக பொருப்பு ஒப்படைக்கப்பட்டி ருக்கின்றது. உத்தியோக நியமனம், உத்தியோகஸ்தர் களின் மீது ஆதிக்கம் முதலியவைகளும், முக்கியமான வேலைகள், கன்ட்றாக்ட்டுகள் முதலியவை கள், கொடுக்கல் வாங்கல் ஆதிக்கம் முதலியவைகளும் அந்நிர்வாக உத்தியோகஸ்தரிடமே ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. அதனால் அம் முனிசிபல் நிர்வாகம் (யாதொரு தடங்கலுக்கு இடமில்லாமலும், தயவு தாட்சண்யத்திற்கு இடமில்லாமலும் நடந்து வர அனுகூலமாய் இருக்கின்றது. சென்னை முனிசிபாலிட்டி என்பது சுமார் 5 லட்சத்திற்கு மேல்பட்ட ஜனத் தொகை கொண்டதும், சுமார் 50 லட்சம் ரூபாய் வருமானம் உள்ளதும், முக்கிய மானவர்களும், நாகரீகமும், படித்தவர்களும், பெருத்த வியாபாரிகளும் தேசீயவாதிகளும் என்பவர்கள் இருக்கின்றதான இம்மாதிரி முக்கிய பட்டண நிர்வாகத்தை கவுன்சிலர்களின் ஆதிக்கத்திற்கு அடங்காத ஒரு தனி நபரிடம் நிர்வாகம் ஒப்புவிக்கப்பட்டு இருக்கும் போதும் அதனால் எல்லாம் சுய ஆட்சித்தன்மைக்கு கேடு இல்லாமல் இருக்கும்போது மற்றபடியான வெளி இடங்களில் மாத்திரம் அதுபோல் நிர்வாக உத்தியோகஸ் தர்களை நியமிப்ப தில் எந்த விதத்தில் சுய ஆட்சித் தத்துவம் கெட்டுப்போகும் என்பது நமக்கு விளங்கவில்லை. கவுன்சிலர்களோ போர்டார்களோ செய்யும் தீர்மானத்தை தீர்மானத்தின் தத்துவப்படி நடத்துவிக்க ஒரு நிர்வாக அதிகாரி இருந்தால் அவரால் என்ன கெடுதி ஏற்படக்கூடும் என்பது விளங்கவில்லை.

ஓட்டர்கள் தயவைக் கோறும் கவுன்ஸிலர்களும், கவுன்சிலர்களின் தயவைக்கோரும் சேர்மெனும் ஞாயமாய் நடந்துகொள்ள முடியாது என்ப தற்கு ஆயிரம் உதாரணம் சொல்லலாம். எஜமானனும் அவனது குமாஸ் தாவும் ஒரு கவுன்சிலில் இருக்கக்கூடாது என்று எதற்காக சட்டம் செய்யப் பட்டிருக்கின்றது? ஒரு வாடகை வீட்டில் குடியிருக்கும் ஒரு நீதிபதியிடம் அந்த வீட்டுக்காரன் மீது வியாஜ்யம் இருந்தால் வியாஜ்யக்காரன் வீட்டில் குடியிருக்கும் காரணத்தைச் சொல்லி நீதியில் சந்தேகப்பட்டு வேறு



RangaRakes tamilnavarasam.com

கோர்ட்டுக்கு மாற்றிக் கொள்ளுகிறான். நியாயாதிபதியும் ஒரு கட்சிக்காரனும் ஒரே தாசி வைத்திருந்ததற்காக மற்ற கட்சிக்காரன் பயந்து கேசை மாற்றிக் கொண்டிருக்கிறான்.

இப்படி சாதாரண விசயங்களில் எல்லாம் நியாயம் தவறும் என்கின்ற பயம் இயற்கையாய் இருக்கும்போது அநேக மக்களின் நன்மையை, அநேகரின் வரியை இம்மாதிரி பாமர மக்கள் தயவில் தொங்கிக் கொண்டி ருக்க வேண்டியவர்களிடம் ஒப்புவிப்பது, ஸ்தல ஸ்தாபனத் தலைவர் களையும், மற்ற பொதுமக்களையும் வேண்டுமென்றே ஒழுக்க ஈனமாய் நடக்கும்படி தூண்டுவதேயாகும்.

அன்றியும் மாதம் 4000, 5000 ரூபாய் சம்பளம் வாங்கும் மந்திரிகள், நிர்வாக சபை மெம்பர்கள் முதலியவர்கள் இடமிருந்த சில அதிகாரங்களை அதாவது அந்தந்த இலாக்காவுக்கு உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் அதிகாரத்தைப் பிடுங்கி இப்போது பப்ளிக் சர்வீஸ் கமீஷனர்கள் என்பதாக சிலரை நியமித்து அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டு விட்டது யாவருக்கும் தெரியும். இந்தப்படி ஏன் செய்யப்பட்டது? என்று பார்த்தால் மந்திரிகளிடம் இந்த அதிகாரங்கள் இருந்தால் அந்தக் காரியங்கள் நியாயமாய் நடைபெறாமல் போக அநேக மார்க்கங்கள் இருக்கின்றன என்றும், மந்திரிகள் பலர் தாக்ஷண்யத்துக்குக் கட்டுப்பட்டவர்களாகையால் பல கஷ்டங்கள் ஏற்படும் என்றும் நினைத்தே இந்தப்படிச் செய்ய வேண்டியே வந்தது. மனிதன் சுதந்திரத்தையும் அதிகாரத்தையும் விரும்புவது எவ்வளவு அவசியம், இயற்கை யென்று கருதுகின்றோமோ அதுபோலவே சுதந்திரங்களும் அதிகாரங்களும் நீதியாய் நடைபெறுவதற்கு பத்திரங்கள் செய்ய வேண்டியதும் அவசியத்திலும் அவசியமாகும். சுருக்கமாக ஒரே ஒரு காரணம் சொல்லுகின்றோம். அதிலிருந்து மற்றதை ஒருவாறு யூகித்தறியலாம். அதாவது இன்று முனிசிபாலிட்டி, தாலூகாபோர்டு முதலியவைகளுக்கு நிர்வாக அதிகாரி ஒருவர், கவுன்சிலர்களுடைய சலுகைக்கும் தயவுக்கும் தொங்கிக் கொண்டிருக்க வேண்டியவர் அல்லாதவறாய் இருந்திருப்பாரானால் அந்த ஸ்தாபனங்களின் சிப்பந்திகள் இருப்பவர்களைவிட 10 மடங்கு யோக்கியர்களாகவும் யோக்கியதாபக்ஷம் உடையவர்களாகவும் இன்று இருக்கும் சம்பளத்தைவிட பகுதி அளவு சம்பளத்தில் நியமிக்கப்பட்டவர் களாகவும் குறைந்தது 3ல் 1 பாகம் குறைந்த எண்ணிக்கையுள்ள சிப்பந்திகளுடனும் அந்தந்த ஸ்தாபனங்கள் இன்றைய நடப்பைவிட நல்ல நடப்பிலும் நடந்துகொண்டு வரும்படியானவைகளாய் இருக்கும் என்பதில் நமக்கு அதிகமான நம்பிக்கை இருக்கிறது. மற்றபடி கன்ட்றாக்ட் விஷயத்திலும் ஸ்கீம்கள் விஷயத்திலும் அதிகமான நன்மைகளை வரிசெலுத்தும் ஜனங்களும் பிரதேசமும் அடைந்திருக்கக் கூடும் என்றும் சொல்லுவோம். அன்றியும் சில ஸ்தாபனங்களில் இருக்கும் நல்ல நாணையமும் பொருப்பும் நேர்மையும் உள்ள தலைவர்கள் கூட இன்று தங்கள் பொருப்புகளை, நிர்ணயமாய் நடத்தமுடியாமல் இருப்பதற்கும் தாங்கள் பாமரமக்கள் தயவில் இருக்க வேண்டிய



நிலைமையும் தாங்கள் அநாவசியமான தாட்சண்யத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள வேறொரு சாக்கு இல்லாமல் இருப்பதும் ஆகும். இந்தப்படி ஒரு நிர்வாக உத்தியோகஸ்தர் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நியமித்துவிட்டால் நாணையமாய் நடக்கும் தலைவர்களுக்கும் நல்ல நிர்வாகத்தில் ஆசையிருக்கும். தலைவர்களுக்கு எவ்வளவோ விதத்தில் அனுகூலமாய் இருக்குமே தவிர அவர்களுக்கு நஷ்டம் ஒன்றுமே ஏற்பட்டுவிடாது. பல நல்ல தலைவர்களும் இந்தப்படி சொன்னதும் இந்தப்படி நியமிக்க ஆசைப்பட்டதும் நமக்கு நன்றாய் தெரியும், அன்றியும் இம்மாதிரி நிலைமை ஏற்பட்டு விட்டால் நிர்வாகத் தலைவருக்கு நேரமில்லை, சாவகாசமில்லை என்கின்ற கஷ்டம் நீங்கிவிடும். அது மாத்திரமல்லாமல் தேர்தல்களுக்கு 1000, 2000, 5000, 10000 ரூபாய்கள் வீதம் செலவுசெய்து ஓட்டர்களுக்கு பணம் கொடுத்து, கவுன்சிலர்களுக்கும் போர்டு மெம்பர்களுக்கும் பணம் கொடுத்து ஸ்தானம் பெற ஆசைப்பட மாட்டார்கள். அதிலும் ஸ்தல ஸ்தாபன புது சட்டத்தின்படியும், வரப்போகும் புதிய சில திருத்தத்தின்படியும் கண்டிப்பாய் நிர்வாக உத்தியோகஸ்தர் இல்லாவிட்டால் தீவட்டிக் கொள்ளை ஸ்தலமாக மாறிவிடும். ஆகவே அடுத்த கவுன்சிலில் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர்களை நியமிக்க ஒரு தீர்மானம் கொண்டுவர வேண்டியது அவசியம் என்று சட்டசபை அங்கத்தினர்களுக்கு ஞாபக மூட்டுகின்றோம். அந்த நிர்வாக அதிகாரியும் ஒரு டிப்டி கலெட்டர் உத்தியோக முள்ளவராகவே இருக்க வேண்டும். ஏனெனில் அவர் கவுன்சிலர்களுக்கு பிடிக்கவில்லையானால் மறுபடியும் கவுரமான உத்தியோகத்துக்கு போகக்கூடியவராய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவரால் தன் மனச்சாக்ஷிப்படி நடக்க முடியாமல் போய் விடும். ஆகவே சுதந்திரத்துடன் நியாயமாய் நடக்கத்தகுதியுள்ளவர்களைப் பார்த்து நியமிக்க வேண்டியது அவசியமாகின்றது.

நிற்க இதைப்பற்றி யாராவது பரிகாசம் செய்வார்களானால் அவர்களுக்கு ஒரே ஒரு பதில் சொல்லிவிடும்படியும் குறிப்பிடுகின்றோம். அதாவது சேர்மென்கள் மீதும் பிரசிடெண்டுகள் மீதும் சட்டசபைப் பிரதிநிதிகளுக்கு நம்பிக்கையில்லாத காரணங்களாலேயும் அவர்கள் பெரும்பான்மையோர்கள் தேர்தல்களில் நடந்துகொண்ட மாதிரியாலேயும் கேவலம் எலக்‌ஷன் நடத்துகின்ற அதிகாரங்களைக்கூட அவர்களிடம் இருந்து பிடுங்கப்பட்டாய் விட்டதே. இதில் அவமானம் இல்லையா? என்று கேட்கின்றோம். இன்னம் ஸ்தல ஸ்தாபனங்களில் நடக்கும் காரியங்களை விளக்கிச்சொல்ல வேண்டுமானால் வெட்கப்பட வேண்டியதாகும். ஆனாலும் அவற்றையும் அவசியம் வந்தால் வெட்கத்திற்கு பயந்து கொண்டு சொல்லாமல் விடப்போவதில்லை என்றே கருதிக் கொண்டிருக்கின்றோம். ஆதலால் அந்த அவசியம் இல்லாமலே இந்த ஏற்பாட்டைச் செய்துவிடுவது சுயமரியாதை உலகத்திற்கு நலம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 11.01.1931**



RangaRakes tamilnavarasam.com

# மௌலானா முகமதலி

மௌலானா முகம்மதலி அவர்கள் லண்டனில் காலமாய் விட்டதைக் கேட்டு வருந்தாதார் யாருமே இருக்கமாட்டார்கள். அவர் ஒரு உண்மையான வீரர். தனக்குச் சரியென்று பட்டதைத் தைரியமாய் வெளியில் சொல்லுபவர்களில் அவரும் ஒருவர். ஏழைமக்களை ஏமாற்றி பணக்காரர்களும் படித்தவர்களும் அனுபவிக்கும் போக்கியமாகிய சுயராஜ்யம் அவருக்கு எப்போதுமே பிடிக்காது. தேசீயப் பிரபலத்துக்காக தனது சமூக நலனை விட்டுக் கொடுக்கும் கொலைபாதகத்தனம் அவரிடம் கிடையவே கிடையாது. தான் சாகப்போவது உறுதி யென்று தெரிந்தே சீமைக்குப் போய் தனது கட்சித் தொண்டை ஆற்றிவிட்டு சாகத் துணிந்தவர். அவர் சீமைக்குப் போகாமல் இந்தியாவில் இருந்திருந்தால் இவ்வளவு சீக்கிரம் செத்திருக்கமாட்டார்.

அவர் ஈரோட்டிற்கு வந்திருந்தபோது சொன்ன ஒரு வாக்கியம் நமக்கு நன்றாய் ஞாபகம் இருக்கின்றது. அதாவது,

> "நேற்று இருந்தவர்கள் இன்றைக்கு இல்லாமல் போவதைச் சிலர் ஆச்சரியமாய் கருதுகிறார்கள். ஆனால் நானோ, நேற்று இருந்தவர்கள் இன்றைக்கும் இருக்கிறார்களே! என்பதை ஒரு ஆச்சரியமாய்க் கருதுகிறேன்" என்று சொன்னார்.

சாவது அதுவும் எந்த நிமிஷத்திலும் சாவது தான் கிரமம் என்றும் உண்மை யென்றும் முடிவு செய்து கொண்டு சாகாமல் இருக்கும் ஒவ்வொரு வினாடியையும் லாபமாய் கருதிக்கொண்டு சாவதற்கு வருத்தப்படாமலும் கவலைப்படாமலும் இருக்கவேண்டும் என்கின்ற இயற்கையைக் கண்டு பிடித்து கவலையற்றிருந்தவர் அவரேயாவர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதில் மிக்க பிடிவாதமும் உறுதியும் கொண்டவர்.

அன்றியும் முதலில் நான் முஸ்லீம், பிறகுதான் நான் இந்தியன் என்று அடிக்கடி சொல்லுபவர். தன்னைப்பற்றி தனது எதிரிகள் எவ்வளவோ பழிகளை கட்டிவிட்டும் அவற்றிற்கு பதில் சொல்லவேண்டுமே என்கின்ற லட்சியம் கூட இல்லாமல் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்றுகூட லட்சியம் செய்யாமல் தன் இஷ்டப்படி நடக்கும் வீரகுணம் உடையவர். இவ் வருங்குணங்கள் கொண்ட ஒரு கலங்கா வீரர் மாண்டது உலக இயற்கையே யாயினும் வருந்தாமல் இருக்க முடியாது.

**குடி அரசு - இரங்கல் செய்தி - 11.01.1931**



# களக்காடு ஐக்கிய முஸ்லீம் ஆண்டு விழா
# இந்திய பொருளாதாரம்

தலைவர் அவர்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!!

இன்று நான் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து சேர்ந்து விட்டேன். ஆனாலும் மிக்க களைப்போடு வந்திருக்கிறேன். சரியாக 24 மணி நேரம் ரயிலில் பிரயாணம் செய்துவிட்டு 10, 15 மைல் மோட்டாரிலும் வந்திருக்கிறேன். ஆனதால் இன்றைய விசயத்தைப் பற்றி நான் சரி வரப் பேச முடியாதென்றே கருதுகிறேன். அன்றியும் அதிக நேரமும் பேசமுடியா தென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நிகழ்ச்சிக் குறிப்பில் எனக்கு இன்று குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயம் "இந்திய பொருளாதாரம்" என்பதாகும். இது என்னைக் கேட்டுப் போட்டதல்ல என்றாலும் எந்தத் தலைப்பினாலும் என்னுடைய சங்கதி ஏதோ அதைத் தான் சொல்லுவது என் குணம் என்பது நீங்களும் தலைவரும் அறிந்ததே யாகும். ஆனாலும் பொருளாதாரம் என்னும் தலைப்பும் மிக்க நல்ல தலைப்பேயாகும். இதன் மூலம் எனது சங்கதியை சொல்ல முடியா விட்டால் பின் எதின் மூலம் நான் சொல்லக்கூடும்? ஆனால் எனக்கிருக்கும் கஷ்டமெல்லாம் அதிக நேரம் பேச முடியாதென்பதே யாகும். ஆதலால் மன்னிக்கக் கோருகின்றேன்.

சகோதரர்களே! பொருளாதாரம் என்கின்ற வார்த்தை நம் நாட்டில் தற்காலம் உள்ளதுபோல் முன் காலத்தில் இருந்ததாகச் சொல்ல முடியாது. முன் காலத்தில் எல்லாம் பொருளை உடைத்தாயிருக்கவும் பணம் காசாய் கையாளவும் சிலருக்கே உரிமை இருந்தது. மற்றவர்களுக்கு தானியம் தவிர வேறு ஒன்றும் பெற உரிமை கிடையாது. நாட்டு வழக்கிலும் பணம் காசு புழக்கமும் கிடையாது. எல்லா வாழ்க்கையும் பண்ட மாற்றை அடிப்படை யாகக் கொண்டதாகவே இருக்கும். ஒரு பண்டத்தைக் கொடுத்து மற்றொரு பண்டத்தை வாங்கிக் கொள்ளுவார்கள். கைத்தொழில்காரர்கள், கூலியாள் கள், ஏவலாள்கள் எல்லோருக்கும் தானியமே கொடுப்பது வழக்கம். மந்திரி களுக்கும் அரசன் பூமி மானியம் விடுவதே தவிர பணமாக ஏதும் கொடுப்பதில்லை. எனக்குத் தெரிய 40, 50 வருஷங்களுக்கு முன் வேஷ்டி கொடுப்



RangaRakes tamilnavarasam.com

பவன், உலோகப்பாத்திரம் கொடுப்பவன், நகை செய்து கொடுப்பவன், தோட்டங்களுக்கு கலப்பை, ஏர் செய்து கொடுப்பவன், செருப்பு தைத்துக் கொடுப்பவன். சுவர் வைப்பவன் முதலியவர்கள் எல்லோரும் தானியம்தான் வாங்கிக் கொள்ளுவார்கள். சில ஆட்களுக்கு வருஷத்திற்கு இவ்வளவு என்று இருக்கும்.

பெருத்த மிராசுதாரர்களிடம் பார்த்தாலும் தானியத்தை தான் பூமியில் பெரிய பெரிய குழிகள் ஆழமாக வெட்டிப்போட்டு வைத்திருப்பார்கள். பண்டமாற்றைத் தவிர சாதாரண ஜனங்கள் பணமாய் பார்ப்பது மிக்க அபூர்வமாகவே இருக்கும். பெருத்த மிராசுதாரர்களிடமும் அரசாங்கப் பழக்கம் முதலியவைகளிலும் பணம் புழங்கினதானாலும் அதுவும் மிகச்சிறு நாணையமாகத்தான் இருக்கும். ரூபாய் என்கிற பெயர் கூட இந்த நாட்டு பாஷையல்ல, நாணையமும் அல்ல. சின்னப்பணம் அதாவது ரூ. 1க்கு 10 கொண்டதாக இருக்கும். விலை பேசுவதிலும் எத்தனை பணம் என்றுதான் கேட்பார்கள். செல்வமுள்ளவனையும், பணக்காரன் என்றுதான் சொல்லுகின்ற வழக்கம் இன்னும் உண்டு. அரசியல் அபராதம் முதலியவை களிலும் 100 பணம் 200 பணம் 500 பணம் என்று பணக்கணக்கில்தான் கணக்கு சொல்லு வதாகும். சமீபகாலம்வரை கூட மலையாளத்தில், திருவாங் கூர், கொச்சி ராஜ்ஜியத்தில் சிவில் கோர்ட்டில் ரூபா என்று பிராது போடுவதில்லை. 10 ஆயிரம் ரூபாயிக்கு பிராது போடுவதானாலும் அதைப் பணமாகப் பெருக்கி அந்தப்பண எண்ணிக்கையைக் காட்டிதான் பிராது போடும் வழக்கம் இருந்து வந்தது. சில இடத்தில் இன்றும் இருக்கிறது.

ஆகவே ரூபாய் என்பதும் பவுன் என்பதும் வெளிநாட்டு நாணை யங்கள். அவை நம் நாட்டிலே புழங்கக்கூடிய நிலை ஏற்பட்டதே பொருளா தார நிலையில் நம்நாடு முன்னையைவிட சற்று உயர்வடைந்தது என்பதைக் காட்ட அறிகுறியாகும். எனவே பொதுவாகப் பார்த்தால் பொருளாதாரம் நம் நாட்டில் குறைவு என்று நான் சொல்லமாட்டேன். மற்ற நாட்டைவிட இந்தநாடு பொருளாதாரத்தில் குறைந்ததல்ல. இந்தியாவை நம்பி அனேக நாடுகள் தங்கள் வாழ்வை நிச்சயித்துக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவின் பொருளாதாரத்தில் நாட்டமில்லை யானால் வெள்ளைக் காரனுக்கு இங்கு வேலை இல்லை. இதுபோலவே இதற்கு முன் வெளி நாட்டிலிருந்து இந்த நாட்டுக்கு வந்த அரசர்களுக்கும் அவர்களுக்கும் முன் வந்த ஆரியர்களுக்கும் இந்த நாட்டில் வேலையே இல்லை.

ஆகவே இவ்வளவு உயர்ந்த பொருளாதார நிலையுடைய இந்திய நாடு இந்த நாட்டு மக்களில் பெரும்பான்மையான பேர்களை வயிரார உண்ணவும், இடுப்பார உடுக்கவும், மானமோடு பிழைக்கவும் முடியாதபடி வேறுபல காரியங்கள் கொடுமைப்படுத்துகின்றன. அவைகளில் முக்கிய மானவை மதமும், கடவுளும், அடுத்த ஜென்மமுமேயாகும்.



மனிதன் எவ்வளவு சம்பாதித்தாலும் மனிதனுக்கு எவ்வளவு கிடைத் தாலும், எவ்வளவு விளைந்தாலும் அனேகமாய் எல்லாவற்றையும் மேல் கண்ட மூன்றுமே அபகரித்துக் கொள்ளுகின்றன. அதிலும் உலகத்தில் வேறு எப்பாகத்திலும் காணமுடியாத மாதிரி இந்த நாட்டில் இம்மூன்றினாலும் பிழைப்பதற்கென்றே பிரவியை ஆதாரமாகக் கொண்டு சில வகுப்புகள் ஏற்பட்டு அந்த நிலைகளைக் காப்பாற்றிக்கொண்டு பாடுபடாமல் வயிறு வளர்ப்பதோடு சகல போக்கியங்களையும் தங்களுக்கே உரிமையாக்கிக் கொண்டதால் இந்த உலகம் உள்ளவரை இந்தியாவின் பொருளாதாரம் இப்படியே இருக்கும்படியாக ஏற்பட்டு விட்டது. அதுமாத்திரமல்லாமல் இந்தநாட்டில் அரசனுக்கும் குடிகளுக்கும் இருக்கும் முறையும், முதலாளிக் கும், தொழிலாளிக்கும் இருக்கும் முறையும், மிராசுதாரனுக்கும் குடியான வனுக்கும் இருக்கும் முறையும், படித்தவனுக்கும் படிக்காதவ னுக்கும் இருக் கும் முறையும் மேல்ஜாதிக்காரனுக்கும் கீழ்ஜாதிக்காரனுக்கும் இருக்கும் முறையும் பார்த்தால் இந்த நாட்டு மக்களில் 100க்கு 90 பேர்களுடைய பொரு ளாதார நிலை இன்றைய நிலையைவிட கடுகளவுகூட மாறி முன்னேற்ற மடைய முடியவே முடியாது என்பது எனது உறுதி. ஆகவே இம்முறைகளும் முன் சொல்லப்பட்ட மதம், கடவுள், அடுத்த ஜன்மம் ஆகிய கொள்கைகளும் இந்தியா எவ்வளவு வளம்பொருந்திய நாடானாலும் செல்வம் பொருந்திய தானாலும், பொன் விளையும், “புண்ணிய” பூமியானாலும் தபோதனர்கள், அவதாரங்கள், ஆழ்வார்கள். நாயன்மார்கள், முனிகள், ரிக்ஷிகள், மகாத்மாக் கள் பிறந்த நாடானாலும், பஞ்சநதி, அஷ்ட நதி ஜீவநதியாய் ஓடுகின்ற நாடானாலும் தரித்திரமும், கூலியும், இழிவும், பஞ்சமும், நோயும் இந்தியா வுக்கு நிரந்தர சொந்தமானதேயாகும் என்பதை கவனத்தில் வையுங்கள்.

நம்முடைய பொருளாதாரக் கஷ்டமெல்லாம் முதலாவது, அநாவ சியமான செலவுகளும், அவற்றிற்கும் அதிகச் செலவுகளுமாகும். இந்திய மக்களின் நூறுக்கு 90 பேர்களுடைய சம்பாதனைகள் அனாவசியமான வைகளுக்கும், குருட்டுப்பழக்கம், மூடநம்பிக்கையானவைகளுக்கும், சோம் பேறியாய் வாழ்கின்றவர்களின் சுகபோகத்திற்கும் செலவு செய்யப்படுவ தினாலேயே வீணாய் விடுகின்றன.

இரண்டாவது, சுலபத்தில் ஒரே பக்கமாக பொருள்களெல்லாம் போய் சேரும்படியாகியும் விடுகின்றன.

மூன்றாவதாக, மனிதனுக்கு உள்ள நேரமும், சக்தியும் குறைந்த வரும்படிக்கே செலவாகும்படியான முறைகளே இங்கு வெகுகாலமாய் இருந்துவருகின்றன. அதாவது. புத்தியை செலவழித்து குறைந்த நேரத்தில் அதிகமான வேலைகள் நடைபெறவும், அதனால் அதிக சம்பாதனை அடையும் மார்க்கம் தேடவுமான துறையானது அடியோடு அடைபட்டுப் போய்விட்டது. இத்தியாதி காரணங்களே இந்தியாவின் பொருளாதாரத்தின் குறைவிற்குக் காரணமாகும்.



RangaRakes tamilnavarasam.com

சாமி பூசை, உற்சவம், புண்ணியம், யாத்திரை ஆகியவைகளின் பெயரால் தனித்தனிச் செலவும், அவற்றிற்காக நடைபெறும் பொது ஏற்பாட்டுச் செலவும் கணக்குப் பார்த்தால் மனிதனின் மொத்த வரும்படியில் ஒரு குறிப்பிட்ட பாகம் வீணாவதைக் காணலாம்.

பிறகு மதத்தைக் காரணமாய் வைத்து ஏற்பாடுகள் செய்திருக்கும் சடங்குகளையும் அவற்றிற்காகும் செலவுகளையும் கணக்குப் பார்த்தால் அதுவும் ஒரு குறிப்பிட்ட பாகத்தைக் கவர்ந்து கொள்வதைப் பார்க்கலாம்.

மற்றும் மனிதன் வாழ்க்கையில் பிரவேசிக்கும் போதே பெரும் பான்மையோர் அவர்களது கல்வி, கல்யாணம் முதலியவைகளால் ஏற்பட்ட கடனின் பேரிலேயே வாழ்க்கையைத்தொடங்க வேண்டியிருக்கின்றன. இவைகள் எல்லாம் சேர்ந்து அவசியமான காரியங்களுக்கு பொருள் இல்லா மல் கஷ்டப்படும்படி செய்து விடுவதுடன் சதா தரித்திரர்களாகவும் கடன்காரர் களாகவும் இருக்கவேண்டியதாய் இருக்கின்றது.

இவை மாத்திரமல்லாமல் நாட்டின் பொருளாதார நிலையை விர்த்தி செய்ய அவசியமான பொதுத் தொழில் சாலைகள், யந்திர சாலைகள் முதலியவைகள் ஏற்பாடு செய்வதற்கும் மார்க்கமில்லாமல் பொருள்களை எல்லாம் மேல்கண்ட சடங்குகளும், வாழ்க்கை முறைகளும் கவர்ந்து கொள்வ தோடு கோவில் கட்டுதல், சாமிக்கு நகை, வாகனம் முதலியவைகள் செய்து வைத்தல், மற்றும் உற்சவம், பூசை ஆகியவைகளுக்குப் பண்டு, பூமிகள் முதலிய சொத்துக்கள் ஒதுக்கிவைத்தல் ஆகிய காரியங்கள் பெரும், பெரும் தொகைகளைக் கவர்ந்து கொள்ளுகின்றன.

ஆகவே இந்த மாதிரியாக எல்லாம் எல்லாப்பொருள்களும் நாச மாகிக்கொண்டும், வீணாகிக்கொண்டும் இருக்கையில் இந்த நாடு எந்தக் காலத்தில்தான் - எந்த வகையில்தான் பொருளாதாரத்தில் சீர் அடைய முடியும்? என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். நம் நாட்டுப் பொரு ளாதாரக் கஷ்டத்திற்கு மற்றொரு காரணத்தையும் சற்று கவனித்துப் பாருங் கள். நம்முடைய வாழ்க்கைத்தன்மையை மேல் நாடுகளைப் பார்த்து நாளுக்கு நாள் செலவை அதிகரித்துக் கொண்டு வருகின்றோம். போக போக்கியங் களை அதிகப்படுத்திக் கொள்ளுகின்றோம். முன்னையைவிட அதாவது 30, 40, 50 வருஷங்களுக்கு முன் நாம் இருந்ததைவிட அதிகமான ஆடம்பரங் களை விரும்புகின்றோம். மேல்நாட்டு நடை, உடை பாவனை யைக் கண்டு காப்பியடித்துப் படிப்படியாக உயருகின்றோம். இவையெல் லாம் நமக்குத் தகாதென்றோ, குற்றமென்றோ சொல்ல வரவில்லை. ஆனால் மேல்நாட்டார் எப்படித் தனது பொருளாதார நிலையை உயர்த்திக் கொண்டே தனது வாழ் வின் சுகபோகத்தையும் உயர்த்திக்கொண்டுபோகின் றாரோ அதுபோலவே நாமும் பொருளாதார நிலையை உயர்த்திக் கொண் டும் வாழ்க்கைத் தன்மை யின் அவசியத்திற் கேற்ற வருவாய்க்கு வகை செய்துகொண்டும்தானே



அதில் பிரவேசிக்கவேண்டும். அதுவுமில்லாமல், இதுவுமில்லாமல் வெறும் மனப்பால் குடிப்பதில் என்ன பயன் அடையக் கூடும் என்பதை யோசித்துப் பாருங்கள். மேல் நாட்டான் குறைந்த நேரத்தில் அதிக வேலை செய்து நம்மைப் பார்க்கிலும் பன்மடங்கு லாபம் அடை கிறான். அதனால் அவர்கள் சுகமனுபவிக்க மார்க்கம் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். நமக்கு ஒரு நாள் சராசரி வரும்படி 2 அணா, மேல் நாட்டானுக்கு ஒரு நாள் சராசரி வரும்படி 2 ரூபாய். இதற்குக் காரணம் அவன் வேலை துரிதமே ஒழிய வேலை சாமார்த்தியம் அல்ல என ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் 10 மணி நேரம் செய்யும் வேலையை மேல் நாட்டான் ஒரு மணி நேரத்தில் செய்துவிடுகிறான். அதற்கேற்ற சாதனங்களை அவன் கையாடுகிறான். அதற் காகவே மேல்நாட்டுச் செல்வத்தையும், அறிவையும், ஊக்கத்தையும் செலவு செய்து அந்த நிலை அடைந்திருக்கின்றான். அப்படிப் பட்டவனைப் பார்த்து வேலை செய்வதிலும், சம்பாதிப்பதிலும் காப்பி அடிக்காமல் அதாவது, அதுபோல் நடக்காமல் அவன் அனுபவிப்பதில் மாத்திரம் காப்பி அடித்து அவனைப்போல் நடக்க ஆரம்பித்தால் சாத்தியப்படுமா? - பொருளாதாரம் இடம் கொடுக்குமா? என்று யோசித்துப்பாருங்கள்.

நமது நாட்டுப் பொருளாதார நிபுணர்கள் செத்துப்போன கைத் தொழில் களை உயிர்ப்பிக்க வேண்டும் என்கின்றார்கள். உதாரணமாக இராட்டினத்தில் நூல் நூற்கவேண்டும், கைத்தரியால் வேஷ்டி நெய்ய வேண்டும் என்கின்றார் கள். போராக்குறைக்கு தக்கிளியில் நூல் நூற்பது தேசீயப் பொருளாதார பக்தியாக குழந்தைகளும் நாமும் கற்பிக்கப்படு கிறோம். ஒரு நாளைக்கு ஒரு பெண் ராட்டினத்தில் நூல் நூற்றால் கால் ராத்தல் அல்லது காலேவீசம் ராத்தல் நூற்று 1 அணா அல்லது அதிகமானாலும் 0-1-6 அணா கூலிதான் அடையக் கூடும். அதுவும் வெகு மோசமான சரக்கைதான் உற்பத்தி செய்யக்கூடும். மேல்நாட்டானோ ஒரு ஆள் ஒரு நாளையில் இதைவிட குறைந்த நேரத்தில் இதைவிடக் குறைந்த கஷ்டத்தில் இதைவிட உயர்ந்த சரக்காக 5 ராத்தல் 6 ராத்தால் நூற்று தினம் 2 ரூபாய் சம்பாதிக்கிறான். ஆகவே மேல் நாட்டார் தினம் 2 ரூ. சம்பாத்தியத் திற்கும் நம் நாட்டான் தினம் 2 அணா சம்பாதிக்கவும் இதுவும், மற்றும் இதுபோலவே விவசாயத்துரையிலும்,வியாபாரத் துரையிலு முள்ள காரணங் களாகுமே யல்லாமல் வேறு ஒரு காரணமுமல்ல. சமூக சீர் திருத்த சம்மந்தமான விஷயங்களுக்கு நமது பண்டிதர்கள் எப்படி தொல் காப்பியர் காலத்திற்குப் போய் ஆராய்ச்சி செய்து அந்த கால நாகரிகத்தைக் கொண்டு சமூக முன்னேற்றம் செய்யப் பார்க்கின்றார்களோ அதுபோலவே நமது தேசீயப் பொருளாதாரப் பண்டிதர்கள்அதைவிட முந்திய காலத்திய கைத் தொழில்களைக் கண்டுபிடித்து அந்தத் துறையில் பொருளாதாரத்தை முன்னுக்குக் கொண்டுவரப் பார்க்கின்றார்கள்.

ஆகவே இந்திய பொருளாதார நிலைக்கு இந்தியர்களும், அவர் களது மதமும், கடவுளும், சடங்குகளும், கர்நாடகத்தில் பித்துக்கொண்ட



RangaRakes tamilnavarasam.com

தலைவர்களுமே காரணமல்லாமல் வேறு ஒன்றும் முக்கிய காரணமல்ல என்பது எனதபிப்பிராயம்.

சகோதரர்களே! வருஷம் ஒன்றுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் மதம், கடவுள், சடங்கு ஆகியவைகளுக்கு செலவாவதை மறுக்கின்றீர்களா? பல கோடிக்கணக்கான ரூபாய்கள் சாமி, கோயில், பூசை, உற்சவம், நகை, வாகனம் ஆகியவைகளுக்காக அடங்கி, முடங்கிக்கிடக்கின்றதை நீங்கள் மறுக்கின்றீர்களா? எனவே இந்தத் துகைகள் எல்லாம் புதிய முறை ஆராய்ச்சி முறை மேல் நாட்டு முறை ஆகியவைகளில் கைத்தொழிலும், வியாபாரமும், விவசாயமும் செய்யப்பட்டு குருட்டுப்பழக்கம் மூட நம்பிக்கை சுயநலக்காரர் கள் சூழ்ச்சி ஆகியவைகளில் இருந்து மீண்டு விட் டோமானால் நமது பொரு ளாதார நிலை தானாகவே உயருமா? இல்லையா? என்பதையும், அந்தப்படி செய்யாத காரணமே இன்றைய தரித்திர நிலைக்குக் காரணமா? இல்லையா? என்பதையும் நீங்களே யோசித்துப்பாருங்கள். எனவே எனக்குக் கொடுத்த விஷயத்தின் தலைப்பில் எனக்குத் தோன்றியதைத் தங்களுக்கு எடுத்துச் சொன்னேன். இது சரியா? தப்பா? என்று யோசித்துப் பார்த்து உங்கள் மன திற்குச் சரி என்று தோன்றியதை வைத்துக்கொண்டு மற்றதை உடனே மறந்து விடும்படியாய் கேட்டுக்கொண்டு இவ்விஷயத்தை முடிக்கிறேன்.

*குறிப்பு : 27.12.1930 இல் திருநெல்வேலி மாவட்டம் களக்காடு ஐக்கிய முஸ்லிம் சங்கத்தின் இரண்டாம் ஆண்டுவிழா.*

**குடி அரசு - சொற்பொழிவு - 18.01.1931**



# காதல்

அன்பு, ஆசை, நட்பு என்பவற்றின் பொருளைத்தவிர வேறு ஒரு பொருளை கொண்டதென்று சொல்லும்படியான காதல் என்னும் ஒரு தனித்தன்மை ஆண் பெண் சம்மந்தத்தில் இல்லை என்பதை விவரிக்கவே இவ்வியாசம் எழுதப்படுவதாகும். ஏனெனில் உலகத்தில் காதல் என்பதாக ஒரு வார்த்தையைச் சொல்லி அதனுள் ஏதோ பிரமாதமான தன்மை ஒன்று தனிமை யாக இருப்பதாகக் கற்பித்து மக்களுக்குள் புகுத்தி அநாவசியமாய் ஆண் பெண் கூட்டு வாழ்க்கையின் பயனை மயங்கச் செய்து காதலுக்காக என்று இன்பமில்லாமல், திருப்தி இல்லாமல் தொல்லைபடுத்தப்பட்டு வரப்படு கின்றதை ஒழிக்க வேண்டுமென்பதற்காகவேயாகும்.

ஆனால் காதல் என்றால் என்ன? அதற்குள்ள சக்தி என்ன? அது எப்படி உண்டாகின்றது? அது எதுவரையில் இருக்கின்றது? அது எந்த எந்த சமயத்தில் உண்டாவது? அது எவ்வெப்போது மறைந்து விடுகிறது? அப்படி மறைந்து போய் விடுவதற்கும் காரணம் என்ன? என்பவை போன்ற விஷயங் களைக் கவனித்து ஆழ்ந்து யோசித்துப்பார்த்தால் காதல் என்பதின் சத்தற்ற தன்மையும், பொருளற்ற தன்மையும், உண்மையற்ற தன்மையும், நித்தியமற்ற தன்மையும் அதைப் பிரமாதப்படுத்துவதின் அசட்டுத் தனமும் ஆகியவை கள் எளிதில் விளங்கிவிடும்.

ஆனால் அந்தப்படி யோசிப்பதற்கு முன்பே இந்தக் காதல் என்கின்ற வார்த்தையானது இப்போது எந்த அர்த்தத்தில் பிரயோகிக்கப்படுகின்றது? உலக வழக்கில் அது எப்படி பயன்படுத்தப்பட்டு வருகின்றது? இவற்றிற்கு என்ன ஆதாரம்? என்பவைகளைத் தெரிந்து ஒரு முடிவு கட்டிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இன்றைய தினம் காதலைப் பற்றி பேசுகிறவர்கள். "காதல் என்பது அன்பு அல்ல, ஆசை அல்ல, காமம் அல்ல, அன்பு நேசம் ஆசை காமம், மோகம் என்பவை வேறு, காதல் வேறு "நடப்பு வேறு" என்றும் அது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் தங்களுக்குள் நேரே விவரித்துச் சொல்ல முடியாத ஒரு தனிக் காரியத்திற்காக ஏற்படுவதாகும். அதுவும் இருவருக்கும் இயற்கையாய் உண்டாகக் கூடியதாகும். "அக்காதலுக்கு இணையானது உலகத்தில் வேறு ஒன்றுமேயில்லை" என்றும்,



RangaRakes tamilnavarasam.com

“அது ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணிடமும் ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணிடமும் மாத்திரந்தான் இருக்க முடியும்; அந்தப்படி ஒருவரிடம் ஒருவருக்குமாக இருவருக்கும் ஒருகாலத்தில் காதல் ஏற்பட்டு விட்டால் பிறகு எந்தக் காரணம் கொண்டும் எந்தக் காலத்திலும் அந்தக் காதல் மாறவே மாறாது” என்றும் பிறகு வேறு ஒருவர் இடமும் அந்தக் காதல் ஏற்படாது.

“அந்தப் படி மீறி அந்தப் பெண்ணுக்கோ, ஆணுக்கோ வேறு ஒருவரிடம் ஏற்பட்டுவிட்டால் அது காதலாயிருக்க முடியாது. அதை விப சாரம் என்று தான் சொல்லவேண்டுமே யொழிய அது ஒருக்காலும் காதலா காது” என்றும்,

“ஒரு இடத்தில் உண்மை காதல் ஏற்பட்டுவிட்டால் பிறகு யாரிடமும் காமமோ விரகமோ மோகமோ என்றெல்லாம் ஏற்படாது” என்று சொல்லப்படு கின்றது.

மேலும் இந்தக் காதல் காரணத்தினாலேயே ஒரு புருஷன் ஒரே மனைவியுடனும், ஒரு மனைவி ஒரே புருஷனுடனும் மாத்திரம் இருக்க வேண்டியது என்றும் கற்பித்து அந்தப்படி கட்டாயப்படுத்தியும் வரப்படு கின்றது.

ஆனால் இந்தப்படி சொல்லுகின்றவர்களை எல்லாம் உலக அனு போகமும் மக்களின் அனுபவஞானமும் இல்லாதவர்கள் என்றோ, அல்லது இயற்கையையும், உண்மையையும் அறியாதவர்கள் என்றோ அல்லது உண்மையை அறிந்தும் வேறு ஏதோ ஒரு காரியத்திற்காக வேண்டி வேண்டு மென்றோ மறைக்கின்றவர்கள் என்றேதான் கருதவேண்டி இருக்கின்றது.

அன்றியும் இந்த மாதிரி விஷயங்களைப் பற்றி நாம் சொல்லும் மற்றொரு விஷயமென்னவென்றால் ஒரு ஆணின் அல்லது ஒரு பெண்ணின் அன்பு, ஆசை, காதல், காமம், நட்பு, நேசம், மோகம், விரகம் முதலாகியவை களைப்பற்றி மற்றொரு பெண்ணோ ஆணோ மற்ற மூன்றாமவர்கள் யாரா வதோ பேசுவதற்கோ நிர்ணயிப்பதற்கோ நிர்ப்பந்திப் பதற்கோ சிறிதுகூட உரிமையே கிடையாது என்றும் சொல்லுகிறோம்.

இன்னும் திறந்து வெளிப்படையாய் தைரியமாய் மனித இயற்கை யையும், சுதந்திரத்தையும், சுபாவத்தையும் அனுபவத்தையும் கொண்டு பேசுவதானால் இவை எல்லாம் ஒரு மனிதன் தனக்கு இஷ்டமான ஒரு ஓட்ட லில் சாப்பிடுவதுபோலவும், தனக்குப்பிடித்த பலகாரக்கடையில் பலகாரம் வாங்குவது போலவும், சாமான் கடைகளில் சாமான் வாங்குவது போலவும் அவனவனுடைய தனி இஷ்டத்தையும் மனோபாவத்தையும் திருப்தியையும் மாத்திரமே சேர்ந்ததென்றும் இவற்றுள் மற்றவர்கள் பிரவே சிப்பது அதிகப் பிரசங்கித்தனமும் அனாவசியமாய் ஆதிக்கம் செலுத்துவ துமாகுமென்றும் சொல்ல வேண்டும்.



இப்படிச் சொல்லப்படுவது கூட இவ்வளவு பெருமையையும் அணி யையும் அலங்காரத்தையும் கொடுத்து பேசப்பட்ட காதல் என்பதை முன் குறிப்பிட்டபடி அது என்ன? அது எப்படி உண்டாகின்றது? என்பதை யோசித்துப்பார்த்தால் யாவருக்கும் சரி என்று விளங்கிவிடும். காதல் என்கின்ற வார்த்தை தமிழா? வடமொழியா என்பது ஒரு புறமிருந்தாலும் தமிழ் மொழியாகவே வைத்துக்கொண்டாலும் அதற்கு ஆண் பெண் கூட்டுத் துறையில் அன்பு, ஆசை, ஆவல், நட்பு, நேசம், விரகம் என்பவைகளைத் தவிர வேறுபொருள்கள் எங்கும் எதிலும் காணப்படவில்லை. அதின் வேறு விதமான பிரயோகமும் நமக்குத் தென்படவில்லை.

அன்றியும் அகராதியில் பார்த்தாலும் மேற்கண்ட பொருளைத்தவிர வடமொழி மூலத்தை அனுசரித்துக் காதல் என்பதற்கு கொலை, கொல்லல், வெட்டுதல், முறித்தல் என்கின்ற பொருள்கள்தான் கூறப்பட்டிருக்கின்றன. மற்றபடி தனித் தமிழ் மொழியில் பார்த்தாலும் ஆண் பெண் சேர்க்கை–கூட்டு முதலாகியவை சம்மந்தமான விஷயங்களுக்கும், அன்பு, ஆசை, நட்பு, நேசம் என்பவைகளைத் தவிர வேறு தமிழ் மொழியும் நமக்குக் காணப்படவில்லை. இவைகளுடன் காதல் என்பதைச் சேர்த்துக் கொண்டாலும் இக்கருத்துக்க ளையே தான் மாற்றி மாற்றி ஒன்றுக்கு மற்றொன்றாகக் கூறப்படுகின்றதே தவிர காதலுக்கென்று வேறு பொருளில்லை.

ஆதலால் இவைகளன்றி காதல் என்பதற்கு வேறு தனி அருத்தம் சொல்லுகின்றவர்கள் அதை எதிலிருந்து எந்தப் பிரயோகத்திலிருந்து கண்டுபிடித்தார்கள் என்பதும் நமக்கு விளங்கவில்லை.

நிற்க இப்படிப்பட்ட காதலானது ஒரு ஆணுக்கோ, பெண்ணுக்கோ எப்படி உண்டாகின்றது? இது தானாகவே உண்டாகின்றதா? அல்லது மூன்றாவது மனிதனுடைய பிரவேசத்தைக் கொண்டு உண்டாகின்றதா? ஒரு சமயம் தானாகவே உண்டாவதாயிருந்தால் எந்த சந்தர்ப்பத்தில், எந்த ஆதாரத் தின்மீது என்பவைகளைக் கவனித்தால் பெண் ஆணையோ, ஆண் பெண் ணையோ தானே நேரில் பார்த்தாலும், அல்லது தான் மூன்றாவது மனிதர் களால் கேள்விப்படுவதாலும், உருவத்தையோ, நடவடிக்கையையோ, யோக்கியதையையோ வேறுவழியில் பார்க்கக் கேட்க நேரிடுவதாலுமேதான் உண்டாகக் கூடுமே தவிர இவைகள் அல்லாமல் வேறு வழியாக என்று சுலபத்தில் சொல்லிவிட முடியாது.

இந்தப் படியும்கூட ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணிடத்தில் காதல் ஏற்பட்டு அந்தப் பெண்ணுக்கு அந்த ஆணிடத்தில் காதல் ஏற்படாமல் போனாலும் போகலாம். இந்தப்படியே ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணிடம் காதல் ஏற்பட்டு அந்த ஆணுக்கு அந்தப் பெண்ணிடம் காதல் ஏற்படாமல் போனாலும் போகலாம். எப்படியும் ஒரு மனிதன் ஒரு வஸ்துவைப் பார்த்த மாத்திரத்தில், கேட்ட மாத்திரத்தில் தெரிந்த மாத்திரத்தில் அந்த வஸ்து தனக்கு



RangaRakes tamilnavarasam.com

இருக்கலாம் - வேண்டுமென்பதாக ஆசைப்படுகின்றானோ, ஆவல் கொள்கி றானோ அதுபோல்தான் இந்த காதல் என்பதும் ஏற்படுவதாயிருக்கின்றதே தவிர வேறு எந்த வழியிலாவது ஏற்படுகின்றதா என்பது நமக்குப் புலப் படவில்லை.

எப்படிப்பட்ட காதலும் ஒரு சுய லட்சியத்தை அதாவது தனது இஷ்டத்தை - திருப்தியைக் கோரத்தான் ஏற்படுகின்றதே தவிர வேறில்லை என்பதும் காதலர்கள் என்பவர்களின் மனோபாவத்தை கவனித்தால் விளங்கா மல் போகாது.

அதாவது அழகைக் கொண்டோ, பருவத்தைக் கொண்டோ, அறிவைக் கொண்டோ, ஆஸ்தியைக் கொண்டோ, கல்வியைக் கொண்டோ, சங்கீதத்தைக் கொண்டோ, சாயலைக் கொண்டோ, பெற்றோர் பெருமை யைக் கொண்டோ, தனது போகபோக்கியத்திற்கு பயன்படுவதைக்கொண் டோ, அல்லது மற்றும் ஏதோ ஒரு திருப்தியை அல்லது தனக்குத் தேவை யான ஒரு காரியத்தையோ, குணத்தையோ கொண்டே தான் யாரும் எந்தப் பெண் ணிடமும், ஆணிடமும் காதல் கொள்ளமுடியும். அப்படிப்பட்ட அந்தக் காரியங்களெல்லாம் ஒருவன் காதல் கொள்ளும்போது இவன் அறிந்தது உண்மையாகவும் இருக்கலாம் அல்லது அங்கு இருப்பதாக அவன் நினைத் துக் காதல் கொண்டு இருந்தாலும் இருக்கலாம் அல்லது வேஷ-மாத்திரத்தில் காட்டப் பட்டதாக இருந்தாலும் இருக்கலாம்.

உதாரணமாக ஒரு நந்தவனத்தில் ஒரு பெண் உல்லாசமாய் உலாத்து வதை ஒரு ஆண் பார்க்கின்றான். பார்த்தவுடன் அந்தப் பெண்ணும் பார்க் கின்றாள். இரண்டு பேருக்கும் இயற்கையாய் ஆசை உண்டாகிவிட்டது. பிறகு நீ யார் என்று இவர்களில் யாரோ ஒருவர் கேட்கிறார்கள். பெண் தன்னை ஒரு அரசன் குமார்த்தி என்று சொல்லுகிறாள். உடனே ஆண் காதல் கொண்டு விடுகிறான். இவனை யார் என்று அவள் கேட்கிறாள். இவன் தான் ஒரு சேவகனுடைய மகன் என்று சொல்லுகிறான். உடனே அவளுக்கு அசிங்கப்பட்டு, வெறுப்பேற்பட்டுப் போய்விட்டது. இது சாதாரணமாய் நிகழும் நிகழ்ச்சி. இங்கு ஏற்பட்ட காதல் எதை உத்தேசித்தது?

நிற்க, அவன் தன்னை சேவகன் மகன் என்று சொல்லாமல் தானும் ஒரு பக்கத்து தேசத்து ராஜகுமாரன் என்று சொல்லிவிட்டால் அவளுக்கு அதிக காதல் ஏற்பட்டு "மறு ஜென்மத்திலும்" இவனை விட்டுப் பிரியக் கூடாது என்று கருதி விடுகிறாள். 4-நாள் பொருத்தபின்புதான் காதல் கொண்டவன் அரச குமாரன் அல்ல என்றும், சேவகன் மகன் என்று அறிந்தாள் என்று வைத்துக்கொள்வோம். இந்த நிலையில் அந்தக் காதல் அப்படியே இருக்குமா? அல்லது இருந்தாகவேண்டுமா என்பதை யோசித்துப் பார்த்தால் காதல் ஏற்படும் தன்மையும், மறுக்கும் தன்மையும் விளங்கும். இந்தப்படிக்கே ஒரு பெண்ணை நோயல்லாதவள் என்று கருதி ஒருவன் காதல் கொண்டபின்



நோயுடையவள் என்று தெரிந்தது அல்லது மற்றவனுடைய மனைவி என்று தெரிந்தது அல்லது ஒரு தாசி என்று தெரிந்தது அல்லது தன்னை மோசம் செய்து தன்னிடம் உள்ள பொருளை அபகரிக்க வந்தவள் என்று தெரிந்தது. இதுபோலவே இன்னமும் தான் முதலில் நினைத்ததற்கு அல்லது தனது நன்மைக்கும், திருப்திக்கும், இஷ்டத்திற்கும் விரோதமாயோ தான் எதிர்பார்க் காத கெட்டகாரியத்திற்கு அனுகூலமாகவோ ஏற்பட்டுவிட்டால் அந்தக் காதல் பயன்படுமா? அதை எவ்வளவுதான் கட்டிப்போட்டாலும் அது இருக்க முடியுமா? என்பவைகளை யோசித்தால் உண்மைக் காதலின் நிலையற்ற தன்மை விளங்காமல் போகாது.

நிற்க உண்மைக் காதல் என்பது ஒருவரை ஒருவர் பார்த்தவுடன் உண்டாகுமா? அல்லது கொஞ்ச நாளாவது பழகியவுடன் உண்டாகுமா? பார்த்ததும் ஏற்பட்ட காதல் உயர்வானதா? அல்லது சிறிது நாள் பழகியபின் ஏற்படும் காதல் உயர்வானதா? சரீரத்தைக்கூடச் சரியாய் தெரிந்து கொள்ளா மல் தூர இருந்து பார்ப்பதாலேயே ஏற்படும் காதல் நல்லதா? அல்லது சரீரத்தின் நிலை முதலியவைகள் தெரிந்து திருப்தி அடைந்த காதல் நல்லதா? என்பவைகளை கவனிக்கும்போது சரீர மாறுபாடாலும், பொருத்தமின்மை யாலும் ஏன் எப்படிப்பட்ட உண்மைக் காதலும் மாறமுடியாது? என்பதற்கு என்ன விடை பகர முடியும்? அல்லது உண்மையாகவே ஒருத்தன் ஒருத்தி யுடன் காதல் கொண்டு விட்டால் ஒருத்தி தப்பாய் அதாவது வேறு ஒருவ னிடம் காதல் கொண்டுவிட்டதாய் கருத நேர்ந்தால் அது பொய்யாகவோ, மெய்யாகவோ இருந்தாலும் தன் மனதுக்கு சந்தேகப்படும்படி விட்டால் அப்போது கூட காதல் மாறாமல் இருந்தால் தான் உண்மைக்காதலா? அல்லது தன் மனம் சந்தேகப்பட்டால் அதிருப்தி அடைந்தால் நீங்கிவிடக் கூடிய காதல் குற்றமான காதலா? என்பதற்கு என்ன மறுமொழி பகரமுடியும்.

காதல் கொள்ளும்போது காதலர்கள் நிலைமை, மனப்பான்மை, பக்குவம், லக்ஷியம் ஆகியவைகள் ஒரு மாதிரியாக இருக்கலாம். பிறகு கொஞ்சகாலம் கழிந்தபின் இயற்கையாகவே பக்குவம் நிலைமை லக்ஷியம் மாறலாம். இந்த மாதிரி சந்தர்ப்பங்களிலும் காதலுக்காக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துக்கொண்டு சதா அதிர்ப்தியில் துன்பத்தில் அழுந்த வேண்டியதுதானா என்று பார்த்தால் அப்போதும் காதலுக்கு வலுவில்லாத தையும் அது பயன்படாததையும் காணலாம்.

ஒரு ஜதை காதலர்களில் அவ்விருவரும் ஞானிகளாய் துரவிகளாய் விட்டார்களானால் இந்த சந்தர்ப்பத்தில் ஒருவரை ஒருவர் பிரிவதும் வெறுப்பதும் காதலுக்கு விரோதமாகுமா? விரோதமானால் அப்படிப்பட்ட காதல் பயன்படுமா? விரோதமில்லையானால் ஒருவர் ஞானியாகி துரவியாகி விட்டதால் மற்றவரை விட்டுப் பிரிந்து கொள்ளுவது காதலுக்கு விரோதமாகுமா? என்பதும் கவனித்தால் காதலின் யோக்கியதை விளங்காமல்



RangaRakes tamilnavarasam.com

போகாது. பொதுவாக மனித ஜீவன் ஒன்றைப் பார்த்து நினைத்து ஆசைப்படு வதும் ஒன்றினிடம் பலதினிடம் அன்பு வைப்பதும் நேசம் காட்டுவதும் இயற்கையேயாகும்.

அதுபோலவே மனிதனுக்குத் தானாகவே எதிலும் விரக்தி வருவதும், வெறுப்புக்கொள்வதும், பிரிவதும் இயற்கையேயாகும். பெலவீனமாய் இருக்கும்போது ஏமாந்து விடுவதும் உறுதி ஏற்பட்டபின்பு தவறுதலைத் திருத்திக்கொள்ள முயற்சிப்பதும், அனுபவ ஞானமில்லாதபோது கட்டுப் பட்டுவிடுவதும் அனுபவம் ஏற்பட்ட பிறகு விடுதலை செய்து கொள்ளுவதும் இயற்கையேயல்லவா?.

உதாரணமாக ஒரு வாலிபன் ஏமாந்து ஒரு தாசியிடம் காதல் கொண்டு சொத்துக்களை யெல்லாம் கொடுத்து விடுவதைப் பார்க்கின்றோம். அந்த வாலிபனுக்கு அந்த தாசியிடம் ஏற்பட்டது காதல் என்பதா? அல்லது காமம் என்பதா? அதே தாசி சிலசமயத்தில் தனக்குத் தாசித் தொழில் பிடிக்காமல் இந்த வாலிபனிடமே நிரந்தரமாயிருந்து காலத்தைக் கழிக்கலாம் என்று கருதி விடுவதைப் பார்க்கின்றோம். ஆகவே இந்த தாசி கொண்டது காதலா அல்லது வாழ்க்கைக்கு ஒரு சௌகரியமான வழியாய் இதை வாலிபன் அறியாமல் நேசத்தை வளர்த்துக்கொண்டே வந்தால் இது ஒத்தக் காதலாகி விடுமா? இப்படியெல்லாம் பார்த்தால் காதல் என்பது ஆசை, காமம், நேசம், மோகம், நட்பு என்பவைகளைவிட சிறிதுகூட சிறந்தது அல்லவென்பது விளங்கி விடும். அதற்கு ஏதேதோ கற்பனைகளை கற்பித்து ஆண் பெண்களுக்குள் புகுத்தி விட்டதால் ஆண் பெண்களும் தங்கள் உண்மையான காதலர்கள் என்று காட்டிக்கொள்ள வேண்டுமென்று கருதி, எப்படி பக்திவான் என்றால் இப்படி இப்படி எல்லாமிருப்பான் என்று சொல்லப்பட்டதால் அனேகர் தங்களை பக்திவான்கள் என்று பிறர் சொல்லவேண்டுமென்று கருதி பூச்சுப் போடுவதும், பட்டை நாமம் போடுவதும் , சதா கோவிலுக்குப் போவதும், பாட்டுகள் பாடி அழுவதும் வாயில் சிவசிவ என்று சொல்லிக்கொண்டிருப்பது மான காரியங்களைச் செய்து பக்திமான்களாகக் காட்டிக்கொள்ளுகின்றார் களோ அதுபோலும், எப்படிக் குழந்தைகள் தூங்குவது போல் வேஷம் போட்டு கண்களை மூடிக்கொண்டிருந்தால் பெரியவர்கள் குழந்தைகளின் தூக்கத்தைப் பரிசோதிப்பதற்காக "தூங்கினால் கால் ஆடுமே" என்று சொன் னால் அந்தக் குழந்தை தன்னைத் தூங்குவதாக நினைக்கவேண்டுமென்று கருதி காலைச் சிறிது ஆட்டுமோ அதுபோலும், எப்படி பெண்கள் இப்படி இப்படி இருப்பதுதான் கற்பு என்றால் பெண்கள் அதுபோலெல்லாம் நடப்பது போல் நடப்பதாய் காட்டித் தங்களைக் கற்புள்ளவர்கள் என்று காட்டிக் கொள் ளுகின்றார்களோ அதுபோலும் உண்மையான காதல்களானால் இப்படி இருப் பார்களே என்று சொல்லிவிட்டால் அல்லது அதற்கு இலக்கணம் கற்பித்து விட்டால் அதுபோலவே நடந்து காதலர்கள் என்பவர் களும் தங்கள் காதலைக் காட்டிக்கொள்ளுகிறார்கள். இதற்காகவே அவர்கள் இல்லாத



வேஷத்தை யெல்லாம் போடுகிறார்கள். அதை விவரிப்பது என்றால் மிகவும் பெருகிவிடும்.

ஆகவே ஆசையைவிட, அன்பை விட, நட்பைவிட காதல் என்பதாக வேறு ஒன்று இல்லை என்றும், அவ்வன்பு, ஆசை, நட்பு ஆகியவைகள் கூட மக்களுக்கு அஃறிணைப்பொருள்கள் இடத்திலும் மற்ற உயர்திணைப் பொருள்களிடத்திலும் ஏற்படுவதுபோல் தானே ஒழிய வே றில்லையென்றும் அதுவும் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்வதிலிருந்து, நடவடிக்கையில் இருந்து, யோக்கியதையில் இருந்து, மனப்பான்மையில் இருந்து, தேவையில் இருந்து, ஆசையில் இருந்து உண்டாவதென்றும் அவ்வறிவும் நடவடிக்கை யும் யோக்கியதையும் மனப்பான்மையும் தேவையும் ஆசையும் மாறக்கூடிய தென்றும் அப்படி மாறும் போது அன்பும் நட்பும் மாறவேண்டியது தான் என்றும், மாற கூடியதுதான் என்றும் நாம் கருதுகின்றோம். ஆகவே இதிலி ருந்து நாம் யாரிடமும் அன்பும், ஆசையும், நட்பும் பொருளாகக் கொண்ட காதல்கூடாதென்றோ அப்படிப்பட்டதில்லை என்றோ சொல்ல வரவில்லை.

ஆனால் அன்பும், ஆசையும், நட்பும் மற்றும் எதுவானாலும் மன இன்பத்திற்கும், திருப்திக்குமேயொழிய மனதிற்குத் திருப்தியும், இன்பமும் இல்லாமல் அன்பும், ஆசையும், நட்பும் இருப்பதாய் காட்டுவதற்காக அல்ல என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே இதை எழுதுகின்றோம். இதுவும் ஏன் எழுதவேண்டியதாயிற்று என்றால் மற்றவர்கள் திருப்தியிலும், சந்தோஷத்திலும் நுழைந்து கொண்டு தொட்டதிற்கெல்லாம் "இது காத லல்ல" "அது காதலுக்கு விரோதம்" "அது காம இச்சை" "இது மிருக இச்சை" என்பது போன்ற அதிகப் பிரசங்கித்தனமான வார்த்தைகளை ஒருவித பொறுப்புமில்லாதவர்கள் எல்லாம் கூறுவதால் அப்படிப்பட்டவர் கள் கூற்றை யும் கூறும் காதலையும் சற்று பார்த்துவிடலாம் என்றே இதைப்பற்றி எழுதலானோம்.

......................எஞ்ஞான்றும் காதலரிருவர் கருத்து ஒத்து உற்று ஆதரவு பட்டதே இன்பம். "பரனை" நினைத்து இம்மூன்றும் விட்டதே பேரின்பம்.,

சற்றேனும் ஏறுமாறாயிருப்பாளே யாமாகில் கூறாமல் சன்னியாசம் கொள்ளு. (ஔவை வாக்கு)

**குடி அரசு – தலையங்கம் – 18.01.1931**



RangaRakes tamilnavarasam.com

# சென்னை பச்சையப்பன் கலாசாலையில் சொற்பொழிவு

தலைவர் அவர்களே! இளைஞர்களே ! சகோதரர்களே! 2 மணி நேரத்திற்கு முன் தான் இந்த இடத்தில் இந்த விஷயத்தைப் பற்றி நான் பேச வேண்டும் என்பதாக ஒரு மாணவ நண்பர் கேட்டார். இன்றைய விஷயம் இன்னது என்று இப்போதுதான் தெரிந்து இதைப்பற்றி என்ன சொல்லுவது என்றும், இது மிகவும் விவாதத்திற்கிடமான சங்கதி ஆதலால் திடீரென்று என்ன பேசுவதெனவும் யோசித்துக்கொண்டு இருக்கிறேன்.

யோசனை முடிவதற்கு முன்னமேயே மேடைக்கு அழைக்கப்பட்டு விட்டேன். ஆனாலும் இதைப்பற்றிய என்னுடைய பழய சங்கதிகளையே இந்தத் தலைப்பின் கீழ் சொல்லப்போகின்றேன். நீங்கள் பெரும்பாலும் மாணவர்களும், இளைஞர்களுமாயிருப்பதால் நான் சொல்லுவதை திடீரென்று நம்பி விடாதீர்கள். நிதானமாய் யோசனை செய்து பிறகு ஒருமுடிவிற்கு வாருங்கள் என்பதை முதலில் உங்களுக்கு எச்சரிக்கை முறையில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நண்பர்களே! சமூக சீர்திருத்தம் என்றால் எந்த சமூகம்? என்பதும் சமயக்கொள்கை என்றால் எந்த சமயம்? என்பதும் முதலில் முடிவு கட்டிக் கொள்வது இங்கு அவசியமாகும். நான் இப்போது பொதுவாக மனித சமூகம் என்பதையும், பொதுவாக மனித சமூகத்திற்கு ஏற்ற சமயம் என்னும் பேரால் உலகில் வழங்குவதாக நமக்குத் தெரிந்த சமயங்களையும் எடுத்துக் கொள்ளுகிறேன். பிறகு அவசியமிருந்தால் தனிச்சமூகம், தனிச்சமயம் என்பதில் பிரவேசிக்கலாம் என்று இருக்கிறேன். பொதுவாக சமயங்கள் – மதங்கள், மார்க்கங்கள் என்பவைகள் எல்லாம் நல்ல அர்த்தத்தில் எடுத்துக்கொண்டாலும் அவை மனிதசமூகத்தின் வாழ்க்கை நலத்திற்கே ஏற்படுத்தப்பட்டவையாகும்.

மனிதவாழ்க்கைக்கேற்ற திட்டங்களேதான் சமயம் அல்லது மார்க்கம் என்று சொல்லப்படுவதுமாகும்.

ஒரு வாசகசாலையிலேயோ, உல்லாசக் கூட்ட சாலையிலேயோ, ஒரு சங்கத்திலேயோ சேர்ந்திருக்க வேண்டிய அங்கத்தினர்கள் அச்சங்கத்தின் நிர்வாகத்தின் அவசியத்திற்காக என்று தங்களுக்குள் விதிகளை நிர்ண



யித்துக்கொள்வது போலவே ஒரு பிராந்தியத்தில் வாழும் ஜனங்கள் தாங்கள் சேர்ந்திருப்பதற்காகவும் தங்கள் வாழ்க்கை தடையின்றி முறையாய் மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் நடைபெறுவதற்காகவும் ஏற்படுத்திக் கொண்ட அல்லது யாராவது ஒரு தலைவனால் அல்லது அறிஞனால் ஏற்படுத்தப்பட்ட விதிகளே சமயக் கொள்கைகளாகும். இதுவும் அந்தந்த காலதேசவர்த்தமானத்திற்கும் மக்கள் அறிவு நிலைமைக்கும் வளர்ச்சிக்கும் தக்கபடி செய்யப்படுவதே யாகும். ஆனால் அக்கொள்கைகள் மக்கள் தங்களது நன்மை தீமைகளைக்கூட சரிவர உணர்ந்து நடந்து கொள்ளமுடியாத அறிவு – இல்லாத காலத்தில் மக்களை பயப்படுத்தி இணங்கச் செய்ய என்று பல கற்பனைகளை உண்டாக்கி பயப்படுத்தி வைத்து அப்பயத்தின் மூலமாவது நடக்கும்படி செய்யக்கருதி ஏற்படுத்திய கொள்கைகளும் சேர்ந்ததாகும். அதாவது எப்படி ஒரு குழந்தையானது தன்னைக்காப்பாற்றிக்கொள்ளக் கூடிய சக்தி இல்லாததென்றும் அதைப் பற்றிய விபரங்களை எடுத்துச் சொன்னால் அதை அறிந்து கொள்ளமுடியா தென்றும் அதன் பெற்றோர்களோ, பாதுகாப்பாளர்களோ கருதினால் அக் குழந்தை வெளியில்போய் நடமாடி ஆபத்தில் பட்டுக் கஷ்டப்படாதிருக்கச் செய்ய வேறுவிதமாக அதாவது ஒருவித பயம் உண்டாகும் படியான பூச்சாண்டிபிடித்துக்கொள்வான் என்றும், பேய் பூதம் பிடித்துக் கொள்ளும் என்றும் துண்டுத்தடிக்காரன் பிடித்துக்கொண்டுபோய் அடைத்து விடுவான் என்றும் இன்னும் பலவகையாய்ச் சொல்லுவதோடு கையையும், முகத் தையும் ஒருவிதமாக ஆக்கிக்காட்டி அக்குழந்தைக்கு ஒன்றும் புரியாதபடி மிரட்டி பயப்படுத்தி வைத்து அதை எப்படி வெளியில் போகாமல் செய்கின்றோமோ அப்படிப் போலவே மக்கள் வாழ்க்கை நலத்திற்கென்று ஏற்படுத்தப்பட்ட கொள்கை களை உணர்ந்து அதன்படி ஒழுகமுடியாத நிலையில் மனிதர்கள் இருக் கிறார்கள் என்று கருதப்பட்ட காலத்தில் அப்போதுள்ள அறிஞர் என்பவர்கள் அம்மக்களை பயப்படும்படியாக ஏதோ அம் மக்களுக்குப் புரியாத ஒன்றைச் சொல்லி வேறுவித பயத்தை உண்டாக்கி அக்கொள்கைகளுக்கும் மதக்கட்டுப்பாட்டிற்கும் இணங்கி நடக்கும்படி செய்திருக்கிறார்கள். அந்த நிபந்தனை மிரட்டல்களும், கட்டுப்பாடுகளும் தான் இன்றைய மோக்ஷம், நரகம், எமன், அடுத்த ஜென்மம், கர்மம், விதி, செக்கில்போட்டு ஆட்டுவது முதலாகியவைகளாகும். மற்றும் இவற்றை வலியுறுத்தி எழுதிய சாஸ்திரம், புராணம் இதிகாசம் முதலியவைகளில் சொல்லப்பட்டவைகளுமாகும். அதுமாத்திரமல்லாமல் மேற்கண்ட முறையில் சொல்லுபவைகளை யெல்லாம் சொல்லிவிட்டும் எழுதிவிட்டுமானபிறகு இவைகளை மனிதன் சொன்னான் மனிதன் எழுதினான் என்றால் நம்ப மாட்டார்களென்று கருதி (ஏனெனில் அவை நம்பமுடியாததும் அறிவுக்குப் பொருந்தாததுவுமாய் இருப்பதால்) அவைகளையெல்லாம் கடவுள் சொன்னார், பகவான் சொன்னார், ரிஷி சொன்னார், முனிவர் சொன்னார் என்று அதாவது மனிதத்தன்மைக்கு மீறினவர்களால் சொல்லப்பட்டது என்று சொல்லி கட்டாயப்படுத்தி எப்படியெனில் நம்பினவனுக்கு மோக்ஷம், நம்பாதவனுக்கு நரகம், கழுதை ஜன்மமாய் பிறக்க வேண்டும் என்று சொல்லி



RangaRakes tamilnavarasam.com

நம்பச்செய்வதுமான காரியத்தின் மீதேதான் சமயக்கொள்கைகளை மக்களுக் குள் புகுத்தி இருக் கிறார்கள். இவற்றை யெல்லாம் உண்மை என்று நம்பின பாமர ஜனங்களும், இவற்றினால் பிழைக்க வசதி செய்து கொண்ட சில பண்டித ஜனங்களும் இந்த மாதிரிக் கொள்கைகள் கொண்ட சமயங்களை முறட்டுப் பிடிவாதம் குரங்குப்பிடியாய் பிடித்து, சிறிதுகூட காலத்திற்கும் அறிவின் நிலைமைக்கும் யேற்றமாதிரி திருத்துவதற்கு விடாமல் முட்டுக் கட்டை போட்டு வந்ததாலேயே அறிவுக்குத் தகுந்தபடியும் காலத்திற்கு ஏற்ற படியும் பல பல சமயங்கள் தோன்ற வேண்டியதாயிற்று. அன்றியும் திருத்த இடம் கொடுத்துக்கொண்டு வந்த சமயமெல்லாம் பெருகவும், பிடிவாதமாய் இருந்ததெல்லாம் கருதவுமாய் இருந்து கொண்டு வரவேண்டியதுமாயிற்று. ஆகவே இன்றையத் தினமும் மக்கள் எந்த சமயமானாலும் இந்தத் தத்துவத் தின் மேல் ஏற்பட்டதென்பதையும் ஒத்துக்கொண்டு கால தேச வர்த்தமானத் திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் தகுந்தபடி திருத்தமடைய உரிமையும் சௌக ரியமுடையது என்று சொல்லப்படுவதாயின் அது எந்த மதமாயினும் சமய மாயினும் (கொள்கையாயினும்) அறிவுள்ள மனிதன் ஒப்புக்கொள்ள வேண்டியதேயாகும்.

அப்படிக்கில்லாமல், அதாவது மனிதனின் உலகவாழ்க்கை நலத் திற்கு மதம் ஏற்பட்டது என்பதாக இல்லாமல் அதுவும் காலத்திற்கும் அறிவுக்கும் ஏற்ற மாறுதலுக்கு கட்டுப்பட்டது என்பதாக இல்லாமல் மதத்திற்காக மனிதன் ஏற்பட்டான் என்றும் அந்த மதத்தைக் காப்பாற்ற வேண்டியதே மனிதனின் கடமை என்றும் அது எப்படிப்பட்டதானாவோ திருத்தவோ யாருக்கும் உரிமை இல்லை என்றும் சொல்லும்படியான மதம் எதுவாயிருந்தாலு மதை அழித்துத்தீர வேண்டியது மனித சமூக சீர்திருத்தத்தைக் கோருகிற ஒவ்வொ ருவருடையவும் முக்கியமான கடமையாகும்.

ஆகவே அக்கடமைக்கு கட்டுப்பட்டவைகள்தான் சமயக்கொள் கைகளாகும். இனி இந்திய சமூகத்தையும் இந்து சமயத்தையும் எடுத்துக் கொண்டோமானால் அது சுருக்கத்தில் முடிக்கக்கூடியவோ, விளக்கக் கூடியவோ, முடியும்படியான விஷயமல்ல. இந்திய மனித சமூகம் பெரிதும் சமயத்தைக்காப்பாற்றப் பிறந்ததாகக் கருதிக் கொண்டிருக்கின்றன. அப்படிக் கருதிக் கொண்டிருப்பதிலும் மற்றொரு சிறிப்புக்கு இடமான விஷயமென்ன வென்றால் மனித சமூக நன்மைக்கென்று ஏற்படுத்தப்பட்ட கொள்கைகளை யெல்லாம் விட்டுவிட்டு அக்கொள்கைகளை நிறைவேற்ற வென்று பொய்யாக வும் கற்பனையாகவும் பயத்திற்காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த அர்த்தமற்ற போலி நிபந்தனைக் கொள்கைகளைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டு கட்டி அழுவதாயிருக்கின்றது. காரணம் என்னவென்றால் மனிதனை அறிவு பெருவதற்கு விடாமலும் விஷயங்களைப் பகுத்தறிந்து நடப்பதற்கு சுதந்திரம் கொடாமலும் கட்டிப்போட்டு வைத்திருந்தால் இந்திய மனித சமூகம் இன்றும் சுயஅறிவு அற்று சமயத்தின் கருத்தென்ன? சமயக் கொள்கைகள் எதற்கு ஏற்பட்டது? என்பவைகளை கவனிக்காமல் கீழ் நிலை



யிலேயே இருந்து கொண்டு சீர்திருத்தமடையவோ, முன்னேற்றமடையவோ முடியாமல் தவிக்கின்றன. உதாரணம் வேண்டுமானால் பாருங்கள். எல்லா சமயக்காரர்களின் மனோ பாவமும் குணமும் மற்றவனிடம் நடந்துகொள்ளும் பான்மையும் ஒரே மாதிரியாக இருப்பதை காண்கின்றோம். ஆனால் ஆண் களைப் பார்த்தால் இன்ன இன்ன சமயத்தான் என்று கண்டுபிடிக்கும்படியாய் வேஷத்தை மாத்திரம் போட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். இவன் இஸ்லா மானவன், இவன் கிறிஸ்துவன், இவன் பௌத்தன், இவன் இந்து, இவன் சைவன், இவன் வைணவன், இவன் ஸ்மார்த்தன் என்று சுலபத்தில் கண்டு பிடித்துவிடலாம். ஆனால் இவர்கள் இத்தனை பேர்களுடைய ஒழுக்கங் களைப் பார்த்தால் மாற்றமில்லாதபடி ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். ஆகவே மதம் என்பதும் சமயம் என்பதும் யாருக்கும் அநேகமாய் வேஷ மாத்திரத்தில் இருக்கின்றதே ஒழிய கொள்கை மாத்திரத்தில் இல்லை என்பதும் மக்கள் வேஷத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு கொள்கைகளை அடியோடு நழுவ விட்டு விட்டார்கள் என்பதும் நன்றாய் விளங்கும். இதற்கு காரணம் என்னவென்றால் இன்றைய உலகில் சமய போதனை என்பதே வேஷத்தை சொல்லிக்கொடுத்து அதை கிரமமாய் அந்தந்த சமயத்தார்கள் பின்பற்றுகிறார்களா இல்லையா என்று பார்ப்பதல்லாமல் கொள்கையை வற்புருத்தாததே யாகும். எந்த சமயத்திற்கும் இந்தமாதிரி வேஷந்தான் பிரதானமான கொள்கை என்று ஆகிவிட்டதால் தான் எந்த சமயமக்களிடமும் சமயஉண்மைகொள்கைகளைப் பார்க்கமுடியாமல் போனதோடு சமயத்தின் பேரால் எப்படிப்பட்ட கொள்கையைச் சொன்னாலும், லக்ஷியம் செய்யாமல் போய்விடவேண்டியாகிவிட்டது.

அன்றியும் மக்களுக்கு இவ்வளவு சுலபத்திலேயே அதாவது வேஷ– மாத்திரத்திலேயே சமயப்பிரதானம் கிடைத்துவிடுகின்றதாலும் உண்மை யான அதாவது மனிதனிடம் நடந்து கொள்ள வேண்டிய கொள்கை நிறைவேற பலவிதமாக, பயங்களுக்காக கற்பிக்கப்பட்ட மோக்ஷம், கடவுள், அருள், அடுத்த ஜன்மத்தில் மேன்மையான பதவி ஆகியவைகள் என்பவைகள் எல்லாம் மேல்கண்ட வேஷமாத்திரத்தாலே கிடைத்து விடுவதாய் அவர் களுக்கு நம்பிக்கை ஊட்டப்பட்டு விட்டதாலும் வெரும் வேஷத்தைப் போடுகின்றதாலேயே மோக்ஷமடையக் கருதி அதிலேயே ஈடுபட்டு பிரதான சமயக்கொள்கையை அலக்ஷியப்படுத்தி விடுகிறார்கள்.

ஆகையால் இன்றையதினம் மக்களுக்கு சமயம் பயன்பட வேண்டு மானால் அதன் மிரட்டல் நிபந்தனைகளான போலிக் கற்பனைகளை யெல்லாம் முதலில் அழித்தாக வேண்டும். அதாவது மோக்ஷம் நரகம் தலைவிதி கடவுளின் பக்கத்தில் இருக்கலாம். அடுத்த ஜன்மத்தில் ராஜா வாய் பிறக்கலாம் என்பவைகளையும் சமய வேஷங்களையும் அடியோடு அழித்தாக வேண்டும். அப்படிக்கில்லாதபக்ஷம் எப்படிப்பட்ட நல்ல கொள்கையுள்ள சமயம் என்றாலும் ஒரு நாளும் பயன் கொடுக்கவே கொடுக் காது. மேலும் கொள்கையையும் அறிவையும் பிரத்தியக்ஷ அனுபவத்தையும்



RangaRakes tamilnavarasam.com

பொருத்திவிடவேண்டும். அதைக்கொண்டு அவரவர்களையே நடந்து கொள்ளும்படி விட்டுவிடவும் வேண்டும். அப்படிக்கில்லாத வெறும் பாட்டிக் கதைச் சமயங்கள் இன்றைய சமூக முன்னேற்றத்திற்கு பயன்படவே படாது என்பது எனது உறுதியான அபிப்பிராயமாகும்.

உதாரணமாக முன் காலத்தில் படிப்பு வாசனை உலகக் கல்வி அறிவு சௌகரியமில்லாத காலத்தில் ஒரு மனிதன் வெளியூர் பிரயாணம் போய் விட்டுமென்று கருதி அந்த ஊருக்கு போனால் புண்ணியம், இந்த சாமியை தரிசித்தால் மோக்ஷம், இந்த தண்ணீரில் குளித்தால் பாவம் நீங்கும், அடுத்த ஜன்மத்தில் ராஜாவாய் பிறப்பான் என்றெல்லாம் சொல்லி அதற்குத் தகுந்த கற்பனைக் கதைகள் எழுதி வைத்ததுடன் ஜீவகாருண்யம் என்பதையும் உத்தேசித்து மனிதன், மாடு, குதிரை ஆகியவைகள் மீது சவாரிசெய்து அவற் றிற்கு தொந்திரவு கொடுக்காமல் இருக்கட்டுமென்று கருதி காலால் நடந்து போனால் அதிக மோக்ஷம் அவசியம் கிடைக்கு மென்றும் எழுதி வைத் திருந்தால் இன்று வர்த்தமானப் பத்திரிகை ரயில் , மோட்டார், ஆகாயக் கப்பல் ஆகியவைகள் ஏற்படுத்தப்பட்டு மலிந்த பிறகுகூட நடந்து யாத்திரை போகவேண்டுமா என்று யோசித்துப் பாருங்கள். இதுபோலவே தான் அனேக விஷயங்களை சமயத்தின்பேரால் அர்த்தம் புரியாமல் பின்பற்றி மூடர்களாக வும், தரித்திரர்களாகவுமாகி அடிமைகளாய் கஷ்டப்படுகின்றார்கள். இக் கஷ்டத்தில் இருந்து மக்களை விடுவிக்க வேண்டுமானால் சமயத்தின் உண்மை தத்துவத்தை தைரியமாய் எடுத்து ஓத வேண்டும். அதன் போலித் தத்துவங்களை தைரியமாய் அழிக்க வேண்டும். அதோடுபோலி கற்பனை நிபந்தனைகளுக்கு ஆதாரமாய் இருக்கின்ற கோவில், குளம், சாமிதரிசனம் , புண்ணியம், மோக்ஷம், அடுத்த ஜன்மம் என்கின்ற உபத்திரவங்கள் எல்லாவற் றையும் அடியோடு ஒழித்தாக வேண்டும். இல்லாவிட்டால் மக்களுக்கு விடுதலையோ சுதந்திரமோ, திருப்தியோ, மோக்ஷமோ இல்லவே இல்லை என்றுதான் சொல்லுவேன். இந்த உபத்திரவங்களும் மடத்தனங்களும் இன்று உலகத்தில் உள்ள எல்லா சமயங்களிலும் இருக்கின்றது என்று ஒருசமயம் சொல்லலாம். ஆனாலும் இந்து சமயம் என்பதிலும் இந்திய மக்கள் என்பவர் களிடமுமே அதிகமாக மிக்க கெடுதி தரும்படியாக-சிறிதுகூட முன்னேற்ற மடைய முடியாதபடியாக - சீர்திருத்தம் செய்ய சற்றும் ஒறுப்படாததாக இருந்து வருகின்றது. மற்ற நாட்டாரும் மற்ற சமயத்தாரும் துணிந்து தாங்கள் முன்னேற்றமடையத்தக்க மாதிரியில் சமயக் கொள்கைகளைத் திருத்தி தடை களை அழித்து முன்னேற்றமும், விடுதலையும் அடைந்து வருகின்றார் கள். ஆதலால் வாலிபர்களே! நீங்கள் சற்று நிதானமாய் விஷயங்களை யோசித்து ஏதாவது ஒரு முடிவுக்கு வந்து உங்களால் சமூகம் முன்னேறும் படியும் சமயக் கொள்கைகள் அதற்கு பயன்படும்படியான மார்க்கத்தை தேடுங்கள்.

*குறிப்பு : சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 'சமூக சீர்திருத்தமும் சமயக் கொள்கைகளும்' என்ற தலைப்பில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 25.01.1931**



# வட்ட மேஜை முடிவு

1920-ல் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அரசியல் சீர்திருத்தம் வழங்கின போது அதிலும் முன்னேற்றமான சீர்திருத்தம் வழங்கும் விஷயத்தில் "ஒரு 10 வருஷ-காலம் பொறுத்து பிரிட்டிஷ் பார்லி மெண்டினால் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அதை இந்தியாவுக்கு அனுப்பி அதன் மூலம் இந்தியரின் தேவையையும் தகுதியையும் விசாரித்தறிந்து அதற்குத்தகுந்ததான அரசியல் முன்னேற்றம் வழங்கப்படும்" என்று தெரிவித்திருந்தபடியே 1929ல் ஒரு கமிட்டியை அதாவது சைமன் கமிட்டியை இந்தியாவுக்கு அனுப்பினார்கள். அந்தப்படி அனுப்பப்பட்ட கமிட்டியை காங்கிரஸ் என்னும் பெயரால் ஒரு கூட்டம் பகிஷ்காரம் செய்த தாய் காண்பித்தாலும் மற்றபடி இந்தியாவிலுள்ள எல்லாப் பொது ஸ்தாபனங் களும், சமூக சமய ஸ்தாபனங்களும், மேலும் இந்திய ஜனப்பிரதிநிதி களடங்கிய ஸ்தலஸ்தாபனங்களாகிய தாலூகா, ஜில்லா போர்டு, முனிசிபா லிட்டி முதலியவைகளும், அரசியல் நிர்வாக ஸ்தாபனங் களாகிய மாகாண சட்டசபை, இந்தியா சட்டசபையாகிய ஸ்தாபனங்களும் பெரிதும் வரவேற்று உபசரித்து தங்கள் குறைகளையும் கஷ்டங்களையும் தேவைகளையும் எடுத்துச் சொல்லி மேற்கொண்டு அளிக்கப்படும் சுதந்திரங் களை நிர்வகிக்கும் தகுதிகளையும் எடுத்துக்காட்டி அவற்றிற்காக பல திட்டங் களையும் வகுத்து அக்கமிட்டி வசம் கொடுத்ததும் யாவரும் அறிந்ததே யாகும்.

இவை ஏற்பட்ட பிறகு காங்கிரசானது தன்னுடைய அபிப்பிராயத் தை தேச மகாஜனங்களும் அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளாமல் போய் விட்டதே என்கின்ற கோபமான ஆத்திரத்தால் சட்ட மறுப்பென்பதன் மூலம் பாமர மக்கள் சுலபத்தில் ஏமாறத்தகுந்ததான கொள்கைகளாய் கண்டு பிடித்து சுதேசியென்றும், வரி மறுப்பு என்றும், மதுவிலக்கு மறியல் என்றும் சொல்லும்படியான திட்டங்களைக் கொண்டு சட்ட மறுப்பு முதலிய கிளர்ச்சி களை ஆரம்பித்ததும் அக்கிளர்ச்சியையும் பொது ஜனங்களும் பொதுஜன ஸ்தாபனங்களும் பல சமூக ஸ்தாபனங்களும் சட்ட சபைகள் முதலியவை களும் லட்சியம் செய்யாமல் சைமன் கமிட்டிக்கு முன் தங்களால் சமர்பிக்கப் பட்ட திட்டங்களை விவரித்துச் சொல்வதற்காகவும் அத்திட்டங்கள் நிறைவேற்றப்படுவதன் மூலம் ஒரு சமூகத்திற்கும் மற்றொரு சமூகத்திற்கும் அபிப்பிராய பேதம் ஏற்படாமலும் ஒரு லக்ஷியத்திற்கும் மற்றொரு லட்சியத்திற்கும் முரண் ஏற்படாமலும் ஒரு மாகாணத்திற்கும் மற்றொரு



RangaRakes tamilnavarasam.com

மாகாணத்திற்கும் அதிருப்தி ஏற்படாமலும் இருப்பதற்காகவென்று எல்லா மாகாணப் பிரதிநிதிகளையும் எல்லா சமூக சமயப் பிரதிநிதிகளையும் எல்லா லட்சியப் பிரதிநிதிகளையும் வரவழைத்து நன்றாய் தர்க்கித்து முடிவு செய்வது என்னும் கருத்தின் மீது வட்டமேஜை மகாநாடு என்பதாக ஒன்றை லண்டனில் கூட்டி அதற்கு இந்தியர்களால் கொண்டாடப்பட்டவர்கள், முன் வழங்கப் பட்ட இந்திய அரசியல் சீர்திருத்தங்களை நடத்திக் கொடுத்தவர்கள், மேலும் நடத்திக் கொடுக்கத் தகுதியும் செல்வாக்கும் உடையவர்கள் என்று கருதக் கூடியவர்களில் பலரை சமய, சமூக, ஜாதி, வகுப்பு, தொழில், லட்சியம், ஆண், பெண் தன்மை வாரியாகப் பிரதிநிதிகளை அறிந்து வரவழைத்து சுமார் மூன்று மாத காலம் பேசி, விவாதித்து ஒரு முடிவுக்கு வந்ததோடு புதிய சீர்திருத் தத்தின் போக்கு இன்ன விதமாய் இருக்க வேண்டும் என்கின்ற தன்மையை யும் தீர்மானித்து அத்தீர்மானத்தையும் ஏகமனதாய் நிறைவேற்றிக் கொண் டார்கள் என்பதும் யாவருமறிந்த விஷயமாகும்.

இவை ஒரு புறமிருக்க பிரிட்டிஷ் பிரதம மந்திரியாரும் மேற்கண்ட விஷயங்கள் நன்றாகக் கலந்து பேசி தர்க்கித்து ஒரு தீர்மானத்திற்கு வந்த தற்காக இந்தியாவுடன் நேசமாகவும் அன்னியோன்ய நட்பாகவும் இருக்க வேண்டுமென்கின்ற எண்ணத்தின்பேரில் என்று மனப்பூர்வமான ஆசை யைக் காட்டி மனம்விட்டுப் பேசியதில் பல நன்மொழிகள் கூறி பிரதிநிதி களையும் மகிழ்ச்சியுடன் உபசாரம் செய்து வழியனுப்பியிருப்பதும் இந்த நல்ல காரியத்திற்காகவென்று ஷை இந்தியப்பிரதிநிதிகளும் பிரதம மந்திரி யாரின் தயாளகுணத்திலும் பிரிட்டிஷாரின் நல்ல எண்ணத்திலும் நம்பிக்கை வைத்திருப்பதை காட்டுவதற்காக அவர்களைப்புகழ்ந்து பாராட்டியதுடன் நன்றியும் செலுத்திவிட்டு இந்தியாவுக்கு கப்பலேறி இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் இனி இரண்டொரு வாரத்தில் இங்கு க்ஷேமமாய் வந்து சேர்ந்தும் விடுவார்கள் என்பது உறுதி.

இந்த நடவடிக்கைகளிலிருந்து இந்தியாவுக்கு வழங்கப்பட வேண்டிய 3வது தவணை சீர்திருத்த முயற்சியின் அத்தியாயங்கள் ஒருவாறு முடிவு பெற்றதாகி விட்டதென்றே கூறலாம். ஒவ்வொரு கூட்டத்தாரும் இச் சீர்திருத்தங்கள் "தங்களால் தான் கிடைத்தது" "தங்களால்தான் கிடைத்தது" என்று பெருமையும் பாராட்டிக்கொள்ளலாம். ஆனால் இன்றிலிருந்து அனேகமாய் காங்கிரசுக்கோ மற்றபடி திரு. காந்தி கிளர்ச்சிக்கோ கூட இனி மேல் உள்ள கவலையும் வேலையுமெல்லாம் இந்த சீர்திருத்தத்தின் பயனாய் ஏற்படப் போகும் பெரிய பெரிய அதிகாரங்களும், பதவிகளும், சம்பளங் களும் மற்ற விதமான பண வரும்படிகளும், பெருமைகளும் யார் யார் அடையும்படி செய்வது என்பதைத்தவிர வேறு வேலையில்லாமல் போய்விடுமென்பதில் நமக்குச் சந்தேகமில்லை. சர்க்காரும் அநேகமாய் இந்த எண்ணத்தையே கொண்டு கூடிய சீக்கிரம் ஜெயில் கதவுகளை யெல்லாம் திறந்து அரசியல் கைதிகள் என்று சொல்லப்படும் 'தேச பக்தர்களை' எல்லாம்



வெளியில் விரட்டி அடித்துத் துரத்தி விடக்கூடும் என்பதிலும் நமக்குச் சந்தேகமில்லை. வெளிவந்த, இந்த "தேசபக்தக் கூட்டங்களும்" இனி கொஞ்சகாலத்திற்கு அதாவது தேர்தல் காலம் சமீபிக்கும்வரை மக்களின் உப்பு வரியைப்பற்றியோ, சீமை ஜவுளியைப் பற்றியோ, கள்ளுகுடியைப் பற்றியோ சிறிது கூட கவலையில்லாமல் தேர்தலுக்கு ஆள்களைப் பொறுக்கி எடுத்து கூட்டு வியாபாரப் பங்கு உண்டாக்கி ஒப்பந்தம் பேசி அடுத்தத் தேர்தலுக்குத் தயார் செய்யும் வேலையிலேயே சரியானபடி ஆழ்ந்து கிடந்து தேர்தல் சமீபத்தில் வந்த பிறகுதான் மறுபடியும் ஒருமுறை உப்புவரி, சுதேச சாமான், மதுவிலக்கு ஆகிய கொள்கைகளைப்பற்றி பேசமுடியும் என்று முடிவு கட்டிவிடலாம்.

ஆகவே, இந்தக் காங்கிரசு விஷயமும் உப்புக் காய்ச்சும் கிளர்ச்சி விஷயமும், நிரபராதிகள் உதை அடிபட்டு, மண்டையுடைத்து, உயிர்கூட துறக்கவேண்டி நேர்ந்த விஷயமும், சிலர் பெரிய பெரிய நஷ்டம் அடைந்த விஷயமும் கொண்ட அத்தியாயமும் ஒருவாறு முடிவுபெறலாம்.

இவற்றிற்கெல்லாம் சமாதானமாக "நாங்களும் இந்தமாதிரியெல்லாம் செய்யாவிட்டால் இதுகூட கிடைத்திருக்காது" என்கின்ற எண்ணத்தின் மீதே சிலர் தங்கள் தங்கள் கஷ்டத்திற்கு சமாதானம் செய்து கொண்டாலும் கொள்ளலாம்.

ஆகவே இவையும் ஒருபுறமிருக்கட்டும். இனி சீர்திருத்தத் திட்ட விஷயத்தையும் அதனால் பொதுமக்களுக்கு ஏற்படப்போகும் பலனையும் பற்றி சிறிது யோசிப்போம்:–

முதலாவது இந்த சீர்திருத்தத்தின் மூலம் வகுப்புவாதம் ஒழிந்த தென்றாவது, ஒழிவதற்கு வகை ஏற்பட்டதென்றாவது சொல்வதற்கு இல்லை யென்பதையும், வகுப்புக்குவகுப்பு நம்பிக்கைக்கு மார்க்கமோ, சமாதா னமோ, வகுப்புப் பிரதிநிதித்துவ விஷயமோ கூட வட்டமேஜை மகாநாட்டின் காலத்தில் 4ல் 3பங்கு நாட்களான சுமார் இரண்டு மாதகாலம் பேசியும் எவ்வித முடிவும் பெறாமல் போனபடியே திரும்பப்பட்டது என்பது கூட இல்லாமல், இங்கு இருந்து சீமைக்குப் போகும்போது இருந்த நிலைமை யைவிட அதிக மோசமான அவநம்பிக்கையின் மீதே திரும்பும்படியாகி விட்டதென்றும் சொல்லலாம்.

எப்படியிருந்தாலும் தேசியவாதிகளில் படித்த மக்களுக்குள்ளும் பணக்காரர்களுக்குள்ளும், ஜமீன்தார், முதலாளி ஆகியவர்களுக்குள்ளும் இப்போதைய சீர்திருத்தம் அதாவது வழங்கப்போவதாக ஏற்பட்ட சீர் திருத்தம் சைமன்கமிஷன் சிபார்சுக்கு மேல் என்றும் மிக்க தாராளமான தென்றும் பொதுஜனப் பிரதிநிதிகளால் கேட்கப்பட்டவைகளுக்கும் மேல் என்றும் எங்கும் அபிப்பிராயமாயிருப்பதைக் காணலாம்.



RangaRakes tamilnavarasam.com

நம்மைப் பொருத்தவரையில் நாமும்கூட வகுப்புவாதமும் அவநம்பிக்கையும், பிரதிநிதித்துவமும் நேர் செய்யப்படாமலும் ஆண் பெண், விஷயம், தாழ்த்தப்பட்டவர்கள் விஷயம் முதலிய விஷயங்களில் கண்டிப்பான ஒருசமத்துவ திட்டத்தை உறுதியாக்கி முடிவு செய்யாததைப் பற்றியும், அதிருப்திப் படுவதோடு சுதேச சமஸ்தானங்களையும் கொண்டு வந்து நம்முடன் பிணைந்திருக்கும் ஒருபெரிய ஆபத்தைப் பற்றியும் மிகவும் மிகவும் வருந்த வேண்டியிருக்கின்றது. இந்த விஷயமானது இதுவரையில் அளித்து வந்த சீர்திருத்தங்களால் எப்படி நமது பாமர மக்களை நம்நாட்டு படித்தவனும், பணக்காரனும், மேல் ஜாதிக்காரனும் ஏமாற்றி, அடக்கி, ஆண்டு கொள்ளை அடித்துகொண்டும், அவர்களும் பாமரமக்களும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு கிடக்கும்படியாயும் ஐரோப்பியர்களின் காரியம் ஒரு ஊசிமுனை அளவுகூட குந்தகமில்லாமல் நடக்கும்படியாக இருந்து கொண்டிருக்கும்படி செய்யத் தகுந்ததாய் இருந்ததோ அதேபோல் ஏன்? இப்போது அதற்கும் மேலாக தங்கள் காரியம் பந்தோபஸ்தாக இருக்கும்படியும், இங்குள்ள சிறு மீன்களைப் பெரு மீன்கள் பிடித்துச் சாப்பிட்டுக் கொண்டு தங்களுக்கு என்றும் குறையாப் பங்கு கஷ்டமில்லாமல் கொடுத்துக்கொண்டு வரும்படியாகவும் பார்த்து பெரிய ஆபத்துக்களை கொண்டுவந்து விட்டாய் விட்டது. இந்தப்படி பிரிட்டிஷ் சர்க்கார் செய்யவும் இதை இந்தியப் பிரதிநிதிகள் ஒப்புக்கொள்ளவும் இனி காங்கிரஸ் தலைவர்களும் ஒப்புக் கொள்ளவும் திரு.காந்திகூட மேலொப்பம் போடவும்வேண்டிய அவசியம் ஏற்படப்போகும் காரணம் என்ன வென்று யோசித்தால் அது தானாகவே விளங்கும். என்னவென்றால் இந்தியநாட்டில் ருஷியக் கொள்கை பரவிவிடுமோ என்கின்ற பயத்தின் மீது பிரிட்டிஷார் இந்தியப் படித்தவர்களையும் பணக்காரர்களையும் கூட நம்பாமல் பாதுகாப்புக்காக சுதேச சமஸ்தானங்களையும் இப்போது இந்த ஆக்ஷியின்மீது ஆதிக்கம் செலுத்தும்படியாகவும் பங்குபெறும்படியாகவும் செய்துவிட்டார்கள். இனி மத்திய அரசாங்கத்தில் எப்போதும் சுதேச சமஸ்தானங்களின் ஆதிக்கம் தான் தலை சிறந்து நிற்கப்போகின்றது. எப்படியெனில், தாலூகா ஜில்லாபோர்டுகளில் எப்படி ஜமீன்தார்கள் ஆதிக்கமும், பாளையக்காரர்கள், பட்டக்காரர்கள் பண்ணையக்காரர்கள் ஆதிக்கமும் தானாகவே ஏற்பட்டுவிடுகின்றதோ அதே போன்றும், மற்றும் சட்டசபைகளிலும் ஜமீன்தார்கள் ஆதிக்கமும் பணக்காரப் பிரபுக்கள் ஆதிக்கமும் தலை சிறந்து விளங்குகின்றதோ அதே போலவும், இவர்கள் எப்படி அந்த ஸ்தாபனங்களில் இருந்துகொண்டு சர்க்கார் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொடுப்பதுடன் தங்கள் ஆதிக்கத்தையும் நிலை நிறுத்திக் கொண்டு பார்ப்பன ஆதிக்கத்திற்கும் உதவி செய்து கொண்டு வரப்படுகின்றார்களோ அது போலவும் தான் இனி சுதேச சமஸ்தானங்களையும் கொண்டுவந்து நுழைத்ததின் மூலம் பணக்காரனுக்கும் பார்ப்பானுக்கும் அரசாங்கத்திற்கும் மற்றொரு புதிய ஆதரவு ஏற்பட்டுவிட்டது என்றே சொல்லலாம். இந்தமாதிரி அரசாங்கத்தை இனி பாமர மக்களால் சிறிதுகூட அசைக்க முடியாதென்றே சொல்லிவிடலாம்.



அன்றியும் சமதர்மக் கொள்கையையோ, ஒரே பக்கம் செல்வ மெல்லாம் போய்ச்சேர்ந்து கொண்டிருப்பதைத் தடுக்கும் கொள்கையை யோ இனி சுலபத்தில் எதிர்பார்க்க முடியாமல் செய்யப்பட்டு விட்டது. திரு. காந்தியவர்களும் தான் உப்பு சத்தியாக்கிரகக் கிளர்ச்சியை ஆரம்பித்ததற்குக் காரணமும் “ருஷியக்கொள்கை போல்ஸ்விஷம் இந்தியாவில் பரவிவிடும் என்று கருதி அதைத்தடுப்பதற்குத்தான் உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பித் தேன்” என்று சொல்லியிருப்பதையும் சேர்த்துப் பார்த்தால் கட்டாயம் அரசாங்கத்தார் இந்தக் கருத்துக் கொண்டேதான் இப்படிச்செய்தார்கள் என்பதும், திரு.காந்திக்கும் இது மிகத் திருப்தியாயிருக்குமென்பதும் தானாய் விளங்கும். இந்தக்காரியமானது இந்தியா “விலங்கைத்தரித்து குட்டையில் மாட்டிக்கொண்டதற்கு” ஒப்பேயாகும். இதில் சிறிதும் சந்தேகமேயில்லை. ஏனெனில் நம்முடைய இன்றைய சுதேச ராஜாக்கலெல்லாம் ஏறக்குறைய தசரத சக்கரவர்த்தி போலும், ராமனைப் போலும், கிருஷ்ணனைப் போலும், அரிச்சந்திரனைப்போலும், கூன்பாண்டியனைப்போலும் தான் இருக்கின்றார் களே யொழிய அதிலிருந்து சிறிதும் மாறுபட்டவர்கள் மிகமிகச் சொற்பமே யாவார்கள்.

ஆகவே, இந்தமாதிரி சமஸ்தானங்களை யெல்லாம் அதாவது இந்தியாவிலுள்ள சுதேச அரசாங்கங்களின் தொல்லைகளையெல்லாம் அடியோடு ஒழிக்கவேண்டுமென்று கருதிக்கொண்டிருந்த நமக்கு அவர் களுக்கு இன்னும் கொஞ்சம் அதிகமான ஆதிக்கமும் பந்தோபஸ்தும் ஏற்பட்டிருக்கின்றதென்றால் அதைப்பற்றி என்ன சொல்லுவது என்பது வாசகர்கள் தான் முடிவுகட்ட வேண்டும்.

தவிர, மற்ற சீர்திருத்தங்கள் விஷயத்திலோ வட்ட மேஜை மகாநாட்டில் தீர்மானமாகியிருக்கின்ற தீர்மானப்படி பார்த்தால் அன்னிய நாட்டு சம்பந்தம், வெள்ளைக்கார உத்தியோகஸ்தர்களின் பாதுகாப்பு, சீர்திருத்தத் திட்டத்தை நடத்தி வைத்தல், சிறுபான்மை யோரின் பாதுகாப்பு முதலிய சில விஷயங்களில் பாதுகாப்பு செய்துகொண்டிருப்பது தவிர மற்றவைகளை மத்திய அரசாங்கத்திற்கு ஒப்படைத்து அதை இந்திய பிரஜைகளின் பிரதிநிதிகளால் நிர்வகிக்கச் செய்யச் சம்மதிக்கப்பட்டாய் விட்டது. பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் உரிமை முழுவதையும் நமக்கே விட்டுக்கொடுத்துமாய் விட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தங்கள் பந்தோபஸ்தில் வைத்துக் கொண்ட விஷயங்கள் சரியா தப்பா அல்லது அதையும் அவர்கள் நமக்கு ஒப்படைத்துவிட வேண்டியதுதானா என்கின்ற விஷயம் வேறானது. அது விஷயத்தில் வட்ட மேஜை மகாநாட்டுக்குச் சென்றவர்கள் யாருக்கும் ஆக்ஷேபனையோ அதிருப்தியோ கிடையாது. நமக்கும் அதில் அதிக தகராறு கிடையாது. ஏனெனில் அவைகளை நமது கைக்கு மாற்றிவிட்டதினாலேயே அவை நமது மக்களுக்கு பயன் படும்படியாக செய்யப்படுமா என்கின்ற விஷயத்தில் நாம் பயந்து கொண்டு தான் இருக்கின்றோம். அது ஒருபுறமிருந்தாலும் மாற்றப்பட்டு நம்மிடம் ஒப்படைக்கப் போகும் விஷயங்கள் எப்படி நடைபெறும் என்பதைப்பற்றி யோசித்துப் பார்க்கலாம்.



RangaRakes tamilnavarasam.com

இந்த இடத்தில் வாசகர்களை பரிசுத்தமான மனதுடன் நடுநிலை யிலிருந்து வாசிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம். இந்த "சுதந்திரமும் லாபகரமானதுமான" சீர்திருத்தங்கள் வந்ததற்காக யார் பெருமை பாராட்டிக் கொண்டாலும் சரி அல்லது இன்னும் முற்போக்கான சுதந்திரம் வராமல் போனதற்கு யார் மீது குற்றம் சுமத்தப்படுவதானாலும் சரி அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. வந்திருப்பதும் வரப்போவதும் இந்தியப் பொது மக்களுக்கு என்னபலனைக் கொடுக்கும் என்பதுதான், கீழே எழுதப்போவ தின் கருத்தாகும். அப்படிப் பார்ப்போமானால் கிராமப்பஞ்சாயத்து, யூனியன், தாலூகா, ஜில்லாபோர்டு, முனிசிபாலிட்டியாகிய பிரதிநிதி ஸ்தாபனங்களில் இது வரையிலும் இன்றும் புகுந்திருக்கும் ஊழல்களும், மாகாணசட்டசபை, நிர்வாகசபை மந்திரிசபை ஆகியவைகளில் தேர்தல், நியமனம் முதலியவை களில் பிரவேசித்திருக்கும் யோக்கியதைகளும், நாணயங்களும், ஒழுக்கங் களும், அவற்றின் நிர்வாகங்கள் நடக்கும் தன்மைகளையும் பார்த்தால் இந்த யோக்கியதைகளும், தன்மைகளும் இந்தமாதிரி சரக்குகளும் தான் நாளைக்கு இந்திய நிர்வாகத்திலும் அதாவது மத்திய அரசாங்கத்திலும் போய் ஆதிக்கம் செலுத்த இடம் ஏற்பட்டது என்பது அல்லாமல் வேறு ஒன்றுமில்லை என்பது நன்றாய் விளங்கும். அன்றியும் இதற்குமுன் வந்துள்ள சீர்திருத்தங்கள் எந்த மாதிரி மக்களுக்குப் பயன்பட்டது? எந்த முறையில் நடத்தப்பட்டது? என்ப தையும் பார்த்தால் வரப்போகும் சீர்திருத்தமும் யாருக்குப்பயன் தரும்? எப்படி நடைபெறும்? என்பதற்கு "வினாடி பலன்" கூட எழுதிவைத்து விடலாம்.

உதாரணமாக, பெரிதும் எப்படிப்பட்டவர்கள் பிரதிநிதியாகின் றார்கள்? என்ன முறையில் பிரதிநிதி ஆகின்றார்கள்? ஆனபின்பு எப்படி நடந்து கொள்கின்றார்கள்? என்கின்ற விஷயத்தைப் பார்த்தால் மாகாணங்களில் இருந்த அயோக்கியத்தனங்களும் நாணயக்குறைவான தன்மைகளுந்தான் இந்திய மத்திய அரசாங்கநிர்வாகத்திலும் தாண்ட வமாடப் போகிறது என்பதை கல்லின் மேல்எழுதிப் பொன்னால் செதுக்கிவிடலாம். இன்றையத் தேர்தல்களுக்கும், நிர்வாகப்பதவி பெருவதற்கும் செய்யப்படாத அயோக் கியத்தனங்கள் இந்த உலகில் எங்காவது, எந்த சமூகத்தினிடமாவது இருக் கின்றதா என்று கேட்கின்றோம்.

சீர்திருத்தப் பிரதிநிதிகள் தெரிந்தெடுப்பு முறையும், அவர்கள் தனி யோக்கியதையும், பெரிதும் இந்தப்படியென்பதாக ஒருபுரமிருந்தாலும், மொத்தத்தில் சீர்திருத்தம் என்பதின் தன்மைதான் எப்படி இருக்கின்றது என்பதையும் சற்று பார்ப்போம்.

"தண்டுவன் வீட்டில் குமரியை அடமானம் வைக்கப்பட்டது" என்கின்ற கிராமப் பழமொழிபோல்,

யோக்கியப் பொருப்பும் நாணையமும் சிறிதுகூட இல்லாததும், பணத்தாசையும் அயோக்கியத்தனமும் மித மிஞ்சி உள்ளதுவுமான கூட்டத் தார்கள், சமூகத்தார்கள் தவிர வேறு எந்த விதத்திலும் சிறிதாவது ஒரு இரண்டு பேராலாவது யோக்கியன் என்றும் நாணையஸ்தன் என்றும் வெளிக் காகிலும் சொல்லப்படக்கூடிய ஒரு மனிதனும் சுலபத்தில் இந்தியப் பொது ஜனப் பிரதிநிதியாவதற்கு மார்க்கமில்லாத முறை கொண்ட சீர்திருத்த மாகவே இருக்கின்றது. அது மாத்திரமல்லாமல் ஆள் ஒன்றுக்கு எந்த வேலையாவது செய்து நாள் ஒன்றுக்கு 0-12-0 அணா கூட சம்பாதிக்க சிரமமான யோக்கியதை இல்லாத ஒருவன் நாள் ஒன்றுக்கு மொத்த ஜன சங்கையில் ஆள் ஒன்றுக்கு 0-3-0 அணா கூட வரும்படியில்லாத நாட்டில் மாதம் 1க்கு 5000, 6000, 7000 ரூபாய்கள் வீதம் சம்பளமும் சில சமயம் மாதம் 1க்கு 10,000, 15,000 வீதம் லஞ்ச மும் சம்பாதிக்கத்தகுந்ததும் சம்பாதிக்கலாம் என்ற ஆசையும் நம்பிக்கையும் உண்டாக்கத் தகுந்ததுமான அநேக உத்தியோகங்களும் பதவிகளும் அதிகாரங்களும் கிடைப்பதல்லாமல் வேறு ஒன்றும் அதிகமாக இல்லை என்று உறுதியாகச் சொல்லுவோம். இது மாத்திரமல்லாமல் இந்தப்படியான பதவி முதலியவைகளைப் பெறுவதற்கு மனிதன் அதாவது பிரதிநிதியாக இருக்க விரும்புகிறவன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பார்த்தால் முன் சொன்னது போல் இனி இதற்கு மேற்பட்ட அயோக்கியத்தனம் உலகில் எதற்கும் எந்த பாகத்திலும் செய்யப்படுவதில்லை என்கின்ற 'உயர்ந்த' தத்துவமான காரியத்தைச் செய்து தான் பெற வேண்டியிருக்கின்றது. ஆகவே இவற்றிலிருந்தே இந்த சீர்திருத்தமானது எவ்வளவு மேலானது என்பது மூடனுக்கும் நன்றாய் விளங்கும். ஆனால் பணம் பதவி அதிகாரம் ஆகிய ஆசைகொண்ட மக்களையும் அவர்களை அண்டிப் பிழைக்க வேண்டிய மக்களையும் இந்த மாதிரி சீர்திருத்தமும் இதுபோன்ற தன்மை கொண்ட இன்னும் அதிகமான சீர்திருத்தமும் மேலானது என்பதோடு அவர்களும் அவர்கள் முன்னோர்களும் "முன் ஜன்மத்தில் செய்த பூஜா பலத்தினால்" கிடைத்தது என்று சொல்ல செய்வதோடு இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பெருவதற்கு இனியும் ஒரு தரம் இரண்டு தரம் ஜெயிலுக்குப் போகலாம் வா என்று மற்றவர்களை அழைக்கவும் செய்யும்.

ஆனால் இந்தியாவின் ஜனத் தொகையில் 100க்கு 90 பேர்கள் கொண்டவர்களான ஏழைமக்கள், உழுகும் குடியானவர்கள், தொழிலாளிகள், கூலிக்காரர்கள், தீண்டப்படாதவர் முதலாகியவர்களுக்கு இந்த சீர்திருத்தம் என்ன பலனைக் கொடுக்கும் என்றும் பார்த்தால் முன்னிலும் அதிகமான தொல்லைகளையும் கொடுமைகளையும் ஒழுக்கக் குறைவுகளையும்தான் உண்டாக்குமென்று "தீர்க்கதரிசனம்" சொல்லுவோம்.

நம்முடைய முடிவான கருத்தென்னவெனில் "இந்தியாவுக்கு ஜனநாயக ஆக்ஷி" என்பதெல்லாம் ஏழைகளைக் கொடுமைப்படுத்து வதான சூக்ஷியும் அயோக்கியத்தனமும் என்று அகராதி எழுதவேண்டியதேயாகும்.

ஏனென்றால் ஜனங்களின் யோக்கியதை என்ன? அவர்கள் பிரதி நிதிகள் எப்படிப்பட்டவர்கள்? ஜனநாயகக்கொள்கை எப்படிப்பட்டது?



RangaRakes
tamilnavarasam.com

என்பவைகளைப் பார்த்தால் முன்சொன்னபடி இளைத்தவர்களை வலுத்த வர்களும் அயோக்கியர்களும் ஏமாற்றுவ தென்பதல்லாமல் வேறு என்ன இருக்கின்றது? மேலும் இந்த ஐம்பது வருஷ- சொந்த அனுபவத்தில் நாம் இதைத் தவிர வேறு ஒன்றையும் முடிவு செய்ய நமக்குப்போதிய ஆதாரம் கிடைக்கவும் இல்லை.

இன்னமும் தெளிவாகப் பேச வேண்டுமானால் நமது ஜனநாயகம் என்பது கூலிக்காரனுக்கும் தொழிலாளிக்கும் முதலாளி காப்பாளனாகவும், உழுகும் குடியானவனுக்கு மிராசுதாரனும் ஜமீன்தாரனும் காப்பாளனாகவும், பெண்களுக்கு ஆண் காப்பாளனாகவும், பறையனுக்கு பார்ப்பான் காப்பா ளனாகவும், சாதுக்கு தந்திரசாலி காப்பாளனாகவும் (இதற்கு வேறுஒரு உதாரணம் சொல்லவேண்டுமானால் எலிக்குப் பூனை காப்பாளனாகவும்) இருக்க சம்மதிப்பது போல்தான் இன்று இந்திய மக்களுக்கு ஜனநாயகம் ஆக்ஷித்தன்மையில் வரும் காப்பாளத்தன்மையும் இருக்கின்றதே தவிர வேறில்லை.

ஆகவே இந்தமாதிரியான ஜனநாயக ஆக்ஷியை மூடனும் அயோக் கியனு மல்லாத எவர்தான் விரும்புவார்கள் என்பதை யோசித்து முடிவு செய்யும் பொருப்பை அறிவுள்ள வாசகர்களுக்கே விட்டுவிடுகின்றேன்.

கடைசியாக நாம் சொல்லுவதென்னவென்றால் உலக மக்களில் பெரும்பாலோர் பூரண விடுதலை சமதர்மம் பொது உடைமைத்தன்மை ஆகிய உயர்வான தர்ம போகங்களை அடையக் கருதிக் கொண்டு அதற்கான முயற்சிகள் செய்துகொண்டுமிருக்கும் காலத்தில் நம்நாடு மேலும் மேலும் அடிமையாகிக்கொண்டு வருவதும் ஏழைகளை வஞ்சித்து ஏகபோகமாய் சம்பளம் லாபம் வரும்படி ஆகியவைகளை ஒரு கூட்டம் கொள்ளை யடிப்பதும் தப்பு என்றும் சம்பளத்தையும் வரும்படியையும், லாபத்தையும், உத்தியோகத்தையும் குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கும் காலத்தில் மறுபடியும் அதிகமான சம்பளமும் உத்தியோக ஆசையும் நமது பிரதிநிதி என்பவர்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதுமான காரியங்களால் நாமும் - நமது நாடும் - இன்றைய உலகப்போக்கில் வெகுதூரம் பிற்போக் கடைந்துவிட்டோம் என்றே சொல்லுகிறோம்.

இனி இராஜாக்கள் மகாராஜாக்கள் ஜமீன்தார்கள் என்பவர்கள் யோக்கியதையும் சம்பளம் உத்தியோகஸ்தர்கள் ஆகியவைகளின் யோக்கிய தையும் பற்றி அதை அடையும் வழியைப் பற்றியும் விபரமாய் பின்னால் எழுதுவோம்.

**“ அரசியல் சீர்திருத்தம் சமதர்மக் கொள்கைக்கு ஆபத்து”**

**குடி அரசு - தலையங்கம் - 25.01.1931**



# பாலர் பரிபாலனம்

சென்னை பண்டிதர் திரு.எஸ். ஆனந்தமவர்களால் எழுதப்பட்ட “பாலர் பரிபாலனம்” என்னும் புஸ்தகம் வரப்பெற்றோம். நமது நாட்டில் குழந்தை வளர்ப்பிலோ அல்லது அதன் போஷணையிலோ போதிய சிரத்தையும், கவனமும் காட்டப்படுவதில்லை யென்பதோடு அனேகருக்கு அதன் விபரமே தெரியாதென்று சொல்லவேண்டி இருக்கிறது. இதனா லேயே சிசு மரணமும், அகால மரணமும், பலவீனமும், ஊக்கமின்மையுமாகிய வைகள் மலிந்து அன்னிய நாட்டார் முன்னிலையில் இந்தியர்களை மாக் களாகக் கருதப்படும் படியாகச் செய்து வருகின்றது. இவை மாத்திரமல் லாமல் மக்களுக்கு நல்லொழுக்கமும் பகுத்தறிவும் கூட அடைவதற்கில் லாமல் இருந்துவரப் படுகின்றது. இவற்றிற்கெல்லாம் காரணம் பிள்ளை களை எப்படி பரிபாலிப்பதென்கிற விஷயத்தில் சிறிதும் அறிவும், ஆராய்ச் சியும் இல்லாததே காரணமென்பதைத் திரும்பவும் வலியுறுத்திச் சொல்ல வேண்டி யிருக்கின்றது.

இத்தகைய பெருங்குறையை போக்க திரு. ஆனந்தமவர்கள் முயற்சித்து இப்புத்தகம் எழுத முன்வந்தது பேருதவியேயாகும். இதில் குழந்தை பிறப்பு, குழந்தைப் பருவத்துன்பங்களும், காயலாவும், ஸ்நானம், உடை, ஆகாரம், தாதி, தொத்து வியாதியிலிருந்து காப்பாற்றுதல், அம்மை குத்துதல், உடற்பயிற்சி, தூக்கம், மல ஜலங்களித்தல், உணவு, கல்வி கொடுக் கும் முறை முதலிய அனேக விஷயங்களைப்பற்றி தெளிவாகவும், முறை யாகவும் எழுதப்பட்டிருக்கிறது. இது வைத்திய சாஸ்திரமாத்திரமல்லாமல் சரீரதத்துவம், மனோதத்துவம் முதலிய பல நூல்களையும், ஆராய்ந்து எழுதப்பட்ட ஒரு முக்கிய புஸ்தகமாகும். ஆகவே இப்படிப்பட்ட அருமை யான புஸ்தகத்தை எழுதின பண்டிதர் திரு. எஸ்.எஸ். ஆனந்தமவர்கள் அறிவிலும் ஆராய்ச்சியிலும் வைத்திய பாண்டித்தியத்திலும் வல்லவ ரென்பதை நாம் தமிழ் நாட்டாருக்கு எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. எனவே இப்புஸ்தகமானது ஒவ்வொரு தாய்மாரிடத்திலும் ஒவ்வொரு புஸ்தகாலயத்திலுமிருக்க வேண்டியதோடு ஆண் பெண் பள்ளிக்கூடங் களிலும் பாடமாய் இருக்கத் தக்கதென்றும் சொல்லுவோம்.



RangaRakes tamilnavarasam.com

வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கெழுதி பெற்றுக் கொள்ளவும்.

விலாசம்
பண்டிட் எஸ்.எஸ். ஆனந்தம்
தமிழ் மருத்துவசாலை
221, தங்கசாலைத் தெரு, சென்னை.

**குடி அரசு - மதிப்புரை - 25.01.1931**



# சட்ட மறுப்புக்கு சர்க்கார் உதவி

சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அது அற்ப ஆயுளாய் முடியுமென்றே முடிவுகட்டி இருந்தோம். அந்தப்படி ஒழிந்து விடுமென்று எதிர்பார்த்த காலத்திற்கு மேலாக சற்று காலம் கடத்திவரப் படுகின்றது. சட்டமறுப்புத் தன்மையை தைரியமாய் வெளியிலெடுத்துச் சொல்ல முடியாதவர்களும் அதில் கலந்து கொள்ள சிறிதும் தைரியமில்லாத வர்களுமாய் இருந்த சில கூட்டாத்தாருக்கு சட்டமறுப்பு இயக்கம் நீடித்து இருப்பதால் வாயில் பேசி பெருமையும் திருப்தியும் அடைய ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. இந்த மாதிரி இனியும் கொஞ்சம் காலம் கடத்தும் நிலைமைக்கு சட்டமறுப்புக்காரர்களாவது வாய்ப்பேச்சு வீரர்களாவது சிறிதும் பொறுப்பாளிகளல்ல என்பதே நமது முடிவு. மற்றுயார் என்றால் சர்க்காராரே முக்கிய காரணஸ்தர்களா வார்கள். இந்தக்கிளர்ச்சி ஆரம்பித்த காலத்தில் அனேகமாய் இந்தியாதேசம் முழுவதும் அதற்கு எதிரிடையாய் இருந்த காலத்தில் பேசாமல் விட்டுவிட்டு பிறகும் கிரமமான முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் அனாகரீகமான முறையில் முறட்டு பலத்தை பிரயோகித்ததால் இப்போது பாமர மக்களை மயங்கச்செய்து அதில் கவனம் செலுத்தும்படி செய்து வருகின்றது-நியாய, அனியாயங்களை கவனியாமலும் காரணகாரியங்களை கவனியாமலும் இதுசமயம் பாமரமக்கள் பலர் அவ் வியக்கத்திற்கு அனுதாபம் காட்டுகின்றார்கள். சட்டமறுப்பின் விஷயம் தெரிந்தோ அதன் தத்துவத்தை உணர்ந்தோ அனுதாபம் காட்டப்படவில்லை என்பது உறுதியானாலும் சர்க்கார் நடவடிக்கையின் பலனாய் "சர்க்காரார் அடிக்கிறார்கள். அடிக்கிறார்கள்" என்கின்ற ஒரு காரணத்திற்காகவும், "நாளைக்கு நம்மையும், இப்படித்தானே அடிப்பார்கள்" என்கின்ற எண்ணத் தைக் கொண்டும் அவ்வியக்கத்தினிடம் அனுதாபம் காட்டுகின்றார்கள். பாமர மக்களின் அனுதாபம் சட்டமறுப்பு இயக்கத்தின் பக்கம் திரும்பி விட்டது என்கின்ற சந்தேகம் படித்த மக்களுக்கு உண்டான வுடன் அவர்கள் தாங்கள் அடுத்த தேர்தலில் ஸ்தானங்கள் பெறவேண்டுமே என்கின்ற கவலையின் மீது அவர்களும் சட்டமறுப்பு இயக்கத்தில் அனுதாபம் உள்ளவர்கள் போல் நடந்து கொள்ள வேண்டியவர்களாகிவிட்டார்கள். இந்தநிலைமைக்குக் காரணம் சர்க்கார் என்றுதான் மறுபடியும் சொல்லுகின்றோம். நிரபராதிகள் அனேகர் அடிபடுகின்றதானது அவ்வியக்கத்தை நெய் வார்த்து வளர்ப்பதுபோல் ஆகின்றது.



RangaRakes tamilnavarasam.com

அன்றியும், இதில் சர்க்கார் காட்டின தந்திர புத்தியும், இயக்கத்திற்கு அனுகூலமாகி விட்டது. உதாரணமாக வைசிராய் பிரபு தன்னைப் பொருத்த வரையில் தான் நல்ல பெயர் வாங்கிக்கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணத் தின்மீது வழவழவென்று பேசுவதும் திரு. காந்தியையும் காங்கிரசையும் புகழ்வதும் இந்தியா மந்திரி தன்னைப்பொருத்தவரை தான் நல்ல பிள்ளை யானால் போதுமென்று இயக்கத்தை ஆதரித்துப் பேசுவதும் பிரிட்டிஷ் முதல் மந்திரி தன்னைப் பொருத்தவரைதான் எல்லாரை யும்விட நல்லபிள்ளையாய் ஆகிவிட வேண்டுமென்று யெல்லாவற்றையும் ஆதரிப்பதுபோல் பேசுவது மாகிய காரியங்கள் இயக்கத்தை வளர்த்திக் கொண்டே இருக்கின்றது. அவர் கள் உண்மையிலேயே மனப்பூர்வமாய் மனதிலுள்ளதை பேசினார்கள் என்று சொல்லுவதானால் இம்மாதிரி தடியடி தாண்டவம் நடந்து கொண்டு இருக்க முடியாது. சென்னையில் சமீபத்தில் நடந்த சட்டசபை கூட்டத்தில் போலிசார் நடவடிக்கையையும் சர்க்காரின் போக்கையும் கண்டித்து மூன்றுநாளையில் இரண்டு தீர்மானங்கள் செய்யப்பட்ட பிறகுகூட அதேமுறையில் தடியடிப் பிரயோகம் நடக்கின்றதென்றால் நடுநிலைமையில் உள்ளவர்கள் இக் காரியத்திற்கு சென்னை அரசாங்கத்தையே பொருப்பாக்க முடியாது.

இந்தியா கவர்ன்மெண்டிலிருந்து “நான் நல்லமனிதன்போல் வாயில் பேசிக்கொண்டிருக்கின்றேன். நீ உன்காரியத்தைப்பார்” என்று உத்திரவு வந்திருந்தாலொழிய மற்றபடி வேறு காரணம் இருக்க முடியாதென்றே கருத வேண்டி யிருக்கின்றது. அது மாத்திரமல்லாமல் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்துவதற்காக யோசித்து முடிவு செய்ய காங்கிரஸ் தலைவர்கள் என்பவர் களை விடுதலையும் செய்துவிட்டு மறுபடியும் இந்தக்காரியம் செய்வதானது, “சர்க்காரார் சட்டமறுப்புக்கு பயந்து கொண்டு தலைவர்களை விட்டு விட்டார் கள் என்று எங்கும் பாமர ஜனங்கள் எண்ணி சர்க்காராரை ஏளனம் செய் வார்களே என்கின்ற பயத்தின் மீதும் இந்திய அரசாங்கம் தடிப்பிரயோ கத்திற்கு அனுமதி கொடுத்து வருவதாகவும் கருத வேண்டி இருக்கின்றது.

எந்தவித எண்ணத்தின் மீது வெகு புத்திசாலித்தனம் என்று கருதி இந்தக்காரியம் செய்திருந்தாலும் இதற்கு யார் பொறுப்பாளியானாலும் சர்க்காராரின் இந்த செய்கையானது பாமர மக்களை சட்டமறுப்பு இயக்கத் திற்கு அனுதாபம் காட்டவே இக்காரியம் பயன்படுகின்றது என்பதில் சந்தேக மில்லை. பாமர ஜனங்களை கிளப்பிவிட இது மிகவும் பயன்பட்டு வரு கின்றது.

உதாரணமாக சென்னையில் இந்த வாரம் நடந்த தடிப்பிரயோகமானது மிக்கப் பெரிது செய்யப்பட்டு சென்னை ஜனங்களின் 100 க்கு 50 பேர்களின் மனமானது சட்டமறுப்பு இயக்க சம்மந்தமான எல்லா நடவடிக்கைகளி னிடமும் அனுதாபம்காட்டும்படி செய்து இருக்கின்றது. பரீட்சை பார்க்க வேண்டுமானால் சமீபத்தில் நடந்த தேர்தலில் சென்னையில் வெற்றி பெற்ற 4 சட்டசபை அங்கத்தினர்களும் தங்கள் ஸ்தானத்தை இராஜீனாமா செய்து



விட்டு இன்று மறுபடியும் நிர்பார்களேயானால் ஒருவர் கூட வெற்றி பெற மாட்டார்கள். சாதாரணமாக திரு. கே. பாஷ்யம் அவர்களுக்கு முதல் ஸ்தான மும் மற்றவை அவர் சொல்லுகின்ற ஆள்களுக்குமே கிடைக்கும் என்று தைரியமாய்ச் சொல்லலாம். ஆகவே பாமர மக்களின் மனதைப் பாழாக்கத் தான் இம்மாதிரி நடவடிக்கை பயன்படுகின்றது. இயக்கத்தில் கலந்துள்ள வர்களில் 100க்கு 99 பேர்களின் எண்ணம் இதுதான் என்பதை சர்க்காரார் தெரிந்திருந்தும் இம்மாதிரி நடந்தால் பிறகு இதற்கு யார் மீது குற்றம் சொல்ல முடியும்?

தவிர நமது மக்களுக்கும் சொந்தபுத்தி குறைவு என்பதற்கு மற்றொரு உதாரணம் சொல்லுவோம். அதாவது சர்க்கார் தடியடியை வெகு நாளாகவே வெகுபேர்மீது பிரயோகித்து வந்திருக்கின்றார்கள். இதுவரை சுமார் எத்த னையோ பேருக்கு எத்தனையோ விதமான அடி கிடைத்திருக்கின்றது. ஆனால் அவர்கள் பேர்கள் எல்லாம் அனாமதேயமாய் போய்விட்டது. திருவாளர் பாஷியத்திற்கு நடந்ததாகச் சொல்லப்படும் தடியடியானது “ஆகாயமளாவி, கடல்முட்டி பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவர் முதுகிலும் தடிப்பு உண்டாகிவிட்டது” என்று புராணப்புளுகர்கள் வர்ணிக்கும் மாதிரி இந்த நாட்டிலுள்ள எல்லோருக்கும் அடிபட்டது போல் கருதும்படி அவ்வளவு தந்திரம் செய்யப்பட்டிருக்கின்றது,

நமது ஆட்களே இந்த பிரசாரத்திற்கு பெரிதும் காரணம் என்று சொல்லுவோம். ஏனெனில் அவர்களது பயங்காளித்தனமே அதற்கு காரணமாகும்,

திரு, பாஷ்யம் பட்ட அடியானது ஈரோடு திரு. ஈஸ்வரன் பட்ட அடியில் 100 ல் ஒரு பங்கு இருக்காது,

திரு, ஈஸ்வரனை இன்னவிதமாய்த்தான் அடிப்பது என்றில்லாமல் அடித்து காரில் வைத்து ஊரை விட்டு 15மைல் தாட்டி ஒரு காட்டுக்குப் பக்கத்தில் கொண்டு போய் இரவில் விட்டுவிட்டு வந்தார்களாம். இம்மாதிரி காரியங்களுக்கு இந்தக் கூட்டத்தார் யாரும் அனுதாபப்படவே இல்லை, ஆகவே அடிபடுவதும் அனுதாபப்படுவதும் அதற்காக சர்க்காரைக் கண்டிப் பதும் எல்லாம் அடியோடு தன் தன் சொந்த நலத்திற்கும், விளம்பரத்திற்கு மாகவே இருக்கின்றதேயொழிய உண்மையான காரியத்திற்கோ ஒரு பொது நலத்திற்கோ இல்லை யென்பது நன்றாய் விளங்குகின்றது. திரு, பாஷியத் திற்காக மாத்திரம் சென்னையில் வக்கீல்கள் ஒன்றுகூடி துக்கம் கொண்டாடி ஊர்வலம் சென்றார்களாம். இது எதற்காக? அடுத்த எலக்ஷன் ஓட்டுக்காகவா? அல்லவா என்பதை யோசித்தால் உண்மை விளங்காமல் போகாது. நிற்க,

எந்த வக்கீலாவது இதற்காக ஒரு நாள் வேலையை நிறுத்தி அனுதாபம் காட்டினாரா. அடித்ததும், அடிக்கச்செய்ததும், அய்யங்கார் பார்ப்பனர்தானே



RangaRakes tamilnavarasam.com

அவரை ராஜீனாமா செய்என்றார்களா? அவர் பேரையாவது வெளிப்படுத்தி னார்களா? சர். உஸ்மான் பெயர்தானே அடிபடுகின்றது.

சட்டமறுப்பை ஆதரித்துப் பேசிவந்த பலர் வட்டமேஜை மகாநாட்டில் ஏற்பட்ட சீர்திருத்தங்களுக்குக் காரணம் சட்டமறுப்பு இயக்கந்தான் என்றும் சட்டமறுப்பு இயக்கத்தைக் கண்டு சர்க்காரார் இருப்பதா போவதா என்றும் எண்ணவேண்டியவர்களாகி விட்டதால் பயந்து கொண்டு கொடுத்து விட்டார் கள் என்பதாகவும் ஒரு சோம்பேறிக்கூட்டம் திண்ணை திண்ணையாய் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதை பொய்யாக்கவேண்டிய அவசியமும் சர்க்காராருக்கு ஏற்பட்டு விட்டாற்போல் ஒருபுறம் வாயிலும் ஒருபுறம் தடி யாலும் பேசவேண்டியவர்களாகி விட்டார்கள்.

வட்டமேஜைத் தலைவர்களும், காங்கிரஸ் தலைவர்களும், சமீபத்தில் கலந்து பேசப்போகிறார்கள் என்பது யாவரும் அறிந்ததே. அதன் பயனாக சமீப காலத்திற்குள் இந்திய சட்டசபையும் மாகாண சட்டசபைகளும் கலைந்து புதிய தேர்தல்கள் அதுவும் ஒரு வருஷத்திற்குள்ளாகவே புதிய தேர்தல்கள் ஏற்படலாம் என்பதாக நினைக்கவேண்டியிருக்கின்றது. மாகாணங்களின் நிர்வாகசபை அங்கத்தினர்களின் எண்ணிக்கைகளும் குறைந்து அவைகளும் மந்திரி ஸ்தானங்களாக மாறினாலும் மாறலாம்.

ஆகவே இந்தமாதிரி தேர்தல்களுக்கு இந்தத் தடிப் பிரயோகமானது வெகு தூரம் உதவி செய்யக்கூடும். அந்தப்படி ஏற்பட்டாலும் நாம் அதிசயப் பட நியாயமில்லை. சென்னை காங்கிரஸ் தலைவர்கள் திரு. காந்தி அவர் களுக்கு இதைத்தான் முக்கியமாய் வலியுறுத்துவார்கள். திரு. சீனிவாச சாஸ் திரியார் போன்றவர்கள் வார்த் தைக்கு திரு. காந்தி முதலியவர்கள் காது கொடுத்துத்தானாக வேண்டி யிருக்கும். திரு. சாஸ்திரியாரும் சீமையில் இருந்தே இதற்கு உத்திரவு வாங்கி வந்திருக்கலாம் என்று கூட எண்ண வேண்டியிருக்கின்றது.

ஆகவே ஒரு சமயம் திரு. காந்தி அவர்கள் இதற்கொப்புக்கொண்டால் சட்டசபைகள் அவசரமாக கலைவது என்பது உறுதியேயாகும். அந்தப்படி அவர் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் கூட வட்டமேஜை மகாநாட்டிற்குப் போனவர்கள் ஸ்தானம் பெறவும் அடுத்த சீர்திருத்தத்திற்கு விதிமுறைகள் ஏற்படுத்தவும், என்கின்ற அவசியத்தின் மீதாவது கலைக்கப்படலாம். அல்லது புது வைசிராய் வந்தவுடன் ஒரு புதிய மாறுதலைக்காட்டவாவது ஏற்படலாம். அந்த சமயத்தில் பழைய சுயராஜ்யக்கட்சி தோன்றியது போல் சுதேசிக்கட்சி என்பதாக ஒன்று தோன்றி தேர்தல்களுக்கு போட்டி போட்டாலும் போடலாம். ஆதலால் இன்றைய மந்திரிகளும் சட்டசபை மெம்பர்களும் மறுபடியும் தாங்கள் ஸ்தானம் பெறவேண்டுமே என்கின்ற எண்ணத்தின் மீது சட்ட மறுப்புக்கு அனுதாபம் காட்டி கண்களில் நீர் ஒழுக்கவேண்டிய அவசிய முடையவர்களாவார்கள் என்பதிலும் அதிசயமிருக்காது என்போம். எனவே



பொது அபிப்பிராயம் சர்க்காருக்கு விரோதமாக பலப்பட்டுக்கொண்டு வருவ தற்கு தடிப்பிரயோகம் ஒருபுறம் பயன்பட்டு வருவதால் சென்னை அரசாங்கம் உடனே கவனித்து புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ள வேண்டுவது அவசியமாகும்.

**குடி அரசு – தலையங்கம் – 01.02.1931**



RangaRakes tamilnavarasam.com

# ருஷ்யாவைப் பற்றி சர். டாகூர் அபிப்பிராயம்

உயர்திரு. சர். ரவீந்திரநாத் டாகூர் அவர்கள் ருஷியா மாஸ்கோ வுக்குச் சென்றிருந்த சமயம் அங்கு ஒரு பத்திராதிபருக்குப் பேட்டி அளித்துப் பேசியதில்,

“நீங்கள் குடியானவர்கள் விஷயத்தில் மிக்க சிரத்தை எடுத்து, அவர் களுக்கு கல்வி பரவும்படி நல்ல வேலை செய்திருக்கிறீர்கள். எங்கள் தேசத் தில் கல்வி, கோடிக்கணக்கான மக்களுக்கு மறுக்கப்பட்டிருக்கின்றது. உங்களி டமிருந்து ஏராளமாகக் கற்றுக்கொண்டேன். தேகபலம், கல்வி இவை யில்லாத வர்களையும் உபயோகித்துக்கொள்ளும் விஷயம் மிக்க சாமர்த் தியமானது. இங்குள்ள தாய் தகப்பனற்ற சிறுவர்கள், புது உலக வாழ்வுக்குத் தகுந்த சக்தி யையும், நம்பிக்கையையும் உடையவர்களா யிருக்கிறார்கள். விவசாயிகள் கஷ்டத்தைப் போக்க நீங்கள் போட்டிருக்கும் திட்டம் திருப்தியாயிருக் கின்றது. வைத்தியம், சுகாதாரம் நல்ல நிலையில் இருக்கின்ற தென்று வைத்தி யர்கள் சொல்லுகிறார்கள்” என்று சொன்னார்.

இதிலிருந்து ருஷியாவின் மேன்மை யாவருக்கும் நன்றாக விளங்கும். இவைதவிர, மற்றொரு விஷயமும் சொன்னார். அதாவது,

“மதம், செல்வ நிலை, சமூகவாழ்வு ஆகிய விஷயங்களில் உங்க ளினின்று மாறுபட்டவர்கள் இடம் கோபியாமல், விவசாயிகளைக் கல்வி மூலம் திருத்த முயற்சிப்பது போல், இவர்களையும் கல்விமூலம் திருத்தும் படியான முறையை அனுஷ்டிக்க வேண்டாமா?” என்று சொன்னாராம். இதை மாத்திரம் நம்மால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஏனெனில், மதப் பித்தர் களையும், செல்வச் செருக்கர்களையும், சமூக வாழ்வில் உயர் தனம் பெற்ற அனுபவக்காரர்களையும் நல்ல வார்த்தையாலோ, பிரசாரத்தாலோ, கல்வி யாலோ திருத்துவதென்பது சுலபமான காரியம் என்பது நாம் கருதவில்லை. இவர்களுக்கு ருஷியக்காரர் செய்யும் ஏற்பாடுகள் தான் பொருத்தமான தென்பது நமதபிப்பிராயம்.

ஆகவே எல்லா விஷயத்திலும் ருஷிய அரசாங்க சீர்திருத்த முறை மேலானதென்றே சொல்லுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 01.02.1931**



# திரு. சி. ராஜகோபாலாச்சாரி ஈ.வெ. இராமசாமி சந்திப்பு

திருவாளர் சி. ராஜகோபாலாச்சாரியார் 29 தேதி காலையில் சென்னை யிலிருந்து ஆமதாபாத் செல்வதற்காக சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் கிரான்ட் டிரன்க் எக்ஸ்பிரஸில் ஏறி வண்டியின் முகப்பில் நின்று கொண்டி ருந்தார் ; பல கனவான்கள் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.

திரு. ஈ.வெ. இராமசாமி 29 உ காலை மங்களூர் மெயிலில் சென்னைக்கு வேறு காரியமாக வந்தார். திரு. ராஜகோபாலாச்சாரியார் நின்ற வண்டிக்கு நேராகவே திரு. ஈ.வெ. இராமசாமி வந்த வண்டியும் வந்து நின்றது. வண்டியை விட்டு இறங்கும் போது எதிரிலிருந்த கூட்டத்தை கவனிக்கும் போது திரு. ஆச்சாரியாரை பார்த்து ஒருவருக்கொருவர் மரியாதை செய்து கொண்டார்கள். ஆச்சாரியாரின் வண்டியினருகில் சென்று பொதுவாக இரண் டொரு வார்த்தைகள் பேசிக்கொண்டார்கள். அங்கு பக்கத்தில் உட்கார்ந் திருந்த திரு. பட்டாபி சீதாராமையரையும் கண்டு மரியாதை செய்தார். அந்த சந்திப்பு 5 வருஷத்திற்கு முன்னிருந்த ஒற்றுமையையும் கூட்டு வேலையை யும் எல்லோருக்குமே ஞாபகப் படுத்தியது என்பதில் ஆக்ஷேபணை இல்லை. பிறகு வண்டி புறப்பட்டதும் திருவாளர்கள் எஸ். இராமநாதன், கண்ணப்பர் ஆகியவர்களுடன் திரு. இராமநாதன் அவர்கள் ஜாகைக்குப் புறப்பட்டு விட்டார்கள்.

இந்த விஷயம் ஏன் தெரிவிக்கப்பட்டது என்றால் பத்திரிகைகளில் ஈ.வெ.இராமசாமி அங்கிருந்த விஷயத்தைக் குறிப்பிட்டதைப்பற்றி பலர் பலவிதமாகப் பேசியதாக தெரியவந்ததால் எழுத வேண்டியதாயிற்று. திரு. ஆச்சாரியாரை பார்க்கவே அங்கு சென்றிருந்ததாக வைத்துக்கொண் டாலும் திரு. ஆச்சாரியாரைப் பார்க்கக் கூடாதான விரோதம் ஒன்றும் இருவருக்குள் ளும் கிடையாது. பார்த்ததினால் இருவர் கொள்கையிலும் மாற்றம் ஏற்பட்டு விட்டது என்று சொல்லவும் முடியாது.

திரு. ஈ.வெ. இராமசாமியைப் பொருத்தவரையில் தனது கொள்கை களில் எவ்வித மாற்றமும் இல்லை. அன்றியும் இன்றைய காங்கிரசில் சேரும் உத்தேசமும் இல்லை.



RangaRakes tamilnavarasam.com

“மக்கள் விடுதலை அடைவதற்கு செல்வம் ஒரே பக்கம் சேராமல் பார்ப்பதும், ஜாதியையும் அதற்காதாரமான மதத்தையும் ஒழிப்பதும் ஆகிய தத்துவங்கள் இந்திய தேசிய காங்கிரசின் முக்கிய கொள்கையாகும்” என்ற நிலைமை ஏற்படும் போது யாருடைய தயவையும் எதிர்பாராமல் காங்கிரஸ் வாதியாயிருப்பார். ஆதலால் இதற்காக யாரும் சந்தேகப்படவோ, பயப் படவோ வேண்டியதில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 01.02.1931**



# மேல்நாட்டின் ஜோதியும் கீழ்நாட்டின் பீதியும்

தலைவரவர்களே! நண்பர்களே!! மேல்நாட்டின் ஜோதியும், கீழ் நாட்டின் பீதியும் என்னும் விஷயமாய் இன்று மறுபடியும் நான் பேச வேண்டு மென்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த தலைப்பைக் குறிப்பிட்டவர்கள் என்ன கருத்தைக்கொண்டு - நான் இத்தலைப்பில் என்ன பேசவேண்டுமென்று கருதி ஏற்பாடு செய்தார்களென்பது எனக்குத் தெரியாது. ஒருசமயம் மேல் நாட்டின் பெருமையையும் கீழ் நாட்டின் சிறுமையையும் பற்றி நான் பேசவேண்டு மென்று கருதினார்களோ என்னமோ தெரியவில்லை. ஆன போதிலும் இந்தத் தலைப்பை நான் காலையில் பார்த்தவுடன் சில விஷயங்கள் சொல்ல லாமென்பதாகக் கருதி சில குறிப்பு வைத்திருந்தேன். ஆனால் இப்போது எனக்கு முன் பேசிய மன்னார்குடி ஜனாப் யூசுப் பாவலர் அவர்கள் சமாதி வணக்கம், கொடி, பஞ்சா முதலிய உற்சவங்கள் இஸ்லாமார்க்க ஆதாரங்களில் கிடையாதென்றும், அவையெல்லாம் புரோகிதக் கூட்டத்தாரால் புகுத்தப்பட்டு மக்கள் மூட நம்பிக்கையால் பின்பற்றுவதாகுமென்றும் சொன்னபோது இங்குகூட்டத்திலிருந்த இரண்டொருவர் ஏதோ பிரமாதமாய் முழுகிப் போய் விட்டது போல் கருதி கூக்குரலிட்டதையும், கோபத்துடன் ஆக்ஷேபித்த தையும் பார்த்தவுடன் நான் முன் குறிப்பிட்டு வைத்தவைகளையெல்லாம் தூரத் தள்ளிவிட்டு அவருக்கேற்பட்ட பீதியையும், இன்னும் அதுபோலவே இந்துக்களென்பவர்களுக்கு ஏற்பட்ட பீதியையும் பற்றியே பேசவேண்டியது அவசியம் என்று கருதிவிட்டேன். அதாவது இம்மாதிரி கீழ் நாட்டின் பீதியை ஒழிக்க வேண்டியது நமது முதற்கடமை யென்பதைப் பற்றியே பேசுகிறேன்.

நண்பர்களே! ஏதாவதொரு விஷயத்திற்கு ஆதாரமில்லை யென்றோ அது அறிவுக்குப் பொருத்தமில்லை யென்றோ, அதனால் பயனில்லை யென்றோ, அல்லது அதனால் இன்னின்ன கெடுதி என்றோ யாராவதொருவர் எடுத்துச் சொன்னால் அதற்கு மாறுபட்டவர்கள் அறிவுள்ளவர்களாயிருந்தால் அல்லது தங்கள் கருத்தில் உறுதியான நம்பிக்கையுள்ளவர்களாய் இருந்தால் அப்படிப்பட்டவர்கள் செய்ய வேண்டிய யோக்கியமான வேலை யென்ன வென்றால் தைரியமாய்த் தக்க சமாதானம் சொல்லி தங்கள் கொள்கைகளை- தாங்கள் நடந்து வருவதற்கேற்ற ஆதாரங்களைக் காட்டி அறிவு அனுபவம் ஆகியவைகளுக்கு பொருத்தி மெய்ப்பித்துக் காட்டவேண்டியது யோக்கியமான கடமையாகும். அந்தப்படியான காரியம் ஒன்றும் செய்யாமல்



RangaRakes tamilnavarasam.com

எடுத்ததற்கெல்லாம் கடவுள் போச்சு, மதம் போச்சு, மார்க்கம் போச்சு, ஆண்டவனின் நம்பிக்கை போச்சு, ஆண்டவன் வார்த்தைக்கு விரோதமாச்சு என்று வெறும் கூப்பாடு போடுவதானால் என்ன பயன் விளையக்கூடும். மக்கள் மூடர்களாயிருக்கும் வரை இம்மாதிரி கூப்பாடுகளை மதித்து அவர்களும் எதோ முழுகிப் போய் விட்டது போல் ஆத்திரப்படக்கூடும். பிறகு அவர்களுக்கும் விபரம் தெரிந்து விட்டால் இந்தமாதிரி கூப்பாடு போட்டவர்களை வட்டியோடு அவமானம் செய்து விடுவார்கள். விஷமப் பிரசாரமும் சுயநலப் பிரசாரமும் வெகு நாளைக்கு இருக்க முடியாது. எந்த மக்களுக்கும் பகுத்தறிவு செல்வாக்குப் பெறும் போது ஏமாற்றினவர்கள் மீதுதான் முதலில் அவர்களது ஆத்திரமெல்லாம் திரும்பும். பிறகு தான் தங்கள் தங்கள் முட்டாள்தனத்தைப்பற்றி வருந்துவார்கள். ஆகையால் தான் விஷம பிரசாரங்களைப்பற்றி நான் எப்போதுமே பயப்படுவதில்லை. ஆனால் சொல்லுபவர்கள் சொன்னால் கேட்பவர்களுக்கு மதி வேண்டாமா என்பது தான் எனது கேள்வி.

நண்பர்களே! என்னைப்போல் ஒரு சாதாரண மனிதன் பேசுவதி னாலோ, தனக்குத் தோன்றியதை எழுதுவதினாலோ கடவுள் போய் விடும்– மார்க்கம் போய் விடும் – சமயம் போய்விடும் என்று நீங்கள் பீதி அடைவீர் களானால் உங்கள் கடவுளுக்கும் மார்க்கத்திற்கும் உள்ள யோக்கியதை எவ்வளவு என்பதை யோசித்துப் பாருங்கள். நீங்கள் உங்கள் கடவுளை உறுதி யானவரல்ல, உண்மையானவரல்ல என்றும், உங்கள் சமயம் உறுதி யானது அல்ல, உண்மையானது அல்ல என்றும், நீங்களே கருதியிருக்கின்றவர் களாகிறீர்கள். நாங்கள் உங்கள் கடவுளையோ, சமயத்தையோ இல்லையென்று சொல்லுவதற்காக இங்கு வரவில்லை யென்பதை உறுதியாய் நம்புங்கள். அவைகளைப்பற்றி உண்டு இல்லை என்று சொல்லிக்கொண்டு திரிவதல்ல எனது வேலை. நீங்கள் சொல்லுவதற்கு, நீங்கள் பின்பற்றுவதற்கு ஆதார மென்ன? அது உங்கள் பகுத்தறிவிற்குப் பொருத்தமாயிருக்கின்றதா? அனுபவத்திற்கு ஒத்து வருகின்றதா? என்று யோசித்துப் பாருங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்வது தான் எனது வேலையாகும். அவைகளுக்கு இடம் கொடுப்பதாலேயே உங்கள் கடவுளோ, மதமோ, ஆதாரமோ போய்விடுமென்று நினைத்தீர்களானால் அவைகளைப்பற்றி மறுபடியும் வெளியில் பேசுவது வெட்கக்கேடான காரியமல்லவா வென்று கேட்கின்றேன்.

இந்தப்படி ஆராய்ச்சி செய்து பார்ப்பதாலேயே மறைந்து போகும் மார்க்கமும், ஆண்டவனும் பிறகு என்ன காரியத்திற்குத்தான் பயன்படக் கூடும் என்பதை நீங்களே ஆத்திரப்படாமல் யோசித்துப் பாருங்கள். “எங்கள் கடவுள் சர்வ சக்தி, சர்வ வியாபகமாயிருக்கக்கூடியவர்” என்று கருதிக் கொண்டு, “அவரால் ஏற்பட்டது எங்கள் மார்க்கம்” என்று சொல்லிக் கொண்டு இருக்கின்ற நீங்கள், “அப்படியானால் சற்று ஆராய்ச்சி செய்து அறிவிற்குப் பொருத்தமாயிருக்கின்றதா வென்று பார்க்கலாமா” என யாராவது கேட்டால்



உடனே இந்த மாதிரி பயந்தால் அப்பொழுது இந்தப் பயப்படுகின்ற ஆட்களுக்கு கடவுள் சர்வ சக்தி உள்ளவர் என்கின்ற விஷயத்திலும், அவர் சர்வ வியாபகமுள்ளவர் என்கின்ற விஷயத்திலும் தங்களது மார்க்கம் அவரால் தான் ஏற்பட்டது என்கின்ற விஷயத்திலும் நம்பிக்கையிருக்கின்றதா வென்பதை சற்று யோசித்துப் பாருங்கள். மனிதனுடைய அறிவிற்குப் பயப்படும் கடவுளும், அவனது ஆராய்ச்சிக்குப் பயப்படும் மார்க்கமும், உலகத்தில் யாருக்கென்ன பயனை அளிக்கக்கூடும்? அறிவையும் ஆராய்ச்சி யையும் கண்டால் ஏன் இப்படிப் பயந்து ஓடுகின்றீர்கள்? ஆராய்ச்சிக்கு மதிப்புக் கொடுக்காத காரணமே இன்று இந்தியா, உலகிலுள்ள நாடுகளி லெல்லாம் அடிமையான நாடாகவும், இந்தியர்கள் உலகிலுள்ள மக்களி லெல்லாம் இழிவான மக்களாகவுமிருக்க வேண்டியதாகி விட்டது. கடவுள் என்றால் குருட்டு நம்பிக்கை, மதம் என்றால் மூடநம்பிக்கை யென்கின்ற தீர்மானம் ஏற்பட்டு விட்டது. இந்த நிலையைத் தவிர கடவுளுக்கும் மதத் திற்கும் வேறு அவமானம் வேண்டியதேயில்லை. இந்த மாதிரி அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் பயந்த கடவுளையும், மதத்தையும் வைத்திருக்கின்றவனை விட கடவுளையும், மதத்தையும் பற்றி கவலைப்படாதவனோ, இல்லையென்று கருதிக் கொண்டிருக்கின்றவனோ வீரனென்றே நான் சொல்லுவேன். ஏனெனில் கவலைப்பட்டுக் கொண்டு உண்டு என்று சொல்லிக்கொண்டு மெய்ப்பிக்க திண்டாடிக் கொண்டும் நடுங்கிக்கொண்டும் திரிவது பயங்காளித் தனமென்றே சொல்லுவேன்.

சகோதரர்களே! நாங்கள் வேலையில்லா வெட்டி ஆள்களா? அல்லது ஏதாவது பூசாரி புரோகிதர் கூட்டத்தைச் சேர்ந்தவர்களா? அல்லது ஏதாவது பண்டிதபுராண காலக்ஷேபக் கூட்டத்தார்களா? எங்களுக்கு இந்த வேலையில் ஏதாவது ஜீவனத்திற்கோ பெருமைக்கோ சிறிதாவது இதில் வழியுண்டா? நாங்கள் ஏன் எங்கள் சொந்த காசையும் நேரத்தையும் செலவு செய்து கொண்டு இந்த மாதிரி ஊர் ஊராய்ச் சுற்றிக்கொண்டு காசுக்குதவாத வெரும் ஆட்கள் எல்லாம் எங்களை வையும் படியாகவும் “சாபம்” கொடுக்கும்படி யாகவும், வெட்டுகின்றேன், குத்துகின்றேன் என்று மிரட்டவும், அவ்வள வையும் லட்சியம் செய்யாமலும், வந்ததுவரட்டும் நாம் செத்துப் போனால் நமக்குத்தானாகட்டும் மற்றும் யாருக்குத்தானாகட்டும் என்ன முழுகிப் போகும் என்கின்ற துணிவின் பேரில் வீட்டிலுள்ள வர்களிடம் கடைசிப் பயணம் சொல்லிக்கொண்டு வந்து, இந்த மாதிரி அலைவதற்குக் காரணம் என்ன? என்பதை யோசித்துப் பாருங்கள். இக் கூட்டத்திற்கு தலைமை வகித் திருக்கும் தலைவர் ஜனாப் தாவுத்ஷா பி.ஏ. அவர்கள் இஸ்லாம் மதத்திற்கு எவ்வளவோ பாடுபடுகின்றவர். அவர் சப் மேஜிஸ் திரேட் உத்தியோகத்தை ராஜிநாமா கொடுத்தவர். ராஜிநாமாக் கொடுக்காமல் இப்போது அவர் உத்தியோகத்திலேயே இருந்திருப்பாரேயானால் இன்றையதினம் ஏதாவது ஒரு பெரிய பதவியில் இருப்பார். மாதம் 4000, 5000 சம்பளமுள்ள உத்தி யோகத்தில் இல்லாவிட்டாலும் மாதம் 900, 1000 ரூ. உத்தியோகத்திலாவது



RangaRakes tamilnavarasam.com

இருந்திருப்பார். அப்படிப்பட்டவர் ஏன் இந்த மாதிரி பாடுபடுகிறார் என்பதை யோசித்துப்பாருங்கள்.

இன்று உலகம் போகின்ற போக்கில் உலகமக்கள் அடைந்திருக்கின்ற முற்போக்கில் – நாகரீகத்தில் நாம் எந்த நிலையிலிருக்கின்றோம் என்பதை யோசித்துப் பாருங்கள்.

நம் "அறிவாளிகள்" இன்று சாமி போச்சு, சமயம் போச்சு, சைவம் போச்சு, சாமியும் சைவமும் நெருக்கடியான நிலையில் இருக்கின்றது என்ப தாக சிறிதும் வெட்கமில்லாமல் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். நம்மைக் காப்பாற்ற ஏற்பட்ட சர்வ சக்தியுள்ள கடவுளை, நம்மை வாழ்விக்க ஏற்பட்ட பரிசுத்த சமயத்தை, நாம் காப்பாற்ற வேண்டிய அளவு நெருக்கடி யான சமயம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்ல ஆரம்பித்தால், அது கடவுளுடையவும், சமயத்தினுடையவும் பலக்குறைவா? அல்லது அந்த மாதிரி சொல்லுகின்ற மக்களின் அறிவுக்குறைவா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். மனிதனுக்கு எப்படிச் சுயமரியாதை பிரதானமோ, அப்படியே கடவுளுக்கும், மார்க்கத்திற்கும்கூட சுயமரியாதை அவசியம் என்பதை நீங்கள் உணருங்கள். அப்படியானால் தங்களைக் காப்பாற்ற இந்த மாதிரி இத்தனை வக்காலத்து கொடுத்திருக்கும் அவைகளுக்கு சுயமரியாதை இருக்கின்றதா என்று யோசித்துப்பாருங்கள்.

சகோதரர்களே! ஐரோப்பாவின் "நோயாளியான" துருக்கியானது, ஆண்டவனுக்கும் மார்க்கத்திற்கும் வந்த நெருக்கடியைக் காப்பாற்றுகின்ற வேலையில் ஈடுபட்டிருந்திருக்குமானால் இன்று அது இன்றைய மாதிரியில் இருந்திருக்க முடியுமா என்பதை யோசித்துப்பாருங்கள். கொடுங்கோல் மன்னன் ஆட்சியில் இருந்த ருஷியா இன்று ஆண்ட வனையும், மார்க்கத் தையும், ஆதாரத்தையும் காப்பாற்றுகின்ற வேலையில் ஈடுபட்டிருந்தால் அது இன்றைய நிலையை எந்தக்காலத்திற்காவது அடைய முடியுமா வென்பதை யோசித்துப்பாருங்கள்.

அதுபோலவே, சீனாவையும், ஜப்பானையும், பிரஞ்சையும், இங்கி லாந்தையும், அமெரிக்காவையும் நினைத்துப்பாருங்கள். எந்த நாட்டுக் கார னாவது அவனுடைய வாழ்நாளையும், சொத்தையும், நேரத்தையும், இந்த மாதிரிக் கடவுளையும், மதத்தையும் காப்பாற்றுகின்ற முட்டாள் தனமானதும், பயனற்றதும், நாசவேலையானதுமான வேலையில் ஈடுபடுத்தியிருக்கின் றார்களா வென்பதை நடு நிலையிலிருந்து யோசித்துப்பாருங்கள்.

கடவுள் போய் விடும் என்று பயந்த மக்களால் வேறு என்ன வேலை யாகும்? என்று நினைக்கிறீர்கள். அவர்களை விட பயங்காளிகள், அறிவிலி கள் வேறு யார் இருக்கக்கூடும்? என்று எண்ணுகின்றீர்கள். கடவுளுக்கும், சமயத்திற்கும் அடிமையான நாடு ஒரு நாளும் சுதந்திரத்திற்கு அருகதையு டையதாகவே ஆகாது.



ஆகவே நீங்கள் முதலில் அந்த பயத்தை ஒழியுங்கள். "சமாதை வணங்க வேண்டாம்" அதற்கு "பூசை செய்யவேண்டாம்" என்றால் உங்கள் மார்க்கம் போய்விடுமா? அப்படியானால், இந்து மதத்திற்கும், இஸ்லாம் மதத்திற்கும் வித்தியாசமென்ன? இந்துமத சம்மந்தமான கோவில்களெல்லாம் பெரிதும் சமாதுதான். அந்தக் கடவுள்களெல்லாம் அநேகமாய் அந்த செத்துப் போன ஆள்களேதான் என்பதே எங்கள் ஆராய்ச்சிக்காரர்கள் துணிபு. அதனால்தான் பல புண்ணிய ஸ்தலங்களும் பல கடவுள்களும் ஏற்பட வேண்டியதாயிற்று. அதையொழிப்பதற்கு தோன்றியதுதான் இஸ்லாம் மார்க்க மாகும். இஸ்லாம் மார்க்கத்தில்தான் ஒரே ஒரு கடவுள் என்பதும், அதற்கும் உருவமில்லை என்பதும், அதைத் தவிர வேறொன்றையும் வணங்கக் கூடாதென்பதுமான கொள்கைகள் சொல்லப்படுகிறது. அதற்கு நேர் விரோத மாக நீங்கள் சமாதுகளை யெல்லாம் வணங்கவும் பூசிக்கவும், ஆரம்பித்து விட்டீர்களானால் நீங்கள் எப்படி மற்றவர்களை குற்றம் சொல்ல யோக்கியதை யுடையவர்களாவீர்கள்? அதுமாத்திரமல்லாமல், அல்லாசாமி பண்டிகை யிலும், கூண்டு முதலிய திருவிழாக்களிலும் இஸ்லாமானவர்கள் சிலர் நடந்து கொள்வது மிகவும் வெருக்கத்தகுந்ததாகும். இப்படிப்பட்டவர்களைக் கொண்ட மார்க்கம் எப்படி பகுத்தறிவு மார்க்கமென்றும், இயற்கை மார்க்க மென்றும் சொல்லிக் கொள்ளக்கூடும்? என்பதை யோசித்துப்பாருங்கள். இவைகளையெல்லாம் ஒரு மார்க்கக் கட்டளை என்று சொல்லுவதானால் அந்த மார்க்கம் ஒரு நாளும் அறிவுமார்க்கமாகவோ உண்மையில் நன்மை பயக்கும் மார்க்கமாகவோ இருக்கமுடியவே முடியாது. அதோடு மாத்திர மல்லாமல் மார்க்கத் தலைவருக்கும், மார்க்க வழிகாட்டியாருக்கும் கூட இது அவமானமும் வசைச்சொல்லுமாகும் என்றே சொல்லுவேன். இன்று இந்து வும், கிருஸ்தவரும் பகுத்தறிவைக்கண்டால் பயப்படுகின்றார்கள். இஸ்லாம் மார்க்கத்தில் தான் தங்கள் மார்க்கம் பகுத்தறிவுக்கு ஏற்றது என்று ரூபிக்க பந்தயம் கட்ட வருகிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட அதாவது சமாது வணக்கமும், பஞ்சா வணக்கமும், கொடி வணக்கமும், கூண்டு உற்சவமும், அல்லாசாமி பண்டிகையும் கொண்ட மக்களை ஏராளமாய் வைதுக்கொண்டு அவற்றையும் மார்க்கக் கொள்கைகளோடு சேர்த்துக் கொண்டிருக்கின்றவர் களையும் வைத்துக்கொண்டு இஸ்லாம் மார்க்கம், பகுத்தறிவு மார்க்கம் என்று எப்படி சொல்லிக்கொள்வதென்பது எனக்குத்தெரியவில்லை. நீங்களே சொல்லுங்கள், இவைகளைக் கொண்ட இஸ்லாம் மார்க்கம் பகுத்தறிவு மார்க்க மாகுமா? கோபிப்பதில் பயனில்லை. இந்து மதம் என்பதை விட, கிருஸ்துமதம் என்பதை விட இஸ்லாம் மதம் என்பது மேலானது என்பது எனதபிப்பிராயம் என்று எங்கும் சொல்லுவேன். ஆனால் அதில் இனி சிறிது கூட சீர் திருத்தம் செய்ய வேண்டிய அவசியமில்லை என்பவர்களுடன் நான் சிறிது பலமாக முரண்பட்டவனே யாவேன். ஏனெனில் நான் கண்களில் பார்ப்பதைக் கொண்டுதான் சொல்லுகின்றேன். அதுவும் இன்று இஸ்லாம் மார்க்கத்தார் என்பவர்களில் பெரும்பான்மையான மக்கள் அனுஷ்டித்து வரும்– நடந்து



RangaRakes tamilnavarasam.com

வரும் கொள்கைகள் இஸ்லாம் மார்க்க கொள்கைகள் என்றால் ஆண் பெண் இரு துறையிலும் சீர்திருத்தம் செய்யவேண்டிய சங்கதி பல இருக்கின்ற தென்று தைரியமாய்ச் சொல்லுவேன். நீங்களும் அவற்றை சீர்திருத்த வழி தேடுங்கள். அவற்றை நிலைக்க வைக்க ஆதாரத்தை தேடாதேயுங்கள். மனிதனின் நன்மைக்கும் சௌகரியத்திற்கும் மார்க்கம் ஏற்பட்டதென்று கருதி தற்கால அறிவுக்கும், நிலைமைக்கும் ஒத்திட்டுப் பாருங்கள். எக்காலத்திற்கும் ஏற்ற மதமென்றால் காலத்திற்கு ஏற்றபடி தானாகவே மாறவோ, மாற்றிக் கொள்ளவோ சௌகரிய மிருக்கும் என்பதில் பயமோ, அவநம்பிக்கையோ கொள்ளாதீர்கள். இருட்டானால் விளக்கைப்பற்ற வைத்துக் கொள்ளுங்கள், பகலானால் விளக்கை அணைத்து விடுங்கள் என்றுதான் பகுத்தறிவுள்ள மார்க்கம் சொல்லி இருக்கும். எப்போதும் விளக்கு வைத்திருங்கள் என்றோ, எப்போதும் விளக்கு வைத்திருக்காதீர்கள் என்றோ, சொல்லி இருக்க முடியாது. ஆகவே, காலப் போக்குடன் கலந்து கொள்ள பயப்படாதீர்கள். இந்தியாவுக்கு இரண்டுமதம் சொந்தமாய்விட்டது. அதாவது இந்துமதம் இஸ்லாமிய மதம் இரண்டும் ஒன்றுபட்டாலொழிய இந்தியாவுக்கு விடுதலை இல்லை. ஒருவர் மதத்திற்கு ஒருவர் வர வேண்டுமென்றால் ஒரு நாளும் முடிவு பெறாது. இருவரும் பகுத்தறிவுப்படி நடந்துகொள்ளலாம் என்றால், யாருக்கும் ஆக்ஷேபனை இருக்க வழியிருக்காது. தங்கள் மதம் பகுத்த றிவுக்கு ஏற்றதாய்தான் இருக்கும் என்ற நம்பிக்கையுள்ளவர்கள் கண்டிப்பாய் இந்த ராஜிக்கு ஒப்புக்கொள்ளலாம். அப்படிக்கு நம்பிக்கை இல்லாதவர்கள் எடக்குப்பேசித்தான் தீருவார்கள். அவர்கள் அதன் பயனை அடைந்துதான் தீருவார்கள். இந்த நிலையில் என்ன சுயராஜ்யம் வந்தாலும், பூரண விடுதலை வந்தாலும் அவை நமக்குள் உதை போட்டுக்கொள்ளத்தான் உதவும். இதுவரை பொதுவாகப் பேசினேன், கடைசியாக இந்துகளுக்கென்று சில வார்த்தை பேசுகின்றேன். ஏனெனில் நானும் சில நண்பர்களும் சாப்பிட்ட தற்குப் பிறகு ஒரு நண்பர் இந்தஊர் கோவில் தேரையும், கோபுரத்தையும் வந்து பார்க்கும்படி கூப்பிட்டார். நாங்கள் பார்ப்பதற்காக அங்கு சென்றோம். பிறகு அங்கு பார்த்த ஆபாசங்களை அப்படியே சொல்ல வெட்கப்பட வேண்டியதாகவே இருக்கின்றது. காட்டு மிராண்டிகள் காலத்தில்தான் சாமி களும் கோவில்களும் ஏற்பட்டதென்று சொன்னால் யாராலும் மறுக்கமுடியாத படி அவைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

முதலாவது நாங்கள் இந்த ஊர்தேரைப் பார்த்தோம். அதில் சித்தரித்து வைக்கப்பட்டிருக்கும் உருவங்கள் மிகமிக ஆபாசமானவையாய் காணப் பட்டன. அவைகளுக்கு என்னதான் தத்துவார்த்தம் சொல்லுவதானாலும், மனிதப்பெண்ணை கழுதை சம்போகம் பண்ணுவது போலும் இது போன்ற மற்றும் பல உருவங்களை சித்தரித்து வைத்திருப்பதை எப்படி ஒப்புக் கொள்வது என்பது எனக்கு விளங்கவில்லை. கோபுரங்களைப் பார்த்ததைப் பற்றிச் சொல்லலாம் என்றாலோ அவற்றைப்பற்றி இன்னும் ஒரு தடவை நினைப்பதற்குக்கூட கஷ்டமாய் இருக்கின்றது. பெண்களை அதில்



படுத்துகின்ற பாடும், காம விகாரங்களை அதில் எடுத்துக்காட்டி இருக்கும் முறையும் அநியாயம், அநியாயம். இவைகளையெல்லாம் நெருப்புவைத்துக் கொளுத்தி இடித்து எறிந்து, இவற்றிற்கு ஆதாரமான சாத்திரங்களையெல் லாம் பொசுக்கி சமுத்திரத்தில் கரைத்துவிட்டாலொழிய இதைச் சேர்ந்த மனிதர்கள் மனிதர்களாகக் கருதப்பட முடியவே முடியாது.

“சுயமரியாதைகாரர்கள் புராணக் குப்பைகளைக் கிளரிக்கிளரி வெரும் ஆபாசங்களைப் பேசுகின்றார்கள், எழுதுகின்றார்கள்” என்று பேசு கின்றீர்கள். எங்கள்மீது சில சமயத்தில் வெறுப்பும் கொள்ளுகின்றீர்கள்.

ஆனால் இந்த கோவில்களுக்குப்போய், தேங்காய் பழம் உடைத்து வைத்து காசும் கொடுத்து இந்த உருவங்களைப்பார்க்க வந்துகொண்டி ருப்பவர்கள் மனிதர்களா? என்பதைப் பற்றி நீங்கள் சிறிதுகூட சிந்திப்ப தில்லை. நாங்கள் எழுதுவதையும் பேசுவதையும் பார்த்து வெறுப்புக் கொண்டு என்ன செய்வது? இவ்வளவு பேசியும், எழுதியும் இந்த நடவடிக் கைகள் நின்றதா? நிருத்த யாராவது பாடுபட்டீர்களா? காரமடைத்தேரில் இதைவிட அசிங்கமாகப்பார்த்தேன். திருவொற்றியூரில் வெகு ஆபாச மாய்ப் பார்த்தேன். மதுரை முதலிய இடம் சொல்லவே வேண்டியதில்லை. ஆனால் இந்த ஊர் கோபுரம் எல்லாவற்றையும் மீறி விட்டது. இதுவரை நாங்கள் எழுதாத, பேசாத நினைக்கவே முடியாத விஷயங்கள் எல்லாம் இதில் இருக்கின்றன. எல்லாம் சாமிகளாகவும் ரிஷிகளாகவும், முனிவர் களாகவுமே காணப்படுவது இன்னும் மோசமாய் இருக்கின்றன. இதையெல்லாம் பற்றி அன்னிய மதக்காரர்கள் பரிகாசம் பண்ணமாட்டார்களா? கேவலமாய் நினைக்க மாட்டார்களா? என்கின்ற மான அவமானமே இல்லாமல் போய் விட்டது. இதை நிறுத்தவேண்டுமா, வேண்டாமா? நிறுத்த வேண்டுமானால் என்ன செய்வது? இதுவரை சமயதிருத்தக்காரரும் சமூக திருத்தக்காரரும் இந்த ஆபாசங்களின் பக்கம் திரும்பியாவது பார்த்தார்களா? போதாக் குறைக்கு பணம் படைத்த மூடர்களும் யோக்கியப் பொருப்பற்றவர்களும் இந்த சித்திரங்களுக்கு சாயம் அடித்து ரிப்பேர் செய் கின்றார்களே. அவர் களை என்னவென்றுதான் சொல்லுவது என்பது விளங்கவில்லை. சிறிதும் ஈவு இரக்கமில்லாமல் ஊரார் பணத்தை ஏழைகள் பணத்தை கொள்ளை அடித்து அவர்களைப் பட்டினிபோட்டுவிட்டு இந்த மாதிரி மிருக மனிதப் புணர்ச்சிகளுக்கு பொம்மைகள் செய்து சாயம் அடித்து பூசை செய்வது என்பது எவ்வளவு இழிவானதும், திமிர் பிடித்ததுமான காரியமாகும் என்பதை யோசித்துப்பாருங்கள். இந்த லக்ஷணத்தில் நாங்கள் இந்த கோவிலுக்குள் புகுந்துவிடுவோமென்று இப்போது போலீசு காவல் போடப்பட்டிருக்கின்ற தாம். நாங்கள் எந்த ஊருக்குப் போனாலும் அங்குள்ள கோவில்காரர்கள் எல்லாம் இப்படியேதான் செய்கின்றார்கள். ஆகவே இந்துக்கள், சமயவாதி கள், சைவர்கள், வைணவர்கள் என்பவர்கள் இவற்றிற்கெல்லாம் என்ன பதில் சொல்லுகின்றார்கள் என்று கேட்கின்றேன் – இந்த இந்துமதத்தை இன்னமும்



RangaRakes tamilnavarasam.com

எத்தனை நாளைக்குத்தான் காப்பாற்றப் போகின்றீர்கள்? என்று கேட்கின்றேன். மதம், சாமி, கோவில் என்றால் முட்டாள்தனம், அயோக்கியத்தனம், ஆபாசம் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. வருத்தப்பட்டுப் பயனில்லை, வெட்கப்பட வேண்டும். அப்போதுதான் அறிவு, ஒழுக்கம், நாகரீகம் விளங்கும். ஆகவே சகோதரர்களே! இவ்விஷயங்களை நன்றாய் ஆலோசித்துப்பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள். பொருளற்ற கூப்பாடு போடுவதால் பயன் விளையாது. இனியும் இந்தமாதிரி குஷ்டவியாதி வந்த சரீரமாதிரி இந்த சமுகம் நாறி அழுந்திக் கொண்டிருப்பதில் பயனில்லை என்பதை வணக்கமாய் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு : திருநெல்வேலி மாவட்ட களக்காட்டில் நடைபெற்ற ஐக்கிய முஸ்லீம் சங்க மாநாட்டின் இரண்டாம் நாளில் ஆற்றிய உரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 01.02.1931**



# சட்டசபையில் எனது அநுபவம்

சென்ற சில ஆண்டுகளில் மாதர் முற்போக்கு எவ்வளவு முன்னேறியிருக்கிற தென்பதும் தங்கள் தற்கால நிலையறிந்து தங்கள் உரிமைகளைப் பெற எவ்வாறு முனைந்து நிற்கின்றனரென்பதற்கும் சமீபத்தில் நடைபெற்ற மாதர் மகாநாடுகளும், அவைகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுமே போதிய சான்று கூறும். இந்தியாவிலேயே முதன் முதல் சட்டசபையில் ஸ்தானம் பெற்ற பெண் அங்கத்தினர் ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மையாரே யாகும். அதிலும் உபதலைவர் பதவி பெற்றது போற்றற்குறியதேயாகும்.

அம்மையார் அவர்கள் தனது சட்டசபை அநுபவத்தை ( ஆங்கிலத்தில் ) எழுதி பிரசுரித்துள்ள பிரதி ஒன்று வரப்பெற்றோம். இதில் தான் பதவி வகித்து வந்த காலத்தில் தான் கொண்டுபோன தீர்மானங்களின் விபரமும் அதையொட்டிய விவாதங்களும் சர்க்கார் தரப்பு பதிலும் அவை அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட விபரமும் செவ்வனே விளக்கப்பட்டுள்ளது. தேவதாசி மசோதாவுக்கும் விபசார விடுதியொழிப்பு சட்டத்திற்கும் இருந்த எதிர்ப்புப் பல. அதன் முழு விபரங்கள் இதில் காணப்படுகின்றன. இதை முற்றும் படித்தவர்களுக்கு பெண்கள் தங்கள் உரிமைகளைப் பெற போராடுவதில் எவ்விதத்திலும் ஆண்களைவிட இளைத்தவர்களல்ல என்பதும்:–

ஆனால் தகுதியுடையவர்களே யென்பதும் விளங்கும். இதன் ஆசிரியை விரும்புவதே போல் குடும்ப நிர்வாகத்திற்கு பெண்களின் கூட்டுரவு எவ்வளவு அவசியமோ அதேபோல் தேச பரிபாலனத்திற்கும், அவர்கள் ஒத்துழைப்பும், உதவியுமவசியமென்பது புலப்படும். இப்புத்தகம் 247 பக்கம் கொண்டது. புஸ்தகம் 1க்கு விலை ரூ. 2–0–0. வேண்டுவோர் அவ்வம்மையாருக்கு எழுதவும்.

**குடி அரசு – மதிப்புரை – 01.02.1931**



RangaRakes tamilnavarasam.com

## கிரேநகரில் ஆதிதிராவிடர் ஆண்டுவிழா
## 'சமரச சன்மார்க்கம்'

சகோதரிகளே! சகோதரர்களே!!

சமரச சன்மார்க்கம் என்பது வாயால் சொல்லக்கூடியதே தவிர காரியத்தில் நடக்க முடியாததாகும். ஏனெனில் எது எது சமரச சன்மார்க்கம் என்கிறோமோ எது எது உண்மையான - இயற்கையான சமரச சன்மார்க்க மென்று கருதுகின்றோமா அவற்றிற்கு நேர் விரோதமாகவே மனித வாழ்க்கை அமைக்கப்பட்டிருக்கின்றது. இது நமதுநாட்டில் மட்டும் அல்ல உலக முழுவதிலுமே அப்படித்தான் அமைக்கப்பட்டுப்போயிற்று. ஆனால் நமது நாட்டில் மற்ற நாடுகளைவிட வெகு தூரம் அதிகமான வித்தியாசம் வைத்து அமைக்கப்பட்டு விட்டது.

முதலாவது கடவுள், மதம், விதி, ராஜா, ஜாதி, பணம், தொழில் முதலாகியவைகள் இயற்கைக்கு மாத்திரமான சமரச சன்மார்க்க மல்லாமல் நியாய பூர்வமான சமரச சன்மார்க்கத்திற்கும் விரோதமாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் ஒருவன் சமரச சன்மார்க்கத்தைப் பற்றி பேச வேண்டுமானால் மேற்கண்ட கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டு சமரச சன்மார்க்கம் ஏற்படவேண்டும் என்கின்ற முறையில் யோக்கியர்களா லோ, அறிவாளிகளாலோ பேசமுடியாது. ஏனெனில் அவை ஒன்றுக் கொன்று முரண்பட்ட தத்துவத்தில் அமைக்கப்பட்டிருப்பவைகளாகும். அதோடு மாத்திரமல்லாமல் சமரசமும் சன்மார்க்கமும் கூடாது என்னும் தத்துவத்தின் மீதே அமைக்கப்பட்டவைகளாகும்.

ஆகையால் நான் சமரச சன்மார்க்கத்தைப் பற்றி பேசவேண்டு மானால் அவைகள் சம்மந்தமான கட்டுப்பாடுகளையெல்லாம் அடியோடு அழிப்பது தான் சமரச சன்மார்க்கம் என்று சொல்ல வேண்டியதாயிருக் கின்றது. இது உங்களில் பலருக்கும் உங்கள் பாதிரிமார்கள், எஜமானர்கள், அக்கம்பக்க ஜாதியார்கள், சாமிகள், மதக்காரர்கள் ஆகியவர்களுக்கு வருத்தமாயும் விரோதமானவைகளாயுமிருக்கும் என்று கருதுகின்றேன். நான் உண்மை யான சமரச சன்மார்க்கம் அடைந்த தேசத்தார், அடைந்த சமூகத்தார், அடைந்த தனிமனிதர்கள் என்று யார் யாரைக் கருதுகின்றேனோ அவர்கள் எல்லாம் மேற்கண்ட இடையூறானவைகளைத் தகர்த்தெறிந்து தான் சமரச சன்மார்க்கம் அடைந்தார்கள் - அடைகின்றார்கள் - அடைய முயற்சிக்கின்றார்கள். இவைகளில் சிறிது தாட்சண்யப்பட்ட வர்கள் கூட தோல்வியே யடைந்து விட்டார்கள்.

உதாரணமாக கடவுளையும், மதத்தையும், பணக்காரனையும் வைத்து சமரச சன்மார்க்கம் செய்ய முடியாதென்று கருதித்தான் ருஷியர்கள், பாதிரி மார்கள் தொல்லையையும் சர்ச்சுகளையும் பணக்காரத்தன்மைகளையும் அழித்துத்தான் சமரசம் பெற்றார்கள். தற்போதைய ருஷிய சரித்திரத்தில் சமரசத்திற்கு பாதிரிமார்கள் எதிரிகளென்றே தீர்மானிக்கப்பட்டு அவர்களை அழித்து விட்டார்கள். அழித்து விட்டார்கள் என்றால் கொன்று விட்டார்கள் என்பது கருத்தல்ல. ஏதோ சிலரை அதாவது சமரசத்திற்கு எதிர்பிரசாரம் செய்தவர்களில் சிலரைத் தவிர மற்றவர்களை பட்டாளத்தில் சேரச் செய்தார்கள்; சிலரை விவசாயத்தில் போட்டார்கள்; சிலரை வைத்தியத்தில் போட்டார்கள்; வேறு காரியங்களுக்கு உதவாதவர்களை காவல் காக்க போட்டார்கள். அது போலவே சர்ச்சுகளை தொழிற்சாலை பள்ளிக்கூடம் முதலியவைகளாக மாற்றினார்கள். இவைகளுக்கு உதவாமல் போக்குவரவுக்கும், மற்ற சௌகரியங்களுக்கும் இடையூறாயிருப்பவைகளை இடித்தார்கள். பணக்காரர்கள் சொத்தைப் பிடுங்கி பொதுஜன சொத்தாக்கி பூமி இல்லாதவர்களுக்கு பூமி, தொழிலில்லாதவர்களுக்கு தொழில், படிப்பில்லாதவர்களுக்கு படிப்பு முதலாகியவைகள் கொடுப்பதற்கு உபயோகப்படுத்தினார்கள். கல்யாண முறையை ஒழித்து பெண் அடிமையை நீக்கினார்கள். கண்டபடி பன்றிகள் போல் பிள்ளை பெறுமுறையை நிறுத்தச் செய்து அளவுபடுத்தி ஆண் பெண் வாழ்க்கை இன்பத்திற்கு சௌகரியம் செய்தார்கள். இன்னும் பல காரியங்கள் செய்தார்கள். ஆனால் நமக்கு இவை பொருந்துமா என்று சிலர் கேட்பார்கள்? யார் கேட்பார்கள் என்றால் பணக்காரன், பாதிரி, உயர்ந்த ஜாதிக்காரன், அரசன் ஆகியவர்கள் தான் கேட்பார்கள். இவர்கள் நமது நாட்டு ஜனத்தொகையில் 100க்கு 5 அல்லது 6 பேர்களே இருப்பார்கள். மற்றவர்கள் 100க்கு 90 க்கு மேற்பட்டவர்களாவார்கள். ஆதலால் குறைந்த எண்ணிக்கை உள்ளவர்கள் அதிலும் தங்கள் சுயநலத்திற்கு என்று சில கட்டுப்பாடுகள் இருக்கவேண்டுமென்றால் யார் சம்மதிப்பார்கள்? முதலா வது உங்களைக் கேட்கின்றேன். நீங்கள் இந்த மூன்று ஆதிக்கத்தை ஒப்புக் கொள்ளுகின்றீர்களா? இருக்கவேண்டும் என்று சொல்லுகின்றீர்களா? என்ன சொல்லுகின்றீர்கள்? (சிரிப்பு) ஆகவே இம்மூன்றும் ஒழிய அவர்கள் கஷ்டப்படுவார்கள். ஆனால் நமக்கு இன்றே அம்மூன்றும் ஒழிய வேண்டும் என்கின்ற ஆத்திரமுமில்லை. ஏனெனில் இன்னும் அநேக நாடுகள் இருக் கின்றன. அவை இப்போதுதான் முயற்சித்திருக்கின்றது. ஆகையால் வரிசைக் கிரமத்தில் அந்த முறை நமக்கும் வரும் என்கின்ற தைரியம் உண்டு. ஆனால் இங்கு மற்றநாட்டில் இல்லாததான ஜாதி உயர்வு தாழ்வு முறை என்பது சாதாரண சமரச சன்மார்க்கத்திற்கு விரோதமாய் இருக்கின்றது. அதை அழித்தே



RangaRakes tamilnavarasam.com

ஆகவேண்டும். இதற்கு நாம் தர்மசாஸ்திரம், கடவுள் செயல், கர்மபலன் ஆகியவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தால் பலனில்லை. சகோதரர்களே! நீங்கள் தர்மத்திற்கும், சாஸ்திரத்திற்கும் , மதத் திற்கும், கடவுளுக்கும் எத்தனை காலமாய் அடங்கி வந்திருக்கின்றீர்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். என்னபலன் அடைந்திருக்கின்றீர்கள்? இந்த நிலைமையில் உங்கள் ஆயுள்காலத்திற்குள் உங்களுக்கு சமரச விடுதலை உண்டு என்று கருதுகின்றீர்களா? இன்றைய நிலைமையேதான் உங்கள் வாழ்க்கையின் பலன், முடிவு, லக்ஷியம் என்று கருதுவீர்களானால் நீங்கள் எதற்காக நாளைய தினம் வரையில்கூட உயிருடன் இருக்க வேண்டும் என்று கருதுகின்றீர்கள் என்பது எனக்குப் புலப்படவில்லை. மனிதன் வாழ்ந்திருக்கக் கருதுவதற்கு ஏதாவது அர்த்தமோ, லக்ஷியமோ இருக்க வேண்டும். சும்மா அறைத்த மாவை அறைத்துக்கொண்டிருப்பது போல் வெரும் ஆகாரம் உட் கொள்ளவும், உட்கொண்டதை மலமாக்கவும் என்பதற்காக அறிவும், சுவாதீனவுணர்ச்சியும், ஞானமுமற்ற ஜந்துக்கள் இருக்கின்றதே. இது போதாதா? இனி மனிதன் என்றும், ஆறறிவு பகுத்தறிவு உள்ளவன் என்றும் சொல்லிக் கொண்டு, பண்டிதன் என்றும் பணக்காரன் என்றும், கடவுளை கண்டு பிடித்து அடையும் மார்க்கங்களான பல மதங்களையும் பின்பற்றி கடவுளென்று பணத்தையும், நேரத்தையும், ஊக்கத்தையும் செலவு செய்கின்ற மனிதனும், நல்ல ஆகார வஸ்துக்களை மலமாக்குவதற்காக வாழ வேண்டுமா என்று கேட்கின்றேன். இதைப்போன்ற அறிவீனமும் அவமானமும் ஆன காரியம் மனித சமூகத்திற்கு வேறொன்றில்லை என்றே சொல்லுவேன். இந்தவித மனித சமூகம் அழிந்துபோவது ஜீவகாருண்ணியத்தை உத்தேசித்தாவது மிகவும் அவசியமானதென்று தோன்றுகின்றது.

ஆகவே உங்கள் லக்ஷியங்களை முடிவுசெய்து கொள்ளுங்கள். அதை நீங்களே அடைய முயற்சி செய்யுங்கள் அதை மற்றொரு ஜன்மத்திற்கு என்று அயோக்கியர்களின் வார்த்தைகளை நம்பி எதிர்பார்த்துக் கொண்டு வீணாய் ஏமாந்து போகாதீர்கள். இந்த ஜன்மத்தில் உங்களை ஏமாற்றுவதற்காகவே அடுத்த ஜன்மம் என்னும் புரட்டை கற்பித்திருக்கின்றார்கள். முன் ஜன்ம சங்கதி ஏதாவது ஒன்று உங்கள் சரீரத்திலிருந்து உதிர்ந்த ஒரு மயிர்த் துண்டாவது உங்களுக்கு இந்த ஜன்மத்தில் ஞாபகமிருந்தால் அல்லவா இந்த ஜன்ம காரியங்களின் செய்கைகளோ பலனோ உங்களுக்கு அடுத்த ஜன்மத்தில் அறியவோ, அனுபவிக்கவோ முடியப் போகின்றது. அன்றியும் கடவுள் உங்களை இப்படிச் செய்து விட்டார் என்று முட்டாள் தனமாய்க் கருதி உங்கள் கஷ்டத்தை நிலைநிருத்தி உங்கள் சந்ததிகளுக்கு விட்டு விட்டு சாகாதீர்கள். உணர்ச்சியும் அறிவும் அற்ற சோம்பேறிக்குத்தான் கடவுள் செயல் பொருத்தமாக இருக்கும். மற்றவனுக்கு அதுசிறிதும் பொருந்தாது. நீங்கள் ஏன் சோம்பேரி யாகின்றீர்கள் - கடவுளுக்கு இடம் கொடுத்து கோயில்கட்டி உறுப்படிகளை அதிகமாக்கி நமது குறைகளையும் கஷ்டங்களையும் முறையிட்டு, முறையிட்டு அழுது வந்ததுபோதும் என்றே



சொல்லுகின்றேன். இனி அந்தப் பக்கம் திரும்பிப் பாராதீர்கள் உங்கள் அறிவையும் மனிதத்தன்மையையும் திரும்பிப் பாருங்கள். அது சொல்லுகின்றபடி நடவுங்கள். உங்கள் பொருப்பை அதின் மீது போடுங்கள். உங்கள் தவறுதல்களுக்கும் நீங்கள் பயன் அடையாமல் போனதற்கும் காரணம் சொல்லும்படி உங்கள் அறிவைக் கேளுங்கள். அதை மதியுங்கள். அதனிடம் நம்பிக்கை வையுங்கள். அது உங்களை சரியான வழியில் செலுத்தும். “கடவுளை”ப்போல் அவ்வளவு மோசமும், புரட்டும், ஆனதல்ல உங்கள் அறிவு. அதற்கு உணவும் வளர்ச்சியும் மற்ற நாட்டு வர்த்தமானங்களும் உங்கள் நடுநிலைமையுமே யாகும். ஆகையால் மற்ற நாட்டு வர்த்தமானங்களை உணர்ந்து நீங்கள் நடுநிலைமையில் இருந்து உங்கள் அறிவுக்கு பூசை போட்டீர்களானால் வந்துவிட்டது அன்றே சமரசம்! சன்மார்க்கம்!! விடுதலை!!! இதில் எனக்கு சிறிதும் சந்தேகமில்லை.

தவிர பெண்கள் விஷயமாய் சில வார்த்தைகள் சொல்ல வேண்டியிருக்கின்றது. அதை சற்று கவனமாய் கேட்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பெண்மக்களை இன்று ஆண்கள் நடத்தும் மாதிரி மேல்ஜாதிக்காரன் கீழ் ஜாதிக்காரனை நடத்துவதை விட, பணக்காரன் ஏழையை நடத்துவதை விட, எஜமான் அடிமையை நடத்துவதைவிட மோசமானதாகும்.

அவர்கள் எல்லாம் இருவருக்கும் சம்மந்தமேற்படும் சமயங்களில் மாத்திரம்தான் தாழ்மையாய் நடத்துகின்றார்கள். ஆண்கள் பெண்களை பிறவி முதல் சாவுவரை அடிமையாயும் கொடுமையாயும் நடத்துகின்றார்கள். அதுவும் நமது நாட்டில் மிகவும் மோசமாய் நடத்துகின்றார்கள். அந்த ஒரு காரணமே இந்த நாடு இன்று மிருக பிராயத்தில் இருப்பதற்கு காரணமாகும். நாம் எல்லோரும் அடிமை வயிற்றில் பிறந்து அடிமைகளால் வளர்க்கப்பட்டோம் என்பதை மறுக்கின்றீர்களா என்று கேட்கின்றேன். நான் எத்தனை பெண்டாட்டி வேண்டுமானாலும் கட்டிக் கொள்ளுவேன்; எத்தனைக் கிழவனானாலும் எனக்கு பெண்டாட்டி வேண்டும். நான் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் ஆசை நாயகிகளாக வைத்துக்கொண்டு அனுபவிப் பேன்; ஆனால் பெண்ணாய் பிறந்த நீ ஒரு புருஷன்தான் கட்டிக்கொள்ள வேண்டும். அவன் செத்துப்போனாலும் புருஷன் என்பதாக ஒரு ஜீவன் உலகில் உண்டு; ஆண் பெண் சேர்ந்து அனுபவிக்கும் இன்பம் என்பதாக ஒரு குணம் உண்டு என்பதை மறந்து விடவேண்டும் என்று விதி ஏற்படுத் தப்பட்டிருக்கின்றது. இதற்கும் கடவுள், மதம், முன்ஜன்மப் பலன் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கின்றது. இது மிகவும் அநீதியும், அயோக்கியத்தனமுமான விஷயமாகும் இந்தக் கொடுமைகளை ஆண்களால் மாற்றிக் கொள்ளலாம் என்றும், பெண்கள் அப்படி மாற்றிக்கொள்ள நினைப்பது சுத்த முட்டாள்தனமாகும் எனக் கருதப்பட்டிருக்கின்றது. ஆண்களைப் போலவே பெண்கள் செய்யத் தயாராக வேண்டும் ஆண் இரண்டு வைப்பாட்டிகளை வைத்தால் பெண்கள்



RangaRakes tamilnavarasam.com

மூன்று ஆசை நாயகர்களை வைத்துக்கொள்ள முற்படவேண்டும். உடனே நிலைமை சரிபட்டுப்போகும். உண்மையான சமரசம் தோன்றி விடும். பிறகு இருவருக்கும் கஷ்டமேயிருக்காது. சிலர் இப்படிச் சொல்லுவது தப்பு என்றும், ஒழுக்கம் கெட்டுப்போகும் என்றும் ஆண்களுக்கு எவ்வளவு வேண்டு மானாலும் புத்தி சொல்லுங்கள் என்றும் சொல்ல வருவார்கள். ஆண்களுக்கு புத்தி அநேககாலமாக சொல்லியாய் விட்டது. கல்யாணம் செய்து கொள்ளு வதே அடிமைப் பிரவேசம் என்றாய்விட்டது. ஒரு மனிதனாவது இவர்கள் சொல்லுகிறபடி யோக்கியனாகவில்லை.

ஆகவே அது இனி பயனற்றதாய் விட்டதால்தான் வேறு மார்க் கத்தை கடைபிடிக்க வேண்டியதாய் விட்டது. இதுவரையில் ஆண்கள் பெண்களை அடிக்காதீர்கள், அடிக்காதீர்கள் என்று சொல்லிப் பெண்க ளுக்கு நியாயம் வழங்க முற்பட்டோம்; பலனேற்படவில்லை என்று கண்டு விட்டோம். இப்போது நாம் பெண்களிடம் சென்று இனி ஆண்கள் உங்களை அடித்தால் திருப்பி அடியுங்கள் என்று சொல்லுகின்றோம். இதனால் என்ன தப்பு என்பது விளங்கவில்லை. இது போல்தானே ஆண்கள் உங்களை வஞ்சித்தால் நீங்கள் அவர்களை வஞ்சியுங்கள் என்று சொல்லுகின்றோம். இஷ்டப்பட்டவர்கள் இந்த முறையில் சேர்ந்து வாழட்டும். இஷ்டம் இல்லாதவர்கள் கல்யாணத்தை ரத்து செய்து கொண்டு தனித்தனி வாழட்டும். இதனால் உலகத்திற்கு என்ன கஷ்டம் வந்துவிடும்? ஆகையால் இந்த விஷயங்களில் பெண்கள் யோசித்து தைரியமாய் முன்னுக்கு வரவேண்டும். பயப்படக் கூடாது. பெண்கள் தங்கள் வாழ்வுக்கு ஒரு வகைசெய்து கொள்ளவேண்டியது பெண்கள் விடுதலைக்கு முக்கியமான அஸ்திவாரமாகும். முக்கியமாய் கண்டபடி கணக்கு வழக்கில் லாமல் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடாது. இதில் அதிக ஞாபகம் இருக்கவேண்டும். பிள்ளை பெறுவது கடவுள் செயல் என்றும், அது பாக் கியத்தில் ஒன்றென்றும் கருதிக்கொண்டு, முட்டாள் தனமாய் மக்கள் கஷ்டப் படுகின்றார்கள். ஆசீர்வாதம் செய்யும்போது 16 பிள்ளைகள் பிறக்க வேண்டு மென்று ஆசீர்வாதம் செய்கின்றார்கள். இது அவர்கள் சொல்லுகின்றபடியே நடக்கும் என்று பயந்து கொண்டு நான் பேசவரவில்லை. ஆனால் இப்படி ஆசீர்வாதம் செய்வது எவ்வளவு முட்டாள் தனமும் பொருப்பற்ற தன்மையும் என்று சற்று யோசித்துப்பாருங்கள்.

ஆகவே இந்தக் காரியத்தில் எத்தனைக்கெத்தனை ஜாக்கிரதை யாயிருந்து கண்டபடி பிள்ளைபெறாமல் தப்பித்துக் கொள்ளுகின்றீர்களோ அத்தனைக்கத்தனை கவலையும் தொல்லையும் ஒழிந்து சுதந்திரமும் விடுதலையும் அடைந்தவர்களாவீர்கள். எவனோ தெரிவில் போகின்றவன் “இப்படிச் சொல்வதால்” ஒரு சமயம் எல்லோருமே பிள்ளை பெறாமல் இருந்து விட்டால் உலகம் விர்த்தியாவது எப்படி என்பான். இப்படிப்பட்ட வன் சுத்த மூடன் என்று தான் அருத்தம் . உலகம் விர்த்தியாவதற்காக மனிதன் பல குட்டிகள் போட்டு தொல்லைப்படவேண்டுமா? நாய், பன்றி, கழுதை,



குதிரை, கோழி, குருவி முதலிய மிருகம் பட்சி ஊர்வன முதலிய ஜீவன்கள் போடும் குட்டிகளுக்கும் பொறிக்கும் குஞ்சுகளும் பீச்சும் குஞ்சுகளும் போதாதா என்று கேட்கின்றேன்.

வீண் அர்த்தமற்ற வார்த்தைகளுக்கு காது கொடுக்காதீர்கள். ஒவ் வொன்றையும் நன்றாய் யோசித்துப் பார்த்து உங்கள் அபிப்பிராயப்படி எதை யும் முடிவு செய்யுங்கள். முடிவுப்படி நடவுங்கள்.

*குறிப்பு :- ஈரோடு பெருந்துறையை அடுத்த கிரே நகரில் 26.01.1931 அன்று நடைபெற்ற ஆதிதிராவிட ஆண்டு மாநாட்டில் ஆற்றிய உரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 08.02.1931**



RangaRakes tamilnavarasam.com

# ஜனநாயகம்

சின்னா பின்னப்பட்டு சீரழிந்து கிடக்கும் ஒரு நாடோ சமூகமோ முன்னேற்றமடைய வேண்டுமானால், கண்டிப்பாய் அந்த நாட்டிற்கு ஜன நாயகம் என்பது அதாவது அந்த ஜனங்களாலேயே அந்த சமூகத்தை ஆட்சி செய்து, முற்போக்கடையச் செய்வது என்பது முடியவே முடியாது. இன்னும் விளக்கமாய்ச் சொல்வதானால், அதாவது, பல மதமாய், பல ஜாதி யாய், பல வகுப்பாய், பல லக்ஷியமாய் பிரிந்து சராசரி 100க்கு 10 பேருக்கு கூட கல்வியறிவில்லாமல் இருக்கும் இந்தியாவுக்கு, இன்று ஜனநாயக ஆட்சி என்பது சிறிதும் பயன்படாது என்பதேயாகும்.

இந்த அபிப்பிராயம், நாம் மாத்திரம் சொல்வதாக மக்கள் கருதினாலும் நமக்கு ஆக்ஷேபணையில்லை. ஆனாலும் அறிஞர்களும், அனுபவ சாலிகளுமான அநேகர் இதே அபிப்பிராயம் கொண்டிருப்பதை நாம் கேட்டு மிருக்கின்றோம்.

அன்றியும் இந்த நமது மேல் கண்ட அபிப்பிராயத்தை நிரூபிக்க இதற்கு முன் பல ஆதாரங்களை நாம் எடுத்து காட்டியும் இருக்கின்றோம். ஆனாலும், இப்போது கிடைத்த இரண்டொன்றையும் எடுத்துக்காட்டு வோம். அதாவது:-

இந்திய நாட்டிலுள்ள மனித சமூகத்தில் சுமார் 6 கோடி மக்கள் தீண்டா தவர்களாக- மனிதர்களால் தொடக்கூடாதவர்களாக-அநேக விஷயங்களில் மனித உரிமைகளை அனுபவிக்கக் கூடாதவர்களாக - தெருவில் நடக்கவோ, குளத்தில் தண்ணீர் அருந்தவோ பொதுக்கோயில், மடம், சத்திரம், சாவடி என்பவைகளில் பிரவேசிக்கவோ சில பொது இடங்களில் சென்று படிக் கவோ, சில பொது இடங்களில் சென்று கூலிவேலை, உத்தி யோகம் முதலிய வைகள் செய்யவோ தடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, கொடுமை செய்யப்பட்ட வர்களாகயிருக்கின்றார்கள் என்பதில் சிறிதும் ஆக்ஷேபணையே இல்லை என்பது உலக மறிந்த விஷயமாகும். ஒரு சமயம் 6 கோடி என்கின்ற எண்ணிக்கையில் சிறிது வித்தியாசமிருப்பதாக யாராவது சொல்லியிருக்க லாமே அல்லாமல், இந்த மாதிரி கொடுமைப் படுத்தப்பட்ட மனித சமூகம் இந்தியாவில், இந்துக்கள் என்பவர்களுக்குள் இல்லை என்று யாரும் சொன்ன தேயில்லை.



ஆகவே, சற்றேறக் குறைய இந்துக்கள் என்பவர்களில் 3-ல் 1-பங்கு ஜனங்கள், இந்த நிலையில் வெகுகாலமாய் இருந்து வருகின்றதையறிந்தும், இவர்களுக்கு எவ்வித விடுதலையும் இல்லாமலேயே இப்படிச் செய்யப் பட்ட கூட்டாத்தாராலேயே, இந்தியாவுக்கு ஜனநாயக ஆட்சி கேட்டுக் கொண்டு வரப்படுகின்றது.

ஜனநாயக ஆட்சி "வழியில்" சுமார் 20, 30 வருஷகாலமாக நடக்க சந்தர்ப்பம் கிடைத்து மிக்க நெருக்கமான வழி என்பதிலாவது நடந்து வந்தும், இன்று வரை இந்தமாதிரி ஜனநாயக தத்துவம், இந்த 6 கோடி மக்கள் கொண்ட சமூகத்திற்கு ஒரு காரியமும் செய்ய முன்வரவேயில்லை. வேறு யாராவது அவர்களுக்கு ஏதாவது செய்வதாயிருந்தாலும் எந்தக் காரியத்திற்கும் இவர்கள் சம்மதிப்பதும் இல்லை. இவர்களை மீறி ஏதாவது சிறிது நடந்தாலும், நடப்பதாயிருந்தாலும் அது இந்திய ஜனநாயகத்தின் தத்துவத்தின் பலனா யில்லாமல், பிரிட்டிஷ் தனி நாயகத்தின் தயவால் என்றே சொல்லும் படியாகவே நடந்து வந்திருக்கின்றன. வந்துகொண்டே யிருக்கின்றன.

மற்றும், இந்தமாதிரி தாழ்த்தப்பட்டு கொடுமை செய்யப்பட்ட 6 கோடி சமூகமானது இன்றையத்தினம் எங்காவது, ஏதாவது ஒருவித சௌக ரியத்தை வழக்கத்திற்கு விரோதமாய் அனுபவிக்கிறார்கள் என்று சொல்லப் படு மானால், அது ஜனநாயகத் தடையையும் பலத்தையும் மீறி, ஜன நாயகத்தை தனிநாயகம் தோற்கடித்த, ஆதிக்கம் செலுத்தியதின் பயனாய் நடக்கின்றதே யல்லாமல் வேறில்லை என்று உறுதியாய்ச் சொல்லுவோம். வெளிப்படை யாய்ச் சொல்லவேண்டுமானால் பார்ப்பாருக்கோ, சைவருக்கோ, சைவ வேளாளருக்கோ மற்றும் தங்களை "பிரம்ம, க்ஷத்திரிய வைசிய சற்சூத்திர" என்று எண்ணிக்கொண்டிருக்கும் மேல் ஜாதிக்கோ இந்த வெள்ளைக்கார அரசாங்கம் "எமனாக"த்தோன்றியபோதிலும், மேல் கண்ட கொடுமை களை யும் கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்தக் கொடுமைப் படுத்தப்பட்ட 6 கோடி மக்களுக்கு, இந்த வெள்ளைக்கார அரசாங்கம் "சர்வ தயாபரரும், காருண்ய மூர்த்தியுமான கடவுளால்" அனுப்பப்பட்டது என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருப்பதில் சந்தேகமும் இல்லை. அதில் ஒரு அதிசயமும் இல்லை.

அன்றியும், இன்று இனியும் கேட்கப்படும் ஜனநாயக சுதந்திரங்கள் கூட மேற்கண்ட தாழ்த்தப்பட்டு கொடுமை செய்யப்பட்டமக்களை இனியும் தலையெடுக்க வொட்டாமல் செய்யவேண்டும் என்கின்ற ஆசையைக் கொண்டு தான் கேட்கப்படுகின்றது என்பதை மறுக்கவோ, ஆக்ஷேபணை சொல்லவோ போதிய காரணம் கிடையாதென்றே தைரியமாய்ச் சொல்லு வோம். இன்று அவர்கள் அனுபவிக்கும் தொல்லைகளில் முக்கியமானது என்னவென்றால், மற்ற மக்களைப்போல் விகிதாசாரம் தாங்கள் படிக்க முடியாதது, மற்றமக்களைப் போல் தங்கள் விகிதாசாரம் தாங்கள் சம்பாதிக்க முடியாதது, மற்றமக்களைப்போல் தங்கள் விகிதாசாரம் அரசியல்



RangaRakes tamilnavarasam.com

சுதந்திரங்களை அனுபவிக்க உத்தியோக வகையரா பெற முடியாதது முதலியவைகளாகும். இந்தமூன்றும் எந்த ஜனநாயக ஆக்ஷி யிலாவது, ஏதாவது ஒரு பரிகாரத்திற்கு இடம் இருக்கின்றதா? என்று பார்த் தால், பரிகாரம் கேட்பதே தேசத்துரோகமாகவும் ஜனநாயக தத்துவத்திற்கு விரோதமாகவும் பாவிக்கப்படுகின்றது. இதைப்பற்றி யாரும், எந்த ஜன நாயக வாதியும், தேசீய வாதியும் வெட்கப்படுவது கூட கிடையாது. இந்த நிலையைப் போல ஒரு மானக்கேடான காரியம் இந்த நாட்டுக்கு வேறு ஒன்றுமே கிடையாது என்று சொல்லுவோம். அரசியல் சீர்திருத்தம் அதிகமாய் வழங்குவதற்காக என்று இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட சைமன் கமிஷனை, இந்த நாட்டில் 100க்கு 99 $^3/_4$ பார்ப்பனரும் ஆக்ஷேபித்து பகிஷ்கரிக்க வேண்டுமென்றார்கள். சில பார்ப்பனரல்லாத சோணகிரிகளும் அவர்களை பின்பற்றினார்கள். ஆனால், தாழ்த்தப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்ட வர்களில் எல்லோருமே சைமன் கமிஷனை வரவேற்று, ஆதரித்து தங்கள் குறைகளைச் சொல்லிக் கொண் டார்கள். பகிஷ்கரித்தவர்கள் யோக்கியதையையும், ஆதரித்தவர்கள் அடைந்த பலனையும் இப்போது கவனித்துப் பார்த்தால், பகிஷ்காரக்கூச்சல் போட்டவர்கள் தங்கள் சமூக நலனுக்கும் ஆதரித்தவர்கள் தங்கள் விடுதலைக்குமாக நடந்து கொண்டார்கள் என்பது விளக்கமாகும். சைமன் கமிஷனை ஆதரித்து, தங்கள் குறைகளைச் சொல்லிக்கொண்ட தாழ்த்தப் பட்ட வகுப்பார்களின் பிரதிநிதிகளாக லண்டனுக்குச்சென்ற திருவாளர்கள் டாக்டர் அம்பரிட்கார், ராவ் சாஹிப் சீனிவாசன் ஆகிய இரு கனவான்களும் வெளியிட்டிருக்கும் ஒரு யாதாஸ்துப்படியும் ராவ்சாஹிப் சீனிவாசன் அவர் கள் லண்டனிலிருந்து தங்கள் வகுப்பாருக்கு அறிவித்திருக்கும் கம்பி யில்லாத் தந்தியி லிருந்தும் நாம் அறிவது என்னவென்றால்,

அவர்கள் தங்கள் யாதாஸ்தில் கண்டிருப்பதானது:-

தங்களுக்கு இந்நாட்டின் சமத்துவமான நகரவாழ்க்கை சுதந்திரம் கிடைப்பதற்கு அடியில் கண்ட திட்டங்களை சட்டமாக ஆக்கச்செய்யப்பட வேண்டுமென்றும்,

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தங்களுடைய மற்ற குடி ஜனங்களுக்கு கொடுத்திருக்கும் உரிமைகளை, யாதொரு தடையுமில்லாமல் தங்களுக்கும் கொடுக்க வேண்டும். அவைகள் எந்த முறையில் இருக்கவேண்டுமென் றால், மற்றவர்கள் பொதுவாக எல்லாக் காரியங்களிலும் அனுபவிக்கும் சுதந்திரங் களை போலவே உதாரணமாக பொதுசத்திரங்கள், மடங்கள், பள்ளிக் கூடங்கள், ரோட்டுகள், குளங்கள், கிணறுகள், இதர தண்ணீர் துறைகள் முதலாகியவைகளிலும், தரையிலாவது, தண்ணீரிலாவது, ஆகாயத்திலாவது செல்லும் வாகனங்கள், நாடக சாலைகள், பொது இளைப்பாறும் இடங்கள், சந்தோஷ விளையாட்டு, களியாட்டு இடங்கள் முதலிய இடங்கள் ஆகியவை கள் எந்த முறையில் நடத்தப்பட்டாலும், அவைகளில் சென்று, அவற்றின் பலனையும், சௌகரியத்தையும், மற்ற குடிஜனங்கள் அனுபவிப்பது போல்



தாங்களும் அனுபவிக்க தாராளமான உரிமைகள் இருக்க வேண்டும் என்றும்,

அவ்வித சுதந்திரங்களை யாராவது தடுத்தால் அப்படித் தடுப்பவர் களை 5 வருஷ காலம்வரை தண்டிக்கத் தகுந்தபடி சட்டத்தில் விதிகள் இருக்க வேண்டும் என்றும்,

மேல்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாய் நடக்கும் முறையில், தங்களை யாராவது, எந்தக் காரியத்திலாவது பஹிஷ்காரம் செய்தால் அல்லது செய்யும்படி தூண்டினால், அப்படிப்பட்ட கூட்டத்தார்களையோ, தனி மனிதர்களையோ, முறையே 7 வருஷம் 5 வருஷகாலம் வரை தண்டிக்கவோ, அல்லது தகுந்த அபராதம் விதிக்கவோ அல்லது இரண்டும் செய்யவோ விதிகள் செய்யவேண்டும் என்றும்,

மற்ற சமூகத்தாருக்கு இருப்பது போல், மற்றவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவும், சாக்ஷி கொடுக்கவும், சொத்துக்களை வாங்கவும், விற்க வும், குத்தகைக்கு விடவும், குத்தகை வசூலிக்கவும், சொத்துக்களை சுதந்திர மாய் அனுபவிக்கவும்,

சர்க்கார் நிர்வாகம், ராணுவம் ஆகிய துறைகளிரண்டிலும் மற்ற ஜனங்களைப் போலவே, தாங்களும் உத்தியோகங்களை தாராளமாய் வகிக்க வும், எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் சேர்ந்து வாசிப்பதற்கும்,

தெரிந்தெடுக்கப்படும் ஸ்தாபனங்களில் தங்கள் சமூகத்தினரின் மொத்த எண்ணிக்கைக்குச் சரியான பிரதிநிதித்துவம் இருக்கவும்,

கோயில்கள், பொது மடங்கள், சத்திரங்கள் ஆகியவைகளின் சொத் துக்களை மற்றவர்கள் அனுபவிப்பது போலவே தாங்களும் அனுபவிக்கவும்,

தங்கள் உரிமைகளை காப்பாற்றிக்கொள்ளும் விஷயத்தில் மற்றவர் களுக்கு இருக்கும் சுதந்திரங்கள் சௌகரியங்கள் தங்களுக்கும் இருக்கவும்,

குற்றங்களுக்கு தண்டனைகள் விதிப்பதில் கொஞ்சமும் வித்தியாச மில்லாமல் இருக்கவும், கண்டிப்பான சட்டவிதிகள் செய்யப்பட வேண்டும்.

மற்றும், தங்கள் சமூக எண்ணிக்கைக்குச் சரியான பிரதிநிதித்துவம் அளிப்பதும், தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தெரிந்தெடுக்கவும்,

முதல் 10 வருஷத்திற்கு தனித் தேர்தல் முறை அளிக்கவும்,

பிறகு சாத்தியப்பட்டால், பொதுத் தேர்தலில் சேர்த்துக்கொள்ள வசதி செய்து கொள்ளவும்,

பொதுத்தேர்தல் முறையை தங்கள் வகுப்பார் ஆக்ஷேபித்தால் அவர்களை நிர்ப்பந்தப்படுத்தாமல் இருக்கவும்,



RangaRakes tamilnavarasam.com

உத்தியோகத் தெரிந்தெடுப்பில், தங்கள் வகுப்பில் வீதாச்சாரம் தெரிந்தெடுக்கவும்,

உத்தியோகங்களில், இப்போது இதர ஜாதிகள் எத்தனை விகிதாச் சாரம் இருக்கின்றார்களோ, அத்தனை பேர்கள் வீதாச்சாரம் வீதம், தங்கள் சமூகத்தாரும் உடனே வந்து சேர்ந்து உத்தியோகம் அடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டியதும்,

இந்தக் காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டச் சட்டங்களை, எந்த மாகாணமாவது சரியான படி அமுலில் கொண்டுவரவில்லையானால், கவர்னர் ஜனரல் சபையிடம் அப்பீல் செய்துகொள்ள உரிமையிருக்கவும், அப்படிப் பட்ட அப்பீலின் மீது, கவர்னர் ஜனரல் உடனே பிரவேசித்து மேல்படி சட்டத்தை சரியானபடி நடத்திவைக்கப் பாதுகாப்புகளும் இருக்கவேண்டும்.

கடைசியாக, இந்த சீர்திருத்தங்கள் வழங்கப்பட்டு இது அமுலுக்கு வரும் போது, இதற்காக அதாவது இவை ஒழுங்காக நடைபெற இதற்கென்றே ஒரு தனி இலாகா ஏற்படுத்தி, அதற்காக ஒரு தனி மந்திரியையும் ஏற்பாடு செய்யவேண்டும். அவர் மத்திய சபையின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவும் இருக்கவேண்டியதோடு பாரபக்ஷமில்லாமல் நடந்துகொள்ளக்கூடிய சுதந்திரமும், தன்மையுமுடையவராகவும் இருக்க வேண்டும்.

மாகாண நிர்வாகசபைகளிலும், மத்திய அரசாங்க நிர்வாக சபையிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் ஸ்தானம் பெறத்தக்க முயற்சியும், ஏற்பாடும் செய்ய கவர்னருக்கும் கவர்னர் ஜனரலுக்கும் சட்டப்பூர்வமான வசதிகள் இருக்க வேண்டும் என்பவைகளாகும்.

இந்தப்படியான ஒரு யாதாஸ்தை வட்ட மேஜையில் ஆஜர் செய்திருக்கின்றார்கள்.

நிற்க, மேற்கண்ட இந்த யாதாஸ்துக்கு அதாவது இந்தப்படியான சீர்திருத்தம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு வட்டமேஜை யாரும் ஒப்புக் கொண்டிருப்பதாக திரு. ராவ்சாஹிப் சீனிவாசன் அவர்கள் தனது சமூகத்தாருக்குக் கொடுத்த ஒரு தந்தியால் தெரியவருகின்றது.

அந்தத் தந்தியின் சாரமாவது:-

1. தனித்தொகுதி மூலம் தேர்தல் நடத்துவது,
2. தங்கள் சமூகத்தில் வயது வந்தவர்களுக்கு எல்லாம் ஓட்டு உரிமை அளிப்பது,
3. மாகாண சட்ட சபைகளில் எப்படியும் 100க்கு 15 வீதம் ஸ்தானங்களுக்கு குறைவில்லாமல் இருப்பது,
4. மந்திரி சபையில் தாழ்ந்த வகுப்பாருக்கு ஒரு ஸ்தானம் இருப்பது,



5. எல்லா உத்தியோகங்களிலும் விகிதாச்சாரம் தங்கள் சமூகத்துக்கு உத்தியோகம் வழங்குவது,

ஆகிய இவைகளுக்கு விதாயங்கள் ஏற்பட்டு விட்டதாக தெரி கின்றது. ஆகவே இந்த சௌகரியங்கள் அவர்களுக்கு கிடைப்பதற்கு இன்று ஜன நாயகம் உதவி செய்ததா? தனி நாயகம் உதவி செய்ததா? என்று பார்த் தால் தனிநாயகத்தின் பெருமை விளங்காமல் போகாது.

## மற்றொரு உதாரணம்

நிற்க, ஜனநாயகத்தின் யோக்கியதைக்கு மற்றொரு உதாரணம் சொல்லுவோம். அதாவது, சமீபத்தில் ஒரு வருஷத்திற்கு முன் இந்திய சட்ட சபையில் நிறைவேறின பாலிய விவாகத்தடுப்புச் சட்டமானது ஜன நாயகத்தால் நிறைவேற்றப்பட முடியாமல், தனி நாயகத்துவத்தின் உதவியாலேயே நிறைவேற்றப்பட்டது. அது அமுலில் வருவதில் ஜனங்கள் - ஜன பிரதிநிதிகள் ஆக்ஷேபிக்கிறார்கள் என்று இன்றும் சொல்லப்படு கின்றது. இந்தச் சொல்லுக்குப் பயந்து, ஜனநாயகத்துக்கு சார்பளிக்கும் அரசாங்கம், தனி நாயகம் செய்யாமல் பயப்படவும் செய்கின்றது.

அன்றியும் அந்தச் சட்டத்தை ஒழிக்கவும், மீறவுமே ஜன சுபாவம் முந்திக்கொண்டு இருக்கின்றது. இந்தப்படி செய்வதற்காகச் சொல்லப்படும் காரணம் என்ன வென்று பார்த்தால் அது பகுத்தறிவையோ, அனுபவ பலனையோ மனித வர்கத்துவ சாஸ்திரத்தையோ ஆதாரமாய்ச் சொல் லாமல் "ஒரு காலத்தில் இருந்த ஒருவர் சொன்னார்" "அந்தப்படி நடக்கா விட்டால் மதத்துக்கு விரோதம்" "பாவமானதாகும்." "நரகம் வரும் என்று வேதம் சொல்லுகிறது" என்ற காரணங்களால் ஆக்ஷேபிக்கப்படுகின்றன. இருக்கின்ற அல்லது வரப்போகின்ற அல்லது இன்றும் அதிகமாக வர வேண்டிய ஜனநாயக ஆக்ஷி திட்டம் என்பதிலும், இந்தப்படியான அதாவது ஏதோ ஒரு காலத்தில் யாரோ ஒரு பெயர் உடையவரால் யாருக்காகவோ சொல்லப் பட்டதாக ஏற்பாடு செய்திருக்கும் - எழுதி வைத்திருக்கும் மதத் துக்கும், வேதத்திற்கும் விரோதம் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏற்படு வதற்கு மார்க்கமில்லாமல் வெகு ஜாக்கிறதையாய்ப் பார்த்து திட்டம் வகுக்கப் படவேண்டுமென்றே சொல்லப்படுகின்றது.

ஆகவே இந்த ஜனநாயகம் மனித வர்க்கத்திற்கு நியாயமான சுதந்திரத்தையும், சுவாதீனத்தையும் கொடுக்கக் கூடியதா அல்லது அடிமைத் தனத்தையும், கெடுதியையும் கொடுக்கக்கூடியதா என்பதை யோசித்தாலும், ஜனநாயகத்தின் யோக்கியதை சுலபத்தில் விளங்காமால் போகாது. நமது மக்களின் ஜனநாயக உணர்ச்சியானது இன்று "நமது தேசம்" "நமது மதம்" "நமது ஜாதி" என்கின்ற தத்துவத்தின் மீதும் "முதலில் தேசம்" என்று பலரும் "முதலில் மதம்" என்று சிலரும் "முதலில் ஜாதி" என்று அநேகரும் கருதியே



RangaRakes tamilnavarasam.com

ஜனநாயக திட்டம் வகுப்பதில் முனைந்திருக்கின்றார்களே யொழிய, முதலில் மனித சமூகம் பிறகுதான் மற்றது என்கின்ற அறிவு இந்த நாட்டில், இன்றைய தினம், மகாத்மாக்கள் முதல் தேசிய வீரர்கள்-தொண்டர்கள் வரை, தேசாபி மானி முதல் தேசபக்தர் தேசியவாதிகள் வரை - ஆச்சாரியார், மடாதிபதி, சுவாமிகள் முதல் அடியார் கூட்டங்கள் வரை, ஆஸ்திக பண்டிதர்கள் முதல் அவர்களது மாணவர்கள் வரை யாராவது ஒருவருக்கு இருக்கின்றதா? என்பதை நடுநிலைமையிலிருந்து யோசித்துப் பார்த்தால் ஜனநாயகத் தத்துவத்தின் யோக்கியதை விளங்காமல் போகாது.

ஜனநாயகம் என்பதில், ஜனம் என்றால் மனிதர்கள் என்றும், நாயகம் என்றால் ஆட்சித்துவம் - எஜமானத்துவம் என்றும் பொருளாகும்.

ஆகவே மனித ஆட்சித்துவம் என்பது மனித தர்மத்துக்கும், மனித துவத்திற்கும் பொதுவான நன்மை பயக்கும்படியானதாகவும் காப்பு அளிக் கும் படியானதாகவும் இருக்கவேண்டியதா? அல்லது "என் தேசம் காப்பாற்றப்பட்டபின்தான் மனித தர்மம், என் மதம் காப்பாற்றப்பட்ட பின்தான் மனித தர்மம், எனக்கு மோட்சத்தில் சரியான இடம் தேடிக் கொண்ட பின் தான் மனித தர்மம், எனக்கு நரகம் கிடைக்காமல் பார்த்துக் கொண்ட பின்தான் மனித தர்மம்" என்று பாதுகாப்பு ஏற்படுத்திக்கொண்டு மனித பொது தர்மத்தையே கவலையற்றதாகக் கொண்டால் அந்த ஜன நாயகம் மனிதவர்க்க ஆட்சி ஆகுமா? அல்லது மத நாயகம், அல்லது தனிப்பட்ட மனிதனின் மோட்சநாயக ஆட்சியாகுமா என்று பார்த்தாலும், ஜனநாயக ஆட்சியின் போலித்தத்துவம் விளங்காமல் போகாது. ஏனெனில் தேசநாயக ஆட்சியும், மதநாயக ஆட்சியும் மோட்ச நாயக ஆட்சியும், மற்ற பொதுக் காரியங்களும் ஒவ்வொரு நாட்டுக்கு ஒவ்வொரு விதமாகவும், ஒவ்வொரு மதத்திற்கு ஒவ்வொரு விதமாகவும், ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒவ்வொரு தனி மனி தனுக்கும் ஒவ்வொரு விதமாகவும், ஒவ்வொரு தனிமனிதனின் ஒவ்வொரு நிலைமைக்கும் ஒவ்வொருவிதமாகவும் இருந்துவருகின்றது. மேலும் இவைகளுக்கெல்லாம் பூரண சுதந்திரமும், பாதுகாப்பும் அளிப்பது தான் ஜனநாயக தத்துவம் என்பதாக மகாத்மாக் களால் பூரண சுயேச்சை வீரர்களால் தேசீய வாதிகளால் உறுதிவாக்களிக்கப் பட்டாய் விட்டது. ஆகவே, இந்த ஜனநாயகம் மனித சமூகத்திற்கு ஆபத் தானதா அல்லது அனுகூலமானதா என்பது அறிவாளிகளுக்கு விளங்காமல் போகாது.

மக்களுக்கு உண்மையான மனித தர்ம நாயகம் எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு ஒரு உதாரணம் வேண்டுமானால் நடுச் சமுத்திரத்தின் முழுகப்போகும் கப்பலின் நடவடிக்கையைப் பார்த்தால் தெரியவரும். அதாவது, கப்பல் முழுகும்போது கப்பல் ஓட்டும் தலைவன் ஜனங்களைக் காப்பாற்ற முயற்சிக்கும் முறையில் மனித தர்மம் விளங்குவதை காணலாம்.



அதாவது கப்பல் முழுக ஆரம்பித்தவுடன் தேசம், மதம், ஜாதி, உத்தியோகம், பணம், பதவி ஆகியவைகளை கவனிக்காமல் பலக் குறை வானவர்களையும் சக்தி குறைவானவர்களையும் காப்பற்றுவதே முதல் கடமையாய் நினைத்து பெண்களையும், வயோதிகர்களையும், குழந்தை களையும், நோயாளிகளையும் முதலில் காப்பாற்றுகின்றான். ஆகவே ஆட்சியிலும் அப்படிப்பட்ட கொள்கையே மனித தர்ம நாயக ஆட்சி யாகும். இந்த ஆட்சியை ஜனநாயக ஆட்சி கப்பலிலிருக்கும் எல்லா ஜனங் களுக்கும் சுதந்திரம் கொடுத்தால் முதலில் எடுத்துக்காட்டிய ஜனநாயகக் கொள்கை ஆதிக்கமானது ஒவ்வொரு தனி மனிதனும் தான் தான் முதலில் காப்பாற்றப் பட வேண்டும் என்று ஆசைப்பட்டு கலகம் ஏற்பட்டு அதனால் கரையேறும் சாதனங்கள் கூட எல்லாம் அடியோடு முழுகிப்போகும். இந்த மாதிரிதான் நமது ஜனநாயகமும் இருக்கின்றது.

## மற்றொரு உதாரணம்

அதாவது ஜனநாயக ஆக்ஷி மனித தர்மத்திற்கு எவ்வளவு ஆபத்து கரமானது என்பதற்கு மற்றொரு உதாரணம் என்னவென்றால் "இவ்வாரம் இந்திய சட்டசபையில் சர் ஹரிசிங்கவரால் கொண்டுவரப்பட்ட விவாக சீர்திருத்த சட்டமானது ஒரே அடியாய் தலையில் அடித்து சொல்லப்பட்டு விட்டது.

இந்த சட்டமானது வெகுகாலமாக அனேக அறிவாளிகள் என்பவர் களால் ஆலோசித்து சம்மதிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டதாகும்.

அச்சட்டமானது பூரண முற்போக்கடைந்தது என்றோ மனித தர்மத்திற்கோ, மனித சுபாவத்திற்கோ, மனித சுதந்திரத்திற்கும் முழுஉரிமை அளிக்கக் கூடிய தென்றோ சொல்லிவிட முடியாததாயிருந்துங்கூட, அதாவது ஒரு மனைவிக்கு மேல் விவாகம் செய்துகொள்ளக்கூடாது என்கின்ற தடையை வைத்தும் அது ஜனநாயகத்துவ பிரதிநிதிசபையாலும் ஜனநாயக தத்துவ அரசாங்கத்தின் ஜனப் பிரதிநிதி அங்கத்தினராலும் (நானபிஷியல்லா மெம்பராலும்) விரட்டி அடிக்கப்பட்டுவிட்டது. இதற்கு சொல்லப்பட்ட காரணம் என்னவென்று பார்த்தால் திரு. ராஜாபகதூர் கிருஷ்ணமாச்சாரியார் என்ற ஒரு அய்யங்கார் பார்ப்பனர் "எனது மூதாதைகள் செய்த ஏற்பாட்டு படிதான் இருக்கவேண்டும். அதற்கு விரோதமானவைகளை ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது. ஆதலால் இந்தச் சட்டம் கூடாது" என்பதாகச் சொல்லி சட்டத்தை எதிர்த்திருக்கின்றார். மற்றவர்களும் இதை அனுசரித்தே மதக்கட்டளையை முன்னிட்டே எதிர்த்திருக்கின்றார்கள். கடைசியாக சர்க்கார் தரப்பில் சட்டமெம்பர் என்கின்ற ஒரு பார்ப்பனர் தனது பார்ப்பனப் புத்தியையே காட்டி சர்க்காருக்கும் தனது சமூக ஆதிக்கத்திற்கும் குந்தக மில்லாமல் பேசி அதை நிராகரிக்கச் செய்துவிட்டார்.



RangaRakes tamilnavarasam.com

அந்தச் சட்டத்தின் சாரமெல்லாம் தனக்கு இஷ்டமான பெண்ணை, அதுவும் ஒரே ஒரு பெண்ணை மணந்து கொண்டு வாழ்வதை எந்த சட்டமும் தடுக்கக்கூடாது என்பதேயாகும். (அதாவது கலப்பு மணத்திற்கு அனுமதி யளிப்பது) இதனால் மதம், பெரியோர் செய்த ஏற்பாடு ஆகியவை கள் கெடக்கூடாது என்கின்ற காரணங்களே, மனிதஉரிமைக்கு தடையாய் இருக் கின்றது என்று ஏற்படுகின்றதே அல்லாமல் அது மனித தர்மத்திற்கோ, சரீர சௌக்கியத்திற்கோ நாணையத்திற்கோ ஒழுக்கத்திற்கோ என்ன தடை அல்லது கெடுதி ஏற்படுகின்றது என்பது கவனிக்கப்படவில்லை என்கின்றது நன்றாய் விளங்குகின்றது.

ஈரோடு சுயமரியாதை மகாநாட்டில் தலைமை வகித்த திரு. ஜயகர் அவர்கள், கலப்பு மணத்தைப் பற்றிப் பேசும்போதுதான் கலப்பு மணத்தைப் பற்றி வெள்ளைக்கார அதிகாரிகளுடன் பேசியதாகவும், அதற்கவர்கள் "கலப்பு மண சட்டத்தைப் பாசுசெய்து (நிறைவேற்றி) எங்களை இந்த நாட்டைவிட்டு விரட்டப் பார்க்கின்றீர்களா என்று கேட்டார்கள்" என்பதாக எடுத்துச் சொன்னார். ஆகவே, கலப்பு மணம், அனுபவத்தில் நமது நாட்டில் நடைபெறுமானால், நமது நாட்டில் ஐரோப்பியர் ஆக்ஷியோ, கிருஸ்துவர் ஆக்ஷியோ, மகமதிய ஆக்ஷியோ, இந்துக்கள் ஆக்ஷியோ மற்றபடி பௌத்தம், கிறிஸ்து, இஸ்லாம், இந்து முதலிய மதங்களோ, பார்ப்பான், பறையன் முதலிய ஜாதிகளோ அன்னிய ஆக்ஷிகளோ அடியோடு நமது நாட்டைவிட்டு ஏன் உலகத்தையே விட்டுக் கூட ஓடிப்போக மார்க்கமுண் டாகும். இந்த நிலை கூடாது என்கின்றவர்களுடைய ஆக்ஷிதான் இன்றும் ஜனநாயக ஆக்ஷியாகவும், இனியும் அதிகமான முற்போக்குள்ள ஜனநாயக ஆக்ஷியாகவும் இருக்கின்றது, இருக்கவும் போகின்றது.

ஆகவே, லெனின் ஆக்ஷியோ, கமால்பாஷா ஆக்ஷியோதான் மனிதத் தர்ம – மனித நாயக ஆக்ஷியாக இருக்க முடியுமே அல்லாமல் மற்றபடி எந்த சீர்திருத்தம் கொடுத்து, எந்த ஜனநாயக ஆக்ஷி கொடுத்து, அதை எந்த மகாத்மா ஒப்புக்கொண்டு அதை எந்த வெள்ளைப் பார்ப்பானோ, கருப்புப் பார்ப்பானோ மொட்டைப் பார்ப்பானோ மனப்பூர்வமாய் ஒப்புக் கொண்டு நடத்திக் கொடுப்பதாயிருந்தாலும் அது ஒரு நாளும் மனித தர்ம ஆட்சி யாயிருக்க முடியவே முடியாது என்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

மேலும் மனிதனுக்கு ஒரு நாயகம் வேண்டி இருந்ததின் காரணமே மனிதசமூகம் நாயகமில்லாமல் வாழ்க்கை நடத்தமுடியாமல் போனதி னாலேயேயாகும். அந்தப்படி முடியாமல் போனதற்கு காரணம், மனித னுக்கு அறிவில்லாத தன்மையும் சுயநலத்தடிப்புமாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் மேல்கண்ட இரண்டும் மக்களுடன் மக்கள் கலந்து ஒற்றுமையாயும் நம்பிக்கையாயும் வாழச்செய்ய முடியாது.



ஆகவே மக்கள் தங்களுக்கு ஒரு அரசன் வேண்டியது என்பதற்கு ஆதாரமான காரணங்கள் எல்லாம் ஒழிக்கப்பட்டு அரசன் இல்லாமல் வாழ லாம் என்கின்ற தன்மை அடையும் வரை தங்கள் பொது வாழ்வில் தங்க ளுக்கு தாங்களே நாயகர்களாயிருந்து கொள்வது என்பது சாத்தியமான காரியமாகுமா என்பதை கவனித்துப் பார்த்தாலும் ஜனநாயகத்தின் முட்டாள் தனம் விளங்காமல் போகாது. அந்தக் காரணங்கள் சரிபடுத்தப் படாத ஜனங் கள் மறுபடியும் தங்களைத் தாங்களே தங்கள் பொதுவாழ்வுக்கு நாயகர்களாய் இருந்து கொள்ளுவது என்பது சாத்தியமான காரியமாகுமா? என்பதை கவனித்துப் பார்த்தால் ஜனநாயத்தின் முட்டாள்தனம் விளங்காமல் போகாது.

ஆகவே இப்போது ஜனநாயக ஆக்ஷி என்று நாம் சொல்லுவ தெல்லாம் ஒருக்காலும் மனித தர்ம ஆக்ஷியாகவே ஆகாது.

**முதலில் நான் மனிதன். பிறகு தான் இந்தியனோ, எவனோ ஆவேன்.**

**குடி அரசு – தலையங்கம் – 08.02.1931**



RangaRakes tamilnavarasam.com

## பல்லாவரப் பொது நிலைக்கழகக் கூட்டம்

சென்ற வாரம் பல்லாவரத்தில் கூடிய பொது நிலைக் கழக ஆண்டு விழாவில் பல தீர்மானங்கள் செய்ததாக நமக்குத் தகவல்கள் கிடைத்திருக் கின்றன. அவை ஒரு அளவில் பண்டிதர்களின் மனமாறுதலைக் காட்டக் கூடியதாகவும், சைவத்தின் புதிய போக்கைச் சிறிதாவது காட்டக்கூடியதாக வுமிருப்பதால் அதைப்பற்றி சில குறிப்பிடுகின்றோம்.

இம்மன மாறுதலும், இப்புதிய போக்கும் நமக்கும் சிறிது பயனளிக் கலாம் என்று நம்ப அத்தீர்மானங்கள் இடம்கொடுக்கின்றன.

### பல்லாவரத் தீர்மானங்களில் முக்கியமானவை

திருவாடுதுறை திருபனந்தாள் மடாதிபதிகளின் நன்கொடைக ளுக்கும் வாக்குறுதிகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளும் தீர்மானங் களும், தமிழுக்கும், சைவத்திற்கும், மடாதிபதிகள் பொருளுதவி செய்ய வேண்டு மென்னும் வேண்டுகோள் தீர்மானமும், மற்றும் தமிழைப் பற்றிய சில தீர்மானங்களும் செய்யப்பட்டிருப்பதுடன் சீர்திருத்த சம்மந்தமான பல தீர்மானங்கள் செய்யப்பட்டிருப்பதுவே நாம் குறிப்பிடத்தக்கதாகும். அவை யாவன:-

கோவிலுக்குள் யெல்லா ஜாதியாருக்கும் எல்லா விஷயங்களிலும் சமத்துவ உரிமை இருக்கவேண்டும்,

ஆதிதிராவிடர்களுக்கு கோவில் பிரவேசமளிக்க வேண்டும்,

கோவில்களில் தேவதாசி முறை கூடாது,

அனாவசியமானதும் அதிக செலவானதும் சமயக் கொள்கைக்கும் அறிவுக்கும் பொருத்தமில்லாததுமான உற்சவங்களை நிறுத்திவிட வேண்டும்.

சாரதா சட்டத்தை உடனே அமுலில் கொண்டுவர வேண்டும்,

பெண்களுக்கு ஆண்களைப்போலவே சொத்துரிமை வழங்க வேண்டும்,



சாதி வித்தியாசம் பாராமல் கலப்பு மணம் செய்து கொள்ளலாம்,

விதவா விவாகம் செய்யப்படவேண்டும்,

இவைகளுக்குச் சமய ஆதாரங்களில் இடமிருக்கிறது,

அன்றியும் இக்காரியங்கள் அறிவுக்கும், ஒழுக்கத்திற்கும் ஏற்றவை யாகும்.

என்பதாகத் தீர்மானித்திருப்பதோடு **மற்ற காரியங்களிலும், அறிவுக்கும், ஒழுக்கத்திற்கும் ஒத்துவராதது எதுவாயினும் அது முதநூலாயிருந்தாலும் (அதாவது கடவுள் வாக்காகவோ வேத கட்டளை யாகவோ இருந்தாலும்) அதை ஒப்புக்கொள்ளமுடியாது** என்பதாகவும் தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகின்றது. இது அதாவது பகுத்தறிவையும் (நியாயமாகிய) ஒழுக்கத்தையும் ஏற்றுக்கொண்டதோடு அக்கொள்கைகள் அவர்கள் கருதும் கடவுள் வாக்குக்கும் வேத (மறை)க் கட்டளைக்கும் விரோத மானாலும் லக்ஷியம் செய்ய வேண்டியதில்லை என்பதாகத் தீர்மானித்திருப் பதிலிருந்து மாறுதல் வேண்டுபவர்களுக்கு சற்று நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். இனி சைவம் என்பது எது அதன் கொள்கை அல்லது தத்துவம் என்பவை எவை என்பதைப் பற்றி நமக்கு இப்போது அதிகக் கவலையில்லை. ஏனெ னில் அறிவுக்கும், ஒழுக்கத்திற்கும் பொருத்தமானவைகளை ஒப்புக்கொள்வ தும், பொருத்தமற்றவைகள் எதுவானாலும் தள்ளிவிடுவதும் என்கின்ற தன்மை ஏற்பட்டுவிட்டால் அந்தக் கொள்கைகள் கொண்ட எந்தச் சமயத்தினி டமும், எந்தக் கூட்டத்தினிடமும் நமக்கு தகராறில்லை. மற்றபடி இனிமேல் அறிவு எது? ஒழுக்கம் எது நியாயம் எது? என்பது போன்ற சில விஷயங்கள் இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். இவைகள் மனிதனுக்கு மனிதன், இடத்திற்கு இடம், காலத்திற்கு காலம், நிலைமைக்கு நிலைமை வேறுபடத் தோன்றலாம், வேறுபடலாம். ஆனபோதிலும் இந்த வேறுபாடு மனிதசமூக மொத்தத்திற்கும் பொருத்தமானதே ஒழிய சைவத்திற்கு மாத்திரமோ, ஒரு தனிக்கூட்டத்திற்கு மாத்திரமோ ஏற்படக்கூடியதல்லவானதால் அதைப் பொது அபிப்பிராய வேறுபாடாகக்கருதி அவர்களுடைய ஒத்துழைப்பை ஏற்றுக் கொண்டு நடுநிலையில் இருந்து விவாதிக்கத் தாராள உரிமையும், சௌகரி யமும் ஏற்பட்டிருப்பதாகவே கருதுகின்றோம்.

முடிவில் பல்லாவரத் தீர்மானங்கள் சைவர்கள் என்பவர்களும் பண்டிதர்கள் என்பவர்களும் வேறு தத்துவார்த்தமில்லாமல் ஒப்புக்கொள் ளும் தீர்மானங்களானால் அவர்களைப் பொருத்தவரையில் பொருத்தமான விஷயங்களில் ஒத்துழைக்கத் தயாராயிருக்கின்றோம் என்பதைத் தெரிவித் துக்கொள்ளுகிறோம்.

பல்லாவரம் அடிகளை நாம் ஆதியிலேயே முரட்டுச் சைவர் களோடும், புராணப்பிழைப்புப் பண்டிதர்களோடும் சேர்த்ததேயில்லை.



RangaRakes tamilnavarasam.com

அடிகளுடைய பழைய ஆராய்ச்சி முடிவுகள் பெரிதும் முற்கூறிய கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டது என்பதும் சைவர்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களில் சிலருக்காவது சீர்திருத்த உணர்ச்சியும், சமத்துவ உணர்ச்சியும் ஏற்பட்டிருக்குமானால் - பண்டிதக் கூட்டத்தார் களில் எவருக்காவது பகுத்தறிவு உணர்ச்சி ஏற்பட்டிருக்குமானால் அது பெரிதும் திரு. மறைமலை அடிகள் சாரலாகத்தானிருக்குமென்றும் கருதி யிருந்ததோடு நாம் எவ்வெத்துறையில் எவ்வித மாறுதல்கள் விரும்பு கின்றோமோ அத்தனைக்கும் அடிகள் ஆதரவளிப்பார் என்று நம்பியும் இருந்தோம். எரிதல் காரணமாய் சிலர் பல காரணங்களால் - பல சூட்சிகளால் அடிகளை சறுக்கலில் இழுத்து விட்டார்கள். எனினும் அடிகள் முற்றிலும் சறுக்கி விடாமல் தன் ஆற்றலையே பிடித்துச் சமாளித்துக் கொண்டார். இதற்கு உதாரணம் வேண்டியவர்கள் திருநெல்வேலி சைவப் பெரியார் மகாநாட்டிற்கும் திருப்பாதிரிப் புலியூர் மகாநாட்டிற்கும் உள்ள வித்தியாசத்தையும் திருபாதிரிப் புலியூரில் அடிகள் நிகழ்த்திய சொற்பொழிவையும் நோக்கினால் உண்மையுணரலாம். எனவே இவை நமக்கறிவிக்கப்பட்ட பல்லாவரப் பொது நிலைக்கழகத் தீர்மானங்கள் என்பவைகளைக்கொண்ட அபிப்பிராயமேயாகும்.

மற்றவை முழு நிகழ்ச்சிகளையும் அறிந்த பின்னர் விபரமாய் தெரிவித்துக்கொள்ள ஆசை கொண்டுள்ளோம்.

**குடி அரசு - தலையங்கம் - 15.02.1931**



# பண்டித மோதிலால் முடிவெய்தினார்

பண்டித மோதிலால் நேரு அவர்கள் இந்தியாவில் கீர்த்திபெற்ற மனிதருள் ஒருவராவர். அதோடு பெருந்தியாகிகளுள் ஒருவராவர். அவர் ஐக்கிய மாகாணத்தில் ஒரு பேர் பெற்ற வக்கீலாயிருந்தவர். கல்கத்தாவுக்கு திரு. தாஸ் போலவும், பம்பாயிக்கு திரு. ஜெயக்கர் போலவும், மத்திய மாகாணத்திற்கு திரு.சாப்ரு போலவும், சென்னை மாகாணத்திற்கு திரு. சீனிவாச ஐயங்கார் போலவும், பெரும் பெரும் வரும்படியுள்ள வக்கீலாகவும் வக்கீல் தொழிலில் கெட்டிக்காரர் என்று பிரமாதிக்கும்படியாகவும் வாழ்க்கையில் எல்லோரைப் பார்க்கிலும் பெருமையாகவும் வாழ்ந்து வந்தவர். அவரது வீடும் வாழ்க்கைத் திட்டமும் அரண்மனைபோலவே இருக்கும்.

இந்திய பொதுவாழ்க்கையை என்றைய தினம் படித்தவர்கள் மூலமும் படித்தவர்களுக்குள்ளாகவுமே ஆரம்பிக்கப்பட்டதோ அன்று முதலே வக்கீல்களே பொது வாழ்வில் இறங்கி வேலை செய்யும் கீர்த்தி பெறவும் முடிந்து வந்தது. அந்த முறையில்தான் திரு. திலகர் முதல் திரு. சத்தியமூர்த்தி ஈராக அநேகர் அநேகமாக பொது வாழ்க்கையில் பிரசித்தி பெற்றவர்களாக நேர்ந்தது.

திரு. காந்தியவர்களும் இந்த முறையிலேயே பொதுவாழ்வுக்கு வரவேண்டியவரானாலும் அவர் பிரவேசித்த காலம் முதல்தான் அதற்கு முன் இருந்தது போன்ற அதாவது பொதுவாழ்வுப் பிரவேசம் சுயநல வாழ்வுக்குப் படிக்கட்டாயிருந்து வந்தது மாறி சிறிதாவது தியாகம் செய்து தன்னலத்தை மறுத்த பிறகேதான் பொது வாழ்வில் மக்கள் பிரவேசிக்க கூடியதாக மாறி விட்டதால் பொது வாழ்வுக்கு ஒரு கௌரவம் ஏற்பட்டு மக்களால் மரியாதை செய்ய வேண்டியதாயிற்று. அந்த நிலை நாட்டில் செல்வாக்குப்பெறவும் பொதுவாழ்க்கையை மதிக்கப்படவும் ஏற்பட்ட சம்பவங்களுக்கு திரு. காந்தியே முதன்மையான காரணஸ்தர் என்றாலும் தேசபந்து தாசும், பண்டித நேருவும் அதற்கு உயிர்கொடுத்தவர்களாவார்கள்.

தங்களுடைய அரச போகத்தையும், செல்வ வரும்படியையும் ஒரே அடியில் துறந்து வெளி வந்தவர்களில் இவ்விரு கனவான்களும் முதன்மையானவர்கள். ஆனால் தேசபந்துவை விட பண்டிதரின் தியாகம் சற்று மேம்பட்டதாகும். ஏனெனில் தேசபந்துவுக்குப் பெரும் வரும்படியும் உயர்ந்த



RangaRakes tamilnavarasam.com

போகமும், பண்டிதருக்கு இளைக்காததாக இருந்தாலும் தேசபந்துவுக்கு பணலக்ஷியமற்ற தன்மையும் எந்த நிலையையும் சரிப்படுத்திக்கொள்ளும் தன்மையும் ஏற்கனவே கொஞ்சம் இருந்துவந்ததால் அவரது தியாகமானது அவருக்கு அவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்கக் கூடியதாய்த் தோன்று வதற்கில்லாமல் இருந்தது எனலாம். ஆனால் பண்டிதரின் தியாகமானது அந்த நிலைமைக்கு முன் சிறிதும் நினைத்திருக்காத மாதிரியில் ஒரு பெரிய அர–சனை "வானப்பிரஸ்த ஆக்ஷிமத்தைக்"கைக்கொள்வதற்காக குடி படைகளோடு ஊர்வலத்துடன் வனத்தில் கொண்டு போய் விட்டு விட்டு வந்தால் அடுத்த நிமிஷம் அவனுக்கு எப்படியிருக்குமோ அதுபோல திடீரென மாறினவராவார். கஷ்ட மறியாதவர் உலக இயற்கை தெரியாதவர். உலகமே தன்னைப்போல் செல்வமாகவும், போக போக்கியமாகவும் இருப் பதாகக் கருதியிருந்தவர், திடீரென்று சன்யாசியானார். குடும்பத்தோடு சன்யாசியானார். நாளை சாப்பாட்டுக்கு என் செய்வது என்ற விசாரமில்லாமல் உள்ளதையெல்லாமிறைத்தார். சில சமயத்தில் நாளைச் சாப்பாட்டுச் செலவுக்கு வழி தேடுவது என்பது ஒரு பெரிய சிக்கலான பிரசினையாக இருந்ததுகூட நமக்குத்தெரியும். அவருக்கு மற்றவர்களைக் கேட்கவும் தெரியாது. யாராவது கொடுத்தால் அதை வாங்குவதும் பெரிய அவமானமென்றும் கருதுவார். இப்படிப்பட்ட பெருமானுக்கு இந்தப் பாக்கியங்கள் கிடைத்ததானது அவரது முயற்சியைக் காட்டிலும் அவரது ஒரே குமாரரான திரு. ஜவர்லாலுவின் முயற்சியே அதிகமானது என்று சொல்லுவது முழுதும் தவருதலாகாது. அதாவது,

அவரது குடும்பமே அந்த நிலையை அடைவதில் சிறிதும் தயங்கவில்லை என்பதாகும். பண்டிதர் திரு. காந்தியின் பழைய கொள்கைகளில் முழுகொள்கைகளையும் ஒப்புக்கொள்ள முடியாதவறாயிருந்தாலும் திரு. காந்திக்கு ஆதியில் சிறிதும் இடையூறு செய்யாதவராகவே இருந்தார். இதன் பயனாகவே திரு. காந்தியும் தனதுவசத்திற்கு இழுக்கப்பட்டார். இந்த நிலையே அவருக்கு இந்திய அரசியல் வாழ்வில் திரு. காந்திக்கு அடுத்த ஸ்தானம் கிடைக்கச்செய்தது. இதனினும் விசேஷமென்னவென்றால் இதற்கு அடுத்த ஸ்தானமும் திரு. ஜவார்லால் அவர்களுக்கே கிடைத்திருப்பதாகும். ஆகவே இன்று உலகமுறையில் ஒரு பெருமை வாய்ந்த, தியாகம் வாய்ந்த, கீர்த்திவாய்ந்த பெரியார் திரு. பண்டித மோதிலால் நேரு என்பதில் யாருக்கும் ஆக்ஷேபனை இருக்காது. மனிதர்களுக்கு வரும் பெருமையும், மேன்மையும், கீர்த்தியும் எல்லாம் அவரவர்களது கொள்கைகளினாலேயேதான் ஏற்படக்கூடியது என்று சொல்லிவிட முடியாது. மற்றபடி தியாகமும், சுயநலமின்மையுமே கொள்கை வித்தியாசத்தையும் மறைத்துவிடும். ஆகவே அந்தகுணம் இந்தியாவியில் தேசபந்துவுக்கும் நமதுபண்டிதருக்கும் கிடைத்தது. பண்டிதர் 70 வது வயதில் முடிவெய்தியது அற்ப ஆயுள் என்றோ, குறைந்த ஆயுள் என்றோ சொல்லிவிட முடியாது. ஆனாலும் பொது வாழ்வுக்கு தியாகம் வேண்டும் என்ற ஒரு உணர்ச்சிக்கு அறிகுறியாய் இருந்த



பெரியார் தன் ஸ்தானத்திற்கு ஒருவர் ஏற்படும் முன் முடிவெய்தினது மிகவும் வருந்தத்தக்கதே யாகும். இந்திய சராசரி வயது 23, இங்கிலாந்து சராசரி வயது 46. பண்டிதர் அவர்கள் இரண்டு சராசரி வயதையும் எப்படிதாண்டிவிட்டாரோ அதுபோலவே இந்தியாவிலும் மற்றும் உலகத்திலும் உள்ள சராசரி மக்களின் தன்மையில் இருந்து எத்தனையோ பங்கு மீறினவர் என்பதில் ஆக்ஷேபனையில்லை. ஆகவே அவர் முடிவெய்தும் போது எவ்வித குறைவுமில்லாமல் தனது முயற்சியின் – லக்ஷியத்தின் பயனை ஒருவாறு எய்தினார் என்றே சொல்லக்கூடும். ஒரு சமயம் கொஞ்சம் நஞ்சம் மீதி இருப்பதாக அவர் கருதி இருந்தாலும் அதைப்பற்றி சிறிதும் கவலைப்படாமலே தான் தனது கடைசி மூச்சையும் விட்டு இருப்பார் என்பது நமது உறுதி. ஏன் எனில் அவரது அருமைப் புதல்வர் திரு. ஜவர்லால் நேரு தந்தையின் பாக்கி வேலையையும் அதற்கு மேற்பட்ட புதிய வேலைகள் பலதையும் செய்து முடிப்பார் என்பதில் தந்தைக்கு சிறிதும் சந்தேகமிருந்திருக்காது என்பதுதான். ஆகவே அது போலவே பெரிய நேரு மறைந்தபோது அவர் நமக்கும் எவ்வித குறைவையும் வைத்துவிட்டுப்போகவில்லை. எப்படி எனில் சின்ன நேரு இருக்கின்றார். அவரால் தந்தையின் ஸ்தானம் அடையப்பட்டு தந்தையின் பாக்கி வேலைகள் ஏதாவது இருந்தாலும் அவை நடத்திவைக்கப்பட்டு அதைவிட முக்கியமான உண்மை விடுதலையாகிய சமதர்ம வேலைகளையும் நடத்திக் கொடுக்கவல்லவரான ஒரு அருங்குழந்தையை நமக்கு அளித்திருப்பதால் இதைக்கொண்டு நாம் சாந்தியடைவோமாக.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 15.02.1931**



RangaRakes

tamilnavarasam.com

## முஸ்லீம் வாலிபர்களுக்கு

சமீப காலமாக, அதாவது சுமார் ஒரு வருஷகாலமாக அநேக இஸ்லாம் வாலிபர்களுடனும், பல மௌல்விகளுடனும், இரண்டொரு மௌலானாக்களுடனும் நெருங்கிக் கலந்து பேசக்கூடிய சந்தர்ப்பங்கள் பல கிடைத்தன. அதிலிருந்து சுயமரியாதை இயக்கக் கொள்கைகளில் பலர் முழுவதையும், சிலர் ஒன்றிரண்டு தவிர மற்றதையும் ஒப்புக்கொள்ளு பவர்களாகவே அறியமுடிந்தது.

ஆனால் கடவுள் என்பதைப்பற்றி மாத்திரம் அவர்களில் அநேகர் தங்கள் அபிப்பிராயத்தை வெளியில் எடுத்துச் சொல்லவே பயப்படு வதையும் சிலர் அப்புறம்இப்புறம் திரும்பிப்பார்த்துப் பேசுவதையும், பார்க்கும்போது நமக்கு மிக்க பரிதாபமாகவே இருந்தது.

அதில் ஒருவர் நம்மிடம் பேசுகையில் "நீங்கள் கடவுள் என்பதைப் பற்றி பேசும், எழுதும் எழுத்துக்கள் எல்லாம் இந்துமதக் கடவுள்களைப் பற்றி மாத்திரம் பேசுகின்றீர்களா? அல்லது மற்ற மதக்கடவுள்களையும் பற்றி பேசுகின்றீர்களா?" என்று கேட்டார்.

அதற்கு நாம் விடையளிக்கையில் "நீங்கள் கடவுள் என்பதற்கு என்ன பொருள் கொண்டு கேட்டிருந்தாலும் நான் கடவுள் என்று பேசுவதில், சர்வ சக்தியும், சர்வ வல்லமையும், சர்வ வியாபகமும், உலகில் நடைபெறும் சகல நடவடிக்கைகளுக்கும் தானே காரண பூதனாயிருக்கின்றதும், அதை வணங்கி னால் நமது தேவைகள் பூர்த்தியாகுமென்பதும், அதற்கு பணி விடை செய் தால் நமது குற்றங்கள் மன்னிக்கப்படும் என்பதும் நாம் உயிருடன் இருக்கும் போது செய்த கருமத்திற்குத் தகுந்த பலனை நாம் செத்தபிறகு நமது ஜீவன் அல்லது ஆத்மா என்பவைகளுக்கு அளிக்கின்றாறது என்னப்படுவதுமான கடவுள் என்பது எந்த மதத்தைச் சேர்ந்ததானாலும், அந்த அர்த்தம் கொண்ட கடவுளைப் பற்றித்தான் பேசுகின்றோம்" என்று சொன்னோம்.

"இந்தப்படி சொல்வதற்குக் காரணம் என்ன?" என்று அவர் கேட்டார்.

நாம் அதற்கு விடையளிக்கையில், "இந்த மாதிரியான ஒரு கடவுள் தன்மையை மக்களுக்குள் புகுத்துவதால் மனித வர்க்கம் தன் முயர்ச்சியற்று, முற்போக்கற்றுப் போவதற்கு இடமேற்படுகின்றது என்றும், இந்தியா இன்று



இந்த மிருகப்பிராய நிலையில் இருப்பதற்கு இதுவே காரணம் என்றும், மற்றும் மக்களில் உயர்வு தாழ்வும், செல்வவானும், தரித்திரனும் இருக்க இதுவே காரணம்" என்றும் சொன்னோம்.

அதற்கவர் "அப்படியானால் உங்களுடைய கடவுள் சம்பந்தமான எழுத்துக்கள் எங்கள் ஆண்டவனையும் தானே சேர்த்துப் பேசுவதாயிருக் கின்றது" என்று சொன்னார்.

நாம் அதற்கு, நான் என்ன செய்யலாம், உங்களுக்காக வேண்டு மானால் இஸ்லாமானவர்கள் கடவுள் தவிர என்று சொல்லி விடட்டுமா? என்று சொன்னோம்.

அதற்கவர் சிரித்துக்கொண்டே, எங்களைப் பரிகாசம் செய்கிறீர்களா? என்று கேட்டுவிட்டு "நீங்கள் மேலே குறிப்பிட்டகுணமும், தன்மையும் கொண்ட கடவுளைப்பற்றித்தான் சொல்லுகின்றேன் என்று சொன்னபிறகு, இஸ்லாமானவர்கள் கடவுள் மாத்திரம் அதிலிருந்து எப்படி விலக்கப்படும் என்றும் இன்றைய தினம் எல்லா மார்க்கத்தாரும் இந்த மாதிரியாகத்தானே கடவுளைக் கருதிக் கொண்டிருக்கின்றார்கள்" என்று சொன்னார்.

அப்படியானால் அதற்கு நாம் என்ன செய்வதென்று சொன்னோம்.

அதற்கவர் "அதை மாத்திரம் விட்டுவிடக்கூடாதா" என்றார்.

நாம் எதை, இஸ்லாம் கடவுளை மாத்திரமா? என்றோம்.

அவர் மறுபடியும் சிரித்துக் கொண்டு "பொதுவாகக் கடவுள் என்பதையே தான் சொல்லுகின்றேன்." என்று சொன்னார்.

நாம் மற்ற கடவுள்களைச் சொன்னால் உங்களுக்கு என்ன நஷ்டம் வந்துவிட்டது என்றும், வேண்டுமானால் உங்கள் கடவுளைச் சொல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்றும் சொன்னோம்.

இவற்றை நாம் பரிகாசமாய் சொல்லுவதாக அவர் உணர்ந்து பிறகு உண்மையாய் பேசுவதாய்ச் சொல்லிப் பேசியதாவது :–

"நீங்கள் சொல்லுவதில் குற்றம் இருப்பதாக நான் சொல்லவரவில்லை. ஆனால் என்போன்றவர்கள் அதில் கலந்து கொள்ளமுடியவில்லை என்பது தான் எனது கவலையே ஒழிய கடவுளைப் பற்றிய கவலை எனக்குச் சிறிதும் கிடையாது. சுமார் பத்துவருஷ– காலமாகவே எனக்கிருந்ததில்லை. ஆனா லும் கவலை இருக்கின்றதாக நம்பிக்கொண்டு நடக்கின்றவர்களைவிட நான் மிகவும் ஒழுக்கத்துடனும், நியதியுடனும் நடந்து வந்திருக்கின்றேன் என்று உறுதியாய்ச் சொல்லுவேன். ஆனால் என்னுடைய நடவடிக்கையை விட கடவுளைப் பற்றிக்கவலை கொண்டிருப்பதாக நான் நடந்து கொண்ட வேஷ



RangaRakes tamilnavarasam.com

நடவடிக்கையே என்னை பிறத்தியார் மதிக்கச் செய்திருக்கின்றதே அல்லாமல் என் ஒழுக்கத்தைப்பற்றி யாரும் மதிப்பதில்லை. ஆதலால் கடவுளைப் பற்றி கவலையில்லை என்று சொல்லிவிட்டால் என்னை எனது மார்க்கத்தார்கள் ஒழித்து விடுவார்கள்" என்று சொன்னார்.

அதற்கு நாம் உங்களுக்கு அந்த மாதிரி மக்களின் மதிப்பு வேண்டு மானால் அந்தப்படியே நடவுங்கள் இல்லாவிட்டால் தைரியமாய் உண்மை யை எடுத்துச் சொல்லுங்கள் என்று சொன்னோம்.

பிறகு, அவர் கடைசியாக முஸ்லீம் வாலிபர்களுக்குள்ளாவது இப்படியொரு இயக்கம் ஆரம்பிக்கலாம் என்று கருதியிருக்கிறேன் என்று சொன்னார். அதற்கு நாம் மிகவும் சந்தோஷம் என்று சொன்னோம். பிறகு வேறு பல விஷயங்கள் பேசினோம்.

நிற்க, இந்தப்படியான எண்ணமுள்ள இன்னும் அநேக வாலிபர்கள் இருக்கின்றார்கள். இரண்டொரு வாலிபர்கள் இதற்காக அதாவது சுய மரியாதை இயக்கத்தின் மீதுள்ள ஆர்வத்தால் தங்களது மார்க்கத்தைக்கூட விட்டுவிடத் தயாராயிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி அவர் சொல்ல நேர்ந்த அவசியம் அவருக்கு மனித சமூகத்தினிடமிருக்கும் அன்பானது அவருடைய மார்க்கத்தைவிட பெரியதாகக் கருதியதேயல்லாமல் வேறல்ல.

ஆகவே, அப்படிப்பட்ட வேகமுள்ள வாலிபர்களானாலும், மௌல்வி களானாலும் தங்கள் சமூகத்திலுள்ள சில பழக்க வழக்கங்கள் மார்க்கத்தின் பேரினாலும், புரோகிதர்களாலும், இந்துக்கள் சாவகாசத்திலானாலும் அவை மனித இயற்கைக்கும், தர்மத்திற்கும் விரோதமாய் இருந்தால் அக் கொள்கை களை அதிலிருந்து கொண்டே திருத்த முயற்சிப்பதுதான் பயனளிக்குமே யொழிய மார்க்கத்தை விட்டு திடீரென்று வெளியேறி விட வேண்டியதில்லை என்பதே நமது அபிப்பிராயம். இந்தப்படி அவர்களை அந்த மார்க்கக் கட்டளைப்படி நடந்து ஆண்டவன் என்பவரிடம் சன்மானம் பெறவோ, மோக்ஷமடையவோ நாம் அப்படிச் சொல்லவில்லை. ஆனால் அவர்கள் அந்த மார்க்கப் பேரைச் சொல்லிக்கொண்டாவது, அந்த சமூகத்தை சீர் திருத்தம் செய்யப் பயன்படுவார்களே என்கின்ற ஆசையின் மீதேயாகும்.

கமால் பாக்ஷா வீரர் மார்க்கத்தை வெளிப்படையாய் விட்டிருந்தாரா னால், அவரால் அந்த சமூகத்திற்கு அவ்வளவு நன்மை செய்திருக்க முடியாது. ஆதலால் நமது முஸ்லீம் வாலிபர்களும், வங்காள முஸ்லீம் வாலிபர்கள் ஏற்படுத்திக்கொண்டிருப்பதுபோல இந்த மாகாணத்திலும் புரோகித ஒழிப்புச் சங்கமென்பதாக ஒரு ஸ்தாபனம் ஏற்பாடு செய்து கொண்டு அதன் மூலம் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளில் அநேகத்தை நிறைவேற்றி வைக் கலாம். அன்றியும் இந்தத் துறையில் மற்றவர்களைவிட முஸ்லீம்களுக்கு வேலை குறைச்சலாய் இருக்கின்றதென்றே சொல்லுவோம். ஏனெனில்



அவர்களுடைய மார்க்கக் கட்டளைகள் என்பதில் பல ஏற்கனவே சுய மரியாதைக் கொள்கையாகவே இருக்கின்றன.

ஆகையால் கடவுளைப் பற்றிய பேச்சு மாத்திரம் அவர்களுக்கும் வேண்டியதில்லை என்பது நமது அபிப்பிராயமாகும். வேண்டுமானாலும் அதை முதலில் பிரசாரம் செய்வதைவிட மற்ற காரியங்களைச் செய்வதே அனுகூலமானதாகும். விவகாரம் வரும்போது அதைப்பற்றியும் பேச யாரும் பயப்படவேண்டியதில்லை. ஆனால் அது அவரவருடைய சொந்த அபிப்பி ராயம் என்றுகூட சொல்லிக் கொள்ளலாம்.

ஆகவே முடிவாக நாம் சொல்லிக் கொள்வதென்னவென்றால் முஸ்லீம் வாலிபர்கள் இந்த தமிழ்நாட்டில் ஒரு புரோகிதமொழிப்புச் சங்கம் ஏற்படுத்திக்கொண்டு மக்களை புரோகிதக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கும் படியும், தங்கள் தங்கள் பகுத்தறிவுக்கு மதிப்பு கொடுக்க மக்களுக்குத் தைரி யம் வரும்படியாகவும் செய்ய வேண்டியது முதல் கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இதற்கு அவசியமும் மற்ற இதன் முழு விபரங்களும் வேண்டுமானால் வங்காள முஸ்லீம் புரோகிதமொழிப்புச் சங்கத்தாரிடமிருந்து தகவல்களை கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். இதன் அவசியத்திற்குக் காரணம் அவர்கள் சொல்லுவதற்கு மேல் நாம் ஒன்றும் சொல்லிவிடமுடியாது. மூட நம்பிக்கை என்பதும் புரோகித ஆக்ஷியென்ப தும் எந்த மதத்திலும் இருக்கக்கூடாது என்பதை யாரும் ஒப்புக்கொள்ளு கின்றார்கள். ஆனால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மதத்தில் அவை இல்லை என்று சொல்லிவிட்டு அன்னிய மதத்தில் இருப்பதாகச் சொல்லு கின்றார்கள். ஆதலால் இன்ன மார்க்கத்தில்தான் இருக்கின்றது என்றும், இன்ன மார்க்கத்திலில்லை யென்றும் யாரும் வாதிட வேண்டியதில்லை. நடு நிலைமையிலிருந்து, தங்கள் பகுத்தறிவைக் கொண்டுபார்த்து, தங்களுக்கு இருப்பதாய் தோன்றினால் அதை விலக்கட்டும். தோன்றாவிட்டால் அப்ப டியே இருக்கட்டும் என்கின்ற கொள்கை வைத்தே முதலில் வேலை துவக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். வேலை துவக்கினால் பொதுநல ஊக்கமுள்ளஅநேக மௌல்விகள்கூட ஒத்துழைக்கத் தயாராயிருக் கின்றார்களென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 15.02.1931**



RangaRakes tamilnavarasam.com

# சுயமரியாதை மகாநாடு - முன்னேற்பாடு கூட்டம்

வரவேற்புத் தலைவர்களே, நண்பர்களே இன்று இங்கு கூடியிருப்பது 3-வது சுயமரியாதை மகாநாட்டை விருதுநகரில் நடத்தும் விஷய மாய் யோசிப்பதற்காகவேயாகும். மகாநாட்டை ராமனாதபுரம் ஜில்லாவில் நடத்துவதென்பது சென்ற வருஷம் ஈரோட்டில் நடந்த இரண்டாவது மகா நாட்டின் போதே இச்சில்லாவாசிகள் அழைக்கப்பட்டு தீர்மானித்த விசய மாகும். இராமநாதபுரம் ஜில்லாவில் எங்கு நடத்துவது என்பது சமீபத்தில் ஈரோட்டில் நடந்த நிர்வாக சபை கூட்டத்தில் விருதுநகர் பிரமுகர்களில் சிலர் முன்னிலையில் அவர்களது சம்மதத்தின் மீது முடிவு செய்ததாகும்.

ஆகவே இங்கு நடைபெறும் விஷயத்தில் எல்லாவற்றையும் விட இவ்வூர் பிரமுகர்களுடையவும், வாலிபர்களுடையவும் ஒத்துழைப்பும் ஊக்கமுமே அதிகமாக வேண்டியதாகும். நமது இயக்கத்தின் முக்கியத்தைப் பற்றியும் அதன் பயனைப் பற்றியும் உங்களுக்கு அதிகம் சொல்ல வேண்டிய தில்லை. இதற்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பிரசாரமும் இதற்கு ஏற்பட்டிருக்கும் எதிரிகளின் தன்மையும் கவனித்தாலே விளங்கிவிடும். எப்படி எப்படியோ மூன்று நான்கு வருஷங்களை இயக்கப் பிரசாரம் நடைபெற்றதுடன் இரண்டு பெரிய மகாநாடுகள் நடந்து மூன்றாவது மகாநாடு நடக்கப் போகின்றது. இயக்கம் ஆரம்பித்தவுடன் பலர் இது மூன்று நாளையில் செத்துப்போய் விடும் என்றார்கள். ஆரம்பத்திலேயே மதக்காரர்களும் வெகு பலமாக உண்டாக்க முயன்றார்கள். என்மீது சொந்தமுறையில் பல பழிப்புகளையும் கெட்ட எண்ணங்களையும் உண்டாக்கினார்கள்.

அவ்வளவையும் தாண்டி எதிரிகளுக்கு சமீபமாய் செங்கற்பட்டி லேயே முதலாவது மகாநாடு மிகவும் பிரக்யாதியாய் நடந்தது. அந்த மகாநாட்டிற்கு அநேகமாய் இம்மாகாணப் பிரபலஸ்தர்கள் உட்பட சுமார் பத்தாயிரம் பேர் விஜயம் செய்திருக்கிறார்கள். அதன் பிரபலத்தைப் பார்த்த எதிரிகள் இந்த வருஷம் ஏதோ ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரிகள் ஆகியவர் களிடமும் அரசாங்கத்தாரிடமும் உள்ள தனி செல்வாக்கு காரணமாய் மகாநாடு பிரபலமாய் நடந்துவிட்டதேயொழிய கொள்கையின் தத்துவத் தினாலல்ல என்று பேசியதோடு இனி அதே மகாநாடு எங்கும் நடக்காது



என்றும் இதுவே முதலும் இதுவே கடைசியும் என்று சொன் னார்கள். மகாநாட்டுத் தீர்மானங்களைப் பற்றி நாடெல்லாம் விஷமபிரசாரம் செய்தார்கள். இவ்வளவையும் தாண்டி இரண்டாவது மகாநாடும் ஈரோட்டில் மந்திரிகள் தயவில்லாமலும், ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் தயவில்லாமலும் அரசாங்கத்தார் சம்மதமே சிறிதும் இல்லாமலும் இயக்க அனுதாபிகள் முயற்சியிலேயே செங்கற்பட்டு மகாநாட்டை விசேஷமாக இல்லா விட்டா லும் குற்றம் சொல்வதற்கில்லாமல் நடந்துவிட்டது. சட்ட மறுப்பு இயக்கத் தின் செல்வாக்கு நமது இயக்கத்திற்கு விரோதமாய் இருந்தும் லட்சியம் இல்லாமல் நடந்தேறிவிட்டது. அதற்குப் பிறகு இந்த வருடமும் இன்றுவரை கொள்கைகள் மேலும் மேலும் தீவிரமாய் குந்தகமும் இல்லாமல் இயக்கம் பரவிக்கொண்டே இருக்கிறது.

ஆனால் இரண்டாவது மகாநாட்டைப் பார்த்தபின்பு நமது எதிரிகள் இந்த மகாநாடு ஈரோட்டில் அல்லாமல் வேறு எங்கு போட்டிருந்தாலும் நடந் திருக்காது. அவருடைய சொந்த ஊரானதினால் நடந்துவிட்டது. இனி அடுத்த வருஷம் நடக்காது என்றார்கள். பிறகு அடுத்த மகாநாடு இராம நாதபுரம் ஜில்லாவிற்கு அழைக்கப்பட்டிருக்கின்றது என்றவுடன் தலைவர் திரு. பாண்டியன் அவர்கள் இராமநாதபுரம் ஜில்லாபோர்டு பிரசிடென்டாய் இருப்பதால் ஒரு சமயம் நடந்தாலும் நடக்குமேயொழிய மற்றபடி அந்த ஜில்லாவில் நடத்த முடியாது என்று சொன்னார்கள். ஆகவே திரு. பாண்டி யன் அவர்கள் இப்போது பிரசிடெண்டு வேலையை விட்டு விட்டதால் இனி நடக்காதென்றே கருதியிருந்தாலும் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் கண்டிப்பாய் ஏமாந்து போவார்கள் என்பது நிச்சயம்.

தவிரவும் இந்த விருதுநகர் மகாநாடானது பெரியதொரு பிரபல மகாநாடாக இருக்கப் போகின்றதென்பதை இப்போதே ஞாபகத்தில் வைத் துக் கொள்ளுங்கள். செய்கையில் கொண்டு வரவேண்டிய பல தீர்மானங் களும் இன்னும் முற்போக்கான பல தீர்மானங்களும் இங்கு தீர்மானிக்கப்பட போகின்றது. அப்போது இன்னும் அநேகர் நமது எதிரிகளாவார்கள். அரசாங்கத்தாரும், காங்கிரஸ்காரர்களுடன் சேருவார்களே தவிர நம்முடன் சேர மாட்டார்கள். இருவரும் சேர்ந்து அதிகமாக இருக்கும். அதைவிட ஜமீன்தாரர்கள் முதலியவர்களின் தொல்லைகளும் இருக்கும். அதைவிட மக்களை ஏமாற்றி அதிகச் சம்பளம் பெற்று சோம்பேரியாய் வாழும் ஆங்கிலம் படித்த கூட்டம் இருக்கும். ஆகவே இந்த நிலைகளை சமாளிப்ப தென்பது லேசான காரியமல்ல. ஆகவே, நாம் வருங்காலத்தில் அதிகமான தொல்லைக்குத் தலை கொடுக்க வேண்டிய அளவுக்கு முன்னதாகவே தக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டியதாய் விருதுநகர் மகாநாடு நடைபெற வேண்டியிருக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். நமது கடைசி லட்சியம் உயர்ந்த ஜாதி என்பதில்லாமல் போகவேண்டுமென்பது மாத்திரமல்லாமல் ஏழை பணக்காரன் என்கின்ற வித்தியாசமும் இல்லாமல்



RangaRakes tamilnavarasam.com

இருக்கவேண்டும் என்பதோடு ஆளுகின்றவன், ஆளப்படுகின்றவன் என்கின்ற வித்தியாசமும் இல்லாமல் போகவேண்டும் என்பதாகும். இதற்கு விருதுநகரில் விதைபோட வேண்டும் என்பதே எனது உத்தேசம். ஆகையால் இந்த மகாநாட்டை சிறப்புற நடத்திக் கொடுங்கள்.

*குறிப்பு : விருதுநகர் காஸ்மாபாலிட்டன் கிளப்பில் 09-02-1931 அன்று மாலை நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 15.02.1931**



# "எனது காதல்"

மேற்கண்ட தலைப்பின்படி 'எனது காதல்' என்பதாக தலைப் பெயரிட்டு கலப்பு மணம் செய்து கொள்ள முடிவுசெய்திருப்பதாகக்கண்டு ஒரு கடிதம் ராமநாதபுரம் ஜில்லாவில் இருந்து ஒரு பெண்மணி எழுதியதாக எழுதப்பட்டு பிரசுரிப்பதற்காக நமக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது.

அதில் கையெழுத்தில்லாததாலும், எழுத்துக்கள் பெண் எழுத்துத் தானா என்று சந்தேகிக்கப்படக்கூடியதாகவும் இருப்பதால் அதை பிரசுரிக் கக்கூடவில்லை. ஆனால் அக்கடிதக் கொள்கைக்கு நாம் சார்பளிக்க வேண்டியது அவசியமாயிருப்பதால் அதை பிரசுரிக்க வேண்டியது அவசியமெனவும் தோன்றுகின்றது.

ஆகவே கையெழுத்துடனும், அது எழுதப்பட்ட பெண்ணின் படம் அல்லது கைரேகையுடனும் நமக்கு வேறு கடிதம் எழுதி அனுப்பப்பட்டால் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். அதில் கண்டகாரியம் நடைபெறவும் நம்மால் ஆன அனுகூலம் செய்யத்தயாராயிருக்கின்றோம். (ப-ர்.)

**குடி அரசு - பத்திராபர் குறிப்பு - 15.02.1931**



RangaRakes tamilnavarasam.com

# காந்தி - இர்வின் சம்பாஷணைப் பலன் என்னவாகும்?

இந்தியாவின் முன்னேற்றமானது காங்கிரஸ் ஆரம்பித்தகாலம் முதலே தடைப்பட்டு விட்டதானாலும் சைமன் கமிஷன் ஏற்பட்டது முதல் அதன் பேராலும் பல தடைகள் ஏற்பட்டு வந்தன. இப்போது தொடர்ச்சியாக சட்ட மறுப்பின் மூலமாகவும் வட்ட மேஜை மகாநாட்டின் மூலமாகவும், போறாக் குறைக்கு காந்தி – இர்வின் சமரசப் பேச்சின் மூலமாகவும் மக்க ளின் கவனங் கள் இழுக்கப்பட்டு காலம் வீணாகிக் கொண்டே வருகின்றது. அரசியலையே வாழ்வாகவும் தொழிலாகவும் கொண்டவர்களால் இவை பிரமாதப்படுத்தப் பட்டு பொது மக்களின் கவனங்கள் அதில் திருப்பப் படுகின்றன.

எப்படியிருந்த போதிலும், இந்த காந்தி – இர்வின் சமரச சம்பா ஷணை நாளைக்கு என்னமாக முடிந்த போதிலும் கடைசியாக இது ஒரு மினக்கெட்ட வேலையாக முடியப்போகின்றதேஒழிய காரியத்தில் ஒரு பயனையும் உண்டாக்கப்போவதில்லை என்பது மாத்திரம் உறுதியேயாகும்.

சைமன் கமிஷன் ரிப்போர்டிலும் வட்ட மேஜை மகாநாடு முடிவிலு மாவது பெண்கள் முன்னேற்றத்திற்கு ஏற்ற பிரதிநிதித்துவத்திற்கும் தாழ்த்தப் பட்ட கொடுமைப்படுத்தப்பட்ட மக்கள் முன்னேற்றமடையத்தக்க பிரதிநிதித் துவத்திற்கும் ஹேது ஏற்பட்டுவிட்டது என்று சொல்லலாம். இது இந்தியா வின் பெரும்பான்மையான மக்களுக்கு சுதந்திர உணர்ச்சி வழங்கினது போல ஆயிற்று. ஆனால் காந்தி – இர்வின் சம்பாஷனையால் ஒன்றுமே ஏற்படப் போவதில்லை என்று தான் சொல்லவேண்டும்.

சமரசப் பேச்சு பேசுவதற்கு முதல் முதலாவது திரு. காந்தியவர்களின் நிபந்தனைகள் ஆறு என்று சொல்லப்படுகின்றது. அவற்றில் முதலாவது அரசாங்கக் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்பது.

இரண்டாவது சர்க்கார் அடக்கு முறைகளை நிறுத்தவேண்டும் என்பது.

மூன்றாவது போலீசார் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது.



நான்காவது பரிமுதல் செய்த சொத்துக்களைத் திருப்பிக்கொடுத்து விடவேண்டும் என்பது.

ஐந்தாவது இயக்கத்திற்கனுகூலமாகவும் சர்க்காருக்கு விரோதமாக வும் இருந்ததற்காக தண்டிக்கப்பட்ட சர்க்கார் உத்தியோகஸ்தர்களை மன்னிக்க வேண்டும் என்பது.

ஆறாவது கள்ளுக்கடையையும் அன்னிய நாட்டு ஜவுளிக்கடை யையும் மறியல் செய்வதை சர்க்கார் தாராளமாய் அனுமதிக்க வேண்டும் என்பது ஆகிய இவைகளாகும்.

சட்டமறுப்பு நிறுத்தப்பட்டதாய் திரு. காந்தி அவர்களால் ஒப்புக் கொள்ளப்படுமானால் சர்க்கார் தண்டித்து ஜெயிலில் வைத்திருக்கும் கைதி களை வெளியில் விடுவதிலும் அடக்கு முறைச் சட்டங்களை எடுத்து விடுவ திலும் சர்க்காருக்கு ஆக்ஷேபணையிருக்க சிறிதும் நியாயமிருக்காது என்று நினைக்கின்றோம். பரிமுதல் செய்த சொத்துக்களை திருப்பிக் கொடுத்து விடுவதிலும் சர்க்காருக்கு ஆக்ஷேபனை இருக்க நியாயமில்லை. ஒரு சமயம் வரி செலுத்தாததால் ஏலம் போடப்பட்ட சொத்துக்களை ஏலம் எடுத்தவர்களி டமிருந்து திருப்பி வாங்கிக் கொடுப்பது சர்க்காருக்கு கஷ்ட மாயிருக்கு மானால் கூட அதற்கு தகுந்த துகையை ஈடு செய்து திருப்பி வாங்கிக்கொடுத்து விடலாம்.

தவிர போலீசார் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டு மென் பதும், தண்டிக்கப்பட்ட சர்க்கார் அதிகாரிகளின் தண்டனையை மாற்றி அவர் களுக்கு உத்தியோகம் கொடுக்கப்படவேண்டும் என்பதும் ஒன்றுக் கொன்று முறண்பட்ட காரியமாகும்.

ஏனெனில் சர்க்காருக்கு விரோதமாய் ஜனங்களுக்கு அனுகூலமாய் நடந்தவர்கள் மன்னிக்கப்படவேண்டுமென்றால் ஜனங்களுக்கு விரோத மாய் சர்க்காருக்கு அனுகூலமாய் நடந்தவர்களும் மன்னிக்கப்பட வேண்டியது சர்க்காருக்கு நியாயம் என்றே தோன்றும். ஒரு சமயம் இந்த நிபந்தனையானது தண்டிக்கப்பட்ட சர்க்கார் உத்தியோகஸ்தர்களைக் காப்பாற்றுவதற்காக கொண்டுவரப்பட்டதாக இருந்தாலும் இருக்கலாம். ஆகவே இதிலும் பிரமாத மாக ஜனங்களுக்கு லாபமோ சர்க்காருக்கு நஷ்டமோ இருப்பதாய் விளங்க வில்லை.

கடைசியாக ஆறாவது நிபந்தனையாகிய கள்ளுக்கடை மறியலும் ஜவுளிக்கடை மறியலும் நடக்க அனுமதிக்கவேண்டும் என்கின்ற நிபந்தனை விவகாரத்திற்கு பொருந்தாததாகவே காணப்படுகின்றது. அவை இரண்டை யும் மறியல் செய்து ஒழிக்கவேண்டியது அவசியமா இல்லையா என்பது வேறு விஷயம். அது ஒரு ராஜி நிபந்தனைக்குப் பொருத்தமானதா என்பது தான் இங்கு யோசிக்கத்தக்க விஷயமாகும்.



RangaRakes tamilnavarasam.com

ஏனெனில் முக்கியமாய் கள்ளுக்கடைமறியல் செய்ததற்காகவும் ஜவுளிக்கடை மறியல் செய்ததற்காகவும் தான் அதிகமானவர்களை கைதி செய்யப்பட்டும், இப்போதும் கைதி செய்துகொண்டும், போலீசாரால் அடிக்கப்பட்டும் வரப்படுகிறது. அப்படி இருக்க "அந்தக் காரியங்களை நான் செய்து கொண்டுதான் இருப்பேன் அதற்காக கைதி செய்தவர்களை விட்டுவிடத்தான் வேண்டும்" என்று சொல்வது எப்படிப் பொருத்தமானது என்பது விளங்கவில்லை. வேண்டுமானால் பேசப்போகும் சமாதானத் திட்டத்தில் ஒரு நிபந்தனையாக அதாவது "கள்ளுக்கடைகளை எடுத்துவிட வேண்டும். வெளிநாட்டு துணிகளை இந்தியாவிற்குள் வரவிடக்கூடாது" என்று பேசலாம்.

அதை விட்டுவிட்டு இந்தப்படி கேட்பது "கிளர்ச்சி செய்துகொண்டிருக்க சர்க்கார் சம்மதிப்பது தான் கிளர்ச்சியை நிருத்துவதாகும்" என்று சொல்வதுபோல்தான் காணப்படுகின்றது.

ஆகவே இவற்றின் விவகாரத் தன்மை எப்படியோ ஆகட்டும். இதனால் எல்லாம் இந்தியாவுக்கு ஏற்படப் போகும் பலன் என்ன என்பதுதான் இப்போது இங்கு யோசிக்கப்படும் விஷயமாகும்.

மரியலின் மூலமாய் மது பானத்தையும், அதன் கெடுதியையும் நிருத்திவிடலாம் என்பது சாத்தியப்படக்கூடியது என்று நினைக்கத்தகுந்த காரியமல்ல என்பதே நமதபிப்பராயமாகும். இந்து மதத்தில் 100-க்கு 60 பேர்களுக்கு மேலாகவே இன்றும் இந்துக்களின் கடவுள்களில் சிலவற்றுக்கு கள்ளு, சாராயம், கஞ்சா, அபினி வைத்துப் படைக்க வேண்டியிருப்பதும், அதைப் பிரசாதமாய்க் கொள்ளவேண்டியதாயிருப்பதும், சுலபத்தில் மறைத்து விடக்கூடிய காரியமல்ல, கள்ளை நிருத்த வேண்டுமானால் முதலா வதாக அந்தக் கடவுள்களையும், கடவுள் பூசைகளையும், சட்ட மூலமாகவும், மரியல் மூலமாகவும் ஒழித்தாகவேண்டும். இரண்டாவதாக சர்க்காருடைய கள்ளு இலாக்கா நிர்வாகத்தில் நமது மக்கள் இருந்து கொண்டு நிர்வாகம் நடத்திக் கொடுத்து பயன்பெறுவதை நிருத்தியாக வேண்டும். கள்ளுக் கடையில் நின்று கொண்டு செய்யும் மரியலை நிருத்திவிட்டு கள்ளு நிர்வாக இந்திய அதிகாரிகள், உத்தியோகஸ்தர்கள் வீட்டிலும், ஆபீசிலும், மரியல் செய்யவேண்டும்.

இந்தப்படிக்கு இல்லாமல் கள்ளுக் கடையின் முன்னால் நின்று கொண்டு போலி நாடகம் நடிப்பதில் எப்படி கள்ளு நின்றுவிடும்? என்பது நமக்கு விளங்காது. அது போலவே வெளிநாட்டுத் துணியை நிருத்த வேண்டுமென்றால் கப்பலி லிருந்து இறக்குமதியாவதை மாத்திரம் காவல் வைத்துத் தடுப்பதால் ஒருவித பயனும் ஏற்பட்டுவிடும் என்று நினைப்ப தற்கில்லை. ஏனெனில் நம்மை விட அதிகமான கூலி சம்பாதிக்கும் படியான ஒரு நாட்டில் செய்யப்பட்ட சரக்கானது மிக்க குறைந்த கூலிக்குக் கிடைக்கும் ஆள்கள் இருக்கும் நாட்டில் கொண்டுவந்து இந்த நாட்டுச் சரக்கை விட குறைந்த விலைக்கு விற்பதென்றால் இதன் குற்றம் எங்கு இருக்கின்றது என்று உணரவேண்டாமா என்று கேட்கின்றோம். இங்கிலாந்தில் நூற்பு நெசவுத் தொழிலில் ஈடுபட்ட கூலிகள் தினம் ஒன்றுக்கு ஆள் ஒன்றுக்கு 3ரூ. 4ரூ. 5ரூ. வீதம் சம்பாதிக்கிறார்கள். இந்தியாவில் நூற்பு நெசவுத் தொழிலில் ஈடுபட்ட கூலிகள் தினம் ஒன்றுக்கு சிலர் 2 அணாவும் சிலர் 8 அணா, 10 அணா, 12 அணாவும்தான் சம்பாதிக்கிறார்கள். தினம் ஒன்றுக்கு ஆள் ஒன்றுக்கு 3ரூ. 4ரூ. கூலிகொடுத்து நூற்று நெய்து, போக வரக் கப்பல் சார்ஜ்ஜும் கொடுத்து வரியும் கொடுத்து இந்திய விலையைவிட எப்படி சல்லீசாய் கொடுக்க அவர்களால் முடிகின்றது என்பதை யோசித்து அதற்குத் தகுந்த வழிசெய்யாமல் வெளி நாட்டார் மீது கோபிப்பதில் என்ன பலன் என்றே திரும்பவும் கேட்கின்றோம். ராட்டினத்தையும், தக்களி யையும் வைத்துக்கொண்டு கை நெசவில் நெய்துகொண்டு 2000 வருஷம் உட்கார்ந்து தவம் செய்தாலும், எப்படிப் பட்ட சட்டமறுப்பு செய்தாலும் ஒரு காலமும் நாம் சீமைவிலை அடங்கும்படி துணிகளை வழங்க மாட்டோம் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள விரும்புகின்றோம்.

யந்திரங்கள் செய்வதில் நமக்குச் சிறிதும் கவலையில்லை. யந்திரங் கள் மூலமாய் வஸ்துக்களை உண்டாக்குவதில் நமக்குச் சிறிதும் கவலை யில்லை. அது மாத்திரமல்லாமல் இந்த இரண்டு காரியமும் இந்தியாவின் "தரித்திர நாராயணன் பேரால் பெரிய பாவம்" என்று கருதிக்கொண்டு 1000 வருஷத் திற்குமுன் இருந்த இராட்டினத்தையும், சோம்பேரிகள் சாப்பிட்ட சாப்பாடு ஜீரணமாவதற்காகச் செய்து கொண்டிருந்த தக்ளியையும் கொண்டு சீமைத் துணியை மரியல் செய்ய வேண்டுமென்று சொன்னால் சிறிதாவது அறிவும், சுயேச்சையும் உடையவர்கள் எப்படி உடன்படக் கூடும் என்று கேட்கின்றோம்.

இந்த மாதிரி மறியலால் இந்திய மக்களுக்கு என்ன பலன் கிடைக்கக்கூடும் என்றும் கேட்கின்றோம். இந்திய தேசிய செல்வமெல்லாம் சாமிக்கும், சடங்குக்கும் அழுதுவிடுவதின்மூலம் ஏழை மக்களுக்கு வேலை இல்லாமல் செய்துவிட்டு, ஏழைகளின் அவசியமான சாதனங்களையும், சல்லீசாய் அடையமுடியாமல் இந்தப்படி தடுத்துவிட்டால் எப்படி ஒரு நாடு முற்போக்கடைய முடியும்?

உண்மையான நல்ல எண்ணத்துடன் மறியல் வேலை செய்ய வேண்டுமானால் மறியலுக்கு வேறு நல்ல காரியம் இல்லை என்று யாராவது சொல்லி விட முடியுமா? இந்திய தேசியத்தின் பேரால், அரசியலின் பேரால், சீர் திருத்தத்தின் பேரால் ஏழைகள் பணத்தை வரியாகத் தட்டிப் பிடிங்கி சம்பள மாகப் பகல் கொள்ளை அடிப்பதை ஏன் மறியல் செய்யக்கூடாது என்று கேட்கின்றோம். உலகத்தில் எந்த தேசத்திலும் அந்தந்த தேச சர்க்காரை


RangaRakes tamilnavarasam.com

நடத்துவதற்கு அந்தந்த நாட்டு மக்கள் அடையும் சம்பளத்தை விட இந்த தேசத்தில் இந்த தேச படித்த மக்களால் தேசியவாதிகளால் 100க்கு 200, 300 பங்கு வீதம் அதிகமாக கொள்ளை அடிக்கப்படுகின்றது. ஏழை மக்களுக்கும் சாதாரண மக்களுக்கும் மற்ற தேசமக்கள் அடைவதை விட 100க்கு 50 பங்குக்கு மேல் குறைவாய் கொடுக்கப்பட்டு வருகின்றது. இதை யார் கவனித்தார்கள்? கவனிக்கின்றார்கள்? என்று கேட்கின்றோம். மற்றும் இந்த உலகத்தில் வேறு எந்த தேசத்திலும் மதத்திற்காகவும் மதம் காப்பாற்றப் படுவதற்காகவும், கடவுளுக்காகவும் கடவுள்கள் காப்பாற்றப்படுவதற் காகவும், அனாவசியமாய் ஒரு தம்பிடியும் செலவாகாமல் கவனிக்கப் படுகின்றது. இந்த தேசத்தில் இந்த தேச செல்வத்தின் பெரும்பாகம் அதாவது சரிபகுதிக்கு மேலாகவே மதத்திற்கும், கடவுளுக்கு மென்று நாசமாக்கப்படுகின்றது. இதை யாராவது திரும்பிப்பார்க்கின்றார்களா என்று கேட்கின்றோம். போறாக்குறைக்கு செத்துப்போன தேசியத்தலைவருக்கும் சிரார்த்தம் செய்யப்பட்டு ஜனங்களுக்கு சடங்கின் முக்கியத்தைப்பற்றி பிரசாரம் செய்து வழி காட்டப்பட்டாய் விட்டது. இருக்கின்ற தேசியத் தலைவர்களாலும் மகாத்மாக்களாலும் தினம் தினம் ராம பஜனையும், நாமா வளியும் கடவுள் தோத்திரமும் ஸ்துதியும் காலம் தவராமல் கணக்குப்படி செய்யப்பட்டு வருகின்றது. இந்தத் தலைவர்களால் - வழிகாட்டிகளால் வரப்போகின்றதாம் சுயராஜியம் என்று கருதிக்கொண்டு இருக்கின்றோம்-**அதிலும் தகப்பன் எலும்பை கங்கையில் போடுவதால் தகப்பன் மோக்ஷத்திற்கு போகக் கூடுமென்று பூரணசுயேச்சைக்கார பண்டித ஜவாரிலால் நடந்துகொண்டதை நினைக்கும் போது இனி யாரை நம்புவது என்பது விளங்கவில்லை** - நிர்க்க இன்றையத்தினம் மேல் நாடுகளில் உள்ள மக்கள் தங்கள் தங்கள் அரசாங்கத்தில் கீழ்தர சிப்பந்திகளுக்கு சம்பளங்களை உயர்த்தவும், நடுத்தர உத்தியோகஸ்தர்களுக்கு சம்பள உயர்வை நிருத்தவும் மேல்தர உத்தியோகஸ்தர்கள் சம்பளம் குறைக்கவும் திட்டம் போடுவதை தேசிய வேலையாய்க் கொண்டிருக்கின்றார்கள். உதாரணமாக, பிரிட்டிஷ் மந்திரியும், நியூஸ்லண்ட் மந்திரியும், ஆஸ்திரேலியா மந்திரியும் தங்கள் தங்கள் சம்பளங்களை யாரும் சொல்லுவதற்கு முன்பே குறைத்துக்கொண்டு மற்ற உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தைக் குறைக்கத் திட்டம் போட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். இது பணக்கார வாழ்வை இரக்கி ஏழைகளின் வாழ்வை உயர்த்துவதற்கு அடிகோலுவதாகும். இப்படிப்பட்ட அவர்களுடைய வாழ்வும் நாணை யமும், பொருப்பும், தகுதியும் இந்தியாவிலுள்ள உத்தியோகஸ்தர்களுடைய தை விட - தேசியத் தலைவர்களுடையதை விட சிறிதும் குறைந்ததல்ல என்றே சொல்லலாம். ஆனால் அவர்கள் வாங்குகின்ற சம்பளத்தைவிட இந்திய உத்தியோகஸ்தர்கள் இந்தியாவுக்கு சேவை செய்வதன் மூலமாய் வாங்கும் சம்பளங்கள் அனியாயமானதாய் இருப்பதை யாரும் கவனிப்பதில்லை. இந்த சம்பளங்களுக்காகவே ஏழைகள் வருத்தப்படுகின்றார்கள் என்பதையாரும் கவனிப்பதில்லை. மேலும் இந்தமாதிரியான சம்பளக் கொள்ளைக்காரர் இன்று



இந்தியாவின் பல பாகத்தில் சட்டமறுப்புக்கு உதவியாளராகவும், தேசியத் தலைவர்களாகவும், பிரதிநிதிகளாகவும் இருந்து வருவது மிகவும் கவனிக்கத் தக்கதாகும். இந்த நிலையில் இன்னும் அதிகாரம் அதிகமாக வேண்டுமென்றும் உத்தியோகம் பெருக வேண்டுமென்றும் ராணுவம் முதலியது தங்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் கேட்கப் படுகின்றது.

இராணுவ இலாக்கா இந்தியர்கள் கையில் ஒப்படைக்கப்படப் போவதால் இன்று என்ன புதிய நன்மை விளைந்துவிடக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை. வேண்டுமானால் இராணுவ இலாக்கா இந்திய மயமாக்கினவுடன் திருவாளர்கள் சீனிவாச சாஸ்திரிகள் பிள்ளைகளும், ராமசாமி அய்யர்கள் பிள்ளைகளும், ரங்காச்சாரிகள் பிள்ளைகளும், குமாரசாமி சாஸ்திரிகள் பிள்ளைகளும், சர்மாக்கள் பிள்ளைகளும் கேப்டனாகவும், கர்னலாகவும், ஜனரலாகவும், பிரிகேடியர்களாகவும் வந்துவிடக் கூடுமே அல்லாமல் மற்றபடி ஏதாவது ஒரு ராஜியத்தைப் பிடித்து இந்திய ஆக்ஷி யின் எல்லையை விரிவாக்கிக் கொடுத்துவிடுவார்கள் என்று கருதக்கூடுமா என்று கேட்கின்றோம். வேண்டுமானால் இவர்களால் இந்தியாவைக் காப்பாற்றுவதைவிட இந்து மதம், இந்து கடவுள்கள், இந்து உர்ச்சவங்கள், இந்து கோவில்கள், இந்து வருணாச்சிரம தர்மங்கள், இந்து சிரார்த்தங்கள், இந்து மனுதர்ம சாஸ்திரங்கள் புராணங்கள் முதலியவைகளே பத்திரமாய் காப்பாற்றப்படும். இவைகளுக்கு விரோதமாக யாராவது பேசினால் அவர்கள் பக்கம் ஜனரல் டையர் போல் பீரங்கிகளை திருப்பப்படுமே அல்லாது இவர்களால் வேறு என்ன செய்யக்கூடும்.

ஆகவே பொதுஜனங்கள் தன்னம்பிக்கையற்று பகுத்தறிவற்று மூடர்களாகவும், மூட நம்பிக்கைக்காரர்களாகவும் இருக்கும்வரை இந்த மாதிரியாக யாரோ சிலரால் ஏதோ வழிகளில் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் படியான காரியம் நடந்து கொண்டுதான் வரும் என்பதில் அதிசயமொன்றுமில்லை. ஆதலால் எந்தக் காரியத்தையும் கண்மூடித்தனமாய் நம்பி விடாமல் பகுத்தறிவைக் கொண்டு நன்றாய் யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 22.02.1931**



RangaRakes tamilnavarasam.com

# இந்தியாவில் அறிவு இயக்கம்

மேல்நாடுகளில் இது சமயம் வெகு தீவிரமாய் நடைபெற்று வரும் அறிவு இயக்கப்பிரசுரங்கள் பல என்பதும் அதுவே இந்தக்காலத்திய முக்கியமான காரியமாய் எங்கும் கருதப்படுகின்றது என்பதும் யாவரு மறிந்த விஷயங்களாகும். அவற்றுள் ருஷியாவிலும், சைனாவிலும், ஜெர்ம னியிலும், துருக்கியிலும், அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் நடப்ப வைகள் மிகவும் தீவிரமாகவும், வேகமாகவும் நடைபெறுபவைகளாகும்.

நிற்க, இவ்வியக்கங்கள் முழுவதும் மிகுதியும் மனித சமூகத்தின் அறிவு வளர்ச்சியிலும் சமரசத்திலுமே கவலை வைத்து நடத்தப்பட்டு வருகின்றவைகளாகும் என்பதில் யாருக்கும் ஆக்ஷேபனை இல்லை. இதில் கலந்து முக்கிய பங்கெடுத்து வேலை செய்து வருபவர்களும் பெரிதும் உலகினோரால் வீரர்கள் என்றும், அறிவாளிகள் என்றும் உண்மையாளர்கள் என்றும், மதிக்கப்படக் கூடியவர்களாகவே இருந்து வருவதும் யாவரும் அறிந்த விஷயமாகும்.

ஆகவே இவ்வறிஞர்களான பெரியோர்கள் மக்களுக்கு அறிவையும், சமத்துவ உணர்ச்சியையும் ஊட்டுவதற்காக முயற்சி செய்து வரப்படும் பிரசாரங்கள் பெரிதும் மனித சமூகத்தின் எல்லாவித கெட்ட காரியங்களுக் கும் ஆதாரமாய் முதலில் மதமும் மதத்தலைவர்கள் உபதேசமும் பிறகு கடவுளும் காரணமாய் ஏற்பட்டுவிட்டதாகக் கண்டுப்பிடிக்கப்பட்டு அவை களைப்பற்றிய மக்கள் அபிப்பிராயங்களை அடியோடு தலைகீழாய் மாற்று வதையே லக்ஷியமாய்க் கொள்ள வேண்டியதாகி அந்தப்படி பிரசாரம் செய்து கொண்டு வருகிறார்கள். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் கடவுள் என்பதான ஒரு பொருள் எவ்வித திணை பால் உடையதாக இல்லை என்கின்ற தத்துவத்தை அடிப்படையாக வைத்து அதன் அவசியத்தையும் மறுத்து காலத்திற்கும், இடத்திற்கும் தகுந்தபடி பிரசாரம் செய்து வருகின்றார்கள். இந்த உணர்ச்சியானது பொதுவாகவே அறிஞர்களாய் இருப்பவர்களுக்கு எவ்வித சுயநலமுமற்ற தன்மையோடும் விருப்பு, வெறுப்பும் காரணமாய் இல்லாமலும் மக்களை மக்கள் சுயநல காரணமாய் அறிவில்லாமற் செய்து ஆதிக்கம் செலுத்தி கொடுமைப்படுத்திவருவதைக் கண்டு சகியாமலே உண்மையான ஜீவகாருண்யத்தின் மீதே ஏற்பட்டு நடைபெற்று வருகின்றன. இதற்காக அப்பெரியோர்களால் பல பல இடங்களில் பல இயக்கங்கள் தோற்றுவிக்கப் பட்டதுடன் பல புத்தகங்களும் எழுதப்பட்டு பல பத்திரிகைகளும் நடத்தப் பட்டு வருகின்றன.

அவற்றில் ஒன்றான அதாவது லண்டனில் ஸ்தாபித்து நடைபெற்று வரும் "ரேஷனலிஸ்ட்டு பிரஸ் அசோசியேஷன்" (அறிவு ஆராய்ச்சி யாளர்களின் அபிப்பிராய பதிப்பு சங்கம் லிமிடெட்) என்னும் சங்கத்தாரால் பல புத்தகங்கள் அச்சிட்டு அடக்கவிலைக்கு வினியோகப்பட்டு வருவது டன் 1855–ஆம் வருஷம்– முதல் அதாவது சென்ற 46 வருஷங்களாகவே ஒரு பத்திரிகையும், "லிட்டரரி கைய்ட்"( அறிவு விளக்கம் ) என்னும் பேரால் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த இயக்கத்திற்கு இந்தியாவில் அநேகர் அங்கத்தினர்களாக இருந்து வருகின்றார்கள். ஆகவே அதன் பிப்ரவரி மீ பத்திரிகையில் "இந்தியாவில் அறிவு இயக்கம்" என்னும் தலைப்பில் ஒரு வியாசம் எழுதப்பட்டிருக்கின்றது. அவ்வியாசம் அவ்வியக்கத்தைச் சேர்ந்த இந்திய நண்பர் ஒருவராலேயே எழுதப்பட்டதாக விளங்குகின்ற தானாலும், அது மேல் நாடுகளின் கவனத்தையும் இழுத்திருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

அதில் காணப்படுவதின் சுருக்கமாவது :–

"இந்திய சரித்திரத்தில் அதிசயக்கத்தகுந்தபடி இந்த 5 வருஷ காலத்தில் ஒரு பெரிய புத்துணர்ச்சிப் பிரவாகம் இருகரையும் புரண்டு போய்க் கொண்டிருக்கிறது. அதாவது சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒரு இயக்கம் ஐந்தாறு வருஷ, காலத்திற்கு முந்தி சென்னை மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு மக்களால் வெகு காலமாக மரியாதை செய்யப்பட்டுவந்த அபிப்பிராயங்களுக்கும், நம்பிக்கை களுக்கும், உணர்ச்சிகளுக்கும் அஸ்திவாரத்திலேயே ஆட்டம் ஏற்படும்படி செய்துவிட்டது. இந்த இயக்கமானது ஆரம்பத்தில் இந்துக்களில் 100க்கு 97 பேர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி மக்களை ஏமாற்றிப் பிழைத்து வந்த சோம்பேறிச் சுயநலப் பார்ப்பனீயத்தின் மீது பாய்ந்து அதைக் கண்டிப்பதின் மூலமாய் தொடங்கிப் பிறகு ஜாதி வித்தியாசத்தைக் கண்டிப்பதில் இறங்கி பிறகு விக்கிரக ஆராதனையையும், பூஜை, உற்சவம் முதலிய செலவுகளையும் கண்டித்துப் பிறகு இந்து மதத்தையும் கண்டித்து அதன் பிறகு மதங்கள் என்பவைகளையெல்லாம் பொதுவில் கண்டிக்கத் தொடங்கிவிட்டது. இந்த நிலையானது மேலும் மேலும் வளர்ந்து தானாகவே பிறகு ஆராய்ச்சித் துறையில் இறங்கி தயவு தாட்சியண்ணியின்றி பகுத்தறிவை உபயோகிக் கச் செய்து விட்டதால் இப்போது மனிதனுக்குக் கடவுள் என்பதும் அவசியமில்லாதது என்று கருதி அதையும் மறுக்கத்தொடங்கிவிட்டது. இந்த மாதிரி ஒரு இயக்கம் தோன்றி மூடநம்பிக்கையிலும், பிடிவாதத்திலும் குருட்டுப் பழக்க வழக்கங்களிலும் புதைபட்டு கடவுள் பேரால் தன்னறிவு கெட்டுக் கிடந்த மக்களுக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டாக்கியதானது இந்தியாவின் சரித்திரத்தில் இதுவே முதன்மையானது என்பது குறிப்பிடத்தகுந்ததாகும். இதுசமயம் இந்தியாவில் இந்த ஒரே ஒரு அறிவு இயக்கம் இருப்பதால் இந்த இயக்கமானது பயமற்ற தன்மையில் பூரண பகுத்தறிவையும் வலியுறுத்தி பிரசாரம் செய்ய வேண்டியதாகி விட்டதின் பயனாய் ஏராளமான எதிர்ப்புகள்


RangaRakes tamilnavarasam.com

பயங்கரத்தன்மையோடு பல பக்கங்களில் இருந்து தோன்றி தொல்லைகள் விளைவிக்க வேண்டியவைகளாகி விட்டன.

ஆனால் இவ்வியக்கத்தலைவரும் இவ்வியக்கப் பிரசாரத்திற்கு ஆதாரமான 'குடி அரசு' என்னும் தமிழ்வாரப்பத்திரிகையின் பத்திராதிபருமானவர் சிறிதும் சளைக்காமலும் பயப்படாமலும் செய்து வந்த வேலையின் பயனாய் இவ்வியக்கக் கொள்கைகள் வாலிபர்களின் மனதைக் கவர்ந்து விட்டதால் அவர்கள் தங்கள் பகுத்தறிவு, காரணம் என்னும் ஆயுதங்களால் எதிரிகளான வைதீகர்களை தலையெடுக்க ஒட்டாதபடி செய்துவிட்டதுடன் எப்படிப்பட்டவர்களுடனும் வாதுக்கு நின்று தங்கள் கொள்கைகளை நிலை நிறுத்த வரிகட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த இயக்கத்தின் அநேக கொள்கைகளில் சமீபத்தில்வரும் ஜனகணிதத்தில் ஜாதிமதப் பெயர்கள் அறிவிக்கப்படக்கூடாது என்பதும் ஒன்றாகும். இதற்கு அரசாங்க முயற்சியும் உணர்ச்சியும் எதிராக இருந்த போதிலும் அனேகர் தங்கள் ஜாதி மதப்பெயர்களை கொடுப்பதில்லை என்றே முடிவுகட்டி இருக்கின்றார்கள். ஆகவே இந்த இயக்கம் இந்தியாவில் செய்துள்ள வேலையை அறிவதற்கு சமீபத்தில் வரும் ஜனகணிதம் ஒரு சாதனமாகும்"

என்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

**குடி அரசு - கட்டுரை - 22.02.1931**



# தேசீய வியாபாரம்

உலகத்தில் மக்கள் தங்கள் தங்கள் வாழ்க்கைக்கு விதாயங்கள் ஏற்படுத்திக்கொள்ளுவதில், பலர் பொது நல சேவை என்பதையும் ஒரு மார்க்கமாக உபயோகப் படுத்திக் கொண்டு வருகின்றார்கள் என்பது யாவரு மறிந்த விஷயமாகும். அந்த முறையிலேதான், இன்று எல்லா விதமான பொது நல சேவைகள் என்பவைகளும், ஒரு தனித்தனி மனிதனின் சுய நல வாழ்க்கையை முக்கிய நோக்கமாகவும், அடிப்படையாகவும் கொண்ட தாகவே இருந்து வருகின்றன.

இந்த நிலைமையானது, இந்நாட்டின் மக்களின் உண்மையான பொது நலம் என்பதை அடியோடு கெடுத்து விட்டதுமல்லாமல், இம்மாதிரி தன்மை களால் பொது நல வாழ்வானது உண்மை, ஒழுக்கம், நாணயம் என்பவைகள் சிறிதும் இல்லாத புரட்டுக்கும், பொய்யுக்கும், வஞ்சகத்திற்கும், நிலையா யுள்ள ஒரு வியாபார சாலை போல் ஏற்பட்டு விட்டது. இதன் பயனாகவே மக்கள் மிகவும் ஏமாற்றப்பட்டு, கஷ்டத்திற்கும், கொடுமைக்கும் ஆளாகி முற்போக்கடைய சிறிதும் இடமில்லாமல் போய் விடுகின்றார்கள். இந்த மாதிரியான காரியங்கள், சமீப காலம் வரை மதம், கடவுள், மோக்ஷம், சன் மார்க்கம் முதலாகியவைகளின் பேராலேயே பெரிதும் நடந்துவந்திருந் தாலும், கொஞ்சகாலமாய் தேசம், தேசீயம், சுயராஜ்யம் என்பவைகளின் பேரால் வியாபாரமாகவே துவக்கப்பட்டு, மக்களுக்கு பெறுத்த இடையூறை யும், கஷ்டத்தையும் கொடுத்து வருகின்றது. ஆகவே, இந்த தத்துவத்தையே முக்கியமாய் எடுத்துக்கொண்டு இதை எழுதுகின்றோம்.

ஏனெனில், சாதாரணமாக மற்றபல நாடுகளில் பொது நலசேவை என்பதில் ஈடுபடுகின்றவர்கள் பலர் கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும், கவலைக்கும் உள்ளாகி, அநேகவித தொல்லைகளை அனுபவிக்கின்றார் கள். ஆனால், இந்த நாட்டிலோ, சிறிதும் கஷ்டமும், நஷ்டமும், தொல்லை யும், கவலையும் இல்லாமல், நேருக்கு நேராகவே, உடனுக்குடனே, பதவி, உத்தியோகம், பணம், கீர்த்தி, அதிகாரம் முதலியவைகள் மாற்றுப்பண்ட மாக அடையப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு காரணம், பொது மக்களை ஒரு கூட்டத்தார், மேலே குறிப்பிட்டபடி ஏற்கனவே மதம், கடவுள், மோக்ஷம், விதி முதலாகியவைகளால் மூட நம்பிக்கைக்கு ஆளாக்கி வைத்திருப்பதால், அந்த மூடநம்பிக்கையானது, அந்த மக்களை, தேசீய வியாபாரிகளிடமும் சிக்கி,



RangaRakes tamilnavarasam.com

ஏமாந்து, கஷ்டப்படும்படி செய்து வருகின்றது.

உதாரணமாக, இந்திய தேசீய காங்கிரஸ் என்னும் ஒரு தேசீய வியாபார லிமிடெட் கம்பெனியானது, அது ஏற்படுத்தப்பட்ட நாள் முதலாகவே, அந்த தேசீய வியாபாரக் கம்பெனியில் நிர்வாக ஸ்தானம் வகித்தவர்களுக்கெல்லாம், பெரும்பான்மையாய், ஹைகோர்ட் ஜட்ஜ் உத்தியோகமும், நிர்வாக சபை அங்கத்தினர் பதவியும், மற்றும் அதில் சேர்ந்த பங்காளிகளுக்கெல்லாம், ஜில்லா ஜட்ஜ், சப் – ஜட்ஜ் முதலிய உத்தியோகபதவிகளும், மற்றும் பட்டம், கௌரவ உத்தியோகங்கள், தொழில் விர்த்தி ஆகியவைகளும் தாராளமாய்க் கிடைத்து வந்தது யாவரும் அறிந்ததே யாகும்.

இந்த நிலைமையானது நாளுக்கு நாள் பெருகி, அநேகர் இவ் வியாபாரத்தில் பங்கெடுக்க நேர்ந்ததின்பின், லிமிடெட் கம்பெனியாய் இருந்ததானது அன்லிமிட்டெட் கம்பெனியாகி அதாவது ஒரு வகுப்பாருக்கு மாத்திரம், ஒரு தரத்தாருக்கு மாத்திரம் என்று வரையறுக்கப் பட்டிருந்ததானது மாறி, எல்லா வகுப்பாருக்கும், எல்லாத் தரத்தாருக்கும் அதில் பங்கு எடுத்துக்கொள்ள சௌகரியம் ஏற்பட்டு, பிறகு, அதற்கு அநேக ( பிரான்ச்சு ) கிளை ஸ்தாபனங்களும் உண்டாகி, இப்போது வரவரப் பெருகி, ஏறக்குறைய சிறிது கல்வியும், தந்திரமும் உள்ள எல்லா மக்களுமே, தேசீய வியாபாரத்தில் கலந்து, அளவுக்குமீறிய அதாவது தங்கள் யோக்கியதைக்கும், தகுதிக்கும் எத்தனையோ பங்கு மீறியதான லாபத்தை– பயனை அடையும்படியாகச் செய்து விட்டது.

ஆகவே, இன்றையதினம் இந்த நாட்டில், பொது மக்களின் சௌக்கியத்திற்கும், பத்திரத்திற்கும், ஒழுக்கத்திற்கும் விரோதமானது என்று சொல்லத் தகுந்த கள்ளு, சாராயக்கடை, சூதாடுமிடம், விபசாரிகள் விடுதி, கொள்ளைக் கூட்டத்தார் முதலாகிய எல்லா வித ஒழுக்கமும், நாணையமும், கெட்ட துறைகள் ஸ்தாபனங்கள் என்பவைகளை யெல்லாம் விட, மிக்க மோசமான துறையாகவும், ஸ்தாபனமாகவும் உள்ள ஸ்தானத்தை மேல்படி தேசீய வியாபாரம் அடைந்து விட்டது.

இன்னும் விளக்கமாய் பேச வேண்டுமானால், வேறு எந்தக் காரியத்தாலும் பிழைக்க முடியாதவர்களும், ஒழுக்கமும், நாணயமும் அற்றவர்களும், மக்களை ஏமாற்றி வாழும் மோசக்காரர்களும் கடைசியாய்ப் போய் அடைக்கலம் புகுவதற்கு இன்று தேசீய வியாபாரத்தைவிட வேறு சுலபமான வழி நாட்டில் ஒன்றுமே இல்லை என்று சொல்லும்படியானதாகி விட்டது. இந்த அபிப்பிராயம், இன்னும் பலமாய் வலியுறுத்தத்தக்க மாதிரியில், முதல் முதல் ஆங்கிலத்தில் அகராதி எழுதின ஒரு ஆங்கில அறிவாளியான, டாக்டர் சாமியல் ஜான்சன் என்பவர், தேசபக்தி என்பதை, "Patriotism is the last refuge of the scoundrel" என்று எழுதி இருக்கின்றார். இதன் பொருள் என்னவென்றால், "தேசீயம் – தேசபக்தி என்பது வேறு எந்த விதத்திலும் பிழைக்கமுடியாத



அயோக்யர்களின் பிழைப்புக்கு கடைசி மார்க்கமாகும்" என்பதாகும். ஜார்ஜ் பர்நார்டு ஷா என்னும் மற்றொரு ஆங்கில அறிஞர், இதே விஷயமாய், "நிரந்தரமாய் ஒரு வேலையில் இருந்து வாழ முடியாதவர்கள், தங்களை அரசியல் வாதியாக ஆக்கிக் கொண்டு, அதிலேயே தங்களது வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ளுவார்கள்" என்று எழுதி இருக்கிறார். இந்த அறிஞர்களின் அபிப்பிராயங்கள் பெரிதும் மேல் நாட்டு அனுபவத்தைப் பொருத்தது என்று சொல்லலாம். ஆனாலும், கீழ் நாட்டு தேசியம் என்பதும், பெரிதும் மேல் நாட்டு நடப்பைக் கண்டே ஆரம்பிக்கப் பட்டிருப்பதாலும், ஏதோ சில பெரியார்கள் தவிர, மற்றபடி பெரும்பான்மையான மக்கள், நமது நாட்டிலும் அப்படிப் பட்டவர்களுக்காகவே ஏற்பட்டு, அதுபோலவே தங்கள் வாழ்க்கைக்கு, தேசீயத்தை ஆதாரமாய் உபயோகப்படுத்தி, மக்களை ஏமாற்றி, நாணையம் சிறிதுமற்ற தன்மையில், சுயநலமிகளாய் இருந்து பயனடைந்து வருவதாலும், தப்பித் தவறி யோக்கியமானவர்கள் ஒருவர், இருவர் இதில் சேர்ந்தாலும், அவர்களும் அந்தத் துறையிலேயே இழுக்கப்படுகின்ற படியாலும், மேல் குறிப்பிட்ட அறிஞர்கள் கண்ட உண்மைகள் இந்தியாவுக்கு அடியோடு பொருத்த மற்றது என்று சொல்லிவிடுவதற் கில்லை என்றே சொல்லுகின்றோம். இதற்கு உதாரணமாக, கொஞ்சகாலமாய் நமது நாட்டில் உள்ள ஜனப் பிரதிநிதி ஸ்தாபனங்கள் என்பவைகளில், ஜனப்பிரதிநிதிகளாய் நியமனம் – தேர்தல் முதலியவை பெற்ற கிராமப் பஞ்சாயத்து, தேவஸ்தானப் பஞ்சாயத்து வகையறாக்கள் முதல், மந்திரிகள், நிர்வாக சபையார்கள், கவர்னர்கள் என்கின்றவர்கள் வரையிலும், மற்றும், இந்த முறையில் அதிகாரம், சர்க்கார் சம்பள உத்தியோகம் முதலியவை பெற்ற சிப்பந்திகள், தலையாரி உத்தி யோகம் முதல் கலெக்டர், ஹைகோர்ட்ஜட்ஜ் உத்தியோகம் வரையிலும் அவற்றில் உள்ளவர்களில் பெரும்பான்மையோர்கள் என்பது மாத்திரமல்லாமல், முக்காலே மூணுவீசம் முக்காணி அரைக்காணி வரையில் உள்ளவர்களின் யோக்கியதையும், அவர்களின் தேசீயம் – பொதுநல சேவை ஆகியவற்றின் தன்மைகளை சுத்தமான நடுநிலைமையிலிருந்து பார்த்தால் விளங்காமல் போகாது. ஆகவே, இந்தப்படி நாம் மேலே விவரித்தெழுதியதின் நோக்கம் எல்லாம் முக்கியமாய் தேசீயம் என்பது பதவியும், உத்தியோகமும், பணமும் சம்பாதிக்கும் மார்க்கமான வியாபாரத் துறையாகும் என்பதை, மக்களுக்கு வெளிப்படுத்தவே எழுதியதாகும். பொதுவாக, சுயநலமில்லாமலும், மோசம், ஏமாற்றுதல் ஆகியவை இல்லாமலும், தகுதிக்கும், தேவைக்கும் மேல் அடைய ஆசையில்லாமலும், நாணையமாய் உழைக்கக்கூடிய பெரியார்களும் இதில் உண்டு என்பதை நாம் மனமார ஒப்புக் கொள்ளுகின்றோமாயினும், அவர்கள், வெகு, வெகு, வெகு சிலரேயாகையால், அதைப்பற்றி கவனித்துக்கொண்டு, இவ்வளவு கெடுதலான விஷயத்தில் சிறிதும் தாக்ஷண்ணியம் காட்டுவது தவறு என்று கருதி மொத்தமாக எழுதுகின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

இந்தியமக்களின் நிலைமை ஏழ்மை என்பதிலும், தரித்திரத்தால் கஷ்டப்படுகின்றார்கள் என்பதிலும், தினம் ஒன்றுக்கு, ஆள் ஒன்றுக்கு 2 அணா வரும்படிக்கும் குறைவாயுள்ள வரும்படிக்காரர்கள் என்பதற்கும், ஆக்ஷேபனை சொல்லுகின்றவர்கள் யாருமே காணோம். அப்படிப்பட்ட நாட்டில், தேசீயத்தின் பேரால், மீ ஒன்றுக்கு 4333-5-4, 5333-5-4 6000-0-0, 7000-0-0 ரூபாய்கள் சன்மானமாக சம்பாதிப்பதும், பொதுநல சேவையின் பேரால் மாதம் ஒன்றுக்கு 1000, 2000, 3000, 4000 ரூபாய்கள் வீதம் சம்பளம் சம்பாதிப்பதும், பொது ஜன நன்மைக்கு உபகாரமான வேலை ( வக்கீல் தொழில் ) முதலியவைகள் என்னும்பேரால் மீ 1க்கு 10000, 20000, 30000 ரூபாய்கள் வரையில் சம்பாதிப்பதும், மற்றும் பல சாதாரண உத்தி யோகங்களிலும், இதுபோலவே, மீ ஒன்றுக்கு 100, 500, 1000, 2000 வீதம் சம்பளம் பெறுவதுமான காரியங்கள் எப்படி தேசபக்தியானதும், தேசீயமா னதும், யோக்கியமானதுமான காரியங்களாகும் என்று கேட்கின்றோம். ரூ 1க்கு பட்டணம் பக்காவில் 6படி அரிசி விற்கின்ற இந்தக் காலத்தில், வெள்ளாமை விளைபொருள்களுக்கு விலை இல்லாத காலத்தில், கைத் தொழில் தொழிலாளர்களுக்கு போதியதொழிலும், கூலியும் கிடைக்காத காலத்தில், வியாபாரிகளுக்கு வியாபாரமும், பணப்புழக்கமும், வரும்படியும் இல்லாமல் கஷ்டப்படும் இக்காலத்தில், ஒருபெரிய நாடு கண்கள் பிதுங்க, தத்தளித்துக் கொண்டு கஷ்டப்படுகின்ற நெறுக்கடியான நிலைமையில், தேசீயத்தின் பேராலும், பொது நல சேவையின் பேராலும், இந்தப்படி ஒரு கூட்டம் மக்களை கொள்ளை அடித்தால், இந்தமாதிரி தேசீயமும், பொது நல சேவையும், யோக்கியமானதும், மதிக்கத்தகுந்ததும் ஆகுமா என்றும் கேட்கின்றோம். இந்த மாதிரியான அயோக்கியத் தனங்களையும், பித்தலாட் டங்களையும், ஏழைகளை, பாமரமக்களை ஏமாற்றிப் பிழைக்கும் தந்திரங் களையும், தந்திரத்திற்கு ஆதாரமானவைகளையும், தேசீயம், தேச சேவை, பொதுநல சேவை என்று ஒப்புக்கொண்டு, அவற்றிற்கு உதவிபுரிய வேண்டுமென்றால், அயோக்கியனாகவோ, முட்டாளாகவோ இருந்தால் ஒழிய, எப்படி முடியும் என்றும், நாம் மறுபடியும் கேட்கின்றோம். தேசீயம் என்பது, வியாபாரம் என்பதாக நாம் குறிப்பிட்டதற்கு யார் கோபித்துக் கொள்வதானாலும், தேசீயத்தில் ஈடுபட்ட பெரும்பான்மையானவர்கள். அதை ஒரு வியாபாரம் போல் பாவித்து, கை முதல் போட்டு, தேசீயத்தை யோ பொதுநலசேவையையோ அல்லது இவை செய்வதற்கு ஆதரவானது என்ற தேர்தல்களையோ நடத்தி, வெற்றிபெற்று, மேல்கண்ட முதலுக்கு 100 க்கு 100 வட்டியுடன், சில சமயங்களில் அதற்கு இரட்டிப்பு லாபத்துடன் பயன் அடைந்து, நாணையம், ஒழுக்கம் எல்லாவற்றையும் துறந்து, வாழ்க்கை நடத்துகின்றார்களா? இல்லையா? என்றும் கேட்கின்றோம். அன்றியும், இப்படிப்பட்ட காரியம், இனி மேல் நடக்காமல் இருக்கவாவது யாராவது எந்த உண்மை தேசீயவாதியாவது முயற்சிக்கின்றார்களா? கருதுகின்றார்களா? என்றும் கேட்கின்றோம்.



தேசீயக்கிளர்ச்சி என்னும் பேரால், இந்தியமக்களுக்கு இன்று கிடைத் துள்ள ஒவ்வொரு சீர்திருத்தமும் இந்தக்காரியத்திற்கே உபயோகப்பட்டி ருப்பதல்லாமல், வேறு ஏதாவது ஒரு காரியத்திற்கு உபயோகப்பட முடிந்ததா என்றும் கேட்கின்றோம். அன்றியும், பதவியில் இருக்கும் நபர்கள் மேல் – அவர்களது கூட்டத்தின் மேல் போட்டிபோட்டு, குற்றம் சொல்லித்திரியும் ஆட்களோ, அன்றி, மற்றொரு கூட்டத்தாரோ, தாங்கள் எப்படியாவது அந்தப்பதவியைப் பெற்று, அந்தலாபத்தை அடைய முயற்சி செய்வதைத் தவிர, மற்றபடி வேறு ஏதாவது நாணையமோ, யோக்கியப் பொறுப்போ உடையவர்களாக இருக்கின்றார்களா என்றும் கேட்கின்றோம். உதாரணமாக, நாளது வரையில், எந்தமந்திரி சபையை யார் கவிழ்க்க முயற்சித்தாலும், எந்த வித நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து கலைக்க முயற்சித்தாலும், எந்த நிர்வாகசபை அங்கத்தினரை எப்படி தாக்கினாலும், அந்தந்த நபர்கள் மீதோ, கூட்டத்தின் மீதோ, நடவடிக்கைகள் மீதோ குற்றம் சொல்லுவதைத் தவிர, அவருக்கு ரூ. 4333-5-4-ம், 5333-5-4-ம் எதற்கு என்றாவது ஏன் ரூ. 1000 போறாது ரூ. 500 போறாது என்றாவது யாரும் கேட்பதேயில்லை. உதாரணமாக, இன்றையத்தினம், சென்னை சட்ட சபையில் உள்ள மந்திரிகள் மீது பொறாமை கொண்டு, அவர்களைக் கவிழ்க்க ஒரு கூட்ட ஆசாமிகள் ஆகாயத்திற்கும், பூமிக்குமாய் முயற்சி செய்து கொண்டுவருவது யாவரும் அறிந்ததே யாகும். அது போலவே, இப்பொழுது மந்திரியாயிருக்கும் ஆசாமிகளைச் சேர்ந்தகூட்டமும் முன் மந்திரியாய் இருந்தவர்களைக் கவிழ்க்க முயற்சிசெய்து, பயனடைந்ததும் யாவருக்கும் தெரியும். ஒவ்வொரு கூட்டமும் இந்தமுயற்சியில் வரும்படியை உத்தேசித்து, தக்க பணச்செலவு செய்து, பலாபலன் அடைந்தது யாவருக்கும் தெரிந்த விஷயமாகும். ஆனால், இதிலுள்ள தந்திரமும், புரட்டும், சுயநலமும் என்னவென்றால், இரண்டு கூட்டமும், இன்னும் இரண்டொரு வௌவால் கூட்டமும், தேசீயத்திற்காகவும் பொதுஜன நன்மைக்காகவுமே மந்திரியாக வேண்டுமென்று சொல்லிக் கொண்டு பாடுபட்டும், நாளதுவரை ஒருவராவது மந்திரிகள் சம்பளத்தை தேவைக்குள்ள அளவுக்குக் குறைத்துக்கொள்வதாய்ச் சொல்லவே இல்லை என்பதும், அந்தத் துறையில் இதுவரை யாரும் பாடுபடவில்லை என்பது மாகும். மந்திரிகள் சம்பளத்தால், வெகுபணம் மீதியாகிவிடும் என்கின்ற எண்ணத்தின் மீதே, நாம் இந்தப்படி எழுதவில்லை. ஆனாலும், மந்திரிகள் சம்பளம் குறைவுபட்டு அது ஒரு குடும்பத்தின் கவலையற்ற வாழ்க்கைக்கு போதுமான அளவுக்கு குறைக்கப் பட்டாலொழிய மந்திரி பதவி என்பது நாணையமாகவும், யோக்கியமாகவும், நடுநிலைமையாகவும், ஒழுக்க முள்ளதாகவும் இருக்க முடியாது என்பதோடு, மற்ற ஜனங்களுக்கும் தேசீயத்தின் பேராலும், பொதுநல சேவையின் பேராலும் செய்யப்படும் ஒழுக்க ஈனமான காரியங்கள் நிறுத்தப்பட முடியாது என்கின்ற எண்ணத்தின் மீதே எழுதப்படுவதாகும்.



RangaRakes tamilnavarasam.com

சென்னை மாகாணத்தைப் பொருத்தவரை, நமக்கு மூன்று கிளர்ச்சி களின் அனுபோகமும், நான்கு தேசிய ஸ்தாபனங்களின் அனுபோகமும், அநேக தேச பக்தர்கள் அனுபோகமும், நான்கு மந்திரி சபைகள் அனு போகமும், பல ஜனப்பிரதிநிதி சபைகள் அனுபோகமும், அநேக மேல்தர, கீழ்தர உத்தியோக சேவைக்காரர்களின் நெருங்கிய பழக்கத்தால் ஏற்பட்ட அனுபோகமும் உண்டு. இவைகளின் கொள்கைகளைப்பற்றி, பிரசாரத்தைப் பற்றி, நடத்தையைப்பற்றி பலமாறுதல்கள் இருந்தாலும், இவைகளில் கலந்துள்ள தனிப்பட்ட மக்களின், 100-க்கு 99 முக்கால் பேர்களின் யோக்கிய மும், நாணையமும், லட்சியமும் ஒன்றேயாகும். எல்லோரும் ஏழைகளை, பாமர மக்களை வஞ்சித்து, கொள்ளை யடித்து, பணம் சம்பாதித்து, பெரிய மனிதர்கள் ஆகவேண்டும் - பட்டம், பதவிகள் பெறவேண்டும், தங்கள் பிள்ளை, குட்டி சந்ததிகளுக்கு உத்தியோகங்கள் பெறவேண்டும் - என்பவைகளையே முக்கிய தத்துவமாய் - கொள்கையாய்க் கொண்டவர்கள் என்பதை, தூக்குமேடை மீதிருந்தும் சொல்லுவோம்.

இது மாத்திரமல்லாமல், யெந்தவிதமான யோக்கியர்களையும், இன்றைய தேசீயமானது அயோக்கியர்களாக்கத் தயாராயிருப்பதோடு, வெளியில் இருக்க முடியாமல் உள்ளே இழுத்துப் போட்டுக் கொள்ளு கின்றதாகவே இருக்கின்றது.

ஆகவே, இன்றையத்தினம், எந்த மாகாண சட்டசபையிலும், அதிகாரத்திலும் பதவியிலும் இருக்கின்ற கட்சிகள் மீதோ, மந்திரிசபை மீதோ, எந்த தேசீயக் கட்சியாவது, பொதுநல சேவைக் கட்சியாவது உண்மை யான, யோக்கியமான போட்டி போடுவதாயிருந்தால், அவர்கள் முதலில் செய்ய வேண்டிய முக்கியமான, யோக்கியமான காரியம் மந்திரிகளுக்கு மீ 1 க்கு 1000 ரூ. சம்பளமும், மந்திரி உத்தியோகம் உள்ளவரை வீட்டு வாடகையும் தவிர, வேறு ஒன்றும் இருக்கப்படாது என்பதும், மற்ற மரியாதை, படி முதலியவைகளும் ஒரு சட்டசபை அங்கத்தினருக்கு சமானமானதாகவே இருக்கவேண்டும் என்கின்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, நிறைவேற்றி வைக்க முயற்சிக்க வேண்டியதாகும். அப்படிக்கில்லாமல், மந்திரிகளுக்கு விரோதமாய் என்று ஒரு கட்சியை ஏற்படுத்திக் கொண்டு, அவர்களுக்கு எதிராக உட்கார்ந்து கொண்டு, அவர்களைத் தோர்க்கடித்து, அந்தப் பதவியைப் பெருவது என்று கருதி, இரவும், பகலும் முயற்சிசெய்து கொண்டு இருப்பதுடன், இதை ஒரு தேசீய வேலையென்றும் சொல்லிக் கொண்டு இருந்தால், இதைப்போன்ற சுயமரியாதை அற்றதும் நாணைய மற்றதும், யோக்கியப் பொருப்பும், ஒழுக்கமும், பொதுநல சேவையுமற்றது மான வேலை, வேறு ஒன்றும் இல்லை என்று வலியுருத்திச் சொல்லுவதோடு, தேசீயம் என்று சொல்லுவது ஒரு மோசடி வியாபாரம் என்பதற்கும், இதையே உதாரணமாய் எடுத்துக் காட்டுவோம்.



நிற்க, இன்றைய தினம், நாட்டில் நடைபெறும் தேசியக் கிளர்ச்சிகள் பலவற்றில் கலந்துள்ளவர்களைப் பற்றிப் பேசுவதானாலும், ஏதோ சிலர் தவிர, மற்றப்படியான 100-க்கு 90 மக்கள் ஆங்கிலம் படித்த வக்கீல்கள், இயக்கத்தை நடத்துகின்ற உள்நாட்டுத் தலைவர்கள் ஆகியவர்கள் இந்த தேச சேவையைக் காட்டி அல்லது இதன் பயனாய் நாளைத் தேர்தல்களில், இம்மாதிரியான பயன்களையே பெருவதுமல்லாமல் மற்றபடி வேறு என்ன செய்யக்கூடும் - என்ன செய்யப் போகின்றார்கள் என்றும் கேட்கின்றோம். ஆகவே இந்தக் காரணங்களால்தான், தேசீயத்தை வியாபாரம் என்று சொல்லுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 01.03.1931**



RangaRakes tamilnavarasam.com

# தைப்பிங் கடிதம்

லேவாதேவி கடையில் அடுத்தாள் என்ற முறையில், பெட்டியடியில் வேலைபார்க்கும் கணக்கப்பிள்ளைகளும், செட்டிப்பிள்ளைகளும் காலை 7மணி முதல் இரவு10மணி வரை சதா கடைவேலைகளிலேயே ஈடுபட்டு சற்றேனும் ஆருதலில்லாமலும் உலக நடவடிக்கை மற்ற இதர காரியங்களை கலந்து பேசவோ, கொஞ்சமும் நேரமில்லாமலிருப்பதை முன்னிட்டு நாளது வருஷம் கார்த்திகை மாதம் 15 தேதி இரவு தைப்பிங் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவிலில் சுவாமி புறப்பாடன்று மேல்கண்ட எல்லோரும் ஒன்று கூடி இது விஷயமாகத் தினசரி காலை 6-30 முதல் 7-30 வரையிலாவது அல்லது மாலை 4 மணி முதல் 5.30 வரையிலாவது ஓய்வு வேண்டுமென்பதைப்பற்றி ஆலோசித்து தீர்மானப்படுத்திக்கொண்டு கோவில் திண்ணையில் கூடி உட்கார்ந்திருந்த அவர்களின் மேலாள் என்று சொல்லும் பெரிய செட்டியார்களிடத்தில் இவர்களுடைய அனுதாபத்தைத் தெரியப்படுத்தினார்கள்.

என்ன சொல்வது கடைசியில், “ உடும்பு வேண்டாம் கைய விடுங்க” ளென்று சொன்ன முறையில் வந்து விட்டது. என்ன பரிதாபம்! மேலாள்கள் ஒருவருக்கொருவர் கலந்து பேசிக்கொண்டு “ என்னடா லீவு. செட்டிய வீட்டு முறையில்லை. காலங்கெட்டுப்போச்சு. அடுத்தாள்கள் எப்படிக் கூடிப் பேசலாம். மேலாளும், அடுத்தாளும் சமமாக போச்சு. அந்த நாளில் சட்டை போடக் கூடாது, காலில் நடையன் போடக்கூடாது, முளங்காலுக்கு மேல் வேட்டிகட்ட வேணும். இப்போது அந்த சுதந்தரங்கள் கொடுத்ததாலல்லவா வந்தது கேடு. இவன்களை இனி இப்படி விடப்படாது. சமையல்காரன்களிடம் சொல்லி சோறு போடாமல் செய்தால் என்ன செய்வார்க”ளென்று ஒவ்வொரு மேலாளும் அவர்கள் அடுத்தாள்களை கடுஞ்சொற்களால் ஏசி , படுத்தாத பாடு படுத்தி விட்டார்கள். பாவம்! என்ன செய்வார்கள்.

உலகம் நாளுக்கு நாள் முன்னேற்ற மடையும் சமயத்தில் இந்த ஒரு சமூகத்தார், இளம்பிராயத்திலுள்ள சிறுவர்களை, ஆடுமாடுகளை அடைத்து வைத்து வைக்கோல், புல் போடுவதைப்போல் கருதி, இந்தக்கொடுமை செய்தால் அவர்கள் எப்போது சுகதேகியாகவும், உலக நடவடிக்கை தெரிந்தவர் களாகவும் வரக்கூடும்.



ஆகையால், எனது நன்ப சகோதர செட்டியார்களே! அவர்களையும் உங்களைப்போல் நினைத்து, அவர்கள் கேட்ட வண்ணம் உங்கள் வேலைகளுக்கு பாதகம் ஏற்படாமல் அவர்களுக்கு ஓய்வு கொடுத்தால் தங்களுக் கதனால் என்ன குறைவு? அவர்கள் கேட்பதும் உலகப் பொருத்தமான விஷயமென்பதை தங்கள் சமூகத்தினர் சற்று ஆலோசித்துப் பார்த்தால் தெரியும். இம்மாதிரி கேள்விகள் மற்ற சமூகத்தினரை இந்த இளம் குழவிகள் கேட்டிருந்தால் மிகப்பிரியத்தோடு சிரமேல் தாங்கி ஆதரித்திருப்பார்கள். தங்களின் பொறாமையாலல்லவா தென்னாடு இந்நிலைமையிலிருக்கிறது. நம் சமூகத்தாரில் சிறு பிள்ளைகளுக்கு இந்த ஆதரவு கொடுக்காத நீங்களா சுயராஜியத்திற்கு ஒற்றுழைக்கப் போகிறீர்கள்? சத்திரம், கோவில், மடம், பூரிதானம்,சிரார்த்தம் இவைகளைச் செய்வது மட்டும் சிறந்த தர்மமென்று நினைத்துக் கொள்ளவேண்டாம். அவைகளெல்லாம் சோம்பேறிகளுக்கு வழிகாட்டியே. ஆனதுபற்றி, சிறியேன் விடுத்த வியாசத்தைக் குறைவு படுத்தாது அடுத்தாள் கோறின விஷயங்களை கவனித்து அவர்களுக்குச் சிறிதளவு ஓய்வுக்கு ஆதரவு செய்தால் நம் சமூகத்தினர்களும் இதர சமூகத்தினர்களுமுடைய நீண்டகால பழம்வழக்கங்களில் மாறுதலடைந்து முன்னேற்றமடைந்து விட்டார்களென்ற பெருமை எல்லோருக்கும், சரீரப்பயிற்சியும், காலதேச வர்த்தமானங்களையும் அறிந்து கொள்ள செட்டி கடைகளில் வேலை செய்கின்றவர்களுக்கு ஓர் சந்தர்ப்பமும் ஏற்படும். வேறு விஷேசித்து என்ன உரைக்கப்போகிறேன்.

**இங்ஙனம்**
**உண்மை உரைப்போன்.**

**குடி அரசு - கட்டுரை - 01.03.1931**



RangaRakes tamilnavarasam.com

# துணுக்குகள்

"நாம் அதிகம் துன்பமடைவதற்கு, நமது அறியாமையே முக்கிய காரணமாகும். ஏனெனில், நாம் எக்காரியத்தையும் கொஞ்சமேனும் முதலில் ஆலோசியாமல் செய்வதுமன்றி, நமது அறிவையும் உபயோகிப்பதில்லை" யென ஓர் பெரியார் உரைத்திருக்கின்றார். ஆனால், நமது மதமோ, நம்முடைய அறிவை உபயோகித்து, ஆலோசனை புரிய இடங்கொடுக்க மறுக்கின்றதுடனல்லாமல் புரோகிதர்களும், மடாதிபதிகளும், குருக்களும் கூறுபவைகளை அப்படியே கண்மூடித்தனமாகவும், சுலபமாகவும் நம்பிக் கொள்ளும்படி நம்மை வற்புறுத்தியும், அப்படி நம்பினவர்களுக்குத் தான் மோட்சலோகம் சித்திக்குமெனவும் கட்டளையிடுகின்றது. இதனால், அறிவை உபயோகித்து ஆலோசிக்கின்றவர்களுக்கும், அவர்கள் உரைக்கும் மோட்சலோகத்திற்கும் அதிக தூரம் ஏற்பட்டுவிடுகின்றது. இக்காரணத்தா லேயே மடாதிபதிகளும், குருக்களும், புரோகித கூட்டங்களும் அறிவுள்ள மானிடர்களை அபாயக்காரர்களென நினைத்து, எப்பொழுதும் அத்தகை யோரை கருவருக்க வேண்டுமென கங்கணம் கட்டிக்கொண்டே வந்திருக் கின்றார்கள். அறிவில்லாதவர்களையும், யோசியாமல் கண்மூடித்தனமாக உரைப்பனவெல்லாம் உண்மையேயென நம்பிக்கொள்ளுகின்றவர்களையும், சுலபமாகவே அடக்கி, ஆண்டு வரமுடியுமென அம்மடாதிபதி முதலியவர்கள் நாளாவட்டத்தில் அறிந்துகொண்டுமிருக்கின்றார்கள். ஏனெனில், அம்மடாதிபதிகளுக்கு இத்தகைய மானிடர்களால் அளவற்ற நன்மைகள் உண்டாயிருக்கின்றது. இம்மடாதிபதி முதலியவர்களின் முன்னோர்கள், இக்காரணத்தால், முன் சாக்கிரதையாகவே தாங்களும் தங்களுடைய சந்ததியாரும் சுகமாகவும், கவலையின்றியும் காலத்தைக் கழிப்பதற்காக, மற்ற மனிதர்களின் அறிவை நாசமாக்கி விட்டார்கள்.

ஃ ஃ

"சந்திரனில் தோன்றப்படும் மனிதர்களின் முகங்கள் கருத்தும், விகாரமாயுமிருப்பதாக" ஓர் வானசாஸ்திரி உரைக்கின்றார். அப்படியானால், நமது புராணங்களும். சாஸ்திரங்களும் ஆபாசமாயிருப்பதைப்பற்றி (அதாவது பொய், வஞ்சனை, சூது, கொலை, விபசாரம் முதலியவைகள் நிறைந்திருப்பதைப்பற்றி) நாம் ஆச்சரியமடைய வேண்டியதில்லை. ஏனெனில், நமது புராணங்கள் யாவும் விண்ணுலகின் பெருமையைப்பற்றி வர்ணிப்பதில் கொஞ்சமேனும் அஞ்சவில்லை. ஆனால், அதற்கு மிதற்கும் சம்மந்தமெப்படியெனில், மதம் என்பது ஓர் வித பைத்தியம். பைத்தியத்துக் கும் சந்திரனுக்கும் கர்ண பரம்பரையான சம்பந்தமும், தொடர்ச்சியும் எப்பொழுதும் இருந்துகொண்டே வந்திருக்கின்றது- இருந்து கொண்டு மிருக்கின்றது.

ஃ ஃ

"புராணங்களும், இதிகாசங்களும், பொதுவாகவே கலப்பற்றதும், பரிசுத்தமுமான கட்டுக்கதைகள்" யென ஓர் பேரறிஞர் கூறியிருக்கின்றார். அப்படியானால், நமது புராணங்களில் காணப்படும் கதைகளும் இவ் விதியின் கீழ் அடங்குமாயென ஓர் சந்தேகம் நமக்கு உதிக்கலாம். ஆனால், ஆழ்ந்து கவனித்தோமேயானால், புராணங்களிலுள்ள கதைகள் யாவும், ஒன்று உண்மையாகவே பரிசுத்தமான கட்டுக்கதைகளாகவாவதிருக்க வேண்டும். அல்லது அவைகள் யாவும் அசுசியான உண்மைகளாகவாவ திருக்க வேண்டும். அப்படி அவைகள் பரிசுத்தமான கட்டுக்கதைகள் அல்லவென்றும், அல்லது அசுசியான உண்மைகள் அல்லவென்றும் கூறினால், பிறகு அவைகள் யாவும் உண்மையாகவே மிக்க ஆபாசமும், அபத்தமும், அசங்கியமுமான கற்பனைகளாகவாவதிருக்கவேண்டும்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 01.03.1931**



RangaRakes tamilnavarasam.com

# கர்ப்பத்தடை

## குழந்தைகள் பெறுவதை குறைக்க அவசியம்

ஒரு தேசத்து ஜனங்கள் திரேக ஆரோக்கியமும், புஷ்டியும், பலமும், வீரமும், சுயமரியாதையும், அறிவுமுள்ளவர்களாக இருக்க வேண்டுமானால், அவர்கள் குழந்தைப் பருவம் முதற்கொண்டே தங்கள் பெற்றோர்களால் நன்றாய் போஷிக்கப்பட்டும், கல்வி கற்பிக்கப்பட்டும், விசாரமில்லாமல் மன உல்லாசமாகவும்வளர்க்கப்படவேண்டும். அவ்விதம் பெற்றோர்களால் குழந்தைகள் வளர்க்கப்பட வேண்டுமானால், பெற்றோர்கள் தங்கள் சக்திக் கும் தகுதிக்கும் போதுமான அளவே குழந்தைகளைப் பெறுவதோடு நிறுத்திக் கொள்ளவேண்டும். அப்படியில்லாமல், சக்திக்கும், அளவுக்கும் மீறி பெற்றோர்கள் அதிகமாகக் குழந்தைகளைப் பெறுவதால் பெற்றோர்கள் கஷ்டத் திற்குள்ளாவதுடன், குழந்தைகளும் பலவீனர்களாகவும், சௌகரிய மற்றவர்களுமாகி, அவர்களைக் கொண்டதேசமும் தரித்திரத்தில் மூழ்கி மற்ற மக்களுக்கும் துன்பத்தை விளைவிக்க வேண்டியவர்களாகி விடுகின்றார்கள்.

உதாரணமாக. நமது நாட்டையே எடுத்துக்கொள்ளுவோமேயானால், நாளுக்கு நாள் ஜனங்களின் எண்ணிக்கை அதிகமாகி, பெரும்பான்மை யோர்கள் தொழிலில்லாமல், வாழ்வதற்கே வகையில்லாமல் மேலும் மேலும் பிள்ளைகளைப்பெற்றுக்கொண்டு, அவைகளை காப்பாற்றவும், படிப்பிக் கவும் சத்தியில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு துக்கத்தில் ஆழ்ந்து கிடப் பதும் நாம் அனுபவித்தும், பார்த்தும் வருவதுமான சம்பவங்களாகும். சில குழந்தைகளைக் கொண்ட சிறிய குடும்பங்களுக்கும், அதிகமான பிள்ளைக் குட்டிகளைக் கொண்ட பெரிய குடும்பங்களுக்கும் உள்ள வித்தியாசங்களை, நாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிகின்றோம். முதலாவது, பிள்ளை களை அதிகமாக பெறப்பெற, பெற்றோர்களின் சுகபோகங்கள் தானாகவே குறைந்து கொண்டு வருகின்றன. அதுபோலவேதான், ஒரு நாடும் தனது சக்திக்கு மேற்பட்ட மக்களை உடையதாக ஆகிவிட்டால் அது சதா காலமும் பஞ்சத்தினாலும், நோயினாலும் துன்பப்பட்டுக்கொண்டு இருக்க வேண்டிய தோடு, அது தன் அழகையும், முற்போக்கையும் இழந்து சுயமரியாதையை யுமிழந்து தயங்கவேண்டியதாகி விடுகின்றது.



இந்த உண்மையை அறியாமலே இதுவரை அனேக சமூக சீர்திருத் தக்காரர்கள் என்பவர்களும், பொருளாதார சீர்திருத்தக்காரர்களென்பவர் களும் தங்கள் நாட்டின்–மக்கள் சமூகத்தின் முற்போக்கிற்கும், பொருளாதார முற்போக்கிற்கும், வேறு எத்தனையோ துறைகளில் உழன்று கஷ்டப்பட்டும் பயனடையாமல் சலிப்பின் மீது கடைசியாக, ஒரு நாட்டுமக்களை மற்றொரு நாட்டு மக்கள் வெறுக்க வேண்டியவர்களாகி விட்டார்கள். சதாகாலமும் பிறர் மீதே குற்றம் சொல்ல வேண்டியவர்களாகவுமாகிவிட்டார்கள். நன்றாய் வாழுபவர்களின் மீது பொறாமைப்பட வேண்டியவர்களாகவும், மற்றவர் களைப் பட்டினி போட்டால் தான் தாம் வாழலாம் என்று நினைக்க வேண் டியவர்களாகவும் ஆகிவிட்டார்கள்.

ஆனாலும், சமீப காலத்தில் சில நிபுணர்கள் இவ்விஷயங்களை நடுநிலைமையிலிருந்து ஆராய்ச்சி செய்து பார்த்து, இவ்வித கொடுமையான நிலைமைக்கு உண்மையான காரணங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அஃதென்னவென்றால், முதலில் குறிப்பிட்டதான அதாவது ஜனங்கள் அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்று, ஜன சமூகத்தைப் அதிகப் படுத்தி விடக்கூடாது என்பதேயாகும்.

ஆகவே, இந்த முடிவானது இப்போது மேல்நாட்டின் அறிவாளிகள் பலராலும், மற்றும் பொது நல சேவைக்காரர்கள் பலராலும், வைத்திய நிபுணர் கள், பொருளாதார நிபுணர்கள் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு, இத் துறை களில் இறங்கி, மேலும் மேலும் ஆராய்ச்சி செய்து மிக்க முற்போக் கான மார்க்கங்களையும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அன்றியும், இந்த தத்துவத்தை அநேக அறிஞர்கள், தங்கள் வாழ்க்கைகளில் அமுலுக்குக் கொண்டு வந்து கொண்டும் இருக்கின்றார்கள். அதாவது மேல் நாட்டார்களில் படித்தவர்கள் என்று சொல்லப்படும் கூட்டத் தார்களிலேயே, அநேகர் கர்ப்பம் தரிக்காமல் இருக்கத்தக்க பல உபாயங் களைக் கையாண்டு வருகின்றார்கள். இதற்காகப் பல சாதனங்களையும் கண்டு பிடித்து, பொது ஜனங்களுக்கு அறிவித்து, சில சாதனங்களை வினியோகித் தும் வருகின்றார்கள். ஆனால், சாதாரண ஏழை ஜனங்களும், பாமர ஜனங் களும் இதன் உண்மைத்தன்மையை உணரவோ, பயன் அடைய முடியா மலோ இருந்து வருகிறார்கள். உண்மையிலேயே, இம் மாதிரி அதிகமான பிள்ளைகளைப் பெறாமல் – கருத்தரிக்க விடாமல் – இருக்கக் கவலை எடுத்துக்கொள்ளவேண்டியவர்கள் மிக்க ஏழை மக்களேயாவார்கள். ஆனால், இவர்களோ இம் மாதிரியான, அதாவது கருத்தரிக்காமல் இருப்ப தற்கான காரியங்களைப்பற்றிப் பேசுவது கூட நாகரீக விரோதமான பேச் சென்று கருதுகிறார்கள். அறிவில்லாத பொது ஜனங்களும், மத விஷயத்திலும், கடவுள் விஷயத்திலும் கண் மூடித்தனமான மூட பக்தியுள்ளவர்களும், இதை மதவிரோதமான தென்றும், பாவகரமானதென்றும், கடவுள் கோபத்திற்கு



RangaRakes tamilnavarasam.com

இலக்கான காரியமென்றும் பேசி, இந்தத் தத்துவங்களை எதிர்த்து வருவதால் ஏழை மக்களும், பாமர மக்களும் இப்படி ஒரு மார்க்கம் இருக்கின்றது என்று அறியக்கூட சௌகரியமில்லாமல் போய் விட்டது. ஆனால், மேல் நாட்டில், டாக்டர் மாரீஸ் டோப்ஸ் என்கின்ற ஒரு ஆங்கிலப் பெண் ஒருவர், தைரியமாக முன்வந்து எவ்வித பழிப்புக்கும், எதிர்பிரசாரத்திற்கும் அஞ்சாமல், இவ்விஷயத்தை, கற்பத்தடையை, பிரசாரம் செய்யத் துணிந்ததின் பயனாய், இப்போது இவ்விஷயம், மேல் நாட்டில் எங்கும் சாதாரணமானதும், சகஜ மானதுமான விஷயமாய்ப் பேசிக்கொள்ளப்படும்படியாக ஆகிவிட்டது. அதுமாத்திரமல்லாமல், மேல் நாடுகளில் பல இடங்களில் பிள்ளைப்பேற்றை தடுக்கும்படியான வசதிகள் சம்மந்தமாக, பல வைத்திய சாலைகள் ஏற்படுத்தப் பட்டும் இருக்கின்றன. கருத்தரிக்காமல் இருக்கவேண்டுமென்ற ஆசை உடையவர்களுக்கு அம் மார்க்கங்களைக் கற்றுக்கொடுப்பதுடன், அதற்கு வேண்டிய சாதனங்களையும், கையாளும் முறைகளையும் போதிக்கின்றார் கள். மருந்து வியாபாரக்கடை முதலியவைகளில், கர்ப்பத்தடைக்கு அனுகூல மான மருந்துகளும், சாதனக் கருவிகளும் விற்பனை செய்யவும் ஏற்பாடுகள் செய்திருக்கின்றார்கள்.

இவைகள் வைத்திய நிபுணர்களாலும், சமூகச் சீர்திருத்த ஆராய்ச்சிக் காரர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டதால் இதை சட்ட விரோத மென்றும் யாரும் சொல்லத் துணியவில்லை. இது எவ்விதத்திலும் சட்ட விரோதமான காரியமுமல்ல என்பதை யாவரும் உணரவேண்டும். ஏனெ னில், சட்ட விரோதமான காரியமென்பதெல்லாம் அன்னியனுக்கும், தனக்கும் துன்பத்தையும் நஷ்டத்தையும் கொடுக்க கூடிய காரியங்களைத் தான் சொல்லலாம். இதனால் யாருக்கும் எவ்வித நஷ்டமோ, கஷ்டமோ, அதிருப்தியோ ஏற்படுவதற்கில்லை.

அன்றியும், இந்த கர்ப்பத்தடை முறை என்பது கர்ப்பம் ஏற்படாமல் தடுப்பதற்கு உரியதே ஒழிய, கர்ப்பம் ஏற்பட்ட பிறகு அதனைக் கலைப் பதற்காக ஏற்பட்டதல்ல. அதற்கு இந்த முறைகள் பயன்படவுமாட்டாது. அன்றியும், கர்ப்பம் ஏற்பட்ட பிறகு கரைப்பது என்பது தாயின் சரீர சக்திக் கும், சில சமயங்களில் உயிருக்குமே ஆபத்தை விளைவிக்க கூடியதாயிருப் பதால் கண்டிப்பாக அந்த முறையை யாரும் கையாளக் கூடாது என்பதே நமதபிப்பிராயம்.

கர்ப்பத்தைக் கலைக்கும் முறை எதுவானாலும் அது கண்டிப்பாக நீக்கப்பட வேண்டியதேயாகும். தேசப் பொது நன்மையையும், சமூக நன்மையையும் மாத்திரமே உத்தேசித்து, அறிஞர்கள் கர்ப்பத்தடையைக் கண்டு பிடிக்கவில்லை மற்றும் என்னென்ன காரியங்களுக்கு கர்ப்பத்தடை அவசியமென்பதையும் சற்று விளக்குவோம்.



பெண்ணானவள் திட சரீரியாயில்லாமலும், காயாலாவுடனும், சரியான அமைப்புப் பொருந்திய சரீரமாயில்லாமலும் இருக்கின்ற சமயத் தில் கர்ப்பம் தரித்து, பிள்ளைகளை பெறுவதென்பது அவளுக்கு மிகவும் அபாயகரமான தாகவும், கஷ்டமானதாகவும் இருக்கும்.

உதாரணமாக, க்ஷயரோகத்தாலும் நீரழிவு வியாதியாலும், நெஞ்சு துடி துடிப்பினாலும் பீடிக்கப்பட்டிருக்கின்ற பெண்களும், பிள்ளை பெறும் துவாரம் அதிகமாக சிறுத்து இருக்கும் பெண்களும் கர்ப்பம் தரிப்பது மிக்க ஆபத்துக்கும், கஷ்டத்திற்கும் உள்ளான கெடுதியாகும்.

தொத்துவியாதி, மேகசம்பந்தமான வியாதி, காக்கை வலிப்பு, பைத்தியம், கேனம் முதலிய வியாதியுள்ளவர்கள் கர்ப்பம் தரிப்பதும் பயனற் றதும் வாழ்க்கையில் மிக்க கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியதுமாகி விடும்.

பிரசவத்தினால் சரீர மெலிவும், பலக்குறைவும் ஏற்படுகின்ற சுபாவ சரீரமுடையவர்கள், மறுபடியும், மறுபடியும் கர்ப்பமானால், சரீரம் மிகவும் பலவீனமடைந்துவிடும். ஒரு ஸ்திரீ ஒரு குழந்தையைப்பெற்று, அது நன்றாகப் பால் குடித்து வளர்வதற்கு முன்னாலும், முதலில் கர்ப்பமாகி பிள்ளைப் பெற்ற பலவீனம் நீங்குவதற்கு முன்பும் கர்ப்பமாகி விட்டால், முதல் குழந்தைக்கு சௌகரியமில்லாமல் போவதோடு மறு குழந்தையைப் பெறுவதற்கும் போதிய சக்தியில்லாமல் போய்விடும்.

பெண்ணும் ஆணும் தகுந்த வயது அடைவதற்குமுன் அதாவது பெண்கள் 22 வயதுக்கு முன்னும், புருஷர்கள் 25 வயதுக்கு முன்னும், சதிபதிகளாயிருக்கும் போது பெண்கள் கர்ப்பம் தரித்து விட்டால், அந்த குழந்தைகள் மிக்க இளமைப்பருவத்தின் காய்ப்பாகி உறுதியற்ற சரீரக் கட்டு டையதாகி விடும். குடும்பத்திற்கு போதிய வரும்படி இல்லாத நிலையில், பெண்கள் பிள்ளைகளைப் பெற்றுவிட்டால் குடும்பத்திற்கு தரித்திரமும், கஷ்டமும் அதிகமாகி வாழ்க்கை திருப்தியுமற்றதாகி விடும்.

அன்றியும், ஆண், பெண் ருது சாந்தியானவுடன் பெண் கர்ப்பமாகி விட்டால், கொஞ்சகாலமாவது தம்பதிகள் இயற்கை இன்பம். கலவி இன்பம் அடைவதற்கு சாவகாசமில்லாமல் போய் விடும்.

இவ்வளவு விஷயங்களில், பெண்கள் கர்ப்பமாவது அசம்பாவித மாயிருப்பதுடன், பெண்களின் சுதந்திரவாழ்வுக்கும் இந்த கர்ப்பமானது பெரிய இடையூறாயிருக்கின்றது. என்னவெனில், பெண்களுக்கு கருப்பத்தை உண்டாக்குகின்ற பொறுப்பு மாத்திரம் ஆணைச் சேர்ந்ததாயிருக்கின்றதே தவிர, மற்றபடி, கருப்பமான நிமிஷ முதல் பிள்ளை பெறும் வரை, அதன் பொறுப்பு முழுவதும், பிள்ளை பெறும் போது அடையும் பிரசவ வேதனை யும், அதனால் உண்டாகும் ஆபத்துகளும் பெண்களே அடைகின்றார்கள்.



RangaRakes tamilnavarasam.com

பிள்ளையைப் பெற்ற பின்பும், தாயானவள் தான் தனது இரத்தத்தைப் பாலாக்கி, குழந்தைகளுக்கு ஊட்டி வளர்க்கின்றாள்.

குழந்தைக்கு வரும் வியாதிகளுக்கும் தானே பத்தியமிருக்க வேண்டியவளாகிறாா். அதைச் சுமந்து, போஷிக்கும் வேலை முழுவதும் தாயே செய்ய வேண்டியவளாகிறாள்.

பெண்ணானவள் ஒன்று, இரண்டு பிள்ளைகளை பெற்றவுடனேயே சகலவிதசுகபோகங்களிலும் விரக்தியுடையவளாகி விடவேண்டியவளாகிறாள்.

குழந்தை பெற்ற உடனே குழந்தையின் போஷனையையும், வளர்ச்சியையும் உத்தேசித்துத் தனது சுதந்திரத்தைவிட்டு, புருஷனுக்கும், குடும்பத்திற்கும் அடிமையாகிவிட வேண்டியவளாகிறாள். புருஷன் தனக்கு இஷ்டமான பெண்ணை மணந்து கொள்வதற்கும் பெண்ஜாதி ஒரு புருஷனைத்தவிர வேறு புருஷனை எந்தக் காரணம் கொண்டும் மணந்து கொள்ளமுடியாததற்கும், இக்குழந்தைகளைப் பெறுவதே பெருத்த தடையாயிருக்கின்றது. பிள்ளைகளைப் பெறுவதாலேயே பெண்களுக்குச் சுதந்திரம், மானம், அறிவு எல்லாவற்றையும் விட்டுவிட நேரிடுகின்றது. சிறிதளவாவது சுயேச்சையுள்ள பெண்ணாய் விளங்குவதைவிட, பிள்ளைகளைப் பெறும் அடிமையான இயந்திரமாகவே இருக்கவேண்டியதாய் இருக்கின்றது. இதுவரை கூறி வந்தவைகளாலும், பல காரணங்களாலும் பெண்கள் கா்ப்பத்தடையை அனுசரிக்க வேண்டியது முக்கியமான காரியமாகும் என்று சொல்லுகின்றோம்.

ஆகவே, இந்த தலையங்கத்தில் கா்ப்பத்தடையின் அவசியத்தைப் பற்றி ஒருவாறு விளக்கினோம். இனி அடுத்த வியாசத்தில் அதன் உபாயங்கள் என்ன என்பதைப் பற்றி நிபுணா்கள் என்பவா்களின் அபிப்பி ராயத்தை எடுத்து விளக்க எண்ணியுள்ளோம்.

**குடி அரசு - கட்டுரை - 01.03.1931**



# ராஜி - ஓ - ஓ - ஓ ராஜி !
# உப்பு சத்தியாக்கிரக ராஜி!!

இந்தியாவின் அரசியல் சரித்திரத்திலேயே இதுவரையும் யாரும் கேட்டிராத அளவுக்கு ராஜி மலிந்து போய் ராஜி - ஓ - ஓ - ஓ ராஜி! ராஜி-ஓ - ஓ - ஓ ராஜி!! என்று வெகு கவலையுடன் அலைந்து திரிந்து எப்படியோ ஒரு விதத்தில் உடும்பு கையைவிட்டால் போதுமென்ற காரியத்தில் வெற்றி பெற்றதைக் குறித்து தேசியவாதிகள் பாராட்டத்தக்கவா்களே யாவாா்கள்.

பொதுவாகவே ராஜியின் தத்துவமானது இதுவரை வெளியாயிருக் கும் விஷயங்களைக்கொண்டு பாா்த்ததில் எது போல இருக்கின்றது என்றால் தற்காலம் இந்திய ஜனங்கள் ஒரு விவகாரத்திற்கு செல்லும்போது அவா்களுடைய விவகாரத்திற்குக் காரணமான காரியங்களும் எண்ணங்களும் வேறு ஒன்றாக இருந்தாலும் வேறு பல அசௌகரியங்களும் பாத்தியங்களும் லட்சியமாகக் கருதப்பட்டிருந்தாலும் வியாஜ்யம் தொடா்ந்து விவகாரத்தை மும்மரமாய் நடத்தினபிறகு அது முடிவு பெறுவதற்குள் ஏற்பட்ட களைப்பும், சலிப்பும், கஷ்டமும், நஷ்டமும் மேலும் மேலும் தொடா்ந்து நடத்தப்போதிய சாதனங்களற்ற தன்மையும் ஆகிய எல்லாம் ஒன்றாகச் சோ்ந்து கடைசியில் எப்படியாவது வியாஜ்யம் ஒழிந்தால் போதுமென்று கருதுவதும், வியாஜ்யம் தொடா்ந்தபோது அதற்குக் காரணமாயிருந்த லக்ஷியம் எந்த கதியாவது அடையட்டும் என்று கருதி விவகார லக்ஷியத்தின் பிரதானத்தையும், அவசியத்தையும் மறந்து அல்லது மனதார அலக்ஷியமாய்க் கருதி எப்படியாவது தங்களுடைய சொந்த கௌரவத்திற்கும் வீம்பு பேசிய வீராப்புக் கும் மாத்திரம் ஏதாவது ஒரு வழியில் பாமர மக்களால் குறைவு சொல்லப் படாமல் இருப்பதற்கும் மொத்தத்தில் தோல்வி ஏற்பட்டு விட்டதாக பிறா் மதிப்பதற்கு இடமில்லாமலும் ஏதோ ஒரு வகையில் தொல்லை ஒழிந்தால் போதும் என்று எப்படி நினைத்து விடுகின்றாா்களோ அதுபோலவே தான் இந்த 1930 வருஷத்திய “தேசியக் கிளா்ச்சி” விவகாரத்தின் முடிவும் ஏற்பட்டு விட்டது என்று சொல்லவேண்டியிருக்கின்றது. என்றாலும் எப்படியோ ஒரு வழியில் இனி மேலாவது பொது ஜனங்களுக்குத் தொல்லையில்லாமல் இருக்கும்படியாக போராட்டத்தை நிறுத்த ஒரு வழி கண்டுபிடிக்கப்பட்டு முடிவுபெற்றதைக் குறித்து “தேசியவாதி”களையும் “தேச பக்தா்”களையும் மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

இந்தப் போராட்டமானது இன்னும் கொஞ்சகாலமாவது நடைபெறுவதின் மூலம் யார் யார் வெற்றி பெற்றாலும், யார் யார் தோல்வியுற்றாலும் எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை என்று ஆரம்ப முதலே கருதி வந்திருக்கின்ற நாம் இப்போது இந்த ராஜியினால் ஏதாவது லாபமோ நஷ்டமோ உண்டாய் விட்டதாக சொல்லக்கூடுமென்று யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள்.

ஏனெனில் இந்த நாட்டு மக்கள் பொதுவாகவும், சிறப்பாகப் பெரும்பாலோர் தனிப்பட்ட முறையிலும் அடைந்துவருகின்ற கஷ்டங்களுக்கும், நஷ்டங்களுக்கும், இழிவுகளுக்கும், சமத்துவமும்,மனிதத்தன்மையும் சுதந்திரமும் அடைய முடியாமல் – முற்போக்கடைய முடியாமல் தடுக்கப்பட்டு அவதிப்பட்டு வருவதற்கும் ஒரு சிறு பரிகாரமும், இக்கிளர்ச்சியின் காரணத்தினாலாவது, ராஜி நிபந்தனையிலாவது சிறிதும் இல்லை யென்று கருதுகின்றோம். ஆதலால் அவற்றைப்பற்றி நாம் கவலையோ, மகிழ்ச்சி யோ அடையவில்லை.

பொதுவாகவே நமது நாட்டு மக்களுக்கு இரண்டு வகையான கூட்டத்தாரிடத்தில் வெகுகாலமாகவே மரியாதையும், பக்தியும் மதிப்பும் இருந்து வருகின்றது. அதாவது ஒன்று, உலக வாழ்க்கையை – சுகபோக போக்கியங்களைத் துறந்த துறவிகள், சன்யாசிகள் என்றால் அவர்களிடம் காரணா காரியமில்லாமல் மரியாதை செலுத்துவதும், பக்தி செலுத்துவதுமாகும்.

இரண்டாவது, அதிகாரமும் ஆட்சியும் செல்வமும் உடையவர் என்றால் அவர்களிடம் மதிப்பு வைத்து அவர்களைபிரமாதமாய் கருதுவது.

ஆகவே இந்த இரண்டு விதமான காரியங்களால் இன்று இந்தியர்கள் கண்ணுக்கும், மனதிற்கும் திருவாளர்கள் காந்தியும், இர்வினும் பிரமாதமாய்த் தோன்றி மக்களின் மனதைக்கவர்ந்து இருந்தார்கள் என்று சொல்ல வேண்டியிருக்கின்றது. போதாக்குறைக்கு ஷ இரண்டு கனவான்கள் நிழலிலும் பேராலும் பயனடையக் காத்திருந்த மக்களின் ஆர்ப்பாட்டமும், விளம்பரமும் மேலும் மேலும் கவனிக்கத்தக்கவர்களாகச் செய்து அவ்விரு கனவான்களின் பெயர்களும் பெருமையாய் அடிபட்டு அவர்களது சந்திப்புகளும், சம்பாஷணைகளும் மிக மிகப் பெரிதாக மதிக்கப்பட்டு நடந்த முடிவும் அர்த்தமில்லாமல் கொண்டாடப்படவும் ஏற்பட்டு விட்டது. இது பெரும்பாலும் உண்மைச் சுதந்திரமின்னதென்பதை வெகு காலமாகவே அறிய முடியாமல் வைத்திருந்த மக்களையும் மூடபக்தியில் அழுத்தி வைத்திருந்த மக்களையும் கொண்ட நாட்டுக்கு இயற்கையேயாதலால் இதைப்பற்றி நாம் குற்றம் சொல்ல வரவில்லை.

ஆனால் இப்படிப்பட்ட பெரியோர்கள் செய்துகொண்ட ராஜியில் நாட்டுக்கு மக்களுக்கு விளைந்த பயன் என்ன என்பதே இப்போது கவனிக்கப்படத்தக்கதாகும்.



ராஜி நிபந்தனைகளின் சுருக்கமாவது:–

1. காங்கிரஸ்காரர்கள் சட்டமறுப்பை நிறுத்திவிட வேண்டியது. சர்க்காரார் அடக்கு முறையை நிறுத்தி விட வேண்டியது.

2. வட்டமேஜை மகாநாட்டில் நடந்த இந்திய அரசியல் திட்ட விஷயங்களைப்பற்றி மேலே தொடர்ந்து ஆலோசிப்பது. இதில் முன் பேசிய விஷயங்கள் முக்கிய விஷயங்களாக இருக்கத்தக்கது.

3. இனியும் நடக்கப் போகும் அரசியல் திட்ட ஆலோசனைகளில் பிரிட்டிஷ் மந்திரி அறிக்கையை ஒட்டி காங்கிரஸ் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்வார்கள்.

4. இந்த சமரசம் சட்டமறுப்பு சம்பந்தமான விஷயத்தைக் கொண்டு ஏற்பட்டதாகும்.

5. சட்ட மறுப்பு அடியோடு நிறுத்தப்பட்டு விடும்.

6. பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரம் என்பது கூடாது. பொதுவாக அன்னிய நாட்டு துணி விஷயத்தில் சட்டம், சமாதானம், தனிப்பட்ட மனிதனின் சுதந்திரம் ஆகியவை பாதிக்கப்படாமல் இந்தியாவின் கைத் தொழில் பொருளாதாரம் ஆகியவைகளை உத்தேசித்து பிரசாரம் செய்வதும், விளம்பரம் செய்வதும் ஆக்ஷேபிக்கப்படுவதாகாது.

7. சுதேசி சாமான்களை உபயோகிக்கும்படியும் லாகிரி வஸ்துக்களின் உபயோகத்தை விலக்கும்படிக்கும் யாருக்காவது தீங்கு விளைவிக்கும் முறையில் செய்யுங்காரியங்களால் சட்டத்திற்கு மீறின மறியல்கள் செய்யக்கூடாது. யாராவது செய்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

8. போலீஸ் அக்கிரமங்களைப்பற்றி விசாரணை செய்வதில்லை.

9, 10. காங்கிரஸ்காரரால் சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டால் சர்க்காராரும் தாங்கள் பிரயோகித்த அடக்கு முறை சம்பந்தமான சட்டங்களை திருப்பி வாங்கிக்கொள்ளுவார்கள்.

11. பர்மாவில் பிறப்புவித்த கிரிமினல் திருத்த சட்டம் வாப்பீஸ் வாங்கப்படமாட்டாது.

12. சட்டமறுப்பு சம்மந்தமாய் இப்போது நடை பெறும் வழக்குகளில் பலாத்காரம் சம்மந்தப்பட்டவை தவிர மற்றவைகள் நிறுத்தப்பட்டுவிடும்.



RangaRakes tamilnavarasam.com

13. பட்டாள சிப்பாய்களும் போலீசாரும் சட்ட மறுப்பில் சேர்ந்து எந்தக்குற்றம் செய்திருந்தாலும் அவர்களை மன்னிக்க முடியாது.

14. வசூல் செய்த அபராதத் துகைகளையும் பரிமுதல் செய்த ஜாமீன் துகைகளையும் திருப்பிக்கொடுக்க முடியாது. ஆனால் வசூலாகாமல் இருப்பவைகள் தள்ளப்பட்டு விடும்.

15. தண்டப்போலீசை எடுத்து விடும் விஷயம் மாகாண கவர்ன் மெண்டுகள் இஷ்டத்தைப்பொறுத்தது. வசூலித்த தண்ட வரியையும் செலவு போக மீதி இருந்தால் தான் வாப்பீஸ் செய்யப்படும்.

16. அடக்குமுறை சட்டப்படி பரிமுதல் செய்து ஜப்தி செய்த அசையும் பொருள்கள் ஏலமிடாமல் விற்பனை செய்யாமல் இருந்தால் மாத்திரம் அவைகள் திருப்பிக் கொடுத்து விடப்படும். வரி பாக்கிக்காக ஜப்தி செய்யப்பட்ட அசையும் பொருள்களையும் பாக்கி வரியைக் கொடுத்து விடுவதாயிருந்தால் திருப்பிக் கொடுத்துவிடப் படும். இந்த விஷயங்களைப் பற்றி எடுத்துக்கொண்ட நடவடிக்கை களின் பயனாய் சொத்துக்கள் ஏதாவது சேதமாயிருந்தால் அவைகளுக்கு சர்க்காரார் பரிகாரம் செய்து கொடுக்கமாட்டார்கள். இந்த வகை ஜங்கம சொத்துக்கள் விற்கப்பட்டிருந்தால் அல்லது யாருக்காவது கொடுக்கப்பட்டு இருந்தால் திருப்பிக் கொடுக்க முடியாது. வரித்துகை போகமீதி இருந்தால் கொடுக்கப்படும்.

17. அவசரச் சட்டபடி பரிமுதல் செய்த சொத்துக்கள் அவசரச்சட்ட நிபந்தனைப்படி தான் திருப்பிக்கொடுக்கப்படும். வரிவசூலுக்காக ஜப்தி செய்யப்பட்ட பூமிகள் விற்கப்படாமலிருந்தால் திரும்பக் கொடுக்கப்படும். பூமிகள் மூன்றாதவருக்கு விற்கப்பட்டிருந்தால் அவ்விஷயங்களில் சர்க்காரால் ஒன்றும் செய்யமுடியாது. இந்தப்படி ஜப்திசெய்யப்பட்டவைகளில் சில கேசுகள் அக்கிரமமாக செய்யப்பட்டிருப்பதாக திரு. காந்தியவர்கள் தெரிவித்ததைப்பற்றி கவனித்ததில், அவர் சொல்லுவதை ஒப்புக்கொள்ளக் கூடவில்லை. ஆகையால் சர்க்காரார் அவ் விஷயமாயும் ஒன்றும் செய்ய முடியாது.

18. சட்ட விரோதமாக வசூலிக்கப்பட்டது என்று யாராவது தெரிவித்துக் கொண்டால் மாகாண அதிகாரிகளால் ஜில்லா அதிகாரி கள் உடனே உண்மையை விசாரித்து அறிந்து பரிகாரம் செய்ய உத்திரவிடப் படுவார்கள்.

19. ராஜீனாமா கொடுத்துவிட்ட உத்தியோக ஸ்தானங்கள் காயமாய் பூர்த்திசெய்யப்பட்டிருந்தால் ராஜீனாமா கொடுத்தவர் களுக்கு மறுபடி உத்தியோகம் கொடுக்கப்படமாட்டாது ராஜீனாமா கொடுத்த



உத்யோகங்களில் ஏதாவது இன்னமும் பூர்த்தி செய்யப்படாதது எதுவாவதுகாலியாயிருந்தாலும் அது அவர்கள் மறுபடியும் விண்ணப்பம் செய்து தங்களுக்கு அந்த வேலை வேண்டும் என்று கேட்டுக்கொள்வதின் மீது மாகாண கவர்ன்மெண்டுகள் யோசித்து தங்கள் யுக்திப்படி நடப்பார்கள். ஆனாலும் இவ்விஷயத்தில் தாராள நோக்கம் காட்டுவார்கள்.

20. உப்புச்சட்டத்தை யாரும் மீறக்கூடாது. உப்புச்சட்டத்தில் மாறுதல் செய்யவும் முடியாது. ஆனால் சில ஏழைகளுக்கு உதவி யளிக்க என்று ஏற்கனவே சர்க்கார் அனுமதித்துக் கொண்டுவருகிற படிக்கு ஏழைகளுக்கு தங்கள் செலவுக்கு என்று உப்பளங்களில் உப்புச் சேகரித்து தங்கள் செலவுக்குப்போக மீதிஇருந்தால் அதை அந்த கிராமத்திலேயே விற்று விடவும் ஆக்ஷேபணை இல்லை. வெளி யிடங்களில் விற்கக்கூடாது. அதுவும் சமுத்திரக்கரை ஓரம் உள்ள ஏழைகளைத்தான் அனுமதிக்கமுடியும்.

21. இதுதான் சமாதான நிபந்தனை. இதை அறிந்து காங்கிரஸ் வாதிகள் தங்கள் கடமைகளைச் செலுத்தி விஷயங்களை அமுலுக்கு கொண்டுவரத் தவறுவார்களேயாயின் சர்க்காரார் பழையபடி நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்கள்

( ஒப்பம் ) H.W. எமர்சன்.

இந்திய சர்க்கார் காரியதரிசி.

## காரியக் கமிட்டி, மாகாணக் கமிட்டிகளுக்கு அனுப்பிய தாக்கீதின் சாராம்சம்

இதை ஒப்புக்கொண்டு காங்கிரஸ் காரியக்கமிட்டியார் சட்ட மறுப்பை நிறுத்தி அடியிற்கண்ட அறிக்கையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதன் சாரம்:–

சர்க்காராருக்கும் காங்கிரஸ் சார்பாக திரு. காந்தியவர்களுக்கும் ஏற்பட்டுள்ள ராஜி ஒப்பந்தத்தை காங்கிரஸ் கமிட்டி ஏற்றுக்கொண்டு அதன் படி நடக்க மற்ற காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் தாக்கீது அனுப்புகின்றது.

காரியக்கமிட்டிக்கும் சர்க்காருக்கும் தற்காலீகமாக ராஜி ஏற்பட்டு விட்டது.

சட்டமறுப்பு இயக்கத்தையும் வரி கொடா இயக்கத்தையும், பிரிட்டிஷ் சரக்கு பஹிஷ்காரத்தையும் நிறுத்தி விடவேண்டியது. மதுபானக் கடைகளையும் அன்னிய ஜவுளிக்கடைகளையும் அவசியம் நேர்ந்தால்



RangaRakes tamilnavarasam.com

பஹிஷ்காரம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

ஆனால் அதில், பலவந்தம் வற்புறுத்தல், வீணான ஆர்ப்பாட்டம் தடையான ஆடம்பரம், சட்டவிரோதம் ஆகியவைகள் இல்லாமல் இருக்க வேண்டும்.

வீட்டு உபயோகத்திற்கு உப்பு சேகரித்துக் கொள்ளலாம் என்பதாகும்.

இதை ராஜி என்று சொல்லுவதா வேறு ஏதாவது சொல்லுவதா என்பதை வாசகர்களையே முடிவு கட்டிக்கொள்ள விட்டுவிடுகின்றோம். இந்த ஒரு வருஷகாலமாக மக்கள் அடைந்த துன்பம், அதனால் இனியும் கொஞ்ச காலத்திற்கு அனுபவிக்கத்தக்கதாய் நாட்டில் ஏற்பட்ட வியாபாரக் குறைவு, சொத்து நஷ்டம், பொதுஜன அசௌகரியம் ஆகியவைகளுக்காக சட்ட மறுப்பு இயக்கம் சிறிது நாள் எதிர்பார்த்ததற்கு மேல் வளர்ந்து வந்தது என்பதைத் தவிர ராஜி நிபந்தனைப்படி பார்த்தால் சட்ட மறுப்பு இயக்கம் பொஸ்ஸ் என்று போனது விளங்காமல் போகாது.

மேலும் சட்ட மறுப்புக்காக காங்கிரஸ் கைகொண்டு செய்த வேலை கள் எல்லாம் அரசியல் தத்துவத்தைக் கொண்டதே ஒழிய உண்மையாக அந்தந்தத் தனிப்பட்ட வேலையின் பயனை உத்தேசித்தல்ல என்று நாம் அடிக்கடி சொல்லி வந்ததும் இப்போது வெட்ட வெளிச்சமாய் விட்டது.

அதாவது இதுவரை செய்துவந்த கள்ளுக்கடை மறியலும், ஜவுளிக்கடை மறியலும், உப்புக்காய்ச்சும், சட்ட மறுப்பும் வேறு ஒரு காரி யத்திற்காக செய்ததே யொழிய கள்ளு நிறுத்தவும், ஜவுளி நிறுத்தவும், உப்புச் சட்டம் உடைக்கவும் செய்ததல்ல என்பதை யாவரும் உணரும்படியாக ராஜி நிபந்தனைகள் வற்புறுத்திக் காட்டி விட்டன.

ஆதலால் இந்தக் கிளர்ச்சியில் கள்ளு நின்றுவிடுமென்றும், ஜவுளி நின்றுவிடும் என்றும், உப்பு தெருக்களில் விலையில்லாமல் கொட்டிக் கிடக்கு மென்றும் கருதினவர்கள் நன்றாய் ஏமாற்ற மடைந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

மேலும், இந்த ராஜியைப் பற்றி தேசியப் பத்திரிகை என்பவைகளில் ஒன்றான சுதேசமித்திரன் பத்திரிகையானது ராஜியைப்பற்றி எழுதுகையில், “இவ்வளவு கஷ்டப்படாமலே இந்த பலனை அடைந்திருக்க முடியாதா என்று சிலர் கேட்கலாம். இது வீண் கேள்வி. ஏனெனில் நடந்தது, நடந்து விட்டது; தேச மகா ஜனங்கள் அஹிம்சா தர்ம போராட்டத்தில் இறங்கி விடுவதன் பலன் ஒரு வருஷத்திற்குள் இவ்வளவு தெளிவாக விளங்கி இருக்காது” என்று சொல்லியிருப்பதில் இருந்தே இதன் பிரயோஜனமற்ற தன்மையும், ஏமாந்துபோன தன்மையும் நன்றாய் விளங்கும். மற்றும் அப்பத்திரிகை எழுதியிருப்பதில் சட்ட மறுப்பு ஆரம்பிக்கப்பட்டதின் “முக்கியமான



லட்சியம் ராஜி நிபந்தனைகளில் குறிப்பிட்டிருக்கும் காரியங்கள் அல்ல வென்பதை மறந்து விடக்கூடாது” என்றும் எழுதிவிட்டு “எதற்காக சட்ட மறுப்பு ஆரம்பிக்கப்பட்டதோ அதுவே நமது முக்கிய லட்சியம். மூன்று நிபந்தனைகளுக்கு உட்பட்டு சர்வகட்சி மகாநாட்டில் கலந்து கொள்ள காங்கிரஸ் இப்போது சம்மதித்து விட்டது” என்றும் எழுதி இருக்கின்றது. அந்த மூன்று நிபந்தனைகளை எடுத்துக்காட்டுவதிலும்,

1. சமஷ்ட்டி அரசாங்கம் ஏற்படுத்துவது.

2. இந்திய ஜனங்களின் பிரதிநிதிகளுக்கு ஜாவாப்தாரியாக அரசியல் நடத்த ஏற்பாடு செய்வது.

3. இந்தியாவின் நன்மையை உத்தேசித்து சில பந்தோபஸ்துக்கள் செய்யப்பட வேண்டியது என்று கண்டிருக்கிறது.

இவை நல்லதா? கெடுதலா? என்பது ஒருபுறமிருந்தாலும், இந்த மூன்று கொள்கைகளையேதான் வட்டமேஜை மகாநாட்டுப் பிரதிநிதிகளும் முக்கிய மாய் வைத்து தீர்மானித்து இருக்கிறார்கள்.

ஆதலால் இது புதிய லக்ஷியம் என்றோ இனிச் செய்யவேண்டிய வேலை என்றோ சொல்லிவிடுவதற்கில்லை. இதன் யோக்கியதையை பார்க்கும் போது ஒரு சிறு கதை ஞாபகத்திற்கு வருகின்றது.

அதாவது ஒரு மாமியார் தான் வீட்டில் இல்லாத போது வீட்டிற்கு ஒரு பிச்சைக்காரன் வந்து பிச்சை கேட்டதில் வீட்டிலிருந்த மருமகள் பிச்சை இல்லையென்று சொல்லி பிச்சைக்காரனை அனுப்பிவிட்டாள். அது சமயம் மாமியார் எங்கோ வெளியில் சென்று வந்து கொண்டிருந்தவள் பிச்சைக் காரனை சந்தித்து என்ன விஷயம் என்று கேட்க அவன் உங்கள் வீட்டு மருமகள் பிச்சை இல்லை என்று சொல்லிவிட்டாள் என்று சொன்னான். அதற்கு அந்த மாமியார் “அவள் கிடக்கின்றாள் அதிகப் பிரசங்கி” என்று சொல்லி பிச்சைக்காரனை அழைத்துப் போய் தான் வீட்டு வாயிலில் நின்று கொண்டு பிச்சைக்காரனை பிச்சை கேட்கும்படி சொன்னாள். பிச்சைக் காரனும் மாமியார் சொன்னபடி வெகு ஆவலாக புதிதாய் “அம்மா பிச்சை போடுங்கள்” என்று கேட்டான். மாமியார் எஜமானி போல் நின்று கொண்டு இருந்தவள் வெகு கம்பீரமாக “பிச்சை இல்லை போ” என்று சொன்னாள். உடனே பிச்சைக்காரன் “இந்தச் சங்கதி உங்கள் மருமகளே சொல்லி விட்டார்களே. இதற்கு நீங்கள் ஏன் என்னைக் கூப்பிட்டு இந்த மாதிரி சொல்ல வேண்டும்” என்று கேட்டான். அதற்கு மாமியார் கோபித்து “பிச்சை உண்டு இல்லை என்று சொல்லும் உரிமை எனக்குத்தான் உண்டே யொழிய என் மரு மகளுக்கு இல்லை. ஆதலால் தான் உன்னை கூட்டி வந்து என் உரிமையை நிலை நிறுத்திக்கொண்டேன்” என்று சொன்னாளாம். அதுபோல வட்ட



RangaRakes tamilnavarasam.com

மேஜை மகாநாட்டில் முடிவான விஷயங்களையே மறுபடியும் காங்கிரஸ் காரர்கள் போய் உட்கார்ந்து அந்த மூன்று விஷயங்களையும் பற்றி பேசி முடிவு செய்யவேண்டும் என்று சொல்வதின் கருத்து இருக்கின்றது.

எனவே சுதேசமித்திரன் எழுதியிருக்கின்றபடி சட்டமறுப்பு இயக்கத் தின் இலக்ஷியம் இதுவாகவே இருந்திருக்குமானால் சட்ட மறுப்புக்கு வெற்றி என்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆனால் எலியைப்பிடிப்பதற்கு மலை யை வெட்டித் தோண்டியிருக்கவேண்டியதில்லை. மற்ற விஷயங்களைப் பற்றி மறுமுறை எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 08.03.1931**



# சுங்கக்கேட்டுகளின் தொல்லை ஒழிந்தது

சுமார் இரண்டுவருஷ காலமாக பிரஸ்தாபத்திலிருந்து வந்த சுங்கக் கேட்டுகளின் மூலம் சுங்கவரி வசூல் செய்யும் தொல்லைகள் ஒழிந்தது. அதாவது இவ்வாரம் சென்னை சட்டசபையில் சுங்கக் கேட்டுகள் மூலம் சுங்கம் வசூலிக்காமல் இருக்க ஒரு சட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கின்றது.

இதனால் ஜனங்கள் செலுத்தி வந்த வரி எந்த அளவிலும் குறைந்து விட்டதாகச் சொல்ல முடியாது. கவனித்துப் பார்ப்போமானால் முன்னிலும் அதிகமான வரியை கொடுக்கக்கூடியதாக வந்து சேரும். அன்றியும் இத னால் இவ்வரி வசூலினால் பிழைத்து வந்த ஆயிரக்கணக்கான பேர்களுக்கு ஜீவனத்திற்கு வழி இல்லாமல் போகும். ஜனங்களுக்கு இப்போது இருந்து வரும் மோட்டார் போக்குவரத்து பிரயாணக்காரருக்கு சற்று வாடகைத் தொல்லை அதிகமாகும். இன்னும்பல அசௌகரியங்களும் உண்டாகக் கூடும். என்றாலும் ஒரு முக்கியமான அனுகூலம் உண்டு என்பதை நாம் எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கின்றோம். அதாவது சுங்கக்கேட்டுக்குப் பக்கத்தில் வண்டிகளை நிறுத்திக்கொண்டு சுங்கக்காரர்களுடன் தொல்லை கொடுக்கும் காரியம் ஒழிந்தது மிகவும் மகிழ்ச்சியடையத்தக்கதாகும். சுங்கக் குத்தகைதாரர்களில் 100க்கு 50 பேர்கள் சுபாவத்திலேயே யோக்கியப் பொறுப் பில்லாமல் பிரயாணிகளை அலக்ஷியமாய்க் கருதி தொல்லை விளைவித்து வருபவர்களாகின்றார்கள். எஞ்சி உள்ளவர்களிலும் 100க்கு 75 பேர்களுக்கு மேலாகவே ஸ்தல ஸ்தாபன நிர்வாகத் தலைவர்களை கைக்குள் போட்டுக் கொண்டு சகிக்க முடியாத தொல்லைகளையெல்லாம் பிரயாணி களுக்குக் கொடுத்து அதிகவரி வசூல் செய்வதில் மிக்க கஷ்டப்படுத்தி விடுகிறார்கள். இவைகள் ஒழிந்தது மிகமிக திருப்தியைக் கொடுக்கக் கூடியதாகும்.

இதனால் சில ஸ்தல ஸ்தாபன தலைவர்களுக்கும் தலைவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கும் சில அங்கத்தினர்களுக்கும் வரும்படி குறைந்துவிடும் என்பதை நாம் மறைக்கவில்லை. சுங்கக் குத்தகை ஏலம் விடும் விஷயத்தில் அனேக ஸ்தலஸ்தாபனக்காரர்கள் ஒழுங்காய் நடந்து கொள்ளுவதே கிடையாது. ஒரு குறிப்பான நபருக்கே ஒன்றுக்குப் பாதியாய் குத்தகைக்கு விட்டு அந்த நபரை சுங்கம் வசூலிக்கும் விஷயத்தில் தன் இஷ்டப்படி அட்டூழியம்செய்ய விட்டுவிடுவதும் வேறு யாராவது வந்து ஏலத்தில் குத்தகைக்குக் கோரினால் தனக்கு வேண்டியவனைக் கொண்டு



RangaRakes tamilnavarasam.com

ஒன்றுக்கு இரண்டாக ஏலத்தில் உயர்த்திக்கேட்கச் செய்வதும் ஏலம் முடிந்த பிறகு வருஷக்கடைசியில் அதிகமாகக் கேட்கப்பட்ட துகையை தள்ளிக் கொடுத்து விடுவதுமான முறையில் அநேக அக்கிரமங்கள் செய்து வந்ததும், ஒரு சமயம் அதிகமாகக் கேட்டு ஏலத்தில் எடுக்கப்பட்ட தனக்கு வேண்டாத வன் வீண் விஷயத்தில் அதிகமான தொல்லைகளையும் நெறுக்கடிகளையும் உண்டாக்கி விட்டுவிட்டு ஓடும்படி செய்து வந்ததும் நமக்கு நன்றாய்த் தெரியும். இந்தமாதிரிக் காரணங்களை உத்தேசித்து பல இடங்களில் சுங்கக்கேட்டு குத்தகைதாரர்கள் எலக்ஷன்களில் பிரவேசித்து தனக்கும் ஸ்தல ஸ்தாபன தலைவர்களுக்கும் பொருத்தமான ஆட்களை தேர்தலில் கொண்டுவர முயற்சிப்பதும் அதற்காக 10ஆயிரம், 20ஆயிரம் கூட சுங்கக் குத்தகைதாரர் செலவு செய்வதும் அந்தப் பணங்களை யெல்லாம் சுங்கக் குத்தகையில் சம்பாதிக்க முயன்று வருவதும் இத்தியாதி பல காரணங்களால் சுங்கத்தின்மூலம் ஸ்தலஸ்தாபனங்களை பூரண உரிமை யாக்கிக் கொண்டு பலவித அக்கிரமங்கள் செய்து வரும் தன்மைகள் நாம் அறிந்த விஷயமாகும். ஆகவே பல விஷயங்களில் சுங்க வசூலானது நமது நாட்டில் நாணைய மில்லாமலும் யோக்கியப் பொருப்பில்லாமலும் கௌரவ மற்ற தன்மையிலும், பிறருக்கு தொல்லை விளைவிக்கும் தன்மையிலும் நடந்துவந்ததானது ஒரு அளவுக்காவது ஒழிபட்டதற்கு சில ஸ்தல ஸ்தாபனக்காரர்களும், சுங்க குத்தகைதாரர்களும் தவிர மற்றவர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டியதே யாகும். இனியும் பல இடங்களில் மார்க்கட்டு சுங்க வசூல் விஷயத்திலும் சில மாறுதல்கள் செய்தால் மிக்க நன்மையாக இருக்கும். அவையெல்லாம் அனேகமாக ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நிர்வாக அதிகாரிகளை நேமிப்பதன் மூலமாக பெரிதும் சௌகரியமேற்படலாம். நிற்க

இச்சட்டம் செய்யப்பட்டதில் உள்ள முக்கியமான மற்றொரு விஷயம் என்னவென்றால் இச்சுங்கவரி ஒழிப்பு மசோதாவுக்கு மிகுதியும் கவலை யெடுத்து பிடிவாதமாய் வேலைசெய்து வெற்றிபெற்ற திரு. ஹில்ட்டன் பிரவுன் துரையவர்கள் சுங்கத்தொல்லையால் ஒரு தடவை கஷ்டப்பட்ட வரானதால் அதாவது ஒரு சுங்கச்சாவடியில் அச்சுங்கக் காரனுடன் வாதாடி அடிதடியாக நேர்ந்ததால் தனது அனுபவமும் தனக்கு ஏற்பட்ட தொல்லையும் மற்ற மக்களுக்கும் இருக்கும் என்று கருதி அதை ஒழிக்க கங்கணம்கட்டி அடியோடு ஒழித்து வெற்றிபெற்றது பாராட்டத்தக்கதாகும். இப்போது இந்த சட்டத்தால் இனி மோட்டார்காரர்கள் ஒரு அளவுக்கு லைசென்ஸ்வரிகள் கொடுக்க வேண்டியதாவதோடு மோட்டார் பஸ்கள் அதாவது வாடகை மோட்டார்கள் வருஷம் ஒன்றுக்கு ஒரு பிரயாணியின் ஸ்தானத்துக்கு 40 ரூ. வீதம் வரி கொடுக்கவேண்டிய தாகின்றது. அதாவது ஒரு மோட்டார் பஸ் 15 பிரயாணிகளை ஏற்றிக்கொள்ள ஸ்தான வசதி ஏற்படுத்தி 15 பிரயாணிகளுக்கு என்று லைசென்சு வாங்கினால் அதற்கு ஒரு வருஷத்திற்கு 600ரூ. வரி கொடுக்க வேண்டியதாகின்றது. இது போலவே 20 பிரயாணிகளுக்கானால் ௸ 800 ரூ. கொடுக்க வேண்டியதாகின்றது. மற்றபடி வேறு சில வரிகளும் செலவுகளும் ஏற்படுவதுடன் பெட்றோல் முதலிய எண்ணைக்கும் அதிக விலை கொடுப்பதின் மூலம் தினம் ஒரு பஸ் ஒன்றுக்கு 12 அணா முதல் ஒரு ரூபாய் போல கொடுக்கவேண்டி ஏற் படலாம். எவ்வளவு ஏற்பட்டாலும் “வண்டிபாரம் பூமி சுமக்கின்றது” என்பது போல் இவ்வளவு கஷ்டமும் பிரயாணிகள் தலையில்தான் விழுகப் போகின்றது என்பது மாத்திரம் உறுதி. ஆனாலும் இதில் நமக்கு ஒன்றும் அதிசயமில்லை. ஏனெனில் இன்றைய எவ்வித சுதந்திரமும், சீர்திருத்தமும், புதுச்சட்டமும், ஏழைகளையும், பாமரமக்களையுமே தொல்லைகொடுத்து துன்பத்திற்காளாக்குவதாயிருப்ப தால் அந்தக்கிரமப்படி இதுவும் ஏற்பட்டதில் அதிசயமில்லை!

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 08.03.1931**





RangaRakes tamilnavarasam.com

# காரைக்குடியில் பார்ப்பனீயத் தாண்டவம் 144

காரைக்குடியில் சுயமரியாதைப் பிரசாரத்திற்கு எப்படியாவது இடையூறு செய்யவேண்டுமென்று சில பார்ப்பன அதிகாரிகளும், பல வைதீகப் பணக்கார நாட்டுக் கோட்டையாரும் முயற்சி செய்துகொண்டுவரும் விஷயமாய் கொஞ்சநாளாக நமக்கு அடிக்கடி சேதி வந்து கொண்டிருந்தது.

“தோலைக் கடித்து, துருத்தியைக்கடித்து கடைசியாக வேட்டைக் குத் தயாராகிவிட்டது” என்ற பழமொழிபோல் எந்த எந்த விதத்திலோ தொல்லை விளைவித்தும், அது பயன் படாமல் போகவே இப்போது அதிகாரிகளின் மூலமாகவே ஏதோ ஒரு நொண்டிச்சாக்கை வைத்து உயர் திருவாளர்கள் சொ. முருகப்பா, அ. பொன்னம்பலனார், ப. சிவானந்தன் ஆகியவர்களுக்குக் காரைக்குடி முனிசிபல் எல்லைக்குள் எவ்விதக் கூட்டம் கூட்டவோ, பிரசங்கங்கள் புரியவோ கூடாதென்று 144 தடை உத்திரவு போட்டுத் தடுக்கப் பட்டிருக்கின்றது. இது பின்னே வரப்போகும் இன்னும் கடினமான தொல்லைக்கு அறிகுறியென்றே கருதவேண்டியிருக்கின்றது. காரைக்குடியானது உண்மையிலேயே பணக்கார ஆதிக்கமும், வைதீக ஆதிக்கமும் கொண்டது என்பதற்கு அதன் முனிசிபாலிட்டியில் பெண்களுக்காவது மற்றும் தாழ்த்தப் பட்டவர்களுக்காவது, குறைந்த எண்ணிக்கையுள்ள சமூகத் தாருக்காவது யாதொரு பிரதிநிதி ஸ்தானமும் ஒதுக்காமல் தீர்மானம் செய்த ஏதேச்சாதிகார மனப்பான்மை ஒன்றே போதுமானதாகும். அப்படிப் பட்டவர்கள் ஆதிக்கத்தில் உள்ள அந்த நாடு சுயமரியாதையைப் பற்றியும், தீண்டாதவரின் சமத்துவத்தைப் பற்றியும், பெண்களின் உரிமையைப் பற்றியும் பேசுவது முனிசிபல் நிர்வாகத்திற்கு இடையூறு ஏற்படு மென்று கருதி, அதிகாரிகளின் தயவைச் சம்பாதித்து 144 போடச் செய்ததில் நமக்கு ஆச்சரியமொன்றுமில்லை.

ஆனால் இந்த மாதிரி பணக்கார ஆதிக்க வாழ்வும், அதிகாரிகள் அவர்களுக்கு அடிமையாகி தலைவிரித்தாடும் பொருப்பற்ற அதிகாரவர்க்க ஆட்சியும் நமது நாட்டில் தாண்டவமாட இன்னும் விட்டுக் கொண்டிருப்பதுவே நமக்கு மிக ஆச்சரியமாகத் தோன்றுகிறது.



அதோடு நாட்டுப் போலீசாரின் யோக்கியதை நாம் அறிந்ததேயாகும். அதிலும் பார்ப்பனப் போலீசாரைப் பற்றியோ வென்றால் அறியாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். அதிலும் சுயமரியாதை இயக்கத்தைக் கண்டால் அவர்களுக்கு எப்படி இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதே இல்லை.

உதாரணமாக ஒரு குரங்கு கள்ளைக்குடித்து, அதைத் தேளும் கடித்து விட்டால் எப்படி அது தலை கால் தெரியாமல் கண்டதை யெல்லாம் கடிக்குமோ அது போலவேதான் நமது பார்ப்பனப் போலீசு நிர்வாகம் இருக்க முடியும். போராக் குறைக்கு இவர்களுடைய தயவை பைத்தியக்கார பணக்காரச் செட்டியார்மார்கள் எதிர்பார்த்து தூபம் போடுவதும் சேர்ந்து விட்டால் 144 உத்திரவு மாத்திரமல்லாமல் இன்னமும் என்ன வேண்டுமானாலும் செய்யப் பின் வாங்க மாட்டார்கள். இந்தக் காரியத்திற்குத் திருப்பத்தூர் டிவிஷனல் ஆபீசர் சம்மதித்துத் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததை நாம் கண்டிக்காமல் விட முடியவில்லை. ஆகையால், ராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் இதில் பிரவேசித்து உண்மை யை விசாரித்து, நீதியை வழங்க வேண்டியது அவருடைய கடமையென்ப தோடு, காரைக்குடியில் உள்ள பார்ப்பனீயப் போலீஸ் ஆதிக்கத்தை உடனே குறைக்க வேண்டிய காரியமும் செய்ய வேண்டுமாய் வலியுறுத்துகின்றோம். குட்டி குலைத்து பட்டி தலையில் விழாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது யோக்கியமான சர்க்கார் கடமை என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 08.03.1931**



RangaRakes tamilnavarasam.com

# புதுச்சேரியில் சுயமரியாதை மகாநாடு

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!!

எங்களை வரவேற்று மரியாதை செய்து வரவேற்புப்பத்திரங்கள் வாசித்துக் கொடுத்ததற்கு நன்றி செலுத்துகிறோமாயினும், எங்கள் வரவைப் பற்றி இவ்வூரில் சிலர் அதிருப்தி அடைந்து ஏதோ கிளர்ச்சி செய்திருப்ப தாகவும் அறிகிறோம். அதற்காக நீங்களும் சற்று பிரயாசைப்பட்டு இம் மகா நாட்டிற்கு அனுமதி பெற்றதாகவும் தெரிகின்றது. எந்த இயக்கமானாலும் எதிர்க்கிளர்ச்சி இருந்தால்தான் ஒழுங்காகவும், பலமான அமைப்பாகவும் விளக்கமாகவும் முன்னேற்றமடையும்.

உதாரணமாக, இவ்வளவு கிளர்ச்சியாவது இங்கு நடந்திருக்கா விட்டால் அதிசயமாகத்தகுந்த இவ்வளவு பெரிய கூட்டம் இங்குக் கூடியிருக்க முடியுமா? எங்கள் வரவில் இவ்வூர் பொது ஜனங்களுக்கு இவ்வளவு கவனம் ஏற்பட முடியுமா? என்று பாருங்கள். அநேகமாக நாங்கள் போகின்ற ஊர்களில் எல்லாம் எதிர்க்கிளர்ச்சியே எங்கள் பிரசாரத்திற்கு மெத்த அனுகூலமளித்து வருகின்றது. நாங்கள் எந்த ஊருக்குப் போனாலும் அங்கு எங்களுக்காகச் செய்யப்படும் மரியாதைகளில் முதலாவது அங்குள்ள கோவில்களை அடைத்துப் போலீஸ் காவல் போடுவதும், "நாஸ்திகர்கள் வருகிறார்கள்" என்று ஊருக்குள் பிரசாரம் செய்து எங்கள் கூட்டத்தை நடத்த விடக் கூடாதென்று அரசாங்கத்திற்கு மனுச் செய்து கொள்ளுவதுமேயாகும். இந்தக் காரியங்கள் செய்யப்படுவதால் நாங்கள் வரும் விஷயங்கள் தானாகவே பரவி, பொதுஜனங்கள் அப்படிப்பட்ட ஆட்கள் அதாவது நாஸ்திகர்கள் என்பவர்கள் எப்படியிருப்பார்கள், அவர்கள் என்னசொல்லுவார்கள் என்பதை பார்க்கலாம், கேட்கலாம் என்பதாகவே அநேகர் வந்து எங்களைப் பார்க்கவும், நாங்கள் சொல்வதைக் கேட்கவும் ஏற்பட்டுவிடு கின்றது. இந்தக் காரணங்களால் எதிர்க் கிளர்ச்சிக்காரர்களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

உதாரணமாக, மலேயா நாட்டுக்கு நாங்கள் எவ்வளவோ இரகசியமாகப் போயும் அங்குள்ள எதிர்க்கிளர்ச்சிக்காரர்களின் செய்கைகளின் பயனாய் மலேயாவில் இதுவரை பிரசாரம் செய்ய எந்த இந்தியருக்கும் ஏற்பட்டிராத பெரிய சௌகரியங்கள் எங்களுக்கு ஏற்பட்டது. அங்கு சுமார் 150 பேர்கள் ஒரு மகஜருடன் போலீஸ் இலாக்காதலைமை அதிகாரியைப் போய்ப் பார்த்து ஈரோடு இராமசாமியையும் அவர்கள் கோஷ்டியாரையும். மலாய் நாட்டுக்குள் விட்டால் பெரிய கலகங்கள் நடந்து விடுமென்று தெரிவித்தார்களாம். அதற்கவ்வதிகாரியானவர் அவ்வளவு பெரிய கலகங்கள் நடக்கும் படியாக அவர்கள் என்ன விதத்தில் அவ்வளவு கெட்ட காரியம் செய்வார்கள் என்று கேட்டாராம். அதற்கவர்கள் எங்கள் சீதையைக் குற்றம் சொல்லுகிறார்கள் என்று சொன்னார்களாம். அதற்கவ்வதிகாரி சீதை யென்றால் என்ன என்று கேட்டாராம். அதற்கவர்கள் சீதையென்றால் எங்கள் கடவுளின் மனைவி என்று சொன்னார்களாம். அதற்கு அவ்வதிகாரி எங்களிலும் சிலர் இயேசு நாதரின் தாயாராகிய மரியம்மாளைக் குறித்துப் பேசுவதில் சிலர் பலவித சந்தேகத்தைக் கிளப்பி விடுகின்றார்கள். அதற்கு நாம் என்ன செய்யமுடியும்? வருபவர்கள் சீதையைக் குற்றம் சொன்னால் நீங்கள் ஒரு கூட்டம் போட்டு அவர்கள் சொல்லுகிறபடி சீதை குற்றவாளி அல்லவென்று சொல்லுங்கள். அதற்கு தைரியமும் ஆதாரமும் இருந்தால் பயப்படதேவையில்லை என்று சொல்லி வருகின்றவர்களின் சுற்றுப் பிரயாணத்தை நடத்திக் கொடுக்க வேண்டிய வேலை தங்களுடையது என்று சொல்லி மகஜர்காரர்களை எச்சரிக்கை செய்தனுப்பினாராம்.

ஆகவே அது போலவே இங்கும் எங்கள் பிரசாரத்திற்கு சில மக்கள் பயந்து விட்டது ஆச்சரியமாக இருக்கின்றது.

நிற்க, சகோதரர்களே, என் வார்த்தைகளை யெல்லாம் நிராகரித்து விட உங்களுக்குப் பூரண சுதந்திரமுண்டு. அதை மறுத்துப் பேசவும் உங்களுக்குச் சுதந்திரமுண்டு. ஒருவருடைய அபிப்பிராயத்தை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பது நியாயமாகாது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் என்னுடைய அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்ல எனக்கு சுதந்திரமுண்டு என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளவேண்டும். அதைத் தடுப்பது என்பது ஒரு காலும் மனிததர்மத்தில் சேர்ந்ததாகாது. நமது நாட்டில் சுதந்திரம் என்பதற்கு அர்த்தமே மற்றவர்கள் சுதந்திரத்தைக் கெடுப்பது என்றுதான் பலர் கருதிக்கொண்டிருக்கின்றார்கள். இந்த மனப்பான்மை அடிமைத் தன்மையின் வாசனையினால் ஏற்பட்டதாகுமே தவிர ஒருக்காலும் சுயேச்சைத் தன்மை உடையதாகாது. எங்களுக்காக ஏன் ஒருவர் பயப்பட வேண்டும்? நாங்களும் மனிதர்கள்தானே? எந்த மனிதனுடைய, எந்த அரசாங்கத்தினுடைய தனிப்பட்ட காரியங்கள் எதிலும் நாங்கள் பிரவேசிப்பதில்லையே. பொதுப்பட்ட காரியங்களில் பொது ஜனங்கள், நன்மை தீமைகளில் மற்ற எல்லாருக்கும் உள்ளது போன்ற உரிமை எங்க ளுக்கும் உண்டு என்பதில் நாங்கள் சிறிதும் விட்டுக் கொடுக்க இசையோம். எங்கள் அபிப்பிராயங்களுக்கு மாறு பட்டவர்கள் தக்கப் பதிலையும் ஆதாரத்தையும் உடையவர்களானால் நாங்கள் பேசுவதைத் தடுக்கவோ எங்கள் மீது ஆத்திரப்படவோ சற்றும் அவசியம் ஏற்படாது. ஆதார மற்றவர்கள், தந்திரத்தில் வாழ்பவர்கள், அமட்டலிலும்



RangaRakes tamilnavarasam.com

மிரட்டலிலும் மக்களை ஏமாற்றி காலம் கழிப்பவர்கள் முதலானவர்களுக்குத் தான் எங்களைப்பற்றி பயம் ஏற்படக்கூடும் கோபமும் ஆத்திரமும் வரக் கூடும். ஆனால் அதற்காக நாங்கள் என்ன செய்வது? அஸ்திவாரமற்றவை களும், புரட்டுகளும் என்றைக்கு இருந்தாலும் ஒரு நாளைக்கு சாய்ந்து விழுந்து தான் தீரும்.

அன்றியும் அதைக் காப்பாற்ற முயற்சிக்கும் நாளெல்லாம் வீண் நாளாகத்தான் முடியும். வெகு நாளையப் புரட்டு என்பதாலேயே அல்லது அதிகக் கோபக்காரர்கள் முரடர்கள் தந்திரசாலிகள் ஆதரிக்கிற அபிப்பிரா யங்கள் என்பதாலேயே எதுவும் நிலைத்திருக்க முடியாது. அவையெல்லாம் இனிப் பலிக்கவும் பலிக்காது. சுதந்திர உணர்ச்சி என்பது இந்த தேசத்தில் இல்லையானாலும் சுற்றுப்பக்க தேசங்களில் இருந்து வந்து புகுந்து விட்டது. இனி அதை வெளியில் தள்ளிவிட முடியாது. ஆதலால் தடைப்படுத்த முயற்சிப்பதிலோ, கோபிப்பதிலோ பயனில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சகோதரர்களே! நாங்கள் இங்கு எந்தவிதமான மதப்பிரசாரம் செய் யவோ, ஏதாவது ஒரு மதத்தைக் குற்றம் சொல்லவோ ஒரு தனி மதத்தை ஸ்தாபிக்கவோ வரவில்லை; அதுபோலவே கடவுள் விஷயத்திலும் கடவுள் உண்டு இல்லை என்று சொல்லவோ அதன் குணத்தில், சக்தியில், விவகாரம் செய்யவோ, அதற்கும், மக்களுக்கும், மதக்காரர்களுக்குமுள்ள சம்மந்தத் தைப்பற்றியும் சுதந்திரத்தைப்பற்றியும் விவாதிக்கவோ நாங்கள் இங்கு வர வில்லை. மக்களுக்கு அறிவு என்பது உண்டு அல்லவா அதன் பயன் என்ன? அதன் சக்தி என்ன? வாழ்க்கையின் சம்பவங்களையும், உலகத் தோற்றங் களையும் அன்னியர் உபதேசங்களையும் பற்றி உங்கள் அனுபவமும் அறிவும் என்ன சொல்லுகின்றது? உங்கள் சொந்த பகுத்தறிவைக் கொண்டு நன்றாய் ஆராய்ந்து எதையும் பரிக்ஷித்துப் பாருங்கள் என்று சொல்லத்தான் வந்திருக்கின்றோம். இதில் என்ன பிசகு ஏற்பட்டு விடக் கூடும் என்பது எங்களுக்கு விளங்கவில்லை. இதற்காக ஏன் ஒருவர் பயப்பட வேண்டும் என்பதும் விளங்கவில்லை. உங்கள் சொந்த அறிவுக்கு மதிப்புக் கொடுக் கவும். அதற்கு சுதந்திரம் கொடுக்கவும் பயந்தால் மிருக ராசிகளை விட மனிதராசி உயர்ந்தது என்று எப்படிச் சொல்லிக் கொள்ளமுடியும்? மக்களை முட்டாள் தனமும் முரட்டுப்பலமும் ஆட்சி செய்யப்பட வேண்டுமா? அல்லது அறிவும் நியாயமும் ஆட்சி செய்ய வேண்டுமா? என்பதுதான் எங்கள் கேள்வி.

மனிதனின் அறிவுக்கு மேற்பட்டதொன்று உண்டு என்று ஒன்றைக் கற்பித்து மக்களுக்குள் புகுத்தி அறிவைக்கொண்டு ஆராய்ந்து பார்க்க இடம் கொடுக்காமல் "நம்பித்தானாக வேண்டும்" என்று வலியுறுத்தி அறிவைக் கட்டிப்போட்டு நாசமாக்கி மனித சமூகம் முழுவதையுமே அடிமைப்படுத்தி விட்டதாலேயே இன்று மனித சமூகம் இவ்வளவு தொல்லைக்கும், கவலைக் கும் ஆளாகி ஆகாரத்திற்கே திண்டாட வேண்டிய நிலைமை யேற்பட்டு விட்டது.



சகோதரர்களே! அசரீரி சொல்லிற்று, அருள் சொல்லிற்று, ஆகாய வாணி சொன்னாள், ஆண்டவன் சொன்னான் என்று ஏதோ ஒன்றைக்கற்பித்து எழுதி வைத்துக்கொண்டு அதன்படி நடந்தாக வேண்டும் என்று மக்களைக் கட்டாயப்படுத்திக் கொண்டு இருப்பதும், அவற்றில் ஏதாவது ஒன்றைப் பற்றியாவது சந்தேகப்பட்டு விவரம் கேட்டால் அவர் மீது கோபிப்பதும், வைவதும், பழி சுமத்துவதும், கலகமாகி விடுமென்று மிரட்டுவதுமான காரியங்கள் எப்படி மனிதத் தன்மையானதும் நியாய மானதுமானவைகள் ஆகும்?

ஆண்டவன் சொன்னதானால், அருள் சொன்னதானால், அசரீரி சொன்னதானால், ஆகாயவாணி சொன்னதானால் அதற்குப் புஸ்தகம் எதற்கு? ஒருவருக்கு மற்றொருவர் சொல்லுவதெதற்கு? காதில் உபதேசிப் பதெதற்கு? தத்துவார்த்தங்கள் எதற்கு? அறிமுகப்படுத்துவதெதற்கு? என்பவைகளை மக்கள் சிறிதும் யோசிப்பதில்லை. ஏதாவது ஒன்றை ஒருவன் ஆண்டவன் சொன்னான் என்று சொல்லிவிட்டால், ஆண்டவன் எப்படி சொன்னான்? ஆண்டவன் சொன்னதாக யார் சொன்னார் என்று கூடக் கேட்கப்படாதென் கிறார்கள். தப்பித்தவறி யாராவது கேட்டுவிட்டால், வசவும், பழியும், மிரட்டலும்தான் பதிலாகயிருக்கின்றனவே யொழிய சமாதானமான திருப்தி யான பதிலென்பதே கிடையாது. ஆகவே மனிதர்கள் முதலாவதாக இந்த இடத்தில் தங்களது அறிவைப் பயன்படுத்த சுதந்திரம் பெற்றாலல்லது ஒரு நாளும் மனித சமூகம் முற்போக்கடைவதற்கே இட மில்லாது போய்விடும். ஏனெனில் உலகத்தில் பலரை சிலர் ஏமாற்ற ஆதிக்கம் செலுத்த தங்கள் தங்கள் புரட்டுகளையும் பித்தலாட்டங்களையும் ஆரம்பித்த இடமே இந்த இடம் தான் என்று நாம் காணுவதால் அந்தப் புரட்டை முதலில் வெளியாக்கி விடவேண்டும் என்று அபிப்பிராயப் படுகின்றோம். ஆதலால் தான் அந்த இடத்தை நன்றாய் பரீக்ஷிக்க வேண்டுமென்று மேலும் மேலும் வலியுறுத்து கின்றோம். இன்று உலகத்திலுள்ள பெரும்பான்மை மதக்காரர்கள் தங்கள் தங்களுக்கு தனித்தனியாக பற்பல விதமான கொள்கைகளையும் வாசகங்க ளையும் வைத்துக்கொண்டு அவர் கள் அத்தனைப் பேரும் தங்கள் தங்கள் கொள்கைகளையும் வாசகங்களை யும் ஆண்டவன் சொன்னான் என்றே சொல்லி சாதித்துக்கொண்டு அவற்றைப் பாமர மக்களுக்குள் பலவந்தமாக செலுத்திவிட்டார்கள். அதனாலேயே மக்களுக்குள் பற்பல பிரிவுகளும், மனப்பான்மைகளும், அபிப்பி ராயங்களும் காணப்படுகின்றன. இவ்வபிப் பிராய பேதங்கள் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதோடு ஒருவரை யொருவர் சந்தேகிக்கவும், வெறுக் கவும் அலட்சியமாய்க் கருதவும், எதிர்க் கவும், வஞ்சிக்கவும், அடக்கி ஆளவும் பயன்படுகின்றன. எந்த மார்க்கமாக என்று பார்த்தால் ஒவ்வொரு மதக்காரனும் தன்தன் மதத்தைச் சேர்ந்த



RangaRakes tamilnavarasam.com

அவதாரத்தின் மூலம், தூதனின் மூலம், ஜோதியின் மூலம் தங்கள் ஆண்டவன் சொல்லியதுதான் மேலான தென்றும், சத்தியமான தென்றும் சொல்லிக் கொண்டு அதை நிலை நிறுத்த மற்றவர்களை நம்பும்படி கட்டாயப்படுத்த முயற்சிப்பதன் மூலமே யாகும். இந்த 'உணர்ச்சியையும் செய்கையையும் உலகத்தில் செல்வாக்குப் பெற்றிருக்க இடம் கொடுத்துக் கொண்டிருக்கும் வரை மனித சமூகத்திற்குள் ஒருவித பொதுவான ஒற்றுமையும் ஓய்வும் ஏற்படுவதற்கு இடமே இல்லை. ஆகையால்தான் இந்த இடத்திலேயே மனிதன் முதல் முதல் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமானது என்று சொல்ல வேண்டி இருக்கின்றது.

நாம் இப்போது எந்த மதக்காரர்களுடைய கொள்கைகளையும் உபதேச வாசகங்களையும் எடுத்துக் கொண்டு அவை சரியா? தப்பா? என்பதாகவோ ஆண்டவன் சொல்லா என்பதாகவோ வாதாட வரவில்லை. நம்முடைய வேலையும் கவலையும் அவையல்ல, மற்றென்னவெனில் எல்லா மதக்காரர்களும் பெரிதும் ஒரே ஆண்டவன்தான் உண்டென்று ஒப்புக்கொள்ளுகின்றவர்களானதால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கொள்கைகளையும் உபதேச வாசகங்களையும் அந்த ஆண்டவனே சொன்னான் என்று சொல்லுவதால் இவர்களுக்குள் எந்த மதக்காரர்கள் சொல்லுவது உண்மை யென்றும் எந்த அவதார புருஷர்கள் எந்த தூதர்கள் முதலானவர்கள் சொன்னது உண்மையாயிருக்கக்கூடியது என்றும் கண்டுபிடிப்பது எப்படி? இதற்கு என்ன பரீக்ஷை என்பவையே யாகும்:-

மேலும் இவைகளை எல்லாம் ஆண்டவன் சொன்னான் என்று நம்பும்படி கட்டாயப்படுத்துவதால் ஆண்டவன் எந்த ரூபத்தில் எந்த நிலையில் எங்கு இருந்துகொண்டு என்ன பாஷையில் சொன்னார் என்பதில் எந்த மதக்காரர் உண்மை சொல்லுகின்றார்கள் என்று கண்டுபிடிப்பதற்குமே யாகும். மேலும் ஒரு ஆண்டவன் என்பவர் தான் சொல்லவேண்டுமென் கின்ற கொள்கையையோ, உபதேசத்தையோ மற்றும் ஏதோ ஒன்றையோ தானே ஒருவர் மூலம் சொல்லி பிறகு மற்றவர்களால் எடுத்துச் சொல்லும்படி செய்த பிறகு அவை விவாதத்திற்கும் உள்ளாயிருப்பதைப் பார்க்கும் போது உண்மையிலேயே அவை ஆண்டவனால், சொல்லப்பட்டிருந்தால் அவைகள் ஒவ்வொரு மனிதனுடைய காதிலும் விழும்படியாகவோ அல்லது மனதிலும் பதியும்படியாகவோ அல்லது இப்பொழுதாவது அவை களை ஆண்டவன் தான் சொன்னான் என்று கருதும்படியாகவோ அல்லது குறைந்த அளவு விவாதமாவதில்லாதபடியாகவோ ஏன் அந்த ஆண்ட வனால் செய்யமுடியவில்லை என்றும் இது ஆண்டவனால் முடியாத காரியமா என்றும் யோசிக்கப் புகுந்தால் அதிலிருந்தே அவைகள் எல்லாம் ஆண்டவனால் சொல்லப்பட்டது என்று சொல்லப்படுவது உண்மையாயிருக்க முடியுமா என்னும் சந்தேகங்கள் தோன்றுவதற்கு என்ன சமாதானம் சொல்லுவது என்பதேயாகும்.



அன்றியும் இவற்றையெல்லாம் ஆண்டவன் சொன்னார் என்று கண் மூடித்தனமாய் நம்புவது அவசியமா அல்லது ஆண்டவன் சொல்லி இருந்தால் நமக்கு ஏன் தெரிந்திருக்கக் கூடாது என்று எண்ணி ஆராய்ந்து பார்ப்பது அவசியமா என்பதுமாகும்.

நிற்க, இப்படிப்பட்ட ஒரு ஆண்டவன் ஏன் மனிதனின் அறிவுக்கு எட்டாதவனாகி விட்டான்? என்பதற்கு இதுவரை யார் என்ன சமாதானம் சொன்னார்கள்? சர்வசக்தியும், சர்வ வியாபகமும் உள்ள ஆண்டவன் ஒரு மனிதனின் அறிவுக்கும், மனதிற்கும், கண்ணிற்கும் தென்படாமல் ஏன் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி யார் யோசித்துப்பார்த்து சமாதானம் கூறுகிறார்கள்? ஏதோ ஒரு ஆண்டவன் இருக்கின்றான் என்று மக்களை நம்பச்செய்ய வேண்டுமென்பதற்காகவோ ஒரு வாசகத்தை ஆண்டவன் சொன்னான் என்று நம்பச் செய்வதற்காகவோ உலகத்திலுள்ள மக்களின் அறிவையும், ஆராய்ச்சியையும், சுதந்திரத்தையும் இம்மாதிரி தடைப்படுத்தி விடுவதா என்று கேட்கின்றோம். இதற்காக மனிதனின் இயற்கை ஞானத்தை தலை எடுக்கவொட்டாமல் அழுத்திவைத்து விடுவதா என்றும் கேட்கின்றோம்.

மனிதர்கள் சுதந்திரமுடையவர்களாக வேண்டுமானால் அவரவர்களுடைய அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் முதலில் சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும். பிறகு அவரவர்கள் அபிப்பிராயத்தை தாராளமாய் வெளியிலெடுத்துச் சொல்ல இடமளிக்க வேண்டும். தனக்கே விளங்காததையும் மற்றொருவனுக்கு விளங்கவைக்க முடியாததையும் நம்பும்படியோ, ஒப்புக் கொள்ளும்படியோ எதிர்பார்ப்பதும் யாரையும் நிர்பந்தப்படுத்துவதும் கண்டிப்பாய் கூடவே கூடாத காரியமாகும். அது போலவே உலக மனிதர்கள் ஒற்றுமைப்பட்டு சகோதரப் பாவம் அடைய வேண்டுமானால் முதலில் ஆண்டவர்கள் தொல்லையும், மதக்காரர்களின் தொல்லையும் அவர்களின் உபதேசங்களின் தொல்லையும் ஒழிந்தாகவேண்டும் . இதற்கு ஒரு மார்க்கம் செய்தாக வேண்டும். இது செய்யப்படாதவரை மனிதன் காட்டு மிராண்டித் தனத்திலிருந்து மனிதத் தன்மைக்கு ஒருக்காலமும் திரும்பமாட்டான். (இதன் தொடர்ச்சி 15.03.1931 குடி அரசு) (தொடரும்)

*குறிப்பு : புதுச்சேரி ஜெப்ளே தியேட்டரில் 01.03.1931 அன்று நடைபெற்ற மாநாட்டில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 08.03.1931**



RangaRakes tamilnavarasam.com

# நிர்பந்தக் கல்யாணம்

இவ்வாரம் வேறொரு பக்கத்தில் "எனது காதல்" என்பதாக சிவ கங்கை திருமதி. ஏ.எஸ். மணிபாய் என்னும் கன்னிகையின் கடிதம் ஒன்று பிரசுரித் திருக்கின்றோம். இதைப் பற்றி சென்ற வாரமும் பிரசுரித்து மிருந்தோம். இப்போது அந்தப்பெண்மணியின் கைப்படவே கடிதம் வந்ததால் பிரசுரித் திருக்கின்றோம். இது சம்மந்தமாக மற்றும் பல சொந்தக் கடிதங்களும் நமக்கு வந்திருக்கின்றன. அப்பெண்ணின் பெற்றோர்கள் அப்பெண் விரும்பும் நாயகனுக்கு மணம் செய்விக்காமல் வேறு யாரோ ஒருவருக்கு அதாவது அப் பெண்ணுக்குத் தெரியாத ஒருவருக்கு பெண்ணு டைய சம்மதமில்லாமலேயே விவாகம் செய்து கொடுக்கப் போவதாய் பெண்ணின் தாயாரும், சகோதரரும் ஒப்புக்கொண்டதாகவும், பெண் தான் அந்தக் கணவனை மணந்து கொள்ள மாட்டேன் என்று கண்டிப்பாய்ச் சொல்லியும் கேட்காமல் கல்யாணப் பேச்சுக் கள் நடப்பதாகவும் தெரிய வருகின்றது.

இம்மாதிரியாக நிர்பந்தக் கலியாணம் செய்வது என்பது மிகவும் அனாகரீகமான செய்கை என்றே சொல்ல வேண்டியிருக்கின்றதற்கு வருந்து கின்றோம். ஆகையால், இவ்விஷயங்கள் உண்மையாக இருக்குமானால் பெற்றோர்கள் தயவு செய்து மணிபாயின் திருமணத்தை அடிமை விவாக மாய் இல்லாமல் சுயேச்சை மணமாகச் செய்து கொடுக்க வேண்டுமாய் வேண்டுகின்றோம்.

**குடி அரசு - வேண்டுகோள் - 08.03.1931**



# இனி என்ன?

## சட்டமறுப்பு இயக்கம்

சட்ட மறுப்பு இயக்கம் சர்க்காருடன் ராஜிசெய்து கொண்டபடிக்குக் காங்கிரஸ் தனது நிபந்தனைகளை நாணயமாய் நிறைவேற்றக் கருத்துக் கொண்டு காரியக்கமிட்டி அறிக்கையின் மூலம் தன்னுடைய கடமையைச் செய்துவிட்டது. அது போலவே சர்க்காராரும் தங்களது நிபந்தனைகளை நிறைவேற்றும் விஷயத்தில் தங்கள் கடமையைச் செய்ய மாகாணக் கவர்ன் மெண்டுகளுக்கு அறிக்கை அனுப்பி சட்ட மறுப்பு இயக்கத்திற்காக சிறைப் படுத்தப் பட்டவர்களை விடுதலை செய்யும்படி செய்து இருக்கிறார்கள். ஆனாலும்,

இந்த ராஜியானது சட்ட மறுப்பு இயக்கம் தோல்வி அடைந்து விட்டது என்று பொதுமக்களால் கருதும்படியானதாக ஆகிவிட்டதே என்று பயப்பட்ட சிலர் தாங்கள் தோல்வியடையவில்லை என்பதைக் காட்டுவதற் காக அங்குமிங்கும் மறுபடியும் மறியல் செய்வதாகக் காட்டிக்கொள்ள அவசிய முடையவர்களாக ஆகி விட்டார்கள்.

அதுபோலவே சர்க்கார் தரப்பிலும், சர்க்காரார் சட்ட மறுப்பு இயக் கத்தைக் கண்டு பயந்து விட்டார்களென்று பாமரமக்கள் நினைத்துவிட்டால் என்ன செய்வது என்கின்ற சந்தேகத்தின் மீதும் போலீசாரைப் பற்றி ஏதாவது கேவலமாய் ஜனங்கள் மதித்துவிட்டால், என்ன செய்வது என்கிறகவலை மீதும் சர்க்காரார் தரப்பிலும் சில இடங்களில் போலீசாருக்குப் பட்டம், பதக்கம், சன்மானம் முதலியவை அளித்து வருவதின் மூலம் பொது ஜனங் களுக்குச் சர்க்காரிடமும், போலீசாரிடமும் பயம் உண்டாகும்படி செய்து வருவதுடன், சிற்சில இடங்களில் சிலரை பலாத்காரமென்னும் சாக்கால் விடுதலை செய்யாமல் வைத்திருக்கவும் ஏற்பாடுகள் செய்வதாய்த் தெரிகின்றது.

இவைகளைப் பற்றித் திருவாளர் காந்தியவர்களோ அல்லது திருவாளர் இர்வின் அவர்களோ இனிக் கவலை செலுத்தப் போவதில்லை. ஏனெனில் இர்வின் பிரபு "தான் தப்பினதே தம்பிரான் புண்ணியம்" என்று நினைத்து அடுத்த மாத வாக்கில் இந்திய விஷயங்களைப்பற்றிக் கை கழுவிவிட்டுக் கப்பல் ஏறிவிடுவார். திரு. காந்தியவர்களும் ஏதோ ஒரு



RangaRakes tamilnavarasam.com

விதத்தில் தொல்லை ஒழிந்தது என்று கருதி இன்னும் சிறிது காலம் மக்களுக்கு இனியும் அதிகமான ஆசை உண்டாகும்படியாக சுயராஜியத் திற்கு அர்த்தம் சொல்லிக் கொண்டு அஹிம்சை - கதர் பல்லவியுடன் கடவுள் பெருமை யையும் பேசிக் கொண்டு முஸ்லீம்களுக்கு வலை வீசிக்கொண்டி ருக்கும் வேலையில் இருப்பார். மற்றபடி இயக்கத்தில் கலந்து வேலை செய்த மற்றத் தலைவர்களோ சிலர் வட்டமேஜை மகாநாட்டில் எப்படிப் பெயர்வாங்குவது, என்ன பேசுவது என்று யோசித்துக் கொண்டிருப்பார்கள். சிலர் தேர்தல் விஷயத்தில் கவனம் செலுத்திப் பிளான் போட்டு வருவார்கள். சிலர் அங்கு மிங்கும் அலைந்து தங்களை வெளியில் காட்டி விளம்பரங்கள் செய்து கொண்டு இருப்பார்கள். தொண்டர்களில் பலர் இனியும் இந்த மாதிரி ஒரு இயக்கம் வராதா என்றும், வராவிட்டால் நமது நிலை என்ன என்றும் எண்ணிக் கவலை கொண்டிருப்பார்கள். சிலர் ஏதோ ஒருவிதத்தில் நமது பெயரும் தேசீய வீரர்கள் லிஸ்டில் பதியப்பட்டு விட்டாய்விட்டது என்ற மகிழ்ச்சியோடு திருப்தி அடைந்து விடுவார்கள். சிலர் தங்களுடைய தனிப்பட்ட வீரப் பிரதாபத்தைப் பேசிக்கொண்டிருப்பதிலேயே திருப்தி அடைந்து கொண்டி ருப்பார்கள். விடுதலையாகாமல் நிறுத்திவைக்கப்பட்டவர்களும் ஏதோ பல காரணங்களால் இந்த இயக்க அபிப்பிராயத்தில் இருந்து மாறுபட வேண்டி யிருக்கின்றவர்களும் ராஜியைப்பற்றி குற்றம் சொல்லிக் கொண்டும் திரு. காந்தியவர்களைப் பற்றி குற்றம் சொல்லிக்கொண்டும் தங்கள் நிலைமைக்கு ஒரு சமாதானம் தேடிக் கொண்டிருப்பார்கள். அதிக தண்டனையடைந்து விடுதலை செய்யப் படாமல் இருக்கின்றவர்களில் சிலர் மன்னிப்புக் கேட்டு வெளியில் போய் விடலாமா என்றும் யோசிப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் வெளியில் வந்தவுடன் காங்கிரசையும் திரு. காந்தியவர்களையும் வைது கொண்டு இருப்பார்கள். விடுதலையான பார்ப்பன ரல்லாதார்களில் பலர் இனி சுயமரியாதை இயக்கம்தான் வேலை செய்வதற்கு ஏற்றது என்றும், சிலர் சமதர்மமே சிறந்தது என்றும், சிலர் பொதுஉடைமைக் கொள்கையே சிறந்தது என்றும் பேசிக் கொண்டிருப்பார்கள். சிலர் அதில் இறங்கி வேலையும் செய் வார்கள். ஒன்றுக்கும் உதவாமல் வெளியிலிருந்து வீண் பேச்சுப் பேசிக் கொண்டும் எழுதிக்கொண்டும் இருந்தவர்களில் சிலர் அகிம்சா தர்மத்தையும் ஆத்ம சக்தியையும் காந்தி அவதாரத்தையும்பற்றி புகழ்ந்து புராணம் எழுதவும் பஜனை செய்துகொண்டு புதிய புதிய வியாக்கியானங்கள் சொல்லு வதில் வீரர்களாகவும் விளங்குவார்கள். மற்றொரு சிலர் சதி வழக்குக் கைதி களையும் விடுதலை செய்தால்தான் ராஜி, கிரமமான ராஜி என்று சொல்லு வதன் மூலம் தங்களுக்கு சதி வழக்குக் கொள்கையில் அனுதாபமும் நம்பிக்கையும் இருப்பதாகக் காட்டுவார்கள். வேறு ஒருசிலர் காந்தி ஜெயித் தாரா? இர்வின் ஜெயித்தாரா? என்று வாதம் செய்து கொண்டு இருப்பார்கள்.

கடைசியாக, வெளியிலிருந்த தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளு பவர்களில் பலர் தாங்களும் இயக்கத்தோடு கலந்திருந்ததாகச் சொல்லிக் கொண்டு மந்திரிகளாக வழி பார்த்துக்கொண்டு அதற்காகப் பல தொண்டர் களையும் தடவிக்கொடுத்துக் கொண்டும் அடிக்கடி தங்கள் பெயர் வெளியில் வரும்படியாக ஏதாவது ஒருவகை விளம்பரத்தில் கவலை செலுத்திக்கொண்டு இருப்பார்கள் மற்றும் நமது கவனத்திற்கு வரமுடியாத வேறு சிலர் வேறு சில காரியங்களைப் பற்றிப் பேசிக்கொண்டும் யோசித்துக் கொண்டும் இருக்கலாம். நிற்க,



நம்மைப் பொறுத்தவரை நாம் இவ்வியக்கத்திற்கு எவ்வித உதவியும் செய்யவில்லை என்பதை மனப்பூர்த்தியாய் ஒப்புக்கொள்வதுடன் நாம் இவ் வியக்கத்திற்கு எதிரியாய் இருப்பதாகக்கூட பலர் நினைப்பதில் தப்பில்லை யென்றும் சொல்லுவோம். நாமும் இயக்கத்தில் கலந்து வேலைசெய்து இருந்தபோதிலும் இதைவிட வேறு என்ன விதமான பலன் அடைந்திருக்க முடியும் என்பதை யோசித்தால் நாம் சேராததால் ஒன்றும் முழுகிப் போக வில்லை என்பதும் புலப்படும். எப்படியெனில் 1921-ம் வருஷத்திய ஒற்றுழை யாமை இயக்கத்தின் போது இன்றைய நமது முக்கிய கொள்கை யாகிய தீண்டாமை விலக்கும், மதுவிலக்கும் முக்கிய திட்டமாக இருந்தும் அவ் விரண்டு திட்டமும் அரசியல் ஆயுதமாக இல்லாமல் உண்மையிலேயே தீண்டாமை ஒழிவதற்கும், மது விலக்கப்படுவதற்கும் என்று கருதியே வேலை செய்தும் இதைவிட எத்தனையோ மடங்கு பாமர ஜனங்களுடைய ஆதரவைப் பெற்று இருந்தும் ஒரு மாதம் கோடி ரூபாய் வசூலித்துச் செலவுசெய்து பிரசாரம் செய்து 3 மாதத்தில் 30000 பேர் சிறை சென்றும், அதுவும் ஆங்கிலம் படித்து அரசாங்க பதவியை எதிர்பார்த்து பிரதிப் பிரயோஜனமடைய என்று வியாபார தோரணையில் இல்லாமல் எவ்விதத் தியாகத்திற்கும் துணிந்த உண்மையான உறுதியான தொண்டர் களாகவே முக்காலே மூணுவீசம் பேர்கள் இருந்தும் சிறைக் கூடங்களில் இன்றைய தினம் உள்ள போக போக்கியங்கள் இல்லாமல் மிக்க மோசமான நிலையில் அதாவது திருட்டு, கொள்ளை, கொலை முதலிய குற்றங்கள் செய்த குற்றவாளிகள் அனுபவிப்பது போன்ற கடினமான கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்தும் ராஜியைப்பற்றியே சிறிதும்கூட கவலை யில்லாமல் இரண்டில் ஒன்றைப் பார்த்துவிடுவது என்கிற முடிவு பலருக்கு இருந்தும், சர்க்காரால் வலியவந்து "உங்களுக்கு என்ன வேண்டும் என்ன வேண்டும்" என்று கேட்டும் ராஜியைப்பற்றி பேசவோ தங்களுக்கு வேண்டி யது இன்னது என்று சொல்லவோ கூட இஷ்டமில்லாமல் இருக்கக் கூடிய நம்பிக்கையும் தைரிய மும் இருந்தும் கடைசியாக என்ன பலனை அடைய முடிந்தது என்று பார்த் தால் இயக்கத்தில் ஈடுபட்ட ஜனங்கள்மீது குற்றம் கண்டு பிடிக்கப்பட்டு யாருடைய மனப்பான்மையையும் லக்ஷியம் செய்யாமல் ஒருவருக்கும் தகவல் தெரிவிக்காமல் யாரையும் கேட்காமல் திடீரென்று நிறுத்தப்பட்டுப் போனதைத் தவிர வேறு ஒன்றுமே ஏற்படவில்லை. மற்றும் அந்த சமயம் ஆங்கிலம் படித்த ஆட்கள் எல்லாம் எதிரிடையாய் இருந்தார்கள். அந்தப்படி எதிரியாய் இருந்த ஆட்களே பெரிதும் இயக்கத்தின் பயனாய் பலனும் அடைந்தார்கள்.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே, அப்படிப்பட்ட அந்த இயக்கமே நாம் கலந்திருந்த காலத்தில் அந்தக் கதியடைந்த பொழுது இந்த இயக்கம் மாத்திரம் நாம் கலந்து இருந்தால் இப்போது அதைவிட வேறு என்ன கதி அடைந்துவிட முடியும்? ஒரு சமயம் இனியும் கொஞ்சம் அதிகமான பேர் சிறை சென்றிருக்கலாம். இன்னும் ஒரு பத்துநாள், அல்லது ஒருமாதம் பொருத்து ராஜிக்கு ஆசைப்பட்டு இருக்கலாம் என்பவைகளைத் தவிர வேறு என்ன பலன் அடைந்திருக்க முடியும்? என்று கேட்கின்றோம். தவிர வட்டமேஜை மகாநாட்டில் புதிதாகக் காங்கிரஸ் காரர்கள் கலந்து கொள்வதின் மூலம் இனி யும் அதிகமாக என்று எந்தவித அரசியல்திட்டம் ஏற்படுவதானாலும் அதனால் நமக்கு என்ன பயன் ஏற்படக் கூடும்? என்பதுதான் நமது கேள்வி. ஒருசமயம் வெள்ளைக்காரர்களின் ஆதிக்கத்தை அடியோடு ஒழித்துவிட்டு மற்றும் அவர்கள் சம்பந்தமோ, ஆதரவோ இல்லாமல் விலகிக்கொண்டு நேப்பாளம், பூத்தானம் முதலிய தேசங்கள்போல் ஒரு தனி ராஜியபாரத்தை அதாவது இந்திய ராஜிய அரசாங் கம் என்பதாக ஒன்று ஏற்படுத்திக் கொள்ளப் போகிறோமா? அப்படியே ஏற்படுத்திக்கொள்வதாகவே வைத்துக் கொண்டாலும் மேல்கண்ட அந்த ராஜாங்கங்களின் யோக்கியதை நமக்குத் தெரியாததா? இன்னும் அங்கெல் லாம் அதாவது நேபாள தேசத்திலெல்லாம் அடிமை வியாபாரங்கள் நடப்ப தும் மத ஆதிக்கமே அங்கு ஆக்ஷி செய்வதும் வருணாசிரமத்திற்கு விரோத மாய் நடப்பது கொலைக்குற்றத்தை விட கொடுமையாய் மதிக்கப்படுவதும் நமக்குத் தெரியாததா? என்று கேட்பதுடன் அவ்வளவு தூரம்கூட போகாமல் இந்தியாவிலுள்ள இந்திய சிற்றரசர்களின் யோக்கியதையை பார்த்தாலே இந்திய வெள்ளைக்கார சம்பந்தமில்லாத இந்திய அரசியல் அமைப்பு அதா வது இந்திய சிற்றரசாங்கமும் இந்திய பிரமுக மக்களும் செல்வ மக்களும் சேர்ந்து எழுத்து வாசனை அறியாத சாமானிய மக்கள் பேரால் அமைக்கப் படும் அரசியல் அமைப்பு எப்படி இருக்கும் என்பதும் அறிய யாராவது ஜோசியம் கூற வேண்டுமா? என்றும் கேட்கின்றோம். ஆஸ்திகம் என்பதை போலவே சுயராஜியம் என்கிற வார்த்தையும் அமைக்கப்பட்டு விட்டதால் சுயராஜியம் என்பதைப்பற்றிக் கிளரினால் மக்கள் கோபித்துக் கொள்ளவும், கடவுளைப் பற்றிப் பேசினால் எப்படி "கடவுளின் உண்மைகளையும் கடவுள் உண்மைகளை வெளியாக்கின பெரியார்களையும் குற்றம் சொல்லுகின்றான்" என்று புராணபிழைப்புக்காரரும் பகுத்தறிவற்றவர்களும் கூப்பாடு போடு கின்றார்களோ அதுபோலவே சுயராஜியத்தைப்பற்றி பேசி னாலும் தேசத் துரோகி என்றும், "தேசீயத் தலைவர்களையும் சுயராஜியத்திற்கு வழிகாட்டிய பெரியார்களையும் குற்றம் சொல்லுகிறான்" என்றும் கோபித்துக் கொள்ளு கிறார்கள். இந்தப்படியே மக்களை இனியும் எத்தனை நாளைக்குத் தான் வைத்திருப்பது என்பது விளங்கவில்லை. இதனால் என்ன பயன் என்பதும் விளங்கவில்லை. ஆகையால் இந்தவிஷயத்தை இனிக் கிளரிக்கொண்டி ருக்காமல் சட்டசபை போகவேண்டியவர்களுக்கும் மந்திரிகளாக வேண்டிய வர்களுக்கும் அதிகாரம் பதவி பெற்று வாழ வேண்டியவர்களுக்கும்



வட்டமேஜை மகாநாட்டில் தொடர்ந்து பேசவேண்டிய வேலையையும் பூரண சுயேச்சை என்பதைப்பற்றி பேச வேண்டிய வேலையையும் விட்டுவிடுவதே நலமாகும். இந்த ஒரு வருஷ– காலத்தில் தேசமக்களில் இயக்கத்தில் சேர்ந்த வர்களில் பலருக்கு பலவித கஷ்டம் விளைந்தது என்பதோடு மாத்திர மல்லாமல் இயக்கத்தில் சேராதவர்களுக்கும் பல கஷ்டம் நேர்ந்ததோடு நாட்டின் முன்னேற்றத் திற்கும் பல தடைகள் ஏற்பட்டது என்பது நம்மால் மறைக்க முடியவில்லை. 'சுதேசமித்தரன்' எழுதியது போலவே "போனது போகட்டும், நடந்தது நடந்துவிட்டது இனிப் பேசுவதில் பயனில்லை" ஆகை யால் இனி மேலாவது நாட்டிற்கு உண்மையான வழியில் முன்னேற்றமேற் படும் படியாகவும் மக்களுக்கு உண்மையிலேயே விடுதலை உண்டாகும் படியாகவுமான வழியில் எல்லோருமே இறங்கி நமது நேரத்தையும், ஊக்கத் தையும், தியாகத்தையும் செலவழிக்க வேண்டுமென்றே ஆசைப்படுகின் றோம். சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்திருந்த பலருடைய நல்ல எண்ணத்தில் நமக்கு சந்தேகமில்லை என்பதை உண்மையாகவே தெரிவித்துக்கொள்ளு கிறோம். பலர் எவ்வித சுயநல எண்ணமும் இல்லாமலும் வேறுபல நாணைய மான நிர்ப்பந்தங்களாலும் திரு. காந்தி யவர்களிடம் உள்ள பற்றுதலினாலும் அவருக்கு இந்த சமயத்தில் உதவி செய்ய வேண்டுமே என்கின்ற ஒரு தயாள குணத்தாலும் அதில் கலந்து கொள்ள வேண்டியவர்களானார்கள் என்பதை யும் மனப்பூர்த்தியாய் அறிந்திருக்கின்றோம் என்பதோடு, அப்படிப்பட்ட கனவான்களையும் நாம் மனமாரப் பாராட்டுவதுடன் அப்படிப்பட்ட கனவான் களின் ஆதரவும் பொருப்பும் சுயமரியாதை இயக்க விஷயத்தில் குறைந்து விட்டது என்றோ அல்லது அவர்களை நாம் எதிர்ப்பார்க்கவில்லை என்றோ சொல்ல வரவில்லை. எப்படியாவது சமீபத்தில்கூட விருக்கும் விருதுநகர் மகாநாட்டில் கலந்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமாய் வேண்டிக்கொள்ளு கின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 15.03.1931**



RangaRakes tamilnavarasam.com

# புதிய கொள்கை ஏன்?

சகோதரர்களே! புதிய கொள்கைகள் ஏன் என்கின்ற விஷயத்தைப் பேசுவேன் என்பதாகத் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள்.

புதிய கொள்கைகள் ஏன் என்பது ஒரு கேள்வியேயாகும். அதற்குப் பதில் என்னவென்றால் நமது முன்னேற்றத்திற்குப் பழைய கொள்கைகள் பயன்படவில்லை என்பதோடு, பழைய கொள்கைகளின் பயனாய் நாம் மிகுதியும் பின்னடைந்து விட்டோம். நம்மைப் போன்ற மற்ற நாடுகள் எல்லாம் புதிய கொள்கைகளாலேயே வெகு வேகமாக முற்போக்கடைந்து வருகின்றன. புதிய கொள்கைகளின் பயனாக மக்கள் எவ்வளவோ முற்போக்கடைந்து வருகின்றார்கள்.

நம்மிடம் வேறு எந்தவிதமான நல்ல காரியங்களில் உறுதியான குணம் இல்லாவிட்டாலும், பழைய கொள்கைகளைக் குரங்குப்பிடியாய் பிடித்துக் கொண்டிருப்பதிலும், புதிய கொள்கைகளிடம் துவேஷமும், வெறுப்பும் காட்டுவதிலும் உலகத்தில் தாமே தலைசிறந்து விளங்குபவர்களாய் இருக் கின்றோம். ஒரு காலத்தில் காட்டுமிராண்டிகளாய் இருந்ததாகச் சொல்லப்படும் ஐரோப்பிய வெள்ளைக்காரர்கள் இன்று உலக சமூகத்தில் தலைசிறந்து விளங்கி வருவதற்குக் காரணம் புதுக்கொள்கைகளை ஏற்கத் தாராளமாய் முன்வந்து பழையக் கொள்கைகளைக் கைவிடுவதில் சிறிதும் தயக்கங் காட்டாததேயாகும்.

எவ்வளவு கீழான நிலைமையில் இருந்த ஜப்பானியர்கள் இன்று ஒரு அரை நூற்றாண்டுகளுக்குள் மிகவும் மேன்மையாய் மதிக்கத் தகுந்தவர்களா கவும், மற்றவர்கள் பார்த்து அவர்களைப் பின்பற்றும்படியாகவும் ஆன தற்குக் காரணம் அவர்கள் மற்றெல்லாவற்றையும் புறக்கணித்து முன்னேற் றத்தையே தலைமையாய் வைத்துச் சிறிதும் தயங்காமல் முன்னேற்ற வழிகளைக் கைக் கொள்ளப் பல புதிய கொள்கைகளைக் கைப்பற்றி பழைய கொள்கைகளைக் கைவிட்டதேயாகும்.

ருஷியா தேசத்தை எடுத்துக்கொள்ளுங்கள். எவ்வளவு அநாகரி கமாவும், கொடுங்கோன்மையாகவும் ஆளப்பட்டு வந்ததாக ஒரு கால் நூற்றாண்டுக்கு முன்சொல்லப்பட்ட தேசம், இன்று சமதர்மம், பொதுவு



டைமையாகிய உண்மை ஜீவகாருண்யத்துறையில் எவ்வளவு முற்போக் கடைந்து உலகமே பிரமிக்கும்படியாகச் செய்து வருகின்றது என்பதைக் கவனியுங்கள். இதற்குக் காரணம் என்ன? அது பழைய கொள்கைகளைக் கை விடுவதிலும் புதிய கொள்கைகளைக் கைப்பற்றுவதிலும், காட்டின துணிகர மான வீரமல்லவா என்று கேட்கின்றேன்.

அது போலவே துருக்கி தேசத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு அரைக்கால் நூற்றாண்டுக்குமுன் அதன் கதி எப்படி இருந்தது? ஐரோப்பா வால் எவ்வளவு வெறுக்கப்பட்டும், பயப்படுத்தப்பட்டும் இருந்து கொண்டு எவ்வளவு கவலையில் ஆழ்ந்திருந்தது. அப்படிப்பட்ட நாடு இன்று அந்த ஐரோப்பியர்களையே திகிலடையச் செய்து கொண்டிருப் பதற்குக் காரணம் என்ன? பழையக் கொள்கைகளை விடவோ, மாற்றவோ துணிந்த துணிச்சலும், புதிய கொள்கைகளைப் புகுத்த எடுத்துக்கொண்ட முயற்சியால் அடைந்த வெற்றியுமல்லவாயென்று கேட்கிறேன்.

அதுபோலவே சைனாவை எடுத்துக் கொள்ளுங்கள். அது ஒரு கால் நூற்றாண்டுக் குள்ளாகவே எவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்கின்றது. இப் போது ஒரு வீசம் நூற்றாண்டுகளுக்குள்ளாக எவ்வளவு பெரிய காரியம் செய்யத் துணிந்து, ருஷியாவைப் பின்பற்ற ஆசை கொண்டிருக்கின்றது என்பதை யோசித்துப் பாருங்கள். இதற்கு காரணம் என்ன? பழைய கொள்கை களைப் பலிகொடுத்துப் புதிய கொள்கைகளுக்கு ஆக்கம் கொடுத்த பலன் அல்லவா என்று கேட்கின்றேன். அதிக தூரம் போவானேன்? இந்தப் பிரஞ்சு தேசத்தை எடுத்துக் கொள்ளுங்கள் பிரஞ்சு ரெவலூயூஷன் என்னும் உலகத் திற்கே பெரிய முதல் கிளர்ச்சியானது புதிய கொள்கைகளை அஸ்திவார மாகக்கொண்டுதானே துவக்கப்பட்டது. அதனால்தானே இன்று அது குடி அரசு ராஜ்யம் என்று சொல்லிக் கொள்ள இடமேற்பட்டது.

புதிய கொள்கைகளின் அவசியத்திற்கு இன்னும் என்ன காரணமும், உதாரணமும் கேட்கிறீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை.

சகோதரர்களே! நமது இந்தியா தேசம் என்பது மேற்கண்ட நாடு களைப் போன்றதுதானே? சில விஷயங்களில் அவைகளைவிடச் சிறந்த தும், பெரியதும், பூர்வீகமானது மென்றுகூட நாம் சொல்லிக் கொள்ளு கின்றோமா? இல்லையா? இந்த நிலையில் நாம் அடைந்த முற்போக் கென்ன என்பதை யோசித்துப் பாருங்கள். பழைய கொள்கையைக் காப்பாற்றுவதிலும் அவை தானாகவே ஏதாவது இறந்து போய்க்கிடந்தால்கூட அவைகளை உயிர்ப் பிப்பதிலும்தானே கவலை கொண்டிருக்கின்றோம் என்று நான் சொல்வதற்கு நீங்கள் வருத்தப்படக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நம்முடைய சனாதன தர்மப் பிரசாரமெல்லாம் பழைய கொள்கை பிரசாரமல்லாமல் வேறு என்ன பிரசாரம் என்று எண்ணுகின்றீர்கள்? நம்



RangaRakes tamilnavarasam.com

முடைய தொல்காப்பியப் பிரசாரமெல்லாம் பழைய கொள்கை பிரசார மல்லாமல் வேறு என்ன பிரசாரம் என்று கருதுகிறீர்கள்? நம்முடைய சமயப் பிரசாரங்கள் என்பவைகள் எல்லாம் பழைய கொள்கைப்பிரசாரங்கள் அல்லா மல் வேறு என்ன பிரசாரங்கள் என்று சொல்ல வருகிறீர்கள் என்று கேட் கின்றேன்.

மற்றும் பொதுமக்கள் பெரிதும் கவலை கொண்டு நடத்திவரும் கோவில், குளம், உற்சவம், வேதம், தேவாரம், பாடசாலை, புராணம், சாஸ்திரம், காலக்ஷேபம், ராம ராஜ்யம், அரிச்சந்திர ராஜ்யம் ஸ்தாபிக்கும் முயற்சி ஆகியவைகள் எல்லாம் பழைய கொள்கைப் பிரசாரமல்லாமல் வேறு என்ன மாய் இருக்கின்றது என்பதை யோசித்துப் பாருங்கள்.

மற்றும் ஆரிய தர்மம், பிராமண தர்மம், வர்ணாசிரம தர்மம், ஆகிய பிரசாரமெல்லாம் பழைய கொள்கைப்பிரசாரமல்லவா என்பதை நீங்களே சொல்லுங்கள். இந்த நிலைமையில் அதாவது பழைய கொள்கைகளில் இவ்வளவு தடிப்பு ஏறி இருக்கின்ற மக்களாகிய நம்மை யெல்லாம் உடைய தேசம் எப்படி மற்ற தேசங்களைப்போல் அதாவது பழைய கொள்கைகளைப் புதைத்து புதிய கொள்கைகளை விதைத்த நாட்டின் நிலையை அடைய முடியும் என்பதை யோசித்துப்பாருங்கள். பழங் கொள்கைகளால் பயனில்லை யென்று கண்டவர்களும், புதிய கொள்கைகளால் மற்ற மக்கள் பயனடைந்து வருவதைப் பார்ப்பவர்களும் கண்டிப்பாய் பழைய கொள்கைகளை ஒழிக்கப் பாடுபட்டுத்தான் தீருவார்கள். அதைப்பார்க்கும் பழைய கொள்கைக்காரர்கள் ஆத்திரம் கொண்டு கோபித்து துவேஷித்து தங்களால் ஆன கெடுதியைச் செய்ய முன்வந்து தான் தீருவார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அவ் வெதிர்ப்பைச் சமாளிக்கும் குணங்கள் புதிய கொள்கைக்காரர்களுக்கு இருந்தால் தான் புதிய கொள்கைகள் வெற்றி பெற்று நாட்டையும் சமூகத் தையும் முன்னுக்குக்கொண்டுவரச்செய்ய முடியும். இல்லாதவரை இந்த நிலைமையிலேயே இருக்க வேண்டியதுதான். ஆகையால் தான் நாங்கள் எங்களால் கூடிய அளவு புதிய கொள்கைகளுக்காகப் போராட நினைத்திருக் கின்றோம். இதிலுள்ள கஷ்டங்களை நாங்கள் உணராமல் இல்லை.

நண்பர்களே! பழைய கொள்கைகள் பயனளிக்கவில்லையென்று சொல்லுவதில் நீங்கள் உண்மையான பழைய கொள்கை எது என்று பார்த்தீர்க ளானால் நமது நாட்டில் உள்ள பழங்கொள்கைகளில் எல்லாவற்றிலும் பழமை யாயிருப்பது மதசம்பந்தமான கொள்கைகளேயாகும்.

அன்றியும் நான் மேலே சொல்லப்பட்ட எல்லா நாட்டாரும் தங்களு டைய பழங்கொள்கைகள் என்பதை மாற்றி, புதிய கொள்கைகளைப் புகுத்திய தில் பழமையான தென்பதும், மதசம்மந்தமானவைகளேயாகும்.

ஆகவே அந்தக் கருத்தைக்கொண்டே நம்நாட்டுப் பழங்கொள்கை



களைப்பற்றிப் பேசி புதுக்கொள்கைகள் ஏன் என்பதைப் பற்றி பிரஸ்தாபிப் பதில் மதத்தையே அடிப்படையாய் வைத்துச் சொல்லவேண்டியிருக் கின்றது. ஏனெனில் மனிதனுடைய அபிலாஷைகளும், எண்ணங்களும், நடவடிக்கை களும், மதத்துடன் பிணைக்கப்பட்டதாகவே இருப்பதால் மனிதனிடத்தில் அவனது ஆசை, எண்ணம், நடவடிக்கை ஆகியவைகளிடத்தில் எவ்வித ஒருசிறிய மாறுதலை எதிர்பார்த்தாலும் அதை மதத்திலும் மாறுபடக் காண முடிந்தால்தான் முடியும். அப்படிக்கில்லாமல் மனிதனின் நடப்புக்கு ஆதார மான பழைய மதக்கொள்கைகளை வைத்துக்கொண்டு மாறுதலை எதிர்பார்ப்ப தென்பது அடியற்ற பாத்திரத்தில் தண்ணீர் மொள்ளுவதாகவே முடியும்.

உதாரணமாக உண்மையிலேயே பழைய மதக்கொள்கைகள் என்ப வைகளில் மாற்றம் ஏற்பட்டிருக்காமல் இருக்குமானால் முன் சொல்லப்பட்ட ஐரோப்பா, பிரான்சு, ஜப்பான், துருக்கி, ருஷியா, சைனா முதலிய பெரிய பெரிய தேசங்களும், சமூகங்களும் இவ்வளவு பெரிய மாறுதலையும் முற்போக்கையும் அடைந்திருக்க முடியுமா என்பதை நீங்களே சற்று நிதான மாய் யோசித்துப்பாருங்கள். அதிலிருந்து புதுக்கொள்கைகள் ஏன்? என்பதற் குரிய காரணங்கள் விளங்காமல் போகாது. (தொடரும்)

*குறிப்பு : புதுச்சேரியில் 01.03.1931 அன்று நடைபெற்ற மாநாட்டுரையின் தொடர்ச்சி.*

**குடி அரசு – சொற்பொழிவு – 15.03.1931**



RangaRakes tamilnavarasam.com

# சீக்கிரத்தில் சட்டசபை கலையப் போகிறதாம்

"சீக்கிரத்தில் இந்திய சட்டசபை கலையப் போகின்றது" என்று ஸ்டேட்ஸ்மென் பத்திரிகை எழுதியிருப்பதாகத் தமிழ் நாடு பத்திரிகையில் 10-ந் தேதி உபத்தலையங்கத்தில் காணப்படுகின்றது. அதாவது,

"இந்தியா அரசியல் மகாநாட்டில் காங்கிரஸ் பிரதிநிதிகள் ஒத்துழைக்கப் போகின்றார்களாதலால் அதை உத்தேசித்து டில்லி சட்டசபையைக் கலைத்து விட்டு புதிய தேர்தல்கள் நடக்கப்போகின்றது" என்று ஸ்டேட்ஸ்மென் பத்திரிகைக்கு அதன் டெல்லி நிரூபர் எழுதியிருப்பதாகக் காணப்படுகின்றது. இதைப் பற்றி ஏற்கனவே நாம் 1-2-31- உ குடி அரசு தலையங்கத்தில் எழுதி இருக்கின்றோம். அப்போது சிலருக்கு அது ஆச்சரியமாகவும், உண்மையற்றதாகவும் தோன்றி இருக்கலாம். எப்படி யிருந்தாலும் இது உண்மையானால் காங்கிரசுக்காரர்களுக்கு சமீபத்தில் நடந்த காந்தி - இர்வின் ஒப்பந்தத்தின் பலனாய் ஏதாவது பயன் உண்டு என்று சொல்வ தானால், சட்டசபைகள் கலைக்கப்பட்டு, காங்கிரசுக்காரர்கள் வெற்றி பெற்று சட்டசபைகளில் நுழைய ஒரு அகால சந்தர்ப்பம் ஏற்படுவதை தவிர வேறு ஒன்றும் இருக்க முடியாது. ஆதலால், இந்த ஒப்பந்தமோ அல்லது இந்த அபிப்பிராயம் தொக்கி இருப்பதான குறிகளோ, ராஜிய சம்பாஷணையில் கலந்திருக்க வேண்டுமென்று நாம் யூகிக்க பல வழிகளிலும் இடம் மேற்படுகின்றது.

ஆனால், காங்கிரசுக்காரர்களுக்கு தங்களுக்கு வெற்றி ஏற்படுவது நிச்சயம் என்கின்ற தைரியமில்லாவிட்டால் கராச்சி காங்கிரசு, சட்டசபைப் பிரவேசத்தை ஒரு சமயம் மறுத்து விட்டாலும் மறுத்து விடக்கூடும். ஆகையால் எதுவும் கராச்சி காங்கிரசில்தான் முடிவுபெறலாம்.

ஆனாலும், அதுவரை அடுத்த தேர்தலுக்குச் செய்யப்பட வேண்டிய முஸ்தீப்புகளில் ஒன்றாகக் கள்ளுக்கடை மறியலும், ஜவுளிக்கடை மறியலும் அங்குமிங்குமாக தலை நீட்டிக் கொண்டு இருக்கவேண்டியதுதான். ஆனால், தீண்டாமை விலக்கு விஷயமாக மாத்திரம் எதுவும் தலைகாட்டப் பட மாட்டாது. ஏனெனில், தீண்டாமை விஷயம் பேசினாலோ, அதற்காக மறியல் முதலியவைகள் துவக்கப்பட்டாலோ ஓட்டுக்கிடைப்பது கஷ்டமான காரியமாகி விடுமாதலால், அது கிணற்றில் போடப்பட்ட கல்லுபோல் பேசாமல் இருந்து கொண்டு இருக்கும்.



ஆதலால், இப்போது சட்டசபைகளில் இருப்பவர்கள் கூட, தீண்டாமை சம்மந்தமாகப் பேசப்பயப்படுவதுடன், ஜவுளி மறியலுக்கும், கள்ளு மறியலுக்கும் கூட தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டாலும் கொள்ளுவார்கள். தீண்டாத வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்பட்ட சட்டசபை அங்கத்தினர்கள் கூட அடுத்த தடவை தேர்தலின் மூலம் சட்டசபைக்கு வர வேண்டியவர்களாக இருப்பதால் அவர்களுக்கும்கூட தீண்டாமைக் கொடுமையைப் பற்றிப் பேசுவது சற்று கஷ்டமாகத்தான் இருக்கும்.

ஏனெனில், ஒன்று தீண்டாமையைக் கடிந்து பேசுகின்றவர்களுக்கு ஓட்டுக் கிடைக்காமல் போகும்.

இரண்டு தீண்டாமை ஒழிந்து விட்டால் தீண்டாதவர்களின் பெயரால் இப்போது சிலருக்குக் கிடைத்து வரும் சௌகரியங்கள் பிறகு கிடைக்காமல் போகலாம். ஆகவே இரண்டு காரணங்களால் அவர்களும் பயப்படுவார்கள்.

ஆகவே இந்தக் காரணங்களால் காங்கிரசுக்கு இருக்கும் மதிப்பை நாம் இல்லை என்று சொல்ல வரவில்லை. ஆனால், காங்கிரசினால் பொதுமக்களுக்குப் பயன் உண்டு என்பதையும், அந்தக் காரணத்தால்தான் காங்கிரசுக்கு மதிப்பு இருக்கின்றது என்பதையும் மாத்திரம் தான் நாம் ஒப்பு கொள்ள முடியவில்லை. பிரத்தியாரையும் நம்பச் செய்யமுடியவில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 15.03.1931**



RangaRakes tamilnavarasam.com

# கராச்சிக்குப் போகின்றவர்களே இந்தியாவுக்கு எது வேண்டும்?

இந்த வாரத்தில் இந்தியாவின் விடுதலையை முற்போக்கை முன்னிட்டு என்று தேசபக்தர்கள், தேசீய வாதிகள் என்பவர்கள் இந்தியாவுக்கு இனிச்செய்ய வேண்டிய வேலை என்ன? என்று நிர்ணயிப்பதற்காக கராச்சிக்குப் போகின்றார்கள். அங்கு இந்த மாதம் 27-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை காங்கிரஸ் நடைபெறப்போகின்றது. அங்கு சென்று இனிமேல் என்ன செய்ய வேண்டியது என்று தீர்மானிப்பதற்கு முன்பதாக இந்தியாவுக்கு வேண்டியது எது என்று தீர்மானிக்க வேண்டியது முக்கியமானதும், அறிவுடைமையானதுமான காரியமாகும்.

பொதுவாக இன்று உலக மக்களில் பெரும்பான்மையோருக்கும் சிறப்பாக இந்தியாவுக்கும் முக்கியமாய் வேண்டியதான காரியங்கள் என்பவை ஆட்சியில் மாறுதலல்லவென்பதையும், இந்திய மக்களின் மன உணர்ச்சியில் மாறுதல் வேண்டியது என்பதையும் நன்றாய் உணர வேண்டும். அவற்றுள்,

1. மக்களுக்குள் பிறவியில் உயர்வு, தாழ்வு உணர்ச்சி மறைதல்.
2. ஆண், பெண் வித்தியாச உணர்ச்சி ஒழிதல்.
3. ஏழை பணக்காரன் என்ற தன்மை உணர்ச்சி அழித்தல்.

ஆகிய இவை மூன்றுமே முக்கியமாகும்.

தேசபக்தர்களே! தேசீய வாதிகளே! இம்மூன்று காரியங்களும் நடைபெற நேற்றைய சுயராஜியத் திட்டத்திலாவது, இன்றைய பூரண சுயேச்சைத் திட்டத்திலாவது எங்காவது ஒரு சிறு இடமாவது பெற்றிருக்கின்றதா? அல்லது இடம்பெற மார்க்கமாவது இருக்கின்றதா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

இதை விட்டுவிட்டு உண்மை உழைப்பாளிகளைப் பார்த்து "ஐயோ காங்கிரசை வைகின்றார்களே" "சுயராஜியத்திற்கு எதிராய் இருக்கின்றார்களே" "பூரண சுயேச்சைக்கு முட்டுக்கட்டை போடுகின்றார்களே" என்று வருத்தப்படுவதால் பயன் என்ன?

சாதாரணமாகக் கோவில்களில் கல்லுருவங்களுக்கு முன்னால் நின்று கொண்டு, தேவாரம், திருவாசகம் முதலியவைகளில் காணப்படும் புராணக் கதையைப் பற்றிய பாடல்களைப் பாடம் பண்ணிக்கொண்டு அருத்தமும், பொருத்தமும் இல்லாமல் கண்களில் நீர் ஒழுகும்வண்ணம் தேம்பித் தேம்பி அழுதுகொண்டு நீட்டி நீட்டிப்பாடுவதும், அதைக் கண்டவர்களுக்கும், கேட்டவர்களுக்கும் கூட சில சமையங்களில் அழுகை வருவதும் பலருக்கு மனதும் "பரவச"ப்பட்டு விட்டதாகச் சொல்லிக் கொள்ளுவதும் பக்கத்தில் இருப்பவர்களில் யாராவது ஒருவர் இருவர் இந்தப் பாட்டுகளுக்கு என்ன அருத்தம் என்றாவது இப்படி அழுது கொண்டு பாடுவதால் பயன் என்ன என்றாவது கேட்டு விட்டால் உடனே அழுதுகொண்டு பாடியவருக்கும் கேட்டுக்கொண்டு "பரவச"ப்பட்டிருந்தவருக்கும் பிரமாதமான கோபம் வந்து கேட்டவர்களை "இதன் அருமை அறியாத மூடர்கள், கயவர்கள்" என்பதாகப் பேசி ஏசுவார்களே யல்லாது வேறு ஒரு சமாதானமும் சொல்ல மாட்டார்கள், சொல்லவும் வகை அறியார்கள். அன்றியும், இந்தப்படி பல பேர்கள் கேட்ட பிறகாவது அந்தப் பாட்டுகளின் அர்த்தமென்னவென்றோ, அவற்றை அழுதுகொண்டு பாடவேண்டிய அவசிய மென்னவென்றோ அதனால் ஏற்படும் பயன் என்னவென்றோ ஒருநாளும் சிந்தித்துப் பார்க்கமாட்டார்கள். ஏனெனில்,

இந்தமாதிரி இவர்கள் கோவிலுக்குப்போனதும், அங்கு பாடினதும், அழுததும் எல்லாம் பெரிதும் எப்படியாவது மற்றவர்கள் தங்களைப் பார்த்து மிகுந்த பக்திவான் என்று சொன்னால் போதும் என்கின்ற ஆசையும், வைதீக - பக்தி உலகத்தில் தனக்கு முதல் வரிசையில் இடம் கிடைத்தால் போதும் என்கின்ற லட்சியத்தைத் தவிர வேறு கவலையே அவர்களுக்கு இருக்காது.

அன்றியும், அந்த பக்திக்கும், வைதீகப் பெருமைக்கும், அவர்களுடைய நடவடிக்கைக்கும் சிறிதும் சம்மந்தமும் இருக்காது. அதுபோலவே நமது தேசபக்தர்கள் என்பவர்களும், காங்கிரஸ் பக்தர்கள் என்பவர்களும் சுயராஜியம் அல்லது பூரண சுயேச்சை பக்தர்கள் என்பவர்களும் நமது நாட்டில் மேடைகள் கிடைத்த பக்கம் காங்கிரசைப் பற்றியும், தேசீயத்தைப் பற்றியும் முன்பு யாராவது சொன்ன வார்த்தைகளை - பாட்டுகளைப் பாடம் பண்ணிக்கொண்டு திருப்பித் திருப்பி ஆவேசத்துடன் பார்ப்பவர்கள், கேட்பவர்கள் கை தட்டும்படி உடல் சிலிர்க்க விரைப்பதுமாகச் செய்யுங் காரியங்களைப் பற்றி யாராவது இதன் அருத்தமென்ன? இதற்கு அவசிய மென்ன? இதனால் பயன் யாது? என்பதாகக் கேட்டுவிட்டால் உடனே கோபமும், ஆத்திரமும் வந்து வசைபாடுவதன் மூலம் அடக்கப் பார்ப்பதல்லாமல் யாதொரு சமாதானமும் சொல்லார்கள், சொல்லவும் அறியார்கள். இந்த மாதிரியான காங்கிரசுக்காரர்களைப் பற்றியும், தேச பக்தர், தேசீயவாதிகள் ஆகியவர்களை பற்றியும் 1925ம் வருஷம் முதல் சமீபகாலம்வரை நாம் எழுதின எழுத்துக்களும், பேசின பேச்சுக்களும் அவ்வப்போது பொது ஜனங்கள் அறிந்ததேயாகும்.



RangaRakes tamilnavarasam.com

அதை அரங்கேற்றாத மேடையே இல்லை என்பதோடு ஊரே இல்லை என்று கூட சொல்லலாம். அதனால் அதுமுதல் சமீப காலம் வரை காங்கிரசுக்கும், தேசீயத்திற்கும் நமது நாட்டில் இருந்த மதிப்பு எவ்வளவு என்பதை இப்போது நாம் எடுத்துக் காட்ட வேண்டிய அவசியமுமில்லை. அதன் பயனற்ற – பரிசுத்தமற்ற நிலையை பலர் உணர்ந்து “அதை கைப் பற்றி பரிசுத்தமாக்கி பயனுண்டாகும்படி” செய்ய பலர் முயற்சித்ததையும் நாம் இப்போது யாருக்கும் ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

ஆகவே இந்த நிலையில் இருந்த காங்கிரசும், தேசீயமும் ஏதோ ஒரு கிளர்ச்சியின் பயனாய் சிலர் சிறை சென்று கஷ்டமடைந்ததின் பயனாய் மறுபடியும் தலையெடுத்து விளம்பரமாக நேரிட்டு மக்களின் கவனத்தை இழுக்கும்படி ஏற்பட்டு விட்டதாலேயே அதற்கு வேறு ஏதாவது ஒரு புதிய யோக்கியதை இப்போது வந்து விட்டதாக கருதிவிட முடியுமா என்று கேட்கின்றோம். அந்தக் காலங்களில் இருந்த காங்கிரசை விட தேசீயத்தை விட இப்போது அவை என்ன புதியதொரு கொள்கைகளை ஏற்படுத்திக் கொண்டுவிட்டது? அல்லது புதியதொரு பயனை உண்டாக்க சக்தியோ யோக்கியதையோ அடைந்து விட்டதா? அல்லது அப்பொழுது அதில் இருந்த மக்களின் யோக்கியதையைவிட இப்போது மாறுதலான மக்கள் அதில் ஏதாவது முன்னிலும் அதிகமாக மிகுந்து விட்டார்களா? என்பனபோன்ற விஷயங்களில் எதில் மாறுதலை யடைந்திருக்கின்றது என்று கேட்கின்றோம். அன்றியும் சமீப கிளர்ச்சியையே அக்காங்கிரசுதான் உண்டாக்கிற்று என்று வைத்துக்கொண்டாலும் இந்தக் கிளர்ச்சிதானாகட்டும், முன் கிளர்ச்சிகளில் இல்லாத முன்வருஷங்களில் இல்லாததாகிய எந்த ஒரு அபாரமான நன்மை யைக் கொண்டு வந்துவிட்டு விட்டது? அல்லது என்ன ஒரு புதிய திட்டத்தையாவது கொண்டுவந்து விட்டது? அல்லது மக்களுக்குள் என்ன விதமான புதிய உணர்ச்சியை உண்டாக்கிற்று? என்று பார்த்தால் “பழைய கருப்பனே கருப்பன்” என்பதல்லாமல் வேறு என்ன சொல்லக்கூடியதாய் இருக்கின்றது என்பது நமக்குப் புலப்படவிடல்லை. இந்த நிலையில் உள்ள காங்கிரசைத்தான் சில மக்களுக்கு கடவுளைக் காப்பாற்றவேண்டிய அவசியம் இருப்பது போல காங்கிரசைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் பலருக்கு ஏற்பட்டுவிட்டது என்பதல்லாமல் அவ் வளவு கஷ்டப்பட்டுக் காங்கிரசைக் காப்பாற்ற அது என்ன ஒரு புதிய தன்மையை அடைந்துவிட்டது என்பது நமக்கு உண்மையிலேயே விளங்கவில்லை. சும்மா, வீணே கோபிக்கின் றவர்களுக்கும் ஆத்திரப் படுகின்றவர்களுக்கும் பயந்து கொண்டு உண்மையை மறைத்துக் கொண்டிருப்பதால் இன்னும் எத்தனை வருஷத் திற்குத்தான் நாம் அதிகமாக வாழ்ந்து விட முடியும்? அல்லது வேறு என்ன பெருமையான பதவியைத்தான் நாம் அடைந்து விட முடியும்? என்பதும் நமக்கு விளங்கவில்லை.



உண்மையிலேயே மனிதன் செய்யப்புகும் பேசப்புகும் காரியங்கள் ஒவ்வொன்றும் அதனால் பொது ஜனங்களுக்கு என்ன பயன் விளையும் என்பதைக்கருதித்தான் செய்யப்பட வேண்டுமே யொழிய, பிறர் என்ன சொல்லுவார்கள்? என்ன நினைப்பார்கள்? என்பதை ஆதாரமாய்க்கொண்ட தாக இருக்கக்கூடாது என்பது நமதபிப்பிராயமாகும். இதை வெகு கால மாகவே சொல்லிவந்திருக்கின்றோம். பிறர் என்ன சொல்லுவார்கள்? நமக்குத் தனித்த முறையில் இதனால் என்ன பலன் உண்டாகும்? என்று யோசித்துச் செய்யும் காரியங்கள் எல்லாம் பெரிதும் வியாபார முறையில் செய்யப்படு பவைகளாகுமேயல்லாமல் பொது நலத்திற்கேற்ற காரியமாகாது என்றுகூட சொல்லுவோம்.

பொதுவாகவே அறிவில்லாத மக்களாலும் சுயநல மக்களாலும் நியாய விரோதமாக லாபத்தை அடைந்து கொண்டிருக்கும் மக்களாலும் காற்றடிக்கும் பக்கம் சாயும் மக்களாலும் எவன் ஒருவன் தனது தொண்டின் பயனாய் பெரிதும் வெறுக்கப்படுகின்றானோ – வையப்படுகின்றானோ, சபிக்கப்படு கின்றானோ பழி சுமத்தி தனிப்பட்ட முறையில் எதிர் பிரசாரம் செய்யப்படு கின்றானோ அவனது தொண்டுதான் பெரும்பாலும் உண்மையானதாகவும் பயனளிக்கக் கூடியதாகவும் இருக்க முடியும் என்பதும் அந்தப்படிக் கில்லாமல் அறிவற்ற மக்களாலும், சுய நலக்காரர்களாலும் அக்கிரமமாய் ஆதிக்கம் பெற்று பலனடைந்து வருபவர்களாலும் பகுத்தறிவற்ற மூட நம்பிக்கைக்காரர்களாலும் சமய சஞ்சீவிகளாலும் எவனொருவன் தனது தொண்டின் பயனாய் பெரிதும் போற்றப்படுகின்றானோ கொண்டாடப் படுகின்றனோ அவனது தொண்டானது பெரிதும் பயனற்றதும் உண்மைக்கும் நியாயத்திற்கும் எதிரானதுமாகவும் இருந்தாக வேண்டும் என்பது நமது தெளிவு. ஆகவே மனிதன் தான் செய்யும் பொதுநல சேவை இன்னது என்ப தாக தீர்மானிக்கும் முன்பாக அது உண்மையாகவே பொது மக்களுக்குப் பயன்பட வேண்டியதாய் இருக்க வேண்டுமென்று கருதுகின்றவனாகவும் அதனால் தனக்கு வரும் எவ்வித கெடுதியையும் பழியையும் தாங்கி அலட்சியமாய்க் கருதக்கூடியவனாகவும் இருக்க வேண்டியதோடு அத் தொண்டின் பயனாய் அவன் சுயநலக்காரர்களால் மக்களை ஏமாற்றிப் பிழைப்பவர்களால் அக்கிரமமாய் ஆதிக்கம் செலுத்தி யனுபவிப்பவர்களால் அறிவற்ற பாமர மக்களால் போற்றப்படாமல் புகழப்படாமல் இருக்கின் றோமா என்றும் பார்த்துக்கொள்ள வேண்டும். எனவே அந்தமுறையில் பார்ப்பதானால் இந்தியாவுக்கு வேண்டிய முக்கியமான காரியம் எது என்று முதலில் சொல்லப்பட்ட மூன்று காரியங்களையும் செய்யப்பிரவேசித்த ஒரு ஸ்தாபனத்திற்கோ தனிமனிதனுக்கோ ஒருக்காலும் பொதுஜன ஆதரவும் ஆமோதிப்பும் விருப்பமும் கிடைக்கவே கிடைக்காது. அன்றியும் அதில் பிரவேசிப்பதால் அனேக கஷ்டங்களுக்கும், நஷ்டங்களுக்கும் ஆளாக வேண்டியதாகவும் ஏற்படும். அதனாலேயே தான் அப்படிப்பட்ட தொண்டு கள் நமது நாட்டில் சிலராலாவது ஒப்புக்கொள்ள பட்டாலும் வெளியில்



RangaRakes tamilnavarasam.com

தலைகாட்டுவதென்பதே மிக்க அறிதாய் விடுகின்றன. ஒன்று இரண்டு தலை காட்டினாலும் அவை அடிக்கடி மறைந்தும் போகின்றன. ஏதாவது பலத்தால் அத்தொண்டுகள் "சற்று நிலை கொள்ளஆரம்பித்து விட்டாலோ" அவை அனேக கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாக வேண்டிய தாயிருக்கின்றன.

ஆகையால் இன்று சுயநலக் காரணமாகவோ மக்களின் புகழ்ச்சி பாராட்டுதல் காரணமாகவோ அல்லாமல் உண்மையான சுயநலமற்ற பொதுத் தொண்டு செய்ய வேண்டும் என்கின்ற கவலையோ ஆசையோ உடைய வர்கள் பொதுஜன எதிர்ப்புக்கும் வசவுக்கும் பழிப்புக்கும் சற்றும் பின் வாங்காது துணிந்து கொண்டு தாழ்த்தப்பட்டவர்கள் மீது உயர்ந்த ஜாதியார் என்னப்பட்டவர்கள் செலுத்தும் ஆதிக்கத்தையும் ஏற்படுத்தி யிருக்கும் நிர்ப்பந்தத்தையும் பெண்களின் மீது ஆண்கள் செலுத்தும் ஆதிக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கும் நிபந்தனைகளையும் செல்வவான்கள் என்பவர்களால் மற்ற மக்கள் சமூகத்திற்கு ஏற்படும் கொடுமைகளையும், முறைகளையும் அடியோடு ஒழிக்க வகைதேடவேண்டியது கடமையாகும் என்பதை உணர்ந்து அத்தொண்டில் இறங்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளு கின்றோம். இந்தத்துறையில் செய்ய வேண்டிய வேலை முழுவதும் மற்றும் அவ்வேலைத் தத்துவத்துக்கு தடையாயிருப்பவைகளைத் தகர்த்தெறிய வேண்டியகாரியங்கள் முழுவதும் பெரிதும் நமது மக்களி டையே செய்யப்பட வேண்டியிருப்பதால் நமது மக்களே அதுவும் மேல் கண்ட தத்துவங்களுக்கு பலவழிகளிலும் எதிரான உணர்ச்சியுடைய மக்களே கூடி இருக்கும்படியான காங்கிரசு என்னும் மகாசபையில் அது எவ்வளவு உண்மையானது என்று வைத்துக்கொண்டாலும் இத்தத்துவங்களை எடுத்துச்சொல்லி அதை ஒப்புக் கொள்ளச் செய்வது என்பது லேசான காரியமென்று நமக்குத் தோன்ற வில்லை. அன்றியும் காங்கிரசு என்பதனானது சுயராஜ்யம் பெற ஏற்பட்டதே ஒழிய சமதர்மம் பெற ஏற்பட்டதல்ல என்பதை அதுவே ஒப்புக் கொண்டிருக்கிறது. எந்த முறையில் என்றால் "சமதர்மம் என்பது சுயராஜியம் வந்தபின் தானாகவே வந்துவிடும்" அல்லது "பிறகு உற்பத்தி செய்து கொள்ள லாம்" என்று சொல்லி வருவதின் மூலமே தெரியலாம். "சுயராஜ்யம் பெற்றாலே சமதர்மம் ஏற்பட்டு விடும்" என்று சொல்லுவது அறியாமை அல்லது உண்மையை மறைத்துச் சொல்லுவது என்றுதான் சொல்லவேண்டி யிருக்கின்றது. ஏனெனில் சுயராஜியம் பெற்ற தேசங்களில் எல்லாம் பூரண சுயேச்சை பெற்ற தனி அரசு நாடுகளிலெல்லாம் கூட சமதர்மம் இல்லாமலும், சமதர்மத்திற்கு பாடுபடுவதால் அதன் எதிரிகள் சுயராஜியம் இல்லாவிட்டால் கூட பாதகமில்லை, சமதர்மம் மாத்திரம் கூடாது என்று கிளர்ச்சி செய்வதும் நாம் அறியாததல்ல. ஆகவே சுயராஜியத்திற்கும் சம தர்மத்திற்கும் சம்பந்த மில்லை என்பதை சம தர்மத்தில் லக்ஷியமுள்ளவர்கள் நன்றாய் உணர வேண்டுமாய் வலியுறுத்துகின்றோம். அன்றியும் சுயராஜியத்தின் திட்டமே வேறு என்பதையும் அதனால் பயனடைகின்றவர்கள் வேறு என்பதையும்



நன்றாய் யோசித்து உணரவேண்டும். சுயராஜ்யம் கிடைத்தால் சமதர்மம் கிடைத்துவிடும் என்று நம்புகின்றவர்களும், சமதர்மமில்லாமல் சுயராஜ்யம் கிடைத்தால் மக்கள் நலமடைவார்கள் என்று எண்ணுகிறவர்களும் கண்டிப்பாய் ஏமாந்து போவார்கள் என்பதை உறுதியாய்ச் சொல்லுகின்றோம்.

ஆகவே இப்பொழுது ஏன் இதை எடுத்துக்காட்டுகின்றோம் என்று கேட்டால் இந்திய தேசீயக்காங்கிரஸ் என்னும் கூட்டம் இம்மாதம் 27தேதி கராச்சியில் கூடப் போவதாலும் இந்திய மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்கின்ற பொதுநல நோக்கமுடைய மக்கள் ஆயிரக்கணக்காக அங்கு கூடப்போவதாலும் பொதுநலத்திற்காக என்று எவ்வித தியாகமும் செய்யத் தயாராகவே இனிச் செய்யவேண்டிய வேலைக்கு திட்டங்கள் வகுக்கப் போகின்றபடியாலும் அங்கு இதற்கு யேதாவது வகை செய்ய முடியுமா என்பதை உணர்ந்து, கூடுமானால் செய்யவோ கூடாவிட்டால் அதன் சம்மந்தத்தில் இருந்து விலகவோ உண்மையாளருக்கு உறுதியளிக்கக்கூடும் என்கின்ற ஆசையினாலேயாகும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 22.03.1931**



RangaRakes tamilnavarasam.com

# சைவ வைணவ போட்டி

## ஒன்றுக்கொன்று பொருத்தம்

**-சித்திரபுத்திரன்**

இராமன் பிறப்பும் சுப்ரமணியன் பிறப்பும் ஒன்று போலவே கற்பிக்கப் பட்டிருக்கின்றது. இரண்டு பேர்களும் பூமி பாரம் தீர்க்கவும் ராக்ஷதர்கள் அசுரர்கள் அக்கிரமங்களை அழிக்கவும் தோன்றினவர்கள். இராமன் பிறப்பதற்காகவும் தேவர்கள் விஷ்ணுவை வேண்டிக்கொண்டார்கள். சுப்ர மணியன் பிறப்பதற்காகவும் தேவர்கள் சிவனை வேண்டிக்கொண்டார்கள்.

இராமன் ஒரு மனிதன் விந்திலிருந்து பிறந்தான். ஆனால், சுப்ரமணி யன் சிவன் விந்திலிருந்து தோன்றினான். இராமன் ராக்ஷதர்களைக் கொன் றான் சுப்ரமணியன் அசுரர்களைக் கொன்றான். இராமன் செய்த சண்டையில் ராக்ஷதர்களைக் கொல்லக் கொல்ல மூலபலம் தானாக உற்பத்தி யாய்க் கொண்டே இருந்தது.

அதுபோலவே சுப்ரமணியன் அசுரர்களைக் கொல்லக் கொல்ல சும்மா தானாகவே அசுரர்கள் உற்பத்தியாய்க் கொண்டிருப்பதும் தலையை வெட்ட வெட்ட மறுபடியும் முளைத்துக் கொண்டே இருந்தது. இன்னமும் பல விஷயங்களில் ஒற்றுமைகள் காணலாம். ஆகவே இரண்டும் ஒன்றுக் கொன்று போட்டிக்காக உண்டாக்கப்பட்டக் கற்பனைக் கதைகள் என்பது விளங்கும். மற்றும் பெரியபுராண 63 நாயன்மார்கள் கதையும் பக்த லீலாமிர்த ஹரி பக்தர்கள் கதையும் அநேகமாக ஒன்றுபோலவே கற்பிக்கப்பட்டிருப்பதை காணலாம். பெரிய புராண நாயன்மார்களில் குயவர் வகுப்பு என்பதற்காக ஒரு நாயன்மாரை திருநீலகண்ட நாயனார் என்று உற்பத்தி செய்தது போலவே பக்தலீலாமிர்தத்திலும் குயவர் வகுப்புக்காக கோராகும்பார் என்பதாக ஒரு பக்தரை கற்பித்து இருக்கின்றார்கள். பெரிய புராணத்தில் பறையர் வகுப்பு என்பதற்காக நந்தனார் என்பதாக ஒரு நாயனாரை சிருஷ்டித்தது போலவே பக்தலீலாமிர்தத்திலும் பறையர் வகுப்புக்காக சொக்கமேளா என்கின்ற ஒரு பக்தரை சிருஷ்டித்து இருக்கின்றார்கள். இப்படியே மற்றும் பல நாயனார் களும், ஹரிபக்தர்களும் கற்பிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் சம்மந்தமான கதைகளும் ஏறக்குறைய ஒன்று போலவே கற்பிக்கப்பட்டிருக்கின்றன.



உதாரணமாக, திருநீலகண்ட நாயனார் தன் பெண் ஜாதியோடு கோபித்துக் கொண்டு ஒருவருக்கொருவர் திரேக சம்மந்தமில்லாமலிருந் ததை சரி செய்ய சிவபெருமான் சிவ யோகியாக வந்து இருவரையும் சேர்த்து வைத்ததாகக் கதை உண்டாக்கப்பட்டிருக்கின்றது.

அதுபோலவே பக்த லீலாமிர்தத்தில் கோராகும்பாரும் தன் மனைவி யுடன் கோபித்துக் கொண்டு ஒருவருக்கொருவர் தேக சம்மந்தமில்லாமல் இருந்ததைச் சேர்த்து வைப்பதற்காகவே விஷ்ணு பெருமான் தோன்றி இருவர்களையும் சேர்த்து வைத்ததாகவே கதை கற்பிக்கப்பட்டிருக்கின்றது.

அதுபோலவே பெரிய புராணத்தில் நந்தனாருடைய கதையிலும் நந்தனாரைக் கோவிலுக்குள் விடும்படி பரமசிவன் இரவில் நந்தனார் கனவில் வந்து சொன்னதாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றது.

பக்த லீலாமிர்தத்தில் சொக்கமேளர் (சொக்கமாலா என்றும் சொல்வ துண்டு) என்னும் பறையர் ஒருவரை விஷ்ணு இரவில் வந்து கோவிலுக்கு அழைத்துப் போனதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது

இப்படி அநேகக் கதைகள் சைவத்திற்கும், வைணவத்திற்கும் போட்டி போட்டு கற்பிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டிலும் பார்ப்பனர்களுக்கும், அர்ச்சகர்களுக்கும் உயர்வுகள் கற்பிக்கப்பட்டிருப்பதிலும் ஒன்று போலவே கற்பிக்கப்பட்டிருப்பதையும் காணலாம். இரண்டிலும் ஜாதி வித்தி யாசத்தை உறுதிப்படுத்தி பிறகு அந்த குறிப்பிட்ட நபர்கள் விஷயத்தில் மாத்திரம் மிக்க கடினமான நிபந்தனைமீது மன்னிக்கப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். ஆகவே இவைகள் சிவனும், விஷ்ணும் ஆகிய இரு கடவுள்களும் ஒருவருக் கொருவர் போட்டி போட்டுக் கொண்டு செய்தார்களா? அல்லது இரண்டு சமயத்தின் பேராலும், ஜாதிகளை நிலை நிறுத்தவும், மதப் பிரசாரத்திற்கும், வயிற்றுப் பிழைப்புக்கும் வழிதேடும் ஆசாமிகளால் கற்பிக்கப் பட்டதா என்பதை வாசகர்கள்தான் முடிவு செய்து கொள்ளவேண்டும்.

ஏனெனில் நாம் சொன்னால் அது மிகுந்த 'தோஷமாக ஏற்பட்டு, பெரிய பாவத்திற்காளாக வேண்டியதாய் போய்விடும்.'

**குடி அரசு - கட்டுரை - 22.03.1931**



RangaRakes tamilnavarasam.com

# புத்த மதமும் சுயமரியாதையும்

சகோதரர்களே!

சுயமரியாதையும், புத்தமதமும் என்ற விஷயத்தைப்பற்றி பேசும் இந்தக் கூட்டத்தில் நான் பேசவேண்டியிருக்கும் என்று இதற்கு முன் நினைக்கவேயில்லை. இன்று நான் ரயிலுக்குப் போக சற்று நேரமிருப்பதாலும், தங்கள் சங்க செக்கரட்டரி என்னை இங்கு அழைத்ததாலும், இவ்விடம் நடக்கும் உபன்யாசத்தைக் கேட்டுப் போக வந்தேன். இப்போது திடீரென்று என்னையே பேசும்படி கட்டளையிட்டு விட்டீர்கள். ஆனபோதிலும் தங்கள் கட்டளையை மறுக்காமல் சிறிது நேரம் சில வார்த்தைகள் சொல்லுகின்றேன். அவை தங்கள் அபிப்பிராயத்திற்கு ஒத்ததாக இல்லையே என்று யாரும் மனவருத்த மடையக்கூடாது என்று முதலில் தங்களைக் கேட்டுக்கொள்ளு கிறேன். ஏனெனில் இன்று பேசும் விஷயத்திற்கு, 'சுயமரியாதையும், புத்தமதமும்' என்று பெயரிட்டு இருப்பதால் அதைப்பற்றி பேசுகையில் என் மனதில் உள்ளதைப் பேசவேண்டியிருக்கும். பச்சை உண்மையானது எப்போதும் மக்களுக்கு கலப்பு உண்மையைவிட அதிகமான அதிருப்தியைக் கொடுக்கக் கூடியதாகவே இருக்கும். உண்மையை மறைத்துப் பேசுவது என்பது எப்போதும் பேசுகின்றவனுக்கும், பேச்சுக் கேட்பவர்களுக்கும் திருப்தியைக் கொடுக்க கூடியதாகவே இருக்கும்; திருப்தி உண்டாகும்படியும் செய்து கொள்ளலாம். ஆனால் உண்மை பேசுவதன் மூலம் அப்படிச் செய்ய முடியாது என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் நான் என் கடமையைச் செய்கின்றேன் என்கின்ற முறையில் பேசுகின்றேன். பிறகு அது எப்படியோ ஆகட்டும்.

சகோதரர்களே ! சுயமரியாதையும், புத்தமதமும் என்பது பற்றிப் பேசுவதில் நான் முக்கியமாய்ச் சொல்லுவதென்னவென்றால் இன்ன மதந்தான் சுயமரியாதை இயக்கம் என்பதாக நான் ஒருக்காலமும் சொல்லமாட்டேன். அந்தப்படி என்னால் ஒப்புக்கொள்ளவும் முடியாது. இன்று காணப்படும் படியான எந்த மதமுமே கூடாது. அவை மனிதனுக்கு அவசியமும் இல்லை என்கின்ற கொள்கையையுடைய சுயமரியாதை இயக்கமானது எப்படித் தன்னை ஏதாவது ஒரு மதத்துடன் பிணைத்துக் கொள்ள சம்மதிக்க முடியும் என்பதை நீங்களே யோசித்து பாருங்கள். ஏனெனில் சுயமரியாதை இயக்கமானது ஒரு நாளும் யாரோ ஒருவர் சொன்னார் என்பதற்காக எதையும்



ஒப்புக்கொள்ளக்கூடியதன்று. யார் சொன்னதாக இருந்தாலும் அது தன் பகுத்தறிவுக்கு பொறுத்தமாக இருக்கின்றதா? தனது அனுபவத்திற்கு ஒத்ததாக இருக்கின்றதா? என்பதைப் பார்த்துத் திருப்தியடைந்த பிறகே எதை யும் ஒப்பு கொள்ளவேண்டும் என்கின்ற கொள்கையை யுடையது. அது எந்த மனித னையும் அந்தப்படி பரீக்ஷித்த பிறகே எதையும் ஒப்புக் கொள்ளவேண்டும் என்கின்றது.

அன்றியும் அது அந்த கொள்கையோடு அதன் நிபந்தனைக் குட்பட்டு யார் எதை சொன்னாலும் அதை யோசிக்கத் தயாராக இருக்கின்றது. அப்படிக்கில்லாமல் எந்த மதமாவது, எந்த நபராவது தான் அனுசரிக்கும் கொள்கையும், தான் சொல்லுவதும் இன்ன காலத்தில் இன்னார் மூலமாக இன்னார் சொன்னது என்பதாகவும், அதற்கு விரோதமாக யாரும் எதையும் சொல்லக் கூடாது என்பதாகவும், அதை யாரும் பரீக்ஷிக்கவும் கூடாது, அதைப்பற்றி சந்தேகமும் படக்கூடாது என்பதாகவும் யாராவது சொல்ல வந்தால் அது எந்த மதமானாலும், அது எப்படிப்பட்ட உண்மையா னாலும் அதைச் சுயமரியாதை இயக்கம் ஒரு நாளும் ஒப்புக்கொள்ள முடியாது. அன்றியும் கடவுள் சொன்னார், அவதாரக்காரர் சொன்னார், தூதர் சொன்னார் என்று சொல்லி ஒன்றைத் தங்கள் பகுத்தறிவுக்கு பொருத்திப் பார்க்காமல் ஒப்புக் கொண்டிருக்கின்றவர்கள் யெவரும் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்ட வர்கள் என்று சொல்லிக்கொள்ள சாத்தியப்படாது. அன்றியும் அவர்கள் தங்களைச் சுயமரியாதை உடையவர்களாக எண்ணிக் கொள்ளவுமாட்டார்கள்.

பழைய அபிப்பிராயங்கள் எல்லாம் அது ஏதுவானாலும் அடியோடு பரிசோதிக்கப்படவேண்டும், பரிசோதிக்கச் சற்றும் பயப்படக்கூடாது. அப்படிப் பரிசோதிப்பதிலும் நடு நிலையிலிருந்தே பரிசோதிக்க வேண்டும். அந்தப்படி பரிசோதிக்கப் பின்வாங்குகின்றவன் யாராயிருந்தாலும் கோழையேயாவான்.

நமக்கு முன்னால் இருந்த மனிதர்களைவிட நாம் விஷேச அனுபவ மும், ஞானமும் உடையவர்களென்று சொல்லிக் கொள்ளப் பாத்தியமுடை வர்கள் என்பதை ஞாபகத்தி லிருத்தாதவன் மனிதத்தன்மை யுடையவனாக மாட்டான். ஏனெனில் முன் காலம் என்பதைவிட முன் இருந்தவர்கள் என்பதைவிட இந்தக்காலம் என்பதும், இப்போது இருக்கிறவர்கள் என்பவர் களும் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் அதிகமான சுதந்தரமும், சௌகரியமு முடையது, உடையவர்கள் என்பது ஒரு சிறு குழந்தையும் ஒப்புக்கொள்ளக் கூடியதாகும். அன்றியும் இந்தக் காலம் அனுபவத்தின்மேல் அனுபவம் என்கின்ற முறையில் புதிய புதிய தத்துவங்கள் வளர்ந்து வந்த காலமுமாகும். மேலும் இப்போதுள்ளவர்கள் பல வழிகளில் இயற்கையாகவே முற் போக்கும் அறிவு விளக்கமும், அனுபோகப் பயிற்சியும் பெற்று வருகிற சந்ததியில் பிறந்தவர்களுமாயிருக்கிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே இயற்கையாகவும் செயற்கையாகவும் முன்னோர்களைவிட நாம் எவ்விதத்திலும் அறிவிலோ, ஆராய்ச்சியிலோ, இளைத்தவர்கள் அல்ல என்பதையும் காலவேறுபாட்டிற்கும், கக்ஷி வேறுபாட்டிற்கும் தகுந்த படி கருத்து வேறுபாடு அடையவேண்டிய உரிமையும் அவசியமுமுடைய வர்கள் என்பதையும் நாம் நன்றாக உணரவேண்டும்.

இந்த நிலையில் இருந்துகொண்டு நாம் பார்த்தோமானால் முன்னோர் சொன்னவைகள் என்பவற்றிற்கு எவ்வளவு மரியாதை கொடுக்கலாம் என்பது தானாகவே விளங்கிவிடும். நிற்க,

மற்றொரு விஷயம் என்னவென்றால், முன்னோர்கள் சொன்ன வைகள் என்பவற்றிற்கு நம் கருத்துக்கள் ஒத்து இருக்கின்றனவா என்று பார்த்துப் பிறகு தான் நம் கருத்துக்களை உறுதிப்படுத்த வேண்டுமென்கின் றதான மனப்பான்மையையும் அடியோடு எடுத்தெறிய வேண்டும். ஏனெனில் முன்னோர் கருத்து என்பதற்காக நாம் எதற்கும் அடிமையாய் விடக்கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் சொல்லுகின்றேன். முன்னோர் கருத்துக்கு அடிமையாய்க் கொண்டுவந்தோமேயானால் உண்மையையும், அறிவு வளர்ச்சியையும் நாம் அடியோடு கொன்று விட்டவர்களாவோம். ஆதலால் புத்த மதம் தான் சுயமரியாதை இயக்கமென்று யாரும் சொல்லக் கூடாது என்று சொல்லுகிறேன்.

ஏனென்றால் உதாரணமாக புத்த மதத்திற்குக் கடவுள் இல்லை, ஆத்மா இல்லை, நித்யமொன்றுமில்லை என்கின்ற கொள்கை இருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். இது புத்தரால் சொல்லப்பட்டது என்றும் சொல்லுகின் றார்கள். இதை உண்மை என்றே வைத்துக் கொள்ளுவோம். இந்தக் கொள்கை கள் புத்தர் சொன்னார் என்பதற்காகத் தங்கள் புத்திக்குப் பட்டாலும் படா விட்டாலும் பௌத்தர்கள் என்கின்றவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியவர் களாகின்றார்கள். இப்படியேதான் மற்ற மதக்காரர்களும் இந்துக்களோ, மகமதியர்களோ, கிறிஸ்தவர்களோ கடவுள் உண்டு ஆத்மா உண்டு நித்தியப் பொருள் உண்டு மனிதன் இறந்தபிறகு கடவுளால் விசாரிக்கப்பட்டு அதன் செய்கைக்குத் தகுந்தபடி மோக்ஷம், நரகம், சன்மானம், தண்டனை ஆகியவை கள் கடவுளால் கொடுக்கப்படுவது உண்டு என்பனபோன்ற பல விஷயங் களை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நம்பிக்கைகளுக்கு காரணம் தங்களுக்கு முன்னேயே யாரோ ஒருவர் சொன்னதாக ஏதோ ஒன்றில் இருப்பதைப் பார்த்து நம்பிக்கொண்டு இருக்கின்றார்கள். இவை உண்மை என்றே வைத்துக் கொள்ளுவோம். இந்த இரண்டு கூட்டத்தார்களும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை தங்கள் தங்கள் பகுத்தறிவு, ஆராய்ச்சி, யுக்தி, அனுபவம் ஆகியவைகள் காரணமாகக் கொண்டிருக்கின்றார்கள் என்று ஏற்படுவதானால் இருதிரத்தாரும் சுயமரியாதை இயக்கக்காரர்களே யாவார்கள்.



ஏனெனில் கண்மூடித்தனமாய் முன்னோர் வாக்கு என்பதாக அல்லா மல் தங்கள் தங்கள் அறிவு, ஆராய்ச்சியின் பயனாய் ஏற்பட்ட அபிப் பிராயம் என்று சொல்லுகின்றவர்களாய் இருக்கின்றார்கள். ஆதலால் அவர்கள் சுயமரியாதைக்காரர்கள் ஆகின்றார்கள்.

உதாரணமாக புத்த மதஸ்தன் என்று சொல்லிக்கொள்ளுகின்ற ஒருவன் தனக்குக் கடவுள் இல்லை என்றும், ஆத்மா இல்லை என்றும், வாயால் சொல்லிக்கொண்டு காரணா காரியங்களுக்கு ஆதாரம் என்ன என்பதை அறியாமல் சந்தேகப்பட்டுக்கொண்டு இருப்பானானால் அவன் தன்னை புத்தமதஸ்தன் என்று சொல்லிக் கொள்ளமுடியவே முடியாது. அதுபோலவே ஒரு இந்துவோ, இஸ்லாமானவரோ, கிறிஸ்தவரோ கடவுள் உண்டு என்கின்ற மதக்காரராக இருந்து கொண்டு நடப்பில் தங்கள் காரியங் களுக்கும், அதன் பயனுக்கும் தங்களைப் பொருப்பாக்கிக்கொண்டு தங்கள் காரியங்களுக்குப் பின்னால் பயன் உண்டு என்கின்ற கொள்கையையும் நம்பிக்கொண்டு அதற்குச் சிறிதும் கட்டுப்படாமல் நடந்து கொண்டும் இருக்கின்ற ஒருவன் தன்னை கடவுள் நம்பிக்கைக்காரன் என்றும் தனது ஆத்மா தண்டனை யையும் சன்மானத்தையும் அடையக்கூடியது என்றும் நம்பிக்கொண்டிருக் கின்றவர்களாக மாட்டார்கள். ஆதலால் இந்த இரண்டு கூட்டத்தார்களும் சுயமரியாதைக்காரர்கள் அல்ல என்றும்தான் சொல்லு வேன்.

ஏனெனில் அவர்களுடைய அறிவுக்கும், அனுபவத்திற்கும் விரோத மான நம்பிக்கையை உடையவர்களாக இருக்கின்றார்கள். ஆதலால், இவ் விரு கூட்டத்தாரிலும் சுயமரியாதைக்காரர்கள் என்பவர்கள் தங்களுக்குத் தோன்றியவைகளும், தாங்கள் கண்ட உண்மைகளும் முன்னோர் கூற்றுக்கு ஒத்திருந்தால் மாத்திரம் முன்னோர் கூற்றம் ஆதரவாக எடுத்துக் கொள்ள பாத்தியமுடையவர்களாவார்கள். அப்படிக்கில்லாமல் முன்னோர் கூற்றுக் குத் தான்கூட உண்மையை பொருத்துகின்றவர்களும் அல்லது அதற்கு ஆதர வாகத் தங்களது உண்மை இருக்கின்றது என்று கருதுகின்றவர்களும் சுயமரியாதைக்காரராகமாட்டார்கள்.

ஆகையால் நீங்கள் எப்படிப்பட்ட கொள்கையை உடையவர்களாக இருந்தாலும் அதில் எவ்வளவு உண்மை இருப்பதாகயிருந்தாலும் அதை நீங்கள் பிரத்தியக்ஷத்தில் தெளிவுபடுத்திக்கொண்டீர்களா? அனுபவத்தில் சரிப்பட்டு வருகின்றதா? என்பதைப் பூரணமாய் அறிந்துகொண்டவர்கள் என்பதைப் பொருத்தும், அவை உங்களுடைய சொந்த அபிப்பிராயத்தின் மீது நம்புகின்றீர்களா? அல்லது அந்தந்த கொள்கையையுடைய மதத் தலைவர்கள் சொன்னதற்காக நம்பிக்கொண்டிருக்கிறீர்களா? என்பதைப் பொருத்துமேதான் உங்கள் மதத்திற்கோ, கொள்கைக்கோ மதிப்பு கிடைக்கும் அப்படியில்லாமல் ஒருவன் தன்னை இந்து என்றோ, கிறிஸ்துவர் என்றோ, மகமதியர் என்றோ, பௌத்தர் என்றோ சொல்லிக்கொள்ளுகின்றவர் ஒரு நாளும் சுயமரியாதைக்காரராகமாட்டார்.



RangaRakes tamilnavarasam.com

ஏனெனில் ஒரு குறிப்பிட்ட மதத்துக்காக ஒரு கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதோடு அது தன்னுடைய நடைமுறைக்கு பிரத்தியக்ஷ அனுபவத்திற்கு ஒத்துவராதிருந்தும் அக்கொள்கைக்காரன் காரணாகாரியங்கள் அறியமுடியாமல் இருந்தும் அவற்றையுடைய ஒரு மதத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டிருப்பது என்பது சிறிதும் ஒப்புக் கொள்ள முடியாததாகும்.

*குறிப்பு : சென்னை மவுண்ட்ரோட்டிலுள்ள தென்னிந்திய புத்தமத சங்கத்தில் 22.03.1931 அன்று ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 29.03.1931**



# பகத்சிங்

திரு. பகத்சிங் தூக்கிலிடப்பட்டதைப்பற்றி அனுதாபங்காட்டாதார்கள் யாருமே இல்லை. அவரை தூக்கிலிட்ட காரியத்திற்காக சர்க்காரைக் கண்டிக்காதவர்களும் யாரும் இல்லை. அதோடு மாத்திரமல்லாமல் இந்தக் காரியம் நடந்து விட்டதற்காக திரு. காந்தியவர்களையும் அநேக தேச பக்தர்கள் என்பவர்களும், தேசீய வீரர்கள் என்பவர்களும் இப்போது வைகின்றதையும் பார்க்கின்றோம்.

இவை ஒருபுறம் நடக்க இதே கூட்டத்தாரால் மற்றொரு புறத்தில் என்ன நடக்கின்றது என்று பார்ப்போமானால் சர்க்கார் தலைவரான ராஜப்பிரதிநிதி திரு. இர்வின் பிரபுவைப் பாராட்டுவதும், அவரிடம் ராஜி பேசி முடிவு செய்து கொண்ட திரு. காந்தி அவர்களைப் புகழ்வதும், பகத்சிங்கைத் தூக்கிலிடக் கூடாது என்கின்ற நிபந்தனை இல்லாத ராஜி ஒப்பந்தத்தைப் பற்றி மிக்க திருப்தியடைந்திருப்பதோடல்லாமல் அதை ஒரு பெரிய வெற்றியாய்க் கருதி வெற்றிக் கொண்டாட்டங்கள் கொண்டாடுவதுமான காரியங்கள் நடைபெறுகின்றன. இவ்வளவோடு மாத்திரம் அல்லாமல் திரு. காந்தியவர்கள் திரு. இர்வின் பிரபுவை மகாத்மா என்று கூறி அந்தப்படியே அழைக்கும்படியாக தேச மகாஜனங்களுக்கும் கட்டளையிடுவதும், திரு. இர்வின் பிரபு அவர்கள் திரு. காந்தியவர்களை ஒரு பெரிய மகான் என்றும், தெய்வத்தன்மை பொருந்தியவர் என்றும், வெள்ளைக்காரர்கள் அறிய விளம்பரம் செய்வதுமான காரியங்களும் நடைபெற்றன.

ஆனால் இப்போது வெகு சீக்கிரத்தில் அதே மக்களால் "காந்தீயம் வீழ்க" "காங்கிரஸ் அழிக" "காந்தி ஒழிக" என்கின்ற கூச்சல்களும், திரு. காந்தி அவர்கள் செல்லுகின்ற பக்கம் கருப்புக் கொடிகளும், அவர் பேசும் கூட்டங்களில் குழப்பங்களும் ஏற்படுவதும் சகஜமாகி விட்டன.

இவைகளை யெல்லாம் பார்க்கும் போது அரசியல் விஷயமாய் பொது ஜனங்களுடைய அபிப்பிராயம் என்ன? கொள்கை என்ன? என்பதைக் கண்டு பிடிக்கவே முடியாமல் இருப்பதோடு அப்படி ஏதாவது ஒரு கொள்கை யாருக்காவது உண்டா என்று சந்தேகிக்க வேண்டியதாகவு மிருக்கிறது. எது எப்படி இருந்த போதிலும் திரு. காந்தியவர்களின் உப்பு சத்தியாக்கிரகக் கிளர்ச்சி ஆரம்பித்த காலத்திலேயே இக்கிளர்ச்சி மக்களுக்கோ. தேசத்திற்கோ



RangaRakes tamilnavarasam.com

சிறிதும் பயன்படாது என்றும், பயன்படாமல் போவதோடல்லாமல் தேசத்தின் முற்போக்குக்கும், கஷ்டப்படும் மக்களின் விடுதலைக்கும் விரோதமானது என்றும் எவ்வளவோ தூரம் எடுத்துச்சொன்னோம். நாம் மாத்திரமல்லாமல் திரு. காந்தி யவர்களே இக்கிளர்ச்சி ஆரம்பிப்பதற்கு காரணமே பதக்சிங் போன்றவர்கள் செய்யுங்காரியங்களை கெடுப்பதற்கும், ஒழிப்பதற்குமே என்று கருத்துப்பட நன்றாய் வெளிப்படையாகவே எடுத்துச்சொல்லியு மிருக்கின்றார். போராக்குறைக்கு அக்கம் பக்கத்து தேசத்தவர்களில் உண்மை யான சமதர்மக்கொள்கையுடைய தேசத்தார்களும் திரு. "காந்தியவர்கள் ஏழைகளை வஞ்சித்துவிட்டார், சமதர்மக் கொள்கைகளை ஒழிக்கவே இக் காரியங்கள் செய்கின்றார். திரு. காந்தி ஒழிய வேண்டும், காங்கிரஸ் அழிய வேண்டும்" என்று ஆகாயம் முட்டக் கூப்பாடு போட்டுக் கொண்டே இருந்தார்கள். ஆனால் நமது தேசீயவீரர்கள் தேச பக்தர்கள் என்பவர்கள் ஒன்றையும் கவனியாமல் பலாபலனையும் உணராமல் விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழுவது போலவும், பந்தயங் கூறிக்கொண்டு பாறையில் முட்டிக் கொள்வது போலவும் தலை கிறுகிறுத்து கண் தெரியாமல் கூத்தாடி னார்கள். அதன் பயனாய் சிறை சென்று வீரர்களாய் "வாகைமாலை சூடி" திரும்பி வந்தார்கள். அதன் பெருமைகளையும் அடைந்துகொண்டார்கள். பிறகு இப்போது பகத்சிங் தூக்கிலிடப் பட்டதை பார்த்து விட்டு "காந்தீயம் வீழ்க" "காங்கிரஸ் அழிக" "காந்தி ஒழிக" என்று கூப்பாடும் போடுகின்றார் கள். இதனால்என்ன பயன் ஏற்பட்டு விடும் என்பது நமக்கு விளங்கவில்லை.

நிற்க, நம்மைப்பொருத்தவரை நாம் உண்மையைச் சொல்லவேண்டு மானால் பகத்சிங் அவர்கள் இந்த மாதிரி பொருப்பும், கவலையும் அற்ற மூடமக்களும், மட மக்களும் பலாபலனை எதிர்பாராமல் எப்படியாவது தங்களுக்கு கௌரவம் கிடைத்தால் போது மென்கின்ற சுயநல மக்களும் உள்ள நாட்டில் உயிருடன் வெகுகாலம் இருந்து கொண்டு இவர்களது நடவடிக்கைகளை பார்த்துக்கொண்டு விநாடி தோறும் வேதனைப்பட்டு இவர்களது முட்டுக்கட்டைகளை அனுபவித்துக்கொண்டிருப்பதைப் பார்க் கிலும் அவர் தன் உயிரை விட்டுமறைய நேர்ந்தது. பகத்சிங்கிற்கு மெத்த "சாந்தி" என்றும், நன்மை என்றுமே கருதுகின்றோம். அந்தப் பேற்றை நாம் அடையமுடியவில்லையே என்றுதான் கவலைப்படு கின்றோம்.

ஏனெனில் ஒரு மனிதன் தன் கடமையைச் செய்தானா? இல்லையா? என்பது தான் கேள்வியே தவிர, பலன் என்ன ஆச்சுது என்பது இங்கு நமது கேள்வி அல்ல. ஆனாலும் காலமறிந்து, இடமறிந்து கடமையைச் செலுத்த வேண்டும் என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகின்றோமாயினும் பகத்சிங் கொள்கைக்கு காலமும், இடமும், நடப்பும் விரோதமாயில்லை என்றே சொல்லுவோம். ஆனால் அவர் தனது கொள்கையை நிறைவேற்றக் கைக் கொண்ட முறைகளில் சிறிது தவறு நேர்ந்து விட்டது என்பதாக நம் புத்திக்கு தோன்றிய போதிலும் அவரது கொள்கை குற்றமுடையது என்று சொல்ல நாம்



ஒருக்காலும் துணியவே மாட்டோம். அதுவேதான் உலகத்தின் சாந்த நிலைக் கொள்கையாகும்.

நிற்க, உண்மையிலேயே பகத்சிங் அவர்கள் தனது கொள்கைகள் முழுவதையும் சரி என்று மனப்பூர்த்தியாய் நிச்சயித்துக் கொண்டு அதை நிறைவேற்ற அவர் நடந்து கொண்ட மாதிரிகள் தான் சரியான மார்க்கம் என்று அவர் முடிவும் செய்துகொண்டு இருப்பாரேயானால் கண்டிப்பாக அவர் நடந்து கொண்டபடியேதான் நடந்து இருக்க வேண்டியதென்று நாம் சொல்லுவதோடு அந்தப்படி அவர் நடக்காமல் இருந்திருந்தால் அவர் யோக்கியமான மனிதரென்று சொல்லமுடியாது என்றும் சொல்லுவோம். ஆதலால் இப்போது நாம் அவரை ஒரு உண்மையான மனிதர் என்று சொல்லு வோம். இந்தியாவுக்கு பகத்சிங் கொள்கைதான் உண்மையாக வேண்டியது என்பது நமது பலமான அபிப்பிரயமாகும். ஏனெனில் நாமறிந்தவரை திரு. பகத்சிங்கிற்கு சமதர்மமும், பொது உடமையும்தான் அவரது கொள்கை யென்று கருதி இருக்கின்றோம். இதற்கு உதாரணம் என்னவென்றால் திரு. பகத்சிங் பஞ்சாப் கவர்னருக்கு எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்ட வாக்கியம் காணப்படுகிறது. அதாவது :-

**"பொதுஉடைமைக்கக்ஷி அதிகாரம் பெற்று ஜனங்களுக்குள் வித்தியாசமான அந்தஸ்துகள் இல்லாமல் இருக்கும்வரை எங்கள் யுத்தம் நடந்து கொண்டுதானிருக்கும். எங்களைக் கொல்வதோடு இந்த யுத்தம் முடிந்து விடாது. அது பகிரங்கமாகவும் ரகசியமாகவும் நடந்துதான் தீரும்"** என்று குறிப்பிட்டிருக்கிறார். அன்றியும் அவர் கடவுள் விஷயத் திலோ எல்லாம் கடவுள் செயல் என்பதிலோ நம்பிக்கை இல்லாத தன்னம் பிக்கையுடைவர் என்றும் கருதிக் கொண்டிருக்கின்றோம். ஆகவே இந்தக் கொள்கையானது எந்தச் சட்டத்தின் படியும் குற்றமாக்கக்கூடியது அல்ல வென்றும் ஆவதாயிருந்தாலும் கூட யாரும் பயப்பட வேண்டிய தில்லை யென்றும் சொல்லுவோம். ஏனென்றால் அதனால் பொது மக்களுக்கு எவ்வித நஷ்டமோ, கஷ்டமோ ஏற்பட்டு விடாது என்று உறுதி கொண்டிருக்கின்றோம். அந்தப்படி ஒரு சமயம் ஏதாவது ஏற்படுவதா யிருந்தாலும் நாம் நம் மனப் பூர்வமாய் யாதொரு தனிமனிதனிடமாவது தனிவகுப்பினிடமாவது தனி தேசத்தானிடமாவது துவேஷம் இல்லாமலும் எந்த தனிமனிதனுடைய திரேகத்திற்கும் துன்பமுண்டுபண்ணாமலும் நம்மை எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் கஷ்டப்படுத்திக்கொள்ளவும் சம்மதிக்கின்றதான தியாகத் தன்மையுடன் இருந்துகொண்டு அக்கொள்கையை நிறைவேற்ற முயற்சிக் கின்றோம். ஆதலால் நாம் எதற்கும் கவலைப்படவோ, பயப்படவோ வேண்டியதில்லை என்று சொல்லுகிறோம். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் சாதாரணமாக நாம் தீண்டாமை ஒழியவேண்டும் என்று சொல்லுவதில் என்ன தத்துவம் அடங்கி இருக்கின்றதோ அதுதான் மக்களின் ஏழ்மைத்தன்மையை ஒழிய வேண்டும் என்பதிலும் அடங்கி இருகின்றது.



RangaRakes tamilnavarasam.com

தீண்டாமை ஒழிவதாய் இருந்தால் எப்படி மேல்ஜாதி கீழ்ஜாதி தத்துவம் அழிந்து தானாக வேண்டுமோ அது போலவேதான் ஏழ்மைத் தன்மை ஒழிவதாயிருந்தால் முதலாளித்தன்மை கூலிக்காரத்தன்மை ஒழிந்து தானாக வேண்டும். ஆகவே இந்தத் தன்மைகள் மறைபடுவது தான் சமதர்மத்தன்மை பொது உடமைத்தன்மை என்பவைகளே ஒழிய வேறில்லை. இந்தக் கொள்கைகள் தான் திரு. பகத்சிங் போன்றவர்களின் கொள்கைகள் ஆதலால் இக் கொள்கைகளை நியாயமானவையென்றும் அவசியமானவை என்றும் கருதுகின்ற ஒருவன் காங்கிரஸ் ஒழிக! காந்தீயம் அழிக!! என்று சொல்லுவதில் நமக்கு ஆச்சரியமோ, குற்றமோ ஒன்றுமே இல்லை. ஆனால் இந்தக் கொள்கைக்காரர்கள் காங்கிரசுக்கு ஜே, காந்திக்கு ஜே என்று சொல்லுவதுதான் நமக்கு மிக ஆச்சரியமாயிருக்கின்றது. திரு. காந்தியவர்கள் என்றையத்தினம் கடவுள் தான் தன்னை நடத்துகின்றார் என்றும் வருணாச்சிரமந்தான் உலக நடப்புக்கு மேலான தென்றும் எல்லாம் கடவுள்செயல் என்றும் சொன்னாரோ அன்றே பார்ப்பனீயத்திற்கும், காந்தீயத்திற்கும் வித்தியாசமில்லை என்று கருதியதுடன் அத்தத்துவம் கொண்ட காங்கிரசு ஒழிந்தாலொழிய நாட்டுக்கு நன்மை இல்லையென்றும் கருதிவிட்டோம். ஆனால் அந்த உண்மை இன்றுதான் மக்களில் சிலராவது கண்டுபிடித்து காந்தீயம் அழிக என்று சொல்லத்தக்க அறிவையும் துணிவையும் அடைந்திருக்கின்றார்கள். இது நமது கொள்கைகளுக்கு ஒரு பெரிய வெற்றியேயாகும். திரு. பகத்சிங் தூக்கிலிடப்பட்டு உயிர்துறந்திருக்காவிட்டால் இந்த வெற்றி இவ்வளவு பிரபலத்தில் ஏற்படுத்துவதற்கு ஆதாரமே இருந்திருக்காது. அன்றியும் பகத்சிங்கை தூக்காமல் இருந்திருந்தால் காந்தீயத்திற்கும் இன்னமும் ஆக்கம் ஏற்பட்டு இருக்கும் என்று கூடச் சொல்லுவோம். சும்மா தானாகவே நோய்கொண்டு அவஸ்தைப்பட்டு செத்துச் சாம்பலாகி இருக்கவேண்டிய பகத்சிங்குக்கு இந்தியமக்களுக்கு, ஏன் உலகமக்களுக்கே உண்மையான சமத்துவமும், சாந்தியும் அளிக்கத்தக்க பாதையைக் காட்டுவதற்கு பயன்படத்தக்கதாய் தனது உயிரைவிட நேர்ந்தது சாதாரணத்தில் வேறுயாரும் அடைய முடியாத பெரும்பேறு என்றே சொல்லி பகத்சிங்கை மனமார, வாயார, கையார பாராட்டுகின்றோம்! பாராட்டுகின்றோம்!! பாராட்டுகின்றோம்!!! இதே சமயத்தில் நமது அரசாங்கத்தாரையும் இனியும் இப்படிப்பட்ட உண்மையான எண்ணமுடையவர்களாகப் பார்த்து மாகாணத்திற்கு 4பேர் வீதமாவது தூக்கிலிட வேண்டுமென்றும் மனமார வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 29.03.1931**



# ஆதிதிராவிடர்கள் என்பவர் யார்?

## இந்திய அரசியலில் தொழிலாளிகளுக்குப் பிரதிநிதித்துவம் எங்கே?

தேர்தல் சம்மந்தப்பட்ட காரியங்களில் ஆதிதிராவிடர்கள் என்பவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருப்பதில் ஆதிதிராவிடர்கள் என்பதாக எந்தெந்த வகுப்பார்களை ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றது என்பது இப்போது பொது ஜனங்களுக்குள் ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. லோக்கல் போர்ட் சட்டப்படியும், முனிசிபல் சட்டப்படியும் ஆதிதிராவிடர்கள் என்பதற்கு வியாக்கியானம் சொல்லி இருப்பதில் "இந்து மதத்தைத்தழுவிக்கொண்டிருக்கும் பறையர், பள்ளர், வள்ளுவர், சக்கிலியர், தோட்டிகள், மாலா (தெலுங்கு பாஷையில் பறையர்) மாதிகர் (தெலுங்கு, கன்னட பாஷையில் சக்கிலி) ஹொலையர் (கன்னட பாஷையில் பறையர்) செருமர்கள் (மலையாள பாஷையில் பறையர்) ஆகிய இந்த வகுப்பார்கள் மாத்திரமே ஆதிதிராவிடர்கள் என்கின்ற வகுப்பில் அடங்கி இருக்கின்றார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்திய அரசியல் பிரதிநிதித்துவத்திலோ, அல்லது ஸ்தல ஸ்தாபன பிரதிநிதித்துவத்திலோ மேற்கண்ட வகுப்பார்களாகிய பள்ளர், பறையர், சக்கிலியர் ஆகிய மூன்று வகுப்பாருக்கு மாத்திரமே பிரதிநிதித்துவத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே இதனால் இந்தியாவில் தீண்டாதார் என்கின்ற வகுப்பில் நடைமுறையில் சேர்க்கப்பட்டிருக்கின்ற வகுப்பார்களில் அரைவாசிப் பேர்களுக்குக்கூட பிரதிநிதித்துவம் கிடைத்திருப்பதாய் நினைப்பதற்கில்லை. ஏனெனில், மேற்கண்ட வகுப்பார்களைத் தவிர இன்னமும் எத்தனையோ வகுப்பார்களைப் பொதுவாகத் தீண்டாதார்களாகவே கருதி வருவது யாவரும் அறிந்ததாகும்.

உதாரணமாக மலையாளத்தில் தீயர்கள், ஈழவர்கள் முதலிய பல வகுப்பார்களையும் தீண்டாதவர்களாகவும், நெருங்காதவர்களாகவும், தெருவில் நடக்காதவர்களாகவும் கருதப்பட்டு வருகின்றது.

தமிழ் நாட்டிலும் குறவர், நாவிதர், வண்ணார், செம்படவர் என்பன போன்ற பல வகுப்பார்கள் சில இடங்களில் தீண்டாதவர்களாகவே கருதப்படு



RangaRakes tamilnavarasam.com

கின்றார்கள். மற்றும் சில இடங்களில் நாடார் முதலிய சில சமூகங்களையும் பொதுக் கோவில், குளம், சத்திரம், சாவடி, தெரு முதலியவைகளில் பிரவே சிக்க உரிமை மறுக்கப்பட்டிருப்பதும், யாவரும் அறிந்ததேயாகும்.

இந்தப்படியாக அனேக சமூகங்கள் பொது மனித உரிமை வழங்கப் படாமல் இருக்கின்றபோது, சட்டத்தின் மூலமாக இந்தச் சமூகங்களுக்கு சமஉரிமையை வழங்காமலும், பிரதிநிதி ஸ்தாபனங்களில் ஸ்தானம் ஒதுக்கா மலும், இருந்தால் எப்படி இவர்களுக்கு நியாயம் வழங்கப்பட்டதாக சொல்லக் கூடும்? எங்கோ சிற்சில இடங்களில் வேண்டுமானால் இக் கூட்டத்தார்களில் யாரோ இரண்டொருவர் தங்கள் சொந்த செல்வ நிலை யினாலும், வேறு வியா பாரம் முதலிய துறைகளில் உள்ள செல்வாக்கினாலும், சற்று பொதுவாழ்வில் விளம்பரப்பட்டிருக்கின்றார்கள் என்பதும், பிரதிநிதித்துவம் பெற்றிருக் கின்றார்கள் என்பதும் அல்லாமல் மற்றபடி வேறுவகையில் அச்சமூகங்கள் எந்த வழியிலும் பிரதிநிதித்துவம் அடைவதற்கு மார்க்க மில்லாமலேயே இருக்கின்றன.

இவை ஒரு புறமிருக்க பொதுவாக இப்போது அளிக்கப்பட்டி ருக்கும் இந்தவிதமான பிரதிநிதித்துவமானது தாழ்த்தப்பட்ட வகுப்பு, ஒடுக்கப்பட்ட வகுப்பு கொடுமை செய்யப்பட்ட வகுப்பு ஆகியவற்றிற்கு பிரதிநிதித்துவம் இல்லை என்பதோடு மாத்திரம் அல்லாமல் ஏழைகளாகவும், தொழிலாளிக ளாகவும் இருப்பவர்களும் சமய சமூக சமுதாயக் கொடுமைகளால் முற்போக் கடையவே முடியாத படி தடுத்து வைக்கப்பட்டு இருக்கின்ற பல வகுப்பாருக் கும் பிரதிநிதித்துவம் இருக்க வழியில்லாமலேயே இப்போதைய பிரதிநிதித் துவ முறை இருந்து வருகின்றது. செல்வவான்களைப் பொருத்தவரை தாராள மாக தனிப் பிரதிநிதித்துவங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக கொஞ்சம் பூமி உள்ள குடியானவனுக்கு என்று ஒரு தொகுதியும், அதிக பூமி உள்ள நிலச்சுவான்தாருக்கு என்று ஒரு தொகுதியும், தோட்டகாரனுக்கு என்று ஒரு தொகுதியும், வியாபாரிக்கு என்று ஒரு தொகுதியும், லேவாதேவி காரனுக்கு என்று ஒரு தொகுதியும், மற்றும் ஆங்கிலம் படித்தவனுக்கு என்று ஒரு தொகுதியும் ஆக இந்தபடி செல்வவான்களுக்கும், ஜமீன்தாரர்களுக்கும் முதலாளிகளுக்கும், தனித்தனி பிரதிநிதித்துவம் கிடைக்கும்படியாகச் செய்துவிட்டு எந்த வகையிலும் ஏழைகளும், தாழ்த்தப்பட்டவர்களும். ஒதுக் கப்பட்டவர்களும் வருவதற்கு மார்க்கம் இல்லாமல் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆகவே இந்த தத்துவங்களைப் பார்க்கின்ற போது இந்த அரசியல் அமைப்பும், ஆக்ஷி அமைப்பும் செல்வவான்களுக்கே சொந்தமாக்கி அவர் களது நன்மைக்கே அனுகூலமானதாக அமைக்கப்பட்டிருக்கின்றதே யொழிய பொதுஜன நன்மைக்கு ஏற்றதான பொதுஜன பிரதிநிதித்துவத்திற்கு லாயக்காக அமைக்கப்படவில்லை என்பது நன்றாய் விளங்கும். குறிப்பாக தொழிலாளிகள் விஷயம் சிறிது கூட கவனிக்கப்பட வில்லை என்பதும்



அவர்களது நன்மைகளையும், முன்னேற்றங்களையும் வேண்டுமென்றே வெகு ஜாக்கிரதையுடன் புறக்கணிக்கப்பட்டு அழுத்தி வைக்கப்பட்டிருக் கின்றது என்பதும் நாம் சொல்லாமலே விளங்கும். நிற்க,

இப்போது அரசாங்க தத்துவப்படி ஆதிதிராவிடர் என்கின்ற தலைப் பில் சேர்க்கப்பட்டுள்ள தீண்டாத வகுப்பார்கள் என்பவர்களுக்கும் கூட சரியானபடி பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டதாகவும் சொல்வதிற் கில்லை. எப்படியெனில் ஆதிதிராவிட வகுப்பு என்று சொல்லப்பட்ட மேல் கண்ட மூன்று வகுப்பார்களிலும் இன்றைய தினம் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு சுமாருள்ள மக்கள் கிறிஸ்துவ மதத்தை தழுவி இருக்கின்றார்கள். அந்தப்படி அவர்கள் கிருஸ்துவ மதத்தைத் தழுவி இருந்தபோதிலும் தீண்டாமையானது கிருஸ்துவமதத்திலும் இருந்து கொண்டு அங்கு வருகின்றவர்களையும் விலக்கி வைத்து இருக்கின்றது. உதாரணமாக "கிறிஸ்துவப் பறையர்கள்" என்றும் "கிறிஸ்துவச் சக்கிலிகள்" என்றும் மற்றும் இம்மாதிரியாகவே சொல்லப்படுவதுடன் அவர்கள் ஊரைவிட்டும் மற்றும் பல பொது உரிமை களை விட்டும் விலக்கியே வைக்கப்பட்டிருக் கின்றார்கள். கிறிஸ்துவர்கள் கோவிலிலுங்கூட மேல்கண்ட ஆதிதிராவிடக் கிறிஸ்துவர்கள் அனுமதிக்கப் படாமல் இருக்கின்றார்கள். ஆகவே இதிலிருந்து தாழ்த்தப்பட்டவர்களுக் கும், ஏழைகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மற்றும் தொழில் காரணமாக தாழ்த்தப் பட்டவர்களுக்கும் அரசியலிலும், ஆக்ஷியிலும் பிரதிநிதித்துவம் இல்லை என்பது உறுதியாகின்றது. எனவே இந்த நிலையில் அவர்கள் வைக்கப் பட்டிருக்கும்போது இந்த நாட்டின் சுதந்திரம் என்கின்ற பெயரை சொல்லிக்கொண்டும், இந்திய மக்களின் சமத்துவம் என்கின்ற பெயரைச் சொல்லிக்கொண்டும் நடத்தப்படுகின்ற இயக்கங்களிலும், கிளர்ச்சிகளிலும் இந்தச் சமூகத்தார் கலந்து கொள்ளவில்லையென்ற பழியை எப்படி அவர்கள் மீது சுமத்தமுடியும் என்பது நமக்கு விளங்கவில்லை. அன்றியும் நம் போன்ற வர்கள் அக் கூட்டத்தார்களை மேற்படி இயக்கங்களில் எப்படி கலந்து கொள்ளச் சொல்ல முடியும் என்பதும் நமக்கு விளங்கவில்லை,

மற்றும், உண்மையையும், நாணயப் பொறுப்பையும் ஒட்டிப் பேசுவ தானால் நம் போன்றவர்கள் அவர்களைக் கண்டிப்பாய் இவ்வித இயக்கங் களில் ஈடுபட வேண்டாமென்றுதான் சொல்லவேண்டியிருக்கும் என்றே சொல்லுவோம். நிற்க,

இந்தப்படி வற்புருத்திச் சொல்லவேண்டிய அவசியம் என்னவென்று யாராவது கேட்பார்களே ஆனால் அவர்களுக்கு மற்றொரு ஆதாரத்தையும் உதாரணமாக எடுத்துக்காட்டக்கூடும். அது என்னவெனில் சமீபத்தில் உயர்திரு. காந்தி அவர்கள் இதுவரை அடிக்காத ஒரு பெரிய குட்டிக் கரணம் அடித்திருக்கின்றார் என்பதேயாகும். அதாவது பம்பாயில் திரு. காந்தி யவர்களை உயர்திரு.டாக்டர் அம்பேட்கார் அவர்கள் தனது வகுப்பார்களின்



RangaRakes tamilnavarasam.com

நிலைமையைப்பற்றி ஒன்றும் செய்யவில்லையே என்றும், இந்த சமயத்தி லாவது தங்களுக்கு ஏதாவது செய்யக்கூடாதா யென்றும் கேட்டுக் கொண்ட போது திரு.காந்தியவர்கள் "சுயராஜ்யம் கிடைக்கும் வரை ஒன்றும் செய்ய முடியாது. சத்தியாக்கிரகம் முதலியவைகளும் செய்யக்கூடாது" என்றும் "சுயராஜ்யம் கிடைத்த பிறகு தீண்டாமை ஒழிந்துவிடும்" என்றும் சொல்லி இருக்கிறார். (19-ந் தேதி சு.மி.) இதைப் பார்க்கும்போது மயிலாப்பூர் "தேச பக்தர்களும் வர்ணாச்சிரம் சுயராஜ்ய வீரர்களும்" இதுவரை தீண்டாமை விலக்கைப் பற்றி என்ன என்ன விதமாய் சாக்குச் சொல்லி வந்தார்களோ அதையெல்லாம் திரு. காந்தியவர்களும் சொல்லுவதற்குத் தகுந்த தகுதி யையும், தைரியத்தையும் பெற்றுவிட்டார் என்பது நன்றாய் விளங்கும்.

ஆனால் ஒத்துழையாமை காலத்தில் இதே உயர்திரு காந்தியவர்கள் ஒத்துழையாதாரிடம் பேசும்போது "தீண்டாமை அடியோடு நீக்கப்பட்டா லொழிய சுயராஜ்யம் வராது" என்றும், "வந்தாலும் அது பயன்படாது" என்றும் சொன்னது இதற்குள் யாரும் மறந்து இருக்க மாட்டார்கள். ஆனால் அதற்கும் சிறிது காலத்திற்கு முந்தி பிராட்வே 8 நெம்பர் கட்டடத்தில் இதே திரு.காந்தியவர்கள் மிதவாதிகளிடத்தில் பேசும் போது "நான் சுயமரியா தைக்காக போராடப் போகின்றேனே தவிர சுயராஜ்யத்திற்காக அல்ல" என்றும், "சுயமரியாதை இல்லாத எந்த அரசியல் சுதந்திரத்தையும் நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்" என்றும் சொன்னார். ஆனால் அவையெல்லாம் இப்போது தலைகீழாகப் போய் கொண்டிருப்பதில் ஆச்சரியமொன்று மில்லையானாலும் தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டிய விஷயத்தில் போட்ட குட்டிக்கரணமானது தீண்டப்படாதார் என்பவர்களுக்குள் இருந்த கொஞ்ச நம்பிக்கையும் ஒழிந்திருக்கும். ஆகவே இந்த நிலையில் தீண்டாதார் விடுதலை எங்கே? தொழிலாளிகளுக்கு பிரதிநிதித்துவம் எங்கே?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 29.03.1931**



# நாடார்கள் துன்புறுத்தப்படுகின்றார்கள்

## அருப்புக்கோட்டை போலீஸ் மாற்றப்படுமா?

இராமநாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டையில் நாடார்கள் தெரு வில் நடக்காமல் தடைப்படுத்தப் பட்டதும் அதனால் ஒரு நாடார் இளைஞர் கொலை செய்யப்பட்டதும் யாவரும் அறிந்த விஷயமாகும். மற்றும் அவர் கள் சில தெருக்களில் உரிமை கொண்டாட முடியாமல் சர்க்கார் 144 போட்டுத் தடுத்து உபத்திரவப்படுத்தினதும் யாவரும் அறிந்ததாகும். இதற்கு எவ்வித கேள்வியில்லாமல் போகும்படி பார்ப்பனப் போலீஸ் அதிகாரிகள் செய்து வரும் நடவடிக்கைகளும் சர்க்கார் வரை தெரியப்படுத்தியும் கவனிக்கப் படாமல் இருந்து வருகின்றது. போதாக்குறைக்கு திருநெல்வேலி ஜில்லா சிந்தாமணி யென்னும் கிராமத்தில் நாடார்கள் தங்கள் சுவாமியை ஊர்வல மாய் எடுத்துச் செல்லவொட்டாமல் கலகம் செய்து பெரிய அடிதடி கலகங் கள் நடந்து அதன் பயனாய் சர்க்கார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண் டியதாகிப் பலர் கொல்லப்பட்டும், பலர் காயப்பட்டும் இருக்கின்றார்கள்.

சர்க்காரார் இவ்விஷயத்தில் காட்டி வரும் கவனம் மிகவும் கவலை யற்றதாகவும் மக்களுக்குள் இப்படி ஒருவித கலவரம் இருக்க வேண்டியது அவசியம் என்று கருதுவதாகவும் இருப்பதாகவே கருதவேண்டியிருக் கின்றது. பார்ப்பனீயப் போலீசும் இந்த நிலைமைக்கு மெத்த உதவி செய்வ தாகவே செய்திகள் கிடைத்து வருகின்றது. போலீஸ் இலாக்காவும், சட்ட இலாக்காவும் 30 நாள் கணக்கெண்ணுவதும் அது முடிந்ததும் 5333-5-4 கணக்கு எண்ணுவதுமான வேலையிலேயே கவனம் செலுத்துவதா யிருக் கின்றதே யொழிய மக்கள் இப்படி உதை போட்டுக்கொண்டு கொல்லப் படுவதற்கு ஒரு பரிகாரமும் செய்வதற்குக் கவலை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை யென்று வருத்தத்துடன் எழுதுகின்றோம். இந்தச் சமயத்தில் இன்னும் ஒரு விஷயத்தைப் பற்றியும் எழுதாமலிருக்க மனமில்லை. அதா வது இந்த மாதிரியான கலகங்கள் பெரிதும் சுவாமியைத் தூக்கிக் கொண்டு செல்லுவதிலும் பஜனை பாடிக்கொண்டு செல்லுவதிலுமே ஏற்படு வதாய் இருப்பதால் இந்தப் பாழும் சாமி சங்கதியை விட்டுத் துலைக்கக் கூடாதா? என்று நாடார் சமூகத்தையும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 29.03.1931**



RangaRakes tamilnavarasam.com

# ஸ்தல ஸ்தாபன அரசாங்கம் கவனிக்குமா?

ஸ்தல ஸ்தாபன புதிய சட்டப்படிக்கு தீண்டாதார், பெண்கள், சிறு வகுப்பார் முதலியவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருந்தும் அநேக ஸ்தலஸ்தாபனத் தலைவர்கள் அச்சட்டத்திற்கு சரியானபடி மரியாதை கொடுக்காமல் தாங்கள் ஏகபோக ஆதிக்கத்தின் மனப்பான்மையையே காட்டி இருக்கின்றார்கள் என்பதாக தெரியவருகின்றது. ஆகையால் அரசாங்கத்தார் இதுவிஷயத்தில் சற்று கவலை எடுத்து ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபனங்களிலும் சரியானபடி பெண்களுக்கும், தீண்டப்படாதார் என்பவர்களுக்கும் சரியான படி ஸ்தானங்கள் ஒதுக்கியிருக்கின்றதா என்று பார்த்தே முடிவு செய்ய வேண்டுமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## மற்றொரு விஷயம்

லோக்கல் போர்டுகளில், தாலூக்கா போர்டுகள் பிரிக்கப்படுவதிலும் ஒவ்வொரு தாலூக்காவுக்கு ஒவ்வொரு போர்டு இருக்க வேண்டுமென்று சட்டத்தில் தெளிவாய் இருந்தும் சில இடங்களில் 2, 3 தாலூக்காக்கள் ஒரே போர்டாக இருந்து வருகின்றதாகத் தெரியவருகின்றது. ஆதலால் ஆங்காங் குள்ள பொதுஜனங்கள் இதைக் கவனித்துத் திருத்துப்பாடு செய்யாத வரை யில், கவர்ன்மெண்டாராவது கண்டிப்பாய் கவனித்து ஒவ்வொரு தாலூக்கா வுக்கு ஒவ்வொரு போர்டாக ஏற்படுத்துவதில் சற்று கண்டிப்பாய் இருக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 29.03.1931**



# கராச்சி

கராச்சி நகரில் இவ்வாரம் நடந்த நடவடிக்கைகள் இந்திய மக்களை திடுக்கிடச் செய்திருக்கும் என்று சொல்லுவது மிகையாகாது. அன்றியும், சாதாரணமாகவே இந்த நான்கு, ஐந்து வருஷங்களாக குடி அரசுப் பத்திரி கையைத் தொடர்ந்து வாசித்து வந்த வாசகர்களுக்கும், சுயமரியாதை இயக்க பிரசாரங்களையும் அம்மகாநாட்டு தீர்மானங்களையும் தொடர்ந்து கேட்டு வந்த பொது ஜனங்களுக்கும், ஒரு பெரிய ஆச்சர்யத்தையும், மகிழ்ச்சி யையும் உண்டாக்கி இருக்குமென்பதில் சிறிது சந்தேகமில்லை.

ஏனெனில், 'குடி அரசு'ப் பத்திரிகை சென்ற நான்கு, ஐந்து வருஷங் களாய் எந்தெந்தக் கொள்கைகளை சுமந்து தமிழ்நாடெங்கும் முழக்கி வந்ததோ அந்தக் கொள்கைகளேதான் பெரிதும் இவ்வாரம் முழுவதும் கராச்சியில் உண்மை உணர்ச்சியுள்ள பதினாயிரக்கணக்கான- வாலிபர் களா லும், பெரியவர்களாலும் முழங்கச் செய்யப்பட்டதோடு பெரும் பெரும் தலை வர்கள் என்பவர்களையும் அம்முழக்கங்களுக்குப் பின்னால் இருந்து கொண்டு பின்பாட்டு பாடும் படியாக செய்துவிட்டது. அதுமாத்திரம் அல்லா மல் நாம் எந்த எந்தக் கொள்கைகளையும், ஸ்தாபனங்களையும், அதன் தலை வர்களையும் குறிப்பிட்டு அவை நாட்டின் உண்மையான சுதந்திரத்திற்கும், முன்னேற்றத்திற்கும் தடையானதென்று முடிவு கட்டி, அவைகள் எல்லாம் ஒழிய வேண்டுமென்று ஆசைப்பட்டுப் பலமாகத் தாக்ஷண்யம் இல்லாமல் பிரசாரம் செய்து கண்டித்து வந்தோமோ அக்கொள்கைகளும், ஸ்தாபனங் களும், அதன் தலைவர்களும் இப்போது கராச்சியில் வெளிப்படையாய் வெறுக்கப்பட்டதோடு அவை அழிய வேண்டும் என்றும், தலைவர்கள் விலகிக் கொள்ள வேண்டுமென்றும் சொல்லப்படும் கூப்பாடுகள் ஆகாய மளாவ முழங்கிக்கொண்டே இருந்தது மற்றும் இது மாத்திரம் அல்லாமல் அவ்வார்த்தைகளைப் பந்தல்களில் எழுதிக்கட்டித் தொங்கவிடப்பட்டும் இருந்ததுடன் அத்தலைவர்களின் நேரில் தெரிவிக்கப்பட்டுமாய் விட்டது. எந்த எந்தத் தலைவர்களைப் பெரிய பெரிய மகாத்மா வென்றும், பழுத்த தேசாபிமானிகள் என்றும் கூறி, அவர்களது கட்டளைக்கும், அபிப்பிராயங் களுக்கும் மாறாக பேசுவதோ, நினைப்பதோ "பாவம்" என்றும், தேசத் துரோகம் என்றும் அநேக மக்களால் கருதப்பட்டு வந்ததோ, அந்தந்தத் தலைவர்களையே "எங்களுக்கு நீங்கள் வேண்டாம்", "திரும்பிப் போங்கள்",



RangaRakes tamilnavarasam.com

“உங்களது கொள்கை ஒழிக”, “உங்களது ஸ்தாபனங்கள் அழிக”, “உட்கார்ந்து விடுங்கள்” என்ற கூப்பாடுகள் முழங்கியதோடு அவைகளை அத்தலைவர்களே நேரில் பார்க்கவும், காதில் கேட்கவும் நேரும்படியான சம்பவங்கள் தாராளமாய் நடைபெற்றும் விட்டன.

இவை மாத்திரமல்லாமல் எந்த ஒரு “ராஜி”யானது உலகமே போற்றப் படுவதாக மக்கள் எல்லாரும், நினைக்கவேண்டும் என்று பெரிய பெரிய ஏற்பாடுகள் ஜால வித்தைகள் போல் செய்து காட்டப்பட்டதோ, அந்த ராஜியானது கராச்சி தெருக்களில் சிரிப்பாய் சிரிக்கப்பட்டுவிட்டது. இன்னும் விளக்கமாய் சொல்லவேண்டுமானால் கராச்சியில் கூடியுள்ள ஆயிரக் கனக்கான வாலிபர்கள் வாயினால் “காங்கிரஸ் ஒழிக”, “காந்தியம் ஒழிக”, “ராஜி அழிக” என்ற சப்தம் மொகுடு முட்ட முழங்கிவிட்டன என்பதே யாகும்.

அன்றியும் மேற்கண்ட இந்த தத்துவம் கொண்ட விஷயங்களையே 4 வருஷத்திற்கு முன்பிருந்தே நாம் சொல்லிவந்தபோதும், எழுதி வந்த போதும், ஆங்காங்கு எழுதித்தொங்க விட்டபோதும் இந்த நாட்டில் எந்த ஒரு கூட்டத்தார் நம்மைத் தேசத்துரோகி என்றும், விடுதலைக்கு விரோதி என்றும் கூப்பாடு போட்டார்களோ அந்தக் கூட்டத்தார்களே இன்று கராச்சித் தெருக்களில் தேசத்துரோகிகள் என்பதாகக் கூப்பிடப்பட்டதை சமாளிக்க முடியாமல் அவர்களிலும் பலர் இக்கூட்டத்தில் அதாவது மேற்கண்ட சபதங்கள் முழங்கிய கூட்டத்தில் சேர்ந்து கூடவே கோவிந்தா போட வேண்டியவர்களாகி விட்டார்கள். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், நமது குடி அரசின் கொள்கைகளே - சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளே பெரிதும் கராச்சி நகரில் இவ்வருஷம் தாண்டவமாடின என்று சொல்லுவது எவ்விதத்திலும் மிகையாகாது.

அது மாத்திரமல்லாமல், காங்கிரசும், காங்கிரஸ் தலைவர்களும் கூட இந்தக் கொள்கைப்போர்வையையே போர்த்திக்கொள்ள வேண்டியதாகி விட்ட தையும், பார்த்த யோக்கியமான எவரும் இனி குடி அரசு கொள்கைகளைக் குற்றம் சொல்லமாட்டார்கள் என்றே சொல்லுவோம்.

நிற்க, திரு. காந்தியவர்கள் விஷயமாய்ப் பலர் நடந்து கொண்டதைப் பற்றி திரு. காந்தியவர்களே மனம் நொந்து பேசியதைப் பார்த்தாலே உண்மையான விடுதலையும், சுதந்திரத்தையும் கோரும் மக்களுக்கு காந்தியத்தில் எவ்வளவு அதிருப்தியும் ஆத்திரமும் இருக்கின்றது என்பது தானாகவே விளங்கும்.

அன்றியும் தேசீய மகாசபை என்றுகூறி இந்திய பாமர மக்களை சுமார் அரை நூற்றாண்டாக ஏமாற்றி வந்த காங்கிரசைப் பற்றியும், அதன் தலைவர்களைப்பற்றியும், அவர்கள் நடத்தைகளையும், உள் எண்ணங்களையும் பற்றியும் பாரத நவவீரர்சபை மகாநாடு என்னும் தியாகத்திற்குத் துணிந்த



வாலிப மக்கள் மகாநாட்டின் வரவேற்புத் தலைவரும், மகாநாட்டுத் தலைவரும் கூறியிருப்பவைகளைப் பார்த்தால் காங்கிரசு முதலியவைகளைப் பற்றி நாம் இதுவரை சொல்லி வந்ததற்கும் இவர்கள் சொல்லுவதற்கும் ஏதாவது சிறிதளவு வித்தியாசமாவது இருக்கின்றதா என்பதும் விளங்கிவிடும். மேல்கண்ட இவ்விரு கனவான்களும் காங்கிரசு நடவடிக்கைகளுக்கும் பிரசாரத்திற்கும் பிடிக்கும் சில ஆள்கள் போன்று வாடகைக்கோ கூலிக்கோ பிடித்த ஆள்கள் அல்ல என்பதும், உண்மையாகவே மனம் கசிந்து பேசியவர்கள் என்பதும் யாவரும் அறிந்ததேயாகும். அதாவது அவர்களில் ஒருவர் சுவாமி கோவிந்தானந்தர், மற்றவர் சுபாஸ் சந்திரபோஸ் ஆவார். ஆகவே மேல்கண்ட கனவான்கள் கூறுவதாவது.

வரவேற்பு கமிட்டி தலைவர் சுவாமி கோவிந்தானந்தர் கூறியதின் சாரம்:-

**“பாமர மக்களுக்கு அனுகூலமான ஆக்ஷியை ஸ்தாபிக்க வேண்டு மென்பது எங்களது நோக்கம். ருஷியாவின் சமதர்மக் கொள்கையை இந்தியாவுக்கு ஏற்ற விதத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதே எனது அவா. சமதர்மத்தோடு கூடின பூரண சுயேட்சையே இந்தியாவின் முடிவான லக்ஷியம். இந்தியாவின் ஜீவநாடி காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை ஆதரிக்க வில்லை. பகவத்சிங்கும் மற்ற தேச பக்தர்களும் செய்த தியாகத்தை அனுகூலமாய்க் கொண்டு கையில் வலுத்தவர்களும், ராஜியவாதிகளும் இப்போது பயனடைந்து வருகிறார்கள்”** என்பதாகும்.

மகாநாட்டுத் தலைவர் சுபாஸ் போஸ் பேசியதின் சாரமாவது,

**“காங்கிரசின் கொள்கைகள் பயனற்றதாகவும் பலவீனமுள்ளதாகவும் இருக்கின்றது.**

**காங்கிரஸ் தலைவர்களோ, முன்னுக்குப்பின் முரணாய் பேசுகின்றவர் களாகவே இருக்கின்றார்கள்.**

**அவர்களது நடத்தைகளோ, வாயில் பேசுவதொன்றாகவும், காரியத்தில் செய்வது வேறொன்றாகவும் இருக்கின்றன.**

**அவர்களது வேலைத் திட்டங்ளோ, எவ்வித புதிய மாறுதல் கொள்கைகளும் அற்றவைகளாகும்.**

**அவர்கள் உள் எண்ணங்களோ எப்படியாவது மக்களிடத்தில் விஷயங்களை சரிக்கட்டிக் காட்டிக் கொண்டு போனால் போதுமென்பதேயாகும்.**

**அவர்களது லக்ஷியங்களோ, ஜமீன்தாரர்களுக்கும் குடியானவனுக்கும், பணக்காரனுக்கும், கூலிக்காரனுக்கும், மேல்ஜாதிகார**



RangaRakes tamilnavarasam.com

**ரென்போருக்கும், தீண்டப்படாதா ரென்போருக்கும், ஆண்களுக்கும், பெண்களுக்கும் எல்லோருக்குமே தாங்கள் நல்ல பிள்ளைகளாய் இருக்க வேண்டுமென்பதையே லக்ஷியமாய் கொண்டவர்கள்.**

**நமக்கு சுதந்திரத்தைச் சம்பாதித்துக் கொடுக்க காங்கிரஸ்காரர் களால் முடியும் என்கின்ற நம்பிக்கை எனக்கு சிறிதும் இல்லை. ஆதலால் இந்தியா சுதந்திரமடைய வேண்டுமானால் வேறு ஒரு புதிய ஸ்தா பனத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்"**

என்று பேசியிருக்கிறார்.

காங்கிரசின் யோக்கியதைக்கு இதைவிட நல்ல ஒரு நற்சாக்ஷிப்பத்திரம் வேறு யாராலும் கொடுக்கமுடியாது, இதுவரை கொடுக்கப்பட்டதுமில்லை. ஆகவே, காங்கிரசைப்பற்றியும், அதன் தலைவர்களைப் பற்றியும் அவர்களது எண்ணங்களைப் பற்றியும் இந்த 5,6 வருஷ– காலமாக நாம் பேசியும் எழுதியும் வந்தவைகளுக்கும் இதற்கும் ஏதாவது ஒரு கடுகளவு வித்தியா சமாவது இருக்கின்றதா என்பதை வாசகர்கள்தான் யோசித்துப்பார்த்து முடிவு கட்ட வேண்டும் என்பதாகக் கருதிவிட்டு விடுகின்றோம். நிற்க,

சுதந்திரத்திற்காக வகுக்கப்பட்ட கொள்கைகள் விஷயத்திலும் டி திரு. போஸ் அவர்கள் கூறுவதாவது:–

**"விவசாயிகள் தொழிலாளிகள் ஆகிய இவர்களுக்கு சமதர்மம் ஏற்படவேண்டும். ஜாதி வேற்றுமைகள் ஒழிக்கப்படவேண்டும், சமூகம் மதம் என்பதான மூடநம்பிக்கைகள் எல்லாம் அடியோடு அழிக்கப் படவேண்டும். பெண்களைப், புதிய தர்மங்களை ஏற்றுக் கொள்ளச் செய்யவேண்டும்"** என்பனவாகியவைகளாகும்.

ஆகவே, இந்தக் கொள்கைகள் கூட இதுவரை குடி அரசு பிரசாரம் செய்து வந்ததோடு இது சுயமரியாதை இயக்கத்தின் முக்கியமான கொள்கை களாகவும் இருப்பது யாவரும் அறிந்ததேயாகும்.

தவிர, சென்ற ஒருவருஷ காலமாய் இந்தியாவில் நடந்த சத்தியாக் கிரகப் போர் என்னும் விஷயத்திலும் நமது அபிப்பிராயமானது இந்திய மக்களால் எவ்வளவு பலமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டது என்பதற்கும் தெளிவான ஆதாரங்கள் வேண்டுமானால் ராஜியைப்பற்றிய பொதுமக்கள் அபிப்பிராயம் என்ன என்பதைக் கூர்ந்து பார்த்தாலே நன்றாய் விளங்கும். அதைவிட நன்றாய் விளங்கவேண்டுமானால் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஒவ் வொரு "தியாக" புருஷர்களும் தேசீய "வீரர்"களும் கிளர்ச்சிக்கு வெளிப் படையாகவோ, மறைமுகமாகவோ உதவி செய்து வந்த "தேசீய வாதி"களும் எப்படியாவது சீக்கிரத்தில் ராஜி ஏற்படாவிட்டால் தமது கதி மாத்திரமல்லாமல் கிளர்ச்சியின் கதி என்ன ஆவது என்று கவலைப்பட்டு ராஜிக்காக அலைந்த



தும், ராஜியாக வேண்டும் என்று பிரார்த்தனைகள் செய்ததும், ராஜி செய்து கொள்ளும்படி திரு.காந்திக்கு பலர் தந்திகொடுத்ததும், பத்திரிகைகள் எல்லாம் "காந்தி பெரிய மனது வைத்து விட்டுக்கொடுக்க வேண்டும்" என்று கோரிக் கொண்டதும், மற்றும் இந்நாட்டில் உள்ள சகல முதலாளிகளும், நிலச்சுவான் தார்களும், வியாபாரிகளும் பெரிதும் திரு. காந்தியையும், கிளர்ச்சியையும் சதா வைது கொண்டு இருந்ததுமான காரியங்களே போதிய ஆதாரங்களாய் இருந்து ருஜுவளிக்கும். இவ்வளவும் போராவிட்டால் கிளர்ச்சி துவக்கப் படும்போது திரு. காந்தியவர்களால் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளையும், இறுதிக் கடிதத்தில் கண்ட வாசகங்களையும், மறுபடியும் ராஜி பேசும்போது ஏற்படுத்தப்பட்ட சமாதானக் கொள்கைகளையும், பிறகு ராஜி ஒப்பந்தப் பத்திரத்தில் காணப்பட்ட நிபந்தனைகளையும் கவனித்துப் பார்த்தாலும் போதுமானதாயிருக்கும்.

தவிர, ராஜி ஏற்பட்டபிறகு எங்கு பார்த்தாலும் ராஜி ஒப்பந்தத்தைப் பற்றிய மக்கள் அபிப்பிராயத்தை மாற்ற ஆங்காங்கு பிரசாரம் செய்ய வேண்டி வந்ததும், பிறகு ஒப்பந்தம் என்ன கதியோ ஆகித்தொலையட்டும் என்கின்ற அலட்சியத்தின் மீது எப்படியாவது அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்கின்ற கவலையே பிரதானமாகி, வைசிராய் பிரபுவுக்குச் சதா தந்திகள் கொடுத்துக் கொண்டிருந்ததும் ஆகிய விஷயங் கள் கிளர்ச்சியின் வீரத்தையும், ராஜியின் கௌரவத்தையும் இன்னும் நன்றாய் விளக்கிவிடும்.

மேலும், ராஜி செய்து கொண்ட தலைவர்கள் தங்களுக்கு வெற்றிகர மான நிபந்தனை எது என்பதை விளக்குகையில் ஒரே ஒரு நிபந்தனையை மாத்திரம் எடுத்துச் சொல்லி வெற்றிகொண்டாடிவந்ததான அதாவது,

"தென்னாப்பிரிக்காவில் திரு. காந்திக்கும் திரு.ஸ்மட்சுக்கும் ஒரு ஒப்பந்தம் நடந்து இருவரும் ஒரு ஒப்பந்தக்கடிதத்தில் கையெழுத்துப் போடும்படியான ஒரு பெருமை கிடைத்ததுபோல் இந்தியாவிலும் திரு. காந்திக்கும் திரு. இர்வினுக்கும் ஒரு ஒப்பந்தம் நடந்து இருவரும் ஒரு ஒப்பந்தக் கடிதத்தில் கையெழுத்துப் போடும்படியான பாக்கியம் கிடைத் ததே அதுவே போராதா" என்பதும்,

"காங்கிரசு ஒரு ஜனப்பிரதிநிதி ஸ்தாபனம் என்பதை சர்க்கார் ஒப்புக் கொண்டார்களே அதுவே போராதா" என்பதுமான சமாதானங்களாலேயே திருப்தியடைய வேண்டுமென்று பெருமை பாராட்டி வந்திருப்பதும் போது மானதாகும்.

இவை ஒருபுறமிருக்க காங்கிரஸ் தலைவர்களுக்கும் திரு. காந்தி அவர்களுக்குமே தங்களுக்குள்ளாக கராச்சி காங்கிரசில் எங்கு தாங்கள் செய்து கொண்ட ராஜி ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்படாமல் கவிழ்த்து விடப்படுகின்றதோ என்று ஏற்பட்ட கவலையும், ராஜியை முதலில் வெற்றி



RangaRakes tamilnavarasam.com

என்று கூறினவர்கள் எல்லாம் "அது வெற்றியுமல்ல தோல்வியுமல்ல. அது யுத்த சமாதான உடன்படிக்கையாகும்" என்று சொன்னதும், திரு.காந்தியவர்கள் தன்னுடைய ராஜியை காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளாமல் தள்ளி விடுமானால் (அதாவது மக்கள் தன்னுடைய வார்த்தைகளை கேட்கா விட்டால் என்கின்ற தலைப்பில்) தான் பட்டினி கிடந்து சாகப்போவதாகவும் பயமுறுத்தியதும், மற்றும் அதை நிறைவேற்ற எவ்வளவோ பிரயாசைப் பட்டதும், வங்காளத்தில் திரு. சென்குப்தாவுக்கும், திரு. சுபாஸ் போசுக்கும் இருக்கும் தகராரை ஆஸ்பதமாக வைத்து, திரு. சுபாஸ் போசை சுவாதீனப்படுத்திக் கொண்டதின் மூலம் ராஜி தீர்மானத்திற்கு ஏற்பட்டிருந்த எதிர்ப்பை ஏமாற்றி நிறைவேற்றிக் கொள்ளச் செய்ததுமான காரியங்களும், ராஜி தீர்மானம் காங்கிரசில் வந்தபோது அதைப்பற்றி பேசியவர்களில் அதிகம் பேர், திரு. காந்தியவர்களின் பெருமைக்குப் பங்கம் வராமல் இருப்பதற்கே தாங்கள் ஆட்சேபிக்காமல் இருப்பதாக சொன்னவைகளும் கிளர்ச்சியின் பலனைத் தெரிவிக்கப் போதுமான ஆதாரங்களாகும்.

அன்றியும், இதுவரை கருப்புக்கொடி பிடிப்பதும், "திரும்பிப்போ" என்பதும், "நீங்கள் எங்களுக்கு வேண்டியதில்லை" என்பதும், மிக்க கேவலமாய் கருதப்பட்டு, அதைப்பெற நேர்ந்தவர்களையும் கேவலமாய்க் கருதுவதாக இருந்து வந்ததானது (இந்த ஆயுதமே இதுவரை காங்கிரஸ் "வீரர்"களுக்கு ஒரு பெரிய ஆயுதமாக இருந்தது) இப்போது அது காங்கிரஸ் தலைவரும் உலகப்பெரியாரும் மகாத்மாவுமானவர் என்று சொல்லப்பட்டவருக்கே ஏற்படுவதற்கு இந்த ராஜி நிபந்தனைகளே பெரிதும் காரணமாய் இருந்ததென்றால் இனி இதற்குமேல் கிளர்ச்சியின் பயனையும், ராஜியின் யோக்கியதையும் விளக்கவேண்டியதில்லை என்றே கருதி, நிறுத்திக் கொள்ளுகிறோம். நிற்க,

இனி குடி அரசு கொள்கைகளும் சுயமரியாதைக் கொள்கைகளும் எவ்வளவு தூரம் இந்நாட்டில் மதிக்கப்பட்டிருக்கின்றது என்று பார்ப்போமானால் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் தயாரிக்கப்பட்ட வருடாந்திர அறிக்கையினால் ஒருவாறு விளங்கும். அதாவது அவ்வறிக்கையில் "தென்னிந்தியா (அதாவது தமிழ்நாடு)வானது இந்தக் கிளர்ச்சிக்குத் தனது கிரமமான பங்கைச் செலுத்தவில்லை" என்பதாகக் குறிப்பிட்டிருந்ததும், "பத்திரிகைகள் யோக்கியமாக நடந்து கொள்ளவில்லை" என்று குறிப்பிட்டிருந்ததும், இதற்காக திரு. சத்தியமூர்த்திக் கூட்டத்தார் அழுது அதை மாற்ற வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டதும், அதற்காக அவர்கள் சொன்ன காரணங்களும் போதுமான ஆதாரங்களாகும். மற்றும், குடி அரசுவின் கொள்கைகள் காங்கிரஸ் தலைவர்களை எவ்வளவு தூரம் நடுங்கச் செய்துவிட்டது என்று தெரியவேண்டுமானால் காங்கிரஸ் வேலைத் திட்டம் தயாரித்து இருப்பதில் அவர்கள் காட்டியுள்ள தந்திரங்களும், அத் தீர்மானத்தை நிறைவேற்றுகையில் மகாசபையில் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்ட விபரங்களும்,



அதிலும் மிகுதியாக சென்னை மாகாணக் காங்கிரஸ் தலைவர்களே கலந்து இருந்ததும் கவனித்துப் பார்த்தால் நன்றாய் விளங்கும். மேல்கண்ட வேலைத் திட்டத் தீர்மானங்கள் நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டதா? தந்திரதிற்காக அதாவது பாமர மக்களை ஏமாற்ற செய்யப்பட்டதா என்கின்ற விஷயம் ஒருபுறம் இருந்தாலும், அத்திட்டங்கள் கொண்ட கொள்கைகளுக்கு நாட்டில் செல்வாக்கு இருப்பதை அத்தலைவர்கள் உணர்ந்து இருக்கின்றார்கள் என்பதை மாத்திரம் நன்றாய் வெளிப்படுத்தி இருக்கின்றது.

அதாவது, இனி அரசியல் சீர்திருத்த விதிகளை (கான்ஸ்டிடியூ ஷனை) மாத்திரம் சொல்லி பாமரமக்களை ஏமாற்ற முடியாது என்பதை உணர்ந்து விட்டார்கள். அன்றியும் "கள்ளை நிறுத்திவிடுவோம்" "வரியை குறைத்து விடுவோம்" என்பது போன்ற தூண்டிமுள்ளில் குத்தும் புழு போன்ற சில விஷயங்களால் மக்களை ஏமாற்ற முடியாது என்றும், இனியும் சற்று முற்போக்கான கொள்கைகளை வெளிப்படையாய் எடுத்துச்செல்ல வேண்டிய காலம் வந்து விட்டது என்பதையும் உணர்ந்து விட்டார்கள்.

ஆகவே, அதற்கு தகுந்தபடி தந்திரம் செய்து சில திட்டங்களை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். என்றாலும், அதை நன்றாய்க் கவனித்துப் பார்த்தால் அதில் ஒரு இடத்திலாவது சோம்பேரிகளுடைய ஆதிக்கத்தை அதாவது பார்ப்பனீய ஆதிக்கத்தை சிறிதும் விட்டுக்கொடுத்ததாக காணப்படவேயில்லை என்பதும் அது பாமரமக்களை ஏமாற்ற என்று வெகு தந்திரமாகவே தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்பதும் நன்றாய் விளங்கும்.

அதாவது, இனி வரப்போகும் சுயராஜ்யத்தில் பாமர மக்களுக்கு என்ன நன்மை இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டவேண்டிய காலம் வந்து விட்டதால், அதற்காக இத்திட்டம் போடப்பட்டதென்பதாக ஆரம்பத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இதன் தலைப்பின் கீழாகவே 20 திட்டங்கள் வகுக்கப்பட்டிருக் கின்றன.

அவற்றுள், முதல் பிரிவில் 3-வது உள் பிரிவு ஒவ்வொருவனுடைய மனசாக்ஷிக்கும் மதிப்பு கொடுக்க வேண்டியதாகவும், தங்கள் தங்கள் இஷ்டப்படி மதத்தைக் கொண்டாடலாம் என்றும் இருப்பதானது மிக்க தந்திரமும் மோசடியுமானதாகும். எப்படியெனில் இந்தத் தீர்மான வாசகத்தின் பலனாய் நாட்டின் எப்பேர்ப்பட்ட முற்போக்கையும் தடைப்படுத்தி விடமுடியும். பொது காரியங்கள் என்பதில் ஒவ்வொருவருடைய மனசாட்சியும் மதிக்கப்படுவது அபாயமான பலனையே கொடுக்கும். உதாரணமாக, சாரதா சட்டமும், மதச் செலவுகளும் கோவில் செலவுகளும் பகுத்தறிவுக்கு விரோதமானதென்றும், நாட்டுக்கும் மனித சமூக நன்மைக்கும் கெடுதியென்றும் தெரிந்தாலும், திரு. சத்தியமூர்த்தி திரு. எம். கே. ஆச்சாரி போன்றவர்கள் மனசாட்சியை மதிப்பதற்காக அவைகள் தடுக்கபடக் கூடாதென்றே ஏற்படுகின்றது. தவிர



RangaRakes tamilnavarasam.com

மேற்படி முதல் பிரிவிலேயே 4-வது உட்பிரிவானது கல்வியையும், அறிவையும் பாழாக்கப் போதுமானதாக இருக்கின்றது. அதாவது, வித்தை பாஷை, சிறுவகுப்பினர் எழுத்துக்கள் நூல்கள் ஆகியவைகளுக்குப் பாது காப்பு அளிப்பது என்பது. இதனால் புராணங்கள், சாஸ்த்திரங்கள், சமஸ் கிருதம் முதலிய பயனற்றவைகளும் பாஷைகளும் காப்பாற்றப்படவேண்டும் என்பதும், மூடநம்பிக்கையை மக்களிடம் இருந்து போக்காமல், காப்பாற்ற வேண்டும் என்பதுமாகும். இதுவே இந்தப் பிரிவின் உண்மையான உத்தேச உள் அர்த்தமாகவும் இருக்கின்றது.

தவிர 6-வது உள் பிரிவு வெளிக்கு நல்லதுபோல் காணப்பட்டாலும் சில வகுப்பாருக்குச் சம சந்தர்ப்பமும், சம உரிமையும் கிடைக்கச் செய்யா மல் தடுக்க உபயோகிக்கவும் உதவும்.

ஏழாவது உள் பிரிவானது கோவில்கள் என்பவற்றின் மூலமாக மக்களுக்குள் ஜாதிப்பிரிவினையும் உயர்வு தாழ்வு தத்துவமும் காப்பாற்றப் பட்டு வருவதை ஒழிக்க இடமில்லாமல் இருக்கும்படி செய்யப்பட்டி ருக்கின்றது. தீர்மானத்தில் உள்ளபடியான சட்டம் இப்போதும் இருந்துதான் வருகின்றது. ஆனால் உண்மையில் உள்ள வித்தியாசத்தையும், உயர்வு தாழ்வு தன்மையும் அழிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்கின்ற தத்துவம் இதில் அடங்கி இருக்கின்றது. இந்த உண்மையை திரு. சத்தியமூர்த்தி ஐயர் இத் தீர்மானம் வந்த போதே தனது பேச்சில் தன்னை அறியாமலே காட்டி யிருக்கிறார்.

2-வது பிரிவில் சர்க்கார் மதவிஷயத்தில் நடு நிலைமை வகிக்க வேண்டு மென்பது மிகவும் ஆபத்தான விஷயமாகும். இதனால் இன்று இந்த நாட்டிலுள்ள ஜாதி மத வித்தியாசங்கள் நிரந்தரமாய் இருந்து கொண்டு அதனால் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற தொல்லைகளும், மக்களின் கொடுமைகளும் நிலையாகவே இருக்கும்.

அன்றியும் இந்த நிலையானது மக்களின் முட்டாள்தனத்தைக் கொண்டு, ஆளைத்தூக்கி ஆள்மேலே போட்டு, சோம்பேரி வேட்டை ஆடு பவர்களுக்கு அனுகூலமாகவே இருந்துவரும்.

3 – வது தீர்மானம் தொழிலாளர்களைப் பற்றியது. அதாவது:-

"தொழிலாளர்களுடைய காலட்சேபத்திற்குக் கட்டக்கூடிய சம்பளம் ஒரு வரையறைக்கு உட்பட்ட வேலை காலம், சௌகரியமான வேலை நிலைமை, விருதாப்பியம், வியாதி காலம், வேலை இல்லாத காலம் ஆகிய வைகளுக்குப் பாதுகாப்பு" என்று இருக்கின்றது.



இதானது தொழிலாளி, முதலாளி என்பதாக இரண்டு ஜாதிகள் பிரிந்து தொழிலாளிகளை நிரந்திரமாய் அவர்களது ஆயுட்காலம் எல்லாமும் அவர் களது சந்ததிகள் காலமும் தொழிலாளர்களாகவே இருக்க செய்யப்பட்ட ஏற்பாடுகள் போலவே இருக்கின்றது. அதாவது தொழிலாளர்களுக்கு ஜீவனத் துக்குப் போதுமான கூலி இவ்வளவென்று திட்டம் செய்வதும், முதலாளிகள் கணக்கு வழக்கின்றி கொள்ளை அடித்துப் பொருள் சேர்க்க வழி செய்வதும் என்றால், இது மிகவும் மோசமான காரியமாகும். தொழிலாளிகளுக்கு அவர் களுக்கு வேண்டிய ஜீவனச் செலவு போக முதலாளிகளுடைய லாபத்திலும் ஒருபங்கு இருக்க வேண்டியது நியாயமாகும்.

ஏனெனில், தொழிலாளிகள் தங்களுடைய சம்பாதனையில் தங்கள் ஜீவனச் செலவு போக காலக் கிரமத்தில் பணம் மீத்து வைத்து அவர்களும் ஒரு காலத்தில் முதலாளிகளாகத் தாராளமாய் வழியை திறந்து விட்டு விட வேண்டும். அப்படிக் கில்லாமல் செய்திருப்பதானது இதுவும் ஒரு வித வருணாசிரமதர்மமேயாகும். அதாவது தொழிலாளி மகன் தொழிலாளி யாகவே இருக்கச் செய்வ தாகும். ஆதலால் இந்த பிரிவு தொழிலாளிகளை ஏமாற்றத்தான் உதவுமே தவிர அவர்களை முன்னுக்குக் கொண்டு வர முடியாது.

9-வது பிரிவில் பூமியில் இருந்து குறிப்பிட்ட ஒரு வருமானத்திற்கு மேல்பட்ட வரும்படி கிடைத்தால் "வருமான வரி விதித்தல்" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதுவும் ஏமாற்றுத் தீர்மானமேயாகும். இதனால் யாருக்கும் எவ்விதப் பயனும் ஏற்படாது.

பூமிக்குடையவர்களும், அதிக வெள்ளாமை செய்ய முயற்சிக்க மாட் டார்கள். ஒரு சமயம் தானாகவே தாராளமாய் விளைந்தாலும் வீண்செலவு கள் மூலம் விவசாயக்கணக்கு, வரவுச்செலவை சரி கட்டிக்காட்டி, ஆதாயம் காட்டாமல் செய்து விடுவார்கள். ஆகையால் நாம் முன் ஒரு சமயம் எழுதியபடி பூமி உடையவர்களுக்கு இத்தனை ஏக்கரா பூமி உடையவருக்கு ஏக்கரா ஒன்றுக்கு இன்ன விகிதம் தீர்வை என்று வரி விதித்தால் செலவுக்கு மேல்பட்டு மீதி கிடைக்கக்கூடியவனுக்கே அதிகவரி ஏற்படும். பூமிகளும் ஒரே கையில் போய் சேர்ந்து விடாமல் பலபேர்கள் அனுபவிக்கவும் அனு கூலமாய் இருக்கும். இதனால் ஏழைகளுக்கு எவ்வித தொந்தரவும் இருக்காது. ஆதலால் இந்த பிரிவு சிறிதும் பயனற்றதேயாகும்.

மற்றும் இந்தப்படியே அநேகமாய் ஒவ்வொரு பிரிவிலும் பயனற்ற தன்மைகள் அடங்கிக் கிடப்பதுடன், சமய சமூக சமுதாயத்துறைகளில் சிறிதும் கை வைக்காமல் ஜாக்கிரதையாய் ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. ஆகவே இத்திட்டங்கள் ஏமாற்றும் தன்மையுடன் பாமர மக்களைத் தங்கள் பக்கம் இழுக்கச் செய்த சூட்சித் தன்மையும் பொருந்தினவையாகு மென்றுதான் சொல்லுவோம். ஜாதிமத விஷயம், புராணவிஷயம், மத விஷயமான



RangaRakes tamilnavarasam.com

அவரவர்கள் மனசாக்ஷி விஷயம் அதாவது மூடநம்பிக்கைகள் விஷயம், தொழிலாளிகள் நிலைமை, பணக்காரர்கள் நிலைமை, முதலியவைகளில் இப்போது நம் நாட்டில் நடை முறையில் இருப்பதைவிட எவ்வித மாறுதலும் காங்கிரஸ்காரர்கள் சுயராஜ்யம் கிடைத்த பிறகு செய்யப் போவதாய்ச் சொல்லும் இந்த புதிய அரசியல் திட்டத்தால் ஏற்பட்டுவிடும் என்றோ, ஏற்படுத்த ஆசை கொண்டு இத்திட்டங்களை வகுத்தார்கள் என்றோ நம்மால் சொல்லமுடியவில்லை.

ஆகவே, சமதர்மத்திலும், பொதுவுடமைக் கொள்கையிலும் நம்பிக் கையும், ஆர்வமும் உள்ள வாலிபர்கள் இதைக்கண்டு ஏமாந்து விடாமல் திட்டமான கொள்கைகளை வெளிப்படையாக விளக்கி அவற்றை தயவு தாட்சண்யம் இல்லாமல் வலியுருத்தி, அமுலில் கொண்டுவர பாடுபட வேண்டியதே அவர்களது கடமையாகும்.

சாதாரணமாகவே இந்தியாவைப் போல, பல வழிகளிலும் முதலாளி களாலும் வைதீகர்களாலும் அடிமைப்பட்டுக் கிடந்த நாடுகள் எல்லாம் விடுதலைப் பெற்று முன்னுக்கு வந்த சரித்திரங்களைப் பார்த்தால் அவை எதுவும் இம்மாதிரி ஏமாற்றமான தீர்மானங்களால் விடுதலை அடைந்து விடவில்லை என்பதும், சமய சமூக சமுதாயக் கொள்கைகள் தலைகீழாக மாற்றப்பட்டதான புரட்சியாலேயே திடீரென மாறுதலையடைந்து, விடுதலை பெற்றன என்பதும் விளங்கும். ஆனால் இந்தியாவுக்கு வரப்போகின்ற சுயராஜியத்தில் வேறு வழிகளில் சிறிது முற்போக்கிற்கு இடமிருந்தாலும், இவ்விதக்காரியங்கள் வெகு ஜாக்கிரதையாகவே நழுவ விடப்பட்டிருக் கிறதுடன், இதை மக்கள் அறியாமல் இருக்கத் தந்திரங்களும் செய்யப் பட்டிருக்கின்றன. ஆகவே இந்த மாதிரியான சுயராஜியம் வருவதால் இந்தியாவின் பொதுமக்களாகிய 100க்கு 90 வீதமான மக்களுக்கு எந்த விதத்தில் மாறுதலோ, புதிய நன்மையோ இருக்கின்றது என்று கேட் கின்றோம்.

இன்றைய தினம் முதலாளி தன்மைக்கு மாத்திரம் உடையவர் களின் ஆதிக்கத்தில் இருக்கும் இந்தியாவானது, பூரண சுயேச்சைக் கிளர்ச்சியின் பயனாய் விடுபட்டு முதலாளித் தன்மையும் வருணாச்சிரம வைதீகத் தன்மை யும் உள்ள கூட்டத்தார் ஆதிக்கத்திற்கு உட்படுத்தப் படுவதாக இருக்கின்றதே தவிர வேறு எவ்வித நன்மையும் மாறுதலும் காணப்படுவதாய் இல்லை. முதலாளித் தன்மை அடியோடு அழிபட வேண்டும் என்பதில் நமக்கு ஒரு சிறிதும் ஆக்ஷேபனை கிடையாது. ஆனால் ஒன்றில் இருந்து விடுபட்டு, மறுபடியும் இரண்டிலும்போய் மாட்டிக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது முக்கியமான காரியமாகும். திரு. காந்தியவர்கள் தன்னை முதலாளி கூட்டத்தவர் அல்ல என்று சொல்லக்கூடுமானாலும் அவர் முதலாளி கூட்டத்தாருடைய தத்துப்புத்திரர் என்பதை ஒப்புக் கொண்டு தானாக வேண்டும். இரண்டாவதான வருணாச்சிரம வைதீக விஷயத்திலோ



திரு. காந்தி அவர்கள்தானே அவைகளில் ஒரு உருவாக இருக்கின்றவர். ஆகவே முதலாளிகளின் தத்துபுத்திரரும், வருணாச்சிரம தர்மியும் இராம இராஜியத்தை விரும்பும் புராண மரியாதைக்காரரும், ஒரு சரியான “ஹிந்து” வுமான திரு. காந்தி அவர்கள் பயணத்தில் இதற்குமேல் நாம் வேறு என்ன எதிர்பாக்க முடியும்?

**குடி அரசு – தலையங்கம் – 05.04.1931**



RangaRakes tamilnavarasam.com

# பாராட்டுதலும் வாழ்த்தும்

சென்ற வாரம் நாம் திருச்சி முனிசிபல் சபையார் மக்களுக்குப் புதிதாக சில லைசென்சு வரிகள் விதிக்கப்பட்டதில் பொது ஜனங்களுக்குள் இருந்த அதிருப்தியைக் குறிப்பிட்டு விட்டு, எதிரிகள் பரிகாசம் செய்வார்களே என்று சிறிதும் பயப்படாமல் முனிசிபல் சபையார் தைரியமாய் முன்வந்துப் புதிய வரிகளை குறைத்துவிடவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டோம்.

அதுபோலவே திருச்சி முனிசிபல் கவுன்சிலர் அவர்களும், சேர்மென் அவர்களும் தைரியமாய் முன்வந்து அதிகமாகப் போட்ட வரிகளைக் குறைத்து விட்டதாக சேதி எட்டி இருக்கின்றது. இது அவர்களுக்கு மிக்க பெருமையும் கௌரவமுமான காரியமாகும். இதற்காகத் திருச்சி பொது ஜனங் களைப் பாராட்டுவதுடன் கவுன்சிலர்களையும், சேர்மென் அவர்களை யும் நாம் மனமார வாழ்த்துகின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 05.04.1931**



# ஓர் சம்பாஷணை

## எதார்த்த வாதியும், கிறிஸ்துமத போதகரும் பேசியது

**எதார்த்தவாதி** : ஐயா! தங்கள் வேதம் என்று சொல்லப்படும் பைபிள் யாரால், எப்பொழுது எழுதப்பட்டது.

**போதகர்** : பழய காலத்திலே தேவ ஆவியால் ஏவப்பட்ட பல தீர்க்க தரிசிகளைக் கொண்டும் கிறிஸ்துவின் சீஷர்களைக் கொண்டும் பிந்திய அப்போஸ்தலரைக் கொண்டும் எழுதப்பட்டது.

**எதா** : சரி தீர்க்கதரிசிகள் என்பவர் சில விடங்களில் தெய்வத்துக்குப் பயப்படாதவர்கள் தானே?

**போதகர்** : இல்லை சார்; எப்பொழுதும் தெய்வத்துக்குப் பயப்படு கிறவர்கள்தான்.

**எதா** : நல்லது, அப்படியானால் ஆபிரகாம் ஒரு தீர்க்கதரிசிதானே ?

**போத** : ஆம், வாஸ்தவந்தான். ஆனால் அவனை (ரை) சில ஆராட் சியாளர் தன் தகப்பனின் மறுமனையாட்டியின் மகளைக் கல்யாணம் செய்த தாகக் குறை கூறுவார்கள்.

**எதா** : அதைப்பற்றி இப்பொழுது கவலை இல்லை. மானிடன் இயற்கையில் சகோதரியைக் கல்யாணம் செய்தேதான் உற்பத்தி ஆகியிருக் கலாம்.

**போத** : அப்படியானால் (ஆபிராம்) ஆப்பிரகாமைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டிய தென்ன?

**எதா** : உண்மையாக அவன் ஒரு தீர்க்கதரிசி தானே?

**போத** : ஆம் வாஸ்தவந்தான். ஆதியாகமம் 2-ம் அதிகாரம் 7ம் வசனத் தில் (கடவுளே) தேவனே... அவன் ஒரு தீர்க்கதரிசி... என்பதாய்ச் சொல்லி யிருக்கிறார்.



RangaRakes tamilnavarasam.com

**எதா** : அந்த ஆபிரகாமே தானே ஆதியாகமம் 21ம் அதிகாரம் 11ம் வசனத்தில் இவ்விடத்தில் தெய்வபயம் இல்லையென்றும்..... பொருள்படப் பேசியதைத் தாங்கள் வாசித்ததுண்டா?

**போத** : அ ஆ ஆம் வாசித்ததுண்டு. ஆனால், அவன் மனைவி ச.ஆ. சாராள் அழகுள்ளவள். அதற்காகப் பயந்து சொல்லியதுண்டு.

**எதா** : மனைவி அழகானால் மனிதர்கள் மனிதர்களுக்குப் பயந்து தெய்வத்திற்குப் பயப்பட வேண்டியதில்லையா?

**போத** : சார் அது பழைய ஏற்பாட்டில் உள்ளது. புதிய ஏற்பாட்டில் உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள்.

**எதா** : சரி ஐயா, நான் படிக்கிறேன். அப்படிப்பட்டவர்களாலேதானே உங்கள் பைபிள் எழுதப்பட்டது.

**போத**: தெய்வமில்லாத காலமிது என்பதாய் முனு முனுத்துக் கொண்டு நழுவி விடுகிறார் .

**எதா** : பைபிள் காலத்தில் தெய்வப்பயமில்லாத இடமிருந்தது. இப் பொழுது காலம் வந்துவிட்டது என்பது உங்கள் அநுபவம். ஆனால் எங்க ளுக்குத் தெய்வ கவலை யில்லாத (காரியமே) வாழ்க்கையே வேண்டும் என்பது எங்கள் துணிபு.

**குடி அரசு - உரையாடல் - 05.04.1931**



# இந்தியாவின் ஜனத்தொகை

இந்தியாவின் மொத்த ஜனத்தொகை 1931ம் வருஷத்திய கணக்குப்படி 351500000 முப்பத்தைந்து கோடியே பதினைந்து லக்ஷம் 1921ம் வருஷத்தில் 320900000 முப்பத்திரண்டு கோடியே ஒன்பது லக்ஷம். ஆகவே இந்த பத்து வருஷத்தில் 3கோடிக்குமேல்பட்ட ஜனங்கள் பெருகி இருக்கிறார்கள். சராசரி நூற்றுக்குப் பத்துப் பேர்களுக்கு மேலாகவே அதிகரித்திருக்கின் றார்கள்.

ஒரு தேசம் அதிலும் கைத்தொழில் வளப்பமில்லாத தேசமாகிய அதாவது கைராட்டினத்தைக்கொண்டு பிழைக்கவேண்டிய நமது இந்தியா வானது, தனது ஜனத்தொகையை இப்படி ஏற்றிக்கொண்டே போனால் பிறகு வேலையில்லாத் திண்டாட்டமும், பஞ்சமும், நோயும் ஏற்படாமல் வேறு என்ன செய்யமுடியும் என்பது நமக்கு விளங்கவில்லை. அன்னிய ஆட்சி யை நம் நாட்டைவிட்டுத் துரத்தி விட்டதினாலேயே ஜன விருத்தி குறைந்து விடும் என்று சொல்லமுடியாது. ஆகையால் பஞ்சத்தை ஒழிக்கவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும், அன்னியநாட்டுச் சாமான் களை பஹிஷ்கரிப்பது என்பதைவிட மக்கள் அதிகமான பிள்ளைகளைப் பெறாமல் தடுப்பதற்கு ஆதாரமான கர்ப்பத்தடை முறையை கையாள வேண்டியதே முக்கியமான வேலையாகும். ஆகையால் உண்மையான தேச பக்தர்களும், தேசியவாதிகளும், இந்தக் காரியத்தைப் பிரசாரம் செய்வதன் மூலம் இந்தியாவிற்கு விடுதலை தேடுவார்களாக.

**குடி அரசு - கட்டுரை - 05.04.1931**



RangaRakes tamilnavarasam.com

# தூத்துக்குடி மகாநாடு

சுயமரியாதை இயக்க சம்மந்தமான மகாநாடுகளும், பிரசாரக் கூட்டங்களும் தமிழ் நாட்டில் எவ்வளவு மும்மரமாக நடைபெற்று வருகின்றது என்பதோடு அதன் கொள்கைகள் நடைமுறையில் நடந்து எவ்வளவு பயன் அளித்து வருகின்றதென்பதைப்பற்றி நாம் யாருக்கும் எடுத்துக் காட்டவேண்டிய அவசியமில்லை என்றே கருதுகின்றோம்.

இவ்வியக்கப் பிரசாரத்தில் ஒரு பாகம் காங்கிரசையும், காந்தீயத்தையும், தாக்கியும், உப்புச் சத்தியாக்கிரகத்தை எதிர்த்தும் வந்ததாகும் என்பதை நாம் யாரும் எடுத்துக்காட்டவேண்டிய அவசியமில்லாமலே ஒப்புக் கொள்ளுகிறோம். அதோடு மாத்திரமல்லாமல் ( நாம் சென்ற வருஷ- ஆரம்பத்தில் தெரிவித்தது போலவே ) இதன் பயனாய் நம்மீது பலருக்கு அதிருப்தியும், துவேஷமும், கோபமும் ஏற்பட்டு நமக்கும், நமது பத்திரிகைக்கும் விரோதமாகப் பலவித எதிர்ப் பிரசாரங்கள் செய்ய நேர்ந்ததும், அதனால் பல சில்லரைச் சங்கடங்கள் விளைந்ததும் பலர் அறிந்ததேயாகும். எப்படியிருந்தபோதிலும் ஆரம்பத்தில் நாம் வெளிப்படுத்திய கொள்கைகளில் சிறிதும் விட்டுக் கொடுக்காமலும், அவை சம்மந்தமான நமது அபிப்பிராயத்தை நாம் ஒண்டியாய் இருந்தபோதிலும் சிறிதும் மறைக்காமலும் நமக்குச் சரி என்றுபட்டதை யெல்லாம், பல நண்பர்களும் நமது நன்மையில் பற்றுள்ளவர்களும் தடுத்தும் தாராளமாய் எழுதிக் கொண்டும், பிரசாரம் செய்து கொண்டுமே வந்தோம். அதன் பலன் என்ன ஆயிற்று என்பதைப் பற்றி அறிய விரும்புகின்றவர்கள் காங்கிரசின் நடவடிக்கைகளையும், காங்கிரசின் சென்ற வருஷ- நடவடிக்கையின் அறிக்கையையும் கவனித்துப் பார்த்தால் தாராளமாய் விளங்கிவிடும்.

சுமார் 4 வருஷங்களுக்குமுன்பாக திரு.காந்தியவர்கள் தமிழ் நாட்டில் கதர் பண்டுக்குப் பணம் வசூலிக்க வந்த சமயத்திலும் நாம் ஒருவரேதான் அதற்கு எதிராகப் பிரசாரம் செய்து பண வசூலைக் கண்டித்துவந்தோம். மற்ற பத்திரிகைகளும், தேசீயவாதிகளும், மற்றும் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் உள்பட அநேகர் அதை ஆதரித்ததுடன், பணமும் உதவி வந்ததோடு நம்மையும் கண்டித்து வந்தார்கள். அதனால் எவ்வித பலமான பயன் ஏற்படா விட்டாலும். ஒரு சிறு அளவுக்காவது அவரது வசூல் பாதிக்கப்பட்டது என்பதைப் பலரும் ஒப்புக்கொண்டார்கள் என்பது மாத்திரமல்லாமல் அது நடந்த கொஞ்ச நாளிலேயே அதற்குப் பணம் கொடுத்தவர்கள் உள்பட அநேகர் அக்காரியத்தில் தாங்கள் நடந்து கொண்டதற்கும், பணம் கொடுத்ததற்கும் வருந்தினார்கள் என்பதில் சந்தேகமில்லை. உதாரணம் வேண்டுமானால் அதே திரு.காந்தியவர்கள் இப்போது தமிழ் நாட்டில் பணவசூலுக்கு வந்தால் என்ன ஆகுமென்பதை நினைத் தால் விளங்கும்.



அதுபோலவே உப்புச் சத்தியாக்கிரத்தைப் பற்றியும் நாம் கண்டிக்கும்போது பலர் நம்மீது வருத்தப்பட்டிருந்தாலும் அதனால் ஏற்பட்ட பலன் என்ன என்பதையும் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஏற்பட்ட கஷ்டம், நஷ்டம் ஆகியவை எவ்வளவு என்பதைக் கவனித்தவர்களுக்கு ஒருவாறு விளங்கி இருக்கும்.

கோயில், குளம் உற்சவம் முதலியவைகள் எவ்வளவு அநாகரீகமானதும், ஒழுக்கக் குறைவானதும், அறிவற்றதும், நஷ்டமும் நாட்டுக்குக் கேடும் உள்ளதுமாயிருந்தாலும் பூசாரிகளும், புரோகிதர்களும், புராணக் காரரும், புலவர்களும், புஸ்தகக் கடைகாரர்களும் உள்ளவரை எப்படி அவை ஒழியாதோ, ஒழிப்பதும் மிக்கக்கஷ்டமோ அதுபோலவே காங்கிரசும் காந்தீயமும், கதரும், தேசீயம் சுயராஜியம் என்பவைகளும் எவ்வளவு பித்தலாட்டமானதானாலும், நாட்டு முற்போக்கிற்கு விரோதமானதானாலும், சுதந்திரத்திற்கும், சமதர்மத்திற்கும் முட்டுக்கட்டை போடுவதானாலும் பலரின் சுயநல வயிற்றுப் பிழைப்புக்கும், வாழ்விற்கும் மாத்திரம் பயன் படுவதானாலும், பார்ப்பனரும், படித்தவர்களும், வக்கீல்களும் பதவி, பட்டம் பெற ஆசைப் பட்டவர்களும், பத்திரிகை பிழைப்புக்காரர்களும், 'தேச பக்தர்களும்' 'தேசீய வீரர்களும்' கதர் வியாபாரிகளும், கதர் தொண்டர் களும் உள்ளவரை நிலைத்துத்தான் தீரும். அதை ஒழிப்பதும் சுலபமான காரியமல்ல. ஆகையால், எதிர் பிரசார அளவுக்கு உடனே பயன் எதிர் பார்க்க முடியாது என்பது மாத்திரமல்லாமல் அதனால் நமக்கு கஷ்டமும் உண்டாகலாம் என்பதும் நமது அபிப்பிராயமாகும்.

ஆன போதிலும் நம்மைப்பொருத்தவரை நாம் தைரியத்தை விட வில்லை, அபிப்பிராயங்களில் சந்தேகமில்லை. நம்பிக்கையில் குறைவேற் படவில்லை எதிற்கும் முயற்சியையும் ஊக்கத்தையும் சிறிதும் தளர்த்திக் கொள்ளவில்லை. ஒரு பத்து வருஷம் பொருத்தாவது நமதபிப்பிராயத்தைச் சரி யென்று மக்கள் ஒப்புக்கொள்ளுவார்கள் என்கின்ற தைரியத்துடனேயே நமது வேலையைச் செய்து வருகின்றோம்.

இன்றையதினம் கடவுள் அவதாரம், லோககுரு என்கின்ற சங்கராச் சாரியார்கள் படுகின்ற பாட்டுக்கும், பண்டார சன்னதிகள் மகாசன்னிதானங்கள் என்னும் மடாதிபதிகள் படுகின்றபாட்டையும் பார்த்தால் வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், கடவுள், கடவுள் அவதாரம், ஆழ்வார், நாயன்மார்கள் என்கின்றவைகள் படுகின்றபாட்டைப்பார்த்தால் அவை



RangaRakes tamilnavarasam.com

களைவிட எத்தனையோ பங்கு தாழ்ந்ததாய் மக்களால் மதிக்கப்படும் காங்கிரசும், காந்தீயமும், கதரும் ஒரு காலத்தில் சிரிப்பாய் சிறிக்கப்படும் என்பதில் யாருக்கும் ஆக்ஷேபணையோ பயமோ வேண்டியதில்லை என்று தைரியமாய்ச் சொல்லலாம் ஏனெனில் முன் சொல்லப்பட்ட காரியங்களில் நம்பிக்கையும், பக்தியும், பிழைப்புக்குமார்க்கமும் கொண்டவர்களாலேயே தான் பின் சொல்லப்பட்டவைகளிலும் நம்பிக்கையையும் பக்தியையும் பிழைப்புக்கு மார்க்கமும் கொள்ளப்பட்டனவாக இருக்கின்றன.

ஆகவே அவர்களது புத்தி இரண்டிலும் ஒன்று போலவே தான் சொல்ல முடியும் என்பது விஞ்ஞான தத்துவமான உண்மையாகும். ஆகையால் ஏதோ ஒரு வழியில் நாம் மக்களுக்கு பகுத்தறிவை உண்டாக்கி விட்டோமேயானால் பிறகு அவர்கள் எல்லாவற்றையும் ஒரே கண்ணாடி கொண்டு பார்த்து உண்மையை உணரக்கூடியவர்களாகி விடுவார்கள் என்பதோடு இந்த தொண்டைத்தான் சுயமரியாதை இயக்கம் செய்து வருகின்றது என்றும் சொல்லுகின்றோம். இதற்காகவே ஆங்காங்கு மகாநாடுகள் கூட்டி தீர்மானங்கள் செய்யப்பட்டும் வருகின்றன.

அப்படிச் செய்யப்படுபவைகளில், இதுவரை நடந்து வந்த மகாநாடுகளில் தூத்துக்குடியில் நடந்த திருநெல்வேலி ஜில்லா 4 வது சுயமரியாதை மகாநாட்டை ஒரு முக்கியமான மகாநாடு என்றே சொல்லலாம். எதனாலெனில் அது கூட்டப்பட்ட இடம், அதன் தலைவர் அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஆகியவைகளினாலேயாகும். திருநெல்வேலி ஜில்லாதான் முதல்முதல் சுயமரியாதை மகாநாட்டைக் கூட்டியது. அவற்றுள் தூத்துக்குடியானது மிகவும் உணர்ச்சியுள்ள ஊராகும். அதன் தலைவர் சுயமரியாதை இயக்கத்தின் உருவமாய் விளங்குபவர். தீர்மானங்களோ சுயமரியாதை இயக்கத்தின் மிகவும் உருதியும் தைரியமும் கொண்ட உண்மை தோற்றமாகும். மகாநாட்டுத் தலைவர் உபன்யாசமானது தைரியமாக உண்மைகளை வெளிப்படுத்திய ஒரு முக்கிய தஸ்தாவேஜு என்றே சொல்லலாம்.

அதாவது, தலைவர் தமது உபந்யாசத்தில் சொல்லி இருப்பதில் காணப்படுபவைகளாவது,

“இந்திய மக்களின் அடிமை நிலைக்கு அவர்களது குருட்டுப் பழக்க வழக்கங்களே காரணம். இந்து முஸ்லீம் சச்சரவுகளுக்கு நமது மகாத்மாதான் காரணம். ஏனெனில் மதப்பூசல்களை ஒழிப்பதற்கு ( இந்துக்களும், முஸ்லீம்களும் ) அவரவர்கள் மதக்கட்டளைப்படி நடந்து கொள்ளவேண்டும் என்றும் இந்து மதத்தையும் இஸ்லாம் மதத்தையும் மேலும் மேலும் விர்த்தி செய்து வளர்க்கவேண்டுமென்று மகாத்மா காந்தி சொல்லுகிறார்.

ஆனால் அவர் சொல்லுகின்றபடி இந்து மதமும் இஸ்லாம் மதமும் இனியும் மேலும் மேலும் வளர்க்கப்பட்டால் கான்பூரில் நடந்த கலகமே தூத்துக்குடியிலும் நடைபெறும் என்பதில் சந்தேகப்பட வேண்டியதில்லை.



பாம்பையும் மரத்தையும் வணங்கி பேயையும் பிசாசையும் கள்ளும் சாராயமும்வைத்து பூசித்து ஆண் பெண் குறிகளை சிலையாக பூசனை செய்து அடையாளமாக நெற்றியில் தரித்துக்கொள்வதாய் இருக்கின்ற மதம் எந்த மதம் என்று கேட்கின்றேன்.

இந்து மதத்தில் தேவ அசுரர் சண்டையும் கிறிஸ்தவர் நடத்திய குரூசேட் சண்டையும், இஸ்லாம் மதத்தினர் நடத்திய ஜிஹாத் சண்டையும் ( மனித சமூகத்தில்அன்பை விளைவித்தவைகள் ஆகுமா ) குரோதத்தையே விளைவித்தன.

கடவுள் என்பது ஒரு விளையாட்டு சாமான். சுவர்க்கம் மோட்சம் என்பவை தின்பண்டங்கள். நரகம் என்பது ஒரு பூச்சாண்டி. இம்மாதிரி கற்பனைகள் எல்லா மதத்தையுமே பற்றிக் கொண்டிருக்கின்றன.

சுயமரியாதை இயக்கம் எந்த மதத்தையும் தனிப்பட்டு தாக்கவில்லை. மதம் எல்லாம் ஒருங்கே அழிந்து போனால் மாத்திரம் மனித சமூகம் முன்னேரும் என்று சொல்லுகிறது. ஆனால் ஹிந்துமதம் மிகவும் மோசமானது. அது மனிதனை மிருகப்பிராயத்தில் வைத்திருக்கிறது.

திலகருக்கும் தாசருக்கும் இறுதிச்சடங்குகள் வெகு ஆர்பாட்டமாய் செய்யப்பட்டன. மோதிலால்நேரு அவர்கள் காயத்திரி மந்திரம் ராம பஜனை முதலியவை நடத்தி மோட்சத்திற்கு அனுப்பப்பட்டார். அவரது குமாரர் தகப்பனார் அஸ்தியை பிரயாகை ஆற்றில்விட்டார்.

இவைகள் நடத்தப்பட முடியாத கோடிக்கணக்கான மக்கள் நரகத்திற்கு போகின்றவர்களா என்று கேட்கின்றேன்.

மகாத்மாக்களும் தலைவர்களுமே இக்கதியானால் பாமர மக்கள் கதி என்ன?

கர்மாவை நம்பினவன் கடைத்தேரமாட்டான். விதியை நம்பினவன் மதியை இழப்பான்.

மூட எண்ணங்களையும், நம்பிக்கைகளையும் அகற்றவே சுயமரியாதை இயக்கம் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது.

தத்துவார்த்தம் ஓவியம் என்கின்ற சாக்கால் கோயில் கொடுமைகளும் புராண ஆபாசங்களும் நிலைத்திருக்கின்றன.

கொல்லாவிரதம் பூண்டவர் ( மகாத்மா ) கீதைக்கு தத்துவார்த்தம் சொல்லி புகழலாம். உயிர்கொலைசெய்த யாகத்தை மறியல் செய்த பெண்மணியை கொன்றவனும், பார்ப்பான் செய்யும் தபசை ஒரு “சூத்திரன்” செய்த தற்குமாக “சூத்திரனைக்”கொன்றவனும் ஆன ஒரு அரசனை இராமாயணம் புகழ்கின்றது.



RangaRakes tamilnavarasam.com

இத்தகைய நூல்களும் பாத்திரங்களும் காவியத்திற்கும் ஓவியத் திற்கும் ஆதாரமாய் இருந்தால் அத்தகைய காவியமும் ஓவியமும் அழிவதே மேல்.

அமெரிக்காவில் நீகிரோவர் துயரத்திற்கு எந்த நிற இருமாப்பு காரணமோ அதே நிற இருமாப்பு தான் நமது நாட்டுத் தீண்டாமைக்கு காரண மாயிருக்கிறது.

இது ஆரியர் ஆதிகாலத்தில் நமது நாட்டில் குடியேரியபோது பழங் குடி மக்களை அசுரர் ராக்ஷதர், மிலேச்சர், பஞ்சமர், சூத்திரர் என்று இழிவு படுத்தக் காரணமாய் இருந்தது.

தீண்டாமைஎன்பது ஏணிமரப்படி போல் இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் பீடித்திருக்கின்றது.

தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்று பேசும் இந்திய தலைவர்கள் வருணாச்சிரம தர்மத்தை ஒழிக்க ஒருப்படுவதில்லை.

தீண்டப்படாதாரை விட பெண்கள் கேவலமாய் நடத்தப்படுகின் றார்கள். அவர்களுக்கு சொத்துரிமை இல்லை. அவர்கள் மற்றவர்களின் சொத்தாயிருக்கின்றார்கள். ஆண்களின் உபயோகத்திற்கு உண்டாக்கப்பட்ட வர்கள் என்றுகருதப்படுகிறார்கள். பெண்களை அடிமைப்படுத்தி வைப்ப தற்கு ஏற்படுத்தப்பட்ட சாதனத்திற்கு மணம் என்று பெயர். பெண்களுக்கு விடுதலை வேண்டுமென்றால் இச்சடங்கு ஒழியவேண்டும். ஆணும் பெண்ணும் தங்கள் முழு சம்மதத்தினால் கூடி வாழவேண்டும், கூடியபிறகு இஷ்டமில்லாவிட்டால் பிரிந்துகொள்ள வசதி வேண்டும்.

மக்கள் தனித்தனியாய் வேலை செய்வது அற்றுப்போய் கும்பல் கும்பலாய்க் கூடி வேலைசெய்ய வேண்டியதாக ஏற்பட்டன. மனிதன் நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படி செய்த வேலைகள் மறைந்து இயந்திரங்களால் அதிக கஷ்டமில்லாமல் வேலை செய்யப்படும் சௌகரியங்கள் ஏற்பட்ட காலத்தில் இந்திய காங்கிரஸ் ஒவ்வொருவனும் தனக்குவேண்டிய துணியை யும், உப்பையும் தன்னையே செய்து கொள்ளும்படி சொல்லுவது தேச முன்னேற்றத்திற்கு ஒவ்வாத காரியமாகும்".

என்பதாகவும் மற்றும் பல விஷயங்களை பலதத்துவ ஆராய்ச்சியுடன் பேசியிருக்கின்றார். இப்படி பேசியிருக்கும்,

திரு. ராமநாதன் அவர்கள் வைதீக ஒத்துழையாதார் கோஷ்டியில் இருந்தவர் என்பதோடு திரு. காந்தி அவர்களின் நன்நம்பிக்கையைப் பெற்ற பிரதம சீடர்களின் ஒருவராய் இருந்தாரென்பதையும் வாசகர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அவரது உபன்யாசத்தைப் படித்துப் பார்க்க வேண்டுமாய் ஆசைப்படுகின்றோம்.



இவரது உபன்யாசம் முழுவதையும் கவனத்துடன் கூர்ந்து வாசித்தால் திரு. காந்தியவர்களின் ஒவ்வொரு திட்டமும் ஆட்சேபிக்கப் படுவதுடன் அதனால் மக்களுக்கு ஏற்படும் கெடுதியும் நன்றாய் விளங்கும். இதில் எந்த அபிப்பிராயமாவது சரியான முகாந்திரம் காண்பித்து எதிர்க்கவோ கண்டிக் கவோ கூடியதாய் இருக்கின்றதா என்பதை அறிஞர்கள் ஆலோசித்துப் பார்க்க விரும்புகிறோம். சுயமரியாதை இயக்கம் காந்தீயத்தையும் காங்கிரசை யும் கதரையும் ஆக்ஷேபிப்பதின் தத்துவமும் இதுவே யாகும்.

ஆதலால்தான் தூத்துக்குடி மகாநாட்டில் சில தீர்மானங்கள் செய்யப் படவேண்டியதாயிற்று. என்னவெனில் திரு. காந்தியவர்களிடம் ( அதாவது காந்தீயத்தில் ) நம்பிக்கை இல்லை என்பதாகவும், எதற்காக நம்பிக்கை இல்லை என்பதை விளக்கமாக அத்தீர்மானத்தில் விளக்கப்பட்டும் இருக்கின்றது. ஏனெனில் யாருக்காவது அத்தீர்மானத்திற்கு ஆக்ஷேபணை சொல்ல ஆசை இருந்தால் அவர்களுக்கு விபரம் தெரிய சௌகரியம் இருக்கவேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீதே காரணங்கள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. அதென்னவெனில்

1. "மதத்தின் பேரால் நடைபெறுகின்ற மூடநம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும் கையாளுவதாலும்,

2. தனது செய்கைகளுக்கும் பேச்சுகளுக்கும் கடவுளே காரணம் என்பதாக அடிக்கடி சொல்லி வருவதால் ஜனங்களின் பொருப்பும் தன் நம்பிக்கையும் தன் முயற்சியும் அற்றுப் போவதாலும்,

3. வருணாச்சிரமம் ராமராஜியம் மனுஸ்மிருதி முதலிய பழய கொடுங்கோன்மையான ஏற்பாடுகளை மறுபடியும் திரும்பிக் கொண்டு வர முயற்சிப்பதாலும்,

4. நமது நாட்டில் இயந்திர வளர்ச்சியைதடை செய்து வருவதாலும் சமதர்மக் கொள்கைக்கு விரோதியாய் இருப்பதாலும் திரு. காந்தியவர் களிடத்தில் நம்பிக்கை இல்லை"என்று தீர்மானித் திருக்கின்றது.

இந்தத் தீர்மானத்தை ஆக்ஷேபிக்கின்றவர்கள் பகுத்தறிவற்றவர் களுக்கும் சுய அறிவற்றவர்களுக்கும் சுயநலக்காரர்களுக்கும் பாமர மக்களுக்கும் நல்ல பிள்ளையாவதற்கு ஆசைப்பட்டு தந்திர புத்தியுடன் சூட்சி திறங்களுடன் இத்தீர்மானத்தைக் கண்டிக்கின்றோம் என்று சொன்னால் நாம் அதை சிறிதும் ஒப்புக்கொள்ளமாட்டோம். மேலும் அதை பயங்காளித் தனம் என்று தான் சொல்லுவோம். ஏனெனில் தீர்மானத்தில் குறிப்பிட்ட குணங்கள் திரு. காந்தியிடம் இருக்கின்றதா இல்லையா? என்றும் அக்குணங் கள் சுயமரியாதை இயக்கக் கொள்கைக்கு முரண்பட்டதா இல்லையா என்றும் சுயமரியாதைக்காரர்கள் இக்கொள்கையுடை யவர்களிடம் நம்பிக்கை வைக்க முடியுமா யென்றும் விபரமாக காரணங் காட்டி ஆட்சேபிக்கவேண்டியது



RangaRakes tamilnavarasam.com

சுய மரியாதையுடையவர்கள் கடமையாகும் என்று தெரிவித்துக் கொள்ளு கின்றோம்.

இம்மகா நாட்டில் இத்தீர்மானம் கொண்டு வந்தவர்களின் உத்தேசமும் காரணமும் என்னவென்றால் "கராச்சி காங்கிரஸ் கொள்கைகளில் மக்கள் ஜீவாதாரவுரிமைக் கொள்கைகள் என்பவையெல்லாம் சுயமரியாதைக் கொள்கைகளே" என்றும், "இனி காங்கிரசுக்கும் காந்தீயத்திற்கும் சுய மரியாதை இயக்கத்திற்கும் வித்தியாசமேயில்லை"யென்றும், "சுயமரியாதை இயக்கக் காரர்கள் எல்லாம் காங்கிரசில் சேர்ந்துவிடலாம்" என்றும் சிலர் "சுயமரியாதை இயக்கமே தேவையில்லை" யென்றுங்கூட சொல்ல வந்த தாலும் பாமர மக்கள் இதை நம்பி ஏமாந்துபோகாமல் இருக்கவும் சரியான கொள் கைகள் காங்கிரசு, ஒப்புக்கொள்ளும் வரை காங்கிரசுக்கும் சுயமரியாதை இயக்கத்திற்கும் இடையில் வேலி யிருக்கவேண்டுமென்றும், எந்தக்காரணம் கொண்டும் சுயமரியாதை இயக்கக்காரர்கள் காங்கிரசில் கலந்துகொள்வதின் மூலம் இரண்டிற்கும் வித்தியாசம் இல்லையென்று பாமர மக்கள் நினைத்து ஏமாந்து போகாமல் இருக்கவேண்டும் என்கின்ற ஆசை யாலேயே காந்தீயத்திற்கும், சுயமரியாதை இயக்கத்திற்கும் உள்ள வித்தியாசங் களை எடுத்துக் காட்டவே இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டதாகும்.

இனி மற்றொரு தீர்மானமென்னவென்றால்,

"இந்தியா உண்மையான விடுதலைபெருதவற்கு வருணாச் சிரம மதவித்தியாசங்களை அடியோடு அழித்து கடவுள், மோட்சம், கர்மபலன், மறுப்பிறப்பு, விதி முதலிய விஷயங்களில் இருந்துவரும் மூட நம்பிக் கையை ஒழித்து, தன்நம்பிக்கையையும் தன் முயற்சி யையும் உண்டாக்கும் படியான கொள்கைகளை மக்களுக்கு புகட்டி, பூமிக்கு உடையன் - குத்தகைக்கு உழுபவன், முதலாளி - தொழிலாளி, ஆண் - பெண், மேல் ஜாதி - கீழ்ஜாதி என்ற பேதங்களை அகற்றி தொழில் முறைகளிலும், சமூகவாழ்விலும், அரசியலிலும் சகலருக்கும் ஈடுபட அவகாசமும் சம அந்தஸ்தும் சம உரிமையையும், சம ஊதியமும் கிடைக்கக்கூடிய முறையில் நமது சமூகத்தை திருத்தியமைத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்று இம்மகாநாடு கருதுகின்றது"

என்பவைகளாகும்.

ஆகவே உண்மையான விடுதலைக்கு இந்திய மக்கள் இப்போது செய்யவேண்டிய வேலையிதுவே யாகும். இந்த வேலைத்திட்டம் காங்கிர சிலோ, காந்தீயத்திலோ கிடையாது என்பதை அறிஞர் ஒவ்வொருவரும் அறிந்தே இருப்பார்கள். காங்கிரசின் 20 திட்டங்களிலும் ஜவஹர்லாலின் பூரண சுயேச்சை திட்டத்திலும் காந்தியின் ராமராஜிய திட்டத்திலும் இவை கிடையாதென்றும் சொல்லுவோம்.



சுயராஜியப் பிரசினையும் பூரண சுயேச்சை விளம்பரமும் ராம ராஜிய கோஷமும் ஒரு சில தனிப்பட்டவர்களின் பெருமைக்கோ நன்மைக்கோ மாத்திரம் என்றால் அவை சரியான திட்டங்கள்தான். அப்படிக்கில்லாமல் "இந்திய மக்கள் 35 கோடி ஜனங்களுக்காக நாங்கள் கேட்கின்றோம்" என்றால் அவைகளை நாம் ஒருக்காலும் ஒப்புக்கொள்ள முடியாது. அவை இந்தியாவை இன்னமும் மோசமான நிலைமைக்குதான் கொண்டு போய் விடும்.

கர்மத்தையும், கடவுள் செயலையும் நம்புகின்றவர்களுக்குச் சுதந்திர மும் சம தர்மமும் இல்லையென்பதை அறிவுள்ளவன் உணராமல் இருக்க மாட்டான்.

அவ்விரண்டும் வெகு நாளைக்கு முன் ஒழிக்கப்பட்டு இருந்திருக்கு மானால் இன்று சுயராஜியத்திற்கும் பூரண சுயேச்சைக்கும் நாம் யாருடைய தயவையும் எதிர்பார்க்கவேண்டியிருக்காது. "சுயராஜியமென்கின்ற செப்பிடு வித்தையை வைத்துக்கொண்டு அன்னிய நாட்டாரின் ஆக்ஷி கூடாது" என்று சொல்லுகின்றார்களே யொழிய இன்ன ஆட்சிமுறை கூடாது என்று சொல்லு வதில்லை. இது வேண்டுமென்றே சூழ்ச்சியால் மறைக்கப் பட்டிருக்கின்ற தென்றே சொல்லுவோம்.

நம்மைப் பொருத்தவரை ஒரு குறிப்பிட்ட கொள்கை மக்களை ஆட்சி புரியவேண்டுமே யொழிய ஒரு குறிப்பிட்ட நாட்டார்களோ வகுப்பார்களோ, மதக்காரர்களோ ஆட்சிப்புரியவேண்டும் என்பதல்ல. பல மதம் பல ஜாதி பல சமூக அபிமானம் கொண்ட மக்கள் வாழும் நாட்டில் பல மதம் பல ஜாதி பல சமூக அபிமானம் ஆகியவைகள் ஒழிகின்றவரை இவைகளில் சம்பந்தப் படாத அல்லது ஜாதி, மத சமூக வித்தியாசமோ அபிமானமுமோ இல்லாத அவைகளில் கவலையற்ற மக்கள்தான் ஆட்சி புரிய வேண்டும் என்போம். அதினாலேதான் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு ஒழிந்தால் ருஷிய அரசாங்கக் கொள்கையே இந்தியாவை ஆட்சிபுரிய வேண்டும் என்கின்றோம். அந்தக் காலத்தில் இந்து முஸ்லீம் கிறிஸ்துவ தகராருக்கு இடமேயிருக்காது. தீண்டாமைக் கொடுமைக்கும் இடமி ருக்காது. ராமராஜியத்தைப் பற்றிய பேச்சே இருக்காது. தகப்பன் எலும்பைக் கங்கையில் போட்டு மோட்சம் தேடிக்கொடுக்கும் செப்பிடு வித்தையும் நடக்காது. ஆகையால் அப்படிப் பட்ட ஆட்சி யோக்கியமான முறையில் சமாதானமுறையில் நமக்கு வேண்டு மானால் தூத்துக்குடி தீர்மானப்படி மக்களை தயார் செய்யவேண்டியதே முக்கிய கடமையாகும்.

நமது லட்சியம் இன்னது, தேவையின்னது என்று வெளியிடுவதில் உள்ள தந்திரமே இன்று நாம் பொதுவாழ்வில் அபிப்பிராய பேதமும், அல்லலும் பட்டுக்கொண்டு இருக்கின்றோம். இந்துக்கள் சுயராஜிய தத்துவம் இந்து மத ராஜியமாகவேண்டும் என்பதும், முஸ்லீம்களின் சுயராஜிய தத்து



RangaRakes tamilnavarasam.com

வம் இஸ்லாம் ராஜியமாகவேண்டுமென்பதும் தவிர வேறு அர்த்தத்தைக் கொண்டிருக்கவில்லை என்று கோபுரத்தின் மீது இருந்தும் கூவுவோம். இந்த இரண்டு அந்தரார்த்தமும் இரு சமூக பாமரமக்களையும் பூச்சி புழுக்களாக்கி நசுக்கிபிழிகின்றன. ஆனால் மதவெறியால் இக்கஷ்டத்தை மக்கள் உணர முடியாமல் மறைக்கப்பட்டிருக்கின்றது.

இந்தியாவில் உள்ள இந்து வாலிபர்களானாலும் சரி, முஸ்லீம் வாலிபர்களானாலும் சரி,மதத்தை அடியோடு மறந்தாலல்லது மனித விடுதலை கிடையாது என்கின்றோம். ஆங்கிலேயனுக்கும் மதமில்லை. அமெரிக்கனுக்கு மதம் இல்லை. பிரஞ்சியனுக்கும் மதம் இல்லை. அவர்கள் மதம் எதையும் தியாகம் செய்து உலகபோக போக்கியத்தைத் தாங்களே அனுபவிக்க வேண்டும் என்பதைத் தவிர வேறில்லை. ருஷியாகாரனுக்கு அது கூட கிடையாது. எல்லா இன்பங்களும் எல்லா மக்களுக்கும் பொது ஆகையால் சகலத்தையும் எல்லோருக்கும் சமமாய் அனுபவிக்கவேண்டும் என்பதே அவர்கள் மதம். இதுவே உயர்ந்த எண்ணம். உயர்ந்த மதமென்று உணருங்கள். அன்பையும் சமத்துவத்தையும் உண்மை மதமாய்க் கொண்ட எவனும் இந்தக் கொள்கையை ஆட்சேபிக்கமாட்டான். அன்பும் சத்தியமும் சமத்துவமும் தான் கடவுள் என்ற, கடவுள் நம்பிக்கை கொண்ட எவனும் இதை ஆட்சேபிக்கமாட்டான். அந்தப்படி யாராவது அன்பையும் சத்தியத் தையும் சமத்துவத்தையும் கடவுள் என்றும் மதம் என்றும் எண்ணிக் கொண் டிருக்கின்ற ஒருவன் சமதர்ம கொள்கையையும் பொதுவுடமைக் கொள்கை யையும் ஆட்சேபிப்பானேயானால் அவன் கடவுள் பெயராலும், மதத்தின் பெயராலும், மக்களை ஏமாற்றித் திரியும் பாஷாண்டியே யாவான் என்பதை தூக்கு மேடையிலிருந்தும் சொல்லுவோம். ஆகையால் வாலிபர்காள்! ஏமாந்து பாஷாண்டிகள் கையில் நாட்டைக்காட்டிக்கொடுத்து விடாமல் தைரியமாய் நின்று உண்மையைச் சொல்லுங்கள். உண்மைக்காக கும்பல் கும்பலாய் உயிர் விடுவதில் நாட்டுக்கு ஒன்றும் நஷ்டம் வராது. இந்தியாவிற்கு ஏற்கனவே பூபாரம் அதிகமாய் விட்டது. ஏதாவது காரணத்தால் பூபாரம் சற்று குறைந்தால் இருக்கின்ற மக்களுக்கு சற்று சௌகரியம் அதிகம் ஏற்படலாம்.

ஏனெனில், இந்தக் கோழை நாட்டிற்கு, வஞ்சக நாட்டிற்கு, சோம்பேரி நாட்டிற்கு, மனிதர்களைத்தின்னும் மாநாட்டிற்கு முப்பத்தைந்தரைக் கோடி மக்கள் இருப்பதானது இந்த நாட்டிற்கு மிகவும் பாரமாகும். ஆகையால், உண்மைக்கும் சமத்துவத்திற்குமிடையில் உயிரை விடுவது நன்மையாகும். நாம் பொது உடமைக் கொள்கை ஏற்படுத்த வேண்டும் என்பது இந்து மதத்திற்கும், மனுதர்மக் கொள்கைக்கும், கேடு செய்ததாகாது. அவைகளின் பலனை அவை அனுபவிக்கச் செய்ததாகுமே தவிர வேறில்லை. மனுதர்ம சாஸ்திரத் தில் சூத்திரன் (தொழிலாளி) சொத்து வைத்திருந்தால் பார்ப்பான் (சோம்பேரி) பலாத்காரத்தால் பிடுங்கிக்கொள்ளலாம் என்று இருக்கின்றது. ஆனால் நாம் இப்போது சோம்பேரி பணம் வைத்திருந்தால் பலாத்காரமில்



லாமல் பிடுங்கிக் கொள்ளலாம் என்றுதான் சொல்லுகின்றோம். இதுதான் சுய மரியாதை இயக்கத்தின் கடைசி லக்ஷியம். ஆகையால் இதை அக்கிரம மென்று எந்த அறிவாளி, எந்த யோக்கியன் சொல்லக்கூடும் என்று கேட் கின்றோம்.

ஆகவே, இதற்கு விரோதமான எந்த ஸ்தாபனமும், எந்த தர்மமும் சுயமரியாதை இயக்கத்துடன் சேரவோ ராஜி பேசவோ முடியாது என்பதை யும், இதனால் என்ன வருவதானாலும் சுயமரியாதைச் சங்கத்தார் பொருத் தருள வேண்டும் என்றும் உண்மையாய்த் தெரிவித்துக்கொள்வதோடு சத்தற்ற எலும்பைக் கடித்து பற்களுக்கும், ஈறுகளுக்கும் வலியுண்டாக்கிக் கொள்வது போல் அன்னியன், அன்னியன் என்கின்ற உணர்ச்சியில் வெள்ளைக்காரர் களுடன் மோதிக்கொள்வதில் பயனில்லை என்றும் நமது நோக்கம் தடை படும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் .

**குடி அரசு – தலையங்கம் – 12.04.1931**

## * தூத்துக்குடி சுயமரியாதை மகாநாட்டின் தீர்மானங்கள்

### பகத்சிங்

1. (a) பொது உடைமை, சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக தனது உயிரை மனப்பூர்த்தியாக தியாகம் செய்த உண்மை வீரர் பகத்சிங்கை இம் மகாநாடு மனமாரப்பாராட்டுகின்றது.

(b) பகத்சிங் தூக்கிலிடப்பட்டதின் மூலம் உண்மையும் வீரமும் பொருந்திய வாலிபர்களின் உள்ளத்தை சமதர்ம தத்துவமும், பொது உடைமைக்கொள்கையும் கவர்ந்து கொள்ளும்படி ஏற்பட்டு விட்டதால் அச்சம்பவத்தை இம்மகாநாடு ஆர்வத்தோடு வரவேற்கின்றது.

(c) இந்திய வாலிபர்கள் இது காரணமாய் தங்களுக்குள் பொங்கித் ததும்பும் ஆர்வத்தை அறிவும், சாந்தமும் பொருந்திய வழிகளில் தேச சேவைக்கு உபயோகப்படுத்த வேண்டும் என்று வற்புறுத்துகின்றது.

### விடுதலை சுதந்திரம்

2. இந்திய நாடு உண்மையான விடுதலை பெறுவற்கு வர்ணாசிரம மதவித்தியாசங்களை அடியோடுஅழித்து, கடவுள், மோட்சம், நரகம், கர்ம பலன், மறுபிறப்பு, தலைவிதி முதலிய விஷயங்களில் இருந்துவரும் மூட நம்பிக்கைகளை ஒழித்து, தன்னம்பிக்கையும் தன் முயற்சியும் உண்டாக்கும் கொள்கைகளை மக்களுக்குப் புகட்டி, பூமிக்குடையவன்– உழுகின்றவன், முதலாளி – தொழிலாளி, ஆண் – பெண், மேல்ஜாதி – கீழ்ஜாதி என்பவை களான பேதங்களை அகற்றி தொழில் முறைகளிலும், சமூகத்துறைகளிலும்,



RangaRakes tamilnavarasam.com

அரசியல்களிலும் சகலரும் சமசுதந்திரத்துடன் ஈடுபட சம அவகாசமும், சம அந்தஸ்தும், சம ஊதியமும் கிடைக்கக் கூடிய முறையில் நமது சமூகத்தைத் திருத்தி அமைத்துக்கொள்ளவேண்டியது அவசியம் என்று இம் மகாநாடு தீர்மானிக்கின்றது.

### பெண் உரிமை

3.(a) விவாகம், விவாக ரத்து, கல்வி, சொத்து, கற்பு, ஒழுக்கம், தொழில், அரசியல் முதலிய துறைகளில் ஆண்களுக்கு உள்ள சகல உரிமைகளும் பெண்களுக்கும் அளிக்கப்படவேண்டும் என்பதாக இம்மகாநாடு திட்டமாய்க் கருதுகின்றது.

(b) நமது பெண்மக்கள் வாழ்விற்கு அவசியமான வகையில் உடைகளையும், நகைகளையும் சுருக்கிக்கொள்ளவேண்டுமெனவும், தேக சக்திக்கு செல்வ நிலைக்கும் தகுந்த அளவில் குழந்தைகளைப் பெறுவதற்காகக் கர்ப்பத்தடைமுறைகளை அவசியம் கையாளவேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

### நம்பிக்கையில்லை

4. (1) மகாத்மா காந்தியவர்கள் மதத்தின் பேரால் நடை பெறுகின்ற மூட நம்பிக்கைகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும் கையாளுவதினா லும்,

(2) தனது செய்கைகளுக்கும், பேச்சுகளுக்கும் கடவுளே காரணம் என்பதாக அடிக்கடி சொல்லி வருவதால் ஜனங்களின் தன்னம்பிக்கையும், தன் முயற்சியும் பொறுப்பும் அற்றுப்போவதாலும்,

(3) வர்ணாசிரமம், இராமராஜ்யம், மனுஸ்மிருதி, தர்மம் முதலிய பழய கொடுங் கோன்மையான ஏற்பாடுகளை மறுபடியும் திருப்பிக்கொண்டுவர முயற்சி செய்து வருவதா லும்,

(4) நமது நாட்டில் இயந்திர வளர்ச்சியை தடைசெய்து வருவதாலும்,

(5). சமதர்மக் கொள்கைகளுக்கு விரோதமாயிருந்து வருவதாலும் அவரிடத்தில் நம்பிக்கை இல்லை என்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

**குடி அரசு - 12.04.1931**



## திருநெல்வேலி ஜில்லா
## 4-வது சுயமரியாதை மகாநாடு

சகோதரர்களே! இன்று இந்த மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் திரு. எஸ். இராமநாதன் அவர்களைப் பற்றி நான் உங்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டியதில்லை. அவர் தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு மிராசுதார் குமாரர். அவர் எம்.ஏ, பி.எல், படித்துப் பட்டமும் சன்னதும் பெற்று, சென்னையில் ஹைகோர்ட்டு வக்கீலாயிருந்தவர். ஒத்துழையாமையின் போது வக்கீல் வேலையையும், தனது சம்பாதனையையும் விட்டுவெளியேரி சிறை சென்றவர். இவர் சிறைசென்ற காலம் எது என்றால் இப்போதைப்போல் சிறைக்குப் போகின்றவர்களுக்கு மாமியார் வீட்டுக்கு முதல் தவணை செல்லும் மருமகனைப் போல் அளவுக்கும் தகுதிக்கும் மீறின உரிமைகளும், சுக போகங்களும் சிறையில் கிடைத்துக் கொண்டிருக்கும் காலம் அல்ல அது. திரு. இராமநாதன் அவர்கள் தலையில் கூடையும் கையில் மண்வெட்டியும் கொடுக்கப்பட்டு தெருவில் ரோட்டுபோடும் வேலைசெய்தவர். சிறை அதிகாரிகளால் பல நிர்பந்த தண்டனைகள் செய்யப்பட்டதல்லாமல் தனி அரையில் அதாவது "கூனு கொட்டடியில்" போட்டு மக்களைப் பார்ப்பதற்கும் பேசுவதற்கும் இல்லாமல் வதைக்கப்பட்டவர். இதற்காக இவரைப்பற்றி மாத்திரம் சட்ட சபையில் பலகேள்விகள் கேட்கப்பட்டது உங்களுக்குத் தெரியும். தவிர சென்னை மகாஜன சங்க காரியதரிசியாயும், தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் கமிட்டியில் காரியதரிசி யாயும் இருந்தவர். இவைகள் தவிர தமிழ், கேரளம், கர்னாடகம் ஆகிய நாடுகளுக்கு கதர் போர்டு நிர்வாக காரிய தரிசியாயும் இருந்தவர். இவ்வளவும் தவிர திரு. காந்தியவர்களுக்கு உற்ற சீடராகவும் இருந்து, திரு. காந்திய வர்களால் மிகவும் போற்றப்பட்டவராகவும் இருந்தவர். இவ்வளவும் அல்லாமல் யாதொரு சுயநலப் பிரதிப் பிரயோஜனமும் எதிர் பாராமலும், தன் கைப்பொறுப்பிலேயே சகல செலவும் செய்து கொண்டு இவ் வியக்கத்தில் உழைப்பவர். அன்றியும் அவரது கொள்கையில் மயக்கமும் குளருபடியும் சமயத்திற்குத் தகுந்த அர்த்த வியாக்கியானமும் இல்லாமல் மிகத்தெளிவும், ஒரே நிலையும் உள்ளவர். ஆகவே இப்படிப்பட்ட ஒருவர் இந்த மகாநாட்டுக்கு கிடைத்திருப்பதால் மகாநாடு உண்மைச் சுயமரியாதை மகாநாடாக நடந்து உண்மையான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு உண்மையான வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

*குறிப்பு : 04.04.1931 அன்று தூத்துக்குடி பாலகிருஷ்ண எலக்டிரிக் தியேட்டரில் நடைபெற்ற மாநாட்டில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 12.04.1931**



RangaRakes tamilnavarasam.com

# ஸ்ரீவில்லிப்புத்தூர்

சகோதரர்களே!

நாங்கள் இங்கு சுயமரியாதை இயக்கசம்மந்தமான பிரசாரம் செய்யவே அழைக்கப்பட்டோம். இங்குள்ள முனிசிபல் தகராறுகளைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. யாருக்கும் ஓட்டுவாங்கிக் கொடுக்க நாங்கள் இங்கு வரவில்லை. உங்களில் சிலர் நாங்கள் யாரோசிலருக்கு ஜஸ்டிஸ் கக்ஷி பேரால் ஓட்டுவாங்கிக் கொடுக்க வந்திருப்பதாய்க் கருதிக்கொண்டு ஆத்திரப்பட்டதாய் தெரிகின்றது. நாங்கள் பணம் வசூல் செய்யவும் இங்கு வரவில்லை. சுயமரியாதை இயக்கத்தில் என்னைப் பொருத்தமட்டில் இரண்டு காரியங்கள் உறுதி. அதாவது இயக்கத்தின் பேரால் யாரையும் போய் நான் எனக்கு ஓட்டு கேட்பதில்லை. இயக்கத்தின் பெயரால் வயிரு வளர்க்கவோ அல்லது யாரையும் போய் பணம் கேட்கவோ போவதில்லை. இந்த இரண்டு காரியங்களைப் பொருத்தவரை நான் உறுதியாக இருக்கின்ற தாய் நான் என்னைக் கருதிக்கொண்டிருக்கும்வரை எப்படிப்பட்டவர்களுக்கும் பயப்பட வேண்டிய அவசியம் வராது என்றும் எனதுகொள்கை எதுவானாலும் அதை வெளியிலெடுத்துச் சொல்ல பயப்படவேண்டிய அவசியம் ஏற்படாது என்றும் கருதி இருக்கின்றேன். இந்த உறுதிதான் இந்த இயக்கம் ஆரம்பித்த காலம்முதல் என்னை இயக்க விஷயத்தில் எவ்வித ராஜிக்கும் இணங்காமல் ஒரே பிடியாய் இருக்கவும் மேலும் மேலும் முற்போக்கான கொள்கையை எடுத்துச் சொல்லவும் செய்து வருகிறது. இதில் சேர்ந்திருக்கும் மற்றவர்களைப் பற்றியும் நான் குறைகூறுவதில்லை. அவரவர்கள் நிலைமையைப் பார்த்து அவரவர்களை அதற்கு தகுந்தபடி மதித்துவிட்டு அவரவர்களால் கூடுமான உதவியை இவ்வியக்க நலத்திற்கு பெற்றுக் கொண்டு வருகிறேன். எனவே யார் வேண்டுமானாலும் எனது கொள்கை முரணை எடுத்துக்காட்டி அதன் மூலம் இவ்வியக்கத்திற்கு ஏதாவது குற்றம் சொல்ல வந்தால் மாத்திரம் நான் பயப்படுவேனே ஒழிய வேறு எந்த வழியில் யார் மிரட்டினாலும் நான் பயப்படக் கூடாதவனாய் இருக்கிறேன்.

சகோதரர்களே! மற்றும் நான் சொல்லுவ தென்னவென்றால் எந்தக் காரணத்தாலும் இந்த இயக்கம் அழிவுபடவும் முடியாது என்பதை தயவு செய்து உணருங்கள். என் நடத்தையாலோ என் சாவினாலோ இயக்கம் சிறிது கூட அடங்க முடியாது. என் சாவைப்பற்றி எனக்கு 12 வருஷ- காலமாகவே கவலையற்று இருக்கின்றேன்.



ஆதலால் தான் இவ்வளவு தலைகீழான இயக்கத்தை ஆரம்பித்திருக்கின்றேன். ஆதலால் தான் இவ்வளவு தலை கீழான கொள்கைகளைத் தைரியமாய் வலியுறுத்துகின்றேன். நான் சாவுக்கோ, அடி, உதைக்கோ பயந்திருந்தால் கடவுளைப்பற்றி கவலைப்படவேண்டாம் என்றும், கோயில்கள் ஒழிய வேண்டுமென்றும், தீர்த்தங்கள் தூர்க்கப்பட வேண்டும் என்றும், கதர் திட்டம் பயனற்றது என்றும், காங்கிரஸ் புரட்டு காந்தீயம் மயக்கம் என்றும், கற்பு என்பது பித்தலாட்டமென்றும், காதல் என்பது இல்லையென்றும், இராமன் என்பவன் கெட்டவன், இராவணன் என்பவன் நல்லவன், புராணம் என்பது ஆபாசம், வேதம் என்பது சூது, மதம் வேண்டாம், ஜாதி வேண்டாம், கல்யாண விலங்கு வேண்டாம், பிள்ளைகள் பெறவேண்டாம், பணக்காரத் தன்மை ஒழியவேண்டும். பார்ப்பனீயம் அழிய வேண்டும். கடவுளைப்பற்றிக் கவலை கூடாது என்றெல்லாம் சொல்லிக் கொண்டும், மற்றும் இதுபோன்ற பல பழையதும், உணர்ச்சியானதுமான விஷயங்களையும் குற்றம் சொல்ல முன் வந்திருப்பேனா என்பதை யோசித்துப் பாருங்கள். இந்தப்படி சொன்ன அநேகர் இதற்கு முன் பட்டதை எல்லாம் நான் தெரிந்து கொண்டு எல்லாவற்றிற்கும் துணிந்துதான் இப்படிச் சொல்லுகிறேனா அல்லது தெரியாமல் சொல்லுகின்றேனா என்று யோசித்துப்பாருங்கள். இப்போது நாங்கள் எங்கிருந்துவருகின்றோம் என்பது உங்களுக்குத் தெரியுமா? என்ன தீர்மானம் நிறைவேற்றிவிட்டு வரு கின்றோம் என்பது உங்களுக்குத்தெரியுமா? என்று கேட்கின்றேன்.

தூத்துக்குடியில் இருந்து வருகின்றோம். தூத்துக்குடி சுயமரியாதை மகாநாட்டில் திரு. காந்தி அவர்களிடம் நம்பிக்கையில்லை என்று தீர்மானித்துவிட்டு வருகின்றோம். ஜாதிமத வித்தியாசங்களை அடியோடு அழிக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டுவிட்டு வருகின்றோம்.

ஆகவே நாங்கள் எங்களுக்குத் தோன்றிய விஷயங்களை எடுத்துச் சொல்ல பயப்படவில்லை என்பதை உணருங்கள். அப்படி நாங்கள் சொல்வதால் ஏதாவது கெடுதி ஏற்படுமென்று தோன்றினால் நீங்கள் மறு கூட்டம் கூட்டி தக்க காரணங்களோடு மறுத்துச் சொல்லுங்கள். அப்படிச் சொல்ல முடியாவிட்டால் உங்களிடம் போதிய சமாதானம் இல்லையென் றும், நீங்கள் சொல்லுவதை மக்கள் மதிப்பதில்லை என்றும், அல்லது நீங்கள் கோழைகள் என்றும்தான் அருத்தம். காங்கிரசிலாவது, கதரிலாவது நாங்கள் உங்களைவிட இளைத்தவர்களல்ல. தமிழ் நாட்டில் கதர் ஸ்தாபனம் ஏற் படுத்தியவர்களே நாங்கள்தான். நாங்கள் கதருக்குத் தனி ஸ்தாபனம் ஏற்படுத் தியவுடன் தங்கள் லாபம் போய்விட்டதே என்று உங்கள் ஊர் கதர் வியா பாரிகளும் மற்றும் கதர் வியாபாரிகளும் கூப்பாடு போட்டது எனக்குத் தெரியும். கதரைப்பற்றியும், காந்தியைப் பற்றியும் கிராமம் கிராமமாய் நடந்து சென்று, பிரசாரம் செய்தவர்கள் நாங்கள்தான். எங்களைப் பார்த்துத்தான் அநேகர் காங்கிரசைப் பற்றியும், கதரைப் பற்றி பேசவும், பிரசாரம் செய்யவும் பழகினார்



RangaRakes tamilnavarasam.com

கள் என்று ஆயிரக்கணக்கான தடவைகளில் நீங்களே சொல்லி இருக்கின் றீர்கள். அப்படிப்பட்ட நாங்கள் ஏன் இன்று கதர், காங்கிரஸ், காந்தியம் ஆகிய மூன்றையும் கண்டித்துப் பேசுகின்றோம் என்று யோசித்துப்பாருங்கள். எங்க ளுக்கு ஏதாவது சுய நலம் கற்பிக்கின்றீர்களா? உங்கள் மனதில் இருந்தால் தைரியமாய்ச்சொல்லுங்கள். திரு.எஸ். இராமநாதன் அவர்களை இன்னமும் திரு. காந்தியும், திரு. ராஜ கோபாலாச்சாரியும் அழைத்துக்கொண்டுதான் இருக் கின்றார்கள். அவர் காங்கிரசில் இருந்தால் மாகாண காரியதரிசி மாத்திர மல்லாமல் இந்திய காங்கிரஸ் காரியதரிசியாகவும் ஏற்றுக்கொள்ளப்படுவார். பணமும், மாதம் 300, 400 பெறப்படுவார். அவர் காங்கிரசைவிடும்போதும், கதர் போர்டில் மாதம் 150, 200 வீதம் சம்பளம் கொடுக்கப்பட்டதை வேண்டாம் என்று தள்ளிவிட்டுதான் வந்தார். நாளதுவரை அவரைப்பற்றி யாரும் எவ்வித உள்எண்ணமும், கற்பித்துப் பேசமுன்வரவில்லை. அவருடைய அபிப்பிரா யங்களை மறுத்துச் சமாதானம் சொல்லவும் முன் வரவில்லை. இன்றைம் தினம் அவர் பேரில் குற்றம் சொல்லுகின்றவர்களோ, அவரது கொள்கைகளுக் காக அவரைக் கண்டிக்கின்றவர்களோ 100-க்கு 90பேர்கள் ஏதோ ஒரு வகை யில் காங்கிரஸ் பேரிலோ, கதர் பேரிலோ, தேசீயத்தின் பேரிலோ தொழிலில் ஊதியம் சம்பாதிப்பவர்களாகவே இருப்பதை நீங்கள் கவனித்துப்பார்த்தால் உணரலாம். அவ்வளவுயில்லாவிட்டாலும் நானும் காங்கிரசில் மாகாணத் தலைவராகவும், கதரில் கதர் போர்டு பிரசிடெண்டாகவும், காந்தீயத்தில் மாறு தல் வேண்டாத வைதீக காந்தி சீடனாகவும் இருந்தவன்தான். வேறு ஒன்றும் சொல்லாமல் நான் இதுவரை காங்கிரசில் இருந்திருந்தால் திரு. ராஜகோபா லாச்சாரியைப்போல் நானும் ஒரு மடாதிபதியாய் இருந்து கொண்டு கையில் 2, 3 லட்சம் ரூபாய் ஆதிக்கம் வைத்துக்கொண்டு, பல சிஷியர்களையும் உடையவனாக இருப்பேன்.

முன் ஒத்துழையாமை ராஜிக்கு திரு. காந்தி என் மனைவியைக் கேட்டுத்தான் பதில் சொல்லவேண்டுமென்று சொன்னதுபோல் உப்பு சத்தியாக்கிரக ராஜிக்கும் நம்மைக் கேட்டுத்தான் திரு. இர்வினுக்குப் பதில் சொல்ல வேண்டி இருக்கும்படியான மனிதனாகி இருப்பேன். அதனால் எனக்கும் சிறிதுகூட பொருள் நட்டமோ, சரீர சௌக்கியக் குறைவோ ஏற்பட் டிருக்கவுமாட்டாது.

அன்றியும், காங்கிரஸ்காரர்கள் பதவியோ, உத்தியோகமோ பெற நேரும்போது முதல் பங்கு எனக்குக் கிடைக்கவும் ஒரு சந்தர்ப்பம் உண்டு. ஆகவே நாங்கள் ஏன் இன்று உங்களிடம் வசவு கேட்கின்றோம். கதர், காங்கிரஸ், காந்தி என்னும் பெயரால் மக்கள் ஏமாற்றப்படுகின்றார்கள். நாடு பிற்போக்கடைகின்றது. ஏழைகளும், தாழ்த்தப்பட்டோரும் தலை தூக்க முடியாமல் அழுத்தப்படுகின்றதை எங்களால் பார்க்க, சகிக்க முடியவில்லை.



## கதர்

இந்த நாட்டில் கதரையும், காங்கிரசையும், காந்தியையும் பற்றிச் சொல்லிக்கொண்டு, வாழ்வதற்குப் பல சௌகரியங்கள் ஏற்பட்டு விட்டதால் அவற்றிற்குச் செல்வாக்குப் பலத்து விட்டது. அதற்கு வக்காலத்துப் பேச அநேகர் ஏற்பட்டு விட்டார்கள். ஆதலால் அதை எதிர்ப்பவர்களுக்குக் கஷ்டம் அதிகமாகிவிட்டது. 50 வருஷ காங்கிரசினால் கண்ட பயன் இதைத் தவிர வேறு என்ன? 10 வருஷ கதரில் கண்ட பயன் என்ன? நான் கதர்தான் கட்டுகிறேன். என் நண்பர்கள் பலர் இன்னும் கதர்தான் கட்டுகிறார்கள். கண்ட பலன் என்ன? ஒன்றுக்கு மூன்றாய், நான்காய்ப் பணம் கொடுக்கின்றோம். ஆனால், ‘அசௌகரியத்தால் அடிக்கடி கஷ்டப்படுகின்றோம். கஷ்ட மாவது சகித்துக் கொள்ளலாம்’ என்றால் பணம் எத்தனை நாளைக்கு நஷ்டப்படுவது? கெஜம் 3 அணாவுக்கு வாங்கக்கூடிய துணிக்குப் பதிலாக அதைவிட மட்ட மான துணிக்கு கெஜம் 10 அணா கொடுக்கின்றோம். கதரை குற்றம் சொல்லு கின்றீர்களே யொழிய 3 அணா துணிக்கு 10 அணா கொடுக்கின்றீர்களே என்று நீங்கள் சற்றுகூட யோசியாமல் இருக்கின்றீர்கள். காயலாக்காரன் காயலா தீருவதற்கு மருந்து சாப்பிடுவதுபோல் என்று சொன்னால் வாயிதா காலம் வரை மருந்து சாப்பிடலாம். அப்படிக்கின்றி காயலா வராமல் இருக்க வேண்டுமானால் எப்போதும் மருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கவேண்டும் என்கிற முறையில் எத்தனை நாளைக்கு மருந்தே சாப்பிட்டுக் கொண்டி ருப்பது. அறிவிருந்தால் வேறு வைத்தியனைத் தேட வேண்டாமா? என்று கேட்கின்றேன். உங்கள் கதரினால் அநேக சோம்பேரிகள், பித்தலாட்டக் காரர்கள் கொள்ளை லாபமடைந்து பிழைக் கின்றார்கள். யாரோ பாட்டிமார் கல்வி அறிவு கொடுக்கப்படாமல் அடக்கி வைக்கப்பட்டிருப்பவர்கள் சிறிது கூலிபெறுகிறார்கள். அதுவும் ஒரு மணிக்கு ஒரு தம்பிடியேபெருகின்றார்கள். இந்த திருப்தி போதுமா? உங்கள் அறிவை நடு நிலைமையில் வைத்து யோசியுங்கள். பணமுள்ளவன் இடமிருந்து, அல்லது பைத்தியகாரர்கள் இடமிருந்து பணம் செலவு செய்யத்தான் கதர் பயன்படுகின்றதே அல்லாமல் ஏழை மக்கள் 100-க்கு 75 பேர்களான ஏழை மக்கள் 20 பேர்களான நடுத்தர மக்கள் ஆகியவர்களுக்கு கதர் பயன்படக் கூடியதா சாத்தியப்படக்கூடியதா என்று யோசியுங்கள். நாட்டுக்கும், சமூகத்திற்கும் அறிவிற்கும் அனுபவத் திற்கும் பொருத்த மில்லாத திட்டங்களை வகுத்துக்கொண்டு தேசம் என்னும் பேரால் பொது மக்களை கதர் கட்டுகின்றாயா இல்லையா என்று மிரட்டினால் கதர் திட்டம் யோக்கியமான புத்திசாலித் தனமான திட்டம் ஆகுமா என்று கேட்கின்றேன். இன்று கதர் ஒருவித கொள்கையுடையவர்களுடைய வேஷச் சின்னமாய் இருக்கின்றதே யொழிய அந்தக் கொள்கைகளில் ஒன்றாய் இருப்ப தாகத் தெரியவில்லை. எப்படி யென்றால் சிவ பக்தர்கள் என்பதற்கு அடையாளம் விபூதியும் ருத்திராட்சமுமாய் இருப்பது போல் தேச பக்தர்கள் என்பதற்கு அடையாளம் கதருடையாயிருக்கின்றது. மற்றபடி இரண்டுக்கும் வேறு வித்தியாசமில்லை.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே இந்த மாதிரியான காரியங்களில் மக்களைக் கட்டாயப் படுத்துவது மனிதனை அடிமைப்படுத்துவதேயாகும்.

## காங்கிரஸ்

தவிர காங்கிரஸ் விஷயத்திலும் நானறிய இந்த 20 வருட காலமாய் காங்கிரசினால் ஏழை மக்களுக்கு ஒரு பயனும் ஏற்படவில்லை. மக்களுக்குச் சரீரப்பிரயாசையாவது மனக்கவலையாவது மானமற்ற தன்மையான இழிவானது சிறிதும் குறைந்ததாகயாரும் சொல்லமுடியாது. இனி வரப்போகும் சுதந்திரத்திலாவது மக்களின் இவ்விதகஷ்டம் குறையத்தக்கநிலைமை ஏற்படும் என்கின்ற நம்பிக்கை எனக்கில்லை. இது வீணாக ஏழைகளையும் முட்டாள்களையும் கைமுதலாய் வைத்துக்கொண்டு சிலரால் செய்யப்படும் தேசீய வியாபாரமே தவிர இதனால் கடுகளவும் மக்களுக்கு நன்மை உண்டாகப்போவதில்லை. ஏதாவது உண்டாயிற்று அல்லது உண்டாகப் போகின்றது என்று உங்களுக்குத் தோன்றினால் எடுத்துச் சொல்லுங்கள்.

## சமய சமூகம்

மற்றபடி சமய சமூகத்துறைகளில் நமக்குப் பல நூற்றாண்டுகளாக உள்ள கஷ்டமும் நஷ்டமும் சிறிதுகூடக் குறையவில்லை. நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகின்றது. அதை ஒழிக்க யாரும் பாடுபடுவதில்லை. அதைப்பற்றி யாரும் நினைப்பதுமில்லை. அந்தத்துறையும் பலருக்கு ஜீவனத்திற்கு ஆதாரமாய் விட்டதால் அதை வளர்த்துக்கொண்டிருக்க சௌகரியம் ஏற்பட்டு விட்டது. சமயங்களை அழித்து சமூகக் கட்டுப்பாடு களை ஒழிப்பது என்றால் உங்களுக்குப் பிராணன் போகின்றது போல் இருக்கின்றது. அதனால் உண்டாகும் கஷ்டங்கள் எவ்வளவானாலும் சகித்துக் கொண்டிருக்கப் பின் வாங்குவதில், காப்புக்காய்த்துபோன இடத்தில் அடிபட்டால் எப்படி வலி தோன்றுவதில்லையோ அப்படியே மூட நம்பிக் கையில் காப்புக் காய்த்துபோன முட்டாள் தனம் தடிப்பேரியிருப்பதால் நஷ்டம் தெரிவதில்லை. கஷ்டம் தெரிவதில்லை. மானாவமானம் தெரிவதில்லை.

உங்கள் சாமிக்கு எத்தனை ரூபாய் பாழாகின்றது என்பதை உணர்ந் தீர்களா? உங்கள் மகாத்மா உணர்ந்தாரா? உங்கள் காங்கிரஸ் உணர்ந்ததா? உங்கள் காங்கிரஸ் தலைவர்கள் பக்தர்கள் உணர்ந்தார்களா? இதையெல்லாம் விட்டு விட்டு மானமற்று நாம் தேசீயம் தேசீயம் என்று கூப்பாடு போடுகின் றோம். சோம்பேரிகளிடம் வேலை வாங்க நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை. சோம்பேரிகள் விர்த்தியாகாத மார்க்கம் நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை. சும்மா வெறுமனே காந்திக்கு ஜே என்கின்றீர்கள். திருப்பதி வெங்கிடாசல பதிக்கு கோவிந்தா! என்பதற்கும், பழனியாண்டவருக்கு அரோகரா!



என்பதற்கும் காந்திக்கும் ஜே! என்பதற்கும் என்ன வித்தியாசம் என்று கவனித்துப்பாருங்கள். ஒவ்வொருவீட்டுக் குழந்தைகளுக்கும் காந்திக்கு ஜே கற்பிக்கப்பட்டு வருகின்றதைப் பார்த்துத்தான் வருகின்றேன். இது மூட நம்பிக்கைத் தடிப்பும் அல்லாமல் இதில் அறிவும் கவலையும் சிறிதாவது இருக்கின்றதா என்று கவனித்துப் பாருங்கள். இந்த நிலையில் உள்ள மக்களாகிய நீங்கள் எங்களைக் குற்றம் சொல்ல வருகின்றீர்கள். உங்களைப் பற்றி நான் வருத்தப்படவில்லை. பரிதாபப்படுகின்றேன். உங்களை ஏய்த்து இந்தக் கதியாக்கிய தந்திரசாலிகளின் கூற்றையும் முயற்சி யையும் ஒழிக்க ஆசைப்படுகிறேன்.

*குறிப்பு : ஸ்ரீ வில்லிபுத்தூர் பொதுவாசகசாலைக்கு முன்புறம் 06.04.1931 அன்று நடந்த கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 12.04.1931**



RangaRakes tamilnavarasam.com

# செட்டிமார் நாட்டு முதலாவது சுயமரியாதை மகாநாடு

சகோதரிகளே! சகோதரர்களே!!

நான் திரு. சண்முகம் அவர்களைப் பற்றிப் பேசுவது எனக்கே கொஞ்சம் சங்கடமாகத்தானிருக்கின்றது. ஏனெனில், அவர் எனது ஜில்லாக் காரர். அத்தோடு, இவ்வியக்கத்தில் ஈடுபட்டு, ஒத்துழைக்கும் எனது நண்பரும் ஆவார். அப்படிப்பட்ட ஒருவருடைய பெருமையைப்பற்றி எடுத்துச் சொல்ல ஏற்பட்டது எனக்கும் சங்கடமான நிலைமை, எனது நண்பருக்கும் சங்கடமான நிலைமை ஏற்பட்டது தானென்று சொல்ல வேண்டும். ஆனபோதிலும், கடமை யைச் செலுத்தவேண்டிய அவசியம் நேர்ந்த காலத்தில் சொந்த அசௌகரி யத்தை உத்தேசித்து நழுவிக்கொள்ளப் பார்ப்பது நியாயமாகாது. ஆகவே, சில வார்த்தைகள் சொல்லவேண்டியவனாகயிருக்கின்றேன். ஏனெனில் இந்த நாட்டில், சுயமரியாதை பிரசாரம் நடை பெறக்கூடாதென்றும், இந்த மகாநாடு இங்கு நடத்தப்படக் கூடாதென்றும், பல சிவநேயர்களும், பண நேயர்களும் பெரிய முயற்சிகள் எடுத்து, எவ்வளவோ சூழ்ச்சிகளும் கஷ்டங்களும் செய்து பார்த்தார்களாம். ஒன்றும் பயன்படாமல்போய், பிரசாரமும் தாராளமாய் நடைபெற்று, மகாநாடும் இவ்வளவு ஆடம்பரத்தோடு இத்தனை ஆயிர ஜனங்களுடைய ஆதர வோடு ஆண் -பெண், மேல் ஜாதி - கீழ் ஜாதி, பணக் காரன்-ஏழை என்கின்ற பாகுபாடும், வித்தியாசமுமில்லாமல் நடைபெறுவதை பார்த்தவுடன், மேற்படி பணநேயர்கள் "யாரோ சில காலிகள் வந்து கூட்டம் போட்டு, கத்திவிட்டுப் போகின்றார்" களெனவும், சிவநேயர்கள் " யாரோ சில அறிவற்ற பாமரமக்கள் வந்து கூப்பாடு போடுகின்றார்" களெனவும், அதைப் பற்றி யாரும் கவனிக்கப்படா தெனவும் சொல்லிக்கொண்டு, இளைப்பாரு வதாகக் கேள்விப்பட்டேன். ஆதலால்தான், இந்தக் கூட்டத்தில் வந்திருக்கும் காலிகளும் அறிவற்ற பாமர மக்களுக்கும் யார் யார் என்பதை தெரிவிப்ப தற்காகவும், இதிலிருந்து இந்தப்படி சொன்னவர்கள் யாராயிருக்கக் கூடுமென் பதை உங்களையே யூகித்து அறிந்து கொள்ளச் செய்வதற்காகவும் சில வார்த்தைகள் பேசுகின்றேன். திரு. சண்முகம் அவர்கள் ஒரு பணக்காரரும், இயந்திர சாலை முதலாளியும், நிர்வாகியுமாவார். அவர் பி.ஏ.பி.எல். பட்டம் பெற்ற படிப்பாளியாவார், நான்கு ஜில்லாக்களுக்கு பிரதிநிதியாக இந்திய சட்டசபை அங்கத்தினருமாவார். அது மாத்திரமல்லாமல், இந்தியாவின் பிரதிநிதிகள் அடங்கிய இந்திய சட்டசபைக்கு உபத்தலைவருமாவார். உயர் திரு. காந்தி முதலியவர்கள் செல்லும் வட்டமேஜை மகாநாட்டிற்கு இந்திய பிரதிநிதியாக செல்ல தெரிந்தெடுக்கப்பட்டவருமாவார். தமிழ்நாட்டி லிருந்து எப்பொழுதும் திரு. ஐயங்கார்களே இந்திய சட்டசபைக்குச் செல்வதாக யிருந்த வழக்கத்தை, இவர் ஒருவர்தான் மீறி, அங்கு போனவரும், மற்றவர் களையும் ஒவ்வொரு ஐயங்கார்களாக ஒழித்துக்கொண்டு வரும்படியாக ஏற்பாடும் செய்தவருமாவார். திரு.-ஷண்முகம் அவர்கள் பள்ளியில் படிக்கும் பொழுது முதலே, நல்ல அறிவாளியென்றும், பேச்சாளியென்றும் தங்கப் பதக்கமும், போட்டிப்பரிக்ஷை வெற்றி பத்திரமும் பெற்றவர். அவர் வக்கீல் தொழிலிலும் பிரபலமும் சாமார்த்தியமும் பொருந்தியவர். மாதம் 3000 ரூபாய் சம்பளமுள்ள சர்க்கார் உத்தியோகம் கிடைக்க விருந்ததை வேண்டாமென்று சொன்னவர். இவைகள் மாத்திரமல்லாமல் சுயமரியாதை இயக்கக் கொள்கை களை காங்கிரஸ் ஒப்புக்கொள்ளா விட்டால் தான் காங்கிரசில் இருக்க மாட்டே னெனவும் சொன்னவர். அன்றியும், சுயமரியாதை இயக்கம், நாஸ்தீக இயக்க மல்லவென்று எங்கும் பேசி, வெற்றிபெற்று வருபவர். ஆகவே, இப்படிப்பட்ட பிரமுகர்கள் கலந்து, தலைமை வகித்து நடத்தப்படும் இந்த மகாநாடு யாரோ இரண்டுகாலிகள் வந்து பேசிவிட்டு போனதாகுமா யென்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்றுதான் இதைச்சொன்னேன். மற்றும், சுய மரியாதைச் சங்கத் தலைவராகிய டபுள்யூ.பி.ஏ சௌந்திரபாண்டியன் அவர் களும், மற்றும் அவர்போன்ற இரண்டொரு கனவான்களும் இதில் கலந்து உழைப் பதையும் நீங்கள் பார்க்கின்றபோது, இந்த ஊரிலுள்ள காலிகளில்லாத பணக்காரர்களென்பவர்களுக்கு இவர்கள் எந்த விதத்திலாவது சிறிதும், இளைத்தவர்கள் அல்லவென்பது உங்களுக்கு நன்றாய்த்தெரியும். அறிவு விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் இந்தப்பக்கத்திலுள்ள, எந்தப்பெரிய ஆள் என்பவரின் அறிவிற்கும், சுயமரியாதை இயக்கத்திலுள்ள எந்த சாதாரண ஆளின் அறிவும் குறைந்ததல்ல வென்பதை நீங்கள் நன்றாக இதுவரை உணர்ந்திருப்பீர்கள். ஏதோ, இந்தப் பக்கங்களிலுள்ள சில அதிகாரி களை தங்களுடைய பணச் செருக்கினால் சுவாதீனப் படுத்திக் கொண்டிருக் கின்றோம் என்கின்ற ஆணுவத்தால், சில்லரைத் தொல்லைகள் விளைவிக் கின்ற ஒரு காரியத்தைத் தவிர வேறு எந்த விதத்திலும், இந்த மகாநாடுகள் பாதிக்கப்படகூடியதல்ல. ஆகையால், இச்சிறு உரைகளோடு திரு. ஷண்முகம் அவர்களை இம்மகாநாட்டின் தலைமை வகித்து, நடத்திக் கொடுக்கும்படியாக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

*குறிப்பு : காரைக்குடியில் 07.04.1931 அன்று நடைபெற்ற செட்டிமார் நாட்டு முதலாவது சுயமரியாதை மாநாட்டில் தலைவரை முன்மொழிந்து ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 19.04.1931**





RangaRakes tamilnavarasam.com

# செட்டிநாடு மகாநாடு

செட்டிமார் நாட்டு மகாநாடு காரைக்குடியில் இம்மாதம் 7,8 தேதிகளில் இந்திய சட்டசபை அங்கத்தினரும் உபதலைவருமான கோவை உயர்திரு. ஆர்.கே.-ஷண்முகம் அவர்கள் தலைமையில் நடந்தது. மகாநாட்டின் நடவடிக்கைகள் மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. மகாநாட்டின் தீர்மானங்கள் பெரிதும் மிகவும் சாதாரணமான தீர்மானங்களேயாகும். ஏனெனில் செட்டிநாடு என்பது மிகுதியும் செல்வவான்கள் ஆதிக்கத்திலிருப்பதாகும். மேலும் அவர்கள் புராண மரியாதையில்மிகுதியும் ஈடுபட்ட வைதீகச் செல்வவான்கள் கூட்டத்தில் சேர்ந்தவர்களாவார்கள். அதுமாத்திரமேயல்லாமல் சமூக வாழ்வில் தங்களை வைசிய குலத்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதின் மூலம் வர்ணாசிரம தர்மத்தை ஆதரித்து ஜாதிப் பெருமை அடைகின்றவர்களுமாவார்கள்.

இந்த நிலையில் அதாவது பணத்திமிர், மதத்திமிர், ஜாதித்திமிர் ஆகிய மூன்றிலும் சூழ்ந்து மகிழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் ஆதிக்கத்தில் உள்ள அந்த நாட்டில் இந்த அளவுக்காவது தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்ற முடிந்ததே என்கின்ற மகிழ்ச்சியின் மீதே பலர் திருப்தி அடைகின்றார்கள். ஆனாலும் பொதுமக்கள் முன்னிலையில் இந்த மகாநாட்டை ஒரு சுயமரியாதை மகாநாடு என்று சொல்லுவதென்றால் பரிகாசத் திற்கிடமாகத் தான் இருக்கும் என்பதை நாம் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும்.

ஏனெனில் புராண மரியாதைக்காரர்கள் கூட்டமாகிய பல்லாவரத்து மகாநாட்டுத் தீர்மானங்களைத்தான் வேறு பாஷையில் எழுதப்பட்டது என்று சொல்லலாமே தவிர மற்றபடி உண்மையான சுயமரியாதை மகாநாட்டுத் தீவிர தீர்மானங்களை அனுசரித்தது என்று சொல்ல முடியாது.

ஆனபோதிலும் செட்டிமார் நாட்டில் ஒரு மகாநாடு அதாவது சுயமரியாதை என்னும் பேரால் கூட்டப்படுவது என்பது லேசான காரியமல்ல என்பதை நேரில் இருந்து பார்த்தவர்கள் தான் அறியமுடியும். மகாநாடு ஆரம்பிப்பதற்கு முன்னிருந்தே இரண்டு வருஷகாலமாய் இம்மாதிரி பிரசாரத்திற்கே அங்கு போதிய சௌகரியமில்லாமல் எவ்வளவோ கஷ்டத்திற்கிடையில் அங்குள்ள நண்பர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் வேலை செய்து வந்து காரியத்திலும் துணிவாய் இரண்டு மூன்று கலப்பு மணம், விதவை



மணம் முதலியவைகள் செய்து பல பத்திரிகைகளும் துண்டுப் பிரசுரங்களும் பதினாயிரக்கணக்காய் வழங்கி கிராமம் கிராமமாய் சென்று கலகம் கலவரம் முதலியவைகளுக்கெல்லாம் தலைகொடுத்துப் போதாக் குறைக்கு போலீசார் தொல்லைக்குமாளாகி 144 உத்திரவு முதலியவைகள் எல்லாம் தாராளமாய் பெறப்பட்டு மற்றும் பல கோர்ட்டு விவகாரங்களிலும் அதாவது சிவிலிலும் கிரிமினலிலும் இழுத்து விடப்பட்ட இவ்வளவையும் சமாளித்து இவ்விதத் தொல்லைகளுக் கிடையிலேயே இந்த மகாநாடு கூட்டப்பட்டிருக்கின்றதென்றால் இதன் கஷ்டம் எவ்வளவு என்பதை வாசகர்கள் தானாகவே உணரலாம். இந்தமகாநாடு விஷயத்தில் "குமரன்" பத்திராதிபர் திரு. சோ. முருகப்பா அவர்கள் சகலத்திற்கும் துணிந்து தனது சொத்தையும் மானத்தையும் சரீரத்தையும் ஒரு துரும்பாய் நினைத்து எது எப்படியானாலும் இயக்கமே பிரதானமானது என்று எண்ணிய துணிவான எண்ணமே இவ்வளவுக்கு அந்த இடத்தில் மகாநாடு நடத்த முடிந்தது.

ஆகவே இவைகளைக் கவனித்தவர்களுக்குத் தீர்மானத்தின் வேகத்தைவிட மகாநாடு இவ்வளவு செல்வாக்காகவாவது நடந்ததென்பதே மிகவும் வெற்றிகரமாகவும் பயனளிக்கக் கூடியதாகவும் தோன்றும் என்பதில் யாருக்கும் ஆட்சேபணையிருக்காது. இவை ஒருபுறம் இப்படி இருந்த போதிலும் இம்மகாநாட்டிற்குத் தலைமை வகித்த திரு. ஆர்.கே.ஷண்முகம் அவர்களின் தலைமைப் பேருரையானது போற்றத்தக்கதேயாகும். அதின் ஒவ்வொரு வாக்கியமும் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் சுயமரியாதை இயக்கத்தின் அவசியமும் அது செய்திருக்கும் வேலையும் அது இந்த நாட்டுக்கு இந்தக் காலத்திற்கு எவ்வளவு ஏற்றதும் முக்கியமான தென்பதும் நன்றாய் விளங்கும். அதோடு இவ்வியக்கம் அரசியல் இயக்கங்களோடு முறண்படுவதாகக் காணப்படுவதற்கும் தகுந்த சமாதானங்கள் கிடைக்கும்.

அன்றியும், பாமர ஜனங்கள் அரசியல்காரர்களுடையவும், அரசியல் பத்திரிகைக்காரர்களுடையவும் வார்த்தைகளையும் எழுத்துக்களையும் ஆழ்ந்து யோசித்துப்பார்த்து உண்மை கண்டு பிடிப்பதற்குப் போதிய ஞானமில்லாததால் "சுயமரியாதை இயக்கம் அரசியலில் மிகவும் பிறப்போக்காய் இருக்கின்றது" என்கின்ற பேச்சுக்களைக் கிளிப்பிள்ளைகள் போல சுயஞானமின்றிச் சொல்லிக்கொண்டிருக்கின்றவர்களுக்கெல்லாம் திரு. ஷண்முகம் அவர்களின் தலைமை உரையானது ஒரு பெரிய மயக்கத்தைத் தீர்க்கும் மருந்தாக விளங்கும். அதாவது திரு.ஷண்முகம் அவர்கள் தலைமை உரையில் காணப்படும் வாக்கியங்களாவது:-

> "சுயமரியாதை இயக்கம் துவக்கப்பட்டதற்கு காரணம் இந்நாட்டு மக்களுக்கு சுயமரியாதை இல்லை" என்பதோடு, "பொதுவாகவே தென் னாட்டு மக்களுக்கு சுயமரியாதை இல்லை" நமது நாட்டு மக்களின் தருமத்தின் மூலமாகவே நமது சுயமரியாதை கெடுகின்றது.



RangaRakes tamilnavarasam.com

“கடவுளைப்பற்றிக் கவலை கொள்ளாதே என்பது நாஸ்திக மாகாது” “புத்த பகவானும் கடவுளைப்பற்றிக் கவலைப்படாதே” என்றுதான் சொல்லி யிருக்கிறார்.

“மக்கள் தங்களது முட்டாள் தனத்தை மாற்றி அறிவு பெறவே நேர மில்லாமல் இருக்கும்போது கடவுளைப்பற்றிய யோசனையில் ஏன் நேரத்தைப் பாழாக்கவேண்டும்?”

“செட்டிமார்களின் தரும முயற்சிகளே நமது சுய மரியாதையை பங்கப்படுத்துகின்றது”

“இந்தியாவில் வேறு எங்கும் தென்னாட்டைப் போல் இவ்வ ளவு சுய மரியாதையற்ற தர்மம் நடத்தப்படுவதில்லை.”

“தென்னாட்டுக்கே சுய மரியாதை இயக்கம் மிகவும் அவசியம்.”

“மக்களைக் கோவில்களும், புராணங்களுமே அறியாமை யிலும், அடிமைத்தனத்திலும் ஆழ்த்துகின்றன என்று முதல் முதல் சொன்னவர் புத்தரேயாவார்.”

“புரோகிதர் தந்திரத்தினாலும், சூட்சியினாலும் புத்தரின் உபதேசங்கள் தலையெடுக்க முடியாமல் போய்விட்டது.”

“ஆனாலும் இப்போது 10 வருஷமாக மறுபடியும் அவ் வுணர்ச்சிகள் பரவிவரத் துடங்கிவிட்டன.”

“இவ்வுணர்ச்சியை”ப் பரப்பினவர் பெரியார் ராமசாமியாரே யாவார். நான் இவ்வியக்கத்தைப்பற்றி மகாத்மா காந்தி இடத்தில் கூறினேன்.

அவர் இவ்வியக்கத்தலைவர் யாரென்று என்னைக்கேட்டார். நான் இராமசாமிப்பெரியார் என்று சொன்னேன். உடனே அவர் அப்படியாகத் தான் இருக்கமுடியும் என்று தானும் நினைத் தாகக் கூறினார்.

இராமசாமியார் சுயமரியாதை இயக்கத்தை ஏன் ஆரம்பித்தார் என்ற பிரசினை வந்தபோது, பக்கத்தில் இருந்த ஒரு நண்பர் திரு. ராமசாமி காங்கிரசில் இருக்கும் போதே அவருக்கு இந்த உணர்ச்சி உண்டு என்று சொன்னார்.

இது முற்றிலும் உண்மை, ஏனெனில் அவர் நீண்ட நாளாகவே பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி உடையவர் என்று நான் அறிவேன்.”



“விடுதலைபெற்ற நாடுகள் எல்லாம் சுயமரியாதை இயக்கத் தால் தான் விடுதலை பெற்றிருக்கின்றது.”

“மேல்நாட்டில் முதலாவது சுயமரியாதை இயக்கம் இது போலவே சமுதாய சீர்திருத்தமாகத் தோன்றிற்று. அதாவது கத் தோலிக்க கிறிஸ்துவர்கள் தொல்லை பொறுக்கமாட்டாமல் மார்ட்டின் லூதர் என்னும் பெரியார் ஓர் இயக்கத்தை தோற்று வித்தார்.”

“பிறகு இரண்டாவதாக பிரான்சில் அரசியல் கிளர்ச்சியாகத் தோன்றியது. அதிலும் நமது கொள்கைகளே சிறந்து விளங்கின.”

“மூன்றாவதாக ருஷியாவில் சுயமரியாதை இயக்கம் ஆரம் பித்து அது சமதர்ம இயக்கமாக மாறியது.”

“இவ்வாறு இங்கிலாந்து, பிரான்சு, ஜர்மனி, ருஷியா முதலிய நாடுகளில் ஏற்பாடா கிய கிளர்ச்சிகளை ஆராய்ந்து பார்த்தால் அவற் றின் மூலாதாரம் நமது சுயமரியாதை இயக்க கொள்கைகளே தான் என்பது புலப்படும்”

“மதநூல்கள் யாவும் மனிதனுடைய சுயமரியாதைக்கு முர ணானவைகள்.”

“ஜாதிபேதம் அழிவதால் போய்விடும் மதமும், எல்லா மக்க ளும் சரிசமானம் என்பதால் போய்விடும் கடவுளும் ஒழிவதா யிருந் தால் அதற்கு நாங்கள் (சுயமரியாதைக் காரர்கள்) ஜவாப்பு தாரிகள் அல்ல.”

“சீர்திருத்தத்திற்கு மதமும் கடவுளும் முட்டுக்கட்டையா யிருந்தால் அவைகளை அழிக்கவே நாங்கள் முயலுவோம்.”

“ஜாதி வித்தியாசம், ஜனநாயகத்திற்கு முற்றிலும் விரோத மானது.”

“சமத்துவம் விரும்பும் நாம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்பது பலர் குற்றமென்கிறார்கள். அதற்கு சமாதானம் சொல்ல ஆரம்பித்தால் மேல் நாட்டு பழக்கவழக்கங்களை காட்டி அங்கு வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் இல்லை என்கிறார்கள். மேல்நாடுகளில் கீழ்மேல் ஜாதி வித்தியாசமிருக் கின்றதா என்றால் தலைகுனிந்து முணுமுணுகின்றார்கள்.”

“இந்து மதத்தில் பெண்களுக்கு தகப்பன் சொத்தில் பாத்திய மில்லை. இப்படிச் சொல்லுகின்றவர்கள் மதவாதிகளே யாகும்.”

“தான் பெற்ற பெண்ணிற்கு சொத்தில்லாமல் எவனோ ஒருவ



RangaRakes tamilnavarasam.com

னுக்கு பிண்டம் போடுவதற்காக என்று சொத்துக்களை கொடுத்துவிட வேண்டுமாம். நமது சொத்துக்கு இருக்கும் பாத்திய தையைப் பாருங்கள்."

"இந்தமாதிரியாக மதம் பிண்டத்தோடு முடிவதாக யிருந்தால் மதம் அவசியமா என்று கேட்கின்றேன்."

"மகாத்மாவின் ( காங்கிரசின் ) 20 திட்டங்களில் ஒன்று இந்த வைதீக மதத்தைக் காப்பதற்கே அமைத்த தாகும்"

"இதற்கு பெயர்தான் மதநடுநிலைமை யாகும்."

"இந்த மத நடுநிலைமையைத்தான் நாம் இன்று அழிக்க வேண்டும் என்கின்றோம்."

"மத நடுநிலைமையுள்ள சுயராஜியம் கிடைத்தாலும் கிடைக்கா விட்டாலும் பலன் ஒன்றே யாகும்."

"லண்டன் மகாநாட்டில் மத நடு நிலைமைதான் தலை விரித்தாடும்."

"நான் "ஜாதிபேத மிருக்ககூடாது" "பொட்டுக்கட்டக் கூடாது" என்பதான இரண்டு தீர்மானங்கள் கொண்டுவந்திருக் கின்றேன்."

"மகாத்மா கூறும் சுயராஜியம் வந்தால் எனது மசோதாக்கள் ஒரு சிலராலேயே தூக்கி எறிந்துவிடப்படலாம்."

"சாதாரணமாய் 10 வருஷங்களில் ஏற்படவேண்டிய சீர்திருத் தங்கள் ஆங்கில அரசாங்கத்தில் மத நடுநிலைமையாலேயே 150 வருஷங்களாகியும் இன்னும் ஏற்படவில்லை."

"மதநடு நிலைமை வகிக்கும் அரசாங்கமும், சுயராஜியமும் ஒழிந்தால் அல்லது நமக்கு உண்மை விடுதலை வரப் போவ தில்லை."

"மதநடு நிலைமை ஒழிக்கப்படாத சுயராஜியம் நமக்கு வேண்டவே வேண்டாம். அது நமக்கு மிகவும் ஆபத்தானதாகும்."

"சுயராஜியத்திற்குமுன் நமது சுயமரியாதையையும், சக்தியையும் பெருக்கிக்கொள்ள வேண்டும்."

முடிவுரையில் கூறியதாவது :-

"நமது தீர்மானங்களைப் பார்த்தவர்கள் இவற்றுள் எதை யாவது குற்றம் சொல்ல இடமுண்டானால் தைரியமாகச் சொல்ல முன்வரட்டும்."



"குழந்தைகள் பட்டினியால்வாட, கல் விக்கிரகத்தின் தலையில் பால் ஊற்றுவது அறிவுடைமையாகுமா?"

"வேறு எந்தத் தீர்மானத்தையாவது செய்து, ஆஸ்திகர் என்று பெயர் வாங்குவதைவிட, இத்தீர்மானங்கள் செய்து நாஸ்திகர் என்று பெயர் வாங்குவதே மேலானது."

"எந்தக் கட்சியின் உதவியும் நமக்குக் கிடைக்குமென்று எதிர் பார்க்கக்கூடாது."

"காங்கிரசோ,ஜஸ்டிஸ் கட்சியோ மற்ற எதுவும் நமதியக்கத் திற்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்க வேண்டியதில்லை."

"எகிப்து, அயர்லாந்து, ருஷியா, துருக்கி, சீனா முதலிய நாடுகள் 25 வருஷத்திற்கு முன்பே சுயமரியாதை இயக்கம் துடங்கி விட்டது."

"நாம் இப்போதுதான் ஆரம்பித்திருக்கின்றோம்."

"வாலிப உலகம்தான் அந்நாடுகளில் வெற்றியை அளித்தது" என்று பேசினார்.

இதைப்பற்றி வாசகர்களை ஒன்று கேட்கிறோம். அதாவது,

சென்ற வாரம் குறிப்பிட்ட தூத்துக்குடி சுயமரியாதை மகாநாட்டுத் தலைவர் திரு. எஸ். இராமநாதன் அவர்கள் பிரசங்கத்தையும் இவ்வாரம் குறிப்பிட்டிருக்கும் செட்டியார் நாட்டு சுயமரியாதை மகாநாட்டுத் தலைவர் திரு. ஆர்.கே. ஷண்முகம் அவர்கள் பிரசங்கத்தையும் படித்துப்பார்த்தபின் இதைப்பற்றி யார் என்ன ஆட்சேபனை சொல்லக்கூடும் என்பதே நமது கேள்வி.

அரசியலைப் பற்றியும், மத இயலைப்பற்றியும் இருவரும் சொல்லி யுள்ளவைகள் தான் சுயமரியாதை இயக்கத்தின் மத இயல் அரசியல் சம்பந் தமான ஜீவநாடிகளாகும். எவ்வித தேசீய வாதியும், மதவாதியும் இந்தத் தத்துவத்திற்கு வந்தால்தான் இந்தியாவில் தேசீயமோ, மதமோ இருக்க முடியுமே அல்லாமல் மற்றபடி அதுவரையில் ஒரு காரியமும் நடைபெற சுயமரியாதை இயக்கம் அனுமதிக்கப் போவதில்லை என்பது மாத்திரம் உறுதி. மறுப்பு வேலையிலும், நாச வேலையிலுமே அது இறங்கி, முடியா விட்டால் தானே முடிவு பெற்றுவிடுமேயொழிய ராஜி என்பதோ, பின்னால் போவ தென்பதோ அதனிடம் யாரும் எதிர்பார்க்க முடியாது.

போதாக்குறைக்கு சென்னையில் இந்த வாரம் அதாவது 11-ந் தேதி பச்சையப்பன் மண்டபத்தில் கூடிய மாதசம்பளக்கார சிப்பந்திகள் மகா நாட்டில் ( தொழிலாளர் மகாநாட்டில் ) தலைமை வகித்த பம்பாய் மாகாணப்



RangaRakes tamilnavarasam.com

பிரமுகர் திரு.ஜம்நாதாஸ்மேதா அவர்களின் தலைமை உபன்யாசத்தில் குறிப்பிட்டிருக்கும் இரண்டொரு வசனங்களையும் இங்கு குறிப்பிடு கின்றோம். அதாவது, ( சுதேசமித்திரனில் காண்கிறபடி )

"பணக்காரர்கள் தாங்களாக தங்களிடம் சேர்ந்திருக்கும் பணக்குவி யலை கொடுக்கச் சம்மதிக்க மாட்டார்கள். அவர்களுக்கு சொத்து சேர்ந்த விதம் பலாத்காரமாய் படையெடுத்து நிலங்களை வலுவில் பிடுங்கிக் கொண்டு அவர்களிடம் வாடகை ( குத்தகை ) என்று வசூலிக்கப்பட்டதால் சொத்துக்கள் குவியலாய்க் குவிந்து விட்டது."........

"இவ்விதம் நிலச்சொந்தம் கொண்டாடுவதால் அவர்கள் ( நிலச் சுவான்தார்கள் ) ஒரு வேலையும் செய்யாமல் ஏராளமாய் பணம் சேர்த்துக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டு மேலும் கூறுவ தாவது,

"மக்களுக்கு சாசுவதமான நன்மை ஏற்படவேண்டுமானால் பின் வரும் மூன்று முறைகளில் ஒன்றைக் கையாளவேண்டும்."

1."சோவியத் ருஷியாவில் செய்ததைப்போல நிலச்சுவான்தாரர் களிடமிருந்து பலாத்காரமாகச் சொத்தை கொடுக்குமாறு செய்வது.

2. படிப்படியாக அபேதவாத (சமதர்ம) கொள்கைகளைக் கையாளுவது.

3. தற்கால அமைப்பை மாற்றாமல் பெரிய பணக்காரர்களுக்கு அதிக வரியைப்போட்டு, அந்த வருமானத்தைக்கொண்டு கல்வி வசதி, முனிசிபல் சௌகரியம், பிரசவ உதவி, வயோதிகர்களுக்கு உபகாரச் சம்பளம் முதலியன கொடுப்பது."

என்று சொல்லிவிட்டு, ஆனால் பலாத்காரத்தினால் செய்யும் காரியம் எதுவும் பலன் தராது என்றும் குறிப்பிட்டு இருக்கிறார். தவிரக் கடைசியாக அவர்

"தொழிலாளிகளுக்கு எல்லாத் தொழில்களிலும் லாபத்தில் பங்கு கொடுக்குமாறு சட்டமியற்றவேண்டும்." என்றும் சொல்லியிருக்கிறார்.

எனவே இதிலிருந்து தொழிலாளிகள் விஷயத்திலும் சுயமரியாதை இயக்கத்தின் தத்துவத்தையேதான் திரு. ஜம்னாதாஸ்மேதா அவர்களும் எடுத்துக்கூறி இருக்கின்றார் என்பது புலனாகும்.

ஆகவே இவைகளை யெல்லாம் உற்று நோக்கினால் இந்தியாவின் 35கோடி மக்களை மூன்றரைக் கோடி வெள்ளைக்காரர்கள் துப்பாக்கி, பீரங்கி,



வெடிகுண்டு, ஆகாயக்கப்பல் முதலியவைகளை வைத்துக்கொண்டு ஆட்சி புரியும் கொடுமையைவிட துப்பாக்கி பீரங்கி முதலியவைகளில்லாமல் 35 கோடி மக்களை ஒரு கோடி பார்ப்பனர் மத விஷயத்திலும், சமூக விஷயத் திலும் அடிமையாக்கி நாகரீக மற்ற முறையில் கொடுமையாய் எவ்வித நன்மையும் புரியாமல் ஆட்சி புரிவதையும்,

பொருளாதார இயலில், 35 கோடி மக்களை ஒரு கோடி பேர்கள் எஜமான், லாபம், வட்டி, குத்தகை, வாடகை என்கின்ற வகையில் மிக்க கொடுமையாய் அடக்கி மிருகங்களைவிட கேவலமாய் நடத்தி வருவதை யும் கவனித்தால் வெள்ளைக்கார ஆட்சியைவிட பின்கண்ட பார்ப்பனீய, பணக் கார ஆதிக்க ஆட்சி மிகவும் சகிக்கமுடியாத கஷ்டமாயிருப்பதை, அறிவும் சுயமரியாதையுமுள்ள ஒருவன் சுலபத்தில் அறிந்துகொள்ளலாம். இந்த நிலைமையில் தான் காங்கிரஸ் சம்பந்தமான பலரும், பார்ப்பனர்களும், அவர்களது சிஷ்யர்களான தேசீய வீரர்களும் நமது சுயமரியாதை இயக் கத்தை சர்க்காருக்கு அனுகூலமான இயக்கமென்று பழிசுமத்தி விஷமப் பிரசாரம் செய்து வருகின்றார்கள். இதை நம்புவதற்கு போதிய மூடமக்கள் தேசத்தில் இல்லையானாலும் பூனை தான் கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடித்தால் எப்படி உலகமே கண் மூடியிருக்குமென்று கருதுமோ அந்தப் பான்மையைப் போல் நடந்து கொண்டு வருகின்றார்கள். என்றாலும், இதன் யோக்கியதையும், சீக்கிரத்தில் வெளியாகக் கூடிய சந்தர்ப்பங்கள் தானாகவே ஏற்படும்படியாக சுயமரியாதை உணர்ச்சி மக்களுக்கு வலுத்து வருவதால் இப்படிப்பட்டவர்கள் இனி வேறு தொழில் பார்த்துக்கொள்ளவோ அல்லது இதன் நிழலில் மறைந்து கொள்ளவோ இல்லாவிட்டால் வேறு சக்தியற்ற வர்களாகிவிடுவார்கள் என்பது நமது உறுதி.

இருந்தபோதிலும் சுயமரியாதை இயக்கத்திற்கும் சர்க்காருக்கும் இருந்துவரும் – இருக்கப்போகும், சம்மந்தத்தை தைரியமாக இந்த சமயத்தி லேயே வெளியிட்டு விடுகின்றோம்.

அதாவது,

பார்ப்பனீயத்தையும், பிரபுத்தன்மையையும் கொண்ட சுயராஜ் யத்திற்கு பாடுபடும்காந்தீயத்தை எதிர்க்கும் முறையில் சர்க்கார் தயவை சுயமரியாதை இயக்கம் ஒரு அளவுக்காவது எதிர்பார்க்க வேண்டி வந்தால் தாராளமாய் எதிர்ப்பார்த்துத்தான் தீரும்.

பணக்காரத் தன்மையையும், பார்ப்பனீயத்தையும் ஒழித்து சமதர்ம மும், பொது உடமைத் தத்துவமும் கொண்ட சுயராஜ்யமாகிய மனித தர்ம சுயராஜ்யம் பெறுவதற்கு இந்த சர்க்கார் முட்டுக் கட்டையாயிருந்தால் அதை அழிக்கும் வேலையில் சுயமரியாதை இயக்கம் ஒரு சிறு வேர் அற்றுப் போகும் வரையில் அதில் ஈடுபட்டிருக்கும். பிரிட்டிஷ் ஆக்ஷியானது எப்படி



RangaRakes tamilnavarasam.com

இருந்த போதிலும் அது பார்ப்பனீய ஆட்சியைவிட மோசமான தல்ல என்பது நமது அபிப்பிராயமாகிவிட்டது. அதுமாத்திரமல்லாமல் திரு.காந்தி கேட்கும் ராமராஜிய ஆட்சியைவிடமோசமானதல்ல என்ப தோடு பிரிட்டிஷ் ஆட்சி முதலாளிகள் ஆட்சி என்கின்ற விஷயத்தில் சுயமரியாதை இயக்கத்திற்கு சிறிதும் சந்தேகமில்லை. பார்ப்பனீய ஆட்சியும், இராமராஜ்யமாகிய காந்தீய ஆட்சியும் ஒழிந்த பிறகுதான் முதலாளிகள் ஆட்சியை ஒழிக்கமுடியும். இவை இரண்டும் அதற்குத் தூண் களாய் இருக்கின்றன. ஆகவே அதன் முறை மூன்றாவதாகும். இவைகளை யெல்லாம் அடியோடு விட்டு விட்டு நேரே பிரிட்டிஷ் ஆட்சியில் கையை வைப்பது பார்ப்பனீய ஆட்சிக்கும் காந்தீய ஆட்சிக்கும் உறம் தேடுவதே யாகும். பார்ப்பனீயமும், காந்தியமும் தான் இந்தியாவில் பிரிட்டிஷாரை வரவழைத்ததும், இன்னமும் அவர் களையே ஆட்சி செய்து கொண்டிருக் கும்படி உதவிபுரிந்து கொண்டிருக் கின்றதுமாகும் என்பது சுயமரியாதை இயக்கத்தின் முடிவான அபிப்பி ராயமாகும்.

உதாரணம் வேண்டுமானால் பிரிட்டிஷாரின் எந்த அக்கிரமத்திற்கும், எந்த கொடுங்கோல் ஆட்சிக்கும் பார்ப்பனீயம் உதவி புரியவில்லை என்று யோசித்துப் பாருங்கள். இந்தியாவில் பார்ப்பனீயம் வெகு நாளைக்கு முன்பே ஒழிந்திருக்குமானால் பிரிட்டிஷ் இருந்த இடம் தெரியாமல் உலகத்தில் மறைந்திருக்கும். ஆகையால்தான் சுயமரியாதை இயக்கம். இப்போது பார்ப் பனீயத்திடமும், பிரபுத்தன்மையிடமும் வேலைசெய்ய வேண்டுமென்கிறது. பிரபுத்தன்மை ( முதலாளித் தன்மை ) ஒழியும்போது யாருடைய முயற்சியு மில்லாமல் பிரிட்டிஷ் ஆதிக்கம் விகிதாச்சாரம் ஒழிந்து தான் தீரும். அல்லது பார்ப்பனீயத்தீற்கும் பிரபுத்தன்மைக்கும் விரோதமாய் வேலைசெய்யும் போது பிரிட்டிஷ் ஆதிக்கம் குறுக்கிட்டால் அதை யும் சேர்த்து அழிக்கத்தான் சுயமரியாதை இயக்கம் வேலை செய்யும். ஆகவே உண்மை விடுதலைக்கு மார்க்கம் தேடுவதை விட்டுவிட்டு போலிக் கூச்சல் போடும் வேலையில் சுயமரியாதை இயக்கம் ஒருநாளும் இரங்காது என்பதை வாசகர்கள் உணர்வார்களாக.

**குடி அரசு - தலையங்கம் - 19.04.1931**

## * செட்டிமார் நாட்டு முதலாவது சுயமரியாதை மகாநாடு - தீர்மானங்கள்

1. புதிதாக கோயில்களும், சத்திரங்களும், வேதபாடசாலைகளும், பசு மடங்களும் அமைக்கக் கூடாது. இதுவரை ஏற்பட்டுள்ளவைகளை பொதுப் பள்ளிக்கூடங்களாகவும், மாணவர்களின் விடுதிகளாகவும், குழந்தைகளுக்கு பாலுதவும் ஸ்தாபனங்களாகவும், எல்லா மக்களுக்கும் சமமாய் பயன்படும்படி மாற்றிவிடவேண்டும்.



2. கலப்பு மணம் செய்யப்பட வேண்டும்.

3. விதவைகள் மறுமணம் செய்து கொள்ள வேண்டும்.

4. சாரதா சட்டம் அமுலுக்கு வர வேண்டும்.

5. பெண்களுக்கு சொத்துரிமை ஏற்படுத்த ஒரு கமிட்டியை ஏற்படுத்த வேண்டும். அதற்காக சட்டசபையில் ஒரு மசோதா சீக்கிரத்தில் கொண்டு வரப்பட வேண்டும்.

6. பெண்களுக்கு விலை கொடுக்கும் பழக்கம் ஒழிக்கப்பட வேண்டும்.

7. கலியாணம் ஒரே நாளில் புரோகிதரின்றி சுறுக்கமாக நடைபெற வேண்டும்.

8. பல்லாவரத்து தீர்மானங்கள் பண்டிதர்களின் மனமாறுதலை காண்பிப்பதால் அவைகளைப் போற்றுகின்றது.

9. ஜாதி வித்தியாசம், தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும். அதற்காக, ஆர்.கே.ஷண்முகம் அவர்களால் இந்திய சட்டசபையில் கொண்டு வந்திருக் கும் மசோதாவை பாராட்டுவதுடன், கராச்சியில் எல்லா பொதுஸ்தலங்களிலும் எல்லா வகுப்பாருக்கும் சம உரிமை உண்டு என்கின்ற தீர்மானத்தில் கோயில் களும் சேர்க்கப்பட்டிருக்குமென நம்பி, அதைப் பாராட்டுகின்றது.

10. இப்பகுதியில் ஆதிராவிடர்கள் முதலியவர்களுக்கு இடையூறுகள் பல செய்யாமல் சாதகமாயிருக்கும் வல்லம்பர், கள்ளர், மறவர், அகமடியர், செட்டிமார்கள் முதலிய வகுப்பினரைப் போற்றுகின்றது. தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடம் பகைமை கொண்டு, கொடுமை விளைவிப்பவர்களுக்கு ஆதரவு அளிப்பவர்களை இம்மகாநாடு கண்டிக்கின்றது. இந்த ஜில்லா போலீஸ் உத்தியோகத்துக்கு, வைதீக உணர்ச்சியாவது ஜாதிப்பற்றாவது இல்லாத ஓர் பார்ப்பனரல்லாதாரை நியமனம் செய்யும்படியாக அரசாங்கத் தாரை வற்புறுத்துகின்றது.

இப்பகுதியில் ஆதிதிராவிடர்களை கொடுமைப் படுத்தியதாகச் சொல்லப்படும் குறைபாடுகளை விசாரித்து, அரசாங்கத்தாருக்கு அறிவிக்க அடியில் கண்ட கனவான்களடங்கிய கமிட்டி யொன்று நியமிக்கப்பட்டது. கமிட்டி கனவான்கள் :- உயர்திருவாளர்கள் ராமநாதபுரம் ராஜா, செட்டி நாட்டு குமாரராஜா, எஸ். முருகப்பா, எஸ்.ஆர்.எம். வெங்கடாசலம்,. எஸ்.ராமச் சந்திரன்.

11. ஜில்லாபோர்டு, தாலூகா போர்டு, முனிசிபாலிட்டி ஆகிய பொது ஸ்தாபனங்களில், கள்ளர்,வல்லம்பர், முகமதியர், ஆசாரிமார், பெண் மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட



RangaRakes tamilnavarasam.com

வேண்டுமெனவும், அரசாங்கத்தார் இதில் தலையிடவேண்டுமெனவும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

12. ஐந்து கோயில் தேவஸ்தான வறும்படியை படிப்புக்கும் வைத்திய சாலைக்கும் பயன்படுத்தவேண்டுமென டிரஸ்டிகளை கேட்டுக் கொள் ளுகின்றது.

13. ஆதிதிராவிட ஹோம் கட்டுவதற்காக 10,000ரூபாயும் 13 ஏக்கரா நிலமும் ஒருகனவானால் அளிக்கப்பட்டும் அஸ்திவாரம் போடப்பட்டும் முனிசிபாலிட்டியார் அதைப்பற்றி கவனியாதிருப்பதற்காக வருந்துவ தோடு, உடனே அதைப்பற்றி கவனிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளுகிறது.

14. குடி அரசையாவது, குமரனையாவது தினசரியாக்க வேண்டு மென கேட்டுக்கொள்ளுவது.

15. சிவகெங்கை ஜமீனில் வெள்ளாமை யில்லாத நிலங்களுக்கும், அதிக வரியுள்ள நிலங்களுக்கும் வரியைக் குறைப்பதற்கு அரசாங்கத்தார் ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றது. ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்களை பிரேரேபித்தும், ஆதரித்தும் பேசிய கனவான்கள் : - திருவாளர்கள் :- பள்ளத்தூர் மு. அ. அருணாசலம், டிலி. அருணாசலம், சொ. முருகப்பா , ஆர்.வி. சாமினாதன், பெ.ரி.சி. மெய்யப்பா, சி.மு.ரு. நாராயணன், சாமி சிதம்பரனார், கி.அ.பி. விஸ்வ நாதன், நீலாவதி, ராமாமிர்தம்மாள், சு.ப. முத்தையா, அ.கா. சொர்னனாதன், ராம. சுப்பிரமணியம், நா. வீரப்பன், அ. பொன்னம்பலனார், ஜீவானந்தம், கஞ்சமலைமூர்த்தி, ராமச்சந்திரன், அ.ரு.சு.ப. வேடப்பா, எஸ்.வி. லிங்கம், கே. அழகிரிசாமி முதலியவர்கள் ஆவார்கள்.

**குடி அரசு - 19.04.1931**



# இந்து முஸ்லீம்

இந்தியாவின் உண்மை விடுதலைக்கு இந்து முஸ்லீம் ஒற்றுமை அவசிய மென்று அடிக்கடி கூறப்படுவதோடு சுமார் 20,30 வருஷகாலமாக அதற்காக பல பெரியார்களும் பாடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இப்போது திரு. காந்தியவர்களே இவ்வேலையில் முனைந்திருக்கிறார்.

இதே காந்தியவர்களால் கொஞ்ச காலத்திற்குமுன் இந்தியாவின் விடுதலைக்கு தீண்டாமை ஒழிய வேண்டியது முதன்மையானகாரியம் என்றும் தீண்டாமை ஒழியாவிட்டால் சுயராஜ்யமே வராது என்றும் சொல லப்பட்டது. ஆனால் இப்போது அந்த பிரச்சினை வெகு சுலபத்தில் தீர்ந்து போய் விட்டது. அதாவது "சுயராஜ்யம் வந்தால் தீண்டாமை தானாகவே ஒழிந்து போகும்" என்று அவராலேயே சொல்லப்பட்டாய் விட்டது.

ஏனெனில் சுயராஜ்யம் வந்தால் மதத்தில் யாரும் பிரவேசிக்கக்கூடாது என்கின்ற நிபந்தனை காந்தி சுயராஜ்யத்தில் முக்கியமான நிபந்தனை யாதலால் "மதத்தில் தீண்டாமை இருப்பதால் அதைப்பற்றி பேசுவது மத விரோதம்" என்று ஒரு உத்திரவு போட்டு விட்டால் தீண்டாமை விஷயம் ஒரே பேச்சில் தானாகவே முடிந்துவிடும் என்று அவர் எண்ணியிருக்கலாம். ஆகை யால் இப்போது தீண்டாமையைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டிய தில்லை.

அன்றியும் திரு.காந்தியின் " சுயராஜ்யம் " இப்போது தீண்டாமை ஒழியாமலே வரவும் போகின்றது. ஏனெனில் தீண்டாதார் எனப்படுபவர் களில் தீண்டாமை ஒழியாமல் சுயராஜ்யம் வர இணங்கமாட்டோம் என்று சொல்லுவதற்கு அறிவும் வீரமுமுள்ள ஆசாமிகள் இல்லை. ஆதலால் "மத நடுநிலைமை" சுயராஜ்யமாய் தாண்டவமாடுகின்றது.

ஆனால் இந்து முஸ்லீம் விஷயம் அப்படியில்லை. ஏனெனில் லக்னோ ஒப்பந்தத்திற்கு பிறகும் வகுப்புவாரி தனித்தொகுதி பிரதிநிதித் துவத்திற்கு பிறகும் அவர்களுக்கு ( முஸ்லீம்களுக்கு ) ஒருவாறு மனிதத் தன்மை ஏற்பட்டுவிட்டது. அவர்களை சுலபமாய் இனி யாரும் ஏய்த்துவிட முடியாது. இந்து முஸ்லீம் ஒற்றுமை எவ்வளவு வாயளவு பேசினாலும் காரியத்தில் இந்துக்கள் எப்படி ஒரு சிறிதும் விட்டுக் கொடுக்காமல் முஸ்லீம்



RangaRakes tamilnavarasam.com

களை ஏமாற்றப் பார்க்கின்றார்களோ அது போலவே, முஸ்லீம்களும், முஸ்லீம் இந்து ஒற்றுமையை வாயளவில் எவ்வளவு பேசினாலும் காரியத்தில் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் இருந்துவரும் தன்மையை அடைந்து விட்டார்கள்.

இந்தத்தன்மையையுடைய இருவரையும் நாம் குற்றம் சொல்ல வர வில்லை. ஏனெனில் இருகூட்டத்தாரும் தங்களின் இரு மதத்தின் உண்மை யான தன்மைப்படியே இருவரும் நடந்து கொள்ளுகின்றார்கள். ஆகையால் மேற்படி இரு மதத்தின் பிரதானமும் தளர்த்தப்படும் வரை இந்தியா மாத்திர மல்லாமல் இவர்களையுடைய எந்த தேசமும் இப்படித்தான் நடந்து கொள்ள முடியும். சுலபத்தில் ஒற்றுமையைக்காணமுடியாது.

உதாரணமாக கொஞ்ச காலத்திற்கு முன்பு காலஞ் சென்ற லாலா லஜபதிராய் அவர்கள் "மகமதியரல்லாதாரை கொல்லவேண்டும் என்கின்ற வசனம் குரானில் இருக்கும்வரை இந்து முஸ்லீம் ஒற்றுமை சாத்தியப்படாது" என்று "சுயராஜ்யா"வில் எழுதியிருந்தது யாவருக்கும் ஞாபகமிருக்கும்.

மற்றும் இன்னும் அதுபோலவே இஸ்லாம் மதத்தை விர்த்திசெய்ய கத்தி, ஈட்டி, பலாத்காரம் ஆகியவைகளை உபயோகித்து யுத்தம் செய்யலாம் என்கின்ற தாத்பரியங்களும் அதில் இருந்து வருவதும் யாவரும் அறிந்ததே.

அதுபோலவே "ஆரியரல்லாதவர்களெல்லாம் மிலேச்சர்கள்" "ஆரியரல்லாதவர்கள் பாஷை மிலேச்சபாஷை. ஆரியரல்லாதவர்களை எல்லாம் கொல்ல வேண்டும், அவர்கள் அழிக்கப்படவேண்டும், அவர்கள் பூமிக்கு சாரம்" என்று "இந்துக்கள்" வேதத்தில் இருந்து வருவதும், சைவனல்லாதவன் கழுவேற்றப்பட்டதாய் புராணங்களில் இருந்து வருவ தும் வேதம் என்பது என்ன, புராணம் என்பது என்ன என்பதையும், இந்து தர்மம் என்பது என்ன என்பதையும் அறிந்தவர்கள் எல்லாம் நன்றாய்த் தெரிந்திருப்பார்கள்.

இஸ்ஸாம் தர்மத்தில் "இஸ்லாம் அல்லாதவன் காபர் அதாவது நாஸ்திகன் அழிக்கத்தகுந்தவன்" என்று இருப்பதும் இந்து அகராதியில் மகமதியன் என்றால் ராக்ஷதன், அசுரன் என்றும் மிலேச்சன் என்றும் இருப் பதும் யாவரும் அறிந்ததேயாகும். அன்றியும், இவைகளை இருதிறத்தாரும் அறிந்திருந்தும் இந்த விஷயங்களில் எவ்வித மாறுதலும் செய்யாமலும் அதுமாத்திரமல்லாமல் எவ்வித மாறுதலும் செய்யக்கூடாது என்கின்ற நிபந்தனையை சுயராஜியத் திட்டத்தில் ஒரு முக்கிய நிபந்தனையாகவும் வைத்துக் கொண்டு இந்து முஸ்லீம் ஒற்றுமை, ஒற்றுமை என்று கூப்பாடு போட்டால் அக்கூப்பாடுகள் வேஷக் கூப்பாடா? அல்லது ஏய்ப்புக் கூப்பாடா? அல்லது வாஸ்தவத்திலேயே போடும் ஒரு உண்மைக் கூப்பாடா? என்பதைப் பொது மக்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமாய்க் கோருகின்றோம்.



நாம் இந்தப்படி எழுதுவது சில தேசீயப் பிழைப்புக்காரர்களுக்கு பிடிக்காததுபோல் காணப்படலாம். அவர்கள் இருகூட்டாத்தாரிடையும் துவேஷ– முண்டாக்கவும் வகுப்புக் கலவரமுண்டாக்கவும் பிரசாரம் செய்வ தாக நம்மைப் பற்றி விஷமப் பிரசாரமும் செய்யலாம். ஆனாலும், அதைப் பற்றி நாம் சிறிதும் கவலைப்படப் போவதில்லை. ஆனால் நாம் எழுதுவது உண்மையா இல்லையா என்று பரிசோதித்துப்பார்க்க வேண்டுமென்றுதான் கவலைப்படுகின்றோம்.

இம்மாதிரியான இரண்டு மதத்தையும்தான் இருகூட்டத்தார்களும் வளர்க்க வேண்டுமென்றும், இருமதத்தாரும் அவரவர்கள் மதத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்றும் இந்தியாவின் ஏக தலைவரான திரு.காந்தியவர்கள் கூறுகின்றார்கள். இது இந்துக்களிலும் முஸ்லீம்களிலும் உள்ள மத பக்திக்காரர்களைத் திருப்தி படுத்தி திரு. காந்தியை மகாத்மா என்று ஒப்புக்கொள்ளவும் உதவும். ஆனால்இது இருசமூகத்தினுடையவும் ஒற்றுமைக்கு சாத்தியப்படக் கூடியதா என்று யோசித்துப் பார்க்கும்படி பொதுஜனங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இரு சமூகத்திலுள்ள வாலிபர்களும் ஒன்று கூடி இரு மதங்களிலு முள்ள வேஷத்தையும், துவேஷத்தையும் ஒன்றுக்கொன்று அடிப்படையா யுள்ள மாறுபாட்டையும் ஒழிக்க முன்வந்து துவேஷமும் வேஷமும் மாறுபாடும் கற்பிக்கும் பாகம் எதிலிருந்தாலும் அவை யார் சொன்னதாக இருந்தாலும் தைரியமாய் எடுத்தெறிந்துவிட்டு ஒற்றுமைக்கான திட்டங் களைப் புகுத்தி இருவரும் தங்களை மனிதத் தன்மை மதக்காரர்கள் (கொள்கைக்காரர்கள்) என்று சொல்லிக் கொண்டு புரப்பட்டால் இந்தியா மாத்திரமல்லாமல், இந்து முஸ்லீம்கள் மாத்திரமல்லாமல் உலகமெல்லாம் உலகத்திலுள்ள சமூகமெல்லாம் இந்தக் கொள்கையின்கீழ் அன்புத் தன்மை யோடு சகோதர வாஞ்சையோடு ஆட்சி புரியப்படலாம். அதில்லாமல் அவரவர்கள் மதத்தைப் பலப்படுத்திக்கொண்டு அவைகளுக்குச் சிறிதும் பங்கமோ மாறுபாடோ இல்லாமல் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படுத்தலாம் என்பது சிறிதும் பயன் படாததாகும். அந்தப்படி ஏதாவது ஒருசமயம் ஒற்றுமை ஏற்பட்டு விட்டதாக யாராவது சொல்லுவதானாலும் சிலருடைய தனிப்பட்ட நன்மைக்கு உதவுமேயல்லாமல் இந்திய மக்களின் பொது நன்மைக்குச் சிறிதும் உதவாது என்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக கூட்டப்பட்ட முஸ்லீம் மகாநாட்டுத் தீர்மானங்களைப் பார்த்தால் ஒற்றுமையின் தத்துவம் எவ்வளவிலிருக்கிறது என்பது விளங்கும்.

அவையாவன: –



RangaRakes tamilnavarasam.com

## தீர்மானங்கள்

1. "இந்துக்கள் வீண் ஆதிக்கம் செலுத்த விரும்பியதால் காசி, ஆக்ரா, மிர்ஜாப்பூர், கான்பூர் முதலிய பல இடங்களில் வகுப்புக்கலவரங்கள் ஏற்பட்டதைக்குறித்து வருந்துகிறோம். காங்கிரஸ் வகுப்பு மனஸ்தாபங் களில் தனது போலி சாத்வீகக் கொள்கையை கைவிட்டுவிட்டது என்றே நாங்கள் கருதுகின்றோம். பெரும்பான்மையான சமூகத்தார் இவ்வாறு இனியும் மனோபாவம் கொண்டிருந்தால் உள்நாட்டுக் கலகம் விளைவது திண்ணம். இந்திய சர்க்காரும், பிரிட்டிஷ் சர்க்காரும் இந்திய நிலைமை யைச் சமாளிக்க திட்டமான கொள்கையின்றி, காங்கிரஸ் வேண்டுகோ ளுக்கே செவிசாய்த்து வருவதால் துரதிருஷ்டம் கொண்ட இந்நாடே அழிந்துபோகும் நிலைமை உண்டாகி விடும் என்று எச்சரிக்கின்றோம்."

2. "பார்லிமெண்டிலிருந்து அதிகாரங்கள் மன்னர்கள் கைக்கு மாற வேண்டுமென்றும், ஐக்கிய ஆட்சி முறையில் சேரும் எல்லோருடைய முழுச்சம்மதமுமின்றி எந்த விஷயத்தையும் ஐக்கிய சர்க்கார் நிர்வாகத்தில் விட்டு விடக்கூடாதென்றும் இம்மகாநாடு அபிப்பிராயப்படுகின்றது. தற்பொழுதுள்ள நிலையில் தனித்தொகுதிகளே வேண்டும் ஐக்கிய சர்க்கார் சட்டசபையில் நூற்றுக்கு 33 1/4 வீதம் முஸ்லீம்களுக்கு ஸ்தானம் வேண்டும்."

3. "இந்தியமன்னர்கள் லண்டனுக்குச் செல்லும் பொழுது கப்ப லிலேயே, முஸ்லீம்களைத் தலையெடுக்க வொட்டாமற் செய்யும் வண்ணம் சதியாலோசனை செய்து கொண்டனர். இந்நிலையில், நிம்மதியாயும், அபாயமின்றியும் வாழவல்ல இரண்டொரு மாகாணங்களை நாம் பிரத்தியே கமாக வைத்துக்கொள்ளுவது தான் நமக்கிருக்கும் ஒரேவழி. இந்துக்களடங் கிய தலைமை சர்க்காரிடத்திலே ராணுவத்தை விட்டுவைக்க நாம் ஒரு நாளும் சகிக்க மாட்டோம். ராணுவத்தில் முஸ்லீம்களுக்கு பெரிய உத்தி யோகம் ஒன்றும் கொடுக்கமாட்டார்கள். இதுவும் தவிர, கான்பூர் போன்ற கலக சமயங்களில் முஸ்லீம்களை இந்த ராணுவம் பாதுகாக்காது. காங்கிரஸ் பிரிட்டிஷாருடன் போர்புரிந்து, அதிகாரத்தை பெற்றதாயின், சற்றும் தயங்காது சகல தியாகங்களையும் செய்து, காங்கிரசுடன் நாம் போர் புரிவோம்" என்பதாகும்.

முஸ்லீம் சமூகத் தலைவரான மௌலானா சௌகத் அலி அவர்கள் பேசி இருப்பதாவது :-

"முஸ்லீம்கள் திரு.காந்தியிடமிருந்து நியாயத்தை எதிர்பார்க்க முடியாது. லட்சம் காந்தியையும் நான் ஒருவனே எதிர்த்துப் போராட முடியும்" என்று பேசியிருக்கிறார்.

மற்றும் அவர் "திரு. காந்தி முஸ்லீம்களில் சில ஏமாளிகளை வைத்துக் கொண்டு வாயாடுகின்றார்கள். இந்து முஸ்லீம்கலவரத்திற்கு திரு. காந்தியே



காரணம். அதோடு மாத்திரமல்லாமல் திரு.காந்தி முஸ்லீம்களுக் குள்ளாகவே ஒருவரை ஒருவர் வெட்டி கொள்ளும்படி செய்கிறார்" என்று பேசி இருக்கிறார்.

இந்த நிலையில் இந்து முஸ்லீம் சமரசம் செப்பிடுவித்தையா அல்லது முடியக்கூடியாதா? என்று யோசித்துப் பாருங்கள். வகுப்புகளையும் மதத்தையும் காப்பாற்றிக் கொண்டு தாங்கள் தந்திரசாலிகளாகவும் அதிக எண்ணிக்கை உள்ளவர்களாகவும் இருக்கின்றோம் என்கின்ற காரணத்திற் காக வகுப்பு வாரி மத வாரிபிரநிதித்துவம் கூடாது என்று சொல்லும் வரை வகுப்பு ஒற்றுமையும் மத ஒற்றுமையும் எதிர்பார்ப்பது முட்டாள் தன மாகவே முடியும் என்பதோடு எந்த 'தேசீயமும்' எந்த 'அஹிம்சை'யும் இனி பொதுமக்களை ஏமாற்ற முடியாது என்பது உறுதி.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 19.04.1931**



RangaRakes tamilnavarasam.com

# தென் இந்திய ரயில்வே கம்பெனி லிமிடெட்

தென் இந்திய ரயில்வேயின் நிர்வாகம் முழுவதும் பிராமணமயமாக இருப்பது யாவரும் நன்கறிந்த விஷயம். பிராமணரல்லாதாருக்கு ஒரு வித சுதந்திரமுமில்லாமல், பிராமணர்களாலேயே கொள்ளையிடப்பட்டுக் கொண்டு வரப்படுகின்றது. பிராமண ரல்லாதாருக்கு ஏஜண்டு ஆபீசிலும், இன்னும் இதர நிர்வாக ஸ்தாபனங்களிலும் இடம் கிடைப்பதே குதிரைக் கொம்பாக இருக்கின்றது. இந்த ரயில்வேயின் நிர்வாகத்தை ஓர் பிராமண அக்கிரகாரமென்று கூறுவது மிகையாகாது. இந்நிலைமைக்கு ரயில்வேக் கம்பெனியின் நிர்வாகஸ்தர்களும் இது வரையிலும் உடந்தையாகவேத்தான் இருந்துகொண்டு வந்திருக்கின்றார்கள். ஜனத்தொகையின் வீதாசாரப்படி ரயில்வேக்களில் உத்தியோகம் வழங்கப்பட வேண்டுமென சட்ட சபைகளில் போராடியதற்கு "அது கம்பெனிகாரர்களின் ஆதிக்கத்துள்ளடங்கியிருப்ப தால், அவர்களுடைய பிரியத்தைப் பொருத்தது" என இதுவரை கூறப்பட்டு வந்ததையும் சகலரும் அறிவார்கள். ஆனால், இப்பொழுது தென் இந்திய ரயில்வேயின் ஏஜண்டின் மனம் முற்றிலும் மாறுதலடைந்து, பிராமண ரல்லாதாருக்கும், அவர்களுடைய தொகையின் வீதாசாரம் உரிமைகளும், உத்தியோகங்களும் வழங்கப்படவேண்டுமென உறுதி கொண்டு, அதற்கேற்ற வாறு "ஸ்டாப் செலக்ஷன் போர்டு" என்னும் ஒரு போர்டை நியமித்திருப்பது மிகவும் போற்றக்கூடியதோர் விஷயமாகும். பிராமணரல்லாதார்களும் ஏஜண்டின் மன மாறுதலை வரவேற்று, தங்களு டைய உரிமைகளைப் பெற வும்; சுதந்திரங்களையடையவும் முன்னணியில் நிற்பார்களென கருது கின்றோம்.

## ஸ்டாப் செலக்ஷன் போர்டு

இந்த போர்டிலுள்ளஅங்கத்தினர்கள் தான் இனி ரயில்வேயின் நிர்வாகத்திற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களையும், சிப்பந்திகளையும் தேர்ந்தெடுப்பவர்களாவார்கள். அப்படித் தேர்ந்தெடுப்பதிலும் பிராமண ரல்லாதாரின் உரிமைகள் தான் முதலில் கவனிக்கப்படும். Mr. மூர்ஹெட் என்பவர் கமிட்டியின் தலைவராவர். இக்கமிட்டியின் காரியதரிசி Mr. K.P. வேலுப்பிள்ளை என்பவர், இவ்விரண்டு உத்தியோகஸ்தர்களும் பிராமண ரல்லாதாரின் குறைகளை செவ்வனே ஆராய்ந்து, அவர்களுடைய உரிமைகளை நிலைநாட்ட கொஞ்சமும் அஞ்சமாட்டார்களென கருதுகின் றோம். இந்த ரயில்வேயில் ஊழியம் செய்யப்பட்ட எண்ணிறந்த பிராமண ரல்லாதாரின் முன்னேற்றம் இவ்விரண்டு பேருடைய பொறுப்பிலுந் தானிருக் கின்றது. ஆகையால், அவர்கள் பிராமணர்களின் ஆதிக்கத்திற்கும், செல்வாக்கிற்கும், கொஞ்சமும் பயப்படாமல், பிராமணரல்லாதாரின் குறை களை நிவர்த்திக்க முயற்சி செய்வார்களென நினைக்கின்றோம். அவ் வாறே உத்தியோகங்கள் வழங்கப்படுவதிலும், சிப்பந்திகளை தெரிந்தெடுப்பதிலும், பிராமணரல்லாதாரின் உரிமைகள் தான் முதலில் கவனிக்கப்படுமெனவும் நினைக்கிறோம். ஏனெனில் பிராமணர்கள் ஏஜண்டின் ஆபீசிலும், இன்னும் இதர நிர்வாக ஸ்தாபனங்களிலும் 100க்கு 90 பேருக்கு அதிகமாகவே காணப்படுகின்றார்கள்.

ஏஜெண்டின் இம்மனமாறுதலை நாம் முழு மனதுடனும் வரவேற் கின்றோம். இக்கமிட்டியை நியமித்ததுடன் ஏஜண்டின் பொறுப்பு நீங்கிவிட வில்லை. ஆனால் இக்கமிட்டியார் தங்களுடைய பொறுப்புகளை உணர்ந்து, அதன்படி நடந்துகொண்டு வருகின்றார்களா என்பதை அடிக்கடி கவனித்துக் கொண்டு வருவாரெனவும் நம்புகின்றோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 19.04.1931**





RangaRakes tamilnavarasam.com

# தீண்டாமை

இந்தியாவில் இந்து முஸ்லீம் ஒற்றுமையைவிட சுயராஜியத்தை விட - பூரண சுயேச்சையை விட - காந்தி - இர்வின் ஒப்பந்தத்தைவிட - தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டியது முக்கியமானது என்கின்ற விஷயம் கடுகளவு அறிவும் மனிதத் தன்மையும் உடையவர்களாகிய எவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதாகும். அப்படிப்பட்ட ஒரு முக்கியமான விஷயம் இப்போது அழுவாரற்ற பிணமாய், கேள்வி கேட்பாடு அற்று அலக்ஷியப் படுத்தப்பட்டு கிடக்கின்றது. அதுமாத்திரமல்லாமல் அவர்கள் அதாவது தீண்டப்படாதார் என்பவர்கள் தாங்களாகவே ஏதாவது ஒரு முயற்சி செய்து தங்கள் இழிவுகளையும் கஷ்டங்களையும் போக்கிக்கொள்ள முயற்சிப்ப தையும் இந்தப்பாழும் சுயராஜியமும் பூரண சுயேச்சையும் என்கின்ற வெறும் வாய் வார்த்தைகள் தோன்றி பழையவைகளையே புலப்படுத்திக் கொள்ள வும் புதியவைகளை தலைகாட்டாமல் இருக்கவும் முயற்சி செய்வதன் மூலம் தடுத்து அழுத்தி வைக்கப்பட்டும் வருகின்றது. இந்த நெறுக்கடியான சமயத் தில் இந்தமுக்கியமான விஷயம் (தீண்டாமைக் கொடுமை விஷயம்) இக் கதியானால் இனி எப்போது தலையெடுக்க முடியும் என்பது நமக்கு விளங்க வில்லை. இந்திய சுயராஜியத்திற்கு இன்று இந்து முஸ்லீம் விஷயம் தடை யாய் இருக்கின்றது என்று தேசீயக்காரார்கள் நீலிக்கண்ணீர்விட செய்தது எது என்று பார்த்தால் முஸ்லீம் சமூகத்தாருடைய கிளர்ச்சியும் அவர் களுடைய ஒற்றுமையும் பலமும் சுயமரியாதை உணர்ச்சியுமேயாகும். ஆகவே அதை விட முக்கியமானதும் அவசியமானதும் மனிதத் தன்மை யானதுமான தீண்டாமை ஒழிக்கும் விஷயம் இந்து முஸ்லீம் "விசாரத்தில்" ஆயிரத்தில் ஒரு பங்கு கூட கவலைப்படுவதற்கு லாயக்கில்லாததாகப் போன தற்கு காரணம் தீண்டப் படாதார் என்பவர்களுக்குள் ஒற்றுமையும் பலமும் சுயமரியாதை உணர்ச்சியும் இல்லாததே காரணமாகும். சாதாரணமாக சுமார் 20 வருஷத்திற்கு முன்பு லக்னோவில் முஸ்லீம்களுக்கு சில உரிமையும், சீர்திருத்த திட்டத்தில் தனி வகுப்புவாரி பிரதி நிதித்துவ உரிமையும் கொடுத் தது போல் தீண்டப்படாதவர்கள் என்பவர்களுக்கும் ஏதாவது வழி செய்து இருந்தால் இன்று அந்த சமூகத்திலும் 100க்கு இத்தனை பேர்கள் என்பதாக படிப்பிலும் உத்தி யோகத்திலும் சமூக வாழ்க்கையிலும் ஸ்தானங்கள் பெற்று இருந்து இந்தச் சமயத்தில் அவர்களும் மனிதர்கள் என்று மதிக்கப்பட்டு இந்திய பூரண விடுதலைக்கு திட்டம் வகுக்கும்போது அவர்களையும் கலந்து



ஆலோசிக்க வேண்டிய காரியம் முக்கியமானதாக திரு. காந்தி அவர்களும், அவர்களையும் ஒரு சமூகமாக மதிப்பதாக காட்டிக் கொண்டாவது இருக்க முடிந்திருக்கும். அப்படிக்கு இல்லாததாலேயே "தீண்டப்படாதார் விஷயம் சுய ராஜியம் வந்த பின்பு சரியாய் விடும்" என்கின்ற ஒரே பேச்சில் முடிவடையவும் முடிந்துவிட்டது.

இவை ஒரு புறமிருக்க கராச்சி காங்கிரசில் புதிய சுயராஜியத்தில் ஏழை மக்களுக்கு தெரிவிப்பதற்காக வகுக்கப்பட்ட ஜீவாதாரமான உரிமை கள் என்பவையான 20 திட்டங்களில் தீண்டாமை விஷயமும் ஜாதி வித்தியாச விஷயமும் எப்படி காப்பாற்றப்பட்டிருக்கின்றது என்று பார்த் தால் அதில் உள்ள சூக்ஷியும் சாமார்த்தியமும் நன்றாய் விளங்கும். அது என்ன வென்றால், பிரஜா உரிமை முதலாவது தீர்மானத்தின் 6வது உட் பிரிவால் 'ஜாதிவகுப்பு காரணமாக பொது உத்தியோகம், அதிகாரம், கௌர வம் தொழில் ஆகிய விஷயங்களில் எவ்வித வித்தியாசமும் கொள்ளக் கூடாது' 7வது உட்பிரிவில் "பொதுகிணறு, பொதுவீதி, பொது இடம் ஆகியவைகளை உபயோகித்துக் கொள்ள எல்லோருக்கும் உரிமை உண்டு" என்பதாக குறிக்கப்பட்டிருக் கின்றது.

இந்த இரண்டு தீர்மானங்களிலும் ஜாதியையோ தீண்டப்படாத வகுப்பு என்று சொல்லப்படுவதையோ ஒழிக்கும் எண்ணமோ, கவலையோ இல்லா திருப்பதை நன்றாய் உணரலாம். ஒரு சமயம் அதில் யாருக்காவது சந்தேகம் இருக்குமோ என்னமோ என்கின்ற எண்ணத்தின் மீதே திரு. சத்தியமூர்த்தி ஐயர் 15-ந்தேதி இந்து பத்திரிகையில் நன்றாய் விளக்கி இருக்கிறார். அதாவது "பொது இடம் என்பதில் வகுப்பு பாத்தியமுள்ள பொது இடமும், தனிப்பட்ட வர்களால் விடப்பட்டபொது இடமும், கோயில் சம்மந்தப்பட்ட பொது இடமும் இதில் சம்மந்தப்பட்டதல்ல" என்றும் எழுதி இருக்கிறார். இவை மாத்திரமல்லாமல் தாழ்த்தப்பட்ட, கொடுமை செய்யப் பட்ட வகுப்புகள் என்பவைகளுக்கு மற்றவகுப்பார்களைவிட எவ்வித வித்தியாசமும் அதாவது தனிச்சலுகை எதுவும் காட்டப்படாது என்பதை வலியுருத்தியும் காட்டப்பட்டிருக்கின்றது.

ஆகவே இந்த கராச்சி காங்கிரஸ் தீர்மானப்படி பார்த்தால் இப்போது அவர்களுக்குச் சில ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதும், அவர்கள் தேர்தலிலோ, மற்ற வழிகளிலோ சம உரிமைபெற சில தனி ஏற் பாடுகள் செய்து இருப்பதும்கூட ஒழிக்கப்பட்டு விடவேண்டியதாகிவிடும். அது மாத்திரமல்லாமல் சட்டங்களிலும், ஆதாரங்களிலும் ஜாதியும், வகுப்பும் குறிக்கப்படவேண்டியதாகும் என்பதோடு அவற்றைப் பற்றி மதங்களில் உள்ள நிலைமையையே அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டியதுமாகும். இதற்கு ஆகவே அதன் முந்திய பாகத்தில் மதநடு நிலைமையையும் அது சம்மந்தமான மனச்சாட்சியையும் வலியுறுத்தப் பட்டும் இருக்கின்றது.



RangaRakes tamilnavarasam.com

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் தீண்டாமை உண்டு, ஜாதி வித்தியாசமுண்டு, புனிதமான ஸ்தலங்கள் என்று கருதப்படுபவைகளில் எல்லா மக்களுக்கும் சம சுதந்திரம் கிடையாது. மற்றபடி யாருக்கும் பிற்பட்ட வர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்பதற்காக தனிச்சலுகை காட்டப்பட மாட்டாது என்பதாகும்.

ஆகவே புதிய சுயராஜியத்தில் ஜாதி, வகுப்புக் கொடுமைகள் சட்டத் தின் மீதே தாண்டவமாடும். ஆனால், சுயராஜியமில்லாத அன்னிய ராஜியத் தில் அதாவது இப்போதய ராஜியத்தில் அநேக விஷயங்களில் ஜாதி, வகுப்பு வித்தியாசக் கொடுமைகள், பழக்கம்,வழக்கம்,மாமூல் என்பவை களையே பிரதானமாய் கொண்டு ஒரு விதத்தில் தாண்டவமாடி வந்தது. ஏதோ ஒரு விதத்தில் இப்போது தீண்டாமையும், ஜாதி வித்தியாசமும் அடியோடு ஒழிக்கப்படவேண்டும் என்கின்ற எண்ணமும், உணர்ச்சியும் பொது மக்க ளுக்குத் தானாகவே ஏற்பட்டு அவை அழிபடக்கூடிய நிலைமை ஏற்படுகின்ற காலத்தில் பூரண சுயேச்சையின் பேரால் மறுபடியும் ஜாதி, வகுப்பு, பேர்களும், ஆதாரங்களும் ஒரு மனிதன் மனசாட்சியை உத் தேசித்து சட்டத்தின்மூலம் நிலை நிறுத்தும்படியாக ஆயிருப்பது மிகுதியும் கண்டிக்கத் தக்கதேயாகும்.

இனி ஏற்படப்போகும் சுயராஜியத்தில் வரும் சமத்துவத்திற்கு ஒரு உதாரணம் எடுத்துக்காட்ட வேண்டுமானால் அதாவது, காங்கிரஸ் தீர் மானத்தின் பலனாய் நமது பெரியார்களும் எவ்விதத்திலும் குற்றம் சொல்ல முடியாதவர்களுமான ஆர்.கே.ஷண்முகம் (வைசியகுலம் என்று சொல்லப் படும்) அவர்களும், திரு. டபிள்யூ பி.ஏ. சௌந்திரபாண்டியன் (க்ஷத்திரிய குலம் என்று சொல்லப்படும் ) அவர்களும் திருச்செந்தூர் கோவில் எல்லைக்குள் போகக்கூடாது என்பது இன்னும் பலமாக நிலை நிறுத்தப் பட்டது என்பதேயாகும். "வைசியர்" "க்ஷத்திரியர்" குலங்களே இப்படி இருக்கும்போது இனி சுப்பப் பரையன், கருப்பன் சக்கிலி ("சண்டாள" குலம் என்பதைச் சேர்ந்தவர்களே) என்பவர்களின் நிலைமையைப்பற்றி பேச வேண்டுமா என்று கேட்கின்றோம். நிற்க,

இதைப் படித்துப் பார்க்கின்றவர்களில் பலருக்கு இந்த நிர்ப்பந்தங்க ளானது தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கும், தீண்டப்படாத வகுப்பாருக்கும் தான் ஏற்பட்டவைகளே தவிர 'ஜாதி இந்துக்கள்' என்று சொல்லிக்கொள்ளப் படும் பார்ப்பனரல்லாத மக்களைப் பாதிக்காது என்று தோன்றக்கூடும், அப்படித் தோன்றுவது முட்டாள் தனமான தோற்றமேயாகும்.

"மதநடு நிலைமை" "மனசாக்ஷி" என்கின்ற இரண்டு வார்த்தைகள் பிரயோகப் படுத்தப்பட்ட பிறகு இந்து மதம் என்பதில் கண்டிப்பாய் "பிராம ணன்", "சூத்திரன்", "பஞ்சமன்" என்கின்ற மூன்று பிரிவுகளும், அவை களுக்கு இப்போது அனுபோகத்திலும் மதச்சம்மந்தமான ஆதாரத்திலும்



உள்ள விஷயங்கள் நிலை நிறுத்தப்பட்டு, அவைகளின்படி அமுல் நடத்தப் படும் என்பதைக் கண்டிப்பாய் உணர்வார்களாக.

ஆகவே தீண்டாதார் எனப்படுவோரும், தாழ்த்தப்பட்ட மக்கள் எனப்படுவோரும் மற்றும் பார்ப்பனரல்லாதாரும் தங்களுக்கு ஏதாவது சுயமரியாதையோ சமத்துவமோ பெறவேண்டுமானால் "பூரண சுயேச் சையை"யே லட்சியமாய்க் கொண்ட இன்றைய காங்கிரசை நம்பிக் கொண்டி ருந்தால் பெருமாள் மாறி பெத்தப்பெருமாளானகதையாகத்தான் முடியும்.

வட்டமேஜை மகாநாடாவது ஒரு விதத்தில் சூக்ஷி இல்லாமல் பேசவும், தைரியமாய் உண்மையை எடுத்துச் சொல்லவும் பயன்படக் கூடியதாக இருக்குமாதலால் அங்கு செல்லுகின்றவர்களாவது இவ் விஷயங்களில் ஜாக்கிரதையாய் இருந்து கவனித்தால் சிறிதளவாவது நமக்கு அனுகூலம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். அங்கு மதசம்மந்தமான நடுநிலைமை மனசாட்சி ஆகியவைகள் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்.

ஜாதி, வகுப்பு என்கின்ற பிரிவினைகள் ஏற்படுவதற்கு இடமில்லாமல் படிக்கு வாழ்க்கைத் திட்டங்களையும், ஆதாரங்களையும் ஏற்படுத்த வேண்டும். எந்த ஆதாரங்களிலும் ஜாதிக்கு கலமே இருக்கக்கூடாது. வருணாச்சிரம பட்டங்களும் பெயர்களுக்குப் பின் ஜாதிப்பட்டமோ, வகுப்புப் பட்டமோ இருக்கக்கூடாது. சிவில் கிரிமினல் சட்டங்களில் ஜாதிப் பிரிவு களுக்கும், வகுப்புப் பிரிவுகளுக்கும் இடமே இருக்கக் கூடாது என்பது போன்ற இன்னும் பல நிபந்தனைகளை வற்புறுத்தி இந்த சீர்திருத்தம் முதல் கொண்டாவது ஜாதி வகுப்புக் கொடுமையை அழித்து விடும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். இந்தக் காரியத்தில் வெற்றி பெற்றுத் திரும்பி வந்தார் களேயானால் இந்தியாவைப் பல வகைகளிலும் பிடித்த எலும்புருக்கி வியாதி யானது அடியோடு ஒழிந்துபோகும் என்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 19.04.1931**



RangaRakes tamilnavarasam.com

# எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!!

காங்கிரஸ் தீர்மானங்களும் சட்டமறுப்பு சத்தியாக்கிரகங்களும் தென்னாட்டில் தேர்தலையே குறிக்கோளாகக் கொண்டது என்பதாக நாம் பலமுறை சொல்லியும் எழுதியும் வந்திருக்கின்றோம்.

அதுமாத்திரமல்லாமல் சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டவுடன் இனி "தலைவர்களுக்கும்" (பார்ப்பனர்களுக்கும்) "தொண்டர்களுக்கும்" (பார்ப்பனரல்லாதார்க்கும்) தேர்தல் பிரசாரத்தைவிட வேறு பிரசாரம் இருக்காது என்றும் தேர்தலை உத்தேசித்தே ஆங்காங்கு கள்ளுக்கடை மறியல், ஜவுளிக்கடை மறியல் ஆகியவைகள் நடத்தப்படும் என்றும் எழுதியும் இருந்தோம். இந்த விஷயங்கள் வாசகர்களுக்கு அப்போழுது சற்று அலட்சியமாகக் கருதப்படக்கூடியதாக இருந்திருக்கும். ஆனால் இப்போது நாம் எழுதியதுபோலவே தேர்தல் பிரசாரங்கள் "தலைவர்களால்" (பார்ப்பனர்களால்) தமிழ் நாட்டில் தொடங்கப்பட்டு விட்டது. அதற்கு அனுகூலமாகத் தொண்டர்கள் (பார்ப்பனரல்லாதவர்கள்) ஆங்காங்கு இந்தத் தலைவர்களுக்கு வரவேற்பு அளித்து கூட்டம் கூட்டி ஜே போட்டு ஓட்டர்களை அறிமுகப்படுத்தி அத்தலைவர்களின் உத்திரவுக்குக் கீழ்ப்படியும்படி செய்யும்படியான வேலையில் மும்மரமாய் ஈடுபட்டு இருக்கிறார்கள். சில இடங்களில் பார்ப்பனரல்லாதார் பணமுடிப்பும் அளிக்கின்றார்கள்.

சமீபத்தில் புதிய சட்டத்தின் படி ஸ்தல ஸ்தாபன தேர்தல்கள் நடைபெறப் போகின்றபடியால் அத்தேர்தல்களில் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியுள்ள கனவான்கள் எந்தெந்த ஸ்தாபனங்களில் ஆதிக்கம் பெற்று இருக்கின்றார்களோ அவர்களைக் கவிழ்த்தும் வேலையில் காங்கிரஸ் பிரசாரம் என்னும் பேரால் மிகவும் தீவிரமாக முயற்சிகள் செய்து வருகின்றார்கள். அதாவது தென்னாட்டை 3 பிரிவுகளாகப் பிரித்து காங்கிரஸ் "தலைவர்கள்" (பார்ப்பனர்கள்) தலைமையில் தங்கள் சிஷ்ய கோடி தொண்டர்களுடன் புறப்பட்டிருக்கிறார்கள். எப்படியென்றால்,

திருவாளர்கள் சி. இராஜகோபாலச்சாரியார் தலைமையில் ஒரு கோஷ்டி, வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு, சென்னை ஆகிய இடங்களுக்கும், டாக்டர் ராஜன் அய்யங்கார் தலைமையில் ஒரு கோஷ்டி கோயமுத்தூர், சேலம், திருச்சி, தஞ்சை ஆகிய இடங்களுக்கும், ஏ.வைத்தி



நாதய்யர் தலைமையில் ஒரு கோஷ்டி மதுரை, திருநெல்வேலி, ராம நாதபுரம், செட்டிமார் நாடு ஆகிய இடங்களுக்கும் என்று பிரித்துக்கொண்டு புறப்பட்டிருக்கின்றார்கள்.

இவர்களுக்கு உபதலைவர்களாக ஒரு கூட்டம் ( அதுவும் வெறும் பார்ப்பனர்களாகவே திருவாளர்கள் டி.வி.எஸ். சாஸ்திரியார், ஆலஸ்யம் ஐயர், வெங்கிட்டராமய்யர், ஈ. கிருஷ்ணய்யர், என்.எஸ். வரதாச்சாரியார், கே. சந்தானம் அய்யங்கார் ,எக்கியேஸ்வர சர்மா, சங்கரய்யர், சங்கரய்யர் லக்ஷிமி அம்மாள், வி.வி.எஸ். அய்யர் செல்லம்மாள், லக்ஷிமிபதி அய்யர் அம் மாள், லக்ஷ்மணராவ்கமலாதேவி அம்மாள், கிருஷ்ணமூர்த்தி அய்யர், சுப்பையர், சுந்திரமய்யர் முதலிய பல அய்யர், அய்யங்கார், அம்மங்கார் களும் இவர்கள் தவிர மற்றும் ஆங்காங்கு போகின்ற இடத்தில் உள்ள வக்கீல் அய்யர் அய்யங்கார் அம்மங்கார்களும் இருப்பதோடு கூட்டங்களில் எங்காவது கேள்விகள் குழப்பங்கள் ஏற்படுகின்ற சமயத்தில் இடத்தில் மாத்திரம் முன்னால் நிறுத்துவதற்கு என்கின்ற உள் எண்ணத்துடன் சிறிது நன்றாய்ப் பேசுவதற்கும் தலைகொடுப்பதற்கும் பார்ப்பனரல்லாதார்களின் உப தலைவர்கள், தொண்டர்கள் என்னும் பேரால் வெகு சிலர்களும் அவர்கள் பெயரைக் குறிப்பிட வேண்டுமென்பதாக விரும்புகிறவர்கள் யாரும் இருக்கமாட்டார்களென்றே கருதுகின்றோம்.ஆனாலும் அவர்கள் பெயரையும் குறிப்பிட்டு விட்டால் ஒரு விதத்தில் தப்பர்த்தம் கற்பிக்கப்படயிடமில்லாமல் இருக்கலாமென்று கருதி அதையும் குறிப்பிட்டேவிடுகின்றோம். அதாவது திருவாளர்கள் கோவை சி.பி.சுப்பையா, தஞ்சை வெங்கிடு கிருஷ்ணபிள்ளை, வேதரத்தினம்பிள்ளை, திருநெல்வேலி திரிகூட சுந்திரம் பிள்ளை, வட ஆற்காடு அண்ணாமலை பிள்ளை ஆகியவர்கள் பெயர்கள் இக்கோஷ்டியார்களுடன் ஆங்காங்கு காணப்படுகின்றன. எனினும் அவர்கள் எவ்வளவு தூரம் இதில் கலந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதும் இவர்களுக்கு எவ்வித மரியாதைகள் தலைவர்கள் என்பவர்களால் அளிக்கப்பட்டிருக்கின்றன வென்பதும் இவர்களிடம் மேற்கண்ட முக்கிய தலைவர்கள் (பார்ப்பனர்கள்) எவ்வளவு மரியாதையும் நம்பிக்கையும் வைத்திருக்கின்றார்கள் என்பதும் இவர்களுடன் நெருங்கிப் பழகி இவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமான பார்ப்பனரல்லாத இரண் டொருவர்களுக்குத்தான் நன்றாய்த்தெரியும். ஆனாலும் அதை நாம் வேண்டுமென்றே இங்கு வெளிப்படுத்தவில்லை. மற்றும் இந்தப் பிரசாரக் கூட்டத்திற்கு பணம் கொடுப்பவர்கள் யார் என்றுபார்த்தால் நெற்றி வேர்வை நிலத்தில் கொட்டப் பாடுபடும் பார்ப்பனரல்லாத மக்களே மூட்டை கட்டி பண முடிப்பை அப்பார்ப்பன பிரசாரத்திற்கு காணிக்கையாக வைக்கின்றார்கள். ஆனால் இது சங்கராச்சாரியாருக்கு கொடுப்பதைவிட மோசமல்ல என்றே சொல்லலாம்.

ஏனென்றால் இந்தப் பணத்தில் இரண்டொரு பார்ப்பனரல்லாதாராவது சாப்பிடுகின்றார்கள் என்கின்ற திருப்தி இருந்தாலும் இந்தக்



RangaRakes tamilnavarasam.com

காணிக்கைத் தொகையானது எந்தப் பார்ப்பனரல்லாதார் கொடுக்கின்றார் களோ அந்த சமூகச் செல்வாக்கை ஒழிக்கப் பிரசாரம் செய்யவே பயன் படுத்தப்படுகின்றன என்பதை பார்க்கின்றபோது நம் நாட்டு மக்களின் நிலையை எடுத்துக்காட்ட இதைவிட வேறு உதாரணம் தேவையா என்று கேட்கின்றோம்.

இதற்கேற்றாற் போல் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்கள், புதிய சட்டத்தின் படி நடைபெற யேற்கனவே ஒரு வருஷ-காலம் வாய்தா கொடுக்கப்பட்டு அந்த ஒரு வருஷ காலவாய்தாவும் தீர்ந்து இப்போது மறுபடியும் புது எலக்ஷன்கள் நடைபெற இன்னும் 6 மாதமோ ஒரு வருஷமோ வாய்தா கொடுக்கப் போகின்றதாக தெரியவருவதைப் பார்த்தால் இனியும் ஒரு வருஷகாலத்திற்கு குறையாமல் இந்தத் தேர்தல் பிரசாரத்தொல்லை நமது நாட்டில் இருக்கும்போலத்தான் காணப்படுகின்றது. பிறகு அதுமுடிந்த வுடன் சட்டசபை தேர்தல் பிரசாரங்கள் முறையே இந்தப்படி தொடங்கப் படலாம். ஆகவே நம் நாட்டு விடுதலைப் பிரசாரங்கள், தேசீயப் பிரசாரங்கள் ஆகிய பொது நல சேவைகள் என்பவைகள் எல்லாம் தேர்தல் பிரசாரமும் பதவி பெருவதுமாகவே இருந்து வருகின்றதை யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம். இந்தத் தந்திரம் சுமார் 50 வருஷமாக (காங்கிரஸ் ஆரம்பிக்கப் பட்ட காலமாக) ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது என்றாலும், இந்த விழிப்பான சமயத்திலும் அதே கூட்டம் அதே காரியத்தை இனியும் இந்த நாட்டில் நடத்துகின்றது என்றால் - நடத்த சௌகரியமிருந்து வருகின்றது என்றால் இந்த நாட்டு மக்கள் எந்த அளவில் முற்போக் கடைந்திருக்கிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை . ஆகவே ஆங்காங் குள்ள பார்ப்பனரல்லாத மக்கள் இந்த சூட்சிப் பிரசாரத்திற்கு ஏமாந்துவிடாமல் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமென்றே எச்சரிக்கை செய்யவே இதை எழுதுகின்றோம். நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் என்று எழுதுவதி னாலேயே வாசகர்கள் தவறுதலாய் நினைத்து விடக்கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அதாவது இப்படி எழுதியதால் ஷை பிரசாரக்கூட்டங்கள் நடத்தப்படுவதில் யாராவது குழப்பம் விளைவிக்கவோ, கேள்விகள் முதலியவைகள் கேட்டு தொல்லை விளைவிக்கவோ வேண்டும் என்பதாக கருதிவிடக்கூடாது என்றும் மேலும் அப்படிப்பட்டகூட்டம் எதுவானாலும், யார் பேசினாலும், எதைச் சொன்னாலும் இஷ்டப்பட்டவர்கள் பேசாமல் கேட்டுக் கொண்டிருப் பதும் இஷ்டமில்லாதவர்கள் அங்கு இருக்காமல் திரும்பிவிடுவதுமாக இருக்கவேண்டுமே யொழிய சிறிது கலவரமாவது உண்டாக்குவது யோக்கிய மல்ல வென்றே சொல்லுவோம். கூட்டங்களில் பேசியானவர்களின் பேச்சுக்கள் ஏதாவது குற்றமுடைய தாகவோ உண்மைக்கு மாறானதாகவோ திருத்தி தப்பர்த்தம் புரியும்படி கூறப் பட்டதாகவோ இருந்ததாக தெரிய வருமானால் அவற்றை பொருமையுடன் கேட்டுக் கொண்டிருந்து மறுநாளோ அல்லது அதற்கடுத்த சௌகரியப்பட்ட நாளோ இதற்கென்றே ஒரு கூட்டம் கூட்டி அவர்கள் பேசிய மாதிரி நாம்



பேசாமல் அதாவது அதே குற்றத்தை நாம் செய்யாமல் தெளிவாயும் நியாயமாயும் விளக்குவதன் மூலம் மக்களுக்கு உண்மையை எடுத்துரைக்க வேண்டும் என்றே தெரிவித்துக்கொள்ளுகின்றோம். ஆகவே எந்தக் காரணத்தை முன்னிட் டும் குழப்பமோ காலித்தனமோ தொல்லைகளோ விளைவிக்கக்கூடாதென்று, மறுபடியும் வலியுறுத்திக் கூறுகின்றோம். பார்ப்பனப் பிரசாரத்திற்கு வருகின்றவர்கள் பலர் வரும்படிக்கோ, பெருமைக்கோ வருகின்றவர்களாக இருக்கலாம் என்றாலும் பெரும் பான்மையோர் ஒருபொதுநல சேவையை குறிகொண்டே வருகின்றார்கள் என்பதை நாம் மறைக்க முயலவில்லை. ஆனால் அப்பொதுநல சேவை எதுவென்றால் தங்கள் (பார்ப்பன) சமூகத்தின் நன்மையையும் ஆதிக்கத் தையும் உயர்வையும் குறியாக வைத்து அவற்றை நிலை நிருத்தவும் பெருக் கவும் என்ற நோக்கம் கொண்ட சமூகத் தொண்டர்களாக வருகின்றபடியால் அந்த அளவில் அவர்களுக்கு உள்ள சமூக பக்தியை நாம் பாராட்ட வேண்டி யவர்களாகவும் பொறாமைப் பட வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம்.

பார்ப்பனரல்லாத சமூகத்தில் அந்த மாதிரி சமூக நன்மைக்கு என்று கஷ்டங்களையும் நஷ்டங்களையும் சகித்துக் கொண்டு புரப்படுகின்ற மக்கள் மிக மிக சுருக்கமே ஆகும். பார்ப்பனர்களுக்கு பணம் கொடுத்து ஆதரித்து பார்ப்பனரல்லாதார் பக்தி காட்டுவது போல் பார்ப்பனரல்லாத பிரசாரகர்கள் வந்தால் அவர்களை ஆதரிப்பவர்களும் பொதுச்செலவுக்கு பணம் கொடுப்பவர்களும் மிக மிக சுருக்கமே யாகும். பார்ப்பன பிரசாரகர்களி டத்தில் இருக்கும் கட்டுப்பாடும் அடக்கமும் பார்ப்பனரல்லாத பிரசாரகர் களிடத்தில் காணப்படுவதும் அருமையோகும். உதாரணம் வேண்டுமானால் சாதாரணமாக நமது நாட்டில் காங்கிரஸ் என்னும் பார்ப்பனப்பிரசாரம் ஏற்பட்டு 50 வருஷங்களாகியும் இன்றுவரை ஒரு பார்ப்பனத் தலைவராவது - ஒரு பார்ப்பன அதிகாரம் பதவி பட்டம் பெற்ற ஆசாமியாவது - சட்டையை கழட்டி வைத்தால் ஜேப்பில் இருக்கின்ற பேனாவைத்திருடி விற்றுப் பிழைக்கும் ஒரு பார்ப்பனத் தொண்டனாவது- "சுத்தமாய் நாளைக்கு கஞ்சிக்கு வகையில்லை" என்று சொல்லிக்கொள் ளக்கூடிய ஒரு உபாதானப் பிச்சைகாரப் பார்ப்பனனாவது எந்தச் சமயத்திலும் எப்படிப்பட்ட நெருக்கடி யான நிலைமையிலும் தன்னுடைய சமூகநன்மையையும் சமூக ஆதிக்கத் தையும் சமூக உயர்வையும் கடுகளவாவது விட்டுக் கொடுத்ததாக யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

வேண்டுமானால் கள்ளுசாராயம் குடிப்பார்கள், எங்கு வேண்டு மானாலும் புசிப்பார்கள், கண்டபடியெல்லாம் திரிவார்கள், எவ்வளவு இழிவான தென்று கருதப்பட்ட வேலைகளை யெல்லாம் கூட செய்வார்கள். ஆனால் அப்படிப்பட்ட எவர்களிடமும் பார்ப்பன சமூக நலத்தையும் உயர்வையும் ஒரு கடுகளவாவது விட்டுக்கொடுத்ததாக ஒரு சிறிதும் காண முடியாது. மற்றபடி பார்ப்பனரல்லாதார்களிலோ என்றால் சமூக நலத்தையும்



RangaRakes tamilnavarasam.com

சமூக சுயமரியாதையையும் ஒரு ஓட்டுக்கு விற்றுவிடத் தயாராயிருப்பார்கள். இந்த வித்தியாசங்களே தான் எப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமையையும் பார்ப்பனர்கள் சமாளித்து வருவதும், பார்ப்பனரல்லாதார்கள் எப்படிப்பட்ட சௌகரியமான நிலைமை கிடைத்தாலும் அதிலிருந்து சடுதியில் கீழேவிழுந்து விடுவதுமாயிருக்கின்றார்கள். ஆகையால் இனியாவது பார்ப்பனரல்லாத பொதுமக்கள் கவனித்து சமூக நன்மையை முக்கியமாய் கருதி சூக்ஷிக்கும் தந்திரத்திற்கும் ஏமாந்து போகாமல் ஜாக்கிரதையுடனும் எச்சரிக்கையுடனும் இருக்கவேண்டுமாய் மறுபடியும் மறுபடியும் வலியுறுத்தி எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 26.04.1931**



# கலைகள்

சுயமரியாதை இயக்கத்தார் மத சம்பந்தமான ஆபாசங்களை எடுத்து வெளிப்படுத்துகின்ற காலத்தில் அதற்குச் சரியான சமாதானம் சொல்ல யோக்கியதை இல்லாத நமது பண்டிதர்கள் தாங்கள் தப்பித்துக் கொள்ளுவதற்காகப் பழைய கலைகள் என்னும் சாக்கின் பேரில் அதன் நிழலில் போய் மறைந்துகொண்டு "சுயமரியாதை இயக்கத்தார் பழைய கலைகளை நாசம் செய்கின்றார்கள்" என்று பழிசுமத்துவதன் மூலமே அவைகளைக் காப்பாற்றப் பார்க்கிறார்கள். ஆகவே இது அவர்களுடைய நியாயமற்ற தன்மையையும் பயங்காளித்தன்மையையும் வேறு வழியில் சமாதானம் சொல்ல சக்தியற்ற தன்மையுமே காட்டுவதாகின்றது.

கோவில்களைக் குற்றம்சொல்லி அதில் உள்ள விக்கிரகங்களின் ஆபாசங்களை எடுத்துக்காட்டி இம்மாதிரி காட்டுமிராண்டித்தனமான உணர்ச்சியை மக்களுக்கு வளர்க்கலாமா என்றும் இந்த ஆபாசத்திற்காக இவ்வளவு பணச்செலவும் நேரச்செலவும் செய்யலாமா என்றும் கேட்டால் ஓவியம் என்னும் நிழலில் புகுந்துகொண்டு "அவைகள் அவசியம் இருக்க வேண்டும்" என்றும் "அவைகள் அழிந்தால் இந்திய ஓவியக் கலை அழிந்துவிடும்" என்றும் "சாமி பக்திக்காக தாங்கள் கோவில்களைக் காப்பாற்றுவதில்லை" என்றும் "ஓவியக்கலை அறிவுக்காக கோவில்கள் காப்பாற்றப்பட வேண்டும்" என்றும் சொல்லுகின்றார்கள். இதுபோலவே புராணங்களைப் பற்றிய ஆபாசங்களை எடுத்துச் சொல்லும் போதும் இதே பண்டிதர்கள் "புராணக் கதைகளை நாங்கள் மதிப்பதில்லை" என்றும் "அப்புராணங்களில் உள்ள இலக்கண இலக்கிய கலைகளையே காப்பாற்ற முயற்சிக்கின்றோம்" என்றும், "கம்பன் கவிச்சுவையும் சேக்கிழார் தமிழ்ச் சுவையும் இவ்வுலகில் வேறு எங்கும் காணமுடியாது" என்றும் "ஆதலால் அவைகள் காக்கப்பட வேண்டும்" என்றும் பேசுகின்றார்கள்.

ஆகவே நமது பண்டிதர்களின் ஓவியக்கலையும், காவியக் கலையும் போகின்ற போக்கைப் பார்த்தால் அவர்களுக்கு உள்ள பகுத்தறிவுக் கலை எவ்வளவில் இருக்கின்றது என்பது ஒருவாறு தானாகவே விளங்கும். மக்களுக்கு ஓவியம் வேண்டுமானால் இந்தியக்கோவில் ஓவியமும் இந்துக் கடவுள்கள் ஓவியமும் கடுகளவு அறிவுள்ள மனிதனும் ஒப்ப முடியாத



RangaRakes tamilnavarasam.com

மதிக்கமுடியாத ஓவியங்கள் என்பதோடு அவை மனிதத்தன்மையும், பகுத்தறிவும் உள்ள மக்களால் உண்டாக்கப்பட்ட ஓவியம் என்று சொல்ல முடியாததான நிலையில் அவை இருப்பதையும் காணலாம். எப்படியெனில் இந்திய ஓவியம் என்பது இந்து மத சம்மந்தமான கடவுள், புராணம் ஆகியவைகளைப் பற்றியதைத்தவிர தனிப்பட்ட இயற்கை அறிவைப் பற்றியது மிக மிக அருமை என்றே சொல்ல வேண்டும். அது மாத்திர மல்லாமல் அவைகளில் இயற்கைக்கு முறண்பட்டதே, 100-க்கு 99 ஓவியங் கள் என்றும் சொல்லவேண்டும். சாதாரணமாக மனிதனும், மிருகமும் புணர்வதும், மிருக முகத்துடன் மனிதன் இருப்பதும் மிருகங்கள் பறப்பதும், மிருகங்களின் மீது அளவுக்கு மீறின மக்கள் இருப்பதும், பக்ஷிகளின்மீது மக்கள் இருப்பதும், மக்கள் பறப்பதும், நாலு கைகளும், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து ஆறு முகங்களும், சிறிய உருவத்தின்மீது பெரிய உருவங்கள் இருப்பதும், தாமரைப் புஷ்பத்தின் மீது ஒருபெண் நிற்பதும் இந்த மாதிரியாகவும் இன்னமும் இதைவிட எத்தனையோ பொறுத்தமற்ற, சாத்தியமற்றதான உருவங்களே இன்று ஓவியமாகக் கருதப்படுகின்றன. சாதாரணமாக மேல்நாடு ஓவியங்களைப் பார்த்தால் இது ஓவியமா? உண்மை தோற்றமா? என்று மருளும்படியாகவும் அவைகளுடைய சாயல் முதலிய வைகளில் இருந்தே குணம், காலம், இடம்,நடவடிக்கை முதலியவைகள் தெரிந்துகொள்ளும்படி யாகவும் அவைகள் பிரத்தியக்ஷமாக இயங்கிக் கொண்டிருப்பது போலவும் எவ்வளவோ அருமையான காரியங்கள் வெகு எளிதில் மிகச்சாதாரண தன்மையில் அறியும்படியாகவும் நாமே பார்த்த மாத்திரத்தில் சுலபத்தில் பழகிக்கொள்ளும் படியாகவும் இருப்பதைக் காணலாம். இவற்றிற்காக ஒரு தம்படியாவது செலவில்லா மலும், பூஜை, நைவேத்தியங்கள் செய்வதின் மூலம் நேரத்தையும், அறிவையும் பறி கொடுக்காமலும் அனுபவிக்கலாம்.

ஆகவே அப்படிப்பட்ட அருமையான ஓவியங்களையும், சித்திரங் களையும், பதுமைகளையும் விட்டுவிட்டு, அநாகரீகமும் காட்டுமிராண்டித் தனமுமான மிருகப்பிராயமும் கொண்டதான உருவங்களை வைத்துக் கொண்டு கொஞ்சமும் வெட்கமில்லாமல் அவைகளுக்குப் பணம், காசு, நேரம் ஆகியவை செலவு செய்து பூஜை முதலியது செய்து கீழே விழுந்து அவைகளிடம் பக்தியையும் காட்டிக்கொண்டு, "அவைகளை ஓவியக்கலைக் காகக் காப்பாற்றுவதற்காக இப்படிச் செய்கின்றோம்" என்றால் இது பகுத்தறி வும், யோக்கியக் குணமும் படைத்த மனிதர் என்பவர்களின் செய்கையாகுமா - பேச்சாகுமா என்று கேட்கின்றோம்.

இதுபோலவே காவியங்கள் என்பவைகளை எடுத்துக் கொண்டோ மேயானால் அதன் ஆபாசக் களஞ்சியங்களை அளவிட்டுச் சொல்ல முடியாது. நமது மக்களில் 100-க்கு 10பேரே எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். அவர்களில் ஆயிரத்திற்கு அரை பேரே காவிய இலக்கண இலக்கியங்களை அறியக்கூடியவர்கள். அவர்களில் எத்தனையோ ஆயிரத்திற்கு ஒருவரே புராணங்களை வெரும் இலக்கியமாகவே மாத்திரம் எண்ணுபவர்கள் அல்லது அனுபவிப்பவர்கள் என்பதாக கணக்கெடுக்கலாம்.

ஆகவே இவர்களைத்தவிர மற்ற கோடிக்கணக்கான மக்கள் அவற்றை என்னவாகக் கருதுகின்றார்கள்? அதைப்பார்த்தபின், கேட்ட பின் எப்படி நடந்து கொள்ளுகின்றார்கள்? என்கின்ற விஷயங்கள் இந்தப் பண்டிதர்களுக்கு தெரியாததா என்று கேட்கின்றோம்.

கம்பராமாயணத்தின் கவி அழகையும், சேக்கிழார் புராணத்தின் தமிழ் அழகையும் பண்டிதர்கள் எடுத்துச்சொல்லும்பொழுதே புஸ்தகத் தின் முன் தேங்காய், பழம் உடைத்து கற்பூரம் பற்றவைத்து, பூஜை செய்து, கீழே விழுந்து கும்பிட்ட பிறகு "ஸ்ரீ மதேராமானுஜாய நமஹ" என்றும், "நமப்பார்வதீபதே - அரகர சங்கர மகாதேவா" என்றும் சொல்லிவிட்டுப் பிறகு கண்மூடி, கை கூப்பி, காப்புச் சொல்லி அருள் உண்டாக்கிக்கொண்டு பிறகுதான் கவி படித்துப் பொருள் சொல்ல ஆரம்பிக்கின்றார்கள். அதுவும் யார் முன்னிலை யில், எப்படிப்பட்ட ஆண் பெண் முன்னிலையில் என்ப தைப்பற்றி நாம் விவரிக்கவே வேண்டியதில்லை.

ஆகவே இந்த நிலையில் புராணங்கள், காவியங்கள் ஆகியவைகள் இலக்கியத்திற்கும், இலக்கணத்திற்கும் பயன்படுகின்றனவா- பயன்படுத்தப் படுகின்றனவா? அல்லது மக்களை இலக்கண இலக்கிய அறிவற்ற மக்களாக் கப் பயன் படுத்தப்படுகின்றனவா என்பதை அறிவுள்ள வாசகர்க ளையே யோசித்து அறிந்து கொள்ளும் படி விட்டுவிடுகின்றோம்.

இந்த இடத்தில் நாம் முக்கியமாய் குறிப்பிடுவது என்னவென்றால் நமது பண்டிதர்கள் என்பவர்களின் வயிற்றுப் பிழைப்புக்கும்,புஸ்தக வியாபாரத்திற்கும், வாழ்க்கை நிலைமைக்கும் இம்மாதிரி காட்டுமிராண்டித் தனமான அநாகரீகமான காவியங்களும், ஓவியங்களுமல்லாமல் வேறு வகை ஒன்றுமில்லாமல் போன தால் அவர்கள் இத்தனை மோசமான பொய்யையும், புரட்டையும், வஞ்சகத்தையும் சொல்லிக்கொண்டு இவை களைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் வந்துவிட்டது.

ஆகவே இம்மாதிரி ஆபாசமும் அநாகரீகமானதுமான காவியமும், ஓவியமும் அழிக்கப்படவேண்டுமானால் முதலாவதாக நமது பண்டிதர்கள் என்பவர்களுடைய வயிற்றுப் பிழைப்புக்கு, வாழ்க்கைச் சௌகரியத்திற்கு ஏதாவது ஒரு வழி கண்டுபிடித்துக் கொடுக்கவேண்டியது பகுத்தறிவையும், நாகரீகத்தையும் விரும்பும் பொது ஜனங்களின் கடமையாயிருக்கின்றது.

மேல்நாட்டுப் பண்டிதர்களுக்கு அவர்களுடைய கல்வியானது பகுத்தறிவை உண்டாக்கக் கூடியதாய் இருப்பதால் அவர்கள் அனாகரீகப்





RangaRakes tamilnavarasam.com

பழங்காவியங்களுடையவும், ஓவியங்களுடையவும் உதவி சிறிதும் இல்லாமலே உயிர்வாழ சௌகரியமடைந்திருக்கிறார்கள்.

ஆனால் நம்முடைய பண்டிதர்கள் பரிதாபகரமான நிலைமையில் இருப்பதால் அவர்களைக் குற்றம் சொல்லுவதிலும் பயனில்லை என்றே சொல்லுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 26.04.1931**



## காந்தியும் நாகரீகமும்

உயர்திரு. காந்தியவர்கள் தற்கால முற்போக்குக்கும், சீர்திருத்தத்திற்கும், நாகரீகத்திற்கும் பொருத்தமற்றவர் என்பதோடு அவர் பழைய கால நிலைமைக்கே மக்கள் போகவேண்டும் என்கின்ற அறிவு உள்ளவர் என்றும் மூட நம்பிக்கையிலும் மூடப்பழக்க வழக்கங்களிலும் மிகுதியும் ஈடுபட வேண்டுமென்றும் ஆகவே இந்தியா விடுதலைபெறவோ முற்போக்கடையவோ நாகரீகம் பெறவோ திரு.காந்தியிடத்தில் நம்பிக்கை வைக்க முடியா தென்றும் கொஞ்சகாலமாக எழுதிவருகின்றோம். அதுமாத்திரமல்லாமல் அவர் இந்தியர்களின் பிரதிநிதியாக நாம் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் கூட எழுதியிருந்தோம். இவைகளையெல்லாம் அனுசரித்தே திருநெல்வேலி ஜில்லா தூத்துக்குடி சுயமரியாதை மகாநாட்டிலும் பல காரணங்கள் காட்டி திரு. காந்தி இடம் நம்பிக்கை இல்லை என்று ஒரு தீர்மானமும் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

இந்தத் தீர்மானமானது சிலருக்கு அதிருப்தியைக் கொடுத்ததாகவும் தெரியவருகின்றது. காங்கிரசிலும் காந்தீயத்திலும் புதிதாக ஞானஸ்நானம் பெற்று மதம் மாறின சில பக்தர்களுக்கு மேல் கண்ட நம்பிக்கையில்லாத தீர்மானத்தால் மிக்க மனவருத்தமேற்பட்டதாகவும் கேட்டு மிக வருந்தினோம். பலர் துக்கம் விசாரித்ததாகவும் தெரிந்தோம். ஆனால் இவை களுக்கு எவ்வித பரிகாரமும் செய்யக்கூடாத நிலைமையில் நாம் இருக்கின் றோம் என்பதை ஒப்புக்கொள்ளுகின்றோம். ஆயினும் அப்படிப்பட்டவர்கள் திரு.காந்தியை உணருவதன் மூலம் தானாகவே அத் துக்கங்கள் ஒழியக்கூடும் என்று நினைக்கின்றோம். திரு. காந்தியவர்கள் டெல்லியில் இந்திய வியாபார சங்க மகாநாட்டை திறந்து வைக்கும்போது அவர் பேசியிருக் கும் பேச்சானது (சுதேச மித்திரனில் காண்கின்றபடி) “நான் தென்னாப்பிரிக்காவில் ஜெனரல் ஸ்மட்ஸுடன் பேசிக் கொண்டிருக்கும் போது தென்னாப்பிரிக்காவில் வந்து குடியேறிய வெள்ளைக்காரர்கள் தங்கள் நாகரீகமானது கீழ்த் திசைக்காரர் களின் செல்வாக்கால் சீர்கெட்டுப் போகக்கூடாது என்று கருதுகின்றார்கள் என்று என்னிடம் கூறினார். அது போலவேதான் இந்தியாவும் விரும்புகின்றது” என்று பேசியிருக்கின்றார்.



RangaRakes tamilnavarasam.com

'மற்றநாட்டு நாகரீகங்கள் இந்தியாவிற்குள் புகுந்து இந்திய நாகரீகத்தைக் குலைக்காமல் இருக்கவேண்டுமென்று (இந்தியா) நான் விரும்புகின்றேன்' என்று பேசியிருக்கின்றார். ஆகவே திரு.காந்தியவர்களின் முற்போக்கையும் சீர்திருத்தத்தையும் நாகரீகத்தையும் அறிய வேண்டியவர்களுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். இது மாத்திரமல்லாமல் இனியும் கொஞ்ச காலத்திற்கு முன் ஒரு பத்திரிகை நிரூபரிடம் பேசும்போது சுயராஜியம் கிடைத்தவுடன் கிருஸ்துவ பாதிரியார்கள்யெல்லாம் இந்தியாவை விட்டு அப்புறப்படுத்தப்பட்டு விடுவார்கள் என்பதாகசொல்லி இருக்கின்றார். அதுவும் எப்படிப்பட்ட பாதிரிகள் அப்புறப்படுத்தப்படுவார்கள் என்றால் கல்வி கற்பிப்பதன் மூலமாகவும், ஆஸ்பத்திரிகள் வைத்து நோய்களுக்கு சிகிச்சைசெய்வதன் மூலமாகவும் மதப்பிரசாரம் செய்யும் பாதிரிமார்கள் அப்புறப்படுத்தப்படுவார்கள் என்பதாக குறிப்பிட்டிருக்கின்றார். ஆகவே திரு.காந்தியவர்கள் நம்நாட்டுப் பண்டிதர்கள் விரும்பும் சீர்திருத்தம், நாகரீகம் முதலியவை கொண்ட தொல்காப்பியனார் காலத்திய நாகரீகக் காரராகவே இருக்கின்றார் என்பதில் இனியும் யாருக்காவது சந்தேகம் இருக்கின்றதா என்றே கேட்கின்றோம்.

திரு.காந்தி நினைத்துக்கொண்டிருக்கும் கீழ் நாட்டு நாகரீகம் என்பது என்ன என்பதாக வாசகர்கள் அறிய வேண்டுமா? என்று கேட்கின்றோம். முதலாவதாக அவர் இந்து மதமே ஒரு உருவாய் எடுத்து தான் வந்திருப்பதாக தன்னைப்பற்றி அடிக்கடி சொல்லிவந்திருக்கின்றார். இந்திய மக்களுக்கு இந்து மதமே போதும் என்றும் வேறு மதம் வேண்டியதில்லை என்றும் இந்து மதம் என்றால் வருணாச்சிரம தர்மமும் இராமாயணத்தில் உள்ள இராமனது தர்மமும் பாரதத்தில் உள்ள கீதையினது தர்மமும் என்றும் அடிக்கடி சொல்லிவருகிறார். அது மாத்திரமல்லாமல் கீதை உபதேசமும் கீதை பிரசாரமும் செய்தும் வருகின்றார். ராமராஜியத்தை ஸ்தாபிப்பதற்காகவேதான் மூச்சுவிடுவது முதல்-தூங்குவது வரையில் உண்டான காரியங்கள் செய்து கொண்டு உயிர் வாழ்ந்திருப்பதாகவும் சொல்லுகின்றார்கள். ஆகவே இந்த இருபதாவது நூற்றாண்டில் சைன்சு உலகத்தில் 10,000-மைலுக்கு அப்பாலும் இப்பாலும் மக்கள் இருந்துகொண்டு ஒருவரை ஒருவர் நேரில் கண்டு பேசிக்கொண்டிருக்கின்ற இக்காலத்தில் ராமாயண பாரத காலத்து நாகரீகத்திற்கும் இந்து மதக்கொள்கைக்கும் ஏற்ற ராஜீய பாரம் இருக்கவேண்டும் என்றால், சொல்லுகின்றவர் ஏதோ ஒரு காரணத்தால் சொல்லுவதானாலும் இதை ஆதரித்து ஆமாம் போடுகின்றவர்களின் யோக்கியதை எப்படிப்பட்டது என்பதை வாசகர்களே யூகித்து உணர்ந்து கொள்ள விட்டுவிடுகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 26.04.1931**



# கருங்கல் பாளையம் முனிசிபல் பெண் பாடசாலை

பெண்கள் யாவரும்படிக்கவேண்டும். தங்களுடைய சீர்திருத்தத்தின்படி அரசாங்க உத்தியோகங்கள் பெரும்பாலும் இனி பெண்களுக்கே வழங்கப்படுமாதலால் அவர்கள் படித்து தயாராயிருக்க வேண்டும். இனிமேல் சுயமரியாதை உள்ள எந்த ஆண்களும் படித்த பெண்ணைத்தான் கலியாணம் செய்துகொள்வார்கள். ஆதலால் பெண்கள் படித்திராவிட்டால் அவர்கள் "கன்னியா ஸ்திரிகள்" மடத்திற்குதான் இனி அனுப்பப்படுவார்கள். அனேக ஆண்கள் தாங்கள் கல்யாணம் செய்து கொண்ட பிறகுகூட இப்போது யோசித்துப்பார்த்து தங்களது சுயமரியாதையை உத்தேசித்து தாங்கள் முன்கலியானம்செய்து கொண்ட படிக்காத பெண்களை தள்ளிவிட்டு படித்த பெண்களாகப் பார்த்து மறு விவாகம் செய்துகொள்ளப் பார்க்கின்றார்கள். ஆதலால் பெரிய பெண்கள் கூட தங்களுக்கு 'எப்படியோ ஒருவிதத்தில் கல்யாணமாகிவிட்டது. இனி பயமில்லை' என்று குருட்டு நம்பிக்கையில் இருந்துவிடாமல் அவர்களும் கஷ்டப்பட்டு படித்து தங்கள் தங்கள் புருஷன்மார்களை வேறு கல்யாணம் செய்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பெண்கள் படித்தால் கள்ளப் புருஷர்களுக்குக் கடிதம் எழுதுவார்கள் என்று மூடப் பெற்றோர்கள் கருதுகிறார்கள், சொல்லுகின்றார்கள். அது மிகவும் முட்டாள் தனமும் போக்கிரித்தனமுமான கருத்தாகும். எந்த பெற்றோர்களும் இதற்காக பயப்பட வேண்டியதில்லை. எந்தப் பெண் கடிதம் எழுதினாலும் ஆண் பிள்ளைகளுக்குத்தான் எழுதுவார்களே ஒழிய வேறு யாருக்கும் எழுதமாட்டார்கள். ஆதலால், நாம் ஆண்களுக்கு இப்போதே சொல்லி வைத்துவிடலாம் என்னவென்றால் எந்தப் பெண் கடிதமெழுதினாலும் படித்துப்பார்க்காதீர்கள் என்றும், படித்துப் பார்த்தாலும் பதில் எழுதாதீர்கள் என்றும்சொல்லிவைத்துவிடலாம். அந்த வார்த்தைகளை ஆண்கள் கேட்காவிட்டால் அந்த ஆண்களை தண்டிக்கின்ற தண்டனையையே பெண்களுக்கும் தண்டித்து விடலாம். இந்த காரியத்திற்காக உலகில் உள்ள மக்கள் சமூகத்தில் பாதியைப் படிப்பில்லாமல் வைத்திருப்பது என்பதும் மிகவும் மோசமான காரியமேயாகும்.



RangaRakes tamilnavarasam.com

சற்றுமுன் இங்கு நடந்த துருவசரித்திரத்தில் பெண்கள் நடித்தமாதிரி மிகவும் போற்றதக்கதாகும். இதை கற்பித்த உபாத்தியாயர் மிகவும் கற்பிப் பதில் தேர்ந்த உபாத்தியாயர் என்பது எனது அபிப்பிராயம். பிள்ளைகளும் மிகவும் கூர்மையான அறிவுள்ளவர்கள் என்றே சொல்ல வேண்டும் .

ஆனால், கதை மாத்திரம் மிகவும் மோசமானது. ஏனெனில் இக் கதையில் அறிவும் இல்லை ஒழுக்கமும் இல்லை. இரண்டு பெண்டாட்டி கதை சில விஷயங்களில் இயற்கையாகக் காணப்பட்டாலும், காட்டுக்குப் போய் தபசுசெய்து ஏதோ காரியம் சாதித்ததாகச் சொல்லப்படுவது இயற் கைக்கும். அறிவுக்கும் நேர்விரோதமானதோடு மக்கள் அறிவைக் கெடுப் பதுமாகும். ஆதலால் உபாத்தியாயர்கள் இனி இம்மாதிரி காரியங்களுக்கு நல்ல கதை களாக அதாவது அறிவு, ஒழுக்கம், முயற்சி, தன்நம்பிக்கை ஆகிய காரியங் களுக்கும் மக்கள் பின்பற்றி நடப்பதற்கும் ஏற்றதாகப் பார்த்துத் தெரிந் தெடுத்து நடத்தப்பட வேண்டும்.

தவர கும்மி, கோலாட்டங்களை ஒழித்து விட்டு ஓடவும், குதிக்கவும், தாண்டவும், கைக் குத்து, குஸ்தி முதலியவைகளையும் சொல்லிக்கொடுத்து ஒரு ஆண் பிள்ளைக்கு உள்ளபலம், தைரியம் உணர்ச்சி ஆகியவைகள் பெண்களுக்கும் உண்டாக்கும்படியாகவும் செய்யவேண்டும்.

*குறிப்பு : ஈரோட்டில் 20.04.1931 அன்று 'பெண்கல்வி' பற்றி ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 26.04.1931**



# இந்து மத தர்ம பரிபாலன சட்டம்

இந்து மத பரிபாலன சட்டம் ஒன்று சென்னை சட்ட சபையில் சுமார் 6, 7 வருஷத்திற்கு முன் கொண்டுவரப்பட்ட காலத்தில் பார்ப்பனர் எல்லோரும் ஏகோபித்தும் பார்ப்பனரல்லாதார்களில் பலர் பார்ப்பனருடன் சேர்ந்து கொண்டும் அச்சட்டத்தை "மதத்தில் சர்க்கார் பிரவேசித்து விட்டார்கள்" என்று ஆக்ஷேபித்ததுடன் இச்சட்டம் கொண்டு வரப்பட்டவர் கள் மீதும் கெட்ட எண்ணம் கற்பித்து எவ்வளவோ எதிர்பிரசாரம் செய்தும் வந்தது யாவரும் அறிந்ததேயாகும்.

அதுமாத்திரமல்லாமல் காங்கிரஸ் முதலிய அரசியல் ஸ்தாபனங் களின் பேராலும் பல பார்ப்பனர்கள் அச்சட்டத்தை எதிர்த்ததும் இந்தக் காரணத்தைவைத்தே தேர்தல்களில் எதிர்பிரசாரம் செய்ததும் பொது ஜனங் களுக்கு ஞாபகமிருக்கலாம். 'இந்து' 'சுதேசமித்திரன்' முதலிய "தேசீய" பத்திரிகைகளும் அச்சட்டத்தைக் கண்டித்து எழுதி பார்ப்பன சந்தாதாரர் களைக் கொண்டு மகஜர்கள் வாங்கி சர்க்காருக்கு அனுப்பியதும் ஞாபக மிருக்கலாம். அப்படிப்பட்ட நெருக்கடியான காலத்தில் நாமும் நமது நண்பர் கள் பலரும் பொது ஜன அபிப்பிராயம் என்பதற்கு எதிராய் நின்று பார்ப்பனர் களின் எதிர்ப்புகளை யெல்லாம் தாக்கி கண்டித்து அச்சட்டத்தின் நன்மை யைப்பற்றியும், தேவையைப்பற்றியும் பொது ஜனங்களுக்கு எடுத்துக்கூறி எதிர்ப்பிரசாரத்தை அடக்கி வந்ததும் யாவரும் அறிந்திருக்கலாம்.

இந்தநிலையில் அச்சட்டம் சட்டசபையில் நிறைவேறி, கவர்னர், துரை, வைசிராய் பிரபு, அரசர் பெருமான் ஆகியவர்கள் சம்மதம் பெற்று முடிவாக அது அமுலுக்கு வந்திருக்கும் விஷயமும் யாவரும் அறிந்ததேயாகும்.

ஆனால் இப்போது அந்த சட்டத்தினால் ஏற்பட்ட பலன் என்ன? என்று பார்த்தோமேயானால் அச்சட்டம் இல்லாதபோது இருந்த நிலைமை யைவிட எந்த அளவாவது "இந்து மத தர்மம்" மாறுபாடடைந்திருக் கின்றதென்றோ, "மக்களுக்கோ" "மதத்திற்கோ" "தர்மத்திற்கோ" நன்மை ஏற்பட்டிருக்கின்றதென்றோ சொல்லுவதற்கில்லை என்றுதான் சொல்ல வேண்டியதாக இருக்கின்றது. ஆனால் அச்சட்டத்தின் பேரால் சில பார்ப்பன ரல்லாதார் கொஞ்சம் சம்பளம் பெறுகின்றார்கள் என்பதை ஒப்புக் கொள்ளு வோமென்றாலும் விகிதாச்சாரத்தைவிட அதிகமாகவே பார்ப்பனர்களும்



RangaRakes tamilnavarasam.com

அச்சம்பளத்தில் பங்கு பெருகின்றார்கள் என்பதைப் பார்த்தால் அதிலும் பார்ப்பனரல்லாதாருக்கு விசேஷ- லாபமில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

ஆனால் அந்த இலாக்காவின் மூலமாக பார்ப்பனரல்லாதாரியக்க மென்னும் ஜஸ்டிஸ் கட்சி அதிகாரத்திலும் பதவியிலும் இருப்பதற்கு ஒரு வசதி அளிக்கின்றது என்கின்ற முறையில் அனுகூலமாயிருக்கின்றது என்று நினைப்போமானால் அவ்வழியிலும் பார்ப்பனர்களும் தங்கள் விகிதாச்சாரத் திற்கு மேற்பட்ட பதவியையும் அதிகாரத்தையும் லாபத்தையும் அனுபவித் துக்கொண்டுதான் வருகிறார்கள். ஆதலால் அந்த வழியிலும் பார்ப்பன ரல்லாதாருக்கு விசேஷ- லாபம் ஏற்பட்டது என்று சொல்லி விடுவதற்கும் இல்லை.

கோவில் நிர்வாகங்களின் யோக்கியதைகளைப்பற்றி நமக்குக் கவலை யில்லையானாலும் அதன் வரும்படிகளான தேசத்தின் பொதுச் சொத்துக்கள் போகும் மாதிரியைப் பார்க்கும் போது அதாவது இந்தச் சட்டத்திற்கு முன் அதிகாரத்தின் பேரால் திருட்டும் கண்டபடியெல்லாம் செலவினங்களின் பேரால் கொள்ளையும் போய்க்கொண்டிருந்த பணங்கள் இப்போது அதாவது சட்டத்திற்குப் பிறகு சட்டப்படி திருட்டும் கொள் ளையும் போய்க் கொண்டி ருக்கின்றது என்றுதான் சொல்லவேண்டி யிருக்கின்றதற்கு வருந்துகின்றோம். ஆகவே அந்தவகையிலாவது பயன் உண்டு என்று சொல்லுவதற்கும் இடமில்லை.

மற்றபடி மக்களுக்கு மதஉணர்ச்சியோ, தர்மஉணர்ச்சியோ, ஒழுக்க உணர்ச்சியோ கற்பிக்கப்படுகின்றதா என்றாவது பார்த்தால் அந்தத்துறை யிலும் விஷயங்களில் முன்னையைவிட இப்போது மோசமாகவே நடை பெற்று வருவதை எடுத்துச்சொல்லவேண்டி இருப்பதற்கும் வருந்த வேண்டியதாகவே இருக்கின்றது.

தேவஸ்தானக் கமிட்டிகள் நியமிக்கப்படும் ஒழுங்கும் அவர்களால் தர்ம கர்த்தாக்கள் டிரஸ்டிகள் நியமிக்கப்படும் ஒழுங்கும் பெரிதும் முட்டாள் களின் பணத்தை நெஞ்சில் சிறிதும் ஈரமற்ற கனவான்கள் அடிக்கும்கூட்டுக் கொள்ளையாகவே நடைபெற்று வருகின்றன. கோயிலின்பேரால் மதத்தின் பேரால் வசூலாகும் பணத்தில் ஒரு காசு குறைவில்லாமல் வசூல் செய்யவும், கோயிலின் பேரால் மதத்தின் பேரால் நாசமாகும் பணத்தில் அரை காசு குறையாமல் வட்டியுடன் நாசமாக்கவும், கோயிலின் பேரால் மதத்தின் பேரால் வயிறு வளர்ப்போர்களுக்கு எவ்விதக் கேள்வி கேட்பாடுமில்லாமல் தாராளமாய்பிழைப்பு நடக்கவுமான காரியங்கள் தான் நடந்து வருகின்றன. இந்த நிலையில் இந்த மாதிரி சட்டம் நிறைவேற்றப்பட்டதால் என்ன பலனைக் கொடுத்தது? இதன் அவசியம் என்னவாயிற்று? என்பதைப்பற்றி யோசிக்க வேண்டியதற்கு இது முக்கியமான சமயம் என்றே சொல்லுவோம்.



எல்லா மக்களுக்கும் சம நியாயம், சம சந்தர்ப்பம், சம உரிமை கொடுப்பதே நோக்கமாகக் கொண்டதன் பயனாகவே பதவியும், அதிகார மும் பெற்ற கூட்டத்தார் இன்று இந்த இந்துமத தர்ம பரிபாலன சட்டத்தினால் 'இந்து மத'த்திற்கு, தர்மத்திற்கு செய்த நன்மை என்ன என்பதை பொது ஜனங்கள் யோசித்துப் பார்க்க வேண்டியது முதற்கடமையாகும். இரண்டாவதாக இந்த மாகாணத்தில் இந்து மதத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு இருக்கும் 4-கோடி மக்களில் சுமார் ஒரு கோடி மக்களுக்கு இந்துக் கோவில்கள் என்பவைகளில் பிரவேசமளிக்க இதுவரை யாதொரு மார்க்க மும் செய்யாமல் ஒரு கூட்டமானது 10-வருஷமாய் மாதம் 5000, 4000, 2000, 1000, 800, 500, 250, 150, 100, 75 வீதம் பல நூற்றுக்கணக்கான மக்கள் சமதர்மத்தின் பேரால் பதவி அடைந்து சம்பளம் பெற்று வாழ்வதில் என்ன பிரயோஜனம் என்பதையும் யோசித்துப் பார்க்கும்படி பொது ஜனங்களுக்கு நினைப் பூட்டுகின்றோம்.

மற்றும் 400-லட்சம் "இந்து மக்களில்" 13 லட்ச மக்கள் பார்ப்பனர் என்னும் பேரால் பிறவியின் காரணமாக அக்கோயில்களில் அனுபவிக் கும் நியாயமற்ற உயர்வையும், செல்வத்தையும் சிறிதுகூட மாற்றி நியாயம் செய்ய முடியாமலும், அவர்கள் தவிர மற்ற மக்கள் சிங்கு, நாயகர், செட்டி யார், முதலியார், நாயுடு, தேவர், பிள்ளை என்கின்ற எல்லா ஜாதியாருக்கும் அக் கோயிலில் பார்ப்பனர் கிட்ட நெருங்கக்கூடாதவர்களாய் இருந்து அனுபவிக்கும் இழிவையும் கொடுமையையும் சிறிதுகூடப் போக்க முடியா மலும் இருக்க மேல்கண்டபடி ஒருசிலரை இந்து தர்மபரிபாலனம் என்னும் பேரால் கொள்ளையடிக்கவிட்டுக் கொண்டிருப்பதிலும் என்ன பயன் என்று யோசித்துப் பார்க்கும்படியும் விரும்புகின்றோம்.

மற்றும் சாதாரணமாக சென்னை மாகாணத்தின் இந்து கோவில், மடம் ஆகியவைகளின் வரும்படி போர்டார் கணக்குப்படியே வருஷம் ஒன்றுக்கு இரண்டரை கோடி ரூபாய் ஆகின்றது.

மற்றும் அதன் பேரால் பொது ஜனங்களுக்கு ஏற்படும் செலவைப் பற்றி இங்கு நாம் குறிப்பிடவில்லை. .

ஆனாலும், அக்கோயில்களுக்கும், மடங்களுக்கும். இருக்கும் வரும்படி இல்லாத ரத்தினம், பொன், வெள்ளி முதலிய உலோகவகைகளின் பொருமானம் எத்தனை கோடி ரூ. பொருமானதாகும்? ஆகவே அவற்றின் குறைந்த வட்டி வருமானமும் சேர்ந்தால் இன்னும் வருமானம் அதிகப் படலாம். இந்த வருமானங்களில் இந்துமத பரிபாலன போர்டார் மற்றும் அதன் சிப்பந்திகள் ஆகியவர்கள் சம்பளமாகப் பெரும் ஒரு பாகம் தவிர மற்ற பாகங்கள் முழுவதும் ஒழுக்கமற்றதும், அனாவசியமானதுமான வகை களிலேயே செலவாகின்றன என்பதை யாராவது மறுக்க முடியுமா? அதாவது புராணக் கதைகளில் வரும் பாத்திரங்களான "சாமி" களினுடையவும்



RangaRakes tamilnavarasam.com

அவர்களது பெண்டுபிள்ளை வைப்பாட்டி அடியார்கள் பக்தர்கள் ஆகியவர் களினுடையவும் பூசைக்கும், கல்யாண முதலிய உற்சவத்திற்கும் என்றும், மற்றும் டிரஸ்டிகளின் சொந்தப் பிரயோசனத்திற்கு என்றும் வீண் போகின் றனவே தவிர வேறு என்ன பலனுக்கு பயன்படுகின்றன?

ஆகவே கோவில், மடம் ஆகிய ஸ்தாபனங்களும், அதன் செல்வங் களும் இந்துமத தர்மபரிபாலன போர்டு ஏற்பட்டு 7 வருஷ- காலமாகியும் யாதொருவித மாறுதலும் இல்லாமல் இருக்குமானால் இந்தச் சட்டத்தினால் நன்மை ஏற்பட்டதாக எப்படிச் சொல்லமுடியும் என்று கேட்கின்றோம்.

குறைந்த அளவாவது கோவில்கள் மூலமும், மடங்களின்மூலமும் மக்களுக்குச் சமத்துவ மேற்படுத்த அவர்களுக்கு யோக்கியதை இல்லா விட்டாலும், அச்செல்வத்தைக்கொண்டு மக்களுக்கு அறிவு விர்த்திக்கோ, தொழில் விர்த்திக்கோ பயன் படும்படியான வித்தைகளைப் படிப்பிக்க வேண்டிய ஏற்பாடுகளாவது செய்திருக்கக் கூடாதா என்று கேட்கின்றோம் . ஆகையால் அந்தத்துறையிலும் இதுவரை ஏதாவது செய்யப்பட்டதாகச் சொல்லுவதற்கில்லாமலே இருந்து வருகின்றது.

ஆகவே, இந்த நிலைமையில் இருந்துவரும் மதபரிபாலன போர்டை கண்டிக்காமல் இருக்கமுடியவில்லை. மத போர்டு நிர்வாகஸ் தர்கள் பெரும்பாலும் நாணையமும், யோக்கியப் பொருப்புமுள்ளவர்கள் என்பதில் நமக்கு ஆக்ஷேபமில்லை என்பதோடு அவர்கள் பெரும் சம்பளம் பெறத் தகுதி உடையவர்கள் என்றே சொல்லலாம். ஆனாலும் அவர்களால் மத தர்மபரிபாலனத்திற்கு என்ன பயன் என்பதுதான்நமது கவலை.

மதம் என்றால் என்ன? தர்மம் என்றால் என்ன? என்கின்ற கேள்விகள் புறப்படும் காலையில் மதத்திற்கும் தர்மத்திற்கும் எவ்வளவோ தத்துவார்த் தங்கள் கூறிவிட்டு இயற்கைக்கு விரோதமான விளையாட்டு பொம்மை களுக்கும் சித்திரங்களுக்கும் செய்யும் பூஜை உற்சவம் முதலியவைகளின் பேரால் பலகோடிக்கணக்காக செல்வத்தை பாழாக்குவதுதானா மததர்ம பரிபாலனம் என்று கேட்கின்றோம்.

இவ்வளவு கோடி ரூபாய்களை இவ்வளவு அனாகரீகமான வழியில் இந்த உலகில் வேறு எந்ததேசத்திலாவது இவ்வளவு முட்டாள் தனமாக பாழாக்கப்பட்டு விட்டு 100க்கு 97பேர்கள் கீழ்ஜாதி மக்களாகவும், 100க்கு 90 பேர்கள் தன் பெயர் எழுதத்தெரியாத தற்குறிகளாகவும் இருந்து வருகின் றார்களா என்று கேட்கின்றோம். பார்ப்பன ஆதிக்கம் ஒழிந்து பார்ப்பன ரல்லாத மக்கள் ஆதிக்கம் வரவேண்டும் என்றும் அதுவும் சமதர்ம ஆதிக்கம் வரவேண்டும் என்றும் கருதி இச்சட்டத்தை ஆதரிக்கப் பாடுபட்ட தின் பலன் இதுதானா என்று யோசித்துப் பார்த்தால் நெஞ்சம் குமுறுகின்றதே ஒழிய கொஞ்சமும் திருப்தி அடைய இடமில்லாமலேயே இருக்கின்றது.



உலகம் போகின்ற போக்கில் மதப்பிடிவாதக்காரர்களும் புராண மரியாதையில் மூழ்கி இருந்தவர்களுமான பலர் தைரியமாக வெளிவந்து மகாநாடுகள் கூட்டி இம்மாதிரி நாட்டின் செல்வம் பாழாய்க் கொண்டிருப் பதை நல்வழியில் பயன்படுத்த இசைந்து வருகின்ற காலத்தில்

அதாவது திருநெல்வேலியில் இம்மாதம் 4, 5 தேதிகளில் கூடிய சைவசித்தாந்த மகாநாட்டில்,

1. "ஏராளமான செல்வங்களையுடைய சைவமடங்களை அரசாங்கத்தார் இந்துமத பரிபாலன இலாகாவின் கீழ் கொண்டு வராமலும் போர்டார்களுடைய பரிசீலனைக்குகூட கொண்டு வராமலும் விட்டு வைத்திருப்பது நியாயமல்ல வென்றும் இனியாவது அப்படிப்பட்ட மடங்களையும் ஆதீனங்களையும், அரசாங்க பரிபாலன இலாக்காச் சட்டத்திற்குள் கொண்டு வந்து அவைகளை பரிசீலனைசெய்து வரவேண்டுமாய் அரசாங்கத்தாரை இச்சைவ மகாநாடு வேண்டிக்கொள்ளுகின்றது."

2. "ஏராளமான செல்வம் படைத்த முக்கியமான பொது மடங்களே இச்சட்டத்தைவிட்டு விலக்கப்படுவதாயிருந்தால் இந்த மாதிரியாக ஒரு சட்டமே தேவை இல்லை என்றும் சட்ட சபையில் சமீபத்தில் கொண்டுவரப் போகும் தண்டவரி சட்டதிருத்தமும் அவசியமில்லை என்றும் இப்போது இச்சட்டம் அமுல் நடக்கின்ற மாதிரியானது கோயில்களுக்கும் சிறு மடங்களுக்கும் வீண்தொல்லை யையும் நஷ்டத்தையும் விளைவிக்கத்தான் பயன்படுகின்றதா யிருக்கின்றதென இச்சைவ மகாநாடு தீர்மானிக்கின்றது."

3. "சைவசமய நூல்கள் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று வரையறுத்துக் கூறுகின்றமையால் சிறு தெய்வவணக்கமும் உயிர்ப்பலி இடுதலும் ஜாதி வேற்றுமைகள் காட்டுதலும் சைவ ஒழுக்கத்திற்கு மாறுபட்ட தென்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது."

என்பதான தீர்மானங்களை செய்திருக்கின்றபோது யாரோ சில சுயநலக்காரர்களுக்கும் வயிற்றுப் பிழைப்புக்காரர்களுக்கும் பயந்து கொண்டு அரைத்தமாவையே திருப்பித்திருப்பி அரைப்பது போல் பூசை உற்சவம் முதலியவைகளுக்காக வீணாக செல்வங்களை விரயமாக்கிக் கொண்டி ருப்பதற்கு ஒருபோர்டும் பல அதிகாரிகளும் பலசிப்பந்திகளும் இருப்பது மானக்கேடான காரியமல்லவா என்று யோசித்து பார்க்கும்படி பொது மக்களை கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

ஆதலால் அந்த போர்டு இனியாவது சற்று தனது பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து இவ்வளவு செல்வங்களும் ஒரு யோக்கிய மான – பயன்படத்தக்கவழியில் செலவு செய்யப்பட ஒரு திட்டம் போட முயற்சிக்க வேண்டும் என்றும் அந்தப்படி செய்ய முடியாவிட்டால் சுயமரியாதை உள்ளவர்கள் அதைவிட்டு விலகி விடுவதன் மூலம் அப் போர்டுக்கு புத்தி வருவிக்கச் செய்யவேண்டுமென்றும் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு – துணைத்தலையங்கம் – 26.04.1931**



# ஏழாவதாண்டு

நமது "குடி அரசு" தோன்றி ஆறாண்டு நிறைவு பெற்று ஏழாவதாண்டின் முதல் மலராய் இவ்வாரப்பதிப்பு வெளியாகின்றது. இந்த சென்ற ஆறாண்டுகளாய் "குடி அரசு" நாட்டிற்கு செய்து வந்த தொண்டைப்பற்றி இதன் வாசகர்களுக்கு நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

இந்த நாட்டின் சமுதாய உலகத்திலும், மத உலகத்திலும், அரசியல் உலகத்திலும் இந்த வீசம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாறுதல்களுக்கு ஒரு சிறு அளவாவது "குடி அரசு" தன்னை பொருப்பாளியாக்கிக் கொள்ளுவதில் யாரும் ஆக்ஷேபணையோ பொறாமையோ படமாட்டார்கள் என்றே கருதுகின்றோம்.

"குடி அரசி"ன் கொள்கைகளை ஆதிமுதற்கொண்டு இதுவரையில் கவனித்துவந்த எவரும் சற்று மேல்நிலையில் உள்ளவர்கள் அவற்றை "மிகவும் அதிதீவிரக்கொள்கை" யென்றும், "சாத்திய மற்றது" என்றும். "இது எந்தக்காலத்தில் நடக்கப்போகின்றது" என்றும், "கொள்கை சரி, போக்கு சரியல்ல" என்றும், "மிக வேகமாய் போகின்றது" என்றும், மற்றும் இது போன்ற பல மாதிரியாகவே சொல்லிவந்ததும், சற்று கீழ் நிலையில் உள்ளவர்கள் குடி அரசு கொள்கை "கடவுள் மறுப்பு" என்றும், "மதம் மறுப்பு" என்றும் சொல்லி வந்ததும், சற்று பணக்காரார்களாயிருப்பவர்களும் உயர்ந்த ஜாதிக் காரரென்று எண்ணிக்கொண்டு இருப்பவர்களும், குடி அரசு கொள்கை, "கட்டுப்பாடு இல்லை; மேல்படி கீழ்படி இல்லை", "அத்து அடக்கம் இல்லை" என்று சொல்லி வந்ததும், பண்டிதக் கூட்டத்தாரில் உள்ளவர்கள் குடி அரசுக்கு "கல்வியில்லை, ஆராய்ச்சியில்லை, இலக்கண இலக்கியம் தெரியவில்லை, ஆதலால் என்ன என்னமோ கண்டதெல்லாம் எழுதுகின்றது, இதனால் சமயத்திற்கு ஆபத்து வந்துவிடும். சமய ஞானங் களுக்கும் சமயாச்சாரியார் வாக்குகளுக்கும் ஆபத்து வந்துவிடும்" என்று சொல்லிவந்ததும், அரசியலில் இருந்தவர்கள் "குடி அரசு" அரசியல் ஞானமற்றது, அதன் பிரசாரம் தேசீய உணர்ச்சிக்கு விரோதமா யிருக்கின்றதே" என்று சொல்லி வந்ததும், மற்றும் இந்த மாதிரியாகவே தனித்தனி வகுப்பார்கள், பிரிவார்கள், சுயநல லட்சிய வாதிகள் முதலாகிய கூட்டத்தார்களால் குற்றம் சொல்லவும் , எதிர்பிரசாரம் செய்து பாமர மக்களை குடி அரசுக்கு விரோதமாய் கிளப்பி விடவும் பல



RangaRakes tamilnavarasam.com

முயற்சிகள் நடைபெற்று வந்தது என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனாலும் இதுவரை மேல் கண்ட எந்த மறுப்புக்காரர்களிலும் எவராவது ஒருவர் குடி அரசின் ஏதாவது ஒரு குறிப்பிட்ட கொள்கையைப்பற்றிய அபிப்பிராயத்தை எடுத்துக்கொண்டு விவகாரம் சொல்லி தர்க்கமாடி மறுத்து நியாயம் சொன்ன தாக ஏற்படவில்லை என்பதை நாம் எடுத்துக்காட்ட சிறிதும் தயங்கவில்லை.

ஆனால் குடி அரசு பிரவேசித்த துறைகள் சாதாரணமாய் வேறு யாரும் பிரவேசிக்கக்கூடாத அவ்வளவு கஷ்டமான துறைகளில் புகுந்து, வேலை செய்த முறையில், மேற்கண்ட சில்லரை சில்லரையான மறுப்பு களாவது, அதிருப்திகளாவது, முண முணப்புகளாவது வராமலிருக்கும் என்று எதிர்ப்பார்ப்பதும் நியாயமான காரியமாகாது என்பதையும் யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள் என்றே கருதுகின்றோம்.

குடி அரசு பிரவேசித்த துறைகளில் அதாவது,

1. பார்ப்பனர்.

2. அரசியல்.

3. மதம்.

4. கடவுள்.

5. வேதம், சாஸ்திரம், இதிகாசம், புராணம்.

6. சைவம்,வைணவம் முதலிய சிறு சமயங்கள்.

7. காந்தீயம்.

8. பண்டைய ஒழுக்கங்கள்,முறைகள், மூடப்பழக்க வழக்கங்கள்.

9. செல்வ நிலைமை முதலாளி-தொழிலாளி முறை.

10. ஆண், பெண் தன்மை.

முதலிய துறைகளில் பிரவேசித்து அவைகளில் மக்களுக்குள் ஒரு பெரிய மனமாறுதலை உண்டாக்கியிருக்கின்றது என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. ஆனாலும் அதை சற்று விளக்குவதில் வாசகர்கள் சலிப்படைய மாட்டார்கள் என்று நினைக்கின்றோம். அதாவது,

**1. பார்ப்பன விஷயம்**

இஃதானது குடி அரசு தோன்றுவதற்கு முந்தியே பார்ப்பனர்கள் விஷயத்தில் "பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார்" என்கின்றதான ஒரு கிளர்ச்சி இந்நாட்டில் யிருந்திருந்தாலும் அது தப்பான வழியிலேயே தப்பான



உத்தேசத்துடனேயே பொது மக்களுக்கு பயன்படாத முறையில் போய்க் கொண்டிருக்கின்றது என்ற ஒரு குற்றம் சொல்லப்பட்டது யாவரும் உணர்ந்ததாகும். எப்படியெனில் இது விஷயமான முந்திய கிளர்ச்சியின் கொள்கைகள் எல்லாம் "பார்ப்பனீயம் நல்லது பார்ப்பனர்கள் தான் கெட்ட வர்கள்" என்று சிலரும், மற்றும் "வைதீகப் பார்ப்பனர்கள் யோக்கியர்கள், அரசியல் பார்ப்பனர்கள்தான் அயோக்கியர்கள்" என்று மற்றொரு சிலரும் கருதி இருந்ததோடு அக்கிளர்ச்சிக்காரர்கள் பெரிதும் உத்தியோகம், அரசியல் ஆகியவைகளில் உள்ள பார்ப்பனர்களை மாத்திரம் வெறுத்து பஞ்சாங்க, பரிசாரக, ஓட்டல்கார, கோவில்மணி அடிக்கிற முதலிய பார்ப்பனர்களை வணங்கி "சுவாமிகளே!" என்று கூப்பிட்டு அவர்கள் காலில் விழுந்து கும்பிட்டு அவர்களின் காலைக்கழுவின தண்ணீரைக் கூட சில சமயங்களில் குடித்தும் வந்தார்கள்.

இந்த குணம் திருவாளர்கள் சர்.பி.தியாகராய செட்டியார், பனகல் அரசர், சர்.பாத்ரோ, தணிகாசலம் செட்டியார் முதலியவர்கள் உள்பட எல்லா பார்ப்பனரல்லாத தலைவர்கள் என்பவர்களுக்குள்ளும் ஒத்துழையாமை இயக்கத்தில் இருந்த திரு. திரு.வி.கல்யாணசுந்திர முதலியார் போன்ற அரசியல்வாதிகளுக்குள்ளும் இருந்து வந்தது என்பது யாவரும் அறிந்ததேயாகும்.

ஆனால் குடி அரசு தோன்றிய பிறகே இந்தமாதிரி எண்ணமானது அடியோடு மாறி இப்போது பொது ஜனங்கள் "எங்களுக்கு எந்தப் பார்ப்பனர்கள் மீதும் தனிப்பட்ட அதிருப்தியோ வெறுப்போ இல்லை" என்றும், "அவர்களது பார்ப்பன தர்மமும், பார்ப்பன சடங்கும், பார்ப்பன ஆதீக்க சம்மந்தமான முறைகளும், ஆதாரங்களுமேதான் எங்களுக்குப் பிடிக்கவில்லை" என்றும் "அவைகளை விட்டு விட்ட-பாராட்டாத பார்ப்பனர்களிடம் எங்களுக்கு ஆக்ஷேபணை இல்லை" என்றும் சொல்லப் புரப்பட்டதோடு பார்ப்பனீயத்தன்மை உள்ள பார்ப்பனரல்லாதாரிடமும் கூட இதுபோலவே வெறுப்பு ஏற்படும்படி செய்திருக்கின்றது.

ஆகவே இந்தத்துறையில் குடி அரசு அஸ்திவாரத்திலேயே கையை வைத்து பார்ப்பனீயத்தொல்லையை என்றுமில்லாமல் போகும்படி வேலை செய்து வந்திருக்கின்றது-வருகின்றது-வரும்.

2. இதுபோலவே அரசியல் துறையிலும் குடி அரசு தோன்றுவதற்கு முன் அரசியலில் தலைப்பட்டிருந்த சில ஆட்கள் மீதும், அதன் பயனை யனுபவிக்கும் சில ஆட்கள் மீதும் மாத்திரமே சிலருக்கு சந்தேகமும் பொறாமையும் கொண்டு அரசியலின் மூலம் பிழைப்பை நடத்த உத்தேசித் திருக்கும் ஆட்களுள் மாத்திரமே போட்டி போடுவதன் மூலம் அரசியல் துறையின் கிளர்ச்சிகள் நமது நாட்டில் நடந்து வந்தன. ஆனால் குடி அரசு தோன்றிய பின்னர்தான் "அரசியலிலுள்ளஆட்களைப்பற்றி நமக்கு



RangaRakes tamilnavarasam.com

கவலையில்லை, அதன் அடிப்படையான கொள்கைகளைப் பற்றியே கவலை கொள்ள வேண்டும்'' என்கின்ற உணர்ச்சியேற்பட்டு அரசியல் கொள்கை களையே தலை கீழாய் மாற்றும்படியான நிலைமை உண்டாக்கியிருக்கின்றது டன் அந்தப்படி அரசியல்காரரும் உணர்ந்து அவர்களையே பழைய கொள்கைகளைப்பற்றி பேச வெட்கப்படும்படி செய்து வருகின்றது.

மேலும் காங்கிரஸ் விஷயத்திலும் குடி அரசு தோன்றுவதற்கு முன் பொது ஜனங்களுக்குள் "காங்கிரசு நல்லது. அதை நடத்துகிறவர்கள்தான் கெட்டவர்கள்'' என்கின்ற உணர்ச்சி இருந்தது மாறி குடி அரசு தோன்றிய பின் "காங்கிரசே நாட்டின் நலத்துக்கு மோசமானது. அது உத்தியோகத் திற்கும், அதிகாரத்திற்கும், பதவிக்கும் விண்ணப்பம் போடும் தபால் பெட்டி'' என்கின்ற உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டி வருகின்றது.

3. மத விஷயத்திலும் குடி அரசு தோன்றுவதற்கு முன் மக்களுக்கு "மதமே பிரதானம்'' என்றும் "இந்துமதமே உலகில் சிரந்த மதம்'' என்றும் பொது மக்களுக்கும் இந்து மக்களுக்கும் இருந்துவந்த வெகுநாளைய உணர்ச்சிகள் மாறி இப்போது "இந்துமதம் என்பதாக ஒரு மதம் உண்டா? அதற்கு ஏதாவது கொள்கைகள் உண்டா?'' என்கின்ற எண்ணமும் "மக்களுக்கு மதம் அவசியமா?'' என்கின்ற எண்ணமும் "மதம் என்பதும் மற்ற வியாபாரங்களைப் போல் மக்களுக்கு ஒரு வியாபாரமும், மூட நம்பிக்கையுமானதல்லவா'' என்கின்ற எண்ணமும் ஏற்பட்டு மதத்தின் பேரால் வாழ்க்கையும், பெருமையும் அடைய கருதி இருக்கின்றவர்கள் இடமும் மூடர்களிடமும், தவிர மற்றவர்களிடம் அதற்கு யோக்கியதையே இல்லாமல் இருக்கும்படி செய்துகொண்டு வருகிறதுடன், மதத்தை வெகு காலமாய் அனுசரித்து பின்பற்றி வந்தவர்களும் தாங்கள் இதுவரை எவ்வித பலனும் அடையாமல் வீண் காலத்தை அதில் செலவிட்டு விட்டோமே என்று தங்கள் ஏமாந்த தன்மையைப்பற்றி வருந்தும்படியாகவும் செய்து வந்திருக்கிறது.

4. கடவுள் விஷயத்திலும் குடி அரசு தோன்றுவதற்குமுன் அதைப் பற்றி மக்கள் வெகுபிரதானமாகக் கருதி வந்தவைகள் எல்லாம் குடி அரசு தோன்றிய பின்பு அதனால் ஏற்பட்ட பெரும் பெரும் கிளர்ச்சிகளின் பயனாய் சிலருக்கு "கடவுள் உண்டோ இல்லையோ என்பதைப் பற்றிய கவலையும், விசாரணையும் அனாவசியம்'' என்று கருதும்படியாகவும், சிலருக்கு "மக்களுக்கு உலகவாழ்க்கை சுலபமாய் நடைபெறுவதற்கு கடவுள் உண்டு என்கின்ற உணர்ச்சியுடன் இருப்பது நல்லது'' என்கின்ற முடிவுக்கு வரும் படியாகவும் மற்றும் அனேகருக்குள் "கடவுளைப்பற்றிய கவலை ஏன்'' என்கின்ற எண்ணத்தையும் உண்டாக்கிவிட்டதுடன் "கடவுள் இல்லை என்று நினைத்துக்கொள்வதால் மனிதன் உலகத்தில் வாழ்வதற்கு தகுதியுடைய வனாகத் தகுந்த அறிவு, பொருப்பு, தன்னம்பிக்கை, குற்றம் உணர்தல் முதலிய அருங்குணங்கள் ஏற்படும்'' என்கின்ற ஒரு உணர்ச்சியையும் அனேகருக்கு உண்டாக்கி இருக்கின்றது.



5. வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம் என்பவைகளும் குடி யரசு தோன்றுவதற்கு முன் அவற்றிற்கு இந்நாட்டில் இருந்த பெருமைகள் எவ்வளவு என்பதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. ஆகவே அவ்வளவு பிரமாதமான மதிப்புகள் அவைகளுக்கு இருந்த உணர்ச்சிகள் எல்லாம் இப்போது மாறி "வேதம், சாஸ்திரங்கள்''என்பவைகள் எல்லாம் ஒரு சாராரின் ஆதீக்கத்திற்கும், பிழைப்பிற்கும் ஏற்பட்டதென்றும், அவை களுக்கு தாங்கள் கட்டுப்பட்டவர்கள் அல்லவென்றும், தங்களுக்கு அது ஆதாரங்கள் அல்லவென்றும், புராணங்கள் என்பவைகள் கட்டுக்கதைகள், ஒழுக்கத் திற்கும், உண்மைக்கும், இயற்கைக்கும் மாறுபட்ட, வெறுக்கத்தகுந்த புஸ்தகங் கள், அவை கீழ் மக்களால் பெரிதும் தொடுக்கப்பட்டவைகள், இதிகாசங்கள் என்பவை நடந்தவை அல்ல, மதிக்கத்தகுந்தவை அல்ல, பூஜிக்கத்தகுந்தவை அல்ல என்று பண்டிதர்கள் முதல் அனேக அறிவாளி களும் பாமரமக்களும் வெளியில் தாராளமாய் சொல்லப் புரப்பட்டு விட்டதோடு, அவைகளில் ஒரு சிலவற்றை மாத்திரம் கலைகளுக்காகவும் அதாவது கவி அழகு, கற்பனை அழகு, இலக்கண இலக்கிய அழகு ஆகியவைகளுக்காக மாத்திரம், அதுவும் அந்தக்கருத்துடனேயேதான் பார்க்கத்தக்கது என்கின்ற அளவுக்கு அபிப்பி ராயம் சொல்ல வந்து விட்டதுடன், புராணங்களைப்பற்றி, சாஸ்திரங்களைப் பற்றி பேசுவதற்கே மக்கள் வெட்கப்படும்படியான நிலையையும் 'குடி அரசு' கொண்டுவந்து விட்டுவிட்டது.

6. மற்றபடி சைவம், வைணவம் ஆகிய சமயங்களைப்பற்றியோ என்றால் 'குடி அரசு' தோன்றுவதற்குமுன் அச்சமயங்களே எல்லா மக்களு டையவும் வாழ்க்கையின் லக்ஷியமாய் இருந்து தாண்டவமாடினதுடன், அவைகளே மக்களுக்கு செல்வமாகவும், செல்வாக்காகவும், கீர்த்தியாகவும், அழகாகவும், பெருமையாகவும், நாகரீகமாகவும் விளங்கியதோடு சமய ஆச்சாரிகளும், மடாதிபதிகளும், ராஜாக்களுக்கு சமானமாய் கருதப்பட்டு வந்தவைகளும் எல்லாம் 'குடி அரசு' தோன்றியபின் அவைகள் சிரிப்பாய் சிரிக்கத்தகுந்த நிலைமைக்கு வந்து, சமய வேஷமும், சமயப் பெருமையும் பரிகசிக்கத் தகுந்த நிலைக்கு வந்துவிட்டதுடன், அதனதன் கொள்கை களுக்கும், சமய ஆச்சாரிகளுக்கும், சமயதெய்வங்களுக்கும் முன்பிருந்த மதிப்பற்று, புதிய புதிய தத்துவார்த்தங்கள் சொல்லி, "குடி அரசுக் கொள்கை கள் தான் எங்கள் சமயக் கொள்கைகள்'' என்பதாக வியாக்கியானம் செய்வதன் மூலம் அவை காப்பாற்றப்பட வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டன. மற்றும் 'குடி அரசு' தோன்றுவதற்குமுன் இவை ஒன்றை ஒன்று வைது கொண்டு இருந்தவைகள் இப்பொழுது எல்லாவற்றையும் மறந்து எப்படியாவது எந்தக் கொள்கையுடனாவது சமயம் என்பதாக ஒன்று உயிர் வாழ்ந்தால் போதும் என்கின்ற நிலையில் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்கின்றன.



RangaRakes tamilnavarasam.com

7. அடுத்தாப்போல் திரு.காந்தியவர்கள் விஷயமும் வேறு பல வழிகளில் "மகத்தான வெற்றி இருப்பதாக" பேசிக் கொள்ளப்பட்டாலும் அரசியல் சமுதாய இயல் ஆகியவைகளைப்பற்றிய விஷயங்களில் அவரது அபிப்பிராயங்களில் மிகவும் தாராளமாய் கண்டிக்கப்படத் தக்கதாகி விட்டது. அவருடைய கதர் விஷயமும் சைவத்திற்கும், விபூதி, ருத்திராட்சத் திற்கும் என்ன சம்மந்தமோ அதுபோல் காந்திக்கும்- கதருக்கும் என்பதாக ஆகிவிட்டது. ஏதோ பார்ப்பனருக்கும் பார்ப்பனீயத்திற்கும் அவர் உற்ற துணையாய் இருப்பதாலும் மற்றும் அதுபோலவே தேசீயத்தின் பேராலேயே வாழ்ந்து தீரவேண்டிய ஒரு கூட்டத்திற்கும் அவருடைய பெயரை உச்சரிக்க வேண்டியது இன்றியமையாததாய் போய்விட்டதாலும், காந்தி காந்தி என்கின்ற ஒரு சத்தம் கொஞ்சம் ஊசலாடுகின்றதே தவிர மற்றபடி அவரிடம் இந்நாட்டு மக்களுக்கு சொந்தபக்தி எவ்வளவோ மாறியிருப்பது தானாகவே விளங்கும்.

8. பழையபழக்கம், வழக்கம், வார்சு பாத்தியம், பெரியோர் வார்த்தைகள் என்கின்றவைகளின் மூலமாய் இருந்துவந்த மூடப்பழக்க வழக்கங்கள் எல்லாம் அநேகமாய் இப்பொழுது வர வர காரணகாரியம் சொல்லி பகுத்தறிவிற்கும், அனுபவத்திற்கும் ஒத்திருக்கின்றதா என்று பார்க்கின்ற நிலைக்கு வந்துவிட்டது.

9. கடைசியாக பணக்காரர்களுடைய தொல்லை எதிர்பார்த்த அளவுக்கு ஒழியவில்லை. ஆனாலும் அவர்களுக்கும் இறங்குமுகம் ஏற்பட்டு, சிறிதுசிறிது பொது உணர்ச்சியில் அவர்களுக்கு மதிப்பு குறைந்து விட்ட தென்றே சொல்லுவோம். தொழிலாளிகளின் மேல் முதலாளிகளுக்கு இருந்துவந்த ஆதீக்கமும் மறைந்து தொழிலாளிகளுக்கு வரவர தைரிய மும், முதலாளிகளுக்கு வரவர பயமும் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றது. ஆனாலும் வரப்போகும் வருஷத்தில் தெளிவாய் காணக்கூடிய அளவுக்கு இந்தத்துறை இன்னமும் எவ்வளவோ தூரம் முற்போக்கடையும் என்கின்ற தைரியம் இருக்கின்றது என்கின்ற நம்பிக்கைக்கு இடம் இருக்கின்றது.

10. ஆண், பெண் தன்மை இந்தத் துறையானது குடி அரசு தோன்றுவதற்குமுன் மக்கள் வாயில் பேசுவதற்கும், மனதில் நினைப்பதற்கும் அஞ்சக்கூடிய விஷயங்கள் எல்லாம் குடி அரசு தோன்றியபின் அடியோடு மாறி, ஆணுக்கும், பெண்ணுக்கும் எந்த விஷயத்திலும், எவ்வித வித்தியாசமும் இல்லை என்கின்ற உணர்ச்சியையும், ஆண்களுக்கு கட்டுப்பட்டு அடங்கி பெண்கள் இருப்பது இருவருடைய சுயமரியாதைக்கும் குறைவு என்றும், பெண்ணுக்கு ஆண் கட்டுப்பட்டு அடங்கி நடப்பது பெருமையும், நாகரீகமும், முறையும் என்கின்றதுமான உணர்ச்சியும் ஏற்பட்டு விட்டது.

ஆகவே இத்யாதி துறைகளில் குடி அரசின் தொண்டு பலனளித்திருக்கின்றது என்று திருப்தியுடனேயே சொல்லுகின்றோம்.



ஆனால் சென்ற வருஷம் அதாவது குடி அரசின் ஆறாவது வருஷ-ஆரம்ப மலரின் தலையங்கத்தில் கண்டதுபோலவே 6-வது வருஷம் முழுவதும் குடி அரசுக்கு முந்திய வருஷங்கள் போன்ற செல்வாக்கு பெருக்கம் இருந்தது என்று சொல்லுவதற்கில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகின்றோம். ஆனாலும் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளுக்கு சென்ற ஐந்து வருஷத்தைவிட ஆறாவது வருஷத்தில் தான் ஒரு முக்கிய பதவியும், கௌரவமும், பொதுமக்கள் ஆமோதிப்பும், "இனிமேல் அதை எதிர்ப்பதோ குற்றம் சொல்லுவதோ முடியாத காரியம்" என்று, அதன் எதிரிகளாய் இருந்தவர்கள் எல்லாரும் எண்ணி, எப்படி யாவது அதன் பெயரைச் சொல்லிக்கொள்ளக்கூடிய சௌகரியம் நமக்கும் வந்தால் தேவலாம் என்று கருதும்படியான ஒரு நிலைமை ஏற்பட்டது என்கின்ற விஷயத்தில் நமக்கு சிறிதும் ஐயமில்லை.

ஆனால் ஏழாவது ஆண்டின் எதிர்கால நிலையைப்பற்றி எழுது வதில், அது ஆறாவது ஆண்டைப் போலவே இவ்வருஷ- வேலைத் திட்டமும் சற்று கஷ்டமானதாயிருந்தாலும் , பத்திரிகை முற்போக்கைப் பற்றி ஆறாவது வருஷம் போல் தடைப்படாது என்பதுடன் அதிக முற்போக்கடையும் என்கின்ற தைரியமும், நம்பிக்கையும் நமக்கு உண்டு. ஏனெனில் இந்த ஒரு வருஷத்திய நமது பிரசாரம் மக்களுக்கு ஏற்படுத்தி இருக்கும் ஒரு உணர்ச்சியும், அரசியல் கிளர்ச்சியிடம் சிலர் வைத்திருந்த நம்பிக்கை ஏமாற்றமடைந்த பலனும், இவ்வருஷம் நடக்கப் போகும் அரசியல் (காங்கிரஸ் - காந்தி) பிரசாரமும் மற்றும் இரண்டொரு விஷயங்களும் மக்களுக்கு அறிவை ஊட்டி உண்மையை விளக்கித் தெளிவைக் கொடுக்கும் என்கின்ற நம்பிக்கை நமக்கு தாராளமாய் இருக்கின்றது.

**குடி அரசு - தலையங்கம் - 03.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி

## அய்யர் - அய்யங்கார் சம்பாஷணை

**– சித்திரபுத்திரன்**

**அய்யர்** :– என்ன அய்யங்கார்வாள் சுயமரியாதை இயக்கம் ஆரம்ப மான காலத்திலேயே நான் பிராமணாளுக்கு ஆபத்து வந்துவிட்டதே என்றும் இதற்கு ஏதாவது வழிசெய்யக் கூடாதா என்றும் கேட்டதற்கு "அது இந்தியாவில் மாத்திரம் நடக்காது சீக்கிரம் ஒழிந்துவிடும்" என்று சொன்னீர். இப்பொழுது நாளுக்கு நாள் அது வளர்ந்து கொண்டே வருகிறதே. எல்லோரும் அதை ஆதரிக்கவும் துணிந்துவிட்டார்களே: அதாவது சைவர் கள் ஒன்று கூடி" 3000 வருஷத்திற்கு முன் இருந்த கொள்கைகள் எல்லாம் சுயமரியாதை இயக்க கொள்கைகள்தான்" என்கிறார்கள். வைணவர்கள் ஒன்று கூடி தங்கள் கொள்கையும் அதாவது "ராமாநுஜர் கொள்கையே சுயமரியாதை இயக்க கொள்கை" என்கிறார்கள். ஸ்மார்த்தர்கள் "சங்கரர் மதமே வேதாந்த மதம். ஆகையால் ஸ்மார்த்த மதமே சுயமரியாதை இயக்க கொள்கைதான்" என்கின்றார்கள். மகமதியர்கள் ஒன்றுகூடி "1,300 வருஷத்திற்கு முன்னேயே சுயமரியாதை இயக்க கொள்கையைத்தான் நபிகள் நாயகம் உபதேசித் திருக்கிறார்கள்" என்கின்றார்கள். பௌத்தர்கள் "2,000 வருஷத்திற்கு முன்னா லேயே பகவான் புத்தர் சுயமரியாதை இயக்கக் கொள்கையைத்தான் உப தேசித்து பிரசாரம் செய்தார்" என்கின்றார்கள். "சித்தர்கள் உபதேசமெல்லாம் சுயமரியாதைக் கொள்கைதான்" என்கின் றார்கள் பொதுமக்கள். பண்டிதர் களில் பலர் "உலகாயித மதம் தான் சுய மரியாதைக் கொள்கை. ஆதலால் அதுவும் இந்து மதத்தில் ஒரு பகுதிதான்" என்கின்றார்கள். பிறகு எந்த விதத்தில் அது அழிந்தோ மறைந்தோ போகும் என்பது நமக்கு விளங்க வில்லேயே !

**அய்யங்கார்**:– இதற்கெல்லாம் நீர் பயப்படாதீர். யாரோ எதையோ சொல்லிக்கொண்டு போகட்டும். நமது இந்து மதத்தை அதாவது நாம் இன்று அனுசரித்து வரும் கொள்கையை யாரும் ஒன்றும் செய்யமுடியாது . நம் பெரியார்களுக்கு இவற்றையெல்லாம் ஒழிக்க வழிதெரியும். இதைவிட கஷ்டமான காலத்தில் எல்லாம் இருந்து சமாளித்து வந்து இருக்கிறார்கள்.



**அய்யர்**:– எப்படித் தெரியும்? 10, 12 வருஷத்திற்கு முன் ஜஸ்டிஸ் கட்சி என்று ஒன்று தோன்றி எவ்வளவு தொல்லை விளைவித்துவிட்டது உமக்குத் தெரியாதா?

**அய்யங்கார்:**– எல்லாம் தெரியும் அதற்காகத்தானே நம் பெரியவாள் அப்போதே காந்தியைப் பிடித்து வந்து ஒரு கிளர்ச்சி செய்து ஏராளமாய் பணம் வசூல் செய்து பலரை ஜெயிலுக்கு அனுப்பி ஜஸ்டிஸ் கட்சியை வீழ்த்தினார்களே. மற்றும் அவர் வீடு வாசல்களுக்குள் எல்லாம் புகுந்து கலகம் செய்யச் செய்தது கூட உமக்குத் தெரியாதா?

**அய்யர்**:– சரி, அப்படியெல்லாம் செய்து ஜஸ்டிஸ் கட்சியை வீழ்த்திய பிறகுதானே சுயமரியாதை இயக்கம் வந்து வீழ்ந்துவிட்ட கட்சியை மறுபடியும் தூக்கி நிருத்தி முன்னிலும் அதிகமான தொந்திரவு கொடுத்துவிட்டது?

**அய்யங்கார்**:– தூக்கி நிருத்திவிட்டதால் என்ன ஆய்விட்டது. அக்கட்சியின் விஷப்பல்லுகளைப் பிடுங்கிவிட்டோமா இல்லையா? இப்போது அக்கட்சியை தண்ணிப் பாம்புபோலத் தானே ஆக்கிவிட்டோம். அது இப்போது சம்பளத்தோடு சரி. வேறு சிறிதாவது வாலாட்டுகிறதா பார்.

**அய்யர்**:– அக்கட்சியால் நமக்குத் தொல்லையில்லையானாலும் சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கட்சியைவிட மோசமாக அதாவது ஜஸ்டிஸ் கட்சியாவது மூர்த்தன்னியமாய் இருந்த காலத்திலும் கூட உத்தியோகத் தில் மாத்திரம் பங்கு கேட்டது. இது பிராமணர்களின் யோக்கியதையையே அடி யோடு ஒழித்து பிராமணர்களை எல்லாம் போர்ட்டராக ஆக்குகிறேன். மூட்டை தூக்க வைக்கிறேன். அதுவரை ஒழியமாட்டேன் என்றல்லவா சொல்லிக்கொண்டு காரியம் செய்து வருகின்றது.

**அய்யங்கார்**:– இதற்கெல்லாம் பயப்படாதீர். சுயமரியாதை இயக்கத் தின் ஆடம்பரத்தையும் அதனால் ஏற்படும் ஆபத்தையும் உத்தேசித்துத் தானே இப்போது அதை ஒழிக்க மறுபடியும் முன்போலவே காந்தியைப் பிடித்து மற்றொரு கிளர்ச்சியை நம்மிட பெரியவாள் ஆரம்பித்தார்கள். அது ஆரம்பமாகி ஒரு வருஷம் போட்டபோட்டில் சுயமரியாதை இயக்கம் அடங்கி விடவில்லையா?

**அய்யர்**:– என்ன அடங்கி விட்டது? எங்குபார்த்தாலும் மாதம் ஒன்று, .இரண்டு, மூன்று மகாநாடுகள் நடக்கின்றன. வாரம்தோறும் பிரசாரங்கள் நடக்கின்றன. சுயமரியாதை இழவு, சுயமரியாதை கல்யாணம், சுயமரியாதை சாந்தி முகூர்த்தம், சுயமரியாதை கிரகப்பிரவேசம், சுயமரியாதை கருமாதி, சுயமரியாதை தெவசம், சுயமரியாதை வாசகசாலை திரப்பு விழா, ஆண்டு விழா, சுயமரியாதை சங்கத் திறப்பு விழா, ஆண்டு விழா, சுயமரியாதை கலப்புமணம், சுயமரியாதை மறுமணம், சுயமரியாதை விதவை மணம்,



RangaRakes tamilnavarasam.com

குழந்தைகளுடன் விதவைகளின் திரு மணம், பார்ப்பனீயமற்ற சடங்கு சுயமரியாதை சங்க கட்டட அஸ்திவாரம் என்பதாக ஏதேதோ தினத்திற்குத் தினம் புதிது புதிதாக ஏதாவது ஒரு காரியம் நடந்து கொண்டே தோன்றிக் கொண்டே இருக்கின்றதே தவிர எங்கு அடங்கி விட்டது?

**அய்யங்கார்**:- இதெல்லாம் ஒரு வேகத்தினாலும், மற்றும் இதை ஒரு புதிய நாகரீகமாக மக்கள் கருதுவதினாலும் செய்யப்படுகின்ற ஒரு வேடிக்கை சங்கதியே ஒழிய மக்கள் இதன் உண்மையை உணர்ந்து செய் கின்றார்கள் என்று கருதவேண்டாம். புத்தருக்கு மேலாக இவர்கள் ஒன்றும் செய்துவிட முடியாது.

**அய்யர்**:- இதை நான் ஒப்பமுடியாததற்கு மன்னிக்க வேண்டும். அந்தக்காலம் வேறு இந்தக்காலம் வேறு. இப்போழுது அந்தக் கூட்டத்தில் பெரிய மனிதர்கள் என்பவர்கள், பண்டிதர்கள், படித்தவர்கள், நல்ல மதபக்தியும் மத ஆராய்ச்சியும் உள்ளவர்கள், யாதொரு தயவு தாட்சன்னியத்திற்கும் கட்டுப்பட வேண்டாதவர்கள். இப்படியாக அநேகர் அக்கொள்கைகளை வாய்ப்பேச்சு மாத்திரமல்லாமல் காரியத்திலும் பின் பற்ற ஆரம்பித்து விட்டார்கள். இதுமாத்திரமல்லாமல், கல்யாண விஷயங்களில் ஜாதி பேதமில்லாமல் கீழ் ஜாதி மேல் ஜாதி பார்க்காமல் கொள்வினை கொடுப் பினை ஆகியவை நடத்த அநேகர் துணிந்துவிட்டார்கள். அநேகர் காரியத் திலும் செய்துவிட்டார்கள். பிராமணனைக் கண்டால் கும்பிடுவதும் சாமி என்று கூப்பிடுவதும் அவமானமாய்க் கருதுகிறார்கள். இப்பொழுது எங்கு பார்த்தாலும் பிராமணர்களே முதலில் கையெடுக்க வேண்டியதாய் இருக் கிறது. இப்படி இருக்க "இது ஒரு வேகம் நாகரீகம்" என்று நீர் சொன்னால் நான் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?

**அய்யங்கார்**:- இதெல்லாம் அநேகமாய் பயமும் சுயநலமும், பேராசையும் தாக்ஷண்யமும் காரணமாகத்தான் செய்யப்பட்டு வருகின்றவை. வெகு சீக்கிரத்தில் இந்தக் கூட்டமே மறுபடியும் பழைய பாடம் படிக்க ஆரம்பித்துவிடுவார்கள். நீர் மாத்திரம் ஒன்றையும் கவனிக்காமல், கதர்,, காந்தி - காங்கிரஸ் சுயராஜ்யம் என்று மந்திரம் ஜெபித்துக் கொண்டு பிரசாரம் பண்ணும். இந்த மந்திர சக்தி சுயமரியாதை இயக்கத்தையும் கொள்கைகளையும் இருந்தவிடம் தெரியாமல் அழித்துவிடும். ஆனால் இதில் உமக்கு தைரியம் இருக்கவேண்டும். பஞ்சாக்ஷரம், அஷ்டாக்ஷரம், தாரகம், காயத்ரி என்கின்ற மந்திர சக்திகள் எல்லாம் என்ன என்று நினைக்கிறீர்? இது போலத்தான். ஆகையால் நீர் சரியாய் ஜபித்தீரானால் வெகுசீக்கிரம் நம்பக்கம் மக்கள் திரும்பி விடுவார்கள்.

**அய்யர்**:- காந்தியும் காங்கிரசும் சுயராஜியமுமே சுயமரியாதைக் கொள்கையை ஒப்புக்கொண்டாய் விட்டதே இனி இந்த மந்திரம் எப்படி சுயமரியாதை இயக்கத்தை அழித்திவிட முடியும்?



**அய்யங்கார்**:- காங்கிரசும் காந்தியும் சுயமரியாதை இயக்கக் கொள்கையை எங்கு எப்போது ஒப்புக்கொண்டார்கள்? உமக்கு அத் தீர்மானத் திற்கு தத்துவ அர்த்தம் தெரிந்தால்தானே உண்மை விளங்கும். நீர் மேலாகப் பார்க்கிறீர். அதனால் "சுயமரியாதை இயக்கக் கொள்கைதான் காந்தி காங்கிரஸ் கொள்கை" என்று உளருகிறீர்.

**அய்யர்**:- சுயமரியாதை இயக்கத் தொண்டர்களே "சுயமரியாதை இயக்கக் கொள்கையே காங்கிரஸ் கொள்கையாகிவிட்டதால் இனி சுயமரியாதை இயக்கம் வேண்டாம்" என்கிறார்கள். காங்கிரஸ் தொண்டர்கள் எல்லாம் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளே காங்கிரஸ் கொள்கையாதலால் சுயமரியாதைக்காரர்கள் எல்லாம் காங்கிரசில் சேரவேண்டுமென்கின்றார்கள். ஆகவே நீர் மாத்திரம் இப்படிச் சொன்னால் நான் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?

**அய்யங்கார்**;- உம்மால் இப்போது ஒப்புக்கொள்ள முடியாது. பிறகு தெரியும் அதன் சூட்சம்.

**அய்யர்**:- சூட்சமென்ன?மோட்சமென்ன? உங்க அய்யங்காரில் ஒருவரே, அதாவது கே. சந்தானம் அய்யங்கார் சென்றவாரம் ஈரோட்டில் ஒரு கூட்டத்தில் "சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை இவ்வருஷ- காங்கிரஸ் அப்படியே ஒப்புக் கொண்டாய்விட்டது. ஆதலால் உங்கள் இராமசாமி நாயக்கர் இனியும் இதில் (காங்கிரசில்) சேராமல் வேதாந்தம் பேசிக்கொண்டு இருப்பது நியாயமல்ல" என்று சொன்னார். நான் பக்கத்தில் இருந்து கேட்டுக் கொண்டே இருந்தேன். அப்படி இருக்க எனக்கு சூட்சமம் தெரியவில்லை என்கின்றீரே.

**அய்யங்கார்**:- அந்தசமயத்தில் நானும் கூடத்தான் அங்கிருந்து அவா (திரு சந்தானம் அய்யங்கார்) சொன்னதை யெல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.

**அய்யர்**:- சரி, அப்படியானால் அதில் சூட்சமமென்ன இருக்கின்றது?

**அய்யங்கார்**:- சூட்சமென்னவென்றா கேட்கின்றீர். சொல்லுகிறேன் கவனமாய் கேளும்,

இராமசாமி நாயக்கர் சாமியைப்பற்றி, மதத்தைப்பற்றிச் செல்லுவதை ஒப்புக்கொள்ள முடியாது என்று சந்தானம் அய்யங்கார் சொன்னாரா? இல்லையா?

**அய்யர்**:- ஆம், அதனால் அங்கு சிறிது தகரார்கூட ஏற்பட்டது. என்னவென்றால் "இது காங்கிரஸ் பிரசாரமா, சாமி பிரசாரமா?" என்று ஒருவர் கேட்டார். பிறகு அந்த வார்த்தையை விட்டுவிட்டு வேறு பேச்சுப் பேசினார்.



RangaRakes tamilnavarasam.com

இதில் சூட்சமமென்ன?

**அய்யங்கார்**:- சாமி, மதம் இரண்டையும் ஒப்புக்கொள்ளப்படாது என்பதுதான் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய கொள்கை.

**அய்யர்**:- அப்படியல்லவே.

**அய்யங்கார்**:- பின்னை எப்படி.

**அய்யர்**:- "சாமியைப்பற்றி கவலைப்படாதே. சாமிக்கு பணம் காசு நேரம் செலவு செய்யாதே. சாமிபேரில் பழியைப் போடாதே பகுத்தறிவைக் கொண்டு எதையும் ஆராய்ச்சி செய்ய வேண்டும்" என்றுதான் சொல்லு கின்றது.

**அய்யங்கார்:-** அதற்கு என்ன அர்த்தம்? (பிராமணாளுக்கு) நமக்குத் தான் சாமி இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன? அதைப்பற்றி கவலை நமக்கு எதற்கு? நாம் சாமி இருப்பதாக ரொம்பத்தான் நினைத்துக் கொண்டி ருக்கிறோமா? அல்லது அதற்காக மிகுந்த கவலைப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றோமா? அல்லது எல்லாப்பழியையும் அதன் மீது போட்டு விட்டு கைகட்டிக்கொண்டு சும்மாதான் இருக்கின்றோமா?

**அய்யர்**:- பின்னே நமக்கும் அவாளுக்கும் என்னதான் வித்தியாசம்?

**அய்யங்கார்**:- அங்கு அல்ல நமது சூக்ஷம்.

**அய்யர்**:- பின்னே எங்கு இருக்கின்றது நமது சூட்சமம்?

**அய்யங்கார்**:- "கடவுள் ஒருவர் உண்டு. அவரே நம்மை நடத்துகிறார். நமது செல்வம் முயற்சி அறிவு எல்லாம் அவருக்கு அர்ப் பணம் செய்து சுவாமியிடம் பக்தி காட்டி அவர் பாதார விந்தத்தை அடை வதே மனிதப்பிறவி எடுத்ததின் பயன்" என்றும், "இந்த ஜன்மத்தில் நாம் கோவில், குளம், சாவடி, பிராமணாளுக்கு தான தர்மம் செய்வதன் மூலம் அடுத்த ஜன்மத்தில் நாம் நல்ல ஜன்மம் எடுக்க வேண்டும்" என்றும் சொல்லு வதல்லவா நம்ம கொள்கை? இதுதான் காந்தி கொள்கை. இதுதானே காங்கிரஸ் கொள்கை. இந்தக் கொள்கையைக் கொண்டுதான் நாம் உலகத்தில் வெகு காலமாக ஆதிக்கத்துடன் வாழ்கின்றோம். இதில் கையை வைக்க விட்டால் தானே சுயமரியாதை இயக்கமும் நமது இயக்கமும் ஒன்று என்று சொல்ல முடியும். இந்தப்படி ஒப்புக்கொண்டு யாராவது நம்மவர்கள் சுயமரியாதை இயக்கத்துடன் சேருகின்றார்களா? என்பதை நன்றாய் யோசித்துப்பாரும். சைவனை எடுத்துக்கொள்ளும், சைவன் என்றால் என்ன. சில பண்டிதர்கள் தானே. அந்த சைவர்கள் என்ன வேண்டுமானாலும் ஒப்புக் கொள்வார்கள். சாமியைப் பற்றி கவலைப்படாதே என்றால் ஒரே ஓட்டமாக ஓடிப்போவான். பின் சாமி இல்லாவிட்டால் புராணம் ஏது? புராணம் இல்லாவிட்டால் பண்டிதன் என்கின்ற பெயர் ஏது? இப்படியே மற்ற சமயமும், மகமதியர்களும் இப்படித்தான். அதிலும் சில பண்டிதர்கள் தான் ஆதிக்கம். ஆண்டவனைப் பற்றி கவலைப்படாதே என்று அவரிடம் சொல்லிப் பார்த்தால் மண்டையை உடைத்துவிடுவார். இப்படித்தான் காங்கிரசும். காந்தி ஒவ்வொரு வார்த்தைக் கும் கடவுள் சித்தம், கடவுள் பிரார்த்தனை இல்லாமல் பேசுகின்றாரா? "கடவுள் மீது பழியைப் போடவேண்டாம். கடவுளைப்பற்றி கவலைப்பட வேண்டாம்" என்று காந்தி இடம் யாராவது சொல்லிப்பார்த்தால் சங்கதி தெரியும் . இரண்டு காதையும் மூடிக்கொண்டு பட்டினி கிடந்து செத்துப் போவேன் என்று முக்காடு போட்டு படுத்துக்கொள்ளுவார். ஆகவே சுயமரியாதை இயக்கத் தின் அஸ்திவாரக் கொள்கையை இந்தக் கூட்டத்தினர்கள் யாவரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். அவ்வியக்கத்தில் இருப்பவர்களே 100-க்கு 90- பேர் கள் ஒப்புகின்றார்களா என்பதே சந்தேகம். ஆகையால் கடவுள் கவலையும், கடவுள் மீது பொருப்புப் போடும் குணமும் இந்து மத தர்மமும் மோக்ஷமும் மறுஜன்மம் ஆகியவைகளும் உள்ளவரை பிராமணாளை (பார்ப்பானை) யாரும் ஒன்றும் அசைத்து விட முடியாது. தெரியாமலா பிராமணாள் எல்லாம் காந்தியை மகாத்மா ஆக்கி விட்டார்கள். எப்படி யிருந்தாலும் காந்தி சூத்திரன்தானே. அப்படி இருந்தும் அவரை நம்முடைய வைதீகபிராமணாள் கூட மகாத்மா என்கிறார்களே எதற்காக? விபீஷணனை(ராக்ஷதனை) சிரஞ்சீவி ஆக்கவில்லையா? அனுமானை (குரங்கை) சிரஞ்சீவி ஆக்க வில்லையா? இது நடந்ததோ இல்லையோ, அதைப்பற்றி எனக்கு கவலை இல்லை. பிராமணாள் நடந்து கொள்ளவேண்டிய முறைக்கு ராமாயணம் ஒரு வழிகாட்டி என்கின்ற அருத்தத்தில் நான் உமக்கு எடுத்துக்காட்டுகிறேன். இதனாலேயே என்னை புராணமரியாதைக்கார முட்டாள் என்று சொல்லி விடாதேயும்.

இந்த காந்திகூட எதுவரையில் மகாத்மா உமக்குத் தெரியுமா" ராம ராஜியம் ஸ்தாபிப்பேன்" "கீதைதான் என்னை நடத்துகின்றது" "பெண்கள் எல்லாம் சந்திரமதி போல் இருங்கள்." "வருணாச்சிரம தர்மம் உலக நடவடிக் கைக்கு சிறந்தது" என்று சொல்லும் வரை தான் மகாத்மா, அப்படிக்கில்லாமல் கொஞ்சம் மாறினாலும் தலைகீழாக கவிழ்ந்து விடுவோம் இது உமக்குத் தெரியாதா?

**அய்யர்**:- அவரைக்கூட கவிழ்க்க இனி யாராலாவது முடியுமா?

**அய்யங்கார்**:- ஏன் உமக்குத் தெரியாதோ.

**அய்யர்**:- தெரியாது.

**அய்யங்கார்**:- முன் ஒருதரம் காந்தி தீண்டாமை விஷயத்தில் கொஞ்சம் அதிகமாய் அதாவது அஸ்திவாரத்தில் கைவைக்கத் தகுந்தமாதிரி





RangaRakes tamilnavarasam.com

பேச ஆரம்பித்தவுடன் தென்னாட்டிலுள்ள நம்மிட பெரியவாள் எல்லாம் "மதத்தைப்பற்றிப் பேச உமக்கு என்ன யோக்கியதை" என்று வளைத்துக் கொண்டதும், பம்பாயில் "காந்தியைக் கொல்ல வேண்டும்", "அவன் ஒரு முட்டாள்" "காந்தி அயோக்கியன்" என்று சொன்னதும், பூனாக்காரர் "காந்தீயம் தேசத் துரோகம். திலகர் கொள்கைக்கு விரோதம்" என்று சொன்னதும், மாளவியாவை தலைமைகொண்ட இந்து மகாசபையாரும் "காந்திக்கு இந்து மதத்தைப் பேச உரிமை இல்லை"என்று சொன்னதும் உமக்குத் தெரியாதா? எங்கே தீண்டாமையைப் பற்றி, மதத்தைத் தாக்கி மாத்திரம் இப்போது தான் ஆகட்டும் காந்தியை ஒரு வார்த்தை மாத்திரம் பேசச்சொல்லு அவருடைய மகாத்மா தன்மை எத்தனை வினாடி நிலைக்கின்றது என்று பார்ப்போம்? நம்ம பெரியவாளும் நம்ம பத்திரிகைகளும் அவரை ஒரே அடியாய் தூக்கி தலைகீழாகக் கவிழ்த்து விடுவார்கள் தெரியுமா? இன்னும் ஒரு உதாரணம் சொல்லுகின்றேன் கேள். 1922 ௵ ஒத்துழையாமை யானது சிறிது (பிராமணாளுடைய) தேவைக்குமேல் போனவுடன், தாசை தேசபந்துவாக்கி சுயராஜ்யக் கக்ஷி உண்டாக்கி ஒத்துழையாமை ஒழித்து இதே காந்தியை மூலையில் உட்கார வைத்துவிடவில்லையா? ஆக்கவும் அழிக்கவும் நாம் தானே. அதனால்தானே நாம் பிரம்மஸ்ரீ ஆனோம்.

**அய்யர்**:- இது சரி. ஆனால் முன் சொன்ன தீண்டாமையைப்பற்றி கராச்சி காங்கிரஸ் தாராளமாக தீர்மானித்து விட்டதாக சொல்லுகின்றார்களே!

**அய்யங்கார்**:- என்ன தாராளம்?

**அய்யர்**;- "ஜாதிமதபேதமில்லாமல் எல்லோரும் பொது ரோட்டு, கிணர் ஆகிய இடங்களுக்கு போகலாம்" என்று சொல்லி தீர்மானம் போட்டு இருக்கின்றார்களே!

**அய்யங்கார்**:-அத்தீர்மானத்தில் என்ன இருக்கின்றது உம்ம தலை புருடை? நீர் பிராமணனாயிருந்தும் உமக்கு மூளையே கிடையாது. உங்கள் படுக்கை வீட்டில் சூத்திராள் படம் - அதாவது ராஜாக்கள், ஜமீன்தாரர்கள், மந்திரிகள் முதலியவர்கள் படம் ஏதாவது சுவற்றில் தொங்கவிட்டு இருந்ததோ.

**அய்யர்**:- அதிகப்பிரசங்கித்தனம் எல்லாம் பேசாதீர். உண்மையைச் சொல்லுமே, மற்றபடி அத்தீர்மானத்தின் இரகசியம் தான் என்ன?

**அய்யங்கார்**:- பொதுரோட்டில் இன்று யார் நடப்பதில்லை? பொது சந்தையில் இன்று யார் போவதில்லை? பொது ரயில் வண்டியில் இன்று யார் ஏறுவதில்லை? கச்சேரி நாடகக்கொட்டாய் வீதி மீட்டிங்கு இவைகளில் யார் நுழைவதில்லை. அதுபோலவே பொதுக்கிணறுகள் என்பதில் நகரங்களில் கிணறு கிடையாது. வாய்க்கால், நதி , இல்லாவிட்டால் பெரிய குளம், இல்லாவிட்டால் தண்ணீர் குழாய். இன்னும் வரவர எல்லாப் பட்டணங்களிலும்



தண்ணீர் குழாய் ஏற்பட்டு விடப்போகின்றது . ஆதலால் கிணற்றைப்பற்றிய தீர்மானத்தால் பயமில்லை. நகரங்களில் உள்ள தெருக்களில் எல்லாம் இப்போதும் யாரும் போய்க்கொண்டு தான் இருக்கிறார்கள். கிராமங்களில் மாத்திரம் சில தெருக்களில் போவதில்லை. அங்குள்ள பிரபுக்கள் பயத்தால் கீழ் ஜாதிக்காரர்கள் நாளைக்கும் காந்தி போகச் சொன்னாலும் போக மாட்டார்கள். போனாலும் ஒன்றும் முழுகிப்போகாது. ஏனென்றால் மற்ற வீதிகளுடன் அதையும் சேர்த்து விடலாம். ஆதலால் இத் தீர்மானத்தினால் மதம் எங்குபோய்விட்டது? இதனால் எல்லாம் பிராமணாளுடைய உயர்வு எங்கு எப்படி போய்விடும் என்று கருதுகீன்றீர்?

**அய்யர்**:- பின்னை எதினால்தான் பிராமணாள் உயர்வும் அதை ஆதாரமாய்க்கொண்ட மதமும் இருக்கின்றது? என்கிறீர்.

**அய்யங்கார்**:- அது உம்ம புத்திக்கு இதுவரை படாதது எனக்கு அதிசயமாகவே இருக்கின்றது.

**அய்யர்**:- அது எது என்று சற்று சொல்லித்தான் காட்டுமே பார்க்கலாம்.

**அய்யங்கார்**:- பிராமணாளும் அவர்கள் மதமும் காப்பாற்றப் படுவது முக்கியமாய் கோயில்களாலேயேயாகும். அந்த இடத்தில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டால்தான் பிராமணாளுக்கும் வருணாச்சிரமத்திற்கும் ஒரு சமயம் ஆபத்து ஏற்படலாம். ஆகையால் அதில் கை வைக்க எப்படிப்பட்டவர்களுக்கும் சிறிதும் இடம் கொடுக்க நம்மிட பெரியவாள் ஒப்ப மாட்டார்கள். அது 'மகாத்மா' காந்தியானாலும் சரி, அவர்கள் பாட்டனார்களான சுவாமிகள் ஆச்சார்ய சுவாமிகளானாலும் சரி ஒன்றும் நடக்காது. ஆகை யால் அந்த இடம் (கோவில் மாத்திரம்) வெகு ஜாக்கிரதையாகவே காப் பாற்றப்பட்டு வருகின்றது. (சேரமாதேவி குருகுலத்தைப்பாருமே. குரு குலத்தையாவது நம்மவாள் அடியோடு ஒழித்துவிட்டார்களே ஒழிய வருணாச்சிரமத்தை விடவில்லையே) கராச்சி காங்கிரசில் கோயிலைப்பற்றிய பேச்சே கிடையாது. ஜாதி வித்தியாசத்தை ஒழிப்பதைப் பற்றிய பேச்சோ சிறிதும் கிடையாது தெரியுமா?

**அய்யர்**:- அப்படியா.

**அய்யங்கார்**:- என்ன அப்படியா என்று கேட்கின்றீர். உங்கள் பிர்மஸ்ரீ சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் தானே அதை நன்றாக விளக்கி இருக்கிறார். அதாவது, "கராச்சி காங்கிரஸ் தீர்மானத்தில் கோவில்களைப் பற்றிய பேச்சு இல்லையாதலாலும் (அது விஷயாலோசனை கமிட்டியால் வந்தும்) அதை சேர்க்கக் கூடாது என்று மனமார தள்ளிவிட்டதினாலும் மேலும் காங்கிரஸ் காரிய கமிட்டி யாருக்கும் கோயிலைப் பற்றிய பிரஸ்தாபிக்க இஷ்டமில்லை என்று நமக்கு தெரிய வந்ததினாலும் பொது உரிமையைப்பற்றிய தீர்மானத்தை



RangaRakes tamilnavarasam.com

திருத்த வேண்டிய அவசியமில்லை" என்று விளக்கி இருக்கின்றாரே நீர் பார்க்கவில்லையா? இது ஏன் தெரியுமோ? இந்த தீர்மானத்தை ஆதாரமாய் வைத்துக் கொண்டு யாராவது தென்னாட்டில் கோயில் பிரவேச சத்தியாக் கிரகம் ஆரம்பித்துவிட்டால் என்ன செய்வது என்றுதான் விளக்கினார்.

**அய்யர்**:- காங்கிரஸ் தீர்மானத்தின் கருத்து இந்தப்படிதான் என்று உமக்கு எப்படித் தெரியும்.

**அய்யங்கார்**:- எப்படி தெரியும் என்றா கேட்கிறீர்? சொல்லுகிறேன் கவனமாய் கேளும். காங்கிரஸ் காரியக் கமிட்டியார், "இத்தீர்மானங்கள் அவசரமாய் பாசாக்கப்பட்டதாக பலர் கருதுவதால், அதில் ஏதாவது விலக்கு வதோ மாறுதல் செய்ய வேண்டியதோ அவசியம் உண்டா" என்று ஆங்காங் குள்ள ஜனத்தலைவர்கள் தேசபக்தர்கள் தியாகிகள் ஆகியவர் களுக்கு அனுப்பி அபிப்பிராயம் கேட்டிருந்தார்கள். ஏன் கோவில் இதில் சேர்க்கப் படவில்லை என்பது நன்றாய் விளக்கப்படட்டும் என்று அந்த முறையில் நமது தென்னாட்டு ஜனத் தலைவரும் தியாகியும் தேசபக்த ருமான நமது பிர்மஸ்ரீ சத்தியமூர்த்தி அய்யர்வாளுக்கும் அந்த சர்க்குலர் வந்தது. அதாவது அய்யர்வாள் ஒரே அடியாய் தீர்மானத்தின் சூக்ஷமத்தைத் தைரியமாய் உடைத்துவிட்டார். அதாவது காங்கிரஸ் காரியக்கமிட்டி சார்பாக காரிய தரிசிக்கு தந்தி கொடுத்தார். அவர்களும் சரி என்று ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

**அய்யர்**:- அதன் கருத்து அப்படியல்ல என்று மறு தந்தி ஒன்றும் வரவில்லையா?

**அய்யங்கார்**:- இல்லை. அன்றியும் எப்படி வரும் ? ஜாக்கிரதையாகத் தானே தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது. அப்படி ஏதாவது மாறுவதா யிருந்தால் பிறகு அத்தீர்மானத்திற்கே ஆபத்து வந்து விடாதா?

**அய்யர்**:- அப்படியா இவ்வளவு புத்திசாலித்தனமாக அத் தீர்மானம் செய்தவர்கள் யார்?

**அய்யங்கார்**:- யார் என்றா கேட்கின்றீர். தென்னாட்டில் சேரமாதேவி குருகுலத் தகராரின் போது ஈ.வெ.ராமசாமி நாயக்கனும் எஸ். ராமநாத பிள்ளையும் சேர்ந்து " பிறவியில் ஜாதி வித்தியாசம் பாராட்டக்கூடாது என்பது காங்கிரசைப் பொருத்தவரையாவது அமுலில் கொண்டு வர வேண்டும்" என்று தமிழ்நாடு காங்கிரசில் ஒரு தீர்மானத்தை பாசாக்கினவுடன் காங்கிரசிலிருந்து ராஜினாமா கொடுத்தும் மற்றும் அந்த பிரசாரத்திலிருந்து விலகியும் இருந்து அந்த மாதிரி தீர்மானம் கொண்டு வந்த ஆளுகள் அதாவது ராமசாமி ராமனாதன் ஆகியவர்கள் காங்கிரசில் இருக்க முடியாமல் காங்கிரசை விட்டுப்போன பிறகு காங்கிரசில் வந்து சேர்ந்தார்களே அவர்கள்தான்.



**அய்யர்**:- அப்படியா அப்படிப்பட்டவர்கள் யார்? அவர்கள் பெயர்கள் என்ன?

**அய்யங்கார்**:- பிர்மஸ்ரீகள் C.ராஜகோபால ஆச்சாரியார், M.K.ஆச்சாரியார், Dr.T.S.S.ராஜன் அய்யங்கார், Dr.T.V.சாமினாத சாஸ்திரியார். N.S.வரதாசாஸ்திரியார், K.சந்தான அய்யங்கார், மட்டப்பாரை R.S. வெங்கிட ராமையர், ஏ. வைத்தியநாதய்யர், எக்கியேஸ்வர சர்மா,T.C.சங்கரய்யர் இன்னும் சில பிர்மஸ்ரீகள் அதாவது இப்பொழுது தென்னாட்டில் காந்தீயம் காங்கிரசுஊயம் என்று பிரசாரம் செய்கின்றார்களே இந்த மகான்கள் தான்.

**அய்யர்**:- அப்படியா? சரி. இதனால் சுயமரியாதை இயக்கம் விழுந்து விடுமா?

**அய்யங்கார்**:- விழுகாமல் என்னசெய்யும் ? நம்முடைய பெரிய வாள் சூக்ஷிகளில் இருந்து சுயமரியாதைக்காரர் தப்புவதென்றால் இலேசான காரியமா?

**அய்யர்**:- சுயமரியாதை இயக்கம் கடவுள் ஜாதி மதம் ஆகியவைகள் மாத்திரம் அல்லாமல் பணக்காரன் - ஏழை, ஆண்-பெண், முதலாளி - தொழிலாளி ஆகிய விஷயத்திலும் கையை வைத்து பெரிய கலக்கம் கலக்குகின்றதே. அதனால் இப்போது தொழிலாளிகள் எல்லாம் நிமிர்ந்து பேசுகின்றார்கள். பெண்கள் வீட்டில் ஆண்களுக்கு அடங்கி நடப்ப தில்லை. சம்பள ஆட்கள் எல்லாம் முதலாளிகளை மதிப்பதில்லை. மற்றும் இதுபோன்ற பல உணர்ச்சிகளைக் கிழப்பிவிட்டு தொல்லை விளைவிக் கின்றார்களே, பரிகாரி முதல்கொண்டு வாய்யா, போய்யா என்கின்றானே. இவைகள் எல்லாம் எப்படி பழையபடி சரிப்படும் ?

**அய்யங்கார்**:- இதெல்லாம் சு.ம. இயக்கக்காரர்களின் சமதர்மக் கொள்கை பிரசாரத்தின் உபத்திரவம் என்பதாக எனக்கும் தெரிகின்றது. ஆனால் அதுவும் சீக்கிரம் அடங்கிவிடும்.

**அய்யர்**:- எப்படி அடங்கிவிடும்?

**அய்யங்கார்**:- காந்தி இருக்கும் வரை நமக்கு பயமில்லை. அவர் பகத்சிங் வகையறா தூக்கப்பட்டதும், மற்றும் அந்த இயக்கத்தை ஒழிக்க வேண்டும் என்கின்ற எண்ணத்துடன் அதை காட்டிக் கொடுத்துதான் இராஜப்பிரதிநிதியிடம் ராஜி பேசினதும் மற்றும் இந்தியாவின் ஆக்ஷியில் சுதேச ராஜாக்களை யெல்லாம் கொண்டு வந்து போட்டு அவர்களுக்கும் இதில் ஆதிக்கம் வாங்கிக் கொடுத்ததும் முதலாகிய காரியங்கள், இந்த மாதிரி சமதர்மக் கொள்கைகளை எல்லாம் வெகு சீக்கிரத்தில் அடக்கிவிடும். ஆகை யால் நாம் பிழைக்க வேண்டுமானால் கௌரவமாய் வாழவேண்டு மானால், பழம் ஏற்பாட்டுப்படி வருணாச்சிரமம், ஜாதி வித்தியாசம் ஆண் பெண்



RangaRakes tamilnavarasam.com

வித்தியாசம், முதலாளி தொழிலாளி வித்தியாசம் இவைகள் நிலைத்து இருந்து நாம் பாடுபடாமல் பூதேவர்களாகவும் சுவாமிகளாகவும் இருந்து பிழைக்க வேண்டுமானால் மகராஜன் காந்தி நன்றாய் இருக்கவேண்டும். அவருக்கு மிகுதியும் கௌரவமும் செல்வாக்கும் நாம் சம்பாதித்துக் கொடுக்கவேண்டும். அவர் செல்வாக்கு குறைந்தால் இந்தியா சுயமரியாதைக் கொள்கையின் கீழ்தான் இருக்க முடியும். ஆகையால் காந்தியைக் காப்பாற்ற வேண்டும். அவர்தான் இப்போது நமக்கு (பிராமணாளுக்கு) நல்ல ஆயுதமாக இருக்கின்றார் தெரியுமா?

**அய்யர்**:- அப்படியா! காந்தீ வாழ்க! மகாராஜன் காந்தி வாழ்க!! மகாத்மா காந்தி வாழ்க !!! எங்கள் அப்பன் காந்தி வாழ்க!!!!

**அய்யங்கார்**:- அப்படிச் சொல்லு. இனி நாம் பிழைக்க வேண்டு மானால் இது தான் நமது மந்திரமாய் இருக்கவேண்டும்.

**அய்யர்**:- யார் யாரோ காந்தி ஒழிக! காந்தீயம் ஒழிக!! காங்கிரஸ் ஒழிக!!! என்கின்றார்களாமே?

**அய்யங்கார்**:- அதைப்பற்றி நாம் ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை. அதையெல்லாம் காந்தியே பார்த்துக் கொள்ளுவார். அந்த மாதிரி ஆசாமி களை ஒழிப்பதற்கு நம்ம காந்தி சர்க்காரைப்பிடித்து அடக்கி விடுவார்.

**அய்யர்**:- ஜவர்லால்நேருகூட அந்த கட்சியைச் சேர்ந்தவராமே.

**அய்யங்கார்**:- எந்தக் கட்சியை?

**அய்யர்**:- காந்தி ஒழிய என்று சொல்லுகின்ற மக்கள் கொள்கையை சேர்ந்தவர்களாமே.

**அய்யங்கார்**:- அதெல்லாம் சும்மா சொல்லுவது. அவர் என்றால் மாத்திரம் பிராமணரல்லவா? "மழைக்கால் இருட்டானாலும் மந்தி ( குரங்கு ) கொம்பு விட்டுக் கொம்பு தவரிப் பாயுமா?" ஜவர்லால் எவ்வளவு தீவிரமாய் பேசினாலும் பிராமணத் தன்மையை மாத்திரம் விட்டுக் கொடுத்து விடுவார் என்று நீர் கனவிலும் என்னிவிட வேண்டாம். உதாரணம் வேண்டுமானால் சொல்லுகிறேன் கேள்.

**அய்யர்**:- சொல்லும் பார்ப்போம்.

**அய்யங்கார்**:- ஜவர்லால் ஆங்கிலம் படித்தவர். குழந்தைப் பருவத்திலேயே சீமைக்குச் சென்று அங்கேயே படித்து வளர்ந்தவர். ருஷியா வுக்குக்கூட போய் வந்தவர். மூடப்பழக்க வழக்கங்கள் மதப்பித்து ஆகிய வைகள் ஒழிய வேண்டுமென்றும், அவை ஒழியாமல் சுயராஜ்யம் வராது என்றும் சொன்னவர். இதெல்லாம் உமக்குத் தெரியுமா? தெரியாதா?



**அய்யர்**:- நன்றாய்த் தெரியும். அதனால்தான் நான் அவர் நமக்கு எதிரியாயிற்றே என்று பயப்படுகின்றேன்.

**அய்யங்கார்**:- போமய்யா போம். உமக்கு சூட்சம அறிவு இருந்தால் அல்லவா இந்த சூக்ஷமம் எல்லாம் அறியக்கூடும்.

**அய்யர்**:- நீர்தான் சூக்ஷம அறிவுக்காரராயிருமே. சங்கதி என்ன? சொல்லும்.

**அய்யங்கார்**:- ஜவர்லால் நேரு மேல்சொன்ன இவ்வளவு இருந்தும் எலும்பைக் கொண்டுபோய் கங்கை ஆற்றில் போட்டு மாதா மாதம் பிண்டம் போட்டால் அந்த எலும்பின் ஜீவன் மோக்ஷத்திற்கு போவார் என்று சொல்லி அவர் தகப்பனார் எலும்பை கங்கையில் போட்டு பிண்டம் கொடுத்தாரே, அது உமக்குத் தெரியுமா?

**அய்யர்**:- ஆம் தெரியும்.

**அய்யங்கார்**:- இதிலிருந்தே பார்த்துக்கொள்ளுமே. வீரர் ஜவர்லால் நேரு நமது பிராமணத்தன்மையை விட்டுக் கொடுத்துவிட்டார்களா ? என்பதை.

**அய்யர்**:- ஓ! ஓ!! அப்படியா? இந்த இரகசியங்கள் எல்லாம் எங்க ளுக்குத் தெரிவதேயில்லை.

நாங்கள் சுயமரியாதை இயக்கத்தை கண்டதும் பயந்து விட்டோம்.

**அய்யங்கார்**:- ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை. காந்தியும் காங்கிரசும் உள்ளவரை சுயமரியாதை இயக்கமோ, நாஸ்திக இயக்கமோ, போல்ஸ்விக் இயக்கமோ இன்னும் சமதர்மம், பொது உடமை, இயற்கைத் தன்மை முதலிய இயக்கங்களோ எதுவும் பிராமணனை ஒன்றும் செய்து விடாது என்று தைரியமாயிரும்.

**அய்யர்**:- வட்டமேஜை மகாநாட்டில் என்ன என்னமோ சுதந்திரம் வரப் போகுதாமே அதிலேதாவது ஆபத்து வந்து விட்டால்?.

**அய்யங்கார்**:- அதைப்பற்றியும் பயப்படவேண்டியதில்லை. அங்கு சென்று நமது ஜீவாதாரத்தைக் காப்பாற்றத்தானே காந்தியை "சத்தியாக்கிரக இயக்கம் தோற்றுப் போகும். பிறகு வருணாசிரமத்திற்கும் இந்து மதத்திற்கும் ஆபத்து வந்து உமக்கும் அவமானம் ஏற்பட்டு விடும்" என்று நம்ம சீனிவாச சாஸ்திரிகளும் இராஜகோபாலாச்சாரிகளும் பேதிக்குக் கொடுத்து இயக்கத்தை எப்படியாவது நிறுத்தி விட்டு அவரை வட்டமேஜை மகா நாட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டார்கள். அதுமாத்திரமல்ல, இந்து ராஜாக்களையும் கொண்டு வந்து நம்மிட பெரியவாள் இந்த சீர்திருத்தத்தில் புகுத்திவிட்டார்கள்.



RangaRakes tamilnavarasam.com

ஆதலால் அது விஷயத்திலும் பயப்படவேண்டிய தில்லை. இன்னும் அநேக சங்கதிகளிருக்கின்றன. சாவகாசமாய் சொல்லு கிறேன். இப்போதே மூன்று பக்கத்திற்கு மேலாகிவிட்டது. யாரும் கோபித் துக் கொள்ளக் கூடாது.

**குடி அரசு – உரையாடல் – 03.05.1931**



# ஆத்மா

ஆத்மா, என்னும் விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கும் நமது நண்பர்கள் பலர் இது ஒரு தத்துவ விசாரணை விஷயம். இதைப்பற்றி எழுதவோ, பேசவோ வேண்டிய அவசியம் சமுதாய சீர்திருத் தக்காரருக்கு எதற்கு? சுயமரியாதைக்காரர்கள் அனாவசியமாய் கண்ட கண்ட விசயங்களிலெல்லாம் தலையிட்டு சீர்திருத்தத் துறையைப் பாழாக்கிக் கொள்ளுவானேன்? என்று கூசாமல் பேசுவார்கள். ஆனால் இப்படிப்பட்ட நண்பர்கள் சமுதாய சீர்த்திருத்தம் என்பது என்ன என்பதாக சரிவர உணராத வர்கள் என்று நினைத்துவிட்டு நம் பாட்டுக்கு நாம் மேலே செல்லக் கூடிய நிலையிலேயே இருக்கின்றோம்.

ஏனெனில் சமுதாய சீர்த்திருத்தம் என்றால் ஏதோ அங்கும் இங்கும் இடிந்துபோன – சுவண்டு போன – ஆடிப்போன பாகங்களுக்கு சுரண்டி கூறுகுத்தி, மண்ணைக் குழைத்து சந்து பொந்துகளை அடைத்துப் பூசி மெழுகுவது என்றுதான் அநேகர் கருதி இருக்கின்றார்கள். ஆனால் நம்மைப் பொருத்த வரை நாம் அம்மாதிரி துறையில் உழைக்கும் ஒரு சமுதாய சீர்திருத்தக்காரரல்ல என்பதை முதலில் தெரித்துக் கொள்ளுகின்றோம். மற்ற படி நாம் யார்? என்றால் என்ன காரணத்தினால் மக்கள் சமுதாயம் (மக்கள் சமுதாயம் என்றால் உலக மக்கள் சமுதாயம்) ஏன் சீர் திருத்தப்பட வேண்டிய நிலைமைக்கு வந்தது? என்பதை உணர்ந்து உணர்ந்தபடி மறுபடியும் அந் நிலை ஏற்படாமல் இருப்பதற்கு நம்மால் இயன்றதைச் செய்யும் முறையில் அடியோடு பேர்த்து அஸ்திவாரத்தையே புதுப்பிப்பது என்கின்றதான தொண்டை மேற்கொண்டிருக்கின்றபடியால் சமுதாய சீர்திருத்தம் என்பதைப் பற்றி மற்ற மக்கள் அனேகர் நினைத்திருந்த தற்கு நாம் மாறுபட்ட கொள்கை யையும், திட்டத்தையும், செய்கையையும் உடையவராய்க் காணப்பட வேண்டிய நிலைமையில் இருக்கின்றோம்.

இதனாலேயே தான் பலவற்றில் உலக மக்கள் உண்டு என்பதை இல்லை என்றும், சரி என்பதைத் தப்பு என்றும், தேவை என்பதை தேவை இல்லை என்றும், கெட்டது என்பதை நல்லதென்றும், நல்லது என்பதை கெட்டது என்றும், காப்பாற்றப்பட வேண்டும் என்பதை ஒழிக்க வேண்டும் என்றும், மற்றும் பலவாறாக மாறுபட்ட அபிப்பிராயத்தை கூறுவோராக –



RangaRakes tamilnavarasam.com

செய்வோராகக் காணப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். ஆனால் நம்போன்ற இப்படிப்பட்டவர்கள் உலகில் நல்ல பெயர் சம்பாதிப்பதும் மதிக்கப்படுவதும் பழிக்கப்படாமல் - குற்றம் சொல்லப்படாமல் இருப்பதும் அருமை என்பது மாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரியும். உதாரணமாக இது விஷயமாய் நாயனார் அவர்களது குறளில்

"உலகத்தார் உண்டென்பதில் என்பான் - வையத்
தலகையா வைக்கப்படுவான்"

என்று ஒரு குறள் காணப்படுகின்றது. இதன் பொருள் அக்குறளில் காண்கின்றபடி பார்த்தால் "உலகத்தாரால் உண்டு என்று சொல்லப்பட்டதை இல்லை என்று சொல்லுபவன் உலகில் பிசாசாக மதிக்கப்படுவான்" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இதில் இருந்து உலகத்தார் என்பது யாரைக் குறிப்பிடுகின்றது? "உலகத்தார் என்றால் உயர்ந்தோர்" என்று சொல்லுவதானால் உயர்ந்தோர் என்பதற்கு லக்ஷணமென்ன? பிசாசு என்றால் அர்த்தமென்ன? வையத் தலைகை என்பதற்கு திருவள்ளுவர் கருத்தென்ன? அவர் பிசாசை நம்பி இருந்தாரா? என்பன போன்ற பல தர்க்க விவகாரங்கள் அக்குறளுக்குப் பொருள் கூறுவதில் சிலருக்கு ஏற்பட்டாலும் அதன் அதிகாரத்தின் தலைப்புப்படி அக்குறளின் கருத்து "அநேக மக்களால் உண்டு என்று கருதப் பட்ட ஒரு விஷயத்தை இல்லை என்று சொல்லுபவன் அறிவில்லா தவன்" என்று பொருள்படுவதாகவே வைத்துக் கொள்ளுவோம். இப்படி இருந்தாலும் இதிலிருந்து அவன், அதாவது உலகத்தாரால் உண்டு என்பதை இல்லை யென்று சொல்லுபவன் எதனால் அறிவில்லாதவன் என்று கண்டு பிடிக்க வேண்டியது இங்கு முக்கியமாகின்றது. எவ்வாறெனில், உண்டு என்பதை இல்லை என்று சொல்லுகின்றதற்காக அவன் கொண்ட கருத்து குற்றமு டையதா? அல்லது பலர் - அநேகர் மற்றவர்கள் - எல்லோரும் உண்டு என்று சொல்லப்பட்ட ஒரு அபிப்பிராயத்திற்கு, அது எப்படி இருந்தாலும் கண்மூடித் தனமாய் பின்பற்றாமல் தனது சொந்த அபிப்பிராயத்தை துணிந்து சொல்ல வந்துவிட்டானே அந்த அடங்காத-கீழ்ப்படியாத - ஊருடன் ஒத்துப் போகாத -ஆணவமான தன்மையுடைய அந்தசெய்கை குற்றமுடையதா? என்று யோசிக்க வேண்டியது இங்கு முக்கியமான காரியமாகும். ஆகவே உலகத்தார் உண்டு என்பதை மறுத்துக் கூறியதற்கு ஆதாரமாக அவன் கொண்ட அபிப்பி ராயம் குற்றம் என்று ஏற்படுமானால் இங்கு உலகத்தார் சொல்லுவதெல்லாம் சரியானதாய்த்தான் இருக்கும் என்று பொருள் கொண்டு நாயனார் சொல்லி இருக்க வேண்டும். அல்லது அப்படி உலகத்தார் அபிப்பிராயத்துக்கு விரோத மாக அபிப்பிராயப்பட்டதை ஒருவன் தனித்து எடுத்துச் சொல்லுவது என் கின்ற தன்மை குற்றமானதென்று கருதி நாயனார் சொல்லி யிருந்தால் மனிதனுக்கு அவனவனபிப்பிராயத்திற்கு சுதந்திரமில்லை என்று வள்ளுவர் கருதி அப்படிச்சொல்லி இருக்க வேண்டும். ஆகவே அக்குறளானது உலக



மக்களில் பொதுவாக பெரும்பான்மையோரையோ அல்லது அறிவாளி களாகிய பெரும்பான்மையோரையோ யாரைக் குறிப்பில் வைத்துக்கொண்டு நாயனார் சொல்லி இருந்தாலும் அக்குறள் பொதுவில் குற்றமுடையது என்பதே நமதபிப்பிராயம்.

ஆதலால் ஆத்மா என்கின்ற விசயத்தைப்பற்றி யார் என்ன சொல்லி இருந்தாலும் - உலகமே என்ன கருத்துக் கொண்டிருந்தாலும் அதை லக்ஷி யம் செய்யாமலேயே நாம் நம்முடைய அபிப்பிராயத்தைச் சொல்லுகின்றோம்.

ஆதலால் ஆத்மா என்பது ஒரு வஸ்து அல்ல, பொருள் அல்ல. அது சுதந்திரம், அறிவு உணர்ச்சி முதலாகியவைகளை உடையதல்ல என்பதோடு அது ஒரு பெரிதும் அர்த்தமற்ற வார்த்தை என்றே நமக்கு காணப்படுகின்றது. இங்லீஷ், தமிழ் அகராதிகளில் பார்த்தாலும் ஆத்மா என்பதற்கு இங்லீஷில் சோல் (Soul) என்றும், சோல் என்றால் அறிவு-யோசனை - ஆசை பிறக்கும் இடம், ஊக்கம், உள் சக்தி, மனிதவர்க்கம், உயிர் என்கின்ற பொருள்கள் காணப்படுகின்றன.

தமிழ் அகராதிகளிலும் அதுபோலவே ஆத்மா அல்லது ஆன்மா என்றால் காற்று, அறிவு, உடல், உயிர், பிராணன், மூளை முயற்சி, பிரம்மன், சுபாவம் என்கின்ற பொருள்கள் காணப்படுகின்றன. இவைகளில் இருந்து அதாவது இந்த வார்த்தைகளில் இருந்து விளக்கப்பட வேண்டியது ஒரே ஒரு வார்த்தைதான் ஆகும் . பிராணன் அல்லது உயிர் என்பதற்குத்தான் அர்த்தம் விளங்கவேண்டி இருக்கின்றது. மற்ற வார்த்தைகள் எல்லாம் தானே அர்த்தம் புரியும்படியாய் இருக்கின்றன.

ஆகவே பிராணன் என்பது என்ன என்று பார்த்தால் அது ஒரு காற்று, பிராணவாயு இருதயத்தில் இயங்கிக்கொண்டிருப்பது என்பதாகத் தான் அகராதிகளில் காணப்படுகின்றது.

இது இங்ஙனமிருக்க இப்போது பழக்கத்தில் ஆத்மா என்றால் அது சரீரத்திற்குள் இருக்கும் ஒரு நித்திய வஸ்துவென்றும் அது சூக்ஷம வஸ்து வென்றும் அதற்கு பிறப்பு இறப்பு இல்லை என்றும் அது மனிதன் இறந்த பின்பு வெளிப்பட்டு மறுபடியும் சரீரம் எடுப்பது என்றும், மற்றும் அது சரீரத்தில் இருக்கும்போது செய்த காரியங்களுக்காக அதன் பயனை சரீரத்தை விட்டுப் பிரிந்த பின்பு கடவுள் மூலம் அனுபவிக்கின்றதென்றும் மற்றும் எத்தனையோ விதமாக அதைப்பற்றி பல மதங்களில் பல விதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றதாய் அறிகின்றோம்.

உதாரணம் என்னவென்றால் அது மனிதனுக்குள் இருந்து மனித சரீரத்திற்கு வேறாய் "என் சரீரம்" என்று சொல்லுவதன் மூலம் சரீரத்திற்கும் வேறுபட்டதென்றும் சொல்லுவது போன்ற ஏதேதோ பிரிவுகள் காட்டி அந்த



RangaRakes tamilnavarasam.com

ஆத்மா சரீரம் விட்டுப்பிரிந்த பிறகு அடைய வேண்டிய - அடையக்கூடிய பலன் ஆகியவைகளைப் பிரதானமாகக் கருதி அதற்கு தகுந்தபடி அதற்காகவே மனிதன் வாழவேண்டியது அவசியமென்று சொல்லப்பட்டு அந்த மாதிரி ஆத்மாவுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்மந்தத்தையே மதங்கள் போதிக்கின்றன வென்றும் அதற்காகவே உலகத்தில் மனித கோடிகளுக்கும் மதம் அவசியமென்றும் சொல்லப்படுகின்றது.

ஆகவே கிறிஸ்து, பௌத்தம், இஸ்லாம், இந்து ஆகிய மதங்களில் பௌத்த மதம் தவிர மற்ற முக்கியமான மூன்று மதங்களும் ஏறக்குறைய ஒரே கொள்கையில் தான் ஆத்மாவுக்கும், கடவுளுக்கும் உள்ள சம்மந்தத்தையும் பற்றிய விஷயங்களை வைத்துக் கொண்டு இருக்கின்றன.

நிற்க மேற்கண்ட ஆத்மா என்பதில்

1. மனித ஆத்மா மாத்திரம்தான் மேற்கண்ட மத சம்மந்தங்களுக்கு அதாவது கடவுளுக்கும் ஆத்மாவுக்குமுள்ள சம்மந்தத்திற்காக ஏற்பட்ட மதங்களுக்கு சேர்ந்ததா? அல்லது புல், பூண்டு, அணு, ஜெந்து, ஊர்வன, பறப்பன, நகர்வன, நீர் வாழ்வன முதலிய ஜெந்துக்களின் ஆத்மாக்கள் என்பவைகளும் அதில் சேர்ந்தவைகளா?

2. இந்தப்படி மனித ஆத்மாவுக்கும் மற்றய ஆத்மாக்களுக்கும் வித்தியாசங்கள் உண்டா? அல்லது எல்லாம் ஒரே தன்மையானதுதானா?

3. மனித ஆத்மா மனித சரீரத்தில் இருக்கும்போது அது செய்த வினைக்கு ஏற்ற பலனை சரீரத்தை விட்டுப்பிரிந்த பிறகு அனுபவிக்கின்றது என்பது போலவே மற்றப் புல், பூண்டு, ஊர்வன, பறப்பன, நடப்பன, நீர் வாழ்வன, அணு ஐந்துக்கள் முதலியவைகளின் ஆத்மாக்களும் சரீரத்தை விட்டு விலகிய பிறகு அவைகளின் வினைக்குத் தகுந்த பலனை அனுபவிக்கின்றனவா?

4. இந்த ஆத்மாக்களில் மேல் கண்ட ஐந்துக்கள் ஒவ்வொன்றுக்கும் சிறிது சிறிது வித்தியாசங்கள், குணங்கள், தன்மைகள் முதலியவைகள் அதாவது புலன்வித்தியாசங்கள் அறிவுவித்தியாசங்கள், உள்ளதுபோலவே மனிதஜீவனும் மற்ற ஆத்மாக்கள் போலவே இருப்பதோடு புலன் அறிவு விஷயத்தில் சற்று கூடுதல் வித்தியாசம் மாறுதல் முதலியவைகள் உடைய ஐந்துவா?

5. உலகத்திலுள்ள மேல் கண்ட ஐந்துக்கள் எல்லாம் வேறு. மனித ஜெந்து மாத்திரம் வேறு என்று சொல்லும்படி வேறுபாட்டை உடைய ஐந்துவா மனிதன்?

என்பன போன்ற இன்னும் பல கேள்விகளும் சந்தேகங்களும் ஒரு



பக்கமிருந்தாலும், மனிதன் என்பதையே நாம் என்ன என்பதாக முதலில் ஆராய்வோம். மனிதன் என்பதின் தன்மை விளக்கம் ஆங்கிலத்தில் (Self) என்பதான தான், நான், என் என்கின்ற குறிப்பு உணர்ச்சிகளே யாகும். அக்குறிப்புகளில் ஒரு மனிதன் தன்னை நான் என்று சொல்லிக் கொள்ளும் போதும் எனக்கு என்னுடைய என்று சொல்லிக் கொள்ளும் போதும் ஏற்படுகின்ற உணர்ச்சி எப்படிப்பட்டது? அது எப்படி உண்டாகின்றது? என்பதை கவனித்தால் ஆத்துமத் தன்மை என்பது தானாகவே விளங்கும்.

அதாவது ஒரு மனிதன் நான் என்பதில் அந்த மனிதசரீரத்தின் எந்தப் பாகம் தனித்து இருந்து நான் என்கின்றது? அல்லது அந்த சரீரம் மொத்தமுமா? அல்லது சரீரமில்லாமலா? சரீரத்தில் எதுவரை நான் என்ற உணர்ச்சி இருக்கின்றது? சரீரத்தில் இருந்து எது போய்விட்டால் நான் என்பது போய்விடுகின்து? என்பது முதலாய் கேள்விகளுக்கு சமாதானம் கிடைத்தாலொழிய நான் என்பது விளங்காது.

இந்த முறையில் நான் என்பதை கவனிக்கும்போது என் சரீரம், என் உயிர், என் ஆத்மா, என் ஆவி, என் ஜீவன், என் மனம், என் அறிவு, என் புத்தி, என் எண்ணம், என் சித்தம், என் பிராணன், என் பிராணவாயு, என் சூக்ஷம சக்தி, என் கடவுள், என் ஆண்டவன் என்பது போன்ற அதாவது மனிதன் அல்லது ஆத்மா அல்லது ஜீவன் என்பவைகளாகிய எது எதை நாம் மனிதனாக ஆத்மாகவாக இருக்கக்கூடும் என்று கருதுகின்றோமோ அவைகளை எல்லாம் தன்னில் இருந்து தனிப்படுத்தி அவைகள் கூட என் என்பதைச் சேர்த்து பேசுவதைப் பார்க்கின்றோம். ஆகவே என் ( நான் ) வேறு. மேற்கண்ட மற்றவைகள் எல்லாம் வேறு என்பதாக நினைக் கும்படியாக இருக்கின்றது. ஆதலால் இவைகள் எல்லாம் மனிதனுடைய தன்மை உணர்ச்சி ஆகிய நான் என்பது அல்ல என்றே சொல்ல வேண்டி யிருக்கிறது.

இந்த நிலையில் மனிதனாகிய நான் என்னும் தன்மை உணர்ச்சி செய்த காரியங்களுக்கு ஆக நான் அல்லாத அதாவது என் ஆத்மா என்பதாகிய ஒரு வஸ்துவோ ஒரு ஜீவனோ ஒரு சக்தியோ ஆகிய சூக்ஷம ஜீவன் என்பது எப்படி அந்தப்பயனை அனுபவிக்க முடியும்? அனுபவிப்பதுதான் எப்படி நியாயமாகும்? நான் செய்த காரியத்திற்கு என் ஆத்மாவை தண்டிப்பதோ, கண்டிப்பதோ சன்மானமாகியவைகளை கொடுப்பதோ எப்படி கடவுளின் நீதியாகும்? என்கின்றதான விஷயம் மிகவும் யோசிக் தத்தக்கதாகும்.

இந்தமாதிரியான பிரச்சினைகளுக்கு சமாதானம் சொல்லுபவர்கள் பெரிதும் ஒரே சமாதானம் தான் சொல்லுவார்கள். அதென்னவென்றால் “இம் மாதிரியான பிரச்சினை வெகு ஆயிரம் வருஷங்களுக்கு முன்னமேயே பலரால் கேட்கப்பட்டாய்விட்டது. இவை சாதாரண மனிதர்களுக்கு புரியும் படி யானவைகள் அல்ல, சொன்னாலும் உங்களைப் போன்றவர்களால்



RangaRakes tamilnavarasam.com

கிரகித்துக் கொள்ளமுடியாது. வேண்டுமானால் கைவல்யம், ஞானவெட்டி, வாகிஷ்டம், கீதை, வேதாந்தசாரம், தத்துவகீதை முதலாகியவைகளைப் பாருங்கள். அதற்கு வேறு பல பக்குவங்கள் வேண்டும்" என்பது போன்ற பதிலை சொல்லி விடுவார்கள்.

சாதாரணமாக கிறிஸ்துவர்களுக்கும் இஸ்லாமானவர்களுக்கும் அனேகர் இந்த விஷயத்தில் கவலைப்படாமல் தீர்ப்பு நாளை உத்தேசித்து தாங்கள் இந்த சரீரத்துடனேயே ஒரு காலத்தில் மறுபடியும் எழுப்பப்பட்டு ஏதோ ஒரு பலனை அடையக்கூடும் என்கின்ற அளவோடு விட்டு விட்டார்கள். ஆதலால் அவர்களிடம் அதிக சிக்கலோ புரட்டோ கிடையாது. பௌத்தர்கள் "ஆத்மா என்பதே கிடையாது நித்திய வஸ்து என்பதே கிடையாது" என்பதாக முடிவு கட்டிவிட்டார்கள். ஆதலால் அவர்களுக்குள்ளும் இம்மாதிரியான கொசமுசாக்கள் கிடையாது.

ஆனால் இந்து மதக்காரர்கள் என்பவர்கள் மாத்திரம், ஆத்மா, சூக்ஷும சரீரம், மோக்ஷ லோகம், நரகலோகம், மறுபிரப்பு அதுவும் பலவித மாய் அதாவது புல்லாகிப் பூண்டாகி என்று படிப்படியாய் ஏற்பட்டது என்றும் இவைகள் எல்லாவற்றையும்விட மற்றொருவிதமாய் அதாவது ஆத்மாக்கள் பிதுர் தேவதைகள் ஆகி பிதுர்லோகம் என்பதில் இருந்து கொண்டு பிள்ளைகள் சந்ததியார்கள் முதலியவர்களால் இந்த உலகத்தின் பிராமணாளுக்கு கொடுக்கப்படுவதை அவர்களது மந்திர சக்தியின் மூலமாய் பெற்று அடைந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்றும் இன்னும் பலவிதமாய் சொல்லப்படுகின்றன. ஆகவே இவை தானாகவே ஒன்றுக்கொன்று முரண்படுவதாலும் அதைப்பற்றி முன்னமேயே பலபல சமயங்களில் வேறுவேறு வியாசங்களில் எழுதப்பட்டதாலும் இதை நிறுத்திவிட்டு அடுத்த வியாசத்தில் "நான்" அல்லது self தன்மை என்பதைப்பற்றி விவரிப்போம்.

**குடி அரசு - கட்டுரை - 03.05.1931**



# ஒரு நல்ல சேதி

## ஈரோடு முனிசிபாலிடி

ஈரோடு முனிசிபாலிடியானது கொஞ்ச காலத்திற்கு முன் இருந்து வந்த பொருப்பற்றதும், நாணையமற்றதுமான நிர்வாகத்தின் பயனாய் செல்வங்கள் பாழாகி கண்டபடி கண்டவர்களால் ஒழுங்குகளும், பண்டங் களும் கையாளப்பட்டு கடைசியாக கடனில் மூழ்கி சம்பளம் வகையறா பட்டுவாடா செய்யவும் சக்தியற்று இந்த மாகாண பாப்பர் முனிசிபா லிடியிலும் ஒழுக்க ஈனமான முனிசிபாலிடியிலும் முதல்நெம்பராய் இருந்து வந்ததானது மாறி, தற்கால சேர்மென் ஜனாப், கே.எ. ஷேக்தாவூத் சாயபு அவர்கள் காலத்தில் நாணையமும், பொருப்பும் பெற்று செல்வ நிலைமையிலும் சற்று நன்னிலை அடைந்து இப்போது நல்ல முனிசிபாலிடிகளில் ஒன்று என்று சொல்லத்தக்க பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. அவரது சொந்த செல்வாக்கினால் ஈரோடு முனிசிபாலிடியால் கல்வி இலாக்காவுக்கு கொடுக்கப்பட வேண்டிய ரூ. 44,000 - ம் கவர்ன்மெண்டார் தள்ளிக் கொடுத்து வஜா செய்து கொண்டார்கள். மற்றும் அவரது சொந்த பிரயத்தனத்தினால் ஜில்லா போர்டுக்கு கொடுப்பட வேண்டிய 2, 3 வருஷ பாக்கியாகிய சுமார் 25,000 ரூபாயும் ஒருவிதத்தில் தள்ளிக் கொடுத்து ஜில்லா போர்டினால் நிரந்தரமாய் வருஷம் 4000, 5000 ஈரோடு முனிசிபாலிட்டிக்கு லாபம் இருக்கும்படியாய் செய்யப்பட்டாய் விட்டது.

மற்றும் ஈரோடு முனிசிபாலிட்டிக்கு தாங்கமுடியாத பாரமாகவும் பெருநஷ்டமாகவும் இருந்து வந்த ஹைஸ்கூல் (அதாவது முன்னிருந்த சேர்மெனால் பாதிரிகள் தாட்சண்ணியத்திற்காக தலையில் போட்டுக் கொண்ட ஒரு உபத்திரவம்) ஆனது இப்போது கோவை ஜில்லா போர்டாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டதால் அவ்விஷயத்தில் ஈரோடு முனிசிபாலிட்டிக்கு வருஷம் 7000, 8000 வீதம் மீது ஏற்படும்படியாக ஆகிவிட்டது.

கன்ட்றாக்டர்கள் தொல்லைகளால் கவுன்சிலர்களுக்குள் அடிக்கடி நிகழும் எதிர்பாராத மனவருத்தங்களும் இனிமேல் நேராமல் இருப்பதற்கு முனிசிபல் வேலைகளை டிபார்ட்டுமெண்டு மூலமாகவே செய்வது என்ப தன்



RangaRakes tamilnavarasam.com

மூலம் இனி அவ்விதம் ஏற்படாமல் இருப்பதற்கும் ஏற்பாடாகிவிட்டது. ஆகையால் பல வழிகளிலும் ஜனாப், ஷேக்தாவூத் சாயபு அவர்கள் காலத்தில் ஈரோடு முனிசிபாலிடி நல்ல நிலைமை அடையும் வழியில் திரும்பிவிட்டது என்றே சொல்லலாம். ஆனால் மறுபடியும் அரசாங்கமும் பொது ஜனங்களில் ஒரு கூட்டமும் முன் நடந்து கொண்டதுபோல் பொருப் பற்ற தன்மையில் நடந்துகொள்ளாமல் யோக்கியமாய் நடந்துகொண்டால் ஈரோடு முனிசிபாலிடி கோயமுத்தூர் முனிசிபாலிடிக்கு உள்ள நல்ல பெயரில் அரைவாசிப் பெயராவது வாங்கக்கூடும்.

கடைசியாக ஈரோடுமுனிசிபாலிடியின் கடன் கஷ்டங்கள் ஒருவாறு தீர்க்கப்பட்டதற்கும் அதன் கஷ்ட நிலைமை ஒருவாறு நிவர்த்தியானதற்கும் கோவை ஜில்லா போர்டு பிரசிடெண்டு திவான் பகதூர் சி.எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்களின் உதவி மிகுதியும் போற்றத்தக்கதும் நன்றி பாராட்டத்தக்கதுமாகும். ஈரோடு முனிசிபாலிடியில் அவரது ஞாபகச் சின்னம் எங்காவது இருப்பதற்கு ஈரோடு பொது ஜனங்களோ, முனிசிபா லிடியாரோ முயற்சிக்க வேண்டியது அவர்களது முக்கிய கடமையாகும்.

கடைசியாக ஒன்று. அதாவது ஈரோடு மின்சார சக்தி வினியோக விஷயமாய் அந்த நிர்வாக பொருப்பையும் உரிமையையும் சர்க்காரார்கள் ஈரோடு முனிசிபாலிடியாருக்கு கொடுக்காமல் ஏதோ ஒரு வெள்ளைக்கார கம்பெனிக்கு கொடுத்தது மிகவும் அக்கிரமமும் அநியாயமுமான காரியமாகும். அதுமாத்திரமல்லாமல் இந்தப்படி செய்ததற்கு அரசாங்கத் தார் சொல்லும் காரணம் மிகவும் அநீதியுமானதாகும்.

அதாவது, "ஈரோடு முனிசிபாலிடியின் நிர்வாகம் மிகவும் ஒழுங்கீனமாகவும் யோக்கியப் பொருப்பற்று நடந்து கடன்கார முனிசிபாலிடியாய் இருப்பதால் மின்சார சக்தி நிர்வாக சுதந்திரப் பொருப்பை அதற்குக் கொடுக்க முடிய வில்லை" என்று சொல்லிவிட்டார்கள். ஒழுக்கீனமாகவும், யோக்கியப் பொருப்பில்லாமலும் யாரோ நடந்துகொண்ட காரியத்திற்கு ஆகவும் அப்படிப்பட்ட காலத்தில் பொது ஜனங்களும் கவுன்சிலர்களும் எவ்வளவோ தூரம் சர்க்காராரை பிரவேசிக்கும்படி கேட்டுக்கொண்ட காலத்திலும் வேண்டுமென்றே அலக்ஷியமாய் இருந்துவிட்டு இப்போது அதே குற்றத்தை ஈரோடு முனிசிபாலிடியார் மீது சுமத்துவதானது சிறிதும் ஒழுங்கல்ல என்றுதான் சொல்லவேண்டும் .

இந்த மின்சார நிர்வாக சுதந்திரத்தை ஈரோடு முனிசிபாலிடியாருக்கு கொடுக்காமல் ஒரு வெள்ளைக்கார தனி வியாபாரக் கம்பெனிக்கு கொடுத்த தால் ஈரோடு முனிசிபாலிடிக்கு வருஷம்1-க்கு 20,000-க்கு மேலாகவே 30.000 ரூ. வரை கூட வரக்கூடிய ஆதாயம் நஷ்டமாகிவிட்டது. யூனிட் 1-க்கு 0-0-6 வீதம் வாங்கும் மின்சாரத்தை அக்கம்பெனியார் நமக்கு யூனிட் 1-க்கு 5- அணாவுக்கு விற்கப் போகின்றார்கள். கோயமுத்தூர் முனிசிபாலிடி



விஷயத்திலும் சர்க்காரார் இப்படித்தான் செய்ய இருந்தார்கள். ஆனால் அந்த சேர்மென் திரு.சி.எஸ். ஆர் அவர்களின் செல்வாக்கால் கோயமுத்தூர் முனிசிபாலிடி சமாளித்துக் கொண்டது. ஆனால் ஈரோட்டு முனிசிபாலிடிக்கு அந்தப்படியான செல்வாக்கு இப்போது இல்லையானாலும் ஈரோடு பொது ஜனங்கள் தங்கள் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் காட்டி தைரியமாய் எதிர்த்து நின்றால் ஈரோடும் வெற்றி பெறலாம். அதாவது "ஈரோடு முனிசி பாலிடி மூலமாய் அல்லாமல் வேறு வழியில் வரும் மின்சாரம் எங்களுக்கு வேண்டாம். நாங்கள் யாரும் தனி வியாபாரக் கம்பெனிகாரர்களிடம் மின்சாரம் வாங்கி உபயோகித்துக் கொள்ள மாட்டோம்" என்று உறுதியாய் சொல்லி விட்டால் போதுமானதாகும்.

அந்தப்படி செய்தால் ஈரோடு முனிசிபாலிடிக்கு குறைந்தது வருஷத் தில் 20000 ரூ. வருஷம் மீதியாகும்.

**குடி அரசு - கட்டுரை - 03.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# பஞ்சமா பாதகங்கள்

“பஞ்சமா பாதகங்கள்” என்னும் ஒரு புத்தகம் தன் ஆசிரியரான திரு. அ. அய்யாமுத்து அவர்களால் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டதை பார்வையிட்டோம்.

அப்புத்தகத்தில் பஞ்சமா பாதகமெனப்படும் கொலை, களவு, பொய், கள், காமம் என்னும் ஐந்து விஷயங்களும் உலகில் எந்த சந்தர்ப்பங்களில் உண்டாகின்றன? அவை ஏன்? யாரால் உண்டாக்கப்பட்டது? அது உலக வழக்கில் எப்படி நடைபெறுகின்றன? இன்ன இன்ன விதத்தில் இன்ன இன்ன காரணங்களால் நடைபெறும் பஞ்சமா பாதகங்கள் குற்றமுடையன வாகுமா?

உண்மையில் நடைபெறும் பஞ்சமா பாதகங்கள் குற்றமாய் கருதப் படுகின்றனவா? என்பவைகளையும் இன்றைய நிலையில் அதாவது சமூக, மத,அரசியல் நிலையில் பஞ்சமா பாதகம் என்பது நிகழாமல் இருக்க முடியுமா என்றும் அவை உண்மையில் நடக்கப்படாமலும் மற்றவருக்கு துன்பம் இழைக்காமலும் இருக்க வேண்டுமானால் எப்படி உலக சமுதாயக் கொள்கை இருக்க வேண்டும் என்பதையும் விவரித்து விளக்கி எழுதப் பட்ட புஸ்தக மாகும். இப்புத்தகம் கிரௌன் 1-8 சைசில் 50 பக்கங்களுக்கு மேல் கொண்ட தாகும். விலை அணா 2. தனிப்பிரதி வேண்டுவோர் 0-2-6 அணா ஸ்டாம்பு அனுப்பப்பட வேண்டும்.

**கிடைக்குமிடம் :**

அ. அய்யாமுத்து,
புஞ்சை புளியம்பட்டி,
கோயமுத்தூர் ஜில்லா.

**குடி அரசு - மதிப்புரை - 03.05.1931**




குடி அரசு

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தரின்
புகழ்பெற்ற சித்த மருந்துகள்

மேக தோஷ மருந்து

தமிழ் வைத்தியசாலை, 221,



RangaRakes tamilnavarasam.com

# பிரிட்டிஷ் ஆக்ஷியின் இன்றைய தீமைகள்

## I நியாயம் வழங்கு முறை

## சிவில் இலாகா

பிரிட்டிஷார் ஆக்ஷியின் பயனாய் இந்திய மக்களுக்குள்ள கஷ்டங்களில் முக்கியமான கஷ்டங்கள் இரண்டு. அவை வரிக்கஷ்டமும் அல்ல, வியாபாரக்கஷ்டமும் அல்ல.

ஆனால் இந்திய அரசியல் பிழைப்புக்காரர்கள் பாமரமக்களை ஏமாற்றி தாங்கள் தான் இந்திய ஜனப்பிரதிநிதிகள் என்று காட்டிக்கொண்டு அரசாங்கத்தாரிடம் உத்தியோகம், பதவி, பட்டம், பெற வரியைப்பற்றியும், வெளிநாட்டு வியாபாரத்தைப்பற்றியும் கள்ளைப்பற்றியுமே எடுத்துச் சொல்லி மக்களை ஏமாற்றுவார்கள். அறிவோடு கூடி நடுநிலைமையில் இருந்து ஒரு மனிதன் யோசித்துப் பார்த்தானேயானால் இவைகள் யெல்லா வற்றையும் விடமுக்கியமாய் இருக்கும் குறைகள் தானாகவே புலப்படும். அதாவது வக்கீல் தன்மைகளும் உத்தியோக தன்மைகளுமேயாகும். இவ் விரண்டும் இந்தநாட்டில் பிரபுத்தன்மையைக் காப்பாற்ற இருக்கின்றதே ஒழிய நியாயத்தைச்செய்யவோ ஏழைகளைக் காப்பாற்றவோ இல்லவே யில்லை. அரசியல் துறையில் சம்மந்தப்பட்டதான வக்கீல் முறையும் உத்தி யோக முறையும் இந்தியாவில் இந்த மாதிரி இல்லாதிருந்திருக்கு மானால் இந்த நாட்டில் இவ்வளவு ஒழுக்கக்குறைவும் நாணயக்குறைவும் தரித்திரமும் மக்களுக்கு கஷ்டமும் அலைச்சலும் இருக்க முடியவே முடியாது என்பதோடு இவ்வளவு தூரம் வித்தியாசப்படும்படியான ஏழைத்தன்மையும் பணக்காரத்தன்மையும்கூட இருக்கமுடியாது என்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

ஏழைகளையும் மத்திய தரத்தாரையும் இந்த நாட்டில் தலையெடுக்க வொட்டாமல் செய்து வருவது இந்த வக்கீல் முறையும் உத்தியோக முறையுமே தவிர வேறு ஒன்றுமேயில்லை.

ஏனெனில் சாதாரண மக்களுக்கு நீதி கிடைப்பதில்லை என்பதோடு பணக்காரனாயிருப்பவன் தனது பணத்தின் மகிமையினால் 100க்கு 90 விஷயங்களில் தன் இஷ்டப்படியே நியாயம் பெறுகின்றான். நியாயாதி பதிகள் என்பவர்களும், வக்கீல்களும் ஏழை மக்கள் நீதி பெறுவதற்கு இடையூறாகவும், பணக்காரர்கள் தங்கள் இஷ்டப்படி நீதி பெறுவதற்கு அனுகூலமாகவுமே இருக்கின்றார்கள்.

இன்றைய வக்கீல் முறையே மனித சமூகத்தின் ஒழுக்கத்திற்கும், நாணயத்திற்கும், சாந்திக்கும், ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் நேர் விரோதமானதாகும். அதுமாத்திரமல்லாமல் தேசத்தின் ஒழுக்கமும், நாணயமும், சுயமரியாதையும் கெட்டுப் போனதற்கு வக்கீல்களே காரணஸ்தர்கள் என்று சொல்லுவது சிறிதும் மிகைபடக் கூறுவதாகாது என்பதே நமதபிப்பிராயம்.

நமது நாட்டுப் பணக்காரர்களில் அநேகருக்கு அயோக்கியத்தனமும், ஆணவமும், நாணயக்குறைவும் ஏற்படவும், அவர்கள் நாட்டின் நலனுக்கு பொருப்பற்ற தன்மையாய் நடந்து கொள்ளவும் காரணமே நமது வக்கீல்களாவார்கள்.

இந்த நாட்டு விவசாயக்காரர்கள் பெரிதும் கடன்காரர்களாக இருக்க வேண்டி ஏற்பட்டதற்கு காரணமும் இந்த நமது வக்கீல்களேயாவார்கள்.

மக்களுக்கு விவகாரத்தில் அதிக நம்பிக்கையும், ஆசையும் ஏற்படுவதற்கு காரணமும் வக்கீல்கள் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அன்றியும், நாளுக்கு நாள் வழக்குகள் அதிகரித்துக்கொண்டு போவதற்கும், நியாயஸ்தலங்கள் அதிகமாவதற்கும், வக்கீல்கள்தான் காரணஸ்தர்களாவார்கள். இன்னும் உண்மையை ஒளிக்காமல் தெளிவாய்ச் சொல்ல வேண்டுமானால் மக்கள் அயோக்கியர்களாவதற்கும், நாணயக்குறைவாயிருப்பதற்கும்கூட நமது வக்கீல்கள் பெரிய பொறுப்பாளிகளாவார்கள்.

இதற்கு காரணம் பிரிட்டிஷ் அரசாங்கமா? இந்திய மக்களா? என்று பார்ப்போமேயானால் பிரிட்டிஷ் அரசாங்கத்தைவிட இந்திய மக்களே மிக அதிகமான பொறுப்பாளியாவார்கள்.

ஏனெனில், பிரிட்டிஷ் இந்திய ஆட்சியில் இந்திய மக்களுக்கு சம்மந்தமும், பங்கும் இருக்க வேண்டும் என்று கேட்க ஆரம்பித்த காலத்திலேயே இந்த வக்கீல் கூட்டங்களேதான் இந்திய மக்களின் பிரதிநிதிகளாயிருந்து வக்கீல் தொழில் விர்த்தியாகி வக்கீல்கள் தாராளமாய் பிழைப்பதற்கு ஏற்றதான திட்டங்களையே இந்திய சுதந்திரத்திற்கும், அரசாட்சியில் பங்கும், சம்மந்தம் பெறுவதற்கும் அனுகூலமான கொள்கை என்று பாமர மக்களுக்குச் சொல்லி நம்பச்செய்து ஏமாற்றி அரசாங்கத்தாரையும் ஒப்பச் செய்து அரசாங்க சீர்திருத்த மூலமாகவும் சட்ட மூலமாகவும் அவைகளைப் பெற்றுக் கொண்டு, தங்கள் தொழிலில் மிக்க தாராளமாகவும், தைரியமாகவும், அயோக்கியத்தனங்களையும் நாணயக்குறைவுகளையும் உபயோகித்து





RangaRakes
tamilnavarasam.com

வந்து, நாளுக்கு நாள் அது முதிர்ந்து, இன்று நாட்டிற்கும் சமூகத்திற்கும் இந்தநிலை ஏற்பட்டு விட்டது.

இந்தமாதிரி வக்கீல் ஆதிக்கமானது இன்றைக்கும் நமது பாமர மக்களுக்கு யோக்கியமாகவும், நாணயமாகவும் இருக்க முடியாத வக்கீல்களின் பிரதிநிதித்துவம் தான் பிடிக்கச்செய்கின்றதேஒழிய உண்மையான பிரதிநிதித்துவம் ஏற்படுத்திக்கொள்ள யோக்கியதை இல்லாமல் செய்து விட்டது.

ஆகவே இதன் பயனாய் வெள்ளைக்கார வக்கீல்களிடமும் வெள்ளைகார அதிகாரிகளிடமும் காணமுடியாத அநேக ஒழுக்கக்குறைவுகளும் நாணயக்குறைவுகளும், நடுநிலையற்ற தன்மையும் நம்ம வக்கீல்கள் இடமும், நம்ம உத்தியோகஸ்தர்கள் இடமும் தாராளமாய் இருந்துவரு கின்றன. அது மாத்திரமல்லாமல் ஒழுக்கமும், நாணையமும் உள்ளவர்கள் வக்கீலுக்கும், உத்தியோகத்திற்கும் அருகதையற்றவர்களாகியும் விட்டார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் சிவில் இலாகா என்று சொல்லப்படும் அதாவது சொத்துக்களின் உரிமைகளைப் பொறுத்த விவகார இலாகாக்களை எடுத்துக் கொண்டால் கீழே இருந்து அதாவது ஒரு சம்மன் சார்வுசெய்யும் சேவகன் முதல் குமாஸ்தா இலாகா உள்பட உள்ள சிப்பந்திகள் வரை உள்பட அவர்களது ஒழுக்கமும் நாணயமும், யோக்கியப்பொறுப்பும் மிக மிக மோசமானதாகவே நடைபெற்றுவர வெகு காலமாய் அனுமதிக்கப்பட்டிருக்கின்றதென்றே சொல்லவேண்டும். இவ்விலாகாவில் லஞ்சமும், மாமூலும், மோசமும் ஹைகோர்ட் ஜட்ஜிகள், இலாகா தலைவர்கள் என்பவர்கள் ஆகிய எல்லோருக்குமே தாராளமாய் தெரிந்து வேண்டுமென்றே அனுமதித்துக் கொண்டு இருக்கும் அளவை மனிதனால் சொல்லத்தரமுடையவைகள் அல்ல என்றே சொல்லுவோம். வக்கீல்கள் தொல்லைகளும், நீதிபதிகள் தொல்லைகளும் ஒருபாகம் என்றால் மேல்கண்ட சிப்பந்திகள், நடுத்தர உத்தியோகஸ்தர்கள் ஆகியவர் களின் தொல்லைகள் சகிக்கமுடியாதவையாகும். இந்தத்துறைகளில் சீர்திருத்தமோ ஒழுங்கோ செய்ய இன்றையதினம் இந்தநாட்டில் ஒரு அரசியல் வாதியாவது ஒரு தேசீயவாதியாவது கிடையவே கிடையாது. இதனால் வலுத்தவன் இளைத்தவனை நேருக்கு நேராய் உதைத்துத் தொல்லைப்படுத்தி அவனிடம் உள்ளதை கையைத்திமிரிப் பிடுங்கிக் கொள்ளுவதைவிட கோர்ட்டு மூலமும், வக்கீல்கள் மூலமும் பிடிங்கிக் கொள்வதோ தொல்லைப்படுத்தி அவனை ஒழிப்பதோ மிகவும் சுலபமானதும் சட்ட பூர்வமானதுமான காரியமாகவே இருந்து வருகின்றது.

ஆகவே இந்த முறையானது பணக்காரர்களுக்கு மிகவும் அனுகூலமாகப் போய்விட்டதால் அவர்களும் அதாவது நம்நாட்டுப் பணக்காரர்களும் சந்தோஷமாகத்தங்கள் முழுபலத்தோடு இதை ஆதரிக்க வேண்டியவர்களாகி விட்டார்கள்.



எனவே இந்தமாதிரியான நடுநிலைமையற்ற அதிகாரிகளும் நாணயமும், ஒழுக்கமும், யோக்கியப்பொறுப்புமற்ற வக்கீல்களும் நியாய இலாகா சிப்பந்திகளும் தாங்கள் இந்த காரியங்கள் செய்வதற்காக அடையும் ஊதியத்தை, வரும்படியைப்பார்த்தால் உலகத்தில் எந்த யோக்கியமான, நாணையமான மனிதனும் தொழிலாளியும் அடையும் ஊதியத்தைவிட எத்தனையோ மடங்கு அதிகமாகவே பெறுகின்றார்கள். ஒரு முனிசீப்பு என்பவர் 300 ரூபாயில் ஆரம்பமாகி மேல்கண்ட அக்கிரமங்களைச் செய்வதன் மூலம் படிப்படியாக மாதம் 4500 ரூபாய் வரை பெறும் ஹைகோர்ட் ஜட்ஜ்வரையில் உயர்த்தப்படுகிறார். ஒரு வக்கீல் மாதம் 100 ரூ. முதல் அக்கிரமும், அயோக்கியத்தனமும், நாணயக்குறைவும், பித்தலாட்டமும் செய்யும் அளவுக்குத் தக்கபடி படிப்படியாய் கெட்டிக் காரனாகி மாதம் 10 ஆயிரம், 20 ஆயிரம் 50 ஆயிரம் ரூ.வரை பெறும் படியான யோக்கியதை யுடையவனாகிறான்.

உலகத்தார் எல்லோராலுமே ஒழுக்கமற்றதென்றும், நாணய மற்றதென்றும், வெளிப்படையாய் தெரியும்படியாக நடந்து கொள்ளும் ஈனத் தன்மையுடைய ஒரு தொழிலில் சட்டப்பூர்வமாகவே இந்தப்படி கொள்ளை அடிக்க இடமிருந்தால், இந்த அரசாங்கத்தின் வேறு எந்த வரியை – யார் செய்யும் காரியத்தை நாம் அக்கிரமம் என்று சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்தத்தொழில்களில் இவ்வளவு அக்கிரமம் செய்வதற்கு இவர்களுக்கு எப்படி வழிகிடைத்தது என்று பார்ப்போமானால்,

1.வக்கீல்களும், நியாயாதிபதிகளும் ஒரேகூட்டத்தினராயிருப்பது. அதாவது வக்கீலே நியாயாதிபதி ஆவதும், நியாயாதிபதி வக்கீலாவதுமான முறை இருப்பது முதல் குற்றமாகும்.

2. சட்டமானது ஒரு வர்ஜா வர்ஜநமில்லாமல் பத்ததி நிர்ணயம் ஆகியவை இல்லாமல் ஒவ்வொரு மனிதனுடைய இஷ்ட மும் ஒரு சட்டமாவதும், ஒருவனுடைய இஷ்டத்தை மற்றொருவன் இஷ்டப்பட்டால் பின்பற்றலாம், இல்லாவிட்டால் பின்பற்ற வேண்டியதில்லை என்பதும், மற்றும் தனக்கு இஷ்டமானவர்கள் அபிப்பிராயத்தை பின்பற்றலாம் என்பதும், அவற்றை யெல்லாம் விட்டுவிட்டு தன் இஷ்டப்படி நடக்கலாம் என்று இருப்பதுமான லா ரிப்போர்டுகளை அதாவது வேறுபல ஜட்ஜுகளின் அபிப்பிராயங்களை சட்டமாக ஏற்றுக்கொள்ள வசதி இருக்கும் முறைகளே சட்ட உலகத்தில் நீதி உலகத்தில் இவ்வளவு ஒழுக்க ஈனங்களை கற்பித்து நீதிபதிகளையும், வக்கீல்களையும் இவ்வளவு ரூபாய்கள் கொள்ளை அடிக்க வசதி செய்து கொடுத்து வருகின்றது.

நியாயஉலகம் சீர்படவேண்டுமானால் அதில் ஒழுக்கத்திற்கும், கிரமத்திற்கும், சிறிதாவது இடமிருக்க வேண்டுமானால் முக்கியமாக மேல்கண்ட இரண்டு முறைகளையும் ஒழித்துவிட வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

மேலும், வக்கீல்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுவதையும், கணக்குவழக்கில்லாமல் வக்கீல்களை தொழில் நடத்த அனுமதி கொடுக்கப் படுவதையும் நிருத்திவிட வேண்டும்,

இந்தக் காரியங்கள், அதாவது இந்தமாதிரி வக்கீல்கள் பெருகுவதான காரியங்கள், இந்த நாட்டின் நியாயத்தையும் ஒழுக்கத்தையும் சாந்தியையும் கெடுப்பதற்கு ஏற்பட்ட விஷக்கிருமிகளை வளர்ப்பதற்கே ஒப்பாகும்.

இனி விவகார முறையில் இருக்கும் அக்கிரமங்கள் இந்த ஒரே வியாசத்தில் சொல்லக்கூடியதல்ல. உதாரணமாக ஒருவிவகாரம் தொடுத்து 20 வருஷத்திற்கு மேலாகியும் இன்னமும் முடிவு பெறாத விவகாரங்கள் பல இருக்கின்றதென்றால் விவகார முறையின் யோக்கியதையைச் சொல்ல வேண்டுமா என்று கேட்கின்றோம்.

ஆகவே அவற்றைப்பற்றி மற்றொரு சமயம் எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 10.05.1931**



# அர்ச்சகர் - ஜோசியர் சம்பாஷணை

**-சித்திரபுத்திரன்**

**அர்ச்சகர்**:- என்ன ஜோசியரே கோவிலுக்கு முன்போல் ஆளுகள் வருவதே இல்லையே! குடும்ப நிர்வாகம் வெகு கஷ்டமாகவல்லவா இருக்கிறது.

**ஜோசியர்**: - என்ன காரணம் ?

**அர்ச்சகர்**;- இந்த எழவு எடுத்த சுயமரியாதைதான்.

**ஜோசியர்:-** சுயமரியாதை காரணம் என்றால் சுயமரியாதைக் காரர்கள் சாமி இல்லை, பூதம் இல்லை என்றுசொல்லி மக்களைக் கோவிலுக்குள் போகக்கூடாது என்று பிரசாரம் செய்கின்றார்களே அதனாலா?

**அர்ச்சகர்** :- இல்லை - இல்லை அதற்கெல்லாம் நமக்கு பயமில்லை. இன்னமும் ஆயிரந்தடவை வேண்டுமானாலும் சாமியில்லை, பூதம் இல்லை என்று சொல்லட்டும், கோவிலை வேண்டுமானாலும் இடிக்க வேண்டுமென்று சொல்லட்டும். அதனால் நமக்கு ஒன்றும் கெட்டுப் போகாது.

**ஜோசியர்**:- மற்றென்ன காரணம் என்று சொல்லுகிறீர்கள்?

**அர்ச்சகர்**;- கோவில்களுக்குத் தேவதாசிகள் வருகின்றதான முக்கிய கைங்கரியத்தைப் பற்றி கண்டபடி பேசி, அதை நிருத்திவிட்டார்களல்லவா? அதனால்தான்?

**ஜோசியர்**:- இதற்கும் பக்திக்கும் சம்மந்தமென்ன? இதனால் எல்லாம் மக்களுக்குக் கடவுள் பக்தி குறைந்து விடுமா?

**அர்ச்சகர்**:- கடவுள் பக்தி என்றால் என்ன என்கிறீர்? கடவுள்தான் எங்கும் நிரைந்தவராயிற்றே. இதற்காக ஒரு மனிதன் கோவிலுக்கு வர வேண்டுமா?

**ஜோசியர்**;- மற்றெதற்காக வருகின்றார்கள்?



RangaRakes tamilnavarasam.com

**அர்ச்சகர்**:- இரண்டு காரியத்திற்காகத்தானே கோவிலுக்கு வருகின்றார்கள்.

1. தன்னை பக்திவான் என்று பிறர் மதிக்க வேண்டும்.

2. அங்குவரும் நல்ல பெண்களை ஆண்கள் பார்க்கவும் , ஆண்களைப் பெண்கள் பார்க்கவுமான காரியங்களுக்கு என்றாலும், இரண்டாவது விஷயத்திற்குத்தான் அதிகம் பேர் வாலிபர்கள் சற்று ஷோக் பேர்வளிகள் சிறிது வயதானவர்களாயிருந்தாலும், சபலமுடையவர்கள் ஆகியவர்கள் வருவது. இப்படிப்பட்ட ஆண்கள் தாராளமாய் வராவிட்டால் குடும்பப் பெண்களும் வருவதில்லை. ஆக இப்படிப்பட்ட இரண்டு கூட்டம் வந்தால் தானே காணிக்கை, கட்டளை, இணைப்புத் தரகு ஆகியவைகள் கிடைக்கும். ஆகவே நமக்குக் கோவிலில் மணியடிப்பதில் என்ன பிரயோஜனம்? கோவில் சம்பளமாகிய மாதம் 1-12-0 ரூ. சம்பளமா நமக்குக் கட்டும்?

**ஜோசியர்**:- அப்படியா சங்கதி. அவர்கள் இப்படிச் செய்தால் நமக்கு வேறு வழிகிடைக்காதோ?

**அர்ச்சகர்**:- என்ன வழி?

**ஜோசியர்:-** நம்ம ஆளுகளே ஒன்று சேர்ந்து நாம் ஆளுக்கு இரண்டு மூன்று வீதம் பெண்டாட்டிகள் கட்டி, நன்றாய் அலங்கரித்து, தினம் காலை, மாலையில் கோவிலுக்கு வரும்படி செய்தால் என்ன?

**அர்ச்சகர்**:- அப்படிச் செய்வது சாத்தியமாகுமா? அவர்களுக்கு நகை, புடவை, மினுக்கு, கண்ட கண்ட இடங்களுக்கு எல்லாம் சென்று அறிமுகம் செய்து கொள்ளுவது முதலாகிய இதெல்லாம் செய்ய வேண்டாமா? பிறகு நமது வீடுகளிலும் போதிய சௌகரியம், வீடு,வாசல், கட்டில், படுக்கை முதலிய சௌகரியம் ஆகியவைகள் வேண்டாமா இவற்றிற்கெல்லாம் பணத்திற்கு எங்கே போவது?

நாம் ஏதோ தாசிகள் செல்வாக்கினால் கோவிலுக்கு வருகின்றவர்களில் ஒன்று இரண்டு ஆள்களைப் பிடித்து சரி பண்ணி அதுவும் இரகசியம் என்றும், அவசரமென்றும் பயப்படுத்தி 10,5 பெற்றுக்கொண்டு கஷ்டமில்லாமல், நஷ்டமில்லாமல் சம்பாதிப்பது நலமா? அப்படிக்கின்றி நம்ம பெண்களையே தாசிபோல் நடக்க ஏற்பாடு செய்து கொள்ளமுடியுமா?

**ஜோசியர்:-** என்னமோ கஷ்டகாலம் உங்களுக்கு மாத்திரமல்ல நமக்கும் கூடத்தான் வந்துவிட்டது.

**அர்ச்சகர்:-** உங்களுக்கு என்ன வந்தது ?

**ஜோசியர்:-** இப்போது எந்தத் 'தேவடியா' மகன் நம்மிடம் ஜோசியம் பார்க்க வருகிறான்? பிள்ளைக்கும், பெண்ணுக்கும் பொருத்தம் பார்க்கின்ற வேலையே மிகவும் குறைந்து போய்விட்டது.





**அர்ச்சகர்** : - ஏன்?

**ஜோசியர்**:- ஏன் என்ன அததுகளே பெண்ணும்-மாப்பிள்ளையுமே பொருத்தம் பார்த்துக் கொள்ளுகின்றன.

**அர்ச்சகர்**:- இருந்தாலும் கிரகதோஷம் பார்க்கவாவது வருவார்களே?

**ஜோசியர்**; - அதாவது வந்தாலும் பரவாயில்லை. அதற்குதான் எங்கு வருகின்றார்கள். 'திருட்டுத் தேவடியா பிள்ளைகள்' காயலா வந்தால்-தலை வலி வந்தால் உடனே டாக்டர்கள் இடம் போய் விடுகின்றார்கள். நம்மிடம் வருவதேயில்லை. நம்மைக் கண்டால் சிரிக்கின்றார்கள். என்னடா என்று கேட்டால் சுயமரியாதையடா என்கின்றார்கள்.

**அர்ச்சகர்:-** சரி, இவ்வளவு ஆனதற்கப்புரம் எனக்கு ஒன்று தோன்றுகிறது.

**ஜோசியர்:-** என்ன?

**அர்ச்சகர்:-** நாமும் சுயமரியாதை பிரசாரம் செய்வதாகச் சொல்லி ஏமாற்றி மெள்ளமெள்ள உள்ளே இருந்தே அதை ஒழித்து விடுவது எப்படி என்றால் இப்பொழுது எத்தனையோ தமிழ் பண்டிதர்கள் அப்படித்தான் அதாவது "நானும் சுயமரியாதைக்காரன்" என்று சொல்லிக்கொண்டு அதற்குள் பிரவேசித்து அதை ஒழிக்கப் பார்க்கின்றார்களே அதுபோல.

**ஜோசியர்:-** அது நல்லவழிதான். நம்முடைய பெரியவாள் பௌத்தர்கள் காலத்திலும் இப்படித்தான் செய்தார்கள். ஆனால், இந்த சு-ம. பயல்கள் (சுயமரியாதைக்காரர்கள்) இது தெரிந்துதான் பு-ம. பயல்களை (புராண மரியாதைக்காரர்களை) அதாவது பிராமணர்களைச் சேர்ப்பதில்லை என்று தீர்மானித்து விட்டார்களே.

**அர்ச்சகர்:-** அதுவும் அப்படியா. அப்படியானால் இந்தப்படி ஏழைகளை வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளும் இந்த சு-ம. காரன்கள் நாசமாய் நிர்மூலமாய்ப் போகட்டும். நாம் போய் இனி காங்கிரசில் சேர்ந்து கொள்ளுவோம்.

**குடி அரசு - உரையாடல் - 10.05.1931**

RangaRakes tamilnavarasam.com

# இரண்டு தமிழ் தினசரி பத்திரிகைகள்

இவ்வாரம் "திராவிடன்" "இந்தியா" என்கின்றதான இரண்டு தமிழ் தினசரிப் பத்திரிகைகள் வெளிவந்திருக்கின்றன. இவற்றுள் முன்னையது முன்னாலேயே இருந்துவந்தது. சிறிது காலம் நிறுத்தப்பட்டு, மறுபடியும் புத்துயிர்பெற்றுத் தோன்றியதாகும். பின்னையது புதிதாகவே தோன்றிய தாகும்.

எப்படி இருந்த போதிலும் இவைகள் இரண்டும் சமய சமூக மத விஷயங்களுக்கு வக்காலத்து பேசும் வகையில் நமக்கு எச்சரிக்கை செய்து கொண்டே புறப்பட்டிருக்கின்றபடியால் நமது கொள்கைகளுக்கு இவை களால் ஆதரவு எதிர்பார்ப்பதற்கில்லை என்றே கருத வேண்டியிருக் கின்றது.

ஏனெனில் நாமோ பல மதங்களையும் பல சமயப் பிரிவுகளையும், சமூகப் பிரிவுகளையும் ஒழித்து மக்கள் யாவரையும் ஒரே சமூகமாக்க வேண் டும் என்னும் கொள்கையின் மீது பல சமயக் கொள்கைகளையும், பல மதக் கொள்கைகளையும், பல சமூகக் கொள்கைகளையும் அவற்றுள் இருக்கும் உட்பிரிவுக் கொள்கைகளையும் அதனால் இருந்து வரும் வேற்றுமை, உயர்வு, தாழ்வு வித்தியாசத்தையும், தங்களுடைய சமூகமோ, சமயமோ மேலானது என்கின்ற எண்ணத்தையும் அடியோடு துலைத்தாகவேண்டும் என்று முடிவு செய்து கொண்டிருப்பது யாவரும் அறிந்ததாகும். அதோடு மாத்திரமில்லாமல் "கடவுளுக்கும், ஆத்மாவுக்கும் சம்மந்தமுண்டாக்கு வதே மதம்" என்றும், அல்லது "கடவுளுக்கும், ஆத்மாவுக்கும் உள்ள சம்மந்தத்தை உணரச் செய்வதே மதம்" என்றும் சொல்லும் படியான மதக் கொள்கை யையும் சமயக் கொள்கையையும் கண்டித்து அவைகள் முட்டாள் தனம் என்பதாக நிரூபித்து மக்களின் இவ்வுலக வாழ்க்கைக்கு மட்டும் ஏதாவது ஒரு மதம் (கொள்கை) இருப்பதானால் அதற்குத் தகுந்தபடி இருக்கட்டும், இல்லா விட்டால் ஒழியட்டும் என்பதன் மூலம் மதங்களிடம் துவேஷிக்கின்றோம் என்னும் பெயர் பெற்று இருக்கின்றோம்.

அதுபோலவே சில சமூகத்தாரும். சில சமயத்தாரும் மக்களை ஏமாற்றி, தங்கள் சமூகமே மேலானதென்று வஞ்சித்து, ஆதீக்கம் பெற்று. அவ் வாதிக்கத்தை நிலைநிறுத்த, "அரசியல்" என்றும், "தேசீயம்" என்றும், "காந்தீயம்" என்றும், "சத்தியாக்கிரகம்" என்றும் பல சூக்ஷித் துறைகளை



உண்டாக்கி, அதன் மூலம் மேலும் மேலும் மக்களை வஞ்சித்துவரும் அயோக்கிய சமூக சமயத்தை ஒழிக்கும் முறையிலும், அவர்களது தந்திரங் களை வெளியாக்கிக் கிளர்ச்சி செய்யும் முறையில் சில சமயக்காரருடனும், சில சமூகக்காரருடனும் சண்டை தொடுக்க வேண்டியவர்களாகவும் இருக் கின்றோம். இதனால் பல சண்டைகளை கிளப்ப வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம்.

இதனால் "தேசீய ஒற்றுமை" கெடுவது மாத்திரமல்லாமல் "தேசீய உணர்ச்சி" கூட ஒழிவதானாலும் நாம் லட்சியம் செய்யாதவர்களாகவும் இருக்கின்றோம். ஆதலால் மேல்கண்ட கொள்கைகளையுடைய நமக்கு மேல்கண்ட இரண்டு பத்திரிகைகளும் அனுகூலமில்லாததோடு எதிர்ப்பாக இருக்க நேரிடும் என்பதை அவைகள் தாராளமாய் வெளிப்படுத்தி இருக்கின்றன.

எப்படி எனில் ஒன்று, அதாவது "திராவிடன்" தனது முதல் இதழில் " சமயத் துவேஷம், சமூகத்துவேஷம், மதத்துவேஷம் முதலியன இல்லாமல் காக்கும்" என்று தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

இரண்டு, "இந்தியா" தனது முதல் இதழில் சமய சமூகச் சண்டைகளை கிளப்பி தேசீய ஒற்றுமைக்கு இடர் செய்யும் இயக்கங்களை எப்பொழுதும் எதிர்த்துப் போராடும் என்று எழுதிக் கச்சை கட்டி நின்று கொண்டு இருக் கின்றது.

ஆகவே "இந்தியா" "திராவிடனை" விட ஒருபடி முன்னேறி இருக்கின்றதென்றே சொல்லுவோம். எனவே குடி அரசுக்கும், சுயமரியாதை இயக்கத்திற்கும் முன்னுள்ள எதிரிகளைவிட மற்றும் சற்று அதிக பலம் கொண்ட சரியான எதிரிகள் இருவர் தோன்றி இருக்கின்றார்கள் என்றுதான் முடிவு கட்டிக் கொண்டு தயாராயிருக்கவேண்டும்.

மற்றபடி காங்கிரசுக்கும், சமயத்திற்கும், மதத்திற்கும் (ஆதிக்கம் பெற்ற) சில சமூகங்களுக்கும், கூட்டத்தாருக்கும் ஆப்தமான இரு நண்பர்கள் தோன்றி இருக்கின்றார்கள் என்றும் சொல்ல வேண்டும். எப்படி இருப்பினும் பொது மக்களுக்கு "உலக நடப்பை உணர்த்துவது பத்திரிகை களாகும்" என்னும் கருத்தின் மீது அப்பத்திரிகைகளையும் ஆதரித்து, அதன் உள்எண்ண மனப்பான்மையை உணர்ந்து கொள்ளுவதைக் கொண்டு தள்ளுவதைத் தள்ளும் உறுதியான மனோதிடத்தில் ஆதரிக்க வேண்டுமாய் மறுபடியும் பொது மக்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இப்பத்திரிகைகளின் பத்திராதிபர்கள் இருவரும் பார்ப்பனரல்லா தார்கள் என்பதோடு இருவரும் பத்திராதிபர்களாகவும் இருந்தவர்களாவார் கள். ஆதலால் அவர்களது கருத்தையும், திறத்தையும், நலனையும் மக்கள்



RangaRakes tamilnavarasam.com

ஏற்கனவே நன்றாய் உணர்ந்தவர்களாவார்களாதலால் அதைப்பற்றி அதிகம் எழுத வேண்டியதில்லை என்றே விட்டுவிடுகின்றோம்.

விலாசம்:-

"திராவிடன்"
14, மவுண்ட்ரோட், சென்னை.
"இந்தியா"
11-ஜெனரல் பாட்டர்ஸ் ரோட்,
மவுண்ட் ரோட், சென்னை.

**குடி அரசு - கட்டுரை - 10.05.1931**



# உபாத்தியாயர்கள்

நமது நாட்டில் உள்ள தொழில் வகுப்புத்தொகுதிகளில் உபாத்தியாயர் வகுப்புத்தொகுதி என்பதே மிகவும் மோசமானதும், முட்டாள் தனமானது மான தொகுதி என்று சொல்லுவோம்.

அக்கூட்டத்தாரில் பெரிதும் அநேகருக்குச் சிறிதும் பகுத்தரிவு என்பதும், உலக கல்வி என்பதும் கிடையாது என்பது நமது 40, 50 வருஷத்திய அனுபவமாகும். அதிலும் பார்ப்பன உபாத்தியாயர்களைப் போன்றதும் பண்டித உபாத்தியாயர்களைப் போன்றதுமான முட்டாள் தனமும் அசந்தர்ப்ப குணமும் அதிகப்பிரசங்கித்தனமும் மற்ற உபாத்தியாயர்களிடம் சற்று குறைவாகவாக இருக்கலாம்.

பொதுவாகவே உபாத்தியாயர்கள் என்பவர்களுக்குப் பகுத்தறிவு உதயத்திற்கு வழியில்லாமலே போய் விடுகின்றதான தன்மையே அவர்களது மூடத்தனத்திற்குக் காரணமாகும்.

முதலாவது உபாத்தியாயர் தொழில் என்பது இப்போது நமது நாட்டில் கிராமபோன் யந்திர வேலையாகவேதான் இருக்கின்றது.

என்னவெனில், ஏதோ ஒன்றைப் படிப்பது, அதை ஒப்புவிக்கும் முறையில் பரீட்சை கொடுப்பது, மறுபடியும் அதை பிள்ளைகளுக்கு கிராம் போன் மாதிரி போதிப்பது ஆகிய காரியங்களைத் தவிர வேறு பகுத்தறிவு பெற சிறிதும் நேரமும், அவசியமும், சௌகரியமும் இல்லாத வாழ்க்கை யிலேயே இருந்து வருவதால் அவர்கள் மூடர்களாகவே இருக்கக் கடமைப் பட்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் அவர்கள் படிக்கும் புஸ்தகமும் சொந்த வாழ்க்கையும் பெரிதும் மூடநம்பிக்கையும் இயற்கை விரோதமும் இழி தகைமையும் கொண்ட சமய சம்மந்தமான நூல்களும் கொள்கை களுமாகவே ஏற்பட்டு விட்டால் இவர்களது அறிவுத்திறத்தை வர்ணிக் கவும் வேண்டுமா என்று கேட்கின்றோம்.

இந்த மாதிரியான மூடர்களிடமே மாணாக்கர்களாயிருந்து கல்வி பெறும் நமது மக்களுக்கு எவ்வளவு அறிவு இருக்கும் என்பதை நாம் விளக்கவேண்டியதில்லை .



RangaRakes tamilnavarasam.com

இன்னும் நல்ல உதாரணம் வேண்டுமானால் வடமொழியிலும் தென் மொழியிலும் வல்லவர்கள் என்கின்ற சாஸ்திரிகள், வித்துவான்கள் ஆகியவர்களின் சொந்த பகுத்தறிவுகளை நிதானமாய் தனித்துத்தனித்து கவனித்துப் பார்த்தால் அதிலிருந்தே மற்ற படித்தவர்கள் யோக்கியதைகள் எல்லாம் கூட விளங்கும்.

இவற்றை உத்தேசித்துத்தான் பல சுயமரியாதை மகாநாடுகளில் உபாத்தியாயர்களை தற்காலம் தற்பித்து செய்யும் முறை தவறு என்றும்,. அவர்களுக்குப் பாடப்புத்தகமாக வைக்கும் புத்தகங்கள் இன்ன இன்ன மாதிரி இருக்கவேண்டும் என்றும், பல தீர்மானங்கள் செய்து வருகின்றோம். ஆனாலும் நாடு இன்னமும் பார்ப்பன ஆதிக்கத்திலேயேயும் வைதீக அழுக்கு மூட்டைகள் ஆதிக்கத்திலேயும் இருப்பதாலும் அரசியல் ஒழுக்க இயல், அறிவுஇயல் முதலியவை சம்மந்தமான ஸ்தாபனங்கள் எல்லாம் சமய ஆதிக்கத்தினால் வாழும் பார்ப்பன ஆதிக்கத்தில் இருப்பதாலும் நமது கருத்துக்களுக்கு ஒருசமயம் மதிப்பு ஏற்பட்டாலும் அவை நடை முறைக்கு சாத்தியமில்லாமல் இருக்கின்றன. நிற்க,

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு உபாத்தியாயரின் யோக்கியதையைப்பற்றி சிறிது விளக்குவோம். அதாவது:-

நமது ஜில்லாவில் ஒரு கனவானிடம் ஒரு பார்ப்பன உபாத்தியாயர் ஒரு தக்க சிபார்சுடன் வந்து தனக்கு ஜீவனத்திற்கே மிகக் கஷ்டமாயிருப்ப தாகவும், எப்படியாவது தனக்கு ஒரு உபாத்தியாயர் வேலை போட்டுத்தர வேண்டுமென்றும் கேட்டார். அக்கனவான் தன்னிடம் உபாத்தியாயர் உத்தி யோகம் காலி யில்லையென்று சொல்லியும் பட்டினிக்கிடப்பதாக துக்கப்பட்ட தனால் மனமிளகி, டெம்பரவரியாக, தற்கால சாந்தியாக ஒரு உத்தி யோகத்தை காலியாக்கி பதிலியாகக் கொடுத்தார். மற்றும் இந்தப்படியே அடிக்கடி காலி வேலைகளை பதிலியாகவே இவருக்குக் கொடுத்துக் கொண்டும் வந்தார்.

ஆகவே இந்த உபாத்தியாயருக்கு அப்பெரியார் தன்னுடைய ஜில்லா எல்லைக்குள் ஏற்படும் தற்கால காலி ஸ்தானங்களை எல்லாம் இவருக்கு அப்போதைக்கப்போது கொடுத்துக்கொண்டுவந்திருக்கிறார். என்றாலும் டெம்பரரியாக நியமிக்கப்பட்ட இப்படிப்பட்டவருக்கு பள்ளிக்கூட வெயில்கால நீண்டவிடுமுறைச்சம்பளம் கொடுக்க சட்டப்படி நியாயம் கிடையாது என்பது யாவரும் அறிந்ததாகும்.

இப்படி இருக்க சென்ற வருஷம் ஒரு நாள் அதாவது வேலையில்லாத காலத்தில் உபாத்தியாயர் அப்பெரியார் வீட்டிற்கு வந்து தனக்கு சாப்பாட் டிற்கே வழி இல்லையென்றும் இரண்டு மூன்று நாள் பட்டினி கிடப்பதாகவும் சொன்னார். இதை நம்பி அப்பெரியார் தனது சொந்தப்பணத்தில் இருந்து ஒரு ரூபாய் கையில் கொடுத்து அனுப்பினார். இதைப் பெற்றுக்கொண்டு



ஊருக்குப் போன உபாத்தியாயருக்கு பள்ளிக்கூடம் திறந்தஉடன் மறுபடியும் ஒரு காலி ஸ்தான பதிலி உத்தியோகம் கொடுத்தார். இந்தப்படி யாக இந்த உபாத்தியாயருக்கு அக்கனவான் அடிக்கடி வேலைகொடுத்து காப்பாற்றி வந்திருக்கின்றார். இப்படிப்பட்ட பெரியாருக்கு அந்த உபாத்தி யாயர் எழுதி ரிஜிஸ்டர் செய்து அனுப்பி இருக்கும் கடிதத்தில் கண்டசில குறிப்புகளை குறிப்பிடுகின்றோம். அதாவது:-

ஐயா....... "நான் தங்களிடம் வேலைபெற்றதில் ஒருவருஷம்தான் கோடைகால லீவு சம்பளம் கிடைக்கப்பெற்று இருக்கிறேன். மற்ற வருஷ- விடுமுறை காலங்களில் சம்பளமில்லாமல் தவித்து இருக்கிறேன்........ ஒரு பிராமணன் இவ்வாறு அலைக்கப்படுவது நியாயமா?

உங்களுக்கும் இந்தக் கதியை நான் விரும்பாவிட்டாலும் நீங்கள் இம்மாதிரி கஷ்டப்பட்டால் உங்கள் மனம் எப்படி இருக்கும்?

செல்வம் தங்கி இராது, அதிகாரம் நிலைக்காது........ தங்கள் ஆத்மா பாவத்தைச் செய்யலாகாது.

நான் சென்ற மே மாதத்தில் தங்கள் வீட்டில் பட்டினி விரதமிருந்த போது தாங்கள் ஒரு ரூபாய் கொடுத்தீர்கள். அந்த ஒரு ரூபாய்க்கு ஸ்டாம்பு இதில் அனுப்பி இருக்கிறேன்.

எங்கள் குடும்பம் வேதம் ஓதிய பெரியவாள் வம்சம்.

உங்கள் ஆத்துமா பரிசுத்தமடைய வேண்டுமானால் அந்த பக்தர்கள் நிறைந்த வம்சத்திற்கு தீங்கு செய்யலாகாது.

என்னைக் காப்பாற்றுவதன் மூலம் தங்களை காத்துக் கொள்ளுவீர்கள் என்று நம்புகின்றேன் .

வேதம் உண்மை - கடவுள் சத்தியம், காயத்திரி ஜபம் வீணாகாது, பதிவிரதைகள் வாக்கு பலியாமல் போகாது.

பிராமணர்களை சதா கஷ்டத்திற்கு உள்ளாக்க வேண்டாம்.

தாங்கள் அடைந்துள்ள பதவியில் மமதைக்கொண்டு ............பதவி பூர்வ புண்ணியத்தால் உண்டானது.

அடுத்த ஜன்மத்திற்கு உங்கள் குலத்தின் க்ஷேம லாபத்தைத் தேடுங்கள்.

ஏழைகளுக்குச் செய்யும் தீமை தங்களுக்குச்செய்து கொண்டதாகும்.

"நான் அடையும் இன்ப துன்பம் பகவான் சத்திய ரூபிக்கு சாறும்" என்பதாக எழுதியிருக்கிறார். இவர் ஒரு பார்ப்பனர் ராமச்சந்திரன் என்ற பெயர் கொண்டவர்.

இன்றைய உபாத்தியாயர்களில் 100-க்கு 90க்கு மேற்பட்டவர்களின்



RangaRakes tamilnavarasam.com

யோக்கியதையும் இப்படிப்பட்டதாகும் என்பதற்கு இன்னும் பல சான்றுகள் நம்மிடமிருக்கின்றன.

மற்றொரு சமயம் ஹெட்மாஸ்டர் ஒரு பள்ளிக்கூட காரியதரிசிக்கு கடிதம் எழுதும்போது ஆனால் கையெழுத்தில்லாமல் மொட்டை கடிதமாய் எழுதப்பட்டது. அதாவது,

“ஐயா நீர் இப்போதுதான் சீமைக்கு அனுப்பி கல்வி கற்பித்த உம்முடைய மகனைத் தின்று இருக்கிறீர். இன்னும் ஒரே ஒரு பெண்தான் இருக்கிறது. எனக்கு துன்பம் செய்தால் பகவான் அந்த ஒரு பெண்ணையும் தின்று விடும்படி செய்து விடுவார்” என்று எழுதியிருந்தார்.

இதிலிருந்து இந்த உபாத்தியாயர்கள் வேதம் முதலியவற்றைப் போற்றுவதைப்பற்றியும் நன்றி விசுவாசம் முதலிய குணங்கள் இல்லாததைப்பற்றியும் நாம் குற்றம் சொல்லவரவில்லை. ஆனால் இவர்கள் எவ்வளவு மூடர்கள், இவர்களது மூடநம்பிக்கை எவ்வளவு, இவர்களின் அற்பபுத்தியின் நிலைமை எவ்வளவு? இந்த மாதிரி தரமுள்ள மக்களை பிள்ளைகளுக்கு படிப்பு கற்றுக்கொடுக்கும்படி சொன்னால் அந்தப் பிள்ளைகள் உருப்படுவார்களா? அறிவு பெறுவார்களா? என்றுதான் கவலைப்படுகின்றோம். ஆகவே இன்று நம் நாட்டு மக்களில் படித்தவர்கள் என்பவர்களிலேயே 100க்கு 90 பேர்கள் பகுத்தறிவற்ற மூடர்களாய் இருப்பதற்கும் மூடபக்திக்காரராய் இருப்பதற்கும் காரணம் எல்லாம் இந்த மாதிரி முழு மூடர்களான உபாத்தியாயர்களிடம் படிப்புப் பெறச்செய்தி ருக்கும் முறையேயாகும். இந்த நிலையில் இவர்களுக்கு இந்த உபாத்தியா யர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளமோ நினைத்தால் அளவுக்கு எத்தனையோ மடங்கு மீறியதாகும். சாதாரணமாக இன்றைய நிலையில் உபாத்தியாயர்களுக்கு மீ 20 ரூ.க்கு கம்மி இல்லாமலும் 50 ரூ.க்கு மேற் படாமலும் சம்பளம் கொடுத்தால் தாராளமான சம்பளமாகும். ஆனால் இன்றைய சம்பள திட்டம் ஏழைகள் படிக்கக்கூடாது என்றும், உடல் பிரயாசைப்பட்டு சம்பாதிக்கின்ற தொழிலாளி பிள்ளைகள் படிக்கக்கூடாது என்றும், ஆனால் ஊரை ஏமாற்றி சோம்பேரியாய் இருந்து அயோக்கியத் தனம் செய்து பாட்டாளிகளின் பலனைக் கொள்ளை அடிக்கும் அயோக்கிய வஞ்சகர்களின் சந்ததிகளே படிக்க வேண்டும் என்றும், அவனும் மூடனாகவும் அயோக்கியனாகவுமே இருந்து இந்த நிலைமையை வளர்க்க வேண்டும் என்றும் அடிப்படையான தத்துவத்துடனேயே கல்வித்துறையை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றதென்றே கருத வேண்டி யிருக்கின்றது. ஆகவே, சம்பள விகிதத்தைப்பற்றியும், அதன் தகுதியைப் பற்றியும் பின்னால் எழுதுவோம்.. இப்போது அவர்களது தகுதியைப்பற்றி குறிப்பிடவே இதை எழுதினோம். இந்தப்படி இன்னும் பல உதாரணங்கள் உண்டு.

**குடி அரசு - கட்டுரை - 10.05.1931**



# கதர் போர்டு நினைத்தது முடிந்தது

உப்பு சத்தியாக்கிரகத்தின்போது வேதாரண்யத்திற்கு சென்று சிறை சென்ற திருப்பூர் உதவி ஸ்டேஷன் மாஸ்டர் வேலையிலிருந்த திரு. சிதம்பரய்யர் என்னும் பார்ப்பனர் இப்பொழுது திருப்பூர் அகில பாரத சர்க்கா சங்கத்தைச் சேர்ந்த காதி வஸ்திராலயத்தில் ரூபாய் 50 சம்பளத்தில் காஷியர் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார். ஷெயாரை வேதாரண்யத்திற்கு அனுப்பும்போது ஷெயாரை உபசரித்து அனுப்புவதற்காக கூடிய கூட்டத்தில் திரு. N.S.வரதாச்சாரியார், திரு.சிதம்பரய்யரைப் பற்றி வானமளாவப் புகழ்ந்தது எல்லோருக்கும் தெரியும், “ திரு. சிதம்பரய்யர் அவர்கள் ரயில்வே உத்தியோகத்தில் இருந்த போதிலும் ஒழிந்த நேரங்களில் கதர் வாங்கிக் கொண்டு போவதும் கதர் விற்பனை செய்வதும் கதரின் மேல் அவருக்குள்ள பற்றுதலும் மிகவும் சிலாகிக்கத்தக்கது என்றும், இப்படிப்பட்டவர்கள் தேசத்துக்கு பாடுபட வந்திருப்பது நம் பாக்கியமே” என்றும், பலவாராக புகழ்ந்து பேசினார். அப்போதே கூட்டத்திலுள்ளவர்கள் உப்பு சத்தியாகிரகம் தீர்ந்து ஜெயிலிலிருந்து வெளிவந்ததும் திரு. சிதம்பரய்யருக்கும் சர்க்கா சங்கத்தில் ஒரு வேலை கிடைக்கும் என்றும் பலபேர் நினைத்துக் கொண்டிருந்தார்கள். அதுபோலவே நினைத்த காரியம் கைகூடிவிட்டது. திரு. சிதம்பரய்யர் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இன்றுவரை 100க்கு 90 பார்ப்பனர்கள் சர்க்கா சங்க நிர்வாகத்தில் இருந்தும் ஒரு முஸ்லிமுக்காவது அதில் இடம் கிடையாது. சர்க்கா சங்கம் என்றால் பார்ப்பன அக்கிராரம் என்று திரு. ஈ.வெ. ராமசாமியார் பொருள் சொன்னது திரு. N.S.வரதாச்சாரியார் காலத்தில்தான் முற்றுப்பெற்றது.

சுமார் நாலு வருஷ காலமாக ஷெ சர்க்கா சங்கத்தில் வேலை பார்த்து வந்த திரு. கண்ணாயிரம் பிள்ளையவர்கள் ஷெ சர்க்கா சங்கத்திலிருந்து நீக்கப்பட்டு காரியதரிசிக்கும் அவருக்கும் கடிதப் போக்குவரத்து நடந்து இப்போது உள்ளூர் பிரமுகர்களுடன் சமாதான பேச்சு நடந்து வருகிறது. முடிந்த விபரம் பின்னர் விபரமாக பிரசுரிக்கப்படும்.

**-ஒரு நிருபர்**

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 10.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# காஞ்சீபுரம் போலீஸ் ஸ்டேஷனிலும் புத்தர், பிள்ளையார் விக்கிரகங்கள் பிரதிஷ்டையா?

பொதுவாக நகரங்கள் மாட மாளிகை, வீடு வாசல்களாலானவை. ஆனால் ஆக்ஸ் போர்ட் நகரம் கல்லூரிகளாலானது என்றும், மான்செஸ்டர் நகரம் மில்களாலானது என்றும் சிறப்பு முறையில் வழங்கப்படுவது போன்று கோயில்களாலான நகரம் ஒன்று உலகத்தில் உண்டு என்று கூறுவதானால் காஞ்சீபுரத்தைத் தான் கூறவேண்டியிருக்கும். காஞ்சீபுரத்தின் வீடுகளின் எண்ணிக்கையை மிஞ்சிவிடும் அந்நகரத்துக் கோயில்களின் எண்ணிக்கை. குளக்கரைகளெல்லாம் கோயில்கள். கழனி தோட்டங்களெல்லாம் கோயில் கள். வீட்டுப் புறக்கடைகளெல்லாம் கோயில்கள். சாமிகள் கணக்கோ சொல்லித் தொலையாது. கோயிலில்லாது கேட்பாரற்று, வெயிலிலுலர்ந்து, மழையில் நனைந்து வாடிவதங்கும் சாமிகளைப் பார்க்கவும் பரிதாப மாயிருக்கும். ஒரு கோயிலில் ஒரு சாமியல்ல. ஒன்று போலவே ஆயிரக்கணக் கான சாமிகள். சில கோயில்களில் சாமிகள் நாத்து விட்டிருக்கிறது. ஒரு லிங்கத்திலேயே 108, 1008 லிங்கங்கள். இரடி விழுந்தாலும் சாமியல்ல, சாமிகளின் மேலும், கோயிலன்று கோயில்களின் மேலுந்தான் விழ வேண்டும். நகரத்தை விட்டு ஒரு மைல் சென்று தனியிடம் தேடி வெளிக்கு உட்காரு வதானாலும் அங்கும் ஒரு கோயிலோ, சாமியோ யிருக்கப் பார்க்கலாம்.

அதிலும் சீக்கியர் மடம், சங்கரர் மடம் போன்ற பல வகுப்பினர் மடங்களும், கிறிஸ்தவாலயம், மகமதிய பள்ளிவாயில்கள், சைன புத்த கோயில்கள், சிவாலயங்கள், தென்கலை வடகலை வித்தியாசமுள்ள வைண வக் கோயில்கள் இவையன்றி பல ஜாதி வகுப்பினர் ஆதிக்கங்களிலுள்ள தனிப்பட்ட கோயில்கள் முதலிய எல்லாமத ஜாதி வகுப்பினரின் ஆலயங் களாலும் நிரம்பப்பட்டு மத வேற்றுமைகளுக்கு ஆஸ்பதமான சரித்திர சம்பந்தமுடையது இக்காஞ்சிமாநகரம். இன்றும் ஒவ்வோராண்டைய வைகாசித் திருவிழாவிலும் நடக்கும் தென்கலை வடகலைச் சண்டையில் போலீஸ் காவலிருக்கும் போதே மண்டையோடு மண்டையுருண்டு கோர்ட்டுக்கும் போவதைக் காணலாம்.

இத்தகைய அருஞ்சிறப்புகளமைந்த இக்காஞ்சீபுரத்தில் பெரிய காஞ்சீபுரம் போலீஸ் ஸ்டேஷனுக்காக சமீப காலத்தில் ஒரு புதிய கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு விசேடமென்ன வென்றால் உள்நுழையும்



வழியின் இருமருங்கிலும் மதிற்சுவருக்குள், ஒரு பக்கலில் நிர்வாண புத்த சிலையொன்றும், மறுபக்கத்தில் பிள்ளையார் சிலையொன்றும், பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. போலீஸ் ஸ்டேஷனுக்கும், புத்த சிலைக்கும், பிள்ளையார் விக்கிரகத்துக்கும் உள்ள தொடர்பென்ன? இதற்கு முன்பு அச்சிலைகள் அக்கட்டிடத்துக்குச் சமீபத்திலுமிருந்ததில்லை. அவ்விடமும் ஓர் கக்கூஸ் கட்டப்பட்டிருந்தவிடம். ஆகையால் பழைமை பாராட்டவும் நியாயமில்லை. ஊரில் சாமிகளில்லை, அதற்காக வைத்திருப்பார்க ளென்றா லும், காஞ்சீபுரத்தைப் பற்றி முன்பே வர்ணிக்கப்பட்டாய்விட்டது. அவ்வக் கால அரசர்கள் தாங்கள் பின்பற்றிய மதங்களை தங்கள் ஆட்சியில் நிலை நாட்டி வந்தது போலிருக்குமோ வென்று பார்த்தாலும், அரசாங்க மதத்துக்கும் இச் சிலைகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. பிறகு, ஏன், எப்படி அச்சிலைகள் அங்கு வைக்கப்பட்டன? அதிகாரியின் சம்மதமின்றியும், அவர் இடங்கொடாமலும் அவைகள் அவ்விடத்தில் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்க வழியில்லை. அவ்வாறு நேர்க்கினும் தம் மதத்தை நிறுவ ஒரு ஜைன விக்ரகத்தையல்லவோ ஒரு நயினாரானவர் வைத்தோ அன்றி அனுமதித்தோ யிருக்க வேண்டும்? புத்த சிலை நாட்டப்படுவானேன்? ஓர் வேளை பிற மதத்தினர்க்கஞ்சி ஜைன விக்ரகத்துக்குப் பலவழிகளில் வேற்றுமையில்லாது ஏறக்குறைய ஒத்ததான புத்த சிலையை நாட்டியிருக்கக்கூடுமோ என்னும் சந்தேகமுண்டாகிறது. இருப்பினுமிருக்கலாம். அப்படியானால் பெரும் பாலோரான பிற 'இந்து' க்கள் என்று சொல்லிக் கொள்பவர்களை திருப்திப் படுத்த பிள்ளையார் விக்ரகமும், இடம் பெற்று விட்டதில் ஆச்சரியமில்லை யல்லவா?

மக்களின் அறிவு விருத்தியடைந்து வருமிக்காலத்தில், மதங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளும், சர்ச்சைகளும், நடந்து வருமிக்காலத்தில், அறியாமையும், மூடக் கொள்கையும், குருட்டு நம்பிக்கையும் பஞ்சாய்ப் பறந்து வருமிக்காலத்தில், கோயில்களையும், சாமிகளையும் பற்றிய ஓர் புத்துணர்ச்சி உலக முழுவதும் பரவி அவைகளை யொழிக்க முயற்சிக்கப் பட்டுவரு மிவ்விருபதாம் நூற்றாண்டில், எல்லா மதத்தினரும், எல்லா வகுப்பினரும், எல்லா கொள்கையினரும் வரக்கூடிய, எல்லோருடைய பணத்தினாலும், கட்டப்பட்டு எல்லோருக்கும் பொதுவான, அதிலும் அரசாங்கக் கட்டிடத்தில் புத்த, பிள்ளையார் சிலைகளை ஸ்தாபிக்கப்பட்டி ருக்கிறதென்றால், அதன் பொருள்தானென்ன? மேலும் இக்காஞ்சீபுரத்தின் நிலைமை தெரிந்திருந்தும், இங்கு நடக்கும் மதச் சண்டைகளையறிந்திருந்தும், அச்சண்டை சச்சரவுகளையடக்கி சமாதானத்தை நிலைநாட்டி வரவேண்டிய போலீஸ் இலாகாவுக்கு சம்பந்தப்பட்ட போலீஸ் ஸ்டேஷனிலேயே இத் தகைய சிலைகளை நாட்டப்பட்டிருப்பது பொதுமக்களுக்கு மன வருத்தத்தை யுண்டுபண்ணக் கூடியதாயுள்ளது.



RangaRakes tamilnavarasam.com

ஆகையால், காஞ்சீ நகர போலீஸ் தலைமையதிகாரியும், போலீஸ் மேலதிகாரிகளும் இவ்விடயத்தையூன்றி கவனித்து கூடிய விரைவில் அச் சிலைகளை அவ்விடத்தைவிட்டகற்றி பொதுமக்களுக்கு திருப்தியையளிக்க முன் வருவார்களாக.

**- ஒரு நிருபர்**

**குடி அரசு - கட்டுரை - 10.05.1931**



## வங்காள மாகாண பெண்களுக்குக்கூட காங்கிரசின் மீது கசப்பு

கல்கத்தா டவுன் ஹாலில் வங்காள ஸ்திரீகள் மகாநாடு ஸ்ரீமதி சாரளா தேவி சௌத்ராணி தலைமையில் நடைபெற்றது. ஸ்திரீகளின் உரிமைகள் வற்புறுத்தப்பட்டும் அதை எவரும் சட்டை செய்யவில்லை என்றும், சிறப்பாக பண்டிதர் ஜவர்லால் நேரு கூட அதை அசட்டை செய்தது ஆச்சர்யமான தென்றும் சென்குப்தாவை மாகாண இளைஞர் மகாநாட்டில் தலைமை வகிக்காது தடுத்தது ரொம்பவும் சரி என்று ஆதரித்ததும், பலர் பிரசங்கமாரி பொழிந்தார்கள்.

பிறகு அங்கு செய்யப்பட்ட தீர்மானங்களாவன:-

சாரதா சட்டம் உடனே அமுலில் கொண்டு வரப்பட வேண்டுமென்றும், பெண்களுக்கு விவாகரத்து உரிமை இருக்க வேண்டுமென்றும், கலப்பு மணம், விதவை மணம், இவைகளை அனுஷ்டிக்க வேண்டுமென்றும், ஆண் களுக்கும் பெண்களுக்கும் ஒரே மாதிரியான ஒழுக்க முறை இருத்தல் வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சிறைபுகுந்த வங்க நாட்டு பெண்களை நமது நாட்டு வீரர்கள் போற்றுகிறார்கள், புகழுகிறார்கள், வீரமணிகளென்கிறார்கள், இவர்கள் வங்க நாட்டு வீரப் பெண்மணிகளின் அடிகளை பின்பற்ற வேண்டுமென்றே சுயமரியாதைக்காரர்கள் விரும்புகிறார்கள். கேரள நாட்டில் காந்தி காந்தி என்று கதறிக் கொண்டும், தேசீய மகாநாடுகளில் தலைமை வகித்து பிரபலஸ்தராக விளங்கும் சென்குப்தாவுக்கு ஸ்ரீமதி சாரளாதேவிசௌத்ராணி தலைமையில் கூடிய வங்க நாட்டுப் பெண்கள் மகாநாட்டில் ஆதரவு இல்லாமல் போன தேன்? இதையும் தென்னாட்டார் தெரிந்து தெளிதல் அவசியம்.

**குடி அரசு - செய்தி விளக்கக் குறிப்பு - 10.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# திருப்பூர் காங்கிரஸ் பிரசாரமும் பணமுடிப்பின் யோக்கியதையும்

சென்ற வாரத்தில் இவ்வூருக்கு திரு. இராஜகோபாலாச்சாரியுள்பட சில காங்கிரஸ் பிரமுகர்கள் வந்து சேர்ந்தார்கள். உடனே பத்திரிகை நிரூபருக்கு ஆள் அனுப்பினார்கள். நிரூபரும் உடனே வந்து சேர்ந்தார். திரு. இராஜ கோபாலாச்சாரியாரின் திக்விஜயங்களையும் அவருடைய பிரசாரத்தின் முக்கிய கொள்கைகளையும் பத்திரிகைக்கு தந்தி கொடுக்கப்பட்டது. பின்னர் பணமுடிப்புக்கு ஒரு புதிய வழி கண்டுபிடிக்கப்பட்டது. சிறை சென்ற திருமதி. பத்மாவதி ஆஷருக்கு திருப்பூர் பொதுஜனங்களின் பெயரால் அவர் செய்த தியாகத்தை பாராட்டி ஒரு பண முடிப்பு கொடுப்பதென்றும் ஷை யாரின் தலைமையில் கிராம பிரசாரத்துக்கு ஷை பணம் செலவழிக்கப்படுமென்றும், ஆனால் ஷை பணமுடிப்பை திரு. இராஜகோபாலாச்சாரியரிடம் கொடுத்து விடவேண்டியதென்றும் முடிவு செய்யப்பட்டது. உடனே, திரு. ஆஷர் கம்பெனியார் ரூ. 501 பிரபல பஞ்சு வியாபாரியும் காங்கிரஸ் தலைவரான வருமான ஒரு கனவான் ரூ. 101 பட்டியல் போட்டு விட்டார்கள். பிறகு சர்க்கா சங்கத்தின் சர்டிபிகேட் பெற்ற கதர் வியாபாரிகளுக்கு உடனே இந்த நிதிக்கு துகை போடும்படி கட்டளை பிறந்தது. உடனே கதர் வியாபாரிகள், தங்கள் நற்சாக்ஷி பத்திரங்களை காப்பாற்றிக் கொள்வதற்காக வழக்கப்படி ரூ. 50 முதல் ரூ. 21 வரை பட்டியலில் போட்டு துகைகளும் கொடுத்து விட்டார்கள். மற்றவர் களும் துகை கொடுத்து விட்டார்கள். துகையும் சுமார் ஆயிரம் வரை ரொக்கம் பை கட்டியாய் விட்டது.

மாலை 7-மணிக்கு நொய்யல் நதிக்கரையில் கூட்டம் கூடியது. திரு. ஈஸ்வரமூர்த்தி கவுண்டர் பணமுடிப்பு கட்டி திருமதி. பத்மாவதி ஆஷரிடம் பணமுடிப்பை கொடுத்தார். திருமதி. அம்மையாரும் பெற்றுக் கொண்டு ஒப்பந்தப்படி திரு. ஆச்சாரியார் அவர்களிடம் உடனே கொடுத்துவிட்டார்கள்.

பின்னர் பிரசங்கம் ஆரம்பமாயிற்று. திரு. K.சந்தானம் அவர்கள் திருமதி. ருக்மணி லக்ஷிமிபதி அவர்களை புகழ்ந்து கூறினார். திரு. இராஜ கோபாலாச்சாரியார் திரு. வேதரத்தினம், அவர்களை புகழ்ந்து சில வார்த்தை கள் கூறி, திரு. காந்தி அவர்கள் சொல்லி அனுப்பினாரென்று சில உப தேசங்களைச் சொன்னார். திரு. வேதரத்தினம் அவர்கள் நேற்றைய தினம் கரூர் ஆற்றங்கரையில் திரு. T.S.S. இராஜன் அவர்கள் பேசும்பொழுது இந்த ஆற்றங்கரையிலுள்ள மணல்களெல்லாம் இந்த 10 வருஷங்களாய் நடந்த உபந்நியாசத்தைக் கேட்டு கொண்டிருந்து இப்போது அவைக ளெல்லாம் பிரசங்கம் செய்யுமென்று சொன்னார். ஆனால் நான் திருப்பூர் நொய்யல் ஆற்றங்கரைகளிலுள்ள மணல்கள் மாத்திரம் அல்லாமல் பக்கத்தில் உள்ள மரம் செடிகளெல்லாம் உபந்நியாசம் செய்யுமென்று நம்புகிறேனென்று சொல்லிவிட்டு இவ்வளவும் தெரிந்து கொண்டிருக்கும் திருப்பூரில் பொது ஜனங்களாயுள்ள நீங்கள் எல்லோரும் கதர் அணியவில்லையே என்றுதான் வருத்தப்படுகின்றேனென்று சொன்னார். பின்னர் திரு. திருகூடசுந்தரம் பேச எழுந்ததும் திரு. K.V. கிருஷ்ணசாமி அய்யர் என்பவர் ஸ்ரீனிவாசபுறத்தில் பெண்களுக்காக ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருப்பதாயும் அந்தக் கூட்டத் திற்கு திருமதிகள் பத்மாவதி ஆஷரும், ருக்மணி லக்ஷிமிபதியும் போக வேண்டியிருப்பதால் திரு. திருகூடசுந்தரம் பேசப் போகும் கூட்டத்திற்கு திரு. விட்டல்தாஸ் ஆனந்தஜீசேட் அவர்களை தலைமை வகிக்கும்படிக்கும் சொல்லும்படியாய் திரு. ஈஸ்வரமூர்த்தி கவுண்டரை கூட்டத்தில் சொல்லும் படி செய்து அவரும் அம்மாதிரி சொல்லவே திரு. திருகூடசுந்தரனாருக்கு பெருத்த அவமானம் ஏற்பட்டு தானும் இந்தக் கூட்டத்தில் அதிக நேரம் பேசப் போவதில்லை என்றும் 6 காரணங்கள்தான் சொல்லப் போவதாயும் அதிலும் 3 காரணங்கள் சொல்லிவிட்டு 3 நிமிஷத்தில் உட்கார்ந்து விட்டார். இனிமேலாவது திரு. திருகூடசுந்தரனார் பார்ப்பன சூழ்ச்சியை நன்கு தெரிந்து கொண்டு இவர்களுடன் பின்பற்றுவதை நிறுத்திக் கொள்வாராக.

**-ஒரு நிருபர்**

**குடி அரசு - செய்தி விமர்சனம் - 10.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# கதரும் - ஹிந்தியும்

இந்திய நாட்டின் சுயராஜ்யத்திற்கு கதரும், ஹிந்தியுமே முக்கிய மான மந்திரங்களாகப் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றன. சென்ற ஒத்துழை யாமையின் போது கதர் கட்டாதவர்களுக்கு ஓட்டு இல்லாமல் இருந்தது. இப்போது மில் முதலாளிகளின் தாக்ஷண்யத்திற்குக் கட்டுப்பட்டு அந் நிபந்தனை கைவிடப்பட்டு விட்டாலும், இப்போது வேறு ஒன்று அதாவது ஹிந்தி படிக்காதவர்களுக்கு பிரதிநிதித்துவமே இல்லை என்கின்ற கட்டளை ஏற்பட்டு அதனால் தென்னாட்டாருக்குப் பிரதிநிதித்துவம் கூட இல்லாமல் செய்தாய் விட்டதாக சொல்லப்பட்டாய் விட்டது. கதரைப் போன்ற ஒரு மோசடியான வியாபாரம் வேறு எதுவுமே இல்லை என்றே சொல்லவேண்டும்.

சாதாரணமாக வியாபாரத்தில் அதிக மோசடி செய்கின்றவர்கள் மருந்து வியாபாரிகளேயாவர்கள். கதரைப்பார்த்த பின்பு (பேடண்ட் மெடி ஷன் என்று) உரிமை செய்துகொண்ட மருந்து வியாபாரிகள் மோசடி எத்தனையோ பங்கு நல்லதென்பதோடு அவைகளில் அநேகம் சில சமயங் களில் நல்ல பலனையும் கொடுத்து வருகின்றது.

ஆனால் இந்தக் கதர் ஆரம்பம் முதல் அந்தம் வரை ஏமாற்ற மானதாகவே முடிவு பெறுகின்றது. திரு.காந்தியவர்கள் மில்லுகளை ஒப்புக் கொண்டாய் விட்டது. மில்துணிகளை கட்டவேண்டியது அவசியம் என்றும் தீர்மானித்தாய் விட்டது. இப்படி இருக்க இனி கதர் எதற்கு என்பது நமக்கு விளங்கவில்லை. அதுவும் மனதார மோசடியாக ஏன் நடைபெற வேண்டும் என்பதும் நமக்கு விளங்கவில்லை.

சாதாரணமாக, பஞ்சு பாரம் ஒன்றுக்கு 360 ரூபாய் விலையிருக்கும் போது கதர் விற்று வந்த விலையையே இன்றும் அதாவது பஞ்சு பாரம் ஒன்றுக்கு 125 ரூபாய் விலையிருக்கும்படியான காலத்திலும் விற்க அனுமதி கொடுத்திருப்பதானது எவ்வளவு அக்கிரமமானது என்பதை வாசகர்கள்தான் உணரவேண்டும். பாரத்துக்கு 100 ரூபாய் இரங்கினால் கதருக்கு ஒரு கெஜத்திற்கு ஒரு அணா குறைத்ததாக பெயர் செய்கின்றார்கள்.

சாதாரணமாக இன்றையவிலைக்கு பஞ்சு ராத்தல் 1க்கு 0-4-0 அணா வே ஆகின்றது. மில்லில் நூற்றால் ராத்தலுக்கு இரண்டணாக் கூலியானால் கையில் நூற்பதால் ராத்தலுக்கு ஐந்தணா கூலி ஆகின்றதானாலும் அதையும்



சேர்த்தே ஒரு ராத்தல் நூலுக்கு சேதாரம் உள்பட 0-9-6 அணா விலையே யாகின்றது. 10 அணா வென்றே வைத்துக்கொள்ளுவோம். 54 இஞ்சு அகல முள்ள 10 கெஜம் துணிக்கு 4 ராத்தல் இடை நூல் செல்லும் இதற்கு நெசவு கூலி 10 கெஜத்திற்கு இப்போதும் ரூ 1-14-0 கொடுப்பதாகவே வைத்துக் கொண்டு பார்த்தாலும் பீசுஒன்றுக்கு ரூ4-6-0 ஆகின்றது. அதாவது, கெஜம் 1க்கு 7அணா ஆகும். இந்த விலைப்படி பார்த்தாலும் மில் துணிக்கும் கதருக் கும் 100க்கு 100பங்கு அதாவது ஒன்றுக்கு இரண்டாகவே கெஜம் 0-3-6 அணாவுக்கு 7 அணா கொடுக்க வேண்டியதாகின்றது.

ஆனால் இப்போது காங்கிரசால் நற்சாட்சிப் பத்திரமும் அனுமதிச் சீட்டும் பெற்ற கதர் கடைகளில் 10 கெஜம் பீசு 1க்கு ரூ6-4-0க்கு விற்கப் படுகின்றது. அதாவது கெஜம் ஒன்றுக்கு 10 அணா வீதம் விற்பதில் அதில் 100க்கு 30வீதம் அதிகமாக விலை கொடுக்கவேண்டியதாயிருக்கின்றது. காங்கிரஸ் சின்னத்திற்காக, அர்த்தமில்லாத சுயராஜ்யத்திற்காக ஒன்றுக்கு மூன்றாக பணம் அதிக செலவு செய்வதின் மூலம் இன்று கதர் வியாபாரிகள் கொள்ளை அடிக்கின்றார்கள் என்பதைத்தவிர நாட்டிற்கு விளைந்த நன்மை என்ன என்பது விளங்கவில்லை.

இது ஒருபுறமிருக்க திருப்பூரிலுள்ள கதர் வியாபாரிகள் எல்லாம் இந்த பத்து வருஷ- காலத்தில் தங்களின் செல்வ நிலைமை எவ்வளவோ பெருக்கிக்கொண்டு வெறும் ஆட்கள் எல்லாம் இப்போது கையில் 10ஆயிரம் முதல் 40, 50 ஆயிரம் ரூபாய் வரையில் தங்கள் செலவு போக மீத்து இருக் கின்றார்கள். கோயில் அர்ச்சகர், சாமி பக்திக்காரர் ஆவதுபோல் கதர் வியாபாரிகள் காந்தி பக்தர்கள் ஆகியிருக்கின்றார்கள்.

அல்லாமலும் குறிப்பாக இந்த வருஷத்தில் மாத்திரம் அதாவது உற்சவ காலங்களிலும் அர்ச்சர்களுக்கு வரும்படி வருவதுபோல், சத்தியாக் கிரக காலங்களில் கதர் வியாபாரிகள் ஆளுக்கு 5 ஆயிரம் 10 ஆயிரம் சம்பாதித்து இருக்கின்றார்கள் என்றாலும் இவர்கள் எல்லாம் அநேகமாக சாதாரணமான வியாபாரிகள் என்றே சொல்லலாம். இப்படியிருக்க இவர்கள் இத்தனை பேர்களுடையவும் வியாபாரத்திற்கும் எத்தனையோ பங்கு மேலாகவே உற்பத்தி செய்து வட்டியில்லாத முதலை வைத்து வியாபாரம் செய்து வந்த காங்கிரஸ் கதர் போர்டுக்குச் சென்ற வருஷத்தில் இந்தப்படி நூற்றுக்கு 30 வீதம் லாபம் வைத்து விற்று வந்தும் கூட மொத்தத்தில் 15 ஆயிரம் ரூபாய் நஷ்டம் என்று கணக்குக் காட்டியிருப்பதாக ஒரு நண்பர் தெரிவித்திருக்கின்றதைப் பார்க்கும்போது காங்கிரஸில் கதர் என்பது எவ்வளவு மோசமான துறையாயிருந்து வருகின்றது என்பதை வாசகர்களே யோசித்துப் பார்த்து உண்மை உணர வேண்டுகின்றோம்.

தவிர அந்த இலாகாதான் இன்று தமிழ் நாட்டின் சத்தியாக்கிரகத் திற்கு பெரிதும் உதவி செய்து இருப்பதைப்பார்க்கும்போது வியாபார



RangaRakes tamilnavarasam.com

முறையிலேயே சத்தியாக்கிரகம் நடத்த கதர் இலாகா ஆயுதமாய் இருந்து வருவதும் பார்ப்பனர்கள் காங்கிரஸ் வாதிகளாகவும், தேச பக்தர்களாகவும், தியாகிகளாகவும் இருப்பதற்காக கதர் இலாகா இருந்து இம்மாதிரி மக்களை கொள்ளை அடித்தும் நஷ்டம் காட்டி வரவேண்டி வருவதும் உண்மை என்பதை இப்பொழுதாவது பொது ஜனங்கள் உணர்வார்கள் என்று நம்பு கின்றோம்.

அன்றியும் அரசாங்க உத்தியோகத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம் வந்ததன் மூலமாக ஏதோ ஒருசில பார்ப்பனருக்கு உத்தியோகம் கிடைக்கவில்லையானாலும் கூட காங்கிரசு, கதர், ஹிந்தி ஆகிய திட்டங்கள் அக் குறையை பூர்த்திசெய்வதோடு பங்கு கிடைக்கும்படி செய்யவே இவை கள் காப்பாற்றப்பட்டு பார்ப்பனருக்கு பயனளித்து வருவதை யார் மறுக்கக் கூடும் என்றும் கேட்கின்றோம் .

நிற்க கதரின் புனிதத்தன்மை இங்ஙனமிருக்க இனி ஹிந்தியின் புனிதத்தன்மையை சற்று கவனிப்போம்.

ஹிந்தியென்பது பார்ப்பன ஆதீக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட புரட்டு என்பதைத்தவிர அதில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை என்பதை அறிவுள்ள எவரும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள் என்றே கருது கின்றோம். இந்தியா நாட்டில் முப்பத்தைந்தரை கோடி மக்கள் இருந்தாலும் பல பாஷை, பல மதம், பல நாகரீகம், பலநடை உடை பாவனைகளாக இருந்துவருவதை யாவரும் மறுக்கமுடியாது. அப்படி இருந்தாலும் மக்களுக்குள் மதத்தின் பேராலும் ஜாதியின் பேராலும் பாஷையின் பேராலும், போட்டிகள் நடந்து வருவதும் மறுக்கக் கூடியவை அல்லவென்றே சொல்லுவோம்.

இந்த நிலைமையுலுள்ள சமூகங்களை பிரிவினைக்கு ஆதாரமாய் இருப்பதை கண்டுபிடித்து அவைகளை ஒழிக்க முயற்சிக்காமல் கண்மூடித் தனமாய் யெல்லோரையும் ஹிந்தி கற்றுக்கொள்ளவேண்டுமென்று அரசி யலின் பேரால் நிர்ப்பந்திப்பது எப்படி ஒழுங்காகும் என்று கேட்கின்றோம். ஹிந்தி என்பது அனேகமாக வடமொழியின் சார்போ, அல்லது திரிபோ ஆகும். இந்த நாட்டில் ஆரியர்கள் தங்கள் ஆதீக்கத்தை நிலை நாட்ட வடமொழிக்கு உயர்வு கொடுக்க பல வழிகளிலும் சூக்ஷி செய்து உலக வாழ்க்கையில் ஒரு ஒடிந்துபோன குண்டூசிக்கும் பயன்படாத பாஷையாகிய அவ்வடமொழிக்கு எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டு வருகின்றது என்பது வெகுநாளாக தமிழ்மக்கள் கவனித்து வரும் சங்கதி யாகும். இப்போது மறைமுகமாய் வடமொழியை ஆதரிக்கவும் ஆரிய நாகரீகம் சமயக் கொள்கை ஆகியவைகளை நிலை நிறுத்தவும் ஹிந்தியை அரசியல் விஷய மாக ஆக்கி அதைக் கதரைப் போல் ஏன் கதரைவிட அதிகமாக ஒவ்வொரு வருக்குள்ளும் புகுத்தப்பார்ப்பது எவ்வளவு வஞ்சமான காரியம் என்பதை நமது சோணகிரிகள் அனேகர் இன்னும் உணரவே இல்லை. தமிழ்ப்



பண்டிதர்கள் சாம்பலையும் மண்ணையும் குழைத்து சூடு போட்டதுபோல் மேலெல்லாம் தீட்டிக்கொண்டு சிவ,சிவ,சிவ என்பதற்கும் ராம,ராம,ராம என்பதற்கும் உதவுவார்களே தவிர மற்றபடி நமது மக்கள் மீது அனாவசி யமான ஒரு பாஷை சூக்ஷித்திறத்தில் சுமத்தப்படுகின்றதே என்கின்றஅறிவும், கவலையும் சிறிதும் கிடையாது என்றே சொல்ல வேண்டியிருக்கின்றது. இன்றைய தினம் இந்தியமக்களுக்கு அவரவர்கள் சொந்த பாஷை தவிர வேறுபாஷை தெரியவேண்டுமானால் அது இங்லீஷ் பாஷை என்றே நாம் தைரியமாய்ச் சொல்லுவோம்.

உலகமே தங்கள் கிராமம்தான் என்று எண்ணிக்கொண்டிருந்த காலம் மலையேறி இப்போது நிலப்பரப்பு, நீர்பரப்பு முழுதும் தெரிந்து 200 கோடி மக்களையும் சகோதரர்களாகப் பாவித்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டி ருக்கும்போது உலக செலாவணி பாஷை ஏதோ அதை மனிதன் அறியாமல் கபீர்தாஸ் இராமாயணத்தை படிக்க வேண்டிய ஹிந்திபாஷை எதற்குப் படிக்க வேண்டும் என்று கேட்கின்றோம்.

தமிழ் மக்களுக்கு சுயமரியாதை என்பது பல துறைகளிலும் வர வேண்டி யிருப்பதை ஹிந்தியின் ஆதிக்கம் இனியும் அதிகமாய் வலியுறுத் துகின்றது என்றே சொல்லுவோம்.

தமிழ்பாஷையின் பாண்டித்தியம் என்பது இப்போதே அனேகமாய் பார்ப்பனர்களிடமேயிருக்கின்றது. தமிழ் பாஷையின் சங்கத்தலைவர்கள் பார்ப்பனர்களாய் இருக்கின்றார்கள் என்பதோடு இந்தப் பார்ப்பனர்கள் தமிழர்களை ஹிந்தி படிக்கக் கட்டாயப் படுத்துகின்றார்கள் என்றால் தமிழ் பாஷைக்காரர்களின் சுயமரியாதை எவ்வளவு என்பதை தமிழர்களே உணர்வார்களாக.

அரசியல் தத்துவத்தின் பயனாய் தமிழ்நாட்டுப் பார்ப்பனர் பார்ப்பன ரல்லாதார் பணத்தில் ஹிந்தி கற்று இந்தியத் தலைவர்களாகிய வடநாட்டுத் தலைவர்கள் இடமெல்லாமல் பார்ப்பனர்களே போய் காரிய தரிசிகளாய் அமர்ந்து அவர்களே தென்னாட்டுப் பிரதிநிதிகளாகி அவர் களது ஆதிக்கத் திற்கே இந்திய அரசியலைத் திருப்பி பயன்படுத்திக் கொண்டு வருகின் றார்கள்.

ஆகவே அரசியல் துறையில் இருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் அறிவு இருந்தாலும் அதை பார்ப்பனர்களுக்கு தக்கவிலைக்கு விற்று விட் டார்கள் என்றாலும் அரசியலில் இல்லாத பார்ப்பனரல்லாதார்கள் அறிவை யாவது தக்கவழியில் உபயோகித்து தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டாமா என்று கேட்கின்றோம்.

**குடி அரசு – துணைத்தலையங்கம் – 10.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# களூர் முனிசிபல் நிர்வாகம்

## அரசாங்கத்தாரின் பாராட்டுதல்

"மிகவும் சாமார்த்தியகரமாகவும், விர்த்தியாகத் தக்க வழியிலும், ஸ்தல ஸ்தாபன ஆட்சியின் கருத்துக்கள் நிறைவேற்றும்படியான முறையில் வெற்றிகரமாகவும் களூர் முனிசிபல் நிறுவாகம் நடத்திக் காண்பிக்கப்பட்டி ருக்கின்றது" என்று சென்னை அரசாங்கத்தார் இந்த மாகாண ஜில்லா முனிசிபாலிட்டிகள் சம்மந்தமாக எழுதி வெளியிட்ட 29-30 வருஷத்திய பொது நிர்வாகக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

இந்த பாராட்டுதலைப் பார்த்து நாம் மிகுதியும் மகிழ்ச்சி அடைவ தோடு களூர் முனிசிபல் அக்கிராசனரையும், அங்கத்தினர்களையும் மனமாரப் பாராட்டுவதோடு களூர் முனிசிபாலிடிக்கு இந்த மாதிரியான ஒரு நன்மை யையும், கௌரவத்தையும், நற்சாட்சிப் பத்திரத்தையும் சம்பாதித் துக் கொடுக் கத்தக்க அங்கத்தினர்களையும், தலைவரையும் தெரிந்தெடுத்த களூர் மகா ஜனங்களையும் பாராட்டி போற்றுகின்றோம்.

**குடி அரசு - செய்திக்குறிப்பு - 10.05.1931**



# ஹிந்து

இந்த வியாசமானது ஹிந்து மதம் என்பது என்ன? ஹிந்துக்கள் என்பவர் யார்? ஹிந்து மதத்தால் மக்களுக்கு விடுதலை உண்டா? என்பதைப் பற்றி ஆராய்தல் என்னும் தன்மையில் எழுதப்படுவதாகும்.

இதற்குமுன் பல தடவைகளில் இதைப்பற்றிய ஆராய்ச்சிகள் பல ரூபமாக வெளிவந்திருந்த போதிலும் அவ்வாராய்ச்சியில் நமது முக்கிய தத்துவங்கள் சிலவற்றிற்கு அநுகூலமாக அதாவது நமது கருத்துக்களை ஒத்ததாகக் காணப்படும் சில விஷயங்கள் இவ்வார "நவ சத்தி"யின் உப தலையங்கத்தில் காணப்படுவதால் அதனை எடுத்துக்காட்டவும் மற்றும் அவைகளில் இருந்து இந்துக்கள், இந்துமதம் ஆகியவைகள் எவ்வளவு தூரம் சமய சமூகம் என்பவைகளுக்கு பொருப்பற்ற தன்மையாகவும், ஒரு நாட்டின் கேட்டிற்கே இவை முக்கிய ஆதாரமாகவும் இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டவும் இதை எழுதுகின்றோம்.

அதாவது "நவ சக்தி"யின் 6-5-1931 உ உபதலையங்கம் இந்துக்கள் யார்? என்னும் தலைப்பில் திரு.வி.கல்யாணசுந்திர முதலியார் அவர்கள் எழுதி இருப்பதின் சுருக்கமாவது;-

வடநாட்டில் சத்பந்திகள் என்று ஒரு சமூகத்தார் இருக்கின்றார்கள். அவர்களில் சாந்தேஷ் என்னும் ஜில்லாவில் மாத்திரம் 40000 பேர் இருக் கின்றார்கள். அவர்கள் தங்களை இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளு கின்றார்கள்.

ஆனால் அவர்களது நடவடிக்கைகள் சிலது இந்துக்களைப் போலவும் சிலது முஸ்லீம்களைப்போலவும் காணப்படும். இதனால் இந்துக்கள் வருணாச்சிர தர்ம மகாநாடு கூட்டி மேல்கண்ட சத்பந்திகள் என்னும் சமூகத் தார்களை இந்துக்கள் அல்ல என்று தீர்மானித்து விட்டார்கள். பிரகு சத்பந்தி கள் சங்கராச்சாரி சாமியாருக்கு அப்பீல் செய்ததில் சங்கராச்சாரியும் அவர் களை இந்துக்கள் அல்ல என்று சொல்லி விட்டார். பிறகு சங்கராச்சாரியார் கட்டளை மீது மேல் கண்ட சத்பந்திகளை மற்ற இந்துக்கள் மத பகிஷ்காரம் செய்தார்களாம். சத்பந்திகள் இதனால் தங்களுக்கு மான நஷ்டம் ஏற்பட்டு விட்டதாக கோர்ட்டில் ஒரு வழக்கு தொடுத்தார்கள். நீதிபதி சத்பந்திகள் இந்துமுஸ்லீம் ஆகிய இருவர் வழக்க ஒழுக்கங்க ளையும் பின்பற்றுவதாய் காணப்படுவதால் மானநஷ்டமில்லை என்று வழக்கைத் தள்ளிவிட்டார்.



RangaRakes tamilnavarasam.com

இதில் நீதிபதி தீர்ப்பு ஒரு புறமிருக்கட்டும் . மற்றபடி வருணாச்சிரம மகாநாட்டாரும், சங்கராச்சாரியாரும் கொண்ட முடிவு ஆராய்ந்து பார்த்தால் சத்பந்திகள் வேதம்தான் இந்து மதத்தின் ஆதாரம் என்பதை ஒப்புக்கொள்ளா ததாலும், ஏகாதசி முதலிய விரதம் இல்லாததாலும், பசுவை போற்றாமை யினாலும், மற்றும் வெள்ளிக்கிழமை உபவாசமிருப்பதாலும். மேற்குநோக்கி பிரார்த்தித்து வணங்குவதாலும் சத்பந்திகள் இந்துக்களாக மாட்டார்கள் என்று முடிவு சொல்லி இருக்கின்றார்கள்.

இன்னார் இந்து, இன்னார் இந்து அல்ல என்று வரையருத்து கூறும் அதிகாரம் யாருக்குண்டு. வேதத்தை ஆதாரமாகக் கொள்ளுபவர்கள் தான் இந்துக்களாவார்கள் என்று எங்கு சொல்லப்பட்டிருக்கின்றது? அதற்கு ஆதாரம் எது? இந்து சமூகத்தில் வேதத்தை பொருட்படுத்தாதவர்கள் அநேகர் இல்லையா? இந்துக்கள் எல்லோருக்கும் வேதம் தெரியுமா? வருணாச்சிரம இந்து மதத்தில் எல்லோருக்கும் வேதம் படிக்க உரிமை யுண்டா? வேதம் படிக்கவே உரிமையில்லாதவர்கள் வேதத்தை எப்படி ஒப்ப முடியும்? சங்கராச்சாரியார் எல்லா இந்துக்களுக்கும் குருவா? சங்கராச்சாரி யார் கொள்கைகளை ஒப்புக்கொண்டு நடப்பவர் மாத்திரமா இந்து? ( என்ற பல கேள்விகளை கிளப்பி விட்ட பிறகு, திரு. திரு.வி.கல்யாணசுந்திர முதலி யாரவர்கள் தமது அபிப்பிராயமாகக் கூறுவதாவது ):-

இந்து மதம் என்று சொல்லுவதானது எக்கட்டுப்பாட்டுக்கும் உட் பட்டதல்ல. அதற்கு சத்மார்க்கம் என்று பெயர். அதில் எல்லாக் கொள்கை களுமடங்கும். அது யாருக்கும் உரிமையுடையதாகும். அதை ஒரு கட்டுப் பாட்டிற்குள் அடிமைப்படுத்துவது அறியாமை. சமரசக் கொள்கையுடை யோரனைவரும் இந்துக்கள்.

## இந்து என்னும் பெயர் பிற்காலத்தில் வந்தது

ஒருவன் கோவிலுக்குப் போவது, போகாமலிருப்பது மதசின்னங்கள் அணிவது, அணியாமலிருப்பது, உருவத்தை வழிபடுவது, வழிபடாம லிருப்பது, ஆத்திகம் பேசுவது, நாத்திகம் பேசுவது ஆகிய காரியங்கள் எது வேண்டுமானாலும் செய்து கொண்டும் செய்யாமலிருந்து கொண்டும் இந்துவாக இருக்கலாம்.

## இந்து மதத்தில் நாஸ்திகத்திற்கு இடமுண்டு

பிறப்பினால் ஜாதி கற்பிப்பதே வருணாச்சிரமாகும்.

இதனை எல்லா இந்துக்களும் ஏற்றுக் கொள்ளுவதில்லை.

வருணாச்சிரமத்தை ஒப்புக்கொள்ளாதவர்களை இந்துக்கள் அல்ல வென்று யாரும் தள்ளுவதில்லை.

வேதாந்த மதக்கார சங்கராச்சாரியார் வருணாச்சிரமத்தில் ஏன் விழ வேண்டும்.



வேதத்தை ஆதாரமாகக்கொண்டு இவர்இந்து, இவர் இந்துவல்ல என்று சொல்லும் சங்கராச்சாரியார் வேதத்தின்படி நடக்காதவர்களை யெல் லாம் இந்துவல்ல என்று விலக்குவாரா?

பார்ப்பன வக்கீல்கள் இந்துக்களாவார்களா?

அவர்களை இந்துக்கள் அல்லவென்று சங்கராச்சாரியார் ஏன் கூறவில்லை?

சமரசம் சன்மார்க்கம் ஏற்பட்டு வரும் இந்நாளில் இடைக்காலத்தில் ஏற்பட்ட வருணாச்சிரமத்திற்கு ஆதிக்கம் தேடுவது அக்கிரமமாகும்.

**நால்வருண மாசிரம முதலா நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளை விளையாட்டே.......**

என்பதாக திரு. முதலியார் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவற்றுள் இந்துமதத்தைப்பற்றி நாம் அவ்வப்போது சொல்லிவந்த பல விஷயங்களையே திரு. முதலியார் அவர்களும் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

இந்துமதத்திற்கு என்று ஒரு குறிப்பிட்ட கொள்கை இல்லை என்று நாம் சொல்லி வந்ததை ஏற்றுக்கொண்டு மேலும் கோவிலை ஒப்புக் கொள்ளாமலும் உருவ வழிபாட்டைச் செய்யாமலும் மதச்சின்னத்தையும் அணியாமலும் கடவுள் உண்டு என்பதை ஒப்புக்கொள்ளாமலும் இருப்பவர் கள் கூட இந்துமதஸ்தர்கள்தான் என்பதாகவே குறிப்பிட்டிருக்கின்றார். மற்றும் அதுமாத்திரமல்லாமல் சமரசக் கொள்கைகள் உடையாரனைவரும் இந்துக்கள் என்றே குறிப்பிட்டிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

இவற்றையெல்லாம்விட மற்றொன்று அதாவது ஒவ்வொருவருடைய மனச்சாக்ஷிக்கும் மதிப்புக் கொடுப்பது இந்து மதம் என்றும் சொல்லி இருப்பதாகும்.

எனவே வாசகர்களுக்கு இப்போதாவது இந்துமதம் என்பதின் கொள் கையும் யோக்கியதையும் நடைமுறையின் யோக்கியதையும் அதன் பேரால் மக்களை அடிமைகொண்டு கசக்கிப் பிழிந்துபார்ப்பனச் சோம்பேரிகள். புரோகித அர்ச்சக சாஸ்திரி கூட்டத்தார்கள் கொள்ளையடித்து வரும் யோக்கியதையும் விளங்கவில்லையா? என்று கேட்கின்றோம்.

இந்த நிலைமை உள்ளமதத்தை உத்தேசித்து காங்கிரசில் “மத நடு நிலைமை வகிப்பது” “மனச்சாக்ஷிக்கு மரியாதைகொடுப்பது” என்கின்ற தான வார்த்தைகளை “பூரண சுயேச்சைத் திட்டத்தில்” சேர்த்திருப்பது என்றால் இந்தக்கொள்கைகளின்படி மக்களுக்கு விடுதலை உண்டா என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

சங்கராச்சாரியின் மனச்சாக்ஷியும் சந்தேஷ் ஜில்லா இந்துக்கள் என்பவர்களின் மனச்சாக்ஷியும் சத்பந்திகளை இந்துக்கள் அல்லஎன்று சொல்லச் செய்து விட்டது என்பதோடு இதை ஆக்ஷேபிக்க யாருக்கும் உரிமை இல்லை யென்பதாகவும் ஏற்பட்டுவிட்டது. மற்றும் திரு. முதலியா ரவர்கள் இந்து மதத்திற்கு வேதம். ஆதாரம் ஒன்று சொல்லுவது பொருந் தாது என்றும், எல்லா இந்துக்களுக்கும் சங்கராச்சாரியார் குருவாயிருக்க முடியாது என்றும், வேதத்தை ஓத எல்லா இந்துக்களுக்கும் உரிமை அளிக்கப் படவில்லை என்றும், வேதம் ஓதவே உரிமை இல்லாதவன் வேதத்தை எப்படி ஒப்புக் கொள்ளமுடியும் என்றும் விளங்கக் குறிப்பிட்டு இருப்பதில் இருந்து வேதத்தை ஒப்புக்கொள்ளாத அனேகர் இந்துக்களாக இருக்கின்றார்கள் என்பதும் புலனாகின்றது.

இதானது குர் ஆனை ஒப்புக்கொள்ளாதவர்கள் இஸ்லாமாகவும், பைபிளை ஒப்புக்கொள்ளாதவர்கள் கிறிஸ்துவர்களாகவும் இருக்கலா மென்பது போலவே இருக்கின்றது.

ஆகவே ஒருவனை மத விரோதி என்றோ மதத்தலைவர் விரோதி என்றோ சொல்லுவதற்கு இடம் எங்கே இருக்கிறது? என்று கேட்கின்றோம்.

இவைகளையெல்லாம் கவனித்தால் நமது நாட்டுக்கு ஏதாவது ஒரு வகையில் விடுதலையோ, முன்னேற்றமோ ஏற்படவேண்டுமானால் நமது திரு. திரு.வி.கல்யாணசுந்தரமுதலியாரவர்கள் எடுத்துக்காட்டிய கொள்கைகள் கொண்டதான இந்துமதம் என்பதை அடியோடு அழித்து ஒழித்து ஆகவேண்டும் அதை ஒழிக்காமல் சன்மார்க்கமோ சமரசமோ இல்லை என்பது உறுதி. ஏனெனில், இந்தமாதிரி கொள்கையற்ற......... ஒரு ஆகாயக் கோட்டை மதத்தின் பேரால் இந்தியாவில் 22 -கோடி மக்களை மூடர்களாக்கி, மானமற்றவர்களாக்கி - மனிதத்தன்மை யற்றவர்களாக்கி- வேசியாக்கி - வேசிமக்களாக்கி - தீண்டாதாராக்கி - காணாதாராக்கி சில சோம்பேரிகளும் சில அயோக்கியர்களுமே அடக்கி ஆண்டு ஆதிக்கம் செலுத்திவரும் கொடுமை ஒழியாமல் வேறு எவ்வழியிலும் இந்நாட்டுக்கு விடுதலை இல்லை என்பதினால்தான்.

கடைசியாக நாம் கூறுவதாவது:- திரு.முதலியார் அவர்கள் இந்து மதத்திற்கு சொல்லும் வியாக்கியானங்கள் முழுவதும் ஒரு மதத்திற்கு இருப்பது என்பது மக்களின் மிருகப்பிராயத்தை காட்டுவதனாலும் அதில் அவர் சிறிதுகூட நடப்பிற்கு விரோதமாய் எதையும் கற்பித்துக்கூறவில்லை என்பதை நாம் மனமார ஒப்புக்கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - துணைத்தலையங்கம் - 10.05.1931**



# ஊத்துக்குளி ஜமீன்தாரர் மரணம்

ஊத்துக்குளி ஜமீன்தாரர் (பாளையத்தார்) உயர்திரு. திவான்பகதூர் முத்துராமசாமி காளிங்கராயர் அவர்கள் 1-5-31 தேதி வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு ஊத்துக்குளியில் தமது அரண்மனையில் முடிவெய்தினார் எனக்கேட்டு மிகவும் வருந்துகின்றோம்.

ஜமீன்தாரர் அவர்கள் கோயமுத்தூர் ஜில்லாவில் புராதனமும், பிரபலமும், கீர்த்தி வாய்ந்ததுமான ஒரு பாளையத்தார் ஆவார்கள். இவர் 1864 ௵ ஜனவரி ௴ 24-ந் தேதி பிறந்தார். இன்றைக்கு இவரது வயது 67 ஆகின்றது. 1881ல் பட்டத்திற்கு வந்தார். இவர் பட்டத்துக்கு வந்து இன்றைக்கும் 50 வருஷம் ஆகின்றது. இந்த ஜமீன் பரம்பரைக்கிரமத்தில் இவர் ஒருவரே 50 வருஷம் பட்டம் ஆண்டார் என்பதோடு இவர் 33-வது பாளையதாரர் ஆவார். இவர்களது பாரம்பரியர்களால்தான் பவானியிலி ருந்து ஈரோடு வழியாக கொடுமுடி வரை வெட்டப்பட்டிருக்கும் காளிங்கராயன் வாய்க்கால் என்னும் 50 மைல் நீளமுள்ள வாய்க்கால் வெட்டப் பட்டதாகும். இந்த ஜமீன்தாரர் அவர்கள் பட்டம் ஏற்றுக்கொண்டது சிறு வயதாய் இருந்தாலும் ஒரு ஆங்கில உபாத்தியாயர் மூலமே கல்வி, பழக்க ஒழுக்கம், நாகரிகம் முதலியவை கற்பிக்கப்பட்டு வந்தார். இவருடைய 50 வருஷ- ஜமீன்தாரர் வாழ்க்கையானது இவரைப் போன்ற இரண்டு பங்கு, மூன்று பங்கு வரும்படியுள்ள பெரியஜமீன்களையெல்லாம் விட மிகப் பெருமையாகவும், பிரபலமாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

கோயமுத்தூர் ஜில்லாப் பொது வாழ்வுக்கு ஒரு திலகம்போல் இருந்தவர் என்று சொல்வது மிகையாகாது. இவர் கொங்குவேளாள சமூகத் தைச் சேர்ந்தவர். அச்சில்லா வாசிகளான மற்ற பிரமுகர்கள்போல் அல்லாமல் ஜில்லாவிலுள்ள எல்லா சமூகப் பிரபலஸ்தர்களிடமும் நெருங்கின பழக்கமும், நேசமும் உடையவராயிருந்ததோடு ஜில்லாவின் சகல காரியங்களுக்கும் தலைவராக இருந்து மக்களுக்கு யோசனை சொல்லி வந்தார். ஜமீன்தாரர் கர்நாடகப் பெரிய மனிதர்கள்போல் ஜாதி பேதங்களில் தங்களைப் பார்ப்பனர் களுக்குக் கீழ்ப்பட்ட ஜாதி என்றும், தாங்கள் சில ஜாதிகளுக்கு மேல்பட்ட வர்களென்றும் கருதி வருணாச்சிரம தர்மத்தைக் காப்பாற்றி பிராமண விசுவாசத்தாலும், பக்தியாலுமே நாகரீகமடைந்தவர்கள் என்று காட்டிக் கொள்வதுபோல் இல்லாமலும், பார்ப்பனர் வீடு தவிர மற்ற யார் வீட்டிலும்



RangaRakes tamilnavarasam.com

சாப்பிடுவதில்லையென்று வேஷமாகச் சொல்லிக் கொள்வதாலேயே பெரியவர்கள் என்று கருதும்படியாகவும் இல்லாமல் அதற்கு நேர் விரோத மாய் ஊண், உடை, மரியாதை ஆகிய விஷயங்களில் ஜாதிவித்தியாசம் என்பதே இல்லாமல் எல்லாருடனும் சமத்துவம் காட்டு வதும், பட்லர்கள் ("பறையர்கள்") என்பவர்களைக் கொண்டு சமையல் வகையரா செய்வித்து சாப்பிட்டு வந்தார். கடவுள் என்னும் விஷயத்தில் மாத்திரம் சற்று அதிகமான உணர்ச்சி இருந்து வந்த போதிலும், புதிய நாகரீகம் அதாவது (up to date fashion) என்கின்ற விஷயத்தில் இந்தியாவுக்கு மேல்நாட்டு நாகரீகம் எது இறக்குமதி யானாலும் அது முதலில் ஜமீன்தாரார் அவர்கள் வீட்டில் வந்து புகுந்து அவர்கள் மூலம்தான் அது மதிப்புபெற்று உலாவும்படியாக இருக்கும்.

தவிர, ஜமீன்தாரர்கள் என்ற பேரால் அநேகர் இந்நாட்டில் இருந்த போதிலும், மரியாதை கொடுத்து, மரியாதை வாங்குவது என்பதிலும், யாரு டனும் பட்சமாய்ப் பேசுவது என்பதிலும், ஒரு மனிதனிடம் முதல் நாள் பழகும்போது எப்படிப் பழகினோமோ அதே முறையில் கடைசிவரை நடந்து கொள்வது என்பதிலும் மிக்க ஆசையும், கட்டுப்பாடும் உடையவர்.

ஆங்கிலத்தில் எட்டிக்கட் என்று சொல்லப்படும் அதாவது மக்களிடம் மக்கள்பழகும் வாழ்க்கைப்பத்ததி என்னும் விஷயத்தில் வெள்ளைக் காரர்கள்கூட நமது ஜமீன்தாரிடம் வந்து பழகிப் போகும்படியான உயர் நிலை யில் இருந்தவர். தென்னாட்டு மற்ற ஜமீன்தாரர்களின் மரியாதையை மிகவும் பெற்றவர் என்பதோடு அவர்களின் மதிப்பையும் நன்கு பெற்றிருந்தார். பொதுக்காரியங்களுக்குத் தாராளமாய் பணம் உதவும் பிரபு. இவருக்கு 5-வது ஜார்ஜ் அரசர் பட்டாபிஷேக ஞாபகார்த்தமாய் 1913ம் வருஷம் திவான்பகதூர் பட்டம் அளிக்கப்பட்டது. இவரது குமாரர்கள் இருவரில் உயர்திரு முத்துக் கிருஷ்ணசாமி காளிங்கராயர் அவர்கள் மூத்தவர். குமார ராஜாவாக இருந்து பட்டத்துக்கு வந்து விட்டார்கள். இளையவர் லண்டன் சென்று உயர்தரக் கல்வி கற்று வந்து, திருவாங்கூர் மகாராஜாவின் பிரைவேட் செக்ரிடியாய் இருந்து இப்போது அதை விட்டு ஊருக்கு வந்து தாமதிக்கின்றார்.

இக்குடும்பம் மற்ற பணக்காரர்களைப்போல் பார்ப்பன தாசர்களாயல் லாமல் எப்போதும் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையில் மிகவும் கவலை கொண்ட குடும்பமாகும்.

தென் இந்தியாவுக்கே ஏன்? இந்தியாவுக்கே முதல் முதலாய் கோய முத்தூரில் கூட்டப்பட்ட பார்ப்பனரல்லாதார் மகாநாட்டை முன்னின்று நடத் திய கனவான் நமது ஜமீன்தாரவர்களே யாகும். அன்று முதல் இன்றளவும் எக்காரணம் பற்றியும் அக்கொள்கையில் சிறிதும் மாற்ற மேற்பட இடமே யில்லாமல் இருந்து வந்திருக்கின்றது. இவர்கள் 67 வருஷ-காலம் உயிருடன் இருந்து 50 வருஷகாலம் ஆக்ஷியில் இருந்து காலமானதோடு அடுத்த பட்டத்திற்கு தன்னிலும், எவ்விதத்திலும், குறையாத குணமும், மேன்மையும்



உள்ள குமார ஜமீன்தாரார் வந்திருப்பதோடு மிக்க புத்தி சாதுர்யமும், தைரிய மும் வீரமும் பொருந்திய இளைய குமாரர் நடராஜ காளிங்கராயர் உற்ற துணையாய் இருந்து பழையபடியே எல்லாக் காரியங் களும் நடைபெற்று வரும் என்பதில் எவ்வித ஆக்ஷேபத்திற்கும் இட மில்லை என்று இருந்தாலும், ஒப்பற்ற ஒரு பெரியாரை கோயமுத்தூர் ஜில்லா இழந்து விட்டது என்பதற்கு புதிய ஜமீன்தாரரும் அவரது சகோதரரும் தான் மக்களுக்கு ஆறுதல்கூற வேண்டுமென்று கூறி முடிக்கின்றோம்.

**குடி அரசு - இரங்கலுரை - 10.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# 'தேசீய'வாதிகளும்
# 'தேச' பக்தர்களும்

நமது நாட்டு அரசாங்கத்தாரை தனிப்பட்ட முறையில் பார்த்தோமேயானால் நமது நலத்தைப்பற்றிய பொறுப்பு ஒரு சிறிதும் அற்றவர்கள் என்பதையும் அவர்கள் தங்கள் ஜாதி, தங்கள் நாடு ஆகியவைகளின் நன்மையையே பெரிதும் கவனித்து அதற்காகவே இந்திய நாட்டின் ஆட்சி நடத்தும் உரிமையை அடைந்து ஆட்சி புரிந்து வருகின்றார்கள் என்பதையும் நாம் வெகு நாளாய் எடுத்துக்காட்டி வந்திருக்கின்றோம் என்பதோடு அந்த ஆட்சியானது அதாவது பிரிட்டிஷ் ஆட்சியானது இந்தியாவில் அன்னிய ஆட்சிக்கு முன் வெகு காலமாய் இருந்து வந்ததாக சரித்திரங்களில் காணப்படும் இந்திய மன்னர்களின் ஆட்சியைவிட – இந்திய "தெய்வ அவதார" ஆட்சிகளைவிட எவ்வளவோ பங்கு மேலானதும் மனிதத் தன்மை பொருந்தியதாகுமென்பதையும் அவ்வப்போது எடுத்துக் காட்டி ஆதாரங்களுடன் மெய்பித்து வந்திருக்கின்றோம்.

மேலும் இந்தியாவில் இருந்ததாகச் சொல்லப்படும் யோக்கியமான ஆட்சிமுறைகள் என்பவைகள் எல்லாம் இன்றையதினம் நம்மால் சுட்டுப் பொசுக்கவேண்டும் என்று சொல்லப்படும் படியான மனுதர்ம ( பார்ப்பன ஆதிக்க ) ஆட்சிமுறையாகத்தானிருந்து வந்ததாகக் காணப்படுகின்றனவே – சொல்லப்படுகின்றனவே தவிர மனிதத்தன்மை ஆட்சி முறை – சமதர்ம ஆட்சி முறை ஒரு நாளும் இருந்ததாக எங்கும் எதிலும் காணப்படவே யில்லை யென்றும் உறுதியாய்ச் சொல்லுகின்றோம்.

இன்னும் பார்க்கப்போனால் ( சனாதன தர்மத்தை ) பழைய தர்மத்தை அனுசரித்து செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டு வரும் இன்றைய இந்திய கிரிமினல் சட்டமும், இந்து சிவில் லா சட்டமும் கூட மனுதர்ம ( பார்ப்பன ஆதிக்க முறையை ) சாஸ்திரத்தை அனுசரித்திருக்கின்றதையும் அவை மனித தர்மத்தை – சமதர்மத்தை சிறிதும் லட்சியம் செய்யப்படாமல் இருந்து வருவதையும் பார்த்தால் சாதாரணமாக யாவருக்கும் நாம் மேல் எடுத்துக் காட்டியதன் தத்துவம் விளங்கும்.

வெள்ளைக்கார ஆட்சி கூட வெள்ளைக்கார நாட்டில் இரண்டொன்று தவிர மற்றபடி அநேகமாய் மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட



தாயிருந்தாலும் அவர்களால் நடத்தப்படும் இந்திய ஆட்சியானது மனித தர்மத்தை அடிப்படையாகக்கொண்டதாயில்லை என்பதையும் நாம் சிறிதும் தயங்காமல் சொல்லுவோம். ஆனால் இந்தப்படியான ஆட்சிக் கொடுமை அதாவது மனித தர்மத்திற்கு விரோதமான – சமதர்மமற்ற ஆட்சிக் கொடுமைக்கு வெள்ளைக்காரர்களே பொறுப்பாளிகள் அல்லவென் பதையும் நாம் எங்கும் தைரியமாய்ச் சொல்லத் தயாராயிருக்கின்றோம்.

ஏனெனில் வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டில் தங்களது ஆட்சி என்றும் நிலைத்திருக்கவும், இந்த நாட்டுச் செல்வத்தைத் தாராளமாய் தங்கள் நாட்டுக்கு கொள்ளைகொண்டு செல்லவும் உத்தேசித்து இந்த நாட்டில் யாருடைய தயவு தங்களுக்கு இருந்தால் தங்களது மேற்படி எண்ணம் தாராளமாய் நிறைவேறுமோ அவர்களது தயவை பூரணமாய் சம்பாதிக்க வேண்டியே அவர்கள் மனித தர்ம ஆட்சி என்பதை அடியோடு மறந்து முழுவதையும் கைவிட்டு மனுதர்மப்படி ( பார்ப்பன ஆதிக்கத்திற்கு தகுந்தபடி ) ஆட்சி முறையை வகுத்து நடத்த வேண்டியவர்களானார்கள். இன்றைய தினமும் இந்த நாட்டின் ஆட்சிமுறை மனித தர்மப்படி நடக்க வேண்டுமானால் மனுதர்ம ஆட்சியை அடியோடு ஒழிப்பதற்கு இந்திய மக்கள் சம்மதப்பட்டால் ஒழிய ஒரு நாளும் இந்த நாட்டில் மனித தர்ம ஆட்சி சாத்தியப்படவேபடாது என்பதை தைரியமாய்ச் சொல்லுவோம்.

ஆகவே அந்தப்படி மனுதர்மம் அழிபட பார்ப்பனர்கள் ஒரு நாளும் ஒப்பமாட்டார்கள் . இந்தப் பார்ப்பனர்களை மீறி வெள்ளைக்காரர் ஏதாவது ஒரு நல்ல ஆட்சி முறையை ஏற்படுத்துவதாயிருந்தால் அவர்களை ஒழிப்பதற்கு நம் பார்ப்பனர்கள் முயலுவார்கள்.

ஆதலால் வெள்ளைக்கார ஆட்சி இந்த நாட்டை விட்டுப் போய் விடுவதாலேயோ அல்லது திரு.காந்தியே ஏக நாயகராக ஏற்பட்டு விடுவதாலேயோ மனித தர்ம ஆட்சியை இந்த நாட்டில் நிலை நிறுத்திவிடமுடியும் என்று யாராவது சொல்லவருவார்களானால் அப்படிச் சொல்லுகின்றவர்களை மூடர்களென்றோ அல்லாவிட்டால் மக்களை ஏமாற்றுகின்ற தற்காக பேசும் பித்தலாட்டக்காரர்கள் என்றோ தான் சொல்ல வேண்டியிருப் பதற்கு வருந்துகின்றோம்.

இன்னும் தைரியமாயும் வெளிப்படையாயும்சொல்லவேண்டுமா னால் இன்றைய வெள்ளைக்கார ஆக்ஷியோ ஆதிக்கமோ ஒழியவேண்டும் என்று சொல்லுகின்றவர்களில் திரு.காந்தியவர்கள் உள்பட 100க்கு 90 பேர்களின் உள் எண்ணமெல்லாம் மனித தர்ம ஆக்ஷியை இந்த நாட்டில் தலைகாட்டச் செய்யாமல் செய்யவும் மனுதர்ம ஆக்ஷியை ( இராம ராஜ்யத்தை ) நிலை நிறுத்தவும் செய்யப்படும் முயற்சியாளர்கள் என்றுதான் சொல்லவேண்டும். இதை பாமரமக்கள் சரிவர உணராமல் மோசம் போய்க் கொண்டிருப்பதனால் இந்தநிலை வளர்ந்துகொண்டே இருக்கின்றது. உதாரணமாக மனுதர்மத்திற்கு



RangaRakes tamilnavarasam.com

எதிரானதாகக் கருதப்பட்ட இந்துமத பரிபாலன சட்டமும் தேவதாசிகள் ஒழிப்புச்சட்டமும் குழந்தை மணத் தடுப்பு ( சாரதா ) சட்டமும் செய்யப் புரப்பட்ட காலத்தில் அதற்கு எதிராய் ஏற்படுத்தப்பட்ட எதிர்ப்புகள் எல்லாம் இச்சட்டங்கள் செய்யப்படுவதே வெள்ளைக்கார ஆக்ஷியின் கொடுமை என்பதாக மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டதும் மக்கள் அதை நம்பி அச்சட்டங்களுக்கு எதிராய் இருந்ததும் கடைசியாக "சர்க்கார் தாசர்கள்" "தேசத் துரோகிகள்" அரசாங்கத்தார் (வெள்ளைக்காரர்கள்) ஆகியவர்கள் தயவில் இச்சட்டங்கள் நிறைவேற்ற முடிந்ததும், முடிந்தபிறகும் சரியானபடி அமுலில் இல்லாததுமே போதிய காரணங்களாகும்.

மேலும் மற்றொரு உதாரணமும் அதாவது யாவருக்கும் சுலபத்தில் விளங்கும்படியானதாக எடுத்துக் காட்டவேண்டுமானால் சமீப கராச்சி காங்கிரசில் "பூரண சுயராஜிய" கவர்ன்மெண்டில் திரு.காந்தி கூட்டத்தார் செய்யப்படப்போகும் ஆக்ஷியின் தன்மைகள் எப்படி இருக்கும் என்று எடுத்துக்காட்டி இருக்கும் 20 பிரிவுகளிலும் மற்றும் அதன் பல உட்பிரிவு களிலும், சற்றேறக்குறைய 3, 4 பிரிவுகள் தவிர மற்றப் பிரிவுகளை இந்நாட்டில் நிறைவேற்றி வைக்க ஆக்ஷேபணையாய் - முட்டுக் கட்டையாய் இருப்ப வர்கள் மனுதர்ம ஆக்ஷியைச் சேர்ந்த இந்தியர்களா, அல்லாதபடி அரசாங்கத் தார்களா? என்று யோசித்துப் பார்க்கும்படி விரும்புகின்றோம்.

ஆகவே அன்னியன் ஆக்ஷியில் இருந்துகொண்டு இருந்தாலும் நாம் செய்யக்கூடிய சௌகரியம் உள்ளவைகளை செய்துகொள்ளாமலும் மற்றவர் கள் செய்ய வந்தாலும் அதைத் தடுத்துக்கொண்டும் இருக்கின்ற மக்கள் தாங்களே ஆக்ஷி நடத்தக்கூடிய எஜமானர்களாகி விட்டால் மற்றவர்கள் சமஉரிமை பெறவோ மனித தர்மம் நடைபெறவோ தகுந்த தான ஆக்ஷியை நடத்த சம்மதிப்பார்களா என்பது அறிஞர்கள் கவனிக்கத் தக்கதாகும்.

ஆகவே இந்தியாவுக்கு ஏதாவது அரசியல் மாறுதல் ஏற்படுத்த வேண்டுமானால் அதில் மனுதர்மக் கொள்கைகள் - வர்ணாச்சிரம கொள்கை கள் - பார்ப்பன ஆதிக்க கொள்கைகள் ஆகியவைகள் அல்லாத ஆக்ஷி ஏதாவது ஏற்படக்கூடும் என்கின்ற நம்பிக்கை சிறிதாவது இருந்தால்தான் இந்த ஆக்ஷியை மாற்ற முயற்சிக்கலாமே ஒழிய மற்றபடி செய்யப்படும் அரசியல் முயற்சிகள் பாமரமக்களின் தற்கொலை முயற்சிகளே யாகும் என்பதை ஒவ்வொரு மனிததர்மவாதியும் உணர வேண்டுமாய் விரும்பு கின்றோம். இந்த இரகசியத்தை நமது மக்களில் பலர் அறிந்திருந்தும் கூட அவர்களில் பலரில் தற்கால நிலைமையானது மனு தர்மத்தை ஸ்தாபிக்கும் அரசியல் முயற்சியில் கலந்துகொள்ளவே தூண்டுகின்றது.

தற்கால நிலைமை என்றது என்னவென்றால், நமது பார்ப்பனர்கள் அதாவது சரீரப்பிரயாசைப்படாமல் சோம்பேரியாய் இருந்து காலம் கழிப்ப தில் அநுபவப்பட்டவர்கள் - நமது நாட்டை அன்னியர்களுக்கு காட்டிக்



கொடுத்து தங்களது ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்ற நிலையில் வெகுகாலமாய் இருந்து வருபவர்கள் - பல உத்தியோகங்களையும் அவற் றிற்கு பெரும் பெரும் சம்பளங்களையும் மற்றும் பல சௌகரியங்க ளையும் அடையத்தக்கதான திட்டங்களை ஏற்படுத்தி அதை அனுபவிப்பதே தேசீயத் தொண்டு என்றும், மக்களை நம்பச்செய்து அதனாலேயே தேசபக்தர்கள் கடமை யென்றும், வெகுகாலமாகவே அனுபவத்தில் கொண்டு வந்து விட்டதால் எல்லோரும் சோம்பேரிப் பிழைப்பை விரும்பும் தேசபக்தர்கள் தேசீய வாதியாக முயற்சிக்க வேண்டியவர்களாகி விட்டார்கள். இந்த நிலையில் உள்ள நம் நாட்டில் இப்போது வரவர இந்த மாதிரியான தேச பக்தர் கள் - தேசீயவாதிகள் மற்றவகுப்பிலும் அதிகரித்து விட்டார்கள். ஏனெனில் இப்போது கொஞ்ச காலமாக "வகுப்பு வாதங்கள்" ஏற்பட்டு ஒவ்வொரு வகுப்பிலும் தேசபக்தர்களும் தேசீய வாதிகளும் விகிதாசாரம் ஆவதற்கு புரப்பட்டுவிட்டதால் சிறுவகுப்பாய் இருந்து பெரும்பங்கு பெற்ற "தேசீய வாதிகளுக்கும்," "தேச பக்தர்களுக்கும்" தகுந்த அளவு "தேசீய வாதம்" செய்யவும் "தேசபக்தி" காட்டவும் இடமில்லாமல் போய்விட்டது. அன்றியும் தேசீயவாதிகளையும், தேசபக்தர்களையும் உற்பத்தி செய்யும் தொழில்சாலை களாகிய பள்ளிக் கூடங்கள் மேலும் மேலும் அதிகமான "தேசீயவாதிக ளையும்" "தேச பக்தர்களையும்" உற்பத்திசெய்து கொண்டு வரும் காரணத்தால் ஏற்கனவே இருந்து வந்த நியாயவாதி வேலைகளும், மோக்ஷ வாதி வேலைகளும், தெய்வபக்தி வேலைகளும் இவர்களுக்கு போதுமான தல்லாமல் போய்விட்டதாலும் தேசீய வாதிகளுக்கு உடலில் வேலைசெய்து பிழைப்பது அவமானம் என்று கருதும்படியான அளவுக்கு அவர்கள் சரீரத்தில் பலக்குறைவும் மனதில் சோம்பேரித்தனமும் பேராசையும் ஏற்பட்டு விட்டதால் இந்த மாதிரி தேசீயவாதி வேலைகளையும், தேசபக்த வேலை களையும் இவர்களில் ஒவ்வொரு நபரும் கைகொள்ள வேண்டியதாய் நிர்பந்தம் ஏற்பட்டு விட்டது.

ஆகவே இந்த தேசீய வாதிகளுக்கும் தேசபக்தர்களுக்கும் உடலில் பாடுபடக்கூடிய ஒரு சக்தியோ, அல்லது பாடுபட்டு சாப்பிடுவது அவமான மல்ல என்கின்ற ஒரு எண்ணமோ, சோம்பேரியாக இருந்து மக்களை ஏமாற்றி வயிறுவளர்ப்பது அவமானம் என்கின்ற ஒரு உணர்ச்சியோ ஏற்படும்வரை இந்த தேசத்தில் ஏதாவது ஒரு வேஷத்தில் தேசீயக்கிளர்ச்சி என்பது இருந்து கொண்டு அநேக "தேசபக்தர்களையும், தேசீய வாதிகளையும்" ஆதரித்துக் கொண்டுதான் இருக்கும். இப்படிப்பட்ட கிளர்ச்சிகளுக்கு "மகாத்மா காந்தி" என்கின்ற ஒரு "அவதார புருஷரே" தான் வேண்டும் என்கின்ற அவசியமும் இல்லை. உதாரணமாக யார் மந்திரியாகவந்தாலும் வரவேற்க ஒரு கூட்டம் எங்கும் இருப்பது போல யார் தலைவராக வந்தாலும் பின்பற்றி "தேச பக்தியை" காட்டி தேசீயவாதிகளாவதற்கு ஒரு கூட்டம் காத்துக்கொண்டுதான் இருக்கும்.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே இந்த அரசாங்கத்தினால் இந்த நாட்டின் தேசீயக் கிளர்ச்சி என்பதை சுலபத்தில் இனி நிறுத்திவிட முடியாது என்று தைரியமாய்ச் சொல்லுவோம். அந்தப்படி நிறுத்துவதும் இந்த மாதிரி ஆக்ஷிக்கு நன்மை அல்ல என்றும் சொல்லுவோம். நல்ல எண்ணம் கொண்ட அரசாங்கம் இந்நாட்டு நன்மையை உத்தேசித்து இவ்வித கிளர்ச்சிகளை நிறுத்த ஆசைப் பட்டால் முதலாவதாக கல்விச் சாலைகளை சோம்பேரியாக்கி தேசீயவாதி யாகவேண்டிய நிர்பந்ததில் வைக்கும் படிப்பைக் கொடுக்காமலும் அதாவது தேசத்தைக் காட்டிக்கொடுத்தும் மக்களை ஏமாற்றி சோம்பேரியாய் இருந்து பிழைப்பதற்கு மட்டும் தகுதியான படிப்பாகிய "மேல் படிப்பைக்" (Higher Education) கொடுக்காமல் 3வது பாரத்தோடேயே பிள்ளைகளின் புஸ்தகப் படிப்பை நிறுத்தி அவர்களுக்கு சிறுவயதிலேயே பாடுபட்டுச் சாப்பிடும்படி யான சரீர வலிமையையும், மன வலிமையையும் கொடுக்கும்படியானதுமான கல்வியைக் கொடுத்து வரவேண்டும்.

பிள்ளைகள் பள்ளியை விட்டு நின்றவுடன் தொழில் செய்யும்படி யான தொழில் சாலைகளையும் விவசாயங்களையும் ஏராளமாய் சர்க்கார் தரப்பில் வைத்திருக்க வேண்டும். இந்தமாதிரி செய்தால் ஒழிய இன்றைய தேசபக்தியும், தேசீய வாதமும் இந்த நாட்டில் இனிஒருநாளும் குறைவு படவே படாது.

இப்போதே பதினாயிரக்கணக்கான வாலிபர்கள் சோம்பேரி மனப் பான்மையுடன் ஆகாயக்கோட்டைகளைக் கட்டிக்கொண்டு கஞ்சிக்கு வகை யில்லாமல் தங்கள் பெற்றோர்களால் படிக்க வைக்க ஏற்பட்ட செல வினால் குடும்பப் பொருள்களை இழந்தும், சிலர் கடன்களுடனும் திரிந்து கொண்டும் இருக்கின்றார்கள். இவர்களுக்கெல்லாம் வயிற்றுப் பசிக் கொடுமை தீர வேண்டுமானால் தேசீய வாதி என்றோ, தேச பக்தர் என்றோ சொல்லிக் கொண்டு ஏதாவது ஒரு கிளர்ச்சியில் சேர்ந்து வயிறு வளர்ப்பதை விட வேறு என்ன வழியிருக்கின்றது? என்று அரசாங்கத்தாரை நாம் கேட்கின்றோம்.

இந்த தேசபக்தியும் தேசியவாதமும் அரசாங்கத்தாரை ஒன்றும் செய்து விட முடியாது என்கின்ற நம்பிக்கையுடன் அரசாங்கம் தைரியமாயிருந் தாலும் "சமாதானமாய் ராஜ பக்தியுடன் வாழும் குடி மக்களுக்கு" அதாவது பணக்காரர்களுக்கும் அரசியல் மூலம் பதவி பட்டம், பணம் பெற நினைத்துக் கொண்டிருக்கும் வக்கீல்கள் முதலியவர்களுக்கும், பெரிய விவசாயிகளுக் கும் எவ்வளவு தொல்லை விளைவித்து வருகின்றது, விளைவிக்கப் போகின்றது என்பதை அரசாங்கத்தார் உணரவேண்டியது முக்கிய கடமை யாகும்.

சமீபத்தில் காலம் சென்ற சட்டமறுப்புக்கிளர்ச்சி இன்னும் தொடர்ந்து நடப்பதற்குப் பணமும், இன்னமும் தொடர்ந்து ஜெயிலுக்குப் போய் "மாபெரும் தியாகிகள்" ஆவதற்கு தேசியவாதிகளும், தேசபக்தர்களும்



தாராளமாய் இருப்பதாக வீம்பு பேசிக்கொண்டிருந்தும் அது திடீரென்று நிறுத்தப்பட்டதற்கு காரணம் என்ன? சர்க்காருக்கு ஏற்பட்ட– ( இல்லை ) ஏற்பட்டதாகச் சொல்லப்பட்ட கஷ்டங்களைவிட பொது ஜனங்களுக்கு (செல்வவான்களுக்கு – முதலாளிகளுக்கு) உண்மையில் ஏற்பட்ட கஷ்டமும் நெருக்கடியுமே தலைவர்களை மிரட்டி நிறுத்தச் செய்து விட்டது.

ஆகவே இனி எவ்வித சீர்திருத்தம் வந்தாலும் (காரியமான சீர் திருத்தம் ஒன்றுமே வரப்போவதில்லை) அச்சீர்திருத்தத்தில் இந்த மாதிரியாக மக்கள் தேசீய வாதிகளாகவும் தேசபக்தர்களாகவும் ஆய்த்தீர வேண்டிய கஷ்டத்திற்கு இடமில்லாமல் செய்தாலொழிய "தேசிய கிளர்ச்சி" ஒருக் காலமும் இந்த நாட்டில் இனி நிறுத்தப்படப் போவதில்லை. ஏனெனில் இக் கிளர்ச்சி ஒன்றேதான் இப்போதைய வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்கக்கூடியதாகி விட்டது. நிற்க

எது எப்படியிருந்தபோதிலும் இம்மாதிரியான தேசபக்தர்களும் தேசியவாதிகளும் தாராளமாய் ஏற்படும் நிலை ஏற்படுவதானது நமது கொள்கைக்கு மிகவும் நன்மை என்கின்ற நம்பிக்கை நமக்கு உண்டு. எப்படி யெனில் இந்த தேசபக்தக்கூட்டம் இன்று சர்க்கார் பக்கத்தில் திரும்பி இருப் பதை மறந்து விட்டு மக்கள் பக்கம் திரும்ப ஆரம்பித்தால் வெகு சீக்கிரத்தில் சமதர்ம ஆட்சி ஏற்பட சௌகரியம் ஏற்பட்டுவிடும் என்பதில் சந்தேக மில்லை. ஆனால் சமதர்ம ஆட்சி ஒரு நாட்டில் ஏற்பட வேண்டு மானால் மனுதர்மத்தால் மக்களுக்கு இருக்கும் அவமானம் விளங்கி வாலிபர் களுக்கு சாப்பாட்டுக்கு இன்னமும் சற்று அதிகமான கஷ்டம் ஏற்பட வேண் டும். அப்பொழுது தான் அவமானத்துடன் வாழ்ந்து – பட்டினி கிடந்து – உயிர் மாள்வதைவிட சமதர்மத்திற்கு உயிர்விடுவது மேல் என்கின்ற உணர்ச்சி நம் வாலிபர்களுக்கு உண்டாகும். ஆதலால் இக்கிளர்ச்சியும் நன்மைக்கே தான்.

**குடி அரசு – தலையங்கம் – 17.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# “நான்”

சென்ற வாரத்திற்கு முந்திய வாரத்தில் ஆத்மா என்னும் விஷயத்தைப் பற்றி எழுதிய வியாசத்தின் இறுதியில் அதன் தொடர்ச்சி பின்னால் வரும் என்று எழுதப்பட்டிருந்தது. அதாவது ஆத்ம உணர்ச்சி என்று சொல்லப்படு வதான “நான்” (என், எனது, என்னுடைய) என்பதின் தன்மையைப் பற்றி எழுதுவதாக எழுதியிருந்தோம்.

ஆகவே இப்போது மனிதன் தன்னை உணர்த்தும் வகையில் நான் என்று சொல்லிக் கொள்வது எது என்பதே இப்போது இவ்வியாசத்தில் ஆராய்வதாகும். முன் வியாசத்தில் ஆத்மா என்பதைப் பற்றிச் சொன்னது போலவேதான் இப்போது “நான்” என்பதைப் பற்றியும் சொல்ல வேண்டி யிருக்கின்றது.

மனிதன் தன்னை நான் என்று சொல்லிக் கொள்வது எதனால்? அது எது? என்னும் ஆராய்ச்சியானது இந்து மதம் என்பதின் கடைசி அதாவது “வேதாந்த” தத்துவமாகப் பாவிக்கப்பட்டு “அதைக் கண்டுபிடிப்பதே கடவுளைக் கண்டு பிடித்ததாகும்” என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

உதாரணமாக “தன்னை அறிந்தவனே கடவுளை அறிந்தவனா வான்” என்றும், “தன்னைத்தான் அறிந்தால் கடவுளை அறியவேண்டிய தில்லை” “தன்னை அறிந்தவரை ஞானி” என்றெல்லாம் சொல்லப் படுவதை நாம் கேட்டிருக்கின்றோம்.

ஆகவே இந்தப்படி சொன்னவர்கள் எல்லாம் ஒரு மனிதன் தன்னை ‘நான்’ என்று சொல்லிக்கொள்கின்றானே அது எது என்று கண்டுபிடிக்கும் விஷயத்தில் ஏதோ ஒரு பெரிய கஷ்டம் இருப்பதாக நினைத்தோ அது சுலபத் தில் மனதுக் கெட்டாதது என்று கருதியே இப்படிச் சொல்லியிருக்கக் கூடும் என்பதாகவும், மற்றும் ‘நான்’ என்பதை கண்டுபிடிக்க முயற்சி செய்து ஒருவன் அதைக் கண்டுபிடித்து விட்டானேயானால் பிறகு அவன் “ஞானி யாகவும்” “துறவியாகவும்” அல்லது கடவுளைப்பற்றி கவலைப்பட வேண்டி யவனல்லாத – லக்ஷியம் செய்யப்பட வேண்டியவனல்லாத “நாஸ்தீகனாக” வும் ஆகிவிடக்கூடும் என்று கருதிச் சொன்னதாகவும் இருக்கக்கூடும் என்பதாக முடிவு செய்து கொள்ள வேண்டியிருக்கின்றது.



எப்படி இருந்தாலும் ஒரு மனிதன் தான் யார்? தனக்குள் இருந்து நான் – என் என்று வரும் உணர்ச்சி எது? அதெப்படி உண்டாகின்றது? எது வரையில் அவ்வுணர்ச்சி இருக்கின்றது? என்பவை முதலான உண்மையை உணர்ந்தால் அவன் நாஸ்திக அபிப்பிராயத்தை அதாவது ஆத்மாவோ, கடவுளோ இருக்கின்றது என்பதை நம்பாத கொள்கையையே கொள்ள வேண்டியவனாகி விடுவான் என்று சொல்லப்படுவதில் உண்மை உண்டு என்பதை ஒப்புக் கொள்ளுகின்றோம்.

உலகத்தில் பெயரும் – உருவமும் உள்ள வஸ்துக்கள் எல்லாம் ஒரு வித சேர்க்கையால் அதாவது பல கூட்டுப் பொருள்களால் சேர்ந்து இருக் கும் வடிவத்தையே பெரிதும் உணர்த்துவதாகும்.

ஏனெனில் உலகத்தில் உள்ள எந்தப் பெயருக்கும் மாறுதலையடை யாத ஒரு தனி வஸ்து என்பது கிடையவே கிடையாது என்பதை ஞாபகத் தில் வைத்துக் கொள்ளவேண்டும், ஏனெனில் எந்தப் பெயரும் ஒரு தோற் றத்திற்கு அல்லது ஒரு உருவத்திற்கு அல்லது ஒரு வடிவத்திற்குத்தான் உபயோகிக்கப்பட்டு – சொல்லப்பட்டு வருகின்றதே அல்லாமல் வஸ்து வுக்குப் பெயர் சொல்லப்படுவதில்லை என்பதேயாகும்.

உதாரணமாக நாம் ஏதாவது ஒரு வஸ்து என்பதை எடுத்துக் கொண்டு அதற்குப் பெயர் என்ன? என்று ஒரு மனிதனைக் கேட்டு, அவன் சொன்ன பெயரையே திருப்பிச் சொல்லி அந்தப் பெயருக்குண்டான வஸ்துவைத் தொட்டுக் காட்டும்படி அம்மனிதனையே கேட்டால், அந்த மனிதன் தொட்டுக் காட்டும் பாகத்தில் இருக்கும் வஸ்துவானது அந்தப் பெயரை அதாவது அவன் முன் சொன்ன பெயரை உடையதாக அது காணப் படாததை நாம் நன்றாய்ப் பார்க்கலாம், அதாவது

ஒரு லாந்தர் – ஒரு மேஜை–ஒரு கடிகாரம் – ஒரு புஸ்தகம் என்பது போன்ற பெயர்களை உடைய வஸ்துக்கள் என்பவைகளில் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொண்டு அவற்றின் பெயர் என்ன என்று கேட்டால் முறையே முன் சொன்ன பெயர்களைத்தான் சொல்லுவான்.

ஆனால் ஒரு லாந்தர் என்பது எது என்று தொட்டுக் காட்டச் சொன்னால் லாந்தர் என்பதில் அவன் தொட்டுக் காட்டிய பாகம் ஒரு சிமிணி யையோ, கண்ணாடியையோ, தகட்டையோ, கம்பியையோ, ஆணியையோ தான் தொட்டுக் காட்டப்பட்டதாய் இருக்கும்.

அதுபோலவே ஒரு மேஜையைத் தொட்டுக் காட்டச் சொன்னால் தொட்டுக் காட்டிய பாகம் ஒரு பலகையையோ, அல்லது காலையோ, ஆணியையோ, குமிளையோ, கைப்பிடியையோ தான் தொட்டுக் காட்டியதாய் காணப்படும்.



RangaRakes tamilnavarasam.com

அது போலவே ஒரு கடிகாரம் என்பதையும் தொட்டுக் காட்டச் சொன்னால் அவன் மேல் மூடியையோ, கண்ணாடியையோ அல்லது, திறந்த கடிகாரமாய் இருந்தால், ஒரு சக்கரம் என்பதையோ, ஆணி என்பதையோ தொட்டுக் காட்டியதாகத்தான் காணப்படும்.

அதுபோலவே ஒரு புஸ்தகம் என்பதையும் தொட்டுக் காட்டச் சொன்னால் அவன் தொட்டுக் காட்டிய பாகம் காகிதமாகவோ, அட்டையாகவோ, காலிகோ துணியாகவோ, தோலாகவோ தான் காணப்படும்.

இப்படியே மற்றும் அதன் உள்பிரிவு பெயர்களும் அதாவது மேல் சொல்லப்பட்ட பெயர்களும் சரியானபடி தொட்டுக் காட்டப்பட்டதாகவும் இருக்கமுடியாது. ஏனெனில் அவன் லாந்தர் என்பதாகக் காட்டியது கம்பி என்பதனாலும், கம்பி என்பதாக ஒன்றைத் தொட்டுக் காட்டியதாக இல்லாமல் இரும்பைத் தொட்டுக்காட்டியதாகதான் காணப்படும். இரும்பு என்பதை காட்டும் போது ஏதோ ஒரு வகையான மண்ணின் சேர்க்கையை காட்டியதாகத்தான் காணப்படும். இப்படியே நமக்குக் காணப்படும் வஸ்துக்கள் எல்லாம் ஏதோ ஒரு ரூபமாத்திரத்திற்கு - ஒரு உருவத்திற்கு-ஒரு மாதிரியான தோற்றத்திற்கு அந்தப் பெயர் சொல்லப்படுவதாகக் காணப்படுமே அன்றி அந்தப் பெயருக்கு அந்த வஸ்து கட்டுப்பட்டு அந்த வஸ்துக்கள் வேறு எந்த ரூபத்தை அடைந்தாலும், வேறு எந்த குணத்தை அடைந்தாலும் அந்தப் பெயரையே யுடையதாக காணும்படியான ஒரு வஸ்துவும் காணப்பட முடியாது என்பது இவற்றிலிருந்து நன்றாய் உணரக் கிடைக்கின்றது.

ஆகவே லாந்தர் என்றதும், மற்றும் மேஜை, கடிகாரம், புஸ்தகம் என்றதும் ஒரு வித வடிவத்தில் காணப்படும் ஒரு தோற்றத்தின் பெயரே அல்லாமல் ஒரு வஸ்துவின் பெயர் அல்ல என்பதும் இதனால் உணரத் தகுந்ததாகும்.

எப்படியெனில் மேஜை நாற்காலி, பெஞ்சு, ஊஞ்சல் என்று சொல்லப் படுவதான வஸ்துக்கள் மரம் என்னும் ஒரே மூலப் பொருளாலும் இரும்பு என்னும் ஒரே உபமூலப் பொருளாலும் செய்யப்பட்டிருந்தாலும் தனித்தனி வடிவத் தோற்றத்தினால் தனித்தனி பெயரை உடையதாகி இருப்பது போலவே உலக வஸ்துக்கள் வடிவம், உருவம், சாயல், குணம், நிலை முதலாகிய பேதத்தால் பலவித பெயர்களை உடையதாயிருந்து பல பல காரணங்களால் அதே வஸ்துக்கள் வேறு பல பெயர்களையும் அடைந் தாலும் முடிவில் அவற்றின் மூலப்பொருள்கள் பெயர் எல்லாவற்றிற்கும் ஒரே (தாது) பெயருடைய வஸ்துவாகவேதான் இருக்கும்.

இதுபோலவேதான் ஜீவன்கள் என்கின்ற 'உயிர்'ப் பிராணிகள் எல்லாம்கூட உருவத்தில் -தோற்றத்தில் வேறு வேறு வகையாய் - பெயராய் சொல்லப்பட்டாலும் அவற்றின் மூலப் பொருள்களும் ஒன்றேயாகும்.



அதாவது மரத்தையே மூலப் பொருளாய்க் கொண்டமேஜை, நாற்காலி பெஞ்சு முதலிய பல பெயர்களுக்கு உருவம் தோற்றம் ஆகியவைகளே காரணமாய் இருப்பது போல் அணுக் கிருமி, பூச்சி, புழு, பக்ஷி, மிருகம், குரங்கு மனிதன் முதலாகிய பல ஜெந்துக்களும் உருவம், தோற்றம், குணம் முதலிய காரணமாய் பலபெயர்கள் சொல்லப்பட்டாலும் தொட்டுக்காட்டும் பாகங் களானது எல்லா ஜீவ வர்க்கத்திற்கும் ஒரே மாதிரியான-ஒரே பெயர் கொண்ட தான மூலப் பொருளாகத்தான் இருக்கும். ஆகவே ஜீவ வர்க்கங்கள் என்பனவாகிய சகல ஜீவப் பிராணிகளும் சாயல், உருவம், தோற்றம், குணம் முதலியவற்றை அவற்றின் மூலப் பொருள்களும், தத்துவமும் ஒன்றே யாகும்.

எனவே எத்தனையோ கோடிவித ஜீவப்பிராணிகள் என்பதில் மனிதன் என்பதும் ஒருவிதமான தோற்றமுடைய வுருவத்திற்கு சொல்லப்படும் பெயரேயொழிய மனிதன் என்கின்ற ஒரு தத்துவத் தனிப் பொருள் இல்லை என்பதை இதனால் ஒருவாறு உணரலாம். ஏனெனில் மனிதன் என்று குறிப்பிடுவதற்கு தொட்டுக்காட்டக்கூடிய ஒரு வஸ்து மனித சரீரத்தின் எந்த பாகத்திலும் கிடையாது என்பதாலேயாகும். உதாரணமாக ஒரு மனித உருவத்தைக் காட்டி அவனை மற்ற ஒரு மனிதனைத் தொட்டுக் காட்டச் சொன்னால் அவன் ஒரு மனிதன் என்பவனின் சரீரம் என்பதில் ஏதாவது ஒரு அவயவத்தைத்தான் தொட்டுக்காட்டுவான். அந்த அவயவத்திற்கு ஏற்கனவே பெயர் கை, கால்,வயிறு, மார்பு, முதுகு, தோள் என்பவை முதலாகிய ஏதாவது ஒரு பெயரையுடைய அவயமாகத்தான் இருக்க முடியும். அந்தப் பெயருக்குடைய அவயவ வஸ்துவையும் கவனித்துப் பார்க்க ஆரம்பித்தால் அது தசை, தோல் முதலாகிய பெயர்களையுடைய பொருளாகத்தான் காணப்படும். இப்படி எல்லாம் இருந்தாலும் கூட அப்படி காட்டப்பட்ட மனிதனும் இயங்குதல் அதாவது அசைகின்ற சக்தி இருக்கும் போதுதான் அந்த தோற்றத்திற்கு மனிதன் என்கின்ற பெயரை உடையதாகவும் அதாவது அசைகின்ற சக்தி இல்லாது போய் விட்டால் மனிதன் என்ற பெயரையுடைய அதே தோற்றம் பிணம் என்னும் பெயரையுடையதாக ஆகிவிடுகின்றது.

அன்றியும் மனிதன் அசையும் சக்தியை உடைத்தாயிருக்கும் வரை அந்த சரீரத்தில் எந்த பாகம் அதாவது முன் சொல்லப்பட்ட அவய வங்களாகிய கண், காது, வாய், கால், கை முதலாகிய எந்த பாகம் போய் விட்ட போதிலும் மனிதன் என்றே சொல்லப்படுகின்றது. ஆகையால் அசையும் சக்தி உள்ள ஒருவித தோற்ற உருவத்திற்குத்தான் இங்கு மனிதன் என்று சொல்லப்படுவதாய் இருந்து வருவதை பார்க்கின்றோம். இந்தப் படியான மனிதன் அசையும் சக்தியை உடைத்தாய் இருக்கும்வரை தான் அவனுக்குள் உயிரோ-ஜீவனோ-ஆத்மாவோ ஒன்று இருக்கின்றது என்று கருதுகின்றார்களே ஒழிய வேறில்லை.



RangaRakes tamilnavarasam.com

இந்த அசையும் சக்தி இருக்கின்ற ஜீவன்கள் எல்லாவற்றிற்குமே தான் ஆத்மா என்பதாக ஒன்று இருக்கின்றது என்பது ஆத்மாவாதிகளின் கொள்கையாகும். அதாவது "சரீரத்தில் இருந்து ஆத்மா பிரிந்து விட்டால் அசைவு நின்று விடும்". அதாவது மனிதன் செத்துப்போவான் என்று சொல்லுவார்கள். எப்படி இருந்தாலும் "சரீரத்திற்கு அசையும் சத்தியை கொடுப்பது தான் ஆத்மா" என்பது ஆத்மாவாதிகள் கொள்கையென்பதும் இதனால் புலப்படும். ஆகவே இந்த அசையும் சக்தி சரீரத்திற்கு எப்படி உண்டாகின்றது? இது எப்படி நின்று போகின்றது? என்பதை சரிவர உணர்ந்தோமானால் ஆத்மாவின் யோக்கியதை இன்னதொன்று ஒருவாறு விளங்கிவிடும்.

இதற்குமுன் ஆத்மாவைப் பற்றி சில கேள்விகள் எழுகின்றன.

அதாவது சரீரத்திற்குள் ஆத்மா எப்படி வந்தது? ஏன் வந்தது? சரீரத்தை விட்டுவிட்டு ஆத்மா எப்படி வெளியேறுகின்றது? அது ஏன் வெளியேறிவிடுகின்றது? எந்த மாதிரி ஆத்மா மனித சரீரத்திற்குள் வருகின்றது? எந்த மாதிரி ஆத்மா கழுதை முதலிய மிருக சரீரத்துக்குள் வருகின்றது? எந்த மாதிரி ஆத்மா அணுக்கிருமி முதலிய சரீரத்திற்குள் நுழைக்கின்றது? ஜீவன்களின் அசைவு, பலம், குணம் முதலிய பலவித மாறுதலான நடவடிக்கைகளுக்கு ஆத்மா காரணமா - அல்லது அதனதன் சரீர அமைப்பு காரணமா என்பன போன்ற பல கேள்விகளாகும். (இவை பழைய கேள்விகளாக பலருக்கு காணப்படலாம் என்றாலும் பழைய கேள்விகள் புதிய மனிதர்களுக்கு தோன்றக்கூடாமல் செய்வதற்கு பழைய காலத்தில் இருந்தே யாரிடத்திலும் சக்தியில்லாமல் போய்விட்டதால் அது புதிய மனிதர்களுக்கும் தோன்றுவதற்கு யார் என்ன செய்ய முடியும்) இவை ஒரு புறம் நிற்க இனி எடுத்துக் கொண்ட விஷயமாகிய 'நான்' என்பதைப் பற்றி கவனிப்போம்.

ஒரு மனிதன் தான் 'நான்' என்று சொல்லுவது அந்த மனிதனுக்குள் இருக்கும் அசையும் சக்தியாகிய ஆத்மா என்பதா? அல்லது வேறு பொருளா? என்று பார்ப்பதனால் அது வேறு பொருளா அல்லவா என்பதை கண்டு பிடிப்பதற்கு முன்னாலேயே ஆத்மா என்பது நான் என்று சொல்லுவதல்ல என்பதானது சீக்கிரத்தில் கண்டு பிடிக்கக்கூடியதாக இருக்கின்றது. எப்படியெனில் ஒரு மனிதன் பேசும்போது, "என் ஆத்மா என்றும், நான் என் ஆத்மாவை விடமாட்டேன் என்றும் இந்த மாதிரி நான், என், என்பது வேறு என்றும், ஆத்மா என்பது வேறு என்றும் பிரித்துப் பேசுவதையும் பேசும்படி இருப்பதையும் பார்க்கின்றோம்". ஆகவே சரீரத்தின் அசையும் சக்தி ஆத்மா என்றால், இந்த நான் என்பது அதைவிட்டு வேறுபட்ட மற்றொரு விஷயமாக இருக்கும் என்று கருத வேண்டியதாய் இருக்கின்றது என்பது இதனால் ஒருவாறு புலப்படும்.



ஆனால் ஒரு மனித சரீரத்தில் ஆத்மா என்பதாக ஒரு வஸ்துவும் உயிர் என்பதாக ஒரு வஸ்துவும் நான் என்பதான தன்மையை உணர்த்த ஒரு வஸ்துவும் ஆக மூன்று வஸ்துக்கள் இருக்கும் என்று நினைப்பது சரி யான நினைப்பாகாது என்பதோடு அப்படி நினைத்தாலும் அவைகளில் எது மனிதனை நடத்துகின்றது. அல்லது மனிதனுடைய நடத்தைக்கு ஜவாப் தாரித் தனமுடையது என்னும் விஷயம் மயக்கத்தையும் முரண்களையும் விளை விக்கக் கூடியதாக ஆகி விடும். ஆதலால் நான் என்று சொல்லப் படுவதும், எண்ணப்படுவதும் தனிப்பட்ட ஒரு வஸ்துவல்ல என்றுதான் எண்ண வேண்டியிருக்கின்றது. மற்றபடி பின்னை அது என்னமாய்தான் இருக்கக் கூடும் என்ற கேள்விக்கு நமது அபிப்பிராயத்தை தெரிவிக் கின்றோம்.

அது பிசகாய் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் அந்தப் பிசகானது ஆத்மா, ஜீவாத்மா, பரமாத்மா என்று பிரித்துச் சொல்லுகின்றது போன்ற அவ்வளவு பெரிய பிசகாகவும் ஆத்மாவுக்கு குணங்கள் கற்பிக்கின்ற அளவு பிசகாகவும் இருக்காது என்பது மாத்திரம் உறுதி. திருத்துவதற்கு யாவருக் கும் உரிமை கொடுத்தே நமதபிப்பிராயத்தை தெரிவிக்கின்றோமே யொழிய இதுவே சரியான அபிப்பிராயம் என்பதாக நாம் ஒன்றும் இவ்விஷயத்தில் சொல்ல வரவில்லை.

ஆகவே ஆத்மா என்பதாக தனித்துப் பிரித்து உணர்த்தக்கூடிய வஸ்து ஒன்று இல்லையென்று சொல்லுவதோடு இனி "நான்" என்ற உணர்ச்சி என்ன என்பதைப்பற்றி சிறிது சொல்லுவோம். *(தொடரும்)*

**குடி அரசு - கட்டுரை - 17.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# ஜனாப் அலாவுதீன் ராவுத்தர்

தென்னிந்திய நல உரிமைச் சங்க உதவித் தலைவரும், மதுரை முனிசிபல் கௌன்சிலரும், நமது நண்பருமான ஜனாப் கா.ம. அலாவுதீன் ராவுத்தரவர்கள் 5.5.31ந் தேதி காலை 7மணிக்கு தமது 55 வது வயதில் முடிவு எய்திய செய்தி கேட்டு நாம் பெரிதும் வருந்துகின்றோம். ஜனாப் ராவுத் தரவர்கள் பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்தில் அதிகக் கவலை பூண்டு, மிக்க அக்கரையுடன் தொண்டாற்றியவராவர். ஜஸ்டிஸ் கக்ஷி தோல்வி யடைந்த பிறகு மதுரையில் கூட்டப்பட்ட பார்ப்பனரல்லாதார் மகா நாட்டின் போது மிக்க ஊக்கத்துடன் ஒத்துழைத்து மகாநாட்டை சிறப்புற நடத்திவைத்த பெரியார்களில் இவரும் ஒருவர் ஆவார். இவர் காலஞ்சென்றது எல்லா பிராமணரல்லாதார்களுக்கும், சிறப்பாக மதுரை பிராமணரல்லாதாருக்கும் ஓர் பெரிய நஷ்டத்தை விளைவித்ததுடன் அவர்களின் முன்னேற்றத்தில் மிக்க கவலையுடன் அரும்பாடுபட்டு வந்த ஒரு உற்ற நண்பரை இழந்து விட்டார் களெனக் கூறுவது மிகையாகாது. நமது அனுதாபத்தை அன்னாரின் குடும்பத் தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - இரங்கல் செய்தி - 17.05.1931**

# 'சுதந்திர வீரன்'

சுதந்திர வீரன் என்னும் பத்திரிகையின் முதல் மலர், முதல் இதழ் வரப்பெற்றோம். அதன் தலையங்கத்தில் கடவுள், காந்தி, காங்கிரஸ், புராதான நாகரீகம், தேசீயம் ஆகியவைகளைப் புகழ்ந்தும், எழுதியிருக்கின் றதுடன் இதையே தமது கொள்கையாகவும் கொண்டிருப்பதாகவும் அறியக் கிடக் கின்றது. ஆதலால் இதன் கொள்கை 'காந்தீயம்' என்பதாகவே தெரிய வரு கின்றது. இப்பத்திரிகைக்கு உயர்திரு. எஸ். சத்தியமூர்த்தி ஐயரால் அனுப்பப் பட்டிருப்பதாய்க் காணப்படும் ஒரு வாழ்த்துச் செய்தியில் "இந்தியா சுய ராஜியம் இழந்து அன்னியர் கையில் சிக்கிப் படும் கஷ்டத்தில் ஒரு பாகத்தை அனுபவிப்பதுடன் தமிழ் நாட்டார் தங்கள் சுயமரியாதையையும் இழந்து கஷ்டப்படுகின்றார்கள்."

"ஆகவே சுதந்திர வீரன் சுயராஜியத்திற்குப் போராடுவதுடன் தமிழ் நாட்டார் இழந்ததை (சுயமரியாதையை) அடைய உதவுமென்று நம்பு கின்றேன்" என்பதாக எழுதி இருக்கின்றார். ஆகவே இதை லட்சியம் செய்து நடக்கும் முறையில் முயன்று நின்று வெற்றிபெற விரும்புகின்றோம்.

ஆசிரியர் திரு.ஜெ.பி.ராட்ரிக்ஸ்
**"சுதந்திர வீரன்"** ஆபீஸ்,
பெரிரா வீதி,
தூத்துக்குடி

**குடி அரசு - மதிப்புரை - 17.05.1931**



RangaRakes
tamilnavarasam.com

# காங்கிரஸ் கூட்டத்தில் சொற்பொழிவு

சகோதரர்களே!

நமது ஊருக்கு வந்த விருந்தாளியை வரவேற்கவும், அவருக்கு நமது மரியாதையைக் காட்டிக்கொள்ளவும் என்று நமது ஊர் மக்களின் பிரதிநிதி ஸ்தாபனமாகிய முனிசிபல் சபை திரு. சென்குப்தா அவர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரமளிக்கத் தீர்மானித்து, அவ்வரவேற்பளிக்கும் கூட்டத் திற்கு என்னை தலைமை வகிக்க வேண்டுமென்று நமது முனிசிபல் சேர் மென் திரு. ஷேக் தாவுத் சாயபு அவர்கள் விரும்பியபடியும், உங்கள் எல்லோருடைய ஆமோதிப்புப் படியும் எனக்கு அளிக்கப்பட்ட இந்தப் பெருமைக்கு நன்றி செலுத்துகின்றேன்.

திரு. சென்குப்தா அவர்கள் முதலில் முனிசிபல் நிர்வாகத்தைப் பாராட்டிப் பேசியபின் இந்த முனிசிபாலிட்டிக்கு மின்சார சப்ளை பொ றுப்பை ஒருவெள்ளைக்காரக் கம்பெனிக்கு அரசாங்கத்தார் கொடுத்து விட்டதைக் கண்டித்துப் பேசினார். அது மிகவும் சரியானதேயாகும். ஆனா லும், அக்குற்றம் முழுவதும் அரசாங்கத்தாருடையதல்ல. அவர்களுக்கு நம்மிடம் இவ்வளவு அலட்சியம் ஏற்படுவதற்கு நமது கேவல நிலைமையே காரணமாகும்.

நமக்கு உண்மையில் அரசாங்கத்தார் செய்தது தப்பு என்றும் அவர்கள் நம்மை அலட்சியம் செய்தது நமக்கு அவமானம் என்றும் நம் எல்லோருக்கும் தோன்றுமானாலும் நாம் இப்போதே ஒரு முடிவு செய்து கொள்ளவேண்டும். அதாவது, நமது முனிசிபல் சங்கத்தின் மூலம் வினி யோகிக்கப்பட அனுமதி கொடுத்தால் ஒழிய நாம் மின்சாரத்தை உபயோகித் துக் கொள்ளுவதில்லை என்கின்றதான ஒரு உறுதி நமக்கு இருக்க வேண்டும். அப்படியானால் தான் நமது காரியம் வெற்றிபெறும். நமது சுயமரியாதையும் காக்கப்படும். அப்படிக்கில்லாமல் சர்க்காராரை ஒருவர் வைது பேசவும் மற்றொருவர் கைதட்டவுமான காரியத்தால் ஒரு காரியமும் நடந்துவிடாது.

நிற்க, அரசியல் இயக்க சம்பந்தமாக திரு. சென்குப்தா அவர்கள் அநேக விஷயம் உங்களுக்கு எடுத்துச் சொன்னார். அக்கிராசனர் என்கின்ற முறையில் உபன்யாசகர் பேசிய விஷயத்தை ஒட்டியும், அதைப் புகழ்ந்தும்



பேசுவதுதான் எனது தர்மமாகுமே யொழிய அவற்றுள் அபிப்பிராயப் பேதப்பட்ட விஷயங்களை எடுத்துக் கொண்டு அக்கிராசனர் தான் மாறு பட்ட அபிப்பிராயத்தைத் தெரிவிக்கு முறையில் எதையும் பேசுவது தர்மமாகாது.

ஆகவே நான் அவர்கள் பேசிய விஷயங்களில் நான் மனப் பூர்வமாய் ஆமோதிக்கும் விஷயங்களை எடுத்துப் பேசிப்பாராட்டுவதன் மூலம் எனது கடமையைச் செலுத்துகிறேன்.

வெள்ளைக்கார ஆட்சியில், வியாபார முறையில் நமக்கு உள்ள கெடுதிகள் முழுவதும் திரு.சென்குப்தா அவர்கள் எடுத்துக்காட்டியது உண்மையேயாகும். அந்தப்படி வெள்ளைக்காரர்கள் தைரியமாய்ச் செய்ய நாம் விட்டுக் கொண்டே வந்துவிட்டோம். இப்போதும் அதைத் தடுக்க வேண்டுமானால் அவர்கள் இந்த நாட்டில் வியாபார ஆட்சி செய்யத் துடங் கின காலத்தில் நாம் எந்த விதத்தில் அவர்களுக்கு சௌகரியம் செய்து கொடுத்தோமோ, அதையே இனியும் செய்து கொண்டிருந்தால் முடியாது. அவர்களது வியாபார ஆட்சிக்கு இங்கு அவர்களுக்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்கும் தன்மைகளை ஒழிக்க வேண்டும். அதை திரு.சென்குப்தா அவர்கள் தனது பிந்திய பாகத்தில் தெளிவுபடுத்தி இருக்கிறார். ஆனால் இங்குள்ள பலருக்கு அவரின் முந்தியபாக உபன்யாசம் மிக சந்தோஷமாய் இருந்தது. அநேகர் கைத் தட்டினார்கள். தலை ஆட்டியும், குலுங்கிக் குலுங்கி யும் சிரித்தார்கள். ஏனென்றால் அவையெல்லாம் வெள்ளைக் காரர்களை வைதவைகளேயாகும்.

ஆனால் அவர் உபன்யாசத்தின் பிந்திய பாகம் அநேகருக்கு மிக்க சங்கடமாக இருந்ததை நான் பார்த்தேன்.முகத்தைச் சுண்டவைத்துக் கொண்டார்கள், தங்கள் அதிருப்தியையும் சிலர் காட்டினார்கள்.

திரு. சென்குப்தா அவர்களும் "இந்த நாட்டில் தீண்டாமை கொடுமை என் புத்தியை கலைத்து விட்டது" என்றும், "கோபியில் ஒரு பார்ப்பான் தைரியமாய் என்னை எதிர்க்க வந்துவிட்டான். நீங்கள் எப்படி இவ்வளவு தூரம் விட்டுக் கொண்டிருக்கின்றீர்கள்" என்றும் என்னைக் கேட்டார். நான் நீங்களே நேரில் பார்க்க நேர்ந்தது சந்தோஷம் என்று சொன்னேன்.

"காங்கிரஸ் காங்கிரஸ்" "காந்தி காந்தி" என்பதால் ஒரு காரியமும் ஆகிவிடாது.

காங்கிரசைப்பற்றி இங்கு எவ்வளவு பெருமைப்படுத்தி கூறிக் கொண்டாலும் அதற்கு திரு.சென்குப்தா சொன்னபடியான கொள்கையை யுடைய மெம்பர் லக்ஷம் ஜனங்களில் ஒருவர் கூட இல்லை என்றுதான் நான் சொல்லுவேன்.



RangaRakes tamilnavarasam.com

இன்று காங்கிரசில் மெம்பர்களாய் இருக்கும் ஜனங்களால் ஒரு காரியமும் முடிந்துவிடாது என்பது எனது உறுதி. பஞ்சகச்சமும், பட்டை நாமமும், உச்சிக் குடுமியும் வைத்துக்கொண்டு, "என்னைத் தொடாதே எட்டி நில்" என்று சொல்லுபவர்கள் தக்ளியை கையில் சுற்றிக்கொண்டு 4 அணா கொடுத்து காங்கிரஸ் மெம்பராகி "மகாத்மா காந்திக்கு ஜே" 'காங்கிரசுக்கு ஜே' என்று கூப்பாடு போட்டுக் கொண்டு இருப்பவர்கள், 100பேர்களால் ஆகும் வேலையை விட மக்களில் 'தீண்டாமை என்பதே கிடையாது இந்தியாவில் பிறந்தவர்கள் எல்லோரும் சகோதரர்கள், சோம்பேரி வாழ்க்கையை ஒழிக்க வேண்டும்' என்று உண்மையாய் கருதிக் கொண்டு கதர் கட்டாமல் 'காந்தி ஒழிக' 'காங்கிரஸ் ஒழிக' என்று சொல்லுகின்ற வனாயிருந்தாலும் அவனே நாட்டுக்கு நன்மைச் செய்கின்றவனாவான். பிந்தியவனது முயற்சியினால் தானாகவே அன்னியநாட்டு வியாபார ஆக்ஷி ஒழிந்துபோகும் என்பது எனது நம்பிக்கை.

இந்த தீண்டாமை ஒழிக்கும் விஷயத்தில் காங்கிரசு மெம்பர்களை விட காங்கிரஸ் மெம்பர் அல்லாதவர்களிலேயே அதிகமான ஜனங்கள் காரியத்தில் நடந்து காட்டுகின்றவர்களாக இருக்கின்றார்கள்.

போலி மெம்பர்களைக் கொண்ட எந்த ஸ்தாபனமும் எவ்வளவு செல்வாக்கு உள்ளதாக இருந்தாலும் அதனால் ஒரு பயனுமே விளையாது.

தீண்டாமையை அனுஷ்டிப்பது காட்டுமிராண்டித்தனம் என்று திரு.சென்குப்தா சொன்னார். இப்போது காங்கிரசிலிருப்பவர்களில் காட்டு மிராண்டிகளல்லாதவர்கள் எத்தனை பேர்கள் இருக்கக்கூடும் என்று நீங்களே யோசித்துப்பாருங்கள்.

வெள்ளைக்காரர்கள் ஆக்ஷி சில விஷயங்களில் விஷக்கிருமிகளின் தொல்லைகள் போலத்தான் இருக்கின்றது என்பதை நான் ஒப்புக் கொள்ளு கின்றேன்.

ஆனால் விஷக்கிருமிகள் ஏற்படாதபடி நம் நாட்டை சுத்தமாக வைத் திருக்கவேண்டாமா என்று கேட்கின்றேன்.

சிறிதும் குப்பை கூளமில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். குப்பை கூளம் மலிந்து கெட்டகாற்று ஏற்பட்டால் அதிலிருந்து விஷக்கிருமிகள் உண்டாகித்தான் தீரும். அதன் ஆதாரத்தை கவனியாமல் விஷகிருமி கடித்ததற்கு மாத்திரம் அவ்வப்போது மருந்து போட்டுக் கொண்டிருந்தால் கிருமி உபத்திரவம் ஒரு நாளும் நீங்காது. அது உண்டாவதற்கு ஆதாரமான குப்பை கூளங்களை அடியோடு அப்புறப்படுத்த வேண்டும். அதுபோலவே நமது நாட்டிற்கு அன்னிய ஆட்சி ஏற்பட வேண்டிய காரணம் என்ன? என்பதை கவனியுங்கள். அதை யார் கொண்டுவந்து விட்டார்கள் என்பதை



நினைப்பூட்டிப் பாருங்கள். அந்தக் காரணத்தை ஒழியுங்கள். அக்காரணம் தீண்டாமை, ஜாதி உயர்வு தாழ்வு வித்தியாசமேயாகும். அதை கவனிக்காமல் காந்திக்கு ஜே வந்தே மாதரம் என்றால் மந்திரத்தில் மாங்காய் விழுமா? அன்னியரை ஏமாற்ற நினைத்து நாமே ஏமாந்து போகத்தான் இவைகள் உதவும். உண்மையிலேயே நாம் வெள்ளைக்கார கொடுமையைவிட நமது நாட்டு மக்களில் சிலருடைய கொடுமையாலேயேதான் அதிக கஷ்டப்படு கின்றோம். அன்றி யும் இந்த மக்களாலேயேதான் வெள்ளைக்காரர்கள் மேலும் மேலும் கொடுமை செய்ய இடமேற்படுகிறது.

ஆகவே, சகோதரர்களே! நமது பெரியார் திரு.சென்குப்தா அவர்கள் சொன்ன விஷயங்களை நீங்கள் நன்றாய் கவனித்து ஒவ்வொன்றையும் உங்கள் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து தள்ளுவதைத் தள்ளி கொள்ளுவதைக் கொண்டு சரியென்று பட்ட வழியில் நடவுங்கள் .

*குறிப்பு : ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் மண்டபத்தில் 16.05.1931 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய தலைமையுரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 17.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# திருச்சி பார்ப்பனரல்லாத வாலிபசங்க இரண்டாவது ஆண்டு விழா

தலைவர் அவர்களே ! சகோதரர்களே!!

"சுயமரியாதையும் சுயராஜியமும்" என்பதுபற்றி பேசுவது இங்குள்ள சிலருக்கு திருப்தியைக் கொடுக்காது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அந்தப்படி அதிருப்திப்படுபவர்களில் அநேகர் நான் பேசிய விஷயங்கள் முழுவதையும் உணர்ந்த பின்பு ஒரு சமயம் திருப்தி அடையக்கூடும் என்று நம்புகின்றேன்.

சிலர் எந்த விதத்திலும் திருப்தி அடைய மாட்டார்கள் என்றாலும் சுயராஜ்யம் என்பதைப் பற்றி மற்றவர்கள் பேசுபவைகளில் இருந்து நான் அடையும் அதிருப்தி அவ்வளவு அவர்களுக்கு நான் பேசுவதில் ஏற்படாது என்றே நினைக்கின்றேன்.

பொதுவாகவே, சுயராஜ்யம், சுயராஜ்யம் என்கின்ற கூப்பாடு நாட்டில் நிறைந்து அந்த வார்த்தைக்கும் ஒருவித செல்வாக்குண்டாக்கப்பட்டிருக்கும் இந்தச் சமயத்தில் அதற்கு விரோதமாக ஒருவர் பேசுவது என்பது சற்று கஷ்டமான வேலை என்பதோடு அளவுக்கு மீறின தைரியம் வேண்டி யிருக்கும் என்று சொல்லுவார்கள். ஆனால் எனக்கு அது அவ்வளவு கஷ்டமாகவோ, அதிக தைரியம் வேண்டிய காரியமாகவோ தெரிய வில்லை. ஏனெனில் எனது அனுபவத்தில் அது மிக சாதாரண விஷயமாகவே தோன்று கிறது. ஆனால் கேட்பவர்களுக்கு ஏதாவது மன வருத்தம் உண்டாகலாமே என்கின்ற எண்ணம் மாத்திரம் சற்று தயங்கச் செய்கின்றது. இருந்த போதிலும் யாரையும் நான் சொல்லுவதை எல்லாம் அப்படியே ஒப்புக்கொள்ளும்படி கேட்கப்போவதில்லை. அன்றியும், நான் சொல்லுவ தெல்லாம் சரியாகவே இருக்குமென்று கண்மூடித்தனமாய் நம்புங்கள் என்றும் உங்களுக்குச் சொல்லுவதில்லை. என் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன். அதை உங்கள் அபிப்பிராயங்களோடு வைத்து ஒத்துப் பார்த்து சரி எது, தப்பு எது என்பதை உணர்ந்து நீங்கள் உணர்ந்தபடி நடவுங் கள் என்றுதான் சொல்லுகின்றேன்.

ஆதலால் நான் சொல்லுவதில் யாருக்கும் எவ்வித கெடுதி ஏற்படவோ, சங்கடம் ஏற்படவோ இடமிருக்காது. மனிதன் பொதுவாகவே எவ்வித



அபிப்பிராயங்களையும் கேட்பதற்கும் தெரிவதற்கும் ஒரு வித ஊக்கம் உடையவனாக இருக்க வேண்டும். இல்லை யானால் மனிதன் உண்மையைக் கண்டு பிடிக்கவோ, அறிவு பெறவோ, முன்னேற்றமடையவோ முடியாது.

அன்றியும் நமது சொந்த அறிவில் நமக்குப் போதிய தைரிய மிருந்தால் யார் என்ன சொன்னாலும் யாரிடம் நாம் எதைக் கேட்டாலும் நமக்கு எவ்வித ஆபத்தும் வந்துவிடாது. ஆகையால் ஒருவரை பேசாமல் இருக்கச் செய்வது என்பதோ, பேசுவதைக் கூட கேட்காமல் இருக்கச் செய்வது என்பதோ கோழைத்தனமேயாகும்.

ஆகவே நான் சொல்லுவதை விருப்பு வெறுப்பு இல்லாமல் நடுநிலை யிலிருந்து கேட்கும்படி கோறுகிறேன்.

சகோதரர்களே! சுயமரியாதை சுயராஜ்யம் என்று சொல்லப்படும் இரண்டு வார்த்தைகளிலும் சுயமரியாதை என்பது நீங்கள் எல்லோரும் பொருள் தெரிந்து அனுபவத்தில் உங்கள் வாழ்க்கையில் எப்போதும் பிரயோகித்துவரும் ஒரு உண்மை வார்த்தை என்பதில் உங்கள் யாருக்கும் ஆக்ஷேபணை இருக்காதென்றே கருதுகின்றேன்.

மற்றும் ஒவ்வொரு மனிதனும் அவ்வார்த்தையின் தத்துவத்தை மனதில் பதிய வைத்து தன்னுடைய ஒவ்வொரு எண்ணமும் செய்கையும் அதைப்பொருத்தே இருக்கவேண்டுமென்று கருதுவதையும் உணருகின் றீர்கள். ஆனால் சுயராஜ்யம் என்னும் பதமோ சமீபகாலத்தில் உண்டாக்கப் பட்டதான ஒரு வார்த்தையேயாகும்.

எதுபோலவெனில் இந்து மதம் என்பதாக ஒரு வார்த்தை எப்படி சமீப காலத்தில் கற்பிக்கப்பட்டு அதற்கு ஒரு கருத்தில்லாமலும், அருத்தமில்லா மலும் வார்த்தை அளவில் பிரயோகிக்கப்பட்டு வருகின்றதோ அதுபோலவே தான் சுயராஜ்யம் என்னும் ஒரு வார்த்தை கற்பிக்கப்பட்டு அருத்த மில்லா மலும், கருத்தில்லாமலும் வெறும் வாய்வார்த் தையில் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற வார்த்தையாகும். ஆனால் இந்த வார்த்தைக்கு அருத்தமும் கருத்துமில்லாமல் போனாலும் "சுயராஜியமே எனது பிறப்புரிமை" என்று சொல்லப்படுவதிலும் அதற்கே எல்லா முக்கியஸ்தானமும் கொடுக்கப்படு வதிலும் அதாவது மேலே குறிப்பிட்ட இந்து மதத்திற்கு பிரதானம் கொடுப்பது போலவே கொடுக்கப்பட்டு மிகப்பிரமாதப் படுத்தப்பட்டு அதற்காகப் பெரிய கிளர்ச்சியும் செய்யப்பட்டு வருகின்றது. பாமர மக்களுக்கு உலகக்கல்வியும் பகுத்தறிவு ஞானமும் இல்லாத காரணமே சுயராஜ்யம் என்னும் வார்த்தை மோக்ஷம், கைலாயம் என்னும் வார்த்தையைவிட மிக்க விளம்பரமும் மக்களின் கவர்ச்சியும் பெற்று விட்டது. இவ்வளவு மாத்திரம் அல்லாமல் "சுயராஜியம் கடவுள் யெத்தனத்தாலும் கடவுள் சித்தத்தாலும் அடையப் படவேண்டியது" என்றும் அதன் சர்வாதிகாரியான திரு.காந்தி அவர்களால்



RangaRakes tamilnavarasam.com

சொல்லப்படுவதாகி இனி அதற்காக வேறு கடவுள் தயவை எதிர்பார்த்து அர்ச்சனைகள் பிரார்த்தனை கள் செய்யப்பட வேண்டியதாகவுமாய்விட்டது. ஆனால் சுயமரியாதைக்கு அந்தக் கடவுள் தயவு தேவையில்லை என்ப தோடு, அந்தக் கடவுளைப் பற்றிய கவலையும் வேண்டியதில்லை என்று சொல்வதோடு சகலமும் சுய முயற்சியினாலேயே ஆக வேண்டும் என்றும் சொல்லப்படுவதாகும்.

அதுமாத்திரமல்லாமல் சுயமுயற்சியை விட்டு கடவுள் தயவுக்கும், கடவுள் செயலுக்கும் இதுவரை எதிர்பார்த்திருந்ததின் பலனே நமது நாட்டுக்கு இன்று சுயமரியாதை இவ்வளவு இன்றியமையாத அவசியமாய் போய் விட்டதென்றும் அது சொல்லுகின்றது.

நிற்க, இன்றைய தினம் கருத்தில்லாமல் கற்பிக்கப்பட்டிருக்கும் சுயராஜியம் என்னும் போலி வார்த்தைக்கு ஆதாரமாகப் பல காரணங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. அவை என்னவெனில்,

"இந்த நாட்டு மக்களுக்கு கல்வியில்லை, செல்வமில்லை, தொழிலில்லை மற்றும் அநேக குறைகளிருக்கின்றன. இதற்கு எல்லாம் காரணம் சுயராஜியமில்லாததே. ஆதலால் சுயராஜியம் சம்பாதிக்க வேண்டும்" என்பதாகச் சொல்லப்பட்டு பாமர மக்களை நம்பச் செய்து பட்டினி கிடப்பவர்களையும் வேலையில்லாமல் திண்டாடுவோரையும் சிறு பிள்ளைகளையும் சோம்பேரிக் கூட்டங்களால் சேர்த்துக் கொள்ளப்பட்டு ஆர்ப்பாட்டம் செய்யப்படுகின்றது. ஆனால் நான் இவற்றிற்கு அதாவது கல்வி, செல்வம்,தொழில் முதலாகியவை நமது நாட்டில் இல்லை என்பதற்கும் இவை மாத்திரம் இல்லாமல் மற்றும் அறிவு, ஆராய்ச்சி, முற்போக்கு, ஈவு, இரக்கம், ஒழுக்கம், நியாயம், நீதி, மனிதத்தன்மை முதலாகியவைகூட இல்லாமல் போனதற்கும் நமது மக்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சி இல்லா மல் போனதே காரணம் என்று சொல்வதோடு, சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்கி மேல்கண்ட சாதனங்களை மக்கள் அடையச் செய்யும் பாதை களை அடைக்கவே "சுயராஜிய முயற்சி" என்பது புதிதாகக் கற்பிக்கப்பட்டி ருக்கின்றது என்றும் நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அன்றியும், சுயராஜிய முயற்சி என்பது வெரும் "வெள்ளைக்காரனைப் பற்றி வசை புராணம் பாடுவதன் மூலமே அவனுக்கு கஷ்டத்தை ஏற்படுத்த வேண்டு மென்பதின் மூலமே நமது கஷ்டமெல்லாம் நீங்கி விடும்" என்று சொல்லப் பட்டு வருவதோடு இதுவரை அப்படியே செய்யப் பட்டும் வரப்படுகிறது.

ஆனால் சுயமரியாதை இயக்கம் சுயராஜிய முயற்சியைப்போல் எல்லாப் பொறுப்பையும் வெள்ளைக்காரன் மீது சுமத்தி அவனைப் பற்றிப் பேசுவதிலேயே காலம் கழித்து அவனுக்குக் கஷ்டம் கொடுப்பதிலேயே நமது ஊக்கத்தையும், முயற்சியையும் செலவழிப்பதில் கவலை கொள்ளு வதில்லை. ஆனால் அவர்களது(வெள்ளைக்காரர்களது) அக்கிரமத்திற்



காதாரமானதும், இடங்கொடுப்பதும், கொடுத்துக்கொண்டு இருப்பதானதுமான விஷயம் எது – யாரால்? என்று கண்டுபிடித்து அதாவது அந்த அக்கிரமங் களுக்கு எது தூண்களாய் இருந்து தாங்கிக் கொண்டிருக்கின்றனவோ அவைகளை பரித்துக் கீழே தள்ளும் வேலையில் ஈடுபடச் செய்கின்றது.

ஆகவே நாட்டில் உள்ள குறைகளை ஒப்புக்கொள்ளுவதில் சுயராஜி யத்திற்கும் சுயமரியாதைக்கும் அதிக வித்தியாசமில்லை. அதற்கு ஆதாரமான காரணங்களை கண்டு பிடிப்பதிலும் காரணஸ்தர்களாகக் கண்டு பிடிக்கப்பட்டவர்களே தாங்கள் தப்பித்துக் கொள்ள அன்னியர் பேரில் பழி சுமத்துவதையும் மாத்திரம் சுயமரியாதை இயக்கம் நம்பி ஏமாந்து போவ தில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

உதாரணம் வேண்டுமானால் பாருங்கள்.

கல்வியில்லை என்பது வாஸ்தவந்தான், ஆனால் யாருக்குக் கல்வி இல்லை? பார்ப்பனர் ஒழிந்த ஏனையோருக்குதான். அதிலும் பள்ளு, பறை என்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், விவசாயம், கைத்தொழில் ஆகிய வைகள் செய்யும் சரீரப் பிரயாசைப்படும் மக்களுக்குத் தான் கல்வியில் லையே யொழிய வேறென்ன?

ஆனால் பாடுபடாத சோம்பேறிக் கூட்டமான பார்ப்பனர்கள் எல்லோருமே நமது நாட்டில் படித்திருக்கின்றார்கள் என்பதை நீங்கள் மறுக்க முடியுமா என்று கேட்கிறேன். இதற்கு வெளைக்காரர் காரணமா – சுயராஜியம் இல்லாதது காரணமா? அல்லது மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியும், அதனால் ஏற்படவேண்டிய பகுத்தறிவு இல்லாததும் காரணமா? என்பதை உங்கள் பகுத்தறிவைக் கொண்டு யோசித்துப் பாருங்கள் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

இன்றைய வெள்ளைக்கார அரசாங்கத்தில் அதாவது சுயராஜிய மில்லாத அரசாங்கத்தில் பார்ப்பனர்கள்தான் படிக்கவேண்டுமென்றாவது, அவர்கள் தவிர மற்றவர்கள் படிக்கக்கூடாது என்றாவது, எங்காவது சட்ட மிருக்கின்றதா? அல்லது அவர்களது ஆட்சியில் மற்றவர்கள் படிக்க வசதி செய்யப்படாமலாவது, ஏதாவது சட்டபூர்வமான தடைகள் இருக்கின்றதா? என்று யோசித்துப் பாருங்கள்.

தாழ்த்தப்பட்ட வகுப்பாரில் 100க்கு கால்பங்கு கூட படித்தவர்கள் இல்லை. பெண் மக்களில் 100க்கு அரைப் பங்கு கூட படித்தவர்கள் இல்லை. விவசாயம், கைத்தொழில் முதலியவை செய்யும் வகுப்பார்களில் 100க்கு ஒருவர் கூட படித்தவர்கள் இல்லை. ஆனால் பார்ப்பனர்களில் 100க்கு 100 பேர்கள் படித்தவர்களாக இருக்கின்றார்களே. இதற்கு என்ன காரணம் சொல்லுகின்றீர்கள்? என்று கேட்கிறேன். இது சுயராஜியமில்லாததாலா?



RangaRakes tamilnavarasam.com

அல்லது பார்ப்பனரல்லாத மக்களுக்கு சுயமரியாதை இல்லாததாலா? என்ற கேள்விக்குத் தயவு செய்து பதில் சொல்லுங்கள்.

ஒரு சமயம் பணம் இல்லாததால் பார்ப்பனரல்லாதார் படிக்க முடியவில்லை என்று சொல்ல வருவீர்களானால் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் எப்படி பணம் சேர்ந்தது? அவர்கள் உங்களைவிட அதிகமாகப் பாடுபட்டு பணம் சம்பாதிக்கின்றார்களா? அவர்கள்தான் தங்களையே அடிக்கடி தாங்கள் பிச்சை வாங்கி உண்ணும் ஜாதி என்றும், புரோகிதம் செய்தும், மணி யாட்டியும், தட்சணையும், உபதானமும் பெற்று வயிர் வளர்க்கும் ஜாதி யென்றும் பல தடவை அவர்களே தாராளமாய்ச் சொல்லிக்கொண்டிருக் கிறார்களே! இன்றும் அந்தப்படி தான் பலர் இருந்தும் வருகிறார்களே. இதை நீங்கள் அறியாததா? இப்படி இருக்க அவர்கள் மாத்திரம் எப்படி 100க்கு 100 பேர் படித்தார்கள் என்பதைக் கண்டுபிடியுங்கள். சுயமரியாதை உணர்ச்சி உண்டாகி பகுத்தறிவு உங்களுக்கு ஏற்பட்டுவிடுமானால்தான் இந்த இரகசியத்தை நீங்கள் சுலபத்தில் கண்டுபிடிக்கமுடியும். மற்றபடி உங்களுக்கு விளங்கவே விளங்காது.

சும்மா வாயில் சுயராஜியம், சுயராஜியம் என்று கூறிக்கொண்டு கொடி யைச் சுமந்துகொண்டு வந்தே மாதரம் என்று பிதற்றித்திரிய வேண்டியதுதான் நமது மக்களின் வேலையாகிவிட்டது. ஆனால் இதனால் என்ன பலன் கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும்? என்கின்ற அறிவு பூஜியமாகிவிட்டது. இன்னமும் நிர்தாட்சன்னியமாய் நான் பேசுவது என்றால் சுயராஜியம் என்பது இருந்த காலத்தில் தான் அதாவது அன்னிய ஆட்சி என்பது இல்லாத காலத்தில்தான் இந்திய மக்களில் இன்னும் அதிகமான எண் ணிக்கை உள்ள மக்கள் தற்குறிகளாய் இருந்திருக்கின்றார்கள். அன்னிய ராஜியம் ஏற்பட்ட பின்னரே "பள்ளு, பறை" தொழிலாளி - பெண்கள் ஆகிய எல்லா வகுப் பாரும் படிக்கலாம் என்கின்ற சட்டமும் அனுமதிப்பும் ஏற்பட்டது. அன்னிய அரசாக்ஷியில் ஏற்பட்ட இந்த சட்டமும் அனுமதியும் கூட இன்று சுயராஜியம் கேட்கும் மக்களாலேயே ஆக்ஷேபிக்கப்பட்டு வருகின்றது. அனேக கிராமங்களில் பள்ளு, பறை பிள்ளைகள் படிக்க சர்க்கார் பணமும் இடமும் கொடுத்தாலும், சுயராஜியம் கேட்கின்ற தேசிய வாதிகள், தேச பக்தர்கள், காங்கிரஸ்வாதிகள் ஆகிய ஜனங்களிலேயே பலர் பள்ளிக்கூடத்தில் உட் காரவோ, பள்ளிக்கூடம் இருக்கும் இடத்திற்கு நடந்து போகும் தெருவையோ அனுமதிப்பது கூட இல்லை. தேசீயவாதி களிலேயே கூட தேசபக்தர் களிலேயே கூட இப்படிப்பட்டவர்கள் இருந்தால் மற்ற மக்களின் ஆக்ஷே பணை எவ்வளவு இருக்கும் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டுமா? என்று கேட்கின்றேன்.

இந்தக் கொடுமையை ஒழிக்க சுயராஜியத்தில் வழி யிருக்கின்றதா? அல்லது சுயமரியாதையில் வழி இருக்கின்றதா? என்று இப்போது யோசித்துப்



பாருங்கள். முதலாவது முன்னால் இருந்து வந்த நமது சுயராஜிய அரசாங்கத்தில் ஒரு கூட்டத்தார்தான் படிக்கலாம். மற்றக்கூட்டத்தார் படிக்கக்கூடாது என்று சட்டமிருந்தும் இன்னும் அது நமது மத தர்மமாய் இருப்பதும், அன்னிய ராஜியத்தினாலேயே அவை முழுவதுமாய் தலை காட்டச் செய்யாமல் மறைக்கப்பட்டிருப்பதும் அன்னிய ராஜியம் மறைந்த உடன் அவை அதாவது மததர்மம் என்னும் பேரால் மறுபடியும் தலைதூக்கும் என்பதும் உங்களுக்குத் தெரியாதா என்று கேட்கின்றேன்.

நாளைய தினம் இந்த திரு.காந்திக்கே சக்கரவர்த்திப்பட்டம் சூட்டினா லும் இந்த மத தர்மங்கள்அழிக்கப்பட முடியுமா என்று உங்களைக் கேட் கின்றேன். அவரைச்சுற்றித் திரிகின்றவர்கள் யார் என்று பாருங்கள். இந்தக் காந்தியும் அவரது இந்தக் கூட்டமும் நாளைக்கு இந்தத்துறைகளில் ஏதாவது நன்மை செய்யக்கூடுமானால் இன்று அவர்கள் செய்வதை யார் தடுக்கின்றார்கள் என்று நான் கேட்கின்றேன்.

## செல்வம்

இதுபோலவே செல்வநிலையும் மிக மோசமானதுதான் என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன். ஆனால், யாருடைய செல்வநிலை மோசமா னது? என்பதை யோசித்துப் பாருங்கள். பாடுபட்டு உழைப்பவர்களுடைய வும், யோக்கியமானவர்களுடையவும், செல்வநிலைதான் மோசமாக இருக் கின்றதே தவிர சோம்பேரிகள், சூக்ஷிக்காரர்கள், வஞ்சக்காரர்கள், கல் மன முடையவர்கள் ஆகியவர்களுடைய செல்வநிலை எங்காவது மோசமாக இருக்கின்றதா என்பதை யோசித்துப் பாருங்கள்.

எந்த நாடாவது சோம்பேரிகள் எல்லாம் மூக்குபிடிக்க சாப்பிட்டு அவர்களது பெண்டு பிள்ளைகள் எல்லாம் மோட்டார் சவாரி செய்து கொண்டு மாட மாளிகைகளில் குடிஇருக்கும்படியான மேன்மையில் இருந் தால் அந்தநாடு செல்வநிலையற்ற நாடு ஆகுமா? அல்லது சுயமரியாதை அற்ற மூடர்களையுடைய நாடு ஆகுமா என்று கேட்கின்றேன்.

இந்த மூடத்தனம் ஒழிய சுயராஜியம் வேண்டுமா? சுயமரியாதை வேண்டுமா? என்று யோசித்துப்பாருங்கள். இன்று உங்களுக்கு சுயராஜியம் வேண்டுமென்கிற ஆட்கள் எல்லாம் பெரிதும் நான் மேலே சொன்ன பாடுபடாமல் சோம்பேரியாய் இருந்து ஊரார் உழைப்பில் வயிர் வளர்க்கும் வஞ்சகர்களும், அவர்களது கூலிகளும் அல்லாமல் ஏதாவது ஒருவர் இரண்டு கூடை மண் வெட்ட தகுதி உடையவரோ அல்லது ஒரு நாலு பரி தண்ணீர் இறைக்கும் அறிவுள்ளவரோ, அல்லது ஒரு மூட்டை தூக்க தகுதி யுடையவரோ அல்லது ஏதாவது ஒரு சரீரத் தொழில் புரிய யோக்கியதை உடையவராகவா இருக்கின்றார்களா என்பதை தேடிப்பார்த்துக் கண்டு பிடித்துச் சொல்லுங்கள் என்று கேட்கின்றேன். மதத்தின் பேரால் காவி கட்டி



RangaRakes tamilnavarasam.com

சன்னியாசிகளாகி மோக்ஷத்திற்குப் பிரசாரம் செய்யும் சோம்பேரிகளுக்குச் சமமாக மற்றொரு வேஷம் போட்டு சுயராஜியப் பிரசாரம் செய்கிறவர்கள் தவிர பாடுபடுவதற்குத் தகுதி உடையவர்கள் எத்தனை பேர் என்று கேட்கின்றேன். மற்றும் ஒவ்வொரு தனி மனிதனின் வரும்படி இந்த நாட்டில் எவ்வளவு வரையில் இருக்கின்றது பாருங்கள். வருஷம்10 லக்ஷம் 8 லக்ஷம் வரும்படி உள்ள தனி மனிதர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கின்றார்கள். ஆள் ஒன்றுக்கு 1000, 2000, 5000, 10000 ஏக்கராக்கள் நிலமுடையவர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள். இந்த யோக்கியதையில் இவர்கள் இருப்பதற்கு இவர்களுக்கு என்ன யோக்கியதைகள் இருக்கின்றன? நாட்டுக்கு இவர்களால் என்ன நன்மைகள் இருந்து வருகின்றன? என்று யோசித்துப் பாருங்கள். மற்றும் இவர்களாவது ஒரு வகையில் நகரும் பிராணிகளாக இருக்கின்றார்கள். மற்றபடி நகராத ஜெந்துக்களாகிய கடவுள்களுக்கு - குழவிக்கல்லுக்கு - எடுத்து உட்காரவைக்கும் - தூக்கிச்செல்லும் ஜீவன்களான பண்டார சன்னதிகள் சங்கராச்சாரியார் ஆகிய நகரா ஜெந்துக்களுக்கு இந்த நாட்டில் எவ்வளவு செல்வம் எவ்வளவு வரும்படி இருக்கின்றது என்பதை சற்று கவனித்துப் பாருங்கள்.

இந்தப்படி செல்வமுள்ள நாட்டின் செல்வநிலை போராது என்று ஒருவன் சொன்னால் அவன் மூடன் அல்லது உண்மையை மறைப்பவன் என்று கருதுவீர்களா அல்லது பெரிய தேசபக்தன் தேசியவாதி என்று கருது வீர்களா என்று கேட்கின்றேன். இந்தப்படியான செல்வநிலை மாற சுயராஜி யம் வேண்டுமா, சுயமரியாதை வேண்டுமா என்பதை இப்பொழுதாவது நன்றாய் யோசித்துப்பாருங்கள். கன்னியாகுமரி முதல் கல்லுருவங்களை எடுத்துக்கொள்ளுங்கள். கன்னியாகுமரி அம்மனுக்கு மாதத்திற்கு 3-நாள் வீட்டிற்கு தூரமாகின்ற சடங்குகள்கூட செய்யப்படுகின்றது. அவ்வளவு சக்தியுள்ளசாமி. ஆனால் அந்த சுத்துப்பிரகாரத்துக்குள், காந்தி, லாலா லஜபதி முதலிய எப்பேர்பட்ட மகாத்மாக்களும் தேசபக்தர்களும், தேசீயவாதிகளும் கூட போகக் கூடாது.

இந்த நிலையில் ஒரு கல்லுக்கு இருக்கும் கௌரவம், செல்வம், கட்ட டம், பூஜை, உற்சவம், வீட்டுக்குத்தூரமான சடங்கு ஆகியவற்றிற்கு செலவு எவ்வளவு என்று கருதுகிறீர்கள். அதற்கு 5 மையில் அடுத்தாப்போல் உள்ள சுசீந்திரத்திலுள்ள ஒரு கல்லுக்கு தினம் 10 மூட்டை அரிசி வேகவைத்துப் படைக்கப்படுகின்றது. அந்தக் கல்லு இருக்கும் இடத்திற்கு கால்மைல் தூரத்திற்கு இப்பால் கூட சில மனிதர்கள் நடக்கக்கூடாது. இதற்கு வருஷந் தோறும் கல்யாணம் முதலிய அநேக ஆடம்பரங்கள் இப்படியே. அதற் கடுத்த வானமாமலை, திருநெல்வேலி, திருச்செந்தூர், தென்திருப்போரை, சங்கரன்கோவில், ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகர், ஸ்ரீவில்லிபுத்தூர், ராமேஸ்வரம், திருப்பரங்குன்றம், மதுரை, பழனி முதலிய இடங்களின் செல்வமும், செலவையும் பார்த்துவிட்டு அவசர அவசரமாகவே ஸ்ரீரங்கத் திற்கு வந்து பாருங்கள். இந்த கோவில் திருபணி கும்பாபிஷேகம் தைலக்காப்பு உற்சவம், பூஜை, சொத்து, நகை, வாகனம், கட்டடம் ஆகிய வைகளை கணக்குப் பாருங்கள். இதுபோன்ற மற்ற தஞ்சை, வடஆற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களையும் கணக்குப் பாருங்கள். மற்றும் ஒவ்வொரு கிராமத்திய கிராமதேவதை பிறகு அவனவனு டைய குலதேவதை குலகுரு வரையிலும் கவனித்துப் பாருங்கள். இந்தச் சொத்தும் செலவும் கணக்குப் போட்டுப் பார்த்தால் நம் நாடு உண்மையிலேயே செல்வமில்லாத நாடா? என்பதை தயவு செய்து நடுநிலைமை யிலிருந்து யோசித்துப்பாருங்கள்.

இந்த செல்வமும் செலவும் மக்களுக்கு பிரயோகிக்கப்பட்டால் இந்த நாட்டிற்கு வேறு என்ன தேவை இருக்கும் என்று கேட்கின்றேன். இதற்கு சுயராஜியம் வேண்டுமா? சுயமரியாதை வேண்டுமா?என்று யோசித்துப் பாருங்கள். இதைத் திருத்துவதற்கு எந்த சுயராஜியத்திலாவது திட்டம் இருக்கின்றதா என்று யோசித்துப்பாருங்கள். சர்வாதிகாரி காந்தி சுயராஜிய திட்டத்தில் ராமராஜியதிட்டம் போட்டாய்விட்டது. அதாவது மத விஷயத் தில் பொதுவில் எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது. பூரண சுயேச்சைக்கும் மேல்பட்ட போல்ஸ்விக்வீரர் ஜவர்லால் அவர்கள் சுயராஜிய திட்டத்திலோ செத்தவர் எலும்பு கங்கையில் போட்டால்தான் அவரது ஆத்மா மோக்ஷ மடையும் என்கிற திட்டம் போட்டாய்விட்டது காலம் தவறாமல் பிண்டங் களும் போட்டுக்கொண்டு வரப்படுகின்றது.

இந்த நிலையில் இந்தக் கோவில்கள் இடிபடவும் இந்தச் சாமிகள் அழி படவும் இந்த சோம்பேரி மடாதிபதிகள் சங்கராச்சாரிகள் ஏர் உழும்படியும், செய்யப்பட இவர்களது சுயராஜியத்தில் இடம் உண்டா என்று கேட்கின் றேன். இந்த சொத்துக்கள் வரும்படிகள் எல்லாம் பாடுபடும் மக்கள் வயி றார கஞ்சிகுடிக்கவும் ஏமாற்றப்படாமல் இருக்கவும் இவர்களது சுய ராஜியத்தில் இடம் உண்டா என்று கேட்கின்றேன்.

சொத்துக்களையெல்லாம் சிலர் கைவசப்படுத்திக் கொண்டு பாடுபடு பவர்களின் வரும்படிகளையெல்லாம் சோம்பேரிகள் அனுபவித்துகொண்டு பாடுபடுபவனுக்கும் தொழிலாளிக்கும் கிடைக்கும் கொஞ்ச நஞ்ச வரும் படியையும் கல்லுக்கும் குட்டிச்சுவற்றிற்கும் அழுகும்படி செய்து கொண்டு இருக்கின்ற ஒரு நாட்டுக்கு சுயமரியாதை வேண்டுமா? அல்லது சுயராஜியம் வேண்டுமா ? என்று யோசித்துப் பாருங்கள்.

சுயராஜியம் வந்தால் இந்த வீண் செலவுகளில் எதையாவது நிறுத்த முடியுமா? இந்தக் கோவில்களில் எதையாவது இடிக்கமுடியுமா? இந்தச் சாமிகளில் எதையாவது ஒழிக்க முடியுமா? என்று பாருங்கள்.

ஒவ்வொரு சாமிக்கும் 7- சுத்து கோட்டைச்சுவர்கள் போன்ற மதில் களும் 5, 6 பிரகாரங்களும் ஆகிய இவைகள் எல்லாம் எதற்கு? இவைகள்



RangaRakes tamilnavarasam.com

இல்லாவிட்டால் சுவாமிகள் ஓடிப்போகுமா? ஓடிப்போனால்தான் என்ன கெடுதி ஏற்பட்டு விடும்? அல்லது சுவாமி என்றால் என்ன? அது ஒரு குற்றவாளியா? அல்லது கைதியா? அல்லது சிறைபிடிக்கப்பட்ட அடிமையா? இந்த மாதிரி அடைப்பட்டுக்கிடக்கும் சிறிதும் சுயமரியாதை இல்லாத சாமியை கும்பிடுகின்ற மக்களுக்கு சுயமரியாதை எப்படி ஏற்படும்? அந்த சாமிகள் ஒழிந்தாலல்லது சுயமரியாதை ஏற்படமார்க்க மில்லை. இந்த மாதிரி சாமிகள் ஒழிய எந்த சுயராஜியத்திலும் திட்டமில்லை என்பது தெரிந்தும் சுயராஜியம், சுயராஜியம் என்று வீணாய் உளறுகின் றோம். இந்த மாதிரி நாட்டையும் ஜன சமூகத்தையும் தேசத்தின் செல்வத் தையும் பாழாக்கும் சாமிகள் முதலில் ஒழிய வேண்டும். ஏழைகளின் - உழைப்பாளிகளின் செல்வத்தை கொள்ளை யடித்த பணக்காரர்கள் "கடவுள் செயலால் பணம் கிடைத்தது" என்று சொல்லித் தப்பித்துக் கொண்டிருப்பதும் ஏழைகள் பாடுபட்ட பொருள்களை ஏமாற்றுக்காரர்கள் கொள்ளை கொண்டுவிட்டால் அதை உணராமல் "கடவுள் செயல்" என்று சொல்லிக் கொண்டு பட்டினி கிடப்பதற்கும் ஆதாரமான "கடவுள் செயல்" "தலைவிதி" என்பவைகள் முதலில் ஒழியவேண்டும். இவை ஒழிவதற்கு சுயராஜியத்தில் இடமிருக்கின்றதா? சுயமரியாதை இயக்கத்தில் இடமிருக் கின்றதா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

மற்றும் இதுபோலவே விவசாயம், அறிவு, ஆராய்ச்சி, வலிமை முதலிய பல காரியங்களுக்கும் சுயராஜியத்தில் சிறிதும் இடமில்லை என்றும் சுயமரியாதை ஒன்றினாலேயே தான் இவைகளை சுலபத்தில் அடையலாம்.

*குறிப்பு :திருச்சி நகரவை பொதுமண்டபத்தில் 17.05.1931 அன்று ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 24.05.1931**



# தீண்டாமை

உலகத்திலுள்ள கொடுமைகள் எல்லாவற்றையும் விட, இந்தியாவில் மக்களை மக்கள் தீண்டாமை என்கின்ற இழிவு சம்மந்தமாக செய்துவரும் கொடுமையே மிகப் பெரிதாகிய கொடுமையென்றும், அதற்குச் சமானமாக வேறு எந்தக் கொடுமையையும் கூற முடியாதென்றும், எல்லா மக்களாலும் அரசியல் சமூக இயல் வாதிகளாலும் சொல்லப்பட்டு பொது மக்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயமுமாகும். ஆனால், அது விஷயத்தில் மாத்திரம் பயன்படத்தக்க வழியில் ஏதாவதொரு முயற்சியை இதுவரையில் யாரும் எடுத்துக் கொள்ளாமலே வெறும் வாய்ப்பந்தல் போடுவதினாலேயே மக்களை ஏமாற்றிக் கொண்டு காலங்கழித்து வருவதும் பிரத்தியட்சத்தில் தெரிந்த காரியமாகும்.

சமீப காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட ஒரு சட்டமறுப்பு கிளர்ச்சியில் உப்புக் காய்ச்சுவது, வனத்தில் பிரவேசிப்பது, கள்ளுக்கடை மறியல் செய்வது, ஜவுளிக்கடை மறியல் செய்வது, என்பவைகள் போன்ற சில சாதாரணமானதும், வெறும் விளம்பரத்திற்கே ஆனதுமான காரியங்கள் செய்யப்பட்டு 40 ஆயிரம்பேர் வரையில் ஜெயிலுக்குப் போயும் அடிப் பட்டும் உதைபட்டும் கஷ்டமும்பட்டதாக பெருமை பாராட்டிக் கொள்ளப் பட்டதே தவிர இந்த மிகக் கொடுமையான தீண்டாமையென்னும் விஷயத் தைப்பற்றி எவ்வித கவலையும் யாரும் எடுத்துக் கொண்டதாகத் தெரிய வில்லை. இதற்குக் காரணம் ஒருசமயம் இது மேல்கண்ட மற்றவைகளைப் போன்ற அவ்வளவு முக்கியமான காரியம் அல்லவென்று அரசியல் காரர்கள் கருதியிருப்பார்களோ என்னவோ என்பதாக யாராவது சமாதானம் சொல்லக் கூடுமா? என்று பார்த்தால் அந்தப்படியும் ஒருக்காலும் சொல்ல முடியாது என்றே சொல்லுவோம்.

ஏனெனில் "தீண்டாமை மிக்க கொடுமையானது" என்றும், "தீண்டாமை ஒழியாமல் இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வராது" என்றும், "வந்தாலும் நிலைக்காது" என்றும், உயர்திரு. காந்தியவர்களே பல தடவை சொல்லியிருப்பதோடு "இந்திய அரசியலில் தீண்டாமை விலக்கையே முக்கிய திட்டமாக வைத்து வேலை செய்ய வேண்டும்" என்றும் சொல்லி அரசியல் திட்டத்திலும் தீண்டாமை ஒழிப்பதற்கு பிரதான ஸ்தானமும்



RangaRakes tamilnavarasam.com

கொடுக்கப்பட்டிருக்கின்றது யாவரும் அறிந்ததாகும்.

இவ்வாரம் கூடிய சேலம் ஆதிதிராவிடர் மகாநாட்டில் தலைமை வகித்த ராவ்பகதூர் எம்.சி.ராஜா அவர்கள் தமது தலைமைப் பேருரையில் சொல்லியிருப்பது போல் அதாவது,

"1921 ம் வருஷத்திய காங்கிரசில் சுயராஜ்யம் பெறுவதற்கு தீண்டாமையை ஒழிக்க வேண்டியது முதற் கடமையாகும். சுயராஜ்யம் பெறுவதற்கு முன்னாலேயே தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமே யல்லாமல் அது சுயராஜ்யம் பெற்ற பிறகு செய்ய வேண்டியவேலையல்ல"

என்றும் தீர்மானித்திருப்பது மாத்திரமல்லாமல், சென்னை யில் திரு. காந்தியவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும் போது,

"தீண்டாமை யென்னும் கொடுமையை ஒழிக்காவிட்டால் சுய ராஜியத்திற்கு வழியில்லை. சுயராஜ்யம் பெற மார்க்கமும் ஏற்படாது" என்றும் சொல்லியிருக்கின்றார்.

இந்தப்படி எல்லாம் திரு.காந்தியவர்கள் சொல்லியிருந்தும், மற்றும் காங்கிரஸ் திட்டத்தில் தீண்டாமையை முதல் திட்டமாக வைக்கப்பட்டு இருந்தும் காங்கிரஸ் இந்த விஷயத்தில் அதாவது தீண்டாமை ஒழிக்கும் விஷயத்தில் இதுவரை என்ன செய்திருக் கின்றது?

உண்மையைக் கூறவேண்டுமானால் காங்கிரசானது இது வரையில் தீண்டாமை விலக்குக்காக யாதொரு வேலையும் செய்ய வில்லை என்று நான் தைரியமாய்க் கூறுவேன். காங்கிரசுக்காரர்கள் இந்து முஸ்லீம் பிரச்சினை ஒன்று மட்டும் தீர்ந்து விட்டால் போதுமென்று நினைக்கின்றார்கள்.

அன்றியும், "தீண்டாமை ஒழியாமல் எவ்வளவு விரிவான சுயராஜ்யம் பெரினும் அதை அடுத்த நிமிஷமே இழக்க நேரிடும்" என்றும், "சர்க்கார் நம்மை அடக்கி ஆளுகிறார்கள், நாம் தீண்டாதார் களை அடக்கியாள விரும்புகின்றோம். ஆகையால் சர்க்காருக்கும் நமக்கும் வித்தியாசமில்லை. ஆதலால் தீண்டாமை யொழியும்வரை நாம் சுயராஜ்யத்திற் கருகதை இல்லை" என்றும் சென்ற வருஷத்தில் கூட திரு. காந்தியவர்கள் சொல்லியிருக்கின்றார்"

என்று பேசியிருக்கிறார்.

மேலும் திரு. M.C. ராஜா பேசி இருப்பதாவது,



மோதிலால் நேரு தீண்டாமைக்கு இந்துக்களே பொருப்பாளி கள் என்றும் லாலா லஜபதி, மாளவியா, ஜெயகர், சாப்ரூ முதலிய இந்துத் தலைவர்கள் "தீண்டாமையை வைத்துக் கொண்டு சுயராஜியம் கேட்பது ஒன்றுக்கொன்று முன்னுக்குப்பின் முரணாகப் பேசுவதாகும்"

எனவும் கூறியிருக்கிறார்கள். இவை தவிர இந்து மகா சபையும்,

"தீண்டாதார்களை கோவில், குளம், பள்ளிக்கூடம், கிணறு, ரஸ்தா ஆகியவைகளில் சமஉரிமை அனுபவிக்க உரிமை அளிக்க வேண்டும்" என்று தீர்மானம் செய்து இருக்கின்றது"

என்றும் பேசிவிட்டு கடைசியாக பேசியிருப்பது என்னவென்றால்:-

"1921 - ம் வருஷத்திலும் 1928-ம் வருஷத்திலும் காங்கிரசுகளில் இது விஷயமாய் செய்த தீர்மானங்கள் எல்லாம் பிறந்த உடனேயே செத்துப் போய்விட்டது. மகாத்மாவும் காங்கிரஸ்காரரும் சர்க்காரை எதிர்த்து, உப்பு சத்தியாக்கிரகம் செய்ததில் ஒரு பகுதியையாவது, இந்து மகா சபையார் முஸ்லீம்களை எதிர்த்துப் போராடும் முயற்சியில் ஒரு பகுதியையாவது மேல்கண்ட தீர்மானத்தை அமுலுக்கு கொண்டுவர உபயோகித்திருப்பார் களேயானால் இந்த நாட்டில் சுயேச்சைக்கு பாதக மளித்து வரும் தீண்டாமைக் கொடுமை அடியோடு ஒழிந்து போயிருக்கும். இனியாவது மகாத்மா காந்தி இதை கவனிப்பாரா?"

என்பதாக பேசி இருக்கின்றார். இந்தப்படி திரு.M.C. ராஜா அவர்கள் பேசி இருப்பதில் ஒரு சிறு எழுத்தையாவது எந்த காங்கிரஸ்வாதியோ அல்லது தேசீயவாதியோ ஆக்ஷேபிக்க முடியுமா? என்று பந்தயம் கூறி கேட்கின்றோம்.

தீண்டாமை ஒழிய வேண்டும் என்கின்ற விஷயத்தில் நாம் தீண்டா தார்களை தூக்கி நிறுத்திவிடப் போவதாக எண்ணிக்கொண்டு பேசுவதாக வும், அவர்களுக்கு நாம் வக்காலத்துப் பேசிவருவதாகவும் யாவரும் நினைத்துக் கொள்ள வேண்டியதில்லை என்பதாக தெரிவித்துக் கொள்ளு கிறோம். மற்றெதற்காக நாம் பாடுபடுகின்றோம் என்றால் அனேக விஷயங் களில் நாமும் அதாவது தீண்டாதார் அல்லாதார்கள் என்று கருதிக் கொண்டி ருக்கின்ற பார்ப்பனரல்லாதார்களும், தீண்டாதாராகவும் கிட்ட நெருங்காதாரா கவும் பாவிக்கப்பட்டு வருகின்றோமே என்கின்ற சுயமரியாதை உணர்ச்சி யினால் தான் என்றே தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள இந்தியர்கள் ஓட்டலிலும், பொதுத் தெருக்களில் இருக்கும் காப்பிக்கடை, பலகாரக்கடை, சாப்பாட்டுக் கடை,



RangaRakes tamilnavarasam.com

ஓட்டல்களிலும், கோவில், சில குளம் முதலியவைகளிலும், சில பொதுப் பள்ளிக்கூடங்களிலும், தீண்டாதாராகவே மதித்து ஒதுக்கப்படுகின்றோம் என்ற காரணத்தினாலேயே தான்.

கடுகளவாவது ஒருமனிதனுக்கு சுயமரியாதை இருந்தால் இந்த விஷயங்களெல்லாம் எந்த மனிதன் மனதுக்கும் கஷ்டமாகத் தோன்றாதா என்பதை சற்று யோசித்துப்பாருங்கள்.

உயர்திரு. சென்குப்தா அவர்கள் தென்னாட்டு சுற்றுப்பிரயாணத்தில் பல இடங்களில் காங்கிரஸ் சம்பந்தமாக பேசியதில்,

"அமரிக்காவில் நீக்கிரோவர்களை அமரிக்கர்கள் நடத்துவது காட்டுமிராண்டித்தனம் என்று கருதி இருந்தேன். ஆனால், இப்போது இங்கு வந்து பார்த்த பிறகு அமரிக்கர்களைவிட இந்த நாட்டில் பிராமணர்கள் தீண்டாமை விஷயத்தில் காட்டு மிராண்டித்தனமாய் நடந்து கொள்ளு கிறார்கள் என்பதாக உணருகிறேன்." என்று பேசியதோடு "இந்த மாகாண காங்கிரஸ்காரர்கள் தீண்டாமை ஒழிக்கும் வேலையைவிட்டு விட்டு வேறு மறியல் வேலையிலும், கொடியெடுத்துக்கொண்டு திரியும் வேலையிலும் ஈடுபட்டிருப்பது காங்கிரசுக்கு அவமானம்" என்றும் சொல்லிக்கொண்டே வந்திருக்கிறார். இதை எந்தப் பத்திரிகையும் பிரசுரிக்க வேயில்லை. அது மாத்திரமல்லாமல் கோபியில் சில பார்ப்பனர்கள் திரு. சென்குப்தாவை பேச விடாமல் கூட்டத்தில் ஏதோ குழப்பம் செய்ததாகவும் தெரியவருகின்றது.

நிற்க, திரு. சென்குப்தா அவர்கள் மற்றொரு கூட்டத்தில் பேசும் போது,

"இந்திய காங்கிரஸ் பிரிட்டிஷாரை இந்திய இராணுவ மேற்பார்வையை இந்தியர்கள் வசமே விட்டுவிட வேண்டுமென்று கேட்கின்றதே. அந்தப்படி ஒரு சமயம் இராணுவ சுதந்திரமும் இந்தியருக்குக் கிடைத்து விட்டால் ஒவ்வொரு இந்திய சிப்பாயிக்கும் இன்றைய நிலையில் ஒவ் வொரு சமையல் அறைகள் வேண்டியிருக்குமே. காங்கிரஸ் இதற்கென்ன செய்யப் போகின்றது? நாம் யுத்தத்திற்கு எத்தனை ஆள் சேர்க்கவேண்டு மோ அத்தனை ஆட்களுக்கும் தனித் தனி சமையல் அறையும், சமையல் ஆட்களும் அல்லவா நமக்கு வேண்டியிருக்கும்? இந்தத் தொல்லையை வைத்துக்கொண்டு நாம் எப்படி இராணுவத்தை நடத்த முடியும்?:" என்று கூட சொல்லியிருக்கிறார்.

சென்னை மாகாண காங்கிரஸ் வீரர்கள் வெள்ளைக்காரனைத் திட்டும் வரையில் கை தட்டி சிரித்துக்கொண்டும், தீண்டாமையைப்பற்றிப் பேசும் போது தலையைத் தொங்கப் போட்டு "பூமாதேவி"யுடன் இரகசியம் பேசிக் கொண்டும் இருந்தார்களே யொழிய அதைப்பற்றி சிறிது கூட கவலை செலுத்தினதாகத் தெரியவில்லை.



இவை ஒருபுறமிருக்க, சென்னை மாகாண பார்ப்பனர்கள் இப்போது புதிதாக ஒரு முயற்சி செய்து வருகின்றார்கள். அதென்னவென்றால் தீண்டாதார்களை நகரங்களுக்குள் கக்கூசு எடுக்கப் போடுவதால் பிராமணர் கள் சரியாய் நடமாடுவதற்கில்லாமல் தீட்டுப்படுகின்றார்கள் என்றும், ஆதலால் ஜாதி இந்துக்களில் பார்ப்பனரல்லாதாரை மலம் எடுக்க முனிசிபா லிடியார் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

ஆகவே இவைகளுக்கெல்லாம் இப்பொழுதுதான் ஆகட்டும் இந்திய தேசீய காங்கிரசுக்கோ உயர்திரு. காந்திக்கோ, வீரர் ஜவர்லால் நேருவுக் கோ உண்மையில் தீண்டாமை ஒழிய வேண்டுமென்கின்ற கவலையும் ஆசையும் இருக்குமானால் இந்த "யுத்தநிறுத்த" ஒப்பந்தத்தின் பயனாய் ஏற்பட்ட ஓய்வு காலத்தை இந்தத் தீண்டாமையை ஒழிக்கும் வேலையில் செலவிடும்படியான ஏற்பாட்டை ஏன் செய்யக்கூடாதென்று தான் கேட் கின்றோம்.

இந்தப் பெரிய சர்வாதிகாரிகளான ஏக தலைவர்களுக்கு ஒருசமயம் வேறு முக்கியமான அதாவது இந்து முஸ்லீம் கிறிஸ்தவ ஒற்றுமை வேலை கள் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் சென்னை மாகாண காங்கிரஸ் தலைவர்களும் வீரர்களும் தொண்டர்களுமாவது ஏன் இந்த வேலையில் தங்கள் ஓய்வை செலவழிக்கக்கூடாது என்றும்தான் கேட்கின்றோம்.

இவ்விஷயம் இப்படியெல்லாம் இருந்தும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் உயர்திரு. C. ராஜகோபாலாச்சாரியாரின் பண வசூல் விண்ணப்ப வெளியீட்டில் ஹிந்தி பிரசாரம் செய்வதை பிரமாதமாக குறிப்பிட்டிருக் கிறார்களே யொழிய தீண்டாமை விலக்கைப் பற்றி ஒரு வார்த்தையும் கூட அதில் குறிப்பிடவில்லை. தீண்டாமையின் தாண்டவமும், அதன் தொல்லை யும் இவர்களுக்கு தெரியாதா என்றும் கேட்கின்றோம். இந்த சமயத்தில் இந்தப்படியாக நாம் ஏன் கேட்கின்றோம் என்றால் தியாகிகளும், சமதர்மக் காரர்களும் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் வீரர்கள் "காங்கிரசினால் தான் தீண்டாமை ஒழிக்கப்படுமே யொழிய மற்றபடி வேறு எந்த வழியிலும் முறையிலும் தீண்டாமை ஒழிக்கப்பட முடியாது" என்று சொல்லுவதன் மூலம் அந்தத் துறையையும் தங்களுக்கே சொந்தமாக்கிக் கொள்ள முயற்சிப்பதால் மற்றவர்கள் இவ்விஷயத்தில் செய்யும் காரியங் களுக்கும் இடையூறும் முட்டுக் கட்டையும் உண்டாகும் படியான சூக்ஷிகள் செய்வதால் நாம் எழுதவேண்டி நேரிடுகின்றதேயொழிய வேறில்லை. எப்படி இருந்தாலும் இந்த சமயமானது இந்தக் காரியத்திற்கு அதாவது தீண்டாமை ஒழிப்பது என்பதற்கு மிக்க அனுகூலமான சமயம் என்றே சொல்லலாம். எப்படியெனில் ஏதோ ஒரு வகையில் சுயமரியாதை இயக்கம் செய்துள்ள கிளர்ச்சியாலும், தீண்டத்தகாதார் என்னப்பட்ட சமூகத்தாருக்கு ஏற்பட்டுள்ள தீவிர உணர்ச்சியாலும் பொது ஜனங்களுக்குள் ஒருவித பரபரப்பு ஏற்பட்டிருப்பதுடன் எதிர்ப்புக்கு அதிக மரியாதை இருக்காது என்பதாகவும்



RangaRakes tamilnavarasam.com

தோன்றுகின்றதுதான். ஆதலால் காங்கிரசில் உள்ள பார்ப்பனரல்லாத தலைவர்களும், தொண்டர்களும் தனியாகக் கூடியாவது, இந்த சமயத்தில் மற்ற ஸ்தாபனக்காரர்களையும் கலக்கிக்கொண்டு ஏதாவது ஒரு முயற்சிக்கும் முந்துவார்களாக. இந்த நிலையில் தீண்டப்படாதார் என்பவர்களும் தகுந்த படி கிளர்ச்சி செய்தோ அல்லது தீண்டாமைக்கு ஆதாரமான 'இந்து' மதத்தை விட்டுவிடச் செய்தோ தங்களின் இழிவுகளையும் கொடுமைகளை யும் ஒழித்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்து கின்றோம்.

தீண்டாதார் என்பவர்களில் ஆங்கிலம் படித்தோ அல்லது செல்வம் படைத்தோ உத்தியோகம் நியமனம் முதலியவைகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களால் தீவிரமான முயற்சிகள் எதுவும் செய்யப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் ஆங்காங்குள்ளவர்கள் கூடிக்கூடி ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டியதும் மிகவும் அவசியமாகும் என்பதை யும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 24.05.1931**

## 3 வது மாகாண சுயமரியாதை மகாநாடு

விருதுநகரில் நடக்கவிருக்கும் 3-வது சுயமரியாதை மகாநாடானது முன் குறிப்பிட்டபடி ஜுன்-*மீ* 6,7, தேதிகளில் நடத்துவது சற்று தாமதித்து அதாவது ஒரு வாரம் பொறுத்து நடத்த வேண்டியதாக ஏற்பட்டு விட்ட தென்று தெரிவிக்க வேண்டியதாகிவிட்டது. ஏனெனில் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க ஏற்கனவே இசைந்து அதை உத்தேசித்தே சுமார் 1 மாதத்திற்கு முன்னதாகவே இங்கு வந்து நீலகிரியில் (ஊட்டியில்) தங்கியிருந்த உயர்திருவாளர் சர். ஹரி சிங்கவர் அவர்களுக்கு பல்லில் வலி ஏற்பட்டு அதனால் ஒரு பல் எடுக்கவேண்டியதாகியும் மேலும் அவருக்கு அந்த வலி நிற்காமல் மிகவும் தொந்திரவு கொடுத்ததால் அவர் மகாநாட்டுக்கு வர முடியாமலும் அதுவரை இங்கு இருக்க முடியாமலும் திடீரென்று தமது ஊருக்குப் புறப்பட வேண்டியதாகிவிட்டது. ஆன போதிலும் மகாநாட்டை எந்த விதத்திலும் ஒரு வாரம் முன்பின்னாகவாவது நடத்திவிடலாம் என்கிற தீர்மானத்தின் மீதே தலைவர் உயர்திருவாளர் சௌந்திரபாண்டியன் அவர்களும், மற்றும் விருதுநகர் பிரமுகர்கள் திருவாளர்கள் வி.வி.ராமசாமி, செந்தில்குமார நாடார் முதலியவர்களும் வெகு மும்மரமாகவே மகாநாட்டு வேலைகளை கவனித்துக்கொண்டு வருகிறார்கள். வேறு தலைவர் தேர்ந்தெடுத்து சீக்கிரம் மகாநாடு நடக்கும் தேதியை தெரிவிக்கப்படும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 24.05.1931**


RangaRakes
tamilnavarasam.com

# திரு. சத்தியமூர்த்தி

உயர்திரு. சத்தியமூர்த்தி அய்யர் தென் இந்தியாவிலுள்ள பார்ப்பன அரசியல்வாதிகளையெல்லாம் விட மிகவும் நல்லவர் என்றே சொல்லு வோம் – அவருக்கு சூது வஞ்சகம் ஆகிய காரியங்கள் அவ்வளவு அதிக மாய் அதாவது பிறத்தியார் கண்டுபிடிக்க முடியாதபடி செய்தவற்குத் தகுந்த அளவு தெரியாது என்றே சொல்லுவோம். ஆதலால் இப்படிப்பட்ட வர்களால் பார்ப்பனரல்லாதாருக்கு அதிகமான கெடுதி ஒன்றும் செய்துவிட முடியாது. அந்த முறையிலேயேதான் அவரை நல்லவர் என்று சொல்லு கின்றோம். அவருடைய பொதுநல சேவையின் ஆரம்பமானது மிகவும் பரிசுத்தமாகவே ஆரம்பிக்கப்பட்டது என்பதே நமது அபிப்ராயம். ஆனால் பிறகு அவரை அய்யங்கார் கூட்டப்பார்ப்பனர்கள் அய்யர்கூட்டப் பார்ப்பனர் களுக்கு விரோதமாய் உபயோகித்துக்கொள்ள நினைத்து திரு.சத்திய மூர்த்தியை மிகவும் தூக்கிவைத்துக் கெடுத்து விட்டார்கள். அவரும் இந்த அய்யங்கார் கூட்டத்தையும் அவர்களது அரசியலையுமே நம்பி தன்னைப் பற்றி அதிகக்கவலை எடுத்துக் கொள்ளாமல் போய் விட்டதினாலும் தனக்கு என்று ஒரு கொள்கையை பிடித்து வைத்துக் கொள்ளாமல் போனதினாலும் கிரமப்படி அவருக்கு இருந்திருக்க வேண்டிய மதிப்பு இல்லாமல் போய் விட்டது. அவர் மிதவாதக் கூட்டத்திற்குள் இருந்திருப்பாரானால் இன்றைய தினம் அவரது சொந்த நிலை வேராகவே இருந்திருக்கும். திருவாளர்கள் கஸ்தூரி ரங்கய்யங்கார், எ.ரங்கசாமி அய்யங்கார், எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் முதலிய அய்யங்கார்கள் தங்களது தகுதிக்குமேல் பெரிய மனிதர்களாவதற்கு திரு. சத்தியமூர்த்தி அய்யர் எவ்வளவோ காரணஸ்தராவார் என்பது நமக்கு தெரியும். அக்கூட்டம் இவருக்கு சிறிதும் நன்றியும் விசுவாசமும் காட்டாமல் போனது பெரிய குற்றமேயாகும். ஆனால் அரசியலில் பெரிய மனிதர்கள் என்பவர்களுக்கு நன்றியற்ற தன்மை இயற்கையேயாகும்.

நிற்க, திரு. சத்தியமூர்த்தி அய்யர் சமீபத்தில் சொன்ன ஒரு விஷயத் தில் அர்த்தம் இல்லாமல் இல்லை. அதாவது 'தென்னாட்டில் உள்ள பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் சண்டை காரணமாக வட நாட்டில் உள்ள மூன்றாந்தர ஆசாமிகள் எல்லாம் பெரிய தலைவர்கள்ஆகிவிடுகின்றார்கள்' என்று சொன்னது அர்த்தமற்றதும் பொறாமையுடையதுமான வார்த்தை என்று நாம் ஒப்புக்கொள்ளமுடியாது. வடநாட்டில் இருந்து தென்னாட்டுக்கு அழைத்து வரும் தலைவர்கள் எல்லோரும் தென்னாட்டு அரசியல்வாதிகள் விளம்பரம் செய்யும் அளவுக்கு – மரியாதை செய்துவரும் அளவுக்கு தகுதியுடையவர் கள் என்று சொல்லமுடியாதென்பதே நமது அபிப்பி ராயமுமாகும். ஆனால் தென்னாட்டில் உள்ள பார்ப்பனர் பார்ப்பனரல்லா தார் சண்டையும் காங்கிர சுக்கு விரோதமாக தென்னாட்டில் இருந்து வரும் உணர்ச்சியும் அதனால் தென்னாட்டில் உள்ள பார்ப்பனர் எவருக்கும் பார்ப்பனரல்லாத அரசியல் வாதிகளுக்கும் மரியாதை இல்லாமல் போன காரணமுமே வடநாட்டு ஆசாமிகளுக்கு தென்னாட்டில் பூரணகும்பம் எடுத்தாக வேண்டிய நிலையை கொண்டு வந்து விட்டுவிட்டது. உண்மையைப் பேசப்போனால் திரு. காந்திக் கும் கூட இவ்வளவு மரியாதை ஏற்பட்டதற்கு காரணமும் தென்னாட்டில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் சண்டையே தவிர வேரல்ல. எப்படியெனில் தென்னாட்டு பார்ப்பன ரல்லாதார் தலையில் கையை வைக்க திரு. காந்தியை மகாத்மா ஆக்க வேண் டிய நிர்பந்தம் நமது பார்ப்பனருக்கு ஏற்பட்டுவிட்டது. தென்னாட்டுப் பார்ப்பனர்கள் மாத்திரம் சாதாரணமாக தீண்டாமை என்னும் விஷயத்தில் உண்மையில் (சூது புரட்டு இல்லாமல்) மனப்பூர்வமாய் விட்டுக்கொடுத் திருப்பார்களேயேனால் திரு. காந்தியை விட பெரிய யோக்கியதையை யுடையவர்களாக ஆவதற்கு பலர் இந்நாட்டுப் பார்ப்பனரிலும் இருக் கின்றார்கள் என்பது நமக்குத் தெரியும். என்ன செய்வது அவர்கள் நிலைமை அப்படி ஏற்பட்டுவிட்டதால் அவர்களுக்கு இருக்க வேண்டிய கிரமமான மரியாதை இல்லாமல் போய்விட்டதுடன் மரியாதைக்கு லாயக்கில்லாத வர்களுக்கும் இவர்கள் மரியாதை செய்யவேண்டியவர்களாகி விட்டார்கள். நமது நாட்டுப் பார்ப்பனர்களில் கல்வி, செல்வம், சக்தி முதலிய குணங்கள் படைத்தவர்கள் பலர் இருந்தும் அவர்களுக்குள் ஒருவருக்காவது தேசத்தைப்பற்றியோ மக்களைப் பற்றியோ உண்மையாய் கவனிக்க முடியாமல் தங்கள் உயர்வை நிலைநிறுத்திக் கொள்வதற்கே பாடுபட வேண்டிய கவலையை முக்கியமாய்க் கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டதால் அவர்களது மற்றப்பெருமை பிரகாசிக்க இடமில்லாமல் போய் விட்டது. மற்றும் பார்ப்பனரல்லாதார்களுக்குள்ளும் எத்தனையோ பட்டேல் களுக்கும் எத்தனை டஜன் கணக்கான சென்குப்தாக்களுக்கும், நரிமேன் களுக்கும் சமமான தனிமனிதர்கள் எத்தனையோ பேர்கள் அரசியலிலேயே இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் தலையெடுக்கக் கூடாது என்பதாக பார்ப்பனர்களே சூஷி செய்து வந்ததால் வெளிநாட்டு வேஷக்காரர்களுக்கு நமது நாட்டில் மதிப்பு ஏற்பட வேண்டியது அவசிய மாகிவிட்டது. அதிகம் பேசுவானேன் வெள்ளைக்கார ராஜியம் இந்தியாவில் இருப்பதற்கு என்ன காரணமோ அதே காரணம்தான் வெளிமாகாண காரர்கள் நமது மாகாணத்தில் மகாத்மாக்களாவதற்கும் மற்றும் பெரிய தலைவர்கள் தேசபக்தர்கள் முதலாகியவர்கள் ஆவதற்கும் காரணமாகி இருக்கின்றது.



RangaRakes tamilnavarasam.com

நியாயமாய் பேசுவோமானால் தென்னாட்டுப் பார்ப்பனரல்லாதார் என்னகாரியத்திற்காக திரு. காந்தியை மகாத்மா என்று கூப்பிட வேண்டும் என்பதே நமக்கு விளங்கவில்லை.

திரு. காந்தியின் அரசியல் அபிப்பிராயமாகட்டும், சமுதாய அபிப்பிராயமாகட்டும், ஏழைத்தொழிலாளிகளைப் பற்றிய அபிப்பிராய மாகட்டும், மற்றும் அவரது பகுத்தறிவு, நிலையான கொள்கை முதலியவை களைப்பற்றிய அபிப்பிராயமாகட்டும் ஏதாவது ஒன்று இந்த நாட்டு பார்ப்பன ரல்லாத மக்களில் யாராவது ஒருவர் ஒப்புக் கொள்ளத்தக்கதாக இருக்கின்றதா - யாராவது ஒப்புக்கொள்ளுகின்றார்களா? என்று கேட்கின் றோம். அரசியல் உலகில் அரசியல் பிரசாரத்தை தொழிலாக கொண்டவர்களும் அரசியல் பத்திரிகையை நடத்துவதை தொழிலாக கொண்டவர்களும் அரசியலின் பேரால் பெரிய பதவி பட்டம் பெற்று பெரிய மனிதர் ஆனவர்களும் ஆக வேண்டி எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களும் ஆகிய கூட்டத்தில் உள்ள பார்ப்பனரல்லாதார்களில் ஏதாவது ஒருவர் திரு. காந்தியின் கொள்கைகளை உண்மையில் ஒப்புக்கொள்ளுகின்றார்களா என்று கேட்கின்றோம். ஆனால் இங்கு ஒருவருக்கு ஒருவர் ஏற்பட்ட பொறாமை, அசூயை, பேராசை, போட்டி ஆகிய காரியங்களால் திரு. காந்தி மகாத்மாவாகவும் மற்ற மூன்றாந்தர ஆள்கள் பூரண கும்பமெடுக்க வேண்டிய தலைவர்களாகவும் விளங்க வேண்டியவர்களாகிவிட்டார்கள். அதுபோலவேதான் இனியும் அநேக காரியங்கள் நடைபெறுகின்றன. இவை நடக்காமல் இருக்க வேண்டுமானால் அதற்குத் தகுந்த வழி திரு. சத்தியமூர்த்தி அய்யருக்கு இல்லாமலில்லை. அதென்னவென்றால் அரசியல் புரட்டை தாராளமாய் வெளியாக்க வேண்டும். எப்படியாவது தங்கள் சமூக ஆதிக்கம் நிலைத்திருந்தால் போதும் என்கின்ற எண்ணத்தை விட்டுவிடவேண்டும். ஜாதி வித்தியாசத்தையும் தீண்டாமை யையும் ஒழிப்பது தான் நமது முக்கிய வேலை என்றும் அதுவேதான் இந்த நாட்டில் இருந்து வெள்ளைக்கார ஆதிக்கத்தை ஒழிக்கும் வேலை என்றும் கருதவேண்டும். இந்த ஒரு காரியம் ஒப்புக்கொண்டால் மற்ற காரியத்தில் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் விட்டுக்கொடுத்து ராஜிசெய்து கொண்டு எல்லோருமே ஒத்துழைக்க ஏற்பாடு செய்யமுடியும். இந்தக் காரியத்தில் திரு. சத்தியமூர்த்தி போன்றவர்கள் இரங்கி வேலை செய்தால் அவர் வடநாட்டுத் தலைவர்களுக்கு மேலானவர் என்பதாக ஆவார் என்பது மாத்திரமல்லாமல் தென்னாட்டிற்கும் ஒரு மாபெருந் தலைவராய் விளங்கக் கூடியவராவார் என்கின்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

**குடி அரசு - துணைத்தலையங்கம் - 24.05.1931**



# ஈரோட்டில் போலீஸ் அமளி

18-5-31-ந் தேதி மாலை 5 மணிக்கு சுமார் 4,5 ரூபாய் பெறுமான ஒரு திருட்டு மோதிரத்தை விலைக்கு வாங்கிய ஒரு பையன் ஏதோ ஒரு ஷராப்புக் கடையில் இருப்பதாக ஈரோடு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கேள்விபட்டு இரு சப்-இன்ஸ்பெக்டர்கள் ஈரோடு பிரபல ஷராப்பு வியாபாரி யாகிய உயர்திரு. மாரிமுத்து ஆசாரி கடைக்குச் சென்று விசாரித்ததாகவும், அந்த ஆசாரியார் பதில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அதில் திருப்தி அடையாத சப்-இனஸ்பெக்டர் ஒருவர் அந்த ஆசாரியாரை ஓங்கிக் கன்னத் தில் அடித்த தாகவும், அதற்காக அங்கு சுற்றியுள்ள ஜனங்களுக்கு மன வருத்தமேற்பட்டு சப்-இன்ஸ்பெக்டரை கண்டித்தாகவும், அதற்காக கடை வீதியானதால் ஜனங் கள் சீக்கிரம் கூடிவிட்டதாகவும், இதில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் நயந்து பதில் சொல்லிக் கொண்டிருக்க மற்றொரு சப்-இன்ஸ் பெக்டர் ஸ்டேஷனுக்குச் சென்று பல கான்ஸ்டேபிள்களை கத்தி, தடி, துப்பாக்கிகளுடன் கூட்டிக் கொண்டு போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்ட ருடன் வந்து, திரு. மாரிமுத்து ஆசாரி உள்பட சிலரை கைது செய்து, ஸ்டேஷனுக்கு அழைத்துப் போன தாகவும் சொல்லப்படுகின்றது. இது இப்படியிருக்க பொது ஜனங்கள் எங்கு திரு. மாரிமுத்து ஆசாரியாரை போலீசார் அடித்து விடுவார்களோ யென்று கவலைகொண்டு சுமார் 2000 பேர் வரையில் போலீஸ்டேஷனைச் சுற்றி கூடி விட்டார்கள். பெரிய பேங்கர் களும்,வியாபாரிகளும் ஜாமின் கொடுப்பதாகச் சொல்லியும், போலீசார் அவர்களை ஜாமீனில் விடாததால் டிப்டி கலெக்டர் ஜனாப். கான்பகதூர் ஜிண்டா சாயபு அவர்களிடம் சென்று இவ்விஷயத்தைச் சொல்லிக் கொண்டவுடன் அவர் உடனே புறப்பட்டு வந்து அரஸ்டு செய்யப் பட்டவர்களை ஜாமீனில் விடச் செய்ததும், கூட்டம் கலைந்து விட்டது. இரண்டு சிறு பையன்களை மாத்திரம் இன்னமும் விடுதலை செய்யாமல் இருக்கிறார்கள். அன்று இரவு பொது ஜனங்கள் ஒன்றுகூடி போலீஸ்டேஷ னில் காவல் புரியாதிருந்தால் போலீசார் திரு. ஆசாரியையும், மற்ற ஆட் களையும் நையப்புடைத்திருக்கக் கூடும் என்றே எல்லாரும் கருதினார்கள். ஆனால் ஒரு அடிகூட அப்புரம் யாருக்கும் விழவில்லை. இப்போது போலீஸார் திரு. மாரிமுத்து ஆசாரி அவர்கள் மீதும் திரு. மாரிமுத்து ஆசாரி போலீசார் மீதும் பிராதுகள் செய்திருப்பதாகத் தெரிய வருகின்றது.



RangaRakes tamilnavarasam.com

இது தவிர ஈரோடு பொது ஜனங்கள் காந்தி சவுக்கில் சுமார் 2000 பேர்கள் ஒரு கூட்டம் கூடி போலீசாரின் அக்கிரம நடவடிக்கையை கண்டித்துத் தீர்மானங்கள் செய்து மேல்அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள். விஷயம் எப்படி இருந்தாலும் கோவை ஜில்லா கலெட்டர் அவர்களாவது, ஜில்லா போலீஸ் சூப்ரெண்டென்ட் அவர்களாவது தயவு செய்து ஈரோடு வந்து இருதரப்பாரையும் கூப்பிட்டு விசாரித்து கேசுகள் மேற்கொண்டு நடவாமல், தேவையானால் இருவர்களுக்கும் புத்திசொல்லி விஷயத்தை இவ்வளவுடன் நிறுத்தி விடுவது போற்றத்தக்க காரியமாகும்.

இல்லாதவரை போலீசுக்கு ஒரு கெட்ட பெயரும், ஜனங்களிடம் ஒரு அனாவசியமான பரபரப்பும் இருந்து கொண்டு மெனக்கேடும், பணச் செலவும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். இவ்விஷயத்தில் வியாபாரிகள் எல்லாம் ஒன்று கூடி இருக்கின்றார்கள். மற்றும் இதற்கு ஊர் பொதுஜனங்களில் பலரும் ஆதரவாய் இருக்கிறார்கள். இதன் வெற்றி தோல்வியானது ஜனங்களுக்கும், போலீஸ்காரருக்கும் என்பதாக திரும்பிவிடக்கூடும் போல் தெரிகின்றது. கடைசியாக ஒரு விஷயம். டிப்டி கலெக்டர் திரு. கான்பகதூர் ஜிண்டா சாயபு அவர்கள் அந்த இரவில் தைரியமாய் வெளிவந்து அரஸ்ட் செய்யப்பட்டவர்களை ஜாமினில் விடச்செய்து ஜனங்களுக்குச் சமாதானம் செய்து எவ்வளவோ பெரிய கலவரம் நடக்க இருந்ததை ஒன்றுமில்லாமல் செய்தது போற்றத்தக்கதேயாகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 24.05.1931**



# ஈரோட்டில் போலீஸ் அக்கிரமம்

சகோதரர்களே! போலீஸார் அத்துமீரி நடந்த காரியத்தை கண்டிப்பதற்கு நாம் இக்கூட்டம் கூடியதாக சொல்லப்பட்டது என்றாலும் “போலீசார் ஏன் அடித்தார்கள்” என்று விசாரணை செய்ய நாம் இங்கு கூடவில்லை. ஆனால் ஒரு கண்ணியமுள்ள கனவானை கடைவீதியில் வைத்து அவமானம் செய்ததான அக்கிரம காரியத்தை கண்டிக்கவே கூடியிருக்கின்றோம்.

ஒருவன் குற்றம் செய்தால் குற்றத்திற்கு உரிய எந்த நியாயமான தண்டனையையும் அடைவதில் நாம் சிபார்சுக்குப் போகப்போவதில்லை. மேலும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதிலும், அவர்களை தண்டிப்ப திலும் நாம் போலீசாருக்கு உதவிபுரிய வேண்டியது அவசியந்தான். குற்றவாளிகளை பிடிப்பதில் நாம் உதவி செய்யாது, போலீசுக்கு விரோதமாக நடந்தால் ஊரில் சமாதானம் என்பது ஏற்படாது என்பது நாம் உணர்ந்ததேயாகும். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் போலீசார் நடந்து கொண்ட முறையானது அக்கிரமமானதாகும். ஏனெனில், போலீசார் ஒரு பெரிய மனிதரை அடித்து விட்டார்கள். இதைக் கண்டிக்காமல் .இருக்க முடியாது. இல்லா விட்டால் நாளைக்கும் இப்படித்தான் செய்வார்கள். மேலும் அவர்களால் அடிக்கப் பட்டவரோ மிக்க மரியாதையுள்ளவர். சுத்த சாது. உண்மையாக நடக்கக் கூடியவர். ஒருவார்த்தையும் துடுக்காக பேசாதவர் என்பது உலகமே அறிந்ததாகும். அப்படிக்கில்லாமல் யோக்கிய தையற்றவராயிருந்தால், இன்று நாம் இங்கு கூடியிருக்க வேண்டிய அவசியமேயில்லை. இதனால் திரு. மாரிமுத்து ஆசாரியாரிடத்தில் நமக்கு மரியாதை குறையவில்லை. மேலும் இவர் யாரிடத்தில் அடிக்கடி லேவா தேவி செய்து கொண்டு இருக்கின்றாரோ அவர்களே...... அந்த சேட்டுமார்களே வேண்டியது துகையை ஜாமீனாக கொடுக்க வந்ததும் திரு. ஆசாரியார் அவர்களின் யோக்கியதையை வெளிப்படுத்துகின்றது. அவரை போலீசார் இம்சை செய்ததினாலேயே அவருக்கு ஒரு கெட்ட பெயராவது அல்லது அவருடைய யோக்கியதை குறைந்து விட்டதாகவாவது ஏற்பட்டு விடாது. அவருடைய யோக்கியதை இன்னும் அதிகமாகக் காணப்படுமேயல்லாமல், குறைந்துவிடாது. ஆனால் போலீசாரின் யோக்கியதை தான் கேவலமாய்க் கருதப்பட்டுவிட்டது.

போலீஸ் இலாகாவிற்கு தற்கால அரசியல் காரணங்களால் அதிகாரங்கள் அதிகமாக வழங்கப்பட்டிருக்கின்றது. அவர்களும் தங்களுடைய



RangaRakes tamilnavarasam.com

அதிகாரத்தை இம்மாதிரி மூர்க்கத்தனமாகவே சில இடங்களில் காண்பித்துக் கொண்டு வருகின்றார்கள். போலீஸ் சிப்பந்திகளின் அக்கிரமத்துக்காக வேறு சில அதிகாரிகள் சில சந்தர்ப்பங்களில் பொது ஜனங்களிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனாலும் சில விஷயங்களில் போலீசார் கள் அத்துமீறியே நடந்துகொண்டு வந்திருக்கின்றார்கள். குறிப்பாக, இப்பொழுது நமது ஊரில் நடந்த சம்பவத்தைப்பற்றி நாம் வருந்தாதிருப்ப தற்கில்லை. ஆனால், நடந்தது நடந்துவிட்டது. அதைப்பற்றி நாம் பிரமாத மான கிளர்ச்சிகள் செய்து, போலீசுக்கும், ஜனங்களுக்கும், விரோதத்தை வளர்த்துக்கொண்டிருப்பதை விட, ஏதாவது ஒரு முயற்சி செய்து இம்மாதிரி சம்பவங்கள் இனி நடைபெறாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் நமது கடமையாகும். ஏனெனில், இன்று நாம் பேசாதிருந்தால், நாளைக்கு நமக்கும் இந்த மாதிரியேதான் நடந்துதீரும். ஆகையால் இம்மாதிரியாக அதிகாரிகள் இனி நடவாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இதனால், நமக்குப் போலீசே வேண்டாமென்பது அர்த்தமாகாது. நமக்கு சில சந்தர்ப்பங்களில் போலீசாரின் உதவி அவசியம் வேண்டியிருக்கின்றது. அவர்களுடைய பந்தோபஸ்தும் தேவைதான். ஆதலால் இந்த சம்பவத்தையே ஓர் ஆதாரமாக வைத்து, ஒருவிதகிளர்ச்சியையும் நாம் செய்துவிடக் கூடாதென்பதையும் இச்சந்தர்ப்பத்தில் அறிவித்துக் கொள்ளுகின்றேன். ஏனெனில், இதை ஓர் ஆதாரமாக வைத்து பெரியதொரு கிளர்ச்சி செய்து விட்டால் இதிலிருந்து அநேக கேசுகள் உண்டாகலாம். பிறகு அதனால் நிரபராதிகள் கஷ்டப்பட வேண்டிவரும். நமது சுயமரியாதையை நாம் காப்பாற்றிக் கொள்ள பாடுபட வேண்டியதுதான். ஏதோ சில போலீசார் பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொண்டால், எல்லாப் போலீசையே நாம் குற்றம் சொல்லுவதும் கூடாது. ஈரோட்டில் இதுவரை ஒருவித கலகமுமில்லாதிருந்தது. இந்துக்களும், முஸ்லீம்களும் சகோதரர்கள் மாதிரி ஒற்றுமையாகத்தான் நாளது வரையிலும் இருந்து கொண்டு வருகின்றோம். அப்படியிருக்கும் பொழுது போலீசார் இதற்காக ஜனங்களிடத்தில் அன்பாயிருந்து, யோக்கியப் பொறுப்புடன் நடந்து கொண்டிருக்க வேண்டும். அதைவிட்டு யோக்கியதையற்ற முறையில் போலீசார் நடந்து கொண்டதானது வருந்தக்கூடிய காரியமேயாகும். மேலதி காரிகள் இதை நன்கு விசாரணை செய்து, நீதி செலுத்தி ஜனங்களுக்கு போலீ சிடத்தில் மதிப்பு இருக்கும்படி செய்ய வேண்டும். ஜனங்களின் சிநேகத் தையும் ஒத்துழைப்பையும் அதிகாரிகள் நாடவேண்டுமென்பதற்காகத்தான் நாம் இன்று தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டியிருக்கின்றது. விஷயம் நியாயஸ்தலத்திற்கு போய் விட்டதாக தெரிகின்றது. ஆதலால் இங்கு விவகாரத்தின் உள்விஷயங்களைப் பற்றி விஸ்தரித்துக் கொண்டிருப்பது நியாயமாகாது. போலீசார் எவ்வளவுதான் அக்கிரமமாகவும் யோக்கிய பொறுப்பற்றும் நடந்து கொண்டபோதிலும் கூட நாமும் அதேமாதிரி நடக்கக்கூடாது.



திரு. மாரிமுத்து ஆசாரியார் வகையறாக்களை போலீஸ் ஸ்டேசனில் அடிக்க முயற்சித்ததாக கேள்விப்பட்டேன். எனக்கும் அப்போழுது ஆள் வந்தது. எங்கு அவர்களை அடித்து, இம்சைகள் செய்து விடுவார்களோயென ஜனங்களும் பயந்து கொண்டு சந்தேகமாகவே தானிருந்திருக்கிறார்கள். நானும் நேரில் சென்று பார்த்துவிட்டு வந்ததோடு அடிக்கடி ஆட்களை அனுப்பி, ஸ்டேசனில் என்ன நடக்கின்றதென்பதை யறிந்து கொண்டேதா னிருந்திருக்கிறேன். நமது டிப்டி கலெக்டர் அவர்கள் வந்து அவர்களை ஜாமீனில் விடும்படி கூறியதாக அறிந்தபிறகே தான் நான் படுக்கைக்குச் சென்றேன். இப்பொழுது வந்திருக்கும் டிப்டி கலெக்டர் மிகவும் நல்லவர். அவர் இவ்விஷயத்தை நன்றாக விசாரணை செய்து, முடிவு கூறுவாரென்பதே என்னுடைய அபிப்பிராயமாகும். ஆகையால் நாம் அடிக்கடி கூட்டம் போடு வதோ வாலிபர்களைத் தூண்டிவிடுவதோ ஆகிய காரியங்கள் செய்யக் கூடாது. அதிகாரிகளைப் பரிகாசம் செய்யவும் கூடாது.

கோர்ட்டில் விசாரணை நடக்கும் பொழுது, நாம் பொருமையாகவும் அடக்கமாகவும் நடந்துகொள்ள வேண்டும். அதிகமாகக் கூட்டம்போட்டு, விசாரணை நடைபெறாமலும் செய்துவிடக்கூடாது. அம்மாதிரி இன்று அதிகமாக ஜனங்கள் கூட்டம் கூடியதனால் தான் இந்தக் கேசை இம்மாதம் 25-ம் தேதி காங்கயத்தில் விசாரணைக்குப் போட்டிருப்பதாக இப்போது நான் கேள்விப்படுகிறேன். ஆனால் அது எவ்வளவு தூரம் உண்மையோ அது எனக்குத் தெரியாது. இம்மாதிரியான புகார்களுக்கு நாம் இடந்தராமல் நடந்துகொள்ள வேண்டும். காங்கயத்தில் விசாரணை போட்டிருப்பதானது நமக்குத்தான் அதிக கஷ்டம் . அவர்களோ சர்க்கார் செலவிலேயே போய் வருவதுமல்லாமல், சர்க்காரார் அவர்களுடைய செலவுக்குக் கொடுக்கிற பணத்திலும் சிறிது மீதி செய்துகொண்டு லாபமடைவார்கள் . ஆனால் நமக்கு எல்லாம் கைச்செலவேயாகும்.

மேலும் போலீசாருக்கு இதனால் அதிக செலவும் ஏற்படப் போவ தில்லை. அநியாயமெனத் தோன்றினாலும், அல்லது இந்தக் கேஸ் அப்பீலில் நிற்காது, உடைபட்டுப் போகும் என்று தோன்றிய பொழுதிலும்கூட, சில அதிகாரிகள் வேண்டுமென்றே நடவடிக்கை நடத்தி அலைந்து திரியட்டும் என்று சமாதானம் செய்து கொள்ளுகிறார்கள். "எனக்கென்ன செலவு வந்தது? இரண்டு வரி எழுத வேண்டியதுதானே. அவன் போய் செலவு செய்து கொண்டு அலையட்டுமே" என போலீசு அதிகாரிகள் கூறுகின்றதாக சொல்லுகின்றார்கள்.

ஆதலால் இதற்காக இனி எவ்வித கிளர்ச்சியும் வேண்டாம். மேலும் சிலர் நம்மைத் தூண்டிவிட்டு மேன்மேலும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமெனவும் கூறுவார்கள். நமக்கு இருக்கும் ஆத்தி ரத்தில் நாம் அவர்களுடைய வார்த்தைகளுக்கு இணங்கி நடந்தோமே



RangaRakes tamilnavarasam.com

யானால், அவர்கள் "சென்னைக்குச் செல்லலாம்" "டில்லிக்குச் செல்லலாம்" "ஒரு கை பார்த்து விடவேண்டும்" என பலவாறாக நம்மைத் தூண்டிக் கொண்டிருப்பார்கள். பிறகு அவர்கள் கண்ணுக்குக் கூட கிடைக்க மாட்டார்கள். நமக்கும் இரண்டு நாள் வரையிலும் தான் இந்த ஆத்திரம் இருக்கும். பிறகு அது தானாகவே அமர்ந்து விடும்.

இதுவரையிலும் திரு.மாரிமுத்து ஆசாரியார் இருந்தவிடமே தெரியாமலிருந்தது. ஆனால் இந்த சம்பவத்தால் அவருடைய பெயர் எல்லோருக்கும் தெரியவந்தது. இவ்வாறு கூட்டம்போட்டு, சில தீர்மானங்களை நிறைவேற்றிவிடுவதால் மட்டும் நமது பொறுப்பு முடிந்து விட்டதாக நாம் நினைத்துக்கொள்ளக்கூடாது. வேண்டுமானால், அல்லது அவசியம் நேர்ந்தால் எல்லாரும் ஆள் ஒன்றுக்கு 5 அல்லது 10 கொடுத்தாவது அவருக்கு நியாயம் கிடைக்கும்படி செய்யவேண்டும். இப்பொழுது இவ்விடத்தில் ஒரு தீர்மானம் பிரரேரேபிக்கப்போகின்றார்கள். அதைக்கவனித்து நிறைவேற்றுவீர்களென நம்புகின்றேன்.

*குறிப்பு: 19.05.1931 ஆம் நாள் ஈரோடு காரைவாய்க்காலில் காவல்துறையைக் கண்டித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 24.05.1931**



# சி. இராஜகோபாலாச்சாரியாரின் வேலைத்திட்டம்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் உயர்திரு. சி. இராஜ கோபாலாச்சாரியார் அவர்கள் பணம் வசூலிப்பதற்காக வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் அந்தப் பணத்தின் மூலம் செய்யப்படும் வேலைத் திட்டங்களையும் குறிப்பிபிட்டிருக்கின்றார். அவைகளில் 5-வது திட்டமாக:-

ஹிந்தி:- "ஜனங்களிடையே இருக்கும் குருட்டு நம்பிக்கையையும், மூடப்பழக்கவழக்கங்களையும் போக்கி பகுத்தறிவும் ஏற்படுவதற்குப் பாடுபட வேண்டும்"

என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இது தற்காலத்திற்கு ஏற்றதொரு வேஷமேயானாலும் இவர்களும் இவர்களது சிஷ்யகோடிகளும் செல்லுமிடங்களிலெல்லாம் பாரதக்கதையையும், ராமாணயக் கதையையும், நளன் கதையையும் மற்றும் விஷ்ணுவின் 10 அவதாரக் கதைகளையும் பிரசங்கம் செய்து, பிரசாரம் செய்து கொண்டே போவது குருட்டு நம்பிக்கையையும், மூடப்பழக்கவழக்கங்களையும் ஒழித்து பகுத்தறிவை உண்டாக்கும் பிரசாரமாகுமா? என்று வணக்கத்துடன் கேட்கிறோம்:

அன்றியும் அந்த ஷை அறிக்கையில் உள்ள 8 திட்டங்களிலும் தீண்டாமை விலக்கு திட்டத்தை மாத்திரம் வெகு ஜாக்கிரதையாகவே நமது ஆச்சாரியாரவர்கள் அடியோடு ஒரு வார்த்தை கூட சொல்லாமல் விட்டிருக்கிறது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

**குடி அரசு - கட்டுரை - 24.05.1931**



RangaRakes tamilnavarasam.com

## பார்ப்பன வக்கீல்கள்,

## மாணவர்கள் "காங்கிரஸ்" பிரசாரம்

இப்போது கோர்ட்டும் பள்ளிக்கூடமும் மூடப்பட்டு லீவு நாளாய் இருப்பதால் அந்த நாளைக் காங்கிரஸ் பிரசாரம் மென்னும் பார்ப்பன பிரசாரத் திற்காக ஊர் ஊராய் சென்று வெகு கவலையாய்ப் பிரசாரம் செய்யப் பார்ப்பன வக்கீல்களும், மாணவர்களும் உபயோகிக்கின்றார்கள்.

இதுபோன்ற கவலை பார்ப்பனரல்லாத வக்கீல்களுக்குள்ளும், மாணவர்களுக்குள்ளும் சிறிதும் யாருக்கும் கிடையாது. பார்ப்பனரல்லாத வக்கீல்களையும், மாணவர்களையும் காங்கிரஸ் பிரசாரம் செய்யும்படி நாம் விரும்பவிலை. ஆனால் பார்ப்பனப் புரட்டை எடுத்து வெளியிடும் பிரசாரம் ஏன் செய்யக்கூடாது என்றுதான் கேட்கின்றோம். பார்ப்பனரல் லாத சமூகம் ஒரு மனிதன் தன்னை தூக்கி ஏதோ விடுவதன் மூலமே மேலேறலாம் என்று நினைத்தால் எவ்வளவுதான் தூக்கிவிட முடியும்? கைக்கு எட்டும் அளவுக்கு மேல் எப்படித்தான் தூக்கிவிட முடியும்? நமது நாட்டில் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றம் என்பது வெறும் உத்தியோக ஆத்திரமே அல்லாமல் அதுவும் தனிப்பட்டவர்கள் தனது தனது சொந்த உத்தியோக நலத்திற்கு ஆத்திரப் படுவதல்லாமல் அந்த சமூக நலத்திற்குப் பாடுபடுவது என்பது யாரிடத் திலுமே அரிதாயிருக்கின்றது.

படித்த மகமதிய சகோதரர்களிடமும் அதுபோலவேதான் சமூக உணர்ச்சி என்பது மிக அரிதாகவே இருக்கின்றது. இந்த சமயத்தில் ஒரு மகமதிய வக்கீலாவது, மாணவராவது வெளிக்கிளம்பி தங்களது உரிமைக்கு விரோதமாய் செய்யப்படும் பிரசாரத்தை ஒழிக்க இதுவரை யாரும் புறப்பட வில்லை. யாரோ வேலை செய்து உத்தியோகங்களைக் கற்பனை செய்து ஏதாவது சீர்திருத்தம் என்பதாக ஒன்றைக் கொண்டுவந்து விட்டால் அவ்வுத்தியோகங்களில் "எனக்கு பங்கு கொடு" என்று கேட்கமாத்திரம் அந்த சமயத்தில் எல்லோருமே தயாராக இருக்கின்றார்களே யொழிய பாமர மக்களுக்காக பாடுபட்டு அறிவூட்டி, அவர்களை ஏமாற்றத்திலிருந்து தப்பு வித்து, சமத்துவத்துடன் வாழவும், உண்மையை உணரவும் செய்வதில் யாரும் கவலை எடுத்துக் கொள்வதே கிடையாது.



ஆகையால் பார்ப்பனரல்லாத வக்கீல்கள், மாணவர்கள், முஸ்லீம் வக்கீல்கள், மாணவர்கள் தைரியமாய் வெளிச் சென்று பார்ப்பனப் புரட்டை வெளியாக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 24.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# புதிய முறை சீர்திருத்த மணம்

## பொன்னம்பலனார் - சுலோசனா

திருவாளர் அ. பொன்னம்பலனார் அவர்களது திருமணமானது 24ந் தேதி மாலை 5 மணிக்கு பிறையார் நாடார் ஹைஸ்கூல் ஆலில் உயர்திரு. புரபசர் லக்ஷிமி நரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருமண ஒப்பந்தம் நடைபெறுவதற்கு முன் திரு. ஈ. வெ. இராமசாமி எழுந்திருந்து சில வார்த்தைகள் சொன்னார்.

அதாவது சீர்திருத்த திருமணம் என்றும் சுயமரியாதைத் திருமணம் மென்றும் சொல்லப்படுபவைகளெல்லாம் எனது கருத்துப்படி பழைய முறையில் உள்ள அதாவது தெய்வீக சம்மந்தம், சடங்கு, இருவருக்கும் சம உரிமை இல்லாத கட்டுப்பாடு, நியாய வாழ்க்கைக்கு அவசியமில்லாத இயற்கை தத்துவத்திற்கு முரணான நிபந்தனைகள் ஆகியவைகளில் இருந்து விடுபட்டு நடைபெறும் திருமணங்களேயாகும். சுயமரியாதை இயக்கத் திற்குப் பின் இத்திருமண விஷயத்தில் அனேகவித சீர்திருத்த மணங்கள் நடைபெற்றிருக்கின்றன.

அதாவது பார்ப்பனப் புரோகிதமில்லாத – அர்த்தமற்ற, அவசிய மற்ற சடங்குகள் இல்லாத, புரோகிதமே இல்லாத ஓரேநாளில் ஒரே மணியில் நடைபெறக்கூடிய வீண்செலவு இல்லாத முதலிய மாதிரியிலும் மற்றும் கலப்பு மணங்களும், விதவை மணங்களும், குழந்தைகளுடன் விதவை மணங் களும், ஒரு கணவன் ஒரே காலத்தில் இரு பெண்களை வாழ்க்கைத் துணை வர்களாய் ஏற்றுக்கொண்ட மணங்களும், மனைவியை புருஷன் ரத்து செய்துவிட்டு வேறு பெண்ணை செய்து கொண்ட மணங்களும் மற்றும் கிறிஸ்துவ மதத்தில் ஒரு மனைவி ஏற்கனவே இருக்க அதைத் தள்ளிக் கொண்ட திருமணமும் மற்றும் பொட்டுக்கட்டி தாசித் தொழிலி லீடுபட்டப் பெண்கள் பொட்டுக்களை அறுத்து விட்டு செய்துகொண்ட மணமும் இப்படி யாக பலவித சீர்திருத்த மணங்கள் இதுவரை நடைபெற்று வந்திருக்கின்றன.

ஆனால் இந்த திருமணம் என்பதானது இதுவரை நடந்த சீர்திருத்த திருமணங்களை யெல்லாம் விட ஒருபடி முன்னேறிய திருமணம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



இன்றைய மணமகளாகிய திருமதி. சுலோசனா ஏற்கனவே திருமணம் நடந்து அந்தம்மையினுடைய கணவனார் இப்பொழுது நல்ல நிலையிலும் உத்தியோகத்திலும் இருந்து கொண்டிருக்கிறார். அப்படி இருக்க இந்தம்மைக்கு இப்போது முதல்புருஷன் இருக்கவே அவரிடமிருந்து விலகி, இது இரண்டாவதாக செய்துகொள்ளும் சீர்திருத்த திருமணமாகும். இந்தத் திருமணம் முதல் புருஷனுடைய சம்மதப்படியே நடைபெறுவதாகும். பெண் ணின் தகப்பனாரும் மற்ற நெருங்கிய பந்துக்களுடையவும் முழுச் சம்மதத் துடனேயே இது நடைபெறுகின்றது. பெண்ணின் தகப்பனார் இப்பொழுதுமீ 500, 600 ரூபாய் சம்பளத்தில் சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பதாக அறி கிறேன். பெண்ணின் தகப்பனார் பெண்ணுக்கு இந்த நகைகள் போட்டி ருப்பதல்லாமல் இந்த மகாநாட்டுச் செலவு, கல்யாணச் செலவு மற்ற செலவு ஆகியவைகள் அவராலேயே செய்யப்படுகிறது. பெண்ணின் சிறிய தகப் பனார் நேரில் இருந்து எல்லாக் காரியங்களையும் நடத்துகின்றார். அதனால் தான் இந்தத் திருமணம் இதுவரை நடந்த சீர்திருத்த திருமணங்களை யெல்லாம் விட ஒருபடி முன்னேறிய திருமணம் என்று சொன்னேன். மணமகன் திரு. பொன்னம்பலம் அவர்களைப்பற்றி உங்களுக்கு ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. அவர் "சைவவேளாளர்" வகுப்பு என்பதைச் சேர்ந்தவராயிருந்தவர். அவற்றை யெல்லாம் அடியோடு ஒழித்து எவ்வித ஜாதிமதபேதம் இல்லாமல் சகலத்திற்கும் துணிந்து சுயமரியாதைத் தொண்டாற்றிவருபவர். பெண் ஸ்ரீவைணவர் என்று சொல்லப்படுவதும் சாத்தாதார் என்று சொல்லப் படுவதுமான வகுப்பைச் சேர்ந்திருந்தவர். அவற்றையெல்லாம் அடியோடு விட்டுவிட்டதுடன் இத்திருமண விஷயத் தில் அப்பெண்ணுக்கு வேறுயார் யாரோ எவ்வளவோ குக்ஷிகள் செய்து பெரும் பெரும்பழிகள் கூறி அதன் புத்தியை கலைத்தும் அதற்கெல்லாம் முற்றிலும் ஏமாறாமல் தைரியமாய் இருந்து இத்திருமணத்திற்கு இசைந்தனர்.

ஆகவே இத்திருமணமானது நாம் விவாக முறையில் என்னென்ன விதமான கொள்கைகளை நமது இயக்கத்தின் மூலமாகப் பிரசாரம் செய்கின் றோமோ அவைகளில் முக்கியமான தொன்றென்றும் ஆண் பெண் விவாக விஷயத்தில் ஏற்படும் சீர்திருத்தமே நமது நாட்டை– ஏன் உலகத் தையே சமதர்மமக்களாகச் செய்யக்கூடிய ஒரு முக்கிய கருவியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**குடி அரசு – சொற்பொழிவு – 31.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாட்டு தீர்மானங்கள்

இம்மாதம் 24, 25ம் தேதிகளில் பிறையாற்றில் நடந்த தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முக்கியமாகக் கருதப் படுவதும், பலருக்கு திடுக்கிடும்படியான அளவுக்கு பிரமாதமாய் காணப்படு வதுமான தீர்மானங்கள் மூன்று.

அதாவது,

1. "மக்களுக்குள் இருந்துவரும் தீண்டாமையும், ஜாதி வித்தியாசமும் அடியோடு ஒழிக்கப்பட வேண்டுமானால் அதற்கு முட்டுக்கட்டையாக விருக்கும் 'இந்து மதம்' என்பது அழிக்கப்பட வேண்டியது மிக்க அவசிய மாகும்."

2. "மக்கள் உண்மையான சுதந்திரமும், சமதர்மமும், பொது வுடைமைத் தத்துவமும் அடைய வேண்டுமானால் அவற்றிற்கு இடை யூறாக விருக்கும் கடவுள் நம்பிக்கையும், எதற்கும் அதையே பொறுப் பாக்கும் உணர்ச்சியும் ஒழிக்கப்பட வேண்டியது அவசியமாகும்."

3. "பெண்கள் ஆண்களைப் போன்ற விடுதலையையும், சமதர்ம ஒழுக்கத்தையும், சுதந்திரத்தையும் அடைய வேண்டுமானால் அவற்றிற்கு தடையாயிருக்கும் பிள்ளைப்பேற்றை (கர்ப்பத்தை) அடக்கி ஆள வேண்டியது அவசியமாகும்"

என்பவைகளாகும்

ஆகவே இதன் கருத்து மத உணர்ச்சி, கடவுள் உணர்ச்சி ஆகியவை மக்கள் வாழ்க்கைக்குள் புகுந்து கொண்டு இருக்கக் கூடாதென்பதேயாகும்.

பொதுவாக நமது நாடானது உண்மையான விடுதலையும், சுதந்திரமும், சமதர்மமும் அடைவதற்கு நாம் வெகுகாலமாகவே மேல்கண்ட இம்மூன்று தன்மைகள் அதாவது மக்களுக்குள் தீண்டாமை ஒழிவதும், ஜாதி வித்தியாசம் நீங்குவதும், பொருளாதார சமதர்மம் ஏற்பட வேண்டுமென்பதும், பெண்கள்



விடுதலையும், சம உரிமையும் அடைய வேண்டுமென்பதையுமே முக்கிய மாய்ச் சொல்லி வந்திருக்கின்றோம். இதை அன்று முதல் இன்று வரை மறுப்பவர்கள் - மறுத்தவர்கள் யாருமில்லை. ஆகவே இம்மூன்று காரியங் களும் ஏற்படவேண்டுமென்று உண்மையாயும், யோக்கியமாயும் விரும்பும் - ஒப்புக்கொள்ளும் ஒவ்வொருவரும் அவற்றிற்கு இடையூறுகளாயிருப் பவைகளை ஒழிப்பதின் மூலம் தான் அவைகளை அடைய முடியுமென்பதை ஒப்புக்கொண்டே தீருவார்கள்.

இந்நிலையில் பார்த்தோமானால் நமக்கு தீண்டாமைக்கும், ஜாதி வித்தியாச உயர்வு - தாழ்வுக்கும் ஆதாரமாக "நமது மதம்" என்று சொல்லப் படும் "இந்துமதம்" என்பதாக ஒன்று இருந்து கொண்டுதான் முட்டுக்கட்டை யாக இருக்கின்றதே யொழிய, வேறொன்றுமில்லை.

இந்து மதம் என்பதின் ஜீவ நாடியே தீண்டாமையும், ஜாதி வித்தியாச முந்தான் என்பதை, "இந்து மத" சம்பந்தமான ஒரு சிறிது ஞானமுள்ள மக்களும் உணருவார்கள்.

அன்றியும், இன்றைய தினம் தீண்டாமையையும், ஜாதி வித்தியா சத்தையும் ஒழிக்க விடாமல் தடுத்துக் கொண்டிருப்பவர்களான நமது எதிரிகள் எதை பிரதானமாய்ச் சொல்லுகின்றார்களென்றால் "இந்து மதத்தை"த் தான் பிரதானமாய்ச் சொல்லுகின்றார்கள்.

ஆகவே இந்து மதத்தின் நிழலில் தான் தீண்டாமையும், ஜாதி வித்தியாசமும் அடைக்கலம் புகுந்து கொண்டிருக்கின்றதே யொழிய வேறு எவருடைய பலத்தாலும் ஆதாரத்தாலும் அவை இருக்கவில்லை. அன்றி யும் ஜாதி வித்தியாசத்தைக் காப்பாற்றுவது தான் இன்று இந்துமத சம்பர தாயமாக இருக்கின்றதே யொழிய, வேறு ஒரு காரியமும் இந்துமதத்தின் அனுபவமாய் எந்த இந்து மக்களிடமுமில்லை என்பதும் அனுபவ ஞான முள்ள யாவரும் நன்றாய் அறியலாம்.

முதலாவது, இந்த ஜாதி வித்தியாசம், தீண்டாமை ஆகியவைகள் அனுபவத்திலிருப்பது தான் இந்து மதம் என்பதைத்தவிர, மற்றபடி இந்து மதம் என்றால் என்னவென்று இந்துக்கள் என்பவர்களில் கோடிக்கு ஒருவராவது விளக்க முடியுமா? அல்லது தங்களுக்காவது தெரியும்படி விளக்கிக் கொண்டிருக்கின்றார்களா? என்று பந்தயம் கூறிகேட்கின்றோம். வார்த்தையளவு அல்லாமல் கருத்தளவில் யாருக்காவது விளங்குமா? விளங்கியிருக்கின்றதா? என்றும் கேட்கின்றோம்.

தவிரவும், இந்து மதம் என்று சொல்லப்படுவதற்கு ஆதாரமென்று சொல்லக்கூடியதும், இந்துக்கள் என்ற தலைப்பின் கீழ் கட்டுப்பட்ட மக்களில் 100க்கு 25 பேராவது தெரிந்து, ஒப்புக்கொள்ளக் கூடியதுமான ஆதாரமோ, தர்மமோ, கொள்கைகளோ, கோட்பாடுகளோ எதுவுமில்லையென்று நம்மால்



RangaRakes tamilnavarasam.com

தைரியமாய்ச் சொல்லக்கூடுமானாலும், ஒரு சமயம் வேறு யாராவது இருப்பதாகச் சொல்லி கட்டாயப்படுத்தி மக்களை ஒப்புக்கொள்ளச் செய்யும் எந்த ஆதாரத்திலாவது தீண்டாமையையும், ஜாதி வித்தியாசத்தையும் வற்புறுத்தாத ஆதாரமோ, தருமமோ, கொள்கையோ கோட்பாடோ இருக் கின்றதா யென்றும் கேட்கின்றோம்.

இஸ்லாம் மதத்திற்கு குர் ஆன், கிறிஸ்துவ மதத்திற்கு பைபிள் என்பவை இருப்பது போல் இந்து மதத்திற்கு என்னயிருக்கின்றது என்பதாக இந்துமத அபிமானிகள் யாராவது சொல்லமுடியுமா? இந்துக்களுக்கு மேற்கண்டதைப் போன்ற ஒரு வேதமிருக்கின்றதா? இருந்தால் அது இந்துக் களென்பவர்கள் தெரியக்கூடியதா? அது இந்துக்கள் என்பவர்கள் எல்லோ ரையும் கட்டுப்படுத்தக் கூடியதா? என்று கேட்பதோடு இந்து மதத்தைக் காப்பாற்றக் கவலைக் கொண்டவர்கள் என்பவர்களாவது அதில் உள்ளவற் றிற்கு கட்டுபட சம்மதிப்பார்களா? என்பதின் மூலம்தான் ஒரு மதத்தின் ஆதாரமின்னதென்பதை நிச்சயிக்க முடியுமேயொழிய, மற்றபடி எவருக்கும் புரிவிக்கப்பட முடியாமலும், தங்களுக்கே புரியாமலும் பேசுவதில் யாதொரு பயனும் ஏற்படாதென்பதுடன் இந்த நிலையில் உள்ள இந்து மத சம்பந்தமான வக்காலத்தே பரிகாசத்திற்கு மிடமாகுமென்பதையும் ஞாபகப்படுத்துகிறோம்.

இந்திய பாமரமக்களின் முட்டாள் தனத்தையும், கற்ற மக்களின் அயோக்கியத்தனத்தையும் உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்கறிகுறியாகத் தான் இந்து மதமென்ற உணர்ச்சி இருக்கின்றேதே என்பதோடு இந்தியாவில் 100-க்கு 10-பேருக்குக்கூட இந்துமதமென்றாலென்ன வென்பது விளங்காமலே அதற்கு அடிமையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களென்றும் நாம் பந்தயம் கூறிச்சொல்லுவோம்.

மேலும், தீண்டாமையும், ஜாதி வித்தியாசமும் ஒழிவதற்கு மாத்திர மல்லாமல், இந்து மக்களின் அறிவு விர்த்திக்குமான உதயத்திற்கும் இந்து மதம் என்கின்ற உணர்ச்சியொழிய வேண்டியதவசியமென்று மேலும் மேலும் வலியுறுத்திச் சொல்லுவோம் . ஆகவே, இவ்வித இந்துமதமென் பதைக் கட்டிக் கொண்டு அழுவதும், அதற்கு ஏதேதோ வியாக்யானங்கள் சொல்லு வதும், அசிங்கத்தையெடுத்து மேலே பூசிக்கொள்ளுவதை யொக்குமே தவிர புத்திசாலித்தனம் ஒன்றும் விளங்காது. பொதுவாக மதங்கள் என்பதே “அதாவது கடவுளுக்கும், மனிதனுக்குமுள்ள சம்பந்தத்தைக் காணவும் - கடவுளை மனிதன் அடையவும்” என்று சொல்லப்படுவதான மதங்கள் என்பதே “மூட நம்பிக்கை”யென்றும், “ஹம்பக்” யென்றும் உலக மக்கள் பெரும்பாலோரால் சொல்லிக்கொண்டு வருகின்ற இந்தக் காலத்தில் பல இடங்களில் அவை யொழிக்கப்பட பிரசாரங்கள் செய்துகொண்டும் வரப் படுகின்ற இந்தக் காலத்தில் கேவலம் அர்த்தமில்லாத, ஆதாரமில்லாத இந்துமதம் என்பதற்கு ஒருவர் வக்காலத்துப் பேசவருவதென்றால் இதைவிட பரிகாசத்திற்கிடமான காரியம் வேறில்லை என்றே சொல்லுவோம்.



அடுத்தபடியாக இந்துமதம் எதற்காகக் காப்பாற்றப்பட வேண்டு மென்பதே நமக்குப் புலப்படவில்லை. அதில் ஏதாவது உயர்ந்த கொள்கைகளோ, பிரயோஜனப்படத்தக்க தத்துவங்களோ அல்லது ஞானங்களோ இருக்கின்ற தென்று யாராவது சொல்லவந்தால், அவர்களைப் பற்றி நாம் சிரிப்பதுடன் அவர்களுக்கு , உவமையாகவுமொரு பழிமொழியைச் சொல்லிக்காட்ட வேண்டியவர்களாகவுமிருக்கின்றோம். அதாவது, ஒருவன் “பஞ்சபாண்டவர் களை எனக்குத் தெரியாதா? கட்டில் கால்கள் போல் மூன்றுபேர்களென்று சொல்லி, இரண்டு விரல்களைக்காட்டி, தரையில் ஒன்றை எழுதி, கடைசியில் அதையும் காலால் தேய்த்து விட்டானாம்.” என்பதை யொக்கும்.

ஆகவே, இப்பழமொழிப்படி எப்படி இந்த நபர் பஞ்சபாண்டவர்கள் என்பவர்கள் கட்டில் குத்துக்கால்கள் ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று ஆகிய இவையொன்றுமே தெரியாதவர் என்று ஏற்படுகின்றதோ, அது போல் இந்துமதம் என்பது “எனக்குத் தெரியாதா?, அது அநேக உயர்ந்த தத்துவங் கள், ஆத்ம ஞானங்கள் முதலியவைகள் கொண்ட பழமையான” தென்று சொல்லுபவர்களுமாவார்கள் என்றுதான் நாம் அபிப்பிராயப்பட வேண்டி யிருக்கிறது.

எனவே, இப்படிப்பட்ட மக்களின் அபிப்பிராயத்திற்கு யாரும் பயப் படவேண்டியதில்லை யென்பதைத் தவிற, வேறு சாமாதானம் பொது மக்களுக்கு நாம் சொல்ல வேண்டியதில்லை யென்றே கருதுகின்றோம்.

மற்றபடி சமதர்மத்திற்கும் பொதுவுடைமைக் கொள்கைக்கும் கடவுள் உணர்ச்சி ஒழிக்கப்பட வேண்டிய தென்பதும் நமது உறுதியான அபிப்பிராய மேயாகும். கடவுள் நம்பிக்கையும், கடவுள் மீது பொறுப்பு போடுபவனும் சுதந்திரமனிதனாயிருக்க நியாயமேயில்லையென்று பல தடவைகளிலும் சொல்லி வந்திருக்கின்றோம்.

கடவுள் உண்டா? இல்லையா? என்கின்ற பிரச்சினையில் நாம் புக வில்லை. அதுமுடிந்த விஷயமாகும் எப்படியெனில், “தொட்டதிற் கெல்லாம் கடவுள் ! கடவுள்!!” யென்று சொல்லி சதா பிரார்த்தனை செய்து கொண்டி ருக்கும் திரு. காந்தியும், சைவசமய நிபுணர்களின் மகாநாடு கூட்டமும், ஏற்கனவே இதைப்பற்றி ஒரு முடிவு சொல்லியாய்விட்டது. அதாவது, “கடவுளிருப்பதாய் மனிதன் நினைத்துக் கொள்வது நல்லது” என்று மாத்திரந் தான் சொல்லிவிட்டார்கள். ஆதலால், அது ஒரு மனிதன் ஒரு பலனையுத் தேசித்து நினைத்துக் கொள்ளவேண்டிய விஷயமாய் போய்விட்டதென்ப தினால் புலனாகின்றது. ஆகையால், நாம் இனியும் அதில் பிரவேசிக்க வேண்டிய வேலையில்லை. ஆனால், மனிதனுடைய தற்கால நிலைக்கு கடவுள்தான் காரணமென்றால் மனிதனின் நிலையை மாற்ற வேண்டுமென்று சொல்ல நமக்கு யோக்கியதை ஏது? இப்படிப் பட்டவர்களுக்கு முயற்சி செய்யத்தான் மனம் எப்படி வரும்? என்பதுதான் நமது கருத்து. ஆதலால்தான்



RangaRakes tamilnavarasam.com

கடவுள் உணர்ச்சியையும், அதன் மேல் பொறுப்பு சுமத்துவதையும் அழிக்க வேண்டுமென்கிறோம்.

பிறகு, பெண்கள் கர்ப்பத்தடை விஷயம்.

நாம் பெண்கள் பிள்ளைகளைப் பிரசவிக்கவே வேண்டாமென சொல்லவரவில்லை. அச்செய்கையினால் பெண்கள் அடிமைகளாகின்றார் களென்பதற்காகவே, முக்கியமாய் அதைத் தங்களாதீக்கத்தில் வைத்து, இஷ்டப்படி தாங்கள் சுதந்திரமாயிருக்கத் தக்க மாதிரியாக உபயோகித்துக் கொள்ளச் சொல்லுகின்றோம். ஆண்கள், பெண்களைத் தங்களைப் போலெண்ணுவார்களானால், அப்போது பிள்ளைகளைப் பிரசவிப்பதன் கஷ்டமும், அதனாலேற்படுமடிமைத்தனமும் அவர்களுக்கு விளங்கும். அவர்களை அடிமைகளென்று கருதிக்கொண்டிருப்பவர்களுக்கு, இதிலுள்ள கஷ்டம் விளங்காது.

மற்றபடி பெண்களின் "கற்பு ஒழுக்க"த்தில் சம சுதந்திரம் இருக்க வேண்டுமென்னும் விஷயத்தில், சிலருக்கு - அதாவது சில ஆண்களுக்குப் பெரிய கஷ்டமிருப்பதாகத் தெரிய வருகின்றது. பெண்கள் கற்புள்ளவர் களாயிருக்க வேண்டுமென சொல்லுவதற்கு, எந்த ஆணுக்குரிமை யுண்டென நாம் கேட்கின்றோம்.

தவிறவும், பெண்களுக்கு புத்தி சொல்ல ஆண்கள் யாரெனவும் கேட்கின்றோம். "கற்பு" என்னும் பூச்சாண்டியின் யோக்கியதை யாவருமறிந்த இரகசியமே யொழிய, அது ஒருவருக்கும் தெரியாததல்ல. பெண்களை நாம் உலகத்திலுள்ள எல்லா மனிதர்களுக்கும் பொது மகளிராயிருக்க வேண்டு மென சொல்லவரவில்லை. ஆனால் மற்றபடி நாம் சொல்லுவதென்ன வென்றால், எல்லா விஷயங்களிலும் ஆண்களுக்குள்ள சுதந்திரம், பெண்களுக்குமிருக்க நியாயமுண்டு. 'கற்புத்தவறும்' விஷயத்திலும், ஆண்களுக்குள்ள நிபந்தனை களும் தண்டனைகளும் தான் பெண்களுக்கு மிருக்க வேண்டுமென்று சொல்லுகின்றோமே யொழிய, வேறில்லை. கற்பு என்பதாக ஒரு குணம் உண்டா? இல்லையா? அது இயற்கைக்கும் சாத்தியத்திற்கும் ஏற்றதா என்கின்ற பிரச்சினைகள் அது வேறு விஷயம். ஆனாலும் யோக்கியமான ஆண் பிள்ளைகள் இதற்குப் பயப்பட வேண்டிய தவசியமேயில்லை.

எவனொருவன், தான் "கற்புள்ளவனாயிருக்க" இருக்கவில்லையோ, எவனொருவனால் இருக்க முடியவில்லையோ அவனுக்குத்தான் இதில் அதிகமான கவலையும் பயமுமிருக்க நியாயமுண்டே தவிற மற்றவர்கள் இதைப்பற்றி கவனிக்க வேண்டியதேயில்லை. அல்லாமலும் நாமாவது "ஆண்கள் கற்புள்ளவர்களாயிருந்தாலும், பெண்கள் கற்புள்ளவர்களா யிருக்கக்கூடா"தென்று சொல்லியிருந்தால்தான், நம்மீதுமொருவர் கோபித் துக் கொள்ளவும் ஒருவருக்கு உரிமையுண்டு. இப்படிக்கெல்லாம் இல்லா மல்



சும்மா வீணே "கற்புப் போய்விட்டதே, கற்புப் போய்விட்டதே" யென்று யாராவது கூப்பாடு போட்டால், அதைப் போலிக்கூச்சலென்று தான் கருதி, குப்பைத் தொட்டியில் போடவேண்டுமே தவிற அதற்காக யாரும் கவலைப்பட வேண்டியதில்லை.

ஆகவே, தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்கள் மிக முக்கியமானதும், நியாயமானது மென்பதோடு, கூடிய சீக்கிரத்தி லிதுவே, உலகத்தீர்மானங்களாக யேற்படப் போகின்ற தென்பதோடு, இதே தீர்மானங் கள் இன்னும் வெகு சமீப காலத்திற்குள் "இந்திய தேசீய காங்கிரசிலும்" புகாதவரையில் அக்காங்கிரசே இருக்குமிடம் தெரியாமல் மறைந்து போகப் போகின்றதென்ற உறுதியையும் கொண்டிருக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 31.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# விருதுநகர் சுயமரியாதை மகாநாடு

விருதுநகர் சுயமரியாதை மகாநாடு ஜூன் முதல் வாரத்திலாவது இரண்டாவது வாரத்திலாவது நடத்துவதாக உறுதி செய்யப்பட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வந்ததில் மகாநாட்டுத் தலைவர் திரு. சர் ஹரிசிங்கவர் அவர்கள் நீலகிரியில் இருந்து உடல் நலமில்லாமல் திரும்பிப்போய் விட்ட தாலும் வெய்யில் கடுமையை உத்தேசித்து வேறுதக்க தலைவர் சமீபத்தில் கிடைப்பதற்கில்லாமல் இருப்பதால் மகாநாட்டை ஆகஸ்டு வாக்கில் நடத்து வதாக தள்ளிப்போட்டு விட்டதாய் விருதுநகர் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டி யார் தீர்மானம் செய்திருப்பதாக தெரிவித்துவிட்டார்கள். மகாநாட்டு விஷய மானது இந்தப்படி அடிக்கடி மக்கள் ஏமாற்றமடையும் படி நடந்து வருவது பலருக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கக் கூடியதா யிருந்தாலும் அதற்கு அனுகூலமாக சம்பவங்கள் ஏற்பட்டு வருகின்றதை நாம் மறுப்பதற்கில்லை என்பதையும் ஒருவாறு தெரிவித்துக் கொள்ளு கின்றோம். இதை ஆதாரமாய் வைத்துக் கொண்டு நமது இயக்க எதிரிகள் விசமப்பிரசாரம் செய்யக்கூடும். ஆனாலும் வரவேற்புக் கமிட்டியார் இதை உணராதவர்கள் என்று சொல்லி விட முடியாது. இதற்காக அவர்கள் மகா நாட்டை எந்த முறையில் நடத்த வேண்டுமென்று கருதி இருக்கின்றார்களோ அதை மாற்றிக்கொள்ள அவர்கள் இஷ்டப்படவில்லை. ஆகையால் நண்பர்கள் இந்த ஒரு தவணை யையும் பொறுத்துக்கொள்ள வேண்டு கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 31.05.1931**



# வருந்துகிறோம்

பச்சையப்பன் கலாசாலை தமிழ் புலவரும் "திராவிடன்" பத்திராதி பருமான உயர்திரு. மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் திடீரென முடிவெய்திய செய்தி கேட்டு நாம் பெரிதும் வருந்துகின்றோம். இவர் ஓர் தமிழ் பண்டிதராய் விளங்கியதுடன், சமூதாயச் சீர்திருத்தத்தில் ஆர்வங் கொண்டு, சமூக முன்னேற்றத்திற்காக பல உபன்யாசத் தொண்டுகளும் புரிந் திருக்கிறார். பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு பாடுபட்டவர்களில் ஒருவரா வார். பொதுவாக தமிழுலகமும், சிறப்பாக பிராமணரல்லாத உலக மும் ஓர் நண்பரை இழந்து விட்டார்களெனக்கூறுவது மிகையாகாது . ஆகவே அவரது பிரிவுக்கு வருந்துவதோடு, நமது வருத்தத்தை அவருடைய குடும்பத் தாருக்கும் முக்கியமாக அவரது உடற்பிறந்த பின்னோர் திருவாளர் மணி கோடீஸ்வர முதலியார் B.A.L.T., அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**குடி அரசு - இரங்கல் செய்தி - 31.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# தரங்கம்பாடி சமுத்திரக்கரையில் கூட்டம்

சுயமரியாதை இயக்கம் தோன்றிய இந்த 5, 6 வருஷ- காலத்தில் நாட்டில் ஏற்பட்டிருக்கிற உணர்ச்சிகள் என்ன என்பதைப் பற்றியும், அதனால் ஏற்பட்ட காரியங்கள் என்ன என்பதைப்பற்றியும், சுயமரியாதை இயக்கத்தின் பேரால் சொல்லப்பட்ட அபிப்பிராயங்களெல்லாம் முதலில் கேட்பவர்க ளுக்கு அதிசயமாகவும், தலைகீழ் புரட்சியாகவும் காணப்பட்ட போதிலும் சாதாரணமாக ஒவ்வொரு அபிப்பிராயங்களும் ஒரு வருஷம் அல்லது இரண்டு வருஷங்களுக்குள்ளாகவே செல்வாக்குப்பெற்று எல்லா ஜனங்களா லும் சகித்துக்கொண்டு வரப்படுகின்றதென்றும், பார்ப்பனர்களுடைய ஆதீக் கத்திலும், பார்ப்பனீய பிரசாரகரின் ஏக நாயகத் தன்மை யிலும் இருந்துவந்த காங்கிரசு முதலிய அரசியல் ஸ்தாபனங்களும் பல மத ஸ்தாபனங்களும் பல சமுதாய வகுப்பு ஸ்தாபனங்களும் இப்பொழுது இந்த அபிப்பிராயங்களையே சொல்லத்துடங்கிவிட்டதென்றும், இவைகளுக் கெல்லாம் காரணம் நாம் ஆரம்பித்த எடுப்பிலிருந்து ஒரு சிறிதும் எந்தக் கொள்கையிலும் பின் போகா மல் நாளுக்குநாள் முன்னேறிக் கொண்டு வந்ததோடு, யாருடைய பழிப்புக் கும், பகைமைக்கும் தாட்சன்னியத்திற்கும் பயப்படாமல் உறுதியுடனிருந்த தோடு, யாரானாலும், எப்படிப்பட்டவர் களானாலும், நமது கொள்கையை ஒப்புக்கொள்ள வில்லையானால் நமக்கு அவர்களைப் பற்றிய கவலை யில்லையென்றும் அலட்சியமாயிருந்ததோடு சிறிதும் ராஜிக்கு இடங் கொடுக்காமலிருந்துமே வந்ததே முக்கிய காரணமாகும்.

நம்மைப்பற்றிப் பலர் குற்றம் சொன்ன காலத்திலும் நமதியக்கம் இது வரை என்ன சாதித்ததென்று கேள்விகள் கேட்கவந்த காலங்களிலும் நாம் அவர்களை லட்சியம் செய்து பதில் சொல்லிக்கொண்டிராமல், நமது லட்சியத் திலேயே கவலை வைத்துக்கொண்டு "நாம் அப்படித்தான் செய்வோம், இவ்வளவுதான் நாம் செய்தது. இஷ்டமிருந்தால் பின்பற்றிவா., இல்லா விட்டால் உன் வேலையைப்பார்த்துக் கொண்டுபோ. நாம் சொல்லுவதுதான் நமது கொள்கை, அதன் பேரில், நமது கொள்கையின் பேரிலோ, நமது செய்கையின் பேரிலோ ஆதிக்கம் செலுத்த வேறுயாருக்கும் உரிமை யில்லை" என்று சொல்லிக்கொண்டு வந்த உறுதியான நிலைமையேதான், நல்லதோ. கெடுதியோ நமதியக்கத்தின் தற்கால நிலைமைக்குக் காரண மாகயிருந்துவருகிறது. ஏனெனில், நாம் யாரிடத்திலும் நமதியக்கத்திற்காக "இப்படிச்செய்கிறேன், அப்படிச் செய்கிறேன்" என்று வியாபாரம் பேசி



ஒப்பந்தம் செய்து, அட்வான்சு வாங்கவில்லை. ஒருவருக்கும் கட்டுப்பட்டு எவரையும் ஏதாவதொரு விஷயத்தை நம்பச்செய்து அதனால் நஷ்டத்தை யடையுங்க ளென்று யாருக்கும் நஷ்டத்தையுண்டுபண்ணவோ, யாருடைய தயவையும் எதிர்பார்க்கவோ இதுவரையில் வைத்துக்கொள்ளவில்லை. நாம் சொல்லுவதற்கும், செய்வதற்கும், சொல்லாததற்கும், செய்யாததற்கும், நம்மையே பொறுப்பாளியாக்கிக் கொண்டிருக்கிறோம். இதில் கலந்து ஒத்துழைத்ததாக சொல்லப்படக்கூடியவர்களெல்லாம் நமது கொள்கையும், அவர்களது கொள்கையும் ஒன்றாயிருக்கிறமுறையில் நம்முடன் சேர்ந்து இருக்கின்றவர்களே தவிற, அவை சிறிது மாறினவுடன் பிரிந்து போய்விட வேண்டியவர்களே யாகையால், கொள்கை மாறாமலிருக்கும் வரையிலுந் தான் யாரும் ஒத்துழைக்க ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களென்று கருதி, சேர்ந்து வேலை செய்துகொண்டு வந்தவர்களென்று நினைத்தோமே யொழிய யாரையும் கூட்டுவியாபார ஒப்பந்தமாக ஒருவருக்கொருவர் எப்படி இருந்தா லும் ஒத்துப்போகவேண்டிய நிர்பந்த முடைய குடும்ப வாழ்க்கை காரியமாக கருதவேயில்லை.

அன்றியும், நாமும், நாம் இதுவரை என்ன செய்துவிட்டோமென்று கவலைப்பட வேண்டியதில்லை. கவலைப்படவுமில்லை. ஏனெனில், நம் முடைய லக்ஷியம் மிகப்பெரியது. இதற்காக நாம் செய்யும் முயற்சி மிகச் சிறியது. இதனுடைய நஷ்டம் நமக்கொன்றும் பிரமாதமானதல்ல. அன்னிய ருக்கும் நம்மால் ஏற்பட்ட நஷ்டமோ, கஷ்டமோ சிறிதும் கணக் கிடத்தகுந்த தேயல்ல. ஏதோ நமக்குத் தோன்றியதை பேசுவது, எழுதுவது, ஊரூராய்ச் சுற்றுவது என்பதைத் தவிற நாம் ஒன்றும் பிரமாதமாக கஷ்டப் பட்டுவிட வுமில்லை. இதற்காக செலவழிக்கப்பட்ட பொருளோ, ஊக்கமோ எதிர் பார்க்கும் காரியத்திற்கு எத்தனையோ மடங்கு சிறியதேயாகும். முன் ஒரு சமயம் நாம் சொன்னது போல் "மலைபோன்ற ஒரு பெரிய காரியத்தைக் கொண்டுவருவதற்காக தலை முடிபோன்ற அற்பசக்தியைக்கொண்டு கட்டி யிழுக்கப் பார்க்கிறோம். வந்தால் மலைபோன்ற கொள்கைகள் வரட் டும். வராமல் அறுந்துபோனால் முடிபோன்ற நமது அற்பமுயற்சிகள் வீணாய் போகட்டும். நமக்கு அதைப்பற்றி பெரிய கவலையொன்று மில்லை. இதனால், பெரிய நஷ்டமொன்று ஏற்பட்டுவிடப் போவதில்லை" யென்று கருதிக் கொண்டே முன் செல்கிறோம்.

ஏனெனில் இவ்வளவு பெரிய இயக்கத்திற்கும், நமது மனஉறுதியும், நிர்தாட்சன்யமுந்தான் ஆஸ்தியாகவும் மூலப்பொருளாகவும் இருக்கின்றதே தவிர வேறில்லை. ஆதலால், தான் நாம் ஒருவருக்குப்பதில் சொல்ல வேண்டும் என்ற கவலை ஏற்படும் படியாக எவ்வித காரியத்தையும், யாரு டைய தயவையும் பிரதி பிரயோஜனத்தையும் எதிர்பார்க்கக் கூடாதென்றே இருக்கிறோம். மற்றும் நமதியக்கத்திலுள்ள, அதாவது இந்த நமது



RangaRakes tamilnavarasam.com

அபிப்பிராயத்தையே கொண்டுள்ள நமது நண்பர்களும், இந்த மாதிரியாகவே தங்களுடைய அபிப்பிரயங்களையும், தங்கள் சக்திகளையும், இஷ்ட சௌகரியங்களையும் பாதிக்கக்கூடிய எந்தக் கட்டுப்பாட்டிலும் விழுந்து விடக் கூடாதென்றே சொல்லுகிறோம்.

எந்தக் காலத்திலும், எந்த இயக்கமோ, எந்த அபிப்பிராயமோ, ஸ்தாப னமோ செல்வாக்குடையதாக யிருந்தால் காரணகாரியங்களை கவனி யாமலும், அவ்வியக்கத்தின் பிரமுகர்களது நடவடிக்கைகளையும், அபிப் பிராயங்களையும் கவனியாமலும் வந்து தெரிந்தோ, தெரியாமலோ வந்து புகுந்துகொள்வதும், பிறகு வேறு யேதாவது செல்வாக்குள்ள இயக்கமோ, அபிப்பிராயமோ, ஸ்தாபனமோ தோன்றினால் அதில் பாய்ந்துவிடுவதும், அந்தப்படி பாய்ந்து விட்டதற்கு பிறருக்கு சமாதானம் சொல்லுவதற்காக தாங்கள் முன்போய்ச் சேர்ந்த இயக்கத்தையோ, அபிப்பிராயத்தையோ, ஸ்தாபனத்தையோ அல்லது அது சம்பந்தமானவர்களையோ குற்றம் சொல்லுவதன் மூலம் சமாதானம் சொல்லப்பார்ப்பது உலக மக்களில் பலரது இயற்கையேயாகும். மற்றும் ஒரு இயக்கத்திற்கு தாராள செல்வாக்கிருக்கும் வரையிலும், அதாவது ஒருவண்டி பள்ளத்தாக்கில் தானாக உருண்டுப் போவதாக யிருந்தால் வண்டியைத் தொங்கிக் கொண்டே வண்டிக்குப் பின்னால் ஓடுவதும், அப்படிக்கில்லாமல் மிக்க பாரத்தோடு ஒரு வண்டி சேற்றில் புதைந்துகொண்டோ, மேட்டில் ஏற வேண்டியதாகவோ ஏற்பட்ட போது அதைத் தோள் கொடுத்து தள்ளிவிட வேண்டிய கஷ்டத்திற்குப் பயந்துகொண்டு கழிபோட்டுக்கொண்டு தொல்லை கொடுப்பதும், விட்டு விட்டு ஓடபார்ப்பதும் சில சாதாரணமக்களுக்கு சகஜமேயாகும். இதைக் கண்டு இயக்கத்தின் பொறுப்புடையவர்கள் பயப்படாமலும், தங்களிடம் ஏதாவது மாறுதல் குணம் ஏற்பட்டிருக்கின்றதா என்பதைமட்டும் பார்த்துக் கொண்டு தைரியமாகவும், உறுதியாகவுமிருக்க வேண்டுமென்பது தான் இம் மாதிரியான சமயத்தில் நான் எனது நண்பர்களுக்குச் சொல்லும் யோசனை யாகும்.

ஒரு இயக்கத்தையோ, ஒரு காரியத்தையோ செய்வதானால் ஒருவ னுக்கு ஏற்படுகிற பெருமைக்கு அளவாகவே சிறுமையும் ஏற்படலாம். பெரு மையைக் கண்டு சந்தோஷமடைந்தவன் சிறுமையைக்கண்டு துக்கப்பட வேண்டியதுதான். பெருமையைக் கண்டு சந்தோஷமடையாதிருந்தவன் சிறுமையைக்கண்டு துக்கிக்கவேண்டியதில்லை. எப்படி யிருந்தபோதிலும் இவ்விரண்டையுமுத்தேசித்துத் தனது உறுதியான கொள்கைகளிலிருந்து பிறளாமலிருப்பானேயானால் அவன் ஒருவகையில் காரியசித்தியடைந்த வனேயாவான். ஒவ்வொரு மனிதனும் தான் செய்யும் காரியம் தனது சொந்த லாப நஷ்டத்திற்கா? அல்லது பொது ஒரு கஷ்டத்தை நீக்கும் பிறர் நலத் திற்கா? என்பதை முதலில் தனக்குள்ளாகவே யோசித்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு இரண்டுவித லாப நஷ்டத்திற்கும் தயாராயிருக்க வேண்டும்.



சகோதரர்களே! இன்றைய தினம் எனக்குமுன் பேசிய திருவாளர்கள் திருஞானசம்பந்தம், சாமி சிதம்பரனார், அழகர்சாமி முதலியவர்கள் 'ஆத்மா' 'கடவுள்' என்பதைப்பற்றி வெகு உறுதியாகவும், தைரியமாகவும் பேசினார் கள். இதைக்காண எனக்கு அளவில்லாத சந்தோஷமும் தைரிய மும் ஏற்பட்டுவிட்டது. இரண்டு தமிழ் பண்டிதர்கள் ஆதரித்துப் பேசுவ தென்றால் சாதாரணமான விஷயமல்ல. எனது இன்றைய அபிப்பிராயங்கள் பெரிதும் ஏறக்குறைய 30, 35 வருஷத்திய அபிப்பிராயங்களேயாகும். சுமார் 30 வருஷங்களுக்கு முன்பாக ஒரு வாலிப அதிகாரியுடன் இந்துமதத்தை பற்றி நான் அதுஒரு "புரட்டான மதம்" என்று சொன்னபொழுது அவர் எனது அபிப்பிராயங்களுக்குச் சமாதானம் கூறாமல் ஒரே அடியாய் "சுவாமி விவேகானந்தர் அமெரிக்கவுக்குச் சென்று எத்தனையோ படிப்பாளிகள் முன்பாக ஹிந்து மதத்தைப்பற்றிப் பேசி, உலகத்திலுள்ள மதங்களில் இந்து மதமே சிறந்ததென்று சொல்லி மெய்ப்பித்துவிட்டு வந்துவிட்டார். அப்படி யிருக்க நீ ஒரு சாதாரண மனிதன் இந்துமதத்தைப்பற்றிப் பேச லாமா?" என்று தான் பதில் சொன்னார். உடனே அதற்கு நான் அப்பொழுதே "விவேகாநந்தர் இந்து மதத்திற்கு ஒரு வக்கீலாக அமெரிக்காவுக்குச் சென்றாரே யொழிய அவர் பிரதிநிதி முறையில் நடந்து கொள்ளவில்லை" யென்றும் "வக்கீலுக் குள்ள உரிமைகளை யெல்லாம் கையாடி, ஜெயித்துக் கொண்டு-வந்தா" ரென்றும் "அமெரிக்காவிலுள்ளவர்கள் உண்மைப் பிரதிநிதிகளுக்குள்ள உரிமைகளைக் கையாடி, தோல்வியடைந்தார்க"ளென்றும், எடுத்துச் சொன்னேன். அன்றியும், சமீபத்தில் சுமார் 10 வருஷங்களுக்கு முன்பு வக்கீல் உயர்திரு. மைலாப்பூர் எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்களுடன் காங்கிரஸ் பிரசாரமாக ஆங்காங்கு சென்ற காலையில் ஒரு நாள் மதுரையில் இரவு 10 – மணிக்கு மேல் படுத்துக்கொண்டு வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக் கையில் ஆத்மா வைப் பற்றியும், கடவுளைப்பற்றியும் இதே அபிப்பிராயம் சொன்னபொழுது, உடனே அவருக்கு கோபம் வந்து "உம்மிடம் சாவகாசம் வைத்ததே தப்பு" என்றும் "நீர் இவ்வளவு கீழான மனிதனென்று எனக்கு இதுவரையிலும் தெரியா"தென்றும் சொல்லி பேசாமல் திரும்பிப் படுத்துக் கொண்டார். ஆனால் அப்படிப்பேசுவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பு தான் கிருஷ்ணராயர் தெப்பக்குளத்தில் அவருடைய தலைமையின் கீழ் "ஒத்துழையாமை" சம்பந்தமான பிரசங்கம் செய்த பிறகு தலைவர் முடிவுரை யாக என்னைப்பற்றி அவர் பேசும்போது "ஸ்ரீமான் ஈ.வெ.இராமசாமி நாயக்கர் ஒரு பெரிய இராஜ ரிஷி" யென்றும், "இவர் நமக்குத் தலைவராகக் கிடைத்தது நமது பாக்கியம்" என்றும், மற்றும் பல விதமாகப் புகழ்ந்து பேசினார். மறு நாட்காலையில் அவருடைய கோபம் தணிந்த பிறகு, தானாகவே என்னுடன் பேசவந்த பொழுது "நாயக்கர்வாள்! கோபஞ்செய்து கொள்ளாதீர்கள். இராத்திரி தாங்கள் அம்மாதிரி பேசியதற்கு காரணம் இன்னதென்று தெரிந்து கொண்டேன். அதாவது, சீமைக்குச்சென்று, கல்விக்கற்றுவந்த உங்களுடைய குழந்தைகள் திடீரென்று இறந்துபோன வெறுப்பினால் தாங்கள் இவ்வித யெண்ணங்கொண்டு விட்டதாக உணர்ந்தேன். ஆதலால் கோபித்துக்



RangaRakes
tamilnavarasam.com

கொள்ளாதீர்க''ளென்று சமாதானம் சொன்னார். நான் அதற்கும், இதற்கும் சம்பந்தமில்லையென்றும், அக்குழந்தைகள் எனது தமையனார் குழந்தைகளென்றுமே அவருக்கு மீண்டும் உரைத்து, எனதபிப்பிராயத்தையே பலமாக மறுபடியும் வற்புறுத்தினேன். ஆகவே, நான் இந்த விஷயங்களெல்லாம் வெகு நாளாகவே கொண்டுள்ள அபிப்பிராயங்களானாலும், அவற்றின் சம்மந்த மான சகல தொல்லைகளையும் மேற்போட்டுக் கொண்டு, பிரசாரம் செய்கிற தென்கிறவேலையாக இப்பொழுதுதான் திரிகிறேன். இதற்கு முன் நான் எந்த தொழிலில் ஈடுபட்டிருந்தாலும், சிநேகமாக ஏற்பட்டவர்களிடமெல்லாம் இதைப்பற்றியே பேசியுமிருக்கிறேன்.

ஆத்மா என்னும் விஷயத்தில் சுருக்கமாக பதில் சொல்லவேண்டுமானால், அது ஒருவித உணர்ச்சியேயொழிய ஒரு தனிப்பட்ட வஸ்துவல்ல., அவ்வுணர்ச்சியானது சரீரத்தின் அசைவு, நின்றவுடன் ஒழிந்துபோகும் என்பதேயாகும். இதைப்பற்றி இரண்டுவியாசங்கள் ''குடி அரசி''ல் முன்னாலேயே எழுதப்பட்டிருக்கிறது. மூன்றாவது வியாசமும் சமீபத்தில் வரும். ஆத்மா என்பதைப்பற்றிய பேச்சே பேசாமலிருந்தால் நல்ல தென்றும், இதனால் பல ஜனங்களுடைய அதிருப்தி யேற்பட்டு, நமக்கு வெளி உதவிகள் குறைந்து போகுமெனவும் சிலர் கூறுகின்றார்கள். அதை ஒத்துக்கொள்ள என்னால் முடியவில்லை. ''எனது அபிப்பிராயங்களை சொல்லுவதை நமது கடமையாக வைத்துக் கொள்ளுவோம். மற்றவர்களுக்கு துன்பமில்லாத முறையில் பிரசாரம் செய்வோ''மென்பதைத் தவிர, வேறு விஷயங்களை எதிர்பார்த்துக் கொண்டு, அபிப்பிராயங்களை மூடிவைத்துக் கொண்டிருப்பது நியாயமாகாது. நமது ஆயுள்காலத்திற்கு எவ்வித அளவும், உறுதியும் பந்தோபஸ்து மில்லையாதலால், கூடுமான வரை சௌகரியமிருக்கும்பொழுது நமது அபிப்பிராயங்களை எல்லாம் சொல்லிவிடுவதுதான் சரியென்று நினைக்கின்றேன். நமது நாட்டில்தான் இவ்வித சாதாரண அபிப்பிராயங்களை வெளியிடுவதற்குக்கூட இவ்வளவு பயப்பட வேண்டியிருக்கிறது. அதற்கு காரணமெல்லாம் இந்த நாட்டிலுள்ள சோம்பேரி வாழ்க்கைகாரர்களின் ஆதிக்கமேயாகும். ஆனாலும் இந்தப்படி தைரியமாய் நாம் புதிய அபிப்பிராயங்களைச் சொல்வதால் நமக்கு ஒன்றும் நஷ்டம் ஏற்படுமென்று பயப்பட வேண்டியதில்லை. லாபமடைகின்றவன் தான் நஷ்டத்திற்குப் பயப்படவேண்டும். நமக்கு லாபமும் இல்லை. நஷ்டமும் இல்லை. ஆதலால் அதைப்பற்றி யாரும் கவலைப் படாமல் விஷயம் சரியா, தப்பா என்கிற முறையில் கவலை செலுத்தி, யோசிக்க வேண்டியதே மக்களின் கடமையென கருதுகிறேன்.

*குறிப்பு : 25.05.1931 அன்று ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 31.05.1931**



# பிரசார போதனாமுறை பள்ளிக்கூடம்

சுயமரியாதை இயக்கத் தத்துவங்களை பிரசாரம் செய்ய ஈரோட்டில் போதனா முறை பாடசாலை ஒன்று ஏற்படுத்தி சிறிது காலத்திற்கு பயிற்சி கொடுப்பது என்பதாக ஏற்பாடு செய்து கொஞ்ச நாளைக்கு முன் அதற்காக ஒரு திறப்பு விழாவும் கொண்டாடப்பட்டது ஞாபகமிருக்கலாம். அந்தப்படி அவ்வப்போது தனித்தனியாக சிலர் வந்து பயிற்சி பெற்று போனார்கள் என்றாலும் ஒரு முறையாக வைத்து அப்போதனாமுறை பயிற்சி செய்யப் படவில்லை.

ஆனால் இப்போது இந்த ஜூன் மீ 15 தேதியில் இருந்து முறை யாகவே பள்ளிக்கூடப்பயிற்சி முறையில் ஒரு பயிற்சி சாலை ஏற்படுத்த நிச்சயித்திருப்பதால் அதில் சுமார் 20, 25 பேர்களையே சேர்த்துக் கொள்ளக் கூடும். ஆதலால் வர இஷ்டமுள்ளவர்கள் தயவு செய்து 8 உ க் குள் இவ் விடம் வந்து சேரும்படியாக விண்ணப்பம் அனுப்ப வேணுமாய்க் கோரப் படுகிறார்கள்.

விண்ணப்பம் எழுதுகின்றவர்கள் அந்தந்த ஜில்லாவிலுள்ள சுய மரியாதை இயக்கத்தில் பற்றுள்ள பிரமுகர்களின் மூலம் அறிமுகச் சீட்டு வாங்கி அனுப்பவேண்டும்.

**குடி அரசு - அறிவிப்பு - 31.05.1931**



RangaRakes tamilnavarasam.com

# சுயமரியாதை இயக்கமும் காங்கிரசும்

சுயமரியாதை இயக்கமானது இப்போது நடைமுறையில் இருக்கும் காங்கிரசுக் கொள்கைகளைக் கொண்ட தேசீயத்திற்கும் திரு. காந்தியவர்களின் தத்துவமாகிய காந்தீயத்திற்கும் நேர்மாற்றமானது என்பதை நாம் மறைக்க முயலவில்லை.

எப்படியெனில் இன்றைய காங்கிரசு திட்டங்கள் காகிதத்தில் என்ன இருந்தபோதிலும் தேசீயத்தின் பேரால் நடைமுறை திட்டங்கள் என்பவைகளாக,

1. கதர்

2. ஹிந்தி

3. கள்ளுக்கடை ஜவுளிக்கடை மறியல் என்பவைகளேயாகும்.

மேற்கண்ட இந்த மூன்று திட்டங்களிலும் சுயமரியாதை இயக்கம் மாறுபட்டேயிருக்கின்றது என்கின்ற விபரம் ஏற்கனவே குடி அரசு வாசகர்கள் உணர்ந்ததுவேயாகும்.

கதர் விஷயத்தில் 1928ம் வருஷத்திற்கு முன்னிருந்தே அதாவது திரு. காந்தியவர்கள் தென்னாட்டிற்கு கதர் பண்டு வசூலுக்கு வந்த காலத்திலேயே கதரின் தத்துவத்தைக் கண்டித்து வந்திருக்கின்றோம். அதையே குடி அரசிலும் திராவிடனிலும் பல தடவை எழுதி வந்திருப்பதோடு அனேக மேடைகளிலும் கதர் கொள்கையைக் கண்டித்துப்பேசியும் வந்திருக் கிறோம்.

ஆதலால் கதரைப்பற்றிய நமது அபிப்பிராயம் என்பது இப்போது புதிதாக ஒன்றும் ஏற்பட்டதல்ல. இதை அனுசரித்தேதான் இவ்வாரம் லால்குடியில் நடந்த 3வது சுயமரியாதை மகாநாட்டில் கதர் கொள்கையைக் கண்டித்து ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது.

அதாவது,

(அ) "தற்காலம் இந்தியதேசியத்தில் காங்கிரஸ் மகா சபையின் ஆதரவில் மகாத்மா காந்தியும் அவரைச் சேர்ந்தவர்களும் செய்துவரும் கதர்ப்



பிரசாரமும் கதர் உற்பத்தி, விற்பனை வேலைகளும் இந்திய நாகரீக அபிவிருத்தியை தடைப்படுத்துகிற படியாலும்,

(ஆ) மக்கள் வாழ்க்கையில் ஒவ்வொருவரும் அவரவர் தேவைக்கு அவரவர்களே தனித்து நின்று உழைத்து மற்றவர் கூட்டுழைப்பைக் கருதாதிருக்க வேண்டுமென்றும் பிற்போக்கான கொள்கை கதர் வேலைக்கு அடிப்படையாயிருந்து (மற்ற தேசத்து மக்கள் கூட்டுழைப்பு மூலம் தொழில்களை அபிவிருத்தி செய்து முன்னேறும் இக்காலத்தில்) நமது நாட்டு மக்களைத் தனித்த வாழ்க்கையின் மூலம் மிருகப் பிராயத்தையடையும்படி செய்வதாலும்,

(இ) இயந்திர சாலைகளைப் பகைத்து தொழில் விவசாய முறைகளில் இயந்திர வளர்ச்சியைத் தடுத்து மனிதப் பிரயாசையை அதிகப்படுத்தும் முறைகளைக் கையாளுவதின் மூலம் கதர் வேலை மனித வாழ்க்கையில் ஓய்வுக்கும், அறிவு வளர்ச்சிக்குமான நேரத்தைக் குறைப்பதாலும்.

(ஈ) இந்த மகாநாடு கதர் இயக்கத்தைக் கண்டிப்பதோடு இந்திய மில் துணிகளை உடுத்தவும், இயந்திரங்களை வளர்க்கவும், கூட்டுத்தொழில் முறைகளைக் கையாளவும் மக்களிடை தீவிர பிரசாரஞ் செய்யவும் தீர்மானிக்கிறது"

என்பதாகும். ஏனெனில்

காங்கிரசின் கதர் கொள்கையானது இந்திய பொருளாதாரம், கைத்தொழில், வியாபாரம் ஆகிய மூன்றையும் பற்றியதாக இருக்கிறதென்பதோடு ஒவ்வொரு மனிதனும் தனக்கு வேண்டியதை அவனவனே உற்பத்தி செய்து கொள்ளவேண்டும் என்னும் தத்துவத்திலும் இந்தக் கதரானது இந்திய நாகரீகத்தையும் பண்டையப் பெருமையையும் பற்றியதாகவும் கருதப்பட்டிருக்கின்றது.

ஆகையால் இந்தத் தன்மையிலுள்ள கதரின் ஒவ்வொரு நிலையையும் கவனித்துப் பார்த்தோமானால் இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கும் நாகரீக வளர்ச்சிக்கும் இந்தவித அபிப்பிராயங்கள் கொண்ட கதர் தத்துவம் எவ்வளவு தூரம் கெடுதியை உண்டு பண்ணத் தக்கதாயிருக்கின்றது என்பது விளங்கும்.

முதலாவதாக **பொருளாதாரத் துறையை** எடுத்துக்கொண்டு கதர் எந்த விதத்தில் அதற்குப் பயன் அளிக்கக் கூடியதாயிருக்கின்றது என்பதை யோசித்துப் பார்ப்போம். பஞ்சு விலை எவ்வளவுக்கெவ்வளவு குறைகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு விவசாய மக்களுக்கு கஷ்டம் ஒரு புறமிருந்தாலும் பஞ்சு விலையைப் பற்றிய அதாவது மூலப்பொருளைப்பற்றிய லட்சியமே இல்லாமல் கதரின் உற்பத்தி, நூற்புநெசவு ஆகியவற்றின்



RangaRakes tamilnavarasam.com

செலவுகளே அதாவது அசல் விலையே மிகவும் கூடுதலாகவே அடங்கும் படியாக ஆவதோடு அதை உற்பத்தி செய்யும் ஒவ்வொரு நிலையும் கஷ்டமானதும் முன்னேற்றத்திற்கு உதவாததுமாகவே இருக்கின்றது.

அதாவது யார் எவ்வளவு பாடுபட்டாலும் கதர் நூல் விஷயத்திலும் நெசவு விஷயத்திலும் துணிரகம் விஷயத்திலும் இன்று காணப்படும் தன்மையிலிருந்து இனி சாதாரணத்தில் எவ்வித மாற்றத்தையாவது செய்து விடக்கூடும் என்று சுலபத்தில் எண்ணுவதற்கில்லை. ஏதாவது ஒரு சிறு மாற்றமாவது ரகம் முற்போக்குத் தன்மையில் செய்யலாம் என்றாலோ அதற்கேற்படும் கூலி முற்போக்கின் தகுதிக்கு மேற்பட்டதாக செல வழித்தாக வேண்டிவரும். இது தவிர விலை விஷயத்தில் இனி இதைவிட குறைக்கும் படியான நிலைமை சுலபத்தில் ஏற்படப்போவதில்லை.

ஏனெனில் கதர் தொழிலோ கதர் வியாபாரமோ மக்களின் சாதாரணப் பழக்கத்தில் உள்ள தொழிலாயும் வியாபாரமாயும் இல்லாமல் வேறு ஏதோ ஒரு தத்துவத்திற்காக தியாகம் செய்து தீரவேண்டிய முறையில் - மற்றவர்கள் நிர்ப்பந்தத்தின் மீது நூற்றல், நெய்தல், விற்பனை வியாபாரம் செய்தல். வாங்கிக் கட்டுதல் ஆகிய காரியங்கள் முழுவதும் நடைபெற வேண்டியதாக இருந்து வருகின்றது. இவ்வளவு கஷ்டப்பட்டும் உத்தேசித்தக் காரியமாகிய பொரு ளாதாரம் என்பது வாங்கி விற்கின்ற மத்திய மனிதன் என்கின்ற முதலாளி தவிர மற்ற யாருக்கும் அது சிறிதும் பயன்படாததாயிருப்பதுடன் உண்மை யிலேயே வாங்கிக் கட்டுகிறவன் அதிக பொருள் அதாவது 100க்கு 250 பங்கு நஷ்டமடைவதற்கும் தயாராயிருக்க வேண்டியவனாகவே யிருக்கின்றான். அப்படிச் செய்தும் தொழிலாளியாகிய நூற்புக்காரன் மணிக்கு ஒரு தம்பிடி அல்லது ஒன்னரைத் தம்பிடி அதாவது ஒரு அணா வில் 12-ல் ஒரு பாகம் அல்லது 8ல் ஒரு பாகமே பெறமுடிகின்றது. நெசவுக்காரனும் சாதா மில் நூல் நெசவு நெய்வதைவிட இரண்டு மடங்கு கஷ்டமும் கவனமும் செலுத்தி வேலை செய்து பழைய கூலியையே தான் பெறவேண்டியதாயிருக்கின்றது.

இவ்வளவும் தவிர முன்குறிப்பிட்டதுபோல் கதர் வாங்குகின்றவனும் ஒன்றுக்கு இரண்டரையாய் விலை கொடுத்தும் சாதாரண சரக்கைவிட மிகக் கேவலமான தென்று சொல்லும்படியான சரக்கையே வாங்கி வேறு ஒரு காரியத்தின் பொருட்டு சமாதானம் செய்து கொள்ளவேண்டியதாயிருக் கின்றது.

ஆகவே பொருளாதாரத்துறையில் கதர் எந்தவிதத்தில் பயன் அளிக்கின்றது என்பது இதிலிருந்தே அறியத்தகுந்ததாகும்.

இனிக் **கதர் தத்துவம்** கைத்தொழில் துறையில் எப்படிப் பயன்படு கின்றது என்று பார்ப்போம். கதர் கைத்தொழில் உலக கைத்தொழில் முறைக்கு நேர்விரோதமானதாக இருக்கின்றது. எப்படியெனில் கைத் தொழில் என்பது



வேலை செய்கின்றவன் கொஞ்ச நேரத்தில் அதிக சரக்கு உற்பத்தி பண்ணக் கூடியதாகவும், அதுவும் சரீரப்பிரயாசை தேவையின் பாகம் நாளுக்குநாள் குறைந்து கஷ்டமில்லாமல் செய்யக்கூடியதாகவும், சாமான் மாதிரியும் நாளுக்கு நாள் உயர்ந்த தரமானதாகவும் இருக்க வேண் டியதோடு அதை வாங்கி உபயோகிக்கும் மக்களுக்கு அந்தசாமான்கள் அதிக சரசமாய் இருப்ப தாகக் காணக் கூடியதோடு அச்சாமானின் வேலைப் பாடானது மக்களை வாங்கும்படி தூண்டக்கூடியதாகவும் இருக்க வேண்டியதாகும். இந்த முறை யில், பார்த்தாலும் கதர் தத்துவம் முதல் பிரிவுக்கு சொல்லப்பட்ட காரணங் களால் கைத்தொழில் முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு நிலையிலும் விபரீத மாகவே இருந்து வருகின்றது.

மூன்றாவதாக **வியாபாரத் துறையில்** பார்த்தாலும் மூலப் பொருளை அதிகமாக செலவு செய்து அதாவது ஒரு வேஷ்டிக்கு எவ்வளவு மூலப்பொருள் (பஞ்சு) வேண்டுமோ அதற்குமேல் இரண்டு அல்லது மூன்று பங்குவீதம் பஞ்சை செலவுசெய்து ( அதாவது மொத்தமான நூலில் முரட்டு துணியாகத்தான் பெரிதும் நெய்ய முடிவதால் இரண்டுமூன்று வேஷ்டிக் காகும்படியான பஞ்சு ஒருவேஷ்டிக்கே செலவாகும்படியாகச் செய்து ) அது சம்பந்தப்பட்ட தொழிலாளிகளையும் கசக்கிப்பிழிந்து விற்கின்றவனையும் வாங்குகின்றவனையும் வேறு காரணத்திற்காக அதாவது வியாபாரத்தில் நம்பிக்கையோ விருப்பமோ இல்லாமல் நிர்ப்பந்தத்தின் பொருட்டு ஜனங்கள் இந்த விற்றல் வாங்கல் வியாபாரம் செய்யும்படியாக இருப்பதால் கதர் தத்து வம் வியாபார முறைக்கும், அதன் முற்போக்குக்கும் நேர் விரோதமான தாகவே இருக்கின்றது.

தவிர ஒருநாட்டின் பொருளாதாரம், கைத்தொழில், வியாபாரம் ஆகியவை மூன்றும் முற்போக்கடையவேண்டுமானால் இம்மூன்றும் மற்ற நாடுகளில் எப்படி முற்போக்கடைந்து இருக்கின்றது? மற்ற நாட்டுக்கும் நமது நாட்டுக்கும் உள்ள வியாபார சௌகரியம் எப்படி இருக்கின்றது? அதன் போட்டியின் தத்துவம் என்ன? உலகப் போக்கு என்ன? என்பவைகளை யோசித்துப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு நாடும் நவீன ஆராய்ச்சி இயந்திர சௌகரியம் வியாபார தந்திரம் ஆகிய காரியங்களைக் கொண்டே யொழிய பண்டைய காலத்தின் கைத்தொழில்முறையை புதுப்பித்ததாலோ ஆராய்ச்சி யை அலக்ஷியம் செய்து இயந்திரங்களை வெறுத்ததாலோ அல்லது மறியல் செய்து நிர்ப்பந்தப்படுத்தி வியாபாரம் செய்யச் செய்ததினாலோ அல்ல வென்பது விளங்கும்.

இந்திய தேசத்தின் மக்களை ஜாதிவாரியாகப் பிரித்து ஒவ்வொரு ஜாதிக்கு இன்ன இன்ன தொழில் என்று கற்பித்து அந்தத்தொழிலை அந்தந்த ஜாதித் தலைமுறை தலைமுறையாகச் செய்ய வேண்டியதுதான் மனித தர்மம் என்கின்றதான நிர்ப்பந்தம் இங்கு இருந்து வருவதாலும் இந்தத் தொழிலாளி ஜாதியல்லாதவர்களே “இந்நாட்டின் நலத்தை கோருகின்ற தலைவர்கள்”



RangaRakes tamilnavarasam.com

என்பதாக ஆகிவிட்டதாலும் அதுமாத்திரமல்லாமல் இந்த மாதிரியான வருணாச்சிரமதர்ம தொழில் முறையில் நம்பிக்கை உள்ளவர்களும் அதை மேலும் நிலைநிறுத்தப்பாடுபடுகின்றவர்களுமே தொழில் முறையை சீர்திருத் தம் செய்கின்றவர்களாக இருப்பதினாலும் பண்டைய தொழில் முறையை புதுப்பிக்க வேண்டுமென்றும் புதிய நாகரீக இயந்திரங்கள் கூடாது என்றும் ஒவ்வொருவரும் ஓய்வு நேரத்தில் வேலை செய்ய வேண்டும் என்றும் அவனவனுக்கு வேண்டியதை அவனவனே செய்துகொண்டு தனித்தனி தொழிலாளியாய் இருக்கவேண்டுமேயொழிய கூட்டுத்தொழிலாளிகளாய் இருக்கக்கூடாதென்றும் சொல்ல வேண்டியதாயிற்று. ஏனெனில் இந்தப்படி ஒவ்வொருவனும் தனித்தனித் தொழிலாளியாக இருந்தால்தான் அதோடு ‘அவனவனுக்கு வேண்டியதை அவனவனே செய்துகொள்ளவேண்டும்’ என்கின்ற வேலையில் அமர்ந்திருந்தால்தான் தொழிலாளிகள் ஒன்றுசேரவோ அவர்கள் நிலையைப் பற்றி கலந்து ஆலோசிக்கவோ அல்லது தங்களது யோக்கியதையை சற்று உயர்த்திக்கொண்டு தொழிலாளி தன்மையில் இருந்து நழுவிக் கொள்ளவோ அவர்களது பரம்பரை தர்மத்தில் இருந்து விலகவோ முடியாததாயிருக்கும் என்று கருதியே இச்சூட்சி செய்யப்பட்டிருக்கிறது. ஆதலாலேயேதான் புதிய நாகரீகமும் இயந்திர சௌகரியமும் கூட்டு வேலையும் தொழிலாளிகள் முன்னேற்றமும் கதர் தத்துவத்தில் சிறிதும் இல்லாமலிருக்க வேண்டியதாகி விட்டது.

ஆகவே, வருணாச்சிரம கட்டுப்பாட்டை உடைத்து மனிதவர்க்கத்தின் சரீரப்பிரயாசையைக் குறைத்து குறைந்த நேரத்தில் அதிகக் கூலி கிடைக்கும் படி செய்து மூலப்பொருள்களை வீணாக்காமல் விவசாயிகளுக்கும் அதிகப் பணம் வரும்படி செய்து எல்லா மனிதருக்கும் எல்லா தொழில் செய்யவும் எல்லாவித பதவியடையவும் தகுந்தபடியாக ஆக்கவேண்டும் என்றால் கண்டிப்பாக இத்தகைய கதர் திட்டம் ஒழிந்தேயாகவேண்டும் என்பது நமதபிப்பிராயமாகும்.

தவிர, இந்தியாவுக்கு எந்த விதமான ஆட்சி முறையோ, அல்லது சுயேச்சையோ பூரண சுயேச்சையோ, அல்லது ராம ராஜியமோ, தர்ம ராஜிய மோ வருவதானாலும் இந்தியா உலக முற்போக்கில் கலந்து கொள்ளவும் புதிய ஆராய்ச்சியின் பயன்களை அனுபவித்து மனித சமூகம் இன்பமும் திருப்தி யும் யடையவும் தகுந்ததாக, ஆவதற்குத்தக்கதாய் இருக்க வேண்டுமே யொழிய மற்றப்படி அவனவன் வயிற்றுப்பாட்டிற்கும் அவனவனுக்கு வேண்டிய இன்றியமையாத அவசியங்களுக்கும் அவனவனே அவனது வாழ்நாள் நேரம் முழுவதையும் செலவு செய்து கொண்டிருக்கும்படியான தத்துவங்கள் கொண்டதாக இருக்கக்கூடாது என்பதே நமதபிப்பிராயம்.

இந்தக் காரணங்களாலேயே திரு. காந்தியவர்களின் தத்துவமானது இந்தியாவை ஒரு நாளும் விடுதலையுள்ள நாடாகவோ மனித சமூகத்தின் முற்போக்கிற்கும் நாகரீக அபிவிருத்திக்கும் சரீரப் பிரையாசையைக் குறைத்துக்கொண்டு வாழும்படியான நாடாகவோ ஒரு நாளும் ஆக்க முடியா தென்றே சொல்லுவோம்.

ஏனெனில் அவரது நோக்கமெல்லாம் பண்டைய நிலைகளையே பெருமையாய்க் கருதுவதிலும் பண்டைய முறைகளை புதுப்பிப்பதிலும் இருக்கின்றதே யொழிய இன்றைய உலகம் என்பது என்ன என்பதில் கவலையோ, கருத்தோ என்பது சிறிதும் இல்லை. பண்டைய நிலைமையை பெருமைப் படுத்தி, பண்டைய முறைகளை புதுப்பிப்பதில் யாருக்கு அனு கூலம் என்று பார்ப்போமானால் மக்களை ஏமாற்றிக்கொண்டு சோம்பேறி வாழ்க்கை நடத்தும் பார்ப்பனர்களுக்கும் பாடுபடுவோரின் பலனை அனு பவிக்கும் பிரபுக்களுக்கும், சரீரப் பிரயாசை இல்லாமல் வாழ்வை நடத்த விரும்பும் படித்த கூட்டத்தார் என்பவர்களுக் கும் அனுகூலமாகவும், தங்கள் ஆதிக்கத்திற்கேற்ற அரசியலை ஸ்தாபித்துக் கொண்டு சுகத்திலிருக்கவும், அதற்கு பயன்படக்கூடியதாகவும் யிருக்கலாம். இந்தக் கூட்டத்தார் முன் திரு. காந்தி அவர்களும் மகாத்மாவாய், அவதார புருஷராய், தெய்வத்தன்மை பொருந்தியவராய், உலகம் போற்றும் உத்தமராய் உலகுக்கே பெரியோராய் விளங்கலாம்.

ஆனால் பாடுபட்டும் கூலியில்லாமல் பட்டினி கிடப்பவனுக்கும் தலைமுறை தலைமுறையாய் ஏழையாய், கூலிக்காரனாய் இருப்பவனுக்கும் தெருவில் நடக்க, குளத்தில் குடிக்க யோக்கியதை இல்லாமல் பன்றியிலும், கழுதையிலும், நாயிலும் கேடாய் மதிக்கும் இந்நாட்டுப் பழங்குடி மக்க ளுக்கும் திரு. காந்தியவர்கள் “எமனாய்” இல்லாமல் வேறுயாராய் இருக்க முடியும் என்பதைப் பகுத்தறிவுடன் நடுநிலையிலிருந்து யோசித்துப் பாருங்கள்.

மற்றது மற்றொரு சமயம்.

**குடி அரசு - தலையங்கம் - 07.06.1931**



RangaRakes tamilnavarasam.com

# தினசரி

## சுயமரியாதை இயக்கத்திற்கு ஒரு தமிழ் பத்திரிக்கை

லாலுகுடி தாலூகா சுயமரியாதை மகாநாட்டுக்கு வந்திருந்த சுயமரியாதை இயக்கப் பிரமுகர்கள் சுயமரியாதை இயக்கத்திற்கு ஒரு தினசரி பத்திரிகை வேண்டி இருக்கின்ற அவசியத்தைப்பற்றி நெடுநேரம் பேசினார்கள். திரு.ஈ.வெ. இராமசாமி, தினசரி அவசியமில்லை என்றும் தன்னால் அதை நிர்வகிக்க முடியாதென்றும் சொல்லியும் மற்றவர்கள் கண்டிப்பாக ஒரு பத்திரிகை இருந்துதான் ஆகவேண்டுமென்றும் நீங்கள் முன் வந்து நடத்தாவிட்டாலும் மற்றவர்கள் நடத்த முன்வருவதை தடுக்காமலாவது இருந்து பத்திரிகை கொள்கைக்கு மாத்திரம் பொறுப்பாளியாய் இருந்தால் போதுமென திரு. இராமசாமிக்குச் சொன்னதின் பேரில் அப்படியானால் அந்த விஷயத்தில் தனக்கு ஆக்ஷேபணையில்லை யென்றும் சொன்னார். அதன் பிறகு 500 ரூ. வீதம் கொண்ட50 பங்குகள் ஏற்பாடு செய்து திருச்சியிலேயே தினசரி பத்திரிகை நடத்துவது என்ற முடிவுக்கு வரப்பட்டது. பத்திரிகையின் நிர்வாகத்திற்கு திரு.சொ. முருகப்பா பொறுப்பாளியாய் இருக்க வேண்டும் என்றும் பேசப்பட்டது. மற்றும் இரண்டொரு தனவணிக கனவான்கள் ஆதரவளிக்க முன் வந்தார்கள். சிலருக்கு தினசரி திருச்சியில் நடத்த முடியுமா என்கிற சந்தேகம் தோன்றியபோது 6 மாதம் திருச்சியில் நடத்திப் பார்த்து முடியாவிட்டால் சென்னையிலேயே நடத்தலாம் என்றும் பேசப்பட்டது. பத்து பங்குகள் அதாவது 5000ரூ.க்கு அங்கேயே விதாயம் ஏற்பட்டது. சமீபத்தில் நடைபெறும் நன்னில சுயமரியாதை மகாநாட்டிலும் அடுத்தவாரம் போல் கொடைக்கானலில் நடைப்பெறப் போகும் சுயமரியாதை சங்க நிர்வாக கமிட்டியின் போது சங்கத் தலைவரைக் கலந்தும் இவ்விஷயம் மேற்கொண்டு யோசிக்கப்படும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 07.06.1931**



# மதுவிலக்கு நாடகம்

தேசியத்தின் பேரால் ஏதாவது ஒரு நாடகம் நாட்டில் நடந்து கொண்டிருக்கா விட்டால் மக்கள் காங்கிரசையும், காந்தியையும் அடியோடு மறந்து விடுகின்றார்கள்.

ஆதலால் தேசீய தொழில்காரர்களுக்கு ஏதாவது ஒரு வேலை நடத்திக் கொண்டிருக்கவேண்டிய அவசியமேற்பட்டிருக்கின்றது. அதற்கு ஏற்றாப்போல் காங்கிரஸ் பக்தர்களுக்கும் பொதுஜனங்களின் காணிக்கைப் பணம் தாராளமாய் இருக்கின்றது. அதற்கேற்றாப்போல் வேலையில்லாத் தொந்திரவால் கஷ்டப்படும் வாலிபர்களும் நாட்டில் ஏராளமாய் இருக்கின்றார்கள். ஆகவே இவ்விரண்டும் சேர்ந்தால் பெட்றோல் எண்ணைக்கும், நெருப்புக்கும் உள்ள சம்மந்தம் போல் ஒன்றுக்கொன்று வெகு சுலபமான சம்மந்தம் ஏற்பட்டு விடுகின்றது.

ஆகையால் இவை இரண்டையும் வைத்துக்கொண்டு என்ன வேலை செய்யலாம் என்று பார்த்தால் பொது ஜனங்கள் சீக்கிரம் ஏமாறுவதற்கு அனுகூலமாக கள்ளுக்கடை மறியல்கள் தான் தென்படுகின்றது. ஆகவே இதன் மீது தலைவர்கள் என்பவர்கள் வாலிபர்களை ஏவி விடுவதால் ஏதாவது ஒரு கலகம் ஏற்படுகின்றது. அக்கலகத்தை பிரமாதப்படுத்தி விளம்பரம் செய்வதே பெரிய தேசீயப் பிரசாரமாகக் கருதப்பட்டு விடுகின்றது. இந்த முறையிலேயே மதுவிலக்கு நாடகம் நடைபெறுகின்றது.

விளம்பரக்காரர்களும், ஸ்தல ஸ்தாபனம், சட்டசபை, முதலியவைகளில் ஸ்தானம் பெறக் காத்துக்கொண்டிருக்கின்றவர்களும் இந்த நாடகத்திற்கு சில சமயங்களில் பாத்திரங்களாய் இருக்கவேண்டியவர்களாகவும் ஆகிவிடுகின்றார்கள். இதன்பயன்களை நாடகக் கம்பெனி சொந்தக்காரர்களாகிய தலைவர்கள் என்பவர்களே அடைகின்றார்கள்.

உதாரணமாக திருப்பூரில் நடந்த மறியலில் அடித்தவர்களும், அடிப்பட்டவர்களும், அதாவது அடித்ததாகக் கெட்டபேர் வாங்கினவர்களும், அடிபட்டு அவஸ்தைபட்டதாகச் சொல்லப்பட்டவர்களும் ஒரே ஊர்க்காரர், ஒரே கூட்டத்தார்கள், ஒரே ஜாதி சொந்தக்காரர்கள் என்று கூடச் சொல்லலாம். ஆனால் இதன் பலன் பெருமை அசோசியேட் பிரஸ், பிரீபிரஸ் சேதிப் பெருமை சமாதானம் செய்துவந்த பெருமை முதலாகிய கௌரவங்க



RangaRakes tamilnavarasam.com

ளெல்லாம் உயர்திரு. சி. ராஜகோபாலச்சாரியார் அவர்களது "பாத சன்னி தானத்திற்கு"ப் போய்ச் சேரவேண்டியதாகி விட்டது.

நம்மவர்கள் மூடத்தனமாக நடந்து, பட்டதுதான் பயன். ஒரு சமயம் யாராவது கொஞ்சம் இவ்வித இயக்கத்தால் பிழைக்க வேண்டியவர்களல்லா தவர்கள் ஒருவர், இருவர் இதில் சேர்ந்து அடிபட்டதாகப் போர்வாங்கியிருந்தா லும் அவர்களுக்கு அடுத்த தேர்தலில் ஏதாவது ஒரு ஸ்தானம் ஒதுக்கி வைக் கப்படுவது மல்லாமல் மற்றபடி இதனால் என்ன பயன் என்பது விளங்க வில்லை.

இந்த மறியலில் சம்மந்தப்பட்ட வாலிபர்களைப் பற்றி நாம் இங்கு பேச வரவில்லை. மற்றபடி பெரியவர்கள், தேசபக்தர்கள், பொதுநல சேவைக் காரர்கள் என்பவர்களை ஒன்று கேட்கின்றோம்.

அதாவது இந்தக் கள்ளுக்கடை மறியல் செய்வது என்பது இதனால் அதாவது இவர்களது மறியலில் கள்ளுக்குடி நின்றுவிடும் என்று கருது கின்றார்களா? அல்லது வெள்ளைக்காரனை இந்த நாட்டைவிட்டு ஓட்டு வதற்கு அல்லது "சுயராஜியம்" பெறுவதற்குப் பயன் படக்கூடியது என்று கருதுகிறார்களா என்று கேட்கின்றோம். கள்ளுக்கடை ஏலத்தில் எடுத் திருப்பது திருப்பூர் பிரபுக்கள். மறியல் செய்வது திருப்பூர் பிரபுக்கள். கள்ளுக்கு மரம் வளர்த்து குத்தகைக்கு விடுவது அக்கம் பக்கத்தில் பிரபுக்கள். இந்தக் கள்ளைக் குடிப்பது திருப்பூர் தொழிலாளிமக்கள். அரசாங்கத்தில் மாதம் ரூ. 5000 வாங்கிக்கொண்டு கள்ளு நிர்வாகம் பார்ப்பது இந்த மாகாணப் பிரபுக்கள் (ஜனப்பிரதிநிதிகள்). மேலும் ஜனப்பிரதிநிதியாக இந்த வேலைக்குப் போட்டி போடுவதும் இதே ஜில்லா பிரபுக்கள். மற்றும் இந்த இலாகாவில் மாதம் ரூ. 2500 சம்பளம் முதல் ரூ. 12 சம்பளம் வரையில் வாங்கி ஜீவனம் செய்து கொண்டு வேலை பார்க்கும் சுமார் 10000பேர்களும் இந்த மாகாண இந்திய (படித்த) மக்களேயாவார்கள். மற்றும் இந்தக் கள்ளு, சாராய வியாபாரத்தால் தொழிலால் பிழைக்கும் சுமார் 20000 மக்களும் இந்த மாகாண இந்திய மக்கள். இப்படியெல்லாம் இருந்தாலும் இந்தத் தொழிலும் சட்டத்தில் குற்றமானதல்ல. மதத்தில் குற்றமானதல்ல, 'ஒழுக்கத்திலும்' குற்றமானதல்ல (அளவுக்கு மீறினால் குற்றம் சொல்லலாம்) இந்த நிலையில் யாரோ இரண்டு பேர் ஏதோ காரணத்திற்காக கள்ளுக்கடைக்குப் பக்கத்தில் போய் நின்று கொண்டு யாரோ இரண்டொருவனை 'அப்பா, சாமி கள்ளுக் குடிக்காதே' 'காந்தி கட்டளை இட்டு இருக்கிறார்' 'ராஜகோபாலாச்சாரி கட்டளையிட்டி ருக்கிறார்'. 'சத்தியமூர்த்தி கட்டளையிட்டு இருக்கிறார்' என்று சொல்லி விடுவதாலேயோ அல்லது அந்தக் குடிகாரனிடமோ, கள்ளு வியாபாரக் காரனிடமோ இரண்டு அடி வாங்கிக்கொண்டு அதை ஒன்று பத்து நூறாகப் பெருக்கிப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்து விடுவதாலேயோ கள்ளுக் குடி நின்று போகுமோ? என்பதை யோசித்துப் பாருங்கள்.



சத்தியாக்கிரகம், மறியல் என்பவைகள் வீண் சண்டித்தனமே யில்லாமல் அதில் ஏதாவது கடுகளவு நாணையமோ, யோக்கியப் பொறுப்போ, இருக்க முடிகின்றதா? என்றுகேட்கின்றோம். உண்மையாய் யோக்கியமாய் கள்ளை நிறுத்த சத்தியாக்கிரகம் செய்பவர்கள் கள்ளு மந்திரி வீட்டில் கள்ளு இலாகா அதிகாரி வீட்டில் – மரம் கள்ளுக்குவிடும் குடியானவன் வீட்டில் – கள்ளு இறக்கும்போது மரத்தடியிலும் மற்றும் இது முதலாகிய ஆரம்ப நிலையிலிருந்து ஏதாவது ஒன்றில் செய்தால் சிறிது அர்த்தமாவது உண்டு. அவைகளை விட்டு விட்டு எல்லாக் காரியமும் நடந்தும், செலவாகும் பணமெல்லாம் செலவாகி, செய்யவேண்டிய சடங்கெல்லாம் செய்யப்பட்டு கள்ளுக்கடைக்குள் கள்ளு வந்து விற்பனைக்கு உட்கார்ந்து கொண்டிருக்கும் போது "காந்திக்கு ஜெ" "கள்ளுக்குடிக்காதே" என்று சொல்லுவதால் எப்படி நிற்கமுடியும் என்பதை அனுபவ ஞானமுள்ள மக்கள் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

மேலும் இந்துக்களில் இருக்கும் அவ்வளவு விகிதாச்சார குடிகார ரும், கிறிஸ்துவர்களில் இருக்கும் அவ்வளவு விகிதாச்சார குடிகாரரும் போல அவ்வளவு விகிதாச்சார குடிகாரர்கள் மகமதியர்களில் இருக்கின்றார் களா என்பதை யோசித்துப் பாருங்கள்.

ஒருக்காலமும் அவ்வளவு குடிகாரர்கள் இல்லை என்றே சொல்லு வோம். இதன் காரணம் என்னவென்றால் அவர்களது மதமானது கள்ளை அவ்வளவு கடினமாக வெறுக்கின்றது. மற்றபடி இந்துக்கள் என்பவர் களிலும் மற்றும் சற்று கல்வி அறிவு மேல்ஜாதிக்காரர்கள் என்கின்ற எண்ணத்துடன் சரீரப்பாடுபடாமல் சோம்பேரியாய் இருக்கும் சைவ வேளாளர் தொண்டை மண்டல வேளாளர் பெருவாரியான வியாபாரிகள் வைசிய செட்டிமார்கள் என்பவர்கள் முதலியவர்களிலும் குடிக்கின்ற மக்கள் விகிதாச்சாரம் மிகவும் சுருக்கமானதேயாகும். அந்த சுருக்கமும் ஏதோ ஒருவித நாகரீகப்பைத்தியக் காரணமாக, செயர்க்கைவாசனை காரணமாக இருப்பதல்லால் மற்றபடி குடிகாரர்கள் என்கின்ற முறையில் ஏற்படுவது கிடையாது. ஆகவே இன்றைய குடிகார மக்களின் குடிக்கு காரணம் என்ன என்பதை அறிவாளிகள் இப் போதாவது யோசித்துப்பார்த்தால் உண்மை உணராமலிருக்க முடியாது.

சாதாரணமாக கள் இலாகா சனப்பிரதிநிதிகள் ஆதிக்கத்திற்கு வரா மலிருந்து சர்க்கார் இடமே இருந்திருந்தால் அது சம்மந்தமாக சட்டம் முதலியவைகள் செய்யவாவது சற்று இடமிருக்கும் இப்போது அதுவும் இல்லாமல் போய்விட்டது. ஏனெனில் ஜனப்பிரதிநிதிகளில் மெஜாரிட்டி யார் யாரோ அவர்களே அந்த இலாகாவை நடத்தும் வேலையை ஒப்புக் கொள்ளும் மந்திரியாகிவிட்டதால் மந்திரிவேலை கிடைக்காதவர்களும் அடுத்த தடவை அதை அடையலாம் என்று காத்திருப்பவர்களும் அதைப் பற்றி ஏதாவது பேசிக்கொண்டும் இவ்வித பிரசாரம் செய்து கொண்டு மிருக்கலாமே யொழிய மற்றபடி இதனால் எல்லாம் கள்ளுக்குடியை ஒழிக்க



RangaRakes tamilnavarasam.com

காரியத்தில் ஒரு துரும்பை அசைத்துவிட முடியுமா? என்று கேட்கின்றோம். வீணாக இது பொதுஜனங்களில் பதவி வேட்டைக் காரருடைய சுயநல வஞ்சகத்தையும் பாமரமக்களின் முட்டாள் தனத்தையும் கைமுதலாக வைத்துக்கொண்டு நடத்தும் போலி நாடகமே யொழிய மற்றபடி கள்ளு மறியலில் சிறிதும் பயனும் நாணயமும், யோகியப் பொறுப்பும், புத்திசாலித் தனமும் இல்லையென்றே சொல்லுவோம்.

அன்றியும் அரசியல் கருத்துக் கொண்ட மறியல்களை நிறுத்தி விட்டு பொருளாதாரத்திற்கும் சன்மார்க்கத்திற்குமான தனிப்பட்ட சீர்திருத்தத் துறையில் மறியல் செய்வதாய் சொல்லி ராஜி பேசிக்கொண்டு ஜெயிலிலி ருந்து வெளியில் வந்த பிறகு மறுபடியும் அரசியல் கருத்தில் செய்யும் மறியலில் எவ்வளவு தூரம் பயனும் நாணயமும் உண்டாகும் என்பதைப் பொது ஜனங்களே யோசித்துப் பார்ப்பதன்மூலம் இந்திய தேசீயத்தின் நாணயத்தையும் தலைவர்களின் நாணயத்தையும் அறிந்துகொள்ளட்டும் என்றே விட்டு விடுகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 07.06.1931**



# ஜவஹர்லால்

உயர்திரு. ஜவஹர்லால் நேரு உடல் சுகத்திற்கென்று தென்னிந்தி யாவிற்கு வந்து ஒரு சரியான நாடகமாடி விட்டு ஊருக்குத் திரும்பினார். எப்படித் திரும்பினார்? சமதர்மக் கொள்கைகளையும் பொதுவுடைமைக் கொள்கைகளையும் பல்லவியாக வைத்துக் கொண்டார்.

“யோக்கியர்களுக்கு அரசியல் உலகம் வெறுப்பைக்கொடுக்கின்றது. சீக்கிரம் அதை விட்டு விலகிக்கொள்ளுவேன்” என்றார். ஆனால் தான் கடைசிவரை அரசியல் பிரசாரமே அதுவும் அரசியல்காரர்கள் முறையைப் பின்பற்றியே செய்தார். சமூக இயல் விஷயத்தில் தீண்டாமையைப்பற்றி உண்மையைத் தைரியமாய் பேசுவதற்கு ஒவ்வொரு நிமிஷமும் நடுங்கினார். ஏதாவது ஒரு சமயத்தில் தீண்டாமை யொழியவேண்டுமென்று பேச நேர்ந் தாலும் உடனே அதற்கு பந்தோபஸ்தாக எந்த ஜாதியாரின் உரிமை களையும் பாதிக்க விடமாட்டேன் என்றும் ஒருகரணம் அடித்துக் கொண்டே பார்ப்பனர் களின் கோபத்திலிருந்தும் தப்பித்துக்கொண்டார்.

காங்கிரசிலும் தீண்டாமையைப்பற்றி ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார். ஆனால் இப்போது செய்ய வேண்டிய வேலை அதுவல்ல. கள்ளுக்கடை, ஜவுளிக்கடை மறியல் தான் என்று ஒரு பல்டி அடித்துத் தப்பித்துக் கொண்டார்.

ஆகவே அவர் கூடியவரையில் திரு. இராசகோபாலாச்சாரியாரை விட சாமர்த்தியமாகவே நடந்து கொண்டார் என்றுதான் சொல்லவேண்டும்.

ஒவ்வொரு ஜாதி மதக்காரருடையவும் உரிமைகள் பாதிக்கப்படாமலும் ஒரு ஜாதியாரால் மற்றொரு ஜாதியாருடைய உரிமை பாதிக்கப்படாமலும் இருக்க வேண்டுமென்று கருதி வேலை செய்பவர்களால் தீண்டாமையை ஒழிக்கவோ பொதுவுடைமையும், சமதர்மமும் கொண்ட கொள்கையை ஏற்படுத்தவோ முடியுமா? என்பதை அறிவுள்ள வாசகர்கள் தான் யோசித்து முடிவு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு ஜாதியின் உரிமையென்று எப்பொழுது பாகுபடுத்திக் கொண்டாரோ அப்பொழுதே திரு. ஜவஹர்லால் ஒவ்வொரு ஜாதியையும், கீழ் ஜாதி மேல் ஜாதி என்ற பாகுபாடுகளையும் படிகளையும் ஒப்புக் கொண்டு அவர்களுடைய உரிமைகளைக் காப்பாற்ற ஒப்புக்கொண்டார் என்பதில்



RangaRakes tamilnavarasam.com

யாரும் சந்தேகப்பட முடியாது.

ஆகவே இன்றையதினம் நாட்டிலுள்ள பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், தீண்டாதார், இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், ஐரோப்பியர்கள் ஆகிய தகறாருகள் ஜாதிமதத்தை ஆதாரமாய்க் கொண்டு சில சௌகரியங்களை தங்கள் தங்கள் ஜாதிமத உரிமை என்று கருதி அதுவும் குர்ஆன், பைபிள், வேதம், தர்மசாஸ்திரம் ஆகியவைகளின்படி கடவுள் கட்டளையாக அனுபவித்து வருவதாகவே கருதிவருகிறார்கள். இவற்றிற்குப் பாதகமில்லாமல் பார்த்துக்கொள்ள வீரர் ஜவர்ஹர்லாலுடைய தயவு எதற்குஎன்றுதான் கேட்கின்றோம். இப்பொழுதே அப்படித்தானே நடைபெற்று வருகின்றது? இது போதாதா? இதைக்காப்பாற்ற காங்கிரசும், காந்தியும், நேருவும் எதற்கு? இதற்கு ஒருஇரும்புப்பூண் போட்டு இனி யாராலும் எந்தக் காலத்திலும் அசைக்காமல் இருக்கவா? என்று கேட்கின்றோம்.

ஒவ்வொரு ஜாதி உரிமையையும், ஒவ்வொரு மத உரிமையையும், ஒவ்வொரு வகுப்பு உரிமையையும் காப்பாற்றுவது, காங்கிரஸ் கொள்கையானால், காந்தி கொள்கையானால், நேரு கொள்கையானால், இவைகளை விட வெள்ளைக்கார கொள்கை ஆயிரம் மடங்கு மேலானதென்று கல்லின்மேல் செதுக்கி வைப்போம்.

மற்றும் தீண்டாமையை ஒழிப்பதைப் பற்றி திரு. ஜவஹர்லால்நேரு கூறினது எவ்வளவு ஏமாற்றுகரமானது என்பதை தீண்டாமை யொழிப்பதில் கவலையுள்ளவர்கள் உணரவேண்டும்.

“தீண்டாமையொழிப்பதும் காங்கிரஸ் திட்டங்களில் ஒன்றுதான். ஆனால் கள்ளுக்கடையும் ஜவுளிக்கடையும் மறியல் செய்யும் வேலைதான் இப்போது காரியத்தில் செய்யவேண்டியது” என்று கூறினால் இதன் யோக்கியத்தன்மை என்ன என்று கேட்கின்றோம்.

தீண்டாமையானது பறையர், சக்கிலியர், பள்ளர் என்று சொல்லப்படுபவர்கள் முதலிய சிலருடைய கஷ்டம் என்று மாத்திரமே சிலர் கருதியிருக்கிறார்கள். இந்தக் கருத்தேதான் நமது மக்களின் சுயமரியாதை யற்ற தன்மைக்கு ஒரு உதாரணமாகும்.

திரு. ஜவஹர்லால் நேருவை நேற்று கன்யாகுமரி கோவிலுக்குள் சென்று “கடவுளை” தரிசிக்க அனுமதிக்காமல் போலீஸ் பந்தோபஸ்துடன் விறட்டி அடித்து விட்டார்கள். திருவனந்தபுர பட்டணத்தின் சில தெருக்களில் திரு. ஜவஹர்லால் ஊர்வலம் போவது கூடாது என்று காவல் மூலம் தடுத்து விட்டார்கள். இந்தக்கதி திரு. லஜபதிக்கும் திரு. காந்திக்கும் கூட ஏற்பட்டதுதான் என்பது யாவரும் அறிந்ததேயாகும்.

ஆகவே “சக்கிலியர், பறையர், பள்ளர்” ஆகியவர்களுக்கு கோவிலிலும், குளத்திலும், தெருவிலும் தீண்டாமை தத்துவப்படி என்ன உரிமை மறுக்கப்பட்டு இருக்கிறதோ அதே உரிமைகள்தான் “சமதர்ம” ஜவஹர்லால்



நேருவுக்கும் அவர் “பாட்டனார்” “மகாத்மா” காந்திக்கும், அவர் பூட்டனான “பாஞ்சால தெய்வம்” லாலா லஜபதிக்கும் மறுக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் தங்களை “நல்ல ஜாதி” என்று கருதிக் கொண்டிருக்கும் “நாயக்கர், செட்டியார், பிள்ளை, முதலியார்” முதலிய “பெரிய ஜாதி” என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கும் தங்களை விஸ்வ, தேவாங்க, சௌராஷ்டிர பிராமணர்கள், க்ஷத்திரியார், வைசியர், சற்சூத்திரர் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கும் நடந்து கொண்டுதான் வருகின்றது. இதில் செய்யப்பட வேண்டும் என்று கருதும் எவ்வித சிறு மாறுதலும் ஜவஹர்லால் நேருவின் திட்டப்படி ஏதாவது ஒரு ஜாதியாரின் உரிமைக்கு விரோதம் செய்ததாகவேதான் ஏற்பட்டுத் தீரும். அதனால் தான் திரு. காந்தி முதல் எல்லோருமே “அந்தக் கோவிலில் சாமி யில்லை”என்று சொல்லிவிட்டு ஓடிப்போய் விடுவதுடன் அல்லாமல் மற்றபடி அங்கு ஒரு நிமிஷ- நேரமாவது தங்கியிருந்து எவ்விதமான காரியமும் செய்ய முடியாதவர்களாகப் போய் விட்டார்கள். இது போலவேதான் முதலாளி – தொழிலாளி நிலைமையைப் பற்றியும், ராஜாக்கள், ஜமீன்தாரார்கள், குடிஜனங்கள் நிலைமையைப் பற்றியும் இந்த “சமதர்மக்” கூட்டம் நினைத்துக்கொண்டு முதலாளிகளும் ராஜாக்களும் கலந்த – அவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படாத சுயராஜ்யம் (சமஷ்டி ஆட்சி) சம்பாதிக்க ராஜி பேசிக்கொண்டிருக்கின்றார்கள். இதை திரு. காந்தியவர்கள் இர்வின் பிரபுவிடம் ஒப்புக்கொண்டதோடு திரு. காந்தியவர்கள் இப்போதே முதலாளிகளின் (வர்த்தக) சங்கத்தின் (கௌரவ) அங்கத்தினராகவும் தன்னைத் தெரிந்தெடுத்துக்கொண்டார்.

இனி ராஜாக்கள் சங்க கௌரவ அங்கத்தினர் பதவி மாத்திரம் அவருக்குக் கிடைக்கவேண்டியது பாக்கியிருக்கின்றது. இது இதுவரையில் அவருக் குக் கிடைக்காமல் இருப்பதற்கு சில ராஜாக்களுக்கு திரு. காந்தியிடம் இன்னும் பூரண நம்பிக்கை ஏற்படாததுவேதான் காரணமாகும். அதுவும் ஏற்படும்படி சிறிது சிறிதாய் ராஜாக்களைப்பற்றி பேசி உறுதிமொழி கொடுத்துக் கொண்டுதான் வருகிறார். அதுவும் சீக்கிரம் முடிந்துவிடும் என்றே கருதிவிடலாம். இந்த நிலையில் இந்த தேசத்தின் தேசீய இயக்கம் நடைபெறுவதும் இதன் தலைவர்களாகிய திரு. ஜவஹர்லால் பொதுவுடைமைக்காரராயிருப்பதாகவும் திரு. காந்தி சமதர்மக்காரரா யிருப்பதாகவும் பரமரமக்களுக்கு விளம்பரப்படுத்தப்படுகின்றது.

ஆகவே திரு. ஜவஹர்லால் பொதுவுடைமைத் தத்துவம் ஒவ்வொரு ஜாதி உரிமையையும் காப்பாற்றுவதும் திரு. காந்தியின் சமதர்ம தத்துவம் ராமராஜியத்தை ஏற்படுத்தி முதலாளிகளையும் ராஜாக்களையும் காப்பாற்றுவதும் என்கின்ற பார்ப்பனீய முதலாளி தத்துவ ஆட்சி என்பதை இப்போதாவது மக்கள் உணர்வார்களாக.

**குடி அரசு – கட்டுரை – 07.06.1931**



RangaRakes tamilnavarasam.com

# இந்துமதம்

இந்துமதம், இஸ்லாமானவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் கொள்கையில் எவ்வளவு கெடுதியோ அதைவிடப் பல மடங்கான கெடுதிகளை இந்துமதம் பார்ப்பனரல்லாத மக்களுக்கு காரியத்தில் விளைவிக்கின்றது. அதைவிடப் பன்மடங்கே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் விளைவிக்கின்றது. இஸ்லாமானவர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், இந்து மதத்தால் யாதொரு கெடுதியும் இல்லை என்று கூடச் சொல்லலாம். இஸ்லாமியரையும் கிறிஸ்தவரையும். இந்துக்கள் வேறாகக் கருதுகின்றார்கள். தங்கள் சமூகத்திற்கு எதிராய் கருதுகின்றார்கள் என்பதைத் தவிர வேறில்லை. பிரிட்டீஷ் அரசாங்கத்தின் பயனாய் அவர்கள் பார்ப்பனரொழிந்த இந்துக்களைவிட சற்று அதிகமான நிலையில் லாபமே அடைந்திருக்கிறார்கள். ஆனால் இந்துமதம் காரணமாக பார்ப்பனரல்லாதாரும் "தீண்டாதாரும்" இழிவாய் நடத்தப்படுவதுடன் சுயமரியாதை இல்லாத முறையிலும் சுதந்திரமில்லாமலும் நடத்தப்படுகிறார்கள். மேலும் இவர்களைப் பார்ப்பனர்கள் அடிமையாக்கிக் கொண்டும் இவர்களது கஷ்டத்தின் பயன்களை அனுபவித்துக் கொண்டும் இவர்களை (பார்ப்பனரல்லாதாரையும், தீண்டாதாரையும்) தலையெடுக்கச் செய்யாமலும் செய்து வருகிறார்கள். இந்துமதம் என்பதாக ஒன்று இருப்பது இஸ்லாமானவர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் மற்றொருவிதத்தில் லாபகரமான தென்றே சொல்லலாம். எப்படியெனில் மேற்கண்ட இரண்டு மதமும் இரண்டு சமூக எண்ணிக்கையிலும் பெருக்க மேற்படுவதற்கு இந்து மதமே காரணமாயிருக்கின்றது. இந்தியாவில் இந்து மதமில்லாமல் வேறு புத்த மதம் கிறிஸ்து மதம் ஆகியவை இருந்திருந்தால் இஸ்லாம் மத சமூக எண்ணிக்கை இவ்வளவு பெருகி இருக்காது. அது போலவே வேறு மதங்கள் இருந்திருந்தால் கிறிஸ்து மத சமூக எண்ணிக்கை யும் இவ்வளவு பெருகி இருக்காது. ஆகவே அவ்விஷயத்தில் இந்து மதம் இருப்பது முஸ்லீம் – கிறிஸ்து மதங்களுக்கு லாபமே யாகும் ஆகையால் இந்துமதத்தை ஒழிக்க வேண்டியதென்பது இந்திய பார்ப்பனரல்லாத மக்களுக்கும் அவர்களில் தீண்டப்படாதார் என்கின்ற மக்களுக்கும் தான் மிகவும் அவசியமானது என்று சொல்லுவோம். இதோடு ஏழைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் கூட சமத்துவமும் பொது உடைமை தத்துவமும் ஏற்பட வேண்டுமானால் முதலில் இந்துமதம் ஒழிய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

**குடி அரசு – கட்டுரை – 07.06.1931**



# திருவாரூரில் சுயமரியாதைப் பிரசாரம்

தலைவரவர்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!! இன்று நான் பேச வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கும் விஷயமான "கராச்சிக் காங்கிரசும், சுயமரியாதையும்" என்பது நோட்டீசில் பார்த்த பிறகுதான் எனக்குத் தெரிய வந்தது. இதைப்பற்றி பல இடங்களில் பேசியும், எழுதியு மிருக்கின்றேனே யென்று சொல்லியும் கூட யாரோ சிலரால் "கராச்சிக் காங்கிரசுக்கும், காங்கிரஸ் தீர்மானங்களுக்கும், சுயமரியாதை இயக்கக் கொள்கைகளுக்கும் வித்தியாசமில்லையாதலால் சுயமரியாதை இயக்கம் வேண்டியதில்லை" யென்று சொல்லப்படுவதாகவும், அதை நம்பி சில வாலிபர்கள் காங்கிரசில் கலந்து கொள்ளஆசைப்படுவதாகவும் தெரியவருவதால், இரண்டுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி எடுத்துச்சொல்ல வேண்டுமென்றே, இந்த விஷயத்தைப் பற்றி பேசவேண்டுமென்று குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். ஆகவே, இப்பொழுது நான் இதைப்பற்றி பேசுவேனென்பதாகக்கருதி, அதிலும் இது சம்பந்தமான எனதபிப் பிராயத்தை உள்ளபடி சிறிதும் ஒளிக்காமல் எனக்குப் பட்டதை சொல்லுவேனென்று யெண்ணி, நீங்களித்தனை பெயர்கள் இன்று இங்கு கூடியிருக்கிறீர்கள். ஆகவே நான் இந்தச் சமயத்தில் யாருக்காவது பயந்து கொண்டோ, யார் தாட்சன்னியத்திற்காவது மயங்கிக்கொண்டோ எனதபிப்பிராயத்தை உள்ளபடி வெளியிடாமல் மறைத்துப் பேசுவேனேயானால், உங்களை ஏமாற்றியவனென்பதாக ஆவதோடு, நானும் ஒரு பயங்காளியென்பதாகவே யாகிவிடுவேன். இந்தப்படி நீங்கள் ஏமாற்றப்படுவதாலும், நான் பயப்படுவதாலும், யாருக்கென்ன லாபம் ஏற்படக்கூடும்? நாங்கள் ஏதாவது உங்களிடம் பணம் பறிக்கவோ, பத்திரிகை பிரசாரம் செய்யவோ அல்லது யாரிடமாவது சம்பளம் பெற்று கூலிப்பிரசாரம் செய்யவோ, அல்லது உங்களுடைய ஓட்டுகளை யாருக்காவது வாங்கிக் கொடுக்க ஏஜண்டுகளாகவோ, தரகர்களாகவோ, அல்லது வயிற்றுப்பிழைப்புக்கே இதையொரு தொழிலாகக் கொண்டு, புராணப் பிரசங்கிகளைப் போல உங்களை ஏமாற்றி திருப்தி செய்து விட்டுப்போகவோ அவசியமுடையவர்களாக இங்கு இப்போது வரவில்லை. ஏதோ எங்களுடைய வாழ்நாட்களானது வீணாகாமலும், எங்கள் வயிற்றுப்பிழைப்புக்கும், வாழ்க்கை, சுகபோக ஆசைக்குமே வீணாகக் கழியாமல் ஏதாவதொரு பயனுள்ள காரியத்தை செய்து விட்டு அதுவும் எங்களுக்கு உண்மையாகவும், உறுதியாகவும், சரியென்று பட்ட காரியத்தையே செய்துவிட்டு முடிவெய்தலாமே யென்கிற



RangaRakes tamilnavarasam.com

யெண்ணத்தின் மீதே சகல சுக, துக்க பலன்களுக்கும் துணிந்து உண்மை யென்றுபட்டதை யெடுத்துச் சொல்ல வந்திருக்கின்றோம்.

ஆகவே, சகோதரர்களே! நீங்களும் இது போலவே இந்த விஷயத்தில் நியாயமாகவும், யோக்கியமாகவும் நடந்து கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம். எதற்காக வென்றால் நாங்கள் சொல்லுவதை அப்படியே நம்பி, மோசம் போய் விடாதீர்களென்பதற்கும், வேறு எந்தக் காரணத்தினாலாவது நாங்கள் சொல்லும் விஷயங்களுக்குள் புகுந்து பாராமல் அப்படியே தள்ளி விடாதீர்களென்பதோடு எங்களுடைய சொந்த பெருமை, சிறுமை ஆகியவைகளை யுத்தேசித்து விஷயங்களை மதிக்காதீர்கள் என்பதற்குமாகத்தான் இப்படிச் சொல்லுகிறேன். ஆகவே, நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்களுடைய சொந்த அறிவையும் ஆராய்ச்சியையும் கொண்டு, நடுநிலைமையிலிருந்து அலசிப்பார்த்து தள்ளுவதைத் தள்ளி, கொள்ளுவதைக் கொள்ளுங்கள். அந்த தைரியத்தைக் கொண்டு தான் நாங்களும் தைரியமாய் உண்மையென்று பட்டதை பேசுகிறோம்.

நாங்கள் சொல்லும் விஷயங்கள் உங்களுக்குப் புதிதாகயிருக்கலாம், அசாத்தியமாகயிருக்கலாம், ஆச்சரியமாகவிருக்கலாம், திடுக்கிடக்கூடிய தாகவிருக்கலாம். உங்களுடைய உணர்ச்சிக்கும் பழக்க வழக்கங்களுக்கும், நம்பிக்கைகளுக்கும் விரோதமாயிருக்கலாம். அன்றியும், நாங்களிதற்கு முன் எப்போதாவது வெளிப்படுத்தின அபிப்பிராயங்களுக்கு மாறுபாடாயிருந்தாலும், அவற்றைவிடத் தீவிரமானதாயிருந்தாலுமிருக்கலாம். எப்படியிருந்த போதிலும் நீங்கள் மாத்திரம் நடுநிலைமையிலிருந்து யோசித்துப் பார்த்தால் தான், ஏமாறாதிருக்க முடியுமே யொழிய மற்றப்படி மத விஷயத் தைப்போல் அரசியலிலும் யார் சொல்லுவதையும் நம்ப வேண்டுமென்றும், நம்பாவிட்டால் பாவம், நரகம் வந்துவிடுமோ என்று பயப் படுகின்ற தன்மை போலும் வைத்துக் கொண்டால் கண்டிப்பாய் இதிலும் ஏமாந்துதான் போக முடியும் என்பதை தெரிவித்துக் கொண்டு மேலே பேசுகிறேன்.

சகோதரர்களே! கராச்சி காங்கிரசும், சுயமரியாதையும் என்னும் விஷயத்தில் எங்களபிப்பிராயத்தைச் சொல்லுவதென்பதில் முதலாவது நாங்களதற்குத் தகுந்தவர்களாயென்பதும் கவனிக்க வேண்டிய விஷயந்தான். எங்களைப் பொறுத்தவரை நாங்கள் காங்கிரஸ் என்பதிலும் கொஞ்சகாலம் உழைத்து அதன் தத்துவங்களையும் உள் பிரகாரத்திலிருந்து மனப்பூர்வமா யுணர்ந்தவர்களேயாவோம். அத்திட்டங்களை நிறைவேற்றுவதிலும், ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கும் பல தடவை ஆளானவர்களுமாவோம்.

இன்னும் விவரமாய்ச்சொல்ல வேண்டுமானால் அதற்காகப் பல தடவை “சிறைக்கு” சென்றுவந்தவர்களுமேயாவோம். அதன் பெருமை யை யுத்தேசித்து இப்பொழுது உங்களிடம் ஒன்றும் சொல்ல வரவில்லை. ஆனாலும் கஷ்டத்திற்கு பயந்து கொண்டு நாங்கள் ஏதோ இவ்வித



அபிப்பிராயம் சொல்லுவதாக சொல்லுகின்றவர்களுடைய வார்த்தைக்கு சமாதானம் தெரியாமல் திண்டாடாதீர்கள் என்பதற்காகத்தானே சொல்ல வேண்டியவனாவேன். அன்றியும், நாங்கள் காங்கிரசின் கொள்கைகள், திட்டங்கள், தீர்மானங்களாகியவைகளின் உள்யெண்ணம் என்னவென்பதும், வெளியெண்ணமென்னவென்பதும் அவற்றை தீர்மானிக்கும் முறை எப்படியென்பதும், அதன் தலைவர்கள், தொண்டர்களாகியவர்களின் தன்மை எப்படிப்பட்ட தென்பதையும், அத்திட்டங்களையும், தீர்மானங்களையும் பிரசாரம் செய்யும் மாதிரியும் அமுல் நடத்தும் மாதிரியும், அதிலுள்ள நாணயங்களும், அதனாலேற்படும் பயன்களும் நன்றாய் அறிந்திருப்பதாகக் கருதிக் கொண்டிருக்கிறவர்களே யாவோம். அதோடு சுயமரியாதை இயக்கத்தைப் பற்றியும், அதன்பேரால் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள், திட்டங்கள், அதன்பயனாய் ஏற்பட்ட பலன்கள் ஆகியவைகளையும். நன்றாயறிந்திருக்கிறோமென்றே கருதிக் கொண்டிருக்கிறவர்களாவோம். ஆதலால், மேற்கண்ட இரண்டு விஷயத்திலும் சிறிதாவது அனுபோகங் கொண்டே பேசுகிறோமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சகோதரர்களே! என்னுடைய சொந்த கருத்துப்படி காங்கிரசும், சுயமரியாதையும் ஒன்றுக் கொன்று மாறானது என்பதோடு குறிப்பாக கராச்சிக் காங்கிரசினால் நாட்டு மக்களின் உண்மையான சமதர்மத்துக்கும், மற்ற நலத்துக்கும் எவ்வித அனுகூலத்தையும் விளைவிக்காதென்பதோடு, அதனால் சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் நடைபெறவும், மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியேற்படவும், இடையூறு ஏற்படுமென்றும் நான் கருதுகிறேன். இரண்டினுடைய அடிப்படையான கொள்கைகளே ஒன்றுக் கொன்று மாறானதாகுமென்றும் கருதுகின்றேன்.

உதாரணமாக சில கூறுகிறேன். சகோதரர்களே! நமது சுயமரியதை இயக்கத்தின் கொள்கைப்படி முதலாவதாக மதமும், ஜாதியும், கடவுளுணர்ச்சியும் மக்களிடத்திலிருந்து விலக்கப்பட வேண்டியதவசியமாகும். காங்கிரஸ் கொள்கைப்படி மதமும், ஜாதியும், கடவுளுணர்ச்சியும் முறை பிசகாமல் காப்பாற்றப்பட வேண்டியது முக்கியமாகும். சுயமரியாதைக் கொள்கையில் பிராமணனென்பவறும், பறையனென்பவறும் நாட்டிலிருக் கக்கூடாது. காங்கிரஸ் கொள்கைப்படி அவர்களிருந்துதான் தீருவார்கள்.

சுயமரியாதைக் கொள்கையில் இந்துமதமென்பதும், மநுதர்ம சாஸ்திரமென்பதும் அழிக்கப்பட வேண்டும். காங்கிரஸ் கொள்கையில் இந்துமதமும், மநுதர்மசாஸ்திரமும் காப்பாற்றப்படவேண்டும்.

சுயமரியாதைக் கொள்கையில் இராமஇராஜ்யம், ஹரிச்சந்திர இராஜ்யமாகிய இந்துமத ஆதார, புராண இராஜ்ய பாரங்கள் – இராஜ்ய முறைகள் அழிக்கப்பட்டாக வேண்டும். காங்கிரஸ் கொள்கைப்படி இராமஇராஜ்யமும், ஹரிச்சந்திர இராஜ்யமும் புதுப்பித்தாக வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

சுயமரியாதைக் கொள்கைப்படி இந்த ஊர் கமலாலய கோவிலின் கட்டட விஸ்தீரணமாகிய ஐந்து வேலி விஸ்தீர்ணமுள்ள இடம் சமநிலை யாக்கப்பட்டு, பயிர் செய்யப்பயன்படுத்த வேண்டும். காங்கிரஸ் கொள்கைப் படி கமலாலயத்தையும், அதைச் சுற்றிலுமுள்ள குட்டிச் சுவர்களையும் பந்தோபஸ்தாய்க் காப்பாற்ற வேண்டும்.

சுயமரியாதைக் கொள்கைப்படி ஏழை-பணக்காரன், முதலாளி-தொழிலாளி, சோம்பேரி- பாடுபடுபவன், மேல் ஜாதி - கீழ் ஜாதி, மிராசுதாரன்-பயிர் செய்பவன், ஜமீன்தாரன் - குடியானவன், மேல்வாரக்காரன் - கீழ்வாரக் காரன் என்கின்ற தன்மைகளிருக்கக் கூடாது. காங்கிரஸ் கொள்கைப்படி இவர்கள் ஒவ்வொருவருடைய பிறப்புரிமைகளையும், அதாவது அவரவர் கள் பிறக்கும்போது இருந்த சொத்துரிமைகளைக் காப்பாற்றி, அவரவர் களுக்கு மதத்தின்பேரால், வர்ணாச்சிரம தர்மத்தின் பேரால், சாஸ்திரங்களில் கூறியுள்ள நீதி நிபந்தனைகளின் பேரால் உள்ள உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும்.

சுயமரியாதைக் கொள்கைப்படி ஆயிரம்வேலி, இரண்டாயிரம் வேலி நிலமுள்ள மடாதிபதிகளும், கோயில் சாமிகளும் ஒழிக்கப்பட வேண்டும். அவைகளை மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தும், மக்களின் நன்மைக்குப் பயன்படுத்தவும் வேண்டும். காங்கிரஸ் கொள்கைப் படி மடங்களையும், சாமிகளையும், காப்பாற்றுவதோடு அதன் சொத்துக்களையும், மடங்களுக்கும், சாமிகளுக்கும் பழைய வழக்கப்படி, மாமூல்படி அடைந்து கொண்டிருக்கச் செய்யவேண்டும்.

சுயமரியாதைக் கொள்கைப்படி மடாதிபதிகளும், சங்கராச்சாரியார் களும், மதப்பிரசார சன்னியாசிகளென்பவர்களும் பட்டாளத்தில் சேர்க்கப் படவும், விவசாயத்திலமர்த்தப்படவும் செய்வதோடு, சக்தியில்லா தவர்களை தானியக்களஞ்சியங்களை சோம்பேரிகள் கொள்ளை கொள்ளாதபடி காவல் காக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். காங்கிரஸ் கொள்கைப்படி இம் மடாதிபதிகளையும், சங்கராச்சாரிகளையும், நூற்றுகணக்கான மக்கள் பல்லக்கில் ஊரூராய் சுமந்துகொண்டு, அவர்கள் கால்களை (பாதத்தை) கழுவினத்தண்ணீரை மக்களுக்குக் குடிப்பித்து, அதற்காக வரிகள் வசூலித்துக் கொண்டிருக்க வேண்டும்.

சுயமரியாதைக் கொள்கைப்படி மக்களுக்கு மேல்லோகம்- கீழ் லோகம், மோட்சலோகம் - பிதுர்லோகம் என்கின்றதான பித்தாலாட்டங்கள் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். காங்கிரஸ் கொள்கைப்படி செத்துப் போனவர்களுடைய ஆவியை மோட்சலோகத்திற்கும், பிதுர்லோகத் திற்கும் அனுப்புவதற்கு பிணங்களின் எலும்புகளையும், சாம்பலையும், கங்கையில் போட வேண்டும்.



சுயமரியாதைக் கொள்கைப்படி ஆத்மாவே சந்தேகம். காங்கிரஸ் கொள்கைப்படி மகாத்மாக்கள், குட்டி மகாத்மாக்கள் உண்டு.

இப்படிப்பட்டவையான அநேக வித்தியாசங்கள் இன்றைய காங்கி ரஸ், காங்கிரஸ் கருத்தாக்கள், காங்கிரசின் ஏகநாயகர்களாகியவர்களுக்கும் சுயமரியாதை இயக்கத்துக்கும் இருந்து வருகின்றன. இவற்றையெல்லாம் மறைத்துக் கொண்டு "காங்கிரசுக்கும் சுயமரியாதை இயக்கத்துக்கும் வித்தியாசமில்லை" என்றும் "காங்கிரசில் பூரண சுயேச்சை உண்டு" யென்றும், பொதுவுடைமைத் தத்துவம், சமதர்மக் கொள்கை ஆகியவைகள் உண்டு, என்றும் பேசுவதில் யோக்கியப் பொறுப்போ, நாணயப் பொறுப்போ இருக்க முடியுமா? வென்பதை யோசித்துப் பாருங்கள்

சகோதரர்களே!

இந்த நாட்டின் சொத்துக்களெல்லாம் கடவுள்களுடையதாகவும், சம்பாதனைகளெல்லாம், மோட்சப் பிரவேச அனுமதிச் சீட்டுக்கும், வழிப் பிரயாணதுக்குமாகவும், மக்களின் சூட்சிக்காரர்களெல்லாம் மோட்சவழி காட்டிகளாகவும், சுயராஜ்ய கர்த்தாக்களாகவும், பாடுபடுகிற ஜனங்களெல்லாம் அடிமைகளாகவும், பாவிகளாகவும் இருந்து கொண்டு பட்டினி கிடப்பவர் களாகவும் இருந்து வரும் முறைதான் இன்றைய கராச்சி காங்கிரஸ் சுயராஜிய திட்டமென்பதை யுணருங்கள். எந்தத் திட்டத்தில் ஏழையென்றும், அடிமையென்றும், ஈனனென்றும், மக்கள் பிறவி யில்லையோ அதுதான் சுயமரியாதை இயக்கத்திட்டம். எந்தத் திட்டத்தில் முதலாளியென்றும், தொழிலாளியென்றும் ஜாமீன்தாரனென்றும் குடியானவனென்றும் மடாதி பதிகளென்றும் சிஷ்யர்களென்றும், பிராமணனென்றும் சூத்திரனென்றும், பறையன் என்றும், பிரிக்கப்பட்டு அவர்களுக்கு சாஸ்திரப்படியுள்ள பிறப் புரிமை காப்பாற்றத் திட்டம் போடப்பட்டிருக்கின்றதோ அதுதான் சுயராஜியத் திட்ட மென்பதை யுணருங்கள்.

நாற்பத்தைந்து வருஷகாலம் காங்கிரஸ் இருந்து வந்தும், லோக மானியர்கள், லோகநாயகிகள், மகாத்மாக்கள், தெய்வீக அவதாரச் சக்திய டையவர்கள், வீரர்கள், தியாகிகள் என்பவர்கள் காங்கிரசுக்குத் தலைமை வகித்து காங்கிரசை குரங்குபோல் ஆட்டி வந்தும் இன்னமும் இந்த நாட்டை விட்டு பறையரும், சண்டாளரும், முகாலோபம் செய்யக்கூடாத இழிவான மனிதரும் ஒழிந்த பாடில்லை, ஒழிவதற்குரிய அறிகுறிகளும் காணப்பட வில்லை என்றால் காங்கிரசும் சுயமரியாதை இயக்கமும் ஒன்றா என்பதை யோசித்துப் பாருங்கள். அதுபோலவே பிராமணனும், பூதேவனும், சூத்திர னும், பஞ்சமனும், பாக்கியவானும், நிர்ப்பாக்கியவானும் இந்த நாட்டை விட்டு ஒழிந்த பாடில்லை. ஒழியும் மார்க்கங்களும் குறிப்பிடப்படவில்லை என்றால் காங்கிரசும் சுயமரியாதை இயக்கமும் ஒன்றா? என்று யோசித்துப் பாருங்கள். இந்த நாட்டில் ஏழைமக்கள் கோடிக் கணக்காக கஞ்சிக்குத் திண்டாடிக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டு படிப்பில்லாமல் துணியில்லாமல், மனிதத்தன்மை யில்லாமல் நாயாய், கழுதையாய், பன்றியாய், ஏன் அதற்கும் கேவலமாய் நடத்தப்பட்டு வருவதொருபுறமிருக்க, கல்லுகளை ஆட்டுக்கல்லாகவும், குழவிக் கல்லாகவும் ஆக்கி ஒன்றுக்குள் ஒன்று சிக்க வைத்து அதன் தலைகளில் தேன், பால், நெய், தயிர், பஞ்சாமிர்தம் அபிஷேகங்களை செய்து கொண்டு அவைகளுக்குப் பெண்டு, பிள்ளை, வைப்பாட்டி கற்பித்து பட்டு, பட்டாடை, வயிரக்கெம்பு நகைகளை சாத்தி கட்டை முட்டிகளையடுக்கி அதன் மீது தூக்கி வைத்து நூற்றுக்கணக்கான மக்கள் சுமப்பதையும், பதினா யிரக்கணக்கான மக்களிழுப்பதையும் இதற்காக இந்த நாட்டில் மாத்திரம் பல கோடிக்கணக் கான ரூபாய்கள் பாழாவதையும் பார்த்தும் காங்கிரஸ், ஏனென்று கேட்க வில்லை. அப்பக்கம் திரும்பியும் கூட பார்க்கவில்லை என்றால் இனியும் கூட காங்கிரசும், சுயமரியாதை இயக்கமும் ஒன்றா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

இந்த நாட்டின் வாழ்க்கை முறையானது வியாபாரத்தின் மூலம், வட்டி வாங்குவதின் மூலம், புரோகிதம், குருஸ்தானம், உத்தியோகம் முதலியவை களின் மூலம் பாடுபடுவர்களுடைய செல்வமெல்லாம், வரும்படியெல்லாம் சிலரிடமே போய் பெருகவும், அவர்கள் அதை தங்களுடையதேயென்று பாழாக்கவுமான மாதிரியிலேயே பாழாக்கத்தகுந்த வாழ்க்கைத் திட்ட மிருந்து வருகிறது. இதைப் பற்றி எந்தக் காங்கிரசும் திரும்பிப் பார்க்கவே யில்லை. ஆனால் நேற்றுத் தோன்றிய சுயமரியாதை இயக்கம் இம் மாதிரி யானத் தன்மைகளையெல்லாம் ஒழித்தாக வேண்டுமென்றே சொல்லுகிறது. இந்த வேலையைத்தான் விடுதலை மார்க்கம் என்று சொல்லுகின்றது. காங்கிர சானது, வெள்ளைக்காரன் அனுபவித்து வரும் போக போக்கியத்தை இந்த நாட்டுப் பணக்காரனும், படித்தவனும், பார்ப்பனனும், மகாத்மாக்களும், தேசீய வாதிகளும், அனுபவிக்க வேண்டுமென்கின்ற ஆசைக்காக “வெள்ளைக்கார இராஜியம் இந்நாட்டை விட்டுப் போக வேண்டு” மென்கிறது. சுயமரியாதை இயக்கமானது இந்த நாட்டு செல்வத்தையும், இன்பத்தையும், இயற்கை வளத்தையும், எல்லா மக்களும் சமமாக அனுபவிக்கவும், இந்த நாட்டு சொத்துக்களெல்லாம் எல்லா மக்களுக்கும் பொதுவானதாயிருக்கவும் இந்த நாட்டு மக்களெல்லாம் பிறவியில் உயர்வு - தாழ்வு என்பது சிறிதுமில்லாமல் சகோதரர்கள் போலிருக்கவும், இந்நாட்டுச் சோம் பேரிகள் சூட்சிக்காரர்கள் பாமர மக்களை யேமாற்றாமலிருக்கவுமான காரியங்களுக்கு மாத்திரந்தான் வெள்ளைக்காரர்கள் ஆட்சி இந்த நாட்டை விட்டுப் போய்த்தீரவேண்டு மென்று சொல்லுகிறது. இந்த நாட்டிலுள்ள ஜமீன்தாரர்களுடைய அக்கிரமம் சகிக்க முடியவில்லை. மிராசுதாரர்களுடைய அநீதி, கொடுமை ஆகியவை கள் நிர்வகிக்க முடியவில்லை. பார்ப்பனர்களுடைய அகம்பாவமும் ஏமாற்று தலும் நினைக்கமுடிய வில்லை. இரண்டு இங்கிலீஷ் எழுத்துகள் தெரிந்து விட்டதனாலேயே படித்தவர்களென்று சொல்லப்படுவர்களின் பகல் கொள்ளை தாங்க முடிய வில்லை. இவைகளை யெல்லாம் அழிப்பதற்கு



காங்கிரஸ் என்ன செய்கிறது? இத்தனை பேரையும் காப்பாற்ற காங்கிரஸ் பாடுபடுகின்றதா? இல்லையா? என்று உங்கள் மனதைக் கேளுங்கள். உங்கள் அறிவைக் கேளுங்கள். உங்கள் அனுபவத்தைக் கேளுங்கள், உங்கள் நாணையத்தை கேளுங்கள்.

ஆனால் சுயமரியாதை இயக்கமானது இந்த மாதிரியான பிரிவுகள் கூடாதென்பதோடு இதற்கு ஆதாரமாய் இருந்து வருவதான எதுவும் கூடாது. அவைகள் எல்லாம் அடியோடு அழிக்கப்பட வேண்டுமென்றல் லவா சொல்லுகின்றது.

சகோதரர்களே! இந்த கோவில்களைக் கண்டால். இந்தத் தேர் திரு விழாக்களைக் கண்டால், இதன் சொத்துக்களைக் கண்டால் உங்களுக்கு வயிறு பற்றி எரியவில்லையே. அதற்கு பதிலாக “ஆநந்த பாஷ்பம்” பெருக் குகின்றீர்களே! பிள்ளைக்குட்டிகளுடன் விழுந்து கும்பிடுகின்றீர்களே! இந்த ஜால வித்தைக்காரர்கள் உங்களை எவ்வளவு முட்டாள்களாக்கி வைத் திருக்கிறார்களென்பதை இதிலிருந்தாவது சிந்தித்துப் பாருங்கள்.

இந்த மடாதிபதிகள் உங்கள் செல்வத்தை கொள்ளை கொண்டு சோம் பேறிகளைக் கூட்டி வைத்து “மதன கோலாகலக்கிரீடை”, “ஜலக்கிரீடை”, “கிருஷ்ண லீலை” நடத்துகின்றார்களே! உங்களுக்கு ஆத்திரமில்லையா? அதற்கு பதிலாக விழுந்து கும்பிட்டு கால்கழுவின தண்ணீரைக் குடித்துக் காணிக்கை செலுத்துகின்றீர்களே! உங்களுக்கு மதியில்லை, மானமில்லை என்பதை இப்போதாவது உணருகிறீர்களா?

நான் போக்கிரியாய் இருக்கலாம்,காலியாய் இருக்கலாம், கூலியாய் இருக்கலாம். இந்த கோவிலும், மடமும், இருப்பதும், இவற்றை நீங்கள் விழுந்து கும்பிட்டுக் கன்னம் கன்னமாய் போட்டுக் கொள்வதும், அறிவுள்ள, மானமுள்ள மனிதனுடைய செயலா? என்றுதான் கேட்கின்றேன். இவை களை ஒழிக்கவேண்டாமா? இந்தச் சொத்துக்களை எடுத்துக் கல்விக்கும், அறிவுக்கும், மானத்திற்கும், மனிதத்தன்மைக்கும் செலவழிக்க வேண்டா மா? என்றுதான் கேட்கின்றேன்.

நீங்கள் என்னைப் பார்த்துக் கோபிப்பதிலோ, ஆத்திரப்படுவதிலோ சிறிதும் பயனில்லை, இதனால் நீங்கள் என்னை என்செய்வீர்கள் என்ப திலும் எனக்குக் கவலை இல்லை. உங்களை ‘வாழவைக்கும்’ காங்கிரசு, அதுவும் கராச்சிக் காங்கிரசின் யோக்கியதையைச் சற்று யோசித்துப் பாருங்கள். உங்கள் மானத்திற்கும்,மதிக்கும், மனிதத்தன்மைக்கும் இந்தக் கராச்சிக் காங்கிரசு என்ன செய்தது, செய்கின்றது, செய்யக்கூடும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

உங்கள் இத்தனை பேரையும் இந்த நிலைமையிலேயே இருக்கச் செய்யத்தானே காங்கிரஸ் கர்த்தாவாகிய மகாத்மா என்பவர் காலையும்



RangaRakes tamilnavarasam.com

மாலையும், 'ராம் ராம், சீத்தாராம்' என்று பஜனைபாடுகிறார், பிரார்த்தனை செய்கின்றார், கீதைபடிக்கிறார். அவர்களது சீஷர்களும் சென்ற விட மெல்லாம், புராணப் பிரசங்கம் செய்கிறார்கள். இது உங்களுக்குப் புரிய வில்லையா?

ஆகவே கடவுள் பூஜையிலும், பிரார்த்தனையிலும், ராம பஜனை யிலும், புராண காலக்ஷேபத்திலும் இருந்து ராம ராஜியம் அடைய வேண்டு மென்கின்றீர்களா? அல்லது இவற்றையெல்லாம் அழித்து, ஒழித்து மனித தர்ம ராஜியம் வேண்டுமென்கின்றீர்களா? என்பதுதான் இப்போது உங்கள் முன் நிற்கும் கேள்வி. அது வேண்டுமானால் காங்கிரசில் சேருங்கள். இது வேண்டு மானால் சுயமரியாதையில் சேருங்கள். "இரண்டும் ஒன்று" என்று மாத்திரம் சொல்லாதீர்கள் என்றுதான் சொல்லுகின்றேன். மற்றபடி உங்கள் இஷ்டம்.

*குறிப்பு : திருவாரூர் கமலாலயத்துக்கு முன்புறம் உள்ள தெப்புக்குளத்து மைதானத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 14.06.1931**



# நன்நிலம் மகாநாடு

## ஹிந்தி கண்டனம்

தஞ்சை ஜில்லா நன்நிலத்தில் இம்மாதம் 7-ந் தேதி கூடிய நன்னிலம் தாலூகா மகாநாட்டில் ஹிந்தி பாஷையைக் கண்டனம் செய்து ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது. அத்தீர்மானமாவது:-

"பழைய புராணக் கதைகளைச் சொல்லுவதைத் தவிர வேறு அறிவு வளர்ச்சிக்கும் மற்ற பொது விஷயங்களுக்கும் உதவாத சமஸ்கிருதம், ஹிந்தி முதலிய பாஷைகளைத் தேசீயத்தின் பேரால் அரசியல் காரணங்களுக்காக வென்று படிக்கச் செய்வதானது பார்ப்பனீயத்திற்கு மறைமுகமாக ஆக்கம் தேடுவதாகுமென்று இம்மகாநாடு கருதுவதோடு, தற்கால விஞ்ஞான அறிவை நமது மக்களிடம் பரப்பவும், நவீனத்தொழில் முறைகளை நமது நாட்டில் ஏற்படுத்தவும், மற்ற தேசங்களில் எழும்பியிருக்கும் சீர்திருத்த முற்போக்கு உணர்ச்சிகளை நமது மக்களிடம் தோற்றுவிக்கவும், உலக பாஷையாக வழங்கிவரும் இங்கிலீஷ் பாஷையையே நமது வாலிபர்கள் கற்க வேண்டு மென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது" என்ற தீர்மானமாகும். இதைபற்றி நாம் 1926 ம் வருஷத்திலேயே "குடி அரசு" பத்திரிகையில் "தமிழுக்குத் துரோக மும், ஹிந்தியின் இரகசியமும்" என்பதாக ஒரு வியாசம் எழுதி இருக்கின் றோம். அது மாத்திரமல்லாமல் "இந்து மதப் புராண இதி காசங்களை உண்மை யாய் உணரவேண்டுமானால் - துளசிதாஸ் இராமாயணத்தை நன்றாய் அறிய வேண்டுமானால் ஹிந்தி படிக்கவேண்டும்" என்று சென்னை திருவாளர் கே. பாஷ்யம் அய்யங்கார் என்ற "ஒரு தேச பக்தர்" சென்ற வாரத்தில் கூட பேசி யிருக்கின்றார். இதிலிருந்தும் ஒருவாறு ஹிந்தியின் இரகசியம் அறியலாம்.

அன்றியும் ஹிந்தி பாஷையைப் பொது பாஷையாக ஆக்குவது முடியாத காரியமென்றும், அது கூடாத காரியமென்றும் பார்ப்பனீயப் புராணக் கதைகளை பரப்பத்தான் முடியுமென்றும் வங்காளம் மாடர்ன் ரிவ்யூ பத்திராதி பரான பாபு ராமாநந்த சட்டர்ஜி அவர்கள் தமது பத்திரிகை யில் எழுதி இருக்கிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இதிலிருந்தும் ஒருவாறு ஹிந்தியானது பார்ப்பனப் பிரசாரபாஷை என்றும், அரசியலுக்கு அது சாத்தியப்படாத பாஷை என்றும் விளங்கும்.

இந்நாட்டில் பார்ப்பனீயம் தாண்டவமாடத் தொடங்கிய காலம் முதல் ஏதாவது ஒரு வகையில் புராணங்களையும், பார்ப்பனீயங்களையும், பரப்பும் நோக்கத்துடனேயே எல்லாப் பாஷைகளும் ஆதிக்கம்பெற்று வந்திருக் கின்றன. உலக வழக்கில் ஒரு சின்னக்காசுக்கும் பயன்படாத சமஸ்கிருத பாஷைக்கு இன்றைய தினம் இந்நாட்டில் இருக்கும் ஆதிக்கமும், அதற்கெ னவே பல ஏற்பாடும், செலவும், மெனக்கேடும் பார்ப்பனீயத்தைப் பரப்பவே செய்யப்பட்டு வருகின்றன. சமஸ்கிருத காலேஜ், சமஸ்கிருதப் பாடசாலை, மற்றும் சமஸ்கிருத வளர்ச்சிக்கு ஏற்ற முயற்சிகள் முழுவதும் சமஸ்கிருதம் வாழ்க்கைக்கு சிறிது பாகமும் வேண்டிய அவசியமில்லாத மக்களின் செல விலேயே நடைபெற்று வருகின்றன. இது இந்த நாட்டு மக்களின் சுய மரியாதையற்ற தன்மைக்கு ஒரு பெரும் உதாரணமாகும். இதை தட்டிப்பேச இன்றைய சட்டசபை, மந்திரிசபை ஆகியவைகளில் ஒரு சிறு மூச்சுவிடவும் ஆள்கள் இல்லை. போதாக் குறைக்கு இன்று ஹிந்தி பாஷை ஒன்று புதிதாக முளைத்து இந்தியமக்கள் மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிகள் வெகு பலமாய் செய்யப்பட்டு வருகின்றது. இது இந்நாட்டு மக்களுக்கு பாஷை விஷயத்திலும் சுயமரியாதையில்லையென்பதற்கு ஒரு உதா ரணமாகும்.

தமிழ்நாட்டுக்கு ஹிந்தி என்ன அவசியத்திற்கு என்று கேட்க ஒரு தேசபக்தராவது இன்று தேசீய வாழ்வில் இல்லை . தேச பக்த குழாம் பெரிதும் கூலிக்கு மாரடிப்பவர்களாலேயே நிறப்பப்பட்டுவிட்டதால் பார்ப்பனத் தலைவர்களுக்கும் பார்ப்பனர்களால் பிடித்து வைக்கப்பட்ட தலைவர் களுக்கும் அடிமைகளாய் இருந்து அவர்கள் உபதேசித்த தேசீய மந்திரத்தை உருப்போட்டு ஜெபித்து வயிறு வளர்ப்பதைவிட வேறு யோக்கியதை இல்லாமல் போய்விட்டது.

இந்த நாட்டில் இன்றைய தமிழ் பாஷையே தமிழ் மக்களின் சுயமரியாதைக்கும், மனிதத் தன்மைக்கும், சுதந்திரத்திற்கும் நேர் விரோதமாக விருக்கின்றது என்பதைப் பல தடவை சொல்லி வந்திருக்கின்றோம். இன்றைய தமிழ் பாஷையில் பெரிய இலக்கியமாய் பாவிக்கப்படுவதாகிய கம்பராமாயணம் பெரிய புராணம் ஆகிய இவ்விரண்டும் கூட மானமுள்ள, சுயமரியாதை - வீரம் ததும்பிய, இரத்த ஓட்டமுள்ளதமிழ் மக்களால் சுட்டுப் பொசுக்க வேண்டிய புஸ்தகமாகும். தமிழ் மக்கள் என்று சொல்லிக் கொள்ளு கின்றவர்களுக்கு போதிய மான உணர்ச்சி இல்லாததாலேயே அவற்றிற்கு தமிழ் நாட்டில் இன்னமும் இடமிருக்க வேண்டியதாகிவிட்டது. இன்றைய தினம் தமிழ் படித்து தமிழ் பாஷையில் பற்றுகொண்டு தமிழைத் தாய் பாஷை யாய்க் கொண்ட ஒருவனாவது தன்னுடைய தமிழ் தாய் வடமொழிப் புருஷனுடன் சோரத்தனம் செய்து கொண்டிருக்கின்றாளா? இல்லையா



வென்றும் பிள்ளை களையெல்லாம் கூட வடமொழிப் புருஷனுக்கு உதவும்படியாகவே அவனைப் போலவே பெற்றுக்கொண்டுமிருக்கின்றாளா? இல்லையா வென்றும், அப்படிச் சோரத்தனம் செய்ததில் முதல்தரப் பிள்ளை களாயும் சிரஞ்சீவி பிள்ளைகளாயும் இந்தக் கம்பராமாயணமும் பெரிய புராணமும் இருக்கின்றதா இல்லையா? என்றும் கேட்பதோடு இந்த வடமொழிப் புருஷனுக்கு தங்களது தமிழ்த்தாயை கூட்டிவிட்டு பெருமை யடைவதன் மூலமே தமிழ் பண்டிதர்கள் இன்று உயிர் வாழ்ந்து ஜீவனம் செய்து வருகின்றார்களா? இல்லையா வென்றும் கேட்கின்றோம்.

தமிழ்த்தாய் தானாகவே சமஸ்கிருதப் புருஷன் மீது ஆசைப்பட்டு "விபசாரம்" செய்வதில் நமக்கு ஆக்ஷேபணை இல்லை. ஆனால் இந்தப் பண்டிதர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு, தங்கள் சுயநலப் பெருமைக்கு தமிழ்த்தாயை கூட்டி விட்டுப் பிழைப்பதைத்தான் நாம் வெறுக்கின்றோம். அப்படிக் கூட்டிவிடுவதாவது தமிழ்த்தாயின் மக்கள் சமூகத்திற்காவது அவர்களது சுயமரியாதைக்காவது ஆபத்தில்லாமல் இருக்குமானால் நமக்கு ஆக்ஷேபணையில்லை. அப்படிக்கின்றி இன்று நாட்டைப் பாழாக்கி விட்டது இந்த சமஸ்கிருதப் புருஷனிடம் தமிழ்த்தாயை சம்பந்தப்படுத் தியதே என்று தெரிந்து இருந்தும், மறுபடி இதையே ஆதரித்தால் இதற்கு எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை. இது இப்படியிருக்க இப்பொழுது மற்றொரு புருஷனை (ஹிந்திப்பாஷையை) தமிழ்த்தாயிக்கு நமது தேச பக்தர்கள் கண்டு பிடித்து இருப்பது மிகவும் ஆச்சரியமாகவே இருக்கின்றது. இனி தமிழ்த்தாயிக்கு தகுந்த புருஷன் வேண்டுமானால் மானத்துடனும் வீரத்துடனும் அறிவுடனும் பிள்ளைகளைப் பெற்று அவைகளை வைத்துக் காப்பாற்றும் புருஷன்தான் இருக்கவேண்டும். அதுவும் தகுந்தபடியான சுதந்திர காதல் மணமாகத்தான் செய்விக்க வேண்டுமேயொழிய இனியும் இம்மாதிரி வயிற்றுப் பிழைப்பை மாத்திரம் கருதிய சம்மந்தமாகவும், அதுவும் தமிழ்த்தாயிக்கு அல்லாமல் மற்றவர்களுடைய சுயநலத்திற்காகவும் இருக்கும் அடிமை மணமாகவும் இருக்கக்கூடாது என்றே சொல்லுவோம்.

தமிழ்த்தாயிக்கு யோக்கியதை இருந்து அவள் தகுந்த மானமுள்ள மக்களைப் பெற்று இருந்தால் நாட்டு நலனுக்கு ஏற்ற சகல விஷயத்தையும் தமிழிலேயே ஆக்கியிருக்கவேண்டும். நாட்டிற்கு தமிழே போதுமான தாயிருக்க வேண்டும். அப்படி இல்லையானால் தமிழ்த் தாயின் தகுதிக்கும் அவசியத்திற்கும் ஏற்றது எதுவோ அதைக் கொள்ளவேண்டும். இன்றையத் தினம் நாட்டிற்கு கவியழகு, கற்பனையழகு, புராண அழகு, மோட்ச அழகு, பகவான் வாக்கு அழகு. அவதாரப் பெருமை அழகு அல்ல வேண்டி யிருப்பது. இவை சோம்பேரிகளுக்கும் மக்கள் கஷ்டத்தை உணராத வன் நெஞ்சகர்களுக்கும் ஊரான் உழைப்பில் வயிறு வளர்க்கும் அயோக்கியர் களுக்கும் அவசியம் உணரமுடியாத அறிவிலிகளுக்குமே இவை வேண்டிய



RangaRakes tamilnavarasam.com

தாகும். மற்றபடி மானமுள்ள மக்களுக்கு - பக்ஷாதாபமுள்ள மக்களுக்கு - யோக்கியர்களுக்கு அறிவாளிகளுக்கு இந்தியாவின் 35 கோடி மக்கள் சமத்துவ உணர்ச்சியுடன் இருக்கவும் வயிற்றுப் பிழைப்புக்கு மானத்தை விற்காமல் வாழவும், பணக்காரன், படித்தவன், மேல்ஜாதிக்காரன் என்கின்ற வஞ்சகர்களால் மிதிபட்டு நசுக்கப்படாமல் இருப்பதற்கும் குழந்தைகளுக்கு பூச்சாண்டியையும், காக்கையையும் பிராக்கு காட்டி கையில் இருப்பதை தட்டிப் பிடிங்கிக்கொள்வது போல் மோட்சத்தையும், காவியத்தையும், கவியழகையும், கடவுளையும், கலைகளையும் காட்டித் தட்டிப் பிடுங்கிக் கொள்ளாமல் அவரவர்கள் பாடுபட்டது அவரவர்களுக் காவது உதவவும், "நீ வீதியில் நடக்க வேண்டாம். அருகில் வரவேண்டாம், கண்களில் தென்பட வேண்டாம், படிக்க வேண்டாம் "சர்வ தயாபரனும் சர்வ கருணாமூர்த்தியும் சர்வ சக்தனும்" ஆகிய "கடவுளிடம்" கூட பக்கத்தில் நெருங்க வேண்டாம்" என்கின்ற அயோக்கியத்தனம் நீங்கவும் வேண்டியது முக்கியமாய் இருக்கின்றபடியால் அதற்கு எந்த பாஷை வேண்டும்? எந்த பாஷைப் படித்தால் இந்த மாதிரியான அற்பபுத்தி நீங்கும்? என்பதுதான் நமது கேள்வி. ஆகவே இன்றைய இந்தத் தேவைக்கு - இன்று இந்த நாட்டிற்கு ஹிந்தி வேண்டுமா? இங்கிலீஷ் வேண்டுமா? என்பதை மானத்துடன் உள்ளவர்கள் நடு நிலைமையிலிருந்து யோசித்துப் பார்த்து சொல்லட்டும் என்றே வேண்டு கின்றோம். ஹிந்தி பாஷையை படிக்க வேண்டும் என்கின்ற நிர்பந்தத்தை காங்கிரசில் கொண்டு வந்து புகுத்தியதே வருணாச்சிரமத்தை நிலை நிறுத்தவும் அதைக் கட்டாயப்படுத்தி மக்களுக் குள் புகுத்தவுமே செய்த சூக்ஷியான காரியமாகும். இந்த அயோக்கியத் தனத்திற்கு திரு. காந்தி அவர்கள் கண்டிப்பாய் உளவாளி என்றே சொல்லுவோம். இதனால் வாய் வெந்து போவதானாலும் சரி. தலையில் இடி விழுவதானாலும் சரி, முன் காலத்து ரிஷிகளும், முனிவர்களும் நமக்கு எவ்வளவு கொடுமையை விளை வித்தவர்கள் என்பதாக இப்போதைய மானமுள்ள மக்கள் எப்படிக் கருது கின்றார்களோ அதற்கு ஒரு முந்திரி கூட குறைவல்ல இன்றைய மகாத்மாக் களால் நமக்கு வரும் ஆபத்தும் இழிவும் என்பதில் எமக்குச் சிறிதும் சந்தேக மில்லை. யாருக்காவது சந்தேகம் இருந்தால் சென்ற வாரம் திரு. காந்தியவர் கள் யங்இந்தியாவில் "வர்ணாச்சிரம தர்மம்" என்கின்ற தலைப்பில் எழுதிய தலையங்கத்தை யுற்று கவனியுங்கள்.

"வர்ணாச்சிரம தர்மங்களில் குறிப்பிட்ட நான்கு தர்மங்களில் எனக்கு நம்பிக்கையுண்டு. இந்தப்பாகுபாடுகள் பரம்பரைத் தொழில் சம்பந்தமாக ஏற்பட்டது."

"பிராமணன் வித்தை கற்றுக்கொடுக்கவும், க்ஷத்திரியன் சக்தியற்றவர் களைப் பகைவரிடமிருந்து காக்கவும், வைசியன் உழவுத்தொழில் செய்யவும், சூத்திரன் உடலால் உழைத்து வேலை செய்யவும் என்று ஏற்பட்டவை களாகும்."



"இந்து மதம் இவற்றை ஜனசமூக வாழ்வில் அங்கீகரித்து கிரமமாக நடத்தையிலும் அனுஷ்டித்து வருகின்றது".

"இந்தப்படியான அவரவருக்கு உரிய காரியத்தை அவரவர் செய்யத் தவறியதால்தான் இப்போது வருண தருமம் அழிந்து பல ஜாதிகள் தோன்றின".

"வகுப்பு ஒற்றுமைக்கும் கலப்பு விவாகம், சமபந்திபோஜனத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்பது எனது திடமான அபிப்பிராயம்."

"கலப்பு விவாகங்களால் நாட்டில் வகுப்பு ஒற்றுமை ஏற்பட்டு விடு மென்று நான் நம்பவில்லை."

"மனிதர் யாவருமே சமம். ஆனால் இந்த சமம் என்பது ஆத்மா வைப் பொறுத்த வரையில் தானேயொழிய சரீரத்தை பொறுத்த வரை சமமல்ல."

என்ற குறிப்புகளை அதில் எழுதி இருக்கிறார். இந்த மாதிரியான வருண தர்மத்தை நிலை நாட்ட வந்த புருஷனை 'பிராமணர்கள்' மகாத்மா என்று கூறுவதிலும், அவரைப் பின் பற்றுவதிலும், அவர் சொல்லுகிறபடி யெல்லாம் ஹிந்தி படிப்பதிலும், கீதை படிப்பதிலும், ராமராஜ்ஜியம் ஸ்தாபிப் பதற்காக கள்ளுக்கடை, ஜவுளிக்கடை மறியல் செய்வதிலும் யாதொரு அதிசயமும் கொள்ளஇடமில்லை. ஆனால் "நாங்களும் சுயமரியாதைக் காரர்கள்தான்" தமிழ்மக்கள் இந்த மாதிரியான வருணாச்சிரமத்திற்குக் கட்டுப் பட்டவர்கள் அல்ல............ என்று சொல்லுகின்ற மக்கள் இந்த மகாத்மா வையும், அவர்களை மகாத்மாவாக்கின பார்ப்பனர்களின் வால்களையும் பிடித்துத் தொங்கிக் கொண்டு திரிவதில்தான் நமக்கு அதிசயம் காணப்படுகின்றது.

இதைப் பார்க்கின்றபோது "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என்று சொன்ன வார்த்தை மிகவும் பொருத்தமும், அருத்தமும் கொண்ட வார்த்தை என்றே தோன்றுகின்றது.

**குடி அரசு - தலையங்கம் - 14.06.1931**



RangaRakes tamilnavarasam.com

# தமிழ் மாகாண மகாநாடென்பது மறுபடியும் பார்ப்பன பிரசாரமேயாகும்

சென்ற ஒரு வருஷ-காலமாய் இந்திய நாட்டில் நடைபெற்ற ஒருவித "அரசியல் கிளர்ச்சி" நாடகத்தின் பயனாய் தமிழ்நாட்டில் பழையபடி பார்ப்பன பிரசாரம் தைரியமாயும் வெளிப்படையாயும் துவக்கப்பட்டு விட்டது. இதை நன்றாய் உணரவேண்டும் என்பவர்கள் இம்மாதம் 6, 7 தேதிகளில் மதுரையில் தமிழ் நாட்டு மக்கள் பேரால் நடைபெற்ற "ஏமாற்றுந் திருவிழா"(தமிழ் மாகாண மகாநாட்டு) நடவடிக்கைகளைக் கவனித்துப் பார்த்தவர்கள் உணரக்கூடும்.

முதலாவது இந்த ஏமாற்றுத் திருவிழாவானது தமிழ்நாட்டு 13 ஜில்லாக்களின் சுமார் 2 1/2 கோடி ஜனங்களின் பிரதிநிதித்துவமாக நடத்தப் படுவதாக எவ்வளவோ விளம்பரப்படுத்தியும் அதற்குத் தெரிந்தெடுக்கப் பட்டு கிடைத்தத் தலைவர் யார் என்பது ஒரு முக்கிய விஷயமாகும்.

திரு. S. சத்தியமூர்த்தி அய்யர் தமிழ் நாட்டு 2 1/2 கோடி மக்களின் முன்னேற்றத்திற்கு தலைவரென்ற காரணத்தாலேயே அந்தத் திருவிழாவுக்கு ஆள்பட்ட பார்ப்பனரல்லாதாரின் பரிதாப நிலைமைக்கு வேறு அத்தாக்ஷி வேண்டியதில்லை. அவரைத் தவிர வேறுயாரும் தெரிந்தெடுக்க கிடைக்க வுமில்லை, முடியவுமில்லை. எனவே இந்த ஸ்தானம் தமிழ்நாட்டு பொது ஸ்தாபனமாம்!

நிற்க, திரு. சத்தியமூர்த்தி அய்யருக்கு என்ன கொள்கை? ஜீவனத் திற்கு என்ன வழி? இவர் இந்த நாட்டு பெரும்பான்மையான மக்களுக்கு எப்படிப் பிரதிநிதியாக உரியவர்? இவரது சொந்தத் தன்மைதான் என்ன? முன்பின் நாணையம் என்ன? இந்நாட்டு மக்களின் நன்மைக்கு இவர் எப்படி பொறுப்பாளி? என்பவை போன்ற காரியங்களால் அந்த ஸ்தாபனத்தின் யோக்கியதையை ஒருவாறு உணரலாம்.

இதுதவிர இம்மகாநாட்டுக்குச் சென்றிருந்த பெரும்பான்மையான மக்கள் யாருடைய பிரதிநிதிகள்? அவர்களின் தன்மையென்ன? கொள்கை என்ன? அவர்கள் இந்நாட்டுப் பெரும்பான்மையான மக்களுக்கு எந்த வகையில் பிரதிநிதிகளாக வந்தவர்கள்? என்பவைகளை யோசித்துப்



பார்த்தால் பிரதிநிதிகளின் யோக்கியதை ஒருவாறு விளங்கும்.

மற்றும் இந்த நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களின் பிரதிநிதிகள் எத்தனை பேர்? முஸ்லீம் பிரதிநிதிகள் எத்தனை பேர்? தீண்டப்படாதவர்கள் என்பவர்களின் பிரதிநிதிகள் எத்தனை பேர்? என்ற கணக்கைப் பார்த்தாலும் மற்றொரு விதத்தில் அதாவது இந்த நாட்டில் "தெய்வீகமாகவும்", மத சம்பந்த மாகவும், ஜாதி வகுப்பு சம்பந்தமாகவும் ஏற்பட்ட பிரிவுகளுக் கெல்லாம் இந்த ஸ்தாபனம் எப்படி பிரதிநிதித்துவம் பொருந்தியது என்பதும் ஒருவாறு விளங்கும்.

இவைகள் எல்லாம் ஒருபுறமிருந்தாலும் அந்த விழாவுக்குச் சென்ற பார்ப்பனரல்லாதார் வகுப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் எப்படி மதிக்கப் பட்டார்கள்? அவர்களுடைய அபிப்பிராயங்கள் எப்படி கவனிக்கப்பட்டது? என்பவைகளைக் கவனித்தால் அதன் நாணையமும், யோக்கியப் பொறுப்பும், எண்ணத்தின் தன்மையும், போனவர்களின் சுயமரியாதையும் ஒருவாறு விளங்கும்.

இவை ஒரு புறமிருக்க அந்தத் திருவிழாவில் செய்யப்பட்ட தீர்மானங்களின் யோக்கியதையைப் பார்த்தாலோ மற்றவிஷயங்கள் எல்லாம் தானாகவே புலப்பட்டுவிடும். இவற்றைப்பற்றி பின்னால் யோசிப் போம். தலைவர் திரு. சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் உபன்யாசத்தில் காணப்படும் முக்கியமானதும் அவரது உள்ளம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டது மான முக்கிய விஷயம் ஒன்றே ஒன்றாகும். அது என்னவென்றால்,

"ஸ்தல ஸ்தாபனங்கள் இப்போது மிகவும் சீர்கேடடைந்து விட்ட தாதலால் அதைக் காங்கிரசுக்காரர்கள் கைப்பற்றவேண்டும்" என்பதேயாகும். "கோடி வித்தலுனு கூட்டிக்கு" என்று தெலுங்கில் ஒரு பழமொழி யுண்டு. அதாவது கோடி வித்தைகளும் (சகல சாமர்த்தியங்களும்) சோற்றுக் குத்தான் என்ற பொருள் கொண்டது. அதுபோலவே பார்ப்பனர்களுடைய இன்றைய தேசீயப் புரட்டுகள் பூராவும் ஜகஜாலப்புரட்டுகள் முழுவதும் இந்த ஸ்தல ஸ்தாபனம், சட்டசபை, மந்திரி சபை, மற்ற உத்தியோகங்கள் முதலியவை களைப் கைப்பற்றத்தானே யொழிய வேறில்லை. இந்தப் புரட்டை அவர்களால் மறைக்க முடியவில்லை. எப்படியாவது வெளிப்படுத்தி விடுகின்றார்கள்.

இதையனுசரித்து சில தீர்மானங்களும், மகாநாட்டில் வந்தது. ஆனா லும் அவற்றின் உள்எண்ணத்தை சுயமரியாதைக்காரர்கள் கண்டு பிடித்து வெளியாக்கி விடுவார்கள் என்று கருதி, மறைமுகமாய் அதாவது இப்போ தைய தேர்தல் முறைகளை கண்டித்து அதை திருத்த கவலை கொண்ட சீர்திருத்தக்காரர்களைப் போல் ஒரு தீர்மானம் செய்து கொண்டார்கள்.

கதர் விஷயத்திலும், கதர் புரட்டை வெளியாக்கி, கதர் இலாகா வையும் கண்டித்து ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு அது விஷயாலோசனை



RangaRakes tamilnavarasam.com

கமிட்டியில் எப்படியோ நிறைவேற்றப்பட்டாய் விட்டது. அதாவது:-

"கதர் இலாகா பிரதிநிதித்துவம் பொருந்தியதாயில்லாமலும் காங்கிர சின் அமுலுக்கு உட்பட்டு இல்லாமலும் இருப்பதோடு அதன் உத்தியோக ஸ்தானங்களில் ஒரே கூட்டத்தினர் நிரம்பி இருப்பது பொது ஜனசபை தத்து வத்திற்கு விரோதமாயிருப்பதால் அதை பொது பிரதிநிதி சபையாக்குவதற்கு வீதாசாரப்படி உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டு எல்லா சமூகத்தாராலும் நடத்தப்பட வேண்டும்" என்பதாகும்.

இது விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்டும் பொதுக் கூட்டத்தில் 5, 6 பேர்களின் ஓட்டுகளால் தோற்றுவிட்டதாக தலைவரால் சொல்லப்பட்டுவிட்டது. இந்த முடிவையும் சபையார் ஒப்புக் கொள்ளாமல் கூச்சல் போட்டும் பயனளிக்கவில்லையாம். இந்த ஓட்டில் பார்ப்பனர் எல்லோரும் ஒரு புறமாகவும், பார்ப்பனரல்லாதவர் எல்லோரும் ஒரு புறமாகவும் ஓட்டு கொடுத்தார்களாம். மற்றொரு பெரும் புரட்டான விஷயம் என்ன வென்றால், மகமதியர் தீண்டாதார் ஆகிய "சிருபான்மையோர் கோரும் உரிமைகளை தாராள மனதுடன் கவனிக்க வேண்டும்" என்பது.

சிறுபான்மையோர் உரிமைகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தால் அது நாளைக்கு கொடுக்க வேண்டி வந்து விடுமே என்கின்ற யுக்தியின் மீதே தாறாளமாய்க் கவனிக்கப்படும் என்று தந்திரமாகப் போடப்பட்டிருக்கின்றது. இது ஏதோ பெரும்பான்மையோரை பிச்சை கேட்பது போலவும் பெருபான்மையோர் தயவுக்கும் தர்மத்திற்கும் கொடுக்க வேண்டியது போலவும் கருதி,பிச்சைக்காரனுக்கு பதில் சொல்லுவது போல் "ஆகட்டும், கவனிக்கலாம்" என்று ஆணவத்துடன் சொல்லும் பதிலேயாகும். இப்படிப்பட்ட ஸ்தாபனத்தில் சிறுபான்மையோர் கலந்து கொள்ளுவது அவர் களது சுயமரியாதைக்கு ஏற்றதல்லவென்றே சொல்லுவோம். அன்றியும் இத் தீர்மானம் ஏமாற்றுகின்ற மனப்பான்மை யுடன் செய்யப்பட்டது என்றும் சொல்லுவோம்.

இனித் தீண்டாமை ஒழிக்கும் விஷயத்தில்,

"காங்கிரசு தீண்டாமையை தொலைக்க வேண்டும் என்ற காங்கிரசு கட்டளையை பரப்புமாறு கேட்டுக் கொள்ளுகிறது".

"தெரு, கிணறு, பள்ளி, தேவாலயம் ஆகியவைகளில் இடம் கொடுக் குமாறு வைதீகர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது" என்பதாகும். அதாவது காங்கிரசின் உத்தேசத்தை ஜனங்களுக்கு தெரிவித்துவிட்டு வைதீகர்களை கேட்டுக்கொள்ள வேண்டியது என்பதுதான் தீண்டாமை ஒழிப்பதின் முயற்சி போலும்! கள்ளுக்கடை ஜவுளிக்கடையை மாத்திரம் மறியல் செய்யவேண்டும் என்பது ஷை மகாநாட்டுத் தீர்மானம். ஆகவே பார்ப்பன இனத்தாரான



வைதீகர்களைக் கேட்டுக் "கொள்ளவேண்டியதும்" பார்ப்பனரல்லாதார் இனத்தாராகிய வியாபாரிகளை மறியல் செய்ய வேண்டியதும் என்றால் இவர்களது உள் எண்ணம் என்ன என்பது ஒரு முழு முண்டத்திற்கும் விளங் காமல் போகாது.

அவர்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) நஷ்டம் உள்ள காரியமோ அவர்கள் ஆதிக்கத்திற்கு குறைவு வரும் காரியமோ எதுவானாலும் அதன் அருகே யாரும் போகக்கூடாது. அதாவது தூர நின்று பிச்சை கேட்டுக் கொள்ளவேண்டியதுதான். மற்றவர்கள் விஷயத்தில் மறியலே செய்து வெளி யாக்கி மானத்தைக் கெடுத்து தங்கள் காரியத்தை சாதித்துக் கொள்ள வேண்டியது என்பது பார்ப்பனர் கருத்து. அதுவே "மகாத்மா" உத்திரவு. அதுவே மகாநாட்டுத் தீர்மானம் என்றால் இவற்றையறிந்தும் மறியல், மறியல் என்றால் அதில் 100-க்கு 99 வயிற்றுக் கொடுமையும், முட்டாள் தனமும் இல்லாமல் வேறு என்னமாய் இருக்கமுடியும் என்பதை வாசகர் களே உணர்ந்து பார்க்கட்டும். தவிர கதரையே கட்ட வேண்டும் என்று ஒரு தீர் மானமும் உள்நாட்டு நூலால் நெய்த துணியையே கட்டவேண்டும் என்று மற்றொரு தீர்மானமும் செய்திருப்பதானது கதரின் சாயம் கொஞ்சம் வெளுத்துப்போனதை அவர்களே ஒப்புக் கொண்டதாகும்.

மற்றொரு தீர்மானம் என்ன வென்றால் 'சமூகத் துவேஷத்தை கிளப்பி விடுகின்றவர்கள் வார்த்தையை நம்பக் கூடாது என்று கேட்டுக் கொள்ளு கின்றது' என்பதாகும். இதிலிருந்தே இவர்கள் செய்த திருட்டுத் தனம் இவர்கள் மனதையே உறுத்தி முன் ஜாக்கிரதையாக பந்தோபஸ்து செய்து கொண்டார்கள் என்பது புலனாகிவிட்டது. ஆகையால் பார்ப்பன ரல்லாத மக்கள் இனியாவது புத்திவந்து தங்கள் சமூக சுயமரியாதைக்குப் பாடுபடு வார்களாக! இதைப்பற்றி சென்னை திருவாளர் ம. சிங்காரவேலு செட்டியார் எழுதியதை மறுவாரம் பிரசுரிப்போம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 14.06.1931**



RangaRakes tamilnavarasam.com

# மதிப்புரைகள்

“பகுத்தறிவே விடுதலை - அல்லது ஜீவாத்மா இல்லை” என்னும் இந்தப் புத்தகம் நமது நண்பர் உடுமலைப்பேட்டை உயர்திரு. எம்.எஸ். கனகராஜன் அவர்களால் எழுதப்பட்டு நமது பார்வைக்கு வந்ததைப் பார்த் தோம்.

இப்புத்தகமானது நாம் பார்த்தவரையில் பகுத்தறிவையே பிரதானமாய் வைத்து மிகுந்த மன ஆராய்ச்சி செய்து எழுதிய ஒரு அருமை யான கருத்துக்களடங்கிய புஸ்தகமாகும் என்பது நமது அபிப்பிராயம். இதில் அநேக சொந்தப் புதிய அபிப்பிராயங்களும், யாவரும் ஆச்சரியப்படும் படியாகவும், எவரும் எளிதில் உணர்ந்து கொள்ளும்படியாகவும் பல மேற்கோள்களுடன் எழுதப்பட்டிருக்கின்றது. பொதுவாகவே மக்களுடைய மூட நம்பிக்கைக்கு முக்கிய ஆதாரமாய் இருந்துவரும் ஜீவாத்மா, மதம், கர்மம், முன்பின் ஜன்மம் ஆகியவைகளைப் பற்றியும் மற்றும் கடவுள் வணக்கம், விக்கிரக ஆராதனை, பிரார்த்தனை அவைகளுடையவும், மற்றும் மத சம்பந்தமானதுமான சடங்குகள், இவைகளுக்காகச் செய்யப்படும் செலவுகள் முதலியவைகளைப் பற்றியும் தக்க ஆதாரங்களுடன் கண்டித்து எழுதப் பட்டிருக்கின்றது. மேலும் இவை மாத்திரமல்லாமல் மக்களுக்குள் பிறவி, ஜாதி வித்தியாசம், வருணாசிரமதர்மம் முதலிய விஷயங்களும் கண்டிக்கப்பட்டிருப்பதுடன் இவைகள் உண்டாக்கப் பட்டதின் உள் எண்ணங் கள் முதலியவைகளையும் விளக்கிக் காட்டப் பட்டிருக்கின்றது.

இந்தப்படி காட்டப்பட்ட இவற்றிற்கெல்லாம் ஆதாரமாகச் “சித்தர் கள்” வாக்கியங்கள் முதலிய பல மேற்கோள்களைக் குறிப்பிட்டிருப்பது டன், விளக்கச் சித்திரங்களையும் யாவரும் உணரும்படியாக வரையப்பட்டி ருக்கின்றன. பொதுவாகக் கூறுமிடத்து இந்தியாவின் இன்றைய அரசியல், சமூக இயல், அறிவு இயல் முதலாகியவைகளின் நிலைமைக்கு முக்கிய காரணம் மதம் என்பதைக் குறிப்பிட்டு சிறப்பாகத் தீண்டாமையும், பெண் அடிமையுமே முக்கிய காரணம் என்பதையும் சொல்லிக்காட்டி இவைகள் எல்லாம் ஒழிந்தால் அல்லது இந்தியா விடுதலையை அடைய முடியாது என்பதையும் தெளிவு படுத்தப்பட்டிருக்கின்றது என்று சொல்லுவோம்.



இப்புத்தகத்தை வாசித்துப் பார்த்தவர்கள் ஒவ்வொருவரும் இதிலி ருந்து அநேக அரிய கருத்துக்களையும், புதிய எண்ணங்களையும் அடைந்தே தீருவார்கள். ஆகவே இவ்வரிய வேலையை மேற்கொண்டு உண்மைத் தொண்டாற்றிய உயர்திரு. எம்.எஸ். கனகராஜன் அவர்களுக்குப் பகுத்தறிவு பெற்றுத் தீர வேண்டிய இந்திய மக்கள் சார்பாக நமது நன்றியறிதல் உரித்தாகுவதாக. (இப்புத்தகம் குடிஅரசு புத்தகாலயத்திலும் கிடைக்கும்)

**குடி அரசு - மதிப்புரை - 14.06.1931**



RangaRakes tamilnavarasam.com

# சுதேசி

தலைவர் அவர்களே! சகோதரர்களே!! நான் எதிர்பாராமல் திடீரென்று கூப்பிடப்பட்டுவிட்டேன். இங்குபேச வேண்டிய அவசியமிருக்குமென நான் கருதவேயில்லை. தங்கள் அழைப்பிற்கிணங்கியும் எனது நண்பரும் சகோதரவாஞ்சையும் உள்ள திரு. நடேச முதலியார் அவர்கள் தலைமை வகித்து நடத்தும் விழாவுக்கு நான் அவசியம் வரவேண்டுமென்றும் ஆசைப்பட்டு வந்தேன். ஆனால் திடுக்கிடும்படியாக அழைக்கப்பட்டு விட்டேன். மற்ற இடங்களில் பேசுவதற்கு எனக்கு எவ்வளவு உற்சாகமும் ஆசையும் இருக்குமோ அவ்வளவு உற்சாகமும் ஆசையும் இங்கே பேச எனக்கு உண்டாகவில்லை. மற்றும் என் மனதிற்கு வருத்தமாகவே இருக்கின்றது.

ஏனெனில் இந்த சங்கமானது எந்தத் திட்டத்தில் நடைபெற இருக்கின்றதோ அத்திட்டங்களுக்கு நேர்மாறான அபிப்பிராய முடையவனாகிய நான் இன்று இந்த கொண்டாட்டமான தினத்தில் அதற்கு நேர் விரோதமாக பேசுவ தென்றால் அது யாருக்கும் கஷ்டமாகவே இருக்குமல்லவா? ஆனாலும் தலைவர் அவர்கள் இவ்விஷயத்தில், எனது அபிப்பிராயத்தையும் யோசனையையும் சொல்ல வேண்டுமெனக் கேட்டதாலும் என்னைக் கேட்காமலே, பேசவேண்டுமாய் கூப்பிட்டு விட்டதாலும் நான் இவ்விஷயத்தில் எனது அபிப்பிராயத்தை சொல்லிவிடுகிறேன். அதைத் தாங்கள் தங்கள் சொந்த அறிவைக் கொண்டு யோசித்துப்பாருங்கள், சகோதரர்களே! நமது மக்களுக்கு மூடநம்பிக்கையில் அதிகப்பழக்க மேற்பட்டுவிட்டதால் பகுத்தறிவை உபயோகிப்பது என்பது மிகுந்த கஷ்டமான காரியமாக இருக்கின்றது. ஆனாலும் சில முக்கிய விஷயங்கள் மூட நம்பிக்கையால் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக சிறிது கஷ்டத்துடனும் நஷ்டத்துடனுமே பகுத்தறிவைக் கிளறி விடவேண்டியதாகின்றது. சகோதரர்களே! நாட்டுக்குக் கெடுதியான ஒருவேகம் மூடநம்பிக்கையின் பயனாய் ரயில் வண்டி மாதிரி போய்க்கொண்டிருக்கின்றது. ரயில்வண்டி கூடாது என்று சொல்லும் ஒருவன் அதை இல்லாமல் செய்துவிட ஓடும் ரயிலுக்கு முன்னால் போய் நின்று தடுப்பதால் என்ன பயன் விளையுமோ அந்தப் பயன்தான் எனது அபிப்பிராயத்திற்கு விளையும் என்பது எனக்குத் தெரியும். ஆதலாலேயே நேர் வேகத்தில் போய் முட்டிக் கொள்ளாமல் அதன் அஸ்திவாரத்தில் வேலை



செய்யவேண்டுமென்று கருதி அநேக விஷயங்களில் நான் நிதானமாய்ப் போய்க்கொண்டிருக்கிறேன். ஆனாலும் இந்த மாதிரி தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் பட்டுக் கொள்ளுகிறேன். ஆகிலும் நடப்பது நடக்கட்டும் என்றேதான் இப்போது பேசப்போகிறேன்.

சகோதரர்களே! உங்கள் சங்கக் கொள்கையில் அதாவது சுதேச ஜவுளி வர்த்தக சங்கம் என்பதில் நீங்கள் கருதி இருக்கும் சுதேசக் கைத் தொழில் கைநெசவு, கைநூற்பு என்கின்றவைகளையே முக்கியத் திட்டங்களாய் வைத்திருப்பது என்பதில் நான் விரோதமான அபிப்பிராயமுடையவனாயிருக்கிறேன்.

முதலாவது சுதேசக் **கைத்தொழில்** என்பதையே எடுத்துவிட வேண்டுமென்றும் அந்த உணர்ச்சி கூடாதென்றும் சொல்லுகின்றேன். சுதேசத் தொழில் என்று இருந்தாலும் பாதகமில்லை. ஒவ்வொரு தொழிலும் கையால் செய்ததாகவே இருக்கவேண்டும்மென்று நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது. நமது நாட்டுப் பொருளாதாரத்திற்கும் தொழில் பெருக்கத்திற்கும் கைத் தொழிலையே அதாவது கையினால் செய்யும் தொழிலையே விர்த்தி செய்வதும் புத்துயிர் அளிப்பதும் ஆதரிப்பதும் என்பதான காரியங்கள் தொழிலுக்கும், பொருளுக்கும் தொழிலாளிக்கும் கேடு செய்வதாகும். முக்கியமாக கதர் என்று சொல்லும் விஷயம் இன்னமும் மோசமானதாகும். அதனால் தொழில் முறை விர்த்தியுமில்லை. பொருளாதார விர்த்திக்கும் இடமில்லை. தொழிலாளிகளுக்கும் பயன் இல்லை. அதுபோலவே தான் கைத்தறி, கை நெசவு என்பவைகள் எல்லாம் தொழில்முறைக்கு கேடுவிளைவிப்பதும் தொழிலாளிகளின் முற்போக் குக்கும், விடுதலைக்கும் எதிரியுமானதாகும். அது நாகரிக முற்போக்கடைய வேண்டிய நாட்டிற்கு சிறிதும் பொருந்தாததுமாகும் அன்றியும் இந்த உணர்ச்சி சமதர்மத்திற்கும் பொது உடைமை தத்துவத்திற்கும் மாறானதுமாகும். இவை மாத்திரமல்லாமல் இயற்கைக்கும் அதோடு மனிதத் தத்துவத்திற்கும் முரண்பட்டதும் காரியத்தில் சித்தி பெறாமல் போவதோடு தானாக ஏற்படும் முன்னேற்றத்தையும் தடுப்பது மாகும்.

சகோதரர்களே! இன்றைக்கு கதர் ஏற்பட்டு 10, 12 வருஷங்களாகியும் சுமார் 40,50 லட்ச ரூபாய் இத்தொழில்முறை பிரசாரத்திற்கு மாத்திரம் இந்நாட்டு மக்கள் பணம் செலவு செய்யப்பட்டு அநேகரை இதில் ஈடுபடுத்தியும் என்ன பலன் ஏற்பட்டது? என்பதை கவனியுங்கள். இதற்காகவே கூட்டப்பட்ட இந்தக் கூட்டத்தில் 100 க்கு 5 பேராவது கதர் கட்டினவர்கள் காணப்படுகிறீர்களா? அப்படித்தான் சற்றுக் குறைவாகவேக் காணப்படுவதாக வைத்துக் கொண்டாலும் இவர்கள் தங்களது பெண்டு பிள்ளைகளுக்கு 1000ல் ஒருவர் வீதமாவது வாங்கிக்கொடுத்து அதைப்பயன்படுத்துகிறவர்கள் இக்கூட்டத்திலாவது உண்டா? என்று யோசித்துப் பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

இதை நான் இந்த கதர் அபிமானிகள் மீது குற்றமாகச் சொல்லவர வில்லை. ஆகாத முடியாத - இயற்கைக்கும் மனிதத் தன்மைக்கும் விரோத மான காரியத்தில் ஏதோ வேகத்தில் ஏதோ ஒரு காரியத்தை உத்தேசித்து தலையிட்டுவிட்டு விழிக்க நேரிட்டுவிட்டது என்றுதான் சொல்லுகின்றேன். கதர் ஏழைகளுக்குச் சோறு போடுகின்றது என்பது பொருளற்ற வார்த்தை யேயாகும். அது சில இடங்களில் வேண்டுமென்றே ஏமாற்ற உபயோகப் பட்டு வருகின்றது. பாமர ஜனங்கள் இதை நம்பி ஏமாந்து விடுகின்றார்கள். கதரின் தத்துவத்தால் இந்த நாட்டில் யாரும் பலனடைவதில்லை. பலனடையவும் முடியாது. ஆனால் கதரைப்பற்றி திரித்தும் குழப்பியும் பிரசாரம் செய்வதால் சிலர் அதுவும் மற்றவர்களுடைய அளவுக்கு மீறிய நஷ்டத்தால் பயனடைகின்றார்கள். எப்படியென்றால் நேற்று நான் திருவாரூரில் இருந்து வரும்போது என் கூட இச்சங்கத்தின் தலைவர் மில், கதர் வியாபாரி ஜனாப் முகமது சுல்தான் சாயபு அவர்கள் கூட்டாளி திரு. வ.ப.மா. முதலியார் பிரயாணம் செய்தார். அவரிடம் நான் சில விபரம் தெரிந்தேன். அதாவது பதினெட்டு நெம்பர் மில் நூலினால் நெய்யப்பட்ட துணி 50 இஞ்சு அகலம் கெஜம் ஒன்றுக்கு 3 அணா 6 பைக்கு விற்பதாகச் சொன்னார். ஆனால் அதே அகல நீளம் கதர் 18நெம்பர் நூலாய் இருந்தால் கஜம் 12 அணாவுக்கு மேல் அடங்குவதாகவும் 10நெம்பர், 8நெம்பராய் இருந்தால் கஜம் 9 அணாவுக்கு கொடுக்கலாம் என்றும் சொன்னார்.

ஆகவே மக்கள் 0-3-6-க்கு பதிலாக 9 அணா 12 அணா போடுவதால் மாத்திரம்தான் 'ஏழைகள் பிழைக்கலாம்' என்று சொல்லப்படுகின்றதே தவிர அத்தொழிலினால் யாரும் பிழைப்பதில்லை. ஆகவே இது பார்ப்பனர்கள் பிழைக்க என்று மற்றவர்களுக்குக் கடவுள் பேரால் போடும் ஒரு முட்டாள் வரிபோல் வேறு சிலர் பிழைக்க என்று கதர் வரி என்பதாகக் கதர் கட்டுப வரிடம் வசூலிக்கப்படும் ஒருவித வரித்திட்டமேயொழிய கதர் ஒரு தொழில் திட்டமல்லவென்றும் அதனால் யாரும் யோக்கியமாய் பிழைக்க முடியாது என்றும் நான் உறுதியாய்ச் சொல்லுவேன்.

கதர் பக்தர்களுக்கு இது புரியாவிட்டாலும் கதர் கர்த்தாக்களுக்கு இந்த அபிப்பிராயம் புரிந்ததுதான். ஜனங்கள் கண்விழித்துப் பிறகு அவர்களும் தங்கள் அபிப்பிராயங்களை இப்போது மாற்றிக்கொண்டார்கள். உயர்திரு. காந்தி அவர்களே இப்போது இன்று நடைபெறும் கதர் திட்டம் பயன்படாது என்று கருதி ஒரு யந்திரம் கண்டுபிடிக்க ஆசைப்பட்டு குறைந்த நேரத்தில் கொஞ்ச கஷ்டத்தில் அதிகமான அளவு நூல் நூற்கும்படியான ஒரு புதிய இயந்திரத்தைக் கண்டுபிடிப்பவர்களுக்கு லட்ச ரூபாய் பரிசு கொடுப்பதாக விளம்பரம் செய்திருக்கிறார். அதன் கருத்து என்ன? கைத்தொழிலிலிருந்து - கைராட்டினத்திலிருந்து யந்திரத் தொழிலுக்கு - யந்திர ராட்டினத்திற்கு பாய்ந்திருக்கிறார் என்பதல்லவா? என்று கேட்கின்றேன்.



அப்படிப்பட்ட யந்திரம் கண்டுபிடித்தால் கைராட்டினம் என்ன கதியாவது? இப்போது கைராட்டினத்தில் நூல் நூற்ற "ஏழைகளுக்கு நாளைக்கு வழி என்ன?" இந்த கதர் என்ன கதியாவது? என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். தவிரவும் கதர் கர்த்தாக்களே கதர் விஷயத்தில் பலவித அபிப்பிராயம் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள்.

அதாவது, கதரே தான் இந்தியாவின் விடுதலை என்று ஒருவரும், யந்திரங்கள் வரும்வரை கதர் என்று ஒருவரும், வேலையில்லாத நேரத்தில் வேலை கொடுக்க என்று ஒருவரும், வேறு தொழிலுக்கு மார்க்கம் கண்டு பிடிக்கும் வரைதான் கதர் என்று ஒருவரும் சும்மா இருக்கும் ஒய்வு நேரங்களில் ஆண் பெண் சகலரும் கதர் நூல் நூற்பதின் மூலம் ஜவுளியே சும்மா கிடைத்து விடும் என்று ஒருவரும், கதர் சுற்றுவதில் ஒரு ஓங்காரம் - பிரணவ சப்தம் ஏற்பட்டு எதிரிகளை அழித்து விடும் என்று ஒருவரும், இந்தப்படி கடவுளுக்கு லக்ஷணம் சொல்லுவதற்கு மேலாகக் கதருக்கு லட்சணம் சொல்லுகின் றார்கள். ஆனாலும் கடைசியாக ஒரு வரியாக வசூலிக்கப்பட்டு சிறிது பாகமே ஏழைகளுக்குப் போய்ச் சேரும் படியான செப்பிடு வித்தையாகவே முடிந்துவிட்டது. நிற்க,

மற்ற தொழில் விஷயங்களிலும் கைத்தொழில் என்கின்ற மனப் பான்மையை விட்டொழிக்க வேண்டும். கைத்தொழில் சாமான்களையே ஆதரிப்பது என்கின்ற மனப்பான்மையையும் விட்டொழிக்க வேண்டும். இது பயன்படாத காரியமாக ஆகிவிடும். இன்றைய தினம் நம் நாட்டில் அநேக "கைத்தொழில் விற்பனர்களுக்கு" வேலையில்லாமல் போய் விட்டது. வேலை கொடுக்கவும் நம்மால் முடியாமல் போய்விட்டது.

உதாரணமாக ஒரே தையல் ஊசியையும் குண்டூசியையும் எடுத்துக் கொள்ளுங்கள். இந்த நாட்டில் அதை கையினால் செய்யத் தெரிந்தவர்கள் ஏராளமாய் இருக்கின்றார்கள். மேலும் செய்யும்படி ஆயிரக்கணக்கான மக்களைப்பிடித்து வேலை சொல்லிக் கொடுத்துத் தயார் செய்யமுடியும். ஆனால் நம்மில் ஒருவராவது அதை வாங்குவோமா? ஒரு சமயம் காந்தி போன்ற ஒருவர் "மகாத்மாவாகி" பல லக்ஷக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து பிரசாரம் செய்து அதனால் பிழைக்க வேண்டிய பலரை ஏற்படுத்தி மோக்ஷம் கிடைக்கும் என்பதுபோல் "கை ஊசி வாங்கினால் சுயராஜ்யம் கிடைக்கும்" என்று பிரசாரம் செய்தால் இப்போது கதர் வாங்குவதுபோல் சிலராவது வாங்குவர்களா? என்பதும் சந்தேகந்தான் என்றாலும் அநேகமாய் அந்த ஊசிகளை வாங்கமாட்டார்கள் என்றுதான் சொல்லுவேன். ஏன்? வேலை நயமில்லாததாலா என்றால் அதுவல்ல. மற்றென்னவென்றால் அதை வாங்க நமது மக்களுக்கு விலை சரிப்படாது. ஏனெனில் ஒரு ஊசி செய்ய நமது கைத்தொழில் முறையில் செலவாகும் நேரத்தில் பல ஆயிரம் ஊசிகள் இயந்திரத்தொழில் முறையில் நம்பிக்கையுள்ளவரால் செய்யப்பட்டு



RangaRakes tamilnavarasam.com

விடுகின்றது. ஆகவே ஒரு காசுக்கு 12 ஊசி விற்கும்போது ஒரு ஊசிக்கு 12 தம்பிடி கொடுப்பதென்றால் யாரும் சம்மதிக்க முடியவே முடியாது என்பது தான்.

அதுபோலவேதான் மற்ற விஷயங்களும். ஆகவே கைத்தொழில் பைத்தியத்தை விட்டு விடவேண்டும். இயந்திரத் தொழில் முறையை ஆதரிக்க வேண்டும்.

அன்றியும் கைத்தொழில் கைத்தொழில் என்பது பொதுவுடைமை தர்மத்திற்கு விரோதமானது என்பதை ஞாபகத்தில் வையுங்கள். முதலாளி தொழிலாளி என்கின்ற பாகுபாடு இருக்க வேண்டும் என்கின்ற மனப் பான்மையுடையவர்கள் தான் கைத்தொழில் கைத்தொழில் குடிசைத் தொழில் என்று கட்டியழுவார்களே தவிர சமதர்மமும் பொதுவுடைமை தத்துவமும் கோருபவர்கள் கைத்தொழிலை அதாவது இயந்திர உதவியில்லாமல் செய்யப் படும் தனிப்பட்டவர்கள் தொழிலை, விரும்பமாட்டார்கள். கைத் தொழில் என்பதே வர்ணாச்சிரம தர்மத்தின் அடிப்படையாகும். திரு. காந்தியவர்கள் சொல்லுகின்ற வர்ணாச்சிரம தத்துவமேதான் கதர் முதலிய கைத்தொழில் முறைகள். எப்படியெனில் அவர் மக்கள் பரம்பரைத் தொழில்களையே (பரம்பரை முறையில்) செய்ய வேண்டும் என்கிற கருத்துடையவர். ஆகவே தொழிலாளி மகன் தொழிலாளியாகவும் முதலாளி மகன் முதலாளியாகவும் இருப்பதற்காகச் செய்யப்படும் மறைமுகமான பிரசாரமே தான் இந்த கதர், கைத்தொழில், குடிசைத்தொழில் என்பவைகளாகும். சமதர்மமும் பொது வுடைமை தத்துவமும் ஏற்படவேண்டுமானால் வர்ணாச் சிரமும் பரம்பரைத் தொழில் முறையும், கைத்தொழில் முறையும் முதலில் ஒழியவேண்டும்.

அன்றியும் கைத்தொழில் செய்வதன் மூலமேதான் அதாவது மக்களுக்கு சரீரத்தில் பாடுபடும்படியான வேலை கொடுத்து அவர்களை வாட்டி வளவை நிமிர்த்துவதான் மக்களுக்கு ஜீவனத்திற்கு வழி ஏற்படுத்த லாம் என்று சொல்லுகின்றவர்கள் கூற்றையும் நான் ஒப்புக் கொள்ளமுடியாது. அந்த முறையையும் நான் ஏற்கமுடியாது.

ஏனெனில் அவர்கள் மக்கள் பிறந்ததும் வளர்ந்ததும் இருப்பதும் தொழில் செய்து சரீர பிரயாசைப்பட்டு உழைத்து சாப்பிடத்தான் இருக்கின் றார்கள் என்று கருதும் எண்ணத்தினாலேயே மக்களைக் கீழ்மைப்படுத்தி விட்டார்கள். ஆனால் இந்தப்படி சொல்லிக்கொண்டு இருக்கின்ற மக்களில் சிலர் மாத்திரம் உட்கார்ந்து கொண்டு பாடுபடாமல் ஜீவிக்க என்று பிறந்து வளர்ந்து வாழ்பவர்களாகக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இதை மோசடி யான எண்ணமென்றே சொல்லுவேன்.

கஷ்டப்பட்டு சாப்பிடுவதற்கென்றே மனிதன் பிறந்தான் என்று சொல்லுவதானால் மனித சமூகம் இல்லாமல் போவதே மேலான காரியமாகும்.



"உலகம் வேண்டுமானால் மனித சமூகம் பெருகவேண்டும்" என்று சொல்லுகிறவர்கள் எல்லாம் பெரிதும் மற்ற மக்கள் உழைப்பில் சாப்பிடு கின்றவர்களே யாவார்கள். ஆகவே மக்கள் கஷ்டப்பட்டு தான் ஆக வேண்டும் என்று சொல்லி கஷ்டப்பட மார்க்கம் தேடுவதைவிட மக்கள் இல்லாமலே போவதற்கு செய்யப்படும் காரியம் மிகவும் நல்ல காரியமாகும்.

உதாரணமாக இரண்டு மாட்டை காலையில் 3 மணிக்கு செக்கில் பூட்டி மாலை 7 மணி வரைக்கும் ஓட்டி அடித்து அதன் வாலை முறித்து முதுகுத் தோல்பட்டை வாங்கி கழுத்து பூசனிக்காய் போல் வீங்க வைப்பதன் மூலம்தான் அந்த மாடுகள் வாழமுடியும் என்றால் அப்படிப்பட்ட மாடுகளை எல்லாம் கசாப்புக்கடைக்காரனிடம் ஒப்புவித்து விட்டு இனி மேல் மாடுகளை யாரும் உற்பத்தி செய்யக் கூடாது என்று சட்டம் போடுவதே மேலான காரியம் என்றுதான் சொல்லுவேன். இந்த மாதிரி நிலை யில் ஒரு மாடுகூட பிழைத்திருக்க வேண்டியதில்லை என்பதே எனது அபிப்பிராயம்.

தவிர பொதுவுடைமை தத்துவத்திற்கு, வெள்ளைக்கார ஆக்ஷியேதான் விரோதமாய் இருக்கின்றது என்பதை நான் ஒப்புக் கொள்ளமுடியாது. நமது நாட்டில் உள்ள வர்ணாச்சிரம தர்மந்தான் அதுவும் திரு. காந்தி சொல்லும் வர்ணாச்சிரம தர்மம்தான் பொது உடைமைக்கு விரோதமானதாகும். இந்த வர்ணாச்சிரம தர்மம்தான் இந்த நாட்டுக்கு வெள்ளைக்கார ஆக்ஷி முதலிய வெளிநாட்டு முதலாளிகள் ஆக்ஷியை கொண்டு வந்துவிட்டதாகும். இன்னும் அவ்வாக்ஷியை நடத்திக் கொடுப்பதே –அதைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டிருப்பதே நமது நாட்டு வர்ணாச்சிரம தர்மமுறையேதான் ஆகும்.

முதலாளி தொழிலாளி என்ற முறையும் வர்ணாசிரம தர்ம முறையில் பட்டது என்பதை மறந்துவிடாதீர்கள். அந்த முறையில் தான் இப்போது நமது நாட்டில் மஞ்சள் புரோகிதர்களும். மஞ்சளும் கருப்பும் கலந்த அரசர்களும், ஜமீன்களும், மிராசுகளும், வியாபாரிகளும் இருக்கின்றார்கள் என்பதோடு இவர்களுடைய பத்திரத்திற்கென்றே வெள்ளை முதலாளிகள் வருவிக்கப் பட்டு காப்பாற்றப்படுகின்றார்கள். ஆகவே நமது நாட்டு மேல் கண்ட புரோகிதர்களும், அரசர்களும், ஜமீன்களும் முதலாளிகளும் பரம் பரை முறை, முறை–பாத்தியமே பிறப்பு உரிமை என்பவைகள் எல்லாம் அடியோடு ஒழியும் போது அதைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு –அதன் பலத்தால் இருக்கும் வெள்ளை முதலாளி ஆக்ஷி கசகசவென்று நசுக்கிவிடும். அதில் சிறிதும் சந்தேகேமேயில்லை. தவிர யந்திரங்கள் வந்தால் மக்களுக்கு வேலை கிடைக்காது என்று சொல்லப்படுகின்றது.

இதுவும் முதலாளி, தொழிலாளி தத்துவ வர்ணாச்சிரம தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதேயாகும். எதற்காக ஒருவனுக்கு சதா தொழில் இருக்கவேண்டும்? புலி, கரடி, சிங்கம், நாய், குரங்கு பக்ஷி ஆகியவை களுக்கு சதா தொழில் இருந்தும் கொண்டிருக்கின்றனவா? அவை தொழில்



RangaRakes tamilnavarasam.com

செய்துதான் ஜீவிக்கின்றனவா? புரோகிதன், அரசன், ஜமீன், மிராசு, வியாபாரி, உத்தியோகஸ்தன் முதலியவர்கள் சதா சரீரத்தால் வேலை செய்து கொண்டுதான் இருக்கிறார்களா?

மேலும் இவர்கள் எல்லாம் வேலை செய்யாததால் உடல் கெட்டுப் போகின்றதே என்று சரீராப்பியாசம் (Exercise) செய்து கொண்டிருப்பதை நாம் பார்க்கவில்லையா? ஒரு கூட்டம் சரீரத்திற்கு வேலை இல்லையே என்று சரீராப்பியாசம் செய்யவும் மற்றொரு கூட்டம் ஜீவனத்திற்கு மார்க்கமில் லையே என்று வேலை செய்து கஷ்டப்படவுமாயிருப்பதற்குக் காரணம் வர்ணாசிரம சமூக வாழ்க்கை முறையா? அல்லது யந்திரத்தினால் ஏற்பட்ட கெடுதியா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

நாட்டில் இருக்கின்ற வேலையையும் மக்கள் எண்ணிக்கையையும் அவர்களுக்கு வேண்டிய ஆகார முதலிய சாமான்களையும் கணக்குப் போட்டு அந்த சாமான்களை யந்திரங்களால் செய்வதன் மூலம் குறையும். நேரத்தைக் கழித்து மிகுதியுள்ள நேரத்தை எல்லா மக்களுக்கும் பங்கு போட்டு பிரித்துக் கொடுத்து அவர்கள் வாழ்நாள் ஜீவனத்திற்கு வேண்டிய முழுக் கூலியையும் கொடுக்க ஆரம்பித்து விட்டால் வேலை சரியாய்ப் போய்விடுமா? இல்லையா? அதாவது ஒரு வாரத்திற்கு ஒரு மனிதனுக்கு இத்தனை மணி நேரம் மாத்திரம் வேலை செய்தால் போதும் என்கின்ற முறையில் பங்கீட்டுக் கொடுத்துவிடவேண்டும். இப்படிச் செய்தால் ஒருவாரத்தில் ஒரு நாள் கூட ஒரு மனிதனுக்கு வேலை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. மீத நாட்களில் கஷ்டப்படாமல் சாப்பிடக்கூடும் எதுபோலவென்றால் தொழிலாளிகளுக்கு நாம் இப்போது தினம் ஒன்றுக்கு 8 மணி 6 மணி என்று திட்டம் போட்டு சட்டம் செய்கின்றோமல்லவா? இதையே வாரத்திற்கு இத்தனை மணி என்று திட்டம் போட்டு விட்டால் தீர்ந்ததல்லவா? அதுபோலவும் உபாத்தியாயர்களுக்கு ஒரு வாரத்திற்கு இத்தனை பீரியட் என்று கணக்குப் போடுவது போலவும் வாரத்தில் ஒரு மனிதன் இத்தனை மணி நேரம்தான் வேலை செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டோ மேயானால் தொழிலாளிகள் கஷ்டம் தானாகவே நீங்கி விடும். அப்படிக் கில்லாமல் ஜட்கா வண்டி குதிரை போலவும் செக்குமாடு போலவும் வேலை வாங்கிக் கொண்டு அதன் பலன்களை யெல்லாம் வேலையை சிறிதும் செய்யாத கூட்டமாகிய புரோகிதர், முதலாளி, மிராசுதார் ஆகியவர்களே அனுபவித்தால் வேலை எப்படி கிடைக்கும்? சரியான கூலி எப்படி கிடைக்கும்? என்பதை யோசித்துப் பாருங்கள்.

ஆகவே சகோதரர்களே, நமது நாட்டுத் தொழில்விர்த்திக்கு கதர் இடையூறு என்றும், ஏழைகளுக்கு வயிற்றுப் பிழைப்புக்கு கதர் பயன்படவில்லை என்றும் கதரின் பேரால் விதித்திருக்கும் அதாவது கெஜம் 3 அணா பெறும்படியான துணியை 9 அணா போட்டு வாங்குவதினால் வாங்குகின்றவன் அக்கிரமமாகவும் நிர்பந்தமாகவும் நஷ்டப்படும் கெஜத் திற்கு ஆரணாவிலிருந்து சிறிது பாகமே தர்மத்திற்கு என்று ஏழைகளுக்குப் பயன்படுகின்றதென்றும் தர்மம் வேறு, கைத்தொழில் வேறு, பொருளாதார வியாபாரம் வேறு என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென் றும் பொது உடைமை தத்துவதற்கு நமது நாட்டுக் கைத்தொழில் முறையும் புரோகிதன், முதலாளி, ஜமீன்தார், மேல்ஜாதி, கீழ்ஜாதி முறைகளே தான் முக்கிய விரோதிகளேத் தவிர வெள்ளைக்காரன் ஆட்சியே முக்கிய மான தல்லவென்றும் ஆதலால், நீங்கள் இவைகளைக் கவனித்து யோசித்து உங்கள் அபிப்பிராயப்படி நடந்துகொள்வதில் உங்களுக்குப் பூரண உரிமை யுண்டு என்றும் இதுவரை எனக்குப்பட்டதைச் சொன்னேன் என்பதோடு இந்த ஊரில் இப்படி ஒரு சங்கம் ஏற்பட்டு இதனால் வர்த்தகர்கள் ஒற்றுமைப் படவும் மற்றும் -ஷராப்பு வியாபாரிகளும் இதில் கலந்துகொண்டு இருப்பதுமான காரியம் மிகவும் போற்றத்தக்கதேயாகும். தலைவர் அவர்களும் இவ்வளவு தூரம் இதில் பங்கெடுத்து உங்களுக்கு அரிய உபதேசம் செய்தது போற்றத் தக்கதேயாகும்.

*குறிப்பு : 10-06-1931 அன்று ஈரோடு சுதேசி ஜவுளி வர்த்தக சங்க ஆண்டு விழாவில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 14.06.1931**



RangaRakes tamilnavarasam.com

# "ஆனாலும் ஒருசமயம்"

"மகாத்மா" காந்தி வட்ட மேஜை மகாநாட்டுக்கு போகமாட்டார். ஒரு சமயம் போனாலும் போகக் கூடும். ஆனாலும் அது சந்தேகந்தான். அப்படி சந்தேகமில்லாமல் போவது ஒரு சமயம் உறுதியானாலும் அவர்தான் போவாரேயொழிய மற்றவர்கள் போகமாட்டார்கள். ஒரு சமயம் மற்றவர்கள் போனாலும் மகாத்மாதான் காங்கிரஸ் பிரதிநிதியாய் இருப்பார். "மகாத்மா" காங்கிரஸ் பிரதிநிதியாய் போனாலும் வட்ட மேஜை மகாநாட்டில் மாத்திரம் கலந்துகொள்ளமாட்டார். வட்ட மேஜை மகாநாட்டில் ஒரு சமயம் கலந்து கொண்டாலும் காங்கிரஸ் கக்ஷியை மாத்திரம் எடுத்துச்சொல்லிவிட்டு விவகாரத்தில் கலந்துகொள்ளமாட்டார். விவகாரத்தில் ஒரு சமயம் கலந்து கொண்டாலும், பாதுகாப்பு விஷயத்தில் மாத்திரம் சிறிதும் விட்டுக்கொடுக்கமாட்டார். ஒரு சமயம் பாதுகாப்பில் விட்டுக்கொடுத்தாலும் இந்திய நன்மைக்கென்றுதான் எதையும் விட்டுக்கொடுப்பாரேயொழிய பிரிட்டிஷ் நன்மைக்காகவென்று சிறிதும் விட்டுக்கொடுக்க மாட்டார். பிரிட்டிஷ் நன்மைக்காகவென்று ஒரு சமயம் எதாவது விட்டுக்கொடுத்தாலும் ' ஐயோ பாவம் ! அவர்களும் (பிரிட்டிஷார்களும்) நம்மைப்போல் மனிதர்கள் தானே ! பிழைத்துப் போகட்டும்' என்று கருதி தயாளத்தின் மீதுதான் விட்டுக்கொடுப்பாரேயொழிய "மிருக பலத்திற்கு" பயந்துகொண்டு ஒருக்காலும் விட்டுக்கொடுக்கமாட்டார். ஒரு சமயம் "மகாத்மா" மிருகபலத்திற்கு பயப்படுவதானாலும் ராஜியை உத்தேசித் தும், பெருந்தன்மையை உத்தேசித்துந்தான் பயப்படுவாரேயொழிய அஹிம்சையும், சத்தியாக்கிரகமும் தோற்றுப்போகுமே என்று ஒரு நாளும் சந்தேகப்பட மாட்டார். ஒரு சமயம் தோற்றுப்போகுமே என்று சந்தேகப்படாமலும் ஒரு சமயம் தோற்றே போய்விட்டாலும் அது கீதையின் ரகசியமாயும், கடவுள் செயலாயுந்தான் இருக்குமேயொழிய ஒரு நாளும் "மகாத்மா" காந்தி செயலாய் இருக்க முடியாது என்பது மாத்திரம் உறுதி.

**( ஒரு ஜோசியன் )**

**குடி அரசு - கட்டுரை - 14.06.1931**



# முஸ்லீம் மகாநாடு

தலைவரவர்களே! கனவான்களே!!

இந்தப் பெரிய மகாநாட்டில் என்னை சில வார்த்தைகள் பேசும்படி அழைத்ததற்கு நன்றி செலுத்துகிறேன். இந்தச் சமயமானது அரசியல் சம்மந்தமான ஒரு நெருக்கடியான சமயம் என்பதை முஸ்லீம் சமூகமானது உணர்ந்து ஆங்காங்கு மகாநாடுகள் கூட்டி தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை தெரிவித்துக்கொண்டு வருகின்றன. அபிப்பிராயங்களில் சற்று ஒருவருக்கொருவர் - மாறுபட்டவர்களாயிருக்கலாம். ஆனாலும், விஷயத்தின் நெருக்கடியை உணராதவர்கள் இல்லை. இந்தச் சமயத்தில் எல்லா முஸ்லீம் மகாநாட்டிலும், சமீபத்தில் வருவதாயிருக்கும் அரசியல் சீர்திருத்தத்தில் முஸ்லீம்களின் நிலை என்ன என்பதே முக்கிய பிரச்சினையாய் இருக்கின்றது. அதிலும் முக்கியமாய் இருப்பது அச்சீர்திருத்தங்களுக்கு முஸ்லீம் பிரதிநிதிகளாய் தேர்தலில் பிரதிநிதித்துவம் பெறுவதா? அல்லது இந்துக்களின் பிரதிநிதியாய் பிரதிநிதித்துவம் பெறுவதா? என்பதே முக்கிய பிரச்சினையாய் இருந்து வருகின்றது. உண்மையை யோக்கியமாய்ப் பேச வேண்டுமானால் முஸ்லீம்கள் முஸ்லீம் பிரதிநிதிகளாய் முஸ்லீம்களின் ஓட்டைக் கொண்டே பிரதிநிதிகளாக அங்கம் பெறவேண்டும் என்பதாகவே இந்தியாவின் பெரும்பான்மையாகிய முஸ்லீம்கள் விரும்புகின்றார்கள் என்பதை ஒப்புக் கொண்டு தான் ஆகவேண்டும். இதுசரியா? தப்பா? என்பது வேறு விஷயம். அதோடு அது சரியா? தப்பா? என்று முடிவு சொல்லுவதற்கு யாருக்கு உரிமை உண்டு என்பதைப் பொருத்தே தப்பு சரி என்கின்ற முடிவைப் பற்றியும் பேச வேண்டியதாகும்.

நிற்க, இவ்வளவு விஷமபிரசாரம் வெளிப்படையான ஒரு உண்மையை அதாவது முஸ்லீம்களின் பெரும்பான்மையான மக்கள் தனித் தொகுதியை விரும்புகின்றார்கள் என்பது குருடனும் அறியும் படியாக இருந்தும் ஒரு சில இந்து தேசீய பிழைப்புக்காரர்களும் தங்கள் சுயநல வாழ்வுக்கு தேசீயத்தை ஏற்படுத்தி அதை நம்பி இருக்கின்றவர்களும் இவ்வளவு பெரிய உண்மையை மறைத்துப் பிரசாரம் செய்கின்றார்கள். இந்த ஆட்களே இந்திய தேசீயத் தலைவர்களானால் இவர்களால் நடைபெறும் தேசீய ஆக்ஷியில் எவ்வளவு நாணயமும் யோக்கியமும் இருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள். பொதுவாகவே இந்துக்களும் முஸ்லீம்களும் மதத்திலும், ஆச்சார



RangaRakes tamilnavarasam.com

அனுஷ்டானங்களிலும் மற்றும் எவ்வளவோ விஷயங்களிலும் பிரிவுபட்டு இருக்கின்றார்கள். இரண்டு சமூகங்களும் ஒன்றுபடுவது என்பது சுலபத்தில் முடியாத காரியமாகும். வரப்போகும் சீர்திருத்தத்திலும் இவ்விரண்டு சமூகங் களும் ஒன்று சேரமுடியாதபடி அதாவது அவரவர்கள் மதத்திற்கும் ஆச்சார அனுஷ்டானத்திற்கும் சிறிதும் பங்கம் ஏற்படாதபடி பத்திரமாய் காப்பாற்றப் படவேண்டும் என்பதே முக்கிய நிபந்தனையாகும். ஆகவே, இரண்டு நேர்க் கோடுகள் எப்படி ஒன்று சேர முடியாதோ அப்படிப் போல் ஜாக்கிரதையாய் காப்பாற்றப்படும் ஒன்றுக் கொன்று மாறான மதத்தைச் சேர்ந்த மக்கள் ஒரு நாளும் ஒன்று சேர முடியாது. அப்படி இருக்க வேண்டி ஏற்பட்ட இரு சமூகங் களும் அவரவர்கள் பிரதிநிதிகளை அவரவர்களே தெரிந்தெடுத்துக் கொள் வதன் மூலம்தான் "பத்திரமாய்" இருக்க முடியும்.

ஆகவே இந்த நிலையில் முஸ்லீம்கள் தனித்தொகுதி கேட்பதில் பிசகு ஒன்றும் இல்லை. ஆனால் அதற்கு ஆக்ஷேபனை சொல்லுவதில் தான் எனக்கு நியாயமிருப்பதாகப் புலப்படவில்லை.

வாயில் வேணடுமானால் "இந்து முஸ்லீம் சகோதரர்கள், இந்து முஸ்லீம் ஒற்றுமை" என்று பேசலாம். அதில் ஒரு சிறிதும் நாணயமே இருக்க முடியாது. ஏனெனில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் உள்ள மத சம்பந்தமான சமூக சம்பந்தமான, கொள்கைகள் சம்பந்தமான ஒற்றுமை கள் எப்படிப்பட்டது என்பது எனக்கும் கொஞ்சம் தெரியும்.

இந்து முஸ்லீம் ஒற்றுமையும் நம்பிக்கைக்கு பாத்திரமான சகோதரத் தன்மையும் வேண்டுமானால் அவற்றிற்கு இடையூறாயிருக்கும் மதக் கொள்கைகளில் முதலில் திருத்தம் ஏற்படவேண்டும். அப்படிக்கில்லாமல் இருவர் மதக் கொள்கைகளையும் பத்திரமாய்க் காப்பாற்ற வேண்டும் என் பதில் "யார் கழுத்தை யார் அறுப்பது?" என்கின்ற உண்மைதான் அதில் தொக்கியிருக்கின்றது. அதுவேதான் அதற்கு அருத்தமாய் இருக்க முடியும். ஏனெனில் இன்றைய தினம் அரசியல் துறையில் இருக்கும் மக்கள் அரசியலை விட மதத்தையே பிரதானமாய்க் கருதி இருக்கின்றார்கள். அது மாத்திரமல்லாமல் மத ஆதிக்கத்தை நிலை நிறுத்தவே அரசியல் ஆதிக்கம் வேண்டும் என்கின்றவர்களாய் இருக்கின்றார்கள். ஆகவே இந்தக் கூட்டத்தார்கள் "தேசீயம் முக்கியமானது,அரசியல் முக்கியமானது" வெள்ளைக்காரனை இந்த நாட்டை விட்டு ஒழிப்பது முக்கியமானது, என்று சொல்லுவதை நான் ஹம்பக் - புரட்டு என்றே கருதுகின்றேன். ஆதலால் சிறுபான்மையாய் இருக்கின்றவர்களுக்கு ஒன்று போதுமான பாதுகாப்பு வேண்டும், அல்லது இருவருக்கும் பொதுவாய் இருவரும் அல்லாதவரான மத்தியஸ்தர் ஒருவர் வேண்டும். மத்தியஸ்தனுக்கு கூலி கொடுத்துத்தான் ஆகவேண்டும். அதற்கு யார் என்ன செய்வது? ஆகையால் இன்றைய தினம் நமக்கு மத்தியஸ்தன் வேண்டாம் என்றால் கட்டாயம் பந்தோபஸ்து



வேண்டியதுதான். ஆதலால் முஸ்லீம்கள் தங்களுக்குத் தனி தொகுதி யையே தான் வேண்டும் என்பதில் குற்றமில்லை.

இந்து முஸ்லீம்களில் இந்தியாவுக்கு இன்னார்தான் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ள யாருக்கும் உரிமை இல்லை. உரிமை இருக்கின்றது என்றால் இருவருக்குமே உரிமை இருக்கின்றது. இந்தியாவில் இருக்கும் 7½ கோடி முஸ்லீம்களில் முக்கால்வாசிக்கு மேற்பட்டவர்கள் இஸ்லாம் மார்க்கம் ஏற்படுவதற்கு முன்பே இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்த சமூகத்தின் பரம்பரையார் ஆவார்கள். அவர்களது மார்க்கம் வேறானதினாலேயே அவர்கள் இந்தியர்களல்லாதவர்களாய்ப் போய்விட முடியாது. இந்தியாவில் உள்ள யாருடைய உரிமைக்கும் அவர்களது உரிமை இளைத்ததாகி விடாது. இந்துக்கள் என்று சொல்லப்படுகின்றவர்களும் இந்துமதம் என்பது தோன்றுவதற்கு முன்பே இங்கு பிறந்து வளர்ந்து வரும் சமூகத்தைச் சேர்ந்த வர்களாவார்கள். அவர்களுக்கும் சகல உரிமையும் உண்டு. ஆதலால் இதில் ஒருவர் மேல் ஒருவர் கீழ் அல்லது ஒருவர் சொந்தக்காரர், ஒருவர் அன்னியர் என்று பேசுவதெல்லாம் கையில் வலுத்தவன் காரியமாகுமே ஒழிய நியாய மான காரியமாகாது.

ஆதலால் முஸ்லீம்கள் இந்தச் சமயம் ஏமாந்து போகக் கூடாது என்றே சொல்லுவேன். "விடிய விடிய கண் விழித்து இருந்து விடியற்காலம் திருடன் வருகின்ற நேரத்தில் தூங்கி ஏமார்ந்து விடாதீர்கள்" என்றே சொல்லுகின்றேன். எப்பொழுது "தேசீயவாதிகளும் மகாத்மாக்களும்" எங்களுக்கு மதத்தைப் பற்றி கவலை இல்லை என்கின்றார்களோ அப்பொழுது வேண்டுமானால் தனித் தொகுதியை பற்றி கவலை இல்லை என்று சொல்லி விடலாம். அதுவரை பத்திரமாகத்தான் இருக்கவேண்டும்.

ஏனெனில் நமது பிரதிநிதி என்பதாக தேர்தலுக்கு நிற்பவர்கள் எல்லாம் நிற்கின்றவரை ஓட்டு கேட்கின்ற வரையில், வெற்றி பெற்று அங்கத்தின ராகின்ற வரையில் நமது பிரதிநிதி என்றுதான் சொல்லிக் கொள்ளுகிறார்கள். வேலை ஆனவுடன் பிறகு அவர்களுக்கு மாத்திரம்தான் அவர்கள் பிரதிநிதிகளாகி அவர்கள் சொந்த சௌகரியத்திற்காக அந்தப்பதவியை எவ்வளவு இழிவாய் வேண்டுமானாலும் உபயோகப் படுத்தி விடுகின்றார்கள். இப்படிப் பட்ட மக்கள்தான் இன்று எந்த சமூகத்திலும் பிரதிநிதியாகத் தகுந்தவர்களாய் இருக்கின்றார்கள்.

இம்மாதிரி ஆட்களுக்கு தனித்தொகுதி இல்லாவிட்டால் அச்சமூகத் திற்கு பெரிய ஆபத்து என்றுதான் சொல்லுவேன். இப்பொழுதே தனித் தொகுதியின் மூலம் பிரதிநிதி ஆனவர்களே அந்த ஸ்தானத்தை எவ்வளவு தப்பாய் உபயோகிக்கின்றார்கள் என்றும் தெரிந்தெடுத்த மக்களின் அபிப் பிராயத்திற்கு எவ்வளவு விரோதமாய் இருக்கின்றார்கள் என்றும் பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே பொதுத் தொகுதியில் தெரிந்தெடுக்கப்படும் 33 பிரதி நிதிகளால் ஒரு சமூகத்திற்கு ஏற்படும் நன்மையை விட தனித் தொகுதியால் தெரிந்தெடுக்கப்படும் 23 பிரதிநிதிகள் இருந்தால் அதிகமான நன்மையே ஏற்படும். என்ன நன்மையென்று சிலர் கேட்பார்கள். நன்மை என்ன என்பது யாருக்கும் தெரிந்ததுதான். உத்தியோகங்கள் பதவிபட்டம், பணம் சம் பாதிக்க சௌகரியங்கள் ஆகியவைகள்தான் தேசீயமாகவும் அரசியல் சீர்திருத்த மாகவும் இருந்து வருகின்றது. இதுதான் இனி வரப்போகின்ற தேசீயத்திலும், சீர்திருத்தத்திலும் கிடைக்கப் போகின்றது. இதை மறுப்பது ஜாலவித்தை யாகுமே ஒழிய நாணையமாகாது. ஆகவே இவை எல்லோருக்கும் சரி சமமாய் கிடைக்க வேண்டும் என்பதற்குத்தான் தனித்தொகுதி வேண்டு மென்பதாகும்.

தவிர, தனித்தொகுதியால் ஒற்றுமை ஏற்படாது என்கின்றார்கள். இதிலும் சிறிது கூட அர்த்தமில்லை என்றுதான் சொல்லுவேன். இப்போது சுமார் 20 வருஷ-காலமாய் தனித் தொகுதிதான் இருந்து வருகின்றது. இதனால் என்ன விரோதம் ஏற்பட்டுவிட்டது? என்ன ஒற்றுமையில்லாமல் போய்விட்டது? என்று கேட்கின்றேன். இப்போது இதை மாற்ற வேண்டிய அவசியமான காரியமென்ன? என்றும் கேட்கின்றேன். கூட்டுத் தொகுதி யாயிருந்தால் எவ்வளவோ கலவரங்கள் ஏற்பட்டு இருக்கும். உதாரணமாகக் கூட்டுத் தொகுதி உள்ள முனிசிபாலிட்டிகளில் இந்து முஸ்லீம் கலகம் மனஸ்தாபம் அல்லது அபிப்பிராய பேதம் இல்லாத முனிசிபாலிட்டி ஒன்றைக் காட்டுங்கள். எலக்ஷன் காலத்தில் இந்து முஸ்லீம் மதத் துவேஷமே எலக்ஷன் பிரசாரமாய் இருந்ததும், இருப்பதும் எனக்கு நன்றாய்த் தெரியும். ஒரு வார்டில் ஒரு இந்துவும் ஒரு முஸ்லீமும் தேர்தலுக்கு நின்றால் இந்துவானவன் ஓட்டர்களிடம் சென்று "துலுக்கனுக்கு ஓட்டுப் போடாதே" என்றுதான் முதலில் சொல்லுகிறான். ஒரு முஸ்லீமானவன் "ஒரு காபிருக்கு ஓட்டுப் போடாதே" என்றுதான் சொல்லுகிறான். இப்படிச் சொல்ல பயப்படுகிற இடத்திலும் கூட "நான் ஒரு இந்துவாச்சே எனக்கு, ஓட்டுப் போடக்கூடாதா?" "நான் ஒரு இஸ்லாமானவனாச்சுதே, எனக்கு ஓட்டுப் போடக்கூடாதா?" என்று கேட்பதோடு இருவர்களும் ஓட்டர்களை "நீ யாருக் குப் பிறந்தவன்" என்று கூடக் கேட்டு விடுகின்றார்கள். ஆகவே கூட்டுத் தொகுதி தேர்தல்கள் மதத் துவேஷத்தையும் வகுப்பு துவேஷத்தையும் கிளப்பிவிட்டுத் தீரவேண்டிய அவசிய முடையதாகவே ஆகிவிடுகின்றது. தமிழ்நாட்டில் கூட்டுத் தொகுதிகளே அநேக இடங்களில் மதத்துவேஷத்தை கிளப்பிவிட்டிருக்கின்றது. இந்து முஸ்லீம்கள் சகோதரர்கள் ஆகவேண்டு மானால் ஒற்றுமையுடையவர்களாக வேண்டுமானால் முதலில் வெளிவேஷத் திலாவது நடைஉடை பாவனைகளிலாவது ஒன்றுபோல காணப்பட இரு சமூகமும் ஒப்புமா என்று கேட்கின்றேன். வெளிக்குக் கூட ஒற்றுமையாக முடியாத சமூகம் பிறகு உள் அந்தரங்கத்தில் பரஸ்பரம் எப்படி ஒற்றுமையும் நம்பிக்கையும் அடைய முடியும்? ஆகவே சகோதரர்களே! நீங்கள்



தனித்தொகுதியே விரும்பி அதையே ஏகமனதாய் நிறைவேற்றிக் கொண்ட விஷயம் எனக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக் கின்றது. இவ்வளவோ டேயே நீங்கள் நின்றுவிடாமல் இதைக் கடைசிவரை கொண்டு செலுத்தி முடிவில் வெற்றிபெற முனைந்து நில்லுங்கள்.

*குறிப்பு : 14-6-1931 அன்று, கோவை சாமி பிக்சர் பாலசில் நடைபெற்ற கோவை மாவட்ட முஸ்லீம் மாநாட்டின் இரண்டாம் நாளில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 21.06.1931**



RangaRakes tamilnavarasam.com

# கும்பகோணம் சாக்கோட்டையில் சுயமரியாதைத் திருமணம்

சகோதரிகளே! சகோதரர்களே! இன்று இங்கு நடக்கும் திருமணம் சுயமரியாதைத் திருமணம் என்று சொல்லப்படுகின்றது. இதை நான் முழு சுயமரியாதைத் திருமணம் என்று ஒப்புக்கொள்ளமுடியாது. பார்ப்பான் வரவில்லை என்பதையும், அர்த்தமற்ற சடங்குகள் அநேகமாயில்லை என்பதையும், வீண்மெனக்கேடான காரியமும் வீண் செலவுமான காரியமும் இல்லையென்பதையும் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் தாலி கட்டத் தயாராயிருப்பதாகத் தெரிகிறேன். பெண் உட்கார்ந்திருக்கும் மாதிரியைப் பார்த்தால் பெண்ணும் மாப்பிள்ளையும் இதற்கு முன் அறிமுகம் கூட ஆன தில்லை போல் காணப்படுகின்றது. சுயமரியாதைக் கல்யாணத்தின் முறைகள் இன்னின்னது என்று இப்போது வரையறுப்பது என்பது காதால் கேட்பதற்கே முடியாத காரியமாயிருக்கும். கல்யாணம் என்பதே வேண்டிய தில்லை என்று சொல்லக்கூடிய திட்டம் சுயமரியாதை இயக்கக் கொள்கை யில் ஒரு காலத்தில் வரக்கூடும். எந்தப்பெண்ணும் எந்த மாப்பிள்ளையும் புருஷன் பெண் ஜாதிகளாகப் போகிறார்கள் என்று பெற்றோர்களுக்குக் கூடத் தெரிய முடியாத நிலைமை ஏற்படும். இந்த மாப்பிள்ளைக்கு இதற்கு முன் எத்தனை பெண் கல்யாணமாயிற்று? இந்தப் பெண்ணுக்கு இதற்குமுன் எத்தனை புருஷன் கல்யாணம் ஆயிற்று? என்கின்ற கணக்குப் போடக்கூடிய காலம் வரும். மற்றும் அதைப்பற்றியே மக்கள் விசாரிக்க - யோசனை செய்யக்கூடிய அவசியமே இல்லாமலும் போகக்கூடும். அந்த மாதிரி கல்யாண முறையும் இன்றைய குடும்ப வாழ்க்கை முறைகள் ஒழிந்து ஆணும் ஆணும் சிநேகமாய், அன்பாயிருப்பது போலவே ஏதோ ஒரு பெண்ணும் ஏதோ ஒரு ஆணும் பெண்ணும் சிநேகமாயிருக்கின்றார்கள் என்கின்ற அளவில் மாத்திரமே சம்பந்தமிருக்கும்படியான காலமும் வரும். இதெல்லாம் அநேகமாய் பெண் மக்களுக்கு பகுத்தறிவு உணர்ச்சியும், சுயமரியாதை உணர்ச்சியும், உண்மைச் சுதந்திரம் என்பது என்ன என்கின்ற உணர்ச்சியும் வந்தவுடனே ஏற்பட்டுவிடும். இப்போது பெண்கள் அடிமைப் பொருள்கள் என்றும் தாங்கள் மற்றவன் அனுபவிக்கும் பொருள் என்றும்தான் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ள நினைப்பதே அவர்களின் அடிமை உணர்ச்சியின் அறிகுறியாகும். அந்தக் கருத்துக் கொண்டுதான் அவர்களுக்கு நடை, உடை அணி முதலியவைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு தாசி என்பவள் அதாவது தான் பிறர் அனுபவிப்பதற்காக இருக்கின்றவள், அதன் பயனாய் ஜீவிக்கின்றவள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் ஒருத்தி தன்னை அலங்கரித்துக் கொள்வதில் இருக்கும் மனோபாவத்திற்கும் மற்றப் பெண்கள் அலங்கரித்துக் கொள்ளு வதில் இருக்கும் மனோபாவத்திற்கும் அதிக வித்தியாசமிருப்பதாக நான் கருதுவதில்லை. மிருகம், பட்சி ஆகியவைகள் ஆணைவிட பெண் தாழ்ந்த தென்று கருதுவதில்லை. "ஆணுக்காகத்தான் பெண் இருக்கிறோம்" என்று கருதி, தங்கள் மீது ஆண்கள் ஆசைப்பட வேண்டும் என்று சிறிதும் முயற்சிப் பதில்லை. ஆண்கள் ஆசைப்படும்படி நடந்து கொள்ளவேண்டும் என்று கருதுவதுமில்லை. ஆனால் பெண் ஜன்மம் எடுத்து தாங்கள் அலங்கரித்துக் கொண்டு ஆண்கள் ஆசையை எதிர்பார்ப்பதற்கே ஏற்பட்டதென்பதாய் கருதுகிறார்கள். தன் சொந்தப் புருஷனை சந்தோஷிக்கச் செய்யவோ திருப்தி அடையச் செய்யவோ என்று செய்யுங் காரியங்களும் கூட ஒரு வித அடிமை எண்ணத்தில் பட்டதே ஆகும். நடைஉடை பாவனைகளில் புருஷனை விட மாறுபட்டிருக்க வேண்டும் என்கின்ற மனப்பான்மையும் அடிமை மோகமே யாகும். இவைகள் எல்லாம் இயற்கைக்கு மாறுபட்டவையே யாகும். எப்படியோ ஆதியில் இம்மாதிரி ஏற்பாடு செய்து விட்டதால் அந்த பத்ததிகள் இனியும் நடந்து வருகின்றன. ஆண்களும் அனேகமாய் தனது வீட்டை, வண்டியை, மாட்டை அலங்கரிப்பதில் என்ன மனோபாவம் கொள்ளுகின் றார்களோ அதே மனோபாவம்தான் தன் பெண் ஜாதியை சிங்காரிப்பதிலும் கொள்ளுகிறான். ஆகையால் பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்வது என்கின்ற மனப்பான்மையை ஒழிக்க வேண்டியது பெண்கள் விடுதலையில் - சுதந்திரத்தில் ஒரு திட்டமாகும்.

தவிர திருமணம், கல்யாணம் என்பவைகள் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வது என்பது தவிர மற்றபடி இதில் வேறு ஒன்றுமே இல்லை. இந்த ஒப்பந்தமும் இருவர் சௌகரியத்தை பொருத்த காரியங்களுக்கு மாத்திரமே அல்லாமல் மற்றொன்றுக்கும் இல்லை. அதுவும் இருவருடைய சமமான சௌகரியத்திற்குத் தானேயொழிய ஒருவருக்கு அதிக சௌகரியம் ஒருவருக்கு குறைந்த சௌகரியம் என்பதாக சிறிது வித்தியாசங்கூட கொண்ட தாயிருப்பதல்ல. அதிலும் இருவரது சுதந்திரங்களும் சமமாய்க் கருதப்பட்ட தாகவும் அதற்கு எவ்விதத்தடையும் இருப்பதாகவும் இருக்கக் கூடாததாகும். அனேகமாய் இந்த ஒப்பந்தங்கள் எழுதி ரிஜிஸ்டர் செய்வதுதான் இனிப் பொறுத்தமானதாக இருக்கும். வேண்டுமானால் புதுவீடு குடிபோதல், புதிய தொழில் வியாபாரம் முதலிய காரியங்கள் துவக்கப்படுபவை ஆகியவை களுக்காக எப்படி முதலிலேயே சற்று விளம்பரம் இருந்தால் அனுகூலம் என்று கருதுகின்றோமோ அதுபோல் நண்பர்கள், நான்கு பந்துக்கள், அக்கம் பக்கத்தார்கள் ஆகியவர்களுக்கு தெரியக்கூடியதாய் இருப்பதும் நன்மை யானதுதான். அதிலும் ரிஜிஸ்டர் இல்லாத திருமணங்களுக்கு சாக்ஷிகள்


RangaRakes tamilnavarasam.com

இருக்க வேண்டியது அவசியம் என்கின்ற முறையில் பலர் அழைக்கப்படு வதும் சரிதான். ஆனால் இதற்காகவே அதிகச்செலவும் மெனக்கேடும் கூடாது என்பது மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். திருமணச் சடங்கு என்று ஒன்றை தனிப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டியதில்லை.

மணமக்கள் சபைக்கு வந்து தங்கள் தங்கள் ஒப்பந்தங்களைச் சொல்லி ஒப்புக் கொண்டதற்கு அறிகுறியாய் தங்கள் தங்கள் சுருக்கெழுத்துள்ள மோதிரம் மாற்றிக் கொள்வதோ மாலை மாற்றிக் கொள்வதோ போதுமானதே யாகும். இதற்காகவென்று ஏன் அதிகப் பணச்செலவு செய்ய வேண்டும்? என்பதுதான் எனக்கும் புரியவில்லை. புதுச்சேலை, புதுநகை தாம்பூலம் இவைகளெல்லாம் பயனற்ற செலவாகவே ஆகின்றன. அனேக சுயமரியாதை கல்யாணங்களில் மாப்பிள்ளை சாதாரண உடுப்புடன் இருந் திருக்கிறார்கள். பெண்கள்தான் உயர்ந்த சேலையும், விலையுயர்ந்த நகை களும் அணிந்து ஒரு ஆணானவன் பெண் வேஷம் போட்டிருப்பது போல் விளங்குகின்றார் கள். இவையெல்லாம் நாகரீகம் என்பதோடு பெண் மக்களின் தன்மையையே குறைத்து விடுகின்றது. பெண்கள் சுதந்திரத் துக்கும், பெண்கள் விடுதலைக் கும் அவர்கள் மனப்பான்மை சற்று மாறியேயாக வேண்டும். “நான் அடிமையாய்த்தான் இருப்பேன் நீ மாத்திரம் எனக்கு எஜமானனாய் இருக்கக் கூடாது” என்பதில் அர்த்தமேயில்லை.

தவிர பெண்களுக்கு பிள்ளைப்பைத்தியம் இருப்பது மிகவும் புத்தி கெட்டத்தனமாகும். பிள்ளைகள் பெறாமல் இருப்பதற்கு எவ்வளவு சௌக ரியம் செய்து கொள்ளக்கூடுமோ அவைகளை செய்து கொள்ள வேண்டும். கொஞ்சுவதற்கென்று பிள்ளைகளைப் பெற்று அவற்றைக் காப்பாற்றுவதற்கு என்று அதற்கு நேர் விரோதமாய் என்னென்னமோ செய்து அஞ்ச வேண்டி யதாகி விடுகிறது. எவ்விதத்திலும் பொறுப்பில்லாதவர்கள் வெகுதாராளமாய் “16 பிள்ளைகள் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும்” என்று ஆசீர்வாதம் செய்துவிடுகிறார்கள். பிள்ளை பெற்று வளர்க்கக் கஷ்டப் படுகின்றவர்கள் யார் என்பதை யோசித்துப்பாருங்கள். நமது அறிவீன மானது இக் கஷ்டங்களை உணரச்செய்யாமல் செய்து விடுகிறது. உணர்ந் தாலும் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல என்று நினைத்துக் கொள்வதால் அக்கஷ்டத்திலிருந்து விலக முடிவதில்லை.

*குறிப்பு : கும்பகோணம் சாக்கோட்டையில் 12-06-1931 அன்று நடந்த ‘ராகு காலத்’ திருமணத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 21.06.1931**



# திரு. காந்தியின் உண்மைத் தோற்றம்

## தொழிலாளர்களுக்கு எச்சரிக்கை

உயர்திரு. காந்தியவர்கள் மக்கள் கள்ளு, சாராயம் குடிக்கப்பட வேண்டியதின் உண்மையான அவசியத்தைப் பற்றியும், அதை எப்படி, எப்போது நிறுத்த முடியுமென்பதைப் பற்றியும், மற்றும் தான் கேட்கும் சுயராஜியத்தின் தத்துவத்தைப் பற்றியும் தமது அபிப்பிராயத்தை விளக்க மாக வெளியிட்டிருக்கிறார்.

இந்த அபிப்பிராயங்களை அவர் பரோடா சமஸ்தானத்திற்கு இம் மாதம் 12 - ந் தேதி திருவாளர்கள் வல்லபாய் பட்டேல், அப்துல் கபூர்கான் ஆகியவர்களுடன் சென்ற பொழுது அங்குள்ள மக்கள் அளித்த வரவேற்புக் குப் பதில் சொன்ன முறையில் வெளியிடப்பட்டதாகும். அதாவது,

1. “கதரில்லாமல் வெறும் மது விலக்கு ஒரு நாளும் வெற்றி பெறாது.

2. கள்ளு,சாராயக்கடைகளை மூடிவிடுவது நம்முடைய வேலை யல்ல.

3. குடிகாரர்கள் தாங்கள் குடிக்கும் பழக்கத்தை அவர்களாகவே விட்டுவிட்டாலொழிய, திருட்டுத்தனமாய் கள், சாராயம் உற்பத்தி செய்து, எப்படியாவது குடித்துத்தான் தீருவார்கள்.

4. கள்ளு, சாராயக் கடைகள் மூடப்பட்டுவிட்டாலும், இப்பொழு திருப்பது போலவே திருட்டுத்தனமாய் கள்ளு, சாராயம் விற்பனை யாகிக் கொண்டு தானிருக்கும்.

5. குடி வழக்கம் நிற்க வேண்டுமென்றால் குடிகாரர்களுக்குக் கைத்தொழில் கற்றுக் கொடுத்தால் தான் நிறுத்த முடியும். இல்லை யாகில் அவர்கள் தாங்கள் குடிக்கும் வழக்கத்தை ஒரு நாளும் விடமாட்டார்கள்.

6. பெரிய தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழி லாளர்களுக்குத் தங்களது களைப்பையும், ஆயாசத்தையும், தீர்த்துக் கொள்ள மதுபானம் வேண்டியதாயிருக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

7. நான் தென்னாப்பிரிக்காவிலிருந்த பொழுதும், வேலைசெய்து களைத்துப் போனவர்களுக்கு வெகு அன்புடன் சாராய வகைகள் வாங்கிக் கொடுத்து வந்திருக்கிறேன்.

8. அங்கு (தென்னாப்பிரிக்காவில்) என்னுடன் இருந்த கூலி களுக்கும் அவர்கள் சாராயம் கேட்ட பொழுதெல்லாம் நானே கடைக் குப் போய் சாராய வகைகளை வாங்கி வந்து பிரியமாகக் கொடுத் திருக்கிறேன்.

9. மிருகங்களைப் போல் வேலை செய்யும் உழைப்பாளிகளுக்கு மதுபானங்கள் அவசியமாய் வேண்டியிருக்கிறது.

10. தங்கள், தங்கள் வீடுகளிலேயே ஏதாவது ஒரு தொழில் செய் கின்ற தொழிலாளிகள் தான் எளிதிற் குடியை விட்டுவிட முடியும்"

என்று பேசிவிட்டுத் தனது சுயராஜியத்திட்டத்தைப் பற்றிப் பேசியிருப்ப தாவது.

## குடிசைத் தொழில்

1. "கிராமவாசிகளுக்கு அவர்கள் தங்கள் வீட்டிலேயே கை இராட்டினத்தால் நூல் நூற்றல், தறி போட்டு நெசவு நெய்தல், செருப்புத் தைத்தல், பால், தயிர், வெண்ணை ஆகியவைகளைச் செய்தல், மற்றுமிது போன்ற வேலைகளை மீண்டும் புதுப்பிப்பதின் மூலமே கிராம ஜனங்களைச் செல்வவான்களாக்க வேண்டும்.

2. இந்தத் தொழிலால் வரும் வரும்படியே அவர்களுக்குப் போது மானது.

3. மற்றபடி இவர்கள் பம்பாய் வர்த்தகர்களைப் போல பெரும், பெரும் பணக்காரர்களாக இருக்க வேண்டியதில்லை.

4. அவர்களதுபணப்பெட்டிகளில் வெள்ளி நாணயங்கள் கொஞ்ச மாகவே இருக்க வேண்டும்.

5. இது தான் சுயராஜ்ய வேலைத்திட்டமாகும்.

6. சென்ற வருடம் நாம் செய்த வேலை இந்த சுயராஜ்யத்திற்கு அஸ்திவாரமானது" என்று பேசியிருக்கிறார்.

இந்த விபரங்கள் இம்மாதம் 13-ந் தேதி வெளியிடப்பட்ட தினசரிப் பத்திரிகைகளாகிய "சுதேசமித்திரன்" 5-வது பக்கம் 2- வது கலத்திலும், "திராவிடன்" 4-வது பக்கம் 3-வது கலத்திலும் 12-ம் தேதி தமிழ்நாடு 8-வது



பக்கம் 4-வது கலத்திலும் 12-ந் தேதி "ஹிந்து" 8- வது பக்கம் 2-வது கலத்திலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆகவே திரு. காந்தி அவர்கள் கள்ளு,சாராயம் குடிப்பவர்களின் அனுபவத்தைச் சொல்லி அதை யொழிக்கக் கண்டுபிடித்திருக்கும் திட்டங்களென்ன வென்றால் "பெரிய தொழிற் சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்கள், தங்கள் களைப்பையும், ஆயாசத்தையும், போக்கிக் கொள்ளுவதற்கு அவர்கள் கள், சாராயம் குடித்துத் தானாக வேண்டும் – குடித்துத்தான் தீருவார்களென்பதோடு, அவர்களுக்கது வேண்டியதாகவு மிருக்கின்றது" என்பதாகவும் முடிவுகட்டி, தொழில் செய்து களைப்படைந்த மக்களுக்குத் தானே சாராயமும் வாங்கி நேரிலேயே கொடுத்திருப்பதாகத் தனது சுய அனுபோகத்தையும் சொல்லியிருக்கிறார்.

இந்தப்படி இவர் சொல்லுவதில் நமக்கு இப்பொழுது ஆக்ஷே பனையில்லை. ஆனால் கள்ளை நிறுத்துவதின் தத்துவமிப்படி யிருக்கையில் இப்பொழுது தொண்டர்களென்பவர்களை ஏவிவிட்டு, கள்ளு, சாராய கடை களண்டைப் போய் நின்று கொண்டு, மறியல் செய்யும்படி சொல்லுவது எதை யுத்தேசித்து என்றுதான் கேட்கின்றோம்.

"குழந்தைகளிடம் பிரியமிருப்பவர்களுக்கு அக்குழந்தைகளது மலத்தினிடமும் அசிங்கம் தோன்றுவது இல்லை" என்பது போல் மகாத்மா விடமிருக்கும் – இருந்து தீர வேண்டிய "பக்தி"யினால், சில தொண்டர்கள வரது வார்த்தைகளின் யோக்கியதையையே உணர முடியாமல் போக வேண்டியவர்களாகி விடுகிறார்கள்.

மதுவிலக்கு செய்வதானது மக்கள் ஒழுக்கத்தையும், சன்மார்க்கத் தையுமுத்தேசித்தேயொழிய, அரசியல் காரணங்களுக்காக வல்ல வென்று திரு. காந்தியாலேயே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அப்படி யிருக்க இப்போது செய்யப்படும் கள்ளுக்கடை மறியலானது சன்மார்க்கத்திற்கு அதாவது மக்களை கள், சாராயக் குடியிலிருந்து விலக்குவதற்கு அடியோடு பயன்படாதென்று மனதாரத் தெரிந்த பிறகும் கள்ளுக்கடை மறியல் களெதற்காக நடைபெறச் செய்து வருகின்றன? என்பது ஒவ்வொரு வரும், முக்கியமாய் யோசித்துப் பார்க்க வேண்டிய வேலையாகும்.

இது ஒரு புறமிருக்க, குடியொழிப்பதென்கின்ற காரணத்தின் பேரில் திரு. காந்தியவர்கள் சொல்லும் மற்றொரு யோசனை எவ்வளவு மோசமான தாகயிருக்கின்றது என்பதையும், பொது மக்களுணர வேண்டுமென்று விரும்புகின்றோம்.

அஃதென்னவெனில், ஒரு தொழிலாளி இயந்திரத் தொழிற் சாலையில் வேலை செய்தால் அவனுக்கு அதிக களைப்பும், ஆயாசமு மேற்படு மென்றும், அப்போது அவ்வாயாசத்தை தீர்த்துக் கொள்ள அவனுக்குக்



RangaRakes tamilnavarasam.com

கள்ளு, சாராயம், அவசியமாகத்தானிருக்குமென்றும், இதற்கு மறியல் செய்வதால் பலன் ஏற்படாதென்றும், ஒவ்வொருவனும். அவனவன் வீட்டிலேயே ஏதாவதொரு தொழிலைச் செய்தால்தான் அவனுக்குக் களைப்பு இருக்க முடியாதென்றும், அப்பொழுது தான் அத்தொழிலாளி குடிக்கா மலிருக்க முடியுமென்றும் சொல்லுகிறார்.

இது, தொழிலாளர் ஒரு பக்கம் சேர்ந்து வேலை செய்ய ஆரம்பித்தால் அவர்களொன்று கூடி முதலாளிகளுக்காபத்தை யுண்டாக்கி விடுவார் களென்றும், தொழிலாளிகள் தங்களுடைய நிலைமையை யுயர்த்திக் கொள்ள யோசனை செய்து, தொழிலாளித் தன்மையை ஒழித்து விடுவார்களென்றும் பயந்து கொண்டு, முதலாளிகளுக்கனுகூலமாகவும், தொழிலாளிகளின் முன்னேற்றத்திற்கு விரோதமாகவும், அதாவது வர்ணாச்சிரமத்தைப் பிரசாரம் செய்யும் சூட்சித்திட்டமே தவிர, மற்றெவ்வித நியாயமோ, நாணையமோ இதிலிருப்பதாக நினைக்க முடிகின்றதா? என்று கேட்கின்றோம்.

ஏனெனில், இன்றைய தினம் கைத்தொழிலாளிகளென்பவர்கள் அதுவுமவரவர்கள் வீடுகளிலிருந்து கொண்டு சொந்தத்திலேயே ஒரு தொழில் செய்பவர்களென்பவர்கள் 100-க்கு 90 பெயர்கள் குடிகாரராகவேயிருக் கிறார்கள். உதாரணமாக நெசவுத் தொழிலீடுபட்ட, தங்களைப் பிராமணர் களென்று சொல்லிக் கொள்ளுபவர்கள் முதற்கொண்டு சகல வகுப்பாரும் 100க்கு 75 பெயர்கள் குடிகாரர்களாகவே தானிருக்கிறார்கள். உதாரணமாக, மதுரை, சேலம், கோயமுத்தூர் முதலாகிய ஜில்லாக்களைப் பார்த்தாலே இவ்வுண்மையை யாவருமெளிதிலறியலாம். மற்றும்

கொல்லுவேலை, தச்சு வேலை, தட்டார வேலை, சித்திர வேலை, கொத்து வேலை, கொல்லத்து வேலை, கருங்கல் கட்டட வேலை,தோல் பதனிடும் வேலை, செருப்புத்தைக்கும் வேலை முதலியாகிய வீட்டுத் தொழிலாளிகளும் பெரும்பாலும் குடிகாரர்களாகவேயிருக்கிறார்கள். அப்படிப்பட்டத் தொழிலாளிகளையும், "நீங்கள் ஏன் குடிக்கின்றீர்கள்?" என்று காரணம் கேட்டால் திரு. காந்தியவர்கள் சொல்லும் சமாதானத்தையே தான் அவர்களும் சொல்லுகிறார்கள். அதாவது "பாடுபட்டு உழைப்ப வனுக்கு ஏதாவது பரிகாரம் வேண்டாமா?" வென்றுதான் சொல்லுகின் றார்கள்.

தவிரவும், தொழிற்சாலை தொழிலாளிகளைவிட இந்த மாதிரியான தொழிலாளிகளுக்குத் தான் குடிப்பதற்கு சௌகரியமுமதிகமேற்படுகின்றது. எப்படியெனில், அன்றாடமிவர்கள் கைகளுக்குக் காசு கிடைக்கின்றது. இவர்களிஷ்டம் போல் குடித்துவிட்டுத் திரிய நேரமும் கிடைக்கின்றது. ஆகவே "குடிசைத் தொழிலாளிகள் குடிக்கமாட்டார்கள்" என்றும், "குடியை சீக்கிரம் விட்டுவிட முடியு"மென்றும் திரு. காந்தி அவர்கள் சொல்லுவது அவ்வளவு நியாயமும். பொறுத்தமுமான வார்த்தைகளாகுமாயென்பதை யோசித்துப் பார்க்கும்படி விரும்புகின்றோம்.



அன்றியும் திரு. காந்தி அவர்கள் மதுவிலக்குக்கும், கதர் பிரசாரம் அவசியம் என்று ஒரு புதிய சம்பந்தத்தை ஏற்படுத்துகின்றார். அதாவது "கதரைப் பரப்பாமல் குடியை நிறுத்த முடியா"தென்கிறார். இது "ஆடி அமாவாசைக்கும், அப்துல் காதருக்கும் உள்ள சம்பந்தம்" போலவே இருக்கின்றது.

எந்தக் கருத்திவ்விரண்டையுமொன்றாக்கிப் பேசுகிறாரென்பது நமக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் கதர் பரவினால் தொழிலாளிகளுக்கு வரும்படி கிடைக்காது, ஆதலால் குடிப்பதற்கு அவர்களுக்குக் காசில்லாமல் போவதன் மூலம் குடி நின்றுவிடுமென்று கருதி, இப்படிச் சொல்லியிருந்தாலிருக்க லாமேயொழிய மற்றபடி வேறு நியாயம் இருப்பதாகக் காணமுடியாது. ஆனாலும் கதர் பரவியிருக்கும் திருப்பூரில்தான் குடிகாரர் கள் மறியல் செய்பவர்களை யுதைத்து, காந்திக்கும் கொடும்பாவி கட்டி இழுத்ததுடன்; அதற்குக் கள்ளு அபிஷேகமும் செய்தார்கள் என்று தெரியவருகிறது. இது எப்படியோ இருக்கட்டும்.

திரு. காந்தி அவர்களிஷ்டப்படியே பார்த்தாலும், கதர் பரவா மலிருக்கும் போது ஏன் குடி நிறுத்தும் வேலையை (மறியலை)ச் செய்கிறா ரென்பது நமக்கு விளங்கவில்லை.

"கடை மூடப்படுவதனால் குடி நின்று விடா"தென்று தெரிந்தும் காங்கிரசுக்காரர்களால் ஏன் கள்ளுக்கடைகளில் முன் மறியல்செய்து, கலக முண்டாக்கப் படுகின்றதென்பதும் நமக்கு விளங்கவில்லை.

சர்க்கார் சட்டம் செய்து, கள்ளு, சாராய முற்பத்தியும், விற்பனையும் நிறுத்தப்பட்டு விட்டாலும், மற்ற மக்களால், "திருட்டுத்தனமா யுற்பத்தி செய்து, இப்போதைய அளவே திருட்டுத்தனமாய் விற்கப்பட்டு தான்வரு"மென்று தெரிந்தும், சர்க்காரைக் குற்றம் சொல்லுவதையே மது விலக்குப் பிரசாரமாய் ஏன் செய்யப்படுகின்றது என்பது நமக்கு விளங்க வில்லை. "வேலை செய்து களைத்துப்போன தொழிலாளிக்கு களைப்புத் தீரக் கள்ளு, சாராயம் வேண்டியதுதா"னென்று தெரிந்து மிதை யுண்மையாகவே நம்பியும்தானே அதாவது திரு. காந்தியவர்களே தொழிலாளிகளுக்குக் கள்ளு, சாராயம் முதலியவைகளை வாங்கிக் கொடுத்து அதன் மூலமாயவர்களுடைய களைப்பையு மாயாசத்தையும் தீர்த்திருந்தும் எதற்காகத் தொழிலாளிகள் குடிக்கப்போகும் இடங்களில் தொண்டர்களை நிறுத்தி மறியல் செய்யச் செய்கிறாரென்பதும், தொண்டர்களை அடிபடச் செய்கிறா ரென்பதும் நமக்குப் புரியவில்லை.

இந்த அபிப்பிராயங்களையேதான் சென்ற வாரம் "தமிழ்நாடு" பத்திரிகையில் திரு. வரதராஜுலு நாயுடுவும் எழுதியிருந்தார். மந்திரி களானவர்களு மிதையேத்தான் சொல்லுகின்றார்கள். பிரத்தியக்ஷ யனு



RangaRakes tamilnavarasam.com

பவத்திலு மிப்படித்தான் காணப்படுகின்றது. மற்றபடி இதிலுள்ள வித்தியாச மெல்லாம் மேற்கண்டவர்கள் முன்னாலேயே சொல்லிவிட்டார்கள். ஆனால், திரு. காந்தியவர்கள் இம்மாதம் 12-ம் தேதி தானிதைச் சொன்னா ரென்பதைத் தவிர்த்து, வேறு வித்தியாசமில்லை.

அன்றியும், மற்றவர்கள் இவ்விஷயத்தில் வாயில் சொல்லுவதுபோல் செய்கையிலும் செய்கின்றார்கள். திரு. காந்தியோ தான் சொல்லுவதற்கும், தான் செய்யச்செய்வதற்கும் பொருத்தமில்லாமல் நடந்து கொள்ளுகிறா ரென்பதுதான் வித்தியாசமாகும்.

ஆகவே மதுவிலக்கு மறியல் விஷயத்தில் திரு. காந்தி அவர்களிடந் தானிந்தப்படி வித்தியாசமிருந்தாலும், மறியல் செய்யும் தொண்டர்களுக் காவது பகுத்தறிவில்லையா? அல்லது சுதந்திரயுணர்ச்சியில்லையா? அல்லது தங்களபிப்பிராயத்திற்கு மதிப்பில்லையா? அல்லது வேறு வழியில்லையா? என்று கேட்கின்றோம்.

## காந்தி சுயராஜியம்

மறியல் விஷயமிப்படியிருக்க, இனி திரு. காந்தியவர்களின் சுயராஜியத்தில் தொழிலாளர்களின் - கிராமங்களின் நிலைமை யென்ன வென்று பார்ப்போமானால், பரோடா ராஜியத்தில் பேசின மேற்கண்ட வாசகங்களின் பிற்பகுதியில் குடிசைத்தொழிலாகக் கிராமவாசிகள் "கை இராட்டினத்தில் நூல் நூற்க வேண்டியது,"

"கைத்தறியில் நெசவு நெய்ய வேண்டியது,"

"ஆடு, மாடு வாங்கி மேய்த்துப் பால், தயிர், வெண்ணை ஆகியவை களை யுண்டாக்க வேண்டியது,"

"செருப்புத் தைக்க வேண்டியது" "மற்றுமிது போன்ற தொழில் களையே செய்ய வேண்டிய"தென்றுரைத்திருக்கிறார். இப்படிச் சொல்லு வதற்கும் காரணமென்னவென்றால் அவர்களுக்கு அதாவது கிராம வாசிகளுக்கு - தொழிலாளர்கள், பம்பாயிலிருப்பவர்களைப் போல் அதிகப் பணக்காரர்களாக வேண்டியதில்லையாம். ஏனென்றால் அவர்களுடைய பெட்டிகளில் கொஞ்சமாகத்தான் பணமிருக்க வேண்டுமாம். இவ்வளவும் சொல்லிவிட்டு "இதுதான் வரப்போகும் சுயராஜியத்திட்ட" மென்றும் சொல்லி விட்டார். அன்றியும், "இதற்காகவேதான் சென்ற வருஷம் கிளர்ச்சிகள் செய்யப்பட்டு, அதற்கேற்ற விதையும் போடப்பட்டிருக்கிற" தென்பதாகவும் கூறிவிட்டார்.

"குடி அர"சை வெகு கஷ்டத்தோடு வாசிக்கும் வாசகர்களே! மற்றும் "குடி அரசை" வெறுக்கும் காங்கிரஸ் அபிமானிகளே!! காந்தி பக்தர்களே!!!



தேசீய சுயமரியாதைக்காரர்களென்று சொல்லிக் கொள்ளுபவர்களே! இந்தக் கொள்கையை நீங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா? என்று தான் உங்களை நாம் வெள்ளையாய்க் கேட்கின்றோம். தத்துவார்த்தம் சொல்லவராதீர்கள். உண்மையைப் பேசுங்கள்.

கிராமவாசிகள் செருப்புத் தைக்க வேண்டுமாம்! ஆடு, மாடுகள் மேய்க்க வேண்டுமாம்! இராட்டினத்தில் நூல் நூற்க வேண்டுமாம்! கைத் தறியில் நெசவு நெய்யவேண்டுமாம்! ஆனால் பம்பாய்வாசிகள் கோடீஸ் வரர்களாகி, அதற்கு தகுந்த போக போக்கியங்களை யனுபவிக்க வேண்டு மாம்! இதுதான் சுயராஜ்ஜியத்திட்டமாம்! ஆகவே இந்தப்படியான மனோ பாவங்கொண்ட திரு. காந்தியைப் "பாரத நவஜவான்" உண்மை வீரர்கள் "காந்தி ஒழிக!" "காந்தீயம் ஒழிக!!" "காங்கிரஸ் ஒழிக!!!" என்று சொன்னதி லென்ன தப்பிதமிருக்கின்றது? காந்திக்கு வேண்டுமானால், காந்தீயம் யொழியாதென்பதில் நம்பிக்கையிருக்கலாம். ஆனால், நமக்கு இப்படிப் பட்ட காந்தீயம், ஒழிய வேண்டுமா? வேண்டாமா? ஒழியாமல் சமதர்மம் ஏற்படுமா? என்று கேட்கின்றோம். "திரு. காந்தி, இந்தியாவை வெள்ளைக்கார ஆட்சிக்கு முன்னிருந்த பழைய அதாவது ஆதிகாலத்து இந்தியாவுக் குக் கொண்டு போகப்பார்க்கின்றார்" என்று திருவாளர் பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் அவர்கள் சொன்னதிலென்ன தப்பித மிருக்கின்றது? என்று கேட்கின்றோம்.

"ருசியப் பொதுவுடைமைக்காரர்கள்" "இந்திய கிராம வாசிகளுக்கும், தொழிலாளிகளுக்கும், திரு. காந்தி அவர்கள் ஒரு பெரிய துரோகி" என்றும், "காங்கிரஸ், தொழிலாளிகளுக்கும், பாமர மக்களுக்கு மேற்பட வேண்டிய முன்னேற்றத்திற்கு ஒரு பெரிய முட்டுக்கட்டை" என்றும் சொன்னதிலென்ன தப்பிதமிருக்கின்றதென்று கேட்பதுடன் நாமிதுவரை சொல்லி வந்த விஷயங்களிலெந்த வெழுத்துக் குற்றமானதென்றும் கேட்கின்றோம்.

இதைப் படிக்கின்ற காந்தி பக்தர்கள், நம்மீது காய்ந்து விழலாம். நமது குடலைப் பிடுங்கி மாலையாகப் போட வெண்ணலாம். இந்தப்படி எழுதி யதாலேயே ஒரு பத்து சந்தாதாரர்கள் குறையலா மென்பவைகளெல்லாம் நமக்குத் தெரியும். தெரிந்தே தானெழுதுகின்றோம்.

ஆனால் நமது இலட்சியமெல்லாம், "இன்று நம்மை யாரும் "மகாத்மா" வென்றோ, "தேசபக்தன்", "தேசீயத்தலைவன்", "தேசீயத் தொண்டன்" என்றோ சொல்ல வேண்டுமென்பதல்ல. நமது "குடி அரசு" பத்திரிகைக்கு 15,000 சந்தாதாரர்கள் வேண்டுமென்ற ஆசையுமல்ல" வென்பதை வாசகர்களுக்கு நாம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் திரு. காந்தியைப் பற்றி, காந்தீயத்தைப் பற்றி நாம் கொண்ட அபிப்பிராயம் சரியா? தப்பா? என்பதை மக்களின்னும் கொஞ்ச காலம் சென்றாவ துணர்ந்தாலும் போதும் அல்லது இந்த மக்களின் சந்ததிகளாவது உணர்ந்தாலும் போதுமென்பது ஒரு லக்ஷியமாயும், அதையுணராத மக்களால், இந்தியாவிலொரு நாளும் சமதர்மக் கொள்கை ஏற்படுத்த முடியா தென்பதும் நமது முடிவாகும். கடவுளையும், மதத்தையும், வேதத்தையும், தெய்வத் தன்மை பொருந்திய பெரியார்களென்பவர்களையும் பற்றிப் பேசுவதற்கு வேண்டிய அறிவையும், தைரியத்தையும் விட, திரு. காந்தியைப்பற்றியும். காங்கிரசைப் பற்றியும் பேசுவதற்கு சற்று அதிக அறிவும், அதிக தைரியமும், வேண்டியிருக்குமென்பதாக நாம் சிறிதும் கருதவில்லை. நிற்க,

மதத்தில் பார்ப்பனன் – பறையனென்கின்ற இருபாகுபாடுகளு மொழி வதற்கு இருவருடைய கூட்டமுமொழிந்தாக வேண்டுமென்று எப்படி விரும்புகின்றோமோ, அப்படியேதான் சமூக வாழ்வு என்பதிலும், முதலாளி – தொழிலாளியென்பதாகிய பாகுபாடுமடியோடொழிவதற்கு இரு பெயரை யுடைய இரு கூட்டமுமொழிந்தாக வேண்டு மென்கிறோம். ஏனென்றால் முதலாளி – தொழிலாளி என்கின்ற பதமே, வைசிய – சூத்திர என்று சொல்லப் படும் வருணாச்சிரம தர்மக் கொள்கைக்கு ஏற்படுத்தப் பட்டதே யாகும். வைசியன்– சூத்திரனென்பது வடமொழிப் பதங்கள். அதாவது சமஸ்கிருத வார்த்தைகள். முதலாளி – தொழிலாளியென்பது தென் மொழி பதங்கள். அதாவது தமிழ் வார்த்தைகள். ஆகவே இவ்விரண்டிலும், பாஷை வித்தியாச மென்பது மாத்திரம் தவிர கருத்து வித்தியாசமென்பது சிறிது மில்லையென்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

சூத்திரனென்றால், சரீரத்தில் வேலை செய்பவன் – முதல் மூன்று பேருக்கும் தொண்டு செய்பவன் – அடிமை யென்பவைகளே, அதையுண் டாக் கியவர்களின் வியாக்கியானமாகும். அதுபோலவே தொழிலாளியென் றாலும். சரீரத்தில் வேலை செய்பவன் – மற்றவர்கள் அவசியத்திற்கும், வாழ்க் கையின் தேவைக்குமே வேலை செய்யும் வேலையாள் – தொண்டன் யென்பவைகளேயாகும்.

அவனுக்கும் உணவுமட்டுந்தானளிக்க வேண்டும். இவனுக்கும், ஜீவனத்திற்குப் போதுமான அளவுதான் ஏதாவது கொடுக்க வேண்டும். ஆகவே, இந்தப் பாகுபாடுகளை சனாதன மகாநாட்டிலும், ஆரியதரும பரி பாலன மகாநாட்டிலும், பிராமண மகாநாட்டிலும், பேசும் போது "மனு தர்மம்" "வருணாச்சிரமபாதுகாப்பு" ஆகிவிடுகின்றது. இவைகளை விட்டு காங்கிரஸ் மகாநாட்டிலும், அரசியல் மகாநாட்டிலும் பேசும்போது "சுயராஜியம்", "முதலாளி – தொழிலாளித்தன்மை பாதுகாப்பு" ஆகிவிடுகின்றது. ஆகவே இரண்டு மகாநாடுகளிலும், ஒரே கருத்தின் மீதுதான், ஒரே மனப்பான்மை யுள்ள மக்களால் தான் பேசப்பட்டும், தீர்மானிக்கப்பட்டும் வருணாச் சிரமதர்மம் வெற்றி பெற்று வருகின்றது.



இந்தத் தருமம் வியாபார முறையில் மாத்திரமல்லாமல், விவசாய முறையிலுமிந்தக் கருத்துடனேயே தானிருந்து வருகின்றது. அதாவது, ஜமீன்தாரன் மிராசுதாரன் யென்பவர்களாகின்ற பூமிக்குச் சொந்தக் காரர்களும், விவசாயத்தொழில் செய்யும் கூலியும், அதாவது பண்ணையும்– பண்ணையாளுமாகிய இரண்டு பிரிவுகளும் கூட வைசியன்– சூத்திரனென் கின்றப் பதங்களின் – தத்துவத்தின் கருத்தேயாகும். அதனால்தான், வருணாச் சிரம தரும முறையில் பூமியுடையவர்களையும், வைசிய வருணத்திலேயே சேர்க்கப்பட்டிருக்கின்றது. அதனாலேயேதான். திரு. காந்தியும், பூமி யுடைவர் களையும் அதாவது ஜமீன்தாரர்கள் முறைமையையும் காப்பாற்றப் பாடுபடு கின்றேனென்று அடிக்கடி சொல்லிவருகிறார்.

உதாரணமாக, அதே 12ந் தேதி "சுதேசமித்திரன்" பத்திரிக்கையின் 5–வது பக்கம் 6–வது கலத்தில் "மகாத்மாவும் இனாம்தாரர்களும்" என்கின்ற தலைப்பின் கீழ் தனது கருத்தை விளக்கமாய் தெரிவித்திருக்கின்றார்.

அதாவது, ஜமீன்தாரர்களின் கோஷ்டியொன்று, தங்களுடைய நன்மைகளைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காக திரு. காந்தி அவர்களை, இம்மாதம் 10–ந் தேதி பம்பாயில் கண்டு கேட்ட பொழுது, "ஜமீன்தாரர்க ளுடைய சொத்துரிமைகளுக்குத் தீங்கிழைக்க நான் கனவிலும் கருத வில்லை"யென்று சொல்லி யிருக்கிறார்.

இதனாலேயேதான் வருணாச்சிரமதருமம், பிறவியிலானாலும் சரி தொழில் முறைமையிலானாலும் சரி, அடியோடு ஒழிக்கப் பட்டாலொழிய சமதர்மமேற்பட முடியாதென உரைக்கின்றோம். ஆனால் திரு. காந்தியவர் களோ இந்த "வருணாச்சிரமமென்பதைத் தொழில் முறையில்தான் நான் சொல்லுகிறேன்" என்பதாகச் சொல்லிவிட்டு, உடனேயே அதற்கடுத்த வாக்கியத்தில் ஆனால் "தொழில் முறையென்பது பரம்பரைக்கிரமமாக இருக்க வேண்டு"மென்று சொல்லி வருகின்றார். இதற்கும் காரணம் சொல்லும் பொழுது இந்தப்படி அதாவது "தொழிலானது, பரம்பரைத்தொழில் முறையைக் கொண்டதாயிருந்தால்தான் உலகம் கிரமமாய் நடைபெற முடியும், தொழிலுமொழுங்காய் நடைபெறு"மென்று சொல்லி வருகிறார்.

ஆகவே, எந்தக் காரணத்தைக் கொண்டானாலும் சரி, எந்த முறை மையிலிருப்பதானாலும் சரி, வருணாச்சிரம தருமமென்பதை அடியோடு ஒழித்தாக வேண்டியதுதான் மக்களின் முக்கியக் கடமையாகும். வருணாச் சிரமமொழிந்த இடந்தான் விடுதலை – சமதர்ம நிலையமாகும்.

ஆதலால், முதலாளி – தொழிலாளி யென்கின்றத் தன்மை எக் காரணத்தைக் கொண்டும், எம்மாதிரியிலுமிருக்க விடக்கூடா தென்றேதான். பொது மக்களுக்கு நாம் யெடுத்துக் சொல்லுகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

காங்கிரசில், தொழிலாளர்களுடைய யோக்கியதையுயர்த்தப் படு மென்று சொல்லுவதெல்லாம், ஒரு மனிதனை "நல்ல தொழிலாளியாயிருக் கச் செய்யப்படு"மென்று சொல்லுவது போல்தானேயொழிய வேறில்லை.

தொழிலாளிகள் என்று ஒரு தனி வகுப்பு இருக்கும்படி செய்து. அவர்களுக்கு எவ்வளவுதான் உயர்ந்த நிலைமை ஏற்படுத்திக் கொடுத்தாலும், அந்த நிலைமையிலும் சரீரப்பாடுபடுவதொரு கூட்டமாகவும், அதன் பயனை யடைவது மற்றொரு கூட்டமாகவுமிருக்கத் தக்கப் பாகுபாடுகளிருக்கின்றதா? இல்லையா? என்றுதான் கேட்கின்றோம். "நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும், தோட்டிக்குப் புல் சுமக்கும் வேலை மட்டும் போகா"தென்பது போல, இந்தத் திட்டமடியோடு மாறவில்லையானால் எந்த ஆக்ஷி வந்துதானென்ன பயன்? யாரைத்தான் இந்த நாட்டைவிட்டு விறட்டி என்ன பயன்? என்று கேட்கின்றோம்.

"ஒவ்வொருவருடைய உரிமைகளும், பாதுகாக்கப்படு" மென்கின்ற சுயராஜ்யத்திட்டமே சூதும், வஞ்சகமும், நிறைந்ததும், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் கழுத்துக்குச் சுருக்குப் போடும் திட்டமாகு மேயல்லாமல் எந்த விதத்திலும் சுருக்கைத் தளர்த்தும் திட்டமாகாது. ஊரார் உழைப்பில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு இப்போதுள்ள பாத்திய தைகள் சிறிதாவது மாறக் கூடியதுமாகாது.

ஆகையால்,ஆங்காங்குள்ளஅறிவுள்ள மக்கள், பொது ஜனங்களுக் கும், இந்த அபிப்பிராயங்களை தைரியமாய் வெளியில் எடுத்துச் சொல்ல வேண்டும். மறியலைக் கண்டு மக்களேமாந்து போகாமல், அதிலுள்ள முரண்பாடுகளையும், புரட்டுகளையும், உள்ளெண்ணங்களையும் தைரியமாய் வெளியாக்க வேண்டியது மிக்க அவசியமாகும்.

அதாவது, ஒவ்வொரு ஊரிலும் தைரியமாய்க் கூட்டங்கள் போட்டோ, அல்லது துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்தோ இவ்விஷயங்களைப் பரப்ப வேண்டும். விவரங்களறியாப் பாமர மக்கள், "கள்ளுக்கடைகாரனுக்கனு கூலக்கார"னென்றோ "சர்க்காராருக் கனுகூலக்கார"னென்றோ தங்களைச் சொல்லுவார்களென்று யாரும் பயந்து கொள்ளக்கூடாது. சொன்னால் சொல்லிக் கொண்டு போகட்டும். அதற்காக, நமது, கடமையை நாம் விட்டு விடக் கூடாது. இந்த இருபதாவது நூற்றாண்டில், அதுவும் மேல்நாடுகளி லெல்லாம் தொழில் முறையிலும் வருணாச்சிரமதர்ம தத்துவமடியோ டொழிந்து வருமிக்காலத்தில் இந்த நாட்டில், வருணாச்சிரம தருமம் பரம்பரை முறையில் இருந்து வர முயற்சிகள் நடப்பதென்றால் இந்நாட்டு மக்களின் கேவலமான நிலைமைக்கும், முட்டாள்தனத்திற்கும் வேறு அத்தாக்ஷியே வேண்டியதில்லை.



கடைசியாக ஒரு வார்த்தை, அதென்ன வென்றால், தொழிலாள சகோதரர்களும், தொழிலாளிகளிடம் அனுதாபமுள்ளவர்களென்பவர்களு மெந்த விதத்திலிந்தக் காங்கிரசையும், காந்தீயத்தையுமாதரிக்கின்றார் களென்பது தான் நமக்கு ஆச்சரியமாயிருக்கின்றது.

தொழிலாளர்கள் காங்கிரசையும், காந்தீயத்தையும் ஆதரிப்பதும், அவைகளுக்கு அனுசரனையாயிருப்பதுமென்பது "உதைக்கின்ற கால் களுக்கு முத்தம் கொடுப்பதை"யே யொக்கும்.

தொழிலாளிகள் ஏதாகிலும் தங்களுடைய நிலைமையை உயர்த்திக் கொள்ளவேண்டுமானால் இதுதான் அவர்களுக்குத் தக்க சமயமென்பதை ஞாபகப்படுத்துகின்றோம்.

இந்தத் தொழிலாளிகளொன்று கூடி தொழிலாளர்களென்பதாக ஒரு பிரிவோ அல்லது அவர்களுக்கென்று ஒரு தனிசட்டமோ இல்லாமலிருக் கவும் பார்த்துக் கொள்ளவேண்டியக் குறிப்பை மனதில் வைத்தே வேலை செய்ய வேண்டுமென்பதையும் குறிப்பிட்டுவிட்டு இதை முடித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 21.06.1931**



RangaRakes
tamilnavarasam.com

# சுயமரியாதை உதயம்

## பெண்கள் சுதந்திரம்

### சொத்துரிமை

மைசூர் சமஸ்தானத்தில் பெண் மக்களுக்கு சொத்து உரிமை அதாவது தகப்பன் சொத்தில் பெண்களும் பங்கு பெறவும் சொத்துக்களை வைத்து சுதந்திரமாய் அனுபவிக்கவும் உரிமை பெற்று விட்டார்கள்.

### கல்யாண ரத்து

பரோடா சமஸ்தானத்தில் ஆணும், பெண்ணும் கல்யாண ரத்து, செய்து விலகிக் கொள்ள சட்டம் கொண்டுவர அனுமதிக்கப்பட்டாய் விட்டது.

அதாவது, தம்பதிகளில் ஆணோ, பெண்ணோ 7-வருஷகாலம் இருக்குமிடம் தெரியாமல் பிரிந்து இருந்தாலும், வேறு மதத்தைத் தழுவிக் கொள்வதால் இஷ்டமில்லா விட்டாலும், சன்னியாசியாகி விட்டாலும், 3-வருஷ- காலம், ஒற்றுமையின்றி சதா குடும்பத்தில் கண்டிப்பாயிருந்தாலும், வேண்டாம் என்று பிரிந்து போய்விட்டாலோ, குடியில் மூழ்கினவர்களா யிருந்தாலோ, சதா பிறர் மீது காதலுள்ளவர்களாக இருந்தாலோ, ஆகிய காரணங்களால் துன்பப்படும் புருஷனோ, மனைவியோ தங்கள் விவாகங் களை சட்ட மூலம் ரத்து செய்து கொள்ளலாம்.

மற்றும் கல்யாணமாகும் சமயத்தில் தம்பதிகளில் யாராவது செவிடு, ஊமை, வியாதி, குருடு, பைத்தியம் ஆகியவைகள் இருந்ததாகவோ அல்லது மைனராக இருந்ததாகவோ தெரிய வந்தாலும், இஷ்டப்படா தவர்கள் தன்னை கல்யாணப் பந்தத்தில் இருந்து விலக்கிக் கொள்ளலாம். இந்தப்படி விலகிக்கொண்ட 6 மாதம் பொருத்து அவரவர்கள் இஷ்டப்படி வேறு கல்யாணம் செய்து கொள்ளலாம்.

### மைசூரில் கல்யாண வயது

மைசூர் சமஸ்தானத்தில் பெண்களுக்கு 14வயது ஆனபிறகு தான் கல்யாணம் செய்ய வேண்டும் என்று சட்டம் கொண்டு வர ஏற்பாடா யிருக்கிறது.



செங்கல்பட்டுத் தீர்மானங்களைப் பார்த்த கனவான்கள் ஜஸ்டிஸ் பேப்பர் உள்பட "சுயமரியாதை இயக்கம், மத சமூகத்தைக் கட்டு திட்டமில் லாமல் செய்கின்றது" என்று சொல்லி கொண்டிருப்பவர்கள் இப்போது இந்திய சமஸ்தானங்களைப் பார்த்தாவது புத்தி பெறுவார்கள் என்று கருது கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 21.06.1931**



RangaRakes tamilnavarasam.com

# துருக்கியில் பெண்கள் முன்னேற்றம்

திரைமறைவில் உரை போட்டுக் கொண்டு இருக்க வேண்டிய பெண்கள் இன்று துருக்கியில் பிறந்ததின் பயனாய் திரையை அவிழ்த்துத் தள்ளி உரையைக் கழட்டி எறிந்து விட்டதோடல்லாமல் “எங்களுக்குக் கல்யாணம் வேண்டாம். கல்யாணம் செய்து கொள்ளுவதன் மூலம் புருஷர்களுக்கு அடிமையாய் இருக்க இனி நாங்கள் சம்மதிக்கமாட்டோம்”

என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். இதோடு நிற்காமல் ‘எங்களுக்கு உத்தியோகம் வேண்டும்’ என்றும் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். புர்தாவை-கோஷாவை-படுதாவை “மதக்கட்டளை” என்று சொல்லப்பட்ட மார்க்கத்தில் பிறந்தும்-இஸ்லாம் மார்க்கத்தின் பிரமுகரான கலீபா இருந்த பிரதான நகரமாகிய துருக்கியில் பிறந்தும் துருக்கியானது கமால்பாஷா என்கின்ற ஒப்பற்ற ஒரு வீரரின் ஆக்ஷியில் இருக்க நேர்ந்ததின் பயனாய் இன்று அப்பெண்மணிகள் “எங்களுக்கு கல்யாணம் வேண்டாம், உத்தியோகம் வேண்டும்” என்று சொல்லக்கூடிய யோக்கியதை அடைந்து விட்டார்கள். அவ்வளவோடு மாத்திரமல்லாமல் பாங்கி முதலிய வியாபார ஸ்தலங்களிலும் அதாவது சதா பல புருஷர்கள் நடமாடும் இடங்களிலும் தங்கள் தலையைக் கத்தரித்துக் கொண்ட அழகான முஸ்லீம் பெண்கள் தாராளமாய் வேலையில் அமர்ந்திருக்கிறார்கள். மெடிக்கல் காலேஜ் (வைத்தியக் கலாசாலை) லா காலேஜ் (சட்டக் கலாசாலை) முதலிய இடங்களில் பெண்கள் அதிகமாக சேர்ந்து படிக்கிறார்கள். அவர்களில் பலர் “ஆண்கள் பலபேர் கல்யாணம் இல்லாமல் இருக்கும்போது நாங்கள் ஏன் கல்யாணம் இல்லாமல் இருக்கக் கூடாது”? என்று கேட்கின்றார்களாம்.

மற்றும் பலர் “ நாங்கள் கல்யாணம் செய்து கொள்ளுவதாயிருந்தால் நன்றாய்ப் பழகி சகல குணமும் தெரிய நேர்ந்த புருஷர்களைத்தான் கல்யாணம் செய்து கொள்வோம்” என்று சொல்லுகின்றார்களாம்.

மற்றும் பலர் “ நாங்கள் 40 வயது ஆனபிறகுதான் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கத் துடங்குவோம்” என்று சொல்லுகின்றார்களாம். பெண்கள் முன்னேற்றம் என்னும் துறையில் துருக்கிப் பெண்கள்தான் உலகத்திற்கே வழிகாட்டிகளாக ஏற்படக்கூடும் என்றே நினைக்கின்றோம். ஆகவே இந்தியா வில் உள்ள சகல பெண்மணிகளும் ஒன்று துருக்கிப் பெண்களைப் பின்பற்ற



வேண்டும், அல்லது துருக்கியில் பிறக்காததற்காக ஒப்பாரிவைத்து அழ வேண்டும். இல்லையேல் மதக்கட்டளைகளுக்கு தாங்களே (பெண்கள்) வியாக்கியானம் சொல்லப் புறப்படவேண்டும். இம்மூன்றைத் தவிர வேறு மார்க்கம் இல்லை.

**குடி அரசு - கட்டுரை - 21.06.1931**



RangaRakes tamilnavarasam.com

# C.I.D.திரு.காந்தியின் தீண்டாமையின் திருகணி வியாக்கியானம்

உயர் திரு காந்தியவர்களை ஒரு தென்னாட்டுப் பார்ப்பனர் ஒருவர் தீண்டாமையைப் பற்றி சந்தேகம் தெரிவிக்குமாறு ஒரு கடிதம் எழுதி இருந்தார். அதற்கு பதிலாக திரு. காந்தி எழுதி இருப்பதில் காணும் குறிப்பாவது,

தீண்டாமை விஷயமான காங்கிரஸ் தீர்மானங்கள் இன்னும் அரசியல் திட்டத்தில் ஒன்றாக நிருவப்படவில்லை. அதாவது நான் சொல்லுவதுதானே ஒழிய இன்னமும், அரசியல் கொள்கையாக ஒப்புக்கொள்ளவில்லை. ப-ர்) அப்படி நிறுவப்பட்டாலும் நீதிஸ்தலங்கள் (அதாவது கோர்ட்டுகள்) இவற்றை கவனித்துக்கொள்ளும். வேதங்களினுடையவும் சாஸ்திரங்களினுடையவும் கட்டளைகளை புறக்கணிக்கப்படமாட்டாது. (அதாவது அவைகளுக்கு விரோதமாக ஒன்றும் செய்யப்படமாட்டாது. ப-ர்) காங்கிரஸ் அமைப்பு போதுமான அளவு விரிவுள்ளதாகவே இருக்கின்றது. (அதாவது எப்படி வேண்டுமானாலும் வியாக்கியானம் செய்து கொள்ள தகுதியாகவே இருக்கின்றது. ப-ர் )

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 21.06.1931**



# இந்து முஸ்லீம்

இந்த நாட்டில், இந்துக்கள், முஸ்லீம்கள் என்கின்ற இரண்டு சமூகங்களும் பெரும்பான்மையான மக்கள் எண்ணிக்கையுடைய சமூகங்களாகும். ஆனால் அவை இரண்டும் தங்கள் தங்களது நடை உடை ஆச்சாரம் அனுஷ்டானம் ஆகியவைகளில் ஒன்றுக்கொன்று நேர் விரோதமான சமூகங்கள் என்பதோடு உண்மையைப் பேச வேண்டுமானால் இவ்விரு சமூகங்களும் அரசியலிலும் மத விஷயத்திலும் ஒவ்வொருவருடைய இலக்ஷியங்களிலுங்கூட வேறுபட்ட தென்று சொல்லும்படியான சமூகங்களாகும்.

உதாரணமாக நடை உடை ஆசார அனுஷ்டானங்களிலுள்ள மாறுபாட்டைப் பற்றி நாம் யாருக்கும் எதுவும் எடுத்துச் சொல்ல வேண்டிய தில்லை என்று கருதினாலும், அரசியல் மத இயல் இலட்சியங்களில் இருவரும் வேறுபட்டவர்கள் என்பதில் சிலருக்காவது விவரம் தெரிய வேண்டியிருக்கலாம். ஆதலால் அதைப் பற்றிக் கவனிப்போம்.

இந்தியாவிலிருக்கும் இந்துக்களில் 1000க்கு 998 பெயர்கள் மத உணர்ச்சியின் பயனாகவே மகமதியர்களை வெறுக்கின்றார்கள் என்று சொல்லுவதிலும் அதுபோலவே இந்தியாவின் பெரும் பகுதியில் உள்ள மகமதியர்களில் 1000க்கு 999 பெயர்கள் இந்துக்கள் என்பவர்களை வெறுக்கின்றார்கள் என்பதிலும் யாருக்கும் சந்தேகமிருக்காது. இதில் ஒரு சமயம் எண்ணிக்கைகளிலும் ஏதாவது ஒரு சிறு அளவு வித்தியாசம் இருந்தால் இருக்கலாமே யொழிய ஒருவரையொருவர் வெறுக்கின்றார்கள் என்கின்ற உண்மையில் வித்தியாசம் இருக்குமென்று யாரும் சொல்லமுடியாதென்றே கூறுவோம்.

ஏனெனில் மகமதியர்களை இந்துக்கள் மிலேச்சர்கள் என்றும், முரடர்கள் என்றும் கருதும்படியாக இந்துமத ஆதாரங்களிலும் இந்தியாவின் சரித்திரங்கள் என்று சொல்லப்படுபவகைகளிலும் காணப்படுவதுடன் இன்றைய உண்மையான இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்களால் மகமதியர்கள் தொடுவதற்கோ - உண்பவை தின்பவைகளில் கலந்து கொள்ளுவதற்கோ அருகரற்றவர்கள் என்றே கருதியிருக்கின்றார்கள் என்பதில் ஆக்ஷேபணையிருக்க முடியாது. அதுபோலவே இந்துக்களைப் பற்றியும் மகமதியர்களுக்கு தங்களது மத சம்பிரதாயப்படி இந்துக்களை இழிவாய்



RangaRakes tamilnavarasam.com

கருதவும் தங்களுக்கு நிரந்திர எதிரியாய்க் கருதவுமான உணர்ச்சிகள் தான் இருந்தும் வருகின்றது. இன்னும் மதக்கொள்கைகள் என்பது அந்தந்த மதக்காரர்கள் அல்லாதவர்களுக்கு உலகத்தில் இட மில்லை என்று கருதக் கூடிய அளவில் தாண்டவமாடிக் கொண்டி ருக்கின்றன.

ஆகையால் தான் இந்துக்கள் இந்தியநாடு தங்களுடையது என்ற மனப்பான்மை மீது இந்தியாவில் தாங்களே ஆதிக்கம் செலுத்த வேண்டு மென்று ஆசைப்படுகின்றார்கள் என்பதையும் அதுபோலவேதான் மகமதியர்கள் இந்தியா முழுவதும் மகமதிய இராஜ்யமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றார்கள் என்பதையும் பார்த்து வருகின்றோம். இருவருடைய மதசம்பந்தமான ஆதாரங்களும் இந்த இலட்சியத்தை வலியுறுத்துவதாகக் கொண்டதென்றே சொல்லுவோம்.

இந்திய அரசியல் தலைவர் திரு. காந்தி அவர்கள் அடிக்கடி தனது ‘சுயராஜ்யத் திட்டத்தின் கருத்து ராமராஜ்யம்’ என்று சொல்லுவதே இந்துக் களின் அரசியல் மனப்பான்மையை விளக்கக்கூடியதாகும்.

அதோடு மகமதியர்கள் மாட்டுமாமிசம் சாப்பிடுவதை இந்துக்கள் அருவறுப்பதும், இந்துக்கள் தெருவில் மேளம் அடிப்பதை மகமதியர்கள் தடை செய்வதும் போதிய உதாரணங்களாகும். ஏனெனில், இந்த இரண்டு தத்துவங்களிலும் மத உணர்ச்சியிருக்கின்றதே தவிர மற்றபடி பொது நோக்கு உணர்ச்சியில்லை என்பது விளங்கும்.

நிற்க, இந்நாட்டில் இந்துக்கள், மகமதியர்கள் என்கின்றதான பெயர் கொண்ட இரு சமூகங்களென்பதில், எண்ணிக்கையில் இந்தியாவில் மகமதியர்களைவிட இந்துக்கள் என்பவர்கள் அதிக எண்ணிக்கையுள்ளவர் களென்று சொல்லுவதானாலும் அதாவது மகமதியர்களைவிட இந்துக்கள் 3 பங்கு அதிகமான எண்ணிக்கையுடையவர்கள் என்று கணக்கு சொல்லு வதானாலும் உண்மையில் மகமதியர்களே இந்தியாவில் வலிமைபொருந்திய சமூகத்தார் என்றுதான் சொல்லவேண்டும்.

ஏனெனில் இந்துக்களின் ஜனசங்கை எவ்வளவு பெரிய எண்ணிக்கை யாயிருந்தாலும் அதில் பல பிரிவுகள் ஏற்பட்டு சின்னா பின்னனப்பட்டு தங்களை ஒரு சமூகம் என்ற சொல்லிக்கொள்ளமுடியாத நிலைமையில் பிரிக்கப்பட்டுக் கிடப்பதால் மகமதியர்களே இந்துக்களை விட பெரிய சமூகமாவார்கள் என்கின்றோம்.

மேலும் இந்துக்கள் என்கின்ற கூட்டத்திலிருந்து பஞ்சமர்கள் அல்லது ஆதிதிராவிடர்கள் என்கின்ற சமூகத்தாரான 4ல் ஒரு பங்கு ஜனத்தொகைக் கொண்ட சமூகத்தை விலக்கித்தான் இந்து சமூக எண்ணிக்கை யைக் கணக்குப் போடவேண்டும். ஏனெனில் அவர்களை ஒரு வித அடிமை



யாகவும் மிருக ஜீவன்களைவிட கேவலமாகவும் இந்துக்கள் கருது கிறார்கள். இதுபோலவே இந்துக்களில் மற்றும் பலசமூகங்கள் ஒன்றுக் கொன்று உயர்வு தாழ்வு என்று சொல்லிக்கொள்ளும் முறையில் சமத்துவம் பாராட்டப்பட முடியாத – ஒற்றுமை பாராட்ட முடியாத நிலைமையிலுள்ள பல பிரிவு களையும் கூர்ந்து பார்த்தால் தானாகவே மகமதிய சமூகம் தான் அதிக எண்ணிக்கையுடையது என்பதும் விளங்கும்.

அன்றியும் மகமதியர்கள் தங்களை எல்லோரும் இஸ்லாமானவர்கள் என்று சொல்லிக்கொள்வது போல் இந்துக்கள் எல்லோரும் தங்களை ஒரு கூட்டத்தில் சேர்த்துச் சொல்லிக் கொள்ள வார்த்தையே கிடையாது. ஒருவித பாவனையும் கிடையாது. தனித்தனி சமயம், ஜாதி, வகுப்பு, உட்பிரிவு ஆகியவைகளைச் சொல்லிப் பிரித்துக்காட்டிக் கொண்டே தீரவேண்டிய வர்களாய் இருக்கிறார்கள்.

வேண்டுமானால் வேறு ஒருவனை ஏமாற்றும் போதும் வேறு ஒருவனுடன் சண்டைக்குப் போகும்போதும் மாத்திரம் தான் இந்து என்றால் என்ன என்று உணர்ந்து கொள்ளமுடியாத மக்களைப்பிடித்து “நாம் எல்லோரும் இந்துக்கள்” என்று உரிமை பாராட்டுவதும், அது தீர்ந்த பிறகு அந்த மக்களையே “எட்டி நில் தொடாதே” என்பதுமான குணங்கள் இந்து சமூகத்தி லுள்ள, சகல பிரிவார்களிடமும் இருந்துவருவது வழக்கமாகயிருந்து வருகின்றது. இது பார்ப்பனனானாலும், சைவனானாலும், வைணவனானாலும், வேளாளனானாலும், “எந்த வருண”த்தானானாலும் மற்றும் யாரானாலும் இவர்களுக்கெல்லாம் இந்த உணர்ச்சி இயற்கை உணர்ச்சியாயி ருந்தே வருகிறது.

ஆகவே இத்தியாதி காரணங்களால் இந்துக்கள் என்பவர்கள் தங்களை ஒரு சமூகம் என்று சொல்லிக் கொள்ளமுடியாத நிலைமையில் வெகுகாலமாய் இருந்து வருவதும் இந்துக்கள் தவிர மற்ற சமூகங்கள் எவ்வளவு சிறியதாயிருந்தாலும் அவை ஆதிக்கத்திலிருந்து வருவது மாயிருந்து வருகிறது. மற்றும் இந்தக் காரணமேதான் இந்தியாவை வெளிநாட்டு மக்களே அதாவது “இந்துக்கள் அல்லாத சமூகமே” ஆளக் கூடியதாகவும் இருந்து வருகின்றது. ஆகவே இந்து சமூகமும் இஸ்லாம் சமூகமும் இந்தியாவில் இப்போதுள்ள ஆக்ஷியின் பயனாய் எவ்வளவு கஷ்டப்பட்டு வருவ தாயிருந்தாலும் ‘அன்னிய ஆக்ஷியை’ ஒழிக்கும் விஷயத்தில் ஒன்றை யொன்று நம்பி ஒத்து வேலை செய்யமுடியாமல் இருந்துவருவதுடன் மூன்றாவதொருவனுடைய தீர்ப்பே இவர்களது வாழ்வுக்கு வேண்டியதாய் இருக்கின்றது.

ஆதலால் புதிய அரசியல் சீர்திருத்தக் கிளர்ச்சியில் இந்து முஸ்லீம் ஒற்றுமை என்பதான முயற்சிகள் யார் யாரோலோ எவ்வளவு முயற்சிகள் செய்தும் முடிவு பெறாமல் முறிந்துபோய்விட்டது நமக்கு சிறிதும் ஆச்சரிய



RangaRakes tamilnavarasam.com

மாக இல்லை. இம்முயற்சியின் அஸ்திவாரமே ஒருவரையொருவர் யேய்க்கும் தத்துவத்தில் இருந்து முளைத்ததே தவிர உண்மையில் நல்ல எண்ணத்தின் மீது சிறிதும் யேற்பட்டதல்லவென்றே சொல்லுவோம். இருவருக்கும் உள்ள தகராறு என்பதே பிரதிநிதித்துவம் என்பதில் மாத்திரம்தான் இருந்து வருகின்றதேயொழிய இன்னமாதிரி சீர்திருத்தம் வேண்டும் என்பதில் இருப்பதாகக் காணவில்லை.

ஆகவே ஒருவர் கோரும் பிரதிநிதித்துவம் மற்றொருவர் கொடுக்க சம்மதிக்காததும் ஒருவர் கொடுக்கும் பிரதிநிதித்துவம் மற்றொருவருக்கு திருப்தி இல்லாததும் ஒருவரிடம் ஒருவருக்குள்ள அவநம்பிக்கையே யாகும்.

ஆதலால் இருவரும் அவநம்பிக்கைப் படுவதிலிருந்தே ஏமாற்றும் தன்மைதான் ஒற்றுமை என்கின்ற ரூபத்தில் இருந்துவருகின்றது என்பது விளங்கும். இந்த நிலையில் நாம் யார் மீதாவது அதிகமான குற்றம் சொல்ல வேண்டுமானால் இந்துக்கள் என்பவர்கள் மீதுதான் அதிக குற்றம் சொல்ல வேண்டியதாய் இருக்கின்றது. அதாவது இந்துக்கள் இடம் தான் ஏய்க்கும் எண்ணம் அதிகமாய் இருக்கின்றது என்று சொல்லுவோம். எப்படியெனில் இந்தியாவில் இந்துக்கள், மகமதியர்களை நினைப்பதைவிட இன்னும் அதிக இழிவாய்க் கருதும் 5, 6 கோடி மக்கள் தீண்டாதவர்களாய் தெருவில் நடக்கா தவர்களாய், கல்வியின்றி, நல்ல உடையின்றி, நல்ல ஆகாரமின்றி, இருக்க வீடு இன்றி, குளிக்க தண்ணீர் இன்றி, தொழில் செய்ய உரிமை இன்றி அடிமைப் படுத்திக் கொடுமைப்படுத்தி இம்சிக்கப்பட்டு வருகின்றார்கள். இவர்களைப் பற்றி எந்த இந்து தலைவருக்கும் மகாத்மாக்களுக்கும் சிறிதும்– கடுகளவும் கூட இந்த அரசியல் கிளர்ச்சி ராஜியில் – திட்டத்தில் சேர்த்துக் கொள்ள கவலையே இல்லாமல் இருந்து வருகின்றார்கள். அவர்களுடைய நிலைமையைப் பற்றிய யோக்கியமான பேச்சே இந்து தலைவர்களுடைய இலக்ஷியத்தில் கிடையவே கிடையாது. மகமதியர்களுடன் ராஜி செய்து கொள்ளவேண்டும் என்கின்ற கவலையுள்ளஅரசியல் ஸ்தாபனமானது தீண்டாதவர்களுடன் ராஜி செய்து கொள்வதைப்பற்றி இலக்ஷியப்படாமல் இருப்பதற்குக் காரணம் தீண்டாதவர்கள் பலமற்றவர்கள், அறிவற்றவர்கள் என்கின்ற எண்ணங்களை விட வேறு ஒரு காரணமு மிருக்கமுடியாது என்றே சொல்லுவோம்.

ஏனெனில் தீண்டாதவர்கள் என்பவர்களும் அரசியல் ஒற்றுமையில் தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதாவது இந்துக்களிடம் நம்பிக்கை இல்லை என்பதை காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அரசியலில் தங்களுக்குத் தனி பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள். இந்திய அரசியல் ஸ்தாபனத்தில் அவர்கள் கலந்து கொள்ளா மலேயே இருந்து வருகின்றார்கள். இப்படியெல்லாம் இருந்தும் இவர்களைப் பற்றி இந்துத் தலைவர்கள் சிறிதும் இலக்ஷியமில்லாமல் இருப்பதும்,



மகமதியர்கள் விஷயத்தில் இவ்வளவு கவலைப்படுவதும் என்றால் இதில் ஏமாற்றும் தன்மை இல்லை என்று எப்படி சொல்லமுடியும்? அன்றியும், 5 கோடி ஜனத்தொகையுள்ள அந்த ஒரு சமூகத்திற்கு 2, 3 பேர்களே வட்ட மேஜை மகாநாட்டுக்கு பிரதிநிதிகளாய் இருக்கின்றார்கள் என்றால் இந்துக்கள் மாத்திரமல்லாமல் அரசாங்கத்தாரும் அவர்களை ஏய்த்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

இவர்கள் இப்படி ஏன் செய்கின்றார்கள் என்றால் மகமதியர்கள் ‘உதைப்பதற்கு’ தயாராய் இருக்கிறார்கள். உயிரை விடத் தயாராய் இருக்கி றார்கள். வேறு மதஸ்தனை கொன்றாலும் கொல்லுவதின் மூலம் செத்தாலும் மோக்ஷமென்று கருதி இருக்கிறார்கள். அந்த உணர்ச்சிதான் அவர்களை மனிதர்களாக வாழச்செய்கின்றது.

நமது தீண்டாதவர்கள் என்பவர்களோ காலில் விழுந்து கும்பிடுவதை– சாமி சாமி என்று கெஞ்சுவதை – உதைக்க உதைக்க உதைத்த காலுக்கு முத்தம் கொடுப்பதை ‘மோக்ஷம்’ என்று கருதுகின்றார்கள். ஆதலால், மகமதியர் களது மோக்ஷ வழியை கண்டு உலகம் நடுங்குகின்றது. தீண்டாதவர்கள் என்பவர்களின் மோக்ஷ வழியைக்கண்டு உலகம் அவர்கள் மீது ஏறி சவாரி செய்கின்றது. இந்த நிலைமையில் ஒருவருக்காவது ஒருவருக்கு உண்மை ராஜியோ, ஒற்றுமையோ, நம்பிக்கையோ எப்படி உண்டாகக் கூடும் என்பதை யோசித்தால் உண்மை விளங்கும்.

இந்த நிலைமையில் ‘சுயராஜியம்’ எப்படி சாத்தியம் என்பதை யோசித்தாலும் உண்மை விளங்கும். இந்தியாவானது சுயராஜியத்திற்கு தகுதியாய் இருந்தால் அதைப் பெறுவதினின்றும், தடுக்க இந்த உலகத்தில் யாராலும் முடியவே முடியாது. இந்து, இஸ்லாம் சமயங்களும் வருணாச்சிரம தர்மமும், தீண்டாமையும் உள்ளவரை உண்மையான விடுதலை ‘சுயராஜ்யம்’ இந்தியா ஒருநாளும் பெற முடியவே முடியாது என்பதை மனதில் வைத்து அவை ஒழியத் தகுந்த வேலை செய்வதுதான் ஒற்றுமையும் விடுதலையும் அடையும் மார்க்கமாகுமே தவிர வேறில்லை.

இன்றையத் தினம் இந்தியாவில் ஏதோ பிரமாதமாய் விடுதலைப் போர் நடப்பதாக கூறப்படுவதும் காணப்படுவதும் வெறும் புரட்டேயாகும். இது ஒரு இந்தியப் பணக்காரனும், மேல் ஜாதிக்காரனும், ஒரு புறமாகவும், வெள்ளைக்காரப் பணக்காரன் ஒரு புறமாகவும் இருந்து கொண்டு தங்கள் தங்கள் நன்மைக்கு என்று செய்து வரும் ஒரு போராட்டமேயாகும். அதாவது வெள்ளைக்காரப் பணக்காரன் தனது அரசாக்ஷி என்னும் தந்திரத்தை ஒரு ஆயுதமாகவும், இந்தியப் பணக்காரனும், மேல்ஜாதிக் காரனும் இந்திய பாமர ஜனங்களின் முட்டாள்தனத்தையும், சில மக்களின் வேலையில்லாத்தனத் தையும் வயிற்றுப் பிழைப்பையும் ஆயுதமாக வைத்துக்கொண்டு செய்யப் படும் யுத்தமேயாகும்.



RangaRakes tamilnavarasam.com

யுத்த நிறுத்த ராஜியின் போதும் இதே காரணம்தான் திரு. காந்தி இந்திய வர்த்தக சங்கத்தின் கௌரவ அங்கத்தினராகவும் லார்டு இர்வின் ஐரோப்பிய வர்த்தக சங்கத்தின் கௌரவ அங்கத்தினராகவும் இருந்துதான் ராஜி பேசினார் கள். ஆகவே முறையே இருவரும் இந்திய வர்த்தகர்கள் சார்பாகவும் ஐரோப்பிய வர்த்தகர்களின் சார்பாகவுமே பேசி ராஜி செய்து கொண்டார்கள்.

ஆகவே இவை முதலாளிகளுடைய போராட்டங்கள் என்பதும் இதற்கு பாமர மக்களையும் தொழிலாளிகளையும் பலி கொடுக்கின்றார்கள் என்பதும் அரசியல் கிளர்ச்சிகளில் சிறிது கலந்து அனுபோகப்பட்டிருந் தாலும் கண்ணாடியில் பிரதி பிம்பம் தோன்றுவது போல் விளங்கும்.

இந்த யுத்தம் ஒருவாறு முடிந்தவுடன் இதே பாமர மக்களும் வயிற்றுக் கில்லாத ஆட்களும் உண்மை விடுதலைக்குப் பாடுபட திரும்பக் கூடும் என்றாலும் இப்பொழுது நடக்கும் போராட்ட முடிவு நிபந்தனையில் அப்படிப் பட்ட ஒரு யுத்தம் அதாவது உண்மை விடுதலைக்கு உரித்தான யுத்தம் மறுபடியும் ஏற்படாமல் இருக்கும்படியான பந்தோபஸ்து செய்வதும் ஒரு பெரிய காரியமாய் இருந்து வருகின்றதை உணருகின்றோம்.

அதுதான் புதிய சுயராஜ்ய திட்டம் என்பதில் உள்ளஅதாவது சமஷ்டி அரசாங்கமுறை என்று சொல்லப்படுவதான, சுதேச அரசர்களின் ஆக்ஷி யையும் இந்த சீர்திருத்தத் திட்டத்தில் சேர்த்திருப்பதும், மத நடுநிலைமையும், ஒவ்வொரு சமூகத்தினுடைய உரிமையும் காப்பாற்றுவது என்பதுமான நிபந்தனைகளுமாகும். சுதேச இராஜாக்கள் நமது ஆக்ஷியில் கலந்து கொள்வது என்பது ‘பணக்காரர்கள் காப்பாற்றப்படுவார்கள்.’ என்பதும், மத நடு நிலைமை என்பது ‘இரண்டு மதத்தின் பேராலும் பல சோம்பேறிகள் வாழலாம்’ என்பதும், ஒவ்வொரு வகுப்பு உரிமையும் காப்பாற்றப்படும் என்பது ‘பார்ப்பனர்கள் காப்பாற்றப்படுவார்கள்’ என்பதும் தானே தவிர வேறில்லை. ஆகவே இந்த சுயராஜியக் கிளர்ச்சி என்பது பணக்காரன், சோம்பேறி, பார்ப்பான் ஆகிய கூட்டம் பிழைப்பதற்கும் நிலையாய் தங்கள் நிலைமையை பந்தோபஸ்து செய்து கொள்வது என்பதற்குமே அல்லாமல் வேறு ஒன்றுமில்லை என்பதாக உறுதி கூறுவோம்.

இந்தப் போராட்டமானது முதலாளிகள் சண்டை என்பதற்கு உதாரணம் என்னவென்றால் வெளிநாட்டுச் சாமான்களை பகிஷ்கரிப்பது என்பதே யாகும். எப்படியெனில் இந்தப் பூச்சாண்டியை அரசியலில் 1907ம் வருஷம் முதலிலிருந்தே கையாளப்பட்டு வரும் தந்திரமாகும்.

இந்த பகிஷ்காரம் என்பது புரட்டு என்பதற்கு அத்தாக்ஷி வெளி நாட்டுத்துணியை பகிஷ்கரிப்பதற்காக கதரைப் பர்த்தி செய்ய ஏற்பாடு செய்திருக்கும் காரியமேயாகும். கதரில் இயந்திரம் முதலிய முதலாளியை காப்பாற்றுவதும், கூலிக்காரனை, தொழிலாளியை அடக்கி வைப்பதுமான



தத்துவம் அடங்கியிருப்பது நன்றாய் விளங்கும். ஒவ்வொரு அரசியல் கிளர்ச்சியின் போது (Boycott) “பாய்காட்” “பகிஷ்காரம்” என்று சொல்லிக் கொண்டு கலவரம் செய்துவிட்டு, ஏதாவது ஒரு அதிகார – உத்தியோக சௌகரியம் கிடைத்தவுடன் அந்நிய நாட்டு வியாபாரத்தை தாராளமாய் விட்டுவிட்டு எலக்ஷன்களில் போட்டிபோடுவதும் யாவரும் அறிந்த தேயாகும்.

இந்தியாவில் ஒரு பழமொழியுண்டு. அதாவது “கொட்டை நூற்று பஞ்சம் விடியுமா?” என்று சொல்லுவதுண்டு. இதன் கருத்து என்னவென்றால் நூல் நூற்பதினால் தரித்திரம் ஒழியுமா என்பதேயாகும்.

ஆகவே இன்றைய சுயராஜ்ய முயற்சிக்கும் ஏழைகள் பணக்காரர்கள் ஆவதற்கும் தொழிலாளிகள் பிழைப்பதற்கும் கள்ளுக்குடி ஒழிவதற்கும் கொட்டை நூற்க வேண்டியது (ராட்டினத்தில் நூல் நூற்கவேண்டியது) தான் முக்கிய மார்க்கமாயிருக்கின்றது என்பது எவ்வளவு தந்திரமானது என்பதை யோசித்தால் சிறிதளவு மூளையுள்ளவர்களுக்கும் தெரியாமல் போகாது.

இதுபோலவே கள்ளுக்கடை மறியல் என்பதும் எலக்ஷன் நெருங்க நெருங்க இது ஒரு எலக்ஷன் பிரசாரமாய் புறப்படுவதும், எலக்ஷன் முடிந்த வுடன் மறியல் ஒழிந்து போவதுமல்லாமல் வேறு அதில் ஏதாவது நாணய மிருக்கின்றது அல்லது இருந்தது என்றாவது யாராவது சொல்ல முடியுமா என்று யோசித்தால் அதன் புரட்டும் விளங்காமல் போகாது.

ஆகவே கதரும், மறியலும், இந்து, முஸ்லீம் ஒற்றுமை முதலிய காரியங்களாலும் ஏற்படப்போகும் பயன் என்ன என்பதை அறிவுடைய – சுயநலமற்ற மக்கள் உணர்ந்து பாமர மக்களுக்கு எடுத்துரைக்க வேணுமாய் விரும்புகின்றோம்.

இதைப்பற்றிய மற்றும் விபரங்களையும் சுதேச சமஸ்தானங்கள் என்பவைகளின் யோக்கியதைகளையும் மற்றொரு சமயம் புள்ளி விவரங் களுடன் எழுதுவோம்.

**குடி அரசு – தலையங்கம் – 28.06.1931**



RangaRakes tamilnavarasam.com

# சித்தயங்கோட்டை "மக்கள் விடுதலை சேவை சங்கம்" திறப்பு விழா

ஆர்வமுள்ள அக்கிராசனாதிபதி அவர்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!!

இந்த ஊரில் மக்கள் விடுதலைசேவை சங்கம் என்பதாக ஓர் சங்கம் புதிதாக ஏற்படுத்த யுத்தேசித்து, அதை திறந்து வைக்க வேண்டுமென என்னை அழைத்ததற்காக நான் நன்றி செலுத்துகின்றேன். இவ்வூர் பிரமுகர் கள் அளித்த வரவேற்புக்கும், வாசித்துக் கொடுத்த உபசாரப் பத்திரப் புகழ் மொழிக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவை எனது தகுதிக்கும், அளவுக்கும் மீறிய வகையில் செய்யப் பட்டிருப்பதால், அவை களை நான் ஏற்றுக்கொண்டேனென சொல்லுவதற்கு முடியாத நிலைமை யிலிருக்கிறேன். இயக்கத்தினிடம் உங்களுக்கிருக்கும் ஆசையால் மெய் மறந்து, அன்பினால் மரியாதை செய்திருக்கிறீர்கள். ஏனெனில், எனக்குப் பொருந்தாததும், மேம்பட்டதுமான வாசகங்கள் வரவேற்புப் பத்திரத்தில் மிகுதியும் காணப்பட்டிருக்கிறது. நமது அக்கிராசனர் உரைத்தது போல் மரியாதை செய்யும் முறையில் அதிகமாகச் செய்யப் பட்டிருக்கிற தென்ப தாகவே கருதினாலும் அவ்வார்த்தைகள் எனது கொள்கைகளுக்காதார மாயிருக்குமென நினைத்து அதன்மூலம் நீங்கள் ஆதரவளிப்பதாய்க் கருதி உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

சகோதரர்களே! இன்று, இங்கு மக்கள் விடுதலைச்சங்கமென்பதை நான் சடங்கு முறையில் திறந்து வைக்க வேண்டியவனாயிருக்கின்றேனே யொழிய வேறு வகையிலில்லை. ஏனெனில், அது ஏற்கனவே திறந்து தானிருக்கிறது. ஆனால், பொது ஜனங்களுக்கு விளம்பரம் செய்வதற்காக இப்படியொரு சந்தர்ப்பம் செய்து கொண்டிருக்கிறீர்களென்றே கருதுகிறேன். அன்றியும், இதைப்பொதுஜனங்கள் தெரிந்து, பயன்படுத்திக்கொள்ள வேண்டு மென்பதற்காகத்தா னிந்தச்சமயம் நானும் சில வார்த்தைகள் சொல்லுகின் றேனே யொழிய வேறில்லை. இதற்காகவே மற்றும் பல பெரியோர்களும் பல அரிய விஷயங்களை எடுத்துச் சொல்ல இங்கு வந்திருக்கிறார்கள், இச் சங்கத்தின் நன்மையைப் பற்றியும், அவசியத்தைப் பற்றியும் அக்கிராசனர வர்கள் எடுத்துரைத்தார். ஆனாலும், என்னிடமிருந்தும் சில வார்த்தை



களெதிர்பார்க்கிறீர்களென நினைக்கிறேன். இப்பொழுது உங்கள் ஊரில் நிறுவப்பட்டிருக்கும் இச்சங்கத்தால் நீங்கள் ஏராளமான நன்மையை யடையக் கூடும். ஆனால் நீங்கள் இச்சங்கத்தை சரியானபடி பயன்படுத்திக் கொள்ளத் தவறுவீர்களாகில், இச்சங்கத்தினால் யாதொரு பிரயோஜனமுமேற்படா தென்றே சொல்லுவேன். அதோடு இந்தக் கிராமத்திய மக்களுக்கு சரியான உணர்ச்சியில்லையெனவும்தான் கருத வேண்டும். இச்சங்கத்தால் மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இவ்வூர் பிரமுகர்கள் முன் வந்து இவ்வளவு பிரபலமாய் இதைத் துடங்கி இருக்கிறார்கள். இச்சங்கமானது இன்று சித்தய்யங்கோட்டை மக்களுடையதாக இருக் கலாம். நாளை இச்சங்கமே மதுரை ஜில்லா முழுவதிலு முள்ள மக்களுடைய தாகலாம். பிறகு தமிழ்நாடுடையதாக விருக்கலாம். கடைசியாக இந்தியா தேசம் முழுவதும் பரவி உலக மக்களுக்கே அறிவுபுகட்டக் கூடிய தாகவு மிருக்கலாம். இச்சங்கத்தை இந்த ஒரு கிராமத்துக்கு மட்டுமென்று நினைத்து விடாதீர்கள். உலக மக்களுக்கே விடுதலை ஸ்தாபனமாக விளங்கவேண்டும் என்று கருதி வேலை செய்யுங்கள். ஒவ்வொரு நாடும் இவ்வாறு ஒவ்வொரு சங்கங்களை ஸ்தாபித்துத்தான், அந்தந்த நாட்டு மக்களுடைய விடுதலைக் காகப் பாடுபடுகின்றது. நாம் எந்தெந்த வகையில் நமது மக்களை விடுதலை செய்ய முடியுமென்பதை முதலில் யோசித்துப் பார்க்க வேண்டும். அதற்கு ஆதாரமாக மற்ற தேசங்களில் எவ்வாறு பாடுபட்டு மக்கள் விடுதலைய டைந்து மேன்மையை அடைந்திருக்கின்றார்களென்பதையும் உணர்ச்சி பெற்றிருக்கின்றார்களென்பதையு மறிந்துதான் நாமும் நமது மக்கள் விடுதலைக்கு வழிதேட வேண்டியவர்களாயிருக்கின்றோம். ஏனெனில் நமக்கு விடுதலை என்பதற்கே இன்னமும் அருத்தம் தெரியாதவர்களா யிருக்கிறோம். இந்த ஊரானது பெரும்பாலும் கைத்தொழிலாளிகள் நிறைந்த ஊராகும். ஆகவே இந்த ஊர் தொழிலாளிகள் எவ்வளவு தூரம் விடுதலை பெற்று எவ்வளவு தூரம் முன்னுக்கு வர வேண்டுமென்பது இந்த ஊர் தொழிலாளிகளைப் பார்த்தே தெரிந்து கொள்ளமுடியாது. வெளிநாட்டு நிலையையும் பார்த்தால்தான் விளங்கும். உதாரணமாக இந்த ஊர் கைத் தொழிலாளி ஒருவன் தினம் 1–க்கு 4 அணா கூலி கிடைத்தால் போதுமென நினைக்கக்கூடும். ஆனால் மதுரையிலுள்ளவன் எவ்வளவு சம்பாதித்து எப்படி வாழுகின்றான் என்பதையும், மதராசிலுள்ளவன் எவ்வளவு சம்பாதித்து எப்படி வாழுகின்றான் என்பதையும் கவனித்துப் பார்த்தால் தான் அவனது நிலை எப்படிப்பட்டது என்பது அவனுக்கு விளங்கும்.

அதுபோலவே வெளிநாட்டிலும் அதாவது அமெரிக்காகாரன் எப்படி வேலை செய்து எவ்வளவு சம்பாதிக்கிறான்? ருஷியாகாரன், இங்கிலாந்துக் காரன் எப்படி சம்பாதித்து எப்படி வாழுகிறான் என்பதையெல்லாம் கவனித் தால்தான் கைத்தொழில் எப்படி இருக்கவேண்டும், எதற்கு முயற்சிக்க வேண்டும் என்பதெல்லாம் விளங்கும். ஆனால் நமது தொழிலாளிகளில் அநேகருக்கு ஒன்றுமே தெரியாது. விடுதலையென்றால் என்னவென்றும்



RangaRakes tamilnavarasam.com

தெரியாது. உதாரணமாக ஒரு தோட்டத்தில் வேலை செய்யக் கூடியவன், நாள்தோறும் 12மணி நேரம் வேலை செய்கின்றான். இன்னொரு தோட்டத்திலே தினம் 10 மணி நேரந்தான் வேலை செய்கிறார்கள். மற்றும் சில தோட்டங்களில் வேலை செய்பவர்கள் 10மணி நேரம் வேலை செய்தாலும் குடியிருப்பதற்கு ஒரு வீடும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இன்னும் சில தோட்டங்களில், மனிதர்கள் குறைந்த அளவு வேலை செய்வதுமல்லாமல் சரீரத்தால் அதிகப் பிரயாசை படுவதற் கில்லாமல் இயந்திரங்களுமமைக்கப் பட்டிருக்கின்றது. இவைகளை யெல் லாம் கவனிக்கக் கூடிய ஒரு தொழிலாளி, தனக்கும் அவ்வாறு உதவியை அளிக்கும்படியாக அதாவது விடுதலை வேண்டுமென கேட்கக்கூடும். ஆகையால் தொழிலாளி என்பவர்களும் அடுத்த தேசங்களைத் திரும்பிப் பார்த்தால் தான் அவர்களுக்கு விடுதலை யின்னதென்பதை அறிந்து கொள்ளமுடியும்.

அதுபோலவேதான் மற்ற மக்களும் மற்ற துறைகளிலும் விடுதலை என்பதை அறிய மற்ற நாடுகளையும் அங்குள்ளமக்கள் நிலையையும் உணரமுடியும். இம்மாதிரியான விடுதலை என்பதை நாமடைய வேண்டு மானால், அதற்கு நாம் எப்படி உழைக்கவேண்டும்? எந்தெந்தத் துறையில் முன்னேறியிருக்க வேண்டும்? முற்போக்குக்கு எவ்வாறு பாடுபடவேண்டும்? ஆகியவைகளை அவசியம் அறிய வேண்டும். மக்கள் விடுதலையடைவ தற்குரிய மார்க்கங்கள் எவை என்று யோசித்தால் பல இருக்கின்றன என்பது விளங்கும். பொதுவாக மக்கள் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அவசி யம் வேண்டியிருப்பவைகள் கல்வி, செல்வம், தொழில், சமூக சமத்துவம், பெண்கள் சமத்துவம், பெண்கள் விடுதலை ஆகியவைகளிலேயே நமக்கு முதன் முதலாக விடுதலை வேண்டியிருக் கின்றது. மற்ற தேசத்தாருடைய கல்வி, செல்வம், தொழில், சமத்துவம், நாகரீகம், விவாகம், விவாகரத்து ஆகியவைகளுடன் நமது தேசத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால்தான் நமது நாட்டின் தன்மை நமக்கு சுலபமாக விளங்கும். அதோடு நமது நிலை இவ்வாறிருப்பதற்குக் காரண மென்ன? என்பதையும் அறிந்து அவை களினின்று விடுதலையடையும் படியான மார்க்கங்களைத் தெரிந்து, அதற்கென பாடுபட்டோமேயானால் நமக்கு நிச்சயமாகவே வெற்றியேற்படும். ஆகவே சகோதரர்களே! இவ்விஷயங் களில் என்னுடைய புத்திக்கு சரியென்று பட்டதையும், அனுபோகத்துக்கு ஒத்திருக்கக் கூடியவைகள் எனறு பட்டவைகளைத்தான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.நான் கூறும் விஷயங்களுக்கு ஆட்சேபணையே கிடையா தென்கின்ற தீர்மானத்தின் மீதாவது, அல்லது ஆட்சேபணையே இல்லை யென்ற எண்ணத்தின் மீதாவது நான் உங்களுக்குச் சொல்ல வரவில்லை. நான் கூறுபவைகள் எனக்கு நியாயமாக யிருக்கின்ற தென்பதுதான் என்னுடைய அபிப்பிராயமாகும். ஆதலால் அதை அலக்ஷியம் செய்ய உங்களுக்கு பூரண உரிமையுண்டு. நீங்கள் என்னுடைய அபிப்பிராயங்களையும் யோசனைகளையும் அறிய ஆவலுள்ளவர்களாயிருக்கின்றீர்கள் என்று நான் உணர்வதினால் எனக்குப்



பட்ட உண்மையை உரைக்க வேண்டியவனாக யிருக்கின்றேன். அபிப்பிராய பேதங்களுக்கு மக்கள் கட்டுப்பட்டவர்களே யாவார்கள். ஒருவர் அபிப்பிராயம் மற்றொருவருக்கு பிடிக்காமலிருப்பது சகஜமேயாகும். ஆனால் அவர்களுக்குப் பட்டதை அவரவர்கள் சொல்ல இடம்தந்து அதை ஆராய்ந்து பார்ப்பது நியாயமும் அறிவுடைமையுமாகும். மக்கள் பலவித எண்ணங்களையுடைவர்களும், மனதையுடையவர்களுமாவார்கள். நமது எல்லோருடைய கண்களும் ஒவ்வொரு விஷயங்களில் ஒவ்வொரு மாறுதலு டையதாகத்தானிருக்கும். ஆனால் நன்றாய் அறிவு அனுபவம் ஆகியவை களைக் கொண்டு ஆராய்ச்சி செய்தால்தான், நாமும் உண்மையை உணர்ந்து ஒருவித முடிவை அடையமுடியும் இல்லையாகில் குழப்பத்தில்தான் இருக்க வேண்டும்.

ஆகவே சகோதரர்களே! நான் சொல்வனவெல்லாம் எனது சொந்த அபிப்பிராயங்கள் தான் என்று நான் சொல்வதோடு நான் ஒரு சாதாரண மனிதன் தான். நான் எவ்வித தெய்வத்தன்மை பொருந்திய ஒரு தீர்க்க தரிசியல்ல. ஆகையால், தனிமனிதன் என்கிற முறையில் தான் என்னுடைய அபிப்பிராயங்களையும், நான் பார்த்தும் ஆராய்ச்சி செய்தும் அனுபவத்தில் அறிந்ததுமானவைகளைத்தான் அதிலும் எனக்கு சரியென்று பட்டதைத் தான் உரைக்கின்றேன். "ஒரு பெரியாருரைத்து விட்டா"ரென கருதி, நீங்கள் அப்படியே அவைகளைக் கேட்டு நம்பி விடுவீர்களானால், அப்பொழுது நீங்கள் யாவரும் அடிமைகளேதான். நான் உரைப்பவைகளை நீங்கள் நம்பாவிட்டால் பாவமென்றாவது தோஷமென்றாவது அல்லது நரகத்துக் குத்தான் போவீர்கள் என்றாவது சொல்லிப் பயமுறுத்தவில்லை. யார் உரைப்பதையும் கேட்டு நாம் வேதவாக்கென அப்படியே நம்பிவிட்ட தினால் தான் நாம் இன்று அடிமைகளாக யிருக்கின்றோம். நான் உரைப் பவைகளை ஆராய்ந்து பாருங்கள். உங்களுக்கு அவைகள் உண்மை யெனத் தோன்றி னால் அவைகளை ஒப்புக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் தள்ளி விடுங்கள். உண்மையெனப் புலப்படுமாகில் அவைகளை உண்மையென ஒப்புக் கொள்ளுவதில் மட்டும் பிரயோஜனமில்லை. அதை அனுஷ்டானத்தில் கொண்டுவந்து அதன்படி நடக்க முயற்சியுங்கள். எனது சொந்த அனுபோகங் களை நான் அறிந்து உங்களுக் குரைப்பது தான் என்னுடைய விடுதலை. அவைகளை ஆராய்ந்து அறிந்து அதன்படி நடப்பதுதான் உங்கள் விடுதலை.

## கல்வி

தற்காலம் கல்வியானது நமது நாட்டில் மிக்க மோசமான நிலைமை யிலிருக்கின்றதென்பதுதான் என்னுடைய அபிப்பிராயமாகும். அரசாங்க அறிக்கைகளின் மூலமாகவும் அடிக்கடி பிரசுரிக்கப்படும் புள்ளிகளின் மூலமாகவும் நமது நாட்டில் படித்த மக்களென்பவர்கள் 100க்கு 10 பெயர்கள் தானிருக்கின்றார்கள். பாக்கியுள்ள 90 பெயர்களும் தற்குறிகளாகத்தானிருக்



RangaRakes tamilnavarasam.com

கின்றார்கள். இவைகளிலும் பிராமணர்களைத் தள்ளி பிராமண ரல்லாதார் களில் 100க்கு எத்தனை படித்த மக்களிருக்கின்றார்களென்பதை பார்த்தோமே யானால், அவர்களோ 100க்கு 5 பெயர் கூட படித்தவர்கள் இருக்க மாட்டார்கள். நாம்தான் அவ்வறிக்கைகளின் கடைசி வரியிலிருக்கின்றோம். அரசாங்க அறிக்கையிலும் பார்ப்பனரல்லாதாரில் அநேக வகுப்பார் கல்வியில் பின்ன டைந்திருப்பதால் அவர்களுக்கு என்று கல்வி சம்பளம் கூட குறைந்திருக் கின்றார்கள். பெண்களுக்கு சம்பளமே இல்லை என்றும் ஏற்பாடு செய்திருக் கிறார்கள். ஆனால் மற்ற நாடுகளில் 100க்கு 50, 60, 70 வீதமும் இன்னும் சில நாடுகளில் நமது நாட்டுப் பார்ப்பன சமூகம் போல 100க்கு 100 மக்களும் படித்த வர்களாகயிருக்கின்றார்கள். நமது நாட்டில் மட்டும் 100க்கு 90 பெயர்கள் தற்குறியாயிருப்பதற்குக் காரணமென்ன? அதுவும் பார்ப்பனரல்லாதவர் சமூகம் 100க்கு 95க்கு தீண்டாதார் சமூகம் 100க்கு $99^3/_4$ ம் பெண்கள் சமூகம் 100க்கு 99 $^1/_2$யும் தற்குறிகளாயிருப்பதற்கு காரணம் என்ன? இதற்கு அரசாங்கமா காரணம்? என்பதை யோசித்துப் பாருங்கள். இதற்குக் காரணம் கண்டு பிடிக்க இதுவரை நாம் என்ன செய்திருக்கின்றோம்? என்ன செய்கின்றோம்? என்பதை கவனித்துப் பாருங்கள். அரசாங்கம் நமக்குக் கல்வி கற்றுக் கொடுக்க வில்லையா? அல்லது அரசாங்கத்தில் பண மில்லையா? அல்லது மக்களுக்கு கல்வி கற்கவேண்டுமென்கிற ஆசை யில்லையா? யென்பவைகளைக் கவனித்தோமானால் ஏன் மக்கள் கல்வி கற்கவில்லை? என்பதற்குக் காரணம் விளங்கும். சகோதரர்களே, நமது சமூகம் இதற்கு முன் என்றைக் காவது கல்வி அறிவுடன் இருந்ததாக சொல்லக் கூடுமா? என்று யோசித்துப் பாருங்கள். அப்பொழுது அதன் உண்மை தெரியும், சர்க்காரார் பார்ப்பனர்களுக்கு மட்டும் தானா படிப்பு சொல்லிக் கொடுக்கின்றார்கள்? இல்லவே இல்லையே, எல்லோரையும் ஒன்றாய்தானே பாவிக்கிறார்கள். ஆதலால் இதிலுள்ள சூக்ஷியை அறிந்தீர்களானால் விடுதலையின் உண்மைத் தத்துவம் விளங்கும். நமது மதத் தத்துவப்படிக்கு ஆதிகாலத்திலினின்னன்ன ஜாதிதான் கல்வி கற்க வேண்டுமென சட்ட திட்டங்களிருந்தன. படிக்க ஒரு ஜாதியும், படிப்பு சொல்லிக்கொடுக்க ஒரு ஜாதியும் இருந்து வந்ததோடு அதிலும் இன்னது இன்னதுதான் படிக்க வேண்டுமென்பதுமாகிய திட்டங்களும் ஆதியிலிருந்தது. இவைகளை நாம் வெளியிலெடுத்துரைத்தால், எல்லாரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆட்சே பனை செய்பவர்களெ வருமேயில்லை. ஒரு தடவை திரு. கோகலே அவர்கள் "பெண்களும் படிக்க வேண்டியது மிக்க அவசியமே. ஆகையால் அவர் களையும் ஆண் களைப் போல் பள்ளிக்கூடங்களுக் கனுப்ப வேண்டு"மென பம்பாயில் உரைத்த பொழுது மக்கள் அவரைத் துன்பப்படுத்தி, இம்சித்து, "கோகலே அயோக்யன், அவன் இருப்பதற்கே தகுதியில்லை" எனவும் உரைத்தார்களாம். ஆண் மக்களின் நிலைமையை விட பெண் மக்களின் நிலைமை படிப்பு விஷயத்தில் மிக்க மோசமானதாகவே இருக்கின்றது. இதிலும் தீண்டாதார் எனப்படுபவர்களின் நிலைமையே இன்னும் இதைக்



காட்டிலும் மிக்க மோசமானதாகவே இருக்கின்றது. கல்வி மக்களுக்கு அவசியமென்பதை அறிந்து மக்கள் ஒத்துக்கொண்ட போதிலும் கூட, மேல்ஜாதிக்காரர்கள் என்பவர்கள் மற்றவர்கள் படிக்காமலிருப்பதற்குரிய பல தந்திரங்கள் இன்னமும் செய்துகொண்டு தானிருக்கின்றார்கள். சில இடங்களில் தீண்டப்படாதாருக்கு பள்ளிக் கூடங்களே இல்லை. அப்படி பள்ளிக் கூடங்கள் சில யிருந்தபோதிலும் கூட போதுமான உபாத்தியாயர்கள் அப்பள்ளிக்கூடங்களுக்கு அகப்படுவதுமில்லை. அப்படியொரு சமயம் பள்ளிக்கூடமும், உபாத்தியாருமிருந்த போதிலும் கூட, தீண்டாதாரின் மக்கள் சில தெருக்களில் நடந்து அப்பள்ளிக் கூடங்களுக்குச் செல்ல உரிமை யில்லை. அவர்கள் அத்தெருக்களில் நடமாடக் கூடாதென தடுக்கப்படு கின்றார்கள். இவ்வளவு கஷ்டங்களையும் அவர்கள் மீறி, படிக்க ஆரம்பித் தாலோ அவர்கள் படிப்பதற்கு போதிய பணமில்லை. அவர்களுக்குப் போதுமான சாப்பாடில்லை. இத்தகையைக் கஷ்டங்களை நாம் எப்படி நீக்க வேண்டும்? என்று பார்த்தால் நமது சமூகத்திற்கு மதவிஷயத்தில் உள்ள முட்டுக் கட்டைகளை முதலில் நீக்குவதுதான் எல்லோரும் படிக்க முயற்சி செய்வ தாகும். மதத்தை காப்பாற்றிக்கொண்டு எல்லோரும் படிக்க வேண்டு மென்பது அறியாமையேயாகும். ஆதலால் மதக்கட்டுப்பாட்டை ஒழிக்க முதலில் முயற்சிக்க வேண்டும். அவ்வாறு முயற்சிப்பதற்கும் நமக்குத் தைரியம் வேண்டும். அவ்வித தைரியம் நமக்கு ஏற்பட்டால்தான் கல்வி விடுதலையுமேற்படும். இவைகளைவிட்டு, 'சரஸ்வதிகடாக்ஷமில்லை, பணமில்லை, அரசாங்காத்தார் கல்வி கற்பிக்கவில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தால் நாம் விடுதலை அடையத் தகுந்த புத்தி இல்லாதவர்கள் என்றுதான் சொல்லிக் கொள்ள வேண்டும். ஏனெனில், பிராமணர்களும் இந்த அரசாங்கத்தில் இருந்து கொண்டும் சாதாரண வரும்படியுள்ளவர்களுமாய் இருப்பவர்களேயல்லா மல், வேறு அரசாங்கத்தில் உள்ள பெரியப் பணக்காரர் களல்ல. அவர்கள் குமாஸ்தாக்களாகவும். காபி கிளப்புக்காரர்களாகவும், புரோகிதர்களாகவும், தக்ஷணை வாங்குபவர்களாகவும், சோம்பேறிகளாகவும் இருந்தும்கூட, அவர்களில் 100க்கு 99 பெயர் எப்படி வாசிக்க முடிந்தது என்பதை யோசித்தோமானால் அப்பொழுதுதான் அதன் சூக்ஷும் புலப்படும். ஆகவே நமது நாட்டில் இப்பொழுது இருந்து வரும் மததர்மங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்குமானால் சிலரைத் தவிர்த்து பெரும்பாலான மக்கள் படிக்கவே முடியாது. நமது மத தர்மப்படி இன்னின்னவர்கள் தான் கற்றுக் கொடுக்க வேண்டு மெனவுமிருக்கின்றது. அந்த முறையை அஸ்தி வாரமாக வைத்தே இன்றைய உபாத்தியாயர்கள் எல்லாம் பார்ப்பனர் களாயிருக்கிறார்கள். இவர்களிடத்தில் படிக்கும் பிள்ளைகள் 100க்கு 90 பெயர்கள் தலையெடுக்க முடியாமல் போகின்றது. ஆகையால் இந்த முறைகள் நடைபெறும்படி யனுமதித்து கொண்டிருப்பதா? அல்லது இவைகளையழிப்பதுதான் நமக்கு விடுதலையை அளிக்குமா? என்பதை யோசனை செய்து பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

## செல்வம்

நமது பொருளாதாரத் துறையை ஆராய்ச்சி செய்தோமானால்தான், நமது நாட்டில் எவ்வளவு செல்வமிருக்கின்ற தென்பதும், நமது நாடு செல்வமுள்ள நாடா? அல்லது ஏழை நாடா? என்பதும் விளங்கும். நமது நாட்டில் உள்ள ஒருவனுடைய சம்பாதனை தினம் ஒன்றுக்கு சராசரி 2 – அணாவுக்கும் கொஞ்சம் குறைந்ததாயிருக்கின்றது. ஆனால் மேல் நாட்டிலோ ஒருவனுக்கு தினம்தோறும் சராசரி ரூ. 2 வரும்படி அகப் படுகின்றது. இவ்வித நிலைமையை நாம் மாற்றவேண்டுமென எண்ணி, முயற்சிப்பதே பொருளாதார விடுதலையாகும். ஆகையால் இந்த விடுதலைக் கும் நாம் எப்படி எந்த முறையில் வேலை செய்ய வேண்டியிருக்கின்ற தென்பதை யோசனை செய்து பாருங்கள். நம்மிடத்தில் நமக்குப் போதுமான பொருளில்லையா? இல்லாதிருக்குமானால் அதற்குக் காரண மென்னயென் பவைகளை யோசனை செய்து பாருங்கள். நாம் பொருள் சம்பாதிக்கக் கடவுளைக் கும்பிடுகின்றோமே ஒழிய எந்த விதத்தில் பாடுபட வேண்டும்? எதனால் பொருள் கிடைப்பதில்லை? என்று யோசிப்ப தில்லை. நாம் கல்விக்கு எப்படி சரஸ்வதி என்று ஒரு பெண் தெய்வத்தை உண்டாக்கி வணங்கி வருகின்றோமோ, அதுபோலவேதான் நமது நாட்டு செல்வத்துக்கும் ஒரு பெண் தெய்வமாகிய லக்ஷ்மியை உண்டாக்கி வணங்கி வருகின்றோம். ஆகையால் ஒருவன் தான் ஏழையாக யிருந்தால் தனக்கு ‘லக்ஷ்மி கடாக்ஷ மில்லை’ என சுலபமாக எண்ணிக்கொண்டு லக்ஷ்மி கடா க்ஷத்தை யடைய கையிலுள்ளதையும் கடன் வாங்கியும் செலவு செய்கிறான். பணக்கார னாயிருப்பவனும் தனக்கு ‘லக்ஷ்மி கடாக்ஷ’மிருப்பதாக நினைத்துக்கொண்டு அதற்கே தனது சொத்தை செலவு செய்து வருகிறான்.

ஓர் ஏழை ஒரு நாள் முழுவதும் கஷ்டப்படுகிறான். அவன் காலை 6 மணிக்கு கையில் மண்வெட்டியைப் பிடித்தானானால் பகல் 1 மணிக்குத்தான் கீழே வைக்கிறான். கொஞ்சமேதாகிலும் ஆகார முட்கொண்டு அவன் மீண்டும் 1–30 மணிக்கு மண் வெட்டியைப் பிடித்தானானால் மாலை 6–30 அல்லது 7 மணிக்குத்தான் கீழே வைக்கின்றான். இவ்வாறு இவன் ஓயாமல் கஷ்டப்பட்டும் இவனுடைய வேலைக் குத் தகுந்த கூலி யகப்படுவதில்லை. இதற்குக் காரணம் ‘கடவுளின் கிருபையில்லை’ யெனவும் ‘லக்ஷ்மி கடாக்ஷ மிருந்தால் தானே முடியு’ மென்பதாகவும், ‘தனக்கு இந்த வேலையையே செய்து பிழைக்க தலையில் பிரமன் எழுதிவிட்டான்’ என்றும் கருதிக் கொண்டு வாழ்நாள் கழிய மண்வெட்டியையே நம்பியிருக்கிறான். அது போலவே சிறிதும் பாடுபடாமல் ஒருவன் பணக்காரனாயிருக்கின்றானே எனக் கேட்டால் “லக்ஷ்மி கால்போட்டு விட்டாள்” என்பதாக சொல்லுகிறான். ஆகவே இந்த இரண்டு வித நிலைமைக்கும் ஒரே காரணத்தையுரைக் கின்றார்களே யல்லாமல், நாம் உண்மையறிய ஆராய்வதில்லை. மேல் நாட்டுக்காரர்கள் தங்களுடைய அறிவை தினமும் விருத்தி செய்து கொண்டே



வருகிறார்கள். பல துறைகளையும் ஆராய்ந்து, பல வித தந்திரங்களால் அத் துறைகளில் ஆராய்ச்சி செய்து மேன்மேலும் முன்னேறிக் கொண்டே யிருக்கிறார்கள். தங்கள் தொழில் முறையை தாங்களாகவே மாற்றுகிறார்கள். ஒரு தொழிலில் இருந்து மற்ற தொழிலுக்கு தாராளமாய் பிரவேசிக்கிறார்கள். தங்கள் முன்னேற்றத்திற்கும் பின்னேற்றத்திற்கும் தங்களையே பொறுப்பாக் கிக் கொண்டு வாழ்க்கையை நடத்துகிறார்கள். தலைவிதியையும் நல்ல காலத்தையும் எதிர்பார்த்து சும்மாயிருந்து விடுவதில்லை. உதாரணமாக முதன் முதலாக கண்டுபிடிக்கப்பட்ட மோட்டாருக்கும், இப்பொழுது கண்டு பிடித்திருக் கப்பட்ட மோட்டாருக்குமுள்ள வித்தியாசங்களை நாம் கவனித் தோமானால் மேல் நாட்டுக்காரன் தொழிலில் முறையில் எவ்வளவு தூரம் முன்னேற்ற மடைந்திருக்கின்றான் என்பது புலப்படாமலிராது.

ஆனால் நாமோ ஆதிகாலத்தில் உண்டாக்கப்பட்ட கட்டை வண்டி களினின்றும் இன்னும் நாம் சிறிதும் முன்னேற்றமடையாமல் இருக்கின்றோம். வேண்டுமானால் இரும்பு ஆணிகளுக்குப் பதிலாக வெள்ளி முலாம் பூசிய ஆணிகளை உபயோகிப்பதில் மட்டும் முன்னேற்ற மடைந்திருக்கின்றோம்.

## தொழில்

தொழிலில் நாம் முன்னேற்றமடையாததற்குக் காரணம் ஆதியில் மக்களை நான்கு வருணங்களாகப் பிரித்து அதாவது பிர்ம, –க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென நான்கு வருணங்களாகப் பிரித்து 100க்கு 90 பெயர் களடங்கிய ஒரு கூட்டத்தை சூத்திரர்களெனத் தாழ்த்தி ‘சூத்திரர்களுக்கு வயிற்றுக்கு மட்டும் உண்ணப் போதுமான உணவிருந்தால் அதுவே அவர்களுக்குப் போது’மெனவும் ‘அவர்கள் மற்ற மூன்று வருணத்தாருக்கும் தங்களுடைய சரீரத்தால் பாடுபட்டு உழைக்கவேண்டும்’ எனவும் எழுதி வைத்துக்கொண்டு அத்தருமங்களின்படி நாம் நடந்து கொள்ள வேண்டு மெனவும் அதனின்று தவறக் கூடாதெனவும் தவறினால் பாபமெனவும் உரைக்கப்பட்டு வந்ததோடு அரசர்களும் இந்த சட்டத்தை காப்பாற்றி வந்ததால் நாம் தொழில் விர்த்தி இல்லாமல் போனதற்குக் காரணமாகும். இவ்வித நிலைமையின் பயனாய் பணம் சம்பாதிப்பவர்கள் – சீர்படுபவர்கள் யார் என்பதை யோசித்துப் பாருங்கள். பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர் களுக்கும் வைசியர்களுக்குமே தான் பணம் மேன்மேலும் சேருமேயல்லாமல் இந்த நிலையில் யார் எவ்வளவு பாடுபட்டாலும் தொழிலாளிகளாகிய “சூத்திரர்”களிடம் ஒரு நாளும் பணம் சேராது என்பதோடு வயிற்றுக்கு வேண்டிய அளவு கூட உணவு கிடைப்பது கஷ்டமாகத்தான் இருக்கும்.

இவ்வித நிலையால்தான் மக்கள் தங்களுடைய முயற்சியில் கவலை யற்றவர்களாக இருந்து கடவுள் மீது பொறுப்பைப்போட்டு அடுத்த ஜன்மத் தில் பணக்காரர்களாக பிறப்பதற்குத் தங்கள் குறைந்த வரும்படியுமான



RangaRakes tamilnavarasam.com

பணத்தையும் நேரத்தையும் செலவு செய்ய வேண்டியவர்களாயிருக் கிறார்கள். கடவுள் உணர்ச்சியே தான் அவர்கள் விடுதலையடைவதைத் தடுத்துக்கொண்டேயிருக்கிறது.

ஆகவே பொருளாதாரத் துறையில் நாம் விடுதலை அடைந்து முன்னேற்றமடைய வேண்டுமானால் நாம் கவலையுள்ளவர்களாகி நம்மை ஏமாற்றி 'சூத்திரர்'களாக்கியவர்களுடன் சண்டை போட்டேதான் தீர வேண்டும். ஆகையால் நாம் அதற்காகக் கவலையில்லாதிருந்தாலும் அக் கட்டுப்பாட்டை ஒழிக்காமலிருந்தாலும் ஒரு நாளும் முன்னேற முடியாது.

'நமது பெரியவர்கள் எப்படி இருந்து வந்தார்களோ அப்படியே இருக்க வேண்டுமேயொழிய புதிய மாதிரியில் நடக்கலாமா?' என்று நாம் கருதிக் கொண்டிராமல் "இரண்டு அணாவிலிருந்து இரண்டு ரூபாய் எவ்வாறு சம்பாதிக்க முடியும்? ஏன் சாம்பாதிக்க முடியாது? மற்றவர்கள் எப்படிச் சம்பாதிக்கிறார்கள்? மற்ற நாட்டிலுள்ளவர்கள் என்ன செய்கிறார்கள்? எப்படிச் சம்பாதிக்கின்றார்கள்?" என்பவைகளை யோசனை செய்து முன்னேறும் மார்க்கங்களை கண்டுபிடித்து அனுஷ்டானத்திலும் அதாவது நடை முறை யிலும் கொண்டு வந்தால்தான் பொருளாதாரத் துறையில் முன்னேற முடியும்.

ஒருவன் இரண்டு மாடுகள் ஒரு வண்டி ஒரு மனைவி இரு குழந்தை களையுடையவனாக இருந்தால் அவன் வண்டியோட்டி சம்பாதிக்கும் பணத்தால் 6 பெயர்களைக் காப்பாற்ற வேண்டியவனாக இருக்கின்றான். இவ்வாறு கஷ்டப்படுவதினின்றும் விடுதலையடைய வேண்டுமானால் இயந் திரங்களினால் எவ்வளவுக் கெவ்வளவு நம்முடைய வேலையைச் சுருக்கிக் கொண்டு குறைந்த நேரத்தில் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக விர்த்தி செய்ய முடியுமோ அவ்வாறு செய்தால் மட்டுந்தான் நாம் விர்த்தியடைய முடியும்.

## மானம்

நமது நாட்டு மக்கள் தங்களுடைய மனிதத்தன்மையை இழந்து விட்டதினால் தான் நமது நாடு இன்று இம்மாதிரியான கேவல நிலைமை யிலிருப்பதற்குக் காரணம். ஏனெனில் நமது நாட்டு மக்களில் 100க்கு 3 பெயர்கள் உயர்ந்தவர்களெனவும், பூதேவர்களெனவும், பிர்மாவின் முகத் திலிருந்து உற்பத்தியானவர்களெனவும், பிராமணர்களெனவும் கூறப்பட்டு பாக்கியிருக்கப்பட்ட 97 பெயர்களும் கீழ் ஜாதி மக்களெனக் கருதப்பட்டு வருகின்றது. இந்த நிலைமை இந்தியாவில் ஜனித்த ஒரு காரணத்தி னாலேதான் நமக்கு எற்பட்டது. மற்ற நாடுகளில் இவ்விதமான அதாவது நிலைமையை அனுசரித்து கீழ் ஜாதியெனக் கருதப்படுவதில்லை. நமது மக்களுக்கு பாரம்பரியமாகவே மானமில்லையெனவும், மனிதத் தன்மையே கிடையாதெனவும் கூறுவதற்கு இந்த ஒரு காரணமே போதுமானதென



நினைக்கின்றேன். மேலும் நாம் பெண்களை மிக்க இழிவாகவும். கௌரதைக் குறைவாகவும் நடத்துகிறோம். நமக்கு வேலையைச் செய்ய சந்தைக்குச் சென்று மாடுகளை விலை கொடுத்து வாங்கி வந்து, வேலை வாங்குவது போலவேதான் நாம் பெண்களையும் நடத்திக்கொண்டு வருகின்றோம். 'புருஷன் வெளியில் வேலை செய்தால், பெண்ஜாதி அப்புருஷனுக்கு அடிமையாயிருந்து வீட்டில் வேலைசெய்தும், பிள்ளைகளைப்பெற்றும், அவர்களைக் காப்பாற்றுவதுந்தான் பெண்களின் வேலை'யெனவும், கடமை யெனவும் நாம் கருதி வருகின்றோம். நாம் மானங்கெட்டவர்களெனக் கூறுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். கடவுள் சிருஷ்டியில் பெண்களை அடிமைகளாகவும். மனிதத் தன்மைக்கு லாயக்கற்றவர்களாகவும், சிருஷ்டிக்கப்பட்டதாய்க் கருதுகிறோம். இது இந்தியாவில் தானேயொழிய வேறு நாடுகளில் கிடையவே கிடையாது. நம் பெண் மக்கள் இவைகளி லிருந்து விடுதலையடைய வேண்டுமானால் நமது பெண் மக்களுக்கு போதிய தைரியமும் வீரமும் வேண்டும். இவ்விரண்டும் அவர்களிடத்தில் இல்லை. நாம் ஆண்களும் பெண்களும் இந்தியாவில் பிறந்தவர்கள் என்று பெருமை யாக சொல்லிக் கொள்கிறோமேயன்றி வேறு ஒருவிதமான யோக்கியதையும் நம்மிடத்தில் இல்லை. தீண்டப்படாதார் என்பவர்களின் நிலைமையோ சொல்லத்தரமன்று. அவர்கள் 5, 6 கோடி மக்களாய் இருந்தும் ஒரு குடியான வனுக்கு 1000கால்நடைகள் ஆடு மாடுகள் இருப்பதுபோல் இந்திய மேல்ஜாதி மக்களுக்கு 5,6 கோடி மனிதக் கால்நடைகள் இருக்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும். இந்த ஒரு காரணமே போதும் இந்தியர்கள் அயோக்கியர் கள் என்பதற்கும் அடிமையாய் நடத்தப்பட தகுதி உள்ளவர்கள் என்பதற்கும் ஆதாரமாகும்.

## நமது வீரம்

நாம் இங்குதான் "பாரத வீரர்கள் பீமன் சந்ததிகள்" என்று மேடை யேறிப் பேசிக்கொள்ளுகின்றோமேயொழிய ஒரு அராபி தேசத்தவனை நடுத்தடத்தில் கண்ணில் பார்த்துவிட்டால் நமது மக்கள் ஆண் பெண் அடங்களும் நடுங்குகின்றன. காலுடன் மூத்திரம் பெய்த்து கொள்ளுகின்றன. வெளி தேசத்திலிருந்து எவன் வந்தாலும் அவனைக் கண்டால் இப்படித்தான் நடுங்குகின்றோம்.

வெளிநாட்டுக்காரன் இங்கு வந்து சம்பாதித்துப் போவதற்குக் காரணமே நமக்கு வீரமும் நாணையமும் அற்ற தன்மையேயாகும். நமது கிராமங்களில் ஒரு அராபி தேசத்துக்காரன் 4 ரூபாய் பெரும்படியான ஒரு சால்வையை 8 ரூபாய்க்கு கொடுத்துவிட்டு 6 மாதம் பொருத்து வந்து பணம் கேட்டால் வெற்றிலை பாக்கு தட்டில் வைத்து சங்கராச்சாரிக்குக் காணிக்கை கொடுப்பது போல் பய பக்தியுடன் கொடுத்து விடுகின்றோம். அவனைக் கண்டால் நடுங்குகின்றோம். உள்ளூர்வாசியிடம் கடன்பட்டிருந்தாலோ.



RangaRakes tamilnavarasam.com

அவனுடைய கடனைக் கொடுக்க மறுப்பதல்லாமல் "பண்ணுவதைப் பண்ணு" என்றும் சொல்லுகிறோம். அயலூரானென்றால் நடுங்குகின்றோம். இதற்குக் காரணமென்ன? ஏனெனில், நமது தைரியம் அவ்வளவில் தானிருக் கின்றது. மற்றும் ஓர் உதாரணம் என்னவென்றால் ஒரு ரயில் வண்டியில் ஆப்கன் தேசத்தான் ஒருவன் இருந்து அவ்வண்டி முழுமையும் காலியாக யிருந்தாலும் கூட நாம் அவ்வண்டியில் ஏற மாட்டோம். நாம் பத்துபெயர்கள் வரை ஒரு அறையிலுட்காந்து அவ்வண்டியில் இடமில்லாதிருந்த போதிலும் கூட வடதேசத்தான் ஒருவன் தைரியமாக அங்கே வந்து உட்காருவான். நாமும் உடனே வண்டியைக் காலி செய்து விடுவோம் .

ஆனால் நாம் காளி,வீரன்,கருப்பன், முனியன், சடையாண்டி முதலிய "வீரம் பொருந்திய தெய்வங்களை" கும்பிடுகிறவர்களாகவுமிருக்கிறோம். எதற்காக கும்பிடுகிறோம் என்றால் அத்தெய்வங்களுக்குள்ள தைரியம் நமக்கும் வர வேண்டுமெனவேதான் என்கின்றோம். ஆனால் நாம் அதனால் தைரியமுடையவர்களாக வாகின்றோமா என்று பார்த்தாலோ, அப்படியு மில்லை. நமது தைரியமெல்லாம் முதலில் "அடி பார்க்கலாம்" என்பதிலும் அடி விழுந்தால் "ஓடுவதற்குள் என்ன அவசரம்" என்பதிலேயேதான் இருக்கின்றது. யார் அடித்தாலும், திருப்பியடிக்கக்கூடிய நிலைமையில் நாமின்று இல்லை.

## முயற்சி

முயற்சி விஷயத்தில் மேல் நாட்டாரோ "இமயமலை உச்சியைக் கண்டு பிடிக்க வேண்டு"மென்றும் 'அதிவேகமாகப் பறக்க முயற்சிக்க வேண்டு' மென்றும், அவ்வித முயற்சியினால் மரணமடைந்தாலும் பரவாயில்லையென வும் மேல் நோக்கிக் கொண்டே சென்று கொண்டி ருக்கிறார்கள். மேலும் நம்மை சுலபத்தில் எவ்வாறு அடக்க முடியும். எவ்வாறு நிரந்தரமாய் அடிமை கொண்டு இருக்க முடியுமென்பதற்குறிய மார்க்கங்களை ஆராய்வதிலுமிருக் கின்றார்கள். ஆனால் நமது இந்தியா விலோ ஒன்றுமே இல்லை. ஏனெனில் தைரியமும், வீரமும், நமக்கில்லை. உதாரணமாக, ஒருவன் ரூபாய் 400, ரூபாய் 500 லஞ்சம் முதலிய செலவுசெய்து ஒரு லைசென்ஸ் வாங்கி துப்பாக்கி வாங்கி இருந்தாலும் அந்தத் துப்பாக்கியின் குதிரையானது கெட்டுப்போய் குதிரையை கம்மாளனிடம் கொடுத்துவிட்டு கட்டையை மூலையில் வைத் திருக்கும் பொழுது கூட நமது குழந்தைகள் தற்செயலாய் அந்தத் துப்பாக்கி யிருக்குமிடத்திற்கு சென்று விட்டாலோ உடனே "துப்பாக்கி! துப்பாக்கி!! கிட்டபோகாதே போகாதே" என்று சத்தமிடுகின்றோம். ஏன்? நமக்கு பயமே அதிகமாயிருக்கின்றது. தைரிய உணர்ச்சியென்பது சிறிதுமில்லை. இதனால் நமது அறிவு எவ்வளவு தூரம் முதிர்ச்சியடைந்திருக்கின்றதென்பது புலப் படாதிராது. நாம் வீணாய் 'நாளை' என நாட்களை கழித்துக்கொண்டு தான் செல்லுகின்றோமேயல்லாது வேறில்லை. விஷயங்களை உணரக்கூடிய சக்தி



நமக்கில்லை. அப்படி யாராவது உணர்ந்து சொல்ல வந்தாலும், 'நமது முன்னோர்கள் எவ்வளவு பெரியவர்கள். அவர்களுக்குத் தெரியாத சங்கதியா இவர்களுக்குத் தெரிந்து விட்டதா? இவர் நேற்று வந்த பயல்தானே.அவரை விடவா இவன் பெரியவன்?' என உரைப்பதிலிருக்கின்றோம்.

இதற்குக் காரணம் என்னவென்றால் நமது அடிமைத்தனம் நம்முடைய தலையின் மீது ஏறி, உட்கார்ந்து கொண்டிருக்கின்றது. அது நமது அறிவை கூரில்லாமல் செய்துவிட்டது. நமது நாட்டிலிருக்கக் கூடிய 'அறிவாளிகளும்,' 'தீர்க்கதரிசிகளும்,' 'கவிவாணர்களும்,' 'தெய்வத் தன்மை பொருந்திய வர்களும்' பழைமையைக் குரங்குப்பிடியாக பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். பழைமையிலிருந்து அவர்கள் சிறிதேனும் நழுவுவார்களேயானால் அவர் களுடைய கவிகளை அரங்கேற்ற முடியவே முடியாது. அவர்கள் தீர்க்கத் தரிசிகளாகவு முடியாது என்பதே.

மக்கள் ஒவ்வொன்றையும் யோசனை செய்து யுக்தியை செலுத்தி, புதிது புதிதாக ஒவ்வொன்றையும் கண்டு பிடிப்பதற்குத்தான் ஆராய்ச்சி எனக் கூறப்படும். ஆனால் நாமோ நமது முன்னோர்கள் என்ன செய்து கொண்டி ருந்தார்க ளென்பதை ஆராய்ச்சி செய்வதிலும், அதை நிலை நிறுத்த என்ன செய்யவேண்டுமென்பதை ஆராய்வதிலுந்தான் ஆராய்ச்சி துறையில் இருந்து வருகின்றோமேயல்லாது, அதாவது பின்னால்தான் திரும்பி பார்த்துக்கொண்டிருக்கிறோமேயொழிய, முன்னோக்கி பார்ப்பதே இல்லை. ஆனால், மேல்நாட்டுக்காரனோ பின்னோக்குவதே கிடையாது. அவன் எப்பொழுதும் முன்னோக்கியே பார்க்கின்றான். அவன் ஏதாகிலும் ஒன்றைப் புதிதாக கண்டு பிடித்தால் மேன்மேலும் ஆராய்ச்சி செய்து 1930-ல் இப்படி இருந்தால் 1940-ல் இது எப்படி இருக்கும்? 1950ல் எப்படி இருக்கும்? 1960 ல் எப்படியிருக்கும்? என்பதையே அறிந்து கொள்ள முயற்சிக்கின்றான்.

இதுதான் நமக்கும் அவர்களுக்குமுள்ள வித்தியாசம். உதாரணமாக ஒரு போர்டு மோட்டார் வண்டியையெடுத்துக் கொள்ளுங்கள். 20 வருடங் களுக்கு முன்னிருந்த ஒரு போர்டு வண்டியின் உருவம், இப்பொழுது எப்படியிருக்கின்றதென்பதைக் கவனித்துப் பாருங்கள். எல்லாம் புதுமாதிரி, எவ்வளவோ சௌகரியங்களமைத்திருக்கின்றான். மேலும் அப்பொழுது மணி ஒன்றுக்கு 18 மைல் சென்றால், இப்பொழுது 90 மைல் வீதம் செல்லு கின்றது. ஒரு காலன் பெட்ரோலுக்கு அப்பொழுது 15 மைல் தூரம் சென்றால் இப்பொழுது 30 முதல் 40மைல் தூரம் செல்லுகின்றது. மோட்டாரில் காணப்படும் கோளாறுகளை குறைத்துக் கொண்டே முன்னேறிக்கொண்டு வருகின்றான். அவனுக்கு மனிதத் தன்மை, உணர்ச்சி, ஊக்கம், முயற்சி, கவலை ஆகியவைகளிருக்கின்றன. நமக்கோ அவைகளில்லை. ஆகையால் தான் நமது நாடு முன்னேறவில்லை. எது எடுத்தாலும் நமது நாட்டில் "பழைமை"வந்து குறுக்கிடுகின்றது. நமது நாட்டு மக்களில் மோட்டாரையே



RangaRakes tamilnavarasam.com

பாராத மக்களுமிருக்கின்றார்கள். தவறி ஏதாவதொரு மோட்டாரை பார்த்து விட்டாலோ "ரயில் வண்டி அறுத்துக் கொண்டு வந்து விட்டது" என சொல்லக் கூடியவர்களுமிருக்கின்றார்கள். இவைகளுக் கெல்லாம் காரணம் என்ன? நமக்குக் கவலை, ஊக்கமில்லை, முயற்சியு மில்லை, முற்போக்கடைய ஆசை யுமில்லை. நாடு முற்போக்கடைந்து விட்டால் சோம்பேறிகளுக்கு இட மிருக்காது என்பதுதான். நாம் ஒவ்வொன்றுக்கும் புராணக்கதைகளை யொப்பிட்டு, திருப்தியடைகிறோம்.

நமது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாயிருப்பவைகளில் முதன்மையானது, நமது புராணங்களிலும் மதக் கொள்கைகளிலும் நம்பிக்கை வைத்திருக்கும் மூடப்பழக்கவழக்கங்களுமேயாகும்.

## சுகாதாரம், ஆயுள்

இந்த கிராமத்தில் சுமார் 1000, 1500 வீடுகளிருக்கின்றன. இவ்வூர் வாசிகளிலநேகர் பெரிய பணக்காரர்களாகவுமிருக்கின்றார்கள். அப்படி யிருந்தும் உங்களுடைய தெருக்கள் எப்படியிருக்கின்றன? பார்த்தீர்களா? எவ்வளவு அசிங்கம்? எவ்வளவு குப்பை? எவ்வளவு துர் நாற்றமுடைய தாயிருக்கிறது? இவ்வித நிலைமையிலிருந்தால் நமக்கு காயலா வருவதற்கு யாரைக் கேட்கவேண்டும்? நமது நாட்டு மக்களின் சராசரி வயது ஒவ்வொரு வனுக்கும் 24 தான் என கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் மேல் நாட்டில் ஒவ்வொருவனுக்கும் சராசரி வயது 45 என்பதாக சொல்லுகிறார்கள். இதற்குக் காரணமென்ன? அங்கு 'இயமன்' இல்லையா? நமது நாட்டு 'இயமன்' அவர்களிடம் சிறு வயதில் செல்லுவதில்லையா? அவனுக்கு நம்மிடம்தானா சதாவேலை இருக்கின்றது? என்று யோசித்துப் பாருங்கள். நமது நாட்டு மக்களிறந்துவிட்டால் உடனே 'நாம் என்ன செய்வது' 'அவனுடைய சீட்டை பிரம்மதேவன் கிழித்துவிட்டான். விதி முடிந்தால் யார் என்ன செய்ய முடியும்?' என சொல்லிவிடுகிறோம். ஆனால் மேல் நாட்டானோ அப்படி இல்லை. அவன் யாராகிலும் காலராவில் இறந்துவிட்டால், உடனே ஆகாரம், தண்ணீர், காற்று முதலியவைகளை கவனித்து, ஆராய்ச்சி செய்து தக்க முறை களை கண்டுபிடித்து மற்றவர்கள் சாகாமல் இருக்க பாடுபடுகின்றானே யொழிய, நம்மைப்போல் ஓங்காளியம்மனைக் கும்பிடுவதில்லை. நமது மதராஸைப் பொறுத்தவரையிலும் ஒரு உதாரணம் என்ன வென்றால், ஒரு தடவை சென்னையில் 15 நாட்கள் வரையிலும் காலரா இருந்ததினால், உடனே ஒரு மீட்டிங்கில் 'ஹெல்த் ஆபிசர் வேலைக்கு லாயக்கு இல்லை' என்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றிவிட்டார்கள். 'ஹெல்த் ஆபிஸரும் அதற்குக் தக்கவாறு பதில் சொல்லி தனது முயற்சியில் 15 நாள் பொறுத்தாவது அடியோடு நிறுத்தப்பட்டதை எடுத்துக் காட்டினாரே அல்லாமல் கடவுள் செயலுக்கு நான் என்ன செய்ய முடியு'மென்பதாக உரைக்கவேயில்லை. அவர் அந்த வியாதியை நீக்குவதற்குரிய மார்க்கங்களை ஆராய்ச்சி செய்து



அவ்வியாதியை அறவே நீக்க முயற்சிக்கின்றாரேயல்லாது எல்லாப் பொறுப்பையும் கடவுளின் தலை மீது சுமத்திவிட்டு, சும்மா இருந்து விடுவ தில்லை. நமது நாட்டு மக்கள் நோய் வந்தால் டாக்டரை அழைத்து வைத்யம் செய்வதற்குப் பதிலாக ஆடு, கோழி முதலியவைகளை அறுத்து பொங்க லிட்டு சாமியை கும்பிட்டு விட்டு பேசாதிருந்து விடுகின்றோம். இவ்வித நிலமையில் நாம் இருந்து கொண்டு 'விடுதலை' 'விடுதலை' யெனப் பெருங் கூச்சலிடுவதில் மட்டும் என்ன பயன்? நமது மக்களுக்கு வேண்டிய கல்வியை ஊட்டி பெண் மக்களுக்கும் சுகாதாரத்தையும் அதன் அவசியத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களை சுத்தமாக இருக்கும் படி செய்து வந்தால் சுகாதார விடுதலை அடைவோமா? அல்லது அவர்களை கவனியாமல் எல்லாம் கடவுளின் தலையில் சுமத்தி சாமியைக் கும்பிட்டுக் கொண்டு உட்கார்ந்து இருப்பதால் விடுதலைய டைவோமா? என்பதை சிறிது யோசனை செய்து பாருங்கள்.

நமது நாட்டு கர்ப்பஸ்திரீகளில் 100க்கு குறைந்தது 10 பெயர்களாவது இறந்து விடுகின்றார்கள். அப்பொழுது 'நாம் அவள் கருத்தரித்த நேரம் அப்படி யிருக்கிறது. அவள் புருஷனுக்கு இரண்டு பெண்டாட்டி யோகம் இருக்கின்றது. அதற்கு நம்மால் என்ன செய்ய முடியு'மென்பதாக மட்டும் உரைத்து, திருப்தியடைந்து விடுகிறோம். வியாதிகளைத் தடுத்துக் கொள்ளக் கூடிய அறிவை நாம் மக்களுக்குப் புகட்டவேண்டும். அதற்குரிய சுகாதார வைத்திய, மருத்துவ, கல்வி ஸ்தாபனங்களை நமது நாட்டில் பரப்ப வேண்டும். ஆனால் நமது நாட்டில் உள்ள செல்வவான்களும், நாட்டு கோட்டை செட்டிமார்களும் தங்களுடைய செல்வத்தைக் கோயில்கள் கட்டுவதிலும், கும்பாபிஷேகங்கள் செய்வதிலும், செலவழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்களே யல்லாது மக்கள் முன்னேற்றத்திற்குரிய மார்க்கங்களில் செலவிடத் தயாராக இல்லை. இத்தகைய இவர்களு டைய செய்கையால் ஒரு சாரார் மட்டும், ஒரு கூட்ட மட்டும் பிழைப்பதற்கு வழி யேற்படுகிறதேயன்றி, எல்லா மக்களுக்கும் அந்தப் பொது ஸ்தாபனம் உபயோகப்படுவதில்லை. மேல் நாட்டு செல்வவான்களோ அப்படியில்லை. அவன் எல்லோருக்கும் உதவும் படியாக கல்விச் சாலைகளையும், ஆஸ்பத் திரிகளையும் ஸ்தாபித்து பொதுமக்களுக்குப் பயன்படும்படியான முறையில் உதவுகின்றான். நமக்கோ அவ்வித உணர்ச்சி கொஞ்சமேனும் கிடையாது. நமது மக்கள் விடுதலையடைய வேண்டுமானால் நாம் ஒவ்வொன்றையும் ஆராய்ச்சி செய்து கொண்டு வந்தால் தான் முடியுமேயன்றி வெறும் கூச்சல் மட்டும் போட்டுக்கொண்டிருந்தால் ஒரு நாளும் மக்களுக்கு விடுதலை கிடையவே கிடையாது.



RangaRakes tamilnavarasam.com

## பெண்கள் விடுதலை

நமது நாட்டுப்பெண்களை அடிமைகளைப் போலவும், மாடுகளைப் போலவுமே நாம் நடத்திக் கொண்டு வருகின்றோம். பெண்களும் தங்களை அடிமைகளென்றுதான் நினைத்துக் கொண்டு வருகின்றார்கள். பெண்கள் அவ்வித நிலைமையிலிருந்து விடுதலையடைய வேண்டுமானால், நாம் அவர்களுக்குச் சுதந்திர உணர்ச்சியுண்டாக்கிக் கொண்டும், ஊட்டிக் கொண்டும் வரவேண்டும். பெண்கள் ஆண்களின் அடிமையல்ல என்றும், அவர்கள் ஆண்களின் சிநேகிதர்களேயாவர்கள் என்றும் கருதும்படி நாம் அவர்களுக்கு விஷயங்களை எடுத்துக்கூறி அவர்களது உரிமைகளை அடைய வசதியளிக்க வேண்டும். வாயளவில் எழுத்தளவில் மட்டும் உரிமைகளளிப்பதாக உரைப்பதில் பிரயோஜனமில்லை. இப்பொழுது நமது இந்தியாவில் 35 கோடி மக்களிருக்கின்றார்கள். பெண்களையும் நாம் மக்களென நினையாமலும் அவர்களுடைய உரிமைகளை நாம் அவர்களுக்கு வழங்காமல் அவர்களை அடிமைகளென்று கருதி, நடத்திக்கொண்டு வந்தால், அப்பொழுது $17^1/_2$ கோடி மக்கள்தான் இந்தியாவில் மனிதர்களெனவும், பாக்கி $17^1/_2$ கோடி மக்கள் மிருகங்களெனவும் தான் கூற வேண்டும். நாம் அவர்களுக்கு வேண்டிய கல்வியை புகட்டாமலும், அறிவு வளர்ச்சிக்கான முறைகளில் அவர்களுக்குச் சுதந்திரமும், விடுதலையுமளிக்காமலும், அவர்களை வெறும் சட்டி சுரண்டிகளாகச் செய்து விட்டோம். சுதந்திரத் தாய்மார்களாக நமது பெண்களிராவிட்டால் அவர்களது குழந்தைகளும் சுதந்திரமில்லாதவர்களாகவேதானிருப்பார்கள். ஆகையால், பெண்களுக்குத்தான் நாம் முதன் முதலாக விடுதலையளிக்க வேண்டும்.

## விதவைகளின் முன்னேற்றம்

விதவைகளை நாம் இன்னாட்டில் ஒன்றா சிறைப்படுத்தி அடிமைகளாக இருக்கவும், இல்லாவிட்டால் விபசாரிகளென இருக்கவுந்தான் இந்நாட்டில் இடமிருக்கிறது. ஆனால் புருஷர்களையோ நாம் அவ்வாறாக நினைப்பதேயில்லை. ‘அவனுக்கென்ன ஐயா! அவன் ஓர் ஆண்பிள்ளை, அவன் ஈக்குச் சமானமானவன் எந்த இடத்துக்கும் போகலாம், என்னமும் செய்யலாம்’ என தைரியமாக உரைக்கின்றோம். விதவைகளை மட்டும் நாம் பலவந்தப் படுத்தி, ஜெயிலில் வைத்திருப்பது போல் வைத்து, அவர்களை வெளியேவிடாமல் காவல் செய்து வருகின்றோம். இது ஒருக்காலும் நியாயமாகாது. மேலும், ‘கடவுள் செய’லெனவும் ஒரு காரணத்தைக்காட்டி அவளைப் பத்திரமாகக் காப்பாற்ற வேண்டியவர்களாகின்றோம். அவள் சிறிது மீறி நடந்துவிட்டால் உடனே அவள் ‘விபசாரி’ என சுலபமாகவே கூறிவிடுகிறோம். இயற்கைத் தத்துவங்களுக்கு ஆளாகாமல் இருப்பது என்பது இவர்களுக்கு விரோதமான காரியங்களால்தான் முடியும். ஆகவே ஒரு மனித ஜீவன் இயற்கை உணர்ச்சிக்கு விரோதமாய் இருப்பது என்பது



கொடுமையான காரியமாகும். விதவைகளால் நாட்டுக்கு வெகு தொல்லை. மனித சமூகத்திற்கு வெகு கவலையானதாகும். ஒரு குடும்பத்தில் ஒரு விதவையிருந்தால் அக்குடும்பத்திற்கு எப்படியும் இழிவு ஏற்பட்டே தீருகின்றது. விதவைத் தன்மையைக் காப்பாற்றுவது பெரிய கஷ்டமாகத் தானிருக்கும். ஆகையால் பெண்கள் விடுதலையிலும், கைம்பெண்களின் விடுதலையே மிக முக்கிய மானதாகும். ஆகையால் அவர்களுக்கு உடனே விடுதலையை அளியுங்கள். விடுதலையளிப்பதாக உரைப்பதில் மட்டும் பிரயோஜனமிருப்பதாக நினைத்துக்கொள்ள வேண்டாம். இங்குள்ள வாலிபர்கள் யாவரும், ஒன்றாகச் சேர்ந்து, இனி ‘விதவைகளையேதான் விவாகம் செய்து கொள்ளுவோம்’ எனத் தீர்மானித்து, விதவைகளையே விவாகம் செய்து கொள்ள முன்வர வேண்டும். இது ஒருவகுப்பாருக்கு மட்டும் நான் கூறுவதாக என்ன வேண்டாம். எல்லா ஜாதியாருக்குமே இது உரைக்கப் பட்டதாகும்.

*குறிப்பு : 22-06-1931 அன்று திண்டுக்கல் அருகிலுள்ள சித்தயங்கோட்டையில் மக்கள் விடுதலை சேவை சங்க திறப்பு விழாவில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 28.06.1931**



RangaRakes tamilnavarasam.com

# குடி அரசு

# 1931-2

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 13

பெரியார் திராவிடர் கழகம்

29 இதழியலாளர் குடியிருப்பு

திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்

சென்னை - 600 041

## பட்டீஸ்வரத்தில் சீர்திருத்தத் திருமணம்

சகோதரிகளே!சகோதரர்களே!!இன்று நீங்கள் சுயமரியாதைத் திருமணம் எப்படி நடத்தப்பட்டதென்பதைப் பார்த்தீர்கள். இம்மாதிரியான விவாகங்கள்தான் முழு சுயமரியாதைத் திருமணங்களென்று கூறி விடமுடியாது. பெண்களுக்குப் போதிய அறிவில்லாதிருப்பதனாலும், அவர்களுக்குச் சுதந்திரமளிக்கப்படாதிருப்பதனாலுமே முழு சுயமரியாதை முறையில் திருமணம் என்பது நடைபெற முடியவில்லை. எப்பொழுது மணமகனால் மணமகளுக்கு கழுத்தில் தாலி கட்டப்பட்டதோ அது அடிமைத் தனத்தைத்தான் குறிப்பிடுகின்றது. நியாயமாகவே மணமகள் தாலிகட்டிக் கொள்ளத் தனது கழுத்தை அளித்தே யிருக்கக்கூடாது. மண மகளுக்குத் தாலி கட்டினால், மணமகனுக்கும் மணமகளால் தாலிகட்டப் படவேண்டும். புரோகிதமில்லாவிட்டாலும், புகைச்சலில்லா விட்டாலும் கூட, இந்த விவாகத் தில் "புரோகிதச்" செலவு குறைக்கப்பட்டிருப்பதாக நான் கருதுவதற்கில்லை.

சகோதரர்களே! நாம் பொதுவாக விவாகத்தைக்கூடக் கடவுளின் தலையிலேயே சுமத்தி விடுகின்றோம். "என்ன செய்வது! விவாகம் திடீரென கூடிவிட்டது! அந்தநேரம் ( தாலிகழுத்துக்கு ஏறும் நேரம்) வந்துவிட்டால் யார்தான் என்னசெய்ய முடியு?" மென்பதாக உரைக்கின்றோமேயல்லாது, விவாகத்தின் உண்மைத்தத்துவத்தை அறிந்து நமது நாட்டில் விவாகங்கள் நடைபெறுவதாகப் புலப்படவில்லை. இருவருடைய சம்மதமுமின்றியே, அவர்களுடைய வயதையும் கவனியாமலும்கூட,"நாங்கள் செய்து வைக்கின் றோம். உனக்கென்ன கவலை வந்தது?" என்று சொல்லியேதான் அநேக விவாகங்கள் நமது நாட்டிலின்றும் நடைபெறுகின்றன. நாம் ஒரு விவாகம் செய்வதென்றால் தம்பதிகளின் அபிப்பிராயத்தையும், வயதையும், யோக்கியதையும் கவனியாமலே, புரோகிதர்களிடம் 4-அணா கொடுத்து, இருவருக்கும் பொருத்தம் சரியாயிருக்கின்றதா என்றுதான் கேட்டுத் தெரிந்து கொள்ளுகின்றோம். அவன் பணத்தை வாங்கிக்கொண்டு இருவருக்கும் பொருத்தமிருப்பதாகக் கூறிவிட்டால் உடனே விவாகமும் நடந்துவிடுகின்றது. நமது நாட்டிலுள்ள மூடப்பழக்க வழக்கங்களும், நிர்பந்தங்களும், சந்தேகங்களுமே இதற்குக் காரணமாகும். மேல்நாடுகளில்

RangaRakes tamilnavarasam.com

தம்பதிகளிருவரும் ஒருவரையொருவர் நன்றாய் அறிந்து, பழகிக்கொண்டு, இவர்களுக்குள்ளாக நிச்சயம் செய்துகொண்ட பிறகுதான், அவர்களுடைய பெற்றோர்களுக்குத் தெரியவரும். அவர்களுக்கு ஒருவித சடங்குகளு மில்லை. சர்ச்சுக்குப் போய் சாக்ஷிகளின் முன்னிலையில் ஒருவரையொருவர் விவாகம் செய்துகொள்ள சம்மதிப்பதாக எடுத்துரைத்து கையெழுத்து செய்துவிடுவார்கள். அவ்வளவேதான். இப்பொழுது நம்மை ஆண்டு கொண்டிருக்கும் நமது அரசரின் விவாகமும் அவ்விதமே தான் நடந்தது.

இஸ்லாமானவர்களில் கூட, மாப்பிள்ளைப் பெண்ணைப்பார்க்கா விட்டாலும்கூட, ஒருவித சடங்குமில்லாமல் தங்களுடைய பந்துக்களின் முன்னிலையில், முல்லாக்களை வைத்துக்கொண்டு, தங்களுடைய விவாக ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்கொள்ளுவார்கள். உலகத்தில் 100க்கு 90 விவாகங்கள் இம்மாதிரியேதான் நடைபெறுகின்றன. நமக்குப்போதிய அறிவில்லாததால், அனேக கஷ்டங்களுக்குள்ளாகி, பலவித சடங்குகளை வைத்துக்கொண்டு, நெருப்பையும், அம்மியையும், குழவியையும் சட்டி பானைகளையும் சாக்ஷியாக வைத்துக்கொண்டு, உலக வாழ்க்கையை நடத்த ஆரம்பிக்கின்றோம். நாம் பெண்களை அடிமைகள்போல நடத்து கின்றோமேயன்றி, அவர்களை சமமாகவும், கூட்டாளிகளாகவும் பாவித்து நடத்துவதில்லை. அப்படிக்கொடுமைப்படுத்தப்பட்டாலும், விவாகத்தை ரத்து செய்துகொண்டு, விலகிக்கொள்ள இருவருக்கும் உரிமையில்லை. சிறிது நாட்களுக்கு முன்னதாகதான், பரோடா அரசாங்கம் "கல்யாணமான புருஷன் பெண்ஜாதி இருவருக்கும் தங்களில் யாருக்கு பிரியமில்லாவிட்டாலும், தங்களுடைய விவாக ஒப்பந்தத்தை ரத்துசெய்து, விலகிக்கொள்ளலா"மென்பதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கின்றது.

நமது நாட்டில், அடுத்தவீட்டுப் பெண்களும், பெற்றோரும் மணமகளுக்கு "மாமி வீட்டில் நீ நல்ல அடிமையாய் இரு. அடித்தாலும், உதைத்தாலும் வருத்தப்படாதே, புருஷன் மனம் கோணாமல் நட" என்று உபதேசம் செய்து, மணமகன் வீட்டுக்கு அனுப்புவதும் வழக்கமாயிருக்கின்றது. இதனுடைய கருத்து அவர்களை ஆடவர்களுக்கு எப்பொழுதும் அடிமைகளாகவும், ஒருவித சுதந்திரமாவது அல்லது உரிமையாவதில்லா திருக்கும்படி செய்வதற்கேயாகும். அவர்களுடைய உபதேசங்களைக் கேட்டு, மணமகன் வீட்டுக்குச் செல்லும் அந்தப்பெண்ணும் தன்னை ஓர் அடிமையென்றே கருதி, புருஷன், மாமனார், மாமி, நாத்தி இன்னுமிருக்கக்கூடிய பந்துக்களுக்கும் பயந்து, அவர்களுடைய பிரியத்தை சம்பாதிப்பதிலேயே தன்னுடைய வாழ்க்கையை நடாத்தி உயிருள்ள பிணமாக வாழ்கிறார்கள். அவர்கள் எவ்வளவுதான் உபத்திரவங்கள் அளித்தபோதிலும் அவைகளைப் பொருமையுடன் சகித்துக்கொள்ள வேண்டியவளாகிறாள்.

மேலும், நாம் கடன் வாங்கி, கலியாணங்கள் ஆடம்பரமாக செய்வதினால் அவர்களுடைய தலையின்மீது அக்கடனையும் சுமத்தி



விடுகிறோம். கடனை வைப்பதுமல்லாமல், அவர்களைத் தனி வாழ்க்கை நடத்தும்படியாக வேறாகவும் வைத்து விடுகிறோம். நாம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்குப் பயந்து கொண்டு, அதிக செலவு செய்வதினாலும், சடங்குகள் பல செய்வதினாலும் கடன் ஏற்பட்டு விடுகின்றது. இந்த யெண்ணம் மக்களைவிட்டு நீங்க வேண்டும். அதிலும் பெண்களை விட்டுத் தான் நீங்க வேண்டும். அப்படி நீங்குவதாக யிருந்தால் பெண்களின் அறிவு விருத்தியாக வேண்டும். உலகப் போக்கையனுசரித்து நடக்கும்படி அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

சிலவிடங்களில் சுயமரியாதைக் கலியாணத்திற்கு ஆண்கள் மட்டும் ஏராளமாய் வந்திருப்பார்கள். பெண்களோவெனில் 5 அல்லது 10 பெயர்கள் தான் வருவார்கள். பெண்கள் வந்தால் கெட்டுப்போவார்களாம்! இதற்குக் காரணம், நாம் அவர்களுக்கு உலக ஞானத்தையூட்டி, அறிவு புகட்டாதிருப்பதைத் தவிர்த்து வேறில்லை. ஆணுக்கும், பெண்ணுக்கும், வித்தியாச மில்லையெனவும், பெண்கள் அடிமைகள் அல்லவென்றும் அவர்கள் கருது வார்களானால், அப்பொழுது நகைகளும், ஆடைகளும் வேண்டுமென்றும் போராடுவதை அறவே விட்டுவிடுவார்கள். அவர்கள் தங்களைத் தாழ்ந்த வர்களெனக் கருதிக்கொண்டிருப்பதால்தான் தங்களை அழகுபடுத்திக் கொண்டு, ஆடவர்களை மயக்கவேண்டிய அவசியம் நேரிடுகின்றது. நமது பெண்களுக்கு, மேலும், குழந்தைகளை வளர்க்கும் முறைகளும் தெரியாது. குழந்தைகளுக்கு அறிவு, யூகம், சுதந்திர உணர்ச்சி ஆகியவைகளை யூட்டி வளர்க்க வேண்டும். குழந்தைகளுக்கு ஏதாகிலும் வியாதி வந்து விட்டால், நாம் உடனே மாரியம்மன் கோவிலுக்கும், ஐயர், பண்டாரம் ஆகியவர்களின் வீட்டுக்கும்தான் செல்லுகிறோமே யல்லாது, அவ்வியாதி ஏன் வந்தது என்பதை ஆராய்ந்து, அதற்குறிய மருந்துகளை அளிக்கும் வைத்தியர்களின் வீட்டுக்குச் செல்லுவதில்லை. சில இடங்களில், குழந்தைகளின் வயிறு நிறைந்திருப்பதையும் அறிந்து கொள்ளாமல், அக்குழந்தைகளின் வயிற்றை அமுக்கிப்பார்த்து அறிந்து கொள்ளுகிறார்கள். இவைகளுக்குக் காரணம் நமக்குப் போதிய கல்வியறிவும், தைரியமுமில்லா மையேயாகும். ஊரில் காலரா முதலிய நோய்கள் வந்தால், உடனே ஓங்காளியம்மனுக்குப் பொங்கலிடுவதிலும் "நாம் என்ன செய்யமுடியும்? அவனுடைய சீட்டு கிழிந்து விட்டது. போவதுபோய்தானே தீரும்" என்று சொல்லக் கூடியவர்களாகத் தானிருக்கிறோம். நாம் நமது அறிவை உபயோகப்படுத்தி நடந்தால், இத்தகைய கஷ்டங்களுக்கு ஆளாக வேண்டியதில்லை.

நமது வாலிபர்கள் படித்த பெண்களைமட்டும் விவாகம் செய்து கொள்வதாக ஒரு வைராக்கியம் கொள்ளுவார்களேயாகில், அப்பொழுது பெண்களைப் பெற்றோர்கள், தங்களுடைய குழந்தைகளுக்கு கல்வியறிவை யூட்டுவார்கள். படித்த பெண்களாகப்படாவிட்டால் கலியாணம் செய்து



RangaRakes tamilnavarasam.com

கொள்ளாமலிருக்க வேண்டும். படியாதபெண்கள் கிழவர்களுக்கு 2ந் தாரம் 3ந்தாரமாக போய்சேரட்டும். இதுதான் படியாத பெண்களுக்கு தண்டனை யாகும். சில சுயமரியாதை விவாகங்களில், பெண்களுக்குத்தாலி கட்டும் வழக்கம் கிடையாது. முனிசிபாலிட்டிகளில் நாய்களுக்குக் கழுத்தில் பட்டை கட்டுவதைப் போல், விவாகமாகும் பெண்களுக்கு நாம்ஒரு தாலியை கட்டி விடுகின்றோம். அப்படி தாலி கட்டுவதாகயிருந்தால், மாப்பிள்ளைக்கும் சேர்த்துதான் கட்ட வேண்டும். எப்பொழுது மாப்பிள்ளை கட்டிக்கொள்ள சம்மதிக்கவில்லையோ, அப்பொழுது பெண்களும் தாலிக் கட்டிக்கொள்ள சம்மதிக்கக்கூடாது. தாலிகட்டுவது அடிமையுணர்ச்சியைத் தான் குறிக்கின்றது.

பெண்களுக்கு நாம் அறிவையூட்டி சமத்துவத்தை அளித்துக் கொண்டு வரவேண்டும். அவர்களைப்பல கூட்டங்களுக்கும் அழைத்துச் செல்ல வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுடைய மூடநம்பிக்கைகள் நீங்கும். நமது பந்துக்கள் வரமாட்டார்களே யெனப் பயப்படக்கூடாது. ஜாதி யைப் பற்றி, நாம் கொஞ்சமும் கவலையடையக்கூடாது. நம்முடைய கொள்கைகளை ஆதரிப்பவர்களிடம் நாம் சம்பந்தம் செய்துகொள்ளலாம். எந்த ஜாதியாகயிருந்தபோதிலும் சரியே, அவர்களுக்கு அறிவு, யோக்கியதை முதலியவைகளிருந்தால் அவர்களிடம் சிநேகிக்கலாம். அறிவுக்கும், அனுபவத்துக்கும் ஒத்திருப்பவைகளை நாம் கவனித்து நடக்கவேண்டு மேயல்லாது பெரியவர்களின் பழக்க வழக்கங்களையே நாம் கண்மூடித்தனமாய் பின்பற்றலாகாது. இவைகள் யாவும் வாலிபர்களால் தான் நடைபெற வேண்டியிருக்கின்றது. வீண் ஆடம்பரங்களின்றியும், அதிக செலவில்லாமலும், சடங்குகளின்றியும் தம்பதிகளிருவரும் தங்களுடைய விவாகத்தை இரண்டு சாட்சிகளின் முன்னிலையில் ரிஜிஸ்தர் செய்து கொள்ளுவதே போதுமானது.

*குறிப்பு : 25.06.1931 இல் கும்பகோணம் பட்டீஸ்வரத்தில் நடைபெற்ற திரு துரைசாமி - திருமதி காந்திமதி ஆகியோரின் திருமணத்தை நடத்தி வைத்து ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 05.07.1931**



# சென்னிமலை யுவர் சங்க ஆண்டு விழா

## "வாலிபர்களே ஜாக்கிரதை!"

## "எழுச்சியினால் கண்மூடித்தனமாய் குழியில் விழுந்து விடாதீர்கள்"

சகோதரர்களே! உங்கள் சங்க வருஷக் கொண்டாட்டத்தை முன் னிட்டு எனக்கு ஆடம்பரமான வரவேற்பளித்ததற்கும், என்னைத் தலைமை வகிக்கச் சொன்னதற்கும், எனக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்த தற்கும் நான் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டவனாவேன். எனது கொள்கைகளுக்கு ஆதரவு காட்டும்முறையில் அப்பத்திரமிருப்பது பற்றியும், அக்கொள்கையிலுங்களுக்குள்ள பற்றுதல் காரணமாய் எனக்குப் புகழ்ச்சியுரைகள் கூறுகிறீர்களென்று நான் கருதுவது பற்றியும் அப் பத்திரத்தை நான் பெற்றுக் கொள்ளுகிறேன். விழாவின் வரவேற்புக் கமிட்டித் தலைவர் நண்பர் பழனியப்பன் வாசித்த வரவேற்புப் பத்திரத் திலும், பின்பு சங்க அறிக்கைப் பத்திரம் வாசித்துக் கொடுத்த நண்பர் என்.வி. பழனியப்பன் உரையிலும் நமது கொள்கை மிகவும் மலிந்து கிடக்கின்றது. நமதியக்கத்தை நீங்கள் எவ்வளவு தூரம் நன்குணர்ந்து அதைச் செயலிலும் செய்து வருகிறீர்களென்பதற் கவைகளே தக்க சாட்சிகளாயிருக்கின்றது. வரவேற்புத் தலைவர் உபன்யாசத்திலுள்ள பெரும் பகுதி விஷயங்கள் யாவும் எனது இன்றைய கொள்கைகளின் தத்துவங்களேயாகும். அதை விட நான் ஒன்றும் புதிதாகச் சொல்லக் கூடுமென்று நீங்களெதிர் பார்க்கமுடியாது. எனினும் அக்கிராசனர் என்கின்ற முறையில் வாலிபர்களுக்குச் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன்.

நாட்டில் எந்தச் சீர்திருத்தம் நடைபெற வேண்டுமானாலும், அவை வாலிபர்களாலேயே தான் முடியுமென்று யாரும் சொல்லுவது வழக்கம். இம்முடிவை இன்று உலகில் சகலருமபிப்பிராய பேதமின்றி ஒப்புக்கொண்ட முடிவுமாகும். இது வெரும் வார்த்தைகளல்ல. இதில் உண்மையில்லா மலுமில்லை.



RangaRakes tamilnavarasam.com

ஏனெனில், வாலிபர்களினுள்ளம் களங்கமற்றது, உலகப்பற்று, சுய நலம், பேராசை, மனோராஜியமாகிய களிம்பும், துருப்பும் பிடியாமல் மூளையுடன் சுத்தமாயிருப்பதாகும். "இளங்கன்று பயமறியா" தென்ற பழமொழிக்கொப்ப அவர்களுக்கெந்தக் காரியத்திலும் பயமென்கிற தடை யானது கிடையாது. அன்றியும் வாலிபர்களின் உள்ளமானது பக்கத்தில் தோன்றுவதை பயமின்றி சடுதியில் பற்றுவதாகும். பற்றிவிட்டாலோ தங்கு தடைகளின்றி படரக்கூடிய வேகமுடையதாகும். இந்தக் காரணங்களால் வாலிபர்களே புதிய புதிய காரியங்களால் பயனேற்பட உதவக்கூடிய வர்களென்று சொல்லப்பட்டு வருகின்றது.

எந்தக் காரியத்தைச் சாதிக்க வேண்டுமானாலும், சுயநலமற்ற தன்மை யும், பயமற்ற தன்மையும், எதையும் தியாகம் செய்யும் உள்ளமும் வேண்டிய தவசியமாகும். இந்தக் குணங்கள் வாலிபர்களிடமே தான் பெரிதும் காண முடியுமேயொழிய உலகவாழ்க்கையிலீடுபட்ட பெரியவர்களென்பவர் களிடத்தில் காணமுடியாது.

ஏனெனில், பெரியவர்களென்பவர்களுக்குப் பல தடைகளுண்டு. அவரவர்கள் மனம் பழக்கமாகிய வாழ்க்கையிலீடுபட்டு, பணந்தேடவும், பெயர்களைக் காப்பாற்றவும், மேலும் மேலுமுயறவும் ஆசைவந்து படர்ந்து, தியாக எண்ணமே தோன்றுவதற்கில்லாமல் செய்து, சகலத் துறைகளிலும் பயத்தை யுண்டாக்கி யிருப்பதாலவர்கள் சிறிதும் பொதுநலத்திற்கும், புதிய காரியங்களைச் சாதிப்பதற்கு முயலாமல் போய்விடுகின்றார்கள். நமது மக்களுக்கு அதாவது பெரியவர்கள், மனிதர்களானவர்களென்பவர்களுக்கு முதலாவது கெட்டகுணம், பயம், இரண்டாவது சுயநலமதிகமேற்படுகின்றது. எப்படியெனில், "நான் செத்துப் போனாலென் பெண்டு, பிள்ளைகளின் கதி என்னவாவது?" "எனது பொருள் தொழில் என்னவாவது?" "என் பெண் டாட்டி, பிள்ளை சொத்து முதலியவைகளைக் காப்பது யார்?" யென்பவை களாகிய யெண்ணங்களே மனிதனை உலகத்தில் எப்படியாவது வாழ்ந்து கொண்டு வெகுநாட்களுக்கிருக்கவேண்டுமென்று கருதுவதற்காதார மாயிருந்து வருகின்றது.

"நான் செத்தால் என் பெண்டு, பிள்ளைகளென்னவாவது?" என்கிற யெண்ணமாகிய ஒரு பெரும் விஷமே நமது மக்களின் பொதுநல உணர்ச் சியைக் கொன்றுகொண்டு வருகின்றது. பொதுநல எண்ணம் ஏற்படாமல் செய்து வருகின்றது. நமது பெண்களும், அவர்களது ஆடவர்களை எவ்வித பொதுநல வேலைக்கும் லாயக்கில்லாமல் செய்து விடுகின்றார்கள். எப்படி யென்றால் "ஐயோ! என்கணவ!! என் தெய்வமே!!! நீ செத்துப்போனால் நான் எப்படிப் பிழைப்பேன்? இந்தப் பிள்ளை, குட்டிகளை எப்படிக் காப்பாற்று வேன்?" என்று சதா ஜபித்துவரும் மந்திரமே, ஆண் சமூகத்தைக் கோழை களாக்கி, சுயநலப்பித்தர்களாக்கி, நாணையமும், யோக்கியப் பொறுப்பற்ற தன்மையை யுடையவர்களாக ஆக்கி வருகின்றது.



நமதுபெண்களுக்குச் சுதந்திரமோ, அறிவோ மற்றவர்களுதவியின்றி தானாக வாழக்கூடிய சக்தியோ மற்றும் ஆண்கள் "இந்தப் பெண்ஜாதி போனால், வேறு ஒருத்தியைக் கொண்டு வாழ்க்கையை நடாத்தலாம். இதற்காக அழவேண்டுமா?" என்று எண்ணுகின்றயெண்ணம்போல "இந்த புருஷன் போனால்,வேறொரு புருஷனைக் கொண்டு வாழ்க்கை நடத்தலா" மென்கின்ற தன்நம்பிக்கையுமிருந்தால், கண்டிப்பாக இன்று நமது நாட்டி லுள்ள ஆண் மக்களெல்லாம் உண்மையான ஆண் மகனாயிருக்க முடியும். சுதந்திர புருஷனாக, மானமுள்ளவனாக இருக்க முடியும். ஆகவே இந்தப் படியில்லாமல் போனதற்குக் காரணம், ஆண்மக்கள் தங்களுக்கு ஏற்படுத் திக் கொண்ட வாழ்க்கைத் துணையானது பயங்காளியாகவும், மூடத்தனம் பொருந்தியதாகவும், தன்நம்பிக்கையற்றதாகவுமிருக்கும்படியான நிலை யில் உள்ள பெண்களை வாழ்க்கைத் துணையாகக் கொண்டதால் தானே தவிர வேறில்லை.

ஆண், தனக்காக என்று கஷ்டப்படுவதுடன், தனக்காகவே தனது சாவுக்குப் பயப்படுவதோடு, தனது பெண்ஜாதிக்கும், பிள்ளைக்குமாகவும் சாவுக்கும், தீய சத்திற்கும் பயப்பட வேண்டியவனாயிருப்பதால் அவன் பயனற்றவனாகவும், சுயநலமும், பேராசையும், பயங்காளித்தனமுமே உருவ மாகத் தோன்றியவனாகவுமாகி விடுகின்றான். ஆதலால் தான் மனிதன் பொது நலத்திற்கருகதையற்றவனென்று சொல்லப்படுவதுடன் மேல் கண்ட இந்த குணங்களற்ற வாலிபர்களே பொதுநலத்திற்கருகர்களென்றும் சொல்லப்பட்டு வருகின்றது.

ஆனால், வாலிபர்களெப்படிப் பொதுநலத்திற் கேற்றவர்களென்கின்ற மகிழ்ச்சியும், பெருமையும் மக்கள் அடைவதற்கு லாயக்குடையவர்களா யிருக்கின்றார்களோ, அதுபோலவே அதற்கு நேரிடையாக அவர்கள் விஷயத்தில் நாம் பயப்படும்படிஅவர்கள்அந்த வாலிபபருவ பயனை முன் பின் யோசியாமலெதிலும் செலுத்தி பொது நலத்திற்குக் கெடுதியை விளைவித்துவிடக்கூடிய அபாயகரமான வஸ்துவாக ஆகிவிடுவார் களென்றும் சில சமயங்களில் கருதவேண்டியதாகவும் இருக்கின்றது.

ஏனெனில், அவர்களது பரிசுத்தமான உள்ளம் எதில் பற்றுகொண்டா லும் துணிந்து, நன்மை தீமையின்னதென்றுகூட யோசியாமல் திடீரென்று பிரவேசித்து விடக்கூடிய சுபாவமுடையதாகி விடுகின்றது.

எதுபோலவென்றால் நமது சிறுபிள்ளைகள் தங்கள் விளையாட்டுக் காக, எப்படி அவ்வப்போது காணப்படும் காரியங்களை யாதாரமாய்க் கொண்டு விளையாடுகின்றார்களோ, அதாவது ஒரு ஊரில் அல்லாசாமிப் பண்டிகை வந்தால் அந்தப்பண்டிகைத் தீர்ந்து பதினைந்து நாட்கள் அல்லது ஒரு மாதம்வரையிலும் எல்லாப் பையன்களும் புலிவேஷம் போல் சதா ஆடிக்கொண்டிருப்பதும், மாரியாய் பண்டிகை வந்தால்,



RangaRakes tamilnavarasam.com

மாரியாய்ப் பண்டிகை தீர்ந்த ஒருமாதம் வரையிலும் ஆண்டியைப்போல் நெருப்பு ஓடு எடுத்து ஆடுவதுபோல் ஆடுவதும், புரட்டாசி மாதம், மார்கழி மாதம் பஜனை காலம் வந்தால் அம்மாதங்கள் தீர்ந்து ஒரு மாதம் வரை யிலும் பஜனைப் பாடுவதுமாகிய காரியங்களையே தங்கள் விளையாடல் களாகக் கருதுகின்றார்களோ அதுபோலவும், நாடகக்காரன் வந்து ஒன்று, இரண்டு மாதங்கள் நாடகமாடிவிட்டு போனால், அந்நடிகர்கள் ஊரை விட்டுப்போய் ஒன்று அல்லது இரண்டுமாதங்கள் வரையிலும் அந்தப் பாடல்களையும் ஆட்டங்களையும் பையன்களாடிக் கொண்டிருப்பது போலவும், நமது வாலிபர்கள் அவர்களுக்குக் காணப்படும் காரியங்க ளிலும், ஸ்தாபனங்களிலும், இயக்கங்களிலும் வீழ்ந்து, அவற்றையே தங்களது வாலிபப் பருவத்தினாலேற்படும் பயமற்றதும், சுயநலமற்றதும், தியாகத்திற்கு தப்பாயிருப்பதுமான அரிய குணத்தைப் பயன்படுத்திவிடு கின்றார்கள். இந்த மாதிரிபயன்படுத்தப்பட்டக் காரியங்களின் பயன் தான் இன்றுபல வாலிபர்கள் தாசி வீடுகளில் திரிந்துகொண்டு, தங்கள் நேரத்தையும், சரீரத்தையும், செல்வத்தையும் பாழாக்கிக் கொண்டு திரிவதும், அதுவே அந்த வாலிபன் ஜன்மமெடுத்ததின் பயனென்று கருதுவதும், அவர் சார்ந்திருக்கும் அந்த தாசிக் கூட்டங்கள் சொல்லுமுபதேசங்களும், நடவடிக்கைகளும் அவர்களுக்கு உண்மையாய்த் தோன்றுவதற்கும் காரணமாயிருந்து வருகின்றன. அதுபோலவே மற்றும் பல வாலிபர்கள் குடி, காலித்தனம், சீட்டாட்டம், குதிரைப்பந்தயம் முதலிய சூதாட்ட மென் பதும், தெய்வபக்தராவதும், மதபக்தராவதும், மதப்பூச்சுகள் பூசுவதென்பதும், படிப்பதென்பதுமாகிய அநேக காரியங்களிலீடுபடுவதுகளும் ஆகிவிடு கின்றன. வாலிப வயதிலுள்ள எழுர்சியும், வேகமும், பயமற்றத்தன்மையும் பொறுப்பெது வென்றுணர்வதற்குப் போதிய அவகாசமும், சௌகரியமும், அனுபவமுமில்லாத காலபலனும் அவர்களையேதாவது கண்மூடித்தன மானக் காரியங்களிலிழுத்து விட்டு, அருங்குணங்களை வீணாக்குவதோடு, பின்னாலும் அவர்களது வாழ்க்கையில் கஷ்டப்படவும் செய்து விடு கின்றன. ஆதலாலேயே சிற்சில சமயங்களில் நான் வாலிபர்கள் "ஜாக்கிர தையாகவே" யிருக்க வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லுவதுடன், அவர்களது வேகம் பொருந்திய ஊக்கம் சிற்சில சமயங்களிலபாயகரமாய் நாட்டுக்குப் பயனற்றதாய் சில சமயங்களில் கெடுதியையும் ஆபத்தை யுமுண்டாக்கக் கூடியதா யேற்பட்டு விடக்கூடுமென்று சொல்லுவதுமுண்டு. அவர்களது எழுர்ச்சியின் வேகத்தினால் செய்யப்பட்டக் காரியங்கள் அவர்களுக்குப் பலன் கொடுக்காததாலோ அல்லது அக்கம் பக்கத்திய சார்பால் வேறுவித யெண்ணங்கள் தோன்றிவிடுவதாலோ, அதாவது தாங்கள் சகவாசம் செய்தவர்களுடைய சகவாச தோஷத்தால் மற்றும் சுயநலமோ, பெருமையோ யேற்படுத்திக் கொள்ள வேண்டுமென்கிற ஆசையேற்பட்டுவிடுகின்ற காரணத்தால், அவர்களது முன்னைய வேகத்தின் பலனானது கெடுதியை (Reaction) யும் சில சமயங்களில் உண்டாக்கி விடுகின்றது. அதாவது, வேகமாய்போகும் எழுர்ச்சியென்னும்



வண்டியானது அனுபோகமின்மை அறியாமை சுயநலமென்னும் சுவற்றில் முட்டினால், வேகத்தின் மிகுதியினால் சுவரும் கெட்டு, வண்டியும் பழுதாகி, அக்கம்பக்கத்தவர்களுக்குத் தொல்லையையும் விளைவித்து விடுகின்றது.

இத்தியாதி காரணங்களால் வாலிபர்கள் மிக்க ஜாக்கிரதையாக, பொறு மையாக யோசித்தே ஒவ்வொரு காரியத்திலும் தங்களருங்குணங்களைப் பயன்படுத்தவேண்டும். வாலிபர் உள்ளம் பெட்ரோலுக்குச் சமமானது. உலக இயக்கத்தோற்றங்கள் நெருப்புக்குச் சமமானது. வகையற்ற முறையில் பக்கத் தில் வந்தால் நெருப்புப் பிடித்து எண்ணையை வீணாக்கி மற்றவர்களுக்குத் தொல்லையை விளைவித்து விடும். ஆகவே "வாலிபர்களே! ஜாக்கிரதை!! ஜாக்கிரதை!!! " யென்று நான் உங்களுக்குச் சொல்லவேண்டியவனாக யிருக்கின்றேன்.

இன்று இங்கு கூடியிருக்கும் வாலிப சங்க ஆண்டு விழா வரவேற்புத் தலைவருரையும், காரியதரிசியவர்களறிக்கையுரையும் நான் கேட்ட வரையி லெனக்கு சரியென்று பட்டவிஷயங்கள், கொள்கைகள் முதலியவை களையே அவர்களும் தங்களது கொள்கையாகவும், நோக்கமாகவும் கொண்டிருப்பதாகயுணர்கிறேன். ஒன்று அவை சிறிது அபிப்பிராய பேதத்திற்கிடமானதாகவிருக்கலாம். ஆனாலும் எல்லாவற்றையுமே இன்னமுமாராய்ந்து பார்க்கும்படியும், அவர்களுக்குத் தோன்றுமனு போகஸ்தர்களைக் கொண்டும் சுயநலமற்றவர்களைக் கொண்டும், முன்பின் நடவடிக்கையை யாராய்ச்சி செய்ய சௌகரியமுள்ள வழிகாட்டி மனிதர் களைக் கொண்டும் அக்கம் பக்க தேசநிகழ்சிகள் அவற்றின் அனுபவங்கள் ஆகியவைகளைக் கொண்டும் விஷயங்களை அறிந்து; தங்கள் கொள்கைகளையும், திட்டங் களையு முறுதிபடுத்திக் கொள்ள வேண்டுமாய் விரும்புகின்றேன். இவைகளைத்தான் நான் என்னை மதிக்கும் வாலிபர் களுக்குச் சொல்லித் தீர வேண்டியிருக்கின்றது.

வாலிப பருவத்தின் கோலத்தையும், அதனது பலனையும் நான் சிறிது அறிந்தவனேயாவேன். வெகுகாலம் நான் வாலிபனாகவிருந்தவன். வாலிபனாகவேயிருந்து சாகவேண்டுமென்ற ஆசையை யுடையவன். அப்பருவத்தின் சக்தியையும் மேன்மையையுமனுபவித்தவன். அந்த அனுபவம் தப்பான வழியிலுமிருக்கலாம் சரியான வழியிலுமிருக்கலாம். ஆனால், நான் வாலிபப்பருவத்தை அனாவசியமாய் விட்டு விடாமல் அதைப்பல வழிகளில் கசக்கிப் பிழிந்தவன். இந்த உண்மை மற்றவர்களைக் காட்டிலும் நீங்களும், உங்கள் பெரியோர்களும் நன்றாயுணர்ந்தவர்களா வீர்கள். ஏனெனில், நான் உங்களிலொருவனாகவும், உங்கள் குடும்பஸ்தர் களிலொருவனாகவுமிருந்து வந்தவன். ஆகவே, இங்கு, இவ்வளவு தைரியமாய் எனது சகோதரர்களுக்கும், குழந்தைகளுக்கும் சொல்லுவது போல் இவ்விஷயத்திலுங்களுக்கு இவ்வளவு எச்சரிக்கை செய்கின்றேன்.



RangaRakes tamilnavarasam.com

மேலும் சகோதரர்களே! நமது நாடு இன்று இருக்கும் நிலைமை யிலிருந்து சிறிது மாற்றமடைய வேண்டுமானாலும் மதசம்பந்தமாகவும், அரசியல் சம்பந்தமாகவும் இந்நாட்டில் சுயநலக்காரரும், சோம்பேரிகளும், மற்றவர்கள் உழைப்பில் வாழ முடிவுசெய்து கொண்டு தங்கள் வாழக்கையை நடத்திவருபவர்களும் இரண்டுவித உணர்ச்சியால் மக்களை கட்டுப்படுத்தி மூடர்களாக்கி, அடிமைகளாக்கி வைத்து பயன் பெற்று வருகின்றார்கள். அவை எவை எனில் மத இயல் அரசியல் என்பவை களாகும். மதத்தின் பெயரால் மோக்ஷலக்ஷியமும் அரசியலின் பெயரால் சுயராஜ்ஜிய லக்ஷியமுமே மனிதனின் வாழ்நாளில் முக்கியமானது என்று மக்களுக்குள் புகுத்தப்பட்டு விட்டது. இரண்டு விஷயத்திலும் பிரவேசித்து இருக்கும் மக்களில் 100க்கு 90பேர் இரண்டுக்கும் அருத்தம் தெரியாத வர்களாகவே அதில் உழன்று கொண்டு இருக்கின்றார்கள். பொருள் தெரிந்த சில பெயர்கள் தங்கள் சுய நலத்தை உத்தேசித்து அவற்றை வியாபாரமாய் நடத்தி வருகின்றார்கள்.

மக்களின் சுபாவம் பொருள் தெரிந்த காரியத்திற்கு பயப்படுவதை விட பொருள் தெரியாத காரியத்திற்குத்தான் அதிகம் பயப்படும். ஏனெனில் பொருள் தெரிந்த காரியங்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளக் கூடுமான தினால் அதற்குப் பயப்பட மாட்டான். பரிகாரம் செய்து கொள்ள முடியாத தற்கே அதிகம் பயப்படுவான்.

அதுபோலவே ஒரு வீட்டுக்குள் பிரவேசிப்பவனுக்கு அவனைப் பிரவேசிக்காமல் இருக்கச் செய்ய "அங்கு தேள் இருக்கும் பாம்பு இருக்கும்" என்று சொன்னால் அவன் அதற்குப் பயப்படாமல் கையில் தடியையும், காலில் பூட்சையும் போட்டுக்கொண்டு உள்ளே பிரவேசிக்கத் துணிந்து விடுவான். அல்லது கையில் நெருப்புப் பந்தத்தை எடுத்துக் கொண்டாவது பிரவேசிக்கத் துணிந்து விடுவான். ஏனெனில் தேளைப் பற்றியும், பாம்பைப் பற்றியும் அவனுக்குத் தெரியுமாதலால் அவைகளின் கஷ்டத்தில் இருந்து விலக ஏற்பாடு செய்து கொள்ளத் தெரியும். ஆனால் அதேவீட்டில் பிசாசோ, பூதமோ இருப்பதாகச் சொல்லிவிட்டால் அந்தவீதியில் நடக்கக்கூட பயந்து கொள்ளுவான். என்ன சொன்னாலும் அந்த வீட்டில் இருக்க சம்மதிக்கவே மாட்டான். காரணம் என்னவென்றால் பிசாசு, பூதம் என்பது இன்னது இன்ன மாதிரியாய் இருக்கும் என்கின்ற விபரம் அவனுக்குத் தெரியாது. ஆதலால் அதிலிருந்து தப்ப உபாயம் செய்துகொள்ள அவனுக்கு முடிவதில்லை. அதுபோலவேதான் மனிதனுக்கு மோட்சம் என்பது என்ன? சுயராஜியம் என்பது என்ன? என்று தெரிந்திருந் தால் அவற்றின் பேரால் இவ்வளவு மக்கள் ஏமாந்திருக்க முடியாது. அருத்தம் தெரியாததையும் மனதில் பட முடியாததையும் பிரசாரம் செய்வ தால் மக்கள் ஏமாந்து விடுகின்றார்கள். ஏதோ தனக்கு பெரிய லாபம் வரு கின்றது என்று கருதுகின்றான். வியாக்கியானம் செய்து பார்க்கும்படி



சொன்னால் மோக்ஷத்தையும் சுயராஜியத் தையும்பற்றி அனேக "பெரியார்கள்" ஏற்கனவே சொல்லி இருப்பதால் அதைப்பற்றி சந்தேகப் படுவதோ அல்லது விளக்கிக்கொள்ள ஆசைப்படுவதோ குற்றமானது என்று கருதுகின்றான்.

இந்த மனப்பான்மையிலேயே தான் மனிதன் வாழ்க்கையை நடத்து கின்றான். இதனாலேயே தான் பாமர மக்கள் சிறிதும் தலைதூக்க முடியாமல் மிருகப்பிராயத்தில் இருந்து வருகின்றார்கள். "பகுத்தறிவைப் பயன்படுத்து வதே பாவம்" என்று சொல்லப்பட்ட ஒரு ஆயுதமே மக்களை அழுத்தி வைத்துக் கொண்டிருக்கின்றது. அர்த்தமற்ற உண்மையற்ற சொற்களுக்கு நடுங்கச்செய்கிறது. உதாரணமாகப் பாருங்கள். மனிதனுடைய மூடத் தனத்துக்கு ஒரு உதாரணம் காட்டுகின்றேன்.

மனிதன் திருடுவான், நம்பிக்கை துரோகம் செய்வான், மோசம் செய் வான், கொலையும் செய்வான். ஆனால் ஒருபறையன் கொண்டுவந்த தண்ணீரை தொட்டு குடி என்றால் நடுங்குவான்.

பாவம் என்று ஒன்று இருந்தால் மோசம் செய்வதைவிட, நம்பிக்கை துரோகம் செய்வதைவிட, பதரப்பதர கொலைசெய்வதைவிட, வேறு ஒன்றும் அதிகபாவம் இருக்கமுடியாது. ஆனால் இவற்றையெல்லாம் பஞ்சாமிருதம் சாப்பிடுவதுபோல் செய்து விட்டு பறையனை திண்ணையில் உட்கார வைப்பது என்றால் நடுங்குகின்றான் என்றால் மனித சமூகத்தை எவ்வளவு சுயநலமாக இருக்கும்படியாகவும், முட்டாள்தனமாக இருக்கும்படியாகவும் வாழ்க்கை முறைகள் மதமுறைகள் மோட்ச நரக முறைகள் அமைக்கப் பட்டிருக்கின்றது என்று பாருங்கள். இதுபோலவே அரசியலிலும் அரசாங் கத்தாருக்கு அனுகூலமாக இருக்கின்றவர்கள் யார்? யாருடைய துரோகத் தால், சுயநலத்தால் இந்நாட்டில் அக்கிரமமான அரசாங்கம் இருந்து வரு கின்றது? என்பவைகளை முக்கிய காரணமாய் உணர்ந்து அந்ததுறையில் ஒரு சிறு வேலையும் செய்யாமல் பாமர மக்களிடம் சுயராஜிய வியாபாரம் நடத்துவது என்பதை மக்கள் உணர முடியாமல் இருப்பதோடு உணர்ந்து சொல்லுகிறவர் களையும் மக்கள் வெறுக்கும்படி செய்யப்பட்டிருக்கின்ற தென்றால் அரசியலின் பேரால் மக்கள் எவ்வளவு முட்டாள்கள் ஆக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை கவனித்துப் பாருங்கள். உங்கள் அறிக்கையில் கண்ட விஷயங்களைப்பற்றியே எடுத்துச்சொல்லி வருவதில் மேலும் கிராம புனருத்தாரணம் என்பதைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

## கிராம புனருத்தாரணம்

கிராம புனருத்தாரணம் என்பது கிராமங்களின் பழைய நிலைமை களை மறுபடியும் புதுப்பிப்பது என்கின்ற அருத்தத்தில் வேலை செய்வதா னால் இனி இந்த தேசத்தில் கிராமம் என்பதே இல்லாமல் போய்விடும்.



RangaRakes tamilnavarasam.com

அந்தப் படி இல்லாமற்போவதே மேல். இருக்கும்படி செய்யவேண்டு மானால் கிராமத்திற்குள் புதிய தன்மைகளை புகுத்தவேண்டும். நமது கிராமங்களைப்பற்றி மேயோ சொல்லி இருக்கும் முறைகள் தான் நமது பழைய கிராம நிலையாகும். நமது அரசியல் துறையில் பாடுபடும் பெரியார் ஒருவர் சமீபத்தில் ஒரு கிராமத்தைப்பார்த்து "இந்த கிராமத்தைப் பார்த்ததும் எனக்குப் பழைய கால கிராம காக்ஷி தென்படுகின்றது. நானும் ஒரு கிராம வாசியானதால் பழைய கிராமக்காக்ஷியைக் கண்டு மகிழ்ச்சி அடை கின்றேன் என்பதாகப் பேசினாராம்.

பழைய மாதிரி கிராமம் இருப்பதனால் கிராமங்கள் ஒழிந்தே போய் விடும். யாரும் கிராமத்தில் இல்லாமல் எல்லோரும் பட்டணங்களுக்கே குடியோடிப் போவார்கள்.

கிராமங்களை பட்டணமாக்கவேண்டும். பட்டணவாசிகளின் வாழ்வு முழுவதும் கிராமவாசிகளின் உழைப்பேயானதால் கிராமவாசிகளே தான் உலகபோக போக்கியங்களை அடைய உரியவர்களாவார்கள்.

கிராம வாழ்க்கை ஒரு விதம் நகர வாழ்க்கை ஒரு விதம் என்பது பித்தலாட்டக்காரியமேயாகும். கிராமவாசிகளைப்பார்த்து கண்ணீர் வடிக்கும் பட்டணவாசியான முதலாளியும், வக்கீலும், உத்தியோகஸ்தனும், பார்ப்பனனும் பித்தலாட்டக்காரர்களேயாவார்கள். அவர்களது வஞ்சகமும், கெட்ட எண்ணமும்தான் கிராம வாசிகளான பெரும்பான்மை மக்களை கால்நடைகளாக வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே ஒவ்வொரு விஷயத் திலும் கவலை கொண்டு பகுத்தறிவைப் பயன்படுத்தி தக்க முறையில் சேவை செய்யவேண்டுமென்று விரும்புகிறேன்.

*குறிப்பு: 28.06.1931 ஆம் நாள் சென்னிமலைநகர் போர்டு பள்ளியில் நடைபெற்ற சென்னிமலை யுவர் சங்க ஆண்டுவிழாவில் தலைமையேற்று ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 05.07.1931**



# பொருளாதாரம்

சகோதரர்களே!

பொருளாதார மென்னும் விஷயத்தைப்பற்றி என்னைப் பேசும்படி கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். பணம் சம்பாதிப்பதிலும், வரும்படி அடைவ திலும் நம்நாட்டு மக்கள் எந்தநிலைமையிலிருக்கிறார்கள்? அவர்களுக்கு அந்த வருவாயென்ன பலனளிக்கின்றது? அவர்களுக்கதிக வருவாய் கிட்டவுமது தக்க பயனளிக்கவும் வழியென்ன? என்பவைகள் போன்றது தான் பொருளாதாரமென்பது பற்றி நான் பேசப்போகும் விஷயத்தில் முக்கிய கவனிப்பாகும். ஆகவே இவ்விஷயங்களில் நமது நாட்டிற்கும் உலகிலுள்ள மற்ற நாடுகளுக்குமுள்ள வித்தியாசங்கள் முதலில் கவனிக்கப்பட வேண்டும். பொருளாதாரத்தில் மேல் நாட்டார் சராசரியாக ஒவ்வொரு நபரும் தினம் 2 ரூபாய் வீதம் சம்பாதிக்கின்றார்கள். நம் நாட்டார்களோ சராசரியாக ஒவ்வொரு வரும் தினம் 2 அணா வீதமே சம்பாதிக்கின்றார்களென்பது யாவருமறிந்த விஷயம். அன்றியும் இதுவே நம் நாட்டுப் பொருளாதாரப் பிரச்சினைக்கு முக்கிய பல்லவியுமாகும். இது உண்மையாகவே யிருக்கலாம். ஏனெனில் மேல் நாட்டில் பல லக்ஷ ரூபாய் சம்பாதிப்பவனிலிருந்து தினம் கால் அணா சம்பாதிப்பவன் வரையில் சகலரையும் ஒட்டு மொத்தம் கணக்கு சேர்த்துப் பிரித்து வகுத்துப்பார்த்தால் ஆளொன்றுக்கு வருமானம் ரூ 2-0-0 ஆகும். அதைப்போலவே இந்திய நாட்டின் பெரிய ஜமீன்தாரனிலிருந்து மகாராஜாக்களிலிருந்து மடாதிபதி களிலிருந்து தினம் ஒரு காசு பிச்சை எடுப்பவன் வரையில் ஒட்டு மொத்தம் கணக்குப் பார்த்து ஆள் ஒன்றுக்கு வருமானமென்னவாகுமென்று பிரித்து ஈவு பார்த்தால் ஆள் ஒன்றுக்கு 2 அணா வீதமே வரும்.

இவ்விதம் மேல்நாட்டில் வருமான மதிகமாவதற்கும் அதாவது சராசரிரூ.2-0-0 வருமானமாவதற்கும் நமது நாட்டில் வருமானம் குறைவ தற்கும் அதாவது ஆள் ஒன்றுக்கு சராசரி0-2-0 அணாவே கிடைப்பதற்கும் காரணமென்ன வென்பதைக் கண்டு பிடிப்பதுதான் பொருளாதாரப் பிரச் சினையில் முக்கியமானதாயிருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். மேல் நாட்டான் பணம் சம்பாதிக்க வென்று உழைக்கிறான். நாமுமது போல வே தானுழைக்கிறோம். ஆனால் தினம் 0-2-0 அணா சம்பாதிப்பதற்கு



RangaRakes tamilnavarasam.com

நமது மக்கள் படுகின்ற கஷ்டத்தினளவு மேல் நாட்டில் தினம் ரூ. 2-0-0 சம்பாதிக்கின்ற ஆட்கள் கஷ்டப்படுவதில்லை. சம்பாதனை விஷயத்தில் நமது கஷ்டமும் சரீரப்பிரயாசையும் சிறிதும் குறைந்த பாடில்லை. ஆனால் நாட்டு வளப்பத்தில் நம் நாட்டை விட மேல் நாடு சிறந்ததென்று யாருமிது வரை சொல்ல வரவில்லை. அப்படியிருக்க அதாவது வளமுள்ள நாட்டிலிருப்பவன் தினம் இரண்டணாவும் வளமில்லா தேசத்திலிருப்பவன் தினமிரண்டு ரூபாயும் சம்பாதிக்கக் காரணமென்ன என்பதில் தான் பொருளாதாரப் பிரச்சினையின் சாவி இருக்கின்றது. மலைவளம், நீர்வளம், நிலவளம், செழிப்பு வர்த்தக மூலப்பொருள்கள் பல தானியங்கள் விளைவுக்கு வேண்டிய சௌகரியங்களாகியவை மற்ற நாடுகளைவிட நமது நாட்டிலதிக முண்டல்லவா? இத்தகைய வளம் கொழுத்த நமது நாட்டில், செல்வத்திற்காக வென்று ஒரு தனி கடவுளையும் ஏற்படுத்திக் கொண்டு, அதற்காக பூஜைநைவேத்தியம் உற்சவம் பிரார்த்தனை முதலியவைகளும் செய்து வரும் நமது நாட்டில் "தரித்திரம் தலைவிரித்தாடக்" காரணமென்ன? மக்கள் சுகமாயிருக்க வீடில்லாமல் கட்டத்துணியில்லாமல் உண்ண உணவில்லாமல் வாடுகிறார்கள் வதங்குகிறார்களென்று சொல்லப்படக் காரணமென்ன? வென்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்தக் காரணத் தினுண்மையைக்கண்டு பிடித்து விட்டால் பொருளாதார பிரச்சினை வெகு சுலபமாகத் தீர்ந்துவிடும்.

பொருளாதார சீர்திருத்த நிபுணர்களுக்கு இந்த விடத்தில் தானாதிக வேலையிருக்கிறது. இதைக்கண்டுபிடித்து நேர் செய்யாமல் "நமது செல்வம் கொள்ளை போகின்றது! கொள்ளை போகின்றதே! தென்று பேசுவதால் - தலையிலும், வாயிலும், வயிற்றிலுமடித்துக் கொள்வதாலொருபயனுமே யுண்டாகாதென்பது எனது அபிப்பிராயம்.

உண்மையைப் பேசத்துணிந்தோமேயானால் 1. இந்த நாட்டில் பொருளாதாரக் கஷ்டமிருக்கின்றதா? 2. இருந்தால் யாருக்கிருக்கின்றது? 3. அது ஏனிருக்கின்றது? 4 யாராலிருக்கின்றது? என்பவைகளாகிய விஷயங்களில் கவனம் செலுத்திப்பார்த்து ஒரு முடிவுக்கு வந்தோமானால் அந்த முடிவின் அபிப்பிராயங்கள் இந்த நாட்டுப் பெரியோர்கள் தலைவர்கள் என்பவர்களது அபிப்பிராயங்களுக்கு விறோதமாகவே இருக்கும். இருந்தபோதிலும் இவ்விஷயங்களில் எனக்குத்தோன்றிய உண்மையை உங்கள் முன் பேசுகின்றேன்.

சகோதரர்களே! இன்று பொருளாதாரக் கஷ்டமென எங்காவது உண்மையிலிருக்கின்றதா? விவசாயங்கள் நடைபெறுகின்றன. தொழில்கள் நடைபெறுகின்றன. சில இலட்சம் பிறவிப் பிச்சைக்காரர்கள் தவிர, சில கோடி பிறவிச் சோம்பேறிகள் தவிர மற்ற மக்களெல்லோரும் வேலை செய்கின்றார்கள். 1,000, 10,000, 1,00,000, 10,00,000, 100 00 000, 1,00000000 ரூபாய்களென்பதான சொத்துக்கள் கொண்ட செல்வவான்கள் நமது நாட்டிலில்லையா? 100, 1,000, 10,000, 1,00,000, 10,00,000 பல 10,00,000 ரூபாய்களென்பதான வருஷ வரும்படியைக் கொண்ட வரும்படிக்காரர்கள் நமது நாட்டிலில்லையா? மாதம் ஒன்றுக்கு 10, 100, 1000, 10,000 ரூபாய்கள் வீதம் சம்பளமும், சம்பாதனையுமானவரும் படியுள்ள உத்தியோகஸ்தர்கள் வக்கீல்கள், வைத்தியர்கள் முதலிய மக்கள் நமது நாட்டிலில்லையா? ஒவ்வொரு வீடுகளில் 1000, 10,000, 1,00,000 ரூபாய் பெறும்படியான நகைகளும், 1000, 10,000, 1,00,000, 2,00,000 பெறுமான கட்டடங்களும், கோட்டை கொத்தளம் போன்ற வீடுடையவர்களும் நமது நாட்டிலில்லையா? வென்று யோசித்துப்பாருங்கள். பூமி விஷயத்திலும் ஆள் ஒன்றுக்கு 5, 10, 100, 1,000, 10000, 20,000, 50,000 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட பூமியையும், வயல்களையும், தோட்டங்களையும், மலைகளையும், சோலைகளையும் அவற்றுள் அழகிய நீரோடைகளையும் கொண்ட மக்கள் நமது நாட்டிலில்லையா? பெரிய பெரிய நதிகள், வாய்க்கால்கள், ஓடைகள், ஏரிகள் நமது நாட்டிலில்லையா? என்று யோசனை செய்து பாருங்கள். ஆகவே இந்த நாட்டில் செல்வமில்லை என்று எப்படி, எந்த ஆதாரத்தைக் கொண்டு சொல்லக்கூடும்? என்பதை சற்று நடு நிலைமையிலிருந்து சிந்தித்துப் பாருங்கள். எனவே, சகோதரர்களே!இவ்வளவு செல்வமிருக்கும் போது இந்த நாட்டைப் பொருளாதாரக் கஷ்டமிருக்கின்ற நாடாக எப்படி சொல்ல முடியும்? அப்படித்தானெங்காவதிருப்பதாக சொல்லுவதானால், யாருக்குப் பொருளாதாரக் கஷ்டமிருக்கின்றது? பாடுபடுகின்றவர்களாய், பாமர மக்களாயிருக்கின்ற - சாது ஜனங்களாக இருக்கின்றவர்களுக்கும், எந்தக் காலத்திலும் எந்த விதத்திலும் பொருளற்றவர்களாகவே இருந்து தீரவேண்டுமென்று நிர்பந்தப்படுத்தப்பட்டிருக்கின்றவர்களுக்குமேயல்லாது, மற்ற யாருக்குப் பொருளாதார கஷ்டமிருக்கின்றது? என்று உங்களை நான் கேட்கின்றேன்.

தங்களை யுயர்ந்த ஜாதியரென்றும், மேல்வருணத்தவரென்றும், பாடுபடுவதற்கு உரிமையில்லாதவர்களென்று மேற்பாடு செய்துகொண்ட கூட்டத்திற்கெங்காவது பொருளாதாரக் கஷ்டமிருக்கின்றதா? என்று பார்த்தீர்களானால் இந்தக் கூட்டத்தாருக்கு எங்காவது சிறிதாவது பொருளாதாரக் கஷ்டமிருப்பதாகவோ, ஜீவனத்திற்குக் கஷ்டப்பட வேண்டியிருப்பதாகவோ, அதனால் பசியுடன் வாடிக்கொண்டோ, கல்வி கற்க மார்க்கமில்லாமலோ இருப்பதாக நீங்கள் சொல்ல முடியுமா? என்பது உங்களுக்கு விளங்கும். ஆகவே, இந்தக் கூட்டத்தவர்களல்லாமல் மற்றவர்களுக்குப் பொருளாதாரக் கஷ்டமென்பதிந் நாட்டிலேனிருக்கின்றது? யாராலிருக்கின்றது? என்பதை இப்போது யோசித்துப்பாருங்கள். அப்போதுதான் நாட்டிலுள்ள செல்வங்களை சகல மக்களும் சரியாய் அனுபவிக்க முடியாமலிருக்கும்படிக்கும், பாடுபடுகின்றவன் பட்டினியாகவும், சோம்பேறியாயிருப்பவன் நன்றாகத் தாராளமாய் சாதாரண அளவுக்கெத்தனையோ மடங்கதிக மாயனுபவித்துக்கொண்டு வாழும்படியாகவுமிருப்பதும் அதற்கு


RangaRakes tamilnavarasam.com

ஆதாரமாக நமது சமூகவாழ்க்கைக் கிரமத்திலதற்கேற்ற திட்டங்களேற்படுத்தி வைத்திருக்கும் சூக்ஷியும், பித்தலாட்டமும், ஏமாற்றமும் நன்றாய் உங்களுக்கு விளங்குவதோடு இதைத்தவிர மற்றபடி வேறொன்றும் 'பொருளாதாரக் கஷ்டத்திற்கு' காரணமில்லை யென்பதை நன்றாயுணருவீர்கள்.

சகோதரர்களே!இந்தப்படியாய்த் திட்டம் செய்வதற்கு மூலகாரணஸ்தர்களாகயிருப்பவர்கள் மேல்ஜாதியார், மேல்வருணத்தாரென்கின்ற சூஷிக்கார சோம்பேறி வாழ்க்கைக் கூட்டத்தார்களா? இல்லையா? வென்று யோசித்துப் பாருங்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமையில், இந் நாட்டிலிருப்பதாய் சொல்லப்படும் பொருளாதாரக்கஷ்டத்தை எப்படி யொழிப்பது தென்பதுதான் இனி முக்கியப்பிரச்சினையாக யோசிக்கப்படவேண்டும்.

சகோதரர்களே!இந்த இடத்திலுங்களது நியாயமான புத்தியையும், நடுநிலைமையான கவனத்தையும் செலுத்திப் பாருங்கள். பொருளாதாரக் கஷ்டத்தின் தத்துவங்கள் சுலபமாக உங்களுக்கு விளங்குவதற்கு ஒரு சிறு உதாரணம் சொல்லுகின்றேன். இன்றையத்தினம் ரூ. 1-க்கு பட்டணம் படியினால் 6 படி அரிசி விற்கும்படியான நிலைமை நம் நாட்டில் இருந்தும் (அதாவது ஒரு தம்படிக்கு ஒரு பெரிய இட்டலி விற்கக்கூடிய அளவு மலிவாக இருந்திருந்தும்) இன்று ஒரு மனிதன் ஒரு இட்டலி 6 தம்படி கொடுத்து வாங்குவதும் அதே இட்டலியை வேறு ஒருவன் ஒரு தம்படிக்கோ அல்லது இரண்டு தம்படிக்கோ விற்றால்கூட அவனிடம் வாங்காம லதிகவிலை கொடுத்து வாங்கி, நஷ்டமடைந்து வயிறார இட்டலி வாங்கி சாப்பிடக்கூட சௌகரியமில்லாமல் கஷ்டப்படுவதும், அதிக விலைக்கு விற்பவன் பெண்டு பிள்ளைகள் கெம்பு வைரக்கம்மலும், அட்டிகையும், ஜப்பான் சில்க் கும், பிராந்தி, விஸ்கிக்குடியுமாகியவைகளான போக போக்கியங்களை அனுபவித்துக் கொண்டு அவன் பிள்ளைகள் பி.ஏ.பி.எல்., படிக்கின்றார்கள் என்றால் இது இந்நாட்டுப்பொருளாதாரக் கஷ்டத்தின் பயனா? அல்லது சிலருக்கெப்போதும் பொருளாதாரக்கஷ்டம் சதா இருக்கும்படியாகச் செய்யப்பட்டிருக்கும் சமூகவாழ்வு ஏற்பாடா? என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். ஆகவே, இந்தப்படியான, அதாவது செல்வத்தையும், பொருளையும் மக்கள் சமமாயனுபவிக்க முடியாதபடி வெகுகாலத்திற்கு முன்பிருந்தே செய்யப்பட்டிருக்கு மேற்பாட்டை-கட்டுப்பாட்டையுடைத் தெரிந்தீர்களானால் இங்குப் பொருளாதாரக் கஷ்டமேற்பட மார்க்கமிருக்குமா? என்று கேட்கின்றேன்.

மேல் நாட்டில் சக்கிலிமகன் பிரதம மந்திரியாகின்றான். குயவன் மகன் லார்டு (Lord) 'பிரபு' சபையில் அங்கம் வகிக்கின்றான். கப்பலில் சட்டி பானைகளைக் கழுவி சுத்தம் செய்கின்றவன் குப்பைக் கூழங்களைக் கூட்டுகின்றவன் மகன் இராஜப் பிரதிநிதியாகின்றான். வண்ணான் மகன் கவர்னராகின்றான் என்பதை நாம் பார்க்கின்றோம். ஆனால் நமது நாட்டில் சக்கிலிகள் வீதிகளிலும் நடக்கக்கூடாது.



பறையன் சுடுகாட்டிலிருந்துகொண்டு, பிணங்களுக்குக் கட்டியத் துணியைக்கிழித்துக் கட்டிக்கொள்ள வேண்டுமென்றும், பிணங்களுக்கு வாயில் போடும் வாய்க்கரிசியைப் பொறுக்கியெடுத்துக் கஞ்சி காய்ச்சிக் குடிக்கவேண்டுமென்றும் திட்டங்களிருந்தாலெப்படிப் பொருளாதாரத் திட்டம் பெருவாரியான பாடுபடும் மக்களுக்கு திருப்திதரக்கூடியதாக விருக்குமென்று யோசித்துப்பாருங்கள்.

இந்த நாட்டில் மேல் ஜாதிக்காரனென்பவன் எவனாவது சரீரத்தால் பாடுபடுகின்றானா? வென்று கவனித்துப்பாருங்கள்.

இந்தநாட்டில்மக்களை பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் பஞ்சமனென்று பிரித்து, இதில் அவர்களுக்கு அந்தஸ்தும், வேலையும் பிரித்து, அதாவது பிராமணன் படிப்பதற்கும்- படிப்பு சொல்லிக் கொடுப்பதற்கு மருகனென்றும், க்ஷத்திரியன் அரசு செலுத்தி - உத்தியோகங்கள் பார்க்க அருகனென்றும், வைசியன் வியாபாரியாய் வியாபாரம் செய்து ஜமீன்தாரனாய் விவசாயக்குடித்தனம் செய்விக்கச்செய்து, பணம் சம்பாதிக்க அருகனென்றும், சூத்திரன் சரீரப்பிரயாசைப்பட்டு, உயிர்வாழுமளவுக்கு மாத்திரம் ஊதியம் பெற, கூலிபெற அருகனென்றும், பஞ்சமனென்பவன் இந்த சூத்திரன் அதிகாரம் செய்யவும், அவனுக்கு வெட்டி வேலை செய்யவும் அவன் உண்டுகழித்த கஞ்சியையும், உடுத்திக்கிழித்த கந்தையையும் பெற்று, உண்டு உடுத்தி இழிபட்ட மிருகங்களிலும் கேவலமாயிருக்க அருகனென்றும் யேற்பாடுகள் செய்ததிட்டமே - வருணாச்சிரம தர்மமே தான் - இன்று இந்த நாட்டில் பாடுபடுபவர்கள் பொருளாதாரத்தில் நல்ல நிலையையடைய முடியாமல் இருக்கின்றதேயொழிய, வேறுகாரணமில்லவேயில்லை. இந்தக்கூட்டம் அதாவது பாடுபடுகின்றவர்கள் எண்ணிக்கையில் மற்றவர்களைவிட அதிகமாயிருப்பதால் நாடு ஏழையாகவும், தரித்திரமாகவுமிருப்பதாக தெரிகின்றது. இவர்களது இந்த நிலைமையை மேல் ஜாதிக்காரர்கள் மற்றவர்களுக்கு - வெளியாருக்கு எடுத்துக்காட்டி, 'இந்தியா ஏழைநாடு, தரித்திரநாடு, பொருளாதாரத்தில் கீழான நாடு' என்பதாக ஒப்பாரிவைத்து அதாவது ஒரு பிச்சைக்காரி பிச்சைப்பெறவேண்டுமானால் யாரிடத்திலாவதுள்ள ஒரு மொண்டிக் குழந்தையையோ, குருட்டுப்பிள்ளையையோ வாடகைக்குப் பெற்றுவந்து, தனது குழந்தை 'குருடு' என்றும், 'மொண்டி' என்றும் சொல்லி, தெரியாதவர்களுக்குக்காட்டி, காசு, பணம் சம்பாதித்துக்கொண்டு பிறகு குழந்தைகளைப் பெற்றோர்களிட மொப்புவித்து விடுவதுபோல் இந்தியாவின் கீழ்பட்ட மக்களென்பவர்களின் நிலைமையை கைமுதலாக வைத்து மேல் நிலைமையில் மிக்க சௌகரியமாக இருப்பவர் தாங்கள் மிகவும் பரிதாபப்படுவதாக வேஷம்போட்டு அரசாங்கத்தில் சுயநலத்திற்கு அனுகூலமான லாபத்தை மேலும் மேலும் அடைவதற்குச் செய்யும் சூக்ஷியேதான் இன்றையப் பொருளாதாரக் கஷ்டமேயொழிய வேறில்லை.



RangaRakes tamilnavarasam.com

இந்தியப் பொருளாதார நிலைமை சிறிது உயரவேண்டுமானாலும் இந்திய ஜனத்தொகையில் 100க்கு 75 பாகத்திற்கு மேலான இந்த சமூகங்கள் பொருளாதாரத் துறையில் மேல் வருவதற்கு சமூகத்துறையில் உள்ள கட்டுப்பாடுகளை உடைக்கச்செய்தால் ஒழிய வேறு வழியில் இந்திய மக்கள் பொருளாதாரத்துறை சீர்படுத்தப்படுமென்பது சிறிதும் முடியாத காரியமே யாகும். ஆகவே இதைத்தவிர மற்ற வழியில் பொருளாதாரத் துறையைப் பற்றி பேசுபவைகளவ்வளவும் புரட்டும், ஏமாற்றமுமேயல்லாமல், அதில் சிறிதும் அறிவுடைமையோ, நாணயமோ உண்மையோ யில்லையென்றே சொல்லுவேன். ஆதலால் நமது நாட்டுப் பொருளாதாரக் கஷ்டமென்பது இம்மாதிரியான ஒரு பெருமிந்திய சமூகத்திற்கிருந்து வருவதற்குக் காரணமே இந்தமாதிரியான வருணாச்சிரம முறையேயல்லாமல் வேறல்ல யென்பதே எனது அபிப்பிராயம். இந்திய நாட்டிலெவ்வளவு பஞ்சமிருப்ப தாக சொல்லப்பட்டாலும், எவ்வளவு தரித்திரமிருப்பதாக சொல்லப்பட்டா லும், எந்தக் காலத்திலும், எந்தக் காரணத்தைக்கொண்டும் மேற்கண்ட உயர்ந்த ஜாதிக்கூட்டமானது ஒரு நாளாவது, ஒரு நிமிஷமாவது, கஷ்டப்பட்டு வதாகவோ பட்டினிக்கிடப்பதாகவோ சொல்ல முடியவே முடியாதென்பதை நீங்கள் கூர்மையாய் யோசித்துப்பார்த்தீர்களானால், உங்களுக்கு விளங்கா மல் போகாது.

மற்றுமின்னுமொரு விஷயத்திலும் நமது பொருளாதார நிலைமைக் கஷ்டமாகக் காணப்படுவதற்குக் காரணம் சொல்லவேண்டியிருக்கின்றது. அதாவது நமது பொருளாதார வருவாய்களும் செல்வர்களுடைய செல்வத் தின் பயன்களும் நாட்டு நலனுக்கும், பெரும்பான்மையான ஏழை மக்கள் பாடுபடுகின்றவர்கள் என்கின்ற கூட்டத்திற்கும் அவர்களது முன்னேற்றத் திற்கும் போக முடியாமல் சாமி பேராலும் மதத்தின் பேராலும் சடங்குகளின் பேராலும் நாசமாகும் ஒரு பெரிய மோசமான துறையேயாகும்.

இந்தநாட்டுச் செல்வவான்களெல்லோரும் பணம் சம்பாதித்து செல்வ வான்களானதற்குக் காரணமிந்த நாட்டுப்பெரும்பான்மையான மக்கள் சரீரப்பிரயாசையின் பயனாலேற்பட்ட தென்பதை சிறிதும் உணராது ‘கடவுள் தங்களுக்குக்கொடுத்தா’ரென்பதாக யெண்ணிக்கொண்டு, அந்தக் கடவுளுக்கு நன்றி செலுத்தும் முறையிலும், இன்னும் மேன் மேலும் செல்வம் பெருக வேண்டுமென்பதற்காக விண்ணப்பம் போட்டு, லஞ்சம் செலுத்தும் முறையிலும் செல்வத்தைப் பாழாக்குகின்றார்கள். இதன் பயனா கவே இந்த நாட்டில் வருஷமொன்றுக்கு பல கோடி ரூபாய்கள் பாழாவதைப் பார்க்கலாம். நமது தமிழ்நாட்டில் மாத்திரம் வருஷமொன்றுக்கு இரண்டு கோடி அல்லது மூன்றுகோடி ரூபாய்கள் வரும்படி வரத்தக்க மூலத்துகை கள், சொத்துக்கள் கோவிலின் பேரால் மதத்தின் பேரால் முடங்கிக் கிடக் கின்றன. மற்றும் மூன்றுகோடி, நான்குகோடி ரூபாய் வருஷம் ஒன்றுக்குப் பொதுமக்களின் வருவாயும், சிலவிடங்களின் கைமுதலும் பாழாகும்



வண்ணம் கிராமதேவதைகள் முதல் உயர்தரக் கடவுள்கள் வரையுள்ள இலட்சக் கணக்கான கடவுள்களுக்குப் பூசை, நைவேத்தியம், உற்சவம், காணிக்கை முதலிய செலவுகளும், கோவில் திருப்பணி கும்பாபிஷேகம் முதலிய செலவுகளும், மற்றும் இரதம், தேர், வாகனம், பாத்திரம், பணம், துணிமணி, நகை முதலிய செலவுகளும் தேசத்தின் பொருளாதார நிலைமை யைப் பாழாக்குகின்றன. தமிழ்நாட்டில் மாத்திரம் இவ்வளவென்றால் இந்தியா மொத்தமு மெப்படியிருக்குமென்று நினையுங்கள். இந்த உண்மையை மக்களுக்கு எடுத்துக்காட்டி இந்த நாசமாய்ப்போகும் பொருளாதாரத்தைக் காப்பாற்றி அச்செல்வங்கள் இந்திய மக்களுக்குப் பயன்படுத்தச் செய்யா மல் இத்துறையில் சிறிது முயற்சியுமில்லாமல் ‘நமது செல்வம் அன்னிய நாட்டுக்குப் போகின்ற’ தென்கின்ற ஜாலமந்திரத்தைப் பிரயோகித்து முட்டாள்களை ஏமாற்றி உண்மை அறியாமலிருக்கும்படி பொதுநலத்தின் பேரால் அரசியலின் பேரால் சூக்ஷிகள் செய்யப்பட்டு வருகின்றதை நமது மக்கள் உணரும்படி செய்யவேண்டும்.

இந்த நாட்டுச் செல்வம் வெளியில் போகின்றதென்பதை அடியோடு நிறுத்தப்பட்டுப் போவதுடன் வெளிநாட்டுச் செல்வங்கள் எல்லாம் நமது நாட்டுக்கே வருவதாக வைத்துக்கொண்டாலும், இன்றைய வருணாச்சிரம முறையும், மத சம்பந்தமான கடவுள் சடங்குகளின் முறையுமிப்படியே இருக்கும் வரை மேற்கண்ட, அதாவது பாடுபடாமல் சோம்பேறியாய் வாழ உரிமையுள்ளவனும், பணக்காரனாக உரிமையுள்ளவனும், உத்தியோகம் பார்க்க உரிமையுள்ளவனும், பொதுஜனப்பிரதிநிதியாக உரிமையுள்ளவனும் தான் இப்போதையைவிட இன்னுமதிகமாகக் கொள்ளையடிக்கவும், போக போக்கியங்களனுபவிக்கவும், கஷ்டப்படுபவர்களை பட்டினி கிடப்ப வர்களை இன்னும் அதிகமாய் கொடுமை செய்யவும் அருகதையுடையவர் களாவார்களே தவிர, ஒரு நாளும் இந்தியாவிலின்று பொருளாதாரத்தால் கஷ்டப்படும் ஏழைமக்கள், பட்டினிக் கிடப்பவர்க ளென்கின்றவர்கள் ஒரு நாளும் யாதொரு விதத்திலும் சீர்பட முடியவே முடியாதென்பதை உணருங்கள்.

மேலும் இந்தியப் பொருளாதாரத் துறை என்பதை சீர்படுத்த மற்றொரு துறையில் பாடு படவேண்டியிருக்கின்றது.

அஃதென்னவெனில் மனிதன் தனது வாழ்வுக்கும், தாழ்வுக்கும் கடவுளே காரணமென்று எண்ணிக்கொண்டு கடவுள் மீதே சகல பொறுப்பும் போட்டுவிட்டு மாடுபோல் உழைப்பதை மாத்திரம் தன் கடமையாய்க் கொண்டிருக்கும் கடவுள் உணர்ச்சியை ஒழிக்க வேண்டுமென்பதாகும்.

நம் நாட்டில் பாடுபட்டு ஏழையாய் பட்டினியாய் இழிவாய் இருந்து கஷ்டப்படுபவன் மாத்திரம் தான் கடவுள் உணர்ச்சி கொண்டு நசமாய்ப் போகின்றானேயொழிய செல்வமுடையவனும், பணமுடையவனும்,



RangaRakes tamilnavarasam.com

சோம்பேறியாய் வாழ்பவனும் ஒருநாளும் உணர்ச்சிகொண்டு கடவுளுக்குப் பயந்து நடப்பது என்கின்ற கொள்கையில் ஈடுபடுவதே இல்லை.

மேலும் எவ்வளவு அக்கிரமமும் மோசமும் செய்தாலும் அந்தக் குணங்களால் சம்பாதித்த பொருளில் ஒரு பாகத்தை கடவுளுக்குக் கொடுத்து மன்னிப்பு பெற்று விடலாம் என்றும் மேலும் மேலும் செல்வம் பெறுவதற்குக் கடவுளுக்கு லஞ்சம் கொடுக்கலாம் என்றுமே கருதுகின்றான்.

ஆகவே கடவுளுணர்ச்சியானது பாடுபடுபவன் கஷ்டப்படவும் பித்தலாட்டக்காரன் சோம்பேறி ஆகியவர்கள் செல்வம் பெற்று சுகப்படவும் தான் உதவுவதாயிருப்பதால் அதை ஒழிக்க வேண்டிய விஷயத்திலும் பாடு பட வேண்டியது அவசியமாகும்.

கடைசியாக பொருளாதாரத் திட்டத்திற்கு மற்றொரு துறையிலும் பாடுபட வேண்டியது அவசியமாகும். அதாவது மனிதன் பொருள் அடைவதற்காக செய்யும் தொழில்கள் எல்லாம் பழைய முறைப்படி 1000, 2000, வருஷங்களுக்கு முன்னால் செய்து வந்த முறைப்படி செய்து வர வேண்டும் என்கின்ற மூடநம்பிக்கையையும் மூடப்பழக்க வழக்கங்களையும் ஒழித்து புதிய மாதிரியில் அதாவது யந்திரம் முதலியவற்றில் பாடுபடும் பொருள் சம்பாதிக்கு முறையில் பாடுபட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். இதைப்பற்றி வேறு பல சமயங்களில் விசேஷமாகப் பேசி இருப்பதால் அவற்றைக் கவனித்தால் தெரியவரும்.

ஆகவே இவ்விஷயங்களை எல்லாம் நீங்கள் தக்கப்படி கவனித்து உங்களுக்கு பட்டபடி நடவுங்கள்.

*குறிப்பு: சென்னிமலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 05.07.1931**



# காந்தியின் விளக்கம்

## பெருமாள் மாறி பெத்தப் பெருமாளானார்

உயர்திரு. காந்தியவர்கள் சென்றமாதம் 12-ந்தேதி பரோடா சமஸ்தானம் மரோலி என்ற கிராமத்தில் மதுபானத்தைப் பற்றிப் பேசிய விபரங்களைப் பற்றிச் சென்ற வாரத்திற்கு முந்திய 'குடி அரசு' பத்திரிகையில் "காந்தியின் உண்மைத் தோற்றம்" என்னும் தலைப்பில் திரு. காந்தி சொன்ன வார்த்தைகளை அப்படியே எடுத்து எழுதி அதின்மீது நமது அபிப்பிரா யத்தையும் எழுதியிருந்தோம்.

இதைப் பார்த்த சில பார்ப்பனர்கள் அதாவது தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர்கள் உடனே திரு. காந்திக்குத் தந்தி கொடுத்தார்கள்.

எப்படி என்றால், 'தாங்கள் மதுபானத்தைப் பற்றி இம்மாதம் 12ந் தேதி மரோலியில் பேசிய பேச்சானது இங்கு சிலருக்கு பலவித அருத்தம் கொள்ளுவதற்கு இடமளிப்பதாய் இருப்பதால் அதை சரியானபடி விளக்க வேண்டும்' என்பதாகக் கேட்டார்களாம்.

மற்றும் பலர் திரு. காந்தியைப் பாராட்டி அதாவது இப்போதாவது மதுபானத்தின் தத்துவத்தை அறிந்து அது விஷயமான கொள்கையை மாற்றிக்கொண்டதற்காக அவரைப் பாராட்டியும் எழுதினார்களாம்.

ஆகவே இவற்றிற்கெல்லாம் பதில் சொல்லும் முறையில் திரு. காந்தியவர்கள் இம்மாதம் 25-ந் தேதியில் பம்பாயில் இருந்து எழுதுவதாக சுதேசமித்திரன் 26ந்தேதி பத்திரிகை 4வது பக்கம் 6வது கலத்தில் காணப் படுவதாவது,

> "இந்தியா முழுமைக்கும் ஒருமணி நேரத்திற்கு என்னை சர்வாதிகாரியாய் நியமித்தால் முதல் முதலில் நான் சாராயக் கடைகளை எல்லாம் மூடிவிடுவேன்.
>
> கள்ளு கொடுக்கும் மரங்களை எல்லாம் வெட்டி விடுவேன். தொழிற்சாலை வைத்து நடத்துபவர்களை தொழிலாளர்களை இரக்கத் துடன் நடத்தும்படி வற்புறுத்துவேன்.



RangaRakes tamilnavarasam.com

தொழிலாளர்களுக்குச் சிற்றுண்டி சாலைகளையும், பொழுது போக்கு சங்கங்களையும் ஏற்படுத்தச் சொல்லுவேன்.

குற்றமில்லாத பானங்களும் பொழுதுபோக்குக்கு ஆக்ஷே பகரமில்லாத சில வசதிகளும் அளிக்கும்படி செய்வேன்.

தொழிற்சாலை வைத்திருப்போர் இதற்குப் பணமில்லை யென்று சொன்னால் அந்தத் தொழிற்சாலைகளை மூடிவிடும்படி சொல்லுவேன்.

தொழிற்சாலையை மூடி விடுவதால் வேலை இல்லாமல் கஷ்டப்படும் ஆட்களை உடனே மாதிரிப் பண்ணைகளுக்கு (விவசாயத்திற்கு) அனுப்பி விடுவேன்.

ஐரோப்பிய நண்பர்களும், காயலாக்காரரும் வைத்தியர் யோசனைப் படி சாராயம் சாப்பிட வேண்டி இருந்தால் அவர்களுக்கு அனுமதிச்சீட்டு கொடுத்து குறிப்பிட்ட அளவு கவர்ன்மெண்ட் செலவில் வாங்கிக் கொள்ள அனுமதியளிப்பேன்.

இதனால் கவர்ன்மெண்டுக்கு வரும்படி குறைந்து விட்டால் நான் உடனே இராணுவச் செலவைக் குறைத்து விடுவேன்.

சேனாதிபதியானவர் தனது சாமர்த்தியத்தால் புதிய நிலைமைக்கு ஏற்றவாறு சமாளிக்க வேண்டியது தான்.

தொழிற்சாலைக்காரர்கள் நான் சொன்ன நிபந்தனைகளின்படி லாபகரமாகவே தொழிற்சாலைகளை நடத்தலாம் என்று சொன்னால், பழையபடி தொழிற்சாலைகளை நடத்த அனுமதியளிப்பேன்."

என்று எழுதி இருக்கின்றார்.

இதுதான் நாம் "காந்தியின் உண்மைத் தோற்றம்" என்று எழுதியதற்கு விளக்கமாகும்.

இதனாலேயே இவ்வியாசத்திற்குக் "காந்தியின் விளக்கம்" என்று பெயர் கொடுத்தோம்.

இந்த விளக்க சமாதானத்தை நன்றாய் ஊன்றிப்படித்துப் பார்த்தால் திரு. காந்தியவர்கள் முன் சொன்ன அபிப்பிராயங்களை இந்த விளக்க சமா தானத்தால் பலப்படுத்துக்கின்றாரே யொழிய சிறிதும் அதற்கு மாறுபடும் படியான அபிப்பிராயம் கொண்டிருப்பதாகக் கொஞ்சமும் விளங்க வில்லை. அதாவது,



"எனக்கு ஒரு மணி நேரம் சர்வாதிகாரம் கொடுத்தால் கள்ளு சாராயக் கடைகளை மூடிவிட்டு கள்ளு மரங்களையும் வெட்டி விடுவேன்" என்பதாகச் சொல்லிவிட்டு உடனே "தொழிலாளிகளுக்கு கள்ளு சாராயம் குடிக்க வேண்டிய அவசியம் ஏற்படாமல் இருக்கும்படி வேறு பல காரியங்கள் செய்வேன்" என்பதாக சொல்லி இருப்பதைக் கூர்ந்து கவனித்தால் விளங்காமல் போகாது. அதாவது "தொழிலாளிகளுக்கு தொழிற்சாலைகளில் வேலைகளை குறைப்பேன்", "அவர்களை இரக்கத்துடன் நடத்தும்படி செய்வேன்". "சிற்றுண்டி சாலை வைக்கும்படி செய்வேன்", "பொழுது போக்குச்சங்கம் வைக்கச் செய்வேன்" "குற்றமில்லாத பானங்களை கொடுக்கச் செய்வேன்", "இந்தப்படி செய்ய முடியாத தொழிற்சாலைகளை மூடிவிடும்படி சொல்வேன்" என்று சொல்வதிலிருந்து இன்றைய நிலைமையில் தொழிலாளிகளுக்கு மதுபானம் அவசியமென்பதையும் மதுபானத்தை நிறுத்துவதானால் அதற்குத் தகுந்த பல நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதையும் அவர் நன்றாய் வலியுருத்தி இருக்கிறார் என்பதை பகுத்தறிவும் நாணையமும் உள்ள யாவரும் மறுக்கமுடியாது. அதோடு கூட "ஐரோப்பிய நண்பர்கள் குடிப்பதற்கு அனுமதிச் சீட்டு கொடுத்து (சுயராஜிய) கவர்ன்மெண்ட் செலவில் சீமைச் சாராயம் வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்வேன்" என்றும் சொல்லி இருக்கிறார். ஆகவே, திரு. காந்தியின் மதுவிலக்குப் பிரசாரத்தில் உள்ள முக்கியம் ஐரோப்பியர்கள் (சுயராஜிய) சர்க்கார் செலவில் வேண்டிய அளவு சீமைச்சாராயம் குடிக்க வேண்டியதும் நமது தொழிலாளிகள் தங்கள் சொந்தச் செலவில் உள்நாட்டு கள்ளு, சாராயம் குடிக்கவேண்டியதும் என்பதாகத்தான் புலப்படுகின்றதே தவிர இன்றைய நிலையில் நமது தொழிலாளிகள் கள், சாராயம் குடிக்கக் கூடாது என்றோ, குடிக்காமல் இருக்க முடியும் என்றோ ஒரு இடத்திலும் அவர் கருதுவதாக நமக்குத் தெரியவே இல்லை. தொழிலாளர்களுடைய குடியை நிறுத்த வேண்டுமானால் அதற்கு பல பரிகாரம் செய்ய வேண்டும் என்பதை ஒப்புக் கொண்ட திரு. காந்தி அந்தப்பரிகாரம் செய்யப்படுமுன் எதற்காக கள்ளுக் கடை மறியல் செய்யச் செய்து கலவரம் உண்டாக்கி வீண் விளம்பரம் செய்யச் செய்கின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. திரு. காந்தி அவர்கள் இன்றையதினம் இந்திய மில் வைத்து நடத்தும் முதலாளிகளிடம் எல்லாம் ஒப்பந்தம்பேசி இருக்கிறார். அவரது பிரிதிநிதிகள் மில் முதலாளி களிடம் சில நிபந்தனைகள் கண்டு கையெழுத்தும் வாங்கி இருக்கிறார்கள். அந்நிபந்தனைகளில் மில்லின் "நிர்வாகஸ்தர்கள் பெரும்பாலும் இந்தியர் களாய் இருக்க வேண்டும். பங்குக்காரர்கள் பெரும் பகுதி இந்தியர்களாய் இருக்க வேண்டும். கதர் வியாபாரிகளுக்குக் கஷ்டம் உண்டாக்கும்படியான 18 நெம்பருக்கு கீழ்ப்பட்ட நெம்பர் நூல் நூற்கக் கூடாது" என்பதாக வெல்லாம் நிபந்தனைகளைக் கண்டு கையெழுத்து வாங்கி அந்தப்படி கையெழுத்திட்ட மில் நூல்களை மாத்திரம் வாங்கி நெய்ய வேண்டும் என்று உத்திரவு போட்டார்களே யொழிய தொழிலாளிகள் குடிக்காமல்



RangaRakes tamilnavarasam.com

இருப்பதற்கு திரு. காந்தியவர்கள் சொல்லும் பந்தோபஸ்து செய்யும் படியான நிபந்தனைகளை அதில் போட்டார்களா என்று கேட் கின்றோம்.

இன்றையதினம் தமிழ்நாட்டில் குடி மறியலின் பேரால் எவ்வளவு பேர்கள் அடிபடுகின்றார்கள்? எவ்வளவு கலவரங்கள் ஏற்படுகின்றன? இதனால் பொதுஜனங்களுக்கு எவ்வளவு தொல்லைகள் ஏற்படுகின்றன?

பைத்தியக்காரர்களிடமும் பயங்காளிகளிடமும் சுயநலக்காரர்களிடமும் பணம் வசூலித்து வேலைத்திண்டாட்டம் உள்ள சிறுவர்களையும் பெற்றோர்களுக்குக் கீழ்படிய இஷ்டமில்லாத சிறுவர்களையும் பாடுபடக் கஷ்டப்படும் சிறுவர்களையும் வேடிக்கை விளையாட்டில் விளம்பரத்தில் பைத்தியமுள்ள சிறுவர்களையும் கூட்டி வைத்து சோறு போட்டு இந்தப்படி கலவரம் செய்வதில் லாபம் என்ன? என்றுதான் கேட்கின்றோம். ஒரு சமயம் இதனால் ஏதாவது ஒரு பயன் உண்டு என்று திரு. காந்தியாகிலும் சொன்னாரானால், ஏதோ ஒரு விதத்தில் சிலர் சமாதானமாவது சொல்லப் புரப்படலாம். "கள்ளுக்கடை மூடுவதால் குடி நிற்காது" என்றும் "குடிகாரர்களை தடைப் படுத்தி " "குடிக்காமல் செய்வதால் குடி நிற்காது" என்றும், "குடிப்பவர்கள் எப்படியும் திருட்டுத்தனமாகவாவது குடித்துத்தான் தீருவார்கள்" என்றும், "கள்ளு சாராய வியாபாரிகள் திருட்டுத்தனமாக கள்ளு விற்றுத் தான் தீருவார்கள்" என்றும், "சரீரத்தால் பாடுபட்டு உழைப்பவர்களுக்கும் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றவர்களுக்கும் அவர்களது களைப்பும், சலிப்பும் தீருவதற்கு கள் அவசியமானது" என்றும், "நானே (திரு காந்தியே) அவர்களது களைப்பைப் பார்த்து மனமிறங்கி சாராயக் கடைக்குப்போய் சாராயம் வாங்கி வந்து அன்பாய் கொடுத்து இருக்கின் றேன்" என்றும் சொல்லி கள்ளின் அவசியத்தையும், குடிக்க வேண்டிய தையும் ஒப்புக் கொண்டு வெளிப்படுத்தி இருக்கும் போது மறுபடியும் ஆங்காங்கு கள்ளுமறியல் செய்வது என்றால் கள்ளுமறியல் செய்யப் படுவது அருத்தமற்றதென்றும், புரட்டு என்றும் ஏன் சொல்லக்கூடாது? என்று கேட்கின்றோம்.

தவிர, தொழிற்சாலை முதலாளிகள், தொழிலாளிகள் கள்ளு குடிக் காமல் இருக்கத்தகுந்த மாதிரியில் "அவர்களது வேலைகளை சுளுவாக்கி கள்ளுக்குப் பதில் வேறு கெடுதி இல்லாத பானங்களும், சௌகரியங்களும் செய்யாவிட்டால் தொழிற்சாலையை மூடிவிட உத்தரவு போடு"வதாக திரு. காந்தி எழுதி இருக்கிறார். ஆனால் இந்தப்படி மூடிவிட்டபிறகு அந்தத் தொழிலாளிகளுக்கு வேலை வேண்டுமே என்றால் "அவர்களை எல்லாம் மாதிரிப்பண்ணை விவசாயத்துக்கு அனுப்பி விடுவேன்" என்று சொல்லு கின்றார்.

ஆகவே தொழிலாளிகளுக்கு சுயராஜிய அரசாங்கத்தில் ஏற்படும் நன்மைகள் எல்லாம் தொழிற்சாலையில் சிறிது சௌகரியமும், அதுசெய்ய



முதலாளி சம்மதிக்காவிட்டால் அந்தத் தொழிலாளிகளை விவசாயம் செய்ய ஏர் உழுகும்படியும், மண் வெட்டி எடுத்து மண் வெட்டும்படியும் சொல்லுவதைத்தவிர வேறு வேலை இல்லை என்பதை நன்றாய் விளக்கி இருக்கிறார்.

ஆகவே, சுயராஜியத்தில் தொழிலாளர்களுடைய நிலைமை இன்னதென்று விளங்கி விட்டது. "காந்தியின் உண்மைத் தோற்ற" மெனும் முந்திய வியாசத்தில் நாம் எழுதி இருந்த அபிப்பிராயத்தை மாற்றவேண்டும் என் கின்ற எண்ணத்தின் மீது நமது பார்ப்பனர்களும், நமது காங்கிரஸ் பக்தர்களும் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாய் எடுத்துக்கொண்ட சிரமமானது "பெருமாள் என்கின்ற பெயரை மாற்றிக் கொள்ளும்படி கொடுத்த பணத்தின் பயனாய் பெத்த பெருமாள் என்கின்ற பெயரை வைத்துக் கொண்டான்" என்பதுபோல் திரு. காந்தியவர்கள் நன்றாய் அழுத்தந் திருத்தமாகக் கள்ளு சாராயம் குடிக்க வேண்டிய அவசியத்தையும், தொழிலாளிகளுடைய (சூத்திரர்களுடைய) நிலைமையையும் பலப்படுத்திவிட்டார். இதைக்கண்ட தொழிலாளிகளான (சூத்திர) காங்கிரஸ் பக்தர்கள் இனி என்ன சமாதானம் சொல்லுவார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. வயிற்றுப் பசியின் கொடுமையினால் வேறுவழியில் மனிதர்களாக வாழ முடியாததின் நிலை யினால் தங்களை ஆதரிப்ப வர்களுக்கு நன்றி காட்டவேண்டுமே என்கின்ற சொந்த அவசியத்தினால் நம்மை வையலாம். "குடி அரசை" வையலாம். ஆனால் தாங்கள் செய்யும் இந்த மாதிரியான யோக்கியப் பொறுப்பும் நாணையமுமற்ற காரியத்திற்கு அறிவாளிகளுக்கு என்ன பதில் சொல்லு வார்கள் என்று தான் கேட்கின்றோம்.

எவ்வளவு யோக்கியதை யற்றவனாகவும், இழிவானவனாகவும் இருந்தாலும் அவனால் "நமக்கு ஒரு ஓட்டுக்காவது மார்க்கமுண்டு" என்று ஒருவன் அறிந்தால் அவனைப் பிரமாதப்படுத்தி "இந்திரனே! சந்திரனே!!" என்று கூறி ஏமாற்றி கையில் ஏதோ கொடுத்து அனுப்புவது சிலரின் இயற்கையேயாகும். இதையே ஆதாரமாய்க் கொண்டு பிழைக்க வேண்டி யதும் சிலரின் இயற்கையேயாகும். ஆனால் சுயநலமற்ற பொது மக்களும் கஷ்டப்படுகின்ற பாட்டாளிகளும் இந்த வியாபாரத்தில் ஏமாந்து போகாமல் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பதற்கே இதை நாம் எழுது கின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 05.07.1931**



RangaRakes tamilnavarasam.com

## லார்ட் வில்லிங்டனின் எச்சரிக்கை

லார்ட் வில்லிங்டன் பிரபு சென்ற மாதம் செம்ஸ்போர்ட் கிளப்பில் பேசியபோது இந்தியர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்திருக்கிறார். அஃதென் னவென்றால்,

“நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நான் இருக்கிறேனே யொழிய ராஜியைக் காப்பாற்ற நான் (இங்கு வர) இல்லை” என்று பேசியிருக் கிறார். ஆகவே, சமாதானப்பங்கமேற்படும் என்று நான் அறிந்தேனே யானால் ராஜியைப்பற்றி சிறிதும் கவலைப்படாமல் சமாதானத்திற்காக எந்த முறையையும் அனுசரிக்க வேண்டிவரும்” என்று சூசனை காட்டி இருக் கிறார். அதோடு ராஜி விஷயத்தைப்பற்றியும் பேசும்போது காங்கிரசுக் காரர்கள் “ராஜியை ஒரு சமாதான அறிகுறியென்று கருதாமல் அடுத்த யுத்தத்திற்கு தயார் ஆவதற்கு ஏற்படுத்திக்கொண்ட சௌகரியமே என்பதாக காந்தி - இர்வின் ஒப்பந்தத்திற்கு வியாக்கியானம் கூறுகின்றார்கள்” என்றும், “இரண்டு பெரிய மனிதர்கள் என்பவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தம், அதாவது காந்தியும் - இர்வினும் செய்து கொண்ட ராஜி என்பதற்கு இந்த மாதிரி பொருள் கொள்வது சிறிதும் யோக்கியமான காரியமென்று நான் கருதவில்லை என்று தாராளமாய்ச் சொல்லுகிறேன்” என்றும் சொல்லி இருக்கிறார்.

இவ்வளவும் போறாமல் அவர் பேசியிருக்கும் மற்றொரு விஷயம் என்னவென்றால் திரு காந்தியவர்கள் தான் அரசாங்கத்தோடு ராஜி ஆவது என்னும் பேரால் எந்த நிபந்தனைக் கேட்டு முடியாமல் போயிற்றோ, அதா வது எந்தப் போலீஸ்காரர்களின் நடவடிக்கைகளை விசாரிக்க வேண்டும் என்று கேட்டாரோ அந்தப் போலீசுகாரர்களையே லார்ட் வில்லிங்டன் நன் றாய்ப் பாராட்டிப் பேசி இருப்பதுடன் அவர்கள் செய்த காரியங்கள் எல்லாம் மிகவும் சரியான காரியமென்றும் சொல்லி அவர்களைப் போற்றிப் புகழ்ந்து இருக்கிறார். அதோடு, இராணுவ சிப்பாய்களையும் போற்றி இருக்கின்றார்.

இதன் கருத்து “முன் எந்தப் போலீசாரின் அடிக்குப் பயந்து ராஜி செய்து கொள்ள வேண்டியதாயிற்றோ, அந்தப் போலீசும் மேல் கொண்டு இராணுவமும் இன்னமும் இருக்கின்றது”என்று சூசனை காட்டுவதேயாகும்.



RangaRakes

இதன் யோக்கியதையும், உண்மையும் எப்படி இருந்த போதிலும் ராஜியின் நாணையம் எப்படி இருக்கின்றதென்பதையும் சர்க்காராரும் காங்கிரசும் ராஜியைக் காப்பாற்றுவதில் எவ்வளவு நாணையமாய் நடந்து கொள்ளுகின்றார்கள் என்பதையும், இந்த ராஜியின் பயனாய் இந்திய மக்களின் சுயமரியாதை எவ்வளவு என்பதை உலக மக்கள் அறிய ஒரு சந்தர்ப்பமும் ஏற்பட்டு விட்டது என்பது புலனாகும்.

கள்ளுக் கடை மறியலின் தத்துவத்தையும் இதில் சேர்த்துக் கொண் டால் நாணையத்தின் யோக்கியதை நன்றாய் விளங்கும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 05.07.1931**



tamilnavarasam.com

# தொழிலாளர்களும் காங்கிரஸ் இயக்கமும்

**“ காங்கிரஸ் தலைவர்கள் வீழ்க!**

**டில்லி ஒப்பந்தக்காரர்கள் ஒழிக!!”**

**சுபாஸ் சந்திரபோஸ் மீது நம்பிக்கையில்லை!!! ”**

**சக்லத்வாலா சேதி.**

**– யார் எழுதினாலென்ன**

கல்கத்தாவில் தொழிலாளர்காங்கிரஸ் ஒன்று திரு. சுபாஸ்சந்திரபோஸ் தலைமையில் கூடிற்று. அது சமயம் பம்பாய் தொழிலாளர்கள் பிரதிநிதிகள் “காங்கிரஸ் தலைவர்கள் ஒழிக, டில்லி ஒப்பந்தக்காரர்கள் (அதாவது காந்தி) ஒழிக” என்று கோஷித்துக்கொண்டிருந்தார்கள்.

லண்டனிலிருந்து பொது உடைமைக்கட்சி திரு. சக்லத்வாலா அவர்கள் “சென்ற தடவை நான் இந்தியாவுக்கு வந்திருந்த பொழுது காந்தியின் வண்டவாளத்தையும் அவரைப் பின்பற்றுகின்றவர்களின் புரட்டுகளையும், துரோகங்களையும் வெளியிட்டேன். ஆனால் இந்த சமயம் பிரிட்டன் என்னை அங்குவர அனுமதிக்கவில்லை. ஆனாலும் இந்தியாவில் உள்ள பொது உடைமை மக்கள் காந்தியின் பித்தலாட்டத்தை தைரியமாய் வெளிப் படுத்தவேண்டும்” என்று எழுதியிருந்தார்.

சுபாஸ் சந்திரபோஸ் தலைமை பிரசங்கத்தில், கராச்சி காங்கிரஸ் தீர்மானத்தை வரவேற்று, அதில் காணும் வார்த்தைகளைவிட கருத்து நல்லதென்று சொன்னதுடன் ருஷிய மாஸ்கோ கட்டளைக்கு சரணாகதி அடைய வேண்டியதில்லை என்றும் சொன்னார். இதனால் மறுநாள் குழப்பம் ஏற்பட்டு “சுபாஸ் சந்திர போஸ் மீது நம்பிக்கை இல்லை” என்பதாக பொது உடமைக்கக்ஷி தொழிலாளர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதில் சுபாஸ் சந்திர போசும் இருந்து கொண்டார். ஒரு ஓட்டினால் அது தோல்வி யுற்றதானாலும் கூட்டத்தை ஒத்திபோட்டு விட்டதாகச் சொல்லிவிட்டு சுபாஸ் சந்திர போஸ் வெளியேறிவிட்டார்.



பிறகு எல்லோரும் கூடி “சுபாஸ் சந்திர போஸ் மீதும் அவரது கோஷ்டி மீதும் நம்பிக்கை இல்லை” என்கின்ற தீர்மானம் நிறைவேற்றி விட்டார்கள்.

## பொது உடைமைக் கக்ஷி தொழிலாளர் அறிக்கை

“திரு. சுபாஸ் சந்திர போஸ் விவாதத்தில் கலந்துகொள்ளுவதில்லை என்று வாக்களித்ததினால் அவர் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத் திற்கு அக்கிராசனம் வகிக்க அனுமதித்தோம். ஆனால் அவரும் ஓட்டு கொடுத்ததால் ஒரு ஓட்டில் அத்தீர்மானம் தோற்றுப்போய் விட்டது. அத்தீர்மானம் முதலில் தோற்றுவிட்டதற்குக் காரணம் இதுதான் காரண” மென அவ்வறிக்கையில் வெளியிடப்பட்டிருக்கிறார்கள்.

இது ஜீலை *மீ* 6, 7 தேதி திராவிடன், சுதேசமித்திரன், இந்தியா, தமிழ்நாடு ஆகிய பத்திரிகைகளில் காணப்படுகின்றன. எல்லாப் பத்திரிகை களையும் வைத்துப் பார்த்தால் இன்னும் பல விஷயங்கள் விளங்கும்.

தமிழ்நாட்டில் உள்ள சில தொண்டர்கள் “காங்கிரசும், நவஜீவன் பாரத சபையும் பொது உடைமைக்காரர் கொள்கையும், தொழிலாளர் கொள்கையும் ஒன்று என்று சொல்லுவதும்” “காங்கிரஸ் தொண்டர்களும், காங்கிரசை ஆதரிப்பவர்களும், நவஜீவன் பாரத சபை மகாநாடு நடத்துகிறோம்” என்பதும் ஒரு கடையில் லாபத்தின் நிமித்தம் பல சாமான்கள் வைத்து விற்பதையே யொக்கும்.

திரு. சக்லத்வாலா தொழிலாளர் காங்கிரசுக்கு அனுப்பிய சேதியில் நன்றாய் எழுதியிருக்கிறார். “நான் முன் இந்தியாவுக்கு வந்த போது காந்தி யின் வண்டவாளத்தை நன்றாய் விளக்க முயற்சித்தேன். இவ்வருஷம் சர்க்கார் என்னை இந்தியாவுக்கு அனுமதிக்கவில்லை. ஆனால் நீங்கள் (பொது உடைமைத் தொழிலாளர்கள்) இந்த சமயத்தில் காந்தியின் பித்தலாட் டங்களையும் அவரது கோஷ்டியின் மோசங்களையும் துரோகங்களையும் நன்றாய் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள்” எனக் கேட்டுக் கொண்டி ருக்கின்றார். ஆகவே தொழிலாளிகள் மனிதர்களாய் வாழவேண்டுமானால், இந்தியாவில் பொது உடைமை தத்துவம் ஏற்படவேண்டுமானால், முதலா வதாக காங்கிரசும், காந்தியும், அவரது கோஷ்டியும் ஒழிந்தாக வேண்டு மென்பதே அவர்களது அபிப்பிராயம் என்பது நன்றாய் விளங்குகின்றது.

இதே திரு சுபாஸ் சந்திர போஸ் அவர்கள் கராச்சி காங்கிரசில் திரு காந்தியவர்களால் அழைக்கப்பட்டு காந்தியைப் பார்ப்பதற்கு முன் பேசிய பேச்சில் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால் உண்மை விளங்கும். அதாவது–

> “காங்கிரஸ் நமக்கு சுதந்திரத்தை சம்பாதித்துக் கொடுக்கு மென்ற நம்பிக்கை எனக்கில்லை. காங்கிரசின் கொள்கை பயனற்ற தாயும், பலஹீனமானதாயுமிருக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

காங்கிரஸ் தலைவர்கள் கூறுவதில் முன்னுக்குப்பின் முறணானவைகள் பல யிருப்பதோடு அவர்கள் சொல்லொன்றும், செயலொன்றுமாகச் செய்து வருகிறார்கள். அவர்களுடைய வேலைத் திட்டம் புதிய மாறுதலை யுண்டாக்கும் நோக்கங் கொண்டதாயில்லை. ஆனால் விஷயங்களைச் சரி கட்டிக்கொண்டு போகிறவைகளாகவே யிருக்கின்றன.

ஜமீன்தாரர்களுக்கும், குடிகளுக்கும், பணக்காரனுக்கும், கூலிக்காரனுக்கும், தீண்டப்படாதாரெனக் கூறப்படுகிறவர்களுக்கும் ஆண்களுக்கும், பெண்களுக்கும், யாவருக்கும் நல்ல பிள்ளைகளாக நடந்து கொள்வதென்பதையே அவர்கள் தங்கள் கொள்கையாகக் கொண்டிருக்கிறார்கள்.

என்று சொன்னார்.

பிறகு திரு.காந்தியைப் பார்த்த பிறகு திரு.சென்குப்தா கக்ஷியின் தொல்லைக்குப் பயந்து திரு.காந்தியை சரணாகதி அடைய நேர்ந்ததின் பயனாய் "காங்கிரசுக்கு ஜே! காந்திக்கு ஜே!!" போட வேண்டிய அவசியத்தில் வந்து விட்டார். "பாவம்" இல்லையானால் ஒரு மணி நேரத்தில் எப்படி ஞானோதயம் ஏற்பட்டிருக்கும் என்பதை யோசித்தால் இந்த உண்மை விளங்கும்.

இப்பொழுதும் நமது நாட்டில் காங்கிரசு தொண்டர்கள், தலைவர்கள் என்பவர்கள் பொதுஉடைமை தத்துவம் பேசுவது என்பது பொது உடைமை தத்துவத்தை ஒழிப்பதற்காகச் செய்யும் காரியமாகத்தான் முடியுமே யொழிய மற்றபடி அதனால் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை என்பது உறுதியானாலும் இந்த முட்டுக்கட்டைகளை எல்லாம் இலக்ஷியம் செய்யாமல் பொது உடைமை உணர்ச்சி ஏற்படக்கூடிய வேகம் நமது நாட்டில் தோன்றி விட்டதால் இதற்காக யாரும் பயப்பட தேவையில்லை என்பதையும் ஆனால் தைரியமாய் உண்மையை வெளிப்படுத்திக் கொண்டு வரவேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**குடி அரசு - கட்டுரை - 12.07.1931**



# காங்கிரசும் - சுயமரியாதையும்

அன்புள்ள தலைவரவர்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!!

இன்று, இங்கு சுயமரியாதை வாசகசாலை ஆண்டுவிழாவை உத்தேசித்து நடைபெறும் உபந்யாசங்களில் நான் "காங்கிரசும் சுயமரியாதையும்" என்பதுபற்றி பேசவேண்டும் என்பதாய் குறிக்கப்பட்டிருக்கின்றது.

இது விஷயமாய் எனது அபிப்பிராயங்கள் அனேகமாக தமிழ்நாடு முழுவதும் அறிந்ததேயாகும். எப்படியெனில் "குடி அரசு" பத்திரிகை வாயிலாகவும் அனேக உபந்யாசங்கள் மூலமாகவும், சுமார் 5, 6 வருஷங்களாக வெளிப்படுத்திக் கொண்டே வந்திருக்கின்றேன். அவற்றில் இருந்து மாறும்படியான நிலைமை இப்போது ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை.

சமீபகாலத்தில், அதாவது இந்த ஒருவருஷ காலத்தில் காங்கிரசிற்கு செய்யப்பட்ட விளம்பரத்தின் காரணமாய் பொது ஜனங்களில் பலருக்கு ஒரு உணர்ச்சி தோன்றி அதைப்பற்றி பேசப்படுகின்றது என்பதை தவிர வேறில்லை. ஒரு நாட்டில் புதிதாக ஏதாவது விஷயம் தோன்றினால் அதைப் பற்றி எங்கும் பேச்சாய் இருப்பது சகஜமேயாகும். அதுபோல்தான் இப்போது காங்கிரசைப் பற்றியும் பேசப்படுகின்றது. ஆதலாலேயே தான் நீங்களும் என்னை அதைப்பற்றியே பேசக்கேட்டு இருக்கின்றீர்கள் என்று கருதுகின்றேன். காங்கிரஸ் ஏற்பட்டு சுமார் 45 வருஷமானபோதிலும், அது எதை உத்தேசித்து, எப்படிப்பட்டவர்களால் ஆரம்பிக்கப்பட்டது என்பது காங்கிரஸ் அனுபோகம் பெற்ற யாவரும் அறிந்ததேயாகும். அது இராஜ விசுவாசப் பல்லவியைப் பாடி உத்தியோகம் பெற ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனமேயாகும். உதாரணம் வேண்டுமானால் நமது நாட்டில் இதுவரையிலும், இப்போதும் பெரிய உத்தியோகஸ்தர்கள், பெரிய வக்கீல்கள், பெரிய பட்டதாரிகள் முதலியவர்கள் எல்லாம் காங்கிரசினாலேயே பெரிய மனிதர்களானவர்கள் என்பதை கவனித்துப் பார்த்தால் விளங்கும். நானும் 10 15 வருஷங்களுக்கு முன்பு இரண்டொரு பழைய காங்கிரசுகளுக்கும் சென்றிருக்கிறேன்.



RangaRakes tamilnavarasam.com

## இராஜ விசுவாசம்

அப்பொழுதெல்லாம் காங்கிரசின் முதல் தீர்மானம் இராஜவிசுவாசத் தீர்மானமேயாகும். உதாரணமாக 1914-ம் வருஷம் சென்னையில் கூடிய காங்கிரசுக்கு நான் சென்றிருந்தபொழுது கல்கத்தா திருவாளர் பூபேந்தரநாத் போஸ் தலைமை வகித்திருந்தார். காங்கிரசு நடவடிக்கை நடந்து கொண்டிருக்கையில் சென்னை கவர்னர் லார்ட் பெண்ட்லண்ட் துரையவர்கள் காங்கிரசுக்கு விஜயமானார். அவர் விஜயமானதும் மற்ற நடவடிக்கைகளை நிறுத்தி விட்டு திருவாளர் சுரேந்திரநாத் பானர்ஜீ அவர்கள் உடனே எழுந்து ஒரு இராஜவிசுவாசத் தீர்மானத்தை பிரேரேபித்து, வெகு அழகாக அதாவது "இந்தியாவுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் கடவுளால் அனுப்பப்பட்ட" தென்றும், "இந்திய மக்கள் தலைமுறை தலைமுறையாய் இராஜவிசுவாசிகளாயிருக்க வேண்டு"மென்றும் பேசி முடித்தார். பலர் ஆமோதித்துப் பேசிய பின், 5 நிமிஷ நேர கரகோஷத்துடன் அது (இராஜவிசுவாச தீர்மானம்) நிறைவே றிற்று. சென்னை "அமிதவாத தேசியவாதி " களான அய்யங்கார் கூட்டத்தினர் கள் சமீபகாலம் வரை எட்வார்ட் மன்னரும், ஜார்ஜ் மன்னரும் விஷ்ணு அம்சமென்றே பேசி வேதங்களிலிருந்தும், சாஸ்திரங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்டி வந்தார்கள். (அதாவது அரசர்கள் விஷ்ணு அம்சமென்று வேதம் கூறுவதாக உரைத்துக்கொண்டு வந்தார்கள்.)

## ஒத்துழையாமை

கடைசியாக சமீப காலந்தொட்டுதான் அதாவது காங்கிரசின் பலனை (உத்தியோகங்களை) ஒரே கூட்டத்தார் (பார்ப்பனர் மாத்திரம்) அனுபவிப்பதில் "பொறாமைப்" பட்ட சென்னை மாகாண பார்ப்பனரல்லாதார் "காங்கிரசின் பலன் எல்லோருக்கும் கிரமமாய் பங்குகிடைக்க வேண்டு" மென்று கேட்க ஆரம்பித்தது முதல் அதுபோலவே காங்கிரசு பலனும் எல்லோருக்கும் பங்குபோக ஆரம்பித்த பிறகே இராஜவிசுவாசம் போய்ஒத்துழையாமையாகி இராஜவிசுவாசமாய் இருப்பவர்களை "தேசத் துரோகிகள்" என்றும், "சுயநலக்காரர்கள்" என்றும், "வகுப்பு வாதிகள்" என்றும் சொல்ல வேண்டியதாகி வழக்கமாய் அனுபவித்து வந்த பலனை அடைய முடியாமல் போனவுடன் காங்கிரஸ்வாதிகள் (பார்ப்பனர் தேசிய வாதிகளாக பரிணமிக்கத் துடங்கி விட்டார்கள். ஜஸ்டிஸ் கக்ஷி என்பதாகவும், முஸ்லீம்லீக் என்பதாகவும் மற்றும் வகுப்புச் சங்கங்கள் என்பதாகவும் சில ஸ்தாபனங்கள் தோன்றி காங்கிரஸ் பலனில் (உத்தியோகங்களில்) பங்கு கேட்காது இருந்திருக்குமானால் இன்றையதினம் இந்தியாவில் இராஜவிசுவாசம் என்பது காங்கிரசுக்கே சொந்தமான ரிஜிஸ்டர் செய்யப்பட்ட (டிரேட் மார்க்காய்) அதாவது உரிமை செய்த வியாபாரக்குறியாய் இருந்து வரும். சென்னபட்டணம் ஜார்ஜ் டவுன் ஆனதுபோல் பார்ப்பனர் மக்கள் பெயரும் ஜார்ஜ் அய்யர், ஜார்ஜ் சாஸ்திரிஆயிருக்கும். உதாரணமாக,



ராஜா விஷ்ணு அம்சம் என்பது கூட பார்ப்பனர் சொல்லி இருக்கா விட்டால் இன்று மற்ற யாருக்குமே தெரிந்திருக்காது என்பதேயாகும். அவர்கள் அப்படிச் சொன்னதிலிருந்து இன்னும் பலர் அப்படி நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நிற்க,

## காங்கிரஸ் யாருக்கு?

இன்றும் காங்கிரஸ் என்பதற்கும் ஆறரைக்கோடி தீண்டாதார் என்பவர்களுக்கும் சிறிதும் சம்பந்தமில்லை. அவர்கள் இராஜவிசுவாசிகள். மேலும் 8 கோடி மகமதியர் என்பவர்களுக்கும் காங்கிரசுக்கும் சம்பந்தமில்லை.இவர்களும் இராஜவிசுவாசிகள். வருணாச்சிரமம் பேசும் பார்ப்பனர்களும் தங்களை இராஜவிசுவாசிகள் என்றே சொல்லிக் கொள்ளுகிறார்கள். இந்த இரண்டு மூன்று கூட்டத்திலும் 100-க்கு ஒருவர் இருவர்கூட காங்கிரஸ்காரர்களாய் இருக்கிறார்கள் என்று தைரியமாய்ச்சொல்ல முடியாது. ஒரு சமயம் மகமதியர்களில் ஒருவர், இருவர் என்கின்ற எண்ணிக்கை இருந்தாலும் கூட தீண்டப்படாதார் என்பவர்களில் சுத்தமாய் "தேசீயவாதிகள்" இல்லை யென்பதை யாரும் மறுக்க முடியாது. கிறிஸ்தவர்களிலும் மிகச் சிலரே இருக்கக்கூடும். அவர்களும் வயிற்றுப்பாட்டிற்கு சர்ச்சுகளில் இராஜ வாழ்த்துப்பாடிவிட்டு வெளியில் வந்து வேடிக்கை கூட்டத்தில் "ஜே! போடுபவர்களாகத்தான் இருக்க முடியுமேயொழிய "இராஜா வேண்டாம்" என்கின்றவர்கள் இல்லை என்றேசொல்லலாம். மற்றபடி சென்னை மாகாணத்தை எடுத்துக்கொண்டால் பார்ப்பனர்கள் தவிர பார்ப்பனரல்லாதார்களில் வயிராரக் கஞ்சி குடிக்கும் 100 க்கு 95 பேருக்கு மேலாகவே காங்கிரசினிடம் கவலை யில்லாதவர்களும் அதை ஒப்புக்கொள்ளாதவர்களுமே இருப்பார்கள். வேண்டுமானால் தேர்தலில் ஓட்டுப்பெற வேண்டியவர்கள் இரண்டுக்கும் நல்லபிள்ளைகள் போல காட்டிக்கொள்வார்கள். மற்றும் இதை ஒரு வியாபாரமாய் கருதுகிறவர்கள் அதுவும் லாபநஷ்டம் பார்த்து இதை பயன்படுத்திக் கொள்ளுபவர்களாகவே இருப்பார்கள். இவற்றைத்தவிர வகுப்பு மாநாடுகள் என்பவைகள் பெரிதும் இராஜ விசுவாசப்பல்லவி பாடிக்கொண்டுதான் வருகிறது என்றாலும் ஒரு சில வாலிபர்கள் பார்ப்பனரல்லாதாரிலும் காங்கிரசை பயன்படுத்திக் கொண்டு வருகின்றார்கள் என்பதை நான் மறக்கவில்லை. அதுவும் அப்படிப்பட்ட வாலிபர்களும் ஒரே கொள்கையாய் தொடர்ந்து அதில் இருக்கின்ற வாலிபர்கள் என்பவர்கள் பூதக்கண்ணாடி வைத்து பார்க்கவேண்டியவர்களாகவே இருப்பார்கள். எந்த ஸ்தாபனமானாலும் அது ஒரு சம்பளம் கிடைக்கும் ஸ்தாபனமாகவும் வாழ்வுக்கு சௌகரியமான ஸ்தாபனமாகவும் விளம்பரத்துக்கு அனுகூலமானதாகவும் ஏற்பட்டுவிட்டால் பிறகு அதில் கலந்து கொள்ளும் மக்கள் ஏராளமாகி விடுவார்கள் என்பதையும் அந்த ஸ்தாபனத்தைப்பற்றி புராணம் பாடுவார்கள் என்பதையும் நான் உங்களுக்கு எடுத்துச்சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை.



RangaRakes tamilnavarasam.com

ஆதலால் அதைப்பற்றியே காங்கிரசின் யோக்கியதையை நிர்ணயித்து விடமாட்டீர்கள்.

## காங்கிரஸ் கொள்கை

ஆகவே இவை ஒருபுறமிருக்க காங்கிரசின் கொள்கைகள்தான் என்ன என்பதை யோசித்துப் பாருங்கள்.

எந்தக்காரணங்களால் இந்த நாடு 'அன்னியநாட்டார்' என்பவர்களின் ஆட்சிக்கு ஆளாக நேரிட்டதோ, அதிலும் பார்ப்பனர்கள் ஆதிக்கம் தலை சிறக்க நேரிட்டதோ அந்தக்காரணங்களை இல்லாமல் செய்ய இந்தக்காங்கிர சில் ஏதாவது ஒரு கொள்கை இருக்கின்றது என்பதாக யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்றேன். இந்தியாவின் பெருமையைப்பற்றி யார் என்ன பேசுவதாயிருந்தாலும் இந்தியாவில் பலமதம், பலஜாதி, பலவித உயர்வு தாழ்வு என்பவைகள் இருந்து வருகின்றதை யாரும் மறுக்க முடியாது. இந்தியாவில் தெருவில் நடக்காத, கண்களில் தென்படாத 'இழிமக்கள்' இருந்துவருவது இரகசியமல்ல. இந்தக் காரணங்களே இன்று அன்னிய ஆட்சி இந்த நாட்டில் இருந்து வருவதற்கும், பார்ப்பனன் பாடு படாமல் வாழ்ந்து ஆதிக்கம் செலுத்தி வருவதற்கும் காரணம் என்பதையும் ஒப்புக் கொள்ளாதவர்கள் இல்லை. இதைச்சரிப்படுத்த யார் என்ன செய்தார்கள்? எந்தக்கொள்கையை காங்கிரஸ் திட்டத்தில் ஏற்படுத்தி இருக் கின்றார்கள்? அல்லது அன்னிய ஆட்சியை ஒழித்த பிறகாவது இதற்கு என்ன மார்க்கம் செய்வதாகக் காங்கிரஸ் தலைவர்கள் சொல்லியிருக் கிறார்கள்? என்பதை கவனித்துப் பாருங்கள்.

## சுயராஜ்ய உரிமை

சுயராஜ்யத்தில் "மதங்கள் ஒழிக்கப்படும்" என்றாவது "மத ஆதிக் கங்கள் ஒழிக்கப்படும்" என்றாவது அல்லது அதுதான் இல்லாவிட்டாலும் "ஜாதிகள் ஒழிக்கப்படும்" என்றாவது "ஜாதிப்பாகுபாடுகள் ஒழிக்கப்படும" என்றாவது எங்காவது தீர்மான ரூபமாகவாவது எழுதப்பட்டிருக்கின்றதா? எங்காவது யாருடைய வாயினாலாவது சொல்லப்பட்டிருக்கின்றதா? என்று கேட்கின்றேன். மற்றும் மதங்களையும் ஜாதிப் பாகுபாடுகளையும் காப்பாற் றப்படும் என்று உறுதிகூறப்படுகிறதா? இல்லையா? என்றும் கேட்கின்றேன்.

அதாவது மதத்தில் **நடுநிலைமை** வகிப்பதாகவும், **வருணாச் சிரமம் காப்பாற்றப்படும்** என்பதாகவும், ஜாதியில் எந்த ஒரு தனிப்பட்ட வகுப்பாருடைய உரிமைக்கும் பங்கம் விளைவிக்கப்பட மாட்டாது என்பதாகவும் எந்த மனிதனுடைய மாறுபட்ட அபிப்பிராயத்தை யும் புண்படுத்தப்பட மாட்டாதென்பதாகவுமல்லவா ஒவ்வொரு ஜாதி மத ஆதிக்கக்காரனுக்கும் உறுதி கூறப்பட்டு வருகின்றது. பிரஜா உரிமைத்



திட்டத்தில் 14வதாக "மத விஷயங்களில் சர்க்காரார் தலையிடமாட்டார்கள்" அதாவது மதக் கொள்கைகளை மாற்ற முயற்சிக்க மாட்டார்கள் என்றும், 17வதாக "மாறு பட்ட அபிப்பிராயங் கொண்டோர் மனது புண்படும்படியாக எந்த காரியமும் செய்ய மாட்டார்கள்" என்றும், அதாவது "பிராமணர்கள்" மனம் புண்படும்படி எதுவும் செய்யப்பட மாட்டாது என்றும் ஸ்பஷ்டமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றதா?இல்லையா?

ஆதியிலும், இந்தக் கொள்கைகளையேதான் நமது பார்ப்பனர் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டையும் ஒப்புக்கொள்ளச் செய்து இதையே அரசி யலிலும் அனுசரிக்கும்படி சட்டமாக்கி கட்டாயப்படுத்தியதன் பயனாகத்தான் இதுவரை இந்தக் கவர்ன்மெண்டில் சரியான சீர்திருத்தம் ஏற்படுத்த முடியாமலேயே இருந்து வருகின்றது. உதாரணமாக, சாரதா சட்டம் எடுத்துக் கொள்ளுங்கள். விவசாரிகள் சட்டம் எடுத்துக் கொள்ளுங்கள். சர்க்காரால் சட்டமாக்கப்பட்டும் ஒரு சில ஜனங்கள் மனம் புண்படுகின்றதென்ற காரணம் கொண்டு அவர்களது முட்டுக்கட்டை யாலேயே எதுவும் சரிவர அமுலுக்கு வரமுடியாமல் இருந்துகொண்டு வருகின்றது. பார்ப்பனீயத்தொல்லை இல்லாதிருக்குமானால் அவை தானாக அமுலில் இருக்கும். இவ் விஷயத்தில் இன்றும் சட்டத்தை மீறுகின்றவர்கள் ஜனங்களா? சர்க்காராரா என்று கேட்கின்றேன். இந்த நிலைமை புதிய அரசாங்கத்திலும் 14, 17 பிரிவுகளை வைத்துக்கொண்டு எப்படி மாற்றக்கூடும் என்பதை யோசித்துப் பாருங்கள். பாமரமக்கள் - பகுத்தறிவற்ற மூடமக்கள் ஏமாறும்படி பேசிவிட்டால் போதுமா? உண்மையை பகுத்தறிவுடன் யோசித்துப் பார்க்க வேண்டாமா? என்று கேட்கின்றேன்.

## மனம் புண்படாது

மத நடு நிலைமை வகிக்கும் சர்க்காரால் - எந்த மனிதனுடைய மனதும் புண்பட சகியாத சர்க்காரால் அது தன்னை எவ்வளவுதான் பூரண சுயேச்சை உடையது என்று சொல்லிக் கொண்டாலும் அதனால் நமக்கு என்ன பலன் உண்டாகக்கூடும்? வேண்டுமானால் பார்ப்பான் இன்றைய வாழ்வைவிட இன்னம் பலமடங்கு மேலாகவே வாழக்கூடும். ஆனால் தெருவில் நடக்க உரிமையில்லாத "பறையன்" நிலைமையும் சரீரத்தில் பாடுபட்டாகவேண்டிய "சூத்திரன்" நிலைமையும் என்னவாகும்? என்றுதான் கேட்கின்றேன். இப்பொழுதும் பறையன் வீதியில் நடந்தாலே எத்தனை பார்ப்பனர் மனம் புண்படும் என்பது உங்களுக்குத் தெரியாதா? ஒருவர் மனமும் புண்பட சகிக்காத சுயராஜியம் யாருக்குப் பயன் படக்கூடும்?



RangaRakes tamilnavarasam.com

## கோவில் பறிமுதல்

மற்றும் ஒரு சமயம் திரு ஜவஹர்லால் அவர்கள் பார்ப்பனரிடையே பேசும்போது "யாவருடைய எந்த வகுப்பாருடைய உரிமையும் சுயராஜ்யத்தில் பரிக்கப்பட மாட்டாது" என்று சொன்னார். ஆனால் உடனேயே மற்றொரு கூட்டத்தில் பேசும்போது "தீண்டாதாரை அனுமதிக்காத கோவில் பறிமுதல் செய்யப்படும்" என்று சொன்னார். இவற்றை திரு காந்தியவர்களும் ஆமோதித்து வருகிறார்.

அப்படியானால் மக்களின் மத, சாஸ்திர பழக்க வழக்க சம்பந்தமான உரிமைகளை எல்லாம் என்ன செய்வது? அவற்றை ஒழிக்க ஆரம்பித்தால் யாருடைய மனதும்புண்படாதா? எந்த வகுப்பாருடைய உரிமையாவது இதனால் பாதிக்கப்படாதா? என்று யோசித்துப்பாருங்கள். இன்றைய நமது நாட்டு வாழ்க்கையே மேல்கண்ட மதம், சாஸ்திரம், புராணம், பழக்க வழக்கங்களை ஆதாரமாகக் கொண்டுதானே இருந்து வருகின்றது? எனவே, இதிலிருந்து ஒருவனுடைய உரிமை என்றால் என்ன என்பதைக் கவனித்து முடிவு செய்ய வேண்டாமா? காங்கிரசில் மனித உரிமை என்பது மதக் கொள்கைப்படி ஏற்பட்ட உரிமையா? சாஸ்திரத்தில் ஏற்பட்ட உரிமையா? அல்லது இதுவரை அனுபவத்தில் பழக்க வழக்கத்தில் ஏற்பட்ட உரிமையா? அல்லது தேச ஆதாரத்திற்கு ஏற்பட்ட உரிமையா? மனித இயற்கைக்கு ஏற்பட்ட உரிமையா? எதைக் குறிக்கின்றது என்று கேட்கின்றேன்.

மத உரிமை என்றால் இந்து மதத்தின்படி மேளமடிக்க வேண்டும். இஸ்லாம் மதத்திற்கு மேளம் கூடாது என்பது போன்ற உரிமைகளில் எதைக் காப்பாற்றுவது?

பார்ப்பனனுக்கும், பறையனுக்கும் உள்ள மதக்கொள்கை உரிமை, சாஸ்திர உரிமை, பழக்க வழக்க உரிமை ஆகியவைகள் என்ன ஆவது? மக்களுக்கு மக்கள், ஜாதிக்கு ஜாதி, ஊருக்கு ஊர் மாறுபட்ட தேசாச்சார உரிமை என்ன ஆவது? மனித இயற்கை உரிமை என்றால் பழக்க வழக்க மத உரிமை என்ன ஆவது? முதலாளி பாதுகாப்பும், ஜமீன்தாரன் பாது காப்பும், வருணாச்சிரம பாதுகாப்பும் என்ன ஆவது?

ஆகவே, இவர்கள் இருவரும் இதைக்கேட்கும் மக்களை முழு மூடர்கள் என்று கருதிக் கொண்டே இந்தப்படி அதாவது யாருடைய உரிமையும் காப்பாற்றப்படுமென்று ஒருபுறமும், பறிமுதல் செய்யப்படும் என்று மற்றொரு புறமும் பேசுகின்றார்கள் என்றே நான் கருதுகிறேன். ஏனெனில்,

## ஜன நாயகமா? ஏக நாயகமா?

முதலாவது திரு. காந்தியும், திரு. ஜவஹர்லாலும் கேட்கும் சுயராஜியம் ஜனநாயக சுயராஜியமா? ஏகநாயக சுயராஜியமா என்பதை முதலில் விளக்கப்படுத்திக் கொள்ளுங்கள். ஜனநாயகமானால் தீண்டாதவர்களை "கோவிலுக்குள் விடமாட்டேன், குளத்தில் விடமாட்டேன்" என்று சொல்லுகின்றவர்கள் யார்? பிறகு அந்தக் கோவிலையும், குளத்தையும் பரிமுதல் செய்கின்றவர்கள் யார்? என்று யோசித்துப்பாருங்கள். ஜனங்கள் விடமாட்டேன் என்று சொன்னால் அந்த ஜனப்பிரதிநிதி சர்க்கார், யார் மனதையும் புண் படுத்தாத சர்க்கார் கோவிலை எப்படி பரிமுதல் செய்ய முடியும்? கோவிலுக்குள் பறையனை விட இஷ்டப்படாத ஜனங்கள் இஷ்டப்படும் பிரதிநிதியை தெரிந்தெடுப்பார்களா? என்பதை யோசித்துப்பாருங்கள். ஜனங்கள் இஷ்டத்திற்கு விரோதமாய் நடக்கும் இராஜியபாரம் ஜனநாயக ராஜியபாரமாகுமா? மற்றும் இந்திய ஜனங்கள் தங்களுக்குள் இருக்கும் ஜாதி வித்தியாசத்தையும், தீண்டாமையையும் ஒழிப்பதற்கு ஜனநாயக சுயராஜியம் வேண்டுமென்றால் இது பித்தலாட்டமா? அல்லவா? என்று யோசித்துப் பாருங்கள். இன்றைய தினம் தீண்டாமை ஒழிப்பதை யார் வேண்டாமென்கின்றார்கள்? இஸ்லாமானவர் ஆக்ஷேபிக்கின்றார்களா? கிறிஸ்துவர்கள் ஆக்ஷேபிக்கின்றனர்களா? அல்லது கிருஸ்துவ அரசாங்கம் ஆக்ஷேபிக்கின்றதா? ஆரம்பித்திலேயே புரட்டு பேசும் சுயராஜியம் அதிகாரம் வந்தால் கொடுமை செய்யுமா? நன்மை செய்யுமா? இன்று தீண்டாமை அனுசரிக்கும் ஜனங்களுக்கு சர்வ அதிகாரம் தந்தால் தீண்டாமையை பலப்படுத்துவார்களா? தளர்த்துவார்களா? எந்த அரசாங்கத்தில் தீண்டாமை இருந்தாலும் தீண்டாமையை அனுசரிக்கின்றவர்கள் இன்று சுயராஜியம் கேட்கும் இந்துக்களே யொழிய வேறல்ல.

ஆகவே இந்தமாதிரி வார்த்தைகள் மக்களை ஏய்க்கும் தந்திர வார்த்தை அல்லவா என்பதை யோசித்துப் பாருங்கள்.

## எனது அனுபவம்

சகோதரர்களே! காங்கிரசில் நான் இருக்கும்போது "காங்கிரசில் ஜாதி வித்தியாசம் பாராட்டக் கூடாது" என்று ஒரு தீர்மானம் காங்கிரஸ் கமிட்டியில் நானும் திரு. எஸ். இராமநாதனும் சேர்ந்து எங்கள் சொந்த செல்வாக்கில் நிறைவேற்றி வைத்தோம். ஆனால் உடனே திருவாளர்கள் சி.இராஜகோபாலாச்சாரி, டாக்டர் இராஜன், டி.வி.எஸ். சாஸ்திரி, என்.எஸ். வரதாச்சாரி, கே.சந்தானம் முதலாகிய காங்கிரஸ் தலைவர்கள் என்கின்ற பார்ப்பனர்கள் இராஜினாமாச் செய்தார்கள் என்பது உங்களுக்கு தெரியாதா? என்று கேட்கின்றேன். காங்கிரஸ் பணத்தில் காங்கிரஸ் பக்தரால் நடத்திய குருகுலத்தில்தானே "எல்லோரையும் சமமாய் வைத்து சாப்பாடு போட வேண்டும்" என்று நாங்கள் சொன்னதற்கு மேற்கண்ட தலைவர் களேதான் "அது அவரவர்கள் இஷ்டமேயொழிய யாரையும் கட்டாயப் படுத்தி யாருடைய மனதையும் புண்படுத்தி யாருடைய உரிமையையும் பறிக்கக் கூடாது" என்று பதில் சொன்னதோடு அதற்காக அந்த குருகுலமே கலைக்கப்பட்டு இப்போது அதை ஒரு பார்ப்பனர் தனது சொந்த சொத்தாக



RangaRakes tamilnavarasam.com

அனுபவிக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்கின்றேன். இந்த விஷயத்தை திரு காந்தியும் ஒப்புக்கொண்டு அது அவரவர் தனி அபிப்பிராயம் என்று செட்டிமார் நாட்டு சுற்றுப்பிரயாணத்தில் சமாதானம் சொல்ல வில்லையா? என்று கேட்கின்றேன்.

இந்த மகாத்மாக்களும், தியாகிகளும், தலைவர்களும் இதற்குள்ளாக இப்போது புடம் போட்ட தங்கமாய் விட்டார்களா? அல்லது சலவை செய்த மக்களாய் விட்டார்களா? என்று கேட்கின்றேன். அல்லது இந்த விஷயங்கள் பொய்யா? என்று கேட்கின்றேன். அல்லது இன்றைய சுயராஜ்ய திட்டத்தில் பார்ப்பனருக்குள்ள இந்த உரிமை பறிக்கப்பட்டு விட்டதா? அல்லது இந்த யாருடைய மனமும் புண்படக்கூடாது என்கின்ற "தர்ம நீதி" எடுத்தெறியப் பட்டு விட்டதா? என்று கேட்கின்றேன்.

காங்கிரஸ் அங்கத்தினரில் ஜாதி வித்தியாசம் பாராட்டப்பட்ட தில்லை என்று ஒரு நண்பர் சொன்னார். என்னுடைய சொந்த அனு போகத்தை இங்கு எடுத்துச்சொல்லுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். அதாவது நானும் உயர்திரு எஸ்.சீனிவாசய்யங்காரும் காங்கிரஸ் பிரசார விஷயமாய் திண்டுக்கல்லுக்குப் போன போது ஒரு பார்ப்பனர் வீட்டுக்குப் போயிருந்தோம். அந்தக்காலத்தில் நான் வேறாக வைத்தே சாப்பாடு போடப்பட்டேன். ஆனாலும் பகலில் சாப்பிட்ட எச்சிலை அப்படியே இருக்க அதன் பக்கத்தில் தான் இரவும் இலை போடப்பட்டு சாப்பிட்டேன்.

இது இப்படியிருக்க, மற்றொரு சமயம் நானும் தஞ்சை திரு. வெங்கிடுசாமி பிள்ளையும் காங்கிரஸ் பிரசாரமாக பெரிய குளத்திற்குப் போனபோதும் ஒரு காங்கிரஸ் பார்ப்பனர் வீட்டில் இறக்கப்பட்டோம். அப்போது காலை பலகாரம் சாப்பிட்ட எச்சில் இலைக்குப் பக்கத்தில் பகல் சாப்பாடும், பகல் சாப்பாடு சாப்பிட்ட எச்சிலைக்குப் பக்கத்திலும், காலை பலகாரம் சாப்பிட்ட எச்சிலைக்குப் பக்கத்திலும் இராத்திரி சாப்பாட்டுக்கும் இலை போடப்பட்டு எறும்புகளும், பூச்சிகளும், ஈக்களும் ஊரிக் கொண்டி ருக்கவே சாப்பிட்டு வந்தோம். இவற்றையெல்லாம் லட்சியம் செய்யாமல் தான் காங்கிரசில் உழைத்தேனானாலும் காங்கிரசில் ஜாதிவித்தியாசம் பாராட்டப்படுவதில்லை என்பதை நான் ஒப்ப முடியாது என்பதற்காக இதை சொல்லிக்கொள்ளுகின்றேன்.

## ஜாதி போய் விட்டதா?

இவ்வளவு தூரம் போவானேன்? இன்றும் காங்கிரசிலுள்ள காங்கிரசை ஆதரித்துப் பிரசாரம் செய்யும் மற்றும் "காங்கிரசும் மகாத்மாவும் தான் இந்தியாவுக்கு விடுதலை, சமத்துவம் வாங்கிக் கொடுப்பவர்?" என்று சொல் லும் பார்ப்பனரில் 100க்கு 5 பேராவது ஜாதி வித்தியாசம் விட்டவர்களா? விடத் தயாராயிருக்கின்றவர்களா? என்று கேட்கின்றேன். பார்ப்பனரல்லா



தார்களில் 100க்கு 10 பேராவது ஜாதி வித்தியாசம் விட்டவர்களா? என்று கேட்கின்றேன். மூடிவைப்பதில் பயனென்ன? 'வாயிக்கு உருசியான சாப்பாடு எங்கு கிடைத்தாலும் சாப்பிடலாம்' என்கின்ற ஒன்றிரண்டு "துறவி" களைப் பார்த்து முடிவு கட்டலாமா? என்று கேட்கின்றேன்.

சுயராஜ்யம் வந்த காலத்திலும் இந்த மனிதர்கள் தானே இந்த நாட்டு மக்களாயிருக்க முடியும்? இவர்களது பிரதிநிதிகள் தானே ஜனநாயக ஆட்சி செலுத்துவார்கள். ஆகவே இந்த நிலையில் என்ன மாறுதலை ஏற்படுத்திவிட முடியும்?

## பொருளாதாரம்

மற்றும் பொருளாதாரத் துறையில் செல்வவான்களுக்கும், உத்தியோ கஸ்தர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் தவிர மற்றவர்களுக்கு என்ன நன்மை செய்ய சுயராஜ்யத்தில் திட்டமிருக்கின்றது என்பதை சற்று யோசித்துப் பாருங்கள். பணக்காரன் பணத்தைப் பிடுங்கி மற்றவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும்படி நான் கேட்கவில்லை. தேசத்துப் பணமெல்லாம் சர்க்காருடையதானதானால் ஆகட்டும் . இல்லையானால் பணம் ஒரே பக்கம் போய்ச் சேருவதற்கு மார்க்கமில்லாமலிருக்க வேண்டும் என்றுதான் சொல்லுகின்றேன். இன்றையதினம் பணக்காரன் பணத்தைப் பிடுங்கி ஏழைகளுக்குப் பங்கு போட்டுக்கொடுத்து விட்டால் இந்த ஏழை நாளைக்கு கயா சிரார்த்தமும், மதுரைவீரன் பூஜையும், காவடி அபிஷேகமும், பண்டிகையும் செய்து வீட்டில் உட்கார்ந்து கொண்டேபணத்தைத் துலைத்து விடுவான் என்பதும், பிறகு பழையபடி புரோகிதனும், தந்திரக்காரனும், ஏமாற்றுக்காரனும்தான் மறுபடியும் பணக்காரன் ஆய்விடுவான் என்பதும் எனக்குத்தெரியும். ஆதலால் தான் நாட்டுச் செல்வம் ஒரு பக்கமே போய் குவியாமல் இருக்கும் திட்டமே போட வேண்டும் என்றும் யாருக்கும் எந்தத்தொழிலும் செய்யவும் எல்லோரும் எதையும் படிக்கவும் சௌகரி யமும், அனுமதியும் இருக்க வேண்டும் என்றும் தான் சொல்லுகின்றேன்.

வருணாச்சிரம சுயராஜ்யத்தில் – யார் மனதையும் புண் படுத்தாத சுயராஜியத்தில் இது முடியுமா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

## மதமும் கோவிலும்

மற்றும் இன்றைய இந்தியா நாட்டின் அடிமைத்தனத்துக்கும், தரித்திரத்திற்கும் ஆதரவாயிருப்பது மதமும் கோவில்களும் என்பது நீங்கள் எல்லோருமே ஒப்புக்கொண்ட விஷயமாகும். ஆகவே காங்கிரசினால் இந்த மதமும் கோவில்களும் ஒழியுமா? என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். இன்று நமது நாட்டில் காங்கிரசில் இருப்பவர்கள் பெரிதும் மதப்புரோகிதக் கூட்டத்தாரும் அவர்களது மக்களும், கோவில்



RangaRakes tamilnavarasam.com

பூசாரி மக்களும் அல்லவா? என்று கேட்கின்றேன். காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்கள் இவற்றை ஆதரிக்கின்றவர்கள் அல்லவா? என்று கேட்கின்றேன். மதமும் கோவிலும் போய் விடுவது உண்மையானால் இந்த ஆட்கள் "காங்கிரசுக்கு ஜே!" "காந்திக்கு ஜே!!" என்று கத்துவார்களா? என்பதையும் யோசித்துப்பாருங்கள். ஏதோ பார்ப்பனருக்கு கையாளாய் இருப்பதின் மூலம் ஏதோ ஒருவிதத்தில் வாழ்க்கை நடைபெறுகின்றது என்பது தவிர காங்கிரசின் யோக்கியதை அறியாத காங்கிரஸ் பக்தர்கள் யார் இருக் கின்றார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே சகோதரர்களே! காங்கிரசு பைத்தியம் என்கின்ற பார்ப்பன ஆட்சியில் இருந்து விலகி மக்களுக்கு உண்மை சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட்டாலொழிய இந்த நாட்டுக்கோ, மக்களுக்கோ எவ்வித பலனும் ஏற்பட போவதில்லை என்பது தான் எனது உறுதி.

*குறிப்பு : 04.07.1931 ஆம் நாள் நாகர்கோயிலில் நடைபெற்ற நாகர் கோயிலைச்சேர்ந்த கோட்டாறு சுயமரியாதை வாசக சாலையின் இரண்டாம் ஆண்டு விழாவில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 12.07.1931**



# சுயராஜியமும் சுதேச சமஸ்தானமும்

இந்தியாவுக்கு வரப்போகும் சுயராஜியம் என்பதும் சீர்திருத்த மென்பதும் இப்போதிருப்பதை விட இன்னும் மோசமான அடிமை விலங்காகவே வந்து முடியப் போகின்றது.

இந்தியாவுக்கு வந்த சைமன் கமிட்டியானது இந்தியாவின் உண்மை நிலைமையையும், தேவையையும் அறியத் தொடங்கியதால், நமது பார்ப் பனர்கள் அதற்கு இடம் கொடுத்தால் தங்களுக்கு ஆபத்து வந்துவிடுமென கருதி, ஏதாவது ஒரு தந்திரம் செய்து கமிஷன் விசாரணையை வெற்றிய டையாமல் செய்யவேண்டும் என்ற எண்ணத்தின்மீது அநேக சூட்சிகள் செய்தார்கள். அவைஒன்றும் தமிழ்நாட்டு மக்களிடம் பலிக்காமல்போகவே, கடைசியாகச் சத்தியாக்கிரகம் என்பதாக ஆரம்பிக்கச்செய்து ஒருபக்கம் கலகம் செய்தார்கள். இவற்றிற்கெல்லாம் காரணம் காங்கிரஸ் என்பதான பார்ப்பன ஸ்தாபனம் ஒன்று அவர்களுக்கு கை ஆயுதமாய் இருப்பதால் எதுவும் செய்ய முடிகின்றது என்பதுடன் மற்ற மக்களுக்கும் அதனால் பல தொல்லைகள் ஏற்பட முடிந்தன. இதனாலேயே சென்ற வருஷம் சத்தியாக் கிரகம் என்னும் பேரால் (பார்ப்பனத்)தொல்லை நிகழ்ந்தது எனினும், மற் றொரு பக்கம் சமதர்ம உண்மைக் கொள்கைகள் முன்னிலும் அதிகமாகத் தலைகாட்ட ஆரம்பித்து விட்டது. இந்த நிலைமையில் அரசாங்கத்தார் வருணாச்சிரம தருமத்திற்கு ஆதரவுகொடுத்தால் சமதர்மக்காரர்கள் தொல் லையும், மற்ற நேச தேச அரசர்கள் இகழ்ச்சியும் ஏற்படுவதாய்க் காணப் படுகிறது. சமதர்மத்திற்கு ஆதரவு கொடுப்பதானாலோ, தங்கள் போக போக் கியங்களை விட்டுவிட வேண்டியதாக ஏற்படும் போல் காணப்படுகின்றது. ஆகவே, இந்தக் கஷ்டத்தில் இருந்து தப்புவதற்குப் பிரிட்டிஷார் பார்ப்பனர் களுடன் கலந்தே ஒரு தந்திரம் செய்யவேண்டியதாய்ப் போய்விட்டது.

அதாவது, தங்கள் (பிரிட்டிஷார்) நிலைமையை பந்தோபஸ்தாய் இருக்கும்படி பார்த்து வருணாச்சிரமக்காரர்கள் நிலைமையும் கெடாமல், ஏதாவது வழிகள் கண்டு பிடித்து, அதை இந்தியர்கள் ஒப்புக்கொள்ளும்படி செய்து, சரிப்படுத்திக் கொண்டு வரவேண்டியது என்கின்ற ஒப்பந்தத்தின் மீது மற்ற விஷயங்களில் எந்தவிதமானாலும் சரி என்கின்ற முறையில் ஒரு புதிய வழி கண்டு பிடித்தார்கள்.



RangaRakes tamilnavarasam.com

அதாவது இந்தநிலைமையில் இந்தியப் பார்ப்பனரும், பிரிட்டிஷாரும் சேர்ந்து, இருவர் நிலைமையும் காப்பாற்றக்கூடிய சுதேச சமஸ்தான மன்னர்களையும், சீர்திருத்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதென்றும், காங்கிரஸ், அதாவது திரு. காந்தி இதற்குச் சம்மதித்தால் எந்தவித அரசியல் கொள்கையை வேண்டுமானாலும் ஒப்புக்கொள்வதென்றும் முடிவுகட்டி, இராஜியின் மூலம் முதலில் திரு காந்தியை இதற்குச் சம்மதிக்கும்படி சரிபடுத்திக் கொண்டார்கள். திரு காந்தியும் வருணாச்சிரமம் காப்பாற்றப்பட வேண்டி ஐக்கிய அரசியல் திட்டத்தையும், அதில் சுதேச மன்னர்கள் கலப்பையும் ஒப்புக்கொண்ட பின்பு தங்களுக்கு இனி எவ்வித ஆபத்தும் இல்லை என்கின்ற நிலைமையில் வெகுபந்தோபஸ்தாக இருக்கின்றார்கள்.

காங்கிரசுக்கும் யார் என்ன சமதர்மம் பேசினாலும், சுதேச அரசர்கள் வருணாச்சிரமத்தை காப்பாற்றுவதோடு சமதர்மத்திற்கும் விரோதமாயிருப்பார்களாதலால் எப்படியானாலும் அவ்விருவருக்கும் பயமில்லை என்கின்ற நிலைமையிலிருக்கின்றது.

இந்தத் தைரியத்தினாலேயே திரு காந்தி வருணாச்சிரமம் பேசுவதும், திரு.ஜவஹர்லால் சமதர்மம் பேசுவதுமாயிருப்பதுடன் திரு. ஜவஹர்லால் பேச்சை கண்டிப்பவர்களுக்குக் காந்தி பேச்சைக் காட்டி மயக்குவதும், திரு.காந்தி பேச்சைக் கண்டிப்பவர்களுக்கு திரு.ஜவஹர்லால் பேச்சைக் காட்டி மயக்குவதுமான வேலையில் ஆட்களைப் பிடித்துப் பிரசாரம் செய்து, காங்கிரசை ஆதரிக்கச் செய்து வரவும் பாடுபடுகின்றார்கள்.

ஆகவே இதிலிருந்து இனிவரப்போகும் சுயராஜியம் வருணாச்சிரம இராஜியமாகவும், சமதர்மத்திற்கு முட்டுக் கட்டையான இராஜியமாகவும்தான் ஏற்படப் போகின்றது என்பது உறுதி!உறுதி!!உறுதி!!!

நமது சுதேச மன்னர்களை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று நாம் கருதிக்கொண்டிருக்கும் இக் காலத்தில் - இயற்கையாகவே அவர்கள் அழிந்து, ஒழிந்து போக சகல சௌகரியமும் ஏற்பட்ட இந்தச் சந்தர்ப்பத்தில், காங்கிரசானது அவர்களுக்குச் சிரஞ்சீவிப் பட்டத்தைக் கொடுக்க முனைந்து கொண்டிருக்கின்றது.

ஆகவே பார்ப்பனிய சூட்சி வெற்றி பெறப்போகின்றது.ஏனெனில் நமது சுதேச சமஸ்தான அரசர்கள் என்பவர்கள் பார்ப்பனீயத்தைவிட மோசமானவர்கள். பார்ப்பனீயமோ பிச்சை கேட்பதின் மூலம் பாடுபடுபவர்களின் செல்வத்தைக் கொள்ளை கொள்வதாகும். சமஸ்தானமோ பாடுபடுபவர்களின் செல்வத்தை அடித்து, உதைத்துப் பிடிங்கிக்கொள்வதேயாகும்.

பார்ப்பனர்களுக்கோ நமது நாட்டைப்பற்றிய எவ்விதப்பொறுப்பும் இல்லை. அதுபோலவே சமஸ்தானங்களுக்கும் நாட்டைப்பற்றிய எவ்வித கவலையும் இல்லை.



இந்திய சமஸ்தானங்களில் நடக்கும் அக்கிரமங்கள் போலவும், அவர்கள் செய்யும் அதிக்கிரமங்கள் போலவும் இந்த உலகத்தில் வேறு எங்குமே காணமுடியாது.

உதாரணமாக இரண்டொரு விஷயங்களை மாத்திரம் சொல்லுவோம். இவைகள் தக்க ஆதாரத்தின் மீதே சொல்லப்படுவதாகும்.

அதாவது இந்திய சமஸ்தான அரசர்கள் அரசியல் நடவடிக்கையையும், ஐரோப்பிய சமஸ்தான அரசர்கள் அரசியல் நடவடிக்கையையும் பற்றிய சில குறிப்புகளை குறிப்பிடுவோம்.

இந்தியாவிலுள்ள அரசர்கள் தங்களுடைய சொந்த செலவுக்கென்று சமஸ்தான மக்கள் வரிப்பணத்திலிருந்து பெறும் தொகையானது அவர்களது சமஸ்தான மொத்தவரும்படியிலிருந்து $^{1}/_{16}$, $^{1}/8$, $^{3}/_{16}$, $^{1}/_{4}$, $^{1}/_{3}$, $^{1}/_{2}$ வீதம் பங்கு பாகத்துக்குக் குறைவில்லாமல் பெற்றுக் கொள்ளுகிறார்கள். உதாரணமாக நம்மரசர்களென்று சொல்லப்படும் திருவிதாங்கூர் மகாராஜா தேச வரும்படியில் 17ல் ஒருபாகமும் ( அதாவது மாதம் 1,00,000 ரூபாயும்) மைசூர் மகாராஜா 14ல் ஒரு பாகமும் ( அதாவது மாதம் 2,00,000 ரூபாயும்) ஐதராபாத் நவாபு பதின்மூன்றில் ஒரு பாகமும் ( அதாவது மாதம் 4,00,000 ரூபாயும்) தங்கள் சொந்த செலவுக்காகப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

பரோடா அரசரும் தனது வரும்படியில் 13ல் ஒரு பாகமும், காஷ்மீர், பிகானீர், இந்தூர் முதலிய அரசர்கள் 5ல் ஒரு பாகமும், மற்றும் சில ஆழ்வார் முதலிய அரசர்கள் 3ல் ஒரு பாகமும், சிலர் வரும்படியில் சரிபகுதியுமாக தங்கள் சொந்த செலவுக்கெனப் பெற்று, அனுபவித்துக்கொண்டு வருகின்றார்கள். ஆனால் ஐரோப்பிய அரசர்களோ, அவர்கள் பெறும் சொந்தச் செலவுப் பணத்தைக் கணக்குப் பார்த்தால், இந்திய அரசர்களைவிட எத்தனையோ மடங்கு குறைந்த அளவாகத்தான் பெற்று வருகிறார்கள்.

உதாரணமாகச் சமீபத்தில் பட்டத்திலிருந்து துரத்தப்பட்ட ஸ்பெயின் தேசத்து அரசர் தனது தேச வரும்படியிலிருந்து 500ல் ஒரு பாகமும், ஜப்பான் அரசர் 400ல் ஒரு பாகமும், டென்மார்க் அரசர் 300ல் ஒரு பாகமும், இட்டாலி அரசர் 500ல் ஒரு பாகமும், நெதர்லேண்ட்ஸ் அரசர் 600ல் ஒரு பாகமும், நார்வே அரசர் 700ல் ஒரு பாகமும், பெல்ஜிய அரசர் 1000ல் ஒரு பாகமும், நமது சக்ரவர்த்தியும் இங்கிலாந்து அரசருமான ஐந்தாவது ஜார்ஜ் அரசர் 1600ல் ஒரு பாகமும்தான் பெற்று வருகிறார்கள். அப்படி யிருந்தும், ஜனங்கள் அரசர்களைப் பட்டத்தைவிட்டு இறக்க வேண்டுமென்று அந்நாடுகள் முயற்சி செய்து கொண்டு வருகின்றன. ஆனால் 2ல் ஒரு பாகமும் 3ல் ஒரு பாகமும், 8ல் ஒரு பாகமும் கொள்ளையடிக்கும் நமது நாட்டு அரசர்களை இன்னமும் பட்டத்தில் வைத்திருப்பதை சகித்துக் கொண்டிருப்பதோடல்லாமல், இந்திய அரசாங்கத்திலும் அவர்களுக்கு



RangaRakes tamilnavarasam.com

ஆதிக்கம் கொடுக்க வேண்டுமென்று நமது “பூரண சுயேச்சைக் கொள்கை கொண்ட காங்கிர”சானது சத்தியாக்கிரகம் செய்து வருவதைப் பார்த்தால் நமது நாட்டு அரசியல் ஞானமும், யோக்கியதையும் நன்றாய் விளங்கும். நிற்க, 10 லட்ச ரூபாய் வரும்படியுள்ள ஒரு அரசர் வருஷம் ஒன்றுக்கு 4,20,010 ரூபாய் வீதம் தனது சொந்த செலவுக்கு எடுத்துக் கொள்வதோடு, இவ்வளவும் போறாமல் 15,00,000 ரூபாய் கடனையும் வைத்துக்கொண்டு முழுச் செலவையும் விபசாரத்திற்கே பயன்படுத்திக் கொண்டிருப்பதோடு, பல தாசிகளையும் இராணிகளாகக் கலியாணம் செய்து கொண்டிருப்பதோடில்லாமல், ஒரு தாசி இராணியின் சகோதரனும், சொந்தக்காரர்களும் அரசாங்கத்தில் செல்வாக்குள்ள ஆதிக்கக்காரர்களாயிருந்து கொண்டு, அரசாங்கத்தை ஆட்டி வருகின்றார்கள்.

மற்றொரு அரசர் 2,19,000 ரூபாய் வரும்படியுள்ள சமஸ்தானத்தில் 1,36,000 ரூபாய் வீட்டுச் செலவுக்கென கொடுக்கப்பட்டு வருகின்றார். இது தவிர அவருடைய குதிரை லாயத்திற்கென வருஷம் 14,000 ரூபாயும் செலவு செய்யப்பட்டு வருகின்றது. ஆனால் அந்த இராஜியத்தின் சுகாதாரத்திற்காக 5000 ரூபாய்தான் வருஷத்தில் செலவு செய்யப்படுகின்றது.

மற்றும், இந்தூர் சமஸ்தானத்தைப் பற்றி 14.6.27ல் வெளியான “சர்வென்ட்ஸ் ஆப் இந்தியா” என்னும் பத்திரிகையில் காணப்படும் குறிப்பாவது:-

“இந்தூர் சமஸ்தான வாசிகளுக்கு 1926ம் ஆண்டானது மிக முக்கியமான ஒரு வருடமாகும். ஏனெனில், அந்த ஆண்டில்தான் சிம்மாதனத்தை வகிப்பவர்களில் ஓர் பெரிய மாறுதலேற்பட்டது. துக்கோஜிராவ் அவ்வாண்டின் ஆரம்பத்திலேயே தனது சிம்மாதனத்தைத் துறந்துவிட்டார். அவருக்குப் பதிலாக அவருடைய குமாரர் எஸ்வந்ராவ் என்பவர் மகாராஜாவாக முடி சூட்டப்பட்டார். அவ்வித மாறுதலால் எத்தகைய வித்தியாசங்கள் ஏற்பட்ட போதிலும்கூட, அரண்மனைச் செலவில் மட்டும் சிறிதுகூட வித்தியாசமேற் படவில்லை. 1924-25 வருஷத்தில் அரண்மனை செலவென 21,28,257 ரூபாயாக இருந்ததானது, அடுத்த வருஷத்திலேயே 23,22,924 ரூபாயாக உயர்ந்து விட்டது. அவ்வருஷத்திய வருமானம் 1,28,10,887 ரூபாய் தான் ஆகின்றது. ஆகையினால், அரண்மனை செலவுமட்டும் கணக்கிட்டால் 100க்கு 18 விழுக்காடாக ஏற்படுகின்றது. அரண்மனை செலவென்று குறிப் பிட்டிருக்கும் இதர கணக்கையும் நாம் இத்துகையுடன் சேர்த்தோமானால், அப்பொழுது அரண்மனையின் மொத்த செலவு இன்னுமதிகமாகவேயிருப்பதைக் காணலாம். ஆனால், அந்த செலவெல்லாம் பல விஷயங்களுடனும் சேர்க்கப்பட்டு விட்டதால், இதுமட்டும் தனியாக காட்டப்பட்டிருப்பதே இத்துகையாகின்றது. அத்தகைய அரண்மனை செலவு என்னும் தலைப்பின் கீழ் “லால்பாக் அரண்மனை வேலை” என்பதற்குச் செலவான துகையையும் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிக்க அவசியமாகும். இதனுடைய செலவுமட்டும் சுமார் ஆறு லட்சமாகின்றது, ஆனால் ஆச்சரிய கரமாகவே ‘மகாராஜாவின் வாசஸ்தான ரிப்பேர் செல’வென்பதாக குறிப் பிட்டு, இச்செலவையும் மராமத்து இலாகாவின் செலவோடு சேர்க்கப் பட்டிருக்கின்றது. உண்மையில் அரண்மனை ரிப்பேர் செலவு அவ் வருஷம் ஏறக்குறைய 6000 ரூ. தானாகின்றது. இம்மாதிரியாகவே தான் வேட்டையாடுவதினிமித்த மேற்பட்ட செலவு சுமார் 12,000 ரூபாயும் “பாரஸ்ட்ஸ்” என்னும் தலைப்பின் கீழ் காட்டப்பட்டிருக்கின்றது. இவ்வித மாக செலவிடப்படும் பணங்களை எல்லாம் நாம் மொத்தமாகச் சேர்த்து கணக்கிட்டுப் பார்த்தோமேயானால், அப்பொழுது அவை சமஸ்தான மொத்த வரும்படியில் நூற்றுக்கு 18-பங்கு அல்லவென்றும். ஆனால், நூற்றுக்கு 22 பங்கு வீதமெனவும் ஏற்படும். இம்மாதிரியாக “அரண்மனை செலவு” என்னும் தலைப்பின்கீழ் அபரிமிதமான பணம் செலவிடப்படுவதால்தான், அச்சமஸ்தானத்திலுள்ள, மக்கள் விருத்தியடைவதற்குரிய கல்வி நிலையங்களும், சுகாதார நிலைமையும் கவனிக்கப்படாமலிருக்கின்றன.

## மற்றொன்று

“பிரிட்டிஷாரின் பாதுகாப்பில், இந்திய அரசர்கள்” அதாவது “Indian Princes Under British Protection” என்னும் புஸ்தகம், பக்கம் 147ல் திரு.சட்கர் என்பவர் கீழே காணுவது போலுரைத்திருக்கின்றார்.

“தனது அரசாங்கத்தின் வரும்படியில் 100க்கு பத்துவீதம் தான் தன்னுடைய சொந்த செலவுக்கென எடுத்துக்கொள்ளுவதாகக் கூப்பாடு போட்டு வரும் பிகானீர் மகாராஜா அவர்கள், தான் வாசம் செய்யும் அரண்மனையைப் பழுதுபார்ப்பதாலேற்படும் செலவையும் “சிவில் ஒர்க்ஸ்” என்னும் தலைப்பின்கீழ், அரசாங்க செலவோடு சேர்த்து விடுகின்றார். 1926-27வது வருடத்திய பிகானீர் அரசாங்க அறிக்கையில் “பழுது பார்க்க வேண்டிய” தென்னும் தலைப்பின்கீழ் 47 இனங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கென்று 40,000 பவுனும் செலவிடப்பட்டிருக்கின்றது. ஆனால் அவ்வறிக்கையில் காணப்படும் 47 இனங்களிலும், 4 இனங்கள் மட்டுமே தான் அரசாங்கப்பொதுக் கட்டடங்களாகும். அவைகளைப் பழுதுபார்ப்பதற்காக ஏற்பட்ட செலவோ மொத்த துகையில் 100க்கு 5 வீதம்தான் எனவு மேற்படு கின்றது”.

## மற்றுமோர் சான்று

1925-26வது வருடத்திய ஜாம்நகர் சமஸ்தானத்தின் அறிக்கையை கவனித்தோமே யானாலும் இம்மாதிரியேதான் “சிவில் லிஸ்டு” என்னும் தலைப்பின் கீழ் செலவான மொத்தத் துகை 40000 பவுன் அல்லது 4,80,000



RangaRakes tamilnavarasam.com

ரூபாய் என, அதாவது கட்டடங்களைப் பழுதுபார்த்ததனாலேற்பட்ட செலவென்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. "அரண்மனை செலவு" என்னும் தலைப்பின்கீழ் அரசரின் சொந்த செலவுக்கென மட்டும் 1,25,000 பவுன் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டின் மொத்தத்தொகையும் 1,65,000 பவுன்களாகின்றது. அதாவது சமஸ்தானத்தின் மொத்தவரும்படியில் 100 க்கு 20 வீதமாகின்றது. இத்துடனின்றி "அரண்மனைச் செலவு" என்னும் தலைப்பின் கீழ் காணப்படுபவைகளைத் தவிர்த்து மீண்டும் தனியாக மோட்டார் செலவெனவும், அரண்மனைச் செலவு மென்பதாகவும் குறிப்பிட்ட வகைகளில் செலவானது 2,00,000 பவுனாகும். இதையும் அரசருடைய சொந்த செலவில் சேர்ப்போமேயானால் அப்பொழுது அவருடைய செலவுமட்டும் மொத்தம் பிரதி வருடமும் 3,75,000 பவுன் என அதாவது சமஸ்தான வருமானத்தில் சரிபாகம் தனது சொந்த செலவுக்காக அரசர் செலவிடுகின்றாரெனவும் ஏற்படுகின்றது. 1926-27 வருடத்திய அறிக்கையை நாம் பார்ப்போமேயானால், அப்பொழுது நாமின்னும் இதைவிடப் பன்மடங்கு பிரமிப்படைய வேண்டி வரும். அரசருடைய சொந்த செலவைக் குறிப்பிடப்பட்டிருக்கும் 6,00,000 பவுனிலும் 2,00,000 பவுன் எதிர்பாராத செலவு என்பதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கின்றது".

மற்றுமோர் அரசாங்கத்தில், (பெயரைப்பற்றி நாம் அதிகக்கவலைப் பட வேண்டியதில்லை. சில வருடங்களுக்கு முன்பதாகத் தான் முதன் முதலாக வரவும் - செலவும் கணக்கிடப்பட்டது.

அந்த சமஸ்தானத்தின் அதிபர் தனது சொந்த செலவைக் குறைப்ப தானது தன்னுடைய கௌரதையைக் குறைத்துக்கொண்டதாக வேற்படும் என நினைத்துக் கொண்டிருந்ததால் அவருடைய சமஸ்தானத்தின் வரவு - செலவின் விபரமே ஒருவருக்கும் புலப்படாமலிருந்தது. பிறகு, அவரைப் போலுள்ள சகோதர அரசர்களால் தூண்டப்பட்டு, இப்பொழுதுதான் முதலா வதாக அவருடைய வரவு-செலவு கணக்கெடுக்கப்பட்டது. கடைசியில் மொத்தம் பார்த்தபொழுது, அந்த அரசாங்கத்தின் மொத்த வருமானம் ஒரு கோடி ரூபாயிக்கும் சற்று அதிகமெனவே ஏற்பட்டது. இந்த அறிக்கை யானது தான் யாவரும் பின்பற்றக்கூடிய தெனவும் கூறப்பட்டு வந்தது. அவ்வறிக்கையை சுருக்கிக் கூற வேண்டுமானால், கீழே காணுவது போலதான் உரைக்க வேண்டும்.

அதாவது:-

அரசாங்கத்தின் மொத்த வருமானம் 125 லட்சம் இந்த 125 இலட் சத்தில் 50 இலட்சம் "சம்பளம்" என்னும் தலைப்பின் கீழ் செலவிடப் படுவதற்கு ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டது. இத்தலைப்பின்கீழ் அரசாங்கத் திலுள்ள பட்டாளத்திற்குச் செலவாகும் 20 லட்சமும் சேர்ந்ததேயாகும்.



அவ்வப்போதேற்படும் செலவினிமித்தமென 15 லட்சம் தனியாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த 15 லட்சத்திலும் 10 இலட்ச ரூபாய் தனியாக அரண் மனை (அரசருடைய) செலவுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டது. படிச்செல வென்பதாகவும், வேலையிலிருந்து நீங்கியவர்களுக்கு உபகாரச் சம்பள மென்பதாகவும் 5 லட்ச ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டது. இவைகள் போக மீதி யிருக்கக்கூடிய 55 லட்ச ரூபாயும் அரசருடைய சொந்த செலவுக்கென ஒதுக்கப்பட்டு விட்டது. ஆகையினால்,அவ்வப்போதேற்படும் செலவு, படிச்செலவு, உபகாரச்சம்பள செலவு என்பதாக அரசாங்கத்திற்கு மொத்தம் 40 லட்சமே செலவிடப்படுகின்றது. இந்த 40 லட்சத்திலும் கல்விக்காக செலவிடப்படும் 2 லட்சமும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அவ்வப் போதேற்படும் செலவுக்கு என ஒதுக்கி வைக்கப்பட்ட 15 லட்சத்தில் அரண் மனை (அரசருடைய) செலவுக்கு என ஒதுக்கி வைத்திருக்கும் 10 லட்சமும், வருமானத்தில் செலவு போக மீதியேற்படும் 55 லட்சமும், ஆக 65 லட்ச ரூபாய் அரசரின் செலவுக்கென ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. பொருளா தாரத் துறையைக் கவனித்துக்கொண்டு வரும் மாணாக்கர்களுக்கு 125 லட்ச ரூபாய் வரும்படியுள்ள ஒரு சமஸ்தானத்தில், 65 லட்ச ரூபாய் சமஸ்தான அதிபதியின் சொந்த செலவுக்கெனவும், 40 லட்சம் அரசாங்க சிவில் நிர்வாகத்திற் கெனவும், 20 லட்சம் ரூபாய் அரசாங்க மில்டேரி நிர்வாகத்தின் செலவுக் கெனவும் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதானது ஒரு சமயம் ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால், இந்த சமஸ்தானத்தில் கல்விக்கென இரண்டு லட்ச ரூ.மட்டும் செலவிடப்படுவதானது இதைவிட இன்னும் பன் மடங்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்".

இவர்களது தர்பார் செலவு விஷயங்கள் இவ்விதமிருப்பதொரு புறமிருக்க, இவர்கள் அரசநீதி, அரசாட்சி செய்யும் அரசியல் நீதி எப்படி யிருக்கின்றதென பார்த்தோமானால், ஒன்னே முக்கால் கோடி ரூபாய் வரும் படியுள்ள ஒரு இராஜபுதன அரசாங்கத்தில் 3,25,000 ரூபாய் மோட்டாருக்காக செலவு செய்யப்பட்டு வருகிறது. ஆனால் கல்விக்கோ 2,75,000 ரூபாய் மாத்திரமே செலவு செய்யப்பட்டு வருகின்றது.

தவிர தலையொன்றுக்கு 15 ரூ. வீதம் வரிவசூல் செய்யும் பிகானீர் அரசாங்கம் கல்விக்குத் தலையொன்றுக்கு 5 அணா வீதமே செலவு செய்கின்றது. தலையொன்றுக்கு 20 ரூபாய் வீதம் வரிவசூல் செய்யும் நவநகர் அரசாங்கம் தலையொன்றுக்கு 6 அணா வீதமே கல்விக்காக செலவு செய்கின்றது. தலையொன்றுக்கு 10 ரூபாய் வீதம் வரிவசூல் செய்யும் ஆள் வார் அரசாங்கம் தலையொன்றுக்கு 3 அணா வீதமே கல்விக்காக செலவு செய்கின்றது. சுகாதாரத்திற்கோ தலையொன்றுக்கு 1 அணா வீதமே செலவு செய்கின்றது.



RangaRakes tamilnavarasam.com

ஆனால், இந்தியாவில் தலையொன்றுக்கு 6-4-0 ரூபாய் வீதம் வரிவசூல் செய்யும் இந்திய அரசாங்கம் கல்விக்காகத் தலையொன்றுக்கு 9 அணா வீதம் செலவு செய்கின்றது.

இவை "பிரின்சுலி இந்தியா" என்னும் பத்திரிகையில் காணப்படும் விபரங்களாகும். இந்திய அரசர்களின் நிர்வாகம் இந்தப்படி பல இருந்தாலும் இவர்களுடைய ஒழுக்கங்களைப் பற்றி யோசிப்போமானால் ஒரு அரசர் தன்னுடைய அதிகாரியொருவருக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்தாலே விளங்கும். அதாவது:-

" பிரியமுள்ள .................. க்கு உம்முடைய லீவ் ( ரஜா ) விண்ணப்பம் கிடைத்தது. ரஜா அனுமதிக்கப்பட்டது. உன்னுடைய கடிதத்தில் காணப்படும் உறுப்படிகளுடன் நீர் சீக்கிரம் திரும்பி வரவேண்டும். அவைகள் மிக்க அழகாயிருக்கவேண்டும். அவைகளென்மனதிற்குத் திருப்தியை அளிக்குமானால் அப்பொழுதுதான் உம்மை இராஜபக்தியுள்ள ஓர் சிப்பந்தியாகக் கருதுவேன்.

உம்முடைய அன்பான

ராஜா சாகிப்"

என்று ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

இந்த ரஜா விண்ணப்பம் எழுதிய சிப்பந்தி அந்த சமஸ்தானத்தில் ஒரு பெரிய அதிகாரியேயாகும், இந்தப்படிக்கு எத்தனையோ அரசர் களுடைய நடவடிக்கைகள் நமக்கு வெளிப்படையாகவும், வெளிப்படை யான இரகசியமாகவும் தெரிந்தே வருகின்றது என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

ஆகவே, இப்படிப்பட்ட அரசர்களைக் கொண்டுவந்து நம்முடைய இந்திய அரசாங்கத்தில் ஒன்றாகச்சேர்த்து விட்டால் இந்தியாவில் எந்தவித மான சீர்திருத்தத்தை எதிர்பார்க்க முடியும்? என்பதை காங்கிரஸ் பக்தர்கள் தான் யோசிக்கவேண்டும்.

இவர்களோடு நமது நாட்டுப் பார்ப்பனர்களும், ஜமீன்தாரர்களும், மற்றும் நமது நாட்டு பெரும் மிராசுதாரர்களும், மைனர்களும், வக்கீல்களும், முதலாளிகளும் கலந்து கொண்டால் நாட்டில் எப்படி சமதர்மமும், பொருளாதார சமத்துவமும் ஏற்படுத்த முடியுமென்பதை சுயராஜ்யக் காரர்கள் தான் விளக்கவேண்டும்.

ஒரு சமயம் "சுயராஜ்யம் வந்து விட்டால் சுதேச அரசர்களையும் கூட சேர்த்து, திருத்தப்பாடு செய்யலாமென்று சிலர் சொல்லக்கூடும். இது வார்த்தைக்கு அலங்காரமானதும், மூடர்களுடைய செவிக்கு இன்பமானதாக வுமிருக்கலாம். எல்லா மனிதர்களுக்குமே ஓட்டுரிமை இருப்பதாயிருந் தாலும், இந்த அரசர்கள் தேர்தலில் தங்களுடைய ஆட்களை நிறுத்தி, 10 லட்சக்கணக்கான பணங்களை செலவு செய்ய முன்வந்து, அவர்களுக் குதவியாக நமது நாட்டு ஜமீன்தாரர்களையும், மிராசுதாரர்களையும், பார்ப்பனர்களையும், முதலாளிகளையும் சேர்த்துக் கொண்டு, இப்போதைப் போலவே கூலி தேச பக்தர்களைக்கொண்டு, பிரசாரம் செய்யச்செய்தால் எப்படிப்பட்ட பிரதிநிதிகள் வரக்கூடுமென்பதைப் பற்றியும், எப்படிப்பட்ட நிர்வாகம் நடைபெறுமென்பதைப்பற்றியும் நாம் நமது வாசகர்களுக் கெடுத்துக் கூற வேண்டுமா? என்று கேட்கின்றோம்.

உலகம் இயற்கையாகப் போகும் போக்கானது இப்பொழுது எவ் வளவோ முன்னேற்றத்தையும் விடுதலையுணர்ச்சியையும், கண்விழிப் பையும் மக்களுக்குத் தானாக அளித்துக்கொண்டு வருமிந்த சமயத்திலிம் மாதிரி புதிய ஆபத்தொன்று முளைத்து, மக்களை இன்னும் அடிமைப் படுத்தத்தக்க நிலைமையேற்பட்டிருப்பதானது, அதுவும் "பூரண விடுதலை" யின் பேராலும் "சுயராஜ்யத்தின்" பேராலும் யேற்பட்டிருப்பது மிகவும் துக்கப்படத்தக்க விஷயமேயாகும் என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 12.07.1931**





RangaRakes tamilnavarasam.com

# அதிசயச்சாமியாரும், நம் பாமர மக்களும்

## நமக்கேன் சுயராஜியம்?

சகோதரர்களே!

இராமநாதபுரத்திற்கடுத்த சுமார் 15-மைலுக்கப்பால் திருப்பாலைக்குடி என்னும் ஊரில் ஓர் சாமியார் இருக்கின்றார். அவர் மகமதிய சாமியாராம். அவர் வெளிவந்து நான்கு மாதம் ஆயிற்றாம். அதற்கு மூன்று மாதங்களுக்கு முன் அவர் பூமிக்குள் உயிருடன் புதைக்கப்பட்டாராம். 3-மாத காலமாய் உள்ளேயே இருந்து பின் வெளிவந்து அந்த திருப்பாலைக் குடிக்குச் சென்று அங்குள்ள ஓர் வரண்ட குளத்தில்போய் அவர் கைவைத்த மாத்திரத்தில் தண்ணீர்பெருகிவிட்டதாம். அவரிடம் வரம் கேட்க போகின்றவர்களுக்கு அந்த குளத்துத் தண்ணீரை எடுத்துவரச்சொல்லி கொடுக்கின்றாறாம். அதைச்சாப்பிட்ட மாத்திரத்தில் சகல நோய்களும் ரோகங்களும் நிவர்த்தி யாகின்றதாம். ஆஹா!என்னே ஆச்சரியம்! இவ் விருபதாம் நூற்றாண்டில் கடவுள் என்ற ஒன்று அரூபி என்று சொல்லு வதற்கும் ஆதாரமில்லாமல் தத்தளிக்கும் பொழுது ஒரு மனிதன் மேற் சொன்ன கடவுளும் செய்யொணாத காரியங்கள் செய்வதென்றால், பகுத் தறிவுள்ள எவரும் நம்ப ஹேது வுண்டா?

நிற்க, இன்னுமோர் அதிசயமாம். குழந்தையில்லாதவர்களுக்கு அந்தக் குளத்துத் தண்ணீரைச் சாப்பிட்டமாத்திரத்தில் கெர்ப்பம் உற்பத்தி யாகின்றதாம்!.

முன்தேவர்களுடைய கலிதமான இந்திரியத்தைச் சாப்பிட்டபின்னா வது குழந்தைகளோ மிருகங்களோ உற்பத்தியானதாகப் புராணங்கள் சொல்லுகின்றன. இப்பொழுதோ குளத்துத் தண்ணீரைக்குடித்த மாத்திரத்தில் குழந்தை உற்பத்தியாகின்றதென்றால், என்போன்ற சகோதர ஆண்பிள்ளை களுக்கு இனி அந்த சம்மந்தப்பட்ட வேலையில்லை என்றே நினைக் கின்றேன்.



இருந்தாலும் குழந்தை பெரும்வழி இலேசானதாக இருந்தாலும் கர்ப்பத்தடை அவசியம் என்பதை சகோதரர்கள் அறிவார்கள் என்று நம்புகின்றேன்.

இந்த சாமியாரிடம் வரங்கேட்க நூறு மைல் சுற்றுப்புறமிருந்து நம் இந்து சகோதர சகோதரிகள் பதினாயிரக்கணக்காக வந்து குவிந்து ஒரு செம்பு தண்ணீர் கொண்டு போகின்றார்கள். செலவோ:- ரயில் சார்ஜ், கார் சார்ஜ், வண்டி சார்ஜ், சாப்பாட்டுச்செலவு, சாமியார் தக்ஷணை, சிப்பந்திகள் பிடுங்கள் வகைகளில் லக்ஷக்கணக்காக விரயமாகின்றது. கூடிய சீக்கிரம் அவ்வூரில் ஜனநெருக்கமிகுதியால் காலரா போன்ற வியாதிகள் கண்டிப் பாய் வரும் போலிருக்கின்றபடியால் சுகாதார உத்தியோகஸ்தர்கள் அதை உடனே நிவர்த்தி செய்ய வேண்டுமாயும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளு கின்றேன்.

நம் இந்தியர்கள் இந்த அற்ப விஷயத்தில் பகுத்தறிவைச்செலுத்த அசக்தர்களாயிருக்கையில் சுயராஜியபாரத்தைத் தாங்குவதற்கு அருகதை யுள்ளவர்களா என்பதைச்சற்று யோசித்துப்பார்த்தால் பள்ளிப்பிள்ளைகளும் நகைப்பார்களென்றால், கனம் மிஸ் மேயோ போன்றவர்கள் நமக்கு புத்தி புகட்டுவதில் நாம் அவர்களை குற்றம் சொல்லுவது பொறாமையும் ரோஷ மின்மையுமல்லவா! ஆதலால் சகோதரர்களே! சகோதரிகளே!இம்மூன்று மாதங்களும் உங்களுடைய உடல், பொருள், ஆவி ஆகியவைகளை வீண் விரயம் செய்தது போதும் போதும்!! இனியாவது நம் யேழைப் பாமர மக்க ளுக்கும், நம் உடன் சகோதரர்களான தாழ்த்தப்படுத்தி வைத்திருப்பவர் களுக்கும் உதவிபுரியும் வண்ணமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளு கின்றேன்.

**குடி அரசு - கட்டுரை - 12.07.1931**



RangaRakes tamilnavarasam.com

# விருதுநகர் விருந்து

கனவான்களே!

திரு.வி.வி.இராமசாமி அவர்கள் சுயமரியாதைக்காரர்கள் தேவஸ் தானக் கமிட்டிக்குப் போகலாமா எனக்கேட்பது ஒரு நல்ல கேள்வியே யாகும்.

நான் சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டு 4,5 வருஷம் தேவஸ்தானக் கமிட்டியில் பிரசிடெண்டாகவும், வைஸ் பிரசிடெண்டாகவும் இருந்தேன். தேவஸ்தான செல்வங்களை பொது நலத்திற்குப் பயன்படும்படி செய்யக் கூடுமானால் அது நல்ல வேலைதான். அங்கு போக வேண்டியதும் அவசியந் தான் என்று கருதியே அங்கு இருந்தேன். இந்த எண்ணத்தின் மீதே தேவஸ் தான சட்டத்தையும் ஆதரித்தேன். ஆனால் அவை சரியான பலனைக் கொடுக்கவில்லை.

ஆகவே நான் இராஜிநாமாச் செய்தேன். எனது சகபாடிகள் எனது இராஜினாமாவை ஒப்பாமல் எனது அபிப்பிராயத்தை ஆதரிப்பதாயும் ஆனால் பொது ஜனங்கள் அபிப்பிராயம் விரோதமென்றும் சொன்னார்கள். ஆனாலும் நான் வேறு வேலையில் இந்த கவனம் செலுத்தலாம் என்று ஒதுங்கிக் கொண்டேன். தகுந்த சகபாடிகள் இருந்தால் அதை நல்வழிப் படுத்தலாம் என்பதும் ஒரு அளவுக்கு உண்மைதான். இராமனாதபுரம் தேவஸ்தானக் கமிட்டி பிரசிடெண்ட் திரு. இராமச்சந்திரன் அவர்கள் நல்ல முயற்சிகள் எடுத்து இருக்கிறார். அது கைகூடுதவற்கு நமது இராமசாமி போன்றவர்கள் உதவி மிக நல்லதாகும். வெறும் சாமி பூஜைகளையும், உற்சவங்களையும் நடத்திக் கொடுப்பதற்குச் சுயமரியாதைக்காரர் அங்கு போவது அவசியமற்ற காரியமாகும்.

ஆதலால் கோவில்களின் பேரால் இருக்கும் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கவும் கோவில்களின் பேராலுள்ள செல்வங்களெல்லாம் மக்கள் நலத் திற்கு உதவவும் வேலை செய்யவேண்டியது முக்கிய அவசியமாகும். அந்தப் பணங்களில் நமக்குச் சம்பந்தமில்லை என்று நாம் சும்மா இருந்து விட்டால் அவர்களுக்கு நன்மையேயொழிய நட்டம் ஒன்றும் இல்லை.



ஆகையால் இந்தவித அபிப்பிராயமுள்ள திரு. இராமசாமியைத் தெரிந்தெடுத்தவர்களும் இதே அபிப்பிராயத்தோடுதான் தெரிந்தெடுத்திருப் பார்கள். ஏனென்றால் திரு.வி.வி.இராமசாமி அபிப்பிராயம் யாரும் தெரிந்ததேயாகும். ஆதலால் அப்படிப்பட்டவர்களின் விருப்பத்திற்கு இணங்கிய திரு.இராமசாமி தனது கடமையைச் செய்வார் என்பதில் சந்தேக மில்லை.

இதுபோலவே கல்வி இலாகாவுக்கும் திரு. கந்தநாடார் பி.ஏ.பி.எல்., அவர்களைத் தெரிந்தெடுக்கப்பட்டது நமக்கு இலாபமேயாகும். கல்வி இலாகா பார்ப்பனீயமயமாய் இருக்கின்றது. கல்வி வருணாச்சிரமக் கல்வி யாய் இருக்கின்றது. பாடப் புத்தகங்கள் புராணப் புத்தகங்களாக இருக் கின்றது. இத்துறையில் புகுந்து அவற்றைப் பகுத்தறிவுக்குப் பயன்படும்படி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இன்று இந்தியாவின் இழி நிலைமைக்கு மதமும், கல்வியுமேயாகும். பழையகால கல்வியை சங்கத்தின் மூலம் அடக்கி வைத்து பார்ப்பனீயத் திற்கு எதிரான எதற்கும் இடம் இல்லாமல் செய்து விட்டார்கள். புஸ்தகங் களை அறங்கேற்றுவது என்பதே கட்டுப்பாடுயாகும் என்பது தான் அருத் தம். இப்போதைய யூனிவர்சிட்டி என்பது அக்கால சங்கமாகவும், அறங் கேற்றுவது டெக்ஸ்ட்புக் கமிட்டியில் பாசாக வேண்டியதாகவுமே இருக் கின்றது.

அந்தக் கமிட்டியில் மதம் இல்லாதவர்களும், கடவுள் பைத்தியம் இல்லாதவர்களுமான பகுத்தறிவாளர்கள் இருக்க வேண்டும். நமது யூனிவர் சிட்டிப் படிப்பு மூடநம்பிக்கையைப் பலப்படுத்துவதாகும். இதிலிருந்து யாரும் அறிவு பெற்றுவிட முடியாது. வேண்டுமானால் கிராமபோன் ஆக லாம். ஆதலால் அத்துறைகளில் சுயமரியாதைக்காரர்கள் புகுந்து முதலா வது உபாத்தியாயர்களை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படி நியமிக்க வேண்டும். உபாத்தியாயர்களுக்கு நல்ல படிப்பு கொடுக்க வேண்டும். அறிவுக்கு ஆதாரமான புஸ்தகங்கள் பிள்ளைகளுக்குக் கொடுபட வேண் டும். இது முதலிய காரியங்கள் கல்வித்துறையில் செய்ய வேண்டி யிருப்பதால் அதற்கேற்றவர்கள் போக நேருவது நன்மையே யாகும்.

ஆதலால் நீங்கள் இந்தக் கருத்தின் மீதே தெரிந்தெடுத்துப் போற்று கின்றீர்கள் என்று நினைக்கின்றேன்.

*குறிப்பு : 06.07.1931 ஆம் நாள் விருதுநகர் காஸ்மாபாலிட்டன் கிளப்பில் திரு. கந்தநாடார் அவர்கள் கல்விச்சங்க உறுப்பினராகவும் திரு. வி.வி.இராமசாமி அவர்கள் தேவஸ்தானக்கமிட்டி உறுப்பினராகவும் பொறுப்பேற்றதற்கு நடைபெற்ற பாராட்டுவிழா விருந்தில் தலைமையேற்று ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 19.07.1931**



RangaRakes tamilnavarasam.com

# இன்னுமென்ன சந்தேகம்?

## "பிராமணா! உன் வாக்குப் பலித்தது!"

ஒரு பார்ப்பனன் தன் பெண் ஜாதியின் நடத்தையில் சந்தேகங் கொண்டு அடிக்கடி அந்தம்மாளை "விபசாரி, விபசாரி" என்று கூறிக் கொண்டே வந்தான்.

ஆனால் அந்தம்மாள் தன் புருஷனின் சந்தேகத்திற்கிடமான காரியங்களுக்கெல்லாம் அவ்வப்போது பல சாக்குப் போக்குகள் சொல்லி புருஷனை அடக்கிக்கொண்டே வந்தாள்.

இப்படி இருக்கையில், அந்த பார்ப்பான் தன் மனைவி அன்னிய புருஷனிடம் சம்பந்தப்பட்டுக் கொண்டிருக்கையில் ஒரு நாள் கைப் பிடியாய் பிடித்துவிட்டான். அப்பொழுது அந்த அம்மாள் வேறு எவ்வித சாக்குப்போக்கும், சமாதானமும் சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாமல் போய்விட்டதால் "பிராமணா! உன் வாக்குப் பலித்து விட்டது!! அதற்கு நான் என்ன செய்யட்டும்?"என்று பதில் சொல்லி மறுபடியும் புருஷன் மீதே குற்றத்தைச் சுமத்தினாள்.

அதாவது, புருஷனைப் பார்த்து "நீ அடிக்கடி என்னை விபசாரி, விபசாரிஎன்று உன் வாயால் சொல்லிக்கொண்டே வந்ததாலல்லவா (பிராமணன் வாக்கு பொய்க்காது, அது எப்படியும் பலித்துவிடும்) என்று சாஸ்திரங்களில் சொல்லி இருக்கின்றபடி நீர் பரிசுத்தமான பிராமணரான தால் உமது வாக்குப் பலித்துவிட்டது. உமது வாக்குப் பலிப்பதற்காகவே இந்தப்படி கடவுள் செயலால் ஏற்பட்டு விட்டது. அதற்கு நான் என்ன செய் வேன்? நீர் ஏன் என்னை அப்படிச் சொன்னீர்?" என்பதாகச் சொன்னாளாம்!

அதேபோல் காங்கிரஸ் காரியக்கமிட்டியும், திரு காந்தியும் சேர்ந்து 12-7-31 ல் செய்த பிரஜா உரிமை தீர்மானமானது நாம் காங்கிரசையும் அதன் தலைவர்கள் என்பவர்களையும் பற்றி, அவர்கள் எப்படிப்பட்ட அபிப் பிராயக்காரர்கள் என்று குற்றம் சொல்லி வந்தோமோ, அதே அபிப்பிராயம் இனி வேறு யாரும் வேறு எவ்வித வியாக்கியானமும், தத்துவார்த்தமும்



செய்ய முடியாதபடி நன்றாய் வெளிப்படையாய் அழுத்தந்திருத்தமாய் சொல்லப்பட்டு விட்டது.

அது என்ன வென்றால்,

அரசியல் சட்டத்தில் ஜனங்களுடைய ஜீவாதாரமான உரிமை என்பது பற்றிய, விதிப்பிரிவுகளில் "இந்தியாவில் உள்ள சகல சமூகத்தாருக் கும், "அவர்களது கலைகள், சமூக நாகரீகங்கள், பாஷைகள், எழுத்துக்கள், தொழில்கள், பழக்கவழக்கங்கள், மதம், மத தர்மங்கள் ஆகியவை காப்பாற் றப்படும்" என்பதாக ஒரு உத்திரவாதம் அதாவது ஜாமீன் கொடுக்கப்படும் என்கின்ற நிபந்தனையும் சேர்க்கப்படும் என்பதாகத் தீர்மானித்திருக் கின்றார்கள். மற்றும், "ஒவ்வொரு சமூக உரிமைகளைப்பற்றிய சட்டங்களும் காக்கப்படும்"என்பதாகவும் "ஒவ்வொரு மாகாணங்களிலுள்ள சிறு பான்மை வகுப்புகளின் உரிமைகளின் அரசியல் உரிமை, மற்றும் இதர உரிமைகள் ஆகியவை காப்பாற்றப்படும் நிபந்தனையானது அரசாங்கத் தின் ஆதிக்கத்திற்குள் இருக்கும்" என்பதாகவும் தீர்மானித்து இருக்கின் றார்கள். இது அசோசியேட் பிரஸ் சேதியாகும்.

மற்றும் 13-ந்தேதி வெளியான எல்லாத் தினசரிகளிலும் காணப் படுவதுமாகும்.

அன்றியும், இத்தீர்மானங்களை ஆங்கிலத்தில் உள்ளபடியே மற் றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டு மிருக்கின்றன. ஆகவே, வாசகர்களுக்கு இவ் விஷயத்தில் இன்னுமென்ன சந்தேகம் இருக்கக் கூடும்? என்பது நமக்கு விளங்கவில்லை.

"கராச்சிக் காங்கிரசில் சமதர்மக் கொள்கை ஏற்பட்டு விட்டது" என்று வாய்த் தப்பட்டை அடித்ததெல்லாம் சுத்த "ஹம்பக்" என்பதாகவோ, அல்லது அது அதனுடைய உண்மை அர்த்தத்தை அறிந்துகொள்ள முடியாத மக்களின் கூற்று என்பதாகவோ இப்போது யாவருக்கும் நன்றாய் விளங்கி இருக்குமென்றே கருதுகின்றோம். ஏனெனில், ஒவ்வொரு வகுப்பாருடைய, அதாவது இந்தியாவில் எத்தனை சமயத்தார், வகுப்பார் உண்டோ அத்தனை வகுப்பாருடைய உரிமைகளையும் பொருத்த கலை ஆதாரங்கள், அதாவது வேதசாஸ்திர புராணங்கள், அவர்களது பாஷைகள், பாஷை எழுத்துக்கள், வகுப்பு கல்விகள், வகுப்பு தொழில்கள், அந்தந்த வகுப்பு பழக்க வழக்கத்தில் இருந்துவரும் நடவடிக்கைகள், ஒவ்வொரு வகுப்பாருடைய மதங்கள், அதாவது சமயம், உட்சமயம், புறச்சமயம், அந்தந்த மததர்மங்கள், அதாவது கோவில், கோவில்சொத்து, மடம், மடங் களின் சொத்துக்கள், மததர்மமான மற்ற காரியங்கள் செய்வதற்கு விடப் பட்டிருக்கும் தர்ம சொத்துக்கள் ஆகியவைகள் எல்லாம் காக்கப்படும் என்பதாக காங்கிரஸ் உறுதிகூறி இருப்பதோடு உத்திரவாதமுமேற்றுக் கொண்டிருக்கின்றது.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே, இது சமதர்மக் கொள்கையாகுமா? அல்லது சுயமரியாதைக் கொள்கையாகுமா? அல்லது நவஜவான் பாரதசபைக் கொள்கையாகுமா? அல்லது போல்ஸ்விக் கொள்கையாகுமா? என்பதை நம்நாட்டு வாலிபர்களை யோசித்துப் பார்க்கும்படி விரும்புகின்றோம். இந்த மாதிரியான சுயராஜியம் ஏற்படுவதற்காக வெள்ளைக்காரன் இருக்கும் அரசியல் அதிகாரத்தைப் பறித்து இந்த மாதிரிஉத்திரவாதம் ஏற்றுக்கொண்ட காங்கிரசுக் காரரிடமும் "மகாத்மா" இடமும் திரு ஜவஹர்லால் இடமும் ஒப்படைக்கலாமா? என்று நிதானமாய் யோசித்துப் பாருங்கள் என்று மறுபடியும் நினைப்பூட்டுகின்றோம். மற்றும் பார்ப்பனரல்லாத காங்கிரஸ் பக்தர்களே!இந்த உத்திரவாதமானது காரியக்கமிட்டிக்கு உயர்திருவாளர்கள் சி.ராஜகோபாலாச்சாரியார், பண்டித மாளவியா ஆகிய "பிராம்மணோத் தமர்"களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது என்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பதையும் உணருங்கள் என்றே சொல்லுகின்றோம். உலகில் வயிறு வளர்ப்பதேதான் பிரதானமான காரியம் என்று கருதி இருப்போமேயானால், மனித உருவாய் பிறந்ததற்கு வருத்தப்பட வேண்டியது தான் என்பதே நமது அபிப்பிராயம். மற்றபடி சுயமரியாதையே பிரதானமானது என்று கருதுகின்றவர்களுக்குத் தான் மனிதனாய்ப் பிறந்ததைப்பற்றி சில சமயங்களிலாவது மகிழ்ச்சி யடைய இடமுண்டு என்று சொல்லலாம். நிற்க,

பம்பாய் காரியக்கமிட்டியின் உத்தரவாத தீர்மானத்தைக்கொண்டு காங்கிரசின் உண்மையான தன்மையை ஒரு வரியில் கூறவேண்டுமானால் "காங்கிரஸ் என்பது சுயமரியாதைக் கொள்கைக்கு நேர்மாறான முரண்பட்ட ஸ்தாபனம்" என்று சொல்லுவதை விட வேறு என்ன சொல்ல முடியும்? என்று அறிவும், நாணையமும், மானமும் உள்ள மக்களை யோசித்துப்பார்க்கும்படி வேண்டுகின்றோம். நிற்க,

காரியக்கமிட்டியின் இந்த உத்திரவாத தீர்மானத்தைப்பற்றி தேசியப் பத்திரிகை என்று சொல்லிக்கொண்டு இருக்கும் "தமிழ்நாடு" பத்திரிகை 13 உ தனது உபதலையங்கத்தில் எழுதி இருப்பதையும் இந்தச்சமயத்தில் குறிப்பிடுகின்றோம். இந்த உப தலையங்கத்தின் ஒவ்வொரு எழுத்தும் வெகு நடுக்கத்துடன் எழுதப்பட்டிருந்தாலும் கூட அதில் உண்மை ஒருவாறு வெளியாகியே விட்டது.

அதாவது:-

> "இந்திய தேசிய காங்கிரசுக்கு தலைகுனியும்படியான காலம் வந்ததைக் குறித்து நாம் மிகவும் துக்கப்படுகின்றோம்".
>
> "காங்கிரசின் தேசீய லக்ஷியம் இப்போது பின்னடையும்படி நேர்ந்து விட்டது".



> "பிரதி வகுப்பாரின் பாஷை, எழுத்து, கல்வி, ஆசார அனுஷ்டானம், மதம், தர்ம சொத்துக்கள் ஆகிய விஷயங்களுக்குத் தக்க பாதுகாப்பளிப்பதாக (காங்கிரஸ்) காரியக்கமிட்டி கூறுவதின் கருத்து நமக்கு விளங்கவில்லை".
>
> "மற்ற மக்களுடைய பிரஜா உரிமை, சுயமரியாதை, மனிதத் தன்மை ஆகியவற்றிற்குப் பங்கம் விளைவிக்காத வரையில் பிரதி மனிதனுடைய மதம், ஆச்சாரம், அனுஷ்டானம் பாதுகாக்கப்படும் என்று காரியக்கமிட்டி கூறி இருந்தால் அதன் பொருள் தெளிவாக ஏற்பட்டிருக்கும்" இந்தியாவின் சமதருமத்தை நிலைநிறுத்துவதற்கு காரியக்கமிட்டியின் முடிவு முட்டுக்கட்டையாக அமையுமென்று அஞ்சுகின்றோம்".

என்பதாகக் குறிப்பிட்டு இருக்கின்றது.

இவை எப்படி இருந்தபோதிலும் "இன்றையதினம் இந்த நாட்டில் இருந்துவரும் ஜாதிமத பேதங்களும், ஆச்சார அனுஷ்டானங்களும், மதங்களும், மத தர்ம சொத்துக்களும் காப்பாற்றுவதற்காக நமக்கு சுயராஜியம் வேண்டும் என்ற கருத்தின் மீது தான் இன்றைய "தேசீயக் கிளர்ச்சி" நம் நாட்டில் நடைபெற்று வருகின்றது என்று சொன்னவர்களின் வார்த்தைகளில் எந்த எழுத்தாவது தப்பிதமானது என்று இதிலிருந்து யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம்.

அன்றியும், காங்கிரஸ் கூட்டத்தில் இத்தனை காலம் பிரஸ்தாபிக்கப் படாத ஒரு புதிய விஷயமும் இந்த ஜவாப்தாரிதீர்மானத்தில் சேர்க்கப்பட்டு விட்டது கவனிக்கத்தக்கதாகும். அதாவது பழக்க வழக்கம், தொழில், மத தர்ம சொத்துக்கள் ஆகியவைகளும் காப்பாற்றப்படும் என்பதோடு, அதற்கு ஜவாப்தாரித்தனமும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதாகும்.

ஆகவே, இனிமேல் இந்தியாவைக் காங்கிரஸ் பார்ப்பனீய சுயராஜியமாக்க இனிசெய்ய வேண்டிய வேலை எது பாக்கி? என்பதாக நமக்கு விளங்கவில்லை. இவற்றையெல்லாம் யோசித்துப் பார்த்தால், காங்கிரசும், காந்தி கோஷ்டியும் இப்பொழுது உலகத்தில் ஏற்பட்டிருக்கும் சமதர்ம-பொதுவுடைமை உணர்ச்சியை அழிக்க பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு சேர்ந்து கொண்டு பாமர மக்களுக்குச் செய்யும் சதியும், துரோகமும் அல்லவா என்று யோசித்துப் பார்க்கும்படி பொது மக்களை வேண்டிக் கொள்ளுகின்றோம். இந்த உண்மையை உணர்ந்துதானே ருஷிய சமதர்மக்காரர்கள் "காங்கிரஸ் பொது ஜனங்களுக்கு துரோகமான"தென்றும், "காந்தி பொதுஜன துரோகி" யென்றும் தைரியமாய்ப் பிரசாரம் செய்து வருகின்றார்கள். அன்றியும் மாஸ்கோவில் இருந்து வந்த சேதி ஒன்று "தமிழ்நாடு" வில் பிரசுரித்திருக் கின்றபடி "ருஷியாவில் "இந்தியா"



RangaRakes tamilnavarasam.com

என்பதாக ஒரு நாடகம் ஆடடப்படுவதாகவும், அதில் பிரிட்டிஷ் ஆட்சி கொடுங்கோண்மையானதென்றும், காந்தி பொதுஜனங்களை தப்பான வழியில் ஏமாற்றி நடத்திக்கொண்டு போகின்றவர் என்றும் கருத்துவைத்துச் சரித்திரம் எழுதி நாடகம் நடைபெறுகின்றதென்பதாக குறிப்பிடப்பட்டி ருக்கின்றது.

இவற்றை யெல்லாம் பார்த்த பிறகும், நன்றாய் உணர்ந்த பிறகும், இனியும் சுயமரியாதைக்காரர்கள் காங்கிரசைப்பற்றி சிறிதுகூட தாட்சண்யம் பார்க்கவேண்டியதில்லை என்பதாகவும், அது ஒரு பெரிய ஜன சமூகத் துரோக சபையாகவும், தாழ்த்தப்பட்ட ஏழை மக்களை ஏமாற்றிக் கழுத்தறுக் கும் வஞ்சக சபையாகவும் இருக்கின்ற உண்மையைப் பொது ஜனங்களுக் குப் படும்படி விளக்க வேண்டியதையே முக்கிய கடமையாகக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது என்றும் தெரிவித்துக் கொள்ளு கின்றோம். இந்தக் கடமைக்கு யாரும் பயப்படுவது சிறிதும் மனிதத்தன்மை யாகா தென்றே தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இதற்காக நாம் யாரையும் காங்கிரஸ் கூட்டத்தில் கலகம் செய்யும் படியாகச் சொல்லவில்லை. அது மிகவும் தப்பானதும், பயங்காளித்தன மானதுமான காரியமாகும். ஆதலால் ஒவ்வொரு இடங்களிலும் இதற் கென்றே தனிக்கூட்டம் கூட்டியே பேசவேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லுகின்றோம்.

அப்படிப்பட்ட கூட்டத்தில் காங்கிரசுக்காரர்கள் குழப்பம் செய்தால் அதற்காக யாரும் பின் வாங்க வேண்டியதில்லை. அதன் மூலமாகவே காங் கிரசு என்பது “காலித்தனமும் உடையது”என்பதை ருஜுப்பிக்க ஒரு சந்தர்ப்பம் கூடப் பெறலாம். ஆகையால் அதற்குப் பயப்படவேண்டிய தில்லை. ஆனால், “சுயமரியாதைக்காரர்கள் என்ன செய்து விட்டார்கள்?” என்று கேட்டால், “காங்கிரசின் புரட்டை வெளிப்படுத்திக் கொண்டிருக் கின்றார்கள்” என்று சொல்லிவிடும் பதிலே அதற்குப் போதுமான பதிலாகும்.

ஏனெனில், சுயமரியாதைக் கொள்கைகளுக்கு நேர்மாறான கொள்கைகளேதான் பெரிதும் காங்கிரசில் இருப்பதை மனதார உணர்ந்தும் “சுயமரியாதையும் காங்கிரஸ் கொள்கையும் ஒன்று தான்” என்று சிலர் விஷமப்பிரசாரம் செய்வதால் அதை ஜனங்கள் அறியும்படி செய்வதன் மூலமே சுயமரியாதைக் கொள்கைகளை எடுத்துச் சொல்ல வசதி ஏற்படு கின்றது. எனவே இந்த சமயத்தில் அலட்சியமாய் இருக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொண்டு இதை முடிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 19.07.1931**



# ஈரோடு முனிசிபாலிட்டியும், சென்னை அரசாங்கமும்

## ஈரோடு மகாஜனங்கள் கண்டனம்

ஈரோடு முனிசிபல் டவுனுக்கு எலக்ட்ரிக் விளக்குகள் போடும் விஷயமானது 1922-ம் ஆ முதல் ஈரோடு முனிசிபல் கவுன்சில் ஆலோசனையிலிருந்து வந்ததாகும். 1928 ம் வருஷம் முதல் இவ் விஷய மாய் தீவிரமான முயற்சிகள் எடுக்கப்பட்டு கவர்ன்மெண்டாருடன் கடிதப் போக்குவரவுகள் செய்யப்பட்டு வந்தன. அப்போது மைசூர் கவர்ன் மெண்டார் மேட்டூருக்கு மின்சாரசக்தி சப்ளை செய்துவந்தபடியினால் மேட்டூர் ஹெட்வர்க்ஸ்களிலிருந்தே ஈரோடு முனிசிபாலிட்டிக்கு மின்சார சக்தி கொண்டுவர வேண்டுமென்ற ஈரோடு முனிசிபல் கவுன்சிலின் பிரேரே பனையானது உடனே மதறாஸ் கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டு விட்டது. பிறகு ஈ.மு.கவுன்சில் மைசூர் கவர்ன்மெண்டாருடன் இது விஷயமாய் கடிதபோக்குவரவுகள் செய்து மைசூர் கவர்ன்மெண்டு எலக்டிரிக்கல் இன்ஜினீயரவர்களை சந்தித்துப் பேசி முடிவு செய்யும் பொருட்டு ஈரோடு முனிசிபல் சங்கத்தார் ஒரு கமிட்டியை நியமுகம் செய்தார்கள். அந்தக் கமிட்டியார் மைசூர் கவர்ன்மெண்டுடன் கலந்து பேசிய பிறகு அவ்விஷயம் அனுகூலமாய் முடிவுபெறும் நிலைமையில் இருக்கையில் மதறாஸ் கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் பிரவேசித்ததின் பேரில் திடீரென்று மைசூர் கவர்ன்மெண்டார் மின்சாரசக்தி சப்ளை செய்ய மறுதளித்து விட்டார்கள். பின்பு ஈரோடு கவுன்சில் தாங்களே இயந்திரம் வைத்து மின்சார சக்தியை உற்பத்தி செய்து வினியோகிப்பது நலமெனக் கருதி மெட்றாஸ் மெஸர்ஸ்சாரிஅண்டு சாரிலிமிடெட் கம்பெனியாரிடம் கேட்கத் தீர்மானித்து அவர்களை யோசனை கூறும் இன்ஜினீயர்களாக வைத்துக் கொண்டு இதற்கு வேண்டிய பிளான்களும் எஸ்டிமேட்டுகளும் தயார் செய்யும்படி முனிசிபல் சங்கத்தார் அவர்களுடன் ஏற்பாடு செய் தார்கள். இது கவர்ன்மெண்டாருக்கு தெரிவிக்கப்பட்டதுடன் இந்த வேலை களை செய்து முடிப்பதற்காக ரூ. $2\frac{1}{2}$ லக்ஷம் கடன் கொடுக்கும்படி சர்க்கா ருக்கு விண்ணப்பம் செய்து கொண்டார்கள். அதன்மீது கவர்ன்மெண்டு இடை வருஷத்தில் கடன் கொடுக்கக்கூடிய நிலைமையில் இல்லை என்பதாக தெரிய வந்ததால், கோயம்புத்தூர் டிஸ்திரிக்ட் போர்டாரிடம் கடன்



RangaRakes tamilnavarasam.com

வாங்குவதற்கு கவர்ன்மெண்டார் தங்களது 12.4.29 தேதிய 13546-1 L & M மிமோராண்டத்தின் மூலம் கடன் வாங்கிக்கொள்ள உத்திரவும் அளித் தார்கள். அதன் பேரில் கோயமுத்தூர் டிஸ்திரிக்ட்போர்டாரவர்களை ஈரோடு முனிசிபாலிட்டியார் கடன் கேட்டதில் அவர்கள் வருஷம், 100க்கு 5ரூ. வீதம் வட்டி கொடுத்து 20 வருஷத்தில் கடன் தொகையை திரும்பக் கொடுத்து விடவேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் கடன் கொடுக்க சம்மதித் தார்கள். உடனே 7.5.29ல் இது விஷயம் கவர்ன்மெண்டுக்கு தெரிவிக் கப்பட்டு அவர்களின் அங்கீகாரம் கோரப்பட்டது. இதற்குள் அதோடு கூடவே இதற்கு வேண்டி பிளான்களும் எஸ்டிமேட்டுகளும் சங்கத்தாரின் எலக்ட்ரிக்கல் இன்ஜினீயர்களால் தயாரிக்கப்பட்டு பிளான் எஸ்டிமேட்டு டன் லைஸென்சுக்காக ஒரு அப்ளிகேஷனும் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்பட்டது. இதன்பேரில் இரண்டுமாதம் பொறுத்து "முனிசிபாலிட்டி யாருக்காவது அல்லது வேறு யாதாமொரு கம்பெனிக்காவது லைஸென்ஸ் கொடுத்து மின்சார சக்தியை ஈரோட்டிற்கு கொண்டு வந்து சில்லரையில் செலவு செய்யும் விஷயம் ஆலோசனையிலிருந்து கொண்டிருப்பதாய் ஹைட்ரோ எலக்ட்ரிக் சீப் இன்ஜினீயரிடமிருந்து தமக்குத் தகவல் வந்திருப்பதாயும் அதனால் ஈரோடு கவுன்சில் அனுப்பி வைத்த பிளானும் எஸ்டிமேட்டும் பரிசீலனை செய்வதை நிறுத்தி வைத்திருக்கிறது" என்று கவர்ன்மெண்டு எலக்டரிக் இன்ஸ்பெக்டரிடமிருந்து 9.9.29 ல் ஒரு கடிதம் வந்தது.

விஷயம் இப்படியாக இருக்கையில் கல்கத்தா ஆக்ட்டேவியஸ் ஸ்டீல் கம்பெனியார் என்கிற ஒரு வெள்ளைக்காரரிடமிருந்து தாங்கள் ஈரோட்டுக்கும் சேலத்திற்கும் மின்சாரசக்தி சப்ளை செய்ய கவர்ன்மெண் டுக்கு அப்ளி கேஷன் செய்திருப்பதாயும் தங்கள் அப்ளிகேஷனை ஈரோடு முனிசிபல் சங்கத்தார் ஆதரிக்கவேணுமாயும் கோரிஒரு லெட்டர் வந்தது. உடனே முனிசிபல் கவுன்சில் தங்கள் கவுன்சிலுக்கு இல்லாமல் மற்ற அன்னியர்களுக்கு கவர்ன்மெண்ட் லைஸென்ஸ் கொடுக்கக்கூடாதென்று கவுன்சில் தீர்மானித்து தங்களுடைய ஆக்ஷேபனையை மதராஸ் கவர்ன் மெண்டாருக்கும் ஆக்ட்டேவியஸ் கம்பெனியாருக்கும் அனுப்பி விட்டார் கள். இது இப்படி இருக்க முன் அனுப்பிய விண்ணப்பமானது அதாவது கடன் வாங்குவதற்கு அங்கீகாரம் கொடுக்கும் படி கேட்டுக்கொண்ட விஷய மானது கவர்ன்மெண்டாரிடம் அதிகக் காலமாக பைசல் செய்யப்படாம லிருந்து வந்தது கவனிக்கப்பட்டு கவர்ன்மெண்ட்டின் 4.10.29ந் தேதி போட்ட 30983-1- C.L & M நெம்பர் மிமோராண்டத்தில் "கடன் அப்ளிக்கேஷன் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். சேர்மேன் லைசென்சுக்கு அப்ளிகேஷன் செய்ய வேண்டும்" என்று கவர்ன்மெண்டாரால் தெரிவிக்கப்பட்டது.

கவுன்சிலால் லைசென்சுக்கு விண்ணப்பம் செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்து மசோதா லைசென்ஸ் வகையறா அச்சடிக்கப்பட்டது.



அதோடுகூடவே தீவிரமாய் வேலை துவக்குவதற்கு வேண்டிய கடிதப் போக்குவரவுகளும் செய்து கொண்டிருக்கையில் மறுபடியும் திடீரென்று கவர்ன்மெண்டார் தாங்களே ஈரோட்டுக்கு மின்சார சக்தி சப்ளை செய்யத் தயாராயிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதன் பேரில் சங்கத்தார் சர்க்காராரே அவ்விதம் மின்சார சக்தி சப்ளை செய்வதாயிருந்தால் தாங்கள் எடுத்துக் கொள்ளுவதாகத் தெரிவித்து விட்டார்கள். என்றாலும், இதற்குள் ளாக கவுன்சிலால் மசோதா லைசென்ஸ் அச்சடிக்கும் விஷயமாயும், பேப்பர்களில் பிரசுரம் செய்யும் விஷயமாயும், இன்னும் லைசென்ஸ் பெறுவதற்கு வேண்டிய முன்நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும் விஷயமாயும் ஏராளமான பணச் செலவு செய்யப்பட்டுவிட்டது.

மெசர்ஸ் சாரி அண்டு சாரி லிமிடெட்டுக்கு பிளான்களும், எஸ்டி மேட்டுகளும் தயார் செய்வதற்கும், மசோதா லைசென்ஸ் அச்சடிப்பதற்கும், மற்றும் இதர செலவுகளும் நீங்கலாக லைசென்ஸ் பீசும் பிரசுரச் செலவும் மாத்திரம் ரூ.1000 ஆகி விட்டது. அப்புறம் கடன் வாங்குவதற்கு அங்கீகாரம் கொடுக்கும் விஷயம் கவர்ன்மெண்டாரால் பைசல் செய்யப்படாமல் ரொம்பகாலம் பாக்கியிலிருந்து கொண்டிருந்தது. கடைசியாக "மேட்டூரி லிருந்து மொத்தமாய் மின்சார சக்தி சப்ளை செய்யும் விஷயம் முடிவாகத் தீர்மானம் செய்யும் வரை கடன் வாங்கும் விஷயம் நிறுத்தி வைக்கப்பட வேண்டு" மென்று 7.2.30ல் 4446ம் நெம்பர் மிமோராண்டத்தின் மூலமாய் கவர்ன்மெண்டாரவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இது ஒரு புறமிருக்க முன் ஹைடிரோ எலக்டிரிக்கல் டிபார்டுமெண்டு சீப் எஞ்சினீயரால் அனுப்பப்பட்ட ஸ்கீமானது 1930 மே மாதத்தில் சாங்கிஷன் செய்யப்பட்டுவிட்டது. ஈரோடு கவுன்சிலர்கள் தங்களுக்கே லைசென்ஸ் கொடுக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டாரை கேட்டுக் கொண்டிருக்கும்போதே தாங்கள் இவ்வித வேலை செய்வதில் மிக்க அனுபவமுள்ளவர்கள் என்றும், கவுன்சில் தீர்மானத்தை புனர்ஆலோசனை செய்யவேண்டு மென்றும், மறுபடியும் வெள்ளைக்கார கம்பெனியாகிய கல்கத்தா மெஸர்ஸ் ஆக்ட்டேவியஸ் ஸ்டீல் கம்பெனியாரிடமிருந்து கவுன்சிலுக்கு ஒரு லெட்டர் வந்தது. கவுன்சிலால் தாங்கள் அவ்விதம் செய்ய முடியாதென்று மறுபடியும் தீர்மானித்து கம்பெனியாருக்குத் தெரிவித்து விட்டார்கள். மறுபடியும் 1930 ஜூன் மாதம் 24-ந்தேதி கூடிய முனிசிபல் சங்கத்தில் ஒரு அயல் கம்பெனிக்கு லைசென்ஸ் கொடுப்பதை ஆட்சேபித்தும், தக்க லாபம் கிடைக்கக்கூடிய ஒரு காரியத்தைச் செய்வதற்குக் கவர்ன்மெண்டார் ஒத்தாசை செய்யவேண்டு மென்றும் தீர்மானங்கள் பாஸ் செய்யப்பட்டன. மின்சார சக்தியை மொத்தத்தில் வாங்கிப் பிரித்துக் கொடுப்பதற்காவது லைசென்ஸ் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்பட்டது. தாங்கள் உடனே மொத்தத்தில் மின்சார சக்தி பெற்றுக் கொள்ள தயாராக இருக்கும் பொருட்டு வேண்டிய வேலைகளை



RangaRakes tamilnavarasam.com

உடனே துவக்க லைசென்ஸ் கொடுக்க வேணுமாய் கவர்ன்மெண்டாரைப் பன்முறையும் கேட்டுக் கொள்ளப் பட்டது. இத்தருவாயில் கடன் கேட்கப்பட்ட தொகையை 1930 செப்டம்பர் மாதத்திற்குள் பெற்றுக் கொள்ளாவிட்டால் 100க்கு $5^1/_2$ வீதம் வட்டி கொடுக்கவேண்டுமென்று கோயமுத்தூர் ஜில்லா போர்டார் தெரிவித்தார்கள். இதை உடனே கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக் குறைந்த வட்டிக்குப் பணம் கிடைக்கும் வீதம் உடனே கடன் வாங்கிக் கொள்ளும்படி சாங்கிஷன் கொடுக்கவேணுமாய்க் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இது விஷயம் ஆலோசனையிலிருப்பதாக 15-2-30ல் கவர்ன்மெண்டார் தெரிவித்தார்கள். திரும்பவும் உடனே கவுன்சிலுக்கே லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்றும் அவ்விதம் கொடுக்காவிட்டால் கவுன்சிலுக்குப் பலவிதமான வகையில் பொருள் நஷ்டமும், கஷ்டமும் ஏற்படுமென்றும் கவர்ன்மெண்டாருக்கு விபரமாக எழுதப்பட்டது.

இவ்வளவு செய்தும் சென்னை அரசாங்கமானது பொது ஜன அபிப்பிராயத்தை லட்சியம் செய்யாமலும் கவுன்சிலர் வேண்டுகோளைச் சிறிதும் கவனிக்காமலும் “கல்கத்தா கம்பெனியார் மிகுந்த அனுபோக சாலிகள். சரியாய் நடத்துவார்கள் என கவர்ன்மெண்டார் கருதுகிறார்கள்” எனக்குறிப்பிட்டு விட்டு கல்கத்தா மெஸர்ஸ் ஆக்ட்டேவியஸ் ஸ்டீல் கம்பெனியாருக்கு லைசென்சு கொடுத்துவிட்டதாக 11-12-30-ந் தேதி போட்ட 11034 / E 30-7 உத்திரவு கிடைத்தது.

எனவே மேல்கண்ட இந்த விஷயங்கள் தான் ஈரோடு முனிசிபாலிட்டியின் மின்சாரத்திட்ட விஷயமான வெளிப்படையான சரித்திரமாகும். (இனி இரகசியமான சரித்திரங்கள் பல உண்டு. அவற்றை பகிஷ்கார காலத்தில் வெளியிடுவோம்.)

ஆகவே, இதை அதாவது இந்த வெளிப்படையான சரித்திரத்தையே கவனித்து பார்ப்போமானால் சென்னை அரசாங்கமானது இவ்விஷயத்தில் எவ்வளவு பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டிருக்கின்றது என்பது விளங்கும். நாம் சென்னை அரசாங்கம் என்று சொல்லுவதானாலும் சென்னை அரசாங்கத்தில் இந்த இலாகாவுக்கு தலைவர்களாயிருப்பவர்கள் இந்திய கனவான்களேயாகும். ஒருவர் ஆந்திர தேசத்து ஜனப் பிரதிநிதி மந்திரி யாவார். மற்றவர் கேரள தேசத்தவராயிருந்தாலும் சர்க்கார் உத்தியோகஸ்தர் என்பதாகச் சொல்லக்கூடுமானாலும் சர்க்காருக்கேப் பொறுப்பானவர் என்று சொல்வதானாலும் அந்த ஸ்தானமும் ஜனப்பிரதிநிதிகளுக்கு என்று ஒதுக்கி வைத்த ஸ்தானமேயாகும்.

ஆகவே ஸ்தலஸ்தாபன இலாகா மந்திரியும், சட்ட மெம்பரும் என்ற இரு இந்திய கனவான்கள் ஆதிக்கத்தில் உள்ள இந்த ஈரோடு மின்சாரதிட்ட



காரியமானது இந்த நாட்டு ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அனுகூலமாயில்லாமல் அதற்கு விரோதமாக ஒரு வெள்ளைக்காரருடைய நன்மைக்கு பயன்படும்படி நடந்து கொண்ட விஷயத்தை கண்டிக்காமலிருக்க முடியவில்லை.

அன்றியும், ஈரோடு பொதுஜனங்கள் பொதுக்கூட்டம் கூடி அரசாங்கத்தைக் கண்டித்தும் செய்த தீர்மானத்தை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்க வேண்டியவர்களாகவே இருக்கின்றோம். சென்னை அரசாங்க சட்டசபை அங்கத்தினர்கள் உண்மையான ஜனப்பிரதி நிதிகளாயிருப்பார்களேயானால் கண்டிப்பாய் இந்த அரசாங்கத்தின் மீதோ அல்லது இதற்கு ஆஸ்பதமாயிருந்த அதிகாரிகள் மீதோ கண்டனத்தீர்மானம் நிறைவேற்றியேயிருக்க வேண்டியவர்களாவார்கள். என்ன செய்வது! பாவம்!! ஒவ்வொரு ஜனப்பிரதிநிதி என்பவர்களும் வேறு எவ்வளவோ காரியத்தை உத்தேசித்து பெரும் பெரும் தொகைகள் செலவு செய்து ஜனப்பிரதிநிதிகளாயில்லாமல் பணப் பிரதிநிதிகளாகவும் தங்கள் தங்கள் சுயநலப்பிரதிநிதிகளாகவும் சென்று இருப்பவர்கள் இம்மாதிரி காரியத்திற்காக எப்படி தங்கள் பிரதிநிதித்துவ உரிமையை செலவழிக்க முடியும்?

ஆகையால்தான் ஈரோடு மகாஜனங்கள் அரசாங்கத்தையும், அரசாங்க இந்திய மெம்பரையும் ஜனப்பிரதிநிதி மந்திரியையும், ஜனப்பிரதிநிதி சட்டசபை அங்கத்தினர்களையும் நம்பாமல் ஈரோடு மகாஜனங்களாகிய தங்களையே நம்பி தீர்மானம் செய்து கொண்டிருக்கிறார்கள். இனி ஈரோடு மகாஜனங்களும் இந்திய மக்களேயாதலால் இந்திய பொதுமக்கள் என்பவர்கள் மற்ற காரியங்களில் நடந்து கொள்வது போலவேதான் அல்லது அவர்களது வழிகாட்டிகள் என்பவர்களும் பிரமுகர்கள் என்பவர்களும் நடந்து கொள்வது போலவேதான் நடந்து கொள்ளுவார்களோ அல்லது தங்கள் சுயமரியாதையையும் சுதந்திரத்தையும் உத்தேசித்து தீர்மானம் செய்தபடி நடந்து கொள்ளுவார்களோ என்பது பலர் சந்தேகிக்கக் கூடியதானாலும் நமக்கு இவ்விஷயத்தில் இவ்வூர் பொதுமக்களிடமும் சிறப்பாக பிரமுகர்களிடமும் பூரண நம்பிக்கை இருக்கின்றதென்றே சொல்லுவோம்.

ஏனெனில், தங்களையே நம்பிய ஜனங்கள் தங்களாலேயே நம்பிக்கைத் துரோகம் அடைய அருகதை ஆகிவிட்டால் மற்றபடி அன்னியர்களை நம்பினவர்கள் நம்பிக்கை மோசமடைவது அதிசயமல்ல. ஆகையால், எந்தக் காரணம் கொண்டும் இந்த அரசாங்கமும் ஜனப்பிரநிதிகளும் அனியாயத்திற்கும், கொடுமைக்கும், நம்பிக்கை துரோகத்திற்கும் பரிகாரம் ஏற்படாதவரை தங்களையே நம்பி இருக்கும் ஈரோடு மகாஜனங்கள் கண்டிப்பாய் மின்சார சக்தியை வாங்கி உபயோகித்துக் கொள்ளக்கூடாது என்றும், சர்க்காரார் ஒரு சமயம் முனிசிபாலிட்டியார் மீது ஆதிக்கம்



RangaRakes tamilnavarasam.com

செலுத்தி முனிசிபாலிட்டியாரை கட்டாயப்படுத்தினாலும் ஈரோடு முனிசிபாலிட்டியார் அதற்கு இணங்கி மின்சாரத்தை நமது முனிசிபாலிட்டிக்கு உபயோகித்துக் கொள்ளுவார்களேயானால் கண்டிப்பாய் முன்சிபாலிட்டியுடனும் ஒத்துழைக்கக்கூடாது என்றும் செய்துள்ள தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டு வரச் செய்யவேண்டியது பொதுமக்கள் கடமையாகும்.

மற்றும் ஷை வெள்ளைக்காரக் கம்பெனியார் இதற்காக ஏற்படுத்தி இருக்கும் புதிய கம்பெனியிலும் யாரும் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாது என்பதும் தீர்மானத்தின் ஒரு பாகமாதலால் அதையும் அமுலுக்கு கொண்டு வரவேண்டியது யோக்கியமாகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 19.07.1931**



# காந்தியின் திண்டாட்டம்

உயர்திரு காந்தியவர்கள் லண்டன் மகாநாட்டிற்கு வருவதாக சர்க்காரிடம் உறுதிகொடுத்து ராஜிசெய்து கொண்டதிலிருந்து அவர்பாடு மிகத் திண்டாட்டமாகவேபோய்விட்டது. ஏனெனில் தான் வட்டமேஜை மகாநாட்டிற்கு போனால் என்ன செய்வது என்பது அவருக்கே புரியாததாய் இருக்கின்றதுடன் இவரது அபிப்பிராயத்தை ஆதரிக்க அங்கு போதிய ஆட்கள் கிடைக்குமா என்பதே பெரிய சந்தேகமாகி விட்டது. அரசியல் சுதந்திரத்தை விட சீர்திருத்த அதாவது சமத்துவ சுதந்திர உரிமை ஆகியவை கேட்கும் வேலையே அங்கு தலை சிறந்து விளங்கப் போகின்றது. ஆதலால் திரு காந்திக்கு அங்கு செல்வாக்கு இருக்கமுடியாது. திரு காந்தியை லங்காஷயர் உள்பட அநேக ஊர்காரர்கள் கூப்பிடுவதாயிருந்தாலும் அவர்கள் இவரைப் பார்க்க ஆசைப்படுவார்களே ஒழிய இவர் பேச்சைக் கேட்பவர்களாய் இருக்கமாட்டார்கள் என்பது திண்ணம். இது அவருக்கே தெரியும். ஆதலால் ஏதாவது ஒரு சாக்கைப் போட்டு போகாமல் தப்பித்துக் கொள்ளப்பார்க்கின்றார் என்பதாகவே நாம் கருதுகின்றோம். நம்மைப் பொறுத்தவரை அவர் போவதும் போகாததும் ஒன்றேதான். ஆனால் அவரைப்பொறுத்தவரை அவர்போகாமல் இருப்பதே அவருக்கு நன்று. இது அவருக்கும் தெரியும். ஆதலால் அநேகமாய் அவரும் போகமாட்டார் என்றுதான் கொள்ள வேண்டும்.

**குடி அரசு - கட்டுரை - 19.07.1931**



RangaRakes tamilnavarasam.com

# சுயமரியாதை வீரய்ய செட்டியாருக்கும் சுய ஆக்ஷி சுப்பையருக்கும் சம்பாஷணை

**- சித்திரபுத்திரன்**

**சு.ம.வீரைய்யசெட்டியார்:-** என்ன ஓய்!சு.ஆ. சுப்பைய்யரே நேற்றெல்லாம் சீமை வேட்டி கட்டிக் கொண்டிருந்தீர். இன்று திடீரென்று கதர் வேஷ்டியும், கதர் குல்லாயும், தடபுடலாயிருக்கின்றதே?

**சு.ஆ:- சுப்பையர்:-** ஒன்றும் விசேஷமில்லை. இன்று முதல் காங்கிரசில் சேர்ந்து விட்டேன்.

**சு.ம.வீ:-** அதென்ன திடீரென்று சேர்ந்து விட்டாய் காங்கிரசைப்பற்றி குற்றம் சொல்லிக் கொண்டிருந்தாயே.

**சு.ஆ.சு:-** நான் பி.ஏ. பாஸ் செய்து எத்தனை நாள் ஆச்சுது?

**சு.ம.வீ:-** 3 வருஷ மாச்சுது.

**சு.ஆ.சு:-** உத்தியோகத்திற்கு எத்தனை விண்ணப்பம் போட்டேன் உனக்குத் தெரியாதா?

**சு.ம.வீ:-** ஆம், சுமார் 50, 60 விண்ணப்பம் போட்டாய். அதற்கென்ன இப்போது?

**சு.ஆ.சு:-** ஒரு விண்ணப்பத்திற்காவது பதில் கிடைத்ததா சொல் பார்ப்போம்?

**சு.ம.வீ:-** அது சரி அதற்கு யார் என்ன செய்வார்கள். உத்தியோகம் இருந்தால் தானே கிடைக்கும்.

**சு.ஆ.சு:-** உத்தியோகம் காலியாகவா இல்லை? எனக்குப் பிறகு எஸ்.எஸ்.எல்.சி பாசு பண்ணின அப்துல்ரகிமான், பறக்கருப்பன், ஜோசப்பு, இரங்கசாமி நாயக்கன், இராமசாமி நாடான் இவர்களுக்கு எல்லாம் வேலை கிடைத்துக் காயமாகி ஒன்று இரண்டு பிரமோஷன்கூட ஆகிவிட்டது. நான் பி.ஏ. பிரசிடென்சி 9தாவதாகப் பாசு பண்ணி இருக்கின்றேன். என் விண்ணப் பத்திற்குப் பதில் கூட இல்லை. இந்த கவர்ன்மெண்டை என்ன பண்ணுவது?

**சு.ம.வீ:-** அது ஏன் அப்படி? உன் விண்ணப்பங்கள் போய்ச் சேருகிறதில்லையா?

**சு.ஆ.சு:-** இல்லையப்பா உங்கள் எளவுதான்.

**சு.ம.வீ:-** என்ன சங்கதி?

**சு.ஆ.சு:-** சுயமரியாதை என்று ஒரு கலகத்தை உண்டாக்கி அதில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்று கூச்சல் போட்டுக் கடைசியாக அது எங்கள் தலையில் வந்து விடிந்தது.

**சு.ம.வீ:-** அடபாவி அதற்கு நாங்களா ஜவாப்தாரி. ஜஸ்டிஸ் கட்சிக் காரரல்லவா? அந்தப்படி கேட்டது.

**சு.ஆ.சு:-** அது எனக்குத் தெரியும். ஜஸ்டிக்கட்சிக்காரர் முக்கிமுக்கிப் பார்த்தும் ஒன்றும் முடியாமல் போய் கடைசியாக அவர்களே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாம் என்கின்றபோது உங்க எளவு சுயமரியாதைக் கலகம் வந்து அதற்கு உயிர் உண்டாக்கி எங்கள் தலையில் கையை வைத்து விட்டது.

**சு.ம.வீ:-** சரி அதற்கும் - கதருக்கும், காங்கிரசுக்கும் என்ன சம்பந்தம்?

**சு.ஆ.சு:-** அதனால்தான் காங்கிரசில் சேர்ந்தேன்.

**சு.ம.வீ:-** ஏன்?

**சு.ஆ.சு:-** இந்தக் கவர்ன்மெண்டை ஒழித்துவிட்டு வேறு வேலை பார்ப்பது என்றுதான்.

**சு.ம.வீ:-** உங்களால் ஒழித்து விடமுடியுமா?

**சு.ஆ.சு:-** ஏன் முடியாது? மாளவியாவே சொல்லி விட்டாரே. ஒரு மாதத்தில் சுயராஜியம் வரப்போகின்றது என்று சொல்லிவிட்டாரே. ஒரு சமயம் காந்தி சொன்னாலும் சந்தேகப்படலாம். அவர் இப்படியே 5,6 தரம் சொல்லிச் சொல்லி ஏமாற்றி விட்டார். மாளவியா வாக்குத் தவராது.

**சு.ம.வீ:-** அப்படியே சுயாராஜியம் வந்து விட்டதாகவே வைத்துக் கொள். அப்போது மாத்திரம் உனக்கு உத்தியோகம் கிடைத்து விடுமா?



RangaRakes tamilnavarasam.com

**சு.ஆ.சு:-** ஏன் கிடைக்காது? இந்த வகுப்புவாரி பிரதிநிதிக் குண மெல்லாம் தவுடு பொடியாகிவிடாதா? அதற்காகத்தானே சுயராஜியம் கேட்பது. இந்த வெள்ளைக்கார ஆட்சி கூட வகுப்புவாரிபிரதிநிதித்துவம் கொடுப்பதில்லை என்றுசொன்னால் அதனிடம் எங்களுக்கு என்ன சண்டை?

**சு.ம.வீ:-** வகுப்புகள் இருக்கும்வரை வகுப்புவாரிஉரிமை வேண் டாமா?

**சு.ஆ.சு:-** வகுப்புவாதம் கூடாது என்றுதானே காங்கிரஸ் சொல்லுது.

**சு.ம.வீ:-** வகுப்புவாதம் கூடாது என்பது சரிதான். வகுப்பு போக வேண்டும் என்றும் காங்கிரஸ் சொல்ல வேண்டாமா?

**சு.ஆ.சு:-** அதுவும் போகத்தான் வேண்டும்.

**சு.ம.வீ:-** அப்படியானால் உங்கள் சுயராஜியத்தில் இந்து, மகமதியன், கிறிஸ்தவன் முதலாகிய வகுப்பெல்லாம் போய்விடுமா?

**சு.ஆ.சு:-** இவைகளை எப்படிப் போக்க முடியும்?

**சு.ம.வீ:-** அப்படியானால் அவரவர்களுக்குள்ள உரிமை கொடுக்கத்தானே வேண்டும்.

**சு.ஆ.சு:-** ஒவ்வொருவருக்கும் தனித்தனி உரிமை கேட்டால் அது வகுப்புவாதமில்லையா?

**சு.ம.வீ:-** வகுப்பு போகாத சுயராஜியத்தில் வகுப்பு உரிமை வேண் டாமா?

**சு.ஆ.சு:-** அது எப்படியோ போகட்டும். இந்துக்களுக்குள் கூட வகுப்புவாதம் எதற்கு?

**சு.ம.வீ:-** உங்கள் சுயராஜியத்தில் இந்துக்களுக்குள் சூத்திரன், பஞ்சமன் என்கின்றதாகிய வகுப்புகளாவது இல்லாமல் போய்விடுமா?

**சு.ஆ.சு:-** இப்படிப் பேசுவதுதான் வகுப்பு வாதம் என்பது?

**சு.ம.வீ:-** எப்படி?

**சு.ஆ.சு:-** வெகுகாலமாய் பெரியவாள் காலம்தொட்டு இருக்கின்ற வழக்கத்தை கேவலம் இந்த சுயராஜியத்திற்காக ஒழிக்கவேண்டும் என்று சொல்வது நியாயமாகுமா? இதனால் தான் உங்களை தேசீய பத்திரிகைகள் வகுப்புத்துவேஷிகள் என்று கூப்பிடுகின்றார்கள். சுயராஜியம் இல்லாவிட்



RangaRakes

டாலும் பரவாயில்லை. சூத்திரன், பஞ்சமன் ஆகிய வகுப்புகள் இல்லாமல் செய்ய நாங்கள் சம்மதிக்க மாட்டோம்.

**சு.ம.வீ:-** ஏனப்பா அது என்ன அவ்வளவு கஷ்டம்?

**சு.ஆ.சு:-** இன்றைக்கு சூத்திரன் என்கின்ற வகுப்பு வேண்டாம், நாளைக்கு பஞ்சமன் என்கின்ற வகுப்பு வேண்டாம், நாளானண்ணைக்கு பிராமணன் என்கின்ற வகுப்பு வேண்டாம் என்பதாக வரிசையாய் சொல்ல ஆரம்பித்து விடுவீர்கள்.

**சு.ம.வீ:-** சொன்னால் என்னப்பா முழுகிப்போகும்.

**சு.ஆ.சு:-** குதிரையும், கழுதையும் ஒன்று என்றால் நீ ஒப்புக்கொள் வாயா?

**சு.ம.வீ:-** அப்படியானால் பிராமணன், சூத்திரன், பஞ்சமன் என் கின்றவர்களில் யார் குதிரை யார் கழுதை? அதற்கு என்ன அடையாளம்? சொல் பார்ப்போம் (என்று சட்டையை முழங்கைக்குமேல் ஏற்றிச் சுருட்டி னார் வீரைய்யன்.)

**சு.ஆ.சு:-** அதெல்லாம் எனக்குத்தெரியாதப்பா. சங்கராச்சாரிசுவாமி களிடமிருந்து "பிராமணாள் எல்லாரும் காங்கிரசில் சேருங்கள்" என்று ஒரு ரகசிய ஸ்ரீமுகம் வந்ததாக எங்கப்பா சொன்னார் அதனால் சேர்ந்தேன். எங்கப்பாவும் எங்க மாமாவும் பேசிக்கொண்டிருந்ததை நான் சொன்னேன். என் மேல் கோபித்துக்கொள்ள வேண்டாம். என்னமோ என் வேலையை நான் பார்க்கின்றேன் உன் வேலையை நீ பார். நமக்குள் சண்டையெதற்கு. என் அபிப்பிராயமெல்லாம் உனக்குத் தெரிந்ததுதானே? நான் போகிறேன் நேரமாச்சுது ( என்று சொல்லிக்கொண்டே நழுவிவிட்டார். )

**குடி அரசு - உரையாடல் - 26.07.1931**



tamilnavarasam.com

# காங்கிரஸ் புரட்டும் - காந்தியின் தவறும்

தலைவரவர்களே! சகோதர சகோதரிகளே!!

இன்று இக்கூட்டத்தில் நான் "காங்கிரஸ் புரட்டும் - காந்தியின் தவறும்"என்னும் விஷயத்தைப் பற்றி பேசவேண்டும் என்று குறிப்பிடப் பட்டிருக்கின்றது. இந்தத் தலைப்பைப் பார்த்த சிலருக்கு ஆத்திரமுண்டாகி யிருக்கலாம். கலகம் செய்யலாமா என்றுகூட கருதிக்கொண்டு வந்திருக் கலாம். இந்தப்படி ஆத்திரம் ஏற்படுவது சகஜமேயாகும். ஆனால், நான் மாத்திரம் 5,6 வருஷ காலமாகவே காங்கிரசை ஒரு புரட்டு ஸ்தாபனம் என்றும், அது பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஏற்பட்ட ஸ்தாபனமென்றும் சொல்லி வந்திருப்பதோடு, "திரு காந்தியவர்கள் பார்ப்பனப் பிரசாரகர் என்றும், பார்ப்பனீயத்திற்கு பாடுபடுகின்றவர்" என்றும் சொல்லி வந்திருக் கின்றேன். இந்த அபிப்பிராயம் எனது அனுபவத்தில் நாளுக்கு நாள் பலப்பட்டுகொண்டு வந்திருக்கின்றதேயொழிய சிறிதாவது குறைவுபடவே இல்லை.

காங்கிரசு ஒரு வகுப்புவாத சபையேயாகும். "தேசிய"ப் போர்வை போர்த்த வகுப்புவாதக் குரங்கேயாகும். அதாவது பிடிவாத வகுப்பு வாத மாகும். தேசீயம் என்னும் பித்தலாட்ட வார்த்தையைச் சொல்லிக்கொண்டே வகுப்புவாதங்களை அதாவது "உயர்" வகுப்பு உரிமைகளைக் காப்பாற்று வதற்கு ஏற்பட்ட ஸ்தாபனமாகும்.

இந்திய தேசீயம் என்னும் வார்த்தை ஒழிந்தாலொழிய வகுப்புவாதம் நமதுநாட்டை விட்டு ஒருநாளும் ஒழியப்போவதில்லை. பித்தலாட்டமாக வும், வஞ்சகமாகவும், சூக்ஷியாகவும், வகுப்புவாதத்தை வலியுறுத்துவது தான் இந்திய தேசீயம் என்பதை நினைவில் வையுங்கள். இதை எங்கு வேண்டு மானாலும் ருஜுப்படுத்தத் தயாராயிருக்கிறேன். தேசீயப்புரட்டு ஒழிந்து தீர வேண்டியது எல்லாவற்றையும்விட மிகமிக அவசியமென்றே எனக்கு இப்போது பலமாய்த்தோன்றி வருகின்றது.

நமது பாமர மக்களின் பகுத்தறிவு அற்ற தன்மையும், ஜீவனத்திற்கு வேறு யோக்கியமான வேலையற்ற தன்மையுமே வகுப்புவாத தேசீயத்திற்கு



இவ்வளவு ஆதரவு கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. இனி அது ஒரு குண்டுமணி அளவும் இருக்க முடியாது. வகுப்புவாத தேசீயத்தின் செல்வாக் கையும், அதனின் காலித்தனத்தையும் கண்டே மக்கள் பயந்து, வெளியில் உண்மையைப் பேசத்தயங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஒருவர் இருவராவது இந்த வகுப்புவாத தேசீயப்புரட்டை வெளியாக்க உயிர்த்தியாகம் செய்து தீரவேண்டியது மிக்க அவசியமாகும். என்றாலும் சமீப காலத்தில் அதன் யோக்கியதை வெளியாகிவிடும் என்கின்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நன்றாய் சிந்தனா சக்தியுடன் யோசித்துப்பார்த்தால் வகுப்புவாத சூக்ஷி இல்லாத வெரும் தேசீயம் என்னும் வார்த்தையே வகுப்பு வாதத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் என்பது தெளிவாய் விளங்கும். தேசீயத்தின் அடிப்படையே வகுப்புவாதம்தான்.

இன்றையதினம் நமது தேசீயம் என்பது ஐரோப்பியம், இந்தியம் என்னும் வகுப்புவாதத்தைக் கொண்டதே தவிர வேறில்லை. இந்தியாவில் ஜாதிப்பிரிவு இருப்பதால், இதன் தேசீயம் ஜாதி வகுப்பு வாதமாகவும், மேல் நாடுகளில் தொழில் பிரிவுகள் இருப்பதால் அங்கு தொழில் வகுப்புவாத மாகவும், தேசீயங்கள் நடைபெற்று வருகின்றன. "இந்தியாவை இந்தியர்கள் ஆளவேண்டும்?" என்பதே வகுப்புவாதமா? அல்லவா? என்று யோசித்துப் பாருங்கள். இந்தியாவை இன்னவிதமான கொள்கை, இன்னவிதமான ஆக்ஷி முறைமையில்தான் ஆளப்படவேண்டும் என்று சொல்வதானால் அதில் வகுப்புவாதம் இல்லை என்று சொல்லலாம். ஆனால் அந்தப்படி சொல்லுவது என்பது நமது தேசீயத்தில் கடுகளவுகூட காணமுடியவில்லை. " ராணுவம் இந்தியமயமாக்க வேண்டும், உத்தியோகம் இந்தியமயமாக்க வேண்டும், அதிகாரம் இந்தியமயமாக்கவேண்டும்" என்கின்றதான இந்திய வகுப்புவாதமேதான் இந்திய தேசீயத்தில் மேலோங்கி நிற்கின்றதே தவிர அதில் எவ்வித கொள்கையாவது மேலோங்கி நிற்பதாகக் காணப்பட வில்லை.

அந்தப்படி ஏதாவது ஒரு கொள்கை மேலோங்கி நிற்கின்றது என்று சொல்லுவோமானால் இந்திய தேசீயம் என்பதிலுள்ள எந்தக் கொள்கைக் காவது இந்திய மக்களின் 100-க்கு 10-பேர்களுடைய ஆதரவாவது இருக் கின்றதா? என்று யோசித்துப் பாருங்கள். மக்களின் ஆதரவில்லாத கொள்கைகளை யாரோ சிலர் வாயில் சொல்லிக்கொண்டோ அதிகார உத்தியோக ஆதிக்க சுயநல ஆசைக்கு வியாபாரமுறையில் ஆட்களை வைத்துப் பேசிக்கொண்டோ இருப்பதில் என்ன பயன் ஏற்படக்கூடும்?

ஆகவே தேசீயசபை எனப்படும் காங்கிரஸ், வகுப்பு வாதத்தை வேறு முறையில் நடத்தும் ஒரு புரட்டு ஸ்தாபனமே தவிர வேறு அல்ல என்று தைரியமாய்ச் சொல்லுகின்றேன். இந்த இலக்ஷணத்தில் அது மற்றவர்களை அதுவும் கஷ்டப்படும், மிதித்து, அழுத்தி நசுக்கப்படும்- இழிவுபடுத்தப்படும் மக்களின் கஷ்டத்தையும், கூக்குரலையும் பார்த்து



RangaRakes tamilnavarasam.com

சிறிதும் அனுதாபப்படாமல்... பரிதாபப்படாமல், அவற்றை யெல்லாம் ஒரே மூச்சில் வகுப்புவாதம் என்று சொல்லுகின்ற போக்கிரித்தனத்தைப் பார்த்தால் தேசீயத்தில் உள்ள புரட்டு மாத்திரமல்லாமல் அதில் இருக்கும் வகுப்பு வாதத் திமிரும் நன்றாய் விளங்கும். இழிஜாதிக்காரனென்று மதத்தின் பேரால் தீர்மானிக்கப்பட்ட பறையன், சக்கிலி, பள்ளன் என்று சொல்லப் பட்ட மக்கள் ஒரு புறம் குடிக்கத்தண்ணீர் இல்லாமல், நடக்கத் தெருவில்லா மல் திண்டாடுகின்றார்கள். தொழிலாளி, குடியானவன் என்று சொல்லப்படு கின்றதான "சூத்திர" வகுப்பு என்கின்ற மக்கள் பாடுபட்டும் கஞ்சியில்லா மல் தவிக்கிறார்கள். "மிலேச்ச" வகுப்பு என்பதில் சேர்க்கப்பட்ட மகமதி யர்கள் தாங்களும் இந்தியர்களாக இருந்தும் தங்களது உரிமை தங்களுக்கு அளிக்கப்படவில்லை என்று கூக்குரலிடுகின்றார்கள்.

இவ்வளவையும் பார்த்தும், கேட்டும் சிறிதும் ஈவு இரக்கமின்றி ஒரே வார்த்தையில் "இதெல்லாம் வகுப்பு வாதம், வகுப்பு வாதக்காரர்கள் எல்லாம் தேசத்துரோகிகள், இது தேசீயத்திற்கு முட்டுக்கட்டை" என்கின்ற ஒரே ஆயுதத்தால் அடித்து நொறுக்கிவிடப் பார்த்தால் இதை யார் பொறுத்துக் கொண்டு இருக்க முடியும்? என்று கேட்கின்றேன். காங்கிரஸ் காரியக் கமிட்டியார் தீர்மானங்களையும் அவற்றிற்கு திரு.காந்தியின் மேலொப்பத் தையும், சற்று நாணயத்துடன் கவனித்துப்பாருங்கள். அது வகுப்பு வாதமா? அல்லவா என்று கேட்கின்றேன். அதுவும் நாம் எந்த வகுப்பு வாதத்தை ஒழிக்க வேண்டும் என்று கூப்பாடு போடுகின்றோமோ அந்த வகுப்பு வாதத்தை நிலைநிருத்த உறுதிப்படுத்தச் செய்யும் வகுப்பு வாதமா? இல்லையா? என்று கேட்கின்றேன். ஆகவே காரியக்கமிட்டியின் தீர்மானம் என்ன? என்பதைச் சொல்லுகின்றேன் கேளுங்கள்.

அதாவது:- "இந்தியாவிலுள்ள சகல வகுப்பாருக்கும் அவர்களது சாஸ்திரங்கள், பாஷைகள், கல்வி, தொழில், மதசம்பந்தமான பழக்க வழக்கம், மத தர்ம ஸ்தாபனங்கள் ஆகியவைகள் தேசீயத்தில் காப்பாற்றப் படும்" என்பதாகும்.

இந்தத் தீர்மானம் வகுப்புவாத தீர்மானமா? அல்லவா? என்று கேட்கின்றேன். பறையன் தொடக்கூடாதவன் என்பதும், முஸ்லீம் தொடக் கூடாதவன் என்பதும், "சூத்திரன்" மற்ற வருணத்தாரை தொடக்கூடாதவன் என்பதும், இந்து மதத்தின் பழக்கவழக்கமா? அல்லவா? என்று கேட்கின் றேன். அன்றியும், இது வகுப்பு வாதமா? அல்லவா? என்று கேட்கின்றேன். இந்த முறை ஒழிக்கப்பட வேண்டுமென்பது வகுப்பு வாதத்தை ஒழிப்பதா காதா? என்று கேட்கின்றேன், இப்படி இருக்க இந்த வகுப்பு வாதம் ஒழிக்கப் பட வேண்டும் என்கின்ற முயற்சிகளை யெல்லாம் வகுப்பு வாதம் என்று சொல்லிவிட்டு இன்று இந்நாட்டில் இருக்கின்ற இந்த வகுப்புவாதங்கள் காப்பாற்ற உறுதி கூறி காங்கிரஸ் தீர்மானம் செய்திருக்கின்றது. இதற்கென்ன பதில் சொல்லப் போகின்றீர்கள்?



காங்கிரஸ் தீர்மானத்தின் பயனாய் இங்குள்ள மக்களுக்கு சம உரிமை உண்டா? மனிதத்தன்மை உண்டா? என்று யோசித்துப் பாருங்கள் என்று கேட்கின்றேன்.

பார்ப்பனர்கள் வருணாச்சிரம மகாநாடுகளில் செய்யப்படும் தீர்மானங்கள் தான் காங்கிரஸ் காரியக்கமிட்டியில் வேறு பாஷையில் செய்யப்பட்டிருக்கின்றது என்பதல்லாமல் வேறு என்ன? கவனித்துப் பார்க் கப் போனால் வருணாச்சிரம மகாநாட்டுத் தீர்மானங்களைவிட காங்கிரஸ் தீர்மானம் மோசமானதென்று சொல்லுவேன். ஏனெனில், வருணாச்சிரம மகாநாடுகளில் தங்கள் வகுப்பு தர்மங்களில் கவர்ன்மெண்டார் பிரவேசிக்கக் கூடாது என்று மாத்திரம்தான் சொல்லுவார்கள். ஆனால் காங்கிரஸ் தீர்மானத்தில் "வர்ணாச்சிரம தர்மங்களை வகுப்பு தர்மங்களை நாங்கள் காப்பாற்றித் தருகின்றோம்" என்று உறுதி கூறி யிருக்கின்றார்கள்.

ஆகவே இப்போது நமது நிலை "பிச்சை போடவேண்டாம். தயவு செய்து நாயைப்பிடித்துக் கட்டு" என்பது போல்தான் இருக்கின்றது. நமக்கு சுயராஜ்யம் வேண்டியதில்லை, வகுப்பு தர்மம் காப்பாற்றப்படாமல் இருந்தால் அதுவே போதும் என்று கேட்டுக் கொள்ள வேண்டியவர்களா யிருக்கின்றோம். இவைகள் எல்லாம் திரு காந்திக்கு தெரியாத விஷயம் என்று கருதி விடாதீர்கள். அவர் சூதாட்டத்தில் இரங்கிவிட்டார். அவர் படித்ததெல்லாம் சீமையில் இருக்கும்போது சட்ட புஸ்தகமும், இந்தியா வுக்கு வந்த பிறகு டால்ஸ்ட்டாய் உபதேசமும், மற்றபடி துளசிதாஸ் இராமா யணமும், பகவத் கீதையுமேயாகும். மற்றபடி, இதைத் தவிர அவருக்கு உலக அனுபவம் போதுமானது இல்லை என்றே சொல்லுவேன். ஏனெனில் மடாதிபதிகள்போல் சிஷ்யர்களிடம்பேசுவதும், பக்தர்கள் கூட்டத்தில் தனக்குத் தோன்றியதைப் பேசுவதுமே தவிர வேறு வழியில் உலக ஞானம் பெற அவருக்கு சந்தர்ப்பம் இருந்ததே கிடையாது. அவரிடம் தெய்வத் தன்மை இருக்கின்றது என்பவர்களுக்கு நான் இதைச் சொல்ல வரவில்லை. அவரும் ஒரு மனிதர்தான் என்று கருதி இருக்கின்றவர்களுக்கே நான் இதைச் சொல்லுகின்றேன். ஆகையால் நாம் திரு காந்தியிடம் இராமாயணத் திற்கும் கீதைக்கும் மேற்பட்ட விஷயங்களையும், சட்டத்திற்கும் டால்ஸ் டாய் உபதேசத்திற்கும் மேல்பட்ட விஷயங்களையும் எதிர்பார்ப்பது நமது பிசகேயாகும். பார்ப்பனர்கள் ஆதரவிலிருக்கும்படியான நிலைமை அவருக்கு ஏற்பட்டு விட்டதால், பார்ப்பனீயத்திற்கு பாடுபட வேண்டிய தாகவும் ஏற்பட்டு விட்டது. ஆகவே இனி எந்தக்காரணத்தை முன்னிட்டும் திரு காந்தியிடம் நாம் சமதர்மத்தை எதிர்பார்க்கக் கருதினோமேயானால் நாம் தான் மூடர்களாய்த் தீருவோம். அவரது ஆயுள் காலம் முடியும் வரை அவரிடம் சமதர்மத்தையோ ஒற்றுமையையோ காணமுடியாது. அவர் வடநாட்டுப்பணக்காரர்களையும் தென்னாட்டுப் பார்ப்பனர்களையும் தான் மனிதராய் கருதுகின்றார். அவர்களது சாவகாசம்தான் அவருக்கு உண்டு.



RangaRakes tamilnavarasam.com

அவர்களது குறைகளைத்தான் உலகக் குறைகளாகக் கருதுகின்றார். ஆதலால் திரு.காந்தியவர்களின் திட்டமெல்லாம் அவ்விருவருடைய அதாவது பணக்காரன் பார்ப்பான் ஆகிய இவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதாகத்தான் இருக்குமே ஒழிய ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள் கஷ்டங்களையும், குறைகளையும் நீக்குவதாக இருக்க முடியாது. ஏழைகள் பிழைக்கவும், தாழ்த்தப்பட்டவர்கள் உயரவும் அவருக்கு இரண்டு வழிதான் தெரியும். ஒன்று இராட்டினம் சுற்றுவது இரண்டாவது "தீண்டாமை பாராட்டுவது பாவம்" என்று வாயால் சொல்லுவது. இந்த இரண்டும்கூட மில்லுக்காரனையும், பார்ப்பானையும் கண்ட மாத்திரத்தில் தத்துவார்த்தம் சொல்ல வேண்டி வந்துவிடும். ஆகவே சகோதரர்களே! எனக்குக்கொடுத்த விஷயத்தை தலையாய்க் கொண்டு என் மனதில் உண்மையென்று பட்டதை நான் ஒழிக்காமல் சொல்லி விட்டேன். இவை அவ்வளவையும் கலப்பற்ற உண்மையென்றோ முடிந்த முடிவு என்றோ கருதி கண் மூடித்தனமாய் ஒப்புக்கொள்ளாதீர்கள். நான் இந்த படி சொல்லுவதற்கு எனக்குப்பல காரணங்கள் இருக்கலாம். சுய நலமிருக்கலாம். பொறாமை இருக்கலாம், வெறுப்பு இருக்கலாம். ஆகையால் நீங்கள் இவற்றை ஒவ்வொன்றையும் வைத்து உங்கள் சொந்தப் பகுத்தறிவை நடுநிலை தன்மையையும் கொண்டு ஆராய்ந்து பார்த்து, பிறகு உங்களுக்குப்பட்டபடி முடிவு செய்து கொள்ளுங்கள்.

*குறிப்பு : தஞ்சை மாவட்டத்தில் சுயமரியாதைப் பிரச்சாரத்தை ஒட்டி 15.07.0931 இல் மாயவரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 16.07.1931 இல் பட்டுக்கோட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம்.*

**குடி அரசு - சொற்பொழிவு - 26.07.1931**



# மௌலானா ஷௌகத் அலி

மௌலானா ஷௌகத் அலி அவர்கள் முஸ்லீம்களுக்கு பிரதிநிதி யல்லவென்பதாகக் காங்கிரஸ் காரியக்கமிட்டி முடிவு செய்து விட்டது என்ப தாக உயர்திரு. காந்தியவர்கள் தமது 16-7-31 தேதி "யங் இந்தியா" பத்திரிகையின் தலையங்கத்தில் எழுதிவிட்டார். இதற்கு பதிலாக மௌலானா அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதன் சுருக்கம் மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. மௌலானா ஷௌகத்அலி அவர் களை "முஸ்லீம்கள் பிரதிநிதியல்ல" வென்று காங்கிரஸ் காரியக் கமிட்டி முடிவு செய்திருப்பதைப் பற்றி யோசித்துப் பார்த்தால் காங்கிரசானது யாரை யும் இலட்சியம் செய்யாமல் தனது போக்கில் மிகவும் தைரியத்தையும், உறுதியையும் கொண்டு விட்டதாகத் தான் சொல்ல வேண்டும். திரு. காந்தி யவர்களும் காங்கிரஸ் காரியகமிட்டியின் இந்த முடிவைப்பற்றி சிறிதும் யோசனை செய்யாமலும், காரியக்கமிட்டியைக் கண்டிக்காமலும் தமது பத்திரிகையில் விளம்பரம்படுத்தி விட்டதிலிருந்து அவரும் துணிந்து விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

அதாவது "காந்தி-இர்வின்" ஒப்பந்தம் முடிந்தவுடன் "இந்து முஸ்லீம் ஒப்பந்தம் ஏற்படாவிடில் மேலால் என்ன செய்வது என்பது எனக்குத் தெரியும்" என்று அவர் சொன்ன காலத்திலேயே இந்த உத்தேசத்தை வைத்துத்தான் சொல்லியிருக்க வேண்டும் என்றும், யார் யார் தனக்கு ஒத்து வரவில்லையோ அவர்களையெல்லாம் இம்மாதிரியாகச் சொல்லி ஒழித்து விடுவதுதான் தனக்குத் தெரிந்த வழியென்று அப்போதே கருதிவிட்டார் என்றும், அந்த எண்ணத்தின் பிரதிபிம்பமே தான் அவரை இவ்வளவு தைரியமாய் எழுதச் செய்தது என்றும் தான் நாம் கருதுகின்றோம். ஒத்துழையாமை ஆரம்பித்த காலத்தில் அலி சகோதரர்கள் இருவரையும் தன்னுடன் கூடவே கூட்டிக்கொண்டு இவ்விருவரையும் தனது இரு பக்கமும் நிறுத்திக்கொண்டு அவர்களைப் புகழ்ந்து பேசி "அலி சகோதரர் களுடைய சட்டைப்பையில் நான் இருக்கிறேன். அவர்கள் தான் என்னை நடத்துகிறார்கள்" என்றெல்லாம் பேசி அவர்களுக்கு உற்சாகத்தை யூட்டி அவர்கள் மூலமாகவே காந்தி, மகாத்மா காந்தி, மகாத்மா என்றெல்லாம் சொல்லச்செய்து, இந்தியத் தலைவர் ஆன பின்பு இப்போது ஒரு வரியில்



RangaRakes tamilnavarasam.com

“மௌலானா சாயபை முஸ்லீம்களின் பிரதிநிதி என்பதாக காரியக்கமிட்டி ஒப்புக் கொள்ளவில்லை” என்று துணிந்து எழுதிவிட்டார். இவரது பத்திரிக்கையான “யங் இந்தியா” உலகில் பல பாகங்களிலும் செல்லுவது டன் இந்த வாக்கியத்தை உலகத்திலுள்ள பத்திரிக்கைகள் எல்லாம் எடுத்துப் போட்டிருக்கின்றன.

எனவே திரு. காந்தி இப்படியெழுதியதின் மூலம் மௌலானாவை ஒழித்துவிடலாம் என்கின்ற அபிப்பிராய மாத்திரமல்லாமல் இந்திய முஸ்லீம்கள் தலையிலும் கையை வைத்துவிடலாமென்கின்ற தீர்மானத் துடன் இருந்துதான் எழுதியிருக்கிறார் என்றே முடிவு செய்ய வேண்டி யிருக்கின்றது. அன்றியும், தானாக இப்படிச் சொல்லுவதற்கு பயந்து தான் ‘காரியக் கமிட்டி முடிவு செய்திருக்கின்றது’ என்பதாக எழுதுகின்றார் என்று தான் கருத வேண்டியிருக்கிறது. அப்படிக்கில்லாமலிருந்தால் உடனே திரு. காந்தியவர்கள் காரியக்கமிட்டியின் இம்மாதிரியான முடிவை கண்டித்திருப் பார். அதுமாத்திரமல்லாமல் தனது பத்திரிகை தலையங்கத்திலும் இவ்வளவு வெளிப்படையாய் பிரசுரித்திருக்கவுமாட்டார்.

நிற்க, மௌலானா ஷௌகத் அலி அவர்களை இந்திய முஸ்லீம் பிரதிநிதியல்ல வென்று தீர்மானம் செய்து விட்டால் பிறகு வட்டமேஜை மகாநாட்டில் இந்தியா முழுமைக்கும் திரு. காந்தியே பிரதிநிதி என்றாய் விடுவதோடு அவரது அபிப்பிராயத்தை எதிர்த்துப் பேசவும் ஆட்கள் இருக்கமாட்டார்கள். பிறகு அவருக்கே ஏக நாயகப் பிரதிநிதித்துவம் சித்தித்து விடும் என்கிற உள்எண்ணமே திரு. காந்தியின் சிஷ்யர்களை இப்படி முடிவு செய்ய இணங்கும்படி தூண்டி இருக்கின்றது என்றுமேதான் கருத வேண்டியிருக்கின்றது.

என்றாலும், இந்த மாதிரியான சூக்ஷிக்கு மௌலானா ஷௌகத் அலி கொடுத்த பதிலும் சரியான பதிலேயாகும். என்னவென்றால், “திரு. காந்தி இந்திய மக்களுக்கு எவ்வளவு பிரதிநிதியோ அதைவிட அதிகமான அளவு நான் முஸ்லீம்களுக்கு பிரதிநிதி” என்று சொல்லி இருக்கின்றார். இதை நாமும் அப்படியே ஆதரிக்கின்றோம். இதற்கு ஆதாரம் என்னவெனில் இன்றையதினம் இந்தியாவில் மௌலானா ஷௌகத் அலியை தங்களுக்கு பிரதிநிதி அல்ல என்று சொல்லுபடியான முஸ்லீம்களை ஒட்டுமொத்த முஸ்லீம் சமூகத்தில் 1000க்கு ஒருவரையாவது கண்டுபிடிக்க முடியுமா? என்று கேட்கின்றோம்.

சென்னையில் சில முஸ்லீம் கனவான்கள் மைலாப்பூர் திரு. சீனிவா சய்யங்காரை தலைவர் என்று சொல்லிக் கொண்டிருந்தது போல் ஒரு சில முஸ்லீம்களால் அதுவும் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களால் திரு. காந்தி தலைவர் என்று சொல்லிக் கொள்ளப்படுவது தவிர வேறு யாரையாவது காட்டக்கூடுமா?



அன்றியும், இந்தியாவிலுள்ள இந்துக்கள் என்பவர்களிலும் திரு. காந்தியை தங்கள் தலைவர் என்றோ, பிரதிநிதியென்றோ சொல்லக்கூடிய வர்கள் 100க்கு எத்தனை பேர் இருப்பார்கள் என்பதாக தமிழ்நாட்டையே எடுத்துக்கொண்டு பார்ப்போம். விளக்கமாகப் பேச வேண்டுமானால் திரு. காந்தியின்இராமராஜியத்தையும், அதன் வருணாச்சிரமதர்மத்தையும் ஒப்புக் கொள்ளுகின்ற மக்களில் பார்ப்பனர்களை தவிர பார்ப்பனரல்லாதார்களில் 100க்கு ஒருவராவது இருக்கின்றார்களா? என்று பந்தயங்கட்டி கேட்கின் றோம். மேலும் பார்ப்பனரல்லாதார்களில் ஒரு குறிப்பிட்ட ஆசாமியின் பெயரை யாவது சொல்லக்கூடுமா? என்று மறுபடியும் கேட்கின்றோம்.

உண்டியல் எடுத்துக்கொண்டு பிச்சை எடுப்பவர்கள் செம்புக்கு நாமம் போட்டுக் கொண்டு மஞ்சல் துணிகட்டி “வெங்கிட்டரமண கோவிந்தா!கோவிந்தா!!” என்று கூப்பாடு போடுவது போல் தேசீயத்தின் பேரால் வாழ்க்கையை நிர்த்தாரணம் செய்து கொண்டவர்கள் காந்திக்கு ஜே! என்று சொல்லுவதும் அதைக்கேட்டுகொண்டு விளையாட்டுப் பிள்ளை களும், வேலையில்லாத பிள்ளைகளும் மற்றும் ஓட்டுகளை எதிர்பார்த்துத் திரியும் பெரிய ஆட்களும் கூப்பாடு போடுவதுமல்லாமல் மற்றப்படி யாருக்கு திரு. காந்தி பிரதிநிதி என்று கேட்கின்றோம்.

பார்ப்பனர்களுடைய பிரசார சாமர்த்தியத்தாலும், இல்லாமல் தீராத இயற்கை அவசியத்தாலும் யாரோ ஒருவர் சங்கராச்சாரியாகி உலக குரு ஆவதுபோல் பார்ப்பனர்களுடைய பிரசார சாமர்த்தியத்தால் திரு.காந்தி அவர்கள் இந்தியப் பிரதிநிதியாக காணப்படுகின்றார். உண்மையைச் சொல்ல வேண்டுமானால் காரியக்கமிட்டி தீர்மானத்தை கையிலெடுத்துக் கொண்டு திரு.காந்தியவர்கள் கப்பலேறியவுடன் பார்ப்பனரல்லாத மக்கள், சுயமரியாதை உணர்ச்சியுடைய மக்கள், சமதர்மக் கவலையுள்ள மக்கள் “திரு. காந்தியவர்கள் எங்களுடைய பிரதிநிதியல்ல, அவர் வருணாச் சிரமக்காரருக்கும், மேல் ஜாதிக்காரருக்கும், முதலாளிகளுக்குந்தான் பிரதிநிதி” யென்று வட்ட மேஜை மகாநாட்டுக்கு தந்தி கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் காரியக்கமிட்டி தீர்மானத்தை நினைத்தால் சுயமரியாதைக்காரனுக்கும், சமதர்மக்காரனுக்கும் இரத்தம் கொதிக்குமென்றே சொல்லுவோம்.

ஆகவே, இந்நிலைமையில் உள்ள காங்கிரசைப்பற்றியும், திரு. காந்தியைப்பற்றியும் மௌலானா சாயபு அவர்கள் “முஸ்லீம்களுக்கு திரு.காந்தியைவிட நான் அதிகமான பிரதிநிதித்துவம் பொருந்தியவன்” என்று சொன்னதில் சிறிதும் தப்பிதமில்லை என்றே கருதுகின்றோம்.

நிற்கவும், மௌலானா சாயபு அவர்கள் மற்றும் இரண்டொரு விஷயங்களில் உண்மையை தைரியமாய் எடுத்துச் சொல்லி இருக்கின்றார் என்பதையும் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. அதாவது “முஸ்லீம்கள்



RangaRakes tamilnavarasam.com

கடைக்கு முன்னால் நின்று கொண்டு மறியல்கள் செய்யப்படுமானால் கண்டிப்பாகக் கலகங்கள் உண்டாகும்” என்றும், இந்தியாவில் ஏதாவது “இரத்தம் சிந்தும்படியான ரணகளம் ஏற்பட்டால் அதற்கு திரு.காந்தியே ஜவாப்தாரியாவார்” என்றும் எச்சரிக்கை செய்யும் முறையில் எடுத்துச் சொல்லி இருக்கிறார். இன்றைய நிலைமையைப் பார்க்கும்போது தேசீயக் கிளர்ச்சி என்பதின் பலன் நாட்டிற்கு இந்த நிலைமையைத்தான் கொண்டு வந்து விடக்கூடும் என்றே நாமும் கருதுகின்றோம். முஸ்லீம்களுக்கும்– இந்துக்களுக்கும் மாத்திரம் தான் கலவரம் நடக்கும் என்பது மாத்திர மல்லாமல் பார்ப்பனர்களுக்கும்– பார்ப்பனரல்லாதார்க்கும், ஜாதி இந்துக் களுக்கும் – தாழ்த்தப்பட்ட இந்துக்களுக்கும் கூட கலவரமும், ரணகளமும் ஏற்பட்டுத் தான் தீரும் என்றே கருதுகின்றோம். யார் தோற்பார்கள், யார் ஜெயிப்பார்கள் என்கின்ற சங்கதி ஒருபுறமிருந்தாலும், நிரபராதிகள் பலர் கஷ்டமும், நஷ்டமும், தொல்லையும் அடையக்கூடும் என்பதில் சந்தேக மில்லை. ஏனெனில் மௌலானா சாயபு சொல்லியிருப்பது போல் அதாவது “காங்கிரஸ் ஆரம்பித்த காலம் முதலே அது முஸ்லீம்களிடம் விஷமத்தன மாகவே நடந்து வந்திருக்கின்றது” என்று சொல்லியிருப்பது போலவே காங்கிரஸ் ஆரம்பமான காலம் தொடங்கியே பொது ஜனங்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு அவர்களுக்கு துரோகமாகவே நடந்து வந்திருக் கின்றது என்பதோடு காரியக்கமிட்டி தீர்மானம் என்பதில் இதை காயம் செய்யப்பட்டு விட்டது.

ஆகவே இந்த நிலையில் இருக்கும் காங்கிரசும், திரு. காந்தியும் “மௌலானா ஷௌகத் அலி முஸ்லீம்களின் பிரதிநிதியல்ல”என்று சொல்லி முடிவுகட்டி இருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

மேலும் காங்கிரசும், அதன் தலைவர்களும் எப்போதுமே தங்கள் சொற்படி தாளம் போடாத இந்துக்களையும் கூட அவர்கள் யாராயிருந் தாலும் இந்தப்படியே அதாவது அவர்கள் “இந்தியப் பிரதிநிதிகளல்ல” என்று சொல்லிவிடுவதிலும் அதிசயமொன்றுமில்லை. காரியக்கமிட்டிக்கு மாத்திரமல்லாமல், திரு.காந்தியவர்களுக்கு மாத்திரமல்லாமல் காங்கிரசுக்கு யார் தலைவர்களாய் வந்தாலும் அவர்களுக்கெல்லாம் இந்த குணம் தான் இருந்து வந்திருக்கிறது.

உதாரணம் வேண்டுமானால் தமிழ்நாட்டிலும் ஒரு சமயம் பார்ப்பன ரல்லாதாரில் சிலர் பார்ப்பனரல்லாதார்களுடைய உரிமையைப்பற்றிக் கேட்டவுடனேயே இங்குள்ள பார்ப்பனர்கள் காங்கிரஸ் தலைவர்கள் ஸ்தானத்தில் இருந்த காலத்தில் அடியோடு தங்களை தலைவர்களாக்கி னவர்களை யெல்லோரையுமே அதாவது திருவாளர்கள் வரதராஜலு நாயுடு, ஆரியா, கல்யாணசுந்திர முதலியார், சக்கரை முதலிய அநேகரை பெயர்களைக் குறிப்பிட்டே “இவர்களை யெல்லாம் காங்கிரசை விட்டு



ஒழித்தால் தான் காங்கிரஸ் பரிசுத்த மடையும்” என்று சொன்னதே போது மான உதாரணமாகும்.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார் விஷயம் இருப்பது போல் இந்தியாவைப் பொருத்தவரை இந்துக்கள் – முஸ்லீம்கள் விஷயம் இருந்து வருகிறது.

ஆதலால் இரண்டும் ஒன்றுபோலவேதான் நடைபெறுகிறது. தமிழ் நாட்டிற்கு திருவாளர்கள் சீனிவாசய்யங்காரும், ராஜகோபாலாச்சாரியுமா னால் இந்தியாவுக்கு திருவாளர்கள் மாளவியாவும் காந்தியுமாவார்கள். இதில் ஒன்றும் புதிய நடவடிக்கைகள் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

எனவே மௌலானா ஷௌகத் அலி அவர்கள் “முஸ்லீம் பிரதிநிதி யல்ல” என்று காரியக்கமிட்டி முடிவு செய்து அது காந்தியின் மூலம் வெளிப்பட்டிருப்பதின் யோக்கியதையைப் பற்றி சுருக்கத்தில் ஒரு வார்த் தையில் சொல்லி முடித்துவிட வேண்டுமென்றால் திரு.காந்தி தலைவர் பதவிக்கு ஏறிச் சென்ற ஏணியையே உதைத்துத் தள்ளி விட்டாரென்று தான் சொல்ல வேண்டும்.

**குடி அரசு – தலையங்கம் – 26.07.1931**



RangaRakes tamilnavarasam.com

# விருதுநகர் மகாநாடு

மூன்றாவது சுயமரியாதை மகாநாடு விருதுநகரில் ஆகஸ்டு மாதம் 8,9 தேதிகளில் திருவாளர் ஆர்.கே. ஷண்முகம் அவர்கள் தலைமையில் நடத்த தீர்மானமாகி எல்லா ஏற்பாடுகளும் வெகு மும்மரமாய் நடைபெற்று வருவதை வாசகர்கள் பத்திரிகைகளின் மூலம் அறிந்திருக்கலாம். இம் மகாநாடு இதற்கு முன் இரண்டு தடவை தேதிகள் குறிப்பிடப்பட்டு எதிர் பாராத சம்பவங்களால் தடைப்படுத்தப்பட்டு விட்டது.

ஆனாலும், இப்போது முன் நடத்தப்பட்டிருந்தால் எவ்வளவு விசேஷமாய் நடைபெற்றிருக்குமோ அதை விட பன்மடங்கு விசேஷமாக நடந்தேற காரியங்கள் நடந்து வருவதானது தலைவர் திருவாளர் சௌந்தர பாண்டியன் அவர்கள் தீவிர முயற்சி எடுத்து சுற்றுப்பிரயாணம் முதலிய வைகள் செய்து வருகின்றதைப் பார்த்தாலே விளங்கும். கால நிலைமையும் முன்னைவிட இப்போது சற்று திருப்திகரமாகவே காணப்படுவது மற்றொரு விசேஷமாகும்.

அதாவது வெய்யில் கொடுமை தணிந்திருப்பது ஒன்று. தண்ணீர் சௌகரியத்திற்கு சற்று அனுகூலமேற்பட்டிருப்பது மற்றொன்று. இவ் விரண்டையும் விட சுயராஜ்ஜியம் என்னும் அரசியல் கிளர்ச்சி என் பதின் இரகசியம் பம்பாய் காரியக்கமிட்டியின் தீர்மானத்தால் ஒரு வகையில் வெளியானதின் பயனாய் சுயமரியாதை இயக்கத்தின் அவசியத்தை, அதை குற்றம் சொல்லிக்கொண்டு இருந்த மக்கள் முதல் யாவரும் அறிய நேர்ந்தது மூன்றாவதாகும். இப்படியாக இன்னும் பல நன்மைகள் ஏற்பட்டது முக்கிய அனுகூலங்களாகும்.

இந்த மகாநாடானது முன்னைய இரண்டு மகாநாடுகளை விட சற்று முக்கியமானதென்றே சொல்லுவோம். சுருக்கமாய்ச் சொல்லுவதானால் இம் மகாநாட்டில் இயக்கத்தின் முற்போக்கை ஒரு விதம் நிர்ணயிக்கக்கூடியதாக இருக்கும். வரவேற்புக் கமிட்டியார் அறிக்கைகளிலிருந்து ஏராளமான பிரதி நிதிகள் வருவதாய் தெரிவித்துக் கொண்டிருக்கின்றதாய் தெரியவருகின்ற தானாலும் எல்லாப் பாகங்களில் இருந்தும் வாலிபர்கள் தாராளமாய் வந்து சேரவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கின்றோம்.



மற்றும் மகாநாட்டிற்கு விஜயமாகும் பிரதிநிதிகள் அவசியம் தங்கள் தங்கள் வீட்டு பெண் மக்களையும் அழைத்து வரவேண்டியது மிகவும் அவசியமென வேண்டிக் கொள்ளுகின்றோம். பெண்கள் வருவதன் மூல மும், அவர்கள் உணர்ச்சி பெருவதன் மூலமும் தான் நமது கொள்கைகள் வீரிட்டெழ முடியுமேயொழிய ஆண்களின் ‘வீர உரைகளால் மாத்திரம்’ காரியங்கள் சாத்தியமாகி விடாது.

ஆதலால் பெண்மணிகளும் தாராளமாய் விஜயம் செய்ய வேண்டு மென்று ஆசைப்படுகின்றோம். பெண்மக்களுக்கு சாப்பாடும், பிரவேசமும் இலவசமென்று வரவேற்புக் கமிட்டியார் தீர்மானித்திருப்பது போற்றக் கூடியதாகும். பெண்கள் மகாநாட்டுக்கு திருமதி இந்திராணி பாலசுப்பிர மணியம் அம்மாள் அவர்களும், வாலிபர்கள் மகாநாட்டிற்கு திரு. நாராயணப் பெருமாள் M.L.C. (திருவனந்தபுரம்) அவர்களும் தலைமை வகிப்பார்கள்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 26.07.1931**



RangaRakes tamilnavarasam.com

# குத்தும் கொலை முயற்சியும்

## பம்பாய் கவர்னர் சுடப்பட்டார்

இவ்வாரத்தில் அரசியல் சம்பந்தமாய் குத்தும், கொலை முயற்சியும், கலகமும் நடைபெற்றிருப்பதாக பல இடங்களிலிருந்து செய்திகள் கிடைத்திருக்கிறது.

பம்பாய் கவர்னரை பூனாவில் ஒரு வாலிபன் ஒரு புத்தகசாலையைப் பார்வையிடும் போது அவரை கொல்லக் கருதி துப்பாக்கியால் சுட்டிருக்கிறான். ஆனால் அக்கவர்னர் அதிசயமாய் தப்பித்துக் கொண்டிருக்கிறார். அதாவது அவரது சட்டப்பையில் இருந்த ஒரு தினக்குறிப்புப் புத்தகத்தின் மூடிப் பொத்தானின் பேரில் அக்குண்டு பட்டதால் அது உடலில் பாயாமல் சட்டைப் பையிலேயே அக்குண்டு தாங்கிவிட்டது. மற்றொரு தரம் சுட்டும் அது அவர்மீது படவில்லையாம். ஏனெனில் அவன் குறிபார்க்கும் போதே கவர்னர் அந்த வாலிபனைப் பிடிக்கப் போனதால் வாலிபனின் குறி தவறி குண்டு அவர்மேலே படாமல் போய்விட்டது. பிறகும் கவர்னரே தான் அந்த வாலிபனை எட்டிப் பிடித்தாராம்.

இந்தமாதிரி மற்றவர்களுக்கு நேர்ந்திருந்தால் "கடவுளே அந்த சட்டைப் பையிக்குள் வந்து இருந்துகொண்டு குண்டைப் பிடித்துக் கொண்டார்" என்றுதான் சொல்லுவார்கள். ஆனபோதிலும் இந்த கவர்னருடைய தைரியத்தையும், அவருடைய மன உறுதியையும் நாம் மிகவும் பாராட்டுகின்றோம். அவர் தப்பித்துக் கொண்டதைக் கூட நாம் அவ்வளவு பாராட்டவில்லை. என்றைக்கிருந்தாலும் ஏதோ ஒருவகையில் செத்துத் தீரவேண்டிய அந்த கவர்னர் இந்த வாலிபன் குண்டினால் செத்திருந்தால் உலகம் ஒரு புரம் தாழ்ந்து போய்விடாது. ஆதலால் கவர்னர் தப்பித்துக் கொள்வதும் இறந்து போவதும் ஒன்று என்றேதான் கருதுகின்றோம். ஆனால் அகிம்சை அகிம்சை என்று பல்லவி பாடுவதின் தத்துவம் என்ன ஆயிற்று என்றுதான் கேட்கின்றோம். இதுபோலவே பஞ்சாப்பிலிருந்து வந்த இரண்டு இராணுவ அதிகாரிகளையும் யாரோ ஒருவன் குத்திவிட்டு ஓடிவிட்டான் என்றும் தெரியவருகின்றது. இவர்கள் இருவர்களுங்கூட பிழைத்துக் கொண்டார்களாம். இதனாலும் நாம் ஒன்றும் மகிழ்ச்சி அடையவில்லை. ஆனால் அஹிம்சைப் போரால் விளையும் பயன் என்பதை மக்கள் அறிய இதையும் ஒரு உதாரணமாய் எடுத்துக் காட்டுகின்றோம். அபிப்பிராய பேதப்பட்டவர்களையும் தங்கள் நன்மைக்கு விரோதமாக இருப்பவர்களையும் கொல்லுவதோ கொல்ல நினைப்பதோ மனித இயற்கைதானே ஒழிய வேரில்லை. கொல்லாமல் இருப்பதுதான் ஆச்சரியம். அதற்காகத்தான் அரசாங்கம், சட்டம், தண்டனை ஆகியவைகள் இருக்கின்றன. ஆதலால் அதிலும் ஆச்சரியப்படயிடமில்லை என்றாலும் தன் உயிருக்கும் துணிந்த ஒருவன் மற்றவனை கொல்ல நினைத்தால் அதற்கு யார்தான் என்ன செய்ய முடியும்? ஆனால் இந்த உணர்ச்சியை தப்பான வழியில் கிளப்பிவிடுவது என்பது மாத்திரம் பிசகு என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம். ஏனெனில் இச்சம்பவத்திற்கு அதாவது அவரைச் சுட்டதற்கு அச்சிறுவன் பொருப்பாளியல்ல. மற்றபடி யார் என்றால் அவ்வுணர்ச்சி அவனுக்கு உண்டாகும்படி நடந்து கொண்டவர்களே, உண்டாவதற்கு தகுந்தபடி பிரசாரஞ் செய்தவர்களே தான் பொருப்பாளியாக வேண்டும். சுடுபட்ட கவர்னர் இதை அறிந்து அந்த வாலிபனைப் பார்த்து 'இந்த முட்டாள்தனமான காரியம் செய்ய உன்னை தூண்டியவர்கள் யார்?' என்று கேட்டிருக்கிறார். எப்படியிருந்தாலும் இனி இம்முறைகள் தான் எல்லா நிலைகளிலும் சகஜமாக இருக்கப் போகின்றது என்பது மாத்திரம் நமது உறுதி. இந்தப்படி இனிநடப்பதற்கில்லாமல் இருக்க வேண்டுமானால் உலக வாழ்க்கைப் பத்ததியானது அடியோடு திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

**குடி அரசு - கட்டுரை - 26.07.1931**





RangaRakes tamilnavarasam.com

# புதுக்கோட்டை

புதுக்கோட்டையில் டவுன் முனிசிபல் சங்கத்தார் முனிசிபாலிடி வரியை வழக்கப்படி ஐந்து வருடங்களுக்கொரு தடவை பரிசீலனை செய்வது போன்ற முறையில் புதியவரிவிதிக்கப்பட்டதின் காரணமாக பொதுஜனங்கள் தங்களுடைய குறைகளை சமஸ்தான தலைமை அதிகாரி யாகிய உயர்திரு ராகவையாவிடம் கூட்டமாகச் சென்று சொல்லிக்கொண்டதில் அவர் அளித்த பதில் திருப்தியில்லாமல் போனதின் காரணமாய் ஜனங்கள் ஆத்திரப்பட்டு, பொறுமையிழந்து, பெரிய கலவரம் விளைவித்து விட்டதாகச் செய்தி கிடைத்திருக்கின்றது. அச்செய்திகளில் கலவரத்தின் பயனாய் பலாத்காரங்களும், அடிதடிகளும், உயிர்ச்சேதங்களும், பொருள் நஷ்டமுமேற்பட்டிருப்பதாக வும் தெரிய வருகிறது.

அதிகாரிகள் கலவரத்தை யடக்க சக்தியற்றவர்களாகி அவர்களும் நிலைமை தவறி நடந்து கொண்டதாகவும், உயிருக்கு பயந்து ஓடிவிட்டதாகவும் தெரியவருகிறது. அதிகாரிகள் ஓடியொழிந்துகொள்ள நேர்ந்ததை நம்மால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. கலகம் செய்தவர்கள் வரி போடப்பட்டக் காரணத்தைக் கொண்டு கலகம் செய்தார்களென்றாலும், கலகத்தின் தன்மையும், முக்கியமும் பார்ப்பனர் பேரிலுள்ள ஆத்திரமென்றே காணப்படுகின்றது.

அதாவது அந்த சமஸ்தானத்தில் பார்ப்பனர்களின் ஆதிக்கமும், அவர்களால் மக்களுக்கேற்பட்டு வந்த குறைகளே கலகத்தை சுலபத்தில் ஆரம்பிக்கச் செய்து விட்டதாய்த் தெரிகிறது. மெயில் பத்திரிகையில் காணப்படும் ரிப்போர்ட்டின் படி பார்த்தால் கலகக்காரர்களில் ஒருசாரார் பார்ப்பன அதிகாரிகளை உதைக்கவும், பார்ப்பனர் வீடுகளைக் கொள்ளை யடித்து நாசமாக்கவும், அவர்களது பெண்களை பயமுறுத்தும் வேலை யிலுமே ஈடுபட்டிருந்ததாய்த் தெரியவருகின்றது. புதுக்கோட்டை சமஸ் தானமானது வெகுகாலமாகவே தென்னிந்தியாவில் பார்ப்பன ஆதிக்கத்தில் தலைசிறந்து விளங்கி வந்திருக்கின்றது. அச்சமஸ்தானத்து பார்ப்பனர்கள் கால நிலை யறிந்து தங்களது நிலைமையைச் சரிபடுத்திக் கொண்டிருப்பார் களே யானால் இக்கலகம் இவ்வளவு கடினமான முறையில் நடைபெற்றி



ருக்காதென்றே சொல்லுவோம். புதுக்கோட்டை கலகத்தின் தத்துவமானது புதுக்கோட்டையுடன் நின்றுவிடுமென்றோ, பார்ப்பனர்- பார்ப்பனரல்லாதாரென்கின்ற முறையுடன் தான் நடைபெறுமென்றோ நாம் தீர்மானித்து விடமுடியவில்லை. மற்ற பிரதேசங்களிலும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் கீழ் ஜாதிக்காரர் - மேல் ஜாதிக்காரர், இந்துக்கள்-முஸ்லீம்கள்-முதலாளி-தொழிலாளி, ஜமீன்தரான்-குடியானவன், காங்கிரசுக் காரன்-காங்கிரசல்லாதவன் என்பன போன்ற முறைகளில் நடைபெற்றுத் தான் தீரும். ஏனெனில் மேற்கண்ட மாறுபட்ட பெயர்களின் மூலம் ஒருவரையொருவர் அடக்கி ஆளுவதும், ஏமாற்றி வருவதும் கஷ்டப்படு கின்ற ஜனங்களுக்கு விளக்கமாய் தெரிந்து விட்டதோடு, மக்களுக்குள் சுயமரியாதை உணர்ச்சியும் தோன்றிவிட்டது. எந்த உணர்ச்சியையும் மனிதன் அடக்கக்கூடுமானாலும், சுயமரியாதையின் உணர்ச்சியை அடக்கக் கூடுமென்பது மிகவும் சிரமமான காரியமேயாகும். ஏனெனில், மனிதர்களுக்கு உயிரைவிட சுயமரியாதையே பிரதானமென்பதாய்க் கருதுவது மனிதத்தன்மையின் பிறப்புரிமையாயிருப்பதால், அது காக்கப்படும் முறையில் கலவரங்கள் நடைபெற்றுதான் தீரும். அதை இனி எந்த அரசாங்கமோ, எந்த சுயராஜியமோ சுலபத்தில் அடக்கி விட முடியுமெனக் கருதுவது கனவாகத்தான் வந்து முடியும்.

ஆகையால், ஆங்காங்கு மக்களை ஏமாற்றியதன் மூலம் ஆதிக்கத்தில் உள்ள மக்கள் இதை ஒரு முன் எச்சரிக்கையாகக் கொண்டு நடந்து கொள்ள வேண்டுமாய் விரும்புகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 26.07.1931**



RangaRakes tamilnavarasam.com

# முகமதுநபி பிறந்தநாள் கொண்டாட்டம்

சகோதரர்களே!

இன்று இங்கு கூட்டப்பட்டிருக்கும் ஒரு மதசம்பந்தமான இந்த முக்கியக் கொண்டாட்டத்திற்கு என்னைத் தலைமை வகிக்க அழைத்ததை உண்மையிலேயே நான் ஒரு பெருமையாய்க் கருதுகின்றேன்.

ஏனெனில், என்னைப்பற்றி எல்லா மத பக்தர்களும் சொல்லும் குறைகள் உலகம் அறிந்ததேயாகும். அதாவது நான் மதங்களைக் குற்றம் சொல்லுகின்றவன் என்றும், மதமே கூடாதென்று சொல்லுகின்றவன் என்பதோடு மாத்திரமல்லாமல் கடவுளைப் பற்றியே கூடத் தகறாரு சொல்லுகின்றவன் என்றும் சொல்லப்படுகின்றவனாவேன்.

அப்படிப்பட்ட என்னை, உலகத்திலுள்ள மற்ற மதக்காரர்களை எல்லாம் விட அதிகமான மதபக்தி கொண்டவர்கள் என்று சொல்லப்படுகின்ற இஸ்லாம் மார்க்கத்தை அனுசரிக்கின்றவர்கள் என்பவர்களாகிய நீங்கள் கூப்பிட்டிருப்பது மிகவும் அதிசயமென்று சொல்லப்பட வேண்டும் அல்லவா?

நீங்கள் என்னைக் கூப்பிட்டது போல் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்கள் அவர்கள் மதசம்பந்தமான ஒரு நாயன்மாரோ, ஆழ்வாரோ பிறந்த நாள், செத்த நாள் "திருநக்ஷத்திரம்" என்று சொல்லப்படும் "விஷேச நாள்" கொண்டாட்டத்திற்கு ஒரு முஸ்லீமையோ, ஒரு கிறிஸ்துவனையோ சுலபத்தில் கூப்பிட்டு விடமாட்டார்கள். அது மாத்திரமல்லாமல் அவர்கள் பக்கத்தில் நீங்கள் இருக்கவும் சம்மதிக்க மாட்டார்கள். உங்களைத் தொட்டுவிட்டால் மறுபடியும் குளிக்காமல் அங்கு போக மாட்டார்கள். அவ்வளவு தூரம் போவானேன்; என்னையே கூப்பிட மாட்டார்கள். மற்றும் எந்த நாயன்மாருக்கும், எந்த ஆழ்வாருக்கும் குரு பூசையும், திருநக்ஷத்திரமும் நடத்துகின்றார்களோ அவர்கள் ஜாதி யாரையே கூப்பிடவோ, பக்கத்தில் வைத்து சாப்பிடவோ, தொடவோ சம்மதிக்க மாட்டார்கள்.



ஏனெனில், அந்தப்படி தொடாமலும், பக்கத்தில் வைத்துச் சாப்பிடாமலும் இருந்து கொண்டு, மற்றவர்களை வெறுப்பாகவும், இழிவாகவும் கருதுவதுமேதான் அவர்களது மதம் (இந்துமதம்) என்று கருதிக் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் தான் அநேகமாய் என்னை மதத் துரோகி என்று அழைப்பதாக நான் அறிந்து வருகின்றேன்.

பொதுவாகவே உலகத்தில் அநேகமான மக்களுக்கு "மதம்" பிரதானமென்று கற்பிக்கப்பட்டிருக்கின்றதே தவிர **மதம் என்றால் என்ன? அது எதற்கு?** என்கின்ற அறிவே மதபக்தர்கள்–மதத்திற்காக பிராணனைக் கொடுக்க இருக்கின்றவர்கள் என்பவர்களிலுங்கூட ஆயிரத்தில் ஒருவருக்கும் தெரியாதென்றே நான் தைரியமாய்ச் சொல்லுவேன். என்னைப் பற்றியே மதஞானமில்லாத மக்கள் பலவிதமாகப் பேசுவதையும், எழுதுவதையும் நான் கேட்டுக் கொண்டும், பார்த்துக் கொண்டும்தான் வருகின்றேன்.

அதாவது பௌத்த மதத்தைப் பற்றியும், இஸ்லாம் மதத்தைப் பற்றியும் அவற்றில் காணப்படும் ஏதாவது விஷயங்களைப்பற்றியும் பேசும்போது "மதமே தப்பானது, மதமே கூடாது என்று சொல்லுகின்ற சுயமரியாதைக்காரன் எப்படி இந்த மதங்களைப் பற்றி மாத்திரம் பேசலாம்?" என்பதாகச் சொல்லுகின்றார்கள். இப்படிப்பட்ட இவர்களை ஒருவித தெளிவற்றவர்களும், ஆத்திரத்தால் அறிவிழந்தவர்களும் என்று சொல்லுவதைவிட வேறு ஒன்றும் சொல்ல முடிவதில்லை.

மதத்தைப் பற்றி நான் பேச ஆரம்பித்த காலத்திலேயே நான் நன்றாய் விளக்கிவிட்டே பேசுகின்றேனேயொழிய பேசிவிட்ட பிறகு தத்துவார்த்தம் சொல்ல வருவதில்லை.

அதாவது 'மதம் என்பது மனிதனின் உலக வாழ்க்கையின் நடப்பிற்கு ஒரு வழிகாட்டியானக் கொள்கைகளைக் கொண்டது. அது நம்மைப் போன்ற ஒரு மனிதனால் ஏற்படுத்தப்பட்டது. அது கால தேசவர்த்தமானப்படி மக்கள் சௌகரியத்திற்காக திருத்தியமைக்கக்கூடிய உரிமையுள்ளது. மனிதனுடைய அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் இடம் தரக்கூடியது' என்று சொல்லுகின்ற மதத்தைப் பற்றி நான் எப்போதும் அது கூடவே கூடாது என்று சொன்னதே கிடையாது. அந்தப் பொருளின்மீது இருப்பதாக ஒப்புக் கொள்ளுகின்ற மதங்களிடம் எனக்கு அதிகத் தகாறாரே கிடையாது.

அப்படிப்பட்ட மதம் என்பது வேண்டியதேதான். அதாவது ஒரு பொதுசங்கமோ, ஒரு வாசகசாலையோ, ஒரு வியாபாரச் சங்கமோ, ஒரு வக்கீல் சங்கமோ, ஒரு விளையாட்டுச் சங்கமோ, ஒரு சீட்டாட்ட சபையோ என்பதாக ஒரு ஸ்தாபனமிருந்தால் அந்த ஸ்தாபனத்திற்குச் சில விதிகள் இருக்க வேண்டியது அவசியமேயாகும். அந்த விதி அந்த ஸ்தாபன மக்கள் நன்மைக்கும், ஸ்தாபனம் சரிவர நடந்தேறுவதற்கும் அனுகூலமானதாகவும்,



RangaRakes tamilnavarasam.com

அந்த ஸ்தாபனக்காரர்களால் ஏற்பட்டதாகவும் இருக்க வேண்டும் என்பது போலவே கூடி வாழ நினைக்கும் மனிதனின் உலக வாழ்க்கை நலத்திற்கும் ஏதாவது விதிகள் வேண்டும் என்பதில் குற்றமில்லை. அவ்விதிகளுக்குப் பெயர், கொள்கை என்றாலும், திட்டம் என்றாலும், மதமென்றாலும் மார்க்கமென்றாலும் ஒன்றேதான்.

நமது நாட்டில் பல பாஷைகள் வந்து கலந்து விட்டதால் கொள்கை களுக்கு மதமென்றும், சமயமென்றும், மார்க்கம் என்றும் சொல்லப்படு கின்றது என்பதாகப் பண்டிதர்கள் சொல்லுகின்றார்கள். ஆதலால் அந்த அளவில் நான் எந்த மதத்துடனும் தகறாருக்கு வரக்கூடியவனல்ல. இதில் ஒன்றும் ஒளிமறைவோ, தத்துவார்த்தமோ இல்லை. வெளிப்படையாகவே சொல்லுகின்றேன்.

ஆனால் 'மதம் மனிதனுடைய ஆத்மார்த்தத்திற்கு ஏற்பட்டது. அது கடவுளுக்கும், மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்குவது - கடவுளைக் காண்பதற்கும் அடைவதற்கும் ஒரு சாதனமாயிருப்பது-அதை உண்டாக் கினது கடவுள், அல்லது கடவுள் அவதாரம், அல்லது கடவுள் தன்மை, அல்லது கடவுள் மகன் அல்லது மனிதத் தன்மைக்குமேற்பட்ட ஒரு தெய்வீகத்தன்மை -அதில் என்ன சொல்லியிருந்தாலும் அது மனிதனுக்குப் புரியாவிட்டாலும் அது பயன்படாவிட்டாலும் மனிதனால் பின்பற்ற முடியாவிட்டாலும் அதை மனிதன் ஒப்புக் கொண்டுதான் தீரவேண்டும். அதன் பேரால் ஏற்பட்ட நூல்கள் சாஸ்திரங்கள் என்பவைகளை எல்லாம் நம்பித்தானாக வேண்டும்- தனக்கு விளங்காததை யெல்லாம் நம்பித்தானாக வேண்டும்-அதில் ஒரு விஷயத்தைக் கூட நழுவவிடக்கூடாது-மாற்றவும் கூடாது-புதிய மாதிரி சௌகரியத்திற்குத் தகுந்தபடி எதையும் சேர்த்துக் கொள்ளவும் கூடாது' என்பது போன்ற 'நீதியையும், நிபந்தனைகளையும் கட்டளைகளையும் கொண்டதுதான் மதம்' என்று சொல்லப்படுமெதையும் நான் என்னைப் பொறுத்தவரை சிறிதும் ஒப்புக்கொள்ளாதவன் என்பதோடு அப்படிப்பட்ட மதம் மனித சமூகத்தின் வளர்ச்சிக்கும், சுதந்திரத்திற்கும், முற்போக்கிற்கும், சுயமரியாதைக்கும் விரோதமானது என்று சொல்லுவ தோடு கூட மனித சமூக நன்மையை உத்தேசித்து அவை அழிக்கப்பட வேண்டியது அவசியமென்றும் கருதுகின்றேன். அன்றியும் நான் எந்த மதம் என்பதைப் பற்றிப் பேசும் போதும் இந்த விஷயங்களுக்கு மாறாக நான் எப்போதும் பேசினதே கிடையாது. நான் பௌத்த மதத்தைப் பற்றியும், இஸ்லாம் மதத்தைப் பற்றியும், இந்து மதத்தைப் பற்றியும் பேசும் போதெல்லாம் இந்த முடிவின் பேரிலேயே பேசுகின்றேன். இந்த உண்மைப் படியுள்ள தாரதம்மியங்களைப் பற்றிதான் ஒரு மதத்திற்கும் மற்ற மதத்திற் கும் உள்ள வித்தியாசங்களைப் பற்றியும் பேசுகின்றேன். இந்த உண்மையின் பேரில்தான் எந்தமதத் தலைவர்களைப் பற்றியும் நான் பேசுகின்றேன்.



திரு.முகமது நபியவர்களையும் மற்றபடி யார் எப்படி நினைத்துக் கொண்டாலும் நான் அவரை ஒரு மனிதர் என்றும் மனிதரைப் போலவே தாயும் தகப்பனும் (ஆணும் பெண்ணும்) கூடிக் கருத்தரித்து பிறந்த பிள்ளையென்றும் கருதிதான் அவரால் செய்யப்பட்டதாகச் சொல்லும் விஷயங்களில் அநேகத்தை நான் புகழ்கின்றேன். அதற்காகவே அவரை யும் பாராட்டுகிறேன். அப்படிச் சொல்லப்படுபவைகளே அந்த மார்க்கத் திற்கு ஒரு பெருமை என்றும் நினைக்கின்றேன். பௌத்தரும் அப்படித்தான். ஆனால் மற்ற மதக்காரர்களோ தங்கள் மதத்தலைவரை ஒரு மனிதர் என்று சொன் னாலே கோபித்துக் கொள்ளுகின்றார்கள்.

கழுதையினுடையவோ, குதிரையினுடையவோ, நாயினுடையவோ வயிற்றிலிருந்து தோன்றினார் என்றாலும் ஒப்புக்கொள்வார்கள். மனிதனுக் கும் மனுஷிக்கும் (கலந்து) பிறந்தது என்றால் அதில் கௌரவமில்லை என்றே கருதுவார்கள். மனிதத்தன்மைக்கும் மனிதன் அறிவிற்கும் மேற் பட்டதாக மக்களுக்குப் புரியாத ஏதாவது ஒன்றைச் சொல்லாமல் ஒரு மதத்தை நிர்ணயிக்க அநேக மக்கள் சம்மதிப்பதேயில்லை.

## இஸ்லாம் இந்து வித்தியாசம்

நிற்க, நான் இந்து மதத்தைப் பற்றியோ இஸ்லாம் மதத்தைப்பற்றியோ பேசுவது என்பதில் இரண்டு மதத்தினுடையவும் ஆதாரங்களை ஆராய்ச்சி செய்து பேசுவதாக யாரும் கருதிவிடாதீர்கள். அந்த வேலையை ஒரு பரீக்ஷை மாணவனுக்குக் கொடுத்துவிடுங்கள். அதில் என்ன இருக்கின்றது என்பதில் எனக்குக் கவலையில்லை. ஆனால் நான் பேசுவது என்பது இரண்டு மதத்தைச் சேர்ந்ததாகச் சொல்லிக் கொள்ளும் பெரும்பான்மை யான மக்களிடை இருந்து வரும் பிரத்தியட்சக் கொள்கைகள் சம்பந்தமானக் காரியங்களையும் அதனால் அவரவர்கள் பிரத்தியட்சத்தில் அடைந்து வரும் பலன்களையும் பற்றித் தான் பேசுகின்றேன்.

பொதுவாகவே மதத்தின் தன்மையை இதிலிருந்துதான் நிர்ணயிக்க வேண்டுமே யொழிய ஏட்டில் என்ன இருக்கின்றது என்று பார்ப்பதில் பயனில்லை. அது போலவே அந்தந்த மதக்காரர்கள் போட்டுக் கொள்ளும் வேஷமே தான் மதம் என்றாலும் அதிலும் பயனில்லை.

அந்தந்த மதங்களில் மக்கள் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள்? மக்கள் எப்படி நடத்தப் படுகின்றார்கள்? அதனால் அந்த சமூகம் என்ன பலனடைந்திருக்கின்றது? என்பது போன்றவைகள்தான் மதத்தின் மேன்மையை அளக்கும் கருவியாகும். அப்படிப் பார்ப்போமேயானால் அநேக விஷயங்களில் இந்து மதத்தைவிட (கொள்கைகளைவிட) இஸ்லாம் மதமே (கொள்கைகளே) மேன்மையான தென்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இஸ்லாமானவர்களிடத்தில் இந்துக்களிடம் இல்லாத பல நல்ல கொள்கைகள் இருக்கின்றன. அதனால் இந்து மதத்தில் இல்லாத மேன்மை



RangaRakes tamilnavarasam.com

இஸ்லாம் மதத்தில் இருப்பதாகத்தான் கருதவேண்டும். அதாவது இஸ்லாம் மக்களிடத்தில் தங்களுக்குள் சமத்துவம், சகோதரத்துவம் ஒற்றுமை அன்பு முதலிய குணங்கள் இருக்கின்றன. வீரம் இருக்கின்றது. வீரம் என்றால் இலக்ஷியத்திற்கு உயிரைவிடத் துணிவது என்பதுதான். இஸ்லாம் மதத்தில் ஜாதி உயர்வு – தாழ்வு இல்லை அவர்களுக்குள் தீண்டாதவன் இல்லை. கிட்ட இருந்து சாப்பிடக்கூடாதவன் இல்லை. அவர்களது தெருவில் நடக்கக் கூடாத மனிதன் குளத்தில் இறங்கக்கூடாத மனிதன் கோவிலுக்குள் புகக் கூடாத மனிதன் இல்லை. இதை யோக்கியமான இந்துக்கள் ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும்.

இஸ்லாம் மார்க்கக் கடவுளுக்கு ரூபம் கற்பித்து வணங்குவதில்லை. அதற்குப் பெண்டு பிள்ளை வைப்பாட்டி கற்பிப்பதுமில்லை. அதற்குப் பூஜை நைவேத்தியம் உற்சவம் நகை துணிமணி முதலியவற்றிற்குக் கோடிக் கணக்கான பணங்களைச் செலவு செய்வதில்லை. மற்றும் அவர்களது பெண்களுக்கு சொத்துரிமை கல்யாண ரத்து விதவைமணம் ஆகியவை களும் உண்டு. அவர்களுக்குள் அன்பையும், வீரத்தையும் பார்த்து நாம் அவர்களை முறடர்கள் என்கின்றோம். அதுபோலவே இந்துக்களுக்குள் ஒருவருக்கொருவர் உள்ள துவேஷத்தையும் பயங்காளித்தனத்தையும் நாம் பார்த்து அவற்றை நாம் சாதுத்தன்மை என்று சொல்லிக்கொள்ளுகிறோம். ஒரு கிராமத்தில் ஒரு இஸ்லாமானவனை ஒரு இந்து அடித்தால் 100 இஸ்லா மானவர்கள் வந்து விழுந்து விடுகின்றார்கள். இதைத்தான் நாம் முறட்டுத் தனம் என்கின்றோம். ஒரு இந்துவை ஒரு இஸ்லாமானவன் அடித்தால் மற்ற இந்துக்கள் "அவன் யாரோ அடிபடுகிறான், நமக்கென்ன கவலை" யென்று சொல்லி சும்மா இருந்து விடுகிறார்கள். இல்லாவிட்டால் அடிக்குப் பயந்து கொள்ளுகிறார்கள். இதைத்தான் சாதுத்தனம் என்று பெருமை பேசிக் கொள்ளுகிறோம். அன்பும் சகோதரத்தன்மையும் இந்துவிடம் எங்கிருக் கின்றது? "ஆடு கோழி தின்னாதே" என்று சொல்லுவதில் மாத்திரம் இருக் கின்றது. மக்களை இழிவாய்க் கருதுவது பிறவியின் பேரால் தாழ்த்தி இம்சிப் பது கொடுமைப்படுத்துவது ஆகிய காரியங்களைச் செய்து கொண்டிருப்ப வன்தான் "அன்பு! அன்பு!! ஜீவகாருண்யம்!!!" என்று பேசுகிறான். அன்பின் உண்மையை அறியவே இல்லை. இஸ்லாம் கொள்கையில் வேறு எங்கு எப்படி இருந்தாலும் சமூக வாழ்விலும், 'ஆண்டவன்' முன்னிலை என்பதி லும் மனிதனை மனிதனாய்க் கருதப்படுகின்றது.

இந்துக் கொள்கையில் வேறு எங்கு ஒற்றுமையாய் இருந்தாலும் சமூக வாழ்விலும் 'கடவுள்' முன்னிலை என்பதிலும் மனிதனை மிருகத்தைவிட, மலத்தை வாயில் கௌவிக்கொண்டு சொல்லும் மிருகத்தை விடக் கேவல மாய் மதிக்கப்படுகின்றது. இதை நாம் பிரத்தியக்ஷத்தில் காண்கின்றோம். இதைத் தான் அன்புமதம் சமத்துவமதம் என்று இந்துக்கள் தைரியமாய்ச் சொல்லுகின்றார்கள்.



மதத் தத்துவ நூலை–வேதம் என்பதை இஸ்லாம் மார்க்கம் செருப்புத் தைக்கிற சக்கிலியும் மலம் அள்ளும் தோட்டியும் படித்தாக வேண்டும், பார்த்தாக வேண்டும், கேட்டாக வேண்டும் என்று சொல்லி கற்றுக் கொடுப் பதையும் பார்க்கின்றோம். இந்துமார்க்க வேதம் என்பதை ஒரே ஒரு சிறுகூட்டம் தவிர (பார்ப்பனன் தவிர) மற்றயாவரும் அவன் பிரபுவானாலும் சரி ஏழையானாலும் சரி யோக்கியனானாலும் சரிஅயோக்கியனானாலும் சரி ஒருவனுமே பார்க்கவும் கேட்கவும் படிக்கவும் கூடாது என்று இன்னும் நிர்பந்தப்படுத்தி அந்தப்படியே இன்றும் நடந்து வருகின்றது. இதைத்தான் சமத்துவ நோக்கம் கொண்ட மதம் என்று இந்துக்கள் இன்றும் இன்னமும் சொல்லுகின்றார்கள். 'மொண்டி முடம், கூன் குருடு ஆகியவர்களுக்கே உதவி செய்' என்று இஸ்லாம் மதம் பிரத்தியக்ஷத்தில் சொல்லுகின்றது. 'சோம்பேரிகளுக்கே – ஊரார் உழைப்பில் உண்டு களிப்பவர்க்கே உதவி செய்' என்று இந்துக்களின் கொள்கை பிரத்தியக்ஷத்தில் சொல்லுகின்றது.

இஸ்லாம் கொள்கை மக்களை ஒன்று சேர்க்கின்றது. இந்தியாவில் கொஞ்சகாலத்திற்கு முன் ஒரு கோடியை விட குறைந்த எண்ணிக்கையுள்ள முஸ்லீம்கள் இன்று 8 கோடி மக்களாய் சேர்ந்து இருக்கின்றார்கள். இன்றும் யாவரையும் எப்படிப்பட்ட இழிவானவர் என்று இந்து மார்க்கத்தாரால் கருதப்பட்டவர்களையும் தனக்குள் சேர்த்துக் கொள்ள கையைநீட்டுகின்றது. இந்துக்களின் கொள்கை எப்படிப்பட்ட மேலானவன் என்று மதிக்கப்பட்ட வனையும் உள்ளே விட மறுத்து வாசல்படியில் காவல்காக்கின்றது. தன்ன வனையும் வெளியில் பிடித்துத் தள்ளுகின்றது.

கள் குடியைப் பற்றி வாய்த் தப்பட்டை அடிக்காத இஸ்லாம் கொள்கை முஸ்லீம்களில் 100க்கு 99 பேர்களை குடியிலிருந்து விலக்கி யிருக்கின்றது. குடிக்கக் கூடாதென்று சதா வாயில் தப்பட்டை அடித்துக் கொண்டு ஓட்டு வேண்டியபோது கள்ளுக்கடையில் நின்று மறியல் செய்யும் இந்து கொள்கையானது இந்துக்களில் 100க்கு 51 பேர்களுக்கு மேல் குடிகாரர்களாகச் செய்திருப்பதோடு இந்து கடவுளுக்கும் குடி வகைகள் வைத்து கோயில்களில் பெரிய பெரிய ஜாதியார் என்பவர்களால் நைவேத்தியம் செய்து பிரசாதமாய் சாப்பிடப்படுகின்றது.

இஸ்லாம் கொள்கையை வலியுறுத்துகின்ற காரணத்தாலேயே இஸ்லாமியர்கள் அதிகமாயுள்ள நாடுகள் இஸ்லாம் அரசர்களால் ஆளப்படு கின்றன. இந்து கொள்கையை வலியுறுத்துகின்ற காரணத்தாலேயே இந்துக்கள் அதிகமாகியுள்ள நாட்டை 'அன்னியர்கள்' ஆளுகின்றார்கள்.

இந்தப்படியாக வெளிப்படையாய்த் தெரியும் கொள்கைகளாலேயே இந்துக் கொள்கைகளை விட இஸ்லாம் கொள்கைகள் எவ்வளவோ மேன்மையான பலன் கொடுத்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தப் படி நான் சொல்லுவதற்காக கோபிக்கும் சகோதரர்கள் முதலில் நான்



RangaRakes tamilnavarasam.com

சொல்லுவது உண்மையா? அல்லது அடியோடு பொய்யா? என்று பார்த்துப் பிறகு பேசுங்கள். பிறகு 'கொள்கைக்காக உயிரை விடுங்கள்'.

## ஏன் சொல்லுகிறேன்

ஆதிதிராவிடர்களை நான் 'இஸ்லாம் கொள்கையைத் தழுவுங்கள்' என்று சொன்னதற்காக அநேகம் பேர் என் மீது கோபித்துக் கொண்டார்கள். அவர்களைப் பற்றி நான் கோபித்துக் கொள்ளவில்லை. அவர்களுக்குச் சொந்த அறிவுமில்லை, சொல்வதையும் கிரகிக்க சக்தியுமில்லை. சிலருக்குத் தங்கள் மேன்மை போய்விடுமே, தங்களுக்கு அடிமைகள் இல்லாமல் போய்விடுமே என்கின்ற சுயநல எண்ணம் என்றே நான் கருதிவிட்டேன். ஏனெனில் 'மோட்சம் அடைவதற்காக' வென்று நான் ஆதிதிராவிடர்களை இஸ்லாம் கொள்கைகளைத் தழுவுங்கள் என்று சொல்லவில்லை, அல்லது 'ஆத்மார்த்தத்திற்கோ' 'கடவுளை அறிவதற்கோ' நான் அப்படிச் சொல்ல வில்லை. ஆதி திராவிடர்களின் தீண்டாமையைப் போக்குவதற்கு சட்டம் செய்வது, சத்தியாக்கிரஹம் செய்வது முதலியவை போலவே இஸ்லாம் கொள்கையைத் தழுவுவது என்பதும் ஒரு வழி என்றே சொன்னேன். இனியும் சொல்லுகின்றேன்.

சட்டம் செய்வது கஷ்டம். செய்தாலும் அமுலில் வருவதும் கஷ்டம். சத்தியாக்கிரஹம் செய்வதும் கஷ்டம். செய்தாலும் வெற்றி பெறுவதும் சந்தேகம். இவற்றால் துன்பமும், தோல்வியும் கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆனால் ஆதிதிராவிடர்களுக்கு இஸ்லாம்கொள்கையை ஏற்றுக் கொண்டேன் என்று சொல்வதில் என்ன கஷ்டம்? அதில் தோல்வியோ துன்பமோ ஏதாவது உண்டா? அல்லது அன்னியருக்கு ஏதாவது கஷ்டம் உண்டா? அவன் ஆஸ்தீகனாய் இருந்தால் என்ன? நாஸ்தீகனாய் இருந்தால் என்ன? உண்மை இஸ்லாம் ஆனால் என்ன? பொய் இஸ்லாம் ஆனாலென்ன? யாருக்கும் எவ்வித கஷ்டமும் இல்லாமல், வேண்டுமானால் எந்தவித மன மாறுதல் கூட இல்லாமல் தன்னுடைய இழிவையும் கஷ்டத்தையும் விலக்கிக் கொள்ள ஆசையும் அவசரமும்பட்ட ஒரு மனிதன்தான் மாலை 5-00 மணிக்கு இஸ்லாம் கொள்கையை ஏற்றுக் கொண்டதாய்ச் சொல்லி 5-30மணிக்கு 'தீண்டாதவன்' என்கின்ற இழிவிலிருந்து மீண்டு தெருவில் நடக்க உரிமை பெற்று மனிதனாவதில் ஏன் மற்றவர்கள் ஆக்ஷேபிக்க வேண்டும்? என்பது எனக்கு விளங்கவில்லை. கேவலம் வயிற்றுச் சோற்றுக் காக 100க்கு 90 மக்கள் என்னென்னமோ அவரவர்களாலேயே இழிவான குற்றமான காரியம் என்று சொல்லப்படுவதை எல்லாம் செய்கின்றார்கள். அப்படி இருக்க இதில் என்ன இழிவோ குற்றமோ இருக்கின்றது என்று கேட்கின்றேன். உலகில் மதங்கள் அடியோடு ஒழிக்கப்படும் போது இஸ்லாம் மதமும் ஒழியும். அதுபோது இந்த ஆதிதிராவிடர்கள் ஏற்றுக் கொண்டதும் ஒழிந்துபோகுமே தவிர அது மாத்திரம் நிலைத்து விடாது.



அதற்காக அதிகக் கஷ்டமும் இல்லை. ஆகையால் எது எப்படியானாலும் தீண்டாமை ஒழிய வேண்டுமென்றால் தீண்டாதார் எனப்படுபவர்கள் இஸ்லாம் கொள்கையைத் தழுவ வேண்டியது என்பது ஒரு வழியேயாகும்.

ஏன் கிறிஸ்து மதத்தைத் தழுவக்கூடாது? ஆரிய சமாஜத்தைத் தழுவக் கூடாது? என்று கேட்கலாம். கிறிஸ்துமதக் கொள்கைகள் புஸ்தகத் தில் எப்படியிருக்கின்றது என்பது பற்றி நான் சொல்லவரவில்லை. பிரத்தி யட்சத்தில் பறக்கிறிஸ்துவன், பார்ப்பாரக்கிறிஸ்துவன், வேளாளக் கிறிஸ்து வன், நாயுடு கிறிஸ்துவன், கைக்கோளக் கிறிஸ்துவன், நாடார் கிறிஸ்துவன் என்பதாகத் தமிழ்நாடு முழுவதும் இருப்பதைப் பார்த்து வருகின்றேன்.

இஸ்லாம் மார்க்கத்தில் பாப்பார முஸ்லீம், பற முஸ்லீம், நாயுடு முஸ்லீம், நாடார் முஸ்லீம் என இருக்கின்றதா? என்று கேட்கிறேன்.

இங்குள்ள கிறிஸ்துவ சகோதாரர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. வேண்டுமானால் வெட்கப்படுங்கள் என்று வணக்கமாக தெரிவித்துக் கொள் கிறேன். ஆரியசமாஜம் என்பதும் ஒரு வேஷமேதான். அதுவும் பயன் அளிக்கவில்லை.

உதாரணமாக வைக்கம் சத்தியாக்கிரகத்தில் ஆரிய சமாஜத் தீயர் களையும், கிறிஸ்துவப் புலையர்களையும் தெருவில் நடக்கவிடவில்லை. இஸ்லாமானவன் தாராளமாய் விடப்பட்டான். பாலக்காட்டிலும் அப்படியே நடந்தது. ஒரு நாள் பாலக்காட்டில் ஒரு செர்மன் என்கிற இழிவுபடுத்தப்பட்ட ஜாதியிலிருந்த தீண்டாதவன் ஒருவன் இஸ்லாமாகி தடுக்கப்பட்டத் தெரு வழியாகப் போனான். அப்போது அவனை ஜவுளிக் கடைப் பார்ப்பனரும் வெற்றிலைக் கடை நாயரும் தெருவுக்கு வந்து நின்று பார்த்தார்கள். உடனே அங்கு இங்கிருந்த ஒரு மாப்பிள்ளை (இஸ்லாமானவன்) "எந்தடா? பன்னிக் கூத்தச்சி மகனே, அவனெ நோக்குன்னு" என்று கேட்டான். அதாவது "என் னடா? பன்றி தேவடியா மகனே! அவனைப் பார்க்கிறாய்" என்று கேட்டான். செர்மனாயிருந்த இஸ்லாம் சிரித்துக் கொண்டே போனான். பார்ப்பனனும் நாயரும் தலைகுனிந்து கொண்டார்கள். இது பிரத்தியட்சத்தில் நடந்த சம்பவம் - சந்தேகமில்லாமல் இனியும் நடக்கக் கூடிய சம்பவம்.

ஆகவே இஸ்லாம் மார்க்கம் செய்கின்ற நன்மை இந்து மார்க்கம் செய்வதைவிட அதிகமா? இல்லையா? என்று பாருங்கள்.

ஆனால் நான் இஸ்லாம் சமூகக் கொள்கைகள் முழுவதையும் ஒப்புக் கொண்டதாகவோ அவைகள் எல்லாம் சுயமரியாதைக் கொள்கைகள் என்று சொல்லுவதாகவோ யாருந் தீர்மானித்து விடாதீர்கள். அதிலும் பல விரோத மான கொள்கைகளைப் பார்க்கிறேன். இந்து மார்க்கத்தில் எதை எதை குருட்டு நம்பிக்கை மூடப்பழக்கம் பாமரத்தன்மை என்கின்றோமோ



RangaRakes tamilnavarasam.com

அவைபோன்ற சில நடவடிக்கை இஸ்லாம் சமூகத்திலும் பலர் செய்து வருவதைப் பார்க்கின்றோம். சமாது வணக்கம் பூஜை நைவேத்தியம் முதலியவைகள் இஸ்லாம் சமூகத்திலும் இருக்கின்றன. மாரியம்மன் கொண்டாட்டம் போல் இஸ்லாம் சமூகத்திலும் அல்லாசாமி பண்டிகை நடக்கின்றது. மற்றும் நாகூர் முதலிய 'ஸ்தல விசேஷங்களும்' சந்தனக்கூடு தீமிதி முதலிய உற்சவங் களும் நடைபெறுகின்றன. இவைகள் குர்ஆனில் இருக்கின்றதா? இல்லையா? என்பது கேள்வியல்ல. சமூகத்தில் பிரத்தியட் சத்தில் நடக்கின்றதா? இல்லையா? என்பது தான் கேள்வி. ஒரு சமயம் களை முளைத்தது போல் புதிதாக தோன்றினவையாகவுமிருக்கலாம். சாவகாச தோஷத்தால் ஏற்பட்ட வைகளாகவும் இருக்கலாம். ஆனால் இவை கள் ஒழிக்கப்பட்ட பின்பு தான் எந்த சமூகமும் தங்களிடம் மூடக் கொள்கை கள் இல்லை என்று பெருமை பேசிக்கொள்ள முடியும். ஆனால் ஒரு விசேஷம், சென்ற வருஷம் ஈரோடு அல்லாசாமி பண்டிகையைப் பற்றி ஈரோடு கூட்டத்தில் நான் கண்டித்துப் பேசினேன். எனது ஈரோடு முஸ்லீம் சகோதரர்கள் அதற்கு சிறிதும் கோபித்துக் கொள்ளாமல் வெட்கப் பட்டார்கள். அதன் பயன் இந்த வருஷம் அடியோடு அந்தப்பண்டிகை அங்கு நின்றுவிட்டது எனக்கு மிக சந்தோஷம். கோபித்துக் கொண்டி ருந்தால் இந்த வருடமும் நடத்தியிருப்பார்கள். ஆனால் இந்து மார்க்கத் திலோ என்னுடைய ஆதிக்கத்தில் இருப்பதுபோல பிரத்தி யாருக்கு காணப்பட்ட சில உற்சவங்களை நிறுத்த ஏற்பாடு செய்தேன். கடைசியாக அது இந்த இரண்டு வருடமாய் என்னால் நடத்தப்படுவதாகக் காணப் பட்டு வந்ததைவிட பலமடங்கு மேலாக நடத்தப்பட்டுவிட்டது. இந்தக் கூட்டத்தார் தான் தங்களை மேலான மதக்காரர் என்றும் தேசீயவாதிகள் என்றும் பகுத்தறிவுக்காரர்கள் என்றும் சொல்லிக் கொள்ளுகின்றார்கள்.

அதோடு மாத்திரமல்லாமல் எம்மீது கோபித்துக் கொண்டு பாமர மக்களைத் தூண்டி விட்டு வையும்படியும் 'சாபம்' கொடுக்கும்படியும் செய்தார்கள். இதன் பயனாகவே இந்தத் தமிழ்நாட்டில் எனக்கு ஒரு பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர் தேர்தலுக்குக்கூட ஓட்டு கிடைக்காது. அது எப்படியோ போகட்டும். உலகமெல்லாம் ஒரு கொள்கையின் கீழ்வர வேண்டுமானால் இஸ்லாம் கொள்கையும் இணங்கிவரத் தயாராயிருக்க வேண்டும். உலகம் சீர்திருத்தத்திற்கு அடிமைப்பட்டது என்பதை மறந்து விடாதீர்கள். மனித சமூகம் அடையவேண்டிய சீர்திருத்தம் இன்னமும் எவ்வளவோ இருக்கின்றது என்பது உறுதி.

மனிதன் காலதேசவர்த்தமானத்திற்கு கட்டுப்பட்டவனாவான். மனிதனது மார்க்கமோ கொள்கையோ கூட அதில் பட்டதேயாகும். ஏனென்றால் மார்க்கம் என்பது மனிதன் வாழ்க்கைக்கு வழிகாட்டி என்ப தைக் கொண்டு சொல்லுகின்றேன். வழி என்பது அடிக்கடி மாறக்கூடியதே யாகும். கால்நடை வழி, ஆடு, கழுதை, குதிரை மூலம் செல்லும் வழி, கட்டை



வண்டி வழி, மோட்டார் வழி, ரயில் வழி, ஓடம் கப்பல் வழி, கடைசியாக ஆகாய விமானவழி ஆகிய ஒவ்வொரு காலத்திற்கு தகுந்ததுபோல் வழி திருத்தப் படவேண்டும். அதுபோலவே மனித வாழ்க்கை வழியும் காலத்தின் கோலமாய் தேசத்தின் தன்மையாய் சந்தர்ப்பத்தின் அவசியமாய் மாறியே ஆகவேண்டும் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். மாறுதலுக்கு இடம்கொடுக்கும் என்கின்ற மார்க்கமே சரியான மார்க்கம்.

உதாரணமாக இஸ்லாம் மார்க்கத்தை எடுத்துக் கொண்டாலும், துருக்கி இஸ்லாம் சமூகத்தின் நடவடிக்கையும், ஆப்கானிஸ்தான் சமூக நடவடிக்கையும், இந்தியா இஸ்லாம் சமூக நடவடிக்கையும் ஒன்று என்று சொல்லிவிட முடியாது. இந்தியாவிலேயே ஈரோட்டுக்கும், தஞ்சைக்கும், சாத்தான் குளத்திற்குமே அனேக வித்தியாசம் காணப்படுகின்றது. இவைகள் மூன்றும் ஒன்றுபடும்போது யாராவது இருவரோ அல்லது மூன்றுபேரும் ஆளுக்குக் கொஞ்சமோ தங்கள் பழக்க வழக்கங்களை நம்பிக்கைகளை மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும். நான் சொல்லும் மாற்றமெல்லாம் முக்கியமாய் நடை உடை பாவனையைப் பொருத்ததேயாகும். மனமாற்றத் தைப் பற்றி இப்போது சொல்ல வரவில்லை. அவை அவரவர்கள் சொந்த சொத்து. மற்றவர்களுக்குத் துன்பமோ தொல்லையோ இல்லாத வழியில் எவ்வித அபிப்பிராயத்தையும் கொள்ள யாருக்கும் உரிமையுண்டு. அறிவு பெருக்கமும் அதனால் மனமாறுதலும் சுபாவமேயாகும்.

ஆகவே சகோதரர்களே! நான் சொன்னவை எனது சொந்த அபிப் பிராயம். என் சொந்த அனுபவ வாயிலாகக் கண்டது என்பவைகள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆதலால் இதையே முழு உண்மையென்று கருதி விடாமல் உங்கள் அறிவு அநுபவம் ஆகியவைகளைக் கொண்டு முடிவுபெற்று உங்கள் இஷ்டப்படி நடக்க உரிமையுடையவர்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

*குறிப்பு: 28.07.1931 ஆம் நாள் சாத்தான்குளத்தில் ( திருநெல்வேலி மாவட்டம் ) நடைபெற்ற முகமதுநபி பிறந்தநாள் கொண்டாட்டத்தில் தலைமையேற்று ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 02.08.1931**



RangaRakes tamilnavarasam.com

# சிக்கனம்

## சிக்கனமா? வரி குறைப்பா?

உணவுப் பொருள்களின் விலை சுமார் 30 வருஷத்திற்குமுன் இருந்தது போலவும், சிலவற்றிற்கு அதைவிட மலிவாகவும் குறைந்து போய் சர்க்காரார் வரிகட்டுவதற்கு மார்க்கமில்லாமல் குடியானவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் அதிகக்கஷ்டம் ஏற்பட்டு மக்கள் புழுவாய்த் துடித்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில், பொதுஜனத் தலைவர்கள் என்பவர்களும், தேசீயத் தலைவர்களென்பவர்களும், தேசீய ஸ்தாபனம் என்பவைகளும் சிறிதும் ஈவு, இரக்கம் யோக்கியப் பொறுப்பு இன்றி உத்தியோகங்கள் பெறவும், பெரும் பெரும் உத்தியோகங்களை சிருஷ்டிக்கவும் முயற்சிகள் செய்வதிலும், அவற்றிற்காகப் போட்டி போடுவதிலும் காலத்தைக் கழித்துக் கொண்டு வருவது இந்திய தேசத்திற்கே பெரிய மானக்கேடானதும், குடி களுக்கு அதிகக் கஷ்டம் கொடுக்கக் கூடியதுமான காரியமுமாகும் என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

இந்தக் கொடுமையையும், அக்கிரமங்களையும் பொதுஜனங்கள் ஒருவாறு உணர்ந்து விட்டார்கள் என்பதை அறிந்த சர்க்காராரும், ஜனத் தலைவர் ஜனப்பிரதிநிதிகள் என்பவர்களும், பொது ஜனங்களை ஏமாற்ற சிக்கனம்-சிக்கனமென்ற பல்லவியைப் பாடிக்கொண்டு, ஒரு சிக்கன நாடகத்தை ஆரம்பித்து, பொது ஜனங்கள் கண்களில் மண்ணைப் போட முயற்சித்து வருகின்றார்கள்.

இதுவரை நடந்து வந்த எல்லாப் பித்தலாட்டங்களையும் விட இந்தச் சிக்கன நாடகப் பித்தலாட்டமானது மிகவும் மோசமான பித்தலாட்டம் என்றே சொல்லுவோம்.

ஏனெனில், சர்க்காரார் ஆங்காங்கு சிக்கனம் செய்வதற்காக ஏற்பாடு செய்யும் கமிட்டிக்கு பெரிதும் பெரும் பெரும் சம்பளம் வாங்கிப் பிழைக்கும் உத்தியோகஸ்தர்களையே நியமித்து இருக்கின்றார்கள். அவர்கள் சிக்கனத்தின் பேரால் கூடிக்கூடிப் பேசிவிட்டு 100-க்கு 3ரூ. 4ரூ. 6ரூ. குறைக்கலாம் என்று சொல்லிவிட்டு, பாக்கி போறாதததற்கு புதிய



வரியைப் போடவேண்டியது தான் என்னும் முடிவுக்கு அனுகூலமாய் இருக்கப் போகின்றார்கள் என்பதில் நமக்குச் சந்தேகமே இல்லை.

இப்பொழுது தேசம் இருக்கும் நிலைமையில் முதலில் சிக்கனக் கமிட்டி ஏற்படுத்துவதைவிட வரிகொடுப்போரின் நிலைமையை நன்றாய் விசாரித்தறிந்து, அவர்களது தேவைக்குப் போக மீதி எவ்வளவு வரி கொடுக்கக்கூடும் என்பதைக் கண்டறிந்து வரியைக் குறைக்க வேண்டியதே முதல் வேலையாகும். பிறகு அந்த வரிவசூல் கணக்கைப் பார்த்து நிர்வாகச் செலவை ஏற்பாடு செய்ய வேண்டியதுதான் இரண்டாவது வேலையாக இருக்க வேண்டும். ஏனெனில் நிலவரி கொடுக்க சக்தி இல்லாமல் மக்கள் திண்டாடுகின்றார்கள்.

ஆனால், காங்கிரசும், தேசீயமும், ஜனப்பிரதிநிதித்துவமும் ஏற்பட்ட நாள் முதல் முதலில் செலவை நிர்மாணித்துக் கொண்டு பிறகு அதற்குத் தகுந்தபடி வரிபோடப்படுகின்றது. அதாவது செருப்புக்குத் தகுந்தபடி காலை வளர்க்கப்படுகின்றது. இதற்கு இராஜரீகம் என்றோ, நிர்வாகமென்றோ சொல்லுவதை விட (இராஜரீகத்தின் பேரால் அடிக்கப்படும்) பகற்கொள்ளை என்றுதான் சொல்ல வேண்டும். இந்தக் கொள்ளை நாளாவட்டத்தில் ஜனப் பிரதிநிதிகள் என்பவர்கள் சம்மதத்தின் பேரில் போடப்பட்டே வந்திருப் பதால் பொது ஜனங்களும் இந்தக் கஷ்டங்களை உணராமல் முட்டாள் தனமாக வைத்த பாரத்தையெல்லாம் சுமந்து கொண்டே வந்திருக்கின் றார்கள்.

உதாரணமாகக் காங்கிரசு ஏற்படுவதற்குமுன் இந்த நாட்டு அதாவது இந்தியாவின் வரியெல்லாம் வெரும் ஐம்பது, அறுபது கோடி ரூபாயாக இருந்ததானது இப்போது 150,160 கோடி ரூபாய்க்கு மேலாகப் போய்விட்டது. இதனால் காங்கிரசு ஏற்படுவதற்கு முன் அன்னக்காவடிகளாய் பிச்சைக்காரக் குடும்பமாய் இருந்தவர்கள் மாதம் 1-க்கு 500, 1000, 4000, 5000 ரூபாய் வீதம் சம்பளம் பெறும்படியானவர்களாக யானார்களே யொழிய பொதுமக்கள் நிலைமை கஷ்டப்பட்டு உழுது பயிர் செய்பவர்கள் குடும்ப நிலைமை சிறிதும் உயர்த்தப்பட்டதாகத் தெரியவில்லை.

உழுது பயிர் செய்கின்றவனுடைய குடும்பத்திற்கு எவ்வளவு தேவையோ அதைவிட 10 மடங்கு முதல் 100 மடங்குவரை அதிகமாக நிர்வாக அதிகாரிகள், சிப்பந்திகள் என்கின்றவர்களுக்குத் தேவை ஏற்பட்டு அதற்குத் தக்கவிதமாக நிர்வாகச் செலவு அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதுபோலவே நிர்வாக உத்தியோகங்களும் அதிகப்படுத்தப்பட்டு வந்து விட்டது.

இந்திய மக்களின் மொத்த சராசரிவரும்படி ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 0-1-7 என்று கணக்குக் கண்டுபிடித்த பிறகும் பொது ஜன



RangaRakes tamilnavarasam.com

சிப்பந்திகளுக்குக் கொள்ளை கொள்ளையாய் அதாவது, நாள் ஒன்றுக்கு 1-8-0 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை அள்ளிக் கொடுப்பதென்றால் இது எவ்வளவு கொடுங்கோன்மையான ஆக்ஷி என்பதையும், அயோக்கியத் தனமான ஜனப்பிரதிநிதித்துவம் என்பதையும் நாம் எடுத்து காட்ட வேண்டுமா? என்று கேட்கின்றோம்.

நாட்டின் நலத்திற்குப் படித்தவர்கள் என்பவர்கள் எப்பொழுது முதல் ஜனப்பிரதிநிதியாகக் கூடிய அக்கிரம நிலைமை ஏற்பட்டதோ அன்று முதலே பாட்டாளிகள் பணம் கொள்ளைபோக மார்க்கம் ஏற்பட்டுவிட்டது.

இந்த நிலைமையில் இனி இந்திய மக்கள் இவ்வளவு வரிகொடுப்ப தென்பது கண்டிப்பாய் முடியவே முடியாது. பகல் கொள்ளைக்குச் சமமான சுயராஜியப் புரட்டில் மக்கள் முட்டாள்தனமாகச் சிக்குண்டு வரிக்கஷ்டம் அனுபவிப்பதை விட வரிக் கொடுமையிலிருந்து தப்புவதற்கு முயற்சிப்பது தான் முதன்மையான வேலையாய்க் கருத வேண்டியிருக்கிறது.

ஆகவே, இனி கண்டிப்பாகப் படித்த கனவான்கள்-உத்தியோகத் திற்கு ஆசைப்படும் நபர்கள் ஜனப்பிரதிநிதிகளாவதை விடப் பாடுபடும் குடியானவர்களே பிரதிநிதிகளாகத் தகுந்த முயற்சி செய்ய வேண்டியதுதான் தேசீய வேலையாய்ச் செய்ய வேண்டியிருக்கின்றது. இந்த நிலைமை அடையாத இராஜரீகம் மக்களுக்கு இனி பெருத்த கஷ்டமாகத்தான் முடியும்.

நிற்க, இப்போதைய சிக்கனக் கமிட்டிகள் சென்னை, பம்பாய் முதலிய மாகாணங்களில் அந்தந்த மாகாண நிர்வாகத்திற்கு வசூலாகும் வரிப் பணத்தைக்கொண்டு சரிசெய்யும்படி ஏற்பாடு செய்யவே நியமிக்கப் பட்டும் அவர்களாலும் வரவு செலவு சரிக்கட்ட முடியாமல் கஷ்டப்படுவதாக தெரிய வருகின்றது. இதனால் அவர்கள் சிறிதும் நாணையமாய், யோக்கியமாய் வேலைச் செய்யவில்லை என்று தைரியமாய்ச் சொல்லுவோம்.

ஏனெனில், உத்தியோகங்களை குறைக்கும் வகையில் அவர்கள் சிறிதும் கவலை செலுத்தவே இல்லை. இப்போது சம்பளத்தைக் குறைப்பதை விட அனாவசிய உத்தியோகங்களைக் குறைத்தால் நிர்வாகத் திற்கு குறைவு படும் துகை சுலபத்தில் மீதியாகிவிடும். பிறகு சம்பளத்தைக் குறைத்தால் வரிப்பளுவை தாராளமாய்க் குறைத்து விடலாம்.

உத்தியோகங்களை குறைக்கும் விஷயத்தில் முதலாவது யாதொருக் கஷ்டமும் இல்லாமல் மந்திரிகளையும், நிர்வாகசபை அங்கத்தினர்களை யும், இப்போது இருப்பதில் பகுதி ஆக்கி விடலாம். ஏனெனில் இவர்கள் தங்களை ஜனப்பிரதிநிதிகளே யொழிய, சர்க்காரார் உத்தியோகஸ்தர்கள் அல்லவென்று சொல்லிக் கொள்ளுபவர்கள்.



ரெவினியூ போர்டு ஆபீசை அடியோடு எடுத்துவிடலாம்.

சிவில் இலாகாவிலோ ஹைகோர்ட் ஜட்ஜுகளில் பகுதியை குறைத்து விடலாம்.

சப் ஜட்ஜுகளையும், முன்சீபுகளையும் மூன்றில் இரண்டு பாகம் குறைத்து விடலாம். இல்லாவிட்டாலும் பகுதியைக் குறைத்துவிடுவதில் எவ்வித குந்தகமும் வராது. அதுபோலவே ரெவினியூ இலாகாவில் டெபுட்டி கலக்டர்கள் என்கின்ற உத்தியோகத்தையே அடியோடு எடுத்து விடலாம்.

டெபுட்டி கலக்டர் உத்தியோகம் வெறும் தபாலாபீசு போலவேதான் இருந்து வருகின்றது. இவர்களுக்கு ஆதியில் இருந்த வேலைகள் எல்லாம் குறைந்தும், சில அடியோடு எடுபட்டும் போய்விட்டன.

1. இன்கம்டாக்ஸ் வேலை இல்லை.

2. ஸ்தல ஸ்தாபன மேல் பார்வை வேலை இல்லை.

3. ரெவின்யூ வேலை மிகமிகக்குறைந்து விட்டது. தாசில்தார் இடம் இருந்த மேஜிஸ்ட்ரேட் வேலை எடுபட்டு போனதால், அவரே எல்லா வேலையும் பார்க்கிறார்.

4. பெஞ்சு கோர்ட்டுகள் ஏற்பட்டுவிட்டதால் கிரிமினல் வேலையும், அப்பீல் வேலையும் 100-க்கு 80பாகம் குறைந்து விட்டது. மீதியிருப்பதற் கும் இப்போது தாசில்தாருக்கு முதல் வகுப்பு மேஜிஸ்ட்ரேட் பவர் இருப்ப தால் அவர் பார்த்துக் கொள்ளக்கூடும்.

இன்னும் மற்ற இலாகாக்கள் வேலையும், அதாவது சிவாஜிநாமா என்குரோச்மெண்டு முதலிய வேலைகள் கீழ் அதிகாரிகள் மூலமே முடிவு செய்யப்பட்டு கடைசி உத்திரவுக்குத்தான் டெபுட்டி கலக்டர் ஆபீசு முத்திரை போட்டு ஜில்லா கலக்டருக்கு அனுப்பப்படுகின்றது. டெபுட்டி கலக்ட டருக்கு என்று யாதொரு அசல் (original) வேலையும் கிடையாது. ஆகவே இந்த உத்தியோகத்தை எடுத்து விட்டு கலக்டருக்கு இன்னமும் ஒரு பொர்ச னல் அசிஸ்டெண்ட் அதுவும் ஒரு தாசில்தார் யோக்கியதையில் உள்ளவ ராய் வைத்து விட்டால் இதன் மூலம் அதாவது டெபுட்டி கலக்டர்கள் எடுத்து விடுவதும் அவர்கள் ஆபீசு எடுத்து விடுவதும் ஆகிய வகையில் வருஷம் 1-க்கு 3500000 முப்பத்தி ஐந்து லக்ஷ ரூபாய் மீதியாகக்கூடும்.

பொது ஜனங்களுக்கும் இந்த இலாகாவுக்கு என்று கொடுக்கப்படும் லஞ்சம், சப்ளை வக்கீல் பீசு, பிச்சைக்காசு முதலிய செலவு தொல்லைகள் ஒழியும்.



RangaRakes tamilnavarasam.com

## போலீசு

இதுபோலவே போலீசு இலாகாவிலும், டிப்டி சூப்ரெண்டு என்கின்ற ஒரு சிறிதும் உபயோகமும், பயனுமற்ற உத்தியோகம் எடுபட்டு விடத் தகுந்ததாகும். அதற்கும் யாதொரு அசல் வேலையும் கிடையாது.

1. போலீசுகாரர்.
2. ஏட்டு.
3. சப் இன்ஸ்பெக்டர்.
4. சர்க்கிள் இன்ஸ்பெக்டர்.
5. டிப்டி சூப்ரெண்டு.
6. ஜில்லா சூப்ரெண்டு.
7. டிப்டி இன்ஸ்பெக்டர் ஜனரல்.
8. இன்ஸ்பெக்டர் ஜனரல்.
9. கவர்ன்மெண்ட்.(போலீசுபோர்ட்போலியோ)நிர்வாகசபை மெம்பர்.

இந்த மாதிரி ஒவ்வொரு இலாகாவுக்கு ஒன்பது படிகள் இருக்கின் றன. இதை கவனித்துப் பார்த்தால் நாளைக்கே டிப்டி சூப்ரெண்டுகளை எடுத்து விட்டாலும் எவ்வித ஆபத்தும் வந்து விடாது. இதுவும் அநேகமாய் ஒரு தபாலாபீசே யொழியே வேறில்லை. ஆகவே இதை எடுப்பதின் மூலம் இந்த இலாகாவிலும் வருஷம் ஒன்றுக்கு சுமார் பத்து லக்ஷ ரூபாயுக்கு குறையாமல் மிகுதிப்படுத்தலாம். இப்படியே கலால் இலாகா முதலிய அநேக இலாகாக்களில் இலாகா ஒன்றுக்கு ஒருபடியை மாத்திரம் எடுத்து அதை மேல் கீழ்படிகளுக்கு பங்கிட்டு அமைத்து விட்டால் கோடிக்கணக்கான ரூபாய்கள் மீதப் படுத்தப்பட்டு வரிசெலுத்து வோருக்கு உதவியும், நன்மையும் செய்யலாம். முக்கியமாக கல்வி இலாகாவும் மிகுதியும் திருத்தி அமைப்பதின் மூலம் எவ்வளவோ பணத்தை மீதம் செய்து கல்வியை இப்போதையைவிடப் பல மடங்கு அதிகமான நன்மையும் பயனும் படக்கூடியதாகச் செய்யலாம். கல்வி அதிகாரிகளுக் குக் கொடுக்கும் சம்பளம் கொள்ளை கொள்ளை என்றே சொல்லவேண்டும். அதிகாரிகள் எண்ணிக்கையும் அதிகம். அது போலவே உபாத்தியாயர்கள் சம்பளம் இரட்டிப்புக் கொள்ளை என்றுதான் சொல்லுவோம்.

அவசியமான கீழ்தரப் படிப்புச் சொல்லிக்கொடுக்கும் உபாத்தியா யருக்கு 15, 20, 25 ரூபாய் சம்பளம் கொடுத்துவிட்டு, மத்திய தரப்படிப்பு, மேல்தரப் படிப்பு, கலாசாலைப் படிப்பு என்பவற்றிற்கு 70, 80 முதல் 1000 ரூபாய் வரை கொடுப்பது என்றால் இது தீவத்திக் கொள்ளையா? அல்லவா? என்று கேட்கின்றோம்.

உபாத்தியாயர்களுக்கு இந்தச் சம்பளம் கொடுப்பதால் பிள்ளை களின் பெற்றோர்களிடம் அதிகச் சம்பளம் வாங்க வேண்டியிருக்கிறது. அதனால் அவர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க முடிவதில்லை.



இப்படி எல்லாம் இருந்தும், இன்று பி.ஏ. எல்.டி. பாசு செய்தவன், உபாத்தியாயருக்குத் தகுதியானவன், 40 ரூபாய் சம்பளத்திற்கும், எம்.ஏ பாசு செய்தவன் 35 ரூபாய் சம்பளத்திற்கும் வரக் கெஞ்சுகின்றான். இப்படியிருக்க இவர்களுக்கு 100, 200, 500, 1000 என்பது எவ்வளவு அக்கிரமமானதும் மக்களைப் படிக்கவிடாமல் தடுப்பதுமானதுமான காரியம் என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் சர்க்காரார்நிர்வாக அதிகாரிகளுக்கு மாதம் 1000 ரூபாய் சம்பளத்திற்கு மேல் போகக்கூடாது என்று சுயமரியாதை மகாநாடு தீர்மானித்துக்கூட இப்போது அதிகம் என்று தோன்றும்படியாக நாட்டின் நிலைமை அதாவது, உணவுப் பொருள்கள், ஆடைப்பொருள்கள் விலை மிகவும் மலிந்து விட்டது. ஆகவே சம்பளத் திட்டத்தில் மனிதன் தேவையை நிர்ணயிக்கும்போது பொது ஜனங்களின் நிலைமை அதாவது 100க்கு 75பேர்கள் இருக்கும் நிலைமை அனுபவிக்கும் சௌகரிய நிலைமை ஆகியவைகளைப் பார்த்தேதான் நிர்வாகஸ்தர்களை நிர்ணயித்து சம்பளத் திட்டம் போடப்பட வேண்டுமே தவிர கனவு காண்கின்ற நிலைமையை யுத்தேசித்து இந்திய மக்களில் 1000க்கு ஒருவன் கூட அனுபவிக்கச் சாத்திய மில்லாத நிலைமைப்படி சம்பளம் போடுவது என்பது யோக்கியமான இராஜரீகமாகாது.

கடைசியாக ஸ்தலஸ்தாபனங்களிலும், ஜனங்கள் வரிகொடுக்கச் சக்தி இல்லாமல் கஷ்டப்படுகின்றார்கள். ஸ்தலஸ்தாபனப் பணமெல்லாம் சிப்பந்திகளும், கன்றாக்டர்களுமே கொள்ளை கொண்டு கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதி முதலிய காரியங்களுக்குப் பணம் போறாமல் திண்டாட வேண்டி இருக்கின்றது. அவைகள் செய்ய வேண்டிய அளவும் செய்ய முடியாமல் இருக்கின்றன.

ஆகவே இந்தப்படி வரியும் பளுவாகவும், சரியான பலனும் இல்லா மலும் போனதற்குக் காரணம் அந்த ஸ்தாபனங்கள் 'பொதுஜனப் பிரதி நிதிகள்' என்பவர்கள் கைக்கு வந்ததேயாகும்.

அவர்களுக்குக் கண்டிப்பாய் பொறுப்பே கிடையாது. 100க்கு 90பேர்கள் கொள்ளையடிப்பவர்களும், கூட்டுக்கொள்ளைக்காரருமேயா வார்கள். சிலர் அனுபவ ஞானமற்றவர்களும், அன்னியர் கை ஆயுதங் களுமாயிருப்பவர்களுமாவார்கள்.

இவர்களால் ஏற்படும் வீண்செலவு, தாக்ஷணியச் செலவு ஆகியவை களைக் கழித்துப் பார்த்தாலே 100க்கு 25 வீதம் வரியையும் குறைத்து நல்ல வேலையையும் செய்யலாம். தனிக் கொள்ளையும், கூட்டுக்கொள்ளையும் எடுபட்டால் 100 க்கு 50 வீதம் வரி குறைக்கலாம். ஆகவே ஸ்தல ஸ்தாபன தற்கால சுயாக்ஷி முறையை எடுத்துவிட்டு, நிர்வாக அதிகாரி ஒருவரை



RangaRakes tamilnavarasam.com

ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபனத்திற்கும் போட்டு, வேண்டுமானால் அவர்களுக்கு ஆலோசனை சபை ஏற்படுத்தி நிர்வாக முறையை மாற்றி னால் அதிலும் எவ்வளவோ பணம் மீதியாகி மக்களுக்குப் பலன் அதிக முண்டாகும். இந்தக் காரியங்கள் செய்ய வெள்ளைக்காரர்கள் முட்டுக் கட்டையாக இருக்கிறார்கள் என்று சொல்லி விட முடியாது. இந்தியர்கள், இந்தியப் பிரதிநிதிகள், இந்திய தேசீயவாதிகள், இந்திய பூரண சுயேச்சை வாதிகள் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்கள் உண்மையானவர்களாக வும், யோக்கியமானவர்களாகவும் இருந்தாலுமே போதும். பிறகு வெள்ளைக் காரர்களைப் பார்த்து நாம் "போடு கரணம்" என்றால் அவர்கள் "எண்ணிக் கொள் போடுகின்றேன்" என்று சொல்லுவார்கள். இப்படிக்கில் லாமல் இப்பொழுது சிக்கனம், சிக்கனம் என்றுபேசுவதெல்லாம் நமது படித்த மக்கள், "தேசீய" மக்கள் கொள்ளையடிப்பதைக் காப்பாற்றவும், வெள்ளைக்காரன் மேல் மாத்திரம் பழி சொல்லி தப்பித்துக் கொள்ளவும் செய்யும் சூக்ஷியே தவிர வேறில்லை.

ஆகவே ஒவ்வொரு மாகாணங்களிலும் அடுத்த சட்டசபை கூடும் கூட்டங்களில் 'சர்க்காரார் நிர்வாகத்தில் ஒரு வெள்ளைக்கார நிர்வாக சபை மெம்பரையும், ஒரு இந்திய நிர்வாக சபை மெம்பரையும், 2 மந்திரிகளையும் தேவையில்லை' என்று தீர்மானம் கொண்டு வருவதுடன், 'மீதி இருக்கும் நிர்வாக மெம்பர் சம்பளமும், மந்திரி சம்பளமும் தாராளமாய் குறைக்கப்பட வேண்டும்' என்றும் தீர்மானங்களும் கொண்டு வந்தார்களேயானால் பொதுஜனப் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்ள அருகதையாவார்கள். பிறகு மற்ற பெரிய சம்பளக்காரர்கள் இந்த வருஷத்திலேயே 100க்கு 50 வீதம் தானாகவே குறைத்துக் கொள்ள வருவார்கள். அதில்லாமல் மற்ற சம்பளங்களில் ஒரு காசு குறைத்தாலும் ஒரு உத்தியோகம் எடுத்தாலும் அது வஞ்சகமும், வஞ்சனையுமாகவுமே கருதப்படும்.

ஏனெனில், கீழ்தர சம்பளக்காரர்கள் தங்களுக்கு சம்பளம் போத வில்லை என்று சொல்லுவதின் காரணமே இதர சிப்பந்திகள், நிர்வாக அதி காரிகள் ஆகியவர்கள் சம்பளங்களைப் பார்த்தே யொழிய 'சாப்பாட்டுக்குப் போதவில்லை, துணிக்குப் போத வில்லையென்றல்ல' என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் இதை முடிக் கின்றோம்.

மற்றபடி நிர்வாக முறையையும், சம்பளத் திட்டத்தையும் சர்க்காரார் நிலவரித் திட்டத்தையும் பற்றி மற்றொரு சமயம் நமது அபிப்பிராயத்தை வெளியிடுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 02.08.1931**



# சித்தோடு சீர்திருத்த சங்கம்

தலைவரவர்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!!

இன்று இந்து சமூகம் என்பதற்கென்று ஏற்படுத்திக்கொண்டிருக்கின்ற ஒரு பண்டிகை நாளைக்கொண்டு ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். ஆனால் வேறு இந்துக்கள் இம்மாதிரிகூட்டம் கூடினால் பண்டிகையின் புராணத்தைப் பற்றியும் அதைக் கொண்டாடினால் மோக்ஷம் அடையலாம் என்றும் பிரசங்கம் செய்யக் கூட்டுவார்கள். ஆனால் நீங்கள் இம்மாதிரி பண்டிகையை இனி வெறுக்கும்படி எடுத்துச் சொல்லும் உணர்ச்சி உள்ள வனை கூப்பிட்டிருப்பது மிகவும் போற்றத்தக்கதேயாகும்.

இக்கூட்டத்திற்கு நீங்கள் ஒரு அருமையான தலைவரைக் கண்டு பிடித்தது மிகவும் போற்றத்தக்கதேயாகும். தலைவர் திரு.வி.எஸ்.செங் கோட்டையா அவர்கள் பெரும் செல்வவான், பொதுஜனங்களுக்குப் பெரிதும் உபகாரியாய் இருந்து வருபவர், அநேக நல்ல பொதுக்காரியங் களில் ஈடுபட்டிருப்பார்கள். அதுபோலவே மத விஷயங்களிலும் பெரிதும் ஈடுபட்டு மதசம்மந்தமான விஷயங்களில் அநேக காரியங்கள் செய்து வரு பவர். ஆதலால் அவரை இந்தக்கூட்டத்திற்கு தலைமை வகிக்க ஏற்பாடு செய்த உங்களை பாராட்ட வேண்டியதே. எனது உபன்யாசம் பயன்படு மானால் தலைவரால் சீர்திருத்தத்துறைக்கு அநேக லாபம் ஏற்படும். அவர்கள் என்னை குரு வென்றும் மற்றும் பிரமாதமாய் புகழ்ந்து பேசினார். நான் அதை ஒப்புக் கொள்ளவே இல்லை. நானும் அவரும் மற்றும் இந்த ஊர்காரர்களும் ஒன்றேயாவோம். 30, 40 வருஷங்களாகவே தாய் பிள்ளை கள்போல் நெருங்கி பழகினவர்கள். ஒரே துறையில் வியாபாரம் செய்து வந்தவர்கள். அநேகர் எனக்கு வரவு செலவுகாரர்களாய் இருந்தவர்கள். அக்கிராசனர் வியாபாரத் துறையில் மேலோங்கி விட்டார். நான் வேறு துறையில் இறங்கிவிட்டேன். இவ்வளவுதான் வித்தியாசம். தலைவரும் இந்தத் துறையில் இறங்கியிருந்தால் அபாரமான காரியங்களை சாதித்து இருப்பார். ஆதலால் அவரைவிட நான் ஒன்றும் சிறந்தவனல்ல. அவர் போன்றவர்கள் இவ்வித உபன்யாசங்களுக்குத் தலைவராகக் கிடைத்து மனமாறுதல் அடைந்தால் நாட்டில் எவ்வளவோ திருத்துப்பாடு ஏற்படும். தவிரவும் வயதில் மூத்தவன் என்கின்ற காரணத்திற்காக மரியாதை செய்வது



RangaRakes tamilnavarasam.com

என்கின்ற மூடப்பழக்க வழக்கத்தை ஒழிப்பது சீர்திருத்தத்தில் பட்டது என்று தலைவர் திரு.செங்கோட்டையா அவர்கள் கருதாததால் தன்னை வயதில் சிறியவன் என்று பல தடவை சொல்லிவிட்டார். அது சரியல்ல. அறிவுள்ளவர்களும், அரும்பெரும் காரியங்களை தன்னலமற்று தியாகபுத்தியுடன் செய்கின்றவர்களும்தான் பெரியவர்களே யொழிய, வெரும் வயதைப் பார்த்து, நரையைப் பார்த்து நடுக்கத்தைப் பார்த்து பெரியவர்கள் என்று மயங்குவது தவறுதலாகும். ஆகையால் இன்று நமக்குக்கிடைத்த தலைவர் சரியான தலைவரேயாவர். பெரியவரேயாவர். மற்றும் எனக்கு பல வரவேற்புப் பத்திரங்கள் கொடுத்தீர்கள். அதில் நீங்கள் எனது கொள்கைகளை நன்றாய் ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள் என்றும், அந்தக் கொள்கைகளுக்கு என்னை ஊக்கமாய் உழைக்கும்படி எதிர்பார்க் கின்றீர்கள் - தூண்டுகின்றீர்கள் என்றுமேதான் கருதி அவற்றை நன்றியறி தலுடன் ஏற்றுக் கொள்ளுகின்றேன்.

## சீர்திருத்தம்

தவிர 'சீர்திருத்தம்' என்பதைப்பற்றிப் பேசுவதில் **யாருக்கு** சீர்திருத் தம்? **எப்படிப்பட்ட** சீர்திருத்தம்? **எதற்காக** சீர்திருத்தம்? **எது** சீர்திருத்தம்? அவற்றை **எப்படி நிர்ணயிப்பது?** அதற்கு முட்டுக்கட்டை எது? பிறகு அவற்றை எப்படி அமுலுக்கு **கொண்டு வருவது?** என்பவை போன்ற விஷயங்கள் சீர்திருத்தத் தலைப்பில் பேசவேண்டிய முக்கிய விஷயங் களாகும். அப்படிப் பார்த்தால் சீர்திருத்தம் இப்போது பேசுவது இந்திய மக்களுக்குத்தான் என்றும் அறிவுக்குட்பட்ட சீர்திருத்தம் என்றும் மனிதத் தன்மையும் சுதந்திரமும் அடைவதற்கு என்றும் உலக அக்கம்பக்கங்களை நோக்கி பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுத்து உறுதியான மனதுடன் பழைமை யுடன் போராடி சீர்திருத்தமடைய வேண்டுமென்றும் தான் சொல்லக்கூடும். எவ்வித சீர்திருத்தத்திற்கும் பல விரோதிகள் உண்டு. அவை பழைமை, முன்னோர் வாக்கு, மகான் வாக்கு, வேதத்தின் கட்டளை, சாஸ்திரசம்மதம், வெகுநாளாய் நடந்துவரும் பழக்கவழக்கம், நம்பியே ஒப்புக் கொண்டாக வேண்டியது என்பவை போன்ற நிர்ப்பந்தம் முதலியவைகள் எல்லாம் சீர்திருத்தத்திற்கு முட்டுக்கட்டையும் விரோதமானவைகளுமாகும்.

தன்னை சீர்திருத்தக்காரன் என்று சொல்லிக்கொள்ளுகின்றவர்கள் மேற்கண்ட அவ்வளவையும் தங்கள் அறிவால் பிரத்தியக்ஷக்கண்களால் அலசிப்பார்க்க உரிமையும், தைரியமும் உடையவர்களாக இருக்க வேண்டும். அதை விட்டு விட்டு 'மற்றதெல்லாம் சரி' ஆனால் 'மதத்தைப் பற்றி பேசலாமா? கடவுளைப் பற்றி பேசலாமா? தேசீயத்தைப் பற்றி பேசலாமா? புராணங்களைப் பற்றி பேசலாமா? மகான்களைப் பற்றி பேசலாமா? மகான்கள் அபிப்பிராயத்தைப் பற்றி பேசலாமா? நமக்கு அவ்வளவு யோக்கியதை உண்டா' என்பது போன்ற பிடிவாதகுணங்களும்,



தன்னம்பிக்கையற்ற குணங்களும், 'ஆனால்' களும் உடையவர்களால் ஒரு நாளும் எவ்வித சீர்திருத்தமும் கைகூடாது. ஆதலால் சீர்திருத்தக்காரருக்கு உரமும், தனது அறிவில் நம்பிக்கையும் பரீக்ஷிக்கும் தாராளதன்மையும் வேண்டும். இது சமயம் உலகமெல்லாம் சீர்திருத்தமடைந்து விட்டது. நாம் மாத்திரம் யாரைத் தொடலாம்? யார் வீட்டில் சாப்பிடலாம்? எதைச் சாப்பிட லாம்? என்பது போன்றவைகளில் இப்பொழுது, இந்த இருபதாவது நூற்றாண்டில் கவனித்து வருகின்றோம்.

உலக மக்கள் ஆகாயத்தில் பறக்கின்றார்கள். நம் மகான்கள் பிணங் கள்போல் மக்கள் தோள்களின் மீது சுமந்து செல்லப்படுகின்றார்கள். மற்ற நாட்டு மக்கள் புதிய, புதிய இயந்திரங்களை உற்பத்தி செய்து சீர்திருத்த மடைகின்றார்கள். நமது நாட்டு மக்கள் நம் பாட்டன் காலத்தில் இருந்த சாதனத்தை தேடிப் பிடித்து அட்டாலியில் இருந்து இறக்கி அமுலுக்குக் கொண்டு வருகின்றார்கள்.

முன்னேற்றம், சீர்திருத்தம் என்கின்ற துறையே நமது நாட்டு மக்களுக்குத் தடைப்படுத்தப் பட்டு விட்டது. அந்தப் பக்கம் திரும்புவ தென்றால் "உயிரை விடுகின்றேன்" என்கின்றார்கள். ஏனெனில் இன்றைய இந்திய நிலைமை நமது பாட்டன் காலத்து நிலைமை ஆகிய எல்லாம் சோம்பேரிகள் வயிற்றுப்பிழைப்புக்கும் ஒருவர் பிழைக்க ஒருவர் உழைக் கும் முறைமைக்கும் அனுகூலமாய் கற்பிக்கப்பட்டிருப்பதால் அதிலிருந்து மாறுவதற்கு சோம்பேரிகளும்,ஊரார் உழைப்பில் சாப்பிடுகின்றவர்களும் ஒருநாளும் ஒப்பமாட்டார்கள். ஆதலால் நம் நாட்டுமக்களே நம் முன்னேற் றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றார்கள். இந்தக்கூட்டம் ஒரு நாளும் இந்தியாவை-இந்து மக்களை முன்னேறவிடவே விடாது. சுதந்திரமாய் வாழவும் சம்மதிக்க மாட்டார்கள். அதனாலேயேதான் அவர்கள் பாமர மக்கள் கல்வி இல்லாமல் இருக்கும்படிக்கும், அவர்களுக்கு செல்வம் சேராமல் இருக்கும்படிக்கும் பல தடைகளை மதத்தின் பெயரால், கடவுள் பெயரால், தேசீயத்தின் பெயரால் ஏற்படுத்தி 100-க்கு 90 மக்களை 100-க்கு 10 மக்கள் ஏமாற்றி வருகின்றார்கள். இந்த சூக்ஷி மாறுதலடைய வேண்டு மானால் கடவுள், மதம், தெய்வீகம், தேசீயம் முதலாகிய எல்லா புரட்டு களையும் வெளியாக்கி உடைத்தெரிய வேண்டும்.

அதற்கு மக்கள் சம்மதிப்பதென்பது மிக்க கஷ்டமான காரியமாகும். ஏனெனில் இவை சம்பந்தமான மூட நம்பிக்கையும் பிடிவாதமும் நம் மக்களது இரத்தத்தில் ஊறிப்போய்விட்டது. அதுமாத்திரமல்லாமல் இந்த மூன்று துறைகளின் பிரசாரத்தையும், வயிற்றுப்பிழைப்பாய்க் கொண்ட மக்கள் நாளுக்கு நாள் வளர்த்து கொண்டு வருகின்றார்கள். அவர்களது தொல்லை அடியோடு ஒழிந்தாலல்லாது சீர்திருத்தமோ, முன்னேற்றமோ சுலபமான காரியமல்ல.



RangaRakes tamilnavarasam.com

உதாரணமாக மதம் என்கின்ற சாக்கின் பெயரால் அரைக்காசு அசலாகும் ஒரு இட்டலியை 6 காசுக்கு விற்கும் ஒரு பார்ப்பானிடம் சென்று ஜாதி வித்தியாசம் தப்பு, பழக்கம் வழக்கம் தப்பு என்றால் ஒப்புக் கொள்ளு வானா? என்று பாருங்கள். அன்றியும் அவனது மதம், ஜாதி, உயர்வு தாழ்வு பாகுபாடு ஒழிவதற்கு முட்டுக்கட்டையாக இருப்பானா? அல்லது இருக்க மாட்டானா? என்று பாருங்கள். அன்றியும் மதப்பிரசாரம் செய்யவும் வெளி கிளம்பமாட்டானா? என்றும் பாருங்கள். இதுபோலவே கடவுள், தேசீயம் என்பதின் பயனாய் வயிரு வளர்க்கும் சோம்பேரிகள் அப்புரட்டை வெளி யாக்க சம்மதிப்பார்களா? என்றும் பார்ப்பதோடு அவர்கள் கடவுள் பிரசாரம், தேசீய பிரசாரம் செய்ய மாட்டார்களா? என்றும் யோசித்துப் பாருங்கள்.

இந்த முட்டுக்கட்டையும் எதிர்பிரசாரக் கூட்டமும் இயற்கையே யானாலும் அவை யொழிந்தாக வேண்டும். நமது மக்கள் படித்தவர்கள் என்றாலும், பாமரமக்கள் என்றாலும் இவ்விஷயங்களில் ஒரே மாதிரி மூடர்களாகவே இருக்கின்றார்கள்.

உதாரணமாக ஒரு ‘வடுகனோ’ ஒரு ‘கைக்கோளனோ’ ஒரு ‘செட்டியோ’ என்பவன் எவ்வளவுதான் சுத்தமாய் இருந்து கொண்டு ஒருபடி அரிசிக்கு 30 இட்டலி போட்டு இட்டலி 1-க்கு கால் அணாவுக்கு விற்றாலும் நமது அறிவாளிகள் என்பவர்கள் வாங்குவதில்லை. ஆனால் பார்ப்பனன் என்கின்ற ஒருவன் எவ்வளவு அழுக்குத் துணியுடனும் சொரி சிரங்குடனும், வேற்வை நாற்றத்துடனும், வெள்ளைப் படையுடனுமிருந் தாலும் ஒரு படிக்கு 60 இட்டலி வீதம் போட்டாலும் இட்டலி ஒன்று 0-0-6 பை வீதம் முன் பணம் கொடுத்து ‘சாமி சாமி’ என்று ‘சொக்கவாசல் பிரசாதம்’ போல் கேட்டு வாங்கிச் சாப்பிடத் தயாராயிருக்கின்றோம். இது பாமர மக்களிடம் மாத்திரம் இருப்பதாக நான் சொல்ல வரவில்லை. பண்டிதர்களிடமும், நாகரீக செல்வவான்களிடமுமே இந்த குணத்தை நான் பார்க்கின்றேன்.

ஆகவே சீர்திருத்தத்திற்கு யார் முட்டுக்கட்டை என்று பாருங்கள். இதுபோலவே கடவுள் விஷயத்திலும், கடவுள் என்பதை மனிதன் தனது அக்கிரமங்களுக்கு பரிகாரம் என்று நினைத்துக் கொண்டு மற்றவர்களை இம்சித்து தப்பித்துக் கொள்வதற்கும், ஏமாற்றுவதற்கும், தான் மற்ற மக்களை விட அதிக லாபம் சம்பாதிப்பதற்கும் பயன்படுத்தி அதனால் அடைந்த பயனை நிலை நிறுத்திக் கொள்ள கடவுளை ஒரு சாக்காய் வைத்து அதற்குக் கோவில் கட்டவும், கும்பாபிஷேகம் செய்யவும், விளக்குப்போடவும், அதன் தலையில் பால், நெய், தயிர், பஞ்சாமிர்தம், தேன் ஆகிய வஸ்துக் களைக் கொட்டிப் பாழாக்கவும், அதை ஆதாரமாய்க் கொண்டு இந்தக் காரியம் செய்து வயிர் பிழைப்பதையே ஒரு தொழிலாய்க் கொண்டு அநேக சோம்பேரிகள் பிழைக்கவுமான காரியத்தில் அமர்ந்திருக்கும் கூட்டத்தார், கடவுள் புரட்டை வெளியாக்க சம்மதிப்பார்களா? மேலும் முட்டுக்



கட்டையாய் இருக்க மாட்டார்களா? மற்றும் கடவுள் பிரசாரமும் செய்ய மாட்டார்களா? என்று யோசித்துப் பாருங்கள்.

இந்தப் புரட்டில் ஏமாறுகின்றவர்களும், இதற்கு அனுகூலமாய் இருப்பவர்களும் எல்லோரும் முழு மூட மக்கள் என்றே சொல்லி விடலாமா? என்றும் பாருங்கள்.

அப்படியும் இல்லையே. நல்ல சாமர்த்தியக்காரர்கள், வெகுதந்திர மாய்ப் பணம் சம்பாதிப்பவர்கள், ஜாலவித்தைபோல் கெட்டிக்காரத்தனம் செய்து மற்ற மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கும் யுக்திசாலிகள் ஆகிய மக்களே இவ்வளவு புத்திநுட்பத்துடனும், தந்திரத்துடனும், கஷ்டத்துடனும் எத்தனையோ மக்கள் வயிறெறிய – எறிய அதைக்கொஞ்சமும் சட்டை செய்யாமல் கல்மனதுடனும், பசியுடன் குழந்தைகளும், பெண்களும், மொண்டி முடங்களும், கிழடுகளும் பசியால் பதரப் பதர அதை சற்றும் லட்சியம் செய்யாத உலுத்த சிகாமணிகளும் ஆயிரம் ஆயிரமாய், லட்சம் லட்சமாய் இம்மாதிரிகடவுள் புரட்டு காரியங்களில் செலவு செய்து பாழாக்குவதென்றால் இதை முட்டாள்தனமென்றும் அறியாத்தனமென்றும் சுலபத்தில் அசட்டுத்தனம் என்றும் சொல்லிவிட முடியுமா? என்று யோசித் துப் பாருங்கள். ஆகவே இந்த மக்கள் கடவுள் புரட்டை வெளியாக்க முட்டுக் கட்டையாயிருக்கமாட்டார்களா? என்று யோசித்துப் பாருங்கள்.

மற்றும் இந்த மாதிரி ஆட்களின் காரியங்களால் பிழைக்கவிருக்கும் கோயிலைக் காத்துப் பிழைக்கும் மக்கள் கடவுள் பிரசாரம் செய்ய மாட்டார் களா? என்று யோசித்துப்பாருங்கள்.

இதுபோலவே தேசீயமென்பதும், ஏழைகளுக்குத் துன்பம் விளை வித்து வருவதும் குடியானவர்களுக்கு தொல்லை விளைவித்து வருவதும், தொழிலாளிகளுக்கும், சரீரத்தால் பாடுபடுகின்றவர்களுக்கும் அரைபட்டினி யையே அளித்துவருவதும் சோம்பேறிகள் மூன்றுவேஷ்டி யுடன் வாழவும் சரீரத்தில் வேர்வை ஏற்படாமல் மெலுக்காக வெள்ளை வேஷ்டியுடன் திரியவும், பதவி ஓட்டுக்கும், உத்தியோகத்திற்கும் அலையும் கூட்டத்தார் இத்தேசீயத்தை நம்பியே முன்னுக்கு வரவேண்டுமென்று கருதி யிருக்கும் கூட்டத்தார், கண்மூடித்தனமாய் வியாபாரத்திற்கு முன்முதல் போடுவது போல் தேசீய அர்ச்சகர்களுக்கு–தரகர்களுக்கு அள்ளி அளித்துக் கொண் டிருக்கும்போது தேசீயப்புரட்டை வெளியாக்குவது சுலபமா? அல்லது சாத்தியமா? என்றும் யோசித்துப்பாருங்கள். இவர்கள் முட்டுக் கட்டையாயி ருக்கமாட்டார்களா? என்றும் யோசித்துப் பாருங்கள். அது மாத்திர மல்லாமல் ஒரு கூட்டம் சீர்த்திருத்தத்திற்கு எதிர்ப்பிரசாரமும் செய்ய மாட்டார்களா? என்றும் கருதிப்பாருங்கள்.

ஆகவே எந்தப் புரட்டையொழிக்க வேண்டுமானாலும் அதனால் லாபமடைகின்றவர்கள் ஒரு நாளும் சம்மதிக்கமாட்டார்கள். பேசிப்பேசி



RangaRakes tamilnavarasam.com

எழுதியெழுதி இந்தக்கூட்டத்தார்களால் வசவும் தொல்லையும் பட்டுப்பட்டு பிறகு ஏதாவது சிறிது கண் விழிப்பை உண்டாக்க முடியுமே யொழிய மற்றபடி உண்மை சீர்திருத்தம் என்பது திடீரென்றாகக்கூடிய சுலபமான காரியமல்ல.

ஆனபோதிலும் விடாமுயற்சியுடன் சுயநலப்பற்றற்ற வாலிபர்களும், நம்பிக்கையுள்ள பெரியவர்களும் பாடுபட்டால் சீர்திருத்தம் சீக்கிரம் அடைய முடியும் என்பதில் சந்தேகமில்லை. உலகம் சீர்திருத்தப் பக்கம் திரும்பி விட்டது. இந்தியாவைப் பார்த்து உலகத்தில் எல்லா நாடும் பரிகாசம் செய்கின்றது. ஆதலால் தானாகவே சீர்திருத்தத்திற்கு பல நற்குறிகள் காணப்படுகின்றன. நான் உங்களைக் கேட்பதெல்லாம் அதைத் தடுக்க வராதீர்கள் என்பதேயாகும். சீர்திருத்தக் காரியங்களில் வேறு காரியத்தைப் போட்டு குழப்பாதீர்கள். சீர்திருத்தவாதிகள் முதலில் ஜாதிப் பிரிவை அழிக்க முன்வாருங்கள். பெண்களுக்கும், ஆண்களுக்கும் சிறிதும் வித்தியாசமில்லாமல் ஒன்று போலாக்குங்கள். பிறகு உங்களால் என்ன காரியமாகாது என்று நினைக்கிறீர்கள்? ‘சுயராஜ்யம்’ ‘பரராஜ்யம்’ என்பதெல்லாம் உங்கள் காலடியில் தானாகவே வந்துவிடும். அதில்லாமல் வெறும்கூப்பாடு உண்மைப் பயனளிக்காது. இந்த ஊரில் சுயராஜ்யக்காரர் 100க்கு 75 பேர்கள் இருப்பதாகக் கத்தலாம், கதர் கட்டலாம், கொடி பிடிக்கலாம், காந்திக்குல்லாய் போடலாம், தீண்டாமை விலக்குவதுதான் சுயராஜ்யத்தின் முதல் கொள்கை என்று சொல்லலாம், மகாத்மாவுக்கு ஜே! என்று கத்தலாம், ‘சுயமரியாதை இயக்கம் தேசீயத்திற்கு விரோதம்’ என்றும் சொல்லலாம். ஆனால் இந்த ஊர் தண்ணீர் கிணற்றில் ஒரு பறையன் வெள்ளிப் பாத்திரத்தில் தண்ணீர் மொள்ள ஒரு நான்குபெயர்கள் சம்மதிப்பார்களா? தண்ணீர் மொண்டவனை உதைக்காமல் இருப்பார்களா? பாருங்கள். சுயராஜ்யம் என்பது வந்தால் மாத்திரம் இந்த ஊர் ஜனங்களுக்குப் புத்தி மாறிவிடுமா? யோசித்துப்பாருங்கள்.

ஆகவே ஒருவன் “கங்காதரா மாண்டாயோ?” வென்றால் எல்லாரும் விபரம் தெரியாமல் அழுகாதீர்கள். இந்த பலக்குறைவேதான் சீர்திருத்தத்திற்கு முட்டுக்கட்டை. ஆகையால் கவனித்து உங்களுக்குத்தோன்றுகிறபடி நடவுங்கள். நான் சொன்னதை யோசித்து ஆராய்ந்து பார்க்காமல் நம்பி விடாதீர்கள்.

*குறிப்பு : 02.08.1931 அன்று ஆடிப்பெருக்கைக் கருத்தில் கொண்டு, ஈரோடு மாவட்டம், சித்தோட்டில் செங்குந்தர் சாவடியில் சித்தோடு சீர்திருத்தச் சங்கத்தார் ஏற்பாடு செய்த கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 09.08.1931**



# ஈரோட்டில் திரு. முகமது நபி பிறந்தநாள் கொண்டாட்டம்

சகோதரர்களே! உங்கள் மத சம்பந்தமான ஒரு சிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு என்னைத் தலைமை வகிக்க அழைத்ததற்கு நான் நன்றி செலுத்துகிறேன்.

என்னை அநேகர் மத துவேஷி என்றும் கடவுள் மறுப்புக்காரன் என்றும் சொல்லுவார்கள். இந்த ஊரிலும் பலர் சொல்லுவார்கள். அப்படியிருக்க நீங்கள் என்னை அழைத்து மிகவும் தைரியமென்றே சொல்ல வேண்டும். எப்படி இருந்தாலும் நான் இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் எனது அபிப்பிராயத்தை வெளியிட பின்வாங்குவதே இல்லை. சென்ற வருஷத்திலும் இதேமாதிரிகொண்டாட்டத்தில் நான் பேசி இருக்கின்றேன். அதிலும் பல இந்து முஸ்லீம்களுக்கு அதிருப்தி இருந்திருக்கலாமானாலும் அநேகருக்கு திருப்தி ஏற்பட்டு முஸ்லீம்களால் அல்லாசாமிப் பண்டிகை நிறுத்தப்பட்டதற்கு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆனால் என்பேரில் கோபித்துக் கொண்ட இந்துக்கள் இவ்வூரில் தங்கள் மாரியம்மன் பண்டிகையைக்கூட நிறுத்திவிட சம்மதிக்காமல் மிகுதியும் காட்டுமிராண்டித்தனமான முறையிலேயே நடத்துகின்றார்கள். இப்படியேதான் எங்கும் நடைபெறுகிறது. இந்துக்களை விட இஸ்லாமானவர்கள் அறிவுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள் என்பதும் நியாயத்தை ஒத்துக்கொண்டு அதன்படி உடனே நடப்பவர்கள் என்பதும் இதிலிருந்து ஒருவாறு உதாரணமாய் விளங்குகிறது. ஆனால் இன்னும் அநேக விஷயங்களில் திருத்துப்பாடு ஆகவேண்டி இருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள். முஸ்லீம் சீர்திருத்தத் தலைவர்கள் இதை வலியுறுத்திக் கொண்டே வருகின்றார்கள். கூண்டு திருவிழா முதலியவற்றையும் நிறுத்தி விடுங்கள். இதனால் எல்லாம் இஸ்லாம் கொள்கைகள் கெட்டுப்போகாது. இவை இருந்தால் தான் பரிகாசத்திற்கிடமானதாகும். இந்த முக்கியமான நாள் என்பதில் வேலூர் மௌல்வி சாயபு அவர்கள் குர்ஆனின் மேன்மையையும் திரு. முகமது நபி அவர்களின் உபதேசத்தின் பெருமையையும் பற்றி சொன்னார்கள். என்னால் அந்தப்படி சொல்ல முடியாது. ஏனெனில் நான் அவற்றை படித்துப் பார்த்தவனல்ல. அந்த வேலைக்கு நான் போவதுமில்லை. நான் அதற்கு அருகனுமல்ல. அப்படி



RangaRakes tamilnavarasam.com

ஏதாவது நான் படித்து அதைப்பற்றி இங்கு பேசுவது என்பதும் அதிகப் பிரசங்கித்தனமேயாகும். ஏனெனில் பெரிய பெரிய மௌல்விகள் இருக்கும் போது அவர்கள் முன் நான் என்னதான் படித்தாலும் என்ன பேச முடியும்? அன்றியும் புஸ்தகத்தில் இருப்பதை விட பிரத்தியக்ஷத்தில் உள்ளதைப் பற்றிப் பேசுவதே பலனளிக்கக்கூடும். நான் இந்த சந்தர்ப்பத்தை எதற்கு உபயோகித்துக் கொள்ளகூடுமென்றால் மக்களிடம் பிரத்தியக்ஷத்தில் காணும் விஷயங்களைப் பற்றியும் இன்னமும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்கின்ற விஷயத்தைப்பற்றியும் பேசுவதும் பயன்படுவதாகும் என்று கருதுகின்றேன். திரு.நபி அவர்களின் இவ்வளவு அருமையான உபதேசம் என்பவற்றில் உலக மக்கள் எல்லாம் பயன்அடையும்படி செய்ய என்ன என்ன செய்யவேண்டும் என்பதற்கு ஆகவே நீங்களும் இந்த நாளை பயன்படுத்திக் கொள்ளப்பார்க்க வேண்டும் என்றே கருதுகிறேன்.

## செட்டி முடுக்கா? சரக்கு முடுக்கா?

இஸ்லாம் மார்க்கம் "மக்களுக்கு உபதேசிப்பதிலும் வேதவாக்கி யங்களிலும் மேன்மையானதாய் இருக்கின்றது" என்கின்ற திருப்தியானது மனிதசமூகத்திற்கு எல்லாப் பயனையும் அளித்துவிடாது. ஆனால் அதன் தத்துவத்திற்கொப்ப காரியத்தில் அதன் பயனை உலகத்தில் மேன்மையுறச் செய்து மக்களுக்கு நல்ல வழிகாட்டியாகி உலகமக்களை ஒன்றுபடுத்தவும் அனைவரையும் சகோதரத்தன்மையுடனும் இருக்கவும் பகுத்தறிவுடனும், சுயமரியாதையுடனும், சுதந்திரத்துடன் வாழவும் செய்யவேண்டும். எந்தக் கொள்கைக்காரனும் புஸ்தகத்தில் இருப்பதைக்கொண்டு தங்கள் முன்னோர் கள், பெரியார்கள் சொன்னார்கள் என்பதைக் கொண்டு இனி உலகத்தை ஏய்க்க முடியாது. உலகம் பகுத்தறிவுக்கு அடிமையாகி எதையும் பிரத் தியக்ஷ அனுபவத்தைக் கொண்டு பரீக்ஷித்து சரிபார்க்க வந்துவிட்டது. அதற்கு துணிந்தும் விட்டது. செட்டி முடுக்கு செல்லாது. சரக்கு முடுக்காய் இருந் தால்தான் இனி செலாவணியாகும். 'என் சரக்கை பரீக்ஷிக்கலாமா?' என்கின்ற அடக்குமுறை இனிப்பலிக்காது. 'அவர் ஒஸ்தியென்று சொன் னார்.' 'இவர் ஒஸ்தியென்று சொன்னார்' 'ஆண்டவன் சொன்னான்' என்ப தெல்லாம் அனுபவத்திற்கு நிற்காவிட்டால் காரியத்தில் நடந்து காட்டா விட்டால் இனி மதிப்புப்பெற முடியாது. ஆதலால் எந்தச்சரக்கின் யோக்கி யதையும் கையில் வாங்கிப்பார்த்துதான் மதிக்கவேண்டியதாகும். அந்த முறையில் இஸ்லாம் கொள்கை என்பதும் முஸ்லீம் மக்களின் நடத்தையைக் கொண்டும் அவர்களது பிரத்தியட்சப் பயனைப் கொண்டும் தான் மதிக்கப் படமுடியும்.

## உலகம் சிரிக்காதா?

இந்துக்கள் தேரிழுப்பதைப் பார்த்து முஸ்லீம்கள் பரிகாசம் செய்து விட்டு முஸ்லீம்கள் கூண்டுகட்டி சுமந்து கொண்டு கொம்பு, தப்பட்டை,



மேளம், பாண்டு, பாணம் வேடிக்கைசெய்து கொண்டு தெருவில் போய்க் கொண்டிருந்தால் உலகம் திருப்பிச் சிரிக்கமாட்டாதா? என்று யோசித்துப் பார்க்கவேண்டும். இந்துக்கள் காசிக்கும், ராமேஸ்வரத்திற்கும் போய் பணம் செலவழித்துவிட்டு "பாவம் துலைந்துவிட்டது" என்று திரும்பி வருவதைப் பார்த்து முஸ்லீம்கள் சிறித்துவிட்டு முஸ்லீம்கள் நாகூருக்கும், முத்துப் பேட்டைக்கும், மக்காவுக்கும் பணத்தை செலவு செய்து கொண்டு போய் விட்டு வந்து தங்கள் "பாவம் எல்லாம் துலைந்து விட்டது" என்று கருதிக் கொண்டு புதுக்கணக்குப்போட வந்தார்களானால் மற்றவர்கள் சிறிக்க மாட்டார்களா? என்று நினைக்க வேண்டும். மக்கள் மார்க்கத்தைக் காப் பாற்றுவதென்றால் கொள்கைகளை பகுத்தறிவுக்கு இணங்கி இருக்கும்படி ஜாக்கிரதையாய் பார்த்து பயன்படுத்தவேண்டும். "தீர்க்கதரிசிகள் பகுத்தறிவுக்கு விறோதமாய் சொல்லி இருக்கமாட்டார்கள்" என்று கருதி அவற்றை தன் இஷ்டப்படி அருத்தம் செய்து கொண்டு பிடிவாதமாய் இருப்பது மூட நம்பிக்கையைவிட மோசமானதாகும். அம்மாதிரி மூட நம்பிக்கையின் பய னாய் தீர்க்கதரிசிகள் என்பவர்கள் சொன்னதின் கருத்தையும், உண்மை யையும் அறிந்து கொள்ள முடியாமலும் போகும்.

## பகுத்தறிவு

நமக்குப் பகுத்தறிவையும் நடுநிலைமையையும் எதிலும் பயன் படுத்த உறுதியும், துணிவும் இருந்தால்தான் உண்மையைக் கண்டு பிடிக்கவே முடியும். நாம் அறிவை உபயோகப்படுத்தாமல் நபிகள் வாக்கியத்திற்கு புரோகிதர்கள் சொல்லுகின்றபடி தப்பர்த்தம் செய்து கொண்டு 'இதுதான் நபிகள் சொன்னது' என்று சொன்னால் நபிகளுக்கு மரியாதை செய்ததாகுமா? நமது சொந்தக்கண்ணை பரிசுத்தப்படுத்திப் பரீட்சித்துப்பார்க்க வேண்டும். சாளேசரம் இருந்தால் சரியாய்த் தெரியாது. பக்கப்பார்வையாய் இருந்தாலும் சரியாய்த் தெரியாது. இரண்டுக்கும் தகுந்தபடி தூரத்தை சரிபடுத்தி நல்ல கண்ணாடி கொண்டு பார்க்கவேண்டும். மஞ்சள் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்த்தால் மஞ்சளாகத்தான் தெரியும். சிகப்பு சிகப்பாகவும், பச்சை பச்சையாகவுந்தான் தெரியும். நல்ல சுத்தமான எந்தவித நிறமும் இல்லாத கண்ணாடிகொண்டு பார்க்கவேண்டும். அது போலவே தைரியமான பகுத்தறிவுடன் சுத்தமான நடுநிலைமை மனதுடன் எதையும் பார்க்கவேண்டும். கண்ட உண்மையை தைரியமாய் வெளியில் எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படிக்கில்லாமல் தங்களுக்கு தெரிந்த தப்பிதங்களை மூடி வைத்திருந்தால் கடைசியாக ரிபேர் செய்யமுடியாத அளவு மோசமானதாகி விடும். நீங்கள் பார்க்கின்ற கண்ணும், நீங்கள் செய் கின்ற அருத்தமும், நீங்கள் அறிந்த மாதிரியும் யுக்திக்கும், அனுபவத்திற்கும் பொறுத்திப் பாராமல் எல்லாம் சரியானதாகத்தான் இருக்கும் என்று நினைத்து விடாதீர்கள். உங்களைப்போன்ற மற்றவர்கள் எப்படி நினைத்தார் கள்? நினைக்கிறார்கள் என்று பாருங்கள்.



RangaRakes
tamilnavarasam.com

### மற்றவர்கள் மதிப்பது

நபி அவர்கள் உபதேசங்களை துருக்கியர் எப்படி மதிக்கின்றார்கள்? எப்படி அர்த்தம் செய்கின்றார்கள்? அவர்கள் என்ன பலன் அடைகின்றார் கள்? என்பவைபோல உலகத்தின் முஸ்லீம்களின் நடப்பு முழுவதையும், அமுலையும், பலனையும் நன்றாய் கவனித்துப் பார்க்க வேண்டும். உங்கள் 'எதிரி' மதத்தை (கொள்கைகளை) பரிசோதிப்பதுபோல் எதிரிஆதாரத்தை எந்தெந்த வழியில் பரிசோதித்து நியாயம் அநியாயம் சொல்லுவோமோ அந்த நோக்கத்துடன், அந்த வேகத்துடன் உங்கள் கொள்கைகள் என்று உங்களுக் குப்புரோகிதர்களால் போதிக்கப்பட்டு நீங்கள் நடக்கும் ஒவ்வொரு நடவடிக்கையையும் பரிசோதித்துப் பார்க்கவேண்டும். கண்ட உண்மையை வீரத்துடன் வெளியிட்டு குற்றமிருப்பின் திருத்தவேண்டும். மனிதன் முடிவுபெற்ற முற்போக்கானவன் என்று யாரும் கருதிவிடக்கூடாது. உலகமும் முழு முற்போக்கை அடைந்து விட்டதாகக் கருதிவிடாதீர்கள். திருத்தம் அவசியமானால் திருத்தியாக வேண்டும். திருத்தம் சரியென்று பட்ட வழியில் மனம் திரும்ப பயமோ வெட்கமோ அடையக்கூடாது.

### இந்தியாவும் அப்படித்தான்

நபி அவர்கள் தோன்றிய காலத்தில் அரேபியாதேசம் எப்படி இருந்த தென்று மௌல்வீ சாயபு அவர்கள் சொன்னார்களோ அப்படியேதான் இன்ன மும் இந்தியா-இந்து கொள்கைகள் இருந்து வருகின்றது. அரேபியர் களிடத்தில் பெண் குழந்தை பிறந்தால் துக்கப்பட்டு கொல்லுகின்ற வழக்கம் இருந்ததாக மௌல்வி சாயபு சொன்னார்கள். இந்துக்களிடத்திலும் பெண் குழந்தை பிறந்தால் துக்கப்படும் வழக்கம் இன்னும் இருக்கின்றது. சமீப காலம் வரை பெண்களை - பெரிய பெரிய பெண்களை புருஷன் இறந்துபோனால் பக்கத்தில் உயிருடன் வைத்து நெருப்புக் கொளுத்தும் வழக்கம் இருந்து வந்தது. இன்றும் பெண்களை அதைவிடக் கேவலமாய் விதவை என்று சொல்லி சகுனத்தடையாகப் பாவித்து கொடுமைப்படுத்தும் முறை இருந்துதான் வருகின்றது. அரேபியர் பல கடவுள்களை வணங்கின தாகச் சொன்னார்கள். அதுபோலவே இன்றும் இந்துக்கள் ஒவ்வொருவரும் பல கோடிக்கணக்கான கடவுள்களை உருவத்துடன் மாத்திரமல்லாமல் பெண்டு, பிள்ளை வைப்பாட்டி ஆடு மாடு குதிரை யானை எலி பெருச்சாளி மயில் கெருடன் பாம்புவாகிய உருவங்களுடன் வணங்குகின்றார்கள். இவை யெல்லாம் கீழ் மக்கள் என்று சொல்லுகின்றவர்களிடம்தான் இருக்கின்றது என்று நினைத்து விடாதீர்கள். மேல்மக்கள் என்று மதத்தின்பேரால் முடிவு கட்டப்பட்ட மக்களிடமே இருக்கின்றது. ஆதலால் திரு.மகமதுநபி அவர்கள் தோன்றுவதற்கு முன் அரேபியா பாலைவனம் எப்படிப்பட்ட காட்டுமிராண்டித்தனத்தில் இருந்ததோ அதுபோலவேதான் இன்றைய வரையில் இந்தியாவின் இந்து சமூகம் இருந்து வருகின்றது. இந்த



லட்சணத்தில் இதை எடுத்துச் சொன்னால் இந்துக்களுக்கு வரும் கோபத்திற்கு அளவே இல்லை. இந்தமாதிரியான ஒரு மதசம்பந்தமான முக்கிய நாள் என்பதற்கு உங்களைப் போல் இந்துக்கள் என்னைக் கூப்பிட வும் மாட்டார்கள். நான் ஏதாவது சொன்னால் பொறுக்கவும் மாட்டார்கள். என்னை வைவதையே அவர்கள் மதப்பிரசாரமாய் கருதுவார்கள். ஆனால் இஸ்லாம் கொள்கை என்பது எவ்வளவு பெருமையாய் எவ்வளவு சகோதரத் தன்மையாய் யாரையும் எந்தவித அபிப்பிராயக்காரனையும் கூப்பிடவும் அவர்கள் சொல்லும் எதையும் பொருமையாய் கேட்கவும் இருக்கின்ற சுதந்திரத்தைப் பார்த்து இவ்விஷயத்தில் இந்துக்கள் வெட்கப்பட வேண்டு மென்றே சொல்லுவேன்.

### துலுக்கர் துடுக்கரா?

மௌல்வி ஆஜீ அப்துல் கரீம் சாயபு அவர்கள் துலுக்கன் துடுக்கன் என்று இந்துக்களால் சொல்லப்படுவதாய்ச் சொன்னார். இது இந்துக் களுக்குள் பலமில்லாத காரணத்தாலும் தங்களுக்குள் வீரமும் ஒற்றுமையும் இல்லாத காரணத்தாலும் சொல்லப்படுவதேயாகும். முஸ்லீம்களுக்குள் இருக்கும் ஒற்றுமையும் வீரமும் இந்துக்களுக்கு துடுக்கர்களாய் காணப் படுவது அதிசயமில்லை. என்னை ஒரு சாயபு அடித்தால் ஒரு அய்யரோ ஒரு செட்டியாரோ ஒரு முதலியாரோ சிபாரிசுக்கு வரமாட்டார். ஏனெனில் ஜாதிப்பிரிவு காரணமாக இந்துக்களுக்குள் சகோதரத்தன்மை இல்லாமல் போய்விட்டது. ஒருவனுக்கு மற்றவர்களிடம் அன்பு இல்லாமல் போய் விட்டது. ஜாதிப்பிரிவு இல்லாத காரணத்தாலேயே முஸ்லீம் மக்களுக்கு சகோதரத்தன்மை இருந்து வருகின்றது. சகோதரர்களை தாராளமாய் உடையவனைக் கண்டால் யாரும் அஞ்சுவது வழக்கம்தான். ஆதலால் இந்துக்கள் உங்களை குற்றம் சொல்லுகிறார்களே என்று கருதி உங்கள் சகோதரத்தன்மையையும் வீரத்தையும் நழுவவிட்டு விடாதீர்கள். எண்ணிக் கையில் கொஞ்சமாயிருந்தாலும் உலகத்தில் நீங்களும் தலைசிறந்து விளங்கக் காரணமே உங்கள் சகோதரத்தன்மையே யாகும். ஆகையால் அதைவிட்டு விடாதீர்கள். ஆனால் மற்ற கொள்கைக்காரரையும் உங்கள் சகோதரர்களாக ஆக்கிக்கொள்ள முயலுங்கள். அதற்குத் தடையாயிருக்கும் சாதாரண காரியங்களையும் வெரும் வேஷமாத்திரத்தால் இருக்கும் வித்தியாசங்களையும் லக்ஷியம்செய்யாமல் ராஜிக்குத் தயாராயிருங்கள். இந்த வகையில் தான் ஒவ்வொரு கொள்கையும் செல்வாக்குப் பெற்று தலை சிறக்கமுடியும். இஸ்லாம் கொள்கையைப்பற்றி யாராவது தப்பிதமாய் நினைத்திருந்தால் தைரியமாய் திருத்த முற்படுங்கள்.

### சந்தேகத்தை திருத்துங்கள்

உதாரணமாக மக்கா யாத்திரையைப் பற்றி மலேயா நாட்டில் உள்ள கிடாசுங்கப்பட்டானியில் என்னிடம் ஒரு இந்து என்பவர் ஒரு கேள்வி



RangaRakes tamilnavarasam.com

கேட்டார். அதாவது 'இந்துக்களது காசி ராமேஸ்வரம் மதுரை யாத்திரையை மூடநம்பிக்கை என்கின்றாயே, இஸ்லாமானவர்கள் மக்கா யாத்திரை செய்ய மலேயாவில் அநேக முஸ்லீம்கள் செல்வதால் கஷ்ட நஷ்டப்படுகின்றார் களே' என்றார். நான் பதில் சொல்லமுடியாமல் அப்படியானால் முஸ்லீம்கள் அநுசரிக்கும் கொள்கைகள் முழுவதும் பகுத்தறிவுக்கொள்கை என்று நான் சொல்லவரவில்லை என்றும் அதில் அநேக நல்ல கொள்கை பிரத்தியட் சத்தில் பார்க்கிறேன் என்றும் சொன்னேன். பிறகு சென்ற வருஷம் இதே கொண்டாட்ட நாளில் ஈரோட்டிற்கு வந்த மௌல்வி அப்துல் அமீது சாயபு பாகவியவர்களைக் கேட்டேன். அவர் விளக்கமாக்கினார். முஸ்லீம்கள் மக்காவுக்குப் போவதில் செல்வத்திலும், சரீர திடத்திலும் தகுதியுள்ளவர்கள் தான் போகவேண்டுமென்று இருக்கின்றதே தவிர எல்லோரும் போய்த்தீர வேண்டுமென்று இல்லை யென்றும் அந்த இடம் முகம்மதுநபி அவர்கள் உண்மையில் பிரத்தியட்சத்தில் பிறந்தஇடம் என்பதற்காக அங்கு போவது என்பது தவிர வேறு அற்புதமில்லை என்று அறிவு வளர்ச்சிக்கும் மற்ற மக்கள் நடை, உடை, நாகரீகம் பார்த்து வரவும் பயன்படும் படியான ஒரு யாத்திரை என்றும் "கொலை களவு கொள்ளை நடத்தின பாபம் தீர்ந்து விடும் என்று சொல்லுவது தப்பு" என்றும் அந்த மாதிரி எண்ணத்துடன் யாரும் போவதில்லை என்றும் சொன்னார். யாராவது அந்தப்படி போனாலும் அது தெரியாத்தனமென்றே சொன்னார்கள்.

ஆகவே மக்களிலேயே பிறவியில் வித்தியாசமில்லை என்று சொல்லும் கொள்கையில் இடத்திற்கு இடம் வித்தியாசம் கற்பிக்கப்பட்டு இருக்காது என்பது பகுத்தறிவில் பட்டதேயாகும். ஆனால் இந்து கொள்கை கள் என்பவற்றில் 'ஒரு மனிதன் எவ்வளவு அயோக்கியனாயிருந்தாலும், கொலை செய்தாலும், திருடினாலும், நம்பிக்கை துரோகம் வஞ்சகம் முதலிய காரியம் செய்தாலும், ஒரு ஊரை நினைத்தால்-ஒரு ஊருக்குப் போனால் ஒரு ஊரில் ஒரு குளத்திலுள்ள தண்ணீரைத் தலையில் தெளித்துக் கொண் டால் பாபம் பரிகாரமாகிவிடும், மோட்சமடைந்து விடுவான்' என்று எவ்வளவோ அடியோடு பொய் பெருமைகளை கற்பித்து மூடநம்பிக்கை உண்டாக்கி அங்குள்ள சோம்பேறிகள் பிழைக்க ஸ்தல யாத்திரை ஏற்படுத் தப்பட்டிருக்கின்ற தென்றும், அப்படிப்பட்ட ஸ்தல யாத்திரைப்புரட்டுகள் எல்லாம் பகுத்தறிவுக்கு விறோதமானது-மூடநம்பிக்கையில் பட்டது என்றும் சொல்லும்போது மற்றவர்கள் யாராவது அது போல் செய்தாலும், அந்தந்த தலைப்பின் கீழ்தான் வருமல்லவா? என்பதை யோசித்து நடக்க வேண்டியது மக்கள் கடமையாகும் என்று ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும்.

## இப்படிப்பட்ட நாள்

ஆகவே இப்படிப்பட்ட அருமையான நாட்களை மனிதன் மேன்மைக்கும் முற்போக்கிற்கும் ஒற்றுமைக்கும் அறிவு விளக்கத்திற்கும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீதே இங்குள்ள இந்து முஸ்லீம்களை சகோதரர்களாகக் கருதியே என் மனதில் பட்டதைச் சொன்னேன். மௌல்வி சாயபு அவர்கள் இருவரும் சொன்ன விஷயங் களிலும் பெரிதும் அறிவுக்கு விறோதமானதோ கேள்விக்கு இடமானதோ இல்லை என்பதை முக்கியமாய் முஸ்லீம்களும் மற்ற இந்துக்களும் கவனித்துப்பார்த்து இதுபோலவே எல்லாக் கொள்கைகள் விஷயங்களிலும் பகுத்தறிவுடனிருக்க வேண்டுமென்றே கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றும் நான் சொன்ன விஷயங்களில் உங்கள் பகுத்தறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் ஒப்புக் கொள்ளாததைத் தள்ளி விடுங்கள். மற்றும் இம் மாதிரி நாட்களை வெறும் விருந்துக்கு உபயோகித்துக் கொள்ளாதீர்கள். இன்று சுமார் 500 ரூ. வசூல் செய்து பெரிய விருந்து சாப்பாடு செய்து சாப்பிட்டதாகத் தெரிகின்றது. இது பிரயோஜனமில்லை. பணங்கள் வசூல் செய்து பகுத்தறிவு பிரசாரம் செய்யவும் ஏழை மக்களுக்கு கல்விக்கும் கொள்கைகளின் உண்மை தத்துவத்தை பகுத்தறிவுக்குப் பொருத்திப் பார்த்து பயன்படுத்தும் தத்துவத்திற்கும் உபயோகிக்கச் செய்யவும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு: 02.08.1931 அன்று ஈரோடு முஸ்லீம் வாலிப சங்கக்கட்டிடத்திற்கு முன் நடைபெற்ற நபிகள் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் ஆற்றிய தலைமையுரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 09.08.1931**


RangaRakes
tamilnavarasam.com

# இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

உயர்திரு காந்தி அவர்கள் தமது 30-7-31 உ "யங் இந்தியா" பத்திரிகை யில் "நாம் இன்று செய்ய வேண்டியது எது?" என்னும் தலைப்பின் கீழ் "பொது ஜனங்களால் அதிகமாகக் கண்டிக்கப்படும் கராச்சி காங்கிரஸ் ஜீவாதார உரிமைகளைப் பற்றிய தீர்மானங்கள்" என்று ஆரம்பித்து, அவைகளை எல்லாம் எடுத்தெழுதி, அவைகளைப் பற்றி தமதபிப்பிராய மென்பதாக எழுதியிருப்பது என்னவென்றால்,

"ஜீவாதார உரிமைத் தீர்மானத்தில் குறிப்பிட்ட பல விஷயங் களில், அனேக விஷயங்களை இன்றே நடத்தி வைக்கக்கூடியவை களாகும். ஆதலால், அவற்றுள் சர்க்காரார் மூலம் சட்டம் செய்து நிறைவேற்றப்பட வேண்டிய சில விஷயங்கள் தவிர, பொது ஜனங் களால் செய்து முடிக்க வேண்டிய முக்கியமான விஷயங்களை இப்பொழுதே நாம் செய்து முடிக்காவிட்டால் பிறகு, இதே பொது ஜனங்கள் தயவாலே இருக்கவேண்டிய அரசாங்கத்தால் எப்படி அவைகள் செய்து முடிக்கப்பட முடியும்?".

"இன்றைய தினமே, கண்டிப்பாய் மாற்றித்தீர வேண்டிய முக்கிய விஷயங்களை செய்யாமல் விட்டு விட்டால், நமக்கு அதிகாரம் வந்தபிறகு அவற்றில் நமக்கு அலக்ஷியம் ஏற்பட்டு விடும்." உதாரணமாக

1. ஒருவருக்கொருவர் மதங்களை மரியாதை செய்வது,

2. பெண்களை எல்லா விஷயங்களிலும் சமத்துவமாய் நடத்துவது,

3. தீண்டாமையை ஒழித்து விடுவது................ ஆகிய காரியங் களைச் செய்ய இப்பொழுதே நம்மால் முடியாவிட்டால் சுயராஜியம் வந்தபிறகு சுயராஜிய அரசாங்கத்தாருக்கு மக்களை நிர்ப்பந்தப் படுத்தி மேற்கண்ட சீர்திருத்தங்களைச் செய்வதற்கு சக்தியில்லாமல் போய்விடுமென்றே நான் தீர்க்கதரிசனம் சொல்லுவேன். ஏனெனில் ஜன அபிப்பிராயங்களுக்கு விரோதமாக ஒரு ஜன செல்வாக்குப்



பெறவேண்டிய அரசாங்கமானது ஒரு நாளும் ஒரு காரியத்தையும் செய்ய முடியவே முடியாது. அப்படியேதாகிலும் செய்ய முடியுமே யானால், அந்த அரசாங்கம் உடனே அழிக்கப்பட்டு விடும்".

"பகுத்தறிவு ஞானமும், கட்டுப்பாடுமுள்ள ஜனநாயகம் தான் சரியான ஜனநாயகமாகும். அப்படிக்கில்லாமல் பாரபட்சமும், பாமரத்தன்மையும், மூட நம்பிக்கையுமுள்ள மக்களின் ஜனநாயக மானது எப்படியிருந்தாலும் முடிவில் வீண் குழப்பமேற்பட்டு தானாகவே அழிந்தே தீரும்".

"ஆகவே, தீண்டாமை யொழித்தல் முதலிய விஷயங்கள் கொண்ட ஜீவாதார உரிமைகளென்பது இப்பொழுதே செய்து தீர வேண்டியதே யொழிய, பின்னால் செய்ய வேண்டியதென்றோ, செய்துவிடலா மென்றோ சொல்லக் கூடியவைகளல்ல. தேசம், உண்மையான சுயராஜியத்திற்கு தயாராயிருக்கின்றது என்று சொல்லுவதானது வாஸ்தவமானால், மேற்கண்ட வேலைகள் செய்வது சிறிதும் கஷ்டமானதல்ல. ஆதலால் ஆங்காங்குள்ள காங்கிரசுக்காரர்கள், ஆங்காங்குள்ள முக்கிய குறைகளென்று தங்களுக்குத் தோன்றும் காரியங்களை முன்னதாகத் திட்டங்கள் போட்டுக்கொண்டு அதற்காக வேலை செய்ய வேண்டும்"

என்று எழுதியிருக்கின்றார்.

இதே அபிப்பிராயங்களை நாம் இதற்குமுன் பலதடவைகளில் எடுத்து சொல்லி, பேசியும், எழுதியும் வந்திருக்கின்றோம். உதாரணமாக திருவாங்கூர் (கோட்டாறு) உபன்யாசத்தில், "முதலாவது திரு. காந்தியும் திரு. ஜவஹர்லாலும் கேட்கும் சுயராஜியம் ஜனநாயக சுயராஜியமா? ஏகநாயக சுயராஜியமா? என்பதை முதலில் விளக்கப்படுத்திக் கொள்ளுங்கள். ஜன நாயகமானால் தீண்டாதவர்களை கோவிலுக்குள் விடமாட்டேன் குளத்தில் விட மாட்டேன்" என்று சொல்லுகின்றவர்கள் யார்? பிறகு அந்த கோவிலை யும் சொத்தையும் பறிமுதல் செய்கின்றவர்கள் யார்? என்று யோசித்துப் பாருங்கள். ஜனங்கள் விடமாட்டேன் என்று சொன்னால் அந்த ஜனப் பிரதிநிதி சர்க்கார், யார் மனதையும் புண்படுத்தாத சர்க்கார், கோவிலை எப்படி பறிமுதல் செய்ய முடியும்? கோவிலுக்குள் பறையனைவிட இஷ்டப் படாத ஜனங்கள், இஷ்டப்படும் பிரதிநிதியை தெரிந்தெடுப்பார்களா? என்பதை யோசித்துப்பாருங்கள். ஜனங்கள் இஷ்டத்திற்கு விரோதமாய் நடக்கும் இராஜியபாரம் ஜனநாயக இராஜிய பாரமாகுமா? மற்றும் இந்திய ஜனங்கள் தங்களுக்குள் இருக்கும் ஜாதி வித்தியாசத்தையும், தீண்டாமை யையும் ஒழிப்பதற்கு ஜனநாயக சுயராஜியம் வேண்டுமென்றால் இது பித்தலாட்டமா அல்லவா? என்று யோசித்துப் பாருங்கள். இன்றைய தினம் தீண்டாமை ஒழிப்பதை யார் வேண்டாமென்கின்றார்கள்? இஸ்லாமானவர்



RangaRakes tamilnavarasam.com

கள் ஆக்ஷேபிக்கின்றார்களா? கிறிஸ்துவர்கள் ஆக்ஷேபிக்கின்றார்களா? அல்லது கிறிஸ்துவ அரசாங்கமும் ஆக்ஷேபிக்கின்றதா? ஆரம்பத்திலேயே புரட்டு பேசும் சுயராஜிய அதிகாரம் வந்தால் கொடுமை செய்யுமா? நன்மை செய்யுமா? இன்று தீண்டாமை அனுசரிக்கும் ஜனங்களுக்கு சர்வ அதிகாரம் வந்தால் தீண்டாமையை பலப்படுத்துவார்களா? தளர்த்துவார்களா? எந்த அரசாங்கத்தில் தீண்டாமை இருந்தாலும் தீண்டாமையை அனுசரிக்கின்ற வர்கள் இன்று சுயராஜியம் கேட்கும் இந்துக்களே யொழிய வேறல்ல,

ஆகவே, இந்த மாதிரி வார்த்தைகள், மக்களை ஏய்க்கும் தந்திர வார்த்தை அல்லவா என்பதை யோசித்துப்பாருங்கள்" என்றும் சொல்லி யிருக்கின்றோம்.

ஆனால், அவற்றை நாம் சொல்லும்போது அவைகளைப் பார்த்த நமது நாட்டு "தேசீய வீரர்"களும், " காங்கிரஸ் பக்தர்"களும் ஆத்திரங் கொண்டிருப்பார்கள். இப்பொழுதோ அவர்களுடைய "குருநாதர்" "மகாத்மா" "காங்கிரசின்-தேசீய சபையின் ஏகநாயகர்" "உலகம் போற்றும் உத்தமர்" "தேர்களிலும் இரதங்களிலும் கடவுளுக்குப் பக்கத்திலிருத்தி வைத்து, பூஜை, நைவேத்தியங்கள் செய்து கும்பிடவேண்டியவ" ரென்று சொல்லப்படுபவரான திரு.காந்தியவர்களின் 30.7.31ந் தேதி "யங் இந்தியா" வில் இம்மாதிரிசொல்லியிருக்கின்றாரே இதற்கென்ன சமாதானம் சொல்லப் போகின்றீர்கள்? என்றுதான் கேட்கின்றோம். அதோடு கூடவே மற்றொரு விஷயத்தையுமிப்பொழுதே குறிப்பிட விரும்புகின்றோம். அதாவது, திரு. "காந்திக்கு அடுத்தவ"ரென்றும், "தென்னாட்டு காந்தி" யென்றும் பல தேச பக்தர்களால் கொண்டாடும்படியான திரு. சி. இராஜகோபாலாச்சாரியார வர்கள் தமது குழாத்துடன் ஈரோட்டிற்கு வந்து, காந்தி பிரசாரம் செய்த காலத் தில் ஈரோடு காங்கிரஸ் பக்தர்களான, நவஜவான் பாரத சபை வீரர்களான சில நண்பர்கள் திரு. ஆச்சாரியாரை நடுக்கூட்டத்தில் "தீண்டாமை விஷய மாக தாங்கள் ஏன் எவ்வித பிரசாரமும் செய்வதில்லை? காங்கிரசிலும் வேலைத்திட்டமாக நடத்துவதில்லை? அதைப்பற்றி ஒரு வார்த்தைக்கூட ஏன் பேசுவதில்லை?" என்று கேட்டபொழுது, அதற்கு திரு.ஆச்சாரியார வர்கள் சொன்ன பதில் என்னவென்றால்,

> "எங்களுக்குத் தீண்டாமை பிரசாரம் செய்ய மகாத்மா காந்தியவர்கள் கட்டளையிடவில்லை. ஆதலால் நாங்களதைப் பற்றி ஒன்றும் செய்யவில்லை" யென்று தைரியமாய்ச் சொன்னார்.

ஆனால், திரு. காந்தியவர்களின் இந்த மேற்கண்ட வாக்கியங்க ளிலோ, "சுயராஜ்யம் பெறுவதற்கு முன்பாகவே தீண்டாமை விலக்கு வேலை செய்தாகவேண்டும். அதைச் செய்ய முடியாத ஜனங்களால் சுயராஜ்யம் வந்தால் தீண்டாமை யொழிக்கப் பட முடியாமல் போவதோடு கிடைத்த சுயராஜியம் தானாகவே அழிந்து நாசமாய்ப் போய்விடும்" என்று



அழுத்தந் திருத்தமாக சொல்லியிருப்பதுடன், "காங்கிரஸ்காரர்கள் ஒவ்வொருவரும் தங்கள் எல்லைகளுக்குள்ளிருக்கும் ஜீவாதார உரிமை விஷயங்களில் எதை முன்னால் செய்யவேண்டுமென்று யோசித்துப் பார்த்து, திட்டம் போட்டுக்கொண்டு அவைகளை உடனே செய்ய புரப்பட வேண்டு" மென்பதாக எழுதியிருக்கின்றார்.

( இவையெல்லாம் 4-8-31ந்தேதி "சுதேசமித்திரன்" 10ம் பக்கம், 5-வது கலத்திலிருக்கிறது.) ஆகவே திரு. இராஜகோபாலாச்சாரியாரவர்களும், அவரைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராய்க் கொண்ட காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களென்று சொல்லிக் கொள்பவர்களும் மற்றும் சுயமரியாதையியக்கத்தை வைது வாழும் தேசீய வீரர்களும் இதற்கென்ன பதில் சொல்லுகின்றார்களென்று கேட்கின்றோம்.

ஜவுளிக்கடை மறியலினால், வெளிநாட்டுக்குப் போகும் செல்வம் நமது நாட்டில் நிற்கலாமென்றே வைத்துக் கொள்ளுவோம். அதனால் லட்சாதிபதியாயிருக்கும் மில் முதலாளிகள், கோடீஸ்வரர்களாகிவிடுவார்க ளென்றே வைத்துக் கொள்ளுவோம். அவர்களால் காங்கிரசுக்கும் லட்சம் லட்சமாய் பணம் கொடுக்கப்பட முடியுமென்றும் வைத்துக்கொள்ளுவோம். ஆனால் இன்றைய தினம் இந்திய பொருளாதார நிலைமையில் எந்தக் கூட்டம் கஷ்டப்பட்டு கால் பட்டினி, அரைப்பட்டினியாயிருக்கின்றதோ அவர்களுக்கு என்ன லாபம் என்பதை யோசித்தால் அதன் பயனற்ற தன்மையும் விளங்கும். வெளிநாட்டுத்துணி ஒரு அங்குலம் கூட இந்தியா வுக்குள் இரங்காமல் செய்தாலும் நூற்பவர்களுக்கு தினம் 1-க்கு 1 அணா வுக்கு மேல் கூலியில்லை யென்பதை அதுவும் கட்டுகின்றவன் ஒன்றுக்கு இரண்டாய், மூன்றாய் விலை கொடுத்தால் தான் என்பதையும் நினைத்துப் பாருங்கள்.

அதுபோலவே கள்ளு மறியலால் கள்ளுக்கடைகள் எல்லாம் எடு பட்டுப் போனதாகவே வைத்துக் கொள்ளுவோம். சர்க்காராருக்கு வரும் கள் இலாக்கா வரும்படியைக் குறைப்பதின் மூலம் சர்க்காராரை ஸ்தம்பிக்கச் செய்து விடலாமென்றே வைத்துக்கொள்ளுவோம். குடிகாரர்களும் பகிரங்க மாய்க் குடிக்கும் கள்ளுக்குடியை விட்டுவிடுவார்களென்றே வைத்துக் கொள்ளுவோம். இவைகளெல்லாம் கீழ்ஜாதிக்காரனென்றும், தீண்டாதவ னென்றும் தெருவில் குளத்தில் பிரார்த்தனை ஸ்தலத்திலிருக்க, அருகில் வரமுடியாதவரென்று சொல்லப்படுகிற இழிவை ஒரு நிமிஷ நேரமாவது வைத்துக்கொண்டிருக்கும் அவமானத்தைவிட முக்கியமானதா? என்று கேட்கின்றோம்.

மற்றும் "திரு. காந்தியின் உண்மைத்தோற்றம்" என்னும் தலைப்பின் கீழ் மதுவிலக்கு விஷயமாய் திரு காந்தியவர்கள் எழுதிய விஷயத்தை எடுத்துப்போட்டிருந்தோம். அதாவது,



RangaRakes
tamilnavarasam.com

“கள்ளு, சாராயக்கடைகளை மூடுவது நம்முடைய வேலையல்ல.”

“குடிகாரர்கள் திருட்டுத்தனமாய் கள்ளு, சாராய உற்பத்தி செய்து எப்படியாவது குடித்துத்தான் தீருவார்கள்.”

“ஆதலால், கள்ளு, சாராயக்கடைகள் மூடப்பட்டாலும் இப்பொழு திருப்பது போலவே கள்ளு, சாராயம் விற்பனையாகிக்கொண்டும், குடிக்கப் பட்டுக் கொண்டுந்தானிருக்கும்”

என்று திரு. காந்தியவர்கள் எழுதியிருந்ததை எடுத்துக்காட்டியிருந் தோம். அப்படியிருந்தும் மறியல்களென்பது ஒரு நாடகம் போல் நடத்தப் பட்டுக் கொண்டு வருகின்றது.

திரு காந்தியவர்கள் எழுதின விஷயத்தை காற்றில் பறக்கவிட்டு விட்டு “காந்திக்கு ஜே! ” என்று கூப்பாடு போட்டுக்கொண்டே கள்ளுக் கடைகளிலும், ஏலம் விடப்படும் இடங்களிலும் தொண்டர்கள் மறியல் செய்து கொண்டு வருவதும், இம்மறியலால் குடி நின்று விடுமா? என்றால் “அரசியல் காரியத்திற்கு மறியல் செய்கின்றோம்” என்பதும், அரசியல் மறியல் செய்து கைவிடப்பட்டு விட்டதே என்றால் “ஒழுக்கத்துக் காக செய்கிறேன்” என்பதுமாய் சமயத்திற்குத் தகுந்தபடி பேசி மறியல் செய்யப் பட்டு வருகின்றது.

இதனால் கவர்ன்மெண்டுக்கு வரும்படி குறைந்து போகலாம். ஆனால் இந்தக் காரணத்தைக் கொண்டே கவர்ன்மெண்டார் செய்து தீரவேண்டிய அநேக நல்ல விஷயங்கள் கல்வி, சுகாதாரம், போக்குவரவு முதலிய துறைகள் இந்தச் சாக்கைச் சொல்லிக்கொண்டு செய்யப்படாமல் நிறுத்தப்பட்டும் போக நேரிட்டுத் தீருமேயல்லாமல், எந்த உத்தியோகஸ் தருடைய சம்பளமாவது லஞ்சமாவது காலணா குறைந்து விடுமா என்று பாருங்கள்.

அன்றியும் இதனால் பொதுஜனங்களுக்கோ, குடிக்கின்ற கூட்டத்தார் களுக்கோ ஒருவித இலாபமும் ஏற்படப்போவது கிடையாது. ஏனென்றால்,

இன்றைய தினம் ஏலம் மறியலால் ஏலத்துகை மாத்திரம் குறையுமே யன்றி, ஏலத்தில் எடுத்தவர்களுடைய வியாபாரங்களொன்றும் பிரமாத மாய்க் குறைந்து விடப்போவதில்லை. அவர்கள் பதினாயிரம், லட்சம் என்ப தாக லாபம் அடைந்து மறியல் தொண்டர்களுடன் வியாபாரம் பேசி தாராள மாய் செல்வவான்களாகப் போகின்றார்கள். எப்படியும் முன்னிலும் செல்வாக்காய் கிளர்ச்சியாய் வேடிக்கையாய் வியாபாரம் நடக்கத்தான் போகின்றது. குடிகாரர்களும் நன்றாய்க் குடிக்கப்போகிறார்கள். இந்தப் படியல்லாமல் ஒரு சமயம் கொஞ்சநஞ்சம் மறியல் நடப்பதாயிருந்தாலும், சந்துக்கடைகள் மூலமும், தோட்ட விற்பனைகள் மூலமும், திருட்டுத்



தனமாய் சாராய வகைகள் காய்ச்சியும், சாராயக் கடைகளிலிருந்தும் வீடு வீடாய் கொண்டுபோய் கொடுத்துக் கொண்டிருக்கின்ற காரியங்களால், குடியும், குடி வியாபாரக்காரர்களுடைய லாபமும் எப்பொழுதும் போலவே நடந்து கொண்டு தானிருக்கப் போகின்றது.

ஆகவே, இன்றைய கள்ளுக்கடை, ஏலஸ்தலம் ஆகியவைகளின் மறியல், குத்தகைதாரர்களுக்கு இலாபத்தைக் கொடுக்கப் போகின்றதென் பதைத் தவிர, கலால் இலாக்கா சட்டங்களும், ஹத்தும் இயற்கையாகவே அமுலுக்கு வராதிருக்கும்படியாக செய்யப்படுவதைத் தவிர, வேறு ஒரு இலாபமும் ஏற்படப் போவதில்லை.

ஆகவே, இதுவரையில் நாம் காங்கிரசையும் காங்கிரஸ் நடவடிக்கை களையும் குற்றம் சொல்லிக் கொண்டு வருகின்றோமென்று நினைத்துக் கொண்டிருந்த வஞ்சனை, சூட்சியறியாத பாமர மக்களும், மூடப்பழக்க வழக்கங்களிலடிமைப்பட்டு, பகுத்தறிவை யுபயோகிக்கத் தைரியம் பெறாத பொதுஜனங்களும் இவ்விஷயங்களையெல்லாம் நன்றாய் ஆராய்ச்சி செய்து பார்த்த பிறகாவது, சுயபுத்தியுடன் ஒரு முடிவுக்கு வர மாட்டார்களா வென்று ஆசைப்படுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 09.08.1931**



RangaRakes tamilnavarasam.com

# சம்பளக் குறைவு

மத்திய மாகாண அரசாங்க கல்வி மந்திரி உயர்தர வகுப்புப் பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளின் சம்பளங்களை அதாவது ஹைஸ்கூல் பிள்ளை களுக்கு 8-ல் ஒரு பங்கும், கலாசாலை மாணவர்களுக்கு 3-ல் ஒரு பங்குமே குறைத்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் சொல்லும்போது "ஏழைக் குடியானவர்களுடையவும், தொழிலாளிகளுடையவும் பிள்ளைகள் படிப்பதற்கு இப்போதைய சம்பளம் மிக அதிகமாயிருப்பதால் அதை குறைத்து அவர்களுக்குச் சௌகரியம் செய்ய வேண்டும் என்பதற்காகவே குறைக்கப்படுகின்றது" என்று சொல்லி இருக்கிறார். இதை அந்தச் சர்க்காராரும் ஒப்புக் கொண்டு விட்டார்கள். அது இந்த ஆகஸ்டு 1-ந் தேதி முதலே அமுலுக்கு வரப்படுமாம்.

அந்தப்படி இங்கும் நமது கல்வி மந்திரி பிள்ளைகள் சம்பளத்தை ஏன் குறைக்கப்படாது என்பதற்குக் காரணம் நமக்குத் தெரியவில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.08.1931**



# விருதுநகர் மகாநாடு I

"சுயமரியாதை இயக்கம்" என்பதாக ஒரு இயக்கம் தோன்றி சுமார் 5,6 வருஷகாலமாகியிருந்தாலும், பொது மகாநாடு என்பதாக இந்த இரண்டு மூன்று வருஷங்களாகப் பெரிய பெரிய மகாநாடுகளும் அதற்கு முன்பிருந் தும் ஜில்லா, தாலூகா மகாநாடு என்பதாகப் பல மகாநாடுகளும் தமிழ் நாட்டில் கூட்டப்பட்டு வருவது யாவருமறிந்ததேயாகும்.

மற்றும் அது சம்பந்தமான பிரசாரங்களும் தமிழ்நாட்டில் ஆங்காங்கு தினந்தோறும் நடைபெற்று வருவதும் யாவருமறிந்ததாகும்.

இவற்றின் பயனாய் இந்துக்களென்று சொல்லிக்கொள்ளப்படும் பெரும்பான்மை மக்களுக்குள் ஒரு தலைகீழான பெரிய மனமாறுதலும் மற்றும் மத சம்பந்தமான சமூக சம்பந்தமான காரியங்களில் செய்கையிலே யுங்கூட ஒரு பெரிய மாறுதலும் ஏற்பட்டு வந்திருக்கின்ற விஷயமும் யாவரும் அறிந்ததேயாகும்.

இந்த இயக்கமும் இதற்கு ஏற்பட்டுள்ள பல அதிதீவிரக் கொள்கை களும் மதவுணர்ச்சிக்கும் பழக்க வழக்கத்திற்கும் நேர் மாறுதலானதாயிருந் தும் இவ்வளவு சொற்ப நாளில் இவ்வளவு தூரம் பரவியதற்குக் காரணம் என்னவென்றால் இவ்வியக்கம் கண்டும் இவ்வியக்கத்திற்கு சேவை புரிந்தும் வரும் மக்கள் யாவரும் ஏறக்குறைய எல்லோரும் வெகுகால மாகவே பொது வாழ்வில் அதாவது, "தேசீயத்"துறை என்பதிலும் "சமூகத் துறை" என்பதிலும் "சமயத்துறை" என்பதிலும் ஈடுபட்டு மனப்பூர்த்தியாய் உழைத்து வந்து சிறிதும் பயன்பெறாமல் ஏமாற்றமடைந்தவர்களானதால் இந்தப் புதிய முயற்சியால் அவர்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையும் அனுபவ மும் மன உறுதியும் தீவிரப் பிரசாரத்திற்கு தூண்டுகோலாகி பொதுமக்க ளின் பகுத்தறிவைப் பிடித்து ஆட்டி அசைத்துப் பலரை சொன்னபடி கேட்க வேண்டியதாய் செய்து வந்ததுடன் ஒவ்வொருவரையும் இணங்கி இதில் இரங்கி வேலை செய்யும்படியும் செய்து விட்டது.



RangaRakes tamilnavarasam.com

இதன் பயனேதான் ஆங்காங்கு தனக்குத்தானே பிரசாரங்கள் நடக்கவும் மகாநாடுகள் கூடவும் அதிதீவிர தீர்மானங்கள் செய்யவும் ஏற்பட்டு வருகின்றது என்பது மிகையாகாது.

இந்த முறையிலேயே இம்மாதம் 8,9 தேதிகளில் விருதுநகரில் மாகாண மூன்றாவது சுயமரியாதை மகாநாடு என்பதாக ஒரு பெரிய மகா நாடு கூடி ஏராளமான தமிழ் நாட்டு வாலிப மக்களை அழைத்து வைத்து பல தீர்மானங்களைச் செய்திருக்கின்றது. அதனுடன் கூடவே சுயமரியாதை பெண்கள் இரண்டாவது மகாநாடும், சுயமரியாதை வாலிபர்கள் 3-வது மகாநாடும் நடத்தப்பட்டு பல தீர்மானங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. இம் மகாநாடுகளில் வரவேற்புக்கமிட்டித் தலைவர்கள், தலைவர்கள் ஆகியவர்களின் சொற்பொழிவுகளும், தீர்மானங்களும் பெரிதும் இரண்டு முக்கிய தத்துவங்களையே அடிப்படையாகக் கொண்டிருப்பது கவனித்த வர்களுக்கு விளங்கி யிருக்கும்.

அதாவது ஒன்று மத சம்பந்தமாகவும், கடவுள் சம்பந்தமாகவும், சமூக சம்பந்தமாகவும், நமது தேசத்தில் இருந்துவரும் பல பழைய கொள்கை களையும் பழக்க வழக்கங்களையும் மனவுணர்ச்சிகளையும்அடியோடு அழிக்கவும், சிலவற்றைப் புதுப்பிக்கவும் வேண்டுமென்பது.

இரண்டாவது:- தேசீயம், சுயராஜியம், சுதந்திரம் என்னும் பேர்களால் மேல் கண்ட அதாவது மத சம்பந்தமாகவும், கடவுள் சம்பந்தமாகவும், பழக்க வழக்க சம்பந்தமாகவும் இருந்து வரும் பழங்கொள்கைகளை நிலைநிறுத்த பாடுபட்டுவரும்படியான ஸ்தாபனங்களையும், முயற்சிகளையும், சூக்ஷி களையும் வெளியாக்கி எதிர்த்து அவைகளால் நமது முயற்சிகளுக்கு இடை யூறு ஏற்படாமல் இருக்கும்படி செய்வது, என்கிறதான இந்த இரண்டு லக்ஷியங்களையே பெரிதும் முக்கியமாகக் கொண்டதாக இருப்பது விளங்கி இருக்கும்.

ஏனெனில் இந்தியதேசத்து மக்கள் இன்று உலகத்தின் முன் மானத் தோடும், சுதந்திரத்தோடும், அறிவோடும், க்ஷேமத்தோடும் வாழுவதற் கில்லாமல் பெரும்பான்மையானவர்கள் இழிமக்களாய், மூடர்களாய், தரித்தி ரர்களாய், அடிமைகளாய் விளங்குவதற்கு மேல்கண்ட இரண்டு தத்துவங் களுமே காரணமாய் இருந்து வந்திருக்கின்றது-இருந்தும் வருகின்றது என்ற காரணத்தினாலே யாகும்.

இந்தப் பெரியதும் தலைகீழ் புரக்ஷியானதுமான மேல்கண்ட இரண்டு தத்துவ பரிகாரங்களுக்கும் எதிர்ப்புகள் பலமானதும் தொல்லைகளை விளைவிக்கும் படியானதுமான எதிரிகளும், எதிர்ப்புகளும் இருந்து தீரும் என்பதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. இவ்வித எதிர்ப்புகள் இவ்வித காரியங்களுக்கு உலகம் ஏற்பட்ட நாள் முதல் அதுவும் சீர்திருத்த உணர்ச்சி ஏற்பட்ட காலம் முதல் இருந்து வந்ததேயாகும்.



ஏனெனில், எவ்வித மாறுதல் ஏற்படுவதானாலும் பழைமையினால் பயன் அடைந்து வந்தவர்களும், பழைமை நிலைமையையே தமது வாழ்க் கைக்கு நிர்ணயித்துக் கொண்டிருக்கிறவர்களும், சுய அறிவற்று பிடிவாதக் காரர்களாய் இருக்கின்றவர்களும், சார்புக்காரர்களும் சாதாரணத்திலேயே மாறுதலுக்கு விறோதிகளாய் இருக்க வேண்டியவர்களாவார்கள்.

உதாரணமாக,

இன்றைக்கு பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கும் பல நூற்றுக் கணக்கான வருடங்களுக்கும் முன்னால் மேல்கண்ட துறைகளில் மாறுதல் செய்ய முன் வந்த சித்தார்த்தர் (புத்தர்) இயேசு (இயேசுகிறிஸ்து) முகமது (முகமதுநபி) சாக்ரட்டீஸ்-மார்டின் லூதர் என்னப்பட்ட பெரியார்கள் அடைந்ததாக சொல்லப்படும் எதிர்ப்புகளும் கஷ்டங்களுமே போதுமான அத்தாக்ஷியாகும்.

ஆகவே தான் இத்துறைகளில் இரங்கிய ஒவ்வொருவரும் தங்க ளுக்கு ஏற்பட்ட, ஏற்படக்கூடிய எதிர்ப்புகளையும், கஷ்டங்களையும், தொல்லைகளையும் சிறிதுகூட லக்ஷியம் செய்யாமல் இரங்க வேண்டியவர் களானதுடன் அவைகளுக்காக ஒரு சிறிதும் கலங்காமலும் தங்களது கொள்கைகளை சிறிதும் தளர்த்துவதற்கு இணங்காமலும் இருக்க வேண்டிய வர்களானார்கள்.

ஆகையினாலேதான், வரவேற்புக்கமிட்டி தலைவர் திரு. W.P.A. சௌந்திரபாண்டியன் அவர்கள் தமது வரவேற்பு உபந்யாசத்தில்,

“காங்கிரசும் சுயமரியாதை இயக்கக் கொள்கையும் ஒன்று என்று சொல்லுகின்றவர்கள் இரண்டையும் சரியாய் உணராதவர்கள் என்றே சொல்லுவேன்” என்றும், “கராச்சி காங்கிரஸ் பிரஜா உரிமைத்திட்டத்தில் மத நடுநிலைமையும்...... மதஸ்தாபன பாதுகாப்பும் பிரமாதப்படுத்தப்பட்டிருக் கின்றன. இந்த ஒரு பகுதியே காங்கிரசானது சுயமரியாதை இயக்கத்தை அரைகூவி போருக்கழைக்கின்றதாய் இருக்கின்றதே” என்றும் “திரு.காந்தி யாரின் பிரசாரமும், உபதேசமும் அவர் அனுஷ்டிக்கும் முறையும் மக்களின் அறிவைக்கெடுத்து மதப் பைத்தியத்தை அதிகரித்து வருகிறது” என்றும்,

“கராச்சி காங்கிரஸ் தேர்ந்தெடுத்த காரியக்கமிட்டியில் இருந்து விலக்கப்பட்டிருந்த திருவாளர்கள் மாளவியாவையும், ராஜகோபாலாச்சாரி யையும் காரியக்கமிட்டி தங்களுடன் சேர்த்துக் கொண்டதின் இரகசியம் என்ன?”

“இவர்கள் இருவரும் இந்துக்களையும் இந்து மத ஸ்தாபனங் களையும் விர்த்தி செய்யும் டிரஸ்டிகளல்லவா? ஆகையால் காங்கிரசால் வரும் சுயராஜியம் இந்து ராஜியம்-ராமராஜியமாகத்தான் இருக்கும் என்று



RangaRakes tamilnavarasam.com

உணர்ந்த முஸ்லீம்கள் தனிக்கிளர்ச்சி செய்வது போல் காங்கிரசின் சமுதாய லக்ஷியம் வருணாச்சிரமதர்மத்திற்கு பாதுகாப்பு அளிப்பதாக இருப்பதால் அதன் முயற்சிகளை எதிர்த்துப் போராடவேண்டும்".

"காந்தியின் வாக்கால் வைதீகப் பிரசாரம் செய்துகொண்டு ஜவகர் லாலின் பொதுவுடமைப் பிரசங்கத்தில் நம்மை மயக்கப்பார்க்கும் காங்கிரஸ் வலையில் சிக்க வேண்டாம் என்று எனது வாலிப நண்பர்களை எச்சரிக்கை செய்கின்றேன்".

"காங்கிரஸ் நமது இயக்கத்தை கொல்லும் வழியில் பிரயோகப் படுத்தப்படுகிறது."

"மேலும் மகான்களால் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் மதக் கொடூரங்களையும் கட்டுப்பாடுகளையும் உடைத்தெறியுங்கள். அவைகளை வேரறுப்பது நமது கடமை".

என்பதாக சிறிதும் தளர்ச்சியும் சந்தேகமும் இல்லாத வலிமையான வார்த்தைகளால் வீர கர்ச்சனை புரிந்திருக்கின்றார்.

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு. R.K.ஷண்முகம், B.A.B.L. M.L.A. அவர்களோ அதைவிட வீரமாய் பேசி இருக்கின்றார். அதாவது:-

"நமது இயக்கத்தில் தேசீயமில்லை என்று சொல்லுவது நமது எதிரி களின்-போலி தேசீயவாதிகளின் சூக்ஷியேயாகும்".

"நமதியக்கத்தில் உள்ள எல்லோரும் உண்மை தேசீயவாதிகள்".

"தேசீய இயக்கமென்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் வெள்ளைக் காரனை மாத்திரம் வைதுவிட்டு அதிகாரம் பதவிகளைப் பற்றி மாத்திரம் பேசிவிட்டு தங்கள் சகோதரர்களை யெல்லாம் தாழ்த்தி இழிவுபடுத்தி அடக்கி வைத்திருக்கும் கொடுமைக்கு பரிகாரம் செய்யாமல் இருக்கின்றார்கள்".

"ஒரு ஜாதியாரோ, ஒரு வகுப்பாரோ மற்றொரு ஜாதியாரைவிட, வகுப்பாரைவிட உயர்ந்தவர்கள் என்பதான தத்துவம் ஒரு நாட்டில் இருக்குமானால் அந்த நாடு எவ்வளவு கொடுமையானதான ஒரு அன்னிய அரசாங்க கொடுமையைவிட மிகப்பெரிய அக்கிரமும் கொடுமையுமான தென்றே சொல்லுவேன்".

"காங்கிரசானது எல்லோருக்கும் மத சுதந்திரம் அளிக்கப்படும் என்றும், மத நடுநிலைமை வகிக்கப்படும் என்றும், மதக்கொள்கைகள் காப்பாற்றப்படும் என்றும் தீர்மானம் செய்துவிட்டது. இதை நாம் ஒப்புக் கொண்டால் நாம் சுயமரியாதையையோ அடிமைத்தனத்திலிருந்து



விடுதலையையோ அடைய முடியாது".

" மத நடுநிலைமையைக்கொண்ட இயக்கம் எதுவானாலும் அது தேசீய இயக்கமாகாது".

" மத பாதுகாப்பை தகர்த்தெறிய வேண்டும்".

"காங்கிரஸ் தீர்மானங்கள் சுயமரியாதை இயக்கத்திற்கு கோடரிக் காம்பு".

"அத்தீர்மானங்கள் கொண்ட ஸ்தாபனங்களோடு எதிர்த்துப் போராட வேண்டும்".

என கர்ஜித்திருக்கிறார்.

மற்றும் வாலிப மகாநாட்டு வரவேற்புக் கமிட்டித்தலைவர் திரு. எஸ். ஜயராம் பி.ஏ. அவர்கள் தமது உபன்யாசத்தில் "சமதர்மம் ஓங்கவே நாம் இங்கு கூடி இருக்கின்றோம். சமூக விடுதலையே இராஜிய விடுதலையை விட அவசியமானது".

"அன்னிய அரசாங்கம் இருக்கும்பொழுதே தீண்டாதவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஏதாவது கதிமோட்சம் ஏற்பட்டால் தான் உண்டு. இல்லாவிட்டால் அவர்களுக்கு ஒரு காலமும் விடுதலை யேற்படாது என்பது நிச்சயம்".

"திரு. காந்தியவர்கள் மூலம் வருமென்று எதிர்பார்க்கும் இராம ராஜியத்தில் இவர்களுக்கு விடுதலை ஏற்படும் என்பதில் எனக்கு நம்பிக்கை யில்லை. அக்காலத்தில் இதைவிட ஜாதிச் சண்டைகள் அதிகரிக்கும்; ஜாதி இந்துக்கள் அதிகமாக இருக்கும் ஒரு அரசாங்கத்தில் தீண்டாதார் கஷ் டத்தை ஒழித்து விடுதலையை எவ்விதம் அமுலுக்குக் கொண்டுவர முடியும்?சமூக விடுதலை இல்லாத தேசீய விடுதலை தேசீய விடுதலை யாகாதென்று சர். கே.வி. ரெட்டிநாயுடு சொல்லி இருக்கிறார். ஆகையால் சம உரிமை விரும்பும் நாம் அரசியல் இயக்கங்களுடன் சேர்வதை விட்டு சமதர்ம இயக்கத்தை தனியாக நிறுவி வேலை செய்யவேண்டும்".

"பகுத்தறிவைக் கொண்ட நமது இயக்கத்தில் போலிக்கடவுள்களும், மதங்களும் சின்னா பின்னப்படுவது ஆச்சரியமல்ல. நாஸ்திகப் பட்டத்திற்குப் பயப்படக்கூடாது".

"விதவைகள் கண்ணீர் விடுவதையும், பெண்களை மிருகங்களை விடக் கேவலமாய் நடத்துவதையும் இனிப் பொறுக்கமுடியாது".

"கடவுளோ, சாஸ்திரமோ, வேதமோ எதுவானாலும் அவற்றின் எதிர்ப்புக் கஞ்சாமல் போராடவேண்டியது இளைஞர் கடமை".



RangaRakes tamilnavarasam.com

என்பதாக வீரமுழக்கம் செய்திருக்கின்றார்.

அதுபோலவே வாலிப மகாநாட்டுத் தலைவரான, உயர்திரு. டி.வி. சோமசுந்திரம், பி.ஏ.,பி.எல். அவர்களும் தமது தலைமை உரையில்,

“சுயராஜியம் வந்தவுடன் அடிமைப்பட்டுக் கிடக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு அவர்கள் உரிமைகள் வழங்கப்படுமென்று காந்தியார் சொல் வதை உண்மையென்று எப்படி நம்பமுடியும்?”

“நம் நாட்டுத்தலைவர்கள் திரு. காந்தி உள்பட ஒருவரும் வருணாச் சிரமப் பிடியிலிருந்து வழுவவில்லை”.

“சமத்துவமும், சகோதரத்துவமும் பரவவேண்டுமானால் மதமெல் லாம் மறையவேண்டும்”.

“சமதர்மக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பவேண்டும்”.

“சொத்து, குடும்பம், நிதி, சட்டம் ஆகியவற்றில் உள்ள பழைய எண்ணங்கள் தகர்க்கப்பட வேண்டும்”.

“சுருங்கக் கூறுமிடத்துக் காங்கிரஸ் முதலாளிகள் ஜமீன்தாரர்கள் பக்கமே சாய்ந்திருக்கிறது”என்று முழங்கி இருக்கிறார்.

சுயமரியாதைப் பெண்கள் மகாநாட்டு வரவேற்புத் தலைவி திருமதி பத்மாவதி திருவண்ணாமலை அம்மாள் அவர்கள் வரவேற்பு உபன்யாசத்தில்,

“எப்படியோ, நமக்கு விழிப்பு ஏற்பட்டுவிட்டது. இனிமேல் நம்மை ஏமாற்ற முடியாது?” “கடவுள்கள் காலம் வேறு இப்போதைய நிலைமை வேறு.” “ஆண்கள் எவ்வித சுதந்திரத்துடன் வாழ்கின்றார்களோ அவ்வித சுதந்திரத்துடன் நாமும் வாழவேண்டும்”.

“கல்யாண விஷயங்களில் நமக்கு சுதந்திரம், சொத்து சுதந்திரம் வேண்டும் ”.

“நாம் கூசாமல் கிளர்ச்சி செய்யவேண்டும். உதவிக்கு சுயமரியாதை இயக்கம் இருக்கிறது.”

“சுயமரியாதை இயக்கத்தைப் பலப்படுத்துவதே நமது விடுதலையின் அஸ்திவாரமாகும்” என்று முழங்கி இருக்கிறார்கள்.

பெண்கள் மகாநாட்டுத் தலைவி திருமதி இந்திராணி பாலசுப்பிர மணியம் அம்மாள் அவர்கள் செய்த தலைமை உபன்யாசமோ மிக அருமையானது. சற்று நீண்டதாயிருந்தாலும், ஒவ்வொருவரும் படித்துப்



பார்க்க வேண்டியதொன்றாகும். அநேக விஷயங்களைப் புள்ளி விவரங்களுடன் எடுத்தாண்டிருக்கின்றார்கள் . அவையாவன:-

“இந்நாடு அடிமைப்பட்டதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்று பெண்களை அடிமைகளாக்கினது. இரண்டு பிறப்பால் ஜாதி வகுத்தது, மூன்று மனிதனுக்கு மனிதன் தீண்டாதவனாக்கினது. நான்கு மூடபழக்க வழக்கங்கள் சடங்குகள்”.

“விதவைகளை மக்கள் செய்யும் கொடுமைகளாலேயே பெண்மணி களின் உயிர் நாடிகள் நசுக்கப்பட்டுவிட்டது. சாரதா சட்டத்திற்குப் பயந்து பால் குடிக்கும் குழந்தைகளுக்கு மணம் முடித்துவிட்ட பாதகர்கள் நம் நாட்டில் பி.ஏ, யம்.ஏ படித்த மனிதர்களாய் விளங்குகிறார்கள்.

“கற்பு நாயகிக்கு மாத்திரந்தானா? நாயகனுக்கு இல்லையா?:” “மறு மணம் வேண்டுமானால் இருபாலருக்கும் வேண்டும்”.

“ஒரு பிறவிக்கு ஒரு நீதிகொண்ட கற்பு அடிமைப்படுத்துவதில் ஆசைகொண்ட மூர்க்கத்தனமேயொழிய அதில் யோக்கியமும், நாணை யமும் இல்லை”.

“வானத்தில் மேகம் தவழ்வது போலவும், கடலில் அலை எழும்பு வது போலவும், பறவை தனது அழகிய சிறகை விரித்துப்பறப்பது போல வும் பெண் மக்களுக்கு தங்களுடைய உள்ளத்திலெழும் விருப்பப்படி நடக்கும் உரிமை இருக்க வேண்டும்”.

“வலுத்தவன் இளைத்தவனை அடக்கி ஆள்வதற்கு அத்தாட்சி ஜாதி வித்தியாசமேயாகும்.”

“இதனால் நமது நாடு மிருகத்தன்மையில் இருந்து மனிதத் தன்மைக்கு இன்னமும் வரவில்லை என்பது புலனாகிறது ”.

“ஜாதி வேற்றுமை ஒழிவதில் தான் நமது நாட்டு விடுதலையிருக் கிறது”.

“சிலர் சுயநலத்திற்காகவே ஜாதிவேற்றுமை காப்பாற்றப்படுகிறது”.

“நம் சகோதரர்களுக்கு நாம் சகோதரத்தனம் காட்ட வில்லையானால் பிற நாட்டார் இடம் நாம் எந்த முகத்துடன் சகோதரத்துவம் கேட்பது?”

“பிற நாட்டார் எண்ணை இல்லாமல் மோட்டார் விடலாமா? மார்ஸ் நக்ஷத்திர மண்டலத்தில் மக்கள் இருக்கின்றார்களா? என்பது போன்ற ஆராய்ச்சி செய்கிறார்கள். நம்நாட்டார் கோவிலுக்குள் இன்னாரை விட லாமா? வேண்டாமா? குளத்தில் தண்ணீர் எடுக்க இன்னாரை விடலாமா? வேண்டாமா? பொது ரஸ்தாவில் இன்னார் நடக்கலாமா? வேண்டாமா? என்



RangaRakes tamilnavarasam.com

கின்ற ஆராய்ச்சிக்கு நம்நாட்டுப் பணம், நேரம் ஆராய்ச்சி ஆகியவை செலவழிக்கப்படுகின்றன".

"இது ஒரு பைத்தியக்காரர்கள் வாழும் நாடாயிருக்கிறது".

"கோவிலுக்காக பல ஜாதியாரால் செலுத்தப்படும் பணம் பல ஜாதி யாருக்கும் பயன்பட வேண்டாமா?"

"பிரார்த்தனை, காணிக்கை முதலிய விஷயங்களில் ஆண்களை விடப் பெண்களே அதிக நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள்".

கடைசியாக 'சென்னை மாகாணத்தில் ஆண்களைவிட 6 லக்ஷம் பேர்கள் எண்ணிக்கையில் அதிகமாக உள்ள 23641936 பெண்களுக்கு சென்னை சட்டசபையில் ஒரே ஒரு பிரதிநிதித்துவம் கொடுத்திருப்பதானது எவ்வளவு வருந்தத்தக்க விஷயமாகும்' என்று பேசி இரத்தக் கண்ணீர் வடித்துப் பேசியிருக்கின்றார்கள். ஆகவே இந்த அபிப்பிராயங்கள் எல்லாம் உலகஞானமும் கல்வியறிவும் உள்ள பெரியோர்களால் மிகவும் பிரத்தியக்ஷ அனுபோகத்தின் மீதும் ஆழ்ந்து யோசித்த நடுநிலைமை முடிவின் மீதுமே பேசப்பட்டவைகளே யொழிய வெறும் மூட நம்பிக்கைகளின் மீதும் இவ்வித அபிப்பிராயங்களுக்கு செல்வாக்கிருக்கின்றதென்கின்ற கண்மூடித்தனமான தைரியத்தின் மீதும் கிளிப்பிள்ளை தன்மைபோலும் வயிற்றுப் பாட்டை உத்தேசித்தும் பேசப்பட்டவைகள் அல்ல என்பது உலக அனுபவமும் நடுநிலைமை ஞானமும் சிறிதாவது முள்ள எவருக்கும் விளங்கும்.

இன்றைய தினம் சுயமரியாதை இயக்கத்தின் மீது சிலரால் சொல்லப்படும் குற்றமெல்லாம் 'இவ்வியக்கத்தில் தேசீயம் இல்லை' என்பதும் 'காங்கிரசைக் கண்டிக்கின்றது' என்பதும் 'திரு. காந்தியவர்கள் அபிப்பிராயத்தை மறுக்கின்றதே' என்பதும் ஆகியவைகளே முக்கியமான குற்றங்களாக சொல்லப்பட்டு வருகின்றன. 35-கோடி மக்கள் கொண்ட ஒரு பெரியதும் சகலவித வளமும் கொண்டதுமான ஒரு புராதன தேசம் ஆயிரக்கணக்கான வருடங்களாக அடிமைப்பட்டு கல்வியறிவில்லாமல் சிறிதும் முற்போக்குமில்லாமல் மிருகப் பிராயத்தில் இருந்து கொண்டு எச்சிலைக்கு மானத்தையும், மனிதத்தன்மையையும் விற்றுக்கொண்டு மனிதனுக்கு மனிதன் இழிவு என்று கருதும்படியாகவும் நாட்டு செல்வங்கள் எல்லாம் நாட்டு மக்கள் யாவரும் சமமாயும் அனுபவிக்காமலும் பாட்டுக்குத் தகுந்தபடியும் அனுபவிக்க முடியாமல் கடவுளென்றும் மதம் என்றும் பழக்க வழக்க மென்றும் சமூகக்கட்டுப்பாடு என்றும் சொல்லிக்கொண்டு வீணாக்கப்பட்டு வருகின்ற ஒரு நிலைமையைப் பற்றி யோசியாமலும் அதற்குக் காரணங்கள் கண்டுபிடிக்க முயலாமலும், உண்மையான விடுதலைக்கு முயற்சியாமலும் மற்றும் மக்கள் எண்ணத்தையும் முயற்சியையும், உபயோகமற்றக் காரியங்களில் திருப்பிவிட்டுக் கொண்டிருந்தால் அறிவுள்ள யார்தான் சகித்துக் கொண்டிருக்க முடியும்? இந்த நாட்டுக்கு விடுதலையையோ ஞானத்தையையோ உண்டாக்க முயற்சிகள் செய்யப்பட்ட காலங்களில் எல்லாம் மதத்தின் பேராலும் வேறு ஏதாவது ஒரு போலியான சூக்ஷி விஷயத்தின் பேராலுமே பார்ப்பனர்கள் அவ்வப்போது பார்ப்பனரல்லாத கூலிகளைப் பிடித்து முட்டுக்கட்டை போட்டே வந்திருக்கின்றார்கள்.

அதுபோலவேதான் இந்த சமயமும் உலகமே விழித்தெழுந்து கொண்டிருக்கின்ற இந்த நூற்றாண்டில் இந்தியாவுக்கு மாத்திரம் விழிப்பு ஏற்படுவதற்கு வகையில்லாமல் பார்ப்பனரும் பார்ப்பனீயமும் தேசீயத்தின் பேரால் முட்டுக்கட்டையாகத் தோன்றி பின்னால் இழுத்துப்பிடித்துக் கொண்டிருக்க நேர்ந்தது மிகவும் வருந்தத்தக்க சம்பவமேயாகும். உலகிலுள்ள எல்லா நாட்டாருக்கும் எல்லா சமூகத்தாருக்கும் புதிய புதிய சீர்திருத்தக்காரர்கள் தோன்றி பழைமைகளை உடைத்தெரிந்து காட்டு மிராண்டித்தனத்திலிருந்து ஆச்சரியப்படத்தகுந்த மனிதத்தன்மைக்கு கொண்டுவந்து எவ்வளவோ முற்போக்குகளை உண்டாக்கி மக்களை மானமுடையவர்களாகவும், சுதந்திரமாகவும், அறிவாளிகளாகவும் வாழும்படி செய்துவிட்டார்கள்.

சைனா, ஜப்பான், துருக்கி, பிரஞ்சு, இங்கிலாந்து, ருஷியா , ஜர்மனி முதலிய ஒவ்வொரு தேசத்திலும் தோன்றிய சீர்திருத்தக்காரர்கள் எல்லாம் முதலில் பழைமையை அழிப்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து வந்திருக்க நமது தேசத்தில் மாத்திரம் சீர்திருத்தக்காரராய் விடுதலைக்கு உழைப்பவராகத் தோன்றின திரு.திலகரும், திரு.காந்தியும் முதலிய யாவருமே பழைமையைக் காப்பாற்றுவதிலும் புதுமையை உள்ளே நுழைய விடாமல் தடுப்பதிலுமே கண்ணுங் கருத்துமாய் இருந்து விட்டார்கள். இன்னும் இருந்தும் வருகின்றார்கள்.

'லோகமான்யர்' என்னும் திலகருக்கு வர்ணாச்சிரம தர்மமும், கீதையின் தத்துவ உபதேசமும் எவ்வளவு தேசீயமாய் இருந்ததோ அதை விட ஒருபடி அதிகமாகத்தான் திரு.காந்தியும் அவற்றை தேசீயமாய் உபதேசிக்கின்றார்-நிலை நிறுத்தவும் பாடுபடுகின்றார் என்பதல்லாமல் மற்றபடி திலகரை விட காந்தியார் எந்த விதத்தில் மேலானவர் அல்லது சமத்துவத்திற்கு சமதர்மத்திற்கு அனுகூலமான காரியம் செய்தவர் அல்லது திட்டம் கையில் வைத்திருப்பவர் என்பதை யோசித்தால் உண்மை விளங்கும். திலகர் காலத்திலாவது அவருக்கு புராண ராஜ்ய தர்மத்தைப் பற்றி பேச பயமிருந்தது. திரு.காந்தி காலத்திலோ புராண தர்மம் மிகவும் வலிவும் செல்வாக்கும் பெற்று விட்டன. போதாக்குறைக்கு திரு. மாளவியாவுக்கு விடுதலை ஸ்தாபனத்தில் கௌரவமான உச்சஸ்தானம் கிடைக்கப் பட்டுவிட்டது.


RangaRakes tamilnavarasam.com

ஆகவே, விடுதலைக்கு தேசீய திட்டம் வகுக்க வேண்டியது திருவாளர்கள் மாளவியா, இராஜகோபாலாச்சாரி, சத்தியமூர்த்தி போன்றவர்களாகவும், அதை வெளிப்படுத்த வேண்டியது காங்கிரசாகவும், நிறைவேற்றி வைக்க வேண்டியது திரு.காந்தியாகவும் ஏற்பட்டுவிட்டது. வாலிபர்களை மயக்க திரு. ஜவஹர்லாலை விட்டு ஏதாவது சொல்லச் செய்து விட வேண்டியது என்கின்ற இந்த முறையில் வருணாசிரமமும், இந்து மதமும், புராண தர்மமும் அரசியலின் பேரால், விடுதலையின் பேரால் இந்த நாட்டில் இந்தக் காலத்தில் தாண்டவமாடுவதானது மக்களின் எவ்வளவு பாமரத் தன்மையைக் காட்டுகின்றது என்பதற்காகத்தான் இவைகளை எடுத்துக் காட்டுகின்றோம்.

இந்தக் காரணங்களால் தான் தேசீய இயக்கம் என்கின்ற போர்வையைப் போற்றிக் கொண்டிருக்கும் வருணாசிரம-பார்ப்பனீய-முதலாளித் தத்துவக்கொள்கைகளைக் கொண்ட காந்தீயத்தை வெட்டிப் புதைக்கும் வேலையை இப்போது சுயமரியாதை இயக்கம் கைகொண்டு வேலை செய்ய வேண்டியதாகிவிட்டது. இதைச் செய்யாமல் சுயமரியாதை இயக்கம் மற்றத் துறைகளில் செய்யும் வேலைகள் எல்லாம் நதிக்கரையில் ஆற்றோரத்தில் கட்டுகின்ற கட்டிடங்களைப் போலத்தான் முடியும். ஏனெனில் சமய சமூகத் துறையில் சுயமரியாதை இயக்கம் எவ்வளவு வேலை செய்து வைத்திருந்தாலும் பார்ப்பனீய காந்தியரசியல் ஆதிக்கம் வரும்போது ஒரே அடியில் அவை கவிழ்க்கப்பட்டதாகி விடும். பெரும்வெள்ளம் வந்தால் நதிக்கரையில் இருக்கும் வீடுகளுக்கு எப்படி ஆபத்தோ அது போலவே ஆகிவிடும். இந்தக் காரணத்தால் தான்அரசியல் என்பதுடனும், காந்தீயம் என்பதுடனும் போராட வேண்டியிருக்கின்றதேயொழிய வேறில்லை.

இதைப்பற்றித் தப்பர்த்தம் கொள்கின்றவர்களுக்கு மாத்திரம் திரு. காந்தியார் உரைத்த ஒரேயொரு விஷயத்தை மாத்திரம் எடுத்துக் காட்டிவிட்டு இதை முடிக்கின்றோம்.

அதாவது 'மனித சமூகத்தில் வீதி கூட்டுவது ஒருவனது தர்மம் என்றும் கணக்கு எழுதுவது மற்றொருவனது தர்மம் என்றும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றது. இதில் குப்பை அள்ளுவது இழிவு-கணக்கு எழுதுவது மேன்மை என்று கருதப்பட்டாலும் குப்பை அள்ளுகின்றவன் தனது தர்மத்தை விட்டுவிட்டு மற்றவன் தர்மத்தில் பிரவேசிக்க நினைத்தாலும் அவன் தர்மமிழந்தவனாகிறான். இவனால் சமூகத்திற்கும் கேடு விளையும்' (காந்தி) என்பதே திரு. காந்தியவர்களின் சமூக சீர்திருத்தமும் அரசியலில் அவர் ஏற்றுக்கொண்ட ஜவாப்த்தாரித்தனமுமாகும். இதுவே சுயராஜ்யத்தில் ஜீவாதார உரிமைத் திட்டமுமாகும். மற்ற விஷயங்களைப் பற்றி மறுமுறை எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 16.08.1931**



# தமிழ் தினசரி

"சண்டமாருதம்" என்னும் தமிழ் தினசரிப் பத்திரிகை திருச்சியில் இருந்து சுயமரியாதை இயக்கத்திற்கு ஆக சுயமரியாதை சங்கத் தலைவர்களுடைய முயற்சியின் மீது ஆரம்பிக்கப்பட்டு இம்மாதம் 7ந்தேதி முதல் வெளியாகி இருக்கின்றது. அதை ஒரு லிமிடெட் கம்பெனி மூலம் வெளியாக்கக் கருதி இருந்த விஷயம் பத்திரிகைகள் மூலம் ஏற்கனவே வாசகர்களுக்குத் தெரிந்ததாகும். லிமிடெட் கம்பெனி ரிஜிஸ்டர் செய்து பங்கு சேர்ந்த பிறகே பத்திரிகை வெளிவருவதென்றால் சற்று நாளாகும். ஆதலால் மகாநாடு நடைபெறும் நாளிலேயே எப்படியாவது பத்திரிகை வெளியானால் அதற்கு அதிக ஆதரவு கிடைக்கும் என்கின்ற ஆசையின் மீது உயர்திரு.சௌந்திரபாண்டியன் அவர்கள் தற்கால சாந்தியாக சொந்தத்தில் ஏற்பாடு செய்து திரு.முருகப்பா அவர்கள் ஆசிரியத் தன்மையில் வெளிப்படுத்தப்பட்டதானது மிகுதியும் பாராட்டத்தக்கதும் நன்றி செலுத்தத்தக்கதுமாகும்.

கூடிய சீக்கிரத்தில் கம்பெனி ரிஜிஸ்டர் செய்யப்பட்டு உயர்திரு. பாண்டியன் முதலியவர்கள் பங்கு சேர்க்க வருவார்கள். அந்தச்சமயம் பொது மக்களும் சிறப்பாக இயக்கத்தில் ஆர்வமுள்ள கனவான்களும் ஆதரவளித்து பங்குதாரர்களாகச் சேர்ந்து 'சண்டமாருதத்தை' என்றும் நிலையானதும், மேலானதுமான ஒரு முக்கிய பத்திரிகையாய் நின்று நமது இயக்கத்திற்குழைக்க தங்கள் தங்களாலான உதவிகளைச் செய்ய வேண்டியது பொது மக்கள் கடமையாகும். பத்திரிகை நடத்துவது என்பது லேசான காரியம் அல்ல வென்பதும் அதிலும் ஒரு இயக்கத்திற்குப் பிரசார பத்திரிகையாய் ஒரு தினசரியை நடத்துவது என்பது சுலபமான காரியமல்ல வென்பதும் நண்பர்கள் உணர்ந்ததேயாகும். ஆதலால், கனவான்கள் எவ்வித யோசனையுமின்றி ஆதரவளிக்க வேண்டுகின்றோம். ஆங்காங்குள்ள நமது இயக்க நண்பர்கள் "சண்டமாருத"த்திற்கு ஒவ்வொரு வருஷ சந்தாதாரர்களாக அநேக சந்தாதாரர்களை சேர்த்துக் கொடுத்து தாங்களும் சந்தாதாரராய் சேரவேண்டுமாய் வேண்டிக்கொள்கின்றோம். ஒரு வார முயற்சியில் தினசரிப் பத்திரிகை வெளிவருவதற்கும், போதிய அளவு முன் பணம் உதவி செய்ததுமல்லாமல் மற்ற முயற்சிகளுடன் மகாநாட்டு வேலைத் தொந்திரவையும் எடுத்துக் கொண்ட உயர்திருவாளர்கள் சௌந்திர



RangaRakes tamilnavarasam.com

பாண்டியன், முருகப்பா, விஸ்வநாதன் முதலிய கனவான்களின் ஊக்கத்தையும் உதவியையும் போற்றுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 16.08.1931**



# “இந்து மதம்”

## வாணியர் சூத்திரரில் சேர்ந்தவரானாலும் வாணியர் தாழ்ந்த ஜாதியாராம்!

“வாணிய வகுப்பார்” என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் ஒரு வகுப்பார் இந்தியாவில் எங்கும் ஒவ்வொரு பட்டணங்களிலும் தாராளமாய் இருந்து வருகிறார்கள். அவர்கள் வியாபாரத்துறையில் மிகுதியும் ஈடுபட்டு பல இடங்களில் மிக செல்வந்தர்களாகவும், பிரபலஸ்தர்களாகவும், நாகரீகமுடையவர்களாவும் இருந்து வருகின்றார்கள். பலர் ஆங்கிலக் கல்வியில் தேற்சியடைந்து உத்தியோகத்திலும், வக்கீல் தொழிலிலும் ஈடுபட்டு மிகப் பிரக்கியாதியாகவும் இருந்து வருகின்றார்கள்.

அப்படிப்பட்ட ஒரு நாகரீகமான சமூகம் இந்தியாவில் பிறந்ததினாலும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதாலும் இந்த 20வது நூற்றாண்டிலும் தீண்டாதவர்களாகப் பாவிக்கப்பட வேண்டியவர்களாக இருந்து வருகின்றார்கள். எப்படியெனில் திருவனந்தபுரம் ராஜிய எல்லைக்குள் அவர்கள் “அவர்ணஸ்தர்கள்” என்றே “ஈன ஜாதியார்” என்றே அரசியல் சமுதாய இயல்களில் எல்லாம் பதிவு செய்யப்பட்டு கோவில் பிரவேசமும், குளப்பிரவேசமும் தடுக்கப்பட்டு இருக்கின்றது. சென்னை மாகாணத்திலும், திருச்செந்தூரில் அவர்களுக்கு ஆலயப்பிரவேச உரிமை இல்லை என்று தீர்மானிக்கப்பட்டுவிட்டது. இப்போது சமீபத்தில் இந்த வாரத்திலேயே தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள வேதாரண்யம் கோவில் சம்பந்தமாய் அக்கோவிலுக்குள் வாணியர்கள் பிரவேசிக்கக் கூடாது என்று தீர்ப்பு ஆகி அப்பீலிலும் உறுதி ஆகிவிட்டது. அத்தீர்ப்பில் ஜட்ஜு குறிப்பிட்டு இருக்கும் விஷயம் மிகவும் மோசமானதேயாகும். அதன் சாரமாவது, “வாணியர்கள் தங்களை வைசியர்கள் என்று சொல்லிக்கொள்வது ஆதாரமற்றதாகும்”.

“அவர்கள் எள்ளைப் பிழிந்து எண்ணை எடுப்பதாகிய இழிவான தொழிலைச் செய்வதால் அவர்கள் தாழ்ந்த ஜாதி இந்துவாக கருதப்



RangaRakes tamilnavarasam.com

படுகிறார்கள். "சூத்திரர்களுக்கு ஆலயப்பிரவேச உரிமை உண்டு என்றாலும் வாணியர்கள் இந்து கோவிலுக்குள் பிரவேசிக்க முயற்சி செய்த போதெல்லாம் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்குக் கோவில் பிரவேச உரிமை கிடையாது" என்பதாக தீர்ப்புச் செய்து அப்பீலை தள்ளி விட்டார். இந்தப்படி ஜட்ஜு தீர்ப்பு சொன்னதற்கு ஆதாரமாக தனது தீர்ப்பில் மனுதர்ம சாஸ்திரத்தை எடுத்துக்காட்டி இருக்கிறார். எனவே இந்தத் தீர்ப்பின்படி இனி "சூத்திரர்"கள் என்று சொல்லப்படும் மக்கள் அதாவது, பார்ப்பனர் தவிர ஏனையோர் விஷயத்திலும், கோர்ட்டு நடவடிக்கைகளுக்கு மனுதர்ம சாஸ்திரம் தான் ஆதாரமாய் இருந்து தீர்மானிக்கப்போகின்றது என்பதில் ஆஷேபனை இல்லை. கோவில் நிர்வாகிகளுக்கும், உள்ளூர் கலகக்காரர்களுக்கும் காசு பணம் கொடுத்து சரிசெய்து கொள்ள முடியாமல் கோர்ட்டுக்கு போகும் இன்னும் சில சமூகங்களுக்கும் இந்தக் கதிதான் நேரக்கூடும். அதாவது கீழ்ஜாதி என்று தீர்ப்புப்பெற வேண்டிய தாகிவிடும் என்பது ஒருபுறமிருந்தாலும் இனி வரப்போகும் 'சுயராஜிய'த் தில் இம்மாதிரி நடவடிக்கைகளுக்கு மனுதர்ம சாஸ்திரம் கூட தேவை யில்லாமல் போய் விட்டது. மற்றென்னவெனில், இதற்குக் காங்கிரஸ் காரியக்கமிட்டியின் பிரஜா உரிமைத் தீர்மானமே போதுமானதாகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 16.08.1931**



# கோவையில் நபிகள் நாயகம் பிறந்தநாள் வைபவம்

தலைவரவர்களே! நண்பர்களே! முஸ்லீம் சமூகத்திற்கே முக்கியமான இந்த நாளில் எனக்கும் ஒரு சந்தர்ப்பமளித்து இங்கு பேசும்படி செய்ததற்கு எனது நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இங்கு எனக்கு முன்பாக மௌல்வி சாயபு அவர்களும் ராவ்சாகிப் இராமச்சந்திரன் செட்டியார் அவர்களும் மிக்க அருமையான விஷயங்களை தக்க நூல் ஆதார ஆராய்ச்சியுடன் எடுத்துச்சொன்னார்கள். நானோ அந்தக் காரியத்தில் சூனியமானவன். அதாவது நூலராய்ச்சி என்பது எனக்கு கிடையாது. நான் அதில் அதிகக் கவலை செலுத்தியதுமில்லை. அது மாத்திரமல்லாமல் பெரியவர்கள், மதத்தலைவர்கள் என்பவர்களின் பெருமைகளும், அவர்களது உபதேசப் பெருமைகளுமே ஒரு சமூகத்தின் மேன்மைக்குப் போதுமானது என்று நான் கருதுகின்றவனுமல்ல. ஆதாரங்கள் எப்படிப் பட்டதாக இருந்தாலும், மதத்தலைவர்கள் 'மத அவதார புருஷர்கள்' என்பவர்கள் எவ்வளவு பெருமை பொருந்தியவர்களாக இருந்தாலும், இன்றைய நம்முடைய யோக்கியதை பிரத்தியட்சத்தில் எப்படி இருக்கின்றது? உலக மக்கள் வரிசையில் நமது நிலைமை என்ன? நமது பிரத்தியட்ச அனுபவ நடவடிக்கையும், மதிப்பும் எவ்வளவில் இருக்கின்றன? இதற்கு என்ன காரணம்? என்பவை போன்றவைகள் தான் எனது ஆராய்ச்சியாகும். அவைகளை ஆதாரமாகக் கொண்டு தான் பேசவேண்டுமென்பது எனது அபிப்பிராயம். அன்றியும் மௌல்வி சாயபு அவர்கள் தங்களது மதப் பெரியார் அவர்கள் பெருமையையும் மத ஆதாரமாகிய குர்ஆன் பெருமையையும் எடுத்துச்சொன்னது போல் நான் சொல்ல வேண்டுமானால் எனது மதம் என்று சொல்லப்படும் இந்து மதத்திற்கு யார் மதப் பெரியார்? எது மத ஆதாராம்? என்பதைக் கண்டுபிடிப்பதே கஷ்டமான பிரச்சினையாக ஏற்பட்டு விடும். ஒரு சமயம் எனக்கு கஷ்டமாக இருப்பதற்கு காரணம் இருந்தாலும் இருக்கலாம். ஏனெனில் நான் நூலாராய்ச்சி அற்றவன். அது மாத்திரமல்லாமல் 'மதங்களுக்கே விரோதி, அதிலும் இந்துமதத்திற்கே ஒரு பெரிய துவேஷியாகவும், துரோகியாகவும் இருக்கின்றவன்' என்பதாகவெல்லாம் சொல்லப்படுகின்றவன். ஆதலால் என்னைத்



RangaRakes tamilnavarasam.com

தள்ளிவிட்டாலும் மற்றபடி வேறு எந்த இந்துமதப்பக்தர்களோ, பரிபாலகர்களோ, அபிமானிகளோ, பண்டிதர்களோ, ஆராய்ச்சியாளர்களோ, மத குருமார்களோ யாராக இருந்தாலும் அவர்கள் இந்து மதத்திற்கு யார் தலைவர்? எது ஆதாரம்? என்பது போன்ற விஷயங்களை எடுத்துச் சொல்வது என்பது சுலபமான காரியமாயில்லை. மத ஆதாரம் என்று சொன்னால் முஸ்லீம்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுகின்றவர்கள் ஒருவராவது "நபி அவர்களையும் குர்ஆனையும் பற்றிக் கேட்டிராதவர்களும், அவைகளை ஒப்புக் கொள்ளமாட்டேன்" என்று மறுப்பவர்களும் இருக்கவே மாட்டார்கள். ஒப்புக் கொண்டே தீருவார்கள். ஆனால் இந்து என்று தங்களை சொல்லிக் கொள்ளுகின்றவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு உறுதியான, எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படியான, யாராலும் மறுக்க முடியாததான ஒரு மதத்தலைவரோ, ஒரு மத ஆதாரமோ இருப்பதாக இந்துக்கள் யாரும் சொல்ல முடியாது. அதுமாத்திரமல்ல ஒன்றை மற்றொன்று ஆட்சேபிக்கும்படியானதாகவும், ஒருவரை மற்றொருவர் குற்றம் சொல்லும்படியானதாகவும் தான் மதத் தலைவர்களும், மத ஆதாரங்களும் இருக்கின்றன.

நண்பர்களே!

உலகமெல்லாம் விழிப்படைந்து மதங்களின் மீது வெருப்படைந்து அவ்வளவோடு மாத்திரமல்லாமல் கடவுளைப்பற்றிய ஆராய்ச்சியிலேயும் இறங்கி சிலர் 'கடவுளே இல்லை' யென்றும், சிலர் 'சந்தேகம்' என்றும் சிலர் 'இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? நமக்கு அதைப் பற்றிய கவலையே வேண்டாம்' என்றும், கடவுள் உணர்ச்சியே உலக முற்போக்குக்கும், அறிவு வளர்ச்சிக்கும், சமத்துவத்திற்கும், சமதர்மத்திற்கும் தடையானது என்றும், 'கடவுள் உணர்ச்சி ஒழிந்தாலொழிய சமதர்மம் நிலவ முடியாது' என்றும் சொல்லிக்கொண்டும், உலகில் தேசம், மதம், ஜாதி, நிறம், வகுப்பு என்பவைகளான வித்தியாசங்களே இல்லாமல் எல்லா மக்களும் சமத்துவமுள்ள சகோதரர்களே என்பதாகவும், 'உன் தேசம், என் தேசம்?' என்று சொல்லுவதே குறுகின நோக்கமும், வகுப்பு துவேஷ உணர்ச்சியும் கொண்டதென்றும், தேசத்துக்கு தேசம் யுத்தம் என்பதே கூடாதென்பதாகவும், ஜாதி மதத் தேசப்பிரச்சினையே உலகத்தில் இருக்கக்கூடாதென்றும் பேசப்படுகின்ற, அவற்றிற்காக பெரிய பெரிய முயற்சிகளும் செய்யப்படுகின்ற இந்தக் காலத்தில் தனித் தனி மத நூல்கள் ஆராய்ச்சியில் இறங்கி அவற்றிலிருந்து உண்மைகளைக் கண்டுபிடித்து மக்கள் யோக்கிதையையும், போக்கையும் நிர்ணயிப்பது என்பது இனி ஒருநாளும் பயனளிக்கக் கூடியதாகாதென்பதே எனது அபிப்பிராயம். மதப்பிடிவாத காரணமாகவும், பிரத்தியக்ஷ காரியங்களைக் கொண்டு தங்கள் தங்கள் நாட்டையும், சமூகத்தையும் மதிக்காமல் ஆதாரங்களைக்கொண்டு தங்களைப் பெருமையாய் நினைத்துக்கொண்டு, முற்போக்கில் கவலை இல்லாமல் இருந்ததாலுமே



இந்த நாடு இன்று உலக மக்கள் முன்பு மிகக்கேவலமாகவும், இழிவாகவும் கருதப்பட்டு வருகின்றது என்பது எனதபிப்பிராயமாகும். மற்றும் இதனாலேயே பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக இந்த நாடு அடிமை நாடாகவும், அடிமை சமூகமாகவும் இருந்து வருகின்றது என்பதும் எனது அபிப்பிராயமாகும். உலகத்தில் புத்தரை தங்கள் மதபோதகராக சொல்லிக் கொண்டு ஒரு பெரும் சமூகம், சுதந்திரத்துடன் வெகு மேன்மையாய் வாழுகின்றது. கிறிஸ்துவை தங்கள் மதபோதகராகச் சொல்லிக்கொண்டு மற்றொரு பெரிய சமூகம் சுதந்திரத்துடன் மேன்மையாய் வாழுகின்றது. அது போலவே முகமது நபியை தங்கள் மதபோதகராகச் சொல்லிக்கொண்டு இனியும் ஒரு பெரிய சமூகம் மிக மேன்மையாகவும், சுதந்திரமாகவும் வாழுகின்றது.

ஆனால் இந்திய சமூகம் யார் பேரைச்சொல்லிக் கொண்டாவது எப்போதாவது மேன்மையாக வாழ்ந்ததாகவோ, சுதந்திரமாய் இருந்ததாகவோ கதையாவது இருக்கின்றதா? காரியத்திலாவது இருக்கின்றதா? என்று பாருங்கள். ஏன் இல்லை? புத்தர் கிறிஸ்து முகமது நபியாகியவர்கள் சீர்திருத்தக்காரர்களாய் தோன்றினார்கள். அந்தந்த நாட்டு மக்கள் அப்பெரியார்களது சீர்திருத்தத்தை ஏற்றுக்கொண்டார்கள். நடவடிக்கையில் அவர்கள் வேறு எந்த எந்த விஷங்களில் தவறுதலாய் நடந்தவர்கள் என்று சொல்வதானாலும் தங்கள் தங்கள் சமூகத்தைப் பெருக்கி, எல்லோரையும் இழுத்துப் பிடித்து ஒன்றாக்கி, ஒற்றுமை உணர்ச்சியும், சமத்துவ உணர்ச்சியும், சகோதர உணர்ச்சியும் கொண்டு நடந்து கொள்ளுவதில் ஒருவரும் தவறவேயில்லை. அந்த ஒரு காரியமே அந்தந்த சமூகத்தை மேன்மையாய் மானத்துடன் வாழச் செய்கின்றது.

நம் நாடு, நம் சமூகம் என்னும் இந்து சமூகம் இந்தக்காரியத்தில் சுத்த சூன்யதிசை அடைந்து, தனது சமூகத்தை மற்ற எல்லா சமூகத்தாருக்கும் வினியோகித்துக்கொண்டு க்ஷீணதிசை அடைந்து வருகின்றது. இன்றைய தினம் இந்தியாவில் 8– கோடி முஸ்லீம் மக்கள் வாழுகின்றார்கள். இனியும் வருஷ வருஷம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகின்றார்கள். இந்த நாட்டில் இவர்கள் எப்படிப் பெருகினார்கள்? இதற்குக் காரணம் அவர்களுடைய சமத்துவ உணர்ச்சியும், சகோதர உணர்ச்சியும் அல்லாமல் வேறு எதைச் சொல்லமுடியும்? என்று கேட்கின்றேன். "முஸ்லீம்கள் பலாத்காரத்தை உபயோகித்து தங்கள் சமூகத்தைப் பெருக்கினார்கள்" என்று சுலபமாய் சொல்லிவிடலாம். அவர்கள் அதை மறுத்தும்கூட நாம் வாஸ்தவம் என்றே வைத்துக்கொண்டாலும் அதுபோலவே இந்துக்களையும் பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டாம் என்று யார் தடுத்தார்கள்? எந்த மதக்கொள்கை தடுத்தது? இந்துக்களும் பலாத்காரத்தை உபயோகிக்கவில்லை என்று யாராவது சொல்லிவிட முடியுமா? புராணங்களில் சொல்லப்படும் தேவர்கள்–அசுரர்கள் சண்டையெல்லாம் சாத்வீகமா? இராமாயண, பாரத சம்பவங்கள் என்பதெல்லாம் அஹிம்சாத் தத்துவமா?



RangaRakes
tamilnavarasam.com

சமணர், சைவர் கொலைபாதக சரித்திரமெல்லாம் அன்புமயமா? சமணரைக் கழுவேற்றிய உற்சவங்கள் பலாத்காரமற்ற தன்மையைக் காட்டுகின்றனவா? பௌத்தர் கோயில்களை இடித்து, விக்கிரகங்களை உடைத்து, உறுக்கி சீரங்கம் கோவில் கட்டிய வைணவ சமய உண்மைகள் என்பவை எல்லாம் சமரச நோக்கமா? என்பனவற்றை யோசித்துப்பாருங்கள். இப்படியெல்லாம் இருந்தும் ஏன் இந்து சமூகம் பெருகவில்லை - மேன்மையாக வாழ வில்லை - மானத்தோடு பிழைக்க முடியவில்லை? இந்திய நாடு மாத்திரம் அடிமை நாடாக வெகு காலமாகவே இருந்து வரக் காரணம் என்ன? என்பவைகளை யோசித்தால் உண்மை விளங்காமல் போகாது.

ஒரு மதம் அந்த மத மக்களை மோட்ச லோகத்திற்கு அழைத்துச் சென்று அங்கு அவர்களைக் கடவுளிடத்தில் உட்கார வைக்கின்றதா? என்பதல்ல எனது மத சம்பந்தமானக் கவலை. மற்றென்னவென்றால் ஒரு மதம், அந்த மத மக்களை மானத்தோடு, சுதந்திரத்தோடு, சாந்தியோடு வாழச் செய்கின்றதா? என்பதுதான் எனது கவலை.

இந்த நாடு விடுதலை பெறாததற்கு இந்நாட்டு மதமும், சமூகமுமே முக்கிய காரணங்கள் என்று தான் சொல்லியாக வேண்டும். மக்கள் யாவரும் ஒரு சமூகமாய், ஒரு மதமாய், ஒரே சகோதரத்துவமுள்ளவர்களாயில்லாத நாடு ஒரு நாளும் உண்மையான விடுதலையைப் பெறமுடியாது என்பதை மறந்து விடாதீர்கள்.

இந்திய நாடு ஏன் ஒரு சமூகமான, சகோதரத்தன்மையான நாடாக யிருக்கவில்லை? என்பதை யோசித்துப்பாருங்கள். முக்கியமாய் மதங்களின் முட்டுக்கட்டைகளே அல்லாமல் வேறு என்ன காரணம் சொல்லக்கூடும்?

சகோதரத்தன்மையும், சமத்துவமுமுள்ள கொள்கையை ஏன் எல்லோ ரும் தழுவக்கூடாது? இதற்குப்பெயர் இந்துமதம் என்பதாய் இருந்தாலென்ன? இஸ்லாம் மார்க்கம் என்பதாய் இருந்தாலென்ன? வேறு என்னவாய் இருந்தாலென்ன? சகோதர மார்க்கம், சமத்துவ மார்க்கம், ஒற்றுமை மார்க்கம் என்பதாக உள்ள எதையும் அறிவுள்ள மனிதன் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

இந்த முக்கியத் தத்துவங்களை விட்டு விட்டு மார்க்கம் என்றால் கடவுளை அடைவதென்றும், வெறும் வேஷம் என்றும் மாத்திரம் நினைத் துக்கொண்டு மக்கள் ஒருவருக்கொருவர் விருப்பு, வெருப்பைக் காட்டு கின்றது அறிவீனமேயாகும். இந்தக் காரணங்களால்தான் நல்ல பயனளிக் கும் மார்க்கங்கள் கூட பெருக்கமடையாமல் போகின்றன. ஒரு மனிதனைப் பார்த்து வேஷமாத்திரத்தினால் இன்ன மதக்காரன் என்று சொல்லிவிடக் கூடியதாய் இருந்தால் - தன்னை இன்ன மதக்காரன் என்று காட்டிக் கொள்வ தற்கு இந்த வேஷமேபோதும் என்று நினைப்பதாயிருந்தால் அது ஒரு நாளும் நல்ல-பயனளிக்ககூடிய மார்க்கம் என்று சொல்லிவிட முடியாது.



இஸ்லாம் மார்க்கம் மேன்மையான மார்க்கம் என்றால் அது இந்தியா வின் மனித சமூகம் முழுவதையும் தன்னுள் அடக்கிக் கொள்ளவேண்டும். அதற்கு முட்டுக்கட்டையாய் இருப்பவைகளை ஒழிக்க முயற்சிக்க வேண்டும். மத சம்பந்தமான பழக்க வழக்கங்கள், வேஷங்கள் என்பவைகள் எல்லாம் ஒழியவேண்டும். பகுத்தறிவுக்கு ஏற்ற எந்தக் காரியத்தையும் செய்ய சுதந்திர மிருக்கவேண்டும்.

மக்களிடத்தில் அன்பு வைத்து சகோதரத்தன்மை காட்டி அன்பு உண்மை என்பவைகளிடத்தில் நம்பிக்கை வைத்து மனிதர்கள் எல்லோரை யும் சமம் என்று கருதிக் கொண்டு மனித சமூகத்திற்கு சேவை செய்வதே தன் கடமை என்று நினைத்துக் கொண்டிருக்கிறவர்கள் எல்லாம் இஸ்லாம் மார்க்கக்காரர்கள் என்று சொல்வதானால் என்னையும் மற்றும் என் நண்பர் கள் பலரையும் இஸ்லாம் கொள்கைக்காரர்கள் என்று தான் முஸ்லீம்கள் எண்ண வேண்டுமேயொழிய தாடியையும், தலையையும், உடையையும் பார்த்து இஸ்லாம் என்றும், இஸ்லாம் அல்லாதவன் என்றும் பிறிப்பதாய் இருக்கக் கூடாது. துருக்கியில் வேஷமாத்திரத்தால் மதம் இல்லை. அதுபோலவே இந்தியாவிலும் வேறுபாட்டை பார்வையிலாவது மறையும் படி மக்கள் எல்லோரும் முதலில் ஒரே மாதிரியான நடை, உடை, பாவனை யாக வேண்டும். பிறகு எண்ணங்களைப் பறிமாரிக்கொள்ள வேண்டும். பகுத்தறிவுக்குப் பொறுத்தமான கொள்கைகளையே மனித வாழ்க்கைக்கும் மார்க்கங்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இஸ்லாம் மார்க்கம் பகுத்தறிவு மார்க்கமென்றும், பகுத்தறிவின் பரீட்சைக்கு விட்டு அதன்படி நடக்கத் தயார் என்றும் முஸ்லீம்கள் இன்று தைரியமாய்ச் சொல்லுகின்றார்கள். அந்தப்படி சொல்ல மற்ற மார்க்கக்காரர்களுக்கு ஏன் தையரிமில்லை? ஏனெ னில், திரு. முகமதுநபி சமீபகாலத்தில் தோன்றி சமீபகாலத்தில் ஏற்படுத்திய கொள்கைகள் ஆனதினாலும் அநேக விஷயங்களில் அது பகுத்தறிவுக்கு நிற்கத்தக்க யோக்கியதையுடையதாய் இருக்கின்றது.

ஆகவே முஸ்லீம்கள் பகுத்தறிவுக்கு விரோதமாய் ஏதாவது இருந் தால் அது தங்களது மார்க்கக் கட்டளை அல்ல என்று தள்ளிவிடவும் அவற்றை நீக்கிவிடவும் பகுத்தறிவுக்காரரையெல்லாம் தங்கள் சகோதரர்கள் என்றும், இஸ்லாம் என்றும் சொல்லவும் தயாராயிருக்க வேண்டும். அது மாத்திரமல்லாமல் அவர்கள் தங்கள் சமூகம் என்றும், அன்னிய சமூகம் என்றும் வித்தியாசம் பாராட்டக்கூடாது. எல்லோரையும் பகுத்தறிவு மார்க்க மாக ஆக்க முயற்சிக்க வேண்டும். உலகமெல்லாம் ஒரே மார்க்கமாவதற்கு- பகுத்தறிவு மார்க்கமாவதற்கு முஸ்லீம்கள் பாடுபடவேண்டும். அவர்க ளுக்கே அதிக சௌகரியமிருக்கின்றது. ஆதலால் அதுவே உலகமத போதகர் என்று சொல்லப்படும் திரு. முகமது நபி அவர்களுக்கு நாம் செய்யும் மரியாதையாகும். இதுவே அவரது பிறந்தநாளாகிய இந்த முக்கியமான நாளில் நாம் உணர்ந்து கொள்ளவேண்டிய உண்மையாகும்.



RangaRakes tamilnavarasam.com

"மதங்கள் ஒழிந்த பிறகு தான் உலக சமாதானமும், ஒற்றுமையும், சாந்தியும் ஏற்படமுடியும்?" என்பது அநேக அறிஞர்களது அபிப்பிராயமானாலும், அதற்கு விரோதமாக ஏதாவது ஒரு மதம் இருக்கும்போது "உலக சமாதானம் ஏற்பட்டு விட்டது" "சாந்தி ஏற்பட்டுவிட்டது" என்று சொல்லப்படுமானால் அது இஸ்லாம் கொள்கைகளாகத்தானிருக்கக்கூடும் என்று கருதுகின்றேன். ஏனெனில் அது சமூக ஒற்றுமை, சமூக சமத்துவம் ஆகிய காரியங்களில் உலகில் மற்றெல்லோரைக் காட்டிலும் அதிகமானக் கவலை எடுத்து வருகின்றது.

துருக்கியையும், ஆப்கானிஸ்தானத்தையும் பார்க்கும்போது அவை எவ்வித சீர்திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ளத் துணிந்து தயாராயிருக்கின்றதாகவே காணப்படுகின்றது.

ஆகவே இந்திய முஸ்லீம்களும் அதைப் பின்பற்றினால் இஸ்லாம் கொள்கைகள் உலகக் கொள்கைகளாவதில் எவ்வித கஷ்டமும் இருக்காதென்றே கருதுகிறேன்.

*குறிப்பு : கோவை அதார்ஜமாத் மஜீத் கமிட்டியார் நடத்திய முகமதுநபி பிறந்தநாள் கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 23.08.1931**



# விருதுநகர் மகாநாடு II

## மதமொழிப்புத் தீர்மானம்

விருதுநகரில் கூடிய மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டு நடவடிக்கைகள் விஷயமாகவும், மகாநாடுகளின் வரவேற்புத் தலைவர்கள், தலைவர்கள் ஆகியவர்கள் உபன்யாசங்களைப் பற்றியும் சென்ற வாரம் எடுத்து எழுதி யிருந்தோம். மற்றும் அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் பற்றி மறு முறை எழுதுவதாகவும் குறிப்பிட்டிருந்தோம். ஆகவே அங்கு நிறை வேற்றப்பட்ட சில தீர்மானங்களைப்பற்றி இதில் ஆராய்வோம்.

"மனிதத் தன்மையைத் தடைப்படுத்துவதற்கு மதங்களின் பேரால் உள்ள பழக்க வழக்கங்கள் காரணமாயிருப்பதாலும், மதங்கள் ஒழியாமல் சகோதரத்தன்மை வளராதாதலினாலும் எல்லா மதங்களும் ஒழிந்து போக வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது." என்பது முதல் தீர்மானமாகும்.

இத்தீர்மானமானது இந்தியாவில் உள்ள தேசீய வாதிகள் என்பவர்கள் யாருக்குமே விரோதமானதாகும் என்பதோடு, தேசீயத் தலைவர்களுக்கும் தேசீயத்தொண்டர்களுக்கும் மிகமிக விரோதமானதாகும்.

மற்றும், "இந்தியத் தொழிலாளர்கள் தலைவர்களான", திரு. கிரி திரு. சிவராவ் போன்றாருக்கும், சமதர்மத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்ற "நவஜவான் பாரத சபை வீரர்கள்" என்று சொல்லிக் கொள்ளும் திரு.போஸ் கூட்டத்தாருக்கும், இந்தியாவில் பூரண சுயேச்சையையும், போல்ஸ்விசத்தையும் பற்றிப்பேசிப் "பொது உடமைக்காரர்" என்று சொல்லிக்கொள்ளும் திரு.ஜவஹர்லால் கூட்டத்தாருக்கும் இத்தீர்மானம் விரோதமானதேயாகும். இது மாத்திரமல்லாமல் அகிம்சா தர்மத்தையும் இராம இராஜியத்தையும் பற்றிப் பேசி வருணாசிரமத்தில் பூரண நம்பிக்கை வைத்து இருக்கும் ஸ்ரீமத் பகவத்கீதை உபாசகராகிய "மகாத்மா" காந்திக்கும் அவரது கூட்டத்தாராகிய திரு.இராஜகோபாலாச்சாரி போன்றாருக்கும் விரோதமானதும், காதால் கேட்பதற்கே சகிக்க முடியாத அளவு கர்னகடூரமானதுமாகும். இவை



RangaRakes tamilnavarasam.com

மாத்திரமல்லாமல், சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களிலேயே சிலருக்கு இது பிடிக்காத தீர்மானமாகும் என்பதிலும் உண்மை இல்லாமல் போகாது.

ஆகவே இந்தியாவின் ஜனத்தொகையில் முஸ்லீம், கிறிஸ்தவர்கள் முதலிய அன்னிய மதக்காரர்கள் என்பவர்கள் உள்பட 100 க்கு 90 பேர் களுக்கும், இந்தியாவின் பொதுநல ஸ்தாபனங்கள் என்பவைகளில் 100-க்கு 99 $^{7}/_{8}$ ஸ்தாபனங்களுக்கும், உலக மனித சமூகத்திலேயே 100-க்கு 80 பேர்களுக்கும் திருப்தியளிக்காததும், விரோதமானதுமான தீர்மானமாகும்.

இத்தீர்மானத்திற்கு இத்தனைவித எதிர்ப்புகளும், அதிருப்திகளும் இருக்கக் காரணமென்னவென்று பார்ப்போமானால், மனிதனுடைய அறிவைக் கெடுக்கும் மயக்கம்தரும் போதை வஸ்துக்களைப் போலவே மதத்தின் தத்துவங்களும் இருக்கின்றபடியால் அதில் ஈடுபட்ட எவருக்கும் மத போதை ஏற்பட்டு, பகுத்தறிவு மழுங்கி, மூடபக்தியும், குருட்டு நம்பிக் கையும் ஏற்பட்டு, சுயம் என்னும் சுவாதீனத்தை இழக்க வேண்டியவர்களாய் விடுகின்றார்கள் என்பதே யாகும்.

உதாரணமாக, இந்து மதம் என்பதைப் பற்றியே முதலில் எடுத்துக் கொண்டோமானால் அம்மதத்தினால் மேன்மையடைகின்றவர்களும், மதத்தின் பயனாய் சோம்பேறிகளாகவே இருந்து பாடுபடாமல், ஊரான் உழைப்பில் வயிற்றை நிறப்பி மேன்மையாய் வாழுகின்றவர்களும் இந்து மதத்தைக் காப்பாற்ற நிலைநிறுத்தப் பாடுபட வேண்டியதும் அதற்கு எதிரி டையாய் இருப்பவர்கள் மீதும், அதை ஒழிக்க முயற்சிப்பவர்கள் மீதும் ஆத்திரப்பட்டு, மதம் ஒழிக்கப்படாமல் இருக்கத் தடை கல்லாய் - முட்டுக் கட்டையாய் இருக்க வேண்டியதும் இயற்கை என்று வைத்துக்கொண்டா லும், இந்துமதத்தின் காரணமாய் ஈனஜாதியாய், இழிகுலமாய், அடிமையாய், வேசிமகனாய், கீழ்ஜாதியாய்க் கருதப்படுகின்ற மக்களும் சரீரத்தைப் பிழிந்து பாடுபட்டுப் பாட்டின் பலனை சோம்பேறிகளுக்கும், சூட்சிக்காரர் களுக்கும், கொள்ளை கொடுத்து விட்டு நாயினுங்கீழாய், மலந்தின்னும் நாய்க்கிருக்கும் சுதந்திரத்திற்குக்கூட உரிமையில்லாத ஜந்துவாய் இருந்து கொண்டிருக்கின்ற "அசையும் பிணங்களான மக்கள்" தங்களை இந்த நிலைமைக்கு ஆளாக்கிய இந்துமதத்தைக் காப்பாற்ற முயற்சிக்கின்றார்கள்- ஒழிக்க முயற்சிக்கின்றவர்களையும் எதிர்க்கின்றார்கள் என்றால் மதங்களால் ஏற்பட்ட மதியீனத்திற்கும், மானமற்ற தன்மைக்கும் வேறு என்ன உதாரணங் கூறக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை.

கள்குடி வெறியன், சாறாயக் குடிவெறியன் ஆகியவர்களால் நாட்டுக்கு, மக்களுக்கு, மனித வாழ்க்கைக்கு, மனிதத்தன்மைக்கு ஏற்படும் தொல்லையை விட கேட்டைவிட மதவெறியர்களால் ஏற்படும் தொல்லை யும் கேடும் அளவிடமுடியாத அதிகமென்றே சொல்லுவோம்.



இன்றையதினம் இந்த நாட்டு ஆட்சிக்கு "வெள்ளைக்காரனுடைய ஆதிக்கம் கூடாது" என்னும் அரசியல் கிளர்ச்சி என்பதும் தேசீயக்கிளர்ச்சி என்பதும் மதத்தை-ஜாதியை அடிப்படையாகக் கொண்டதா? அல்லது மானத்தை, சுதந்திரத்தை விடுதலையை அடிப்படையாகக் கொண்டதா? என்பதை யோசித்தால் மதவெறியின் தன்மை தானாக விளங்கும்.

சாதாரணமாக வெள்ளைக்கார அரசாக்ஷியின் ஆதிக்கத்தை இன்றைய தினம் இந்துக்கள் ஒழிக்க வேண்டும் என்பதின் கருத்தெல்லாம் அவன் வேறுமதக்காரனாய் இருக்கின்றான் என்பதல்லாமல் வேறு என்ன தத்துவத்தில் இன்று அன்னிய ஆக்ஷி என்பதற்கு காரணம் சொல்லப்படு கின்றது? என்பதை கவனித்துப்பாருங்கள். வேண்டுமானால், இன்னும் ஒரு காரணம்அதிகமாய்ச் சொல்லலாம். என்னவென்றால், பொருளாதார சம்பந்த மான காரணம் - அதாவது "இந்தியர்கள் செல்வம் அன்னிய நாட்டிற்கு போகின்றது" என்பதுமாகும். என்றாலும், இது பாமர மக்களை ஏமாற்று வதற்குச் சொல்லிக் கொள்ளப்படும் காரணமேயாகும்.

ஏனெனில், இந்துமதத்தால் இந்தியநாட்டுச் செல்வம் நாசமாவதை விட - ஏழைத்தொழிலாளிகள் கொள்ளை அடிக்கப்படுவதைவிட அன்னிய ஆக்ஷியால் அதிகக்கஷ்டம் இல்லையென்றாலும், இதை ஆக்ஷேபணை சொல்லாமல் ஒரு காரணம் என்றே ஒப்புக்கொண்டு பார்த்தாலும் கூட ஒரு மனிதனுக்கு அவனுடைய சுதந்திரமும் சுயமரியாதையும் முக்கியமானதா? அல்லது பொருளாதாரத் தத்துவமே முக்கியமானதா? என்று யோசித்தோ மேயானால் பொருளின் முக்கியாம்சம் எவ்வளவோ கீழானபடிக்குப் போய்விடும். ஆனால் சுதந்திரமும், சுயமரியாதையும் மேலானது என்பதை எப்படிப்பட்ட மோசக்காரனும் ஒப்புக்கொண்டுதான் தீருவான்.

ஆகவே, இந்த நிலைமையில் இந்திய மக்களுடைய சுதந்திரமும், சுயமரியாதையும் பாதிக்கப்படுவது வெள்ளைக்கார ஆக்ஷியாலா? இந்து மதத்தாலா? என்பதை இப்போது நடுநிலைமையில் இருந்து யோசித்து பார்த்தால் தானாகவே உண்மை விளங்கும். மேலும் இந்துமதத்தினால் தான் இந்தியாவில் "கீழ்ஜாதி மனிதனும் ஈன ஜாதி மனிதனும் எந்த நிலைமை யிலும் சுதந்திரம் பாராட்டக் கூடாத சூத்திரனும், சண்டாளனும் தெருவில் நடக்கவும் குளத்தில் தண்ணீர் மொள்ளவும் கோயிலுக்குள் புகவும் அருகில் வரவும் யோக்கியதையற்ற மக்களும்" இருந்துவருகின்றார்களா? அல்லது வெள்ளைக்கார ஆக்ஷியின் பயனாய் இருந்து வருகின்றார்களா? என்று கேட்கின்றோம்.

ஆகவே மனிதத்தன்மையும், சகோதரத்தன்மையும் ஏற்பட வேண்டு மானால் மதங்கள் ஒழிய வேண்டும் என்பதாக விருதுநகர் மகாநாடு தீர்மானம் செய்திருப்பதில் அறிஞர்கள் உண்மைச் சுதந்திர வாதிகள் - சுயமரியாதை உள்ளவர்கள் - சமதர்மத்தை விரும்புகின்றவர்கள் என்ன



RangaRakes tamilnavarasam.com

குற்றம் சொல்ல முடியும்? என்று கேட்கின்றோம்.

அன்றியும் இந்நாட்டின் இன்றைய சுதந்திர ஆக்ஷிக்கு, சகோதரத்து வத்திற்கு, சினேக தத்துவத்திற்கு மதங்களே அதாவது இந்து, முஸ்லீம், கிறிஸ்து முதலிய மதங்களே இடையூறாய் இருந்துகொண்டு உட் பகை யையும், சாந்தியற்ற தன்மையையும் உண்டாக்கி வருவதை நாம் நேரிலேயே தினமும் பார்த்தும், கேட்டும் வருகின்றோமாதலால் விருதுநகர் மகாநாட்டில் " மக்களுக்குள் எவ்வித மதஉணர்ச்சியும் இருக்கக்கூடாது" என்றும் தீர்மானிக்க வேண்டியதாயிற்று.

ஆகவே மதமானது ஒரு மனிதனுக்கு புறத்தன்மையிலும், அகத் தன்மையிலும் கேடுசூழ்வதாகவே இருக்கின்றபடியால், உலகத்திற்குப் பொதுநலசேவை என்பது முதலாவதாக மதங்களை அழிப்பதே, மத உணர்ச்சிகளை ஒழிப்பதே என்பதாகத்தான் முடிவுகொள்ள வேண்டியிருக் கின்றது.

மக்கள் காட்டுமிராண்டிகளாய் இருந்தகாலத்தில்-கல்வி அறிவு உலக அனுபவம் ஞானம் இல்லாதிருந்த காலத்தில்-மக்களை நல்வழிப்படுத்து வதற்கு என்று ஒரு சமயம் மதம் என்பதாக கற்பனை செய்து மக்களுக்கு ஒரு பயத்தை உண்டாக்கி அவர்களது ஞானமற்ற சுதந்திரத்தை அடக்க ஏற்பாடு செய்ததாக இருக்கலாம். ஆனாலும் இன்று உலகம் பொருள் தத்துவ ஞானமும் விஞ்ஞான ஞானமும் ஏற்பட வசதி ஏற்பட்டு பெருகிவரும் நாளில் காட்டுமிராண்டித்தன காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மதமும், மத உணர்ச்சியும் எதற்கு என்றுதான் கேட்கின்றோம். இந்தப்படி நாம் சொல்லும் போது இதற்கு வேறுவழியில் சமாதானம் சொல்லமுடியாத மக்கள் சிலரால் இரண்டு விதமான கேள்விகள் கேட்கப்படுகின்றன.

அவையாவன,

ஒன்று "மதத்தை ஒழிக்கவேண்டும் என்று சொல்லுகின்ற நீங்கள், அந்த இடத்தில் (அதாவது மதநம்பிக்கையுள்ள இடத்தில்) வேறு எதை ஏற்படுத்தப் போகின்றீர்கள்?"

இரண்டு "நீங்கள் ஏன் வெறும் அழிவு வேலைகளையே செய்து வருகின்றீர்கள்?" என்பவைகளேயாகும்.

இந்தக் கேள்விகள் மதவெறியால் மயக்கமெய்திய அடிமைத்தன்மை யின் பிரதிபிம்பமேயொழிய மற்றபடி இக்கேள்விகளில் எவ்வித ஜீவத் தன்மையும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் மதமோ அல்லது வேறு எதுவோ ஒன்று அதாவது மனிதனை அடிமைகொண்டு, அவனது சுயஅறிவைக் கெடுக்கக்கூடியதான சாதனம் மனித வாழ்க்கைக்கு அவசியமானது என்று கருதுவதினாலேயே இம்மாதிரிகேட்கச்செய்கிறது.



ஆனால் அப்படிப்பட்ட எதுவும் மனிதத்தன்மைக்கும், வாழ்க்கை முற்போக் குக்கும் தடையானது கேடானது என்று முடிவு செய்யப்பட்ட பிறகு அந்த இடத்தில் வேறு எதை நம்மால் வைக்கமுடியும் என்பது நமக்கு விளங்க வில்லை. இன்னமும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் ஒரு உதாரணத் தைச் சொல்லிக் காட்டுகின்றோம்.

அதாவது,

ஒரு மனிதனின் சரீர சுகத்திற்கு விரோதமான ஒரு நோயை ஒழிக்க வேண்டுமானால் அந்த மனிதனுக்கு இந்த வியாதி ஒழிந்து போனால் அந்த இடத்தில் வேறு எதை வைக்கின்றது என்று யாராவது கேட்டால் அவரை அறிவுள்ள மனிதன் என்று யாராவது சொல்லக்கூடுமா? ஒரு சிலந்தி கட்டியை அறுக்கும் வைத்தியனிடம் போய் இந்தச் சிலந்திக்கு பதில் வேறு என்ன கட்டியை உண்டாக்கப் போகிறாய்? என்று கேட்டால் வைத்தியன் என்ன சொல்லுவான்?

மதத்தின் பயனாய் மனித சமூகத்தின் அறிவு தடைப்படுகின்றது, மானம் தடைப்படுகின்றது, ஒற்றுமை தடைப்படுகின்றது, மனிதனுக்குள் தோன்றும் சுதந்திரவுணர்ச்சி தடைப்படுகின்றது, செல்வம் பாழாகின்றது, அடிமைத்தனமும் வளர்கின்றது, சாந்தி என்பதே இல்லாமல் பகையும் குரோதமும், போரும் வளர்ந்து வருகின்றது என்றால் "அதற்குப்பதில் என்ன செய்யப்போகின்றாய்? " என்று எதற்காகக் கேட்பது என்பதை யோசித்தால் அந்தக் கேள்வி ஒரு முட்டாள்தனமான கேள்வி என்பதைவிட அதற்கு வேறு பதில் சொல்லவேண்டிய அவசியமில்லையென்றே கருதுகின்றோம்.

நோய் ஒழிந்தால் எப்படித் திரேக சௌக்கியம் தானாகவே ஏற்பட்டு விடுமோ அதுபோல் மதம் ஒழிந்தால் மனித சமூகம் தானாகவே சுதந்திரத் தையும், அறிவையும், ஒற்றுமையையும் பெற்று மேன்மையடையும் என்கின் றோம்.

ஆகவே, இந்த வேலை ஆக்க வேலையா? அழிவு வேலையா? என்பதை யோசித்தால் இதனுள் பொதிந்து கிடக்கும் ஆக்கத்தன்மையும் தானாகவே விளங்கும்.

தீமையை அகற்றுவது அழிவு வேலையானால் மதத்தை ஒழிப்பது என்பதும் அழிவு வேலையாய் இருந்து போகட்டும். அதைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. மற்ற தீர்மானங்களைப்பற்றி பின்னால் விளக்கலாம்.

**குடி அரசு - தலையங்கம் - 23.08.1931**



RangaRakes tamilnavarasam.com

# "வகுப்புவாதம்"

இன்றைய அரசியலில்-தேசீயத்தில் ஒரு மனிதன் அரசியல் ஞானியாகவும், தீவிர தேசீயவாதியாகவும் ஆகவேண்டுமானால் அவன் எவ்வளவு அயோக்கியனாகவும், எவ்வளவு சுயநலக்காரனாகவும், சமயத்திற்குத் தகுந்தபடி குட்டிக்கரணம் போடுபவனாகவும் இருந்தாலும் ஒரு வார்த்தையை மாத்திரம் சொல்லிவிட்டால் போதும்.

அதாவது,

"வகுப்புவாதம் கூடாது" என்றால்,

உடனே அவனுக்கு வேண்டிய விளம்பரங்களும் தேசாபிமானி-தேசபக்தன் என்கின்ற பட்டங்களும், அரசியல் ஞானி-தீவிர தேசீயவாதி என்கின்ற நாமகரணங்களும் ஏற்பட்டுவிடும்.

நமது பார்ப்பனர்களும் அப்படிப்பட்டவனை ஊரூராய் இழுத்துக் கொண்டு போய் உபசாரப் பத்திரங்கள் வாங்கிக்கொடுத்து, கூட்டம் கூட்டுவித்து, மாலைகள் போட்டு மறியாதை செய்து புகழ்மாலை பாடி அனுப்பி விடுவார்கள்.

மற்றபடி ஒருவன் எவ்வளவு யோக்கியனாயிருந்தாலும் நாணையக் காரனாகவும் உண்மையில் தேசத்திற்காகவே மக்களுக்காகவே பாடுபடுகின்றவனாகவும் பல தியாகங்கள் செய்து கஷ்ட நஷ்டப்பட்டவனாகவும் இருந்தாலும், "வகுப்பின் பேரால் கொடுமைப்படுத்தப்பட்டு மக்களோடு, மக்களாய் சேர்க்கப்படாமல் சட்டத்தின் படியும் சமூகப்பழக்க வழக்கத்தின் படியும் பிறித்து வைத்திருக்கும் மக்களுக்கு மற்ற மக்களுக்குண்டான வகுப்புரிமை கொடுக்கவேண்டமா" என்று கேட்டுவிட்டால் "நமது தேசீய" வாதிகளுக்கு உடனே வந்துவிடும் கோபம்.

அவனை தேசத்துரோகி என்றும், வகுப்புவாதி என்றும், தேசீய ஞான மற்றவனென்றும் தேசவிடுதலைக்கும், சமரசத்திற்கும், சுயராஜ்ஜியத்திற்கும் முட்டுக்கட்டை போடுகிறவன் என்றும் தூற்ற ஆரம்பித்து விடுவார்கள்.



அதுதான் போகட்டும் 'மதம் எல்லாம் ஒன்றாக வேண்டும், வகுப்பு எல்லாம் ஒன்றாகவேண்டும் மதப்பிரிவு வகுப்புப்பிரிவு என்பது கூடாது, மதத்தின் பேராலும், வகுப்பின் பேராலும் மக்கள் சட்டத்திலும், சமூக வாழ்க்கையிலும் பிறிக்கப்படக்கூடாது உயர்வு தாழ்வு கூடாது' என்று ஒருவன் சொன்னால் உடனே அவனை 'துலுக்கனும் மலுக்கனும் ஒன்றா?' 'பார்ப்பானும் பறையனும் ஒன்றா?' என்ன 'நீ மதத் துரோகியாயிருக் கிறாயே வகுப்பு துவேஷியாயிருக்கின்றாயே' என்று சொல்லிவிடுவார்கள்.

"அப்படியானால் அவர்களுக்கு தனிஉரிமை கொடுக்க வேண டாமா?" என்றால், 'இதெல்லாம் தேசத்துரோகம் தேசீயத்திற்கு விரோதம்' என்று சொல்லி தூற்ற ஆரம்பித்து விடுவார்கள்.

இந்தக் காரணத்தினாலேயே தேசத்திற்காக இரவும் பகலும் பாடு பட்டு ஜெயிலுக்குச் சென்று கஷ்டப்பட்டு இந்திய மக்களைத்தட்டி எழுப்பின வீரர்களாகிய மௌலானா ஷௌகத் அலி போன்றவர்கள் எல்லாம் இன்று தேசத்துரோகிகளாகவும், மக்களுடைய பிரதிநிதிகள் அல்லாதார்களாகவும் 'ஆகிவிட்டார்கள்'.

நகத்தில் அழுக்குப்படாமல் பட்டு வெல்வெட்டின் மீது நடந்து கொண்டு ஊரைவிட்டு -வீட்டைவிட்டு அசையாமல், தங்கள் தொழிலையும் விடாமல், தேசீயத்தின் பேரால் பெருமை பெற்று பணமும் சம்பாதித்துக் கொண்டு கௌரவமாயிருந்துகொண்டு பெரும்பெரும் கூட்டங்களில் தலைமை வகிக்க மாத்திரம் வந்து புகழ்மாலை பெற்றுப் போய்க் கொண்டிருக்கும் திருவாளர்கள் டாக்டர் அன்சாரி, முத்துரங்கம், விஜயராகவாச்சாரி போன்ற "பெரியார்கள்" இன்று தேசீய வாதிகளாய் இந்திய மக்கள் பிரதிநிதி களாய்- காங்கிரஸ் தலைவர்களாய்-திரு.காந்தியின் உத்தமதோழர்களாய் விளங்குகின்றார்கள். காங்கிரஸ் மண்டபங்களுக்கு தங்கள் பெயர் இடப்படத் தக்கவர்களாய் விளம்பரம் செய்யப்படுகின்றார்கள்.

வகுப்புவாதமே! உனக்கு ஏற்பட்டு இருக்கும் இழிவுதான் எவ்வளவு? நினைக்கவே பயமாயிருக்கின்றதே! இதிலிருந்து "தேசீய" வாதத்திற்கு பெருமையும் சுகமும் கீர்த்தியும் கிடைக்கின்றதென்பதும் "வகுப்பு" வாதத்திற்கு சிறுமையும், கஷ்டமும், துரோகமும் கிடைக்கின்ற தென்பதும் நன்கு விளங்குகின்றது. இருந்தாலும் பறவாயில்லை. நாம் வகுப்பு வாதியே தான். எது வரையில்? என்று கேட்கின்றீர்களேயானால் இந்தியாவில் வகுப்பு பிரிவு என்பது எதன் பேரினாலும் சரி, அதாவது மக்களுக்குள் தேசத்தின் பேரிலோ மதத்தின் பேரிலோ, நிறத்தின் பேரிலோ, ஜாதியின் பேரிலோ, வகுப்பின் பேரிலோ, தொழிலின் பேரிலோ ஆண்பெண் பிறவியின் பேரி லோ ஆகிய எவைகளின் பேரிலானாலும் சரி. பிறிவுகள் என்று சட்டத் திலோ-சமூகத்திலோ-பழக்கவழக்கத்திலோ இருக்கின்றவரை-மனதால் எண்ணப்படுகின்ற வரை கண்டிப்பாய் நாம் வகுப்புவாதியேதான் என்பதை



RangaRakes tamilnavarasam.com

அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லுகின்றோம்.

தேசீயவாதிகளே! கோபித்துக்கொள்ளாதீர்கள்!! கோபித்துக் கொள்ளா தீர்கள்!!! ஏனெனில் நாம் மாத்திரம் வகுப்பு வாதியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மற்றும் யார்? யார்? எனிலோ ஒவ்வொரு வருணப்பிறிவில் நம்பிக்கை இருக்கும் ஒவ்வொரு வருணத்தின் உரிமையையும் காப்பாற்ற முயற்சிக்கும் உங்கள் "மகாத்மா" வருண வகுப்புவாதி.

ஒவ்வொரு மதத்தையும் காப்பாற்றும் - மத நடுநிலைமை வகிக்கும் உங்கள் காங்கிரசு வகுப்புவாதி.

எந்த வகுப்பாருடைய எந்த ஜாதியாருடைய மனமும் புண்படாமல் நடந்து கொள்ளும் உங்கள் "போல்ஸ்விக் வீரர்" ஜவஹர்லால் வகுப்புவாதி.

ஒவ்வொரு வகுப்பாருடைய கலைகள் -ஆதாரங்கள்-பழக்க வழக்கங்கள், தொழில் முறைகள் முதலியவைகளைக் காப்பாற்ற ஜாமீன் கொடுக்கும் உங்கள் காங்கிரசுக் காரியக்கமிட்டி வகுப்பு வாதி.

ஹிந்தி தெரியாதவர்களுக்குக் காரியக்கமிட்டியில் இடமில்லாத காங்கிரஸ் தேர்தல் வகுப்புவாதி.

கதர் கட்டாதவர்களுக்கு ஓட்டில்லை என்கின்ற காங்கிரசு தேர்தல் ஓட்டர்களின் யோக்கியதாபக்ஷம் வகுப்புவாதி.

தீண்டாதவர்களுக்கு கோயில் -குளம்-பள்ளிக்கூடம் தனியே கட்டிக் கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லுகின்ற திரு.மாளவியா வகுப்புவாதி.

கடைசியாக மதங்களும், வகுப்புகளும் இருந்து வருவதைக் கண் ணில் நேரில் பார்த்துக் கொண்டும், அதனதன் உரிமைகளைத் தவறாமல் அளிப்பதாக வாக்களித்துக் கொண்டும் இருக்கின்ற மக்கள் அந்தந்த வகுப்பினருக்கு பிரதிநிதித்துவ உரிமை கொடுப்பதற்கு மறுப்பதும்-யாரா வது கேட்டால் அதற்கு வகுப்புவாதம் என்று பெயர் கொடுப்பதும் எல்லா வற்றையும் விட பெரிய வகுப்புவாதி என்னப்படும்.

தேசமே வகுப்புகளின் கண்காட்சிசாலையாய்-மதங்களின் கண் காட்சி சாலையாய், ஜாதிகளின் வகுப்புகளின் கண்காட்சி சாலையாய் இருக்கும் போது சட்டசபையிலும், உத்தியோகத்திலும், மதவகுப்புப் பிரதி நிதித்துவம் இருந்தால் என்ன முழுகிப்போகும்? என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 23.08.1931**



# சட்டசபையில் திரு.பாண்டியன் தீர்மானம்

உயர்திரு. W.P.A சௌந்திரபாண்டியன், எம்.எல்.சி. அவர்கள் "இராமனாதபுரம் ஜில்லா தேவகோட்டை முதலிய சுற்றுப்பக்கங்களிலுள்ள ஆதி திராவிடர்கள் என்பவர்களை அங்குள்ள உயர்ந்த ஜாதியார் களென்பவர்கள் மிகவும் கொடுமைப்படுத்தி வருவதால் அரசாங்கத்தார். அதை விசாரித்து உண்மை அறிந்து அதன்மேல் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஒரு கமிட்டி நியமிக்க வேண்டு" மென்று சென்னை சட்டசபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அதை அரசாங்க இந்திய அங்கத்தினரும் பார்ப்பன சட்டசபை அங்கத்தினர்களும் எதிர்த்தும், மந்திரிகள் விரோதமாய் ஓட்டுக் கொடுத்தும் தீர்மானம் நிறைவேறியது குறித்து மகிழ்வெய்துகின்றோம். ஆயினும் சர்க்காரார் அத்தீர்மானத்தை மதித்து ஒரு சரியான கமிட்டி நியமிக்கக் கவலையெடுத்து கொள்வார்களோ, அல்லது தீர்மானத்தை குப்பைத் தொட்டியில் போட்டு விடுவார்களோ என்பது சந்தேகமேயாகும். எனினும் திரு.பாண்டியன் அவர்களின் இம் முயற்சி போற்றத்தக்கதேயாகும்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 23.08.1931**



RangaRakes tamilnavarasam.com

# ஈரோடு அர்பன் பாங்குத் தேர்தல்

ஈரோடு அர்பன் பாங்கி டைரக்டர்கள் (நிர்வாகஸ்தர்கள்) தேர்தல் இம் மாதம் 22-ந்தேதி நடைபெற்றது. அதில் இப் பாங்கி ஏற்பட்டு இதுவரை இல்லாத அளவு ஊக்கமும் பரபரப்பும் காணப்பட்டது.

கடைசியாக 9 பார்ப்பனரல்லாதாரும் 2 பார்ப்பனரும் தெரிந்தெடுக் கப்பட்டார்கள். பார்ப்பனக்கோட்டையாயும் அவர்களது உண்மை சிஷ்யர் களுக்குத் தவிர மற்றவர்களுக்கு மழைக்குக்கூடத் தங்குவதற்கு இடமில்லா திருந்த இந்த அர்பன்பாங்கி பார்ப்பனரல்லாதார் இரண்டொருவரின் தியாகத்தின் காரணமாய் அவர்கள் வெளிப்படையாய் “கெட்டபேர்” வாங்கத் துணிந்ததின் காரணமாய் 9 பார்ப்பனரும் இரண்டு பார்ப்பனரல்லா தவருமாய் இருந்த ஸ்தாபனம் நாளாவட்டத்தில் சுயமரியாதை உணர்ச்சி யேற்பட்டு இப்போது 11-பேர்களில் 9-பேர் பார்ப்பனரல்லாதார் டைரக்டர் களாய் வர முடிந்தது. இதுவும் சரியான தேர்தல் என்று நம்மால் சொல்லிவிட முடியாது.

தீண்டாதார் வகுப்புக்கு ஒரு டைரக்டரும் பெண்கள் வகுப்புக்கு குறைந்தபக்ஷம் ஒரு டைரக்டரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் அது உண்மையான பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியென்றே சொல்லலாம். அன்றி யும் இப்போது தெரிந்தெடுக்கப்பட்ட 11 பேர்களிலும் வக்கீல்களும் பாங்கர் களுமே 100க்கு 90-வீதம் டைரக்டர்களாகி இருக்கின்றார்களே ஒழிய யாருடைய உபயோகத்திற்கு, யாருடைய நன்மைக்கு என்று அர்பன் பாங்கி கள் ஏற்பட்டனவோ அந்தக் கூட்டத்தாரின் பிரதிநிதிகளை பூதக்கண்ணாடி வைத்துத்தான் தேடிப்பிடிக்க வேண்டியதாய் இருக்கின்றது. ஆதலால் அடுத்த தேர்தல்களில் இம்மாதிரியாக அதாவது பார்ப்பனர்கள் கையில் இருந்து பறிக்கப்பட்ட ஸ்தாபனம் மற்றொரு வழியில் அவர்களைவிட மோசமானவர்களான லேவாதேவிக்காரர்கள் கைக்கும், முதலாளிகள் கைக்கும் போகாமல் தொழிலாளர்கள் கைக்கும் தாழ்த்தப்பட்டவர்கள் கைக் கும் போகும்படியாக பார்த்துக்கொள்ள வேண்டும் என்றே விரும்பு கின்றோம்.

தகுதியானவர்கள் கிடைப்பதில்லை என்கின்ற காரணத்தைச் சொல்லிக் கொண்டு உலகம் உள்ள நாள் அளவும் ஏமாற்றுவது என்பது பார்ப்பன சூக்ஷிகள் எல்லாவற்றையும்விட மோசமான சூக்ஷியேயாகும்.



அன்றியும் பாங்கி நிர்வாக செல்வாக்கை மற்ற சுயநல சம்பந்த காரியங்களுக்கு உபயோகித்துக் கொள்ளும் உத்தேசமுள்ளவர்களுக்கு இதில் இடம் இருக்க நேர்ந்தால் அதுவும் ஒரு மோசமான காரியமாகும்.

ஆதலால் அடுத்த வருஷ தேர்தல்களில் ஓட்டர்கள் இன்னமும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றோம். நிற்க தெரிந் தெடுக்கப்பட்ட டைரக்டர்களில் சிலர் தங்களுக்குத் தலைவர் ஸ்தானம் கிடைக்காது என்கின்ற காரணத்தால் தங்களுக்கு (அடங்கிய) மற்ற டைரக்டர்களையும் தேர்தலுக்கு போகவிடாமல் செய்யவும் கோரமே இல்லாமல் செய்யவும் முயற்சித்ததாகவும் தெரியவருகின்றது. இது அவ் வளவு மேன்மையான காரியமென்றோ, புத்திசாலித்தனமான காரிய மென்றோ சொல்லிவிட முடியாது.

டைரக்டர்களில் யாருக்காவது, சொந்த விரோதம் இருந்தால் அப்படிப்பட்டவர் பாங்கியின் நன்மையைக் கோரி ராஜியாகப் பார்க்க வேண்டும். முடியாவிட்டால் ராஜினாமா செய்திருக்க வேண்டும். அல்லது தன்னாலான நன்மையைச் செய்ய சௌகரியமுள்ளபோது செய்து விட்டு சும்மா இருக்க வேண்டும். அப்படிக்கு இல்லாமல் தலைவராக வரக்கூடிய அளவு மெஜாரிட்டி பலம் இருக்கின்றவருக்குக் காரியத்தை நிர்வகிக்கச் சக்தி யில்லை என்பதாக ஒரு சமயம் யாருக்காவது தோன்றினால் அப்படிப்பட்ட வர் மெஜாரிட்டியாரையும் தன்னைப்போலவே மதித்து தனது அபிப்பி ராயத்தை மாற்றிக் கொண்டிருக்கவேண்டும். இல்லாதவரை தன்னால் கூடிய உதவி செய்து நிர்வாகம் திறமையாய் நடைபெற உதவி செய்ய முன் வரவேண்டும்.

இவைகள் ஒன்றுக்கும் கட்டுப்படாமல் தனக்குக் கிடைக்கத்தக்க நிலைமை இல்லை என்று காணப்படாததாலேயே மெஜாரிட்டி அபிப்பிரா யத்திற்கும், பாங்கியின் நன்மைக்கும் எதிரியாயிருந்து நிர்வாகத்திற்கு முட்டுக்கட்டை போடுவதற்குக் கட்சி சேர்ப்பதும், “ஒரு கை பார்க்கின் றோம்” என்பதும் பொது நலத்திற்கு விரோதம் என்பதோடு யோக்கியப் பொறுப்புக்கும் விரோதமான காரியமாகும் என்பது நமது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

அன்றியும் இந்த முட்டுக்கட்டையின் கெடுதியை அறியவும் மற்றும் பாங்கியின் நல்ல நிர்வாகத்திற்கு எதிரியாய் இருந்தவர்கள் யார் என்பதைத் தெரியவும் முடியாதபடி அவ்வளவு அறிவற்றவர்கள் என்று ஓட்டர்களை இந்த முட்டுக்கட்டைக்காரர்கள் நினைத்து விடுவார்களேயானால், அடுத்த தேர்தலில் அதன் பயனை அறியும்படி ஓட்டர்கள் செய்து விடக்கூடும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தவிர தொட்டதற்கெல்லாம் நிர்வாகத் திறமையைப் பற்றிப்பேசுவது 100க்கு 99 விஷயங்களில் மதிப்பற்ற



RangaRakes tamilnavarasam.com

தாகவும், சுயநலங் காரணமான வார்த்தை என்பதாகவும் வரவரப் பொது ஜனங்களால் கருதப்பட்டு விட்டது.

இனி அதைப் பற்றிப் பேசுவது பேசுபவர்களுக்குத்தான் பகுத்தறிவில்லையென்று சொல்லப்படுமே தவிர மற்றபடி அது ஒப்புக்கொள்ளக் கூடிய காரியமாகாது என்றும் சொல்லுவோம். ஏனெனில் நிர்வாகத் திறமைக்கு அளவு எடுக்கும் கருவி எது என்ற பிரச்சினைக்கு மறுமொழி சொல்லுவது இம்மாதிரி ஆசாமிகளுக்குக் கஷ்டமான காரியமாயிருப்பதால்தான். மற்றபடி யாருடைய நாணையத்திலாவது ஒழுக்கத்திலாவது குற்றம் சொல்லக்கூடுமானால் அதை யாரும் கவனிக்க வேண்டியதேயாகும்.

இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பிரசிடெண்ட், வைஸ் பிரசிடெண்ட் என்பவர்கள் நடவடிக்கையைப் பற்றிச் சொல்லப்பட்ட குற்றமெல்லாம் “இருவரும் விருதுநகர் சுயமரியாதை மகாநாட்டுக்குப் போய் விட்டு வந்தவர்கள்” என்றும், “பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியுள்ளவர்கள்” என்றும் சொல்லப்படுவதை தவிர வேறொரு குற்றமும் இரகசியமாகவோ, வெளிப்படையாகவோ சொல்லப்படவே இல்லை.

(மேலும் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இதே பாங்கியில் சில காலம் டைரெக்டராகவும் பல தடவை முனிசிபல் கவுன்சிலராகவும் மகாஜன ஹைஸ்கூல் காரியதரிசியாகவும் மற்றும் லிமிடெட் பாங்கி வைஸ் பிரசிடெண்டாகவும் சொந்தத்திலேயே ஒரு பாங்கராகவும் இருந்து வருவதுடன் ஈரோடு பஞ்சாயத்துக் கோர்ட்டு பிரசிடெண்டாகவும் இருந்தவர்.) முன்னிருந்த பிரசிடெண்டுக்கும், வைஸ்பிரசிடெண்டுக்கும் இருக்கும் பெருமையெல்லாம் அவர்கள் பார்ப்பனர்கள் என்றும், ஒருவர் வருணாச்சிரம தர்ம சபைத்தலைவர் என்றும் மற்றவர் பார்ப்பன தர்மகர்த்தர் என்றும் சொல்லப்படுவதைத் தவிர மற்றபடி அவர்களைவிட இவர்களுக்கு வேறு விஷேசம் ஒன்றும் சொல்லப்படவேயில்லை. இந்தக் காரணங்கள் தேர்தல்களுக்கு யோக்கியதாபக்ஷங்களாகக் கவனிக்கப்படுமானால் அவரவர்கள் தங்களாலான வரையில் பார்க்க வேண்டியது நியாயமேயாகும். ஏனெனில் எப்போதாவது இந்தக் கலகம் முடிந்துதானாக வேண்டும். அதை வீணாக நாள் கடத்துவதில் பயனில்லை.

ஆகவே இதைத் தவிர அந்த பாங்கியின் நன்மையை உத்தேசித்தோ அல்லது அந்த கௌரதையை அடைய எல்லாருக்கும் உரிமை உண்டென்பதை உத்தேசித்தோ கவனிக்கப்படுமானால் யாரும் நிர்வாகத்துடன் ஒத்துழையாமை செய்யாமல் அதற்கு முட்டுக்கட்டை போடாமல் அனுகூலமாயிருக்க வேண்டியது நியாயமாகும். பார்ப்பனரல்லாதார் வருகின்ற காலங்களில் எல்லாம் “தகுதி போராது” என்று சொல்லிக் கொண்டிருக்கும்



காலத்திற்கு இனி யோக்கியதை இருக்காது என்றும் கக்ஷி கட்டுவதால் இருவருக்கும் நஷ்டமே தவிர ஒருவர் மாத்திரம் நஷ்டமடைந்து மற்றவர்கள் நஷ்டமில்லாமல் இருந்து விடலாம் என்றும் கருதுவது ஏமாற்றமாய் முடியு மென்றும் வணக்கமாய் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – கட்டுரை – 30.08.1931**



RangaRakes tamilnavarasam.com

# சாரதா சட்டத்தை ஒழிக்க சூழ்ச்சி

சாரதா சட்டத்தை ஒழிப்பதற்காக இப்போது தென்னாட்டுப் பார்ப்பனர்கள் முஸ்லீம்களை தங்களுடன் சேர்த்துக்கொண்டு சூட்சி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். சமீபத்தில் கூடும் சட்டசபைக்கு தஞ்சை, திருச்சி ஜில்லாக்களின் பிரதிநிதியான திரு. கிருஷ்ணமாச்சாரியார் என்னும் பார்ப்பனர் திருத்தம் என்னும் பெயரால் ஒரு தீர்மானம் அனுப்பி இருக்கிறாராம். அதில் சாரதா சட்டத்தில் இருந்து முஸ்லீம்களையும், பார்ப்பனர்களையும் பிரித்து விட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றதாம். ஆகவே "சீர்திருத்தங்களுக்கு சர்க்காரார் முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள்" என்று சொல்லும் தேசீயவாதிகள் இதற்கு என்ன பதில் சொல்லுவார்களோ தெரியவில்லை.

இது ஒரு புறமிருக்கட்டும். இத்திருத்தத்திற்கு சர்க்காரார் இணங்கினால்தான் அது நிறைவேறக்கூடுமென்று தெரிய வருவதால் சர்க்காரார் இதற்கு இணங்கமாட்டார்களென்பதோடு நடுநிலைமையும் வகிக்காமல் எதிர்த்துத் தோற்கடிப்பார்களென்றே நம்புகின்றோம்.

ஏனெனில், இந்திய தேசீயவாதிகளால் மகாத்மா என்றும், சத்திய கீர்த்தி என்றும் சொல்லப்படும் லார்ட் இர்வினிடம் முஸ்லீம்களும், பார்ப்பனர்களும் இது விஷயமாய் தூது சென்ற காலத்தில் லார்ட் இர்வின் அவர்கள், "சாரதா சட்டம் என்பது மதப் பிரச்சினையிலோ வகுப்புப் பிரச்சினையிலோ பட்டதல்ல. அது பொதுவாகவே மக்கள் வைத்திய சம்பந்தமானதும், சுகாதார சம்பந்தமானதுமாகும். ஆதலால் சர்க்காரார் இதில் மதத்தையும், வகுப்பையும் கருதி ஒரு கூட்டத்திற்கு ஒரு மாதிரி மற்றொரு கூட்டத்திற்கு ஒரு மாதிரி என்பதாகச் செய்ய முடியாது" என்று அப்போதே சொல்லி இருக்கின்றார்.

ஆகவே, இப்போது சர்க்காரார் எந்த விதத்திலும் இதை மதவகுப்புப் பிரச்சினையாகக் கருதி பின் வாங்கமுடியாதென்றே கருதுகின்றோம். தவிரவும் அந்தப்படி கருதி ஒரு மதத்தையோ ஒரு வகுப்பையோ அந்தச் சட்டத்தில் இருந்து விலக்குவதானால் பார்ப்பனர்களைப் போலவே சிறு குழந்தைகளை கல்யாணம் செய்யும் வேறு பல சமூகங்களின் கதி என்ன ஆவதென்று கேட்கின்றோம். சாதாரணமாக பார்ப்பனர்களைப் பார்த்து காப்பி அடிக்கும் கோமுட்டிகளென்றும்,ஆரிய வைசியர்களென்றும், செட்டிகளென்றும், விஸ்வப் பிராமணர்களென்றும் மற்றும் பல விதமாய்ச் சொல்லிக் கொள்ளக் கூடியவர்களான சிறு பெண்களைக் கல்யாணம் செய்யும் வகுப்பார்கள் கதி என்னாவதென்று கேட்கின்றோம். இந்த விஷயத்தில் சர்க்காரார் ஏதாவது கோழைத்தனமாகவாவது நாணயத் தவறுதலாகவாவது நடந்தால் சர்க்காருக்குப் புத்தி கற்பிக்க வேண்டியது சீர்திருத்தவாதிகளது முக்கியக் கடமையாகுமென்பதை நாம் அழுத்தமாகச் சொல்லுகின்றோம். தவிரவும், முஸ்லீம்கள் இந்தச் சட்டத்தை எதிர்ப்ப தென்பது சிறிதும் அறிவுடைமையாகாது என்பதுடன் அதுவும் மதத்தின் பேரால் எதிர்ப்பதென்பது தங்கள் மதம் பகுத்தறிவுக்கேற்றதென்று சொல்லக் கூடியவர்கள் வெட்கப்பட வேண்டியதுமாகுமென்றே சொல்லுவோம்.

வேறு காரணங்களை மனதில் வைத்துக் கொண்டு அதற்காக மதத்தைக் கொண்டு பொறுப்பாக்குவதும் அதன் மறைவில் நிற்கப் பார்ப்பதும் மதத்தை இழிவுபடுத்துவதேயாகும். ஆகையால் சென்னை மாகாண முஸ்லீம் நண்பர்கள், வைசிராய் அவர்களுக்கு முஸ்லீம்கள் பேரால் சாரதா சட்டத் திருத்தப் பிரேரேபனையை எதிர்த்துத் தந்திகொடுப்பதுடன் ஆங்காங்குள்ள சீர்திருத்தவாதிகளும், தனிப்பட்ட முறையிலும், சமுதாய முறையிலும் திருத்தப் பிரேரேபனையைக் கண்டித்துத் தந்திகள் அனுப்ப வேண்டுமாய் விரும்புகின்றோம். திரு. ஆர்.கே.ஷண்முகம் அவர்கள் இத்திருத்தம் நிறைவேறாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது முக்கியக் கடமையாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

திருச்சி, தஞ்சை ஓட்டர்கள் திரு. கிருஷ்ணமாச்சாரியாரை இந்தியா சட்டசபைக்குத் தெரிந்தெடுத்ததிற்கு வெட்கப்பட்டு இனியாவது மானத்துடன் நடந்து கொள்வார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 30.08.1931**



RangaRakes tamilnavarasam.com

# பயமுறுத்தல் கடிதங்கள்

அன்பர் திரு. ஜார்ஜ் ஜோசப் அவர்களை காங்கிரஸ் "பக்தர்"களில் யாரோ ஒருவர் வெட்டிப் புதைத்து விடுவதாய் அவருக்கு ஒரு கடிதம் எழுதி யிருப்பதாகவும் அது திரு.ஜோசப் அவரது மனைவியாரால் போலீசில் ஒப்பு விக்கப்பட்டதாகவும் பத்திரிகையில் பார்த்தோம்.

இக்கடிதம் எழுதக் காரணம் 'குடி அர'சில் வார வாரம் வெளியான திரு.ஜோசப் அவர்களின் "காந்தியின் இராமராஜியம்" என்பது பற்றிய வியாசங்களின் காரணமாகவே இருக்கலாம். இருந்தாலும்,

இம்மாதிரி கடிதம் நமக்கும் பல வந்து கொண்டிருக்கின்றன. நண்பர்கள் திரு.ஏ.இராமசாமி முதலியார், திரு.பி.வரதராஜுலு நாயுடு ஆகியவர்களுக்கும் பல வந்ததாக நாம் சென்னையில் இருக்கும்போது பத்திரிகைகளில் பார்த்தோம். நமக்கு வந்த கடிதங்கள் 100க்கு மேற்பட்ட தாகும். வசவு கடிதங்கள் வர்ணிக்க முடியாத கருத்துக்களால் எழுதப்பட்ட வைகளும் இரத்தத்தினால் துவைத்து கையெழுத்துப் போடப்பட்டவை களும் ஆபாசமான சித்திரம் எழுதிக் காட்டியவைகளுமாக அநேக கடிதங் களுண்டு. இவை பெரிதும் பார்ப்பனர்களால் எழுதப்பட்டவைகள் என்று கருதக் கூடியவைகளானாலும் சில பார்ப்பனர்களல்லாத வாலிபர்களாலும் இருக்கலாம். ஒன்றிரண்டு மதப் பைத்தியம் (அதுவும் சைவ மதப்பைத்தி யம்) காரணமாகவே யிருக்கலாம் என்றும் எண்ணக்கூடியவைகளாகும்.

இவைகள் எல்லாமுமே நம்மை அவர்கள் (எழுதினவர்கள்) கொல்ல வேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீதோ அல்லது கொன்று விடலாம் என்கின்ற தைரியத்தின் மீதோ எழுதப்பட்டவைகள் அல்ல என்பதுதான் நமது அப்போதையதும் இப்போதையதுமான அபிப்பிராயமுமாகும்.

ஆனால் நம் பேரிலுள்ள கோபத்தின் வேகம் அந்த வழியில் (அந்தப்படி ஒரு கடிதம் எழுதி) ஒரு விதம் தணித்துக்கொள்ளப்பட்டது என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம். ஏனெனில் நமது நடவடிக்கைகள் அவர்களுக்கு அவ்வளவு ஆத்திரத்தைக் கொடுக்கின்றது என்பதாக தெரிகின்றது. அதற்கு யார் என்ன செய்யக்கூடும்?



கொன்று விடுவதாக எழுதின வீரனுடைய வீரத்தனத்திற்கு பயமுறுத் தப்பட்டவர்களுடைய வீரம் சிறிதாவது குறைந்து இருந்தால் அவர்கள் தங்களது குரலைக் கொஞ்சம் தளர்த்தியிருக்கலாம் - பேனாவை சற்று குறுக்கியிருக்கலாம்-சரீரத்தை சற்று மறைத்தாவதிருக்கலாம்.

ஒருவனைக் கொல்வதின் மூலம் ஒருவன் வீரனாகப் பார்ப்பது போலவே ஒருவனால் கொல்லப்படுவதின் மூலமும் ஒருவன் வீரனாகப் பார்க்க உரிமையுண்டு - வழியுண்டு என்பதை யாரும் மறுக்கமுடியாது.

எப்படியெனில் சாமி சிரத்தானந்தாவைக் கொன்றவன் தனது "வீரத் தினாலேயே கொன்று வீரனானான்" என்று வைத்துக்கொண்டாலும் கொல்லப் பட்ட சிரத்தானந்தஜீயும் வீரராகாமல் போகவில்லை.

பகத்சிங்கை தூக்கிலிட்டு சர்க்காருக்குக் கிடைத்த வீரப்பட்டத்திற்குச் சிறிதும் குறைந்ததல்ல பகத்சிங்குக்குக் கிடைத்த வீரப்பட்டம். உண்மை யிலேயே ஒரு மனிதனுடைய லட்சியத்திற்கு வெற்றி ஏற்படவேண்டும் என்று கருதுகின்ற மனிதனுக்கு அவன் ஆசை நிறைவேறவேண்டுமானால் அந்த லட்சியத்திற்கு அவனது உயிரைக் கொடுத்ததாய் அதாவது அந்த லட்சியத்தின் பயனாய் அவனது உயிர் இழக்கப்பட்டதாய் ஏற்பட்டால் அது உண்மையில் பயனளிக்கக்கூடியதேயாகும்.

ஏனெனில் ஒவ்வொரு மனிதனுக்கும் சாவு உறுதி. அந்த சாவு 1000ல் 999 நோயிக்கும் அகஸ்மாத்தான சம்பவத்திற்கும் தன்னை அறியாமலும் தான் பறிகொடுக்கப்படத்தக்கதாய் நடைபெற்று வருகின்றனவே தவிர ஒரு மனிதன் தனது சாவை தக்க விலைக்குக் கொடுத்ததாகக் காணப்படுவது மிக்க அரிதாகவே யிருக்கின்றது.

பகத்சிங் காரியம் சரியா? தப்பா? என்பது சிலருக்காவது விவ காரத்திற்கிடமானதாயிருந்தாலும் அவரது சாவு அவரது லட்சியத்திற்குத் தக்க பயனளித்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதுபோலவே காங்கிரஸ் லட்சியத்திலோ மத லட்சியத்திலோ நம்பிக்கை இருக்கின்றவர்கள் தங்களது சாவை தக்க விலைக்கு பயன்படுத்து வது என்று கருதிய முடிவினால் ஒருவனைக் கொல்ல எண்ணுவதில் ஏதாவது குற்றமிருக்கின்றதென்று நாம் சிறிதும் கருதமாட்டோம். அதாவது தமது லட்சியத்திற்கு விரோதமானவன் - தடையானவன் என்று கருதப் படுகின்றவனை சாகடிப்பதின் மூலம் தனது சாவை பயன்படுத்தலாம் என்று எண்ணுவதில் இயற்கைக்கு விரோதம், அனுபவத்திற்கு விரோதம், ஞாயத் திற்கு விரோதம் இருப்பதாகக் காணமுடியவில்லை.

அதுபோலவே சாகடிக்கப்படுகின்றவனும் தனது லட்சியத்திற்காக அந்த லட்சியம் கைகூடுவதால் யாரொருவர் நஷ்டமடையக்கூடியவரோ,



RangaRakes tamilnavarasam.com

கஷ்டமடையக் கூடியவரோ அல்லது லட்சியமே நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடியதல்ல வென்றோ கருதப்படுபவரோ ஆகியவர்களால் சாக டிக்கப்பட நேருவதிலும் அதிசயமோ இயற்கைக்கு விரோதமோ, நடப் பிற்கு விரோதமோ, நியாயத்திற்கு விரோதமோ இருப்பதாய் கருதவும் முடியவில்லை.

எந்த மனிதனாவது தனது லட்சியத்தைப் பிரதானமாய்க் கருதி அதற்கே உழைத்துத் தீர வேண்டுமென்று முடிவு கட்டிக் கொண்டு இருப் பானேயானால் அவன் அதற்காக உயிரை இழக்க நேருவதுதான் அவனது லட்சியத்தில் அவனுக்குள்ள உறுதியையும் அவன் அடைய வேண்டிய வெற்றியையும் காட்டுவதாகும். அதோடு அந்த லக்ஷியத்திற்கும் அவன் செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் செய்துவிட்டதான தனது கடமையையும் நிறைவேற்றியதாகும்.

அன்றியும் லக்ஷியக்காரன் உயிருடன் இருந்து லக்ஷியத்திற்காக பாடுபட்டுக் கொண்டிருப்பதில் எவ்வளவு பயன் ஏற்படுமோ அதைவிட கண்டிப்பாய் பல மடங்கதிகமான பலனும் ஏற்படக்கூடும். அறிவாளிகளின் வேலையும் அதுவேயாகும்.

ஆதலால் சாவுக்கு பயந்து யாரும் தங்கள் லக்ஷியங்களின் வேகத்தை சிறிதும் குறைத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காகவே இதை எழுதினோம்.

தவிர "நான் செத்துப் போனால் என் பெண்டுபிள்ளை என்ன கதி யாகும்?" என்கின்ற ஒரு மனப்பான்மை தான் இந்தியர்களை சுயமரியாதை யற்ற கோழைகளாகச் செய்து கொண்டு வந்திருக்கின்றது. இந்த மனப் பான்மை இந்தியாவில் தான் அதிகம் உண்டு. சௌகரியமிருப்பவன் இம் மாதிரி காரியங்களில் பிரவேசிக்கும் போதே பெண்டுபிள்ளைகளது உயிர் வாழ்க்கைக்கு ஏதாவது செய்துவிட வேண்டியது அறிவுடைமையாகும். சௌகரியமில்லாதவன் அதற்காகவே உயிர்வாழ வேண்டும் என்று கருது வானேயானால் அப்படிப்பட்டவன் தயவுசெய்து இம்மாதிரியான பொது நல காரியங்களில் பிரவேசிக்காமல் இருப்பதே நலமாகும். ஏனெனில், இம் மாதிரி லட்சியக்காரர்களாலேயே அதாவது "பெண்டுபிள்ளைகளைக் காப்பாற்ற இருக்கின்றோம்". அவர்களை காப்பாற்ற வேண்டியது நமது லக்ஷியம் அல்லது கடமை" என்று கருதிக் கொண்டிருக்கிறவர்கள் பொதுக் காரியங்களில் பிரவேசிப்பதாலேயே உண்மையான லட்சியங்கள் - பொதுக்காரியங்கள் பாழாகின்றன. அன்றியும் அவர்களுடைய பொதுநல சேவையும் நாணயக் குறைவானது - ஹம்பக்கானதும் என்று கருதப்பட வேண்டியதுமாகி விடுகின்றன. ஆகையால் அதைப்பற்றி யாரும் கவலைப்படக்கூடாது. நிற்க இந்தப்படி நாம் எழுதுவதில் லக்ஷியத்திற்காக ஒருவனை சாகடிப்பது அல்லது ஒருவன் சாவது என்கின்ற இரண்டு



காரியங்களையும் நாம் ஒன்றாகவே கருதி இருப்பதாக யாரும் கருதிவிடக் கூடாது என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். சுயமரியாதை இயக்கத் தைப் பொறுத்த வரையில் அதன் லக்ஷியம் நிறைவேற ஒருவனை சாகடிப் பதை விட லட்சியத்தின் எதிரி ஒருவனால் சாவதே மேல் என்று தான் இன்று கருதுகின்றோம். ஏனெனில் செத்தவனை இருவரும் போற்றுவார்கள். செத்த வனிடத்தில் இரு கூட்டத்தாரும் அனுதாபம் காட்டுவார்கள். அதன் மூலம் லட்சியத்திற்கு ஆக்கம் ஏற்படும். சாகடித்தவனை ஒரு கூட்டம்தான் போற்ற லாம். அதுவும் தைரியமாய் வெளிப்படையாய் போற்றமாட்டார்கள். அதிலி ருந்தே எதிர்ப்பின் ஆக்கமும் குன்றலாம். அதுவும் தவிர கொல்லுபவன் ஒளிந்திருந்து பயந்து வேலை செய்ய வேண்டும். கொல்லப்படுபவன் தைரியமாய் வெளிப்படையாய் இருந்து உயிர் கொடுக்கலாம். மற்றும் சில நன்மைகள் உண்டு. ஆதலால் சாவுக்கு துணிந்து லட்சியங்களை மாற்றிக் கொள்ளாமல் இருக்கவேண்டியது உண்மை லட்சியக்கார மனிதனின் கடமை என்பதை வலியுறுத்துகின்றோம்.

திரு.ஜோசப் அவர்களின் மனைவியார் அக்கடிதத்திற்குப் பயந்தது பெண்கள் உலகத்திற்கே ஒரு 'மாசு' என்றுதான் சொல்லுவோம். அவ் வம்மையார் தனது புருஷன் கொல்லப்பட்டு விட்டால் 'ராட்டினம் சுற்றி' பிள்ளைக்குட்டிகளைக் காப்பாற்ற வேண்டுமே என்று பயந்திருக்கலாமோ அல்லது தனது வாழ்க்கையின் மேன்மை குன்றி விடுமே என்று பயந்திருக் கலாமோ என்று நாம் நினைக்கவில்லை. ஆனாலும் தமது அன்புள்ள காதலன் பிரிந்துவிட்டால் என்ன செய்வது என்று காதலை உத்தேசித்து பயந்திருக்கலாம் என்றே கருதினாலும் அதுவும் சரியல்ல என்றே சொல்லு வோம். தனது காதலனுக்கு அவரது லட்சியத்திற்காக அவரது உயிரைக் கொடுக்க நேர்ந்தது என்னும் ஒரு மேன்மையும் அவரது லட்சியம் நிறை வேறுவதற்கு அனுகூலமாக அது பயன்பட்ட லாபத்தை விட காதலனை இழந்து விட்ட நஷ்டம் சிறிதும் அதிகமல்ல என்றே சொல்லுவோம். சாப்பாட்டிற்கு ஏதாவது ஒரு வழிவேண்டுமானால் பள்ளிக்கூட உபாத்தி யாய ராகலாம். முடியா விட்டால் சரீரத்தில் வலுவிருக்கின்றவரை ரோட்டில் கல் உடைக்கலாம். மற்றபடி தனக்கு வேண்டிய பெருமையையோ கௌர தையைப் பற்றியோ யோசிப்பதானாலும் இந்தக் காரணங்களால் அம்மை யாரின் கௌரவத்திற்கு எவ்வித குறைவும் ஏற்பட்டுவிடாதென்றே தைரிய மாய்ச் சொல்லுவோம், சொல்லுவோம்.

திரு. ஜார்ஜ் ஜோசப் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகோ வெட்டிப் புதைக்கப்பட்ட பிறகோ திருமதி ஜோசப் அம்மையாருக்கு மாஜி முதல் மந்திரியான டாக்டர் சுப்பராயன் அவர்களது மனைவியாருக்கும் இப்போதைய முதல் மந்திரியான திவான்பகதூர் முனுசாமி நாயுடு அவர்களது மனைவியாருக்கும் இந்திய நிர்வாக சபை சட்டமெம்பரான சர்.சி.பி. இராமசாமி அய்யர் அவர்களது மனைவியாருக்கும் இந்நாட்டில்



RangaRakes tamilnavarasam.com

உள்ள கௌரதையில்-பெருமையில்-தன் மதிப்பில் அனேக பாகம் அதிக மாகத்தான் இருக்குமே தவிர எள்ளளவாவது சிறிதாயிருக்கும் என்று கருது வதற்கு இடமிருக்காது என்று உறுதியாய் சொல்வோம். ஆகையால் அம்மையார் பயப்படாமல் தனது காதலனை அலங்கரித்து யுத்த களத்திற் குத் தைரியமாய் நல்லதொரு பேனாவைக் கையில் கொடுத்து "எனக்காகக் கவலைப்பட வேண்டாம்" என்று சொல்லி அனுப்பிப் கொடுக்க வேணு மாய்ப் பிரார்த்திக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 30.08.1931**



# காந்தியின் யாத்திரை

## போனாலென்ன? போகாவிட்டாலென்ன?

உயர்திரு. காந்தியவர்கள் இங்கிலாந்து போகும் விஷயமாய் போகா மல் தப்பித்துக் கொள்ள முயற்சித்துச் சர்க்காரார் மீது எவ்வளவோ குற்றப் பத்திரிகை வாசித்துப் பார்த்தும் கடைசியாக இப்போது அந்தப் பிரச்சினை யானது ஒன்று, "போய்த் தீரவேண்டியது" அல்லது "தாம் குற்றவாளியாக வேண்டியது" என்கின்ற நிலைமைக்கு வந்து விட்டதால் போவதா? இல்லையா? என்பது ஒவ்வொரு வினாடியும் ஒரு பெரிய விடுகதையாகவே இருந்து வந்தது.

திரு. காந்தியவர்கள் சர்க்காரார் மீது ஒரு வண்டி குற்றங்கள் சுமத்தி நீண்டதொரு குற்றப் பத்திரிகை படித்தார். ஆனால் சர்.சி.பி.இராமசாமி அய்யரை சட்ட மந்திரியாகக் கொண்ட சர்க்காரார் அவ்வளவுக்கும் ஒரே அடியில் பதில் சொல்லி குற்றப்பத்திரிகை ஏற்படுத்தினவர்களை நடுங்கச் செய்து விட்டார்கள். அதன் சுருக்கமாவது:-

"திரு.காந்தியவர்களே! நீங்கள் சாட்டிய குற்றப் பத்திரிகையை சர்க்காரார் ஒப்புக்கொள்ள முடியாது. காங்கிரஸ் ஒப்பந்தத்தை மீறி தப்பு செய்து வந்திருப்பவைகளை சர்க்காரார் அவ்வப்போது உங்களுக்கு எடுத்துக் காட்டி வந்திருக்கின்ற விபரம் தங்களுக்கே தெரிந்ததாகும்".

"காங்கிரஸ் செய்த தப்பிதங்களுக்கு பதிலுக்கு பதில் செய்யாமல் சர்க்காரார் சாதாரண சட்டத்தின்படியே நடவடிக்கைகள் நடத்தி அவைகளை சமாளித்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஒப்பந்தத்தில் காணப்படாத பல விஷயங்களில் கூட சர்க்காரார் உங்களுக்காக வேண்டியே இணங்கி வந்திருக்கின்றார்கள் என்பதும் உங்களுக்கே தெரியும்".

"லண்டன் மகாநாட்டுக்கு போவதை மறுப்பதானது ஒப்பந்தத்தின் பிரதானமான கொள்கையை பாழ்படுத்துவதாகும் என்பதை உணருங்கள்".

"ஒப்பந்தத்தில் சாதாரண சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொள் வதை நிறுத்தி வைக்க நிபந்தனை கிடையாது என்பதையும் உணருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

தனிப்பட்ட சம்பவங்களையும் நிலைமையையும் சமாளிக்க ஒப்பந்தப்படி சர்க்காராருக்கு எப்பொழுதும் உரிமையுண்டு". "இதுவரை சர்க்காரார் கூடு மானவரை பொருமையுடனேயே இருந்து வருகின்றார்கள். இனியும் இருக்க முயற்சிக்கின்றார்கள்".

"ஆனால் அந்தப்படி இனியும் சர்க்காரார் பொருமையாயிருந்து வருவது என்பது காங்கிரசின் நடவடிக்கையைப் பொறுத்தது என்பதை உணருங்கள். எப்போதும் பொருமையாகவே இருப்போம் என்று சர்க்காரார் உறுதி கூற முடியாது"

என்பதாக பதில் தெரிவித்து விட்டார்கள்.

இதன் பிறகுதான் காங்கிரஸ்காரர்கள் வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாத - தப்பித்துக்கொள்ள முடியாத நிபந்தனையாகப் பாவிக்க வேண்டியதாகி விட்டது.

திரு. காந்தியவர்கள் நிலைமை "போனாலும் கஷ்டம் போகா விட்டாலும் கஷ்டம்" என்கின்ற நிலைமைக்கு வந்து விட்டது. போகாமல் இருப்பதில் இரண்டு வித கஷ்டங்கள். போவதால் ஒருவித கஷ்டம். அதாவது போவதால் காங்கிரசின் குட்டு வெளியாவதுடன் போய்விடும். போகாவிட்டால் பழையபடி கிளர்ச்சித் தொல்லையை இழுத்துப்போட்டுக் கொள்ள வேண்டியிருப்பதுடன் "உலகத்தின் முன்பாக காங்கிரசின் நாணையம் வெளுத்துப்போகும்" என்கின்ற இரண்டு கஷ்டங்கள் ஏற்ப டுகின்றன.

ஆகவே ஏதாவது ஒரு வகையில் சர்க்காரார் மீது குற்றம் சுமத்தி போகாமல் இருக்கவே முயற்சித்துப் பார்த்தும் அது வெற்றிபெற இடமில் லாமல் போனதால் ஒரு மொண்டிச் சாக்கையாவது வைத்து போய் விட்டே வந்து விடலாம் என்று முடிவு செய்ய வேண்டிய நிலைமை திரு. காந்திக்கு ஏற்பட்டுவிட்டது. சர்க்காரார் அதற்கும் இடம் கொடுக்கா மலிருந்ததால் ஒப்பந்த நிபந்தனை சம்பந்தமான பிரச்சினைகளைவிட "ஏதோ ஒரு பஞ்சாயத்துக்கு ஒப்புக்கொண்டால் போதும், நான் போகத் தயாராயிருக் கின்றேன்" என்று சொல்ல வேண்டியதாகி விட்டது. அதாவது இந்த பஞ்சாயத்தானது செய்யும் முடிவுக்கும் "நான் லண்டன் போவதற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. எப்படியாவது பஞ்சாயத்துக்கு ஒப்புக் கொண் டால் இப்போதே போய்விடுகிறேன். பிறகு நீங்கள் எப்போதோ யாரையோ பஞ்சாயத்து நியமித்து என்னமோ செய்து கொள்ளுங்கள்" என்கின்ற நிபந்தனையின் மேல் போவதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாய் தெரிகின் றது. ஆகவே லண்டன் போவது ஒப்பந்தப்படி அவசியம் என்பதாக உணர்ந்து விட்டார் என்றே ஊகிக்க வேண்டியதாய் இருக்கிறது. எப்படி இருந்தாலும் லண்டன் மகாநாட்டால் இந்தியாவுக்கு அரசியல் சம்பந்தமான



நன்மை ஒன்றும் ஏற்படப்போவதில்லை. அதாவது,

இப்போதைய வரி குறையாது. உத்தியோகம் குறையாது.

உத்தியோகக் கொள்ளை குறையாது. பார்ப்பனீயக் கொடுமை சூக்ஷி குறையாது.

பணக்கார ஆதிக்கம் குறையாது.

படிப்பு என்னும் பேரால் சோம்பேரிகள் வாழ்க்கையும் அவர்களது கொள்ளையும் பொறுப்பற்றவர்கள் கைகளுக்குப் போகும் அரசியல் ஆதிக்கமும் குறையாது. இவைகளுக்குப் பதிலாக அவைகள் அதிகப் படலாம்.

சரீரத்தால் பாடுபடும் தொழிலாளிகளுக்கு எவ்விதத்திலும் கஷ்டம் குறையாது. வேண்டுமானால் தீண்டாதவர்களுக்கும் பெண்களுக்கும் முன்னேற்றமேற்பட சற்று மார்க்கமுண்டாகலாம்.

இதற்கும் காங்கிரசும் பார்ப்பனர்களும் முட்டுக்கட்டை போடாமல் இருந்தால் தான் - திரு. காந்தியவர்கள் வருணாச்சிரம மூட்டையை வட்ட மேஜையில் அவிழ்க்காதிருந்தால்தான் முடியும்.

நிற்க திரு. காந்தியவர்கள் லண்டன் சென்றதாலேயே கடைசிவரை இருந்து "காரியம் ஏதோ ஒரு விஷயத்தில் சமாதானமாக முடிந்தது" என் கின்ற நிலைமையை ஏற்பட இடங்கொடுப்பார் என்று நம்புவதும் பிசகே யாகும். ஏனெனில் "அதற்குப்பிறகு காங்கிரசுகாரருக்கு வேலை என்ன வென்பது ஒரு பெரிய விடுகதையாகும்." இன்றைய நிலைமையில் "வட்ட மேஜை மகாநாடு முடிவுப்படி ஒரு திட்டம் ஏற்பட்டுவிட்டது" என்று வைத்துக் கொண்டாலும் அதன் பயனாய் ஏற்படும் உத்தியோகங்கள் காங்கிரசுக்காரர்களுக்கு கிடைத்துவிடும் என்று சொல்லிவிட முடியாது. எங்கு எப்படியானாலும் தென்னாட்டில் கண்டிப்பாய் கிடைக்கவே மாட்டாது.

ஆதலால் தென்னாட்டுப் பார்ப்பனர்களுக்கும் தேசீயத்தின் பேரால் வாழ்வை ஏற்படுத்திக் கொண்டவர்களுக்கும் வேறு ஒரு வழி வேண்டியது அவசியமேயாகும்.

தவிரவும் காங்கிரஸ் அடங்கியவுடன் இனிப் புறப்படப் போகும் கிளர்ச்சி சமதர்மக் கிளர்ச்சியேயாகும். இதில் திரு.காந்தியும் சேரமுடியாது. சேர்ந்தாலும் அவருக்கும் மதிப்பு இருக்காது என்பதுடன் அவர் கலந்த கிளர்ச்சியும் நாணையமானதாய்க் கருதப்படாததாய் போய் விடலாம். பிறகு பணக்காரன், மில் முதலாளி, படித்த ஆட்கள் ஆகிய இந்தக் கூட்டமும்



RangaRakes

tamilnavarasam.com

இதில் சேர முடியாது. இவ்வளவும் தவிர தென்னாட்டுப் பார்ப்பனர்கள் அதன் கிட்டக்கூட வர முடியாது. ஆகவே இவர்களுக்கெல்லாம் உலகத்தில் இடம் வேண்டுமானால் காங்கிரசின் கிளர்ச்சிக்கு எந்தக் காரணத்தைக் கொண்டாவது உயிர் வைத்திருக்க வேண்டியது திரு.காந்தியின் கடமை யாகும். ஆதலால் ஏதாவது ஒரு சாக்கைச் சொல்லிக்கொண்டு வருணா சிரமத்திற்கு மோச மில்லாமல் பார்த்து விட்டு திரு.காந்தியவர்கள் ஓடிவந்து விட வேண்டிய வரேயாவார்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 30.08.1931**



## விருதுநகர் மகாநாடு III

### மத நடுநிலைமைக் கொள்கை கண்டனத் தீர்மானம்

விருதுநகர் மகாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்களில் மதங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்னும் தீர்மானத்தைப்பற்றி சென்ற வாரம் விளக்கி இருந்தோம்.

இவ்வாரம் மதநடுநிலைமை கொண்ட ஸ்தாபனங்களை மறுத்தும் மத நடுநிலைமை கொள்கையைக் கண்டனம் செய்தும் தீர்மானிக்கப்பட்ட தீர்மானத்தைப் பற்றி சற்று விளக்குவோம். தீர்மானமாவது:-

"சமுதாய முற்போக்குகள் ஏற்படுவதற்கு ஆன முயற்சிகள் செய்யப் படும்போதெல்லாம் "மதம்போச்சு மதம் போச்சு" என்று பிற்போக்காளர்கள் கூப்பாடு போட்டுக்கொண்டே முட்டுக் கட்டையாய் இருந்து வருவதால் அரசாங்கத்தார் அனுசரித்து வரும் மத நடுநிலைமையை கண்டிப்பதோடு அதை ஆதரிக்கும் எந்த அரசியல் ஸ்தாபனங்களையும் ஒப்புக்கொள்ள முடியாது என்பதாக இந்த மகாநாடு தீர்மானிக்கிறது" என்பதாகும். அது போலவே "வர்ணாச்சிரம தர்மத்தை ஒப்புக்கொள்ளும் எந்த அரசியல் ஸ்தாபனத்தையும் ஒப்புக்கொள்ள முடியாது" என்பதுமாகும்.

இவை காங்கிரசையும் திரு.காந்தியையும் கண்டித்து செய்யப்பட்ட தீர்மானம் என்றே சொல்லலாம். ஏனெனில் மத நடுநிலைமையை காங்கிரஸ் ஒப்புக்கொள்ளுகின்றது. வருணாச்சிரம தர்மத்தை திரு.காந்தியவர்கள் ஒப்புக் கொள்ளுகிறார். ஆகவே இவ்விரு கொள்கைகளும் அவைகளை ஒப்புக் கொள்ளும் ஸ்தாபனங்களும் கண்டிக்கப்படுமானால் மேல் கண்டபடி காங்கிரசும், திரு.காந்தியும் கண்டிக்கப்பட்டவர்களேயாவார்கள். இப்பொழு தாவது பொதுஜனங்கள் சுயமரியாதைக்காரர்கள் ஏன் காங்கிரசை, காந்தியை கண்டிக்கின்றார்கள்? என்பதை உணர வேண்டுகின்றோம். மதநடுநிலை மையை ஒப்புக்கொண்டால் மதக்கொள்கைகளில் யாரும் பிரவேசிக்கவே கூடாது என்பதுதான் அதன் தத்துவமாகும். ஆகவே இந்தத் தத்துவம் காப்பாற்றப்படவேண்டும் என்பதை ஒப்புக்கொண்டோமேயா னால் மதக் கொள்கைகள் மத சம்பந்தமான கட்டளைகள், மத சம்மந்தமான



RangaRakes tamilnavarasam.com

விதிகள் என்பவைகளில் யாரும் பிரவேசிக்கக் கூடாது என்பதை நாம் ஒப்புக் கொண்டதாகவே ஆகும். அப்படியானால் இன்றைய நிலைமையில் மனித தர்மத்திற்கு ஏற்ற எவ்வித சீர்திருத்தத்தையும் செய்யக்கூடாது என்பதாகத் தான் முடியும்.

ஒரு சிறு சீர்திருத்தம் கொண்டு வருகின்ற காலத்திலும், சீர்திருத்த விரோதிகள் எழுந்து நின்று "வந்து விட்டது மதத்திற்கு ஆபத்து", "மதம் போச்சுது மதம் போச்சுது" என்று கூப்பாடு போட்டால் இந்த நிலைமையில் சீர்திருத்தக்காரர்கள் என்ன செய்ய முடியும்? என்பதை யோசித்துப் பாருங்கள். ஏறக்குறைய பிரிட்டிஷ் அரசாங்கம் வந்து 150 வருஷ காலமாகியும் இனியும் சரியான சீர்திருத்தங்கள் ஏற்படாததற்கு இந்த மத நடுநிலைமையென்பதே முக்கிய தடங்கலாயிருந்து வந்திருக்கின்றது என்பதுடன் சர்க்காராரும் சில சமயங்களில் அதன் நிழலில் ஒளிந்து கொண்டு தப்புவித்து கொள்ள முயற்சிக்கிறார்கள் என்பதையும் பிரத்தியக்ஷத்தில் பார்த்து வருகின்றோம்.

ஆகவே இந்த மத நடுநிலைமைக் கொள்கையை இந்திய காங்கிரசும் இந்திய அரசியல் வட்டமேஜை மகாநாடும் ஒப்புக்கொள்ளுமானால் அக்கொள்கைளின் கீழ் எவ்வித சீர்திருத்தத்தை எதிர்பார்க்கமுடியும் என்பதை யோசித்தால் அக்கொள்கையினால் ஏற்படும் ஆபத்து விளங்காமல் போகாது. காங்கிரசு இந்த மதநடுநிலைமையை ஒப்புக் கொள்ளுவதாலேயேதான் காங்கிரசை நாம் வைதீகத்தை – பார்ப்பனீயத்தை காப்பாற்றும் ஸ்தாபனம் என்று கூறுகின்றோம். இதை மறுப்பதற்கு யாரிடம் என்ன ஆதாரம் இருக்கின்றது? என்று கேட்கின்றோம்.

விவாக சம்பந்தமான – ஜாதி வித்தியாச உயர்வு தாழ்வை நீக்கும்படியான பல அரிய தீர்மானங்கள் சட்டசபைகளுக்கு வந்தும், அவை தோல்வி அடைந்ததற்கு என்ன காரணம்? என்றும், இன்னும் சாதாரண விஷயங்களுக்கெல்லாம் மத நடுநிலைமை என்று வைதீகர்கள் கூப்பாடு போடுவதற்கு என்ன காரணம்? என்றும் வாசகர்களை கேட்கின்றோம். தவிர இத் தீர்மானத்தை எதிர்க்கின்றவர்களில் சிலர்,

"இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் ஏற்படுகின்ற பிரச்சனைகளுக்கு மாத்திரம் தான் இந்த நிபந்தனையேயொழிய மற்றபடி இந்துக்களுக்குள்ளாக நடக்க வேண்டிய சீர்திருத்தங்களுக்கு இது கட்டுப்படாது" என்று சொல்லிப் பாமர மக்கள் கண்களில் மண்ணை வாரிப்போடப் பார்க்கின்றார்கள்.

மதநடுநிலைமை என்கின்ற பேச்சை முஸ்லீம்களோ, கிறிஸ்துவர்களோ உபயோகிப்பது ஒரு தடவையானால் அந்தக் காலத்திற்குள் இந்துக்கள் 100 தடவை உபயோகித்து வருகின்றார்கள். தேவஸ்தான பரிபாலன சட்டத்தின் போது மதநடுநிலைமை வந்து புகுந்து அந்த சட்டமே



குப்பைத் தொட்டியில் கிடப்பதற்கும் லாயக்கில்லாததாய்ப் போய் சிலர் கொள்ளை அடிப்பதற்கு மாத்திரம் தான் அதுபயன்படக்கூடியதாகிவிட்டது.

மதபரிபாலனச் சட்டம் என்னும் தேவஸ்தானச் சட்டம் ஏற்படுவதற்கு முன்பு தேவாலயங்களுக்குள் சென்று வந்த வாணியர் முதலிய ஜாதியருக்குச் சட்டம் ஏற்பட்டபின்பு உள்ளே போக யோக்கியதை இல்லாமல் போய் விட்டதுடன் இவ்விஷயத்தில் வெகு தைரியமாய் மனுதர்மசாஸ்திரத்தை எடுத்து, கோட் செய்து தீர்ப்பு எழுதப்பட்டுமாய் விட்டது. இந்த மத நடுநிலைமை காரணமாகவே சாரதா சட்டமும் இன்று உயிருக்கே ஊஞ்சலாடிக் கொண்டிருக்க வேண்டியதாகி விட்டது. இவைகளை எல்லாம் அற்பமான காரியங்கள் என்று சொல்லி ஏமாற்றி விடமுடியாது.

மற்றும், பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும்.

தீண்டாதவர்களுக்குத் தீண்டாமை போக வேண்டும்.

என்று நாம் தீர்மானங்கள் சட்டசபைகளுக்குக் கொண்டு போனோமேயானால் மத நடுநிலைமை கொள்கையுடைய அரசாங்கத்தாரால் முதலாவதாகத் தீர்மானம் அனுமதிக்கப்படுமா? என்பதை யோசித்துப் பாருங்கள். அரசியல் சம்பந்தமான மூடநம்பிக்கை இல்லாத பகுத்தறிவு உள்ளவர்களுக்கு இவை விளங்காமல் போகவே போகாது. வேண்டுமென்றே பேசுகின்றவர்களுக்கு மாத்திரம் விளங்குவது சிறிது கஷ்டமாகும்.

ஆகவே சமதர்மத்தை விரும்புகின்ற மக்களுக்கு மத நடுநிலைமை கொண்ட ஒரு அரசியல் ஸ்தாபனம் ஒரு பெரும் முட்டுக்கட்டையேயாகும்.

அதுபோலவே வருணாச்சிரம தர்மத்தை ஆதரிக்கும் விஷயமுமானதால் அதைப்பற்றி அநேக தடவைகள் எழுதப்பட்டிருப்பதால் இதில் அதிகம் எழுதவில்லை. இந்தக் காரணங்களாலேயே இவ்விரண்டையும் கண்டித்து விருதுநகர் மகாநாடு தீர்மானித்திருக்கிறது.

## மத விடுமுறை

மற்றபடி சர்க்காரார் விடுமுறை நாட்களில் "மத சம்பந்தமான லீவு நாட்கள் நீக்கப்பட வேண்டும்" என்று மற்றொரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது.

நமது அரசாங்கத்தில் வருஷம் ஒன்றுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் 52 நாட்கள் கழிந்து விடுகின்றன. இது கிறிஸ்துவ சமயத்தை ஒட்டி ஏற்படுத்தப் பட்ட நாளாகும். மற்றபடி குறைந்தது எல்லா மத சம்பந்தமாகவும் வருஷத்தில் 35 நாட்கள் விடுமுறையாகப் பாவிக்கப்படுகின்றன. இவைகள் அரசாங்க இலாகாக்களிலும், பள்ளிக்கூடங்களிலுமே கையாளப்



RangaRakes
tamilnavarasam.com

பட்டு பிறகு எல்லாக் காரியாலயங்களுக்கும் பரவி வரப்படுகின்றது.

இதனால் அந்த நாட்களின் தொழில்கள் கெடுவதுடன் கைப்பணமும் செலவழிக்கப்படுவதோடு மத உணர்ச்சியையும் வலுப்படுத்துவதாக ஏற்பட்டு வருகின்றன.

அன்றியும், ஒரு சமூகத்தாரின் விடுமுறைக்காக மற்ற சமூகத்தாரின் வேலை கெடுவதுடன் இதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு மற்ற மதக்காரர்களும் நஷ்டமடைய வேண்டியவர்களாகின்றார்கள். ரம்சானுக்காக இந்துக்களும், கிறிஸ்தவர்களும் ஏன் நஷ்டமடைய வேண்டும்? வைகுண்ட ஏகாதசிக்காக இஸ்லாமியர்களும், கிறிஸ்துவர்களும் ஏன் நஷ்டமடைய வேண்டும்? கிறிஸ்துப் பிறந்தநாள் பண்டிகைக்காக இந்துக்களும், முஸ்லீம்களும் ஏன் நஷ்டமடையவேண்டு? மென்பதையும் மற்றும் மத சம்பந்தமான விஷயங்கள் எதிலும் நம்பிக்கை இல்லாதவர்கள் இந்த விடுமுறை நாட்களுக்காக ஏன் நஷ்டமடைய வேண்டுமென்பதையும் கவனித்தால் மதத்தின் பேரால் மக்கள் பலவந்தப்படுத்தப்பட்டு கஷ்ட நஷ்டமடைவது விளங்கும். ஆதலால் ஞாயிற்றுக்கிழமை என்பதையும் அது மத சம்பந்தமானது என்பதற்கு ஆகவே மாற்றி பொதுவாகவே ஒருவித விடுமுறைகளை ஏற்படுத்தி அவற்றிற்கும் எல்லோரும் அனுபவிக்க சௌகரியங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

சாதாரணமாக பள்ளிக்கூடங்களுக்கு விடப்படும் விடுமுறை நாட்கள் வாரத்தில் சனி, ஞாயிறு என்பதில் 52 வாரத்திற்கு 104 நாட்களும், வெயிற் காலம் 2-மாதம் என்பதில் சனி ஞாயிறு நீங்கி 45 நாட்களும் இவை தவிர ஜனவரியில் 10 நாட்களும் மற்றும் பண்டிகைகளில் 25 நாட்களும் ஆக ஒட்டு மாதம் வருஷத்தில் 6 மாதகாலத்திற்கு மேலாகவே 200 நாட்கள் வரை கூட விடுமுறை நாளாக பயன்படுத்தப்படுகின்றது.

இதனால் பிள்ளைகளுக்கு ஏற்படும் பொருள் நஷ்டம் கால நஷ்டம் எவ்வளவு என்று பார்த்தால் அதன் கஷ்டம் விளங்கும். இவைகள் எல்லாம் ஒருபுறம் இருந்தாலும், மத சம்பந்தமாக அரசாங்கத்தில் ஏன் லீவு விட வேண்டும் என்பதும், அவசியமாயிருக்கின்றவர்கள் தங்கள் தங்கள் சொந்த லீவாக வாங்கிக்கொள்ள சௌகரியம் அளிக்கப்பட வேண்டும் என்பதும் இதன் மூலம் மத உணர்ச்சியை எவ்வளவு குறைக்கப்படக்கூடுமோ அவ்வளவு குறைக்க வழி தேடவேண்டும் என்பதுமே இத்தீர்மானத்தின் கருத்தாகும். மற்றபடி ஓய்வோ விடுமுறையோ மக்களுக்கு கூடாதென்ற கருத்தின் மீது இத்தீர்மானம் செய்யப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 30.08.1931**



# ஈரோடு ரயில்வே ஸ்டேஷன் மாற்றம்

ஈரோடு ரயில்வே ஸ்டேஷனானாது 25-8-31 தேதி முதல் இப்போது இருந்து வந்த ஸ்டேஷனுக்கு சுமார் ஒரு மைல் தூரம் மேற்கு புறமாகத் தள்ளி கட்டப்பட்டு அங்கு மாற்றப்பட்டுவிட்டது. சுமார் ஒருகோடி ரூபாய் வரை செலவு செய்து கட்டடங்கள் பல கட்டப்பட்டிருக்கின்றன. தென் இந்தியாவில் உள்ள பெரிய ஸ்டேஷன்களில் இதுவும் ஒரு பெரியதும் அதிக செலவிட்டு கட்டப்பட்டதுமாகும். நாளாவட்டத்தில் ஈரோடு தென் இந்திய ரயில்வே பெரிய வண்டிப்பாதைகளுக்கு ஒரு முக்கிய ஸ்தலமாக செய்யப்படக்கூடும். இதன் பயனாக சுமார் ஆயிரம் குடிகள் ஈரோட்டிற்கு அதிகமாகலாம். ஆனால் பிரயாணம் செய்கின்ற ஜனங்களுக்கு சிறிது கஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். என்னவெனில் ஸ்டேஷனுக்கும் ஊருக்கும் முன்னையைவிட சற்று அதிக தூரமாகி விட்டது. ஸ்டேஷனுக்கு இரவு காலங்களில் முன்போல் தைரியமாய் போக முடியாமல் பயப்பட வேண்டியதாய் விட்டது. மோட்டார் கூலி வண்டி வாடகை முதலியவைகள் அதிகமாய் விட்டன. ரயிலுக்கு போவது வருவதில் பிரயாணிகளுக்கு அரைமணி நேரம் அதிகம் செலவு செய்ய வேண்டியதாகி விட்டது. பொது ஜனங்களுக்கு இதுபோல் இன்னும் சில அசௌகரியங்கள் ஏற்பட்டிருந்தாலும் ரயில்வே ஸ்டேஷன் மாற்றம் விஷயம் சுமார் 20 வருஷங்களாகவே யோசனையில் இருந்து வந்ததாகும். இவ்வித அசௌகரியங்கள் பிரயாண வசதிகளில் ஏற்படுவது சகஜமேயாகும்.

ஆனாலும்கூட இந்த ஸ்டேஷன் கட்டிய பணத்தைக் கொண்டு ஒரு புதிய ரயில்பாதை ஏற்பாடு செய்திருந்தால் ஈரோட்டிற்கும் மைசூருக்கும் ஒரு ரயில் பாதை போட்டிருக்கலாம். என்ன காரணத்தினாலோ அவர்களுக்கு புதிய ரயில் பாதையை விட ஈரோடு ஸ்டேஷன் பெரியதாகக் கட்ட வேண்டியது அவசியமாகிவிட்டது. என்றாலும் இந்த ஸ்டேஷனால் ஈரோடு பட்டணத்திற்கு சற்று முற்போக்கேற்பட்ட தென்றே சொல்லலாம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 30.08.1931**



RangaRakes tamilnavarasam.com

# முஸ்லீம்கள் பிரச்சினை

## தனித்தொகுதிக்கு ஜனாப் ஜமால் மகமது ஆதரவு

சென்னையில் பிரபல வியாபாரியும், இந்திய தோல் அரசரும் (India Leather King) முஸ்லீம் சமூக பிரமுகருமான திரு. ஜமால் மகமது சாயபு அவர்கள் தலைச்சேரி மாப்பிள்ளை முஸ்லீம்கள் மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசியதில் "ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்ட கூட்டுத் தொகுதி நல்லதானாலும் பல காரணங்களால் சென்னை முஸ்லீம்கள் செய்துள்ள தனித்தொகுதித் திட்டத்தைத் தான் ஆதரிப்பதாகவும் எல்லா முஸ்லீம் களும் ஆதரிக்கவேண்டு"மென்றும் சொல்லி இருக்கிறார்.

ஆகவே, தனித்தொகுதிக்கு எந்த முஸ்லீம் பிரமுகர் விரோதமாக இருக்கின்றார் என்பதை விளக்க வேண்டியது தேசீய முஸ்லீம்கள் என்பவர் களின் கடமையாகவும் தேசீய இந்துக்கள் என்பவர்களின் கடமையுமாகும்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 30.08.1931**



# சுயமரியாதைக்காரனுக்கும் புராணமரியாதைக்காரனுக்கும் சம்பாஷணை

**- சித்திரபுத்திரன்**

**சுயமரியாதைக்காரன்:-** வாருங்கள் ஐயா புராணமரியாதைக் காரரே! வெகுநாளாய்க்காணோமே, எங்கு சென்றிருந்தீர்கள்?

**புராண மரியாதைக்காரன்:-** எனது வயிற்றுக் கொடுமை தான் உமக்குத் தெரியுமே! புராணக் காலக்ஷேபம் செய்யப் போயிருந்தேன்.

**சு-ம:-** அப்படியா? உங்கள் புராணக் காலக்ஷேபம் சரியாய் நடக் கின்றதா? ஜனங்கள் முன்போல் புராணங்களை மரியாதை செய்து கேட்கின் றார்களா?

**பு-ம:-**அதை ஏன் கேட்கின்றீர்கள்? வரவர புராணம் என்றாலே மக்களுக்கு ஒருவித வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. நம்மை யாரும் லட்சியம் செய்வதே கிடையாது.

**சு-ம:-**ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? புராணங்கள் எல்லாம் பகவான்கள், ரிஷிகள், பரமசிவன், மகாவிஷ்ணு முதலியவர் வாக்கு என்ப தாக இருக்கும்போது புராணங்களுக்கு மரியாதைப் போய் விட்டது என்பது அதிசயமாகவல்லவா இருக்கிறது?

**பு-ம:-** என்னைப் பரிகாசம் செய்கின்றீர்களா? என்ன? நீங்கள் போடு கின்றபோடுதான் நாட்டையே பாழாக்கி விட்டதே. நம்மைக் கண்டால் பையன்கள் கல்லெடுத்துப்போடுகின்றார்கள்? "ரிஷிகள் சொன்னார், பக வான் சொன்னார்" என்றால் "உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட் கின்றார்கள்.

**சு-ம:-** இப்படியிருக்க சற்று முன் நீங்கள் புராணக் காலக்ஷேபம் செய்யப்போயிருந்தேன் என்று சொன்னீர்களே?



RangaRakes tamilnavarasam.com

**பு-ம:**-அதுவா கேட்கின்றீர்கள். நான் இப்போது காங்கிரசில் சேர்ந்து அதிலிருந்து கொண்டு காங்கிரஸ் மேடைகளின் மூலம் கொஞ்சம் கொஞ்சம் புராணப் பிரசங்கம் செய்து வருகின்றேன். இந்த சமயத்தில் காங்கிரசில்லாவிட்டால் புராணங்கள் நெருப்பில் போடப்பட்டிருக்குமே?

**சு-ம:**- காங்கிரசில் எப்படி ஐயா புராணப் பிரசங்கம் செய்ய முடியும்? அதில் அரசியல் பிரஸ்தாபம்தானே செய்ய முடியும்?

**பு-ம:**- அந்த இரகசியம் உங்களுக்குத் தெரியாது போல் இருக்கின் றது. இனி அதிலும் கைவைத்து விடாதீர்கள்.

**சு-ம:**- தெரியாதே.

**பு-ம:**- முதலில் மேடையில் ஏறினவுடன் "மகாத்மா காந்திக்கு ஜே, வந்தேமாதரம்!!" "ஜெயஜெயபாரத"என்று சொல்லும்போதே "நமப் பார்வதிபதஹே" என்றும் "ஹரஹர சங்கரமகாதேவ!வெங்கிட்ரமண கோவிந்தா!!கோவிந்தா!!!"என்றும் சொல்லுவேன். அங்குள்ள எல்லா உறுப்படிகளும் கூடவே கத்தும். பிறகு இரண்டொரு தேவாரம்பாடுவேன். பிறகு மெள்ள "மகாத்மா காந்திவாள் இருக்காளே, அவாளை மனிதப்பிறப்பு என்று எண்ணி விடாதீர்கள்! அவர் ஒரு அவதாரபுருஷராக்கும்!!! மகா விஷ்ணுவே அவதாரம் செய்திருக்கிறாராக்கும்!!!அதாவது பகவான் ஸ்ரீமத் பகவத்கீதையில் திருவாய் மலர்ந்தருளி இருக்கின்றபடி "யுகா யுகங்கள் தோறும்!!!" என்பதாக ஆரம்பித்துவிட்டு பாரதம், ராமாயணம், பாகவதம் முதல் பெரிய புராணம், சின்னபுராணம், மச்சபுராணம், தவளை புராணம், கெருட புராணம், பெருச்சாளி புராணம் வரையில் சும்மா அளந்து கொட்டிவிடுவேன். முண்டங்கள் வாயைத்திறந்து ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நின்றது நின்றபடியே இரவு 10 மணிவரையில் கேட்டுக் கொண்டிருக்கும். உடனே மேல் வேஷ்டியை விரித்துக் கொண்டு கதர் குல்லாய் போட்ட ஒரு பையனை அந்தக்கூட்டத்தில் ஒரு சுத்து சுத்திவர சொன்னால் 10 ரூபாய்க்கு குறையாது வசூலாகிவிடும். மற்றும் எத்தனையோ உறுப்படிகள், சற்று ஸ்குரு லூஸ் ஆனதுகள், பவுண்டன் பேனா, மோதிரம், பேனாகத்தி, கை சங்கிலி, கெடியாரம் முதலியவைகளையும் கழட்டி போட்டுவிடும் பிறகு என்ன குறை?

**சு-ம:**- பவுண்டன் பேனா கடிகாரமெல்லாம் ஏன் போடுவார்கள்?

**பு-ம:**- நான் அந்த மாதிரி சொல்லுவேன்.

**சு.ம:**- எந்த மாதிரி?

**பு-ம:**- "சத் விஷயம் கேட்டுவிட்டு சும்மா போகாதீர்கள். மடியில் உள்ளதைப் போடுங்கள். அணில் பாலம் கட்ட ராமபிரானுக்கு சிறுமணல்



மேலே பூசிக் கொண்டு வந்து உதரி உதவி செய்ததது போல் அவதார புருஷராகிய மகாத்மா காந்தியின் இப்புனிதமான கைங்கரியத்திற்கு தங்களால் கூடியதை உதவுங்கள், அந்தப்படி உதவாவிடில் நீங்கள் பாவி யாகிவிடுவீர்கள். உங்களுடைய வஞ்சனையை பகவான் உங்கள் மடி யிலிருந்தே அறிந்து கொண்டிருக்கிறார்." என்று சொல்லுவேன். சொன்ன வுடனே முண்டங்கள் மடியைப்பார்த்தும் ஜேபியைப் பார்த்தும் உள்ளதை எடுத்துப்போட்டுவிட்டு ஒரு கும்பிடு கும்பிட்டு விட்டுப்போய்விடுவார்கள். காசும் பணமும் இல்லாதவர்கள் பேனா,கத்தி, மோதிரம், சங்கிலி முதலி யவைகளைப் போடுவார்கள். பிறகு அதையே ஏலம் போட்டால் அது வேறே ஒன்றுக்கு இரண்டாய் பணம் வரும். இவ்வளவு தான் நமது புராணக்காலக்ஷேபம். ஏதோ ஒரு வழியில் ஜீவனம் நடக்கின்றது. மகாராஜன் காந்தி தோன்றினான் எங்களையெல்லாம் காப்பாற்ற.

**சு-ம:**- இப்படிச் செய்தால் திரு.காந்தி முதலிய யாவரும் இதற்கெல் லாம் ஒன்றும் கணக்குகேட்க மாட்டார்களா?

**பு-ம:**- அந்த வழக்கம் தான் இதில் கிடையாது. அதல்லவா காங்கிரசில் இருக்கும் ஒரு பெருந்தன்மை.

**சு-ம:**- அதென்ன அப்படி? ஏன் கணக்குக் கேட்கமாட்டார்கள்?

**பு-ம:**- கேட்டால் தெரியும் சங்கதி? கேட்க ஆரம்பித்தால் திரு.காந்தி முதல் அவர்கள் அப்பன் வரை பதில் சொல்லியாக வேண்டும். அது மாத்திர மல்ல. இதே மாதிரி கணக்குக் கேட்டு "அவன் பணம் எடுத்துக்கொண்டான் இவன் பணம் எடுத்துக் கொண்டான்" என்று கணக்கு வெளி வந்துவிட்டால் பிறகு எவனுக்கும் யாரும் பணம் கொடுக்கமாட்டார்கள். அப்புறம் காங்கி ரசுக்கு ஆளே சேராது. ஆதலால் திருட்டு வசூலைக் கண்டு பிடித்தாலும் வெளியில் சொல்லமாட்டார்கள். அந்த ஒரு பெருந்தன்மை காங்கிரசுக்குத் தான் உண்டு. நீங்களே பாருங்களே எத்தனையோ பேர் திருப்பதி உண்டியல் மாதிரி வசூல் நடத்துகிறார்கள் யாராவது பேசுரார்களா?பாருங்கள்.

**சு-ம:**- இந்த முறையில் ஒருவாறு உங்களுக்கும் மற்றும் சில ஆட் களுக்கும் வாழ்க்கை நடந்து வருகின்றது என்பதில் எனக்கு சந்தோஷம் தான். ஆனால் புராணங்களின் யோக்கியதைகளைப் பற்றி உண்மை யிலேயே உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பு-ம:**- அதென்ன அப்படி கேட்கின்றீர்கள்? அதெல்லாம் ஒரு மாதிரியாய்த்தான் இருக்கும். அதை வெளியில் சொல்ல முடியுமா? ரிஷிமூலம் நதி மூலம் கேட்கலாமா? பொதுவாகவே புராணங்களை யாராவது குற்றம் சொன்னால் எனக்குக் கோபம் தான் வரும்.

**சு-ம:**- சரி, சரி கோபித்துக் கொள்ளாதீர்கள். அதை நான் குற்றம்



RangaRakes tamilnavarasam.com

சொல்ல வரவில்லை. அதைப்பற்றி ஏதாவது சந்தேகமிருந்தால் கேட்க லாமா?

**பு-ம:-** பேஷாய்க் கேளுங்கள்.

**சு-ம:-** அப்படியானால் ஒரு சந்தேகம். ஆனால் நீர் கோபித்துக் கொள்ளக்கூடாது.

**பு-ம:-** கோபம் என்ன? சந்தேகத்திற்குக் கோபிக்கலாமா?

**சு-ம:-** உங்கள் வீட்டு தோட்டத்தில் ஒரு மல்லிகைச் செடியின் அடியில் ஒரு குழந்தை அப்பொழுதுதான் பிறந்ததாகக் காணப்படக் கூடியது அழுது கொண்டு கிடக்கக் கண்டீர்களேயானால் அதைப்பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்?

**பு-ம:-** என்ன நினைப்பது? யாரோ பெற்றுத் திருட்டுத்தனமாய்க் கொண்டு வந்து போட்டு விட்டு போய் விட்டார்கள் என்றுதான் நினைப்பேன்.

**சு-ம:-** யார்? எப்படிப்பட்டவர்கள் பெற்றார்கள் என்று நினைப் பீர்களா?

**பு-ம:-** யாரோ " திருட்டு கர்ப்பம் " அதாவது விதவையோ, கல்யாணமாகாத பெண்ணோ புருஷன் ஊரில் இல்லாமல் தேசாந்திரம் போனவருடைய மனைவியோ,சோரத்தனமாய் கர்ப்பம் ஆகி, அதைப் பெற்று நமது தோட்டத்தில் கொண்டு வந்து போட்டுவிட்டாள் என்று தான் நினைப்பேன்.

**சு-ம:-** சரி. இதுதான் நல்ல பகுத்தறிவு என்பது.

**பு-ம:-** அதென்ன? அப்படிச் சொல்லுகிறீர்கள்? இதுகூடவா மனிதனுக்குத் தெரியாது? இந்தப்படி அல்லாமல் பின்னை என்னமாய் நினைக்க முடியும்? மல்லிகைச் செடியா பிள்ளை பெறும்? அல்லது ஆகாயத்தில் இருந்து வந்து விழுமோ? ஒரு மூடன் கூட இதற்கு மாறாக சொல்ல முடியாது.

**சு-ம:-** தாங்கள் சொல்லுவது நிரம்பவும் சரி. வேறு விசேஷம் ஒன்றும் இல்லை. மல்லிகைச் செடியின் கீழ் இருந்தால்தான் அப்படிச் சொன்னீர்கள். ஒரு சமயம் துளசிச் செடியின் கீழ் கிடந்தாலோ?

**சு-ம:-** எங்கும் அப்படித்தானே கிடக்கும். துளசிச்செடிக்கு மாத்திரம் என்ன கொம்பா முளைத்திருக்கும்? அல்லது அது கர்ப்பமாகி பிள்ளை பிறக்குமோ? இதென்ன சிறுபிள்ளைகள் மாதிரி கேட்கின்றீர்களே?



**சு-ம:-** இல்லை, ஏதோ ஒரு புராணத்தில் துளசிச்செடி அடியில் ஒரு குழந்தை கிடந்தது. அதைக்கடவுள் அவதாரமாய்க் கருதினார்கள். பிறகு அது கடவுளே ஆகிவிட்டது. இப்போதும் அது கடவுளாயிருக்கின்றது என்று பார்த்ததாக எனக்கு ஞாபகம். ஆதலால் அந்த புராணங்களை யெல் லாம் தாங்கள் நம்புவதுண்டா? அல்லது நம்பும்படி காலக்ஷேபம் செய்வ துண்டா? என்று தெரியலாம் என்பதாக ஆசைப்பட்டுத்தான் தங்களைக் கேட்டேன்.

**பு-ம:-** நீர் சு.ம. என்பது தெரிந்தும் உம்மிடம் நான் பேசியது சுத்தத் தப்பு. புராணத்தை சந்தேகப்படுகின்ற-தர்க்கம் செய்கின்ற-நாஸ்தீகர்களு டைய முகாலோபனமே செய்யக்கூடாது என்ற பெரியவாள் இதற்காகத் தானே சொல்லி இருக்கின்றார்கள். சு.ம.என்றாலே நாத்திகம் தானே. உம்மோடு பேசிய குற்றத்திற்காக நான் ஒரு முட்டாள் ஆக வேண்டியதும் நியாயம் தானே?

**சு-ம:-** இப்படிக் கோபித்துக் கொள்ளலாமா? நீங்கள் சொன்னதை உங்கள் வாயைக் கொண்டு, சொன்னதைக் கொண்டு உங்களை என்ன சொல்லுகின்றீர்கள் என்று தான் கேட்டேனே ஒழிய நான் ஏதாவது குற்றமான வார்த்தை சொன்னேனா? அல்லது என் அபிப்பிராயமாக ஏதாவது சொன் னேனா? ஏன் இவ்வளவு கோபம்?

**பு-ம:-** கோபம் ஒன்றும் இல்லை எனக்கு வேலையிருக்கின்றது. கொஞ்சம் அவசரம். நான் போய் விட்டு வருகின்றேன் (என்று சொல்லிக் கொண்டே நழுவிவிட்டார்.)

**குடி அரசு - உரையாடல் - 06.09.1931**



RangaRakes tamilnavarasam.com

# திருச்சங்கோட்டில் உபன்யாசம்

நான் இங்கு இப்படி ஒரு கூட்டத்தில் பேசவேண்டியிருக்கும் என்று கருதவேயில்லை. ஜமீன்தாரர் (டாக்டர் சுப்பராயன்) அவர்கள் ஒரு காரியமாய் என்னை இங்கு வரவேண்டுமென்று 10, 15 நாட்களுக்கு முன்னமே எழுதியதை உத்தேசித்து அவர்களைக் காண நான் வந்தேன். சற்று முன்புதான் இங்கு ஒரு மீட்டிங்கு கூட்டப்பட்டிருப்பதை அறிந்தேன். இக்கூட்டம் ஜமீன்தாரர் அவர்களையும் திரு. கண்ணப்பர் அவர்களையும் உத்தேசித்தே கூட்டப்பட்டது என்பதையும் அறிந்தேன். இதில் நான் பேசுவது என்பது அசௌகரியமான காரியம் என்றாலும் நண்பர் நடேச முதலியார் அவர்கள் சொல்லையும் ஜமீன்தாரர் அவர்கள் சொல்லையும் தட்ட முடியாமல் ஏதோ சிறிது பேச வேண்டியவனாக இருக்கிறேன். இன்று பேசவேண்டிய விஷயம் "தற்கால இராஜ்ய நிலைமை" என்பதாக நோட்டீசில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. நானோ இராஜிய திட்ட சம்பந்தமான விஷயங்களில் மாறுபட்ட ஒரு அபிப்பிராயம் கொண்டிருப்பவன். இராஜிய துறையில் சிறிதுகாலம் இருந்து பார்த்துவிட்டு அதன் கொள்கைகளில் அதிருப்தி கொண்டு வெளியேறி என் சொந்த இஷ்டப்படி சமூகத்துறையில் வேலை செய்து கொண்டிருப்பவன். அப்படிப்பட்ட நான் இராஜிய நிலைமையைப் பற்றி என்ன பேசமுடியும்? என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

சகோதரர்களே இன்றைய நிலைமையில் நான் இராஜியத்துறை கொள்கைகளில் மாத்திரம் அப்பிராய பேதங்கள் கொண்டவனல்ல. தற்கால இராஜிய விஷயம் என்பதையே நாணையமானதல்ல என்று கருதுவதோடு இந்தியநாட்டின் விடுதலைக்கு இந்த இராஜியத்துறை அவ்வளவு முக்கியமானதல்லவென்றும், மற்ற விஷயங்களின் வரிசைக்கிரமத்தில் அரசியல் சீர்திருத்தம் என்பது எவ்வளவோ பின்னால் இருக்க வேண்டியது என்றும் கருதுகின்றவன். நமக்கு இருக்கும் வேலை எல்லாம் நாம் செய்யவேண்டிய முதல் வேலை எல்லாம் சமுதாய சம்பந்தமானதே தவிர அரசியல் வேலையல்ல.



ஏனெனில் சமூகத்துறையில் நமது நிலைமை என்ன? நமது அடிமைத் தனத்தின் கொடுமை எவ்வளவு? இவைகளுக்குக் காரணம் என்ன? என்பதை நினைத்துப் பார்த்தால் அறிவும் மானமும் உள்ள மனிதன் அரசியல் தன்மையை கொஞ்சமும் பெரிதாகக் கருதி லட்சியம் செய்ய மாட்டானென்றே கருதுகின்றேன். உங்களில் யார் எப்படி நினைத்துக் கொண்டாலும் சரி என்னைப் பொறுத்தவரை நமது நாட்டு மத சம்பந்தமான சமூக சம்பந்தமான அடிமைத்தனத்தால் தான் நாம் சுதந்திரமிழந்து மானமிழந்து இழி ஜாதியாய் வாழுகின்றோமே யொழிய அரசியல் அடிமைத் தனத்தாலல்ல என்பதே எனது அபிப்பிராயம். நான் இப்போது அரசாங்க ஆட்சியின் சுதந்திரத்தை முதன்மையானதாக விரும்பவில்லை. உத்தியோகத்தை பிரமாதமானதாகக் கருதவில்லை. அதிகாரத்தை ஆசைப்படவில்லை.

என்னுடைய நாட்டு மனிதன் ஒருவன் என்னை ஒரு மனிதனாய்க் கருதவேண்டும்,அவன் என்னை பிறவியில் சமமாய் நினைக்கவேண்டும் என்றுதான் ஆசைப்படுகின்றேன். இந்த இழிவுத்தன்மையும் அவமானமும் தான் என்னை வருத்துகின்றது. நினைத்தால் வயிறு பற்றி எறிகின்றது, நெஞ்சம் குமுறுகின்றது. இதற்கு ஏதாவது ஒரு மார்க்கம் ஏற்பட இன்றைய எந்த அரசியலாவது இடையூறாயிருந்தால் சொல்லுங்கள். அப்பொழுது அந்த அரசியலைப் பற்றி கவனிப்போம் அதை யொழிப்போம். இல்லாவிட்டால் வேறு எது இடையூறோ, யார் இடையூறாயிருக்கின்றார்களோ அவற்றை யொழிக்க ஒன்று சேரலாம் வாருங்கள். அதைவிட்டு விட்டு இவ்வளவு பெரிய அக்கிரமத்தையும் கொடுமையையும் மூடி வைத்துக் கொண்டு "அரசியல் அரசியல்" என்றால் என்னஅருத்தம்? இது யாரை ஏமாற்றுவது? இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படியே காலத்தை கடத்துவது? என்பவைகளை யோசித்துப் பாருங்கள்.

"அரசியலைப் பற்றிக்கூட நமக்குக் கவலையில்லை. அன்னியனை ஒழிக்க வேண்டாமா?" என்று சிலர் கேட்கின்றார்கள். இதிலும் உண்மையோ அறிவுடைமையோ இருப்பதாக நான் கருதவில்லை. ஏனென்றால் யார் அன்னியன்? என்பதை முதலில் கவனித்துப் பாருங்கள்.

என்னை அடிமை என்பவனும், வைப்பாட்டி மகன் என்பவனும், கிட்ட வரவேண்டாம் - தொடவேண்டாமென்பவனும், கிட்ட வந்தாலே - கண்ணில் தென்பட்டாலே தோஷம் என்பவனும், நான் தொட்டதை சாப்பிட்டால்-என் எதிரில் சாப்பிட்டால் நரகம் என்பவனும் அன்னியனா? அல்லது "உனக்கும் எனக்கும் வித்தியாசமில்லை, தொட்டாலும் பரவாயில்லை, நாம் எல்லோரும் சமம்தான்" என்று சொல்லுகின்றவன் அன்னியனா? என்பதை யோசித்துப் பாருங்கள்.



RangaRakes
tamilnavarasam.com

நமது ஜனங்கள் 100க்கு 90 பேர்கள் மூடமக்களாக யிருந்து வருகின்றார்கள். கல்வி வாசனையும் இல்லை. அறிவு வாசனையும் இல்லை. இருந்தாலும் அறிவு சுதந்திரமில்லை. இவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு யார் என்ன பேசினாலும் கைதட்டுவார்கள். கூடவே கோவிந்தா போடுவார்கள். ஆகவே சரி எது? தப்பு எது? என்று தெரிந்து கொள்ளும் அறிவு யில்லாதவர்கள். இவர்கள் முன் எதைச் சொன்னால் தான் என்ன? என்கின்ற முறையில் தேசத்தில் எத்தனையோ புரட்டுகள் நடக்கின்றன. இதைப் பார்த்துக் கொண்டே இந்த நிலைமையை மாற்ற வேண்டியதே நமது முதல் வேலையாயிருக்கவேண்டும் என்பதை யாருமே கவனிப்பதில்லை. எந்தத் தலைவருமே நினைப்பதில்லை. இப்படியே காலம் கடந்தால் நமக்கு எப்போது விடுதலை கிடைக்கக்கூடும்? என்பதை யோசித்துப் பாருங்கள்.

"பொருளாதாரத் துறையில் நாம் அடிமையாய் இருக்கின்றோம். நமது பொருள் கோடிக்கணக்காக வெளியில் போகின்றது. அதை நிறுத்த வேண்டாமா?" என்கின்றார்கள் மற்றொரு கூட்ட அரசியல் கூட்டத்தார். இதையும் என்னால் லட்சியம் செய்யவோ, ஒப்புக்கொள்ளவோ முடியவில்லை. ஏனென்றால் பொருள் நஷ்டம் என்பது இப்போது நமது நாட்டில் யாருக்கு இருக்கிறது? என்று யோசித்துப் பாருங்கள்.

நமது நாட்டில் சமூகத்துறையிலேயே பிறவியிலேயே பொருளாதார உரிமை அநேக மக்களுக்குத் தடுக்கப்பட்டிருக்கின்றது.

உதாரணமாக புரோகிதன், உத்தியோகஸ்தன், வக்கீல், வியாபாரி, முதலாளி, ஜமீன்தாரன், மிராசுதாரன் ஆகியவர்களின் கூட்டங்களுக்குத்தான் பொருளாதார உரிமை இருக்கின்றதேயொழிய மற்ற ஜனங்களுக்கு வயிற்றுக்கு எவ்வளவு வேண்டும் என்கின்ற அளவுக்குட்பட்ட அடிமை உரிமைதானே இருந்து வருகின்றது? முற்கூறிய கூட்டங்களுக்குப் பொருளாதார உரிமை என்பது பிறவியிலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதுடன் மற்றவர்கள் அதற்கு அருகரல்லாமல் இருக்கும்படியான நிர்ப்பந்தங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக, ஒரு இட்லிக்கடைப் பார்ப்பானுடைய மகன் ஹைகோர்ட் ஜட்ஜாக வரலாம். ஒரு பஞ்சாங்கப் பார்ப்பனன் மகன் மந்திரி ஆகலாம். ஒரு தோட்டியினுடைய மகன் ஹைகோர்ட் ஜட்ஜாக வர முடியுமா? யோசித்துப் பாருங்கள். ஜாதியின் பேரால் வகுக்கப்பட்டிருக்கும் பிரிவா னது இம்மாதிரி சிலருக்கு நன்மையையும், சிலருக்குத் தீமையையும் செய்து வருகின்றது, வெகுகாலமாய் செய்தும் வந்திருக்கின்றது. இனிமேல் இந்தப்படி செய்யாமல் இருக்க நமது "அரசியல் சுயராஜியத்தில்" எவ்வித திட்டமும் இல்லை என்பதோடு இந்த முறைமையைக் காப்பாற்றவும் திட்டம் போடப்பட்டிருக்கின்றது என்றால் அறிவுள்ள மனிதன் எப்படி இந்த அரசியலை ஒப்புக் கொள்ள முடியும்?



இன்றைய தினம் இந்த திருச்சங்கோட்டில் ஒரு பறையன் இட்லி சுட்டானானால் அது எவ்வளவு பெரிதாயிருந்தாலும் மற்றவர்கள் நாயிக்கு வாங்கிப் போடக்கூட அவனிடம் இட்லி வாங்கமாட்டார்கள். ஒரு பார்ப்பனன் இட்லி சுட்டால் அது எவ்வளவு சிறிதாயிருந்தாலும் எவ்வளவு மோசமாயிருந்தாலும் "சாமி சாமி" என்று கெஞ்சி ஒன்றுக்கு ஆறு விலை கொடுத்து வாங்குவார்களென்றால் இது அரசியல் சுதந்திரமில்லாத காரணத்தாலா? சமூக சுதந்திரமில்லாத காரணத்தாலா? என்று தயவு செய்து யோசித்துப் பாருங்கள். பறையன் இட்லி வயிறு நிறையாதா? அது விஷம் கலந்ததா? மதமும் ஜாதியுமல்லவா இப்படி செய்கின்றது?

ஏழை ஜனங்களையும் சரீரத்தால் பாடுபடும் தொழிலாளிகளையும் கீழ்ஜாதி என்றும், தொடக்கூடாதவர்கள் என்றும், கொடுமைப்படுத்தித் தாழ்த்தி வைத்திருக்கும் ஜனங்களையும் கவனித்து, அவர்களை அவர்களுடைய கஷ்டங்களில் இருந்து விடுதலை செய்ய முடியாத அரசியல் திட்டம் யாருக்கு வேண்டும்? என்று கேட்கின்றேன்? மேல் ஜாதிக்காரனுக்கும் முதலாளிக்குமல்லவா அது பயன்படும். தொழிலாளிக்கு எவ்வளவு கூலி கொடுப்பது என்பதை யோசிப்பதுதான் அரசியல் திட்டத்தில் ஒரு கொள்கையாய் இருக்கின்றதே தவிர முதலாளி எவ்வளவு லாபத்திற்கு மேல் சம்பாதிக்கக்கூடாது என்பதாக யாராவது திட்டம் போடுகிறார்களா? பாருங்கள்.

நமது மக்களின் இழிவும், அடிமைத்தனமும், பொருளாதாரக் கஷ்டமும் நமது மதத்தின் பலனாய் சமுதாய முறையின் பயனாய் இருந்து வருகின்றதா? அல்லது இல்லையா? என்று பாருங்கள். பணக்காரனும் ஜமீன்தாரனும் பணக்கார பிரபுவும் தங்கள் பணங்களை இந்நாட்டில் என்ன செய்கிறார்கள்? என்று சற்று கவனித்துப்பாருங்கள். மதத்தின் பயனாய் ஏற்பட்ட முட்டாள்தனத்தின் காரணமாய் இதோ எதிரில் தெரிகின்ற கோவிலின் பேரால் பாழாகின்ற பணம் இவ்வளவென்று உங்களுக்குத் தெரியாதா? பணம் சேரச் சேர மண்ணால் கட்டின கோவிலை இடித்து கல்லால் கட்டுகின்றான். பிறகு சலவைக்கல்லால் கட்டுகிறான், சித்திரவேலை செய்கிறான், பிறகு வெள்ளியிலும், தங்கத்திலும் வாகனம் செய்கின்றான். தங்க ஓடு போட்டு கோவில் கூரையை வேய்கின்றான். இந்த மூடமக்களைக் கொண்ட நாட்டிற்கு பணம் மிச்சமாவதால் என்ன லாபம்?

பாமர மக்களை அறிவாளிகளாக்கி அவர்கள் கையில் பணத்தை ஒப்புவித்தால் தான் அந்தப் பணம் நாட்டின் நலத்திற்கு பயன்படும். அப்படிக்கில்லாமல் பாழாவதற்கும் சோம்பேரிகளும், சூக்ஷிக்காரர்களும் பிழைப்பதற்காக பணத்தைக் காப்பாற்றுவதில் என்ன பலன்? என்று யோசித்துப் பாருங்கள். மற்றொரு கூட்டத்தார் நமக்கு "சமத்துவம் வேண்டியதற்காக சுயராஜியம் வேண்டு"மென்கிறார்கள். இதுவும் அர்த்தமற்றதும் அறிவற்றதுமான பேச்சு என்றுதான் சொல்லுவேன். பார்ப்பனனும், பறையனும்



RangaRakes tamilnavarasam.com

இருக்கும் நாட்டின், இருக்க வேண்டிய நாட்டின், இருக்கும்படி காப்பாற்றப் படவேண்டிய நாட்டின் மக்களுக்கு சமத்துவம் சம்பாதிப்பது என்பது புரட்டா? அல்லது நாணையமானதா என்று யோசித்துப்பாருங்கள். வீண் வாய்பேச்சில்-வெட்டிப்பேச்சில் மயங்குகின்ற பாமர மக்களைக் கூட்டு வித்துப் பேசி விடுவதினாலேயே எந்தக்காரியமும் நடந்துவிடாது. எப்படி யானாலும் ஒரு காலத்தில் வெளியாய்த்தான் தீரும். நாட்டிற்கு உண்மை விடுதலை வேண்டுமானால் விடுதலைக்கேற்ற அரசியல் சுதந்திரம் வேண்டு மானால் பயன்படத்தக்க நாணையமானதான சுதந்திரம் வேண்டுமென்று தான் சொல்லுகின்றேன். வரப்போகும்-வரவேண்டுமென்று கேட்கப்படும்- சுதந்திரத்தின் பயனாய் இனிமேல் நமது நாட்டில் பார்ப்பனனும் பறையனும் இருக்கமாட்டானா? என்று கேட்கின்றேன். பறையன் உள்ளே விடப்படாத கோவில்கள் இடிபடுமா? என்று கேட்கின்றேன். இன்றைய தினம் சாமிகளின் பேரால் நடைபெறும் வீண் செலவுகள் ஒழிக்கப்படுமா? என்று கேட்கின் றேன். இன்றையதினம் ஜாதிகளின் பேரால் இருந்து வரும் கொடுமையும் இழிவும் கொள்ளையும் ஒழிக்கப்படுமா? என்று கேட்கின்றேன். குடும்பத் துடன் பாடுபட்டும் பட்டினி கிடப்பவனும் பாடுபடாமல் இருந்து கொண்டு குடும்பத்தோடு மேன்மையாய் வாழ்பவனும் இருக்கமாட்டானா? என்றும் கேட்கின்றேன். ஜமீன்தாரன் என்பவனும் குடியானவன் என்பவனும் இல்லாமல் போய் விடுவார்களா? என்றும் கேட்கின்றேன். இவைகளை ஒழிக் காத சமத்துவம் என்ன சமத்துவமாகும்? இந்த வித்தியாசங்கள் இருக்கும் "சுயராஜியத்திற்கும்" இப்போது இருக்கும் "அன்னிய ராஜியத்திற்கும்" என்ன வித்தியாசம் இருக்கக்கூடும்? என்பதை யோசித்து பாருங்கள். மத மூடநம்பிக்கையில் மக்கள் அறிவீனர்களாய் இருப்பது போலவே அரசிய லிலும் **மூடநம்பிக்கையுள்ளவர்களாயிருந்து அறிவீனர்களாகி தாங்களும் கெட்டு அன்னியரையும் கெடுத்து நாட்டின் முற்போக்கை பாழாக்குகிறார்கள்.**

நமது நாட்டில் அரசியல் கிளர்ச்சி ஆரம்பித்த காலம் முதல் இதுவரை சமூக சம்பந்தமான முற்போக்கு ஏதாவது ஏற்பட்டிருக்கின்றதா? என்று பாருங்கள். சமூக முற்போக்கு-சீர்திருத்தம் என்பவை ஏற்பட தீவிர முயற்சி செய்யப்படும் போதெல்லாம் அரசியல் என்பது குறுக்கிட்டு தடைகல்லாய் இருந்து வந்திருக்கின்றதே ஒழிய என்ன நன்மை ஏற்பட்டிருக்கின்றது? என்று சொல்லுங்கள் பார்ப்போம். இவ்வளவு விழிப்பான இந்தக்காலத்திலும் அரசியல் தலைவர்கள் வருணாச்சிரம பாதுகாப்பும் மதநடுநிலைமையும் என்று சொல்லிக்கொண்டு தானே இன்று சுயராஜியம் வேண்டுமென்கிறார் கள்-சுயராஜியமும் வாங்கப் போயுமிருக்கின்றார்கள். எந்தத் தலைவராவது சுயராஜியத்தில் வருணாச்சிரமம் ஒழிக்கப்படும், மதக்கொடுமை ஒழிக்கப் படும், மத சம்பந்தமான பழக்கவழக்கம் கீழ்-மேல் நிலைமை ஆகியவை கள் ஒழிக்கப்படும் என்று சொன்னார்களா? சொல்லுகின்றார்களா? என்று நன்றாய் கவனித்துப்பாருங்கள்.



வருணாச்சிரமமும் மதக்கொடுமையும் ஒழியவேண்டுமென்கிற நான் எப்படி இந்த அரசியலை சுயராஜியத்தை ஆதரிக்க முடியும்? மத நடுநிலை மையில் பறையன் ஒழிவானா? சூத்திரன் ஒழிவானா? என்று ஆராய்ந்து பாருங்கள். அப்படியிருக்க சுயராஜியக் கிளர்ச்சியில் பறையன் என்பவனுக் கும், சூத்திரன் என்பவனுக்கும் அறிவும் மானமும் இருந்தால் அதில் சேரக்கூடுமா? என்று யோசித்துப்பாருங்கள்.

நண்பர்களே! நான் இதுவரை பேசியது தங்களில் யாருக்காவது அபிப்பிராய பேதத்திற்கோ அதிருப்திக்கோ இடமிருக்கக் கூடியதாக இருந்தாலும் இருக்கலாம். ஆனால் நான் எனது அபிப்பிராயம் என்கின்ற முறையில் இந்த இடத்தில் எனக்குப் பட்டதை பேசவேண்டுமே ஒழிய கூட்டத்திற்குத் தகுந்தபடி சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி என்று பேசக்கூடாது என்கின்ற முறையில் பேசினேன். இந்தக் கருத்துக்கள் தப்பாக இருக்கலாம். இவற்றையெல்லாம் அடியோடு நீங்கள் கண்டிக்கக்கூடியதாகவும் இருக்க லாம். ஆனால் என் அபிப்பிராயம் என்கின்ற முறையில் வெளியிட எனக் குள்ள பாத்தியதையில் உங்களுக்கு ஆக்ஷேபமிருக்காதென்று கருதியே பேசினே னேயொழியே வேறில்லை.

ஆகவே தாங்கள் நான் சொன்னதையும் இனியும் கனவான்கள் பலர் சொல்லப்போவதையும் தயவு செய்து ஒத்திட்டு ஆராய்ச்சி செய்து பார்த்து உங்களுக்கு இஷ்டப்பட்டதை ஏற்றுக்கொள்ளுங்கள் என்றே கேட்டுக் கொள்ளுகின்றேன்.

*குறிப்பு: 01.09.1931 அன்று திருச்செங்கோட்டிற்கு டாக்டர்.பி.சுப்பராயன் அவர்களைக் காண சென்றிருந்தபோது ஈ.வெ.ராமசாமியவர்களை அங்கு "தற்கால ராஜிய நிலைமை" என்ற பொருள்பற்றி பேச ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் உரையாற்ற வேண்டுமென திரு.டி.வி. நடேச முதலியாரும் பிறரும் வற்புறுத்தியதன் பொருட்டு டாக்டர்.பி.சுப்பராயன் அவர்கள் தலைமை வகிக்க கூட்டத்தில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 06.09.1931**



RangaRakes tamilnavarasam.com

# சத்தியாக்கிரகம்

"சுயமரியாதை இயக்கமானது எவ்வித சத்தியாக்கிரகமும் செய்ய வில்லை" என்பது இன்றைய தினம் அதன் மீது துவேசமும், பொறாமையும் கொண்டவர்களால் சொல்லப்படும் ஒரு பெரிய குற்றமாகும்.

மற்றபடி அதன் கொள்கைகளைப் பற்றி யாரும் இதுவரை எவ்விதக் குற்றமும் சொல்லவில்லை. அன்றியும் இந்த மேற்கண்ட குற்றத்தை மனதில் வைத்துக்கொண்டுதான் "சுயமரியாதை இயக்கம் இதுவரை என்ன சாதித்துவிட்டது?" என்பதாகவும் சிலர் நம்மைக் கேட்கின்றார்கள்.

சுயமரியாதை இயக்கம் "சத்தியாக்கிரகம்" என்பதாக ஒரு கிளர்ச்சியை ஆரம்பித்து, சில வாலிபர்களைச் சேர்த்து அவர்களுக்கு சாப் பாடும் விளம்பரமும் கொடுத்து, ஏதோ இரண்டொரு கோவில்களின் முன்போ, அல்லது குளங்களின் முன்போ கொண்டுபோய் நிறுத்தி, அவ் வாலிபர்களுக்கு கொஞ்சம் அடியும் உதையும் வசவும் வாங்கிக்கொடுத்து, ஜெயிலுக்கும் சிலரை அனுப்பி, அதற்குத் தகுந்த விளம்பரங்களும் பாராட்டுக் கூட்டங்களும் போட்டு ஆடம்பரங்கள் செய்வதுமான காரியங் களைச் செய்திருக்குமேயானால் அந்தக் காரியங்களால் நமது லட்சியம் வெற்றி பெற்றாலும்-பெறாவிட்டாலும் லட்சியத்திற்கே முட்டுக்கட்டையாக இருந்தாலும்கூட, சிறிதும் கவலை இல்லாமல் "சுயமரியாதை இயக்கம் நிரம்ப காரியம் சாதித்துவிட்டது" என்பதாக நமது மக்கள் கருதி விடுவார் கள். மற்றபடி இவ்வியக்கத்தால் பயன்பட்டதான காரியம் எவ்வளவு நடை பெற்றிருந்தாலும் நமது மக்கள் தெரிந்து கொள்ளுவது என்பது சாத்தியமற்ற காரியமாகும்.

ஏனெனில், முதலாவது நமது மக்களுக்கு பெரும்பாலும் பகுத்தறிவு ஆராய்ச்சி என்பது தடைபடுத்தப்பட்டு விட்டது.

இரண்டாவதாக, ஏதாவது சிலருக்குப் பகுத்தறிவு உணர்ச்சி இருந்தா லும் அதை நேர்வழியில் பயன்படுத்த யோக்கியமோ, நாணையமோ, நன்றி யறிதல் தன்மையோ கிடையாது.



ஆகவே, இந்த இரண்டு காரணங்களாலேயே பொதுநல வாழ்க்கை நாணையமாய் இல்லாமல் இருப்பதுடன் ஒன்றிரண்டு நாணையமாய் உண்மையாய்ப் பாடுபட்டாலும் அதை மக்கள் அறிய முடியவோ, நன்றி செலுத்தவோ முடியாமல் போய்விடுகின்றது.

நிற்க, சுயமரியாதை இயக்கம் ஆரம்பத்தில் அரசியலில் இரண்டு காரியத்தை லட்சியமாய் கொண்டு ஆரம்பத்திலிருந்தே கதறி வந்திருப்பது டன், அந்த லட்சியத்திற்காகவே சுயமரியாதை இயக்கப் பிரமுகர்கள் காங்கிரசிலிருந்து பிரிந்தும் வந்ததுமான காரியம் யாவரும் அறிந்ததாகும். அந்த லட்சியம் ஒருவாறு வெற்றிப்பெற்றது என்பதை இன்று அதன் எதிரி களும் மறுக்கமாட்டார்கள்.

அதாவது, இவ்வியக்கம் தோன்றிய காலம் தொட்டு அரசியல் பிரதிநிதித்துவ தேர்தலிலும், அரசியல் உத்தியோகத்திலும், பல மதம், பல வகுப்பு, கீழ்-மேல் நிலைமை ஆகியவைகள் ஏற்பட்ட இன்னாட்டு மக்களுக்கு வகுப்புவாரிஉரிமை ஏற்பட வேண்டுமென்று கூப்பாடு போட்டு வந்ததேயாகும். சுயமரியாதை இயக்கம் இந்த மாதிரிகூப்பாடு போட்டு இந்தப்படிக் கேட்பதை இழிவான தேசத்துரோகமான காரியமென்று திரு.காந்தியும், காங்கிரசும் பிரசாரம் செய்தும் அது இழிவானதல்ல, தேசத் துரோகமானதல்ல என்பதான உணர்ச்சியை மக்களுக்குள் உண்டாக்கி அந்தப்படி இழிவென்றும் தேசத்துரோகமென்றும் சொல்லி வந்த அதன் எதிரிகளையெல்லாம் முறியடித்து வந்திருக்கின்றது.

மேலும் "சுயமரியாதை இயக்கம் எந்த சமூகத்தாருக்காக வகுப்பு வாரி உரிமை கேட்டுவந்ததோ அந்த சமூகத்தாரின் நன்மைக்காக ஏற்பட்ட தாகச் சொல்லிக்கொண்டு உத்தியோகங்களையும் பதவிகளையும் சுய நலத்துக்குக் கொள்ளையடித்தக் கூட்டத்தார்களாலேயே வகுப்பு வாரி உரிமைக்கு விரோதமாய் செய்யப்பட்ட செய்கைகளை சமாளித்தும், மற்றும் அரசியல் ஸ்தாபனங்கள், தேசீய ஸ்தாபனங்கள், பார்ப்பனத் தலைவர்கள், மகாத்மாக்கள் முதல் அனேகர் அதற்கு விரோதமாயிருந்தும் அவ்வள வையும் சமாளித்து, அரசியல் - பிரதிநிதித்துவங்களிலும், பதவிகளிலும், உத்தியோகங்களிலும் அரசாங்கத்தாராலேயே வகுப்புவாரி உரிமையை ஒப்புக்கொள்ளச் செய்தும், அதை அமுலுக்கு கொண்டுவரச் செய்தும் இன்றைய தினம் அமுலில் நடந்தும் வருகின்றது.

நாளையதினம் வரப்போகும் அரசியல் சீர்திருத்தத்திலும் 1000 மகாத்மாக்கள் விரோதமாய் இருந்தாலும் கூட இந்தக் கொள்கைகள் ஒப்புக்கொள்ளப்பட்டு அமுலில் வரவும் போகின்றது.

மற்றும் அடுத்த மாதம் நமது நாட்டில் நடக்கப்போகும் ஸ்தல ஸ்தாபன பிரதிநிதிகள் தேர்தல்களிலும் பறையர் என்பவரும், பள்ளர் என்ப



RangaRakes tamilnavarasam.com

வரும், சக்கிலி என்பவரும், சாம்பர் என்பவரும் தேர்தலில் நின்று வெற்றி பெற்று, மனிதராக வந்து சபையில் சரிசமமாக உட்காரப்போவதும் உறுதியாகிவிட்டது.

மற்றும் மனித சமூகத்திலேயே சுதந்திரத்திற்கு அருகதையற்றவர்கள் என்று இழித்துக்கூறி, தாழ்மையாய்க் கருதி, அடிமைகளாய் நடத்தி வந்த "பொட்டை" என்னும் பெண்மக்களும் தேர்தலில் நின்று வெற்றிபெற்று மனித உணர்ச்சியுடன் சபையில் வந்து சுதந்திரத்துடன் உட்காரப் போவதும் உறுதி. மற்றபடி மகமதியர், கிறிஸ்துவர்கள் என்பவர்களும் தங்கள் மானத்தையும் மனசாக்ஷியையும் இழக்காமல் ஸ்தானம் பெறக்கூடிய யோக்கியதை அடைந்திருக்கிறார்கள்.

இதுபோலவே சர்க்கார் உத்தியோகத்திலும் சுயமரியாதை இயக்கம் விரும்பியவாரே இத்தனை பறையன், இத்தனை பார்ப்பனன், இத்தனை பார்ப்பனரல்லாதவன், இத்தனை முகமதியன், இத்தனை கிறிஸ்துவன் என்று விதி ஏற்பட்டு அநேக விஷயங்களில் அந்தப்படி நடைபெற்றும் வருகின்றது. இனி கூடிய சீக்கிரம் பெண்களுக்கும் இந்த உத்தியோகங்களில் பங்கு கிடைக்க முயற்சிக்கிறது.

இவைகளெல்லாம் சுயமரியாதை இயக்கத்தால் ஏற்பட்டதா? அல்லது அல்லவா? என்பதை விவகாரத்தில் வைத்து கொண்டாலும் சுயமரியாதை இயக்கம் என்று ஒன்று ஆரம்பமான காலத்தில்- அதன் (அவ்வியக்கத்தின்) அவசியத்திற்காக - கொள்கையாக சொல்லப்பட்ட காரணங்களில் இந்த வகுப்புவாரி உரிமையேதான் முக்கியமாய் சொல்லப்பட்டதா? அல்லது அல்லவா? என்பதில் ஒரு கடுகளவு விவாதமும் செய்யமுடியாது. யாராவது செய்யக்கூடுமானால் அவர்களுக்கு திருவண்ணாமலைக் கான்பரன்சும், காஞ்சீபுரம் கான்பரன்சும், கதர் ஸ்தாபன தகராறும் முதலாகியவைகளும் "குடிஅரசி"ன் 1926-ம் வருஷத்திய தலையங்கங்களும், உப தலையங் கங்களும் மற்ற நிரூபங்களும் தோல்ப்பிக்கத் தயாராய் இருக்கின்றன.

நன்றி அறிதலற்ற தன்மை, குரோதம், பொறாமை, எதிரிகளிடம் கூலிபெறுவதால் அதற்குத் தகுந்தபடி பேச வேண்டியதாகிய குணங்கள் இல்லாதவர்கள் இதை ஒப்புக்கொள்ளுவார்கள் என்றே கருதுகின்றோம்.

ஆகவே மேற்கண்டபடி அரசியல் துறை மாத்திரமல்லாமல் சமுதாயத் துறையை எடுத்துக்கொண்டோமேயானாலும் ஜாதி அகம்பாவம், ஆணவம் ஆகியவைகளை வெளிப்படையாய் காட்டும் மனோபாவம் நமது நாட்டில் 100க்கு 50 வீதமாவது மறைந்திருப்பதைக் காணலாம். மற்றும் மத சம்பந்தமான சடங்கு, உற்சவங்கள் விஷயமாய் உள்ள உணர்ச்சிகளும் 100க்கு 50 பங்கு அறிவாளிகள் என்பவர்கள் மனதிலேயே முக்கியஸ்தமும் பிடிவாதமும் குறைந்து ஏதோ கடன் கழிப்பது என்கின்ற முறையில் நடத்த



வேண்டியதாகி, சிறிது சிறிதாய் குறைந்து வருவதைக் காணலாம். இவை ஒருபுறமிருந்தாலும் பார்ப்பனர் உட்பட எல்லா ஜாதி மக்களும் இன்று சமபந்தியில் இருப்பதற்கு முன் போல் பயப்படாமலும், கஷ்டப்படாமலும் தாராளமாய் இருந்து உண்பதையும் காணலாம். அது மாத்திரமல்லாமல் ஸ்பரிச தோஷமில்லாமல் பல உயர்ந்த ஜாதியினர் சமமாக ஆகாரம் உட்கொள்ளுவதையும் காணலாம்.

உதாரணமாக, ஈரோடு சுயமரியாதை மகாநாட்டிலிலும், விருதுநகர் சுயமரியாதை மகாநாட்டிலிலும் ஆயிரக்கணக்கான மக்கள் ஒரே பந்தியில் சமமாக உட்கார்ந்து சாப்பிட்டதை இயக்க எதிரிகளும் கூட இருந்து பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். எவ்வித ஒழிமறைவுமில்லாமல் பார்ப்பனரல்லாத-சைவர்கள் அல்லாத நாடார்கள்தான் சமையல் செய்தார் கள். ஈரோட்டில் பறையர்கள் முதல் எல்லா ஜாதியாரும், எல்லாமதக்காரரும் பறிமாறினார்கள். சைவ வேளாளர், தொண்டமண்டல முதலியார், காரைக் காட்டு சைவர், பார்ப்பனர், நாடார், நாயக்கமார், செங்குந்தர், வாணிய வைசியர், நாடார், க்ஷத்திரியர், நாட்டுக்கோட்டை-வைசியர் ஆகிய எல்லோருமே சமமாக உட்கார்ந்து, ஒன்றாகச் சாப்பிட்டார்கள். அதுவும் பந்தி 1-க்கு 150 பேர் வீதம் சாப்பிட்டார்கள். எந்த அரசியல் மகாநாட்டிலும் பார்ப்பனரல்லாதார் சமையல் செய்ததோ, "தீண்டா" ஜாதியார் பறிமாறி னதோ பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் எல்லோரும் ஒரு பந்தியில் இருந்து சாப்பிட ஏற்பாடு செய்ததோ இதுவரையில் நாம் அறிய நடந்ததே இல்லை. மற்றும் பெண்கள் ஆண்களுடன் சரிசமமாக தங்களைக் கருதிக் கொண்ட தும் மற்றும் அவர்கள் நிர்பந்தங்கள் ஒழிந்ததுமான சம்பவங்கள் இவ் வியக் கத்தின் பயனாய் காணப்பட்டதுபோல் வேறு எதிலாவது காணப்பட்டது என்று யாரும் சொல்ல வரமாட்டார்கள். மற்றும் கடவுள், மதம், சமயம், வேதம், புராணம் முதலியவைகளைப் பற்றியும், இனியும் பல காரியங் களும் ஏற்பட்டதை சொல்லாமலே விட்டுவிடுகின்றோம். அதை அவரவர் களே நினைத்துப் பார்த்தால் தெரியும். ஆகவே சொன்னவரையிலும் கூட இதன் தன்மைக்கு ஒரு விஷயத்தை ஞாபக மூட்டுகின்றோம்.

அதாவது, எந்த மக்களுக்கு என்ன விதமான நன்மை செய்ய வேண்டுமென்று கருதினோமோ அந்த மக்களின் எதிர்ப்புக்கிடையிலேயே இவை செய்யப்பட்டது என்பதுடன், பலன் அடைந்த சமூகத்தாரே இன்றும் எதிரிகளாய் இருந்து வருகின்றார்கள் என்பதையும் ஞாபகமூட்டுகின்றோம்.

மேலும் சுயமரியாதை மகாநாடுகளின் தீர்மானங்களின்படி பால்ய மணம் தடுப்பு - பெண்களுக்குச் சொத்துஉரிமை-விவாகரத்து-விதவை உரிமை-தீண்டாமை விலக்கு முதலியவைகளுக்கு சட்டசபைகளில் சட்டங் கள் கொண்டு வரப்பட்டு சில நிறைவேறியும் சில விவாதத்திலும் யோசனை யிலும் இருந்து வருகின்றன. தீண்டாதவர்கள் என்பவர்கள் விஷயத்தில் அவர்களுக்குக் கல்வி வசதியும் பூமி வசதியும் சிற்சில இடங்களில் சர்க்



RangaRakes tamilnavarasam.com

காரால் நடத்தப்பட புதிய உத்திரவுகளும் போடப்பட்டு வருகின்றன. இவை கள் எல்லாம் சுயமரியாதை இயக்கத்தால்தான் ஆயிற்றா? என்பது ஒரு முக்கிய கேள்வியாய் இருக்கலாம். அதற்கு பதில் சொல்ல நாம் ஆசைப்பட வில்லை. ஆனால் ஒன்றை மாத்திரம் நினைப்பூட்டுகிறோம். அதாவது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள்-சுயமரியாதை இயக்கத்தின் தேவைகள்-விருப்பங்கள் ஆகியவைகள் பற்றி அவ்வியக்கம் தெரிவித்துக் கொண்டபடி காரியங்கள் நடந்து வந்திருக்கின்றது-நடந்தும் வருகின்றது டன் இவைகளைப்பற்றி இதுவரை எந்த அரசியல் இயக்கமும் தெரிவிக்க வில்லை - தனது லட்சியமாய்க் கொள்ளவும் இல்லை என்பதாகும். ஆகவே இவை யாரால் ஏற்பட்டதாய் இருந்தால் என்ன? என்பதோடு இனியும் எவ் வளவோ ஆகவேண்டி இருக்கின்றது என்பதையும் நாம் மறைக்க வில்லை.

## சத்தியாக்கிரகம்

இனி எடுத்துக் கொண்ட விஷயத்தைக் கவனிப்போம். அதாவது சத்தியாக்கிரகம். மேற்கண்ட இந்தக் காரியங்கள் செய்வதற்கு சுயமரியாதை இயக்கமானது இதுவரை எவ்வித சத்தியாக்கிரகமும் செய்யவில்லை. அன்றி யும் எவ்வித பலாத்காரமும் செய்யவில்லை.

மற்றபடி அது என்ன செய்ததென்றால் மனதில் உள்ளதை உள்ளபடி தைரியமாய் வெளியில் எடுத்துச் சொல்லிற்று. பேனாவைத் தாராளமாக ஓட்டிற்று. தத்துவார்த்தத்திற்கு இடம் கொடுக்கவில்லை. ஊர் ஊராய், கிராமம் கிராமமாய், பட்டணம் பட்டணமாய் சென்று பட்டி தொட்டிகளிலும், காடு மேடுகளிலும் கூப்பாடு போட்டது. சமயத்துக்குத் தகுந்தபடி பேசவில்லை. பின்னால் போகவில்லை என்பதைத் தவிர வேறு ஒன்றும் பிரமாதமாகச் செய்து விடவில்லை. மக்களுக்குள் இயற்கையாய் ஏற்படும் சுயநலமும், உத்தியோகப் போட்டியும், பொறாமைகளும் இவ்வியக்கத்தில் கலந்து கொண்ட சிலருக்கு சற்று குறைவாய் ஏற்பட்டு இருந்திருக்குமானால் சுய மரியாதை இயக்கத்தால் இன்னமும் சற்று அதிகமான பலன்கள் ஏற்பட்டி ருக்கும் என்பதை நாம் மறைக்கவில்லை. அவைகள் சற்று அளவுக்கு மீறி அதிகமாக ஏற்பட்டுவிட்டதால் ஏற்பட்ட பலன்கள் குறைவாய் இருப்பதாகக் கருத வேண்டியிருக்கின்றது. இவை எப்படியோ ஆகட்டும். பொதுவாகவே சுயமரியாதை இயக்க வேலையானது வெறும் விளம்பரக் கிளர்ச்சியும் மக்களின் மூடத்தன்மையை பயன்படுத்திக் கொள்ளுவதும் அல்லவாகை யால் அதன் வேலை சற்று கஷ்டமானதாக இருந்து வருகின்றது.

அன்றியும் "இந்துக்களின் சுயராஜியத்திற்காக வெள்ளைக்காரனு டன் சண்டை பிடிக்கப் போகின்றோம், வாருங்கள்" என்று ஒரு தேசத்தார் மீது மற்றொரு தேசத்தாரை ஏவி கூட்டம் சேர்ப்பது போன்ற சுலபமான காரிய மாயில்லை என்பதோடு மாத்திரமல்லாமல் இந்தியர்களின் நன்மைக்காக இந்துக்கள் மீதே அவர்களது உயிர்போன்ற உணர்ச்சிகளை,



சுயநலங்களை தகர்த்தெரிய போர்தொடுக்க வேண்டியதான மிக்க கஷ்டமான வேலை யாகயிருந்து வருகிறது.

ஆகையால் சுயமரியாதை இயக்க வேலை அக்கஷ்டமான காரிய மாயிருக்கின்றதால் இந்து மக்களுக்குள் பிரசாரம் செய்து பகுத்தறிவை எழுப்பி போதனை ஏற்றி அவர்களை சரிபடுத்துவதின் மூலம் பயன்பட வேண்டியதாய் இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையில் அப்படிப்பட்ட மக்களோடு எடுத்த எடுப்பில், "சத்தியாக்கிரகம்" செய்வதென்பது எப்படி சாத்தியமாகக் கூடியதாகும்? என்பதை பொறுப்புடன் இருந்து யோசித்துப் பாருங்கள். உண்மையிலேயே நம் (சுயமரியாதை இயக்கத்து) எதிரி என்ப வனும் அதாவது எதற்காக எவனிடம் நாம் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டு மென்று கருதுகின்றோமோ அவனும், அதற்காக அந்தக் காரியத்தை சத்தியமாகக் கருதி சத்தியாக்கிரகம் செய்யும் முறையிலேயே நமது சத்தியாக் கிரகத்தை எதிர்த்து நம்மோடு சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்று எண்ணுகின்றான். வாசகர்கள் இந்த இடத்திலுள்ள ஒரு முக்கியமான கஷ் டத்தை நன்றாய் கவனிக்க வேண்டுகின்றோம். சத்தியாக்கிரகம் என்பதாக முதல் முதலாக ஆரம்பித்தவர்களான அதன் கருத்தாக்கள் சத்தியாக்கிரகம் என்பதை ஒரு தருமமாகவும் அதாவது கடமையாகவும், நீதியாகவும் அதாவது தெய்வக்கட்டளையாகவும் கருதி அதற்கு அது ஒரு தெய்வீகசக்தி வாய்ந்ததென்ற பொருள் கொடுத்து அதில் தெய்வீகத்தன்மை புதைந்து கிடக்கின்றதென்றும் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்து விட்டால் எப்படி யானாலும் அது ஜெயித்துத்தான் தீருமென்றும், அதற்கு அநேக விதமான தெய்வீக பத்தியங்கள் (நிபந்தனைகள்) ஏற்படுத்தி அதன் மூலமே மக்க ளுக்கு சத்தியாக்கிரகத்தில் நம்பிக்கையுண்டாக்கி காரியத்தில் அதை நடத்தி வருகின் றார்கள். அனுபவ பலன் எப்படியிருந்த போதிலும் இன்றும் அந்தக் கருத்திலேயே தான் அது நடைபெற்று வருகின்றது.

ஆனால், சுயமரியாதை இயக்கக்காரர்களோ தெய்வீகம் என்பதி லேயே சத்தியாக்கிரக கர்த்தர் போன்ற நம்பிக்கையுடையவர்களல்ல. சத்தியா கிரகத்தை ஒரு தெய்வீக சக்திப் பொருந்திய காரியமாக அவர்கள் கருதுவது மில்லை. அன்றியும் சத்தியம் என்கின்ற ஒன்றுக்கு மனித சக்திக்கு மீறினதான ஒரு சக்தி இருப்பதாக அவர்கள் கருதுவதுமில்லை.

மற்றும், சத்தியாக்கிரகம் என்பதின் பேரால் செய்யப்படும் காரியங் கள் எல்லாம் சத்தியமானதாய் இருக்கவேண்டுமென்றோ, அல்லது சத்திய மானதாய் இருந்து விட்டதாலேயே வெற்றிபெற்றுவிடுமென்றோ, வெற்றி பெறக் கட்டுப்பட்டதென்றோ கருதுவதில்லை.

ஏனெனில், சத்தியம் என்பது ஒரு விஷயத்தில் எல்லாருக்கும் ஒன்று போலவே படும் என்று நினைக்கக் கூடியதாய் இல்லை.



RangaRakes tamilnavarasam.com

நாம் சத்தியமென்று கருதுவது மற்றொருவன் அசத்தியமென்று கருத உரிமையுடையதேயாகும்.

அன்றியும் சத்தியம் என்று ஒரு மனிதனுக்குப் பட்டதெல்லாம் உண்மையானதும், நியாயமானதும் என்று கருதிவிடவும் முடியாது.

உதாரணமாக மாட்டை அறுத்து அதன் மாமிசம் சாப்பிடுவது சத்திய மானதாகவும், நியாயமானதாகவும் மௌலானா சௌக்கத் அலிக்குத் தோன் றலாம். அதைத் தடுக்க வேண்டியது சத்தியமாகவும், அதற்காக சத்தியாக் கிரகம் செய்ய வேண்டியது நியாயமாகவும் திரு.காந்திக்குத் தோன்றலாம்.

"இருவரும் கடவுள் பக்தர்கள்-மத பக்தர்கள் இருவரும், சத்தியத்தில் அதாவது-கடமையிலிலும், நியாயத்திலும் நம்பிக்கை வைத்தே இந்தப்படி முடிவு காண்கின்றார்கள்" என்றால் இதில்

எது சத்தியம்?

எது அசத்தியம்?

எது சத்தியாக்கிரகத்திற்குறியது?

எது துராக்கிரகத்திற்குறியது?

இதற்கு என்ன பரீக்ஷை? என்பவனற்றை கவனித்துப்பாருங்கள். மற்றும் கள்ளும், சாராயமும் சாமிக்கு வைத்துப்படைத்துக் குடித்து, கூத்தாட வேண்டியது கருப்பன், காட்டேரி, மதுரை வீரன், முருகன் முதலியவை களைக் கடவுளாக கும்பிடும் பல ஜாதி மக்களுக்கு தர்மமாகவும், நியாய மாகவும் தோன்றலாம்.

அதைத் தடுக்க வேண்டியது தர்மமாகவும், நியாயமாகவும் அதற்கு சத்தியாக்கிரகம் செய்ய வேண்டியது அவசியமாகவும் காங்கிரசுக்காரருக் குத் தோன்றலாம். இதில் எது நியாயமானது? இதற்கு என்ன ஆதாரம்? என்று பாருங்கள்.

மற்றும் "மற்றொருவன் சமைத்ததை சாப்பிடுவது பாவம்" என்றும் "மற்றொருவன் தொட்ட தண்ணீரை குடிப்பது தோஷம்" என்றும் "மற்றொருவன் பார்க்க தண்ணீர் சாப்பிடுவது நரகம் சித்திக்கக்கூடியது" என்றும் பண்டித மாளவியா போன்ற "உத்தம பிராமணர்"களுக்குத் தோன்றலாம். ஆனால் இந்தப்படி நினைப்பதே மகா அக்கிரமமென்றும், ஜாதி ஆணவமென்றும், அறிவீனம் என்றும், சுயநலம் என்றும், அந்த வழக்கத்தை ஒழித்தாலொழிய நாடு ஒற்றுமையும், முன்னேற்றமும், சமத்து வமும் அடையாதென்றும், அதை ஒழிக்க சத்தியாக்கிரகம் செய்ய வேண்டு மென்றும் சமூக சீர்திருத்தக்காரருக்குத் தோன்றலாம்.



இப்படியே இன்னும் பல உண்டு. இவற்றுள் எது சத்தியம்? எதைப்பற்றிச் செய்யும் சத்தியாக்கிரகம் வெற்றி பெறுவதற்குரியது? என்று யோசிப்போமானால் என்ன முடிவுக்கு வர முடியும்?

முதலாவது சத்தியத்திற்கு இலக்ஷணம் என்ன என்பதை நிர்ணயிக்க நம்மிடம் என்ன பரீக்ஷைக்கருவி இருக்கின்றது? அப்படியே கண்டுபிடித் தோமாயினும் அந்த சத்தியம் ஜெயித்தாக வேண்டும் என்பதற்கு என்ன ஆதாரமோ, நிர்பந்தமோ, அல்லது நடத்துவிக்கும் சக்தியோ இருக்கின்றது?

சத்தியத்தையும், அசத்தியத்தையும் பற்றி தீர்ப்புச் சொல்ல அருகர் யார்?

சத்தியாக்கிரகம் வெற்றி பெற்றதாலேயே சத்தியாக்கிரகம் செய்யப் பட்டதற்காக இணங்க வந்தவன் தான் சத்தியத்திற்கு கட்டுப்பட்டு விட்டதாக நினைத்து திருப்தி அடைகிறானா? அல்லது நிர்பந்தத்திற்காக தொல்லை சகிக்கமாட்டாமல் அதாவது திருடனது அடி பொறுக்கமாட்டாமல் மறைத்து வைத்திருந்ததை, குரங்குப்பிடியாய் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்ததை எடுத்துக் கொடுத்து விட்டதுபோல் இணங்கவேண்டியதாயிற்றே என்று கருதுகின்றானா? என்பனவாகியவற்றை யோசித்துப்பார்த்தால் சத்தியாக் கிரஹத்தின் யோக்கியதை விளங்காமல் போகாது.

நாம் கடை வைத்து வியாபாரம் செய்யும்போது நல்ல வியாபாரம் நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் ஒரு பிச்சைக்காரன் மேலெல்லாம் அசங்யத்தைப் பூசிக்கொண்டுவந்து கடைக்கெதிரில் நின்று கொண்டு "ஐய்யய்யா ஐய்யய்யா" வென்று கூப்பாடு போட்டால் உடனே காசு கொடுத்து அனுப்புகின்றோமே? இதற்கு என்ன பெயர்? மற்றொருவன் அசங்யமான புண்ணைக் காட்டிக் கொண்டு எதிரில் நின்று கெஞ்சினால் என்ன சொன்னாலும் போக மாட்டேன் என்று பிடிவாதமாய் இருந்தால் அவன் முகத்தைக் கூட பார்க்காமல் பேசாமல் காசு கொடுத்து அனுப்புகி றோமே? இதற்கு என்ன பெயர்? இந்தக் காரியங்கள் எல்லாம் சத்தியாக் கிரகமாகுமா? அல்லவானால் இவை எப்படி வெற்றி பெறுகின்றன? என்பவைகளைப் பார்த்தால் சத்தியாக்கிரஹம் வெற்றி பெருவதின் இரகசி யம் விளங்காமல் போகாது.

சாதாரணமாக சண்டித்தனத்திற்கு 100-க்கு 50க்கு மேற்பட்ட விஷயங்களில் வெற்றி ஏற்படுகின்றதை நேரில் பார்க்கின்றோம். இந்த சண்டித்தனத்திற்கு வேண்டியதெல்லாம் மானாவமானம் கருதக்கூடாது, மற்றவன் செய்யும் கொடுமைக்குப் பின் வாங்கக்கூடாது என்பவைகளே யாகும். ஆகவே இக்காரியங்களுக்குத் தயாராய் இருந்தால் ஏறக்குறைய அனேக காரியங்களில் வெற்றி அடையலாம். ஆனால் சத்தியாக்கிரக எதிரி யும் மானத்திற்குப் பயந்தவனாகவும் தொல்லைக்கு ஈடுகொடுக்க சக்தி



RangaRakes tamilnavarasam.com

யில்லாதவனாகவும் இருந்தால் தான் முடியும். அவனும் சத்தியாக் கிரகிகளைப் போல் சண்டித்தனத்திற்கு மானாவமானமற்ற தன்மைக்குத் துணிந்து விட்டானேயானால் யார் ஜெயிப்பார்கள்? என்பது சூதாடுவது போலத்தான் முடியும். எப்படியானாலும் இவ்வெற்றிகளுக்கு "ஏமாற்றி ஜெயித்து விட்டோம்" "தந்திரம் செய்து ஜெயித்துவிட்டோம்" என்று தான் சொல்ல வேண்டுமேயொழிய சத்தியத்தினால் என்று சொல்ல முடியவே முடியாது. சுருக்கமாக உண்மையைச் சொல்லவேண்டுமானால் இந்த வெற் றிக்கு நாணையத்தையும் சுயமரியாதையையும் விலையாகக் கொடுத்துதான் வெற்றி பெற்றோம் என்று சொல்ல வேண்டுமேயொழிய மற்றபடி நியாயம் வென்று விட்டது-சத்தியம் ஜெயித்துவிட்டது என்று சொல்லுவது பித்தலாட் டமே யாகும். ஆகவே சத்தியாக்கிரஹம் என்கின்ற பெயரே அர்த்தமற்ற தாகும் என்பதும் அதன் பேரால் கையாளப்படும் முறைகளும் தன்மதிப் பற்றதாகும் என்பதும் ஒருவனுடைய முடிவானால் அவன் தன்மதிப்பைப் பறிகொடுத்து ஒரு காரியத்தை நிறைவேற்றுவது என்பது கண்ணை விற்று சித்திரம் வாங்குவது போலவேயாகும்.

அன்றியும் சத்தியாக்கிரகத்தில் அகிம்சை இருக்கின்றது என்றும், பலாத்காரம் இல்லையென்றும், ஆதலால் வெற்றிபெற அது ஒரு சாதனம் என்றும் சொல்லப்படுகின்றது. இதிலும் ஏதாவது உண்மை இருக்கின்றதா என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது. இம்சை என்பதற்கு அருத்தம் என்ன? என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு மனிதனின் சரீரத்தை நோகச் செய்வதோ ஒரு மனிதனுடைய மனதை நோகச் செய்கின்றதோ ஆகிய இரண்டு காரியங்களும் இம்சையில் பட்டதேயாகும். இது ஒவ்வொரு மனிதனுடையவும் அனுபவமேயாகும். யாருடைய சரீரமும் நோகாமல், மனமும் நோகாமல் எந்தக் காரியத்திற்கா கிலும் சத்தியாக்கிரகம் செய்யக்கூடும் என்று யாராலும் சொல்லமுடியாது.

ஆகவே சத்தியாக்கிரகத்தில் அகிம்சை இருக்கின்றது என்று சொல்வ தெல்லாம் உண்மையை மறைத்தும், திரித்தும் சொல்லுவதாகுமே யொழிய மற்றபடி நாணையமான வார்த்தை யாகாதென்றே சொல்லுவோம்.

நிற்க, மற்றொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் சுயமரியாதை இயக்கத்தின் லட்சியம் சமதர்மத்தன்மையும், சமஉடைமைத் தன்மையும் என்று முடிவு செய்து கொண்ட பிறகு, கையில் வலுத்தவனும், தந்திரத்தில் வலுத்தவனும், உலக சுகபோகங்கள் தனக்கே வரும்படி செய்து கொண்டு இளைத்தவனையும், சாதுவையும் அடிமைகளாக்கி ஆண்டு, பயன்பெற்று வரும் போதும், இதுவே சத்தியம், இதுவே தருமம், இதுவே நீதி, இதுவே கடவுள் கட்டளை, இதுவே வேதத்தின் கருத்து, சாஸ்திரத்தின் சம்மதம் என்று ஏற்பாடு செய்து வைத்திருக்கும் போதும், சத்தியத்தின் பேரால் எதற்கு சத்தியாக்கிரகம் செய்யமுடியும் என்பதை யோசித்தால்,



சத்தியாக்கிரகத்தின் பயன்படாத தன்மை விளங்கும். கோயிலை இடிப்ப தும், சாமி சொத்துக்களையும் மடாதிபதிகள் சொத்துக்களையும் பறிமுதல் செய்து "பஞ்சமர்களுக்கு"ப் பிரித்துகொடுத்து, மடாதிபதிகளை விவசாயத் தில் போடுவதும், ஜமீன்தாரர்கள் பூமிகளைக் குடிகளுக்கு பங்கு போடு வதும், அரசர்களும் பிரபுக்களும் நாழி அரிசியுடனும், நான்குமுழத் துண்டு டனுமேதானிருக்க வேண்டுமென்பதும் முதலாகிய காரியங்களுக்கெல்லாம் சத்தியாக்கிரகம் செய்ய முடியுமா? செய்தால் அதற்கு சத்தியாக்கிரகம் என்கின்ற பெயர் தகுமா? என்பவற்றை யோசித்துப்பாருங்கள்.

இவைகளையெல்லாம் நன்றாகக் கவனித்து பகுத்தறிவுடன் சமதர்ம நிலைமையில் இருந்து பார்த்தோமேயோனால் சத்தியாக்கிரகம் என்னும் வார்த்தையும், அதன் பிரசாரமும், அனுபவமும் மறைமுகமாய் வைதீகத்தை - வருணாசிரமத்தை பிரசாரம் செய்யப்படுவதேயொழிய வைதீகத்திலும், தெய்வீகத்திலும் நம்பிக்கை உண்டாக்கச் செய்வது என்பதைத் தவிர மற்ற படி நமது மக்களுக்கு இன்று உண்மையாய் கிடைக்க வேண்டிய மனிதத் தன்மையான நியாயத்தையும் அதை நிறைவேற்ற வேண்டியதான தர்மத்தை யும் உணர்த்துவதாகாது என்பது நன்றாய் விளங்கும்.

எனவே, இதுவரை சொல்லி வந்தவைகளில் இருந்து ஒரு மனிதன் தனது லக்ஷியம் வெற்றி பெறுவதற்கு சத்தியாக்கிரகம் செய்யப்படுவது என்பது பொருளற்றதென்றும், தன்மதிப்பற்ற தென்றும் தான் எடுத்துக் காட்டப் பட்டதேயன்றி, லக்ஷிய சித்திக்காக எவ்வித முயற்சியோ, தியாகமோ செய்யப்படாது என்பதற்காக சொல்லப்பட்டவைகள் அல்ல என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இனி லக்ஷியத்திற்காக மனிதன் சுயமரியாதைக்காரன் கையாளப் பட வேண்டிய முறைகளைப் பற்றியும், தியாகம் செய்யவேண்டிய துறை களைப் பற்றியும் பின்னால் விவரிப்போம்.

**குடி அரசு - தலையங்கம் - 06.09.1931**



RangaRakes tamilnavarasam.com

# மாளவியாஜீ

சேர்மாதேவி குருகுல சம்பந்தமாய் தூத்துக்குடி டி.ஆர். மகாதேவய்யர் என்கின்ற பார்ப்பனரை 100க்கு 90 பார்ப்பனரல்லாதார் நமது நாட்டில் குற்றம் சொன்னார்கள்-சொல்லுகின்றார்கள். இதனாலேயே அவரை அரசியல் உலகத்தை விட்டு ஓட்டியும் விட்டார்கள். அவரும் தனக்கும் அரசியலுக்கும் தகுதியில்லை என்று கருதி வாழ்க்கைக்கு வேறு வழியையும் தேடிக் கொண்டார்.

இதற்கெல்லாம் காரணம் என்ன? "பார்ப்பனன் சாப்பிடுவதை பார்ப்பனரல்லாதவன் பார்க்கக் கூடாது. பார்ப்பனனும் மற்றவனும் சமபந்தியாய் உட்காரக்கூடாது" என்று அவர் சொன்னதேயாகும். ஆனால் பண்டிதர் மதன்மோகன் மாளவியாஜீ அவர்கள் எந்த விதத்தில் திரு.மகா தேவய்யரைவிட மேலானவர்? அரசியல் உலகத்திலிருக்கத் தகுந்தவர்? என்று கேட்கின்றோம். மகாதேவய்யராவது தன்னைப் பொறுத்தவரை நம் எதிரில் சாப்பிட்டார் - நம்முடன் உட்கார்ந்து சாப்பிட்டுமிருக்கிறார். மாளவியாஜீ அவர்களோ, "கீழ்ஜாதிக்காரர்கள் கோயிலுக்குள் போகக் கூடாது" என்றும், "அவர்களுக்கு வேறு இடம் வேறு கோவில், வேறு பள்ளிக்கூடங்கள் இருக்க வேண்டும்" என்றும் சொல்லுகிறார்.

தனது சம்மந்தி பார்ப்பனரல்லாதவனிடம் உட்கார்ந்து சாப்பிட்டவனிடம் உட்கார்ந்து சாப்பிட்டதற்கு அவரை ஜாதியைவிட்டுத் தள்ளினவர். பார்ப்பனரல்லாதார் இடம் கோடிக்கணக்கான ரூபாய்களை வசூல் செய்து கட்டிய, ஏற்படுத்திய காசி இந்து யூனிவர்சிட்டி பள்ளிக்கூடத்தில் தீண்டாதவர்கள் உள்ளே வரக்கூடாதென்றும், பார்ப்பனரும், அல்லாதாரும் சம்பந்தியாய் இருக்கக்கூடாதென்றும், அவருக்கு வேறுபடிப்பு, இவருக்கு வேறுபடிப்பு என்றும், ஏற்பாடு செய்துவைத்து அதற்கு தானே எஜமானனாய் இருந்து நடத்தியும் வருகின்றார். இப்படிப்பட்ட ஒருவர் இன்றைய தினம் இந்திய நாட்டு மக்களுக்குத் தலைவர் என்றும், பிரதிநிதி என்றும், சொல்லுவதானால் இந்திய மக்களுக்கு சுயமரியாதையோ, ஞானமோ இருக்கின்றதாகக் கொள்ளமுடியுமா? என்றுகேட்கின்றோம். இன்றைய தினமும் பண்டித மாளவியாஜீ ஒரு பார்ப்பனரல்லாதான் முன் தாகத்திற்குத் தண்ணீர் சாப்பிட்டால் பாவம் என்று நினைத்துக்கொண்டிருக்கின்றவர். சுயராஜியம் வாங்கப்போகும்போதுகூட இந்தியாவிலிருந்து பார்ப்பனர்களாலேயே பர்த்தி செய்த ஏனங்களில் தண்ணீர்கொண்டு போகின்றார். தனி சமயலறையில் சமைத்துக்கொண்டு போகிறார். இது யாவருமே அறிந்ததாகும். ஆகவே இவரால் இந்தியாவுக்கு எவ்விதம் சமதர்மமுள்ள சுயராஜியம் கிடைக்கும் என்பதை 'தேசபக்தர்கள்' கவனிக்க வேண்டாமா? என்று கேட்கின்றோம். இதைச்சொன்னால் நம்மை கெட்டவன் என்றும், பாவி என்றும் சொல்லுகின்றார்களேயொழிய அவர் அப்படிச் செய்வது நியாயமா? அல்லது சுயமரியாதைக்கேற்றதா? என்று யாரும் சிந்திப்பதில்லையென்றால் பிறகு நாம் என்னதான் செய்வது? இவர்களைப்பற்றி நாம் என்னதான் நினைப்பது? நமது மக்களை எப்படித்தான் நினைப்பது? என்பது நமக்கு விளங்கவில்லை. சுயமரியாதைக்காக பாடுபடுவதாகச் சொல்லுகின்றவர்கள் இதையெல்லாம் எப்படி மறைத்து வைப்பது என்பதும் நமக்கு விளங்கவில்லை.

பண்டித மாளவியாஜீ அவர்கள் நம்மெதிரில் சாப்பிடுவதால் நமக்குப் பசி அடங்கிவிடும் என்பதாகக் கருதி நாம் அதை இங்கு குறிப்பிடவில்லை. ஆனால் அவர் அப்படி மறைவாய் சாப்பிடும் போது நம்மை என்னமாய்க் கருதி அப்படிச் சாப்பிடுகின்றார் என்பது தான் கவனிக்கத் தக்கது என்று சொல்லுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.09.1931**


RangaRakes
tamilnavarasam.com

# காந்திஜீ

திரு காந்திஜீ அவர்களோ உலகம் தோன்றியது முதல் காணப்படாத வேடிக்கை மனிதராக இருந்து வருகின்றார். அதாவது தான் அரை வேஷ்டி கட்டி இருப்பதற்குக் காரணம் உலக மக்களுக்குத் தேவையான துணி கிடையாதாம்! ஆதலால் சிக்கனத்தை உத்தேசித்து அரை வேஷ்டியுடன் இருக்கின்றாராம்!! இதை உலகம் ஒப்புக்கொண்டு அவரை சபர்மதி ரிஷி என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள் நமது அரசியல் பாகவதர்கள். ஆனால் நம் நாட்டுமக்களில் அநேகருக்குக் கஞ்சிக்கே மார்க்கமில்லாமலிருக்கும் போது ஆட்டுப்பாலும், ஆரஞ்சிப்பழரசமும் சாப்பிடுவது கவலைப் படக்கூடியதல்லவாம்! அது எப்படியோ போகட்டும். இதற்காக நாம் அவரை அவருக்குப் பிடிக்காத உணவை சாப்பிடச் சொல்லவில்லை. காந்திஜீ அவர்கள் தனது காலுக்குச் செருப்பு போட்டுக்கொள்ள வேண்டிய தற்காக தானாகவே செத்த மாட்டுத்தோலொன்றை கையில் கொண்டு போகின்றாராம்! 'என்ன ஜீவகாருன்யம்!' என்பதை நினைத்துப் பாருங்கள். உலகிலுள்ள 175 கோடி மக்களில் வேறு யாருக்காவது இந்த எண்ணம் தோன்றுமா? என்று பாருங்கள். சமணர்களுக்குக் கூட இவ்வளவு ஜீவ காருண்யம் இருந்த தாகக் காணமுடியவில்லை. திரு காந்தியைத் தவிர மற்ற மனிதன் எல்லாம் கொலை பாதகர்கள் என்றும் திரு காந்தி ஒருவரே அஹிம்சா தரும மூர்த்தியென்றும் கருதவேண்டுமென்பது தானே இந்தச் செய்கையினுடையவும் இதன் விளம்பரத்தினுடையவும் தன்மையாகின்றது. அஹிம்சா தர்மம் எப்படியோ போகட்டும் அதைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டிய தில்லையென்று வைத்துக்கொள்ளலாம்.

இனி அவரது வருணதருமம் என்னவென்பதை யோசித்தால் அதாவது 'வருணாச்சிரம தர்மம் சரிவர நடந்து வராததாலேயே இந்தியாவுக்கு சுயராஜ்ஜியம் இல்லாமல் போய்விட்டது' என்று அவர் சொல்வதை யோசித்தால் அவர் நமக்கெல்லாம் எப்படி - எந்த முறையில் பிரதிநிதி என்பது விளங்கவில்லை.

இது மாத்திரமல்லாமல் "சுயராஜியம் கிடைத்தாலும் கடவுள் செயல், கிடைக்காவிட்டாலும் கடவுள் செயல்" என்று சொல்லிக்கொண்டு போகின்றார். ஆகவே எவ்வளவு பொறுப்புடன் போகின்றார் என்பதும், எவ்வளவு தன்நம்பிகையுடன் போகின்றார் என்பதும் இதிலிருந்தே அறியலாம். பொறுப்பும் இல்லாமல், தன்நம்பிக்கையும் இல்லாமல் இருக்கும் ஒருவரே இந்தியப் பிரதிநிதியாய் போகின்றார் என்றால் இதை ஒப்புக்கொள்ளுபவர்கள் எவ்வளவு ஞானமுள்ளவர்கள் என்பதையும் கவனித்தால் விளங்காமல் போகாது.

எந்த இந்தியன் வாய்திறந்தாலும் 'மகாத்மா அவதார புருஷர், ரிஷி, முனிவர்' என்பவைகளான "தெய்வீக"த் தன்மைகளை அவர் மீது ஏற்றிச் சொல்லுவதாலேயே மத சம்பந்தமான மூடநம்பிக்கைக் கண்ணைக் கொண்டே திரு காந்தியைப் பார்க்கின்றார்களேயொழிய பகுத்தறிவுக் கண்ணைக் கொண்டு ஒருவராவது பார்க்கவில்லை என்பதும் மத சம்பந்தமான மூடநம்பிக்கைப் பிரசார முறையிலேயே மக்களை ஏமாற்றுகின்றார்கள் என்பதும் வெளிப்படையாய் விளங்கவில்லையா ? என்று கேட்கின்றோம். இந்தப்படி இன்று எந்த நாட்டிலாவது ஒரு அரசியல் மனிதரை அவதார மூர்த்தி மகாத்மா என்பது போன்ற தன்மைகளால் கருதுகின்றார்களா? என்று யோசித்துப்பாருங்கள்.

ஆகவே நமது நாட்டுக்கு இன்னமும் எத்தனை காலத்திற்குத் தான் ரிஷிகளும், அவதாரங்களும், மகாத்மாக்களும் தோன்றிக்கொண்டிருப்பது என்பதும் அவர்களது "தெய்வீகத் தன்மை"க்கு ஆளாய்க்கொண்டிருப்பதென்பதும் நமக்கு விளங்கவில்லை.

(இஸ்லாம் மதக் கொள்கைப்படியாவது 'இனிமேல் நபிகள் கிடையாது' என்பதுபோல் நமக்கும் 'இனிமேல் மகாத்மா கிடையாது. அவதார புருஷர் கிடையாது' என்று ஏற்பட்டாலொழிய இந்தியர்களுக்கு ஒரு நாளும் பகுத்தறிவு உண்டாகப் போவதில்லை.)

இவைகளெல்லாம் மத சம்பந்தமான எண்ணங்கள் அல்லவா ? என்று தான் கேட்கின்றோம். இதற்காக நம்மீது கோபித்து என்ன செய்வது? வெட்டுவதாகவும், குத்துவதாகவும் - மிரட்டுவதால் என்ன பயன்?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.09.1931**


RangaRakes
tamilnavarasam.com

# நவஜவான் தொண்டரும் தலைவரும்

நவஜவான் பாரத வீரர்கள் 'காந்தி ஒழிக' என்று சொல்லி தடுத்து நன்றாய் அடிப்பட்ட சேதி ஒரு பக்கம் இருக்க, நவஜவான் பாரத வீரர் சபை தலைவரான திரு. சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள் திரு. காந்தி வட்ட மேஜை மகாநாட்டுக்குப் போவதைப் பற்றி தங்களது திருப்தியையும் தாங்கள் திரு. காந்தியவர்களையே பின்பற்றி வருவதாகவும் உறுதிகூறி தந்தி அடித்திருக்கின்றார். (இது 29.8.31 தமிழ்நாட்டு பத்திரிகையில் இருக்கிறது.) இதிலிருந்து பாரத நவஜவான் சபை கொள்கைகளின் யோக்கியதையும் தலைவர்களின் யோக்கியதையும் விளங்குகின்றது.

நவஜவான் பாரத வீரர்கள் என்று சொல்லிக்கொள்ளும் வாலிபர்கள் கவனிக்கத் தக்கதாகும்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 06.09.1931**

# M.A.,L.T. உபாத்தியாரின் கடவுள் பாடம்

**உபாத்தியாயர்:-** பெட்டியை தச்சன் செய்தான், வீட்டை கொத்தன் கட்டினான், சாப்பாட்டை சமையற்காரன் சமைத்தான், உலகத்தைக் கடவுள் உண்டாக்கினார். தெரியுமா?

**மாணாக்கன்: -** தெரிந்தது சார். ஆனால், ஒரு சந்தேகம் சார்.

**உபாத்தியாயர்: -** என்ன சொல்?

**மாணாக்கன்:-** அப்படியானால், கடவுளை யார் உண்டாக்கினார் சார்?

**உபாத்தியாயர்:-** முட்டாள்! இந்தக் கேள்வியை உனக்கு யார் சொல்லிக் கொடுத்தது? அவர் தானாகவே உண்டானார். இனிமேல் இப்படியெல்லாம் கேட்காதே.

**மாணாக்கன்:-** ஏன் சார்? கேட்டால் என்ன சார்?

**உபாத்தியாயர்:-** அது! நிரம்பவும் பாவம்.

**மாணாக்கன்:-** பாவம் என்றால் என்ன சார்?

**உபாத்தியாயர்:-** சீ! வாயை மூடு. நீ அயோக்கியன், "குடிஅரசு" படிக்கிறாயோ? ஏறு பெஞ்சி மேல்.

**குடி அரசு - உரையாடல் - 13.09.1931**



RangaRakes tamilnavarasam.com

# இந்தியாவின் பொருள் நஷ்டத்திற்கு காரணம்

இந்திய நாடு எவ்விதமான வளத்திலும் மற்ற நாடுகளை விட இளைத்ததல்ல என்பதும், இந்தியாவில் இராஜாக்கள் ஜமீன்தாரர்கள் முதலிய செல்வவான்களும், மற்றும் அவர்களுக்குச் சமானமான மடாதிபதிகள், ஆச்சாரிய பீடங்கள், கோடீஸ்வரர்கள் ஆகியவர்களும் ஆன பிரபுக்கள் மற்ற நாடுகளுக்கு இளைக்காத அளவில் தாராளமாய் இருந்து வருகின்றார்கள் என்பதும் யாவரும் அறிந்த உண்மையாகும். அதுபோலவே வியாபாரிகளும், வியாபாரப் பொருள்களும் கூட மற்ற நாடுகளைப் போலவேதான் இங்கு இருந்து வருகின்றன.

விவசாயத்துறையிலும் ஏராளமான பூமிகள் இருப்பதும், அவற்றிற்கு அனுகூலமான இயற்கை நீர் பாசான வசதிகள் இருப்பதும், ஒவ்வொரு மிராசுதாரர்கள் 1000 ஏக்ரா, பதினாயிரம் ஏக்கரா, சிலர் லக்ஷம் ஏக்ரா - பூமிகளையும் உடையவர்களாக இருப்பதும், விவசாயம் செய்யப்பட வேண்டிய பூமிகள் இன்னும் எவ்வளவோ இருப்பதுமான நாடாகவும் இருப்பதின் மூலம் விவசாயத்துறையிலும் இந்தியா மற்ற நாடுகளுக்கு இளைக்காததாகவே இருந்து வருகின்றது.

இப்படிப்பட்ட பல்வளமும் பொருந்திய இந்திய நாடு ஏன் தரித்திரமான நாடு என்றும், அடிமையான நாடு என்றும், ஏழைகள் பெருத்த நாடு என்றும் சொல்லப்பட்டு வருகின்றது என்பதை தேச முற்போக்கில் கவலை கொண்டவர்கள் யோசிக்கத்தக்கதேயாகும்.

முதலாவது, இந்தியாவின் மேல்கண்ட வளமுள்ள செல்வம் எல்லா மக்களும் அடையத் தக்க மாதிரியான சமூக அமைப்பு இல்லாமல் செல்வங்கள் சில வகுப்பு மக்களுக்கே உரியதாகவும் அனுபவிக்கத் தக்கதாகவுமான சமூக அமைப்பு முக்கியமான காரணமாகும்.

அதாவது, வருணாச்சிரம தருமப்படி இன்ன இன்ன வகுப்புக்கு இன்ன இன்ன தொழில்- இன்ன இன்ன உரிமை என்பதான திட்டமே நாட்டின் செல்வம் எல்லோருக்கும் பரவுவதற்கில்லாமல் தடைப்படுத்திக் கொண்டிருக்கிறது. இரண்டாவது, ஒரு வகுப்பு மக்கள் அதாவது 100க்கு 90



பேர்களுக்கு மேலாகக்கொண்ட சமூக மக்கள் அவர்களது வயிற்றுக்குப் போதுமான அளவுக்கு மேல் பெறமுடியாத நிபந்தனைக்குள்ளாக்கி வைக்கப்பட்டதுடன், அவர்கள் கையில் தங்கள் வயிற்றுக்கு வேண்டிய ஆகாரத்தின் அளவுக்கு மேற்பட்ட எந்தப் பொருளையும் வைத்திருக்க உரிமையில்லாதவர்களாக்கப் பட்டிருக்கின்றது என்பது இரண்டாவது காரணமாகும். இந்த உண்மைக்கு ஆதாரம் மனுதர்ம சாஸ்திரத்தில் நன்றாய்க் காணலாம்.

அதாவது, "சூத்திரன் பொருள் சேர்த்து வைத்திருந்தால் பிராமணனுக்கு ஆபத்தாக முடியும்"; "சூத்திரன் பொருள் வைத்திருந்தால் பிராமணன் பலாத்காரமாகப் பிடுங்கிக் கொள்ளலாம்.

"சூத்திரன் பொருளை பிராமணன் எப்படிவேண்டுமானாலும் கொள்ளை அடிக்கலாம்".

"அடிமையான சூத்திரன் பொருள் வைத்திருக்க உரிமை உடையவனல்ல" என்கின்ற அனேக ஆதாரம் இந்து மத தர்ம சாஸ்திரங்களில் இருக்கின்றன. (இங்கு சூத்திரன் என்பதற்கு பொருள் தொழிலாளிகள் என்பதேயாகும்.)

இந்த மாதிரியான திட்டங்களை ஏற்படுத்த ஆதாரமாயிருந்தது வருணாச்சிரம தர்மமேயாகும்.

வெள்ளைக்கார அரசாங்கத்தின் பயனாய் இந்த தர்மங்கள் சிறிது சிறிது மாற்றமடைந்து ஏதோ 100ல் ஒருவர் ஆயிரத்தில் ஒருவர் செல்வான்கள் ஆகவும் வருணமுறை தவரி பணம் சம்பாதிக்க உரிமை உடையவர்களானாலும் கூட அந்தப் பணமானது மனுதர்ம சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல் அதாவது "சூத்திரன் செல்வத்தை பிராமணன் எந்தவிதத்திலானாலும் கொள்ளை கொள்ளலாம்" என்கின்ற தர்மப்படி "சூத்திரன்" செல்வத்தை கொள்ளை கொள்ளவே ஸ்தலம், கோவில், குளம், புண்ணியம், பாவம், சடங்கு முதலிய காரியங்களின் மூலம் கொள்ளை அடிக்கப்பட்டு விடுகின்றன.

இந்தக்காரணத்தாலேயே "சூத்திரர்கள்" என்கிற வகுப்பினரில் 100-க்கு 75-பேர்கள் கடன்காரர்களாகவே இருக்க நேரிட்டு இருக்கின்றது.

இவை ஒருபுறமிருந்தாலும், இன்று பொருளாதாரக் கஷ்டத்தையே பெரும்பாலும் எடுத்துச் சொல்லி அதை நிவர்த்திப்பதற்காக இந்தியாவுக்கு சுயராஜியம் வாங்கித் தருகின்றதாய்ச் சொல்லும் அரசியல் தலைவர் திரு. காந்தி அவர்களும் இந்த வருணாச்சிரம முறையை அடிப்படையாகக் கொண்டதான சுயராஜியமேதான் வேண்டும் என்று சொல்லி அதற்காகவே பாடுபட்டு வருகின்றார்.



RangaRakes tamilnavarasam.com

இதற்கு உதாரணம் வேண்டுமானால் அவர் அவ்வப்போது பேசியிருக்கும் பேச்சுகளும் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயங்களுமே போதுமானதாகும்.

முதலாவது திரு.காந்தி அவர்கள் தன்னை ஒரு வருணாச்சிரம தர்மி என்றும், இந்தியாவில் வருணாச்சிரம தர்மம் குறைந்ததாலேயே அன்னிய ஆக்ஷி ஏற்பட்டதென்றும், அதனால் வருணாச்சிரம தர்ம ஆக்ஷியை ஏற்படுத்தவே தான் பாடுபடுவதாகவும் பல தடவைகளில் தாராளமாய் வெளிப்படையாய் எடுத்துச் சொல்லி இருக்கிறார். அந்தப்படியே சொல்லியும் வருகின்றார். ஆனால் இந்த இடத்தில் வாசகர்களுக்கு ஒரு மயக்கம் ஏற்படலாம். அது என்ன வென்றால், திரு. காந்தியவர்கள் வருணாச்சிரம தர்மத்தைப்பற்றிப் பேசும்போது தனது "வருணாச்சிரம தர்மம் வேறு" என்று சொல்லி வருகின்றதால் அது வேறாயிருக்கலாம் என்று கருதி இருக்கலாம். அது எப்படியிருந்தபோதிலும் அதாவது ஜாதி உயர்வு, தாழ்வு சம்பந்தமான காரியம் எப்படியிருந்தபோதிலும், வித்தியாசம் இருக்க வேண்டும் என்பதிலும், அவனவனுடைய பரம்பரைத் தொழிலையே அவனவன் செய்ய வேண்டுமென்பதிலும், அவர் சந்தேகத்திற்கு இடம் இருக்கும் படியாகக் கூடப் பேசாமல் தெளிவாகவே ஜாதி பாகுபாடுகளும் சுதர்மமும் (அதாவது அவனவன் குலத்தொழிலும்) கண்டிப்பாய் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்றே சொல்லுகின்றார். (இது அவர் எழுதியிருக்கும் பகவத்கீதை மொழி பெயர்ப் பில் கூட இருக்கின்றது. 18-ம் அத்தியாயம் 41 முதல் 48 வரை உள்ள சுலோகங்கள்.)

இவை ஒரு பக்கம் இருந்த போதிலும் சமீபத்தில் அவர் பரோடா சமஸ்தானத்தில் பேசிய போதும் இந்தக் கருத்தையே வற்புறுத்திப் பேசிக் காட்டியிருக்கின்றார்.

அதாவது, "கிராம வாசிகள் செருப்புத்தைத்தல், ஆடு,மாடு மேய்த்தல் முதலிய தொழில்களைச் செய்யவேண்டும், அவர்கள் பெட்டிகளில் அதிகப்பணம் வைத்திருக்கக்கூடாது. அவர்கள் பம்பாய் வியாபாரிகளைப் போல் (வைசியர்களைப்போல்) பணக்காரர்களாக இருக்க நினைக்கக் கூடாது" என்று பேசி இருக்கின்றார். ஆகவே இப்போது திரு.காந்தியவர்களால் கேட்கப்படும் சுயராஜியம் என்பது இந்திய மக்களின் பொருளாதார நிலைமையை எப்படி முன்னுக்கு கொண்டு வரக்கூடியதாகும்? என்பது யோசிக்கத்தக்கது.

நிற்க, நமது நாட்டு மக்களின் பொருளாதார நிலைமை மோசமாயிருப்பதற்கு மற்றும் சில காரணங்களும் உண்டு.

அதாவது நமது ஜனங்களின் மத தத்துவமே இவ்வுலக வாழ்க்கை "பொய்" என்பதும் "மாய்கை" என்பதும், செல்வத்தை மோட்சத்தில் இடம்



பிடித்து வைக்கவும், அடுத்த ஜன்மத்தில் நல்ல பிறவியாய் பிறக்க ஏற்பாடு செய்து கொள்ளவும் செலவழிக்க வேண்டும் என்கின்றதான எண்ணங்கள் செல்வங்களைப் பாழாக்கி விடுகின்றன. அன்றியும் பாடுபடுகின்ற மக்களுக்கு தங்கள் மதக்கடமை, ஜாதிக்கடமை என்பது மாத்திரமல்லாமல் முன் "ஜன்ம கர்மத்தின்" பயன் என்றும் எண்ணும் எண்ணங்களையேப் புகுத்தப் பட்டு தங்கள் கஷ்டங்களையும் தரித்திர நிலைமையையும் உணராமல் இருந்து வருகின்ற குணமும் தகுந்த பயனை அடையமுடியாமல் செய்து விடுகின்றன. இவை தவிர நமது நாட்டு தர்ம ஸ்தாபனங்கள் ஏராளமான செல்வங்களை தன்னுடையதாக்கிக்கொண்டு அவைகள் மக்களுக்குப் பயன்படாமல் வீணாக்கப்படுகின்றன.

சாதாரணமாக சென்னை மாகாணத்தின் சர்க்காரார் வரி எவ்வளவு ரூபாய் இருக்குமோ, அதில் 4-ல் ஒரு பங்குக்குக் குறையாமல் இம் மாகாணத்தில் வரும்படி வரத்தக்க சொத்துக்கள் தர்மஸ்தாபனங்களாய் இருக்கின்றன. அவற்றின் மற்ற செலவுகளுக்கு என்று நமது மக்களால் செய்யப்படும் செலவுகளின் மொத்தம் நாம் செலுத்தும் வரித் துகைக்குக் குறையாத தென்றே சொல்லலாம். இவை இந்த நாட்டு மக்களுக்குப் பயன் படாததோடு வீண் செலவினமாகவே ஏற்பட்டு விடுகின்றன. அன்றியும் தர்ம ஸ்தாபனங்களில் வரும்படி இல்லாமல் வெறும் முடக்கமாய் இருக்கும் சொத்துக்கள் தங்கம், வெள்ளி, கல் நகைகள், இடங்கள் முதலியன கோடிக்கணக்கான ரூபாய் வரும்படி வரக்கூடிய அளவு உள்ள சொத்துக்கள் யாதொரு பிரயோஜனமும் இல்லாமல் முடங்கிக் கிடக்கின்றது.

இவை ஒருபுறமிருக்க இராஜாக்கள் என்றும், ஜமீன்தாரர்கள் என்றும் ஏற்பட்டக் கூட்டங்கள் அனுபவிக்கும் பொருள்கள், மற்றும் அவர்கள் நகை, பொக்கிஷம், புதைத்து வைத்திருப்பது முதலிய செல்வங்களின் அளவு நூற்றுக்கணக்கான கோடி என்றே சொல்லலாம்.

இவ்வளவும் தவிர இந்திய மக்களின் வருமானம் என்பதோ அவர்கள் தங்களது தொழில் முறைகளை சிறிதும் மாற்றிக்கொள்ளாததால் பிரயாசை அதிகமும், சாமான் யோக்கியதை குறைவும், உற்பத்திக்குறைவும் இதனால் வரும்படிக் குறைந்ததுமாக இருப்பதுடன் மனிதனுடைய தேவைக்கும் போக போக்கியங்களுக்கும் வேண்டியவைகளுக்கெல்லாம் ஏழை முதல் செல்வவான், மகாராஜாக்கள் வரை வெளி நாட்டுப் பொருள்களையே உபயோகிக்க வேண்டியவர்களாகி அதன் மூலம் செல்வம் ஏராளமாய் வெளியில் போய் விடுவதால் ஒருவித நஷ்டத்தை அடைய வேண்டியதாக ஏற்பட்டுவிடுகின்றது.

ஆகவே, இத்யாதி காரணங்களால் நாட்டின் பெரும்பாகமான மக்கள் ஏழைகளாக - தரித்திரர்களாக இருக்கக் கடமைப்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள். பொருளாதாரத் துறையில் இந்திய நாடு முற்போக்கடைய



RangaRakes tamilnavarasam.com

வேண்டுமானால் அதன் அஸ்திவாரமான காரணங்களையெல்லாம் கவனிக்காமல் மக்களுடைய மதியீனத்தையும், பகுத்தறிவற்ற தன்மையையும் ஆதரவாய் உபயோகித்துக்கொண்டு வெளிநாட்டுத் துணியை மறியல் செய்வதாலும், கதரை வாங்கிக் கட்டுவதாலும், கள்ளுக்கடைகளை மூடி விடுவதாலும் பொருளாதாரத் துறையை சரிப்படுத்தி விடலாம் என்று சொல்லுவது ஒரு நாளும் நாணையமானதோ, அறிவுடைமையானதோ, காரியத்தில் பயன் கொடுக்கக் கூடியதோ என்பதாகச் சொல்லி விட முடியாது.

இந்தியாவின் பொருளாதாரத்துறை சீர்படுவதற்கு முதலாவது வருணாச்சிரம முறை ஒழியவேண்டும்.இரண்டாவது மத சம்பந்தமான எண்ணங்கள் அகற்றப்படவேண்டும். மூன்றாவது கோவில், குளம், சடங்கு, சாத்தான், சனி விலக்கு ஆகிய எண்ணங்கள் அழிக்கப்பட வேண்டும். பிறகு அரசன், ஜமீன்தாரன் முதலிய தத்துவங்கள் அழிக்கப்பட்டாக வேண்டும்.

இவைகளை யெல்லாம் மறைத்து வைத்துக்கொண்டு-இந்தத் துறைகளில் எல்லாம் புகுந்து அழிக்க வேலை செய்யாமல் இருந்து கொண்டு இருப்பதுடன், வருணாச்சிரம தர்மத்தையும் புராண மரியாதையையும் பலப் படுத்திக்கொண்டு பொருளாதாரத்துறை சீர்படுத்துவதற்குச் சீமைக்குப் போய் “வெள்ளைக்காரனிடம் வியாபாரம் பேசப் போகின்றேன்” என்று சொல்லுவது அடியோடு அர்த்தமற்றதும், நாணையமற்றதுமாகுமா? அல்லது இல்லையா? என்று யோசித்துப் பாருங்கள்.

**குடி அரசு - தலையங்கம் - 13.09.1931**



# ஒரு பெண்ணுக்கு பல புருஷர்கள்

இந்தியாவில் ஒரு புருஷனுக்கு பல பெண்ஜாதிகள் இருந்து வருவது சாதாரணமாகவும், அவ்வழக்கம் சமூகத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும், மதத்துடனும் மதச்சம்பந்தமான கடவுள்கள், மதாச்சாரியார் முதலியவர்களுக் குள்ளும் இருந்து வருவதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் ஒருவித சீர்திருத்தக்காரர்கள் என்பவர்கள் மாத்திரம், அதுவும் வெள்ளைக்கார தேசத்தை, அவர்களது நாகரீகத்தைப் பின்பற்றியவர்கள் என்கின்ற முறையில் சிலர் ஒரு புருஷனுக்கு ஒன்றுக்கு மேல்பட்ட பெண்கள் கூடாது என்று சொல்லுவார்கள். அதற்குக் காரணம் சொல்லவும் தெரியாது. இரண்டு பெண்டாட்டிகள் கட்டின மதாச்சாரியாரை வணங்குவார்கள். இரண்டு பெண்டாட்டிகள் கட்டின சாமியையும் கும்பிடுவார்கள். அதற்கு, கோயில்கட்டி, இரண்டு பெண்டாட்டிகளை வைத்து கும்பாபிஷேகம் செய்து, பூசை உற்சவமும் செய்வார்கள். தாங்களும் பல பெண்களிடம் சாவகாசமும் செய்திருப்பார்கள். தங்கள் காதலிகளாக பயன்படுத்தியும் வருவார்கள். ஆனால் வாயில் மாத்திரம் இரண்டு பெண்டாட்டிகளைக் கட்டிக்கொள்வது சீர்திருத்தத்திற்கு கொள்கைக்கு விரோதம் என்பார்கள். ஆகவே இக் கூட்டத்தார் சீர்திருத்தம் என்பதற்கு அருத்தம் தெரியாதவர்களும், அதில் பொறுப்பும், கவலையும் இல்லாதவர்களும் ஆனவர்கள் என்று சொல்லப் படவேண்டியதோடு, வெள்ளைக்கார நாகரீகத்தைத் தாங்களும் வாயினால் பேசுவதின் மூலம் தங்களை “நாகரீகக்காரர்” என்று பிறத்தியார் சொல்ல வேண்டும் என்கின்ற ஆசையையும் உடையவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே இதன் நன்மை தீமை என்பது எப்படி இருந்தாலும், ஒரு மனிதனுக்கு உள்ள சுதந்திரம் ஒரு மனுஷிக்கும் இருக்கவேண்டியது என்கின்ற முறையில் பார்க்கும்போது நமது புருஷர்கள் இரண்டு பெண்டாட்டிகளுடன் வாழுவது போலவே நமது பெண்கள் இரண்டு புருஷர்களுடன் வாழுவதில் குற்றமில்லை என்பதே நமதபிப்பிராயம் என்பதோடு, அம் முறையை இஷ்டப்படுபவர்கள் கையாளுவதில் எவ்விதத்தடையும் இருக்கக் கூடாது என்பதும் நமதபிப்பிராயமாகும். புருஷன் பெண்சாதியாக வாழுவது என்பது, புருஷன் பெண்சாதி என்பவர்களுடைய தனித்தனி சொந்த இஷ்டத்தைப் பொறுத்ததே



RangaRakes tamilnavarasam.com

தவிர, அதில் ஆதிக்கம் செலுத்த வேறு யாருக்கும் உரிமை இல்லை என்பதே அவ்விஷயத்தில் நமது அபிப்பிராயமாகும். இந்து மத ஆதாரங்களில் இவ்வழக்கம் இருந்து வந்ததாக எழுதப்பட்டிருப்பது ஒருபுறமிருந்தாலும், மலையாளப் பிரதேசத்தில் இவ்வழக்கம் இன்று பிரத்தியக்ஷத்தில் இருந்து வருவதைக் காணலாம். அதாவது, ஒரு வீட்டில் 2, 3 புருஷர்கள் இருந்தால் அவர்கள் 2, 3 பேருக்கும் ஒரு பெண்ணையே மனைவியாகக் கொண்டு வாழ்க்கை நடத்தி வரப்படுகின்றது. இது தவிர இந்தியாவின் வடகிழக்கில் உள்ள தீபேத்து என்கின்ற நாட்டில் இன்றும் பெண்மக்களில் அவ்வழக்கம் தாராளமாய் இருந்து வருகின்றது. ஒரு பெண்ணுக்கு நான்கு ஐந்து புருஷர்கள் கணவர்களாக இருந்து வருகின்றார்கள். இதனால் சிறிதும் சண்டை சச்சரவின்றி சந்தோஷமாகவே வாழ்ந்து வருகின்றார்கள். இப்படியிருக்கின்ற இந்த ஜனங்களிடம் மிக்க நல்ல குணங்களும் நாணையங்களும் இருந்து வருகின்றதாம். இதை தீபேத்துக்கு இரண்டு தடவை பிரயாணம் செய்து நேரிலேயே சென்று பார்த்து விட்டுவந்த ஒரு பிரஞ்சு மாதாகிய திருமதி லாபூஜீ என்கின்ற ஒரு அம்மையார் இதைப் பற்றி வியக்தமாக எழுதுகிறார். (இந்த விபரம் 9-9-31-தேதி "நவசக்தி"யில் காணலாம்.) ஆகவே, நமது மக்களுக்குள் வாழ்க்கை முறையோ, சீர்திருத்தமோ, முற்போக்கோ என்பவைகளைப்பற்றி சுதந்திர உணர்ச்சியோ-சுதந்திர அபிப்பிராயமென்பதோ அநேகருக்கு இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். எந்தப்பழக்க வழக்கம் சீர்திருத்தம் என்றாலும் நம்நாடு-நம் மதம்-நம் ஜாதி-நம் வகுப்பு ஆகியவைகளில் என்ன இருக்கின்றது? எப்படி நடந்து வருகின்றது? என்கின்ற அளவில் தான் அவரவர் புத்தியைச் செலுத்த அருகதை உள்ளவர்களாயிருக்கின்றார்களே தவிர, உலகத்தில் மற்ற பாகங்களில் எப்படி இருந்தது? எப்படியிருக்கின்றது? என்பவைகளைப் பற்றி கவனிப்பதோ, அல்லது இவ்விஷயங்களின் தன்மை என்ன? இதன் காரணமென்ன? நமது அறிவுக்கு எப்படிப் படுகின்றது? இப்படியிருந்தால் என்ன? என்பது போன்ற சுதந்திர அறிவோ, ஆராய்ச்சியோ கிடையவே கிடையாது என்று தான் சொல்லவேண்டியிருக்கின்றது. இந்தக்காரணமே தான் உலகத்தில் முற்போக்கும், சுதந்திரமும், விடுதலையும் இந்திய நாட்டிற்கு மாத்திரம் தடைப்பட்டிருக்கின்றது என்று சொல்ல வேண்டியும் இருக்கின்றது.

ஆகவே, எந்தக் காரியத்தையும் ஆராய்ந்து பார்த்து அனுபவ குண தோஷம் கண்டு, மனதின் சுதந்திரத்தை மறுக்காமல், அடக்காமல், சுயேச்சையாய் நடக்க வேண்டியது தான் மனித தர்மம் என்றும், அந்தப்படி உலகமே சுயேச்சையாயிருக்க சௌகரியம் இருப்பதுதான் மனித சமூகவிடுதலை என்றும் சொல்லுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.09.1931**



# சி.இராஜகோபாலாச்சாரியாரின் ஜாதிப் பிரசாரம்

உயர்திரு சி.இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் செம்டம்பர் 10-தேதி "இந்து" பத்திரிகையில் ஜாதிக்கட்டுப்பாட்டின் மூலம் மதுவிலக்கு செய்வதை சட்டமாக்க வேண்டும் என்பதற்கு சமாதானம் எழுதும் முறையில், ஒவ்வொரு ஜாதிக்கும், கிளை ஜாதிகளுக்கும் தம் தம் ஜாதியினரை ஜாதிப் பஞ்சாயத்து மூலம் அடக்கியாளுவதை ஆதரித்து எழுதியிருக்கிறார். உண்பது, பருகுவது மற்றும் நடை உடை பாவனைகள் முதலிய விஷயங்களில் ஒவ்வொரு ஜாதியாரும் அந்த ஜாதியில் பிறந்த மக்களை கட்டாயப் படுத்த உரிமையுண்டு என்று கூறுகிறார். ஜாதிக்கட்டுப் பாட்டை மீறுகிறவர்களை ஜாதிப்பிரஷ்டம் மூலமும், வேலையிலிருந்து நீக்குவதன் மூலமும் தண்டிப்பது நியாயமென்றும் வற்புறுத்துகிறார். மேற்கண்ட கூற்றை ஊன்றி கவனிக்கும்படி வாசகர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். "காங்கிரஸ் வருணாச்சிரமத்தை வளர்க்க ஏற்பட்டிருக்கும் ஒரு ஸ்தாபன"மென்று நாம் கூறிவருவதை மறுக்கும் அன்பர்கள் திரு. இராஜகோபாலாச்சாரியார் கூற்றில் பதிந்திருக்கும் கொள்கையை அலசிப் பார்க்கவேண்டும். காங்கிரஸ் ஸ்தாபனத்தில் தேசீயமும், மதுவிலக்கும் வெறும் போர்வைகளென்றும், வருணாசிரம பாதுகாப்பே காங்கிரசின் ஆணித்தரமான நோக்கமென்பதும் இப்பொழுதாவது பொது ஜனங்கள் கண்டு கொள்வார்களென்று நம்புகிறோம். வகுப்புவாதம் கூடாதென்றும், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கூடாதென்றும் பறையடிப்பவர்கள், ஜாதிப் பஞ்சாயத்துகள் மூலம் பலவந்தத்தை உபயோக்கிக்க வேண்டுமென்று கூறுவதில் ஏதாவது நாணையமுண்டா? ஜாதிக்கட்டுப்பாட்டைவிட ஜாதிகளுக்கு ஆதிக்கம் தேட இதைவிட சிறந்த முறைகள் வேறு ஏதாவது உண்டா? தீண்டாமை விலக்கிற்கும், விதவைகள் துயரத்திற்கும், பெண்ணடிமைக்கும், பொருளாதாரக் கஷ்டத்திற்கும் எந்த (அதாவது ஜாதி வகுப்பு) முறையை நாம் காரணமாகச் சொல்லி அதை அழிக்க வேண்டு மென்று கருதுகின்றோமோ அதைக்காப்பாற்ற வேண்டும் என்பதும், அதன் மூலம் செய்யப்படும் கொடுமையாலும்,பலாத்காரத்தாலும் ஜாதிக்கு ஆதிக்கம் தேடவேண்டுமென்பதும் திரு ஆச்சாரியார் கொள்கை என்பது புலப்படுகின்றதா? அல்லது இல்லையா? என்பது கவனிக்கத் தக்கதாகும்.

**குடி அரசு - கட்டுரை - 13.09.1931**



RangaRakes tamilnavarasam.com

# கர்ப்ப ஆக்ஷி முறை

## ஓர் சந்தேகம்

நமது நண்பர் ஒருவர் கருப்பத்தடையின் அவசியத்தைத் தான் ஒப்புக் கொண்ட போதிலும் அனுஷ்டிக்கப்படவேண்டிய முறையைப் பற்றி அடியிற்கண்டவாறு ஆக்ஷேபிக்கிறார்:- அதாவது,

“கர்ப்ப உற்பத்திக்கு ஹேதுக்கள் சுக்கிலம் சுரோணிதம் என்று கூறப்படுவனவேயாகும். கலவி காலத்தில் ஆடவனிடமிருந்து சுக்கிலமும், ஸ்தீரியினிடமிருந்து சுரோணிதமும் வெளியாகிறது. கர்ப்ப உற்பத்திக்கு சுக்கில ஸ்கலிதம் தான் அவசியமானதேயொழிய சுரோணித ஸ்கலிதம் அவசியமல்ல. உதாரணமாக ஒரு ஸ்தீரி பத்துக் குழந்தைகள் பெற்றிருக் கலாம். அவளுக்கு சுரோணிதமே ஸ்கலிதமாகாமலிருக்கலாம். அதாவது புருஷ இச்சையே பூர்த்தியடையாமலிருக்கலாம்.

ஸ்கலிதமான சுக்கிலம், கருப்பையின் வாயிலை நோக்கி நழுவிப் போகும்போது, நிதம்பத்தின் வரைகளில் தங்கியிருக்கும் சுரோணிதக் கிருமிகள், சுக்கிலத்திலுள்ள ஆண் சினைகளிடம் ஸ்வீகரித்துக் கொண்டு கருப்பையில் பிரவேசிக்கிறது. உடனே கருப்பை வாய் மூடிக்கொள்ளுகிறது. அதிலிருந்து மாதவிடாய் நின்று கர்ப்ப உற்பத்தி உண்டாகிறது. இதுகாறும் கூறியவற்றிலிருந்து சுக்கில சுரோணித கிருமிகள் கருப்பையில் பிரவேசித் தால்தான் கர்ப்பம் ஏற்படும் என்பது புலனாகிறது. கிருமிகளை கருப்பையில் புகவிடாமல் செய்தாலும், அல்லது அவற்றை சக்தியிழந்து போகும்படி செய்தாலும், அழித்துவிட்டாலும் கர்ப்பம் தரிக்காது”.

### தடைமுறை

சக்தியை இழந்து விடும்படி செய்வதோ அல்லது அழிந்துவிடும்படி செய்வதோ, ஸ்திரிகளுக்கு கெடுதலை உண்டு பண்ணும். ஆதலின் செக் பெச்சாரி(Check Pessary) என்று சொல்லப்பட்ட ஓர் ரப்பர் கருவியைப் பெண்களுக்கு அணிவித்து போகித்தால் ஸ்கலிதமான விந்து உள்ளே பிரவேசியாமல் ரப்பர் பையிலேயே தங்கி விடுகிறபடியால் கர்ப்பந்தரிக்க



முடியாது என்று சொல்லிவிடலாம். இந்த முறையைத்தான் அநேகமாக ஸ்ரீமதி கார்மைக்கேல், மேரிஸ்டோப்ஸ் உள்பட யாவரும் கூறுகிறார்கள். உலகில் பெரும்பாலான இடங்களில் அனுஷ்டானத்தில் இருப்பதும் இது தான். இதைத்தவிர கர்பத்தடை மருந்துகள் என்று சில போலி ஆசாமிகள் செய்து விற்கும் மருந்துகளால் யாதொரு பயனுமில்லை என்று நிச்சயமாய்க் கூறலாம். மற்றப்படி கருப்பச்சிதை வுண்டுபண்ணும் மருந்துகள் உள வென்று ஒப்புக் கொள்ளலாமே யொழிய கர்ப்பத்தடை மருந்துகள் என்று ஒரு மருந்தும் கிடையவே கிடையாது. ஆதலால் யாரும் ஏமாந்து போகக் கூடாது.

“நிற்க, ஷெ ரப்பர் கருவியை உபயோகிப்பதால் கர்ப்பத்தடை பெற்று விடும் என்பது உண்மையே. அதனால் ஆண்,பெண் இருபாலரும் அனுபவிக்கும் இன்பம் எத்தகையது என்று ஆராயப்புகின் ஒருக்காலும் அத்தகைய கருவியை எவரும் உபயோகிக்க முற்படார் என்பது திண்ணம். ஸ்திரியின் ஜனனேந்திரியம் வெகுநுட்பமானதும் ஸ்பரிச உணர்ச்சி மிகவும் அதிகமாக உள்ளதுமாகும். அத்தகைய நுட்பமான இந்திரியத்தில் பிரவேசிக் கும் இயல்பையுடையதும், பிரவேசித்தால் இன்பத்தையன்றி இடரையளிக் காததுமான இந்திரியம் ஆண் உருப்பொன்றே யாகும். இரண்டு இந்திரி யங்களும் வெகுநுட்பமானவை. எலும்பில்லாமல் வெறும் தசை நரம்பு களாலானவை. உணர்ச்சியை மூளைக்கு அறிவிப்பது நரம்பு. ஆகவே வெறும் நரம்புத் தொகுதிகளாலான ஓர் அங்கத்திற்கு எத்தகைய நுட்பமான உணர்ச்சி உண்டு என்பதை வாசகர்களே தெரிந்து கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட கருவிகள் ஒன்றோடொன்று பொருத்தினால் ஏற்படும் இன்பம் எத்தகையது என்பதையும் பெண் உறுப்பின் தசையின் மிருதுத் தன்மைக்கு எவ்விதத்திலும் ஒவ்வாத ரப்பரை அணிந்து கொண்டு அதுவும் ஆண் உறுப்புக்கும் ஏற்படும் சேர்க்கையின்பம் எத்தகையது என்பதையும் அனுபவிகளே கூறமுடியும்.ஒருமுறை இத்தகைய ரப்பர் கருவியை உபயோகித்தவர் மறுமுறை அதை உபயோகிக்க மனம் ஒருப்படார் என்பது திண்ணம்.

இந்த ரப்பரை யணிந்து கொள்ளும் ஸ்திரீகளுக்கு போககாலத்தில் அத்யந்தப் பிரியமாவது உல்லாசமாவது ஏற்படாது என்பதுடன் அரை மருங்குகளில் முதலில் உறைசலை உண்டு பண்ணிவிடும். ஸ்தீரிபுருஷ ஜனனேந்திரியங்களின் கூட்டுறவால் ஏற்படும் இன்பத்தில் அணுவளவும் இத்தகைய கருவியால் எதிர்பார்க்கமுடியாது. மேலும் ஆண்உறுப்பின் இயற்கையும் நாளடைவில் மாறிவிடவும் கூடும். போககாலத்தில் பஞ்சேந்திரியங்களும் தத்தம் சுவாதீனத்தையிழந்து இன்பக்குவட்டின் மிசை அமரும் தன்மை இத்தகைய ரப்பர்கருவியால் தடையுறும் என்பது திண்ணம்.”



RangaRakes tamilnavarasam.com

இந்தப்படி எழுதிய நண்பரின் ஆக்ஷேபனையில் சில உண்மைகளிருந்தபோதிலும் கர்ப்ப ஆக்ஷி ரப்பர் கருவிகளை உபயோகிப்பதில் அவர் நினைக்கிற அளவு கஷ்டமிருக்கவில்லை. கருவியை அனுபவத்தில் பரீக்ஷித்துப் பார்த்தால் அவருக்குத் தோன்றிய சந்தேகங்களுக்கு ஆதாரமில்லை என்பது தெரியவரும்.

இயற்கையாய் ஏற்பட்டதல்லாமல் மனிதன் செய்கையாய் ஏற்படுத்திக் கொள்ளும் எந்த சாதனங்களையும் கையாளுவதில் ஆரம்பத்தில் சில கஷ்டங்கள் தோன்றுவது சாதாரணம். உதாரணமாக, பல் விழுந்த ஒருவர் செயற்கைப் பல்லை செய்து வைத்துக்கொண்டால் ஆரம்பத்தில் சிறிது வலியும், பெருத்த மனக்கஷ்டமும் ஏற்படுவதுண்டு. மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்ளுவதிலும் முதலில் சிறிது சிரமமேற்படுவதியல்பு. ஆனால் சிறிது நாட்கள் கழித்தபின் செயற்கைப்பல் வைத்திருப்பவரும், மூக்குக் கண்ணாடி யணிந்திருப்பவரும், அம்மாதிரி ஒரு செயற்கை சாதனத்தைத் தான் அணிந்திருப்பதையே மறந்து விடுகிறார்கள். அதே மாதிரி ஒரு ரப்பர் கருவியை மிருதுவான ஒரு பாகத்தில் அணிந்து கொள்ளுவதில் ஆதியில் கொஞ்சம் அருவருப்பும், சிரமமும் தோன்றலாம். ஆனால் கொஞ்சகாலம் பொருத்துக் கொண்டிருப்பதால் அந்த உணர்ச்சி தானாகவே மறைந்து போகின்றது.

நமது நண்பர் கருதுவது போல் ரப்பர் கருவியானது எவ்வித தடங்கலையும் உண்டாக்கக் கூடியதல்ல. உறுப்பில் உணர்ச்சியுள்ள பாகத்தை அது தடைப்படுத்தவில்லை. கருப்பையானது உள்ளே பதிந்து கிடக்கின்றது. அதிலுள்ள சிறு துவாரத்தையே இந்த கருவி மறைக்கின்றதே அல்லாமல் நிதம்பத்தில் மற்ற பாகங்களுக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. ஒரு விரலில் அங்குஸ்தான் தரிப்பது போல் கருப்பையின் மேல் இக்கருவி தரிக்கப்படுகிறது. கலவி போகத்தில் கருப்பை சம்பந்தம் இல்லை. போக உறுப்புகள் முன்பாகத்திலேயே இருப்பதால் நண்பர் நினைக்கும் தடங்கல் ஏற்படக் காரணமில்லை. அப்படிப்பட்டத் தடங்கலிருந்தால் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலுமுள்ள லட்சக்கணக்கான மக்கள் இக்கருவிகளை உபயோகிக்கமாட்டார்கள். ஆனால் இக்கருவிகளை உபயோகிக்கும் மாதிரியை பிசகில்லாமல், முடியுமானால் டாக்டர்களின் மூலமே அறிந்து கொள்ள வேண்டும்.

**குடி அரசு - கட்டுரை - 20.09.1931**



# காசில்லாமல் நடத்தலாம்

**- சித்திரபுத்திரன்**

ஐயா! உங்கள் கலியாணத்திற்கு மந்திரம் வேண்டுமா? பார்ப்பான் வேண்டுமா? மந்திரம் பிரதானமானால் மந்திரத்தை ஒரு கிராமபோன் ரிகார்ட்டில் பிடித்து வைத்துக் கொண்டால் தாலி கட்டுகின்றபோது கிராமபோன் வைத்து தாலிகட்டி விடலாம். பார்ப்பான் வேண்டுமானால் ஏதாவது ஒரு பார்ப்பானை பொட்டகிராப் பிடித்து அதை மணவரையில் வைத்து தாலிகட்டி விடலாம். இரண்டும் வேண்டுமானால் இரண்டையும் வைத்து தாலி கட்டி விடலாம். வாத்தியம் வேண்டுமானாலும் கிராமபோனிலேயே மதுரை பொன்னுச்சாமி வாத்தியம் வைக்கலாம். ஒன்றும் வேண்டாம், பெண்டாட்டியும் புருஷனும் ஆனால் போதும் என்றால் விரலில் மோதிரத்தை மாட்டி கழுத்தில் மாலை போட்டு கையைபிடித்து அழைத்துக் கொண்டு போகலாம்.

**குடி அரசு - சிறு குறிப்பு - 20.09.1931**



RangaRakes tamilnavarasam.com

# கடலூரில் சுயமரியாதைக் கூட்டம்

தலைவரவர்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!!

சுயமரியாதை இயக்கம் என்பதைப் பற்றி பேசவேண்டுமென்பதாக நண்பர் பெருமாள் அவர்களால் இக்கூட்டம் கூட்டப்பட்டிருக்கின்றது. நாங்கள் திரு.பெருமாளின் குமாரத்தியின் திருமணத்திற்கு என்று அழைக்கப்பட்டு இங்கு வந்தோம். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த ஊரில் ஒரு பொது கூட்டத்தில் பேசவேண்டுமென்றஆசை அநேக நண்பர்களுக்கு இருந்ததால் நானும் இந்த சந்தர்ப்பத்தை வீணாக்காமல் சிறிது பேசலா மென்றே கருதுகின்றேன்.

சுயமரியாதை இயக்கத்தின் தீவிரமான கொள்கைகளை யெல்லாம் இப்போது உங்களுக்கு எடுத்துச் சொல்வது என்பது சற்று கஷ்டமானதா யிருக்குமென்றே கருதுகின்றேன்.

ஏனென்றால் இதற்குமுன் இங்கு இந்தப் பிரசாரம் நடத்தப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. அதன் தீவிரக் கொள்கைகளை நீங்கள் முதல் முதலாக கேட்கும்போது அது உங்களைத் திடுக்கிடச் செய்யும். அவற்றின் உண்மையை அறிவது என்பது இன்றே சுலபத்தில் புலப்படக்கூடியதாகாது. ஆதலால் உங்களுக்கு சிறிது நிதானமான முறையில் தான் பேச வேண்டிய வனாயிருக்கிறேன். அதாவது இந்த நான்கு, ஐந்து வருஷங்களுக்கு முன் கிராம ஜனங்களின் முன் நான் எந்த நிலையில் பேசினேனோ அது போல் முதல் பாடத்திலிருந்து பேச வேண்டியவனாகயிருக்கிறேன். ஏன் இந்தப்படி சொல்லுகிறேன் என்றால் திரு.பெருமாள் வீட்டுக் கல்யாணத்திற்கு பார்ப்பான் வரவழைக்கப்படாததாலேயே இவ்வூரார் அவர்மீது மிகுந்த கோபமாய் இருப்பதாகவும், நான் கோவில் குளங்களைப் பற்றி குற்றம் சொல்லுகின்றவன் என்பதாகவும் ஜாதிகளையெல்லாம் ஒன்றாக்க வந்திருக் கின்றேன் என்பதாகவும் குற்றம் சொல்லி இந்தக் கூட்டத்திற்கு யாரும் போகக்கூடாதென்று சிலர் பிரசாரம் செய்தார்களாம். இப்படிப்பட்ட முயற்சிக் காரர்கள் முன்னால் பார்ப்பனர்களின் நடத்தையையும் கோவில் குளங்க ளினுடைய தொல்லையையும் எடுத்துச் சொன்னால் எப்படி அது உங்க ளால் நடுநிலையில் கிரகிக்கப்படும் என்பதை நீங்களே நினைத்துப்



பாருங்கள். புதிய சங்கதி எதுவானாலும் காதைமூடிக்கொள்ளவே நமது மக்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றார்கள். சிறு குழந்தைப் பருவத்தில் நமக்குப் புகுத்தப்பட்ட விஷயங்களையே ஆராய்ச்சியின் மூலம் அறிவின் மூலம் கண்ட முடிவென்று கருதி அதற்குத் தலைகொடுத்துக்கொண்டு இருக்கின் றோம். நமது உள்ளத்தில் எது எது பதிக்கப்பட்டு விட்டதோ அதெல்லாம் தேர்ந்த ஞானிகளாலும் தெய்வத் தன்மை பொருந்திய அவதார புருஷர் களாலும் சொல்லப்பட்ட உண்மைகள் என்ற உறுதியுடனே புகுத்தப்பட்டி ருக்கின்றோம்.ஆகையால் புதிய நோக்கங்களையும் தோற்றங்களையும் காண சகிக்காதவர்களாக இருக்கின்றோம்.

உலகப் போக்கை நாம் தெரிய நேர்ந்தாலும், பார்க்க நேர்ந்தாலும் அதன் அனுபவத்தின் மேன்மை அடையவும், பாராட்டிப்பேசவும், தயாராய் இருக்கின்றோமே அல்லாமல் அதை நமது வாழ்க்கையுடன் நமது நாட்டு எண்ணங்களுடன் பொருத்திப் பார்ப்பதற்கு சிறிதும் எண்ணுவதே கிடை யாது. நமது மக்களின் இந்த மாதிரியான நிலையைப் பார்த்துப் பார்த்து மனம் கஷ்டப்பட்டதால் தான் நாங்கள் இந்த துறையில் இரங்கி தொண்டு செய்ய வேண்டியவர்களானோம்.

## சுயமரியாதை

சுயமரியாதை இயக்கம் என்பதின் முக்கிய கொள்கைகள் என்பவை ஒன்றும் புதிதானதோ அல்லது ஏதாவது அதிசயமானதோ என்று நீங்கள் மலைக்கவேண்டியதில்லை. அது மனிதன் அறிவுபெறவும் சமத்துவம் அடையவும் சுதந்திரம் பெறவும் பாடுபடுகின்றது. அறிவுக்கும் சமத்துவத் திற்கும் சுதந்திரத்துக்கும் எதிராயும் தடையாயும் இருக்கும் எதையும் அடியோடு ஒழிக்க தைரியம் கொள்ளுகின்றது. இந்த நிலையில் மக்களின் மூடத்தனத்தினாலும் தாழ்வினாலும், அடிமைத்தனத்தினாலும் பயனடைந்து வாழ்கின்றவர்களுக்கு சுயமரியாதை இயக்கம் ஒரு கோடாலியாய் காணப் படுவதானால் அதிசயமொன்றுமில்லை. எங்களைக் கண்டால் துவேஷமும், வெறுப்பும் ஏற்படத்தான் செய்யும். எங்களை வையவும் தொல்லைப் படுத் தவும் அவரவர்கள் மனம் தூண்டத்தான் செய்யும். இவ்வியக்கத்தை கையாளுகிறவர்களுக்கு அவற்றையெல்லாம் சமாளிக்க சக்தி இருந்தால் தான் இவ்வியக்கத்தால் ஏதாவது பலன் ஏற்பட முடியும். எதிர்ப்புக்கும் தொல்லைக்கும் பயந்தால் ஒரு காரியமும் நடவாமல் போவதோடு பிற் போக்கும் ஏற்பட்டுவிடும்.

சாதாரணமாக நாங்கள் இந்த ஊர் பொதுஜனங்களின் பாராட்டு தலையும் வணக்கத்தையும் மரியாதையும் பெற்று கொஞ்சம் பணமும் சம்பாதித்துக் கொண்டு போகவேண்டுமானால் எங்களால் சுலபத்தில் முடிந்து விடும். நமது ஜனங்களின் முட்டாள்தனம் எங்குளங்கு இருக் கின்றது என்பது எங்களுக்கு நன்றாய்த் தெரியும்.



RangaRakes tamilnavarasam.com

உதாரணமாக நாங்கள் தேசபக்தர்களைப்போல கதர் வேஷம் போட்டு கையில் கொடியைப் பிடித்துக்கொண்டு பாரதமாதவுக்கு ஜே! சுயராஜியத்திற்கு ஜே! மகாத்மாவுக்கு ஜே! என்று கூறிக்கொண்டோ, அல்லது பெரிய கடவுள் பக்தர்கள் போல் வேஷம் போட்டுக் கொண்டு மஞ்சள் உடையோ, காவி உடையோ கட்டிக்கொண்டு பட்டை நாமம் போட்டுக் கொண்டு குடை, சேகண்டி இவைகளுடன் நாராயண மூர்த்தி கோவிந்தா, கோவிந்தா என்றோ சொல்லிக்கொண்டு பஜனைக் கோஷ்டியுடனோ கூட்டமாய் வந்தோமானால் நீங்கள் கும்பிட்டு காசுகொடுத்து விட்டுப் போவீர்கள் என்பது எங்களுக்கு நன்றாய்த்தெரியும். இதற்காக ஒரு துரும்பைக் கிள்ளிப்போட வேண்டிய அவ்வளவு சிறிய கஷ்டம் கூட நாங்கள் படவேண்டியதில்லை.

ஆனால் நாங்களோ இன்று அப்படி சொல்லி வயறு வளர்ப்பதனுடைய புரட்டுகளை எடுத்துச் சொல்லுகின்ற வேலையை மேற்போட்டுக் கொண்டிருக்கின்றோமாதலால் சோம்பேரிப் பிழைப்புக்காரர்களுடைய கோபத்திற்கும் பழிதீர்த்துக்கொள்ளும் வஞ்சகத்திற்கும் ஆளாக வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்திய நாடு சூக்ஷிகாரருடைய ஆக்ஷிக்கு உட்பட்ட காலம் முதலே எங்களைப்போல் ஒரு கூட்டம் பல தடவை தோன்றி சூக்ஷிகளை வெளிப்படுத்தி வந்திருக்கின்றதானாலும் சூக்ஷிக் காரர்களின் சாமாத்தியமானது, அவற்றை லக்ஷியப்படுத்தக்கூட முடியாமல் செய்து கொண்டே வந்திருக்கின்றது.

இன்றைய தினம் அறிவு வளர்ச்சிக்கும் சமத்துவத்திற்கும் சுதந்திரத் திற்கும் விரோதமான காரியங்கள் என்று எதை எதை நாங்கள் கருதுகின்றோமோ அவற்றையெல்லாம் எங்களுக்கு முன்னும் அநேக பெரியார்கள் கருதி வெகு கடினமாக கண்டித்து பேசி இருக்கிறார்கள்.

உதாரணமாக ஜாதி மதத்தை கண்டித்தும் வேத சாஸ்திரங்களைக் கண்டித்தும் கோவில், குளம், கல்லுருவம், தாம்பர உருவம் ஆகியவைகளை கண்டித்தும் பூஜை, உற்சவம், சடங்கு ஆகியவைகளைக் கண்டித்தும் எத்தனையோ பெரியார்கள் பேசியிருக்கின்றார்கள். "சாஸ்திரத்தைச் சுட்டு சதுர்மரையைப் பொய்யாக்கி சூத்திரத்தைக் கொண்டு சுகம் பெருவதெக் காலம்" என்று ஒருவர் சொல்லியிருக்கிறார். ஒரு பெரியவர் "கல்லையும் செம்பையும் வணங்கும் கசடர்கள்" என்று சொல்லியிருக்கின்றார். சாதி மத பேதமெல்லாம் சூட்சியால் ஏற்படுத்தப்பட்டது என்றும் சொல்லியிருக் கின்றார். இன்னும் எவ்வளவோ சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் நம் மக்களோ அப்பெரியார்களையெல்லாம் தெய்வீகத்தன்மை கொண்டவர்கள் என்றும், ஞானிகள் என்றும் சித்தர்கள் என்றும் கருதி இன்றும் வணங்குகின்றார்கள். ஆனால் அப்பெரியார் சொன்னவைகளை கவனித்துப் பார்க்கும்படி யாராவது சொன்னால் மாத்திரம் அவர்கள் மீது மிருகப் பாய்ச்சல் பாய் கின்றார்கள். இது ஒன்றே போதாதா நம்மக்களின் அறிவின்



திரத்தை அளந்து பார்ப்பதற்கு என்று யோசித்துப் பாருங்கள். இந்த மாதிரியான பாமர உணர்ச்சியும் பயங்காளித்தனமும் வைத்ததைச் சுமக்கும் மிருக சுபாவமும் இன்னாட்டு மக்களின் உயர்குணங்களாகப் பாவிக்கப் பட்டு வருவதாலேயே உலகத்தில் இந்திய நாடு மாத்திரம் வெகுகாலமாகவே அடிமை நாடாகவே, கூலி நாடாகவே சுயமரியாதையும் அறிவும் ஞானமும் அற்ற நாடாகவே இருந்து வருகின்றது. இதற்குக் காரணம் இன்னது தான் என்பதை கண்டுபிடிக்க நம்மவர்களுக்கு இன்னமும் அறிவு ஏற்படவில்லை. ஒரு நாய் வளர்த்துகின்றவன் தன் நாயை மற்றவன் மேல் ஏவிவிடுவது போல் நம்மை யார் சூட்சி செய்து இக்கெதிக்கு ஆளாக்கினார்களோ அவர்களே தான் அச்சூக்ஷியை ஒழிக்க வரும் ஆட்கள் மேல் நம்மை உசுபடுத்தி விடுவதால் உண்மையை உணர கவலை கொள்ளாமல் அவர்கள் கை காட்டின பக்கம் திரும்பிக் கொண்டு கத்துகின்றோம்.

நமது நாட்டு அடிமைத்தனம் எத்தனை காலமாய் இருந்து வருகின்றது என்பதை நினைத்துப் பாருங்கள். தர்மராஜ்யம், இராமராஜ்யம், சத்தியகீர்த்தி அரிச்சந்திரராஜ்யம் முதலிய அவதார ராஜ்யம் முதல் தெய்வீகத்தன்மை பொருந்திய மூவேந்தர் முதலிய சரித்திர ராஜ்யம் வரை இந்திய மக்கள் நிலைமையை சற்று ஞாபகப்படுத்தி ஆராய்ச்சி செய்து உண்மையைக் கண்டு பாருங்கள். அந்த நிலைக்கு இந்த நிலை மேலானதா? கீழானதா? என்று சுயமரியாதைக் கண்ணாடி மூலம் பாருங்கள். ஞானக் கண்ணாடி மூலம் பாருங்கள். சுதந்திரம், சமத்துவம் என்கின்றதான கண்ணாடிகள் மூலம் பாருங்கள்.

நீங்கள் எந்த பார்ப்பனர்களையும் கேட்டுப்பாருங்கள். தங்கள் நிலை "இன்றையைவிட அன்று அதாவது அவதார ஆட்சியிலும் மூவேந்தர் ஆட்சியிலும் மேலாயிருந்தது. ஆனால் இன்று கீழாயிருக்கின்றது" என்று தான் சொல்லுகின்றார்கள். ஆனால் அவர்கள் தவிர மற்ற மக்களாகிய "சூத்திரர்கள்" பெண்கள் தாழ்த்தப்பட்ட ஜாதியார்கள் என்று இழிவுபடுத்தி இருக்கிற நம்மில் 100க்கு 99 ஜனங்களை கேட்டு பாருங்கள், நெஞ்சில் கையை வைத்து நினைத்துப் பாருங்கள். அன்றுக்கு இன்று எவ்வளவு மேலான நிலையில் இருக்கின்றோம் என்பதை ஒவ்வொரு துறையாய் ஆராயுங்கள். உண்மை காண்பீர்கள். இதோடு நின்று விடாமல் இந்த நிலையோடு திருப்தி அடையாமல் இன்னும் மேலே போக வேண்டும் என்று சொல்லுங்கள். எவ்வளவு மேலே போகவேண்டுமானாலும் நானும் கூடவே வர பாடுபடுகின்றேன். ஆனால் பழைய நிலையேமேல் அதற்கே போக வேண்டும் என்று சொன்னால் அதை சகிக்க முடியவில்லை.அரை நிமிஷம் கூட அதை ஆதரிக்க முடியாது. உலகம் அறிவு பொருள் முதலிய அகத் திலும் புறத்திலும் சமத்துவத்தையும் பூரண சுயேச்சையையும் அடைய தீர்மானித்து விட்டது. இந்தியா மாத்திரம் மூடர்களாய், அடிமைகளாய் இழி மக்களாய் இருக்கும் அவதார ராஜியத்திற்கு போக வேண்டுமென்றால் இந்நாடு அடியோடு அழிந்து போவதே மேலான காரியமல்லவா?



RangaRakes tamilnavarasam.com

நண்பர்களே உலகத்தை ஒரு கண்ணில் பார்த்து இந்தியாவை ஒரு கண்ணில் பார்த்து, இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை உணருங்கள். நம் கல்வி, செல்வம், வாழ்வு, விவசாயம்,வீரம், மானம், அறிவு ஆராய்ச்சி, முற்போக்கு ஆகியவைகள் எல்லாம் எப்படி இருந்து இருக்கிறது. மற்ற நாடுகள் எப்படி இருந்தது இருக்கின்றது என்பவைகளை சிந்தித்துப் பாருங் கள் என்று சொல்லி ஒவ்வொன்றிலும் வெளி தேசத்தையும் இந்தியாவையும் ஒப்பிட்டு பார்க்கும்படி விளக்கிக் காண்பித்து விட்டு உட்கார்ந்தார்.

## "உபசாரப் பத்திரம்"

*இந்த சமயத்தில் ஒரு வாலிபர் கடலூர் வாலிபர்கள் சார்பாக திரு. இராமசாமி பெரியாருக்கு உபசாரப்பத்திரம் படிக்க வேண்டும் என்று சொல்லி அதன் பிரதி ஒன்றை தலைவரிடம் கொடுத்தார். தலைவர் அதை வாங்கி தானே வாசித்துப் பார்த்தார். அவ்வுபசாரப்பத்திரத்தில் முதல் இரண்டு மூன்று வாக்கியங்களில் திரு. இராமசாமியை பாராட்டும் பாவனையாகவும் பின் இரண்டு வாக்கியத்தில் கதரைப் பற்றிய அபிப்பிராயத்தை விளக்க வேண்டு மென்றும், தாலிகட்டுவது அடிமைத்தனத்திற்கு அறிகுறி என்றும் சொல்லும் தங்கள் மனைவியார் ஏன் தாலிகட்டி இருக்கின்றார்கள் என்றும் கேள்வி கேட்கும் பாவனையாக எழுதப்பட்டிருந்தது. தலைவர் எழுந்து கதரைப் பற்றிய விபரம் தெரிய வேண்டுமானால் தானே சொல்லுவதாகச் சொல்லி அதைப்பற்றி புள்ளிவிபரங்களுடன் 15 நிமிஷம் பேசினார். (அது ஒரு தனி வியாசமாக சீக்கிரத்தில் பிரசுரிக்கப்படும்) அதன் பேரில் கடலூர் திரு தேவநாயக அய்யா அவர்கள் பேச விரும்பியதின் மீது சில விஷயங்கள் பேச அனுமதிக்கப்பட்டார். அவர் கதரைப்பற்றி பேசினார்.*

பின்னர் திரு.இராமசாமி எழுந்து பதில் சொல்லும் முறையில் தாலி கட்டிக்கொண்டிருப்பது அடிமைத்தனத்திற்கு அறிகுறி என்று அனேக பெண்கள் இன்னமும் உணரவில்லையென்றும் உணர்ந்த பல பெண்களும் தாங்கள் அடிமைகளாய் இருப்பதைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறார் கள் என்றும் சிலர் சமூகத்துரைக்கு பயந்து கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் எந்த எண்ணத்தின் மீது தனது மனைவியார் கட்டிக் கொண்டிருந் தாலும் அவர்களது இஷ்டத்திற்கு விரோதமாய் பலவந்தம் செய்யத் தான் துணியவில்லை என்றும் சொன்னார். ஒருவர் மத்தியில் எழுந்து "உங்கள் குடும்ப மனைவியையே நீங்கள் அடக்கி ஆள முடியவில்லையானால் மற்றவர்களை எப்படி திருத்தமுடியும்" என்றார். இதற்கு திரு.இராமசாமி சமாதானம் சொல்லுகையில் மனைவியை அடக்கி ஆளவில்லை என்று சொன்ன நண்பர் மனைவி என்றால் அடிமை என்கின்ற நமது பழைய கொள்கையை மனதில் வைத்துக்கொண்டு பேசுகின்றாரேயொழிய அவர்கள் இஷ்டப்படி நடக்க அவர்களுக்கு உரிமை உண்டு என்றும் சிறிதும் கவனியா மல் சொல்லுகிறார் என்றே கருதுகின்றேன் என்றும், பெண்களுக்கு



கல்வியறிவும் சுதந்திர உணர்ச்சியும் சுயமரியாதையும் ஏற்பட்டால் தானாகவே தாலியை அறுத்தெறிந்து விடுவார்கள் என்றும் சுதந்திர உணர்ச்சி உள்ள பெண்கள் இனி தாலிகட்ட கழுத்தைக் கொடுக்கமாட்டார்கள் என்றும் இவ்விஷயங்களில் மற்ற வெளிஜனங்கள் என்பவர்களுக்கும் குடும்பத்தார் என்பவர்களுக்கும் பிரமாத வித்தியாசம் இல்லையென்றும் சொல்லிவிட்டு கடைசியாக இந்தக்கூட்டத்தில் அரசியல் சம்மந்தமான பேச்சை தான் வேண்டுமென்றே பேசாமல் விட்டுவிட்டதாகவும் ஏனெனில் இதுவே முதல் கூட்டமானதால் அதிகமான விஷயங்களை ஜீரணம் செய்விக்க முடியா தென்று கருதியே அப்படிச் செய்ததாகவும் ஆனபோதிலும் காங்கிரசுக்காரர் கள் என்கின்ற முறையில் சிலர் அவர்களாகவே நம்மை பேசும்படி செய்ததால் தான் அதற்கு நன்றி செலுத்துவதாகவும் கூறி கதரைப்பற்றியும் அதற்கும் அரசியலிற்கும் பொருளாதாரத்திற்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றியும் அது எவ்வளவு தூரம் தொழில் முறையிலோ, பொருளாதாரத் துறையிலோ உதவி இருக்கின்றதென்றும் அது சமதர்ம கொள்கைக்கும் மனிதனின் இயற்கையான ஆசாபாசங்களுக்கும் முன்னேற்றத்திற்கும் எவ்வளவு இடையூறென்றும் எடுத்துக் காட்டியதுடன் திரு.காந்தியே மில்லை ஆதரிக்க வந்து விட்டதுடன் புதிய இயந்திரம் கண்டுபிடிக்க ஆசைப்பட்டு கண்டுபிடிப்பவருக்கு ரூ. 100000 சன்மானம் கொடுக்க முன்வந்து விட்டார் என்றும், கதர் தற்கால சாந்திதான் என்பதாக திரு. ராஜகோபாலாச்சாரியார் சொல்லி யிருக்கும் அபிப்பிராயங்களையும் எடுத்துச் சொல்லிவிட்டு கதரை ஒரு தர்ம கைங்கரியமாக வைத்துக் கொண்டாலும்கூட ஏழைகள் பிழைக்க வென்று மக்களிடம் கதரின் பேரால் 4 அணா வசூலித்து அவர்களுக்கு ஒரு அணா போய்ச் சேரும்படி யிருப்பது தர்ம கைங்கரியம் ஆகாதென்றும் எப்படியெனில் ஒரு நாளைக்கு கால் ராத்தல் நூல் நூற்று ஒரு அணா கூலி அல்லது ஒண்ணே கால் அணா கூலி பெருகின்றார்கள் என்றால் அந்த கால் ராத்தல் நூலால் நெய்யப்பட்ட கதரை வாங்க வேண்டியவர் 6 அணா கொடுக்கிறார். இந்த நீளமுள்ள துணியை, மில் துணியாக வாங்கினால் 0-2-6 அணாவுக்கு வாங்கலாம். ஆகவே ஒரு அணா தர்மம் செய்ய மற்றவனிடம் 3-6 தட்டிப் பரிக்க வேண்டி இருக்கின்றது என்று புள்ளி விபரத்துடன் எடுத்துக்காட்டினார். பிறகு திரு. தேவனாயகய்யா பேச அனுமதிக்கப்பட்டார்.

அது சமயம் அவர் கதர் விலை இப்போது அதிகமாயிருந்தாலும் நாளாவட்டத்தில் குறைந்து விடும் என்றும் மூன்று நான்கு வருஷத்திற்கு முன் கதர் கஜம் 0-10-6 அணாவாக இருந்தது இப்போது 0-9-6 அணாவாக இருக்கின்றதென்றும் சமதர்மம் ஆரம்பித்தால் நமக்குள் கலகம் வரும், போலிசார் கவர்மெண்டார் அனுகூலமாய் இருக்கமாட்டார் என்றும் சொன் னார். இதற்கு திரு.இராமசாமி எழுந்து கதர் விலை கெஜத்திற்கு ஒரு அணா குறைந்ததற்கு கதர் முன்னேற்றமடைந்ததால் அல்லவென்றும் பஞ்சு பாரம் 350 ரூ. இருக்கும்போது கெஜம் 0-10-6 அணாவுக்கு விற்றது இப்போது



RangaRakes tamilnavarasam.com

பஞ்சுபாரம் 116 ரூ. க்கு வந்த பிரகு அதாவது மூன்றில் ஒரு பங்குக்கு பஞ்சு விலை வந்தபோது கதர் விலையில் 10-ல் ஒரு பங்கு குறைத்து ஒரு அணா மாத்திரம் குறைக்கப்பட்டிருக்கின்றது என்று கதரின் குணத்தில் பார்த்தாலும் கூட தான் கதர் இலாக்காவில் இருக்கும்போது 50 இஞ்சு 10கெஜம் மூன்றறையே அரைக்கால் மூன்றேமுக்கால் றாத்தல் இடைதானிருந்தது. இப்போது 4 ராத்தல் இடை ஆகிவிட்டது என்றும் எடுத்துச் சொல்லிலிட்டு திரு தேவநாயக அய்யா அவர்களை இனியும் ஏதாவது கேட்கின்றீர்களா என்று கேட்டார். அவர் இவ்வளவுதான் என்று சொன்னார். பிறகு இனியும் யாருக்காவது தான் பேசியதில் ஏதாவது சந்தேகம் உண்டா என்றார். மற்றொரு வாலிபர் ஒரு சந்தேகம் என்று சொல்லி வருணாச்சிரம தர்மத்தின் அவசியத்தையும் அர்ச்சகர் புரோகிதர்கள் அவசியத்தையும் பற்றி பேசினார். தலைவர் தாங்கள் சந்தேகங்களையோ கேள்விகளையோ சொல்லுங்கள் என்றார். உடனே அவர் 1. கடவுள் உண்டா இல்லையா? 2. கடவுளை அடையும் மார்க்கம் என்ன? 3. மனிதன் கடமை என்ன என்று கேட்டார்.

இதற்கு திரு.இராமசாமி கடவுள் என்பதை தான் ஒரு அர்த்தமற்ற வார்த்தை என்று கருதி யிருப்பதாகவும் ஆனால் கடவுளைப் பற்றி பேசுபவர்கள் அதற்கு தனித்தனி அர்த்தம் கற்பித்து கொள்ளுகிறார்கள் என்றும் கேள்வி கேட்பவர் கடவுளுக்கு இன்ன விதமான அர்த்தம் கொண்டு இருக்கிறார் என்று தெரிந்தால் அது உண்டு இல்லை என்றும் எப்படி அடைவதென்றும் ஒரு வார்த்தையில் முடித்து விடலாம் என்று சொன்னார். இதற்கு கேள்வி கேட்டவர் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

பிறகு மனிதனுடைய கடமை என்பது தனியாக ஒன்று இல்லை என்றும் அவரவர் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் அனுபவத்திற்கும் சரி என்று பட்ட விஷயங்களின்படி அவரவர் நடந்து கொள்ளுவதைதான் கடமையாக கொள்ள வேண்டுமென்று சொன்னார்.

*குறிப்பு : 13.09.1931 அன்று கடலூர் பழைய டவுனில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 20.09.1931**



# கடலூரில் திருவாளர் ஈ.வெ.இராமசாமி

சகோதரர்களே! சகோதரிகளே!! மணமக்களே!!! புதிய முறையான திருமணம் இப்பகுதிக்கு இது புதியது. பூசைமேடு கோவிந்தசாமிதிருமணம் முன் நடைபெற்றது. அதன்பின் இன்று இங்குவந்திருக்கிறோம். தலைவர் முனிசிபல் கவுன்சிலர் புதிய முறையில் திருமணம் நடைபெறுமென்று கூறியபடி சுயமரியாதை திருமணம் என்றால் என்ன? நான் இங்கு வந்ததும் உறவினர், தோழர் முதலியவர்களின் அதிர்ப்தி ஏற்பட்டதாகக் கேள்விப் பட்டேன். அதன் காரணம் பகுத்தறிவில்லாமையே. மதம், புராணம், பழக்கம், வழக்கம், மோக்ஷம், நரகம் கற்பிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அதிர்ப்தியும், பயமும், நடுக்கமும் தான் தோன்றும். நன்கு யோசித்து திரு.பெருமாள் அவர்கள் போல் துணிவுடன் செய்தால்தான் வரும்கால உலகிற்கு பயன் தரும். இதுபோன்ற திருமணங்கள் பலவிடங்களில் நடந்துகொண்டு வருகிறது. சிலவிடங்களில் விளம்பரத்திற்காக சிறிது ஆர்பாட்டத்துடன் சுயமரியாதை இயக்கத்து திருமணம் நடைபெறுகின்றது. நான் கூறுவது சிலருக்கு வியப்பாகத் தோன்றினாலும் தோன்றலாம். உங்கள் அறிவுப்படி கொள்ளவும் தள்ளவும் உரிமை உங்கட்கு உண்டு. பழமை, புதுமை என்ற பாகுபாடின்றி பகுத்தறிந்து முடிவுப்படி செய்யுங்கள். திரு மணம் என்பது ஒரு பெண்ணும் ஒரு ஆணும் வாழ்க்கைக்கு அடிகோலும் ஆரம்ப நாளே திருமணம் என்பதாகும். பல சடங்குகளுக்கும் விழாக் களுக்கும் தத்துவார்த்தம் வேறாக யிருக்கலாம். ஆண் பெண் கூடி வாழ இச்சைக்காக, சந்தோஷத்திற்காக ஒன்றுகூடும் ஜதை சேர்தலே திருமண மாகும். திருமணம் ஆணும் பெண்ணும் தங்களுக்குள் நேரில் சம்மதம் பெற்று இருவரும் இன்பத்தோடு ஒன்றுபடுதலே எல்லா நாட்டாராலும் கையாளப்படுவதாகும். நம்நாட்டிலோ தாய் தகப்பன்மார்களின் வியாபார மாக "ஜதை" சேர்க்கப்பட்டு முடிவு கூறப்படுகிறது. திருமணம் என்பது ஆணும் பெண்ணும் ஒன்றுபட்டு வாழ்வது "தெய்வீக"மென்பதாகவும் மறு உலகில் இடம் பெறுதற்கான காரியங்கட்கு இங்கு வாழ்வதாகவும், காலவினை, பொருத்தம், முடிச்சு, நமது கடமை, தேர்தல், முயற்சி என்ற காரணத்தையும் மறக்கின்றோம். ஜாதிக்கொவ்வொரு விதமாக பழக்கவழக்க மென்ற காரணத்தால் சடங்கு, பணக்கேடு, நேரக்கேடு, மக்கள் ஊக்கக்கேடு ஆகிய கஷ்டத்தோடு தான் திருமணம் நடத்துகிறோம். மாற்றமடைவதில்



RangaRakes tamilnavarasam.com

நாம் பெரியார்கட்கு பயந்து பழைமையையே குரங்குப் பிடியாகப் பிடித்து கொள்கிறோம். ஆண் பெண்ணுரிமையைப் பற்றியோ வெனில் ஆண் இச்சைக்கும், வேலைக்கும், ஏவுதலுக்கும் என்றே பெண்கள் சேர்க்கப்படு கிறது. சொத்துரிமை சமஉரிமை பெண்கட்கு வழங்கப்படுவதில்லை. புதிய முறை என்பது ஒவ்வொருவரும் சிந்திக்கவும், ஆராயவும் வேண்டுவதுதான் இத்திருமணம் நிகழ்ச்சியாகும். இதுபற்றி மாலை பொதுக் கூட்டத்தில் விரிவாகப் பேசுவோம். இங்கு நடைபெறும் நடைமுறை நிகழ்ச்சிகள் பெரிதும் பெண்கட்கு பயமாகத் தோன்றலாம். காரணம் அடுப்பூதவும், வேலை செய்யவும் அடிமை என்று பழக்கியும் வந்ததோடு "கல்வி" அறிவு போதாக்குறைதான். செலவுசுருக்கம், நாள்குறை, வேலைகுறை, பெண்கள் உரிமை, மணமக்கள் சம்மதம், கடன்படல், பின்கடன் தீர்க்கப்பாடுபடல் ஆனால் இன்று நடக்கும் திருமணத்திற்கு ஏன் இவ்வளவு பேர் என்று கேட் கலாம். அது ஒரு சாட்சிக்காகத்தான். ஒரு கடை வைப்பவன் மற்ற கடைக் காரர்களை அழைப்பதும், புது பேரேடு போடுவதும், அவர்களது ஒப்பந் தத்தை எடுத்து ருஜுப்பிக்க பேசுவதும் சாட்சிக்காகத்தான். ஆகவே சாட்சி முறை அவசியம். நமக்கு ஆதாரம் சாட்சிதான். முகம்மதியர் ஒரு புத்தகத்தில் கையொப்பம், கிறிஸ்துவர்கள் கோவில் முன்பாக ஒப்பம், நாம் அதற்காகவே இங்கு சாட்சியாகவே கூடியிருக்கிறோம். சாட்சியில்லாததால் சமீபத்தில் ஒரு "கல்யாணம்" தள்ளுபடியாயிற்று. ஆதலால்தான் நாம் கூடி சாட்சியளிக்கின் றோம். பெண் அடிமைப் படுத்துதல் ஒப்பந்தத்தில் சம உரிமையுடன் திட்டம் காணல் வேண்டும். வீணாக பழைய சென்மப்பலன், தலைவிதி என்று கட்டாயப்படுத்தி வருவதால் பெண்கள் இனி கட்டுப்பட்டு வாழாது. நம்மில் ஒருவர் வியாபாரியிடம் முதல் கஷ்டப்பட்டு பாடுபட்டு பின் சுதந்திரம் பெற்று தனித்து வியாபாரியாகுவதை பார்க்கிறோம். புருஷன் தாசி வீட்டிற்கு போதல், கள் குடித்து அடித்தல் போன்ற காரணத்தால் கஷ்டப் படும் பெண்கட்கு விடுதலை வேண்டுவதாகும். நாங்கள் ஏன் இங்கு வந் தோம்? புரோகிதம் செய்ய வரவில்லை. ஆரம்பத்தில் பலருக்கு விளங்காத தால் நாங்கள் வந்து இம்முறையை விளக்க வேண்டுமென்று திரு.பெருமாள் விரும்பியதற்காக வந்தோம். இன்னும் 10 வருஷங்களில் புருஷன் பெண்சாதி தேர்ந்தெடுப்பது கூட எவருக்கும் தெரியப்போவதில்லை. பிற எல்லா நாட்டு நாகரீகங்களைப் பற்றி மட்டும் நாம் கூற தேவையில்லை. அவரவர்கள் அறிவுப்படியே அறிவு வளர்ச்சிப்படியே இத் திருமணம் நடைபெறும். மற்றும் மாலை விரிவாகப் பேசுவோம்.

*குறிப்பு: 13.09.1931 ஆம் நாள் கடலூரில் நடைபெற்ற (கடலூர் திரு.பெருமாள் இல்லத்திருமணம்) திருமதி.இரங்கம்மாள் - திரு.விஜயன், திருமதி.பேபி அம்மாள் - திரு.வெங்கிடசாமி ஆகியோரின் ( இரண்டு ஜோடி மணமக்கள்) திருமணத்தை நடத்திவைத்து ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 20.09.1931**



# சுயமரியாதை இயக்கமும் இராமாநந்த சட்டர்ஜீயும்

சமீபத்தில் விருதுநகரில் நடந்த 3-வது சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்களில் மதங்களைப் பற்றிச் செய்யப்பட்ட தீர்மானத்தைப்பற்றி அதாவது, "மதத்தின் பேரால் அனுஷ்டிக்கப்படும் பழக்கங்களும் பயிற்சி களும் சமூக சீர்திருத்தத்திற்கு தடையாயிருந்து வருவதால், மதங்கள் ஒழியவேண்டும் என்றும் மதங்கள் ஒழியாமல் சகோதரத்துவம் ஏற்படா தென்றும் மதச்சண்டை ஒழியவேண்டுமானால் மக்களுக்குள் மதத்தைப் பற்றிய உணர்ச்சி ஏற்படுவதை நிராகரிக்க வேண்டுமென்றும்" செய்யப்பட்ட தீர்மானத்தின் மீது வங்காளத்தில் வெகுகாலமாய் நடைபெற்று வரும் "மாடர்ன் ரிவ்யூ" என்னும் பிரபல பத்திரிகையின் ஆசிரியராகிய உயர்திரு இராமானந்த சட்டர்ஜீ அவர்கள் மேற்படி பத்திரிகையில் சில ஆக்ஷே பணைக் குறிப்புகள் எழுதியிருக்கிறார்.

அதன் சாராம்சமாவது:-

"மக்களுக்குள் எப்பிரிவினராயினும் சுயமரியாதையைப் பெற விரும்புவரேல் அதற்கு ஒவ்வொருவரும் ஆதரவளிக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் சுயமரியாதைக்காரர்களின் தீர்மான விஷயத்தில் நாம் பின்வருமாறு நினைப்பது தவராயிருந்தால் திருத்தவேண்டுமாய் கோறுகிறோம்.

தென்னிந்திய சுயமரியாதை இயக்கத்தார் சொல்லும் எல்லாக் கொள்கைகளிலும் நியாயமிருக்கின்றதென்று நம்மால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

விருதுநகர் மகாநாட்டின் தலைவர் திரு. ஆர்.கே.ஷண்முகம் அவர் கள் பேசியதாக நமக்கு எட்டிய செய்தியில்,

"இந்தியாவில் மதம் என்று சொல்லப்படும் பலம் பொருந்திய ஸ்தாப னம் மக்கள் முற்போக்கிற்கு தடையாகயிருந்து வருகின்றது" என்று பேசி யிருக்கின்றார்.



RangaRakes tamilnavarasam.com

இதை அனுசரித்து மதங்கள் மறையவேண்டும் என்பதாக ஒரு தீர்மானமும் அம்மகாநாட்டில் செய்யப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து சுயமரியாதைக்காரர்களின் நோக்கம் தெளிவாக விளங்குகின்றது.

திரு. ஷண்முகம் இந்தியாவின் நிலையைப் பற்றி பேசியதால் இந்தியாவின் பண்டை கால மத நிலையைப் பற்றி சற்று ஆராய்வோம் என்று ஆரம்பித்து,

## முற்காலத்தில்

வேதங்களை ஏற்படுத்திய ரிஷிகளும் அது யாருக்கு ஏற்படுத்தப் பட்டதோ அவர்களும் பிறவியில் பிராமணர்களாயில்லாமலிருந்தும் அனைவராலும் பிராமணர்கள் என்றே கருதப்பட்டிருக்கின்றார்கள்.

பிரம்மத்தை வழிபடுபவர்கள் என்ற காரணத்தாலே பலர் பிராமண ரானார்கள். கீதாச்சாரியாரும் கீதை கேட்டவரும் பிராமணராகக் கருதப் பட்டார். ஆதலால் மக்கள் சீர்திருத்தமடைய அக்காலத்தில் மதம் தடுக்கவில்லை.

## மத்திய காலத்தில்

புத்தரால் "புத்த மதம் ஜாதி முறையைத் தகர்த்தது. நானக்கரும் குரு கோவிந்தரும் தாழ்ந்தோர்களை உயர்த்தி அவர்களைச் சகோதரர் களாக்கினார்கள். வங்காளத்தில் சைதன்னியர் முஸ்லீம்கள் உள்பட பலரை ஜாதிமத பேதமின்றி சிஷ்யராக்கிக் கொண்டார். கபீர்தாஸ் பல உயர்ந்த உபதேசங்களைச் செய்திருக்கிறார்.

## தற்காலத்திலும்

ராஜாராம் மோகன்ராய் பிரம்ம சமாஜத்தை உண்டாக்கினார். கேசப் சந்திரசேனர் அதை விர்த்தி செய்தார். ஜாதியை விட வேண்டுமென்றும் சொன்னார். தயானந்த சரஸ்வதி ஆரிய சமாஜம் உண்டாக்கினார். ஈஸ்வர சந்திர வித்தியாசாகரர் விதவாவிவாகத்தை புகுத்தினார். வீரேசலிங்கம் பந்துலு சமூக சீர்திருத்தம் செய்தார். விவேகானந்தர் அரிய உபதேசங்களைச் செய்தார். மகாத்மா காந்தி பிராமணர் பிராமணரல்லாதாருக்கும் ஒரே மாதிரி போதிக்கிறார். ரவீந்திரநாதர் ஒரு பெரியார். இவர்கள் எல்லோரும் செய்த காரியங்கள் மதவுணர்ச்சியை நீக்கி செய்யப்பட்டவைகளல்ல. இப்படி யிருக்க இனி மத நம்பிக்கையில்லாதவர்கள் செய்த காரியம் என்ன என்பதை யோசனை செய்து பார்க்கட்டும். சுயமரியாதைக்காரர் ருஷியா வைப் பின்பற்றுவதாகத் தெரிகின்றது. அங்கும் மதம் அடியோடு அற்றுப் போகவில்லை"

என்பவை கருத்தாக எழுதியிருக்கிறார்.



இவற்றிற்கு நாம் சமாதானம் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். திரு.இராமாநந்த சட்டர்ஜீ அவர்கள் ஒரு உண்மை சீர்திருத்தவாதி என்ப தாகவே நாம் கருதி இருக்கின்றோம். சுயமரியாதை மகாநாட்டுக்கு அவரைத் தலைமை வகிக்கச் செய்ய வேண்டுமென்று ஒரு பிரச்சினை கூட இருந்து வந்தது யாவருக்கும் தெரிந்ததேயாகும்.

ஆகவே அவரது நல்லெண்ணங்களில் நமக்கு சந்தேகம் கொள்ள இதுவரையில் எவ்விதத்திலும் இடமில்லை.

ஆனால் திரு.சட்டர்ஜீ அவர்களால் சொல்லப்பட்ட விஷயங்கள் மக்களுக்குள் ஒரு செல்வாக்குப் பெற்ற அபிப்பிராயமும் சிறிதும் யோசித்துப் பார்க்காமல் சப்த மாத்திரத்திலேயே ஒப்புக்கொள்ளக்கூடிய அளவுக்கு பழக்கமும் விளம்பரமும் கொண்டதாகும். ஆதலால் அவ்வபிப் பிராயங்கள் கொள்கின்றவர்களுக்கெல்லாம் உள் எண்ணம் கற்பிக்க முடியாது என்பதை ஒப்புக் கொள்ளுகின்றோம்.

## முற்காலம்

ஆனால், திரு.சட்டர்ஜீ அவர்கள் காட்டிய முற்கால கதைகளை அப்படியே ஒப்புக் கொண்டு பார்த்தாலும் கூட முற்காலத்தில் ரிஷிகள், தீர்க்கதரிசிகளான பெரியார்கள், கீழ் ஜாதியிலிருந்து பிராமணர்களாகப் பாவிக்கப்பட்டவர்கள் என்பவர்கள் எல்லோருமே மதத்தினாலேயே அந் நிலையை அடைந்தார்கள் என்றாலும் தனித்தனி மனிதர்கள் என்கின்ற முறையில் தனித்தனியான "தெய்வீக" அதாவது மனித சக்திக்கு மீறியதான காரியங்கள் செய்தவர்கள் என்கின்ற நம்பிக்கை காரணத்தினால் தான் பெரியவர்களானார்கள் என்பதோடு அந்த மாதிரி தெய்வீகசக்தி என்பது அவர்களிடம் இருக்கின்றது என்று பாவிக்கப்பட்ட காரணமே அவர்கள் பெரியவர்களாவதை-ஆனதை யாராலும் தடுக்க முடியாமல் செய்து விட்டதே தவிர மற்றபடி யெல்லோருக்கும் அந்தமுறை பயன்பட்டதாக இல்லை என்றும் இப்போதும் எல்லோருக்கும் பயன்படாதென்றும் சொல்லுகின்றோம்.

## மத்திய காலம்

மத்தியகாலத்தில் பல பெரியார்கள், பல சீர்திருத்தங்கள் செய்திருக் கின்றார்கள் என்றால் அவற்றுள் புத்தர் ஒருவர் செய்த சீர்திருத்தத்தால் தான் இன்று அனேக மக்கள் ஒன்றுபட்டிருப்பதை காணலாம். ஆனால் புத்தர் ஒரு கடவுளையோ ஒரு மதத்தையோ ஆதாரமாய் வைத்துக் கொண்டு தனது சீர்திருத்தத்தைச் செய்தார் என்று சொல்லி விடமுடியாது. ஆதலா லேயே அவர் சுயமரியாதைக்காரர்கள் போல் இந்துக்கள் முதலிய எல்லா மதக்காரர்களாலும் இந்துக்களின் புராண இதிகாசங்களாலும், நாஸ்திகர் என்றும், மதமற்றவர் என்றும் இன்றும் சொல்லப்பட்டே வருகிறார்.



RangaRakes tamilnavarasam.com

மற்றபடி நானக், குரு கோவிந்தர், கபீர், சைதன்னியர் முதலியவர்களும் சீர்திருத்தம் செய்யப் புறப்பட்டவர்கள் என்று சொல்லிக் கொள்ளலாமே தவிர அவர்களது உபதேசங்கள், முயர்ச்சிகள் ஆகியவைகள் மக்களில் சிறு சிறு கூட்டம் கொண்ட பலப் பல பிரிவுகளை உண்டாக்கிற்று என்பதைத்தவிர இந்திய பொதுமக்களுக்கு என்ன சீர்திருத்தம் செய்தது என்பது நமக்கு விளங்கவில்லை.

ஒவ்வொரு பெரியார் என்பவர்களின் பேரால் ஒவ்வொரு கூட்டம் தனித்து இருந்து கொண்டு மற்றக் கூட்டத்தினரிடம் அதிருப்தியுடன் வாழ்ந்து வருகின்றன என்பதை பிரத்தியக்ஷமாய்க் காண்கின்றோம்.

## தற்காலத்திலும்

ராஜாராம்மோகன் ராய் அவர்களால் செய்யப்பட்ட சீர்திருத்தத்தின் பயனாய் சிற்சில இடங்களில் மாத்திரம் பிரம்ம சமாஜம் என்னும் பேரால் சில லக்ஷம் பேர்களும், தயானந்த சரஸ்வதி அவர்களால் செய்யப்பட்ட சீர் திருத்ததத்தின் பயனாய் ஆரிய சமாஜத்தின் பேரால் சில இடங்களில் சில லக்ஷம் பேர்களும் ஒரு தனித்தனிப் பிரிவினராக இருந்து வருகிறார்கள்.

விவேகாநந்தர் உபதேசம் எவ்வளவு மேன்மையானது என்று சொல்லப்பட்டாலும் அது பெரும்பாலும் தர்க்கவாதத்திற்கு இந்தியப் புராதனப் பெருமையை பேசுகின்ற சந்தோஷ சமயத்திற்கும் மாத்திரம் பயன்படுவதன்றி காரியத்தில் என்ன பயன் ஏற்பட்டது என்பதை சென்னை மைலாப்பூரில் இருக்கும் ராமகிருஷ்ணா ஹோமை போய்ப்பார்த்தால் விளங்கும். அதாவது, ஊராரிடம் பணம் பறித்து பிள்ளைகளுக்கு பட்டை நாமமும், சாம்பலும் பூசப்பட்டு தனித்தனி அரைகளில் உட்கார வைத்து சாப்பாடு போட்டு, ஜாதி வித்தியாசம் கற்பிக்கப்பட்டு உயர்வு தாழ்வு நிலை நிறுத்தப்பட்டு வருகிறது. திரு.காந்தி அவர்கள் பிராமணருக்கும், பிராமணரல்லாதாருக்கும் செய்யும் உபதேசம் தென்னிந்திய பிராமணரல்லாதாரால் எப்படி கருதப்படுகின்றது என்பதும், காந்தி அவர்கள் மக்களை எந்தக்கால உலகத்திற்கு கொண்டு போக பாடுபடுகின்றார் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் தென்னிந்தியாவில் உள்ள காந்தி சீஷர்களில் பார்ப்பனர் தவிர மற்றவர்கள் திரு.காந்தியை மத சம்பந்தமான விஷயங்களில் ஏற்றுக்கொள்ளுகின்றார்களா? என்பதும் நடு நிலைமை விசாரணை செய்து பார்த்தால் உண்மை விளங்கும்.

அன்றியும் அவரது சீர்திருத்த உபதேசம் இன்றைய கெடுதிகளில் எதை மாற்றக்கூடியதாயிருக்கின்றது என்ற விஷயத்தை முடிவு செய்ய திரு.சட்டர்ஜீ அவர்களுக்கே விட்டு விடுகின்றோம்.

ஆகவே முற்காலம்-மத்தியகாலம்-தற்காலம் என்று சொல்லப்பட்ட காலங்களில் எத்தனையோ பெரியார்கள் ஏற்பட்டு மதத்தின் பேரால்



அல்லது மதத்தை தள்ளிவிடாமல் மத உணர்ச்சியால் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் என்னப்பட்டவைகள் செய்த காரியங்கள் என்னவாய் இருந்தபோதிலும் இச் சீர்திருத்தவாதிகள் தோன்றுவதற்கு முன் இந்தியா இருந்த நிலைமையைவிட இன்று என்ன துறையில் எவ்வித மாறுதல் அடைந்திருக்கின்றது என்கின்றதான பிரத்தியக்ஷ அனுபவங்களைக் கொண்டுதான் நாம் மதத்தை சேர்த்து செய்யப்படும் சீர்திருத்த வேலைக்கும் மதத்தை நீக்கி செய்யப்படும் சீர்திருத்த வேலைக்கும் வித்தியாசங்கள் பார்க்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

திரு. சட்டர்ஜீ அவர்கள் எடுத்துக்காட்டிய பெரியார்களின் வாக்கை-கொள்கையை இன்று ஒப்புக்கொண்டு நடக்கும் மக்கள் எத்தனைபேர்கள் இந்தியாவில் இருக்கின்றார்கள் என்பதை கவனிக்குமுன், இப்பெரியார்களை பெரியார்களாக, தெய்வாம்சம் பொருந்தியவர்களாக கருதி வணங்கும் மக்களில் ஆயிரத்தில் ஒருவராவது அவர்களது கொள்கையை ஒப்புக் கொண்டு நடக்கிறார்களா என்று கேட்கின்றோம். இதற்குக் காரணம் மதமா? அல்லது அப்பெரியார்களின் மீதுள்ள அலட்சிய புத்தியா? அல்லது மனிதனின் முட்டாள்தனமா? என்றும் தெரிய விரும்புகிறோம்.

முற்கால மத்தியகால தற்கால தெய்வீகப் பெரியார்கள், தீர்க்கதரிசிகள், சுவாமிகள், மகாத்மாக்கள் ஆகியவர்கள் மதத்தின் பேரால் செய்து வந்த சீர்திருத்த வேலையின் பலனை ஒரு வாக்கியத்தில் அடக்க வேண்டுமானால் இந்தியாவில் இந்து மதத்தின் பேரால் எத்தனை ஆயிரம் ஜாதிகள்? எத்தனை லட்சம் பிரிவுகள்? எத்தனை கோடி தீண்டக்கூடாத-கிட்ட வரக் கூடாத-கண்ணில் தென்படக்கூடாத மக்கள், எத்தனை பத்துக் கோடி கீழ் ஜாதி "சூத்ரஜாதி" மக்கள்? எத்தனை பத்துக்கோடி தற்குறிகள்? என்பவற்றை கவனித்து பார்க்கும்படி திரு.சட்டர்ஜீ அவர்களை வணக்கமாய்க் கேட்கின்றோம்.

திரு. சட்டர்ஜீ அவர்களால் எடுத்துக் காட்டப்பட்ட பெரியார்களில் யாராவது நாம் சொல்லும் மதத்தை அடியோடு ஒழித்து வேலை செய்திருப்பார்களானால், அப்பெரியார்கள் வேலை வெற்றி பெற்று இருக்குமானால், வெற்றி பெற அறிஞர்கள் உதவி இருப்பார்களானால் இன்று நாம் மேல் எடுத்துக்காட்டியதான இத்தனை ஆயிரக்கணக்காகவும் லட்சக்கணக்காகவும் கோடிக்கணக்காகவும் பத்துக்கோடிக்கணக்காகவும் வித்தியாசங்களும் மேல்கீழ்படிகளும், மாச்சரியங்களும், இழிவுகளும்,கொடுமைகளும், காட்டு மிராண்டித்தனமான உணர்ச்சிகளும் இருந்து வருமா? என்று பின்னும் பின்னும் வணக்கமாய் கேட்கின்றோம். மதத்தில் ஆழ்ந்திருக்கும் எண்ணமானது அதன் பயனாய் ஏற்பட்ட இவ்வளவு பயங்கரமான பலன்களையும் அலட்சியமாய் எண்ணியிருக்கும்படி மனதை அவ்வளவு இரும்பாக்கி விட்டது.



RangaRakes tamilnavarasam.com

மேலும் திரு.சட்டர்ஜீ அவர்கள் மதத்தில் நம்பிக்கை அற்றவர்கள் இதுவரை என்ன செய்திருக்கின்றார்கள்? என்று ஒரு கேள்வி கேட்கின்றார். அது மிகவும் சரியான கேள்வியேயாகும். ஆனால் மத நம்பிக்கை அற்றவர் களின் வேலையானது எப்படி இருந்தபோதிலும் மதநம்பிக்கை உள்ள வர்கள் வேலையின் பயன் அவர்கள் செய்யும் வேலையின் சௌகரி யத்தைப் போல அவ்வளவு சுலபமான வேலையாயில்லை.

ஏனெனில் முற்சொன்னவர்களது வேலையானது திரு.ராமானந்த சட்டர்ஜீ போன்ற பெரியார் முதல் கொண்டு அதிர்ப்தி படவேண்டியதும் சங்கடப்பட வேண்டியதுமான ஒரு எதிர் நீச்சல் வேலையாய் இருக்கின்றது. இவ்வேலை செய்பவர்களோ, பெரியார்கள், சீர்திருத்தக்காரர்கள் அறிஞர்கள், கற்றவர்கள், செல்வவான்கள், ஏழைகள், “பெரிய ஜாதியார்கள்” “இழி மக்கள்” என்று சொல்லப்பட்டவர்கள் எல்லோராலும் வெறுக்கப்பட வேண்டியவர்களாகவும் எதிர்க்கப்பட வேண்டியவர்களாகவும் இருக்க வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். மதத்தினால் தங்கள் தங்கள் யோக்கியதைக்கு மீறின சௌகரியமும், மேன்மையும் அடைந்து வருகின்ற வர்கள் மாத்திரமல்லாமல் கஷ்டமும் இழிவும் அடைகின்றவர்களும் தங்களை இக்கெதிக்கு ஆளாக்கியதின் பயனை அனுபவிக்கின்றவர் களுடன் சேர்ந்து கொண்டு நம்மை நமது வேலை நடக்கவொட்டாமல் தடுக்கின்றார்கள் என்றால் மதத்தின் கொடுமைக்கு வேறு எதை சமானமாகச் சொல்லலாம் என்பதும், இப்படிப்பட்ட கொடுமைக்கு ஆதாரமான மதத்தை ஒழிப்பது என்பதானது தீர்மானம் செய்யப்பட்ட மறுநாளே பலன் பார்க்கக் கூடியதா என்பதும் திரு.சட்டர்ஜி அவர்களால் தர்ம சிந்தனையோடு கவனிக்கப்படவேண்டிய தாகும்.

மதமற்றவர்களால் ஏற்பட்ட நன்மைகள் என்ன என்பதை கணக்கு பார்க்க இன்னமும் காலம் வரவில்லை என்றுதான் சொல்லுகின்றோம். மதத்தின் பேரால் கட்டிப்போடப்பட்டிருக்கும் மக்களுக்கு சுயஞானம் ஏற்பட்ட பிறகும் மதத்தின் பேரால் பயனடைந்து வருகின்றவர்களுடைய எதிர்ப்புகளை சமாளிக்க சௌகரியம் செய்து கொண்டபிறகும் தான் மத நம்பிக்கை அற்றவர்களின் வேலையை கணக்குப் பார்க்க வேண்டும் என்று வணக்கமாய் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றோம்.

மத நம்பிக்கை அற்றவர்கள் தங்கள் வேலையில் வெற்றி பெருவார் களா? என்கின்ற விஷயத்தில் நாம் உறுதிகூற துணியவில்லை. ஆனால் நாம் கூறும் மதநம்பிக்கை அற்றால்தான் அதன் பேரால் இழிவுபடுத்தப் பட்ட-பிரிவுபடுத்தப்பட்ட-சூக்ஷி செய்து ஏமாற்றப்பட்ட மக்கள் விடுதலை பெற்று சமத்துவமடைந்து உலக சகோதரத்துவம் கொண்டாட முடியும் என்பதில் நமக்கு சிறிதும் சந்தேகமில்லை என்பதோடு இதுவே வைரம் போன்ற நமது உறுதியான எண்ணமாகும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.



தவிர “தென்இந்திய சுயமரியாதைக்காரார்கள் ரஷியாவை பார்க் கிறார்கள்” என்று எழுதி இருப்பதைப் பற்றி சுயமரியாதைக்காரர்கள் அவ மான மடையவில்லை. ஏனெனில் ரஷியா எவ்வித இழிவான வேலை யையும் மகாபாதகமான வேலையையும் செய்வதாக நாம் கருதவில்லை. ஒரு சமயம் ரஷியா முட்டாள்தனமான வேலை செய்வதாக வேண்டு மானால் சொல்லிக் கொள்ளட்டும். முட்டாள்தனமான காரியம் சூக்ஷியான வேலையைவிட கெட்ட காரியமாகி விடாது. திரு. ராமானந்த சட்டர்ஜீ அவர்கள் தென் இந்தியாவை, தென்இந்தியப்பார்ப்பனரைக் கொண்டும், அவர்களது பத்திரிகையைக் கொண்டும், அவர்களது அரசியல் இயக்கங் களைக் கொண்டும் பார்க்காமல் வாழ்க்கையில் சகல துறைகளிலும் கீழ் ஜாதியார்களாகவும் சூத்திரர்களாகவும், நாஸ்தீகர்களாகவும், தேசத்துரோகி களாகவும், பிராமணத்துவேஷிகளாகவும், சர்க்கார் தாசர்களாகவும் பெயர் சூட்டி ஒதுக்கித் தள்ளி வைத்திருக்கும் மூன்றே முக்கால் கோடி மக்களின் மூலமாக பார்ப்பாரேயானால் ருஷியாவைப் பற்றிய அபிப்பிராயம் அந்த நாட்டுக்கு சரியென்றோ, தப்பென்றோ பட்டாலும் தென் இந்தியாவுக்கு அவசியம் என்று உணருவதோடு ருஷியாவுக்கு வழிகாட்டக் கூடிய சக்தியைக்கூட பெற்று விடுவார் என்றே கருதுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 20.09.1931**



RangaRakes tamilnavarasam.com

# கேள்வி

## மூன்று கன்றுக்குட்டிகள்

மூன்று பசுவின் கன்றுக்குட்டிகள் ஒன்றாய் ஒரு காட்டில் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றில் குடியானவர் வீட்டுக்கன்றுக்குட்டி:-

"நண்பர்களே வீட்டுக்கு போகலாம், பால் கரக்கும் நேரமாய் விட்டதால் நாம் போய் பால் குடிக்கலாம்" என்றது.

செட்டியார் வீட்டு கன்றுக்குட்டியானது "பால் கரக்கின்ற நேர மானால்தான் என்ன முழுகிப் போய்விட்டது? வயிரார பால் கிடைக்கவா போகின்றது?" என்றது.

மூன்றாவதான அய்யர் வீட்டுக்கன்றுக்குட்டியானது "நீங்கள் என் னமோ பேசிக்கொள்ளுகின்றீர்களே? எனக்கு ஒன்றுமே விளங்க வில்லையே" என்றது.

ஒவ்வொன்றும் இந்தப்படி பேசியதின் கருத்து என்ன?

**பதில்**

குடியானவன், கன்றுக்குட்டிக்கு வயிரா ரப் பால் கொடுப்பது வழக்கம்.

செட்டியார், கன்றை அவிழ்த்து விட்டு முலைக்காம்பில் வாய்வைத்து முட்டி கொஞ்சம் பால் குடித்தவுடனேயே கன்றுக்குட்டியை பிடித்துக்கட்டி விடுவது வழக்கம்.

அய்யரோ, கன்றுக்குட்டியை மாட்டுக்கு எதிரில் காட்டுவதைத்தவிர பக்கத்தில் கட்டி இருக்கக்கூட சம்மதிக்காமல் பால் கரந்து கொள்ளுவார். ஆதலால் அவை தன் தன் அனுபவங்களையே பேசின.

**குடி அரசு - விளக்கக்குறிப்பு - 20.09.1931**



# தற்கால ரஷியாவின் கல்விமுறை

அறிவில்சிறந்த தலைவர் அவர்களே! சகோதரர்களே!! சகோதரிகளே!!!

இங்கு இன்று இந்தக் கூட்டமானது இந்தப் பள்ளிக்கூடத்துப் பிள்ளை களின் அறிவுப் பெருக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்டூடன்ஸ் லிட்டரரிஅசோசியேஷனின் இவ்வருஷ ஆரம்பக் கொண்டாட்டத் திற்காக கூட்டப்பட்டதாகும். இதில் தலைமை வகிக்கும் கனவான் திரு.எஸ்.ராம நாதன் எம்.ஏ.பி.எல் அவர்கள் கல்வி அறிவில் தேர்ச்சிபெற்ற ஒரு பெரிய பண்டிதராவர். இப்போது இங்கு எனக்கு முன் முதலாவதாக உபன்யாசம் செய்த உபன்யாசகர் திருமதி சி.பி.காமாக்ஷியம்மாள் எம்.ஏ.எல்.டி. அவர் களும் கல்வியறிவில் தேர்ச்சிபெற்ற ஒரு பண்டிதை யாவார்கள். இங்கு கூடி யிருக்கும் கனவான்களும் அனேகமாக கல்வியில் தேர்ச்சி பெற்ற பெரிய பெரிய பி.ஏக்களும், எம்.ஏக்களும் எல்.டி. களுமா யிருக்கின்றார்கள். இந்தச் சமயத்தில் இங்கு செய்யப்படவேண்டிய உபந்யாசமும் கண்டிப்பாகக் கல்வி யைப் பற்றியதாகவே இருக்க வேண்டியது பெரிதும் பொருத்தமானதாகும்.

ஆகவே இப்படிப்பட்ட சமயத்தில் இங்கு உபன்யாசம் செய்ய அழைக்கப்பட்டிருக்கும் நானோ, இப்படிப்பட்ட கல்வி இல்லாதவனும், ஆங்கிலத்தில் ஏதுமே கற்காதவனுமாய் இருக்கின்றேன். ஆதலால் நீங்கள் என்னிடமிருந்து முந்திய உபன்யாசகர்கள் உபன்யாசித்தது போன்ற அருமையான விஷயங்கள் எதையும் எதிர்பார்க்க முடியாது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் கல்வி என்பதைப்பற்றி ஏதாவது பேசுவதென்றால் பள்ளிக்கூடத்தின் மூலமோ, புஸ்தகத்தின் மூலமோ கற்ற கல்வி என்பதைப் பற்றி ஏதுமே பேசமுடியாது. ஆனால் ஏதோ எனது பிரத்தியட்ச அனுபவத்தின் மூலம் கேள்வி மூலம் கல்வி என்னும் விஷயமாய் நான் கொண்ட ஏதாவது சில அபிப்பிராயங்களைப் பற்றித்தான் சிறிது பேசமுடியும்.ஆனால் அவை அனேகமாகப் பள்ளிக் கூடக்கல்விக்கும் புஸ்தகக் கல்விக்கும் மாறுபட்ட அபிப்பிராயமாக இருந்தாலும் இருக்கலாம். ஆதலால் நீங்கள் நான் சொல்வதை ஆதார மாய்க்கொள்ளாமல் ஒரு தனி மனிதனின் கேள்வி அனுபவ அபிப்பிராயம்



RangaRakes tamilnavarasam.com

என்கின்ற முறையில் கவனித்து அதை அலசிப் பார்த்து ஒப்புக்கொள்ளத் தக்க விஷயம் ஏதாவது இருக்கின்றதா என்று கவனித்து அவற்றுள் உங்களுக்கு பிடித்தது ஏதாவது இருந்தால் எடுத்துக்கொண்டு மற்றதை குப்பையில் தள்ளிவிடுங்கள். அந்த உணர்ச்சியோடு தான் மற்றும் எந்த விஷயத்தையும் கவனிக்க வேண்டு மென்பது முறையானாலும் சிறப்பாக நான் சொல்லும் விஷயத்தை நடு நிலையில் இருந்து நன்றாய் யோசித்துப் பார்த்த பிறகே அதை மதியுங்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## கல்வி முற்கால கல்வி

சகோதரர்களே! கல்வி விஷயத்தில் இந்த சகாப்தத்தில் இருக்கும் மக்கள் மிகவும் மேன்மை பெற்றவர்களே ஆவார்கள். ஏனெனில் முந்திய சகாப்தத்திற்கும் பிந்திய சகாப்தத்திற்கும் கல்வி கற்பிப்பதில் எவ்வளவோ வித்தியாசங்கள் உண்டு. முதலாவது நம் சகாப்தத்திற்கு முந்திய காலத்தில் இன்ன இன்னார் தான் கல்வி கற்பிக்க உரிமையுடைவர்கள் என்கின்ற நிபந்தனை இருந்தது. இன்ன இன்ன விஷயந்தான் கற்பிக்கப்படலாம் என்கின்ற நிபந்தனையும் இருந்தது. இதோடு மாத்திரமல்லாமல் இன்ன இன்னார்தான் கல்வி கற்பிக்கப்பட உரிமையுடையவர்கள் என்கின்ற நிபந்தனையும், இன்ன இன்னவர்களுக்கு எழுத்துவாசனையே கற்பிக்கப் படக்கூடாது என்கின்றதான நிர்ப்பந்தமும் இருந்து வந்தது. இந்த மாதிரி யான நியமங்களினாலும், நிர்ப்பந்தங்களினாலும் கல்வி என்பது “மூடுமந்தி ரம்” போன்று ஒரு ரகசியப் பொருளாகவே இருந்து வந்தது. இந்தக் காரணங்களால் முற்காலங்களில் ஆயிரத்தில் ஒருவர் இருவரே கல்வி கற்றவர்கள் என்று சொல்லும்படியான மாதிரியில் இருந்து வந்ததோடு கல்வி கற்றவர்கள் என்பவர்களே எல்லா மக்கள்மீதும் எல்லாக் காரியத்திலும் ஆதிக்கம் செலுத்துபவர்களாய் இருந்து வந்தார்கள். அன்றியும் மேல் சொல்லப்பட்ட இந்த நிபந்தனைகளும், ஆதிக்கங்களும், எல்லாம் மக்கள் பிரிவில் ஒரு தனிபிரிவார் மாத்திரம் அதுவும் பிறவிகாரணமாய் உரிமை கொண்டாடத் தக்கதாய் இருந்து வந்ததே அல்லாமல் மற்றபடி பொதுத் தகுதியைக் கொண்டதாகவோ, எல்லோருக்குமே சம உரிமையைக் கொண்டதாகவோ சிறிதும் இருந்து வரவில்லை.

சாதாரணமாய் நமது இந்தியாவை முழுவதும் எடுத்துக்கொண்டு பழைய கல்வி போதனாமுறை என்பதை ஒரு முறையாக வைத்துப் பார்ப்போமானால் இந்தியாவில் உள்ள 35 கோடி மக்களில் 17 $^{1}/_{2}$ கோடி மக்களான பெண்களுக்கு எந்தக்காரணத்தைக் கொண்டும் கல்வி கற்பிக்க முடியாததாகும். மற்றொரு பிரிவில் 7 கோடி ஜனசமூகம் ஆகிய தாழ்த்தப் பட்ட மக்கள் என்பவர்கள் விஷயத்திலும் படிப்பு என்பது நினைப்பதற்கே முடியாத காரியமாய் இருக்கும். மற்றும் பார்ப்பனர்கள், அரசர்கள், வியா பாரிகள் என்கின்ற வெகு சிறிய கூட்டத்தார்கள் மாத்திரம் கல்வி கற்க



உரியவர்களாவார்கள். அவர்களிலும் கல்வி கற்பிப்பதில் பிரிவுக்கு பிரிவு வித்தியாசமிருக்கும்.

## இன்றைய கல்வி

ஆனால் இன்றைய கல்வி போதனை விஷயத்தில் இவ்வித வித்தியா சங்கள் ஏதும் இல்லாமல் யாருக்கும் யாவரும் கல்வி கற்பிக்கப் படலாம் என்கின்ற ஒரு நியமம் இருந்து வருகின்றது. ஆகையினால் நான் முந்திய சகாப்தங்களை விட பிந்திய சகாப்தம் கல்வி விஷயத்தில் பாராட்டக் கூடியது என்று சொன்னேன். ஆனபோதிலும் கல்வியின் இன்றைய லட்சிய மும் கற்பிக்கும் போதனாமுறையும் பாராட்டக்கூடியது என்பதாகச் சொல்லிவிட முடியாது.

ஏனெனில் கல்வி என்பது ஒரு மனிதனுக்கு கற்பிக்கப்படவேண்டிய அவசியமெல்லாம் ஒருவன் தனது வாழ்நாளில் சுதந்திரத்தோடு வாழ்வதற்கு தகுதிப்படுத்துவது என்பதேயாகும். அல்லது உலகில் நல்வாழ்க்கை வாழத் தகுதியுடையவனாக்குவது என்பதாகும்.

அதாவது ஒவ்வொரு காரியத்திற்கும் மற்றவர்களை எதிர்பார்த்தோ, மற்றவர்கள் ஆதிக்கத்தில் இருந்தோ அல்லது தனக்கு மற்றவர்கள் வழிகாட்ட வேண்டிய நிலையிலோ மனிதன் இல்லாமல் சுதந்திரத்தோடு சுய ஞானத்தோடு வாழத் தகுதியுடையவனாக வேண்டும் என்பதேயாகும். அன்றியும் கல்வி கற்பிக்கும் கடமையில் இருக்கும் ஒவ்வொருவரும் கல்வியின் அவசியத்திற்கு இந்தக் காரணங்களைத்தான் சொல்லுகின்றார் கள். கற்பிக்கப்படுபவர்களும் இந்த எண்ணத்தின் மீதுதான் தாங்கள் கற்பதாக கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கல்வியின் பயன் இந்த லக்ஷியத்திற்கு அனுகூலமாயிருக்கின்றதா என்பதை சற்று யோசித்துப் பாருங்கள்.

பொதுவாக, எந்த தேசீயத்திலுமே மக்களுக்கு கல்வி கற்பிக்கும் பொருப்பில் இருப்பவர்கள் எல்லோரும் கல்வி போதிக்கும் விஷயத்தில் ஒருவிதமான உள் கருத்தை வைத்துதான் அதை கல்வியின் மூலம் போதிக் கும் முயர்ச்சியில் இருந்து வருகின்றார்கள். அந்த மாதிரியான உள் கருத்தை போதிப்பதில் கல்வியானது மக்களுக்கு அறிவுக்கும் வாழ்க்கையில் சுதந்திர மாய் வாழ்வதற்கும் பயன்படுகின்றது என்கின்ற கொள்கையை விட தாங்கள் கொண்ட உள் எண்ணத்தையே மிகமுக்கியமாய் கருதுகின்றார்கள். உதாரணமாக ஒரு தேசத்தார் தேசபக்திக்கு ஏற்ற கல்வி இருக்கவேண்டும் என்று கருதுகிறார்கள். மற்றொரு தேசத்தார் மத பக்திக்கு ஏற்றதான கல்வி வேண்டுமென்று கருதுகிறார்கள். மற்றொருவர் வீரம் ஏற்படவேண்டுமென்று கருதுகிறார்கள். இன்னொருவர், அந்த நாட்டு பழமையான பழக்க வழக்கம் ஏதோ ஏற்படுவதற்குத் தகுந்ததாயிருக்கவேண்டுமென்று கருதுகின்றார்கள். மற்றும் சிலர் கடவுள் பக்தி புகட்டுவதற்கு அனுகூலமாய் பார்க்கின்றார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இப்படியாகவே பல உட்கருத்துகளை பிரமாதமாய் கருதி கல்வி முறை ஏற்படுத்துவதில் கல்வியின் உண்மையான பிரயோஜனம் ஏற்படாமலே மறைந்து போய்விடுகின்றது.

## கல்வியும் மதமும்

இந்தக் காரணங்களால் கல்வி கற்றவர்கள் எல்லாம் அறிவாளிகளாய் இருக்கமுடியாமல் எந்த உள் காரணத்தை வைத்து கற்பிக்கப்பட்டார்களோ அதற்கு மாத்திரமே பயன்படுகின்றவர்களாக ஆகிவிடுகின்றார்கள். கல்வி கற்பிப்பதில் இக்குறைபாடுகள் தவிர மற்றொரு பலமான கெடுதி என்ன வென்றால், கல்வி கற்பிப்பதில் மதத்தின் ஆதிக்கம் வந்து புகுந்து அறிவுக் காக கல்வி என்பது மாறி முட்டாள் தனமும், விசாரணைஅற்ற தன்மையும் வருவதற்கே கல்வி பயன்படும்படியாக ஆகிவிடுகின்றது. இது இன்று உலகத்தில் இரண்டொரு தேசம் தவிர மற்ற தேசங்களிலெல்லாம் நடந்து வரும் சம்பவமாகும்.

இதற்கு காரணமென்ன வென்றால், கல்வியின் பொருப்பு எல்லாம் மதங்களினுடையவும், மத ஸ்தாபனங்களினுடையவும் ஆதிக்கத்தில் சிக்கி மதபோதகர்கள், மதகுருக்கள், மதத்தலைவர்கள் ஆகியவர்களால் நடத்தப் பட்டு வருகின்றவைகளாய் இருப்பதே காரணமாகும்.

மதத்திற்கும், உலக இயற்கைக்கும் எப்போதுமே சம்பந்தம் இருப்ப தில்லை. ஏனெனில் அனேகமாய் எல்லா மதங்களுமே உலக இயற்கையின் மீது ஆதிக்கம் செலுத்தி அதை வழிமரித்து கண்மூடித்தனமான செயர்க் கையில் திருப்புவதையே ஜீவநாடியாய் கொண்டிருக்கின்றது. அதனால் மதம் கலந்த படிப்பால் இயற்கை அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் இடமில்லா மலே போய் விடுகின்றது. எப்படி எனில் மதங்கள் என்பவைகள் எல்லாம், ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் இருந்தே காணப்படுபவைகள் ஆகும்.

ஆகவே, மத சம்பந்தமான கொள்கைகள், அபிப்பிராயங்கள், முதலியவைகள் எல்லாம் அந்தக் காலத்திய உலக நிலை, அறிவு நிலை, ஆராய்ச்சி சவுகரிய நிலை, கல்வி நிலை ஆகியவைகளுக்கு ஏற்றவை களாகவே இருக்கும். ஆதலால் அவை இந்தக்கால அறிவு, ஆராய்ச்சி சவுகரியம் முதலியவைகளுக்கு ஏற்றதாக இருக்க முடியாது. இந்த குறைபாடானது உலக தோற்றத்தின்-மனித வாழ்க்கையின் ஒவ்வொரு தன்மையிலும் இருக்க வேண்டியதாகிவிட்டது. ஆதலால் கல்வியும் மதமும் கலந்தால் அறிவு சூன்யமாக வேண்டியதைத் தவிர வேறில்லை.



## பகுத்தறிவும்-மதமும்

உதாரணமாக தற்கால நிலைமையின் பயனாய் ஏற்பட்ட ஆராய்ச்சி சவுகரியத்தை கைகொண்ட ஒரு வான சாஸ்திரி கிரகணத்திற்கு காரணம் சொல்லுவதாய் இருந்தால், அவன் பூமியுடையவும், சூரியனுடையவும் நடப்பைக் கொண்டு கணக்குபோட்டு பார்த்து ஒன்றின் நிழலால் மற்றொன் றின் ஒளி இன்ன காலத்தில் இன்ன அளவுக்கு மறைக்கப்படுகின்றது என்று சொல்லுவான். இதே விஷயத்தைப் பற்றி மத சாஸ்திரியை கேட்டால் அவன் சூரிய, சந்திரன்களுக்கு ஏற்பட்ட சாபத்தின் பயனாய் ராகு,கேது என்னும் இரண்டு கெட்ட கிரகங்களால் ஏற்படும் பீடைகள் என்று சொல்லுவான்.

இதில் இருக்கும் மற்றொரு ஆச்சரியம் என்னவென்றால், ஒரே ஆசாமி வானசாஸ்திரியாய் இருந்து பாடம் கற்பிக்கும்போது பூமியின் நிழ லால் மறைக்கப்படுகின்றதென்றும் மத சாஸ்திரியாய் இருந்து பாடம் கற்பிக் கும்போது சூரியன், சந்திரன் என்னும் தேவர்களை ராகு,கேது என்னும் பாம்புகள் விழுங்குகின்றன என்றும் சொல்லுவான்.

இதுமாத்திரமல்லாமல் வானசாஸ்திரியாய் இருந்து சூரியக்கிரகணத் தன்மையைப் பிரதியட்சப் பாடமாக சில சாதனங்களைக் கொண்டு பிள்ளை களுக்குப் பாடம் கற்புவித்துவிட்டு வீட்டுக்குப் போனவுடன் ராகு, கேது பாம்புகள் விழுங்குகின்றன என்பதற்குத் தகுந்தபடி தோஷ பரிகாரத்திற்கு ஸ்நானம் செய்யவும் தற்பணம் செய்யவும் சங்கல்பம் செய்து கொள்ளவும் சாந்தி செய்யவுமான காரியத்தில் ஈடுபடுகின்றான். ஆகவே கல்வியுடன் மதத்தையும் கலக்குவதால் மனிதனுடைய பகுத்தறிவும் அறிவு சுதந்திரமும் எவ்வளவு கேவலமான நிலைமைக்கு வந்து விட்டது என்பதை நினைத்துப் பாருங்கள்.

அதிலும் நமது மதசம்பந்தமான அபிப்பிராயங்களும், குறிப்புகளும் மிகமிகப் பழமையானதினால் காட்டுமிராண்டித்தனமான காலத்து எண்ணங் களையும் அதன் முடிவுகளையும் இன்று எவ்வளவோ தெளிவான காலத் தில் கட்டிக்கொண்டு அழுவதுடன் அதைக் கல்வியுடன் கலக்கி கல்வி யையே பாழ்படுத்தி விட்டோம்.

## உபாத்தியாயர்கள்

இன்றைய கல்வியில் முக்கியமாக நமது நாட்டுக் கல்வியில் இருக் கின்ற ஆபத்தும் பயனற்ற தன்மையும் எதனால் என்று பார்ப்போமானால் நமது கல்வி போதகர்கள் எல்லாம் மதத்தின் சாக்கினால் மேன்மையடைந்து வருகின்றவர்களாகவே ஏற்பட்டு விட்டதாகும். மதம் என்னும் உலோகத்தி னால் ஒரே அச்சில் உருக்கி வார்க்கப்பட்ட உருவங்களேதான் இன்று பெரிதும் உபாத்தியாயர்களாக அமைந்து இருக்கின்றார்கள். இம்மாதிரி



RangaRakes tamilnavarasam.com

உபாத்தியாயர் களிடம் படிக்கும் பிள்ளைகளுக்குக் கல்வியினால் எப்படி அறிவும் சுதந்திர ஞானமும் உண்டாகமுடியும் என்பதை யோசித்துப் பாருங்கள். அறிவு வேறு மதம் வேறு என்று பிரித்துவிட வேண்டும். அறிவை உண்டாக்கி விட்டு பிறகு அந்த அறிவின் மூலம் மதத்தைக் கொள்ளும்படி செய்ய வேண்டும். அப்படிக்கில்லாமல் மதத்தைப் புகுத்தி அதன் மூலம் அறிவை வளரவிடாமல் செய்து விட்டால் சுதந்திரஞானம் எப்படி ஏற்படும்?

இரண்டும் இரண்டும் ஐந்து என்றால் எப்படி ஐந்து? என்று கேள்க் கக்கூட உரிமை இல்லாதமுறையில் கல்விகற்பித்தால் கணக்கில் ஒரு மனிதன் தேர்ச்சிபெற முடியுமா? அதுபோலவே இயற்கை விஷயங்களில் காட்டுமிராண்டிக் காலமுதல் கர்ண பரம்பரையாக கேட்டு வந்த சேதியையே சொல்லிக்கொண்டு அதையே போதித்து வந்தால் அதன் மூலம் எப்படி இயற்கை அறிவு ஏற்படுத்த முடியும்?

பிள்ளைகளுக்கு சுதந்திர ஞானம் பரவச்செய்யும் கல்விக்காக சில தப்புகள் செய்ய வேண்டி வந்தாலும் அனுமதிக்கத்தான் வேண்டும். ஆனால் அத்தப்பிதத்தை அனுமதிக்கும் முறையில் வேண்டுமானால் நாம் சற்று ஜாக்கிரதையில் இருந்து அத்தப்பிதத்தினால் ஏற்பட்ட பயனைக்கொண்டு பிரத்தியட்ச அனுபவ அறிவுபெறத் தகுதியாக்கவேண்டும். உபாத்தியாயர் களின் புத்திசாலித்தனத்தை இங்குதான் பார்க்கவேண்டுமேயொழிய எதிரொலிபோல் கூப்பாடு போட்டு உறுப்போடவும் கண்மூடித்தனமாய் விஷயங்களைப் பதிய வைக்கவும் சிறிதும் இடம் கொடுக்கக் கூடாது. ஆகவே நமது கல்வியின் ஜீவநாடி எல்லாம் லக்ஷியத்திலும் போதனா முறையிலும் தான் இருக்கின்றது. உபாத்தியாயர்கள் பகுத்தறிவாளர்களாய் இருக்க வேண்டும். அறிவின் முடிவின்படி நடப்பவர்களாய் இருக்க வேண்டும்.

## பிரார்த்தனை

இன்று இங்கு இந்த விழா துவக்கப்படுமுன் நிகழ்ச்சி குறிப்பில் குறிப்பிட்டிருந்த பிரார்த்தனை என்னும்பேரால் ஒரு பொய் நடிப்பு நடிக்கப் பட்டதானது உங்களுக்குத் தெரியும். பிரார்த்தனை என்று தலைவர் சொன்ன வுடன் சில பிள்ளைகள் வந்தார்கள், கைகட்டினார்கள்,கண்களை மூடிக் கொண்டார்கள், “ஜனகணமன.....” என்று எதையோ சொன்னார்கள். அது போலவே சிலபெண்கள் வந்தார்கள். கைகட்டினார்கள். கண்மூடினார்கள். ஏதோ பாஷையில் எதையோ சொன்னார்கள். இதற்கு பெயர் பிரார்த்தனை யாம். இது பக்திக்காக செய்யப்படுவதாம், மேலும் இது கடவுளுக்கு ஆகவாம், நண்பர்களே! இதில் ஏதாவது அறிவோ நாணையமோ இருக் கின்றதா? என்பதை நிதானமாய், பொருமையாய் யோசித்துப்பாருங்கள். தயவு செய்து ஆத்திரப்படாதீர்கள்.



கடவுள் என்பதும் பக்தி என்பதும் பிரார்த்தனை என்பதும் எவ்வளவு முக்கியமானதாகவும் உண்மையானதாகவும் இருக்க வேண்டுமென்று சொல்லி வருகின்றீர்களோ அந்தக்குணம் எல்லாம் மேல் குறிப்பிட்ட இந்த பிரார்த்தனையில் இருந்ததா? பாருங்கள். சாதாரணமாக கிராமபோனுக்கு உள்ள அறிவு போன்று சிறுவர்கள் அவர்களுக்கும் அவர்களுக்கு இந்த பிரார்த்தனைப் பாட்டு சொல்லிக் கொடுத்தவர்களுக்கும் புரியாத ஒரு பாட்டை இந்த சபையில் உள்ள சுமார் ஒரு ஆயிரம் பேருக்கும் புரியாத பாஷையில் நாடகத்தில் நடிப்பதுபோல் வந்து சொல்லிவிட்டு போவது என்றால் இதற்கு சமமாக எதை சொல்லுவது?

அநேகமாக நமது பிரார்த்தனைகள் என்பதெல்லாம் புரியாத பாஷை, புரியாத சொற்கள், புரியாத கருத்துக்கள் கொண்ட பாடல்களாகவும் வாக்கியங்களாகவும் இருக்கின்றனவே தவிர பக்தி என்பதற்கு பொருத்த மானதாய் இருக்கின்றதா? பாருங்கள். எந்த பக்தி பாட்டும் சங்கீத பிரதானி யத்திலும், இலக்கண இலக்கிய பிரதானியத்திலும், வேஷப் பிரதானியத் திலும், சடங்குப் பிரதானியத்திலும் இருக்கின்றதே தவிர உண்மை பிரதானி யத்தில் சிறிதாவது இருக்கின்றதா? பாருங்கள். இந்த மாதிரிவேஷமுறையில் இவ்வளவு சிறு குழந்தைப்பருவத்தில் இருந்தே புகுத்தப்பட்ட இந்த பக்திக்கு ஏதாவது ஒரு துரும்பளவு யோக்கியதையாவது இவர்களது பிற் கால வாழ்வில் உண்டாகிறதா? என்று யோசித்துப்பாருங்கள்.

மற்றும் இதிலிருந்து அக்குழந்தைகளுக்கு ஒரு பித்தலாட்டத்தையும் நாணையக்குறைவையும் பக்தி என்னும் பேரால் புகட்டினவர்களானோமா? இல்லையா? என்று யோசித்துப்பாருங்கள்.

## பெண்கள்

அன்றியும் இந்தமாதிரியான மதம் கலந்த கல்வியானாலும் வேஷத் தன்மையானாலும் நமது பெண்கள் நிலையும் மிகவும் மோசமாகி விடு கின்றது. அவர்கள் மதத்தையும் பக்தியையும் வாழ்க்கையில் பிரமாதப் படுத்தி அதனால் பெண் சமூகம் முன்னேறவே மார்க்கம் இல்லாமல் செய்து கொள்ளுகின்றார்கள். பெண்களை இன்றையதினம் ஒரு உபாத்தியாயராக வாவது இருக்கக்கூடிய நிலைக்கு கொண்டுவந்தது மதமும் பக்தியும் அல்லவே அல்ல. ஆனால் மதமும் பக்தியும் தான் அவர்களை இதுவரை அடிமைகளாக்கி வைத்திருந்தது. அவையெல்லாம் மாறி அவர்களுக்கு சிறிதளவாவது சுதந்திரமேற்படக் காரணம் மதத்தை அலட்சியம் செய்து செய்யப்பட்ட சீர்திருத்த பகுத்தறிவு உணர்ச்சியல்லவா? அப்படிப்பட்ட பெண்மக்கள் இப்போது சிறிது விடுதலை பெற்று உபாத்தியாயரான பிறகு தங்கள் அடிமைத் தனத்திற்கு காரணமாய் இருந்த மதத்தை பிள்ளைகளுக்கு கல்வியுடன் புகுத்துவார்களானால் அவர்களை மத சம்பிரதாயத்தில்



RangaRakes tamilnavarasam.com

ஈடுபடுத்துவார்களே யானால் இவர்களிடம் நமது பிள்ளைகளை ஒப்புவிக்க லாமா? என்பது பயமாகவே இருக்கின்றது.

இப்பெண்கள் கண்மூடித்தனமாய் மதத்தில் ஆழ்ந்து கல்வியோடு அதை கலக்கி குழப்புவதிலிருந்து அவர்கள் மருபடியும் அடுப்பூதவும், சட்டி சுரண்டவுமான உலகத்திற்கு போக ஆசைப்படுகின்றார்கள் என்றுதான் விளங்குகின்றது. இனி பிள்ளைகளுக்கு கல்வி போதிக்கும் வேலை முழுவதும் பெண்களுக்கே கொடுக்க வேண்டும் என்று எண்ணிய என் போன்றவர்கள், மனதெல்லாம் பெண் உபாத்தியாயர்கள் நிலைமையைப் பார்த்த பிறகு மனம் பயப்படுகின்றது.

ஆகவே, பெண் உபாத்தியாயர்கள் பகுத்தறிவுக்கு மதிப்பு கொடுக்க வேண்டுமேயொழிய ஆண் உபாத்தியாயர்களை பின்பற்றக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறோம். இல்லாதவரை தங்கள் பழய தொழிலுக்காவது போய்விடவேண்டும். குழந்தைகளை கெடுத்து விடக்கூடாது என்றும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

## தேசீயம்

தவிர இந்த லக்ஷணத்தில் உள்ள கல்வியோடு இப்போது வரவர தேசபக்தி என்பதாக ஒன்று புகட்டப்பட்டு விடுகின்றது. இது அறிவு வளர்ச்சிக்கு மற்றொரு ஆபத்தான காரியமாகும். கடவுள் பக்தி, மத பக்தி ஆகியவைகளைப் போலவே இந்த தேச பக்தியும், மனிதனின் அறிவு வளர்ச்சியை நாசமாக்கி விடுகின்றது. அதிலும் நமது நாட்டு தேசபக்தியோ நினைப்பதற்கே பயங்கரமானதாய் இருக்கின்றது. தேசபக்தியும், தேசீயமும் பழமையைப் பார்த்துக் கொண்டு பின்னால் போகப்பார்க்கின்றதே தவிர முன்புரம் திரும்பிப் பார்ப்பதில்லை. முற்போக்கில் கவலைகொள்வதில்லை. தேசீயத்திற்கும் புதியதுக்கும் ஜென்மப் பகையாய் இருந்து வருகின்றது. தேசீயம் என்றாலே பழமை என்றே கருதப்பட்டு விட்டது. புதுமை என்றாலே தேசத்துரோகம் என்றாய்விட்டது.

ஆகவே, கல்வி என்று பேர் வைத்து அதன் சாக்கில் மதத்தை போதித்து தேசியம் என்ற உணர்ச்சியையும் அதன் மூலமாகவே ஏற்றி விட்டால் குரங்குக்கு கள்வார்த்தது போல் தான் ஆகுமே தவிர அங்கு பகுத்தறிவுக்கும்,ஆராய்ச்சிக்கும், முற்போக்குக்கும், சுதந்திரத்துக்கும் இடமே இல்லாமல் போய்விடும். இந்தக் காரணம் தான் உலகத்தில் இந்தியாவுக்கு மாத்திரம் கீழ்படியில் முதல் ஸ்தானம் கிடைத்திருக்கின்றது.

## முடிவுரை

ஆகவே, கல்வி கற்பிப்பதை விட கல்வியின் லக்ஷியத்தையும், போதனையின் தன்மையையும் மாற்ற வேண்டியது இந்தியாவுக்கு மிகவும் அவசியமானதாகும் என்பதே எனது அபிப்பிராயம். நண்பர்களே! ஏதோ கல்வி என்னும் தலைப்பின் கீழ் எனக்குப் பட்ட, நான் சரியென்று கருதிய சில விஷயங்களை தங்களுக்கு விண்ணப்பித்துக் கொண்டேன். இவற்றை நன்றாய் அலசி பார்க்க வேண்டுமாயும், அதாவது சரி என்று பட்டால் மாத்திரம் எடுத்துக்கொள்ளும் படியாகவும் தப்பாயிருந்தால் தயவு செய்து உடனே மறந்து விடுங்கள் என்றும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

*குறிப்பு : 17.09.1931 அன்று ஈரோடு மகாஜன ஹைஸ்கூலில் ஸ்டூடன்ஸ் லிட்டரரி அசோசியேஷன் என்னும் மாணவர் இலக்கிய சங்க வருட ஆரம்ப நாள் விழாவில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 27.09.1931**


RangaRakes

tamilnavarasam.com

# புதுக்கோட்டை

இச்சென்னை மாகணத்திலிருக்கும் 2 $^1/_2$ கோடி மக்கள் உள்ள தமிழ் நாட்டில் புதுக்கோட்டை சமஸ்தானம் ஒன்றுதான் தமிழ்மன்னர் ஆட்சியில் இருந்து வருகிறது என்று சொல்லக்கூடியதாகும்.

ஆனாலும் அதுவும் வெகுகாலமாகவே பார்ப்பன ஆதிக்க ஆட்சிக்கே அடிமையாயிருந்து வந்திருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முன் வரமாட்டார்கள். ஆட்சி முறை மாத்திரம் தான் பார்ப்பன ஆதிக்கத்திலிருந்த தென்று சொல்லிவிட முடியாது. அச்சமஸ்தான பட்டத்திற்கு வரும் அரசர்கள் வாரிசிலும் அரசு செலுத்தும் முறையிலும் பார்ப்பன ஆதிக்கம் புகுந்து அச்சமஸ்தானம் பார்ப்பனர்கள் இஷ்டப்படி ஆட்டுவிக்கப்பட்டதாய் இருந்து வந்திருக்கின்றது.

புதுக்கோட்டை ராஜியபார பட்டத்திற்கு வரவேண்டியவர் அரசரின் குமாரர் என்பது அச்சமஸ்தானத்தின் சட்டமாயிருந்தாலும் பார்ப்பனீயத்தின் காரணமாகவே வருணாச்சிரமக் கொள்கை தாண்டவமாடி அரச குமாரருக்கு பட்டமில்லாமல் வேறு ஒருவருக்குப் பட்டம் ஏற்பட்டது. அந்தப்படி வேறு ஒருவருக்கு ஏற்பட்ட பட்டமும் ஒரு சிறு குழந்தைக்கு ஏற்பட்டதால் அக் குழந்தை பெரியதாகி பட்டம் ஏற்க இனியும் 10 வருஷ காலத்திற்கு மேலாகவே செல்லக்கூடிய நிலைமை உண்டாகி அதற்கு பார்ப்பனர் ஒருவர் ரீஜண்டாக நியமிக்கப்பட்டு அவ்வரசாட்சியானது பார்ப்பனீய ஆட்சி என்று சொல்லும்படியாகவே இதுவரை அரசாட்சி நடந்து வந்திருக்கின்றது.

அச்சமஸ்தானத்திற்கு வெளியில் அதாவது பிரிட்டிஷில் எப்படி பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சி ஏற்பட்டதோ அது போலவும், இம்மாகாணத்திலுள்ள மற்ற சுதேச சமஸ்தானங்களில் எல்லாம் எப்படி அவ்வுணர்ச்சி ஏற்பட்டதோ அதுபோலவும் புதுக்கோட்டையிலும் சற்று ஏற்பட்டு அச்சமஸ்தான உத்தியோகங்களில் சிலவற்றையாவது இரண்டொரு பார்ப்பனரல்லாதாருக்கும் கொடுக்க வேண்டியதாயிற்று.



இந்தக்காரணமே அதாவது பார்ப்பனரல்லாதாருக்கு அரசாங்கத்தில் சில உத்தியோகங்கள் கொடுக்கும் காரணமே எப்படி அச்சமஸ்தானத்திற்கு வெளியிலுள்ள மற்ற இடங்களிலும் தேசீயம் என்றும் காங்கிரஸ் என்றும் கூப்பாடு போட்டு பாமர ஜனங்களையும் முட்டாள் ஜனங்களையும் அரசாங்கத்திற்கு விரோதமாக கிளப்பி விட்டும், கஞ்சிக்கு வகையற்ற ஆட்களைப் பிடித்து கூலி கொடுத்தும் பார்ப்பனரல்லாத அதிகாரிகளையும் பிரதிநிதிகளையும் அரசாங்கத்தையும் வையும்படி தூண்டிவிடப்படுகின்றதோ அது போலவே புதுக்கோட்டையிலும் அவ்வரசாங்கத்தின் மீது வெறுப்பு உண்டாகும் படியாகவும் அங்குள்ள பார்ப்பனரல்லாத அதிகாரிகள் மீதும் ஜனப் பிரதிநிதிகள் மீதும் துவேஷம் உண்டாகும்படியும் தாராளமாய் பார்ப்பனர்களால் “தேசீய” பிரசாரமும், “காங்கிரஸ” பிரசாரமும் செய்யப்பட்டு வந்திருக்கின்றதையும், யாரும் மறுக்க முடியாது. உதாரணம் வேண்டுமானாலும் பல எடுத்துக்காட்டலாம்.

அச்சமஸ்தானத்தில் பார்ப்பனரல்லாதாருக்கு உத்தியோகம் கொடுக்க ஏற்பட்டது முதல் இதுவரை சமஸ்தானத்திற்கு விறோதமாய் பிரசாரம் செய்யப்பட்டதாகவும், ஜனங்களை கிளப்பி விட்டதாகவும், திருவாளர்கள் சுந்திரேசய்யர், சாமிநாதய்யர், விஸ்வநாதய்யர், சுப்ரமணிய அய்யர், ராம கிருஷ்ணய்யர், நாகரத்தினமய்யர், சென்னை எஸ்.சத்தியமூர்த்தி அய்யர் முதலிய அனேக பார்ப்பனர்கள் மீதே புதுக்கோட்டை அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருப்பதும், இன்னமும் சில பார்ப்பனர்களை சமஸ்தானத்துக்குள் இருக்கக் கூடாதென்றும், பிரவேசிக்ககூடாதென்றும், போடப்பட்ட தடை உத்திரவுகள் அமுலில் இருப்பதும் போதுமான அத்தாக்ஷியாகும்.

இந்தப்படி பார்ப்பனரல்லாதாருக்குள் இதுவரை ஒருவராவது அவ்வரசாங்கத்தின் மீது துவேஷம் உண்டாகும்படியாக பிரசாரம் செய்ததாகவோ மக்களை தூண்டி விட்டதாகவோ நமக்கு தெரிந்த அளவில் எவரும் இருந்ததாக சொல்லமுடியவில்லை. நாம் பார்த்தவரை எந்தப் பத்திரிகைகளிலும் வெளிவரவுமில்லை. இந்த நிலையில், இதுவரை அங்கு நடந்து வந்த தேசீய காங்கிரஸ் பிரசாரத்தின் பயனாய் அங்குள்ள பொது ஜனங்களுக்கு அரசாங்கத்தினிடம் ஒருவித வெறுப்பு ஏற்பட்டிருந்த சமயத்தில் சமஸ்தானத்தில் புதிதாக வரியும் உயர்த்தப்பட்டுவிட்டது.

இந்தவரி உயர்த்தப்பட்ட சமயமானது சற்று பொருளாதார நெருக்கடியுள்ள சமயமாய் இருந்தபடியால் ஜனங்களுக்கு ஏற்கனவே அரசாங்கத்தின் மீது ஏற்படுத்தப்பட்டிருந்த வெறுப்புக்கு இவ்வரி உயர்வானது புகைந்து கொண்டு இருக்கும் நெருப்பின் மீது நெய் வார்த்து ஊதிவிட்டது போல் ஆகிவிட்டதால் ஜனங்கள் சற்று ஆத்திரமடைந்து வரிஉயர்வுக்கு எப்படியாவது பரிகாரம் தேடவேண்டியவர்களானார்கள். ஜனங்களின் ஆத்திரத்தோடு கூடிய இந்த முயர்ச்சியை சமாளிக்கத் தகுந்த ராஜதந்திரம்



RangaRakes tamilnavarasam.com

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இல்லாத காரணத்தாலும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் பார்ப்பனர்களாய் இருந்து கொண்டு அச்சமஸ்தானத்தில் பெருவாரியாய் இருக்கும்பார்ப்பனரல்லாத மக்களிடம் அனுதாபமில்லா மலும் ஏழைகளின் கஷ்டத்தை கவனிக்காமலும், தகுந்தபடி சமாதானம் சொல்லி திருப்தி செய்யாமலும் இருந்ததாலும், மேல் குறிப்பிட்டபடி அரசாங்கத்தின் மீது ஏற்கனவே வெறுப்பு ஏற்பட்டு இருந்ததோடு அரசாங்க ஆட்சிக்கு பார்ப்பன அதிகாரிகளும் ஆதிக்கமுமே காரணம் என்பதாக பொது ஜனங்கள் கருதி குழப்பத்தில் பிரவேசித்து இருக்கலாம் அல்லது இந்த குழப்பமானது அரசாங்க அதிகாரிகள் மீதும் காரியாலயங்களின் மீதும் பிரயோகமாகும் போது அதிகாரிகள் பெரிதும் பார்ப்பனர்களாயிருந்த படியால் அவர்கள் மீதும் தங்கள் கண்ணோக்கங்கள் செலுத்தப்பட்டி ருக்கலாம்.

இதன் பயனாய் பார்ப்பன அதிகாரிகளும், பார்ப்பனரல்லாத அதிகாரிகளும் கஷ்டப்பட்டார்கள் என்று சொல்வதனாலும் இக்கலகத்தை "தூண்டி விட்டவர்" என்று பார்ப்பனர்களால் கட்டுப்பாடாய் பிரசாரம் செய்யப்பட்டும் பார்ப்பனரல்லாத அதிகாரியான போலீசு கமிஷனருக்கே தான் அதிகமான கஷ்டமும், உயிருக்கே ஆபத்தும் ஏற்படும்படியான பலாத்கார செய்கைகளின் பலன்களும் ஏற்பட்டிருக்கின்றன. அரசாங்க காரியாலயங்களும் தாக்கப்பட்டன.

இந்த நிலையில் இனி இச்சம்பவங்களின் உண்மையை நடுநிலைமை யில் இருந்து அறிய முற்படவேண்டியது நியாயம் என்பதையும் இச் சம்பவத்திற்கு தகுந்த பரிகாரம் செய்யப்பட வேண்டியது அவசியம் என்பதையும் யாவருமே மறுக்கமாட்டார்கள்.

மேல் கண்ட சம்பவ சம்பந்தமாக, சம்பவத்திற்கு பின் நடந்த நடவடிக்கைகள் எப்படிப்பட்டது என்பதை முதலில் சற்று யோசிப்போம். அதென்ன வெனில் அங்கு ஏற்கனவே ஆதிக்கத்தில் இருந்த பார்ப்பனர் எல்லாம் ஒன்று கூடி அச்சம்பவங்களுக்கு உண்மையாய் இருந்த காரண காரியங்களை நன்றாய் மரைத்து சம்பவத்திற்கு கொஞ்சமும் சம்பந்தப் பட்டிராததான "பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி" என்றும் "அதற்கு சுயமரியாதை இயக்க பிரசாரமே காரண"மென்றும் ஒரு கதை கட்டிவிட்டு இக்கலக விசாரணை என்பதை ஆதாரமாய் வைத்துக்கொண்டு பார்ப்பனரல்லாதார் முன்னேற்ற உணர்ச்சியை அடியோடு ஒழிக்கவும், சுயமரியாதை இயக்கத்திற்கு எதிர் பிரசாரம் செய்யவும் ஆன காரியங் களுக்கு உபயோகித்துக் கொண்டார்கள்.

மேலும், அந்த சமஸ்தானத்தில் இனி எந்த எந்த பார்ப்பனரல்லாதார் முன்னுக்கு வரக்கூடுமோ, அரசாங்கத்தில் உத்தியோகம், பதவி, பெருமை முதலியவைகள் அடையக்கூடுமோ, அப்பேர்பட்ட கனவான்களை யெல்



RangaRakes

லாம் இந்த சாக்கைக்கொண்டே ஒழித்துவிடலாம் என்று கருதி அவர்கள் பேரிலேயே "கலகத்துக்கு இவர்களே ஆஸ்பதமானவர்கள்" என்பதான பழிகளை சுமத்தி அவர்களையெல்லாம் கஷ்டத்தில் கொண்டு வந்து விடத் தக்க ஏற்பாடுகளும் செய்தார்கள்.

இதன் பயனாய் திருவாளர்கள் முத்துசாமி வல்லத்தரசு பி.ஏ., பி.எல், எம்.எல்.சி உள்பட அனேக பார்ப்பனரல்லாத பிரமுகர்களையும் பிடித்து சிறையில் அடைக்கச் செய்து விட்டார்கள். "காளை மாடு கன்றுபோட்டது என்றால் கன்றைப்பிடித்து தொழுவத்தில் கட்டு" என்று சொல்லும் தன்மை போல் திடீரென்று திரு.வல்லத்தரசை பிடித்து ஜெயிலில் அடைத்தார்கள்.

திரு. முத்துசாமி வல்லத்தரசு அவர்கள் குற்றவாளியாய் இருந்தால் தண்டிப்பதில் பாரபக்ஷம் காட்டும்படி நாம் யாருக்கும் யோசனை சொல்ல வரவில்லை. ஆனால் ஒரு பொருப்புள்ள கனவானை பெரும் பதவிக்கு வர அருகதை உள்ளவராய் இருக்கும் கனவானை ஏதோ ஒரு கலவரம் நடந்ததற்காக என்று அவரேதான் காரணஸ்தராய் இருந்தாரென்று ஒரு கதை கட்டிவிட்டதின் பயனாய் சிறையில் போட்டு அடைத்துக் கொண்டு "கலகத்தைப்பற்றி விசாரணை செய்து நியாயம் வழங்கு கின்றோம் என்று சொன்னால்" இச்செய்கைகளால் எப்படி சரியான நீதி கிடைக்க மார்க்கம் உண்டாகும் என்று நம்பக்கூடும்.

பார்ப்பனரல்லாத பிரமுகரான திரு.முத்துசாமி வல்லத்தரசை ஜெயிலில் வைத்து விட்டு "கலகத்திற்குக் காரணம் பார்ப்பனர் பார்ப்பன ரல்லாதார் உணர்ச்சியும் சுயமரியாதைப் பிரசாரமும் தான்" என்ற கற்பனையைப் பரப்பி விட்டு விசாரணை ஆரம்பித்தால் விசாரணையில் கலகத்திற்கு உண்மையான காரணம் வெளியாகக்கூடுமா என்பதை வாசகர்கள் தான் யோசித்தறிய வேண்டியது. முத்துசாமி வல்லத்தரசை ஜெயிலில் வைத்த உடனே அங்குள்ள பார்ப்பனரல்லாதார் எல்லோருமே பயந்து இருப்பார்கள் என்பதிலும் அங்குள்ள பார்ப்பனர்கள் எல்லோருமே தைரியங் கொண்டு எதுவேண்டு மானாலும் சொல்லலாம் என்று துணிந்திருப்பார்கள் என்பதிலும் சிறிதாவது சந்தேகத்திற்கு இடமிருக்க முடியுமா என்று கேள்க்கின்றோம்.

கலக விசாரணை அதிகாரிமுன் சாட்சிகொடுத்த பார்ப்பனர்கள் அத்தனைபேரும் அனேகமாய் ஒரே பள்ளிக்கூடத்தில் உட்கார வைத்து பாடஞ் சொல்லிக்கொடுத்த பிள்ளைகளைப் போலும் ஒரு கிராமபோன் தட்டை திரும்பத்திரும்ப கேட்டால் எப்படி இருக்குமோ அதுபோலும் பெரிதும் ஒரேமாதிரியாகவே சாட்சி சொல்லி இருக்கின்றார்கள்.

அரசாங்கமானது தனது விசாரணையில் பாரபட்சமில்லாமல் இருப்பதை நன்றாய் காட்டிக் கொள்ள முயற்சி செய்திருக்குமானால் ஒன்று



tamilnavarasam.com

பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற காரணத்திற்காக கலகம் நடந்தது என்பதாக அரசாங்கத்தார் நினைத்து விட்டார்கள் என்று ஜனங்கள் நம்பும்படியான தன்மையில் திரு. முத்துச்சாமி வல்லத்தரசை சிறைப்படுத்தா திருந்திருக்க வேண்டும். அல்லது அந்த மாதிரிஜனங்கள் கருதக்கூடாது சர்க்காரார் இன்னமும் ஒரு முடிவுக்கும் வரவில்லை என்று ஜனங்கள் நம்ப வேண்டும் என்று அரசாங்கம் நினைத்திருந்தால் பிராமணரிலும் சிலரை சிறைப்படுத்தித் தங்கள் நடுநிலைமையை காட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

அந்தப்படி பார்ப்பனத் தலைவரான திரு.சாமிநாதய்யரையோ வேறு ஒரு தலைவரையோ பிடித்திருந்தால் கிராம்போன் பெட்டி போன்ற பார்ப்பன சாக்ஷியங்கள் ஒன்றுகூட தலைகாட்டி இருக்கமாட்டாது. அல்லது வேறு மாதிரியாகவாவது இருந்திருக்கும் என்பதோடு பார்ப்பனரல்லாதார் சாட்சிகளும் பயமில்லாமல் வந்து உண்மைகளைச் சொல்லியிருக்கும். அப்படிக்கில்லாமல் பார்ப்பனரல்லாதார் பிரமுகரை மாத்திரம் சிறைப் படுத்தியதால் உண்மை வெளியாவதற்கே மார்க்கமில்லாமல் போய்விட்ட தென்று பயப்பட வேண்டியதாய்த்தான் இருக்கின்றது.

இப்பொழுதும் ஒன்றும் காலம் கடந்துவிடவில்லை. ஏதோ ஒரு வழியில் பொதுவிசாரணை நடந்துவிட்டது. அதைப்பற்றிய அறிக்கையும் வெளியாகியிருக்கலாம்.

இனிமேல் கோர்ட் நியாயஸ்தல விசாரணை நடக்க வேண்டியிருக் கின்றது. இவ்விசாரணையில் உண்மை வெளியாக வேண்டியிருக்கின்றது. நடுக்கண்ட நியாயத்தை உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலைமையில் “அரசாங்கம் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாய் இருக் கின்றது, பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாயிருக்கின்றது” என்று பாமர மக்களுக்குள் எண்ணம் ஏற்படாமலிருக்க வேண்டியது அவசியமாகுமா தலால் திரு.வல்லத்தரசை வெளியில் விட்டு அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளவோ அல்லது அரசாங்கம் இரு கட்சிக்கும் பொதுவாய் இருக்கிறார்களென்று கருதுவதற்காக பார்ப்பனர்களிலும் முக்கியமான ஒருவரை அடைத்து வைக்கவோ செய்யவேண்டியது நடு நிலைமை நியாயம் வழங்கப்பட வேண்டியதை உத்தேசித்து அவசியமான காரியமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளவே இதை எழுதுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 27.09.1931**



# சாரதா சட்டத்திற்கு அழிவா? வைதீகர்கள் கூக்குரல்

## காந்தியின் குட்டித் தலைவர்கள் இதற்கென்ன பரிகாரஞ் செய்கிறார்கள்?

இந்திய நாட்டின்கண் வாழும் மக்களே! “வைதீகம்” செய்யும் கொடுமைகளை பிறந்த நாள் முதல் இறக்கும் வரை கண்கூடாகக் காணும் மானிடர்களே! நம்மை ஆதிக்கத்தில் ஆழ்த்தி வைத்திருக்கும் கொடுமை களை கண்ணுற்றும், போதாக்குறைக்குப் பிராமணர்கட்குத் தாசராய் அடிமை கொண்டு சுற்றித்திரியும் தலைவர்களே! காந்தியின் குட்டித்தலைவர் கள் என்று சொல்லி, ஊர் ஊராய் பிரசங்கம் செய்யும் ராஜகோபாலாச் சாரியின் அடிச்சுவட்டை பின்பற்றும் தலைவர்களே! அடியேன் கீழே கொடுக்கும் உறையை நன்றாய் கவனித்து சுயமரியாதைக்காரர்கள் சொல்வது உண்மையா-பொய்யா என்று ஆராய்ந்து அதன்பின் வசைப் புராணம் தொடங்குவதை ஆரம்பியுங்கள். கூலிக்கு உண்மையையும், மானத்தையும் விற்கும் பேர்வழிகளைக் கொண்டு, பத்திரிகை நிரப்ப வேண்டி, வியாசம் எழுதும் சாம்பராணிகளே! கவனியுங்கள்! மந்தப் புத்தியை அகற்றி சொந்தப் புத்தியை கொண்டு பார்த்தால் அடியேன் சொல்லுவது உண்மை என்பது நன்கு புலப்படும்; இனி நாம் எடுத்துக் கொண்ட விஷயத்தை ஆராய்வோம்.

தென்னிந்திய நாட்டிலே தஞ்சை, திருச்சினாபள்ளி ஜில்லாக்களின் இந்திய சட்டசபை அங்கத்தினரான திருவாளர் வைதீகம் கிருஷ்ணமாச்சாரி யார் இந்தியா சட்டசபையில் சாரதா மசோதாவிற்கு பங்கம் விளைவிக்க முயற்சி செய்து வருவதாகப் பத்திரிகைகள் மூலம் காணக்கிடக்கின்றது; ஐயோ! சிசுமணத்தால் பெண்மணிகள் அல்லற்படுவதை கண்ணாற் பார்த்தவர்கள் அறியக்கூடும். இக்கொடுமைகள் மேற்ஜாதி மக்களென்று பறை சாற்றும் பார்ப்பனர் ஜாதியில் கிடைப்பதைக் கிருஷ்ணமாச்சாரியார் பார்க்கவில்லை? “கண்ணிருந்தும் குருடனிடத்தில் படும் கஷ்டம் தெரிந்தும், அதனை மற்றவர்கள், அல்லற்படுவதை கண்டு தக்க வழி



RangaRakes tamilnavarasam.com

கண்டுபிடித்து வெகு ஆண்டுகளாய் அமுலில் கிடந்த மசோதாவை நன்னிலைமைக்குக் கொண்டு வந்த திரு.ஹிரிவிலாஸ சாரதா அவர்கள் செய்த சாரதா சட்டத்திற்கு அழிவுதேட புறப்பட்ட வைதீகப்பித்தரே! பார்ப்பனர் ஏஜண்டே! நமது ஆசாரப்படி செய்யாது, சட்டசபையில் மெம்பராக வீற்றிருக்கும் மமதை கொண்ட வைதீகரே! எமது ஆர்ப்பாட்டம் எத்தனை நாளைக்கு நடைபெறும், அதோடு நில்லாது, நமது கோஷ்டி களையும் தூண்டிவிட்டு, ஊர் ஊராகப் பிரசங்கம் புரியச் சொல்லி சாரதா சட்டத்தை அழிக்கப் பார்ப்பது உங்கட்குத் தருமமா? இதுதான் உயர் குலத்தில் உதித்தோமென்ற சொல்லிற்குப் பயனோ? என்னவிந்தை! என்ன கொடுமை!!! பார்ப்பனர்களே!! முப்பத்துமுக்கோடி இந்திய மக்களில் சிலராகிய தாங்கள் யாவரையும் அடக்கி ஆள எத்தனித்த காலம் மலை யேறிப் போய் விட்டது. ஜெகசால புரட்டு மாய்ந்ததென்பதை அறியுங்கள். புத்துணர்ச்சி பெற்ற மக்களுண்டென்பதை நன்கு நிதானப் புத்தியுடனிருந்து யோஜித்து நாங்கள் சொல்வது உண்மை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

நாங்கள்தான் தேசத்தலைவர்கள், சுயராஜ்யமின்றி வாழ்வது கூடா தென்று பறைசாற்றும் தொண்டர்களே, சாரதா சட்டம் குலைய கெடுக்கும் பார்ப்பனர்களை என்ன செய்தீர்கள், பத்திரிகைகளில் பாரத நாட்டிற்குப் பாடுபடுவதாக வரைந்து கொண்டு, அங்கு நடக்கும் கொடுமைகளை கவனஞ் செலுத்தாது-கூலிக்கு ஆசிரியராய் அமர்ந்து “பத்திராதிபர்” என்ற மமதையால் எழுதிவிட்டால் போதுமா? புத்தியின்றி வாழும் மானிடர்கள் போன்று போக்குஇடம் கொடுத்து, பார்ப்பனர்கள் செய்யும் சாரதா மசோதா விற்குத் தடை செய்யும் திரு. கிருஷ்ணமாச்சாரியார் கூட்டத்திற்குத் தக்க சவுக்கடி கொடுக்க வேண்டாமா? அப்படிக்கில்லாது நான்தான் காந்தியின் குட்டித் தலைவர், என் சொற்படிதான் நடக்க வேண்டும், தேசமே எமது ஆட்சி, ஆங்கிலேயர் இந்நாட்டைவிட்டு ஓடவேண்டும், சுயராஜ்யம் எங்கள் கையில் விரைவில் ஒப்படைக்க வேண்டும், இல்லாவிட்டால் லண்டன் சென்று போராடுவோம் என்றெல்லாமோ சொல்லும் எந்தாய் நாட்டில் வாழும் தேச பக்தர்களே! காந்தியின் பேரைச் சொல்லிக் கொண்டு நகர் நகராய் பணஞ்சேகரித்து அதற்குத் தலைவர் நாம்தானென்று சுற்றித் திரியும் மணிகளே! உலகமக்கட்கு அதாவது சிசுக்கட்கு உபசாரமாய் நடை முறையில் இருந்து வரும் மசோதாவிற்கு உலைவைக்கப் பார்க்கின் றார்களே இதற்கென்ன தேசத் தலைவர்கள் செய்கிறார்களென்பதே எமது கேள்வியன்றோ! இதற்கும் ஒன்றும் பரிகாரம் தேடாது மௌனஞ் சாதிப்பது தேசத் துரோகமில்லையா? பார்ப்பனர் அடிமைத்தனத்தில் சிக்கி வாழும் பார்ப்பனரல்லாத தேசபக்தர்களே! சுயமரியாதைக்காரனாகிய எம்மைக் கண்டு நீங்கள் ஆத்திரப் படலாம், பத்திரிகை முழுவதும் எழுதலாம், ஆனால், நாங்கள் உண்மையை உள்ளன்புடன் சொல்வோம். தக்கவிடை அளித்தாலும் பதிலுரை கொடுக்கவும் தயாரென்பதை சித்தத்துடன் தெரிவித்துள்ளேன்.



பார்ப்பனரல்லாத வாலிபர்களே! சுயமரியாதைத் தலைவர்களே! வாலிபர்களே! சட்டசபையில் கொண்டுபோகத் தயாராயிருக்கும் திரு. கிருஷ்ணமாச்சாரியாரின் இளம் மணஞ்செய்து கொள்ளலாமென்று தக்க முகாந்திரத்துடன் சொல்லும் திட்டத்திற்குப் பயனளிக்காது பாடுபட முன் வாருங்கள், பார்ப்போம், பார்ப்போம், பார்ப்பனர்கள் அட்டகாசத்தைப் பார்ப்போம். பாரினில் தலை எடுக்காது ஆழ்த்தி வைப்போம். இனியும் விட்டுக் கொடுக்காது தலைகுனியும்படி செய்ய வேண்டுமாய் சுயமரியாதை வீரர்களை கேட்டுக் கொண்டு எனது கட்டுரையை முடித்துக் கொள்ளு கிறேன்.

வைதீகம் வீழ்க!

சாரதா சட்டம் நிலை பெறுக!

**- சுயமரியாதைத் தொண்டன்.**

**குடி அரசு - கட்டுரை - 27.09.1931**



RangaRakes
tamilnavarasam.com

## 100000. லக்ஷம் ரூபாய் இனாம் !

### புதிய மாதிரி ராட்டின இயந்திரப் பரிசுக்கு அக்டோபர் 31உ வரை வாய்தா

இப்போது இருந்துவரும் நூல் நூற்கும் ராட்டினமானது நூற்கும் விஷயத்தில் அதிக நேரமும் கொஞ்ச உற்பத்தியும் ஆவதின் மூலம் நூற்பவர்களுக்கு பிரயாசை அதிகமாகவும் கூலி குறைவாகவும் கிடைத்து வருவதை உத்தேசித்து புது மாதிரியான, அதாவது கொஞ்ச நேரத்தில் கொஞ்சப் பிரயாசையில் அதிக நூலும் அதிக கூலியும் கிடைக்கும்படியான அபிவிர்த்தியுள்ள ஒரு புது மாதிரியான ராட்டின எந்திரத்தைக் கண்டு பிடித்து குறிப்பிட்ட காலத்துக்குள் கொடுப்பவர்களுக்கு ஒரு லட்ச ரூபாய் (100000 ரூ) இனாம் கொடுப்பதாக உயர்திரு காந்தியவர்கள் கொஞ்ச நாளைக்கு முன்பு வெளிப்படுத்தியிருந்தார். இது வரையில் அம் மாதிரியான ஒரு அபிவிர்த்தி இயந்திரம் யாராலும் கண்டுபிடிக்கப்படாததால் அப் பரிசுக்கு இன்னமும் சிறிது காலம் வாய்தா அதிகமாகக் கொடுக்கப்பட்டிருப் பதாய் ஆமதாபாத் குஜ்ராத் வித்தியா பீடத்தார் தெரிவிக்கிறதாக தினசரிப் பத்திரிகைகளில் காணப்படுகின்றது. அதாவது,

"100000 ரூ. பரிசுக்காக புதிய ராட்டின யந்திரம் கண்டுபிடிப்பவர்கள் அதை அக்டோபர் மாதம் 31 தேதிக்குள் குஜராத் வித்தியா பீடத்திற்கு அனுப்பிக்கொடுக்கலாம்" என்பதாகும்.

ஆகவே திரு. காந்தியவர்கள் கொஞ்ச நேரத்தில் அதிகமான சாமான் உற்பத்தியும் பணவரும்படியும் கிடைக்கும்படியான கொள்கையை விரும்புகின்றாரா ? இல்லையா ? என்பதும் அவர் விரும்புகின்றபடி ஏதாவது ஒரு சாதனம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் அது யந்திரமாகக் கருதப்படக் கூடியதாகாதா என்பதையும் அதனால் இயந்திர முற்போக்கை திரு காந்தி ஒப்புக்கொள்கின்றார் என்பது விளங்கவில்லையா ? என்பதை யும் அந்தப்படி ஏற்படும் இயந்திரத்தின் பயனாய் அதாவது அப்புதிய இயந்திரம் ஒரு நாளைக்கு கால் ராத்தல் நூல் நூற்பதற்கு பதிலாக ஒரு



RangaRakes

மணிக்கு கால் ராத்தல் நூல்நூற்கும்படியானதாக ஏற்பட்டிருந்தால் அதன் பயனாய் அவ்வியந்திரம் ஒரு நாளைக்கு 8 பேர் செய்கின்ற வேலையை ஒரே ஆள் செய்யும்படி யானதாக ஆகி பாக்கி " ஏழுபேர்கள் கூலி வாயில் மண் விழுகாதா" என்பதையும் காந்தி பக்தர்களின் இயந்திர பகிஷ்கார கதர் பக்தர்கள் கவனித்துப் பார்த்து பிறகு இயந்திர முறையைக் கண்டிக்க வேண்டுகிறோம்.

குடி அரசு - வேண்டுகோள் - 27.09.1931.



tamilnavarasam.com

# சமதர்ம அறிக்கை

## முகவுரை

தற்காலம் உலகில் ரஷியாவிலும், ஸ்பெயினிலும், மற்றும் சைனா முதலிய இடங்களிலும் சமதர்மம், பொதுவுடைமை தர்மம் ஆகியவை களின் பேரால் அரசாக்ஷிகளும் கிளர்ச்சிகளும் நடைபெற்று வருவது யாவரும் அறிந்த ஒரு உண்மையாகும்.

இவ்வுணர்ச்சியானது ரஷியாவில் தான் முதல் முதல் தோன்றியதாக நமது மக்களில் அனேகர் கருதிக் கொண்டிருக்கின்றார்கள். சமதர்ம உணர்ச்சி சம்பந்தமான சரித்திரத்தைக் கவனித்து ஆராய்ந்து பார்ப்பவர் களுக்கு இக்கருத்து சரியானதல்ல என்பதாகத் தோன்றும். ஏனெனில், உலகில் சமதர்ம உணர்ச்சி என்பதானது பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றியிருப்பதற்கு அத்தாட்சிகளிருக் கின்றன.

சமதர்ம உணர்ச்சி ஒரு எண்ணமாய் ஏற்பட்டு அதன் தத்துவங் களைப்பற்றியும், கொள்கைகளைப்பற்றியும் வெளியில் எடுத்து மக்களுக்குத் தெரியும்படியாக மகாநாடுகள் மூலமும் அறிக்கை மூலமும் வெளிப்பட்டிருப்பதாக நமக்கு விளங்கும்படியாய் காணப்படும் காலமே இன்றைக்கு சுமார் 80, 90 வருஷங்களுக்கு முன்பு என்று தெரிகின்றது. அதாவது 1847 ம் வருஷத்திலேயே லண்டன் மாநகரத்தில் உலகத்திலுள்ள சமதர்மவாதிகளுடைய மகாநாடு (காங்கிரஸ்) ஒன்று நடந்திருப்பதாகவும், அதன் பயனாய் அறிக்கை வெளியிடப்பட்டிருப்பதாகவும் தெரியவரு கின்றது. ஆனால் அதை சீக்கிரத்தில் கையாளப்படவும் அனுபவத்திற் கொண்டு வரவும் முயற்சித்த நாடு ரஷியாவாக ஏற்பட்டு விட்டது.

இது சம்பந்தமாக நமக்குக் கிடைத்த ஒரு அறிக்கை சரித்திரத்தில் சமதர்ம உணர்ச்சி பெற்றவர்களில் முதன்மையான முக்கியஸ்தர்கள் ஜெர்மனியர்களாயிருந்தாலும், அதற்காக மகாநாடு கூடினது லண்டன் பட்டணமாய் இருந்தாலும், அதற்கு அப்பொழுதே கிளர்ச்சி நடந்தது பிரான்சு தேசமாயிருந்தாலும், அது முதல் முதல் அனுபவத்தில் கொண்டுவர முயற்சிக்க வேண்டிய இடம் ரஷியாவாகவே ஏற்பட்டுவிட்டது சிலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தாலும் அந்தப்படி ஏற்படு வதற்கு நியாயம் இல்லாமலில்லை.



என்ன நியாயமென்று வாசகர்கள் கேட்பார்களேயானால் அதற்கு நமது சமாதானமானது எங்கு அளவுக்கு மீறிய – தாங்க முடியாத கொடுமை நடைபெறுகின்றதோ அங்கு தான் சீக்கிரத்தில் பரிகார முயற்சி வீறு கொண்டு எழவும் சீக்கிரத்தில் இரண்டிலொன்று காணவுமான காரியங்கள் நடைபெறும்.

எனவே இந்த நியாயப்படிப் பார்ப்போமானால் உலக அரசாங்கங் களிலெல்லாம் ரஷிய ஜார் அரசாங்கமே மிக்கக் கொடுங்கோன்மையாக நடைபெற்று வந்திருக்கின்றது. அதனாலேயே அங்கு சமதர்மமுறை அனுப வத்திற்கு கொண்டுவர வேண்டியதாயிற்று. இந்த நியாயப்படி பார்த்தால் அவ்வித சமதர்ம உணர்ச்சி உலகில் ரஷியா தேசத்தை விட இந்தியாவுக்கே முதன் முதலாக ஏற்பட்டு இருக்கவேண்டியதாகும். ஆனால் அந்தப்படி ஏற் படாமல் இருப்பதற்கு இங்கு அனேகவித சூட்சிகள் நடைபெற்று வந்திருப்ப தாலும், சூட்சிக்காரர்கள் இந்திய மக்களை வெகு ஜாக்கிரதையாகவே கல்வி, அறிவு, உலக ஞானம், சுயமரியாதையுணர்ச்சி முதலியவைகள் பெறுவதற்கு மார்க்கம் இல்லாமல் காட்டுமிராண்டித்தன்மையில் வைத்து வந்ததோடு, கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் ஏற்படுத்தப்பட்ட உணர்ச்சியானது அடிமையாக இருப்பதே கடவுள் சித்தமென்றும், மோக்ஷ சாதனமென்றும் புகட்டி வந்ததாலும், அதே சூட்சிக்காரர்கள் அடிக்கடி வேற்றரசர்களை அழைத்து வந்து மக்களை மிருகத்தனமான ஆதிக்கத்தால் அடக்கி ஆளச் செய்து வந்ததாலும் உலகில் சமதர்ம உணர்ச்சி முதன் முதல் இந்தியா விலேயே ஏற்பட்டிருக்க வேண்டியது மாறி ரஷியாவுக்கு முதல் ஸ்தானம் ஏற்பட வேண்டியதாயிற்று.

ஆன போதிலும் கூட இப்போது உலகில் மற்றும் எல்லாப் பாகங் களிலும் ஏற்பட்டு விட்டதின் காரணமாய் இந்தியாவிலும் ஏற்பட வேண்டியது தவிர்க்க முடியாத அவசியமாய் போய்விட்டதால் இங்கும் தலை காட்ட ஆரம்பித்து விட்டது. ஆனால் உலகில் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மைகளில் மற்ற தேசத்திற்கும் இந்தியாவுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் இருந்து வருகின்றது. அதென்னவென்றால் மற்ற நாடுகளில் ஒரு விஷயம் தான் முக்கியமாய் கருதப்படுகின்றது. அதாவது முதலாளி (பணக்காரன்) வேலை யாள் (ஏழை) என்பதுவேயாகும். ஆனால் இந்தியாவிலோ மேல் ஜாதியார்– கீழ் ஜாதியார் என்பது ஒன்று அதிக மாகவும் முதன்மையானதாகவும் இருப்பதால் அது பணக்காரன், ஏழை தத்துவத்திற்கு ஒரு கோட்டையாக இருந்து காப்பாற்றிக் கொண்டு வரு கின்றது. ஆதலால் இங்கு சமதர்மத்திற்கு இரட்டிப்பு அதிகமான எதிர்ப்பு இருந்து வருவது கொண்டு சமதர்ம உணர்ச்சி தலை தூக்க முடியவில்லை.

இவ்விபரங்கள் இந்த அளவில் நிற்க, முன் குறிப்பிட்டதான அதாவது சமதர்மக் கொள்கை சம்பந்தமாக அந்தக்காலத்தில் வெளியான



RangaRakes tamilnavarasam.com

ஒரு அறிக்கையை மக்கள் உணரும்படியாக வெளிபடுத்தலாம் என்று நாம் கருதுவதால் அதை மொழிபெயர்த்து வெளியிடலாம் என்கின்ற கருத்துக்கு மேல்கண்ட வாக்கியங்களை முகவுரையாக எழுதினோம். இனிமேல் வருபவைகள் முழுவதும் அவ்வறிக்கையின் மொழிபெயர்ப்பேயாகும். அதில் நமதபிப்பிராயம் என்பது சிறிதும் இல்லை. ஆகையால் வாசகர்கள் அதை 1847-ஆ ல் இரண்டு ஜர்மனியர்களுக்கு ஏற்பட்ட அபிப்பிராயம் என்பதாகவே கருதி வாசிக்க வேண்டும் என்று விரும்புகின்றோம்.

**ஈ.வெ.ரா.**

*குறிப்பு: 1847 ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற சமதர்ம காங்கிரசு வேண்டுகோளுக்கிணங்க காரல்மார்க்ஸ் - பிரடரிக் ஏங்கெல்ஸ் ஆகியோர் வெளியிட்ட சமதர்ம அறிக்கை ( Manifesto of communist partyy ) ( 1872 இல் முதன்முதல் ஜெர்மனியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது) யை தமிழில் மொழிபெயர்ப்பு செய்து குடி அரசில் வெளியிட்ட போது எழுதிய முகவுரை,*

**குடி அரசு - நூல் முகவுரை - 04.10.1931**



# அரசாங்கமும் தேசீயமும்

"வேகின்ற வீட்டில் பிடுங்கினது லாபம்" என்பதாக ஒரு பழமொழி யுண்டு. அது போலவே இன்று பிரிட்டிஷ் அரசாங்கமும், இந்திய தேசீயமும் நடைபெற்று வருகின்றன. ஏனென்று கேட்பதற்கு ஆளில்லை. இரு கூட்டமும் சேர்ந்து பாடுபட்டுழைக்கும் மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் சூட்சியை அறியத்தக்க புத்தி இந்திய மக்களுக்கு இல்லை. ஆனால் சீர்திருத்தத்தைப் பற்றியும், சுதந்திரத்தைப்பற்றியும், சுயராஜ்யத்தைப் பற்றியும் பேச்சுக்களுக்கும் கிளர்ச்சிகளுக்கும் மாத்திரம் குறைவில்லை. பொருளாதாரத் துறையைப்பற்றி நீலிக்கண்ணீர் விடுவதிலும், சுதேசி பிரசாரம் செய்வதிலும் மதுபானத்தைப் பற்றி மிக்கக் கவலைப்பட்டவர்கள் போல் நடித்து காங்கிரஸ் ஒரு புறம் பகிஷ்காரமும், மறியலும் அரசாங்கம் ஒரு புறம் பிரசாரமும் செய்வதாக செய்யும் ஆர்ப்பாட்டங்களிலும் குறை வில்லை.

அதே சமயத்தில் "பொருளாதார நெருக்கடியை சரிப்படுத்த" சர்க்காரார் புதிய புதிய வரி போடுவதிலும் காங்கிரஸ் மக்களுக்கு அதிக செலவை உண்டுபண்ண கதர்த்தொழிலை விர்த்தி செய்வதிலும் குறை வில்லை. இந்த இரண்டு காரியங்களிலும் தேசத்தில் பொருளாதாரக் கஷ்டமும், அடிமைத்தன்மையும், அறியாமையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றதேயொழிய வேறில்லை.

ஆனால் இந்தியாவிலுள்ள இந்திய மக்கள் நிலைமையோ- இவைகளுக்கு காரணம் என்ன? இக்கஷ்டங்களிலிருந்து எப்படி விடுதலை பெறுவது? என்கின்ற உணர்ச்சியே சிறிதுமின்றி, தெய்வத்தின் மீது பழியைப் போட்டுவிட்டு, காந்தி ஜயந்தி பண்டிகை கொண்டாடுகின்ற வேலையில் முனைந்து நிற்க பிரசாரம் செய்யப்படுகின்றார்கள். இந்த முயற்சிகளானது இந்தியாவில் 20, 30 நூற்றாண்டுகளுக்கு முன் இருந்ததாகக் காணப்படும் நிலைமையிலேயே மக்களை இறுத்தி வைக்கும் முயற்சியாக காணப்படு வதல்லாமல் மற்றபடி அதில் வேறு எவ்வித பரிகாரமோ, விடுதலையோ முற்போக்கோ இருப்பதாகக் காணமுடியவில்லை.



RangaRakes tamilnavarasam.com

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது என்றால் அது யாருக்கு ஏற்பட்டிருக்கின்றது? எதனால் ஏற்பட்டது? என்கின்றதான இரண்டு விஷயத்தையும் கவனித்து யாருக்கு எவ்வித சௌகரியம் செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும்? என்பதைக் கவனிக்க வேண்டியது நீதியையும் பொறுப்பையும் உணர்ந்த - நல்லெண்ணமுடைய ஒரு அரசாங்கத்தின் கடமையாகும்.

இன்றைய நிலைமையில் நம் தலையில் சுமத்தப்பட்டுள்ள அரசாங்கமோ சிறிதாவது நியாயத்தையும், பொறுப்பையும் லட்சியம் செய்யாமல் 'வேகின்ற வீட்டில் பிடுங்கினது லாபம்' என்கின்ற பழமொழிப்படி ஜனங்களுக்கு அவர்களது வாழ்க்கையை நடத்திக் கொண்டு போக இன்னமும் அதிகமானப் பொருளாதாரக் கஷ்டத்தைக் கொடுக்கும் மாதிரியில் வரியை அதிகமாக உயர்த்துகின்ற வேலையையே பொருளாதார நெருக்கடியைக் குறைப்பதற்குச் செய்யப்படும் வேலை என்று சொல்லிக் கொண்டு அந்தப் படியே செய்து வருகின்றது.

ஆகவே, அரசாங்கத்தார் இப்போது நாட்டில் பொருளாதார நெருக்கடி இருக்கின்றது என்று நினைத்திருப்பதெல்லாம் அரசாங்க உத்தியோகஸ்தர் களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் இருப்பதைத்தான் பொருளாதார நெருக்கடி என்று கருதி இருக்கின்றார்களேயொழிய, குடி ஜனங்கள் வரி கொடுக்க முடியாமல், வாழ முடியாமல் இருக்கின்ற நிலைமையை ஒரு நாளும் பொருளாதார நெருக்கடி என்று கருதுவதாய்த் தெரியவில்லை. சர்க்காரார் உத்தியோகஸ்தர்களுக்குச் சாதாரணமாய் 20 வருஷத்திற்கு முன் இருந்த சம்பளங்கள் இன்று அநேக விஷயங்களில் ஒன்றுக்கு ஒன்றரை, இரண்டு ஆகவும், சிலருக்கு ஒன்றுக்கு மூன்றாகவும் ஏற்பட்டிருக்கின்றன. சம்பளங்கள் மாத்திரமல்லாமல் உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கையும் ஒன்றுக்கு இரண்டாய், மூன்றாய் சில உத்தியோகங்கள் நான்கு பங்கதிகமாகவும் அதிகப்படுத்தப்பட்டு விட்டன. உதாரணமாக, ஒரு போலீசுகாரனுக்கு மாதம் 7 ரூபாய் முதல் 8 ரூபாய், ஒரு ஏட்டுக்கு 14 முதல் 25 ரூபாய், ஒரு இன்ஸ்பெக்டருக்கு 70 முதல் 150 ரூபாய் இருந்ததானது, இப்போது போலீஸ் காரனுக்கு 18 முதல் 22 ரூபாயும்,ஒரு ஏட்டுக்கு 25 முதல் 35 ரூபாயும், மத்தி யில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் உத்தியோகம் அதிகமாகி 60 முதல் 175 ரூபாயும், இன்ஸ்பெக்டருக்கு 175 முதல் 300 ரூபாய் வரையும் ஏற்படுத்தப்பட்டு போலீசுகாரர்கள் எண்ணிக்கையும் அதிகப்படுத்தப்பட்டு விட்ட தென்றால் சாதாரணமாக இது 20 வருஷத்திற்கு முன் இருந்த நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் எவ்வளவு பங்கு உயர்ந்திருக்கின்றது என்பதை யோசித்துப் பாருங்கள். இது கீழ்தர்ஜா நிலைமைக்கு உதாரணம் கூறப் பட்டது.



இனி மேல் தர்ஜா நிலைமை என்பதைப் பற்றி கவனிப்போமானால் சென்னை அரசாங்க நிர்வாகசபை 5300 ரூபாய் சம்பளமுள்ள இரண்டு அங்கத்தினர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்ததானது இப்போது 5300 சம்பளமுள்ள ஏழு அங்கத்தினர்களால் நிர்வகிக்கப்படுகின்றது என்றால் எவ்வளவு விகிதாச்சாரம் அதிகமாக மக்கள் மீது அரசாங்க பளுவு சுமத்தப்பட்டிருக்கின்றது என்பதை நினைத்துப் பாருங்கள். இனி நீதி வழங்கும் இலாகா நிலைமையையும் சற்று கவனித்தோமேயானால் 3000 ரூபாய் சம்பளமுள்ள 5 ஹைகோர்ட்டு ஜட்ஜிகளால் நடைபெற்றுவந்த நீதி நிர்வாகம் இன்று 4000ரூ. சம்பளமுள்ள 15 ஜட்ஜிகளால் ஹைகோர்ட்டு நீதி நடைபெற்று வருகின்றது. இந்த விகிதாச்சாரத்தை அனுசரித்தே இந்திய இராணுவச் செலவும் 22 கோடி ரூபாயில் இருந்தது 60 கோடி வரை உயர்த்தப்பட வேண்டிய அளவுக்கு ஏறிவிட்டது. இந்தக் காரியங்கள் அவ்வளவும் தேசீயத்தின் பேராலும், நல்ல அரசாக்ஷியின் பேராலும் உயர்த்தப்பட்டதேயொழிய வேறில்லை என்பதை முதலில் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, தயவு செய்து மேலே படியுங்கள். ஆகவே, நல்ல அரசாக்ஷியும், தேசீயமும் மக்களின் நன்மைக்காக என்றே ஒன்றோடு ஒன்று போட்டி போட்டு இந்த நாட்டுக்கு இன்று இந்த நிலைமையைக் கொண்டு வந்து விடப்பட்டிருக்கின்றது.

அரசாங்கம் இந்த அளவுக்கு தலைகனத்து, சிறிதும் ஈவு இரக்கமில்லாமல் மக்களின் இரத்தத்தை உறிஞ்சும்படியானதாக ஏற்பட்டதற்கு முக்கிய காரணம் இந்திய தேசீயம் என்கின்ற ஒரு பெரிய பித்தலாட்டமான சாதனமேயாகும்.

இந்தப் பித்தலாட்டமான தேசீயம் இவ்வளவு அட்டூழியங்களைச் செய்ய அனுகூலமாயிருந்ததற்குக் காரணமெல்லாம் நமது இந்திய மக்களின் முட்டாள்தனமும், வயிற்றுப் பிழைப்புக்கு எதையும் விற்கத் தயாராய் இருந்த மானமற்றத் தனமுமேயாகும். இதை இன்னமும் விவரித்துச் சொல்லவேண்டுமென்பதாக நமது 'குடி அரசு' வாசகர்கள் ஆசைப்படமாட்டார்கள் என்றே கருதுகின்றோம். ஆனாலும் இரண்டொரு வருக்காவது இரண்டொரு விஷயங்களாவது விளங்க வேண்டி இருக்குமானால் நமது மாகாணத்தின் தேசீயத்தைப் பற்றி மட்டும் சிறிது ஜாடை காட்டி விட்டு பிறகு மேலே போகலாம் என்று கருதுகின்றோம்.

அதாவது இந்திய தேசீய காங்கிரசுக்கு நமது மாகாணத்தில் மாத்திரம் தலைவரானவர்கள், காரியதரிசி ஆனவர்கள் ஆகியவர்களைப் பற்றியும் , அவர்களால் நாட்டுக்கு ஏற்பட்ட நலனைப் பற்றியும், அவர்களது நாணயம், தேசபக்தி, தேசிய கொள்கை ஆகியவைகளைப் பற்றியும் சற்று யோசித்துப் பாருங்கள்.

திருவாளர்கள் சர்.சி. சங்கரநாயர் முதல் சர்.மணி அய்யர், எஸ். சீனிவாச அய்யங்கார், சி.விஜயராகவாச்சாரியார், சி.பி. ராமசாமி அய்யர்,



RangaRakes tamilnavarasam.com

எ.ரங்கசாமி அய்யங்கார், எஸ். சத்தியமூர்த்தி அய்யர் முதலியவர்கள் ஆவார்கள். இன்றைய தினமும் இந்த மாதிரி ஆட்களுடைய யோக்கியதை சற்று வெளியாகி விட்டதால் இதே கூட்டத்தில் உள்ள ஆட்களே சற்று வேறு வேஷம் போட்டுக் கொண்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். அதாவது சிலபேர் "வெள்ளை வேஷ்டி கட்டிக் கொண்டு பிச்சைக்குப் போனால் லக்ஷியம் செய்ய மாட்டார்கள்" என்று கருதி "காவிவேஷ்டி கட்டிக் கொண்டு பிச்சைக்குப் போவது" போல் சந்நியாசி, துறவி என்கின்ற பேரால் அதாவது வக்கீல் உத்தியோகம் செய்வதை விட்டு விட்டவர்கள் என்கின்ற பெயரால் அதே தேசீயத்தை அதே முறையில் அதே கூட்டத்தார்களே இன்றும் நடத்துகின்றார்களேயொழிய வேறு எந்த விதத்திலும் நாணயமுடையவர் களோ, யோக்கியமும், நல்ல எண்ணமும் உடையவர்களோ இந்த வேலையில் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லிவிட முடியுமா? உதாரணமாக, திரு. காந்திக்கு திரு. ஏ. இரங்கசாமி அய்யங்கார் அரசியல் காரியதரிசி யாகவும், திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் சமுதாய காரியதரிசியாகவும் இருக்கிறார்கள் என்பதும், திரு. எஸ்.சத்தியமூர்த்தி தான் கான்பரன்ஸ் தலைவராகவும் இருக்கிறார் என்பதுமே போதுமானதாகும்.

மற்ற மாகாணக்காரர்களின் யோக்கியதை தமிழ்நாட்டு தேசீயவாதி களை விட உயர்ந்திருக்கும் என்று கருதி நாம் அவர்களைப் பற்றி எழுதாமல் விட்டு விட்டதாக யாரும் கருத வேண்டியதில்லை. தேசீயம் என்கின்ற அச்சில் எந்த மாகாணத்து மக்களை உருக்கி ஊற்றினாலும் ஒரே மாதிரி உருவந்தான் தோன்றும். இந்த மாகாணத்தில் அதற்கென்றே முன்னணியில் நிற்க ஒரு தனி ஜாதியே ஏற்பட்டு விட்டதால், அது சற்று வேறு மாதிரியாக காணப்பட இடமுண்டாகின்றது என்றாலும் எங்கும் பொதுவில் வக்கீல் கூட்டம் தான் என்பதை மறந்து விடாதீர்கள்.

இந்த மாதிரியான தேசீயமானது (வக்கீல் கூட்டமானது) எப்படிப் பட்ட அரசாங்கத்துடன் தேசீய வியாபாரம் செய்ய ஆசைப்பட்டதென்று பார்ப்போமேயானால், வக்கீல் கூட்டத்தின் மனப்பான்மையின் தத்துவத் திற்குச் சிறிதும் பின் வாங்காததான (வியாபாரத் கூட்டத்தினரான) வெள்ளைக்காரர்களின் அரசாங்கத்தில் முட்ட ஆரம்பித்தது. இரண்டு கூட்டங்களும் ஒன்றுக்கொன்று இளைக்காததான தந்திரமும், சூக்ஷியுமுடை யதாததால் இரண்டும் முட்டிக்கொள்ளும் போது இந்திய மூடப்பாமர ஜனங் கள் மத்தியில் சிக்கி, கச கச வென்று நசுங்க வேண்டியவர்களாகி விட்டார்கள். மேற்கண்ட இந்த இரு வர்க்கத்தினர்களின் சுயநல வியாபாரமே தான் இன்றும் 'நல்ல ஆட்சி'யின் பேராலும், 'தேசீயத்தின்' பேராலும் நடக் கின்றது என்பதை யாரும் மறந்து விடாதீர்கள். வாசகர்களே! இது மாத்திர மல்லாமல், இன்று சீமையில் நடக்கும் வட்டமேஜை மகாநாடு என்பதும் சர்க்காரும் (வெள்ளைக்காரரும்) தேசீயமும் (வக்கீல்களும்) சேர்ந்தது. இந்திய மக்களை ஆலையில் கொடுத்து நசுக்கிப்பிழியும் படியான தன்மை



பொருந்திய அளவு கொடுமை கொண்ட ஒரு சதியாலோசனை என்பதை விட மற்றபடி அதற்கு வேறு ஏதாவது பெயர் கொடுக்க முடியுமா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

இந்தியாவின் முப்பத்தைந்து கோடி ஜனங்களுக்கும் பிரதிநிதி என்று சொல்லிக்கொண்டு சீமைக்குச் சென்றிருக்கும் திரு. காந்தி அவர்கள் தன் தலையில் சுமந்து கொண்டு போயிருக்கும் சுயராஜ்யத் திட்டம் வருணாச்சிரமக் கொள்கையும், முதலாளி ஆதிக்கக் கொள்கையும் கொண்ட தான ஒரு பெரிய மூட்டையா? அல்லவா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

அவர் விஷயம் அப்படியிருக்க, மற்ற பிரதிநிதிகளின் யோக்கி யதைகள் தான் என்ன என்பதையும் சற்று யோசித்துப் பாருங்கள். ஏழை மக்களுக்கும், பாடுபட்டு உழைத்துவிட்டு பட்டினி கிடக்கும் மக்களுக்கும் பிரதிநிதியாக யாராவது போயிருக்கின்றார்களா? என்பதை சற்று நடு நிலை மையில் நல்ல புத்தியோடிருந்து யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம்.

ஒரு சமயம் திரு. காந்தி அவர்கள் தன்னை அடிக்கடி தான் "இந்தியாவில் பாடுபட்டு உழைத்து பட்டினி கிடக்கும் கிராமத்து ஏழை மக்களின் பிரதிநிதி" என்று சொல்லிக்கொள்ளுகின்றாரே என்று கருதி அவரை ஏழை மக்களின் உண்மையான பிரதிநிதி என்று கருதியிருப்பீர் களேயானால் நீங்கள் ஒரு முட்டாள்களேயாவீர்கள் என்று நாம் சொல்லு வதற்காக யாரும் அவசரப்பட்டு மனவருத்தமடைய கூடாதென்று கேட்டுக் கொள்ளுகிறோம். ஏனெனில், திரு. காந்தியவர்கள் தன்னை எந்த விதத்தில் ஏழை மக்களின் பிரதிநிதி-கிராமவாசிகள் பிரதிநிதி என்று சொல்லிக் கொண்டிருக்கிறார் என்பதைக் கவனித்தால் இதன் உண்மை விளங்கிவிடும்.

அதாவது "ஏழை மக்கள் கிராமத்தில் ஆடுமாடு மேய்த்து, நெய், பால், மோர் விற்றும், செருப்புத் தைத்தும் வாழ வேண்டியது. அவர்களது கையில் காசு சேரும் படியான வேலை எதுவும் செய்யக்கூடாது. மற்றும் பம்பாய் மில் முதலாளிகளைப் பார்த்து பொறாமைப்படக் கூடாது. அவர் களைப்போல் பணக்காரர்கள் ஆவதற்கு எண்ணவும் கூடாது" என்பதான கொள்கையுடன் தான் கிராமத்து ஏழை மக்களின் பிரதிநிதி என்று அவரே ஒரு தடவைக்கு மேலாகவே சொல்லி இருக்கிறார் என்பதை மறந்து விடாதீர்கள்.

அதாவது, வருணாச்சிரமக் கொள்கைபடி மக்கள் இருக்க வேண்டிய அளவுக்கு சுயராஜ்யம் கொண்டுவரப் போயிருக்கும் பிரதிநிதியேயாவார்.

மற்றபடி, வட்டமேஜை மகாநாட்டின் பார்ப்பனரல்லாதார் பிரதிநிதி களான திருவாளர்கள் இராமசாமி முதலியார், பன்னீர் செல்வம் முதலியவர் களின் யோக்கியதையையும் நாம் வெளியில் சொல்லித்தான் வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய தென்பதில்லை. ஏனெனில், திரு.இராமசாமி



RangaRakes
tamilnavarasam.com

முதலியார் ஜஸ்டிஸ் கட்சி என்னும் ஒரு தேசீயக் கட்சிப் பிரதிநிதியாவார். ஆதலால், ஜஸ்டிஸ் கட்சியின் தேசீயக் கொள்கை என்ன என்று தெரிந்தவர்களுக்கு திரு.முதலியாரின் பிரதிநிதித்துவத்தை பற்றி தெரிவிக்க வேண்டியதில்லை. திரு.பன்னீர் செல்வம் அவர்களோ இந்திய கிருஸ்துவர் பிரதிநிதி ஆவார். அவருடைய மத சமுதாயக் கொள்கைகள் தெரிந்தவர்களுக்கு அவரது பிரதிநிதித்துவத்தைப் பற்றியும் நாம் தெரிவிக்க வேண்டியதில்லை.

மற்றும் சென்னை மாகாண பார்ப்பனப் பிரதிநிதிகளுக்காக தலையங்கத்தை வளர்க்க மனமில்லாததால் விட்டு விட்டோம்.

பெண்கள் சார்பாகவோ, திருமதி.ராதாபாய் சுப்பராயன் அம்மாள் நமது பிரதிநிதியாவார். அந்தம்மாள் ஒரு ஜெமீன்தாரணியாவார். பெண்களுக்கு எல்லா பிரதிநிதித்துவமும், மந்திரி வேலை வரை பதவியும் கிடைக்க வேண்டுமென்பதற்கு எவ்வளவு வேண்டுமானாலும் வஞ்சகமில்லாமல் வாதாடுவார்கள். ஆனால், புருஷனிடம் அடியும் உதையும் பட்டுக் கொண்டு, தற்கொலை பண்ணிக்கொள்ளவும் சௌகரியம் இல்லாமல் கஷ்டப்படும் பெண்களைப் பற்றிய கதை அந்த அம்மையாருக்கு சிறிதுமே தெரியாது. ஆகவே, அந்தம்மாளிடம் பெண்களுக்கு முக்கியமாக எவ்வித விடுதலை வேண்டுமோ அந்தக் காரியம் மாத்திரம் எதிர்பார்க்க முடியாது. இவை இப்படி இருக்க, மற்றபடி வட்டமேஜை மகாநாட்டில் நமது சர்க்காரார் பிரதிநிதித்துவம் எவ்வளவு யோக்கியதை உடையது என்று பார்த்தால் ஒரு வரியில் முடிவு கண்டு விடலாம். அதாவது 'இந்தியாவை இந்துசமஸ்தான மன்னர்களும், இந்திய வக்கீல்களும், வியாபாரிகளும் சேர்ந்து ஆட்சி புரிய வேண்டியதாகும்' என்கின்ற கொள்கையே தான் சர்க்காராருடைய கொள்கையாகும். மற்றபடி நமது மாகாண தீண்டாதவர்கள் பிரதிநிதித்துவத்தைப் பற்றி பேசுவதென்றாலோ நமது பிரதிநிதியாய் சென்றிருப்பவர் தங்களுக்கு என்ன வேண்டும்? என்பதையே சரியாய் உணராதவர்கள் ஆவார்களா என்பது சந்தேகம்.

ஆகவே, இப்படிப்பட்ட வட்ட மேஜை மகாநாட்டை மேலே சொன்ன படி 35 கோடி மக்களை வதைத்து தாங்கள் வாழ நினைத்திருக்கும் பலவித சுயநல எண்ணங்களைக் கொண்ட ஒரு சிறு கூட்டத்தாரின் சதியாலோசனை மகாநாடு என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும் என்று மறுபடியும் கேட்கின்றோம். சுதந்திரம், சுயராஜ்யம், பொருளாதாரக் கஷ்டம் என்று கூப்பாடு போட்டுக் கொண்டு இருக்கும் இந்த காலத்திலேயே அதுவும் அக் கூச்சல்களுக்கு மத்தியிலேயே இந்தியாவில் 'பொருளதார நெருக்கடியை குறைக்க' என்று புதிய வரி போடுவதினுடையவும், அடக்கு முறை சட்டங்கள் ஏற்படுத்துவதினுடையவும் கொடுமையை நினைத்தால் யாருக்கு தான் வயிறு பற்றி எரியாது? அரசாங்கம் என்பது இப்படித்தான் இருக்கும் என்று சொல்லுவதானால், தேசீயம் இப்படித்தான் இருக்கும் என்று



சொல்லுவதானால் மக்களுக்கு ஒரு அரசாங்கமோ, தேசீயமோ அடியோடு வேண்டியதில்லை என்கின்றதான நிலைமையே மேலென்று சொல்லுவோம். தேசம் தன்னரசு நாடாகி, எங்கு பார்த்தாலும் கலகமும் கொள்ளையும் நடக்கும் நிலைமை வந்தாலும் இந்திய மக்கள் இன்று அரசாங்கத்தாலும், தேசீயத்தாலும் கஷ்டப்படுகின்ற இம்சையில் இருந்து 100- க்கு 50 பங்கு மேலாகவே குறைவாகத் தான் கஷ்டப்படுவார்களேயொழிய, இதைவிட ஒரு சிறு கடுகளவும் அதிகமாய்க் கஷ்டபட முடியாதென்று தைரியமாய்ச் சொல்லுவோம்.

அப்படி ஏதாவது, யாராவது அந்த சமயம் இன்றைய நிலைமையை விட சற்று அதிகமாகக் கஷ்டப்பட கூடியதாகும் என்று சொல்லக் கூடுமானால், அப்படிக் கஷ்டப்படும் கூட்டம் வெகு சிறிய கூட்டமாகவும், அதுவும் இன்று மக்களை வதைத்துக் கொடுமைப்படுத்தி, சோம்பேறியாய் வாழும் பார்ப்பன-வக்கீல்-உத்தியோகம் ஆகிய கூட்டமும், பாட்டிற்குத் தகுந்த கூலிகூட கொடுக்காமல் ஏழைகளை ஏமாற்றி வாழும் முதலாளி, ஜமீன்தாரர் கூட்டமும் தான் சின்னா பின்னப்படுமே தவிர, மற்றபடி 100-க்கு 90 பேர் கொண்ட ஏழை மக்களுக்கு ஒரு கஷ்டமுமே வந்து விடாது.

ஆகவே, இவற்றிலிருந்து அரசாங்கமும், தேசீயமும் சோம்பேரிகளையும், செல்வவான்களையும் காப்பாற்றுவதற்கேற்பட்டதேயொழிய ஒரு நாளும் ஏழை மக்களைக் காப்பாற்ற ஏற்பட்டதல்ல என்றே உரக்கக் கூறுவோம்.

ஏழை மக்கள் கூப்பாடு வெளியில் யாருக்கும் தெரியக்கூடாது என்பதற்காகவே தான், அதாவது எப்படி அடித்தாலும் அழுகக் கூடாது என்பதற்காக மேலும் மேலும் அடிப்பது போலவே இன்று இந்திய சட்டசபையில் பத்திரிகைச் சட்டம் கொண்டு வந்தாய் விட்டது. இச்சட்டம் கொண்டு வரப் பட்டதற்கும், அமுலில் வரப் போவதற்கும் திரு.காந்தியும், தேசீயமுமே நூற்றிற்கு 51 பாகத்திற்கு மேலாகவே பொறுப்பாளியாவர்களென்று சொல்லுவோம்.

அடித்தவனை தண்டிக்கவோ, கொலை செய்தவனை கொலை செய்யவோ கூடாதென்று நாம் எப்பொழுதும் சொல்லவரவில்லை. ஏனெனில், தண்டனையடைய தயாராயிருப்பவன் தான் பெரிதும் அடிக்க வருவான். சாகத் துணிந்தவன் தான் மற்றவனைக் கொல்ல வருவான். ஆகையால் அதில் தப்பித்துக் கொள்ள ஆசைப்படுபவர்களை விட்டுவிடும்படி நாம் சொல்ல வரவில்லை. அதற்காக ஒரு மனிதன் தனது அபிப்பிராயத்தைக்கூட வெளியில் எடுத்துச் சொல்லக் கூடாது என்று சட்டம் செய்வதானால் இது எப்படி நாகரீகமான சுயேச்சைக்கு இடமளிப்பதான ஆட்சி என்று சொல்ல முடியும்?



RangaRakes tamilnavarasam.com

ஒவ்வொரு 'தேசீயப்பத்திரிகையும்' ஒவ்வொரு 'தேசீயவாதியும்' அனேகமாய் இவ்விஷயத்தில் வழவழவென்றே பேசி சர்க்காருக்கு தைரியத்தையும் ஆக்கத்தையும் அளித்துவிட்டார்கள். 'நான் ஓயாமல் அழுகிறேன். நீ நோகாமல் அடி'யென்பது போலவே நடந்து கொண்டி ருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள பேசினார்களேயல்லாமல் வேறில்லை. அதாவது 'ஒரு சட்டம் வேண்டியது தான்-ஆனால்' என்று தான் தங்கள் ஆட்சேபனைகளைத் தெரிவித்து இருக் கிறார்கள். கொலை செய்தவனைத் தண்டிக்க ஏற்கனவே சட்டம் இருக்கின்றது. கொலைக்குத் தூண்டியவனையும் தண்டிக்க ஏற்கனவே சட்டம் இருக்கின்றது. அப்படியிருக்க, அடியோடு பத்திரிகை சுதந்திரத் தையே அழிக்கத்தக்க சட்டம் எதற்காக செய்யப்பட வேண்டும்? என்பது நமக்கு விளங்கவில்லை. என்ன குறைந்தாலும் இந்தியா தேசத்தில் நாள் 1 க்கு நூற்றுக்கணக்கான கொலைகளுக்குக் குறையாமல் மனிதனை மனிதன் வெட்டிக்கொண்டோ, குத்திக் கொண்டோ, சுட்டுக்கொண்டோ தான் கொலைகள் நடைபெறுகின்றன. இதற்காக உலகத்தில் கத்தி இல்லாமல் போய்விட்டதா? துப்பாக்கி இல்லாமல் போய்விட்டதா? கைகள் இல்லாமல் போய் விட்டதா? என்று கேட்கின்றோம். கோபப்பட்டு, ஆத்திரப்பட்டு, துவேஷப்பட்டு குத்துவதும், வெட்டுவதும், சுடுவதும் கோழைத்தனமென் பதையும், முட்டாள்தனம் என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளுகின்றோம். அதற்காக மக்களுக்கு உண்மை விளங்காமலும், விஷயஞானமேற்படா மலும் இருக்கும்படி செய்வதா? என்பது தான் நமது கேள்வி.

ஆகவே, இந்த சமயத்தில், அதாவது இந்தியாவுக்கு 'சுதந்திரம்' வழங்கப்போகும் சமயத்தில், பொருளாதாரக் குறை நீங்கப் போகும் சமயத்தில், அதுவும் 'அஹிம்சா தர்மமூர்த்தியாகிய மகாத்மா காந்தி' உலகத்தை அஹிம்சா தர்மத்தில் திருப்பி அஹிம்சையின் மூலமே ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமல் ஏழைகளுக்கு வேண்டிய "சுதந்திரம் வாங்கிவர சீமைக்குப் போயிருக்கும்" சமயத்தில், கதரின் மூலம் மணிக்கு ஒரு தம்படி வரும்படியான "பொருளாதாரக் கஷ்டத்தை நீக்க" விருக்கும் சமயத்தில் இதுவரையில்லாத புதிய வரி உயர்வும், இதுவரையில்லாத புதிய அடக்குமுறை சட்டமும் ஏற்படுவது என்றால், இந்த தேசீயத்திலும், இந்த சர்க்காரிலும் ஏதாவது நாணையமோ, யோக்கியமோ இருக்கமுடியுமா? என்று யோசித்துப் பாருங்கள். எனவே, ஜனங்களின் முட்டாள்தனத்தால் தேசீயம் இவ்வளவு அயோக்கியத்தனமாய் நடைபெறுவதும், தேசீயத்தின் அயோக்கியத்தனத்தால் அரசாங்கம் இவ்வளவு அக்கிரமமாகவும், கொடுமையாகவும் நடைபெற வேண்டியதானதுமான காரியங்களை நினைத்துப்பார்த்தால் இவை நமக்கு அதிசயமாய்த் தோன்றவில்லை.

ஏனெனில், மக்களின் முட்டாள்தனம் நீங்கும் போதுதான் இந்தக் கொடுமையும், அக்கிரமமும் எல்லாம் சரிபட முடியும். அதுவரை யார் என்ன பாடுபட்டாலும் ஒரு காரியமும் சாத்தியப்பட மாட்டாது. இப்படியே தான் மேலும் மேலும் நடந்து கொண்டே இருக்கும்.

ஆதலால் இன்று மக்களின் முட்டாள்தனத்தையும், மூடநம்பிக்கை யையும் ஒழிக்கும் வேலை தான் தேசீய வேலையாகவும், நல்ல அரசாட்சி ஏற்படுத்தும் வேலையாகவும் கொள்ள வேண்டியதாகும் என்பதை பொது ஜனங்களுக்கும், தேசாபிமானிகளுக்கும் தெரிவித்துக் கொள்ளவே இதை எழுதினோம்.

**குடி அரசு - தலையங்கம் - 04.10.1931**



RangaRakes

tamilnavarasam.com

# பெண்களுக்குச் சொத்துரிமை

## மைசூர் அரசாங்கத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை அளிக்கச் சட்டம்

1931-ஆ அக்டோபர் மாதம் 22 தேதி நடைபெற விருக்கும் சட்டசபையில் இந்து லா என்னும் இந்துக்கள் சட்ட சம்பந்தமான விஷயங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். கடந்த 2 சட்டசபைகளில் மேற்படி விஷயங்கள் சம்பந்தமான பொதுக் கொள்கைகள் யாவும் ஒப்புக்கொள்ளப்பட்டாய் விட்டன. அதின் மீது ஏற்பாடு செய்திருக்கும் திட்டங்கள் வரப்போகும் சட்டசபையின் விவாதத்திற்குக் கொண்டு வரப்படும்.

அவையாவன :-

பெண்களுக்குத் தாங்கள் பெண்களாகப் பிறந்த காரணத்தாலோ, அல்லது அவர்களுக்குச் சொத்துரிமை உண்டு என்பதற்கு மதசம்பந்தமான ஆதாரங்கள் இல்லை என்கின்ற காரணத்தாலோ அவர்களது வாரிசு சொத்துரிமை மறுக்கப்படக்கூடாது. ஒரு பாகம் பிரியாத குடும்பத்தில் உள்ள ஒருவர், தான் சுயார்ஜிதமாக சம்பாதித்து வைத்திருக்கும் சொத்திலும் பெண் சந்ததிகளுக்கு உரிமை உண்டு.

ஒவ்வொரு விதவைக்கும் தானாகவே தத்து எடுத்துக்கொள்ள உரிமையுண்டு. புருஷன் கண்டிப்பாய் தத்து எடுத்துக் கொள்ளக் கூடாது என்று ஏற்பாடு செய்திருந்தால் விதவைக்குத் தத்து எடுத்துக் கொள்ள உரிமை இல்லை.

பெண் பிள்ளைகளுக்கு இப்போது கிடைத்துவரும் வாரிசு உரிமைகளிலும் கூட சொத்துக்களின் வரும்படிகளை அனுபவிக்க மாத்திரம் உரிமை இருக்கின்றதே தவிர, மற்றபடி அவர்கள் அதை தங்கள் இஷ்டப்படி சர்வ சுதந்திரமாய் அனுபோகிக்கவும், வினியோகிக்கவும் உரிமை இல்லாமல் இருக்கின்றார்கள்; ஆதலால் இந்தக்குறையும் நீங்கும்படியாக அதாவது அவர்களுக்குக் கிடைக்கும் வாரிசு உரிமை சொத்துக்களை



தங்கள் இஷ்டப்படி சர்வசுதந்திரமாய் அனுபவிக்கவும், வினியோகிக்கவும் இந்தப் புதிய சட்டத்தில் அனுமதிக்கப்படுகின்றது.

பாகம் பிரியாத குடும்பத்தில் கணவன் இறந்துவிட்டால் பெண் ஜாதிக்குக் குழந்தை இருந்தாலும், இல்லாவிட்டாலும் குடும்ப சொத்தில் கணவனுக்குள்ள பாகம் சர்வசுதந்திரமாய் பெண்களுக்குக் கொடுத்து விட வேண்டும். குடும்ப சொத்துக்கள் பல வழிகளில் துர்வினியோகம் செய்யப்பட்டக் காலங்களிலும் அச்சொத்துகளின் மீது பெண்களுக்கு ஜீவனாம்சத்திற்கு உரிமையுண்டு என்பதாகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 04.10.1931**



RangaRakes tamilnavarasam.com

# நாகையில் பொதுக் கூட்டம்

தலைவரவர்களே! சகோதரர்களே!! சகோதரிகளே!!! தலைவர் அவர்கள் சும்மா இருந்த உங்களை தூண்டிவிட்டு கேள்விகள் கேட்கும்படி செய்துவிட்டார். நான் வம்பு சண்டைக்கு வரவில்லை. வலியவந்தால் நான் எப்படி ஓட முடியும்? உங்கள் சந்தேகத்தையெல்லாம் தீர்க்கக் கூடிய தீரனல்ல நான். எனக்கு தோன்றியதை, நான் சரியென்று கருதியதை சொல்லுகின்றேன். உங்களுக்கு சரி என்று பட்டதை ஒப்புக்கொள்ளுங்கள். மற்றதைத் தள்ளி விடுங்கள். அவ்வளவு தான் சொல்ல முடியும். என்னை ஒரு மகாத்மா என்றோ, மனித தன்மைக்கு மீறிய சக்தி உடையவனென்றோ கருதி ஒன்றையும் கேட்டுவிடாதீர்கள். சாதாரணமான மனிதன் என்று கருதி நான் சொன்னவற்றில் உங்களுக்கு விளங்காதது ஏதாவது இருந்தால் கேளுங்கள். எனக்கு தோன்றியதை சொல்லுகிறேன். சரி தப்பு என்று கூட என்னிடம் சொல்லாதீர்கள். உங்களுக்குத் தோன்றியபடி நினைத்துக் கொள்ளுங்கள். திருந்துங்கள். எனக்கு ஆட்சேபனை இல்லை, நான் பேசு பவற்றில் தப்பிதங்கள் இருக்கலாம் என்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் நான் சரி என்று நினைத்ததைச் சொல்ல எனக்கு உரிமை உண்டு என்பதில் நான் சந்தேகப்படவில்லை.

## என்னை பற்றி

நண்பர்களே! முதலில் ஒரு விஷயத்தை சொல்லிக் கொள்ளுகிறேன். அதாவது சாப்பாட்டு ஜாகைக்கு போகும் வழியில் என்னைப் பற்றியும், என் மனைவியைப் பற்றியும் சுவர்களில் கண்டபடியெல்லாம் எழுதி இருந்தது, மற்றும் சிலரைப் பற்றியும் எழுதி இருந்தது.

பதிலுக்கு பதில் எழுதும் முறையிலோ என்னமோ மற்றும் சிலரைப் பற்றியும் எழுதி இருக்க கண்டேன். தவிர, தலைவர் திரு. குப்புசாமி அவர் களிடம் யாரோ ஒருவர் "நாங்கள் ஜாதியைக் கெடுக்கின்றோம்" என்றும் "சுயமரியாதைக்காரர்கள் தங்கள் பெண்களை பறையருக்கு கொடுப்பார் களா?" என்றும் கேட்டார்களாம். அதற்கும் "பதில் சொல்லுங்கள்" என்றார்.



நண்பர்களே! என்னைப் பொறுத்தவரை நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதுவும் என் மனப்பூர்த்தியாய் சொல்லுகிறேன். என்னவென்றால், என்னை ஒருவர் மகாத்மா என்றோ தெய்வத் தன்மை பொருந்தியவர் என்றோ, சித்தர் என்றோ, புத்தர் என்றோ, ஞானி என்றோ கூப்பிடுவதை விட கருதுவதை விட என்னை அயோக்கியன் என்றும், திருடன் என்றும், முட்டாள் என்றும், சுயநலக்காரன் என்றும், பணம் சம்பாதிப்பவன் என்றும் மற்றும் இழிவான வேலை செய்கின்றவன் என்றும் சொல்லுவதில் எனக்கு லாபம் இருக்கின்றது என்று கருதுகின்றேன்.

ஏனெனில், எனது வேலையானது இராமசாமி என்று ஒரு மகாத்மா வோ, மற்றும் தெய்வத்தன்மை பொருந்திய ஒரு ஒப்பற்ற மனிதர் இருந்தார் என்று மூட ஜனங்கள் சொல்லிக் கொள்ளவோ,எனது படத்தை பூஜையில் வைத்து பூஜிக்கவோ, தேரில் வைத்து இழுக்கவோ, கோவிலில் என் பெயரில் விக்கிரகம் செய்து பூசை உற்சவம் செய்யவோ நான் கருதவில்லை. அந்த குணத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று கருதி வெளிப்பட்டவன். ஆகவே, என்னை அக்கதிக்கு ஆளாக்காதவர்களே எனது நண்பர்கள் ஆவார்கள். எனது கொள்கைகளுக்கும் துணை புரிந்தவர்களாவார்கள்.

ஏனெனில் வண்ணான், நாவிதன், பறையன், பள்ளன், செட்டி, நாயக் கன், நாடார் என்று சொல்லப்பட்ட 'இழிகுல' மக்கள் என்பவர்கள் எல்லாம் இன்று ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியும், பூஜித்தும், உற்சவம் செய்யப் பட்டும், நாட்டுக்கோ, அச்சமூகங்களுக்கோ ஏற்பட்ட பலன் என்ன? என்று கேட்கின்றேன். அதன் பேரால் அவர்கள் கதைகளைச் சொல்லி சிலர் வயிறு வளர்க்கின்றனர். சிலர் சோம்பேரிகளாய் வாழ்கின்றார்கள் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

அதுபோலவே இராமகிருஷ்ண 'பரமஹம்சர்', விவேகானந்த 'சுவாமிகள்' , லோகமன்ய திலக 'மகரிஷி', இராமலிங்க 'வள்ளலார்' என் கின்ற சமீபகால மக்களால் நாட்டுக்கு ஏற்பட்ட பயன் என்ன? இவர்கள் படம் பூஜிக்கப்படுவது எனக்கு தெரியும். இவர்களை 100க்கு 75 மக்களுக்கும் தெரியும். ஆனால் 100 ல் ஒருவருக்கு நடந்த நன்மை என்ன? அதுபோலவே இன்று பிரத்தியட்சத்தில் இருக்கும் காந்தி மகாத்மாவும், திருப்பாலக்குடி மஸ்தானும் வணங்கப்படுவதும், அவதாரமாகவும், நபியாகவும் கருதப்படுவதும், அதோடு மாத்திரமல்லாமல் அவர்களது மலம் முதல் சுவாசக் காற்று மலம் வரை மதிக்கப்படுவது எனக்குத் தெரியும்.

## 'மகாத்மா'

திரு. காந்தியை விட 'மஸ்தான்' சாயபுக்கு உண்மையிலேயே மதிப்பு அதிகம் என்பது எனக்குத் தெரியும். ஏனெனில், அனேகர் திரு.காந்தியை



RangaRakes tamilnavarasam.com

மனிதனாகவே கருத வேண்டுமென்றே தங்கள் சுயநலத்திற்கும், ஆதிக்கத் திற்கும், வயிற்று வளர்ப்புக்கும், திரு காந்தியை ஏமாற்றுவதற்கும் அவரை மகாத்மா என்று சொல்லுகிறவர்கள், திருப்பாலக்குடிசாயபை உண்மை யிலேயே தெய்வத்தன்மை பொருந்தியவராக மதித்து, பூஜித்து வருகிறார்கள். எங்கள் ஊரில் இருந்து அனேக பி.ஏ., பி.எல்., எம்.ஏ., முதலியவர்களும், உயர்ந்த ஜாதியார் பிராமணர் என்று தங்களை சொல்லிக் கொள்ளுபவர் களுமே போய் அவரது எச்சிலை சாப்பிட்டுவிட்டும் வந்தார்கள். எச்சில் கலந்த தண்ணீரே பழனி பஞ்சாமிர்தம் போல் டின்னில் அடைத்துக் கொண்டு வந்து இருக்கின்றார்கள். ஆனால் , இவர்களால் நாட்டிற்கு ஏற்பட்ட பலன் என்ன? என்று கேட்கின்றேன்.

திருப்பாலக்குடி சாயபை ஒரு சாதாரண மனிதன் என்று எண்ணாத காரணத்தால், அவரது எச்சில் கலந்த தண்ணீரை குடித்து லாபம் பெறலா மென்று கருதி, மக்கள் மூடர்களாக வேண்டியதாயிற்று. அதுபோலவே, திரு.காந்தியை மகாத்மா என்று கருதியதால், அவரது காரியத்தால் ஏற்படும் தீமைகளும், நஷ்டங்களும், இழிவுகளும் எல்லாம் அதற்குமாறாக கருதப் படவேண்டியதாயிற்று. ஆனால் என்னுடைய காரியங்களுக்கு அப்படிப் பட்ட விபரீதபலன் ஏற்படவேண்டாம் என்றே கருதுகிறேன். எனக்காக எந்த மனிதனும் எவ்வித நஷ்டமும் அடையவேண்டாம். எதையும் நம்ப வேண்டாம். நான் கூறுபவைகளை வெகு ஜாக்கிரதையாய் அலசிப் பார்க்க வேண்டுமென்றே ஆசைப்படுகிறேன். ஆகையால், நான் தெய்வத்தன்மை பொருந்தியவனாகக் கருதப்பட்டுவிட்டால் மக்கள் என் வார்த்தையை ஆராய்ந்துப் பார்க்க மாட்டார்கள். 'நான் அயோக்கியன்' என்று சொல்லப் பட்டால் என் வார்த்தைகள் மிகவும் ஜாக்கிரதையாக கவனிக்கப்படும். உதாரணமாக, இன்றைய கீதை என்பதை எடுத்துக்கொள்ளுங்கள், அதில் இருக்கும் அக்கிரமம், தந்திரம், முன்னுக்குப்பின் முரண், மக்களை மக்கள் இழிவுப்படுத்துவது என்பவைகள் யாருடைய புத்திக்காவது விளங்கு கின்றதா? ஏன் விளங்கவில்லை? அதைச் சொன்ன மனிதனை இன்னான் என்றே, எதற்காகச் சொன்னான் என்றே உணரமுடியாமல் "பகவான் சொன் னார்" என்று சொல்லப்பட்டதால் இன்றைய உலக மக்கள் எல்லாருக்குமே அது பொருந்துவதாகும் என்று சொல்லக் கூடிய அளவுக்கு புகழப்பட்டு கின்றது. அது போலவேதான் புராணங்கள். சாஸ்திரங்கள், வேதங்கள் என்கின்ற ஆபாசக் களஞ்சியங்கள் எல்லாம் மதிக்கப்படுகின்றன.

ஆகவே, அந்தப்படி மதிக்கப்படாமல் எனது வார்த்தைகள், அபிப் பிராயங்கள் அதற்குண்டான சரியான மதிப்புப்பெறவேண்டுமானால், நான் அயோக்கியனாகவும், பணம் சம்பாதிப்பவனாகவும், திருடனாகவும், கருதும்படியான பிரசாரம் செய்பவர்கள் உதவி செய்தவர்களாகவே ஆவார்கள். எந்த காரணத்தைக் கொண்டும் மனிதத்தன்மைக்கு மீறிய எந்த குணத்தையும் என் மீது சுமத்திவிடாதீர்கள்.



தூத்துக்குடியில் சுமார் 20, 30 சுவர்களில் "இராமசாமிக் கழுதைக்கு செருப்படி" என்று எழுதியிருந்தது. ஆனால் இதுவரை அடி விழுக வில்லை இங்கும் "இராமசாமிக் கழுதை செத்துவிட்டது" என்றும் "இராம சாமியின் மனைவி நாகம்மாள் அவிசாரி" என்றும் எழுதி இருந்தது.

"இராமசாமிப் பெரியார் சிரஞ்சீவியாய் இருக்க வேண்டும்" என்று எழுதியிருந்ததைப் பார்த்து சந்தோஷப்பட்டிருந்தேனேயானால் "இராம சாமிக் கழுதை செத்துப் போய் விட்டது" என்பதற்கு நான் வருத்தப்பட வேண்டும். அதுபோலவே, "இராமசாமி மனைவி கற்புக்கரசி" என்று எழுதி இருந்ததைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து, மாதம் மும்மாரி மழை வரச் செய்து பயன் பெற்று இருந்தால் "இராமசாமி மனைவி நாகம்மாள் அவிசாரி" என்பதற்கு நான் விசனப்பட வேண்டும்.

ஆகவே, அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால், இவைகளி லிருந்து ஒரு அளவுக்கு நான் 'வெற்றி பெற்று விட்டேன்' என்பதை மாத்திரம் உணருகிறேன். என்னை அறியாமலே நான் ஏதாவது மதிப்பு பெற வேண்டுமென்று கருதி இருந்தாலும், நானே, எனக்கு தீங்கு தேடிக்கொண்ட வனே யாவேன். அது எப்படியோ போகட்டும்.

## பறையனுக்குப் பெண் கொடுப்பாயா?

ஜாதியை நாங்கள் ஒன்றாக்குகின்றோமாம் ஆம், ஆக்கமுயற்சிக் கின்றோம். அதில் சந்தேகமில்லை. ஆனால் சீக்கிரத்தில் முடியுமா என்பது சந்தேகம். மனிதஜாதி ஒன்றாகித்தான் தீர வேண்டும். அதற்கு தடை செய் கின்றவர்கள் அயோக்கியர்கள், மடையர்கள் என்று தைரியமாய்ச் சொல்லு கின்றோம். எங்கள் பெண்களை பறையனுக்கு கொடுப்போமா? என்று கேட்கப்படுகின்றது.

இது ஒரு அறிவீனமான கேள்வி, அல்லது அயோக்கியத்தனமான கேள்வி என்றே சொல்லுவேன். ஏனெனில், எங்கள் பெண்களை நாங்கள் அவர்களுக்கு இஷ்டப்பட்டவர்களுடன் கூடிவாழ செய்யப்போகின் றோமே யொழிய, எங்களுக்கு இஷ்டமானவர்களுக்குக் கொடுக்கும் உரிமையைக் கொண்டாடுகின்றவர்கள் அல்ல. பெண்களை ஒரு சாமானாக கருதி ஒருவருக்கு கொடுப்பது என்கின்ற முறையை ஒழிக்க முயற்சிக் கின்றோம்.

நண்பர்களே! நாங்கள் ஆதிதிராவிடர்களைப் பற்றி பேசும் போது பார்ப்பனர்கள் மனவருத்தமடைவதில் அருத்தம் உண்டு. ஆனால் பார்ப்பனரல்லாதார் மனவருத்தமடைவதில் சிறிதும் அர்த்தமில்லை. அது வெறும் முட்டாள்தனமும், மானமற்றதன்மையுமேயாகும். ஏனெனில், நமது சமூகத்தில் பார்ப்பனர் என்கின்ற கூட்டத்தாராகிய 100 -க்கு 3வீதமுள்ள



RangaRakes tamilnavarasam.com

ஜனத்தொகை நீங்கி, மற்ற ஜனங்களுக்கு இந்த நாட்டில் சூத்திரன், (அடிமை) ஆதிதிராவிடன் (பறையன்) என்கின்ற பட்டமில்லாமல் வேறு எந்தப் பட்டத்தோடாவது யாராவது இருக்க முடியுமா? இருக்கின்றார்களா? என்று கருதியும், அனுபவத்தையும் கொண்டு பாருங்கள். சூத்திரன் என்கின்ற கலத்தில் நீங்கள் பதியப்பட்டிருப்பதில் உங்களுக்குச் சிறிதாவது மானம் இருந்தால் பறையன் என்கின்ற பட்டம் போகவேண்டுமென்பதில் கடுகளவாவது வருத்தமிருக்குமா?என்று கேட்கின்றேன்.

பறையன் பட்டம் போகாமல் உங்களுடைய சூத்திரப்பட்டம் போய் விடும் என்று கருதினீர்களேயானால் நீங்கள் வடிகட்டின முட்டாள்களே யாவீர்கள்.

மற்றும், பேசப்போனால் பறையன் சக்கிலி என்பதற்கு இன்னார் தான் உரிமையென்றும், அது கீழ் ஜாதியென்பதற்கு இன்னது ஆதாரமென்றும் சொல்லுவதற்கு ஒன்றுமே இல்லை. கை பலமேயொழிய, தந்திரமேயொழிய வேறில்லை. ஆதலால், அதாவது சீக்கிரத்தில் மறைந்து விடக்கூடும். உங்கள் சூத்திரப்பட்டத்திற்கு கடவுள், மதம், வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், கோவில் ஆகிய அநேக ஆதாரங்கள் உண்டு. இத்தனையையும் நாசமாக்கி அடியோடு ஒழித்தாலல்லாமல் உங்கள் தலையில் இருக்கும் சூத்திரப்பட்டம் கீழே இறங்காது. ஆகவே, யாருக்காவது மான உணர்ச்சி இருந்திருந்தால் “நீங்கள் ஜாதி ஒன்றாக்குகின்றீர்களே” என்று நம்மைக் கேட்டிருக்க மாட்டார்கள். ஆகவே, ஆதிதிராவிடர் நன்மையைக்கோரி பேசப்படும் பேச்சுகளும், செய்யப்படும் முயற்சிகளும், ஆதிதிராவிடரல்லாத மக்களில் பார்ப்பனரல்லாத எல்லாருடைய நன்மைக்கும் என்பதாக உணருங்கள்.

## நான் மாறுவது

நான் அடிக்கடி கொள்கைகளில் மாற்றமடைவதாக சொல்லப்படுகின்றது வாஸ்தவமாக இருக்கலாம். நீங்கள் ஏன் அதை கவனிக்கின்றீர்கள்? ஒரு மனிதன் அவன் பிறந்தது முதல் இன்றுவரை திருடிக்கொண்டே இருக்கின்ற ஒரே நிலைக்காரன் என்று சொல்லப்பட்டால் அவன் மகாயோக்கியனா? என்று கேட்கின்றேன். எந்த மனிதனும் ஒரே நிலைமையில் இருக்கவேண்டும் என்று நீங்கள் ஏன் ஆசைப்படுகின்றீர்கள்? அதனால் உங்களுக்கு என்ன லாபம்? மாறுதல் முற்போக்குள்ளதா? பிற்போக்குள்ளதா? அதனால் மக்களுக்கு நன்மையா? தீமையா? என்பன போன்றவைகளை கவனிக்கவேண்டியது அறிவாளிகளின் கடமையாகும்.

மற்றும், பொது நன்மையை உத்தேசித்து கஷ்டப்படுகின்ற மக்கள் நன்மையை உத்தேசித்து மாறினானா? அல்லது சுயநலத்திற்கு அக்கிரமமான லாபமடைவதற்கு மாறினானா? என்று பார்க்க வேண்டும். யோக்கியன், அறிவாளி, ஆராய்ச்சியாளி, பொறுப்பாளி, கவலையாளி ஆகியவர்கள் மாற வேண்டியது அவசியமாகலாம். அதைப்பற்றிய கவலை ஏன்? யார் எப்படி மாறினாலும் பார்க்கின்றவர்களுக்கு புத்தியும் கண்ணும் சரியாய் இருந்தால் மாற்றத்தைப் பற்றி ஒன்றும் ஆபத்து வந்து விடாது.

நான் பல தடவை மாறி இருக்கலாம். பல குட்டிக்கரணங்கள் போட்டிருக்கலாம். சுயநலத்திற்காகவும் குட்டிக்கரணம் போட்டிருக்கலாம். பச்சோந்தியாய் இருக்கலாம். அதனால் உங்களுக்கென்னகெடுதி? நாடகக் கொட்டகையில் நாடகம் பார்க்கின்ற போது ஒரு மனிதன் எத்தனை வேஷம் மாறி மாறிப் போட்டு நடிப்பதை நீங்கள் காசு கொடுத்து பார்த்து விட்டு, நடித்தவனையும் புகழ்ந்துகொண்டு போகின்றீர்களா? அல்லது இல்லையா? என்பதை நினைத்துப் பாருங்கள். அதனால் நீங்கள் ஏமாந்து போய் விடுகின்றீர்களா? அதுபோல் எங்களை நினைத்து கொண்டு வந்து நாங்கள் சொல்வதைக் கேட்டுவிட்டு போங்கள்.

பிறகு, உங்கள் புத்திக்கு பட்டதை ஒப்புக் கொள்ளுங்கள். மற்றதை தள்ளிவிடுங்கள். இன்றைய தினம் நான் சொல்லுபவைகள் கூட எனக்கு முடிந்த முடிவா என்பது சந்தேகம் தான். அன்றியும் உங்களுக்கு இன்றைய நிலைமையில் கால வர்த்தமானத்தை பொறுத்தவரையில் இவ்வளவுதான் சொல்லலாம் என்று கருதிக்கொண்டு சில விஷயங்களில் அளவாகவே பேசுகின்றேன் என்றும் சொல்லலாம்.

கோயில் கட்டிய மக்கள் கோயிலை இடிக்க வேண்டியவர்கள் ஆகி விடுவார்கள். அஹிம்சை பேசுபவர்கள், பலாத்காரத்தை பேசவேண்டியவர்களாகி விடுவார்கள். இராஜவிசுவாசிகள் இராஜ துரோகிகள் ஆகிவிடுவார்கள். திருடக்கூடாது என்பவர்கள் கொள்ளை அடிக்கச் சொல்லுவார்கள். இப்படியாக அபிப்பிராயங்கள் மாறிக் கொண்டுபோகலாம். இவற்றையெல்லாம் அபிப்பிராயங்கள் மாறியதாலேயே குற்றம் என்று சொல்லிவிட முடியாது. தங்களை நல்ல சூத்திரர்கள் என்று சொல்லிக்கொண்டு பார்ப்பனர்கள் கால்களைக் கழுவிய தண்ணீருக்கு பவுன் கொடுத்து சாப்பிட்டவர்கள், ‘இன்று சூத்திரன் என்றால் ஆத்திரங்கொண்டடி’ என்றும் ‘பார்ப்பனர்கள் ஜாக்கிரதை’ என்றும் ஏன் சொல்லுகின்றார்கள்? இந்த மாற்றத்தால் இப்படிச் சொன்னவர்கள் அயோக்கியர்களாகிவிட முடியுமா? தவிர ‘சூத்திரன் பணம் வைத்திருந்தால் பிராமணர்கள் பலாத்காரத்தால் அதைப்பறித்துக் கொள்ளலாம்’ என்று மனுதர்ம சாஸ்திரத்தில் இருந்தது மாறி இப்பொழுது வெள்ளையர் தர்மத்தில் ‘தந்திரங்களினாலும் சூக்ஷிகளாலும் மாத்திரம் தான் பறித்துக் கொள்ளலாம்’ என்கின்றதான மாறுதல் ஏற்பட்டுவிட்டது. நாளை ஒரு சமயம் சமதர்ம காலத்தில் ‘பிராமணன் (சரீரத்தில் பாடுபடாதவன்) சொத்து வைத்திருந்தால் மற்றவர்கள் பலாத்காரத்தில் பிடுங்கிக்


RangaRakes
tamilnavarasam.com

கொள்ளலாம்' என்று ஏற்பட்டாலும் ஏற்படலாம். இந்த மாதிரி மாறுதல்கள் காலத்திற்கும், பகுத்தறிவுக்கும், நாட்டின் முற்போக்குக்கும் ஏற்றார்போல் நடந்து தான் தீரும். எனவே நான் மாறுதலடைந்து விட்டேன் என்று சொல்லப்படுவதில் வெட்கப்படவில்லை. நாளை நான் எப்படி மாறப் போகின்றேன் என்பது எனக்கே தெரியாது. ஆதலால், நான் சொல்வதை கண்மூடித்தனமாய் நம்பாதீர்கள்.

## தேசீயத்திற்கு விரோதியாவது

மற்றும் நான் தேசீயத்திற்கு விரோதியென்று சொல்லப்படுகின்றது. கடவுளுக்கும், மதத்திற்கும் விரோதியான ஒருவன் கேவலம் தேசீயத்திற்கும் விரோதியாவது ஒரு அதிசயமல்ல. மற்ற யாருடைய தேசீயத்திற்கும் நான் விரோதியா? அல்லது இல்லையா? என்பது விவகாரத்திற்கிடமான தாயிருந்தாலும், உயர்திரு.காந்தியவர்களின் தேசீயத்திற்கு நான் சரியான விரோதியேயாகும். அதிலும் பார்ப்பனீய தேசீயத்திற்கு எவ்வளவு விரோதி யோ அதை விட பலமடங்கு அதிகமான விரோதியேயாகும். கராச்சி நவ ஜவான் வீரர்கள் 'காந்தி வீழ்க! காந்தியம் வீழ்க!!' என்று சொல்வதற்கு 2,3 வருஷத்திற்கு முன்பிருந்தே நான் காந்தி தேசீயத்திற்கு விரோதியாகி இருக்கின்றேன். காந்தீயம் ஒழிந்தாலொழிய இந்த நாட்டிற்கு விடுதலையோ, சமத்துவமோ, சுயமரியாதையோ இல்லை என்று கருதிக் கொண்டு இருக் கின்றவன். காந்தி தேசீயமெல்லாம் வெள்ளைக்கார ஆக்ஷியைப் பிடுங்கி, பார்ப்பனனிடமும், பணக்காரனிடமும் கொடுத்து, வருணாச்சிரம ஆட்சி ஆக்க வேண்டும் என்கின்ற ஒரே கொள்கை கொண்டதுதான்.

உதாரணம் வேண்டுமானால் அவரது கதர் தத்துவத்தையும், கிராம முன்னேற்றத் தத்துவதையும் நன்றாய் கவனித்துப் பார்த்தால் அப்பொழுது அவைகள் வருணாச்சிரமத்தை ஆதரிப்பதே ஒழிய வேறில்லை என்பதை விளக்கும். அன்றியும், திரு.காந்தியே 'வருணாச்சிரமத்தை நிலைநிறுத்தவே சுயராஜ்யத்தை வேண்டுகிறேன்' என்பதுவாக பல தடவை சொல்லி இருக்கிறார்.

அவர் எண்ணமெல்லாம் 'இந்தியாவைப் பழங்கால நிலைமைக்கு கொண்டு போக வேண்டு'மென்பதேயாகும். இந்தக் கருத்தை உள்ளே வைத்துக் கொண்டுதான் அதற்கு இடையூறாயிருக்கும் பிரிட்டிஷ் ஆட்சி மீது மக்களுக்கு விரோதம் ஏற்படும்படி நடிக்கின்றார். ருஷிய ஆட்சியை விட, மற்றும் ஏதாவது ஆட்சியை விட, பிரிட்டிஷ் ஆட்சி மோசமானதாக இருக்கலாமேயொழிய இராமன், அரிச்சந்திரன், கிருஷ்ணன், மனு, சேர சோழ பாண்டியன் முதலியவர்களின் ஆட்சியை விட 1000 பங்கு வெள்ளை யாட்சி மேலானதென்றே சொல்லுவேன். உதாரணமாக, திரு.இரவீந்திரநாத் டாகூர் அவர்கள் முந்தாநாள் பேசியதை கவனியுங்கள்.



'பகுத்தறிவின்மை, மூட நம்பிக்கை, ஜாதிப்பிரிவு, மதத்துவேஷம் முதலியவைகள் தான் நமது தேசத்தின் பெரும் விரோதிகள். அன்னிய ஆட்சியை விட அவை கொடியன. இவை ஒழிந்தாலொழிய பூரண சுயேச்சை என்பது கிடையாது' என்று சாந்தி நிகேதனத்தில் இருந்து உலக மக்களுக்கு சேதி அனுப்பியிருக்கின்றார். திரு. காந்தி தேசீயம் இந்தியாவின் மேற்படி விரோதிகளை ஒழிக்குமா? அல்லது அதை கொடுமையினதல்லாத அன்னிய ஆட்சியை ஒழித்து, அக்கொடுமைகளை நிலை நிறுத்துமா? யோசித்துப் பாருங்கள். தேசீயம் என்று சொல்லிவிட்டதாலேயே பாம்புப் புற்றில் கையைவிட வேண்டுமா? நெருப்புக்கு முத்தம் கொடுக்க வேண டுமா? என்று கேட்கின்றேன். சகோதரர்களே! நமது கொள்கை காந்தி தேசீய மாகிய காங்கிரசுக்கு விரோதமானதேயாகும். வருணாச்சிரமத்திற்கும், முதலாளி தத்துவத்திற்கும் விரோதமானதேயாகும். மேலும், அவற்றிற்கு அனுகூலமாயிருக்கும் கடவுள், மதம் என்பனவாகியவற்றிற்கும் விரோத மேயாகும். இன்னும் எங்குபோய் நிற்கும் என்று என்னாலேயே சொல்ல முடியாது. ஆகவே, நீங்கள் எதற்கும் உங்கள் பகுத்தறிவை தைரியமாய் உபயோகியுங்கள்.

*குறிப்பு : நாகையில் 03.10.1931 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 11.10.1931**



RangaRakes tamilnavarasam.com

# வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

இன்றையதினம் 'இந்தியா தேசத்தில் இந்திய மக்களுக்குள் இருந்துவரும் ஜாதி மத பேதங்களுக்குத் தகுந்தபடியான பிரதிநிதித்துவம் ஏற்படக்கூடாது' என்பதே தான் இந்திய காங்கிரஸ் கொள்கையாகவும், தீவிர தேசீயமாகவும் இருந்து வருகின்றது. அன்றியும் இந்தப்படி சொல்லுகின்ற வர்கள் தான் தேசீயவாதிகளாகக் கூடும். நம்மைப்பொறுத்தவரையிலும், 'ஜாதி மத வகுப்புப்படி மக்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண் டும்' என்று சொல்லுவதாலேயே தீவிர தேசீயவாதிகள் லிஸ்டில் நமது பெயர் பதியப்படாமல், வகுப்புவாதிகள் தேசத்துரோகிகள் லிஸ்டிலும் நமது பெயர் பதியப்பட்டுவிட்டது. ஆனபோதிலும் ஜாதி, மதம், வகுப்பு ஆகியவை களை அடியோடு அழிக்கவேண்டும் என்று சொல்லுகின்ற 'ஜாதிமதத் துரோக' லிஸ்டிலும் நமது பெயர் மாத்திரமேதான் இருக்கின்றதே யொழிய மற்றபடியான 'தீவிர தேசீயவாதிகள்' பெயரெல்லாம் ஜாதிமத வகுப்பைக் காப்பாற்றும் லிஸ்டிலேயே தான் பதியப்பட்டிக்கின்றன. இதில் இருந்து பகுத் தறிவுள்ள மக்கள் ஜாதிமத வகுப்புவாதிகள் யார்? என்பதை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். ஆனாலும் சொந்த அறிவே சிறிதும் இல்லாத பாமரமக்கள் நம்மை குறைகூறாமல் இருக்கமாட்டார்கள். இந்த நாட்டில் நாமறிய சுமார் 20 வருஷகாலமாகவே பிராமணர்கள் மகாநாடு, வருணாச் சிரம மகாநாடு, கிருஸ்துவர் மகாநாடு, முஸ்லீம்கள் மகாநாடு, சைவர் மகாநாடு, வைணவர் மகாநாடு, ஆரியதர்ம பரீக்ஷித்து மகாநாடு, மற்றும் க்ஷத்திரியர், வைசியர், பார்ப்பனரல்லாதார், பறையர், சக்கிலியர், வண்ணார், நாவிதர், நாயக்கர், பள்ளர்கள், வணியவைசியர்கள், வேளாளர், படையாட்சி, வேடுவர், கோமுட்டி வைசியர், நாட்டுக்கோட்டை வைசியர், அகமுடையர், உடையார், நாடார், மறவர், கள்ளர், வீரசைவர், தேவாங்கர், இராஜபுத்திரர், சாலியர், மராட்டியர், கைக்கோளர், சௌராஷ்டிரர்கள், பலிஜியர்கள், குயவர்கள், கோனார் முதலிய பல முக்கிய வகுப்புக்காரர்களின் தனித்தனி மகாநாடுகளும், மற்றும் இவற்றுள் நூற்றுக்கணக்கான உட்பிரிவு வகுப்புகள் மகாநாடுகளும் நடைபெற்ற வண்ணமாகவே இருந்து வருகின்றன.

மற்றும் தேசீய கொள்கைகள் என்பவைகள் எல்லாம் ஜாதிமத வகுப்புகளை காப்பாற்றுவதிலும் அவற்றின் பரம்பரை உரிமைகளை



காப்பாற்றுவதிலும் பழக்க வழக்கங்களை காப்பாற்றுவதிலும் தவரமாட்டோ மென்று அந்த வகுப்பாருக்கு உறுதிக்கொடுப்பதாகவே தான் தீர்மானித் திருக்கின்றன. சர்க்காரார் கணக்கிலும் ஜாதிக்கொரு கலமும், மதத்திற்கொரு கலமும், வகுப்புக்கொரு கலமும் போடப்பட்டு அதை அனுசரித்தே சிவில் கிரிமினல் சட்டங்களும், ஆக்ஷியும் நடத்தப்பட்டு வருகின்றன. வியாபாரத் துறையிலும் ஜாதி வகுப்புகள் ஆதிக்கமும், விவசாயத்துறையிலும் ஜாதிமத வகுப்புகள்ஆதிக்கமும் இருந்து வருவதோடு சமூகத் துறையிலும் ஜாதிமத வகுப்பு ஆதிக்கம் தலை சிறந்தே விளங்குகின்றன.

உதாரணமாக, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு.இராஜ கோபாலாச்சாரியார் அவர்களே தலைவர் ஹோதாவில் 'எவனாவது கள் குடித்தால் அவனை ஜாதியை விட்டும் வகுப்பைவிட்டும் பகிஷ்காரம் செய்து அதாவது அவனுக்கு நீர், நெருப்பு, பூமி ஆகியவை யாரும் கொடுக்காமல் கொடுமைப்படுத்துவதான ஜாதி வகுப்பு கட்டுப்பாட்டை பலப்படுத்துங்கள்' என்று அறிக்கை விட்டிருக்கின்றார். இந்த மாதிரியான முறையில் தேசீயம் முதல் காந்தீயம் வரை ஜாதி மத வகுப்பு பிரிவினை களுக்கு இரும்புப் பூண்கள் போடப்பட்டது போல்உறுதிப்படுத்தி, கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அன்றியும், இவை சுலபத்தில் ஒழிக்கப்பட யாராலும் சம்மதிக்க முடியாது என்பதிலும் எவரும் எவ்வித சந்தேகமும் கொள்ள முடியாது. ஒரு பறையர் ஒரு பொதுத் தெருவில் நடந்தால் இன்ன தண்டனை, ஒரு வாணிய வைசியர் ஒரு பொது கோவிலுக்குள் போனால் இன்ன தண்டனை, ஒரு நாடார் க்ஷத்திரியர் ஒரு பொதுக் குளத்தில் தண்ணீர் மொண்டால் இன்ன தண்டனை என்கின்ற பினல் கோட் சட்டமும், அதற்காக இன்ன நஷ்டம் கொடுக்க வேண்டும் என்கின்ற சிவில் கோர்ட் சட்டமும், கிராம முன்சீப் முதல் பிரிவி கவுன்சில் வரை செலாவணி ஆகிக் கொண்டு தான் இருக்கின்றது.

அன்றியும் இதற்கு விரோதமாய் பேசுபவன் ஒவ்வொருவனும் ஒவ்வொரு ஜாதி மத வகுப்புக்கும் விரோதியேயாகின்றானேயொழிய, அவன் சமரசகாரனாவதில்லை. இவை மாத்திரமல்லாமல் பொது ரோட்டில் ஒரு இந்து மேளம் அடித்தால் மகமதியர்கள் கத்தியால் குத்துகிறார்கள். பொதுத் தெருவில் ஒரு மகமதியர் மாட்டைப் பிடித்துக்கொண்டு போனால் இந்துக்கள் அவரை கத்தியால் வெட்டுகிறார்கள். சீக்கியரும், முகமதியரும் தங்களை ஒருவருக்கொருவர் ஜன்ம விரோதிகள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடைகிறார்கள். 'பிராமண'ருக்கும் 'சூத்திர'ருக்கும் இருக்கும் 'ஒற்றுமை'யை எடுத்து காட்ட வேண்டியதில்லை. இந்த நிலை மையில் உள்ள மக்களுக்கு ஜாதிப்படியோ, மதப்படியோ, வகுப்புப்படியோ பிரதிநிதித்துவம் மாத்திரம் கூடாதாம்!

ஏனெனில், அது தேசீயத்திற்கு விரோதமாகி விடுமாம்! ஆனால் அப்படிப்பட்ட ஜாதிமத வகுப்புகளை என்றும் நிலையாய் இருக்கும்படி



RangaRakes tamilnavarasam.com

காப்பாற்றுவது மாத்திரம் தேசீயமாம். அதற்காகவே திரு.காந்திக்கும் காங்கிரசுக்கும் சுயராஜ்யம் வேண்டுமாம். இந்தநிலைமையுள்ள இதன் யோக்கியதை ஒரு புறம் இருக்க பொது ஜனங்களுக்கு அளிக்கப்படும் (பிரதிநிதிகளை தெரிந்தெடுக்கும் முறை) நிலைமையைப் பற்றி சிறிது யோசிப்போம்.

ஓட்டானது கல்வியைப் பொறுத்ததாகவும் பணத்தைப் பொறுத்ததாகவும், வரும்படியைப் பொறுத்ததாகவும் இருக்க வேண்டும் என்ற அளவில் தான் நிர்ணயிக்கப்படுகின்றது. இந்தியாவில் உள்ள மற்ற எந்த மதத்திற்கும், எந்த ஜாதிக்கும், எந்த வகுப்புக்கும் கல்வி, சொத்து, வரும்படி ஆகியவைகள் இருந்தாலும் பஞ்சமர், ஆதிதிராவிடர், தீண்டப்படாதார், என்கின்ற 7 கோடி மக்களில் கல்வியோ, சொத்தோ குறிப்பிட்ட வரும்படியோ 1000ல் ஒருவருக்காவது இருக்கின்றதா என்று பார்த்தாலே அதன் இல்லாமை உண்மை நன்றாய் விளங்கும். பார்ப்பனர்களுக்கு 100க்கு 100பேர் கல்வி, சொத்து, வரும்படி ஆகியவைகள் எல்லாமும் அல்லது ஏதாவது ஒன்றும் உடையவர்கள் ஆகவேதான் இருப்பார்கள். ஆதலால் அவர்கள் எல்லாருமே எப்படியும் எந்த தொகுதியிலும் ஓட்டர்களாகி விடுவார்கள். மற்றபடி 'மேல் ஜாதிக்காரர்' என்பவர்களிலும் அரைவாசிப் பேராவது ஓட்டர்களாக ஆகிவிடுவார்கள். நடுஜாதிக்காரர் என்பவர்கள் அரைக்கால் வாசிப்பேர்களாவது ஓட்டர்களாகி விடுவார்கள். மற்றும் சில 'கீழ் ஜாதி'க்காரர் என்பவர்களும் வீசம் வாசிப்பேர்களாவது ஓட்டர்களாகி விடுவார்கள். ஆனால் பறையர், சக்கிலியர், பள்ளர் முதலிய 'தீண்டாத' வகுப்பார் என்பவர்களில் முந்திரிப் பெயராவது அதாவது 300ல் ஒரு பாகம் பெயர்களாவது ஓட்டராக இருக்க முடியுமா? என்பதை யோசித்துப் பாருங்கள். நிற்க, மற்றொரு விதத்திலாவது அதாவது அவர்களுக்கென்று சில ஸ்தானங்களை பொதுதேர்தலில் ஒதுக்கி வைத்தாலும் உண்மையான பறையரோ, சக்கிலியரோ வர முடியுமா? என்பதை சற்று யோசித்துப் பாருங்கள். பறையனிலேயே பட்டை நாமம் துளசிமணி போட்டுக் கொண்டு 'மற்ற பறையனைத் தொட்டால் தீட்டு' என்று கருதுகிறவனும், விபூதி, உத்திராக்ஷம் போட்டுக் கொண்டு பறத்தெருவுகளுக்குள் போய் வந்தால் குளிக்கின்றவனும், தனது சொந்தநலத்திற்கு சமூகத்தை விற்பவனும் தான் வர முடியுமேயொழிய இவற்றிற்கு சௌகரியமில்லாதவன் வரமுடியுமா? என்று பாருங்கள். ஒருக்காலும் முடியாது. ஏனெனில், உண்மையாகவே தங்கள் சமூகம் முன்னேற வேண்டும் என்று கருதுகின்றவனையும், தன்னை ஏன் மற்றவர்கள் பறையன் என்று சொல்லுகின்றார்கள் என்று கருதுகின்றவனையும் மற்ற ஜாதியார்கள் ('மேல் ஜாதியார்கள்') தெரிந்தெடுக்க ஒரு நாளும் சம்மதிக்க மாட்டார்கள் . மற்றபடி கிராமங்களிலோ, அங்குள்ள மிராஸ்தாரர்கள் தங்கள் குதிரைக்காரனையும், நாய்க்கு பதிலாய் இருக்கும் அடிமையையும் மாத்திரம்தான் தெரிந்தெடுத்ததாய் சடங்கு செய்து, அவனை தங்கள் கைத்தடிமுனையிலேயே வைத்திருப்பார்களேயொழிய தங்களுடன் சரி சமமாய் உட்கார நினைப்பவனை கிராமத்திலேயே வைத்திருக்க மாட்டார்கள்.



இவை நிற்க, 21 வயது வந்த ஆண்களுக்கெல்லாம் ஓட்டு உரிமை கொடுப்பதாய் வைத்துக் கொண்டாலும், அந்த அந்த கிராமத்து மிராசுதாரன் சொன்னபடி தான் ஆசாமிகள் அபேக்ஷகர்களாக நிற்கவும், ஓட்டர்கள் ஓட்டுகள் போடவும் முடியுமே அல்லாமல், மற்றபடி பிரதிநிதித்துவத்திற்கு தகுந்தவர்கள் என்று ஒரு நாளும் வரமுடியவே முடியாது.

ஆகவே, மற்ற ஜாதி மத வகுப்பார் இடம் நம்பிக்கை இல்லை என்று கருதுகின்ற எந்த சிறுவகுப்புக்காரர்களாயிருந்தாலும், அவர்களுக்கு பிரதிநிதித்துவம் இருக்கும்படியாகவும், அந்த பிரதிநிதித்துவத்தை அவர்களே சகல உரிமைகளுடன் தெரிந்தெடுத்துக்கொள்ள தகுந்ததாகவுமே தான் சுயராஜ்ய ஆக்ஷிமுறை ஏற்படுத்தப்படவேண்டும். அப்படிக்கில்லையானால் ஒரு பொதுவான, அதாவது இந்திய ஜாதி மத வகுப்பு வித்தியாசத்தில் கட்டுப்படாத ஒரு கூட்டத்தின் ஆக்ஷியில்தான் விடவேண்டும் என்று சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கின்றோம். அதைவிட்டுவிட்டு 'என் ஜாதி உயர்வையும், அனுபவத்தையும் விடமாட்டேன்' ஆனால் நான் கீழ் ஜாதி என்று வதைத்து , கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கின்றவனுக்கு நான் தான் தர்ம கர்த்தவாய் இருப்பேன்' என்றால் அது வடிகட்டின அயோக்கியத்தனமேயாகும்.

நிற்க, திரு. காந்தியவர்கள், 'முகமதியருக்கும் சீக்கியருக்கும் மாத்திரம்தான் தனிப்பிரதிநிதித்துவம் தனித்தொகுதி மூலமாய் வேண்டுமானாலும் கொடுக்க சம்மதிப்பேன். ஆனால் தீண்டாதார் என்கின்ற வகுப்புக்கு மாத்திரம் கொடுக்க மாட்டேன்' என்று சொல்லுவதும், திரு.மாளவியா அவர்கள் 'அதற்கும் ஆமாம் சாமி' போடுவதும் என்றால், இதில் கடுகளவாவது நீதியோ அல்லது நல்ல எண்ணமோ இருக்கின்றதா என்று பார்க்கும் படி வாசகர்களை கேட்கிறோம்.

சாயபு வாய்வார்த்தை வாயில் இருக்க, முதலில் கையை நீட்டி விடுகிறார். உடனே ஆயிரக்கணக்கான சாயபுகள் மேல்விழுந்து நசுக்கிவிடுகின்றார்கள். அவர்களிடத்தில் அவ்வளவு கட்டுத்திட்டமும்,வீரமும் இருக்கின்றது. ஆதலால், அவர்களுக்கு பதில் பேசாமல், 'கொடுப்பதற்குள் என்ன சாயபே அவசரம்' என்று மன்னிப்புக் கேட்க வேண்டியிருக்கின்றது. அதுபோலவே சீக்கியர்களும் வாய் வார்த்தை வாயிலிருக்க கிருபானை (கத்தியை) எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

அன்றியும், சீக்கிய பூச்சாண்டிகாட்டி சாயபை ஏமாற்ற வேண்டியும் இருக்கின்றது. ஆதலால் சீக்கியர் எண்ணிக்கை லக்ஷக்கணக்குள் இருந்தாலும், அவர்களுக்கு தனித்தேர்தல் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டியிருக்கின்றது. ஆனால், தீண்டாத ஜாதியார் என்பவர்களோ ஏழு கோடி பேர் இருந்தாலும் அவர்களுக்கு மானம் இல்லாமல், மனிதத்தன்மை நினைத்துப் பார்ப்பதற்கில்லாமல் வீரம் என்பதற்கு அர்த்தமே தெரியமுடியாமல், உதைத்த காலுக்கு முத்தம் இடும் மிருகத்தன்மையில் அடக்கி வைக்கப்



RangaRakes tamilnavarasam.com

பட்டிருக்கிறார்கள். ஆதலாலும், அவர்கள் இன்னும் 'மேல் ஜாதியார்' களுக்கு உழைத்துப் போடவேண்டிய அடிமைகளாயிருக்க வேண்டியிருப்பதால், அவர்களை முன்னேற்றமடைய விடமுடியாதென்று சொல்லி அவர்களுக்கு தனித்தேர்தல், தனிப்பிரதிநிதித்துவம் காங்கிரசும், காந்தியும், மாளவியாவும் மறுக்கவேண்டியதாகி விட்டது.

ஆகவே, காங்கிரசின்– திரு.காந்தியின், திரு.மாளவியாவின் தேசபக்தியும், தேசீயமும் வகுப்புப் பிரதிநிதித்துவத்தை எதிர்ப்பதல்லாமல் வேறு கொள்கை ஒன்றும் முக்கியமானதல்லவென்றே சொல்லுவோம்.

தவிர, 'சர்க்காரார் தான் ஜாதி மத வகுப்பு பேதங்களால் ஜனங்களை பிரித்துவிட்டு, சுயராஜ்யம் கொடுக்காமல், சூட்சி செய்கின்றார்கள்' என்று திரு.காந்தியும் கிளிப்பிள்ளை தேச பக்தர்களும் அடிக்கடி சொல்வதுண்டு. ஜாதிமத வகுப்புகளை பிரிட்டிஷ் அரசாங்கம் பிரித்ததா? அல்லது இந்திய இராம இராஜ்யம் பிரித்ததா என்று கேட்கின்றோம்.

அன்றியும், முஸ்லீம்கள் விஷயத்தில் அவர்களுக்கு நியாயம் வழங்குவதிலிருந்து தப்பித்து கொள்ளுவதற்காக தேசீய முஸ்லீம் என்றும் தேசத் துரோக முஸ்லீம் என்றும் பிரித்து வைத்து, 'நீங்கள் இரண்டு பேரும் ஒன்று சேர்ந்து வாருங்கள். உங்கள் பங்கைக் கொடுக்கத் தடையில்லை' என்று சொல்லுவது திரு.காந்தியா? அல்லது பிரிட்டிஷ் அரசாங்கமா? என்று கேட்கின்றோம். திரு. காந்தி அவர்களின் சட்டைப்பையின் டிக்கட் பாக்கட்டில் இருக்கும் திரு. அன்சாரியைத் தவிர தேசீய முஸ்லீம் தலைவரோ, தொண்டரோ, பின்பற்றுபவரோ வேறு முஸ்லீம் யார்? என்று கேட்கின்றோம்.

அப்படித்தான் இருந்தாலும் 8 கோடி முஸ்லீம்களில் எத்தனை கோடிப் பேர்கள் 'தேசிய' முஸ்லீம்கள்? எத்தனை கோடி பேர்கள் 'தேசத் துரோக முஸ்லீம்கள்'என்று சொல்லக் கூடும்? என்று கேட்கின்றோம். "ஏழைகளுக்காக திக்கற்றவர்களுக்காக, வாயில்லாப்பூச்சிகளான கிராம வாசிகளுக்காக, சிறுபான்மையோருக்காக, தாழ்த்தப்பட்டவருக்காகத் தான் நான் பாடுபடுகிறேன். அவர்கள் பிரதிநிதியாகத் தான் நான் வட்டமேஜை மகாநாட்டிற்கு வந்து இருக்கின்றேன்" என்று பல்லவி பாடி மந்திரம் ஜபிக்கும் திரு.காந்தியவர்கள் உண்மையில் யாருடைய பிரதிநிதியாய் சீமை சென்றிருக்கிறார்? என்பதை சற்று கவனித்துப் பாருங்கள். ஆகவே, வரப் போகும் சுயராஜ்யத்தில் எவ்வளவு சிறிய சுதந்திரம் கிடைத்தாலும், எவ்வளவு பெரிய சுதந்திரம் கிடைத்தாலும் அது இந்தியாவில் உள்ள – இருக்க வேண்டிய எல்லா ஜாதி மத வகுப்புக்கும் சரியான பிரதிநிதித்துவமாய் இருக்கக் கூடியதாய் இருந்தால் தான், இந்திய மக்களால் ஒப்புக் கொள்ளக்கூடியதாகும். இல்லாதவரை எதிர்க்க வேண்டியதாகும்.

**குடி அரசு – தலையங்கம் – 11.10.1931**



# நாகை முதலாவது சுயமரியாதை மகாநாடு

தலைவர் அவர்களே! நண்பர்களே!! *இத்தீர்மானத்தை எதிர்த்துப் பேசியவர்களால் தான் இத்தீர்மானத்திற்கு பெருத்த ஆதரவளிக்கப் பட்டதாக கருதுகின்றேன். திரு.சிவஞானம் எதிர்த்ததால் தான் அத் தீர்மானத்தை உங்களுக்கு விளக்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. இல்லாவிட்டால் ஒரு சமயம் ஒருவர் இருவராவது தாக்ஷண்ணியத்திற்காக கைதூக்கவேண்டியிருக்கும். ஆதலால் நான் சொல்வதை நன்றாய் கவனித்து உங்கள் இஷ்டத்தை தெரிவியுங்கள். தீர்மானத்தை எதிர்ப்பவர்கள் மீது கோபிப்பது கோழைத்தனமாகும். தீர்மானத்தில் உண்மையும், வீரமும் இல்லை என்று கருத வேண்டியதாகும்.

தவிர எதிர்ப்பவர்கள் அநேகர் உண்மையாகவே அவர்களுக்கு விளங்காமல் எதிர்த்தாலும் எதிர்க்கலாம். அவர்களுக்கு விளங்கவைக்க வேண்டியது நமது கடமை. அதனால் மற்றவர்களுக்கும் விளங்கும். அன்றியும் அவ்விளக்கம் மற்றவர்களுக்கு பிரசாரம் செய்யவும் உதவும்.

நண்பர்களே! கள்ளுக்கடை மறியலானது குடி நிறுத்துவதற்காக செய்யப்படுவதில்லை என்பது எனது அனுபவ ஞானமான முடிவு.

நான் தென்னாட்டில் மறியலை நடத்தி இருக்கின்றேன். என் மனைவியையும், சகோதரியையும், என் பந்து சிநேகிதர்களின் தாயார், மகள் முதலியவர்களையும் கொண்டு நடத்தினேன். அநேக கடைகளை மூடினேன். எனது 600 தென்னை மரங்களை வெட்டினேன். 300,400 மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சாமல் தானகவே காய்ந்து போகும்படி செய்தேன். மறியலுக்காக நானும் எனது ஈரோட்டு நண்பர்கள் சுமார் 100 பேரும் ஜெயிலுக்குப் போனோம். திருச்சியில் நூற்றுக்கணக்கான பேர்களை எம்.ஏ., பி.எல்., உட்பட சிறைக்கு அனுப்பினேன். கையில் 500 தொண்டர்களை வைத்துக் கொண்டு, ஆயிரம் தொண்டர்களை லிஸ்டில் வைத்துக் கொண்டு நானும் நண்பர் திரு.இராமநாதனும் மதுரையில் தினம் நான்கு நான்கு பேர்களாக 100 தொண்டர்கள் வரை ஒவ்வொரு வருஷ தண்டனைக்கு அனுப்பினேன்.



RangaRakes tamilnavarasam.com

மதுரை சர்க்காரார் திணறினார்கள். அந்த சமயத்தில் திடீரென்று திரு.சி.இராஜ கோபாலாச்சாரியார் மறியலை நிறுத்தும்படி உத்திரவு செய்தார். அடிதடி, வசவு, பலாத்காரம் ஒன்றுமே நாங்கள் செய்யவில்லை. தொண்டர்கள் தண்டிக்கப்பட்டவுடன் அதிகாரி என்னிடம் வந்து பேசுவார். போலீசார் எனக்கு வெகுமரியாதை செய்வார்கள். அதிகாரிகள் வெட்கப்படுவார்களே யொழிய நம்மீது குரோதமோ, துவேஷமோ இல்லை. அப்படிப்பட்ட சமயத்தில் மறியலை நிறுத்த நானும் திரு.இராமநாதனும் சம்மதிக்க வில்லை. அப்படியிருக்க நாங்கள் மறியலை நிறுத்த சம்மதிக்காவிட்டால் தான் இராஜினாமா செய்து தனது தலைவர் பதவியை திரு.எஸ்.சீனிவாசய் யங்காருக்கு அளித்து விடப்போவதாய்ச் சொல்லி பயமுறுத்தி மறியலை நிறுத்தி விட்டார். 100 பேர் சிறையில் ஒரு வருஷம் தண்டிக்கப்பட்டிருக்க, 500 பேர் தயாராய் இருக்க மறியலை நிறுத்திய உடன் எங்கள் மனம் கஷ்டப் பட்டு விட்டது. காரணம் என்ன என்று பார்த்தபோது நாகப்பூர் கொடி சத்தியாக்கிரகத்திற்கு தொண்டர்கள் போதவில்லை என்றும் ஜமநாத பஜாஜ் ஆரம்பித்த சத்தியாக்கிரகம் தோல்வி அடைந்ததால் அவருக்கு அவ மானம் என்றும், அவர் வேலையை விட்ட வக்கீல்களுக்கு பல லக்ஷ ரூபாய் கொடுத்தவர் என்றும் திரு.இராஜகோபா லாச்சாரியார் சமாதானம் சொன்னார். அந்தக் காரணமாக எல்லா மறியலும் நிறுத்தப்பட்டது. இதனால், மறியலுக்கு பயந்து கள்ளுக்கடை ஏலமெடுக்காதவர் நஷ்டப்படவும், துணிந்து குறைந்த துகைக்கு ஏலத்தில் எடுத்தவர் கொள்ளை லாபம் சம்பாதிக்கவும் சர்க்காரார் இந்த நஷ்டத்தின் சாக்காய் இந்திய மக்களின் ஆரம்பக்கல்வியின் வாயில் மண்ணைப் போடவுமே ஏற்பட்டது. மற்ற பெரிய கல்வி இலாகா அதிகாரி கள் சம்பளம் சிறிதும் குறையவில்லை. மறியலால் கள்குடி குறைபாடு குறை யாது, முக்காலும் குறையாது என்று உறுதி கூறுவேன்.

இத்தீர்மானத்தை எதிர்த்தவரே தான் பேசும் போது ஒரு வார்த்தை சொன்னார். அதாவது தங்கள் மறியலால் கடையில் வியாபாரம் குறைந்து விட்டதாகவும், ஆனால் தெருக்களில் பலகாரம் விற்பதுபோல் பாட்டல் பாட்டல்களாய் எடுத்துச் சென்று விற்கப்படுகிறதென்றும் சொன்னார். ஆகவே மறியல்காரர்களை நான் ஒன்று கேட்கின்றேன், அதாவது தங்கள் மறியலின் காரணமாக கள்ளுக்கடைகளில் கள்ளு விற்பதைத் தடுத்து, வீதி வீதியாய் விற்கும்படியான நிலைமை ஏற்பட்டதற்கு மறியல் தொண்டர் களோ அவர்களது "உலகம் போற்றும்" ஒப்பற்ற தலைவரோ என்ன பரிகாரம் செய்ய போகிறார்கள்? என்று கேட்கின்றேன். கள்ளு இலாகாவை நடாத்தும் மந்திரியையாவது, கள்ளு இலாகா அதிகாரிகளையாவது வீதியில் கள் விற்கும் மக்களையாவது இந்த மறியலின் மூலமாக அசைக்க முடியுமா? என்று கேட்கின்றேன். கள்ளுக்கடை மூடிவிட்டால் தெரு விற்பனைகள் எங்கு போய்விடும்? லைசென்சு இல்லாமல் மரம் கட்டி இறக்கும் கள் எங்கு போய்விடும்? ஆகவே, மறியல் குடியை நிறுத்துவதற் காகவா? அல்லது வயிற்றுப் பிழைப்புக்கோ விளம்பரத்திற்கோ, கள்ளுக் கடைக்காரரிடம் வியாபாரம் பேசி, ஆச்சிரமம் வைத்து, கொடிதூக்கிக் கொண்டு திரிந்து, பார்ப்பனர்களுக்கும் அவர்களது அடிமைகளுக்கும் ஓட்டு வாங்கி கொடுப்ப தற்காகவா? என்று உங்களை கேட்கின்றேன். மறிய லால் கள் குடி நிறுத்த முடியாது என்று நான்மாத்திரம் சொல்ல வரவில்லை, திரு. இராஜகோபாலாச்சாரியார் சொன்னதையும் இப்போது நான் சொல்ல வரவில்லை. ஆனால் திரு.காந்தி- உங்களால் 'மகாத்மா' என்று சொல்லப் படும் உங்கள் தலைவரான திரு.காந்தி அவர்கள் திருவாய் மலர்ந்தருளி யதை சொல்லுகின்றேன் கேளுங்கள்.

அதாவது "குடிகாரர்கள் தாங்களாகவே குடியை விட்டாலொழிய குடியை நிறுத்த முடியாது. கள்ளுக்கடைகளை மூடிவிடச் செய்வது நம் வேலை அல்ல. மூடினாலும் திருட்டுத்தனமாக இப்பொழுது இருப்பது போலவே வியாபாரமும், குடியும் இருந்துதான் வரும். சரீரத்தால் தொழில் செய்கிற மிருகங்களைப்போன்ற உழைப்பாளிகட்கு கள்ளு அவசியமானது. நானே வாங்கிக் கொடுத்திருக்கிறேன்" என்று திரு.காந்தியே சொல்லியிருக் கிறார். இதிலிருந்து சட்டங்களின் மூலம் கூட மதுபானத்தை நிறுத்தி விட முடியாது என்பதே அவரது அபிப்பிராயமாகும். இப்படியிருக்க இந்த மறியல் என்பது நாடகம் என்றும், பாமரமக்களை ஏய்ப்பதின் மூலம் தாங்கள் தலைவர்களாகவும், தேசபக்தர்களாகவும் ஆவதற்கு செய்யப்படும் சூக்ஷி என்பதல்லாமல் வேறு என்ன வித உண்மையோ, நாணையமோ இந்த மறியலில் இருக்கின்றதா? என்று யோசித்துப் பாருங்கள். இப்பொழுது அநேக ஊர்களில் கள்ளு குத்தகைக்காரர்களுடன் வியாபாரம் பேசிக் கொண்டு மறியலை நிறுத்திக் கொண்டார்கள். சிலர் பலாத்காரத்திற்கு பயந்து கொண்டு நிறுத்தி விட்டார்கள். சிலர் பொதுஜனங்களிடம் வாங்கிய பணத்தை பங்கு போடுவதில் சண்டை போட்டு கொண்டு நிறுத்திவிட்டார் கள். சிலர் தேர்தலில் ஓட்டு பெற கூலி கொடுத்து நடத்துவதால் எதிர் அபேக்ஷகர்கள் உண்மையை வெளிப்படுத்துவதால் நிறுத்தப்பட்டு விட்டது. இந்த நிலைமையில் 'மறியல், மறியல்' என்று ஏன் இளம் வாலிபர்களை அயோக்கியர்களாகவும் வாழ்க்கைக்கு உதவாதவர்களுமாகவும் ஆக்க வேண்டும்? என்று கேட்கின்றேன். தவிரவும் இந்துமதக் கடவுள்களில் சிலவற்றிற்கு குடம் குடமாய் கள் வைத்துப் படைத்து குடிப்பவர்களை எப்படி நிறுத்தி விட முடியும்? தவிர வட்டமேஜை மகாநாடு திரு.காந்தி இஷ்டப்படி முடிவு பெற்று விட்டால் மறியல் நடக்குமா?என்று யோசித்துப் பாருங்கள். அப்பொழுது இவர்கள் என்ன சொல்லுவார்கள்? "சர்க்காரா ரோடு ராஜி ஏற்பட்டு விட்டது. ஆதலால் மறியல் வேண்டாம். மறியலால் மது நின்று விடாது. ஒன்றோ சட்டத்தாலோ அல்லது வேறு உபாயத்தாலோ நிறுத்தலாம்" என்று தானே சொல்லுவார்கள். மற்றும் சமூக சம்பந்தமான குறைகளைப் பற்றி பேசி காங்கிரசுக்காரர் ஏன் அவ்விஷயத்திற்குப் பொது ஜனங்களிடம் வசூலிக்கும் 10 லக்ஷக்கணக்கான பணத்தில் ஒரு காசும் செலவு செய்வதில்லை என்றும், ஒரு வேலையும் காங்கிரஸ் தொண்டர்கள்


RangaRakes
tamilnavarasam.com

வேலை திட்டத்தில் இல்லை என்றும் கேட்டால் அதற்கு என்ன பதில் சொல்லுகின்றார்கள் என்பதை கவனியுங்கள். "அதெல்லாம் சுயராஜ்ஜியம் வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றும் "ஒரு வரியில் சரிப்படுத்தி விடலாம்" என்றும் சொல்லுகின்றார்கள். அப்பேற்பட்ட சமூக சம்பந்தமான பழக்க வழக்கங்களை சுயராஜ்ஜியம் வந்த பிறகு ஒரு வரியில் சரிப்படுத்தி விடுவதானால், அது சாத்தியமானால் - உண்மையானால் கள்ளு குடியை நிறுத்த மாத்திரம் தானா பல வரிகளாலும் முடியாமல் போய் விடும்? என்று கேட்கின்றேன்.

தவிரவும் தீர்மானமானது யாரையும் குடிக்கும்படி சொல்லவில்லை. கள்ளுக்கடைக்கு குடிகாரர்களை கூட்டிக் கொண்டு போகும்படியும் சொல்லவில்லை. மறியல் மறியல் என்று சொல்லிக் கொண்டு செய்யும் முட்டாள்தனமான காரியத்தால் கள்ளு வியாபாரிகளை கொள்ளையடிக் கும்படியாகவும், தெருக்களில் எல்லாம் கள்ளு சாராயம் விற்கும் படியாக வும், பாமர ஜனங்கள் இந்த முட்டாள் தனமும் சூட்சி நிரம்பியதுமான வார்த்தை களை நம்பி பொறுத்தமும், நாணயமும், யோக்கியப் பொறுப்பும் அற்ற சுயநலமிகளை ஜனப் பிரதிநிதியாக்க விடாமலும் செய்ய வேண்டு மென்பதுதான் இத்தீர்மானத்தின் தத்துவமாகும். நமது மக்கள் பாமர மக்களானதினாலும், 100 க்கு 90 பேர் எழுத்து வாசனை அறியாத மக்களான தினாலும், அவர்களை மூட நம்பிக்கையிலும், பகுத்தறிவற்ற தன்மையிலும் பார்ப்பனர்களும், அரசாங்கத்தாரும் வைத்திருக்கின்றார்களானதினாலும், காந்தி, காங்கிரஸ், கதர், பகிஷ்காரம், தேசீயம், மறியல் முதலிய காரியங்க ளால் ஏமாந்து போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கின்றதே தவிர வேறில்லை என்று சொல்லுகின்றேன். நமது வாலிபர்களிடமிருக்கும் அபிமானமே என்னை இப்படிச்சொல்லச் செய்கின்றது. எழுச்சியான-வேடிக்கையான- பரபரப்பை உண்டாக்கத் தக்க எதுவானாலும் இளம் வாலிபர்களின் மனதைக் கவர்வது இயற்கை. புரட்டாசி மாதம் வந்தால் அநேக வாலிபர்கள் நாமம் போட்டு, பஜனைக்குப் போய் விடுவார்கள். அல்லா பண்டிகை வந்தால் அநேக வாலிபர்கள் தங்களை மிருகமாக்கி புலிவேஷம் போட்டுக் கொள்ளு வார்கள். வேடிக்கைப் பார்த்த ஒன்றுமறியா சிறு குழந்தைகளும் பண்டிகை நின்று ஒரு மாதம் வரை இவர்களைப் போல் ஆடிக்கொண்டே இருப்பார்கள். ஆதலால் ஒவ்வொருவரும் தங்கள் அறிவைக் கொண்டு யோசித்துப் பார்த்து சரியென்று தோன்றியபடி நடவுங்கள்

*குறிப்பு : 03,04.10.1931 நாட்களில் நடைபெற்ற நாகை வட்ட முதலாவது சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இரண்டாவது தீர்மானத்தை விளக்கி ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 18.10.1931**



### * தீர்மானம்

பார்ப்பனர்களும், சுயநலக்காரர்களும், வயிற்றுப்பிழைப்புக்காரர் களும் காங்கிரஸ் மறியல் பகிஷ்காரம் என்ற வார்த்தைகளால் பாமரமக்களை ஏமாற்றி தேசத்தைப் பழைய அதாவது பார்ப்பன ஆதிக்க காலத்திற்கும், சோம்பேரிகள், பணக்காரர்கள் ஆதிக்கத்திற்கும் கொண்டு போகப் பார்க் கின்ற படியால் அவ்விதம் நடைபெறாதபடி பார்த்துக்கொள்ள வேண்டு மென்றும், ஆங்காங்குள்ள சுயமரியாதைக்காரர்கள் கவனித்துக்கொள்ள வேண்டு மென்றும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.



RangaRakes tamilnavarasam.com

## வட்டமேஜை மாநாடு முறிந்தால் கவலைப்பட வேண்டியதில்லை

வட்டமேஜை மகாநாட்டின் முதல் சப்கமிட்டி கூட்டமானது முறிந்து முடிவு பெற்று விட்டது. எப்படி எனில் “இந்தியர்களாகிய நாம் நமக்குள் இருக்கும் வகுப்பு வித்தியாசங்களுக்கு பரிகாரம் செய்து கொள்ள நமக்குள்ளாகவே ஒரு பைசலுக்கு வரமுடியவில்லை” என்கின்றதான முடிவுக்கு வந்து விட்டது. எவ்விஷயத்தில் நமக்குள்ளாக நாம் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை என்கின்ற முடிவுக்கு வரப்பட்டது என்றால், நமக்கு அடுத்தாற்போல் பிரிட்டிஷாரால் வழங்கப்படப்போகும் சுதந்திரத்தையோ, அல்லது அவர்களிடம் இருந்து “கை பலத்தால்” தட்டிப் பிடுங்கிக் கொள்ளப் போகும் சுயேச்சையையோ நமக்குள் நாம் எப்படி பங்கிட்டுக் கொள்வது என்கின்ற காரியத்தில் நாம் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை என்று தீர்மானம் ஏற்பட்டு விட்டதோடு, இந்தியாவின் “ஏக தலைவர்” அல்லது “ஏகப்பிரதிநிதி” நானே தான் என்று சொல்லப்படும்-சொல்லிக் கொள்ளவும் உரிமை கொண்டாடும் திரு.காந்தியவர்களாலேயே “நமக்குள் நாம் ஒரு முடிவுக்கு வரும் விஷயத்தில் நான் எவ்வளவோ பாடுபட்டும் தோல்வி அடைந்து விட்டேன்” என்று விளக்கமாகத் தத்துவார்த்தத்திற்கு இடமில்லாமல் ஒப்புகொள்ளப்பட்டாய் விட்டது.

இந்த நிலைமையில் இனி மேலால் நடக்க வேண்டிய காரியம் என்ன என்கின்ற விஷயத்தில் ஒருவருக்கொருவர் தந்திரமும், சூக்ஷியும் செய்ய வேண்டியதவசியமாய் விட்டதுடன் திரு.காந்தி அவர்கள் தான் தோல்வி அடைந்து விட்டதற்கு ஏதாவது ஒரு சமாதானத்தை சொல்லித் தீர வேண்டியதாய் விட்டது. இந்த இரண்டும் சேர்ந்து காங்கிரசினுடையவும், திரு.காந்தியினுடையவும் உண்மையான நிறத்தையும், தத்துவார்த்தத்தையும் வெளிபடுத்தி விட்டது.

அதென்ன வெனில்:-

திரு.காந்தி அவர்கள் இந்தியாவில் இருந்து சீமைக்குப் புறப்படும் விஷயத்தில் அவரது அபிப்பிராயத்தை கேட்ட போது “இந்து முஸ்லீம் பிரச்சினை ஏதாவது ஒரு வழியாய் முடிவு பெற்றாலொழிய நான் சீமைக்குப் போவதில்லை” என்று சொன்னதானது யாவருக்கும் தெரிந்ததேயாகும். ஆனால், உப்புப் போரானது பிராண அவஸ்தையில் இருந்து சிலேத்துமம் இழுத்துக்கொண்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த சமயத்தில் ஏதாவது ஒரு வகையில் “உடும்பு வேண்டாம் கையை விட்டால் போதும்” என்கின்ற கவலையின் பேரில் லார்ட் இர்வினிடம் சென்று ராஜி பேச வேண்டியிருந்ததால் உப்புப் போர் சம்பந்தமாய் “சிறை பிடித்தவர்களை விடுதலை செய்து அடக்குமுறையை நிறுத்திவிட்டால் உப்புப் போரை நிறுத்தி விடுவதோடல்லாமல் நான் சீமைக்கும் போகத் தயாராய் இருக்கிறேன்” என்று வாக்குக் கொடுத்ததை நிறைவேற்றாமலிருக்க முடியாத மாதிரியில் திரு.காந்தியை லார்ட் இர்வின் வைத்து விட்டுப் போய்விட்டதாலும், லார்ட் வில்லிங்டன் திரு.காந்தியவர்களை “போகிறீரா? என்ன சொல்லுகிறீர்? இர்வின் பிரபு உப்புப் போரை அழிக்கவிட்ட பாணம் இதோ இருக்கின்றது” என்று காட்டி மிரட்டியதினாலும் திரு.காந்திக்கும் அவரது சிஷ்யர்களுக்கும் சீமைக்குப் போக இஷ்டமே இல்லாமல் இருந்தும் “கடவுள்” அவர்களது கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு போய் வட்ட மேஜை மகாநாட்டில் உட்கார வைத்துவிட்டார். இந்த நிலைமையில் என்ன செய்வார்! பாவம்!!. “கடவுளை” நோகவோ முடியவில்லை, தத்துவார்த்தங்களும் வில்லிங்டன் பிரபுவிடம் செல்லவில்லை. வேண்டுமானால் அஹிம்சையைப் பற்றி பேசுவதால் மகாத்மாவாகலாம், கிறிஸ்துவாகலாம், உலகசிரேஷ்டராகவும் ஆகலாம். அதுவும் இவையெல்லாம் யாரிடத்திலாகலாம் என்றால் திரு.காந்தியவர்களை விட அதிகமான “கடவுள் பக்தர்களான” பாதிரிமார்களிடத்தில் ஆகலாம். தன் பேரில் சாமி வந்தது என்று சொல்லிக்கொண்டு பெருமை அடைகின்ற “வீர”ப் பெண்மணிகளை போல் “எங்கள் வீட்டிற்கு காந்தி வந்தார்” என்று சொல்லிப் பெருமையடையும் பெண்மணிகளிடம் ஆகலாம். ஆனால், “கடவுளோடு” போட்டி போட்டுக்கொண்டு உலகத்தில் பெரும் பாகத்தை ஆக்ஷிபுரியும் வெள்ளைக்கார அரசாங்கத்தினிடம் இந்த கடவுள் பக்தியும், அஹிம்சை பல்லவியும் எப்படிச் செல்ல முடியும்? அதனாலேயே ராம்சே மக்டானால்ட் அவர்கள் தைரியமாய் எழுந்து “திரு.காந்தியவர்களே! உம்முடைய தோல்விக்காக நீர் வெட்கப்படாதீர்கள். சட்டமறுப்புப் பூச்சாண்டியானது எல்லா காரியத்தையும் சாதித்துவிடாது. பேசுங்கள், நாணயமாய் உண்மையாய் நடந்து கொள்ளுங்கள், நான் சொல்லுகின்றபடி கேளுங்கள்” என்று பொருள்பட அழுத்தமாய்ச் சொல்லிவிட்டார். மக்டானல்ட் துரை இப்படி சொல்லிவிட்டதால் திரு.காந்தி பெயரைச் சொல்லி வயிறு வளர்த்து வந்தவர்களுக்கும் அவரால் மனிதராகலாம் என்று நினைத்து கொண்டிருந்தவர்களுக்கும் அவர் விக்கிரகத்தை வைத்து பூஜை, உற்சவம் செய்து ஜீவிக்கலாம் என்று இருந்தவர்களுக்கும் இது சற்று அவமானமாகக் காணப்படலாம். ஆனால், யார்தான் என்ன செய்ய முடியும்? முலாம் பூசின கள்ள நாணையம் எத்தனை நாளைக்கு செலாவணியாகக்





RangaRakes tamilnavarasam.com

கூடும்? பூச்சுத் தேயத்தேய உண்மை சொரூபம் வெளியாகித்தானே தீரும். இதை கருமத்தின் பயன் என்றாலும் சரி, சையன்ஸ் என்றாலும் சரி அதற்காக நாம் சண்டைக்கு வரவில்லை.

நிற்க, திரு.காந்தியவர்கள் "நமக்குள் நாம் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் போனோம்" என்பதற்கு காரணம் சர்க்காரார் பேரிலேயே பழி கூறியதோடு நில்லாமல், மற்றும் ஒரு அடி முன் சென்று "இந்தியாவில் இருந்து சர்க்காரால் வரவழைக்கப்பட்ட பிரதிநிதிகள் சரியான பிரதிநிதிகள் அல்ல" வென்றும் "நமக்குள் நாம் ஒரு முடிவுபெறாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே சர்க்காரார் பிரதிநிதிகள் அல்லாதவர்களாகப் பார்த்து பொருக்கி எடுத்து அனுப்பி இருக்கின்றார்கள்" என்றும் ஒரு அபாண்டமான குறை கூறியிருப்பதன் மூலம் சர்க்காராரை மாத்திரம் குற்றம் சொல்வதல்லாமல் இந்தியாவில் இருந்து வந்திருக்கும் பிரதிநிதிகளையும் இழிவு படுத்திப் பேசி இருக்கிறார். இப்படிப் பேசியதானது அவர் இதுவரை பேசிவந்த-செய்துவந்த அக்கிரமங்களில் எல்லாம் இது ஒரு பெரிய அக்கிரமமான பேச்சென்றே சொல்ல வேண்டி இருக்கின்றது. இப்போது சீமைக்கு சென்று இருக்கும் பிரதிநிதிகளில் திரு.காந்தியவர்களின் பிரதிநிதித்துவ யோக்கியதைக்கு குறைந்த பிரதிநிதித்துவ யோக்கியதை உடைய பிரதிநிதிகள் யாரும் இல்லை என்றே சொல்லுவோம். ஒரு சமயம் மற்ற காரியங்களில் அவரவர்களின் சொந்த விஷயத்தில் யார்யார் எப்படி எப்படி நடந்து கொள்ளுகின்றவர்களாயிருந்தாலும், அவரவர்கள் மதத்திற்கும், அவரவர்கள் ஜாதிக்கும், அவரவர்கள் வகுப்புக்கும் திரு.காந்திக்கு உண்டான பொறுப்புக்கு குறையாத பிரதிநிதிகள் என்றே சொல்லுவோம். திரு.காந்தியவர்களுக்கு இந்து மதத்தைக் காப்பாற்ற எவ்வளவு அக்கரை உண்டோ பார்ப்பனீயத்தையும் முதலாளித் தன்மையையும் காப்பாற்ற எவ்வளவு அக்கரை உண்டோ அவ்வளவு அக்கரை தங்கள் தங்கள் மதத்தைக் காப்பதிலும் முஸ்லீம் கிறிஸ்துவ பிரநிதிகளுக்கு முன்டென்பதை திரு.காந்தி அறிவாராக.

திரு.மாளவியாவுக்குப் பார்ப்பனீயத்தைக் காப்பாற்ற எவ்வளவு அக்கரை உண்டோ அது போலவே பார்ப்பனீயத்தை ஒழித்து மனிதத் தன்மையைப் பெற திரு.அம்பெட்காருக்கும், திரு.சீனிவாசனுக்கும் அக்கரை உண்டு என்பதைத் திரு.காந்தி உணர்வாராக. இப்படி இருக்கும் நிலைமையில் வட்டமேஜை பிரதிநிதிகள் சரியானவர்கள் அல்ல என்றும் கலகக்காரர்களென்றும் திரு.காந்தி அவர்கள் சொல்லுவதென்றால் அது குறும்புத்தனமானது என்று சொல்லுவதை விட வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை.

இந்தியாவில் வகுப்பு சம்பந்தமான பேச்சுகளும், தீர்மானங்களும் வரும் போதெல்லாம் அவைகளைக் கொண்டு வருபவர்களை "வகுப்பு வாதிகள்" என்றும் "தேசீயத்திற்கு விரோதிகள்" என்றும் பார்ப்பனர்களும், அவர்களது கூலிகளும், சிஷ்யர்களும் பேசி மற்றவர்களை வாயடக்கி வெற்றி கொண்ட தந்திரத்தையும், சூக்ஷியையுமே சீமைக்குப் போய் அங்கும் காட்ட வேண்டியதாய் விட்டது.

திரு.காந்திக்கு "வகுப்பு வாதம் கூடாது, மதவாதம் கூடாது" என்றும் "காங்கிரசு தான் பிரதானமானது" என்றும் கருதி அந்தப்படியே உண்மையான எண்ணம் இருந்திருக்குமானால் திருவாளர்கள் மாளவியா, மூஞ்சே, சரோஜினி, எ.ரங்கசாமி அய்யங்கார் ஆகிய ஜாதிமத வகுப்பு வாதிகளைப் பார்த்து "மகாநாட்டில் உங்களுக்கு வேலை என்ன? நீங்கள் எதற்காக இங்கு இருக்கிறீர்கள்?" என்று கேட்டு இருக்க வேண்டாமா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

மாளவியாவுக்கு இடமிருக்கும் மகாநாட்டில் அம்பெட்காருக்கு இடமிருப்பது தகுதி அற்றதென்றோ, மூஞ்சேயிக்கு இடமிருக்கும் மகாநாட்டில் சௌகத் அலிக்கு இடமிருப்பது தகுதி அற்றதென்றோ, ரங்கசாமி அய்யங்காருக்கு இடமிருக்கும் மகாநாட்டில் சீனிவாசனுக்கு இடமிருப்பது தகுதியற்றதென்றோ யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம்.

வகுப்புக் கமிட்டியில் வகுப்புப் பிரதிநிதிகள் ஒரு முடிவுக்கு வர முடியாமல் தோல்வியுற்றதற்கு காரணம் வகுப்பு சம்பந்தமான அபிப்ராயங்களின் பலன் என்றோ, அல்லது பிரதிநிதிகள் ஒருவரால் ஒருவர் ஏய்க்கப்பட முடியாத சமஜோடியான வீரர்கள் என்றோ சொல்லப்படுமானால் அது மனித தன்மையின் மேன்மையான குணமாகும். அப்படிக்கு இல்லாமல் ஒரு பக்கத்துப் பிரதிநிதிகள் யோக்கியர்கள் என்றும், மற்றொரு பக்கத்துப் பிரதிநிதிகள் அயோக்கியர்கள் என்றும் சொல்லுவது ஒரு விதத்திலும் யோக்கியமான பேச்சாகா தென்பதோடு, இது ஒரு கோழைத்தனமான சமாதானம் என்றும் சொல்லுவோம். ஆகவே இதைப் பார்க்கும் போது திரு. ராம்சே மக்டனால்ட் துரை, திரு.காந்தியைப் பார்த்து "நாணயமாய் நடந்து கொள்ளுங்கள். உண்மையை மறைக்க முயற்சிக்காதீர்கள். உங்களுக்குள் பைசல் செய்து கொள்ள சக்தியில்லாவிட்டால் எங்கள் மீது குறை கூறாதீர்கள்" என்று சொன்னதோடு "இந்தியாவில் இல்லாத ஜாதி மத வகுப்புகளின் பிரதிநிதிகள் இங்கு யாராவது தருவிக்கப்பட்டிருக்கின்றார்களா?" என்றும் கேட்டிருப்பதானது மிக மிக பொருத்தமான பேச்சென்றே கருதுகின்றோம். இவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த திரு.காந்தி அவர்கள் தன் தலையை தொங்கப் போட்டிருப்பதைத் தவிர வேறு ஒன்றும் பதில் சொல்ல முடியாமல் போனதே இதற்கு சரியான உதாரணமாகும். தவிர திருவாளர்கள் மாளவியா, மூஞ்சே, சரோஜினி, ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்கள் "காங்கிரசு பிரதிநிதிகளேயொழிய வகுப்புப்பிரதிநிதிகள் அல்ல" என்று சொல்லக்கூடுமானால் திருவாளர் காந்தி "என்னை ஒருவரை மாத்திரம் தான் காங்கிரசு பிரநிதியாய் அனுப்பிற்று" என்று எப்படி சொல்லிக்கொள்ள முடியும்? என்று கேட்கின்றோம்.


RangaRakes tamilnavarasam.com

அன்றியும் திரு.காந்தி இருக்கும் போது இவர்கள் எல்லாம் எதற்காக வட்ட மேஜை மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும்? அங்கு இவர்கள் பேசியது எதன் சார்பாக? எதற்கு பிரதிநிதித்துவமாக? என்கின்ற விஷயங் களை கவனித்துப் பார்த்தால் இதன் சூக்ஷி யாருக்கும் விளங்காமல் போகாது. அன்றியும் "இந்தியாவுக்கு பிரதிநிதி ஸ்தாபனம் காங்கிரசு ஒன்றே தான்" என்றும் "காங்கிரசுக்கு பிரதிநிதி திரு.காந்தி ஒருவரே தான்" என்றும் சொல்லுவதை காங்கிரசும் திரு.காந்தியுமாவது ஒப்புக்கொண்டிருப்பவர் களாயிருந் தால் வட்டமேஜை மகாநாட்டுக்கு மற்றும் சுமார் 10, 20 ஸ்தாபனங் களிலிருந்து 50, 60 பிரதிநிதிகளை சர்க்காரார் தெரிந்தெடுத்திருப்பதையும், அவர்கள் ஏற்கனவே சீமைக்கு ஒரு தரம் சென்று வந்திருப்பதையும் தெரிந்து கொண்ட பின்பும், அந்த பிரதிநிதித்துவங்களை கேன்சல் செய்யா மல் காங்கிரசும் திரு.காந்தியும் ஏன் தங்கள் பிரதிநிதித்துவங்களை ஒப்புக் கொண்டு அங்கு சென்று இருக்க வேண்டும்? என்றும் கேட்கின்றோம். திரு.காந்தியவர்கள் தன்னோடு கூடவே திரு.மாளவியாவை அழைத்துச் சென்றார் என்பதையும் திரு.மாளவியாவை பிரதிநிதியாய் தேர்ந்தெடுக்க திரு.காந்தியவர்கள் முயற்சியும் உண்டு என்பதையும் யாராவது மறுக்க முடியுமா? அது மாத்திர மல்லாமல் முஸ்லீம் சமூகத்திற்கு டாக்டர் அன்சாரி அவர்களை தெரிந்தெடுக்க திரு.காந்தியவர்கள் எவ்வளவோ பாடுபட்டும் முடியாமல் போனதால் அவர் பிரதிநிதியாய் வரவில்லையே என்று திரு.காந்தி வருத்தப்பட்டுக் கொண்டிருப்பதும் யாராவது மறுக்க முடியுமா? இந்த நிலைமையில் வட்ட மேஜை மகாநாட்டை வகுப்பு மகாநாடாக்கு வதற்கு திரு.காந்தி அவர்களும் ஒரு பங்குக்காரர் தானா?அல்லவா? என்று கேட்கின்றோம். அன்றியும் திரு.காந்தி அவர்கள் சரியாகவோ தப்பாகவோ தனது வாக்கினாலேயே, எப்பொழுது முகமதியர்களுக்கும், சீக்கியர்களுக் கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தனித்தேர்தல் தொகுதி மூலம் கொடுக்கின்றேன் என்றும், அதுவும் அதை காங்கிரசே அனுமதித்திருக் கின்றது என்றும் ஒப்புக்கொண்டாரோ அப்பொழுதே காங்கிரசும் காந்தியும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு விரோதம் இல்லை என்பது முடிவு பெற்று விட்டது; அன்றியும் இந்த வகுப்புவாரி உரிமை யின்று நேற்றல் லாமல் சுமார் 20, 30 வருஷ காலமாகவே காங்கிரசில் இருந்தும் வருகின்றது. ஆகவே இருபது வருஷத்திற்கு முன்னாலேயே காங்கிரசு ஒப்புக் கொண்ட விஷயத்தைப் பற்றி இன்று புது விஷயம் போல் பேசுவதானது ஒரு சூட்சியே ஒழிய வேறு என்ன நாணயம் அதில் இருக்கக் கூடும்? என்று தைரியமாய் கேட்கின்றோம்.

தவிர இப்போது வகுப்புத் தகராறு என்பது முஸ்லீம்கள் விஷயத்தி லும், சீக்கியர்கள் விஷயத்திலும் இருந்து வருவதைப் பற்றி நாம் பேச வரவில்லை. ஆனால் தீண்டாதார் என்று ஒதுக்கித் தள்ளி வைத்திருக்கும் 7 கோடி மக்களுக்கு வரப்போகும் சுயராஜியத்தில் என்ன விமோச்சனம் செய்யப்பட்டிருக்கின்றது? என்று தான் கேட்கின்றோம்.



திரு.காந்தி அவர்களும் தீண்டாதாருக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டியது அவசியம் என்றும் அதை தான் ஒருபோதும் ஆட்சேபிக்க வில்லை என்றும் ஒப்புக்கொள்ளுகின்றார். அப்படியிருக்க வகுப்புவாதம் குறுக்கிட்டு திரு.காந்தியின் தேசீயத்தை எவ்விதத்திலும் கெடுத்து விட வில்லை. ஆனால் தீண்டப்படாதாருக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பது என்பதில் திரு.காந்தியோ, காங்கிரசோ சூட்சியும், ஏமாற்றுந் தன்மையும் இல்லாமல் உண்மையாய் நடந்து கொள்ளுகின்றவர்களாய் இருந்தால் முகமதி யர்களைப் போலவும், சீக்கியர்களைப் போலவும் பிரதிநிதித்துவம் அடையும்படி தாராளமாய் ஏன் விட்டுவிடக்கூடாது? அப்படிக்கில்லாமல் "நீயும் வீட்டுக்குள் வரலாம், உனக்கும் இடம் ஒதுக்கி வைத்திருக்கின்றது. ஆனால் வெளிக்கதவை மாத்திரம் தாராளமாய் திறந்து விடும்படி கேட்காதே" என்று சொல்லுவதானால் அது நாணயமானதா? என்று யோசித்துப் பாருங்கள்.

விஷயங்கள் இப்படியெல்லாம் இருக்க வட்டமேஜை மகாநாட்டை சர்க்காரார் கெடுத்துவிட்டார்கள் என்று சொல்லுவதில் பயன் என்ன? திரு.காந்தியவர்கள் தனது ஆத்ம சக்தியாலும், அஹிம்சா தர்மத்தாலும், கடவுள் கருணையாலும் எந்த விதமான சுதந்திரம் பெற்று வந்தாலும் அதை இந்தியாவில் கொண்டு வந்து தான் செலாவணியாக்க வேண்டுமேயொழிய மற்றபடி வேறு எந்த நாட்டிற்கும் கொண்டுபோய் விடமுடியாது. இந்தியா வில் இருக்கும் வகுப்பு, மத, ஜாதிகளை மறைந்து போகும்படியாகவும் எதையும் கொண்டு வந்து விடமுடியாது. ஏனெனில் எல்லா மத வகுப்பு ஜாதிகளையும் காப்பாற்றுவதாக வாக்கு கொடுத்து விட்டே சீமைக்கு கப்பலேறி இருக்கிறார். இந்நிலைமையில் அந்த சுதந்திரத்தில் ஒவ்வொரு மதமும், ஒவ்வொரு வகுப்பும், ஒவ்வொறு ஜாதியும் பங்கு கேட்பதில் மாத்திரம் என்ன கெடுதி இருப்பதாக திரு.காந்தி சொல்ல முடியும்? ஒவ் வொரு ஜாதியும், வகுப்பும், மதமும் சிறு சிறு கூட்டமாய் இருக்குமானால் ஒரு சமயம் அவர்களை ஏமாற்றிவிடுவது சாத்தியமாக இருக்கலாம். அப்படிக்கில்லாமல் 8 கோடி முஸ்லீம்கள், 7 கோடி தீண்டாதார், முக்கால் கோடி கிறிஸ்தவர், 3 கோடி பார்ப்பனர், 14 கோடி பார்ப்பனர் அல்லாதார் மற்றும் கால் கோடி, அரைக்கோடி, ஒரு கோடி, இரண்டு கோடி என்பதான சில்லரை மதங்களும், சில்லரை ஜாதிகளும், உள் வகுப்புகளும் எத்தனையோ இருக்கும் போது இவர்கள் இத்தனை பேர்களின் கண்களிலும் மிளகாய் பொடி போட்டு எப்படி ஏய்க்க முடியும்? என்பதை யோசித்துப் பாருங்கள். ஏதோ தந்திரத்தாலோ, ஏதோ கைபலத்தாலோ, ஏதோ மூடநம்பிக்கையாலோ ஒரு காலத்தில் ஒரு சமூகமோ, வகுப்போ, ஜாதியோ, மதமோ, உச்சஸ்தானமும், அதிகாரமும், ஆக்ஷியும், பணமும், படிப்பும் பெற்று விட்டால் அவைகள் அப்படியே அவர்களுக்கு எப்போதும் நிலைத்திருக்கும்படியாகவும், கீழ் மக்களாக, அடிமையாக, ஏழையாக, கூலியாக, படிக்காத தற்குறிகளாக இருக்க ஏற்பாடு செய்யப்பட்டவர்கள்



RangaRakes tamilnavarasam.com

எப்போதும் அதுபோலவே கீழ்மக்களாக, தற்குறிகளாக, கூலிகளாக, ஏழைகளாக, அடிமைகளாக இருக்கும்படி செய்ய முயற்சிப்பதென்றால் அதை எப்படி சுதந்திரம் என்றும், சுயராஜ்ஜியம் என்றும், சுயேச்சை என்றும், சமத்துவம் என்றும், சமதர்மம் என்றும் சொல்லமுடியும்? என்று கேட்கின்றோம்.இம்மாதிரி விடுதலை முயற்சிக்கு பழைய சூக்ஷியையும், அயோக்கியத்தனத்தையும் நிலை நிறுத்தப்பாடுபடும் மற்றொரு புதிய சூக்ஷியும், அயோக்கியத்தனமும் என்று சொல்லாமல் வேறு என்ன பெயர் கொடுக்க முடியும்?

சாதாரணமாக இனி வரப்போகும் சுயராஜ்ஜியமோ, சுயேச்சையோ எப்படிப்பட்டதாயினும் அதில் முதலில் பரிசோதிக்க வேண்டிய விஷயம் இரட்டமலை சீனிவாசப் பறைய வகுப்புக்கும், அம்பட்கார் பறைய வகுப்புக்கும் என்ன விடுதலையோ, யோக்கியத்தையோ, மாறுதலோ ஏற்படுமா என்று பார்ப்பது தான் முக்கிய பரீக்ஷையாய் இருக்க வேண்டுமே அல்லாது ஏ.ரங்கசாமி அய்யங்கார் பிராமணருக்கும், மாளவியா பிராமண ருக்கும் இனியும் என்ன புதிய யோக்கியதை ஏற்படும் என்பதைப் பார்க்க வேண்டியதாய் இருக்க கூடாது என்பதை வலியுறுத்திச் சொல்லுகின்றோம்.

சாதாரணமாக இந்தியா பூராவுக்கும் உள்ள 36 கோடி மக்களில் 12ல் ஒரு பாகமாகிய 3 கோடி மக்கள் வகுப்பாகிய பார்ப்பன ஜாதியாருக்கு அந்த வகுப்பில் மாத்திரம் எத்தனை பிரதிநிதிகள் சென்றிருக்கிறார்கள் என்பதை சற்று யோசித்துப் பாருங்கள். சாதாரணமாக நமக்கு தெரிந்த அளவில் நமது மாகாணத்தில் இருந்து மாத்திரம் திருவாளர்கள் சீனிவாச சாஸ்திரி, சர்.ராமசாமி ஐயர், ரங்கசாமி ஐயங்கார், ராமச்சந்திர ராவ், திருமதி ராதாபாய் அம்மாள், ராகவய்யா முதலியவர்கள் சென்றிருக்கின்றார்கள். மற்ற பங்குக்கு பிரதிநிதிகளாக திருவாளர்கள் ராமசாமி முதலியார், பாத்ரோ ஆகிய இருவர் மாத்திரம் இந்துக்கள் பார்ப்பனர் அல்லாதாருக்கும், திரு.பன்னீர்செல்வம் கிறிஸ்தவ வகுப்புக்கும், திரு.ஜமால் முகம்மது சாயபு மகம்மதியருக்கும், திரு.இரட்டமலை சீனிவாசன் தீண்டாதாருக்கும் பிரதிநிதியாக சென்று இருக்கிறார்கள். ஆக ஒட்டுமொத்தம் 3 கோடி உள்ள சமூகத்திற்கு இந்த ஒரு மாகாணத்தில் இருந்தே, அதுவும் வகுப்புவாதம் பேசும் மாகாணத்தில் இருந்தே பார்ப்பனர்களில் 6 பேர்களும் பாக்கி 33 கோடிக்கு 5 பேரும் சென்றிருக்கிறார்கள் என்றால் இனி வகுப்புவாதத்தைப் பற்றி கவலையே இல்லாமல் இருப்பதாக சொல்லப்படும் மற்ற மாகாணங் களில் இருந்து எவ்வளவு மோசமாக பிரதிநிதித்துவங்கள் போயிருக்கும் என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டுமா? என்று கேட்கின்றோம்.

ஆகவே வட்டமேஜை மகாநாட்டில் “வகுப்புவாதம் வந்து குறுக்கிடு கின்றது, குறுக்கிடுகின்றது” என்று கத்துவ தெல்லாம் தாழ்த்தப்பட்டவர் களையும், ஒடுக்கப்பட்டவர்களையும் மேலும் மேலும் தாழ்த்தவும், ஒடுக்க



வும் செய்யப்படும் சூக்ஷியை வெளியாக்குவதும், உயர்த்தப்பட்டு உச்சம் பெற்ற வகுப்புகளை மேலும் மேலும் உயர்த்தவும் செய்யப்படும் சூட்சியை வெளியாக்குவதும்தான் குறுக்கிடுவதாய் காணப்படுகின்றனவேயொழிய வேறில்லை. ஆகவே வட்டமேஜை மகாநாடு முறிந்த வரையில் கஷ்டப்படும் மக்களுக்கு லாபமேயொழிய நஷ்டமில்லை. வட்ட மேஜை மகாநாடு வெற்றி பெற்ற வரையில் பார்ப்பனர்களுக்கும், பணக்காரர் களுக்கும் தான் லாபமேயொழிய வேறில்லை. ஆகையால் வட்டமேஜை மகாநாடு முறிந்து போய்விட்டதே என்று யாவரும் கவலைப்பட வேண்டிய தில்லை, கவலைப்பட வேண்டியதில்லை.

**குடி அரசு - தலையங்கம் - 18.10.1931**



RangaRakes
tamilnavarasam.com

# ஆதி திராவிடர்களுக்கு இந்துக்களின் துரோகம்

உயர்திரு காந்தி அவர்கள் "ஆதிதிராவிடர்கள் கேட்கும் உரிமையை என் உயிர் போகும் அளவும் எதிர்த்தே தீருவேன்" என்று சொன்னதில் இருந்தும்,

"ஆதிதிராவிட தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டு லண்டனுக்கு வந்திருப்பவர்கள் ஆதிதிராவிடர்களின் தலைவர்கள் அல்ல" என்று சொன்னதில் இருந்தும்,

"ஆதிதிராவிட தலைவர்கள் வெட்கப்பட்டு (அவமானப்பட்டு) ஓடும் படியாக நான் செய்யப்போகும் காரியத்திற்கு நீங்கள் உதவி புரிய வேண்டும்" என்று இந்திய மாணவர்களைக் கேட்டுக் கொண்டதிலிருந்தும், "ஆதி திராவிடருக்கு நான் தான் (காங்கிரசுதான்) பிரதிநிதியே யொழிய வேறு யாரும் இருப்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்" என்றும்,

மற்றும் ஆதிதிராவிட தலைவர்களை அவமானமாகப் பேசியதில் இருந்தும், ஆதிதிராவிட மக்களுக்கு திரு.காந்தியின் மீது அதிருப்தி ஏற்பட இடமுண்டாய் விட்டது.

இந்த சங்கதி தெரிந்த இந்திய காங்கிரசுகாரர்கள் என்பவர்கள் பலர் ஆங்காங்குள்ள சில ஆதி திராவிட கூலிகளைப் பிடித்து, கூலி கொடுத்து கூட்டி வைத்து, ஆதிதிராவிட தலைவர்களை ஏளனமாகப் பேசும்படி செய்தும், அவர்களிடம் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும், திரு.காந்தி இடமே நம்பிக்கை இருப்பதாகவும் சீமைக்குத் தந்தி கொடுக்கச் செய்ததில் இருந்தும் காங்கிரசுக்காரரிடமும் ஆதி திராவிடர்களுக்கு அதிருப்தி ஏற்பட இடமேற்பட்டது.

இவை மாத்திரமல்லாமல் திரு.காந்தி அவர்கள் தனது சுயராஜ்ஜியத்தில் "வருணாச்சிரமமும் பரம்பரைத் தொழிலும் காப்பாற்றபடும் என்று மேல் ஜாதியாருக்கு உறுதி கொடுக்கப்படும்" என்று தெரிவித்து இருந்தாலும் மற்றும் "கிராம வாசிகள் (சூத்திரரும் பஞ்சமரும்) மாடு மேய்த்தும் செருப்புத் தைத்தும் ஜீவிக்க வேண்டுமேயொழிய அவர்கள் வியாபாரிகளைப் போல (வைசியர்களைப் போல்) பணக்காரர்களாகி பெட்டியில் பணம் மீத்தக் கூடாது" என்றும் சொன்னதில் இருந்தும் திரு.காந்தியிடம் அவர்களுக்கு அடியோடு நம்பிக்கை இல்லாமல் போகவும் இடம் ஏற்பட்டு விட்டது. இவ்வளவுடன் மாத்திரம் இல்லாமல் இந்திய "தேசீய பத்திரிகை"கள் என்பவை யெல்லாம் அவை பார்ப்பனரால் நடத்தப்படுபவைகளானாலும் பார்ப்பனரல்லாதாரால் நடத்தப்படுபவைகளானாலும், எல்லாம் ஒரே மாதிரியாக ஆதிதிராவிடர்களுக்கு துரோகமாகவே நடந்து கொள்வதாலும் அதாவது ஆதிதிராவிடர் கேட்பது அக்கிரமமென்றும், காந்தி சொல்லுவதும் காங்கிரசு சொல்லுவதுமே சரியென்றும் எழுதுவதோடு நிற்காமல், ஆதி திராவிடர்களது சேதியை சரி வர வெளிப்படுத்தாமல் தப்பும் தவறுமாகவும் பொது ஜனங்களுக்கு ஆதிதிராவிடர்கள் மீது தப்பர்த்தமும் துவேஷமும் ஏற்படும்படியாக கட்டுப்பாடாய் பிரசுரித்து வருவதாலும் ஆதிதிராவிடர்கள் மனம் பதறி எந்த வகையிலாகிலும் தங்களுக்குப் பந்தோபஸ்து கிடைக்க வேண்டும் என்று முயற்சி செய்யக் கட்டாயப் படுத்தப்பட்டு விட்டது.

நிற்க, சென்ற வாரம் சென்னையில் கூடிய ஆதிதிராவிடர்களின் மூன்று கூட்டங்களில் 3 நாளும் சில பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளான சில காங்கிரசு சகாக்களும் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன் சென்று கலகம் செய்து இருக்கின்றார்கள் என்பதாக நம்பத்தகுந்த இடத்தில் இருந்து சேதி கிடைத்திருக்கின்றது.

அதாவது, முதல் நாள் பீச்சு மீட்டிங் நடந்து கொண்டிருக்கும் போது சில அய்யங்கார் பார்ப்பன மாணாக்கர்கள் வம்பில் பிரவேசித்து திரு. பொன்னம்பலம் பேசிக் கொண்டிருக்கும் போது "காந்திக்கு ஜெ, வந்தே மாதரம், அம்பட்காருக்கு ஷேம்" என்று சத்தம் போட்டு கூட்டத்தைக் கலைக்கசூக்ஷி செய்தார்களாம். ஒரு கனவான் அவர்களிடம் மரியாதையாய் "உங்கள் கூட்டத்திற்கு நாங்கள் வருகின்றோமா? நீங்கள் ஏன் எங்கள் கூட்டத்தில் கலவரம் செய்கின்றீர்கள்?" என்று கேட்க, அதற்கு சரியான பதில் சொல்லாமல் "இதெல்லாம் சுயமரியாதை பசங்களுடைய குறும்பு" என்று சொன்னாராம். பிறகு, அவர்களுக்கு புத்தி கற்பித்த பிறகு போய் விட்டார்கள்.

அடுத்தநாள் இந்த விஷயத்தையும், நடந்த தீர்மானத்தையும் எல்லா பத்திரிகை ஆபிசுக்கு அனுப்பியும் "திராவிடன்" தவிர மற்ற எப் பத்திரிகையும் லக்ஷியமே செய்யாமலும், சில ஒழுங்காய் போடாமல் ஆதிதிராவிடரை கண்டிக்கும் மாதிரியிலும் பரிகாசமாகவும், இழிவு படுத்தும் மாதிரியாகவுமே பிரசுரித்தன. அசோசியேட் பிரசுக்கு இந்த சேதியை நேரில் கொடுத்த போது "இந்த மாதிரி அனாமதேய சங்கதிகள் போட முடியாது" என்று சொல்லி விட்டார்களாம்.



RangaRakes tamilnavarasam.com

பிறகு, அடுத்த மீட்டிங் நேபியர் பார்க்கில் திரு.சிவராஜ் பி.ஏ, பி.எல்., எம்.எல்.சி., அவர்கள் தலைமையில் கூட்டப்பட்ட போதும் சிலர் கூட்டத்தில் குழப்பம் செய்ய முயற்சித்து பயன்படாமல் போனதால் ஆதி திராவிடர்கள் திரும்பி வீட்டிற்கு போகும் போது அவர்களை காங்கிரசுகாரர் வழிமறித்து அடித்தும், கல் எறிந்தும் தொந்திரவு செய்திருக்கிறார்கள் என்று ஆதிதிராவிட தலைவர் ஒருவர் சொன்னதோடு, போலீசாரும், ஆதி திராவிடர் நன்றாய் உதைபட்ட பிறகு தான் வந்தார்கள் என்றும் சொன்னார்.

இந்த சங்கதியையும் "தேசிய பத்திரிகை" கள் என்பவை "ஆதி திராவிடர்கள் விஷமம்" என்றும் "காந்திக்கு ஆபத்து" என்றும் "ஆதி திராவிடர்கள் குறும்பு" என்றும் தலைப்பு கொடுத்து ஆதிதிராவிடர்கள் மீதே பழி சுமத்தி எழுதிற்றே யொழிய ஒன்றாவது அவர்கள் அடிபட்டதற்கு பரிதாபப்படாமலும், அடிபட்டதே வெளியில் தெரியாமலும் செய்து விட்ட தோடு, அவர்கள் மீது ஜனங்களுக்கு துவேஷம் உண்டாகும்படியாகவே செய்து வந்தன.

ஒரு தலைவர் ஒரு பத்திராதிபரைக்கண்டு இவ்விஷயங்களைச் சொல்லி கேட்டதற்கு "சுயமரியாதைக்காரர்கள் இதில் கலந்ததால் தான் நான் அப்படி செய்தேன்" என்றும் "நீங்கள் அவர்களோடு சேர்ந்தால் இன்னமும் உங்களுக்கு என்ன கதி கிடைக்கின்றது பாருங்கள்" என்றும் "இந்த காரணத்தால் தான் போலீஸ் உதவி உங்களுக்கில்லை" என்றும் சொன்னாராம்.

மூன்றாம் நாள் திரு.எம்.சி.ராஜா எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடந்த எழும்பூர் ஏரி கூட்டத்தில் சுமார் ஏழாயிரம் பேருக்கு மேலாகவே வந்திருந்தார்கள். இக்கூட்டத்திலும் கலவரம் செய்யப் பலர் நினைத்திருந் தாலும் கூட்டம் பலமாய் இருந்ததால் அங்கு ஒன்றும் செய்ய முடியாமல் போய் விட்டதால், திரும்பிப் போகும் போது வழியில் பெருத்த கலவரம் செய்யப்பட்டிருக்கின்றன. அடிதடிகளும் நடந்ததாய்த் தெரிகின்றன.

இந்த விஷயங்களை எல்லாம் உண்மையாய் எழுதாமல் சில பத்தி ரிகைகள் எல்லாம் கட்டுப்பாடாக ஆதிதிராவிடர்களுக்கு கொடுமையையே உண்டாக்கி வருகின்றன. இது மிகவும் பரிதாபகரமான விஷயமாகும். ஆதிதிராவிடர்களிடமிருந்து மலம் எடுக்கும் தொழில் முதல் கொண்டு எவ்வளவோ இன்றியமையாத வேலைகளைப்பெற்று வரும் இந்து மக்கள் என்பவர்கள், அவர்களுக்கு இவ்வளவு கொடுமையும், துரோகமும் செய்து வருவது எந்த விதத்திலும் பொறுக்க முடியாததேயாகும். இந்த கொடுமை கள் எப்படியாவது, ஆதிதிராவிடர்களை மெய்யாகவே ஒரு நாளைக்கு வெறி பிடிக்கத் தான் செய்து விடும். இது தவிர்க்க முடியாத இயற்கையாகும். பிறகு இப்போது "புலி வருகின்றது! புலி வருகின்றது!!" என்பது போல் ஆதி திராவிடர்களின் மீது சுமத்தும் பழியும், அபாண்ட பொய்யும், விஷமப் பிரசாரமும் ஒரு நாளைக்கு உண்மையாய் நடக்க நேரிட்டாலும் நேரிடலாம். ஆகையால் அறிவாளிகள் ஜாக்கிரதையாயும், முன் எச்சரிக்கை யாயும் நடந்து கொள்ள வேண்டியது புத்திசாலித்தனமாகும். வேதாந்தமும், தத்துவ ஞானமும்,அஹிம்சா தர்மமும் பைத்தியக்காரர்கள் ஆஸ்பத்திரியில் நடக்க வேண்டிய தாகுமே யொழிய ஆதிதிராவிடர் தலையில் கைவைக்க பயன்படுத்துவது தற்கொலையாகவே முடியும். அஹிம்சா தர்மத்தையும், கடவுள் பக்தி நம்பிக்கையையும் கொண்டு கோட்டை வாசலில் துளசியைக் கொட்டிய நாயக்கர் ராஜியம் இன்று பெயர் சொல்ல வார்சு இல்லை என்பதை யாரும் மறுக்கமுடியாது. நிற்க,

ஆதிதிராவிடர்கள் என்பவர்களும் பொறுமையை இழக்க வேண்டிய அவசியம் ஒன்றும் நேர்ந்து விடவில்லை. அவர்கள் இந்த சமயத்தில் பதிலுக்குப் பதில் என்று கூட பலாத்காரத்தில் இறங்குவது மிக மிக தப்பிதமே யாகும். ஆனால் உதைகளை பட்டுக்கொள்ளும்படி நாம் சொல்லவர வில்லை. பதிலுக்கு பதில் உதைப்போம் என்று எதிரிகள் நினைக்கும்படி நடந்து கொள்ள வேண்டியதானது இப்படிப்பட்ட மக்களுக்கு மிகவும் அவசியமானாலும், பொறுத்தவரையில் அதிக பலம் ஏற்படும் என்பதை ஞாபக மூட்டுகின்றோம்.

நிற்க, இந்த நிலைமையில ஆதிதிராவிடர்கள் இனி இந்துக்களை நம்புவதோ, காங்கிரசையோ, காந்தியையோ நம்புவதோ "தான் சாக மருந்து குடிப்பதை"யே ஒக்கும் என்று தைரியமாய்ச் சொல்லுகின்றோம். கண்டிப்பாய் இனி ஆதிதிராவிடர்கள் அரசியலில் தனித்தொகுதி தேர்தல் முறையும், வகுப்புவாரி உத்தியோக முறையும் இல்லாமல் இந்தியாவில் அரைநிமிஷம் கூட மனிதர்களாய் வாழ முடியாது. ஆதலால் அவர்கள் தனித்து நின்றோ, அல்லது தங்களுக்கு வேண்டிய உதவி அளிக்கக் கூடியவர்களுடன் கலந்தோ முயற்சி செய்து லக்ஷியத்தை அடைய கவலை கொள்ள வேண்டியது அவசியம் என்றும் ஏமாந்து விடக்கூடாது என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 25.10.1931**


RangaRakes
tamilnavarasam.com

# தீண்டாதாருக்கு விமோசனம்

## முகமதியரைத் தழுவுவதை விட வேறு கதியில்லை

**- எவனெழுதினாலென்ன**

### தீண்டாதார் நிலை

சகோதரர்களே ! தீண்டாதார் என்பதாக ஒதுக்கித் தள்ளிவைத் திருக்கும் நம்முடைய சமூகத்தின் எண்ணிக்கை இந்தியாவில் சுமார் 7 கோடி மக்கள் இருக்கின்றோம். நாம் தெருவில் நடந்தாலும், மற்றவர்கள் கண்ணில் நாம் தென்பட்டாலும், நமது நிழல் மற்ற மனிதர்கள் மேல் பட்டாலும் தீட்டு ஒட்டிக்கொள்ளுமென்றும், தோஷமென்றும், உடனே குளித்தாக வேண்டு மென்றும், சிலர் குளிப்பதுகூட போதாதென்று ஏதாவது 'பிராயச்சித்தம்' செய்து கொள்ளவேண்டும் என்றும் சொல்லுகின்றார்கள்.

இவை தவிர, நமக்கு குடிக்கத் தண்ணீர் வேண்டுமானால் நாமாகப் போய் மொண்டு கொள்ளும்படியானதொரு பொதுக்குளமோ, குட்டையோ, ஏரியோ, கிணரோ கிடையாது. நாம் எந்தக் குளத்தை யாவது, கிணற்றை யாவது தொட்டுவிட்டால் அவற்றை மந்திரங்கள் சொல்லி புண்ணியார்ச் சனை செய்து தண்ணீரையும், மாட்டு மூத்திரத்தையும் தெளித்து சுத்தம் செய்தாகவேண்டும்.

நாம் குடி இருக்கவேண்டிய இடமோ ஊருக்கு ஒரு மைல், அரை மைல் தூரத்தில் குடிசைகள் கட்டிக்கொண்டு அங்குதான் வாழ வேண்டும். அங்கும்கூட ஓட்டு வில்லை வீடோ, மெத்தை வீடோ கட்டி அதில் நாம் குடி இருந்தால் ஊருக்கே கேடு வந்துவிடுமாம். நாம் வாழும் இடத்துக்கு சேரி என்று பெயர். நாம் வாழுகின்ற பக்கம்தான் ஊர் ஜனங்கள் குப்பை, செத்தை கொண்டுவந்து போட்டுவைப்பதும், ஊரார் மல ஜலம் கழிக்க வருவதுமான இடமாக உபயோகித்துக் கொள்ளப்படுகின்றன. ஏனெனில் அவற்றிற்கு காவலாய் இருக்குமாம்.



நமக்கு வேலையோ தோட்டி வேலை தான் பாரம்பரியமாய் சொந்த மானது. மற்றும் ஊர்கூட்டி, மலம் அசிங்கம் முதலியவைகளை எடுத்து சுத்தம் செய்வதும், பிணம் சுடுவதும், செத்த மிருகங்களை அப்புறப்படுத்து வதும், கழனி வயல் முதலியவைகளுக்குக் குப்பை, செத்தை முதலியன கொண்டுபோடுவதும், மற்றும் தானியம் விதைத்து அறுப்பு அறுத்து மிராசுதாரன் வீட்டிற்குத் தானியம் போய்ச்சேரும் வரையில் சகலவேலையும் செய்வதும், வீட்டிலும், வயலிலும் சேருகட்டி வைத்திருக்கும் தானியத்திற்கு காவல் இருப்பதும், மற்றும் இது போன்றவைகளுடன், தப்புக்கொட்டுதல், செத்துப்போன பிணங்களுக்காக அழுதல், பிணத்தின்மீது போடும் அரிசியை எடுத்துச் சமைத்து சாப்பிடுதல், பிணத்தின்மீது போத்தி இருந்த துணியில் கொஞ்சம் கிழித்து எடுத்துக்கட்டிக்கொள்ளுதல், இரவிலும், பகலிலும் 10, 20, 30 மைல்கள் தூரமுள்ள வெளியூர்களுக்குச் சேதி கொண்டு போதல், முதலிய காரியங்கள் செய்யவேண்டியதும் நமது பிறப்புரிமை யாகும்.

இவை ஒருபக்கமிருந்தாலும் நமது பிள்ளைகள் படிக்கக்கூடாது என்பது மேல் ஜாதிக்காரர்களின் கட்டளையாகும். அதுவும் மதத்தை ஒட்டிய கட்டளையாகும். அவற்றை மீறி படிப்பதாயிருந்தாலும் பள்ளிக் கூடங்கள் கிடையாது. எங்காவது ஒன்று இரண்டு பள்ளிக்கூட வசதிகள் இருந்தாலும் நமக்குச் சம்பளம் கொடுக்கவும், புஸ்தகங்கள் வாங்கிக் கொடுக் கவும், துணிமணி கொடுக்கவும், படிக்கும் பையனுக்கு சாப்பாடு போடவும் சௌகரியம் கிடையாது. கிராமங்களில் இருக்கும் நம்மவர்கள் இவ்விஷயங் களைப்பற்றி நினைக்கவே கூடாது.

இவை தவிர நமக்கு நாவிதன் கிடையாது, வண்ணான் கிடையாது, நாமாகத் துவைத்துக்கொள்ளலாம் என்றாலும் அதற்கும் கிணறு, குட்டையும் கிடையாது. ஒரு கிராமத்தில் 500 வீடு இருந்தால் அங்கு 20 பறையர் வீடு இருந்தால் அந்த 20 வீட்டுப் பறையர்களும் அவர்களது பெண்டு பிள்ளைகளும் எல்லாமுமே மேற்கண்ட 500 வீட்டுக் குடிமக்களுக்கும் அடிமை சாசனம் எழுதிக்கொடுத்த குடும்பத்தைப் போல் அடிமை வேலை செய்யவேண்டியதாகும். இரவு பகல் என்கின்ற கணக்கே கிடையாது. கூலி கேட்டால் உதை கிடைக்கும். விவசாய அறுவடையின் போது களத்தில் பிச்சைவாங்குவதும், மற்றபடி சட்டி எடுத்துக்கொண்டுபோய் வீடு வீடாய் 'பிச்சைபோடுங்க சாமி' என்று கூப்பாடு போட்டு பிச்சைசோறு கேட்டு வாங்கிச் சாப்பிட வேண்டியதாகும். பிச்சைசோறு கேட்கும் சட்டிகூட முழுசாய் இருந்தால் அது ஒரு பெரிய குற்றமாகிவிடும். ஏனெனில் கிராமத் தில் பறையன் முழுசட்டி எடுத்துப் பிச்சை எடுத்தால் கிராமத்திற்கு கெடுதி ஏற்பட்டுவிடும் என்கின்ற ஒரு ஐதீகம் உண்டு. ஆதலால் நல்ல சட்டியாய் இருந்தாலும் வாய்ப்பாடுகளை உடைத்து ஓடு மாதிரியாக ஆக்கிக் கொண்டு தான் சோத்துப் பிச்சைக்கு போகவேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

சில இடங்களில் ரொம்பவும் மேல்ஜாதிக்காரர்கள் என்பவர்கள் கண்டிப்பாய் பறையர்களுக்கு பிச்சை சோறு போடமாட்டார்கள். ஏனெனில் பறையனுக்கு சோறுபோட்டால் வீட்டிற்குள் சட்டியில் இருக்கும் சோறெல்லாம் தீட்டாய்(சேஷமாய்) போயிடுமாம். இது மாத்திரமல்லாமல் இன்னும் ஒரு மதக்கொள்கை உண்டு. அதென்ன வென்றால் சில மேல் ஜாதிக்காரர்கள் சாப்பிட்ட எச்சிலையில் உள்ள மீதியையும் அவர்களுக்கு தேவையில்லாத மீதத்தையும் கூட பறையருக்குக் கொடுத்தால் பெரிய தோஷம் ஏற்பட்டுவிடும் என்று கருதி, குளிவெட்டி புதைத்துவிடும்படி செய்வதும் உண்டு . நமக்கு பிச்சைசோறு போடக்கூடிய ஜாதியாரோ, கெட்டுப்போனதையும், ஊசிப்போனதையும் தான் பத்திரமாய் வைத்திருந்து நமது சத்தம் கேட்டதும் ஓடி ஓடிப்போய்க்கொண்டுவந்து போடுவார்கள். நிற்க,

துணிவிஷயத்திலும் இப்படித்தான் நமக்கோ புதுத்துணி வாங்கிக் கட்ட காசுகிடையாது, கட்டினாலும் பொறாமைப்படுவார்கள். மேல் ஜாதிக் காரர்கள் கட்டி கிழித்த கந்தலையே கட்டவேண்டும். அப்படி கட்டுவதற்கும் சில முறைகள் உண்டு. அவை என்னவென்றால் வேஷ்டியை இடுப்பில் முழங்காலுக்கு கீழே தொங்கவிட்டு கட்டக் கூடாது, மேலேயும் துணி போடக்கூடாது, பெண்கள் மார்பை மூடக் கூடாது என்பன போன்ற கட்டுப் பாடுகளுடன், மற்றும் தங்கம், வெள்ளி நகை போடக்கூடாது என்பதும் குடைபிடிக்கக்கூடாது என்பதும், காலில் செருப்புப் போடக்கூடாது என் பதும், பித்தளை, வெண்கலப்பாத்திரங்கள் உபயோகிக்கக்கூடாது என்பது மான பல நிபந்தனைகளுண்டு.

இவ்வளவும் தவிர தமிழ்நாட்டில் பல ஜில்லாக்களில் பூமிகளை ஒருவருக்கொருவர் விற்கும்போது அந்த பூமியில் வேலை செய்யும் அடிமைகள் என்பதாக நம் பெரியோர்களின் பெயர்கள் போட்டே அந்த வழி அடிமை என்பதாக நம்மையும், குடும்பத்துடன் விற்றுவிடுவதுமுண்டு. அந்த பூமியை வாங்கினவர்களுக்கு எல்லாம் நாம் அடிமைகளாவோம். மற்றும் பல ஜில்லாக்களில் நம்மவர்கள் படும் பாடு சொல்லவே முடியாது. உங்களில் பலர் காதால் கேட்டுகூட இருக்கமாட்டீர்கள்.

அதாவது, மலையாள ஜில்லாக்களில் நம்மில் ஒரு வகுப்பாரை "நாயாடிகள்" என்று சொல்லுவது உண்டு. அவர்கள் எந்த ரோட்டிலும் நடக்கக்கூடாது. சுமார் 50 கெஜம் முதல் 100 கெஜத்திற்கு மேற்பட்ட தூரத்தில் தான் எந்த ரோட்டிலும் இருக்கவேண்டும். அவர்கள் எங்கும் எவ்வித தொழிலும் செய்யமுடியாது. யாருக்கும் தெரியாமல் ஊருக்கு வெளியில் சாலைத் தெருவில் ஒரு துணியை விரித்துப் போட்டு விட்டு, காட்டுக்குள் ஓடிப்போய் மறைந்து கொண்டு "தம்பிரானே தம்பிரானே" என்று கூப்பாடு போடவேண்டும். சாலையில் நடக்கும் ஜனங்கள் அதில் ஏதாவது பண்டமோ, காசோ போட்டுவிட்டு போனால் மாலையில் ஒரு வருக்கும் தெரியாமல் வந்து எடுத்துக்கொண்டு ஓடிவிட வேண்டும். இதைத் தவிர எங்காவது வயல்களில் சிந்திக்கிடக்கும் நெல்லுகளைப் பொறுக்குவதும், மற்றும் ஏதாவது பட்சி, பூச்சி, ஜந்து முதலியவைகளை கல்லால் அடித்துப் பிடித்து சுட்டுத் தின்பதும் ஆகியவற்றைத் தவிர வேறு ஒன்றுமே செய்யமுடியாது.

இதைத் தவிர மலையாளத்தில் மற்றும் ஒரு கூட்டம் உண்டு. அவர்கள் நம்மிலும் கொஞ்சம் பெரிய ஜாதியென்று சொல்லிக்கொள்ளு வார்கள். ஆனால் அவர்கள் தெருவில் நடக்கும்போதே 'ஹா' 'ஹா' என்று சத்தம் போட்டுக் கொண்டே வரவேண்டும். ஏனெனில் "தாழ்ந்த ஜாதிக்காரனாகிய நான் வருகிறேன். எதிரில் வரும் உயர்ந்த ஜாதியார்களே ! விலகிக் கொள் ளுங்கள்" என்று குறிப்பு காட்டுவதற்காக. அதாவது மூலை முடக்குகளில் மோட்டார்கார்கள் வரும்போது எதிரில் வண்டி வந்தாலும் வராவிட்டாலும் அது ஹாரன் ஊதுவது போல் சத்தம் போடவேண்டும். ஆனால் மோட்டார் மூலைமுடக்குகளில் மாத்திரம் ஊதும். இவர்களோ நேர்ரோட்டில் போகும் போதும் மற்றவர்களுக்குத் தான் கீழ்ஜாதிக்காரன் என்று தெரிவிப்பதற்காக வேண்டி சத்தம் போட்டுக்கொண்டே வரவேண்டியதாகும்.

## சமூகத்துரையில்

இவை தவிர சமூகத்துறையில் நமக்கு இருக்கும் ஸ்தானமானது நாம் எந்த விதத்திலும் நமது இன்றைய நிலைமையை விட்டு மாற முடியாமலும், நாம் எப்படியும் பணக்காரர்கள் ஆகமுடியாமலும், நாம் ஒரு தனித்தொழில் செய்து சுதந்திரமாயிருக்கமுடியாமலும், நமது நிலைமையை உயர்த்திக் கொள்ள படிக்கவோ அல்லது அதிக வரும்படி உள்ள வேறுதொழிலில் போய் சேரவோ மார்க்கமில்லாத நிலைமையிலேயே இறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றோம். எவ்வளவு தான் நம்மவர்கள் முன்னுக்கு வருவதானாலும் சுயராஜிய அரசியலில் பியூன் வேலைக்கு லாயக்காகலாம், மிஞ்சினால் போலீஸ்காரன் வேலைக்கு லாயக்காகலாம், ஸ்தல சுயாட்சி களில் கக்கூஸ் எடுப்பதில் இருந்து, குப்பை மேஸ்திரி வேலைக்கு லாயக் காகலாம். இதுவும் அந்தந்த இலாகா "தேசீயத்தலைவர்கள் " தயவு வைத்து கொடுத்தால்தான் உண்டு. மற்றபடி குமாஸ்தா வேலைக்கோ அதற்கு மேற்பட்ட ஏதாவது உத்தியோகஸ்தர் வேலைக்கோ வர நமக்கு மார்க்கமே கிடையாது. 50 லட்சம் ஜனத்தொகை கொண்ட கிறிஸ்துவர்கள் வேறு மதக் காரராய் இருந்தும் பார்ப்பனர்களுக்கு சமமாக அனேகம்பேர் உத்தியோகம் பதவி முதலியவை பெற்று வாழுகின்றார்கள். நம்மைப்போலவே எண்ணிக்கையுள்ள முகமதியர்கள் அன்னிய மதக்காரர்களாய் இருந்தும், அதாவது 8கோடி இருந்தும் சற்று ஏறக்குறைய அவர்களது ஜனத்தொகைக் குள்ள விகிதாச்சாரம் எல்லா உத்தியோகங்களிலும் இருக்கிறார்கள். மற்றும் இவர்களில் அநேகர் ஏராளமான பணக்காரர்களாகவும், வியாபாரிகளாகவும் விவசாயக்காரர்களாகவும், பேங்கர்களாகவும் இருக்கிறார்கள். இந்துக்களில்


RangaRakes
tamilnavarasam.com

உள்ள மற்ற வகுப்பார்களும் கூட எவ்வளவோ முற்போக்கடைந்திருக் கிறார்கள். ஆனால் 7 கோடி ஜனத்தொகை கொண்ட நாம் (இந்த நாட்டுப் பழங்குடி மக்களாக இருந்தும்) தீண்டாதார் அல்லது பஞ்சமர் என்கின்ற பெயரை உடைய நாம் எந்த அளவில் படித்தவர்களாய் இருக்கின்றோம், உத்தியோகஸ்தர்களாயிருக்கின்றோம், பணக்காரர்களாய் மிராசுதாரர்களாய், பாங்கர்களாய், வியாபாரிகளாய் இருக்கின்றோம் என்பதை யோசித்துப் பாருங்கள். படித்தவர்கள் 1000-க்கு ஒருவர் உண்டா? பணக்காரர் 10000 க்கு ஒருவர் உண்டா? பதவி உள்ளவர்கள் 100000 க்கு ஒருவர் உண்டா? இதன் காரண மென்ன?

## "ஆதி" பட்டம்

நாம் தானே இந்நாட்டின் பழம் பெரும் குடிமக்கள் என்று ஆதாரம் இருக்கின்றது. நமக்குத்தானே ஆதிதிராவிடர், ஆதி ஆந்திரர், ஆதி மராட்டியர், ஆதி கர்னாடகர் என்கின்ற பெயர்கள் வழங்குகின்றன. இந்த "ஆதி" பட்டமெல்லாம் நாம் என்றும் நிலையாய், அடிமையாய், தீண்டாதார ராய் இருப்பதற்கு அனுகூலமாக கொடுக்கப் பட்டதே யொழிய, மற்றபடி இந்நாட்டின் பழம் பெருங்குடி மக்கள் என்று மரியாதை செய்து முற்போக் கடையச் செய்விப்பதற்கு கொடுக்கப் பட்டதா? அல்லது உதவுகின்றதா? என்று எண்ணிப் பாருங்கள். ஒரு நாட்டிற்கு எவ்வித சுதந்திர மிருந்தாலும்-பூரண சுயேச்சை இருந்தாலும்-சுயராஜிய மிருந்தாலும் அன்னாட்டிலுள்ள 3-ல் ஒரு பங்கு மக்கள் தீண்டாதார் என்றும், கீழ் ஜாதியார் என்றும், பாடுபட்டு உழைத்து, மற்றவர்களுக்கே போட்டு விட்டு, தெருவில் நடக்கவும், குளத்தில் தண்ணீர்மொள்ளவும், ஊருக்குள் குடியிருக்கவும் உரிமையில்லாமலும், வயிரார உண்ண முடியாமலும் இடுப்பார உடுத்த முடியாமலும் இருக்கும் படியான மக்கள் உள்ள நாடாயிருந்தால் அந்த நாடு கொடுங்கோன்மை ஆக்ஷி உள்ள நாடு என்று சொல்லுவதல்லாமல் அதற்கு ஏதாவது மேற் கொண்ட யோக்கியதை உள்ள பெயர் கொடுக்க முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள்.

## இதற்கு காரணம் என்ன? நம் குற்றம் தான்

நிற்க, சகோதரர்களே! மற்றொரு விஷயத்தையும், நான் சொல்லாமற் விடுவதற்கில்லை. அதாவது நாம் மேல் கண்டபடியான இழிவுக்கும், கொடுமைக்கும் பாத்திரமானதற்கு நாமே முக்கிய காரணஸ்தராய் இருந்து வரும் நம்முடைய அறிவீனத்தையும், மானமற்ற தன்மையையும் எடுத்துச்சொல்லித் தீர வேண்டுமல்லவா? அதைச் சொல்லுகின்ற போது நீங்கள் வருத்தப்படக் கூடாது. நான் சொல்லுவது உண்மைதானா? அல்லது அல்லவா? என்று யோசித்துப் பார்க்கவேண்டும். உண்மையென்று பட்டால் உடனே கவனிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



சகோதரர்களே! நாம் தீண்டாதவர்கள் என்று சொல்லப்படுவதற்கும், தீண்டாதவர்களாய் நடத்தப் படுவதற்கும் முக்கிய காரண மென்ன என்பதை யோசித்துப்பாருங்கள். வெள்ளைக்காரர்களிலாவது, துருக்கியர்களிலாவது, சீனா ஜப்பான்காரர்களிலாவது தங்கள் நாட்டு மக்களில் யாரையாவது தீண்டாத ஜாதியாராகவும், கீழ்ஜாதியாராகவும் நடத்துகின்றார்களா? யாராவது அந்தப்படி நடத்தப்பட சம்மதித்துக் கொண்டிருக்கிறார்களா? நம் நாட்டில் மாத்திரம் ஏன் அம்மாதிரி தீண்டாதார்களாய் நடத்தப் பட வேண்டும்? நாமும் ஏன் வெகு காலமாகவே அதற்கு இணங்கி நம்மை நாம் தீண்டாதாரர் என்றே எண்ணிக்கொண்டு இருக்க வேண்டும்? என்பன போன்ற விஷயத்தை யோசித்துப் பாருங்கள்.

அன்றியும், வெளி நாட்டிலிருந்து வந்த கிறிஸ்துவனாவது, முகமதி யனாவது நம்மைத் தீண்டாதாரராய் நடத்துகின்றார்களா? அன்றியும் சீனா ஜப்பான் ஆகிய இடங்களில் இருந்துவரும் சைனாகாரன் ஜப்பான்காரன் முதலிய பௌத்தர்களாவது நம்மை தீண்டாதவர்களாக நடத்துகின்றார்களா? இல்லையே.

மற்றபடி யார் நம்மை தீண்டாதாரராய் யார் நடத்துகின்றார்கள் என்று கவனித்துப் பாருங்கள். நம் நாட்டிலே பிறந்து நம் நாட்டிலே வளர்ந்து நம்மிடம் வேலை வாங்கி வாழ்ந்து வரும் மக்கள்தான் நம்மை தீண்டாதாரர் களாய் நடத்துகின்றார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் ஏன் அவர்கள் அம்மாதிரி நடத்துகின்றார்கள்? என்று பாருங்கள். நாமும் அவர் களும் ஒரே தேசத்தார் என்பதற்காகவா? அல்லவே அல்ல. மற்றெதற்காக என்றால் நாமும் அவர்களும் ஒரே மதக்காரர்கள் என்பதற்காகவே அல்லா மல் வேறு எந்தக் காரணத்தாலு மல்ல. அதாவது நம்மையும் நம்மைத் தீண்டாதவர்களாக பாவிக்கும் மக்களையும் ஒரே மதத்தின் கீழ் சேர்த்து எல்லோரும் இந்துக்கள் என்றும் இந்து மதக்காரர்கள் என்றும் சொல்லிக் கொள்வதாலேயே ஒழிய வேறில்லை. பெரிதும் வேறு நாட்டாரும் வேறு மதக்காரர்களுமான இஸ்லாம் மதக்காரரையும் பௌத்தரையும் கிறிஸ்து வரையும் தீண்டாதார் என்று யாராவது சொல்லுகின்றார்களா? அல்லது அவர்களாவது மற்றவர்கள் அப்படிச் சொன்னால் பொறுத்துக் கொண்டு இருப்பார்களா? ஒரு நாளும் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஏனெ னில் அவர்கள் மதத்தில் தீண்டாமை என்பதான ஒரு பிரிவு இல்லாததாலும் சுயமரியாதையே பிரதானமானதினாலும் அவர்களை யாரும் அந்தப்படி சொல்ல முடியாது. சொன்னாலும் அவர்கள் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். உடனே "புத்தி கற்பித்து" விடுவார்கள். ஆதலால் நம் தலையின் மீது நாம் சுமந்து கொண்டிருக்கும் 'இந்து' என்னும் மதம் தான் நம்மை தீண்டாதவர்களாக ஆக்கி இருக்கின்றதே யொழிய வேறு எந்தக் காரணத்தினாலும் நாம் தீண்டாதார்கள் அல்ல என்பதை இப்போது நீங்கள் உணருகின்றீர்களா? ஆகவே நம்மில் எவன் ஒருவன் தன்னை 'இந்து' என்று சொல்லிக் கொள்ளுகின்றானோ அவனெல்லாம் தன்னை மற்றொரு



RangaRakes tamilnavarasam.com

இந்து என்பவன் தீண்டாதான், பறையன், பஞ்சமன் என்று சொன்னால் கோபிக்கவோ ஆட்சேபிக்கவோ சிறிதும் இடமில்லை என்று உறுதியாய்ச் சொல்லுவேன். இந்து மதத்தில் தீண்டாமை உண்டு என்பதுடன் வெகு காலமாக நமது முன்னோர்கள் காலம் தொட்டு நாம் 'சண்டாளப் பறைய ராய்' தீண்டாதாராய் நடத்தப் பட்டு வந்திருக்கின்றோம். நம்மை நாம் இந்து என்று சொல்லிக் கொள்வதன் மூலம் நாமே நம்மை தீண்டாதார் என்று ஒப்புக்கொண்டும் வந்திருக்கின்றோம். அப்படி இருக்க இன்று நாம் திடீ ரென்று நமக்குச் சுயமரியாதை வந்து விட்டவர்கள் போல் வேஷம் போட்டுக் கொண்டு "நம்மை யாரும் தீண்டாதார் என்று சொல்லக் கூடாது" என்று சொன்னால் அதற்கு ஏதாவது அர்த்தமுண்டா? இந்தப்படி நாம் சொல்லிக் கொள்வதாலேயே மற்றவர்கள் பயந்து கொள்ளுவார்களா?

ஒரு மனிதன் தன்மேலெல்லாம் மலத்தை எடுத்துப் பூசிக் கொண்டு வந்து எதிரில் நின்று "என்னைப் பார்த்து யாரும் அசங்கயப் படக்கூடாது. என்னை எட்டிப்போ என்று யாரும் சொல்லக் கூடாது" என்று சொன்னால் யாராவது கேட்பார்களா? அல்லது அது நியாயமாக வாவது இருக்குமா? அல்லது "மலம் பூசிக்கொண்டு வருபவர்களைப் பார்த்து யாரும் அசங்கயப் படக்கூடாது எட்டி நில் என்று சொல்லக் கூடாது" என்று இந்தியன் பினல் கோடில் அதாவது கிரிமினல் சட்ட புஸ்தகத்தில் ஒரு செக்ஷன் போட்டு அதற்கு ஒரு வருஷ தண்டனை என்றும் போட்டு விட்டதினாலேயே அந்தப்படி அசங்கயப்பட்டு எட்டி நில் என்று சொன்னவர்களில் இரண் டொருவரை தண்டித்துவிட்ட தினாலேயே அசங்கயப்படும் குணத்தை மக்களிடமிருந்து மாற்றிவிட முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள்.

இதுபோலவேதான், இந்துக்களில் மற்றொரு சாரார் தங்கள் மதத்தைச் சேர்ந்த மற்ற மக்கள் தங்களை சூத்திரர் என்று யாரும் கூப்பிடக் கூடாது என்றும், "சூத்திரனென்றால் ஆத்திரம் கொண்டடி" என்றும் சொல்லு கிறார்கள், எழுதி ஆங்காங்கு தொங்கவிடுகிறார்கள். இதுவும் பேதமைத் தன்மை என்றே சொல்லுவேன். ஏனெனில் தன்னை இந்து என்று சொல்லிக் கொள்ளும் எவனையும் ( அதாவது அவன் பார்ப்பனரல்லாதவனாய் இருந்தால்) அவனை 'சூத்திரன்' என்று கூப்பிட உலகத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் உரிமை உண்டு. அதை மறுப்பவன் மூடனேயாவான். ஏனெனில் இந்து மதத்தில் சூத்திரன் என்கின்ற வகுப்பு உண்டு என்பதும் அது பார்ப்பனரொழிந்த ஏனையோருக்கும் உரித்தானது என்பதும் இந்து வாய் இருக்கும் ஒவ்வொருவனும் ஒப்புக்கொள்ள வேண்டியதே யாகும். இந்துக்களுக்குள் எத்தனை உட் பிரிவு சமயக்காரர்கள் இருந்தாலும் அத்தனை சமயமும் சூத்திரனையும், பிராமணனையும், பஞ்சமனையும் [பறையனையும்] ஒப்புக்கொண்டே இருக்கின்றது.

அன்றியும் இந்த முறையானது இந்துமத உட்பிரிவு சமயங்களாகிய சைவத்தின் சிவபுராணத்திலும், பெரிய புராணத்திலும், 63 நாயன்மார்களிலும், மற்றும் சமயாச்சாரிகளிலும் இருக்கின்றது என்றால் பிறகு இதை ஆக்ஷே பிக்க யாருக்கு, எந்த சைவனுக்கு உரிமை உண்டு? என்று யோசித்துப் பாருங் கள். அதுபோலவே வைணவத்திலும் அவர்களது ஆழ்வாராதிகளிலும், பகவத் பாகவத பக்தர்களிலும், நாலாயிரப் பிரபந்தம், இராமாயண முதலிய இதிகாச புராணங்களிலும் ஆதாரம் இருக்கின்றது என்றால் பிறகு இதை ஆக்ஷேபிக்க யாருக்கு-எந்த வைணவனுக்கு உரிமை உண்டு என்று யோசித்துப் பாருங்கள். மற்றும் இந்து மதத்திற்கு ஆதாரமான வேத சாஸ்திரம், ஸ்மிருதி முதலியவைகளிலும் இருப்பதோடல்லாமல் "பகவான் வாக்கு" களிலும், 'ரிஷிகள்' வாக்குகளிலும் இருக்கின்றது என்றால் பிறகு இதை ஆக்ஷேபிக்கின்ற 'இந்து' என்பவன் யோக்கியனாகவோ, அல்லது அறிவுடையனாகவோ இருக்க முடியுமா? என்று யோசித்துப்பாருங்கள்.

ஆகவே நம்மவர்கள் தங்களுக்கு சூத்திரப்பட்டமும், தீண்டாதார், பஞ்சமர் என்கிற பட்டமும் வேறு யாராலோ கொடுக்கப் பட்டதாய் கருதி மற்றவர் பேரில் கோபப்படுவது வடிகட்டின அறிவீனமே யாகும். ஏனெனில் எவன் ஒருவன் தன்னை இந்து என்று சொல்லிக்கொள்ளு கின்றானோ அவனெல்லாம் சூத்திரப்பட்டமும், பஞ்சமப்பட்டமும் தானே எடுத்து தன் தலையில் சூட்டிக்கொண்டு திரிகின்றவனாவானே தவிர வேறில்லை.

## இந்து மதம் உள்ளவரை

இந்தியாவில் இந்துமதம் உள்ளவரை சூத்திரனும், பஞ்சமனும் ஒரு நாளும் மறைந்து போகமாட்டார்கள். அதுபோலவே இந்துமத வேதமும், சாஸ்திரமும், இராமாயண பாரதமும், பெரியபுராணம் சிவபுராணம் திரு விளையாடல் புராணம் முதலியவைகளும் உள்ள வரையிலும் சூத்திரப் பட்டத்தையும், பஞ்சமப் பட்டத்தையும் ஒழித்துவிடுவது என்பது முடியவே முடியாது.

திரு. காந்தி எவ்வளவுதான் மகாத்மாவானாலும் 'சாமி' வேதாசலமும் எவ்வளவுதான் சுவாமியானாலும், "சுவாமி" சகஜானந்தமும் எவ்வளவுதான் சுவாமியானாலும் எதுவரையிலும் தங்களை இந்துக்களென்றோ, சைவர் களென்றோ சொல்லிக்கொள்ளுகின்றார்களோ அது வரையில் அவர்கள் சூத்திரர்கள் என்பதையும் மூன்றாவதவர், பஞ்சமர் [பறையர்] என்பதையும் பிரிவீ கவுன்சில் வரையில் ருஜூபிக்கமுடியும். அவர்களை அப்படிக் கூப்பிட உலக மக்களுக்கு உரிமையுண்டு. மேல்கண்ட இவர்கள் எதுவரை இந்து மதப்பிரசாரமும், சைவப்பிரசாரமும் செய்கின்றார்களோ அதுவரை இவர்கள் தங்களுள்பட மக்களை சூத்திரர்களாகவும், பஞ்சமர்களாகவும் ஆக்கி நிலைநிறுத்த முயற்சித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்றுதான் சொல்லுவேன்.





RangaRakes tamilnavarasam.com

சம்பந்தனை ஒப்புக்கொண்ட சைவன், சம்மந்தன் பாடிய 'சாமி' களை ஒப்புக்கொண்ட சைவன், சம்மந்தனின் தேவாரங்களையும் சம்மந்தனின் சமயங்களையும் ஒப்புக்கொண்ட சைவன், சம்மந்தனைப் பார்ப்பனன் என்று ஒப்புக்கொண்ட சைவன் ஒருவன் தன்னை சூத்திரன் அல்ல என்று சொல்லிக் கொள்ள யோக்கியதை உண்டா? என்று நன்றாய் யோசித்துப் பாருங்கள்.

அதுபோலவே நந்தனை ஒப்புக்கொண்ட ஒருவன் அதுவும் நந்தன் பறையன். அவன் எங்கள் ஜாதி" என்று ஒப்புக்கொண்ட ஒருவன் தன்னை பறையன் அல்ல என்றும், தான் தீண்டாதவன் அல்ல என்றும் சொல்ல முடியுமா? என்று யோசித்துப்பாருங்கள். உத்தியோகப் பார்ப்பனனுடனும், எலக்ஷன் பார்ப்பனனுடனும் சண்டை போடுவதற்கு வேண்டுமானால் ஏதாவது தந்திரம் பேசலாம், "தமிழ்நாட்டில் ஆதியில் ஜாதியில்லை" என்று சொல்லலாம், சாமர்த்தியமாய் விவகாரம் செய்யலாம். ஆனால் தன்னை இந்து என்றோ, சைவன் என்றோ, வைணவன் என்றோ சொல்லிக்கொண்டு வேறு ஒருவனிடம் விவகாரம் பேசி தன்னை சூத்திர வகுப்பிலிருந்தும், பஞ்சம வகுப்பிலிருந்தும் விலகிக்கொள்ள முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள். [ சற் சூத்திரன் என்று சொல்லிக்கொள்வதால் தப்பித்துக் கொள்ள முடியாது ]

## காந்தி சுயராஜ்யத்தில் நமது நிலைமை

திரு காந்தியால் வரும்படியான சுயராஜியம் அது எப்படிப்பட்ட தானாலும் எவ்வளவு பயனுள்ளதானாலும் பயனற்றதானாலும் இந்துமதத் தைக் காப்பாற்றும் சுயராஜ்யமாக இருக்கும் என்பதில் மாத்திரம் சந்தேகப் பட வேண்டியதில்லை.

அதுவும் எப்படிப்பட்ட இந்துமத மென்றால் வர்ணாச்சிரம தர்மத் தோடு கூடின பரம்பரை ஜாதித்தொழிலையும் வகுப்புப்பழக்க வழக்கங்க ளையும் நடத்திக்கொடுக்க முயற்சிக்கும்படி-கட்டாயப் படுத்தும்படியான இந்து மதத்தைக் காப்பாற்றும் சுயராஜ்யமாய்த்தான் இருக்கும் என்பதில் யாரும் எவ்வித ஆக்ஷேபணையும் கொள்ள வேண்டியதில்லை.

ஆகவே திரு. காந்தியின் சுயராஜ்ய காலத்தில் யார் யார் இந்துவோ அவர்கள் எல்லோருமே இந்த மூன்று ஜாதியின் கீழ் தான் வரவேண்டும். அதாவது பிராமணன், சூத்திரன், பஞ்சமன் ஆகிய விதியில் தான் வர வேண்டும். அந்தக்காலத்தில் இந்துக்கள் என்பவர்கள் இன்றையதினம் சுயராஜியமில்லாத காலத்தில் அனுபவிக்கும் உரிமையும், பேசும் உரிமையும், எழுதும் உரிமையும் , கேட்கும் உரிமையும்கூட ஒருநாளும் அனுபவிக்கமுடியாது என்பதை கெட்டியாய் மனதிலிறுத்துங்கள். ஏனெ னில் காந்தி சுயராஜ்ய காலத்தில் மத சம்பந்தமான விஷயங்களைப்பற்றியும் ஜாதி சம்பந்தமான விஷயங்களைப்பற்றியும் பேசுபவர்கள் எல்லாம் சட்டப்படி 124-A, 153-A என்பது போன்ற துரோக சட்டங்களின் கீழும்



குற்றமாகக்கருதி தண்டிக்கப்பட வேண்டியதாகி விடுவார்கள்.

அன்றியும் ஒரு மனிதன் தான் "இந்து மதத்தை விட்டு வெளியில் போய் விடுகிறேன்" என்பதும் வெளியில் போவதும் குற்றமானதாகவே கருதப்பட்டாலும் கருதப்படலாம். அதற்காக சட்டமுமியற்றப்படலாம். ஏனெனில் இந்துமத கோட்பாட்டின்படி ஒரு மனிதன் பிறவியில் எந்த மதத்தில் எந்த ஜாதியில் பிறந்தானோ அந்த மதத்தில் அந்த ஜாதியில் தான் சாகின்ற வரையில் இருந்தாகவேண்டும். அதனால் தான் திரு. காந்தியும் "நான் கோறும் சுயராஜ்யம் வந்தால் கிறிஸ்து மதத்திற்கு பிரசாரமாகிய ஆஸ்பத்திரி பள்ளிக்கூடம் முதலியனவை வைத்து நடத்தும் பாதிரிமார் களை யெல்லாம் இந்தியாவை விட்டு விறட்டி விடுவேன்" என்று துணிந்து சொன்னார். அந்தப்படி அவர் சொன்ன தானது வேண்டுமென்று சொன்னதாக யாரும் நினைத்துவிடக்கூடாது. மதம் மாறுவது அவ்வளவு இழிவான தென்றும் பாபமானதென்றும் அதற்கு இடம் கொடுப்பது அவ்வளவு தோஷ மானதென்றும் இந்து மத தத்துவத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. திரு.காந்தியவர்கள் கிறிஸ்து வர்களைச் சொன்னது போல் மகமதியர்களைச் சொல்லாததற்குக் காரணம் மகமதியர்களிடத்தில் இருக்கும் "முறட்டுத் தனத்தின்" காரணமான பயமே யொழிய மற்றபடி மகமதியர்களை மத மாற்றம் செய்ய அனுமதிப்பது குற்றமாகாது என்கின்ற எண்ணத்தாலல்ல. ஆகையால் காந்தீய சுயராஜ்யமென்பது இந்துக்களில் சூத்திரர் என்னும் தலைப்பின் கீழ் வரும் மக்களுக்கும் பஞ்சமர் என்னும் தலைப்பின் கீழ் வரும் மக்களுக்கும் மிகவும் ஆபத்தானது என்பதை யாரும் மறந்து விடா தீர்கள்,

திரு. காந்தியவர்கள் பல தடவைகளில் சொல்லியிருக்கும் சமத்துவ தத்துவத்தின் விளக்கத்தையும் நினைப்பூட்டிக்கொள்ளுங்கள். அதாவது,

"சமத்துவமென்பது ஆத்துமாவுக்கே யொழிய சரீரத்திற்கல்ல" என்று சொல்லியிருக்கின்றார்.

மற்றும் அவர் 1919-20ல் "தீண்டாமை யொழியாமல் நான் ஒரு நாளும் சுயராஜ்யம் கேட்கமாட்டேன்" என்றும் சொன்னதோடு, "இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படாததற்கு முன் நான் சுயராஜ்யம் கேட்க மாட்டேன்" என்றும் சொன்னதோடு "இவை இரண்டும் ஒழியாததற்கு முன் கிடைக்கும் சுயராஜ் யம் நிலைக்காது" என்றும், "நிலைத்தாலும் மக்களுக்குள் இரணகளமாகும் படியான கலகம் ஏற்படும்" என்றும் சொல்லியிருக்கின்றார்.

இப்படிப்பட்ட இவர் இப்போது தைரியமாய்,

"தீண்டாமை ஒழியவேண்டியதும் இந்து முஸ்லீம் ஒற்றுமையும் பிறகு பார்த்துக்கொள்ளலாம். முதலில் நாட்டை என் வசம் ஒப்புவித்து விட்டு விலகிக் கொள்ளுங்கள். மற்றவைகளை நான் பார்த்துக்கொள்ளுகின்றேன்" என்று பிரிட்டிஷாரை கேட்கின்றார்.



RangaRakes tamilnavarasam.com

இதன் அருத்தமென்ன? என்று யோசித்துப்பாருங்கள். ஆட்சி தனது கைக்கு வந்து விட்டால் பட்டாளம் தனது கையில் ஒப்படைத்து விட்டால் பார்ப்பனர்களையும் பனியாக்களையும் (முதலாளிகளையும்) பட்டாளத்தில் சேர்த்து இராணுவச்சட்டத்தினால் முஸ்லீம்களையும் தீண்டாதார்களையும் அடக்கி ஒடுக்கிவிடலாம் என்கின்ற எண்ண மில்லாமல் வேறு என்ன எண்ணம் இருக்கக்கூடும்? என்று யோசித்துப் பாருங்கள்.

ஆகவே எனதருமைச் சகோதரர்களே! தீண்டப்படாத சகோதரர் களே!! தெருவில் நடக்க-குளத்தில் தண்ணீர் மொண்டு குடிக்க-கண்ணில் தென்பட உரிமை இல்லாத சகோதரர்களே!!! நீங்கள் மனிதர்களாக மதிக்கப்பட வேண்டுமானால் ஒன்று:- இந்துமதத்தை விட்டு வெளியேறுங் கள். இரண்டு:- முகமதியர்களைச் சாருங்கள். இந்த இரண்டு காரியத்தாலும் நாம் உலக மக்களுக்கே சுயமரியாதை கொடுக்கலாம். மற்றபடி நமக்கு வேறு விமோசனமே இல்லை! இல்லை!! இல்லை!!!

**குடி அரசு - கட்டுரை - 25.10.1931**



# இரண்டிலொன்று வேண்டும்

**- சித்திரபுத்திரன்**

ஏதாவது ஒரு காரிய சித்திக்கு இரண்டிலொரு சக்தி வேண்டும். அவையாவன.

1. "கை" பலம் (பலாத்காரம்)

2. "புத்தி" பலம் (சூக்ஷி அல்லது தந்திரம்)

மொகலாயர் கை பலத்தில் ஆண்டார்கள். வெள்ளையர் புத்தி பலத்தில் ஆண்டார்கள்.

இந்திய பொது மக்களுக்கு இரண்டும் இல்லை, எப்போதும் இருந்த தில்லை. ஆதியில் ஆங்காங்குள்ள கொள்ளைக் கூட்டத்தலைவர்கள் அவ்வப்போது சில்லரை சில்லரையாய் ஆண்டிருப்பார்கள்.

ஆனால், ஆரியர்களுடைய சூக்ஷியானது மக்களைப் பிரித்து வைத்து புத்தியும், பலமும் இல்லாமல் செய்து தாங்கள் மாத்திரம் எந்தக் காலத்திலும், எப்போதும் ஆதிக்கம் செலுத்தி தாங்கள் மாத்திரம் மேன்மை யாய் வாழும்படி செய்து கொண்டார்களே ஒழிய இந்தியாவுக்கோ, அல்லது இந்தியப் பொதுமக்களுக்கோ எவ்வித பயனும் ஏற்படவில்லை.

திரு.காந்திக்கு பலமும் இல்லை, புத்தியும் இல்லை. ஆனால் ஆரி யரின் கையாளாய் இருப்பதால், ஆரியர்கள் தங்களது சூக்ஷியை திரு.காந்தி மூலமாய் வெளியாக்குவதன் மூலமும், அவற்றிற்கு விளம்பரம் கொடுப்பதன் மூலமும் ஏதாவது வெற்றி கிடைத்தால் அது ஆரியருக்கு மாத்திரம் பயனளிக்கக் கூடியதாகும். மற்றும் ஆரியருக்கு சிறிது செல்வ வான் உதவி வேண்டியிருப்பதற்காக செல்வவான்களையும் தங்களுடன் சேர்த்துக் கொள்ளுவார்கள்.

ஆகவே, இந்தியப் பொது மக்களுக்கு வெற்றி அதாவது விடுதலை வேண்டுமானால் பலம் வேண்டும். பலம் வேண்டுமானால் ஒற்றுமை வேண்டும். ஒற்றுமை வேண்டுமானால் ஜாதி வகுப்புப்பிரிவு ஒழிய



RangaRakes tamilnavarasam.com

வேண்டும். ஜாதி வகுப்புபிரிவு ஒழிய வேண்டுமானால் மதம் ஒழிய வேண்டும். மதம் ஒழிய வேண்டுமானால் பகுத்தறிவு வேண்டும்.

பலம் இல்லாமல் சூக்ஷியாவது வேண்டுமானால் கல்வி அறிவு வேண்டும். கல்வி அறிவு வேண்டுமானால் அதற்கு தடையான காந்தீயம் என்னும் பார்ப்பன ஆதிக்கம் ஒழிய வேண்டும்.

இரண்டும் இல்லாமல் காரிய சித்தி வேண்டுமானால் ஒற்றுமையும், பலமும் உள்ள சமூகத்தோடு சேர்ந்து கொள்ள வேண்டும்.

**குடி அரசு - கட்டுரை - 25.10.1931**



# புரட்டு! சுத்தப் புரட்டு!

நமது செல்வத்தை அன்னிய நாட்டார் கொள்ளையடிப்பதாகச் சொல்லுவது சுத்தப் புரட்டு.

நமது செல்வத்தை கொள்ளையடித்து நம்மைப் பட்டினிப்போட்டு வதைப்பவர்கள் நமது கடவுள்களும், நமது பார்ப்பனர்களும், நமது முதலாளி, ஜமீன்தாரர், மிராசுதாரர், வட்டிக் கடைக்காரர் ஆகியவர்களுமே யாவார்கள்.

அந்நிய நாட்டார் கொள்ளையடிக்கும் செல்வமெல்லாம் நம் முடையதல்ல.

நம்மை கொள்ளை அடித்து பட்டினிபோடும் பாதகர்களாகிய மேற்கண்ட முதலாளி, ஜமீன்தாரன், மிராசுதாரன், வட்டிக் கடைக்காரன் முதலியவர்கள் செல்வமேயாகும்.

ஆகையால் அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

மேலே சொல்லப்பட்ட இந்தக் கூட்டங்களை ஒழித்தால்தான் நமது செல்வம் நமக்குக் கிடைக்கும்.

அப்போது நாம் வயிறார உண்ணலாம். கஷ்டப்படும் நாடுகளுக்குத் தருமமும் செய்யலாம்.

**இப்படிக்கு**

**100 க்கு 90 மக்களாகிய**
**தொழிலாளிகள்,**
**வேலையாளர்கள்,**
**கூலியாட்கள்,**
**பண்ணையாள்கள்.**

**குடி அரசு - பெட்டிச்செய்தி - 25.10.0931**



RangaRakes tamilnavarasam.com

# தீபாவளியும் காங்கிரசும்

தீபாவளிப் பண்டிகைக்கு இன்னும் சில தினங்களே இருக்கின்றன. நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பணநெருக்கடியின் மூலம் மிகச் செல்வந்தர் என்று கருதப்படுகிறவர்களில் பலர் அன்றாடம் செலவிற்கு வகையின்றி திண்டாடுகிறார்கள். ஏழைக்குடியானவர்களும், தொழிலாளிகளும் தானிய விலை குறைந்ததின் காரணத்தாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணத்தாலும் ஏக்கமுற்றிருக்கின்றனர். இந்த நிலையில் மதத்தின் பெயரால் அனுஷ்டிக்கப்படும் பழைய பழக்கவழக்கங்களில் நமது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் குருட்டுப் பற்றுதலால் தீபாவளியின் போது ஏராளமான பொருள் நமது நாட்டில் வீண் விரையமாக்கப்படுகிறது.

அப்படிப்பட்ட வீண் செலவுகளில் பட்டாசு முதலிய வெடிகள் சுடுதல், பலகார தின்பண்டங்களை அளவுக்கு மிஞ்சி சாப்பிடுதல், புது வஸ்திரங்கள் வாங்குவதில் தன் நிலைமைக்கு அதிகமாகச் செலவு செய்தல் முதலியன முக்கியமாகும். இவற்றில் வெடிகள் சுடுவதின் மூலம் நமது நாட்டுப் பொருள் சீனா முதலிய அந்நிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அவ்வந்நிய நாடுகளில் நமது நாட்டிலுள்ள மூட ஜனங்கள் தேவைக்கு வெடி கள் செய்வதென்று மனித நன்மைக்கு உபயோகமில்லாத ஒரு தொழில் வளர்க்கப்பட்டு வருகிறது. தீபாவளியில் தின்பண்டங்கள் தின்ன வேண்டு மென்று இருக்கும் வழக்கத்தால் மக்களிடையே நோய் விருத்தியாகிறது. தின்பண்டங்களை ஒவ்வொருவரும் தனது தேக நிலைக்குத் தகுந்த அளவு நிரந்தரமாக புசித்து வர வேண்டுமேயொழிய வருஷத்தில் சில தினங்களை மாத்திரம் பண்டிகைகள் கொண்டாடும் விசேஷ தினங்களென ஏற்படுத்திக் கொண்டு அந்த நாட்களில் மாத்திரம் அதிகமாகப் புசித்தால் நோயடைவது நிச்சயம். தமிழ்நாட்டில் அஜீரணத்தால் ஏற்படும் காலரா வென்னும் தொத்து நோய் ஒவ்வொரு வருஷமும் ஆரம்பமாவது தீபாவளி காலத்தில் தான் என்பதை சகலரும் அறிவர்.

தீபாவளியில் புது வஸ்திரம் கட்டியாக வேண்டுமென்றிருக்கும் வழக் கம் மேற்கண்ட மற்ற இரண்டு தீங்குகளையும் விட மிகவும் பாதகமானது. மக்களுக்கு வஸ்திரம் அவசியமெனக் கொண்டாலும் ஒவ்வொருவரும் தனக்கு வேண்டிய வஸ்திரங்களை நாளடைவில் அந்தந்த சமயத்திலுள்ள தேவைக்குத் தக்கவாறும், தனது பொருள் நிலைமைக்குத் தக்கவாறும் வாங்கிக் கொள்ளவேண்டும். பழைய வஸ்திரங்கள் கிழியாமல் வேண்டிய அளவு இருக்கும்போது புதிதாய் வாங்கவேண்டியதில்லை. பொருள் கஷ்டம் ஏற்படுங்காலத்தில் கிழிந்த வஸ்திரங்களைக் கூடிய வரையில் மறுபடியும் செப்பனிட்டுத் தைத்து உபயோகப்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டுமே யொழிய புதிய வஸ்திரம் வாங்கித்தான் ஆக வேண்டுமென்ற நியதியை கைக்கொள்ளக் கூடாது. ஆனால் தீபாவளிக் கொண்டாட்டம் என்னும் மூட சம்பிரதாயத்தின் காரணமாய் ஒருவன் தன் வசத்தில் ஏராள மான வஸ்திரங்கள் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த போதிலும், தற்சமயம் அவசிய செலவுக்கே பணமில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்த போதிலும் பண்டிகைக் காலத்தில் புது வஸ்திரம் வாங்கி உடுத்தவேண்டுமென்று கட்டாயப் படுத்தப்படுகிறான். இதன் பயனாய் ஏழை மக்கள் தங்களுக்கு வேண்டிய துணிகளை தீபாவளி சமயத்தில் தவிர வேறு சமயங்களில் வாங்காமல் இருக்கிறார்கள். துணி வியாபாரத்தில் ஒரு வருஷத்திய வியாபாரம் முழுவதும் ஒரு தினத்தில் நடத்தவேண்டி இருப்பதால் ஒரு நெருக்கடி ஏற்பட்டுத் துணி விலை அதிகப் பட்டு ஏழைகளுக்கு நஷ்ட முண்டாகிறது. ஆகையால் நமது நாட்டு மக்கள் இவ்வித நெருக்கடியிலும், கஷ்டத்திலும் பட்டுழலாமலிருக்கவேண்டுமானால் தீபாவளிப் பண்டிகை யைக் கைவிட வேண்டியதவசியம். தேச நலத்தை விரும்புகின்றவர்களும், ஏழைமக்களின் அறியாமையை அகற்றப் பாடுபடுகிறவர்களும் தாங்கள் செய்கையில் தீபாவளியைக் கொண்டாடாமல் மற்றவர்களுக்கு வழிகாட்டு வதும் தவிர தீபாவளியைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனப் பொதுமக்களிடை தீவிரப் பிரசாரஞ் செய்ய வேண்டியதும் அவசியமாகும்.

பொது நன்மையைக் கோரும் அறிவாளிகளிடையில் இவ் விஷயத் தைப் பற்றி அபிப்பிராய பேதமிருக்க இடமில்லை. ஆனால் நமது நாட்டின் தற்காலத்திய பொது வாழ்க்கையில் இவ்விஷயத்தில் மாறுப்பட்டஅபிப்ராய மேற்பட்டிருப்பதிலிருந்து எந்த அளவுக்கு நமது பொது வாழ்க்கை பகுத்தறிவுக்கு முரண்பட்டிருக்கிறதென்று வெளியாகிறது. இவ்விஷயத்தில் காங்கிரஸ் கக்ஷிக்காரருடைய நிலை மேற்கண்ட நமது அபிப்பிராயத்திற்கு நேர் விரோதமாயிருக்கிறதென்பது வெட்ட வெளிச்சமாயிருக்கிறது. தாங் களே மற்றெல்லோரையும் விட தேசமக்களிடை செல்வாக்குப் பெற்றவர் களென்று காங்கிரஸ்காரர் வீறாப்புப் பேசிக்கொள்ளுகிறார்கள். காங்கிரசின் சார்பாய் இங்கிலாந்து சென்றிருக்கும் காந்தியார், தானே இந்திய தேசத்திற்கு ஏகப்பிரதிநிதி யென்றும் இந்தியாவிலுள்ள எந்த சமூகத்தைப்பற்றியும் பேச மற்றெவருக்கும் உரிமையில்லை யென்றும் வட்டமேஜை மகாநாட்டில் மார் தட்டுகிறார். இவ்வளவு செல்வாக்கும், பிரதிநிதித்துவமும் பெற்ற கூட்டத்தார் தற்சமயம் பாமர மக்களிடையே எவ்வித பிரசாரஞ் செய்கிறார்களென்று உற்று நோக்க வேண்டியதவசியம்.



RangaRakes tamilnavarasam.com

காங்கிரஸ் திட்டத்தில் தற்காலம் அமுலிலிருப்பது இரண்டே அம்சங்களாகும். ஒன்று குடியை ஒழித்தல், மற்றொன்று அன்னிய ஆடையை ஒழித்தல். இவ்விரண்டுக்குமாக கடைகளின் முன் மறியல் செய்ய கொஞ்சகாலம் முயற்சி செய்யப்பட்டது. ஆனால் இப்பொழுது மதுபான மறியலும், அன்னிய ஆடை மறியலும் பிரயோசனமற்றனவென்று புலப்பட்டுவிட்டது. ஆகை யால், தங்கள் திட்டத்தை அமுலுக்குக்கொண்டுவர காங்கிரஸ்காரர் புதிய இரண்டு வழிகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர். ஒன்று ஜாதிக்கட்டுப் பாடு, மற்றொன்று பண்டிகை. ஜாதிக்கட்டுப்பாட்டின் மூலம் குடியை நிறுத்துவதென்றும், பண்டிகைகள் கொண்டாடுவதின் மூலம் கதர் வியாபாரத்தைப் பெருக்கி அன்னிய ஆடையை பகிஷ்கரிப்பதென்றும் தீர்மானித்திருக்கின்றனர். நமது தேசமக்களிடையில் ஒற்றுமை யேற்படாமல் பிரித்து வைத்திருக்கும் நூற்றுக்கணக்கான ஜாதிகள், ஜாதிக்கட்டுப்பாடு என்னும் ஒரே ஆயுதத்தின் பலத்தால் தான் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஆயினும் நாளாவட்டத்தில் ஏற்பட்டுவரும் முன்னேற்ற உணர்ச்சியும், அறிவும் பொது மக்களிடம் பரவுவதால் ஜாதிக் கட்டுப்பாடுகள் தளர்ந்து ஜாதிகள் மறைந்து போவதற்கு வசதிகள் ஏற்பட்டுவருகின்றன. ஒவ்வொரு ஜாதியிலும் கல்வி கற்று முற்போக்கடைந்த மக்கள் ஜாதிக்கட்டுப்பாட்டை எதிர்த்துப் போராடி வருகின்றனர். ஆனால் காந்தீயமென்னப்படும் வர்ணாச்சிரம தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட காங்கிரஸ் கக்ஷியோவெனில் முன்னேற்ற உணர்ச் சியை எதிர்த்து, மக்களின் அறிவுவளர்ச்சியைத் தடுத்து ஜாதிக்கட்டுப் பாடு என்னும் நாகரீகமற்ற மூட ஜனங்களின் பலவந்தச் செயல்களுக்கு ஆக்கந் தேடுகிறது. மதுவிலக்கின் பெயரால் வருணாச்சிரமத்தை நிலை நாட்டும் காங்கிரஸ் முயற்சியை எதிர்க்கவேண்டியது அறிவாளிகளின் கடமையாகும்.

காங்கிரஸ் திட்டத்தின் இரண்டாவது பகுதி பண்டிகைகள் கொண்டாடுவதின் மூலம் கதர்விற்பனையைப் பெருக்கி அன்னிய ஆடையைப் பகிஷ்கரித்தல். தற்சமயம் மூலை முடுக்குகளிலெல்லாம் "தீபாவளிக்குக் கதர் வாங்குங்கள்" என்று துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் திரு.ராஜகோபாலாச்சாரியார் தனது அறிக்கையில் "தீபாவளி நமது தேச மக்கள் அனைவருக்கும் பொதுவான பண்டிகை, ஏழை, பணக்காரர், ஆண், பெண் முதலியவர்கள், குழந்தைகள் எல்லோரும் அன்றைய தினத்தைச் சந்தோஷமாகக் கொண்டாடுகிறார்கள். முக்கியமாக தீபாவளி விடுதலைக் கொண்டாட்டமாகும். அன்று நரகாசுர னிடமிருந்து உலகம் விமோசனம் பெற்ற நாள். ஆகையால் தீபாவளி என்பது விடுதலைக்கு அறிகுறி. தென்னாட்டில் நாம் அநாதி காலமாக புது ஆடைகள் வாங்கியணிந்து தீபாவளி கொண்டாடி வருகிறோம். ஆயிரக் கணக்கான வருஷங்களாக இவ்வாறு நடத்திவந்தோம். இவ்வருஷ தீபாவளி தமிழ்நாட்டில் கதர் அபிவிர்த்தியைச் சந்தோஷமாய்க் கொண்டாடும் பண்டிகையாயிருக்கவேண்டும்" என்று எழுதியிருக்கிறார். இதிலிருந்து நமது மக்கள் தீபாவளிப் பண்டிகை கொண்டாடித்தான் ஆக வேண்டுமென்று காங்கிரஸ்காரர் எவ்வளவு அக்கரையாக வேலைசெய்கிறார்களென்பது வெளிப்படுகிறது. அப்படிக் கொண்டாடுவதிலும், புராணத்தில் இப்பண்டிகையைப் பற்றி கட்டிவிடப்பட்டிருக்கும் பொய்க்கதையில் நம்பிக்கை வைத்தே கொண்டாட வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. தீபாவளி விடுதலை தினமென்றும், நரகாசுரன் கதையைப் பாமர மக்கள் நம்ப வேண்டுமென்றும் திரு.இராஜகோபாலாச்சாரியார் பிரசாரஞ் செய்ய முற்படுவது வெட்கக் கேடான விஷயமாகும்.

நரகாசுரன் கதையை திரு.இராஜகோபாலாச்சாரியார் நம்புவதில்லை. ஆனால் பாமர மக்கள் அந்தப்புரட்டில் நம்பிக்கை வைக்கவேண்டு மென்றும், இப்படி குருட்டு நம்பிக்கையை வளர்ப்பதன் மூலம் இந்து மதத்திலுள்ள மற்ற புரட்டுகளையும் ஜனங்கள் நம்ப இடமேற்படுமென்றும் இப்படி மத ஆதிக்கம் வலுத்து, வருணாச்சிரமம் தழைத்தால் பிராமண செல்வாக்கு நிலை நிற்கு மென்றும் திரு.இராஜகோபாலாச்சாரியார் முதலிய காங்கிரஸ் கக்ஷிக்காரர் கருதியே இம்மாதிரி பிரசாரம் செய்கின்றார்கள். தனது தீபாவளி அறிக்கையில் மற்றோரிடத்தில் திரு.இராஜகோபாலாச்சாரியார் குறிப்பிடுவதாவது.

"ஆலைத் துணிகளை அணிந்து தீபாவளி கொண்டாடுவது சிரார்த்த பிண்டத்திற்கு சீமை பிஸ்கோத்து வைப்பது போலவேயாகும். ஹோமத்தீயில் நெய்க்கு பதிலாக கோக்கோஜத்தை விடுவது போலாகும்" என்கிறார்.

இப்படிப் பிரசாரஞ் செய்வதின் மூலம் மக்கள் சிரார்த்தஞ்செய்யவும், ஹோமம் வளர்க்கவும் முற்படுவார்களென்றும் அதன்மூலம் தனது ஜாதியார் என்றென்றைக்கும் சோம்பேரிகளாய் வயிறு வளர்க்க இடமேற்படுமென்றும் திரு.இராஜகோபாலாச்சாரியார் கனவு காண்கிறார். உலக மக்களிடையே பகுத்தறிவு தோன்றிவிட்டதென்பதையும், தமிழ்மக்களிடையே சுயமரியாதை இயக்கம் பரவி வருகிறதென்பதையும், திரு.இராஜகோபாலாச் சாரியாருக்கு நினைவூட்ட விரும்புகிறோம். நரகாசுரன் கதையில் நம்பிக்கை வைக்கும் காலம் மலையேறி விட்டது. திரு.ராஜகோபாலாச்சாரியார் தனது சுய ஜாதி மக்களின் நன்மையைக்கோருபவரானால் காலத்திற்கேற்றவாறு அவர்களது தொழிலை மாற்றிக் கொண்டு மதத்தின் பெயராலும், வருணாச்சிரமத்தின் பெயராலும் பிறரை ஏமாற்றி, பண்டிகைகளென்றும், சிரார்த்தமென்றும், ஹோமமென்றும் ஏய்த்துப் பிழைக்காமல், அவரவர் சக்திகேற்ற நாணயமும், கண்ணியமும் வாய்ந்த தொழில்களில் ஈடுபடவேண்டுமென்று பிரசாரஞ் செய்வாராக.

தீபாவளியில் கதர் வாங்க வேண்டுமெனச் செய்யப்படும் பிரசாரத்தைப்பற்றி ஒரு வார்த்தை மட்டும் சொல்ல விரும்புகிறோம். கிராமத்தில் உண்ண உணவின்றிப் பட்டினி கிடக்கும் ஏழைகள் நூற்று, நெய்து பிழைப்



RangaRakes tamilnavarasam.com

பதற்காகவே கதர்ப்பிரசாரம் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. தற் சமயத்தில் கதர் வேஷ்டி வாங்குவதென்றால் சுமார் கெஜம் ஒன்றுக்கு அணா ஒன்பது கொடுக்கவேண்டியதிருக்கிறது. ஆனால் இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்கும் ஆலைத்துணியில் இந்த கதரைவிட உயர்ந்த காடாத்துணி வாங்குவதென்றால் கெஜம் நான்கு அணாவுக்கு கிடைக்கிறது. கதருக்கு பதிலாக இந்த ஆலைத்துணியை வாங்குவதால் நமது நாட்டுப்பணம் வெளி நாட்டுக்குப் போவதில்லை யென்பதோடு கெஜம் ஒன்றுக்கு ஐந்தனா மிச்சமும் ஏற்படுகிறது. கெஜம் ஒன்றுக்கு ஒன்பதணா கொடுத்து கதர் வாங்கு வதில் ஏழைகளுக்கு நூற்பதில் இரண்டணாவும் நெய்வதில் இரண்டணாவும் கிடைக்கலாம். ஆலைத்துணி வாங்குவதால் ஏற்படும் ஐந்தணா மிச்சத்திலிருந்து இந்த நான்கணாவையும் நேரே நூற்கிறவர்களுக்கும், நெய்கிறவர்களுக்கும் மணியார்டர் மூலம் அனுப்பிவிட்டால் பாக்கி இன்னும் ஒரு அணா வேறு தர்மச்செலவுக்கு மிச்சப்படுகிறது. மேலும் ஆலைத்துணிக்குக் கொடுத்த நான்கணா மூலம் ஆலையில் வேலை செய்யும் எவ்வளவோ ஏழைத்தொழிலாளிகள் பிழைப்பார்கள். இப்படி ஒரு தர்ம பண்டு ஏற்படுத்தி கவர்ன்மெண்டார் மூலமோ அல்லது பொது ஜன நம்பிக்கை பெற்ற ஒரு ஸ்தாபனத்தின் மூலமோ ஏழைகளுக்கு உதவுவதே நாகரீக முறையாகும். அதை விட்டு விட்டு ஆயிரக்கணக்கான வருஷங் களுக்கு முன் மனித சமூகம் நாகரீகமடையாமல் காட்டு மிராண்டிகளா யிருந்த காலத்தில் துணி உற்பத்தி செய்த முறையை இன்றைய தினம் பின்பற்ற வேண்டுமென்றும், அதற்காக, கதர் என்ற ஒரு தொழிலை சிருஷ்டி செய்து அதன் மூலம் ஏழைகளுக்கு உதவுவதாகச் சொல்லப்படும் பொருளில் ஒட்டிக்கிரட்டி பொது ஜனங்களை நஷ்டப்படச் செய்வது ஒழுங்கு முறை யாகாது. உணவின்றி வருந்தும் ஏழைகள் நமது நாட்டில் மட்டுமல்லாமல் மற்ற நாகரீகமடைந்த தேசங்களிலுமிருக்கிறார்கள். தற்சமயம் ஏற்பட்டிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் உலகத் திலுள்ள எல்லாத் தேசங்களிலும் ஏழைகளின் தொகை பெருகி வருகின்றது. மற்ற நாகரீகமடைந்த தேசத்தார் ஏழைகளைப் பாதுகாக்க வேண்டி பல நவீன தொழில்களை நாகரீக முறைகளில் சிருஷ்டிக்கிறார்கள். அப்படியும் தொழில் கிட்டாத ஏழைகளுக்கு உதவ ஒரு பண்டு ஏற்படுத்தி அதிலிருந்து மாதா மாதம் உதவியளிக்கின்றார்கள். நமது தேசத்தாரும் இவ்வித நாகரீக முறையையே கைக்கொள்ள வேண்டும். கதர் என்பது தற்சமயம் நமது நாட்டாரை தேசீயத்தின் பெயரால் அடக்கியாள முற்பட்டிருக்கும் ஒரு சிறு பான்மைக் கூட்டத்தாரின் சூழ்ச்சி யென்று எச்சரிக்கை செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம்.

**( S.R. )**

**குடி அரசு - தலையங்கம் - 01.11.1931.**



# திரிகூட சுந்தரனார் திருமணம்

நண்பர் உயர்திரு. திரிகூட சுந்திரர் அவர்களுக்கு திருநெல்வேலி யில் சுயமரியாதை முறைப்படி திருமணம் நடந்த சங்கதி மற்றொறு பக்கம் பிரசுரித்திருக்கிறோம்.

அவர் ஒருநாளும் சுயமரியாதைக் கொள்கைகளுக்கு எதிராக இருந்த தில்லை. நமது இயக்கத்தை பாராட்டி எழுதி இருக்கும் வியாசங்கள் அநேகம் 'குடி அரசி'லும், "ரிவோல்டி" லும் காணலாம்.

உடல் நலிவால் அவரது திருமண அழைப்பிற்குச் செல்ல நமக்கு வசதி ஏற்படவில்லையானாலும் அத்திருமணம் நடந்த முறையை அறிந்து நாம் மிகுதியும் மகிழ்ச்சி அடைவதுடன் திரிகூட சுந்திரரை நாம் மிகுதியும் பாராட்டுகிறோம்.

மணமக்கள் சீர்திருத்தத் துறையில் தொண்டாற்றி மனித சமூகத்திற்கு விடுதலையையும், சுயமரியாதையையும் உண்டாக்க ஆசைப்படுகின்றோம்.

**குடி அரசு - வாழ்த்துச் செய்தி - 01.11.1931**



RangaRakes tamilnavarasam.com

# தமிழன்

ஈப்போவில் பிரசுரிக்கப்படும் "தமிழன்" என்னும் தமிழ் தினசரி பத்திரிகையின் வெளியீடுகள் வரப்பெற்றோம். இப்பத்திரிகையானது தேசத்திற்கும், மக்கள் சுயமரியாதைக்கும் வெகு காலமாக உழைத்து வரும் பெரியார் உயர்திரு.சுவாமி அற்புதானந்தா அவர்களை ஆசிரியராகக் கொண்டுள்ளது.

சமூக ஊழியமும், சமூக சீர்திருத்தமும் புரிவதே இப்பத்திரிக்கையின் பொது நோக்கமாயிருந்த போதிலும், தீண்டாதார், ஏழை, எளியவர்களின் குறைகளை முக்கியமாக தீர்ப்பதற்காக வெளிவந்துலாவும் ஓர் சிறந்த தமிழ் தினசரி இதுவேயாகும். தமிழ் மக்களுக்குள் புகுத்தப்பட்டிருக்கும் ஜாதி மத வித்தியாசங்களையும், பிறவியினால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளையும் கண்டித்து, தீண்டாமை, நெருங்காமை, பாராமை முதலிய அட்டூழியங்களை அறவேயழித்து, கலப்பு மணம், விதவை மணம், புரோகிதமற்ற மணம், புரோகிதமற்ற ஈமக்கடன் முதலியவைகளை ஆதரித்து, மக்களின் பகுத் தறிவை வளர்த்து, அவர்கள் முன்னேற்றமடையும்படியான துறைகளில் ஈடுபட்டுழைத்தலுமாகிய அரிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, பாடுபட முன்வந்ததற்காக நாம் அதை முழுமனதுடன் வரவேற்ப துடன், நமது வாசகர்களையும், இப்பத்திரிகைக்கு உடனே சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரிக்க வேணுமாய் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

நாடெங்கும் பண நெருக்கடியால் அல்லலுற்று, பரிதவித்துக் கொண்டிருக்குமிக்காலத்தில், இத்தருணத்தில் நாடெங்கும் சமதர்ம கொள்கைகளைப் பரப்பி, பாமர மக்களைத் தட்டி எழுப்பி, உற்சாகப்படுத்து வதற்காக முன் வந்த "தமிழனின்" நிர்வாகஸ்தர்களுக்கு நமது வந்தனத்தை அளித்துக் கொள்ளுகின்றோம்.

சுயமரியாதை இயக்கத்தை ஆதரித்து, மலாய் தேசத்தில் முதன் முதலாக வெளிவந்த தமிழ் தினசரி இதுவொன்றேயாகும்.

**குடி அரசு - மதிப்புரை - 01.11.1931**



# ஈரோடு முனிசிபாலிட்டி

ஈரோடு முனிசிபாலிட்டிக்கு புதிய சட்டப்படி நடக்க வேண்டிய தேர்தலுக்கு இம்மாதம் 4 ந் தேதி ஸ்லிப்பு வாங்க தேதி போட்டிருந்தபடி 4ந் தேதி 24 ஸ்தானங்களுக்கு சுமார் 50 அங்கத்தினர்கள் வரை போட்டி போட ஸ்லிப்பு கொடுத்திருந்தார்கள்.

இவற்றுள் திருவாளர்கள் ஆர்.கண்ணம்மாள் (ஈ.வெ.ராமசாமி சகோதரி) கே.எ.ஷேக்தாவுத் சாயபு இப்போதைய சேர்மென், எம்.கே.மகமது சுல்தான் சாயபு நெல்மிஷன், பி.சின்னுசாமி கவுண்டர் நெல்மிஷன், மாரிமுத்து பண்டாரம் தாழ்த்தப்பட்ட வகுப்பு ஆகிய ஐவர்களுக்கு போட்டி ஸ்லிப்பே இல்லாமல் வெற்றி பெற்றார்கள். மற்றும் ஈ.வெ.கிருஷ்ணசாமி நாயக்கர் இப்போதைய கவுன்சிலர், எம். சிக்கய்ய நாயக்கர் இப்போதைய கவுன்சிலர், ஈ.வி. நஞ்சப்ப செட்டியார் இப்போதைய வைஸ்சேர்மன், ஈ.ஓ.சி. முத்துசாமி கவுண்டர் இப்போதைய கவுன்சிலர், கே.கே.குதரத்துல்லா சாயபு, இப்போதைய கவுன்சிலர், கே.எம்.சீனிவாசபிள்ளை இப்போதைய கவுன்சிலர், ஐ.ப. மகமட் சுல்தான் சாயபு சராப்புக்கடை, கே.அப்துல் ராஸக் சாயபு உப்பு மண்டி, காதர்சா குமாரர் சி.ரெங்கராஜ் செட்டியார் இப்போதைய கவுன்சிலர், எஸ்.வெங்கடாஜல முதலியார் ஜவுளி வியாபாரம், கேசவலால் சேட் மண்டி வியாபாரம் ஆகியவர்கள் தங்களுக்கு போட்டியாக ஸ்லிப் போட்டிருந்த கனவான்கள் அவர்கள் ஸ்லிப்பை (போட்டியை) வித்திட்றா செய்து கொண்டதால் இவர்களும் போட்டியில்லாமல் வெற்றி பெற்றவர் களாவார்கள்.

மற்றும் எட்டு ஸ்தானங்களுக்கு போட்டி பலமாக இருப்பதாக தெரிகின்றது. கருங்கல் பாளையத்தில் இரண்டு வார்டுகளுக்கு 5பேர்கள் போட்டி போடுகிறார்கள். அதாவது ஒரு வார்டுக்கு திருவாளர்கள் கே.பி. ஷண்முகபிள்ளையும், (மாஜி கௌன்சிலர்) டி.சீனிவாச முதலியாரும் (மாஜி சேர்மன்) ஒரு வார்டுக்கு மாரிமுத்து பிள்ளையும் (இப்போதைய கவுன்சிலர்) குழந்தை பிள்ளையும், மிராசுதார் ராஜுப்பிள்ளையும் (மாஜி முனிசிபல் உத்தியோகஸ்தர் & மிராசுதார்) ஒக்கிலியத்தெரு வார்டில் அப்பையாக் கவுண்டரும் (பேங்கர்) பாண்டிக் கவுண்டர் என்னும் சௌடப்பக் கவுண்டரும் (பேங்கர்) பார்ப்பனத் தெரு வார்டுக்கு வக்கீல் யூ.எஸ்.



RangaRakes
tamilnavarasam.com

சுப்பிரமணிய அய்யரும், வக்கீல் சி.பி.ராகவேந்திரராவும், வளையக்காரத் தெரு வார்டுக்கு இ.எஸ்.கோவிந்தசாமி நாயுடுவும் (கண்றாக்டர்) கருங்கல் பாளையம் மிராசுதார் தேவநாயகமும், ஒப்பணக்காரத் தெரு வார்டுக்கு இப்போதைய கவுன்சிலர் எம்.எஸ்.முத்துகருப்பஞ் செட்டியாரும், மாஜி கவுன்சிலர் வி.ஐ.டேவிட்டும், ஸ்டேஷன் பாக வார்டுக்கு இப்போதைய கவுன்சிலர் பட்டக்காரர் எம்.எல்.சி அவர்களும் , மாஜி கவுன்சிலர் ஆர்.எஸ். விசுவாசமும், ரெவரெண்ட் ஞானமுத்து, ஈ.ஒய்.சுல்தான் சாயபு (கண்றாக்டர்) ஆகியவர்களும் போட்டி போடுகிறார்கள் என்றாலும் இரண்டொரு வார்டுகள் தவிர மற்றவைகளின் போட்டி அவ்வளவு மும்முரமாக இருக்காதென்றே கருதுகின்றோம்.

தேர்தல் தேதி குறிப்பிட்ட உடன் ஈரோட்டில் ஏற்பட்ட தடபுடல்களும் கட்சிகளும் நெருக்கடிகளும் வெகு பலமாக இருந்து வந்தது. இதற்குக் காரணம் இப்போது இருக்கும் சேர்மென் ஜனாப் ஷேக்தாவுத் அவர்கள் மறுபடியும் தான் சேர்மெனாய் வருவதில்லை என்று சொல்லிவிட்டதால் பல கவுன்சிலர்கள் தான் தான் சேர்மெனாக வரவேண்டுமென்று கட்சி சேர்க்க ஆரம்பித்து விட்டார்கள். இதில் பார்ப்பன பிரமுகர்களும் இரண்டொருவர் கலந்து தங்களுக்குப் பிடித்த கனவான்களை சேர்மனாக்க தந்திரம் செய்து கக்ஷி சேர்த்தார்கள். பல அபேக்ஷகர்களையும் நிறுத்தினார்கள்.

கடைசியாக திரு.இராமசாமி திருவாளர் பட்டக்காரர் முதலியவர்கள் ஜனாப் ஷேக்தாவுத்சாயபு அவர்களை மறுபடியும் சேர்மனாக இருந்தாக வேண்டும் என்று நிர்பந்தப்படுத்தி சம்மதிக்கச் செய்த பின்பு தேர்தல் உணர்ச்சி வேறு விதமாய் மாறிற்று என்றாலும், போட்டிகள் மாத்திரம் வெகு பலமாக ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் சேர்மன் ஷேக்தாவுது சாயபு அவர்கள் இப் போட்டி களுக்குள் நுழைந்து தன்னிடம் அன்புள்ளவர், வெறுப்புள்ளவர் என்கின்ற வித்தியாசமில்லாமல் எல்லாரிடமும் சென்று அலைந்து திரிந்து நாள் 1-க்கு 24 மணி நேரம் வீதம் வேலை செய்து மொத்தத்தில் 16 ஸ்தானங்களுக்குப் போட்டியில்லாமல் செய்துவிட்டார். இவ்விஷயத்தில் சேர்மென் அவர்களின் பிரயாசையும், வெற்றியும் மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

புது சட்டப்படி கூட்டப்படும் இந்த நிர்வாகமும், ஜனாப் ஷேக்தாவுது அவர்கள் தலைமையில் ஒழுங்காகவும், வெற்றிகரமாகவும் நடைபெறு மென்பதில் ஆக்ஷேபணை இல்லை. வெற்றி பெற்ற கவுன்சிலர்கள் சேர்ம னுடன் ஒத்துழைத்து ஈரோடு முனிசிபாலிட்டிக்கு இப்போது ஏற்பட்டுவரும் நல்ல பெயரை விர்த்தி செய்வார்களாக.

**குடி அரசு - கட்டுரை - 08.11.1931**



# வகுப்புவாதிகள் அயோக்கியர்களா?

இந்தியர்களின் அடிமைத் தன்மைக்கும் இழி நிலைக்கும் மதமும், ஜாதியும், வகுப்பும் அவை சம்பந்தமான மூடநம்பிக்கை எண்ணங்களும், வெறிகளும், சடங்குகளும் இவற்றிற்காக ஒருவரை ஒருவர் அவநம்பிக்கை கொண்டு அடக்கி ஆள நினைப்பதுமே முக்கியமான காரணங்களாகும் என்பதாக நாம் பல தடவை சொல்லி வந்திருக்கின்றோம். பலமாக அனேக உதாரணங்களுடன் எழுதியும் வந்திருக்கின்றோம்.

மதங்களின் பேரால் பல முக்கிய மதங்களும், அநேக கிளை மதங் களும் உட்பிரிவு மதங்களும் ஏற்பட்டு, மக்களை பெரும் பெரும் பிரிவு களாகப் பிரித்துவிட்டதென்றாலும் வருணாச்சிரமத்தையும், ஜாதிப்பிரிவு களையும், பலவகுப்புப் பிரிவுகளையும் கொண்டதான இந்துமதமானது எல்லா மதங்களையும் விட மக்கள் சமூகத்திற்கு பெரிய இடையூறாய் இருந்து கொண்டு மக்களின் ஒற்றுமையையும், தன்னம்பிக்கையையும் அடியோடு பாழாக்கி வருவதுடன் இதன் காரணமாய் மக்கள் வலி இழந்து, சுயமரியாதை இழந்து, சுதந்திரமற்று நடைப்பிணங்களாகவும் பகுத்தறிவற்ற மிருகத் தன்மையிலும் கேவலமாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

இதற்கு உதாரணமாக, சென்னை மாகாணத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு பார்த்தாலே போதும். இந்துகள் என்று சொல்லிக் கொள்ளும் ஜனங்கள் சுமார் மூன்றே முக்கால் கோடி இருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் 385 ஜாதிகளாகவும் மற்றும் பல உள் பிரிவு ஜாதிகளாகவும் வகுக்கப் பட்டு இருக்கின்றார்கள். (இந்த ஜாதி பெயர்களும் ஒவ்வொரு ஜாதியரின் எண்ணிக்கையும் காலம் சென்ற திரு.எல்.டி.சாமிக்கண்ணு பிள்ளை அவர்களால் பிரசுரித்த மெட்ராஸ் இயர்புக் என்னும் புஸ்தகத்தில் காணலாம்) நாளேற நாளேற நாகரீகத்தின் காரணமாகவும் செல்வநிலையின் காரணமாகவும் இன்னும் அதிகமான ஜாதி பிரிவுகளும், உட்பிரிவுகளும் ஏற்படும் படியான நிலையிலேயே தேசம் போய் கொண்டிருக்கிறதே தவிர அவைகள் குறைந்து ஒன்றுபடத் தக்க முயற்சியோ அறிகுறியோ காண்பதற் கில்லை.



RangaRakes
tamilnavarasam.com

இந்தியாவின் 8 -ல் ஒரு பாகம் கொண்ட சென்னை மாகாணத்தில் மாத்திரம் 385 ஜாதிப்பிரிவுகள் இருக்கின்றதென்றால் இனி மற்ற 7-பாக ஜனத்தொகையில் எத்தனை ஜாதிப்பிரிவுகள் உட்பிரிவுகள் இருக்கக்கூடும் என்பதை வாசகர்கள் சற்று சிந்தித்துப் பார்த்தால் தானாக விளங்கிவிடும்.

இந்த ஜாதிப்பிரிவுகள் மாத்திரமல்லாமல் 'உயிரினும் தேசத்தினும் முக்கியமாய் கருத வேண்டிய'தானதாய் பாஷை பிரிவுகள் எவ்வளவு? இவ்வளவு ஜாதியும், தாய் பாஷையும் தங்களுக்குள் பிரிபட்டு இருக்கின்றோம் என்று மாத்திரம் நினைத்துக் கொண்டிருக்காமல் தங்களுக்குள் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற உள் எண்ணமும் வெளி நடவடிக்கைகளும் வெறுப்பும் துவேஷமும் எவ்வளவு?

இவற்றையெல்லாம் கவனிக்காமலும், இதை நேர்படுத்த முயற்சிக்காமலும் யாரோ சில சோம்பேறிகளும் சுயநலக்காரரும் 'தேசீயம் தேசீயம்' என்று சொல்லி மக்கள் கண்களில் மிளகாய்ப் பொடியைப் போட நினைத்தால் நாடு எப்படி க்ஷேமம் அடையும்? கொஞ்ச நாளைக்கு மாத்திரம் தான் இந்த தேசீய வயிற்றுப்பிழைப்பு வியாபாரம் நடந்த முடியுமே ஒழிய இது என்றும் நிலைத்திருக்க முடியுமா என்பது யோசிக்கத்தக்கதாகும்.

'வகுப்பு வாதம் கூடாது' என்று சொல்லுவதன் மூலம் ஏதோ சில பயங்காளிகளையும், வேறு வழியில் பிழைக்க வகையற்ற தேசீயவாதிகளையும், உத்தியோகம் பதவிப் பிரியர்களையும் மிரட்டலாமே ஒழிய, வகுப்புப் பிரிவுகளாலும், உயர்வு தாழ்வு வித்தியாசங்களாலும் உள்ள கஷ்டத்தையும் கேட்டையும் ஒழிக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

'வகுப்புவாதம் மதவாதம் ஜாதிவாதம் பேசி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பவர்களால் தேசத்தின் விடுதலை கெட்டுப் போகின்றது' என்று திப்பிலி, தேசாவரம், சதகுப்பைளெல்லாம் பேசவும் எழுதவும் தொடங்கி விட்டதைக்கண்டு நாம் சிறிது லக்ஷியம் செய்யவில்லை.

அந்தப்படி எழுதும் பேசும் யோக்கியர்களில் 100க்கு அரைப் பேராவது தங்கள் மதத்தையும், உள் மதத்தையும், ஜாதியையும், உள் ஜாதியையும் ,வகுப்பையும் உள்வகுப்பையும் விட்டு விட்டவர்கள் உண்டா என்று பந்தயம் கட்டி கேட்கின்றோம்.

ஆகவே தேசீயம் என்பதும், தேசீயப் பிழைப்பு என்பதும் மக்களை எவ்வளவு அயோக்கியர்களாகவும் இழிதகைமை உள்ளவர்களாகவும் செய்து விடுகின்றது என்பது கவனித்துப் பார்ப்பவர்களுக்கு விளங்காமல் போகாது.



எப்பொழுது ஒருவனுக்கு, அவனுக்கு என்று ஒரு தனி மதம், தனி ஜாதி, தனி வகுப்பு என்பதாகப் பிரிக்கப்பட்ட பின்பு அவன் தனது மதம், தனது ஜாதி, தனது வகுப்புக்கு என்று ஒரு உரிமை கேட்பதில் என்ன தப்பிதமோ, அயோக்கியத்தனமோ இருக்கமுடியும்?

வகுப்புவாதம், மத வாதம், ஜாதி வாதம் கூடாது என்கின்ற யோக்கியர்கள் ஒருவராவது மதத்தையும், ஜாதியையும், வகுப்பையும் அழிக்கச் சம்மதிக்கின்றார்களா? அது மாத்திரமல்லாமல் பார்ப்பனர் முதல் பறையர் வரை மாயாவாதம் முதல் சைவர்வரை அவரவர்களின் ஜாதி மத வகுப்புக்கு உயிரை விட்டாவது காப்பாற்ற வேண்டும் என்கின்றார்களேயொழிய ஒருவராவது ஜாதிமத வகுப்புகளை குழிதோண்டிப் புதைக்க வேண்டும் என்று சொல்லுகின்றவர்களை கண்டு பிடிக்க முடியுமா? மதத்தையும், ஜாதியையும், வகுப்பையும் ஒரு புறத்தில் காப்பாற்றிக் கொண்டு மற்றொரு புறத்தில் ஜாதி மத வகுப்புப்பிரதிநிதித்துவம் கேட்பதை அயோக்கியத்தனம், இழிதன்மை என்று சொன்னால் அப்படிச்சொல்லுவது ஆயிரம் மடங்கு அயோக்கியத்தனமும், இரண்டாயிரம் மடங்கு இழிதன்மையும், வஞ்சகத்தன்மையும் துரோகத் தன்மையும் ஆகாதா என்பதோடு இது தங்கள் வயிற்றுப்பிழைப்புக்கும், வாழ்வுக்கும் என்னவேண்டுமானாலும் செய்யலாம் என்கின்ற கீழ்மக்கள் தன்மையா அல்லவா என்று கேட்கின்றோம்.

தேசம்,ஜீவராசிகளுக்கு பொதுவானதாகும், தேச ஆட்சியும் மக்களுக்குப் பொதுவானதாகும். எந்த மனிதனுக்கும் ஆட்சியில் அவனது இஷ்டத்தை தெரிவிக்கவும், ஆட்சியில் பங்குபெறவும் உரிமை உண்டு என்பதை எந்த மூடனும் மறுக்க முடியாததாகும். ஏதோ சில அயோக்கிய வஞ்சகர்களது செல்வாக்குக்காலத்தில் அவர்களது ஏய்ப்பில் விழுந்த முட்டாள் மன்னர்களான, ஒழுக்க ஈனமுள்ள அரசர்கள் காலத்தில் ஏற்பட்ட அக்கிரமங்களாலும் கொடுங்கோன்மைகளாலும் ஜாதிமத வகுப்பு ஆணவங்கள் ஏற்பட்டு ஒரு ஜாதி மத வகுப்பை மற்றொரு ஜாதி மத வகுப்பு அடக்கி ஆளும்படியாகவும், ஒரு ஜாதி மத வகுப்பு உழைப்பில் மற்றொரு ஜாதி மத வகுப்பு சோம்பேறியாய் இருந்து கொண்டு உண்டு வாழும் படியாயும் செய்யப்பட்டு விட்டதினாலேயே எல்லா காலங்களிலும் எல்லா அரசாட்சிகளும் அப்படிப்பட்ட வஞ்சகர்களுக்கு உதவியாகவே இருக்கவேண்டுமா என்றும் யாரோ சிலருக்கு பிழைப்பதற்கு வேறு வழி இல்லாததினாலேயே அந்த ஈனர்களுக்கு கூலியாய் இருக்கும் இழிதகைமையை மற்றவர்களும் அடையவேண்டுமா என்றும் கேட்கின்றோம்.

ஏதாவது ஒரு மனிதன் 'என்னுடைய மதம் சிறுபான்மையானது என்றும், என்னுடைய ஜாதி வலியிழந்த ஜாதியென்றும், என்னுடைய வகுப்பு தாழ்த்தப்பட்டு இழிவு படுத்தப்பட்டதென்றும் சொல்லி, அதன்



RangaRakes tamilnavarasam.com

காரணமாக ஆட்சியில் எனக்குள்ள பங்கு இன்னது என்பதை தெளிவாய்ச் சொல்லி, என்னை நீ அடக்கி ஆள முடியாதபடி செய்துவிடு' என்று சொல்வதில் என்ன தப்பு இருக்கின்றது என்று கேட்கின்றோம். இதற்கு பதில் சொல்லாமல் அப்படிக்கேட்பது 'குலாம் தன்மை' என்றும் தேசத்துரோகத் தனம் என்றும் சொல்லுவதானால் அப்படிச் சொல்லுகின்றவர்களை இப்படிச்சொல்லுவது 'வயிற்றுப்பிழைப்புக்கு எச்சிலை பொறுக்கும் இழி தன்மை' என்று ஏன் சொல்லக்கூடாது.

தன் பங்கை தனக்குக் கொடு என்று கேட்டவுடன் கொடுக்க மறுத்த குடும்பங்கள் எல்லாம் அனேகமாய் நாசமுற்றே இருக்கின்றன. ஆகவே, எந்த மதக்காரருடைய பங்கையானாலும், எந்த ஜாதி வகுப்புக்காரருடைய பங்கையானாலும் மறுத்து ஏமாற்றப்பார்த்தால் கண்டிப்பாக அந்த நாடு கேடுறுவது திண்ணம். எப்படி கேடுற்றாலும் சில பொருப்பற்ற கூலிகளின் ஜீவனம் நடந்தேறலாம் என்பதில் நமக்கு சந்தேகமில்லை. ஆனால் நாடு கெடும் என்பதை உண்மையும் பொறுப்பும் உள்ள மக்களுக்கு எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

சுமார் ஏழு கோடி தாழ்த்தப்பட்ட மக்களும், சுமார் எட்டு கோடி முஸ்லீம்களும் தங்களுக்கு இந்துக்களிடம் நம்பிக்கை இல்லை என்று சொன்னால் 'எங்களை நம்பித்தானாக வேண்டும்' என்று சொல்ல எந்த இந்துவுக்கு உரிமை உண்டு என்று கேட்கின்றோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் தக்க சமாதானம் சொல்லி சரிப்படுத்த முயற்சிக்காமல் 'தாழ்த்தப்பட்டவர்களுக்கு காந்தியிடமும், காங்கிரசினிடமும் நம்பிக்கை இருக்கின்றது. அம்பட்காரிடம் நம்பிக்கை இல்லை' என்று சில பாவங்களுக்கு பணம் கொடுத்து சீமைக்கு தந்தி அடித்து பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி விடுவது யோக்கியமான செய்கையாகுமா?என்று கேட்கின்றோம்.

உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் என்பவர்களில் நூற்றுக்கு கால் பேராவது காந்தியையும், காங்கிரசையும் நம்புகின்றார்களா என்று பந்தயம் கட்டிக் கேட்கின்றோம்.

சீமையில் திரு.காந்தியடிகள் 'தாழ்த்தப்பட்டவர்களுக்கு காங்கிரசும் நானும்தான் பிரதிநிதி' என்று சொன்னபோது திரு.அம்பெட்கார் சொன்ன பதிலுக்கு திரு.காந்தி என்னபதில் சொன்னார்? அம்பெட்கார் அவர்கள் நல்ல வெளிப்படையான பாஷையில் 'காங்கிரசுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை, காங்கிரசில் தாழ்த்தப்பட்ட மக்கள் கிடையாது, அப்படியிருக்க திரும்பத் திரும்ப திரு.காந்தியவர்கள் காங்கிரசும் தானும் தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பிரதிநிதிகள் என்று சொல்லுவது பொறுப்பற்றவர்கள் சொரணையில்லாமல் பேசும் பேச்சாகும்' என்று எடுத்து சொன்னார். அப்படி இருக்கும்போது மறுபடியும் மறுபடியும்



காங்கிரசுதான் தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பிரதிநிதி என்று சொல்லுகிறவர்களுக்கு சிறிதாவது மானமோ , சுயமரியாதையோ இருக்குமானால் திரு.அம்பெட்காருக்கு பதில் சொல்லிவிட்டு மேல்கொண்டு சமாதானம் சொல்ல வேண்டும். அதாவது இன்ன இன்ன தாழ்த்தப்பட்ட மக்கள் இத்தனை பேர்கள் காங்கிரசில் இருக்கின்றார்கள். அவர்களது நிலைமை இன்னது என்று தெரிவித்துவிட்டு அம்பெட்காரையும் அவரது அபிப்பிராயத்தையும் கண்டிப்பது ஒழுங்காகும். அப்படிக்கில்லாமல் 'அம்பெட்கார் ஒரு குலாம்' 'எம்.சி.ராஜா ஒரு குலாம்', 'என். சிவராஜ் ஒரு குலாம்' 'மதுரைப்பிள்ளை ஒரு குலாம்' 'அவர்களை ஆதரிக்கின்ற மற்றவர்களும் குலாம் இழி மக்கள்' என்று பேசிவிட்டால் எழுதிவிட்டால் சமாதானமாகி விடுமா என்று கேட்கின்றோம். இந்தப்படி பேசுகின்ற எழுதுகின்றவர்களுடைய உண்மை குலாம் தன்மை நமக்குத் தெரியாதா என்பதை அவரவர்களே யோசித்துப் பார்க்க வேண்டுமாய் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தன் பங்கைக் கேட்பவனை குலாம் என்றும், அடிமை என்றும், அதிகார வர்க்கத்தினர்கூலி என்றும், எச்சில் பொருக்கிகள் என்றும் சொல்லத் துணிவதின் கருத்தெல்லாம் பேனாவும், காகிதமும் தன்வசம் இருக்கின்றன என்கின்ற தலைகொழுப்பில்லாமல் மற்றபடி அறிவும் நாணயமும் இருந்து செய்த காரியம் என்று சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

அன்றியும் வட்ட மேஜை மகாநாட்டு முஸ்லீம் பிரதிநிதிகளை துரோகிகள் என்றும், வஞ்சகர்கள் என்றும், முஸ்லீம்களின் தொல்லை என்றும் , முஸ்லீம்களின் முட்டுக்கட்டையென்றும் முஸ்லீம்களின் வஞ்சகம் என்றும் , முஸ்லீம்களின் சூட்சி என்றும், தலையங்கம் கொடுத்து எழுதுவதே 'தேசீயப் பத்திரிகை'களுக்கு ஒரு யோக்கியதையாக விளங்குகின்றது. இது 'தட்டிப் பேச ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்' என்று சொல்வது போல் நடக்கும் காரியமேயல்லாமல் வேறு என்ன என்று சொல்ல முடியும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் கையிலும், முஸ்லீம்கள் கையிலும் சரியான பத்திரிகைகள் இருந்து அச்சமூகத்தாருக்கு தங்கள் உரிமைக்குப் பாடுபடுவதில் இன்னும் சரியான அக்கரை இருந்து, அப்பத்திரிகைகளை ஆதரித்து பிரபலப்படுத்தி இருந்தால் இந்த சமூகங்களின் தலையில் தேசீயத்தின் பேரால் சுலபத்தில் கல்லைப் போட்டு விட முடியுமா என்று கேட்கின்றோம். மௌலானா ஷௌகத் அலியைப் பற்றி சில பத்திரிகைகள் வெகு இழிவாய் எழுதத் தொடங்கிவிட்டன. மௌலானா ஷௌகத்தலியின் நாணயத்தை விட எந்த விதத்தில் திருவாளர்கள் காந்தியும், மாளவியாவும், ரங்கசாமி அய்யங்காரும், ராஜகோபாலாச்சாரியாரும், சத்தியமூர்த்தியும் உயர்ந்தவர்



RangaRakes tamilnavarasam.com

கள் என்று கேட்கின்றோம். மௌலானா ஷௌக்கத்தலி அவர்கள் மகமதிய சமூகமாகிய 8 கோடி மக்களுக்கும் சமமான ஆதிக்கம் வேண்டுமென உழைக்கிறார் என்றே வைத்துக் கொள்ளுவோம்.

ஆனால், மேல் கண்ட திரு.காந்தி முதலியவர்களின் உழைப்பு எத்தனை கோடி மக்களின் ஆதிக்கத்திற்கு என்பதை யோசித்துப் பாருங்கள். இந்திய ஜனத்தொகையில் 100க்கு மூன்று பேராய் உள்ள பார்ப்பன வகுப்புக்கு மாத்திரமல்லாமல், வேறு வகுப்புக்கு ஆதிக்கமில்லா விட்டாலும் சமத்துவமாவது கிடைக்கும்படி உழைக்கின்றார்களா? என்று கேட்கின்றோம். இம்மாதிரி சுயவகுப்புப் புலிகளான ஆசாமிகளைத் தேச பக்தர்கள் என்றும் உண்மையான முஸ்லீம் பிரதிநிதிகளை வகுப்புவாதிகள், சூட்சிக்காரர்கள், குலாம்கள் என்றெல்லாம் சொல்லுவதென்றால் இது எவ்வளவு மோசடியான தந்திரமென்பது யோசித்துப் பார்ப்பவர்களுக்கு விளங்காமல் போகாது.

நிற்க, ஒரு சமூகத்தாரிடமோ ஒரு மதத்தாரிடமோ மற்றொரு சமூகத் தார் உண்மையில் பயப்பட்டு பந்தோபஸ்து விரும்பினால் அவர்களுக்கு சமாதானம் சொல்லி அவர்கள் பயம் தீரும்படியான மார்க்கம் செய்வதை விட்டு விட்டு இந்தப்படியெல்லாம் கேவலப்படுத்தி அவர்களது விருப்பங் களை அலட்சியப்படுத்தி அடக்கி ஆள நினைப்பது ஒரு நாளும் முடியாது என்பதற்காகவும், விஷமப்பிரசாரம் செய்து இழிவுபடுத்தப்பார்ப்பது இனி செல்லாது என்பதற்காகவுமே இதை எழுதுகின்றோம். அன்னியன் கையில் ஆதிக்கமும் பாதுகாப்பும் இருக்கும்போதே இவ்வளவு அக்கிரமங்களும், கொடுமைகளும், வஞ்சகங்களும் மனந் துணிந்து வேண்டுமென்றே செய் கின்ற மக்கள் இனி தங்கள் கைக்கு ஆதிக்கம் வந்தால் என்ன செய்ய மாட்டார்கள் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டியது நடுநிலைமையாளர் கடமையாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 08.11.1931**



# காங்கிரஸ் புரட்டுக்குத் தோல்வி

சென்னை நகரசபைக்கு செனட்டிலிருந்து ஒரு பிரதிநிதியைத் தெரிந்தெடுப்பதற்கு தேர்தல் நடைபெற்றது. அதற்குத் திரு.புர்ரா சத்திய நாராயணாவும், இங்கிலாந்திற்கு வட்டமேஜை மகாநாட்டுப் பிரதிநிதியாகச் சென்றிருக்கும் திவான்பகதூர் ஏ.ராமசாமி முதலியாரும் போட்டியிட்டனர். இவர்களில் திரு.ராமசாமி முதலியாருக்கு 109 ஓட்டுகளும் , திரு.சத்திய நாராயணாவுக்கு 46 ஓட்டுகளும் கிடைத்தன. திரு. ராமசாமி முதலியாரே செனட்டின் பிரதிநிதியாக நகரசபைக்கு தெரிந்தெடுக்கப்பட்டார். இந்தியா வுக்கு தானே பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ளும், காங்கிரசைச் சேர்ந்த திரு.சத்தியநாராயணாவுக்கு செனட்டு அங்கத்தினர்களின் ஆதரவில்லா மையைக் கொண்டு படித்தவர்களிடத்தில் காங்கிரசுக்கு எவ்வளவு செல் வாக்கு இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளலாம். ‘காங்கிரசுக்கு விரோத மான ஜஸ்டிஸ்கட்சி’யைச் சேர்ந்த திரு.ராமசாமி முதலியார் அவர்கள் ஊரில் இல்லாதிருந்தும் வெற்றிபெற்றதைப் பாராட்டுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 08.11.1931**



RangaRakes tamilnavarasam.com

# சென்னையில் சுயமரியாதை

சென்னை நகரத்தில் பல இடங்களில் அநேகமாக நாள் தவறாமல் சுமார் ஒரு மாதமாகப் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. சுயமரியாதை இயக்கத் தோழர்கள் திரு.பொன்னம்பலனார், குருசாமி, பண்டிதர் திருஞானசம்பந்தர், எஸ்.ராமநாதன், டி.வி.சுப்பிர மணியம் முதலியவர்கள் சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, காங்கிரஸ் புரட்டு முதலியவைகளை எடுத்துக்காட்டி சமதர்மப் பிரசங்கங்கள் செய்து வருகின் றனர். ஆயிரக்கணக்கான பொதுஜனங்கள் உற்சாகத்துடன் கூட்டங் களுக்குப் போய் உண்மையுணர்கின்றனர். இவ்வாறு நடைபெறும் பொதுக் கூட்டங்களைப் பற்றிய நிகழ்ச்சிகளைத் தேசீய பத்திரிகைகள் வெளியிடுவ தில்லை. இதற்கு மாறாக கூட்டங்களில் கலகஞ் செய்வதற்காக காலிகளைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றன. தேசீயப்புரட்டு வெளியாகி அதனால் பொது ஜனங்கள் விழிப்படையும் போது தேசீயப் பத்திரிகைகளும், தேசீய வாதிகளும் வேறு இதைத் தவிர என்ன தான் செய்யக்கூடும்?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 08.11.1931**



# இரண்டு சந்தேகம்?

**- சித்திரபுத்திரன்**

**1.போக்கிரி :** திருமதி ஸ்லேட்டர் அம்மாளை மீராபாயம்மாளாக்கி, முக்காடு போட்டு ஆபாசமாக்கி சீமைக்கு அழைத்துப் போய் இந்திய நாகரீகத்தைப் பாருங்கள் என்று வெள்ளைக்காரர்களுக்கு காட்டுகிறாரே அது ஏன்? முக்காடு என்ன அவ்வளவு அழகா? அல்லது, தன்னை ஒரு சனாதன இந்து என்பதற்காகவா?

**யோக்கியன்:** அதைப்பற்றி கவலை உனக்கு எதற்கு? அது அவரவர்கள் இஷ்டத்தைப் பொறுத்தது.

**போக்கிரி:** சரோஜனி அம்மாள் அப்படியில்லையே?

**யோக்கியன்:** மறுபடியும் பேசுகிறாயே?

**2. போக்கிரி:** சரி, அதைப்பற்றி பின்னால் பேசிக்கொள்ளலாம். திரு. காந்திக்கு திரு.ஏ. ரங்கசாமி அய்யங்கார் அவர்களின் யோக்கியதை தெரி யுமா? தெரியாதா?

**யோக்கியன்:** தெரியும். ஏன்?

**போக்கிரி:** அவர் காந்தியை மீறித்தானே வட்டமேஜைக்குப் போனார்?

**யோக்கியன்:** ஆம்.

**போக்கிரி:** அப்படி இருக்க, திரு.காந்தி அவரை எதற்காகத் தனக்கு அரசியல் ஆலோசனை சொல்லும் அமைச்சராக வைத்துக்கொண்டார்.

**யோக்கியன்:** இது வேண்டுமானால் நல்ல கேள்வி. ஏன் வைத்துக் கொண்டார் என்றால், திரு. ஏ.ரங்கசாமி அய்யங்கார் ‘இந்து’ ‘சுதேசமித் திரன்’ பத்திரிகைகளின் ஆசிரியாய் இருக்கின்றார் என்பதற்காகத்தான்.



RangaRakes tamilnavarasam.com

அன்றியும் திரு.ரங்கசாமி அய்யங்காரிடம் திரு.காந்தியின் கைவரிசை ஒன்றும் செல்லாது. ஏனெனில் இந்து பத்திரிகையொன்றாலே திரு.காந்திக்கு எப்போதும் நெஞ்சில் கொஞ்சம் நெருப்பு உண்டு.

**போக்கிரி:** அதெப்படி?

**யோக்கியன்:** காலஞ் சென்ற ஒத்துழையாமையின்போது கூட இந்து பத்திரிகை ஒத்துழையாமைக்கு விரோதமாய் விஷமப் பிரசாரம் செய்தும் திரு.காந்தி அடிக்கடி அதன் ஆசிரியருக்குக் கடிதம் எழுதி அவரைக் கைக்குள் போட்டு, 'ஒத்துழையாமையை தயவு செய்து கவனித்துக் கொள்ளுங்கள்' என்று கடிதமெழுதி இருக்கிறார். அன்றியும் 'இந்து'வும் 'சுதேச மித்திர'னும் சேர்ந்துதான் திரு.தாசுக்கு விளம்பரம் கொடுத்து அவரை 'தேசபந்து' வாக்கி 'மகாத்மாவை' தோற்கடித்து ஒத்துழையாமையைப் புதைத்து விட்டதுகள். ஆதலால் அதுபோலவே இப்போதும் செய்து விடுமோ என்கின்ற பயத்தால்தான் திரு.ரங்கசாமி அய்யங்காரை திரு.காந்தி தனது மந்திரியாக்கிக் கொண்டார்.

**போக்கிரி:** மற்றவர்களையெல்லாம்விட திரு.ஏ.ரங்கசாமி அய்யங்காரிடம் மாத்திரம் என்ன அவ்வளவு பயம்?

**யோக்கியன்:** 'இந்து' 'சுதேசமித்திரன்' என்றால் பார்ப்பனர்கள் என்று அருத்தம். அதுவும் 'தென்னாட்டு அய்யங்கார் பார்ப்பனர்கள்'என்று அர்த்தம். திரு.காந்தியைப்போல் ஆயிரம் காந்தியை அய்யங்கார் பார்ப்பனர்கள் ஆக்கவும் கூடும். அழிக்கவும் கூடும். திரு.காந்தி இவையெல்லாம் தெரியாதவரல்ல. யார்யாரைப் பிடித்து எப்படி எப்படி சரிபண்ணலாம், எப்படி எப்படி விளம்பரம் செய்யலாம் என்பதில் அவருக்கு அனுபவமுண்டு – லார்டு இர்வினை 'மகாத்மா இர்வின்' என்று காந்தி கூப்பிட்டாரே எதற்கு? என்பது உமக்குத் தெரியுமா?

**போக்கிரி:** சரி, விளங்கிற்று இனி ஒன்றும் தெரியவேண்டாம்.

## புதிய தொண்டரும் பழைய தொண்டரும்

**புதுத் தொண்டர்:** வட்டமேஜை முறிந்து போனால் என்ன செய்வது? 'ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டி வரும்' என்று காந்தி சொல்லுகின்றாரே'.

**பழய தொண்டர்:** அட பயித்தியக்காரா! வட்டமேஜை மகாநாடு முறிந்தால் தான் நமக்கு நல்லது.

**புதுத் தொண்டர்:** அதென்ன அப்படி?



**பழய தொண்டர்:** வட்டமேஜை மகாநாடு முறிந்து போனால், திரு.காந்தி இந்தியாவுக்கு வந்து, மறுபடியும் ஏதாவது சத்தியாக்கிரகம்– சட்டமறுப்பு– என்பதாக, எதையாவது ஒன்றைச் செய்யச் சொல்வார்.

**புதுத் தொண்டர்:** அதனால் நமக்கென்ன லாபம்? ஜனங்களுக்கு கஷ்டம் தானே?

**பழய தொண்டர்:** அட முட்டாளே! ஜனங்கள் எக்கேடு கெட்டேனும் தொலையட்டும். அதைப் பற்றி நமக்கென்ன கவலை? நமக்கு எப்படியும் ஒரு வேலை இருக்குமல்லவா? அதனால் உண்டி வசூலிக்கவோ, பணம் வசூல் செய்யவோ, தேசாபிமானியாகவோ சவுகரியம் இருக்கும். அப்படியில்லா விட்டால் நம்மை எவன் சட்டை பண்ணுவான்?

**புதுத் தொண்டர்:** நமக்கு வேலை வேண்டியதற்காகவா தேசியத் தொண்டு செய்வது?

**பழய தொண்டர்:** சரி! சரி! உனக்கு ஒன்றும் தெரியாது. உங்கள் வீட்டில் ஏதோ சோற்றுக்குக் கொஞ்சம் வகை இருக்கின்றது போல் தெரிகின்றது, அதனால் உனக்கு வட்டமேஜை முறிய வேண்டிய அவசியமில்லையென்று தோன்றுகின்றது.

**புதுத் தொண்டர்:** அதென்ன அப்படி சொல்லுகின்றாய்?

**பழய தொண்டர்:** வட்டமேஜை ஏதாவது ஒரு வழியில் வெற்றி பெற்று விட்டால், இந்தியாவில் வேலையில்லா கஷ்டம் எவ்வளவு அதிகரிக்கும் தெரியுமா? முக்கால்வாசிப் பத்திரிகைகள் ஒழிந்து போகும். முன்பெல்லாம் பாமர மக்களை ஏமாற்ற மதம் ஒன்று தான் இருந்தது. இப்போது நமது பிராமணப் பெரியோர்கள் தயவினால் தேசீயம் என்பதாக ஒன்று ஏற்பட்டு , இதில் அனேகம் பேருக்கு ஜீவனோபாயம் உண்டாயிற்று. மகாத்மா காந்தி அதற்கு தண்ணீர் ஊற்றி வளர்த்து வருகிறார். அதனால் இப்போது நம்போலியர்க்கெல்லாம் சோற்றுக்குச் சோறு, துணிக்குத்துணி, கை செலவுக்குத் தாராளமாகக் காசு இவ்வளவும் தவிர, போகின்ற பக்கம், வருகின்ற பக்கம் எல்லாம் திருப்பதி குடை யாத்திரைக்காரருக்கு காலில் தண்ணீர் விட்டு விழுந்து கும்பிட்டு, தட்டத்தில் காசு போடுகின்ற மாதிரியான மரியாதை–இவ்வள வெல்லாம் இருக்கின்ற போது, இவை அத்தனையும் ஒழிந்து போகின்ற மாதிரியில் 'வட்டமேஜை வெற்றி பெற்றால்' என்று கேட்கின்றாயே, பாவி! இதைக் கேட்டதும் எனக்குத் திகீர் என்கின்றது.

**புதுத் தொண்டர்:** கோபித்துக் கொள்ளாதீர்கள்! எனக்கு அனுபோகம் இல்லாததினால் இப்படிக் கேட்டேனே ஒழிய, உங்கள் பிழைப்பில் நான் கை வைக்கவில்லை.



RangaRakes tamilnavarasam.com

**சத்தியாக்கிரகமும் தடையும்**

**கேள்வி:** 'சத்தியாக்கிரகம்' என்பதை குற்றம் சொல்லுவதின் காரணம் என்ன?

**விடை:** சத்தியாக்கிரகம் என்கின்ற வார்த்தையில் மனிதத் தன்மைக்கு மீறினதான, ஏதோ ஒரு 'தெய்வீக'சக்தி இருப்பதான கருத்து இருக்கின்ற படியால், தெய்வத்தன்மை என்பதை ஒப்புக்கொள்ளாதவன் சத்தியாக் கிரகத்தை ஒப்புக் கொள்ளமுடியாது.

**கேள்வி:** அப்படியானால் முழுச் சுயமரியாதைக்காரர்கள் என்பவர் கள் கூட சத்தியாக்கிரகம் செய்கின்றார்களே அதன் அருத்தம் என்ன?

**விடை:** பசிக் கொடுமையால் உலகில் நடக்கும் எத்தனையோ விதமான அற்புதமல்லாதவைகளில் சுயமரியாதைக்காரர் என்பவர்கள் சத்தியாக்கிரகம் செய்கின்றார்கள் என்பதும் சேர்ந்ததாகும். 'யாரைவிட்டது காண் பசிக் கொடுமை எவரை விட்டது காண் பசிக் கொடுமை' என்பதும், 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்பதும் இதில் சேர்ந்தவைதான்.

**கேள்வி:** 'மகாத்மா'காந்தி எத்தனையோ காரியத்திற்கு சத்தியாக் கிரகம் செய்கின்றாரே? இந்த தீண்டாமைக்கு ஏன் சத்தியாக்கிரகம் செய் வதில்லை?

**விடை:** அவர் தீண்டாமை விலக்குவதில் சத்தியம் இருக்கின்றதா இல்லையா என்பதில் இன்னமும் முடிவு காணாமல் இருக்கின்றார். ஆதலால் தான் தீண்டாமை ஒழிப்பதற்கு சத்தியாக்கிரகம் செய்யும் விஷயத்தில் பயப்படுகிறார்.

**கேள்வி:** அப்படியானால் வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு அவர் எப்படி உதவி செய்தார்?

**விடை:** வைக்கம் சத்தியாக்கிரகம் திரு காந்தி ஆரம்பித்ததல்ல. மற்றவர்கள் ஆரம்பித்து விட்டார்கள். 'நம்பிக்கை இருக்கின்றவர்கள் செய் யுங்கள்' என்று அனுமதி மாத்திரம் கொடுத்துவிட்டார்.

**கேள்வி:** வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு 'மகாத்மா' பணம் கூட கொடுத்தாரே.

**விடை:** ஆம். அந்தப் பணம் கொடுத்தது எதற்கென்றால் வைக்கம் சத்தியாக்கிரகத்தை நடத்தப் பஞ்சாப்பில் இருந்து சீக்கியர்கள் பதினாயிரக் கணக்கான ரூபாய்களுடன் வந்து விட்டார்கள். அவர்களைக் கொண்டு சத்தியாக்கிரகம் நடந்தால் ஜனங்கள் சீக்கியர்கள் ஆய்விடுவார்களே என்று கருதியும், மற்றும் பணம் தாராளமாய் இருந்தால் தீண்டாமை விலக்குக்கு



நினைத்த இடங்களில் எல்லாம் சத்தியாக்கிரகம் தொடங்கப்பட்டு விடுமே என்று பயந்தும், சீக்கியர்களை திரும்பிப் போகும்படி செய்துவிட்டார். அதனால் சிறிது உதவி செய்ய வேண்டியதாயிற்று.

**குடி அரசு - உரையாடல் - 15.11.1931**



RangaRakes
tamilnavarasam.com

# மக்களே! பார்ப்பனீயம் ஜாக்கிரதை!!

## BEWARE OF BRAHMINISM

தென் இந்தியாவில் உள்ள பார்ப்பனர்கள் மறுபடியும் கதர், காங்கிரஸ், மறியல் என்னும் பெயர்களைச் சொல்லி மூடமக்களிடம் உண்டியல் பிச்சை, தட்டப்பிச்சை முதல் பல தந்திரங்களால் பணம் வசூலிக்க வழிகளுண் டாக்கி, பார்ப்பனரால்லாதாரையே கூலிகளாகப் பிடித்து அவர்கள் வசம் அம் மார்க்கத்தை ஒப்புவித்து கூப்பாடு போடச்செய்து, பிரசாரம் செய்ததின் பயனாய் அடங்கிக்கிடந்த பார்ப்பனீயம் இப்போது மறுபடியும் தலை விரித்து ஆடத் தொடங்கி இருக்கிறதென்பது யாவரும் அறிந்ததேயாகும்.

பார்ப்பனீயத்தின் கருத்தெல்லாம், தேசம் பார்ப்பனர்கள் ஆதிக்கத் திற்கு வரவேண்டுமென்பதைத் தவிர வேறு ஒரு காரியமும் இல்லை என்பதும் வெகு காலத்திற்கு முன்பே விளங்கிய விஷயமாகும். அதற்காக என்று செய்யப்படும் கதர்-காங்கிரஸ்-மறியல் முதலிய பிரசாரத்தின் கருத் தெல்லாம் சட்டசபை தாலூகா, ஜில்லாபோர்டுகள் முனிசிபாலிட்டி முதலிய வைகளை பார்ப்பனரல்லாதாரிடமிருந்து பிடுங்கி பார்ப்பன ஆதிக்க வசம் ஒப்புவிக்கும் தரகர் வேலை என்பதைத் தவிர மற்றபடி இவற்றால் எல்லாம் மதுபானமோ, ஏழ்மைத்தன்மையோ, அடிமைத்தன்மையோ ஒழியப்போவ தில்லை என்பதும் நிச்சயமான உண்மையாகும்.

'தேன் அழித்தவன் புறங்கை நக்கமாட்டானா' என்பது போல் 'பார்ப் பனர்களுக்கு போகமுடியாத சமயத்தில் ஒன்று அரை உத்தியோகமோ, ஸ்தானமோ நமது கைக்கு வராதா' என்று எண்ணுகின்ற தொண்டர்களும் சிலர் இருக்கலாம் என்றாலும் பார்ப்பனரல்லாத மக்கள் இது சமயம் ஏமாந்தால் கடைசியில் ஆபத்தாய் முடியும்.

உதாரணம் வேண்டுமானாலும் நிதானமாய் யோசித்துப் பார்த்தால் விளங்கும். இப்போது, முனிசிபல் எலக்ஷனும், தாலூகா ஜில்லாபோர்ட் எலக்ஷனும் சமீபித்த உடனே எத்தனை 'வரி செலுத்துவோர்' சங்கம், 'நகர நல உரிமை' சங்கம், 'குடியானவர்கள்' சங்கம், 'ரோட்டில் நடப்பவர் கள்' சங்கம், 'ரயிலில் பிரயாணம் செய்கின்றவர்கள்' சங்கம், 'மதுவிலக்கு' சங்கம், 'சுகாதார' சங்கம், 'தொழிலாளிகள்' சங்கம், 'உழுது பயிர் செய்வோர்'



சங்கம், 'வேலையற்றவர்கள்' சங்கம் என்பவைகளாகிய அநேக சங்கங்கள் புறப்பட்டு வருகின்றதை கவனித்துப் பார்த்தாலே உண்மை விளங்கிவிடும். 1920- ஷ த்திய சீர்த்திருத்தத்தின்போதும் சட்டசபை தேர்தலை உத்தேசித்து கிளப்பப்பட்ட காங்கிரஸ் கிளர்ச்சியானது ஒத்துழையாமையில் ஆரம்பித்து, தேர்தல்கள் வந்தவுடன் சட்டசபைப் பிரவேசமாக மாறி எலக்ஷன் முடிந்த உடன் எல்லாமுமே அடங்கிப்போய்விட்ட சங்கதி யாவரும் அறிந்ததே. இப்போதும் அதுபோலவே 1931ம் வருஷத்திய சீர்திருத்தத்தை எதிர்பார்த்து, சட்டசபை தேர்தல்களை உத்தேசித்து, ஒரு வருஷத்திற்கு முன்னால் இருந்தே போடுகின்ற கூச்சல் இது என்பதைத் தவிர மத்தியில் இந்த 5, 6 வருஷங்களாய் ஏதாவது நடவடிக்கைகள் நடந்ததா என்பதை யோசித்துப் பாருங்கள். அன்றியும் இவற்றிற்கு மத்தியில் ஏற்பட்ட ஒரு தேர்தலின் போதும், சட்டசபை காலாவதி முடிவதற்கு 'மூன்று நாள்' இருக்கையில் காலம் சென்ற 'தேசபக்த சிகாமணி' மோதிலால் நேரு உள்பட, பல 'தேசபக்த சீஷர்கள்' பின்பற்றுபவர்கள் உள்பட அநேகர் சட்டசபையின் மீது 'கோபித்து' ராஜினாமா கொடுத்து விட்டுவந்து , மறுபடியும் மூன்று நாளில் அடுத்த காலாவதி தேர்தலுக்கு நின்றது முதலிய காரியங்களையும் யோசித்துப்பாருங்கள்.

இன்று தென் இந்தியாவிலுள்ள காங்கிரஸ் ஸ்தாபனங்களின் தலைவர் கள் எல்லோருமே 100க்கு 90 பேர்களுக்கு மேலாகவே அந்த கூட்டத் தினரும், அதில் நேரில் கலந்து இருந்தவர்களும் பார்ப்பனர்களுமாகவே இருக்கின்றார்களா இல்லையா என்பதையும், மற்ற பொது 'தேசீய' ஸ்தாபனங்கள், கூட்டங்கள் ஆகியவைகளின் தலைவர்கள் காரியதரிசிகள் ஆகியவர்களும் அனேகமாய் பார்ப்பனர்களா? அல்லவா? என்பதையும் யோசித்துப் பாருங்கள்.

மற்றும் காங்கிரசின் பெயரைச் சொல்லிக் கொண்டு, காங்கிரஸ் காரர்கள் என்கின்ற முறையில் வட்டமேஜை மகாநாட்டுக்குப் போயிருக்கும் பிரதிநிதிகளும் பார்ப்பனர்களா? அல்லவா?என்பதையும் யோசித்துப் பாருங்கள்.

கடைசியாக சென்னை மாகாண காங்கிரஸ் தலைவர்களும் காங்கிரஸ் மகாநாட்டுத் தலைவர்களும் பார்ப்பனர்களா? அல்லவா? என்பதையும் யோசித்துப்பாருங்கள். இவைகளை எடுத்துக்காட்டுவது வாசகர்களுக்கு ஒரு சமயம் பார்ப்பனத் துவேஷமாய் காணப்பட்டாலும் படலாம். என்றாலும் தொண்டர்கள் என்பவர்கள் மாத்திரம் 100க்கு 90 பேர்கள் பார்ப்பனரல் லாதார்களா? அல்லவா? என்பதையும், அத்தொண்டர்களின் ஜீவனம் பெரிதும் அக்காங்கிரஸ் சம்மந்தத்தின் பேரினாலேயே இருக்கின்றதா? இல்லையா? என்பதையும், இத்தொண்டர்களுக்கு காங்கிரசினால் ஜீவனம் இல்லாவிட்டால் இவர்கள் அங்கு இருப்பார்களா? என்பதையும், இவர்கள்



RangaRakes tamilnavarasam.com

காங்கிரசின் மூலம் ஜீவிப்பதைத் தவிர வேறு வழியில் பாடுபட்டுப் பிழைக்க 100க்கு 10 பேராலாவது முடியுமா? என்பதையும் யோசித்துப் பாருங்கள்.

மற்றும் ஒரு விஷயத்தையும் யோசித்துப்பார்க்க விரும்புகின்றோம். அதென்னவென்றால்:-

பார்ப்பனர்களின் வக்கீல்கள், டாக்டர்கள், மிராசுதாரர்கள், வியாபாரிகள் முதலியவர்களே காங்கிரசில் தலைவர்களாயிருக்கவும், பார்ப்பனரல்லாதார்களில் வக்கீல்கள், டாக்டர்கள், மிராசுதாரர்கள், வியாபாரிகள் முதலியவர்கள் அதுபோல் காங்கிரசில் சேராமலிருக்கவும் காரணம் என்ன? பார்ப்பனரல்லாத வகுப்போ, ஜாதியோ, அதாவது வயிற்றுப் பிழைப்பை காங்கிரசின் மூலம் நடத்துகின்றவர்கள் தவிர மற்ற பார்ப்பனரல்லாதார் சமூகமே 'தேசத்துரோகிகளா'? அல்லது 'குலாம்களா'? அல்லது 'நக்கிப்பொறுக்கிகளா?' என்பதை யோசித்துப் பாருங்கள்.

திருவாளர்கள் ஏ.ரங்கசாமி அய்யங்கார், சத்தியமூர்த்தி, சி.வி.வெங்கட்ரமணய்யங்கார், பாஷ்யம்அய்யங்கார், ராஜகோபாலாச்சாரி, டாக்டர் ராஜன், மகாலிங்கய்யர் ஆகியவர்களுக்கு இருக்கும் 'சுயராஜ்ய தாகம்' 'சமதர்ம உணர்ச்சி' முதலியவைகள் திருவாளர்கள் வெரிவாட செட்டியார், இரத்தின சபாபதி முதலியார், டாக்டர் நடேச முதலியார், தம்மண்ண செட்டியார், குமார சாமி செட்டியார், காயாரோகணம் பிள்ளை முதலியவர்களுக்கு ஏன் இல்லை. முற்கூறியவர்களெல்லாம் மாத்திரம் தான் யோக்கியர்கள், நாணையக்காரர்கள், தேசபக்தர்கள், தியாகமூர்த்திகள் ஆகியவர்களா? பிற்கூறியவர்களெல்லாம் மாத்திரம் அந்தப்படி அல்லாதவர்களா? அல்லது தேசத்தின் பேரால் பணம் சம்பாதித்து அதனால் சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்களா?

இவைகள் ஒருபுறம் இருந்தாலும், இன்று தமிழ் நாட்டு காங்கிரஸ் மகாநாட்டுத் தலைவரிடமாவது, காங்கிரஸ் கமிட்டித் தலைவரிடமாவது இன்று காங்கிரசில் வேலை செய்யும் காங்கிரஸ் தொண்டர்கள் அல்லது பக்தர்கள் என்பவர்களில் 100க்கு 5 பேருக்காவது நம்பிக்கையோ, அல்லது மரியாதையோ இருக்கின்றதா? என்று காங்கிரஸ் பக்தர்களையும் தொண்டர்களையும் கேட்டுப்பாருங்கள். பார்ப்பனரல்லாத தொண்டர்கள் ஒவ்வொருவரும் அவர்களிடம் அடியோடு நம்பிக்கை இல்லை என்று தான் சொல்லுவார்கள், சொல்லுகிறார்கள்.

அப்படி யிருக்க அவர்களை தலைவர்களாக்கியதும், தலைவர்களாகக் கொண்டாடுவதும், அவர்களது தலைமையில் தொண்டாற்றுவதுமான காரியம், வெறும் - பரிசுத்தமான வயிற்றுப் பிழைப்பு நாடகமாக இராமல், கடுகளவாவது நாணையமோ, சுயமரியாதையோ உடைய தேசியமாகவோ, தேசபக்தியாகவோ இருக்க முடியுமா என்று நன்றாய் யோசித்துப் பாருங்கள்.



சைவ மடங்களில் வெட்டிச் சோறு இல்லாவிட்டால் அங்கு எப்படி நூற்றுக்கணக்கான மொட்டைப்பண்டாரங்கள் இருக்கமுடியாதோ அது போலவே, காங்கிரஸ் பெயரைச் சொல்லி வயிறுவளர்க்க இடம் இல்லாவிட்டால் இன்று இத்தனை தேச பக்தர்கள் ,தேசிய வீரர்கள் , தொண்டர்கள், காங்கிரசில் இருந்து 'தொண்டாற்ற' முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள். அன்றியும் இன்று காங்கிரசில் வயிறு வளர்ப்பவர்களில் 100க்கு 90 பேர் இதில் வந்து சேர்வதற்கு முன் எங்காவது நாணயமான, கௌரவமான தொழிலில் ஈடுபட்டு தாராள முறையில் சுதாவில் வயிறு வளர்த்தார்களா என்றாவது யோசித்துப் பாருங்கள்.

எங்கோ இரண்டு ஒன்று மூளையிலுள்ள கோளாறாலோ வேறு காரியங்களை எதிர்பார்த்தோ இந்த கூட்டத்தில் சேர்ந்திருப்பதாலேயே அவர்களை உதாரணமாகக் கொண்டு வராதீர்கள். அதிகம் பெயர்களின் யோக்கியதைகளையே கவனித்துப் பார்க்க விரும்புகிறோம்.

இவற்றையெல்லாம் 'குடி அரசு' ஆரம்பித்த காலத்திலேயே பக்கம் பக்கமாய் எழுதியிருந்தாலும் மேடை மேடையாய் கூப்பாடு போட்டிருந்தாலும் இப்போதும் அதை ஏன் திருப்புகிறோம் என்றால், உண்டியல் காசில் வயிறு வளர்த்துக் கொண்டு மேடையேறி கள்ளு, சாராயக்கடைகளில் குடிகாரர்களும், கீழ்மக்களும், வெறிகாரர்களும் பேசுவதுபோல் வாயில் வந்தபடி மற்றவர்களைப் பேசும் இழிதன்மையின் யோக்கியதையையும் காரணங்களையும் மக்களுக்கு எடுத்துக்காட்டவே நாம் எழுத நேரிடுகின்றது.

காங்கிரஸ் தொண்டர்கள் என்பவர்கள், காந்தி பக்தர்கள் என்பவர்கள், அஹிம்சா தர்மத்தைக் கடைப்பிடித்தவர்கள் என்பவர்கள் வெளிப்படையாய் தேர்தல் கூலிகளான பிறகும், கூலிக்கு மற்றவர்களை வையத் தொடங்கிய பிறகு அவர்களது யோக்கியதையை பொது ஜனங்களுக்கு வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை.

காந்தியைக் கும்பிடுவதிலோ, அவர்மீது புகழ் மாலை பாடி ஜீவனம் செய்வதிலோ நமக்கு பொறாமையில்லை. கல்லைக் கும்பிட்டு அதன்மீது புகழ்மாலை பாடி அதன் பெயரை சொல்லிக் கொண்டு வயிறுவளர்க்கும், முட்டாள்தனத்தை விட, இதை நாம் அதிகமாக குற்றம் சொல்லவரவில்லை. ஆனால், அதற்காக தேர்தலில் ஏன் பிரவேசிக்க வேண்டும் என்று தான் யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம்.

ஏற்கனவே இருக்கின்றவர்களை விட இவர்கள் தரகர்களாயிருந்து வேலை செய்வதன் மூலம் கொண்டு வந்து நிறுத்தப்படுபவர்கள் எந்த விதத்தில் யோக்கியர்கள், நாணையமானவர்கள் என்று சொல்லக்கூடும் என்று கேட்கின்றோம். தொண்டர்களுக்கு கூலி கொடுத்து, அல்லது கூலி



RangaRakes tamilnavarasam.com

கிடைக்கச் செய்து மற்றவர்களை வாய்கொண்டமட்டும் வையச் சொல்லுகின்றார்கள் என்பதைத்தவிர வேறு என்ன அதிகமான யோக்கியதை இருக்கின்றவர்களுக்கு இவர்கள் கங்காணிகளாக இருக்கின்றார்கள்?

எந்த காங்கிரஸ்–கதர்–மறியல் தொண்டருக்கும் தேர்தலைப்பற்றி பேசவும், பார்ப்பனரல்லாத பிரமுகர்களைப்பற்றி வசைபாடவும் என்ன அவசியம் இருக்கின்றது? சர்க்காராரை வைதுவிட்டு வயிறு வளர்ப்பதில் அக்கரை இல்லை. மற்றபடி தேர்தல் ஸ்தாபனங்களில் இருக்கும் நபர்களைப் பற்றி பேசவேண்டிய காரியம் எதற்கு? அதுவும் பார்ப்பனர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு எதிர் அபேக்ஷகர்களிடம் கூலி வாங்கிக் கொண்டு பேசுவது என்றால் யார் சகிப்பார்கள்? அந்தப்படி எதற்காக சகித்துக் கொண்டு இந்த இழிவான வேலையில் ஒரு கூட்டம் பிழைப்பதை பார்த்துக் கொண்டு இருக்க வேண்டும் என்பதும் நமக்குத் தெரியவில்லை.

மனிதர்களுடைய சொந்த குணங்களின் உண்மையை இருபுறமும் சொல்லுவதைப் பற்றி நமக்கு சங்கடம் இல்லை. ஆனால் அவர்கள் அந்தக் கக்ஷிக்காரர் இந்தக் கக்ஷிக்காரர் என்றும் காங்கிரஸ் கக்ஷிக்காரர் அல்ல என்றும் சொல்லுவதனால் அதில் நாணையம் உண்டா என்றும் பாருங்கள்.

காங்கிரஸ் கக்ஷிக்காரர் என்றால் என்ன அருத்தம்? ‘தொண்டர்களுக்கு சோற்றுக்கு கொடுக்கின்றவர்’ என்பதைத் தவிர வேறு என்ன விதமான நல்ல அபூர்வ- பொது நன்மைக்கு ஏற்ற நாணையமான குணம் இருந்தது - இருக்கின்றது-இருக்கும் என்று சொல்ல முடியும்? அளவுக்கு மிஞ்சினால் எதுவும் கெடுதி என்பதை உணராமல் மக்கள் எல்லோரையும் மூடர்கள் என்று எண்ணிக்கொண்டு வேலை செய்வது என்பது என்றைக்கானாலும் ஒரு நாளைக்கு வெளியாக்கப்படவேண்டியதாய் தான் முடிகிறது.

ஆதலால் பொது ஜனங்கள் பார்ப்பன தந்திரத்தைக் கண்டும், பார்ப்பனக் கூலிகளின் நாடகத்தைக் கண்டும் ஏமாந்துபோக கூடாது என்று எச்சரிக்கை செய்கின்றோம்.

நிற்க பல ‘தேசபக்தர்கள்’ தாங்கள் ஜெயிலுக்குப் போய் விட்டு வந்ததை பிரமாதமாகப் பேசி மக்களை ஏய்க்கின்றார்களாம். அனேகருக்கு வீட்டுச்சாப்பாட்டை விட இப்போதைய ஜெயில் சாப்பாடு நல்ல சாப்பாடு என்பதையும்,வீட்டிலிருப்பதை விட அங்கு சௌக்கியம் அதிகம் என்பதையும் யாவரும் அறியாமல் இல்லை. இதற்கு மற்றொரு உதாரணமாக 5.11.31ந் தேதியின் ‘இந்தியா’ வாரப்பத்திரிக்கையில் உண்மையில் நடந்ததாக எடுத்துக்காட்டியிருக்கும் ஒரு விஷயத்தை குறிப்பிடுகின்றோம். அதாவது, ‘வேலையில்லா திண்டாட்டத்துக்கு பரிகாரம்’ என்ற தலைப்பின் கீழ்.



> ‘ஒரு அதிகாரி ஒருவனுக்கு 12 மாதம் தண்டனை விதித்தார். அதற்கு எதிரி பிரபுவே உமக்கு வந்தனம். எனது கஷ்டத்தை கொஞ்ச காலத்திற்குத் தீர்த்து வைத்தீர்கள். என்னைப்போல் வேலையில்லாமல் திண்டாடும் ஒவ்வொருவரும் இதை அடைவது நலம் என்று சொல்லி அதாவது (ஒரு வருஷத்திற்காவது தனக்கு சாப்பாட்டிற்கு வழியேற்றப்பட்டதே என்று) சந்தோஷப்பட்டான்

என்பதாகும்.

இந்தப்படி விஷயங்களைப் பச்சையாய் எடுத்துச் சொல்லுவதில் சிலருக்கு சங்கடம் இருக்கலாம். உண்மையாய், யோக்கியமாய் வேலை செய்கின்ற தொண்டர்களைப்பற்றி நாம் யாதொன்றும் கற்பிக்க வரவில்லை. அப்படிக்கில்லாமல் மேல் கண்டபடியெல்லாம் பேசுவதும், உண்மைக்கு விரோதமாக துவேஷபுத்தியுடன் சுயநலத்துக்கு விஷமப் பிரசாரம் செய்வதும், மற்றும் ஒருவருக்கொருவர் உள்ள சொந்த மனஸ்தாபங்களில் புகுந்து ஒருவரிடம் கூலி வாங்கி மற்றவர்களை வைய உபயோகித்துக் கொள்வதுமான ‘தேச சேவை’யைக் கண்டிக்காமல் இருப்பது பயங்காளித்தனமாகும் என்பதோடு, ஒழுங்குக்கும் சமாதானத்திற்கும் பங்கமேற்படுத்துவதுமாகும் என்றே வெளிப்படுத்துகிறோம்.

கடைசியாக ஒரு வார்த்தை சொல்லி இதை முடிக்கின்றோம். அதாவது:- இந்தமாதிரி ‘தேசீயத்தொண்டர்’களைச் சுவாதீனம் செய்து, அவர்களை ஏவி விட்டு, தங்கள் பகைமைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் காரியம் செய்கின்றவர்களுக்கு இன்று சற்று சந்தோஷமாயிருப்பதாகக் காணப்படலாமே ஒழிய, நாளைக்கு இதே தொண்டர்களை சற்று அதிகக்கூலி கொடுத்து வாங்கி, இவர்கள் மீதே உசுப்படுத்திவிடுவது என்பது பிரமாதமான காரியம் அல்லவென்பதை நினைவிலிருத்தும்படி தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 15.11.1931**



RangaRakes tamilnavarasam.com

# திரு.காந்தி தனித்தொகுதியை மறுப்பதின் ரகசியம் I

## சீர்திருத்தம் கூடாது என்பதேயாகும்

**– தேசீயத்துரோகி**

திரு.காந்தியும், காங்கிரசும், பார்ப்பனர்களும் தனித்தொகுதி கூடாது கூடாது என்று கூச்சலிட்டுக் கொண்டு வருகின்றனர். தனித்தொகுதி இருந்தால், அரசியலில் எல்லா வகுப்பினர்களும் சம உரிமை பெற முடியும். ஆகையால் தனித்தொகுதியோடு கூடிய அரசியல் சீர்திருத்தமே வேண்டுமென்றும், நாட்டில் உள்ள சிறுபான்மை வகுப்பினர்களும், அவர்களின் தலைவர்களும் கூறுகின்றனர். இதை நாட்டின் உண்மை நிலையைத் தெரிந்த நடுநிலையாளர்கள் சரியென்று ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆனால், தனித்தொகுதிக்கு எதிராக இருக்கின்றவர்கள், தனித்தொகுதி வேண்டுமென்று கூறுபவர்களையும், அதை ஆதரிப்பவர்களையும், வகுப்பு வாதிகள் என்றும் தேசத்துரோகிகள் என்றும் தாராளமாக பிரசாரஞ் செய்கின்றனர். தேசீயப் பத்திரிகைகளும், இவர்கள் பாடும் பல்லவியையே பாடி வருகின்றன.

இந்த முறையிலேயே பார்ப்பனரின் மகாத்துமாவாகிய திரு.காந்தியும், அவரைப் பின்பற்றுபவர்களும், ஒரேயடியாகத் தனித்தேர்தல் முறை கூடாது என்று கூறுவார்களானால் அதில் ஏதாவது தேசிய நோக்கம் இருக்கலாம் என்றாவது சொல்ல இடமுண்டு. ஆனால் இங்கிலாந்து வட்டமேஜை மகாநாட்டிற்குப் போன பின் திரு. காந்தியும், மாளவியா போன்ற வைதீகர்களும், முஸ்லீம்களுக்கும், சீக்கியர்களுக்கும், தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்கச் சம்மதிப்பதாகவும், தீண்டத்தகாதார்களுக்கும், மற்ற சிறுபான்மை சமூகத்தாருக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்கக் கூடாதென்றும் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

திரு.காந்தியவர்கள், "எனது உயிரை விட்டாவது தீண்டாதாருக்குத் தனிப்பிரதிநிதித்துவம் கொடுப்பதை மறுப்பேன்" என்று வெகு உறுதியாகப் பலவிடங்களில் சொல்லி வருகிறார். வட்டமேஜை மகாநாட்டிலிருக்கும் மற்ற வைதீகர்களும், திரு.காந்திக்குத் துணையாக நிற்கின்றனர். ஆனால் திருவாளர்கள் சாப்ரூ, பாத்ரோ போன்ற அரசியல் வாதிகளும், முஸ்லீம்களும், தீண்டாதாருக்கும் சிறுபான்மையோருக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுப்பதை உறுதியாக ஆதரித்து நிற்கின்றனர்.

முஸ்லீம்களும், தீண்டாதார்களும், மற்ற சிறுபான்மை வகுப்பினர்களும் சேர்ந்து ஒவ்வொரு மாகாணச் சட்டசபையிலும், தலைமைச் சட்டசபைகளிலும், ஒவ்வொரு வகுப்பினருக்கும், இத்தனை இத்தனை பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்று ஒரு திட்டம் தயார் செய்து, அதை முதல் மந்திரி, திரு.மெக்டனால்டு அவர்களிடம் கொடுத்து விட்டார்கள். அத்திட்டத்தினாலும், தீண்டாதார்களுக்கு அரசியல் சமூகப்பங்கு கிடைக்கிறதே அல்லாமல் சமத்துவம் பெறுவதற்குத் தடை இருக்கிறதாயினும், திரு.மெக்டனால்டு அதை ஒரு முக்கியமான திட்டமாகக் கருதி, சிறுபான்மையோர் பிரச்சினைக் கமிட்டியின் கடைசிக் கூட்டத்தில், "சிறுபான்மையோர் உரிமைகளை முடிவு செய்யும் போது அத்திட்டத்தையும், முக்கியமான ஒரு கருவியாக வைத்துக் கொண்டு முடிவு செய்யப்படும்" என்று கூறிவிட்டார். ஆகவே, பிரிட்டிஷாரும், முஸ்லீம்களும், கிருஸ்தவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும், ஐரோப்பியரும், வட்டமேஜை மகாநாட்டு இந்தியப்பிரதிநிதிகளில் மெஜாரிட்டியாரும், தீண்டாதாருக்கும், மற்ற சிறுபான்மையினருக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுப்பதை ஆதரிக்கின்ற காரணத்தால் வட்டமேஜை மகாநாடு வெற்றிகரமாக முடிந்தால் தனிப்பிரதிநிதித்துவம் விரும்பும் சமூகத்தாருக்கு அது கிடைப்பது நிச்சயம். இவ்வாறு தனிப்பிரதிநிதித்துவம் கேட்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், சிறுபான்மையினருக்கும் வெற்றியேற்படாமலிருக்கத் திரு.காந்தியும் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்து பார்த்தார். முஸ்லீம்களுக்கு அவர்கள் இஷ்டப்படி பாதுகாப்பு கொடுக்கச் சம்மதிப்பதாகவும், ஆனால் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க மறுக்கும் விஷயத்தில் தன்னோடு ஒத்துழைக்கச் சம்மதிக்க வேண்டு மென்றும் கேட்டார். ஆனால் முஸ்லீம் பிரதிநிதிகளோ இந்த மோசமும், சூழ்ச்சியுமான உடன்படிக்கைக்குச் சிறிதும் சம்மதிக்கவில்லை.

இவ்வாறு தீண்டாதார்களுக்கும், மற்ற சிறுபான்மை வகுப்பினரான கிருஸ்தவர், ஐரோப்பியர் முதலானவர்களுக்கும் ஒரே பிடிவாதமாகத் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க திரு.காந்தியவர்கள் மறுப்பதன் இரகசியம் என்ன என்பதைக் கவனிப்போம். திரு,காந்தியும், மாளவியா, ரங்கசாமி அய்யங்கார் முதலானவர்களும் வருணாச்சிரம தருமத்திற்கு முள்வேலி போடுகிறவர்கள் என்பதை அவர்கள் பேச்சிலிருந்தும், நடவடிக்கைகளிலிருந்தும் நன்றாய் அறியலாம். வரப்போகும் சுயராச்சியம், வைதீகர்களுக்கும், அவர்கள் மதங்களுக்கும், கலைகளுக்கும், நாகரீகங்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் சுயராச்சியமாக இருக்க வேண்டும் என்பது திரு.காந்தியினு





RangaRakes tamilnavarasam.com

டைய கொள்கையும், காங்கிரஸ் கொள்கையும் ஆகும் என்பதைக் கராச்சி காங்கிரஸ் செய்திருக்கும் தீர்மானத்திலிருந்து அறியலாம்.

முஸ்லீம், கிருஸ்தவர், தீண்டாதார், ஐரோப்பியர் ஆகிய எல்லோருக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுத்து விட்டால், சட்டசபைகளில் இவர்களின் சரியான பிரதிநிதிகள் கண்டிப்பாக வந்து சேர்ந்து விடுவார்கள். மேற்கண்ட வகுப்பினர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்தால் இந்துக்களின் பிரதிநிதிகளுக்கு சற்றேறக்குறைய சமமாக ஆகிவிடுவார்கள். முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும், ஐரோப்பியர்களும், தீண்டாதார்களும், வைதீக இந்துக்களைப் போல் வருணாச்சிரமதர்மவாதிகள் அல்லர்; சமதர்ம விரோதிகள் அல்லர். ஆகையால் சீர்திருத்த தீர்மானங்களும்சமூக சமத்துவத் தீர்மானங்களும், சமதர்மத் தீர்மானங்களும் நிறைவேற்றப்படலாம். இவைகளின் மூலம் வைதீகமும், வருணாச்சிரம தர்மமும் அழிக்கப்படலாம். ஆகவே வருணாச்சிரமதர்மமும், வைதீக இந்து மதமும் அழிய வேண்டிய நிலைக்கு வந்து விடும். இந்தக் கருத்தை மனத்தில் வைத்துக் கொண்டுதான் வருணாச்சிரமத்தையும், வருணாச்சிரம இந்து மதத்தையும் காப்பாற்றவே பிறந்திருக்கும் திரு.காந்தி தீண்டாதார்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க மறுக்கிறார் என்பதில் சந்தேகப்பட வேண்டியதில்லை. திரு.காந்தியின் மனப்பாங்கை நன்றாய் அறிய வேண்டுமானால் மற்றொரு விஷயத்திலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். அதாவது திரு.காந்தியவர்களை "முஸ்லீம்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்கச் சம்மதிக்கும் போது தீண்டாதவர்களுக்கு அவ்வாறு கொடுக்க ஏன் ஆட்சேபிக்கிறீர்கள்" என்று கேட்ட போது திரு.காந்தி "லெட்சுமணபுரி காங்கிரஸ் ஒப்பந்தப்படி அவர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் கொடுப்பதைக் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளுகிறது" என்றார். மறுபடியும் "லெட்சுமணபுரி ஒப்பந்தப்படி சீக்கியர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்க ஏற்பாடு இல்லையே" என்று கேட்ட போது, இதற்குத் திரு.காந்தி "சரித்திர சம்பந்தமான காரணங்களால் முஸ்லிம்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டியதிருக்கிறது" என்று கூறினார். இவ்வார்த்தையில் தான் திரு.காந்தியின் மனப்பான்மை நன்றாய் விளங்குகிறது. முஸ்லிம்களும், சீக்கியர்களும், பரம்பரையாகப் பெருமையோடு வாழ்ந்தவர்கள். அரசர்களாக இருந்து ஆட்சி புரிந்தவர்கள் ஆகையால் அவர்கள் அரசாங்க உரிமைகளுக்குப் பாத்தியமுடையவர்கள். ஆகவே அவர்களுடைய உரிமைக்குப் பங்கம் உண்டாகாதபடி அரசியல் பாதுகாப்புகள் வேண்டியது என்னும் கருத்தும், தீண்டாதார்களோ பரம்பரையாகச் சுதந்தரமின்றி அடிமையாகத் தாழ்த்தப்பட்டே வாழ்ந்தவர்கள். அவர்கள் ஆட்சி புரிந்த பரம்பரையைச் சேர்ந்தவர்கள் அல்லர். ஆகையால் அவர்களுக்கு அரசியலில் பங்கு பெறுவதற்குப் பாதுகாப்பு வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தும் அடங்கியிருக்க வில்லையா? இக்கருத்துக்கும் வருணாச்சிரம தர்மத்தைப் பாதுகாக்க வேண்டும் என்னும் அபிப்பிராயத்திற்கும்



வித்தியாசம் என்ன இருக்கிறது. வருணாச்சிரம தருமம் எவ்வாறு பரம்பரையாக உயர்வு பெற்று சுதந்தரம் அனுபவிப்பவர்கள் அவ்வாறே அனுபவிக்கவும், பரம்பரையாக அடிமையாக இருந்து தொழிலாளிகளாய் கூலிகளாய் அல்லற்படுபவர்கள் அவ்வாறே இருக்கவும் அரண் செய்கிறதோ அவ்வாறு தானே திரு.காந்தியின் மேற்கண்ட அபிப்பிராயம் இருக்கிறது என்பது யோசித்துப் பார்ப்பவர்களுக்குத் தெரியாமற் போகாது.

இன்று தீண்டத்தகாத வகுப்பினர்கள் இந்தியாவில் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பது திரு.காந்திக்குத் தெரியாததல்ல. பொது ரோட்டில் நடக்க முடியாத தீண்டத்தகாதவர்கள்-பொதுக் குளம், கிணறுகளில் தண்ணீர் எடுக்க முடியாத தீண்டத்தகாதவர்கள்-பொது இடமான கோயில் சத்திரம் முதலியவைகளில் பிரவேசிக்க முடியாத தீண்டத் தகாதவர்கள்-ரயில்வே ஸ்டேஷன் ஹோட்டல்களிலும், மற்றும் தனிப்பட்டவர்கள் வைத்திருக்கும் ஹோட்டல்களிலும் போக முடியாதிருக்கும் தீண்டத்தகாதவர்கள் பொதுத் தொகுதியில் நின்று உயர்ந்த ஜாதிக்காரர்களால் சட்ட சபைக்குத் தெரிந்தெடுக்கப்படுவார்களா? என்பது திரு.காந்திக்குத் தெரியாததல்ல. வயது வந்தவர்கள் எல்லோருக்கும் ஓட்டுரிமை கொடுக்கும் காரணத்தாலும், திரு.காந்தியின் காங்கிரசின் முயற்சியாலும் ஒரு தீண்டத்தகாத வகுப்புப் பிரதிநிதி தெரிந்தெடுக்கப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும் (ஏற்படுவதே சந்தேகம்) திருவாளர்கள் அம்பெட்கார், ஆர்.சீனிவாசன், எம்.சி.ராஜா போன்ற உண்மையான-சுயமரியாதையுள்ள அவ்வகுப்புப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படமுடியாமல் உயர்ந்த ஜாதிக்காரர்களின் தயவை நாடி அவர்களுடைய அபிப்பிராயத்தை அனுசரித்து நடக்கும் ஒரு போலி வருணாச்சிரம வைதீகப்பிரதிநிதிதான் தெரிந்தெடுக்கப்படக்கூடிய நிலை ஏற்படும் என்பதும் திரு.காந்திக்குத் தெரியாததல்ல. தெரிந்திருந்தும் அவர்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க மறுத்தால் அதை ஒரு சூழ்ச்சியாகத்தானே கொள்ள வேண்டும்?

உள்ளபடியே தனிப்பிரதிநிதித்துவம் இல்லாமலே தீண்டாதவர்களுக்கு அரசியலில் சம உரிமையும் சமூகத்தில் சம உரிமையும் கொடுத்து விடலாம் என்று திரு.காந்தி நினைப்பாரானால் அதை நாம் எவ்வாறு ஒப்புக்கொள்ள முடியும்?

சென்ற ஒத்துழையாமையின் போது திரு.காந்தி, தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்பதைக் காங்கிரசில் முக்கியமாகச் சேர்த்த காரணத்தால் தானே ஒத்துழையாமையும் தோல்வி யடைந்து, காங்கிரசில் இருந்த பார்ப்பனர்களும் பிரிந்து சுயராஜியக்கட்சியை ஆரம்பித்தார்கள். திரு.காந்தியையும் மூலையில் தூக்கிப்போட்டு விட்டார்கள். இப்பொழுதும் தீண்டாதவர்கள் சார்பாகத் திரு.காந்தி உண்மையாக ஏதாவது நன்மை செய்யவேண்டுமென்று நினைத்தால் பார்ப்பனர்களும், காங்கிரசும் தன்னைக் கை விட்டு விடுவதோடு முன்போலவே மூலையில் உட்காரவைத்து விடுவார்கள்



RangaRakes tamilnavarasam.com

என்பதை அவர் அறியாதவர் அல்லவே. இந்த எண்ணம் கொண்டு தான் திரு.காந்தியவர்கள் ஒத்துழையாமை செத்தபிறகு தென்னாட்டுக்கு வரும் போது வருணாச்சிரம மூட்டையைத் தலையில் தூக்கிக்கொண்டுவந்து வருணாச்சிரம பிரசாரம் செய்து பார்ப்பனர்களை சுவாதீனம் செய்துகொண்டு போனார். அந்த உறுதியினால் தான் அவரது உப்பு சத்தியாக்கிரக இயக்கத் துக்கும் எல்லா பார்ப்பனர்களும் அவரோடு ஒத்துழைத்து விளம்பரம் கொடுத்து மகாத்மா பட்டத்தை அரங்கேற்றினார்கள்.

ஆகவே இப்போது திரு.காந்தி தீண்டாதவருக்கும், மற்ற சிறு பான்மை வகுப்பினருக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுப்பதை மறுப்ப தின் காரணமும், உயிர் போனாலும் ஒப்பமாட்டேன் என்று சொல்லும் காரணமும், வருணாச்சிரமத்தையும் வைதீக இந்துமதத்தையும் பாது காக்கவேதான் பாடுபடுவதாக பார்ப்பனர்கள் உணர வேண்டும் என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை யென்று உறுதியாகக் கூறுகிறோம்.

திரு.காந்திக்கு இந்த அபிப்பிராயம் இருப்பதை அனுசரித்துத்தான் இங்குள்ள வருணாச்சிரம தர்மக்காரர்களும் திரு.காந்தியை வானம் அளாவ மகாத்மா என்றும், அவதார புருஷரென்றும் கொண்டாடுகிறார்கள். மற்றும் தான் 'தீண்டாதாரின் தனிப்பிரதிநிதித்துவத்திற்கு விரோதி என்கின்ற பெயருடன் இந்தியாவுக்குத் திரும்பி வருவாரேயானால் கண்டிப்பாக திரு.காந்தியை 'மகாத்மா காந்தி' என்பதோடு மாத்திரமல்லாமல் 'பகவான் மகாத்மாகாந்தி' என்கின்ற பட்டம் கிடைக்கும் என்பது அவருக்குத் தெரியும். இந்த விஷயங்களையெல்லாம் நன்றாய் உணர்ந்ததினால் தான் தீண்டாதார் சமூகத்தாரும் தங்கள் சமூக சங்கங்கள் மூலமும், மகாநாடு மூலமும், பொதுக் கூட்டங்கள் மூலமும் திரு.அம்பெட்கார், திரு.சீனிவாசன் ஆகியவர்களே தங்கள் பிரதிநிதிகள் என்றும், திரு.காந்தியும், காங்கிரசும் தங்கள் பிரதிநிதிகள் அல்லவென்றும் தீர்மானங்களை நிறைவேற்றி யிருக் கிறார்கள். இதற்கு மாறாக இங்குள்ள வருணாச்சிரமதருமிகள் சில போலி களைப் பிடித்து திரு.அம்பெட்காரும், திரு.சீனிவாசனும் தாழ்த்தப்பட்டவர் களின் நம்பிக்கைக்கு உரியவர்கள் அல்லர் என்றும் திரு.காந்தியும், காங்கிரசுமே தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளென்றும், புரட்டுத்தந்திகள் கொடுத்திருக்கிறார்கள். இந்த வருணாச்சிரம தர்மவாதிகளை அனுசரித்தே தேசீயப் பத்திரிகைகளும் பெரும் பிரசாரம் செய்கின்றன. தேசீயவாதிகளும் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். ஆகவே இவர்கள் செய்யும் புரட்டுகளும், ஆரவாரங்களும் தாழ்த்தப்பட்டவர்கள் தலையில் கை வைக்கச் செய்யப் படும் சூழ்ச்சிகள் என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 22.11.1931.**



# கார்ப்பொரேஷன் தேர்தலைப்பற்றி பார்ப்பனர் குறை கூறுவதன் ரகசியம் II

**- தேசீயத்துரோகி**

சென்னை கார்ப்பொரேஷனில் திரு.ஏ.ராசசாமி முதலியார் தலைவ ராயிருக்கும் காலத்தில், தலைவர் தேர்தலுக்குப் போட்டி போட்டுக் கொண்டு அதனால் வகுப்புச் சண்டையை வளர்க்கும் தொல்லையை நீக்குவதற்காக ஒரு சமரசமான முடிவு செய்து கொண்டனர். அந்த முடிவின்படி ஒவ்வொரு வருஷமும், தலைவர் தேர்தல் கஷ்டமில்லாமல் நடக்க ஏதுவாயிற்று. அவ்வொப்பந்தம் சென்னையில் உள்ள ஒவ்வொரு வகுப்பினரும் தங்கள் தங்கள் எண்ணிக்கைக்குத் தக்கவாறு கார்ப்பொரேஷனில் தலைமைப்பதவி பெற வழிசெய்தது. அவ்வொப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் அனேகமாக எல் லோரும் அதை நியாயமான ஒப்பந்தம் என்று பாராட்டினர். அவ்வொப்பந்த மாவது,

1. பிராமணரல்லாதார்
2. பிராமணர்
3. பிராமணரல்லாதார்
4. கிருஸ்தவர்
5. பிராமணரல்லாதார்
6. முஸ்லீம்
7. பிராமணரல்லாதார்
8. தாழ்த்தப்பட்டவர்கள்

என்று இவ்வாறு குறிப்பிட்டபடி அந்தந்த வகுப்பிலிருந்து தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டியது என்பதாகும். இவ்வொப்பந்தப் படியே முதலில் திரு.பி.டி.குமாரசாமி செட்டியார் அவர்கள் தலைவராக தெரிந்தெடுக்கப்பட்டார். அவருடைய உத்தியோக காலமாகிய ஒரு வருஷம் முடிந்தபின், அடுத்த தலைவர் தேர்தல் சென்ற 12-11-31ல் நடைபெற்றது. இத்தேர்தலில் முன் ஏற்படுத்திய திட்டப்படி ஒரு பிராமணர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவராவார். ஆகையால் பிராமணரல்லாத வகுப்பினரும் மற்ற வகுப்பினரில் யாரும் தலைவர்



RangaRakes
tamilnavarasam.com

தேர்தலுக்குப் போட்டியிடவில்லை. ஆனால் பிராமணர்களுக்குள்ளேயே போட்டி உண்டாயிற்று திரு.ஜி.ஏ.நடேசன் அவர்களும் திரு.டி.எஸ்.ராமசாமி அய்யர் அவர்களும் போட்டி இட்டனர். இப்போட்டியில் திரு.டி.எஸ். ராமசாமி அய்யரே வெற்றி பெற்றார். திரு.ஜி.ஏ.நடேசன் தோல்வியுற்றார். பார்ப்பனரல்லாத கார்ப்பொரேஷன் அங்கத்தினர்கள் திரு.டி.எஸ்.ராமசாமி அய்யருக்கு ஓட்டுச் செய்தனர். பார்ப்பன அங்கத்தினர்களும், ஐரோப்பிய அங்கத்தினர்களும் திரு.ஜி.ஏ.நடேசனுக்கு ஓட்டுச் செய்தனர். திரு.நடேசன் தோற்றதும், திரு.சத்தியமூர்த்தி சாஸ்திரியார் முதலிய பார்ப்பனரும் மற்றும் பார்ப்பன தாசர்களும் ஐரோப்பியரும் "ஒப்பந்தம் முறிந்து விட்டது" "முறிந்து விட்டது" என்று கூச்சல் போட ஆரம்பித்து விட்டனர். ஆனால் உண்மையில் ஒப்பந்தம் முறிந்து விட்டதா என்றால் முறியவில்லை என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. எப்படி எனில் இது வகுப்புவாத சம்பந்தமான ஒப்பந்தமே யொழிய வேறில்லை. உண்மையிலேயே ஒப்பந்தம் முறிந்துவிட்டதென்றால், பிராமணருக்குப் பதிலாக மற்றொரு பிராமணரல்லாதாரோ, கிறிஸ்தவரோ, தாழ்த்தப்பட்டவரோ தலைவராக வந்திருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் ஒப்பந்தத்தின் நிபந்தனைப்படி ஒரு பிராமணரே தலைவராக வந்திருக்கும் போது, ஏன் ஒப்பந்தம் முறிந்து விட்டதென்று கூச்சலிடவேண்டும் என்பதை நன்றாய் யோசித்துப் பார்த்தால் அதில் உள்ள இரகசியம் விளங்கும்.

முதற் காரணம் பார்ப்பனர்களின் மனத்திற் கிசைந்த ஒரு பார்ப்பனர் தெரிந்தெடுக்கப்படாததாகும். திரு.ஜி.ஏ. நடேசன் அவர்கள் பிராமணீயத்தையும், பிராமணர்களையும் அனுசரிக்கும் முழு வகுப்புவாதியாக இருக்கலாம். இக் காரணத்தைக் கொண்டுதான், பார்ப்பனர்கள் அவரை ஆதரித்தனர். ஐரோப்பியர்களைப் பற்றி நாம் சொல்லவேண்டிய தில்லை. அதுவும் சென்னையில் உள்ள ஐரோப்பியர்களும், பார்ப்பனர்களும் சகோதரர்களாகவோ, சம்பந்திகளாகவோ ஒருவரோடு ஒருவர் சேர்ந்திருப்பவர்கள் என்பது நாடறிந்த விஷயமாகும்.

அன்றியும் பார்ப்பனர்களால் ஆதரிக்கப்படுகிறவர் பார்ப்பனரல்லாதார்களுக்கு விரோதியாய் இருப்பார்கள். அப்படியிருப்பவர்களைத் தான் பார்ப்பனர்களும் ஆதரிப்பார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மை. பார்ப்பனர்களில் வகுப்புவாதம் இல்லாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்பது உண்மையானாலும் இரண்டு பிராமணர்கள் போட்டி போடும் போது அவர்களில் அதிக மோசமில்லாத ஒருவரை ஆதரிப்பதால் பிராமணரல்லாதார் செய்கையில் குற்றமாகாது. இந்த உத்தேசத்தின் பேரிலேயே பார்ப்பனரல்லாதார் திரு.டி.எஸ்.ராமசாமி அய்யரைத் தேர்தலில் ஆதரித்தனர். அன்றியும் பார்ப்பனரல்லாதாருடன் நெருங்கிப் பழகுபவர்களிடம் பார்ப்பனர்களுக்கு எப்படி விருப்பம் இருக்கக் கூடும்?. ஆகையால்தான் ஒப்பந்தம் முறிந்து விட்டது என்று அவர்கள் வீண் புரளி செய்கின்றனர். இது ஒரு புறமிருக்க இதை விட முக்கியமான இரகசியம் என்னவென்றால் இவ் வொப்பந்தத்தை அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்னும் நோக்கமும் ஆகும். ஏனெனில், இன்னொருமுறை பிராமணர் தலைவராய் வர 7 வருஷங்கள் ஆகும். அதுவரையிலும் பிராமணரல்லாதாரும், கிறிஸ்தவரும், மகமதியரும், தாழ்த்தப்பட்டவருமே தலைவராயிருக்க முடியும். இவ்வாறு மற்ற வகுப்பினர்கள் நீண்ட காலம் பதவி வகிப்பது பார்ப்பனர்களுக்குப் பொறுக்குமா? அன்றியும் ஒவ்வொரு தேர்தல்களிலும் பார்ப்பனர்கள் உள்ளே புகுந்து கலகம் செய்து கக்ஷி சேர்க்கவும் இவ்வொப்பந்தத்தால் இடமில்லாமல் போய்விட்டது. இந்தக் காரணங்களால் பார்ப்பனர்கள் ஒப்பந்தத்தை ஒழித்து விட வேண்டிய அவசியத்தில் வந்துவிட்டார்கள். வெள்ளைகாரரும் பார்ப்பனர்களுடைய தாயாதிகளேயானதால் இந்த ஒப்பந்தத்தால் வெள்ளைக்காரருடைய தயவுக்கு காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆதலால் அவர்களுக்கும் தங்கள் தயவு தலைவர் அபேக்ஷகர்களுக்கு இல்லாமல் போய் விட்டதே என்கின்றதைக் கொண்டு தங்களை யாரும் இனி லக்ஷியம் செய்ய மாட்டார்கள் என்று பயந்து கொண்டதுடன், இனித்தேர்தலிலும் தங்கள் தாசர்களைக் கொண்டு வரமுடியாமல் போய்விடுமே என்ற ஆத்திரத்தினாலும் ஒப்பந்தம் முறிந்துவிட்டது என்றும் புரளி செய்கின்றனர். பார்ப்பன பத்திரிகைகளாகிய சுதேசமித்திரனும், இந்துவும் இவ்வெண்ணத்தோடு தான், ஒப்பந்தம் முறிந்துவிட்டது என்று எழுதியிருக்க வேண்டும்.

திரு.ஜி.ஏ. நடேசன் தோற்றதனால் வருத்தமடைந்தவர்கள் சீனியர் அங்கத்தாராகிய திரு.நடேசன் அவர்களையே பார்ப்பனரல்லாதார் ஆதரித்திருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். சீனியருக்கும் ஒப்பந்தத்திற்கும் சம்பந்தமில்லை. சென்ற வருஷத் தேர்தலில் திரு.டாக்டர் நடேசன் அவர்களைத் தேர்ந்தெடுக்காமல் திரு.பி.டி.குமாரசாமி செட்டியாரைத் தெரிந்தெடுக்க வில்லையா? அப்பொழுது ஒப்பந்தம் முறிந்து போயிற்று என்று ஒருவரும் சொல்லவில்லையே. இப்பொழுது பார்ப்பனர்களுடைய முழு நம்பிக்கைக்குப் பாத்திரமுடையவரும், பார்ப்பனரல்லாதார் நம்பிக்கைக்குப் பாத்திரமில்லாதவரும் ஆகிய ஒருவர் வெற்றி பெறமல் வேறு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் தான் இந்தக் கூச்சல் உண்டாயிற்று என்பதை யோசிக்கும் போது பார்ப்பனர்கள் சத்தம் போடுவதின் ரகசியம் விளங்குகிறது. ஆகவே இதன் ரகசியம் எந்த வகையிலாவது ஒப்பந்தத்தை முறியச் செய்யவேண்டும் என்னும் சூழ்ச்சியேயாகும் என்று கூறி முடிக்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 22.11.1931**

# மற்றொரு 'சனியன்' "கார்த்திகைத் தீபம்"

மதத்தின் பெயரால் ஏற்பட்ட பண்டிகைகளின் மூலமாகவே நமது நாட்டுச் செல்வங்களும், மக்களின் உழைப்பும் பெரிதும் வீணாகிக்கொண்டு வருகின்றன என்பதை நாம் பலதடவை எடுத்துக்காட்டிப் பேசியும், எழுதியும் வருகிறோம். எவ்வளவு பேசினாலும், எவ்வளவு எழுதினாலும் நமது மக்களுக்கு இன்னும் அப்பண்டிகைகளில் உள்ள அபிமானமும், மூட நம்பிக்கையும் ஒழிந்த பாடில்லை. "அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும்" என்பதைப்போல, அடிக்கடி அவற்றின் புரட்டுக்களை வெளிப்படுத்தி வருவதனால் நமது மக்களுக்கு அவைகளின் உண்மை விளங்கக் கூடும் என்று கருதியே நாமும் இடைவிடாமல் எழுதிக் கொண்டு வருகிறோம்.

சென்ற மாதத்தில் தான் நமது நாட்டின் செல்வத்தைக் கொள்ளை கொண்டு பாழாக்கிச்சென்ற தீபாவளிப் பண்டிகையைப்பற்றி எழுதியிருந்தோம். அப்பண்டிகையால் நமக்குக் கிடைத்த பலன் என்ன? தீபாவளியின் பெயரால் ஏறக்குறைய 20 கோடி மக்களாவது பண்டிகை கொண்டாடி இருப்பார்கள். இவர்கள் பண்டிகை கொண்டாடியதன் பயனாய் சுமார் 10 கோடி ரூபாய்க்குக் குறையாமல் பாழ்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தப் பத்துகோடி ரூபாயும், அனாவசியமாய் துணிவாங்கிய வகையிலும், பலகாரங்கள் செய்த வகையிலும், பட்டாசு வாங்கிப் பொசுக்கிப் புகையும், கரியுமாக ஆக்கிய வகையிலும் செலவாயிருக்கும் என்பது மட்டும் அல்ல; பண்டிகை நாளில் வருத்தமின்றிக் களித்திருக்கவேண்டும் என்பதைக் கருதி ஏழைமக்கள் கள், சாராயம், பிராந்தி, விஸ்க்கி, ஜின், வொயின், பீர், ராமரசம் முதலிய வெறிதரும் பானங்களை குடித்துக் கூத்தாடிய வகையிலும் ஏராளமான பணம் செலவழிந்திருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தப்பண்டிகையினால் வெற்று நாளில் மறந்து போயிருந்த சாமிக்குப் படையல் போடத் தூண்டும் புராணக் கதை, மூடநம்பிக்கை மக்கள் மனத்தில் மறுபடியும் வந்து குடிபுகுந்ததோடு, அவர்களுடைய செல்வமும் கொள்ளைப்போகும் நிலை ஏற்பட்டது.



இவ்வளவு மாத்திரம் அல்ல; தீபாவளிப் பண்டிகைக்கு விடுமுறை விட்டதன் பயனாய், தினக்கூலிக்கு வேலை செய்யும் ஏழை மக்கள் கூலியை இழந்ததோடல்லாமல், கடன்வாங்கி நஷ்டமடைந்தது எவ்வளவு! வேலை நடக்கும் தொழிற்சாலைகள் மூடப்பட்டு, அதனால் தடைப்பட்ட காரியங்கள் எவ்வளவு! தீபாவளிக்கு முன் சில நாட்களும், தீபாவளிக்குப் பின் சில நாட்களும், தீபாவளியைக்கருதி மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தாமல் விளையாட்டுக்களிலும், வேடிக்கைகளிலும் கவனம் செலுத்திய காரணத்தால் அவர்களுடைய படிப்புக்கு நேர்ந்த கெடுதி எவ்வளவு! அரசியல் காரியங்கள் நடைபெறுவதில் இந்த ஓய்வால் தடைபட்ட காரியங்கள் எவ்வளவு?

இவ்வளவு தொல்லைகளையும் உண்டாக்கிச் சென்ற தீபாவளிப் பண்டிகையின் ஆர்பாட்டம் மறைந்து இன்னும் ஒரு மாதங்கூட ஆகவில்லை. சரியாய் 15 நாட்களுக்குள்ளாகவே மற்றொரு 'சனியன்' தொடர்ந்து வந்து விட்டது. இவ்வாறு தவறாமல் ஒவ்வொரு மாதமும் நமது நாட்டுச் செல்வத்திற்குச் 'சனியன்' பிடிப்பது வழக்கமாகவும், அவ்வழக்கம், "தெய்வீகம்" என்று சொல்லப்படுவதாகவும் "மதத்தின் முக்கியபகுதி" என்று சொல்லப்படுவதாகவும் இருந்து வருகிறது. இப்பொழுது வரும் 'சனிய'னாகிய பண்டிகை "கார்த்திகைத்தீபம்" என்பது தான். இந்தக் "கார்த்திகைத் தீபப்பண்டிகை"யை ஒரு பெரிய "தெய்வீகம்" பொருந்திய சிறந்த நாளாகக் கருதி இந்தியா முழுதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதை இந்து மதத்தில் உள்ள சைவர், வைணவர், வீரசைவர், ஸ்மார்த்தர் முதலிய எல்லாப் பிரிவினரும் கொண்டாடுகின்றனர்.

சாதாரணமாகக் கார்த்திகை நட்சத்திர தினத்தைச் "சுப்பிரமணியன்" என்னும் சாமிக்கு உகந்த சிறந்த நாளாகக் கருதியே "பக்தர்கள்" என்பவர்கள் விரதங்களும், பூஜைகளும் நடத்தி வருகின்றனர். சாதாரண காலத்தில் வரும் கார்த்திகைகளைவிட, கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகையே மிகவும் சிறந்த பண்டிகையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் பொருட்டுத் திருவண்ணாமலை முதலிய பல ஊர்களுக்கு யாத்திரை போய்ப்பணத்தைச் செலவு செய்து விட்டுத் திரும்பும்போது அங்கிருந்து வாந்திபேதியைக் கொண்டு வருகின்றனர். ஒவ்வொரு மாதமும் கார்த்திகைக்காக, வைத்தீஸ்வரன் கோயில், குன்றக்குடி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சுவாமிமலை முதலிய ஊர்களுக்கு மக்கள்சென்று செலவு செய்யும் செல்வங்களே பதினாயிரக்கணக்காகவும், இலட்சக்கணக்காகவும் ஆகும்போது 'பெரிய கார்த்திகை' என்று பெயர் பெற்று கார்த்திகை மாதப் பண்டிகை நாளில் செலவாகும் பொருள் கோடிக்கணக்கில் குறைவுபடுமா? இதில் எவ்வாறு பொருள் வீணாக்கப்படுகிறதென்பதை நினைத்துப் பாருங்கள்! தீபாவளிக்காக வர வழைத்து விற்பனையாகாமல் கடைகளில்



RangaRakes tamilnavarasam.com

தங்கிக்கிடக்கும் பட்டாசுகளுக்கு செலவுவந்து இந்தப் பட்டாசுகளின் மூலம் பணம் படபடவென்று சத்தமிட்டு வீணாக்கப்படும்.

வீடுகளுக்குள்ளும், வெளிப்புறங்களிலும், காடுகளிலும், மேடு களிலும், குப்பைகளிலும், கூளங்களிலும் எண்ணற்ற 100, 1000, 10000, 100000 கணக்கான விளக்குகளைக் கொளுத்தி வைப்பதன் மூலம் செலவாகும் நெய் எண்ணெய்ச்செலவு எவ்வளவு! கோயில்கள் என்பவைகளுக்குச் 'சொக்கப் பானை' கட்டி நெருப்புவைப்பதற்காகச் செலவு செய்யும் நெய், எண்ணெய், விறகு முதலியவைகளுக்காகும் செலவு எவ்வளவு! கார்த்திகைப் பண்டிகைக்காகத் திருவண்ணாமலை முதலிய ஊர்களுக்குப் பிரயாணஞ் செய்வதன் மூலமாகும் ரொக்கப்பணச் செலவு எவ்வளவு! அங்கு கூம்புக்கு (சொக்கப்பானை) செலவாகும் விறகு, கற்பூரம், வெண்ணெய், நெய் ஆகியவற்றிற்காகும் செலவு எவ்வளவு! இவ்வாறு பல வகையில் செலவு செய்யப்படும் கோடிக்கணக்கான பணங்களால் நமது நாட்டிற்குக் கடுகள வாவது பயனுண்டா என்று ஆலோசித்துப்பாருங்கள்.

இன்னும் இப்பண்டிகையினால் மக்களுக்குண்டாகும் மூடநம்பிக்கை யையும், அதனால் உண்டாகும் மூடப்பழக்கவழக்கங்களையும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! கார்த்திகையைப்பற்றி வழங்கும் புராணக்கதை இரண்டு. அவைகளில் ஒன்று:-

ஒருசமயம் 'அக்கினி தேவன்' (நெருப்பு) என்னும் 'கடவுள்' சப்த ரிக்ஷிகளின் மனைவிமார்களைப் பார்த்து மோகங்கொண்டானாம். அதை அறிந்த அவன் மனைவி 'சுவாகாதேவி' என்பவள், அந்த ரிக்ஷிகளின் மனைவிகளைத் தொந்தரவு செய்தால் அவர்களால் தன் கணவன் சபிக்கப் படுவான் என்று எண்ணினாளாம். அதனால் அவள் வசிஷ்டரின் மனைவி யாகிய அருந்ததி உருவத்தை மாத்திரம் விட்டுவிட்டு, மற்ற ஆறு ரிக்ஷி களின் மனைவிமார்களைப்போல் உருவங்கொண்டு தன் கணவன் ஆசையை நிறைவேற்றினாளாம். இவ்வாறு சுவாகாதேவி கொண்ட ஆறு உருவத்திற்கும் கார்த்திகை என்று பெயராம். இவைகள்தான் கார்த்திகை நட்சத்திரமாக காணப்படுவதாம். இந்த நட்சத்திரப் பெண்கள்தான் 'சுப்பிர மணியன்' என்னுஞ் சாமி குழந்தையாக இருக்கும்போது அதையெடுத்து வளர்த்தார் களாம்! என்பது ஒருகதை.

இக்கதையினால்தான் கார்த்திகை நட்சத்திரத்திற்குப் பெருமை. இக்கதை நமது மக்களுக்குக் கற்பிக்கும் மூடநம்பிக்கையைப் பாருங்கள். பிறர்மனைவி மேல் ஆசைப்பட்டு விபசாரம் பண்ணுவது குற்றம் இல்லை என்பது ஒன்று, மனைவி தன் கணவன் எந்தத் தகாத காரியத்தை விரும்பி னாலும் அதை எப்பாடு பட்டாவது பூர்த்திசெய்து கொடுக்கும் அடிமைக் கருவியாக இருக்க வேண்டுமென்பது ஒன்று. இவைமட்டும் அல்லாமல் இயற்கைப் பொருள்களின்மேல் எல்லாம் 'தெய்வீகம்' என்னும் மூட



நம்பிக்கையை உண்டாக்கும் துர்ப்போதனை ஒன்று, ஆகவே இவற்றை ஆராயும் போது இக்கதையும் இதன் மூலம் ஏற்பட்ட விரதம், பண்டிகை முதலியனவும் புரட்டு என்று உணரலாம்,

இனி, இக்கார்த்திகையைப் பற்றிய இரண்டாவது கதையாவது:-

ஒரு காலத்தில் பிரம்மா என்னும் கடவுளும், விஷ்ணு என்னும் கடவுளும் தாம் தாமே ஆதி மூலக்கடவுளர் என்று கூறிக்கொண்டதனால் இருவருக்கும் முதலில் வாய்ச் சண்டை உண்டாகி, பிறகு அது கைச் சண்டையாக மூண்டு ஒருவரோடு ஒருவர் அடிபிடி சண்டை செய்தனராம். அவர்களுடைய சண்டை சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கும் வரவில்லையாம். ஆகையால் அப்பொழுது 'பரமசிவன்' என்னும் 'கடவுள்' அவர்கள் மத்தியில் ஒரு பெரிய 'ஜோதி' உருவத்தோடு வானத்திற்கும் பூமிக்குமாக நின்றாராம். உடனே சண்டைக்காரக் 'கடவுள்'கள் இருவரும் ஒன்றும் தெரியாமல் திகைத்து நின்றார்களாம். அப்பொழுது 'ஜோதி' உருவாக நின்ற பரமசிவக் கடவுள் 'ஏ பிரம்ம விஷ்ணுகளே! இந்த 'ஜோதி'யின் அடிமுடிகளை யார் முதலில்கண்டு வருகிறாரோ அவர்தான் உயர்ந்தவர்' என்று ஒரு அனாமதேய (அசரீரீ) வார்த்தை சொன்னாராம். உடனே விஷ்ணு பன்றி உருவங் கொண்டு அடியைக்காண பூமியைத்துளைத்துக் கொண்டு வெகுதூரம் சென்றும் காணமுடியாமல் திரும்பி வந்து விட்டாராம். பிரமன் அன்னப்பறவை உருவம் கொண்டு ஜோதியின் முடியைக்காணப் பறந்து மேலே செல்லும் போது வழியில் ஒரு தாழம்பூ வந்துகொண்டிருந்ததாம். அதைக் கண்டு பிரமன் "தாழம்பூவே, எங்கேயிருந்து எவ்வளவு காலமாக வந்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்க; அது "நான் பரமசிவனுடைய முடியிலிருந்து கோடிக்கணக்கான வருஷங்களாக வந்துகொண்டிருக் கிறேன்" என்று சொல்லிற்றாம். உடனே பிரமன் "நான் சிவனுடைய முடியைப் பார்த்து விட்டதாக அவனிடத்தில் எனக்காக சாட்சி சொல்லுகி றாயா என்று கேட்க, அதுவும் சம்மதிக்க, இருவரும் பரமசிவனிடம் வந்து முடியைக்கண்டு வந்ததாகப் பிரமன் கூற, தாழம்பூவும் அதை ஆமோதித்த தாம். அது கண்ட சிவன் கோபங்கொண்டு இருவரும் பொய் சொன்னதற் காக,"பிரமனுக்கு இவ்வுலகில் கோயில் இல்லாமற் போகக் கடவது" என்றும், "தாழம்பூ இனிமேல் தனக்கு உதவாமல் போகக் கடவது" என்றும் சாபம் கொடுத்தாராம். பிறகு பிரமாவும் விஷ்ணுவும் தங்கள் கர்வம் ஒழிந்து பரம சிவனே பெரியவர் என்று எண்ணி இருவரும் அவரை வணங்கி, எங்கள் வழக்கைத் தீர்த்து வைத்ததற்கு அடையாளமாக இந்த மலையின் மேல் ஒரு "ஜோதி" உருவாக இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார் களாம். "பரமசிவனும்" அதற்குச் சம்மதித்து "ஒவ்வொரு வருடத்திலும் கார்த்திகை மாதத்தில், கார்த்திகை பண்டிகையில் நான் இந்த மலையின் உச்சியில் ஜோதியாகக் காணப்படுவேன்" என்று சொன்னாராம். இதுதான் திருவண் ணாமலைப் புராணமாகிய அருணாசலப் புராணத்தில் சொல்லப்படும் கார்த்திகைப் பண்டிகைக் கதை.



RangaRakes tamilnavarasam.com

இந்தக் கதையை ஆதாரமாகக் கொண்டுதான் இன்றும் “சைவப் பெரியார்கள்” என்பவர்கள் சிவன் என்பவரே மற்ற “கடவுள்” களைவிட உயர்ந்தவர் என்று சண்டை போடுகின்றனர். இந்தக் கதையைக் காட்டிச் சிவனை உயர்த்தியும் மற்றவர்களைத் தாழ்த்தியும் பாடாத சைவப் புராணங்களும், தேவாரங்களும், திருவாசகங்களும், தோத்திரங்களும் இல்லை. இதற்கு எதிராக மற்ற மதத்தினர்கள் எழுதி வைத்திருக்கும் கதைகள் பல. இவ்வாறு மதச் சண்டையை உண்டாக்குவதற்கு இக்கதை முதற் காரணமாக இருப்பதை அறியலாம். இந்தக் கதையில் தாழம்பூ பேசுவது ஒரு வேடிக்கை! ‘கடவுள்’ களுக்குள்ளேயே சண்டை வந்தது ஒரு விந்தை! இதுபோலவே ஆராய்ந்தால் பரிகாசத்திற்கும் வேடிக்கைக்கும் இடமாக இக்கதையில் அநேகம் செய்திகள் அமைந்திருப்பதைக் காணலாம்.

இவ்வாறு இரண்டு முரண்பட்ட வேடிக்கைக் கதைகளை ஆதாரமாகக் கொண்ட இந்தக் கார்த்திகை பண்டிகையினால் நமது மக்கள் மனத்தில் குருட்டு பக்தியும், மூடநம்பிக்கையும், முட்டாள்தனமும் அதிகப்படும் என்பதில் சந்தேகம் உண்டா? இது நிற்க மேலே கூறிய கதைகளில் இரண்டாவது கதையைச் சைவர்கள்தான் ‘சிவனுக்கு’ பெருமை கற்பிக்கிறதென்று நம்பி கார்த்திகை பண்டிகை கொண்டாடுகிறார்கள் என்றால் வைணவர்களும் கொண்டாடுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. வைணவர்களின் ‘கடவுளை’ மலந்தின்னும் பன்றியாக்கிக் கேவலப்படுத்தியிருப்பதுடன் சிவனுடைய பாதத்தைக் கூட காணமுடியாத அவ்வளவு சக்தியற்ற தெய்வம் என்று இழிவுபடுத்தியிருப்பதை அறிந்தால் அவர்கள் இந்தப் பண்டிகையைப் பெருமையாகக் கொண்டாடச் சம்மதிப்பார்களா? இவர்கள் போகட்டும், ஏதாவது ஒரு கடவுளாவது இருக்கிறார் என்ற நம்பிக்கையில்தானே கடவுள் என்னும் கொள்கையுடைய ஸ்மார்த்தர்களும் இக்கதையை நம்பிப் பண்டிகை கொண்டாடுகிறார்களே! இதில்தான் என்ன அர்த்தம் இருக்கிறது? இவற்றையெல்லாம் யோசிக்கும் போது இவர்கள் முட்டாள்தனம் காரணமாகவாவது, வீண் ஆடம்பரம் காரணமாகவாவது இப்பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள் என்றுதான் நினைக்க வேண்டி இருக்கிறது. அல்லது அறிந்தோ அறியாமலோ நமது மக்கள் மனத்தில் “பண்டிகைகள் புண்ணிய நாட்கள் அவற்றைக் கொண்டாடுவதால் புண்ணியம் உண்டு. கொண்டாடா விட்டால் பாவம்” என்னும் ஒரு குருட்டு எண்ணம் குடிகொண்டிருக்கிறது என்ற முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கிறது.

ஆகவே, இதுபோன்ற பண்டிகைகளால், நமது நாட்டில், பொருட்செலவும், வறுமையும், மூடநம்பிக்கையும், வீண் காலப்போக்கும் நிறைந்திருப்பதை எடுத்துக் கூறத் தொடங்குகிறவர்களுக்கு உடனே பகுத்தறிவற்ற வைதீக மூடர்கள் “தேசத் துரோகி” “மதத் துரோகி” “வகுப்புவாதி” “நாஸ்திகன்” என்ற பட்டங்களைச் சூட்டி விடுகின்றனர். சிறிதேனும் பொறுமை



கொண்டு சொல்லும் விஷயத்தைப் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்க்கின்றவர்களில்லை.

இத்தகைய வீண் காரியங்களை ஒழித்து மக்களைப் பகுத்தறிவுடையவராகச் செய்ய இதுவரையிலும் எந்த தேசீயத் தலைவர்களாவது, எந்த தேசியத் தொண்டர்களாவது எந்த தேசீயப் பத்திரிகைகளாவது முயற்சி எடுத்து கொண்டார்களா? இன்னும் இதுபோன்ற மூடநம்பிக்கைக்கான விஷயங்களை “சுயராஜியம்” “சுதந்தரம்” “காங்கிரஸ்” “பாரதமாதா” “மகாத்மா காந்தி” “காந்தி ஜயந்தி” என்னும் பெயர்களால் பிரசாரஞ் செய்து மற்றும் பண்டிகைகளையும், உற்சவங்களையும், விக்கிரகங்களையும், கற்பித்து மக்களை ஏமாற்றிக்கொண்டுதானே வருகிறார்கள்.

இவ்வாறு தேசீய பிழைப்புக்காரர்கள் ஒருபுறமும், பண்டிகையில் நம்பிக்கையுள்ள வைதீக மூடர்கள் ஒருபுறமும், பணம் சேர்க்க ரயில்வே கம்பெனிக்காரர்கள் ஒருபுறமும் புராணப் பிழைப்புக்காரர்களும், குருக்கள்களும், புரோகிதர்களும் மற்றொருபுறமும் பண்டிகைப் பிரசாரம் பண்ணினால் மக்களுக்குப் பகுத்தறிவு விளங்குவது எப்பொழுது?

**குடி அரசு – தலையங்கம் – 22.11.1931**



RangaRakes tamilnavarasam.com

# “சர்வம் பார்ப்பன மயம்” - திருவாங்கூர்

புதிய மகாராஜா பட்டத்திற்கு வந்தவுடன் திருவாங்கூர் சமஸ்தானக் குடிமக்களுக்கு இனியேனும் உண்மையான சுதந்தரம் உண்டாகும் என்று நம்பினோம். இதற்கு அறிகுறியாக கப்பற் பிரயாணம் செய்து அந்நிய நாடு சென்று வந்தவர்கள் உள்ளே போகக்கூடாது என்று தடுக்கப்பட்டிருந்த கோயில்களுக்குள் அவர்களும் போகலாம் என்று முன்னிருந்த தடை நீக்கப்பட்டது. இதைக்கொண்டு “இனி திருவாங்கூர் மக்கள் வைதீகக் கொடுமையிலிருந்தும் நீக்கப்படுவார்கள் போலும்” என்றும் சந்தோஷப் பட்டோம். ஆனால் இப்பொழுது சர்.சி.பி. ராமசாமி அய்யர் அவர்களை மேன்மை தங்கிய மகாராஜாவுக்கு அரசியல் ஆலோசனை கூறும் உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டதிலிருந்து கப்பலேறி அந்நிய நாடுகளுக்குச் சென்றுவந்த சர்.சி.பி. ரா. அய்யர் அவர்கள் கோயிலுக்குள் போவதற்குத் தடை இருக்கக் கூடாது என்பதற்காகவே முன்னிருந்த தடை நீக்கப்பட்டது என்றே நினைக்க வேண்டியதிருக்கிறது. அன்றியும் இப்பொழுதிருக்கும் மகாராஜா அவர்கள், ஒரு சமயம் சர்.சி.பி.ரா. அய்யர் அவர்களுடன் இங்கிலாந்து முதலிய தேசங்களுக்குப் பிரயாணம் செய்து வந்தால் அப்பொழுது மகாராஜா கோயிலுக்குள் போவதற்கு யாதொரு தடையும் இல்லாமல் இருப்பதற்கு முன்னேற்பாடாக இக்காரியம் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றும் நினைக்க வேண்டி இருக்கிறது.

அன்றியும் இப்பொழுது பட்டத்திற்கு வந்திருக்கும் மகாராஜா அவர்கள் காலத்தில் முன்னிருந்ததைக் காட்டிலும் இன்னும் பார்ப்பன ஆதிக்கம் அதிகப்பட்டு உறுதிப்படும் என்றும் கருதி திருவாங்கூர் பிரஜைகளின் சார்பாக இரக்கப்படுகிறோம், இவ்வாறு நடக்கக்கூடும் என்பதற்கு அடையாளமாக மகாராஜா பட்டத்திற்கு வந்தவுடன், முன்பே திரு. சுப்பிரமணியஅய்யர் என்னும் பார்ப்பனர் திவானாயிருக்க, சர்.சி.பி.ராமசாமி அய்யரும் அரசியல் ஆலோசனை கூறும் அதிகாரியானார். ஆகவே இப்பொழுது திருவாங்கூர் ராஜ்ஜியம் இரண்டு பார்ப்பன அதிகாரிகளின் வசம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது.



திருவாங்கூர் சமஸ்தானம் பார்ப்பனர்களின் அதிகாரத்தில் அகப்பட்டு, அச்சமஸ்தான மக்கள் பார்ப்பனீயத்தால் நசுக்குண்டு கிடப்பது இன்று அல்லது நேற்று முதல் நடைபெறும் விஷயமல்ல; நூற்றுக்கணக்கான வருஷங்களாகவே இப்படியிருந்து வருகின்றது. இதைக் கீழ்வரும் விஷயத்தால் தெளிவாய்த் தெரிந்துகொள்ளலாம். 1817 ஆம் ஆண்டு முதல் 1931 ஆம் ஆண்டு வரையிலும் திருவாங்கூர் திவான் உத்தியோகத்தை 24 பேர் வகித்து வந்திருக்கின்றனர். இந்த 24 பேர்களில் திரு.நாணுப்பிள்ளை என்பவர் 1877 முதல் 1880 வரையில் 3 வருஷமும் இப்பொழுது சென்னை அரசாங்கத்தில் சட்ட மந்திரியாய் இருக்கும் திரு. கிருஷ்ணன் நாயர் 1914 முதல் 1920 வரை 6 வருஷமும், திரு வாட்ஸ் என்னும் ஐரோப்பியர் 1925 முதல் 1929 வரை 4 வருஷமும் திவானாக இருந்திருக்கின்றனர். இவர்கள் திவானாக இருந்த 13 வருஷங்கள் போக பாக்கி 101 வருஷங்களும் பார்ப்பனர்களே திவான்களாக இருந்து வந்திருக்கின்றனர். இந்தக் கணக்கைப் பார்த்தாலே திருவாங்கூர் ராஜ்ஜியம் எப்பொழுதும் பார்ப்பன மயம் என்பதில் ஏதேனும் தவறு உண்டா?

சுதேச சமஸ்தானமாகவும், பார்ப்பன ஆதிக்க ராஜ்யமாகவும், ‘பத்மநாபசுவாமி’ என்னும் ‘கடவுளின்’ ராஜ்யமாகவும் இருக்கும் அந்த சமஸ்தானம் எந்த நிலையிலிருக்கிறது? 40 லட்சம் ஜனத்தொகையுள்ள அந்த சமஸ்தானத்தில் சுமார் 20 லட்சம் பேர் முகமதியர், கிறிஸ்தவர் முதலிய அந்நிய மதத்தினராகவும், சுமார் 12 1/2 லட்சம் மக்கள் தீண்டக்கூடாதவர்களாயும், பார்க்கக்கூடாதவர்களாகவும், தெருவில் நடக்கக்கூடாதவர்களாகவும் இருக்கின்றார்கள். இவைபோக சுமார் 7 1/2 லட்சம் ‘இந்துக்கள்’ என்பவர்களே ‘பத்மநாபக்கடவுளின்’ அரசாங்கமாகிய இந்துராஜ்யத்தில் இருக்கின்றார்களென்றால் இதை என்ன ராஜ்யம் என்று சொல்வது? பார்ப்பனர்களின் அதிகாரத்தின் காரணமாக - பார்ப்பனீயமாகிய இந்துமதக் கொடுமை காரணமாக - இந்து மதத்திலிருந்து விலகியவர்கள்தான் இப்பொழுது அச்சமஸ்தானத்தில் இருக்கும் 20 லட்சம் வேறு மதக்காரர்களும் என்பதை யார் இல்லையென்று சொல்லமுடியும்? இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் தானே இன்று 12 1/2 லட்சம் பேர் தீண்டத்தகாதவர்களாகவும், பார்க்கக்கூடாதவர்களாகவும், தெருவில் நடக்கக் கூடாதவர்களாகவும், மிருகத்தினும் கேடாக மதிக்கப்பெற்று கொடுமை செய்யப்பட்டுக் கிடக்கிறார்கள்? இவர்களும் அந்நிய மதத்தினர்களாக ஆகிவிட்டால் இவ்வளவு கொடுமைக்கு ஆளாவார்களா?

இந்த இழிவான நிலையில் உள்ள இச்சமஸ்தானம், எல்லா மக்களும் கண்விழித்துச் சுயமரியாதை உணர்ச்சி பெற்று வருகிற இந்நாளிலுமா பார்ப்பனர் வசமும் பார்ப்பனிய வசமும் சிக்கித் துன்பப் பட்டுக் கொண்டிருக்க வேண்டும்? என்ற உணர்ச்சியுடன் திருவாங்கூர்ப் பிரஜைகள் அனைவரும் சர்.சி. பி.ரா. அய்யரின் நியமனத்தைச் சரியான காரணங்களுடன் கண்டித்துத் தீர்மானங்கள் செய்வதை நாம் பாராட்டுகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

இதோடு மற்றொரு வதந்தியும் உலாவுகிறதென்று அறிகிறோம். அதாவது, இப்பொழுதுள்ள திவான், திரு. சுப்பிரமணிய அய்யர் திவான் பதவியை விட்டு விலகியவுடன், அப்பதவிக்கு சென்னையில் உள்ள திரு.டி.ஆர். வெங்கட்டராம சாஸ்திரி அவர்களும், மற்றும் இரண்டு பெரிய இந்திய அரசாங்க உத்தியோகஸ்தர்களும் முயற்சி செய்கிறார்களாம். இவ்வாறு முயற்சி செய்துகொண்டிருக்கும் திரு. டி.ஆர் வெங்கட்டராம சாஸ்தியார் அவர்களோ, அல்லது வேறு ஒரு “சாஸ்திரியார்” அல்லது “அய்யர்” அல்லது “அய்யங்கார்” அல்லது “ஆச்சாரியா”ரோ திவானாக வந்தால் திருவாங்கூர் ராஜ்யம் இன்னும் மோசமான பார்ப்பன ராஜ்யமாக ஆகவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை என்பது உறுதியான விஷயமாகும். உதாரணமாக சர். சி .பி .ரா. அய்யர் அவர்களின் யோக்கி யதையைப் பார்த்தாலே இது விளங்கும். முதலாவது, திரு.அய்யர், தன் அதிகாரத்தால் செய்யக்கூடிய எந்த உத்தியோகங்களையும், நன்மைகளை யும், தன் இனத்தார்களாகிய பார்ப்பனர்களுக்கு மாத்திரம் செய்யக் கூடியவர் என்பது நாம் அறிந்த சங்கதி. இரண்டாவது, எல்லா மக்களும் சமசுதந்தரம் பெற்றுச் சகோதரர்களாய் வாழ வேண்டும் என்னும் சமதர்மக் கொள்கைக்கு எதிரான வருணாச்சிரம தரும வகுப்பினரைச் சேர்ந்தவர் என்பது யாவருக் கும் தெரிந்த செய்தி. மூன்றாவது,

அவர் எப்பொழுதும் பிரிட்டிஷ்காரருக்குச் செல்லப் பிள்ளையாக நடந்து தன் காரியங்களைச் சாதித்துக்கொள்ளக்கூடியவர் என்பது அவருடைய “அரசியல் நாடகம்” அறிந்தவர்களுக்கு நன்றாய்த் தெரியும். இதனால், பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்து சுதேச சமஸ்தானத்திற்குப் போகும் எந்த பார்ப்பனரும், பெரும்பாலும் இந்த மாதிரியான யோக்கியதை உள்ளவராகத்தான் இருப்பார்கள். ஆகையால் திருவாங்கூர் பிரஜைகள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு இத்தகைய விஷயங்களை, இந்திய அரசாங்கத்தாருக்கும், மேன்மை தங்கிய மகாராஜாவுக்கும் எடுத்துக் காட்டிப் பரிகாரம் தேடிக்கொள்ளும்படி அவர்களுக்கு நினைப்பூட்டி, நாமும் இந்தச் சமஸ்தானம் பார்ப்பனருக்கும், பார்ப்பனீயத்திற்கும் அடிமைப்பட்டு வருவதைப் பலமாகக் கண்டிக்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 22.11.1931**




குடி அரசு

டாக்டர் சிங்காரம் அவர்களின்

டி. சி. சிங்காரம் அண்டு கோ,



RangaRakes
tamilnavarasam.com

# எல்லாம் பழய ஆதிக்கம் செலுத்தவே

நமது நாட்டில் ஆங்கிலப்படிப்பு பரவ ஆரம்பித்ததன் பலனாகவும், ஏழு ஆண்டுகளாக நமது இயக்கம் யாருக்கும் அஞ்சாமல், எந்த எதிர்ப் புக்கும் பின் வாங்காமல் உண்மைகளை எடுத்துக்கூறிப் பிரசாரம் செய்ததன் பலனாகவும், பார்ப்பனீயத்திற்கும், வருணாச்சிரம தருமங்களுக்கும் ஏற்கனவே ஏற்பட்டிருந்த மதிப்பு கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ச்சியடைய ஆரம்பித்துவிட்டது. இதனால் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டும், பூதேவர்கள் என்று கூறிக்கொண்டும் இருந்த பார்ப்பனர் களுடைய கௌரவமும் குறைய தொடங்கிவிட்டது என்பதும் உண்மை யாகும். ஆகையால், அவர்கள் காங்கிரசின் பெயராலும், அரசாங்க உத்தியோ கத்தின் செல்வாக்காலும் மற்றும் பல பொது இயக்கங்களின் பெயராலும் தங்களைத் தலைவர்களாகவும், தியாகிகளாகவும், தேசாபிமானிகளாகவும் செய்து கொண்டு பார்ப்பனரல்லாத மக்களை ஏமாற்றி வாழ்ந்து வந்தவர்கள். இப்போது மேற்படி பொது இயக்கங்களிலும் பார்ப்பனரல்லாதார் புகுந்து தங்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டும் என்று போராட ஆரம்பித்தவுடன் வேறு பல பேர்களாலும், பிரசாரங்களாலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சி செய்கின்றார்கள்.

நமது இயக்கமானது பார்ப்பனர்களை நமது மக்கள் உயர்வாக கருதுவதற்குக் காரணமாக இருந்த 'மதம்', 'வேதம்', 'புராணம்', 'ஸ்மிருதி', 'கடவுள்', 'ஆன்மா', 'மோட்சம்', 'நரகம்', 'பாவம்','புண்ணியம்' முதலிய அடிப்படைகளிலேயே கை வைத்து அவைகளை அழிக்கத் தொடங்கிய வுடன் அவர்கள் விழித்துக் கொண்டு அந்த அடிப்படைகளை மறுபடியும் புதுப்பித்து அவைகள் மூலம் மீண்டும் பழய ஆதிக்கத்தைப் பெறவே வழி தேடுகிறார்கள். இதற்காகவே பார்ப்பனர்கள் காங்கிரசின் பெயரால், 'மகாத்மா', 'பாரதமாதா', 'அவதாரம்', 'கதர்', 'ஹிந்தி', 'கொடியேற்ற வணக்கம்', 'ஜெயந்தி விழாக்கள்' முதலியவைகளைக் கொண்டு பாமர மக்களின் மனத்தில் பழய வருணாச்சிரம தருமத்தையும், மூட நம்பிக்கை களையும் உண்டாக்குவதோடு மட்டும் அல்லாமல், 'பிராமண சபை', 'சனாதன தர்ம சபை', 'தருமரக்ஷணசபை', 'வேதோத்தாரணசங்கம்', 'அத்வைத சபை' 'ஹிந்துமத சபா' முதலிய சங்கங்களை அமைத்துக் கொண்டு இவைகள் மூலமாகவும், மக்களுடைய பகுத்தறிவைத் தடுத்து அவர்களை வைதீக மூடநம்பிக்கையுடையவர்களாக்க முயற்சி செய்கிறார் கள். இந்தமாதிரியான வைதீக சபைக்காரர்களுக்கு நாம் நன்றி பாராட்டு கிறோமேயொழிய உண்மையில் அவர்களிடம் துவேஷமோ, கோபமோ அடையவில்லை. ஏனெனில், அவர்கள் பிராமணர்களின் உண்மை மனக்கருத்தை அச்சபைகளிற் செய்யும் பிரசங்கங்களின் மூலமாகவும் தீர்மானங்களின் மூலமாகவும் வெளிப்படுத்துவதால், பிராமணரல்லாதார் ஏமாறாமல் இருக்கவும் பிராமணர்களை நம்பிக் கொண்டிருக்கும் மக்களை எச்சரித்துத் திருத்தவும் முடிகிறது என்கின்ற இந்த காரணத்திற்காகவே நாம் அவர்களுக்கு நன்றி பாராட்டுவதாக கூறுகிறோம். பார்ப்பனர்களுடைய உண்மையான அபிப்பிராயத்தை அறியவேண்டுமானால், சென்ற 23.11.31ல் கும்பகோணத்தில் கூடிய தஞ்சை ஜில்லா பிராமணசபையின் இரண்டாவது வருட கொண்டாட்டத்தின் நிகழ்ச்சிகளைக் கவனித்தால் விளங்காமல் போகாது. அப்பொழுது, பணக்காரர்களாகவும், ஆங்கிலம் படித்தவர்களா கவும், வக்கீல் தொழில் செய்பவர்களாகவும் அரசாங்க உத்தியோகத்திலி ருந்து உபகாரச் சம்பளம் பெற்று நீங்கியவர்களாகவும், உபாத்தியாயர்களாக வும், ஒன்றுந்தெரியாத வைதீகர்களாகவும் உள்ள பார்ப்பனர்கள் ஒன்று கூடிப் பேசிய வார்த்தைகளின் சில பகுதிகளை கவனிப்போம். (இந்நிகழ்ச்சி சென்ற 26.11.31ந் தேதி வெளியான "தமிழ்நாடு" பத்திரிகையில் காணப்படு கிறது.)

> "நவநாகரீகத்தில் அகப்பட்டுக் கொண்டு ஆயிரக்கணக்கான பிராமணர்கள் தங்கள் தங்கள் தர்மத்தை மறந்து நிற்கிறார்கள். மாமிசம் உண்ணும் பிராமணர்களையும், குடிக்கும் பிராமணர்களையும் நாம் இப்போது பல இடங்களில் காண்கிறோம். எனக்குப் பிரத்தியட்சமாய் தெரிந்ததைத் தான் கூறுகிறேன். டில்லியில் ஒரு விருந்து நடந்தது. அதில் சற்றும் அச்சமில்லாமல் மாமிசம் சாப்பிட்ட பிராமணனை நான் அறிவேன். கவர்னர் முதலிய பிரமுகர்களுக்கு நடத்தும் விருந்துக் கச்சேரிகளில் ஆதிதிராவிடர்களால் பரிமாறப்பட்டு அநேக பிராமணர்கள் சாப்பிடுகிறார்கள். இது என்ன பிராமணீயம் என்று கேட்கிறேன். ஆதிதிராவிடர்களை கோவில்களுக்குள் பிரவேசிக்கக் கூடாதென்று நாம் சொல்லுகிறோம். ஆனால், ஆதி திராவிடர்கள் கையில் போஜனம் செய்யும் பிராமணர்களை நாம் கோயிலுக்குள் நுழையாமல் தடுக்கிறோமா? கடல்கடந்து வரும் பிராமணர்களை நாம் வரவேற்று உபசரிக்கிறோம். வைதீகர்கள் பிள்ளைகள் கூட ஐ.சி.எஸ். முதலான பரீட்சைகளுக்குச் சீமைக்கு செல்லுகிறார்கள். அதைப்பற்றி நாம் என்ன செய்கிறோம்?"

என்று தலைமை வகித்த பார்ப்பனர் பேசியிருக்கிறார். இவர் பேசி யிருப்பது முழுவதும் உண்மையான விஷயம் என்பதில் யாரும் சந்தேகப் படவேண்டியதில்லை. இந்த நிலைமையை சீர்திருத்திப் பழைய வைதீக


RangaRakes
tamilnavarasam.com

நிலைமைக்கு மறுபடியும் பார்ப்பனர்களைக் கொண்டு வரவேண்டுமே என்னும் உணர்ச்சியோடு அவர் பேசியிருக்கலாம். அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. மேற்கூறியபடி 'ஒழுக்கம்' கெட்ட பார்ப்பனர்களும் தங்களைப் பார்ப்பனர்களாகவே மதித்துக் கொண்டு மற்றவர்களை 'சூத்திரர்களாக' மதிக்கும் அகங்கார மனப்பான்மை தான் ஒழிய வேண்டும் என்று நாம் கூறுகிறோம். ஏதோ இவர் இம்மாதிரி பார்ப்பனர்களின் நடத்தையை வெளிப்படையாகக் கூறிவிட்டாரே ஒழிய செய்கையில் மேற்கூறியவாறு 'ஒழுக்கங்கெட்டவர்'களாக உள்ள பார்ப்பனர்களையெல்லாம் பகிஷ்கரிக்க எந்தப் பார்ப்பானும் முன்வர மாட்டான் என்பதை நாம் அறிவோம். நேற்று திருவனந்தபுரத்தில் நடந்த சம்பவத்தைக் கவனித்தாலே இது விளங்கும். திரு.காந்தி, பண்டித ஜவகர் லால்நேரு, லாலா லஜபதிராய் முதலியவர்களைக் கப்பலேறிச் சென்று வந்தவர்கள் என்ற காரணத்திற்காக உள்ளே செல்வதைத் தடுத்த கோயிலில் மகாராஜாவின் உத்தரவு காரணமாக கப்பல் பிரயாணம் செய்த சர்.சி.பி.ராம சாமி அய்யர் அவர்கள் செல்லவில்லையா? அவர் இல்லாமல் வேறு ஒரு பார்ப்பனரல்லாதாருக்காக மகாராஜாவால் தடைநீக்கப்பட்டு அப்பார்ப்பன ரல்லாதாரும் கோயிலுக்குள் போயிருந்தால் திருவாங்கூரில் உள்ள பார்ப்பனர்களும் பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள வைதீகர்களும் சும்மா இருந்திருப்பார்களா? திருவாங்கூரில் 'இந்துமதம் அழிந்துவிட்டது' என்று போடும் கூச்சல் ஆகாயத்தைப் பிளக்கும் அல்லவா? அன்றியும், இதே சர்.சி.பி.ராமசாமி அய்யர் அவர்கள் சட்டமெம்பராய் இருந்த காலத்தில் கும்பகோணத்திற்கு வந்திருந்தபோது 'உலககுரு' என்று பார்ப்பனர்களால் கூறப்படுகின்ற 'சங்கராச்சாரியார்' அவரை 'ஆசீர்வதித்து' பாராட்டினாரே. இதுபோலவே 'சூத்திரர்கள்' என்கின்றவர்களிடத்தில் பேசினால் 'பாவம்' என்ற கொள்கையையுடைய 'சங்கராச்சாரியாரும்' மற்றும் வைதீகப் பார்ப்பனர்களும், உத்தியோகப் பார்ப்பனர்களையும், இங்கிலாந்து சென்று வந்த பார்ப்பனர்களையும், கறி தின்னும் பார்ப்பனர்களையும், குடிக்கும் பார்ப்பனர்களையும், வரவேற்றும், ஆசீர்வதித்தும் அவர்களைப் புகழ்ந்தும், அவர்களுடைய வாக்கு உதவியையும், பொருள் உதவியையும் பெற்றார் கள்-பெறுகிறார்களே இவற்றையெல்லாம் யாராவது கண்டித்தார்களா? இல்லையே. ஆகையால் மேற்கூறிய பார்ப்பனர் அபிப்பிராயத்தை வேறு எந்தப் பார்ப்பனரும் ஒப்புக் கொண்டு நடத்தையில் அனுஷ்டிக்க முன்வர மாட்டார்கள் என்பது நிச்சயம்.

மற்றொரு பார்ப்பனர் 'ஆங்கிலப்படிப்பினால்தான் பார்ப்பனீயம் கெட்டது' என்று பேசியதற்குப் பதிலாக 'நான் ஆங்கிலக்கல்வி கற்றவனே, ஆனால் என்னுடைய மத தர்மங்களில் அக்கல்வி தலையிட்டிருக்கிறதாய் நான் சொல்லமுடியாது. முக்கியமாய் நாம் நம் சிறுவர்களுக்கு சமஸ்கிருதக் கல்வியை புகட்டினால் பல தீமைகள் வராமல் தடுக்கலாம். இது மிகவும் முக்கியமான காரியமாகும்' என்று ஒரு சர்வகலாசாலைப் பட்டம் பெற்ற



பார்ப்பனர் பேசியிருக்கிறார். இதிலிருந்து படித்த பார்ப்பனர்களும் உத்தி யோகம் செய்யும் பார்ப்பனர்களும் என்னதான் கெட்டாலும் தங்கள் பிராமணீயக் கொள்கைகளைத் தாம் விட்டுவிட்டதாக நினைத்துக் கொள்வதேயில்லையென்பது விளங்கும். அவர்கள் வருணாச்சிரம தர்ம முறைப்படியே தாங்கள் மேலாகவும் மற்றவர்கள் தங்களுக்குக் கீழாகவும் இருக்கவே விரும்புகிறார்கள் என்பதும், அதற்காகவே உழைக்கிறார்கள் என்பதும் உண்மையென்பதில் சந்தேகப்படவேண்டியதில்லை. மற்றும் 'பிராமணீயம் ஒருநாளும் அழியாது அது எந்தக் காலத்திலும் நிலைப் பெற்றிருக்கும் சக்தியை உடையதாகும். சென்ற யுகங்களிலும் அனேக பிராமணர் நாஸ்திக புத்தியை உடையவர்களாய் இருந்தார்கள். இப்பொழுது இது புதிதல்ல' என்று ஒருவரும்.

'நீங்கள் இவ்விடத்தில் ஒரு சத்தியம் செய்து கொள்ளவேண்டும். பெண்களை நாம் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பக்கூடாது. தகுதியற்ற கல்வியைப் பெண்களுக்குபோதிப்பதனால் தான் நம்முடைய குடும்பங்கள் கெட்டுப்போகின்றன. நம்மை நாம் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். சாரதாசட்டத்தை எதிர்த்து அதற்கு நாம் கீழ்ப்படியாமல் இருக்கவேண்டும். இந்தியாவுக்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அரசாங்கம் நமக்கு அநேக தீங்குகளை செய்யப் போவதும் நிச்சயம். ஆகையால், நாம் முன் ஜாக்கிரதை யுடனிருந்து காரியங்களைக் கவனிக்க வேண்டும்' என்று ஒருவரும் பேசியிருக்கின்றனர். இந்தப் பேச்சுக்களிலிருந்தும், இவ்வாறு பார்ப்பனர் கள் பிரச்சாரங்கள் செய்து கொண்டு வருவதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது. 'அவர்கள் அனைவரும், மீண்டும் வருணாச்சிரம தரும ராஜியத்தை நிலைநாட்டவே பாடுபடுகிறார்கள்' என்பது தான். இந்த வகை யில், பார்ப்பன சபைகளில் உள்ள பார்ப்பனர்களும், காங்கிரசில் உள்ள பார்ப்பனர்களும், அரசாங்கத்தில் உத்தியோகஞ்செய்யும் பார்ப்பனர்களும், மற்றும் எந்த இழிவான நிலையில் உள்ள பார்ப்பனர்களும், தங்கள் ஆதிக்கம் அழியாமல் இருப்பதற்கும், தங்கள் ஆதிக்கம் மறுபடியும் தேசத்தில் நிலைபெற்று பார்ப்பனரல்லாத மக்களை அடிமைப்படுத்துவதற் கும் பல துறைகளிலும் இருந்து உழைக்கிறார்கள் என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது. இந்தக் காரணத்திற்காகவேதான் மதசம்பந்தமான 'அவதார புருஷர்கள்' என்று அவர்களாலேயே கொண்டாடப்படுகின்ற 'ஆழ்வார்கள்', 'நாயன்மார்கள்', 'பக்தர்கள்' முதலியவர்களிலும் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்ற வித்தியாசத்தை மனதிற்கொண்டு பார்ப்பன ரல்லாத 'ஆழ்வார்' களுக்கும், 'நாயன்மார்'களுக்கும், 'பக்தர்'களுக்கும் பெருமைகெடாமல் பார்ப்பனர்கள் என்பவர்களுக்கே பெருமை கொடுக் கும் இவர்கள், வருணாச்சிரம தருமத்தைக் குரங்குப்பிடியாக பிடித்திருக்கும் திரு.காந்தியை 'மகாத்மா'வாகவும் 'அவதார'புருஷராகவும் கொண்டாடு கின்றனர். இந்தியாவில் உள்ள மதங்களுக்கும், கலைகளுக்கும், நாகரீகங் களுக்கும் பாதுகாப்பு வேண்டும் எனக் கூறும் காங்கிரசைப் போற்று



RangaRakes tamilnavarasam.com

கின்றனர். இன்றேல், திரு.காந்தியை மூலையில் தூக்கிப் போட்டுவிட்டு காங்கிரசையும் ஒழித்துவிட அவர்கள் முயற்சி செய்யப் பின் வாங்க மாட்டார்கள் என்பது நிச்சயமான செய்தியாகும்.

மக்களுடைய பகுத்தறிவை வளர்ப்பதற்குரிய நூல்களோ, இலக்கியங்களோ இல்லாததும், வருணாச்சிரமதருமத்தைப் போதிக்கும் துளசிதாஸ் ராமாயணம், பகவத்கீதை, முதலிய நூல்கள் உள்ளதுமாகிய ஹிந்தி மொழியை பிரசாரஞ் செய்கின்றனர். சனாதன தர்மத்தைப் போதிக்கும் சமஸ்கிருதப் படிப்பை விருத்திச்செய்யவேண்டும் என்றுபேசுகின்றனர்.

இவ்வாறு செய்வதில் உள்ள தந்திரத்தையும் யோசித்துப் பாருங்கள். ஆங்கிலப் படிப்பினால் விஞ்ஞான அறிவும், பிற நாட்டு நாகரீகங்களும், சுதந்திர உணர்ச்சியும் உண்டான காரணத்தால் தான் இன்று பார்ப்பன ரல்லாதார் சுயமரியாதை உணர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்ற விஷயம் தெரிந்தே மேற்கூறியவாறு பிரசாரஞ்செய்கின்றனர் என்று கூறுவதில் தவறு என்ன இருக்கின்றது என்று கேட்கிறோம்.

இச்சமயத்தில் மற்றொரு விஷயத்தையும், கூறி வைதீக அரசியல் பார்ப்பனர்களின் சூழ்ச்சியை வெளிப்படுத்த விரும்புகிறோம். சென்ற சில தினங்களுக்கு முன் ‘குருவாயூர் கோயில் சத்தியாக்கிரகத்தை கண்டிக்க முன் வந்த திரு.எம்.கே.ஆச்சாரியார், ‘கோயில் பிரவேசஞ் செய்ய விரும்புகிற வர்கள், மத பக்தியினால் சுவாமி தெரிசனத்திற்காக கோயிலுக்குள் செல்ல வேண்டும் என்று விரும்பவில்லை. அரசியல் காரியங்களை முன்னிட்டு சமவுரிமை வேண்டும் என்பதற்காகவே கோயிற்பிரவேசம் விரும்புகின்ற னர். ஆகையால், அதைத் தடுக்க வேண்டும், என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டிருந்தார். இதிலும், எப்படியாவது மததர்மம் அழியாமல் காப் பாற்றப்பட வேண்டும் என்ற அபிப்பிராயம் அடங்கியிருப்பதைக் காண லாம். ‘மத தர்மத்தை ஒப்புக்கொள்ளுகிறவர்களுக்கு கோயில் பிரவேசம் அளிக்கலாம்’ என்ற அபிப்பிராயத்தையும் அவரே ஒப்புக்கொண்டிருக் கிறார்.

இதிலிருந்து மத தர்மம், ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டால் எந்த வகையிலும் பிராமணீயம் அழியாமல் நிலைக்கும் என்பதுதான் அவர் கருத்து என்பதை அறியலாம். ஆனால், மத தர்மம் ஒப்புக் கொள்ளப் படும்போது, எல்லா வகுப்பினரும் கோயிலுக்குள் செல்லலாம் என்ற உரிமை எப்படி ஏற்படும் என்பது தான் நமக்கு விளங்கவில்லை. இன்னார் கோயிலுக்குள் போகலாம், இன்னார் கோயிலுக்குள் போகக் கூடாது என்பதற் கும் அந்த பாழும் மத தர்மந்தானே காரணமாய் இருந்துக் கொண்டிருக் கிறது. ஆகவே, திரு.ஆச்சாரியார் கூறும் மத தர்மத்தையும், பிராமணசபை யார் பிரசாரம் செய்யும் மததர்மத்தையும் எவ்வாறு நாம் ஒப்புக்கொள்ள முடியும்? ஒரு போதும் ஒப்புக்கொள்ளவே முடியாது. அழிக்கப்பட்டே



ஆகவேண்டும் என்றே கூறுகின்றோம். ஆகையால், பார்ப்பனர்கள் செய்யும், எல்லாப் பிரசாரங்களும், மதத்தையும், மத தர்மத்தையும், அதன் மூலம் வருணாச்சிரம தருமத்தையும், பார்ப்பனீயத்தையும் காப்பாற்றவே செய்யப்படும் பிரசாரங்களே என்பதை மீண்டும் கூறி எச்சரிக்கை செய் கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 29.11.1931**



RangaRakes tamilnavarasam.com

# தீண்டாதார் கல்வி

தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித்தொகுதி கொடுக்கக்கூடாது என்றும், தனித்தொகுதி கேட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகள் அல்லவென்றும், தேசீயவாதிகளும் தேசீயப்பத்திரிகைகளும் பிரசாரம் செய்துகொண்டு வருகின்றன. ஆனால், அவர்கள் பொதுப்பள்ளிக் கூடங்களில்கூட சேர்ந்து படிப்பதற்கு நமது நாட்டு மக்கள் தடையாக இருக்கிறார்கள் என்ற விஷயத்தை அறிந்தால் தாழ்த்தப்பட்ட தீண்டாதார்களை உயர்ந்த ஜாதி இந்துக்கள் எவ்வளவு கீழாகவும் கொடுமையாகவும் நடத்துகிறார்கள் என்பது விளங்கும். சென்னை சர்க்கார் 1930-31 வருஷத்தில் தொழில் இலாகா செய்துள்ள வேலையைப்பற்றி வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தீண்டப்படாதார்களுக்காக 1784 தனிப் பள்ளிக்கூடங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றனர். இவ்வாறு தீண்டாதவர்களுக்கெனத் தனிப்பள்ளிக் கூடங்கள் வைப்பதற்குக் காரணம் ‘கிராமாந்தரங்களில் ஜாதித் துவேஷங்கள் வேரூன்றிக் கிடப்பதால் அவர்கள் பொதுப்பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிக்க முடியவில்லை’ என்றும் கூறியிருக்கின்றனர். இதிலிருந்து நமது தேச நிலை எவ்வாறு இருக்கிறதென்பதை அறிந்துகொள்ளலாம். இந்த நிலையில் உள்ள நமது நாட்டில் தீண்டாதார் பொதுத்தொகுதியில் நின்று எவ்வாறு தேர்தலில் வெற்றிபெறமுடியும் என்பதை யோசித்துப்பாருங்கள். பரோடா அரசாங்கத்தார் தீண்டாதார்களும் சமூக சமத்துவம் பெறுவதற்கு சாதகமாக அங்குள்ள பொதுப்பள்ளிக்கூடங்களில் தீண்டாதார்களை தாராளமாகச் சேர்த்துப்படிப்பிக்க உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். ஆனால், நமது நாட்டில் பொதுப்பள்ளிக்கூடங்களில் தீண்டாதார்களைச் சேர்க்க மறுக்கக் கூடாது என்ற உத்திரவு இருந்தும், அதைப் கவனிப்பாரும், அமலுக்குக் கொண்டு வரவேண்டும் என்னும் கவலையுள்ளவர்களும் இல்லை. ஏனெனில், கல்வியிலாகாவில் உள்ள அதிகாரிகளும், பள்ளிக்கூடத்தில் உள்ளவர்களும் பார்ப்பனர்களாக இருப்பதே காரணமாகும். கிராமாந்தரங்களிலும், நகரங்களிலும், பொதுப்பள்ளிக்கூடங்களில் தீண்டாதார்களை தாராளமாகச் சேர்த்துக் கொண்டால், 1784 பள்ளிக்கூடங்கள் தனியாக இருக்கவேண்டிய அவசியம் இல்லையே. அவைகளுக்காகும் செலவைக் கொண்டு இன்னும் கல்வியை அதிகமாக விருத்தி செய்யவும் பள்ளிக்கூடங்கள் இல்லாத இடங்களில் பள்ளிக்கூடங்கள் வைக்கவும் முடியுமல்லவா? இதற்காக யார் முயற்சி யெடுத்து கொண்டு வேலை செய்கிறார்கள் என்று கேட்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 29.11.1931.**



RangaRakes
tamilnavarasam.com

# மூட்டைப்பூச்சிகளின் சேஷ்டை

'பம்பாய் ஐக்கோர்ட்டிலிருந்து டாக்டர் அம்பெட்காருக்கு ஒரு சம்மன் அனுப்பப்பட்டது. அவர் இங்கிலாந்திலிருப்பதால் இச்சம்மன் திரும்பி வந்து விட்டது. அவர் இந்தியாவில் அடி வைத்தவுடன் அவரை வரவேற்க இச்சம்மன் தயாரயிருக்கும். ஐந்தாவது மாகாண மாஜிஸ்திரேட்டால் வழக்கு விசாரிக்கப்படும், பம்பாய் எல்பினஸ்டன் ரோடு, கோவாப் பரோட்டிவ் கிரெட்டிட் சொசைட்டியின் காரியதரிசி திரு.ராமகிருஷ்ணாவால் மேற்படி வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. டாக்டர் அம்பெட்கார் அடிதடி, கொள்ளை, சட்டவிரோதமான கூட்டத்தில் சேர்ந்தது ஆகியவைகளே அவ் வழக்கு தொடர்வதற்கு காரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது' என்று பத்திரிகைகளில் ஒரு செய்தி காணப்படுகின்றது. இதன் உண்மை என்னவோ அதைப்பற்றி நாம் தற்சமயம் ஒன்றும் கூறவிரும்பவில்லை. ஆனால், காங்கிரஸ், காந்தீயம் இவைகளுக்கு விரோதமான அபிப்பிராயம் உடையவர்கள் யாரோ அவர்களை நம் நாட்டுப் பார்ப்பனர்களும், அவர்களால் தூண்டப்பட்ட கோடரிக்காம்புகளும், சும்மாவிடமாட்டார்கள் என்பதும், மூட்டைப் பூச்சிகள் போல அவர்களுக்கு ஏதாவது சில்லரைத் தொந்தரவுகளைச் செய்து கொண்டே இருப்பார்கள் என்பதும் ஆகிய விஷயத்தை மாத்திரம் நினைப்பு மூட்டுகிறோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 29.11.1931**



# இந்திய வைத்திய கலாசாலையின் மேல் துவேஷம்

## தமிழ் வைத்தியத்திற்கு உலை

**- தேசீயத்துரோகி**

மதம், ஜாதி, பாஷை, கலை, நாகரீகம்,பழக்கவழக்கம் முதலிய எல்லாவற்றிலும், தங்களுடையதே பெரிதென்றும், ஆகையால் தங்களுக்கே முதன்மை ஸ்தானம் கொடுக்கவேண்டுமென்றும், நீண்டகாலமாகப் பார்ப்பனர்கள் போராடிக்கொண்டும் பெரும்பாலும், இப்போராட்டத்தில் வெற்றி பெற்றுக் கொண்டும் வருகின்றனர். தங்களுக்கு ஆதிக்கமில்லாத வழியிலும், லாபமில்லாத வழியிலும், மற்றவர்களுக்கு லாபமும், ஆதிக்கமும் சிறிதளவு உண்டு என்ற வழியிலும் செய்யப்படும் காரியங்கள் எவையாயிருந்தாலும் அவைகளைப்பற்றித் தப்புப்பிரசாரம் பண்ணத் தொடங்கிவிடுகின்றனர். அவைகள் தேசத்துரோகமான செயல்களென்றும், அவைகளால் தங்கள் மதத்திற்கு ஆபத்து வந்துவிட்டதென்றும், பாஷைக்கு ஆபத்து வந்துவிட்ட தென்றும், கலைகளுக்கு ஆபத்துவந்துவிட்டதென்றும், குலைக்கத் தொடங்கி விடுகின்றனர். இது எப்பொழுதும் நமது நாட்டில் பார்ப்பனர்களால் ஆடப்படும் நாடகமாகவே இருந்து வருகின்றது.

இதற்கு உதாரணமாகச் சென்ற 1.12.31ல் சென்னை ஆயுர்வேத சபையின் ஆதரவில் திரு.சத்தியமூர்த்தி சாஸ்திரியார் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தை எடுத்துக்கொள்ளலாம். அக்கூட்டம் காலஞ்சென்ற பனகால் அரசரின் முயற்சியினால் சென்னையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்திய வைத்திய கலாசாலையின் நடைமுறையையும், இந்தியவைத்திய வளர்ச்சியில் சென்னை அரசாங்கத்தார் அநுசரித்து வரும் கொள்கையையும் கண்டிக்கவே கூட்டப்பட்டதாக இருக்கிறது. இவ்வாறு கூட்டம் கூட்டிக் கண்டனம் செய்வதற்குக் காரணம் என்ன என்பதைக் கூறுவதற்கு முன் அக்கூட்டத்தில் பேசிய 'பிராமணோத்தமர்'களின் பேச்சுகளைக் கொஞ்சம் கவனிப்போம்.



RangaRakes tamilnavarasam.com

“இப்பள்ளிக்கூடம் ஏற்பட்டதன் பலனாக ஆயுர்வேத வைத்தியப் பழக்கம் உள்ளவர்களுக்குக் கெடுதியும் நேரிடுகிறது. இதனால் ஆயுர்வேத வித்தைக்கே ஆபத்து ஏற்படும் போல இருக்கிறது. இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்தில் தேருபவருக்கே உத்தியோகம் கொடுக்கப்பட வேண்டும் என்று கவர்ன்மெண்ட் உத்தரவு பிறப்பித்திருப்பதனால் எங்கள் போன்ற வர்க்கு ஒருவித யோக்கியதையும் இல்லை என்று கூறுவது போலாகிறது’. “இந்திய வைத்தியமுறை விஷயமாக எங்களுடைய யோசனையையும் அனுஷ்டித்து சுத்த சமஸ்கிருத ஞானம் வாய்ந்தவர்களையும் அப்பள்ளிக் கூடத்தில் போதகராக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே நாங்கள் இங்கு கூறவந்திருக்கும் முக்கியயோசனை’’என்று ஒரு பார்ப்பனர் பேசியிருக்கிறார்.

“புராதன கால வைத்தியமுறை திருப்திகரமான பலன் அளிக்க வேண்டுமாயின் கவர்ன்மெண்ட்டின் இந்திய வைத்தியப் பள்ளிக்கூடம் தற்போது நடப்பதைப்போல் நடத்தப்படுவதைவிட மூடப்படுவதே நலம் என்ற எண்ணம் எங்கள் எல்லோருடைய மனதிலும் தோன்றியிருப்பதை தெரிவிக்கவே முற்பட்டோம்”.

“ஆயிர்வேத வைத்தியம் ஆதிகால மகரிஷிகள் அனுஷ்டிக் கப்பட்ட விதமாக நீடிக்கச்செய்ய வேண்டுமென்று பரம்பரையாகப் பாடு பட்டு வரும் வைத்திய மகான்கள் கவர்ன்மெண்ட் ஆதரவிருந்தால் அந்த சாஸ்திரம் பழய மேன்மை ஸ்திதியை அடையும் என்று நம்பியிருந்தனர். அந்த நம்பிக்கையினால் தான் இந்திய வைத்தியப்பள்ளிக்கூடம் ஒன்று ஸ்தாபிக்கப்படுவதை ஜனங்கள் ஆதரித்தனர்”.

“இப்பள்ளிக்கூடத்தை பழய முறையில் சாஸ்திர நிபுணத்துவம் வாய்ந்தவர்களிடம் விடவேண்டும். பழய வித்துவான்களைப் போற்றி ஆதரிக்கவேண்டும்” என்னும் விஷயங்கள் அச்சபையின் சார்பாக ஒரு பார்ப்பனரால் வாசிக்கப்பட்ட யதாஸ்த்தில் காணப்படுகின்றன. இன்னும் அக் கூட்டத்தில் செய்த தீர்மானங்களில் “பிராசீன சம்பிரதாய ரீதியில் ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்தையும், வைத்திய முறையையும் விருத்தி செய்ய வேண்டும்” என்று அரசாங்கத்திற்கு அறிவித்துக்கொள்ளுவதா கவும், “இந்திய மருத்துவப் பள்ளிக்கூட நிர்வாகப் பொறுப்பை இந்த (சமஸ்கிருத ஆயுர்வேத) சாஸ்திரத்தில் பரிபூரண ஞானம், பரிபூரண சிரத்தை, பரிபூரண விசுவாசம் நிறைந்த வித்துவான்கள் கையில் விட வேண்டும்” என்றும் காணப்படுகின்றன.

ஆகவே, மேலே கூறிய விஷயங்களை கவனித்துப்பார்த்தால் உண்மை இன்னதென்று எல்லோருக்கும் விளங்கிவிடும். அரசாங்கத்தால் நடத்தப்படும், இந்திய வைத்திய கலாசாலையில் சமஸ்கிருத பாஷையில் உள்ள ஆயுர்வேத வைத்தியத்தையே போதிக்கவேண்டும் என்பதும்,



அதற்காகச் சமஸ்கிருத வைத்தியம் கற்ற பார்ப்பனர்களையே பள்ளிக்கூடத் தில் பேராசிரியர்களாக நியமிக்கவேண்டும் என்பதுமே பார்ப்பனர்களின் உள் எண்ணம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு முடிவு செய்து, இம்முடிவும் அரசாங்கத்தாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடைமுறையிலும் கைக்கொள்ளப்படுவதால் உண்டாகும் பலன் தான் என்ன என்பதையும் சிறிது யோசித்துப்பாருங்கள்.

இப்பொழுது தமிழ்ச் சித்தவைத்தியமும், ஆயுர்வேத வைத்தியம் யூநானி வைத்திய பாகங்களும், மேல் நாட்டு வைத்திய முறைக்கிணங்க போதிக்கப்படுவதால், அப்பள்ளிக்கூடத்தில் பிராமணரல்லாதார், கிருஸ்த வர், முஸ்லீம் முதலிய எல்லா வகுப்பு மாணவர்களும் சேர்ந்து படிக்க முடிகின்றது. இவ்வாறின்றிச் சமஸ்கிருத ஆயுர்வேத வைத்தியம் மட்டும் போதிக்கப்படுமானால் சமஸ்கிருதம் படித்த பார்ப்பனர்கள் மாத்திரமே சேர்ந்து படிக்கும் சந்தர்ப்பம் வாய்க்கும். இதனால் பார்ப்பனர்களுக்கு உத்தியோக வேட்டைக்கு வசதியும் ஏற்படும் என்கின்ற இந்தக் காரணத்தால் தான் இப்பொழுது பார்ப்பன வைத்தியர்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கி யிருக்கின்றார்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

உண்மையிலேயே இந்த நாட்டில் ஆயுர்வேத வைத்தியத்திற்கு ஆதரவளிக்கவேண்டும் என்பதற்கும், ஆயுர்வேத வைத்தியர்களை மட்டும் தான் அரசாங்கத்தார் பாதுகாத்து உத்தியோகம் கொடுக்கவேண்டும் என்ப தற்கும் ஏதாவது ஆதாரமோ அல்லது நியாயமோ உண்டா? என்று கேட் கின்றோம்.

பரம்பரையாக தமிழ்நாட்டில் வழங்கிவரும் வைத்தியம் சித்த வைத்தியமேயாகும். இப்பொழுதும் நாட்டுப்புறங்களிலும், நகரங்களிலும் நாட்டு வைத்தியர்களாக இருக்கின்றவர்கள் பெரும்பாலும், தமிழர்களும் தமிழ் வைத்தியங் கற்றவர்களுமேயாவார்கள். தமிழ் வைத்தியத்தில் கூறப்படும் மருந்துகளுக்கு வேண்டிய பொருள்கள் யாவும் இந்நாட்டில் கிடைக்கக் கூடியனவேயாகும். தமிழ்நாட்டு சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்ற வகையில்- தமிழ் வைத்திய மருந்துகளும் அமைந்திருக்கின்றன. ஆகை யால் தமிழ் வைத்தியத்தை போதிப்பதும், விருத்தி செய்வதும் சுலபமான காரியமாகும்.

இதற்கடுத்தபடியாக யூநானி மருத்துவ முறையும் , நம்நாட்டில் எளிதில் விருத்தி செய்யக்கூடியதாகும். முஸ்லீம் ஆட்சி இந்தியாவில் எங்கும் பரவியிருந்ததனாலும் முஸ்லீம்கள் நாடு முழுவதும் வாழ்ந்திருப்ப தனாலும் அவ்வைத்தியமும் நாட்டின் நிலைமைக்கேற்றவாறே அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், ஆயுர்வேத வைத்தியமோ இந்த நாட்டிற்கு சிறிதும் ஒவ்வாததாகும் என்பதே நமது அபிப்பிராயம். அது பழங்காலத்



RangaRakes tamilnavarasam.com

தில் இமயமலைப் பிரதேசங்களில் வசித்துக் கொண்டிருந்த நாகரீகமற்ற நாடோடிகளால் (ரிஷிகள்) கண்டுபிடிக்கப்பட்ட முறைகளேயாகும். அந்த வைத்தியத்தில் சொல்லப்படும் மருந்துக்கு வேண்டிய மூலிகை வகைகளும், மற்றையப் பொருட்களும் இமயமலைப் பிரதேசங்களில் கிடைக்க கூடுமேயன்றி நமது நாட்டில் அகப்படமாட்டா. அன்றியும் சமஸ்கிருத வைத்தியங் கற்ற பண்டிதர்கள் நமது நாட்டில் அதாவது தமிழ்நாட்டில் எத்தனை பேர் இருக்கின்றார்கள்?

சென்னை போன்ற நகரங்களில் நாலைந்து ஆயுர்வேத பண்டிதப் பார்ப்பனர்களும், அவர்களால் செய்து விற்கப்படும் மருந்துக்கடைகளும் இருந்து விட்டால் போதுமா? இதற்காக அரசாங்கத்தார் நாட்டில் - அனு போகத்தில் வழங்கிவரும் வைத்தியமுறையை அலட்சியஞ் செய்துவிட்டு அந்த நாலைந்து பூணூல்காரர்களுக்காக ஏழைமக்களின் வரிப்பணத்தை செலவுசெய்ய வேண்டுமா? என்று கேட்கின்றோம். ஒரு சமயம் சமஸ்கிருத ஆயுர்வேத வைத்தியத்தைப் பார்ப்பனர் படித்து அரசாங்க வைத்தியசாலை களில் உத்தியோகம் பெற்றுவந்தால் அதனால்தான் யாருக்கு நன்மையுண்டு என்று பார்ப்போம். சமஸ்கிருதம் படித்த பார்ப்பனர்கள் கட்டாயம் வருணா சிரமத்தர்மவாதிகளாகவும் ஜாதித் துவேஷம் பாராட்டுகிறவர்களாகவும்தான் இருக்கவேண்டும். இத்தகைய துவேஷபுத்தியுடைய வைத்தியர்கள் பொது ஜனங்களுக்கு எப்படி வைத்தியம் செய்வார்கள்? பிராமணரைத் தவிர மற்றவர்களை தொட்டால் தீட்டு ஒட்டிக்கொள்ளும் அல்லவா? அதற்காக பட்டுத் துணியை கையில் போட்டு நாடிப் பார்க்கும் பழைய முறையைத் தானே கொண்டு வருவார்கள். இந்தவிதமான மனப்பான்மையுள்ளவர்கள் எப்படி ஒருவருடைய வியாதிகளை அறிந்து தகுந்த மருந்துகளை கொடுத்து அதை குணப்படுத்த முடியும்? என்பன போன்ற விஷயங்களை நன்றாய் ஆலோசனை செய்து பார்க்க வேண்டுகிறோம். நிற்க,

இவ்வாறு பார்ப்பனர்கள் ‘ஆயுர்வேத வைத்தியத்திற்கு ஆபத்து வந்து விட்டது” என்று மாரடித்துக்கொள்வதில் ஏதாவது அர்த்தம் இருக் கிறதா? இப்பொழுதுள்ள இந்தியவைத்திய கலாசாலையில் சித்தவைத்தியம், யூநானி வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் ஆகிய மூன்றின் பாகங்களும் போதிக்கப்பட்டு வருவதாகவே கேள்விப்படுகிறோம். அப்படியிருந்தும் இவர்கள் கூச்சல் இடுவதற்குக் காரணம் பொறாமையும், துவேஷப் புத்தியும், வயிற்று எரிச்சலுந் தவிர வேறு என்னதான் இருக்கமுடியும்?

நமது நாட்டில், பரம்பரையாக வைத்தியத்தொழில் செய்து வருபவர் கள் மருத்துவகுலத்தினர் என்பது யாவரும் அறிந்த விஷயம். அப்படி யிருந்தும், ‘பரம்பரை ஆண்டியா? பஞ்சத்திற்கு ஆண்டியா?’ என்றபடி வயிற்றுப்பிழைப்புக்காக வயித்தியங்கற்றுக் கொண்ட பார்ப்பனர்கள் தங்களைப் பரம்பரை வைத்திய மகான்களென்றும் கூறிக்கொண்டு, தமிழ்



வைத்தியத்திற்கு உலைவைக்க வழிதேடுகின்றனரே, இது எவ்வளவு நாணயமற்ற செயலாகும்? நாம் இவ்வளவும் கூறியது “தமிழ் வைத்தியந் தான் நமக்கு வேண்டியது மற்ற வைத்தியங்கள் தேவையில்லை” என்ற எண்ணத்தோடு அல்ல, பார்ப்பனர்கள் எந்தெந்த வகையில், தங்கள் ஆதிக்கத்தை நுழைக்க வேலை செய்கிறார்கள் என்பதைக் காட்டவே இவ்விஷயத்தை எழுத முன்வந்தோம். **ஆபத்தில்லாமல், சுலபமான வழியில் வியாதிகளை நீக்கக்கூடிய வைத்தியமுறை எந்த நாட்டு வைத்தியமாயிருந்தாலும் அதை நாம் ஆதரித்து விருத்தி செய்ய வேண்டுமென்பது தான் நமது அபிப்பிராயம்.** ரிஷிகளால் கண்டு பிடிக்கப்பட்டது வெகு காலமாக இருந்து வருவது ஆகையால் அதைத் தான் அரசாங்கத்தார் ஆதரிக்கவேண்டுமென்று சொல்லும் மூளையற்ற - துவேஷவாதத்தை நாம் கண்டிக்கிறோம்.

இந்த மூளையற்ற பிடிவாதத்தினாலும் எண்ணத்தினாலுமே, நமது நாட்டு தொழில்களும், கலைகளும் நாசமடைந்தன என்பதை நினைப்பூட்டு கிறோம். இவ்விடத்தில் மேலே கூறிய ஆயுர்வேத சபைக் கூட்டத்தில் தலைமை வகித்த திரு.சத்தியமூர்த்தி சாஸ்திரியார் அவர்கள் கூறிய “இங்கு கூடியுள்ள ஆயுர்வேதப் பண்டிதர்களுக்கு ஒரு வார்த்தை, நீங்கள் கேவலம் ஆஷாட பூதிகளாகச் சொன்னதையே சொல்லிக் கொண்டு பழய ஏட்டைப் புரட்டிக் கொண்டிருக்கக்கூடாது. இந்தப் பெரிய சாஸ்திரத்தை மேன்மேலும் முன்னுக்குக்கொண்டுவந்து தற்கால அவசியத்திற்கு ஏற்றவாறு ஆகர்ஷணை செய்ய வேண்டும்” என்னும் வார்த்தையையே நாமும் எடுத்துக் காட்டுகிறோம். திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரியார் அவர்கள் எந்தக் கருத்தோடு கூறியிருந்தாலும் அது வார்த்தையளவில் கண்மூடித்தனமுள்ள வைதீகர்களுக்கு நல்ல சவுக்கடி கொடுக்கக் கூடியதாகவேயிருக்கிறது என்பதை நினைவூட்டி முடிக்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 06.12.1931**



RangaRakes tamilnavarasam.com

# அன்று சொன்னதற்கு அழிவில்லை

கொஞ்ச நாளாக நமது நாட்டில் ஒவ்வொரு நாளும் அரசியல் கிளர்ச்சிப் பத்திரிகைகளைப் படிக்க ஆவல் உண்டாக்கிக் கொண்டிருந்ததும், விடிந்து எழுந்தது முதல் படுக்கைக்குப்போகும் வரையிலும் வேலையற்றவர்கள் வேலையுள்ளவர்கள் ஆகிய எல்லோராலும், எங்கும் பேசப்பட்டுவந்ததுமாகிய வட்டமேஜை மகாநாட்டின் இரண்டாவது கூட்டம் முடிந்துவிட்டது. 'திரு.காந்தி அவர்கள் வட்டமேஜை மகாநாட்டிற்குப் போயிருக்கிறார், அவர் தமது அபாரமான சக்தியினால் பிரிட்டிஷாரை நடுநடுங்க வைத்துச் சுயராஜ்யத்தை வாங்கி முன்னதாக இந்தியாவுக்கு பார்சல் அனுப்பிவிட்டுத்தான் இங்கிலாந்தைவிட்டுப் புறப்படுவார்' என்று 'காந்தி பக்தர்கள்' நினைத்துப் பேசிக் கனவுகண்டு கொண்டிருந்த சுயராஜ்யமும் இன்னதென்று தெரிந்து விட்டது.

ஆனால், இந்த சுயராஜ்யமும் காங்கிரசின் பிரதிநிதியாகிய திரு.காந்தி அவர்கள் வட்டமேஜை மகாநாட்டிற்குப்போன பிறகுதான் கிடைத்தது என்று சொல்லுவதற்கில்லாமற் போய்விட்டது பற்றி காங்கிரஸ்காரர்கள் ஆயாசப்படுவதோடுங்கூட ஆத்திரமும் படக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. காங்கிரஸ் பிரதிநிதிகள் இல்லாமல் நடைபெற்ற முதல் கூட்டத்திலேயே- சென்ற ஜனவரி மாதத்தில் பிரிட்டிஷ் முதல் மந்திரி வெளியிட்ட அறிக்கையிலேயே இன்னமாதிரியான சுயராஜ்யந்தான் கொடுக்கமுடியும் என்று கூறினார். அதே சுயராஜ்யத்தைத்தான் இப்பொழுதும் கொடுப்பதாக முதல் மந்திரி தமது அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார். முதல் வட்டமேஜை மகாநாடு நடந்தபோது, அம்மகாநாட்டைத் 'தேசத் துரோகிகள் கூட்டம்' என்றும், 'சர்க்கார் தாசர்கள் கூட்டம்' என்றும், 'உத்தியோக வேட்டைக்காரர்கள் கூட்டம்' என்றும், 'வகுப்புவாதிகள் கூட்டம்' என்றும் பலவாறு நமது நாட்டுத் தேசீயப் பத்திரிகைகள் என்பனவும், தேசீயத் தலைவர்கள் என்பவர்களும், தேசீயத்தொண்டர்கள் என்பவர்களும், கை வலிக்க எழுதினார்கள்; தொண்டை வலிக்கக் கத்தினார்கள். பிறகு, 'காந்தி-இர்வின் ஒப்பந்தம்' ஏற்பட்டதன் பலனாகத் திரு.காந்தி வட்டமேஜை மகாநாட்டிற்குப் போகும் படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவரும் வட்டமேஜை மகாநாட்டிற்குப் போகாமல் நழுவவிடுவதற்கு எத்தனையோ வகையில் சாக்குப்போக்குகள் காட்டியும்கூட போக முடியாமல் இருக்க ஒன்றும் சரியான காரணம் கிடைக்காமையால் 'கடவுள்' தலையின்மேல் பாரத்தைப் போட்டுப் போய்ச் சேர்ந்தார். காங்கிரஸ்காரர்களும், 'ஆசீர்வாதங்'கூறி 'ஜே'போட்டுக் கப்பலேற்றி அனுப்பினார்கள். ஆனால், அப்பொழுதே திரு.காந்தியாரால் புதிதாக ஒன்றும் சாதித்துக் கொண்டு வரப்போவதில்லை என்று தெரிந்த 'நவஜவான்'காரர்கள் கருப்புக் கொடி பிடித்தார்கள். 'காந்திக்கு வெட்கம், காங்கிரசுக்கு வெட்கம், காந்தி ஒழிக, காங்கிரஸ் ஒழிக' என்று கூச்சலிட்டார்கள். அப்பொழுதும் திரு.காந்தியவர்கள் வெகு ஜாக்கிரதையாக 'கடவுள்' என்னைப் போகச்சொல்லுகிறார். 'கடவுள்'எந்த மாதிரியான சுயராஜ்யத்திற்கு வழி விடுகிறாரோ அதன்படி நடக்கட்டும். என்னால் ஒன்றும் ஆகாது. எல்லாம் 'கடவுள் சித்தம்'என்னும் பல்லவிகளைப் பாடிக்கொண்டு தான் போனார்.

திரு.காந்தி அவர்களுக்குத் துணையாக திரு.மாளவியா, திரு.ரங்கசாமி அய்யங்கார், திருமதி.சரோஜினி தேவி முதலியவர்கள் 'காங்கிரஸ் பிரதிநிதிகள்' என்ற பெயரில்லாவிட்டாலும் அநாமதேயப் பிரதிநிதியாகப் போய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் சென்றுங்கூட முதல் மகாநாடாகிய 'தேசத் துரோக, வகுப்புவாத, உத்தியோக வேட்டை'க் கூட்டத்தில் எந்தவிதமான சீர்திருத்தம் கொடுப்பதாக பிரிட்டிஷ் அரசாங்கம் சம்மதித்ததோ, அதைவிட ஒன்றும் அதிகமாக கொடுத்துவிட இப்பொழுது சம்மதித்துவிடவில்லை. 'அன்று கண்டதிற்கு அழிவில்லை'என்பது போல முன்பு என்ன சொல்லப்பட்டதோ அதைத்தான் திரும்பவும் சொல்லப் பட்டது. ஆகவே, இவர்கள் போய்த்தான் என்ன பிரயோஜனம் உண்டாகி விட்டது? போகாமல் இருந்த காலத்தில் தான் என்ன நஷ்டம் வந்து விட்டது என்று கேட்கிறோம்.

திரு. காந்தியவர்கள் வட்டமேஜை மகாநாட்டில் பேசும்போதெல்லாம் 'காங்கிரஸ் ஒன்றே தான் இந்தியாவுக்குப் பிரதிநிதி ஸ்தாபனம், அதனுடைய அபிப்பிராயமேதான் இந்தியாவின் அபிப்பிராயமாகும். காங்கிரசை ஆதரிக்காத வகுப்பினர்கள் இந்தியாவில் இல்லை. என்னைத்தான் காங்கிரஸ் தனது பிரதிநிதியாக அனுப்பியிருக்கிறது. ஆகையால் நான் கூறும் அபிப்பிராயந்தான் காங்கிரஸ் அபிப்பிராயம். என் அபிப்பிராயமே இந்தியாவில் உள்ள 35கோடி ஜனங்களின் அபிப்பிராயமாகும். நான் கேட்கும் சுயராஜ்யம் கொடுக்காவிட்டால் இந்தியா பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு மறுபடியும் 'ஆத்மசக்தி' கொண்டு போர் செய்யும் என்று இம்மாதிரியே தன்னையும், காங்கிரசையும் பற்றி வெகுவாகப் புகழ்ந்து 50 நிமிஷம் அதிகமான பிரசங்கம் செய்வார். அதன்பின் 10 நிமிஷத்தில் "காங்கிரசின் நோக்கம் பூரண சுயராஜ்யமே யாகும். பூரண சுயராஜ்யம் கொடுத்து விட்டால், இந்தியாவிலுள்ள வகுப்புக்கலகங்கள் யாவும் ஒழிந்து போகும். இந்தியாவிலுள்ள மதச் சண்டைகளும் ஒழிந்து விடும், பூரண


RangaRakes
tamilnavarasam.com

சுயராஜ்யம் கொடுத்து விட்டால் இந்தியாவை எங்களால் காத்துக்கொள்ள முடியும்" என்று பல்லவி பாடி முடிப்பார். இவருடைய பல்லவி முடிந்தபின் 'காந்தி பக்தர்'களாக இருக்கின்ற இரண்டொரு பிரதிநிதிகளும் அநுபல்லவி யும் பின்பாட்டும் பாடிமுடிப்பார்கள். திரு. காந்தியின் பேச்சுக்கு மாறாக "ஒவ்வொரு வகுப்புக்கும் பாதுகாப்பு இருக்கவேண்டும். பூரண சுயேச் சைக்கு இந்தியா இன்னும் யோக்கியதை யடையவில்லை. பூரண சுயேச்சை கொடுத்துவிட்டால், சிறுபான்மை வகுப்புகளும், தாழ்த்தப்பட்ட வகுப்பு களும், செல்வாக்குப் பெற்ற பெரும்பான்மை வகுப்புகளிடம் அகப்பட்டு நசுங்குண்டு அழியும்படி சம்பவிக்கும். ஆகையால், தக்க பாதுகாப்போடு கூடிய சீர்திருத்தமே வேண்டும்" என்று பேசுகின்றவர்களையும், அவர்களை ஆதரிப்பவர்களையும், இந்தியாவின் பிரதிநிதிகள் அல்லவென்றும், அவர் களுக்கு இந்தியாவில் செல்வாக்கில்லை யென்றும், பிரிட்டிஷ் அரசாங்கத் தாரின் தரகர்களென்றும் மகாநாடு வெற்றிகரமாக முடியாமலிருக்க வேண்டு மென்றே பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்களென்றும், நியாயமின்றியும் நாணயமின்றியும் பேசிக் கொண்டு வந்தார். இதற்கு அவ்வப்போது மற்ற பிரதிநிதிகள் தக்க சாட்டை கொடுத்தார்களென்றாலும் அவர் தனது புலம்பலைக் கடைசி வரையிலும் விடவேயில்லை.

இவ்வாறு திரு.காந்தியவர்கள் என்னதான் கூறினாலும் கடைசியில் ஒன்றும் பலிக்காமல் போய்விட்டது. கடைசிக்கூட்டத்தில் பிரிட்டிஷ் முதல் மந்திரி வெளியிட்ட அறிக்கையில்,

> "இந்தியாவிற்கு மாகாண முழு சுய ஆட்சியும், மத்திய அரசாங்கத்தில் பொறுப்புள்ள ஆட்சியுமே கொடுக்கப்படும். ராணுவ இலாகாவும், வெளி நாட்டு சம்பந்த இலாகாவும் கவர்னர் ஜெனரலின் பொறுப்பில்தான் ஒதுக்கப்படும். சில நிபந்தனைகளுடன் நிதி சம்பந்த மான பொறுப்பை மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படும். இந்தியாவின் செல்வநிலைக்குத் தீங்குவராமல் பாதுகாக்கும் பொறுப்பு கவர்னர் ஜெனரலிடமே இருக்கும். குறைந்த வகுப்பினர் களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பும் கவர்னர்ஜெனரலி டமே இருக்கும். தேசத்தின் அமைதியைப் பாதுகாக்கும் பொறுப்பும் அவருடையதே. இனி ஐக்கிய அரசாட்சியின் அமைப்பு முறை யைப்பற்றி முடிவு செய்வது, சிறுபான்மை வகுப்புப்பிரச்சினை யைப் பொறுத்தாகும். உங்களால் இதுவரையிலும் சிறுபான்மை வகுப்புப் பிரச்சினையைச் சமரசமாகத் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. இனியாவது நீங்கள் முயன்று ஒரு முடிவுக்கு வாருங்கள். இல்லாவிட்டால் நானே முடிவுசெய்து விடுகிறேன். இந்தியாவில் உள்ள எல்லா வகுப்புகளுக்குள்ளும் சமரசம் ஏற்படாத காரணமே பொறுப்பாட்சிக்குத் தடையாக இருக்கிறது. இனி ஐக்கிய அரசாங்கத் தில் ஒவ்வொரு விஷயமும் எப்படி எப்படி இருக்கவேண்டுமென்



> பதைப்பற்றி இந்தியாவில் கூடப்போகும் மூன்றாவது கூட்டத்தில் தனித்தனிக் கமிட்டிகளின் மூலம் முடிவு செய்யப்படும்.

என்று மிகவும் தெளிவாகக் கூறிவிட்டார். இதுதான் முதல் மந்திரியின் அறிக்கையில் உள்ள சாரமாகும்.

இவ்விஷயத்தை அறிந்தவுடன் திரு.காந்தியும், 'தான் வந்தும் ஒன்றும் அதிகப்படியான காரியம் நடைபெறவில்லையே இதற்கு என்ன சமாதானம் கூறலாம்'என்று பல மணி நேரங்கள் ஆலோசனை செய்து பார்த்தார். கடைசியாக 'நான் இந்தியாவை விட்டு வந்த காலத்தில் நம்பிக்கை இழந்ததைவிட இப்பொழுது ஒன்றும் அதிகமாக இழந்துவிடவில்லை' என்று வெகு சாதுர்யமாகச் சமாதானங்கூறிவிட்டார். ஆனால், பூரண சுயராஜ் யம் வாங்கித் தருவதாக திரு.காந்தியும், காங்கிரசும் சட்டமறுப்புப்போர் நடத்தியதற்குப்பலனாக ஒன்றையும் காணோம். சட்டமறுப்பினால் நாட் டிற்கு ஒரு நன்மையும் உண்டாகப்போவதில்லையென்றும், அதற்குப் பதிலாக மக்களுக்குத் துன்பமே உண்டாகுமென்றும் நாம் ஆதி முதல் கூறி வந்தது இப்பொழுது என்னவாயிற்று? ஆயிரக்கணக்கான தொண்டர்கள் என்பவர்கள் அடிபட்டதும், சிறைபட்டதுந்தான் லாபம். சுயராஜ்யம் வாங் கித் தருகிறோம் என்று ஏழை மக்களிடம் உண்டியல் வசூலும், பணவசூலும் செய்து காங்கிரஸ்காரர்கள் சாப்பிட்டு ஏப்பமிட்டதுதான் பலன். நாட்டில் உள்ள வியாபாரிகள் வியாபாரத்தில் நஷ்டமடையவும், அரசாங்கத்தின் செலவு அதிகரிக்கப்படவும், அதன் மேல் தபால், தந்தி, உப்புவரி, நிலவரி, இறக்குமதிவரி முதலிய பலவகையில் அதிகவரி ஏற்பட்டு ஜனங்கள் கஷ்டப்படவும், சட்டங்களை மீறுதல் என்ற எண்ணம் படிந்ததனால் மக்கள் ஒழுங்கீனமான வழிகளில் பிரவேசிக்கவும், கொள்ளைகளும், கொலை களும், தாராளமாக நடைபெறவும், 'தேசீய வீரர்கள்', 'தியாகிகள்'என்ற பட்டங்கள் பெறவும், செய்ததுதான் லாபம். வேலையில்லாமல் திண்டாடிய வர்களும் பொழுதுபோக்குவதற்கு வழியில்லாத காலிகளும் ஏதாவது ஒரு கிளர்ச்சியான காரியத்தைச்செய்து கொண்டுதான் இருக்க வேண்டும் என்னும் எண்ணம் உடையவர்களும், ஏதாவது ஒரு இயக்கத்தின் பேரால் தனக்கு வேண்டாதவர்களை அவதூறுசெய்யவேண்டும் என்னும் நோக்க முடையவர்களும், ஜவுளிக்கடை மறியல், கள்ளுக்கடை மறியல் என்ற பெயர்களால் காலித்தனம் செய்ததுதான் லாபம். இம்மாதிரி பலவகையில் தேசத்திற்குக் கஷ்டமும், மக்கள் மனதிற்குத் தொல்லையும், தேசத்தின் செல்வத்திற்கு நஷ்டமும் ஏற்பட்டதைத்தவிர சட்டமறுப்பு இயக்கத்தினால் ஒரு கடுகளவு நன்மையும் ஏற்படவேயில்லையென்று முன்னமே கூறி னோம், இப்பொழுதும் கூறுகின்றோம்.

அல்லாமலும் காங்கிரசினால் நாட்டிற்கு ஏற்பட்ட மற்றொரு பெருங் கெடுதியையும் இச்சமயத்தில் சொல்லாமல் இருப்பதற்கில்லை. அதாவது



RangaRakes tamilnavarasam.com

காங்கிரஸ் பிரசாரம் செய்யும் ஆட்கள் வருணாச்சிரமவாதிகளாயிருந்து கொண்டு மக்களுக்கு 'ஆத்மசக்தி', 'தெய்வபக்தி', 'புராண நம்பிக்கை' முதலிய புரட்டுகளைப் போதித்துக் கொண்டு வந்தார்கள். திரு.காந்தியையும் 'தெய்வ புருஷர்' ஆக்கி அவர்மீது மூடநம்பிக்கை கொள்ளும்படி ஜனங்களுக்குப் போதித்தார்கள். இந்தக்காரணங்களால் இப்பொழுதும் திரு. காந்தியைப் பற்றி தெரிந்துக் கொண்டிருகிற பாமர மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதே முக்காலே மூன்று வீசம் பேர் திரு.காந்தியை ஒரு 'மகான்', 'அவதாரபுருஷர்', 'தெய்வீக சக்தி' வாய்ந்தவர், 'தெய்வீக சக்தி' யினால் வெள்ளைக்காரர்களை நமது நாட்டைவிட்டு ஓட்டிச் சுயராஜ்யம் வாங்கிக்கொடுத்து விடுவார்' என்ற அளவில் காங்கிரஸ் 'பக்தர்'களால் சொல்லத் தெரிந்து கொண்டு 'காந்திக்கு ஜே' என்று கத்துகிறார்களே யல்லாமல் 'அவர் ஒரு அரசியல்வாதி வருணாச்சிரம தருமி'என்று தெரிந்து கொண்டிருக்கிறவர்கள் எத்தனைபேர் என்று கேட்கிறோம்.

ஆகவே, காங்கிரசும், திரு.காந்தியும் நடத்திய சட்டமறுப்பு இயக்கத் தால், காந்தி மதமும், வருணாச்சிரம தருமமும், மூடநம்பிக்கையும், காலித் தனமும் பரவியதைத் தவிர வேறு ஒன்றும் இல்லையென்பது நடுநிலைமை யிலிருந்து சொந்த அறிவோடு யோசித்துப் பார்ப்பவர்களுக்கு விளங்காமல் போகாது. வேண்டுமானால் அடுத்த எலக்ஷனிலும், இப்பொழுது நடை பெறும் ஸ்தலஸ்தாபனத் தேர்தல்களிலும், காந்தி, காங்கிரஸ், தேசீயம், சுயராஜ்யம் என்னும் பெயர்களைச் சொல்லி ஓட்டு வாங்கவும், ஓட்டுக் கேட்பவர்களுக்குத் தரகர்களாய் இருக்கவும் பிரயோசனப்படும்; பிரயோ சனப்படுகின்றது என்று சொல்லிக் கொள்வதைப் பற்றி நமக்கு ஆட்சேபனை யில்லை. இவ்விஷயம் இவ்வளவோடு இருக்கட்டும்.

இனி வரப்போகும் அரசியல் சீர்திருத்தத்தால் நாட்டின் ஏழை மக் களுக்கு- தொழிலாளர்களுக்கு- தீண்டத்தகாதவர்களுக்கு- பெண் மக்க ளுக்கு- நாள் முழுவதும் கஷ்டப்பட்டு வேலை செய்து அரைவயிற்றுக்குக் கூட உணவில்லாமல் துன்பத்திலும், கவலையிலும், கொடுமையிலும் காலங் கழிக்கும் ஆதரவற்ற மக்களுக்கு ஏதாவது நன்மை விளையுமா என்பதை யும் சிறிது ஆலோசித்துப் பார்ப்போம்.

சிறுபான்மையோர், பெண் மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், கஷ்டப் பட்டு உழைப்பவர்கள் முதலானவர்களுக்கு என்னதான் பாதுகாப்பு அளித்தாலும், அவர்கள் சமூக சமத்துவம் பெற்று, அவர்களுக்குள்ள கஷ்டங்களெல்லாம் நீங்கி, அவர்களுக்கு 'உயர்ந்த ஜாதிக்காரர்' என்ப வர்களால் செய்யப்படும் கொடுமைகள் தொலைந்து, மேலான நிலைமைக்கு வந்து விடுவார்கள் என்று சொல்ல முடியாது. இதற்குப் பதிலாக படித்தவர்கள் அதிகமான உத்தியோகங்களைப் பெறவும், பணக்காரர்களும், ஜமீன்தாரர் களும், பட்டங்களும், பதவிகளும் பெற்று ஏழைமக்களைக் கொடுமைப்



படுத்தவும், வருணாச்சிரம தருமக்காரர்கள் இன்னும் தங்கள் சனாதன தருமத்திற்கு நிலையான ஆதரவு தேடிக் கொள்ளவும் தான் சௌகரியம் உண்டாகும்.மற்றபடி விவசாயிகளும், தொழில் செய்பவர்களும், கொடுத்து வரும் வரியில் ஒரு சிறிதும் குறைவேற்படப்போவதில்லை. இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் அவர்களிடம் வாங்கும் வரிகள் அதிகமாகவே ஆகக்கூடும். நமது செல்வம் பயனற்ற வழியில் மதத்திற்கெனவும், திருவிழாகளுக்கென்றும், புரோகிதர்களுக்கென்றும் செலவாகி வருவது குறைந்து, அச்செல்வம் தேசமக்களின் தரித்திரத்தையும், நஷ்டத்தையும், போக்குவதற்கும்பயன்படப்போவதில்லையென்றும்உறுதியாகக் கூறுகிறோம்.

மத்திய அரசாங்கத்தில் உண்டாகப் போகும் ஐக்கிய அரசாட்சியில், சுதேச ராஜாக்களும், சமீன்தார்களும், பணக்காரர்களுமே பதவி வகித் திருப்பார்கள். அங்கு திரு.மாளவியா, தர்பாங்கா மகாராஜா போன்ற வருணாச் சிரம தருமவாதிகளுக்கே செல்வாக்கு மிகுந்து நிற்கும். இத்தகைய சபையின் மூலம், கஷ்டப்படுவோர் நன்மைக்களுக்காகச் சீர்திருத்த சமதர்மச் சட்டங்கள் தோன்ற முடியுமா? என்று ஆலோசியுங்கள்.

ஆகவே, இனி வரப்போகும் சீர்திருத்தத்தினாலும், இப்பொழுது நடைபெற்று வரும் காங்கிரஸ் ஆர்ப்பாட்டங்களினாலும் எள்முனையளவு நன்மையும் நமது நாட்டிற்குக் கிடைக்க போவதில்லை என்பதை மீண்டும், மீண்டும் கூறுகிறோம்.

ஜாதிகளின் பெயராலும், மதங்களின் பெயராலும் நடைபெறபோகும் அரசியலால் பொதுவான சமதர்மத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்? சாதிகளும், மதங்களும் ஆயிரக்கணக்கான வருஷங்களாக நிலைத்து வேரோடி, மக்கள் மனத்திலும், இரத்தத்திலும் ஊறிக்கலந்து போயிருக்கின்ற நமது தேசத்தில் ஜாதி, மத ஆதிக்கமும் பாதுகாப்பும் உள்ள அரசியலைத் தவிர வேறு அரசியலை ஸ்தாபிக்கவும் முடியாதென்பது உண்மைதான். நமக்குள் ஜாதி, மத துவேஷங்கொண்டு வலுத்தவர்கள் இளைத்தவர்களைத் துன்பப்படுத்தி-கொடுமை புரிந்து ஆளுவதைவிட 'ஜாதி, மதங்கள் ஒழிந்து சமரசமாக வேண்டும்'என்பதற்கு அதிக அநுகூலஞ்செய்யாவிட்டாலும், பிரதிகூலம் செய்யாமலிருக்கும் அந்நியர் பாதுகாப்பிலிருப்பது ஒரு வகையில் மேன்மையானதென்று தான் நாம் சொல்லுகிறோம்.

நமக்குள்ளிருக்கும், சாதிப்பிணக்குகள், சமயச்சண்டைகள், அடிமை மனப்பான்மை, புரோகித ஆதிக்கம் முதலியவைகள் ஒழிந்து பகுத்தறிவு பெற்று விட்டால் அந்நியர்க்கு இங்கு வேலையில்லை. நாமும் நம் நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளும் திறமையுடைவர்களாகி விடுவோம். ஆகையால், நமது சுதந்திரத்திற்குத் தடைகளாக இருக்கின்ற ஜாதி, மதம், கடவுள், வேதம், புராணம், மூடப்பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை ஒழித்து



RangaRakes tamilnavarasam.com

ஏமாற்றுகிறவர்களுக்குக் கஷ்டப்படுகிறவர்கள் அடிமையாகாமல் எல்லா மக்களும் சுகமடைந்து வாழக்கூடியது சுயராஜ்யமானாலும், பூர்ண சுயேச் சையானாலும் ஐக்கிய ஆட்சியானாலும், அந்நிய ஆட்சியானாலும், வேறு யாருடைய ஆட்சியானாலும் அதை நாம் வரவேற்கத் தயாராக இருக்கி றோம் என்று கூறி முடிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 06.12.1931**



# நமது ஆசிரியரின் ஐரோப்பா பிரயாணம்

இன்று 13-12-31-ல் நமது ஆசிரியர் திரு. ஈ.வெ.இராமசாமி அவர்கள் திரு.இராமனாதன் அவர்களுடன் (Ambosie) அம்போய்சி என்னும் பிரஞ்சு கப்பலில் ஐரோப்பா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்வதற்கு புறப்பட்டு விட்டனர். திரு.இராமசாமி அவர்கள் உடல்நிலை தொடர்ந்த பிரயாணத்திற்கு இடங்கொடுக்க முடியாத நிலையிலிருப்பினும் இயக்க வளர்ச்சியை முன்னிட்டு என்ன நேர்ந்த போதிலும் தமது சுற்றுப் பிரயாணத்தை முடித்து வருவதென்ற எண்ணத்துடனேயே புறப்பட்டு விட்டார். சுற்றுப்பிரயா ணத்தை முடித்து விட்டு மீண்டும் நம் நாடு திரும்புவதற்கு ஏறக்குறைய 3,4 மாதங்கள் செல்லுமெனத் தெரிய வருகின்றது. இவர்களது சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகளும், அவ்வப்போது நமதியக்க சம்பந்தமான கட்டுரைகளும், நமது பத்திரிகையில் வெளிவரும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளு கின்றோம். மேலும் மேல் நாட்டுப் பழக்க வழக்கங்களைப் பற்றி நமது மக்கள் நன்கு தெரிந்து கொள்ளுமாறு இது வரையிலும் மேல் நாடு சென்ற எந்த இந்தியரும் நடு நிலைமையான தாராளமனப்பான்மையுடன் அபிப்பி ராயம் கூறியதில்லை. இது மாத்திரமல்லாமல் மேல் நாடு சென்று திரும்பி யுள்ள இந்தியர்களான நம்மவர்கள் பெரும்பாலும் அரசியல், கல்வி, மத விருத்தி இவைகளைப் பற்றியே தான் இதுவரையிலும் ஆராய்ந்திருக்கின் றனரேயொழிய அத்தேசத்து மக்கள் வழக்கபழக்கங்கள், மதபக்தி, கடவுள் பக்தி இவைகளை அவர்கள் எந்த அளவுக்குத் தங்கள் வாழ்க்கையில் உபயோகப்படுத்திக் கொள்ளுகின்றனர் என்பதைப் பற்றி சிறிதும் கவலை கொண்டதுமில்லை அவைகளைப் பற்றி நமது மக்களுக்கு எடுத்துக் கூறியதுமில்லை. காரணம் எதுவாகவிருக்கலாமென கருதுகின்றீர்கள். அந்த நாடுகளின் உண்மையான நிலை நமது மக்கள் தெரிந்து கொண்டால் "இந்து" மதத்தின் கெதி என்னவாகுமோ என்னும் பயமே தான் காரண மாகும்.

இத்தகையவர்கள்தான் இன்று நமது நாட்டில் மேல் நாடு சென்று திரும்பியவர்கள் என்ற புகழுக்குள் புகுந்து கொண்டு மக்களை மிருகங்க ளெனக் கருதி வேட்டையாடி வருகின்றனர். இப்படிப்பட்ட சமரசமற்ற மனப் பான்மையுடையவர்கள் எண்ணத்தில் மண்ணையள்ளிப் போடுவதே நமது



RangaRakes tamilnavarasam.com

ஆசிரியரின் சுற்றுப்பிரயாண நோக்கமாகும். ஐரோப்பா சுற்றுப்பிரயாணத்தின் பொழுது ஆங்காங்கு நமது நாட்டு சமூக நிலையையும், நமது இயக்கக் கொள்கைகளையும் பிரசாரம் செய்தும் வருவார்கள். இதனால் மேல் நாட்டு மக்களுடைய ஆதரவும் நமதியக்கத்திற்கு ஏற்படும் என்பது திண்ணம்.

உலக ஒற்றுமை வேண்டுமேயானால் சகல தேசமக்களுக்கும் பொருத் தமான சமூகச்சட்டங்கள் ஏற்படுதல் வேண்டும். இம்மாதிரியான காரியங்களைச் செய்வதற்கு நமது நாட்டில் முன்வருவோரைவிட தடை செய்கின்றவர்கள் அல்லது குறை கூறுகின்றவர்கள் தான் மலிந்துக் காணப்படுகின்றனர். இத்தகைய மக்களுக்கிடையே இம்மாதிரியான உணர்ச்சி தோன்றுவதென்பது இலகுவான காரியமல்ல. அதிலும் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதென்பதோ அதிக கஷ்டமான காரியமாகும். இப்படிப்பட்ட காரியங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதற்கான வழிகளைக் கண்டுபிடித்து மக்களையும் அவ்வழியையே பின்பற்றுமாறு செய்வதென்ற நோக்கத்துடன் தங்களது திரேக நிலையையும், பொருட் செலவையும் கவனியாது, சுற்றுப்பிரயாணத்திற்குத் துணிந்த நமது கிழச் சிங்கத்தையும், அவரது வலக்கையாம் இராமநாதனையும் எவ்வாறு நமது மக்கள் போற்றாதிருக்க முடியும். நம்மைப்பொருத்தவரையில் வெற்றியும், தோல்வியும் ஒன்றேயானாலும், வெற்றியும், தோல்வியும் சந்தர்ப்பத்தை பொருத்தாகுமென்பதுதான் நமதியக்க அபிப்பிராயமேயல்லாது திரு. காந்தியவர்களைப் போல் “கடவுள் செயல்” என்று ஒருபோதும் கருதுவதில்லை. மேலும் நமது ஆசிரியரும், திரு.ராமநாதன் அவர்களும் திரு.காந்தி அவர்களைப்போல் வெற்றி மாலை சூடிவருவதாகச் சென்று “கடவுள்” சித்தத்தால் “தோல்வியடைந்து விட்டேன்”என்ற முகாரி இராகப்பல்லவியைப் பாடிக்கொண்டு இந்தியா திரும்பப் போவதில்லை. ஏன் எனிலோ? நமது சமூக விடுதலை நமது சமூக ஒற்றுமையால் தான் ஏற்பட முடியுமேயல்லாது பிறரை எதிர்பார்த்துத் தூரதேசம் சென்று கிடைத்து விடமாட்டாது என்ற மாற்றமுடியாத அபிப்பிராயமே தான் காரணம்.

ஆகவே, நமது ஆசிரியரவர்கள் வெற்றியையோ, தோல்வியையோ எதிர்பார்த்து ஐரோப்பா செல்லவில்லை. தனது உடல் நலன், நமதியக்க வளர்ச்சி, மேல் நாட்டு மக்கள் பழக்கவழக்கங்கள், பொருளாதாரச் சமரசம், தொழிலாளர்கள் நலன் இவைகளைப் பற்றி ஆராயவும் தங்களது ஆராய்ச்சியால் கிடைக்கப்பெற்றவைகளை இந்திய மக்களுக்கு எடுத்துக் கூறவுமேயாம். இத்தகைய நல்லசந்தர்ப்பத்தை நாம் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் சந்தர்ப்பம் இப்பொழுது தான் இடங்கொடுத் திருக்கின்றது.

இனி இச்சமயத்தில் நமது கடமை என்னவென்பதையும் சற்று யோசித்துப் பார்த்தல் வேண்டும். வைதீக, தேசீய, வருணாசிரம, பிராமண,



இந்து மகாசம்ரட்சணா சபைகளெல்லாம் தங்களது வேலைகளை வெகு தீவிரமாகச் செய்து கொண்டு வருகின்றனவென்பது வெளிப்படை. அகில இந்திய காங்கிரஸ் சப் கமிட்டியோ, நாசிக் தீண்டாதார் சத்தியாக்கிரகத்தை ஆதரிக்க மறுத்து விட்டது. குஜராத் சாதி ஹிந்துக்களோ ஆதிதிராவிடக் குழந்தைகள் தங்களுடைய குழந்தைகளுடன் ஒன்று சேர்ந்து படிப்பதற்காகத் தீண்டப்படாதார், பயிர், பச்சைகளையெல்லாம் நெருப்பிற்கிரையாக்கினர்.

வைதீகக் கோஷ்டியினரோ குருவாயூர் சத்தியாக்கிரகத்திற்கு எதிர் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். திரு.காந்தியவர்களோ தீண்டாதாருக்குத் தனித் தொகுதி கொடுப்பதை தனது உயிரைத் தியாகம் செய்வதன் மூலமாகவாகினும் தடை செய்வதாக கர்ஜிக்கின்றார். நம் நாட்டுப் பார்ப்பனர்களோ சாரதா சட்டத்தைக் கொளுத்திவிட வேண்டுமெனத் துள்ளுகின்றனர். மதக்கர்த்தாக்களோ தங்களது கொள்ளையடிக்கும் திட்டத்தை இன்னும் விரிவுபடுத்திக் கொண்டே போகின்றனர். பணக்காரர்களோ அவர்களுக்காதரவளிக்கின்றனர். போதாக்குறைக்கு நமதியக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்த பல நண்பர்களும் இன்று பொருளாதார நிலையை யுத்தேசித்து நம்மை எதிர்க்கவும் ஆரம்பித்து விட்டனர். இம்மாதிரியான பல திறப்பட்ட எதிர்ப்புகளுக்குள் இன்று நமது இயக்கம் பரவி வருகின்ற தென்றால் இன்னும் கொஞ்சம் தியாக புத்தியுடன், பொறுப்புணர்ந்து ஒற்றுமையுடன் வேலை செய்ய முற்படுவோமானால் நமதியக்கத்தின் வளர்ச்சி எவ்வளவு வேகமுடையதாகவிருக்கு மென்பதையும் சிந்தித்தல் வேண்டும். நமக்குள்ளிருக்கும் சில சில்லரை விவகாரங்களை இயக்க சம்பந்தப்படுத்தி இயக்கத்திற்கு கேடு விளைவிப்பதான வழியில் செல்லுவது நியாயமானதாகாது. ஆகையால் நமது ஆசிரியர், திரு.ராமசாமியும், திரு.இராமநாதனும் ஐரோப்பா சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது நாமும் நமது வேலையைத் தீவிரமாய் இங்கு நடத்த வேண்டும். பிறப்பதும், இறப்பதும் உலக இயற்கையேயாயின் பிறப்பிற்கும் இறப்பிற்கும் மத்தியிலிருக்கும் நாட்களை சேம்பேறித்தனமாய்க் கழிப்பதென்பதன்று. ஆகையால் ஒன்று கூடுங்கள், இயக்கத்தைப் பற்றிய வேலைகளில் உங்கள் சிந்தையையும், நேரத்தையும் செலவிடப் பிரயத்தனப் படுங்கள். இவைகள்தான் ஐரோப்பா சென்று திரும்பும் நமது ஆசிரியருக்கும், திரு.இராமநாதனுக்கும், நாம் அளிக்கும் பரிசாகும். ஆகவே, நமது கடமைகளில் நாம் எப்பொழுதும் தவர மாட்டோமென்று உறுதி கூறுவதுடன், ஐரோப்பா சுற்றுப் பிரயாணம் வெற்றியுடனும், சௌகரியத்துடனும், மன சமாதானத்துடனும் இருக்க வேண்டுமென விரும்புகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 13.12.1931**



RangaRakes tamilnavarasam.com

# தியாகிகளின் வீரச்செயல்

நமது நாட்டுத் "தேசீய வீரத் தியாகிகள்" ஆகிய காங்கிரஸ்காரர்கள் இதுவரையிலும், மற்றவர்களைப் பதவி வேட்டைக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தது போக, இப்பொழுது அவர்களே பதவிகளுக்கு ஆசை கொண்டு நுனி நாக்கிலிருந்து தண்ணீர் சொட்டும்படி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இவ்விஷயத்தை, ஸ்தல ஸ்தாபனத் தேர்தலுக்குக் காங்கிரஸ் காரர்கள் பலர் ஆங்காங்கே போட்டி போடுவதைக் கொண்டு தெரிந்துக் கொள்ளலாம். ஆனால், இந்தத் "தியாகிகள்" எதற்காக ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள் என்பதைக்கேட்டால் தான் இவர்களுடைய அரசியல் ஞானமும், தேசாபிமான மிகுதியும், ஸ்தல ஸ்தாபனங்களின் பிரயோசனத்தை இவர் எவ்வாறு அறிந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியும் விளங்கும்.

ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் பெற முன் வருகின்றவர்கள், "நான் நகரின் சுகாதாரத்திற்காக உழைப்பேன். ஏழை ஜனங்களின் வரிகளைக் குறைக்கப்பாடுபடுவேன். நகரில் தண்ணீர் வசதியுண்டாக்கப் பாடுபடுவேன். விளக்கு வசதிகளை அதிகப்படுத்த முயலுவேன். ஏழை மக்களுக்கு குடியுருப்பு வசதிகளை உண்டாக்க முயலுவேன். நகரில் பள்ளிக்கூடங்களை மிகுதிப்படுத்தவும், கட்டாயக்கல்வியை உண்டாக்கவும் பாடுபடுவேன். பிச்சைக்காரர்களின் தொல்லைகளை ஒழிக்கவும், வேலையில்லாதவர்களுக்குத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தவும் உழைப்பேன். ரோடுகளையெல்லாம் கப்பி ரோடுகளாகச் செய்யவும் தார் போட்ட ரோட்டுகளாக்கவும் பாடுபடுவேன்" என்று இம்மாதிரியான விஷயங்களைக் கூறி ஓட்டுக் கேட்பார்கள். இதுவே எந்த நாட்டிலும் நடைபெறும் வழக்கம். இவ்விஷயங்கள் ஒரு நகர சபை, ஒரு நகரத்திற்குச் செய்ய வேண்டிய காரியங்களுமாகும். இவ் விஷயங்களை உணர்ந்து இவைகளுக்காக முயலும் குணமுடையவர்கள் தான் நகரசபைகளில் அங்கம் பெறுவதற்கும் தகுதி வாய்ந்தவர்களாவார்கள்.

ஆனால், நமது நாட்டுத் "தியாகிகள்" எதற்காக நகரசபைக்குச் செல்லுகிறார்களென்றால் நான்கே காரியங்களுக்காக செல்லுகின்றார்கள். அந்த நான்கு காரியங்களாவன:- நகரசபைக் கட்டிடங்களிலும், அதன் அதிகாரத்திற்குட்பட்ட மற்ற இடங்களிலும் தேசீயக்கொடியை நட்டுப் பறக்க விடுவதாகிய பயனற்ற காரியம் ஒன்று.

நகரசபையின் கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுக்கு அதிக நாள் உழைக்கக் கூடிய கெட்டியான துணியைக் குறைந்த தொகையில் வாங்கிக்கொடுப்பதை நிறுத்திவிட்டு, கொஞ்சநாளில் கிழிந்து தொலையக்கூடிய பயனற்ற கதர்த்துணியை அதிக விலைக்கு வாங்கிக் கொடுப்பதன் மூலம் எப்பொழுதும் இதற்காகும் செலவைக் காட்டிலும் அதிக செலவாகும்படி செய்வதாகிய காரியம் ஒன்று.

நகரசபையைச் சார்ந்த பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் சிறு பிள்ளைகளுக்கு, நாகரீக- விஞ்ஞான சாஸ்திர - யந்திர அறிவைத் தடைப்படுத்துவதும், மூளையை மழுக்கக் கூடியதுமாகிய தக்ளியிலும், ராட்டினத்திலும் நூல் நூற்கக் கற்றுக் கொடுப்பதாகிய காரியம் ஒன்று.

பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்குப் பகுத்தறிவுக்கு இடமில்லாமல், மூட நம்பிக்கையை உண்டாக்கக் கூடிய புராணங்களும், கதைகளும், மத நூல்களும் மாத்திரம் உள்ள திருத்தப்பெறாத பயனற்ற பாஷையான ஹிந்தியைப் போதிக்கச் செய்வதாகிய காரியம் ஒன்று.

ஆகிய இந்த நான்கு வீர சூர பராக்கிரமத்தனமான காரியங்களுக்காகத் தொண்டைத் தண்ணீர் வற்ற, உயிர் கொடுத்துப் போராடவே காங்கிரஸ் தேசீயப்புலிகள் ஸ்தல ஸ்தாபனங்களுக்குள் செல்லுகின்றனர் என்பதை அவர்கள் செய்யும் பிரசார மூலமாகவும், சில ஸ்தாபனங்களில் அவர்கள் கொண்டு வரும் தீர்மானங்களைக் கொண்டும் அறிந்திருக்கிறோம்.

சமீபத்தில் சென்னை நகர பரிபாலன சபையிலும், பள்ளிக்கூடங்களில் ஹிந்தி பாஷையும், சர்க்கா, தக்ளி இவைகளில் நூல் நூற்கக்கற்றுக் கொடுப்பதும் போதிக்கப்படவேண்டும் என்னும் தீர்மானம் காங்கிரஸ் காரர்களால் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் நம்பிக்கையில்லாத அங்கத்தினர்களும், மேற்படி தீர்மானத்திற்கு எதிராக இருந்தால் எங்கே அடுத்த தேர்தலில் சபையில் அங்கம் பெறாமல் போய் விடுவோமோ என்ற பயத்தினால் ஆதரித்து நிறைவேற்றி விட்டார்கள்.

அன்றியும் மற்றொரு நகரசபையில் தற்போதுள்ள தலைவருடன் காங்கிரஸ்காரர்கள் சமரசம் பேசும்போது கதர், ஹிந்தி முதலியவைகளுக்கு ஆதரவளித்தால் சேர்மன் ஸ்தானத்திற்குப் போட்டியிடுவதில்லை என்று ஒப்பந்தம் பேசினார்களாம். இன்னும் பல நகரசபைகளில், காங்கிரஸ்காரர்கள் என்று இருப்பவர்களும், அவர்களுடைய அனுதாபத்தைப் பெற ஆசைப் பட்டுக் கொண்டிருப்பவர்களும் இவ்விஷயங்களுக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் அறிகின்றோம்.


RangaRakes tamilnavarasam.com

ஆகவே காங்கிரஸ்காரர்களின் மதச்சின்னங்களாக இருக்கின்ற மேற் கூறிய நான்குமே நகர பரிபாலன சபைகள், தாலூகா போர்டுகள், ஜில்லா போர்டுகள், சட்டசபைகள், யூனிவர்சிட்டிகள் ஆகியவைகளின் முக்கிய மான வேலைகளாக ஆகிவிட்டால் நமது நாடு எப்பொழுது அந்நிய தேசங் களுக்குச் சமத்துவமான நிலையை அடைய முடியும் என்று யோசித்துப் பாருங்கள்.

அந்நிய தேசங்களில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்கள் போன்ற பொது நிலையங்கள் யாவும், நாட்டு மக்கள் அனைவரையும், திடகாத்திரமுடைய-அறிவுடைய-சுதந்திரமுடைய - சகோதரத்துவமுடைய -துன்ப வாழ்க்கை நீங்கி இன்பவாழ்க்கையில் வாழக்கூடிய-நல்ல நகர ஜனங்களாக்க முயன்று கொண்டிருக்கின்றன. ஆங்குள்ள தேச நன்மையைக் கருதும் அரசாங்கங் களும், கட்சிகளும் தன்னையே தமது கொள்கையாக வைத்துக் கொண்டு வேலை செய்கின்றன.

ஆனால், நமது நாட்டில் உள்ள இந்த "தியாகிகள்" தேச மக்களை இன்னும் கோழைகளாகவும், அடிமைகளாகவும், சண்டிகளாகவும், மூட நம்பிக்கையுடைவர்களாகவும் இருக்கச் செய்யவே முயற்சி செய்கின்றார்கள். இம்முயற்சிக்கு ஒன்றுந்தெரியாத ஜனங்களில் சிலர் ஏமாந்து, காங்கிரஸ் தொண்டர் என்பவர்கள் தங்கள் மதச்சின்னங்களுடன், பிச்சைக்குவரும் போதும், ஓட்டுக்குவரும்போதும் உதவியும் செய்து விடுகின்றனர். ஒன்றுந் தடை செய்யாமலும், இம்முயற்சியினால் உண்டாகும் லாப நஷ்டங்களை உணராமலும் இருந்து வருகின்றார்கள். ஆகையால், நாம் இந்த நிலை ஒழிந்து ஜனங்கள் உண்மையான அறிவு பெறவும், நமது தேசம் உண்மை யான முன்னேற்றம் பெறவும், எத்தகைய வெற்றிக்கும், தோல்விக்கும், மதிப்புக்கும், அவமதிப்புக்கும் லட்சியம் பண்ணாமல் உழைக்க வேண்டி யதே கடமையாகும், தேசாபிமானமாகும், தேசத்திற்கு - தேசமக்களுக்குச் செய்யும் சிறந்த ஊழியமாகும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொண்டு இப்பொழுது இவ்வளவோடு நிறுத்துகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.12.1931**



# இரண்டு ஆச்சாரியார்கள் தனி உரிமையும் மதமும் வேண்டுமாம்.

**- தேசீயத்துரோகி**

## மத நடுநிலைமையின் ஆபத்து

நாசிக்கில் உள்ள கோயிலில் பிரவேசிக்கவும், "ராமகுண்டம்" என்னும் தீர்த்தக் குளத்தில் குளிக்கவும் தீண்டாதார்கள் சத்தியாக்கிரகம் செய்து வருகின்றனர். இச்சத்தியாக்கிரகத்தை வைதீக இந்துக்கள் தடுத்து வருகின்றனர். இதைப்பற்றி "இந்திய சனாதன வைதீகசபை"த் தலைவர், திரு.காசிகிருஷ்ணமாச்சாரியார் என்பவர் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். அவ்வறிக்கையில்,

> "நாசிக்குக்காக மிஸ்.மேயோவை மறுபடியும் இந்தியாவின் மீது கிளப்பி விட்டுவிடாதீர்கள். சனாதன தர்மிகளும், பஞ்சமர் களும் சுயநலக்காரர்களின் வார்த்தைகளைக் கேட்டு ஒருகாரியத்தை யும் செய்ய வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். சத்தியாக் கிரகத்தின் நோக்கம் "சத்தியத்தைக் காப்பதேயாகும்". "ராமகுண்ட தீர்த்தம்" பொதுச்சொத்தல்ல. அது பொதுச் சொத்தாக இருந்தால் தான், தீண்டாதார்களும் ஜாதி இந்துக்களைப் போல அதில் உரிமைக் கொண்டாட முன்வரலாம். காங்கிரசும் மற்றும் பொருப்புள்ள ஸ்தாபனங்களும், மூலாதார உரிமைகளை ஒப்புக்கொண்டிருக்கின் றன. சொந்த அதிகாரமுள்ள சொத்துக்களையும், தர்ம ஸ்தாபனங் களையும் பொதுச்சொத்துக்களாக மாற்ற மேற்படி ஸ்தாபனங்கள் ஒப்புக் கொள்ள முடியாது"

என்ற விஷயங்கள் காணப்படுகின்றன. இதிலிருந்து காங்கிரஸ் மதநடுநிலைமையின் ஆபத்தை உணரலாம். எந்தக் கோயில்களும், தர்ம ஸ்தாபனங்களும் ஒருவர் அதிகாரத்திலேயோ, அல்லது ஒரு கமிட்டியின் அதிகாரத்திலேயோ அடங்கிதான் இருக்கும். அப்படிப்பட்ட ஸ்தாபனங் களில் மற்றவர்கள் பிரவேசிக்க உரிமையில்லை என்பதே திரு.ஆச்சாரியா ரின் வாதம். இதுதான் காங்கிரசின் நடுநிலைமைக்கும் வியாக்யானம். இந்நிலைமையில் தீண்டாதவர்கள் எப்படி பொது ஸ்தாபனங்களில் சமத்து



RangaRakes tamilnavarasam.com

வம் பெற முடியும்? "மிஸ்.மேயோவைக் கிளப்பிவிட வேண்டாம்" என்று திரு.ஆச்சாரியார் கூறிகிறார். யார் மிஸ்.மேயோவைக் கிளப்பிவிடுகிறவர்? ஒரு குளத்தில் தீண்டாதவர்களும் குளிப்பதற்காகத் தடைகூறும், திரு. ஆச்சாரியார் போன்றவர்கள் மிஸ்.மேயோவை கிளப்பிவிடுகிறார்களா? அல்லது குளத்தில் குளிக்க எங்களுக்கும் பாத்தியம் வேண்டுமென்றுக் கேட்கின்ற தீண்டாதவர்கள் கிளப்பிவிடுகிறார்களா? நன்றாய் யோசித்துப் பாருங்கள். சத்தியாக்கிரகம் என்றால் சத்தியத்தைக் காப்பாற்றுவதாம்! எது சத்தியம்? நாசிக் கோயிலில் ஜாதி இந்துக்கள் மாத்திரம் செல்ல உரிமை இருப்பது சத்தியமா? "ராமகுண்டம்" என்னும் குளத்தில் ஜாதி இந்துக் களுக்கு மாத்திரம் குளிக்க உரிமையிருப்பது சத்தியமா? இவைகளில் தீண்டாதார்கள் பிரவேசிக்காமலிருப்பது சத்தியமா? திரு.ஆச்சாரியார் கருத்துப்படி தீண்டாதவர்கள், தீண்டாதவர்களாகவே ஒன்றிலும் சுதந்திரம் இல்லாமலிருப்பதும், ஜாதி இந்துக்கள் வழக்கமாகத் தங்களுக்குள்ள ஏகபோக உரிமைகளை அனுபவித்துக் கொண்டிருப்பதுந் தான் சத்தியம் என்று கருதுகிறார் எனத் தெரிகிறது.

இது சத்தியமானால், இதற்காக சத்தியாக்கிரகமானால், இதை மற்றொரு வருணாச்சிரம தர்மம் என்பதில் என்ன தவறு இருக்கிறது? ஆகையால் இத்தகைய சத்தியம் வேண்டவே வேண்டாம். இன்னும் எத் தனை மேயோக்கள் வந்தாலும் வரட்டும், அதைப்பற்றி கவலையில்லை. வேண்டுவது எல்லாருக்கும், எல்லாவிடங்களிலும் சமவுரிமை தான். கோயில்களும், தர்ம ஸ்தாபனங்களும், சிலருடைய ஆதிக்கத்திலிருந் தாலும் அவைகள் பொதுச் சொத்துக்கள் தான். அவைகளைப் பொதுச் சொத்துக்களாக ஆக்கித் தேசத்திற்கு பயன்படச் செய்யவேண்டுமென்பது தான் நமது கொள்கை. இதற்குத் தற்கால நிலைமையில் சத்தியாக்கிரகம் சிறிதும் பயனளிக்காது.

## மதத்தைக் காப்பாற்ற வேண்டும்

நமது சனாதன வைதீக நண்பர், திரு.எம்.கே.ஆச்சாரியார் அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில்,

"அரசாங்கத்தார், மதவிஷயங்களில் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்திருப்பார்கள் என்றும், இதைப்பற்றி வட்டமேஜை மகாநாட்டில் வற்புறுத்த வேண்டிய அவசியமில்லை என்றும், லார்ட் இர்வின் இந்தியாவை விட்டுப் புறப்படுமுன் பாரத தர்ம மகா மண்டலத்திற்கு உறுதி கூறியதாகத் தெரிகிறது. ஆனால், சாரதா சட்டம் சம்பந்தமாக அவர் நடந்து கொண்டதிலிருந்து இவ்வுறுதிமொழி பயனற்ற தாகும். சாதாரண ஐரோப்பியர்களுக்கும், நவீன நாகரீகத்திலுள்ள இந்தியர் களுக்கும் "மதம்" என்பதன் கருத்து வைதீக இந்துக்களுக்கு இருப்பது போல் தோன்றுவதில்லை. "மதத்திற்கும் கல்யாணம் போன்ற சமூக விஷயங்களுக்கும் சம்பந்தம் இருக்கக்கூடாது" என்று அவர்கள் கூறுகின்ற னர். இவர்கள் எது மத விஷயம்? எது மதவிஷயமல்லவென்பதில் தங்கள் அபிப்பிராயத்தை வைதீக இந்துக்களின் மேல் பலவந்தமாக சுமத்த அனுமதிக்கக்கூடாது. இதே மாதிரி காங்கிரசும் மத சுயேட்சை அளிப்பதாக உறுதி கூறியிருப்பதும் பிரயோஜனமற்றதாகும். காந்திக் கட்சியினர் "ஆலய சத்தியாக்கிரகம்" என்று கூறுவதைக்கொண்டும், "தீண்டாமையை ஒழிப்ப தாகக் கூறுவதைக் கொண்டும்" மதவிஷயத்தில் அவர்கள் நடுநிலைமை வகிக்கும் விதம் விளங்குகின்றது............ மேல் நாடுகளில் மதத்தையே ஒழித்து விட்டனர். இந்தியாவிலும் ஒழிக்க முயலுகின்றனர். அதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது"

என்று கூறியிருக்கிறார். இதிலிருந்து சீர்திருத்த விஷயத்தில் வைதீகர்களின் மனப்பான்மை எப்படி இருக்கிறது என்ற விஷயத்தைத் தெளிவாய் அறிந்து கொள்ளலாம்.

அரசாங்கத்தார் சாரதா சட்டத்திற்கு ஆதரவு அளித்து விட்டதனால், அரசாங்கம் மத நடுநிலைமை வகிக்கவில்லையாம். கல்யாணம் போன்றவை கள் மதவிஷயங்களாம். அப்படியானால், சாப்பிடுவது, குளிப்பது, பல் விளக்குவது, ஒன்றுக்குப் போவது, வெளிக்குப் போவது முதலியவைகளும் மத விஷயங்கள் தான் போலும். இவைகளுக்கும் தான் சாஸ்திரங்களில் விதிகள் கூறுகின்றன. "மற்ற வருணத்தாருடைய சொத்துக்கள் எல்லாம் பிராமணருக்கே சொந்தமானது" என்பது பார்ப்பனர்களின் ஸ்மிருதிக் கொள்கை. ஆகையால் இதுவும் மத விஷயம் ஆனதால் பார்ப்பனர்கள் யார் வீட்டில் கொள்ளையடித்தாலும், யார் சொத்துக்களைக் கவர்ந்தாலும் அவர்களைப் பிடிக்கவோ, விசாரிக்கவோ, தண்டிக்கவோ பொது ஜனங்க ளுக்கும், அதிகாரிகளுக்கும் அரசாங்கத்திற்கும் அதிகாரமில்லையென்றும் சொல்லலாம். இதுவும் மத விஷயம்தானே! இவற்றில் எல்லாம் அரசாங்கத் தார் நடு நிலைமை வகிக்க வேண்டும் என்று சொல்லுவது போலத்தான் சமூகச் சீர்திருத்த சட்டங்களுக்கு அரசாங்கத்தார் ஆதரவு அளிக்கக் கூடாது என்று சொல்லுவதும், ஆதரவு அளித்தால் அரசாங்கத்தார் மதத்தில் தலையிட்டு விட்டார்கள் என்று சொல்லுவதும் ஆகும். அடுத்தபடியாக, மதம் என்பதன் கருத்து வைதீக இந்துக்களுக்குத் தோன்றுவதுபோல் நாகரீகமுடையவர்களுக்குத் தோன்றுவதில்லையாம். இது உண்மைதான். நவீன நாகரீகமும், ஆராய்ச்சியும், அறிவும் உடையவர்களுக்கு மதம் இன்னது சமூக விஷயம் இன்னது என்று தெரியும். ஆகையால், அவர்கள் சமூகச்சீர்திருத்தஞ் செய்வதற்குப் பின்வாங்க மாட்டார்கள். வைதீக இந்துக்கள் பகுத்தறிவற்றவர்கள். சுருங்கவும் விளங்கும்படியும் கூறவேண்டு மானால் 'முட்டாள்கள்' ஆகையால் அவர்கள் சமூக விஷயங்களையும் மதம் மதம் என்று சொல்லிக் கொண்டு ஒரு சீர்திருத்தத்திலும் மன மில்லாமல் பழைய இருட்டு உலகத்திலேயே வசிக்க விரும்புவார்கள்.





RangaRakes tamilnavarasam.com

ஆகையால், வைதீகர்கள் அபிப்பிராயத்தை அலட்சியம் செய்தால் தான் சமூகம் முன்னேற்றம் அடைய முடியும். திரு.ஆச்சாரியார் போன்றவர் களின் அபிப்பிராயத்தால் சமூகம் சமத்துவமும், விடுதலையும் பெற முடியாது என்று சொல்லுகிறோம்.

அடுத்தபடியாக, காங்கிரஸ் ஒரு காரியமும் செய்யாமலிருக்கும் போதே, காங்கிரசைச் சேர்ந்த சிலர் வாயளவில் ஆலய சத்தியாக்கிரகத்தை ஆதரித்துப் பேசும்போதே, காங்கிரஸ்காரர்கள் தீண்டாமை போகவேண்டு மென்று மேடைக் கூச்சலிடும்பொழுதே நமது திரு. ஆச்சாரியார் அவர்கள் காங்கிரஸ் மத நடுநிலைமை தவறிவிட்டது என்று கூச்சலிட ஆரம்பித்து விட்டார். உண்மையிலேயே காங்கிரஸ் இவ்வேலைகளைச் செய்ய எண்ணு மானால் நிச்சயமாக நமது திரு.ஆச்சாரியார் போன்ற வைதீகர்கள் அதை ஒழித்துவிடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அடுத்தபடியாக, மேல் நாட்டில் மதம் ஒழிந்துவிட்டதாம். நமது நாட்டில் அப்படி ஒழியாமல் பாதுகாக்க வேண்டுமாம். மதம் பாதுகாக்க வேண்டுமென்றால் பிராமண ஆதிக்கம் நிலைநிற்க வேண்டுமென்று தானே அர்த்தம். இனியும், மதத்தைக் கொண்டு ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது என்று எச்சரிக்கிறோம். பகுத்தறிவும், கஷ்டமும், பொருளாதாரச் சங்கடமும் அதிகப்படுகின்ற காலத்தில் மதம் தூள் தூளாகப் பறக்கவேண்டியதைத் தவிர நிலைக்க முடியாது. ஆகையால் திரு. ஆச்சாரியார் வீண் கனாக் காண வேண்டாம் என்று மீண்டும் எச்சரிக்கின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 20.12.1931**



# துடையையுங் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டுதல்

கலகம், கிளர்ச்சி, ஆர்ப்பாட்டம் முதலிய காரியங்களைப் பார்ப்பதி லும், அவற்றில் ஈடுபடுவதிலும் சாதாரணமாக எல்லா மக்களுக்கும் ஒரு உற்சாகமும், ஆசையும் உண்டாவது இயல்பான விஷயமாகும். அமைதியாக -பொறுமையாக-தடபுடலான காரியம் ஒன்றுமில்லாமல்- இருப்பதால் மனத்திற்கு ஒருவித உற்சாகமும் இருப்பதில்லை; என்னமோ ஒருவிதமான மந்தமாகவே இருக்கும். ஆகவே, அமைதியாக இருக்கும் மக்களை-கிளர்ச்சியான-கலகமான-ஆர்ப்பாட்டமான காரியங்களைச் செய்யும்படி தூண்டி விடுவது மிகவும் சுலபமான விஷயமாகும். கொஞ்சம் பேசுந்திறமையுடைய- எழுதுந்திறமையுடைய எவராலும் இக்காரியம் செய்யமுடியும். மக்களை அடக்கி வைத்திருக்கின்ற ஒரு ஸ்தாபனத்தின் மீதோ, அல்லது ஒரு தலைவன் மீதோ அல்லது ஒரு சமஸ்தானத்தின் மீதோ, அல்லது ஒரு ஜமீன் மீதோ அல்லது ஒரு அரசாங்கத்தின் மீதோ பொது ஜனங்கள் ஒப்புக் கொள்ளும்படியான விதத்தில் குற்றங்களையும், பழிகளையும் சுமத்திச் சாதுரியமாகப் பேசினால் போதும். உடனே ஒன்றுந் தெரியாத அவர்கள் துவேஷமும், வெறியும், உணர்ச்சியுங்கொண்டு கலகஞ் செய்வதற்குத் தயாராகி விடுவார்கள். இத்தகைய துவேஷத்தை உண்டாக்கும் தலைவர்கள் சொல்லுகின்றபடியெல்லாம் கேட்கப் பொதுஜனங்களும் பின்வாங்க மாட்டார்கள். இதுவே, நமது நாட்டில் மட்டுமல்ல, மற்ற எல்லா நாடுகளிலும் பொது ஜனங்களிடம் படிந்து கிடக்கும் இயற்கை சுபாவமாக இருந்து வருகிறது. உள்ள நெருப்பை விசிறி கொண்டு வீசிப் பற்றவைப்பது போல் இயற்கை சுபாவத்தைப் பேச்சு வலிமையால் தூண்டிவிடுவது கஷ்ட மான காரியமல்ல. ஆனால், ஒரு திட்டத்தை ஏற்படுத்தி அதன்கீழ் அடங்கி, உருவான வேலைகளைச் செய்யும்படி மக்களைத் திருப்புவது கொஞ்சம் கடினமான காரியமேயாகும். முதலில் திட்டங்கள் வகுப்பதும், அத்திட்டங் களை எந்தெந்த வழிகளிற்போய் நிறைவேற்றுவது என்பதுமே சாதாரண மானவர்களால் செய்யமுடியாத காரியமாகும். அதிலும், அழிக்கின்ற தொழிலிலேயே ஈடுபட்டுவிட்ட மக்களால் இவ்வாறு ஒரு திட்டத்தின் கீழ் இருந்து வேலை செய்வது மிகவும் கடினமான காரியமேயாகும்.



RangaRakes tamilnavarasam.com

ஒரு நாட்டில் நல்ல அரசியல் நடைபெற வேண்டுமானால் - நல்ல பொறுப்பாட்சி- அதாவது ஜனநாயக ஆட்சி நடைபெற வேண்டுமானால் அந்நாட்டு மக்கள் மேலேகூறியவாறு கலகத்திலும்-கிளர்ச்சியிலும் ஆர்ப்பாட்டத்திலும் அதிகமாகப் பழக்கப்படாமல் ஒரு திட்டத்தின் கீழ் அடங்கி உருவான காரியங்களைச் செய்வதில் பழக்கப்படவேண்டும். இவ்வாறு பழக்கப்பட்ட பொது ஜனங்களே ஜனநாயக அரசாங்கத்தில் அங்கம் வகித்து அதை வெற்றியோடு நடத்தக் கூடிய சாமர்த்தியமும், அனுபவமும், ஆலோசனையும் உடையவர்களாயிருப்பார்கள். அவர்க ளால் நடத்தப்படும் அரசாங்கமே சிறந்த அரசாங்கமாகவும், மற்ற நாடுகளுக் குப் பின்வாங்காத அரசாங்கமாகவும், செல்வநிலையைப் பெருக்கக்கூடிய, தொழில்கள், விவசாயங்கள் முதலியவைகளைப் புதிய முறையில் விருத்தி செய்யக்கூடிய அரசாங்கமாகவும் இருக்கக்கூடும். நாட்டின் முன்னேற்றத் திற்குரிய புதிய சாஸ்திரங்களையும், சாஸ்திர ஆராய்ச்சி சாலைகளையும் ஏற்படுத்தக்கூடிய அரசாங்கமாக இருக்கக்கூடும். எல்லா மக்களும் சௌக்கியமாக வாழ்வதற்கு நாடு முழுவதும் சுகாதார வசதிகளையும், வைத்திய வசதிகளையும் ஏற்படுத்தக் கூடிய அரசாங்கமாக இருக்கக் கூடும். இப்படியில்லாமல் கலகத்திலும், கிளர்ச்சியிலும்-ஆர்ப்பாட்டத்திலுமே போய்க்கொண்டிருக்கிறதிலேயே பழகிக் கொண்டிருக்கிற மக்களிடம் திடீரென பொறுப்புள்ள ஆட்சி வந்து விட்டால், அவ்வாட்சி வெற்றியுடன் நடக்கமுடியாது. கலகத்திலும்-கிளர்ச்சியிலும்-ஆர்ப்பாட்டத்திலுமே அந்த ஆட்சி நடைபெறக் கூடும். இப்படி நடைபெறக்கூடிய ஒரு அரசாட்சியில் ஜனங்களுக்கு எப்படி நன்மையுண்டாக முடியும்? அரசாங்கத்தாரால் கலகங்களை அடக்குவதைக் கவனிப்பதற்கு நேரமிருக்குமா? அல்லது நாட்டின் நன்மைகளுக்கான உருவான வேலைகளைச் செய்வதற்கு நேரமிருக்குமா? என்று யோசனை செய்து பாருங்கள்.

ஆனால் ஒரு நாடு சுதந்திரம் பெற முயற்சி செய்கின்ற காலத்தில் அந்நாட்டில் பெருங்கலகங்கள் நடப்பது சகஜந்தான் என்பதை எந்நாட்டிலும் நடைபெற்ற சரித்திர உண்மைகளைக் கொண்டு அறிகிறோம். ஆனால், நமது நாடோ நீண்டகாலமாக கலகத்திலேயே மூழ்கியிருந்தாலும், சுதந்திரம் பெறுவதற்குரிய வழி ஒரு சிறிதும் ஏற்பட்டதில்லை. இதற்குக் காரணம், ஜாதி, மதவேற்றுமைகளும், அவைகளால் ஏற்பட்ட துவேஷங்க ளுமேயாகும். எந்தச் சுதந்திரங்களுக்கும் இவைகளே தடைகளாக இருந்து வருகின்றன. சமீபகாலத்தில் நமது நாட்டில் அரசியல் கிளர்ச்சி ஏற்பட்ட வுடன் இந்த ஜாதி, மதகிளர்ச்சிகளும், துவேஷங்களும் அதிகப்பட்டுக் கொண்டு வருகின்றதேயொழிய குறைந்தபாடில்லையென்பது நமக்குத் தெரியாத விஷயமல்ல. அரசியல் சுதந்தரம் சிறிது உண்டான பிறகும் அதிக அரசியல் சுதந்தரம் வேண்டுமென்ற கிளர்ச்சி ஏற்பட்ட பிறகுந்தான் இந்து முஸ்லீம் கலகம், பார்ப்பன பார்ப்பனரல்லாதார் சண்டை, தாழ்த்தப்பட்ட வர்கள் உயர்ந்தவர்கள் சச்சரவு, வெள்ளையர் வெள்ளையரல்லாதார்



துவேஷம் இவைகள் அதிகப்பட்டன என்பதை யாரும் பொய்யென்று சொல்ல முடியாது. ஆகவே, பல ஜாதிகளும், பலமதங்களும் ஆயிரக் கணக்கான வருஷங்களாக ஜென்மப்பகை கொண்டு அடிக்கடி சண்டை செய்து கொண்டு வாழுகின்ற நாட்டில் சுதந்தரக் கிளர்ச்சி தோன்றுகின்ற போது இந்த ஜாதி மதவேற்றுமைகளும் துவேஷங்களும் முன்வந்து சுதந்தரக் கிளர்ச்சியை நசுக்கி விடுவது இயல்பேயாகும். இதற்கு வேறு உதாரணம் தேட வேண்டிய கஷ்டம் வேண்டாம். நமது நாடே தகுந்த உதாரணமாக இருக் கின்றது.

இந்த நிலையில் உள்ள நமது நாட்டில் தற்போது நடைபெறும் அரசியல் கிளர்ச்சி உண்மையாக அரசியல் கிளர்ச்சியை உண்டாக்கும் பிரசாரமாக இல்லையென்பதுதான் நமது அபிப்பிராயம். உண்மையான அரசியல் சுதந்தர ஆசையுடையத் தலைவர்களும், தொண்டர்களும் இருந்தால் அவர்களுடைய எண்ணத்தில் நாம் ஒன்றும் குற்றம் கற்பிக்க முன்வரவில்லை. ஆனால், பெரும்பாலான அரசியல்வாதிகள் மக்களுக்குள் ஜாதித்துவேஷமும், மதத்துவேஷமும் உண்டாகும் வகையில் “அஹிம்சா தர்மம்” என்ற பெயரால் பிரசாரஞ்செய்து கொண்டு வருகின்றனர் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வாறு பிரசாரம் பண்ணுவதையே தேசாபிமான மாகவும் கருதுகின்றனர். இவ்வாறு பிரசாரஞ்செய்துவரும் வயிற்றுப் பிழைப்பு தேசாபிமானிகளாலேதான் நமது நாட்டில் கலகங்கள் அதிகப் பட்டுக் கொண்டு வருகின்றன என்பதில் சிறிதும் சந்தேகப்பட வேண்டிய தில்லை. “அஹிம்சா தர்மம்” என்று சொல்லிக் கொண்டு, அந்நிய நாட்டு மனிதர்கள் மேலும், அவர்கள் நிறத்தின்மேலும், அவர்கள் மதக் கொள்கை யின் மேலும் வெறுப்பும், துவேஷமும் உண்டாகும்படி பிரசாரஞ் செய்து வரும் பொறுப்பற்ற வயிற்றுப்பிழைப்பு தேசாபிமானிகளின் செய்கையால் தான் நமது நாட்டில் புரட்சி இயக்கம் பலப்பட்டுக் கொண்டு வருகிறதென்று கூறுவோம். நீண்டகாலமாக வங்காளமாகாணத்தில் புரட்சி யியக்கம் இருந்து வருவது உண்மையானாலும், ஒத்துழையாமையும் “அஹிம்சா தர்மத் துவேஷப் பிரசாரமும்” ஏற்பட்ட பின்பு தான் இது அதிக மாக தலை விரித்தாடுகிறது என்பது உண்மையாகும்.

புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் பெரும்பாலும் வாலிபர் கள். வாலிபர்கள் எந்தக்காரியத்தையும் முன் பின் யோசனையில்லாமல் உடனே செய்து முடித்து விடவேண்டுமென்னும் எண்ணமுடையவர்கள். அதற்காகத் தமது உயிரையும் பொருட்படுத்தாமல் தியாகஞ்செய்ய முன் வரும் குணமுடையவர்கள். இத்தகைய குணமுடையவர்கள் துவேஷத்தை மூட்டும் அரசியல் கிளர்ச்சியின் பலனாக அந்நியர்கள் மீது வெறி கொண்டு கொலைகளும், சதிகளும் தாராளமாகச் செய்ய முன்வந்து விட்டனர் என்பதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. இச்செய்கைகளே தேசாபிமான முடையதென்றும், சுயராஜ்யம் அளிக்கக் கூடியதென்றும் அவர்கள் கருதக்



RangaRakes tamilnavarasam.com

கூடிய நிலைமையை நமது அரசியல் கிளர்ச்சி ஏற்படுத்திவிட்டதென்று கூடக்கூறலாம். இவர்களுடைய இக்கலகச் செயல்களை தேசாபிமானமாக வும் தியாகமாகவும் ஆரம்பத்தில் நமது நாட்டுத் தேசீயப் பத்திரிகைகள் என்பன பாராட்டவும் தொடங்கின. தேசீயவாதிகள் மேடைகளில் புகழவும் தொடங்கினர். இவர்களுடைய படங்களை வைத்துக் கொண்டாடவும், இவர்களுக்காக விழாக்கள் நடத்தவும் ஆரம்பித்தனர். ஆனால், அப்பொழுதே சில பொறுப்புள்ள தலைவர்கள் இச்செயல்களைக் கண்டித் தனர். நாணயமும், பொறுப்பும் உள்ள எவரும் இச்செயல்களை ஆதரித்து, மேலும் மேலும் வாலிபர்களுக்கு இத்தகைய விஷயங்களில் ஊக்கம் உண்டாக்க முன்வரமாட்டார்கள் என்பது நிச்சயமாகும்.

"தேசாபிமானம்" என்னும் பெயரால் வெறிகொண்டு நிரபராதிகளை யும், உத்தியோகஸ்தர்களையும் இரக்கமின்றிக் கொலை செய்யும் இந்தப் புரட்சி ஒழிய வேண்டுமானால் பொறுப்புள்ள தேசப் பிரமுகர்கள் அனை வரும் இதனைக் கண்டிக்க வேண்டும். இதனால் வரும்தீமையை வாலிபர் கள் உணரும்படி செய்ய வேண்டும். அப்படியில்லாமல் ஒரு பக்கத்தில், அந்நியர்கள் மீது துவேஷத்தைக் கிளப்பிவிடும் "அஹிம்சாதர்ம"பிரசார மும் , ஒரு புறத்தில் புரட்சியைக்கண்டிப்பதான அறிக்கைகளும் செய்து கொண்டிருந்தால் எப்படி புரட்சி அடங்கும் என்று கேட்கின்றோம். இது, குழந்தையின் துடையையுங் கிள்ளிவிட்டு தொட்டியையும் ஆட்டிவிடுவது போலத்தானே ஆகும்.

சில "தேசீய"ப் பத்திரிகைகள் பொறுப்பின்றிக் கொலைக் குற்றங்க ளையும், கொலை செய்தவர்களையும், தேசாபிமானமாகவும், தேசாபிமானி களாகவும் போற்றி உற்சாகப்படுத்தும் முறையில் நடந்து கொண்ட காரணத்தால் தானே அச்சுச் சட்டம் ஏற்பட்டது? இவ்வாறு 'தேசீய'ப் பத்திரிகைகள் என்பன பொறுப்பற்றதனமாக நடந்து கொண்டிராவிட்டால் அச்சுச் சட்டம் பிறந்திருக்க முடியாது என்பது உண்மை அல்லவா?

அடுத்தபடியாகத் துவேஷத்தைப் பெருக்கிவிடும் முறையில் "அஹிம்சை"ப் பிரசாரம் பண்ணியதன் பலனால் வங்காளத்தில் புரட்சி இயக்கமும் தலைவிரித்தாட தொடங்கவும், அதை அடக்க அரசாங்கத்தார் வங்காள அவசரச் சட்டத்தை ஏற்படுத்தும்படியான நிலையும் ஏற்பட்டு விட்டது அல்லவா?

இப்பொழுது ஐக்கிய மாகாணத்தில் வரிகொடாமை இயக்கம் ஆரம்பித்தவுடன் அரசாங்கத்தாரும் அவசரச்சட்டம் ஒன்றை ஏற்படுத்தி விட்டனர். இந்த அவசரச் சட்டங்களை அரசாங்கத்தார் வாபீஸ் பெற்றுக் கொள்ள வேண்டும் எனப் பெரும் கிளர்ச்சி செய்கின்றனர். புரட்சி இயக்கத் தையும், வரிகொடா இயக்கத்தையும் நிறுத்துவதற்கு ஒரு முயற்சியும் செய்யா மல், அவற்றை அடக்க ஏற்பட்ட சட்டங்களின் மேல் மாத்திரம் பழிபோட்டுக் கிளர்ச்சி செய்வதில் என்ன பலனிருக்கிறது? அவசரச் சட்டங்களுக்கு நிரபராதிகளும் ஆளாகிக் கஷ்டப்பட நேரும் என்பதை நாமும் ஒப்புக் கொள்கிறோம். அவசரச் சட்டங்களால் இன்னும் அக்கிளர்ச்சி கள் கொஞ்சம் அதிகப்படும் என்பதிலும் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால், அவசரச் சட்டம் உண்டானதற்கான காரணங்களையும் ஒழிப்ப தற்கு முயற்சி செய்துக் கொண்டு அவசரசட்டங்களையும் வாபீஸ் வாங்கிக் கொள்ளுமாறு கிளர்ச்சி செய்வதே நியாயமும், ஒழுங்குமாகும்.

இவையல்லாமல், மீண்டும் நாட்டில் வரிகொடா இயக்கமும், பகிஷ் கார இயக்கமும் பலமாக ஆரம்பிக்க வேண்டுமென பிரசாரஞ்செய்யப் பட்டும் வருகிறது. திரு. காந்தியும் சத்தியாக்கிரக சண்டை ஆரம்பிப்பதாகச் சொல்லிக் கொண்டு வருகிறார். "காந்தி – இர்வீன் ஒப்பந்தம்" முடிந்தது முதல், "மறுபடியும் சத்தியாக்கிரக போர் ஆரம்பிப்பதற்கு தயாராய் இருங் கள்", என்றே பொறுப்புள்ள காங்கிரஸ்காரர்கள் எல்லாம் சொல்லிக் கொண்டு வந்தனர்; வருகின்றனர். "தேசத்தின் அமைதியையும், சட்டத்தை யும் , நிரபராதிகளையும் காப்பாற்றுவது அரசாங்கத்தின் பொறுப்பு. ஆகை யால், அரசாங்கம் சட்டத்தையும் அமைதியையும் நிலைநிறுத்த பின்வாங் காது" என மேன்மை தாங்கிய வைசிராய் தாம் பேசும் இடங்களில் கர்ஜித் துக் கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் தேசத்தில் மறுபடியும், கலகம் ஏற்படுமாயின் பாமர ஜனங்களுக்குத் தான் அதிகமான கஷ்டமும், நஷ்டமும் உண்டாகும் என்பதில் ஆட்சேபனை உண்டா?

"சுயராஜ்யம்", "காங்கிரஸ்", "காந்தி", "அஹிம்சை", "தேசாபி மானம்" என்னும் பெயர்களால் காலிகளும், நாணயமற்றவர்களும், பிழைப்பற்றவர்களும் மறுபடியும் ஏமாற்றப் புறப்பட்டு விடுவார்கள். இப் பெயர்களைச் சொல்லி பாமர மக்களிடம் பொருள் பறிக்கத் தொடங்கி விடுவார்கள். இவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களினால் மறுபடியும் புரட்சியும், அடிதடிகளும், துவேஷங்களும் அதிகப்படக் கூடும். ஆகவே, அரசாங்கத்தார் இவற்றை அடக்கச் சென்ற உப்புச்சத்தியாக்கிரகத்தின் போது அவசரச் சட்டங்கள் பிறப்பித்தது போல இன்னும் பல அவசர சட்டங் களைப் பிறப்பிக்கவும்கூடும்.

இவ்வாறு காங்கிரஸ்காரர்கள் செய்து கொண்டு வரும் பிரசாரங்கள் ஒருபுறமும், புரட்சிக்காரர்கள் நடத்திக்கொண்டு வரும் அக்கிரமங்கள் ஒரு புறமும், அரசாங்கத்தார் இவைகளை அடக்க வெளியிடும் அவசரச் சட்டங்களும், தடையுத்தரவுகளும் ஒரு புறமும் சேர்ந்து நாட்டுமக்களைச் சமாதானமின்றிக் கஷ்ட நிலையில் வாழும்படி செய்வதைத் தவிர வேறு ஒரு பலனையும் ஏழைமக்கள் காணப்போவதில்லை, அடையப்போவ


RangaRakes
tamilnavarasam.com

தில்லையென்பது தான் நமது அபிப்பிராயம். இதனால், தற்போது உள்ளதைவிட இன்னும், நமது நாட்டின் வியாபார நிலையும், செல்வ நிலைமையும் கஷ்ட நிலைமைக்கு வந்து சேருமென்பது நிச்சயம். மற்றபடி இந்த மாதிரியான வீண் கலகங்களால் ஒரு கடுகளவும் பிரயோஜனம் உண்டாகப் போவதில்லை. நமது நாட்டுச் சாதி மத வேற்றுமைகளுக்கு அழிவுவராமல் இன்னும் கெட்டியாக ஆணியடித்துக்கொண்டு "சுயராஜ்யம்" வேண்டும் என்று கேட்பது கையாலாகத் தனம் என்று தான் கூறுவோம். சுயராஜ்யத்திற்காகச் செய்யப்படும் கிளர்ச்சியில் ஒருபாகத்தை சாதி, மதங்களை ஒழிப்பதில் செலவு செய்திருந்தால் இதுபோது நாம் எவ்வளவோ மேலான நிலையில் போய் இருந்திருக்கலாம். போதிய சுதந்தரமும் கூடப்பெற்றிருக்கலாம். ஆனால் தேசத்தைக் காட்டிலும், வருணாச்சிரமதருமத்தையும், மதத்தையும் உயிரினுஞ் சிறந்ததாக எண்ணிக்கொண்டிருக்கின்ற "தேசத்தலைவர்"களால், நமது நாடு சாதி, மத வேற்றுமை ஒழியப் போவது ஏது? இவைகள் ஒழியாதவரையில் பூரண சுதந்திரம் கிடைப்பது ஏங்கே ? ஒரு சமயம் கிடைத்தாலும் அதை வைத்து ஆளுந்திறமை தான் இருக்க முடியுமா? என்று தான் கேட்கிறோம்.

ஆகையால் இனியும் உண்மையான சமூக சகோதரத்துவ ஆசையும், உண்மையான தேச முன்னேற்ற ஆவலும் உள்ளவர்கள் அனைவரும் தேசத்தின் அமைதிக்காக உழைக்க முன் வரவேண்டும். புரட்சிச் செயல்களும், கலகங்களும் நடைபெற வொட்டாமல் எல்லா மக்களுக்குள்ளும் சகோதரத்துவமும், சுயமரியாதையும் தாண்டவமாடக்கூடிய பிரசாரஞ் செய்யவேண்டும். குற்றமற்ற மனமுள்ள வாலிபர்கள் மனத்தில் வெறியை உண்டாக்காமல் அன்பையும், சமதர்ம எண்ணத்தையும் உண்டாக்க வேண்டும். இவ்விஷயங்களைப் பொறுப்புள்ள தலைவர்களும், தொண்டர்களும் மேற்கொள்ள வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 20.12.1931**



# யார் செயல் ? யாருக்கு நன்றி ?

காங்கிரசில் உள்ள பார்ப்பனர்கள் அனைவரும், வருணாச்சிரம தருமத்தையும், மதத்தையும், கடவுளையும், வேதங்களையும், புராணங்களையும் பிரசாரம் புரிந்து, நமது இயக்கத்தால் சிறிது கண் திறந்து வருகின்ற பாமர மக்களை மீண்டும் மூடநம்பிக்கையில் கட்டுப்படுத்தி வைக்கவே காங்கிரசை உபயோகப்படுத்திக் கொண்டு வருகின்றனர் என்று நாம் அடிக்கடி கூறிவருவதில் சிறிதும் தவறில்லை யென்பதற்கு மற்றொரு உதாரணம் கிடைத்திருக்கிறது.

"தென்னாட்டுக் காந்தி" எனக் காங்கிரஸ் கூலிகளால் கொண்டாடப்படும் திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களைப்பற்றி நாம் ஒன்றும் அதிகமாகக்கூற வேண்டியதில்லை. அவர் ஒரு பழுத்த வருணாச்சிரம தரும வாதியாகிய "கடவுள் பக்தர்" ஆக விளங்குகிறார் என்பது பலருக்கும் தெரிந்த விஷயமாகும். குடுகுடுப்பைக்காரன் போகுமிடந்தோறும், தனது குடுகுடுப்பையையும், தன் தோளின் மேல் ஒரு மூட்டைக் கந்தைத் துணியையும் சுமந்துகொண்டு போவதைப் போல, திரு. ராஜகோபாலாச்சாரியாரவர்களும் எங்கே போனாலும் புராணங்களையும், கடவுளையும் சுமந்தே தான் செல்லுவார். அவர் எந்த அறிக்கை வெளியிட்டாலும், எங்கே என்னென்ன பேசினாலும், கடவுளைப்பற்றியும், புராணங்களைப் பற்றியும் பேசாமல் விடவே மாட்டார். அவருடைய அரசியல் பிரசாரத்துடன் கூடவே கடவுள் பிரசாரமும், புராணப்பிரசாரமும் நடந்து தான் தீரும். அவருடைய சகாக்களாகிய மற்ற அய்யர், அய்யங்கார், ஆச்சாரியார்களும் இம் மாதிரியே பிரசாரம் பண்ணிக்கொண்டே வருகின்றனர். இதற்கு உதாரணமாகச் சமீபத்தில் அவர் வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கை யைக் கவனிக்க வேண்டுகிறோம். அவ்வறிக்கை வருமாறு :-

"நாளது டிசம்பர் மாதம் 28-தேதி மகாத்மா காந்தி பம்பாய் வந்து சேருவார். அன்றைய தினத்தைத் தமிழ்நாடெங்கும் திருநாளாகக் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அன்று மாலை சாதி, மத, கட்சி பேதங்கள் எல்லாவற்றையும் மறந்து, தமிழ் நாட்டில் உள்ள ஆண்கள், பெண்கள் அனைவரும் பொதுக் கூட்டத்



RangaRakes
tamilnavarasam.com

தில் கூடவேண்டும். நமது ஒப்பற்ற தலைவர் அளவில்லாத தேக சிரமங்களுக்கு உள்ளாகியும், சௌக்கியமாகத் திரும்பி வந்ததைக் குறித்து ஆண்டவனுக்கு நன்றி செலுத்திப் பிரார்த்தனை செய்ய வேண்டும். அன்றைய தினம் நமது மகிழ்ச்சிக்கு அறிகுறியாகச் சொந்த வீடுகள், பொதுக்கட்டிடங்கள் எல்லாவற்றிலும் தேசீயக்கொடி பறக்க விடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்". (இந்தியா)

என்பது அவ்வறிக்கையாகும்.

இந்த அறிக்கையின் சுருக்கமான கருத்து, "திரு. காந்தியவர்கள் பிரயாணஞ்செய்த காலத்தில் உடம்பு சௌக்கியமாக இருந்தது ஒன்று, பிரயாணஞ்செய்து திரும்பி வந்தது ஒன்று, ஆகிய இந்த இரண்டு காரியங் களைச் செய்து விட்டார். இதற்காக "ஆண்டவன்" என்பவனுக்கு நன்றியும், பிரார்த்தனையும் செய்வது ஒன்று. தேசீயக்கொடி பறக்க விடுவது ஒன்று. ஆகிய இந்த இரண்டு காரியங்களையும் செய்யவேண்டும்" என்பதாகும்.

உண்மையிலேயே திரு. காந்தியவர்களுக்கு ஒருவித ஆபத்தும் உண்டாகாமல் இருந்ததற்குக் காரணம் ஆட்டுப்பாலும் பேரீச்சம்பழங் களும், நிலக்கடலைகளும், டாக்டர்களும், ஆங்கில அரசாங்கத்தார் அவருக் கெனத் தனியாகப் பாதுகாப்புக்கென ஏற்படுத்தியிருந்த போலீசுமேயாகும்.

இரண்டாவது, குறிப்பிட்ட இடங்களுக்குப் பிரயாணம் செய்து குறிப் பிட்ட இடத்திற்குத் திரும்பி வந்ததற்குக் காரணம் ரயில், கப்பல், மோட்டார் முதலியவைகளேயாகும்.

ஆகவே திரு. காந்தி அவர்கள் சௌக்கியமாகப் பிரயாணஞ் செய்து திரும்பியதற்காக நன்றி செலுத்தவேண்டுமானால் ஆங்கில அரசாங்கத்தார் போலீஸ்காரர்கள், ரயில்வே அதிகாரிகள், கப்பல் அதிகாரிகள், மோட்டார் ஓட்டிகள் ஆகிய இவர்களுக்கும், அவருக்குப் பால் சப்ளை செய்த ஆடு களுக்கும், பேரீச்ச மரங்களுக்கும், நிலக் கடலைகளுக்குமே நன்றி செலுத்த வேண்டும். இதுதான் உண்மையும், அறிவுடைமையுமாகும். இதை விட்டு விட்டு ஒன்றுமில்லாத ஏதோ ஒன்றைச்சொல்லி அதற்காக நன்றி செலுத்துங் கள்; பிரார்த்தனை செய்யுங்கள் என்று கூறுவதும், தேசீயக்கொடி பறக்க விடுங்கள், என்று சொல்லுவதும் மக்களை மூட நம்பிக்கையில் முழுக வைக் கவா? அல்லவா? என்றுதான் கேட்கின்றோம்.

தேசீயக்கொடி பறக்கவிடுவதில் ஒரு குறும்புத்தனமான விஷயமும் அடங்கியிருப்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். சொந்த வீடுகளில் தேசீயக்கொடி பறக்கவிடுவதைப் பற்றி யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். ஆனால் பொது இடங்களில் பறக்க விடுவதைப்பற்றி தான் மக்களுக்குள் மனவேற்றுமைகளும், தகராறுகளும், விரோதங்களும் விளையக்கூடும். ஆகவே இவ்விஷயத்தின் மூலம் சிறிது கிளர்ச்சியும் உண்டாகக்கூடும் என்பது நிச்சயம்.



அன்றியும் இம்மாதிரி பிரார்த்தனை செய்வது, நன்றி செலுத்துவது, தேசீயக்கொடி பறக்கவிடுவது என்பவைகளின் மூலம் இதுவும் ஒரு பண்டிகையாகவும், திருவிழாவாகவும், கொண்டாடப்பட வேண்டு மென் பதும் திரு.ராஜகோபாலாச்சாரியார் அவர்களின் கருத்தாகும். நாம் திரு விழாக்களும், பண்டிகைகளுமே ஒழிய வேண்டுமென்று பிரசாரஞ் செய்து வருகின்ற காலத்தில் காங்கிரஸ் பார்ப்பனர்கள் இம்மாதிரி அரசியலின் பேரால், திரு. காந்தியின் பெயரால் - காங்கிரசின் பெயரால் புதுப்புதுப் பண்டிகைகளை ஏற்படுத்தி வருகிறார்கள் என்பதைக் காட்டவே இதை எழுதினோம். ஆகையால் இவைபோன்ற முட்டாள்தனமான செயல்களுக்கு ஏமாறாமலிருக்குமாறு பொது ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 20.12.1931**



RangaRakes tamilnavarasam.com

# திரு. படேலின் வைதீகம்

திப்பாரா ஜில்லா மாஜிஸ்திரேட்டை இரண்டு மாணவிகள் அக்கிரமமாகச் சுட்டுக்கொன்ற கொடுஞ் செயலைக்கண்டிக்கும் பொருட்டு பம்பாயில் பெண்களின் கண்டனக்கூட்டம் ஒன்று கூடிற்று. அதில் காங்கிரஸ் தலைவர் திரு. வல்லபாய் படேல் அவர்கள் பேசும் போது கீழ்க்கண்டவாறு கூறினார்.

> “இது மிகவும் கொடிய குற்றம். இந்தியப் பெண்களின் பரம்பரை வழக்கத்திற்குத் தகுந்த செய்கையாகாது. இந்தியப்பெண்கள் சமூகத்திற்கே இது ஒரு நீங்காத பழியாகும். அவர்களுடைய புகழுக்கே கேடு விளைக்கின்றது. உயிர்களை அழிக்கக்கூடிய கருவிகளைப் பெண்கள் கையில் எடுப்பதே தகாத காரியம். உயிரை உற்பத்தி செய்வதும் காப்பாற்றுவதுமே அவர்களுக்கு இடப்பட்ட கட்டளையேயன்றி, கொல்லும்படி கட்டளையிடப்படவில்லை”

என்பது திரு. படேல் அவர்களின் பேச்சு. இதிலுள்ள அபிப்பிராயங்களில் கொலை செய்யும் அக்கிரமத்தன்மையைக் கண்டிக்கும்சொற்கள் முழுவதையும் நாம் பாராட்டுகிறோம். இவ்வாறு கொலை செய்த-வெறி பிடித்த பெண்களின் கொடுந்தன்மையை நாம் பலமாகக் கண்டிக்கின்றோம்.

ஆனால் “உயிரை உற்பத்தி செய்வதும் அதைக் காப்பாற்றுவதுமே அவர்களுக்கு இடப்பட்ட கட்டளை” என்று கூறிய பழய வைதீக அபிப்பிராயத்தை நாம் சிறிதும் ஒப்புக்கொள்ளமாட்டோம். பெண்கள் பிள்ளை பெற்று வளர்க்கக்கூடிய வெறும் யந்திரங்கள் அல்லர். அவ்வாறு யந்திரங்களாக வைக்கப்பட்டிருப்பதும் தவறு; ஆண் மக்களின் சுய நலம்; இந்து மதத்தின் ஆபாச வழக்கமாகும். பெண்கள் ஆண்களைப்போலவே சகல உரிமைகளையும் பெறத்தகுதியுடையவர்கள் என்பது திரு. படேல் அவர்களின் பரந்த அறிவுக்குத் தோன்றாமல் போனதைக்கண்டு ஆச்சரியப்படுகின்றோம்.

**குடி அரசு - செய்திவிளக்கம் - 20.12.1931**



# அவர்களும் நாமும்

நாம் விடுதலை பெற்று நம்முடைய துன்பங்கள் எல்லாம் ஒழிந்து சுகத்தோடு வாழ வேண்டுமென விரும்பினால், முதலில் நம்மை நாம் சீர்திருத்தஞ்செய்து கொள்வது அவசியமானதாகும். நாம் விடுதலை பெறுவதற்குப் பெரிய தடைகளாக நம்மைச் சூழ்ந்து கொண்டு நிற்பவை எவை என்று ஆராய வேண்டுவது முதல் வேலை. ஆராய்ந்து கண்டுபிடித்து அத்தடைகளை அடியோடு நீக்குவதற்கான எண்ணத்தைப் பலப்படுத்திக் கொண்டு, பின்பு அவற்றை ஒழிப்பதற்குரிய வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டும்; கண்டு பிடித்த அவ்வழிகளை உறுதியோடும், உண்மையோடும், அஞ்சாமலும் கைக்கொண்டு அந்தத் தடைகளை ஒழிக்க முயல வேண்டியதே சிறந்த செய்கையாகும். இவ்வாறு தான் மற்ற நாகரீகம் பெற்ற-சுயேட்சை பெற்ற நாடுகளில் உள்ளவர்கள் நடந்து அவர்கள் தற்காலத்திலிருக்கும் உன்னத நிலையை அடைந்திருக்கின்றனர். நமது நாட்டிலோ பலருடைய மனத்திலும், விடுதலை பெற வேண்டும் என்ற எண்ணம் மாத்திரம் சில ஆண்டுகளாக உறுதிப்பட்டு நிலைத்திருந்தாலும், எந்த வழியில் அந்த விடுதலையை அடைவது என்பதைப் பற்றிச் சரிவரச் சிந்திக்காமலும், சரியான முடிவுக்கு வர மனமில்லாமலும் இருக்கின்றனர்.

“விடுதலையை வாங்கித் தருகிறோம்” என்று சொல்லித் தேச மக்களுக்குத் தலைமை வகித்து நடத்துகிறவர்களும், சரியான வழியை மக்களுக்குக் காட்டாமல் இருக்கின்றார்கள். மற்ற நாட்டினர் தங்கள் சமூகத்தில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகக் குடி கொண்டிருந்த எந்தெந்த நடவடிக்கைகளை ஒழித்ததன் மூலம் விடுதலை பெற்றார்கள் என்பதை இந்தத் தலைவர்கள் என்பவர்கள் அறியாதவர்கள் அல்லர். அறிந்திருந்தும், நம்மிடத்திலும் அது போல் உள்ள அந்த நடவடிக்கைகளாகிய தடைகளைப் பற்றிய தீமைகளை ஜன சமூகத்திற்கு எடுத்துக் காட்டாமலும், அவைகளை ஒழிக்க வேண்டுமென்று கூறாமலும் மறைத்து வைத்துக் கொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணம் அவைகளின் மேல் இவர்கள் கொண்டுள்ள ஒருவிதக் குருட்டு நம்பிக்கையேயாகும். அந்த நமது முன்னேற்றத்திற்குத் தடையான நம்முடைய நடவடிக்கைகள், “நமது முன்னோரால் கையாளப்பட்டவை; அவைகள் தெய்வீகத் தன்மை



RangaRakes tamilnavarasam.com

யுள்ளவை; ஆகையால் அவற்றை அழிக்கக்கூடாது” என்ற ஒரு பகுத்தறி வற்ற, பிடிவாதமான எண்ணமே யாகும்.

ஆகையால் தான், நமது நாட்டில் சமூகச் சீர்திருத்தம் செய்ய முன் வந்தவர்களும், வருகின்றவர்களும், அரசியல் விடுதலைப் பெற முன் வந்தவர்களும், வருகின்றவர்களும், பழமையான காரியங்களுக்கு ஒரு கெடுதியும் இல்லாமல் அவைகளுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதை முதன்மையாக வைத்துக் கொண்டே, சமூகச் சீர்திருத்தமும், அரசியல் விடுதலையும் பெற விரும்பினார்கள், விரும்புகின்றார்கள். நாம் வேறொரு நல்ல இடத்தை அடைய வேண்டுமானால், இருந்த பழைய இடத்தை விட்டுப் புறப்பட்டால் தான் குறிப்பிட்ட நல்ல இடத்திற்குப் போக முடிவதைப் போல், பழமையாக நம்மிடம் குடி கொண்டிருக்கும் பல நடவடிக்கைகளை ஒழித்தால் தான் புதுமையான விடுதலையை அடைய முடியும் என்பதை அவர்கள் சிறிதும் சிந்திப்பதில்லை; சிந்தித்தாலும், தமது இரத்தத்துடன் கலந்து உடம்பில் ஊறிப் போயிருக்கும் “பழய நம்பிக்கை” அவர்களைப் பழமையை விட்டு அசைய விடுவதில்லை.

பழமை யென்னும் பாழும் கோட்டைக்குள் உறுதியாக உட்கார்ந்து கொண்டே புதுமையான விடுதலை, சமூக சமத்துவம் இவற்றைப் பெற வேண்டுமெனப் பேசி வருகின்றனர். இதற்காக இவர்கள் செய்யும்படி காட்டுகின்ற முயற்சிகளும், வழிகளும், இன்னும் நாம் பல ஆயிரம் ஆண்டு களானாலும், தற்போது இருக்கும் நிலைமையிலிருந்து இம்மியளவும் மாறாமல் நிறுத்தி வைக்கக் கூடிய வழிகளாகவும் முயற்சிகளாகவுந் தான் இருக்கின்றன.

இவற்றை விளக்கச் சில உதாரணங்களைக் கீழே எடுத்துக் காட்டு கிறோம். அவற்றைக் கொண்டு மேலே நாம் கூறியவைகளின் உண்மையை ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். நாகரீகம் பெற்ற நாடுகளில் வாழுகின்ற அறிஞர்களும், சீர்திருத்தக்காரர்களும், அரசியல் வாதிகளும், தமது நாட்டு மக்கள் மனத்தில் தன்னம்பிக்கையை வேரூன்றச் செய்கின் றனர்; நன்மை தீமையைப் பகுத்தறிந்து சிந்தித்து ஒரு காரியத்தைச் செய்யும் படி மக்களின் எண்ணத்தைத் திருப்புகின்றனர். பழமையைப் பற்றிச் சிறிதும் பொருட்படுத்தாமல், காலத்திற்கேற்ப தம்முடைய நடத்தைகளை யும், எண்ணங்களையும், செயல்களையும் மாற்றிக் கொள்ளும்படியான மனப்பான்மையை உண்டாக்குகின்றனர்.

நமது நாட்டில் வாழும் தலைவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் செய்கையோ இதற்கு முற்றிலும் வேறு பட்டதாகவே இருக்கின்றது. நமது மக்களுக்குத் தன்னம்பிக்கை சிறிதும் உண்டாகாதபடி “ஆண்டவன்” என்பவனை நம்புவதனாலும், பிரார்த்தனைகளை நடத்துவதாலுமே



காரியங்களை முடிக்கலாமென்னும் மூடத்தனத்தைப் பரவச் செய்கின்றனர். எதையும் ஆராய்ந்து பார்க்கும் பகுத்தறிவை உண்டாக்காமல், “மதக் கட்டளை” “கடவுள் மொழி” “பெரியோர் சொல்” “மகாத்மா வாசகம்” என்று சொல்லி அவற்றைச் சரியோ, தப்போ அப்படியே நம்பும்படியான மனப்பான்மையை உண்டாக்குகின்றனர், காலத்திற்குப் பொருந்தாத பழய நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளும் எண்ணத்தை உண்டாக்காமல், “பழமையான நடவடிக்கைகள்” பரிசுத்தமானவை, அவற்றை மாற்றிக் கொண்டால் நமது மதத்திற்கு அழிவு வந்து விடும்; நமது புராதன நாகரிகத்திற்குச் சிதைவு வந்து விடும்; ஆகையால் பழமையை விட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தை உறுதியாக நிலைக்கச் செய்யக்கூடிய வேலையையே செய்கின்றனர். நாகரீக தேசத்தார்கள், தம்முடைய நாட்டு மக்களை உலக நாகரீகத்திற்கு வேண்டிய சிறந்த கல்விகளை கற்கும்படி செய்கின்றனர். அதாவது:- கைத்தொழில் சம்பந்தமான கல்வி, வியாபார சம்பந்தமான கல்வி, விவசாய சம்பந்தமான கல்வி, விஞ்ஞான சாஸ்திர சம்பந்தமான கல்வி, சுகாதார சம்பந்தமான கல்வி, அரசியல் சம்பந்தமான கல்வி முதலிய உலக வாழ்க்கைக்குப் பயன்படத் தகுந்த கல்வியை வளர்க்க முயற்சி செய்கின்றனர். ஆனால் நமது நாட்டுத் தலைவர்கள் என்பவர்களோ, மேற்கூறிய பலவகைப்பட்ட கல்விகளைக் கற்பதற்கு வசதியுள்ள நூல்கள் நிரம்பிய பாஷையையே நமது நாட்டை விட்டு ஒழித்து விட வேண்டு மென்று வேலை செய்கின்றனர். மக்களுக்கு உலக நாகரீகத்தைப் போதிக் காமல், சோம்பேரித் தனத்தையும், மூடநம்பிக்கைகளையும் உண்டாக்கக் கூடிய சில புராணங்கள் மாத்திரம் உள்ளதும், சிறந்த இலக்கியங்கள் கூட இல்லாததுமாகிய ஹிந்தி பாஷையையே எல்லா மக்களும் படிக்க வேண்டும் என்று பிரசாரம் பண்ணுகின்றனர்.

மற்ற நாட்டு தலைவர்கள் எல்லோரும், மக்களுடைய கஷ்டமான உழைப்பைக் குறைத்து, எல்லாத் தொழில்களையும் இயந்திரங்களைக் கொண்டு விருத்தி செய்து, நாட்டின் விவசாயம், கைத்தொழில் முதலியவை களை வளர்க்க முயற்சிக்கின்றனர். இதன் மூலம், நமது நாட்டு விவசாயமும், கைத்தொழிலும், அந்நிய நாட்டு விவசாயத்திற்கும், கைத்தொழில்களுக்கும், சளைக்காமல் அவைகளுடன் போட்டி போடவும், வியாபாரத்தின் மூலம் தங்கள் நாட்டில் செல்வத்தை பெருக்கவும் முயற்சி செய்து வெற்றி பெறுகின்றனர்.

நமது நாட்டுத் தலைவர்கள் என்பவர்களோ இயந்திரங்களின் மூலம் தொழில்களை விருத்தி செய்யவேண்டும் என்னும் எண்ணமே மக்களிடம் தோன்றாமலிருக்கும்படியும், எல்லாத் தொழில்களையும் பிறர் உதவி இல்லாமல் தாமே கையினால் செய்து கொள்ள வேண்டும் என்னும் குறுகிய மனப்பான்மையையும் “தேசீயம்” என்னும் பெயரால் உண்டாக்குகின்றனர். இதனால் நாட்டின் விவசாயம், கைத்தொழில்கள் முதலியன வளர்ச்சியடைய



RangaRakes tamilnavarasam.com

ஒட்டாமலும், எந்த வகையிலும் அந்நிய நாடுகளுடன் வியாபாரம் செய்து போட்டி போட முடியாமலும், நாட்டின் செல்வ நிலை வளர முடியாமலும் பாழ்படுத்துகின்றனர்.

மற்ற நாகரீகம் பெற்ற நாடுகளிலோ, தொழிலாளர்கள் முதலாளிகள், ஏழைகள் பணக்காரர்கள், தாழ்ந்த சாதிக்காரர்கள் உயர்ந்த சாதிக்காரர்கள் என்ற வித்தியாசங்கள் ஒழிந்து, எல்லா மக்களும், சம சுதந்தரமும், சம சுகமும் அடைவதற்கான வழிகளையும் முயற்சிகளையும் செய்து கொண்டு வருகின்றனர்.

நமது நாட்டில் உள்ள தலைவர்கள் என்பவர்களோ, வருணாச்சிரம தரும மனப்பான்மையைச் சிறிதும் மாற்றிக் கொள்ளாமல், கஷ்டப்பட்டு கொண்டிருக்கின்றவர்கள் நிரந்தரமாகவே கஷ்டப்பட்டுக் கொண்டே வாழவும், ஏழை மக்களை நசுக்கிப் பிழிந்து அவர்கள் உழைப்பின் பலனை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் எப்பொழுதும் அப்படியே அனுபவித்துக் கொண்டிருக்கவுமே பாதுகாப்புத் தேடிக் கொண்டு வருகின்றனர்.

மற்ற நாட்டினர், தங்கள் நாட்டு வாலிபர்களுக்குச் சிறந்த கல்விப் பயிற்சியும், தொழில் செய்யும் திறமையும், நாட்டிற்கு ஆபத்து வருங் காலத்தில் அதைக் காப்பாற்றுவதற்காக ராணுவ பயிற்சியும் கொடுத்து அவர்களைச் சிறந்த வீரப்பிரஜைகளாகச் செய்கின்றனர்.

நமது நாட்டுத் தலைவர்கள் என்பவர்களோ, நமது வாலிபர்களுக்குக் கல்விப் பயிற்சியும், தொழிற்பயிற்சியும் கற்றுக் கொள்ளும் படியான ஊக்கத்தை உண்டாக்காமலும், ராணுவப்பயிற்சியை அடைய வேண்டுமென்னும் எண்ணத்தை மிகுதிப்படுத்தாமலும் வாலிபர்களைக் கோழைகளாக்குகின்றனர். அன்றியும் "சத்தியாக்கிரகம்" "ஆத்ம சக்தி" என்னும் பெயர்களால் நமது வாலிபர்களை அடிபடவும், உதைபடவும், மான ஈனமின்றி உண்டியல் பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு, தெருத்தெருவாக, வீடுவீடாகப் போய் பிச்சை வாங்கும் பேடிகளாகவும் செய்கின்றனர்.

மற்ற நாட்டுத் தலைவர்கள், மக்களுடைய பகுத்தறிவுக்கும், தன்னம்பிக்கைக்கும், முயற்சிக்கும் தடைகளாயிருந்து, அவர்களைச் சோம்பேறிகளாகவும், மூடர்களாகவும் ஆக்கி வைத்துக் கொண்டு, வெகுகாலமாக நிலை பெற்று வரும் மதங்களையும், கடவுள்களையும், வேதங்களையும், ஒழித்து இவைகள் மக்களின் கவனத்தைக் கவராமல் இருக்க முயன்று ஜெயம் அடைகின்றனர்.

நமது நாட்டுத் தலைவர்கள் என்பவர்களோ நமது தேசத்தில் ஒன்றோடு ஒன்று கலகம் புரிந்து கொண்டிருக்கும் மதங்கள், கடவுள்கள், வேதங்கள் இவைகளால் உண்டான நாகரீகங்கள் ஆகிய பலவகையான



பிரிவுகள் எல்லாம் என்றும் அழியாமல் நிலைத்திருப்பதற்கு வேண்டிய பாதுகாப்புகளை உறுதியாக ஏற்படுத்தி அவைகளை நிலைக்க வைக்கப் பாடுபடுகின்றனர்.

மற்ற நாட்டுத் தலைவர்கள், மனித சமூகத்திற்குப் பயன்படாமல் ஒரு சிலரின் சுய நலத்திற்காகப் பயன்பட்டுக் கொண்டிருக்கும் மடங்களின் சொத்துக்களையும், கோயில்களின் செல்வங்களையும், மற்றும் மத ஸ்தாபனங்களின் பொருள்களையும் பறிமுதல் செய்கின்றனர். அவற்றைத் தேசத்தின் சுகாதாரம், கல்வி, கைத்தொழில் முதலியவைகளுக்குச் செலவு செய்து தேசத்தை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வருகின்றனர்.

நமது நாட்டுத் தலைவர்கள் என்பவர்களோ, மடங்களின் சொத்துக்களும், கோயில்களின் சொத்துக்களும், மற்றுமுள்ள தரும ஸ்தாபனங்களின் சொத்துக்களும் பரம்பரையாக எந்தக் கூட்டத்தாரின் சுய நலத்திற்குப் பயன்பட்டு வந்ததோ அந்தக் கூட்டத்தாரின் நன்மைக்கே இன்னும் நிலையாக உபயோகப்பட்டு வரவேண்டுமெனப் பாதுகாப்புத் தேடுகின்றனர். இவைகளை மாற்றுவது மதவிரோதமென்றும், "கடவுள்" என்பவருக்கு விரோதமான செய்கை என்றும், அவைகளில் தலையிட பொது ஜனங்களுக்கும், அரசாங்கத்தாருக்கும் உரிமையில்லை என்றும் கூச்சலிட்டுக் கொண்டு வருகின்றனர். இதன் மூலம் ஏராளமான செல்வத்தை தேசத்திற்குப் பயனில்லாமல் சில சுயநல கூட்டத்தாரே அனுபவித்து வருகின்றனர்.

மற்ற நாட்டில் உள்ளவர்கள், பெண்மக்களும், ஆண்மக்களைப் போலவே சமூக வாழ்விலும் அரசியல் வாழ்விலும் சம சுதந்தரம் அனுபவிக்க உரிமை வழங்கி வருகின்றனர்.

ஆனால் நமது நாட்டிலோ, "பால்ய விவாஹத்தை தடுப்பது மத விரோதமான காரியம்; விதவைகளைக் கல்யாணஞ்செய்து கொள்ள அனுமதிப்பது மதத்துரோகம்; கோஷா முறையை நீக்குவது "கடவுள்" கட்டளைக்கு விரோதம்; "உயிர்களை உற்பத்தி செய்வதும், அவைகளைக் காப்பாற்றுவதுந்தான் பெண்களுக்கு இடப்பட்ட கட்டளை" என்று கூறிப் பெண்மக்களுடைய சுதந்திரத்திற்கு விரோதமாக வேலை செய்கின்றனர்.

மற்ற நாடுகளில், ஜனங்களுக்கு லௌகீக ஞானம் உண்டாகும் பொருட்டும், சுகாதாரத்தோடும், பகுத்தறிவோடும் வாழக்கூடிய வழிகளைக் காட்டும் பொருட்டும், சுகாதாராக் காட்சிகள், கல்வி கண்காட்சிகள், விவசாயக் கண்காட்சிகள், கைத்தொழிற் கண்காட்சிகள், விஞ்ஞான சாஸ்திர சம்பந்தமான கண்காட்சிகள் முதலியவைகளை நடத்தி வருகின்றனர். இவ்வகை யிலேயே ஏராளமான பணங்களைச் செலவிட்டுத் தேச மக்களை அறிவுடைய மக்களாக்குகின்றனர்.



RangaRakes tamilnavarasam.com

நமது நாட்டிலோ மக்களுடைய அறிவை மழுங்கச்செய்து அடிமைப் படுத்துவற்காகப் பொய்யாகவும் புனைந்துரைகளாகவும் எழுதப்பட்ட புராணங்களை நம்பி அவற்றில் உள்ள கதைகளையே திருவிழாக்களாக ஏராளமான பொருளைச் செலவு செய்து நடத்தி வருகின்றனர். அல்லா மலும், புராணக்கதைகளையே ஆதாரமாகக் கொண்ட பண்டிகைகளையும் கொண்டாடுவதுடன், தேசீயத்தின் பேரால் இன்னும் புதுப்புதுப் பண்டிகை களையும் உற்பத்தி செய்து வருகின்றனர்.

இக்காரியங்களின் மூலம் மக்களை இன்னும் குருட்டு நம்பிக்கை யுடைவர்களாகவும், பகுத்தறிவற்றவர்களாகவும் ஆக்கி வருகின்றனர்; மக்களுடைய முயற்சியையும், நேரத்தையும், பாடுபட்டுத் தேடிய செல்வங் களையும் பயனற்ற வீணான வழியிற் செலவு செய்யும்படி தூண்டி விடுகின்றனர். மற்ற நாட்டில் உள்ளவர்கள், சந்திரமண்டலத்தில் குடியேறு வது எப்படி? அதற்கு மேல் உள்ளதாகக் கூறப்படும் உலகங்களை கண்டுபிடிப்பது எப்படி? ஆண் பெண் சேர்க்கையில்லாமல் மக்களை சிருஷ்டிப்பது எப்படி? ஒவ்வொரு மக்களும் தனித்தனியே ஆகாய மார்க்க மாகப் பறந்து செல்வது எப்படி? என்று ஆராய்ந்துக் கொண்டிருக்கின்றார் கள். இதற்காக அந்நாடுகளில் உள்ள அறிஞர்கள் தங்கள் காலத்தையும் அறிவையும் செலவழித்து வெற்றிப் பெற்றுக் கொண்டும் வருகின்றார்கள். ஆனால் நமது நாட்டில் உள்ள பண்டிதர்களும், அரசியல்வாதிகளும், தீண்டாதவர்கள் கோயிலுக்குள் செல்லுவதும், அவர்கள் பொதுச்சாலை களில் நடப்பதும், பொதுப்பள்ளிக்கூடங்களில் படிப்பதும், பொதுக்கிணறு களிலும், பொதுக்குளங்களிலும் தண்ணீர் எடுப்பதும், மதவிரோதமா? அல்லவா? சாஸ்திர விரோதமா? அல்லவா? கடவுள் கட்டளைக்கு விரோ தமா? அல்லவா? என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றனர். அன்றி யும் ஐந்து தலைமுறைக்கு முன் தாயாதியாக இருக்கும் குடும்பத்தில் ஒருவர் வெளியூரில் இறந்து போய்விட்டார் என்ற சங்கதியை இறந்த இரண்டு தினங்கள் கழிந்த பின் கேள்விப்பட்டால் அப்பொழுது ஸ்நானம் செய்ய வேண்டுமா? வேண்டாமா? என்ற விஷயத்தைக் கண்டுபிடிக்க நமது நாட்டுப் பண்டிதர்கள் சாஸ்திரங்களை புரட்டிக் கொண்டு, ஒருவர்க் கொருவர் அபிப்பிராய வேறுபாடுகளுடன் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றார் கள். நாகரீகம் பெற்ற அவர்கள் தம் நாட்டுக் குழந்தைகள், ஆண் பெண்கள் அனைவருக்கும் கட்டாயக் கல்வி போதிப்பதற்காகச் சட்டங்கள் செய்து, அதற்கேற்றாற் போல் நாடெங்கும் ஏராளமான பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திக் கல்வியை விருத்தி செய்து வருகின்றார்கள். நாமோ கல்விக்கு அதிதேவதை "சரஸ்வதி" என்பவள் என்று வைத்துக்கொண்டு ஒவ்வொரு வருஷமும் பூஜை செய்து வருவதோடு, பதினெட்டாம் பெருக்கு என்னும் ஆடிமாதப் பண்டிகையில் நமது புத்தகங்களை எல்லாம் ஆற்றில் கொண்டு போய் போட்டு அழித்து வருகிறோம். இந்த மாதிரியான எந்த விஷயங் களைப் பார்த்தாலும் அவர்கள் முன்னே சென்று கொண்டிருப்பதும், நாம்



பின்னே சென்று கொண்டிருப்பதுமாகவே இருக்கின்றோம். நாகரீகம் பெற்ற நாட்டினராகிய அவர்கள் செய்யும் எந்தக் காரியங்களும் இவ்வுலக வாழ்க் கைக்குப் பயன் தரக் கூடியனவாகவே இருந்து வருகின்றன; இவ்வுலகில் எல்லா மக்களும் அறிவோடும், நாகரீகத்தோடும், சுகத்தோடும், சமத்துவத் தோடும் வாழுவதற்குச் செய்யும் காரியங்களாகவே காணப்படுகின்றன. ஆனால், நாம் செய்யும் காரியங்களோ, இவ்வுலக வாழ்க்கையில் மற்ற நாகரீக நாட்டினருடன் சமநிலைக்கு வர வழியில்லாமல், புராணக் காலத் திலிருந்த அநாகரிக மக்களாகவே இன்னும் இருந்து கொண்டிருக்கவே உபயோகப்படுகின்றன; இன்னுஞ் சிறிது கவனித்துப் பார்த்தால் நமது காரியங்கள், நமக்குள்ள கடவுள், புராண மத நம்பிக்கைகளின் மூலம் "நாம் இறந்த பின் எங்கேயோ போய் எதையோ அடைந்து சுகம் அனுபவிக்கப் போகிறோம்" என்ற எண்ணத்தை மனத்தில் வைத்துக் கொண்டு செய்யப்படும் காரியங்களாகவே இருக்கின்றன. இன்னும் காலப்போக்கை அறிந்த அவர்கள் செய்யும் காரியங்களைப் பற்றிச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் கூற வேண்டுமானால், அவர்கள், இனி வரப் போகும் காலம் எப்படியிருக்கும் அக்காலத்தில் நமது சமூக வாழ்வு, அரசியல் வாழ்வு இவைகள் எப்படியிருக்கும்? அவைகளுக்குத் தகுந்தபடி நம்மை இப் பொழுதே எப்படிச் சரிப்படுத்திக் கொள்ளுவது? என்ற கவலையோடும், எண்ணத்தோடுமே காரியங்களைச் செய்து கொண்டு போகின்றார்கள். இக் காரியங்களுக்குத் தகுந்த வகையில் தங்கள் கொள்கைகளையும், நம்பிக்கை களையும், பழக்கவழக்கங்களையும் தாராளமாக மாற்றிக் கொண்டு செல்லு கின்றார்கள். நாமோ, "ருக்வேத காலத்தில் எப்படியிருந் தோம்? தொல் காப்பியக் காலத்தில் எப்படியிருந்தோம்?

அந்தப் பழய நாகரீக நிலைக்குப் போவதே, நாம் செய்ய வேண்டிய தேசப்பணி; மதக்கடமை என்ற எண்ணத்துடன் அவைகளைப் பற்றி ஆராய்வதும், பிரசாரஞ் பண்ணுவதுமாகவே இருக்கின்றோம். இந்த வகையாக இரண்டு வேறுபட்ட வழிகளில் வேலை செய்து கொண்டுவரும் தேசத்தார்களில் எவர் அறிவு படைத்தவர்கள்? எவர் அறிவில்லாதவர்கள்? எவர் முன்னேற்றமடையக்கூடியவர்கள்? எவர், தாம் இருக்கும் கீழ் நிலையை விட்டு மாறாமலே இருக்கக் கூடியவர்கள்? என்பதைப் பகுத் தறிவு கொண்டு ஆலோசித்துப் பாருங்கள். கால நிலைக்கு ஏற்றவாறு தங் களைச் சரிப்படுத்திக் கொண்டு போகின்ற தேசத்தார் முன்னேற்றமடை வார்களா? அல்லது "எது எப்படியானாலும், எமது நாட்டுப் பழய நாகரீ கத்தை விட மாட்டோம்" என்று முரட்டுப் பிடிவாதம் செய்து கொண்டிருக் கும் தேசத்தார் முன்னேற்றமடைவார்களா? என்பதையும் யோசித்துப் பாருங்கள். இன்று நமது நாட்டில் நடைபெறும் "தேசிய இயக்கம்" என்ப வைகள் நம்முடைய பழைய நாகரீகத்தை நிலை நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் தானே பாடுபடுகின்றன? "தேசீய இயக்கத்தை"ச் சார்ந்து நின்று வேலை செய்யும் மற்றவர்களும் இக்கொள்கைக்குத் தானே



RangaRakes tamilnavarasam.com

ஆதரவளித்து வருகிறார்கள். திரு.காந்தியுள்பட எல்லாத் தேசீயத் தலைவர்களும், வைதீக பாழும் கோட்டைக்குள் உட்கார்ந்துக் கொண்டு தானே "ராஜ்ய" சுதந்திரத்திற்குப் போராடுகின்றனர்? தற்சமயத்தில் பரிபூரண ராஜ்ஜிய சுதந்திரம் கிடைத்து விட்டாலும், அதைக் கொண்டு நமது பழய நாகரீகத்தை நிலை நிறுத்தத் தானே முயற்சி செய்யப்படும்? "பழய நாகரீகத்தைக் கொண்டு தான் நமது நாட்டைச் சமாதானமாக வைத்திருக்க வேண்டும்" என்ற கொள்கையைக் குரங்கு பிடியாக பிடித்துக் கொண்டிருப் பவர்கள் கையில் தானே தற்கால நிலையில் ராஜீய அதிகாரம் போய்ச் சேரும்? இத்தகைய வைதீக மனப் பான்மையுடையவர்கள் கையில் தேசம் அகப்பட்டு ஏழைமக்கள், கஷ்டப் படுகிறவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் முதலியவர்கள் அவர்களுடைய பரிதாபகரமான நிலையிலேயே இருப்பது சரியா? அல்லது இவர்களுக்கு அனுகூலஞ்செய்யாவிட்டாலும், இவர்கள் முன்னேற்றத்திற்குத் தடை செய்யாமல் இருக்கின்ற கூட்டத்தார் கையில் அதிகாரம் இருப்பதனால் இப்பொழுது ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை என்பது சரியா? என்பவைகளில் எது சரியென்பதை நன்றாய் யோசனை செய்து பாருங்கள்.

அதன் பிறகு, நாம் தேசீயத்தின் போக்கைக் கண்டிப்பதைப் பற்றியும், திரு.காந்தி போன்ற வைதீகர்களின் போக்கைக் கண்டிப்பதைப் பற்றியும் குறை கூறலாம். எதையும் பகுத்தறிவோடு ஆராய்ந்து பார்க்காமல், "மதம்", "கடவுள்", "வேதம்" இவைகளின் மேல் பாமர மக்கள் வைத்திருக்கும் மூடநம்பிக்கையைப் போலவே, "காங்கிரஸ்", "காந்தி", "தேசீயம்" என்ற பெயர்களின் மேலும், குருட்டு அபிமானமும், மூட நம்பிக்கையும் வைத்துக் கொண்டு சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைக் குறைகூறுவதில் ஏதாவது பொருள் உண்டா என்று கேட்கிறோம். ஆகையால், குருட்டு அபிமானமில்லாமல், மூடநம்பிக்கையில்லாமல், ஆத்திரமில்லாமல், பொறுமையோடு, பகுத்தறிவோடு நினைத்துப் பாருங்கள்! அப்பொழுது நாங்கள் கூறுவதில் உள்ள உண்மை விளங்காமற் போகாது என்று தான் சொல்லுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 27.12.1931**

# அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அங்குஸ்தான் | - | தையற்காரர்கள் விரலில் அணியும் பூண் |
| அசக்தர்கள் | - | இயலாதவர்கள், சக்தியற்றவர்கள் |
| அட்டாலி | - | பரண், மேல்மாடி |
| அதிக்கிரமம் | - | நெறி தவறல், வரம்பு மீறல் |
| அனுஷ்டானம் | - | வழக்கம், ஒழுக்கம் |
| ஆகர்ஷணை | - | ஈர்ப்பு, உள்வாங்குகை |
| ஆஸ்பதம் | - | இடம், பற்றுக்கோடு |
| இராஜிய துறை | - | அரசியல் துறை |
| ஒட்டிக்கிரட்டி | - | ஒன்றுக்கு இரண்டு, சரிமடங்கு அதிகமாக |
| கர்னகடூரம் | - | காதுகளால் கேட்க முடியாத |
| கலிதம் (ஸ்கலிதம்) | - | விந்து நழுவுகை, ஒழுகுதல் |
| காயமாகி | - | உறுதியாகி |
| கெம்பு | - | சிவப்பு இரத்தினக்கல் |
| சர்க்கா | - | இராட்டை, இராட்டையின் முன்னேறிய |
| வடிவம்சித்தித்துவிடும் | - | கை கூடிவிடும், வெற்றி கிட்டிவிடும் |
| சிலேத்துமம் | - | சளிக்கவ்வம், கோளை |
| சிவாஜி நாமா | - | தீர்வை விதிக்கப்படாத தரிசு (யாருக்கும் உரிமையாக்கப்படாத அரசு நிலம்) |
| சுக்கிலம் | - | விந்து |
| சுரோணிதம் | - | கருமுட்டை |
| சூசனை | - | குறிப்பு, மறைமுகமாக சுட்டிக் காட்டுதல் |
| சூன்ய திசை | - | அழிவு |
| சேகண்டி | - | வட்ட வடிவமான உலோக மணி வகை |

RangaRakes tamilnavarasam.com

# குடி அரசு

# 1932-1

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 14

பெரியார் திராவிடர் கழகம்

29 இதழியலாளர் குடியிருப்பு

திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்

சென்னை - 600 041

## தலைநகரும் பிடிபட்டது

ஒரு நாட்டு மக்களைச் சீர்திருத்த வேண்டுமானால் - அவர்களிட முள்ள மூடப்பழக்கவழக்கங்களை ஒழிக்க வேண்டுமானால் - அவர் களிடமுள்ள சாதிசமய பேதங்களை ஒழித்து சகோதரர்களாக ஒற்றுமையுடன் வாழச் செய்ய வேண்டுமானால் தைரியமாக அவர்களிடம் குடி கொண்டி ருக்கும் குற்றங்களை எடுத்துக்காட்ட வேண்டும் - இவ்வாறு தேச மக்களிடம் படிந்து கிடக்கும் குற்றங்களை அவர்களுடைய எதிர்ப்பையும், வெறுப்பை யும் எதிர்பாராமல் எடுத்துக்காட்டுவதன் மூலந்தான் அவர்களைச் சீர்திருத்தஞ் செய்ய முடியும். தேசத்தின் நன்மைக்கு மக்களுடைய சீர்த்திருத்தத்திற்கு எந்தெந்தக் காரியங்களை ஒழிக்க வேண்டும், எந்தெந்தக் காரியங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்னும் விஷயங்களைப் பகுத்தறிவுடன் ஆராய்ந்துத் தன் மனத்திற்கு பட்டதை தைரியமாக ஜன சமூகத்திற்கு எடுத்துக் கூறும் தலைவர்களால்தான் - இயக்கங்களால்தான் எந்த தேசமும் முன்னேற்ற மடைய முடியும்.

இவ்வாறில்லாமல், மக்களுடைய பழக்க வழக்கங்களுக்கு அவர் களுடைய பழய கொள்கைகளுக்கு விரோதமான அபிப்பிராயங்களை வெளி யிட்டால் பொதுஜனங்கள் நம்மை எதிர்ப்பார்கள்; அவர்களிடம் நாம் தலைவர்களாக விளங்கமுடியாது; பொதுஜனங்களால் நாம் தூஷிக்கப் படுவோம் என்று பயந்து கொண்டு அவர்கள் அனுசரித்து வரும் மூடப்பழக்க வழக்கங்களுக்கு ஆதரவளித்துக் கொண்டே சீர்திருத்தஞ் செய்ய முயலும் தலைவர்களாலும், இயக்கங்களாலும் ஒரு சீர்திருத்தமும் செய்ய முடியாது என்பது சீர்திருத்தவாதிகளின் முடிவான அபிப்பிராயமாகும்.

இந்த அபிப்பிராயத்துடன் நமது நாட்டில் உள்ள தலைவர்களின் போக்கையும், இயக்கங்களின் நடத்தைகளையும் கவனித்தால் அநேகமாக எல்லாத் தலைவர்களும், எல்லா இயக்கங்களும் பாமர மக்களின் மூடப்பழக்க வழக்கங்களுக்கு விரோதமான பிரசாரத்தைத் தாராளமாகவும் அஞ்சாமலும் செய்வதில்லை என்பது விளங்கும். ஆனால், தேசமக்களின் முன்னேற் றத்திற்கு காலநிலையை அனுசரித்து எந்தக் காரியங்களைச் செய்வது சரி யென்று படுகிறதோ அந்தக் காரியங்களை யாருடைய தயவுக்கும்,

RangaRakes tamilnavarasam.com

தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாமல், இது வரையிலும் பகுத்தறிவுக்குப் பொருத்தமான - பொது ஜனங்களின் மூடப் பழக்க வழக்கங்களுக்கு விரோத மான - சிறந்த கொள்கைகளை ஆண்மையுடன் வெளியிட்டு வருவது நமது இயக்கம் ஒன்றேயாகும்; நமது இயக்கத் தோழர்களே யாவார்கள்; என்பது நமது நாட்டு மக்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும்,

இம்மாதிரியான சீர்திருத்த அபிப்பிராயங்களைப் பாமர மக்களிடம் பரப்பிவருவதனால் அவர்களை இது வரையிலும், ஏமாற்றிக் கொண்டிருந்த எல்லா கூட்டத்தாருக்கும் நமது இயக்கத்தின் மேலும், நமது இயக்கத் தோழர்களின் மேலும், குரோதமும் பொறாமையும் ஏற்பட்டு நமது இயக் கத்தைப் பற்றியும், நமது இயக்கத் தோழர்களைப் பற்றியும் பலவகையான தப்புப் பிரசாரங்கள் செய்து வருகின்ற விஷயம் குடி அரசு வாசகர் களுக்கெல்லாம் நன்றாய்த் தெரிந்த செய்தியாகும்.

முக்கியமாக நமது இயக்கத்தின்மேல் துவேஷத்தைக் கற்பித்துப் பொதுஜனங்களிடத்தில் பிரசாரம் பண்ணுகிறவர்கள் பிச்சை வாங்கும் புரோகிதக் கூட்டத்தாராகிய பார்ப்பனர்களும், அவர்களுடைய வார்த்தை களையும், அவர்களுடைய பிழைப்புக்கு ஆதாரமாக ஏற்படுத்தப்பட்டி ருக்கும் மதம், வேதம்,புராணம், சுவர்க்கம், நரகம், கடவுள், மோட்சம் என்னும் புரட்டுக்களின் மேல் நம்பிக்கை கொண்டிருக்கும் பகுத்தறிவற்ற ஏமாந்த சோணகிரிகளாகிய சில பார்ப்பனரல்லாதார்களும், கூலிக்கு மாரடிக்கும் சில காலிகளுமே ஆவார்கள்.

பார்ப்பனர்களின் ஆதிக்கம் பெற்று விளங்கும் தேசீயப் பத்திரிகைகள் என்பனவும், வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்பட்ட மற்றும் சில கூலிப் பிரசாரக் குட்டிப்பத்திரிகைகளும், நமது இயக்கத்தின் பேரிலும், தோழர்களின் மேலும், பல ஆதாரமற்ற அற்பத்தனமான அபாண்டமான பழிகளைச் சுமத்திப் பாமர மக்களிடம் பொய்ப்பிரசாரம் பண்ணிக் கொண்டிருக்கின்றன என்பதும் வாசகர்களுக்குத் தெரியாத செய்தி அல்ல.

நம்மைப் பற்றி சுயநலக்காரர்களும், மோசக்காரர்களும், கூலிக் காரர்களும், அயோக்கியர்களும் அவதூறுப் பிரசாரம் பண்ணிக் கொண்டி ருந்தாலும் நமது இயக்கம், நாளுக்கு நாள் பொதுஜனங்களின் மனத்தில் ஆழமாக ஊன்றி அவர்களைத் தட்டி எழுப்பி உற்சாகப்படுத்தி வருகின்றன என்பதை எந்த எதிரிகளும் மறுக்கமுடியாது.

இதற்கு உதாரணம் அடுத்தடுத்து பல இடங்களில் ஜில்லா மகா நாடுகளும், மாகாண மகாநாடுகளும், தாலூகா மகாநாடுகளும் நடந்து வருவ தைக் கொண்டே அறியலாம். சென்ற 1931-ம் வருஷத்தில் தூத்துக்குடியில் ஒரு மகாநாடும், காரைக்குடியில் ஒரு மகாநாடும், பொறையாற்றில் ஒரு மகாநாடும், நன்னிலத்தில் ஒரு மகாநாடும், லாலுகுடியில் இரண்டு மகாநாடுகளும்.



விருதுநகரில் பல மகாநாடுகள் சேர்ந்த ஒரு மாகாண மகாநாடும், திருவாரூரில் ஒரு மகாநாடும், சென்னையில் பல மகாநாடுகள் சேர்ந்த ஒரு மகாநாடும், ஆக 9 மகாநாடுகள் நடந்திருக்கின்றன. கணக்கிடமுடியாத பொதுக்கூட்டங்களும் நடந்திருக்கின்றன. இந்த மகாநாடுகளெல்லாம் மந்திரிகளுடைய தயவைக் கொண்டோ, ஸ்தலஸ்தாபனத் தலைவர்களின் தயவைக் கொண்டோ, ஜமீன் தாரர்களுடைய தயவைக் கொண்டோ, பெரிய பணக்காரர்களுடைய தயவைக் கொண்டோ நடைபெறவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். இதைக் கொண்டு நம்மை அரசாங்கத்தின் தயவை நாடுகிறவர்களென்றும், உத்தி யோகஸ்தர்களின் தாசர்களென்றும், நமது எதிரிகள் பிதற்றித்திரிவது வீண்புரட்டு என்பதை உணரலாம். ஆனால் பொது ஜனங்களின் ஊக்கத் தினாலும், வாலிபர்களின் முயற்சியாலுமே மேற்கூறிய நமது மகாநாடுகள் யாவும் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தகுந்ததாகும். இந்த மாதிரி வேறு எந்த இயக்க மகாநாடுகளும் நடந்ததில்லை, நடப்பதில்லை என்று தைரிய மாகச் சொல்லுவோம். இந்த மகாநாடுகளில் சென்ற 26, 27-12-31-ந் தேதி சனி, ஞாயிறுகளில், சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடை பெற்ற நமது சுயமரியாதை மகாநாட்டைப் பற்றி இப்பொழுது கவனிப்போம். மற்ற மகாநாடுகளைப் பற்றிய விஷயங்களை அவ்வப்போது நமது பத்திரிகையில் எழுதிவந்ததைப் படித்திருப்பீர்கள்.

நமது மாகாணத்தின் தலைநகரமாகிய சென்னையில் நமது இயக்கம் ஆரம்பித்த நாள் முதல் இதுவரையிலும் நமது இயக்க சம்மபந்தமாக ஆங்காங்கே பல சமயங்களில் பல பொதுக்கூட்டங்கள் நடந்ததைத் தவிர சுயமரியாதை இயக்கத்தின் பேரால் ஒரு மகாநாடேனும் நடந்ததில்லை., இதற்குக் காரணம் நமது இயக்கப் பிரசாரம், அங்கு சரிவர நடத்தப் படாததும், நமது இயக்கத்தின் உண்மையான கொள்கைகள் பொது ஜனங்களுக்குத் தெரியாததும், இக்காரணங்களால் சென்னை நகரப் பொது ஜனங்களின் எண்ணம் நமது இயக்கத்தில் திரும்பாததுமே ஆகும் என்பதை நாம் தாராளமாக மறைக்காமல் ஒப்புக்கொள்ளுகிறோம்.

சென்னை நகர மக்களிடம் ஆங்கில நாகரிகம் எவ்வளவு குடி கொண்டிருக்கிறதோ அதைவிடப் பதினாயிரம் மடங்கு அதிகமாக மூடப் பழக்கவழக்கங்கள் அவர்கள் இரத்தத்தில் ஊறிப் போயிருக்கின்றன என் பதைச் சென்னை நகரத்தில் சிறிது அனுபவமுடையவர்களும் அறிவார்கள். அவர்கள் கொண்டாடாத பண்டிகைகளும், கும்பிடாத சாமிகளும், செய்து கொள்ளாத பிரார்த்தனைகளும், அநுஷ்டிக்காத விரதங்களும், நம்பாத மூட நம்பிக்கைகளும், செய்யாத புரோகிதச் சடங்குகளும், தரித்துக் கொள்ளாத மத வேஷங்களும், நமது மாகாணத்தில் வேறு எந்த பாகத்திலும் இல்லவே இல்லை. சர்வகலாசாலைப் பட்டங்கள் பெற்றவர்கள் முதல், எழுத்து வாசனை அறியாத பாமரர்கள் வரையில் இந்நிலைமையில் கொஞ்சமும் வித்தியாசம் இல்லாதவர்கள். அரசாங்க மந்திரிகள் முதல் தெருக் கூட்டும் தோட்டிகள்



RangaRakes tamilnavarasam.com

வரையில் எல்லோரும் இந்த நிலைமையிலேயே இருக்கிறார்கள். உதாரணமாக ஒன்றே ஒன்று சொல்லுகிறோம். கால்சட்டை, மேல்சட்டை, கழுத்துச் சுருக்கு, காலில் பூட்சு முதலியவைகளை நாகரிகமாக அணிந்திருப்பதோடுங் கூட காதில் வயிரக் கடுக்கன்களும், கைகளில் காப்பு கொலுசுகளும், நெற்றியில் பட்டைநாமங்களும், கழுத்தில் அங்கவஸ்திரமும் அணிந்திருக்கும் வைதீக நாகரீகஸ்தர்களைச் சென்னை நகரில்தான் காணலாம். இந்த அலங்கோலமுள்ள நாகரீகத்தை வேறு எந்த இடத்திலும் காண முடியாது. இத்தகைய மக்கள் நிறைந்த இடத்தில் பொது ஜனங்களின் பெரிய தாராளமான ஆதரவாலும் முயற்சியாலும் பெண்கள் மகாநாடு, தொண்டர் மகாநாடு இவற்றுடன் கூடிய ஒரு சுயமரியாதை மகாநாடு நடப்பதென்றால் நமது இயக்கம் பொது ஜனங்களின் கவனத்தை எவ்வளவு தூரம் கவர்ந்திருக்கிறதென்பதை யோசித்துப் பாருங்கள். இனி அம்மகாநாட்டின் நிகழ்ச்சிகளைச் சிறிது கவனிப்போம்.

மகாநாடு நடந்த இரண்டு தினங்களிலும், நமது இயக்கத் தோழர்கள் செய்த ஒவ்வொரு பிரசங்கங்களையும் மண்டபங் கொள்ளாமல் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களும், அளவற்ற சந்தோஷத்தோடும், ஊக்கத்தோடும், மூட பழக்கங்களை ஒழிக்க வேண்டும் என்னும் ஆவேசத்துடனும் அப்படியே ஏற்றுக் கொண்டது குறிப்பிடத்தகுந்ததாகும். மகாநாட்டில் தலைமை வகித்தவர்களும், பேசியவர்களுமான ஒவ்வொரு தோழர்களும் நமது இயக்கக் கொள்கைகளை சென்னை நகர மக்களின் கண்கள் திறக்கும்படி விளக்கமாக அஞ்சாமல் ஆண்மையோடும், ஊக்கத்தோடும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

நமது இயக்கம், நமது மக்களாகிய ஆண், பெண்கள் அனைவரும் சம சுதந்தரம் பெற்று உலக வாழ்வில் உயர்வு தாழ்வில்லாத இன்பத்தை அனுபவித்து வரவேண்டுமென்பதற்காகவே பாடுபடுகின்றது என்னும் விஷயம் சுயமரியாதை இயக்கத்தின் உண்மையை அறிந்தவர்களுக்கெல்லாம் தெரிந்த செய்தியாகும். இதற்குத் தடையாக இருப்பவைகளான பார்ப்பன ஆதிக்கம், புரோகிதப்புரட்டு, வேத புராண இதிகாச சாஸ்திரங்கள், அவைகள் மேல் உள்ள நம்பிக்கை, தெய்வ நம்பிக்கை, கடவுள் நம்பிக்கை, இவற்றுக்கெல்லாம் காரணமான ஆத்மா நம்பிக்கை ஆகியவைகள் அடியோடு ஒழியவேண்டும் என்று கூறுகின்றோம். இந்த விஷயங்களை அஸ்திவாரமாகக் கொண்டு கட்டப்பட்ட எல்லா மதங்களும் வேரோடு, அடியோடு, கிளையோடு வீழ்ந்து மாள வேண்டும் என்று சொல்லுகின்றோம்.

மதங்கள் ஒழிந்தால் சாதிகள் ஒழியும்; மூடநம்பிக்கைகள் யாவும் ஒழியும்; எல்லோரும் அரசியலில் சமத்துவம் பெறலாம்; ஏழைகள் துயரம் நீங்கும்; ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் உள்ள மலைக்கும் மடுவுக்கும் போன்ற வித்தியாசம் ஒழியும் என்று சொல்லி வருகின்றோம். நமது மக்களின்



உயர்வு தாழ்வுக்கும், ஒற்றுமைக் குறைவுக்கும் காரணமாயிருப்பவைகளையெல்லாம் ஒழிக்காமல் அவற்றைப் பாதுகாத்து நிலைநிறுத்தப் பாடுபடும் காங்கிரஸ் முதலிய இயக்கங்களை ஒழிக்க வேண்டுமெனக் கூறுகின்றோம். இவ்விஷயங்களையெல்லாம் சுயமரியாதை மகாநாட்டைத் திறந்து வைத்த தோழர் சிங்காரவேலு அவர்கள் பிரசங்கத்திலும், வரவேற்புத் தலைவர் தோழர் லட்சுமி நரசு அவர்கள் பிரசங்கத்திலும், தலைவர் தோழர் பார்த்தசாரதி அவர்கள் பிரசங்கத்திலும், பெண்கள் மகாநாட்டைத் திறந்து வைத்த சகோதரி கிரிஜாதேவி அவர்கள் பிரசங்கத்திலும், வரவேற்புத் தலைவர் சகோதரி குஞ்சிதம் அவர்கள் பிரசங்கத்திலும், தலைவர் சகோதரி அன்னபூரணி அவர்கள் பிரசங்கத்திலும், தொண்டர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர் சகோதரி சகுந்தலா அவர்கள் பிரசங்கத்திலும், தலைவர் சகோதரி இந்திராணி பாலசுப்ரமணியம் அவர்கள் பிரசங்கத்திலும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. இந்த மகாநாட்டினால் சென்னை வாசிகள் அனைவரும், காங்கிரஸ் மக்களின் சாதி, மத, பழக்கவழக்கக் கொடுமைகளைப் போக்கி அவர்களை உண்மையான சுதந்தர முடையவர்களாகச் செய்யக்கூடிய ஸ்தாபனம் அல்லவென்றும், இத்தகைய விடுதலையைத் தருவது சுயமரியாதை இயக்கமே என்றும் தெளிவாக உணர்ந்து கொண்டார்கள் என்று கூறலாம். "காங்கிரஸ் ஒன்றே விடுதலையளிக்கும் ஸ்தாபனமாகும். ஆகையால் எல்லோரும் காங்கிரசிலேயே சேர வேண்டும். இனி பார்ப்பனரல்லாதார் கட்சி, சுயமரியாதைக் கட்சி முதலியவைகள் நமது நாட்டிற்குத் தேவையல்ல" என்று பலர் பிரசாரம் பண்ணியதன் புரட்டையும் சென்னைவாசிகள் அறிந்து கொண்டார்கள் என்றே சொல்லுவோம்.

சென்னை மகாநாட்டில் இப்பிரசங்கங்களில் தோழர் சிங்காரவேலு அவர்களின் பிரசங்கத்தில் உள்ள இரண்டொரு விஷயங்கள் மாத்திரம் நாம் ஒப்புக்கொள்ள முடியாதவை என்பதை இச்சமயத்தில் கூறாமல் இருப்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு உதாரணமாக ஒரு விஷயத்தை மாத்திரம் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

நமது இயக்கக் கொள்கைகளில், ஜாதிகளையும், மதங்களையும், சடங்குகளையும் ஒழிக்கக் கலப்புமணம் அவசியமானது என்பதும் முக்கியமானதொன்றாகும். இவ்விஷயம் சீர்திருத்தவாதிகள் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு விஷயமும் ஆகும். ஆனால். தோழர். சிங்காரவேலு அவர்கள் தமது பிரசங்கத்தில், "நமது தேச ஜாதி கலப்பு மணத்தால் ஒழியும் என்று சிலர் கருதுகின்றார்கள். ஆனால் கலப்பு மணம் செய்து கொண்டவர்கள் தனிப்பட்ட ஒரு ஜாதியாகின்றார்கள். இந்த விதங்களால் இன்னும் ஜாதிகள் வளர்ந்து வருகின்றன" என்று கூறியிருப்பதை நாம் ஒப்புக்கொள்ளமுடியாது. தற்போது கலப்பு மணம் செய்து கொள்ளுகின்றவர்கள் குறைவாயிருப்பதனாலும் கலப்பு மனஞ் செய்து கொள்ளுவதனால் பாதகம் இல்லை என்ற எண்ணம் நமது மக்களிடம் உண்டாகாததனாலும், இவர்கள் தனி



RangaRakes tamilnavarasam.com

ஜாதியாக இருப்பதைப்போல காணப்படுகின்றார்களே யொழிய உண்மையில் இவர்கள் தனி ஜாதியாராக இல்லை. கலப்பு மணம் அதிகப்பட அதிகப்பட, ஜாதியென்னும் பாறை தூள் தூளாகச் சிதறி, பொடியாக பறந்துபோய்விடும் என்பதில் சந்தேகம் இல்லை. ஜாதி, மதம், சடங்குகள் என்னும் பாறைகளை உடைத்துத் தூளாக்கிப் பறக்கச் செய்யும் கருவி கலப்பு மணத்தைவிட வேறொன்றும் இல்லையென்பதே நமது இயக்கத்தின் அபிப்பிராயமாகும். இது கல்வியினாலும் ஆகும். அந்நியநாட்டில் உள்ள பல மேதாவிகளும், நமது நாட்டிலுள்ள பல பேரறிஞர்களும் இதையே வற்புறுத்தி வருகிறார்கள்.

சென்னைச் சுயமரியாதை மகாநாட்டில், காங்கிரஸ், காந்தி, ஹிந்தி முதலியவைகளைக் கண்டித்தும், செங்கற்பட்டு, ஈரோடு, விருதுநகர், மகாநாடுகளில் நிறைவேறிய தீர்மானங்களை ஆதரித்தும் யாதொரு எதிர்ப்புமின்றிப் பொது ஜனங்களின் ஏகமனதான அபிப்பிராயத்துடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதனால் சென்னைப் பொது ஜனங்கள், காங்கிரஸ் பித்தலாட்டங்களையும், சுயமரியாதை இயக்கத்தின் உண்மையான கொள்கைகளையும் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறலாம்.

சுயமரியாதைப் பெண்கள் மகாநாட்டில் நிறைவேறியுள்ள தீர்மானங் களும் பெண்களின் சமத்துவத்திற்கும், சுதந்தரத்திற்கும் பெரிதும் ஏற்றதாகவே யிருக்கின்றன. சென்ற 28 - 12 - 31-ல் சென்னை ‘செனட்’ மண்டபத்தில் இந்தியப் பெண்கள் மகாநாடு சகோதரி பி. கே. ராய் அவர்களின் தலைமையில் நடந்தது. அம்மகாநாட்டின் வரவேற்புத் தலைவர் சகோதரி நாசிர் உசெய்ன் அவர்கள். இவ்விருவர் பிரசங்கங்களும், பெண்கள் சுதந்தரத்திற்கான விஷயங்களை எடுத்துக் காட்டுகின்றன. அம் மகாநாட்டிலும் பெண்கள் சுதந்தரத்திற்கும், சமத்துவத்திற்கும் ஏற்ற பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன.

ஆனாலும் அத்தீர்மானங்களைக் காட்டிலும், அம்மகாநாட்டிற் பேசியவர்களைக் காட்டிலும் நமது சுயமரியாதைப் பெண்கள் மகாநாட்டுத் தீர்மானங்களும், பேச்சுக்களும் முற்போக்குடையதாக இருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. நமது சுயமரியாதைப் பெண்கள் மகாநாட் டில், பெண்களின் அடிமைக்கு முதற் காரணமாக இருக்கின்ற மதங்கள் ஒழிய வேண்டும் என்றே எல்லாச் சகோதரிகளும் கர்ஜித்தார்கள். இந்த வாசனை யானது கொஞ்சங்கூட ‘செனட்’ மண்டபத்தில் நடந்த இந்தியப் பெண்கள் மாநாட்டில் வீசவில்லை என்பதை அந்த மகாநாட்டு நிகழ்ச்சிகளைப் படித்தவர்களும், பார்த்தவர்களும் அறிவார்கள். ஆயினும் வயதேறிய மத நம்பிக்கையுள்ள பல பெண் மக்கள் கூடிய இந்திய பெண்கள் மகாநாட்டில் பலத்த விவாதத்தோடும், திருத்தத்தோடும் பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டிருப்பதை நாம் பெரிதும்



பாராட்டுகிறோம். மற்றும் பெண்கள் சுதந்தரத்திற்காக நிறைவேற்றப் பட்டிருக்கும் எல்லாத் தீர்மானங்களையும் பாராட்டுகிறோம்.

இனி நமது சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாட்டைப் பற்றி நாம் அதிகமாகக் கூற வேண்டியதில்லை. இவ்வளவு தூரம் நமது நாட்டில் சுய மரியாதை இயக்கம் பரவவும், பொது ஜனங்கள் இவ்வியக்கக் கொள்கைகளை உணர்ந்து கண் விழிக்கவும் செய்தவர்கள் சுயமரியாதைத் தொண்டர்களாகிய தோழர்களே யென்பதை யாரும் மறுக்க முடியாது. இத்தோழர்களின் இடை விடாத - சுயநலங் கருதாத - யாருடைய தயவு தாட்சண்யங்களுக்கும் கட்டுப்படாத உழைப்பினால் தான் நமது இயக்கம் சம்பந்தமான இத்துணை மகாநாடுகளும், கூட்டங்களும் நடைபெறுகின்றன என்பதை யாரும் அறிவார்கள். ஆகவே அவர்கள் மகாநாட்டில் பேசிய பேச்சுக்கள், நமது இயக்கத்தை இன்னும் அதிதீவிரமாக நாடு முழுதும் பரவச் செய்து பொது ஜனங்களை ஏமாறாமல் எழுப்பிவிடக் கூடியனவாகவேயிருந்தன. அப்பேச்சுக்களையும், அப்பேச்சாளர்கள் எடுத்துக் காட்டிய உண்மைகளை யும் ஆணித்தரமான அபிப்பிராயங்களையும் கேட்ட கிழவர்கள் முதல் வாலிபர் வரை ஆண் பெண்கள் அனைவரும் மதப்புரட்டு, காங்கிரஸ் புரட்டு, வைதீகப் புரட்டு, சடங்குப் புரட்டு முதலியவைகளை விளக்கமாகத் தெரிந்து கொண்டு அடிக்கடி சந்தோஷ ஆரவாரஞ் செய்தனர்.

கடைசியாக ஒரு விஷயத்தை மட்டும் கூறி முடிக்கின்றோம். நமது தலைவர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், உடல் நலமில்லாமல் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்தவுடன் மனிதத் தன்மையற்ற பேடிகள் சிலரும் “சிவநேசர்கள்” என்றும், “தேசீயவாதிகள்” என்றும், “சைவப் பெரியார்கள்” என்றும் பெயர் வைத்துக் கொண்டிருக்கும் அயோக்கி யர்கள் சிலரும் “ஈ. வெ. ராமசாமி இப்படியே எப்பொழுதும் ஓய்வெடுத்துக் கொண்டு வேறு உலகம் போய்விட வேண்டும், போய் விட்டால் நாடு நன்மையடையும்” என்று முட்டாள் தனமாகவும், சிறிதும் உலக ஞான மில்லாமலும், பத்திரிகைகளில் எழுதினார்கள். தங்கள் சாமிகளை வேண்டிக் கொண்டார்கள். பிறகு, ஈ.வெ. ராமசாமியும் தோழர். எஸ். ராமநாதனும் ஐரோப்பா சுற்றுப்பிரயாணம் போயிருக்கின்றதை அறிந்ததும் அப்பேடிகள் ஆனந்தக் கூத்தாடினார்கள். நமது இயக்கம் செத்து போய்விடும். தங்கள் வயிற்றுப் பிழைப்பு நாடகத்தை யாதொரு விக்கினமும் இல்லாமல் நடத்திப் பொது ஜனங்களை ஏமாற்றலாம் என்று கும்மாளம் போட்டார்கள். ஆனால் இத்தகைய பேடிகளின் அடிவயிற்றில் நெருப்பு எரியும்படி நமது மகாநாடு சென்னையில் வெற்றிகரமாக பொது ஜனங்களின் தாராளமான ஆதரவுடன் நடைபெற்றது. இதிலிருந்தாவது நமது எதிரிகளாகிய வயிற்றுப் பிழைப்புக் காரர்கள், நமது இயக்கம் பொதுஜன இயக்கம் என்பதையும் தலைவர்கள் சுயநலத்திற்கான இயக்கம் அல்ல வென்பதையும் உணர்ந்து வாயடங்கு வார்களென்று நினைக்கிறோம். கடைசியாக இந்த சென்னை மகாநாட்டை



RangaRakes tamilnavarasam.com

முன்னின்று நடத்திய நமது இயக்கத் தோழர்களையும் பொதுஜனங்களையும் நாம் பாராட்டுவதுடன் நமது தலைவர்களான ஈ. வெ. ராமசாமியும், எஸ். ராமநாதனும் ஐரோப்பா சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருவதற்குள் இது போல இன்னும் பல மகாநாடுகளும் நடைபெறும் என்று எதிர் பார்க்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 03.01.1932**



# காலஞ்சென்ற மாணிக்க நாயக்கர்

பெருந்தமிழறிஞரும், ரிட்டயரான சூப்பிரின்டென்டிங் இஞ்சினீயரும் சிவபுரி ஜமீன்தாரருமான திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் காலஞ் சென்ற செய்தி கேட்டு மிகவும் வருத்தமடைகிறோம். இவர் தமிழ்மொழியில் சிறந்த ஆராய்ச்சியுள்ளவராகவும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் ஊக்க முடையவராகவும் இருந்தார். இவர் உயிரோடு இருந்திருந்தால் தமிழ் மொழிக்கு நன்மையும், பார்ப்பனரல்லாதாருக்கு நன்மையும் உண்டாயிருக்கக் கூடும். இந்த நன்மைகளை நமது மக்கள் அடைவதற்கில்லாமல் திடீரென்று மாரடைப்பு வியாதியால் இறந்தது பெரும் நஷ்டமேயாகும். இவரை இழந்து வருத்தமடையும் அவர் மனைவி மார்களுக்கும், பெண்களுக்கும், சகோதரர் முதலிய உறவினர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 03.01.1932**



RangaRakes tamilnavarasam.com

# மீண்டும் தொல்லை

இது வரையிலும் தேசம் அடைந்து வந்த கஷ்டம் நீங்குவதற்கு ஒரு மார்க்கமும் ஏற்படாமல் இருந்துவரும் இச்சமயத்தில் மறுபடியும் தேசத் திற்குப் பலவகையிலும், கஷ்டங்களும், நஷ்டங்களும் உண்டாக்கக் கூடிய சந்தர்ப்பம் வந்து விட்டது பற்றி நாம் மிகவும் வருத்தமடைகின்றோம். சென்ற வருஷத்தில் திரு. காந்தி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட உப்புச் சத்தியாக் கிரகத்தினால் உண்டான துன்பம் இன்னும் நீங்கினபாடில்லை. இந்த நிலையில் மறுபடியும் காங்கிரஸ், பகிஷ்கார இயக்கத்தையும் வரிகொடாமை, வாரங் கொடாமை முதலியவைகளையும் ஆரம்பித்ததைக் கண்டு, அரசாங்கத்தாரும் அதிமும்முரமாக அடக்குமுறைகளை ஆரம்பித்து விட்டார்கள்.

ஆனால் இம்மாதிரி காங்கிரஸ் போர் தொடுக்க ஆரம்பித்ததற்கும், அரசாங்கத்தார் அடக்குமுறையைக் கையாளவும், அவசரச் சட்டங்களை ஏற்படுத்துவதற்கு முன் வந்ததற்கும் இருவர் கூறும் காரணங்களையும் நாம் விட்டு விடுகின்றோம். உண்மையில், காங்கிரஸ் எதற்காக மீண்டும் இத்தகைய போராட்டம் தொடங்க வேண்டும், அப்படிப்பட்ட நெருக்கடி என்ன வந்து விட்டது? என்பதைப் பற்றி மாத்திரம் இப்பொழுது நாம் கவனிப்போம்.

சென்ற வருஷம் நடைபெற்ற உப்புப் போரின் முடிவில் திரு.காந்தி அவர்களுக்கும், லார்டு இர்வின் அவர்களுக்கும் நடந்த ஒப்பந்தமும் அதன் பயனாக திரு. காந்தியவர்கள் காங்கிரசின் ஏகப் பிரதிநிதியாக இங்கிலாந் திற்குப் போனதும் எல்லோருக்கும் தெரிந்த செய்தியாகும். அவர் வட்ட மேஜை மகாநாட்டில் பேசும் போதெல்லாம் காங்கிரஸ் ஒன்றுதான் இந்தியா முழுவதுக்கும் பிரதிநிதித்துவம் பொருந்திய ஸ்தாபனம்; ஆகவே அந்த ஸ்தாபனத்தின் ஏகப்பிரதிநிதியாகிய தாம் ஒருவரே, இந்தியாவின் 35 கோடி மக்களின் பிரதிநிதி ஆகையால் தான் கேட்கும் சுயராஜ்யந்தான் கொடுக்க வேண்டும்; மற்ற பிரதிநிதிகள் இந்தியாவின் பிரதிநிதிகள் அல்லர் என்று எவ்வளவோ முறை கூறியும், இவ்வார்த்தைகளை வெள்ளைக்காரர்களும், மற்றைய பிரதிநிதிகளும் ஒரு சிறிதும் ஒப்புக் கொள்ளாமல் மறுத்து விட்டார் கள். திரு. காந்தியின் ஆத்ம சக்தியின் வலிமையும், அவருடைய "கடவுள்" பிரார்த்தனையின் வலிமையும் மகாத்மா தன்மையும் வெள்ளைக்காரர்களிடம்



பலிக்கவில்லை. இதனால் காங்கிரஸ் இந்தியாவின் பொதுவான ஒரே ஸ்தாபனம் அல்லவென்பதும் இந்தியாவிலுள்ள மற்ற கட்சிகளைப் போல் அதுவும் ஒரு பெரிய கட்சிதான் என்பதும் உலக முழுதும் தெரிந்து விட்டது.

அடுத்தபடியாக, திரு. காந்தி அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் வழங்க மறுக்கும் விஷயத்தில் தன்னோடு ஒத்துழைத்தால் உங்கள் கோரிக்கைகள் எல்லாவற்றிற்கும் விட்டுக் கொடுக்கச் சம்மதிக்கிறேன் என்று முஸ்லிம்களிடம் ஒப்பந்தம் பேசியதிலிருந்தும் "முஸ்லிம்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்க சம்மதிக்கிறேன், ஆனால் தாழ்த்தப் பட்டவர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் கொடுப்பதை என் உயிர் போகும் வரையிலும் தடுத்துப் போராடுவேன்" என்று கூறியதிலிருந்தும் சிறுபான்மை வகுப்பினரான கிறிஸ்தவர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர் முதலியவர்களுக்கும் தனிப் பிரதிநிதித்துவம் வழங்க மறுத்ததிலிருந்தும், திரு. காந்தியின் மேல் இந்தியாவிலுள்ள அனேகருக்கு நம்பிக்கை யில்லாமற் போய்விட்டது. தீண்டா வகுப்பினரும், மற்றச் சிறு பான்மைச் சமூகத்தினரும் இவர்களின் முன்னேற்றத்தில் அனுதாபங் கொண்ட மற்ற நடுவுநிலைமையான எண்ணமுடையவர்களும் காங்கிரஸ் ஸ்தாபனத்தை வருணாச்சிரம தர்மஸ்தாபனமாகவும் திரு. காந்தியை வருணாச் சிரம தர்ம ஸ்தாபனத்தின் பிரதிநிதியாகவும் எண்ணத் தொடங்கிவிட்டனர்.

அன்றியும் காங்கிரஸ் பிரதிநிதி வட்டமேஜை மகாநாட்டிற்குப் போயும் கூட, காங்கிரஸ் பிரதிநிதி போகாத காலத்தில் நடைபெற்ற முதல் வட்டமேஜை மகாநாட்டில் பிரிட்டிஷ் முதல் மந்திரி இந்தியாவுக்கு என்ன சீர்திருத்தங்கள் கொடுப்பதாகக் கூறினாரோ அதே சீர்திருத்தத்தை தான் கொடுப்பதாக காங் கிரஸ் பிரதிநிதியாகிய திரு. காந்தியும் இருந்த இரண்டாவது கூட்டத்திலும் கூறினார். இதனாலும் காங்கிரசினாலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மனத்தை மாற்ற முடியவில்லை என்பது வெட்ட வெளியாகி விட்டது.

ஆகவே காங்கிரஸ் உப்புப் போர் நடத்தியதற்கு ஒரு பயனும் இல்லா மல் போய்விட்டது. காங்கிரஸ் செய்து வந்த கிளர்ச்சிகளால் தேசத்திற்கு நஷ்ட மும் கஷ்டமும் ஏற்பட்டதே ஒழிய வேறு ஒரு எள்ளத்தனையும் பலன் கிடைக்கவில்லை என்பதும் திரு. காந்தி இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்படும் முன்பே சாதாரண ஜனங்களுக்கும் தெரிந்து விட்டது.

காங்கிரசாலும், திரு. காந்தியாலும் இவர்களைத் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடும் கூட்டத்தாராலும் நாட்டுக்கு ஒரு பலனும் உண்டாக வில்லை என்பது தெரிந்தால், பொது ஜனங்கள் இவர்கள் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கமாட்டார்கள். இவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் முன் போல வரமாட்டார்கள். இவர்களை வெறுக்கவும் ஆரம்பித்து விடுவார்கள். பொதுஜனங்கள் இப்படித் திரும்பி விட்டால் காங்கிரசின் கொஞ்ச நஞ்ச பலமும், கிளர்ச்சியும் போய்விடும். காங்கிரசின் பலம் போய்விட்டால்,



RangaRakes tamilnavarasam.com

வருணாச்சிரம தருமமும், மத தர்மங்களும் தளர்ந்து தேய்ந்து அழிந்து போகக் கூடிய நிலைமைக்கு வந்து விடும் என்பதில் சந்தேகம் இல்லை.

இதற்கு உதாரணம் வேண்டுமானால், நாசிக்கில் தீண்டாதார் கோயில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்ததையும் அவர்களுக்குச் சில காங்கிரஸ்காரர்கள் உதவி செய்ய முன் வந்ததையும், மலையாள நாட்டில் குருவாயூரில் காங்கிரஸ் காரர்களே கோயில் பிரவேச சத்தியாக்கிரகம் ஆரம்பித்ததும், மற்றும் பல காங்கிரஸ் கமிட்டிகளில் கோயில் பிரவேசம் போன்ற சமதர்ம சத்தியாக் கிரகங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்ற யோசனைகள் நடந்து கொண்டிருந் ததும் போதுமானதாகும். இவ்வாறு காங்கிரசில் கோயில் பிரவேசம் போன்ற சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதற்குக் காரணம் நமது இயக்கமும், நமது இயக்கக் கொள்கைகளை ஒப்புக் கொண்டால்தான் பாமர மக்களிடத்தில் செல்வாக்குப் பெறலாம் என்னும் நோக்கமுடைய சில பார்ப்பனரல்லாதார் காங்கிரசில் இருப்பதனாலுமேயாகும்.

இம்மாதிரியான காரணங்களால் காங்கிரசின் தன்மை வெளிப்பட்டு, அதன் மதிப்பு குறைந்து போய்விடும் என்ற நிலைமைக்கு வந்தவுடன் மறுபடியும் காங்கிரசின் கிளர்ச்சியையும் மதிப்பையும் பலப்படுத்தவே இப்பொழுது சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். இதைத் தவிர வேறு ஒரு காரணமும் இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம். இதனால் தான் என்ன பலன் உண்டாகப் போகிறது என்று எதிர்பார்க்கிறீர்கள்? குருவாயூர் சத்தியாக்கிரகம் போன்ற சமதர்ம சத்தியாக்கிரகம் நிறுத்தப் படுதலும், வாயளவிலாவது திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் போன்றவர்கள் பேசிவந்த தீண்டாமை விலக்குப் பேச்சு அடியோடு ஒழிக்கப்படுதலும், மறுபடியும் பாரதமாதா பஜனை, ராம பஜனை போன்ற பஜனைகள் ஆரம்பிக் கப்படுதலும், இவைகளின் மூலம் மக்கள் மனத்தில் மூடநம்பிக்கைகளை உண்டாக்குதலும் ஆகிய பலன்தான் உண்டாகப் போகின்றது.

ஆகையால் இச்சமயத்தில் பார்ப்பனரல்லாதாருக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். சென்ற உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது எத்தனை பார்ப்பனர்கள் ஜெயிலுக்குப் போனார்கள்; எத்தனைப் பார்ப்பனர்கள் தடியடி வாங்கினார்கள், எத்தனை பார்ப்பனரல்லாதார் ஜெயிலுக்குப் போனார்கள், எத்தனைப் பார்ப்பனரல்லாதார் தடியடி வாங்கினார்கள் என்ற கணக்கை நன்றாய் ஆலோசித்துப் பார்த்து விட்டுப் பிறகு உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள். இதோ, எத்தனை பார்ப்பனர்கள் பெரிய தலைவர்களாகத் தேசீயப் பத்திரிகைகள் மூலம் சட்ட சபையில் பிரஸ்தாபத்திற்கு வந்ததன் மூலமும் விளம்பரப்படுத்தப்பட்டார்கள்; எத்தனை பார்ப்பனரல்லாதார் இம் மாதிரி விளம்பரப்படுத்தப்பட்டார்கள் என்பதையும் மறக்காமல் கணக் கெடுத்து யோசித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.



இந்தக் கணக்கைப் பார்ப்பீர்களானால் தடியடிபட்டவர்களும், சிறை சென்றவர்களும் பார்ப்பனரல்லாதார்கள் என்பதையும், தலைவர்களாகவும் தியாகிகளாகவும், வீரர்களாகவும் விளம்பரப்படுத்தப்பட்டவர்கள் பார்ப் பனர்கள் என்பதையும் அறிவீர்கள். ஆகையால் காங்கிரசின் வருணாச்சிரம தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகத் தொடங்கியிருக்கும் சட்டமறுப்பில் கலந்து நமது விடுதலையாகிய சமதர்மத்தை இன்னும் தள்ளி வைக்காமலிருக்கும்படி எச்சரிக்கின்றோம்.

அன்றியும் காங்கிரஸ் இப்பொழுது சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பித் திருப்பதில் மற்றொரு சூழ்ச்சியும் அடங்கி இருக்கிறது. அதாவது, “வருணாச் சிரம தரும இந்துக்களின் கையிலேயே அரசியல் சீர்திருத்த ஆதிக்கம் இருக்க வேண்டும்” என்ற காங்கிரசின் நோக்கத்திற்கு விரோதமாகவே வரப்போகும் சீர்திருத்தம் அமைந்திருக்கப் போகின்றது. முஸ்லீம்களுக்கும், சீக்கியர் களுக்கும், தீண்டாதவர்களுக்கும் மற்றச் சிறுபான்மை வகுப்பினருக்கும் தனிப்பிரதிநிதித்துவம் உள்ள சீர்திருத்தந்தான் வரப்போகின்றது. இத்தகைய சீர்திருத்தம் வந்தால் கூடுமான வரையிலும், தாழ்த்தப்பட்டிருக்கும் சமூகத்த வர்கள், மற்ற சீர்திருத்தக்காரர்களின் ஆதரவையும் பெற்றுச் சட்டசபைகளின் மூலம் தாங்களும், மற்ற உயர்ந்த ஜாதி இந்துக்களைப் போல எல்லா உரிமை களையும் பெறக்கூடும் என்று நம்பலாம். இம்மாதிரி இவர்கள் சமநிலைக்கு வந்துவிட்டால் வருணாச்சிரம தருமங்களும், மதப்புரட்டுகளும் கட்டாயம் அழிந்து போகும். ஆகையால் வரப்போகும் சீர்திருத்தத்தைக் கெடுக்க வேண்டும் என்னும் எண்ணத்துடனும், இனி இந்தியாவில் நடக்கப் போகும் சீர்திருத்த ஆலோசனைக் கமிட்டிகளை நடக்காமற் செய்ய வேண்டும் என்னும் நோக்கத்துடனுமே சட்ட மறுப்பு ஆரம்பித்து இருக்கிறார்கள் என்றும் துணிந்து கூறலாம்.

ஆகையால் சமதர்மத்தையும் நியாயமான அரசியல் சீர்த்திருத் தத்தையும், நாட்டின் நன்மையும், வேண்டுகின்ற எவரும் தற்சமயத்தில் காங்கி ரசால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் போராட்டத்தைக் கண்டு மயக்கமடைய மாட்டார்கள் என்பது நிச்சயம். காங்கிரசின் உண்மை நோக்கமும் கொள்கை யும் தெரியாமல் சுயராஜ்ய ஆவேசம் கொண்டு திடீரெனச் சட்ட மறுப்பு இயக்கத்திற்கலந்து கொண்டு தங்கள் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளு கின்ற பார்ப்பனரல்லாத இளைஞர்களை எச்சரிக்கவே இவ்விஷயங்களைக் கூறினோம்.

பார்ப்பனர்கள் தங்கள் பிழைப்புக்கும் உத்தியோகங்களுக்கும், யாதொரு ஆபத்தும் வராமல் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும், காங்கிரஸ் பிரசாரம் பண்ணுவார்கள். பார்ப்பனரல்லாத இளைஞர்களையும், பள்ளிக்கூட மாணவர்களையும் தூண்டி விடுவார்கள். இந்த ஏமாற்று வார்த்தை களில் ஈடுபட்டுப் பார்ப்பனரல்லாத இளைஞர்கள் தங்கள் பிழைப்பைக்



RangaRakes tamilnavarasam.com

கெடுத்துக் கொள்வார்கள்; பார்ப்பனரல்லாத மாணவர்கள் படிப்பையும் விட்டுத் திண்டாடுவார்கள். பார்ப்பன இளைஞர்களும், பார்ப்பன மாணவர்களும் வாய்ப்பேச்சளவிலேயே நின்று கொண்டு வேடிக்கைப் பார்ப்பதும், பார்ப்பனரல்லாதாரைப் பலி கொடுத்து மகிழ்வதுமாகவே இருப்பார்கள் என்பதையும் இச்சமயத்தில் கூறாமல் இருக்க முடியவில்லை. ஆகையால் பார்ப்பனரல்லாதார்களே ஜாக்கிரதை!

**குடி அரசு - தலையங்கம் - 10.01.1932**



# சூழ்ச்சி வெளிப்பட்டது

**- தேசீயத்துரோகி**

திரு. காந்தியவர்கள் இங்கிலாந்தில், வட்ட மேஜை மகாநாட்டிலும் மற்றும் வெளியிடங்களிலும், இந்தியாவின் நிலைமையைப்பற்றிச் செய்து வந்த பிரசங்கங்களை நாம் அவ்வப்போது பத்திரிகைகளிற்படித்து வந்திருக்கிறோம். அவர் இந்தியாவில் உள்ள சாதி வேற்றுமைகளை வெளிப்டுத்தாமல் கூடிய வரையிலும், மறைத்துக்கொண்டே வந்தார். இந்தியாவில் சமூக ஒற்றுமை ஏற்பட்டு விட்டதென்றும், ஆகையால் பூரண சுயேச்சை கொடுத்து விட வேண்டுமென்றும் ஆரவாரம் பண்ணினார். தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றிப் பேசும்போது, "அவர்களுக்குக் காங்கிரஸ்தான் பிரதிநிதி, அம்பெட்கார் முதலானவர்கள் பிரதிநிதிகள் அல்லர். தாழ்த்தப்பட்டவர்களை இந்துக்கள் அவ்வளவாகக் கொடுமைப்படுத்தவில்லை. ஆகையால் அவர்களுக்குத் தனித்தொகுதி வேண்டிய அவசியமில்லை. பொதுத்தொகுதிகளிலேயே தாழ்த்தப்பட்டவர்களும் தேர்ந்தெடுக்கப்படலாம். கொஞ்ச நஞ்சம் உள்ள வேற்றுமைகளும் சுயராஜ்யம் கொடுத்துவிட்டால் நீங்கிப்போய்விடும்" என்று பேசிக்கொண்டிருந்தார்.

திரு. காந்தி, இவ்வாறு முழுப்பூசனிக்காயை சோற்றுக்குள்வைத்து மூடிக்கொண்டு இங்கிலாந்தில் இருந்து கொண்டிருக்க இங்குள்ள அவருடைய வாலர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அம்பெட்கார் தேசத்துரோகியென்றும், முஸ்லீம்கள் அரசாங்கத்தைத் தாங்குகிறவர்களென்றும், அம்பெட்காரின் விஷமத்தனமென்றும், அம்பெட்காரின்மேல் நம்பிக்கையில்லையென்றும் பத்திரிகைப் பிரசாரங்களும், மேடைப்பிரசாரங்களும் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், தாழ்த்தப்பட்டவர்களும் பல மகாநாடுகளும், கூட்டங்களும் கூட்டி, அம்பெட்காரே தங்கள் பிரதிநிதி யென்றும், காந்தி தங்களுக்குப் பிரதிநிதியல்ல வென்றும் கண்டித்துத் தீர்மானங்கள் பல செய்து கொண்டுதான் இருந்தார்கள்.

கடைசியில் திரு. காந்தி இங்கிலாந்து சென்று, வட்டமேஜை மகாநாட்டை ஒரு முடிவும் செய்யவொட்டாமல் பண்ணிவிட்டு இந்தியாவுக்குச்



RangaRakes tamilnavarasam.com

சென்ற 28-12-31 ல் திரும்பிவந்தார். அப்போது அவரை அவர்பால் பக்தியுடைய மக்கள் திரளாகக் கூடி பம்பாயில் வரவேற்றனர். அச்சமயத்தில் நடந்த மற்றொரு சம்பவம் குறிப்பிடத் தகுந்ததாகும். 1000 தொண்டர்கள் தீண்டா வகுப்பினர் கறுப்புக்கொடி பிடித்துக்கொண்டு வந்து திரு. காந்திக்குத் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினர். 1000 தொண்டர்கள் என்பது தேசீயப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ள கணக்குத் தான் ; ஆனால், உண்மையில் ஆயிரத்திற்கு மேலான தொண்டர்கள் இருந்திருக்கவேண்டும்.

தாழ்த்தப்பட்ட தொண்டர்கள் கருப்புக்கொடி பிடித்ததோடுமட்டும் விடவில்லை, காங்கிரஸ் தொண்டர்களுக்கும், இவர்களுக்கும் பெரிய சச்சரவுகளும் நடைபெற்றது. அடிதடிகளும் நடந்தன. கடைசியில் போலீசார் தலையிட்ட பின்னரே கலகம் அடங்கிற்று. இவ்வாறு காந்தியின் வருகையின்போது கலகம் நடந்த செய்தியை யாரும் மறைக்கமுடியாது. அதில் உள்ள ரகசியமும் வெளிப்படையானதேயாகும்.

இவ்வாறு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தொண்டர்கள், கறுப்புக் கொடி பிடிக்கவேண்டிய காரணந்தான் என்ன? திரு. காந்தி, தானே இந்தியா முழுவதற்கும் பிரதிநிதி; தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிரதிநிதி. ஆகையால் தான் சொல்லுவதையே கேட்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தது பொருத்தமற்ற வார்த்தை - அர்த்தமற்ற சொற்கள். அவர் எங்களுடைய பிரதிநிதி அல்ல ; அம்பெட்கார் தான் எங்கள் பிரதிநிதி என்பதைத் தெரிவிப் பதற்கே யாகும். இதன் மூலம் தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் உண்மையான மனப்பான்மையையும், உணர்ச்சியையும் வெளிப்படுத்தினர். இந்த நிகழ்ச் சியைக் கொண்டு திரு. காந்தி இங்கிலாந்தில் பேசிய பேச்சுக்களின் உண்மை விளங்கும்.

இந்த சம்பவத்தை, நமது நாட்டு தேசீயப்பத்திரிகைகள் குறிப்பிடும் போது, “அம்பெட்கார் கட்சியாரின் அமளி’’ என்றும் “அம்பெட்கார் கூட்டத்தாரின் அயோக்கியத்தனம்’’ என்றும் “அம்பெட்கார் கோஷ்டியாரின் ஆர்ப்பாட்டம்’’ என்றும், பெரிய தலைப்பெயர்கள் கொடுத்துப் பிரசுரித்தன. தாழ்த்தப்பட்டவர்கள், தங்கள் உணர்ச்சியைக் காட்டுவதற்காகச் செய்த காரி யத்தை ஏன் இவர்கள் இவ்வாறு விவேகமின்றிக் குறைகூற வேண்டும்? இதற் காகத் திரு. அம்பெட்காரின் பெயரையும் ஏன் இழுக்கவேண்டும்?

தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திரு. காந்தியின் மேல் நம்பிகை இல்லை என்பதற்கும், தனித் தொகுதி வேண்டுமென்பதை ஆதரித்தவர்களிடத்தில் தான் நம்பிக்கையுண்டென்பதற்கும் மற்றொரு உதாரணத்தையும் காணலாம். சென்ற 27-12-31 ல் சென்னைக்கு வந்து சேர்ந்த, திருவாளர்கள் எ.டி. பன்னீர்செல்வம், எ. ராமசாமி முதலியார், ஆர், சீனிவாசன், பொப்பிலிராஜா முதலியவர்களைக் குதூகலமாக வரவேற்ற கூட்டத்தில் மிகுதியாக இருந்த வர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்புப்பிரதிநிதிகளும், அவ்வகுப்புத் தொண்டர் களுமே யாவார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் இவ்வாறு ஏராளமாகக்கூடி வரவேற்றது ஏன்? திரு. அம்பெட்காரின் துணையாக இருந்த திரு. ஆர். சீனிவாசன் அவர்களிடம் தங்களுக்குள்ள நம்பிக்கையை காட்டுவதற் கேயாகும். திரு. அம்பெட்காரின் கொள்கையை ஆதரித்த திருவாளர்கள். பன்னீர் செல்வம், பொப்பிலிராஜா, ராமசாமி முதலியார் ஆகியவர்களிடமும், தமக்குள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்கேயாகும்,

இவ்வாறு இந்தியா முழுவதும் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் எல்லோரும் திரு. காந்தியாரின் அபிப்பிராயத்திற்கு விரோதமாகவும், அம்பெட்கார் அபிப்பிராயத்தில் நம்பிக்கையுடையவராகவும் இருப்பது மலைமேல் ஏற்றிய விளக்கைப்போல் தெரிகிறது. இப்படியிருந்தும், திரு. காந்தியும், அவருடைய பக்தர்களும், இன்னும் பழய பல்லவியையே பாடு வதில் என்ன பயன் என்று கேட்கிறோம். நமது நாட்டுப் பத்திரிகைகளும் உன்மையை மறைத்துவிட்டுத் தாழ்த்தப்பட்ட வகுப்புத் தலைவர்களின் மேல் பழியைச் சுமத்துவது எவ்வளவு அயோக்கியத்தனம்? தாழ்த்தப்பட்டவர்களை உயர்ந்த ஜாதி இந்துக்களால் நசுக்கப்படுகிறவர்களாகவே இன்னும் வைத்துக் கொண்டு, “அவர்களும் இந்துக்கள் தான் அவர்களை பிரிக்கக்கூடாது. அவர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் கொடுத்தால் அவர்கள் எப்பொழுதும் தீண்டாதார்களாகவே இருந்துவிடுவார்கள்’’ என்று வீண் பிடிவாதம் பேசு வதில் என்ன பிரயோசனம்?

திரு. காந்தி அவர்கள் வந்து இறங்கும் போதே - அவரை வரவேற்கக் கூடியிருந்த கூட்டத்திலேயே தாழ்த்தப்பட்டவர்களுக்கும் உயர்த்திக் கொண் டிருப்பவர்களுக்கும் சண்டை சச்சரவு நடந்தது. அவர் வரும்போதே இப்படி யிருந்தால், இனி காரியங்களைச் செய்யத் தொடங்கும் போது என்னென்ன காரியங்கள் நடக்கப்போகின்றனவோ? என்பதைப்பற்றி இப்பொழுது நாம் என்ன சொல்லுவது? எல்லாம் போகப் போகத்தான் தெரியும்.

**குடி அரசு - கட்டுரை - 10.01.1932**



RangaRakes tamilnavarasam.com

# பகிஷ்கார யோசனை

காங்கிரஸ் காரியக் கமிட்டியில் தற்போது செய்திருக்கும் பகிஷ்கார யோசனை மிகவும் புத்திசாலித்தன முள்ளதாகவும், வேடிக்கையானதாகவும் இருக்கிறது. ரயில், போஸ்டாபீஸ், தந்தி முதலியவைகளையும் பகிஷ்காரம் செய்ய வேண்டுமாம். ஆனால் எந்த காங்கிரஸ்காரராவது இவைகளை நடைமுறையில் செய்து காட்ட முடியுமா? என்று கேட்கிறோம். இந்தப் பகிஷ்கார வியாக்கியானம் வெகு வேடிக்கையானது! ரயிலைப் பகிஷ்காரஞ் செய்வதென்றால் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு வண்டிகளில் ஏறாமல் மூன்றாவது வகுப்பில்தான் ஏறவேண்டுமாம்! தபால் பகிஷ்காரம் என்றால் கவர் எழுதாமல் கார்டுகளிலேயே எழுத வேண்டுமாம். தந்தியைப் பகிஷ்கரிப்பது என்றால் கூடுமானவரையில் வார்த்தைகளைச் சுருக்கித் தந்தி கொடுக்க வேண்டுமாம்! இதுதான் இந்த பகிஷ்காரங்களுக்குக் காங்கிரஸ் காரர்கள் செய்யும் அருமையான அர்த்த புஷ்டியுள்ள விருத்தியுரை.

இந்த வியாக்கியானம் கூறவும் இந்தப் பகிஷ்காரப் பிரசாரஞ் செய்யவும் வேண்டிய அவசியமே இல்லை. பொருளாதார நெருக்கடியுள்ள தற்காலத்தில் இப்படித்தான் நடந்து தீருகின்றது. ஏழை மக்கள் ரயிலில் முதலாவது, இரண்டாவது வண்டிகளை எப்பொழுதும் திரும்பிப் பார்த்தே யிருக்க மாட்டார்கள். அவர்கள் எழுதும் கடிதங்களும் குறைவு. அதிலும் கார்டு 9 பைசாவும், கவர் 1 அணா 3 பைசாவும் ஆனவுடன் நிச்சயமாகக் கார்டில்தான் எழுதுவார்கள். தந்திக்கும் அவர்களுக்கும் வெகுதூரம். ஆகையால் இந்தப் பகிஷ்காரத்தைப் பற்றிப் பிரயோசனமில்லை.

உண்மையிலேயே பகிஷ்காரம் பண்ண வேண்டுமானால், வெள்ளைக் கார அரசாங்கத்திற்குச் சொந்தமானதையெல்லாம் நாம் உபயோகிக்கக் கூடாது என்று இருக்க வேண்டுமேயானால், முதலில் நாம் இந்த நாட்டிலேயே இருக்கக் கூடாது. ஏன்? இந்த நாட்டை இப்பொழுது வெள்ளைக்கார அரசாங் கந்தானே ஆண்டு கொண்டிருக்கின்றது. ஆகவே அவர்களுடைய ஆட்சிக் குள் அடங்கிய நாட்டில் இருப்பது "பாவம்" அல்லவா? ஆகையால் எல் லோரும் சமுத்திரத்தில் குடியேற வேண்டும்; வெள்ளைக்காரர் ஆளும் பூமி யைப் பகிஷ்காரம் பண்ண வேண்டும் என்று தீர்மானஞ் செய்வார்களானால் இன்னும் மெச்சத்தக்கதாக இருக்கும் என்று யோசனை கூறுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 10.01.1932**



# சமஸ்கிருத சனியன்

**- தேசீயத் துரோகி**

தேசீயத் துரோகியாகிய நாம் கூறும் விஷயங்கள் முழுவதும், எழுதும் சங்கதிகள் எல்லாம், மக்களுக்கு பயன்படாத பழைய காரியங்களில் ஆசை யுடையவர்களுக்கு வெறுப்பாகத்தான் இருக்கும். ஆனால் அதைப் பற்றி, அதாவது எவருடைய வெறுப்பைப் பற்றியும் எதிர்ப்பைப் பற்றியும் நாம் கவலைப் படுவது கிடையாது. ஆகவே இப்பொழுது ஒரு தேசீயத்தைக் கண்டிக்கவே இந்த முகவுரையைக் கூறிக் கொண்டு முன்வந்தோம்.

சென்னை மாகாணத்தில் கல்வியிலாக்காவில் சிக்கனம் செய்வதைப் பற்றி ஆலோசனைக் கூறிய சிக்கனக் கமிட்டியார் கூறியிருக்கும் யோசனை களில் "சென்னைப் பிரசிடென்சிக் கல்லூரியில் உள்ள சமஸ்கிருத ஆனர்ஸ் வகுப்பை எடுத்து விட வேண்டும்" என்பதும் ஒரு யோசனை யாகும்.

உண்மையிலேயே "தேச மக்கள் கல்வியினால் அறிவு பெற வேண்டும்; கல்வியினால் பகுத்தறிவு பெற வேண்டும்" என்று விரும்பு கின்ற வர்கள் சமஸ்கிருதக் கல்வியை எடுத்து விடுவது பற்றிக் கொஞ்சமும் கவலையோ வருத்தமோ அடையமாட்டார்கள். ஏனென்றால் இன்று இந்து மதம் என்று சொல்லும் ஒரு கொடுமையான மதம் இருப்பதற்கும் இந்த இந்து மதத்திலிருந்து பிறந்த ஜாதிக் கொடுமை, சடங்குக் கொள்ளை, கடவுள் முட்டாள் தனம் ஆகியவைகள் கற்றவர்கள் கூட்டத்திலும், கல்லாதவர்கள் கூட்டத்திலும் தலைவிரித்தாடி அவர்கள் உழைப்பையும், அறிவையும், சுதந்தரத்தையும் கொள்ளை கொண்டிருப்பதற்கும் காரணம் சமஸ்கிருதமே யாகும். இன்று வருணாச்சிரமதருமக்காரர்கள் சனாதன தருமம் காப்பாற்றப்பட வேண்டும் என்று சொல்லுவதற்கும் சுயராஜ்யத்தைவிட சனாதன தருமமும், வருணாச்சிரம தருமமும் காப்பாற்றப்படுவதே முக்கியமானதென்று சொல்லுவதற்கும் சமஸ்கிருதப் பாஷைப் படிப்பும் அதில் உள்ள நூல்களுமே காரணமாகும். தீண்டத்தகாதவர்களைத் தெருவில் நடக்கக் கூடாது; கோயிலுக் குள் செல்லக்கூடாது; குளத்தில் குளிக்கக் கூடாது; பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கக்கூடாது என்று சொல்லுவதற்கும் காரணம் சமஸ்கிருத நூல்களே யாகும். சாரதா சட்டம் போன்ற சீர்திருத்த சட்டங்களைச் செய்யக்கூடாது என்று சொல்லுவதற்கும், பொட்டுக் கட்டுவதைத் தடுக்கும் சட்டம், பிரஜா



RangaRakes tamilnavarasam.com

உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியளிக்கும் சட்டம், பெண்களின் சொத்துரிமைச் சட்டம், விவாக விடுதலைச் சட்டம் முதலியவைகளை மத விரோதமானவைகள் என்று கூறித் தடுப்பதற்கும் திரு. சிவராஜ், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி. அவர்களை எங்கும் எதையும் தின்னும் பார்ப்பனர், பார்ப்பன ரல்லாதார் கூடிய சென்னை காஸ்மாபாலிட்டன் கிளப்பில் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ள மறுத்ததற்கும் காரணமாயிருப்பவை சமஸ்கிருத நூல்களேயாகும். சீர்திருத்தத்திற்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்து குறைத்துக் கொண்டு தொண்டை வீங்குகின்ற வருணாச்சிரமக் கூட்டத்தார்கள் எல் லோரும் தங்கள் கொள்கைகளுக்குச் சமஸ்கிருத, வேத, புராண, இதிகாச, ஸ்மிருதிகளையே பிரமாணங்களாகக் காட்டுகின்றனர். அவை என்ன சொல்லு கின்றனவென்று கவனிக்கின்றார்களே ஒழிய தங்கள் அறிவு என்ன சொல்லு கின்றது? உலகப் போக்கு என்ன சொல்லுகின்றது? என்று கொஞ்சங்கூடக் கவனிக்கின்றார்களில்லை. இவ்வாறு கவனிக்கக் கூடிய அறிவு அவர்களிடம் இல்லாதபடி அவர்கள் மூளையை அந்த சமஸ்கிருதப் பழங்குப்பைகளாகிய சாஸ்திரங்கள் என்பன உறிஞ்சி விட்டன. ஆகையால் இனி வருங்கால இளைஞர்களின் நல்ல தூய்மையான மூளைகளிலாவது கோளாறு ஏற்படாம லிருக்க வேண்டுமானால் – அவர்களிடம் மூட நம்பிக்கைகளும், சுயநலமும் உண்டாகாமல் பகுத்தறிவும், சமதர்ம நோக்கமும் உண்டாக வேண்டுமானால் சமஸ்கிருதக் கல்வியை அடியோடு ஒழிக்க வேண்டியதே முறையாகும்.

ஆனால் நமது நாட்டில் உள்ள சமஸ்கிருதப் புராணக் குப்பைகளாலும் அவைகளைப் பார்த்துச்செய்த தமிழ்ப்புராணக் கூளங்களாலும் குடி கொண்டிருக்கும் மூட நம்பிக்கைகள் போதாதென தேசீய ஆடைகளைப் புனைந்து “ஹிந்தி” என்னும் பாஷையையும் கொண்டு வந்து நுழைத்துக் கொண்டு பார்ப்பனர்கள் நம் மக்களை ஏமாற்றுகிறார்கள். ஹிந்தியைப் பரப்புவதற்காகப் பார்ப்பனர் பிரயாசைப் படுவதற்குக் காரணம் அதன் மூலம் மீண்டும் வருணாச்சிரம தருமத்தையும், புராண நம்பிக்கை, மத நம்பிக்கை, பிராமண பக்தி, சடங்கு பக்தி முதலியவைகளை விருத்தி செய்து தங்கள் பழய கௌரவத்தையும், ஏமாற்று வயிற்றுப் பிழைப்பையும் புதுப்பித்துக் கொள்ளலாம் என்பதற்காகவே என்பது சுயமரியாதைகாரர்களுக்குத் தெரியாத விஷயமல்ல. ஆகையால் இத்தகைய பார்ப்பனர்கள் இந்த ஹிந்தி பாஷை முதலானவை களுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கும் சமஸ்கிருதத்தைக் கைவிடச் சம்மதிப்பார்களா? ஒருக்காலும் சம்மதிக்கமாட்டார்கள்.

ஆகையால்தான் பார்ப்பனர்கள் ஊருக்கு ஊர் கூட்டங்கூடி சென்னை அரசாங்கச் சிக்கனக் கமிட்டியார் பிரசிடென்சி கல்லூரியில் உள்ள சமஸ்கிருத ஆனர்ஸ் வகுப்பை எடுக்கும்படி சிபார்சு செய்ததைக் கண்டிக்கிறார்கள். பொருளாதார நிலையைப் பற்றிய கவலையும் அவர்களுக்கில்லை. எந்தப் பொருளாதாரம் எக்கேடு கெட்டாலும் தங்கள் சுயநலத்திற்குத் துணை செய்கின்ற மதமும் அதற்குச் சாதகமா யிருப்பவைகளும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதே அவர்களின் கொள்கையாக இருந்து வருகின்றது. காப்பிக்கிளப்புப் பார்ப்பான், உத்தியோகப் பார்ப்பான், அரசியல் பார்ப்பான், சட்ட மறுப்புச் செய்து ஜெயிலுக்குப் போகும் பார்ப்பான் உள்பட எல்லோரும் இக்கொள்கையைக் கைவிடாமலே வைத்துக் கொண்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இச்சமயத்தில் நாமும் கிளர்ச்சி செய்ய வேண்டும். பார்ப்பனர்களின் வெறுங்கூச்சல்களுக்குப் பயந்து கொண்டு அரசாங்கத்தார் சிக்கனக்கமிட்டியின் சிபார்சைக் கைவிட்டுவிடக் கூடாதென எச்சரிக்கை செய்ய வேண்டும். சில பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கங்களிலும் சுயமரியாதைச் சங்கங்களிலும், சிக்கனக் கமிட்டியின் யோசனையைப் பாராட்டியும் இன்னும் சமஸ்கிருத கல்விக்காகக் கொடுக்கும் உபகாரத் தொகையை நிறுத்தும்படியும் தீர்மானங்கள் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். இவ்வாறே நாடெங்கும் பல தீர்மானங்கள் செய்து அரசாங்கத்தாரை எச்சரிக்கை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் சமஸ் கிருதச் சனியன் ஒழியும்.

**குடி அரசு – கட்டுரை – 17.01.1932**





RangaRakes tamilnavarasam.com

# சுயராஜ்யம்! சுயராஜ்யம்!!

இப்பொழுது நமது நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் வெள்ளைக்காரர்களைத் துரத்தி விட்டு இந்நாட்டின் அரசாட்சியை நாமே ஆள வேண்டும் என்று தேசீயவாதிகள் ஜனங்களிடம் கிளர்ச்சி செய்து அவர்களைத் தூண்டி வருகிறார்கள். இதற்காக சட்டமறுப்பு, வரிகொடாமை முதலிய இயக்கங்களை நடத்தி வருகிறார்கள். ஆனால், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களாகவும், தீண்டாத வகுப்பினர்களாகவும் உள்ள சுமார் 7 கோடி மக்கள் இந்துக்களின் ஆட்சியை விட வெள்ளைக்காரர்களின் ஆட்சியையே - அதாவது அவர்களின் பாதுகாப்பையே விரும்புகின்றனர். இவ்வாறு இவர்கள் விரும்புவது நியாயமானதே என்பதும் இதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை என்பதுமே நமது அபிப்பிராயமாகும். நமது நாட்டிற்கு வெள்ளைக்கார ஆட்சி வருவதற்கு முன் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக இந்துக்களுடைய ராஜ்யபாரம்தான் இருந்து வந்தது. அக்காலத்தில் அதாவது அந்தப் பல ஆயிரம் ஆண்டுகளிலும் தீண்டத்தகாத வகுப்பினர்களெல்லாம், தீண்டத்தகாதவராகவும்! தெருவில் நடக்கத்தகாதவராகவும், கண்ணால் பார்க்கத்தகாதவராகவும், சண்டாளராகவும், அடிமைகளாகவும், சுகாதாரமற்ற சதுப்புநிலங்களில் வசிக்கின்றவர்களாகவும், உண்ண உணவில்லாதவராகவும் உடுக்க உடை இல்லாதவராகவும் தான் இருந்து வந்தார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வுண்மையை இந்துக்களின் பரிசுத்தமான நூல்களாகக் கருதப்படும் புராணங்கள் ஸ்மிருதிகள் முதலியவைகளைக் கொண்டும் இந்திய நாட்டின் சரித்திரத்தைக் கொண்டும் அறியலாம். இன்றும் வெள்ளைக்கார அரசாங்கத்தார், தீண்டத்தகாதவர்களுக்குச் செய்ய முன் வரும் சில நன்மைகளையும் மதம், வழக்கம், சாஸ்திரம் என்பவைகளின் பேரால் தடுத்துக் கொண்டிருக்கிறவர்கள் உயர்ந்த சாதி இந்துக்களே என்பதை யாரும் மறுக்க முடியாதல்லவா? நமது மதத்திலும், நமது சமூக சீர்திருத்தங்களிலும் தலையிடாமல் இருக்கும் அந்நிய ஆட்சியிலேயே உயர்ந்த ஜாதி இந்துக்கள், தாழ்த்தப்பட்ட தீண்டாதார்களைப் பலவகையிலும், தொந்தரவு பண்ணி அடிமையாக்கி மிருகங்களைப் போல் வைத்திருக்க விரும்புகின்றார்கள்; அவர்கள் விரும்பும் சமத்துவத்திற்கும் சுயமரியாதைக்கும் எதிராக பலமான கிளர்ச்சி செய்கின்றார்கள் என்றால் இப்படிப்பட்டவர்கள் கையிலேயே ராஜ்ய



அதிகாரமும் கிடைத்துவிட்டால் அப்பொழுது நமது நாட்டு ஒடுக்கப்பட்டவர்களின் கதி என்ன ஆகும்? தென்னாப்பிரிக்காவில் உள்ள வெள்ளையர்கள், இந்தியர்களை எவ்வாறு முன்னேற முடியாமல் அடக்கி வைக்கவும், அந்த நாட்டை விட்டு ஓட்டி விடவும் முயலுகின்றார்களோ, அதைவிட இன்னும் பன்மடங்கு அதிகமாகத் தீண்டாதார்களை அடக்கி வைக்க முயல்வார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தென்னாப்பிரிக்கா வெள்ளையர்களாவது தங்களுடைய சுய நலத்தையும் பொருளாதார நிலையையும் கருதி இந்தியர்களை அடக்கி வைக்க நினைக்கிறார்களேயொழிய வேறு மத சம்பந்தமான குருட்டு எண்ணம் அவர்களிடம் ஒன்றுமில்லையென்று சொல்லலாம். ஆனால் நமது நாட்டு வருணாச்சிரம தரும இந்துக்களோ சுயநலத்தோடுங்கூட தீண்டாதவர்கள் எப்போதும் தீண்டாதவர்களாகவே அடக்கி வைக்கப்பட வேண்டுவது மத கட்டளையாகவும் “கடவுள்'' சித்தமாகவும், சாஸ்திர சம்மதமாகவும் கருதுகிறார்கள்; கருதுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இக்காரணங்களை முன்னிட்டே இன்று தீண்டாத வகுப்பினரும், மற்ற சிறுபான்மை வகுப்பினரும் இந்துக்களின் அதாவது வருணாச்சிரம தரும உயர்தர ஜாதி இந்துக்களின் ஆட்சியை விட அந்நியர்களாகிய வெள்ளையர்களின் பாதுகாப்புள்ள ஆட்சியையே மேலானதாக விரும்புகிறார்கள் என்பதை வட்ட மேஜை மகாநாட்டில் டாக்டர். அம்பெட்கார், திரு. சீனிவாசன் முதலியவர்கள் கூறிய அபிப்பிராயங்களை கொண்டும் இந்தியாவில் பல பாகங்களிலும் அவர்கள் நடத்திய மகாநாடுகளின் தீர்மானங்களைக் கொண்டும் அறியலாம். இவ்வாறு விரும்புவதில் தவறு ஒன்றுமில்லை என்றே நாமும் உறுதியாகச் சொல்லுகிறோம். இவ்விஷயத்தை இன்னும் உறுதியாக வற்புறுத்துவதற்குச் சென்ற டிசம்பர் மாதம் 27, 28, 29 ஆகிய மூன்று தினங்களிலும் கல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்திய சுயராஜ்ய சங்க மகாநாட்டின் தீர்மானங்களே போதுமானதாகும்.

ஆகையால் அம்மகாநாட்டுத் தீர்மானங்களைக் கவனிப்போம்.

1. “தீண்டாதவர்கள் இந்து மதத்தில் சேர்ந்தவர்கள் தான்”

2. “தீண்டாதவர்கள், வேதம், புராணம், ஸ்மிருதி, முதலியவைகளைப் பின்பற்றுகிறவர்களென்று அவர்கள்மேல் மற்ற உயர்ந்த ஜாதி இந்துக்கள் சகோதர வாஞ்சை காட்டி வருகின்றனர்”.

3. “சில சீர்திருத்தக்காரர்களால், அவர்கள் அனாவசியமாகக் கிளப்பிவிடப்பட்டது காரணமாக, அவர்கள் வருணாச்சிரம தருமிகளுக்கு விரோதிகளாய் விட்டனர்”.

என்று தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றனர். இத்தீர்மானங்களினால் தீண்டாதாருக்கு இன்னும் ஆபத்தேயொழிய ஒரு சிறிதும் நன்மையில்லை என்பது உறுதி. தீண்டாதவர்கள் இந்துக்கள் என்று சொல்லிக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டிருக்கும் வரையிலும் அவர்கள் அடிமையாகத்தான் இருந்து தீரவேண்டும். சமத்துவம் பெறவே முடியாது. இந்து மத வேத, புராண, ஸ்மிருதிகளை ஒப்புக் கொள்ளுகிறவர்கள்தான் இந்துக்களாவார்கள் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. வேத, புராண ஸ்மிருதிகளை ஒப்புக் கொண்டால் வருணாச்சிரம தருமத்தையும் ஒப்புக் கொண்டாக வேண்டும். வருணாச்சிரம தர்மத்தை ஒப்புக்கொண்டால் பார்ப்பான் உயர்ந்தவன், க்ஷத்திரியன் பார்ப்பானுக்குத் தாழ்ந்தவன் ஆகையால் பார்ப்பான் சொன்னபடியே கேட்க வேண்டும்; வைசியன் பார்ப்பானுக்கும் க்ஷத்திரியனுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்; சூத்திரன் மேற்கூறிய மூவர்களுக்கும் வேலை செய்ய வேண்டும்; பஞ்சமன், சண்டாளன், தெருவில் நடக்கக் கூடாது ஊருக்கு வெளியில்தான் கிடக்க வேண்டும்; கல்வி கற்கக் கூடாது; நல்ல உணவு கொள்ளக் கூடாது; நல்ல உடைதரிக்கக் கூடாது; எந்தப் பொது இடங்களுக்கும் வரக் கூடாது என்ற நிலையில் இருந்துதான் ஆக வேண்டும். ஆகவே இந்த நிலையில் இருக்கத் தீண்டாதவர்கள் தம்மை இந்துக்கள் என்று கூறிக் கொள்ளச் சம்மதிக்கலாமா? அப்படி சம்மதிப்பதனால் தம்முடைய தாழ்ந்த நிலையை – அடிமைநிலையை – கஷ்டமான நிலைமையை விட்டுக் கரையேற வழியுண்டா? என்று தான் கேட்கிறோம்.

மேல் உள்ள தீர்மானங்களில் மூன்றாவது தீர்மானத்தில் அவர்கள் தங்கள் சமத்துவத்திற்குப் போராடுவது தகாது என்று கூறிவிட்டார்கள். "சீர்திருத்த வாதிகளால் அனாவசியமாக கிளப்பிவிடப்பட்டார்கள்" என்று சொல்லுவதிலிருந்து "தீண்டாதவர்கள் கேட்கும் சமவுரிமை அனாவசியமானதென்று" அகில இந்திய வருணாச்சிரம சுயராஜ்ய சங்கத்தார் அபிப்பிராயப் படுகிறார்களெனவும், "தீண்டாதவர்கள் இது வரையிலும் இருந்த அடிமை வாழ்க்கையில் இருப்பதே அவசியமானதென" அபிப்பிராயப்படுகிறார்கள் எனவும் பட்டப்பகல் போல் உணரக்கிடக்கின்றதல்லவா?

இன்னும் அவர்கள் செய்திருக்கும் தீர்மானங்களைப் பார்த்தால் நாம் மேலே கூறியதில் எள்ளளவும் பிசகில்லை என்பதையும், அவை முற்றும் உண்மை என்பதையும் அறிந்து கொள்ளலாம். அத்தீர்மானங்கள் வருமாறு:-

4. "நாசிக் ஆலயத்தையும், ராமகுண்ட தீர்த்தத்தையும் அசுத்தப்படுத்த முயற்சி செய்கின்றவர்களைக் கண்டிக்கின்றது".

5. "இந்தச் சத்தியாக்கிரகிகளைக் கஷ்டத்தோடு எதிர்க்கும் சனாதன தர்ம இந்துக்களை இம்மகாநாடு பாராட்டுகின்றது. இவர்களுக்குத் தேவைப் படும் பண உதவியையும், மற்ற உதவிகளையும் செய்யத் தயாராயிருப்பதாக உறுதி கூறுகிறது".

6. "தீண்டாத வகுப்புப் பிள்ளைகளுடன் வருணாச்சிரம தருமிகளின் பிள்ளைகளும் சேர்ந்து பள்ளிக்கூடங்களில் படிக்கும்படி



வற்புறுத்தும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் போக்கையும் இந்திய சமஸ்தானங்களின் போக்கையும் கண்டு இம்மகாநாடு வருந்துகிறது".

இத்தீர்மானங்களும் அம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருப்பதிலிருந்து அவர்களுடைய மனப்பான்மை இன்னதென்பதை அறியலாம். இந்த மனப்பான்மை தான் நமது நாட்டில் உள்ள உயர்ந்த ஜாதி இந்துக்களாகிய பார்ப்பனர்கள், அவர்கள் வலையில் சிக்குண்டு கிடக்கும் பார்ப்பனரல்லாதார்கள், இந்துமத பக்தர்கள் எல்லோரிடத்திலும் குடி கொண்டிருப்பதாலும், இந்த அபிப்பிராயமுள்ள மக்களே மிகுதியாக இருக்கும் ஒரு தேசத்தில் உள்ள ஒரு ஏழைத் தீண்டத்தகாத மக்கள் எப்படி முன்னுக்கு வரமுடியும்? அதிலும் இவர்கள் கையில் அதிகாரமும் ராஜ்ய பாரமும் வந்துவிட்டால் இன்று சமதர்மக் கிளர்ச்சி செய்கின்றவர்களின் கதியும், தீண்டத்தகாத மக்களுக்குப் பாடுபடும் தலைவர்களின் கதியும் என்ன வாகும்? திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் காலத்தில் சமணர்களுக்குக் கிடைத்த கழுவேற்றத்தைப் போல தூக்குத் தண்டனையும் சித்திரவதையும் தீவாந்தர சிட்சையும் சிறைத் தண்டனையும் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை அல்லவா. இவ்வளவு காரியங்களைச் செய்ய இந்து மதமும், இந்து மதச் சாஸ்திரங்களும் தடை செய்யாமல் இவற்றுக்கு அனுகூலமாகவே இருக்கும் என்று உறுதியாகக் கூறுகிறோம். ஆகையால் தான் நாம் இந்து மதமும், ஜாதிகளும் ஒழிய வேண்டும் என்று கூறிவருகின்றோம். இவை ஒழிந்தால் இத்தகைய ஆபத்துகள் ஒன்று மில்லை. கல்கத்தா, "அகில இந்திய வருணாச்சிரம சுயராஜ்ய சங்க" மகா நாட்டார் தீண்டாதார்களை இந்துக்களென்று முடிவு கட்டிய பின்னர்தான், "அவர்கள் சமத்துவம் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் அல்லர்" என்று தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள் என்பதை ஆலோசித்துப் பார்ப்பவர்கள் எவரும், இந்து மதம் இருக்க வேண்டும் என்று சொல்லமாட்டார்கள். இந்து மதத்தை வைத்துக் கொண்டு ஜாதிக் கொடுமைகளை ஒழிக்கலாமென்றாவது, சமத்துவம் பெறலாம் என்றாவது சொல்லவும் முன் வரமாட்டார்கள்.

இன்னும் அந்த "அகில இந்திய வருணாச்சிரம சுயராஜ்ய சங்க மகாநாட்டில்" மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அது.

**"தீண்டத்தகாதவர்களின், வர்ணாச்சிரமதர்மத்திற்கு விரோதமான தவறானஅபிப்பிராயத்தை ஒழிப்பதற்காக நாடெங்கும் உபதேசிகள் பலரை அனுப்ப வேண்டும்"**

என்பதாகும்.

இத்தீர்மானம் எதற்காக என்று யோசித்துப்பார்த்தால் உண்மை விளங்காமல் போகாது. தீண்டத்தகாதவர்களின் சுயமரியாதை உணர்ச்சியை சமதர்ம உணர்ச்சியை அடக்கி அவர்களை இந்து மதத்தவர்களாக – அதாவது அடிமைகளாக – பாவிகளாக – சண்டாளர்களாக – மிருகம் போன்றவர்களாக



RangaRakes
tamilnavarasam.com

இருக்கச் செய்ய வேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்டது தானே ஒழிய வேறில்லை என்பது நிச்சயமாகும்.

இந்த மாதிரி இன்னும் வருணாச்சிரம தர்மப்பிரசாரம் செய்து கொண்டிருக்கும் இந்த நாட்டில் எப்படி சுயராஜ்யம் நியாயமாக நடக்க முடியும்? என்று யோசித்துப் பார்க்கவேண்டுகின்றோம். இத்தகைய வருணாச் சிரம தரும மனப்பான்மையை மாற்ற திரு. காந்தியாலாவது அல்லது மற்ற எந்த தேசீயவாதிகளாலாவது முடிந்ததா? என்று கேட்கின்றோம். இம் மாதிரி யான ஜாதி வருணாச்சிரம தருமக் கொடுமைகளையும், இக்கொடுமை களுக்குக் காரணமாக இருக்கும் மதங்களையும், ஒழித்தால்தான் நாம் சமத்துவம் பெறமுடியும்; நாம் ஒற்றுமையடைய முடியும்; நாம் ராஜ்ய பாரத்தை நீதியோடு - சமாதானத்தோடு - எல்லா மக்களும் சுகமடையும்படி நடத்த முடியும் என்று கூறுகின்றவர்களைத் தேசத்துரோகிகள் என்று சொல்லும் கூட்டம் மெஜாரிட்டியாக இருக்கும் ஒரு தேசம் எப்படி முன்னேற்றமடைய முடியும்? அத்தேசத்தில் உள்ள - கொடுமைப் படுத்தப்படுகின்ற மக்கள் - சிறுபான்மைச் சமூகத்தினர் எப்படி சமஉரிமை பெற்று எதை எப்படி அனுமதிக்க முடியும்? என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

நமது நாட்டிலேயே பிறந்து, நமது நாட்டிலேயே வளர்ந்து, நமது நாட்டிலேயே வாழும் மக்களைக் கொடுமைப்படுத்தும் வருணாச்சிரம தர்மிகளாகிய சகோதரத் துரோகிகளை அடக்கமுடியாமல் - அவர்களுடைய செல்வாக்கை ஒழிக்க முடியாமல் - அவர்களுடைய மதங்களையும், சாஸ்திரங் களையும் சுட்டுப் பொசுக்க முடியாமல், அப்படிச் செய்வதற்கும் மன மில்லாமல் இருக்கின்ற நாம் எந்தக் காரியத்தில் தான் வெற்றி பெற முடியும்? என்று கேட்கிறோம். "சுயராஜ்யம்" "சுயராஜ்யம்" என்று சொல்லி பாமர மக்களை ஏமாற்றத்தான் முடியுமே ஒழிய வேறு ஒன்றும் முடியாது என்று உறுதியாகக் கூறுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 17.01.1932**



# ஜாதி மகாநாடுகள்

நமது நாட்டில் சிறிது அரசியல் உரிமை கிடைத்ததன் பலனாகவும், அரசியல் கிளர்ச்சிகள் கொஞ்சம் அதிகப்பட்டதன் பலனாகவும், கல்வி, அரசாங்க உத்தியோகம், ஸ்தல ஸ்தாபன பதவிகள் முதலியவைகளில் முன்னேறாமல் இருந்த ஒவ்வொரு ஜாதியினரும் விழித்துக் கொண்டனர். கல்வி, பட்டம், பதவி முதலியவைகளில் முன்னேறி இருக்கும் வகுப்பாரைக் கண்டு தாமும் அவர்களைப் போல் ஆக வேண்டும் என்ற எண்ணத்துடன் வகுப்பு மகாநாடுகள் கூட்டவும் தங்களுக்குரிய பங்கைக் கொடுக்க வேண்டு மென்று அரசாங்கத்தைக் கேட்கவும் ஆரம்பித்தனர். பல வகுப்புகள்- அதாவது பல ஜாதிகள் உள்ள ஒரு தேசத்தில் அதிகாரம், பட்டம், பதவி முதலியவைகளில் எல்லா வகுப்புகளுக்கும் சம பங்கு இருக்க வேண்டும் என்று கேட்பதும் அதற்காகப் போராடுவதும் நியாயமேயாகும்.

இந்தக் காரணங்களுக்காக நமது நாட்டில் வகுப்பு மகாநாடுகள் கூட ஆரம்பித்த காலத்தில், எல்லாவற்றிலும் முன்னேற்றமடைந்து தேசத்தில் ஆதிக்கம் பெற்று மற்ற வகுப்புகளை எல்லாம் தாழ்ந்த வகுப்புகளாக வைத்து தமது வகுப்பை மாத்திரம் உயர்ந்த வகுப்பாக வைத்துக் கொண்டிருக்கும் சிறுபான்மைக் கூட்டத்தாராகிய பார்ப்பனர்கள் இம்மகா நாடுகளைக் கண்டித் தனர். பார்ப்பனர்களின் பேச்சை நம்பிய பார்ப்பனரல்லாதார் சிலரும் இந்த வகுப்பு மகாநாடுகளைக் கண்டித்தார்கள். வகுப்பு மகாநாடுகள் கூட்டுவது தேசத் துரோக மென்றும் வகுப்பு வாதத்தை வளர்ப்பதாகுமென்றும், தேசீய ஒற்றுமைக்கு விரோதமென்றும் பலமாகப் பிரசாரம் பண்ணினார்கள். ஆனால் எந்த ஜாதியினரும், இந்த பிரசாரத்தைக் கண்டு ஏமாறாமல் இப்பிரசாரம் அரசாங்கத்தின் அதிகாரம், பட்டம், பதவி இவைகளைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தி வரும் ஒரு கூட்டத்தார் தங்கள் ஆதிக்கத்திற்குக் கெடுதிவராம லிருக்க, அதாவது இவைகளில் மற்ற சாதியினர்களும் பங்குக்கு வராமலிருக் கச் செய்யும் சுயநலப்பிரச்சாரம் என்பதை அறிந்து கொண்டனர். ஆகையால் இத்தகைய பிரச்சாரத்தைக் கண்டு ஏமாறாமல் தங்கள் தங்கள் வகுப்பு முன்னேற்றத்தில் கவலைக் கொண்டு மகாநாடுகளைக் கூட்டி, அவர்களைக் கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியவைகளில் முன்னேறி மற்ற உயர்ந்த வகுப்பினரைப் போல ஆகவேண்டுமென பிரச்சாரம் பண்ணினார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இவ்வாறு முயற்சி செய்ததின் பலனாக ஒவ்வொரு வகுப்பினரும் விழிப்படைந்து, நாகரீகம் பெற்று தேசத்தில் எல்லா விஷயங்களிலும் தங்களுக்கும் சமஉரிமை இருக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டனர். வகுப்பு மகாநாடுகள் தேச ஒற்றுமைக்கு விரோத மானவை என்று கூறிக் கொண்டிருந்த பார்ப்பனரல்லாதார்களும், இப்பொழுது இவைகளை ஆதரிக்கவும், வகுப்பு முன்னேற்றத்தில் கவலைக் கொள்ளவும் ஆரம்பித்துவிட்டார்கள். வகுப்பு மகாநாடுகளைக் கூட்டுவோர் தேசத் துரோகிகள் என்று சொல்லிப் பலமாகக் கிளர்ச்சி செய்த பார்ப்பனர்களும், இதுவரையிலும் தாங்கள் அனுபவித்து வந்த ஏகபோக உரிமைகளுக்கு ஆபத்து வந்துவிட்டது என்பதை அறிந்து, பார்ப்பன மகாநாடுகளும், வருணாச்சிரம தரும மகாநாடுகளும், சனாதன தரும மகாநாடுகளும் கூட்டித் தங்களுடைய ஆதிக்கம் குறையாமல் இருப்பதற்கு வழியும், பாதுகாப்பும் தேடுகின்றனர். சுருங்கக் கூறினால் தற்சமயத்தில் நமது நாட்டு அரசியல் வாதிகளில் 'ஜாதி' அபிமானம் இல்லாத தலைவர்களே இல்லை யென்று கூறிவிடலாம்.

சமீபத்தில் நடந்த வட்ட மேஜை மகாநாட்டிற்குச் சென்ற இந்திய பிரதிநிதிகளும், ஜாதியின் பேராலும், மதத்தின் பேராலும் சென்று இவைகளை மனதில் வைத்துக்கொண்டே, அதாவது தங்கள் ஜாதிக்கும், மதத்திற்கும் சரியான பாதுகாப்புகள் இருக்க வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே பேசினார்கள்; காரியங்களில் கலந்து கொண்டார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

எல்லா ஜாதிகளும், கல்வியிலும், அறிவிலும், நாகரிகத்திலும் முன்னேற்றமடைந்து சமநிலைக்கு வரவேண்டும். எல்லா ஜாதிகளும் அரசாங்க உத்தியோகப் பதவிகளிலும், கௌரவப் பதவிகளிலும் சமபங்கு பெற்று முன்னேற வேண்டும். மலை உச்சியில் இருக்கிற ஜாதிகளும், மலையின் நடுத்தளங்களில் வாழும் ஜாதிகளும், மலைக் குகைகளில் வாழும் ஜாதிகளும், மலைச் சரிவுகளில் வாழும் ஜாதிகளும், மலை அடிவாரத்தில் வாழும் ஜாதிகளும், சமமான ஒரே இடத்தில் வந்து ஒரே நாகரிகம், ஒரே விதமான கல்வி ஒரே விதமான சுதந்திரம் ஒரே விதமான ஒழுக்கம் முதலியவைகளைப் பெறுவார்களானால், அவர்களிடமிருந்த ஜாதி வித்தியாசம், கொள்கை வித்தியாசம் முதலியவைகள் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரிந்து எல்லோரும் ஒரே சகோதரர்களாக ஆக முடியும் என்ற கருத்தைக் கொண்டுதான் நாம் ஆதி முதல் ஜாதி மகாநாடுகளை ஆதரித்து வருகிறோம். ஒவ்வொரு ஜாதியும் தாம தாம் முயற்சி செய்து சம சுதந்திரம் பெறுவதன் மூலம் ஜாதி ஒழியும் என்னும் நோக்கத்தோடுதான் நாம் ஜாதி மகாநாடுகளுக்கு ஆதரவளிப்பதுமாகும். எண்ணற்ற ஜாதிகளும் கணக்கற்ற கொள்கைகளும் உள்ள ஒரு தேசத்தில் இவைகளை ஒன்றுபடுத்துவதற்கு இதுவே சிறந்த வழியாகும் என்பது அறிவுடையவர்கள் ஒப்புக்கொள்ளக் கூடியதேயாகும். இவ்வாறில்லாமல்



வகுப்பு வாதம் கூடாது, ஜாதி மகாநாடுகள் கூடாது, வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம் உதவாது என்று சொல்லும் தேசாபிமானப் பாசாங்கு பேச்செல்லாம் தற்போது எல்லாவற்றிலும் ஆதிக்கம் பெற்றிருக்கும் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்கள் எப்பொழுதும் ஆதிக்கம் பெற்றிருக்கவும், கொடுமைப் படுத்தப்பட்டிருக்கும் தாழ்ந்த ஜாதிக்காரர் என்பவர்கள் எப்பொழுதும் கொடுமைக்குட்பட்டு அடிமையாகவே வாழ்ந்து கொண்டிருக்கவும் செய்யப் படும் சூழ்ச்சிப் பிரசாரமேயாகும். வேறு யோக்கியமான பிரசாரமென்றோ, நாணயமான பிரசாரமென்றோ சொல்லமுடியாதென்றே கூறுவோம்.

ஆனால் தனிப்பட்ட ஜாதியாச்சாரங்களும், மதக் கொள்கைளும் ஒழிந்து, தங்களுக்கு மேற்பட்டவர்களென்றும் இல்லாமல் கீழ்ப்பட்டவர்க ளென்றுமில்லாமல் எல்லா மக்களும் சமசுதந்தரம் பெறவே ஜாதியின் பெயரால் மகாநாடுகள் கூட்டப்படுகிறது என்னுங் கொள்கை கைவிடப் பட்டாலும் பழைய ஜாதியாச்சாரங்களையும் கொள்கையாச் சாரங்களையும் புதுப்பித்து தங்கள் ஜாதி எப்பொழுதும் தனிப்பட்ட ஜாதியாகவே இருக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் ஜாதி மகாநாடுகள் கூட்டப்பட்டாலும் அது தேசத்தை இன்னும் அடிமை நிலையிலும், ஒற்றுமையற்ற நிலையிலும் கொண்டு போய்ச் சேர்க்குமேயொழிய வேறு ஒரு பலனையும் தராது என்பது நிச்சயம்.

ஆனால் இப்பொழுது நமது நாட்டில் நடைபெற்று வருகின்ற ஜாதி மகாநாடுகள் எல்லாவற்றிலும் பெரும்பாலும் சீர்திருத்தத்துக்குரிய பேச்சு களும் தீர்மானங்களுமே நடந்து கொண்டு வருகின்றன. ஒவ்வொரு ஜாதி மகாநாடுகளிலும் ஆண் பெண்கள் எல்லோருக்கும் கட்டாயமாகக் கல்வி போதிக்கப் படவேண்டுமென்றும், தங்கள் ஜாதிக்குள்ளிருக்கும் உட்பிரிவு களை ஒழிக்க வேண்டுமென்றும், அவர்களுக்குள் கலப்பு மணங்களும். சமபந்தி போஜனங்களும் செய்யப்பட வேண்டுமென்றும் பெண்கள் சுதந்திரத்தை ஒப்புக் கொண்டு அவர்களுக்கு விதவா விவாக உரிமை, சொத் துரிமை, வயது வந்தபின் மணஞ் செய்து கொள்ளும் உரிமை முதலியவை களைக் கொடுக்க வேண்டுமென்றும், கல்யாணம் முதலிய சடங்குகளில் செலவுகளைக் குறைக்க வேண்டுமென்றும் பேசப்பட்டும் இவை சம்பந்தமான தீர்மானங்கள் செய்யப்பட்டுமே வருகின்றன. மதப் பைத்தியமும், ஜாதிப்பித் தும் பிடித்த சில தலைவர்களால் கூட்டப்படும் சில ஜாதி மகாநாடுகளைத் தவிர பெரும்பாலான எல்லா மகாநாடுகளிலும் மேற்கூறியவை சம்பந்தமான தீர்மா னங்களே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இம்மாதிரியான தீர்மானங்கள் ஜாதி மகாநாடுகளில் நிறைவேற்றப்படுவதற்கு காரணம் நமது சுயமரியாதை இயக்கமேயாகும்.

ஆனால் சில ஜாதி மகாநாடுகளில் நடைபெறும் சில பிற்போக்கான செயல்களையும், பேச்சுகளையும் பற்றி மாத்திரம் நாம் எடுத்துக் காட்டிக்



RangaRakes tamilnavarasam.com

கண்டிக்காமல் இருப்பதற்கில்லை. அதாவது சில ஜாதி மகாநாடுகளில் அந்த ஜாதிக்காரர்கள் தங்களுடைய பழம் பெருமைகளை எடுத்துப் பேசாமலிருப் பதில்லை. தங்களை க்ஷத்திரியர்களென்றும், வைசியர்களென்றும், பிராமணர் களென்றும் சொல்லிக் கொண்டும் இம்மாதிரி அரசாங்கத்தாரும் தங்கள் ஜாதிகளை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும் பேசுகின்றனர், தீர்மானங் களும் நிறைவேற்றுகின்றனர். இவர்கள் கூற்றுக்கு ஆதாரமாக ஜாதி மதங் களை நிலைநிறுத்தி மக்களைத் தனித்தனி வகுப்பாகப் பிரித்து வைத்து எல்லா ரையும் தமக்கு கீழ் அடக்கி வைத்து ஆதிக்கம் செலுத்துவதற்காகப் பார்ப்ப னர்களாலும், பார்ப்பனர்களின் சாவகாசத்தாலும் ஆரியர்களின் நாகரீகமே உயர்ந்தது என்று எண்ணிய தமிழ்ப் புலவர்களாலும் ஏற்படுத்தப் பட்டிருக்கும் புராணங்களையும், கதைகளையும் காட்டுகின்றனர். தங்கள் தங்கள் ஜாதிக்குத் தனித் தெய்வங்கள் உண்டென்றும் தனிக் கொடிகள் உண்டென்றும் கூறி அவைகளையும் அனுஷ்டிக்கும் படியும், அவைகளுக்குப் பூசை, திருவிழா முதலியன செய்யும்படியும் தூண்டுகின்றனர். இவ்வாறு செய்வதனால் அந்த ஜாதிகள் தேசமக்களுடன் சமநிலைக்கு வரமுடியுமா? என்றுதான் நாம் கேட்கிறோம். மக்களை முட்டாள்களாக ஆக்கி அவர்கள் உழைப்பினால் வரும் செல்வங்களைப் பயனற்ற வழிகளில் செலவு செய்து தரித்திரர்களாக்கி வைக்கும் தெய்வ நம்பிக்கையையும், தெய்வ வழிபாட்டையும் வற்புறுத்து வதனால் என்ன பலன் உண்டாகப் போகின்றது? இதுவரையிலும் நமது நாட்டு மக்கள், தெய்வங்கள், திருவிழாக்கள், பூசைகள் இவைகளுக்காக செலவழித்த பொருள்கள் எவ்வளவு? அவைகளால் நமது நாட்டிற்கு ஏற்பட்ட நன்மை என்ன? என்று ஆலோசித்துப் பார்க்குமாறு இப்பிற்போக்காளர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். இத்தகைய கொள்கைகளை அனுசரிக்க முற்படும் ஜாதிகள் இதுவரையிலும் ஒதுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டுத் தனித்துக் கிடந்தது போலவேதான் இன்னும் கிடக்கவேண்டும் என்றும் எச்சரிக்கை செய்கிறோம்.

ஆகையால், உண்மையிலேயே தங்கள் ஜாதி முன்னேற்றம் அடைய வேண்டும் என்று எண்ணி ஜாதி மகாநாடுகளைக் கூட்டுகின்ற தலைவர்கள் பரந்த நோக்கமும், சிறந்த கொள்கையும், சுயமரியாதை உணர்ச்சியும் உடையவர்களாய் இருக்க வேண்டும். தனிப்பட்ட ஜாதியாசாரங்களையும், கொள்கையாசாரங்களையும் ஒழித்து உலக சகோதரத்துவத்தை அடைவதற்கு தகுந்த பொதுவான ஆசாரங்களை உண்டாக்க வேண்டும் என்னும் நோக்க முள்ளவராய் இருக்க வேண்டும். தமக்கு மேல் உயர்ந்த ஜாதியார்கள் இருக் கிறார்கள். தமக்குக் கீழ் தாழ்ந்த ஜாதியார்கள் இருக்கிறார்கள் என்னும் எண்ணத்தைத் தம் ஜாதியினரிடமிருந்து அகற்றவேண்டும் என்னும் கொள்கையுடையவராயிருக்கவேண்டும். பரம்பரையாக நமது ஜாதிக்கு ஏற்பட்ட தொழிலை விட்டுவிடக் கூடாது; நமது ஜாதியினர் அனைவரும் பரம்பரைத் தொழிலையே செய்து வரவேண்டும் என்னும், மூடக் கொள்கை யையும், பிடிவாதமான கொள்கையும் ஒழித்து, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கல்விக்கும், அறிவுக்கும், திறமைக்கும், வசதிக்கும் ஏற்ற எந்தத்



தொழிலையும் செய்யலாம் என்ற கொள்கையையும் எண்ணத்தையும் தமது ஜாதியினர்க்கு உண்டாக்க வேண்டும் என்னும் உறுதியான அபிப்பிராய முடையவராய் இருத்தல் வேண்டும். இத்தகைய கொள்கையும், உறுதியான எண்ணமும் உள்ள தலைவர்களால் கூட்டப்படும் ஜாதி மகாநாடுகளும், ஜாதிகளுந்தான் முன்னேற்றமடைய முடியும்; சமசுதந்தரப் பந்தயப் போட்டி யில் கலந்து கொண்டு செம்மையாக வாழமுடியும் என்று உறுதியாகக் கூறுகிறோம்.

ஆகையால், தங்கள் மதத்தையும் பழய ஆசாரங்களையும், தொழில் களையும் காப்பாற்றிக் கொண்டு சமசுதந்தரமும் பெறலாம் என்று நினைக் கின்ற வைதீக ஜாதித் தலைவர்களின் எண்ணம் பயனற்றதென்பதை உணர்ந்து கொண்டு, காலத்திற்கேற்ப மதாச்சாரம், ஜாதி ஆச்சாரம் எல்லா வற்றையும் மாற்றிக் கொள்ளப் பின்வாங்காத தலைவர்களாலேயே ஜாதிகளும், ஜாதிக் கொடுமைகளும், மதங்களும், மதக் கொடுமைகளையும் ஒழிக்க முடியும் என்று கூறுகிறோம். இத்தலைவர்களின் முயற்சியினால் தான் நமது நாட்டில் ஐக்கியபாவம் ஏற்பட முடியும் என்றும் சொல்லுகிறோம். ஆகையால் ஜாதி மகாநாடு கூட்டுகின்றவர்கள் மேற்கூறிய சில பிற்போக்கான செயல்களும் பேச்சுகளும் இனியும் தங்கள் மகாநாடுகளில் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளும்படி தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 24.01.1932**



RangaRakes tamilnavarasam.com

# திரு. வல்லத்தரசு

புதுக்கோட்டையில் பிரபல வக்கீலாகவும், சமதர்ம வாதியாகவும், பாமர மக்களின் மூடப் பழக்க வழக்கங்களை யொழித்து அவர்களைப் பார்ப்பனர் களிடம் ஏமாறாமலிருக்கும்படி செய்ய வேண்டும் என்ற நோக்கமுடையவ ராகவும் இருந்த திரு. முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ., பி. எல்., அவர்களைத் தமிழுலகம் நன்றாய் அறியும். சென்ற வருஷத்தில் புதுக்கோட்டையில் முனிசிபல் வரி உயர்த்தப்பட்டதன் காரணமாக நடந்ததாகச் சொல்லப்படும் கலகத்தை முன்னிட்டு இதுவரையிலும் அவரைக் கைது செய்து வைத்திருந்தார்கள். ஆனால் அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று சமஸ்தானத்தில் உள்ள பிரபலமானவர்களும், வெளியூர்களில் உள்ள சில பிரமுகர்களும் பலமான கிளர்ச்சி செய்து கொண்டு வந்தார்கள். இதன் பயனாக புதுக்கோட்டை அரசாங்கத்தாரும் அவரை விடுதலை செய்ததோடு மட்டும் அல்லாமல் இனி சமஸ்தானத்திற்குள்ளேயே வசிக்கக் கூடாதென, சமஸ்தானத்திற்கு வெளியிற் கொண்டு வந்துவிட்டு விட்டார்கள்.

நாட்டின் பொது ஜனங்களால் மதிக்கப்படுகின்ற ஒருவரை உண்மை யிலேயே அரசாங்கதின் நன்மைக்காக உழைக்கப் பாத்தியமுடைய ஒருவரை இவ்வாறு வெளியேற்றுவதற்குக் காரணம் பார்ப்பன சூழ்ச்சியைத் தவிர வேறில்லை என்று தான் நாம் கூற வேண்டியிருக்கிறது. திரு. வல்லத்தரசு அவர்கள், புதுக்கோட்டையில் உள்ள பார்ப்பனர்கள் கூடிக் கொண்டு செய்த காங்கிரஸ் கிளர்ச்சிக்கு விரோதமாகக் கூட்டம் நடத்தினார். காங்கிரஸ் கிளர்ச்சி தலையெடுப்பதற்கு விரோதமாக இருந்தார். பார்ப்பனர்களைப் பாமர மக்கள் நம்பி அவர்களுடைய சாஸ்திரங்களுக்கும், மதங்களுக்கும், சடங்குகளுக்கும் கட்டுப்பட்டுக் கிடப்பதை அகற்றப் பாடுபட்டார். பார்ப்பனர் சூழ்ச்சியில் ஈடுபட்ட பாமர மக்களைக் கண்விழிக்கச் செய்து பகுத்தறிவுடையவராக்கப் பிரசாரம் பண்ணும் சுயமரியாதை இயக்கத்தில் பற்றுக் கொண்டவராயிருந்தார். இதன் பயனாகப் புதுக்கோட்டையில், நமது சுயமரியாதை இயக்கமும், அதி தீவிரமாகப் பரவ ஆரம்பித்தது. இக்காரணத்தால் அந்தச் சமஸ்தானத்திலுள்ள பார்ப்பனர்கள் அனைவரும் அவர்மேல் துவேஷமும், பொறாமையுங் கொண்டு, அவரை எப்பொழுது அழுத்தலாம் என்று சமயம் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்குப் புதுக்கோட்டை கலகமே ஒரு காரணமாக அகப் பட்டது. எப்படியோ எந்தக் காரணத்தாலோ, யார் வைத்த கொள்ளியோ வீடு வெந்து போயிற்று. அரசாங்கத்தாரும், ஒரு நல்ல தோழரை வெளியேற்றி விட்டார்கள் என்று நாம் வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை.

ஆனால் திரு. வல்லத்தரசு அவர்களை வெளியேற்றி விட்டதினால், புதுக்கோட்டையில் சமதர்மக் கொள்கை பரவவொட்டாமல் செய்து விடலாம் என்று வீண் எண்ணங் கொண்டிருக்கும் பார்ப்பனர்களின் எண்ணம் பயனற் றது என்பதை மாத்திரம் கூறுகிறோம். இனிதான் அந்த சமஸ்தானத்தில் நமது இயக்கக் கொள்கைகள் அதிதீவிரமாகப் பரவுமென்பதைக் கூறுகிறோம். இறுதி யாகத் திரு. வல்லத்தரசு அவர்களும், தம்மை சமஸ்தானத்தார் வெளியேற்றி யது பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தமது கொள்கையாகிய சமதர்ம ஊழியத்தைத் தளர்ச்சியின்றி பிரிட்டிஷ் இந்தியாவில் புரிந்து புகழ்பெறுமாறு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பார்ப்பன ஆதிக்கம் பெற்ற சுதேச சமஸ்தானத்தில், சமதர்ம நோக்க முடைய ஒரு பார்ப்பனரல்லாதார்க்கு நேர்ந்த கதியைப் பார்த்தவர்கள், இந்தியாவில் பார்ப்பன ஆதிக்கம் நிறைந்த சுயராஜியம் ஏற்படுமாயின் சமதர்ம நோக்கமுடைய நம் போன்றவர்களுக்கெல்லாம் என்ன கதி நேரு மென்பதைச் சிந்தித்துப் பார்க்கும்படி தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 24.01.1932**


RangaRakes
tamilnavarasam.com

# பெண் போலீஸ்

இந்திய சரித்திரத்திலேயே இதுவரை கேட்டிராத ஒரு புதிய சம்பவம், பரீக்ஷார்த்தமாக இவ்வாண்டிலிருந்து ஆரம்பிக்கப்படப் போகிறது. அதாவது பெண்கள் போலீஸ் உத்தியோகத்துக்குச் சேர்க்கப்படப் போகின்றார்க ளென்பதே.

"போலீஸ் உத்தியோகத்தில் சேர விரும்பும் பெண்கள் தங்கள் விண்ணப்பங்களை உடனே அனுப்பலாம். இலவச உடுப்பும், ஜாகையும் அளிக்கப்படும்"

என்று போலீஸ் தலைமை சூப்பரெண்டெண்ட் அவர்களால் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறதென டெல்லியிலிருந்து 20-1-32 உ வெளியான ஒரு பிரஸ் செய்தி கூறுகிறது.

இது உண்மையானால் சர்க்காரின் செய்கையை மனமாரப் பாராட்டி வரவேற்கிறோம். இந்த நற்செய்தி பெண்கள் உலகத்தில் ஒரு புதிய உணர்ச்சி யையும், பெண்கள் முற்போக்கில் ஆர்வமும் கொண்ட சீர்திருத்த உலகிற்கு மட்டற்ற மகிழ்ச்சியையும் உண்டாக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை. மற்றும் பெண்கள் மனத்தில் பெரும் கவலையும், பொறுப்பும் ஏற்பட்டிருக்குமென்பது திண்ணம். ஆனால் பெண்கள் ஆண்களுக்கு எவ்வகையிலும் அடங்கிய வர்கள், அடிமைகள், பேதைகள், பிள்ளைபெறும் இயந்திரங்கள் என இதுவரை மதம், கடவுள், சாஸ்திரம், புராணம், பழக்க வழக்கங்கள் இவை களின் பேரால் அடக்கி, ஒடுக்கி, மிதித்து, ஆழ்த்திக் கொண்டிருக்கும் சுயநலக் கூட்டத்தார்களுக்கு, வைதீக வெறியர்களுக்கு தலையில் இடி விழுந்தாற் போல் தோன்றலாம். தங்கள் மதமே அழிந்து விட்டதாகக் கருதலாம். ஆனால் கால மாறுதலையும், உலக முற்போக்கையும், பெண்களது அதி தீவிர உணர்ச்சி களையும், ஒருக்காலும், யாராலும் தடுக்கவியலாது என்பதை அவர்கள் அறியவேண்டும்.

"அடுப்பங்கரையே கைலாசம், ஆம்படையானே சொர்க்கலோகம்" என்ற எண்ணத்தில் பெண்களை வைத்திருந்த காலம் போய் இன்று பெண் உலகம் தனக்கு ஆடவரைப் போல எல்லா உரிமைகளும் வேண்டும், தாங்கள் எவ்வகையிலும் ஆடவரினும் தாழ்ந்தவரல்லர் இயற்கையாய் தாங்கள் அனுபவிக்க வேண்டிய சுதந்திரங்களை நல்கவேண்டுமென வீரமுழக்கம் செய்கிறார்கள். பெண்கள் உரிமை இயக்கம் ஒவ்வொரு நாளும் வலிமை பெற்றே வருகின்றது, பெண்கள் படிக்கலாகாது. படித்தால் கெட்டு விடுவார்கள் என்று வாய் வேதாந்தம் பேசிய சோம்பேறிக் கூட்டத்தார் பெண்கள் படித்துப் பட்டம் பெற்று டாக்டர்களாகவும், உபாத்தினிகளாகவும், தாதிகளாகவும், வக்கீல்களாகவும் இருப்பதைக் கண்டு என்ன செய்து விட்டார்கள். அஃதே போல் சாரதா சட்டமோ, இளமை மண தடுப்புச் சட்டமோ பிரஸ்தாபத்திற்கு வந்தபோது "மதம் போச்சு" என்று கத்தியது தவிர கண்ட பலன் ஒன்று மில்லை. அது போலவே இன்றும் "பெண்களாவது போலீசில் சேரவாவது" என்றும் சொல்லலாம். ஆனால் பெண்கள் அவர்களது சுயநல எண்ணத்தை மெய்ப்பிக்கத் தக்கவாறு நடந்து கொள்ளல் வேண்டும். சுமார் 2 வருஷ காலத்திற்கு முன்பிருந்தே அகில இந்திய மாதர் சங்கத்தார் பெண்கள் போலீசில் சேர்க்கப்படல் வேண்டுமென வற்புறுத்தி வருகிறார்கள். மேல் நாடுகளில் பெண் போலீசார் துப்பறிவதிலும் குற்றங்களைக் கண்டுபிடிப்ப திலும் அதிக சாமர்த்தியம் வாய்ந்திருக்கிறார்களென்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகையால் இன்று தங்கள் உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருக் கின்ற பெண் மக்கள், தங்கள் சுதந்திரத்திற்காக வாதாடும் பெண்மக்கள், தங்கள் சமத்துவத்திற்காக விழையும் பெண் மக்கள் சர்க்காரால் கொடுக்கப்பட்ட இவ் வரிய சந்தர்ப்பத்தை என்ன செய்யப் போகின்றார்கள்?

"சட்டங்கள் செய்வதும் பட்டங்கள் ஆள்வதும் பாரினிலே பெண்கள் செய்ய வந்தோம்"

என்ற கவி பாரதியாரின் வீர மொழிகளை மெய்ப்பிப்பார்களா?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 24.01.1932**



RangaRakes tamilnavarasam.com

## ஈ. வெ. ராமசாமியின் ஈஜிப்ட் கடிதம்

### "நாங்கள் பார்த்த கப்பல்"

சூயஸ் துறைமுகத்தில் ஒரு பெரிய கப்பலை 29 - 12 - 31 தேதியில் நாங்கள் பார்த்தோம். அதன் பெயர் "எம்பரஸ் ஆப் பிரிட்டன்" (Empress of Britain) நேற்றைக்கு முந்திய தினம் கனடியன் பசிபிக் ரெயில்வே கம்பெனி யாரால், அக்கப்பலின் மேல் தளத்தில் ஒரு விருந்து கொடுக்கப் பட்டது. அது சமயம் மேன்மை தங்கிய பிரதம மந்திரி அவர்களும் மேன்மை தங்கிய ஹை கமிசனர் அவர்களும் பிரதம விருந்தினராயிருந்தனர். மேற்படி கப்பலைப் பற்றிய சில ருசிகரமான விவரங்கள் கீழ்வருமாறு.

### உலக அதிசயக் கப்பல்

உலகத்திலே அதிசயமானாதும், பெரியதும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கே பெருமை தரக் கூடியதுமான, கனடியன் பசிபிக் போக்குவரவுக் கப்பலான "எம்பரஸ் ஆப் பிரிட்டன்" என்ற இந்தக் கப்பலைத் தவிர வேறு ஒன்றையும் கூற முடியாது. பிரிட்டிஷார் கடல் வியாபாரத்தில் மிகவும் கியாதி வாய்ந்தவர் கள் என்ற பரம்பரை புகழை இந்த அதி உந்நத கப்பல் ஒருபடி அதிகம் உயர்த்தியிருக்கின்றதென்றே சொல்லலாம். இது 800 அடி நீளமும் 100 அடி அகலமும் உள்ளது. மணி 1க்கு 20மைல் வேகம் போகக்கூடியது. மொத்தம் 42,500 டன் எடையுள்ளது. பிரகாசமான வெண்மை வர்ணத்தால் பூசப்பட்டும் மேல் தட்டின் பகுதிகளில் நீலநிறப் பட்டைகள் அழகாகத் தீட்டப்பட்டும், இதனை ஊடுருவிச் செல்லும் மூன்று பெரிய புகை போக்கிகள் மங்கலான பழுப்பு நிறத்தோடும் திகழ்வது கண்ணைக் கவரத் தக்க காட்சியாகும். அதன் அடிப்பாகத்தில் தீட்டப் பெற்றுள்ள பச்சை நிறப் பட்டைகள் அட்லாண்டிக் சமுத்திரத்தின் அலைகளின் நிறத்தைத் தோற்கடிப்பனவாய் இருக்கின்றன. மேல்தளத்திலிருந்து சுமார் 208 அடி உயரத்தில் பறக்கும் கொடிகளும், கப்பல் அசையும்போது காற்றினால் அலைக்கப்பட்ட அக்கொடிகள் அசையும் கம்பீரமும் தூரத்திலிருந்து காண்போருக்கு, ஓர் மிகப் பெரிய, உன்னத, நவீன ராஜ மாளிகையே தண்ணீரில் மிதப்பது போல் தோன்றும். "எம்பரஸ் ஆப் பிரிட்டன்" முதல் வகுப்புப் பிரயாணிகள் மூன்றாம் அறையும், 3ம் வகுப்பும் உடையதாயிருக்கிறது. இதை உண்டாக்கும் போதே ஒன்றுமட்டும் முக்கியமாய் கவனிக்கப்பட்டது. அதாவது, மற்ற எந்தக் கப்பலிலும் இல்லாத மாதிரி ஒவ்வொரு பிரயாணிகளுக்கும் அதிகமான இடவசதி அளிக்கத் தக்கதாய் இருக்க வேண்டுமென்பதே. மற்ற அதிக எடையுள்ள கப்பல்களைக் காட்டிலும், இதில் குறைந்த பிரயாணிகளே இருக்கக் கூடியதாயிருக்கிறது. சுமார் 1195 பிரயாணிகள் மட்டும் இதிலிருக்கலாம். ஆனால் கப்பல் மாலுமிகள் 714 பேர் இருக்கிறார்கள்.

### ஒன்பது அடுக்குகள்

பிரயாணிகளது உபயோகத்திற்காக ஒன்பது தட்டுகள் விடப்பட்டிருக் கின்றன. சலூன் பிரயாணிகளின் உபயோகத்திற்காக 11 பொது அறைகளும், ஒரு சிசுபோஷண சாலையும், யாத்ரீகர்களுக்கு 3 பொது அறையும், ஒரு சிசு போஷண சாலையும் 3ம் வகுப்புப் பிரயாணிகளுக்கு 2 பொது அறைகளும், ஒரு சிசு போஷண சாலையும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஏ தட்டிலும், பி தட்டிலும் பிரயாணிகள் உலாவவும் காற்று வாங்கவும் தகுந்த திறந்த வெளிகள் இருக்கின்றன. மற்றும் ஏ தட்டில் ஒரு பாகம் நடனத் திற்காக ஒதுக்கிவிடப் பட்டிருக்கிறது. பி தட்டு மிகவும் அலங்கார மாகவும் முதல் வகுப்புப் பிரயாணிகள் சௌகரியமாய் இளைப்பாறத்தக்க தாயும் இருக்கிறது. சலூன் பிரயாணிகளின் சௌகரியத்தை முன்னிட்டு டென்னிஸ் முதலிய விளையாடுமிடங்கள் கொண்ட தட்டு ஒன்றும் இணைக்கப்பட்டி ருக்கிறது. டி தட்டில் இரண்டு பெரிய சாப்பிடும் அறைகளும் அதிலிருந்து ஏணி வழியாக மேலே எப் தட்டுக்குச் சென்றால் அங்கு நீந்தும் குளமும் சிற்றுண்டிச் சாலையும், தேகாப்பியாச இடங்களும் மனோரம்மியமான காட்சி யளிப்பனவாயிக்கின்றன.

### நவீன தோற்றங்கள்

ஜனங்கள் சௌகரியமாய் உட்கார்ந்து பார்க்கத்தக்க காலரிகள் நிறைந்த டென்னிஸ் பந்து விளையாடுமிடமும் அதன் சமீபத்திலேயே சிற்றுண்டிச் சாலையும் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. எம்ப்ரஸ் ஆப் பிரிட்டனின் இன் னொரு முக்கியக் காட்சி என்ன வெனில் ஒவ்வொரு தட்டிலுள்ளவர்களும் நீந்துவதற்குக் கொண்டுள்ள ஆர்வமே தண்ணீர் மட்டத்தில் அவர்கள் எல்லோரும் நீந்துவது கண்டு களிக்கவேண்டிய ஆச்சரிய காட்சியேயாகும். கை கால் முதலிய அங்கங்களைப் பரீட்சை செய்து வேண்டிய சிகிச்சை செய்ய ஏற்பட்ட தனி அறைகள் பி. தட்டின் மத்தியில் இருக்கிறது. ஜி. தட்டில் பற்பல புதிய காட்சியளிக்கும் பல அறைகள் சுமார் 30 அடி அகலத்தில் அமைக்கப் பட்டிருக்கின்றன. மேற்சொன்ன பல நவீனங்களோடு எப். தட்டில் டர்க்கிஷ் பாத் (Turkish Bath) என்று சொல்லப்படும் ஒரு வித ஸ்நானத்திற்குரிய சாதனங்களெல்லாம் அமைக்கப் பெற்றிருக்கின்றன.


RangaRakes tamilnavarasam.com

## நூதன அலங்காரம்

இத்தகைய பெரிய கப்பலின் அலங்காரம் மிகவும் நூதனமானவை. ஒவ்வொரு இடத்திலும் அலங்காரங்கள் ஒழுங்காயும், நவீனமாயும் மேனாட்டுப் புராதன சித்திர வேலைப்பாட்டுடன் நவீன கொள்கைகளைப் புகுத்தி எங்கும் வளைவுகளாகவும், கோணங்களாகவும், சரிகோடுகளாகவும் உள்ள அலங்காரம் பார்க்கப் பார்க்கப் பரவசமாயிருக்கிறது.

பல கற்றுத்தேர்ந்த நிபுணர்களின் மேற்பார்வையில் எவ்வித குறை பாடுமில்லாது செவ்வனே அலங்கரிக்கப்பட்ட தோற்றம் போற்றக் கூடியதே.

## எம்பரஸ் அறை

முதல் முதல் கண்களைக்கவர்வது எம்பரஸ் அறை என்ற நடன அறையேயாகும். இதை மிகவும் பிரக்யாதி பெற்ற எம்பயர் நடன சாலைக்கு அடுத்தபடியாகச் சொல்லலாம். இருண்ட நீலநிற மேற்கூரையும், அதன் வழியாக மின்சார சாதனத்தால் தோன்றி மறையும் நட்சத்திரங்களின் ஒளியும், அவற்றைச் சுற்றிய வெண்ணிறமான சுவராகச் சதுரத் தூண்களும், மெல்லிய சிறகுகளால் அலங்கரிக்கப்பட்ட ஸ்தம்பத்தின் பீடங்களும் ஜரிகை வேலைப் பாடமைந்த இளஞ்சிவப்பான வெல்வட் பட்டினால் தொங்கவிடப் பட்ட ஜன்னல் திரைகளும், மற்றொரு மூலையில் மேடையின் பின்புறம் ஜன்னல் திரைகளையும் தோற்கடிக்கக் கூடிய சிங்காரத்தோடு தொங்கவிடப் பட்ட திரையின் பிரகாசமும் ஒருங்கே சேர்ந்து மனோரம்மியமான காட்சியளிப்பதோடு, இஃதோர் வாத்தியகாரர் மேடையோ, அன்றி பேசும் படக்காட்சி சாலையோவென்ற ஐயத்தை உண்டாக்காதிராது.

அடுத்தாற்போல் பசும் சலவைக்கல் தூண்களும், கண்ணாடிவில் கூரையும் கொண்டு, சிவப்பும் நீலமும் கலந்த வெல்வட் பட்டுத் திரைகள் தொங்கவிடப்பட்டதுமான இளைப்பாறும் கூடம் காணப்படுகிறது.

## சாப்பாடு மண்டபமும் – நீந்தும் குளமும்

விலையுயர்ந்த மரத்தினால் தூண்களே இல்லாது நுண்ணிய வேலைப் பாடுகளமைந்து இரண்டு பாகமாக தடுக்கப்பட்ட சாப்பிடும் மண்டபத்தின் சுவற்றில் காணப்படும் சித்திரங்கள் ஆச்சரியப்படத்தக்கன வாயிருக்கின்றன. ஒரு புறம் புஷ்பங்கள், பறவைகள் முதலிய சித்திரங்களும் மற்றொருபுறம் வானமும், நட்சத்திரங்களைப் போலும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 40 அடி அகலமும் தூண்கள் தாங்கிய கண்ணாடிக் கூரையும், பளிங்கு போன்ற தண்ணீரும் கொண்ட நீந்தும் குளம் மிகவும் அழகானது. அக்கண்ணாடிக் கூரையின் வழியாக செயற்கை சூரிய ஒளி செலுத்தப்படுகிறது. அதன் ஒரு பாகத்திலிருந்து படிக்கட்டுகளின் வழியாக மேல் தளத்துக்கும், சிற்றுண்டிச்



சாலைக்கும், உடைமாற்றிக் கொள்ளும் அறைக்கும் செல்ல வசதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

## ஆகாயவசனி

எம்பரஸ் ஆப் பிரிட்டனில் பிரயாணிகள் இரண்டு கண்டத்திலிருந்தும் ஆகாயவசனியின் உபயோகத்தால் ஆனந்தமடைகிறார்கள். சேமிக்கப் பட்ட ஓரிடத்திலிருந்து சுமார் 10 அல்லது 12 ஒலி பெருக்கும் கருவியின் மூலம், மேல் தட்டுகளுக்கும் முக்கியமான பொது அறைகளுக்கும் நிகழ்ச்சிகள் கேட்கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

## சுத்தக் காற்று

எம்பரஸ் ஆப் பிரிட்டனில் உள்ள பிரயாணிகள் வெளியேவிடும் சுவாசக் காற்று ஒவ்வொரு 7 நிமிஷத்துக்கு ஒரு தரம் சுத்தமாக்கப்பட்டு, புதிய ஆரோக்கிய காற்று நிரப்பப்படுகிறது. ஓர் நூதன சாதனத்தால் கடல் காற்று ஓரிடத்தில் சேகரிக்கப்பட்டு பின்னர் காலநிலைக்குத் தக்கவாறு உஷ்ணமோ அல்லது குளிர்ச்சியோ ஆக்கப்பட்டு, பொது அறைகளிலும், மண்டபத்திலும் பொருத்தியிருக்கும் விசைகளை அழுத்துவதன் மூலம் எல்லாவிடங்களிலும் சுத்தக் காற்று நிறப்பப்படுகிறது. மற்றும் தனிப்பட்ட நபர்களது விருப்பத் திற்கேற்றவாறு இளங்காற்றாகவோ அல்லது பெருங் காற்றாகவோ, தாங்கள் விரும்பிய அறைகளுக்கும் இடத்திற்கும் வரவழைத்துக் கொள்ளலாம்.

## இணையற்றது

எம்ப்ரஸ் ஆப் பிரிட்டன் எல்லா வகையிலும், இணையற்றதாகும். 42500 டன் எடையுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் இக்கப்பல், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய துறைமுகங்களின் மத்தியில் செல்லும் கப்பல்களெல் லாம் பெரியது, ஐரோப்பாவுக்கு செண்ட் லாரன்ஸ் வழியாகப் பிரயாணம் செய்யும் கப்பல்களிலெல்லாம் பெரியது, உலகப் போக்குவறவு கப்பல்களிலே பெரியது, லண்டன் துறைமுகத்திலேயே பெரியதென பதிவு செய்யப்பட்டது, மகா யுத்தத்திற்குப் பிறகு இங்லாந்திலோ, அமெரிக்காவிலோ இது போன்று கட்டப் படாத இணையிலாதது. செண்ட் லான்ரஸ் வழியிலேயே அதிக வேகமானது. இக் கப்பலின் முக்கிய அம்சமாக கவனிக்கப்பட்ட கரைக்கும் கப்பலுக்கும் டெலிபோன் சம்பந்தம் இணைக்கப்பட்டது. ராயல் கழகத்தினராலேயே அலங்கரிக்கும் பெருமை வாய்ந்த முதல் கப்பல் இது ஒன்றே. இன்னும் சில்லரை விஷயங்களைப் பற்றி எழுத வேண்டுமானால் விரிந்து கொண்டே போகும். மேற்கூறப்பட்ட காரணங்களால் இக்கப்பலின் தனிச் சிறப்பு தெள்ளென விளங்குகிறது.

**குடி அரசு – பயணக் கடிதம் – 24.01.1932**



RangaRakes tamilnavarasam.com

# சமதர்மப் போர்

**– தேசியத்துரோகி**

டில்லியில் உள்ள போலீஸ் சீனியர் சூப்பரின்டென்ட் அவர்கள் போலீஸ் இலாகாவில் பெண்களையும் சேர்க்க முயற்சி செய்கிறார். 'போலீஸ் உத்தியோகத்திற்கு பெண்கள் தேவை' என விளம்பரங்களும் வெளியிட்டி ருக்கிறார். இந்த நிகழ்ச்சியை நாம் பாராட்டுகிறோம். எதற்காகப் பெண் போலீஸ் தேவை என்று சொல்லுகிறார் என்பதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. ஆனால் இது பெண்களின் சமத்துவத்திற்கு ஏற்ற செய்கையாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

சென்னையில் சென்ற வருஷத்தில் கூடிய பெண்கள் மகாநாட்டில் பெண்களுக்கு போலீஸ் உத்தியோகம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக் கப்பட்டிருப்பதாக நமது ஞாபகம். டாக்டர். முத்துலட்சுமி அம்மாள் அவர்கள் கூட ஒரு சமயம் பெண்களுக்குப் போலீஸ் உத்தியோகம் வேண்டுமெனப் பேசியிருப்பதாக நினைக்கிறோம். பெண்மக்களும் ஆண்மக்களைப் போல் சமஉரிமை பெற வேண்டும் என்று சொல்லுகின்ற ஆண் பெண்கள் அனை வரும் டில்லி போலீஸ் சூப்பரின்டென்டின் யோசனையை வரவேற்பார்க ளென்று நம்புகின்றோம்.

சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டிருக்கும் பெண்களைப் போலீசார் இம்சிப்பதைப்பற்றி சீர்திருத்தமுள்ள பெண்களெல்லாம், சமத்துவம் வேண்டுகின்ற பெண்களெல்லாம் ஆத்திரப்படுகின்றார்களாம். ஆனால் இது எதற்கு? என்பது தான் நமக்கு விளங்கவில்லை. சட்ட மறுப்பில் கலந்து கொண்டு மறியல் – ஊர்வலம் முதலியவைகளை நடத்துகின்ற ஆண்மக்கள் போலீசாரால் அடிபடுகின்ற பொழுது பெண்களும் அடிபடுகின்றது நியாயந் தானே? ஆண்மக்கள் தண்டனை அடைகின்ற பொழுது பெண்மக்களும் தண்டனை அடைய வேண்டியது முறைதானே! சுகத்தில் மாத்திரம் ஆண்களுக் குள்ள உரிமைகள் எல்லாம் பெண்களுக்கும் வேண்டும், கஷ்டத்தில் மாத்திரம் பெண்களுக்குப் பங்கும், சமத்துவமும் வேண்டாமென்றால் யார் கேட்பார்கள்? சர்தார் பட்டேல் சொல்லியபடி 'பிள்ளைகளைப் பெறுவதும், வளர்ப்பதுந்தான் பெண்கள் கடமை' என்பதை ஒப்புக் கொண்டு அவர்கள்



சட்ட மறுப்பில் கலந்து கொள்ளாமல் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நான்கு வகையான பழக்க குணங்களுடன் வீட்டிற்குள்ளேயே இருந்தால் அவர்களை யார் என்ன செய்யப் போகிறார்கள்?

ஆனால் ஆண்மக்களை ஆண் போலீசார் தடுக்கிறார்கள். பெண் களைத் தடுக்க பெண் போலீசார் இல்லை. ஆண் போலீசார்தான் அவர்களைத் தடுக்கிறார்கள். ஆகையால் பெண் போலீசாரை நியமித்துவிட்டால் இந்த வித்தியாசமும் ஒழிந்து போகிறது. ஆகையால் பெண் போலீசார் நியமிப்பதை நாம் மனப்பூர்வமாய் பாராட்டுகிறோம். அன்றியும் விபசாரத் தடைச் சட்டம் அமுலுக்கு வந்திருக்கும் இச்சமயத்தில் பெண் போலீசார் ஏற்படுவது சீர் திருத்த வேலைக்கும் சாதகமாகுமென்று சந்தோஷப்படுகின்றோம். ஆகை யால் பெண் போலீசாரை ஏற்படுத்துவது எப்பொழுதும் நிலையாக இருந்து வரச் சீர்திருத்தவாதிகள் முயல வேண்டும்.

## II

பிப்ரவரி 4–ந்தேதி கூடும் இந்திய சட்டசபைக் கூட்டத்தில் சமூக சீர் திருத்த மசோதாக்கள் கொண்டு வரப்படுகின்றனவாம். அவைகளில் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்களால் கொண்டுவரப்படும் தீண்டாதவர்களுக்கு இருந்துவரும் அசௌகரியங்களைப் போக்கும் மசோதாவும், தேவதாசி முறையை ஒழிக்கும் மசோதாவும் முக்கியமானவையாகும். இதில்தான் இந்திய சட்டசபையின் யோக்கியதை விளங்கப் போகிறது. ஜாதி இந்துக்கள் ஏழைத் தீண்டாதவர்களின் நன்மையை எவ்வளவு தூரம் கவனிக்கின்றவர்களா யிருக்கின்றார்கள் என்பது வெட்டவெளியாகி விடும். காங்கிரசும் மற்ற வைதீகர்களும், ஜாதி இந்துக்களும் தீண்டாதவர்களுக்குத் தனிப் பிரதி நிதித்துவம் வேண்டுவதில்லை என்று சொல்லித் தீண்டாதவர்களின் கோரிக்கையை மறுத்ததின் சூழ்ச்சி விளங்கும். "தேவதாசி முறை மதசம் மந்தமானது. அது ஒழிந்து விட்டால் இந்து மதத்திற்கு ஆபத்து" என்று சொல்லுகின்ற கூட்டத்தார் இந்திய சட்டசபையில் எத்தனைபேர் இருக்கின்றனர் என்பதும் வெளிப்படும். இப்பொழுது சட்டசபையில் திரு. எம். கே. ஆச்சாரியார், பண்டித மாளவியா போன்றவர்கள் இல்லை யென்றாலும் திரு. ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியாரும், அவர் கூட்டத்தைச் சேர்ந்த சிலரும் இருக்கின்றார்கள் என்பது நேயர்களுக்குத் தெரியும். இவர்கள் எதிர்க்காமல் இருக்க மாட்டார்கள். ஆனால் அரசாங்கத்தார் வைதீகர் பக்கம் சேருவார்களா? அல்லது நமது சுயமரியாதைத் தலைவர் திரு. ஆர்.கே. ஷண்முகம் அவர்கள் பக்கம் சேருகின்றார்களா? என்பது நமக்கு இன்னும் விளங்கவில்லை.

இந்த சட்டசபைக் கூட்டத்தில் மற்றொரு கரடியும் வருகிறது. ஒரே கரடி பல உருவமாக வருகிறதாம். அதாவது சாரதா சட்டத்தை எடுத்து விட வேண்டும் என்றும், திருத்த வேண்டுமென்றும் பல மசோதாக்கள்



RangaRakes tamilnavarasam.com

வருகின்றனவாம். இந்த மாதிரியான மசோதாக்களைப் பல இந்துக்கள் கொண்டு வருகிறார்களாம். ஒரு முஸ்லீம் கூட இத்தகைய மசோதா ஒன்று கொண்டு வருகிறாராம். இதுதான் ஆச்சரியமான சேதி. குழந்தைகளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஆசைப்படும் கிழவர்களின் 'அதிர்ஷ்டம்' எப்படி இருக்கிறதோ தெரியவில்லை.

சாரதா சட்டத்தை ஆட்சேபித்தும் திரு. ஆர் கே. ஷண்முகம் அவர்களின் மசோதாக்களை கண்டித்தும் நாடெங்கும் உள்ள வைதீகர்கள் தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். 'நாங்கள் ஒற்றுமையடைந்து விட்டோம். சீர்திருத்தம் பெற்று விட்டோம். ஆகையால் முழு சுயராஜ்யம் வேண்டும்' என்று சொல்லும் காங்கிரஸ்காரர்களின் உண்மைப் பேச்சு இச்சமயம் விளங்கி விடும். ஆகையால் இந்த மசோதாக்களின் கதி என்னவாகிற தென்பதைக் கவனித்துக் கொண்டிருப்போம்.

## III

திரு. காந்தி அவர்கள், தாம் ஜெயிலுக்குப் போகுமுன்பு, ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகத்தைப் பற்றி தமது 'யங் இந்தியாவில்' ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தார். அக்கட்டுரையில் "ஆலயப் பிரவேச சத்தியாகிரகஞ் செய்ய நினைப்பவர்களுக்கு, ஆலயத்தின் மேல் நம்பிக்கை ஏற்பட வேண்டியது அவசியமாகும். ஆலயத்தில் நம்பிக்கையற்றவர்கள் சத்தியா கிரகஞ் செய்ய நினைப்பது தவறு. ஆலயப் பிரவேசம் ஒரு மத உரிமை. ஆகையால் இந்துக்களின் கோயில்களில் இந்துக்கள் அல்லாதவர்கள் பிரவேசிக்க முயற்சிப்பது தவறு. இந்த சத்தியாக்கிரகத்தில் இந்துக்கள் அல்லாதவர்கள் வெளியிலிருந்து கொண்டு உதவி புரியலாமே தவிர கலந்து கொள்ளக் கூடாது" என்ற அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன.

ஆகவே சுயமரியாதைக்காரர்கள் இந்த அபிப்பிராயத்தை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? இந்த அபிப்பிராயத்தை ஒப்புக் கொண்டு சத்தியாக்கிரகம் பண்ணுகிறவர்களுடன் எப்படிக் கலந்து கொள்ள முடியும்? நாம் கோயில்கள் ஒழிய வேண்டும் என்று சொல்லுகிறோம். இப்படிச் சொல்லுகிற நாம் எப்படிக் கோயில்கள் மேல் நம்பிக்கை கொள்ள முடியும்? ஆகையால் தற்போது காங்கிரஸ்காரர்களால், காங்கிரஸ்காரர்களின் ஆதரவு பெற்றவர்களால் நடத்தப்படும் ஆலயப்பிரவேச சத்தியாக்கிரகம் மதப்பற்று கொண்டவர்களாலேயே நடத்தப்படுகிறதென்று தெரிந்து கொள்ளலாம். ஆகையால்தான் மத நம்பிக்கை கொண்டவர்களால், மதத்தை அறியாமல் காப்பாற்றுவதற்காகச் செய்யப்படும் சத்தியாக்கிரகங்களில் சுயமரியாதைக் காரர்கள் கலக்கவில்லை. அப்படிக் கலந்து கொள்ளுவதும் தவறு என்று அபிப்பிராயப்படுகிறோம்.



## IV

திரு.காந்தி அவர்கள் "சட்டசபை தீர்மானங்கள் குடிஅரசின் தத்துவப் படி பொது ஜனங்களின் அபிப்பிராயத்தைச் சார்ந்ததாகவே யிருக்கும். ஆகையால் பொது ஜன அபிப்பிராயத்தை வளர்க்க வேண்டுமானால், தகுந்த முறையில் நடத்தப்படும் உண்மையான சத்தியாக்கிரகத்தைத் தவிர வேறு வழியில்லை" என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். பொது ஜன அபிப்பிராயப்படிதான் சட்டசபையில் சட்டங்கள் ஏற்படுத்த முடியும் என் பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் பொது ஜன அபிப்பிராயத்தை வளர்க் கச் சத்தியாக்கிரகந்தான் சரியான வழி என்று சொல்லுவது தவறாகும். சத்தியாக் கிரகஞ் செய்தால் எதிரிகள் இன்னும் பலமாக எதிர்த்து நிற்பார்களேயொழிய சாதகமாக மனந்திரும்பமாட்டார்கள். சத்தியாக்கிரகம் என்பது அகிம்சை யாகாது. ஒருவருடைய காரியங்களைத் தடுப்பது எப்படி அகிம்சையாகும்? ஒருவருடைய காரியங்களை நடைபெற வொட்டாமல் எந்த வகையில் தடுத் தாலும் அது ஹிம்சையேயாகும். ஆகையால் சத்தியாக்கிரகத்தால் எதிர்க் கட்சியின் கொள்கை உறுதிப்பட்டு அவர்கள் இன்னும் பலமாக எதிர்த்துத்தான் நிற்பார்கள். ஆகையால் பிரச்சாரத்தாலும், பத்திரிகைகளாலும் தான் பொது ஜனங்களைத் திருப்ப முடியும். ஸ்பெயின், டர்க்கி, ரஷ்யா, பிரான்சு முதலிய தேசங்களில் நடந்த சீர்திருத்தப் புரட்சிகளுக்குச் சாதகமாகப் பொது ஜனங் களின் மனம் திரும்பியது பத்திரிகைகளாலும் தலைவர்களின் பிரசாரத் தாலுமே ஒழிய சத்தியாக்கிரகத்தால் அல்ல என்பது திரு. காந்தியவர்களுக்குத் தெரியாததல்ல. ஆகையால் பிரசாரத்தின் மூலம் பொது ஜனங்களின் மனத் தைத்திருப்பிச் சட்ட சபைகளின் சமதர்மச் சட்டங்கள் செய்து, சமதர்மத்தை நிலை நிறுத்துவதே கைகூடும் மார்க்கம் என்று நாம் சொல்லுகிறோம்

**குடி அரசு - கட்டுரை - 31.01.1932**



RangaRakes tamilnavarasam.com

# வெண்ணெயை வைத்துக் கொண்டு?

நமது நாடு விடுதலை பெற வேண்டும் என்று நமது நாட்டிலுள்ள எல்லாக் கட்சியின் தலைவர்களும் கூறிக் கொண்டு வருகின்றனர். அதற்காக ஏதோ சில காரியங்களையும் செய்து கொண்டும் வருகின்றனர். தற்பொழுது சுயராஜ்யத்தைப் பற்றியும், தேச விடுதலையைப் பற்றியும் பேசாத மனிதர்கள் ஒருவர்கூட இல்லை யென்றே சொல்லலாம். ஆனால் யாரும் நமது நாட்டு ஏழை ஜனங்களின் துன்பத்தைப் போக்கி அவர்களைச் சுகமாக வாழும்படி செய்வதற்குத் தகுந்த வழி என்ன என்பதைப் பற்றிச் சிந்திப்பது கிடையாது. சுயராஜ்யம் வந்து விட்டால் எல்லாம் சரிப்பட்டு விடும் என்று ஒரேயடியாகச் சொல்லி விடுகிறார்கள். இப்படிப் பேசுகின்ற கூட்டத்தார் இது வரையிலும் நமது நாட்டு மக்களின் கஷ்டத்தைப் போக்க ஏதாவது செய்திருக்கிறார்களா? அல்லது அதைப் பற்றி நினைத்ததுதான் உண்டா? என்றால் கொஞ்சங்கூட இல்லை என்று நாம் துணிந்து சொல்லுவோம்.

நமது நாட்டிலேயே பிறந்து வளர்ந்த எண்ணற்ற மக்கள், இன்று கட்டத் துணி இல்லாமலும், உண்ண உணவில்லாமலும், இருக்க இடமில்லாமலும், மற்ற மக்களுடன் சேர்ந்து வாழ முடியாமலும் மிருகத்தை விடக் கேவலமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அனேக மக்கள், மிருகத்திலும் கேவலமாக இந்த நாட்டில் கிடந்து உண்ண உணவில்லாமல் சாவதை விட அந்நிய நாடுகளில் சென்று எந்தக் கஷ்டத்திற்குள்ளானாலும் அவமானத்திற்குள் ளானாலும் வயிற்றையாவது கழுவிக் கொண்டிருக்கலாம் என்னும் எண்ணத் துடன் கப்பலேறிப் போய் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பொழுது தென்னாப்பிரிக்கா, மலேயா, பர்மா, சிலோன், ஜாவா, கெனியா, கிழக்காப்பிரிக்கா முதலிய நாடுகளில் நமது நாட்டு இந்தியர்களே அதிகமாகக் குடியேறிக் கூலிகளாக இருக்கின்றனர். இந்த நாடுகளில் ‘இந்தியர்’ என்ற வார்த்தைக்கு ‘கூலிகள்’ என்ற அர்த்தமே வழங்கி வரு கின்றது. இம்மாதிரி அந்நிய தேசத்தில் சென்று வசிப்பவர்களில், வியாபாரம், உத்தியோகம் முதலிய தொழில்களில் ஈடுபட்டிருக்கும் இந்தியர்கள் மிகச் சிலரேயாவார்கள். மற்ற நூற்றுக்கு தொண்ணூற்றொன்பதே முக்காலே மூன்று வீசம் மக்கள் கடல் கடந்து சென்றும் கஷ்டம் தொலையாமல் கூலிகளாகவே வாழ்ந்து வருகின்றனர்.



இவ்வாறு லட்சக்கணக்கான மக்கள் தங்கள் தாய் நாட்டைத் துறந்து – சிலர் பெண்டு பிள்ளைகளையும் கூடப் பரிதவிக்க விட்டுவிட்டு, உற்றார் உறவினர்களை எல்லாம் றந்து, வேற்று நாடுகளுக்கும், வேற்றுத் தீவுகளுக்கும் குடியேறுவதன் காரணத்தை நன்றாய் யோசித்தால் விளங்காமல் போகாது.

நமது நாட்டிலேயே பிறந்த எண்ணற்ற மக்களுக்குக் குடியிருப்பதற்குச் சொந்தமாக ஒரு ‘சென்ட்’ நிலங்கூட இல்லை. அவர்கள் பிறர் அதாவது உயர்ந்த சாதிக்காரர்களின் நிலங்களில் குடியிருந்து கொண்டு, அந்நிலக் காரர்களுக்கு அடிமை வேலை செய்து அவர்கள் கொடுக்கும் குறைந்த கூலியைப் பெற்று ஜீவனஞ் செய்ய வேண்டியிருக்கிறது. இவ்வாறு வேலை செய்து கொண்டிருக்கும் எஜமானனிடத்தில் அதிகக் கூலி கேட்டாலோ அல்லது அதிகக் கூலி கிடைக்கும் இடத்திற்கு வேலைக்குப் போனாலோ உடனே அவர்கள் இந்த பரிதாபகரமனான மக்களுக்குக் குடியிருக்கக் கூட இடமில்லாமல் தங்கள் நிலத்தை விட்டு விரட்டுகின்றனர்.

இத்தகைய ஏழை மக்களின் சந்ததிகளாவது முன்னுக்கு வர வழியிருக் கிறதா? என்று ஆலோசனை செய்து பார்த்தால் அதற்கும் வழி இல்லை. இவர்கள் படிப்பதற்கும் வசதி இல்லை. ஏழை மக்கள் சிறு பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப முடியாத நிலையில் இருக்கின்றனர். முதலில் இவர்களால் பள்ளிக்கூடச் சம்பளம் கொடுக்க முடியாது. இரண்டாவது, இவர் கள் பள்ளிக்கூடம் போய்ப் படிப்பதாயிருந்தால் சாப்பாட்டிற்கு என்ன செய் வது? ஆகையால் இந்த ஏழை மக்களின் சிறு பிள்ளைகளும் ஏதாவது வேலை செய்து சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமையில் இருக்கிறார்கள். ஆகையால் இந்த நிலையைப் பரிகரித்து இவர்களை யெல்லாம் கல்வியுடைய வராக்கி மனிதராக்க என்ன முயற்சி செய்யப்படுகிறது?

தொழில் செய்து ஜீவிக்கும் நிலைமையிலுள்ள அனேகருக்கு தொழில் கிடைப்பதில்லை. நமது நாட்டில் பூர்வீக காலந் தொடங்கி நடைபெற்று வருந் தொழில் விவசாயத்தொழில் ஒன்றேயாகும். அதுவும் சென்ற யுகங்களில் எந்த முறையில் நடந்துகொண்டிருந்ததோ அந்த முறையில்தான் இன்றும் நமது நாட்டில் நடைபெற்று வருகின்றது. ஆகையால் இது கஷ்டமான தொழிலாக வும் லாபமற்றத் தொழிலாகவும் இருந்து கொண்டிருக்கிறது. விவசாயத் தொழிலைப் புதிய முறையில் அபிவிருத்தி செய்தாலொழிய அதில் லாபத்தை ஏராளமாக எதிர்பார்க்க முடியாது ; விவசாயத் தொழிலாளர்களின் கஷ்டமும் நீங்காது. மற்றபடி வேறு தொழிற்சாலைகள் மிகுதியாக ஏற்படவில்லை. போயும் போயும் திரு. காந்தியவர்கள் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில் கதர் ஒன்றேயாகும். இதற்காக ராட்டினத்தில் நூல் நூற்று அரை அணா ஒரு அணா பெற்று எத்தனை மக்கள் சுகமாக வாழ முடியும் என்று கேட் கிறோம்?



RangaRakes tamilnavarasam.com

அன்றியும் ஏழை மக்கள் சுகாதாரமற்ற இடங்களிலும், நெருக்கமான சிறிய குடிசைகளிலும் கும்பலாக வாழ்ந்து நல்ல காற்றும் வெளிச்சமும் இயற்கையாக இருந்தும் அவற்றை அனுபவிக்க முடியாமலிருக்கின்றார்கள். பல வகையான நோய்களுக்கு ஆளாகி ஆரோக்கிய வாழ்வும் இன்றி, அகால மரணமும் அடைந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த மாதிரியாக இவர்கள் அடையும் கஷ்டங்களைப் போக்க என்ன செய்யப்பட்டது? இந்த மாதிரியான நம்மால் நிவர்த்திக்கக் கூடியதாயிருந்தும் நிவர்த்திக்காத காரணத்தினால் தானே எண்ணற்ற மக்கள் நமது நாட்டை விட்டு வெளியேறு கின்றனர். தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களில் வெள்ளைக்காரர்கள் இந்தியர்களை அவமதிக்கிறார்கள் என்பதற்காகப் பெரிய கிளர்ச்சி செய்கின்ற அரசியல் தலைவர்களில் யாராவது நமது நாட்டில் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்று இருக்கின்ற வைதீகர்கள் ஏழை மக்களைப் படுத்தும் கொடுமையைப் பற்றி ஏதாவது பேசுகின்றார்களா? கிளர்ச்சி செய்கின்றார்களா? என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்கும் படி தெரிவித்துக் கொள்ளு கிறோம்.

இவ்வாறு நமது நாட்டில் ஏழை மக்கள் கஷ்டப்படுவதற்கும் அக் கஷ்டம் தாங்க முடியாமல் அவர்கள் கடல் கடந்து முன்பின்னறியா அயல் நாடுகளுக்குச் சென்று துன்ப வாழ்க்கை வாழ்வதற்கும் நமது நாட்டுப் பணக் காரர்களாலும், உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்களாலும், அவர்கள் விடுதலை பெறுவதற்கும் இக்கஷ்டங்களை நிவர்த்திக்க முடியாமலிருப்பதற் கும் காரணம் என்ன என்று கேட்டால் தேசாபிமானிகளென்று இருக்கிறவர்கள் உடனே தயங்காமல் ஒரு காரணம் சொல்லிவிடுகின்றனர். அந்தக் காரணம்:- “ஆங்கிலேயராகிய அன்னியர் நமது நாட்டை ஆளுவதால்தான் நமது நாடு இந்த நிலையில் இருக்கிறது” என்று சொல்லி விடுகிறார்கள். ஆனால் இது சரியான காரணமாகுமா? என்றுதான் நாம் கேட்கின்றோம்.

“மதம், மதம்'' என்ற குருட்டு நம்பிக்கையின் பேரால் நாம் குடும்பங் களில் செய்கின்ற செலவுகளை விட்டு விட்டுப் பொதுவாக நமது நாட்டில் ஒன்றுக்கும் பயன்படாமல் பொதுச் சொத்தாக இருந்து வீணாகும் பொருள்கள் மாத்திரம் எவ்வளவு என்று பாருங்கள்! திருப்பதி, இராமேஸ்வரம், சீரங்கம், மதுரை, மாயவரம், திருவடமருதூர், சிதம்பரம், திருவாரூர், பழனி, ஆவுடையார் கோயில், வேதாரண்யம், திருவையாறு, வைத்தீஸ்வரன் கோயில் போன்ற தேவஸ்தானங்களுக்கு இருக்கும் சொத்துக்கள் எவ்வளவு? அவைகளி லிருந்து நிரந்தரமாக வந்து கொண்டிருக்கும் வருஷ வரும்படி எவ்வளவு? இவையல்லாமல் யாத்ரீகர் மூலம் வரும் லாபம் எவ்வளவு? என்று பார்த்தால் எல்லாம் கிட்டத்தட்ட 60 அல்லது 70 கோடிக்குக் குறையாமல் இருக்கக் கூடுமென்பதில் சந்தேகமில்லை. இவற்றோடு திருவாடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், குன்றக்குடி, மதுரை, கும்பகோணம், சிருங்கேரி முதலிய பல ஊர்களில் உள்ள மடங்களுக்கு இருக்கும் சொத்துக்கள் குறைந்தது 10 அல்லது 15 கோடி ரூபாயாவது இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சமீபத்தில்



திருவாங்கூரில் பத்மநாப சாமி கோயிலில் உள்ள நாணயங்களைக் கணக்கிட்ட போது 20 லெட்சம் ரூபாய் பெறுமானமுள்ள வெள்ளி நாணயங்களும் 30 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள தங்க நாணயங்களும் இருக்கின்றனவாம். இன்னும் திறந்து பார்த்து விலை மதிப்பிட முடியாமல் அனேக பெட்டிகள் கிடக்கின்றனவாம். அவைகளையும் கணக்கிட்டால் குறைந்தது 50 லட்ச ரூபாய்க்காவது இருக்கக்கூடும். ஆகவே, திருவாங்கூர் பத்மநாப சாமி கோயி லில் ஒன்றுக்கும் உதவாமல் பாழாகிக் கிடக்கும் பொருள் மாத்திரம் ஒரு கோடி என்றால் மற்ற கோயில்களையெல்லாம் சேர்த்துப்பார்த்தால் 60 அல்லது 70 கோடிக்கு குறையாமலிருக்கலாமென்று நாம் கூறியதில் சிறிதும் தவறு இருக்க முடியாது.

இந்த மாதிரி நமது நாட்டிலுள்ள குழவி கல்லுகளுக்கும், கரடுமுரடான பொம்மைக் கற்களுக்கும், சந்நியாசி வேஷதாரிகட்கும் கோடிக்கணக்கான பொருளை வைத்து விட்டு ‘நமது நாடு தரித்திர நாடு! தரித்திர நாடு!! வெள் ளைக்காரர்களால் நாம் தரித்திரமடைந்து விட்டோம். ஆகையால் அந்நிய ராகிய வெள்ளைக்காரர்கள் நமது நாட்டை விட்டுப் போனால்தான் நமது தரித்திரம் நீங்கும் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் ஏதாவது அர்த்த முண்டா!’ என்றுதான் நாம் கேட்கின்றோம்.

உயிரற்ற கல்லுகளும் சந்நியாசிகளுமே கோடிக்கணக்கான ரூபாய் களுக்கு முதலாளிகளாய் இருப்பதையும், இவைகளுக்காக ஒவ்வொரு வருஷமும், ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு நாளும் அழிக்கப்படும் பண்டங் களையும், ரூபாய்களையும் பார்த்த எந்த அறிவுள்ள மனிதனாவது நமது நாட்டை வறுமை நிறைந்த நாடு என்று சொல்லுவதை ஒப்புக்கொள்ள முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள்.

இந்த மாதிரி கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒருவருக்கும் பிரயோசனப் படாமல் துருப்பிடித்துக் கிடப்பதற்குக் காரணம் நமது மக்களின் மூளையில், நமது தலைவர்கள் என்கிறவர்களின் மண்டையில் அழுக்கேறிப் பாசி பிடித்து விளக்கமின்றி இருப்பதுதானே காரணம்? இந்த அழுக்கை - பாசியைக் கழுவி சுத்தப்படுத்தினாலல்லவோ நாம் விடுதலை பெற முடியும்?

காலஞ் சென்ற பனகால் மன்னரால் தேவஸ்தானங்களும், மடங்களும் தாங்கள் செய்யும் செலவுகளுக்குக் கணக்கு ஒப்பிக்க வேண்டும் என்பதற்காகவும் அவைகளின் சொத்துக்கள் அழியாமல் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற் காகவும் நிறைவேற்றப்பட்ட ‘இந்து மத தரும பரிபாலனச் சட்ட’த்தையே நமது நாட்டு வைதீகக் கூட்டத்தார் எதிர்த்து ‘மதமே போச்சு, மதத்திற்கு ஆபத்து’ என்று பெருங் கிளர்ச்சி செய்தார்களென்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். இத்தகைய மனப்பான்மையுடைய வைதீகர்கள் இவைகளின் சொத்துக்கள் நாட்டிற்குப் பிரயோசனப்பட வேண்டும் என்று சொன்னால் சாமானியமாக ஒப்புக்கொள்ளவா போகின்றார்கள்? இவ்வாறு சொல்லுகின்ற



RangaRakes tamilnavarasam.com

வர்களை நாஸ்திகர்களென்றும் மதத் துரோகிகள் என்றும், கடவுள் துரோகிகள் என்றும், தேசத் துரோகிகள் என்றும் சொல்லிப் பலமாக எதிர்ப் பிரசாரம் புரியாமல் விடமாட்டார்கள் அல்லவா?

ஸ்பெயின், ரஷியா முதலிய நாடுகளில் கோயில்கள் மடங்கள் இவை களின் சொத்துக்கள் அரசாங்கத்தாரால் பறிமுதல் செய்யப்பட்டு தேசத்தின் நன்மைக்குப் பயன்படுத்தப்பட்டதைப் போல நமது நாட்டிலும் இவைகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யாவிட்டாலும் அவைகளின் வரும்படியைக் கொண்டு, தொழிற்சாலைகளும், ஆராய்ச்சி ஸ்தாபனங்களும் கல்விச் சாலைகளும் ஸ்தாபிக்கவாவது சம்மதிப்பார்களா என்றுதான் நாம் கேட் கின்றோம். மதத்தின் பெயரால், கல்விக்கும். தொழில்களுக்கும், வைத்தியத் திற்கும் செலவு செய்யும் கிறிஸ்தவ மதத்தையுடைய வெள்ளைக் கார அரசாங்கம் நாமும் நமது மதச் சொத்துக்களை இவ்வழியில் செலவு செய்வ தற்குத் தடை செய்யாது என்பது நிச்சயம். இதற்கான சட்டங்களை நாமே செய்து கொள்ளலாம். ஆனால் யார் இதற்குச் சம்மதிக்கிறார்கள்? என்று கேட் கிறோம். காங்கிரஸ்காரர்கள் கேட்கும் சுயராஜ்யத்திலும் இந்த மதச் சொத்துக் கள் இப்பொழுது இருக்கும் பாழான நிலையிலேயே இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையிலிருக்க வேண்டும் என்றுதானே சொல்லு கிறார்கள்? ஆகவே எந்த சுயராஜியம் வந்துதான் என்ன பயன்? ஏழை மக்களின் கதி என்றும் ஒரே கதிதானே? ‘இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?’ என்று ஏழைமக்கள் கூறும் பழமொழியில் என்ன குற்றமிருக்கிறது?

நமது மதத்தின் பேரால் புதைபட்டுக் கிடக்கும் கோடிக்கணக்கான பொருளைக் கொண்டு கல்விச் சாலைகளும், கைத்தொழிற் சாலைகளும், ஆராய்ச்சி சாலைகளும் ஏற்படுத்தி நமது மக்களை இத்துறையில் ஈடுபடுத்து வோமானால் நமது நாட்டில் ஒருவராவது எழுதப்படிக்கத் தெரியாமல் இருக்க முடியுமா? ஒருவராவது தொழிலற்ற சோம்பேரியாக இருக்க முடியுமா? ஒருவராவது பகுத்தறிவில்லாத மூட நம்பிக்கையுள்ளவராக இருக்க முடியுமா? என்றுதான் கேட்கின்றோம்.

ஆகவே, நமது மக்களைக் கெட்டியாகப் பிடித்து அழுத்திக் கொண்டி ருக்கும் மதம் என்னும் பாரம் இறங்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் தலைதூக்கி கண்விழித்து மற்றவர்களைப் பார்க்க முடியும். பிறகுதான் பாழாகக் கிடக்கும் திரவியங்களை நாட்டின் நன்மைக்கு உபயோகப்படுத்தச் சம்மதிப்பார்கள். இல்லாத வரையில் நாம்என்றும் அடிமைகளாகவே, பகுத்தறிவில்லாதவர்களாகவே இருக்க வேண்டியதுதான்.

இதுவரையிலும் ஆயிரக் கணக்கான வருஷங்களாக மதங்களையும், சாமிகளையும் கட்டிக் கொண்டு அழுததனால் என்ன கிடைத்தது? நமது நாடு அடிமையாகவும் நமது நாட்டு மக்கள் ஏழைகளாகவும், நமது நாட்டில்



சாப்பாட்டுக்கில்லாமல் அந்நிய நாட்டுக்குச் செல்லக் கூடியவர்களாகவும், இந்தியர் என்றால் கூலிகள் என்று அந்நியர்களால் இகழக் கூடியவர்களாகவும் ஆனதுதான் கண்ட பலன். இவைகளைத்தான் நமது மதங்களும், நமது சாமிகளும் நமக்கு கொடுத்தன. ஆகையால் இன்னும் இவைகளைக் கட்டிக் கொண்டு அழ வேண்டுமா? இவைகளுக்காக நமது செல்வங்களை வீணாக்க வேண்டுமா? இவைகளை இன்னும் அழியாமல் கட்டிக் காப்பாற்றக் கூடிய சுயராஜ்யம் வேண்டுமா? என்றுதான் நாம் கேட்கின்றோம். நன்றாய் யோசனைச் செய்து பார்த்தபின் பதில் சொல்லுங்கள். கடைசியாக நமது நாட்டு மக்கள் சமத்துவமடைந்து சுகத்தோடு வாழ வேண்டுமானால் நமது மதங்கள் ஒழிய வேண்டும். மத ஸ்தாபனங்களின் சொத்துக்கள் தேசத்தின் நன்மைக் காகப் பயன்படும்படி அவைகளை பறிமுதல் செய்து உபயோகப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் நாமும் நாகரீகம் பெற்ற தேசத்தார்களைப் போலச் சிறந்து மனிதர்களாக விளங்க முடியும் என்று கோபுரத்தின் மேல் நின்று கொண்டு கூறுகின்றோம்.

கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழும் மூடர் களைப் போல, ஏராளமான பொருள்களை முட்டாள்தனம் காரணமாகப் பாழ்படுத்தி வைத்துக் கொண்டு, “நாம் அன்னிய ஆட்சியினால் ஏழைகளாக இருக்கிறோம்; கல்வியறிவில்லாமல் இருக்கிறோம்; ஒற்றுமை இல்லா மலிருக்கிறோம்; தொழிலில்லாம லிருக்கிறோம்” என்று தொண்டைத் தண்ணீர் வற்றும்படி கத்துவதில் ஏதாவது அர்த்தம் உண்டா? என்பதை மறுபடி யும் மறுபடியும் நன்றாய் யோசித்துப் பாருங்கள் என்று தெரிவித்துக் கொள்ளு கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 31.01.1932**



RangaRakes tamilnavarasam.com

# பூனைக்கும்? பாலுக்கும்?

இந்திய சட்டசபையில் மேன்மை தங்கிய வைசிராய் என்ன பிரசங்கம் செய்யப்போகிறார் என்று நமது நாட்டு அரசியல்வாதிகள் அனேகர் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பிரசங்கமும் சென்ற 25 - 1 - 32 தேதியில் வெளிவந்து விட்டது. அதில் குறிப்பிடத் தகுந்த விஷயம் தற்கால சட்ட மறுப்பைப் பற்றி ராஜப்பிரதிநிதி அவர்கள் சொல்லியிருக்கும் விஷயமே யாகும். மேன்மை தங்கிய ராஜப் பிரதிநிதியவர்கள் "சண்டைக்கு இழுக்கப் பட்டால் எந்த அரசாங்கம் பின் வாங்கி நிற்கும்?" என்று கேட்கும் கேள்வியும், "சட்டமறுப்புக்கு விரோதமாக இப்பொழுது அமுலில் உள்ள முறைகள் அவசியமாக இருக்கக் கூடிய வரையில் அவைகள் தளர்த்தப்படவே மாட்டா" என்று கூறிவிருப்பதும் மிகவும் கவனிக்கக் கூடிய விஷயமாகும். அதிலும் காங்கிரஸ்காரர்கள்பால் அநுதாபம் காட்டுவதன் மூலம் "தேசாபிமானிகள்" என்று காங்கிரஸ்காரர்களால் மதிக்கப்பட வேண்டுமென்றும், சட்டமறுப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலைமையில் இருப்பதின் மூலம் அரசாங்கத்தாருக் கும் "நல்லபிள்ளைகளாக" இருக்க வேண்டுமென்றும் தடுமாறிக் கொண்டி ருக்கின்ற கோழைத் தலைவர்கள் அவசியம் கவனிக்க வேண்டியது அவசியத்திலும் அவசியமாகும்.

அவசரப்பட்டு சட்டமறுப்பைத் தொடங்கியவர்கள் காங்கிரசின் குட்டி தலைவர்களென்பது நாடறிந்த விஷயமாகும். ஆனால் 'திரு.காந்திக்கு இராஜப்பிரதிநிதி பேட்டி கொடுத்துப் பேசியிருந்தால் சட்டமறுப்பியக்கம் இவ்வளவு கஷ்டமான நிலைமைக்குப் போயிருக்கா'தெனவும், ஆகவே 'ராஜப்பிரதிநிதியவர்கள் திரு. காந்தியவர்களுக்குப் பேட்டியளிக்க மறுத்தது தவறு' எனவும் இந்த நடுநிலைமைக்காரர்கள் சொல்லிக் கொண்டிருக்கின் றனர். ஆனால் இவர்கள் இவ்வாறு சொல்லுவதிலும் ஒரு சிறிதும் அர்த்த மில்லை என்றுதான் நாம் சொல்லுகிறோம். உண்மையில் திரு. காந்தியவர்கள் சமாதானப் பிரியமுடையவராயிருந்தால் காங்கிரசின் சர்வாதிகாரியாகிய தன் னுடைய அனுமதியும் இல்லாமல் குட்டித் தலைவர்களால் தொடங்கப்பட்ட சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திவிட்டு ராஜப்பிரதிநிதி அவர்களுடன் சமா தானம் பேச முன் வருவாரானால் அது நியாயமாக இருக்கும். அப்பொழுது ராஜப்பிரதிநிதியவர்கள் சமாதானம் பேச மறுத்திருந்தால் காங்கிரஸ் தன்னு டைய கொள்கைப்படி சட்டமறுப்பு ஆரம்பித்திருக்கலாம். அப்பொழுது இந்த நடுநிலைமைவாதிகள் கூறும் 'ராஜப்பிரதிநிதி காந்திக்குப் பேட்டியளிக்க மறுத்துவிட்டது தவறு' என்று சொல்லுவதற்கு அர்த்தமிருக்க முடியும்.

இது நிற்க, சட்டமறுப்பியக்கத்தால் ஒரு காரியமும் நடக்கப் போவ தில்லை என்பது நமது நேயர்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமே ஒழிய வேறில்லை. இதுவரையிலும் நடந்த சட்டமறுப்பினால் நமக்குக் கிடைத்த பலன் என்ன என்பதை யோசித்துப் பார்ப்பவர்களுக்கு இது விளங்காமல் போகாது, சட்டமறுப்பு இல்லாமலிருந்தால், வட்டமேஜை மகாநாட்டுக் கமிட்டி களின் வேலை இன்னும் திறமையாகவும். தாராளமாகவும், விரைவாகவும் நடந்து முடியக்கூடும். இப்பொழுது கொஞ்சம் சீர்பட்டிருக்கின்ற தொழில் களும், வியாபாரங்களும் விளைவுப் பொருள்களின் அக விலைகளும் இன்னும் கொஞ்சம் சீர்படக்கூடும். சட்டமறுப்பு நடைபெறுவதால் இவைகள் பாதகமடையக் கூடுமேயொழிய நமது நாட்டிற்கு வேறு கடுகளவு நன்மை கூட உண்டாகப் போவதில்லையென்று ஆரம்பமுதல் கூறிவந்ததையே இப்பொழுதும் கூறுகிறோம்.

ஆகையால், சட்டமறுப்பு இயக்கத்தில் சிறிதும் நம்பிக்கையில்லா விட்டாலும் அது நாட்டுக்குத் தீமை விளைக்கும் பயனற்ற வழி என்று எண்ணிக் கொண்டிருந்தாலும், பாமர மக்களின் தூற்றுலுதக்குப் பயந்து பேசாமலிருக்கும் ராஜீயவாதிகள் தமது கோழைத்தனத்தை விட்டுவிட்டு தைரியமாக சட்டமறுப்பை நடத்துவதற்கு உதவி செய்வதே சிறந்த காரிய மாகும். "சட்டமறுப்பு நின்றால் அவசர சட்டங்களும் நீக்கப்படும்" என்னும் கருத்தைத் தெளிவாக இராஜப்பிரதிநிதியவர்கள் தமது பிரசங்கத்தில் கூறியிருப்பதைக் கவனித்து ஆவன செய்வதே கடமையாகும். "பூனைக்குத் தோழன் பாலுக்கும் காவல்" என்று சொல்லிக் கொண்டு வாழுகின்ற சமயம் இதுவல்ல என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 31.01.1932**





RangaRakes tamilnavarasam.com

# கிறிஸ்துவ மதத்தில் ஜாதியுண்டா?

இந்து மதத்தில் தான், சாஸ்திர சம்மதமாகவும், தெய்வ சம்மதமாகவும், பலர் கொடுமைப்படுத்தப்பட்ட மக்களாய் அந்த மதத்தை விட்டு வெளி யேறினாலொழிய மனிதத் தன்மை பெறமுடியாதவர்களாய் கோடிக்கணக்கான மக்கள் இருப்பதாக உலக முழுதும் தெரிந்திருக்கிறது. ஆனால் மிகவும் நாகரிகம் பெற்ற மதமாக அன்பு மதமாக – சகோதரத்துவம் நிறைந்த மதமாகப் பிரசாரம் பண்ணப்பட்டு வரும் கிறிஸ்துவ மதத்தில் இத்தகைய சாதிக் கொடுமை இல்லை என்று பறை சாற்றப்பட்டு வருகிறது. உண்மையிலேயே அந்த மத வேதத்தின் படி – அந்த மத கர்த்தாவான யேசு நாதரின் கொள்கைப் படி அந்த மதத்தில், சாதி வித்தியாசம் பாராட்டவோ, சாதி வித்தியாசம் காரண மாகத் தாழ்த்தப் பட்ட மக்களைக் கொடுமைப் படுத்தி வைத்திருக்கவோ ஒரு ஆதாரமும் இல்லையென்பதை நாம் அறிவோம்.

இத்தகைய ஒரு மதம் ஜாதி வித்தியாசங்களும், கொடுமைகளும் நிறைந்த இந்தியாவில், அதிலும் தென்னிந்தியாவில் எந்த நிலையிலிருக்கிறது என்று பார்த்தால், இந்து மதத்தின் அண்ணனாகவோ, அப்பனாகவோ பாட்ட னாகவோதான் இருந்து வருகிறதென்று கூறலாம். இந்து மதக்கோயில்களில் எப்படி ஜாதிக்கு ஒரு இடம் ஒதுக்கப் பட்டிருக்கிறதோ அது போலவே கிறிஸ்துவ மதக் கோயில்களிலும் ஜாதி வித்தியாசம் பாராட்டப் பட்டுத் தனித் தனி இடங்கள் ஒதுக்கப்படுகின்றனவாம். ஆனால் அரசாங்கக் கணக்கில் கிறிஸ்தவர்களுக்கு ஜாதி வாரிக்கணக்கு போடாமல் எல்லாக் கிறிஸ்தவர்க ளையும் பொதுவாகக் "கிறிஸ்தவர்கள்" என்ற தொகுதியிலே சேர்க்கப்பட்டி ருக்கின்றது. இக்காரணத்தால், தீண்டாத சாதியினராகக் கருதப்படும் கிறிஸ்த வர்கள், பொது ஸ்தாபனங்களில் ஒருவித உரிமையும் பெற முடியாமல், எல்லா உரிமைகளையும் உயர்ந்த சாதியாராக இருந்து கொண்டிருக்கும் கிறிஸ்து வர்களே அடைந்து வருகிறார்கள்.

எப்படி இந்து மதத்தில் ஒவ்வொரு சாதிக்காரர்களும் தங்கள் தங்களுக்குக் கீழுள்ள சாதியார்களின் மேல் வெறுப்பும் வித்தியாசமும் பாராட்டி வருகின்றார்களோ அதுபோலவே கிறிஸ்தவ மதத்தில் புகுந்துள்ள வர்களும், நாயுடு முதலியார், பிள்ளை, அய்யர் முதலிய ஜாதி வித்தியாசங் களை விடாமல் வைத்துக் கொண்டு, ஆதிதிராவிடக் கிறிஸ்தவர்களையும், மற்ற தாழ்த்தப்பட்ட வகுப்புக் கிறிஸ்தவர்களையும் வித்தியாசமாக வைத்துக் கொடுமை செய்து வருகின்றனர். இவ்வாறு செய்து வருவதைப் பற்றிய கிளர்ச்சி நீண்டநாளாக நடைபெற்றுங்கூட இன்னும் அம்மத குருமார்கள் இவ்வேற்றுமைகளை ஒழித்து உண்மையான கிறிஸ்தவக் கொள்கைகளை நிலை நிறுத்த முயற்சி செய்யாமலிருந்து வருகிறார்கள்.

ஆகவே இதுவரையிலும் பொறுமையோடு கொடுமைகளை அனுபவித்து வந்த தீண்டாத வகுப்புக் கிறிஸ்தவர்கள் இப்பொழுது கண் விழித்துக் கொண்டு அதிக ஊக்கத்துடன் கிளர்ச்சி செய்வதைக் கண்டு நாம் பாராட்டுகின்றோம். இதற்கு உதாரணமாகச் சென்ற 23. 1. 32–ல் லாலு குடியில் தீண்டப்படாத கிறிஸ்துவர்கள் மகாநாடு கூடியிருப்பதைக் கூறலாம். அம் மகாநாட்டுத் தலைவர் திரு. ஞானப்பிரகாசம் அவர்களும், திறப்பாளர் திருமதி நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்களும் வரவேற்புக் கழகத்தலைவர் திரு ஆரோக்கியசாமி அவர்களும் மற்றும் உள்ள உபந்யா சகர்களான திருவாளர் கள் டி. வி. சோமசுந்தரம், டி. பி. வேதாசலம் வி. ஐ. முனிசாமி பிள்ளை முதலிய பலரும் தீண்டப்படாத கிறிஸ்தவருக்குள்ள குறைகளை எல்லாம் விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகையால் இனியாவது அம்மத குருமார்கள் தீண்டாதவர்களுக்குள்ள குறைகளை நீக்கி மதக் கொள்கைப்படி யாதொரு வேற்றுமையையும் பாராட்டாமல் அவர்களையும் நடத்துவதற்குரிய ஏற்பாடு களைச் செய்ய வேண்டும், அல்லது அரசாங்கத்தார் அவர்கள் விரும்புகிறபடி தீண்டப்படாத கிறிஸ்துவர்களும் மற்ற ஆதிதிராவிடர்களுக்குக் காட்டு வதைப் போலத் தனிச் சலுகை காட்ட முன் வரவேண்டும் என்று எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

கடைசியாகத் தீண்டப்படாத கிறிஸ்தவர்களுக்கும் ஒரு வார்த்தை சொல்லி முடிக்கிறோம். தீண்டப்படாத கிறிஸ்துவர்களின் குறைகள் நீங்கா விட்டால் அம்மதத்திலுள்ளவர்கள் நீக்க முற்படா விட்டால், இந்து மத ஆதி திராவிடர்கள் எந்த வகையில் தங்கள் மேல் சுமத்தப்பட்டிருக்கும் மதக் கொடுமைகளையும் ஜாதிக் கொடுமைகளையும் நீக்கிக் கொள்ள விரும்பு கின்றார்களோ, அந்த வகையிலேயே தீண்டப்படாத கிறிஸ்துவர் களுக்கும் தங்கள் குறைகளை நீக்கிக் கொள்ள முயலுவதே சமத்துவம் பெறுவதற்கு ஏற்ற வழியாகும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 31.01.1932**


RangaRakes
tamilnavarasam.com

# ஈ. வெ. இராமசாமியின் "கெய்ரோ" கடிதம்

போர்ட் சைட்டிலிருந்து எழுதிய வியாசம் கிடைத்திருக்கலாம். அதில் "எம்பரஸ் ஆப் பிரிட்டன்" என்கின்ற கப்பல் விஷயத்தைப்பற்றி மாத்திரம் எழுதமுடிந்தது. மற்றபடி கொழும்பிலிருந்து கப்பல் புறப்பட்டதற்குப் பின் கண்ட விஷயங்களைப்பற்றி சுருக்கமாக எழுதுகிறேன்.

## கொளும்பிலிருந்து

டிசம்பர் 17 -ம் தேதி காலை புறப்பட்ட கப்பல் 24-ம் தேதி காலை 10 மணிக்கு 'ஜிபுட்டி' என்கின்ற பிரஞ்சு துறைமுகம் வந்து சேர்ந்தது. இது ஏடனுக்கு எதிர்பாகத்தில் இருப்பதும் பிரஞ்சுக்காரருடைய துறைமுகமுமாகும். நாங்கள் பிரஞ்சுக்கப்பலில் பிரயாணம் செய்ததால் பிரஞ்சு கப்பல் அங்கு செல்ல வேண்டியதாயிற்று. பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமான தீவாகிய மடகாஸ்கர் என்னும் தீவுக்கு அனுப்பப்படும் சாமான்களும் அத்தீவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சாமான்களும் ஜிபுட்டி என்கின்ற துறைமுகத்தின் வழியாகத்தான் வரவேண்டும். இந்த துறைமுகத்தில் நாங்கள் இரங்கினதும் "கமாலியர்" என்கின்ற ஒரு ஜாதியார் நீக்கிரோவர்களைப் போல் அதிக கருப்பும் மிகவும் சுருண்ட தலைமயிரும் உடையவர்கள் தான் இந்தத் தேசத்தில் அதிகமாய் இருக்கிறவர்கள், இவர்கள் பாஷை அரபு - மதம் இஸ்லாம். மிகவும் இளைத்த சரீரம் உள்ளவர்கள், பார்வைக்கு விகாரமானவர்கள், ரொம்பவும் ஏழைகள், அழுக்கு துணியுடையவர்கள் இவர்கள்தான் இவ்விடத்திய கூலிகள். பெண்கள் விகாரமாய் மலைலம்பாடி ஜாதியாரைப் போல் நகை அணிந்துகொண்டு நீண்ட குப்பாயம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கு சில அரபியரும், நம் பக்கத்திய அதாவது மரைக்காயர்கள், றாவுத்தர்மார்களைப் போல் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் நல்ல உடை உடுத்திக் கொண்டு சுத்தமாகவும், நல்ல தோற்றமாகவும் இருக்கிறார்கள். இவர்கள் முதலாளிகளாகவும், சற்று நாகரீக வாழ்க்கைகாரராகவும் காணப்படுகிறார்கள்.



## தினசரி வாழ்க்கை

ஜிபுட்டி துறைமுக பாகம் மாத்திரம் நல்ல உயர்தரக் கட்டடங்களும், நல்ல உயர்தர ஷாப்பு கடைகளும், பிரஞ்சுக்கார வெள்ளையர்களால் மிகுதியும் குடியிருக்கப்பட்ட மாளிகைகளும் உடையதாக காணப்படும். மற்றப்படி ஊருக்கு ஒரு பெண் கூட முகத்தை மூடிக் கொண்டு போனதை நாங்கள் பார்க்கவில்லை. ஆனால் முக்காடு மாத்திரம் போட்டிருக்கிறார்கள். இங்கு பம்பாய் குஜராத்தி வியாபாரிகள் சிலரைப் பார்த்தோம். இங்கு தபால் எழுதிவிட்டு சில சாமான்கள் சாப்பாட்டுக்கு வாங்கினோம். பிறகு 24ந்தேதி மாலை - 5 மணிக்கு ஜிபுட்டியிலிருந்து கப்பல் புறப்பட்டு 29ந்தேதி சூயஸ் துறைமுகத்துக்கு வந்தது. அத்துறைமுகம் மிக்க அழகானதாகவும், ஊர் மிகவும் புதிய முறையில் ஏற்படுத்தப்பட்டதாகவும் இருந்தது. ஜிபுட்டியிலிருந்து செங்கடலில் கப்பல் புறப்பட்டவுடன் தினம் 1க்கு 3, 4 கப்பல் வீதமும், சூயசுக்கு பக்கத்தில் வரவர ஒரு மணி ஒன்றுக்கு ஒரு கப்பல் வீதம் கடலில் போவதையும் வருவதையும் பார்த்துக் கொண்டே இருந்தோம். சூயசுக்கு பக்கத்தில் வந்தவுடனே சிறிது சிறிதாய் குளிர் அதிகப்பட்டு சூயசில் நடுங்கும்படியான குளிர் ஏற்பட்டது. ஏனெனில் அங்குதான் முதலில் குளிர்கண்டோம். கப்பலில் எங்களுடைய இடம் 4வது வகுப்பு (மேல் தட்டு) ஆனதால் அங்கு சென்னையில் கப்பல் ஏறினது முதல் 4, 5 நாள் வெய்யிலாலும், மழையாலும் மிகவும் கஷ்டப்பட்டதுடன், சாமான்களுடன் அடிக்கடி மூட்டைகள் இறக்கும்போதும் ஏற்றும் போதும் இடம் மாறவேண்டியதாயும் இருந்தது. புதுச்சேரி துறைமுகத்தில் எனக்கு சிறிது காச்சலும், மயக்கமும், தலை வலியும் அதிக தொந்தரவு செய்ததுடன், வெய்யிலிலேயே இருக்க வேண்டி இருந்ததாலும் சற்று மன வருத்தமும் உடல் நிலையைப்பற்றி கவலையும் ஏற்பட்டதால் 4வது வகுப்பில் இருந்து 3-வது வகுப்புக்கு மாற்றலாம் என்று தீர்மானித்து புதுச்சேரியிலிருந்து எங்களைக் காண வந்திருந்த திரு. பாரதிதாசன், திரு. நோயேல், திரு. செல்வம், அவர்களுடைய காரியதரிசி ஆகியவர்கள் மூலமாய் கப்பல் கமிஷனரிடம் சென்று மாற்றும்படி கேட்டதில் அவர் சென்னையில் 3-வது வகுப்புக்காக சொல்லப்பட்ட சார்ஜை விட 2 - பவுன் அதிகமாக கூட்டி 1 - டிக்கட்டுக்கு 120ரூ. வீதம் அதிகம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார். அதற்கும் சம்மதித்ததில் இங்கிலீஷ் பவுன்நோட்டு எடுக்க மாட்டேன் என்று சொல்லி இந்திய நாணய நோட்டே வேண்டுமென்று கேட்டார். எங்களிடம் இருந்த துகைகள் எல்லாம் இங்கிலீஷ் நாணய நோட்டாகவே மாற்றப் பட்டிருந்ததால் புதுச்சேரி டவுனுக்கு இங்கிலீஷ் பவுன் நோட்டை அனுப்பி, இந்திய நாணயமாக மாற்றிக்கொண்டு வந்து கொடுப்பதாகச் சொல்லி நாணயம் மாற்ற திரு. பாரதிதாசன் அவர்களை புதுச்சேரி ஊருக்குள் அனுப்பினோம். அவர் இந்திய நாணயத்தையும் சில தின்பண்டங்களையும் ஒரு டாக்டர் வசம் அனுப்பி கொடுத்தார். அதற்குள் எனக்கு சற்று குணமாயிருந்ததாலும், டாக்டர் பரீக்ஷித்துப் பார்த்து சில பக்குவம்



RangaRakes
tamilnavarasam.com

சொன்னதாலும் 3-வது வகுப்புக்கு மாறாமல் 4-வது வகுப்பிலேயே இருந்து கொண்டோம். பிறகும் 2, 3 நாள் கஷ்டப்பட்டோம். கப்பலில் நாங்கள் மூட்டைகளை விட கேவலமாகவே நடத்தப்பட்டோமானாலும் 4-ம் நாள் ஒரு கீழ் தட்டில் சாமான்களை வைத்துக் கொள்ள கப்பல் கமிஷனர் அனுமதி கொடுத்தார். அந்த கீழ்தட்டானது மூட்டைகள் போடவும் ஒரு பக்கம் பிரஞ்சு சோல்ஜர்கள் இருக்கவும் ஏற்பட்டது. அதில் 50 சோல்ஜர்கள் இருக்க இடமுண்டு. 50 சோல்ஜர்கள் ஏற்கனவே இருந்தார்கள். நாங்கள் மூட்டைகளின் மேல் இருந்தோம். இரண்டொரு நாள் சோல்ஜர்கள் எங்களுடன் பழகி விட்டதாலும், மூன்று தமிழ் பிரஞ்சு இந்திய சோல்ஜர்கள் மிக்க பழக்கமாகி விட்டதாலும் பிரயாணம் சிறிது கூட கஷ்டமாக தோன்றவில்லை. ஆகாரம் இந்த சோல்ஜர்களுக்கு கொடுக்கப்பட்ட ஆகாரமே தான் எங்களுக்கும் கொடுக்கப்பட்டது. அதாவது தினம் 2 வேளை வேக வைத்த உருளைக் கிழங் கும், கொள்ளு, அல்லது அவரை, கடலை முதலிய ஏதாவதொரு தானியமும் வேகவைத்துக் கொடுப்பதுடன், உருண்டை ரொட்டி 3-ம் இதுகளும், மாட்டு மாம்ச துண்டும், சாராயமும் கொடுக்கப்படுவது வழக்கம். காலையில் பால் இல்லாத காப்பியும் ரொட்டியும் உண்டு. இவற்றுள் சாராயம் மாட்டு மாம்சம் ஆகியவைகளை நாங்கள் உபயோகிக்கவில்லை. மற்றதுகளுடனும், கொளும் பிலும், சென்னையிலும் புதுச்சேரியிலும் வாங்கின பிஸ்கட், ஆரஞ்சுப்பழம் ஆகியவைகளுடனும் காப்பி, டீயுடனும் சரிப்படுத்திக் கொண்டோம்.

## சூயஸ் கால்வாய்

சூயசிலிருந்து 29-தேதி பகல் 2 மணிக்குக் கப்பல் சூயஸ் கால்வாய் வழியாக போர்ட் சைட்டுக்குப் புறப்பட்டது. இந்தக் கால்வாயானது செங்கட லுக்கும் மத்தியதரை கடலுக்குமாக சுமார் 100 மைல் நீளம். மணல் தரையில் வெட்டப்பட்ட கால்வாயாகும். இதன் அகலமெல்லாம் சுமார் 150 அடி தானி ருக்கும். நமது வாய்க்கால் போலவே இருபக்கம் கரையில் நடக்கும் ஜனங் களுடன் பேசிக் கொண்டே கப்பலில் போகலாம். ஆனால் 40 ஆயிரம் 50 ஆயிரம் டன் கனமுள்ள கப்பல்கள் எல்லாம் தாராளமாய் போகத்தகுந்த ஆழம் வெட்டப்பட்டிருக்கிறது. கால்வாய் வேலைகள் இன்னமும் நடந்துக் கொண்டேதான் இருக்கின்றது. எதிரில் கப்பல் வந்தால் ஒதுங்கி நிற்க ஆங்காங்கு வசதி இருக்கின்றது. கால்வாய்க்கு நெடுக வாட்சுமேன்களும், காவல்களும், பந்தோபஸ்துகளும் உண்டு. இந்த கால்வாய் “சூயஸ் கால்வாய் கம்பெனியார்” என்கின்ற ஒரு கம்பெனியாரால் முதல் போட்டு வெட்டப்பட்டு ஒவ்வொரு கப்பலுக்கும் சுங்கம் வாங்குவதன் மூலம் பங்குக்காரர்களுக்கு லாபம் கிடைத்து வருகின்றது. ஒரு கப்பலுக்குச் சுமார் 10, 000 பத்தாயிரம் ரூபாய், 15, 000 ரூபாய் போல் சுங்கம் வசூலிக்கப்படுவதாகக் கேள்விப்பட் டோம். சூயஸிலிருந்து போர்ட் சைட்டுக்கு போவதற்குள் குளிர் அதிகப் பட்டுக் கொண்டே வந்துவிட்டது.



## போர்டு சைட்

29- தேதி இரவு 10 மணிக்கு கப்பல் போர்ட் சைட்டுக்கு வந்தது. இரவு 11 மணிக்கே பிரயாணிகளை கப்பலை விட்டு இறக்கிவிட்டார்கள். துறைமுகம் சென்னையைப் போலவே கப்பலிலிருந்து தரையில் கால் வைக்கலாம். ஸ்தல யாத்திரைகளில் எப்படி பண்டாரங்களும் அர்ச்சகர்களும் யாத்திரை வழி காட்டிகளும் ரயிலிலேயே வந்து தொந்திரவு செய்வார்களோ அதுபோல் GUIDE என்று சொல்லப்படும் வழிகாட்டிகள் கப்பலுக்குள்ளாகவே வந்து சூழ்ந்து கொண்டு இம்சைப்படுத்திவிட்டார்கள். பிறகு ஒருவன் எங்களுடன் விடாப்பிடியாய்த் தொடர்ந்து எங்கள் சாமான்களைக் கப்பலில் இருந்து போட்டில் ஏற்றிக் கொண்டு, எங்களை கஸ்டம் ஆபீசு, டாக்டர் சோதனை, சாமான் சோதனை முதலியவைகளை நடத்திக் கொடுத்து ‘அக்ராப்போல்’ என்கின்ற ஒரு ஓட்டலில் கூட்டிக் கொண்டு வந்து இரவு 12 மணிக்கு விட்டான். இங்கு ஓட்டல் என்பது தங்குமிடம் மட்டுந்தான். அதாவது ஒரு அறையில் சாமான் வைத்து படுத்துக் கொள்ளலாம். கட்டில், நாற்காலி, மேஜை உண்டு. சாப்பாட்டுக்கு வேறு ஏற்பாடுதான் செய்து கொள்ள வேண்டும். இந்த ஓட்டலில் நாள் 1க்கு 3 பேருக்கும் தங்குவதற்கு தினம் 3 ரூ. வீதம் பேசி ஒரு வாரம் இருந்தோம். சாப்பாடு சொந்தத்தில் செய்து கொண்டோம். வழிகாட்டி 7 ரூபாய் வாங்கிவிட்டான். வழிகாட்டிகளின் கஷ்டத்தைத் தவிர வேறு கஷ்ட மில்லை. பாஷை தெரியாதவர்கள் இந்த கஷ்டம் அனுபவித்துத்தான் ஆக வேண்டும்.

போர்ட்சைட் ஊரானது சூயசைப் போலவே புதிதாக உண்டாக்கப்பட்ட சிறிய பட்டணம் 3 புறமும் தண்ணீர் சூழ்ந்தது. இங்குள்ள மக்கள் பெரும் பாலும் எகிப்தியர்கள். அநேகமாக 100க்கு 90 பேர் இஸ்லாம் மதக்காரர்கள் மற்ற பல தேசத்தாரும் இங்கு இருக்கிறார்கள். துறைமுகம் என்பதைத் தவிர இதற்கு வேறு பெருமை கிடையாதானாலும் பெரிய பெரிய ஷாப்புகளும், அலங்கார சாமான் கடைகளும் தாராளமாய் உண்டு. சரி பகுதி காப்பிக் கடைகள் இருக்கும். சாமான்கள் நிலவரமெல்லாம் நமது ஊர்களிலுள்ளது போலவேயொழிய அதிகமில்லை. ஆனால் கடைகளில் சாப்பிட்டால் செலவு அதிகம். ஜனங்கள் பார்வைக்கு வெள்ளைக்காரர்களை போலவே இருக்கிறார் கள். எகிப்திய இஸ்லாம் பெண்களுக்கும், ஐரோப்பிய பெண்களுக்கும் வித்தி யாசம் கண்டு பிடிப்பது கடினம். கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் கூட அடையாள வித்தியாசம் கிடையாது. 3ல் 2 பாகம் பெண்கள் ஐரோப்பிய உடையுடனும் தொப்பிகளுடனுமே திரிகிறார்கள். ஆண்கள் எல்லாம் ஐரோப்பிய உடைதான், சில ஏழைக் குடும்பப்பெண்களும், சில கிராமக் குடும்ப பெண்களும் மாத்திரம் உள்ளே ஐரோப்பிய உடை அணிந்து மேலே கருப்புத் துணியினால் போர்த்துக் கொண்டு வாய் மாத்திரம் மறையும் படி ஒருவித வலை துணிகட்டிக் கொள்ளுகிறார்கள். (நெற்றி, கண், மூக்கு எல்லாம் தெரியும்)



RangaRakes tamilnavarasam.com

ஆண்கள் ஐரோப்பிய உடையுடன் சிலர் ஐரோப்பிய தொப்பியும் துருக்கி தொப்பியு மணிகிறார்கள். தாடி என்பது கிடையவே கிடையாது. கிறிஸ்தவர்களையும், இஸ்லாமியர்களையும் இங்கு அடையாளம் கண்டு பிடிக்கவே முடியாது. இந்த ஊர் ஜனங்கள் எல்லோருக்கும் இந்த துறைமுகத் திற்கு வந்து போகும் பிரயாணக்காரர்களால்தான் வியாபாரமும் பிழைப்பும் நடக்க வேண்டியதே தவிர வேறில்லை. எகிப்திய இஸ்லாம் பெண்களின் டேன்சு தினமும் நடக்கும். பலர் உடம்பெல்லாம் பலவித பச்சைகுத்திக் கொள்ளுகிறார்கள்.

## கெய்ரோ

போர்ட் சைட்டில் ஒரு வாரம் இருந்து விட்டு ஜனவரி மாதம் 5-ந்தேதி காலை 8 மணிக்கு கெய்ரோவுக்குப் புறப்பட்டு ரயிலேறி 5-ந் தேதி பகல் 1 மணிக்கு கெய்ரோவுக்கு வந்தோம். 150 மயில் தூரம் 3 வது வகுப்புக்கு மயிலுக்கு அரை அணா ரயில் சார்ஜ் விகிதம் ரயில் வண்டிகள் எல்லாம் S. I. R சின்ன வண்டிகளில் இரண்டு, இரண்டு பேருக்கு பெஞ்சிகள் இருப்பது போலவே எல்லா வண்டிகளிலும் இருக்கின்றது. வண்டிகள் எல்லாம் பெரிய வண்டிகள்.

முதல் வண்டியிலிருந்து கடைசி வண்டி வரை வண்டி நடுவில் நடந்து போகலாம். கெய்ரோ பட்டணமானது ஆப்பிரிக்கா தேசத்திலேயே பெரிய பட்டணமாகும். இதில் 10 லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள். இது ஈஜிப்ட் (எகிப்திய) தேசத்தின் தலைநகரமுமாகும். எகிப்திய தேசம் என்பது உலகத்தில் உள்ள பழமையான தேசங்களிலெல்லாம் மிகப் பழமையானது. நாகரிகங்க ளிலும் எகிப்திய நாகரிகமே மிகப் பழமையானது. இது உலகுக்கு மத்திய தேசமுமாகும், இவ்விடத்திய சீதோஷ்ண நிலை குளிர் காலத்தில் பெங்க ளூரைப்போலவும் வெய்யில் காலத்தில் நமது ஊர்களைப் போலவும் இருக் கும். இங்குள்ள மலைகள் அநேகமாய் மணல் மலைகளேயாகும். நிலங்கள் பெரும்பாகம் வெரும் மணல் பூமிகளாகவே இருக்கும்.

கெய்ரோவில் ஒரு பெரிய நதி ஓடுகின்றது. அதற்குப் பெயர் நில் (Nile) நதி என்று பெயர். இது உலகத்திலேயே பெரிய நதியாகும். இதன் நீளம் 3500 மைல். இதில் கப்பல்கள் தாராளமாகப் போகின்றன. இதற்கு பல வாய்க்கால் களும் தாராளமாகப் பாசனங்களும் உண்டு. இங்கு மழை என்பதே கிடையாது. ஒட்டகம், குதிரை, கோவேறுக் கழுதை, கழுதை ஆகியவைகளால்தான் எல்லா வேலையும் செய்யப்படுகின்றது. பசுமாடு பால்கரக்கவும், காளை மாடுகள் சாப்பிடவும் தான் பயன்படுகின்றன. உருளைக் கிழங்கு, முட்டை கோஸ் முதலிய குளிர் தேசக் காய்கரிகளே தான் அதிகம். எல்லோரும் கோதுமை ரொட்டியும் சப்பாத்தியும் தான் அதிகம் சாப்பிடுகிறார்கள். உடை விஷயங்கள் நம் ஊர் உடைகளைவிட அதிகம் தேவை இருக்கிறதுடன் அதிகமாகவே



உபயோகிக்கிறார்கள். அவற்றின் விலைகள் எல்லாம் நமது பக்கத்தை விட நயமாகவே இருக்கின்றன.

பொதுவாக கிராமங்கள் எல்லாம் மண் சுவர் வீடுகளாகவும் மேற் கூரைகள் எல்லாம் மரம் போட்டு பலகை போட்டு மண்பரப்பியதாகவுமே இருக்கின்றன. மழை இல்லாததால் கூரையைப் பற்றி இவர்கள் கவலைப் படுவதில்லை. பட்டணங்களில் வீடுகள் 3, 4, 5, 6, 7 மாடி வரையில் இருக் கின்றன. 3, 4 மாடிகளே அதிகம். பொதுவாகப் பம்பாய்க் கட்டடங்கள் போலவே காணப்படும்.

நிற்க, நான் இதுவரை எனது உடைகளை மாற்றிக் கொள்ள வில்லை. தலைக்கு மாத்திரம் ஒரு கம்பளி குளிர் (மங்கி கேப்) குல்லாய் போட்டுக் கொண்டேன். ஆகாரம் ரொட்டி, முட்டை, காப்பி இவைகள் தான் முக்கியமாய் உபயோகிக்கிறேன். முட்டை இவ்விடம் மிக மலிவு. 2 அணாவுக்கு 5 முட்டை கிடைக்கின்றது.

இந்தப் பக்கத்துக்காரர்களுக்கு நான் ஒருவனே தாடி வைத்தவனா கவும், ஒரு புதுமாதிரி மனிதனாயும் காணப்படுவதால் யாரும் குறிப்பாய்ப் பார்ப்பதும் மற்றும் மரியாதை செய்வதுமாய் இருக்கிறார்கள். கூடுமான வரை யில் ஜனங்கள் நமது ஜனங்களை விட நல்ல குணமுள்ளவர்களாகவும், விவேகிகளாகவும் இருக்கிறார்கள். இந்தியன் என்றால் மிகப்பிரியமாய்ப் பேசுகிறார்கள். ஐரோப்பியரிடம் வெருப்பாய் இருக்கிறார்கள். இவ்விடத்திய பெண்கள் மிகவும் சுரு சுருப்பாகவும், சுதந்திர உணர்ச்சியும், தைரியமும், துணிவும் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். குழந்தைகள் சிறுவர்கள் ஆகியவர்களுக்கு நமது பக்கத்திய குழந்தைகளை விட அதிக புத்தியும், சுதந்திர உணர்ச்சியும் துணிவும் இருக்கின்றன. மற்ற அரசியல் மதவியல் சம்மந்தமான விஷயங்கள் பின்னால் எழுதுகிறேன். இன்னும் இரண்டு மூன்று தினத்தில் ‘ஏதன்சுக்கு’ (கிரீக் தேசம்) போவோம்.

**குடி அரசு – பயணக் கடிதம் – 07.02.1932**



RangaRakes tamilnavarasam.com

# வைதீக வெறி

இந்துப் பெண்மணிகள் பலவகையிலும் சுதந்திரம் இல்லாதவர்களாய் அடிமைப்பட்டுக் கிடப்பதற்கு முதன்மையான காரணம், அவர்கள் ஆண்களின் தயவைக் கொண்டு ஜீவனம் பண்ணக் கூடிய நிர்ப்பந்தமான நிலையிலிருப்பதேயாகும். இந்த வகையான நிர்ப்பந்த நிலைமை இருப்பதற்குக் காரணம் இந்தப் பாழும் இந்து மதமும், அதன் மூலம் செய்யப்பட்டிருக்கும் சட்டங்களுமே என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகையால் ஆண் மக்களுக்கு இருப்பது போன்ற எல்லா உரிமைகளும் பெண் மக்களுக்கும் சட்ட மூலமாக ஏற்பட்டால் தான் அவர்கள் சீர்திருத்தமடைய முடியுமென்று நாம் கூறி வருகிறோம். ஈரோடு, விருதுநகர், சென்னை முதலிய இடங்களில் கூடிய நமது இயக்கப் பெண்கள் மகாநாடுகளிலும் இது சம்பந்தமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் டிருக்கின்றன. ஆனால் எந்த விதமான மாறுதலையும் விரும்பாமல் தங்கள் சுயநலம் ஒன்றையே விரும்புகின்ற வைதீகர்கள், பெண் மக்கள் உரிமைகளுக்கு எதிராகவே கிளர்ச்சி செய்து கொண்டு வருகின்றனர். பெண் மக்கள் கேட்கும் சுதந்தரங்களையெல்லாம் மதத்திற்கு விரோதம், 'கடவுள்' கட்டளைக்கு விரோதம், சாஸ்திரங்களுக்கு விரோதம்; அவர்கள் விருப்பத்தின்படி சுதந்தரம் கொடுத்துவிட்டால் மதம் போய்விடும்; கடவுள்கள் போய்விடுவார்கள்; சாஸ்திரங்கள் அழிந்து விடும் என்றெல்லாம் வீண் கூச்சலிட்டுத் தடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் கல்வி யறிவும் உலக நாகரீக அறிவும் சுயமரியாதை உணர்ச்சியும், சுதந்தர தாகமும் உள்ள பெண்மக்கள் எல்லோரும் இந்த வைதீகர்களின் பூச்சாண்டிகளுக்குக் கொஞ்சமும் பயப்படாமல் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகின்றனர். நாமும் இவர்களுடைய அபிப்பிராயங்களை ஆதரித்து சட்டங்கள் செய்ய வேண்டுமெனக் கிளர்ச்சி செய்து கொண்டு வருகிறோம். இவ்வாறு பெண்மக்களும் சீர்திருத்தக்காரர்களும், சுயமரியாதை இயக்கமும் உழைத்ததன் பயனாகவே திவான்பகதூர் அரிவிலாச சாரதா அவர்களால் இந்திய சட்டசபையில் இளமை மணத்தைத் தடுக்கும் சட்டம் கொண்டு வந்து நிறை வேற்றப்பட்டது. ஆயினும் நமது நாட்டு வைதீக மூடர்களின் கிளர்ச்சியாலும், அரசியல் கிளர்ச்சிக்காரர்களின் ஆர்ப்பாட்டங்களாலும் அந்தச் சட்டம் சில மாதங்கள் சரியாக அநுஷ்டிக்



கப்படாமல் இருந்தது. இப்பொழுதும் அச்சட்டம் அமுலிலிருப்பதாகத் தான் சொல்லப்பட்டு வருகிறது. இன்றும் வைதீகர்கள் அனைவரும் இச்சட்டத்தைக் கண்டித்து இதனால் மதம் போய்விட்டதென்றும், வருணாச்சிரம தருமம் போய்விட்டதென்றும், சனாதன தருமத்திற்கு அழிவு வந்துவிட்டதென்றும், ஆகையால் இச்சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும் குலைத்துக் கொண்டு கிடக்கிறார்கள். இச்சட்டத்தை ஒழிப்பதற்கென்றே தஞ்சை திருச்சி ஜில்லாக்களின் பிரதிநிதியாகத் திரு. ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியார் இந்திய சட்டசபையில் போய் உட்கார்ந்து கொண்டு திருத்த மசோதாவும் கொண்டு வந்து கொண்டிருக்கிறார். அம்மசோதாவை ஆதரிக்கும் மனப்பான்மையுடைய வைதீகர்களும் சபையில் அங்கத்தினர்களாயிருக்கின்றனர்.

இதற்கிடையில் இளமை மணத்தடைச் சட்டத்தைக் கொண்டு வந்த திவான் பகதூர் அரிவிலாச சாரதா அவர்களே மற்றொரு சிறந்த சீர்திருத்த மசோதாவைச் சென்ற 26-1- 32 இந்திய சட்டசபையில் கொண்டு வந்து அதைத் தனிக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று பிரேரேபித்தார். அந்த மசோதாவின் நோக்கம் 'பெண்களுக்குப் புருஷனுடைய சொத்தில் பாகம் இருக்க வேண்டும்' என்பதேயாகும். நியாய புத்தியும் பகுத்தறிவும் மனிதத் தன்மையும் உள்ள எவரும் இம்மசோதாவை அப்படியே ஒப்புக் கொள்வது தான் ஒழுங்காகும்; ஜீவகாருண்யத் தன்மையும் சமரச நோக்கமும் உள்ள எந்த ஒரு மனிதனும் இம்மசோதாவை ஒப்புக் கொள்ளப் பின் வாங்க மாட்டான்.

இந்து மதப் பெண்கள் எவ்வளவு செல்வமுள்ள குடும்பத்தில் பிறந்தாலும், பிறந்த அகத்திலுள்ள சொத்திலும் அவர்களுக்குப் பாத்தியம் இல்லை. எந்த செல்வவானுடைய குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டாலும், புருஷன் இருக்கும் வரையில் கொஞ்சம் சுகமாக இருக்கலாமே யொழிய புருஷன் இறந்து விதவையாகிவிட்டால், சொத்துரிமையும், சுகமும் இல்லாமல் துன்பப் படக் கூடிய நிலையில் இருக்கின்றனர். இத்தகைய கொடுமையை இந்துமத பெண்கள்தான் பாழும் இந்து மதத்தில் பிறந்ததற்காக அனுபவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவ்வளவு கஷ்ட நிலை கிறிஸ்தவ, முஸ்லீம் பெண்களுக்கு இல்லவே இல்லை. வேறு எந்த நாகரீகம் பெற்ற நாட்டிலும் இல்லை என்றே கூறலாம். இந்தப் பரிதாபகரமான நிலையை நீக்கிப் பெண்களைப் புருஷனுடைய சொத்துக்கு உரிமையுடையவராகச் செய்வதே திரு. சாரதா அவர்கள் மசோதாவின் முக்கிய நோக்கமாகும்.

இத்தகைய அரிய மசோதாவைப் பிரரேரேபித்த போது அதை திரு. அமர்நாத் தத்தர், திரு. லால் சந்து நாவல்ராய் திரு. ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியார் ஆகிய மூவரும் எதிர்த்தனர். அரசாங்கத்தின் சார்பாக சர். லாஸ்பெடட் கிரஹாம் அவர்களும் சபை அங்கத்தினர்களில் மூன்று பேர் எதிர்த்ததைக் காரணமாகக் கொண்டு மசோதாவை ஆதரிக்க மறுத்தார். ஆனால் மற்ற அங்கத்தினர்கள் அனைவரும் இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் ஆகியவர்களும் இம்மசோதாவை வரவேற்று ஆதரிப்பதாக



RangaRakes tamilnavarasam.com

யூகிக்க இடமிருக்கிறது. ஆகவே இந்த மசோதாவுக்குச் சட்டசபையில் தாராளமான ஆதரவிருப்பது வெளிப்படையாகத் தெரிந்துவிட்டது. இனி இம்மசோதாவை எதிர்த்த வைதீகர்களும் அரசாங்கத்தாரும் தாங்கள் அம்மசோதாவை எதிர்ப்பதற்கு கூறிய காரணங்களைப் பற்றிக் கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போம். இம்மசோதாவை எதிர்த்த திரு. அமர்நாத் தத்தர் என்பவர் தாம் வருணாச்சிரம தருமத்தில் நம்பிக்கை உடையவர் என்றும் பண்டைக் கால மகான்களின் புனித சட்டங்களில் கை வைக்க ஒருவருக்கும் சுதந்தரம் கிடையாது என்றும் சொன்னார். இந்த வைதீக மனப்பான்மையுள்ள கனவான் பேச்சைச் சிறிது ஆராய்ந்து பாருங்கள். இவர் வருணாச்சிரம தருமத்தில் நம்பிக்கையுடையவராயிருந்தால், இவர் அதைப் பின்பற்றி நடக்கிறாரா? இவரால் நடக்கத் தான் முடியுமா? வெள்ளைக்கார அரசாங்கத் தால் ஏற்படுத்தப்பட்ட சட்டசபையில் சட்டை, தலைப்பாகையோடு வந்து உட்கார்ந்து கொண்டு பேச எந்தப் "பண்டைக்கால மகான்களின் புனித சட்டம்" போதிக்கிறது? "மிலேச்ச" பாஷையாகிய ஆங்கில பாஷையைப் படிக்கவும், உத்தியோகம் பெறவும், பேசவும் எந்த "பண்டைக்கால மகான் களின் புனித சட்டம் கூறுகிறது? என்று தான் கேட்கிறோம்.

அடுத்தபடியாக இந்த மசோதாவை எதிர்த்த திரு. கிருஷ்ணமாச் சாரியார் இந்து விதவைகள் கஷ்டப்படுகிறார்கள், அநீதியாக நடத்தப்படு கிறார்கள் என்னும் கதை மெய்ப்பிக்கப்பட வில்லை யென்றும், இம்மசோதா இந்து சமூகத்தின் வேரையும் தர்மத்தையும் வெட்டி வீழ்த்தி விடும் என்றும், இந்து மதத்தின் அடிப்படையான அஸ்திவாரங்களைப் பலமாய்த் தாக்குகிறது என்றும் பேசி இருக்கிறார். இவர் பேசியிருப்பதில் உண்மையாவது, அல்லது அறிவுக்குப் பொருத்தமான வாதமாவது இருக்கிறதா? என்று பாருங்கள்! உண்மையில் இவர், வருணாச்சிரம தருமத்தைப் பற்றி பேசவோ, அல்லது தன்னை ஒரு வருணாசிரம தரும இந்துவாகச் சொல்லிக் கொள்ளவோ எவ்வளவு தூரம் சுதந்திரம் உள்ளவர் என்று தான் நாம் கேட்கின்றோம். வேதங்களை மனப்பாடம் பண்ணித் தவளையைப் போல் கத்திக் கொண்டு காவிரிக் கரையில் உட்கார்ந்து கொண்டு ஓமம் பண்ணிக் கொண்டிருப்பதை விட்டு விட்டு இங்கிலீஷ் பாஷை பயிற்சியும், உயர்ந்த உத்தியோகஸ் தர்களாகிய இங்கிலீஷ்காரர்களின் கூட்டுறவும் வைத்துக் கொண்டிருக்கும் இவர் வருணாச்சிரம தரும இந்து ஆவாரா? இனி இவர் பேசியதில் உள்ள விஷயங்களைக் கவனிப்போம்.

இந்து சமூக விதவைகள் கஷ்டப்படுகிறார்கள் என்பதும் அநீதியாக நடத்தப்படுகிறார்கள் என்பதும் மெய்ப்பிக்கப்படவில்லையாம். இது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போன்ற பேச்சேயாகும். மற்ற சமூகத்தை விடத் திரு. ஆச்சாரியார் அவர்களின் பார்ப்பன சமூகத்திலேயே விதவைகள் அதிகம். அவர்கள் வீடுகளில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வீடுகளில் விதவைகள் இல்லாமல் இல்லை. அவர்கள் படும் கஷ்டங்களுக்கு அளவில்லை. வேண்டுமானால் நாலு மொட்டை அம்மாள்களைக் கூப்பிட்டு



விசாரித்தால் உண்மை விளங்கும். இது போகட்டும். இந்த மசோதா இந்து சமூகத்தின் வேரையும், தர்மத்தையும் வெட்டி வீழ்த்தி விடுமாம்! இந்து சமூகத்தின் அடிப்படையான அஸ்திவாரங்களைப் பலமாக தாக்குகிறதாம்! எவ்வளவு உண்மையான - சீவகாருண்யமான பேச்சு பாருங்கள்! பெண் மக்களை மிருகங்களிலும் கேடாகக் கொடுமைப் படுத்தி, பிள்ளை பெறும் யந்திரங்களாகவும் அடிமை வேலை செய்யும் கருவிகளாகவும் வைத்திருப் பது தானா இந்து மதம்? ஜன சமூகத்தில் பாதியாக இருக்கின்ற தாய்மாரைத் தவிக்க விடுவது தானா இந்து மதம்? இந்து மத தர்மம்? இந்து மதத்தின் அடிப்படையான அஸ்திவாரம்? என்று தான் நாம் கேட்கின்றோம். இப்படிப் பட்ட சட்டங்களைக் கொண்டிருக்கும் ஒரு மதம் மதமாகுமா? என்று யோசித் துப் பாருங்கள். இப்படிப்பட்ட சட்டங்களை உண்டாக்கியவர்கள் மகான்களா? அல்லது சுயநலவாதிகளா? ஜீவகாருண்ய முள்ளவர்களா? அல்லது வன் நெஞ்சர்களா? யோக்கியர்களா? அல்லது அயோக்கியர்களா? என்று நன்றாய் யோசனை செய்து பாருங்கள்!

ஆகையால் தான் நாம் இத்தகைய அயோக்கியத் தனங்கள் நிறைந்த இந்து மதத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். இந்த மதம் ஒழிந்தலான்றி பெண்மக்களுக்கோ, மற்ற ஜாதிக் கொடுமையால் கஷ்டப் படும் கூட்டத்தார்க்கோ சுதந்திரம் கிடைக்கப் போவதில்லை என்று உறுதி யாகச் சொல்லுகிறோம். ஆண் பெண் வேறுபாடு இல்லாமல் எல்லா மக்களை யும் மக்களாகப் பாவித்து சுதந்தரம் வழங்கக் கூடியதாக ஒரு மதமோ அல்லது ஒரு கடவுளோ அல்லது ஒரு வேதமோ இருந்தால் அதை நாம் ஆட்சேபிக்க வில்லை. இப்படி யில்லாமல் ஒரு கூட்டத்தாரை உயர்ந்த பதவியிலிருந்து எல்லாச் சுகங்களையும் அடையக் கூடியவராகவும், மற்றொருக் கூட்டத் தாரைப் பிறந்தது முதல் இறக்கும் வரை அடிமையாயிருந்து எல்லாத் துன்பங் களையும் அனுபவிக்கக் கூடியவராகவும் வைத்திருக்கக் கூடியவராகவும், வைத்திருக்கக் கூடியது மதமாயிருந்தாலும் சரி அல்லது கடவுளாயிருந்தாலும் சரி அல்லது வேதங்களாயிருந்தாலும் சரி அவைகளை நெருப்பிலிட்டுக் கொளுத்தி அச்சாம்பல்களை 'அட்லாண்டிக் ஓஷன்' என்னும் கடலில் கொண்டுபோய் கொட்டவேண்டுமென்பதே நமது முடிவான தீர்மானமாகும்.

இனி அரசாங்கத்தின் நோக்கத்தையும் கவனிப்போம். நமது பிரிட்டீஷ் அரசாங்கத்தார் "இந்துக்களின் மதத்தில் தலையிடுவதில்லை" என்று சொல்லிக்கொண்டு நமது சமூக சீர்திருத்தத்தில் சிறிதும் கவனமில்லாமலே தான் இது வரையிலும் இருந்து வந்து கொண்டிருக்கிறார்கள். உண்மை யிலேயே அரசாங்கமும் சமூக சீர்திருத்தம் பண்ணுவதில் கவனமுடையதாக இருந்திருக்குமானால் பிரிட்டீஷ் அரசாங்கம் ஏற்பட்ட இந்த நூற்றைம்பது வருஷ காலத்திற்குள் நமது இந்து சமூகம் எவ்வளவோ சீர்திருத்தமான நிலைமைக்கு வந்திருக்கக் கூடும். ஆனால் அரசாங்கத்தாரோ சீர்திருத்தத்தில் கொஞ்சமும் கவலை இல்லாமல் "நாங்கள் மதத்தில் தலையிட மாட்டோம்" என்னும் அந்தப் பழயப் பல்லவியையே வைதீக வெறியர்களின் மிரட்டு



RangaRakes tamilnavarasam.com

தலுக்குப் பயந்து இன்னும் பாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆதரவற்ற பெண் களுக்குச் சொத்துரிமை வழங்கும் பொருட்டுக் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மசோதாவைப் பற்றி அரசாங்கத்தின் சார்பாக "இந்த மசோதாவுக்குப் பலமான பொது ஜன ஆதரவிருப்பதாக எங்களுக்குத் தெரிந்தால் ஒழிய நாங்கள் இதை ஆதரிக்க மாட்டோம்" என்று சொல்லிவிட்டார்கள். அரசாங்கத் தார் இம்மசோதாவை ஆதரிக்க முன்வராமல் இவ்வாறு எதிர்த்ததை நாம் பலமாகக் கண்டிக்கின்றோம். பெண்கள் சம்பந்தமாகக் கொண்டு வரும் இம்மசோதாவுக்குப் பொது ஜன ஆதரவு இருப்பதை எப்படி தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை அரசாங்கத்தாருக்கு ஞாபகப் படுத்த விரும்பு கின்றோம். உண்மையில் இந்தச் சாரதா மசோதாவுக்குப் பொது ஜன ஆதரவு இருக்கிறதா என்று அறிய வேண்டுமானால் சொத்துரிமை இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கும் பெண் மக்களின் அபிப்பிராயங்களை அறிவது தான் ஒழுங்காகும். இம்மசோதாவைப் பற்றி வைதீக வெறி பிடித்த, சுயநலமுடைய ஆண் மக்கள் கூறும் அபிப்பிராயம் பொருத்த மற்றதாகும். ஏனென்றால் பெண்களை அடிமையாக வைத்திருப்பதுதான் இந்து மதம். சிறு குழந்தை களைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதுதான் இந்து மதம் -ஆண் மக்கள் சொத்து சுதந்தரத்தோடு சுகமடைவதும் பெண் மக்கள் அவையில்லாமல் துன்பமடைவதுந்தான் இந்து மதம், இந்து மத தர்மம், இந்த மதத்தின் அஸ்திவாரம் என்ற கொள்கையுடையவர்கள் எப்படி இம்மசோதாவை ஆதரிக்கக் கூடும்? ஆகையால் பெண் மக்களின் அபிப்பிராயத்தையே அனுசரித்து இம்மசோதாவுக்கு ஆதரவு கொடுப்பது தான் அரசாங்கத்தின் நியாயமான கடமையாகும். "இந்தியர்களைக் காப்பாற்றவே நாங்கள் இந்தியா வுக்கு ஊழியம் புரிகிறோம்" என்று வெள்ளைக்கார அரசாங்கம் சொல்லிக் கொண்டிருப்பது உண்மையானால் இந்த மசோதாவை ஆதரித்துப் பெண் மக்களுக்கு நியாயம் வழங்குவது தான் நேர்மையாகும் என்று எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

கடைசியாகப் பொது ஜனங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லி முடிக் கிறோம். சாரதா சட்டத்தைக் கண்டித்து வைதீக வெறியர்கள் கிளர்ச்சி செய்தது போல் இப்பொழுது அந்தக் கூட்டத்தார் கிளர்ச்சி செய்யப் போகின்றார்கள். ஆகையால் நாம் அவர்களுடைய விஷமப் பிரசாரத்திற்கு இடங்கொடாமல், இந்த மசோதாவை ஆதரித்துப் பொதுக் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறை வேற்றி அரசாங்கத்தார்க்கு அனுப்பி அவர்களையும் எச்சரிப்பது அவசியம் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நாம் எதிர்பார்த்ததற்கு விரோதமாக பலத்த விவாதத்திற்குப் பின் மேற்படி மசோதா தோற்றுவிட்டதாக இன்றைய செய்தியறிய மிகவும் விசனிக்கிறோம். இதைப் பற்றி மறுமுறை எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 07.02.1932**



# நான்கையும் பாருங்கள்

**- தேசியத்துரோகி**

## சீனாவைப் பாருங்கள்

தற்காலத்தில் சீனதேசம் ஆபத்தான நிலைமையிலிருந்து கொண்டிருக் கிறது. ஜப்பான் அதை ஓட ஓட விரட்டுகிறது. ஜப்பானுடன் எதிர்த்து நின்று போர் செய்யும் வல்லமை சீனாவுக்கு இல்லை. ஆகையால் அது சர்வதேச சங்கத்தினிடம் முறையிட்டுக் கொண்டிருக்கிறது. சர்வதேச சங்கமும் இத் தனை நாட்களாக ஒரு முடிவுக்கும் வராமலிருந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது சர்வ தேசங்களுக்கும் சொந்தமாக இருக்கும் பிரதேசத்தில் ஜப்பான் ஆதிக்கம் செலுத்த விரும்புவதால் சீனா ஜப்பான் தகராறில் சர்வதேச சங்கமும் தலையிட்டுக் கொண்டிருக்கிறது. இது எப்படியாவது போகட்டும். சீனா இத்தகைய பலமற்ற நிலைமையில் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை மாத்திரம் கொஞ்சம் கவனிப்போம்.

சீனாவில் சரியான சீர்திருத்தம் ஏற்பட வில்லை. சீனாவின் மக்கள் ஏறக் குறைய இந்தியா மக்களைப் போன்றவர்கள். பழய நாகரீகத்தை விடாப் பிடி யாக பிடித்திருப்பவர்கள். சீனாவில் சீர்திருத்த நோக்கமுடைய கூட்டத்தாரும் இருக்கின்றனர். அவர்கள் நம்மைப் போன்ற - அதாவது சுய மரியாதை இயக்கக்காரர்களைப் போன்ற சீர்த்திருத்தக்காரர்கள். ஒரு பக்கம் பழமையை உயிர்போனாலும் விடக் கூடாது என்ற கொள்கையை உடைய மக்கள் இருக் கின்றனர். அவர்கள் நாட்டின் அரசியலில், கவனம் இல்லாதவர்கள். அவர்கள், பரலோகத்துக்கான காரியங்களிலேயே கருத்துள்ளவர்கள். சுருங்கக் கூறினால் நமது நாட்டு வருணாச்சிரம வைதீகர்களின் பங்காளிகள்.

அல்லாமலும் முதலாளிக் கூட்டத்தாரும் சீனாவில் மிகுதியாக இருக்கின்றனர். அவர்கள் தாங்கள் மனைவியுடன் மக்களுடனும் சுகபோக வாழ்க்கை வாழ்வதில் தான் கருத்துடையவர்கள். ஆகையால் அவர்களுக்கு நாட்டைப் பற்றிய கவனம் சிறிதும் இல்லை.



RangaRakes tamilnavarasam.com

அன்றியும் அங்கு ஏழை மக்களின் கூட்டம் மிகுதி. ஆகையால் சைனாவில் பொதுவுடமைப் பிரசாரமும் அதிகம். இவ்வியக்கமும் பலமாக இருக்கிறது. இவர்களும் ஒரு புறத்தில் உள்நாட்டு அரசியலை ஸ்தாபிக்க முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர்.

ஆகவே இதுவரையிலும் கூறியவற்றையெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தால் சைனாவின் மக்கள் பழய நாகரீகத்தில் - மூட நம்பிக்கையில் இன்னும் கருத்துடையவர்களாக இருப்பதால் அவர்களிடம் ஒற்றுமை யில்லை. பலமான அரசாங்கம் ஸ்தாபிக்க முடியவில்லை. ஆகையால் அது அந்நிய தேசப்படையெடுப்புக்குக் கட்டுப்பட்டு பயந்து கொண்டிருக்கிறது. எல்லா வல்லரசுகளும் சைனாவின் பிரதேசத்தில் ஆதிக்கம் வைத்துக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இதனோடு நமது நாட்டின் நிலைமையைக் கொஞ்சம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுகிறோம். சீன மக்கள் மனத்தில் உண்டாயிருக்கும் கொஞ்சம் மாறுதல் கூட இன்னும் நமது மக்களின் மனத்தில் உண்டாகவில்லை. அவர்களுக்கிருக்கும் குறைந்த ஒற்றுமையில் லட்சத்தில் ஒரு பங்கு ஒற்றுமை கூட நமது மக்களிடம் உண்டாகவில்லை. இந்த நிலையில் நமக்குப் பூரண சுயேச்சை கிடைத்துவிட்டால்? நம்மை விரட்ட யார்தான் முன்வர மாட்டார் கள்? இளைத்தவன் தலையில் மிளகாய் அரைக்க நினையாதவர்கள் யாரே னும் உண்டா? ஆகையால்தான் முதலில் மக்கள் மனத்தில் உள்ள மூடத் தனத்தை அகற்றுங்கள். ஒற்றுமையை உண்டாக்குங்கள்! ஜாதி மதங்களை ஒழியுங்கள்! பூரண சுயேச்சை பெறலாம் என்று கூறுகிறோம்.

## தீண்டாதாரின் சமத்துவப் போர்

குருவாயூர் ஆலய தர்மகர்த்தாக்கள் தீண்டாத வகுப்பினரின் சத்தியாக் கிரகத்திற்குப் பயந்து இதுவரையிலும் கோயிலை மூடிவைத்து விட்டனர். சென்ற 28-1- 32ல் மீண்டும் திறக்கப்பட்டது. அப்பொழுது தீண்டாதவர்களும் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்து விட்டனர்.

பண்டரிபுரத்தில் உள்ள கோயிலுக்குள் போக விரும்பி தாழ்த்தப்பட்ட வர்கள் தர்மகர்த்தாக்களை அனுமதி கேட்டனர். அவர்கள் அனுமதி தர மறுத்துவிட்டனர். உடனே தீண்டத் தகாதவர்கள் அனைவரும் சத்தியாக் கிரகம் செய்வதெனத் தீர்மானித்து விட்டனர்.

மேற்கண்ட இரண்டு செய்திகளைப் பற்றி கொஞ்சம் ஆலோசித்துப் பாருங்கள். குருவாயூர் கோயில் பூனைகள் கோயிலைப் பூட்டி வைக்க சம்மதித்தார்களே யன்றி அதற்குள் தாழ்த்தப்பட்டவர்களைப் போக விடச் சம்மதித்தார்களில்லை. பல நாட்களாகச் சிறையிலிருக்கச் சம்மதிக்கும் குருவாயூர் சாமி, தீண்டத்தகாதவர்கள் தன்னிடம் வர சம்மதிக்கவில்லையா?



இனி பண்டரிபுரப் பார்ப்பனர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. அவர்களும் பூட்டி வைக்கப் போகிறார்களா அல்லது குருவா யூர்ப் பிரகஸ்பதிகள் செய்ததுபோல் முள்வேலி போடப் போகிறார்களா? என்பது தெரியவில்லை.

இந்தச் சங்கடங்கள் தீர நமக்கு ஒருவழி தோன்றுகிறது. கோயில்களில் உள்ள சாமிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க விரும்புகின்றவர்கள் அவை களைத் தூக்கிக் கொண்டுபோய் தங்கள் சொந்த வீடுகளில் வைத்துக்கொண்டு கொண்டால் அங்கு யாரும் சத்தியாக்கிரகம் பண்ண வரமாட்டார்கள். சாமி களுக்கும் உயிர் போய்விடாது.

அல்லது கோயில்களையே அடியோடு தரைமட்டமாக்கிவிட்டால் தீண்டாதவர்கள் சத்தியாக்கிரகம் பண்ண வேண்டிய அவசியமில்லை. கோயில்கள் இருப்பதினால்தானே அதற்குள் பிரவேசிக்க வேண்டுமென விரும்புகின்றனர்?

போகட்டும் எப்படியாவது செய்யுங்கள்; ஆனால் இதைப் பற்றியும் சிந்தித்துப் பாருங்கள். தீண்டத்தகாத மக்கள் இம்மாதிரி தங்கள் சமதர்மத்திற்காக கஷ்டப்பட வேண்டிய நிலையிலிருக்கின்றனர். அவர்கள் உரிமையைக் கவனிப்பார் யாருமில்லை. எந்த சுயராஜ்யக்காரனாவது ஜாதிக் கொடுமையை ஒழிக்க வேலை செய்கிறானா? மதம் என்னும் மூடத்தனத்தை ஒழிக்க வேலை செய்கிறானா? இவைகளைப் பற்றி கவலையில்லாமல் இருக்கும் போது இவர்கள் சுயராஜ்யமாவது, பூரண சுயேச்சையாவது! பெறுவதாவது! அனுபவிப்பதாவது! என்று நாம் பரிகாசம் பண்ணுவதை யாராவது குற்றமென்று சொல்ல முடியுமா?

## நகர சபையா? மத சபையா?

சென்னை நகர சபையார் சென்ற 30-1-32-ல் கௌடய மடாதிபதியான திரு. “பக்தி சித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி” அவர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்களாம். அது சமயம், திரு. சுவாமியார், தமது சீடர்களுடன் விஜயம் பண்ணினாராம். வரவேற்புப் பத்திரம் வாசிப்பதற்கு முன் அவருடைய சீடர்களில் ஒருவரால் “தெய்வ ஸ்தோத்திரம்” கூறப்பட்ட தாம். அதன்பின்தான் வரவேற்பு பத்திரம் கொடுக்கப்பட்டதாம். திரு. சுவாமியாரும் கடைசியில் பதில் கூறும் போது “கடவுள் சர்வாந்திரியாமியாய் எங்கும் நிறைந்திருக்கிறார்” என்றும், “மதக்கல்வி மிகவும் அவசியமானது” என்றும் உபதேசம் பண்ணினாராம்.

போகட்டும், சென்னை நகரசபை உறுப்பினர்கள் நல்ல உபதேசம் பெற்றதற்காக சந்தோஷப்படுகிறோம். உறுப்பினர்களில் எத்தனை பேர் ஸ்வாமிகளிடம் உபதேசம் பெற்று அவர்களின் சீடர்களானார்களோ



RangaRakes tamilnavarasam.com

தெரியவில்லை. சென்னை நகரசபை இனி மதக் கல்வி போதிக்க விரும்பி னாலும் விரும்பலாம். ஆனால் அச்சமயத்தில் மற்றொரு விஷயத்தையும் மறந்து விடக் கூடாது. சென்னை நகரத்தின் குடிமக்களில் கடவுள், புராணம், மதம் முதலியவற்றை மறுக்கின்றவர்களும் இருக்கின்றார்கள். அவர்களிட மிருந்தும் நகரசபைக்கு வரிப்பணம் வந்துகொண்டிருக்கும். ஆகையால் நாஸ்திகக் கல்வியும் போதிக்க வேண்டியது நியாயமாகும் என்பதை நினைப் பூட்டுகிறோம்.

சென்னை நகரசபை இனி கும்பகோணம் சங்கராச்சாரியாருக்கும் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்க வேண்டியதுதான். தருமபுரம், திருவாவடுதுறை முதலிய ஊர்களில் உள்ள பண்டார சன்னதிகளுக்கும் வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுக்க வேண்டியதுதான். மற்றும் ஜீயர்கள், பிஷப்புகள், போப்புகள், மகந்துகள், முல்லாக்கள் ஆகிய எந்த மதத் தலைவர்கள் வந்தாலும் அவர்களுக்கும் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்க வேண்டியதுதான். இனி நகரசபை மதசபையாக மாற வேண்டி யதைத் தவிர வேறு வழியில்லை என்று நாம் பயப்படுகிறோம்.

## தெய்வ சக்தி எங்கே?

ஸ்பெயின் தேசத்தில் புதிதாக ஏற்பட்டிருக்கும் குடியரசு அரசாங்கம், மக்களின் அறிவைக் கெடுத்து மூடராக வைத்திருக்கும், மதஸ்தாபனங்களின் ஆதிக்கங்களை யெல்லாம் ஒழித்துக் கொண்டு வருகின்றனர். மடங்கள் கோயில்கள் இவைகளின் சொத்துக்களை யெல்லாம் பறிமுதல் செய்து அவைகளைத் தேச மக்களின் நன்மைக்குப் பயன்படுத்தத் தீர்மானித்து விட்டனர்.

இதைக் கண்ட ரோமன் கத்தோலிக்கப் பாதிரிமார்களெல்லாம், மிகவும் கோபம் கொண்டு, அரசாங்கத்திற்கு எதிராகப் பொது ஜனங்களைக் கிளப்பி விட எவ்வளவோ முயற்சி செய்தனர். அறிக்கை மேல் அறிக்கை வெளி யிட்டனர். மதத்திற்கு ஆபத்து என்று கூச்சலிட்டனர். ஆனால், ஒன்றும் பலிக்க வில்லை. பாவம், அவர்களுடைய கடவுள் அவர்களைக் காப்பாற்றா மல் கைவிட்டு விட்டார். அவர்களுடைய கடவுளுக்கு – தெய்வீக சக்திக்கு – மதத்திற்கு, அரசாங்கத்தின் செய்கையைத் தடுப்பதற்கு வலிமையில்லையா? கடைசியில் அந்தப் பாதிரிமார்க ளெல்லாம் மூட்டை முடிச்சுகளுடன், நாட்டை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள். “ஹாலண்ட்’’ தேசத்தில் போய் தங்கியிருக் கிறார்களாம் !

இந்தச் சமயத்தில் நமக்கு ஒரு யோசனை யுண்டாகிறது. கடவுளின் பிரதிநிதியாக – மதத்தின் பிரதிநிதியாக இருக்கின்ற தங்களையே காப்பாற்றாத மதம் தேசத்தைக்காப்பாற்ற முடியுமா? மக்களைக் காப்பாற்ற முடியுமா? என்ற யோசனை இந்தப்பாதிரிகளுக்கு உண்டாக வில்லையே என்று தான் யோசிக் கிறோம். இதனால் தான் “மதம் மக்களுடைய சொந்த புத்தியையே கெடுத்து விடுகிறது’’ என்று சொல்லுகிறோம். இதனால் நாம் கிறிஸ்துவ மதத்தையும் கிறிஸ்துவப் பாதிரி மார்களையும் மாத்திரம் கண்டிக்கிறோம் என்று நினைக்க வேண்டாம். பொதுவாக எல்லா மதங்களையும் இப்படித்தான் கூறுகிறோம். ஆகையால் இனியாவது மதம் பயனற்ற தென்பதை அறிவீர்களா?

**குடி அரசு – கட்டுரை – 07.02.1932**


RangaRakes
tamilnavarasam.com

# மலேயா தமிழர்கள்

மலேயாவில் உள்ள பினாங்கு நகரில் சென்ற 16, 17-1-32 ல் அகில மலேயாத் தமிழர்களின் இரண்டாவது மகாநாடு மிகவும் விமரிசையாக நடை பெற்றதை அறிந்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். மலேயாவில் நமது சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய தலைவர்களாக இருந்து தொண்டாற்றி வரும் திருவாளர்களான வி. கே. முருகேசம் பிள்ளை, ஆர். ஆர். ஐயாறு, தாமோதரம், ஜி. சாரங்கபாணி, சுவாமி அற்புதானந்தா, எச். எச். அப்துல்காதர் முதலானவர்கள் அம்மகாநாட்டில் அதிகமான பங்கு எடுத்துக் கொண்டு வேலை செய்திருக்கின்றார்கள். அந்த மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர் மானங்கள் எல்லாம் நமது இயக்கக் கொள்கையை அநுசரித்தனவாகவே இருக்கின்றன.

அத்தீர்மானங்களில் முக்கியமானவை பொருத்தமற்ற விவாகங் களைக் கண்டிப்பதும், விதவா விவாகத்தை ஆதரிப்பதும், விவாகரத்தை ஆதரிப்பதும், இறந்து போனவர்களுக்காகச் செய்யப்படும் அர்த்தமற்ற சடங்குகளைக் கண்டிப்பதும் "அகில மலேயா தமிழர் மகாநாடு" என்பதை "அகில மலேயா தமிழர் சீர்திருத்த மகாநாடு" என்று மாற்ற வேண்டும் என்ப தும் முக்கியமான தீர்மானங்களாகும். இது போலவே வாலிபர் மகாநாட்டிலும், பிறப்பினால் ஏற்றத்தாழ்வு இருப்பதைக் கண்டிப்பதாகவும், விவாகங்களைச் சடங்குகள் இல்லாமல் குறைந்த செலவில் பதிவு செய்து கொள்ளும் முறை யில் செய்ய வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இத்தீர்மானங்களை யெல்லாம் நாம் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறோம்.

தீர்மானங்களோடு நில்லாமல், வாலிபர்களும் சீர்திருத்த ஆர்வ முடைய தோழர்களும் இவைகளை அநுஷ்டானத்தில் கொண்டு வர வேலை செய்வார்களென்று நம்புகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 07.02.1932**



# உணர்ச்சி வீண் போகாது

எல்லா மக்களும் தாங்கள் இருக்கும் நிலையை விட்டு இன்னும் உயர்ந்த நிலையை அடைவதற்கே ஆசைப்படுவார்கள். கீழான நிலையை அடைவதற்கு விரும்புகின்ற மனிதர்கள் உலகில் யாரும் இருக்க மாட்டார்கள். கீழான நிலைக்குச் செல்லவேண்டுமென்னும் கருத்துடையவர்கள் யாராவது இருந்தாலும், அவர்கள் கருத்தும், அதனால் தமக்கு நன்மை உண்டாகும் என்ற நம்பிக்கையைக் கொண்டதாகத் தான் இருக்கக் கூடும். இது மனித சமூகத்தின் இயற்கையாகும். இத்தகைய ஆவலும் முற்போக்குணர்ச்சியும் இருந்த காரணத்தால்தான் மனித சமூகமானது பண்டை காலத்திலிருந்த மிருகப் பிராயத்திலிருந்து முற்றும் மாறுதலடைந்து தற்கால முள்ள நாகரீகமான நிலைக்கு வந்திருக்கின்றது.

"மனிதன் அறிவுடையவனாகவே படைக்கப்பட்டான்" என்னும் மத வாதிகளின் கட்டுக் கதையைத் தள்ளிவிட்டுச் சரித்திர மூலமாகப் பண்டைக் காலத்தில் மக்கள் எந்த நிலையிலிருந்தனர் என்பதை ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை விளங்கும். மக்கள் உண்டான காலத்தில் அவர்கள் குரங்கு களைப் போலவே மரங்களிலும், மலைகளிலும் வாழ்ந்து பிறகு தழை, மரப் பட்டைகளை எடுத்து, மிருகங்களை வேட்டையாடி உண்டு வாழ்ந்தவர்கள் நாளடைவில், நல்ல உடைகளைச் செய்து அணியக் கூடியவர்களாகவும், ஆகாரங்களைப் பக்குவப்படுத்தி உண்ணக் கூடியவர்களாகவும் இருந்து இடங்களமைத்துக் கொள்ளக் கூடியவர்களாகவும் சிறப்படைந்தனர் என்பது சரித்திர உண்மை.

இத்தகைய மக்கள் எல்லோரும் பண்டை காலத்தில் அறிவுடையவர் களாக இருந்திலர். அறிவுடையவர்கள் சிலரும், அறிவில்லாதார்கள் பலருமாக இருந்தனர். இந்த அறிவுடைய சிலரே மற்ற எல்லா மக்களையும் ஒரு கட்டுக்கு உட்படுத்தி அவர்களையெல்லாம் ஆண்டு வந்தனர். தமது அறிவின் திறமையால் பல சட்டங்களை ஏற்படுத்தி மக்களை அதற்கு கட்டுப்பட்டு ஒழுகும்படி செய்து வந்தனர். அக்காலத்திலிருந்த அறிஞர்களின் எண்ணம் மிகவும் முன்னேற்றமுடையதாகத்தான் இருந்தது. ஆனால் அவர்கள் எண்ணக் கூடிய எல்லாக் காரியங்களையும் செய்து முடிக்கும் ஆற்றல்



RangaRakes tamilnavarasam.com

அவர்களுக்கில்லை. தற்காலத்தில், ஆகாயத்தில் பறக்கவும், இயந்திரங்களால் ஆகிய மோட்டார் ரயில் முதலியவைகளை உபயோகிக்கவும், இயந்திரங் களைக் கொண்டு சண்டை போடவும் மனிதர்கள் கண்டு பிடித்திருப்பது போலவே அவர்களுக்கும் இம்மாதிரியான விஷயங்களின் மேல் ஆசை மாத்திரம் இருந்தது. ஆகையால் சாதாரணமாக நடந்து திரிந்த மனிதர்கள், மாடு, கழுதை, குதிரை முதலியவைகளின் மேல் ஏறிக் கொண்டு சவாரி செய்யவும், பிறகு அவைகளை வண்டிகளில் பூட்டிப் பிரயாணம் பண்ணவும், தண்ணீரில் கட்டைகளை மிதக்கவிட்டுக் கொண்டு அதன்மூலம் நீர்நிலை களைத் தாண்டவும், பிறகு அவைகளைப் பாய்க்கப்பல்களாகச் செய்து கொள்ளவும் தான் கற்றுக் கொண்டார்கள். சரீர பலத்தால் சண்டை செய்த வர்கள், வில், ஈட்டி, முதலிய ஆயுதங்களைக் கொண்டு சண்டை செய்யவுந் தான் கற்றுக் கொண்டார்கள். அக்காலத்தில் அவர்களுடைய அறிவினாலும் முயற்சியினாலும் இவ்வளவு தூரந் தான் நாகரீகமடைய முடிந்தது. ஆகவே அதற்கு மேல் உண்டான, அதாவது தாங்கள் செய்ய முடியாத எண்ணங்களை எல்லாம் செய்வதற்கு ஏதோ ஒரு பொருள் இருக்கவேண்டுமென்று கருதி விட்டார்கள். அப்பொழுது தான் 'கடவுள்', 'தெய்வம்', வேறு உலகம் என்ற எண்ணங்களெல்லாம் உண்டாயின. அவ்வெண்ணத்தின் பயனாகவே சாஸ்தி ரங்களும், மதங்களும் ஏற்பட்டு விட்டன. அது முதல் மக்களுடைய மனத்தில் உள்ள தன்னம்பிக்கை குறைந்து தங்களுக்குத் தெரியாத ஒரு பொருளின் சக்தியினால்தான், தங்களால் முடியாத காரியங்களெல்லாம் நடைபெறுகின்றன என்ற நம்பிக்கையில் வீழ்ந்தார்கள்.

பண்டைக் காலத்தில் ஆகாயவிமானம் இருந்ததாகவும், அது பறந்து சென்றதாகவும் இராமாயணத்தில் கூறப்படுகின்றது. 'மயில் பொறி' என இயந்திரத்தினால் மயில்போல ஒரு வாகனம் இருந்ததாகவும், அதன் மீது ஏறிக் கொண்டு சென்றதாகவும் சீவக சிந்தாமணி என்னும் நூலில் சொல்லப்படு கிறது. மகாவிஷ்ணு என்னும் தெய்வத்துக்கு விரோதமாக இருந்த ஒருவன் மகாவிஷ்ணுவைப் போலவே சங்கு, சக்கரம், வில், வாள், கதை முதலிய ஆயுதங்களையும், இயந்திரத்தினால் கருடன் போல ஒரு வாகனம் செய்து கொண்டு அதன்மேல் ஏறி ஆகாயமார்க்கமாக பிரயாணம் செய்ததாகவும் பாகவதம் கூறுகிறது. மற்றும் பல புராணங்களில் கோட்டைச் சுவர்களின் மேல் பகைவர்களுடன் தானே சண்டைபோடக்கூடிய அனேக விதமான இயந்திரங் கள் இருந்ததாகவும் சொல்லப்படுகின்றன. ஆனால் இவை யெல்லாம் அக்காலத்தில் உண்மையில் இருந்தனவா என்றால் இல்லை என்று திடமாகக் கூறலாம். அப்படியானால் இவற்றைப் பற்றிய பிரஸ்தாபம் உண்டாவதற்கு காரணம் என்ன என்றால் எண்ணமே காரணம் என்று கூறுவோம். இவ்வாறு இருக்க வேண்டுமென்ற ஆசை அக்காலத்தில் அறிஞர்களுக்கு இருந்தது. அந்த ஆசையினாலும், மனோபாவத்தினாலுமே கதைகள் எழுதி விட்டார்கள் என்பது தான் உண்மை. இவ்வாறே ஓர் இடத்திலிருந்து பேசுவதை நெடுந்தூரத்திலுள்ளவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையும்



இருந்தது. இந்த மாதிரியான பல ஆசைகள் இன்றும் சிறு குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை எல்லோருடைய மனத்திலும் இருப்பதைக் காணலாம்.

இவ்வாறு மக்களுடைய மனத்தில் பல காலமாக நிகழ்ந்து வந்த ஆசையே முதிர்ச்சி அடைந்து அதன் பயனாக தற்காலத்தில் அவைகளெல் லாம் நிறைவேறி வருகின்றன. ஆகையால் மக்களுடைய மனத்தில் உண்டா கும் முன்னேற்றமான எண்ணங்கள் நாளடைவில் நிறை வேறாமல் போவ தில்லை.

இது போலவே பண்டைக் காலத்திலேயே எல்லா மக்களுடைய அறிவும் வளர வளரப் பலவகையான அபிப்பிராய பேதங்களும் வளரத் தொடங்கின. மக்களை அடக்கி ஆளும் பொருட்டு அறிஞர்களால் ஏற்படுத் தப்பட்ட தெய்வங்கள், கடவுள்கள், சாஸ்திரங்கள் முதலியவைகளின் உண்மை யற்ற தன்மைகளையும் உணர்ந்து வெளிப்படுத்தவும், மக்களுக்கு அவை களின் மூலம் உண்டாகி இருக்கும் பயத்தையும் அடிமைப் புத்தியையும் அகற்றி ஒவ்வொருவரையும் தன்னம்பிக்கை உடையவர்களாக வாழச் செய்யவும் முயன்றனர். இதன் பயனாகத் தோன்றியவைகள் தான் நாஸ்திக மதம், புத்த மதம், சித்தர்களின் கொள்கைகள் முதலியவைகள்.

பொதுவாக அறிவுடைய மக்கள் அனைவரும் தாமே கடவுள், சாஸ்திரம் இவைகளைப் பற்றிச் சிந்திக்கும் போது அவைகள் பொய்யென உணரத் தொடங்கினர். ஆகவே அவர்கள் அவைகளின் கட்டுப்பாடுகளி லிருந்து விலகிச் சுயேச்சையாகவும், சுகமாகவும், கவலையின்றியும் வாழ முயற்சி செய்தனர். நாளடைவில் ஒருவரை ஒருவர் அடக்கி ஆளுவதற்கும் செல்வமும் சுகமும் உடையவர்கள் எப்பொழுதும் செல்வமும் சுகமும் உடையவர்களாகவே வாழ்வதற்கும், அவையில்லாமல் அடிமையாய் இருந்து துன்புறுவோர்கள் எப்பொழுதும் அடிமையாக இருந்து துன்புறுவதற்குமே, நம்மால் ஒரு காரியமும் ஆகாது என்றிருக்கும் சோம்பேரிகளுக்குமே மதமும், கடவுளும், சாஸ்திரங்களும் என்ற உணர்ச்சி உண்டான பின், அவை கள் சிறிது சிறிதாக ஒழிந்து வருகின்றன.

"மதங்களையும், சாஸ்திரங்களையும், கடவுளுக்குச் செய்யப்படும் காரியங்களையும் அழிக்க ஒரு காலத்திலும் முடியாது. அவைகளுக்கு அழிவு வருகிற காலத்தில் கடவுளே அவதாரம் பண்ணி அவைகளை நிலைநிறுத் துவார்" என்று மதவாதிகள் கூறும் சொல் பொய்யாகப் போகுமாறு ருஷியா போன்ற தேசங்களில் மதங்களும், கடவுள்களும், அவைகளுக்குச் செய்யப் படும் காரியங்களும் இருந்த இடம் தெரியாமல் போய்க் கொண்டிருக்கின்றன. மக்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் மதங்கள், கடவுள் கள், சாஸ்திரங்கள் இவைகளை அழிக்க வேண்டும் என்ற கொள்கை பரவாத நாடு ஒன்றுமே இல்லை. எல்லா நாடுகளிலும் இக்கொள்கையுடைய மக்கள் இருந்து வருகின்றனர்.



RangaRakes tamilnavarasam.com

இன்னும் சில ஆண்டுகளுக்குள் உலக முழுவதும் இக்கொள்கைகள் பரவி தற்போது உள்ள மதங்களும் கடவுள்களும் சாஸ்திரங்களும் இவை களின் மூலம் ஏற்பட்டுள்ள உயர்வு தாழ்வு வித்தியாசங்களும் அடியோடு மாண்டொழியும் என்பதற்கு ஐயமில்லை. மக்களுடைய மனதில் உண்டாகும் உணர்ச்சிகள் நாளடைவில் முதிர்ச்சி அடைந்து சித்தி பெறுவதே இவ்வுலகில் இது வரையிலும் நடைபெற்று வரும் இயற்கை நிகழ்ச்சியாக இருந்து வரு கின்றது என்ற உண்மையை அறிந்தவர்கள் எவரும் நாம் கூறுவதைப் பற்றிச் சிறிதும் ஐயமுறமாட்டார்கள் என்பது நிச்சயம்.

இப்பொழுது, கடவுள், சாஸ்திரம், மதம் முதலியவைகளைப் பற்றிய பயமும் நம்பிக்கையும் யாரிடத்திலிருக்கின்றது என்று பார்த்தால் உண்மை விளங்கும். கல்வி அறிவும், உலக நாகரீக உணர்ச்சியும், பகுத்தறிவும் இல்லாத சாதாரண மக்களிடத்தில் தான் இவைகளைப் பற்றிய நம்பிக்கை இருக் கின்றதே தவிர, வேறு படித்தவர்களிடத்திலோ, நாகரீகமுடைய வர்களிடத் திலோ, பகுத்தறிவு உடையவர்களிடத்திலோ இவைகளைப் பற்றிய நம்பிக் கையோ, பயமோ இருக்கிறதென்று கூற முடியவே முடியாது. நம்பிக்கை இருப்பதாகக் காட்டிக் கொண்டு வைதீகர்கள் போல் நடிப்பவர்களெல்லாம் சுயநலத்தினால் பொருளையோ, புகழையோ, பிறரை ஏமாற்றுவதையோ கருதித்தான் அவ்வாறு நடிக்கின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். உண்மையில் அவைகளில் நம்பிக்கை உடையவர் களாயிருந்தால் அவை களில் சொல்லுகின்றபடி நடக்க வேண்டும். இவ்வாறு சாஸ்திரங்கள் சொல்லு கிறபடியோ மதங்களின் கட்டளையின்படியோ, கடவுள்களின் அபிப்பிராயப் படியோ, முற்றிலும் நடந்து வருகின்ற ஒரு மனிதனாவது இவ்வுலகில் இல்லை. ஆகையால் அவைகள் யாருடைய நம்பிக்கைக்கும் உரியதாக இல்லாமை யால் அடியோடு அழியக்கூடிய காலமும் தூரத்திலில்லை யென்று சொல்லு கிறோம். இவ்வாறு நடைபெறுவது இயற்கையேயாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 14.02.1932**



# இரண்டு மசோதாக்களின் கதி

இந்திய சட்ட சபையில் இம்மாதம் 4-ந்தேதி நடந்த நிகழ்ச்சிகள் நமது நாட்டுச் சீர்திருத்தவாதிகள் எல்லோராலும் கவனிக்கக் கூடிய தொன்றாகும். அன்று நமது நாட்டுப் பெண்மக்களுக்கு விடுதலையளிக்கக் கூடிய இரண்டு மசோதாக்கள் விவாதத்திற்கு வந்தன. அவைகளில் "விதவைகளுக்கு சொத்துரிமை" அளிக்கும் மசோதா ஒன்று. இம்மசோதா விவாதத்திற்கு வந்த காலத்தில், வைதீகர்கள் இதைப் பற்றி கூறிய அபிப்பிராயத்தையும் சென்றவாரம் எடுத்துக் காட்டி கண்டித்திருந்தோம். கடைசியாக இம்மசோதா தனிக் கமிட்டிக்கு அனுப்பப்படாமல் தோற்றது. இரண்டாவது "விவாக விடுதலை மசோதா" ஒன்று விவாதத்திற்கு வந்தது. கடைசியில் இம் மசோ தாவைப் பற்றிய விவாதமும் ஒத்திவைக்கப்பட்டது. இதுவும் "விதவை களுக்குச் சொத்துரிமை" வழங்கும் மசோதாவைப் போலவே தோற்றுப் போகும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு இந்தியப் பெண்மணிகளுக்குச் சுதந்திரம் அளிக்கும் மசோதாக்கள் தோற்றுப் போவதற்குக் காரணம் என்னவென்று பார்ப்போம். முதற்காரணம் வைதீகர்கள்; இரண்டாவது காரணம் அரசாங்கத்தார்கள்.

இவர்களில் வைதீகர்களைப் பற்றி நாம் குறை கூறுவதில் ஒன்றும் பயன் உண்டாகப் போவதில்லை. அவர்கள் எப்பொழுதுமே சீர்திருத்தங்க ளுக்கு முட்டுக்கட்டைகளாகவே இருந்து தீருவார்கள். பொருள் சம்பாதிப் பதிலும், பட்டம், பதவி பெறுவதிலும், சாஸ்திரம், மதம் முதலியவைகளைப் பார்க்காமல் எந்தக் காரியங்களையும் செய்யப் பின்வாங்கமாட்டார்கள். ஆனால் அவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு உண்டாகும் நன்மைகளை மாத்திரம் தடுக்க, முன் வராமல் இருக்க மாட்டார்கள். பிறருடைய சுதந்திரத் திற்கும், சமவுரிமைக்கும் தடை செய்வதற்காக மதத்தையும், சாஸ்திரங் களையும் கொண்டு வந்து நடுவில் போட்டு குழப்பம் பண்ணுவார்கள். இவ்வாறே தான் எந்தச் சீர்திருத்தங்களுக்கு முயற்சி செய்கின்ற காலங் களிலும் வைதீகர்கள் செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே அவர்க ளுடைய நோக்கம் சுயநலத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை. ஆகையால் சீர்திருத்தம் புரிய விரும்புகிறவர்கள் வைதீகர்களுடைய அபிப்பிராயங்களை



RangaRakes tamilnavarasam.com

யும், கூச்சல்களையும் பொருட்படுத்தாமல் தங்களுடைய காரியத்தை நிறைவேற்றுவதில் நோக்கமுடையவராயிருந்தால் தான் சீர்திருத்தம் பண்ண முடியும்.

அடுத்தபடியாக அரசாங்கத்தாரும் மசோதாக்களுக்கு ஆதரவளிக்காமல் எதிர்த்தார்கள். ஒரு நாட்டு மக்களைச் சீர்திருத்தி அவர்களுக்குச் சுதந்திரத் தன்மையும், சமத்துவத் தன்மையும் உண்டாகும்படி செய்வதற்கு அரசாங்கமே கடமைப் பட்டதாகும். அரசாங்கத்தின் ஆதரவில்லாமல் நாட்டில் எந்த விதமான சீர்திருத்தங்களையும் செய்ய முடியாது. ஒரு துருக்கி தேசத்தை எடுத்துக் கொண்டால் அந்த நாட்டில் இன்று நடைபெற்று வரும் சமூக சீர்திருத்தங்களெல்லாம் அரசாங்கத்தாராலேயே செய்யப்பட்டு வருகின்றன. இது போலவே ருஷியா, ஸ்பெயின் முதலிய நாடுகளிலும் நடைபெறுகின்றன. மற்றய இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா, பிரான்சு, இட்டாலி முதலிய எல்லா தேசங்களிலும் அரசாங்கத்தாராலேயே சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் செய்யப்பட்டன என்பது அறிந்ததாகும். ஆனால் நமது நாட்டு அரசாங்கமோ "நாங்கள் மதத்தில் தலையிட மாட்டோம்" என்று சொல்லிக் கொண்டு வைதீர்களுக்குச் சாதகமாகவே இருந்து கொண்டிருக்கிறது.

இந்திய அரசாங்கம் இவ்வாறு வைதீகர்கள் கூச்சலைக் கண்டு அஞ்சுவதற்குக் காரணம், அவர்களைத் திருப்தி செய்துவிட்டால் அரசியல் கிளர்ச்சி அதிகமாக நடைபெறாது என்று நினைத்திருக்கலாம். உண்மையில் அரசாங்கம் இவ்வாறு நினைத்திருக்குமாயின், அது மிகவும் தவறானதே யாகும். இதனால் அரசியல் கிளர்ச்சிக்காரர்கள் ராஜ விசுவாசிகளாக மாறிவிடப் போவதில்லை. அவர்கள் எப்பொழுதும் அந்தக் கிளர்ச்சியைச் செய்து கொண்டு தான் இருப்பார்கள். இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுத்துவிட்டு வெள்ளைக்காரர்கள் நமது நாட்டைவிட்டுப் போய் விட்டாலும், அப்பொழுதும் அரசாங்கத்தாரை எதிர்த்துக் கொண்டு இருக்கும் ஒரு கூட்டம் இருந்து கொண்டு தான் இருக்கும். ஆகையினால் ஏதோ ஒன்றை நினைத்துக் கொண்டு வேறு ஒன்றைச் செய்வது ஒழுங்காகாது என்று சொல்லுகிறோம்.

அடுத்தபடியாக நமது நாட்டு அரசியல் வாதிகள் சீர்திருத்த விஷயங்களில் எந்தவிதமான அபிப்பிராயமுடையவர்களாயிருக் கின்றார்கள் என்று பார்த்தால், அவர்களும் வைதீகர்களின் "வக்காலத்து"க் காரர்களாகத்தான் இருந்து வருகின்றார்கள் என்பது விளங்கும். சீர்திருத்த வாதிகளை ஏமாற்ற வாய்ப் பேச்சுக்காக மாத்திரம் சுயராஜ்யம் பெற்ற பின், எல்லா சீர்திருத்தங்களையும் செய்து கொள்ளலாம் என்று மாத்திரம் பேசுகின்றார்களே ஒழிய சாதாரணமாகச் சீர்திருத்தங்களைப் பற்றிப் பிரசாரங்கள் கூடச் செய்வதில்லை. இவர்கள் கேட்கும் சுயராஜ்யமோ 'மத நடுநிலைமை' வகிக்கக் கூடிய சுயராஜ்யமாக இருக்கிறது. இது மாத்திரமல்லாமல் ஒவ்வொரு மதத்திற்கும், மத நூல்களுக்கும், நாகரீகங்களுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் பாதுகாப்பு



அளிக்கக் கூடிய சுயராஜ்யமாக இருக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். தற்போதுள்ள வெள்ளைக்காரர் அரசாங்கத்திலாவது ஜனப் பிரதிநிதிகளாகச் செல்லும் 'மெஜாரிட்டி'யான சட்டசபை அங்கத்தினர்கள் சீர்திருத்த நோக்கமுடைய வர்களாயிருந்தால் எந்தச் சீர்திருத்தச் சட்டங்களையும் நிறைவேற்றக் கூடிய சௌகரியம் இருக்கிறது. ஆனால் அந்த அரசியல் வாதிகள் கேட்கும் சுயராஜியத்தில் மதக்கொள்கைக்கு விரோதமான எந்த சீர்திருத்த மசோதாக்களையும் சட்ட சபையில் கொண்டுவரவே இடமில்லையே. ஆகையால் அரசியல் கிளர்ச்சிக் காரர்களையும் சமூக சீர்திருத்த விரோதிகளாகத்தான் நாம் தீர்மானமாகக் கருதுகின்றோம்.

இவ்வாறு வைதீகர்களும் அரசாங்கத்தாரும், அரசியல் வாதிகளும் சமூகச் சீர்திருத்தத்திற்கு விரோதிகளாயிருப்பதனால் சீர்திருத்தக்காரர்கள் யாருடைய தயவையும் எதிர்பார்ப்பதில் பயனில்லை. தம்மைத் தாமே நம்பி ஜன சமூகத்தின் பழய மனப்பான்மைகளை மாற்ற முயற்சிப்பதைத் தவிர தற்காலத்தில் வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. மக்களுடைய மனத்தைச் சமூக சீர்திருத்தத்தில் மாற்றினால் சட்டசபைக்குச் செல்லும் பிரதிநிதிகளும் சீர்திருத்த நோக்கமுடையவர்களாகவே இருக்கக் கூடும். அவர்களைக் கொண்டு எந்த விதமான சட்டங்களையும் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பதே நமது அபிப்பிராயமாகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 14.02.1932**



RangaRakes tamilnavarasam.com

# சட்டசபையில் வைதீகர்

மதம், கடவுள், வேதம், சாஸ்திரம் முதலிய கற்பனைகளில் குருட்டு நம்பிக்கையுடைய பகுத்தறிவற்ற வைதீகர்களைக் காட்டிலும், தாம் பார்க்காத வைகளையும், அறியாதவைகளையும், நம்பாத பகுத்தறிவுடைய நாஸ்திகர் களே உலகத்தில் நன்மையை, மக்களுடைய நலத்தைக் கவனிப்பவர்கள் என்பது ஒரு உண்மையான அபிப்பிராயமாகும் என்று நாம் தீர்மானமாக நினைக்கிறோம். வைதீகர்கள் எவ்வளவு தான் யோக்கிய பொறுப்புடைய வர்களாயிருந்தாலும், இரக்கமன முடையவர்களாய் இருந்தாலும் கால நிலையையும் மக்களுடைய மனோபாவத்தையும், பிறர் நலத்தையும் அறிந்து அதற்குத் தகுந்த வகையில் நடந்து கொள்ளுவதற்குரிய அறிவு, அவர்களிடம் உண்டாவதில்லை. ஏனெனில், கொடுமைப்படுகிற மக்கள் கொஞ்சம் சுக மடையக்கூடிய சீர்திருத்த சம் மந்தமான விஷயங்கள் வருகிற பொழு தெல்லாம் அவர்கள் வேதங்களில் என்ன சொல்லப்படுகின்றது. புராணம் ஸ்மிருதி முதலிய சாஸ்திரங்களில் என்ன சொல்லப்படுகின்றது என்று பார்த்து அதன்படியே நடந்து கொள்ள வேண்டும் என்று நினைப்பார்களே ஒழிய தமது சொந்த புத்தியினால் ஆலோசித்துப் பார்க்க முன்வருவதே யில்லை. அவர்கள் சொந்த அறிவும் உபயோகப்படுவதேயில்லை. ஆனால் மதம், கடவுள், வேதம், சாஸ்திரம் முதலிய கற்பனைகளைக் கற்பனைகளாகவே அறிந்திருக்கின்ற 'நாஸ்திகர்' என்பவர்களோ எந்த விஷயங்களிலும் தமது சொந்த புத்தியை செலுத்தி யோசனை செய்யக் கூடியவர்களாக இருக்கின் றார்கள். இவ்வாறு யோசனை செய்வதனால் பிறருடைய சுகதுக்கங்களையும் இலாப நஷ்டங்களையும் அறிந்து அவர்கள் பால் இரக்கங்கொண்டு உதவி செய்யக் கூடியவர்களாய் இருப்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மேலே நாம் கூறியவைகளைப் பொய்யென்றோ, பொருத்தமற்ற தென்றோ யாரும் கூறமுடியாது. இது வரையிலும் உலகில் நடந்து இருக்கின்ற எந்தச் சரித்திரங்களைப் பார்த்தாலும் இவ்வுண்மை விளங்காமல் போகாது. புராணங்களில் ஆகட்டும், இதிகாசங்களிலாகட்டும், மற்றும் தேச சரித்திரங் களிலாகட்டும் மதம், வேதம், கடவுள், சாஸ்திரம் இவைகளை நம்பாத நாஸ்திகர்கள் ஜனசமூகத்திற்குத் தீங்கு செய்ததாகவோ அல்லது ஜன சமூகத்தை அடிமைப்படுத்தியதாகவோ, கொடுமைப்படுத்தியதாகவோ



சொல்லப்படவில்லை. இதற்கு மாறாக மதம் என்னும் அபினையும், வேதம் என்னும் சாக்கடையையும், கடவுள் என்னும் பொய் மொழியையும், சாஸ்திரம் என்னும் குப்பையையும் கண்மூடித்தனமாக நம்பிய வைதீகர்களே ஜன சமூகத்தைக் கஷ்டத்திற்கு உள்ளாக்கி வந்திருக்கின்றார்கள் என்று அறியலாம். ஒரே வகையான மக்களை வேறு வேறு சாதிகளாகப் பிரித்து வைத்ததும், கொள்கை காரணமாக அதாவது மதம் காரணமாக ஒருவரை ஒருவர் வெறுப் பதும், பழிப்பதும், அடிப்பதும், குத்துவதும், கொல்லுவதும், கழுவேற்று வதுமான கொடுமைகளைச் செய்யும் படி வைத்ததும் குருட்டு நம்பிக்கை யுள்ள வைதீகர்களே ஆவார்கள். ஆகையால் எந்தக் காலத்திலும் வைதீகர் களால் ஜனசமூகம் விடுதலையோ, சுதந்திரமோ, சுகமோ அடைய முடியாது என்ற உண்மையான நிச்சயத்தோடுதான் நாம் வைதீகத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமெனக் கூறிவருகிறோம்.

ஜனசமூகத்தில் சரிபகுதியாக விருக்கும் பெண் மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகக்கட்டுண்டு கிடந்த தமது அடிமைத் தளையை அறுத்தெறிந்து சுதந்தரத்தோடு வாழ உலகமெங்கும் கிளர்ச்சி செய்து வருகின்றனர் என்பதும் அவருடைய கிளர்ச்சி நியாயமானதும், உண்மையானதும், அவசியமானதும் ஆகும் என்பதும், குடி அரசு வாசகர்களுக்குத் தெரியாத புதிய செய்தி அல்ல. பெண்மக்கள் பிறந்தது முதல் இறக்கும் வரையிலும் அடிமையாகவே இருந்து துன்பப்பட்டு வாழக்கூடிய நிலையை அகற்றி, அவர்களும் ஆண் மக்களைப் போலவே சுதந்தரத்துடன் வாழச் செய்ய வேண்டுமென்றும் நமது இயக்கம் தோன்றிய நாள் முதல் நாம் இடைவிடாது பிரசாரம் பண்ணிக் கொண்டு வருகிறோம். மதம், வேதம், கடவுள், சாஸ்திரம் இவைகளின் பேரால் ஆண் களுக்கு ஒரு நீதி, பெண்களுக்கு ஒரு நீதி ஏற்பட்டிருக்கும் கொடுந்தன்மை யான – அக்கிரமமான – அநீதி ஒழிய வேண்டும் என்று சொல்லி வருகிறோம்.

ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதற்காகச் செய்து கொள்ளும் ஒரு ஒப்பந்தமாகிய 'விவாகம்' அதாவது மணம் என்ற விஷயத்தை எடுத்துக் கொண்டு கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள்! இவ்விஷயத்தில் ஆண் களுக்குக் கொடுத்துள்ள உரிமைகளையும், பெண்களுக்கு ஏற்படுத்தியுள்ள அநீதிகளையும் பாருங்கள் ! இந்து சமூகத்தில் ஆண்கள் எத்தனை மனைவி களை வேண்டுமானாலும் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம்; உயிரோடிருக் கும் மனைவி பிடிக்காவிட்டால் அவளை நீக்கி விட்டு வேறு பெண்ணை விவாகம் பண்ணிக் கொள்ளலாம். மனைவி இறந்து விட்டாலும் வேறு மணம் புரிந்து கொள்ளலாம் என்பதற்கு மதம், வேதம், சாஸ்திரம் ஆகிய இவைகள் இடந்தருகின்றன. ஆனால் பெண்கள் பல கணவர்களை மணம் புரிந்து கொள்ளவும், உயிரோடிருக்கும் கணவன் பிடிக்காவிட்டால் அவனை நீக்கி விட்டு வேறு ஒருவனை மணம் புரிந்து கொள்ளவும், கணவன் இறந்து விட்டால் வேறு மணம் செய்து கொள்ளவும், அந்த மதமும், வேதமும், சாஸ்திரங்களும் தடைசெய்கின்றன.



RangaRakes tamilnavarasam.com

இப்படிப்பட்ட வித்தியாசமும் கொடுமையும் இல்லாமல் பெண்களும் ஆண் மக்களைப் போலத் தங்கள் விருப்பப்படியே மணம் புரிந்து கொள்ளச் சுதந்தரமுடையவர்களாய் இருக்க வேண்டுமென்று கூறுகிறவர்களையும், இதற்காக சட்டஞ் செய்ய வேண்டுமென்று சொல்பவர்களையும், சட்டம் ஆக்குவதற்காக மசோதாக்கள் கொண்டு வருபவர்களையும், அதை ஆதரிப்பவர்களையும் வைதீகர்கள் நாஸ்திகர்கள் என்றும் மதத் துரோகிகள் என்றும் தூற்ற வாரம்பித்து விடுகின்றனர். “மண விஷயத்தில் ஆண்களுக்கு இருக்கும் உரிமை பெண்களுக்கும் இருந்தால் மணம் என்பதன் தெய்வீகத் தன்மை போய் விடும்; பெண்களின் கற்புத்தன்மை போய் விடும்; இந்திய மக்களின் கட்டுப்பாடான சமூகத்தன்மை அழிந்து விடும்”, என்று வைதீகர்கள் கூச்சலிட்டு எதிர்க்கின்றனர். ஆனால் இவர்கள் ஆண் மக்கள் விஷயத்தில் மாத்திரம் இக்கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கச் சம்மதிப்பதில்லை; ஆண் மக்கள் மாத்திரம் பல மனைவிகளை மணந்து கொள்ளுவதனாலும், ஒரு மனைவியை நீக்கிவிட்டு வேறு மனைவியை விவாகம் புரிந்து கொள்ளுவதனாலும் மனைவி இறந்தபின் வேறு மணம் புரிந்து கொள்ளுவதனாலும். ‘மணம்’ என்பதன் தெய்வீகத் தன்மை அழியவில்லையா? கற்புத் தன்மை அழியவில்லையா? இந்திய மக்களின் கட்டுப்பாடான சமூகத்தன்மை அழியவில்லையா? என்று தான் கேட்கிறோம்.

பொதுவாகப் பெண்மக்களுக்குச் சுதந்தரம் வழங்கும் விஷயத்தில் நமது நாட்டு வைதீகர்களுக்கு இருந்து வரும் மனப்பான்மையை நாம் பல தடவைகளில் விளக்கமாக எடுத்துக் காட்டி வந்திருக்கின்றோம். அன்றியும் சீர்திருத்தம் சம்பந்தமான மசோதாக்கள், பெண்கள் சுதந்தரம் சம்பந்தமான மசோதாக்கள் சட்ட சபைகளில் கொண்டு வரப்படும் காலங்களில், வைதீகர்கள் தாங்களாகவே முன்வந்து தங்கள் மனப்பான்மையை வெளியிட்டு வந்திருக்கின்றார்கள். இவ்விஷயங்களை பாலிய விவாகத் தடை மசோதாவை இந்திய சட்டசபையில் திரு. சாரதா அவர்கள் நிறைவேற்றிய காலத்தில் அதை எதிர்த்த பண்டித மாளவியா, திரு. எம். கே. ஆச்சாரியார் போன்றவர்களின் பேச்சுகளிலிருந்து உணரலாம். அன்றியும் இந்த ஆண்டிலும் சென்ற ஜனவரி மாதத்திலும், பிப்ரவரி மாதத்திலும் இந்திய சட்டசபையில், “விதவைகளுக்குச் சொத்துரிமை வழங்க வேண்டும்” என்ற மசோதாவை திரு. சாரதா அவர்கள் கொண்டு வந்த காலத்திலும் “இந்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு விவாகரத்துச் செய்து கொள்ள உரிமை வேண்டும்” என்ற மசோதாவை திரு. அரிசிங்கவர் அவர்கள் கொண்டு வந்த காலத்திலும், இவர்களை எதிர்த்து திரு. ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியார் போன்ற வைதீகர்கள் வெளியிட்ட அபிப்பிராயங்களைக் கொண்டும் வைதீகர்களின் மனப்பான்மைகளை நன்றாய் உணரலாம். சென்ற வாரங்களில் “விதவைகளுக்குச் சொத்துரிமை” வழங்கும் மசோதாவைப் பற்றி எழுதியிருந்தோம். ஆதலால் இப்பொழுது “விவாக விடுதலை” மசோதாவைப் பற்றி மாத்திரம் கூறி முடிக்கின்றோம்.



சென்ற 13-2-32 இல் இந்திய சட்டசபையில் மீண்டும் விவாக விடுதலை மசோதா விவாதத்திற்கு வந்த போது வைதீகர்கள் நடந்து கொண்ட மாதிரியைக் கவனித்தால் நமது நாட்டினரனைவரும் வெட்கமடைய வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. அன்று காலையில் மசோதாவைப் பற்றிய விவாதம் தொடங்கிய போது பண்டித சத்தியேந்திர நாத சென் என்பவர் மசோதாவை எதிர்த்தும், திரு. ஜோஷி, ஆர். எஸ். சர்மா போன்றவர்கள் மசோதாவை ஆதரித்தும், திரு. சீத்தாராம ராஜு, திரு. ஸி. எஸ். ரெங்கய்யர் போன்றவர்கள் மசோதாவின் கொள்கையை ஒப்புக் கொண்டும், ஆனால் அதைப் பிறகு நிறைவேற்றிக் கொள்ளலாமென்றும் விளக்கெண்ணையாகவும் பேசினார்கள். இவ்வாறு காலையில் விவாதம் நடந்து முடிந்தது. மீண்டும் இடைவேளை போஜனத்திற்குப் பின் சட்டசபைக் கூடிய போது சபையில் 18 அங்கத்தினர்களே வீற்றிருந்திருந்தார்களாம், மற்ற அங்கத்தினர்கள், அதாவது இம்மசோதாவை எதிர்க்கும் மனப்பான்மையுடைய வைதீக அங்கத்தினர்களும், ஆதரிக்கும் மனப்பான்மையுடைய அங்கத்தினர்கள் சிலருங்கூடச் சட்ட சபைக்குள் வராமல் வெளியிலேயே நின்று விட்டார்களாம் சட்ட சபையிலிருந்து இருந்து கொண்டு தங்களுடைய உண்மையான அபிப்பிராயத்தை வெளியிடத் துணிவில்லாத இவ்வங்கத்தினர்களால் நமது சமூகத்திற்கோ, அல்லது தேசத்திற்கோ என்ன நன்மை செய்ய முடியும் என்று கேட்கின்றோம். கடைசியில், சட்ட சபைத் தலைவர் சபையில் “குவாரம்” உண்டாவதற்கு எவ்வளவோ முயன்றும் கடைசி வரையிலும் ‘குவாரம்’ ஏற்படாததால் சபை ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியிலிருந்து “ விவாக விடுதலை” விஷயத்தில் நமது வைதீகர்களின் மனப்பான்மை எவ்வாறு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். இந்த வைதீகர்கள் “விவாக விடுதலை” உரிமையில்லாமையால் உண்டாகும் தீமைகளையும், நன்மைகளையும், விவாக விடுதலை உரிமை இருந்தால் அதனால் உண்டாகும் நன்மை தீமைகளையும் தங்கள் சொந்த அறிவைக் கொண்டு நன்றாய் ஆலோசித்துப் பார்த்தால் “விவாக விடுதலை” மசோதாவை எதிர்க்க முன் வருவார்களா? என்று கேட்கின்றோம்.

ஒரு குடும்பத்திலுள்ள கணவன் மனைவிகளுக்குள் ஒற்றுமையில்லாவிட்டால் எந்தக் காலத்திலும் ஒற்றுமை ஏற்பட முடியாத அதிருப்தி ஏற்பட்டுவிட்டால், அல்லது வியாதி யுடையவர்களாய் இருந்தால் ஒருவருடைய நடத்தை மற்றவர்களுக்குப் பிடிக்காமல் இருந்தால், தாங்கள் கணவன் மனைவிகளாக வாழ்வதில் சிறிதும் விருப்பமில்லாதவர்களாயிருந்தால் அவர்கள் தங்கள் மண ஒப்பந்தத்தை சட்ட மூலமாக நீக்கிக் கொள்ளுவதில் என்ன குற்றமிருக்கின்றது? மனவொற்றுமையில்லாத இருவர்கள் சேர்ந்து வாழ்க்கை நடத்துவதில் ஏதாவது சௌகரியமோ சுகமோ அவர்களுக்கு இருக்க முடியுமா? ஆனால் ஆண் மகன் மாத்திரம் மணம் செய்து கொண்ட மனைவி பிடிக்கா விட்டால் யாதொரு தடையுமின்றி உடனே அவளை



RangaRakes tamilnavarasam.com

நீக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணஞ் செய்து கொள்ளுகின்றான். இது சட்டப்படி செல்லத்தக்கதாகவும், குற்றமற்றதாகவும் இருக்கிறது. ஆனால் கணவனால் நீக்கப்பட்ட பெண்கள், கணவன் உயிரோடு இருக்கும் வரையிலும் தனக்கு விருப்பமுள்ள வேறொரு புருஷனை மணந்து கொள்ளச் சட்டப்படி உரிமையில்லை. இந்தக் காரணத்தால் கணவனால் நீக்கப்பட்ட – வெறுக்கப்பட்ட – அநேக பெண்கள் திருட்டுத் தனமாகத் துன்மார்க்க வழியில் பிரவேசிக்கவும் சில சமயங்களில் மானம் பொருக்க மாட்டாமல் தற்கொலை செய்து கொள்ளவும், தனித்திருந்து விபசாரம் புரிந்து மானமற்ற வாழ்க்கை நடத்தவும் நேருகின்றது. பெரும்பாலும் தற்கொலை செய்து கொள்ளும் பெண்களெல்லாம் மாமன், மாமி, புருஷன் முதலியவர்களின் கொடுமை சகிக்க முடியாமலும், வேறு ஒரு புருஷனை மணந்து வாழ வழியில்லாமலும்; தனித்திருந்து கௌரவமாக ஜீவிப்பதற்கு முடியாமலும், மனமுடைந்து தற்கொலை செய்து கொள்ளுகிறார்களே ஒழிய வேறு காரணம் இல்லை என்று சொல்லலாம். இது போலவே மாமன், மாமி, பெண்சாதி முதலியவர்களின் கொடுமைக்கு அஞ்சித், தற்கொலை செய்து கொண்ட ஆண்கள் எவரேனும் உண்டென்று கூறமுடியுமா?

ஆகையால் பெண்களும் ஆண்களைப் போலவே உரிமைப் பெற்றவர்களாயிருந்தால் இத்தகைய கொடுமைகள் நடைபெற முடியுமா? என்று தான் கேட்கிறோம். கணவன் எவ்வளவு அயோக்கியனாயிருந்தாலும் வியாதியஸ்தனாயிருந்தாலும், ஆண்மை அற்றவனாய் இருந்தாலும், கொடுமைப்படுத்துகின்றவனாய் இருந்தாலும் அவனையே ஆயுள் வரையிலும் தெய்வமாகக் கொண்டு அவனுக்கு அடிமையாக இருந்து வாழ்வது தான் ‘மணத்தின் தத்துவம்’ ‘விவாகத்தின் தெய்வீகத்தன்மை’ ‘ரிஷிகளின் புனிதமான சட்டம்’ பெண்கள் கடமையென்று விதிப்பது ஒரு மதமாகுமா? வேதமாகுமா? சாஸ்திரமாகுமா? நீதியாகுமா? அறிவுடைமை யாகுமா? என்று நன்றாய் யோசனை செய்து பாருங்கள்!

ஆகையால் இத்தகைய கஷ்டங்களில்லாமல் ஆண் பெண் இருவரும் சமவுரிமையடைய வேண்டுமென்ற நல்லெண்ணத்துடனேயே திரு. அரி சிங்கவர் அவர்கள், ‘விவாக விடுதலை மசோதா’வைக் கொண்டு வந்தார். இத்தகைய ஒரு நல்ல சீர்திருத்த மசோதாவை வைதீகர்கள் ஆதரிக்க மனமில்லாமலும் அவ்விவாதத்தில் அதிகமாகக் கலந்து கொள்ள இஷ்ட மில்லாமலும் சட்ட சபைக்கு வெளியிலேயே நின்று விட்டார்கள். இவ்வாறு வெளியிலேயே நின்றவர்களுடன் அரசாங்க அங்கத்தினர் சிலரும் இருந்த னராம்! இதனால் அரசாங்கமும் வைதீகர்களுடன் சேர்ந்து கொண்டு இந்த மசோதாவை எதிர்த்ததாகத் தானே அர்த்தம்? இவ்வாறு எத்தனை நாளைக்கு அரசாங்கத்தார் வைதீகர்கள் வார்த்தைக்கு அஞ்சிச் சீர்திருத்தத்திற்கு விரோதி யாய் இருப்பார்களென்று கேட்கின்றோம். உண்மையிலேயே நாட்டின் நன்மையில் கருத்துடைய அரசாங்கமாய் இருந்தால் இது போன்ற சீர்திருத்த



மசோதாக்களை ஆதரிக்க வேண்டியது கடமையாகும். அல்லது மத நடு நிலைமை வகிக்கக்கூடிய அரசாங்கமாய் இருந்தால் மசோதாவை எதிர்க்கா மல் நடுநிலைமை வகிக்க வேண்டும். இரண்டுமில்லாமல் மசோதாவுக்கு எதிராக உள்ள வைதீகர்களுடன் சேர்ந்து கொண்டு வெளியேறுவது ஒழுங் கான காரியமா என்று தான் கேட்கிறோம்.

வைதீகர்களும் அரசாங்க உறுப்பினர் சிலரும் “விவாக விடுதலை மசோதா”வைக் கெடுக்கும் பொருட்டு சபைக்குள் வராமலிருந்த காரணத்தால், உத்தியோகப் பற்றற்றவர்களின் மசோதாவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒரு நாளில் அரை நாள் வீண் போயிற்று. இனியும் உத்தியோகப் பற்றற்றவர்களின் தீர்மானங்கள் விவாதத்திற்கு வரும் நாளில் இந்த மசோதாவும் வரத்தான் போகிறது. அப்பொழுதும் இம்மாதிரி சட்டசபைக்குள் வராமல் வெளியி லேயே நின்று கொண்டு நாளை வீணாக்கப் போகிறார்களா? அல்லது மசோதாவை எதிர்த்துத் தோற்கச் செய்யப் போகிறார்களா? அல்லது வேறு என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம்.

இவ்வாறு வைதீகர்களும், அரசாங்கமும் சீர்திருத்தங்களை எதிர்ப்ப தனால் அவ்வுணர்ச்சியை அடக்கி விட முடியாது என்பது நிச்சயம் என்று மாத்திரம் எச்சரிக்கை செய்கிறோம். வரவர மக்களுடைய மனத்தில் சமூகச் சீர்திருத்த உணர்ச்சி மிகுந்து வருவதன் பலனாக சீர்திருத்தங்களுக்கு விரோத மாக இருக்கின்ற மதம், வேதம், சாஸ்திரம், வைதீகம் ஆகியவைகளின் ஆதிக் கம் வீழ்ச்சிடையும் காலம் தூரத்திலில்லை என்றே நாம் கூறி முடிக்கிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 21.02.1932**



RangaRakes tamilnavarasam.com

# தீண்டாதார் துன்பம்

வெள்ளைக் காரர்களைப் பார்த்து "நீங்கள் எங்களைக் கொடுமைப் படுத்துகிறீர்கள்! ஆகையால் உங்களுடைய அரசாட்சி எங்களுக்குப் பிடிக்க வில்லை; ராஜ்யத்தை எங்களிடம் விட்டு விட்டு நீங்கள் உங்கள் தேசத்திற்குப் போய் விடுங்கள்; நாங்கள் ஒற்றுமையாயிருந்து எங்கள் தேசத்தை ஆண்டு கொள்ளுவோம்" என்று சுயராஜ்ய வாதிகள் கூச்சலிடுகின்றனர்; இதற்காகச் சட்டமறுப்பு செய்கின்றனர்; சிறைக்குச் செல்கின்றனர்; இன்னும் சத்தியாக் கிரகத்தின் பெயரால் என்னென்ன காரியங்களையோ செய்து கொண்டிருக் கின்றனர். ஆனால் வடநாட்டில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் உள்ள கலகமும் வெறுப்பும் இன்னும் ஓய்ந்த பாடில்லை. இவர்கள் ஒற்றுமையாய் வாழ்வதற்குரிய காரியங்களைச் செய்யவும் இல்லை.

இது ஒரு புறமிருக்க மிகவும் பரிதாபகரமான வாழ்வில் இருந்து துன்பப்படும் ஆதிதிராவிடர் போன்ற தீண்டாத மக்களின் கதி இன்னும் மோசமானதாகவே இருந்து கொண்டிருக்கின்றது. தீண்டாதவர்கள் கோயில் பிரவேசத்தின் பொருட்டு நாசிக்கிலும், குருவாயூரிலும் சத்தியாக்கிரகம் புரிந்து கொண்டு துன்பப்படுதலும், அவர்களை வைதீக இந்துக்கள் எதிர்த்துத் துன்பப்படுத்துதலும் ஒரு புறமிருக்க, அவர்கள் தங்கள் மட்டிலாவது சுத்தமாகவும், நாகரீகமாகவும் சௌகரியமாகவும் வாழக்கூட மனஞ்சகிக்காத இந்துக்கள் அவர்களுக்குப் பண்ணும் கொடுமை மிகவும் அநீதமாக இருக்கின்றது என்ற விஷயம் நமது நாட்டு மக்களுக்கு தெரியாததல்ல. சென்ற ஆண்டில் ராமநாதபுரம் ஜில்லாவில் ஜாதி இந்துக்கள் தீண்டாதவர்களுக்குச் செய்த கொடுமையும், திருச்சி ஜில்லாவில் ஜாதி இந்துக்கள் தீண்டாத வர்களுக்குச் செய்த கொடுமையும் இன்னும் மறக்கப்படவில்லை. இது போலவே ஒவ்வொரு கிராமத்திலும் தீண்டாதவர்களுக்குப் பல கஷ்டங் களிருந்து வருகின்றன. ஆனால் அத்தீண்டாத மக்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு உயர் ஜாதி இந்துக்களின் கையையே எதிர்பார்த்திருப்பதாலும், பெரும்பாலானவர்கள் கல்வி அறிவும் உலக நாகரீக உணர்ச்சியும் இல்லாமை யால் "தங்களை ஆண்டவன் என்பவன் தீண்டாதவராகவே கஷ்டப்படும்படி படைத்தான்; எல்லாம் தமது தலை விதியின் படி நடக்கும்" என்ற நம்பிக்கை



யுடையவர்களாயிருப்பதனாலும் தங்கள் துன்பத்தைச் சகித்துக் கொண்டு வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

இப்படி யில்லாமல் தீண்டாத மக்கள் கொஞ்சம் சுயமரியாதை உணர்ச்சி பெற்றுத் தங்களைச் சீர்திருத்தம் செய்து கொள்ள முந்துவார்களானால், அப்பொழுதே அவர்களை முன்னேற ஒட்டாமல் நசுக்கிப் பழைய சாக்கடை யிலேயே அமிழ்த்தி வைக்க ஜாதி இந்துக்கள் தயாராகிவிடுகிறார்கள். இதற்கு உதாரணமாக இப்பொழுது சேலம் ஜில்லா ராசிபுரம் தாலூக்கா, தாத்தைய் யங்கார் பட்டி கிராமத்திலிருக்கும் தீண்டத்தகாத மக்களை, அவர்கள் முன்னேற்றமடையாதபடி அடக்கி வைக்க உயர் ஜாதி மக்கள் அவர்களுக்கு விதித்திருக்கும் நிபந்தனைகளைப் பார்த்தால் விளங்கும். இதைப் பற்றி அவர்கள் சேலம் ஜில்லா கலெக்டருக்கும், போலீஸ் சூப்பரின்டெண்டுக்கும் செய்து கொண்டிருக்கும் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுக் காட்டியிருக் கின்றனர்.

"எங்களூர்க் குடியானவர்கள், நாங்கள் நாகரிகமாய் இருப்பதற்காகப் பொறாமைப்பட்டு எங்களைக் கண்ட இடங்களில் எல்லாம் அடித்தும், எங்கள் தெருப் பெண்களை வாய்க்கு வந்தபடி திட்டியும் கஷ்டப்படுத்து கிறார்கள். அதோடு அல்லாமல் கீழ்க்கண்ட நிபந்தனைகள் ஏற்படுத்தி அதன்படி நடக்காது போனால் எங்கள் கால்களை ஒடித்து விடுவோம்" என்று சொல்லு கிறார்கள்.

நிபந்தனைகள் :–

1. பறையர்கள் கிராப்பு வைக்கக் கூடாது

2. பள்ளிக்கூடம் தெருவில் இருக்கவும் கூடாது, படிக்கவும் கூடாது.

3.வெள்ளை வேஷ்டிக் கட்டக்கூடாது; அழுக்கு வேஷ்டி யிலிருந் தாலும் முழங்காலுக்கு மேல் கட்ட வேண்டும்.

4. பெண்கள் மார் ஆடை போடக்கூடாது; மீறி மார் ஆடைப் போட் டால் மாரை அறுத்துவிடுவது.

5. நாகரிகமான நகைகள் போடக் கூடாது.

6. குடைகள் பிடிக்கவும் கூடாது; குடையிருந்தால் நெருப்பு வைத்துக் கொளுத்தி விடவேண்டும்.

7. பெட்டிகள் கையில் கொண்டு வரக்கூடாது; புஸ்தகமும் கையில் பிடிக்கக்கூடாது.

(தமிழ்நாடு)



RangaRakes tamilnavarasam.com

என்பது தீண்டாதவர்களின் விண்ணப்பம். இந்தக் கொடுமைகளை யார் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? என்று கேட்கின்றோம். இந்த நிலைதான் கிராமாந்தரங்களிளெல்லாம் இருந்து வருகின்றது. இதை மாற்றுவதற்கு இது வரையிலும் என்ன முயற்சியை, எந்தத் தேசீயவாதிகள் செய்தார்கள் என்று கேட்கிறோம். அந்நியர்கையில் அதிகாரமும், தாங்கள் சுதந்தரமின்றி அந்நிய நாட்டினர்க்கு அடிமையாக இருக்கும் இக்காலத்திலேயே இந்த உயர்ஜாதி இந்துக்கள் தீண்டாதவர்களுக்கு இக்கொடுமையைச் செய்வார்களாயின் இவர்கள் கையில் ஆட்சியும் அதிகாரமும் கிடைத்துவிட்டால் அவர்களைச் சித்திரவதை செய்யமாட்டார்களா? என்று யோசித்துப்பாருங்கள்.

இம் மாதிரி வலுத்தவர்கள் இளைத்தவர்களுக்குக் கொடுமை செய்வதை பொருட்படுத்தாத ஒரு தேசீயம், அல்லது ராஜீயம் எதற்குப் பயன்படும்? இவ்வாறு தீண்டாதவர்களைக் கொடுமைப்படுத்தும் எண்ணத்தை உயர் ஜாதி இந்துக்களின் மனத்தில் பதிய வைத்திருப்பதற்கு காரணம், பாழும் மதமும், வைதீகமும், பழக்க வழக்கங்களுமே அன்றோ? ஆகையால் இந்தப் பாழும் மதமும், வைதீகமும், பழக்க வழக்க மூட நம்பிக்கையும் தொலைந்தாலொழிய உயர் ஜாதி இந்துக்களின் மனத்தில் மாறுதல் ஏற்படுமா? ஒருக்காலும் முடியாது. ஆகவே இனியும் தீண்டாத வர்கள் கடவுளையோ மதத்தையோ நம்பிக்கொண்டிருந்தால் ஒரு சிறிதும் முன்னேற்ற மடையப் போவதில்லை. தம்மையே நம்பி இடைவிடாது கிளர்ச்சிச் செய்வதன் மூலமும், வைதீகர்களாகிய அரசியல் கிளர்ச்சிகாரர்கள் எல்லாம் “சுயராஜ்யம் வந்தபிறகு பார்த்துக் கொள்ளலாம்” என்று கூறும் வார்த்தைக்கு ஏமாறாமல் முயற்சிசெய்வதன் மூலமும் தான், தாங்கள் விடுதலை பெற்று மனிதர்களாக வாழ முடியுமென்று எச்சரிக்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 21.02.1932**



## தனித் தொகுதியா? பொதுத் தொகுதியா?

ஒரு நாட்டில் வகுப்புப் பிரிவினைகள் நிலைத்திருக்கும் வரையிலும், ஒவ்வொரு வகுப்பினரும் தாம் தாம் தனித் தனி வகுப்பினரென்றும், தாம் மற்ற வகுப்பினருடன் உடனிருந்து உண்பதும், கலப்பதும், உறவாடுவதும், தமது மதத்திற்கும், கடவுளுக்கும், வேதத்திற்கும், புராதன நாகரீகத்திற்கும் விரோத மான செய்கையாகுமென்றும் நினைத்துக் கொண்டும் உண்மையாகவே நம்பிக் கொண்டும் இந்த நம்பிக்கையின் படி நடந்து கொண்டும் வருகின்ற வரையிலும் ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினருடைய நன்மைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் அந்தரங்க சுத்தியுடன் உழைப்பார்கள் என்று நினைப்பது தவறான எண்ணமேயாகும். இவ் விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்கு நாம் வேதங்களையோ, சாஸ்திரங்களையோ, சிலாசாசனங் களையோ கஷ்டப்பட்டு ஆராய்ந்து பார்க்க வேண்டிய அவசியமில்லை. தற்காலத்தில் நம் கண் முன் நடைபெறும் காட்சிகளைக் கொண்டே யாவரும் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக இன்று அரசியலிலோ, அல்லது உத்தியோகத் துறையிலோ, அல்லது வியாபாரத் துறையிலோ, மற்றும் எந்தத் துறையிலாகட்டும் உயர்ந்த பதவியும், ஆதிக்கமும், செல்வாக்கும் அடைந்திருக்கின்ற அய்யர், அய்யங்கார், முதலியார், பிள்ளை, நாயுடு, செட்டியார், ரெட்டியார், நாடார் முதலிய எல்லா வகுப்பினரும் தங்கள் தங்கள் வகுப்பினருடைய நன்மையையும் முன்னேற்றத்தையும் மாத்திரம் கருதி அவர்களுக்கே உதவி செய்யக் கூடிய நிர்ப்பந்தமான நிலையில் இருப்பதும் தம் வகுப்பினரல்லாத கஷ்டப்படும் மற்ற வகுப்பினர்களுக்கும் உதவிசெய்ய வேண்டுமென்ற எண்ணமிருந்து கூட அவ்வாறு செய்ய முடியாத நிலையில் இருப்பதும் சிறிது உலக அனுபவம் தெரிந்த எல்லோருக்கும் விளங்கக் கூடிய விஷயமேயாகும்.

மற்ற நாட்டுச் சரித்திரங்களை விட்டு விட்டு, நமது இந்திய நாட்டுச் சரித்திரத்தை மாத்திரம் சிறிது யோசித்துப் பார்த்தாலுங் கூட இந்த விஷயத் தைத் தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. முஸ்லிம் அரசர்கள் நமது நாட்டை ஆண்டகாலத்தில் அவர்கள் முஸல்மான்கள் நலத்தை மாத்திரமே முதன்மையாகக் கருதி அரசாட்சி செய்து வந்திருக்கிறார்கள் என்பதும், நாயக்க அரசர்கள் ஆண்ட காலத்தில் அவர்கள் தங்கள் குலத்திலுள்



RangaRakes tamilnavarasam.com

ளவர்களையே முதன்மையான பதவிகளில் நியமித்து ஆண்டு வந்திருக்கிறார்கள் என்பதும், வெள்ளைக்காரர்கள் நமது நாட்டை ஆளத் தொடங்கிய நாள் முதல் அவர்களும் தமது வகுப்பினர் நன்மையையே முக்கியமாகக் கருதி ஆண்டு கொண்டிருக்கிறார்கள் என்பதும், முஸ்லிம்கள் ஆண்ட காலத்திலும் நாயக்க அரசர்கள் ஆண்ட காலத்திலும் வெள்ளைக் காரர்கள் ஆளும் இக்காலத்திலும் அரசாங்கத்தில் உயர்ந்த பதவி வகித்திருந்தவர்களும், வகித்திருப்பவர்களும் ஆகிய பார்ப்பனர்க ளெல்லாம் தங்கள் வகுப்பிற்கான நன்மைகளையே சாதித்துக் கொண்டார்கள், சாதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற விஷயமும் வெளிப்படையாகத் தெரியக் கூடும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த விஷயங்களையெல்லாம் நன்றாக ஆலோசித்துப் பார்க்கின்ற எந்த வகுப்பினரும், தங்கள் தங்கள் வகுப்பின் முன்னேற்றத்தையும், சுதந்திரத்தையும் கருதுவார்களானால், அவர்கள் தங்களுக்கு அரசியல் துறையிலும், சமுதாயத்துறையிலும் நியாயமான உரிமை கிடைப்பதற்குரிய வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்பது எந்த வகையிலும் குற்றமற்ற நியாயமேயாகும். உயர்வு தாழ்வான வகுப்புப் பிரிவுகள் நிலைத்திருக்கும் வரையிலும், படிப்பும், பணமும், பதவியும் பெற்ற உயர்ந்த வகுப்பினர்கள் அவை இல்லாத தாழ்ந்த வகுப்பினரை அடக்கி வைத்திருக்கும் வரையிலும், அவ்வாறு அடக்கி வைத்திருப்பதுதான் மதக் கட்டளையும், சாஸ்திர நீதியும் என்ற எண்ணமுடையவர்களாய் இருக்கும் வரையிலும் முன்னேற்றமடைவதற்கு வழி இல்லாமல் கொடுமைப்படுத்தப் பட்டிருக்கும் மக்கள், தங்கள் சுதந்தரத்திற்கு அரசாங்க அமைப்பில் பாதுகாப்பு தேடிக் கொடுக்க வேண்டும் என்று கேட்பது தவறானதென்றோ, தேசத்திற்குத் தீமை தரக்கூடிய காரியமென்றோ நிதான புத்தியுடனிருந்து யோசனை செய்து பார்க்கின்ற கடுகளவு அறிவுடைய எந்த மனிதனாவது சொல்ல முடியுமா?

ஆகவே நமது நாட்டில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அடிமைப் படுத்தப்பட்டும், மிதிக்கப்பட்டும், நசுக்கப்பட்டும், கொடுமைப் படுத்தப்பட்டும் கிடக்கின்ற மக்கள் தங்களை இதுவரையிலும் முன்னேற வொட்டாமல் தடைப் படுத்தி வைத்திருந்த கூட்டத்தாரின் கையில் அரசியல் அதிகாரம் கிடைக்கப் போகின்ற காலத்தில், அவர்கள் தங்களுக்கு வேண்டிய பாதுகாப்பை அரசியல் சுதந்திரத்தில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்க முன் வந்திருக்கிறார்கள். இவ்வாறு தாழ்த்தப்பட்டவர்கள் கேட்பதை இதுவரையிலும் ஏகபோக உரிமையாகச் சுகம் அனுபவித்து வந்த கூட்டத்தார் "இப்படிக் கேட்பது வகுப்புத் துவேஷமான காரிய"மென்றும் "தேச ஒற்றுமைக்கு விரோதமானக் காரிய"மென்றும் கூறித் தடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்ற விஷயம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் அவர்களிடத்தில் அனுதாப முள்ளவர்களுக்கும் தெரியாத தொன்றல்ல. இதன் உண்மையை வட்ட மேஜை மகாநாட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிரதிநிதிகளும், முஸ்லீம் வகுப்புப்



பிரதிநிதிகளும், கிருஸ்தவர், ஐரோப்பியர், சட்டைக்காரர் முதலான சிறுபான்மை வகுப்புப் பிரதிநிதிகளும் எதிர்கால அரசியல் சீர்திருத்தத் திட்டத்தில் தங்களுக்குத் தனிப்பட்டத் தேர்தல் தொகுதி இருக்க வேண்டுமென்று கூறியதையும் இதைக் காங்கிரஸ் பிரதிநிதியாகவும் வருணாச்சிரம தருமத்தின் பிரதிநிதியாகவும் இந்து மகாசபையின் பிரதிநிதியாகவும் வட்டமேஜை மகாநாட்டிற்குப் போயிருந்த திருவாளர்களான, காந்தி, மாளவியா, மூஞ்சே முதலானவர்கள் ஆதிமுதல் அந்தம் வரையிலும் எதிரிகளாக இருந்து மறுத்துப் பேசியதிலிருந்தும் அறியலாம். கடைசியாக இந்த வகுப்பு சம்மந்தமான தகராறு ஒரு முடிவுக்கு வராத காரணத்தினாலேயே வட்ட மேஜை மகாநாடும் பயன்தரத் தகுந்த ஒரு முடிவுக்கும் வராமல் வீணாகக் கலைந்தது. அப்போது முதல் மந்திரியாகிய திரு. மெக்டொனால்டு அவர்களும் "வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாக நீங்களே ஒரு சமரசமான முடிவுக்கு வருவீர்களானால் அதனை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளு"மென்றும் "இல்லாவிட்டால் இனி ஏற்படுத்தப்படும் வட்ட மேஜை மகாநாட்டுக் கமிட்டிகளின் மூலம் அரசாங்கமே முடிவு செய்யு"மென்றும் கூறி அனுப்பிவிட்டார். அவ்வாறே இப்பொழுது அரசியல் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட தனித் தனி மூன்று கமிட்டிகள் இந்தியாவில் துரிதமாகத் தமது வேலைகளைச் செய்து கொண்டு வருகின்றன. இவற்றுள் திரு. லோதியன் அவர்களைத் தலைமையாகக் கொண்ட வாக்குரிமைக் கமிட்டியானது பல இடங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து எவ்வாறு வாக்குரிமை அளிப்பது என்பது பற்றியும் எந்த முறையில் தேர்தல் தொகுதிகளை ஏற்படுத்துவது என்பதைப் பற்றியும் விசாரணை செய்து கொண்டு வருகிறது. இக்கமிட்டி கடைசியில் எந்த விதமாக முடிவு செய்கிறதோ அந்த முடிவே அநேகமாக ஆங்கிலப் பாராளுமன்ற சபையாரால் ஒப்புக் கொள்ளப்பட்டு அரசியல் சீர்திருத்தமாக வரக்கூடுமென்று நம்பலாம். ஆகவே இச்சமயத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரும், மற்ற சிறுபான்மை வகுப்பினரும் தங்களுக்கு வேண்டிய பாதுகாப்பைத் தேடிக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். ஆகையால் அவர்களுக்கு அதிகாரம் வாய்ந்த சட்டசபை முதலிய ஸ்தாபனங்களில் பங்கு பெற எந்த விதமான தேர்தல் தொகுதி இருந்தால், அவர்களின் உண்மையான பிரதிநிதிகள் யாருடைய செல்வாக்கிற்கும் எதிர்ப்புக்கும், தயவுக்கும், தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாமல் தேர்ந்தெடுக்கப்பட்டு, அச்சமூகத்தின் உயர்வுக்காகவும், விடுதலைக்காகவும் உழைக்க முடியும் என்னும் விஷயத்தில் நமது அபிப்பிராயம் என்னவென்பதை இப்பொழுது முடிவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

முஸ்லீம் வகுப்பினரின் உண்மையான பிரதிநிதிகளாகிய மௌலானா ஷௌக்கத் அலி போன்றவர்கள் முஸ்லீம்களுக்குத் தனித்தேர்தல் தொகுதியே இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களென்பதும், இந்தியக் கிறிஸ்துவர்களும், சீக்கியர்களும், ஐரோப்பியர், சட்டைக்காரர் முதலியவர்



RangaRakes tamilnavarasam.com

களும் தனித்தேர்தல் தொகுதியையே விரும்புகிறார்களென்பதும், எல்லோரும் அறிந்த செய்கையாகும். இதைப் போலவே தாழ்த்தப் பட்டவர்களும் தனித் தேர்தல் தொகுதியையே விரும்புகின்றார்களென்பதை அச்சமூகத்தார் இந்தியாவெங்கும் பலவிடங்களிலும் கூடிய பல மகாநாடுகளிலும் மற்றும் அவர்களுடைய ஸ்தாபனங்களாக இருக்கின்ற பல சங்கங்களிலும் செய்யப் பட்டுள்ள தீர்மானங்களின் மூலமாகவும், இச்சமூகத்தாரின் செல்வாக்கு வாய்ந்த தலைவர்களான திருவாளர்கள் அம்பேட்கார், சீனிவாசன், எம். சி. ராஜா, சிவராஜ், முனிசாமி பிள்ளை, சுவாமி சகஜானந்தம் முதலியவர்களின் அபிப்பிராயங்களிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் சமீபத்தில் திரு. எம். சி. ராஜா அவர்கள் இதற்கு முன் வெளியிட்ட தனது அபிப்பிராயங்களை மாற்றிக் கொண்டு இப்பொழுது பொதுத் தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படுவது மூலமாகத் தேர்ந்தெடுக் கப்படுவதனாலேயே தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்கு விமோசனமுண்டு என்று கூறமுன் வந்திருப்பது பற்றி நாம் ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை. திரு. ராஜா அவர்கள் தமது அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டதைப் பற்றி அவர்கள் கூறும் காரணங்களை சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

1. தனித் தொகுதி ஏற்படுத்தினால் தேர்தலுக்கு முன் வரும் அபேட்சகர்கள் ஓட்டர்களைச் சந்திக்க இரண்டு மூன்று ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டுமாகையால் ஏழைமக்களாய் இருக்கின்ற அச் சமூகத்தின் பிரதிநிதிகளுக்கு இது மிகவும் கஷ்டமாக இருக்கும்; ஆகையால் பொதுத் தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பதே நன்மையாகும்.

2. தாழ்த்தப்பட்ட சமூகத்தார் இப்பொழுது மத பக்தியிலும், தெய்வ வணக்கத்திலும் வர வர அதிகப்பட்டு ஜாதி இந்துக்களின் ஆதரவு பெற்று வருவதாலும், ஜாதி இந்துக்களும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உதவி செய்ய முன் வந்து கொண்டிருப்பதாலும் பொதுத் தொகுதி யிலேயே அவர்களின் சரியான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கப்படக் கூடும்.

3. வரப்போகும் மாகாண சுயாட்சியில் அரசியல் கட்சிகளே அதிகாரம் வகிக்குமாகையால் தாழ்த்தப்பட்ட சமூகத்தாரும் ஏதேனும் ஒரு அரசியல் கட்சியை ஆதரித்து நின்றால்தான் மந்திரி பதவி பெற முடியும்; ஆகையால் தனித் தேர்தல் தொகுதி ஏற்படுத்திக் கொண்டு ஒதுங்கி நிற்பதை விட பொதுத் தேர்தல் தொகுதியில் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களில் அரசியல் கட்சிக்காரர்களின் ஆதரவு பெற்று அச் சமூகத்தாரின் சரியான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட முடியும்.



என்ற காரணங்களை திரு. ராஜா அவர்கள் கூறுகின்றார். இக்காரணங் கள் எவ்வாறு பொருத்த மற்றவையாக இருக்கின்றன என்பதைச் சிறிது காட்டுகின்றோம்.

தனித் தொகுதி ஏற்படுத்தினால் அபேட்சகர்கள் அதிக தூரம் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டுமென்று பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்கு அவர்களுடைய உண்மையான நன்மையைக் கவனிக்கின்ற தலைவர்கள் யார் என்பது தெரியும். ஆகையால் அவர்களுக்கு ஓட்டுச் செய்ய முன் வருவார்கள் என்பதில் ஐயமில்லை. உதாரணமாகச் சென்ற வட்டமேஜை மகாநாட்டில் தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்காக உண்மை யோடு போராடிய திரு. அம்பெட்கார், திரு. சீனிவாசன் ஆகியவர்களின் அபிப்பிராயங்களை ஆதரித்துக் கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் தீர்மானங்கள் செய்யவில்லையா? இன்று அந்தப் பிரதிநிதிகள் இந்தியாவுக்கே ஒரு அபேட்சகராக முன் வந்தால் அவர்கள் இந்தியா முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து தாழ்த்தப்பட்ட சமூக ஓட்டர் களை எல்லாம் சந்தித்தால் தானா அவர்களுக்கு ஓட்டுக் கிடைக்கும்? அவர் கள் சுற்றுப் பிரயாணம் செய்யாமலே தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் ஓட்டு களைப் பெற்று வெற்றி பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை யல்லவா? அது போலவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உண்மையாகப் பாடுபடுகின்ற தலைவர்கள் கஷ்டமில்லாமலே தேர்ந்தெடுக்கப்பட முடியும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

அடுத்தபடியாகத் "தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பாலும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாகயிருந்து வருவதாலும், ஜாதி இந்துக்களும் அவர்களுக்கு உதவி செய்ய முன் வருவதாலும் அவர்களுக்குத் தனித் தேர்தல் தொகுதி வேண்டாம்; பொதுத் தேர்தல் தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படுவதே போதுமானது" என்பதைப் போன்ற மோசமான அபிப்பி ராயம் வேறொன்றும் இல்லையென்றே நாம் சொல்லுவோம். இன்று அன்னிய மதங்களை அனுசரித்து வருகின்ற தாழ்த்தப்பட்டவர்களைக் காட்டிலும் இந்து மதத்திலேயே இருந்து வருகின்ற தாழ்த்தப்பட்டவர் களுக்குத் தான் அதிக மான கஷ்டங்களும், நிர்ப்பந்தங்களும் இருந்து வருகின்றனவென்பதும், இவைகளுக்கு இந்து மதமே காரணமாக இருக்கின்றதென்பதும், ஆகையால் இந்து மதம் அழிந்தாலே அல்லது இந்து மதத்தை விட்டு வெளியேறினாலோ ஒழிய தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்கு விமோசனமில்லை என்பதும் பகுத்தறி வுடையவர்களுக்குத் தெரியாத செய்தி அல்ல. வர்ணாச்சிரம தருமத்தை அடிப்படையாகக் கொண்ட இந்து மதத்தை நம்பியிருக்கும் உயர்ந்த சாதிக் காரர்களாலும், மதங்களையும், கடவுள்களையும், வருணாசிரம தருமங் களையும் காப்பாற்ற வேண்டுமென்ற அரசியல்வாதிகளாலும், தாழ்த்தப்பட்ட சமூகத்தார் சமத்துவம் பெற முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள்! அன்றியும் இன்று தாழ்த்தப்பட்ட சமூகத்தார் பள்ளிக் கூடங்களில் சேர்ந்து



RangaRakes tamilnavarasam.com

படிப்பதற்கும், கோவிலுக்குள் செல்வதற்கும், பொதுக்குளம், கிணறுகளில் தண்ணீர் எடுப்பதற்கும், பொதுத் தெருக்களில் நடப்பதற்கும் தடையாக இருக்கின்ற உயர்ந்த சாதி இந்துக்கள் எப்படி அவர்களின் சமத்துவத்திற்கு உழைக்கும் உண்மையான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்களா? என்றுதான் கேட்கின்றோம்.

அடுத்தபடியாகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தார் ஏதேனுமொரு அரசியல் கட்சியை ஆதரித்தால் தான் மந்திரி பதவி பெற முடியுமென்பதற்கும், தனித் தேர்தல் தொகுதிக்கும் என்ன சம்பந்தமிருக்கிறதென்பது நமக்கு விளங்க வில்லை. அரசியல் கட்சிகளின் ஆதரவு பெற்று பொதுத் தொகுதியில் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களுக்கு அபேட்சகராக வருகின்றவர்கள் ஏன் அவ்வாறே தனித் தேர்தல் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட முடியாது என்று கேட்கின்றோம். இன்று தனித் தேர்தல் தொகுதியில் இருக்கும் முஸ்லீம்களின் பிரதிநிதிகளும், கிறிஸ்தவர்களின் பிரதிநிதிகளும் அரசியல் கட்சிகளின் பேரால் அபேட்சகராக நிற்பதும், தேர்ந்தெடுக்கப்படுவதும் தெரியாத விஷயமா? ஆகையால் மந்திரி பதவி பெறுவதற்கு பொதுத் தேர்தல் தொகுதி அனுகூலமாய் இருக்குமென்று சொல்லுவதும், தனித்தேர்தல் தொகுதி பிரதி கூலமாய் இருக்குமென்று சொல்லுவதும் தவறான அபிப்பிராயம் என்பதில் சந்தேகமில்லை.

இனி, பொதுத் தொகுதி, பொதுத் தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படுவதில், தனித்தொகுதி இம்மூன்றிலுமுள்ள நன்மை தீமைகளை மாத்திரம் எடுத்துக்காட்டி முடிக்கிறோம்.

தற்சமயத்தில் காங்கிரஸ்காரர்களும், இந்து மகாசபைக்காரர்களும் சொல்லுவதுபோல "பொதுத் தேர்தல் தொகுதியிலேயே தாழ்த்தப்பட்ட சமூகத்தார் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்" என்று முடிவு செய்து விட்டால் அச் சமூகத்தாரின் பிரதிநிதிகள் ஒருவரேனும் சட்ட சபையில் ஸ்தானம் பெற முடியாதென்பது நிச்சயம். வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை வழங்கப் பட்டாலுங் கூட உயர்ந்த ஜாதி இந்துக்களே மெஜாரிட்டி ஓட்டர் களாக இருப்பார்களென்பதும் அவர்கள் தாங்கள் இதுவரையிலும் அனு பவித்து வந்த ஆதிக்கத்திலும், அதிகாரத்திலும் சமத்துவம் பெற விரும்பு கின்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் பிரதிநிதிகளுக்கு ஓட்டளிக்க முன் வர மாட்டார்கள் என்பதிலும் சிறிதும் ஐயமில்லை.

அடுத்தபடியாகப் பொதுத் தேர்தல் தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டாலும் மெஜாரிட்டி ஓட்டர்களாகிய உயர்ந்த ஜாதிக்காரர்களின் ஆதரவைப் பெற்றவர்களும், தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் சுதந்தரங்களை விட்டுக் கொடுத்து உயர்ந்த சமூகத்தாரின் ஆதிக்கத்திற்கு சாதகமாய் இருக்கின்ற அடிமை மனப்பான்மை உடையவர்களும்தான் தேர்ந்தெடுக்கப் பட முடியும் என்று சொல்லுகிறோம்.



ஆகையால் தனித்தேர்தல் தொகுதி ஏற்படுவதின் மூலமாகவும், அச்சமூகத்தாரே தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதின் மூலமாகவும் தான் தாழ்த்தப்பட்ட சமூகத்தார்களும், மற்ற சிறுபான்மை வகுப்பினரும் தங்கள் சமூகத்திற்குழைக்கும் உண்மையான பிரதிநிதிகளைச் சட்ட சபைகளுக்கு அனுப்பி நன்மை பெற முடியுமென்று துணிவாய்ச் சொல்லு கிறோம். ஆகையால் தாழ்த்தப்பட்ட சமூகத்தார்கள் இச்சமயத்தில் ராஜீய வாதிகளின் வார்த்தைகளையும், சமத்துவத்திற்குப் பாடுபடுவது போல் நடிக் கும் வைரம் பாய்ந்த வருணாச்சிரம தரும இந்துக்களின் வார்த்தைகளையும், அரசியல்வாதிகளாலும், வருணாச்சிரம தரும இந்துக்களாலும் ஏமாற்றப் பட்டிருக்கும் சிலருடைய வார்த்தைகளையும் கேட்டு மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கை செய்கின்றோம். உண்மையிலேயே தங்கள் சமூகத் திற்கு நன்மை செய்வதாக இருக்கின்ற தனித் தேர்தல் தொகுதி வேண்டு மென்றே கிளர்ச்சி செய்வார்களென்றும் இவ்விஷயத்தையே திரு. லோதியன் கமிட்டியின் முன் சாட்சியம் கூறும் போது எடுத்துச் சொல்லி தங்கள் நன்மையில் வெற்றி பெறுவார்களென்றும் எதிர்பார்க்கிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 28.02.1932**



RangaRakes tamilnavarasam.com

# மத உரிமையின் ஆபத்து

இந்தியாவுக்கு அரசியல் சீர்திருத்தம் கொடுப்பதற்கு வேண்டிய திட்டங்களை ஆலோசித்து முடிவு செய்ய பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும், மூன்று கமிட்டிகளில் ஒன்றாகிய ஆலோசனைக் கமிட்டியின் கூட்டம் சில நாட்களாகப் புது டில்லியில் நடைபெற்று வருகின்றது. அக்கமிட்டியில் அரசியல் சீர்திருத்தத்தில் சேர்க்க வேண்டிய அடிப்படையான உரிமைகளைப்பற்றி ஆலோசனை செய்து வருகின்றனர். அவர்கள் முடிவு செய்து ஒப்புக் கொண்டிருக்கும் உரிமைகளாலும், அத்தகைய உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் சீர்திருத்தத்தாலும் நமது நாட்டின் ஏழைமக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அதிகமான நன்மையுண்டாகப் போவதில்லையென்றுதான் நாம் துணிந்து கூறுகிறோம். இவ்வாறு நாம் கூறுவதற்குரிய காரணங்களை ஆராய்வோம்.

"எந்த சமஸ்தானமாயினும், மாகாண ஆட்சிக்கு உட்பட்டதானாலும், ஐக்கிய ஆட்சிக்குள் அடங்கியதானாலும், அவ்விடங்களில் சர்க்கார் மதமென்பது ஒன்று இல்லை என்று அறிக்கையிட வேண்டும்" என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அடுத்தபடியாக "மத சுதந்தரம், பொது ஜனங்களின் பழக்க வழக்கங்கள் முதலிய உரிமைகளுக்குச் சம்மதம் அளிக்கிறது" என்பதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இவ்விரு தீர்மானங்களால் இதுவரையிலும் நமது நாட்டு மக்கள் எந்த நிலையில்இருந்து கொண்டிருக்கிறார்களோ அந்த நிலையில்தான் அரசியல் சீர்திருத்தம் பெற்றபின்னும் இருந்து தீர வேண்டும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

உண்மையிலேயே ஒரு நாட்டு மக்கள், ஜாதி பேதங்கள் இல்லாமல், ஏழை பணக்கார வித்தியாசங்கள் இல்லாமல், தொழிலாளி முதலாளிக் கொடுமைகள் இல்லாமல் குடியானவன் நிலச்சுவான்தார் வித்தியாசமில்லாமல், உயர்ந்தவன் தாழ்ந்தவன் வித்தியாசம் இல்லாமல் சமத்துவமும், சகோதரத்துவமும், சுதந்தரமும் பெற்று வாழ வேண்டுமானால், முதலில் மதங்களும், தனித்தனிப் பழக்க வழக்கங்களும் ஒழிந்தாக வேண்டும். இவ்வாறு மக்களைப் பிரித்துவைத்துக் கொடுமைப்படுத்துவதற்குக் காரணமான மதங்களையும் அவைகளிலிருந்து முளைத்த பழக்கவழக்க



வேறுபாடுகளையும் அரசாங்கமே தைரியமாக முன் வந்து ஒழிக்க வேண்டும். இப்படியில்லாமல், "அரசாங்கத்திற்கு எந்த மதமும் இல்லை" என்று சொல்லுகின்ற அரசாங்கமாயிருந்தாலுஞ்சரி, "நாங்கள் மதத்தில் தலையிட மாட்டோம்" என்று சொல்லுகின்ற அரசாங்கமாயிருந்தாலும் சரி, "ஒவ்வொரு மதங்களுக்கும், கலைகளுக்கும், நாகரீகங்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும்" என்று சொல்லுகின்ற அரசாங்கமா யிருந்தாலுஞ் சரி, சமதர்மக் கொள்கையுள்ள சீர்திருத்தங்கள் எவையும் செய்ய முடியாது. இந்த மாதிரியான கொள்கையுள்ள அரசாங்கங்கள் ஏக நாயக அரசாங்கமானாலும், அல்லது குடியேற்ற நாட்டு அந்தஸ்துள்ள அரசாங்கமானாலும் ஐக்கிய அரசாங்கமானாலும், அல்லது பூரண சுயேச்சை அரசாங்கமானாலும், இவைகளால் நாட்டில் உள்ள ஏழை மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், சுதந்தரமற்ற மக்களுக்கும் கடுகளவாவது நன்மையுண்டாகப் போவதில்லை.

எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, அதாவது ஏக நாயக அரசாங்கமானாலும் அல்லது ஜனநாயக அரசாங்கமானாலும், அது தேச மக்கள் எல்லோரையும் மக்களாகவே கருதி, அவர்களுக்குள் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் ஆகியவைகள் நிலைத்திருக்கச் செய்வதையே நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். இந்த சமத்துவம், சகோதரத்துவம் சுதந்திரம் ஆகியவைகள் வளர்வதற்குத் தடையாக இருப்பவை மதமானாலும், பொருளானாலும், ஜாதியானாலும், வேதமானாலும் நாகரீகங்களானாலும், பழக்க வழக்கங்களானாலும், கடவுள் ஆனாலும் மற்றும் எவையானாலும் அவைகளைச் சட்டங்களின் மூலம் அடியோடு ஒழிக்கப் பின்வாங்காத அரசாங்கமாக இருக்க வேண்டும். இத்தகைய அரசாங்கத்தினால்தான் தேசமக்கள் எல்லோருடைய சுய மரியாதையையும் காப்பாற்ற முடியுமென்பதில் ஐயமில்லை.

இப்படியில்லாமல், "அரசாங்கத்திற்கு மதமில்லை" என்று மாத்திரம் ஒப்புக்கொண்டு "மத சுதந்தரம், பொது ஜனங்களின் பழக்க வழக்கங்கள் முதலிய உரிமைகளுக்குச் சம்மதமளிக்கிறது" என்ற கொள்கையை உடைய ஐக்கிய ஆட்சி அரசாங்கத்தால் என்ன நன்மை ஏற்பட்டு விட முடியும் என்று கேட்கிறோம். இந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ள அரசாங்கம், கல்யாணம், சிரார்த்தம், கருமாதி முதலிய பல பெயர்களால் பார்ப்பனரல்லாதார்களிடமிருந்து செல்வத்தைச் சுரண்டுவது எங்கள் மதம் ஐந்து வயதுப் பெண் குழந்தையை அறுபது வயதுக் கிழவனுக்கு மணஞ்செய்து கொடுத்து, அன்றைக்காவது, அல்லது மறுநாளிலாவது, மறுமாதத்திலாவது, மறுவருஷத்திலாவது தாலி யறுக்கவைப்பதும், இவ்வாறு தாலியறுத்த பெண்களை மொட்டையடித்துக் கைம்பெண்களாக ஆயுள் முழுதும் இருந்து துன்புறும்படி வைப்பதுதான் எங்கள் மதம், கோயில்கள் என்பவைகளில் உள்ள குழவிக்கல்லுகளுக்கும், பொம்மைகளுக்கும், ஏராளமாக செல்வங்களைப் பாழ்பண்ணிவிட்டு மக்களுடைய உழைப்பை



RangaRakes tamilnavarasam.com

யும், செல்வத்தையும், காலத்தையும் பயனற்ற வழியில் செலவிடுவதுதான் எங்கள் மதம், இவ்வாறுள்ள கோயில்களின் செல்வங்களைப் பார்ப்பனர்கள் தான் தின்று கொழுக்கலாம். இக்கோயில்களுக்குள் உயர்ந்த ஜாதி இந்துக்கள் தான் போகலாம், தாழ்த்தப்பட்டவர்கள் போகக்கூடாது என்று ஏற்பட்டிருப்பது தான் எங்கள் மதம்; ஆண்களுக்குத்தான் சொத்துரிமை உண்டு, பெண்களுக்கு எந்த வகையிலும் சொத்துரிமை இல்லை என்பதுதான் எங்கள் மதம்; ஆண்கள் எத்தனை கல்யாணம் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம், பெண்கள் இவ்வாறு செய்து கொள்ளக்கூடாது, கணவன் இறந்து விட்டாலும் விதவையாகத் தனித்திருந்தே உயிர் வாழ வேண்டும் என்ற ஏற்பாடுதான் எங்கள் மதம் என்று சொல்லுகின்ற மதம் சுதந்தரங்களுக்கு எல்லாம் உரிமை கொடுத்து ஆக வேண்டுமல்லவா?

உயர்ந்த ஜாதி இந்துக்களின் பிள்ளைகளும், தாழ்ந்த வகுப்பினரின் பிள்ளைகளும் ஒரு பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படிப்பது மதச் சுதந்தரத் திற்கும், பழக்க வழக்க சுதந்தரங்களுக்கும் விரோதம்; உயர்ந்த வகுப்பினர் தண்ணீர் எடுக்கும் கிணறு, குளங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தண்ணீர் எடுப்பது. பழக்க வழக்க சுதந்தரத்திற்கு விரோதம். உயர்ந்த வகுப்பினர்கள் வசிக்கும் தெருக்களில் தாழ்ந்த வகுப்பினர் நடப்பது பழக்கவழக்க சுதந்தரங் களுக்கு விரோதம்; உயர்ந்த வகுப்பினர் பார்க்கும்படி, தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் படிப்பதும் நல்ல வேஷ்டிக் கட்டுவதும், சட்டை போடுவதும், கிராப்பு வைப்பதும், காலில் செருப்பணிவதும், குடை பிடிப்பதும், பெண்கள் மார்பில் துணி போடுவதும் பழக்க வழக்க சுதந்தரங்களுக்கு விரோதம் என்று கூறி வைதீகர்களும், ஜாதி இறுமாப்புக் கொண்டவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களைக் கொடுமைப்படுத்த மேற்கூறிய உரிமை இடங் கொடுக்கின்ற தல்லவா? ஆகையால், மத நடு நிலைமையும், மதம், பழக்க வழக்கம் ஆகிய சுதந்தரங்களுக்கு உரிமையும் வழங்கும் ஆட்சியில் ஏழை மக்களுக்கு ஒரு பயனும் ஏற்படப் போவதில்லையென்று நிச்சயமாகக் கூறலாம்.

இன்னும் ஆலோசனைக் கமிட்டியில் தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் வேண்டுகோளுக்கு இணங்கி மற்றொரு தீர்மானமும் செய்யப் பட்டிருக்கிறது. அது "குடிமக்கள் தங்கள் நகர உரிமைகளை அனுபவிப்பதற்குத் தடையாக எத்தகைய பழக்க வழக்க வித்தியாசங்கள் ஏற்படுவதாயினும் அவைகள் சட்ட விரோதமானவை எனத் தீர்மானிக்க வேண்டும்" என்பதாகும்.

முதலில் மதம், பழக்க வழக்கம் ஆகிய சுதந்திரங்களுக்கு உரிமை கொடுத்து விட்டு மேற்கூறியவாறு தீர்மானிப்பதில் என்ன அர்த்தமிருக்கிறது. முதலில் கூறிய தீர்மானத்தை அரசாங்கம் நடத்தி வைப்பதா? அல்லது இரண்டாவது செய்யப்பட்டுள்ள தீர்மானத்தை அரசாங்கம் நடத்தி வைப்பதா? என்று யோசித்துப் பாருங்கள்! வரப்போகின்ற அரசாங்கத்தில் பெரும்பாலும் ஆதிக்கமும், அதிகாரமும் செலுத்தப் போகின்ற பணக்காரர்களும், வைதீகப் பித்தர்களும், ஜாதி இறுமாப்புக் கொண்டவர்களும் "மதம் பழக்க வழக்க சுதந்திரங்களுக்கு உரிமை கொடுக்கும்" தீர்மானத்தை நடைமுறையில் வைத் திருப்பார்களா? அல்லது "குடிமக்கள் தங்கள் நகர உரிமைகளை அனுபவிக் கத் தடையாக இருக்கும் பழக்க வழக்க வித்தியாசங்களைத் தடுக்கும்" தீர்மானத்தை நடைமுறையில் வைத்திருப்பார்களா? என்று யோசனை செய்து பாருங்கள்! ஆகவே இரண்டாவது செய்யப்பட்டிருக்கும் தீர்மானம் தாழ்த்தப் பட்டவர்களுக்கு வெறும் வாய்ச்சமாதானம் கூறுவதற்குப் பதிலாகவே செய்யப்பட்டி ருக்கிறதென்று தான் சொல்லலாம்.

இன்னும் "தர்ம ஸ்தாபனங்கள், மத ஸ்தாபனங்கள், சமூக ஸ்தாபனங் கள், கல்வி ஸ்தாபனங்கள் முதலியவற்றைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் தங்கள் சொந்த செலவில் அமைத்து அந்த ஸ்தாபனங்களில் தங்கள் சொந்த மதங்களையும், தங்கள் சொந்த பாஷைகளையும் அநுஷ்டிக்க அவர்களுக் குப் பூரண சுதந்திரம் கொடுக்கிறது" என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இத்தீர்மானம் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத் திற்குச் செய்யப்பட்டிருப்பது போலக் காணப்படுவதாயினும் இத்தகைய உரிமை மற்ற உயர்ந்த வகுப்பினர்களுக்கும் இல்லாமலில்லை. எந்த வகுப்பி னர்களுக்கும் இத்தகைய உரிமை உண்டு. ஆகவே இதுவும், "மதங்கள், பழக்க வழக்க சுதந்திரங்கள்" ஆகியவைகளுக்கு உரிமை கொடுக்கும் தீர்மானத் தைப் போன்றதேயாகும். இத்தீர்மானம், இன்னும் மக்களின் ஒற்றுமைக்குத் தடையாக இருக்கின்ற மதங்களையும், நாகரிகங்களையும் நிலைத்திருக் கும்படி செய்வதற்குத் துணை புரியக் கூடியதே யாகும்.

இவ்வாறு ஒவ்வொரு தனிப்பட்ட வகுப்பினரும் தங்கள் தங்கள் மதம், கலை, பழக்க வழக்கங்கள் இவைகளைக் காப்பாற்றிக் கொள்ள உரிமைய ளித்து விட்டு, "அரசாங்க ஆதரவு பெற்ற பள்ளிக் கூடங்களில் எல்லோரை யும் சேர அனுமதிக்க வேண்டும், ஜாதி, மதம், சமூகம், பிறப்பிடம் முதலியவற் றைக் கொண்டு தடைப்படுத்தக்கூடாது" என்று தீர்மானித்திருப்பதில் என்ன பயனுண்டு? தனித்தனி ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமை யிருக்கின்றதால், உயர்ந்த சாதிக்காரர்கள், அரசாங்க ஆதரவு பெற்ற ஸ்தாப னங்களில் தாழ்த்தப்பட்டவர்களையெல்லாம் சேர்க்கப்படும் பொழுது தாங்கள் அதை பகிஷ்கரித்து விடுவார்கள். ஏனென்றால் ஒவ்வொரு சமூகத் திலும் உள்ள மதப் பித்தர்கள், தங்கள் மதம், பழக்க வழக்கங்களைக் காப்பாற்ற எப்படியேனும் தனி ஸ்தாபனங்களை ஏற்படுத்தாமல் இருக்கமாட்டார்கள். இவ்வாறு தனிப்பட்ட ஸ்தாபனங்கள் அதிகமாக ஏற்படுகின்றபோது அரசாங்க ஆதரவு பெற்ற கல்வி ஸ்தாபனங்களின் எண்ணிக்கைக் குறையும் என்பதில் ஐயமில்லை. ஆகவே இவைகளைக் கொண்டு தாழ்த்தப்பட்டவர்கள் பெரிய பயனைப் பெற முடியாது என்று சொல்லுகிறோம். ஆனாலும் சிறிதளவாவது நன்மை தரக்கூடிய இத்தீர்மானத்தை நாம் வரவேற்கிறோம்.





RangaRakes tamilnavarasam.com

இது நிற்க, இனி எந்த மாதிரியான தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலுங் கூட அவைகளெல்லாம் பெரிய நன்மையை அளித்துவிடாது என்று சொல்லு கிறோம். ஏனென்றால், மதம், பழக்க வழக்க சுதந்திரம் முதலியவைகளுக்கு உரிமையளிக்கின்ற வரையிலும், அரசாங்கத்திற்கு மதம் இல்லையென்று சொல்லிக் கொண்டு மதத்தில் தலையிட மறுக்கின்ற வரையிலும், நமது நாட்டில் சமதர்மம் பரவமுடியாது என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

ஆயினும், "ஒவ்வொரு மதங்களுக்கும், கலைகளுக்கும் நாகரீகங் களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதையும், எந்தத் தனி வகுப்பினர்களுக்கும் தனிச் செல்வாக்கு இல்லாமலும்" உள்ள சுயராஜியம் வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டிருக்கிற காங்கிரசைக் காட்டிலும், வட்டமேஜை ஆலோசனைக் கமிட்டியாரால் செய்யப்படும் முடிவுகள் சிறிதளவு நன்மையானவைகளாயிருக்கிறதென்றே நாம் கருதுகின்றோம்." "தாழ்த்தப் பட்டவர்களுக்குப் பொது ஸ்தாபனங்களில் அவர்களுடைய பங்குக்கு ஏற்றவாறு உரிமையளிக்க வேண்டும்" என்பன போன்ற சில தீர்மானங்கள் அவர்களுக்கு நன்மையளிப்பனவாகும். இந்தச் சிறிய சாதகத்தைக் கொண்டு அவர்கள் கொஞ்சம் கொஞ்சம் தங்கள் கையை பலப் படுத்திக் கொண்டு, சிறிதளவாவது முன்னேற்றமடைய வழியிருக்கிறது என்பதனால் கொஞ்சம் திருப்தி அடைய வேண்டியிருக்கிறது. தாழ்த்தப் பட்டவர்களுக்கு ஒரு சிறிதும் பாதுகாப்பு அளிக்க விரும்பாத காங்கிரஸ் காரர்களைக் காட்டிலும், ஆலோசனைக் கமிட்டியார் ஓரளவு சாதகமான காரியங்களுக்கு இடங் கொடுத்திருக்கிறார்கள் என்று மகிழ்ச்சி யடைகிறோம்.

இவைகளை எல்லாம் ஆலோசிக்கும் போது சீர்திருத்தக்காரர்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய விஷயமென்ன? அவர்கள் பிரசாரத்தின் மூலம் மக்களுடைய மனத்தில், மாறுதல் உண்டாக்குவதனால் தான், ஜாதி, மதப் பழக்க வழக்கங்களை ஒழிக்க முயலவேண்டியதிருக்கிறதே யொழிய தற்கால அரசாங்க அமைப்பைச் சாதகமாகக் கொண்டு ஒன்றுஞ் செய்ய முடிவதற் கில்லை என்பதே. இத்தனை காலமாக பிரிட்டிஷ் அரசாங்கமும் "நாங்கள் மதத்தில் தலையிடுவதில்லை" என்ற பல்லவியைப் பாடிக் கொண்டே சீர்திருத்தங்களைச் செய்வதற்கு முன் வராமலிருந்தது, காங்கிரஸ் கேட்ட சுயராஜ்யமும் இதைவிட மோசமானதாகத்தான் இருந்தது. இப்பொழுது நடைபெறும் வட்ட மேஜை ஆலோசனைக் கமிட்டியின் தீர்மானங்களை ஆராயும் போதும், வரப்போகும் ஐக்கிய ஆட்சியும் இப்படித்தானிருக்கு மென்று தெரிகின்றது.

ஆதலால் எந்தச் சுயராஜியம் வந்தாலும் படித்தவர்களும், பணக்காரர் களும், உத்தியோகம், பட்டம், பதவி, முதலியவைகளைப் பெற்று ஏழை மக்களின் பொருளைச் சுரண்டுவதற்குத் தான் துணைசெய்யுமே ஒழிய மற்றபடி ஜாதி மத உயர்வு தாழ்வுக் கொடுமைகள் ஒழிந்து, நாட்டு மக்களனைவரும் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் பெற்று வாழமுடியாது என்பதைத் தான் கூறுகிறோம். உண்மையில் நமது நாட்டு மக்கள் சுயமரியாதை பெறவேண்டு மானால் ஜாதி, மதம், பழக்க வழக்கம் முதலியவைகளை ஒழித்து எல்லோரையும் ஒன்றுபடுத்தக் கூடிய ஆட்சிதான் தேவை என்பதை எடுத்துக் காட்டி முடிக் கிறோம். அது குடி அரசானாலும், முடி அரசானாலும் அல்லது வேறு எந்த அரசானாலும் சரி.

**குடி அரசு - தலையங்கம் - 06.03.1932**


RangaRakes
tamilnavarasam.com

# பாராட்டுகிறோம்

தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறவும், தங்கள் உரிமையையும், சமத்துவத்தையும் பெற அவர்கள் போதிய கல்வியறிவு பெற்று உலக ஞான மறிந்து தங்கள் இழிவான நிலையைத் தாங்களே உணரவேண்டுமென்பதை நாம் பன்முறையும் கூறிவருகிறோம். அத்தகைய அவர்களது நிலையை அறிய அவர்கள் எல்லோரும் ஏனையோரைப் போலவே கல்வி கற்று அறிவு வளர்ச்சிபெற வேண்டுவது மிகமிக இன்றியமையாதாகும். அவ்விதமே அவர்கள் கல்வி கற்க முற்படினும் அவர்களுக்கு அதனால் ஏற்படும் கஷ்டங்களும், இன்னல்களும், எதிர்ப்புகளும் எண்ணிறந்தன. அத்தகைய பல இடையூறுகளில் பொருளின்மை தலைசிறந்ததெனலாம். தங்கள் பிள்ளை களைப் படிக்க வைக்க வேண்டுமென்ற பேரவா பல பெற்றோர்க்கு இருந்த போதிலும் போதிய பணமின்மையால் அவர்களது புஸ்தக வகைக்கோ, அல்லது துணிமணிகளுக்கோ வேண்டியன கொடுத்துதவ முடியாமையால் பிள்ளைகளின் படிப்பில் கவலை செலுத்தாத பெற்றோர்கள் அனேகர் உண்டென்பதும் நமக்குத் தெரியும். அத்தகைய அவர்களது குறை நீக்கப்பட்ட திற்கொப்ப திருச்சி ஜில்லா லால்குடியில் உள்ள போர்டு ஸ்கூல் ஆதிதிராவிட மாணவர்களின் உபயோகத்திற்காக ரூபாய் 10,000 நன்கொடையளித்த ராவ்பகதூர் சபாரத்னம் செட்டியார் அவர்களது தயாள குணத்தைப் பற்றி சென்ற வாரம் ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டது நேயர்களறிந்ததே. பெருந்தணி கரான சபாரத்னமவர்கள் ஏழை ஆதிதிராவிட மாணவர்களுக்கு உதவி செய்ய முன்போந்தது அவரது தயாள சிந்தையையும் தெள்ளிதில் விளக்குகின்றது. ஷை தொகையானது ஷை மாணவர்களது சாப்பாடு வசதிக்காக உபயோகிக் கபடுமென்பது கேட்டு மகிழ்ந்தோம். மிகவும் தாராள சிந்தையுடன் பொருளீந் துதவிய திரு. சபாரத்னம் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.03.1932**



# தேசீயப் பைத்தியம்

தேசீயம் என்பது ஒரு பித்தலாட்டம் என்பதையும், அது சுயநலவாதி களின் வயிற்றுப்பிழைப்புக்குத் துணைபுரியும் வார்த்தை என்பதையும், நமது இயக்கம் தோன்றிய நாள் முதல் நாம் எடுத்துக்காட்டி வந்திருக்கின்றோம். தேசீயவாதியாக இருக்கின்ற ஒருவன் எச்சமயத்திலும் யோக்கியப் பொறுப்பு டன் நடந்துகொள்ள முடியாது. சமயத்திற்குத் தகுந்த வேஷங்களைப் போட்டுக்கொண்டு பாமர மக்களை ஏமாற்றக் கற்றுக் கொள்ளவேண்டும். பாமர மக்களைப் பலவகையிலும் ஏமாற்றி அவர்களைத் தன்னைப் பின்பற்று மாறு செய்துகொள்ள முடியாத எவனும் தேசீயத்தலைவனாக இருக்க முடியாது. பாமர மக்களை ஏமாற்றுவதற்கு எவ்வளவு பித்தலாட்டங்களும், அயோக்கியத்தனங்களும் செய்தாக வேண்டுமோ அவ்வளவும் செய்துதான் ஆகவேண்டும். அன்றியும் ஒரு நிலையான கொள்கையும், நேர்மையான நடத்தையும் இல்லாதவனே தேசீயவாதியாக இருக்க முடியும். அல்லாமலும் பாமர மக்கள் எவ்வளவு பிற்போக்கான கொள்கையும், பழக்க வழக்கமும் உடையவர்களா யிருக்கிறார்களோ அவ்வளவு பிற்போக்கான கொள்கையை யும் பழக்க வழக்கங்களையும் பாராட்டுகின்றவனே தேசீயத்தலைவனாகப் புகழ்பெற்று விளங்க முடியும். காலத்திற்குத் தகுந்த மாதிரியில் நாட்டிற்கு நன்மை தரும் கொள்கைகளை யாருடைய நன்மதிப்பையும் இகழ்ச்சியையும் பாராட்டாமல் எடுத்துக் கூறும் ஒருவன் தேசீயவாதியாக விளங்க முடியாது. அவன் தேசத் துரோகியாகவும், புரட்சிக்காரனாகவும், நாஸ்திகன் என்று வைதீகர்களால் பழி சுமத்தப்படுபவனாகவுந் தான் விளங்க முடியும். ஆகை யால் தான் நமது தேசத்திலும் மற்றும் நமது நாட்டைப் போல மூடநம்பிக் கையுடைய மக்கள் வாழ்கின்ற தேசங்களிலுமுள்ள ஒருவன் தேசீயத்தின் பெயரால் புகழ் பெறுவதும், பாமர மக்களின் நன்மதிப்பைப் பெறுவதும், தன் காரியங்களைச் சாதித்துக் கொள்வதும் சுலபமாக இருந்து வருகின்றது.

அல்லாமலும் முற்காலத்தில் வைதீகர்கள், பக்தர்கள், மதாச்சாரியார்கள், புரோகிதர்கள் என்பவர்கள் எவ்வாறு ஜன சமூகத்தை ஏமாற்றுகின்றவர் களாகவும், ஜன சமூகத்தின் நன்மதிப்பிற்கு பாத்திரப்பட்டவர்களாகவும், ஜன சமூகத்திற்குப் பல ஆசை வார்த்தைகளைக் காட்டுவதன்மூலம் அவர்களிடம் பொருள் பெற்றுப் பிழைக்கின்றவர்களாகவும் இருந்து வந்தார்களோ



RangaRakes tamilnavarasam.com

அவ்வாறேதான் இக்காலத்தில் தேசீய வாதிகளும் இருந்து வருகின்றார்கள். வைதீகர்களும், பக்தர்களும், மதாச்சாரியார்களும், புரோகிதர்களும், பாமர மக்களுக்கு “இறந்தபின் சுவர்க்கத்தை அடையலாமென்றும், அங்கே இவ்வுலகத்தைக் காட்டிலும் அதிகமான சுகத்தை அடையலாமென்றும், அச்சுகத்தை நீண்டநாள் அனுபவிக்கலாமென்றும், அது அழியாத சுகமென் றும், ஆகையால் அதைப் பெற முயல்வதே அறிவாகுமென்றும், அற்பமான இவ்வுலக சுகத்தை இச்சிப்பதனால் அவ்வுலக சுகத்தைப் பெறமுடியா தென்றும் கூறி அவர்கள் அறிவைக் கெடுத்துவந்தனர். அந்தச் சுவர்க்க வாசலின் சாவி தங்களிடத்தில்தான் இருக்கின்றதென்றும் கூறி, அவர்களின் உழைப்பையும், செல்வத்தையும், அறிவையும் கொள்ளை கொண்டு வந்தனர். அவர்களைப் போலவே இன்று தேசீயவாதிகள் என்பவர்களும், “நாங்கள் ராம ராஜியத்தைக் கொண்டு வருகிறோம். அந்த ராஜியத்தில் எல்லோரும் கஷ்டமில்லாமல், தரித்திரமில்லாமல் வாழலாம். ஒருவரும் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டியதில்லை. அரசாங்கத்திற்கு வரிகொடுக்க வேண்டிய தில்லை. எல்லோரும் தங்கள் இஷ்டப்படி வாழ்ந்து கொண்டிருக்கலாம்” என்று சொல்லிக் கொண்டு வருகின்றனர். அந்த சுவர்க்க லோகத் தரகர்கள் தங்கள் மதச் சின்னங்களாக ‘விபூதி பட்டை நாமம், துளசிமணி, உருத்திராட் சம் முதலியவைகளைத் தரித்துக் கொண்டு ‘அரகரா சிவ சிவா ராமா கோவிந்தா’ என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தது போலவே இந்தத் தேசீயவாதிகளும் இன்று ராமராஜ்யச் சின்னமாக கதர்த்துணி, தேசீயக் கொடி முதலியவைகளைத் தரித்துக் கொண்டு ‘பாரத மாதாவுக்கு ஜே! மகாத்மா காந்திக்கு ஜே!’ என்று சத்தமிட்டுப் பாமர மக்களை ஏமாற்றுகின்றனர். அவர்கள் பாமர மக்களின் கவனத்தை இழுக்கும் பொருட்டு அளவற்ற பண்டிகைகளையும், சடங்குகளையும், விழாக்களையும், உண்டாக்கி அவைகளை அவர்கள் கொண்டாடும்படி செய்து அவைகளின் மூலம், அவர்களுடைய உழைப்பையும், அறிவையும், செல்வத்தையும் எவ்வாறு கெடுத்துவந்தார்களோ அதைப்போலவே இன்று இந்தத்தேசீயவாதிகளும் ஜெயந்திகளையும், பிரார்த்தனைகளையும், கொடியேற்று விழாக்களையும் ஏற்படுத்தி அவைகளின் மூலம் பாமரமக்களின் கவனத்தை இழுத்து, அவர்களுடைய செல்வத்தையும், உழைப்பையும், அறிவையும் கெடுத்து வருகின்றனர். அந்தக் காலத்தில் நமது மக்கள் எவ்வாறு சுவர்க்கத்தை நம்பி வைதீகர்களும், பக்தர்களும், மதாச்சாரியார்களும், புரோகிதர்களும் இழுத்த இழுப்புக்கெல்லாம் போய்க்கொண்டிருந்தார்களோ அதைப்போலவேதான் இன்றும் இருக்கின்றனர். தேசீயவாதிகள் வாங்கித் தருவதாகக்கூறும் ‘ராம ராஜியத்’தை நம்பி இவர்கள் இழுக்கும் இழுப்புக்கெல்லாம் பின்செல்லு கின்றவர்களாயிருக்கின்றனர். பாமர மக்களின் இத்தகைய அறியாமையைக் கண்டே இன்று நமது நாட்டில் வேறுபிழைப்பிற்கு வழியில்லாமலிருக்கின்ற வர்களும், கௌரவமான வழியில் ஜீவனம் பண்ண வகையற்றவர்களும், யோக்கியமான முறையில் பட்டம் பதவி பெறத் திறமையற்றவர்களும் தேசீய



வேஷம் பூண்டு, தேசீய வாதிகளாக நடனம் பண்ண ஆரம்பித்து விடு கின்றனர்.

இந்த உண்மையை அறிய வேண்டுமானால் இன்று நமது நாட்டில் தேசீய வேஷம் போட்டுத் திரியும் கூட்டத்தினரைக் கொஞ்சம் கவனித்துப் பார்த்தால் கொஞ்சம் பகுத்தறிவுடைய எவரும் நன்றாகத் தெரிந்து கொள்ள லாம். தேசீயத் தொண்டர்கள் என்பவர்களில் அனேகர் வேறு பிழைப்பிற்கு வழியில்லாத காரணத்தால் தேசீயக் கூட்டத்தில் சேர்ந்து கொண்டு “காங்கிரஸ்”, “காந்தி”, “கதர்”, “சுயராஜ்யம்” என்று கூச்சலிட்டுத் திரிகின்றனர் என்பதை யாரும் மறுக்க முடியாது, இவர்களில் அனேகருக்கு, காங்கிரஸ் என்றால் இன்னது, காந்தியென்றால் இப்படிப்பட்டவர், கதர் என்றால் அதன் தத்துவம் என்ன? சுயராஜியம் என்றால் அது எப்படி யிருக்கும்? என்று கூடத் தெரியாதவர்கள் என்பது பலருக்குத் தெரிந்த விஷயமாகும். இவர்களை நடத்துகின்ற தலைவர்கள் என்பவர்கள், எதைச் சொல்லும்படி கட்டளை யிடுகிறார்களோ, எதைச் செய்யும்படி உத்தரவிடுகிறார்களோ, அவற்றையே அவற்றின் பொருளை யுணராமலே செய்கின்ற புத்திசாலித்தனமுடைய வர்கள் என்பதும் அனேகருக்குத் தெரியாத விஷயமல்ல. நமது நாட்டுத் தேசீய ஸ்தாபனமென்று சொல்லிக் கொண்டிருக்கின்ற காங்கிரஸ் கைக்கூலி கொடுப்பதையோ, சோறு போடுவதையோ நிறுத்திவிடுமானால் காங்கிரசின் கட்டளைப்படி சட்டமறுப்புச் செய்யத் தொண்டர்கள் என்று சொல்லிக் கொண்டு தேசீயத்தின் பெயரால் பெருவாரியாக முன்வர மாட்டார்கள் என்பது சிறிதும் சந்தேகமற்ற உண்மையாகும். இதற்கு உதாரணமாக சென்ற ஒத்துழையாமை இயக்கம் தோன்றிய காலத்திலும், உப்புச் சட்ட மறுப்பு இயக்கம் தோன்றிய காலத்திலும், காங்கிரஸ் பேரால் ‘தேசீய சேவை’ என்று சொல்லிக் கொண்டு எத்தனை ஆயிரக்கணக்கான தொண்டர்கள் முன் வந்தார்கள் என்பதையும், தற்போது ஆரம்பித்து நடத்தப்பட்டுவரும் சட்ட மறுப்புப் போரில் எவ்வளவு பேர் தேசீயத்தின் பெயரால் தொண்டர்களாக முன் வந்து சட்ட மறுப்புச் செய்திருக்கிறார்கள் என்பதையும் பார்த்தால் விளங்கும். சென்ற ஒத்துழையாமையின் போதும், உப்புச் சட்டமறுப்பின் போதும், அரசாங்கத்தார் கடினமான அடக்கு முறையைக்கைக் கொள்ளாத காரணத்தாலும், காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சட்ட விரோதமானதெனக் கூறி அதன் பணத்தில் கை வைக்காத காரணத்தினாலும் காங்கிரஸ் ஸ்தாபனம் தொண்டர்களுக்குக் கைக்கூலி கொடுக்கவும்,சோறு போடவும் தயாராயிருந் தது. இக் காரணத்தாலேயே ஏராளமான வேலை யற்றவர்கள் தேசீயத்தின் பேரால் சட்டமறுப்புச் செய்ய முன் வந்தனர். ஆனால் இப்பொழுது காங்கிர சால் நடத்தப்படும் சட்ட மறுப்பிலோ, முன்போல ஏராளமான தொண்டர் களைக் காணவில்லை. இதற்குக் காரணம் அரசாங்கத்தார் கடுமையான அடக்குமுறையைக் கையாண்டதும், காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சட்ட விரோத மானதென விளம்பரப்படுத்தி அதன் பொக்கிஷத்தைக் கைப்பற்றிக் கொண்டதும், பாமர மக்களிடம் காங்கிரசின் பேரால் பணம் வசூல்



RangaRakes tamilnavarasam.com

செய்வதைத் தடுத்ததுமேயாகும். இவ்வாறு காங்கிரசின் பணமும் போய் பண வருவாய்க்கு இடமில்லாமலும் போனவுடன் அதன் தலைவர்களால் யாருக்கும் கைக்கூலி கொடுக்கவும், சோறு போட்டு வளர்க்கவும் முடியாமற் போய்விட்டது. ஆகவே தேசீயத்தின் பெயரால் முன் வந்து, சட்டமறுப்புச் செய்கின்ற தொண்டர்கள் கூட்டமும் குறைந்து விட்டது. இதனால் தேசீயம் என்று சொல்லப்படுவது பிழைப்பற்றவர்களுக்கு ஒரு கையாயுதமாக இருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

அடுத்தபடியாகத் தேசீயவாதிகளாக விளங்கும் தலைவர்களாகிய பணக்காரர்களைப் பற்றிக் கொஞ்சம் ஆராய்ந்து பாருங்கள்! பணக்காரர்களுக்கு எந்த காலத்திலாகிலும், தமது சுய நன்மையை விட்டுக் கொடுத்து ஏழை மக்களுக்குச் சம உரிமையும், சம சுகமும் அளிக்க வேண்டும் என்னும் எண்ணம் உண்டாக முடியுமா? அவர்களுடைய பணத் திமிரும், ஜாதி அகங்காரமும், மதக்கிறுக்கும் ஒழிந்தால் அல்லாமல் அவர்களிடம் சமதர்ம நோக்கமும், அதற்குத் தகுந்த தியாக புத்தியும் தோன்றப் போவதில்லை என்பது உறுதியாகும். இத்தகைய இயல்பையுடைய அவர்கள் தேசீய வேடம் தரித்து ஏழைகளுக்குப் பாடு படுவதாகப் பாசாங்கு பண்ணுவது எதற்காக என்று ஆலோசித்துப் பாருங்கள். பாமர மக்களிடம் செல்வாக்குப் பெற்று, அதன் மூலம் சட்ட சபைத் தேர்தல், ஸ்தல ஸ்தாபனத் தேர்தல் முதலியவைகளில் வெற்றி பெற்று அதிகாரம் வகிப்பதன் வாயிலாகப் பாமர மக்களின் உழைப்பையும், அதன் பயனையும் நிரந்தரமாகக் கொள்ளையடிக்கவா? அல்லவா? என்றுதான் கேட்கிறோம். உண்மையாகவே ‘தேசீயம்’ பேசும் பணக்காரத் தலைவர்கள், தியாகஞ் செய்யக் கூடியவர்களாயிருந்தால் இப்பொழுது அவர்கள் எங்கே? அரசாங்கத்தார் கடினமான அடக்குமுறையைக் கையாளாத காலங்களில் தொண்டைவறளத் தேசீயம் பேசியவர்களெல்லாம், கடுமையான அடக்குமுறை ஆரம்பித்தவுடன் ‘தப்பித்தோம் பிழைத்தோம்’ என்று எங்கோ ஓடி ஒளிந்து போனார்கள்? இத்தகைய தேசீயவாதிகளில் அனேகர் கவர்னர்கள், மந்திரிகள், நிர்வாக சபை அங்கத்தினர்கள் ஆகியவர்களுக்கு அளிக்கும் வரவேற்புக் கூட்டங்களில் கலந்து கொள்ளவும், கவர்னர் வீட்டுக் கல்யாணத்தில் மணமக்களுக்குப் பரிசுகள் வழங்கவும் பின் வாங்கவில்லையன்றோ? மற்றுஞ் சிலர் சட்டசபைகளில் உட்கார்ந்து கொண்டு, காங்கிரஸ், காந்தி, கதர், சுயராஜ்யம் முதலிய வார்த்தைகளைக் கலந்து பேசிவிடுவதும், அரசாங்கத்தாரின் அடக்கு முறையைப் பற்றியும், தடியடி பிரம்படி முதலியவைகளைப்பற்றியும், பிரமாதமாகக் கேள்விகள் கேட்டு ஆர்ப்பாட்டம் பண்ணுவதும் எதற்காக? இவைகளெல்லாம் தங்களைத் தேசீய வாதிகள் என்று பாமர மக்கள் நினைத்துக் கொள்ளவும், அதன் மூலம் அடுத்த எலக்ஷனில் வெற்றி பெறவும் செய்யப்படும் தேசீய தந்திரமா? அல்லவா? என்று ஆலோசித்துப் பாருங்கள்!



இன்னும் ஸ்தல ஸ்தாபனங்களில் ஒட்டிக் கொண்டிருக்கும் தேசீய வேஷக்காரர்களில் அநேகர் “சட்ட மறுப்புக்கு அநுதாபம் காட்டும் தீர்மானங்கள் எதுவும் ஸ்தல ஸ்தாபனங்களில் நிறைவேற்றக் கூடாது” என்று அரசாங்கத்தாரின் கடுமையான உத்தரவு இருப்பதை அறிந்திருந்தும், பலஸ்தல ஸ்தாபனங்களில் சட்டமறுப்புக்கு அநுதாபம் காட்டும் முறையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களையெல்லாம் அரசாங்கத்தார் ஒப்புக் கொள்ளாமல், நிராகரிக்கும்படி உத்திரவிட்டவைகளை அறிந்திருந்தும், “கூட்டத்தை ஒத்தி வைக்க வேண்டும்” என்றும், யாராவது சிறைப்பட்டால் அதற்கு அநுதாபங் காட்டுவதாகவும் ஸ்தல ஸ்தாபனக் கூட்டங்களில் தீர்மானங்கள் கொண்டுவருகிறார்களே இது எதற்காக? இதுவும் மறுபடியும் எலக்ஷனில் வெற்றியடைவதற்குச் செய்யப்படும் பிரசாரமா? அல்லவா? என்றுதான் கேட்கிறோம். ஆகவே தேசீயத்தலைவர்கள் என்பவர்களிலும் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதே முக்காலே மூன்று வீசம் பேர்வழிகள் பட்டம் பதவிகளைப் பெறவே இவ்வேஷத்தைத் தரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெளிவாக உணரலாம். அன்றியும் அறிவு, திறமை, தியாகம் முதலியவைகளுக்கு மதிப்பில்லாமல் பணத்தையும், ஜாதியையுமே முதன்மையாக மதித்து, தேசீய இயக்கங்களில் தலைமைப் பதவியும், பத்திரிகை விளம்பரமும் அளிக்கப்படுவதும், ஏழைத் தொண்டர்களைப் பற்றிக் கேள்வி முறையில்லாமல் மேற்கூறிய பணக்கார உயர்ந்த சாதித் தலைவர்களைப் பற்றியே சட்ட சபைகளில் கேள்விகள் கேட்டு விளம்பரப்படுத்துவதும், தேசீயத்தின் உண்மையை உணர்வதற்குத் தகுந்த உதாரணமாகும்.

அடுத்தபடியாகத் தேசீயத்தின் பெயரால் நடைபெறும் பத்திரிகைகளைப் பாருங்கள்! அவைகள் வெகு ஜாக்கிரதையாக, அரசாங்கத்தாரின் அடக்குமுறைச் சட்டங்களுக்கு அகப்பட்டுக் கொள்ளாமல் தலையங்கங்கள் எழுதினாலும், தேசீயத்தின் பெயரால் நடைபெறும் காரியங்களைப் பற்றி, அவை வெகு அற்பமானவையாய் இருந்தாலும் பிரமாதப்படுத்திப் பெரிய பெரிய எழுத்துக்களால் தலைப் பெயர் கொடுத்துப் பிரசுரிக்கின்றன. உண்மையிலேயே சட்ட மறுப்பு இயக்கத்தை ஆதரிக்காத பத்திரிகைகளும், சட்ட மறுப்பு இயக்கத்தை எதிர்க்கும் பத்திரிகைகளுங் கூட இவ்வாறு செய்கின்றனவே எதற்காக? தேசீயப் பத்திரிகை என்று பெயர் பெறுவதின் மூலமும், தேசீய விஷயங்களையே அதிகமாக வெளியிடுகின்றன என்று தேசீய மோகங் கொண்டிருக்கும் மக்களால் நம்பப்படுவதன் மூலமும் பத்திரிகைகள் அதிகமாக விற்பனையாகிப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்தைத் தவிர வேறென்ன? ஆகவே தேசீயம் என்பது பத்திரிகைகளுக்கு பிழைப்பைக் கொடுக்கும் ஒரு கருவியாகி விட்டது என்று உணரலாம்.

இன்னும், இந்தத் தேசீயம் என்பதன் பெயரால், உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்கள், தங்கள் செல்வாக்கும், அதிகாரமும் எப்பொழுதும் குறையாமலிருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், அரசியல் சீர்திருத்தத்தில்,



RangaRakes tamilnavarasam.com

கொடுமைப்படுத்தப்பட்டு, தாழ்த்தப் பட்டிருக்கும் வகுப்பினருக்குப் போதிய பாதுகாப்பு அளிப்பதை மறுத்து வருவதையும், இதைத் தேசீயத்தின் பேரால் உயர்ந்த வகுப்பினர் என்பவர்களாலேயே நடத்தப்படும் பத்திரிகைகளெல் லாம் ஆதரித்து வருவதும் தெரியாத விஷயமல்ல.

மற்றும் மதம், கடவுள், வேதம், புராணம், வருணாச்சிரம தர்மம் முதலியவைகளில் நம்பிக்கை கொண்ட திருவாளர்கள் காந்தி, மாளவியா போன்ற வைதீகர்கள் தேசீயத்தின் பெயரால் மீண்டும் மக்களுடைய மனத்தில் மதம், கடவுள், வேதம், புராணம், வருணாச்சிரம தருமம் முதலியவைகளைப் பற்றிய மூட நம்பிக்கைகள் உண்டாகும்படி செய்து வருகின்றனர் என்பதை யும், இவ்வாறு மக்களுடைய பகுத்தறிவை அடக்கி ,அவர்களை என்றும் சுதந்தரமற்ற அடிமைகளாகவே வைத்திருக்கக் காரணமாக இருக்கும் வைதீகப் பிரசாரத்திற்கும் தேசீயமே கருவியாக இருந்து வருகின்றதென் பதையும் யார் மறுக்க முடியும்? மக்களை வைதீகத்தில் திருப்ப தேசீயம் உதவி யாக இருக்கின்ற காரணத்தினாலேயே, வருணாச்சிரம தருமத்தில் முரட்டுப் பிடிவாதமுடைய “மடி சஞ்சி”களில் அனேகரும் தேசீய வேடந்தரித்து நடிக்கின்றார்கள் என்பதும் உண்மையான விஷயமாகும்.

ஆகவே நாம் இது வரையிலும் “தேசீயம்” என்பதைப் பற்றிச் சொல்லி வந்த விஷயங்களைக் கொண்டு அதன் பித்தலாட்டங்களை உணரலாம். இவ்வாறு நாட்டு மக்களின் கஷ்டங்களை நீக்குவதற்கு ஒரு வழியிலும் உதவி செய்யாமல், அவர்களை ஏமாற்றி இன்னும் கஷ்ட நிலைமையிலேயே வைத்திருக்க உதவியாக இருக்கும் இவ்வார்த்தையைக் கொண்டுதான் இன்று பிழைப்பற்றவர்களும், பணந் திரட்டும் தந்திர சாலிகளும், பதவி வேட்டைக் காரர்களும், தங்கள், தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுகின்றார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். ஆதலால் உண்மையான சமதர்ம நோக்க முடைய எந்த வாலிபர்களும், முதியவர்களும், தேசீயத்தின் பெயரால் நடை பெறும் கிளர்ச்சிகளையும், காரியங்களையும் கண்டு ஏமாறாமல் இருப்பதே நன்மையாகும்.

இதுவரையிலும் இந்த “தேசீயம்”என்ற வார்த்தையின் பேரால் நமது நாட்டில் நடந்த கிளர்ச்சிகளாலும், காரியங்களாலும் ஏழை மக்கள் என்ன நன்மையைப் பெற்றார்கள்? மேலும் மேலும் பல வகையில் ஏழை மக்களுக் குக் கஷ்டமும், நஷ்டமும் பொதுவாக தேசத்தின் செல்வத்துக்கும், வியா பாரத்துக்கும், அனேக மக்களின் உயிருக்கும் துன்பமும் சேதமும் உண்டான தைத் தவிர வேறு கடுகளவு நன்மையாவது கிடைத்ததுண்டா? என்று யோசித்துப் பார்ப்பவர்களுக்குத் ‘தேசீயத்தின்’ பித்தலாட்டம் விளங்காமற் போகாது.

ஆதலால், நமது நாட்டு ஏழை மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக் கும் நன்மை உண்டாக வேண்டுமானால் – நமது நாட்டில் வேரூன்றி இருக்கும்



சாதி மத பேதங்கள் ஒழிந்து, எல்லா மக்களும் சம சுதந்திரம் அடையக் கூடிய சந்தர்ப்பத்தை உண்டாக்க வேண்டுமானால் எப்படி “வைதீகம்” என்னும் பழைய பாசிபிடித்த விஷநீர்க் குளத்தை முழுதும் மண்ணைப் போட்டு மூட வேண்டுமோ அதைப்போலவே இந்தத் தேசீயம் என்னும் பித்தலாட்டத் தையும் அடியோடு ஒழித்தாக வேண்டும். எப்படி வைதீகத்தில் நம்பிக்கை யுடைய மக்கள் பகுத்தறிவும், நாகரீகமும் அடையாமல் புரோகிதர் வலையில் அகப்பட்டுக் கிடந்து அழிய வேண்டுமோ அதுபோலவே தேசீயத்தில் மக்களுக்கு நம்பிக்கையும் பைத்தியமும் இருக்கின்றவரையிலும், சுகமும் சமத்துவமும் பெற முடியாமல் “தேசீயத் தலைவர்கள்” என்பவர்களின் வலையிற் சிக்கிக் கஷ்டமும் நஷ்டமும் அடைய வேண்டியதுதான். “தலை வலி போய்த் திருகு வலி வந்தது” என்பது போலவே மக்களுக்கு வைதீகத் தில் உள்ள மூடநம்பிக்கை கொஞ்சம் கொஞ்சம் குறைந்து சிறிது பகுத்தறிவு உதயமாகி வருகிற இக்காலத்தில் இந்தப் பாழும் “தேசீயம்” என்பது தோன்றி அவர்களைப் பிணித்து மறுபடியும் மூடநம்பிக்கையில் அழுத்தி வருகிறது என்பதில் ஐயமில்லை.

ஆகையால் இச்சமயத்தில் ஜன சமூக ஊழியர்கள் அனைவரும் தேசீயமென்பதன் பித்தலாட்டங்களை வெளியாக்கிப் பொது ஜனங்களை ஏமாறாமலிருக்கச் செய்ய முன்வர வேண்டுவதே உண்மையான ஜன சமூக ஊழியமாகும் என்பதை உணர வேண்டுகிறோம். வைதீகத்தைப் போலக் கொடியதான இந்த தேசீயத்தை ஒழிக்க எவருடைய புகழ்ச்சியையும், இகழ்ச்சி யையும் எதிர்பாராமல் தைரியத்துடன் முன் வருவதே ஒவ்வொரு பகுத்தறிவு டைய வாலிபர்களின் கடமையாகும் என்று கடைசியாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 13.03.1932**



RangaRakes
tamilnavarasam.com

# திரு. மாளவியாவின் புரோகிதம்

பிரபல வருணாச்சிரம தருமவாதியாகிய பண்டித மதன் மோகன மாளவியா அவர்களைப் பற்றி, நாம் அதிகமாக யாருக்கும் எடுத்துக்கூறத் தேவையில்லை. அவர் இங்கிலாந்து சென்றபோது, கங்கை நீரும், களிமண்ணும் மடிசஞ்சிகளும் கூடவே கொண்டு சென்ற வைதீகர் என்பது தெரியும். ‘சூத்திரன்’ என்பவன் ஒருவன் மோட்சமடைய வேண்டுமானால் “அவன் இருபத்தோரு ஜென்மங்கள் நற்குலத்தில் பிறந்து, சற்கருமங்களைச் செய்து, பிராமண பக்தனாயிருந்து கடைசியில் பிராமணனாகப்பிறந்து தான் மோட்சம் பெற வேண்டும்” என்ற பிராமணீய மதக்கொள்கையில் உறுதியான நம்பிக்கையுடைய முதிர்ந்த வயிரம் வாய்ந்த வைதீகர் என்பது அவருடைய போக்கை உணர்ந்தவர்கள் எல்லோருக்கும் தெரியும்.

இத்தகைய வைதீக மாளவியா அவர்கள் அரசியல் சீர்திருத்தத்தில் தீண்டாதவர்களுக்குத் தனித்தொகுதி அளிப்பதை அடியோடு மறுக்கின்றார் என்ற விஷயமும் தெரியாததல்ல. இப்படிப்பட்ட இவர் சென்ற சிவராத்திரி வாரத்தின்போது, காசியில் கங்கைக்கரையில் நடந்த “தசாஸ்வமேதக் கூட்டத்தில்” இந்துமதத்தைச் சேர்ந்த சகலவகுப்பினருக்கும் ஜாதி பேதமின்றி “மந்திரதீக்ஷை” கொடுத்தாராம்! அப்போது 150 பேர்களுக்குமேல் 500 பேர்களுக்குள் அடங்கிய தீண்டாதார்களுக்குச் “சமயதீக்ஷை” கொடுத்தாராம்!

இவ்விஷயங்கள் பத்திரிகைகளிலெல்லாம் வெளியாகியிருக்கின்றன. என்றுமில்லாமல் இப்பொழுது திடீரெனத் தீண்டாத வகுப்பினர்மேல் திரு. மாளவியா அவர்களுக்குக் கருணைபிறந்து “சமயதீக்ஷை” அளிக்கப் புறப்பட்டது எதற்காக? அவர்கள் இந்த உலகத்திலிருந்துகொண்டு “சமத்துவம் வேண்டும் சமத்துவம் வேண்டும்” என்று சொல்லிக் கொண்டு வருணாச்சிரம தருமத்தைக் கெடுக்க வழி தேடுகின்றனர். ஆகையால் அவர்களை ஒரேயடியாக மோட்சலோகத்திற்கு அனுப்பிவிடலாம் என்ற எண்ணத்தின் பேரிலா? அல்லது அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள தீண்டாமையைப் போக்கிச் சமத்துவம் அளிக்கவா? என்று கேட்கின்றோம். அல்லது “தீண்டாதவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையால் அவர்களைத் தனியாகப் பிரிக்கக் கூடாது. அவர்களுக்கும், அரசியல் சீர்திருத்தத்தில் பொதுத்தொகுதிதான் அளிக்கப்படவேண்டும். இந்துக்கள் தீண்டாதார்களை வெறுத்து ஒதுக்கவில்லை. அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து சமத்துவம் கொடுத்து வருகின்றார்கள்” என்று இந்துமகா சபைக்காரர்களும், காங்கிரஸ்காரர்களும் கூறி வருவதற்கு அடையாளமாக இக்காரியத்தைச் செய்யத் தொடங்கினாரா? என்று கேட்கின்றோம். இவ்வாறு “சமயதீக்ஷை” கொடுக்கப்பட்ட தீண்டாத வகுப்பினர்களை இன்று திரு. மாளவியாவின் கூட்டத்தார் உடன் வைத்து உண்ணவும் பழகவும் தயாராயிருக்கிறார்களா? என்றும் கேட்கிறோம். ஒருநாளும் அவர்கள் இதற்குச் சம்மதிக்க மாட்டார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆகவே தீண்டாதார்களை ஏமாற்றும் பொருட்டுச் சமயத்திற்குத் தகுந்தபடி செய்யப்படும் ஒரு தந்திரந்தான் திரு. மாளவியா அவர்களால் செய்யப்பட்ட “சமயதீக்ஷை” என்பதை உணர வேண்டும்.

இவ்வாறு திரு. மாளவியா போன்றவர்கள், தீண்டாதார்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் புரோகிதங்களைக் கண்டு ஏமாறாமலிருக்குமாறு தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்கு எச்சரிக்கை செய்கின்றோம். இந்துமத நம்பிக்கையும், இந்துமத வேதங்களில் நம்பிக்கையும் உள்ள எந்த இந்துக்களும், “பிறப்பினால் எல்லோரும் சமம்” என்பதை ஒத்துக்கொண்டு எல்லா வகுப்பினர்களுக்கும் சமத்துவம் கொடுக்கச் சம்மதிக்க மாட்டார்கள் என்பதை அறிய வேண்டுகிறோம். வீணாக யாரும், “சமய தீக்ஷை”, “மந்திர தீக்ஷை” என்ற பெயர்களைக் கேட்டு, வருணாச்சிரம தருமவாதிகளின் வலைக்குள் சிக்கிவிட வேண்டாமென மீண்டும் எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.03.1932**





RangaRakes

tamilnavarasam.com

# சர். ரெட்டி நாயுடு அவர்கள்

இந்திய சர்க்காரின் ஏஜண்டாகத் தென்னாப்பிரிக்காவில் உத்தியோகம் வகித்திருந்த சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் தமது உத்தியோகத்தினின் றும் நீங்கி இந்தியாவுக்கு வந்து விட்டார். சர். ரெட்டி நாயுடு அவர்கள் தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்தியாவின் நன்மைக்காக உண்மையாகவும், அஞ்சாமலும் உழைத்தார் என்பதை யாரும் மறுக்க முடியாது. சர். ரெட்டி நாயுடு அவர்கள் சமுதாய ஊழியத்தில் அளவு கடந்த பற்றும், உண்மையாகத் தனது கொள்கைகளைக் கைப்பற்றி நடக்கும் தன்மையும் உள்ளவர் என்பதை அவரை நேரில் அறிந்த நமது மாகாண வாசிகள் அனைவரும் அறிவர். இவருக்கு முன் தென்னாப்பிரிக்காவில் ஏஜண்டாயிருந்த மகாகனம் சீனிவாச சாஸ்திரிகளைக் காட்டிலும் ஊக்கமாகவும், உண்மையாகவும் இந்தியர்களுக் காக உழைத்தவராவார். ஆனால் மகாகனம் சீனிவாச சாஸ்திரிகள் தென்னாப் பிரிக்காவிலிருந்த காலத்தில், அவர் எங்கேயாவது மூச்சு விட்டாலும், தும்மி னாலும், இருமினாலும் அவற்றையெல்லாம் நமது நாட்டுப் பத்திரிகைகள் பிரமாதமாக வெளியிட்டு விளம்பரம் பண்ணி வந்தன. அதற்குக் காரணம் அவர் பார்ப்பனராயிருந்ததும், நமது நாட்டுப் பத்திரிகைகளும் பார்ப்பனர் களுடையதாயிருப்பதுமேயாகும். ஆனால் “சர். ரெட்டி நாயுடு அவர்களோ பார்ப்பனரல்லாதார்; அதிலும் வருணாச்சிரம தருமப் புரட்டுகளில் நம்பிக்கை யற்ற ஓர் சீர்திருத்தவாதி” ஆகையால் இவருடைய உண்மையான ஊழி யத்தை பற்றிக் கூட எந்தப் பார்ப்பனப் பத்திரிகைகளும் எடுத்துக்காட்டா திருந்தன. இது நமது நாட்டு வழக்கமாகவே இருந்து வருகின்றது. இதனா லேயே ஒன்றுக்கும் உதவாப் பார்ப்பனர்களும் கூடப் பெரிய தலைவர்க ளாகவும், பிரபல தேசாபிமானிகளாகவும் ஆகிவிடுகின்றார்கள். உண்மையாக நாட்டு மக்களுக்கு உழைக்கும் பார்ப்பனரல்லாதார்கள் எப்படிப்பட்டவர் களாயிருந்தாலும் குடத்துள் வைத்த விளக்கைப் போல் இருக்கின்றார்கள் என்பது நமது நாட்டுப் பார்ப்பனப் பத்திரிகைகளின் போக்கையறிந்தவர் களுக்குத் தெரிந்த விஷயமாகும்.



இறுதியாக நாம், சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்களுடைய ஊழி யத்தைப் பாராட்டுகிறோம். இனி அவர் நமது நாட்டில் உள்ள வருணாச் சிரம தருமச் சூழ்ச்சிகளையெல்லாம் ஒழித்து உண்மையான சமதர்மத்தைப் பரவச் செய்ய முன் வருவாரென நம்புகின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 13.03.1932**



RangaRakes tamilnavarasam.com

# ஏ. பி. சி. வைதீகம்

**– தேசீயத்துரோகி**

நாம் சொல்லுவதைத் தயவு செய்து கொஞ்சம் காதுகொடுத்துக் கேளுங்கள். பிறகு அதைப் பற்றிக் கொஞ்சம் ஆலோசனையும் செய்து பாருங்கள். அதன் பின் வேண்டுமானால் நம்மைத் தூற்றுங்கள். தாராளமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம். கூடுமானால் நாம் பதில் சொல்லுகிறோம். "காங்கிரஸ் இயக்கம் முதலாளிகள் இயக்கம் அதில் உள்ளவர்கள் அனைவருமே முதலாளிகளின் ஆதிக்கத்தை எந்தக் காலத்திலும் விட்டுக் கொடுக்கச் சம்மதிக்க மாட்டார்கள்" என்று எந்தக் கோபுரத்தின் உச்சியில் நின்று கொண்டும் சொல்லத்தயார். இதற்குக் காரணம் சொல்லுகிறேன் கேளுங்கள்!

இப்பொழுது சட்ட மறுப்புச் செய்து ஜெயிலுக்குப் போயிருக்கின்றவர்களைப் பாருங்கள். அவர்கள் ஜெயிலுக்குப் போன விதத்தையும் ஆலோசனை பண்ணுங்கள். ஜெயிலில் போய் அடையும் கஷ்ட நஷ்டங்களையும் கொஞ்சம் ஆலோசனை செய்து பாருங்கள். நாம் கூறுவதன் உண்மை காந்த விளக்கைப் போலத் தெரியும்.

முதலில் தொண்டர் கூட்டத்தைப் பாருங்கள். இவர்களெல்லாம் மறியல் செய்து போலீஸ்காரரிடம் தடியடியும், பிறம்படியும் பட்டு ஜெயிலுக்குப் போகின்றார்கள். தொண்டர்களில் பெரும்பாலானவர்கள் அடிபட்ட வர்களே. அடிபடாதவர்கள் மிகக் கொஞ்சம்.

இரண்டாவது தலைவர்கள் கூட்டத்தைப் பாருங்கள். அவர்களை இரு பிரிவாகப் பிரித்துக் கொள்ளலாம். ஒருபிரிவு பார்ப்பனரல்லாத தலைவர்கள், மற்றொரு பிரிவு பார்ப்பனத் தலைவர்கள், பார்ப்பனர்களிலும், தெலுங்கப் பார்ப்பனர்கள், தமிழ்ப் பார்ப்பனர்கள் என்று இரு வகையாகப் பிரித்துக் கொள்ளலாம். இவர்கள் ஜெயிலுக்குப் போன கதையைப் பாருங்கள். பிறகு இவர்களில் எந்தக் கூட்டத்தார் கெட்டிக்காரரென்று யோசியுங்கள்.

பார்ப்பனரல்லாத சோணகிரித் தலைவர்கள், போலீசாரிடம் அடிபட்டுத்தான் ஜெயில் செல்லுகிறார்கள். இதற்கு உதாரணம், திரு. பக்தவச்சலம், முத்துரங்க முதலியார் போன்றவர்கள் உதைபட்டுச் சிறைசென்றதே போதீய



உதாரணமாகும். தெலுங்குப் பார்ப்பனர்களாகிய திரு. பிரகாசம், நாகேசுவர ராவ் பந்துலு போன்றவர்களும் கொஞ்சம் கஷ்டப்பட்டே சிறைசென்றார்கள். ஆனால் இவர்களில், தமிழ்ப் பார்ப்பனர்கள்தான் மிகவும் தந்திரசாலிகள். திரு. சத்தியமூர்த்தி, ராஜ கோபாலாச்சாரி முதலியவர்கள் எப்படிச் சிறை சென்றார்கள் என்று பார்த்தீர்களா? தடியடி படவில்லை; பிரம்படி படவில்லை; கால் நடையாக நடந்து சென்று கூட காங்கிரசுக்கு ஒன்றும் செய்யாமல் சிறை சென்றார்கள், மோட்டார்கார்களில் உட்கார்ந்தபடியே நோட்டீஸ் வழங்கிவிட்டுச் சிறை சென்றார்கள். ஆகையால் இப்பொழுது தொண்டர்கள் சமர்த்தர்களா? தலைவர்களில் பார்ப்பனரல்லாதார் சமர்த்தர்களா? தெலுங்கப் பார்ப்பனர்கள் சமர்த்தர்களா? தமிழ்ப் பார்ப்பனர்கள் சமர்த்தர்களா? என்றுதான் கேட்கிறோம். இனி இவர்கள் சிறையில் சென்று அனுபவிக்கும் கஷ்ட நஷ்டங்களைப் பாருங்கள்!

சிறையில் ராஜீயக் கைதிகளுக்கு மூன்று விதமான உபசாரம் நடக்கின்றது. அவை ஏ. வகுப்பு, பி. வகுப்பு சி. வகுப்பு என்பன. இந்த ஏ. பி. சி. வகுப்புப் பிரிவினை நமக்குப் பழயகால மனுநீதியைத்தான் ஞாபகம் படுத்துகிறது. மனுநீதியில்தான் ஒரு குற்றத்தை பார்ப்பான் செய்தால் அவனுக்குக் குறைந்த தண்டனையும், க்ஷத்திரியன் அதே குற்றத்தைச் செய்தால் இன்னும் அதிகமான தண்டனையும், வைசியன் அதே குற்றத்தைச் செய்தால் க்ஷத்திரியனுக்குக் கொடுப்பதைக் காட்டிலும் அதிகமான தண்டனையும், சூத்திரன் அந்த குற்றத்தைச் செய்தால் சகிக்க முடியாத கொடுந் தண்டனையும் விதிக்கும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே ஜாதிக்கொரு நீதி கூறும் மனு நூலை நாம் வெறுக்கிறோம்; கொளுத்த வேண்டுமென்று கூறுகிறோம். ஆனால் மநுநீதியைப் போலவே இப்பொழுது பிரிட்டிஷ் அரசாங்கத்திலும் ராஜீயக் கைதிகளுக்கு ஏ. பி. சி. வகுப்பு அளிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் யார்? பணக்கார ஜாதியாராக இருக்கின்ற காங்கிரஸ்காரர் தானே? முன்னே அதாவது இந்துமத அரசர்கள் காலத்தில், ஜாதியின் பேரால் தண்டனை கொடுக்கப்பட்டது. இப்பொழுது பணத்தின் பேரால் தண்டனை கொடுக்கப்படுகிறது. இவை இரண்டில் என்ன வித்தியாசம் இருக்கிறது? பெரிய பணக்காரனாகவும் தலைவன் என்று பெயர் படைத்தவனாகவும் இருக்கிறவன் ஏ. வகுப்புக் கைதியாவான். கொஞ்சம் குறைந்த பணக்காரனாகவும் சின்னத் தலைவனாகவும் இருக்கின்றவன் பி. வகுப்புக் கைதியாவான், சாதாரண மானவர்களும் அன்னக்காவடிகளும் சி. வகுப்புக் கைதிகள்.

இக்கைதிகளுக்குள் ஏ. வகுப்புக் கைதிகளுக்கு யாதொரு கஷ்டமும் இல்லை. மாமியார் வீடாகவே ஜெயிலை நினைத்துக் கொள்ளலாம். மாமியார் வீட்டைக் காட்டிலும் அதிக சௌகரியமும் உபசாரமும், ஏ. வகுப்புக் கைதிகளுக்கு உண்டு. பி. வகுப்புக் கைதிகளுக்கும் அவ்வளவு கஷ்டமில்லை, அவர்களும் அனேகமாக மாமியாள் வீடாக இல்லா விட்டாலும் தங்கள் சொந்த வீட்டில் இருப்பது போலவாவது இருக்கலாம். ஆனால் நமது தோழர்களாகிய



RangaRakes tamilnavarasam.com

தொண்டர்களும், மற்றவர்களும் பெறும் சி. வகுப்புக்கும், மற்ற திருட்டு கொலை முதலிய குற்றங்கள் செய்த கைதிகள் நிலைக்கும் வேறுபாடில்லை என்றே சொல்லலாம்.

பொதுவாகப் பார்க்கும் போது சுய ராஜ்யம் பெறத் தியாகிகளாக வெளி வரும் பணக்காரனுக்கு ஒரு கஷ்டமும் இல்லை. அவன் வெளியிலும் சுகம் அடைகின்றான். ஜெயிலுக்குள் சென்றாலும் ஏ வகுப்பில் அமர்ந்து இன்பம் அனுபவிக்கின்றான். ஆனால் வறுமையினாலும் வேலை யில்லாமையாலும், திண்டாடும் சாதாரண மக்கள் வெளியிலிருந்தாலும் கஷ்டந்தான் அடை கிறார்கள். காங்கிரஸ் பேரைச் சொல்லிச் சிறைசென்றாலும் அங்கேயும் சி வகுப்பில் சேர்க்கப்பட்டு வெளியிலிருந்ததைக் காட்டிலும் அதிக கஷ்டத் தைத்தான் அடைய வேண்டியிருக்கின்றது. அந்தோ! பரிதாபம்!! பரிதாபம்!!!

தோழர்களே! காங்கிரஸ் காதலர்களே! இங்கே கொஞ்சம் ஆலோசனை பண்ணுங்கள்! ஏழை மக்களின் சௌகரியத்திற்காக சுயராஜ்யம் வேண்டு மென்று கேட்கின்ற இந்த காங்கிரஸ் தலைவர்கள் உள்ளக் கிடக்கையைக் கொஞ்சம் நுழைந்துபாருங்கள்! இந்தத் தலைவர்களுக்கு மதிப்பிருக்கும் படி உழைப்பவர்கள் தொண்டர்களல்லவா? தொண்டர்கள் இல்லாவிட்டால் தலைவர்கள் எப்படி வெளிவர முடியும்? இப்படிப்பட்ட தொண்டர்களுக்குச் சிறையில் சௌகரியம் வேண்டுமென்பதற்காக இவர்கள் இதுவரையிலும் என்ன செய்தார்கள்? இவர்கள் மாத்திரம் ஏ வகுப்பில் போய் சுகமாகக் கவலை யற்று வாழ்கிறார்களே ஒழிய வேறு என்ன செய்கிறார்கள்? சிறையிலும் தங்க ளுக்கும் தொண்டர்களுக்கும் சமத்துவமான ஸ்தானமே இருக்கவேண்டு மென்று யாரேனும் கேட்டார்களா இவர்கள்தானா நாளை சுயராஜ்யம் பெற்று ஏழை மக்களுக்குச் சமத்துவம் கொடுக்கப்போகிறார்கள்?

சுயராஜ்யத்திற்காக எவ்வளவோ தியாகம் செய்யத் தயாரென்று முன்வந்திருக்கும் இந்தத் தலைவர்களில் எவரேனும் இதுவரையிலும் “எங்கள் சகாக்களான – தேச மக்களான – அரசியல் கைதிகளில் அநேகர் சி வகுப்பில் இருக்கும்பொழுது நாங்கள் ஏ வகுப்பிலும், பி வகுப்பிலும் இருக்க மாட்டோம். அவர்களுக்கும் எங்களைப் போலவே ஏ வகுப்போ, பி வகுப்போ கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நாங்களும் சி வகுப்பிலேயே இருக் கிறோம்” என்று எந்தத் தலைவர்களாவது தியாக புத்தியுடன் சொல்ல முன்வந்தார்களா? என்று பாருங்கள்.

நீங்கள் மகாத்மா என்று சொல்லுகிற திரு. காந்தியாகட்டும், குட்டி காந்தி என்று சொல்லுகிற திரு. ராஜகோபாலச்சாரியாகட்டும், அல்லது மற்ற பேர்வழிகளாகட்டும், அவர்கள் அனைவரும் இன்று ஏ வகுப்பில்தானே இருக்கின்றார்கள்? வெளியில் இருப்பதுபோலவே ஜெயிலுக்குள்ளும், பகவத்கீதை படித்துக்கொண்டும், பத்திரிகை பார்த்துக் கொண்டும், உலாவிக் கொண்டும், காற்று வாங்கிக் கொண்டும் இருக்கிறார்கள் அல்லவா? ஆனால்



நமது ஏழைத் தோழர்களின் கதி யென்ன? கல்லுடைப்பதும், மூட்டை தூக்குவதும், இட்ட வேலைகளைச் செய்வதும், சுதந்தரம் இன்றி இருப்பதும் ஆகிய கஷ்டங்களைத்தானே அடைந்து வருகிறார்கள்?

இதிலிருந்தே நமது ராஜீயத் தலைவர்களின் மனப்பான்மை விளங்கவில்லையா? ஜெயிலில் நடக்கும் குறைகளைப் பற்றி பத்தி பத்தியாக பத்திரிகைகளில் எழுதும் தேசாபிமானிகளில் யாராவது இந்த ஏ, பி, சி என்னும் புதிய வருணாச்சிரம தர்மத்தைக் கண்டித்தார்களா? எந்தெந்த காரியத்தைப் பற்றியோ சட்டசபைகளில் கேள்விகள் கேட்டுத் தங்களை விளம்பரப்படுத் திக் கொள்ளும் காருண்ய கனவான்களில் யாரேனும் இந்த ஏ, பி, சி வருணாச் சிரமத்தைப் பற்றி கண்டித்ததுண்டா? கேள்வி கேட்டதுண்டா? என்று யோசித் துப் பாருங்கள். ஆகவே எல்லா ராஜ்யத் தலைவர்களும் சிறையில் இந்த ஏ, பி, சி பிரிவு இருக்க வேண்டுமென்று தானே விரும்புகின்றார்கள் இவர்கள் அதிகாரம் வகிக்கக் கூடிய சுயராஜ்யத்திலும் இந்த ஏழை பணக்கார ராஜ்யந் தானே இருக்கும்? காங்கிரஸ் பேரைச் சொல்லி சிறைசெல்லும் சோணகிரி களே ஏ, பி, சி யைக் கவனிங்கள்! நீங்கள் கொண்டிருக்கும் மயக்கம் தெளியும். அதன்பின் நம்மோடு சண்டைக்கு வாருங்கள்.

**குடி அரசு – கட்டுரை – 13.03.1932**



RangaRakes tamilnavarasam.com

# வாக்குரிமை

சுதந்தரம் பெற்ற ஒரு தேசத்தின் அரசாங்கம் நன்றாய் நடைபெறுவ தற்கு முதன்மையான காரணமாயிருப்பவர்கள் வாக்காளர்களே யாவார்கள். உள்நாட்டுக் கலகங்கள் ஒன்றும் இல்லாமலும், வெளி நாடுகளுடன் சண்டைச் சச்சரவுகளில்லாமலும் நடைபெறுவதாக மாத்திரம் இருக்கின்ற அரசியலை நல்ல அரசியல் என்று கூறிவிட முடியாது. நியாயமாக ஆளுகின்ற அரசாங் கத்தாலும் அமைதியோடு ஆட்சி புரிய முடியும். கொடுங்கோல் ஆட்சி புரிகின்ற அரசாங்கத்தாலும் அமைதியோடு ஆளமுடியும். கொடுங்கோல் அரசாங்கம் பணக்காரர்களையாதரித்து அவர்களுக்குப் பட்டம் பதவிகளை யளித்து ஏழை மக்களையடக்கி யாண்டால் நாட்டில் எந்தக் கலகமும் உண்டா காமல் தடுக்க முடியும், ஆதலால் நல்ல அரசாங்கமென்பது ஏழை பணக்காரர் என்ற வேறு பாடில்லாமல் எல்லா மக்களும் சம சுதந்தரமுடையவர்களாக வாழும் படியும், தேசத்தில் உள்ள வறுமை, பிணி முதலியவைகளைப் போக்கியும் நன்மை செய்கின்ற அரசாங்கமேயாகும்.

இம்மாதிரியான நல்ல அரசாங்கம் என்பது ஒன்று நடைபெற வேண்டு மானால், அதன் நிர்வாகிகள் சமதர்ம நோக்கமுடையவர்களாகவும், காலதேச வர்த்தமானங்களையறிந்து ஆட்சி புரியக் கூடியவர்களாகவும், மாறாத, உறுதி யான, நன்மையான கொள்கை யுடையவர்களாகவும், எவ்வளவு கஷ்டமான காலத்திலும் மனத்தளர்ச்சியும், அச்சமும் இல்லாமல் தமது பொறுப்பையு ணர்ந்து நடக்கின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய சமதர்ம நோக்கமுடையவர்களை அரசாங்க நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுப்பது வாக்கா ளர்களின் கடமையாகும். ஆகையால் தான் நல்ல அரசாங்கம் ஏற்படுவது வாக்காளர்களைப் பொறுத்த விஷயமாகும் என்று கூறினோம்.

ஆகவே ஒரு நாடு சுதந்தரம் பெறுவதற்கு முன்பே அந்நாட்டில் உள்ள வாக்காளர்களுக்கு அரசியல் விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும். அப்பொழுதுதான் அவர்கள் தங்கள் வாக்கின் பெருமையை உணரமுடியும். வாக்காளர்கள் தங்கள் வாக்கை அலட்சியமாகக் கருதக் கூடாது. அதனுடைய உண்மையான பெருமையை உணர்ந்திருத்தல் வேண்டும். இத்தகைய அறிவு பெற்ற வாக்காளர்கள்தான் மேற்கூறிய சிறந்த நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கக் கூடியவர்களாயிருப்பார்கள்.



மேல் நாடுகளில், சுதந்தரம் பெற்ற நாடுகளில் உள்ள வாக்காளர்கள் தங்கள் வாக்கின் பெருமையை உணர்ந்திருக்கின்றனர். அவர்களுக்கு அரசியலின் பெருமையையும், அதனால் உண்டாகும் பலா பலன்களும் தெரியும். ஆகையால் அவர்கள் அரசியல் கட்சிகளின் கொள்கைகளை யறிந்து, தங்களுக்குப் பிடித்த கொள்கைகளையுடைய அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கே பெரும்பாலும் வாக்களிக்கின்றனர்.

ஆனால் தற்சமயம் நமது நாட்டில் சிறுபான்மையோராக இருக்கின்ற வாக்காளர்களில் பெரும்பாலான மக்கள் இன்னும் தங்கள் வாக்கின் மதிப்பை உணர்ந்து கொள்ளவில்லையென்றே கூறலாம். நகர சபைத் தேர்தல் வாக்காளர்களில் பெரும்பாலானவர்கள் தங்களின் வாக்கின் மதிப்பு 5 ரூபாய்க்கு மேற்பட்டதென்றும், தாலுகா போர்டுத் தேர்தல் வாக்காளர்கள் தங்கள் வாக்கின் மதிப்பு 1 ரூபாய்க்கு மேற்பட்டதென்றும், சட்டசபைத் தேர்தல் வாக்காளர்கள் தங்கள் வாக்கின் மதிப்பு 8 அணாவுக்கு மேற்பட்ட தென்றும் உணர்ந்து கொண்டிருக்கின்றார்களே யொழிய வேறுவகையில் அதன் உண்மையான மதிப்பை உணரவில்லை. ஜில்லா போர்டுத் தேர்தல் வாக்காளர் கள் தங்கள் வாக்கை எவ்வளவு மதிப்புள்ளதாக உணர்ந்திருக்கிறார்கள் என்பதை இனிமேல் தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு வாக்காளர்கள் தவறான உணர்ச்சியுடையவர்களாயிருப் பதற்குக் காரணம் நமது நாட்டு அரசியல் கட்சிகளும், அதன் தலைவர்களுமே யாவார்கள். வாக்காளர்களை அறிவுடையவர்களாகச் செய்ய வேண்டியது அரசியல் கட்சிகளுடையவும், அவைகளின் தலைவர்களுடையவும் கடமை யேயாகும். ஆனால் நமது நாட்டு அரசியல் கட்சிகள் யாவும் இதுவரையிலும் தமது உறுப்பினர்களுக்குத் தேசீயத்தின் பெயரால் பட்டம் பதவி உத்தியோகம் செல்வாக்கு முதலியவைகளைத் தேடிக் கொடுப்பதில் முதன்மையான கவனத்தைச் செலுத்தி வந்து கொண்டிருக்கின்றவே யொழிய வாக்காளர் களைச் சீர்திருத்துவதில் எந்தக் கட்சியும் கவனஞ் செலுத்தவே யில்லை யென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமேயாகும்.

நாகரீகம் பெற்ற மேல் நாடுகளில், தேர்தல் காலங்களில் ஒவ்வொரு அரசியல் கட்சியினரும் ஒவ்வொரு தொகுதியிலும் தங்கள் அபேட்சகரை நிறுத்துகின்றனர். ஒரு கட்சியின் கொள்கைகளை உறுதியாகப் பின் பற்றுகின்ற வர்களும், அக்கொள்கைகளில் ஆட்சேபமற்ற நம்பிக்கையும் உள்ளவர் களுமே கட்சியின் பேரால் அபேட்சகராக முன்வருகின்றனர். அவர்கள் தங்கள் கட்சியின் நோக்கங்களையும், திட்டங்களையும் வாக்காளர்களுக்குப் பிரசங்கங்களின் மூலமாகவும், துண்டு விளம்பரங்களின் மூலமாகவும், பத்திரிகைகளின் மூலமாகவும், பலவகையாக எடுத்துக்கூறி வாக்குக் கொடுக்கும்படி பிரசாரம் பண்ணுகின்றனர்.



RangaRakes tamilnavarasam.com

இவ்வாறு ஒவ்வொரு கட்சிக்காரர்களும் தங்களுடைய நோக்கங்களையும், திட்டங்களையும் எடுத்துரைப்பதனால் வாக்காளர்கள் எந்தக் கட்சியின் கொள்கை தங்களுக்கு நன்மையளிக்கக் கூடியது என்று தீர்மானிக்க முடிகிறது. அபேட்சகர்களும், தங்கள் கட்சிகளின் நோக்கங்களையும், திட்டங்களையும் பிரசாரம் பண்ணும் வகையிலேயே பொருளைச் செலவு செய்கின்றனர். தேர்தலில் செலவாகின்ற பணம் இவ்வகையில் செலவாகின்றதேயொழிய நமது நாட்டைப் போல வாக்காளர்களுக்கு "லஞ்சம்" கொடுக்கும் வகையில் ஒரு காசு கூடச் செலவழிவதில்லை.

ஆனால் நமது நாட்டு வாக்காளர்களுக்கோ எந்த அரசியல் கட்சிகளின் உண்மையான கொள்கைகளைப் பற்றியும் தெரியாது. அவர்கள் தங்கள் விருப்பப்படி வாக்களிக்க முடியாத நிலைமையில் கூட இருக்கின்றனர் என்று கூறுவதும் தவறாகாது. ஒவ்வொரு ஏழை வாக்காளர்களும், தங்களுக்கு மேலாக இருக்கின்ற பணக்காரர்களின் செல்வாக்கிற்கும், தாட்சண்யத்திற்கும் கட்டுப்பட்டவர்களாகவே யிருக்கின்றனர். தேர்தலில் அபேட்சகராக முன் வருகின்றவர்களும் பணக்காரர்களாகவே யிருக்கின்றனர். அவர்கள் தங்கள் சொந்த கௌரவம், பட்டம், பதவிகளின் செல்வாக்கைக் கூறிப் பணத்தைச் செலவிட்டு வாக்குப் பெறுகிறார்களேயொழிய வேறுவழியில் தாங்கள் கொள்கைகளை வாக்காளர்களிடம் எடுத்துக் கூறி அதன்மூலம் வாக்குப் பெற முன் வருவதில்லை. அபேட்சகர்கள் பெரும்பாலும் வாக்காளர்களிடம் தாங்கள் இன்ன கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கூடத் தெரிவித்துக் கொள்வதே கிடையாது.

பணக்கார அபேட்சகர்கள், தாங்கள் வீட்டிலிருந்தபடியே தங்கள் ஏஜண்டுகளை வாக்குக் கொடுக்கும் இடங்களுக்கு அனுப்பிப் பணத்தினாலும், தங்கள் பெயருக்குள்ள செல்வாக்கினாலும் வாக்குப் பெற்று வெற்றியடைகின்றனர். இதுதான் நமது நாட்டில் தேர்தல் நாடகமாக இருந்து வருகிறது.

பொதுவாக மேல் நாடுகளில், கட்சியின் பெயரால் ஒரு தலைவனுக்குச் செல்வாக்கும், வெற்றியும் ஏற்படுகின்றது. ஆகவே கட்சிதான் அங்கு தலைவர்களையும், தேர்தல் அபேட்சகர்களையும் சிருஷ்டிக்கின்றது. நமது நாட்டிலோ ஒரு தலைவன் பேரினாலேயே ஒரு கட்சிக்குச் செல்வாக்கு ஏற்படுகின்றது. தலைவர்கள்தான் கட்சிகளைச் சிருஷ்டிக்கிறவர்களாக இருக்கின்றார்கள். இம்முறை மாறி ஒரு கொள்கையைப் பொறுத்து மதிப்பும், இழிவும் ஏற்படக் கூடியநிலை வர வேண்டும்.

உதாரணமாக இன்று காங்கிரஸ்காரர்கள் தேர்தலுக்கு முன்வருகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது அவர்கள் வாக்காளர்களுக்கு எதைக் கூறுவார்கள். "காந்திக்கு ஜே! மகாத்மாவுக்கு ஓட்டுப் போடுங்கள்" என்று பிரசாரம் பண்ணுவதைத் தவிர வேறு ஒன்றையும் சொல்ல மாட்டார்கள். இதற்கு முன் காங்கிரஸ்காரர்கள் அபேட்சகர்களாக



முன் வந்த காலங்களில் இவ்வாறு பிரசாரம் பண்ணித்தான், பணத்தையும் செலவு செய்து ஓட்டு வாங்கினார்கள் என்பது நமக்குத் தெரியாத செய்தி அல்ல. ஆகையால் இந்த முறை மாறுவதற்கு வழியென்ன என்பதைப் பற்றிச் சிறிது ஆலோசிப்போம்.

ஓட்டர்களின் தொகை குறைந்திருப்பது தான் இத்தகைய ஊழல்கள் ஏற்படுவதற்கே காரணமாகுமென்றே நாம் நினைக்கின்றோம். ஒரு ஜில்லாவில் 60 ஆயிரம் வாக்காளர்கள் இருப்பார்களாயின், அவர்களில் அநேகமாக 30 ஆயிரம் வாக்காளர்களுக்கும் குறைந்தவர்கள் தான் தங்கள் வாக்கை உபயோகப்படுத்த முன் வருவார்கள். ஆகவே 25 ஆயிரம் வாக்குகளைப் பெறுகின்ற ஒருவன் தேர்தலில் நிச்சயமாக வெற்றி பெற்று விடுவான். ஒரு வாக்குக்கு ஒரு ரூபாய் வீதம் கணக்கு வைத்துக் கொண்டாலும், 25 ஆயிரம் ரூபாய் போதுமானதாகும். மேற்கொண்ட செலவுக்கு ஒரு 5 ஆயிரம் வைத்துக் கொண்டாலும் 30 ஆயிரம் செலவு செய்கின்ற ஒருவன் சந்தேகமில்லாமல் தேர்தலில் வெற்றி பெறமுடியும். ஒரு பணக்காரன் சட்ட சபைத் தேர்தலில் 30 ஆயிரம் செலவு செய்வது ஒரு பெரிய காரியமல்ல. இவ்வாறு செலவு செய்துதான் இப்பொழுது பெரும்பாலான பணக்காரர்கள் தேர்தலில் வெற்றி பெற்று வருகின்றனர்.

ஆகையினால் வாக்காளர்களின் தொகை ஒரு ஜில்லாவுக்கு 50 ஆயிரம் 60 ஆயிரம் என்று குறைந்த தொகையில் இல்லாமல், இரண்டு லட்சம் மூன்று லட்சம் என லட்சக்கணக்கிலாகி விட்டால் அனேகமாகப் பணங் கொடுத்து ஓட்டு வாங்கலாம் என்ற தைரியம் பணக்காரர்களிடத்திலிருந்து ஒழிந்து போய்விடும். லெட்சக்கணக்காகத் தேர்தலில் செலவு செய்ய முன்வரவும் மாட்டார்கள். அப்படிச் செலவு செய்ய முன் வந்தாலும், எத்தனை தேர்தலில் இவர்களால் போட்டி போட முடியும்? போட்டி போடுவார்களானால் இரண்டொரு தேர்தல்களுக்குள்ளேயே அவர்களுடைய பணத் திமிர் ஒழிந்து மூலையில் உட்கார்ந்து விடுவார்களென்பதில் ஐயமில்லை.

இந்த நிலையில் சட்டசபை ஸ்தாபனங்களுக்கு அபேட்சகர்களாக முன் வருகின்றவர்கள், தங்கள் நோக்கங்களையும், சட்டசபையில் போய் தாங்கள் செய்ய உத்தேசித்திருக்கும் வேலைத்திட்டங்களையும் வாக்காளர்களிடம் சொல்லிக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் வந்துவிடும். வாக்காளர்களும், அபேட்சகர்களின் சொந்தத் தொகுதிகளைக் கவனிக்காமல், அவர்களுடைய நோக்கங்களையும், கொள்கைகளையும் உணர்ந்து – வாக்குக் கொடுக்கக் கூடிய நிலைக்கு வந்துவிடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆனால் இவ்வாறு வாக்காளர்களை அதிகப்படுத்தும் விஷயத்தில் நமது நாட்டினர் எந்த வகையான எண்ணத்தைக் கொண்டிருக்கின்றனர் என்பதை இப்பொழுது வாக்குரிமையைப் பற்றி விசாரணை செய்து கொண்டிருக்கும் திரு. லோதியன் கமிட்டிமுன் நமது நாட்டுப் பொது ஜனப் பிரதிநிதி



RangaRakes tamilnavarasam.com

களில் பலர் கொடுத்த சாட்சியங்களைக் கொண்டு ஒருவாறு யூகித்து உணரலாம்.

சில பிரமுகர்கள் ஜனத்தொகையில் நூற்றுக்குப் பத்து வீதம் வாக்காளர் களை அதிகரிப்பது போதுமென்றும் சிலர் 20 வீதம் அதிகரிப்பது போது மென்றும், சிலர் 25 வீதம் அதிகரிப்பது போதுமென்றும், சிலர் முப்பது வீதம் அதிகரிப்பது போதுமென்றும் கூறிவருகின்றனர். ஒரு சிலரே வயது வந்தவர் களுக்கெல்லாம் ஓட்டுரிமையளிக்க வேண்டும் என்றும் கூறிவருகின்றனர். காங்கிரஸ்காரர்களும் இந்த அபிப்பிராயத்தையே கொண்டிருக்கின்றனர். சமீபத்தில் கூடிய ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாக சபைக் கூட்டத்திலும் இதை ஆதரித்து முடிவு செய்திருக்கின்றனர்

இன்னும் சிலர், சொத்துரிமையின் மீது வாக்குரிமை கொடுக்க வேண்டுமென்றும், ஆங்கிலப் படிப்பின்மீது வாக்குரிமை வழங்க வேண்டு மென்றும், எந்தப் பாஷையை யேனும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கையின்மேல் வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் கூறி வருகின்றனர். இவைகளெல்லாம் வாக்காளர்களின் தொகையைக் குறைப் பதற்குக் கூறும் யோசனையே யன்றி வேறாகாது.

ஒரு தேசத்தின் அரசாங்கத்தினால் வரும் நன்மை தீமைகளை, அந்த நாட்டில் உள்ள ஏழைகள், பணக்காரர்கள், முதலாளிகள், தொழிலாளிகள், ஆண்கள், பெண்கள், படிப்புள்ளவர்கள், படிப்பில்லாதவர்கள் ஆகிய எல்லா மக்களும் அனுபவிக்கக் கூடியவர்களாகவேயிருக்கின்றார்கள். ஆகையி னால் அரசியல் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எல்லா மக்களுக்கும் இருக்க வேண்டியதே நியாயமாகும்.

வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமையளிக்கப்பட்டு விட்டால் கூடிய வரையிலும் மக்களின் சமதர்மத்திற்குப் பாடுபடக் கூடியவர்களும் அரசியல் நிர்வாகத்தில் திறமையுடைவர்களும், சட்ட சபைகளுக்கும் மற்ற பொது ஸ்தாபனங்களுக்கும் தெரிந்தெடுக்கப் படமுடியும் என்றே நாம் நினைக்கிறோம். ஏனென்றால் பணக்காரர்கள் லட்சக்கணக்கான வாக்காளர் களைப் பணத்தினால் வசப்படுத்தவோ, அல்லது அதிகாரத்தினாலும், செல்வாக்கினாலும் பயமுறுத்தவோ முடியாது.

எந்த அபேட்சகர்களும் தங்கள் நோக்கங்களையும் வேலைத் திட்டங் களையும் வாக்காளர்களிடம் கூறித்தான் ஆகவேண்டும். கல்வியறி வில்லாத வாக்காளர்களும் ஒவ்வொரு அபேட்சகர்களின் கட்சிக் கொள்கை களையும் திட்டங்களையும் அறிந்து கொள்வது கஷ்டமான காரியமல்ல. இவ் விஷயத்தைப் பற்றி சென்னையில் ஆகாயவசனி மூலம் பிரசங்கம் செய்த திரு. லோதியன் அவர்கள் கூறிய அபிப்பிராயம் கவனிக்கத்தக்க தொன் றாகும். "கல்வியில்லாத காரணத்தால் ஒருவரை அறிவு, திறமைகள்



இல்லாதவர்கள் என்று சொல்லிவிட முடியாது. கல்வி கற்றவர்களைக் காட்டி லும் கல்வி அறிவில்லாத கற்றவர்களில் பலர்உலக விஷயங்களில் தேர்ச்சிய டைந்தவர்களாயிருக்கக் காணலாம். ஆதலால் கல்வியறிவில்லாதவர் களுக்கும் ஆகாசவசனிகள் போன்ற சாதனங்களின் மூலம் அவர்களுடைய தாய் பாஷைகளில் அரசியல் விஷயங்களைக் கூறி அவர்களை அரசியல் அறிவுடையவர்களாக்கலாம்" என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்,

ஆகையால் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை அளிப்பதன் மூலம் தான், நமது நாட்டு ஓட்டர்களைச் சிறிதளவாவது தங்கள் வாக்கின் மதிப்பை உணரச் செய்ய முடியுமென்றும் லஞ்சங் கொடுத்தோ, பயமுறுத் தியோ ஓட்டு வாங்கும் முறையை ஒழிக்க முடியுமென்றும், சமதர்மத்திற்குப் பாடுபடும் உண்மையான உழைப்பாளர்கள் சிலராவது தேர்தலில் வெற்றி பெற முடியுமென்றும் நாம் கருதுகின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 20.03.1932**



RangaRakes
tamilnavarasam.com

# கீதைக் கூட்டமா? காங்கிரஸ் கூட்டமா?

காங்கிரஸ்காரர்கள், தங்களுடைய காரியங்களுக்கு இப்பொழுது ஜனக்கூட்டம் சேர்வதும் கஷ்டமாகி விட்டதை அறிந்து புதிய வழிகளைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள் என்று தெரிகின்றது. இன்று திரு. காந்தியவர்கள் தமது "ராமராஜ்ய"ப் பேச்சையும், "பகவத்கீதை"ப் பிரபாவத்தையும் விட்டு விடுவாரானால் அவருக்கும் பொது ஜனங்களிடம் உள்ள மதிப்புக் குறைந்து போகும் என்பதில் ஐயமில்லை. பொது ஜனங்கள், தாங்கள் கொண்டிருக்கும் மூட நம்பிக்கை காரணமாக "ராமராஜ்யம்" "பகவத் கீதை" முதலிய வார்த்தை களைக் கேட்டே ஏமாறுகிறார்கள் என்பதில் ஐயமில்லை.

சென்ற 14 – 3 – 32ல் கராச்சியில் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி சுவாமி கிருஷ்ணானந்தர் என்பவர் ஐவுளிக்கடை வீதியில் காங்கிரசின் பெயரால் கூட்டம் சேர்ப்பதற்கு ஒரு தந்திரம் செய்தார். இரு தெருக்கள் சந்திக்கும் ஒரு சந்தியில் உட்கார்ந்து கொண்டு 'பகவத்கீதை' பாராயணம் பண்ண ஆரம்பித்தார். உடனே அதைக் கேட்க ஜனக்கூட்டம் சேரத் தொடங்கிற்று. பிறகு வழக்கம்போல் போலீஸார் வருவதும், கலகஞ் செய்வதும், கைது செய்வதும் ஆகிய காரியங்கள் நிறைவேறின.

இவ்வாறு காங்கிரஸ் கூட்டம் கூட்டுவதில் என்ன அர்த்தமிருக்கிறது என்று தான் நாம் கேட்கிறோம். சாதாரணமாக மருந்து விற்கின்றவன் ஒருவன் ஒரு சந்தியில் நின்று கொண்டு, தனது மருந்தைப் பற்றியும், அது தீர்க்கும் வியாதிகளைப் பற்றியும் பிரசங்கம் பண்ண ஆரம்பித்தால் அங்கும் வேடிக்கை பார்க்கத் திரளான ஜனங்கள் கூடி விடுகின்றனர். கழைக் கூத்தாடி ஒருவன் தனது கழைக் கோலை நட்டு வைத்து விட்டுத் தனது வாத்தியத்தை முழக்கத் தொடங்கினால் அங்கும் திரளான ஜனங்கள் கூடிவிடுகின்றனர். செப்பிடு வித்தைக்காரன் ஒருவன் தனது கோணிப்பையை எடுத்து வைத்துக் கொண்டு தண்டு தளவாடங்களுடன் உட்கார்ந்து தனது சங்கதிகளை எடுத்து விடத் தொடங்கினால் அங்கும் திரளான ஜனங்கள் கூடி விடுவார்கள். பாம்பாட்டி ஒருவன் தனது பாம்புப் பெட்டியை எடுத்து வைத்துக் கொண்டு தன் மகிடியை ஊத ஆரம்பிப்பானாயின் அங்கும் எண்ணில்லாத மக்கள் கூடி விடுகின்றார்கள்.



இந்த அற்பமான காரியங்களுக்கே இவ்வளவு ஜனங்கள் கூடுவார்க ளாயின் சாதாரணமாக, பொது ஜனங்கள் உண்மையானவை யென்றும் கேட்டால், படித்தால் மோட்சமும் சகல சௌகரியமும் உண்டாகுமென்றும் நம்பிக் கொண்டிருக்கும் ராமாயண பாரத பாகவதம் முதலியவைகளையும், பகவத்கீதையையும் பாராயணம் பண்ணத் தொடங்கினால், மூட நம்பிக்கை யை யுடைய மக்கள் ஏராளமாகக் கூடுவார்கள் என்பதில் என்னதடை?

ஆகையால் மக்கள் மயங்கத் தகுந்த இதுபோன்ற காரியங்களைச் செய்து ஜனக் கூட்டத்தைச் சேர்த்து, அதை அரசியல் கூட்டமென்றும், காங்கி ரஸ் கூட்ட மென்றும், சொல்லி ஏமாற்றுவதுதான் ஒழுங்கா என்று கேட்கின் றோம். இத்தகைய காரணங்களின் மூலம் பொது ஜனங்கள் காங்கிரசை ஆதரிப்பதாகவும்; அரசாங்கத்தை வெறுப்பதாகவும் விளம்பரம் பண்ணு வதனால் வெள்ளைக்காரர்களோ மற்றவர்களோ ஏமாந்து விடுவார்களா? என்று யோசித்துப் பாருங்கள்.

ஆகையால்தான் பொது ஜனங்கள் ஏமாறாமல் இருக்க வேண்டு மானால், அவர்களுடைய ஏமாற்றத்திற்குக் காரணமான மூட நம்பிக்கையை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று நாம் கூறி வருகின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 20.03.1932**



RangaRakes tamilnavarasam.com

# பாழாகிறது 12000 கும்பகோணக் கொள்ளை

**– தேசீயத் துரோகி**

அடுத்த வருஷத்தில் மாசி மாதத்தில் வரப்போகும் மகத்திற்கு மகா மகம் என்று பெயர். இது பன்னிரண்டு வருஷத்திற்கு ஒரு தடவை கும்பகோணத்திற்கு வரும் ஒரு கொள்ளை நோயாகும். இந்தக் கொள்ளை நோய் கும்பகோணத்தை மட்டிலும் விட்டுவிடுவதில்லை. சென்னை மாகா ணத்தையே பிடித்து ஒரு ஆட்டம் ஆட்டிவிடும். சென்னை மாகாணத்தைத் தவிர வெளிமாகாணத்தில் உள்ளவர்கள் சிலரையும் கூட பிடிக்காமல் விடுவதில்லை.

கும்பகோணத்தில் அழுக்கும் பாசியும் நாற்றமும் பிடித்த குளம் ஒன்று இருக்கிறது; அதன் பக்கத்தில் சென்றாலே மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் போக வேண்டும். அந்தக்குளத்தில் தான் பார்ப்பனர்கள் சாப்பிட்ட எச்சல் இலைகள் ஒதுங்கிக் கிடக்கும். குழந்தைகள் ஆபாசம் பண்ணிய துணி களையும், பாய்களையும் அதில்தான் கழுவுவார்கள். தீட்டுக்காரப் பார்ப்பன பெண்களும், மற்றவர்களும் அதில்தான் சாதாரண நாளில் முழுகுவார்கள். விபசாரம் பண்ணிப் பிள்ளை பெறும் முக்காடு போட்ட அம்மாமார்களும் அந்தக் குளத்தில்தான் குழந்தைகளை அமிழ்த்தி மோட்சத்திற்கு அனுப்பு வார்கள். எல்லாப் பாவங்களையும் அந்த அற்புதமான தீர்த்தம் நீக்கிவிடும். இத்தகைய "மகாத்மீயம்" பொருந்திய குளம் அது. அதில் வந்து மாசி மாச மகத்தில் முழுகிவிட்டால் உடனே மோட்சமும் சகல ஐசுவரியங்களும் கிடைத்து விடுவதாக இந்துக்களின் நம்பிக்கை. இதன் பொருட்டே இந்தியா வின் பல பாகங்களிலிருந்தும் திரளான மக்கள் வந்து கூடி அந்தக் குளத்தில் விழுந்து போவார்கள். ஐயோ! அந்தப் பரிதாபக் காட்சி பார்க்க முடியாததாகும். அன்று பிடிக்கும் நாற்றம் ஒரு மாதம் வரையிலும் உடம்பை விட்டு நீங்காது. ஊர் முழுதும் நாற்றம். அதுமுதல் மாகாணம் முழுதும் காலரா பரவி விடும். ரயில்வேகாரனுக்கு கொழுத்த வரும்படி, இந்துக்களின் பணம் குறைந்தது 5 லட்சமாவது நஷ்டமாகும்.

இது மாத்திரம் அல்ல. கும்பகோணம் நகர மக்களுக்கும் பெருவாரி யான நஷ்டம். இந்த மகாமகத்தை முன்னிட்டு இப்பொழுதே நகர சபையார் பணத்தைச் செலவழிக்க திட்டம் போடுகின்றனர். மகாமகத்தின் பொருட்டு ரோடுகளைச் சீர்திருத்தவும், புது ரோடுகள் போடவும் அறுபதினாயிரம் ரூபாயும், மகாமகக் குளத்தைச் சுத்தம் பண்ண பன்னிரண்டாயிரம் ரூபாயும் திட்டம் போட்டு நகர சபையின் ஆலோசனைக்குக் கொண்டு வரப்பட்டி ருக்கிறது. ரோடுகளைச் சீர்திருத்தம் பண்ணுவதும் புது ரோடுகள் போடுவதும், நகரத்திற்கே ஒரு பொதுவான நன்மையைத் தருவதாயிருப்பதால் அது அவ்வளவு மோசமான செலவல்ல. ஆனாலும் இந்தப் பணப் பஞ்ச காலத்தில் இவ்வளவு பணத்தை மண்ணில் கொட்ட வேண்டிய அவசியமில்லை. ஆனால் குளத்தைச் சுத்தம் பண்ண வேண்டும் என்பதற்காகச் செலவிடலா மென்று ஆலோசிக்கப்படும் பன்னிரண்டாயிரம் ரூபாயும் பாழ்! பாழ்!! பாழ்!!! என்றுதான் சொல்லுகிறோம். இந்த மாதிரியே ஒவ்வொரு மகாமகத்தின் போதும் செலவழிந்து கொண்டுதான் வந்திருக்கலாம். ஆகவே அந்தப்பாழும் சாக்கடையானது இதுவரையிலும் எத்தனை லட்சம் ரூபாய்களை விழுங்கி யிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்!

ஜனங்களின் வரிப்பணம் இவ்வாறு பாழாகுவதற்குக் காரணம் என்ன? இந்துக்களின், வைதீகர்களின், மதியற்ற தன்மையல்லவா? சுதேசிப்பிரசாரம் பண்ணுகிறவர்கள் யாராவது இதைப்பற்றி பேசுவார்களா? இந்தமாதிரி 12000 ரூபாயைக் குளத்தில் கொட்டிப் பாழாக்கி, நமது இந்தியாவில் உள்ள ஜனங் களை யெல்லாம் "கும்பகோணத்திற்கு வாருங்கள்!", என்று கூவியழைப்ப தால் வரும் நஷ்டத்தை எந்தத் தேசாபிமானியாவது சிந்தித்துப் பார்க்கின் றார்களா? ஜனங்கள் ரயிலுக்குக் கொடுக்கும் பணம் எவ்வளவு? அவை எங்கே போய்ச் சேருகிறது. கும்பகோணத்திலேயே கூட்டத்தில் மிதியுண்டு சாகப்போகிறவர்கள் எவ்வளவுபேர்? காலரா, ஜுரம் முதலிய நோய்களால் கும்பகோணத்திலும் மகாமகத்திற்கு வந்து போன ஜனங்களுடைய சொந்த ஊர்களிலும் சாகப் போகின்றவர்கள் எத்தனை பேர்? பிறகு வைத்திய உதவிக்காக ஆகும் செலவு எவ்வளவு? கும்பகோணத்திற்கு வந்தவர்கள் கூட்டத்தில் நகைகளையும் பணங்களையும் திருட்டுக் கொடுப்பதன் மூலம் நஷ்டமாகும் பொருள் எவ்வளவு? என்று எந்த அறிவுள்ள தேச பக்தனாவது யோசித்துப் பார்க்க முன் வருவானா?

அல்லது கும்பகோணம் வாசிகளும், நகர சபையாரும் தான் இவை களை யோசித்துப் பார்க்க முன் வருவார்களா? உண்மையிலேயே இவை களையெல்லாம் ஆலோசித்துப் பார்த்து, நமது மக்களுக்கு அவர்களுடைய அறியாமையால் உண்டாகப்போகும், உடல், பொருள், உயிர் நஷ்டங்களைத் தடுக்க விரும்பினால் என்ன செய்ய வேண்டும்? உடனே குளத்திற்கொட்டும் பன்னீராயிரத்தை பத்திரப்படுத்த வேண்டும். வேண்டுமானால் இனி எந்தக் காலத்திலும் இந்த எண்ணமே வராமலிருக்கும் பொருட்டு அந்த மகாமக ஆபாசக்குளத்தைத் தரைமட்டமாகத் தூர்ப்பதற்குச் செலவழிக்கலாம். எங்கும் விளம்பரம் பண்ணி, மகாமகத்தை முன்னிட்டு யாரும் கும்பகோணம் வரக்





RangaRakes tamilnavarasam.com

கூடாதென்று தெரிவித்து விட வேண்டும். மகாமகத்தின் போது கும்பகோணத்திற்கு வருவதால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களை எடுத்துக் காட்ட வேண்டும். இவ்வாறு செய்வது தான் மக்களை அறிவுடையவர்களாகச் செய்வதற்கும், பொருள் நஷ்டத்தைத் தடுப்பதற்கும் வழியாகும். இதனால் நமது நாட்டு “ஏழை மக்களுடைய பல லட்சக்கணக்கான ரூபாய்கள் மீத மாகும் என்பதில் ஐயமில்லை. அவர்களுடைய உடலுக்கு வரும் கஷ்டமும், நேரத்திற்கு உண்டாகும் நஷ்டமும் மீதமாகும் என்பதிலும் ஐயமில்லை. இதை விட்டு விட்டு நகரின் ரோடுகளை யெல்லாம் சுத்தப்படுத்தி வைத்திருக் கிறோம். மகா மகச் சாக்கடையையும் சுத்தம் பண்ணியிருக்கிறோம். ஆகை யால் இந்துக்களே வாருங்கள்!” என்று விளம்பரம் பண்ணுவதனால் என்ன நன்மையுண்டு? இன்னும் ரயில்வேக்காரர்கள் செய்யப் போகும் விளம்பரங் கள் வேறே யிருக்கின்றன. அவர்கள் இதற்காக இப்பொழுது முதலே வர்ணப் படங்கள் தயார் செய்து கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. மகாமகத்தின் புராணக் கதையையும் பார்ப்பனர்களைக் கொண்டு எழுதிக் கொண்டிருப்பார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. ஆகவே இனி எஸ். ஐ. ஆர். காரர்கள் படங்களைப் போட்டு புராணக் கதைகளைக் கூறிப் பொது ஜனங்களுக்குக் கும்பகோணத்தின் பெருமையை உபதேசம் புரியத் தொடங்கி விடுவார்கள்.

ஆனால், இந்தமாதிரி இச்சமயத்தில் செய்யச் சம்மதித்து விட்டால் அதாவது மகாமகச் சாக்கடையைச் சுத்தப் படுத்தாமலும் கும்பகோணத்திற்கு மகாமகத்தை முன்னிட்டு யாரும் வரக் கூடாதென்றும் பேசாமல் இருந்து விட்டால், கும்பகோணம் பார்ப்பனர்கள் சும்மாயிருப்பார்களா? என்பது தான் சுயமரியாதைக்காரர்கள் கேட்கும் கேள்வி. உடனே அவர்கள் சாஸ்திர மூட்டைகளையும், மடிசஞ்சிகளையும் தூக்கிக் கொண்டு வைசிராயிடம் போய் எங்கள் மதத்திற்கு ஆபத்து வந்து விட்டது என்று முறையிடுவார்கள் என்பதில் ஐயமில்லை. அதிலும் முடியாமல் போனால் இங்கிலாந்திற்குக் கூட சாஸ்திரமூட்டை, மடிசஞ்சி இவைகளுடன் கூட கங்காஜலமும் களிமண்ணும் சேர்த்து எடுத்துக் கொண்டு போவார்களென்பதிலும் சந்தேகமில்லை.

ஆகவே, நமது செல்வங்களைப் பாழக்குவது எவை என்பதைப் பாருங்கள். நமக்கு மாத்திரமா? அரசாங்கத்தாருக்கும் இதனால் வரும் நஷ்டம் அளவற்றவை. அவர்கள் அன்றைய தினம், நகரத்தில் ஏராளமான போலீஸ் அதிகாரிகளையும் சுகாதார அதிகாரிகளையும், டாக்டர்களையும் வைத்திருக்க வேண்டும். இந்தச் செலவெல்லாம் யார் தலையில் விடிகிறது? ஆகையால் இது போன்ற முட்டாள் தனத்தை ஒழிக்க வேண்டியது அவசியமாகும் என்று சொல்லும் சுயமரியாதைக்காரர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடு படுகிறவர்களா? அல்லது இந்த மாதிரியானவைகளைப் பிரசாரம் பண்ணும் வைதீகர்களும், பார்ப்பனர்களும் அவர்களுக்கு துணை செய்யும் காங்கிரஸ் காரர்களும் நாட்டின் முன்னேற்றத்தைக் கருதுகின்றவர்களா? என்று



யோசனைப் பண்ணிப் பாருங்கள்! அழுக்கும், பாசியும், நாற்றமும் எடுத்த ஒரு பாழுங் குளத்தில் குளிப்பதனால், தாங்கள் செய்த பாவமெல்லாம் போய் விடுகிறது! ஏராளமான புண்ணியம் வருகிறது! மோட்சம் கிடைக்கின்றது! நினைத்தவை நிறைவேறுகின்றன. என்று நம்புவதை விட முட்டாள் தனம் வேறு என்ன இருக்கின்றன? நாற்றமடிப்பதையும், வியாதி வருவதையும் கண்கூடாகப் பார்த்திருந்தும் இவ்வாறு செய்வதில் என்ன அருத்தமிருக் கிறது? சுகாதாரமுறை அறிந்த டாக்டர்களில் எவ்வளவுபேர் சயின்சு படித்த கலாசாலைப் பட்டதாரிகளில் எவ்வளவு பேர் இந்தக் குளத்தில் விழுவார்கள் என்பதை நினைக்கும் போது நாம் அழுவதா? சிரிப்பதா? என்று தெரிய வில்லை! நமது மக்கள் கற்றவர்களாயிருந்தாலும் கல்லாதவர்களாயிருந்தாலும் அவர்கள் மூளையில் மதம், நம்பிக்கை என்னும் அழுக்குகள் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே என்றைக்கு மதமும், வைதீகமும், நம்பிக்கையும் நமது நாட்டை விட்டு ஒழிகின்றதோ அன்றுதான் நாம் உருப்பட முடியும் என்றுகூறுவதில் என்ன தவறு இருக்கின்றது.

இந்த ஒரு மகா மகத்திற்கு மாத்திரம், முனிசிபாலிட்டியாரால், ரோட்டுகளுக்காக 60,000 ரூபாயும், குளத்திற்காக 12,000 ரூபாயும், ஆக 72,000 எழுபத்திரண்டாயிரம் ரூபாய் செலவழிக்கத்திட்டம் போடப் படுமானால் மற்றபடி நமது நாடு, முழுவதும் இதுபோல் நடைபெறும் திரு விழாக்களுக் கும், பண்டிகைக்கும் செலவாகும் பணம் எவ்வளவு? இவைகளால் நமது நாடு அடையும் பலன் என்ன? இது வரையிலும் மேலும் மேலும் தரித்திரர் களாகவும், அடிமைகளாகவும், பகுத்தறிவற்றவர்களாகவும் ஆனதைத் தவிர வேறு என்ன பயனைப் பெற்றோம்? என்று ஆலோசனை செய்து பாருங்கள்! சுயமரியாதைக்காரர் சொல்லுவதன் உண்மை விளங்கும்.

**குடி அரசு – கட்டுரை – 20.03.1932**



RangaRakes tamilnavarasam.com



குடி அரசு

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்.

மாதர்களுக்கு

தங்கபஸ்பம்.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

# தீண்டாமையே இந்துமதம்

அகில இந்திய தீண்டாமை விலக்குச் சங்கத்தின் சென்னைக் கிளையின் ஆதரவில் சென்ற 17 – 3 – 32 வியாழனன்று, காலஞ் சென்ற சுவாமி சிரத்தானந்தர் அவர்களின் உருவப் படத்தை வைக்கும் பொருட்டு, சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் தலைமையில் சென்னைக் கோகலே மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று. கூட்ட ஆரம்பத்தில், திரு. பாத்ரோ அவர்கள்,

“தீண்டாதாருக்கு இந்து சமூகம் செய்துள்ள தீமைகள் கொஞ்சம் அல்ல. அதை அகற்றுவதற்குப் பல சீர்திருத்தக்காரர்கள் பாடுபட்டு வந்திருந்தும், இன்று வரையிலும் இக்கொடுமை அழியாமல் இந்தியாவில் நிலைத்து வருவது வருந்தத் தக்கதாகும். ஒரு சமூகத்தாரைத் தொடவும் கூடாதென மிருகங்களைக் காட்டிலும் இழிவாக நடத்துவதை விடக் கொடுமையான விஷயம் வேறொன்றுமில்லை. புத்தர் போன்ற பெரியார்களின் உபதேசங்கள் இந்நாட்டில் தோன்றியிருந்தும், இன்னும் இத்தீண்டாமைக் கொடுமை ஒழியாமலிருப்பதற்குக் காரணம் இந்து சமூகத்தில் உள்ள மூட நம்பிக்கைகளும், மூடப் பழக்க வழக்கங்களுமே யாகும்”

என்று பேசியிருக்கிறார். இதைக் கொண்டு, நமது நாட்டில் தீண்டாமை நிலைத்திருப்பதற்குக் காரணம் இந்து மதமும், அதைக் கைப்பற்றியிருக்கும் மக்களிடம் உள்ள மூட நம்பிக்கைகளும், மூடப் பழக்க வழக்கங்களுமேயென்பதை அறியலாம். ஆனால் அதே சமயத்தில் சேலம் திரு. சி. விஜயராகவாச்சாரியார் அவர்கள் பேசும் போது,

“இப்பொழுது நாம் யோசிக்க வேண்டிய விஷயம் தீண்டாமையை எப்படி விலக்கலாம் என்பதைப் பற்றியேயாகும். தீண்டாமை எப்படி வந்தது என்பதைப் பற்றி யோசிப்பதோ, அல்லது இந்து மதத்தின் மேல் குறைகூறிக் கொண்டிருப்பதோ தீண்டாமையை விலக்குவதற்குரிய வழியாகாது. இந்து மதந்தான் தீண்டாமை தொல்லையைப் புகுத்தி விட்டது என்று சொல்லவே முடியாது. இந்து சமூகம் தீண்டாமை நிலைத்திருப்பதை ஒப்புக்கொள்ளவேயில்லை என்று துணிந்து கூறுவேன்.”





RangaRakes tamilnavarasam.com

என்று இந்து மதத்தைப் புகழ்ந்தும், தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டும் பேசியிருக்கிறார். ஆகவே இவ்விருவர்களின் கருத்துக்களையும் கவனித்தால் "தீண்டாமைத் தொல்லைக்கு இந்து மதம் காரணம்" என்று திரு. பாத்ரோ கருதுவதாகவும், இந்துமதம் தீண்டாமையை ஒப்புக் கொள்ளவில்லை. ஆகையால் இந்து மதத்தைக் குறை கூறுவது தவறு என்று திரு. விஜயராகவாச்சாரியார் கருதுவதாகவும் அறியலாம். ஆனால் எது உண்மையான அபிப்பிராயம் என்பதைப் பற்றி நாம் சிறிது ஆராய்வோம்.

இன்று தீண்டாத மக்களை உயர்ந்த சாதிக்காரர்கள் என்பவர்கள் வசிக்கும் தெருவில் நடக்கக் கூடாது என்று தடுப்பதற்கும், தீண்டாதார்களை, உயர்ந்த சாதியினர் என்பவர்கள் தண்ணீர் எடுக்கும் குளம், கிணறு முதலியவைகளில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று தடுப்பதற்கும், அவர்களைப் பொதுப் பள்ளிக் கூடங்களில் சேர்ந்து படிக்கக் கூடாது என்று தடுப்பதற்கும் காரணம் இந்து மதமும், அதில் உள்ள மூடப்பழக்க வழக்கங்களும் அல்லவா என்று கேட்கிறோம்.

இன்று மலையாள நாட்டைச் சேர்ந்த குருவாயூரில், தீண்டாத மக்கள் கோயில் பிரவேசத்திற்காகச் செய்யும் சத்தியாக்கிரகத்தை எதிர்த்து நிற்கின்றவர்கள், உயர்ந்த சாதியென்று சொல்லிக் கொண்டிருக்கும் வைதீக இந்துக்கள் தானே. இதைப் போலவே பம்பாய் மாகாணத்தில் உள்ள நாசிக் என்னும் ஊரில் தீண்டாதார்கள் கோயில் பிரவேச உரிமையின் பொருட்டுச் செய்யும் சத்தியாக்கிரகத்தை எதிர்த்து நிற்பவர்களும் உயர்ந்த சாதி யென்று சொல்லிக் கொண்டிருக்கும் வைதீக இந்துக்கள் தானே. இந்த உயர்ந்த சாதிக்காரர்களான வைதீக இந்துக்கள் இவ்வாறு தீண்டாதவர்களின் உரிமைகளுக்கு எதிரிடையாய் இருப்பதற்கு, இந்து மதத்தையும் இந்து மத சாஸ்திரங்களையும் தவிர வேறு ஏதாவது காரணம் உண்டா? என்றுதான் கேட்கிறோம்.

பார்ப்பனர்கள் வருணாச்சிரம தருமத்தின் பேராலும், சனாதன தருமத்தின் பேராலும், கூட்டங்கள் கூட்டுவதற்கும், மகாநாடுகள் நடத்துவதற்கும், அந்தக் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் தீண்டாதவர்கள் ஆலயங்களுக்குள் செல்ல வேண்டுமென்று கேட்பதும் அதற்காக முயற்சி செய்வதும் இந்து மதத்திற்கு விரோதமான தென்றும், தீண்டாதார்க்குக் கோவில்களுக்குள் செல்லவும், உயர்ந்த சாதி இந்துக்களுடன் சமத்துவமாகப் பழகவும் உரிமை கொடுத்து விட்டால் இந்துமதம் அழிந்து விடுமென்றும் தீர்மானங்கள் செய்வதற்குக் காரணம் இந்து மதமும் இந்துமத சாஸ்திரங்களும் அல்லவா என்று தான் கேட்கின்றோம்.

பாமர மக்களால், மகாத்மாவாக மதிக்கப்படும் திரு. காந்தி அவர்கள் தீண்டாமையின் கொடுமையைப் பற்றியும், அதை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், பேசியும் எழுதியும் வருகின்றார். ஆனாலும் "தீண்டாமை ஒழிய வேண்டும்; ஆனால் வருணாச்சிரம தருமம்



நிலைத்திருக்க வேண்டும்" என்றும், 'பிறப்பினால் ஒவ்வொருவரிடமும் குண வேறுபாடு உண்டு' என்றும், ஆத்மாவில்தான் எல்லாரும் சமத்துவமே ஒழிய உடம்பில் சமத்துவமில்லை' என்றும் சொல்லிக் கொண்டு தான் தீண்டாமையை ஒழிக்க வழி தேடுகிறார். இவ்வாறு அவர் சொல்லுவதற்குக் காரணம் அவர் படித்த இந்து மத சாஸ்திரங்களும், அவர் நம்பும் இந்து மதமும் அல்லவா என்றுதான் கேட்கிறோம்.

இனி இந்துமத நூல்களில் வருணாச்சிரம தருமத்தைப் பற்றிக் கூறப்படாத சாஸ்திரங்கள் எவையேனும் உண்டென்றும் எவராலேனும் சொல்ல முடியுமா? திரு. காந்தியினாலும், மற்றும் இந்து மத வைதீகப் பண்டிதர்களாலும் மற்றும் சீர்திருத்த வாதிகளாலும் கூடப் புகழ்ந்து பேசப்படும் 'கீதை' யில்தான் வருணாச்சிரம தருமத்தைப் பற்றிக் கூறப்படவில்லை என்று சொல்ல முடியுமா?

> 'பார்த்தனே! **பெண்கள் வைசியர்கள் சூத்திரர்கள் பாப யோனியில் பிறந்தவர்களானாலும்** அவர்களுள் என்னை நம்பி யிருப்பவர்கள் யாரோ அவர்கள் பரமபதத்தைச் சேர்வார்கள்.
>
> '**புண்ணிய ஜென்மமுள்ள பிராமணர்களும் ராஜரிஷிகளும்** பக்தி யுள்ளவர்களாய் என்னை ஆதரிப்பதற்குச் சொல்ல வேண்டுமா?'!

(பகவத்கீதை அத்தியாயம் 9, சுலோகம் 32, 33)

மேற்காட்டியுள்ள பகவத்கீதை எதைப் போதிக்கின்றது. பிறப்பினால் ஜாதி உண்டு என்பதைப் போதிக்க வில்லையா? இந்த கீதையைப் பாராயணம் பண்ணிக் கொண்டிருப்பதுதான் சுயராஜியம் பெறுவதற்கும் மோட்சம் பெறுவதற்கும் வழி என்று நம்பிக் கொண்டிருப்பவர்கள் வருணாச்சிரம தருமம் அழிவதற்கு எவ்வாறு சம்மதிப்பார்கள்?

> 'ஆத்ம ஞானிகள் கல்வியில் தேர்ந்தவனிடத்திலும், கல்வியில்லாத பிராமணனிடத்திலும் பசு, யானை, நாய் என்பவைகளிடத்திலும் நாயைத் தின்கிற சண்டாளனிடத்திலும் அறிவுடையவர்கள் **ஆத்மாக்களின் சமத்துவத்தையே** பார்ப்பார்கள்'

(பகவத்கீதை அத்தியாயம் 5, சுலோகம் 18)

என்று காணப்படும் கீதை வாக்கியத்தைக் கொண்டு பகவத்கீதையில் தீண்டாமைக்கு ஆதரவில்லையென்று சொல்லக்கூடும். ஆனால் இதில் ஆத்மாவுக்குத்தான் சமத்துவம் கூறப்படுகிறதே ஒழிய உடம்புக்குச் சமத்துவம் கூறப்படவில்லை என்பதை அறிந்தால் தீண்டாமை விலக்குக்கு இடமில்லை என்பதை அறியலாம்



RangaRakes tamilnavarasam.com

பகவத்கீதையில் இந்த சுலோகத்தைக் காட்டிலும் சமத்துவத்தை வற்புறுத்துவதற்கு வேறு சிறந்த சுலோகமில்லை. இதுவே இப்படி இருக்குமானால் மற்றவை எப்படியிருக்குமென்பதை யோசித்துக் கொள்ளுங்கள்.

இனி தமிழர்களால் சமதர்மநூல் என்று சொல்லப்படும் குறளில் தீண்டாமைக்கு இடமில்லை என்று சொல்லப்படுகின்றது. ஆனால் அதன் உண்மை நிலை என்ன என்பதைக் கொஞ்சம் பார்ப்போம்.

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா**
**செய்தொழில் வேற்றுமையால்"**

என்ற குறளைக் கொண்டு பிறப்பு வித்தியாசத்தைத் திருவள்ளுவர் ஒப்புக் கொள்ளவில்லையென்றும் தொழில் வேற்றுமை பற்றியே உயர்வு தாழ்வு வித்தியாசம் உண்டென்றும் கூறுகின்றனர். இதுவும் தீண்டாமையை ஒரு வழியில் ஒப்புக் கொள்ளுகின்றதென்பதே நமது அபிப்பிராயமாகும். உயர்வு தாழ்வு வித்தியாசத்தைக் கற்பிப்பது பிறப்பாயிருந்தாலும் சரி அல்லது தொழிலாயிருந்தாலும் சரி, அவை மூலம்தான் தீண்டாமையும் உற்பத்தியாகின்ற தென்பதை யாரும் மறுக்க முடியாது.

அல்லாமலும் திருவள்ளுவரும் வருணாச்சிரம தர்மத்தை ஒப்புக் கொள்ளமலில்லை யென்றே சொல்லலாம்.

**"மறப்பினும் ஒத்துக்கொளல் ஆகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்"**

**"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்**
**காவலன் காவான் எனின்"**

என்னும் குறள்பாடல்கள் வருணாச்சிரம தருமத்தைப் போதிப்பனவேயாகும். "பார்ப்பான் வேதத்தை மறந்து விட்டாலும் மறுபடியும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் அவனுடைய பிறப்பிற்குரிய ஒழுக்கத்தை விட்டு விடுவானானால் கெடுவான்".

'அரசன் சரியாக அரசாட்சி செய்யாவிட்டால் பசுக்களின் நன்மை குறையும் ஆறுவகைத் தொழிலையுடைய பார்ப்பனர்கள் வேதத்தை மறந்து விடுவர்'

என்பனவே மேற்கூறிய குறள்களுக்கு அர்த்தம் என்பதைக் கொண்டு ஆராயும் போது திருவள்ளுவர் வருணாச்சிரம தருமத்தை ஒப்புக் கொள்ளவில்லையென்றாவது, உயர்வு தாழ்வு வித்தியாசங்களை ஒப்புக் கொள்ளவில்லை யென்றாவது, தீண்டாமைக்கு இடங்கொடுக்க வில்லையென்றாவது சொல்ல முடியுமா? 'தமிழ் வேதம்' 'சமதர்ம வேதம்' என்று சொல்லப்படும் குறளின் நிலமையே இப்படி இருக்குமானால் மற்ற நூல்களின் நிலைமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமா?



இனி புராணக்கதைகளை எடுத்துக் கொண்டாலும் அவைகளும் தீண்டாமையை ஒழிக்க இடந்தரவில்லை என்பதைப்பற்றி நாம் அதிகமாக ஒன்றும் கூற வேண்டிய அவசியமில்லை. பெரிய புராணத்திலுள்ள நந்தனார் கதை ஒன்றே போதுமானதாகும். நடராஜா என்கிற பரமசிவன் என்னும் கடவுளிடத்தில் பக்தியுள்ளவராகிக் கோயிலுக்குள் செல்ல விரும்பிய தீண்டாதாராகிய நந்தனாரை அந்த உடம்புடன் கோயிலுக்குள் வந்து தன்னை வணங்குவதற்கு அந்த நடராஜா என்கிற பரமசிவன் என்னும் கடவுளே சம்மதிக்காமல் நெருப்பில் மூழ்கி இறந்து பார்ப்பன சரீரத்தைப் பெற்றுக் கொண்டபின் கோயிலுக்குள் வர வேண்டுமென்று சொல்லி அவ்வாறே நந்தனாரும் நெருப்பில் மூழ்கிப் பார்ப்பன உடம்பு பெற்றுக் கொண்டு கோயிலுக்குள் போனதாகத்தானே பெரிய புராணத்தில் சொல்லப் படுகின்றது? தீண்டாமை விலக்குக்கும் சமத்துவத்துக்கும் இடமிருப்பதாகச் சொல்லப்படும் பெரியபுராணம் என்பதே இவ்வளவு கொடுமையாக இருக்குமானால் மற்ற சின்ன புராணங்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

இனி, சங்கராச்சாரியார் என்பவர் தீண்டாமையை ஒழிக்கப் போதனை செய்தார் என்று கதை சொல்லுகிறார்கள் அவர் ஒருநாள் கங்கையில் ஸ்நானம் பண்ணிவிட்டு வரும் போது எதிரில் வந்த ஒரு தீண்டாதானைக் கண்டு விலகியதாகவும், உடனே அத்தீண்டாதான் சங்கரரை நோக்கி ஆத்மாவில் என்ன வித்தியாசம்? என்று கேட்டதாகவும், பிறகு சங்கராச்சாரியார் ஆத்ம சமத்துவத்தை யறிந்து அவனைக் கட்டித்தழுவிக் கொண்டதாகவும், அவனுடைய ஆத்ம ஞானத்தைப் பாராட்டியதாகவும், அதற்காக சங்கராச்சாரியார் பஞ்சதசி என்ற நூலைச் செய்ததாகவும் அவருடைய கதையில் சொல்லப்படுகிறது. இந்தக் கதையும் ஆத்ம சமத்துவத்தைச் சொல்ல வந்ததே ஒழிய சரீர சமத்துவத்தைச் சொல்லவரவில்லையே! ஆகையால் இந்தக் கதையினால் பிறப்பு வித்தியாசமும், தீண்டாமையும் இருப்பதைக் காணலாம்.

மேற்கூறிய காரணங்களிலிருந்து தீண்டாமை நமது நாட்டில் தோன்றி நிலைத்திருப்பதற்கு இந்து மதமும், இந்து மத சாஸ்திரங்களும் அவைகளின் மூலம் உண்டான மூட நம்பிக்கைகளும், குருட்டுப் பழக்க வழக்கங்களுமே என்பதை அறியலாம். இந்த உண்மையை மறைத்துவிட்டு "இந்து மதத்தில் தீண்டாமைக்கு அனுமதியில்லை ஆகையால் இந்து மதத்தின் மேல் குறை கூறக் கூடாது" என்று சொல்லுவது இந்து மதத்தின் பேரில் வைத்துள்ள குருட்டு நம்பிக்கையும் இந்து மதம் அழிந்து போனால் தங்களுடைய கௌரவத்துக்கும் சுய நலத்துக்கும் பங்கம் வரும் என்னும் எண்ணமுமே தவிர வேறல்ல என்றே நாம் கூறுவோம்.

திரு. விஜயராகவாச்சாரியார் அவர்கள் "தீண்டாமை எப்படி வந்தது என்பதைப் பற்றி யோசிப்பதோ, அல்லது இந்து மதத்தின் பேரில் குறைகூறிக் கொண்டிருப்பதோ தீண்டாமையை விலக்குவதற்குரிய வழியாகாது" என்று



RangaRakes tamilnavarasam.com

கூறியிருப்பது எவ்வளவு மோசமான அபிப்பிராயம் என்று யோசித்துப் பாருங்கள்! ஒரு வியாதியைப் போக்க வேண்டுமானால் அது எவ்வாறு உண்டாயிற்று என்பதை முதலில் தெரிந்துகொண்டு அது தோன்றுவதற்குக் காரணமாயிருந்த தீமையை ஒழிப்பதன் மூலமாக அன்றோ எப்பொழுதும் அந்த வியாதியை வர வொட்டாமல் தடுக்க முடியும்? இதை விட்டு விட்டுத் தற்கால சாந்தியாகச் சில மருந்துகளைக் கொடுத்து அதன் தொந்தரவைத் தணித்து விட்டால் போதுமா? மறுபடியும் அடிக்கடி அவ்வியாதி உண்டாகித் துன்பப்படுத்தாதா? என்று யோசனை செய்து பாருங்கள்! இது போலவே தீண்டாமை உண்டானதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து அக்காரணத்தை அடியோடு கல்லி யெறிந்து சுத்தப்படுத்தினால் அல்லவா தீண்டாமை அடியோடு அழியும்?

ஆதலால் தீண்டாமை எப்படி வந்தது என்பதைப்பற்றி யோசனை பண்ணிப் பார்த்தால் இந்து மதத்தின் மூலமாகத் தான் வந்தது என்னும் உண்மை யாருக்கும் விளங்காமற் போகாது. இவ்வுண்மையை யறிந்தவர்கள், தீண்டாமையை அடியோடு ஒழிக்க வேண்டுமானால் இந்து மதத்தையும் அடியோடு ஒழித்துத்தானாக வேண்டும் என்ற முடிவுக்குத்தான் வரக்கூடும். ஆகையால்தான் இந்துமதமே தங்கள் உயர்வுக்குக் காரணம்; அது அழிந்தால் தங்கள் மதிப்பும் போய்விடும் என்று முடிவு செய்து கொண்டு எந்தக் காரியங்களைச் செய்தாலும் அவைகளுடன் இந்து மதப் பிரசாரத்தையும் சேர்த்துக் கொண்டு வருகின்ற பார்ப்பனக் கூட்டத்தைச் சேர்ந்த திரு. விஜயராகவாச்சாரியாரவர்கள் "தீண்டாமை எப்படி வந்தது?" என்பதைப் பற்றி ஆராய வேண்டாமென்று கூறினார் என்பதில் என்ன சந்தேகம்?

ஆகவே இந்தக் கொடிய தீண்டாமையை அடியோடு ஒழிப்பது எப்படி என்பதைப் பற்றிய நமது அபிப்பிராயத்தைப் பலமுறை வெளியிட்டிருக் கிறோமாயினும் இச்சந்தர்ப்பத்திலும் சுருக்கமாகக் கூறிவிடுகின்றோம். தீண்டாமை எப்பொழுதும் நிலைத்திருந்தால் தான் இந்து மதம் நிலைத் திருக்கும் என்ற அபிப்பிராயமுடைய வைதீகக் கூட்டத்தை ஒதுக்கித்தள்ளி விட்டு மற்றவர்களில் தீண்டாமையை ஒழிப்பதற்கு யோசனை கூறுவோரு டைய அபிப்பிராயத்தை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். "இந்து மதத்தில் தீண்டாமைக்கு ஆதரவில்லை. ஆகையால் இந்து மத தர்மங்களைக் கைப் பற்றுகிறவர்கள் எல்லோருக்கும் மத சம்பந்தமான சமூக சம்பந்தமான தடை கள் இருக்கக் கூடாது" என்று சொல்லுகின்றவர்கள் ஒரு சாரார். "இந்து மதத்தில் தீண்டாமைக்கு இடமிருக்கிறது; இதனாலேயே இந்து மதம் பாழடைந்து வருகிறது. ஆகையால் இக் கொடுமையை இந்து மதத்தை விட்டு ஒழித்துப் பரிசுத்தமாக்க வேண்டும்" என்று சொல்லுகின்றவர்கள் ஒருசார்பார்.

ஆனால் நாமோ இந்த இரு சார்பினர்களின் அபிப்பிராயங்களையும் ஒப்புக்கொள்ளவில்லை. இவர்கள் அனைவரும், மதத்தையும், சாஸ்திரங் களையும் நம்பிக்கொண்டு, அவைகளை ஒழிக்க மனமில்லாமல் அவைகளின் மூலமாகவே தீண்டாமையை ஒழித்துச் சமத்துவத்தை உண்டாக்க



வேண்டுமென்று விரும்புகின்றார்கள். இவர்களுடைய விருப்பம் எந்தக் காலத்திலும் நிறைவேறப் போவதில்லையென்பதை, மதத்தையும், சாஸ்திரங்க ளையும் நம்பிக் கொண்டு தீண்டாமையை ஒழித்துச் சமதர்மத்தை உண்டாக்க முன் வந்த, ராமாநுஜர், சைதன்யர், குரு, கோவிந்தசிங், குருநானக், தயானந்த சரஸ்வதி, விவேகாநந்தர், ராமலிங்க சுவாமி போன்றவர்களின் முயற்சி என்ன ஆயிற்று என்று ஆலோசித்துப் பார்ப்பவர்கள் ஒப்புக் கொள்ளுவார்கள். இவர்களுடைய முயற்சியினால் ஒரு கடுகளவாவது தீண்டாமையைப் போக்க முடிந்ததா?

இவ்வாறு இவர்களுடைய முயற்சிகளும், உபதேசங்களும் பலன் தராமல் போனதற்குக் காரணம், அவர்கள் தங்கள் முயற்சிகளுக்கும், உப தேசங்களுக்கும் மதங்களையும், சாஸ்திரங்களையும் அடிப்படையாக வைத்துக் கொண்டு, அவைகளுக்குத் தத்துவார்த்தங்கள் கூறித் தங்கள் கொள்கைகளுக்கு ஆதரவு தேடியதேயாகும் என்பதில் என்ன சந்தேகம்?

ஆகையால், மதமும், சாஸ்திரங்களும் ஒழிந்தாலல்லாமல் தீண்டாமை ஒழியப் போவதில்லை என்பதே நமது முடிவான அபிப்பிராயமாகும். இந்த அபிப்பிராயத்தினால் தான், சுயமரியாதை இயக்கம், மதங்களையும் சாஸ்திரங் களையும், அதிலும், அவசரமாகவும் அவசியமாகவும் இந்து மதத்தையும், இந்துமத சாஸ்திரங்களையும் அடியோடு ஒழிக்க வேண்டுமெனக்கூறியும், அந்த வேலையைச் செய்தும் வருகிறது.

உயர்ந்த சாதியினர் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களான – இந்து மதத்திலும், இந்துமத சாஸ்திரங்களிலும், நம்பிக்கையும் குருட்டுப் பழக்க வழக்கங்களும் உடைய இந்துக்களிடம் உள்ள மத நம்பிக்கையையும் சாஸ்திர நம்பிக்கையையும் ஒழிப்பதன் மூலமே தீண்டாதவர்கள் சமத்துவம் பெற முடியும் இந்து மதத்தை வைத்துக் கொண்டு ஒரு பொழுதும் சமத்துவம் பெற முடியாது. ஆகையால் இந்து மதம் ஒழியும் வரையிலும் தீண்டாமைக் கொடு மையை சகித்துக் கொண்டு இந்து மதத்துடன் போர் புரிந்து கொண்டிருக்க முடியாதவர்கள் இந்து மதத்தையே அடியோடு விட்டு விட்டுத் தங்களுக்குச் சமத்துவம் அளிக்கின்ற வேறு மதத்தில் சேருவதும் தவறாகாதென்றும் சொல்லுகின்றோம். அவசரமாகச் சமத்துவம் பெற விரும்புகிறவர்களுக்கு இதைத்தவிர வேறுமார்க்கமில்லை என்பதே நமது அபிப்பிராயமாகும்.

**குடி அரசு – தலையங்கம் – 27.03.1932**



RangaRakes tamilnavarasam.com

# சுதேசிப் பிரசாரம்

நமது நாட்டின் பொருளாதாரத் துறையை விருத்திச் செய்ய வேண்டுமென்பதிலும் இதற்கு ஆதாரமானத் தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதிலும் நாம் யாருக்கும் பின்வாங்கியவர் அல்லோம் என்பதை நமது மகாநாடுகளில் அவ்வப்போது நிறைவேற்றப் பட்டிருக்கும் தீர்மானங்களைக் கொண்டு அறியலாம்.

பொருளாதாரத் துறையிலும், தொழில் அபிவிருத்தியிலும் நாம் முன்னேற்றமடைய வேண்டுமானால் கூட்டுறவுத் தொழில் முறையில் இயந்திரங்களை விருத்தி செய்தால் ஒழிய நாம் வியாபாரத்தில் அன்னிய தேசங்களுடன் போட்டி போட ஒரு நாளும் முடியாது என்பதே நமது கொள்கையாக இருந்து வருகின்றது. இந்தத் தத்துவத்தைக் கொண்டுதான் நாம், ராஜீயச் சின்னமாக உபயோகப்பட்டு வருகின்ற கதர்த் திட்டத்தைப் பலமாக எதிர்த்து வருகின்றோம்.

அன்றியும் இப்பொழுது காந்தீயத்தினால் ஏற்பட்ட 'சுதேசீயம்' என்னும் பிரசாரம் மக்களை மீண்டும் பழய மிருகப் பிராயத்திற்கு இழுத்துச் செல்லும் தத்துவத்தை யுடையதென்று கூறி அதை அடியோடு கண்டிக்கின்றோம்.

ஒவ்வொரு மனிதனும் தனக்கு வேண்டிய பொருள்களைப் பிறருடைய கூட்டுறவை விரும்பாமல் தானே உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் திரு. காந்தியின் தேசீயமாகும். இத் தேசீயத்திலிருந்து முளைத்தது தான் கதர்த்திட்டம் என்பதும். மேற்கூறிய "தனக்குத் தானே உதவி செய்துகொள்ளுதல்" என்னும் கொள்கையை அஸ்திவாரமாகக் கொண்டு தான் இப்பொழுது நமது நாட்டு 'ராஜீயம்', 'தேசீயம்', 'காந்தீயம்', 'சுதேசியம்' ஆகிய எல்லாம் நடைபெற்று வருகின்றன.

மனிதர்கள் உற்பத்தியான பழய காலத்தில் - அவர்கள் மிருகப் பிராயமுடையவர்களாக இருந்த காலத்தில், ஒவ்வொருவரும் தத்தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தேடிக் கொண்டு தனித்தனியே வாழ்ந்து



வந்தனர். அதன் பின் சிறிது அறிவு விளக்கமான பின்பு தனித்தனிக் குடும்பங்களாக இருந்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்தனர். அதன் பின் தனித்தனி சமூகங்களாகப் பெருகினர். இப்பொழுது எல்லா மக்களும் ஒரே சமூகமாக வாழ வகை தேடுகின்றனர்.

இதைப் போலவே தொழில்களும் கூட்டுறவு முறையில் வளர ஆரம்பித்தன. ஒருவனுக்கு வேண்டிய பண்டத்தை அவனே செய்து கொள்ளாமல், ஒவ்வொன்றை ஒவ்வொருவன் செய்யவும், ஒருவன் தான் செய்த பொருளை மற்றொருவனிடம் கொடுத்து தனக்கு வேண்டிய பொருளை அவனிடமிருந்து பெற்றுக் கொள்ளவும் நேர்ந்தது. இதுதான் பண்ட மாற்றுதல் என்னும் வியாபாரத்திற்குக் காரணமாகும். இந்த முறையில் தான் பொருளாதாரத் துறையும், தொழில் அபிவிருத்தியும் முன்னேற்றமடைய முடியும். மக்களுடைய தனித்தனி சமூக அமைப்பும் ஒழிந்து ஒரே சமூகமாக வழியும் உண்டாகும். இந்த முறைதான் தேசத்தின் முற்போக்குக்கு ஏற்ற வழியாகும்.

இதை விட்டு விட்டுத் திரு. காந்தியின் "தனக்குத் தானே உதவி செய்து கொள்ளுதல்" என்னும் தத்துவத்தை உடைய தேசீயத்தைப் பின்பற்றும் தேசம், தொழில் முறையிலும், வியாபாரத்துறையிலும், பொருளாதாரப் பெருக்கத்திலும் வளர்ச்சியடைய முடியாமலும், மக்களுக்குள் சமத்துவமும் சகோதரத்துவமும் உண்டாக முடியாமலும், வருணாசிரம தரும வாழ்க்கையிலேயே இருந்து கொண்டு அதிவிரைவாகப் பழய மிருகப் பிராயத்திற்குச் செல்ல வேண்டியதுதான் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இதனால் தான் தேசீயமும், சுயமரியாதையும் எந்தக் காலத்திலும் ஒன்று சேரமுடியாதென்றும் கூறி வருகின்றோம்.

இவ்விஷயங்களையே சென்ற ஆண்டில் விருது நகரில் நடந்த சுயமரியாதை மூன்றாவது மகாநாட்டில் நிறைவேற்றிய,

> "பொருளாதாரத் துறைக்கும், தொழில் அபிவிருத்திக்கும் இயந்திர வளர்ச்சிக்கும் சமதர்ம உணர்ச்சிக்கும் கதர் தத்துவம் விரோதமாய் இருப்பதால் கதர் தேசீயப் பொருளதாரத்து தொழில் திட்டம் என்பதை இம்மகாநாடு மறுக்கின்றதுடன் தொழில் முறை இயந்திர வளர்ச்சியை இம்மகாநாடு ஆதரிக்கின்றது".

என்ற தீர்மானமும் வற்புறுத்துகின்றது.

ஆகவே, தேசத்தில் பொருளாதார முன்னேற்றத்தையும், சமூக சமத்துவத்தையும் உண்டாக்க விரும்புகின்றவர்கள் எவரும் இயந்திரங்களினால் செய்யக் கூடிய தொழில்களை எல்லாம் இயந்திரங்களைக் கொண்டே கூட்டுறவு முறையில் அபிவிருத்தி செய்வதற்கு முயற்சி



RangaRakes tamilnavarasam.com

பண்ணினால் ஒழிய நமது நாடு முன்னேற்றம் அடைய முடியாது. என்பதை உணர்ந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

ஆனால் இந்த முறையில் பண்டங்களை உற்பத்தியாக்க நமது நாட்டில் இது வரையிலும் ஒரு முயற்சியும் செய்யப்படவுமில்லை; பண்டங்கள் உற்பத்தியாகவும் இல்லை. ஆனால் அன்னிய நாட்டுப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்னும் சத்தம் மாத்திரம் பலமாக இருந்து கொண்டு வருகிறது.

இப்பொழுது "பகிஷ்காரக் கூச்சல்காரர்களு"க்கு ஆபத்து உண்டான வுடன் இக்கூச்சலே வேறு விதமாக மாறி "சுதேசிப் பொருள்களை வாங்குங் கள்" என்ற கூச்சலாகப் புறப்பட்டிருக்கின்றது.

உண்மையிலேயே நமது நாட்டில் சுதேசிப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்குமானால் அவற்றை வாங்குங்கள் என்று செய்யும் பிரசாரத்தை நாம் வரவேற்பதுடன், நாமும் அந்தப் பிரசாரத்தை மேற்கொண்டு முன்னணியில் நின்று வேலை செய்வோம். ஆனால் நமக்குத் தேவையான சுதேசிப் பொருள்கள் கிடைக்காமலும், கூட்டுறவு முறையில் இயந்திரத் தொழில்களை உற்பத்தி செய்யாமலும், இவ்வாறு தொழில்களைச் செய்ய சிறிது கூட முயலாமலும், இக்கொள்கையைக் கூட 'தேசீய வாதிகள்' ஒப்புக் கொள்ளாமலும் இருக்கின்ற போது "சுதேசியை வாங்குங்கள்" என்னும் பிரசாரமும், இப்பெயரினால் சங்கங்களும் உண்டாவதில் என்ன அர்த்த மிருக்கிறது என்று நமக்கு விளங்கவில்லை.

ஆனால் இது வரையிலும் நமது நாட்டில் 'ஹோம்ரூல்', 'சுயராஜ்யம்', 'காங்கிரஸ்', 'காந்தீயம்', 'தேசீயம்' என்ற பற்பல வார்த்தை களைக் கூறித் தேசாபிமானிகளாக விளங்கியவர்கள் எவ்வாறு அவ் வார்த்தைகளைக் கொண்டு பொது ஜனங்களை ஏமாற்றிப் பட்டங்களையும் பதவிகளையும் பெற்று வந்தார்களோ, அவ்வாறே தான் இப்பொழுதும் "சுதேசியை வாங்குங் கள்" என்ற பிரசாரத்தை மேற்கொண்டிருப்பவர்களும், வரப் போகும் தேர்தல் களில் வெற்றி பெறுவதற்கு இதை ஒரு தந்திரமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று தான் கூற வேண்டும்.

'சுதேசியை வாங்குங்கள்' என்னும் இந்த புதிய தேர்தல் பிரசாரம் முதலில் யாரால் கிளப்பிவிடப்பட்டது. இப்பொழுதும் யாரால் நடத்தப்படு கிறது? எப்படி நடத்தப்படுகிறது? என்ற விஷயங்களை அறிந்தால் அதன் பின் இதைக் கண்டு யாரும் ஏமாற மாட்டார்கள் என்பது நிச்சயம். ஆகையால் அவ்விஷயங்களை ஆராய்வோம்.

வருணாச்சிரம தரும வாதியாகிய திரு. மாளவியா பண்டிதர் இங்கிலாந்திலிருந்து வட்ட மேஜை மகாநாட்டை விட்டுத் திரும்பி வந்த



வுடனேயே இந்த இயக்கத்திற்கு விதை போட்டார். காங்கிரஸ் பெயராலோ, காந்தியின் பெயராலோ, சத்தியாக்கிரகத்தின் பெயராலோ, பகிஷ்காரத்தின் பெயராலோ, தேர்தல் பிரசாரம் பண்ணினால் நிச்சயமாகத் தடியடியோ, அபராதமோ, சிறை தண்டனையோ பெற்று கஷ்டமடையும்படி நேரும் என்பது அவருக்குத் தெரியும். ஆகையால் அன்னிய நாட்டுப் பொருள் களைப் பகிஷ்கரியுங்கள் என்று சொல்லுவதை விடச் 'சுதேசியை வாங்குங்கள்' என்று பிரசாரம் செய்வது சட்ட விரோதமும் ஆகாது; தேர்தல் பிரசாரம் நடப்பதற்கு வழியும் ஆகும் என்று கருதிப் பிரசாரம் பண்ண ஆரம்பித்தார்.

இச்சமயத்தில் அடக்குமுறைச் சட்டங்களால் மூலைகளிற் பதுங்கிக் கிடந்த பதவி வேட்டைக்காரர்கள் அனைவரும் இப்பிரசாரத்தை வரவேற்றனர். இவர்கள் எல்லோரும் பார்ப்பனர்கள் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. உதாரணமாகச் சென்னையிலும், கும்பகோணம், கோய முத்தூர், திருநெல்வேலி முதலிய இடங்களிலும் இப்பொழுது ஆரம்பிக்கப் பட்டிருக்கும் இச்சங்க நிர்வாகிகளைப் பார்த்தாலே இவ்வுண்மை விளங்கும். இனி மற்ற ஊர்களில் ஆரம்பிக்கப்படப் போகும் சங்க நிர்வாகிகளும் பார்ப்பனர்களாகவேதான் இருப்பார்கள் என்பதில் யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. இவர்கள் எல்லோரும் அடக்கு முறைச் சட்டங்கள் ஏற்படு வதற்குமுன்பு தேர்தலுக்காக வேண்டி 'காந்தி', 'காங்கிரஸ்', 'சத்தியாக்கிரகம்', 'சட்ட மறுப்பு', 'பூரண சுயேட்சை', 'கதர்' என்ற வார்த்தைகளைக் கூறித் திரிந்தவர்கள் தான் என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகின்றோம்.

இப்பொழுது 'சுதேசியை வாங்குங்கள்' என்பது பற்றிப் பிரசாரம் செய்யப் புறப்பட்டு இருப்பவர்கள் இவர்கள் கொள்கைப்படி செய்யப் பட்டி ருக்கும் சுதேசிப் பண்டங்கள் ஒன்றும் இல்லாமையால் கதர் ஒன்றைத் தான் பிரசாரம் பண்ண முடியும். கதர் ஒரு தொழிலாகாமையாலும் அதனால் இதுவரையிலும் ஒரு லாபமும் கிடைக்காமையாலும் இனியும் கிடைக்கப் போவதில்லையாகையாலும் கெஜம் இரண்டரை அணா மூன்று அணா பெறக்கூடிய துணிக்கு 9 அணா, 10 அணா கொடுத்து வாங்க வேண்டி யிருப்பதனாலும் கதரை நம்பி நூல் நூற்கின்றவர்கள் ஒரு நாளைக்கு 1 அணா 1½ அணாவுக்கு மேல் பெற வழி இல்லாமையாலும் கதர்ப் பிரசாரத்தால் பரம்பரையாக நெசவு செய்து வாழ்ந்து வந்தவர்களிலும், அதன் மூலம் வியா பாரம் செய்து வந்தவர்களிலும், ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வேலை யின்றி பட்டினிகிடக்க நேர்ந்தமையாலும், 'கதர் பிரசாரம்' என்பது ஏழை மக்களின் பொருளை கொள்ளை அடிக்கப் பார்ப்பனர்களால் செய்யப்படும் ஏமாற்றுப் பிரசாரம் என்பதை நாம் இப்பொழுது புதிதாக எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.



RangaRakes tamilnavarasam.com

நமது நாட்டில் தொழில்களை அபிவிருத்தி செய்து வியாபாரம் பண்ணுவதன் மூலம் பொருளாதாரத்தை வளர்க்க இந்த 'சுதேசி பக்தர்கள்' ஒரு முயற்சியும் செய்யாமல் "சுதேசியை வாங்குங்கள்" என்று மாத்திரம் பிரசாரம் பண்ணுவதில் என்ன அர்த்தமிருக்கிறது என்று மீண்டும் மீண்டும் யோசனை செய்து பார்த்தால் இதில் உள்ள சூழ்ச்சி வெளிப்படாமல் போகாது, சுதேசிப் பண்டங்கள் இருந்தாலல்லவோ அவைகளை வாங்குங்கள் என்று பிரசாரம் பண்ணவேண்டும். அவை இல்லாமலிருக்கும் போது இப்பிரசாரம் செய்ய முன் வந்திருப்பது தேர்தலுக்காகச் செய்யப்படும் சூழ்ச்சியா? அல்லவா? என்று யோசனை செய்து பாருங்கள்.

ஆகவே யாரும் இந்த சுதேசிப் பிரசாரத்தைக் கண்டு ஏமாறாமல் இருக்கும்படி எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். ஆங்காங்கே உள்ள நமது இயக்கத்தோழர்கள் பார்ப்பனப்புலிகள் இந்தச் 'சுதேசி' என்னும் பசுத் தோலைப் போர்த்துக் கொண்டு பொது ஜனங்களை ஏமாற்ற முன் வந்திருப் பதை எடுத்துக்காட்டி பாமர மக்களை எச்சரிப்பார்கள் என்று நம்புகின்றோம்.

காங்கிரஸ் பிரசாரத்தின் பெயரால் தேர்தலுக்குப் பணம் சேர்க்க முடியாமல் போய் விட்ட படியால் இப்பொழுது சுதேசிப் பிரசாரத்தின் பெய ரால் பார்ப்பனர்கள் பணம் சேர்க்கப் புறப்பட்டு இருக்கிறார்கள் என்ற உண்மை யைப் பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டி அவர்களை ஜாக்கிரதையாக இருக்கும்படி செய்ய வேண்டுகிறோம்.

சுதேசி என்னும் பதத்தில் உள்ள ஏமாற்றங்களை எடுத்துக் காட்டுவது நமது கடமையாகும். இப்பொழுது நாம் சும்மா இருந்து கொண்டு சுதேசியின் பேரால் பார்ப்பனர்களைப் பணம் சேர்க்க விட்டு விடுவோமானால் பின்னால் அது பார்ப்பனரல்லாத பொது ஜனங்களுக்கே ஆபத்தாய் முடியும் என்பதில் சந்தேகமில்லை.

**குடி அரசு - தலையங்கம் - 03.04.1932**



# ஹிந்திக் கொள்ளை

ஒரு தேசத்தில் உள்ள மக்களைச் சுலபமாகவும், சீக்கிரமாகவும், அறிவுடையவர்களாகச் செய்வதற்கு, முதலில் அவர்களுடைய தாய் மொழி யின் மூலம் எல்லா விஷயங்களையும் போதிக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டுவருகிறது. இதுதான் பொது ஜனங்களின் மனத்தில் தேசாபி மான உணர்ச்சியை உண்டாக்குவதற்கு அடிப்படையான வேலையென்றும் சொல்லப்படுகிறது. இது போலவேதான் சுதந்தரப்போர் புரிந்த நாட்டினர் செய்து தங்கள் காரியங்களில் வெற்றி பெற்றிருக்கின்றார்கள் என்றும் அறி கின்றோம். ஆனால் நமது தமிழ் நாட்டின் தேசாபிமானமோ இதற்கு முற்றிலும் வேறுபட்டதாகவே இருந்து வருகிறது.

சுயராஜ்யம் வேண்டுமென்று கூச்சலிடுகின்ற தேசத்தலைவர்கள் என்பவர்களில் யாரும் இதுவரையிலும் தாய்மொழியின் வளர்ச்சியில் மனஞ் செலுத்தவும் முயற்சி செய்யவும் முன்வரவே இல்லை.

ஆனால் வட நாட்டினர் அரசியல் விஷயத்துடன் ஹிந்தியையும் சேர்த்துக் கொண்டு, அதையே இந்தியா முழுவதுக்கும் பொதுப்பாஷை ஆக்க வேண்டுமென முயற்சி செய்யத் தொடங்கியவுடன் நமது நாட்டுத் தேசாபிமானிகளும் அவர்கள் கொள்கையை ஆதரித்துப் பிரசாரம் பண்ணத் தொடங்கிவிட்டனர். தேசாபிமானியாக வெளி வருகின்ற ஒருவன் "காந்திக்கு ஜே" "காங்கிரசுக்கு ஜே" "கதர் கட்டுங்கள்" என்று சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பது போலவே "இந்தியைப் படியுங்கள்" என்றும் சொல்ல வேண்டிய அவசியமும் இப்பொழுது ஏற்பட்டு விட்டது.

தெலுங்கர்கள், வங்காளிகள் முதலானவர்கள் தங்கள் தாய் பாஷையை மிக உன்னத பதவிக்குக் கொண்டு வந்து வைத்திருக்கின்றனர். அவர்கள் தங்கள் மொழிகளில் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற புதிய நூல்களை யெல்லாம் ஆக்கி வைத்திருக்கின்றனர். அவைகளைப் படிக்குமாறு மக்க ளுக்கு ஊக்க மூட்டுகின்றனர். நமது தமிழ் மொழியோவென்றால் ஒன்றுக்கும் பயன்படாத நிலையிலேயே இன்னும் இருந்து வருகிறது. மக்களுடைய அறியாமையைப் போக்கி நவீன அறிவையும், உலகப் பொருள்களின்



RangaRakes tamilnavarasam.com

தன்மைகளை அறிந்து அவைகளைத் தமது வாழ்க்கைக்கு உபயோகப் படுத்திக் கொள்ள அறிவையும் ஊட்டக் கூடிய நூல்களைச் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளவே இல்லை.

தமிழ் மொழிக்காக உழைக்கின்றோம் என்று சொல்லிக் கொண்டிருக் கின்ற பண்டிதர்களும், சங்கங்களும் தமிழ் மொழியினால் பொதுஜனங்கள் நன்மையடையத் தகுந்த உருப்படியான வேலைகள் ஒன்றுமே செய்வதில்லை. ராமாயணக் கதையையும், பாரதக் கதையையும் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய கதைகளையும் வசனமாகவும், பாட்டாகவும், சுருக்காகவும், விரிவாக வும் திருப்பித் திருப்பி எழுதிக் கொண்டிருக்கின்றனர், அல்லது அந்தப் புலவர் எந்தக் காலத்திலிருந்தார்.. இந்தப் புலவர் எந்தக் காலத்திலிருந்தார் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கின்றனர். இது தான் ஆராய்ச்சி யென்று சொல்லப்படுகின்றது. இவ்வளவுதான் இவர்கள் தமிழ் பாஷைக்குச் செய்யும் தொண்டு. இதனால் மக்களை இன்னும் மூட நம்பிக்கை உடைய வர்களாக்குவதற்கு வழி தேடுகின்றார்களேயொழிய வேறு தேசத்திற்கு என்ன நன்மை செய்கின்றார்கள் என்றுதான் கேட்கின்றோம்.

ஆனால் தேசாபிமானிகளாக வருகின்றவர்களுக்கோ இதில் கூடக் கொஞ்சமும் கவலை இருப்பதில்லை. பொதுவாக நமது நாட்டு தேசாபி மானிகளுக்கு எந்த வகையிலும் சொந்த அறிவு என்பதே இருப்பதில்லை. வடநாட்டுத் தேசாபிமானிகள் எந்தக் காரியங்களை ஆரம்பிக்கின்றனரோ அதையே பின்பற்றுவது தான் நமது நாட்டு அரசியல் வாதிகளின் போக்காக இருந்து வருகின்றது. சமூகவியலாகட்டும், மதவியலாகட்டும், அரசியலாகட் டும், பாஷாவியலாகட்டும் மற்ற எந்த இயலாகட்டும் எல்லாவற்றிலும் நமது நாட்டினர் வடநாட்டினர்க்கு அடிமைப்பட்டே வந்து கொண்டிருந்தனர். இதற்கு உதாரணமாக இது வரையிலும் நடந்து வந்திருக்கும் கதர் இயக்கம், காங்கிரஸ் இயக்கம். இந்தியியக்கம் முதலியவைகளை எடுத்துக் கொண்டாலே போதுமானதாகும்.

சமீபத்தில், சென்னையிலுள்ள இந்திப் பிரசாரசபைக்கு ஒரு கட்டடம் கட்டும் பொருட்டு நிதி சேகரிப்பதற்காகப் பத்திரிக்கைகளில் ஒரு வேண்டு கோள் வெளிவந்தது. அதில் இந்தியின் அவசியத்தையும், அதற்குக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்திப் பொது ஜனங்களைப் பொருளுதவி செய்யுமாறு வேண்டிக்கொண்டு, பலவகையான அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சட்டசபை மெம்பர்களும் தாலூக்கா போர்டு, முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு முதலிய ஸ்தாபனங்களில் பதவி வகிப்பவர் களுமாகச் சுமார் 50 பேர்களுக்கு மேல் கையொப்ப மிட்டிருக்கின்றனர்.

உண்மையிலேயே இவர்கள் இந்தி மொழி தேசீய பாஷையாக வேண்டும். அதன் மூலம் மக்கள் நன்மையடைய வேண்டும் என்ற கருத்துடன் இந்தி மொழிக்கு ஆதரவளிக்க முன்வந்தார்களா என்பது தான் நமக்குச்



சந்தேகம். இவர்கள் தங்கள் சொந்த பாஷையின் வளர்ச்சிக்குக் கடுகளவாவது நன்மை செய்திருப்பார்களானால் இந்தி மொழிக்கு ஆதரவளிக்க முன் வந்ததில் ஏதாவது அர்த்தம் இருக்க முடியும். அப்படியில்லாமல், தமிழ் மக்கள் முன்பின் அறியாததும்; சமஸ்கிருதம் தெரிந்த பார்ப்பனர்களைத் தவிர மற்றவர்களுக்குப் படிக்கக் கஷ்டமாயிருப்பதும், துளசிதாஸ் ராமாயணத்தைத் தவிர வேறு இலக்கியங்களோ அல்லது நவீன கலைகளோ இல்லாததும் ஆகிய ஒரு பிரயோசனமற்ற பாஷையைத் தமிழ் மக்களிடம் பரப்ப முன் வருவார்களா? தங்கள் சொந்த மொழியையே கற்க முடியாமல் வாழுகின்ற பொது ஜனங்கள் இந்தி மொழியை எவ்வளவு தூரம் கற்றுக் கொள்ளப் போகிறார்கள்?

இவையெல்லாம் அந்தப் பிரமுகர்களுக்குத் தெரியாத விஷயம் அல்ல. ஆயினும் ஏன் கையெழுத்திடமுன் வந்தார்களென்றால், தங்களைத் தேசாபிமானி என்று காட்டிக் கொள்வதன்மூலம் அடுத்த தேர்தலுக்கு ஆதரவு பெறவே என்பதில் சிறிதும் சந்தேகமே இல்லை. ஆதலால் இதைக் கண்டு யாரும் ஏமாந்து விட வேண்டாமென்று எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 03.04.1932**



RangaRakes tamilnavarasam.com

# யோகப்புரட்டு

மூச்சடிக்கிப் பலவகையாக யோகஞ் செய்வதன் மூலம் சிறிது சரீர திடம் பெறுவதற்கு ஏதாவது மார்க்கமிருக்குமேயொழிய அதில் வேறு “தெய்வீகத்தன்மை” யாதொன்றுமில்லை யென்பதே நமது அபிப்பிராய மாகும். ஆகவே இதுவும் கழைக் கூத்து, சர்க்கஸ், ஜால வித்தை முதலியவை களைப் போல ஒன்றுதான் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் நமது மக்கள் யோகத்தில் ஏதோ “தெய்வீகத்தன்மை” இருப்ப தாக நம்பியிருப்பதால் அநேகர் யோகிகள் என்று கிளம்பி, சில ஜாலங்களைச் செய்து, பாமர மக்களை மலைக்கச் செய்து ஏமாற்றி வருகின்றனர். ஜன சமூகமும் இவர்கள் பால் பரம்பரையாகவே ஏமாந்து கொண்டும் வருகிறது.

இதற்கு உதாரணமாகச் சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கவனித் தால் விளங்கும். “ஹட யோகம்” என்பதில் சித்தி பெற்றவராகச் சொல்லப்பட்ட நரசிம்மசாமி யென்பவர் சென்னை, கல்கத்தா முதலிய இடங்களில், பிரபல ரசாயன சாஸ்திரிகளின் முன்னிலையில், கொடிய விஷம், கண்ணாடித் துண்டுகள், ஆணிகள் முதலியவற்றை விழுங்கி உயிரோடிருந்தாராம். இந்த நிகழ்ச்சியைக் கண்டு ரசாயன சாஸ்திரிகள் எல்லோரும் மலைத்துப் போய் விட்டனர். ஆகவே யோகத்தின் மகிமையைப் பற்றிப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டது.

ஆனால் இதே நரசிம்ம சாமியார் சில தினங்களுக்கு முன் ரெங்கூனில் இரண்டாம் முறையாக விஷங்களையும் கண்ணாடித் துண்டுகளையும் விழுங்கிய கொஞ்ச நேரத்திற்குள் மரண யோகம் பெற்று விட்டார். இதற்குக் காரணம் விஷம் உண்டவுடன் ‘ஹட யோகம்’ பண்ணுவதற்குக் கொஞ்சம் நேரமாகிவிட்டது என்று பத்திரிகைகளில் சொல்லப்படுகின்றது. ஆனால், அவைகளை உட்கொள்ளும் சாதுரியத்திலோ அல்லது மாற்று மருந்தை உட்கொள்ளுவதிலோ அல்லது பழக்கப்பட்ட அளவை உட்கொள்ளுவதிலோ தவறிவிட்டார் என்று ஏன் சொல்லக் கூடாதென்று தான் நாம் கேட்கின்றோம்.

யோகத்தில் ‘தெய்வத் தன்மை’ உண்டென்பது வீண் புரட்டேயொழிய வேறில்லை. சாதுரியத்தினாலோ அல்லது பழக்கத்தினாலோ அல்லது மாற்று



மருந்துகளினாலோ செய்யப்படும் காரியங்களையெல்லாம் யோகமென்றும், மந்திரமென்றும், தேவதையென்றும், தெய்வசக்தியென்றும் சொல்லி ஒரு கூட்டத்தார் ஜன சமூகத்தை ஏமாற்றி வருகிறார்கள் என்பதை அறிய வேண்டு கிறோம். ஆகையால் இனியேனும் இது போன்ற மோசடியான காரியங்களைக் கண்டு ஏமாறாமலிருக்கும்படி எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 03.04.1932**



RangaRakes
tamilnavarasam.com

# சட்டசபைநாடகம்

ஏழை மக்களுடன் பழகி, ஏழை மக்களாகவே வாழ்கின்ற ஏழை மக்கள் தான் அவர்களுடைய துன்பங்களை நீக்க உண்மையாகப் பாடுபட முடியுமே யொழிய ஏழைமக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு பதவி வகித்து வருகிற வேறு எந்தப் பணக்கார முதலாளிகளும் அவர்களின் துன்பத் தைப் போக்கப் பாடுபடமுடியாது என்று நாம் அடிக்கடி சொல்லி வருகிறோம்.

இதற்கு உதாரணம் வேண்டுமானால் நமது இந்தியா சட்டசபையின் நிகழ்ச்சிகளையும் மாகாண சட்டசபைகளின் நிகழ்ச்சிகளையும் கவனித்துப் பார்த்தால் நன்றாய் விளங்கும். இச்சமயத்தில் சென்ற 4-4-32 ல இந்திய சட்டசபையில் இந்திய ராணுவ சம்பந்தமான முக்கிய விஷயம் பற்றி விவாதம் நடக்கும்போது சபையில் பல உறுப்பினர்களின் ஸ்தானங்கள் காலியாக இருந்தனவாம். இதை திரு. எஸ். சி. மித்திரா அவர்களும், சட்டசபைத் தலைவரும் எடுத்துக்காட்டி கண்டித்தனர். அப்போது தலைவர் கண்டித்துக் கூறியதாவது:-

> "சட்டசபைக் கூட்டத்திற்கு பலர் வரவில்லை என்றும், சிலர் வந்து விட்டுத் திரும்பி விட்டார்கள் என்றும், சபையில் அதிக மெம்பர்கள் இல்லை யென்றும், திரு. எஸ். சி. மித்திரா கூறியதைக் கவனிக்க வேண்டும். ஆகையால் வாக்காளர்களே இதைக் கவனியுங்கள்.
>
> தேர்தல் காலத்தில் ஏராளமாகச் செலவு செய்து படாதபாடுபட்டு சட்டசபைப் பதவி பெறுகிறவர்கள் பிறகு சபைக்கூட்டத்திற்கு வருவதைப்பற்றிக் கவலை கொள்வதில்லை. இத்தகைய மெம்பர்க ளிடம் அனுதாபம் காட்ட முடியாது.

என்று மிகவும் அழுத்தமாக உறுப்பினர்களின் செய்கையைத் தலைவர் கண்டித்திருக்கின்றார்.

இவ்வாறு சட்ட சபைக் கூட்டங்களுக்கே சரியாகப் போகமுடியாத நமது பிரதிநிதிகள் எவ்வாறு நமது நன்மைக்காகக் கவலையுடன் பாடுபடுவார் கள் என்று யோசித்துப் பாருங்கள்.



இவர்கள் ஏழைகளின் நன்மைக்காகவோ, சீர்திருத்தத்திற்காகவோ, பாடுபடாமல் போனாலும், சட்டசபையில் சில மெம்பர்களால் கொண்டு வரப் படும் நல்ல தீர்மானங்களுக்கு முட்டுக்கட்டை போடாமலாவது இருக்கிறார் களா என்று பார்த்தால் அப்படியும் இருப்பதில்லை. 'மதம்' 'கடவுள்' 'வேதம்' 'பழமை' 'தெய்வீகம்' 'பழக்க வழக்கம்' என்னும் பெயர்களினால் அவைகளை எதிர்த்து தீமை செய்யச் சிறிதும் பின்வாங்குவதில்லை.

இதற்கு உதாரணம் வேண்டுமானால் இந்திய சட்ட சபையில் திரு. சாரதா அவர்களால் விதவைகளுக்குச் சொத்துரிமை வழங்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட மசோதாவைத் தோற்கடித்ததும், திரு. அரிசிங்கோர் அவர்களால் விவாக விடுதலை செய்து கொள்ளுவதற்கு உரிமை வழங்கக் கொண்டுவந்த மசோதாவின் விவாதத்தின் போது சபையில் குவாரம் இல்லாமற் போகுமாறு சபை மெம்பர்கள் சபையை விட்டு வெளியேறியதும் ஆகிய காரியங்களே போதுமானதாகும்.

அல்லாமலும் பால்ய விவாகத்தைத் தடுக்கும் சாரதா சட்டத்தைத் தொலைக்க வேண்டும் என்பதற்காகவே சட்டசபையில் ஆதி முதல் ஒரு கூட்டம் சூழ்ச்சி செய்து கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கொண்டும் அறியலாம்.

ஆகவே இந்திய சட்டசபை மெம்பர்களின் நாடகத்தையறிய, அச் சபைத் தலைவர் கூறிய அபிப்பிராயமும், நாம் காட்டிய இரண்டொரு உதாரணங்களுமே இச்சமயத்தில் போதுமானதென்று கருதுகிறோம். சமயம் நேரும்போது மற்றொரு முறை இது பற்றி எடுத்துக் காட்டுவோம்.

இனி நமது மாகாண சட்டசபையைப் பற்றி மாத்திரம் கொஞ்சம் கவனித்தால் மற்ற மாகாண சட்டசபைகளின் நாடகங்களும் நன்கு விளங்கும்.

நமது மாகாண சட்டசபையில் சென்ற கூட்டங்களில் நடந்த காரியங் கள் முழுதும் அனேகமாகத் தேர்தலுக்காகச் செய்யப்பட்ட பிரசாரங்களும், பிரசங்கங்களும், கேள்விகளுமாக இருந்தனவேயன்றி வேறு யாதொன்றும் நடைபெற்றதாகத் திட்டமாகக் கூறமுடியாது.

ஒரு மாஜிஸ்திரேட், சட்ட மறுப்புச் செய்து அதன் பொருட்டு அபராதம் விதிக்கப்பட்ட ஒரு பெண். தன்னிடம் அபராதம் கொடுக்கப் பணமில்லை என்று சொல்லியபோது, அப்பெண் கழுத்திலிருந்த தாலியைக் கொடுவென்று கேட்டதைப் பற்றிய பேச்சு, சட்டசபை ஆரம்பம் முதல் முடிவுவரையிலும் இருந்து கொண்டே வந்தது. இதன் பொருட்டு, அந்த மாஜிஸ்திரேட் வருத்தந்தெரிவித்தும், அரசாங்கத்தாரும் அச்செய்கையைக் கண்டித்துங்கூட, சட்டசபை மெம்பர்கள் அப்பேச்சை விட்டு விடவே யில்லை.



RangaRakes tamilnavarasam.com

தாலியைத் தெய்வத் தன்மையாகக் கருதிக் கேள்விகள் கேட்டு ஆர்ப்பாட்டம் பண்ணிய இந்த மெம்பர்கள், கணவனையுடைய பெண்கள், வைதீகர்களின் கொள்கைப்படி, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் பிறவி குணங்களை விட்டு விட்டுச் சட்டமறுப்புச் செய்ய பகிரங்கமாக வெளிவந்ததனால், அவர்களுடைய "தெய்வீகத்" தன்மை போய்விட்டது என்பது பற்றி ஏன் அப்பெண்களைக் கண்டிக்கவில்லை என்று கேட்கின்றோம். உண்மையில் இவர்கள் தாலியின் "தெய்வீகத்தன்மையை" அறிந்து அதற்காக இவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்தார்கள் என்றால் அதில் சிறிதும் அர்த்தமே இல்லையென்பது தான் நமது அபிப்பிராயம்.

அடுத்தபடியாக அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்ட விஷயம்; டாக்டர். பேட்டன் அவர்களைச் சென்னைப் போலீசார் அடித்ததும், அவர் மீது வழக்குத் தொடுத்ததுமாகிய விஷயமாகும். இது பற்றி இந்திய மந்திரியுள் பட அரசாங்கத்தார் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்தும் நமது சட்டசபை மெம்பர்கள் சும்மா விட்டுவிடவில்லை கேள்விகளுக்குமேல் கேள்விகள் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்கள்.

இன்னும் தடியடிகளைப் பற்றியும், பிரம்படிகளைப் பற்றியும் கேட்ட கேள்விகளுக்கு அளவே யில்லை. அரசாங்கத்தாருடைய அடக்குமுறைகளைப் பற்றியும், அவசரச் சட்டங்களைப் பற்றியும், கண்டித்துத் தீர்மானங்கள் கொண்டு வருவதும், சரமாரியாகக் கேள்விகள் கேட்பதும் ஆகிய காரியங்களில் தான் ஏறக்குறைய எல்லா மெம்பர்களும் ஊக்கமெடுத்துக் கொண்டு காலத்தைக் கடத்தினார்களேயன்றி, வேறு நாட்டுக்கு - மக்களுக்குப் பிரயோசனகரமான காரியங்கள் எதையும் உருப்படியாகச் செய்து முடித்தார்கள் என்று கூறுவதற்கு இடமில்லை. உண்மையிலேயே நமது சட்டசபைப் பிரதிநிதிகள், நமது தேசமக்களின் நன்மைகளைக் கவனிக்கக் கூடியவர்களாய் இருந்தால், ஏழை மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் இவர்களின் நன்மைக்காக ஏதேனும் செய்திருக்க வேண்டும்.

நமது தேசமக்களில் கோடிக்கணக்கான பேர், உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும், இருக்க இடமின்றியும், ஒவ்வொரு நாளும், பட்டினியினாலும், பசியினாலும், நோய்களினாலும் மடிந்து வருகின்றனர். இவர்களுடைய துன்பங்களைப் போக்க ஒரு மார்க்கமும் தேடாமல் இருக்கின்றனர்.

விவசாயிகளோ, அகவிலைக் குறைவினாலும், வரிச் சுமையினாலும், கடன் சுமை தாங்கமாட்டாமல் நாளுக்கு நாள் பாப்பராகிக் கொண்டே வருகின்றனர். இவர்கள் துன்பத்தைப் போக்க ஒரு மார்க்கமும் இல்லை. ஆனால், 'சிக்கனம்' 'சிக்கனம்' என்பதைப் பற்றிய பேச்சு மாத்திரம் பலமாக இருந்து வருகிறது. இந்த சிக்கனப் பேச்சினால் யாருக்கும் நன்மை இல்லை. சிக்கனம் என்ற பெயரினால், பத்துப் பன்னிரண்டு, இருபது முப்பது சம்பளம் வாங்கும்



கீழ் தர வேலைக்காரர்களுக்குக் கஷ்டமும், ஆபத்தும் ஏற்பட்டதே ஒழிய வேறு ஒரு நன்மையும் இல்லை. ஆயிரக்கணக்காக சம்பளம் வாங்குபவர்கள், நூற்றுக்குப் பத்து வீதம், பதினைந்து வீதம் குறைத்துக் கொண்டார்கள் என்று பெருமையாகப் பேசப்பட்டது. இதனால், ஆயிரக்கணக்கான சம்பளக்காரர்களுக்கு ஒரு நஷ்டமும் இல்லை.

உண்மையிலேயே சிக்கனம் செய்வதனால் நன்மை யேற்பட வேண்டுமானால், ஆயிரக்கணக்கான சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர் களின் தொகையைக் குறைத்து ஏராளமான சம்பளத்தையும் குறைத்து, விவசாயிகளின் வரிச்சுமையைக் குறைத்திருக்க வேண்டும். இதற்கு யாரும் கவலை எடுத்துக் கொண்டார்கள் என்று கூறமுடியாது.

அடுத்தபடியாக தொழிலாளர்களின் நிலைமையைப் பற்றியும் யாரும் கவலைப் படவே இல்லை. சிக்கனத்தின் பெயரால், ரயில்வேயிலும் மற்றும் தொழிற்சாலைகளிலும், சொற்ப கூலி பெறும் தொழிலாளர்களைக் குறைத்துக் கொண்டு வருகின்றனர். ஆனால், ஆயிரக்கணக்காக சம்பளம் வாங்கும் உயர்ந்த உத்தியோக பதவிகளில் யாதொரு சிக்கனமும் நுழைவதில்லை. இந்தப் பரிதாபகரமான நிலையைக் கவனித்து ஏழைத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய நமது சட்டசபைப் பிரதிநிதிகள் யாதொரு முயற்சியும் எடுத்துக் கொள்ளக் காணோம்.

இவ்வாறு நமக்கு தற்போது தேவையாயுள்ள முக்கியமான காரியங்களின் மேல் கவனமில்லாமல், சுயராஜியம் என்று ஆர்ப்பாட்டம் பண்ணுவதும், அரசாங்கத்தாரின் தவறுகளையே சதா எடுத்துக் காட்டி கொண்டிருப்பதுமாகிய காரியங்களையே எப்பொழுதும் சட்டசபையில் செய்து கொண்டிருப்பதனால் நமக்கு என்ன நன்மை உண்டாகப் போகின்றது?

தற்போது நமது நாட்டில், வியாபார மந்தமும், பொருளாதார நெருக்கடியும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்படுவதற்குக் காங்கிரசால் செய்யப்படும் சட்டமறுப்பும் ஒரு முக்கிய காரணம் என்பதை இந்த சட்டசபை மெம்பர்கள் உணராதவர்கள் அல்லர். ஆயினும், அவர்கள் காங்கிரசின் செயலைக் கண்டித்துப் பேச முன்வருவதே இல்லை. காங்கிரஸ்காரர்கள் போல் அரசாங்கத்தாரை மாத்திரம் கண்டிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றனர். இது எதற்காக? தேர்தல் பிரசாரம் பண்ணுவதற்காகவா? அல்லவா? என்று நினைத்துப் பாருங்கள்!

சட்டசபை ஸ்தாபனங்களில் கெட்டியாக உட்கார்ந்து கொண்டு உருப்படியான காரியங்கள் ஒன்றும் செய்யாமல் சட்டமறுப்பைப் பற்றியும், தடியடிகளைப் பற்றியும், சிறைத் தண்டனைப் பற்றியும், அபராதத்தைப் பற்றியும் வீண் ஆர்ப்பாட்டம் பண்ணுகிறவர்கள் அனைவரும் தேர்தல் பிரசாரகர்களே என்றுதான் நாம் கூறுகின்றோம். இவர்கள் உண்மையிலேயே



RangaRakes
tamilnavarasam.com

சட்டமறுப்பிலும், காங்கிரசிலும், பற்றுடையவர்களாயிருந்தால் இவர்களும், காங்கிரசுடன் சேர்ந்து கொண்டு சட்டமறுப்புச் செய்து ஜெயிலுக்குப் போக வேண்டும். அப்படியில்லாமல் சௌக்கியமாகச் சட்டசபை ஸ்தானங்களில் உட்கார்ந்து கொண்டு அரசாங்கத்தாரை மாத்திரம் கண்டித்துப் பேசிவிடுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

இவ்வாறு அரசாங்கத்தாரை கண்டிப்பதின் மூலம், தங்களைத் தேசீயவீரர்கள் என்று பாமர மக்கள் நினைக்கும்படி செய்து கொண்டு அதை அடுத்தத் தேர்தலுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளத்தான் இக்காரியம் செய்கின்றார்கள் என்பதில் என்ன சந்தேகம்?

ஆகையால் இந்திய சட்டசபைத் தலைவர், வாக்காளர்களுக்கு எச்சரிக்கை செய்தது போல நாமும், நமது மாகாண வாக்காளர்களுக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகின்றோம், சட்டசபையின் வேலையைக் கெடுத்துக் கொண்டு தேசாபிமானியென்ற பட்டத்திற்காக வீண் ஆர்ப்பாட்டங்கள் புரியும் பிரதிநிதிகளையெல்லாம் கவனித்துக் கொள்ளுமாறு வாக்காளர்களுக்குக் கூறுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 10.04.1932**



# இத்தகைய கோயில்கள் ஏன்?

தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த வரகூர் என்னும் கிராமத்தில் உள்ள வெங்டேசப் பெருமாள் கோயிலில் பார்ப்பனரல்லாதார் சென்று தெரிசனம் பண்ணக்கூடாது என்பது பற்றி அவ்வூர் பார்ப்பனர்களுக்கும், பார்ப்பனரல்லாதார்களுக்கும் நீண்ட காலமாக வழக்கு நடைபெற்றது. கடைசியில் சென்னை ஹைகோர்ட்டில், ஜஸ்டிஸ் கிருஷ்ணன் பண்டலே முன்பும், ஜஸ்டிஸ் வாலர் முன்பும் விசாரணைக்கு வந்த போது இருவரும் வேறு வேறு அபிப்பிராயம் கொண்டனர்.

ஜஸ்டிஸ் கிருஷ்ணன் பண்டலே பார்ப்பனரல்லாதாருக்கும் தரிசனம் பண்ண உரிமையுண்டு என்று அபிப்பிராயப்பட்டார்; ஜஸ்டிஸ் வாலர் பார்ப்பனரல்லாதாருக்குத் தரிசனம் பண்ணும் உரிமையில்லை என்று அபிப்பிராயப்பட்டார்; ஆகையால் கடைசியாக ஜஸ்டிஸ் வாலஸ் அவர்கள் அவ்வழக்கை இரண்டாம் முறையாக விசாரித்து, பார்ப்பனரல்லாதார்க்குத் தரிசன உரிமை இல்லை என்று தீர்ப்புக் கூறினார்.

இத்தீர்ப்பைப் பற்றி நமக்கு ஒரு கவலையுமில்லை. பார்ப்பனரல்லாதாருடைய தயவோ ஒத்தாசையோ இல்லாவிட்டால் எந்தக் கோயில்களும் நிலைத்திருக்க முடியாது. சோற்றை வடித்து பொங்கல் புளியோதரைகள் பண்ணி அவற்றைக் கல்லுப் பொம்மையின் முன்பு கொண்டு போய் காட்டியபின் பார்ப்பனர்கள் பங்கு போட்டு எடுத்துக் கொண்டு போகிற ஒரு காரியத்தைத் தவிர, மற்ற எல்லாக் காரியங்களையும் பார்ப்பனரல்லாதார்களே செய்து வருகின்றார்கள். இத்தகைய ஒரு கோயிலுக்குள், பார்ப்பனரல்லாதார் போகக் கூடாது என்று தடுத்துக் கோர்ட்டுக்குப் போகும்படி செய்த பார்ப்பனர்களின் சுய நலத்தையும் அகங்காரத்தையும் உணருகின்ற எந்தப் பார்ப்பனரல்லாதாரும், இனி இது போன்ற கோயில்கள் விஷயத்தில் எந்த வகையிலும் ஒத்துழைக்க முன் வர மாட்டார்களென்றே நம்புகின்றோம்.

ஆகையால் உண்மையில், பார்ப்பனர்களின் சுயநலத்தையும், அகங்காரத்தையும் ஒழிக்க வேண்டுமானால் முதலில் செய்ய வேண்டியது கோயில்களை பகிஷ்கரிக்க வேண்டிய வேலையேயாகும். தங்களுக்கு உரிமை



RangaRakes tamilnavarasam.com

யில்லாத கோயில் சம்பந்தமான எந்த வேலைகளையும் செய்ய மறுத்து அவைகளைப் பார்ப்பனர்களே செய்து கொள்ளும்படி விட்டுவிட வேண்டும்.

இவ்வாறு கோயில்களைப் பகிஷ்கரிக்க ஆரம்பித்தால், கோயில்களே அனேகமாக ஒழிந்து போய் விடும். நமது மக்களுக்குக் கோயில்களின் மேல் உள்ள மயக்கம் ஒழிந்தால் முக்கால்வாசி மூட நம்பிக்கைகள் ஒழிந்து போகு மென்பதில் ஐயமில்லை.

ஆகையால் இனியேனும், கோயில் பிரவேசத்திற்காகப் பாடுபடுகின்ற வர்கள், கோயில்களை ஒழிக்கப்பாடுபடுவார்களானால், அதனால் அதிக நலனும், பொருளாதாரச் சிக்கனமும் ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 10.04.1932**



# கவியும் பண்டிதரும்

காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானத்தின் பேரில், காங்கிரஸ்காரர்கள் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்திக் கொண்டு இருக்கும் காலத்திலேயே பூரியில் அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டையும் கூட்ட ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் அரசாங்கத்தார் சட்ட மறுப்பு இயக்கத்தைக் காங்கிரஸ்காரர்கள் நடத்திக் கொண்டிருக்கும் போது காங்கிரஸ் மகாநாடு கூடினால் சட்ட மறுப்பு இயக்கத்தை இன்னும் பலப்படுத்துவதற்குக் காரணமாகும் என்று கூறி பூரி காங்கிரசைத் தடுத்து விட்டார்கள்.

இதன்பின் காங்கிரஸ் கமிட்டியினர் மகாநாடு கூட்டும் விஷயத்தில் கவலை கொள்ளுவதை விட்டுச் சட்டமறுப்பு இயக்கத்தையே நடத்தினர். இதன் பலனாகக் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர் பெரும்பாலும் சிறை சென்றுவிட்டனர். இப்பொழுது வெளியிலிருப்பவர்கள் இரண்டொரு வரே யாவார்கள்.

இந்த நிலையில் இப்பொழுது காங்கிரசின் ஆக்டிங் தலைவராக இருக்கும் திருமதி சரோஜினிதேவியார் காங்கிரசின் 47வது மகாநாட்டை டில்லியில் கூட்டத் தீர்மானித்து, அதற்குத் திரு. மாளவியா பண்டிதரைத் தலைமை வகிக்கும்படி கேட்டு, அவரும் ஒப்புக் கொண்டு, மற்றும் மகாநாட்டு உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டுப் பத்திரிகைகளிலும் வெளியிடப் பட்டன.

இதற்கிடையில் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை யில் “காங்கிரசை நடத்த முன் வருவோர், சட்ட மறுப்பு இயக்கத்திற்கு ஆதரவான தீர்மானங்கள் ஒன்றும் காங்கிரஸ் கூட்டத்தில் கொண்டு வரப்பட மாட்டாதென்று உறுதி கூறினால், காங்கிரஸ் கூட்டத்திற்கு அரசாங்கத்தார் ஒரு தடையும் செய்ய மாட்டார்கள்” என்ற விஷயம் காணப்பட்டது. இதை திருமதி சரோஜினி தேவியாரும், திரு. மாளவியா பண்டிதரும் கவனித்துத் தானிருக்க வேண்டும்.

இந்த நிலையில், டில்லி மகாநாட்டுக்குக் காரியதரிசியாக நியமிக்கப் பட்டிருந்தவர் மகாநாடு கூடுவதற்கு வழக்கம்போல இட வசதியளிக்க



RangaRakes
tamilnavarasam.com

வேண்டுமென டில்லி கமிஷனருக்கு எழுதியிருந்தார். கமிஷனர், கலெக்டர் மூலமாக, காங்கிரஸ் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்தி வருவதால் இடவசதி யளிக்க முடியாது எனக் கூறிவிட்டார்.

இவ்விஷயம் வெளியானவுடன் நமது நாட்டுப் பத்திரிகைகள் எல்லாம், அரசாங்கத்தாரின் செய்கையைக் கண்டிக்க ஆரம்பித்துவிட்டன. ஜனங் களிடையில் கொஞ்சங் கொஞ்சமாக மறந்து போய்க் கொண்டிருந்த காங்கிரஸ் பெயரை மறுபடியும் ஞாபகப்படுத்தப்பட்டது.

டில்லியில் கூடுவதாக ஏற்பாடு செய்த காங்கிரசைப் பற்றி பலர் பலவாறாக அபிப்பிராயங் கூறினர். திரு. மாளவியா பண்டிதர், மிதவாத நோக்க முடையவராகையாலும், திருமதி. சரோஜினி தேவியாரும் தென்னாப்பிரிக்கா விலிருந்து வந்த பின் சட்ட மறுப்புக்கான காரியத்தில் இறங்கிச் சிறைசெல்லா மலிருப்பதினாலும், இருவரும் அரசாங்கத்திற்கும், காங்கிரசிற்கும் சமரசம் உண்டாகும்படியான மார்க்கத்திற்காக ஏற்பாடு செய்வார்களென்று சிலர் கூறினார்கள். சிலர் அமிதவாதிகளிடமுள்ள காங்கிரசை மிதவாதிகளும் புத்தி சாலிகளான இளைஞர்களும் கைப்பற்றிக் கொள்ளப் போகிறார்களென்று கூறினார்கள், இவ்வாறு பலர் அபிப்பிராயம் கொண்டது வெறும் யூகமே ஒழிய வேறு இதற்குத் தக்க காரணம் ஒன்றும் கிடைக்கவில்லை.

ஆனால் எதற்காக திருமதி. சரோஜினி தேவியாரும், திரு. மாளவியா பண்டிதரும் மகாநாடு கூட்ட முன் வந்தார்களென்றால், இருக்கின்ற கிளர்ச்சி கள் போதாவென்று இன்னுஞ் சில கிளர்ச்சிகளை உண்டாக்கித் தேசத்தில் குழப்பத்தை உண்டு பண்ணும் பொருட்டாகவே என்று தான் நாம் கூறுவோம்.

உண்மையில் திருமதி, சரோஜினி தேவியாரும், திரு. மாளவியா பண்டிதரும் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்த முயற்சி செய்யும் நோக்க முடை யவராயிருந்தால், அல்லது அரசாங்கத்தாருக்கும், காங்கிரசுக்கும் சமாதானம் செய்து வைப்பவர்களாயிருந்தால் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தும்படி காங்கிரஸ்காரர்களை வேண்டிக் கொண்டு மகாநாடு கூட்டும் விஷயத்தில் பிரவேசித்திருக்கலாம். இவர்கள் இவ்வாறு ஒன்றும் செய்ய முன்வரவில்லை அல்லது அவர்களாவது தனித்த முறையிலாவது சட்ட மறுப்பு இயக்கத்தைக் கண்டிக்கின்றவர்களாகவுமில்லை. இந்த நிலையில் இவர்களால் நடை பெறக்கூடிய ஒரு மகாநாடு சட்ட மறுப்பு இயக்கத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கத்தோடு கூடுகிறது என்று தான் யாரும் கருதக் கூடுமே யொழிய வேறு வகையாக ஒரு நாளும் கருதவே முடியாது.

அன்றியும், இவ்விருவருடைய தனித்தனி நடவடிக்கைகளை யெடுத்துக் கொண்டு பார்த்தால், ஒருவரையாவது நம்பி ஒரு காரியத்தையும் செய்ய முடியாது.



முதலில் திருமதி. சரோஜினி தேவியாரை எடுத்துக் கொள்வோம். அவர் ஒரு கவி என்பது நாடறிந்த விஷயம். எப்பொழுதுமே கவிகளும், மகாத்மாக்களும், பைத்தியக்காரர்களும், பாலர்களும், பக்தர்களும், பேதையர் களும் ஒரு தன்மையானவர்கள். இவர்கள் எப்பொழுதும் உறுதியாக இருக்க மாட்டார்கள். இவர்களுக்குப் பொறுப்பு என்பதும் இருக்காது. இவர்களை நம்பி ஒரு காரியமும் செய்ய முடியாது என்பது உலகறிந்த விஷயமாகும். ஆகவே கவியரசியாகிய திருமதி. சரோஜினி யாரைத் தேசத்தின் அமைதி யைப் பாதுகாப்பவர் என்று எப்படி நம்ப முடியும்.

இரண்டாவது திரு. மாளவியா பண்டிதரை எடுத்துக் கொள்ளுவோம். இவர் மிதவாதி என்பது உண்மையே. ஆனால் வருணாச்சிரம வாதி என்பதை யாரும் மறுக்க முடியாது. சென்ற வட்ட மேஜை மகாநாட்டில், வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாக திரு. காந்தியார் பிடிவாதமாக இருந்து குழப்பம் விளைத்ததற்கு உறுதியான பக்கபலமாக இருந்தவர் திரு. மாளவியா பண்டிதரே என்பதை யாரும் அறிவார்கள். இத்தகைய பண்டிதரைத் தலைமை யாகக் கொள்ளும் காங்கிரஸ், முழு வருணாச்சிரம தரும ஸ்தாபனமாகவும், இந்து முஸ்லீம் கலகத்தை அதிகப்படுத்துகின்ற ஸ்தாபனமாகவும், தாழ்த்தப் பட்டார் உயர்த்திக் கொண்டிருப்பவர் சண்டையைப் பெருக்குகின்ற ஸ்தாபன மாகவும் மாறக் கூடுமே யொழிய வேறு எந்த வகையிலும் சீர்திருத்தமடைய முடியாதென்பது நிச்சயம்.

ஆகவே இவ்விருவரும், திடீரென காங்கிரஸ் கூட்ட முற்பட்டபோது, “சட்ட மறுப்பு இயக்கம் நடைமுறையில் இருக்கும்போது, காங்கிரஸ் மகா நாட்டை நடத்த அரசாங்கத்தார் இடங் கொடுக்க மாட்டார்கள்” என்னும் விஷயம் அவர்கள் புத்தியில் படாமல் இருந்திருக்க முடியாது. அவர்கள் சொந்த புத்தியில் படாமலிருந்தாலும், அரசாங்கத்தார் வெளியிட்ட அறிக்கை யையாவது நிச்சயமாகப் பார்த்திருக்கலாம். இருந்தும் சட்ட மறுப்புச் சம்பந்த மாக ஒன்றும் பேசாமல் மகாநாடு கூட்டுவதாகத் தடபுடல் செய்தது வீண் கிளர்ச்சிக்கேயாகும். இதன்மூலம் அரசாங்கத்தை ஆதரிக்கின்றவர்கள் மனத்திலும் அரசாங்கத்தைப் பற்றிய வெறுப்பை உண்டாக்கிச் சட்ட மறுப் பைப் பலப்படுத்துவதற்குச் செய்த தந்திரமேயாகும்.

அன்றியும், காங்கிரசையும், சட்ட மறுப்பையும் ஞாயமானதென்றும், அரசாங்கத்தாரின் செய்கைகள் அநியாயமானவைகளென்றும் சொல்லிக் கொண்டும், தம்மையும் காங்கிரஸ்காரர்கள் என்று கூறிக்கொண்டும், ஆனால் இன்னும் சட்டமறுப்புச் செய்து சிறைக்கு மாத்திரம் போகாமலிருக்கின்ற திருமதி. சரோஜினி தேவியாரும், திருமாளவியா பண்டிதரும் காங்கிரசுக்காக மிகவும் பாடுபடுகின்றார்கள் என்று புகழ் பெறுவதற்காகவே டில்லியில் மகாநாடு கூட்ட முயற்சித்தார்களென்றும் கூறலாம்.



RangaRakes tamilnavarasam.com

உண்மையில் இவர்கள் சட்டமறுப்பை ஆதரிக்கின்றவர்களா யிருந்தால் இப்பொழுது சிறைக்குள் வாசஞ்செய்து கொண்டிருக்க வேண்டும். அல்லது காங்கிரசுக்கும், அரசாங்கத்திற்கும் சமரசம் பண்ணி நாட்டில் அமைதியை உண்டாக்கும் நோக்கமுடையவர்களாயிருந்தால் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்துவதற்கு வழி தேடியிருக்க வேண்டும். இரண்டுமில்லாமல், அரசாங்கத்தின் எண்ணந்தெரிந்தும் மகாநாடு கூட்ட முற்பட்டது எதற்காக என்றுதான் கேட்கின்றோம்.

ஆகவே அரசாங்கத்தார் தேசமிருக்கும் தற்போதைய குழப்பமான நிலையில், நிபந்தனை கூறாமல் காங்கிரஸ் மகாநாடு கூடத் தொடங்கியதைத் தடுத்த விஷயத்தை நியாய புத்தி உடையவர்கள் எவரும் அக்கிரமமானதென்று கூறமுடியாது, தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்க முயற்சிப்பது போல் ஒரு நிபந்தனையுமில்லாமல் காங்கிரசை நடத்தும்படி விட்டுவிட்டுப் பிறகு, அவர்கள் சட்ட மறுப்புக்கு ஆதரவான தீர்மானங்களை நிறைவேற்றிய பின் இன்னும் பலமான அடக்குமுறைகளைக் கையாளுவதன் மூலம், தேசத்தில் அதிகமான குழப்பம் உண்டாவதை இப்பொழுதே தடுக்க முன்வந்ததைப் புத்திசாலித்தனமான காரியமென்றே நாம் அபிப்பிராயப் படுகிறோம்.

இது நிற்க, இனி டில்லி காங்கிரசைப் பற்றி இன்னும் சில விஷயங்களைக் கவனிப்போம். டில்லி காங்கிரசுக்கு அரசாங்கத்தார் ஆதரவளிக்க மறுத்தபின்னர் திருமதி. சரோஜினியார் வெளியிட்ட அபிப்பிராயத்தில் "சர்க்கார் காங்கிரஸ் கூட்டத்திற்குத் தடை செய்தது, அதைப் பாராட்டியது போலவேயாகும். ஆகையால் எப்படியும் காங்கிரசை நடத்தியே தீருவேன்" என்று கூறியிருக்கிறார். திரு. மாளவியா பண்டிதரும் "காங்கிரசைப் பொருத்த மட்டில் வருடாந்தரக் கூட்டத்தைக் கூட்ட ஏற்பாடு நடந்து கொண்டு தானிருக்கிறது. குறிப்பிட்ட தேதியில் டில்லியில் கூட்டம் நடக்கலாம்" என்று ஒரு வகையாகச் சந்தேகமான அபிப்பிராயத்தை வெளியிட்டார். இதன்பின் டில்லி காங்கிரஸ் காரியதரிசியாகிய திரு. சாஹ்னி வெளியிட்டிருக்கும் அறிக்கையில் "அரசாங்கத்தார் டில்லி காங்கிரசுக்கு ஆதரவளிக்க மறுத்தாலும், வருஷாந்தரக் கூட்டத்தைக் கூட்ட வரவேற்புக் கழகத்தினர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டு தானிருக்கின்றனர். இம்மகாநாட்டிற்கு வரும் பிரதிநிதிகள் இதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை ஏற்கத் தயாராயிருக்க வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

ஆனால் அரசாங்கத்தாரின் அபிப்பிராயம் மாறிவிட்டதாகத் தெரியவில்லை. காங்கிரஸ் கூட்டத்தை நடக்கவொட்டாமல் செய்யவேண்டும் என்னும் நோக்கம், அரசாங்கத்தாரிடம் உறுதியாக இருப்பதாகத் தெரிகின்றது. இந்த நிலையில் கூட்டப்படும் காங்கிரசினால் குழப்பமும், கலகமும் ஏற்படப் போவதைத் தவிர வேறு என்ன நன்மை ஏற்படப்போகிறது?



அன்றியும் டில்லி காங்கிரஸ் விஷயத்தில், தற்சமயம் காங்கிரசில் உள்ள அதிதீவிரவாதிகளுக்கு நம்பிக்கை இல்லை என்றும் அதைக் கூட்டுவதில் விருப்பமில்லையென்றும் சொல்லப்படுகிறது. பாஞ்சாலத்திலுள்ள தீவிர காங்கிரஸ்வாதிகள் டில்லி மகாநாட்டை ஆதரிக்கவில்லையென்றும் தெரிகிறது.

ஆகவே, காங்கிரஸ்காரர்களின் ஆதரவில்லாத நிலையிலும், அரசாங்கத்தாரின் எதிர்ப்புக்கிடையிலும், கூட்டப்படுவதாக இருக்கும் இக்கூட்டம் காங்கிரஸ் கூட்டமாகாது.

காங்கிரஸ்காரர்களைத் தவிர மற்றவர்களிடம் திருமதி. சரோஜினி யாருக்கும், திரு. மாளவியா பண்டிதருக்கும் செல்வாக்கில்லாமையால், இது தேசமக்களின் கூட்டமும் ஆகாது. வீணாகக் கிளர்ச்சியையும், கலகத்தையும், குழப்பத்தையும் உண்டாக்குகின்ற ஒரு போலிக்கூட்டமே யாகுமென்றுதான் நாம் கூறுகின்றோம்.

ஆகையால் இக்கூட்டத்தையோ, இக்கூட்டம் சம்பந்தமான கிளர்ச்சியையோ கண்டு யாரும் ஏமாந்து போக வேண்டாமென எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 17.04.1932**



RangaRakes tamilnavarasam.com

# மீண்டும் குழந்தை மணம்

பால்ய விவாகத் தடைச்சட்டமாகிய சாரதா சட்டம் தோன்றிய நாள் முதல் அதற்கு உண்டான ஆபத்துக்கள் அளவற்றவை. வைதீகர்கள் அதை ஒழிப்பதற்குச் சூழ்ச்சிகள் பல செய்து கொண்டு வந்தார்கள். காங்கிரஸ் காரர்களின் சட்ட மறுப்பு ஒருபுறம், அச்சட்டத்தை அமல்நடத்தாமல் தடை செய்து கொண்டு வந்தது. அரசாங்கத்தாரின் அலட்சியப் புத்தி ஒருபுறம் பெருந்தடையாக இருந்து வந்தது, ஆனால் இப்பொழுது அச்சட்டமே செல்லத்தக்கது அல்ல என்பதற்குத் தகுந்த ஆதாரம் அகப்பட்டு விட்டது.

திரு. வசந்த குமாரதாஸ் என்பவர், 14 வயதுக்கு உட்பட்ட தனது மகளை மணஞ்செய்து கொடுக்க ஏற்பாடு செய்திருந்ததைத் தடை செய்திருந்தும், தடை யுத்தரவை மீறி விவாகம் நடத்தப்பட்டது. அதன் பின் ஜில்லாக் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டு, பேக்கர் கஞ்ச் ஜில்லா நீதிபதி, திரு. வசந்த குமாரதாசை சிவில் ஜெயிலுக்கு அனுப்ப உத்தரவு பிறப்பித்தார். இவ்வுத்தரவை ரத்து செய்ய வேண்டுமென கல்கத்தா ஹைக்கோர்ட்டுக்கு விண்ணப்பித்து "1780, 1797 ஆகிய வருஷங்களில் பார்லிமெண்டில் நிறைவேறிய கிழக்கிந்திய கம்பெனிச் சட்டங்கள் இன்னும் ரத்தாகாமலிருக்கும்போது ஒரு இந்து தனது மகளை விவாகம் பண்ணிக் கொடுப்பதற்கு உள்ள உரிமையையும், அதிகாரத்தையும் மறுக்க முடியாது" என்று விவாதிக்கப்பட்டது. ஹைக்கோர்ட்டு நீதிபதிகளும் இதை ஒப்புக் கொண்டு ஜில்லா நீதிபதியின் உத்தரவை ரத்து செய்தனர்.

இவ்வழக்கினால் சாரதா சட்டம் பயனற்றதெனத் தெரிந்துவிட்டது.

இவ்வழக்கில் எடுத்துக் காட்டப்பட்ட 1780ஆம் வருஷத்திய கிழக்கிந்திய கம்பெனிச் சட்டத்தில் 18வது விதியில் "சுதேசிகளுடைய பழக்க வழக்கங்களுக்குச் சாதகமளிக்கும் பொருட்டு இந்து, முகம்மதிய சட்டங்களின் படியும், அக்குடும்பங்களின் வழக்கப்படியும் குடும்பத்தின் தந்தைக்கும், முதலாளிக்கும் உள்ள உரிமையில் தலையிடுவதில்லை என்று பார்லிமெண்ட் தீர்மானிக்கிறது. இவர்கள் தங்கள் குடும்பங்களுக்குள் செய்து கொள்ளும் காரியங்கள் இங்கிலாந்து சட்டங்களுக்கு விரோதமாக இருந்தாலும் அவை குற்றமாகா" என்றும்,



1797வது கிழக்கிந்திய கம்பெனிச் சட்டத்தில் 12வது பிரிவில் "சுதேசிகளின் சமூகப் பழக்க வழக்கங்களுக்குப் பாதகம் ஏற்படாதிருக்கும் பொருட்டு குடும்ப சம்பந்தமாக இந்து, முஸ்லீம் தந்தைகளுக்கும், முதலாளிகளுக்கும் உள்ள உரிமையில் எத்தகைய கோர்ட்டு நடவடிக்கையும் தலையிடக்கூடாது என இச்சட்டம் கட்டளையிடுகிறது" என்றும் இருக்கின்றன.

இந்தப் பழைய துருப்பிடித்த சட்டங்கள் தான் இப்பொழுது சாரதா சட்டத்திற்கு ஆபத்தை விளைவித்ததாகும்.

இனி சாரதா சட்டம் பயன்பட வேண்டுமானால், பார்லிமெண்டின் இந்தப் பழய சட்டங்கள் ரத்தாக வேண்டும். அல்லது சாரதா சட்டத்தில், பழய சட்டங்களில் உள்ள இவ்விதிகள் செல்லத்தக்கவைகள் அல்லவெனக் குறிப்பிடப்படவேண்டும். சாரதா சட்டத்தை நிறைவேற்றிய ஆரம்ப காலத்திலேயே இதைக் கவனித்திருந்தால் இப்பொழுது இத்தகைய சங்கடம் ஏற்பட இடமிருந்திருக்காது.

இவ்விரண்டு காரியங்களைச் செய்யும் விஷயத்திலும் பல சங்கடங்கள் ஏற்படக்கூடும். நமது நாட்டு வைதீகர்களும், அவர்களுக்குச் சாதகமாக இருக்கும் அரசியல் கிளர்ச்சிக்காரர்களும் சும்மா இருக்க மாட்டார்கள்.

ஒரு சமயம், இந்திய அரசாங்கத்தாரின் முயற்சியினால், பார்லிமெண்டில் பழய சட்டங்கள் முழுவதையுமோ, அல்லது அவற்றில் உள்ள மேற்காட்டிய பிரிவுகளையோ ரத்துச்செய்வதற்கு ஏற்பாடாகுமானால், நமது வைதீகர்கள், அரசாங்கம், பழைய வாக்குறுதிகளை மீறுகிறதென்றும், மதத்தில் தலையிடுகின்றதென்றும் கூறி அரசாங்கத்தின் மேல் பழி தூற்ற ஆரம்பித்து விடுவார்கள். இதை வருணாச்சிரமதரும அரசியல் கிளர்ச்சிக் காரர்களும், அரசாங்கத்தைத் தூற்றுவதற்கு ஒரு ஆதாரமாக வைத்துக் கொள்ளுவார்கள். ஆகையால், இச்சமயத்தில், அரசாங்கத்தார், மேற்கண்ட பழைய சட்டங்களையோ அல்லது அவற்றில் உள்ள மேற்காட்டிய விதிகளையோ ரத்துச் செய்ய முன்வரமாட்டார்களென்றே நினைக்கின்றோம்.

இனி சாரதா சட்டத்தில் ஷை விதிகள் செல்லத்தக்கவையல்ல வென்று விதி ஏற்படுத்தவும் தற்சமயமுள்ள சட்டசபையில் இயலாதென்பது நிச்சயம். சென்ற கூட்டங்களில் விதவைகளுக்குச் சொத்துரிமையளிக்கும் மசோதாவும், விவாக விடுதலை மசோதாவும் அடைந்த கதியைப் பார்த்தால் விளங்கும்.

இனிச் சட்ட நிபுணர்களின் அபிப்பிராயத்தைப் பார்த்தாலோ அவர்களும் வேறு வேறு அபிப்பிராயப்படுகிறார்கள். இந்தியா சட்டசபைக்கு இத்தகைய சட்டஞ் செய்யஉரிமை உண்டு என்று கூறுவோர் சிலர். இத்தகைய சட்டஞ் செய்ய உரிமை இல்லையென்று சொல்லுவோர் சிலர். ஆகவே இந்த வகையிலும் முரண்பட்ட அபிப்பிராயமே இருந்து வருகிறது.



RangaRakes
tamilnavarasam.com

ஆனால் எந்தச் சங்கடத்தையும் அரசாங்கம் கண் வைத்தால் நீக்கி விடலாம். இனி அரசாங்கம் இவ்விஷயத்தில் என்ன செய்யப்போகிறது என்பது தான் நமது கேள்வி.

உண்மையிலேயே நமது இந்திய அரசாங்கம், இந்தியர்களின் முன்னேற்றத்தில் நோக்கமுள்ளதாயிருந்தால் சாரதா சட்டத்தைப் பயனுடையதாகச் செய்ய வேண்டும். அல்லது மேற்கண்ட பழைய பார்லிமெண்ட் சட்டமாகிய மனுஸ்மிருதிகளை ரத்துச் செய்ய முயலவேண்டும். இரண்டுமல்லாமல் ஏனாதானாவென்று இருக்குமானால், சீர்திருத்தக்காரர்கள் வெள்ளைக்கார அரசாங்கத்தின் மேல் வைத்திருக்கும் சிறிது நம்பிக்கையும் ஒழிந்து போகும்.

திரு. ஹரிவிலாச சாரதா அவர்களும், சளைக்காமல், இதற்கான முயற்சியைச் செய்வாரென்றே எதிர் பார்க்கிறோம். நாமும் நாடெங்கும் கூட்டங்கள் கூட்டிப் பழைய சட்டங்களை ரத்துச் செய்ய முயலும்படியும், சாரதா சட்டத்தைத் திருத்தும் படியும், அரசாங்கத்தாரை வற்புறுத்துவதாகத் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும்.

இளங் குழந்தைகளை மணம் புரிந்து கொடுப்பது குற்றம் என்று அறிவதற்குப் புத்தியில்லாத வைதீகர்களுக்குச் சட்டத்தினால் அறிவு புகட்ட வேண்டிய நிலையில் நமது நாடு இருக்கின்றது. இந்தப் புத்திசாலிகள் பூரண சுயேச்சை கேட்கின்றார்கள் என்று நம்மைப் பிறர் ஏளனம் பண்ணுவதில் என்ன தவறு இருக்கின்றது என்றே நாமும் கேட்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 17.04.1932**



## ஐக்கிய திட்டத்தின் அலங்கோலம்

மதவாதிகள் என்று இருப்பவர்கள் ஏதேனும் ஒரு ‘கடவுள்’ என்பதன் பெயரைச் சொல்லிக் கொண்டு பாமர மக்களை ஏமாற்றுவது எவ்வாறு உலக இயல்பாக ஆகிவிட்டதோ, அவ்வாறே அரசியல்வாதிகளாக இருக்கின்றவர்கள் மிதவாதிகளானாலும் சரி, அமிதவாதிகளானலும் சரி, மற்றும் எந்த வாதி பிரதிவாதிகளானாலும் சரி எல்லோரும் ‘சுயராஜ்யம்’ என்று சொல்லிப் பாமர மக்களை ஏமாற்றுவது சகஜமாக இருந்து வருகிறது. இதன் உண்மையை அறிவதற்கு நமது நாட்டின் தற்கால அரசியல் நிலைமையைக் கவனித்துப் பார்ப்பது ஒன்றே போதுமானதாகும்.

நமது நாட்டில், இப்பொழுது உள்ள அரசியல்வாதிகள் அனைவரும் ஐக்கிய ஆட்சி என்பதைப் பற்றியே எங்கும் பேசிக் கொண்டு வருகிறார்கள். இந்தியாவுக்கு எத்தகைய சீர்திருத்தம் ஏற்படுத்துவது என்பதைப் பற்றி யோசனை செய்வதற்காகக் கூட்டப்பட்ட வட்டமேசை மாநாடுகளின் பயனால் உண்டான வார்த்தையே இந்த “ஐக்கிய ஆட்சி” என்பதாகும்.

காங்கிரசின் சர்வாதிகாரியான திரு. காந்தியுள்பட மற்ற எல்லா அரசியல் கட்சிக்காரர்களும், இந்தியாவுக்கு “ஐக்கிய ஆட்சித் திட்டம்” ஏற்படுத்துவதை ஒப்புகொண்டு விட்டனர். ஆனால் இதை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதைப் பற்றித்தான் இப்போது ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

இந்த ஐக்கிய ஆட்சி முறையை நமது நாட்டில் சரியான முறையில் அமைப்பதற்கு எவ்வளவு இடையூறுகள் இருக்கின்றன என்பதையும், அந்த இடையூறுகளுக்குக் காரணங்கள் என்ன என்பதையும் ஆராய்ந்துப் பார்ப்பவர்களுக்கு, ஐக்கிய ஆட்சி அமைப்பில் உள்ள கஷ்டமும், சிரமமும் விளங்காமற் போகாது. ஆகையால், தற்கால நிலைமையில், ஐக்கிய ஆட்சித் திட்டத்தை ஏற்படுத்துவதற்கு முடியாமலிருக்கும் சங்கடங்களைப் பற்றியும், ஏற்படுத்தினாலும், அவ்வாட்சியை எல்லா மக்களும் சுகமடையும்படி நடத்த முடியாது என்பதற்குள்ள காரணங்களையும் ஆராய்வோம்.



RangaRakes tamilnavarasam.com

மாகாணங்களும், சுதேச அரசாங்கங்களும் சேர்ந்து இருக்கும் ஆட்சியே ஐக்கிய ஆட்சியாகும். மாகாணங்களின், பிரதிநிதிகளும், சுதேசி சமஸ்தானங்களின் பிரதிநிதிகளும் கூடிய ஒரு மத்திய சபைக்கே ஐக்கிய அரசாங்க சபை என்று பெயர்.

இந்த ஐக்கிய மத்திய சபையின் அதிகாரங்கள் எப்படி இருக்க வேண்டும், அதன் பிரதிநிதிகள் யார் யாராக இருக்க வேண்டும், எந்தெந்த வழிகளில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்னும் விஷயமும், மாகாண சட்டசபைகளுக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்க வேண்டும்,. அவைகளின் பிரதிநிதிகள் யார் யாராக இருக்க வேண்டும், அவர்கள் எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்னும் விஷயமும் சமஸ் தானங்களின் நிலைமைகள் எப்படி இருக்க வேண்டும் என்னும் விஷயமும் தீர்மானிக்கப்பட்ட பின்னரே ஐக்கிய ஆட்சியை ஸ்தாபிக்க முடியும். இவைகளே ஐக்கிய ஆட்சிக்கு அடிகோல வேண்டிய அடிப்படையான வேலைகள்.

ஆனால் இந்த விஷயத்தில் நமது இந்திய அரசியல்வாதிகளிடத்தில் எந்த விதமான ஏகோபித்த அபிப்பிராயமும் இது வரையிலும் உண்டாக வில்லை. மத சம்பந்தமான காரணங்களாலும், வகுப்பு உணர்ச்சி சம்பந்தமான காரணங்களாலும், ஒவ்வொரு வகுப்பினரும், கட்சியினரும், மதத்தினரும், சட்டசபைப் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக ஒற்றுமையடைய முடியாத வேறு வேறு அபிப்பிராயங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

உதாரணமாக, முதலில் சமஸ்தான மன்னர்களை எடுத்துக்கொள்ளு வோம். சமஸ்தான மன்னர்கள் ஐக்கிய ஆட்சியின் மத்திய சட்டசபையில் தங்களுக்குப் பிரதிநிதித்துவம் நூற்றுக்கு 51வீதம் இருக்க வேண்டுமென்றும், தங்கள் சமஸ்தானத்தில், தங்களுக்குள்ள உரிமைகளில் ஐக்கிய சட்டசபை தலையிடக் கூடாதென்றும், கிழக்கிந்திய கம்பெனியாருக்கும், சமஸ்தானங் களுக்கும் ஏற்பட்டுள்ள உடன்படிக்கை காப்பாற்றப் பட வேண்டுமென்றும் விரும்புகின்றனர்.

சமஸ்தான மன்னர்களின் இந்த அபிப்பிராயத்தை அனுசரித்து ஐக்கிய ஆட்சி ஏற்படுமானால் அந்த ஐக்கிய ஆட்சியினால் இந்தியாவுக்கு ஒரு நன்மையும் இல்லை என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. பிரிட்டிஷாருக்குப் பதிலாக சுதேச மன்னர்களே இந்திய ஏழை மக்களை ஆளுகின்றவர்களாக ஏற்பட்டுவிடுகின்றார்கள். ஆகையால் இந்த மாதிரியான ஐக்கிய ஆட்சியை இந்திய அரசியல்வாதிகள் எவரும் ஒப்பு கொள்ளவும் மாட்டார்கள். சுதேச மன்னர்களோ தங்கள் கோரிக்கையை அங்கீகரிக்காத ஐக்கிய ஆட்சியை ஒப்புக்கொண்டு அதில் சேருவார்களா என்பது சந்தேகம். ஆகவே, சுதேச மன்னர்கள் சேராத ஒரு ஆட்சியைச் சரியான ஐக்கிய ஆட்சியென்று கூறவும் முடியாது. ஆகையால் ஐக்கிய ஆட்சி ஏற்படுவதற்குச் சமஸ்தானங்களின்



பிரச்சினை ஒரு முக்கியமான சங்கடமாக இருந்து வருகிறது என்பதை அறியலாம்.

இனி அடுத்தபடியாக வகுப்புப் பிரச்சினை எவ்வளவு பெரிய தடை யாக இருக்கிறது என்பதைச் சிறிது பார்ப்போம். வகுப்புப் போராட்டம் காரண மாகவே இந்தியா அடிமை நாடாக இருப்பதாகக் கூறுகின்ற அபிப்பிராயத் தைத் தவறானதென்று கூற முடியாது. இந்த வகுப்புப் பிரச்சினையில் ஒரு முடிவுக்கும் வர முடியாத காரணத்தாலேயே வட்ட மேஜை கூட்டங்களால் ஒரு பயனும் கிடைக்காமல் போயிற்று என்பது நமக்குத் தெரியாத செய்தியல்ல.

முதலில் முஸ்லீம்களுக்கும், இந்துக்களுக்கும் சட்டசபைப் பிரதிநிதித் துவ விஷயத்தில் ஒரு வகையான சமரச முடிவும் ஏற்படுவதற்கு வழி யில்லாமல் இருக்கின்றது.

முஸ்லீம்கள் ஐக்கிய சட்டசபையில் தங்களுக்கு மூன்றிலொருபங்கு பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்றும், பாஞ்சாலம், சிந்து முதலிய மாகாண சட்டசபைகளில் தங்களுக்கு மெஜாரிட்டி ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படவேண்டுமென்றும் விரும்புகின்றார்கள். இவர்களுடைய அபிப்பி ராயத்தை முஸ்லீம்களைத் தவிர வேறு எந்த அரசியல்வாதிகளும் ஆதரிக்க வில்லை. ஆகையால் இந்த விஷயத்தில் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் ஏகோபித்த அபிப்பிராயம் உண்டாவதற்கு இடமில்லாமலிருக்கிறது.

அடுத்தபடியாகத் தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்சினையும் இவ்வாறே ஒற்றுமையடைவதற்கு வழி இல்லாமல் இருந்து வருகிறது. தாழ்த்தப்பட்ட வர்களில் ஒரு சார்பார் தனித் தொகுதி வேண்டுமென்றும், ஒரு சார்பார் பொதுத் தொகுதி வேண்டுமென்றும் கேட்கின்றனர். இவ்வகையில் அவர்கள் தங்களுக்குள்ளேயே ஒற்றுமையான அபிப்பிராயமில்லாமல் சண்டை போட்டுக் கொண்டு எதிரிகளுக்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களும் தங்களுடைய ஜனத் தொகைக்கு தகுந்தவாறு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்றும் கேட்கின்றனர். இதை இந்து மகா சபையாரும் காங்கிரஸ்காரர்களும் ஆட்சேபித்து தாழ்த்தப்பட்டவர்களும் இந்துக்கள் தானென்றும் அவர்களை இந்துக்களினின்றும் தனியாகப் பிரிப்பது கூடாது என்றும் கூறி அவர்கள் கேட்கும் உரிமைகளை மறுக்கின்றனர்.

மற்றும் இந்தியக் கிறிஸ்துவர், சீக்கியர், ஆங்கிலோ இந்தியர், வெள்ளையர் முதலிய வகுப்பு சம்பந்தமான பிரச்சினைகளும் இருக்கின்றன. ஆனால் முஸ்லீம்கள், தாழ்த்தப்பட்டவர்கள் பிரச்சினைகள் சமரசமான முடிவுக்கு வந்து விடுமானால் மற்றவைகளைப் பற்றிய கஷ்டமில்லை. சுலபமாகவே முடிவு செய்து விடலாம்.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே ஐக்கிய ஆட்சித் திட்டத்தை முடிவு செய்ய வேண்டுமானால் முதலில் சமஸ்தான பிரச்சினையும், வகுப்புப் பிரச்சினைகளும் முடிவடைய வேண்டியதே அவசியமானதாகும். இவை ஒரு சமரசமான முடிவுக்கு வருமானால் மற்ற வரவு செலவு சம்பந்தமாகவும், உத்தியோகம் சம்பந்த மாகவும், வியாபார சம்பந்தமாகவும், அதிகார சம்பந்தமாகவும், வாக்குரிமை சம்பந்தமாகவும் முடிவு செய்வது ஒரு கஷ்டமான காரியமல்லவென்பதே நமது அபிப்பிராயமாகும்.

சமஸ்தானப் பிரச்சினை, வகுப்புப் பிரச்சினை ஆகிய இவ்விரண்டுள் வகுப்புப் பிரச்சினை விஷயம் இந்திய அரசியல் வாதிகளையே பொறுத்த விஷயமாக இருக்கிறது. இவ்விஷயத்தில் இந்துக்களும், முஸ்லீம்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களும் மற்ற சிறுபான்மை வகுப்பினர்களும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை.

இந்தியாவுக்கு நான்தான் பிரதிநிதி என்று பறையடித்துக் கொண்டி ருக்கும் காங்கிரஸ் ஸ்தாபனமும், அதன் சர்வாதிகாரியாகிய திரு. காந்தியும் இந்த வகுப்புப் பிரச்சினையைத் தீர்க்கச் சரியான நடவடிக்கை ஒன்றும் எடுத்துக் கொள்ளவில்லை. வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாகத் திரு. காந்தியோ, அல்லது காங்கிரசோ கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை தாழ்த் தப்பட்டவர்களும், முஸ்லீம்களும் மற்ற வகுப்பினர்களும் ஆதரிக்கவே யில்லை; அவர்களுக்குக் காங்கிரசினிடம் ஒரு சிறிதும் நம்பிக்கையேயில்லை.

ஆனால் திரு. காந்தியார் "எங்களிடம் இந்தியாவை ஒப்பித்து விட்டால் அதன் பின் நாங்கள் வகுப்புப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளுவோம். பிரிட்டிஷார் இருப்பதனால்தான் வகுப்புப் பிரச்சினையை முடிவு செய்ய முடியவில்லை" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டு வருகிறார். இது காங்கிரஸ்காரர்களாலும் திரு. காந்தியாலும் வகுப்புப் பிரச்சினையை முடிவு செய்ய முடியாது என்பதையே தெளிவாகக் காட்டுகிறதல்லவா? இப்பொழுது இதை முடிவு செய்வதற்கு ஆற்றல் இல்லாதவர்கள் சுயராஜ்யம் வந்த பின் எவ்வாறு சமரசமாக வகுப்புப் பிரச்சினையை முடிவு செய்யும் ஆற்றலுடைய வர்களாவார்கள்? என்று தான் கேட்கின்றோம்.

இந்த விஷயம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தெரியாததொன்றல்ல. ஆயினும் இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டில் திரு. மெக்டனால்டு அவர்கள், "வகுப்புப் பிரச்சினையை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள், உங்களால் முடியாவிட்டால் அரசாங்கமே முடிவு செய்யும்" என்று கூறிக் கொஞ்சம் காலமும் கொடுத்திருந்தார். கொடுத்திருந்தும் இவ்விஷயத்தில் இந்திய அரசியல்வாதிகளால் ஒரு முடிவுக்கும் வர இயலவில்லை.

ஆகவே இனி அரசாங்கத்தாரே வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு முடிவு செய்யப் போகின்றனர். முடிவும் எல்லோராலும் ஒத்துக் கொள்ளக் கூடியதாக இருக்குமா? என்பது சந்தேகம்.



முஸ்லீம்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மற்ற சிறுபான்மை வகுப்பினர்களுக்கும் தனி உரிமைகள் அளிக்கும் எந்த முடிவையும் காங் கிரஸ் கட்சியினரும், இந்து மகா சபையினரும் ஒப்புகொள்ளப் போவதில்லை. காங்கிரஸ், இந்து மகாசபை இவைகளின் கோரிக்கைகளை அனுசரித்ததாக அரசாங்கத்தாரின் முடிவு இருக்குமாயின் அதை மற்றவர்கள் ஒப்புக் கொள்ளப்போவதில்லை.

இரண்டாவது வட்ட மேஜை மகாநாடு நடந்தபோது முஸ்லீம்களும், தாழ்த்தப்பட்டவர்களும் மற்ற சிறுபான்மை வகுப்பினரும் சட்டசபை ஸ்தானங்கள் சம்பந்தமாகத் தங்களுக்குள் ஒரு ஏற்பாடு செய்து கொண்டனர். அதைக் காங்கிரஸ்காரர்களும், இந்து மகாசபைக்காரர்களும் தவிர மற்ற எல்லோரும் அனேகமாக ஆதரித்தனர். முதல் மந்திரி திரு. மெக்டனால்டு அவர்களும் 'வகுப்புப் பிரச்சினை. சம்பந்தமாக முடிவு செய்யப்படும்போது இவ்வொப்பந்தம் கவனிக்கப்படும்' என்று கூறியுள்ளார். அந்த ஒப்பந்தத்தைக் கூட முஸ்லீம்களில் பலர் ஒப்புக் கொள்ளவில்லை.

ஆகவே அரசாங்கத்தார் செய்யும் எந்த முடிவும் எல்லோருக்கும் திருப்தியளிக்கக் கூடாததாகவேயிருக்கக்கூடும் என்பதில் ஐயமில்லை.

மேலே நாம் கூறிவந்த காரணங்களையெல்லாம் யோசிக்கும் போது ஐக்கிய ஆட்சிக்கே ஆபத்து வருமோ என்று சந்தேகப்படுவதற்கே இடமிருக்கிறதென்பதை யறியலாம்.

இந்தச் சங்கடங்களையெல்லாம் உத்தேசித்துச் சில அரசியல்வாதிகள் முதலில் மாகாண சுயாட்சி அளித்து விட்டு அதன்பின் ஐக்கிய ஆட்சித் திட்டத்திற்கான வேலையைச் சாவகாசமாகச் செய்து கொண்டு செல்லலாம். என்று கூறுகின்றனர். இது ஒரு நல்ல யோசனை என்றுதான் நாமும் அபிப் பிராயப்படுகிறோம்.

ஆனால் எந்த ஆட்சியானாலும் சரி, ஐக்கிய ஆட்சியாக இருக்கட்டும், அல்லது மாகாண சுயாட்சியாக இருக்கட்டும், அல்லது பூரண சுயேச்சை யாகவே இருக்கட்டும் அவற்றை நமது நாட்டில் உள்ள எல்லா வகுப்பினரும் சமாதானத்துடன் ஒப்புக் கொள்ளும்படியான முறையிலும், அத்தகைய ஆட்சியால் எல்லா வகுப்பினரும் சௌகரியம் பெறும்படியான முறையிலும் அமைப்பது கஷ்டமான காரியம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. நமது நாட்டில், சுயநலம் விரும்புகின்ற சுதேச மன்னர்களும், சுதேச ராஜ்யங்களும், பல வேறுபட்ட மதங்களும், வகுப்புக்களும் இருக்கும் வரையிலும், இந்தக் கஷ்டம் தீருவதற்குக் கொஞ்சமும் வழியே இல்லை. ஆகையால் தான் நாம் வகுப்புச் சங்கடங்களும், மதத் தொல்லைகளும் ஒழிவதற்குப் பாடு படவேண்டுமென்றும், இவை யொழிந்தால் சுயராஜ்யம் தானே வருமென்றும் ஆதி முதல் சொல்லிக் கொண்டு வருகின்றோம். நமது நாட்டு அரசியல்



RangaRakes tamilnavarasam.com

கட்சிகள் இதைக் காதிற் போட்டுக் கொள்ளாமல் வீணே, ஐக்கிய ஆட்சி யென்றும், சுயராஜ்யமென்றும் கூச்சலிடுவதிலும், பிரச்சாரம் பண்ணுவதிலும், சட்ட மறுப்புச் செய்வதிலும் என்ன பயன் உள்ளது? என்று கேட்கின்றோம்.

ஒரு சமயம், ஐக்கிய ஆட்சியோ அல்லது மாகாண ஆட்சியோ ஏற்பட் டாலும் அதனால் நாட்டின் ஏழை மக்களுக்கு ஒரு பயனுமில்லை என்பதை யும், பணக்காரர்களும், ஜமீன்தாரர்களும், சுதேச ராஜாக்களும் ஆதிக்கம் பெற்று, ஏழைகளையும், தொழிலாளர்களையும், கொடுமைப்படுத்த வசதியும், சந்தர்ப்பமும் உடையதாகத்தான் அவ்வாட்சி இருக்குமென்பதையும் நாம் இப்பொழுது புதிதாக எடுத்துக் காட்ட வேண்டியதில்லை என்றே கருது கின்றோம்.

ஆதலால் யாரும், அரசியல் கிளர்ச்சிக்காரர்களின் பசப்பு வார்த்தை களைக் கேட்டு ஏமாறாமல், நமது தேசமக்களைப் பிடித்து வாட்டிக் கொண்டி ருக்கின்ற சாதி, மத பேதங்களை ஒழித்துச் சமதர்மத்தை உண்டாக்கப் பாடுபடவேண்டியதே நமது கடமையாகுமென்பதையும், இதுவே தேச நன் மையை உண்மையாகவே கருதுகின்ற ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய முதல் வேலை என்பதையும் எடுத்துக் காட்ட விரும்புகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 24.04.1932**



# வக்கீல்களின் ஜாதி ஆணவம்

மதுரையில் உள்ள பார்ப்பன வக்கீல்களும், கோயமுத்தூரில் உள்ள பார்ப்பன வக்கீல்களும் சென்னை அரசாங்கத்தின் சட்ட மந்திரி கனம் கிருஷ்ண நாயர் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பதில்லையென்று தங்கள் சங்கத்தில் தீர்மானம் செய்தனர். ஆனால் கோயமுத்தூரிலுள்ள பார்ப்பன ரல்லாத வக்கீல்கள், தங்கள் சங்கத்தில் இவ்வாறு தீர்மானம் நிறைவேறிய தற்குப் பார்ப்பன வக்கீல்களின் ஜாதி ஆணவமே காரணமென்பதை அறிந்து, பார்ப்பனரல்லாத வக்கீல் சங்கம் ஒன்றை ஸ்தாபனம் பண்ணினார்கள். இவ்வாறு பார்ப்பனரல்லாத வக்கீல்கள் செய்த காரியத்தை நாம் வரவேற் கின்றோம்.

நமது மாகாண முழுவதிலும் உள்ள வக்கீல் சங்கங்கள் எல்லாவற்றிலும் பார்ப்பனர்களின் ஆதிக்கம் தான் மிகுந்து நிற்கின்றது. ஆகையால் மாகாணத் தில் உள்ள எல்லா வக்கீல்களுமே பார்ப்பனரல்லாதார் நன்மைக்கென ஒரு தனிச் சங்கம் ஏற்படுத்திக் கொள்ளுவது மிகவும் நன்மையேயாகும். இனி கனம் கிருஷ்ணன் நாயருக்கு வரவேற்பு அளிப்பது கூடாது என்று தீர்மானித்த வக்கீல்களின் மனப்போக்கையும் அவர்கள் செய்த காரியம் உண்மையில் தேசாபிமானத்திற்கு அறிகுறியான காரியமா? அல்லது ஜாதி ஆணவத்திற்கு அடையாளமான காரியமா? என்பதைப் பற்றிக் கொஞ்சம் ஆலோசித்துப் பார்ப்போம்.

அடக்குமுறைச் சட்டங்களை அமல் நடத்திவரும் அரசாங்கத்தில் சட்ட மந்திரியாயிருக்கும் காரணத்தால் கனம் கிருஷ்ண நாயருக்கு வரவேற்பு அளிக்கக்கூடாது என்பதே மேற்படி வக்கீல் சங்கங்களின் மனக்கருத்து என்று சொல்லப்படுகிறது.

ஆனால் அடக்குமுறையை அனுசரித்துவரும் அரசாங்கத்தின் ஆதிக்கத்திலுள்ள கோர்ட்டுகளில் ஆஜராகிப் பணம் சம்பாதிக்கும் இவர்கள் அந்த அரசாங்கத்தின் சட்ட மந்திரியை மாத்திரம் வெறுப்பதில் என்ன அர்த்த மிருக்கிறது? என்று யோசித்துப்பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

உண்மையில் இந்த வக்கீல் கூட்டத்தார்கள் அரசாங்கத்தின் செய் கையை ஆதரிக்காதவர்களாயிருந்தால், உடனே வக்கீல் தொழிலை விட்டு வெளியேறவேண்டும். இப்படி யில்லாமல் பணத்திற்காகப் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அடிபணிவதும், பணமில்லாமைக்கு ஒரு தீர்மானம் செய்வதும் எவ்வளவு மோசமான செய்கையாகும்?

மதுரை வக்கீல் சங்கப் பார்ப்பனர்களும், கோயமுத்தூர் வக்கீல் சங்கப் பார்ப்பனர்களும், கனம் கிருஷ்ண நாயருக்கு வரவேற்பு அளிக்க மறுத் தமைக்குக் காரணம் ஜாதி ஆணவத்தைத் தவிர வேறு அரசியல் காரணம் ஒன்றுமே இல்லையென்பதை சர். சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் சட்ட மந்திரியாயிருந்த காலத்தில் நடந்த காரியங்களைக் கொஞ்சம் நினைத்துப் பார்ப்பவர்கள் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

சர். சி. பி. ரா. அய்யர் அவர்கள் சட்டமந்திரியாயிருந்த காலத்திலும், தற்போது நடப்பது போன்ற அடக்குமுறைகள் நடந்து கொண்டு தானிருந்தன. ஆனால், அந்தக் காலத்தில் அவர் சுற்றுப் பிரயாணம் செய்தபோது, எந்த வக்கீல் சங்கங்களும் அவரைப் பகிஷ்கரிக்கவில்லை. ஆங்காங்கே அவருக்குச் சிறப்பாகவே வரவேற்பு அளித்தனர். இதற்குக் காரணம், அவர் பார்ப்பனர் என்பதா? அல்லவா? என்றுதான் கேட்கின்றோம். இப்பொழுதுள்ள சர். கிருஷ்ண நாயரோ பார்ப்பனரல்லாதார். ஆகவே பார்ப்பனரல்லாத சட்ட மந்திரியை கௌரவிப்பது தங்கள் ஜாதிக் கொள்கைக்கு ஏற்றதாகாது என்ற அகங்கார புத்தியால்தான் பார்ப்பன வக்கீல்கள் வரவேற்பு அளிக்கக்கூடாது என்று தீர்மானித்தார்கள் என்பதில் யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை.

இத்தகைய மனப்பான்மையுள்ள வக்கீல்களும், மற்றும் ஜாதி அகங்காரம் கொண்ட வைதீகப் பார்ப்பனர்களும், இயற்கையிலேயே அகங் காரம் பிடித்த பணக்காரார்களும்தான் சுயராஜ்யத்திற்காகப் பாடுபடுகின்றார்கள். இவர்கள் கையில் தேசத்தின் அதிகாரப் பதவி கிடைத்துவிட்டால் பார்ப்பன ரல்லாத ஏழை மக்களின் கதி என்னாகு மென்பதைக் கவனிக்க வேண்டு கிறோம்.

பார்ப்பனரல்லாத கட்சியினரையும், சுயமரியாதைக் கட்சியினரையும் வகுப்புத் துவேஷிகள் என்று புரளி பண்ணிக் கொண்டுத் திரியும் புத்தி சாலிகள், உண்மையில் வகுப்புத் துவேஷிகள் யார்? என்பதை இப்பொழு தாவது உணர்வார்களா? என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 24.04.1932**



# சுயமரியாதையும் காங்கிரசும்

## சுயமரியாதை

திரு. காந்தியால் 1921ஆம் வருஷம் ஆரம்பிக்கப்பட்ட ஒத்துழை யாமை இயக்கமானது அரசியல் கொடுமைகள் ஒழிப்பதோடு பார்ப்பனக் கொடுமைகளையும் ஒருவாறு ஒழிக்கும்படியான மாதிரியில் சில கொள்கை கள் கொண்டிருந்தாலும் நம் போன்றவர்களின் ஆசைக்கும், அவசரத்திற்கும் தக்கபடி அது காணப்பட்டதை முன்னிட்டும், அவ்வியக்கத்தில் கலந்து மனப்பூர்வமாக நாலைந்து வருஷ காலம் உழைத்ததின் மூலமும் அது சமயம் பார்ப்பனர்களுடைய நெருங்கிய சம்பந்தம் இருக்க நேர்ந்ததன் மூலமும், அதன் பலாபலன்களை நாமும் ஒரு பங்கு அனுபவிக்க நேர்ந்ததின் மூலமும், அவ்வியக்கத்தின் போக்கைப் பார்ப்பனர்கள் எந்த வழியில் திருப்பி அதன் பலனை எப்படி அடைய முயற்சித்தார்கள், முயற்சிக்கின்றார்கள் என்பதை நன்றாய் அறிய நமக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அதிலிருந்து நமது போக்கையும் ஒரு வகையில் ஒன்றுபடுத்தி ஒரே வழியில் திருப்பி யோசிக்க வேண்டிய அவசிய முண்டாயிற்று. அங்கனம் யோசித்ததின் பலனாக நமக்குக் கிடைத்த பலன் என்னவென்றால் நமது மக்கள் அரசியல் விஷயமாய் கூச்சல் போடுவதும், முயற்சிகள் செய்வதும் சற்றும் நமக்குப் பயன்படுவதல்ல என்பதும், இவைகள் பார்ப்பனர்கள் நம் மீது செலுத்தி வரும் தங்கள் உயர்வை யும், ஆதிக்கத்தையும் நிலைநிறுத்திக் கொள்ளும் சூழ்ச்சிக்கேது உண்டாக் கப்பட்டிருக்கிறதே தவிர வேறல்லவென்றும், இன்றைய நிலையில் நமது மக்களுக்கு வேண்டியவைகளெல்லாம் பகுத்தறிவும் மானமுமே முக்கிய மானதென்றும், இன்றைய பார்ப்பன ஆதிக்கத்திற்கு முக்கிய காரணமும், அந்நிய ஆட்சியின் கொடுமைக்குக் காரணமும், நமது மக்களுக்குப் பகுத்தறிவும் தன் மதிப்பு உணர்ச்சியும் தடைப்படுத்தப் பட்டிருப்பதே தானென்றும் கண்டு பிடித்தோம். இது மாத்திர மல்லாமல் நமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கும், சமத்துவத்திற்கும் வேண்டிய வேலையெல்லாம் செய்தும் பார்த்து விட்டோம். அதாவது பணம் கொடுத்தோம், சுக சௌக்கியம் விட்டோம், சிறை சென்றோம் இன்னும் மனிதனால் உயிரைத் தவிர வேறு என்ன என்ன சாதனங்களை அலட்சிமாய் கருத முடியுமோ அவ்வளவும்



RangaRakes tamilnavarasam.com

செய்தோம். இப்படிச் செய்ததால் ஒருவரல்ல, இருவரல்ல ஆயிரக்கணக்கான பேர் லட்சக்கணக்கான ரூபாய்களையும் நட்டமடைந்து ஒரு தடவை மாத்திர மல்லாமல் பல தடவை சிறையும் சென்றோம்.

இவ்வளவு செய்ததின் பலனாகவும் கடுகளவு கூட முற்போக்கு அடைய முடியாமல் போனதையும் கண்கூடாகக் கண்டோம். அதன் பிறகே மற்ற நாட்டு விடுதலை நிகழ்ச்சிகளை ஆராயத் துடங்கியதில் அவற்றிலும் அநேகமாய் ஒவ்வொரு நாடும் நம்மைப் போலவே வேறு பல முயற்சிகளை எவ்வளவோ செய்து பார்த்தும் முடியாமற் போன காலங்களில் எந்த முடிவைக் கண்டு பிடித்து அந்த முயற்சியிலேயே யிறங்கி கடைசியாக விடுதலைப் பெற்று சமத்துவம் அடைந்ததாகவும் கண்டோமோ அதையே பின்பற்ற நாமும் ஆசைப்பட்டோம்.

அன்றியும் பெருமையும் வலிமையும் கொண்ட நாடு என்று சொல்லப்பட்ட ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களின் உன்னத நிலைமைக்கு அவற்றின் பகுத்தறிவு வளர்ச்சியும், சுயமரியாதை உணர்ச்சி யுமே முக்கியமான தென்பதையும் கண்டோம். சமீப காலம் வரை கஷ்டப் பட்டுக் கொண்டிருந்த துருக்கி, சைனா, ஜப்பான் முதலிய தேசங்கள் வல்லரசுத் தன்மை பெற்றதற்கு அவற்றின் சுயமரியாதை உணர்ச்சி என்பதையும் கண்டோம். அதன் பிறகே நாமும் நமது தேசத்தின் விடுதலைக்கும், சமத்துவத்திற்கும், பகுத்தறிவும் தன்மதிப்புமே பிரதானம் என்பதாகக் கருதி அதன் முயற்சிக்குச் **சுயமரியாதை இயக்கம்** எனப் பெயரிட்டோம். இவ் வியக்கம் எந்த ஒரு தனிப்பட்ட நாட்டிற்கோ, சமூகத்திற்கோ வென்பதாக இல்லாமல் பொதுவாக தாழ்த்தப்பட்டும், இழிவு செய்யப்பட்டும், தன்மான உணர்ச்சி உண்டாகாமல் அமுத்தப்பட்டும், பகுத்தறிவு வளர்ச்சி செய்யாமல் தடைசெய்யப்பட்டும் இருக்கும் எல்லா மக்களுக்கும், கொடுங்கோன்மையில் அடக்கி ஆளப்பட்டு வரும் மக்களுக்கும் பயன்படும்படியான முறையில் அமைக்க விரும்பியே இதில் பிரவேசித்துள்ளோம். பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுத்து மக்களெல்லோரும் சமத்துவம் என்கின்ற உண்மையான மனிதத் தன்மைக்குத் தாராளமாய் இடங்கொடுக்கின்ற ஒவ்வொருவருக்கும் இடமும் ஒதுக்கி வைக்கும் எண்ணங் கொண்டே இம்முயற்சிலீடுபட்டோம் என்றும், இம்முயற்சியானது மிகவும் கஷ்டமானதென்றும், அளவுக்கு மீறிய துன்பத் தையும் தொல்லைகளையும் விளைவிக்கக் கூடியதென்றும் நாம் நன்றாய் உணர்கின்றோமாயினும், இது வெற்றி பெற்றாலொழிய நமது சமூக மாத்திர மல்ல, நமது நாடு மாத்திரமல்ல, உலக சமூகம் எல்லாவற்றிற்கும் உலக முழுமைக்கும் நிற்பயமான விடுதலையோ, சாத்தியமோ, ஓய்வோ இல்லை என்கின்ற முடிவினாலும், இம்முயற்சி இன்றைய பெரியோர் களெனப்படும் வயது சென்றவர்களுடைய ஒத்துழைப்பும், ஆதரவும் பெறமுடியாவிட்டா லும் பெரும்பான்மையான பரிசுத்தத் தன்மையுடைய வாலிபர்களின் கூட்டுறவும் அனுதாபமும், ஆதரிப்பும் மலிந்து கிடப்பதாலும் துணிந்து இறங்கிவிட்டோம்; முடிவில் இதனுடைய வெற்றி தோல்வியைப் பற்றி நாம் அதிகமான கவலை எடுத்துக் கொள்ளாமல் இந்த முயற்சி சரியா, தப்பா என்பதைப் பற்றி மாத்திரம் தீர யோசித்து தைரியமாயிறங்கி இருக்கின்றோம்.

### காங்கிரஸ்

காங்கிரஸ் என்பது பாமர மக்களைப் படித்த கூட்டத்தார் ஏமாற்றுவதற் கென்று ஏற்படுத்திக் கொண்ட ஸ்தாபனம் என்றும் அதிலும் அப்படித்த கூட்டத்தார் என்பதில் முக்கியமானவர்கள் நமது தென்னாட்டு பார்ப்பனர்க ளேயென்றும், அவர்கள் இஷ்டப்படியெல்லாம் ஏறக்குறைய காங்கிரஸ் ஆரம்பமான காலமுதல் கொண்டு ஆட்டப்பட்டு வந்திருக்கின்றது என்றும், காங்கிரஸ் என்பதாக ஒன்று நமது நாட்டில் ஏற்பட்ட பிறகே மக்களின் ஒற்றுமை குலையவும், ஒழுக்கம் கெடவும் ஏழை மக்களுக்கு பல வழிகளிலும் கஷ்டம் ஏற்படவுமான காரியங்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றதென்றும் கோபுரத்தின் மீதிருந்தும் கூறுவேன்.

உண்மையை ஒளிக்காமல் பேச வேண்டுமானால் நமது நாட்டில் காங்கிரஸ் என்கின்ற ஒரு கொடிய எமன் போன்ற இந்த ஸ்தாபனம் இருக்கும் வரையில் ஏழை மக்கள் விடுதலை என்பதை கனவிலும் நினைக்க வேண்டிய தில்லை என்றே கல்லிலும் எழுதி விடுவோம்.

வெள்ளைக்காரனுடைய கொடுமையான ஆட்சிமுறை ஏதாவது ஒரு காலத்திலாவது நமது நாட்டை விட்டு ஒழிய வேண்டுமானால் முதலாவது காங்கிரஸ் ஒழிந்து தீர வேண்டும். பிறகுதான் “இந்து மதமும் பார்ப்பன ஆதிக்கமும் ஒழிய வேண்டும்” என்று சொல்லுவோம். ஏனெனில் ‘இந்து’ மதத்தின் பெயரால் பார்ப்பனர்கள் மாத்திரம் தான் மக்களை ஏமாற்றி பாழ்ப் படுத்த முடியும். காங்கிரசோ அப்படியில்லை. காங்கிரசின் பெயரால் எல்லா வகுப்பு அயோக்கியர்களும், அன்னக்காவடிகளும் அனாமதேயங்களும், காலிகளும் மக்களை ஏமாற்ற வசதி இருக்கின்றது.

‘இந்து’ மதம் ஒரு மனிதன் செத்தபிறகு மோட்சம் (விடுதலை) என்கின்ற புரட்டான தத்துவத்தின் மீது கட்டப்பட்ட பொய்க் கோட்டை யாகும். காங்கிரசோ உயிருடன் இருக்கும் போதே விடுதலை (மோட்சம்) கொடுப்பது என்கின்ற புரட்டான தத்துவத்தின் மீது கட்டப்பட்ட பொய்க் கோட்டையாகும். பாமர மக்களும் ஏழை மக்களும் இதை வெகு சுலபத்தில் நம்பி ஏமாந்து போகத் தக்கபடி தந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதற்கு தக்கபடி அரசாங்கத்தின் மீது மக்களுக்கு வெருப்பு ஏற்படும் படி பிரசாரங்கள் செய்ய வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே ஜனங்கள் ஏமார்ந்து போவதில் அதிசயமில்லை.

**குடி அரசு - கட்டுரை - 01.05.1932**



RangaRakes tamilnavarasam.com

# எட்டாவதாண்டு

நமது ‘குடி அரசுக்கு’ ஏழு ஆண்டுகள் நிறைவேறி, இன்று எட்டாவது ஆண்டின் முதல் இதழ் வெளிவருகிறது. நமது ‘குடி அரசு’ பிறந்தது முதல் இது வரையிலும் நாட்டில் உண்டாக்கியிருக்கும் மாறுதலை எதிரிகளும் வயிற்றெரிச்சலோடு ஒப்புக்கொண்டுதான் தீருவார்கள்.

நமது ‘குடி அரசு’ மக்களுடைய உயர்வு தாழ்வுக்குக் காரணமான எல்லா மாசுகளையும் போக்கிச் சமத்துவத்தை உண்டாக்கும் கொள்கையுடன் ஏற்பட்டது என்பதை வாசகர்களுக்கு நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

முதலில் புரோகிதப் புரட்டில் உள்ள சூழ்ச்சிகளையும் அர்த்தமற்ற செயல்களையும் வெளிப்படுத்திச் சிக்கனத்தையும், மூட நம்பிக்கையைப் போக்கிப் பகுத்தறிவையும் போதித்தது.

இரண்டாவது மக்களிடம் ஜாதி பேதத்தையும் எண்ணற்ற மூடநம்பிக்கைகளையும் உண்டாக்குவதற்குக் காரணமாக இருக்கும் வேதம், புராணம், இதிகாசம், ஸ்மிருதி முதலிய சாஸ்திரங்களின் ஆபாசங்களையும் பொய்யுரைகளையும், அவைகள் பார்ப்பனர்களின் சுயநலத்திற்காக உண்டாக் கப்பட்டவை என்பதையும் எடுத்துக்காட்டிற்று.

மூன்றாவது மக்கள் ஏமாறுவதற்கும், மக்களை ஏமாற்றுவதற்கும் காரணமான அவதாரம், நாயன்மார், ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள், ஜீயர்கள், சந்நிதானங்கள், பாதிரிகள், முல்லாக்கள், புரோகிதர்கள், குருக்கள் முதலிய வர்களின் சூழ்ச்சிகளையும், மோசங்களையும் வெளிப்படுத்திற்று.

கடைசியாக, கடவுள், ஆன்மா, மோட்சம், நரகம், மறுபிறப்பு முதலிய வற்றில் உள்ள சூழ்ச்சிகளையும் புரட்டுகளையும், இவ்வார்த்தைகளில் உள்ள அர்த்தமற்ற தன்மைகளையும் வெளிப்படுத்தியது.

மேற்கூறிய விஷயங்களைப் பிரச்சாரம் பண்ண நாம் எல்லா மதங்க ளையும் தாக்க வேண்டியதிருந்தது. மதங்களைத் தாக்காமல் மேற்கூறிய காரியங்களைச் செய்யவே முடியாது.



‘கடவுள்’, ‘வேதம்’, ‘ஆன்மா’, ‘மோட்சம்’, ‘நரகம்’, ‘மறுபிறப்பு’, ‘அவதாரம்’ ஆகிய புரட்டுகள் எல்லாவற்றையுமோ, அல்லது இவைகளில் சிலவற்றையோ, அல்லது பலவற்றையோ, அல்லது ஒன்றையோ அஸ்திவார மாகக் கொண்டிராத மதமே உலகில் இல்லை. ஆகவே மேற்கூறிய அஸ்தி வாரங்களையெல்லாம் அகழ்ந்தெரிய வேண்டுமானால் மதங்களையும் அடியோடு அழித்தே ஆகவேண்டுமென்ற முடிவுக்கு வந்தது.

பெண்களின் சமத்துவத்திற்கும் சுதந்திரத்திற்கும் “குடி அரசு” செய்திருக்கும் அவ்வளவு வேலை இந்தியாவில் வேறு எந்தப் பத்திரிகையும் செய்ததில்லையென்று தோள்தட்டிக் கூறலாம். இன்று நமது நாட்டில் நடைபெறும் எந்தப் பெண்கள் கூட்டத்திலும் சுயமரியாதைக்கான தீர்மானங் கள் நிறைவேற்றப்படுவதற்குக் ‘குடி அரசின்’ பிரசாரமே காரணமாகும்.

‘குடி அரசு’ இவ்வாறு மத விஷயத்திலும், சமூக விஷயத்திலும், பங்கு எடுத்துக் கொண்டதோடு மாத்திரம் நிற்காமல் அரசியல் விஷயத்திலும் மக்கள் ஏமாறாமலிருக்குமாறு அடிக்கடி எச்சரிக்கத் தவறவில்லை.

அரசியல்வாதிகளின் புரட்டுகளையும், அயோக்கியத்தனங்களையும், தாட்சண்யமில்லாமல் பொது ஜனங்களுக்குக் கூறி வந்தது. இதன் பலனாகத் தென்னாட்டுப் பார்ப்பனர்களுக்குப் பொது மேடைகளில் இடங்கிடைக்காத நிலைமையும் உண்டாயிற்று. இன்று தென்னாட்டில் வருணாச்சிரம தருமி களுக்கும், காங்கிரஸ்காரர்களுக்கும் செல்வாக்கு இல்லாமலிருப் பதற்குக் காரணம் ‘குடி அரசின்’ பிரசாரமேயாகும். சுருங்கக் கூறினால் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் மதப் பிரசாரத்தையும், வருணாச்சிரம தருமப் பிரசாரத்தையும், முதலாளி ஆதிக்கப் பிரசாரத்தையும் ஆரம்ப முதல் இன்று வரையிலும் வெட்ட வெளிச்சமாக்கிப் பொது ஜனங்களை ஏமாறாமல் இருக்கும்படி செய்து வருவதும், இக்காரணங்களில் காங்கிரஸ் ஸ்தாபனத்தை அடியோடு அழித்தால் ஒழிய நமது நாட்டுக்குச் சமதரும ராஜியம் கிடைப்பதற்கு வழி யில்லை என்று பிரசாரம் பண்ணி வருவதும் நமது ‘குடி அரசு’ ஒன்றேயாகும்.

இவ்வாறு ‘குடி அரசு’ மத விஷயத்திலும், சமூக விஷயத்திலும் அரசியல் விஷயத்திலும் உள்ள சூழ்ச்சிகளை வெளிப்படுத்தி வந்த காரணத்தினால் இதற்கு உண்டான எதிர்ப்புகள் எண்ணற்றவை.

‘மத பக்தர்’கள் எல்லோரும் ‘குடிஅரசு’ வாலிபர்களையெல்லாம் கெடுக்கிற தென்றும் ‘குடி அரசு’ பெண்களையெல்லாம் கெடுத்து விடுகிறது என்றும் ‘குடி அரசு’ப் பிரசாரத்தால் உலகமே முழுகிப் போய் விடுமென்றும் மறுபடியும் ‘கடவுள்’ அவதாரம் பண்ணித்தான் ‘குடி அரசையும்’ அதை ஆதரிக்கும் சுயமரியாதைக்காரர்களையும் தொலைக்க வேண்டுமென்றும் ஊர் ஊராகப் பிரசாரம் பண்ணினார்கள்; பத்திரிகைகளில் எழுதினார்கள்; புதிய



RangaRakes tamilnavarasam.com

பத்திரிகைகளும் ஆரம்பித்து நடத்தினார்கள்; அவர்கள் நம்பும் 'ஆண்ட வனை' நோக்கித் 'தவமும்' கிடந்தார்கள்.

இரண்டாவது, 'குடி அரசு' தோன்றுவதற்கு முன் சமூகச் சீர்திருத்தக் காரர்களாக விளங்கி வந்தவர்களெல்லாம் 'குடி அரசை'க் கண்டு நடு நடுங்கினார்கள். 'குடி அரசு' சீர்திருத்த விஷயத்தில் அளவு கடந்து செல்லு கிறதென்றும், இவ்வாறு சென்றால் உள்ள சீர்திருத்தமும் அழிந்து விடும் என்றும், மதங்களையெல்லாம் அழித்துவிட்டுச் சீர்திருத்தம் பண்ணுவது முடியாத செயலென்றும், ஆப்கானிஸ்தானத்தில் மாஜி அரசர் அமனுல்லா கான் அதிதீவிரச் சீர்திருத்தம் செய்ய முயன்றதனால் ராஜியத்தை இழக்கும் படி நேர்ந்ததைப் போல 'குடி அரசு'க் கொள்கையும் மதிப்பிழந்து புறக்கணிக் கப்படுமென்றும், பலவாறாக பயமுறுத்தல் பிரசாரமும், அவதூறுப் பிரசாரமும் பண்ணினார்கள்.

மூன்றாவதாகப் பார்ப்பனர்களும், காங்கிரஸ்காரர்களும் பொறாமைக் காரர்களும் 'குடி அரசை' ஒழிப்பதற்குச் செய்த சூழ்ச்சிகள் எண்ணத் தொலையாதவை. 'குடி அரசை'த் தேசத் துரோகப் பத்திரிகையென்றும் அர சாங்க தாசப் பத்திரிகையென்றும், ஜாதித்துவேஷப் பத்திரிகையென்றும், நாஸ்திகப் பத்திரிகையென்றும் பலவாறு பொது மக்களிடம் பிரசாரம் பண்ணி னார்கள். 'குடி அரசு' பொது உடைமைப் பிரசாரம் பண்ணுகிறதென்றும், ஆகையால் அதையும் அதைச் சேர்ந்த கூட்டத்தாரையும் அடக்காவிட்டால் நாட்டில் கலகமும் கொள்ளையும் உண்டாகுமென்றும், அரசாங்கத்தாரிடமும், பொது மேடைகளிலும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் பிரசாரம் பண்ணினார்கள்.

அதிலும் சென்ற இரண்டு ஆண்டுகளில், அதற்கு முந்திய ஆண்டு களைக் காட்டிலும் 'குடி அரசை'யும் அதன் மூலம் உண்டான சுயமரியாதை இயக்கத்தையும் அழிக்கப்பாடுபட்டவர்களின் முயற்சி மிகவும் அதிகம் என்றே கூறவேண்டும். நமது நாட்டில் உப்புச் சத்தியாக்கிரகத்திலும், சட்ட மறுப்பிலும் ஈடுபட்ட பார்ப்பனர்களும், சில பார்ப்பனரல்லாதாரும் 'குடி அரசை'ப் பற்றியும் 'குடி அரசை' ஆதரிப்போரைப் பற்றியும், ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு மேடையிலும், கூட்டத்திலும், நாள் தவறாமல், நாழிகை தவறாமல் அவதூறுப் பிரசாரம் பண்ணினார்கள் நம்மவர்களுக்குள்ளேயே சிலர், புத்தி தடுமாற்றத்தினாலேயோ, அல்லது சுய நலத்தினாலேயோ, அல்லது வேறு எந்தக் காரணத்தினாலேயோ எதிரிகளுடன் சேர்ந்து கொண்டும், 'தேசீய சுயமரியாதை' என்ற புதுப் பெயர் வைத்துக் கொண்டும் 'குடி அரசை'யும் சுயமரியாதை இயக்கத்தையும் எதிர்த்தார்கள். இவ்வாறு எவ்வளவு பாடுபட்டுங்கூட அதன் சந்தாதாரர்களின் எண்ணிக்கையைச் சிறிதளவு குறைக்க முடிந்ததேயொழிய வேறு இதன் கொள்கைகளின் நமது எதிரிகளால் ஒரு உரோமத்தைக் கூட அசைக்கமுடியவில்லை என்பது வாசகர்களுக்குத் தெரியாத செய்தியல்ல.



'குடி அரசு' தோன்றிய நாள் முதல் இது வரையிலும் தனது கொள்கையிலிருந்து சிறிதும் வழுவாமல், உழைத்து வருவதற்குக் காரணம், யாருடைய தயவையும் தாட்சண்யத்தையும் எதிர்பாராமல் வேலை செய்வதே யாகும். ஒரு கொள்கையைப் பிரசாரம் பண்ண ஏற்பட்ட எந்தப் பத்திரிகை யாகட்டும், எந்த ஊழியராகட்டும், பிறருடைய தயவு தாட்சண்யத்திற்குக் கட்டுப்படாமலிருந்தால் தான் கொள்கைக்காக உழைக்க முடியும் என்ற தத்துவத்திலிருந்து சிறிதும் பிசகாமலே 'குடி அரசு' இது வரையிலும் இருந்து வருகிறது.

எண்ணற்ற எதிர்ப்புக்களிருந்தும் 'குடி அரசு' பொது ஜனங்களின் கவனத்தை நாளுக்கு நாள் எதிர்பார்ப்பதற்கு அதிகமாகவே கவர்ந்து வருவதற்கு அதன் அசைக்கமுடியாததும், பகுத்தறிவுக்குப் பொருத்தமானதும் உண்மையில் நாட்டில் சமதருமத்தை யுண்டாக்கத் தகுந்ததும் ஆகிய கொள்கைகளே காரணமாகும் என்று நாம் கூறுவது மிகையேயாகும்.

ஆரம்பத்தில் 'குடி அரசை'த் தங்களுடைய தேர்தல் பிரசாரத்திற்கு உபயோகப்படுத்தி கொள்ளாலாமென்று கருதி அதன் கொள்கைகளை ஒப்புக் கொள்வது போலச் சிலர் நடித்து வந்தார்களானாலும், நாளடைவில் அவர்கள் 'குடி அரசின்' உண்மைக் கொள்கைகளையும் அது யாருடைய தயவையும் போற்றுதல், தூற்றுதல்களையும் எதிர்பார்ப்பதல்ல என்பதையும் அறிந்த பின் "குடி அரசு" படிப்பதையும் அதன் கொள்கைகளைப் பற்றிப் பேசுவதையும் விட்டு விட்டதோடு மாத்திரமல்லாமல் மறைமுகமாகச் சிலர் எதிர்ப்பிரசாரங் கூடச் செய்ய ஆரம்பித்தார்கள் என்னும் விஷயம் 'குடி அரசு' வாசகர்களில் பலருக்குத் தெரிந்திருக்கலாம். இப்படி இருந்தும் 'குடி அரசி'ன் கொள்கை களுக்கும் 'குடி அரசு'க்கும் ஒரு குறைவும் உண்டாகவில்லை.

வைதீகர்களும், பார்ப்பனர்களும், காங்கிரஸ்காரர்களும் 'குடி அரசை' உபயோகப்படுத்திக் கொள்ள எதிர்பார்த்து ஏமாந்தவர்களும் 'குடி அரசை' ஒழிக்கப் பாடுபட்டாலும், ஆரம்பத்தில் 'குடி அரசி'ன் சீர்திருத்தக் கொள்கை களை ஆதரித்து வந்த பணக்காரர்களும், உத்தியோகஸ்தர்களும், மந்திரி மார்களும் 'குடி அரசை' ஆதரிக்கவும், சுயமரியாதைக் கூட்டங்களுக்கு வரவும் பயந்து ஒதுங்கியிருந்தாலும் பணக்காரர்களில் சில உண்மையான சுயமரியாதைப் பற்றுடையவர்களைத் தவிர மற்ற எல்லாப் பணக்காரர்களும் ஜமீன்தாரர்களும் பெரிய உத்தியோகஸ்தர்களும் இவர்களுடைய கையாட் களாக வேலை செய்யும் ராஜ்யவாதிகளும் 'குடி அரசு'க் கொள்கையை முந்திய ஆண்டுகளைவிடச் சென்ற ஆண்டில் அதிகமாக எதிர்த்துப் போராடி னாலும், அதன் வேலை சென்ற ஆண்டிலேயே அதிகமாக நடைபெற்றி ருக்கிறது என்று தைரியமாகவே கூறவேண்டும். உதாரணமாகச் சென்ற ஆண்டில் நடைபெற்ற சுயமரியாதை மகாநாடுகளை எடுத்துக்கொள்ளலாம்.



RangaRakes tamilnavarasam.com

சென்ற ஆண்டில் தூத்துக்குடியில் ஒரு சுயமரியாதை மகாநாடு காரைக் குடியில் ஒரு சுயமரியாதை மகாநாடு, பொறையாற்றில் ஒரு சுயமரியாதை மகாநாடு, நன்னிலத்தில் ஒரு சுயமரியாதை மகாநாடு, லாலு குடியில் இரண்டு சுயமரியாதை மகாநாடுகள், விருதுநகரில் மாகாணச் சுயமரியாதை மகாநாடு, நாகப்பட்டினத்தில் ஒரு சுயமரியாதை மகாநாடு, சென்னையில் ஒரு சுய மரியாதை மகாநாடு ஆக பத்து சுயமரியாதை மகாநாடுகள் நடந்திருக்கின்றன. இவைகளைத் தவிர நாடெங்கும் நடைபெற்றுள்ள பொதுக்கூட்டங்கள் எண்ணற்றவை. இந்த மகாநாடுகளின் பயனாலும் பொதுக் கூட்டங்களின் பயனாலும் ஆயிரக்கணக்கான மக்கள் சுயமரியாதை யியக்கத்தின் உண்மைக் கொள்கைகளையறிந்து, அவைகளைக் கூடிய வரையிலும் பின்பற்றி நடக்கக் கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள் என்பதையும் யார் மறுக்க முடியும்? இவற்றுக்கெல்லாம் 'குடி அரசின்' அச்சமற்ற ஊழியம் அன்றோ காரணம்.

சுருங்கக் கூறவேண்டுமானால் சென்ற ஏழாண்டுகளாகக் "குடி அரசு" தனது கொள்கையை விட்டு நழுவாமலும் யாருடைய தயவுக்கும் கட்டுப் படாமலும், எவருக்கும் அஞ்சாமலும், உழைத்து வந்ததன் பலன் வீண் போகாமல் நாளுக்கு நாள் அதிகமான மக்கள் - ஆரம்பத்தில் அதன் கொள்கைகளில் நம்பிக்கையில்லாமலிருந்தவர்கள் கூட அதன் கொள்கை களைப் பற்றிச் சிந்திக்கவும் பின்பற்றவும் முன் வருகிறார்கள் என்ற உண் மையை அறியும் போது 'குடி அரசும்' அதன் வாசகர்களும், பெருமையும், மேலும் மேலும் உறுதியோடும், அஞ்சாமையோடும் பிரசாரம் பண்ணுவதில் ஊக்கமும், தைரியமும் அடைய வேண்டுமேயொழிய வேறு தளர்ச்சியோ, கவலையோ படவேண்டிய அவசியமில்லையென்றே நிச்சயமாகக் கூறு வோம்.

மற்றொரு விஷயத்தையும் 'குடி அரசின்' வெற்றிக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். சென்ற நாலைந்து மாதங்களாக நமது ஆசிரியர் நமது நாட்டில் இல்லாமல் மேல் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்திற்காக தோழர் இராமநாதன் அவர்களுடன் சென்றிருந்தும் 'குடி அரசி'ன் வளர்ச்சியில் ஒரு விதமான குறைவும் ஏற்படவில்லை என்பதைக் கொண்டும் அதன் கொள்கைக்கு தேசத்தில் எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பதை அறியலாம்.

இனி எதிர்காலத்தில் சென்ற ஆண்டுகளைவிடக் "குடி அரசின்" வளர்ச்சியும் அதன் கொள்கைகளுக்கு ஆதரவும் அதிகப்படும் என்றே எதிர்பார்க்கிறோம். நமது ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி அவர்களும், தோழர் எஸ். ராமநாதன் அவர்களும் மேல் நாட்டினர் மத சமுதாய விஷயங்களில் எவ்வாறு முன்னேறியிருக்கின்றார்கள் என்பதையும், அவ்வாறு முன்னேறி யிருப்பதற்குக் காரணங்கள் என்ன என்பதையும் நேரில் பார்த்து அறிந்து கொள்ளும் பொருட்டு மேல் நாடுகளில் இப்பொழுது சுற்றுப்பிரயாணம் பண்ணிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் சுற்றுப் பிரயாணத்திலிருந்து



திரும்பி வந்தவுடன் 'குடி அரசின்' கொள்கைக்காக வேண்டி இன்னும் அதி தீவிரமாக உழைப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஆகவே இனி வருங் காலத்தில் பொது ஜனங்களின் கவனமும், வாசகர்களின் ஆதரவும் 'குடி அரசி'னிடமும் அதன் கொள்கைகளிடமும் அதிகமாகவே ஏற்படுமென்று உறுதியாக நம்புகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 01.05.1932**



RangaRakes

tamilnavarasam.com

# கோயில் நுழைவும் தீண்டாமையும்

தீண்டாமை என்னும் வழக்கம் மனிதத் தன்மைக்கு விரோதமான தென்பதையும், அதுவே நமது நாட்டு மக்களைப் பல்வேறு பிரிவினராக்கி வைத்துக் கலகத் தன்மையை உண்டாக்கி வருகிறதென்பதையும், தீண்டாமை ஒழிவதன் மூலந்தான் நாட்டில் ஒற்றுமையும் சகோதரத்துவமும் நிலவமுடியு மென்பதையும் இப்பொழுது அனேகமாக எல்லாக் கட்சியினரும் ஒப்புக் கொண்டுவிட்டனர். தீண்டாமையை நாட்டை விட்டு அகற்றி, அதனால் துன்பப்பட்டுக் கொண்டிருந்த மக்களுக்குச் சமூக சமத்துவமளிப்பதற்காகப் பல கட்சியினரும் பேச்சளவிலும் எழுத்தளவிலுமாவது முயற்சி செய்ய முன் வந்திருக்கின்றனர்.

தீண்டாமை ஒழிந்துவிட்டால் அதைப் போற்றுகின்ற வேத சாஸ்திரங்க ளுக்கும், வைதீக மதங்களுக்கும், அம்மதங்களைப் பின்பற்றுகின்ற கண்மூடி வைதீகர்களின் வயிற்றுப் பிழைப்புக்கும் ஆட்டமும் அபாயமும் உண்டாகி விடும் என்பதை அறிந்திருக்கின்ற திரு. எம். கே. ஆச்சாரியார் கூட்டத்தைச் சேர்ந்த முரட்டு வைதீகர்களையும் அவர்களுடைய சூழ்ச்சிகளில் அகப்பட்டு கிடக்கும் பொது ஜனங்களையும் தவிர வேறு யாரும் தீண்டாமைக்கு ஆதரவளிக்கவில்லையென்று துணிந்து கூறலாம்.

தீண்டாமையை ஒழித்து, அதனால் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கும் மக்களை கை தூக்கி விட வேண்டியது ஒழுங்கும் நியாயமும் அவசியமும் ஆகும் என்ற உணர்ச்சி தற்போது நமது நாட்டு உயர்சாதி மக்கள் எனப்படு வோர்கள் சிலருடைய மனத்தில் பட்டிருப்பதற்குக் காரணம் தாழ்த்தப்பட்டச் சகோதரர்கள் செய்யும் கிளர்ச்சியும், சென்ற ஏழெட்டு ஆண்டுகளாக நமது இயக்கம் செய்துவரும் பிரசாரமுமே என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் தீண்டாமையை எந்த வகையினால் ஒழிக்க முடியும் என்பதை ஆலோசிக்கும் போது, எல்லோரும் கீழ்க்கண்ட விஷயங்களைப் பற்றி எண்ணிப் பார்க்காமலிருக்க முடியாது.

இந்து மதத்தைச் சாராதவர்களும், இந்து மதத்திற்கு எதிரானவர்களும் இந்துமதப் பற்றுடைய மக்களால், 'அந்நியர்கள்' 'மிலேச்சர்கள்' என்று



இழித்துக் கூறக் கூடியவர்களுமாகிய வேற்று மதத்தினர்கள் உயர்சாதி இந்துக் களுடன் தீண்டாமையென்ற வேறுபாடின்றி நெருங்கிப் பழகிக் கொண்டி ருக்கின்றனர்.

ஆனால், நீண்டகாலமாக இந்துக்கள் என்றே மதிக்கப்பட்டு வருகின்ற தாழ்த்தப்பட்ட மக்களோ உயர்சாதி இந்துக்களுடன் நெருங்கிப் பழக முடியாத வர்களாகவும், அவர்கள் வசிக்கும் தெரு, குளம் கிணறு, பள்ளிக்கூடம், கோயில் முதலியவைகளைச் சமத்துவமாக அனுபவிக்க முடியாத வர்களாகவும் 'சண்டாளர்கள்' என்றும் 'பாபிகள்' என்றும் 'பஞ்சமர்கள்' என்றும், 'பாதகர்கள்' என்றும், 'புலையர்கள்' என்றும் பலவாறு இகழ்ந்து ஒதுக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தத் தகாத நடத்தைக்குக் காரணம் என்ன வென்பதைக் கொஞ்சம் பொறுமையோடு ஆலோசித்தால் விளங்காமற் போகாது.

அந்நியராயிருந்தாலும் அவர்களிடம் மற்ற உயர்ந்த சாதி இந்துக் களைப்போல கல்வியும், செல்வமும், திறமையும், செல்வாக்கும், கட்டுப் பாடும், ஒற்றுமையும் அமைந்திருப்பதே அவர்கள் மற்ற உயர்ந்த சாதி இந்துக் களுடன் சமத்துவமாகப் பழகுவதற்குக் காரணமாகும்.

சகோதர இந்துக்கள் என்று சொல்லப்பட்டாலும் தாழ்த்தப் பட்டவர் களிடம், செல்வமும், கல்வியும், திறமையும், செல்வாக்கும், கட்டுப்பாடும், ஒற்றுமையும் இல்லாமையே இவர்கள் "உயர்சாதி" என்று சொல்லப்படுகின்ற இந்துக்களால் தீண்டப்படாதவர்களாகக் கொடுமை படுவதற்குக் காரண மாகும்.

ஆகையால் உண்மையில் தீண்டப்படாத சகோதரர்கள் சமூக சமத்து வம் பெற வேண்டுமானால் அவர்கள் கல்வியிலும், திறமையிலும், செல்வத் திலும், செல்வாக்கிலும், ஒற்றுமையிலும் மற்றவர்களைப் போல சமநிலையை அடையவேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இக் காரியத்தை இப்பொழுதோ அல்லது இன்றைக்கோ, அல்லது நாளைக்கோ, அல்லது மறுநாளோ, அல்லது ஒன்றிரண்டு மாதங்களிலோ அவசரப்பட்டுச் செய்து விட முடியாது. நாளடைவில்தான் இதைச் செய்யமுடியும்.

ஆனால் தற்போது, அவர்களுக்குச் சமத்துவமளிக்கச் செய்யப்படும் சாதகமான செயல்கள் கோயில் பிரவேசம், தெரு, குளம், கிணறு, பள்ளிக் கூடம் முதலியவைகளைத் தடையின்றி அனுபவிக்க இடமளிப்பது போன்ற காரியங்களாகும் என்பதும் உண்மையேயாகும்.

ஆகவே இவைகளில் தீண்டப்படாதவர்கள் சமத்துவ உரிமை பெறும் விஷயத்தில், அரசாங்கத்தாரும், சமூக - அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் ஆதரவாகவே இருக்கின்றார்கள் என்பதில் ஐயமில்லை.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் பொதுஜனங்களோ இன்னும் வைதீகர் வசப்பட்டவர்களாகவும் ஜாதி, மதம், தீண்டாமை முதலியவைகளில் கொண்டுள்ள நம்பிக்கை மாறாதவர் களாகவும் இருந்து வருவதினால், தீண்டப்படாத சகோதரர்கள் மேற்கூறியவை களில் சமத்துவம் பெறுவதற்குக் கஷ்டமாக இருந்து வருகிறது.

இவற்றுள் மற்றவைகளைக் காட்டிலும் 'கோயில் பிரவேசம்' என்ற ஒரு விஷயமே இப்பொழுது மிகவும் முக்கியமான ஒரு பிரச்சனையாக இருந்து வருகிறது.

இந்தக் கோயில் பிரவேசத்தின் பொருட்டு குருவாயூர், நாசிக் முதலிய இடங்களில் சத்தியாக்கிரகங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இதற்குமுன் பல தடவைகளில் மதுரை, திருச்சிராப்பள்ளி, நாகர்கோவில், ஈரோடு முதலிய இடங்களில் கோயில் சத்தியாக்கிரகங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவை பய னின்றி கழிந்தன.

ஆனால் அக்காலத்தில் கோயில் சத்தியாக்கிரகத்திற்கு இருந்த ஆதரவைக் காட்டிலும் இப்பொழுது கொஞ்சம் அதிக ஆதரவே இருந்து வருகிறது என்று கூறலாம். இந்த ஆதரவைக் கொண்டு விடாமுயற்சியுடன் கோயில் நுழைவுக்காகப் பாடுபட்டால் அவ்வுரிமை கிடைத்துவிடும் என்ப திலும் ஐயமில்லை என்றே வைத்துக் கொள்ளலாம். ஆனால் இவ்வாறு தீண் டாத சகோதரர்கள் கோயில் நுழைவு உரிமை பெறுவதினால் அவர்களுக்குக் கிடைக்கும் பயன் என்ன என்பதைப் பற்றியே இப்பொழுது நாம் குறிப்பிட விரும்புகின்றோம்.

அவர்கள் மற்றவர்களுடன் சமத்துவமாகக் கோயில்களுக்குச் செல்லும் உரிமை பெறுவதன் மூலம் ஓரளவு தீண்டாமை ஒழிகின்றதென் பதையும், சமத்துவம் கிடைக்கின்ற தென்பதையும் நாம் ஒப்புக் கொள்ளு கிறோம். இதுவும் ரயில்வண்டிகளிலும் திருவிழாக் காலங்களிலும் கோயில் களின் தேர்களை இழுக்குங் காலங்களிலும் எந்த அளவில் தீண்டாமை ஒழிந்து சமத்துவம் ஏற்படுகிறதோ அந்த அளவில் தான் கோயில் நுழைவினா லும் தீண்டாமை ஒழிந்து சமத்துவம் ஏற்படும் என்பதே நமது கருத்தாகும். ஆகவே கோயில் நுழைவினால் நிரந்தரமாகத் தீண்டாமையொழிவோ, சமத்து வமோ ஏற்பட்டு விடமுடியாது என்பதைப் பற்றி யாரும் ஐயுற வேண்டிய தில்லை.

ஆகையால் பொது இடத்திற்குப் போகக் கூடிய உரிமை தீண்டாதவர் களுக்கும் இருக்க வேண்டும் என்ற கருத்துடன் கோயில் பிரவேச முயற்சி நடைபெறுமானால் அதை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கவே கடமைப் பட்டுள்ளோம் என்பதில் ஐயமில்லை.



இவ்வாறில்லாமல் தீண்டாதவர்களும், கோயிலில் சென்று அங்கு இருப்பதாகச் சொல்லப்படும் 'கடவுள்' என்கின்ற குழவிக்கல்லுகளையும், பதுமைகளையும் தொழுவதற்கும், அவைகளின் பேரால் மற்ற மூட மக்களைப் போல் பணம் செலவு பண்ணுவதற்கும், இவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் 'பக்திமான்கள்' ஆவதற்கும் 'மோட்சம்' பெறுவதற்கும் கோயில் பிரவேசம் அவசியம் என்ற கருத்துடன் முயற்சி செய்யப்படுமானால் "இம்முயற்சி கண்டிப்பாகத் தீண்டாதவர்களுக்குக் கேடு சூழும் முயற்சியே" என்று தான் கூறுவோம்.

இப்பொழுது நமது நாட்டில் இருந்து வரும் எண்ணற்ற கோயில்கள் காரணமாகவும் அவைகளின் சார்பாக நடைபெற்றுவரும் 'திருவிழா'க்களின் காரணமாகவும் இவைகளின் மேல் பாமரமக்களுக்கு உள்ள நம்பிக்கை 'பக்தி' முதலியவைகளின் காரணமாகவுமே பொதுஜனங்களின் செல்வம் பாழாகின்ற தென்பதை யாரும் மறுக்க முடியாது. இதோடு மட்டுமல்லாமல் பொது ஜனங்கள் அறியாமை நிறைந்தவர்களாகவும் மூட நம்பிக்கை மிகுந்தவர் களாகவும் இருந்து வருகின்றதற்கும் கோயில்களே காரணமாகும். இந்த நிலையைக் கருதும் போது தீண்டப்படாத சகோதரர்களும் மூட நம்பிக்கை காரணமாகக் கோயில்நுழைவு உரிமை பெறுவார்களாயின் அவர்களும் தங்கள் பொருளைச் சிறிதும் பயனில்லாமற் பாழாக்கி என்றுமுள்ள வறுமை நிலையில் இருந்து வரவேண்டியதைத்தவிர வேறு வழியில்லை என்றே கூறுகின்றோம்.

ஆகையால் தீண்டப்படாத சகோதரர்களும், அவர்கள் சமூக சமத்து வத்தில் ஆவலுடைய மற்றவர்களும் 'பக்தி' என்ற மூடநம்பிக்கையைக் கொண்டு கோயில் நுழைவுக்குப் பாடுபடாமல் "பொது இடத்தில் எல்லா மக்களுக்கும் உரிமை வேண்டும்" என்ற உறுதியுடன் கோயில் நுழைவுக்கு முயற்சி செய்ய வேண்டுகின்றோம். இவ்வகையில் தீண்டப்படாத சகோதரர் களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுகிறோம். உண்மையில் தீண்டாமைக் கொடுமையொழிந்து மற்ற மக்களுடன் சமத்துவமாக வாழ்வதற்கு அடிப் படையான காரணங்களாக இருக்கும் செல்வம், கல்வி, திறமை, செல்வாக்கு, ஒற்றுமை முதலியவைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்யவேண்டுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 08.05.1932**



RangaRakes tamilnavarasam.com

# காலித்தனமா? அஹிம்சையா?

காங்கிரசின் பெயராலும், திரு. காந்தியின் பெயராலும், அஹிம்சையின் பெயராலும், சத்தியாக்கிரகத்தின் பெயராலும் நமது நாட்டில் இப்பொழுது நிகழ்ந்து வரும் காரியங்களைப் பார்த்தால் நியாய புத்தியுடைய எவரும் அவைகளைக் கண்டிக்காமலிருக்க முடியாது. 'அஹிம்சையின்' பெயரால் ஆரம்பித்து நடத்தப்படும் சட்டமறுப்பு இயக்கத்தினால் உண்டாகும் ஹிம்சைகள் எண்ணற்றவை.

நாட்டில் வியாபார மந்தமும் பொருளாதார நெருக்கடியும் ஏற்றுமதி இறக்குமதிக் குறைவுகளும் ஏற்பட்டுச் செல்வ நிலை பாழ்பட்டுக் கிடக்கிறது. ஏழைமக்கள் பட்டினியினாலும் நோயினாலும் கிடந்து மடிகின்றனர். கற்றவர்கள் பலர் வேலையற்ற திண்டாட்டத்தினால் படும் தொல்லைகள் சொல்லித் தொலையாதவை.

அரசாங்கமோ இத்துன்பங்களை நிவர்த்தி செய்ய முன் வராம லிருப்பதற்குத் தங்களுக்கு சட்ட மறுப்புக்காரர்கள் கொடுத்து வரும் தொல் லையே காரணம் என்று சொல்லி விடக் கூடிய நிலைமையில் இருக்கின்றனர்.

ஆகவே பொதுஜனங்களின் கஷ்டம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு போகின்ற தென்பதை யாரும் இல்லையென்று சொல்ல முடியாது. "அரசாங்கத்திற்கு உண்டாகும் கஷ்டம் ஜனங்களைப் பாதிக்காமல் போகாது" என்ற அரசியல் தத்துவத்தை அறிந்தவர்கள் சட்டமறுப்பு இயக்கமும் பொது ஜனங்களின் கஷ்டத்திற்கு ஒரு முக்கிய காரணமாகும் என்பதை ஒப்புக் கொண்டுதான் தீரவேண்டும்

தற்போது சட்ட மறுப்பு இயக்கம் அரசாங்கத்தாருக்குத் துன்பங் கொடுத்துக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் நேரே பொது ஜனங் களுக்கும் துன்பம் உண்டாக்கக் கூடிய நிலைக்குத் திரும்பி விட்டதைக் கண்டும் பொது ஜனங்கள் அதை அடக்க முன் வராமலிருப்பதா என்பதுதான் நமது கேள்வி.



உதாரணமாகச் சில தினங்களாக நடை பெற்று வரும் "தபால் பெட்டி களில் தீ யிடுதல்" என்ற நிகழ்ச்சியைப் பாருங்கள். இந்த முயற்சி இப்பொழுது அனேகமாக இந்தியாவில் உள்ள எல்லா முக்கிய பட்டணங்களிலும் தொடங்கி நடைபெற்று வருகின்றது. இந்த மதியற்ற காரியத்தால் உண்டாகும் கஷ்டமும் நஷ்டமும் யாருக்கு என்று ஆலோசித்துப் பாருங்கள்.

இதனால் அரசாங்கத்திற்கு ஒருவித நஷ்டமுமில்லை கஷ்டமு மில்லை. அரசாங்கத்தாரிடம் விலை கொடுத்து வாங்கிய ஸ்டாம்புகள் ஒட்டப் பட்ட தபால்களே பெட்டிகளில் போடப்படுகின்றன. அவைகள் பற்றியெரிந்து விடுவதனால் நஷ்டம் அரசாங்கத்தாருக்கா? பொது ஜனங்களுக்கா? என்று ஆராய்ந்து பார்க்கும் மூளையற்றவர்கள் தானா சுயேச்சை சுயராஜியம் பெற்று ஆளக் கூடியவர்கள்?

இன்னும் தபால் ஆபீசுகளில் மறியல் செய்யவும் ஆரம்பித்து இருக்கின்றனர். சில இடங்களில் ரயிலை மறியல் செய்தார்களாம். ஆஹா! இவையெல்லாம் எவ்வளவு புத்திசாலித்தனமான காரியங்கள்!

இது மாத்திரமல்ல தனி மனிதர்களின் உயிருக்கும் காலிகள் ஆபத்தை உண்டாக்கி வருகின்றார்கள். கொலை வெறிபிடித்த சில வாலிபர்களால், இது வரையிலும் உத்தியோகஸ்தர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இதற்கு உதாரணம் சில தினங்களுக்கு முன் மிதுனபுரி ஜில்லா மாஜிஸ்திரேட் திரு. ஆர். டக்ளஸ் என்பவரை சுட்டுக் கொன்ற அநியாயமும் ஒன்றாகும். தங்கள் கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகஸ்தர்களை இவ்வாறு மூர்க்கத்தனமாகச் சுட்டுக் கொல்வதனால் சுயராஜியம் கிடைத்து விடுமா என்று தான் கேட்கின்றோம்.

இங்ஙனம் உத்தியோகஸ்தர்களைக் கொலை புரிந்து வரும் கூட்டத் திற்கும், காங்கிரஸ் சட்ட மறுப்புக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லப் பட்டாலும் அரசாங்கத்தின் மேலும் வெள்ளைக்கார அதிகாரிகளின் மேலும் துவேஷத்தை உண்டாக்கி வரும் அஹிம்சா தருமம் என்று சொல்லப்படுகின்ற சட்டமறுப்புப் பிரசாரமே காரணமென்பதை யார் மறுக்க முடியும்?

இத்தகைய கொலைச் செயல்களையெல்லாம் காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்கள் கண்டிக்கின்றார்கள் என்றாலும் கொலை செய்யத்தூண்டும், துவேஷத்தை யுண்டாக்கும் சட்ட மறுப்புப் பிரசாரத்தை நிறுத்தவோ ஒழிக்கவோ யாரும் முன்வராமலிருப்பது நமது நாட்டிற்கு இன்னும் கெடுதியை உண்டாக்கும் விஷயமேயாகும்.

இன்னும் பல இடங்களில், சட்ட மறுப்புக்காரர்கள் வேலை நிறுத்தம் செய்யச் சொல்லும் போது, வேலை நிறுத்தம் செய்யாதவர்களையும், கடை களைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கின்றவர்களையும் பலாத் காரத்தினால்



RangaRakes tamilnavarasam.com

துன்புறுத்துகிறார்கள் என்ற செய்திகளும் கிடைக்கின்றன. இவைகளை யெல்லாம் பார்க்கும் போது தற்போது அஹிம்சையின் பேரால் சட்ட மறுப்பு செய்து வரும் 'புத்திசாலிகள்' காலித்தனத்திலும், பலாத்காரச் செயல்களிலும் இறங்கிப் பொது ஜனங்களுக்குத் துன்பத்தை உண்டாக்கத் தொடங்கி விட்டார்கள் என்று சொல்லுவதில் என்ன குற்றமிருக்கின்றது?

இவ்வாறு தொண்டர்கள் என்பவர்கள் செய்வதற்குக் காரணம் காங்கிர சல்ல வென்றும், பொறுப்பற்ற சிலருடைய தூண்டுதலேயென்றும் சில தேசீயப் பத்திரிகைகள் என்பன குறிப்பிட்டிருந்தன. ஆனால் காங்கிரஸ் கமிட்டியில் தபால் தந்தி, ரயில்வே முதலியவைகளையும் பகிஷ்கரிக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணியிருக்கும் போது இவைகளுக் கெல்லாம் எப்படி காங்கிரஸ் காரணம் அல்லவென்று கூறமுடியும் என்று கேட்கின்றோம்.

ஆகையால் இவ்வாறு பொறுப்பற்ற தன்மையிலும், காலித் தன்மை யிலும், பொது ஜன நன்மைக்கு விரோதமாக நடந்து கொள்ளுவதோ - நடந்து கொள்ளுபவரோ - எதுவாயிருந்தாலும், எவராயிருந்தாலும் அவர்களை அடக்க வேண்டியதே பொது ஜனங்களின் கடமை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 08.05.1932**



# சேலம் சுயமரியாதை மகாநாடு

சென்ற 7, 8-5-32 சனி ஞாயிறுகளில் சேலத்தில் நடைபெற்ற முதலாவது சேலம் ஜில்லா சுயமரியாதை மகாநாட்டின் தலைவர், வரவேற்புத் தலைவர்; பெண்கள் மகாநாட்டின் தலைவர், வரவேற்புத்தலைவர், திறப்பாளர்; தொண்டர் மகாநாட்டின் தலைவர், வரவேற்புத் தலைவர், திறப்பாளர் முதலிய வர்களின் பிரசங்கங்கள் நமது பத்திரிகையில் சென்ற வாரத்திலும், இவ் வாரத்திலும் வெளியாகி யிருக்கின்றன. அந்தப் பிரசங்கங்களை யெல்லாம் படித்துப் பார்ப்பவர்களுக்கு, நமது இயக்கத்தின் தற்கால வளர்ச்சியைப் பற்றியும், உண்மையான கொள்கைகளை அநுபோகத்தில் கொண்டு வரும் செய்தியைப் பற்றியும் நாம் ஒன்றும் அதிகமாகக் கூறவேண்டியதில்லை என்றே கருதுகின்றோம்.

முதலாவது இவ்வாண்டில் முதலில் சேலத்தில் நமது மகாநாடு நடை பெற்றதே நமக்கு ஒரு பெரிய வெற்றியாகும். ஏனெனில் சேலம் ஒரு பெரிய தேசீயக் கோட்டை என்றும், தேசீயத்திற்கு எதிர்ப்பான எந்தச் செயல்களையும் சேலத்தில் செய்ய முடியாதென்றும், சிலர் மனதில் ஒரு தப்பான எண்ணம் நிலவியிருந்தது. இவ்வெண்ணம் தவறானதென்பதை உணர்த்துவதற்கும், சுயமரியாதை இயக்கமும், அதன் கொள்கைகளும், எந்தத் தேசீயத்திற்கும் அஞ்சாமல் எந்த இடத்திலும் எப்பொழுதும் பரவிப் பொது ஜனங்களை விழிப்படையச் செய்யக் கூடிய தன்மையுடைய தென்பதற்கும், ஒரு எடுத்துக் காட்டாகவே சேலத்தில் நமது மகாநாடு கூடிற்று என்று நிச்சயமாக கூறலாம்!

சேலத்தில் மகாநாடு கூட்ட முயன்றவர்களுக்கு உண்டான துன்பங்கள் எண்ணற்றவை. சுயமரியாதை இயக்கம் பரவினால் தங்கள் தேசீய வயிற்றுப் பிழைப்பிற்குக் கெடுதி வரும் எனக் கருதிய 'காலிகள்' சிலர் மகாநாடு கூடா மல் இருக்க எவ்வளவோ பிரயத்தினம் பண்ணி பார்த்தார்கள். ஊரிலுள்ள பெரிய மனிதர்களிடம் சென்று அவர்களுக்குத் தகுந்த மாதிரி இல்லாத பொல்லாத பொய்யுரைகளைப் புகன்று மகாநாட்டிற்கு உதவி செய்யாமல் இருக்கும் படியும், மகாநாட்டு நிர்வாகிகளுடன் ஒத்துழைக்காமலிருக்கும் படியும் கலகம் பண்ணினார்கள். எதிரிகள் இம்மாதிரி எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தும், மகாநாட்டு வேலைகள் தடைப்படாமல் நடந்து கடைசியாகக் குறிப்பிட்ட தேதியில் மகாநாடும் நடைபெற்றது.



RangaRakes tamilnavarasam.com

நமது இயக்கத் தோழர்களான எஸ். வி. லிங்கம், அழகர்சாமி போன்ற வர்களை வெட்டி விடுகிறோம் என்றும், குத்திவிடுகிறோமென்றும், மிரட்டிக் கொண்டும், மகாநாட்டைக் கலைப்பதற்காக ஆள்சேர்ப்பது போலப் பாவனை பண்ணிக் கொண்டும் கப்பி விட்டார்கள்.

மகாநாடு நடக்கும் சமயத்திலும் 'காலிகள்' கலகம் பண்ண மறந்து விடவில்லை. வெளியிலிருந்து கொட்டகை மீது கல் விட்டெறிந்தும், இயக்கத் தோழர்கள் மகாநாட்டில் பேசும்போது இடைஇடையே சத்தம் போட்டும் கலகம் பண்ண முயற்சித்தனர்.

ஆனால், நமது இயக்கத் தோழர்கள் இவற்றையெல்லாம் பொருட் படுத்தாமலும் எதிரிகளுக்குக் கொஞ்சமும் கஷ்டத்தை உண்டாக்காமல் அவர்களிடம் பொறுமை காட்டியும் மகாநாட்டை வெற்றியுடன் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

மகாநாட்டிற்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளும் சுயமரியாதை இயக்கத்தின் உண்மையையும், தேசீயவாதிகள் என்று வேஷம் போட்டுக் கொண்டு கலகம் பண்ண முயற்சித்த எதிரிகளின் காலித் தனங் களையும் உணர்ந்து கொண்டார்கள்.

நமது இயக்கத் தோழர்கள் 'ஈ. வெ. ராமசாமி' அவர்களும், 'எஸ்.ராமநாதன்' அவர்களும் மேல்நாட்டுச் சுற்று பிரயாணத்திற்குப் போயி ருப்பதைக் கண்டு "சுயமரியாதை இயக்கம் செத்துப் போய்விட்டது, கொஞ்ச நஞ்சம் உள்ள கிளர்ச்சியும் இனி அடியோடு ஒழிந்துவிடும்" என்று திண்ணைப் பிரசாரம் பண்ணிக் கொண்டிருந்த நமது எதிரிகளுக்கு சேலம் ஜில்லா மகாநாடு சரியான புத்தி கற்பித்ததென்றே கூறலாம்; அவர்கள் இரு கன்னங்களிலும் 'பளிர், பளீர்' என இரண்டு அறைகள் கொடுத்து 'ஏ பேதைகளே நான் சாகவில்லை உயிரோடுதான் இருக்கிறேன். முன்னையைக் காட்டிலும் இப்பொழுது அதிகமாகக் கொழுத்துப் பருத்து உயர்ந்து வருகிறேன் பாருங்கள்' என்று சுயமரியாதை இயக்கம் சொல்லுவதைப் போல இருந்ததென்றே கூறுவோம். சுருங்கக் கூறவேண்டுமானால் சேலத்தில் இதுவே முதல் மகாநாடாய் இருந்தாலும் பொது ஜனங்கள் கவனத்தை இது போல் வேறு எந்த மகாநாடும் கவரவில்லையென்றே சொல்லலாம்.

இனி இம்மகாநாட்டில் பங்கெடுத்துக் கொண்ட தோழர்களின் பேச்சுக் களின் சிறப்பைப் பற்றியும், அப்பேச்சுக்கள் பொது ஜனங்களின் கண்ணைத் திறந்து சுயமரியாதை இயக்கத்தின் உண்மைக் கொள்கைகளை உணர்ந்து பார்க்கும்படி செய்தது என்பதைப் பற்றியும் நாம் கூறுவது தற்புகழ்ச்சி யாகுமென விடுக்கின்றோம்.



ஆனால் சுயமரியாதை மகாநாட்டிற்குத் தலைமை வகித்த தோழர் ம. சிங்கார வேலு அவர்களின் பிரசங்கத்திலுள்ள ஒரு விஷயம் மட்டிலும் குறிப்பிடத்தக்கதாகும். "நாம் விரும்புகின்ற சாதி ஒழிவு, சமய ஒழிவு, பெண்கள் விடுதலை, சமூக சமத்துவம், பொருளாதார சமத்துவம், மூடப் பழக்கவழக்கங்களை ஒழித்தல் முதலியவைகளைச் செயலில் நிறைவேற்ற வேண்டுமானால் அரசியலைக் கைப்பற்றவேண்டுமென்றும், அரசியலைக் கைப்பற்றாத வரையில் இந்த நோக்கங்களை நிறைவேற்ற முடியா" தென்றும் குறிப்பிடுகிறார்.

ஆனால் இவ்விஷயத்தை நாம் தற்சமயத்தில் ஒத்துக் கொள்ள முடியவில்லை. அரசியலைக் கைப்பற்றினால்தான் நமது இயக்கக் கொள்கை களைச் சீக்கிரமாகவும், எளிதாகவும் நிறைவேற்ற முடியும் என்ற தத்துவத்தை ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் இக் கொள்கையை இப்பொழுதே சுய மரியாதை இயக்கம் கைக்கொண்டு விடுமானால் அக்கட்சியின் வளர்ச்சிக்குப் பாதகம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

நமது கட்சியின் கொள்கைகள் தேசமக்கள் எல்லோருடைய மனத் திலும் படிந்துவிடுமானால் அதன்பின் நாம் சட்ட மூலமாகவே அரசாங் கத்தைக் கைப்பற்றுவதும், நமது கொள்கைகளைச் சட்டங்கள் செய்வதன் மூலம் நிறைவேற்றுவதும் ஆகிய காரியங்கள் சுலபமாக முடியும். இந்தக் காரணத்தினால்தான் நமது கட்சி இது வரையிலும் அரசியலில் கலக்காமல் சமூகசீர்திருத்தப் பிரசாரம் மட்டும் செய்து கொண்டு வருகிறது என்று தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறோம்.

அன்றியும் நாம் இப்பொழுதே அரசியலைக் கைப்பற்றுவது என்று தீர்மானித்து விடுவோமானால் மற்ற அரசியல் கட்சிகளில் எவ்வாறு பட்டம் பதவிகளை விரும்புகின்ற சுயநலவாதிகள் நிரம்பிக் கிடக்கின்றார்களோ, அவ்வாறே நமது கட்சியிலும் நிரம்பிவிடக் கூடும் என்று நிச்சயமாக நம்பலாம். பட்டங்களுக்கும், பதவிகளுக்கும் ஆசைப்படுகின்றவர்கள் நிறைந் துள்ள கட்சிகள் எல்லாம் உண்மையான சமூக சீர்திருத்தத்திற்கும், சாதி மதங்கள் ஒழிவதற்கும், ஆண் பெண் சமத்துவத்திற்கும், ஏழை பணக்கார சமத்துவத்திற்கும் உண்மையாக உழைக்க முடியாத நிலைமை அடைந்து விடும் என்பதை நமது நாட்டில் தற்காலத்தில் நடைபெற்றுவரும் அரசியல் கட்சிகளின் போக்கைக் கொண்டு உணரலாம்.

ஆகையால் நமது இயக்கம் உண்மையில் ஏழை மக்கள் இயக்க மாகவே இருந்து, ஏழைமக்களின் விடுதலைக்கும், சமத்துவத்திற்கும் உழைக்க வேண்டுமானால், நமது இயக்கக் கொள்கைகள் தேசமெங்கும் பரவி மக்கள் எல்லோரும் அவைகளை ஒப்புக் கொள்ளும் வரையிலும் அரசியலில் கலவாமல் வெறும் சமூகச் சீர்திருத்த இயக்கமாகவே அதிதீவிரமாகப் பிரசாரம் பண்ணிக் கொண்டு வருவதே சாலச் சிறந்ததென்பதே நமது இயக்கத் தலைவர்



RangaRakes tamilnavarasam.com

களின் கருத்தாகும். இவ்வாறு செய்தால்தான் நாட்டில் சமாதான பங்கம் ஏற்படாமல் நமது இயக்கக் கொள்கைகளை நடைமுறையில் வழங்கும்படி செய்ய முடியும் என்பதில் ஐயமில்லை.

மற்றபடி, தோழர் சிங்காரவேலு அவர்கள் சொல்லியுள்ள அபிப்பி ராயங்கள் முழுவதும் நமது கட்சியின் அபிப்பிராயங்களே என்பதையும் அவைகளை நிறைவேற்றுவதன் மூலம்தான் நமது நாட்டில் எல்லாவித சமத்துவமும் உண்டாகமுடியும் என்பதிலும் ஐயமில்லை.

சேலம் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் புதுமை யானது ஒன்றுமில்லை யென்றாலும், இதற்குமுன் செங்கற்பட்டு, ஈரோடு, விருதுநகர் முதலிய மகாநாடுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களை ஆதரிப்பதான தீர்மானம் ஒன்றே போதுமானதாகும். இந்த மூன்று மகாநாட்டுத் தீர்மானங்களிலும் நமது இயக்கக் கொள்கைகள் முழுவதும் அடங்கியுள்ளனவென்பதை நாம் கூறுவது மிகையாகும். ஆகையால் அத் தீர்மானங்களைப் பொது ஜனங்களிடம் பிரசாரம் பண்ணி அமுலுக்குக் கொண்டு வருவதைத் தவிர, வேறு புதிதாகத் தீர்மானிக்க வேண்டிய விஷயம் ஒன்றுமில்லையென்றே சொல்லலாம்.

அடுத்தபடியாக, காங்கிரஸ் வருணாச்சிரம தருமப் பிரசாரமும், புராணப் பிரசாரமும் செய்து வருகிறது என்ற கருத்துடன் செய்யப்பட்ட தீர்மானமும் பாராட்டக் கூடியதேயாகும். இத்தீர்மானங்களைப் பற்றிப் பேசிய நமது இயக்கத் தோழர்கள், அப்பாதுரையார், டி. வி. சுப்பிரமணியம், கே. வி. அழகர்சாமி, பொன்னம்பலனார், குருசாமி, பண்டிதர் திருஞான சம்பந்தம், எஸ். வி. லிங்கம் முதலானவர்கள் சாதி, சமயம், வேதம், புராணம்,, மதம், கடவுள், மகாத்மா, காங்கிரஸ், ஹிந்தி, கதர், அரசியல் முதலிய புரட்டு களை தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டிய போது பொது ஜனங்கள் உணர்ந்த உண்மைக்கும், அடைந்த மகிழ்ச்சிக்கும், கொண்ட ஊக்கத்திற்கும் அள வில்லை யென்றே சொல்லலாம்.

கடைசியாக பல எதிர்ப்புக்கிடையே சேலம் ஜில்லா மகாநாட்டை நடத்த முன்னின்று உழைத்த நமது இயக்கத் தோழர்களின் ஊக்கத்தையும் தைரியத்தையும் போற்றுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 15.05.1932**



# திருச்சி பார்ப்பனரல்லாதார் மகாநாடு

சென்ற 7, 8–5–32 இல் திருச்சிராப்பள்ளி ஜில்லா பார்ப்பனரல்லாதார் ஆறாவது மகாநாடு திருச்சியில் நடைபெற்றது. அம் மகாநாட்டை அங்கு எந்த விஷயத்திற்குக் கூட்டப்பட்டதோ அந்த விஷயத்தைத் தவிர மற்றவை களெல்லாம் வெற்றியோடு நடைபெற்றன என்றுதான் சொல்ல வேண்டும்.

தற்சமயம், பார்ப்பனரல்லாதார் கட்சியில் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று, அக்கட்சியின் தலைவர்கள் சிலர் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப் பற்றி ஆராய்ந்து ஒரு முடிவு செய்யவே இம்மகாநாடு கூட்டப்பட்டதாகும். ஆனால் இவ்விஷயம் விஷயாலோசனைக் கமிட்டியில் விவாதத்திற்கு வந்துங்கூட தலைவர்களின் பிடிவாதத்தினால் நிராகரிக்கப்பட்டதென அறிகிறோம். மற்றபடி அரசியல் சுதந்தரம் சம்பந்த மாகவே பெரும்பாலும் தீர்மானங்கள் நடைபெற்றன. மகாநாட்டின் தலைவர் சர். ஏ. பி. பாத்ரோ அவர்களும், மற்றும் திறப்பாளர் வரவேற்புத் தலைவர் முதலியவர்களும், பெரும்பாலும் அரசியல் உரிமை சம்பந்தமாகவே ஊக்கங் காட்டிப் பேசினார்கள்.

சர். பாத்ரோ, சர், கே. வி. ரெட்டி போன்ற பிரபல தலைவர்கள் அனை வரும் காங்கிரசின் போக்கையும், சட்ட மறுப்பின் தீமையையும் பலமாகக் கண்டித்துப் பேசிய விஷயம் தேச மக்களால் கவனிக்கக் கூடியதாகும்.

பார்ப்பனரல்லாதார் கட்சியை அகில இந்திய இயக்கமாக்க வேண்டு மென்னும் விஷயத்தில் எல்லாத் தலைவர்களும் ஒன்றுபட்ட அபிப்பிராயங் கொண்டிருந்தனர் என்றே கூறலாம்.

உண்மையில் பார்த்தால், நமது நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளில் தற்சமயம் கட்டுப்பாடானதும் நிதானத்தோடு காரியம் செய்யக் கூடியதுமான அரசியல் கட்சி ஜஸ்டிஸ் கட்சி ஒன்றேயென்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்விஷயங்களை திருச்சி ஜில்லா மகாநாட்டின் நிகழ்ச்சிகளைக் கவனிப் போர் அறியலாம்.

திருச்சி மகாநாட்டில் நடைபெற்ற ஒரு முக்கியத் தீர்மானம் அரசியல் வாதிகளால் கவனிக்கக் கூடியதொன்றாகும் அதாவது:– “மத்தியப் பொறுப்



RangaRakes tamilnavarasam.com

பாட்சியுடன் கூடிய மாகாண சுயாட்சி கொடுக்க வேண்டு" மென்று தீர்மானம் செய்திருப்பதேயாகும். வட்ட மேஜை மகாநாட்டிலும் நமது நாட்டிலும், எல்லா அரசியல் வாதிகளும் ஐக்கிய ஆட்சியே வேண்டுமென்று கேட்டனர். இன்னும் பலரும் ஐக்கிய ஆட்சியைப் பற்றியே கனவு கண்டு கொண்டிருக் கின்றனர். வட்ட மேஜை மகாநாட்டிற்குச் சென்ற ஜஸ்டிஸ் கட்சி கட்சியின் அங்கத்தினர்கள் கூட ஐக்கிய ஆட்சியையே ஆதரித்தனர். இப்படியிருந்தும் திருச்சி மகாநாட்டில், மத்தியப் பொறுப்பாட்சியும், முழு மாகாண சுயாட்சியும் வேண்டு மென்று தீர்மானம் நிறைவேற்ற முன் வந்தது. மிகுந்த சாமர்த்தியமும் புத்திசாலித்தனமும் சாத்யமான வழியில் தடையின்றி சுதந்திரம் பெற்றுத் தேசத்தை முன்னேற்ற வேண்டுமென்னும் எண்ணமும் ஆகுமென்றே கூறலாம். சுதேச சமஸ்தானங்களும் ஒன்றுபட்டு அமையக்கூடிய ஐக்கிய ஆட்சி ஏற்படுத்துவது அசாத்தியமான காரிய மென்பதை அறிந்த பின், தைரியமாக இவ்வாறு தீர்மானம் பண்ண முன் வந்ததைப் பாராட்டுகிறோம்.

சமூகச் சீர்த்திருத்தம் சம்பந்தமாக ஜஸ்டிஸ் கட்சி இது வரையிலும் அதிக ஊக்கம் செலுத்தாமல் இருந்தது போலவே இந்த மகாநாட்டிலும் இருந்தது என்று சொல்லுவதில் தவறு ஒன்றும் இல்லை.

இந்தக் காரணத்தினாலேயே இதற்குமுன் நடைபெற்ற பார்ப்பனரல் லாதார் மகாநாடுகளில் காணப்பட்ட ஒரு ஊக்கமும் கிளர்ச்சியும் இந்த மகா நாட்டில் கொஞ்சங் கூட காணப்படாமலிருந்தது. இம் மகாநாட்டுடன் சர். கே. வி. ரெட்டியார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பார்ப்பனரல்லாதார் இளைஞர் மகாநாட்டில் காணப்பட்ட ஒரு ஊக்கம் பார்ப்பனரல்லாதார் மகா நாட்டில் இல்லையென்று கூறலாம். ஆயினும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டி ருக்கும் இச்சமயத்தில் ஒரு மகாநாட்டைக் கூட்டி காங்கிரசின் போக்கைத் தைரியமாகக் கண்டித்து தீர்மானங்களும் பிரசங்கங்களும் செய்த இந்த மகாநாட்டைப் போற்றாமலிருக்க முடியாது.

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கு திருச்சி மகாநாடு ஒரு வழிகாட்டி யாக இருந்ததென்றே கூறலாம். பார்ப்பனரல்லாதார் கட்சியைத் தேசமெங்கும் பரப்பவும், கட்சியின் கொள்கைகளைத் தவறில்லாமல் நிறைவேற்றவும், கட்சித் தலைவர்கள் பொதுஜனங்களின் அபிப்பிராயப்படி நடக்கவும் மகாநாடு மிகவும் முயற்சியெடுத்துக் கொண்டது என்று சொல்லலாம். இந்த வகையில் இனி வரப்போகும் மாகாணப் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டிற்குத் திருச்சி மகாநாடு ஒரு வழிகாட்டியாக இருந்தது என்பது உண்மையாகும். ஆகவே இவ்வகையில் மகாநாட்டை வெற்றிபெற நடத்திய தலைவர் களையும் நிர்வாகிகளையும் நாம் பாராட்டுகிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 15.05.1932**



# இந்து முஸ்லிம் கலகம்

மொகரம் பண்டிகையை முன்னிட்டு சென்ற 14-5-32 முதல் பம்பாயில் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் கடுமையான கலகம் நடைபெற்று வருகின்றது. கல்கத்தாவிலும் இக்கலகம் தலைகாட்டத் தொடங்கிவிட்டது. எங்கும் ஒற்றுமை, சகோதரத்துவம், சமரசம், சீர்திருத்தம் என்று பேசப்பட்டு வரும் இக்காலத்தில் கேவலம் மதத்தையும், ஜாதியையும் முன்னிட்டு இவ்வாறு கலகம் விளைவித்துக் கொள்ளுவதாக உலகத்தார் கருதும்படி நடந்து கொள்ளுவதைவிட நமது நாட்டிற்கு மானங்கெட்ட தன்மை வேறு ஒன்றுமே இல்லையென்பதை எந்த இந்தியரும் வெட்கத்தோடு ஒப்புக் கொண்டுதான் தீர வேண்டும்.

கலகம் உண்டானதற்கு மூலகாரணம் சிறுபிள்ளைகள் ஆரம்பித்த சில காரியங்கள் என்றே பத்திரிகைகளில் சுட்டிக் காட்டப்படுகின்றது. சில முஸ்லிம் சிறுவர்கள் இந்துக்கள் வசிக்கும் இடங்களுக்குச் சென்று யாசகம் கேட்டார் களாம். இந்துக்கள் யாசகம் கொடுக்க மறுத்தார்களாம். இவ்வாறு யாசகம் கொடுக்க மறுத்தவர்களையும் வற்புறுத்திக் கேட்கவே அவர்கள் கோபங் கொண்டு, தமது வேலைக்காரர்களைக் கொண்டு அச்சிறுவர்களைத் துன்புறுத் தினார்களாம். இதைக் கேள்வியுற்ற முஸ்லிம்கள் உடனே கூட்டமாகச் சேர்ந்து வந்து இந்துக்களுடன் கலகம் புரிந்தார்களாம். இதன் பின்பே கலகம் முற்றி விட்டதாம். இதுவே பத்திரிகைகளில் காணப்படும் கலகத்திற்குக் காரணமான செய்தியாகும்.

இந்த அற்பகாரணத்தால் கலகம் மூண்டு நூற்றுக்கணக்கான மக்கள் உயிர் துறக்கவும் ஆயிரக்கணக்கானவர்கள் அடிபடவும், காயப்படவும் சொத்து சுதந்திரங்களை இழக்கவும், உயிருக்கு அஞ்சவும் நேர்ந்ததென்றால் இதைவிட நமது தேசத்திற்கு அவமானம் வேறு என்ன வேண்டும்? அபலை களான பெண்மக்களும், குழந்தைகளும் காலிகளால் தாக்கப்படுகின்றனர். கடைகளும் வீடுகளும் தாராளமாக சூறையாடப்படுகின்றன. இந்துக்களுக்குச் சொந்தமான இடங்களும், முஸ்லிம்களுக்குச் சொந்தமான இடங்களும் தாராளமாக நெருப்புக்கு இரையாக்கப்படுகின்றன. இக்கலகத்தில் இந்துக்கள் பக்கம் தான் அதிகச் சேதமென்றோ, அல்லது முஸ்லிம்கள் பக்கம்தான்



RangaRakes
tamilnavarasam.com

அதிகச் சேதமென்றோ கூறுவதற்கில்லை. கலகம் என்று ஏற்பட்டால் இரு பக்கத்திலும் கொலைகளும், அடிகளும், கொள்ளைகளும் நடந்துதான் தீரும்.

இவ்வாறு அடிக்கடி இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் கலகம் உண்டாவதற்குக் காரணம் எப்பொழுதும் இவ்விரு சமூகத்தாருக்குள்ளும் இருந்துவரும் அவநம்பிக்கையேயாகும். முதலில் இந்த அவ நம்பிக்கையைப் போக்கி இருசமூகத்தாருக்குள்ளும் ஒற்றுமை உணர்ச்சியை ஏற்படுத்த முயற்சி செய்யாமல் "எங்கள் நாட்டில் நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாகி விட்டோம்; எங்களுக்குள் சாதிச் சண்டை இல்லை, மதச் சண்டை இல்லை; சுயராஜ்யம் கொடுப்பதுதான் தாமதம்; இப்பொழுதே சுயராஜ்யம் கொடுத்து விட்டால் கொஞ்ச நஞ்சமுள்ள மனப்பிணக்குகளும் ஒழிந்துவிடும்" என்று தேசீய வேஷக்காரர்கள் கூச்சலிடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது?

இப்பொழுது பம்பாயில் ஏற்பட்ட கலகத்திற்குக் காரணம் சிறு பிள்ளைகள் செய்த முரட்டுத்தனமான விளையாட்டுக் காரியங்களும், அவைகளுக்கு மேல் சிறு பிள்ளைத்தனமாக நடந்து கொண்ட இந்துக்களின் அவசரப்பட்ட ஆத்திரமான காரியமுமே மூலகாரணம் என்று கூறப் பட்டா லும், மதப் பிடிவாதம் என்று சொல்லப்பட்டாலும் உண்மையில் கலகம் பெருகி ஓங்கியதற்குக் காரணம் 'அரசியல்' என்றுதான் நாம் அபிப்பிராயப் படுகின்றோம்.

முஸ்லிம் பொது ஜனங்களும், பொது ஜனங்களால் மதிக்கப்படும் தலைவர்களும் காங்கிரசையோ, சட்ட மறுப்பையோ, சத்தியாக்கிரகத்தையோ ஆதரிக்கவில்லை என்பது உலகறிந்த விஷயம், அன்றியும் திரு. காந்தியார் வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்று வந்தபின், திரு. காந்தியும் காங்கிரசும் அரசியலில் முஸ்லிம்களின் கோரிக்கைகளை ஒப்புக்கொள்ள முடியா தென்பதை பகிரங்கமாகக் காட்டிக் கொண்டபின் முஸ்லிம்கள் காங்கிரசை "இந்து மகாசபையின் அப்பன்" என்றே தீர்மானித்து விட்டார்கள். ஆகவே காங்கிரசின் மீது கொள்ளும் பகைமையை அதை ஆதரிப்போர்பாலும் கொள்ளத் தொடங்கி விட்டார்கள். இதைப் போலவே காங்கிரஸ் அபிமானங் கொண்ட இந்துக்கள், முஸ்லிம்கள் சட்டமறுப்பை ஆதரிக்கவில்லை என்பதற் காகவும் முஸ்லிம் பொது ஜனங்களும், அவர்களின் தலைவர்களான மௌலானா ஷௌக்கத் தலி போன்றவர்களும், காங்கிரசையும் அதன் காரியங்களையும் வெளிப்படையாகக் கண்டித்து எதிர்க்கின்றார்கள் என்பதற் காகவும், முஸ்லிம்களின் மேல் உள்ளூர வெறுப்பில் ஆத்திரமும் கொண்டி ருந்தார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. இதனாலேயே "வேண்டாத பெண்டாட்டி கால் பட்டாலும் குற்றம் கை பட்டாலும் குற்றம்" என்பது போலச் சிறு பிள்ளைகள் யாசகம் கேட்ட அற்பகாரணத்தை முன்னிட்டுக் கலகம் உண்டாகி விட்டதென்று கூறுவதில் சிறிதும் தவறு கிடையாது. இதுவே இந்து முஸ்லீம் கலகம் வலுப்பதற்குக் காரணம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



இந்து முஸ்லிம் கலகத்திற்கு அரசியல் காரணமில்லை என்றும், சில பொறுப்பற்றவர்களும் வகுப்புச் சண்டை மூட்டுகின்றவர்களுமே கலகத் திற்குக் காரணம் என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்திப் பார்க்க வேண்டுகிறோம். இந்தியாவில் அரசியல் சீர்திருத்த மும், அதிகப்படியான அரசியல் சீர்திருத்தம் வேண்டும் என்னும் கிளர்ச்சியும் ஏற்படுவதற்கு முன் இப்பொழுது நடப்பது போல இந்துக்களுக்கும் முஸ்லிம் களுக்கும் அடிக்கடி பெரும் கலகங்கள் நடந்தது உண்டா என்று கேட்கிறோம். இம்மாதிரியான கலகங்கள், அரசியல் சீர்திருத்தமும், அதிகப்படியான அரசியல் சீர்திருத்தம் வேண்டுமென்னும் கிளர்ச்சியும் ஏற்படுவதற்குமுன் இல்லையென்பது உண்மை. ஆகவே இதற்கு முன்னில்லாமல் இப்பொழுது சில ஆண்டுகளாக ஆரம்பித்து அதிகப்பட்டு வரும் இக்கலகங்களுக்குக் காரணம் அரசியலா? அல்லவா?

இரு சமூகத்தாரிடமுமிருந்து வரும் இத்தகைய விரோத மனப் பான்மை நீங்கி இந்து முஸ்லிம் ஒற்றுமை உண்டாவதற்குத்தான் வழியுண்டா என்று பார்த்தால் சமீபத்தில் ஏற்படுவதற்கு வழியில்லையென்று தான் கூறவேண்டும். பல வகுப்புகளும், பல மதங்களும் உள்ள ஒரு நாட்டில் அரசியல் கிளர்ச்சி அதிகமாக அதிகமாக வகுப்பு மதக்கலகங்களும் அதிகப் பட்டுக் கொண்டுதான் இருக்கக் கூடும். ஆகையால் வகுப்பு வித்தியாசங் களையும், மதக் கோட்பாடுகளையும் ஒழித்தாலன்றிக் கலகத்தை ஒழிக்கவா வது, அரசியலை நன்றாக நடத்தவாவது விரும்பும் அரசியல் சீர்திருத் தங்களைப் பெறவாவது முடியாது என்பது நிச்சயம். ஆதலால் நமது நாட்டில் இந்துக்கள் பழய இந்துக்களாகவே இருக்கும் வரையிலும், முஸ்லிம்கள் பழய முஸ்லிம்களாகவே இருக்கின்ற வரையிலும் இரு சமூகத்திற்குள்ளும் ஒற்றுமை உண்டாகப் போவதே இல்லை.

இந்து சமூகத்திலும் முஸ்லிம் சமூகத்திலும் மாறுதலை உண்டாக்கி னால்தான் இருசமூகத்திற்கும் ஒற்றுமை உண்டாக முடியும் இருசமூகத் தினருடைய பழக்க வழக்கங்களிலும், மனப்பான்மைகளிலும் மாறுதலை உண்டாக்கப்பாடுபடுவதே உண்மையான தேசவூழியமாகும். ஆனால் தேசீயத்தில் ஈடுபட்டிருக்கும் எந்த ஸ்தாபனமும், எந்த மனிதர்களும் இதற்காகப் பாடுபடக் கொஞ்சமும் கவலையெடுத்துக் கொள்ளவே இல்லை யென்பது உண்மை. இதற்கு மாறாக, இரு சமூகத் தலைவர்களும்; மத விஷயத் திலும், வகுப்பு விஷயத்திலும், இரு சமூகத்தாருக்குள்ளும், மூடநம்பிக்கை களையும், பிடிவாதத்தையும் அதிகப்படுத்தி வருகிறார்கள் என்றுதான் கூற வேண்டியிருக்கிறது. இப்படியானால் எப்பொழுதுதான் இரு வகுப்பினருக் குள்ளும் சமரச உணர்ச்சி உண்டாக முடியும் என்று யோசனை செய்து பாருங்கள்!



RangaRakes
tamilnavarasam.com

அன்றியும், சுலபமாக இந்து முஸ்லிம் கலகம் உண்டாவதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது என்று நாம் நினைக்கின்றோம். சாதாரணமாக ஓடுகின்ற ஒருவனை ஓட ஓட விரட்டுவதே உலக இயல்பு. எவ்வளவு அடித்தாலும் எதிர்க்கமுடியாமல் தாங்கிக் கொள்ளுகின்ற ஒருவனை அடிக்கின்றவன் பயமில்லாமல் அடிப்பதுதான் இயல்பு. 'நாம் விரட்டினால் நம்மை எதிர்த்து விரட்டுவான்' என்ற பயமிருந்தால், 'நாம் அடித்தால் நம்மையும் திருப்பி அடிப்பான்' என்ற அச்சமிருந்தால் விரட்ட எண்ணுகின்றவனும், அடிக்க நினைக்கின்றவனும், நினைத்தவுடன் விரட்டவோ, அடிக்கவோ, துணிய மாட்டான் என்பது உறுதி. இந்த முறையில் இந்துக்களின் நிலைமையையும், முஸ்லிம்களின் நிலைமையையும் எடுத்துக் கொண்டால், இந்துக்கள் சமூகம் ஜாதிமத விஷயங்களில் நெல்லிக் காய் மூட்டைகளாய் இருப்பதனால், ஒற்றுமையோடு எதிர்க்கின்ற கூட்டத்தைக் கண்டால் முதலில் பயந்து ஓடக் கூடிய நிலையிலும், அடிபடக் கூடிய நிலையிலுமே இருக்கின்றது என்பதில் ஐயமில்லை. இக்காரணத்தினால் தான் முஸ்லிம்கள் சிறுபான்மையினரா யிருந்தாலும் அஞ்சாமல் எதிர்க்கவும் இந்துக்கள் முதலில் யோசனை யில்லாமல் கலகம் உண்டாவதற்குக் காரணமாயிருந்து விட்டுப் பிறகு அடி பட்டு ஓடவும் நேருகின்றது. இதற்கிடையில், கலகக்காரர்களும் கொள்ளைக் காரர்களும் புகுந்து கலகத்தை அதிகப்படுத்திப் பொருள்களைக் கொள்ளை யடிக்கின்றார்கள்.

ஆகவே, ஒருவன் அடிப்பதைப் பொறுத்துக் கொண்டிருப்பது, அல்லது ஒருவன் விரட்டுவதைக் கண்டு ஒருவன் பயந்துகொண்டு ஓடுவது என்ற நிலை இருக்கும் வரையிலும் இது மாதிரியான வகுப்புக் கலகங்களும் மதச்சண்டைகளும் இருந்துதான் தீரும் என்பதில் யாரும் சந்தேகமே படவேண்டியதில்லை.

ஆனால், திரு. காந்தியின் - காங்கிரசின் ஆதிக்கம் ஏற்பட்டபின் இந்த நிலைமாறி, கலகத்தை எதிர்த்து நின்று அடக்கும் சக்தி உண்டாவதற்கு வழியே இல்லாமல் போய்விட்டது. திரு. காந்தியின் உபதேசமும், காங்கிரசின் பிரசார மும் "சத்தியாக்கிரகம் பண்ணுங்கள்! தடியடி வாங்குங்கள்! எவ்வளவு அடித் தாலும் பட்டுக் கொள்ளுங்கள்! ஆத்மசக்திதான் பெரிது! ஆத்மசக்தியினால் எதிரிகளை வெற்றி கொள்ளுங்கள்" என்று கோழைத்தனத்தை ஊட்டிக் கொண்டு வருகின்றது. இந்தக் கோழைத்தனமான பிரசாரம் நடைபெறுகின்ற வரையிலும், இதை மக்கள் பின்பற்றிக் கொண்டு அடிபடுகின்ற வரையிலும் எந்த வகுப்பினரானாலும் சரி, எந்த மதத்தினரானாலும் சரி, கலகம் நேரும் போது அடிபட்டு மானங்கெட்டுச் சாவ வேண்டியது தான்.

ஆகவே, இந்து முஸ்லிம் கலகத்திற்குக் காரணம் அரசியலும், மூட நம்பிக்கைகளும், ஒரு சார்பாரின் கோழைத்தனமும் காரணமா யிருப்பதை உணராமலும், உணர்ந்து அவைகளை ஒழிக்க வழி தேடாமலும், இருந்து



கொண்டு வீணாக அரசாங்கத்தின் மேல் பழி போடுவது எவ்வளவு ஒழுங்கான செய்கையாகும்?

கலகம் நேர்ந்தபின், அதை அடக்க அரசாங்க அதிகாரிகள் சரியான முறைகளைக் கையாளவில்லை; பாராமுகமாக இருக்கிறார்கள் என்று தேசீயவாதிகளும், தேசீயப் பத்திரிகைகளும் கூச்சலிடுகிறார்கள். ஆனால் அரசாங்கத்தாருடைய அடக்கு முறைகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்படாமல் சட்டமறுப்புச் செய்யக் கற்றுக் கொடுத்தவர்கள் யார்? இந்தத் தேசீயத் தலைவர்களும் பத்திரிகைகளும் அல்லவா? அரசாங்கத்திற்கு விரோதமாகக் காங்கிரஸ்காரர்கள் சட்டமறுப்பும் கலகமும் செய்வது போ லவே, இந்துக்கள் முஸ்லிம்களுக்கு விரோதமாகவும், முஸ்லிம்கள் இந்துக் களுக்கு விரோதமாகவும் கலகம் புரிகின்றார்கள். சட்டமறுப்புக் காரர்கள் அரசாங்கத்தாருடைய தடியடிகளையும், பிரம்படிகளையும், கடுமையான தண்டனைகளையும் மீறிக் கலகம் பண்ணுவது போலவே, இப்பொழுது இந்துக்களும், முஸ்லிம்களும் அரசாங்க அதிகாரிகளின் அடக்கு முறை களுக்கும் அடங்காமல் கலகம் பண்ணிக் கொள்ளுகிறார்கள். ஆகவே இந்தக் குற்றத்திற்கும் அரசியல் கிளர்ச்சியே காரணம் என்பதை யார் மறுக்கமுடியும்?

அன்றியும் இந்த இந்து முஸ்லிம் கலகம் நடந்த காலத்தில், அந்த பம்பாய் நகரத்திலேயே போஸ்டாபீஸ்களுக்குத் தீ யிடுவதும், தபால் பெட்டி களுக்குத் தீ யிடுவதும் ஆகிய காரியங்களும் நடந்திருக்கின்றன. இதைக் கொண்டே இக்கலகம் சட்ட மறுப்புக்காரர்களால் உண்டானதா? அல்லவா? என்பதை எளிதில் தீர்மானிக்கலாம்.

ஆகவே இனியாவது உண்மையில் இந்து முஸ்லிம் ஒற்றுமை உண்டாகவேண்டுமானால், இருவகுப்பினரிடமுள்ள மூட நம்பிக்கை களையும் முரட்டுப் பிடிவாதங்களையும் ஒழிப்பதும், அரசியலில் முஸ்லிம் கள் விரும்பும் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற தேசீயவாதிகள் சம்மதிப்பதும், இந்துக்கள் கோழைகளாயில்லாமல் முஸ்லீம்களைப் போல் ஒற்றுமையாகவும், தைரியமாகவும் இருக்கும்படி செய்வதும், பொது ஜனங்களிடம் சட்டத்தை மீறுவது, கலகம் பண்ணுவது என்ற எண்ணம் உண்டாகாமல் இருக்கச் செய்வதும் ஆகிய காரியங்களாலேயே முடியுமென்று கூறுகிறோம்.

இதைவிட்டு விட்டு இப்பொழுதே வெள்ளைக்காரர்கள் நமது நாட்டை விட்டு ஓடி விட வேண்டுமென்று பிரசாரம் பண்ணுவதும், இன்றைக்கே பூரண சுயேச்சை கொடுத்துவிட்டால் வகுப்புச் சச்சரவுகள் ஒழிந்து சமரசம் ஏற்பட்டு விடும் என்று சொல்லுவதும் வீண் என்பதையும், அதனால் ஒரு பலனும் உண்டாகப் போவதில்லை என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 22.05.1932**



RangaRakes tamilnavarasam.com

# எதிரிகளின் விஷமப்பிரசாரம்

நமது இயக்கத் தோழர்களான திரு. சௌந்தர பாண்டியன் அவர்களும், திரு. வி. வி. ராமசாமி அவர்களும், திரு. முருகப்பர் அவர்களும், திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதன் அவர்களும், திரு. டி. வி சோமசுந்தரம் அவர்களும், "சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை வரையறுத்து ரிஜிஸ்டர் செய்ய முடியாதிருப்பதனாலும், பலரும் தங்கள் தங்கள் விருப்பப்படி சங்கத்தின் அனுமதியின்றி நடந்து கொள்ளுவதாலும், இயக்க நிர்வாகக் கமிட்டியினின்றும் நீங்கிக் கொள்ளலாமா" என்று யோசனை செய்ததாகவும், முடிவை நமது மாகாணச் சங்கத் தலைவர் திரு. ஆர். கே. சண்முகம் அவர்கள் வரும் வரையிலும் ஒத்திவைத்திருப்பதாகவும், அதுவரையிலும் இயக்கத்தின் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாமல் விலகியிருப்பதென்று தீர்மானித்திருப்பதாகும் சண்டமாருதம் பத்திரிகையில் ஒரு அறிக்கை வெளிவந்தது.

அவ்வறிக்கை வெளிவந்த பின் திரு. டி. வி. சோமசுந்தரம் அவர்கள், தான் அவ்வறிக்கையில் சம்பந்தப்படவில்லையென்றும், தனக்கு அவ்வறிக்கையில் கூறியுள்ளவை யாதொன்றும் தெரியாதென்றும், அவ்வறிக்கையில் கண்ட விஷயங்களை தாம் ஒப்பவில்லை என்றும், அவ்வறிக்கையில் கையெழுத்து இடும்படி தன்னை யாரும் கேட்க வில்லையென்றும் வெளியிட்டிருக்கிறார். மற்றவர்கள் நால்வரும் 'சண்டமாருதத்தில்' வெளிவந்த அவ்வறிக்கைக்குப் பின் வேறொரு செய்தியும் வெளிப்படுத்தாததால் அவ்வறிக்கையின் அபிப்பிராயத்தை அவர்கள் ஒப்புக் கொள்ளுவதாகவே நாம் கருத வேண்டியிருக்கிறது.

ஆகவே நமது இயக்கத் தோழர்களான திரு. சௌந்தரபாண்டியன் அவர்களும், திரு. முருகப்பர் அவர்களும், திரு. வி. வி. ராமசாமி அவர்களும், திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்களும் இவ்வறிக்கையை வெளியிட்டதிலிருந்து நமது இயக்க அபிமானிகள் பலர் அவர்கள் இயக்க த்திலிருந்தே விலகி விட்டதாக ஒரு தப்பு அபிப்பிராயப்படுவதாக அறிகின்றோம். இதற்கு அனுசரணையாக நமது எதிரிகளும் சுயமரியாதை இயக்கத்திலிருந்து மேற்கண்ட தோழர்கள் விலகிவிட்டார்களென்றும், அதனால் சுயமரியாதை இயக்கத்தில் பிளவு உண்டாகி விட்டதென்றும், இனி இயக்கம் அழிந்து விடுமென்றும் விஷமப் பிரசாரம் பண்ண ஆரம்பித்து விட்டார்கள்.



ஆனால் உண்மையில் மேற்கூறிய நான்கு தோழர்களும் நமது இயக்கத்திலிருந்து விலகவில்லை யென்பதையும், விலகுவதற்கு நினைக்கக் கூட இல்லை என்பதையும், இவர்கள் எந்தக் காலத்திலும் நமது இயக்கத்தை விட்டு விலகக் கூடியவர்கள் அல்ல வென்பதையும் சந்தேகமில்லாமல் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். இந்த நான்கு தோழர்களும் நமது இயக்கம் தோன்றிய நாள் முதல் இதில் ஈடுபட்டு யாருடைய தயவு தாட்சண்யங்களுக்கும் கட்டுப்படாமல் உழைத்து வருபவர்கள் என்பதை நாம் கூறுவது மிகையேயாகும். உண்மையில் இத்தோழர்கள் சுயநலங்கருதியவர்களாயிருந்தால் அவர்கள் நமக்கு எதிரிடையான இயக்கங்களில் சேர்ந்து சுலபமாக தேசாபிமானப் பட்டம் பெற்றிருக்கலாம். அப்படியில்லாமல் உண்மையான சுயமரியாதைக் காரர்களாகவும் இயக்கக் கொள்கைகள் முழுவதையும் மனப்பூர்வமாக நம்பி ஒப்புக் கொள்ளுகின்றவர்களாகவும் இருக்கும் காரணத்தால் தான் அவர்கள் இது வரையிலும் நமது இயக்கத்திலிருந்து கொண்டு எதிரிகளின் மிரட்டுதல்களுக்கும் வசைமொழிகளுக்கும் அஞ்சாமல் உழைத்து வருகிறார்கள் என்பது நமது இயக்கத்தில் உள்ள மற்ற தோழர்களுக்குத் தெரியாத செய்தியல்ல.

இத்தகைய உண்மையான சுயமரியாதைத் தோழர்களை, இயக்கத்திலிருந்து விலகிவிட்டார்களென்று சிலர் செய்யும் 'பிரசாரம்' நமது இயக்கத்தின் மேல் உள்ள குரோத புத்தியினால் செய்யப்படும் பொய் பிரசாரமேயாகும். அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், எதிரிகளின் கூற்றுக்கு ஆதாரமாக ஒரு வார்த்தையாவது ஒரு எழுத்தாவது காணப்படுகிறதா? என்று கேட்கின்றோம்.

அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் காணப்படுவது "இயக்க நிர்வாகக் கமிட்டியிலிருந்து விலக்கிக் கொள்ளலாமா" என்று யோசித்ததாகவே காணப்படுகிறதே யொழிய இயக்கத்திலிருந்து விலகிக் கொள்வதாக அவர்கள் ஒரு பொழுதும் கருதியதில்லை யென்று அறியலாம். ஆகையால் அவர்கள் வெளியிட்ட அறிக்கையைத் திரித்துக் கூறி தப்புப் பிரசாரம் செய்வதன் மூலம் மேற்கூறிய நமது இயக்கத் தோழர்களின்மேல் பழி சுமத்தும் பொறுப்பற்றவர்களின் வார்த்தைகளை யாரும் நம்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

எந்த இயக்கத்திலும் தலைவர்களுக்குள் மன வேற்றுமை ஏற்படுவதும், அதனால் வருத்தமடைவதும் சகஜம். அதனால் இயக்கத்தின்மேல் உண்மையான பற்றுடைய யாரும் திடீரென்று இயக்கத்தை விட்டு விலகி விடாமல், இயக்கத்தில் தாங்கள் வகித்திருக்கும் பொறுப்பான பதவிகளிலிருந்து ஒதுங்கி நிற்பதும், தங்கள் மன வேறுபாடு தீருகின்ற வரையிலும், இயக்க நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாமலிருப்பதும் சில சமயங்களில் நடைபெறக் கூடிய காரியங்கள்தான். இந்தமுறையிலேயே நமது இயக்கத் தோழர்களுக்கும் சில விஷயங்களில் அபிப்பிராயப்பேதம் தோன்றி வருத்தமடைந்து நடவடிக்கை



RangaRakes tamilnavarasam.com

களிலிருந்து மாத்திரம் தற்சமயம் விலகியிருக்கத் தீர்மானித்திருக்கிறார்கள் என்றுதான் நம்புகிறோம்.

இனி நமது இயக்கத் தோழர்களான மேற்கூறியவர்கள் நிர்வாகக் கமிட்டியிலிருந்து விலக யோசித்ததற்குத் தாங்கள் கூறிய காரணங்களை நிவர்த்தித்து இயக்கத்தைப் பலப் படுத்துவதற்கு இச்சமயத்தில் தாங்களே உழைக்க வேண்டுமென்றும், நமது எதிரிகளின் விஷமப் பிரசாரத்திற்கு இடங் கொடாமல் இயக்க நடவடிக்கைகளில் கலந்து கொண்டு இயக்க வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கும் தோழர்களான ஈ. வெ. ராமசாமி, ஆர், கே.சண்முகம், எஸ். ராமநாதன் முதலியவர்கள் வந்தபின் மனவருத்தம் அடைந்திருக்கும் நமது இயக்கத் தோழர்கள் கூறும் குறைகளின் உண்மை களை ஆராய்ந்து நிவர்த்திக்கப்பட்டு எல்லாத் தோழர்களுக் குள்ளும் ஒருமனப்பட்ட அபிப்பிராயமும் சமரசமும் உண்டாகு மென்பதிலும் இவர்கள் முன்னிலும் பன் மடங்கு உற்சாகத்துடன் நமது இயக்க வளர்ச்சிக்காக வேலை செய்வார்களென்பதிலும் ஐயமில்லை.

ஆகையால் நமது இயக்க அன்பர்கள் யாரும் தோழர்கள் சௌந்திர பாண்டியன், முருகப்பர், வி. வி. ராமசாமி, கி. ஆ. பெ. விசுவநாதன் முதலியவர்களைப் பற்றி எதிரிகள் செய்யும் தப்புப் பிரசாரத்திற்கும் அவர்கள் இயக்கத்திலிருந்து விலகி விட்டதாகக் கூறும் புரளிகளுக்கும் செவி சாய்க்காமலிருக்கும்படி வணக்கமாக எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 22.05.1932**



# விபசாரம் ஒழியுமா?

‘விபசாரம்’ என்பதற்குச் சாஸ்திரங்களில் கூறப்படும் பொருள் பலவகையாகும். பொதுவாக இப்பொழுது “பொருள் வாங்கிக் கொண்டு ஆடவர்களின் இச்சையைப் பூர்த்தி செய்வதையே தொழிலாகக் கொண்டு ஜீவனம் பண்ணுவதையே விபசாரம்” என்று உலக மக்கள் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. பொருள் பெறாமல் சிற்றின்ப ஆசையுடன் கண்டவர்களையெல்லாம் காதலிக்கும் ஆண்களின் செய்கையையும் பெண்களின் செய்கையையும் ‘விபசாரம்’ என்றே கூறலாம்

இத்தகைய ‘விபசார’த்தினால் தேசத்தில் உண்டாகி வரும் தீமைகள் எண்ணற்றவை. கேட்கச் சகிக்காத கொடும் பிணிகளும், பார்க்கப் பொறுக்காத பெரும்நோய்களும் விபசாரத்தினால் உண்டாகின்றன. விபசாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஆண்களும், பெண்களும் நோய்வாய்ப்பட்டு வருந்துவதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளும் நோய்க்கு ஆளாகி ஜன சமூகத்தையே பிணியடையச் செய்யும் காளான்களாக இருக்கின்றனர்.

இன்னும் ‘விபசார’த்தினாலேயே கொலை, களவு முதலிய தீச் செயல்களும் மிகுதிப்படுகின்றன. ஆதலால் இக்கொடிய விபசாரத்தை ஒழிக்க உலகமெங்கும் முயற்சி நடைபெற்று வருகின்றது; அறிஞர்கள் எல்லோரும் இக் கொடுமையைப் பற்றி பேசி வருகின்றனர்.

ஜனசமூகத்தை அரித்துக் கொல்லும் புழுக்களில் “விபசாரத்தைப்” போன்ற வேறொரு கொடிய புழு இல்லை யென்றே சொல்லலாம். பண்டைக் காலந் தொட்டு வழங்கி வரும் அனேக தீய விஷயங்களில் ‘விபசார’மும் ஒன்றாகும்.

பழந்தமிழ் நூல்களில் ‘விலை மகளிர்’, ‘பொது மகளிர்’, ‘வரைவின் மகளிர்’ என்னும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. இவர்களுடைய தொழில் ‘விபசார’மேயாகும். ‘விபசாரம்’ என்பது சாஸ்திரங்களின் மூலம் குற்றமாகக் கருதப்பட்டாலும், ஜன சமூகத்தில் அது தாராளமாக நடைபெற்றே வந்திருக்கிறது. ஒரு ஆடவன், மணம்புரிந்து கொண்ட மனைவியோடு கூட ‘காதற் கிழத்தி’ என்னும் பெயருடன் நிலையாக வேறொரு பெண்ணோடு சேர்ந்தி



RangaRakes tamilnavarasam.com

ருப்பதும் சில சமயங்களில் இதுவும் போதாமல் 'கணிகையர்' இல்லங்க ளுக்குச் சென்று வருவதும் வழக்கமாகயிருந்ததாகவும் தமிழ் நூல்களால் அறியக் கிடக்கின்றது.

இதுவும் அல்லாமல், கோயில்களின் ஆடல் பாடல்களைச் செய்து கொண்டும், 'சாமி'யையே கல்யாணம் செய்து கொள்ளப்பட்டது என்னும் அர்த்தத்தில் பொட்டுக் கட்டிக் கொண்டும், 'தேவரடியார்' எனப் பெயர் பூண்டும் வாழும் கூட்டத்தினரும், விபசாரத்திற்குக் காரணமாக இருப்பதும் நாடறிந்த செய்தியாகும். இத்தகைய 'தேவரடியார்'களைப் பற்றியும் அவர்கள் கோயில்களிலுள்ள கல்லுச் சாமிகளுக்குப் (அவைகளை உண்டாக்கி வைத்திருக்கும் புரோகித ஆசாமிகளுக்கும்) பெண் சாதிகளாக இருந்து தொண்டு புரிய வேண்டிய அவசியத்தைப் பற்றியும் சமஸ்கிருத நூல்களில் சொல்லப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்.

தமிழ் நூல்களிலோ பண்டைக் காலத்தில், விபசார வாழ்க்கையை மேற்கொண்டிருந்த 'விலை மகளிர்' 'பொது மகளிர்' 'வரைவின் மகளிர்' என்ற பெயருடைய கூட்டத்தார் போக, ஆடல் பாடல்களைத் தொழிலாகக் கொண்டிருந்த 'பாடினி' 'பாணினி' 'விறலி' என்ற பெயருடைய ஒரு கூட்டத் தினரும் வேறேயிருந்திருக்கின்றனர். இக் கூட்டத்தாருக்கும் தற்காலத்தில் உள்ள 'தேவரடியார்' என்னும் கூட்டத்தாருக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கக் கூடுமா? என்பது ஆராயத்தக்க விஷயமாகும்.

ஆகவே இந்த 'விபசாரம்' என்னும் கொடிய வழக்கம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல வென்பதையும், பல ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே நமது நாட்டில் நிலைத்து வருகிறதென்பதையும் அறியலாம்.

முற்காலத்திலிருந்த வைதீகர்கள், புலவர்கள், நூலாசிரியர்கள் முதலிய வர்கள் அனைவரும் விபசாரத்தின் தீமையைப் பற்றிக் கூறாமல் விடவில்லை. விபசாரத்தின் கெடுதியைப் பற்றிச் சொல்லாத நீதி நூல்களோ, இலக்கியங் களோ, கதைகளோ ஒன்றுமில்லை என்று கூறலாம். 'கொலை', 'களவு', 'பொய்', 'கள்', 'காமம்' என்று கூறப்படும் பஞ்சமகா பாதகங்களில் 'காமம்' என்று குறிப்பிட்டிருப்பது விபசாரத்தையேயாகும். இவ்வாறு வைதீகர்களும், நீதி நூல்களும், புலவர்களும், நூலாசிரியர்களும், விபசாரத்தை ஜன சமூகத் தினின்றும் நீக்குவதற்குப் பண்டைக் காலமுதல் முயற்சி செய்துங்கூட, அக் கொடிய வழக்கம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்ததேயொழியக் குறைந்த பாடில்லை. இவ்வாறு 'விபசாரம்' குறையாமல் வளர்ந்து வந்ததற்குக் காரணம் 'விபசாரம்' தோன்றுவதற்கு அடிப்படையான காரணம் என்ன என்பதை ஆராய்ந்து அதை அடியோடு ஒழிக்க வழி தேடாமையேயாகும்.

'விபசாரம்' வளர்ந்ததற்கு முதற்காரணம் ஆடவர்களின் ஆணவமே யாகும், பெண்கள் விஷயத்தில் மாத்திரம் "கற்பு" "பதிவிரதாதர்மம்" என்ற கட்டுப்பாடுகளை வற்புறுத்தி ஆண்கள் விஷயத்தில் வற்புறுத்தாமல்



விட்டதனால் பெண்கள் பலர் விபசார வாழ்க்கையில் ஈடுபட நேர்ந்தது., பணம் கொடுத்துப் பண்டங்களை வாங்குவோர் இல்லாவிட்டால், பண்டங்களை விற்பனைக்கென்று வைத்துக் கொண்டு வாங்குவோரை எதிர்பார்ப்பவர்களும் இருக்க மாட்டார்களல்லவா? அது போலவே சிற்றின்ப வேட்கை கொண்ட முரட்டு ஆண்கள் பலரால் பலவந்தப்படுத்தப் பட்டு விபசாரியானவர்கள் பெருகியே விபசாரிகள் அதிகமானார்கள் என்று கூறுவது எவ்வகையிலும் பொருந்தாமற் போகாது.

இரண்டாவது, சமூக வாழ்க்கையில் ஏற்படுத்தப்பட்ட பல கொடுமை யான கட்டு திட்டங்களும் விபசாரத்தை மிகுதிப்படுத்தின என்பதில் ஐய மில்லை.

காதல் மணமில்லாமை, விதவை மணமில்லாமை, விவாக விடுதலை உரிமை இல்லாமை, பெண்களுக்குச் சொத்துரிமையில்லாமை முதலிய சமூகக் கட்டுப்பாடுகள் பெண்கள் விபசாரிகளாவதற்கு முக்கிய காரணமாயிருப் பனவாகும்.

ஒருவர் மேல் ஒருவர் காதல் கொள்ளாத ஒரு தம்பதிகளின் வாழ்க்கை தூய வாழ்க்கையாக இருப்பது கஷ்டம். அத் தம்பதிகள் இருவரும் தங்கள் மன இச்சையைத் தகாத வழியில்தான் பூர்த்தி செய்து கொள்ள நேரும்.

பருவ காலத்தில் விதவையான பெண்களை சாஸ்திரங்களின் மேலும், மதத்தின் மேலும் பழிசுமத்தி மணஞ்செய்து கொடாமல் வைத்திருப்பதனால் விளையும் விபசாரக் கொடுமையை அளவிட்டுக் கூற யாரால் முடியும்? இன்று குளங்களிலும், ஆறுகளிலும், கிணறுகளிலும், சாக்கடைகளிலும், குப்பைத் தொட்டிகளிலும் எறிந்து கொல்லப்படும் குழந்தைகளெல்லாம் விபசாரிகளாலும், விதவைகளினாலும் பெற்ற குழந்தைகள் என்பதை யார் மறுக்க முடியும்? வீட்டுக்கு வீடு விதவைகள் குடி கொண்டிருக்கும் ஜாதியில் தான் விபசாரங்களும், சிசுக் கொலைகளும் அதிகம் என்று அறியாதார் எவர்?

இந்து சமூகத்தில், விவாக விடுதலை இல்லாமையால் நேரும் 'விபசாரம்'மும் அதிகமே. மனைவியின் மேல் விருப்பமில்லாத கணவன், அவளை நீக்கிவிட்டுத் தாராளமாக வேறு பெண்ணை மணம் புரிந்து கொண்டோ அல்லது வேறு ஒரு பெண்ணைச் சேர்த்து வைத்துக் கொண்டோ வாழலாம். ஆனால் மனைவியோ வேறுமணம் புரிந்து கொண்டு வாழ, சட்டப்படி இடம் இல்லாமையால் விபசார வாழ்க்கையையே மேற்கொள்ள நேருகின்றது.

பெண்களுக்கு கணவனுடைய சொத்திலும் பெற்றோர் சொத்திலும் உரிமை இல்லாத காரணத்தால் கணவனாலும் பெற்றோர்களாலும் ஆதரிக்கா மல் விடப்பட்டவர்கள் ஜீவனத்திற்கு வேறு வகையில்லாத போது. 'விபசார' வாழ்க்கையையே கைக்கொள்ளும்படி நேருகின்றது.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே உண்மையில் விபசாரம் ஒழிய வேண்டுமானால், ஆண்களுடைய ஆணவத்தை அடக்குவதற்கும் பெண்கள் சுதந்தரமாகிய காதல் மண உரிமை, விவாக விடுதலை உரிமை, விதவா விவாக உரிமை, சொத்துரிமை முதலியவற்றிற்கும் சட்டங்களின் மூலம் பலவந்தமாக உதவி செய்ய வேண்டும்.

இப்பொழுது பல நாடுகளிலும் விபசாரத்தை ஒழிப்பதற்குச் சட்டங்கள் செய்யப்பட்டு அமுலிலும் இருந்து வருகின்றன. ஆனால் விபசாரத் தடைச் சட்டம் அமுலிலிருக்கும் எல்லா நாடுகளிலும் அது அடியோடு ஒழிந்து விட்டதென்று கூறத்தகாது.

ஒருக்கால் இந்தியாவைத் தவிர மற்ற தேசங்களில் விபச்சாரத் தடைச் சட்டத்தினால் அதை அடியோடு நிறுத்திவிடக்கூடும்.

ஏனெனில் இந்தியாவைத் தவிர மற்ற இடங்களில் நடைபெறும் விபசாரம் வெளிப்படையானவை. வெளிப்படையாக வியாபாரம் போல் நடைபெறும் விபசாரத்தைத் தடுப்பது எளிது.

ஆனால் நமது நாட்டில் நடை பெறுவது போன்ற மறைமுகமான விபசாரங்களைத் தடுப்பது முடியாது. விதவைகள் செய்யும் விபசாரத்தையும், விவாக விடுதலை செய்து கொள்ள முடியாமல் பேருக்குத் தம்பதிகளாக வாழும் குடும்பங்களில் நடைபெறும் விபசாரங்களையும் எப்படித் தடுக்க முடியும்?

மேல் நாடுகளில் ரஷியா தேசம் ஒன்றில்தான் அடியோடு விபசாரம் ஒழிந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமூக வாழ்க்கையில் எத்தகைய வேற்றுமையும் இருப்பதற்கு இடமில்லாமல் சட்டமூலம் ஏற்பட்டிருக்கும் சௌகரியமேயாகும்.

இப்பொழுது நமது தேசத்தில் பரோடா, மைசூர், திருவாங்கூர் முதலிய சமஸ்தானங்களில் சட்டம் மூலம் விபசாரம் தடுக்கப் பட்டிருக்கிறது. சென்னையிலும் பம்பாயிலும் ‘விபசார’ச் சட்டம் நிறைவேறியிருக்கிறது. பம்பாய் நகரத்திலும், சென்னை நகரத்திலும் இச் சட்டம் அமுல் நடத்தப் படுகிறது. இப்படி இருந்தும் மேற்கண்ட சமஸ்தானங்களிலும் நகரங்களிலும் விபசாரக் கொடுமை அடியோடு ஒழிந்துவிட்டதா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். பகிரங்கமாக நடந்த ‘விபசார’ வியாபாரம் ஓரளவு ஒழிந்ததே அன்றி மறைமுகமான விபசாரம் சிறிதும் குறையவேயில்லை.

இன்னும் இச்சட்டத்தை நாடெங்கும் அமுலுக்குக் கொண்டு வந்தாலும், தாட்சண்யமின்றிச் சட்டத்தின் விதிகளை உபயோகித்தாலும் விபசாரத்தை அடியோடு ஒழிக்க முடியாது.



வெளிப்படையான ‘விபசார’ வியாபாரத்தை ஓரளவு ஒழிக்க முடியுமே தவிர ரகசிய வியாபாரம் எப்பொழுதும் நடந்தே தான் தீரும்.

ஆகையால் மற்ற நாடுகளைப் போல் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமூக விஷயங்களில் எத்தகைய வித்தியாசமும் இல்லாமல் சம சுதந்திரம் ஏற்படுத்தி அதை அனுபோகத்தில் கொண்டு வருவதன் மூலந்தான் விபசாரத்தை அடியோடு ஒழிக்க முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆனால் நமது நாட்டு வைதீகர்களோ விபசாரம் தீயது என்று வாயளவில் மாத்திரம் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்குத் தமது வீட்டில் உள்ள விதவைப் பெண் மக்கள் செய்யும் விபசாரம் கண்ணுக்குத் தெரிவதில்லை. தமது குடும்பங்களில் உள்ள ஒற்றுமையில்லாத தம்பதிகள் செய்யும் விபசாரமும் கண்ணுக்குத் தெரிவதில்லை. தெரிந்தாலும் அதைக் குற்றமாகவோ விபசாரமாகவோ கருதாமல், அதற்குப் பரிகாரம் தேடாமல் கண்ணால் காணாதது போலவும், காதால் கேளாதது போலவும் இருந்து விடுகின்றார்கள்.

விபசாரம் ஒழிவதற்கு, காதல் மணம், விதவை மணம், விவாக விடுதலை, சொத்துரிமை முதலியவைகளே வழியென்று கூறும் சீர்திருத்தக் காரர்களையும் சுயமரியாதைக்காரர்களையும் “பெண்களை யெல்லாம் விபசாரம் செய்யத் தூண்டுகின்றவர்கள்” என்று குறைகூறுகின்றார்கள்.

மதப் புரட்டுகளையும், சாஸ்திரப்புரட்டுகளையும், நம்பிப் பெண்களைக் கொடுமைப்படுத்தி விபசாரத்தனத்திற்கு ஆளாக்கிக் கொண்டிருக்கும் இந்த மடையர்களான வைதீகர்களும், பகுத்தறிவற்றவர்களும், நமது நாட்டில் அரசியல் விஷயங்களிலும், சமுதாய விஷயங்களிலும் செல்வாக்குப் பெற்றிருக்கும் வரையிலும், விபசாரத்தை ஒழிப்பதற்கு எத்தகைய சட்டங்கள் செய்யப்பட்டாலும் அவைகளுக்குத் தகுந்த முழுப்பலனும் கிடைக்க முடியாதென்றே கூறுவோம்.

**குடி அரசு – தலையங்கம் – 29.05.1932**



RangaRakes tamilnavarasam.com

## சீர்திருத்த அரசியல் சிங்கம்

உண்மையான சீர்திருத்தக்காரரும், தேசபக்தருமான திரு. விபினசந்திர பாலர் அவர்கள் காலஞ்சென்ற செய்திகேட்டு வருந்துகின்றோம். நமது நாட்டில் அரசியல்வாதியாகவும், சமுதாய சீர்திருத்தவாதியாகவும் விளங்கிய தலைவர்கள் சிலரேயாவார்கள், அவர்களில் காலஞ் சென்ற லாலா லஜபதிராய் ஒருவர் என்பது நாடறிந்த செய்தி. அவரைப் போன்றே திரு. விபினசந்திர பாலரும் சமுதாய சீர்திருத்தக் காரராகவும், நிதானமுள்ள அரசியல்வாதியாகவும் விளங்கினார்.

சென்ற 1925 ல் சென்னையில் நடைபெற்ற ஒரு வாலிபர் மகாநாட்டில் திரு. விபினசந்திர பாலர் அவர்கள் தலைமை வகித்துப் பேசும் போது "நீங்கள் உண்மையில் வீரர்களாகவும், தேசத்திற்கு உழைக்கக் கூடியவர்களாகவும் இருக்க விரும்புவீர்களானால் 25 வயதிற்குமுன் ஒருக்காலும் மணம் புரிந்து கொள்ளாதீர்கள்! ஒரு சமயம் உங்கள் பெற்றோர்கள் கட்டாயப்படுத்தி மணம் செய்து வைக்கத் துணிவார்களாயின் வீட்டை விட்டு ஓடிப் போய்விடுங்கள்" என்று கூறினார். இதைப் போலவே பெண்கள் மணவிஷயத்திலும் பால்ய மணம் கூடாது என்ற அபிப்பிராயமுடையவர்.

அன்றியும் திரு. பாலர் அவர்கள் தமது முதல் மனைவி இறந்தபின் இரண்டாவதாக ஒரு விதவைப் பெண்ணையே மணம் புரிந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் தமது இளம் வயதிலேயே சீர்திருத்த அபிப்பிராயங்களை உறுதியாகக் கொள்ளத் தொடங்கி விட்டார். பிரம்ம சமாஜ ஸ்தாபகரான பாபு கேசவசந்திரசென் அவர்களின் மாணவராகிப் பிரம்ம சமாஜத்தில் ஈடுபட்ட பொழுது இவரது தந்தை அதில் ஈடுபடக்கூடாது எனத்தடுத்தும் கேட்காமல் பிரம்ம சமாஜக் கொள்கைகளை மேற்கொண்டதால் தமது சொத்துக்களை இவருக்குக் கொடுக்காமல் வேறொருவருக்கு எழுதி வைத்தும்; வீட்டை விட்டுத் துரத்தியும் கூட தமது உறுதியான கொள்கையினின்றும் சிறிதும் தவறாத வீரராக விளங்கினார். இத்தகைய அஞ்சா நெஞ்சம் படைத்த சீர்திருத்த வீரர் நமது விபினசந்திர பாலர்.



காங்கிரஸ் திரு. காந்தியின் கையில் சிக்கி தாறுமாறாகும் வரையில் காங்கிரசில் சேர்ந்து இருந்தார்; காங்கிரஸ் பயனற்ற ஆவேசமான காரியங்களில் புகுந்த போது அதைவிட்டு விலகித் தனித்து நின்று தேச ஊழியம் புரிந்து வந்தார்.

சாதாரணமாக சுயராஜியம் என்னும் பெயரால் மக்களை ஆவேசமான வழிகளில் தூண்டிவிட்டு வீண்கிளர்ச்சிகளை உண்டாக்கி நாட்டில் பொருளாதாரக் கஷ்டத்தையும் மற்றும் பல தொல்லைகளையும் உண்டாக்கும் ஆவேசக்காரர்களுக்குத் தேசத்தலைவர் பட்டம் கிடைப்பதும், நாட்டின் முன்னேற்றத்திற்கு உண்மையாகவும், அமைதியாகவும் பலனுண்டாகும் படியும் அரசியலிலும் சமுதாய விஷயங்களிலும் ஈடுபட்டு உழைக்கின்றவர்களுக்குத் தேச துரோகப் பட்டம் கிடைப்பதும் போலவே நமது திரு. விபினசந்திரபாலர் அவர்களுக்கும் காங்கிரசிலிருந்து விலகிய பின் வசைமொழிகளும், தேசத்துரோகப் பட்டமும் கிடைத்துவந்தன. ஆயினும் அவர் சிறிதும் அஞ்சாமல் இறக்கும் வரையிலும் தமது அபிப்பிராயங்களை அடிக்கடி பத்திரிகைகளில் வெளிப்படுத்துவதன் மூலம் தேச ஊழியம் புரிந்து கொண்டு வந்தார்.

பேசுந் திறமையில் இவரைப் போல் சிறந்தவர் வேறு எவரும் இல்லையென்று சொல்லலாம். 1907-ம் ஆண்டில் சென்னை கடற்கரையில் இவர் செய்த பிரசங்கத்தொனி இன்னும் இந்திய மக்கள் மனத்தைவிட்டு நீங்கியிருக்க முடியாது.

இத்தகைய பெரியார் தமது 76 - வது வயதில் காலஞ் சென்றது பற்றி நாம் அதிகமாக வருந்துவதற்கு நியாயமில்லை. வயதேறியவர்கள் இறப்பது இயல்பே என்று சமாதானமடைவதே முறையாகும். இவர் கொண்டிருந்த அரசியல் அபிப்பிராயத்தையும், சமுதாய சீர்திருத்த அபிப்பிராயத்தையும் நமது நாடு பின்பற்றியிருக்குமாயின் தற்பொழுதுள்ள மோசமான நிலை மாறி எவ்வளவோ ஒழுங்கான முறையில் முன்னேறியிருக்கக்கூடும் என்ற விஷயத்தை இச்சமயத்தில் ஞாபகப்படுத்த வேண்டியது தேச ஊழியர்களின் கடமையாகும்.

காலஞ் சென்ற திரு. விபினசந்திரபாலர் அவர்களின் தேச ஊழியத்தைப் போற்றுகின்றவர்களும் அவருடைய சமுதாய ஊழியத்தைப் பாராட்டுகின்றவர்களும் அவருக்குச் செய்ய வேண்டிய நன்றி அவருடைய உயர்ந்த கொள்கைகளைப் பின்பற்றி நாட்டின் நன்மைக்கு உழைப்பதேயாகும் என்று தெரிவித்துக் கொள்ளுவதுடன் அவருடைய அன்பினர்களுக்கெல்லாம் நமது அநுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 29.05.1932**



RangaRakes tamilnavarasam.com

# இளைஞர்களும் சுயமரியாதையும்

## கத்தோலிக்கர் பயம்

இளைஞர்களுக்கும், சுயமரியாதை இயக்கத்திற்கும் உள்ள தொடர்பைப் பற்றி இப்பொழுது நாம் கூறுவது புதியதன்று. இந்த நாட்டில் மட்டிலும் அல்ல, வேறு எந்த நாட்டிலும் மூடப் பழக்க வழக்கங்களையும் அவற்றிற்குத் தந்தைமார்களாக இருந்து வளர்த்து வரும் புரோகிதர்களின் ஆதிக்கங்களையும், இந்தப் புரோகிதர்களின் வயிற்றுப் பிழைப்பு வஞ்சகச் செயல்களுக்கெல்லாம் ஆதரவு கொடுத்து வரும் மதங்களையும் அழித்து தவிடுபொடி செய்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் அந்நாட்டின் வாலிபர்கள் என்பதை உலக ஞானம் உள்ள எவரும் அறிவார்கள். இளைஞர்களால் விரும்பப்படாததும், அவர்களுடைய கூட்டுறவையும் ஒத்துழைப்பையும் பெறாததுமான எந்த இயக்கமும் மாண்டு மடிந்து இருந்த இடந்தெரியாமலும், தேச மக்களின் நினைவில்கூட இல்லாமலும் போதல் திண்ணம். ஏனென்றால் முதியோர்களைப் போன்று அழுக்கேறிப் பாசம் பிடித்து, சுரணையற்றுப் போன மூளை இளைஞர்களிடமில்லை. இது நமது முன்னோர் வழக்கமாயிற்றே இதை விட்டு விட்டால், நமக்கு ஏதாவது தீங்கு நேர்ந்து விடுமோ! அண்டை அயலார் நம் மேல் பழி கூறுவார்களே! இதனால் நமது வருவாய்க்கு இடையூறு நேர்ந்து விட்டால் என்ன செய்வது? வழக்கத்திற்கு விரோதமாக நடந்தால் "குலதெய்வம்" கெடுத்து விடுமோ "தெய்வம் கோபித்துக் கொள்ளுமே" என்று தொட்டதற்கெல்லாம் சந்தேகமும், பயமும் கொள்ளுகின்ற கோழைத்தனமும் பேடித்தனமும் இளைஞர்களிடமில்லை. இளைஞர்களின் சிந்தையும், அறிவும் செயலும் பரிசுத்தமானவை; ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடங்காதவை; சுயநல விவகாரங்களில் படிந்து முனை மழுங்காமல் கூர்மையாகவே இருப்பவை. ஆகையால் அவர்கள் எந்தச் செயல்களையும் ஆலோசித்துப் பார்த்து அவை சரியானவை என்று தம்மனத்திற்குப் பட்டால் உடனே அந்தக் காரியத்தை யாருடைய புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் எதிர்பாராமல், ஆதரிப்பையும், புறக்கணிப்பையும் பொருட்படுத்தாமல், எதிர்ப்பையும் கண்டிப்பையும் லட்சியம் பண்ணாமல், செயல் முறையில் காட்டக் கூடிய ஆண்மை படைத்தவர்கள். ஆகையால்தான் அவர்கள் தலையிட்டு அவர்களுடைய ஆதரவைப் பெற்று அவர்களுடைய ஊழியத்தைப் பெற்று, நடைபெறக் கூடிய எந்த இயக்கங்களும் மின்சார சக்திபோல் பரவி வெற்றி பெற்று வருகின்றன.



துருக்கி தேசத்தின் சுயமரியாதை வீரரான 'முஸ்தபா கமால் பாஷா' அவர்களின் கொள்கைகளை முழுமனத்துடன் ஆதரித்து, நாடெங்கும் பரவச் செய்து வெற்றியைக் கொடுத்தவர்கள் இளைஞர்கள்; இத்தாலி தேசத்தின் சுயமரியாதை வீரராகிய 'முசோலினி' அவர்கள் அந்நாட்டு இளைஞர்களின் ஆதரவைப் பெற்றே தமது கொள்கைகளில் வெற்றி பெற்றார்; ருஷியா தேசத்துச் சுயமரியாதை வீரராகிய 'லெனின்' அவர்களும் இளைஞர்களின் துணையைக் கொண்டே தமது கொள்கைகளை நிலைநிறுத்தி வெற்றி பெற்றார்; ஸ்பெயின் தேசத்தில் புரோகிதர்களின் ஆதிக்கத்தை ஒழித்து மக்களின் சுயமரியாதையைக் காப்பாற்றக் காரணமாயிருந்தவர்களும், இருக்கின்றவர்களும் இளைஞர்கள்; கடந்த மகாயுத்தக் காலத்தில் அப்பொழுது பிரிட்டிஷ் முதல் மந்திரியாகயிருந்த திரு. லாயிட் ஜார்ஜ் அவர்களின் விருப்பத்தின்படி நின்று இங்கிலாந்தின் சுயமரியாதையைக் காப்பாற்றியவர்கள் அந்நாட்டின் இளைஞர்கள் என்னும் விஷயங்கள் சரித்திர ஞானம் உள்ளவர்களுக் கெல்லாம் தெரியாதவை யல்ல.

பழயகால சரித்திரங்களைப் புரட்டிப் பார்த்தாலும் இந்த உண்மையை வெளிப்படையாக உணரலாம். கிரீசின் வைதீக முதலாளிக் கூட்டத்தாரால் அக்கிரமாகக் குற்றஞ் சாட்டி விஷங்கொடுத்துக் கொல்லப்பட்ட 'சாக்ரட்டீஸ்' என்னும் பெரியாரின் கொள்கைகளை ஆதரித்தவர்கள் இளைஞர்கள்; அக்காலத்தில் மூடநம்பிக்கை இருளில் மூழ்கிக் கிடந்த மக்களுக்குப் புரோகிதர்களின் வஞ்சகச் செய்கைகளை எடுத்துக் காட்டி அவர்களை விடுதலை செய்த ஏசுகிறிஸ்துவின் கொள்கைகளைப் பரவச் செய்தவர்கள் இளைஞர்கள்; விக்கிரக ஆராதனைகளிலும், பலிகளிலும், கொடுமையான வழக்கங்களிலும் அமிழ்ந்துக் கிடந்த அரேபிய தேச மக்களுக்குச் சுயமரியாதையை உண்டாக்கிய முகமது நபி அவர்களின் கொள்கைகளுக்கு ஆதரவு அளித்தவர்கள் இளைஞர்கள்; ஜெர்மனி தேசத்தின் சுயமரியாதை வீரராகிய மார்ட்டின் லூதர் அவர்களின் கொள்கைகளை ஆரம்பத்தில் ஆதரித்து நாடெங்கும் பரப்பியவர்கள் இளைஞர்கள்; மேற்கூறிய பெரியார்கள் அனைவரும் புரோகிதர்களின் மோசங்களையும், அக்கிரமங்களையும், வேஷங்களையும் எடுத்துக் காட்டி தேசமக்களை விழிப்படையச் செய்ய முயன்றபோது முதியவர்களான வைதீகர்களும், புரோகித ஆதிக்கத்திற்கு அடங்கியவர்களும் எதிர்த்து அப்பெரியார்களுக்குப் பலவகையான துன்பங்களை உண்டாக்கிய காலங்களிலும் அஞ்சாமல் அவர்கள் கொள்கைகளை ஆதரித்துப் பரவச் செய்தவர்கள் பரிசுத்த மனமுடைய இளைஞர்களே என்பதைக் கற்றவர்கள் யாவரும் அறிவார்கள்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலும், ஏழு ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட நமது சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டு இதைப் பரவச் செய்து வருபவர்கள் அனைவரும் பெரும்பாலும் இளைஞர்களே என்பதை யாரும் அறிவார்கள். இன்று சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க வேண்டுமென்று பிரயத்தனம் பண்ணிய படு வைதீகர்களின் பிள்ளைகளையும் நமது இயக்கம்



RangaRakes tamilnavarasam.com

வெளியில் இழுத்துத் தன்னோடு சேர்த்துக் கொண்டு வளர்ந்து வருவதுடன், அவ்வைதீகத் தந்தைமார்களின் உச்சிக் குடுமியையும் பிடித்துக் குலுக்குகிறது என்பது நாடெங்கும் தெரிந்த செய்தியாகும்.

'சைவப் பெரியார்'களெல்லாம் மகாநாடுகள் கூட்டிச் சுயமரியாதை இயக்கத்தைக் கண்டித்தார்கள். சைவ இளைஞர் மகாநாடு கூட்டி அவர்களை யெல்லாம் சுயமரியாதை இயக்கத்தில் சேரவிடாமல் தடுத்துப் பார்த்தார்கள். என்னதான் முயன்றாலும் இளைஞர் மனத்தையும் சுயமரியாதை இயக்கத் தையும் வேறுபடுத்த முடியாமல் இப்போது மூலையில் உட்கார்ந்து விட்டார்கள்.

ஆனால் இப்பொழுது கத்தோலிக்கக் கிறிஸ்துவர்களில் சிலர் நம்மைக் கண்டிக்க முற்பட்டிருக்கின்றதைக் கண்டு நாம் ஆச்சரியமடையவில்லை. புரோகித ஆதிக்கம் எந்தெந்த இடங்களில் இருக்கின்றதோ, அங்கெல்லாம் நமது இயக்கம் சென்று அவ்வாதிக்கத்தைத் தளர்த்தாமற் போகாது.

இந்தியாவில் புரோகிதர்களின் சட்டத்திற்கும், நிபந்தனைகளுக்கும் அடங்கியுள்ள மதங்களில் கத்தோலிக்கக் கிறிஸ்துவர்கள் மதமும் ஒன்று என்று சொல்லப்படுகிறது. ஆகையால்தான் அம்மத இளைஞர்கள் பலர் இப்பொழுது சுயமரியாதை உணர்ச்சி பெற்று வருகிறார்கள். இதைக் கண்டு பயந்தே அம்மத வைதீகர்களின் ஆதிக்கத்தில் சென்ற 30-5-32 -இல் தூத்துக்குடியில் நடைபெற்ற கத்தோலிக்க வாலிபர்களின் மகாநாட்டில் நமது இயக்கத்தைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அத்தீர்மானம் வருமாறு:-

> சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கைகளை மேலே போர்த்துக் கொண்டு நாஸ்திகத்தையும் மதத்தில் வெறுப்பையும் பரப்பிவரும் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி இம்மகாநாடு கத்தோலிக்க இளைஞர்களுக்கு எச்சரிக்கை செய்வதுடன்,
>
> சமத்துவமின்மையை உண்டு பண்ணியவர்களும், அதை ஆதரித்து வருகின்றவர்களும், குருக்கள்மார்கள் என்று சொல்லிக் குருக்கள் களை எதிர்த்தும், அவர்கள்மேல் குறைகூறியும் வரும் மனப்பான் மையை வளர்த்துவருவதையே நோக்கமாகக் கொண்டுள்ள இவ் வியக்கத்தின் செயல்களில் ஒன்றை இம்மகாநாடு முக்கியமாகக் கண்டிக்கிறது.
>
> இத்தகைய பிரசாரத்தை அழிக்கத் தங்களால் முடிந்த வகையில் எல்லாம் முயற்சி செய்யுமாறு இம்மகாநாடு கத்தோலிக்க வாலிபர் களைக் கேட்டுக் கொள்கிறது.

மேற்கண்ட தீர்மானத்தைக் கத்தோலிக்க வாலிபர்கள் மகாநாட்டில் நிறை



வேற்ற வேண்டிய அவசியம் நேர்ந்ததற்குக் காரணம் இன்னதென்பதை நாம் விளக்கிக் காட்ட வேண்டியதில்லை. இத்தீர்மானத்தில் "சமத்துவமின்மையை உண்டுபண்ணியவர்களும், அதை ஆதரித்து வருகின்றவர்களும் குருக்கள் மார்கள் என்று சொல்லிக் குருக்களை எதிர்த்தும், அவர்கள் மேல் குறை கூறியும் வரும் மனப்பான்மையை வளர்த்துவருவதையே நோக்கமாகக் கொண்டுள்ள இவ்வியக்கத்தின் செயல்களில் ஒன்றை இம்மகாநாடு முக்கிய மாகக் கண்டிக்கிறது" என்று விளக்கமாகக் கூறப்பட்டிருப்பது ஒன்றே போதுமானதாகும்.

இத்தீர்மானத்தைச் செய்தவர்களுக்கு நாம் சொல்லுகின்றோம். சமத்துவம் சகோதரத்துவம் சுதந்திரம் என்பனவைகளை உண்டாக்குவதே எங்கள் இயக்கத்தின் நோக்கம்; இவைகளுக்குத் தடையாக இருப்பவை புரோகிதர்களும், கடவுள், மோட்சம், நரகம், சொர்க்கம், பாவம், பாவமன்னிப்பு, பரலோகம் முதலிய பூச்சாண்டிகளேயாகும். இவைகளின் மேல் மக்கள் கொண்டிருக்கும் மயக்கத்தையும் நம்பிக்கையையும் ஒழித்தால்தான் சுய மரியாதையை உண்டாக்க முடியும் என்றுதான் பிரசாரம் பண்ணிக் கொண்டு வருகின்றோம். இந்தப் பிரசாரத்தை அடிப்படையாகக் கொண்டு தான் எங்கள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுதும் இப்பிரசாரமே எங்கள் இயக்கத்தின் முதன்மையாக இருந்து வருகிறது. இந்த பிரசாரமானது கத்தோலிக்க இளைஞர்கள் மனத்திலும், சைவ இளைஞர்கள் மனத்திலும், வைணவ இளைஞர்கள் மனத்திலும், முஸ்லிம் இளைஞர்கள் மனத்திலும் மற்ற எந்த இளைஞர்கள் மனத்திலும் புகுந்துதான் தீரும். இந்த உணர்ச்சி இளைஞர்கள் மனத்தில் வேரூன்ற, வேரூன்ற பாதிரிகளுக்கும், பண்டார சன்னதிகளுக்கும், ஜீயர்களுக்கும், முல்லாக்களுக்கும் மற்றுமுள்ள சமுதா யத்தை அரித்துக் கெடுக்கும் விஷப்பூச்சிகளாகிய புரோகிதக் கூட்டங் களுக்கும் செல்வாக்கும், வயிற்றுப் பிழைப்பும் இல்லாமல் போகும் என்பதில் ஐயமில்லை.

சுயமரியாதை இயக்கம், குருக்கள்மார்களின் வஞ்சகச் செயல்களைக் கண்டிக்கின்றதென்று ஆத்திரப்பட்டு வாலிபர்களுக்கு எச்சரிக்கை செய்ய முன் வந்த கத்தோலிக்க கிறிஸ்துவ வாலிபர் மகாநாட்டார், அவர்களுடைய 'கடவுள் குமாரன்' என்று சொல்லப்படுகின்ற ஏசுநாதர் புரோகிதர்களைக் கண்டித்திருப்பதற்கு என்ன செய்யப் போகிறார்கள்?

"நீங்கள் குருக்கள் என்று அழைக்கப்படாதிருங்கள்! கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவாயிருக்கிறார்."

"வஞ்சகர்களாகிய வேத பாரகர்களே! பரிசேயர்களே! நீங்கள் வெளி வேஷத்திற்காக அதிக ஜெபம் பண்ணுவதுபோலக் காட்டி, விதவைகளின் வீடுகளை அபகரிக்கிறீர்கள்."

"சாப்பிடுகின்றதும் தண்ணீர் அருந்துவதுமான பாத்திரங்களின்



RangaRakes tamilnavarasam.com

வெளிப்புறத்தை மாத்திரம் சுத்தமாக்குகிறீர்கள்! உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கின்றன.”

“நீங்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பா யிருக் கிறீர்கள்! அவைகள் வெளியே அலங்காரமாகக் காணப்படும் உட்புறத்திலோ இறந்தவர்களின் எலும்புகளும் எல்லா அசுத்தங்களும் நிறைந்திருக்கும்.”

“அப்படியே நீங்களும் வெளிவேஷத்தில் நீதிமான்கள் போல மக்களுக்குக் காணப்படுகிறீர்கள்! உள்ளத்திலோ, வஞ்சகத்தினாலும், அக் கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்!” என்று மத்தேயு சுவிசேஷம் 23-வது அதிகாரத்தில் சொல்லப்படும் விஷயத்தை நாம் இக்காலத்தில் எல்லா மதத்தில் உள்ள குருமார்களுக்கும் பொருத்தமானது என்றுதான் சொல்லு கிறோம். எங்கள் இயக்கம் குறிப்பிட்ட ஒரு மதத்தைக் கண்டிக்கவோ, அல்லது ஒரு வேதத்தைக் கண்டிக்கவோ, அல்லது ஒரு மத குருமார்களைக் கண்டிக் கவோ எழுந்தது அன்று என்று பல தடவை விளக்கப்பட்டிருக்கிறது. மக்களின் பகுத்தறிவிற்கு முட்டுக்கட்டைகளாக இருக்கும் மதங்களையும், எல்லா வேதங்களையும் எல்லா மதகுருக்கள்மார்களின் வஞ்சகங்களையும் ஒழிக் கவே செய்யும் என்பதை இப்பொழுதும் கூறுகிறோம்.

உண்மையில் இந்த விஷயங்கள் இளைஞர்களுக்கெல்லாம் தெரியாதவைகளும் அல்ல; புரோகிதர்களின், மோசங்களும் வஞ்சகங்களும், அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் மதப் புரட்டுகளும் இளைஞர்கள் மனத்தில் இயற்கையாகவே வேரூன்றி வந்து கொண்டிருக்கின்றன. ஆகை யால் இனி எவர் என்ன தீர்மானங்கள் செய்தாலும், பிரசாரம் பண்ணினாலும் இளைஞர்களின் உணர்ச்சியைக் கட்டுப்படுத்தமுடியாது என்று எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 05.06.1932**



## தற்கொலை தெய்வீகமா?

**-தேசியத்துரோகி**

மசூலிப்பட்டிணத்தில், ஒரு போலீஸ் சேவகரின் மகளுக்குக் கல்யாணம் நடத்துவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம். கல்யாணத்திற்கு முதல் நாள் அந்த மணப்பெண், கல்யாண உடைகளை அணிந்து கொண்டு வீட்டின் கொல்லைப் புறத்தில் அடுக்கியிருந்த விறகில் ஏறித் தானே நெருப்பு வைத்துக் கொண்டு இறந்து விட்டாளாம். இவ்வாறு இறந்ததற்குக் காரணம் அப்பெண், தன்னை “தெய்வத் தன்மை உள்ளவள்” என்றும் தான் “மனிதனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள யோக்யதை இல்லை” என்றும் கூறியதாகவும் கடிதம் எழுதி வைத்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

அப்பெண் இறந்ததற்கு ‘தெய்வத்தன்மை’ கற்பிக்கப்பட்டவுடன், ஏராளமான ஜனங்கள் கூடி, முனிசிபல் அதிகாரிகளின் உத்தரவுப் பெற்று அப்பிணத்தை ஊர்வலமாக தூக்கிச் சென்று அடக்கஞ் செய்தார்களாம். இதன்பின் அப்பிணத்தை புதைத்த இடத்தில் கோயில் கட்டுவதற்காக ஜில்லா முழுதும் பணம் வசூல் பண்ணுகிறார்களாம்.

நமது நாட்டு மக்களின் பயித்தியக்காரத்தனத்தைக் காட்டுவதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

வாங்கினகடனை திருப்பிக் கொடுக்க முடியாத காரணத்தால் மான முள்ளவர்கள் பலர் தற்கொலை செய்து கொண்டு உயிர் துறந்திருக்கிறார்கள். கௌரவமாக ஜீவனம் பண்ணியவர்கள், கஷ்டப்பட வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்த போது கஷ்டம் பொறுக்கமுடியாமல் தற்கொலை செய்து கொண்டிருக் கிறார்கள். குடும்பச் சச்சரவு காரணமாகத் தற்கொலை செய்து கொண்டு மடிந்து போனவர்களில் ஆண்களும் உண்டு, பெண்களும் உண்டு. மணமகன் பிடிக்காத காரணத்தால் மணமகள் தற்கொலை செய்து கொண்டு இறப்பதும், மணமகள் பிடிக்காத காரணத்தால் மணமகன் தற்கொலை செய்து கொண்டு சாவதும் உண்டு. இம்மாதிரி இதற்கு முன் நடைபெற்றும் இருக்கின்றது. ஆகையால் தற்கொலை செய்து கொண்டு இறப்பதில் தெய்வத்தன்மை கற்பிப்பதும், அதை மக்கள் நம்பி ஏமாறுவதும் மூடத்தனமேயாகும்.



RangaRakes
tamilnavarasam.com

மசூலிப்பட்டணத்தில் இறந்து போன மணப்பெண் விஷயமும் வெறும் தற்கொலையே தவிர வேறு ஒன்றும் ஆச்சரிய முள்ளதல்ல வென்றே நாம் சொல்லுவோம்.

அந்தப் பெண், தனக்குக் குறிப்பிட்டிருந்த மாப்பிள்ளை பிடிக்காத காரணத்தால் இறந்திருக்க வேண்டும்; அல்லது புத்தி தடுமாற்றத்தால் இறந்திருக்க வேண்டும். இதைத் தவிர வேறு எந்தக் காரணமும் கூற முடியாது. இவ்வாறு உண்மையைச் சிந்தித்துப் பார்க்கும் அறிவில்லாமல் 'தெய்வீகத் தன்மையை' நம்பி ஒருவர் சென்ற வழியே மற்றவர்களும் ஆட்டு மந்தைப் போலச் செல்வதனால் உண்டாகும் பயித்தியக்காரத்தனத்தையும், பொருள் நஷ்டத்தையும் யாராவது கவனிக்கின்றார்களா?

இந்த மாதிரியே செத்துப் போனவர்கள் சம்பந்தமாக உண்டான மூட நம்பிக்கைகள் காரணமாகத்தான் இன்று நமது நாட்டில் எண்ணற்ற கோயில்கள் பெருகியிருக்கின்றன. கிராமங்களில் உள்ள பலவகைப்பட்ட கோயில்களெல்லாம் செத்துப் போன மனிதர்கள் பேரால் ஏற்பட்டவை என்பதை இன்றும் கிராமங்களில் உள்ளவர்கள் அந்தக் கோயில் 'சாமி' களைப் பற்றிச் சொல்லும் கதைகளால் அறியலாம். இப்பொழுது மசூலிப் பட்டினத்தில் நடந்த சம்பவமும் இதற்கு தகுந்த உதாரணமாகும்.

பொது ஜனங்களிடம், இந்த மாதிரியான இயற்கை நிகழ்ச்சிகளை எல்லாம் 'தெய்வத்தன்மை' என்று நம்புகின்ற குணம் இருக்கின்ற வரையிலுமவர்கள் முன்னேற்றமடையப் போவதில்லை. ஆகையால் பகுத்தறிவுடைய தோழர்கள் இது போன்ற விஷயங்கள் நேரும் போதெல்லாம் பொது ஜனங்களை எச்சரித்து ஏமாறாமலிருக்கும்படி செய்ய முன் வருமாறு வேண்டுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 05.06.1932**



# சிறுபிள்ளைத்தனம்

சிறுபிள்ளைகள் விளையாட்டிலேயே கவனமுள்ளவர்கள்; தாம் செய்யும் வேலைக்குப் பிற்காலத்தில் இன்னது பலன் கிடைக்கும் என்பது பற்றிச் சிறிதும் சிந்திக்கமாட்டார்கள். தற்கால சந்தோஷத்திற்காக எந்தக் காரியங்களையும் பொறுப்பின்றித் செய்யத் துணிவார்கள். அவர்களுக்குக் கவலையோ பொறுப்போ ஒரு சிறிதும் தெரியாது. இதனால்தான் 'சிறுபிள்ளையிட்ட வெள்ளாமை வீடு வந்து சேராது' என்று சொல்லுவது வழக்கம்.

இத்தகைய விளையாட்டுப் பிள்ளைகளைப் போலத்தான் இப்பொழுது காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள் நடந்து வருகிறார்கள். உண்மையில் கொஞ்சங் கூட பொறுப்புள்ள காங்கிரஸ்காரர்கள் யாரும் இப்பொழுது இல்லை. பொறுப்பற்ற முறையில் காலித்தனமான காரியங்களைச் செய்து வீண் கலகத்தை உண்டு பண்ணும் சில சிறுபிள்ளைத் தனமுடையவர்களே இப்பொழுது 'காங்கிரஸ்' என்பதன் பெயரால் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தபால் பெட்டிகளுக்குத் தீயிடுவது, தபாலாபிசை மறியல் செய்வது, ரயிலை மறியல் செய்வது காங்கிரஸ் கட்டளைகளுக்கு உட்படாத தனித்த வியாபாரிகளுக்கு நஷ்டத்தை விளைவிப்பது, அவர்கள் கடைகளை ரகசிய முறையில் தீக்கிரையாக்குவது போன்ற காரியங்களை எந்த யோக்கிய முள்ள மனிதராவது செய்ய முடியுமா? இச்செயல்களெல்லாம் தேசத்தில் நடைபெறவில்லையா?

திரு. சரோஜினி அம்மாள் அவர்களும், திரு. மாளவியா பண்டிதர் அவர்களும் டில்லியில் காங்கிரஸ் நடத்துவதாக ஏற்பாடு செய்து நடத்தத் தொடங்கும்போது அரசாங்கத்தார் அக்காங்கிரசைத் தடைசெய்து விட்டதும், பிறகு காங்கிரஸ் நடவாமற் போனதும் யாவரும் அறிந்த விஷயம். ஆனால் காங்கிரஸ்காரர்கள் டில்லி மகாநாட்டை அரசாங்க உத்தரவை மீறி நடத்தி விட்டதாகவும், தீர்மானங்கள் நிறைவேற்றிவிட்டதாகவும் வீண் புரட்டாக வீராப்புப் பேசிக் கொண்டனர். டில்லி காங்கிரஸ், அரசாங்கத்தார் செய்திருந்த தடைப் பந்தோபஸ்துகளையெல்லாம் மீறி நடந்து விட்டதாகவும் முக்கியமான



RangaRakes tamilnavarasam.com

தீர்மானங்களையெல்லாம் நிறைவேற்றி விட்டதாகவும், பத்திரிகைகளும் பிரசுரித்துக் கிளர்ச்சி பண்ணின. பொறுப்புள்ள 'காங்கிரஸ்' தலைவர்கள் என்பவர்கள் எவரும் வெளியில் இல்லாதிருக்கும்போது இவ்வாறு காங்கிரசைக் கூட்டியதாகவும், அவற்றைத் தேசமக்கள் பின்பற்ற வேண்டும் என்பதாகவும் பேசியதும் புரளி பண்ணியதுமே சிறு பிள்ளைத்தனமான காரியமாகும். இதன் பிறகுதான் சிறு பிள்ளைத்தனமான செயல்களும் அதிகப்பட்டன என்பதில் ஐயமில்லை.

இதன்பின் இன்னுஞ் சில இடங்களில் மகாநாடு கூட்டுவதாக விளம்பரம் புரிந்ததும் அரசாங்கத்தார் அவைகளைத் தடுத்ததும் டில்லி காங்கிரஸ் மாதிரியே எங்கோ ஓரிடத்தில் மகாநாடு கூட்டியதாகவும், டில்லி காங்கிரஸ் தீர்மானங்களை ஆதரித்ததாகவும், 500 பிரதிநிதிகள் வந்திருந்ததாகவும், 1000 பிரதிநிதிகள் வந்திருந்ததாகவும் பத்திரிகைகளில் எழுதிப்புரளி பண்ணிக் கொண்டிருக்கின்றனர். இதற்கு உதாரணமாக தஞ்சாவூர் ஜில்லா 'காங்கிரஸ்' மகாநாட்டை எங்கோ ஓரிடத்தில் கூட்டியதாகவும், தமிழ் மாகாண மகாநாட்டை மதுரையில் எங்கோ ஒரு சந்திக்கடையில் கூட்டியதாகவும், பத்திரிகைகளில் வெளியான செய்திகளே போதுமானதாகும். இன்னும் கல்கத்தாவைச் சேர்ந்த ஹௌராவில் நடத்த முயற்சித்த காங்கிரஸ் மகாநாடு, குண்டூரில் நடத்த முயற்சித்த ஆந்திர மாகாண மகாநாடு, பகல்காட்டில் நடத்த முயற்சித்த மகாநாடு, நாகபுரியில் நடத்த முயற்சித்த மத்திய மாகாண மகாநாடு, அமிர்தசரசில் நடத்த முயற்சித்த பாஞ்சால மாகாண மகாநாடு முதலியவைகளும் போதிய உதாரணங்களாகும். இந்த மகாநாடுகளால் உண்டான பலன் என்ன? பத்திரிகைகளில் மகாநாடு கூட்டப் போவதாக விளம்பரம் புரிவதும், உடனே அரசாங்கத்தார் மகாநாடு நடத்துவதாக விளம்பரம் பண்ணிய நிர்வாகிகளுக்கு 144 போடுவதும், அதை அவர்கள் மீறுவதும், மகாநாட்டிற்கே தடையுத்தரவு போடுவதும், பிறகு அந்தப் பொறுப்பற்றவர்கள் மகாநாடு நடத்திவிட்டதாகப் புரளி பண்ணுவதும் ஆகிய வீண் விளையாட்டுக் காரியங்களைவிட வேறு கடுகளவேனும் பலன் விளைந்தது என்று சொல்ல முடியுமா?

இவ்வாறே தான் "காங்கிரஸ்"காரர்களால் செய்யப்படும் மறியல், பொதுக்கூட்டம் முதலியவைகளும் நடைபெறுகின்றன. யாராவது தங்களுக்குப் பணம் கொடுக்காத வியாபாரிகள் இருந்தால் அவர்கள் கடைக்கு மறியல் செய்வதாக இரண்டு மூன்று பேர் விளம்பரம் பண்ணிக்கொண்டு போவதும், போலீசார் வந்தவுடன் ஓட்டமெடுப்பதும் வழக்கமாகிவிட்டது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் பொதுக்கூட்டம் நடைபெறப்போவதாக விளம்பரம் பண்ணுவதும், பிறகு அந்த இடத்தில் கூட்டத்தை நடத்தாமல் நாலு பேரைச் சேர்த்துக் கொண்டு எங்காவது ஒரு குப்பை மேட்டில் பேசிக் கொண்டிருந்து விட்டு வந்து போலீசாரை ஏமாற்றிக் கூட்டத்தை நடத்திவிட்டதாக விளம்பரம் பண்ணிக் கொள்வதும், ஜாலவித்தைக் காட்டப் போவதாகவும்,



கழைக்கூத்தாடப் போவதாகவும் கோழிக் சண்டை, கிடாச் சண்டை நடக்கப் போவதாகவும் விளம்பரம் பண்ணிக் கூட்டத்தைச் சேர்த்து அதில் 'காங்கிரஸ் பிரசாரம் பண்ணிவிட்டு, போலீசார் வருவதற்கு முன் கூட்டத்தைக் கலைத்து விட்டு ஓடிவிடுவதாகவும் செய்திகள் வெளிவருகின்றன. இவைகளுக்கும், மாமரத்தை குத்தகை எடுத்திருக்கின்ற ஒருவன் கல்லெறிந்து மாங்காய் அடிக்கும் சிறுபிள்ளைகளைத் தடியைத் தூக்கிக் கொண்டு பயமுறுத்தி விரட்டவும், அவர்கள் ஓடவும், பிறகு குத்தகைக்காரன் மறைந்த பின் மீண்டும் அந்தப் பிள்ளைகள் கல்லெறிந்து மாங்காய் அடிக்கவும், மறுபடியும் குத்தகைக்காரன் முன்போலவே விரட்டவும் இவர்கள் ஓடவும் ஆக, இப்படியே அடுத்தடுத்து நடைபெறுவதற்கும் என்ன வித்தியாசம் என்றுதான் கேட்கிறோம்.

'காங்கிர'சானது அதைச் சேர்ந்தவர்கள் பிதற்றிக் கொள்வது போல இந்தியாவின் 35 கோடி மக்களுக்கும் பிரதிநிதியாக இருக்குமானால், ஏன் இந்து முஸ்லீம் சச்சரவு உண்டாகாமல் பார்த்துக் கொள்ளக் கூடாது? ஏன் தீண்டத்தகாதார் தீண்டுவோர் சண்டை உண்டாகாமல் பார்த்துக் கொள்ளக் கூடாது? சென்ற ஆண்டில் கான்பூரில் நிகழ்ந்த இந்து முஸ்லீம் கலகம் இன்னும் இரத்தத்தில் எழுதப்பட்டு நம்மனதை விட்டு அகலாத பயங்கரக் காட்சியாக இருக்கின்றது. சென்ற சில தினங்களுக்கு முன் பம்பாயில் ஆரம்பித்த இந்து முஸ்லீம் கலகம் இன்னும் சரியாக ஓய்ந்த பாடில்லை. தாழ்த்தப்பட்ட, தீண்டத்தகாத மக்களுக்குத் தீண்டத் தகுந்த உயர்த்திக் கொண்டிருக்கும் மக்கள் ஒவ்வொரு நாளும் செய்துவரும் கொடுமை சகிக்க முடியாததாக இருக்கின்றது. இவற்றை எல்லாம் சரிப்படுத்த முடியாத ஒரு ஸ்தாபனமோ, அதைச் சேர்ந்தவர்களோ நாங்கள்தான் 35 கோடி மக்களுக்கும் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்வது வெட்கக் கேடல்லவா?

காங்கிரசின் யோக்கியதையும், அது செய்யும் காரியங்களால் தேசத்தில் நடைபெறும் காலித்தனங்களும், கலகங்களும் இந்த நிலையில் இருக்கும் போது இந்தியாவின் அடிமையைப் பாதுகாப்பதற்கு வைசிராய் அவர்களால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் அவசரச் சட்டத்தைக் கண்டிக்க முன் வந்து விட்டார்கள். இவ்வளவு கட்டுத் திட்டங்களும், கவனிப்பும், அவசரச் சட்டமும் இருக்கும்பொழுதே போக்கற்ற காலிகள் பலர் 'காங்கிரஸ்' பெயரைச் சொல்லிக் கொண்டு அடாத செயல்களைச் செய்து, தேசத்தின் அமைதிக்குப் பங்கம் விளைப்பார்களானால் இந்தக் கட்டுத்திட்டங்களும் கவனிப்பும் அவசரச் சட்டங்களும் இல்லாமல் போனால் தேசத்தின் கதி என்னாவது? பம்பாயில் நடப்பது போன்ற கலகம் மூலைக்கு மூலை தாராளமாக நடைபெறாமலிருக்கவும், நிரபராதிகளான பொதுஜனங்களின் சொத்துக்களுக்கும் சுதந்தரங்களுக்கும் உயிர்களுக்கும் அபாயம் ஏற்படாமலிருக்கவும் முடியுமா என்று கேட்கிறோம்.



RangaRakes tamilnavarasam.com

“கேவலம், சிறுபிள்ளைகள் தண்ணீர்ப் பந்தல் வைக்கும் பொருட்டு யாசகங் கேட்பதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாமல் அவர்களைத் தொந்தரவு செய்த சில துவேஷப் புத்தியுடைய இந்துக்களால் நேர்ந்த கலகந் தான் பம்பாய் இந்து முஸ்லீம் கலகத்திற்குக் காரணம்” என்று சொல்லப் படுவதைவிட நமக்கு வேறு என்ன அவமானம் வேண்டும்?

இத்தகைய நிலைமையைப் போக்கி தேசத்தில் அமைதியை உண் டாக்க வேண்டுமென்னும் கவலை மிதவாதிகள் என்று சொல்லப் படுகின்ற காங்கிரசில் சேராத அரசியல் வாதிகளில் அனேகருக்கு இருந்தா லும், அவர் கள் வெளிப்படையாகக் காலிகளின் செயல்களைக் கண்டிக்கவோ தேச மக்களுக்கு நன்மையான வழிகளை எடுத்துக்காட்டவோ தைரியமாக முன்வராமல் பதுங்குகிறார்கள். காங்கிரஸ் செயல்களைக் கண்டிப்பதனால் எங்கே தங்கள் செல்வாக்குக் குறைந்து போய்விடுமோ என்று பயப்படு கிறார்கள். ஆகையால் அவர்கள் பாம்புக்குத் தலையையும், மீனுக்கு வாலை யும் காட்டும் ‘விலாங்கு’ மீன்களைப் போல் அரசாங்கத்தார்க்கு நல்ல பிள்ளை களாகவும், காங்கிரஸ்காரர்களிடம் அநுதாபம் உள்ளவர்கள் போலவும் நடந்து கொண்டு தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து வருகிறார்கள். இச்சமயத்தில் மற்றொரு விஷயத்தையும் கவனிப்போம். வெளியில் பேசும் மிதவாதிகளெல்லாம், காங்கிரசுடன் ராஜி பண்ணிக் கொள்ளாமல், திரு. காந்தியை விடுதலை செய்யாமல் தேசத்தில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாதென்றும், அரசியல் சீர்திருத்தம் கொடுத்தாலும் அதைச் சரியாக நடத்தி வைக்க முடியாதென்றும் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா என்றுதான் நாம் கேட்கிறோம். லார்டு இர்வின் அவர்கள் வைசிராயாக இருந்த காலத்தில், திரு. காந்தியவர்களுக்கும், லார்டு இர்வின் அவர்களுக்கும் ராஜி ஒப்பந்தம் ஏற் பட்டதே; சில நாள் அவ்வொப்பந்தமும் அமுலில் இருந்ததாகக் கருதப் பட்டதே; அப்பொழுதுதான் தேசத்தில் அமைதியும் சமாதானமும் நிலவி இருந்ததென்று சொல்ல முடியுமா? ஆகையால் காங்கிரசோடு ராஜி செய்து கொள்ளுவதன் மூலம் தேசத்தில் அமைதி ஏற்பட்டு விடும் என்று கூறுவது வீண் பேச்சென்றே சொல்ல வேண்டும். அன்றியும் பூரண சுயேச்சை கேட்கும் காங்கிரசுக்கும், மாகாண சுயாட்சி கொடுக்கலாமா? என்று யோசனை செய்து கொண்டிருக்கும் அரசாங்கத்திற்கும் எப்படி ராஜி ஏற்பட முடியும்? ஏற்பட்டா லும் எத்தனை நாளைக்கு அந்த ராஜி நிலைத்து நிற்க முடியும்? என்று யோசித்துப் பாருங்கள்.

நமது நாட்டிலுள்ள வகுப்புப் பிரிவுகளும், துவேஷங்களும் ஒழிகின்ற வரையில் மக்களுக்குள் ஒற்றுமை ஏற்பட முடியாது என்ற அபிப்பிராயத்தை மறுக்கின்றவர்கள் யாருமில்லை, இருந்தும், இந்த சாதி, மதங்களை ஒழித்து ஒற்றுமையுண்டாக்க யாரும் முயல முன்வரவில்லை. இந்த நிலையில் பூரண



சுயேச்சைப் பேச்சுப் பேச சிறிதேனும் யோக்கியதை உண்டா என்று கேட்பதில் என்ன தவறு இருக்கின்றது?

திரு. காந்தியார் வட்டமேஜை மகாநாட்டுக்குப் போகுமுன்னர் “வகுப்புப் பிரச்சினையில் ஒரு முடிவு ஏற்பட்டால் தான் இங்கிலாந்து போ வேன்” என்று சொல்லிக் கொண்டிருந்தாரே அதன்படி செய்தாரா? இங்கி லாந்தில் பேசும் போதெல்லாம் “இந்தியாவுக்குப் போனவுடன் முதலில் வகுப்புப் பிரச்சினையை முடிவு செய்த பிறகே மற்ற காரியங்களைப் பார்ப்பேன்” என்று சொல்லிக் கொண்டாரே! இந்தியாவிற்கு வந்த பின் என்ன செய்தார்? சட்டமறுப்பில் கலந்து கொண்டு சிறைசென்று, நூல் நூற்றுக் கொண்டும், பகவத்கீதை படித்துக்கொண்டும் ஓய்வுபெற்றிருப்பதைவிட வேறு என்ன செய்தார்? இதை ஆலோசித்துப் பார்க்கும்போது திரு. காந்தியா ராலோ அல்லது காங்கிரசாலோ வகுப்புப் பிரச்சினையைத் தீர்த்துச் சமாதா னத்தை ஏற்படுத்த முடியாது என்பது விளங்குகிறதல்லவா? பூரண சுயேச்சைப் பேச்சுப் பேசிக் கொண்டு காலிகளைத் தூண்டிவிட்டுக் கிளர்ச்சி செய்து கொண்டிருக்கத்தான் காங்கிரசால் முடியும் என்பது தெரியவில்லையா?

ஆகையால் இச்சமயத்தில், காங்கிரசோடு ராஜி பேச வேண்டு மென்றும், அவசரச் சட்டங்கள் கூடாதென்றும், உடனே காங்கிரசின் விருப்பப் படி பூரண சுயேச்சை கொடுத்தாக வேண்டும் என்றும் பல்லவி பாடிக் கொண் டிருப்பதில் பயனில்லை. பொறுப்பற்ற முறையில் சிறு பிள்ளைத்தனமாக நடந்து கொண்டு தேசத்தில் அமைதியைக் கெடுக்கின்றவர்கள் யாராய் இருந் தாலும் அவர்களை அடக்கவும், அவர்களுக்குப் புத்தி கற்பிக்கவும், அவர் களுக்குப் பொது ஜனங்களிடம் செல்வாக்கில்லாமற் செய்யவும், பொது ஜனங் கள் அவர்கள் செயல்களுக்கு ஆதரவு அளிக்காமலிருக்கும்படி செய்யவும் எச்சரிக்க வேண்டியதே இச்சமயத்தில் உண்மையான தேச ஊழியர்களின் கடமையாகும் என்று கூற விரும்புகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 12.06.1932**



RangaRakes

tamilnavarasam.com

# சத்தியாக்கிரகம் வீண்

"சத்தியாக்கிரகம்" என்பது "சண்டித்தனம்" என்பதும், அதனால் வீண் சிரமமும், நஷ்டமும் ஏற்படும் என்பதும், அது மனிதருடைய வீர உணர்ச்சியைக் குறைத்து அடிமைப்புத்தியை வளர்க்கக்கூடிய தென்பதும் நமது இயக்கத் தோழர்களுக்கெல்லாம் தெரியும். ஆகையால் தான் நாம் சத்தியாக் கிரகத்தைக் கண்டித்து வருகிறோம்.

அரசியல் துறையில் சத்தியாக்கிரகம் சிறிதும் பயனளிக்காதென்பது வெளிப்படையாகத் தெரிந்த செய்தி. சமூக ஊழல்களைப் போக்கும் வகையில் சத்தியாக்கிரகம் பயன் தரக்கூடும் என்ற ஒரு நம்பிக்கை சிலரிடம் இருந்து வந்தது. அந் நம்பிக்கையும் பயனற்ற தென்பதை விருதுநகர் மகாநாட்டிலும், அதன்பின் பல மகாநாடுகளிலும் நமது பத்திரிகை மூலமாகவும் விளக்கப் பட்டிருக்கிறது. இதை உண்மையென்று நிரூபிக்க, சமீபத்தில், நாசிக்கில், தீண்டாதவர்கள் செய்த சத்தியாக்கிரகம் சம்பந்தமாக அவர்களுக்கும் சனாதன தருமிகளுக்கும் உண்டான சச்சரவை, நாசிக் ஜில்லா மாஜிஸ்திரேட் திரு. எல். என். பிரௌன் அவர்கள் விசாரணை செய்து தீர்ப்பளித்து உத்தர விட்டிருப்பதே போதுமானதாகும்.

நாசிக்கில், ராமகுண்டம், இலச்சுமணகுண்டம், தனூர்குண்டம், சீதா குண்டம் என்று நான்கு தீர்த்தக் குளங்கள் இருக்கின்றன. இந்தக் குளங்களைச் சுற்றி வருவதற்கு 'சாந்தவா' என்று சொல்லப்படும் வழி ஒன்றிருக்கிறது, இந்தக் குளங்களில் குளிக்கவும் 'சாந்தவா'வில் நடக்கவுமே தீண்டாதவர்கள் சத்தியாக்கிரகம் பண்ணினார்கள். இதை எதிர்த்தே சனாதன தருமிகளும் போர் புரிந்தார்கள். கடைசியாக 'மாஜிஸ்திரேட்' தீண்டாதவர்களுக்கு அந்தக் குளங் களில் குளிக்கவும், அந்த வழியில் நடக்கவும் உரிமையில்லையென்று தாம் நம்புவதாகவும் ஆகையால் "சிவில் கோர்ட்" மூலம் இவ்வுரிமைகளுக்கு உத்திரவு பெறும் வரையிலும் அந்தக் குளங்களை நெருங்கவும், அவைகளில் குளிக்கவும் கூடாதென்று கிரிமினல் புரொஸிஜர் கோட் 147 – 3 – வது பிரிவின் படி உத்திரவு செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறிய தீர்ப்பின் உத்தரவு வருமாறு:–



பொதுவாகத் தீண்டாத வகுப்பினருக்கு நான்கு குண்டங் களின் அருகே செல்லவும் அவைகளில் இறங்கிக் குளிக்கவும் உரிமையில்லை என்றுநான் நம்புகிறேன். ஆதலால் லட்சுமண குண்டம், தனூர்குண்டம், ராம குண்டம், சீதா குண்டம் என்னும் இந்த நான்கு குண்டங்களின் அருகே செல்லவாவது அவைகளில் இறங்கிக் குளிக்கவாவது கூடாது என்று மகர்களுக்கும், மங்கர்களுக் கும், தோடர்களுக்கும், பங்கிகளுக்கும் மற்றுமுள்ள தீண்டாத வகுப்பினர்களுக்கும் கிரிமினல் புரொஸீஜர் கோட் 147 – 3 –வது பிரிவின் படி நான் தடை உத்தரவு செய்கிறேன். தீண்டாதவர்கள் இவைகளில் குளிப்பதற்கு சிவில் கோர்ட் மூலம் உத்தரவு பெறும் வரையிலும் பக்கத்தில் நெருங்கவோ அல்லது இவைகளில் இறங்கிக் குளிக்கவோ அவர்களுக்கு உரிமை இல்லை. குண்டங்களைச் சுற்றி வரும் பிரயாணிகள் சாந்தவாவை உபயோகப்படுத்துகின்றார்கள். ஆதலால் அதை பொதுப் பாதையாக உபயோகிக்கலாமா என்பது இரண்டாவது விஷயம். நாகரிகமாக உடைதரித்திருக்கும் கிறிஸ்த வர்களும், முஸ்லீம்களும் அவ்வழியாக நடக்க விடப்படுகிறார்கள் என்று சாட்சிகளின் மூலம் தெரிகிறது. ஆனால் அந்த சாட்சிகள் இந்த வழக்கிற்கு பொருத்தமாக இல்லை. ஆகையால் தீண்டாத வகுப்பைச் சேர்ந்த இந்துக்கள் சம்பந்தமான இவ்வழக்கில் தீண்டாத வகுப்பு இந்துக்களுக்கு சாந்தவாவை உபயோகிக்க உரிமையுண்டு என்பது வெளியாக வில்லை"

இதுதான் மாஜிஸ்திரேட் திரு. பிரௌன் அவர்களின் தீர்ப்பின் உத்தர வாகும்.

இவ்வுத்தரவில், மகமதியர் கிறிஸ்தவர் முதலான அன்னிய மதத்தினர் நடக்கும் ஒரு வழியில், இந்து மதத்தைச் சேர்ந்த தீண்டாதவர்களுக்கு மாத்திரம் நடக்க உரிமையில்லை என்று மாஜிஸ்திரேட்டால் குறிப்பிட்டிருப் பதைக் கவனிக்க வேண்டுகிறோம். இவ்வாறு தீர்ப்புக் கூறுவதற்கு, இந்துக் களின் பிடிவாதமும் குருட்டு மாமூல் பழக்கமும் காரணமல்லவா? இப் பழக்க வழக்கங்களை ஆதாரமாகக் கொண்டு தானே மாஜிஸ்திரேட் உத்தரவளித் திருக்கிறார்? இதற்கு விட்டுக் கொடுக்காத இந்துக்களும், இப்பழக்க வழக்கங் களுக்கு ஆதரவளிக்கும் சட்டமும், நியாயமும் இருக்கும் வரை யிலும் தீண்டாதார்களுக்கு சத்தியாக்கிரகத்தினால் என்ன நியாயம் கிடைக்க முடியும்?

ஆகவே உண்மையில் எளிதாகச் சமூக மத உரிமை பெற விரும்பு கின்றவர்கள் செய்யவேண்டிய வேலை சட்டஞ் செய்வதற்குக் கிளர்ச்சி செய்ய வேண்டியதேயாகும். "எந்த பொது இடங்களிலும் எல்லார்க்கும் செல்ல அனுபவிக்க உரிமையுண்டு" என்கின்ற சட்டம் ஏற்பட்டு விடுமானால், அப்பொழுது இச்சட்டத்திற்குக் கட்டுப்படாமல் தடை செய்கின்றவர்களிடம்



RangaRakes tamilnavarasam.com

சத்தியாக்கிரகம் போன்ற காரியங்களைச் செய்வது ஒரு சமயம் பயன்தரக் கூடியதாக இருக்கலாம். ஏனென்றால் சட்டபலமும், உரிமையும் அப்பொழுது ஏற்பட்டு விடுகிறது. அதிகாரிகளும் இம்மாதிரி தடையுத்தரவு பிறப்பிக்கவும், தீர்ப்பளிக்கவும் முடியாது என்பது உண்மையல்லவா?

ஆகையால் ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டுத் தீண்டப்படாதவர்களாக வைத்துக் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கும் கூட்டத்தார் அமைதியான முறையில் அரசியல் உரிமைகளைக் கைப்பற்றி தங்கள் உரிமைகளுக்குச் சட்டங்கள் செய்வதன் மூலம் சுதந்தரம் பெற முயல்வதே சிறந்தவழி யென்பதை எடுத்துக் காட்ட விரும்புகின்றோம். ஆனால் தற்சமயம் சுதந்தரமடைவதில் தங்களுக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்த சத்தியாக்கிரகம் போன்ற பிரசாரம் தீண்டாத வகுப்பினரைப் பொறுத்தவரையில் ஒருவகையில் சிறிது சாதகமளிக்கக் கூடிய தென்பதை ஒப்புக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 12.06.1932**



# சிறுபான்மையோர் ஒப்பந்தம்

வாக்குரிமை சம்பந்தமாக இந்தியாவில் விசாரணை செய்த திரு. லோதியன் கமிட்டியின் அறிக்கையும் வெளியாகி விட்டது. வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை கொடுத்தால் ஒழிய, தேசத்தில் கஷ்ட நிலைமையை அனுபவத்தில் உணர்ந்திருக்கும் ஏழை மக்கள் சட்டசபைகளில் பிரதிநிதித்துவம் பெற முடியாதென்றும், ஓட்டுரிமையை நூற்றுக்குப் பத்து வீதமோ, பதினைந்து வீதமோ, இருபது வீதமோ, முப்பது வீதமோ, ஐம்பது வீதமோ அதிகப் படுத்துவதனால் ஏழைகளுக்கு ஒரு வித நன்மையும் ஏற்பட்டு விடாதென்றும், இப்பொழுது இருப்பதுபோல், பணக்காரர்களும், ஜமீன்தார்களும், முதலாளிகளும் தான் சட்டசபைகளில் பிரதிநிதித்துவம் பெற முடியுமென்றும் முன்பு எழுதியிருந்தோம். வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை கொடுக்கும் விஷயத்தைப் பற்றி. லோதியன் கமிட்டியோடு ஒத்துழைத்த யாரும் கவலை எடுத்துக் கொள்ளவில்லை யென்றும் குறிப்பிட்டிருந்தோம். அவ்வாறே இப்பொழுது வெளியா யிருக்கும் லோதியன் கமிட்டி அறிக்கையிலும் ஓட்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தப் பட்டிருப்பதைத் தவிர வேறு எந்த அபூர்வமான காரியமும் காணப்படவில்லை. ஆகவே ஏழைமக்கள் நிலை எப்பொழுதும் ஒன்றுதான். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தங்களுக்கு வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுவந்தார்கள். இவ்விஷயமும் லோதியன் கமிட்டியாரால் கவனிக்கப்படவில்லை.

அடுத்தபடியாகச் சட்டசபைகளின் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக எந்தெந்த வகுப்புக்கு எவ்வளவு பிரதிநிதித்துவம் கொடுப்பது என்பதைப் பற்றியும் தனித் தொகுதி ஏற்படுத்துவதா? கலப்புத் தொகுதி ஏற்படுத்துவதா? ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பதா? என்பதைப் பற்றிய லோதியன் கமிட்டி அறிக்கையில் யாதொரு முடிவும் கூறப்படவில்லை. வகுப்புப் பிரச்சினை சம்பந்தமான இம்முடிவு, பிரிட்டிஷ்பிரதம மந்திரியினால் செய்யப்பட வேண்டியிருக்கிறது. பிரதம மந்திரியோ எவ்வகையாக இவ்விஷயத்தில் முடிவு செய்யப்போகிறார் என்பது வெளிப்படவில்லை.



RangaRakes tamilnavarasam.com

இங்கிலாந்தில் இரண்டாவது வட்டமேஜை மகாநாடு நடந்தபோது, சிறுபான்மை வகுப்புப் பிரதிநிதிகளும் தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிரதிநிதிகளும் சேர்ந்து "தங்களுக்குத் தனித்தொகுதியும், பாதுகாப்பும் வேண்டும்" என்று தீர்மானித்து கீழ்க்கண்டவாறு ஒவ்வொரு சட்ட சபைகளிலும் ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானித்தார்கள்.

ராஜாங்க சபை மொத்த ஸ்தானம் இருநூறில் ஜாதி இந்துக்களுக்கு 101-ம், தாழ்த்தப்பட்டவக்ளுக்கு 20-ம், முஸ்லீம்களுக்கு 67-ம், கிறிஸ்தவர்களுக்கு 1-ம், சீக்கியர்களுக்கு 6-ம், ஆங்கிலோ இந்தியர்களுக்கு 1-ம், ஐரோப்பியர்களுக்கு 4-ம் ஒதுக்க வேண்டும் என்றும்;

மத்திய தலைமைச் சட்ட சபையில் மொத்தம் முன்னூறு ஸ்தானங்களில் ஜாதி இந்துக்களுக்கு 123-ம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 45-ம், முஸ்லீம்களுக்கு 100-ம், கிறிஸ்தவர்களுக்கு 7-ம், சீக்கியர்களுக்கு 10-ம், ஆங்கிலோ இந்தியர்களுக்கு 3-ம், ஐரோப்பியர்களுக்கு 12-ம் ஒதுக்கி வைக்க வேண்டும் என்றும்;

வங்காள சட்டசபையில் மொத்தம் 200 ஸ்தானங்களில், ஜாதி இந்துக்களுக்கு 38-ம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 35-ம், முஸ்லீம்களுக்கு 102-ம், கிறிஸ்தவர்களுக்கு 2-ம், ஆங்கிலோ இந்தியர்களுக்கு 3-ம், ஐரோப்பியர்களுக்கு 20 ஒதுக்கி வைக்க வேண்டும் என்றும்;

பம்பாய் சட்டசபையில் மொத்த ஸ்தானங்கள் இருநூறில் ஜாதி இந்துக்களுக்கு 88-ம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 28-ம், முஸ்லீம்களுக்கு 66-ம், கிறிஸ்தவர்களுக்கு 2-ம், ஆங்கிலோ இந்தியர்களுக்கு 3-ம், ஐரோப்பியர்களுக்கு 13-ம் ஒதுக்கி வைக்க வேண்டுமென்றும்;

சென்னை சட்டசபையில் 200 மொத்த ஸ்தானங்களில் ஜாதி இந்துக்களுக்கு 102-ம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 40-ம், முஸ்லீம்களுக்கு 30-ம், கிறிஸ்தவர்களுக்கு 14-ம், ஆங்கிலோ இந்தியர்களுக்கு 4-ம், ஐரோப்பியர்களுக்கு 8-ம், மலை ஜாதியார்களுக்கு 2-ம் ஒதுக்கி வைக்கவேண்டுமென்றும்,

பாஞ்சால சட்டசபையில் 100 மொத்த ஸ்தானங்களில் ஜாதி இந்துக்களுக்கு 14-ம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 10-ம், முஸ்லீம்களுக்கு 51-ம், சீக்கியர்களுக்கு 20-ம், மற்றவர்களுக்கு 5-ம் ஒதுக்கி வைக்கவேண்டுமென்றும்;

சிந்து மாகாணத்தில் இந்துக்களுக்கும், எல்லைப்புற மாகாணத்தில் இந்துக்களுக்கும், சீக்கியர்களுக்கும் விசேஷ பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்றும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இவ்வொப்பந்தத்தில் திருவாளர்கள் ஆகாகான், பன்னீர்ச் செல்வம், அம்பெட்கார்,



கிட்னிகார் முதலியவர்கள் கையெழுத்திட்டு இதைப் பிரதம மந்திரி திரு. மேக்டனால்டு அவர்களிடம் அளித்திருக்கின்றார்கள். அவரும் இவ்வொப்பந்தத்தைப் பெற்றுக் கொண்டபோது "வகுப்புப்பிரச்சினையைப் பற்றி முடிவு கூறும்போது இவ்வொப்பந்தம் முக்கியமானதாகக் கவனிக்கப்படும்" என்று கூறினார். ஆனால் இவ்வொப்பந்தப்படி பிரதம மந்திரி முடிவு செய்யப்போகிறாரா? அல்லது இதைக் குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டு வேறு விதமாக முடிவு செய்யப்போகிறாரா? என்பது பிறகுதான் தெரியும்.

ஆனால் இச்சமயத்தில், மேற்கண்ட ஒப்பந்தம் ஏற்படுவதற்குமுக்கிய காரணமாயிருந்த, முஸ்லீம்களும் தாழ்த்தப்பட்டவர்களும் எவ்வித அபிப்பிராயமுடையவர்களாயிருக்கின்றார்கள் என்பது கவனிக்க வேண்டியதாகும். அவ்வொப்பந்தத்தில் கண்டுள்ளபடி ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்படும் எண்ணிக்கை விஷயமாக முஸ்லீம்களுக்குள்ளும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்குள்ளும் மாறுபாடான அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால் தனித்தொகுதியும், பாதுகாப்பும் கோரும் விஷயத்தில் முஸ்லீம்களுக்குள்ளும் தாழ்த்தப்பட்டவர்களுக்குள்ளும் பெரும்பான்மையோருடைய அபிப்பிராயம் அவ்வொப்பந்தத்திற்குச் சாதகமாகவே இருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது. இதனை ஆதிமுதல் மௌலானா ஷௌக்கத் அலி அவர்கள், முஸ்லீம்களுக்கு தனித் தொகுதி கொடுக்க வேண்டுமென்றே போராடிக் கொண்டிருப்பதைக் கொண்டும், சமீபத்தில் இந்தியாவில் உள்ள பிரபல முஸ்லீம் தலைவர்கள் ஒன்று சேர்ந்து, 'லண்டன் டைம்ஸ்' என்னும் பத்திரிகையில் வெளியிட்டிருக்கும் ஒரு மகஜரில் "ஆங்கில அரசாட்சிக்குப் பதிலாக இந்துக்களில் அரசாட்சி ஏற்படுவதாயிருந்தால், அப்பொழுது முஸ்லீம்கள், ஆங்கில அரசாட்சியே சிறந்ததென்று கருதுவார்கள். ஏனெனில் ஆங்கில அரசாட்சி பாரபட்ச மற்றதாக இருக்கிறது. அல்லாமலும் ஆங்கில அரசாட்சி நீங்கிவிட்டால் பலசாலிகளான முஸ்லீம்களுக்கும், சதியாலோசனை இரத்தவெறி முதலிய கெட்டகுணங்களைக் காங்கிரசின் மூலம் கற்றுக் கொண்டிருக்கும் இந்துக் களுக்கும் ஓயாமல் சண்டை உண்டாகிக் கொண்டேயிருக்கும். ஆகவே பொறுப்பாட்சியுடன் ஐக்கிய அரசாட்சியை ஏற்படுத்தி எல்லா வகுப்பினர்க்கும் அதிகாரத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டு மென்பது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் எண்ணமாக இருக்குமானால் இரு சமூகங்களின் உரிமைகளையும் வரையறுக்கும் பொழுது ஒவ்வொரு சமூகத்தின் ராஜ விசுவாசத்தையும் கவனிக்கப்படுமென்று நம்புகிறோம்" என்று கூறியிருப்பதைக் கொண்டும் உணரலாம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களும் இவ்வொப்பந்தத்தை ஆதரித்தும், தனித்தொகுதியையும் பாதுகாப்பையும் வற்புறுத்தியும் தீர்மானங்கள் செய்திருக்கின்றார்கள். 'தனித் தொகுதி வேண்டாம், பொதுத் தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படவேண்டும்' என்றும் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்திருக்கும் திரு எம். சி. ராஜாவின் கூட்டத்தாருக்கு இந்து மகாசபைக்



RangaRakes tamilnavarasam.com

காரர்களின் ஆதரவும், தனித்தொகுதிக்கு விரோதமாயிருப் பவர்களின் ஆதரவும் தான் இருக்கின்றனவேயொழிய தாழ்த்தப்பட்ட சமூகத்தில் அதிக ஆதரவில்லை என்று சொல்லப்படுகிறது. மற்றைய சிறுபான்மை சமூகத் தினரும் தனித்தொகுதியை விரும்பி நிற்கின்றனர்.

ஆனால் இச்சமயத்தில் திரு. மாளவியா, திரு. மூஞ்சே முதலிய இந்து மகாசபைக் கூட்டத்தாராலும் காங்கிரஸ் அபிமானமுடையவர்களாலும் தனித் தொகுதிக்கு விரோதமாகப் பிரசாரம் பண்ணப்பட்டு வருகிறது. இப்பிரசாரத் தினால் முதல் மந்திரியார் மயங்கி தனித்தொகுதிக்கு ஆதரவளிக்காமல் விட்டுவிடுவாரானால் பொதுத்தொகுதிக்கு ஆதரவு அளித்து அவ்வாறு முடிவு செய்யும்படி விட்டு விடுவாரானால் இந்தியாவில் எப்பொழுதும் இந்து முஸ்லீம் கலகம் மாத்திரம் அல்லாமல் மற்றும் பல வகுப்புக் கலகங்களும் உண்டாகுமென்பதில் ஐயமில்லை. இப்பொழுது இருக்கும் மதச்சண்டை போதாமல் தேர்தல் சண்டைகளும் முளைத்து விடும் என்பது நிச்சயம். ஆகை யால் தேசத்தில் வகுப்புக்கலகங்கள் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் பிற்போக்கான சமூகங்களுக்குத் தனித்தொகுதி ஏற்படுத்துவதே சிறந்தது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 19.06.1932**



## அரசாங்கமும், சமூக சீர்திருத்தமும்

மைசூர் சமஸ்தான சட்டசபைக் கூட்டத்தின் முடிவில், திவான் சர். மிர்ஸா இஸ்மாயில் அவர்கள் செய்த பிரசங்கத்தில்,

“இந்தியாவில் சமுதாய சீர்திருத்தங்கள் சம்பந்தமான சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வரும் விஷயத்தில் பல கஷ்டங்கள் ஏற்படும். முதலில் பொது ஜனங்களிடம் சீர்திருத்தம் உண்டாக வேண்டும். இதனால் தான் எளிதில் சமுதாயச் சீர்திருத்தம் உண்டாகும். இவ்வாறு பொது ஜனங்களிடம் சீர்திருத்த உணர்ச்சி உண்டாகாத காரணத்தால்தான், அதிகமான பொது ஜன ஆதரவு ஏற்படும் வரையிலும் சீர்திருத்தம் சம்பந்தமான மசோதாக்களை ஆதரிக்க அரசாங்கத்தார் பின் வாங்குகின்றனர்” என்று பேசியிருக்கிறார்.

இப்பேச்சிலிருந்து பொதுஜன ஆதரவு இருந்தால் தான் அரசாங்கத்தார், சமூகச் சீர்திருத்த மசோதாக்களுக்கு ஆதரவு அளிக்க முடியும். இன்றேல் அளிக்க முடியாதென்று அர்த்தம் உண்டாகவும் இட மிருக்கின்றது. உண்மையில் இந்த அர்த்தத்தில் திவான் அவர்கள் பேசி யிருப்பாரானால், இது “அலை ஓய்ந்த பின் கடலில் ஸ்நானம் செய்யலாம்” என்னும் முடிவைப் போன்றது என்று தான் நாம் கருதுகின்றோம்.

பொது ஜனங்கள் எப்பொழுதும், மூட நம்பிக்கையுடைய வைதீகர் களுடைய பேச்சுக்களுக்குச் செவிசாய்க்கக் கூடியவர்களாகத் தான் இருப்பார் கள். ஆகையால் அவர்களே சமுதாய சீர்திருத்தத்திற்கு ஆதரவளிக்க முன் வரவேண்டுமென்று எதிர்பார்ப்பது தவறாகும். குற்றஞ் செய்கின்றவனை தானே குற்றஞ் செய்யாமல் திருந்தி வரட்டுமென்று விட்டுக் கொண்டிருந்தால் அவன் திருந்துவது எப்பொழுது? அவன் செய்த குற்றத்தை எடுத்துக் காட்டித் தண்டனையும் அளித்தால் தான் அவன் திருந்துவான் என்பது உண்மை யல்லவா? அதுபோலவே, பழய நம்பிக்கையினாலும், குருட்டுப் பழக்க வழக்கங்களினாலும் பொது ஜனங்கள் கைக்கொண்டு வரும் சமூக ஊழல் களைப் போக்க அரசாங்கத்தாரே முற்பட்டு, சட்டங்களைச் செய்து, அச்சட்டங் களின் கருத்துக்களைப் பொது ஜனங்கள் உணரும்படி செய்வதன் மூலமே சமூகச் சீர்திருத்தத்தை ஏற்படுத்த முடியும் என்பதில் சந்தேகமில்லை.



RangaRakes tamilnavarasam.com

சமீபத்தில் சமுதாய சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கும், துருக்கி முதலிய தேசங்களை எடுத்துக் கொண்டால், அங்கெல்லாம் பொது ஜனங்கள் சமுதாய சீர்திருத்த உணர்ச்சி பெற்ற பிறகு தான் சமுதாய சீர்திருத்தச் சட்டங்கள் செய்யப் பட்டதா? அல்லது அரசாங்கத்தாரே முன்வந்து சமுதாய சீர்திருத்தச் சட்டங் களைச் செய்து அவைகளுக்குப் பொது ஜன ஆதரவைப் பெற்றார்களா? என்று பார்த்தால், இவ்வுண்மை விளங்கும். அரசாங்கமே தைரியமாகச் சமுதாய சீர் திருத்தச் சட்டங்களை நிறைவேற்றி அவைகளைப் பொது ஜனங்கள் அனுசரிக் கும்படி செய்தார்கள் என்பது யாவருக்கும் தெரியும்.

இப்பொழுது இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் காட்டிலும் சமுதாய சீர்திருத்தம் சம்பந்தமாகக் கொஞ்சம் முன்னணியில் நிற்கும் சமஸ்தானங்களில் முதன்மை பெற்று பரோடாவும், இரண்டாவது மைசூருமாக இருக்கின்றது என்று புகழப்படுகின்றது. இந்த நிலைமையில் திவான் அவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சமுதாய சீர்திருத்தம் சம்பந்தமான மசோதாக்கள் சட்டசபையில் ஆலோசனைக்கு வரும்போது பொது ஜன ஆதரவு இருக் கிறது என்று தெரிந்தால்தான் நாங்கள் ஆதரிப்போம் என்ற பல்லவியைப் பாடிக் கொண்டிருப்பது போல மைசூர் அரசாங்கத்தின் சார்பாகவும் பாட ஆரம்பித்ததைப் பற்றி நாம் வருந்துகின்றோம். ஆயினும் திவான் அவர்கள் “அரசாங்கத்தார் ஆதரவு அளிக்கப் பின்வாங்குகின்றனர்” என்று தான் கூறுகிறாரே ஒழிய பிரிட்டிஷ் அரசாங்கத்தைப் போல ஆதரவு அளிக்க மாட்டோம் என்று கூறவில்லை என்பதைப் பார்க்கச் சிறிது சமாதானம் அடைய வேண்டியிருக்கிறது. இவ்வாறு பின்வாங்கிய மனதுடனாவது சமூகச் சீர்திருத்த சட்டங்களுக்குக் கூடியவரையிலும் ஆதரவு அளித்து வரும் மைசூர் அரசாங்கத்தையும் திவான் சர். மீர்சா இஸ்மாயில் அவர்களையும் பாராட்டுகின்றோம். சென்ற சட்டசபைக் கூட்டத்தில் ‘பால்ய விவாகத் தடைச் சட்டம்’ மைசூர் சட்ட சபையில் நிறைவேறி இருப்பதும் அவ்வரசாங்கம் சமுதாய சீர்திருத்த விஷயத்தில் ஊக்கம் காட்டி வருகிறது என்பதற்கு ஒரு உதாரணமாகும் என்பதையும் இச்சமயத்தில் நினைப்பூட்டுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 19.06.1932**



# பாராட்டுகின்றோம்

எவ்வளவுதான் பழமை விரும்பிகளும், வைதீகர்களும், வர்ணாசிரமி களும் தங்கள் சுயநலத்தையும், கொள்கைகளையும், பிடிவாதத்தையும் நிலைநாட்ட பகீரதப் பிரயத்தனப் பட்டபோதிலும், எவ்வகை சூட்சிகள் செய்ய முற்பட்டபோதிலும், எவ்வகை மறைமுகமான எதிர்ப்புகள் உண்டாக்கி வைத்த போதிலும் நடைபெறுகின்ற சம்பவங்கள் அவர்களது மனமுவந்த எண்ணங்களையும் ஆகாயக் கோட்டைகளையும் தவிடு பொடியாக்குவதன்றி நேர்விரோதமாகவுமிருக்கின்றன. இது காலச் சக்கரத்தின் வேகமேயன்றி பிறிதொன்றில்லை. உலகம் தினம் தினம் நிமிஷத்திற்கு நிமிஷம் முற்போக் கடைந்து கொண்டு நவீன மயமாகிக் கொண்டு வருவதுடன் ஒவ்வொரு நாளும் நடைபெறும் அதியற்புத செயல்களினின்று பழமையை மறந்து விடுங்கள்! பழமையை மறந்து விடுங்கள்! என்று அறை கூவியழைப்பதை போன்றிருக்கிறது.

இதற்கு உதாரணம் வேண்டுமாயின் இவ்வாரம் நமதியக்கத் தோழர் விருதுநகர் திரு வி. வி. ராமசாமி அவர்கள் ராமனாதபுரம் ஜில்லா தேவஸ்தான கமிட்டி ஆலோசனை போர்டின் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தியே போதுமானதாகும். அன்பர் திரு. ராமசாமி அவர்கள் நாடார் என்று வழங்கப்படும் குலத்தவராவர். நாடார் குலத்தவர்கள் மற்ற ஜாதியாரைக் காட்டிலும் தாழ்ந்த ஜாதியார் எனக் கற்பித்து வைதீகர்களும், வருணா சிரமிகளும் நாடார் பெருமக்களுக்கு கோயில் நுழைவு உரிமை மறுக்கப் பட்டிருப்பது நேயர்கள் அறிந்ததொன்றாகும். அவ்வாறிருந்தும் அத்தகைய “புனித தெய்வீகம்” பொருந்திய கோவில்களின் கமிட்டி ஆலோசனைத் தலைவராகத் தோழர் ராமசாமி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது கண்டு மகிழ் வதோடு அவரைப் பெரிதும் பாராட்டுகிறோம். வைதீக உலகத்திற்கிதுவோர் நல்ல பாடமாகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 19.06.1932**



RangaRakes tamilnavarasam.com

# மன்னார்குடி மகாநாடு

தஞ்சை ஜில்லாவின் இரண்டாவது சுயமரியாதை மகாநாடு, சென்ற 18, 19-6-32 சனி, ஞாயிறுகளில் மன்னார்குடியில் நடைபெற்றது. அம்மகா நாட்டுடன் தொண்டர் மகாநாடும் நடைபெற்றது. தஞ்சை ஜில்லாவின் முதலாவது மகாநாடு சென்ற ஆண்டில் தரங்கம்பாடியில் நடைபெற்றபின் சென்ற ஆண்டிலேயே நன்னிலம் தாலூக்கா மகாநாடு நன்னிலத்திலும் நாகப்பட்டிணம் தாலூக்கா மகாநாடு நாகப்பட்டிணத்திலும், சென்னை மாகாணச் சுயமரியாதைத் தொண்டர் மகாநாடு திருவாரூரிலும் நடை பெற்றன. இன்னும் பல பொதுக்கூட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன. இவ்வாறு தஞ்சை ஜில்லாவில் பல சுயமரியாதை மகாநாடுகளும், அடிக்கடி பல ஊர்களில் பல பொதுக் கூட்டங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், கிணற்றுத் தவளைகளாக இருந்து கொண்டிருக்கும் நமது வைதீக எதிரிகளில் பலர் தஞ்சை ஜில்லாவில் சுயமரியாதை இயக்கம் ஆதரவற்று மாண்டு போய் விட்டதென்று கனவு கண்டு கொண்டும், அக்கனவை உண்மையென்று அறியாமையால் நம்பிப் புரளி பண்ணிக் கொண்டும் இருந்தனர். இத்தகைய அறிவற்றோர்க்கு மன்னார்குடி மகாநாடு நல்ல புத்தி கற்பித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

தஞ்சை ஜில்லாவில் சிறந்த வைதீகக் கோட்டையாக இருப்பது மன்னார்குடியேயாகும். அனேகமாக நமது மாகாணத்திலேயே மன்னார்குடியைப் போல பார்ப்பனர்கள் நிறைந்த இடமும் வேறு ஒன்றும் இல்லை என்று சொல்லலாம். இதுவும் அல்லாமல் தற்சமயம் காங்கிரஸ் பெயரால் ஏதாவது கிளர்ச்சி செய்து கொண்டிருக்கின்றவர்கள் சிலராவது இருக்கின்றார்கள் என்று சொல்லக்கூடிய இடம் தஞ்சாவூர் ஜில்லாவில் ஒன்று இருக்கின்றது என்று யாரேனும் சொல்லுவார்களேயானால் அது மன்னார்குடியேயாகும். 'தஞ்சாவூர் ஜில்லாவில் காங்கிரஸ் கிளர்ச்சி பலமாக இருக்கின்றது' என்று சொல்லப்பட்டு வந்த காலத்தில் அவ்வாறு சொல்லுவதற்குக் காரணமாக இருந்தது மன்னார்குடியே யாகும். இத்தகைய வைதீகமும், பார்ப்பனர்களும், காங்கிரஸ்காரர்களும் நிறைந்த ஒரு ஊரில் நமது மகாநாடு நடைபெறுவதென்றால் அது ஒன்றே நமது இயக்கம் எவ்வாறு பரவி வருகிறது என்பதற்குத் தகுந்த உதாரணமாகும். மன்னார்குடியில் நமது மகாநாடு நடைபெற்றதைக் கொண்டு இனி எந்த வைதீகமானாலும் சரி, வேதங்களானாலும் சரி,



குருமார்களானாலும் சரி, மதஸ்தர்களானாலும் சரி, இயக்கங்களானாலும் சரி, பிரசாரங்களானாலும் சரி, நமது இயக்கத்தை ஒழித்து விட முடியாது. இவ்வியக்கத்தின் தத்துவமாகிய சமதர்ம வெள்ளம், மதங்கள், புரோகிதம், சாதிகள், சாத்திரங்கள், உயர்வு தாழ்வுகள், சுய நலங்கள், மூட நம்பிக்கைகள், குருட்டுப் பழக்கவழக்கங்கள் ஆகிய அணைகளையெல்லாம் அடியோடு பெயர்த்துக் கொண்டு எல்லா மக்களையும் இழுத்துக் கொண்டு பகுத்தறிவுச் சுதந்தர கடலில் போய்ச் சேருவதில் எள்ளளவும் ஐயமில்லையென்று அறியலாம்.

மன்னார்குடி மகாநாடு மற்றொரு வகையில் குறிப்பிடத் தகுந்த ஒரு பெருமையுடைய மகாநாடாக விளங்கினது போற்றத் தக்கதாகும். இதுவரையிலும் நடைபெற்ற மகாநாடுகளிலெல்லாம் பெண்கள் மகாநாட்டைத் தவிர சுயமரியாதை மகாநாடுகளில் ஆண்களே தலைமை வகித்து வந்தார்கள். ஆனால் மன்னார்குடி மகாநாட்டிலோ, நமது இயக்கத்தின் உண்மைத் தோழர்களில் ஒருவராகிய திருமதி. குஞ்சிதம் அவர்கள் பி. ஏ., எல். டி., தலைமை வகித்தது நமது இயக்கம் எவ்வாறு பெண்களின் சமத்துவத்திற்கு உண்மையோடு உழைத்து வருகிறது என்பதைக் காட்டுவதற்கு ஒரு உதாரணமாகும்.

மன்னார்குடி மகாநாட்டில் பலதிறப்பட்ட அரசியல் அபிப்பிராய முடையவர்களும் பலதுறையிலிருந்து கொண்டு சமூகச் சீர்திருத்தம் புரிந்து வருபவர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தகுந்த மற்றொரு விசேஷமாகும். இதனால் வேறு வேறு துறையிலிருப்பவர்களும் கூட சுயமரியாதை இயக்கத்தின் தத்துவங்களை மறுக்க முடியாதவர்களாக அதன் கொள்கைகளுக்கு ஆதரவளிக்கும்படியான நிலைமை நமது இயக்கம் உண்டாக்கி விட்டதென்ற உண்மையை யார் மறுக்க முடியும்?

நமது இயக்கத்தின் உண்மைத் தத்துவங்களை தெரிந்து கொள்ள முடியாத அறிவற்றவர்களும், நமது இயக்கக் கொள்கைகள் எங்கும் பரவிவிடுமானால் தங்களின் தனிமதிப்புக்கும் சுயநலத்திற்கும் இடமில்லாமல் போய்விடுமே என்ற பயமும் சுயநலமும் உடையவர்களும் 'காந்தி' 'காங்கிரஸ்' 'சுயராஜ்யம்' என்ற பெயர்களைச் சொல்லி தலைவர் பட்டமும் தேசாபிமானப் பட்டமும் பதவிகளும் அடைய விரும்பும் போலிகளும், தற்சமயம் நமது இயக்கத்தைப் பற்றித் தப்புப் பிரசாரம் பண்ணிக் கொண்டு வருகிறார்கள்; இக்கூட்டத்தார்கள் தாம், நம்மை 'தேசத்துரோகிகள்' என்றும், 'நாஸ்திகர்கள்' என்றும் வகுப்புத் துவேஷிகள்' என்றும் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இவர்கள் கூற்று சுயநலமுடையதும் யோக்கியப்பொருப்பு இல்லாததும் ஆனது என்பதை மகாநாட்டின் தலைவர் திருமதி. குஞ்சிதம் அவர்கள் தமது முன்னுரையில்

**"காங்கிரஸ்காரர்கள் அடிக்கடி 'அன்னிய ஆட்சி' என்றும், 'அன்னியத் துணி' என்றும் 'அன்னிய பாஷை' என்றும் சொல்லி நமது மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆங்கிலேயர்கள் அன்னியர்கள் என்றால்**



RangaRakes tamilnavarasam.com

**பார்ப்பனர்கள் (ஆரியர்கள்) யார்? என்று கேட்கிறேன். 'இங்கிலீஷ்' அன்னிய பாஷை என்றால் சமஸ்கிருதம் எந்தப் பாட்டன் வீட்டுப் பாஷை? என்று கேட்கிறேன். ஆகையால் அவர்கள் சொல்லுகிறபடி பார்த்தாலும், 400 வருஷத்திற்கு முந்தி வந்த அன்னிய பாஷையை ஒழிப்பதற்கு முன் 2000 வருஷங்களுக்கு முந்தி வந்த "அன்னியராகிய பார்ப்பனர்களின் ஆட்சியை ஒழிக்க வேண்டியது இன்னும் அவசிய மல்லவா? அது போலவே 400 வருஷத்திற்கு முந்தி வந்த அன்னிய பாஷையை ஒழிப்பதற்கு முன் 2000 வருஷமாக நமது சமூகத்தில் 'பராசரஸ்மிருதி' 'மநுதர்மம்' முதலிய கொடூரச் சட்டங்களைச் செய்த அன்னிய பாஷையாகிய 'சமஸ்கிருத பாஷை'யை அடியோடு அழிக்க வேண்டாமா? என்று கேட்கிறேன். ஆகையால் இந்த பசுப்பு வார்த்தை களிலெல்லாம் மயங்கிவிடாமல் நிதானப் புத்தியோடு ஆவேசங் கொள்ளாமல்; எந்தக்காரியத்தையும் யோசித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்"** என்று பேசியிருப்பதிலிருந்து அறியலாம்.

மன்னார்குடியில் நமது மகாநாட்டை நடத்தவொட்டாமல் செய்ய வைதீகர்களும், அவர்களுக்கு ஆதரவாயுள்ள பார்ப்பன உத்தியோகஸ் தர்களும் எவ்வளவோ முயற்சி செய்தும் பலிக்காமல் மகாநாடு மிகவும் வெற்றியோடு முடிவு பெற்றது பாராட்டத்தக்கதாகும். பெரிய மனிதர்களின் ஆதரவின்மையையும், வைதீகர்களின் விஷமப் பிரசாரத்தையும், அதிகாரி களின் அக்கிரமங்களையும் சிறிதும் பொருட்படுத்தாமல் மகாநாட்டை வெற்றியுடன் நடத்துவதற்குக் காரணமாக இருந்தவர்கள் மன்னார்குடி யிலுள்ள நமது இயக்க வாலிப வீரர்களே என்பது குறிப்பிடத்தகுந்ததாகும். ஆகவே எத்தகைய கஷ்ட நஷ்டங்களையும் லட்சியம் பண்ணாமல் மகா நாட்டை வெற்றியோடு நடத்திய நிர்வாகிகளையும் மகாநாட்டின் நடவடிக்கை களில் பங்கெடுத்துக் கொண்டவர்களையும் பாராட்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 26.06.1932**



RangaRakes

# வைதீகர்களின் முட்டுக்கட்டை

உலகமெங்கும், 'சுதந்திரம்' 'சமத்துவம்', 'சகோதரத்துவம்', 'விடுதலை' என்று கூக்குரலிடும் ஓசை செவியைத் துளைக்கின்றது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக அடிமைப் படுகுழியில் வீழ்ந்துகிடந்த பெண்களும், ஏழை மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், தொழிலாளர்களும், தங்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக நின்ற கோட்டைகளைத் தகர்த்து ஒழித்து தரைமட்டமாக்கிக் கொண்டு வருகிறார்கள். இவர்களின் படை எழுச்சி யினால், மதக் கோட்டைகளும், சாஸ்திரக் கோட்டைகளும், வருணாசிரம தருமக் கோட்டைகளும், சுய நலக் கோட்டைகளும், பகுத்தறிவுக் குண்டு களால் அடியோடு பெயர்த் தெறியப்படுகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியாவில் உள்ள உலக நிலையறியாத, பரந்த நோக்கமில்லாத வைதீகப் பிடுங்கல்கள் தர்ப்பைப் புல்லுகளையும், பழய பஞ்சாங்கக் கட்டுகளையும், சாத்திரக் குப்பைகளையும் காட்டி மேற்படி கோட்டைகளைக் காப்பாற்ற முயற்சி செய்கின்றார்கள். ஆனால் இவர்களின் முயற்சி வீணென்று பள்ளிப் பிள்ளைகளும் அறிந்து பரிகசிக்கின்றார்கள் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. இந்த வைதீகப்பிடுங்கல்களின் போக்கையும், மனப் பாங்கையும், முட்டாள் தனத்தையும் சென்ற 20-6-32 ல் தஞ்சை ஜில்லா திருவிடமருதூரில் கூடிய பிராமணர் மகாநாட்டின் தீர்மானங்களைக் கொண்டு உணரலாம். இனி அம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானங் களையும் அவைகளின் மூலம் அந்த மிரட்சியடைந்த மூளையையுடைய வைதீக மக்களின் போக்கையும் கவனிப்போம்.

பெண்கள் விஷயமாக அம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானத்தில், பெண்கள் மகாநாடுகளையெல்லாம் கண்டித்தும், பெண்கள் மகாநாடுகளெல்லாம் மேல் நாட்டுக் கல்வி கற்ற பெண்களால் கூட்டப் படுகின்றதென்றும், அவர்கள் விரும்பும் சுதந்திரங்கள் மதத்திற்கும் சமூகப் பழக்க வழக்கங்களுக்கும் விரோதமானவை என்றும், ஆகவே, அவர்களு டைய அபிப்பிராயங்கள் இந்தியப் பெண்களின் அபிப்பிராயம் அல்ல வென்றும், ஜன சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் எச்சரிக்கை செய்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வைதீகர்களின் புத்தியற்ற தன்மைக்கு இதை விட வேறு என்ன உதாரணம் வேண்டும்? இன்று பெண்கள் விரும்பும் சுதந்திரமும்,



tamilnavarasam.com

சொத்துரிமையும், கல்வியறிவும், சுகாதார வாழ்க்கையும் ஆண்களைப் போல் வயது வந்த பின் தங்கள் விருப்பப்படி மணஞ் செய்து கொள்ளும் உரிமையும், விதவைகளாகிவிட்டால் மறுமணம் புரிந்து கொள்ளும் உரிமையும், கணவனுடைய கொடுமையையோ நடத்தையையோ சகிக்கமுடியாத போது மண விடுதலை செய்து கொள்ளும் சுதந்தரமும், தங்கள் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ள சட்ட சபைகளிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும் இடம் பெறும் உரிமையும் கேட்கின்றார்கள். இவ்வுரிமைகளெல்லாம் இன்று ஆண்களுக்கு எவ்வாறு இருக்கின்றனவோ அவ்வாறு பெண்களுக்கும் இருக்க வேண்டும் என்று கேட்பதில் என்ன தவறு இருக்கின்றது? இளம் வயதில் மாடு, கன்றுகளை விற்பனை புரிவது போல் பெண்களை மணம் செய்வித்து தாலியறுத்த பின் வீட்டின் மூலையில் உட்கார வைத்து, அவர்கள் தங்கள் இயற்கை உணர்ச்சியை அடக்கிக் கொள்ள முடியாமல் திருட்டுத் தனமாக அன்னிய புருஷருடன் இன்பம் அனுபவித்துக் கர்ப்பமாகிக் குழந்தை பிறந்த பின் அதைக் கழுத்தை முறித்துக் கள்ளிக் காட்டிலோ, சாக்கடையிலோ, கிணற்றிலோ, ஆற்றிலோ, குளத்திலோ எறியும்படி செய்வது மதத்திற்கும், பழக்க வழக்கங்களுக்கும் சம்மதமா? கணவனால் வெறுக்கப்பட்ட சொத்துரிமையும், கல்வியறிவும், ஆதரவும் அற்ற பரிதாபகரமான நிலைக்குரிய பெண்கள் விபசார வாழ்க்கையில் ஈடுபட்டு மானத்தை விற்று ஜீவனஞ் செய்யும் காரியந்தான் மதத்திற்கும், பழக்க வழக்கங்களுக்கும் சம்மதமா? ‘மதம்’ ‘பழக்கவழக்கம்’ என்று கண்மூடிக்கதறிக் கொண்டிருக்கும் அறிவிலிகளால் தான் பெண் மக்கள் மேற்கூறிய கொடிய வாழ்க்கையில் ஈடுபட வேண்டியிருக்கிறதென்பதை பகுத்தறிவாளர் மறுக்க முடியுமா? இவற்றையுணராத வைதீகர்கள் பெண்கள் விரும்பும் சுதந்திரத்தால் மதமும், பழக்க வழக்கங்களும் போய்விடும் என்று ஏன் பாழும் குரலெடுத்துக் கத்துகிறார்கள்?

அடுத்தபடியாக ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர். இத்தீர்மானத்தில் குருவாயூர் முதலிய இடங்களில் நடைபெறும் ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகங்களைக் கண்டித்தும், தீண்டாதார் ஆலயங்களில் நுழைந்தால் சனாதன தர்மமும் இந்து மத சம்பிரதாயமும் அழிந்து விடுவதுடன் இந்து சமூகத்தில் கலகமும் வேற்றுமைகளும் உண்டாகுமென்றும் ஆகையால் காங்கிரஸ் இவ்வியக்கத்தை ஆதரிக்கக் கூடாதென்று எச்சரிக்கை செய்வதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். கோயில் பிரவேசத்திற்காகச் சத்தியாக்கிரகம் பண்ண வேண்டும் என்கின்றவர்கள் கவனிக்க வேண்டுகின்றோம். கோயிலுக்குள் நுழையும் உரிமை பெறச் சத்தியாக்கிரகம் பண்ணுகின்ற கஷ்டத்தையும் கோயில் பிரவேச உரிமை கிடைத்தபின், அந்தக் கல்லுச் சாமிகளுக்காகத் தாங்கள் பாடுபட்டுத் தேடும் செல்வங்களைப் பாழாக்கும் முட்டாள்தனத்தைப் போக்க பாடுபட வேண்டிய கஷ்டத்தையும் ஆலோசித்துப் பார்த்தால், இப்பொழுதே இக்கஷ்டங்களுக்கு இடம் இல்லாமல் தடுத்து விடலாமல்லவா? கோயில் பிரவேசத்திற்காகப் பாடுபடுவதை விட, கோயில்களின் பயனற்ற தன்மைகளையும் அவைகளால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களையும் எடுத்துக் கூறி எவரையும் கோயிலுக்குப் போகாமலும், அதற்காகச் செலவு செய்யாமலும் தடுக்க முயற்சிப்பது எவ்வளவோ பயன் தரக்கூடியதென்பதே நமது அபிப்பிராயமாகும். ஜனங்கள் கோயில்களுக்குப் போவதையும், அங்கே கொண்டு போய் பணத்தைப் பார்ப்பனர்கள் வயிற்றில் போடுவதையும் நிறுத்தி விடுவார்களானால் கோயில்களும் அழிந்து போகும்; அவைகளைக் கட்டிக் கொண்டு அழும் வைதீகர்களும், பார்ப்பனர்களும் கொட்டம் அடங்கி மூலையில் உட்கார்ந்து விடுவார்கள். இதைவிட்டு, கோயில் பிரவேசத்திற்கு என்று நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கும் வரையிலும் கோயில்களுக்கு மதிப்பும், பாமர மக்களின் செல்வங்களுக்குக் கேடும், சோம்பேறி வைதீகர்களுக்கும், பார்ப்பனர்களுக்கும் பிழைப்பும் இருந்து கொண்டுதானிருக்கும். ஆகையால் கோயில்களை ஒழிப்பதற்கு வழி தேடுவதே சாலச் சிறந்ததென்று நாம் எச்சரிக்கை செய்கின்றோம். இந்த வகையில் பார்ப்பனர்களே கோயில்களைக் கட்டிக் கொண்டு அழுவதில் நமக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், கோயில்களாகட்டும், குளங்களாகட்டும், மற்ற எந்த பொது ஸ்தலங்களாகட்டும், அவைகளில் எல்லோரும் பிரவேசிக்கக் கூடிய உரிமையை நிலை நாட்டும் பொருட்டுச் செய்யப்படும் எந்த முயற்சியையும் நாம் முழு மனதுடன் ஆதரிக்கின்றோம். பார்ப்பனர்கள் எதையும் தங்களுடைய ஏகபோக உரிமையாக அனுபவிக்கச் சுதந்திரம் பெற்றிருந்த காலம் மலையேறி விட்டதென்று எச்சரிக்கின்றோம்.

அடுத்தபடியாக, ‘மத உரிமை’ பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், மத உரிமைகளுக்கு விரோதமாகச் சட்டங்கள் ஏற்படுத்தக் கூடாதென சர்க்காருக்கும் சட்டசபைகளுக்கும் தடையேற்படுத்த வேண்டும் என்றும் மதச் சம்பந்தமான பழக்க வழக்கங்களில் அரசாங்கமும், சட்டசபைகளும் தலையிடக் கூடாதென்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்த வைதீகர்களின் மனப்போக்கின் படி பார்த்தால், அரசாங்கம் என்று ஒன்று இருக்க வேண்டிய தேவையே இல்லை என்று கூறலாம். தேசமக்களின் கொடிய பழக்க வழக்கங்களைப் போக்கி அவர்களை நலமுடன் வாழச் செய்ய வேண்டியதே அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். இக்கடமையைச் செய்யாத அரசாங்கம் இருந்தும் பயனில்லை; இறந்தும் பயனில்லை. தன் மதத்தினர் தவிர அன்னிய மதத்தினரை யெல்லாம் அழிக்க வேண்டும் என்று கூறும் ஒரு மத உரிமைக்கு அரசாங்கம் தடை செய்யாமலிருக்க முடியுமா? புருஷன் இறந்த பின் அவன் மனைவியையும் காஷ்டத்தில் ஏற்றிக் கொலை செய்யும் மத உரிமையை அரசாங்கம் தடை செய்யாமலிருக்க முடியுமா? பெண்களைப் பொட்டுக்கட்டி விட்டு விபசாரத் தொழில் நடத்தச் செய்யும் மதவுரிமையை அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? ஒரு நாளைக்கு பன்னிரெண்டு மணி நேரமும் நெற்றி வேர்வை நிலத்தில் வரும்படி உழைப்போர் உணவின்றி வருந்திச் சாகவும், நகத்தில் அழுக்குப்படாமல் வெல்வெட்டு மெத்தையிட்ட சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டிருக்கும் சோம்பேறிகள் ஆதிக்கம்





RangaRakes
tamilnavarasam.com

செலுத்தும் மதவுரிமைக்கு, (அக்கிரமத்திற்கு) அரசாங்கம் எப்பொழுதும் இடங்கொடுத்துக் கொண்டிருக்க முடியுமா? ஆகையால் தேசம் நன்மை யடைய வேண்டுமானால், மதவுரிமை, சாதி உரிமை, பழக்க வழக்கம் என்ப வற்றையெல்லாம் மூட்டைக்கட்டி "அட்லாண்டிக்" பெருங்கடலில் போட்டு விட்டுச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்ற வேண்டியதே முறையாகும். இத் தகைய அரசியல் சீர்திருத்தம் வருவதாயிருந்தால்தான் சுயமரியாதைக் காரர்கள், அரசியல் சீர்திருத்தத்தை ஆதரிப்பார்கள். இவ்வாறில்லாமல் இந்த வைதீகர்கள் விரும்புகின்றபடியும் காங்கிரஸ்காரர்கள் கேட்கின்றபடியும், மதப் பாதுகாப்புள்ள சீர்திருத்தம் எது வந்தாலும் அதைச் சுயமரியாதைக்காரர்கள் ஆதரிக்கப் போவதில்லை. ஒரு சமயம் ஆதரிக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டாலும், மதப்பாதுகாப்பை ஒழித்துச் சமூக சீர்திருத்தச் சட்டங்களை ஏற்படுத்தவே முன்வருவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆதலால், வைதீகர் கள் வேண்டும் மதப்பாதுகாப்புப் பூச்சாண்டி இனிப் பலிக்காதென்று எச் சரிக்கை செய்கின்றோம்.

அடுத்தபடியாக, சாரதா சட்டத்தைக் கண்டித்தும் இச்சட்டத்தை இந்து சமூகத்திலுள்ள பலரும், பல ஸ்தாபனங்களும் ஆதரிப்பதைக் கண்டித்தும் பால்ய விவாகத்தைத் தடை செய்வது மதத்திற்கு விரோத மென்றும் ஆதலால், சாரதா சட்டத்தைத் திருத்தவோ, ரத்து செய்யவோ அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டும் என்றும் தீர்மானித்திருக்கின்றார்கள். இவர்கள் தீர்மானத்திலேயே, சாரதா சட்டத்தை இந்து சமூகத்திலுள்ள பலரும், பல ஸ்தாபனங்களும் ஆதரிப்பதாகக் குறிப்பிட்டிருக்கும் போது சிலராகிய வைதீகர்கள் ஏன் கூச்சலிட வேண்டும்? இச்சட்டம் உண்மையிலேயே ஜனசமூகத்திற்கு நன்மை யளிக்கக் கூடியதென்பதை அறிந்து தானே பலரும் ஆதரிக்கின்றார்கள், அப்படி யிருக்க ஏன் இவ் வைதீகர்கள் இதை எதிர்க்க வேண்டும்? 'மதம்' என்ற குருட்டுத்தனம் தானே இவர்களுடைய அறிவை நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்க்க முடியாமல் தடை செய்கின்றது? ஆகையால் இந்த வகையிலும் இவர்களுடைய தீர்மானம் ஒரு செல்லாக் காசு என்றுதான் நாம் கூறுவோம்.

கடைசியாக மற்றொரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றார்கள். அதாவது "வேதம் ஆகமம் முதலியவைகளை பிரசாரம் பண்ணுவதற்கும், புரோகிதர், கோயில் அர்ச்சகர்கள் முதலியவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வைதீக காரியங்களுக்கு அழிவு வராமல் காப்பாற்றுவதற்கும், வருணாச்சிரம தருமசபைகள் ஏற்படுத்துவதற்கும், இந்துமத தத்துவங்களைப் பிரசாரம் பண்ணுவதற்கும், மாணாக்கர்களிடம் வைதீக ஒழுக்கங்கள் உண்டாவதற்காகச் சிறு விடுதிகளை ஏற்படுத்தவும் "தர்ம ஊழியர் சங்கம்" என்னும் ஒரு ஸ்தா பனத்தை ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். ஒவ்வொரு சமூகத்தினரும் வேதாகமப் புரட்டுகளையும், புரோகிதப் புரட்டுகளையும், அர்ச்சகர்களின் அயோக்கியத்தனங்களையும், வருணாச்சிரம தர்ம



அக்கிரமங்களையும், பழைய குருட்டுப் பழக்கங்களையும் ஒழிக்க முயற்சி செய்யும் இக்காலத்தில், நமது பார்ப்பனர்கள் இவற்றை வளர்க்க முயற்சி செய்வது எவ்வளவு புத்திசாலித்தனமென்று யோசித்துப் பார்க்க வேண்டு கிறோம். உண்மையில் இவர்களுக்கு தேசத்தின் மீது கவனமோ, ஏழை களின்மேல் அனுதாபமோ மற்ற தேசங்களைப் போல் நமது தேசமும் சிறந்து விளங்க வேண்டும் என்னும் ஆசையோ இருந்தால் இவ்வாறு மகாநாடுகள் கூட்டிப் பிற்போக்கான தீர்மானங்களைச் செல்வார்களா? என்று தான் கேட்கி றோம். பணபலமும், பத்திரிகை பலமும் செல்வாக்குப் பலமும் படைத்த வைதீகப் பார்ப்பனர்கள் இப்பொழுது தீர்மானித்திருக்கிறபடி, பலதுறை களிலும் நுழைந்து பிரசாரம் பண்ணவும், பார்ப்பனர்களை இன்னும் நம்பிக் கொண்டிருக்கும் பாமர மக்களில் பலர் இவர்கள் பிரசாரத்தினால் ஏமாறவும் கூடும். ஆனால் இது எப்பொழுதும் நிலைத்து நிற்க முடியாது என்பது மாத்திரம் நிச்சயம். காலச்சக்கரம் வெகுவேகமாக சுழன்று கொண்டிருக்கும் இந்நிலையில் பார்ப்பனர்களின் வைதீகப் பிரசாரம், ஒரே முறையில் செய்யப் படும் சுயமரியாதைப் பிரசார சண்டமாருதத்தால் சிதறிப் போய்விடும் என்பது நிச்சயம், ஆகையால் எங்கும் பகுத்தறிவும், விடுதலையும், சுதந்திரமும் உதயமாகிவரும் இக்காலத்தில் பார்ப்பனர்கள் மாத்திரம் இவ்வாறு இன்னும் ஏமாற்றிக் கொண்டிருக்க நினைப்பதும், அதற்காக மகாநாடு கூட்டுவதும், தீர்மானங்கள் நிறைவேற்றுவதும் வீண்! வீண்! வீண்! என்று எச்சரிக்கை செய்கின்றோம். இத்தகைய அழுக்குமூட்டை வைதீகர்களைக் கண்டிக்காத தேசீயப் புலிகள் நம்மைத் "தேசீயத்துரோகிகள்" என்றும் "சுயராஜ்ய விரோதி கள்" என்றும் கூறுவது வடிகட்டின அயோக்கியத்தனமல்லவா? இனியேனும் யார் உண்மையான சுதந்திரத்திற்குப் பாடுபடுவர்க ளென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுகிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 26.06.1932**



RangaRakes tamilnavarasam.com

# குடி அரசு

# 1932-2

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

### தொகுதி 15


பெரியார் திராவிடர் கழகம்

29 இதழியலாளர் குடியிருப்பு

திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்

சென்னை - 600 041


## மாகாண சுயாட்சி தான்

### சட்டமறுப்பால் பயனில்லை

நமது நாட்டில் உள்ள ஆவேசங் கொண்ட தேசாபிமானிகள் கூட்டத்தில் பல மாதங்களாய், பூரண சுயேச்சைப் பேச்சும், குடியேற்ற நாட்டு ஆட்சிப் பேச்சும், ஐக்கிய ஆட்சிப் பேச்சும் நடைபெற்று வந்தன. இந்தியாவுக்கு எத்தகைய சீர்திருத்தம் வழங்கலாம் என்பதை விசாரித்து முடிவு செய்வதற்காக ஆங்கிலப் பாராளுமன்றத்தாரால் நியமிக்கப்பட்ட 'சைமன் கமிஷ'னை காங்கிஸ்காரர்கள் பகிஷ்காரம் பண்ணினார்கள், "பூரண சுயேச்சையே இந்தியாவுக்கு வேண்டும்" என்று சொல்லி திரு. காந்தி அவர்களின் தலைமையில் 'உப்பு சத்தியாக்கிரகம்' 'சட்ட மறுப்பு' முதலிய வற்றை நடத்தி தேசத்தில் பெருங்குழப்பத்தையும், கிளர்ச்சியையும் உண்டாக் கினார்கள். இவ்வாறு சட்டமறுப்பு இயக்கம் பலமாக நடைபெற்ற காரணத்தால் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும், இந்தியர்களிடம் தாராள மனது காட்டுவது போல், வட்ட மேஜை மகாநாடு ஒன்றை ஏற்படுத்தி இந்தியப் பிரதிநிதிகளை இங்கிலாந்திற்கு வரவழைத்து அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாக விவாதிக்கச் செய்தார்கள். முதலில் நடந்த வட்ட மேஜை மகாநாட்டிற்கு காங்கிரஸ் பிரதிநிதி கள் செல்லவில்லை. ஆனாலும் முதல் மகாநாட்டிலேயே இந்தியாவுக்கு ஐக்கிய ஆட்சியை ஏற்படுத்துவது என்று தீர்மானித்தார்கள். பிறகு இரண்டாம் முறை நடந்த வட்டமேஜை மகா நாட்டிற்குக் காங்கிரசின் ஏகப்பிரதிநிதியாக திரு. காந்தி அவர்களும் சென்றார். இந்த மகாநாடும் ஐக்கிய ஆட்சியை ஏற்படுத்துவது என்ற முதல் மகாநாட்டு முடிவோடு நின்றதே ஒழிய அவ் வாட்சிக்கான திட்டங்கள் ஏற்படுத்துவது பற்றி ஒரு முடிவுக்கும் வராமல் கலைந்தது. கடைசியாக பிரிட்டிஷ் முதல் மந்திரியால் வாக்குரிமைக் கமிட்டி, சமஸ்தானக்கமிட்டி, ஆலோசனைக் கமிட்டி என மூன்று கமிட்டிகள் நியமிக்கப்பட்டன. இக்கமிட்டிகளில் வாக்குரிமைக் கமிட்டியின் வேலையும், சமஸ்தானக் கமிட்டியின் வேலையும் முடிந்து விட்டன. இவைகளின் அறிக் கைகள் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் இருக்கின்றது, இன்னும் ஆலோசனைக் கமிட்டியின் வேலைகள் முழுவதும் முடியவில்லை.

வட்ட மேஜை மகாநாடு கூடியது முதல் சில தினங்களுக்குமுன், சென்ற 27-6-32ல் இந்தியா மந்திரியின் அறிக்கை வெளியாகும் வரையிலும் எங்கும்


RangaRakes

tamilnavarasam.com

ஐக்கிய ஆட்சியைப் பற்றியே பேச்சாக இருந்தது. ஆனால் இந்தியாவில் ஐக்கிய ஆட்சியை ஏற்படுத்துவதில் உள்ள இடையூறுகளையும், சிக்கல் களையும் உணர்ந்த பல நிருபர்களும், அரசியல்வாதிகளும், மாகாண ஆட்சி தான் முதலில் ஏற்படக் கூடும் என்று கூறிவந்தார்கள். 'காந்தி - இர்வின்' ஒப்பந்தம் ஏற்பட்டது முதல் பெரும்பாலான காங்கிரஸ்காரர்களும் திரு. காந்தி யும் ஐக்கிய ஆட்சித் திட்டத்தை ஒப்புக் கொண்டனர்.

ஆனால் நாம் மாத்திரம். ஆதிமுதல், "ஐக்கிய ஆட்சி ஏற்பட இடமில்லை" என்றே வட்ட மேஜை மகாநாடு ஏற்படுவதற்கு முன் உண்டான "சைமன் கமிட்டி" அறிக்கையின் படியும் அவ்வறிக்கையின் மேல் இந்திய அரசாங்கத்தார் செய்துள்ள சிபாரிசின் படியும், அமைந்த "மாகாண சுயாட்சி" தான் ஏற்படும் என்றும் ஆகவே "காங்கிரஸ்"காரர்கள் செய்யும் சட்ட மறுப்பி னாலும், மற்றவர்கள் போடும் கூச்சலினாலும் ஒரு பயனும் இல்லை என்றும் கூறி வந்தோம்.

இவ்வுண்மையைத் தற்சமயம் இந்தியா மந்திரி வெளியிட்டிருக்கும் அறிக்கையைக் கொண்டு உணரலாம். இந்தியா மந்திரியின் அறிக்கையை சென்ற 27-6-32ல் மேன்மை தங்கிய வைசிராய் அவர்கள் வெளியிட் டுள்ளார்கள். அவ்வறிக்கையிலிருந்து நமக்குத் தெரியும் செய்தியாவது :-

> "தற்பொழுது அவசரமாக மாகாண சுயாட்சி கொடுப்பதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவாகும். ஆனால் இப்பொழுது மாகாண சுயாட்சிக்காக தயாரிக்கப் போகும் அறிக்கையிலேயே, ஐக்கிய ஆட்சிக்கான திட்டமும் ஏற்படுத்தப்பட்டிருக்கும். இந்திய ஆட்சித் திட்டங்களை ஆராய்ந்து முடிவு செய்வதற்கு அதிக காலம் பிடிக்குமாதலால் முதலில் மாகாண சுயாட்சியே வழங்கப்படும்.
>
> வகுப்புப் பிரச்சினை சம்மந்தமாக அரசாங்கத்தார் தமது முடிவை இன்னும் இரண்டு மாதங்களுக்குள் தெரிவித்து விடு வார்கள். அதன்பின் ஆலோசனைக் கமிட்டியின் கூட்டம் நடை பெற்று அதன் அறிக்கை தயாரிக்கப்படும். இதன் பின்பே பாராளு மன்றத்தாரால் நியமிக்கப்படும் கூட்டுக் கமிட்டியினால், இந்தியப் பிரதிநிதிகளையும் விசாரித்து உடனே மாகாண சுயாட்சியைக் கொடுக்கின்ற மசோதா தயாரிக்கப்படும். இம்மசோதாவைத் தயாரிக் கும் போது, வாக்குரிமைக் கமிட்டி சமஸ்தானக் கமிட்டி ஆலோ சனைக் கமிட்டி ஆகியவைகளின் அறிக்கைகளையும் துணையாக வைத்துக் கொள்ளப்படும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட மசோதா பாராளுமன்றத்தாரால் ஒப்புக் கொள்ளப்பட்டபின் சட்டமாக அமுலுக்கு வரும்."

என்பதுதான் இந்தியா மந்திரியின் அறிக்கையில் உள்ள சாரமாகும்.



இனி தயாரிக்கப் போகும் அறிக்கை பாராளுமன்றக் கூட்டுக் கமிட்டியினால் இந்தியப் பிரதிநிதிகளின் உதவியையுங் கொண்டு தயாரிக்கப்படும் என்று விளம்பரப் படுத்தியிருந்தாலும் உண்மையில் அவ்வறிக்கை குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டதாக அறியாதவர்களால் கருதப்படும் "சைமன் அறிக்கை"யை ஒட்டியதாகவும், அதன்மேல் இந்திய அரசாங்கத்தார், செய்தி ருக்கும் சிபாரிசை ஒட்டியதாகவும் தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை என்றே சொல்லலாம்.

ஆகவே, இதுவரையிலும் "சைமன் கமிஷனை" எதிர்த்தும் வட்ட மேஜை மகாநாட்டை எதிர்த்தும், பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்தும் சட்ட மறுப்பும். கிளர்ச்சிகளும் செய்ததினால் என்ன பலன் கிடைத்தது? என்று கேட்கிறோம்.

"சட்டமறுப்பு இயக்கத்தை ஒடுக்கி தேசத்தில் அமைதியை ஏற்படுத்துகின்றோம்" என்று சொல்லிக் கொண்டு இந்திய அரசாங்கத்தாரால் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டங்களாலும், அவைகளை எதிர்த்துச் சட்ட மறுப்புக்காரர்கள் செய்யும் கலகங்களாலும் நிரபராதியான ஏழை மக்கள் கஷ்டப்படுகிறது தான் கண்டபலன்.

"பிரிட்டிஷ் அரசாங்கத்தார் முதலில் இந்தியாவுக்கு மாகாண சுயாட்சி தான் கொடுப்பது" என்று தீர்மானித்திருப்பதால் அரசாங்கத்திற்கு இப் பொழுது இருந்து வரும் இந்திய அரசியல்வாதிகளின் ஆதரவும் பொது ஜனங்களின் ஆதரவும் குறைந்து விடும். ஆகையால் மாகாண சுயாட்சித் திட்டத்தை யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்று சிலர் கூறி வரு கிறார்கள். இக்கூற்று சிறிதும் உண்மையற்றது என்று நாம் கூறுவோம். இங்கி லாந்தில் இரண்டாவது வட்டமேஜை மகாநாடு நடந்த காலத்திலேயே பிரபல மான இந்திய அரசியல் வாதிகளில் பலர் ஐக்கிய ஆட்சியை ஏற்படுத்துவதற்கு முன் மாகாண சுயாட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று கூறினார்கள். வட்ட மேஜை மகாநாடு கலைந்தபின்னும், முஸ்லீம் தலைவர்களில் பலரும் இந்துத் தலைவர்களில் பலரும் மற்ற சிறுபான்மை வகுப்புத் தலைவர்களில் பெரும் பாலானவர்களும் முதலில் 'மாகாண சுயாட்சி' ஏற்படுத்தும் விஷயத்தை ஆதரிப்பதாக அபிப்பிராயங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஆகையால் அரசாங்கத்தார் ஏக காலத்தில் ஐக்கிய ஆட்சியையும் மாகாண சுயாட்சி யையும் விரும்புகின்றவர்களும், பூரண சுயேட்சைக்காரர்களும் காட்டும் பூச்சாண்டிகளுக்குப் பயப்படமாட்டார்கள்.

இதற்கு மத்தியில் அரசாங்கத்தார் காங்கிரசுடன் சமாதானம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்றும் அவசரச் சட்டங்களையெல்லாம் நீக்கிவிட வேண்டுமென்றும், மீண்டும் அவசரச் சட்டங்களை ஏற்படுத்தக் கூடா தென்றும் இனி வரப்போகும் தேர்தலில் ஜனங்களிடம் ஓட்டுப்பெற விரும்பும் "தேச பக்தர்கள்" எல்லாம் தனித்தனியாகவும் ஒன்று சேர்ந்தும் பல



RangaRakes tamilnavarasam.com

அறிக்கைகள் வெளியிட்டார்கள். திரு காந்தி அவர்களும் "தேசீய கௌரவத் திற்குப் பங்கம் வராத சமாதான" த்திற்குச் சம்மதிப்பதாக வெளியிட்டிருந்தார்.

ஆனால் சிறந்த ராஜதந்திரியான லார்டு வில்லிங்டன் அரசாங்கத்தார் "காங்கிரஸ்காரர்கள் சட்ட மறுப்பு நடத்திக் கொண்டிருக்கின்றவரையிலும் எத்தகைய சமாதானத்திற்கும் தயாராயில்லை" என்ற முடிவோடு இருக்கிறார் கள் என்ற விஷயம் அடிக்கடி தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆயினும் அரசியல் தந்திரம் அறியாதவரும் மதபக்தரும்ஆன மாஜி வைசிராய் லார்டு இர்வின் பிரபு அவர்களுடன் திரு. காந்தியவர்கள் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டது போல லார்டு வில்லிங்டன் பிரபு அவர்களுடன் செய்து கொள்ள முடியாது என்பதை காங்கிரஸ்காரர்கள் இன்னும் உணராததாலேயே பிடிவாதமாகச் சட்ட மறுப்பை நடத்திக் கொண்டிருக்கின்றனர். ஒருக்கால் காங்கிரசுக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் சமாதானம் ஏற்பட்டாலும் முன்பு ஏற்பட்ட "காந்தி - இர்வின்" ஒப்பந்தத்தைப் போல் போலிச்சமாதானம் ஏற்படாது என்பது நிச்சயம். காங்கிரஸ் படிந்து வந்தாலொழிய சமாதானம் செய்து கொள்ளப் போவதில்லை என்ற உறுதியினால் தான் இப்பொழுதுள்ள அவசரச் சட்டங்களின் காலம் முடிந்தபின் மீண்டும் ஜூலை 3ந்தேதிமுதல் புதிய அவசரச் சட்டங்களை ஏற்படுத்துவதாக அரசாங்கத்தார் முடிவு செய்திருக்கின்றார்கள். இது பற்றி சென்ற 27-6-32ல் பாராளுமன்றத்தில் இந்தியா மந்திரியவர்கள்

> "ஜூலை மாதம் 3-ம் தேதி முதல் புதிய அவசர அதிகாரங் களைப் பெற வேண்டிய சங்கடமான நிலைமைக்கு வந்திருக்கி றோமாகையால் அதற்கு வேண்டிய அவசர அதிகாரங்களைப் பெறுவதென்று முடிவு செய்திருக்கிறோம்"

என்று பேசியிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

ஆகவே இது வரையிலும் கூறியவற்றால் இப்பொழுது மாகாண சுயாட்சி கொடுப்பதாகவே அரசாங்கத்தார் முடிவு செய்திருக்கிறார்கள் என்பதையும் பூரண சுயேச்சைக்காகவும், ஐக்கிய ஆட்சிக்காகவும், செய்த சட்ட மறுப்புக்களும் போட்ட கூச்சல்களும் வீணே என்பதையும், காங்கிரஸ் காரர்கள் சட்ட மறுப்புச் செய்து கொண்டிருக்கும் வரையிலும் அரசாங்கத்தார் சமாதானத்திற்கு இணங்கப்போவதில்லையென்பதையும் அவசரச் சட்டங்களையும் கைவிடப் போவதில்லையென்பதையும் உணரலாம்.

இந்த நிலையில் தேச மக்கள் செய்ய வேண்டிய வேலை வரப்போகும் மாகாண சுயாட்சியில் ஒவ்வொரு வகுப்பினரும் சமபங்கு பெற்றுத் தங்கள் தங்கள் நிலையைச் சரிப்படுத்திக் கொள்ள முயலுவதேயாகும். பிற்போக் கடைந் திருக்கும் சமூகத்தினர் இப்பொழுது ஏமாந்து பேசாமலிருந்துவிட்டால் பிறகு கஷ்டப்படுமாறு நேரும். ஆகையால் முக்கியமாகத் தாழ்த்தப்பட்ட



சமூகத்தினர் வரப்போகும் மாகாண சுயாட்சியில் சட்டசபைகளிலும் மற்ற பொதுஸ்தாபனங்களிலும் தங்கள் ஜனத்தொகைக்குத் தகுந்த பிரதிநிதித்துவம் பெறுவதற்கும் தங்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் யாருடைய தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாமல் உழைக்கக் கூடிய பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுப்பதற்கும் தகுந்த வகையை மாகாண சுயாட்சித்திட்டத்தில் அமைக்கும் படி கிளர்ச்சி செய்ய வேண்டும். வகுப்புப் பிரச்சினை சம்பந்தமான முடிவி லேயே தாழ்த்தப்பட்ட சமூகத்தினருடைய நன்மை தீமைகளும் மற்ற பிற் போக்குள்ள சமூகத்தினருடைய நன்மை தீமைகளும் அடங்கியிருக்கின்றன. ஆகையால் எல்லாச் சமூகத்திற்கும் அரசியலில் நியாயமான பிரதிநிதித்துவம் ஏற்படும்படி முடிவு கூறுமாறு பிரிட்டிஷ் முதல் மந்திரிக்கு எடுத்துக் காட்டு வதே இச்சமயத்தில் உண்மையான தேசாபிமானிகளின் கடமையாகும் என்பதை நினைப்பூட்டுகிறோம். இதை விட்டு இன்னும் வீணாகச் சட்ட மறுப்பென்றும், சத்தியாக்கிரகமென்றும் சொல்லிக் கொண்டு தேசத்தின் அமைதியைக் கெடுத்துக் கொண்டிருப்பதனால் ஒரு பயனும் இல்லை என்று எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 03.07.1932**



RangaRakes tamilnavarasam.com

# வெற்றிக்குறி

திருச்சியில் உயர்திருவாளர் எம். டி. சோமசுந்திரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சீர்திருத்த திருமண நிகழ்ச்சியைப் பற்றிய செய்தி பிறிதோரிடம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. நமதன்பர் சோமசுந்திரம் அவர்கள் சென்னை அரசாங்க அமைச்சர் கனம் பி. டி. ராஜன் அவர்களது சிறிய தந்தை யென்பதும், தொண்டை மண்டல முதலியார் என்று சொல்லப்படும் வகுப்பைச் சேர்ந்தவரென்பதும் நேயர்கள் அறிந்ததே. அன்னார் தலைமையில் புரோகிதம் ஒழிந்து சீர்திருத்தத் திருமணம் நடந்ததானது மேற்படி சமூகத்தில் ஒரு பெரும் புரட்சியை யுண்டாக்கி விட்டதென்றே சொல்ல வேண்டும். ஏனெனில் இந்த சமூகத்தார் தாங்கள் ஜாதியில் உயர்ந்தவர்கள் என்ற இறுமாப்புக் கொண்டிருப்பதோடு புரோகிதத்தையோ, வைதீக மதாச்சார சடங்குகளையோ எக்காரணம் கொண்டும் கைவிட ஒறுப்படாதவர்கள். அத்தகைய ஓர் "பெரிய" வகுப்பில் புரோகிதம் ஒழிந்த சீர்திருத்தத் திருமணம் நடந்ததென்றால், அது நமதியக்கத்திற்கு மகத்தான வெற்றி என்றே கூற வேண்டும். நமதியக்கக் கொள்கைகள் நாட்டில் எவ்வளவு மலிந்து வருகின்ற தென்பதோடு நமது கொள்கைகள் திட்டங்கள் யாவும் மக்களுக்கு தங்கள் தினசரி வாழ்க்கைக்கு பயன்படத்தக்க இன்றியமையாதனவாய் இருக்கின்றன வென்பது நன்கு புலனாகும். நமது கொள்கைகள் நாடெங்கும் பரவி சர்வ வியாபகமாக வேண்டுவதற்கு பார்ப்பனீயக் கோட்டைகளும், சைவக் கோட்டைகளும் தகர்த்தெறியப்பட வேண்டுமென நாம் பன்முறையும் இடித்திடித்து கூறிவந்திருக்கிறோம். தலைவரவர்கள் தனது முன்னுரையில் சுயமரியாதை உலகெலாம் பரவவேண்டுமென அவாவுவதையும் இத்தகைய மணங்கள் நாட்டிற்கு எவ்வகையிலும் புதிதன்று எனவும், இது பழங்கால முறையே என்றும் குறித்திருப்பதைப் பாராட்டுவதோடு இத்தகைய திருமணங் கள் ஏராளமாக நடைபெற வேண்டுமென்றும் விரும்புகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 03.07.1932**



# ஏழைகளுக்கு நன்மையில்லை

இக்காலத்தில் எங்கு பார்த்தாலும் பணமில்லாத காரணத்தால் மக்கள் படும் துன்பம் சொல்ல முடியாததாக இருக்கின்றது. இன்னார் கஷ்டப் படுகின்றார்கள்; இன்னார் கஷ்டப்படாமல் இருக்கிறார்கள் என்று சொல்லு வதற்கில்லை. ஏழை முதல் பணக்காரன் வரை ஆண்டி முதல் அரசன் வரை எல்லோரும் பொருளாதார நெருக்கடியால் இன்னது செய்வதென்று தோன்றாமல் திக்குமுக்காடுகின்றார்கள். நமது நாட்டு மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் பரம ஏழைகள் என்பது தெரிந்த விஷயம். இத்தகைய ஏழை மக்கள் உணவுக்கும், உடைக்கும், உறைவிடத்திற்கும், படுந் துன்பம் இவ்வளவு அவ்வளவு என்று யாராலும் குறித்துரைக்க முடியாது. இந்த நாட்டில் பிழைப்பில்லாமல் பெண்டு பிள்ளைகள், உற்றார் உறவினர், எல்லோ ரையும் விட்டு விட்டு கடல் கடந்து அன்னிய நாடு சென்று கூலி வேலை செய்யும் மக்களில் இந்தியரே அதிகமானவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இப்படிப்பட்ட கூலிகளுக்குக் கூட அன்னிய நாடுகளிலும் பிழைப்பு இல்லாமல் ஒவ்வொரு வாரமும் ஆயிரக்கணக்கான மக்கள் திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் பெண்டு பிள்ளைகளுடன் வறுமையின் கொடுமையினால் பல பிணிகளுக்கும் ஆளாகி இரத்தக் கண்ணீர் வடிக் கின்றார்கள். நாட்டின் தலைவர்கள் என்பவர்களும் பணக்காரர்களும், படிப்பாளிகளும் இத்தகைய ஏழைமக்களின் துயரைப் போக்க ஒரு வழியும் செய்யக் கவலையெடுத்துக் கொள்ளக் காணோம்.

வெள்ளைக்காரர்களின் அரசாட்சியை யொழித்து இந்தியர்களுடைய சுயராஜ்யத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு "காங்கிரஸ்" சட்டமறுப்பு இயக்கத்தை வருஷக்கணக்காக நடத்திக் கொண்டு வருகிறது. சுயராஜ்ய ஆவேசங் கொண்ட வாலிபர்களும், நடுத்தர வயதுள்ளவர்களும், காங்கிரசின் பேராலும், சட்ட மறுப்பின் பேராலும் ஜெயிலுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். சட்ட மறுப்பின் பெயரால் இவர்கள் செய்யும் காரியங்கள் இன்னவையென்பது வாசகர்களுக்குத் தெரியாத விஷயமல்ல. இந்தச் சட்ட மறுப்பால் அரசாங்கத் திற்கும் கஷ்டமும், நஷ்டமும் உண்டாவதைப் பற்றி, நமக்குக் கவலை இல்லை. ஆனால் பொது ஜனங்களுக்கும் பல கஷ்டங்களையும் நஷ்டங்



RangaRakes tamilnavarasam.com

களையும் சட்ட மறுப்பு இயக்கம் உண்டாக்கிக் கொண்டு வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தச் சட்ட மறுப்பு இயக்கத்தை அடக்கும் பொருட்டு அரசாங்கத்தார் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியினாலும் பொதுஜனங்களுக்குக் கஷ்டம் உண்டாகாமற் போகவில்லை. சட்ட மறுப்புக் கைதிகளாக ஆயிரக்கணக்கான மக்களைச் சிறையிலடைத்துக் கொண்டு அவர்களுக்குச் சோறு போட்டு வருகிறார்கள். இன்னும் சட்ட மறுப்பைச் சமாளிக்கும் பொருட்டு விசேஷ போலீசாரையும் மற்றும் பல உத்தியோகஸ்தர்களையும் ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே இவை போன்ற காரியங்களுக்குச் செலவாகும் பணமெல்லாம் பொது மக்கள் தலையிலேயே விடிகின்றது. இதன்மூலம் ஏழைகள் படும் துயரை அளவிட்டுக் கூற முடியுமா? இது நிற்க,

படித்த கூட்டத்தினர்க்கு ஏழைமக்களிடம் எள்ளளவும் அனுதாபம் இருப்பதில்லை. அவர்கள் எப்பொழுதும் பட்டம் பதவி முதலியவைகளைப் பெற்று அச்செல்வாக்கைக் கொண்டு ஏழைமக்களின் இரத்தத்தை உறிஞ்சி, தாங்கள் மாத்திரம் சௌக்கியமாக வாழ்வதிலேயே குறிப்பாய் இருப்பவர்கள். இவர்களைப் போலவேதான் பணக்காரர்களும், ஏழை மக்கள் பால் சிறிதும் இரக்கமில்லாமல் தமது நன்மைக்கான காரியங்களிலேயே கவனத்தைச் செலுத்தி வருகின்றவர்களா யிருக்கின்றார்கள். இந்தப் படித்தவர்களுடைய தயவும், பணக்காரர்களுடைய தயவும் இன்றேல் அரசாங்கமும் நாட்டில் தங்கள் விருப்பப்படி ஆண்டு கொண்டிருக்க முடியாது. ஆகையால் இவ்விரு கூட்டாத்தாரையும் திருப்தி செய்விக்க வேண்டிய நிர்ப்பந்தம் எப்பொழுதுமே அரசாங்கத்திற்கு உண்டு. ஆகையால் அரசாங்கத்தார், படித்தவர்கள், பணக்காரர்கள் ஆகியவர்களின் செல்வாக்கும், ஆதிக்கமும் மேலும் மேலும் வளர்ச்சியடைவதற்குத் தகுந்த முறையில் ‘சுயராஜ்யம்’ என்னும் பெயரினால் அரசியல் சீர்திருத்தம் வழங்கி வருகின்றனர்.

இந்தச் சீர்திருத்தத்தின் மூலம் கிடைக்கும் லாபங்களைப் பங்கு போட்டுக் கொள்ளும் விஷயமாக படித்தவர்களுக்குள்ளும், பணக்காரர் களுக்குள்ளும் உண்டாகியிருக்கும் கட்சிகள் பல. இக்கட்சியைச் சேர்ந்த வர்கள் தேர்தல்களில் வெற்றிபெறும் பொருட்டுச் செய்யும் ஆர்ப்பாட்டங்கள் பல, பிராமணர் கட்சி, அல்லாதார் கட்சி, முஸ்லீம்கட்சி, சீக்கியர் கட்சி, தாழ்த்தப் பட்டோர் கட்சி, கிறிஸ்தவர் கட்சி என வகுப்பின் பேராலும் மதத்தின் பேரா லும் உண்டாகியிருக்கும் கட்சிகள் பல. இக்கட்சிகளில் பிராமணருக்குள் காங்கிரஸ் பிராமணர், மிதவாதப் பிராமணர், சுதேசிப் பிராமணர், சனாதன தருமப் பிராமணர் எனப் பல்வேறு கட்சிகள் இருக்கின்றன. பிராமணரல்லா தார்க்குள்ளும் இதுபோலவே, தேசீய பார்ப்பனரல்லாதார், சுயேச்சைப் பார்ப்பனரல்லாதார் எனப் பல வகைக் கட்சிகள் இருக்கின்றன. முஸ்லீம் களுக்குள்ளேயும், மௌலானா ஷௌகத் அலி கட்சி, சர். முகமது இக்பால்



கட்சி, மௌலானா ஹசரத் மோகினி கட்சி, தேசீய முஸ்லிம் கட்சி எனப்பல பிரிவுகளிருக்கின்றன. தாழ்த்தப்பட்டவர்களுக்குள், திருவாளர்கள் அம்பேட்கார், சீனிவாசன் கட்சி, திருவாளர்கள் மூஞ்சே ராஜா ஒப்பந்தக் கட்சி எனப் பிரிவுகளிருக்கின்றன. இவ்வாறே ஒவ்வொரு வகுப்புக் கட்சிக்குள்ளும் உட்பிரிவுக் கட்சிகள் பல இருந்து வருகின்றன. இப்பிரிவுகளும் கட்சிகளும் தோன்றியிருப்பதன் நோக்கம், சீர்திருத்தத்தில் பட்டம் பதவிபெறுவதையன்றி வேறில்லை யென்பதில் ஐயமில்லை. இந்தக் கட்சிகளில் ஒன்றேனும் அரசியல் திட்டத்தில் மதப் பாதுகாப்பும், பணக்கார நிலச்சுவான்தார் பாதுகாப்பும் இருக்கக் கூடாது என்பது பற்றிப் போராடாத ஒரு காரணத்தைக் கொண்டே இவையெல்லாம் படித்தவர்களின் நன்மைக்காகவும், பணக்காரர்களின் ஆதிக்கத்திற்காகவும் சிருஷ்டிக்கப்பட்ட கட்சிகளேயொழிய ஏழைமக்களின் நன்மைக்காகச் சிருஷ்டிக்கப் பட்டவைகள் அல்லவென்பதை உணரலாம்.

இன்றும் அரசியல் காரணமாகவும், மதம் காரணமாகவும் தேசத்தில் ஒரு வகுப்போடு ஒரு வகுப்பும், ஒரு மதத்தோடு ஒரு மதமும் சதா கலகம் விளைத்துக் கொண்டிருப்பதைத் தடுப்பதற்கான முயற்சிகளை எந்தக் கட்சியினரும் செய்ய முன் வரவில்லை. இவ்விஷயத்தில் யாரும் கவலை கொண்டிருக்கிறார்கள் என்று கூடச் சொல்ல முடியவில்லை.

உதாரணமாக இப்பொழுது பம்பாய் நகரத்தில் நடைபெறும் இந்து முஸ்லீம் கலக சம்பந்தமான செய்திகள் நமது மனத்தைக் கலக்குகின்றன. அங்கு இந்துக்களிலும், முஸ்லீம்களிலும் நிரபராதிகள் படும் துன்பத்தைக் கேட்கும் எவரும் இரத்தக் கண்ணீர் வடியாமலிரார். கடைகள் கொள்ளை போகின்றன; தீக்கு இறையாக்கப் படுகின்றன; பலர் கொல்லப் படுகின்றார்கள்; எண்ணற்றவர்கள் காயமடைகின்றார்கள்; அபலைகளான பெண்மக்களும் கூட அவமானமும், அடியும் படுகிறார்களென்றால் இதை விட இன்னும் வேறு என்ன வேண்டும். மசூதிகளும் கோயில்களும் தாக்கப் படுகின்றன. இவைகள் தாக்கப்படுவதில் நமக்குச் சிறிதும் கவலையில்லை. இதன் மூலம் இன்னும் கலகம் வலுத்து வருகிறதென்பதைப் பற்றியே கவலைப் படுகிறோம். உண்மையில் இக்கலகம் உண்டாவதற்கு முதலில் அரசியல் காரணமாக இருந்தாலும், வரவர இக்கலகம் மதச் சண்டையாகவே முற்றிவிட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆகவே உண்மையில் இது போன்ற வகுப்புக் கலகங்களும், மதச் சண்டைகளும் ஒழிய வேண்டுமானால் மதப்பாதுகாப்பும், ஜாதி நாகரிகப் பாதுகாப்பும், நிலச்சுவான்தார், பணக்காரர்களுக்குப் பாதுகாப்பும் உள்ள அரசியல் சீர்திருத்தத்தால் ஒழியுமா? என்றுதான் கேட்கிறோம்.

ஏழைமக்களின் வறுமையைப் போக்குவதற்கு முயலாமலும், கவலை கொள்ளாமலும், ஜாதிமதச் சண்டைகளை ஒழித்துச் சமாதானத்தை உண்டாக்க வழி தேடாமலும் இருந்து கொண்டு, வீணே “ஐக்கிய ஆட்சி” “மாகாண



RangaRakes tamilnavarasam.com

சுயாட்சி'' ''குடியேற்ற நாட்டு ஆட்சி'' ''சுயராஜ்யம்'' என்று பட்டம் பதவிகளுக்காக வேண்டிக் கூச்சலிடும் அரசியல் கட்சிகளால் நாட்டுக்கு என்ன நன்மை யுண்டாகுமென்று கேட்கிறோம்.

ஆகையால் பொது ஜனங்கள், எந்த அரசியல் கட்சிக்காரர்களை நம்பினாலும் நன்மையடையப் போவதில்லை யென்பது நிச்சயம். ஜாதிப் பிரிவுகளுக்கும், உயர்வு தாழ்வுகளுக்கும் ஏழை பணக்காரத் தன்மைகளுக்கும் காரணமாக இருக்கும் மதத்திற்கு ஆதரவளிக்கும் எக்கட்சியினாலும் நாட்டுக்குக் கடுகளவும் நன்மை செய்ய முடியாது என்று எச்சரிக்கை செய்கின்றோம். மதமும் மதப்பாதுகாப்பும் நிலைநிற்கும் வரையிலும், வகுப்புச் சண்டைகளும், மதச் சண்டைகளும் ஒழியப் போவது இல்லை என்பது நிச்சயம். ஆகையால், முதலில் மதத்தையும், அதன் மூலம் உண்டான மூடநம்பிக்கைகளையும் ஒழிக்க வேண்டியதே உண்மையான தேசாபிமானிகளின் கடமையாகும். இதை விட்டுவிட்டு வீணாகச் 'சுயராஜ்யம்' 'சுதந்திரம்' 'விடுதலை', 'சமத்துவம்' என்று கூச்சலிடுவதெல்லாம், பொது ஜனங்களை ஏமாற்றும் பொருட்டே என்பதை மீண்டும் கூறி எச்சரிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 10.07.1932**



# தாழ்த்தப்பட்டார் விடுதலை

## இந்துக்கள் மாயவலை

பொதுவாக உலகில் வாழும் ஜீவப் பிராணிகளெல்லாம் இன்பத்தையே அடைய விரும்புகின்றன. இது உலக சுபாவமாகும். இது போலவே அறிவில் சிறந்தவர்கள் என்று கருதப்படும் மனிதர்களும் இன்பத்தோடு வாழ விரும்புவதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஆனால் மற்ற ஜீவப் பிராணிகளுக்கும், மனிதர்களுக்கும் தாங்கள் சௌக்கிய மடையும் விஷயத்தில் ஒரு வித்தியாசம் மாத்திரம் உண்டு. மற்றய பிராணிகள் வேறுள்ள ஜீவன்களையெல்லாம் தங்களுக்கு அடிமையாக வைத்துக்கொண்டு, அவைகளின் உழைப்பால் தாங்கள் கஷ்டப்படாமல் சௌக்கியமாக ஜீவிக்க வேண்டும் என்று நினைப்பதில்லை. ஒவ்வொரு ஜீவப் பிராணி வகையும் தாமே உழைத்து வருந்திச் சௌக்கியமடைகின்றன. ஆனால் மனிதன் மாத்திரம் பிற மனிதன் தமக்குக்கீழ் அடங்கி நடக்கும்படி செய்து, அவர்கள் உழைப்பைக் கொண்டு, தான் சிறிதும் கஷ்டப்படாமல் சுகம் அனுபவிக்க ஆசைப் படுகின்றான். இக்குணம் முற்காலத்தில் ஒரு மனிதனிடம் உற்பத்தியாகி, பின்பு அது பல மனிதர்களிடம் பரவி, கடைசியில் ஒரு கூட்டத்தினரிடம் நிலைத்து விட்டது என்று யூகித்துக் கூறுவது பொருத்தமாக இருக்கலாம். இக்குணத்திற்கே 'சுயநலம்' என்று சொல்லப்படுவது. இக்குணத்தையே தொழிலாகக் கொண்ட ஒரு கூட்டம் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக உலகில் இருந்து கொண்டுதான் வருகிறது.

இக்கூட்டத்தினரின் சூழ்ச்சியினால் தான் உலகில் தற்போது நமது கண்முன் காணப்படும் எண்ணற்ற சாதிப் பிரிவுகளும், மதவேற்றுமைகளும், கொடுமைகளும், குருட்டுப்பழக்க வழக்கங்களும் ஏற்பட்டு நிலை பெற்று வருகின்றன,

எங்கும் ''சமத்துவம்'' ''சகோதரத்துவம்'' ''விடுதலை'' ''சுதந்திரம்'' என்னும் வார்த்தைகள் தோன்றி சுயநலக்கூட்டத்தாரின் சூழ்ச்சியால் அடிமைப்பட்டு மனிதத் தன்மையை மறந்து கிடந்த மக்களை விழிக்கச் செய்கின்ற இக்காலத்திலும் பரம்பரையாக கஷ்டமின்றிச் சுகம் அனுபவித்து



RangaRakes tamilnavarasam.com

வந்த கூட்டத்தார் தங்கள் சுயநலத்தை விட்டுக்கொடுக்கச் சம்மதிக்கா மலிருப்பதில் ஆச்சரியமில்லை. நெடுங்காலமாக அனுபவித்து வந்த சௌக்கியத்தைத் திடீரென்று எப்படி தியாகம் பண்ணிவிட முடியும்? தங்கள் சமத்துவத்திற்குப் போராடத் தூக்கத்தினின்று எழுந்து புதிய ஊக்கத்துடன் முன்வந்திருக்கும் மக்களை மீண்டும் அடிமைப்படுகுழியில் வீழ்த்தவே முயற்சி செய்வார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆனால் "மனுதருமத்தை"ச் சட்டமாகவும், அதை ஆக்கிய பார்ப்பனர்களை மந்திரிகளாகவும், குருமார்களாகவும் வைத்துக் கொண்டு அரசாண்ட இந்திய மன்னர்களின் அரசாட்சி ஒழிந்து "பிரிட்டிஷ்" அரசாட்சி ஏற்பட்டதின் பலனாக, இன்று மனிதத்தன்மையை மறந்து அடிமையாகக் கிடந்த மக்கள், தங்கள் மனிதத் தன்மையைப் பெற முயற்சிக்கின்றனர். பழய இந்து மன்னர்களின் அரசாங்கம் இப்பொழுதும் நமது நாட்டில் நிலைத்திருக் குமாயின் இன்று தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் விரும்புவது போலவும், கிளர்ச்சி செய்வது போலவும், சமத்துவத்திற்கும், சுதந்திரத்திற்கும் கிளர்ச்சி செய்வார் களானால் கட்டாயம் அச்சமூகத்தார் முழுவதும் சித்திரவதைக்கும் சிரச்சேதத் திற்கும் உட்படுவார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்டபின் தாழ்த்தப்பட்ட மக்களில் சிலர் கொஞ்சம் கல்விப் பெற்றதன் பயனாலும், தாங்களும் மற்றவர்களைப் போல் மனிதர்கள் தான் என்பதை உணர்ந்ததன் பயனாலும், தாங்கள் உழைக்க பிறர் அதைக் கொண்டு உயிர் வாழ்ந்து, தங்கள் தலை மேலேயே உட்கார்ந்து கொண்டு அமிழ்த்திக் கொண்டிருக்கும் கொடுமையை உணர்ந்ததன் பயனாலும், தாங்கள் இந்துக்களினின்றும் தனியாகப் பிரிந்தாலொழிய தங்களுக்கு ஒருவித விமோசனமும் ஏற்படாது என்பதை அறிந்து அதற்காகக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். இக்கிளர்ச்சி சமூகத்திலிருந்து ஆரம்பித்து அரசியலிலும் நுழைந்து விட்டது.

இந்துக்களின் அரசாட்சி ஒழிந்துவிட்ட கால முதலே அவர்கள் ஆதிக்கமும் குறைந்துவிட்டது. ஆகையால் எப்பொழுதும் அடக்கி ஆண்டு வந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தினரை மதத்தைக் கொண்டாவது. வேத சாஸ்திரங்களைக் கொண்டாவது, பலாத்கார அதிகாரத்தைக் கொண்டாவது இனியும் அடக்கி வைத்திருக்க முடியாது என்பது நிச்சயம். ஆகவே அரசியல் ஆதிக்கம் பெற்றால் தான் அவர்களை முன்போல அடக்கி ஆளமுடியும். இந்தக் காரணத்தால் தான் வெள்ளைக்காரர்களின் ஆதிக்கத்தைக் குறைத்து தங்கள் கையில் ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் வைத்துக் கொள்ளக் கூடிய "சுயராஜ்ய"த்திற்காகச் செய்யப்படும் கிளர்ச்சியில், உயர்ந்த சாதிக்காரர் களும், வைதீகர்களும், மத பக்தர்களும் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.



திரு. காந்தி உள்ளிட்ட காங்கிரஸ்காரர்களும், பண்டித மாளவியா, திரு மூஞ்சே யுள்ளிட்ட இந்து மகாசபைக்காரர்களும் தாழ்த்தப்பட்ட கூட்டத் திற்குத் தனித் தொகுதி ஏற்படுத்தக் கூடாது என்று பலமாக எதிர்ப்பதற்குக் காரணம் இதுவேயாகும். முஸ்லீம்கள் தனித் தொகுதி வேண்டிப் பிரிந்து நிற்கும் காலத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தாரும், மற்ற சிறுபான்மைச் சமூகத்தாரும், தனித்தொகுதி பெற்றுப் பிரிந்து நிற்பார்களாயின் இந்து சமூகத்தாரின் கூட்டம் சட்ட சபைகளில் மைனாரிட்டியாகி விடும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறாகி விட்டால், தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் தமக்கு வேண்டிய சௌகரியங்களை முஸ்லீம்களுடையவும் மற்றச் சிறுபான்மைச் சமூகத்தினருடையவும் பிரதிநிதிகளின் உதவி பெற்றுச் சட்ட சபைகளின் மூலம் செய்து கொள்ளலாம் என்பதில் சந்தேக மில்லை. இவ்வகையாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் சமத்துவம் பெறக்கூடிய சந்தர்ப்பம் பெற்று விட்டால் அது, இதுவரையிலும் அவர்களைக் கொடுமைப் படுத்தி அடக்கியாண்டு வந்த உயர்ந்த சமூக இந்துக்களின் சுயநலத்திற்குப் பாதகம் உண்டாக்காமற் போகாது. இக் கருத்துகளைக் கொண்டுதான் "காங்கிரஸ்" பிரதிநிதி என்ற பெயரோடு "வருணாச்சிரம தரும"த்தின் பிரதிநிதியாகச் சென்ற திரு. காந்தி யவர்களும் மற்ற இந்து மகாசபையைச் சேர்ந்தவர்களுமான வட்டமேஜை மகாநாட்டுப் பிரதிநிதிகள் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதி ஏற்படுத் துவதை ஒரே அடியாக எதிர்த்தார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஆனால் இச்சூழ்ச்சியை அறிந்த தாழ்த்தப்பட்ட மக்கள், தங்களுக்குத் தனித் தொகுதியே வேண்டுமென விரும்புகின்றனர். அச்சமூகத்தின் தலைவர்களாகிய திருவாளர்கள் டாக்டர் அம்பெட்கார், ஆர். சீனிவாசன், எம், சி. ராஜா, வி. ஐ. முனுசாமி பிள்ளை போன்ற தலைவர்களெல்லாம் தங்களு டைய சமூகத்திற்குத் தனித் தொகுதியே வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். இவர்களில் திரு. எம். சி. ராஜா அவர்களைத் தவிர மற்றவர்கள் இன்றும் தனித் தொகுதி வேண்டுமென்பதிலேயே உறுதியாக இருக்கின்றனர்.

திரு. எம். சி. ராஜா மட்டிலும், எவ்வித சூழ்ச்சியினாலோ ஏமாற்றப்பட்டு இந்து மகாசபையைச் சேர்ந்த திரு. மூஞ்சே அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தனித் தொகுதியை எதிர்த்தும், கூட்டுத் தொகுதியை ஆதரித்தும் பிரசாரம் பண்ணிக் கொண்டு வருகிறார். உண்மையில் இப்பிரசாரத்திற்கு காரணம், இந்துக்களின் சூழ்ச்சி என்பதில் சிறிதும் ஐயமில்லை. .இந்துக்களின் வலையிற் சிக்கி இருக்கும், திரு, எம். சி. ராஜா அவர்களைப்போல் அவர் களுடைய வலையிற் சிக்கிய வெகு சிலரே ராஜாவின் பேச்சை ஆதரிக் கின்றார்கள்.

ஆனால் திரு. ராஜா அவர்களின் அபிப்பிராயந்தான் தாழ்த்தப்பட்ட வர்களின் அபிப்பிராயம் என்று நினைக்குமாறு, இந்துக்களின் ஆதிக்கத் திலிருக்கும் தேசீயப் பத்திரிகைகள் எனப் பெயர் வைத்துக் கொண்டிருப் பவை, திரு. ராஜாவை ஆதரித்து விளம்பரம் பண்ணிக் கொண்டு வருகின்றன.



RangaRakes tamilnavarasam.com

உண்மையில் தாழ்த்தப்பட்ட சமூகம் சமத்துவம் பெற வேண்டுமானால், அவர்கள் இந்துக்களினின்றும் பிரிந்து தங்கள் கால்பலத்தில் நின்று கொண்டே கிளர்ச்சி செய்தால் தான் முடியும் என்பதை நாம் அடிக்கடி எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஆகவே டாக்டர். அம்பெட்கார், சீனிவாசன், வி. ஐ. முனிசாமி பிள்ளை ஆகியவர்கள் விரும்புகிறபடி அரசியல் சீர்திருத்தத்தில் தனித் தொகுதி பெற்றால் தான் தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலை பெற முடியும். இவர்கள் கூறுவது தான் தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் அபிப்பிராயம் என்பதையும், திரு. எம். சி. ராஜாவின் அபிப்பிராயம் இந்துக்களின் அபிப்பிராயமே தவிர தாழ்த்தப் பட்ட சமூகத்தாரின் அபிப்பிராயம் அல்ல வென்பதையும் சென்ற 5-5-32ல் கமிட்டியில் திரு. வி.ஐ. முனுசாமி பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் கூடிய அகில இந்திய தாழ்த்தப்பட்டார் காங்கிரஸ் தீர்மானத்தைக் கொண்டும், சென்ற 10-7-32ல் பம்பாயில் திரு. எம். சி. ராஜா அவர்கள் தலைமையில் கூடிய தாழ்த்தப்பட்டார் மகாநாட்டைக் கொண்டும் அறியலாம். டாக்டர் அம்பெட்கார் கட்சியை ஆதரிப்போரால் கூட்டப்பட்ட கமிட்டி காங்கிரசுக்கு, பல மாகாணங்களிலிருந்தும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தனர். தனித் தொகுதியை எதிர்க்கும் கட்சியினரும் வந்திருந்தனர். அவர்கள் மிகச் சிலராக இருந்த காரணத்தால் மகாநாட்டை விட்டு வெளியேறி விட்டனர். ஆகவே தனித்தொகுதியை ஆதரிப்பதாகவும், இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டின் போது இங்கிலாந்தில் செய்து கொள்ளப்பட்ட சிறுபான்மையோர் ஒப்பந்தத்தை ஆதரிப்பதாகவும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. இந்த மகாநாட்டிற்கு இந்துக்களின் எதிர்ப்பு இருந்ததே தவிர ஆதரிப்பு சிறிதும் இல்லை. ஆகவே இம் மகாநாட்டுத் தீர்மானங்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் உண்மையான அபிப்பிராயம் என்று கூறுவதற்கு என்ன தடையுண்டு?

பம்பாயில் திரு. எம். சி. ராஜா கட்சியினரால் கூட்டப்பட்ட மகாநாட்டிற்கு சுமார் 200, பிரதிநிதிகளே வந்திருந்தனர். மகாநாட்டிற்கு எதிராகத் தனித் தொகுதியை ஆதரிக்கும் கட்சியைச் சேர்ந்தவர்கள் 250 பேர்கள் மகாநாட்டுக் கொட்டகைக்குள் விடப்படாமல் தடுக்கப்பட்டிருக்கின்றனர். 250 என்னும் எண்ணிக்கை, பொதுத் தொகுதியை ஆதரிக்கும் தேசீயப் பத்திரிகைகளில் காணப்படுகின்றதாதலால், இது உண்மையாக இருக்க முடியாது. 250க்கு மேல் அதிகமாகத்தான் இருக்க வேண்டும். அன்றியும் இம் மகாநாடு இந்துக்களின் ஆதரவின் மேல்தான் கூட்டப்பட்டதாகும். ஆகவே இம் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானங்கள் இந்துக்களின் அபிப்பிராயத்தைச் சேர்ந்தனவே யொழிய, தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் அபிப்பிராயத்தைச் சேர்ந்தவை யென்று கூற முடியாது என்பது நிச்சயம். இம் மகாநாட்டில் தான் கூட்டுத் தொகுதியை ஆதரிப்பதாகவும், "ராஜா - மூஞ்சே ஒப்பந்த"த்தை ஆதரிப்பதாகவும், வட்டமேஜை மகாநாட்டில் செய்யப்பட்ட 'சிறுபான்மையோர் ஒப்பந்த'த்தை எதிர்ப்பதாகவும் தீர்மானித்திருக்கிறார்கள்.



இந்து மகாசபைக்காரர்களின் தூண்டுதலால் நடத்தப்பட்ட இந்த மகாநாட்டில் தலைமை வகித்த திரு. எம். சி. ராஜா அவர்கள் பேச்சில் காணப்படும் வாதங்களிலும் ஒரு புதுமையும் தோன்றவில்லை. வழக்கம்போல் இந்துக்களை ஆதரித்தால்தான் தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்கு அரசாங்கத்தில் மந்திரி முதலிய உத்தியோகப் பதவி கிடைக்குமென்றும், இந்துக்களின் துணையோ, உதவியோ இல்லாமல் தாழ்த்தப்பட்ட சமூகத்தார் சமத்துவமோ, சுதந்திரமோ பெற முடியாதென்றும் கூறியிருக்கிறார்.

அடிக்கடி இவர் மந்திரி பதவியையே கூட்டுத்தொகுதிக்கு உதாரணமாகக் கூறி வருவதைக் கொண்டு, மந்திரிப் பதவி மோகத்தினாலேயே இந்து மகாசபைக்காரரின் பாட்டுக்குத் தாளம் போடுகிறார் என்று கூறுகிறார்கள். அது எப்படியாவது இருக்கட்டும். இந்து சமூகத்தினரின் உதவியோ, துணையோ இல்லாமல், தாழ்த்தப்பட்டார் சமத்துவம் பெற முடியாது என்னும் வாதத்தை மாத்திரம் கவனிப்போம்.

இது வரையிலும் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக இந்துக்களின் தயவை எதிர்பார்த்து வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு அவர்கள் செய்த நன்மை என்ன? தாழ்த்தப்பட்டவர்களைக் கல்வி கற்க அனுமதிக்காமலும் தெருவில் நடக்க அனுமதிக்காமலும், நல்ல உடை உடுத்த அனுமதிக்காமலும், கிணறு குளங்களில் தண்ணீர் எடுக்க அனுமதிக்காமலும் செய்ததுதான் கிடைத்த பலன். பிரிட்டிஷ் அரசாங்கம் இருக்கின்ற இக்காலத்தில் கூட தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பொது இடங்களில் சமத்துவம் கொடுக்க மறுக்கிறார்கள் என்றால் பிரிட்டிஷ் அரசாங்கமில்லாமல் தங்கள் கையிலேயே எல்லா அதிகாரமும் இருக்குமானால் என்னதான் செய்ய மாட்டார்கள் என்று கேட்கிறோம். இதைபற்றி நாம் அதிகமாக விரித்துக் கூற வேண்டியதில்லை. "இந்துக்களின் தயவை எதிர்பார்த்துக் கொண்டும், தங்களையும் இந்துக்கள் என்று நினைத்துக் கொண்டும் இருக்கும் வரையிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விமோசனமே உண்டாகப் போவதில்லை" யென்று கோபுரத்தின் மேல் நின்றும் கூறுவோம்.

ஆகையால் இந்து மகாசபைக்காரர்களின் வலையிற் சிக்குண்டு கிடக்கும் திரு எம். சி. ராஜா கூட்டத்தாரின் பேச்சைக் கேட்டு ஏமாறக்கூடாது என்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

கொடுமைபடுத்தப்பட்டு, நசுக்கப்பட்டு அடிமையாக்கப்பட்டுக் கிடக்கும் சமூகத்தின் சமத்துவத்திற்கும், முன்னேற்றத்திற்கும், உண்மையாகப் பாடுபடுகின்றவர்கள் யார் என்பதை வெகு சுலபமாகத் தெரிந்து கொள்ள ஒரு வழியுண்டு. அவ்வழியாவது:-

தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் விடுதலைக்கு உண்மையாக பாடுபடுபவர் அச்சமூகத்தைத் தாழ்த்தி வைத்திருக்கும் கூட்டத்தினரால்



RangaRakes tamilnavarasam.com

கட்டாயமாக எதிர்க்கப்படுவார்கள், தூஷிக்கப்படுவார்கள். பல விதமான பழிகளுக்கு ஆளாக்கப்படுவார்கள் என்பது நிச்சயம். ஆதலால் தாழ்த்தப் பட்ட சமூகத்தினரின் பரம்பரை விரோதிகளாகிய உயர்ந்த சமூகத்தினரால் ‘தேசத்துரோகி’ என்றும் ‘சமூகத்துரோகி’ ‘தேசாபிமான மில்லாதவர்” என்றும் தூற்றப்படுகின்றவர்கள் யாரோ அவர்களே அச்சமூகத்தின் உண்மை யான சமத்துவத்திற்கும், சுதந்திரத்திற்கும் பாடுபடுகின்றவர்கள் என்பதை உணரலாம்.

இப்படி இல்லாமல் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் விரோதிகளாகிய உயர்ந்த சமூகத்தினரால், தாழ்த்தப்பட்ட சமூகத்தலைவர்கள் என்றும் விடுதலைக்குப் பாடுபடுகிறவர்கள் என்றும், “தேசாபிமானிகள்” என்றும், இவர்கள் பேச்சைக் கேட்டால்தான் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு விடுதலை உண்டு என்றும் பிரசாரம் செய்யப்படுபவர்களால் அச்சமூகத்திற்கு உண்மை யான விடுதலை ஏற்பட முடியாது என்பது நிச்சயம், ஆகையால் எவர் தங்கள் சமூகத்தின் உண்மையான விடுதலைக்குப் பாடுபடுகின்றவர் என்பதை அறிந்து அவர்களைப் பின்பற்றுமாறு தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு எச்சரிக்கின்றோம்.

இந்து மகாசபைக் காரர்களின் சூழ்ச்சி வலையிற் சிக்கியும், தேசா பிமான வேஷக்காரர்களின் பசப்பு வார்த்தைகளுக்கும், தட்டிக் கொடுத் தலுக்கும் ஏமாற்றமடைந்தும், தங்கள் சமூக நன்மையை, இதுவரையிலும் விரோதிகளாகவே இருந்து வரும் சமூகத்தார் கையிலேயே ஒப்படைக்க வேலை செய்யும் ஏமாந்தவர்களின் பேச்சைக் கேட்டு மோசம் போகாம லிருத்தலே தாழ்த்தப்பட்டார் கடமையாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 17.07.1932**



# பெண்கள் அடிமை நீங்குமா?

இந்தியப் பெண்களுக்கு எத்தகைய கல்வியளிக்க வேண்டும் என்பதைப் பற்றிப் பலர் பலவாறான அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகிறார்கள். அவைகளில் பிற்போக்குடையவர்களின் அபிப்பிராயங் களை இப்பொழுது எந்தப் பெண்களும் ஒப்புக் கொள்ளத் தயாரில்லை. முற்போக் குடையவர்களின் அபிப்பிராயங்களையே பெண்கள் வரவேற்கத் தயாரா யிருக்கிறார்கள்.

“இந்தியப் பெண்கள் இதுவரையிலும் இருந்தது போலவே தங்களுக் கென்று ஒரு வித அபிப்பிராயமும், சுதந்திரமும் இல்லாமல், “கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருஷன்” என்று சொல்லுவது போல கணவனு டைய நன்மையை மாத்திரம் கருதி அடிமையாகவே இருந்து, பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டும், அவைகளை வளர்த்துக் கொண்டும் வாழ்வதே சிறந்தது; இதுவே இந்தியப் பெண்களுக்கு வேண்டிய நாகரீகம்; இந்நாகரீகத்தை மீறினால் இந்தியப் பெண்களின் சமுதாய வாழ்க்கையின் உயர்வு கெட்டுப் போகும்; அவர்களுடைய பதிவிருதா தர்மம் அழிந்து போகும்; இதனால் இந்திய நாகரீகமே மூழ்கிவிடும்; ஆகையால் பெண்களுக்குக் குடும்பக் கல்வியும், மதக் கல்வியும் மாத்திரம் அளித்தால் போதும்” என்று பிற்போக் கான அபிப்பிராயமுடையவர்கள் கூறி வருகின்றனர். ஆனால் ஆண்கள் இவ்விதமான அபிப்பிராயத்தை வெளியிடுவதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. அவர்கள் தங்கள் சுயநலத்தைக் கருதுகின்ற பொழுது, இதற்குமேல் தீவிரமான அபிப்பிராயத் திற்குச் செல்ல முடியாது; சென்றால் அவர்களு டைய சுயநலத்திற்கு நிச்சயமாக ஆபத்து உண்டாகிவிடும். ஆனால் பெண்கள் இம்மாதிரியான அபிப்பிராயத்தை வெளியிட்டால் அது ஆச்சரியப்படத் தக்கதேயாகும்; அன்றியும் அதில் வேறு ஏதாவது சூழ்ச்சி இருக்க வேண்டும் என்றுதான் நினைக்கவும் வேண்டும்.

சில தினங்களுக்கு முன் லண்டனில், லிசியம் கிளப்பில், பம்பாய் சர்வசலாசாலைப் பெண்கள் சங்கத்தின் ஆண்டு விழாவில், சென்னை கிறிஸ்துவப் பெண்கள் கலாசாலைத் தலைவரான திருமதி. மெக்டாக்கல் என்பவர் ஒரு பிரசங்கம் செய்தார். அப்பொழுது அவர்,



RangaRakes tamilnavarasam.com

"பெண்மக்கள் உயர்தரக் கல்வி கற்பதனால் குற்றமற்ற பயன் உண்டாகும் என்று சொல்ல முடியாது. இந்தியப் பெண்கள் பக்தியிலும் மனோவுறுதியிலும் சிறந்தவர்கள். அவர்களுக்குக் குடும்பத்தில் மிகவும் சம்பந்தமும், பற்றுதலும் உண்டு. அவர்கள் குடும்பத்திலுள்ள பற்றுதலிலிருந்து நீங்குவார்களானால் இந்திய சமூக வாழ்க்கைக்கு மிகுந்த பாதகம் ஏற்பட்டு விடும். ஆகையால் அவர்களுக்குப் போதிக்கும் உயர்தரக் கல்வியுடன் கிறிஸ்தவ மதத்தின் உயர்ந்த தத்துவங்களையும் சேர்த்துப் போதிக்க வேண்டும்; இன்றேல் உயர்தரக் கல்வியால் பெண்களுக்கு மிகுந்த ஆபத்தே உண்டாகும்."

என்று பேசியிருக்கிறார். திருமதி. மெக்டாகல் அவர்கள் நாகரீகம் பெற்ற மேல் நாட்டுப் பெண்மணியாயிருந்தும் இவ்வாறு பேசி யிருப்பதைக் கண்டு உண்மையில் நாம் வருந்தாமலிருக்க முடியவில்லை. ஆனால் இந்தியப் பெண்களின் சமுதாய வாழ்க்கையைப் பற்றி இந்த அம்மாளுக்கு இவ்வளவுக் கவலை தோன்றியிருப்பதைப் பற்றி ஆராயும் போது நிச்சயமாக அதில் ஒரு சூழ்ச்சியிருக்க வேண்டுமென்ற முடிவுக்கே வரலாம். அச்சூழ்ச்சியும் அந்த அம்மாளின் சொற்களிலேயே காணப்படுகின்றது. அச்சூழ்ச்சி, "உயர்தரக் கல்வியுடன் கிறிஸ்துவ மதத்தின் உயர்ந்த தத்துவங்களையும் சேர்த்துப் போதிக்க வேண்டும்" என்பதேயாகும். ஆகவே இது கிறிஸ்து மதத்தை இந்தியாவில் பரவ வைப்பதற்குச் செய்யப்படும் பிரசாரத்தைத் தவிர வேறொன்றுமல்ல என்றுதான் நாம் கூறுவோம்.

கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த திருமதி. மெக்டாகல் அவர்கள் எப்படி "கிறிஸ்துவ மதக்கல்வி" உயர்தரக்கல்வி கற்கும் பெண்களுக்கு அவசியம் என்ற அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களோ இதைப் போலவே இந்திய வைதீகர்களும் பெண்களுக்கு இந்து மதக்கல்வி அவசியம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்

ஆனால் இவ்வபிப்பிராயங்களை நாம் அடியோடு மறுக்கிறோம். "பெண்களுக்குக் குடும்ப வாழ்க்கையில் அடிமையாயிருந்த பிள்ளைகளைப் பெற்று வளர்த்துக் கொண்டிருப்பது ஒன்றுதான் ஏற்றது" என்ற அபிப்பிராயமே தவறாகும். இத்தகைய கட்டுப்பாடு இருக்கின்ற வரையிலும் பெண்கள் அடிமைகளாகத்தான் – அதாவது ஆண்களுடைய உதவியை நம்பித்தான் வாழ முடியும் என்பது நிச்சயம். உண்மையில் பெண்களும் ஆண்களுக்குச் சமமாக வாழ வேண்டுமானால், அவர்களும் ஆண்களைப் போலவே தாங்கள் விரும்பிய கல்விகளைக் கற்கவும், தங்கள் அறிவுக்கும், ஆற்றலுக்கும், விருப்பத்திற்கும் இசைந்த எத் தொழில்களையும் தடையின்றிச் செய்யவும் உரிமை வேண்டியது அவசியமாகும்.

அல்லாமலும் மதக்கல்வி என்பது அவர்கள் காதில் கூட விழக்கூடாது



என்பதே நமதபிப்பிராயம். மதத்தைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிற ஆண் மக்களே இன்று அடிமைப் புத்தியினாலும், மூட நம்பிக்கைகளாலும் கிடந்து சீரழிகின்ற செய்தியைப் பற்றி நாம் அடிக்கடி கூறி வருகின்றோம். "மதம் என்பதுதான் மக்களிடத்தில் அடிமைப் புத்தியையும் பயங்கொள்ளித்தனத்தையும், தன்னம்பிக்கையின்மையையும், மூட நம்பிக்கைகளையும் உண்டாக்கக் காரணமாயிருக்கின்றது. ஆதலால் மதத்தையே அடியோடு ஒழிக்க வேண்டும்" என்று பிரசாரஞ் செய்து வருகின்றோம். இந்த நிலையில் "பெண்களுக்கு மதக் கல்வியளிக்க வேண்டும்" என்னும் அபிப்பிராயத்தை நாம் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

சாதாரணமாக மதக்கல்வி கற்காவிட்டாலும், கேள்வி மூலமும், பழக்க வழக்கங்களின் மூலமும் மத விஷயமாகக் கொஞ்சம் தெரிந்து கொண்டிருக்கும் நமது பெண் மக்களின் நிலையை ஆராய்ந்தால் அதன் மோசத்தை அறியலாம். நமது பெண் மக்கள் மனத்தில் இன்று அடிமைப் புத்தியும், கோழைத் தனமும், மூட நம்பிக்கைகளும், குருட்டுப் பழக்க வழக்கங்களில் விடாப்பிடிவாதமும் நிறைந்திருப்பதற்குக் காரணம் மதமே என்பதை யார் மறுக்க முடியும்? ஆதலால் பெண்களுக்கு மதக்கல்வி வேண்டும் என்று சொல்லுகின்ற அபிப்பிராயத்தை நாம் ஒரு சிறிதும் ஒப்புக் கொள்ள முடியாது.

"பெண்களும் ஆண்களைப் போல் உடல் வலிமையிலும் சிறப்படைய வேண்டும். தேகப் பயிற்சி, ஆயுதப் பயிற்சி முதலிய பழக்கங்களை பெற்றிருக்க வேண்டும். தங்களை மானபங்கப்படுத்த நினைக்கும் அறிவற்ற, வெறி கொண்ட ஆண்மக்களை எதிர்த்துத் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளக் கூடிய ஆற்றலையும் பெற்றிருக்க வேண்டும். சமயம் நேரும்போது, படை வீரர்களாகச் சேர்ந்து பகைவர்களை எதிர்க்கக் கூடிய சக்தி பெண்களுக்கும் இருக்க வேண்டும்" என்பதே நாகரீகம் பெற்ற மக்களின் அபிப்பிராயம்; பெண்மக்களும் இவ்வபிப்பிராயத்தை முழுமனத்தோடு ஆதரிக்கிறார்கள். உலகத்தின் போக்கும் அபிப்பிராயமும் இப்படி இருக்க "பெண் மக்களுக்கு உயர்தரக் கல்வி கற்பிப்பதனால் பயனில்லை" என்று சொல்லுவதை யார் ஒப்புக் கொள்ளமுடியும்?

ஆனால் தற்காலத்தில் உள்ள கல்வி முறை மிகவும் மோசமானதென்பதை நாம் ஒப்புக் கொள்ளுகின்றோம். வெறும் குமாஸ்தா வேலைக்குப் பழக்கக் கூடிய கல்விதான் இப்பொழுது கற்பிக்கப்படுகிறதே யொழிய வாழ்க்கைக்குப் பயன்படும் கல்வி கற்பிக்கப்படவில்லை என்பது உண்மையாகும். ஆகையால் தற்காலத்திலுள்ள கல்விமுறையை மாற்றி வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய முறையிலும், சிறிதும் மத நம்பிக்கைகளும், கோழைத்தனமும், அடிமைப் புத்தியும் உண்டாகாத வகையிலும் உள்ள கல்வித் திட்டத்தை ஏற்படுத்தி பெண்களுக்கும், ஆண்களுக்கும் சமத்துவமான கல்வியளிக்க ஏற்பாடு செய்வதே மக்கள் முன்னேற்றத்திற்கு ஏற்றதாகும் என்று கூறுகிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 17.07.1932**



RangaRakes tamilnavarasam.com

# வைதீகக் கோட்டையில் சுயமரியாதைக் குண்டு

செட்டிநாட்டின் தலைநகரான காரைக்குடியில் சென்ற 17 - 7 - 32ல் இராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு மிக்க விமரிசையாக நடைபெற்றது. அம்மகாநாட்டின் தலைவர் பிரசங்கம், சென்ற வாரத்திய நமது பத்திரிகையில் வெளி வந்திருக்கின்றது. வரவேற்புத் தலைவர் பிரசங்கமும், மற்ற நிகழ்ச்சிகளும் இவ்விதழில் வேறோர் இடத்தில் வெளிவந்திருப்பதைக் காணலாம்.

செட்டி நாட்டில் நடைபெற்ற இம்மகாநாடு நமது இயக்கத்தின் வெற்றிக்கு ஒரு சிறந்த சின்னமாகும் என்று கூறியும், நினைத்தும் சந்தோஷப்படுவது சிறிதும் தவறாகாது. ஏனெனில், இன்று நமது நாட்டில் பார்ப்பனீயத்திற்கு ஆதரவு அளித்து வருகின்ற மக்கள் நிறைந்த இடம் செட்டிநாடு என்பது உலகமறிந்த விஷயம்.

"வேதங்கள்" என்று சொல்லப்படுகின்றவைகளிலும் இயற்கை நிகழ்ச்சிகளுக்குப் பொருந்தாததும், வருணாச்சிரம தருமத்திற்கு ஆதரவளிக்கக் கூடியவைகளுமான புராணங்களிலும் நம்பிக்கை வைத்துக் கொண்டும், அவைகளைப் பற்றி பிதற்றுகின்றவர்களின் வலையிற் சிக்கி ஏமாந்து கொண்டும் இருக்கின்ற மக்கள் செட்டி நாட்டில்தான் அதிகமாக இருக்கிறார்கள். பழமை என்பதில் கண்மூடித்தனமான நம்பிக்கை வைத்துக் கொண்டு, அவை தீமையை உண்டாக்கக் கூடியவைகளாய் இருந்தாலும் விடாமல் குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டு கஷ்டப்படுகின்ற மக்களும், செட்டி நாட்டு மக்களேயாவர்கள். பார்ப்பனர்கள் சோம்பேறிகளாக உட்கார்ந்து கொண்டு தின்று கொழுப்பதற்காக அன்னச் சத்திரங்களைக் கட்டி வைக்கின்றவர்களும், பார்ப்பனப் பிள்ளைகளைத் தேடிப் பிடித்துக் கொண்டுபோய் சோறு போட்டு எண்ணெய், துணிமணி முதலிய சகல சௌகரியங்களும் கொடுத்து வளர்த்து ஆட்டு மந்தைகளைப் போல கத்திக் கொண்டிருக்கச் செய்கின்ற வேத பாடசாலைகளை அமைத்திருக்கின்றவர்களும் நன்றாய் இருக்கின்ற கோயில்களை எல்லாம் இடித்துத் தள்ளி கோடிக் கணக்கான பணங்களை செலவிட்டு மீண்டும் அவற்றைக் கட்டி, பிறகு அவைகளுக்கு "கும்பாபிஷேகம்" என்னும் பெயரால் லட்சக்கணக்கான பொருள்களையும் செலவு செய்து பணத்தை வீணாக்கும் "பேரறிஞர்"களும் செட்டி நாட்டில் தான் மிகுதியாக இருக்கிறார்கள். உலகமெங்கும் நாகரீக வெள்ளம் புரண்டு, பழய மூடப் பழக்க வழக்கங்களையெல்லாம் அழித்துக் கொண்டு வருகின்ற இக்காலத்திலும் செட்டி நாட்டிலுள்ள முதியோர்கள் அனைவரும் பார்ப்பனர்களைச் "சாமி" என்று அழைத்துக் கொண்டும், அவர்களையே "பூவுலக தெய்வங்கள்" என நம்பிக்கொண்டும், அவர்களையே தங்கள் குடும்பத்தின் சகல வரவு செலவுகளையும் நடத்தும் "சர்வாதிகாரி"களாக வைத்துக் கொண்டும் இருக்கிறார்கள் என்பது அந்நாட்டில் அனுபவமுள்ளவர்களுக் கெல்லாம் தெரிந்த விஷயம். ஆனால் அந்நாட்டு இளைஞர்கள் தற்பொழுது சுயமரியாதை உணர்ச்சியுடையவர்களாகி அங்கு குடிகொண்டிருக்கும், பார்ப்பனீயத்தை ஒழிக்கவும், தங்கள் சமூக ஊழல்களைப் போக்கிச் சீர்திருத்தஞ் செய்யவும் சில காலமாக வேலை செய்து வருகின்றனர். இத்தகைய உணர்ச்சி வாலிபர்களிடமும் உண்டான பிறகுதான் இங்கு நமது இயக்கம் அதி தீவிரமாகப் பரவ ஆரம்பித்தது என்று கூறலாம்.

அங்கு நமது இயக்கம் பரவ ஆரம்பித்த காலத்தில் அந்நாட்டில் குடிகொண்டிருக்கும் "பழம் பெருச்சாளிகள்" நமது இயக்கத்தை அழிப்பதற்குச் செய்த சூழ்ச்சிகளும், இழி செயல்களும் எண்ணற்றவை. பார்ப்பன அதிகாரிகளும், பார்ப்பனர் பேச்சுக்கு "ஆமாம் சாமி" போடும் பணக்காரர்களும் நமது இயக்கத்தைப் பிரசாரம் பண்ணியவர்களுக்கெல்லாம் எவ்வளவோ கெடுதிகளை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் செய்து பார்த்தார்கள். ஒன்றினாலும், நமது இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கெடுதியோ, நமது இயக்கத்தைப் பரவ வொட்டாமல் தடுக்கவோ முடியவில்லை.

சென்ற ஆண்டில் நமது மகாநாடு பல எதிர்ப்புகளுக்கிடையே திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள், பி. ஏ. பி. எல். , எம். எல். ஏ. தலைமையிலும் இவ்வாண்டு புதுச்சேரி அரசாங்க வரவு செலவு இலாக்காத் தலைவர் ஏ. வி. முத்தையா அவர்கள், பி. ஏ. பி. எல். தலைமையில் வெற்றியோடும் நடைபெற்றிருக்கின்றன. சென்ற ஆண்டு மகாநாட்டைப் போலவே (சற்று அதிகமாகவே) இந்த ஆண்டிலும் அதிகாரிகளும் பார்ப்பனர் வசப்பட்ட பணக்காரர்களும் காங்கிரஸ் பேரால் செட்டி நாட்டில் ஜீவனஞ் செய்து கொண்டிருக்கும் அன்னக் காவடிகளும் மகாநாட்டைத் தடைசெய்ய பல சூழ்ச்சிகளைப் புரிந்தார்கள். சென்ற ஆண்டிலாயினும் நமது மகாநாட்டிற்குப் பல பணக்காரர்களின் ஆதரவு இருந்ததாகக் கருதப்பட்டது. இந்த ஆண்டில் பெரிய பணக்காரர்கள் என்று சொல்லக் கூடிய எவருடைய ஆதரவும் இல்லையென்றே கூறலாம். ஆனால் எதிர்ப்பு மாத்திரம், ஒரு சிறிதும் குறைந்தபாடில்லை. அப்படி இருந்தும் நமது மகாநாடு வெற்றியோடு நிறைவேறியதற்குக் காரணம் அந்நாட்டு இளைஞர்களின் ஊக்கமும், தைரியமும், உழைப்பும், சுயமரியாதையும் ஆகும் என்பதை யாரும் மறுக்க முடியாது.


RangaRakes tamilnavarasam.com

இம்மகாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் திரு. ஏ. வி, முத்தையா அவர்கள் என்பதையும் வரவேற்புத் தலைவராய் இருந்தவர், திரு. எஸ். லக்ஷிமிரதன் எம். ஏ. பி. எல். அவர்கள் என்பதையும் அறிந்த எவரும் மகாநாட்டைப் பொறுப்பற்றவர்களின் கூட்டம் என்றோ, படிக்காதவர்களின் கூட்டமென்றோ, ஒன்றும் தெரியாத இளைஞர்களின் கூட்ட மென்றோ சொல்ல முன் வரமாட்டார்கள். அப்படியும் பொறாமையால், வழக்கம்போல் மேற்கண்ட பல்லவிகளை பாட முன்வருவார்களானால் அவர்களைப் போல வடிகட்டின முட்டாள்கள் வேறு யாரும் இருக்க முடியாது என்பதைச் சிறு பிள்ளைகளும் அறிவார்கள். இவ்விஷயத்தை வரவேற்புத் தலைவர் திரு. எஸ். லக்ஷிமிரதன் அவர்கள்,

> "வயதாலும், கல்வியறிவாலும், உலக அனுபவத்தாலும் முதிர்ந்த இத்தகைய பெரியார் ஒருவர் நமது இயக்கக் கொள்கைகள் அனைத்தையும் அங்கீகரித்து ஆதரிப்பதுடன் அவற்றை நிலை பெறச் செய்வதிலும் இத்தனை ஆர்வத்துடன் கலந்து கொள்ளுதல், இவ்வியக்க விரோதிகளின் வம்புப் பேச்சுகளுக்கு ஒரு வாய்ப் பூட்டாக இருக்கும் என்பது திண்ணம்"

என்று தமது வரவேற்புப் பிரசங்கத்தில் கூறியிருப்பதைக் கொண்டு உணரலாம்.

வரவேற்புத் தலைவர் அவர்கள் பிரசங்கத்தில் நமது இயக்கத்தின் உண்மையான கொள்கைகள் இவைகள் என்பதையும், எதிரிகள் நம்மை "நாஸ்திகர்கள்" என்றும், "பிராமணத் துவேஷிகள்" என்றும், "வகுப்பு வாதிகள்" என்றும், "தேசத் துரோகிகள்" என்றும் பிரசாரஞ் செய்வ தெல்லாம் கடைந்தெடுத்த அயோக்கியத்தனம் என்பதை தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டியிருக்கும் பகுதிகள் மிகவும் கவனிக்கத் தக்கவையாகும். அவை களாவன:-

> "பசுவிற்காகவும், உருக்கிவிட்ட ஈயத்தைப் போல் காது களைத் துளைக்கின்ற கொட்டுகளுக்காகவும், தென்கலை, வடகலை நாமங்களுக்காகவும் இன்னும் இத்தகைய இழிந்த காரியங்களுக் காகவும் நம்மைப் பல வகுப்பினராகப் பிரித்து தமது உடல், பொருள், ஆவி யாவற்றையும் ஒருங்கே .இழந்து உலகத்தை எப்பொழுதும் போர்க்களமாக்குவதற்குக் காரணமாயிருக்கும் மதங்களை விட் டொழியுங்கள்" என்றால் நாம் உடனே நாஸ்திகர் என பட்டம் சூட்டப் படுகின்றோம்.

> "அறிவை ஒதுக்கிப் பிறப்பைப் பேணி அநீதிகளைப் போதிக்கும் சாத்திரக் குப்பைகளைக் கண்டிப்பதனாலும், வருணாச் சிரம உயர்ச்சி தாழ்ச்சிகளையும், அதனாலாய உரிமைகளையும், கடமைகளையும் தள்ளி விடுவதனாலும் நம்மை பிராமணத் துவேஷிகளாகத் தூற்றுகிறார்கள்"



> "உயர்வடைவதற்காக சந்தர்ப்பம் ஏற்படும் வரையிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் பிரத்தி யேகமான வசதிகள் அமைக்க வேண்டுமென்றால் நம்மைத் தேசீய விரோதமான வகுப்புவாதச் சச்சரவுகள் செய்பவர்களாகப் பறை யறைகின்றனர்."

> "அன்னிய அரசாட்சியை ஒழிப்பது மட்டும் சுயராஜ்யமாகக் கருதி, மக்கள் கட்டுண்டு அடிமைகளாய் வாழ்வதற்கு காரணமாய் இருக்கும் பழக்கவழக்கங்களாகிய இரும்புத் தளைகளை, **மத நடுநிலை** என்ற பெயரால் இருந்தபடியே என்றும் நின்று நிலவச் செய்யும் காங்கிரசுத் திட்டத்தையும் இன்னும் இன்னோரன்ன அவர்தம் குறைகளையும் நாம் எடுத்துக் கூறுவதனால் நம்மைச் சுதந்திரம் வேண்டாத தேசத்துரோகிகள் என்று முரசறைகிறார்கள்."

மேற்கூறிய உண்மைகளை அறிந்த எவரும் சுயமரியாதை இயக்கத்தை பழி கூற முன் வருவார்களா என்று கேட்கிறோம்.

எந்த இடங்களில் அடிமைத்தன்மை, ஏமாற்றுந் தன்மை, வஞ்சகம், கொடுமை, புரட்டு, மூடநம்பிக்கை, சுயநலம் முதலியவைகள் குடிகொண்டு இருக்கின்றனவோ அங்கெல்லாம் நமது இயக்கம் தோன்றாமலும், தனது சமதர்ம வேலையைச் செய்யாமலும் போகாது என்ற உண்மையை நாம் அடிக்கடி கூறிவருகிறோம் . மேற்கூறிய பார்ப்பனீயத்தால் கட்டுப்பட்டு வருந்தும் மக்களுக்குச் சமத்துவமும், சுதந்தரமும், விடுதலையும் அளிக்கவே நமது இயக்கம் தோன்றியதாகும். இதனை மகாநாட்டுத் தலைவர் திரு. ஏ. வி. முத்தையா பி.ஏ. பி.எல். அவர்கள் தமது தலைமைப் பிரசங்கத்திலும் விளக்கிக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அப்பகுதி வருமாறு:-

> "ஏழை மக்கள்" - வறிய மக்கள் அறியாமையில் அழுந்தி உண்மை விளங்காது பலபல துறைகளிலும் இன்னல்களுக்கு உட்பட்டுத் தவிக்கின்றார்கள். இது ஒரு காட்சி! இப்படித் தவிக்கும் ஏழை மக்களுக்கு - வறிய சகோதரர்களுக்கு கண்களைத் திறந்து விடாமல், புத்தியைத் துலக்காமல் - வழி காட்டாமல் வேறு சில சகோதரர்கள், அவர்களை மிரட்டி - அதட்டி - பயப்படுத்தி - ஏய்த்துப் பொருள் பறிக்கின்றார்கள். இது மற்றொரு காட்சி.
>
> இவ்விரண்டு காட்சிகளையும் கண்டு மனம் பொறாது - உள்ளம் உடைந்து இவைகளை யகற்ற - வழிதேட - இச்சீர் கேடான நிலையைச் சீர்படுத்த அருள் நோக்கங் கொண்ட - அறிவிற் சிறந்த பெரியார்கள் இவ்வியக்கத்தை ஆரம்பித்திருக்க வேண்டும்; ஆரம்பித்தார்கள்.



RangaRakes tamilnavarasam.com

அன்பு - அறிவுடைய எவரும் இந்தக் காட்சிகளைக் கண்டால்- இந்த நிலையைப் பார்த்தால் - இதைப்பற்றிக் கேள்விப்பட்டால் சும்மா இரார்; எப்படி இருக்கமுடியும்?

மனம் பதைத்து "அந்தோ! அறியாமையின் விபரீதங்கள் எவ்வளவு கொடியன! இப்படிப்பட்ட அநியாயங்களும், அழும்புகளும் உண்டா? இவைகளை அகற்றுவதற்கு வழியொன்றும் கிடையாதோ என ஆழ்ந்து யோசிக்காமலிரார்.

இந்த யோசனை உதித்த ஒருவருக்கு ஆற்றலுமிருந்தால் இயக்கம் ஒன்றில் முற்பட்டுத் தொண்டு செய்யாமலிரார்.

தன்னைப் போன்ற உயிர்கள் இன்னலுற்று, வாடி, வதங்கி ஏங்கி நிற்கும் போது, கல் நெஞ்சம் படைத்தவனாய் சாத்திரங்கள் காட்டி உதவி செய்ய முன்வராமல், வாதம் புரிபவனும் மனிதனாமோ? சொல்லுங்கள்"

மேற்கூறிய தலைவர் பேச்சில் உள்ள உண்மையைச் சிந்திக்கும் எவரும் ஏழை மக்களுக்குத் தொண்டு செய்ய முன்வராமல் இருக்கமுடியுமா? அவ்வாறு ஏழைகளுக்காக - கஷ்டப்படும் மக்களுக்காக - அடிமையாகிக் கிடக்கும் மக்களுக்காக உண்மையாக உழைக்க விரும்புகின்றவனுக்காகவே சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டது என்பதை மேற்கூறிய உண்மை உரைகளைக் கொண்டு தெளிவாக உணரலாம்.

கடைசியாக வரவேற்புத் தலைவர் அவர்கள்,

"விருதுநகர் மகாநாட்டுத் தீர்மானத்திற்கு இணங்க நமது இயக்கத்திற்குச் சங்கம் அமைக்க வேண்டும். அதன் சட்ட திட்டங்களும், கொள்கைகளும், நமது இயக்க நோக்கங்களுக்கு இணங்க அவசியம் நேரிடும் பொழுது மாற்றியமைத்துக் கொள்ளக் கூடியனவாக இருத்தல் வேண்டும். அதற்குப் பெரு நிதி திரட்டல் வேண்டும். வளம் நிறைந்த ஓரிடத்தில் சுயமரியாதைப் பல்கலைக் கழகமும், தலைச்சங்கமும் நிறுவ வேண்டும். மேனாட்டுக் கிறிஸ்தவ மிஷன்களைப் போல பொருளீட்டுவதும், மக்கள் முன்னேற்றமே கருதி உழைக்க முன்வரும் ஆசிரியர்களையும், தோழர்களையும், இளைஞர்களையும் ஒன்று சேர்க்கவும் வேண்டும். நமது கொள்கைகளுக்கேற்ற வாழ்க்கை முறையும் சகல விதமான கலைகளும், கைத் தொழில்களும், விவசாய அபிவிருத்தி முறைகளும், அவ்விடத்தில் போதிக்கப்பட வேண்டும். அக்கழகம் நாட்டில் நாம் என்ன மாறுதல்களை விரும்புகிறோமோ அவற்றின் உண்மையையும், மேன்மையையும் வாழ்க்கையில் அனுஷ்டிப்பது மூலமாக விளக்கிக் காட்டுவதாக இருக்க வேண்டும்."



என்று கூறியிருக்கும் விஷயம் எல்லோருடைய கவனத்தையும் தற்சமயத்தில் கவர்ந்து நிற்கும் ஒரு விஷயமாகும். இது சம்பந்தமாகப் பலமுறை பேசப்பட்டும் தீர்மானங்கள் செய்யப்பட்டும் வருகின்றனவேயொழிய இன்னும் ஒரு காரியமும் செய்யப்படவில்லை. ஆனால் இதனால் நமது வேலைகள் ஒன்றும் தடைப்பட்டு விடவில்லையென்பது மாத்திரம் நிச்சயம். நமக்கென்று ஒரு சரியான ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொள்ளாமலே தனிப்பட்ட சிலருடைய உழைப்பினாலும் செல்வாக்கினாலும் நமது இயக்கம் நடைபெறுகிறது என்று பிறர் சொல்லக் கூடிய நிலைமையிலிருந்தாலும், நமது நாட்டில் சங்கங்களும், சட்ட திட்டங்களும் உள்ள இயக்கங்கள் நீண்ட காலமாகக் கிளர்ச்சி செய்து ஏழைகளுக்குச் செய்திருக்கும் நன்மையைக் காட்டிலும், நமது இயக்கம் எவ்வளவோ மாறுதலையும், உணர்ச்சியையும் குறுகிய காலமாகிய இந்த 7 ஆண்டுகளுக்குள் தேசத்தில் உண்டாக்கி யிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆயினும் நமக்கென ஒரு ஸ்தாபனம் வேண்டியது அவசியம் என்பதையும் யாரும் மறுக்க முடியாது. ஆகவே இவ்விஷயம் வெளிநாட்டிலிருக்கும் நமது தலைவர்கள் வந்தவுடன் செய்யப்படும் என்று உறுதியாக நம்பலாம்.

இம்மகாநாட்டில் முக்கியமாகச் செய்யப்பட்டிருக்கும் தீர்மானம் ஒன்றேயாகும். அது:-

"தற்பொழுது ஜில்லா அதிகாரிகளான, ஜில்லா கலெக்டர், ஜில்லா நீதிபதி, ஜில்லா வைத்திய அதிகாரி, தேவ கோட்டை சப் கலெக்டர் முதலியவர்கள் எல்லாம் பார்ப்பனர்களாயிருப்பதனாலும், தேவ கோட்டைக்கடுத்த கிராமங்களில் அடிக்கடி ஆதிதிராவிடர்கள் தாக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப் படுவதனாலும், இந்த ஜில்லாவிலுள்ள பிராமண அதிகாரிகளை மாற்றி பிராமணரல்லாத அதிகாரிகளையே நியமிக்க வேண்டுமென்று அரசாங்கத்தை இம் மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது."

என்னும் தீர்மானமாகும். இந்தத் தீர்மானத்தைக் கொண்டே அப்பக்கங்களில் ஏழைமக்கள் படும் துன்பத்தை அறியலாம். சாதாரணமாகவே, பணக்காரத் தன்மையும், பார்ப்பனீயமும் மிகுந்த உறவுடையது என்பது கண்கூடான விஷயம். பணக்காரர்கள் நிறைந்த நாட்டில் ஏழைமக்கள் சுதந்திரம் வேண்டுமென்று பேச வாயெடுத்தாலே அவர்கள் பாடு கஷ்டத்தில் முடியும். அதோடு பார்ப்பனீயத்தை மேற்கொண்ட அதிகாரிகளும் நிறைந்திருப்பார்களானால் அந்த நாட்டு மக்களின் நிலையை நாம் என்னவென்று சொல்ல முடியும்? ஆகவே இத்தீர்மானம் மிகமிக அவசியமான ஒரு தீர்மானமாகும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய பார்ப்பனீயமும், பணக்காரத் தன்மையும், மூடப் பழக்க வழக்கங்களும் நிறைந்துள்ள நாட்டில் வெற்றியாக நடந்த சுயமரியாதை மகாநாடு குறிப்பிடத் தக்கதொன்றன்றோ? இம் மகாநாட்டை நடத்துவதில்



RangaRakes tamilnavarasam.com

பெரும் முயற்சி எடுத்துக் கொண்ட வாலிபர்களின் ஊக்கத்தையும், உழைப் பையும், தைரியத்தையும் பாராட்டுகின்றோம். அதோடுங்கூட செட்டிநாட்டைச் சீர்திருத்த இது போல் ஆண்டுக் கொரு மகாநாடு நடத்துவது மட்டும் போதா தென்றும், நாள் தோறும் மகாநாடுகளும் பொதுக் கூட்டங்களும் சங்கிலித் தொடர் போல் நடத்திக் கொண்டே யிருந்தால் தான் அந்நாட்டில் உள்ள பார்ப்பனீயத்தை அடியோடு விரைவில் ஒழிக்க முடியும் எனபதையும் ஞாபகப்படுத்துகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 24.07.1932**



# தேர்தல் ஜாக்கிரதை!

நமது நாட்டில் பல ஆயிரக் கணக்கான வருஷங்களாக ஒரு சிறு கூட்டம், தேசத்தில் உள்ள பெரும்பாலான ஏழை மக்களை ஏமாற்றி வயிறு பிழைத்துக் கொண்டேயிருக்கிறது. அச்சிறு கூட்டமே நாட்டின் அரசியல் துறையில் செல்வாக்கு வைத்துக் கொண்டும், சமூகத் துறையில் தலைமை வகித்துக் கொண்டும் தங்கள் சுகபோக வாழ்வுக்கு எந்த வகையிலும் குறைவு வராமல் காப்பாற்றிக் கொண்டும் வருகிறது. தாழ்ந்த நிலையிலிருந்து துயரப் படும் மக்களில் எவரேனும் உயர்நிலையடைந்து வாழ்ந்திருக்கும் அச்சிறு கூட்டத்தாரின் சூழ்ச்சிகளை அறிந்து வெளிப்படுத்த ஆரம்பித்தார்களாயின் அப்போதே அவர்களை, அரசியல் துறையிலும் சமூகத்துறையிலும், தங்களுக்கு இருக்கும் செல்வாக்கை உபயோகித்துத் தலைதூக்க வொட்டாமல் செய்து கொண்டு வந்தார்கள். இது பண்டைக் கால முதல் நடைபெற்று வரும் மறைக்க முடியாத உண்மையாகும்.

பண்டைக் காலத்தில் இக் கூட்டத்தார் பாமர மக்களைப் பயமுறுத்தி அடிமைப் படுத்துவதற்கு உபயோகித்த ஆயுதங்கள், "கடவுள்" "வேதம்" "மதம்" "சடங்குகள்" "புராணங்கள்" "வருணாச்சிரமதருமங்கள்" "மோட்சம்" "நரகம்" "சுவர்க்கம்" "பாவம்" "புண்ணியம்" முதலிய வார்த்தை களேயாகும். இவ் வார்த்தைகளுக்குப் பயந்தே ஏழைமக்கள் தங்கள் சுயமரியாதையை யிழந்து வாடி வதங்கிக் கிடந்தனர். ஆயினும் நாளேற நாளேற மக்களுடைய அறிவும் சிறிது வளர்ச்சியடைந்த காரணத்தாலும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களைப் பார்த்து "நாமும் ஏன் அவ்வாறு இருத்தல் கூடாது" என்று சிந்திக்கத் தொடங்கிய காரணத்தாலும், தமது உரிமையை அடையமுடியும் என்ற தைரியம் உண்டான காரணத்தாலும், மேற்கூறிய அர்த்தமற்ற வார்தைகளுக்கு அடியோடு அஞ்சிக் கட்டுப்படுவதிலிருந்து நீங்கினர். ஆகவே மேற்கூறிய வார்த்தைகளுக்குள்ள கௌரவமும், அவை களால் உயர்ந்த கூட்டத்திற்கு இருந்த மதிப்பும் கொஞ்சம் கொஞ்சம் குறைய ஆரம்பித்தன. ஏழை மக்களும் அரசியல் துறையிலும், சமூகத்துறையிலும் பண்டுமுதல் இருந்து வந்த கட்டுப்பாடுகளை ஒழித்துக் கொஞ்சம் சம நிலையும் சௌக்கியமும் அடையத் தொடங்கினர்



RangaRakes tamilnavarasam.com

இது கண்ட, உயர்ந்த அச்சிறு கூட்டத்தினர், இனிமத சம்பந்தமான காரியங்களைக் கொண்டும், வார்த்தைகளைக் கொண்டும் பாமர மக்களை ஏமாற்றுவது முடியாதெனக் கண்ட அக்கூட்டத்தார், தங்கள் பழய பழக்க வழக்கங்களையும் நாகரீகங்களையும் அடியோடு விட்டு விட்டுப் புதிய கல்விகளையும் தொழில்களையும் கற்றுக் கொண்டு அரசியல் பதவிகளை மட்டிலும் கைப்பற்ற ஆரம்பித்தார்கள். அக்கூட்டத்தார்கள் தான் நமது நாட்டில் உள்ள வைதீகப் பார்ப்பனர்கள் என்பதை நாம் விரித்துக் கூற வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகின்றோம். இக் கூட்டத்தார், இந்தியாவின் நன்மைக்கு என்றோ, இந்திய மக்களின் முன்னேற்றத்திற் கென்றோ ஏழைமக்களின் உதவிக் கென்றோ ஏற்படும் எந்த ஸ்தாபனங் களிலும் நுழைந்து கொண்டு, அவைகளின் மூலம் கிடைக்கும் செல்வாக் கையும், நன்மைகளையும் தங்களுக்கும் தங்கள் சமூகத்திற்கும் மாத்திரம் உபயோகப்படுத்திக் கொண்டும் பாமர மக்களை வழக்கம் போல் கீழே அமிழ்த்துக் கொண்டுமே வந்திருக்கின்றார்களென்பது நமது நாட்டின் உண்மை நிலையை அறிந்தவர்களுக் கெல்லாம் தெரியாத விஷயமல்ல.

உதாரணமாக நமது நாட்டிற்குச் சுயராஜ்யம் வேண்டும் என்று கிளர்ச்சி செய்ய ஏற்பட்ட அரசியல் ஸ்தாபனமாகிய "காங்கிரஸ்" ஏற்பட்டது முதல் இது வரையிலும் எந்தச் சமூகத்தார் நன்மையடைந்து வந்தார்கள் என்பதை உணர்ந்தால் இவ்வுண்மை விளங்காமல் போகாது. திரு. காந்தி அவர்கள் காங்கிரசைக் கைப்பற்றுவதற்கு முன், அதில் ஈடுபட்டிருந்தவர்கள் யாவரும், அரசாங்கத்தாரை மிரட்டுவதும் பிறகு அரசாங்கத்தார் கொடுக்கும் உத்தி யோகத்தை ஏற்றுக் கொண்டு, தாசானுதாசராகி ஏழை மக்களின் இரத்தத்தை உறிஞ்சுவதுமாகவே இருந்து வந்தார்கள் என்ற விஷயம் காங்கிரசின் பழய நிலையை அறிந்தவர்களுக்கெல்லாம் தெரியும். காங்கிரசைத் திரு. காந்தி யவர்கள் கைப்பற்றிய காலத்திலும் கூட, ஒத்துழையாமையியக்கத்தைக் காங்கிரஸ் நடத்தாத காலத்தில் எல்லாம் வைதீகக் கூட்டத்தைச் சேர்ந்த பார்ப்பனர்கள் அனைவரும் காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொண்டு பட்டம் பதவிகளை வேட்டையாடி வந்ததும், ஒத்துழையாமைக் காலங்களில் ஏமாந்த பார்ப்பனரல்லாதார் அடிபடுதலும், அபராதம் செலுத்துதலும், சிறைப்படுத் தலுமாயிருக்கப் பார்ப்பனர்கள் மாத்திரம் காங்கிரஸ் பேச்சை விட்டுவிட்டு வேறு பல பெயர்களால் ஜன சமூகத்தை ஏமாற்றிப் பட்டம் பதவிகளைப் பெற முயற்சிப்பதும் நமது நாட்டினற்குத் தெரியாத விஷயமல்ல.

காங்கிரசின் சட்ட மறுப்பு இயக்கமாகிய ஒத்துழையாமையோடு கலந்து கஷ்டப்படுவதின் மூலம் பாமர மக்களின் செல்வாக்கைப் பெறாதவர்கள், வேறு தேசீயத்தின் பெயரால் பாமர மக்களை ஏமாற்றிச் செல்வாக்குப் பெறும் பொருட்டு "சுதேசிப் பொருள்களை வாங்குங்கள்" சங்கம் ஏற்படுத்திப் பிரசாரம் பண்ணிக் கொண்டு வருகிறார்கள் என்பதும் இச்சமயத்தில் நினைவுக்குக் கொண்டு வர வேண்டிய ஒரு விஷயமாகும். சுதேசிப் பொருள்



விருத்தியாக வேண்டுமென்பதைப் பற்றியும், அப்பொருள்களை ஆதரிக்க வேண்டுமென்பதைப் பற்றியும் நமக்கு யாதொரு ஆட்சேபணையும் இல்லை. ஆனால் நஷ்டப்படக் கூடியதும், பிழைப்புக்கு வழியில்லாததும், படித்த கூட்டத்தாராகிய பார்ப்பனர்கள் கொள்ளையடிக்கக் கூடியதுமாகிய கதர் போன்ற போலிச் சுதேசிகளை விட்டு விட்டு, அன்னிய நாடுகளுடன் நாமும் போட்டி போட்டு வியாபாரம் செய்யக் கூடிய முறைகளில் யந்திர சாதனங் களைக் கொண்டு, துணி நெய்தல் போன்ற பல வகையான கைத்தொழில் களையும் வளர்க்க வேண்டுமென்பதே நமது நோக்கமாகும். இவ்வாறு செய்வோமானால் நமது நாட்டுப் பொருள்கள் சிறந்ததாகவும், குறைந்த விலையுள்ளதாகவும் இருக்கக் கூடுமென்பதில் ஐயமில்லை. இத்தகைய சிறந்ததும், குறைந்த விலையுள்ளதுமாகிய பொருள்களை மக்கள் தாமே பிரியப்பட்டு வாங்குவார்கள். இவைகளை "வாங்குங்கள்" என்று பிரசாரம் பண்ண வேண்டிய அவசியம் கூட அதிகமாக உண்டாகாது. இதற்கான முயற்சி ஒன்றும் செய்யாமல், சும்மாவாவது " சுதேசிப் பொருள்களை வாங்குங்கள்" என்றும் "அப்பொழுதுதான் சுயராஜ்யம் வரும்" என்றும் வீண் பிரசாரம் செய்வதும், இப்பிரசாரத்தில் பார்ப்பனரல்லாதார்க்கு இடந்தராமல் முழுதும் பார்ப்பனர்களையே சேர்த்துக் கொண்டிருப்பதும் தேர்தல்களில் பார்ப்பனர் கள் வெற்றி பெறுவதற்காகச் செய்யப்படும் தேர்தல் பிரசாரம் என்றுதான் நாம் கூறுகின்றோம்.

முதலில் "மதம்" "கடவுள்" "வேதம்" "பாவபுண்ணியம்" முதலிய அர்த்தமற்ற சொற்களால் பாமர மக்களை ஏமாற்றி வந்த மக்கள் பிறகு அவைகளை விட்டு விட்டு காங்கிரசின் பெயரால் அரசியல் ஆதிக்கம் பெற்று பாமர மக்களை ஏமாற்றத் தொடங்கினார்கள். காங்கிரசிலிருந்தால் கஷ்டம் உண்டாகக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோது அதன் பெயரையும் சொல்லிக் கொள்ளாமலும் 'கதர்', 'சுதேசி' என்பவைகளின் பெயரால் பாமர மக்களை ஏமாற்றத் தொடங்கி இருக்கின்றார்கள்.

இக்கூட்டத்தார், இப்பொழுது வேறொரு இயக்கத்தையும் ஆரம்பித்து அதன் பெயராலும் பாமர மக்களை ஏமாற்றத் தொடங்கி இருக்கின்றார்கள் என்று தெரிகின்றது. இப்பொழுது மக்கள் "சமத்துவம்", "சகோதரத்துவம்" "சமூக முன்னேற்றம்" முதலிய வார்த்தைகளைக் கேட்டு, அவைகளைப் பெறவேண்டும் என்றும் இச்சிக்கின்றார்கள். ஆகையால் "சமூக ஊழியம்" "சமூக சீர்திருத்தம்" "சமூக முன்னேற்றம்" என்று சொல்லிக்கொள்ளு கின்றவர்களுக்கும் நாட்டில் ஒருவகையான செல்வாக்கு ஏற்படத் தொடங்கி யிருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தையும் பார்ப்பனர்கள் வீண் போக்காமல் "சமூக முன்னேற்றச் சங்கம்" என ஒன்று ஏற்படுத்திக் கொண்டு தேர்தல் பிரசாரம் பண்ணப் புறப்பட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

இவ்வாறு ஒரு சங்கம், திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் தோன்றி அதைச் சேர்ந்த சிலர் கிராமங்களில் பிரசாரம் பண்ணிக் கொண்டு வருவதாகப்



RangaRakes tamilnavarasam.com

பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. இச்சங்கத்திற்குத் தற்பொழுது, திரு. டி. எஸ். எஸ். ராஜன் அவர்களும் கே. ஜி. சிவசாமி அய்யர் அவர்களும் முறையே தலைவராகவும் காரியதரிசியாகவும் இருந்து வருகிறார்கள். இவர்களை நன்றாய் அறிந்தவர்கள் இச்சங்கம் உண்மையில் ஏழை மக்களை முன்னேற்றும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதா? அல்லது பார்ப்பன சமூகத்தை மறுபடியும் ஜில்லா போர்டுகளிலும் தாலூகா போர்டுகளிலும் முன்னேற்றமடையச் செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்டதா? என்பதைக் கண்டுகொள்ளுவார்கள். முதலில் இச்சங்கத்தைத் தொடங்கு கின்ற காலத்தில் கோவை திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், திருச்சி. திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை முதலியவர்களையெல்லாம் வரவழைத்துச் சங்கத்தை விளம்பரப்படுத்தினார்கள். இவ்விளம்பரம் பார்ப்பனரல்லாத மக்களை வசப்படுத்துவதற்காக வேண்டியென்பது பின்னால் விளங்கிவிட்டது.

இச் சங்கத்தின் நடவடிக்கைகளிலும், கிராமப் பிரசாரங்களிலும் கலந்து கொள்ள விரும்பிய சமூக, ஊழியப் பிரியர்களான பார்ப்பனரல்லாதார்களை இச்சங்கத்தார்களுடன் கலந்து கொள்ளுவதற்கு இடங்கொடுக்காத காரணம் ஒன்றே இச்சங்கம் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக ஏற்பட்டது என்பதற்குப் போதிய சான்றாகும்.

கட்டாய ஆரம்பக்கல்வி, தீண்டாமை ஒழித்தல், மதுவிலக்கு, சுதேசியம், சிக்கனம் முதலியவைகள் இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாக அமைக்கப் பட்டிருப்பதும் பார்ப்பனரல்லாத மக்களை ஏமாற்றுவதற்கென் பதில் ஐயமில்லை. இச்சங்கத்தார்களின் கொள்கைகளை ஆதரிப்பதாக ஒப்புக் கொள்கின்றவர்களையும், இதற்காக இவர்கள் வெளியிட்டிருக்கும் உறுதி மொழிப் பத்திரத்தில் கையொப்பமிடு பவர்களையும், ஸ்தல ஸ்தாபனங் களுக்கு அபேட்சகர்களாக நிறுத்தி ஓட்டுச் சேகரித்து கொடுப்பதாகவும் பிரசாரம் பண்ணிவருகின்றனர். அதோடு கூட தற்போது இருக்கும் ஸ்தல ஸ்தாபன உறுப்பினர்களையும், தலைவர்களையும் பற்றிப் பாமர மக்களிடம் அவர்களுடைய செல்வாக்கு குறையும் படியான வழியில் பிரசாரம் பண்ணிக் கொண்டு வருகின்றார்கள். இதைக் கொண்டு இச்சங்கத்தாரின் சூழ்ச்சியை நன்றாய் உணரலாம். தற்போது இருக்கும் ஸ்தல ஸ்தாபன உறுப்பினர்களும், தலைவர்களும் பார்ப்பனரல்லாதார்களே என்பது எல்லோருக்கும் தெரியும். பார்ப்பனரல்லாதார் கட்சி தோன்றிய பிறகும் ஸ்தல ஸ்தாபனங்கள் பெரும் பாலும் பார்ப்பனரல்லாதார் வசமாகிவிட்டன. ஸ்தல ஸ்தாபனங்களில் பார்ப்பனரல்லாதார் ஆதிக்கம் பெற்றபின் அவை சம்பந்தப்பட்ட உத்தி யோகங்களும் "கண்ராக்ட்டு"களும் பார்ப்பனர்களுக்கே ஏகபோகமாக இருந்தது போக பார்ப்பனரல்லாதார்க்கும் கிடைக்க ஆரம்பித்து விட்டன. பார்ப்பனர்கள் எவ்வளவு முயன்றும் அவைகளில் முன்போல ஆதிக்கம் பெற முடியாமல் போய்விட்டது. ஆகையால் தான் இப்பொழுது மீண்டும்



சில வருஷங்களுக்கு முன்பு இருந்தது போலவே ஸ்தல ஸ்தாபனங்களில் பார்ப்பனர்களும் அவர்களுக்கு "ஆமாம் சாமி" போடும் பேர்வழிகளும் ஆதிக்கம் பெறும் பொருட்டுப் பாமர மக்களை ஏமாற்றி ஓட்டுப் பறிப்பதற் காகவே "சமூக முன்னேற்றச் சங்கம்" என்றும், "சுதேசியம் பிரசாரச் சங்கம்" என்னும் வகையான சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டு தேர்தல் பிரசார வேலை செய்ய முன் வந்திருக்கின்றார்கள் என்று தெரிவித்துக் கொள்ளு கிறோம்.

இந்தச் "சமூக முன்னேற்றச் சங்கம்" மாத்திரம் அல்ல; இன்னும் இது போன்ற பல சங்கங்கள் தேர்தலின் பொருட்டு பார்ப்பனர்களால் ஏற்படுத்தப் படலாம். ஆனால் எந்தப் பெயருடன் எத்தகைய சங்கங்கள் பார்ப்பனர்களால் ஏற்படுத்தப்பட்டாலும் அவர்களால் செய்யப்படும் பிரசாரம் மதப் பிரசார மாயிருந்தாலும், காங்கிரஸ் பிரசாரமாயிருந்தாலும், சுதேசிப் பிரசாரமாயிருந் தாலும், சமூக ஊழியப் பிரசாரமாயிருந்தாலும், தீண்டாமை விலக்குப் பிரசாரமாயிருந்தாலும், மதுவிலக்குப் பிரசாரமாயிருந்தாலும் அவை யெல்லாம் தங்கள் சமூகத்தின் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட பிரசாரமாக இருக்குமே தவிர வேறொன்றாயிருக்க முடியாது என்பது இதுவரையிலும் நாம் கண்டுணர்ந்த அனுபவம் அன்றோ? ஆகையால் நமது மாகாணமெங்கும் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்கள், அதாவது ஜில்லா தாலூகா போர்டுத் தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இச்சமயத்தில் பார்ப்பனர்கள் செய்யும் பிரசாரத்திற்கு ஏமாறாமல் ஜாக்கிரதையாயிருப்பது அவசியம். பார்ப்பனர்களின் வலையிற் சிக்கியவர்களும் அவர்களிடம் கூலி பெறுபவர்களும் ஆகிய சில பார்ப்பனரல்லாத கூலிப் பிரசாரகர்களும் புறப்பட்டுப் பார்ப்பனர்களுக்குச் சாதகமாகப் பிரசாரம் பண்ணக் கூடும். ஆதலால் அவர்கள் சொற்களையெல்லாம் நம்பி ஏமாற்றமடைய வேண்டாம் என்று பொது ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்கின்றோம். உண்மையில் பொது ஜனங்களின் நன்மைக்கு உழைக்கக்கூடியவர்களும், சுயநலம் கருதாத வர்களும், குருட்டு நம்பிக்கை இல்லாதவர்களும், உயர்வு சாதிபேதம் பாராட்டாதவர்களும், மதப் பிடிவாதம் இல்லாதவர்களும் ஆகிய சிறந்தவர் களேயே தேர்தல்களில் ஆதரிப்பது பொது ஜனங்களின் கடமையாகும். இத்தகைய மனிதர்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் பெற்றால்தான் அவர்களால் அடையக் கூடிய நன்மைகளைப் பொது ஜனங்கள் அடைய முடியும். இப்படியில்லாமல் பார்ப்பனர்களுடைய தயவு தாட்சண்யங்களுக் குக் கட்டுப்பட்டோ, அவர்கள் கூறும் "சுதேசியம்" "சமூக ஊழியம்" "சுயராஜ்ஜியம்" முதலிய பூச்சாண்டி வார்த்தைகளுக்கு ஏமாந்தோ பார்ப்பனர் கையாள்களை ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அனுப்புவீர்களானால் பிறகு கஷ்டப்பட வேண்டியவர்கள் நீங்கள் தான் என்று இப்பொழுதே பலமாக எச்சரிக்கை செய்கின்றோம். பொதுஜனங்களே! வாக்காளர்களே! தேர்தல் பிரசாரம்! ஜாக்கிரதை!! ஜாக்கிரதை!!!

**குடி அரசு - தலையங்கம் - 31.07.1932**



RangaRakes
tamilnavarasam.com

# ஸ்தல ஸ்தாபனச் சட்டம்

இப்பொழுதுள்ள "ஸ்தல ஸ்தாபனச் சட்டப்படி நகரசபைத் தலைவர்களோ, லோக்கல் போர்டுகளின் தலைவர்களோ ஒழுங்காக நடந்து கொள்ளாவிட்டால் அவர்கள் மீது உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றவும், நம்பிக்கையில்லாத் தீர்மானம் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்டவுடன் தலைவர்கள் தங்கள் பதவியை இழந்து விடவும் இடமிருக்கிறது.

"ஸ்தல ஸ்தாபனச்சட்ட"த்தில் இத்தகைய பிரிவு ஏற்படுத்தியிருப்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. இது ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகம் ஊழலாகப் போய் விடாமல் திறமையாக நடைபெற வேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் அமைக்கப்பட்டதேயாகும். இப்பிரிவு இல்லாவிட்டால் தலைவர்கள் சிறிதும் பயமில்லாமல் தங்கள் அதிகாரங்களைச் சுய நலத்தின் பொருட்டு துஷ்பிரயோகம் செய்ய இடமேற்படும் என்பதில் ஐயமில்லை. இப்பிரிவு இருந்தால் "ஸ்தல ஸ்தாபன"த் தலைவர்கள் தங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டாவது நேர்மையான வழியில் நடந்து கொள்ள வேண்டும் என்று ஞாபகப் படுத்திக் கொண்டே இருக்கும்.

ஆனால் இச்சட்டம் அமலுக்கு வந்த சுமார் இரண்டு வருஷங்களாக, பல நகர சபைகளிலும், லோக்கல் போர்டுகளிலும் உள்ள தலைவர்களின் பேரில் நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. சில "ஸ்தல ஸ்தாபனங்களில்" மற்ற வேலைகளைக் கவனிப்பதற்கு நேர மில்லாமல் சதா நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் கொண்டு வருவதும், இருக்கும் தலைவரை விலக்குவதும், வேறு தலைவரைத் தேர்ந்தெடுப்பதும் பிறகு அத்தலைவர் மேல் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றுவதும் ஆகிய வேலையே நடைபெற்றுக் கொண்டு வந்திருக்கின்றது. நகர சபைக் காரியங்களையும் லோக்கல் போர்டுகளின் வேலைகளையும், ஒழுங்காகவும், திறமையாகவும் நிர்வாகம் புரிந்து வந்த தலைவர்களும் இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானத்திற்கு இரையாகி இருக்கிறார்கள். ஆகையால், இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மான அதிகாரமானது உறுப்பினர்களுக்கும் தலைவர் களுக்கும் உள்ள தனிப்பட்ட விரோதங் களினாலும், சம்பந்தத்தினாலும் தலைவரின் நிர்வாகத் திறமையையோ, ஊழலையோ கவனியாது பதவியை



விட்டு நீக்கவும் பதவியில் வைத்திருக்கவும் இடங்கொடுக்கிறதென்பதை உணரலாம். இந்தக் காரணத்தை உத்தேசித்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் சம்பந்தமாகத் திருத்தம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணமும், ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகம் ஊழல்களாகப் போகாமல் இருக்க பாதுகாப்புகள் ஏற்படுத்த வேண்டும் என்னும் எண்ணமும் இச்சட்டம் ஏற்பட்ட நாள்முதலே பலர் மனத்தில் இருந்து வந்தது. இதற்காகச் சில தனிப்பட்ட சட்டசபை உறுப்பினர்கள் முயற்சி செய்தும் ஒன்றும் நிறைவேறவில்லை.

ஆனால் இம்மாதம் நடைபெறும் சென்னை சட்டசபைக் கூட்டத்தில் முதன் மந்திரியவர்களால் தயாரிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றிய திருத்தமொன்று அரசாங்கத்தாரால் கொண்டு வரப்படுமென்று அறிகிறோம். அத்திருத்தத்தில் கீழ்க்கண்ட விஷயங்கள் அடங்கியிருப்பதாகத் தெரிகிறது.

"தலைவர் மீதோ, உபதலைவர் மீதோ நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கு முன் தீர்மானத்தைக் கொண்டு வருபவர் பத்து நாட்களுக்கு முன் அறிக்கை செய்ய வேண்டும்."

"அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால் நிறைவேற்றப் பட்டால் தலைவரை அப்புறப்படுத்த அரசாங்கத்தாருக்கு அதிகாரம் உண்டு."

"ஒரே கூட்டத்தில் தலைவர் பேரிலும், உபதலைவர் பேரிலும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரக் கூடாது."

"ஒருவரால் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லா தீர்மானம் சபை உறுப்பினர்களால் நிராகரித்துத் தள்ளப்படுமானால் அவர் மீண்டும் ஆறு மாதத்திற்குள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரக் கூடாது."

"நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொஞ்சம் அதிகப்படியான அங்கத்தினர்களின் ஆதரவை மாத்திரம் பெற்று மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினரின் ஆதரவைப் பெறாதிருந்து ஆறுமாதங்களுக்குப் பின்னும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு இதே போன்று நிறைவேறுமானால் தலைவரை நீக்கும் அதிகாரம் அரசாங்கத்தார்க்கு உண்டு."

இத்திருத்தம் நிறைவேறுமானால் ஸ்தல ஸ்தாபனங்களின் நிலைமை தற்பொழுது இருப்பதைக் காட்டிலும் கொஞ்சம் மாறுதலடையும் என்று நிச்சயமாக நம்பலாம். தற்பொழுதுள்ள சட்டப்படி தலைவர் மீதும் உபதலைவர் மீதும் ஒரே சமயத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர இடமிருப்பதனாலும், அத்தீர்மானம் நிறைவேறிய உடன் தலைவர்கள் தமது பதவியை விட்டு நீங்க வேண்டியிருப்பதனாலும் உண்டாகும் சங்கடங்கள் பல. இச்சங்கடத்தைத் தற்போது கொண்டு வர இருக்கும் திருத்தம்



RangaRakes tamilnavarasam.com

நிவர்த்திக்கிறது என்ற அளவில் திருப்தியடைய வேண்டியிருக்கிறது.

ஆனால் தற்போதுள்ள "ஸ்தல ஸ்தாபனச் சட்டம்" நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவைகளின் ஆட்சியோ சமமாக நடைபெறுவதற்குத் தூண்டுகோலாக இருப்பதென்பதே நமது அபிப்பிராயம். இது விஷயமாகத் தற்போதைய சட்டம் அமலுக்கு வந்த காலத்திலேயே "குடி அரசு" தனது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறது. இப்பொழுதும் அவ்வபிப் பிராயத்தையே வலியுறுத்திக் காட்ட விரும்பு கிறோம்.

நமது நாட்டில் அரசியல்வாதிகளாக விளங்குகின்றவர்கள் அனை வரும் அரசாங்கத்தில் புதிய அரசியல் சீர்திருத்தத்தின் பலனாக ஏற்பட்டி ருப்பதும், ஏற்படவிருப்பதும் ஆகிய மாதம் 1000, 2000, 3000, 4000, 5000 கணக்காக சம்பளமுள்ள அதிகாரப் பதவிகளைப் பெறுவதிலேயே நோக்க முடையவர்கள் என்பதை நாம் புதிதாக எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. ஆகவே இவ்வரசியல்வாதிகள் ஜனங்களின் ஓட்டுக்களைப் பெற்றுச் சட்டசபைகளுக்குச் செல்ல வேண்டுமானால் கிராமத்து ஜனங்களிடம் தங்கள் செல்வாக்கை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கின்றது. இதற்கு அடிப்படையாக இவர்கள் "ஸ்தல ஸ்தாபனங்" களையே வைத்திருக் கிறார்கள்.

"ஸ்தல ஸ்தாபனங்" களில் உத்தியோக நியமனங்களும் "கண்ராக்ட்" விஷயமும் அவற்றின் தலைவர்களுக்கு இருப்பதனால் இவைகளின் தலைமை ஸ்தானத்தைக் கைப்பற்றி மேற்கண்ட அதிகாரங்களை உப யோகப்படுத்திச் சட்ட சபைத் தேர்தல்களில் வெற்றி பெற வேண்டுமென்னும் கருத்தைக் கொண்டே அரசியல்வாதிகளெல்லாம் ஸ்தல ஸ்தாபனங்களில் முதன்மையாகக் கவனம் செலுத்தி வருகின்றார்கள் என்று கூறலாம்.

இரண்டாவது, ஆயிரக்கணக்கான சம்பள உத்தியோகங்களுக்கு ஆசைப்படாதவர்கள் தங்கள் உற்றார் உறவினர்களுக்கு உத்தியோகம் தேடிக் கொடுக்கவும், கண்ட்ராக்டின் மூலம் பணம் சம்பாதிக்கவுமே "ஸ்தல ஸ்தாபனங்" களின் ஸ்தானங்களைக் கைப்பற்ற விரும்புகின்றார்கள்.

இவ்விரண்டு காரணத்தைக் கொண்டுதான் இன்று ஸ்தல ஸ்தாபனத் தேர்தலில் போட்டி பலமாக இருக்கின்றது. கேவலம் கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர் பதவி முதல் ஜில்லா போர்டு உறுப்பினர் பதவி வரையில் உள்ள ஒவ்வொரு தேர்தலுக்கும், ஆயிரம், பதினாயிரம், லட்சம் என்ற கணக்கில் ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்றன. "ஆதாயமில்லாத செட்டியார் ஆற்றோடு போவாரா?" என்று கூறும் பழமொழி இந்த ஸ்தல ஸ்தாபனங்களில் பணஞ் செலவழிக்கின்றவர்கள் விஷயத்தில் பொருந்தாமல் போகாது.



மற்றபடி ஸ்தல ஸ்தாபனங்களின் மூலம் பொது ஜனங்களுக்கு நன்மைகள் செய்யவேண்டும் என்னும் உண்மை நோக்கமுடையவர்களுக்கு இக்காலத்தில் இடங் கிடைப்பது அரிது. "இப்பொழுது தேர்தலில் செலவு செய்யும் பணத்தைப் பிறகு சம்பாதித்துக் கொள்ளலாம்" என்ற தைரியம் உள்ளவர்கள் தான் துணிந்து கணக்கில்லாமல் பணத்தைச் செலவழிக்க முன் வருவார்கள். நாணயமாக நடந்து கொள்ளும் நோக்கம் உள்ளவர்கள் கணக்கற்ற பொருளை வீணாகத் தேர்தலில் செலவு செய்யச் சம்மதிக்க மாட்டார்கள். ஆகவே நாணயமுள்ளவர்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் ஸ்தானம் பெறுவதே முடியாததாகும்.

ஒரு சமயம் நாணயமுள்ளவர்களும், திறமையுள்ளவர்களும், பொதுஜன ஊழியத்தில் உண்மையான விருப்பமுள்ளவர்களும் ஸ்தல ஸ்தாபனங்களில் உறுப்பினர் பதவி பெற்றுத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக் கப்பட்டாலும் அவர்கள் தங்கள் பதவியின் கௌரவத்திற்கு ஆசைப்பட்டால், நாணயத்தோடும் திறமையோடும் தங்கள் கடமையைச் செய்ய முடியாத நிலையிலேயே தான் இருக்க முடியும். ஏனென்றால், "ஸ்தல ஸ்தாபனங்" களின் பொருளிலிருந்தே, தங்கள் தேர்தல் செலவை ஈடுசெய்து கொள்ளலாம் என்ற நோக்கமுடன் வந்திருக்கும் உறுப்பினர்களுக்கும், தங்கள் செல்வாக்கை உபயோகப்படுத்திப் பணம் சம்பாதிக்கலாம் என்ற நோக்கமுடன் வந்திருக்கும் உறுப்பினர்களுக்கும் சலுகை காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டே தீரும். இந்நிர்ப்பந்தத்திற்குக் கட்டுப்படாத தலைவர், நம்பிக்கையில்லாத் தீர்மானத் தின் மூலம் தமது பதவியை இழக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டு விடும். ஆதலால் தலைவர் பதவிக்கு ஆசைப்படுகின்றவர்கள், சபையின் பெரும் பாலான உறுப்பினர்களை எந்த வகையினாலும் திருப்திப்படுத்தி வைத்திருக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.

இதனால் எவ்வளவு யோக்கியமும், திறமையும் உள்ள தலைவரா யிருந்தாலும் அவர் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்று ஆசைப்படுவாரேயானால் ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து அங்கத்தினராக வந்திருப்பவர்களில் "மெஜாரிட்டி" யாரை ஒழுங்கீனமான வழியில் திருப்தி செய்து வைத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின் றார் என்பதை உணரலாம். இந்த நிலையை உண்டாக்கி இருப்பது தற்போ துள்ள சட்டமும், நம்பிக்கையில்லாத் தீர்மானமுமேயாகும் என்பதையும் அறியலாம்.

ஆனால், ஸ்தல ஸ்தாபனச் சட்டத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர இடமில்லாதிருக்குமானால் இத்தகைய ஊழல்களுக்கு இட முண்டாகாது என்று கூறலாமா? என்றால் இப்படியும் கூறமுடியாது. இப் பொழுதாவது உறுப்பினர்களெல்லாம் உண்மையான பொது ஜன ஊழியர் களாயிருந்தால், யோக்கியமுள்ள தலைவரை வைத்திருக்கவும், யோக்கியப்



RangaRakes tamilnavarasam.com

பொறுப்பில்லாத தலைவர்களைப் பதவியை விட்டு நீக்கவும் அதிகார மிருக்கின்றது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் இல்லாவிட்டால் ஒழுங்கீனமாக நடந்து அதிகாரத்தைத் துஷ்பிரயோகஞ் செய்யும் தலைவர்கள் எந்த வகைக்கும் பயமில்லாமல், தற்போதுள்ள சட்டப்படி தலைவர் பதவியேற்ற மூன்று வருஷம் வரையிலும் தமது விருப்பம் போல் தாராளமாக நடக்க இடங் கொடுக்குமாதலால் "ஸ்தல ஸ்தாபனங்"களின் நிர்வாகமானது தற்பொழுது இருப்பதைக் காட்டிலும் இன்னும் படுமோசமாகப் போய்விடும் என்பதில் ஐய மில்லை. ஆகையால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அவசியம் இருந்துதான் தீர வேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம்.

இப்பொழுது "ஸ்தல ஸ்தாபனங்" களில் உள்ள ஊழல்கள் ஒழிந்து அவைகளின் ஆட்சி திறமையாகவும், பொதுஜனங்களுக்குப் பயன்படும் வழியிலும் நடைபெற வேண்டுமானால் அவைகளுக்கு ஒவ்வொன்றும் தனித்தனியே ஒரு நிர்வாக அதிகாரியை நியமனம் பண்ணி, அவற்றின் காரியங்களை நடத்தும் உரிமையை அந்த உத்தியோகஸ்தரிடம் விட்டு விட்டால் போதுமானதாகும் என்பதே நமது நோக்கமாகும். அதாவது, இப்பொழுது சென்னை நகர சபைக்குக் "கமிஷனர்" என்று ஒரு நிர்வாக அதிகாரி இருப்பது போல ஒவ்வொரு "முனிசிபாலிட்டி" களுக்கும், "தாலூகா போர்டு"களுக்கும், "ஜில்லா போர்டு"களுக்கும், அதனதன் வரவு செலவுகளுக்கும், நிர்வாகத்துக்கும் தகுந்த யோக்கியதையில் ஒவ்வொரு நிர்வாக அதிகாரியை நியமிக்கவேண்டுமென்பதே நமது அபிப்பிராயம். இப்பொழுது சென்னை நகரசபையில் அதன்நிர்வாக காரியங்களை நடத்த "கமிஷனர்" என்னும் நிர்வாக அதிகாரி இருப்பதனால் தான் அங்கத்தினர்கள் ஒருவர்க்கொருவர் எவ்வளவு தான் அரசியல் விஷயமாகவும், வகுப்பு சம்மந்தமாகவும் விரோதம் பாராட்டிக் கொண்டாலும் அதன் நிர்வாகம் திறமையாக நடந்து வருகின்றது என்பதில் ஐயமில்லை. இவ்வாறில்லா விட்டால் பெரிய நகரமாகிய சென்னையும் மற்ற -அங்கத்தினர்களும், தலைவர்களும், சண்டைப் போட்டுக் கொண்டிருக்கின்ற நகர சபைக்கும் உட்பட நகரங்களும் லோக்கல் போர்டுகளுக்கு உட்பட்ட ஊர்களும் கஷ்டப்படுகின்ற மாதிரி கஷ்டப்பட வேண்டியதுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆகையால் இதுபோலவே "ஸ்தல ஸ்தாபனங்களுக்கும்" நிருவாக அதிகாரிகள் என்பவர்களை ஏற்படுத்திவிட்டால் அவைகளில் உத்தியோக நியமனங்கள் சம்பந்தமாகவும் கண்ட்ராக்ட் சம்மந்தமாகவும் தற்பொழுது நடைபெறும் ஊழல்கள் நடைபெற இடமே ஏற்படாது. ஸ்தல ஸ்தாபன உத்தி யோகஸ்தர்களும் அங்கத்தினர்களின் தயவுக்கும், சலுகைக்கும் கட்டுப்பட்டு ஒழுங்கீனமான வழியில் நடந்து கொள்ள வேண்டிய நிலைமை மாறி, யோக்கி யர்களாகவும் தங்கள் கடமையைத் திறமையோடு செய்யக் கூடியவர்களா கவும் நடந்து கொள்ள முடியும். இதனால் நிர்வாகம் மிகவும் உயர்வுடைய தாகவும் இருக்கும்.



அடுத்தபடியாக "ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் அங்கத்தவர்கள் ஏராளமாகச் செலவழிப்பதும் ஒழியும். கூடிய வரையிலும் உண்மையான பொது ஜன ஊழியர்களும் யோக்கியர்களும், கல்வியறிவுடையவர்களும் ஸ்தல ஸ்தாபனங்களில் பதவி பெறுவார்கள்,

இதனால் "ஸ்தல ஸ்தாபனங்" களில் மோகமுள்ளவர்கள் "இவ்வாறு செய்வதனால் ஜனநாயகத் தன்மை போய்விடுகிறது" என்று நொண்டிவாதம் கூறுவார்கள். இதனால் ஜனநாயகத்துவம் போய்விடவில்லையென்பதே நமது அபிப்பிராயம். "நிர்வாக அதிகாரி" அந்த ஸ்தாபனத்திற்கு நியமிக்கப்பட்ட ஊழியரே தவிர யதேச்சதிகாரியல்லர். தலைவரும், அங்கத்தவர்களும் யோசித்துச் செய்யும் தீர்மானங்களின் படி தான் "நிர்வாக அதிகாரி" காரியங் களை நடத்திச் செல்லுவாரேயொழிய வேறு அவராக ஒன்றும் செய்வதற்கு அதிகாரமில்லை. அன்றியும் இவ்வதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனப்பிரதிநிதிகளின் தலைவர்களான மந்திரிகளுக்கு ஏற்படுகிறது. இதனால் ஜனநாயகத்துவத்திற்கு விரோதமான சங்கதியும் ஒன்றுமில்லை என்று இதனால் அறியலாம். இம்மாதிரி நிர்வாக அதிகாரியை நியமிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டால்தான் தற்போதைய ஸ்தல ஸ்தாபனச்சட்டம் ஒழுங்கு பெற நடைபெறும் என்பதை எடுத்துக்காட்டவே இவ்வளவு தூரம் கூற முன் வந்தோம். இந்த முறையில் சட்டத்தைத் திருத்த முயற்சிசெய்வதே உண்மை யான ஜனாபிமானிகளின் கடமையாகும். இல்லாத வரையில் சுயமரியாதையும், நாணயமும், திறமையும் உள்ளவர்கள் யாரும் ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் வகிக்கவும், தலைமை வகிக்கவும் இவைகளின் மூலம் தேச மக்களுக்கு நன்மை செய்யவும் இடமில்லை என்றே கூறுகின்றோம். இதற்கு உதாரணம் வேண்டுமானால் தற்பொழுது "ஸ்தல ஸ்தாபனங்"களில் விரல் விட்டு எண்ணக்கூடிய சில ஸ்தாபனங்களே நாணயமான தலைவரைப் பெற்று ஒழுங் காக நிர்வாகம் நடத்திக் கொண்டு செல்லுகின்றனவே தவிர நாணயமும், நிர்வாகத் திறமையும் உடைய தலைவர்கள் பலர் நம்பிக்கையில்லாத் தீர்மா னங்களால் விரட்டியடிக்கப் பட்டதையும் ஒழுங்கீனமும் சக்தியில்லாமையும் உடையவர்கள் பலர் தலைவர்களாக இருப்பதையும் நினைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டுகிறோம்.

ஆனால் இப்பொழுது "நிர்வாக அதிகாரி ஏற்படுத்த வேண்டும்" என்னும் நமது கொள்கைக்கு எதிர்ப்பு இருந்தாலும் இவைகளின் ஊழல்கள் இன்னும் அதிகமாக அதிகமாகக் கடைசியில் உண்மையான ஜன சமூக ஊழியர்கள் இம்முடிவுக்கே வந்து தீருவார்களென்பதில் நமக்கு நம்பிக்கை யுண்டு.

**குடி அரசு – தலையங்கம் – 07.08.1932**



RangaRakes tamilnavarasam.com

# ஏழைகள் கண்ணீர்

தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியினாலும் வேலையில்லா திண்டாட்டத்தினாலும் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாகிப் பரிதவிக்கும் மக்கள் ஏழை மக்களே யாவார்கள். அதிலும், தொழிலாளர்கள் படும் துயரத்தைச் சொல்லத் தரமன்று. ஒவ்வொரு யந்திரசாலைகளிலும், தொழிற்சாலைகளிலும் வேலையாட்களைக் குறைத்துக் கொண்டே வருவதன்மூலம் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் வேலை யற்றவர்களாக வெளியேறுகின்றனர்.

நமது நாட்டுத் தொழிலாளர்கள் பெரும்பாலும், அனேகமாக, எல்லோருமே தினச் சம்பளம் பெறுகின்றவர்களாயிருந்தாலும், வாரச் சம்பளம் பெறுகின்றவர்களாயிருந்தாலும், மாதச் சம்பளம் பெறுகின்றவர் களாயிருந்தாலும், அவர்கள் அந்தக் கூலியைக் கொண்டு ஜீவனஞ் செய்கின்றவர்கள் தான் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. இதைத் தவிர அவர்களுக்கு வேறு பூஸ்திதியோ, ரொக்கப் பணமோ இல்லை. அனேகர் குடியிருக்கவும் சொந்தக் குடிசை இல்லாமல், குடிக்கூலிக்கு வாழ்ந்து வருபவர்கள். இத்தகைய நிலையில் உள்ளவர்களைத் திடீரென்று வேலையும் இல்லையென்று வீட்டிற்குப் போகச் சொல்லிவிட்டால், அவர் களின் கதி என்னாவது என்று கேட்கின்றோம். எங்கும் பணப்பஞ்சம் மக்களை வாட்டுகிற காலத்தில் அவர்கள் தங்கள் பெண்டுபிள்ளைகளைக் காப்பாற்று வது எப்படி?

இன்று பணக்காரர்களோ, நிலச்சுவான்தார்களோ, முதலாளிகளோ மற்றும் யாராயிருந்தாலும் அனைவரும் சௌக்கியம் அனுபவிப்பதற்குக் காரணமாய் இருப்பவர்கள் ஏழைத் தொழிலாளர்கள். நாட்டில் தொழில்கள் வளர்ச்சி அடைவதற்கும், வியாபாரம் வளர்வதற்கும், காரணமாய் இருப்ப வர்கள் ஏழைத் தொழிலாளர்கள். இருந்தும் அவர்கள் நிலை என்ன? இருக்க இடமில்லாமலும் உடுக்க உடையில்லாமலும், உண்ண உணவில்லாமலும், பெண்டு பிள்ளைகளுடன் பட்டினிக் கிடந்து நோயால் வருந்திப் பரிதவிப்பதுதான் அவர்கள் கண்ட பலன்.



இன்று ஒவ்வொரு ரயில்வேக் கம்பெனிகளிலும் ஆட்களைக் குறைத்து வருவதுடன் இன்னும் குறைப்பதற்கும் திட்டம் போட்டு வரு கிறார்கள். இது போலவே அரசாங்கத்தின் அதிகாரத்திலுள்ள தொழிற் சாலைகளிலும் தனிப்பட்ட முதலாளிகளின் ஆதிக்கத்திலுள்ள தொழிற் சாலைகளிலும் ஆட்களைக் குறைத்து வருகிறார்கள். ஆனால் இக் கம்பெனிகளிலும் தொழிற்சாலைகளிலும் உள்ள ஆயிரம், இரண்டாயிரம் என்று சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களைக் குறைக்கக் காணோம். ஏழைத் தொழிலாளர்களின் வயிற்றில் மண்போட்டு பெரிய உத்தியோகஸ்தர்களின் பணப்பெட்டிகள் நிரப்பப் படுகின்றன.

தொழிலாளர்களை குறைப்பதைக் காட்டிலும், தொழில் நேரத்தைக் குறைத்து, விடுமுறை நாளை அதிகப்படுத்தி சம்பளத்தைக் குறைத்துக் கொடுப்பதன்மூலம் தொழிலாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுவதை தற்கால சாந்தியாக நிவர்த்திக்கலாமென்று தொழிலாளர்களின் தலைவர்கள் சிலர் கூறும் யோசனை சிறந்த யோசனையேயாகும். இந்த யோசனைக்கு ஏனைய தொழிலாளர்களும் சம்மதிப்பதாகவும் அறிகின்றோம். இவ்வாறு செய்வதனால் தொழிலாளர்கள் அரை வயிற்றுக் கஞ்சியாவது குடித்துக் கொண்டிருக்க முடியும். இந்த முறையையாவது, தொழிலாளர்களைக் குறைத்துதான் ஆக வேண்டுமென்ற நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகும் கம்பெனிகளும் அரசாங்கமும், முதலாளிகளும் கைப்பற்றுவார்களானால் ஒருவாறு தற்சமயம் அவர்கள் துயரம் நீங்கும் என்றே கூறலாம். ஆனால் இது நிறைவேறுமா என்றுதான் கேட்கிறோம்.

“சுயராஜ்யத்திற்கு” என்றும் “சுதேசி”க்கு என்றும் “பொதுப் பாஷை”க்கு (ஹிந்தி) என்றும் கூச்சல் போட்டு தேசாபிமானிகளாக விளங்குகின்றவர்கள் யாரும் ஏழைத் தொழிலாளர்கள் விஷயத்தில் ஒன்றும் கவலை எடுத்துக் கொள்ளக் காணோம். அரசாங்கமும் அவர்கள் துயரை நீக்க முன்வரக் காணோம். இந்த நிலையிலேயே தொழிலாளர் துயரமும், வேலை யில்லாத் திண்டாட்டமும் வளர்ந்து கொண்டே போகுமானால் கடைசியில் பெரும் ஆபத்தாக முடியுமென்று எச்சரிக்கை செய்கின்றோம். ஆகையால் இப்பொழுதே முதலாளிகளும், மாகாண அரசாங்கங்களும், இந்திய அரசாங்கமும், தொழிலாளர்களின் துன்பத்தை நீக்கத் தாமதமின்றி முயற்சி யெடுத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 07.08.1932**



RangaRakes tamilnavarasam.com

# தமிழர் மகாநாடு

திருச்சி ஜில்லா துறையூரில் சென்ற 6, 7-ம் தேதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் தமிழ்ப் புலவர் மகாநாடு, தமிழ் மாணவர் மகாநாடு, தமிழர் மகாநாடு ஆகிய மகாநாடுகள் கூடி முடிந்தன. இம்மகாநாடு சம்பந்தமான அறிக்கைகள் பத்திரிகைகளிலும், துண்டுப் பிரசுரங்களாகவும் வெளிவந்த காலத்தில் நாம் ஒரு வகையில் மகிழ்ச்சியடைந்ததுண்டு. இதற்குக் காரணம் இம் மகாநாடு, தமிழர் சீர்திருத்தத்தையும், தமிழ் மொழி வளர்ச்சியையும் ஒருங்கே கருதி செல்வர்கள், புலவர்கள், மாணவர்கள், சீர்திருத்தக்காரர்கள், அரசியல்வாதிகள் முதலிய எல்லாத் தமிழர்களும் ஒன்று சேரும் மகாநாடு என்று கருதியதே யாகும்.

நாம் இவ்வாறு அபிப்பிராயப்பட்டது தவறல்ல என்பதற்கு இம் மகாநாட்டு நிர்வாகிகளால் வெளியிடப்பட்டிருக்கும் 9-வது அறிக்கை ஒன்றே போதுமான சாட்சியாகும். அவ்வறிக்கையில்

1. "மக்களுள் வேறுபாடு பிறப்பினால் இல்லை என்பதை உணர்ந்து ஏழை மக்களை நம்மைப் போல் மேன்மையடைவிக்கவும்,

சுதந்தர தாகங் கொண்டுள்ள நம்முடைய நாட்டிற்குக் கல்வியை அடிப் படையாகக் கொண்டாலன்றி அஸ்திவாரமில்லாத, வீடு போலாகுமாத லின், தாய் மொழியைத் தற்காலத்துக்கு ஏற்ற முறையில் பயில்வித்து நம்முடைய நாட்டைச் சீர்திருத்தவும்,

2. சோம்பேரிகள் உண்டு உறங்குவதற்கு இடமாக அமைந்து கிடக் கின்ற பொதுச் சொத்துக்களை நம்முடைய ஏழைமக்களின் கைத் தொழில், கல்வி முதலியவற்றிக்குப் பயன்படுத்த முயற்சிக்கவும்,

3. அறிவு, ஆற்றல், ஆண்மை, கல்வி, செல்வம், கைத்தொழில், வாணிபம் முதலியவற்றில் ஏனைய நாடுகளினின்றும் நம்முடைய தமிழ் நாடு ஒரு சிறிதும் பின்னிட்டதன்று என்பதை மெய்ப்பிக்கவும்"

என்ற பகுதிகள் காணப்பட்டன. இப்பகுதிகளைப் படித்தவர் எவரேனும் இம்



மகாநாடுகள் சீர்திருத்தங் கருதிய மகாநாடுகள் அன்றெனக் கருதமுடியுமா? என்று கேட்கிறோம்.

இத்தகைய அறிக்கைகளைக் கண்ட பின்னர்தான் நம்மவர்களில் பலர், அதாவது சுயமரியாதைத் தோழர்களில் பலர் தமிழர் சமூக முன்னேற்றத் திற்கான தீர்மானங்கள் பலவற்றை எழுதி மகாநாட்டின் காரிய தரிசிகளுக்கு அனுப்பினார்கள்.

ஆனால் மகாநாடு நடைபெறுவதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னர்தான் மகாநாட்டின் வரவேற்புத் தலைவராகிய திரு. த. வெ. உமா மகேஸ்வரம் பிள்ளையவர்கள் "தமிழர் மகாநாடு தமிழ் வளர்ச்சியை மட்டும் கருதிய மகாநாடே யன்றி சீர்திருத்த சம்பந்தமான மகாநாடும் அன்று சமய சம்பந்தமான மகாநாடு மன்று" என்று ஒரு அறிக்கையை வெளியிட்டி ருந்தார்கள்.

தமது வரவேற்புப் பிரசங்கத்திலும் 'தமிழ் வளர்ச்சி இம் மகாநாட்டின் நோக்கமெனின் தமிழ்ப் புலவர் மகாநாடும், தமிழ் மாணவர் மகாநாடும் அதனை நிறைவேற்றக் கூடுமே, தமிழர் மகாநாடு இயற்றத்தகும் கருமம் என்ன? தமிழரில் பெரும்பான்மையோர் தமிழ்ப் புலவரும் அல்லர்; தமிழ் மாணவரும் அல்லர்; தமிழ்க் கலைகளைப் பரவச் செய்ததற்குத் தமிழ்ப் புலவரும், தமிழ் மாணவர்களும் இன்றியமையாத கருவிகள் என்றாலும் மொழிப் பற்றுடைய தமிழர்கள், பொருளையும் தமது செல்வாக்கையும் வரையாது கொடுத்து உதவினாலன்றி தமிழ்ப் புலவர்களும் மாணவர்களும் யாதும் செய்ய இயலாது. இம் முத்திறத்தினரும் ஒன்று சேர்ந்து தமிழ் மொழி வளர்ச்சிக்குரிய வழிகளில், தொண்டாற்ற வேண்டுமெனக் கருதியே மூன்று மகாநாடுகளும் கூட்டப் பெற்றிருக்கின்றன.

இம்மகாநாடுகளின் உண்மை நோக்கங்கள் யாதெனத் தெரியாத படியால் மக்களின் சீர்திருத்தத்தில் கருத்துடைய நண்பர்கள் செய்தித் தாள்களிலும், துண்டுத் தாள்களிலும் தாம் நிறைவேற்ற விரும்பும் முடிவுகளை வெளியிட்டு வருவதைப் பார்த்தேன்' என்று கூறியுள்ளார். இவ்வாறு இவர் அறிக்கை வெளியிட்டதும் வரவேற்புப் பிரசங்கத்திற் கூறியதும் இதற்கு முன் வெளியிட்ட அறிக்கைகளுக்கு முன்னுக்குப் பின் முரண்பட்ட கூற்று என்றுதான் நாம் கூறுவோம். மகாநாடு நடத்துவதாக முடிவு செய்த ஆரம்ப கால முதல் மகாநாட்டுத் தேதிக்கு இரண்டு மூன்று தினங்களுக்குமுன் வரையில் "தமிழர் மகாநாடு தமிழரின் சீர்திருத்தத்திற்காகவும், தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் கூட்டப்படுகிறது" என்று அறிக்கை மேல் அறிக்கைகள் வெளியிட்டவர்கள் மகாநாட்டு நிர்வாகிகளே ஒழிய வேறு யாரும் அல்லர். இவர்களுடைய அறிக்கைகளைக் கண்டுதான் மக்களின் சமூக சீர்திருத்தத் திற்குப் பாடுபடும் அன்பர்கள் பல முடிவுகளை எழுதி அனுப்பினார்கள். திரு. உமா மகேசுவரம் பிள்ளையவர்கள் சில தினங்களுக்குமுன் சீர்திருத்தக்



RangaRakes tamilnavarasam.com

காரர்களின் தீர்மானங்களைக் கண்டு வெருண்டு வெளியிட்ட அறிக்கையையும், தமது வரவேற்புப் பிரசங்கத்தில் கூறிய செய்தியையும், மகாநாடு நடத்த ஆரம்பித்த காலத்திலேயே வெளியிட்டு மகாநாட்டு நிர்வாகிகளின் 9 - வது அறிக்கை போன்ற அறிக்கைகளையும் வெளியிடாமல் இருந்திருப்பார்களானால், யாரும் "செய்தித்தாள்களிலும், துண்டுத்தாள்களிலும் தாம் நிறைவேற்ற விரும்பும்" சீர்திருத்த சம்பந்தமான தீர்மானங்களை வெளியிட்டிருக்கமாட்டார்கள் என்பது உறுதி.

இனி, இவர்கள் முதலில் "தமிழர் சீர்திருத்தத்திற்காகவும், தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் மகாநாடு கூட்டுகின்றோம்" என்று அறிக்கைகளை, வெளியிட்டு விட்டுக் கடைசியாகச் சீர்திருத்தக்காரர்களின் தீர்மானங்களைக் கண்டபின் "சீர்திருத்த மகாநாடும் அன்று சமயவளர்ச்சி மகாநாடும் அன்று மொழி வளர்ச்சி ஒன்றையே கருதிய மகாநாடு" என்று தீர்மானித்ததற்குக் காரணம் என்னவென்பதைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

இம்மகாநாட்டைக் கூட்ட ஏற்பாடு செய்தவர்கள் அனைவரும் உண்மையான தமிழ்ப் பற்றும் தமிழ் வளர்ச்சியில் நோக்கமும் உடையவர்களாய் இருந்தாலும் "சைவ சமய பக்தர்கள்" என்பதை யாரும் அறிவார்கள். இவர்கள் "சைவத்தை விட்டால் தமிழ் இல்லை;. தமிழை விட்டால் சைவம் இல்லை" என்னும் கொள்கையினராய் இதுகாறும் இவை இரண்டையும் இரு தோள்களிலும் தூக்கிப் போட்டுக் கொண்டு திரிந்தவர்கள் என்பதையும் யாரும் அறிவார்கள். இத்தகையவர்கள் சீர்திருத்தத்தின் பெயரால் கூட்டும் மகாநாடு சீர்திருத்தத்தின் பெயராலும் தமிழின் பெயராலும் சைவத்தை வளர்க்க முயலும் மகாநாடாக இருக்கும் என்று கருதியே பல சீர்திருத்தக் காரர்கள் மகாநாட்டினருக்கு எச்சரிக்கை செய்யவும், பல தீர்மானங்களை அனுப்பவும் முன் வந்தார்கள். உண்மையிலேயே இந்த மகா நாட்டினர் சீர்திருத்தத்தில் ஆர்வமுடையவர் களாக இருந்தால் சீர்திருத்தக்காரர்களின் அறிக்கைகளைக் கண்டோ தீர்மானங்களைக் கண்டோ பயப்பட்டிருக்க வேண்டியதில்லை. விவாதத்திற்கு இடமில்லாத சீர்திருத்தத் தீர்மானங்களையெல்லாம் மகாநாட்டில் நிறைவேற்றியிருக்கலாம். விவாதத்திற்கு இடமான விஷயங்களை மகாநாட்டினரும் கொண்டு வராமலிருந்தால், சீர்திருத்தக் காரர்களும் கொண்டு வராமலிருந்திருப்பார்கள். மகாநாடும் முதலில் எதற்கென்று கூட்டுவதாக அறிக்கைகள் வெளியிடப்பட்டனவோ அதற்கென்று கூட்டப்பட்டதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதாகவும் முடிந்திருக்கும். இவ்வாறு செய்ய மகாநாட்டினர் முன் வராததிலிருந்தே இவர்கள் நோக்கம் வேறு என்பதும், கடைசியில் அது நிறைவேற முடியாமல் போய் விட்டதென்பதும் விளங்கிவிட்டது.

கடைசியாக, மகாநாட்டில் மொழி சம்பந்தமான தீர்மானங்கள் மட்டுமே நிறைவேற்றப்படும் என்ற முடிவுக்கு வந்த பின்னும் அதைப்பற்றிச் சீர்திருத்தக்காரர்கள் ஒன்றும் ஆட்சேபிக்கவேயில்லை. ஆனால் மத



சம்பந்தமில்லாமல் மொழி சம்பந்தமாக மாத்திரம் செய்யப்படும் தீர்மானங்களில் தாங்களும் பங்கெடுத்துக் கொள்வதாகவும் சீர்திருத்தக்காரர்கள் ஒப்புக் கொண்டனர்.

திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியார் கல்வி மந்திரி அவர்கள் தலைமையில் இரண்டாவது நாள் கூடிய தமிழர் மகாநாட்டில் மாத்திரம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அத்தீர்மானங்கள் யாவும் தமிழ்மொழி சம்பந்தப்பட்டனவே யொழிய மதச் சம்பந்தமானவை அல்ல. சில தீர்மானங்களோடு ஒட்டிக் கொண்டிருந்த மதச் சம்பந்தமான விஷயங்களும் சீர்திருத்தக்காரர்களால் திருத்தப்பட்டு அவைகள் ஏகமனதாக நிறைவேறின.

இவ்வாறு மகாநாடு வெற்றியுடன் முடியும் பொருட்டு, மத சம்பந்த மாகப் பிடிவாதஞ் செய்யாமல் விட்டுக் கொடுத்த மகாநாட்டு நிர்வாகிகளையும், மொழி சம்பந்தப்படாத மற்ற சீர்திருத்தத் தீர்மானங்களை வற்புறுத்தாமல் விட்டுக்கொடுத்த சீர்திருத்தக்காரர்களையும் எல்லோரும் ஏகமனதாக மொழி வளர்ச்சி கருதி மகாநாட்டை அமைதியோடு நடத்தியதற்காக இருபாலரையும் பாராட்டுகின்றோம். இவ்வாறு அமைதியோடு நடைபெறுவதற்கு முக்கியக் காரணமாயிருந்தவர், தமிழர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த கல்விமந்திரி திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியார் அவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

மொழி வளர்ச்சி கருதி, பல வேறுபட்ட கொள்கையினரும் ஒன்று சேர்ந்து கூடிய மகாநாடு இது ஒன்றேயாகும். ஆதலால் இதில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வீண்போகாமல் - ஏட்டுச் சுரைக்காயாக இல்லாமல் - பலன் அளிக்குமென்று நம்புகின்றோம். கடைசியாக மற்றுஞ் சில விஷயங்களையும் கூறாமலிருக்க முடியாமைக்காக உண்மையாகவே வருந்துகின்றோம். அவையாவன:-

மகாநாட்டின் நிர்வாகத்தினர்களில் சில சில்லரைப் பேர் வழிகள் நடந்துகொண்ட வெறுக்கத் தகுந்த முறைகளேயாகும். மகாநாட்டிற்குச் சீர்திருத்தக்காரர்களாகிய சுயமரியாதைத் தோழர்களும் ஏராளமாக வந்திருந்தனர். இவ்வாறு வருவார்கள் என்ற விஷயமும் முன்னரே மகாநாட்டு நிர்வாகிகளுக்குத் தெரியும். அப்படியிருந்தும், சுயமரியாதைத் தோழர்களின் மனம் புண்படும் படியான வாக்கியங்கள் எழுதிய இரண்டொரு "போர்டு"கள் போடப்பட்டிருந்தன. இந்த போர்டுகளை எடுத்துவிட வேண்டுமென்று மகாநாட்டுத் தலைவர்களில் சிலர் சொல்லியும் கூட எடுக்கப்படவில்லை. கடைசியில் இவைகள் சுயமரியாதைக்காரர்களின் முயற்சியினாலேயே மகாநாட்டு நிர்வாகிகளுக்குத் தெரிவித்து எடுக்கப்பட்டன.

மகாநாடு தொடங்கும் பொழுதும், இடையிலும் சமய சம்பந்தமான பாடல்கள் பாடுவது முறையல்லவென்று தெரிவிக்கப்பட்டும், பிடிவாதமாக



RangaRakes tamilnavarasam.com

அப்பாடல்களையே பாட முயற்சித்தது வெறுக்கத் தகுந்த செயலாகுமென்றே கருதுகின்றோம். இப்பிடிவாதம் காரணமாகவே சிறிது குழப்பமும் ஏற்பட்ட தாகத் தெரிகிறது.

முதல் நாள் கூட்டத்தில், சுயமரியாதைத் தோழர்களில் சிலர் மேடையின்மேல் உட்கார்ந்திருந்ததைக் கண்டு பொறுக்காமல் இரண்டாம் நாள் மேடையின் மேல் உள்ள நாற்காலிகளின் மேல் பெயர்கள் எழுதிய சீட்டுக்கள் கட்டப்பட்டிருந்தன. ஆனால் அப்பெயர்களில் மகாநாட்டிற்கு வராதவர்கள் பெயர்கள் கூட இருந்ததாகவும், பெயர்கள் எழுதிய சீட்டுப்படி யாரும் உட்காரவில்லை என்பதாகவும் தெரிகிறது. ஆகவே இச்செயல் சுயமரியாதைத் தோழர்கள் எவரும் மேடையின் மேல் உட்காரக் கூடாது என்பதற்காகச் செய்யப்பட்டது என்பது நன்றாக விளங்கிவிட்டது.

இன்னும் சுயமரியாதைக்காரர்கள் கலகம் பண்ணினால் அவர்களை அடிப்பதற்காக ஆட்கள் தயாரித்து வைத்திருந்ததாகவும் நம்பிக்கையான இடங்களிலிருந்து கேள்வியுற்றோம்.

மிகவும் கேவலமாக இருந்த மற்றொரு விஷயம் குறிப்பிடத் தகுந்த தாகும். போலீஸ்காரர்களை பிரம்புடன் கொண்டு வந்து வைத்திருந்ததும், அவர்கள் சாதாரணமாக வெளியே செல்ல எழுந்திருப்போரைக் கூட பிரம்பைக் காட்டி, "உட்காரு, வெளியே போ" என்று ஆர்ப்பாட்டம் பண்ணியதும் மிகவும் வெட்கக்கேடான செய்கையாகும். இவ்வளவும் சுயமரியாதைத் தோழர்களுக்குப் பயந்து செய்த காரியம் என்றே சொல்லப்படுகின்றது. இது உண்மையானால் படித்த பண்டிதக் கூட்டத்தாரின் பயங்கொள்ளித் தனத்திற்கும், அறியாமைக்கும் இதைவிட வேறு அத்தாட்சி வேண்டியதில்லை.

சுயமரியாதைக்காரர்கள் கலகக்காரர்கள் அல்லர் என்பதையும் "போலீஸ்" முதலிய எந்த உதவியும் இல்லாமல் 5000, 10000 மக்கள் கூடியிருக்கும் மகாநாடுகள் பலவற்றை அமைதியுடன் நடத்தியவர்கள் நடத்துகிறவர்கள் என்பதையும், நியாயத்தின் பொருட்டு வாதிட எந்தப் போலீசுக்கும் அடியாட்களுக்கும் அஞ்சமாட்டார்கள் என்பதையும் மகா நாட்டு நிர்வாகிகள் உணராமல் போனதற்காக உண்மையில் நாம் பரிதாபப் படுகின்றோம். தமிழ் மொழி சம்பந்தமாகக் கூடிய ஒரு மகாநாட்டைத் தமிழர்கள் போலீஸ் உதவியைக் கொண்டு நடத்தினார்கள் என்றால் இதைவிட வேறு என்ன அவமானம் வேண்டும்?

இன்னும் சுயமரியாதைத் தோழர்கள் விஷயத்தில் மகாநாட்டு நிர்வாகிகளில் குறுகிய நோக்கமுடைய சில சில்லரைப் பேர்வழிகள் காட்டிய மனோபாவங்களை வெளியிட வெட்கப்படுகிறோம்.

இக்காரியங்களையெல்லாம் வெளியிடுவதன்மூலம் யாரையும் அவமானப்படுத்த வேண்டுமென்றோ, மனம் நோகச் செய்ய வேண்டுமென்றோ நாம் கூறவில்லை. இனிமேலாவது இவர்கள் மகாநாடு கூட்டும் காலங்களில் இவ்வாறு கேவல புத்தியுடன் நடந்து கொள்ளுவோரை மகாநாட்டு நிர்வாகங்களில் சேர்த்துக் கொள்ளாமலிருக்கும் பொருட்டே கூறினோம்.



கடைசியாக சுயமரியாதைத் தோழர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டிரா விட்டால் இந்தத் தமிழர் மகாநாடு பெரும்பாலும் சைவ சித்தாந்த மகாநாடாகவே முடிந்திருக்க கூடும் என்பதில் ஐயமில்லை. சுயமரியாதைத் தோழர்கள் கலந்து கொண்டதனால்தான் இது உண்மையான தமிழ் மொழி வளர்ச்சி மகாநாடாக முடிந்தது என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

இச்சமயத்தில், தமிழ் பண்டிதர்களுக்கும், தமிழபிமானிகளுக்கும் சில வார்த்தைகள் கூற விரும்புகிறோம். சுயமரியாதைத் தோழர்கள், தமிழ் மொழிவளர்ச்சி விஷயத்தில் எந்த வகையிலும் மற்ற பண்டிதர்களுக்கும் தமிழ் அபிமானிகளுக்கும் பிற்பட்டவர்கள் அல்லர் என்று தெரிவிக்கின்றோம். இதற்கு சுயமரியாதைத் தோழர்கள் தமிழர் மகாநாட்டிற் கலந்து கொண்டதும், தமிழ் வளர்ச்சிக்கான தீர்மானங்களிலும் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டதுமே உதாரணமாகும். உண்மையில் "ஹிந்தி" மொழியைக் கண்டிப்பதாக மகாநாட்டில் மெஜாரிட்டியினரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், சுயமரியாதைத் தோழர்கள் இல்லாவிட்டால் தோற்றே போயிருக்கும். "ஹிந்தி" கண்டனத் தீர்மானத்தைச் சிலர் எதிர்த்த பொழுது, அவ்வெதிர்ப்புக்குச் சரியான பதில் இறுத்தி "ஹிந்தி" கூடாது என்பதை பெரிய "மெஜாரிட்டி" யாரை ஒப்புக் கொள்ளச் செய்தவர்கள் சுயமரியாதைத் தோழர்களே யாவார்கள் என்பதை நாம் கூற வேண்டியதில்லை.

ஆனால் மற்ற பண்டிதர்களில் பலர் விரும்புவது போல, புராணங்களை எழுதுவதும், அவைகளைப் பற்றிப் பேசுவதும், தேவார, திருவாசகங்களைப் பாடுவதும்தான் தமிழ் வளர்ச்சி என்று சுயமரியாதைத் தோழர்கள் கருதுவதில்லை.

மக்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியதும், அறிவையும், திறமையும், தைரியத்தையும் உண்டாக்கக் கூடியதும் ஆகிய சிறந்த கலைகளையெல்லாம் தமிழில் எழுதிப் பரவச் செய்வதன் மூலம், மக்களுடைய அறிவையும், தமிழ் மொழியையும் செம்மை செய்வதே தமிழ் வளர்ச்சி என்று கருதியிருப்பவர்கள் என்று கூறுகிறோம். இதுதான் உண்மையான தமிழ் வளர்ச்சிக்கான வழியுமாகும். ஆகையினால் இனியேனும் "மதம்" என்றும் "சமய உணர்ச்சி" என்றும் "தெய்வீகப் பாடல்கள்" என்று சொல்லுகின்ற பல்லவிகளை விட்டுவிட்டு உண்மையான தமிழ் வளர்ச்சிக்காக உழைக்க வேண்டுகிறோம். இவ்வகைக்கு சுயமரியாதைத் தோழர்களும் மற்றவர்களும் துணை நிற்பார்கள் என்பதில் ஐயமில்லை என்று கடைசியாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 14.08.1932**



RangaRakes tamilnavarasam.com

# கல்வி மந்திரி பிரசங்கம்

சென்ற 4-8-32ல் நடந்த சென்னைச் சர்வகலா சாலைப் பட்டமளிப்பு விழாவின் போது நமது மாகாண கல்வி மந்திரி திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்கள் பட்டதாரிகளுக்குச் செய்தப் பிரசங்கம் மிகவும் சிறந்த தொன்றாகும். அவர் தற்காலக் கல்வியில் உள்ள குற்றங்களையும், கல்வியின் லட்சியம் இன்னதென்பதையும், கல்வி எம்முறையில் போதிக்கப்பட வேண்டு மென்பதையும், எத்தகைய கல்வி அவசியமென்பதையும், கற்றவர்கள் செய்ய வேண்டிய வேலையையும் தெள்ளத்தெளிய விளக்கிக் காட்டியிருக்கிறார்.

கல்வியானது உலக வாழ்க்கைக்குப் பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும். வெறும் வித்தையை மாத்திரம் கற்றுக் கொடுப்பதனால் தேச மக்களின் துன்பத்தைப் போக்க முடியாது. ஆகையால் தொழில் கல்வியை வளர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்னும் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்.

அன்றியும் தற்காலத்தில் உயர்தரக் கல்விக்கு அதிகமாக செலவு செய்வதைக் காட்டிலும், ஆரம்பக் கல்வியின் பொருட்டு அதிக கவனம் செலுத்த வேண்டும்; ஆரம்பக்கல்வியின் மூலம் தேசமக்கள் எல்லோரையும் அறிவுடையராக்க முயல வேண்டும் என்னும் சிறந்த அபிப்பிராயமும் கல்வி மந்திரியின் பிரசங்கத்தில் காணப்படுகிறது.

நமது நாட்டு மாணவர்களுக்குத் தற்சமயம் எல்லா விஷயங்களையும் ஆங்கிலத்தின் மூலமே கற்பிக்கப் படுவதானால் விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்கு அதிக நாளாகிறது. ஆங்கில பாஷையைத் தவிர மற்ற விஷயங் களைத் தாய்மொழியின்மூலம் கற்பிக்கப்பட்டால் குறைந்த காலத்திலும் சுருங்கிய செலவிலும் கற்கக் கூடும். ஆகையால் இவ்வாறு கற்பிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று சில காலமாகக் கல்வித் துறையில் உழைத்துவருவோர் சிலர் பிரயாசைப்பட்டு வருகின்றனர். நமது கல்வி மந்திரியவர்கள் இவ்வபிப்பிராயத்தை வற்புறுத்தி தாய்மொழிக் கல்வியின் அவசியத்தை எடுத்துக்காட்டிப் பேசியிருப்பது கவனிக்கத்தக்க தாகும்.

தற்பொழுது தேசீயவாதிகளில் பலர், ஆங்கில பாஷையின் மீதும் வெறுப்புக்கொண்டு, அதற்குப் பதிலாக 'ஹிந்தி' பாஷையை இந்தியாவிற்குப் பொதுப்பாஷையாக்க வேண்டும் என்று முயற்சி செய்து வருகின்றனர். வட நாட்டார், தங்கள் பாஷையின் மேல் உள்ள அபிமானம் காரணமாக



ஆரம்பித்த இம்முயற்சியைத் தென்னாட்டில் உள்ள தமிழ் மொழியின் மேல் வெறுப்புக் கொண்ட பார்ப்பனர்களும் ஒப்புக் கொண்டு இதன் பொருட்டுப் பெரும் முயற்சி செய்துவருகிறார்கள். ஆனால் நாம் ஆதிமுதல் 'ஹிந்தி' பொது மொழியாவதற்குத் தகுதி உடையதன்று என்று சொல்லிவருகிறோம். ஹிந்தி மொழியில் விஞ்ஞானக் கலைகள் ஒன்றேனும் இல்லையென்பதையும், இலக்கியங்கள் இல்லையென்பதையும், தமிழர்க்கு கஷ்டமான மொழி என்பதையும், ஆங்கிலத்தை அன்னிய மொழியென்றால் ஹிந்தியும் அன்னிய மொழிதான் என்பதையும், ஹிந்தியைப் பொது மொழியாக்க வேண்டுமென்றால் முஸ்லீம்கள் உருதுவைப் பொதுமொழியாக்க வேண்டு மென்கிறார்களாதலால் இதன் மூலம் இந்து - முஸ்லீம் கலகம் நேரும் என்பதை யும் அறிந்தவர்கள் நாம் சொல்லுவதை ஒப்புக் கொள்ளாமல் இருக்கமாட்டார் களென்பது நிச்சயம். ஆதலால் தற்காலத்தில் அதிகமான மக்களால் பேசப் படுவதும், உலகம் முழுவதும் பரவியிருப்பதும், எல்லாக் கலைகளும் நிரம்பி யிருப்பதும் ஆகிய ஆங்கிலத்தையே பொது மொழியாக வைக்க வேண்டும் என்றும் கூறிவருகின்றோம். கல்வி மந்திரியவர்களும் ஆங்கிலமே பொது மொழியாக இருக்க வேண்டும் என்று தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டிருப் பதை நாம் பாராட்டுகிறோம்.

கல்வியானது, கற்றவர்களுக்குப் பகுத்தறிவை உண்டாக்கக் கூடிய தாகவும், பழய குருட்டுப் பழக்க வழக்கங்களைப் போக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டுமென்றும், இதற்கேற்ற முறையில் கல்வியைத் திருத்தி அமைக்க வேண்டுமென்றும் நாம் கூறிவருகிறோம். இவ்வபிப்பிராயமும் கல்வி மந்திரியின் பிரசங்கத்தில் காணப்படுகின்றது.

கற்றவர்கள் உத்தியோகத்திற்கென்று கற்காமல், அறிவுக்கென்றும், நாட்டின் நன்மைக்கென்றும் கற்று, தேசமக்களைச் சீர்திருத்த வேண்டும் என்னும் அபிப்பிராயத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள். கற்றவர்களெல்லாம், கிராமப் புனருத்தாரண வேலையில் ஈடுபட்டு கிராமாந்தரங்களையும் அங்குள்ள மக்களையும் சீர்திருத்த முயல வேண்டும் என்றும், இதுவே தேசீய வேலையும், தேசீய நோக்கமும் ஆகும் என்றும் குறிப்பிட்டிருப்பது நமது நாட்டுக் கல்விமான்களால் கவனிக்கக் கூடியதொன்றாகும்.

தற்பொழுது கற்றவர் கூட்டம், தேசமக்களின் முன்னேற்றத்தில் சிறிதும் கவலையில்லாமல் தங்கள் சுயநலம் ஒன்றையே கருதி உத்தியோகம் ஒன் றையே நாடித்திரிந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் கல்விமுறை என்பதில் ஐயமில்லை. ஆகையால், இனியாவது கல்விமுறை சீர்திருத்தப் பட்டு நாட்டின் முன்னேற்றத்துக்கு உபயோகத்திற்கு ஏற்ற முறையில் கற்பிக் கப்படுவதற்கு முயற்சி செய்யுமாறு வேண்டுகிறோம். இறுதியாக இத்தகைய சிறந்த அபிப்பிராயங்களைத் தைரியத்தோடு வெளியிட்ட திரு. ரெட்டியார் அவர்களைப் பாராட்டுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 14.08.1932**



RangaRakes tamilnavarasam.com

# பர்னாட்ஷா - மேத்தா

நமது இயக்கப் பிரசாரத்தைக் கண்டு நமது நாட்டு வைதீகர்களும், பண்டிதர்களும் நடு நடுங்குகிறார்கள், நமதியக்கக் கொள்கைகள் எல்லா மக்கள் மனத்திலும் பதிந்துவிட்டால் தங்கள் சுயநலத்திற்குக் காரணமாக இருக்கும் வைதீகம் அழிந்துவிடும் என்று அஞ்சுகிறார்கள். உண்மையில் இவ்வாறு பயப்படுவதற்குக் காரணம் பகுத்தறிவில்லாமையும், பழைய சாஸ்திரங்களிலும், பழக்க வழக்கங்களிலும் வீண் அபிமானம் கொண்டிருப் பதுமேயாகும். அபிமானத்தைப்போல அறிவைத் தடைபடுத்தும் கருவி உலகத்தில் வேறு ஒன்றும் இல்லை. எவ்வளவுதான் படித்தவர்கள் மூட நம்பிக் கைகளை ஒழிக்க அஞ்சி அவைகளைக் காப்பாற்ற முயன்றாலும் காலம் சும்மா விடுவதில்லை. உலகம் புகழும் பரந்த அறிவினர்கள் உள்ளத்தில் உண்மை உணர்ச்சித் தோன்றி வெளிப்பட்டு விடுகின்றது.

உலகத்தில் உள்ள கவிஞர்களில் மிகச் சிறந்த - பரந்த - அறிவினராகிய "ஜியார்ஜ் பர்னாட்ஷா" என்பவரைப்பற்றி அறியாதார் எவரும் இலர். அவர் கூறுவது முழுவதும் நமது இயக்கக் கொள்கைக்கு ஆதரவளிக்கக் கூடிய மொழிகளேயாகும். அவர் எழுதிய நூல்களைக் கற்றோர் அனைவரும் அவருடைய அபிப்பிராயங்களை நன்கு அறிவார்கள். அவர் இங்கிலாந்தில் சமீபத்தில் ஆகாசவசனி மூலம் ஒரு பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தின் சுருக்கம் வருமாறு:-

"நான் மிகவும் பெரிய மனிதன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். பிரிட்டிஷ் ஆகாயவசனிக் கார்ப்பொரேஷனும் இவ்வாறே கருதுகிறது. நானும் ஒரு சாதாரண தாடியுள்ள கிழவனைப் போலவே இருக்கிறேன் என்பதை என்படத்தின் மூலம் அறிந்திருப்பீர்கள். நீங்கள், நான் பெரிய மனிதனானது எப்படி என்னும் ரகசியத்தை அறிய ஆசைப்படுவீர்கள்.

உண்மையில் பெரிய மனுஷனென்றோ, பெரிய மனுஷி என்றோ யாரும் இல்லை. மக்கள் கொண்டுள்ள பலவாறான மூட நம்பிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

குழந்தைகளால் பெற்றோர்களுக்குப் பெரும் பொறுப்பு உண்டாகிற தென்று பலர் கூறுகிறார்கள். இப்படி கூறுவது சிறிதும் பொருளற்ற வார்த்தை யாகும். குழந்தைகளால் ஏற்படும் பெரும் செலவைப் பெற்றோர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது.



இறந்து போனவர்களுக்குப் பதிலாக புதிய மக்களை உண்டாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்ததாகும். இதன் பொருட்டு அர சாங்கத்தார் பெற்றோர்களுக்குத் தாராளமாகப் பண உதவி செய்ய வேண்டும்.

இறந்து போனவர்களுக்குப் பதிலாகப் புதிய மக்களை உண்டாக்கு வதனால் ஏற்படும் செலவு முழுவதும் இப்பொழுது பெற்றோர்களையே சேருகிறது. ஆனால் பிரமச்சாரிகளுக்கு இவ்விஷயத்தில் எவ்வகையான செலவுமில்லை.

ஆகையால் பெண்களுக்குக் கொஞ்சமேனும் புத்தி இருக்குமாயின், அரசாங்கத்தார் குழந்தைகளைப் பெறுவோர்களுக்குத் தக்க ஒத்தாசை செய்வதாக உறுதி கூறாமலிருக்கும் வரையிலும், தாங்களும் பிரம்மச்சரி யத்தை மேற்கொண்டு "குழந்தைகளைப் பெறமுடியாது" என்று கண்டிப்பாக அரசாங்கத்தாருக்கு எச்சரிக்கை செய்து விட வேண்டும்."

இதுதான் திரு. பர்னார்ட்ஷா அவர்களின் பிரசங்கமாகும். இதன் பொதுக் கருத்து, நாட்டின் ஜனப்பெருக்கத்தைக் காப்பாற்ற வேண்டிய கடமையும், மக்கள் தொகையை அதிகப்படுத்த வேண்டிய கடமையும் அரசாங்கத்தைச் சார்ந்தது என்பதாகும். இத்தகைய சிறந்த அரசாங்கம் ஏற்பட வேண்டுமானால் முதலில் மக்களிடம் இருக்கும் மூட நம்பிக்கைகள் யாவும் ஒழிய வேண்டும் என்று தான் நாம் கூறுகிறோம்.

அடுத்தபடியாக தொழிலாளர் தலைவர்களில் ஒருவரான திரு. யமுனா தாஸ் மேத்தா அவர்கள் சென்ற 6-8-32 வெள்ளிக்கிழமை மாலை பம்பாய் பிரவொட்ஸ்கி விடுதியில் மாணவர் கூட்டத்தில் சமதர்மத்தைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்துள்ளார். அப்பிரசங்கம் வருமாறு:-

"மக்களின் சுபாவமே சமதர்மத்தை நாடி நிற்கின்றது. சமதர்மத்தின் தத்துவம் ஜீவகாருண்யமுடையது. இக்கொள்கை மற்றய நாடுகளை விட இந்தியாவிற்கு மிகவும் அவசியமாகும். ஆகையால் இந்த தத்துவத்தை நன்றாக உணர்ந்து ஆதிக்கத்தையும் வேற்றுமையையும் ஒழிக்கும்படி மாணவர்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

பண்டைக் காலத்தில் இருந்த மதத்தலைவர்களும், அறிஞர்களும், மக்களுடைய வறுமைத் துன்பத்தைப் போக்கும் பொருட்டு "தர்மம் புரிய வேண்டியது அவசியம்" என்று உபதேசம் புரிவதை வழக்கமாகக் கொண்டி ருந்தார்கள். ஜன சமூகம் தற்பொழுது எந்த அடிப்படையின் மேல் இருக் கிறதோ அந்த அடிப்படையை அடியோடு மாற்றி வேறு விதமாக அமைத்து விட்டால் தருமம் கொடுப்பதும், தருமம் வாங்குவதும் (பிச்சை எடுப்பது) ஒழிந்து போகும் என்பதே சமதர்ம வாதிகளின் அபிப்பிராயமாகும்.

இப்பொழுதுள்ள ஜன சமூக அமைப்பின்படி மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய அவசியமான சாதனங்கள் எல்லாம் சில மனிதர்களின் ஆதிக்கத்



RangaRakes tamilnavarasam.com

தில் உள்ளன. உணவுப் பொருள்களைத் தரும் விளைநிலங்கள் ஜன சமூகத் திற்குப் பொதுவாக இல்லை. அவைகள் சிலருடைய ஆதிக்கத்தில் மட்டுமே இருக்கின்றன. நிலம் வேண்டுமானால் நிலச் சுவான்தார்களிடம் பணம் கொடுத்து வாங்க வேண்டி இருக்கிறது.

யாருக்கும் முதலே இருக்கக் கூடாதென்று சமதர்மவாதி கூறவில்லை. முதல் இல்லா விட்டால் எக்காரியமும் நடைபெறாது. ஆனால் ஒரு அளவுக்கு மேல் தனிப்பட்ட சொத்து இருப்பதற்கு இடமில்லை. எல்லோரையும் ஒரே அளவுக்குக் கட்டுப்பாடு செய்வதும் கஷ்டமானதே. ஆனால் லட்சாதிபதியின் மகனுக்கும், தோட்டியின் மகனுக்கும் உள்ள வேற்றுமையை ஒழிக்க வேண்டுமென்பதே சமதர்வாதியின் கொள்கையாகும். பகுத்தறிவைத் துணை யாகக் கொண்டால்தான் இத்தகைய சமதர்மம் ஏற்படும்படி செய்யலாம்."

என்பது திரு. மேத்தா அவர்களின் பிரசங்கமாகும், இதிலிருந்து எந்தக் கொள்கை பரவவேண்டுமானாலும், அது ஐக்கிய ஆட்சிக் கொள்கை யானாலும், பூரண சுயேச்சைக் கொள்கையானாலும், சமதர்மக் கொள்கை யானாலும், பொது உடமைக் கொள்கையானாலும் முதலில் மக்களிடமுள்ள மூட நம்பிக்கைகள் அழிய வேண்டும். அதன் பின்தான் ஜனசமூகத்திற்கு நன்மையை அளிக்கத் தகுந்த எந்த அரசியல் அமைப்பையும் ஏற்படுத்த முடியும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய அபிப்பிராயத்தையே அறிவுடை யோர் அனைவரும் வெளியிட்டு வருவதை மேற்கூறிய அபிப்பிராயங் களைக் கொண்டு உணரலாம்.

உலகம் இவ்வாறு விரைந்து சமதர்ம உலகத்திற்குச் சென்று கொண்டி ருப்பதை அறியாதக் கிணற்றுத் தவளைகள் சுயமரியாதை இயக்கத்தைப் பழிக்கத் தொடங்குகிறார்கள். அவ்வியக்கத்தினால் உண்டாகும் நன்மையை உணராமல்; கோயிலை இடிக்கச் சொல்லுகிறது;. குளத்தைத் தூர்க்கச் சொல்லுகிறது; மதத்தை அழிக்கச் சொல்லுகிறது; சாஸ்திரங்களை கொளுத்தச் சொல்லுகிறது; ஜாதியைப் போக்கச் சொல்லுகிறது என்று கூறி பாமர மக்களை அதற்கு எதிராகத் திருப்ப முயற்சிக்கிறார்கள். ஆனால் மேற்கூறியவாறு இவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் மேல் பழிசுமத்துவதாகக் கூறுவதாகக் கருதிக்கொண்டு செய்யும் பிரச்சாரமே உண்மையான சுயமரியாதைப் பிரச்சார மாகும். அறிவுடையவர்கள் இதை யோசித்துப் பார்த்தால், அதாவது சுயமரியாதை இயக்கம் இவ்வாறு கூறுவதற்குக் காரணம் என்னவென்பதை ஆராய்ந்து பார்த்தால் உண்மையை அறிந்து கொள்ளுவார்கள் என்பது நிச்சயம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 14.08.1932**



# இதற்கு என்ன சொல்லுகிறார்கள்?

மக்களுக்குள் எந்த வகையினாலும் வித்தியாசங்கள் என்பன சிறிதும் இல்லை. ஆனால் தற்போது காணப்படும் வித்தியாசங்களை ஏற்படுத்தி ஒரு கூட்டத்தாரை உயர்வாகவும், மற்றொருக் கூட்டத்தாரைத் தாழ்வாகவும், மற்றுஞ்சில கூட்டத்தாரை நடுத்தரமானவர்களாகவும், மற்றும் பலரைத் தாழ்த்தப்பட்டவர்களாகவும், மற்றும் பலரைத் தீண்டாதார்களாகவும் பிரித்து பிரித்து வேறு வேறாக வைத்திருப்பது சுயநலங் கொண்ட மக்களால் செய்யப்பட்ட ஏமாற்றேயன்றி வேறல்ல. உண்மையில் நோக்கும் போது எல்லா மனிதர்களும் சமமான நிலையையும், இன்பத்தையும், வாழ்வையும் பெறுவதற்குத் தகுதியுடையவர்களே யாவார்கள். ஆகையால் மக்களுக்குள் உள்ள உயர்வு தாழ்வு வேற்றுமைகளை ஒழித்து எல்லோரையும் ஒன்று படுத்திச் சுதந்திரமும், சுகமும் உடையவர்களாய் வாழச் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் தற்கால அறிஞர்கள் மனத்தில் தோன்றி அதற்கான முயற்சிகள் ஒவ்வொரு நாட்டிலும் நடைபெறுகின்றன.

மக்களுக்குள் அளவிலடங்காத வேற்றுமைகளும் இவ்வேற்றுமை காரணமாக ஒருவர் மேல் ஒருவர் வீண் வெறுப்புக் கொள்ளுதலும், இவ் வெறுப்புக் காரணமாக கொடுமைகளைச் செய்வதுமாகிய காரியங்கள் மற்றய நாடுகளைக் காட்டிலும், நமது நாட்டில் நமது சமூகத்தில் நாள்தோறும் அதிக மாக வளர்ந்து கொண்டே போகின்றன என்பதைப் பகுத்தறிவு உடையவர்கள் எல்லோரும் அறிவார்கள். இவைகளுக்கெல்லாம் காரணமாயிருப்பன பலவாயினும் முக்கியமானது மதம் ஒன்றே என்று நாம் கூறிவருகிறோம். ஆகவே மதம் என்பது அடியோடு அழிந்தால் மக்களிடம் உள்ள வேற்றுமைகளும், வெறுப்புகளும், நீங்கி ஒற்றுமை உண்டாகிவிடும் என்றும் கூறிவருகிறோம்.

அதிலும் முக்கியமாக இந்துமதம் அழிந்தால் தான் இந்துக்கள் உருப்படமுடியும் என்பதை முக்கியமாக எடுத்துக்காட்டிவருகிறோம். இவ் விஷயத்தை நாம் சொல்லும் போது தான் நம்மை "இந்து மதத் துரோகி" கள் என்றும் "தேசத்துரோகி" கள் என்றும் "நாஸ்திகர்கள்" என்றும் நம்மைப்பற்றி நம் எதிரிகள் பொது ஜனங்களிடையில் துவேஷப் பிரசாரம் பண்ணிக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டு வருகிறார்கள். எதற்காக நாம் இந்து மதம் முதலில் அழிந்து தீர வேண்டும் அல்லது அழிக்கப்பட்டு ஒழிய வேண்டும் என்று சொல்லுகின் றோம் என்பதை அறிந்தார்களானால் நம்மைப் பகுத்தறிவுடையவர்கள் அவசரப்பட்டு ஒதுக்கி விட மாட்டார்கள்; அல்லது நம்மோடு அவசரப்பட்டுச் சண்டைக்கு வரமாட்டார்கள் என்பது நிச்சயமாகும். ஆகையால் அக் காரணத்தைச் சிறிது கூற விரும்புகிறோம்.

சாதி வித்தியாசம் "கடவுள்" என்பவராலேயே ஏற்படுத்தப்பட்டது என்பது இந்து மதக்கொள்கை. "வேதங்கள்" என்பவைகளிலும், "ஸ்மிருதி கள்" என்பவைகளிலும் "கடவுள்" என்பவரின் முகத்தில் இருந்து "பிராமணன்" என்னும் சாதியும், தோளிலிருந்து "க்ஷத்திரியன்" என்னும் சாதி யும், துடையிலிருந்து "வைசியன்" என்னும் சாதியும், பாதத்திலிருந்து "சூத்திரன்" என்னும் சாதியும் பிறந்ததாகக் கூறுகின்றன. இந்த சாதி வேற்றுமையை ஆதாரமாகக் கொண்டே உயர்வு தாழ்வுகளும், தொழில்களும் கற்பிக்கப்பட்டன. ஆதியில் ஏற்படுத்தப்பட்ட இந்த நாலு வகையான சாதி வேற்றுமையே இப்பொழுது நாலாயிரக் கணக்கான சாதி வேற்றுமைகள் தோன்றி நிலைத்திருப்பதற்குக் காரணமாக இருந்தன.

அன்றியும் மக்கள் சமூகத்தில் பாதித் தொகையாக இருக்கின்ற பெண்கள் சமூகத்தைக் கொடுமைப் படுத்தி, அடிமைப்படுத்தி அவர்கள் ஒன்றுமறியாத அபலைகளாக வைத்திருப்பதற்குக் காரணமும் இந்து மதமேயாகும்.

இன்னும் எண்ணற்ற பண்டிகைகளையும், திருவிழாக்களையும் ஏற்படுத்தி ஏழைமக்களின் பொருளை வீணாகச் செலவழிப்பதற்குக் காரணமா யிருப்பதும் இந்து மதமோயாகும்.

கல்யாணத்திலும் கருமாதியிலும், இன்னும் பலகாரியங்களிலும் பலவகையான அர்த்தமற்ற சடங்குகளை ஏற்படுத்தி, இவைகள் மூலம் ஏழை மக்களின் பொருளைப் பார்ப்பனர்களுக்குப் போய்ச் சேரும்படி செய் வதற்குக் காரணம் இந்துமதமேயாகும்.

காளியென்றும், கருப்பன் என்றும், முனியாண்டி என்றும், சிவன் என்றும், பெருமாள் என்றும் பலவகையான சாமிகளையும், அவைகளுக்கு விக்கிரகங்களையும், அவ்விக்கிரகங்களுக்குக் கோயில்களையும் ஏராள மானப் பொருளைச் செலவு செய்து கட்டி வைத்து அவைகளின் பேரால் நாள் தோறும், வாரந்தோறும், வருஷந்தோறும், ஆயிரக் கணக்காகவும், லட்சக் கணக் காகவும், கோடிக்கணக்காகவும் பணத்தை வீணாகச் செலவு செய்து விட்டு இந்திய நாடு வறுமையடைவதற்குக் காரணமாய் இருப்பதும் இந்து மதமேயாகும்.



இவ்வாறு எந்த வகையில் பார்த்தாலும் இந்து மதமானது அதை பின்பற்றும் மக்களை நாள் தோறும் அடிமைகளாகவும், தரித்திரர்களாகவும், மூடர்களாகவும், ஒருவரோடு ஒருவர் ஒன்று சேர முடியாதவர்களாகவும் செய்து கொண்டு வருகிறதே யொழிய மற்றபடி கடுகளவு நன்மையையாவது உண்டாக்கவில்லை என்பதை "மதம்" என்னும் பாசியினால் மறைக்கப் படாத மூளையை உடையவர்கள் தெரிந்து கொள்ளலாம்.

இந்து மதத்தினால் விளையும் இத்தகைய கெடுதிகளை நன்றாய் அறிந்தே காலஞ்சென்ற பெரியார்களாகிய இராமாநுஜர், சைதன்னியர், ராசாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, விவேகானந்தர் முதலியவர்கள் சாதி வேற்றுமையை ஒழிக்கவும், பெண்களின் அடிமையை அகற்றவும் எவ்வளவோ முயற்சி செய்தார்கள். அவர்கள் செய்த முயற்சிகள் அனைத்தும் இன்று ஏட்டளவிலும், பேச்சளவிலும் நிற்பதைத் தவிர ஒரு பலனையும் தரவில்லை என்பதை நாம் அறிந்துதான் இருக்கின்றோம். இவ்வாறு அவர்கள் முயற்சி பலன் தராமல் போனதற்குக் காரணம் பெரும்பாலும் இந்து மதமே என்பதில் ஐயமில்லை. சாதிபேதம் பெண்ணடிமை ஆகிய அஸ்திவாரங் களின் மேல் கட்டப்பட்டிருக்கும் இந்து மதத்தை வைத்துக் கொண்டே அந்த சாதிபேதத்தையும், பெண்ணடிமையையும் ஒழிக்க வேண்டுமென்றால் எப்படி முடியும்? ஆகையால் நாம் இந்து மதமாகிய வீட்டையே முழுவதும் இடித்து எறிந்தால்தான் அதன் அஸ்திவாரமாகிய சாதி பேதம், பெண்ணடிமையாகிய இரண்டையும் அடியோடு பெயர்த்தெறிய முடியும் என்று கூறுகின்றோம். ஆகவே நமது நோக்கம் சாதிபேதமும், பெண்டிமையும் ஒழிய வேண்டு மென்பது தான் என நாம் எடுத்துக் காட்டுவது மிகையாகும்.

ஆகையால் யார் யார், சாதி வேற்றுமைகளை ஒழித்து மக்களுக்குள் சமதர்மத்தை நிலை நிறுத்தவும், பெண்களுடைய அடிமைத்தன்மைக் கான காரணங்களை எல்லாம் ஒழித்து அவர்களுக்கும் ஆண்களைப்போல் சம உரிமை அளிக்கவும் பாடுபடுகின்றார்களோ அவர்களையெல்லாம் நாம் பாராட்டுகின்றோம். இத்தகைய கொள்கைகளுடன் உழைத்து வரும் இயக்கங் களுக்கும், மக்களுக்கும், சாஸ்திரங்களுக்கும் மதங்களுக்குங்கூட நாம் எதிரிகளல்ல வென்பதைச் சொல்லிக் கொள்ளுகிறோம்.

நாம் இப்பொழுது இந்துக்களுக்குள்ளேயே வடநாட்டிலும் தென்னாட் டிலும் சாதிவேற்றுமையையும், பெண்ணடிமையையும் ஒழிக்க வேண்டும் என்னும் கிளர்ச்சி தோன்றியிருப்பதைக் கண்டு நமது இயக்கத்தின் நோக்க மும், வேலையும் வீண்போகவில்லையென்று களிப்படைகிறோம். இதற்கு உதாரணமாகச் சென்ற 8-8-32ல் புதிய டில்லியில் "இந்து சீர்திருத்த மகாநாடு" என்னும் பெயருடன் இந்துக்களால் ஒரு மகாநாடு நடத்தப்பட்டதையும், அம்மகாநாட்டின் தலைவர் வரவேற்புத் தலைவர் முதலியவர்களின் பேச்சுக்களையும், அம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் கூறலாம்.



RangaRakes tamilnavarasam.com

அம் மகாநாட்டின் வரவேற்புத் தலைவர் திரு. ராமலால் வர்மா என்பவர் “மூட நம்பிக்கைகளாலும், இழிவான வைதீகங்களாலும், பலவித மான சாதி பேதங்களும் பிரிவுகளும் ஏற்பட்ட காரணத்தால் இந்து சமூகம் தாழ்ந்த நிலையை அடைந்து விட்டது. இந்து சமயம் தீண்டாமை என்னும் கறையினால் தாழ்வையடைந்திருக்கிறது. ஆகையால் இந்த சாதி வேற்றுமை களையும், தீண்டாமையையும் அடியோடு ஒழிக்க வேண்டியது அவசிய மாகும்” என்று பேசியிருக்கிறார்.

அம் மகாநாட்டின் தலைவர் சுவாமி சத்திய தேவ பாரி பிரஜாத் என்பவர்,

“இந்துக்கள் வீண்பெருமையையும் துவேஷத்தையும் விடுவார் களானால் அவர்கள் ஆதிக்கம் மிகுந்தவர்களாவார்கள். இந்துக்களுக்குள் ஒற்றுமை ஏற்படுவதற்கு முன் சுயராஜ்யம் கிடைப்பதென்பது முயற்கொம்பு தான். இந்தியாவின் மக்களாகிய இந்துக்கள் அனைவரும் தமக்குள் உள்ள சமூகத் துவேஷங்களை விட்டொழித்தும் சமூகக் கொடுமைகளை ஒழித்தும், சுயநலத்தை விட்டுக் கொடுத்தும் இந்தியாவுக்குத் தொண்டு புரிய வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்” என்று பேசியிருக்கிறார்.

இன்னும் அம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்களில் மூன்று தீர்மானங்கள் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு வேண்டிய சிறந்த தீர்மானங்களாகும். அவைகள் வருமாறு:-

1. இம்மகாநாடு இந்து சமூகத்தில் பிறப்பினாலேயே சாதி வேற்றுமை பாராட்டும் காரணத்தால் ஆயிரக்கணக்கான சமூக வேற்று மைகளும், தீண்டாமையும் வளர்வதாகக் கருதுவதால் சாதி வித்தி யாசம் பாராட்டுவதை இந்துக்கள் அதிவிரைவில் விட்டொழிக்க வேண்டுமென்றும், இதன் பொருட்டு இந்துக்களின் பல விரிவான சாதி யினரும் தங்களுக்குள் சமபந்தி போஜனமும், கலப்பு மணமும் செய்ய வேண்டுமென்றும் யோசனை கூறுகிறது.

2. இம்மகாநாடு தீண்டப்படாதவர்களுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கும் பொது இடங்கள், பொதுக்கிணறுகள், பொதுப் பாதை கள் முதலிய வற்றை மற்ற இந்துக்களைப்போல் சம உரிமையோடு அனுபவிக்க உரிமை உண்டு என்று கருதுவதுடன், பொதுப்பள்ளிக் கூடங்களில் மேற்கண்ட வகுப்புப் பிள்ளைகளைத் தடையின்றிச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், இந்துக்கோயில்களிலும், மற்ற பொதுஇடங்களிலும் தடையின்றிச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறது.



3. இம்மகாநாடு இளம்பருவத்தில் பெண்களுக்கு மணம்புரியும் காரணத்தாலேயே விதவைகள் பெருகுவதனால் இந்துக்கள் அனை வரும் இளம்பருவ மணத்தை ஒழித்துச் சாரதா சட்டத்தின்படி மணம் செய்யுமாறும், சமூக ஒற்றுமையுடன் அச்சட்டத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.

மேற்கண்ட மூன்று தீர்மானங்களிற்கண்ட விஷயங்கள் நமது சுயமரியாதை இயக்கத்திற்குப் புறம்பானவையல்ல. அத்தீர்மான விஷயங்கள் இந்துக்களால் அனுஷ்டானத்துக்கு கொண்டு வரப்படுமானால் நமது விருப்பத்தின் படி இந்துக்களின் சமூகம் வளர்ச்சியடைவதுடன் அவர்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் இந்து மதமும் அழிந்துதான் தீரும்.

ஜாதி வித்தியாசமும், தீண்டாமையும் கோயில்களிலும், பள்ளிக்கூடங் களிலும் பொதுக்கிணறு, பொதுப்பாதைகளிலும், தாழ்த்தப்பட்டார்க்கு உரிமை இல்லாதிருப்பதும் இளமை மணமும் இந்து மதத்திற்கு அடிப்படையானவை கள்; ஆகையால் இவைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று கும்பகோணம் பார்ப்பனர்கள் பேசிக் கொண்டு வருவதையும் மகாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றிக் கொண்டிருப்பதையும் அறிந்தவர்கள் டில்லி இந்து சீர்திருத்த மகாநாட்டுத் தீர்மானங்கள் இந்து மதத்திற்கு மாறுபட்டதென்பதையும் இந்து மதத்திற்கு அழிவைத் தேடுவது என்பதையும் ஒப்புக் கொள்ளாதிருக்க முடியுமா? என்றுதான் கேட்கின்றோம். ஆகவே இந்து மதத்திற்குப் புறம்பான தாயிருந்தாலும் இருக்கட்டும், இதனால் இந்து மதம் அழிந்தாலும் அழியட்டும் என்ற தைரியத்துடன் இந்து சமூக வளர்ச்சி ஒன்றையே கருதி மேற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றிய டில்லி “இந்து சீர்திருத்த மகாநாட்டா”ரை நாம் பாராட்டுகிறோம். இச்சமயத்தில் சுயமரியாதை இயக்கத்தைக் கண்டு முணு முணுக்கும் பண்டிதர்களும், தென்னாட்டுக் கும்பகோணம் மடிசஞ்சிகளும் திரு. எம். கே. ஆச்சாரியார் கூட்டத்தாரும், வடநாட்டில் இந்துக்கள் கூடி இவ்வாறு தீர்மானம் பண்ணியிருக்கிறார்களே இதற்கு என்ன சொல்லுகிறார் கள் என்று கேட்கின்றோம்.

இதனால்தான் நமது இயக்கத்தின் ஆக்க வேலைகளாகக் கலப்பு மணங்களையும், விதவா விவாகங்களையும், சமபந்தி போஜனங்களையும், தீண்டாமை ஒழித்தலையும் செய்து வருகிறோம். இக்காரியங்களின் மூலம் சடங்குகளும் சாதிகளும் ஒழிக்கப்பட்டு வருகின்றன. இக்கொள்கை இந்தியா முழுவதும் அனுஷ்டிக்கப்படுமாயின் இந்துக்களைப் பிடித்த கஷ்டம் விரைவில் அழிந்து ஒழிவது நிச்சயமென்பதில் ஐயமில்லை.

இன்று சாதிகள் ஒழிய வேண்டும், பெண்களுக்குச் சமத்துவம் கொடுக்க வேண்டும், இவைகளின் பொருட்டுக் கலப்பு மணங்கள் செய்யப்பட வேண்டும், மூட நம்பிக்கைக்கான சடங்குகளை ஒழிக்க வேண்டும் என்னும் கொள்கைகளை பழுத்த இந்து மத பக்தர்கள் கூட ஒப்புக்கொண்டு பிரசாரம்



RangaRakes tamilnavarasam.com

பண்ண முன் வந்திருப்பதை நோக்கும் போது இன்னுஞ் சில நாட்களில் இவர்களே, இந்து மதத்தினர் வரவர தரித்திர திசையை அடைவதற்கு காரணம் எனன என்பதை ஆழ்ந்து சிந்திப்பார்களாயின் அதற்குக் காரணம் கோயில் களும், சாமிகளும், சடங்குகளும், பண்டிகைகளும் என்பதையுணர்ந்து இவைகளையும் ஒழிக்க முன்வருவார்களென்றே நம்பலாம்.

ஆகையால் எப்பொழுதாவது இன்றில்லாவிட்டாலும் இன்னுஞ் சில தினங்கள் கழித்தாவது மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருக்கின்ற "இந்து மதம்" "வைதீக மதம்" "தெய்வீக மதம்" "புராதன மதம்" என்று சொல்லப்படுகின்ற பாழும் மதம் அழிந்தே தீரும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆதலால் இனியாவது சுயமரியாதை இயக்கம் சொல்லுகின்ற விஷயங்களில் உண்மையை உணர்ந்து மக்களின் முன்னேற்றத்திற்கான முயற்சியைப் புரியுமாறு பொதுஜனங்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 21.08.1932**



# நம்பிக்கையில்லைத் தீர்மானம்

செல்வாக்கோ, வன்மையோ பெற்ற எந்த கட்சியே யாயினும் எந்த இயக்கமே யாயினும் அதிலுள்ள அங்கத்தினருள் அபிப்பிராய பேதங்கள் எழுவதும், இருப்பதும் சர்வ சாதாரணம். உண்மையுணர்ந்து அத்தகைய அபிப்பிராய பேதங்கள் பரிகரிக்கப்பட்டால் பின்னர் ஆக்க வேலைகள் தீவிரமாய் நடைபெறுவதும் சரித்திர சம்மதமான யாரும் மறுக்க முடியாத உண்மைகளாகும். உலகெங்கும் இத்தகைய சம்பவங்கள் நடப்பதை கேட்டும், கண்டும் வருகிறோம். இத்தகைய சம்பவங்கள் கட்சியின் முன்னேற்றத்தையும் பலத்தையும் குறிக்கிறதேயன்றி வேறில்லை. பார்ப்பன ரல்லாதார் கட்சி ஆதிக்கத்திலிருப்பதும் பார்ப்பனரல்லாத மந்திரிசபை அதிகாரத்திலிருப்பதும் இக்கட்சியை ஒழிக்க அதிகாரத்தைக் குலைக்க எதிரிகள் செய்யும் சூழ்ச்சி களும் விஷமங்களும் எண்ணிறந்தன. இதன் உண்மையறியாது நம் மக்கள் இன்னும் ஏமாந்தே வருகின்றனர். சில தினங்களுக்குமுன் சென்னை அரசாங்க மந்திரி கனம் முனுசாமி நாயுடு அவர்கள் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதாக இருந்த விஷயமே தக்க சான்றாகும். அதற் காகக் கூடிய தென்னிந்திய நலவுரிமைச்சங்க நிர்வாகக் கமிட்டியின் கூட்ட நடவடிக்கைகளை பிரிதோரிடம் பிரசுரித்துள்ளோம். யாராயிருந்த போதிலும் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லவும், குறையைத் தெரிவித்துக் கொள்ள வும் உரிமை உண்டு என்பதை நாம் ஒப்புக் கொண்டபோதிலும் இந்தியாவுக்கு வழங்கப்போகும் சீர்திருத்தங்கள் பிரஸ்தாபத்தில் இருக்கின்றன. கட்சி பலத்தை உத்தேசித்து ஏகோபித்த ஆக்க வேலையில் ஈடுபட வேண்டிய பொழுது இத்தகையதோர் சம்பவம் நடந்ததையறிய உண்மையில் வருந்துகிறோம்.

அஃதெவ்வாறாயினும் இத்தகையதோர்த் தீர்மானம் கொணர்ந்த அங்கத்தினரே முன்யோசனையுடனும், பகுத்தறிவுடனும் நடந்து மேற்படி தீர்மானத்தை வாபீஸ் வாங்கிக் கொண்டதறிய சந்தோஷிக்கிறோம். பார்ப்பன ரல்லாதார் கட்சி கட்டுக் குலைந்து போகப் போகிறது என்று அகந்தையும் வீராப்பும் கொண்டிருந்த எதிரிகள் சூடுகண்ட பூனை போலடங்கினறென்றே சொல்லுவோம். பார்ப்பனரல்லாத மக்கள் ஒறுமைப்பட்டு ஆக்க வேலையில் முழு மனதுடன் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 21.08.1932**



RangaRakes tamilnavarasam.com

# குற்றஞ்சொல்ல வாய் உண்டா?

## (வகுப்புப் பிரச்சினை முடிவு)

இனிவரப்போகும் மாகாணசுயாட்சி அமைப்பில், ஒவ்வொரு மாகாண சட்டசபைகளிலும், ஒவ்வொரு வகுப்பினருக்கும் தனித்தனியே எத்தனை ஸ்தானங்கள் இருக்கவேண்டும் என்னும் வகுப்புப் பிரச்சினை சம்பந்தமான முடிவு சென்ற 16-8-32ல் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டு விட்டது. இந்த வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாக பல சமூகங்களும் ஒப்புக் கொள்ளும் படியான ஒரு முடிவு காண திரு. காந்தியுள்பட வட்டமேஜை மாநாட்டுப் பிரதிநிதிகள் இந்தியாவிலும் இங்கிலாந்துக்குச் செல்லும் வழியில் கப்பலிலும் இங்கிலாந்திலும் எவ்வளவோ முயன்றும் முடியாமற்போய் விட்டது. இவர்களால் முடியாமல் போன காரணத்தாலேயே இப்பொழுது பிரிட்டிஷ் பிரதம மந்திரியால் தீர்மானிக்கப்பட்ட முடிவை இந்திய அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கின்றார்கள்.

இப்பொழுது அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கும் தீர்ப்பின்படி முஸ்லீம்கள், சீக்கியர்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் ஐரோப்பியர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் முதலியவர்களுக்குத் தனித் தொகுதிகள் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையளிக்கப் பட்டிருக்கிறது. மற்றும் பெண்கள், தொழிலாளர்கள், நிலச்சுவான்தாரர்கள், வியாபாரிகள், சர்வ கலாசாலைகள் முதலிய பலருக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

இத்தீர்ப்பில் முக்கியமாகக் கவனிக்கக் கூடியன சில உள்ளன. முஸ்லீம்கள் பஞ்சாப் மாகாணத்திலும் வங்காள மாகாணத்திலும் தாங்கள் பெரும்பான்மையினராயிருப்பதால், தங்கட்கு அதிக ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்க வேண்டும் என்றும் மற்ற மாகாணங்களில் தங்கள் ஜனத்தொகைக்குத் தக்கவாறு ஸ்தானங்கள் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டனர். ஏறக்குறைய அவர்கள் கேட்டவாறே கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் இத்தீர்ப்பைக் கொண்டு முஸ்லீம்கள் திருப்தியடைவதுதான் நியாயமே தவிர தங்களுக்கு அரசாங்கத்தார் காட்டியிருக்கும் சலுகை போதாதென்று குறை கூறுவது ஒழுங்கானதல்லவென்று நாம் கருதுகின்றோம்.

அடுத்தபடியாக தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித்தொகுதியும், பொதுத்தொகுதியில் ஓட்டுக்கொடுக்கும் உரிமையும் அளித்திருப்பது பாராட்டத்தகுந்ததாகும். இதனால் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்குச் சட்ட சபையின் மூலம் அவர்கள் விரும்பும் நன்மைகள் கிடைக்க இடமுண்டு. எப்படியெனில் பொதுத் தொகுதியின் மூலம் தேர்ந்தெடுக்கப் படும் பிரதிநிதிகள் தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் வாக்குகளையும் பெற்றே சட்டசபைக்குச் செல்ல வேண்டியிருப்பதால், அப்பிரதிநிதிகள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் அவர்கள் சமூக முன்னேற்றத்தின் பொருட்டு கொண்டு வரும் தீர்மானங்களுக்கு ஆதரவளித்தே தீர வேண்டும். இன்றேல் அடுத்தத் தேர்தலில் தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் வாக்குகளைப் பெறமுடியாமல் போய் விடுவார்கள்.

அடுத்தபடியாகப் பெண்களுக்குக் கொடுத்திருக்கும் ஸ்தானங்கள் மிகவும் குறைவாகும். ஜனத்தொகையில் பாதிக்கு மேலுள்ள பெண் சமூகத்திற்கு மிகக்குறைந்த ஸ்தானங்களை அளித்திருப்பது அச்சமூகத்தை இழிவு படுத்துவதாகுமென்பதே நமது அபிப்பிராயமாகும். ஆனால் அவர்களுக்குள்ளும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கியிருப்பது போற்றத்தக்கதாகும். இவ்வாறு பெண்களுக்குள்ளும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கியிருப்பதைப் பலர் கண்டிக்கிறார்கள். தற்பொழுதுள்ள நிலையில் பெண்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால் சட்டசபைகளுக்குப் பொதுத் தொகுதியின் மூலம் தேர்ந்தெடுக்கும் எல்லாப் பெண்களும் அநேகமாக இந்துப் பெண்களாகவே இருப்பார்களென்பதில் ஐயமில்லை. மற்றைய வகுப்புப் பெண்கள் ஸ்தானம் பெறுவதற்கு முடியாமல் போய் விடும். ஆகையால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளித்திருப்பதன் மூலம் எல்லா வகுப்புப் பெண்களுக்கும் ஸ்தானம் கிடைக்கும்படி செய்திருப்பதை நாம் பாராட்ட வேண்டுமே தவிர குறை கூறுவது தவறாகும்.

அடுத்தபடியாகத் தொழிலாளர்களுக்கு அளித்திருக்கும் ஸ்தானங்களும் மிக மிகக் குறைவானதாகும். தொழிலாளர்கள் இல்லாவிட்டால் நாட்டில் விவசாயமோ, கைத்தொழில்களோ, வியாபாரமோ பணக்காரர்களோ, அரசாங்கமோ ஒன்றும் நிலைத்திருக்க முடியாது என்பது அறிஞர்கள் கண்ட உண்மையாகும். நாட்டின் செல்வத்தை வளர்க்கின்றவர்கள், நாட்டைப் பாதுகாத்து வருபவர்கள் தொழிலாளர்களே யாவார்கள். ஆகவே நியாயப்படிப் பார்த்தால் அவர்களுக்கு அரசாங்கத்திலும் சட்டசபையிலும் அதிக ஆதிக்கமிருக்க வேண்டியது ஒழுங்காகும். இப்படியில்லாமல் அவர்களை நசுக்கும் மனப்பான்மையுடையவர்களுக்கு அதிக ஆதிக்கமும், அவர்களுக்கு பேருக்கு மாத்திரம் சில ஸ்தானங்களும் ஒதுக்கி வைத்திருப்பது திருப்தியற்ற செயலாகுமென்று தான் நாம் கூறுவோம்.

ஆயினும் பிரதம மந்திரியவர்கள் வருணாச்சிரம தரும அரசியல் வாதிகளின் பயமுறுத்தல்களையும், முட்டுக்கட்டைகளையும் சிறிதும் லட்சியம் பண்ணாமல் தாழ்த்தப்பட்டோர், முஸ்லீம்கள், சிறுபான்மைச் சமூகத்தினர்கள் முதலியவர்கள் விரும்பியபடியே அவர்களுக்குத் தனித்





RangaRakes tamilnavarasam.com

தொகுதியும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளித்து வெளியிட்டிருக்கும் இத்தீர்ப்பை நாம் வரவேற்கின்றோம்.

இது சட்டமாகும் போது, இத்தீர்ப்பில் கண்டுள்ள தேர்தல் ஏற்பாட்டையும் மற்றும் பல ஏற்பாடுகளையும் 10 வருஷ காலத்திற்குப் பிறகு இதில் சம்பந்தப்பட்ட சமூகத்தினரின் சம்மதத்தின் பேரில் மாற்றுவதற்கு இடமிருக்கவும் மாற்றப்படாவிட்டால் 20 வருஷங்களுக்குப்பின் இந்த விசேஷ ஏற்பாடுகள் தாமே முடிந்து விடுவதாகவும் சட்டத்திலேயே விதித்துவிட வேண்டுமென்பது அரசாங்கத்தாரின் உத்தேசமெனக் கூறப்பட்டிருக்கின்றதும் கவனிக்கத் தக்கதாகும்.

இந்த விதமான வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பு வெளியானவுடன், நமது நாட்டில் உள்ள சில நியாயபுத்தியுள்ள அரசியல்வாதிகளைத் தவிர பாக்கியுள்ள அதிதீவிர ஆவேச அரசியல் வாதிகளும், இந்து மகாசபைக் காரர்களும், வருணாச்சிரமத் தருமிகளும், அரசியல் வயிற்றுப் பிழைப்புக் காரர்களும் தேசீயப் பல்லவி பாடும் பத்திரிகை ஆசிரியர்களும் ஒரேடியாக இதைக் கண்டிக்கத் தொடங்கி விட்டார்கள் "இந்திய அரசியலில் வகுப்புவாத விஷயத்தை பிரதம மந்திரி புகுத்தி விட்டார்" என்று வகுப்புவாத விஷயத்திலேயே ஊறிப்போய் கிடக்கும் இவர்கள் கூச்சலிடுகிறார்கள். ஆனால் இவர்கள் இவ்வாறு புலம்புவதில் ஏதாவது அர்த்தமுண்டா என்றுதான் நாம் கேட்கின்றோம்.

வட்டமேஜை மாநாடு ஆரம்பமானது முதல் இந்த வகுப்புப் பிரச்சினை விஷயம் முதன்மையானதாக இருந்து கொண்டிருந்தது யாருக்கும் தெரியாததல்ல, பிரிட்டிஷ் அரசாங்கமும் பிரதம மந்திரியும் "நீங்களே இவ்விஷயத்தை முடிவு செய்து கொள்ளுங்கள்" என்று சொல்லி இந்தியப் பிரதிநிதிகளிடமே ஒப்படைத்து விட்டு ஆரம்ப முதல் கடைசிவரையிலும் இதில் தலையிடாமலே இருந்து விட்டார்கள்.

இந்தியப் பிரதிநிதிகளும் கூடிக்கூடிப் பேசிப் பார்த்தார்கள்; திரு. காந்தியவர்களும் வகுப்புப் பிரச்சினை தீர்ந்தால்தான் வட்ட மேஜை மாநாட்டுக்குப் போவேன் என்று சொல்லிப் பார்த்தார்; இங்கிலாந்திலும் என்னென்னமோ செய்து பார்த்தார். கடைசியில் ஒன்றும் முடியாமல் போய்விட்டது. வட்டமேஜை மகாநாட்டு முஸ்லீம் பிரதிநிதிகளோ வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாகச் சமரசமான முடிவு ஏற்பட்டால்தான் தாங்கள் மகாநாட்டுடன் கலந்து உழைக்க முடியும்; இன்றேல் கலந்து உழைக்க முடியாது என்று கூறி ஒதுங்கிவிட்டார்கள். இக்காரணத்தால் மேலே நடத்த வேண்டிய அரசியல் வேலை தடைப்பட்டு விட்டது என்னும் விஷயங்கள் இதைத் தேசீயக் கூச்சல்காரர்கள் அறியாததல்லவே.



ஆகவே இவர்களால் முடிவு செய்யமுடியாமல் கைவிடப்பட்ட ஒரு விஷயத்தையே பிரதம மந்திரி முடிவு செய்திருக்கும் போது, அது சரியாயிருந்தாலும், தப்பாயிருந்தாலும் அதைப்பற்றிப் பேச இவர்களுக்கு வாயுண்டா என்றுதான் நாம் கேட்கின்றோம்.

அன்றியும் இவ்விஷயத்தை முடிவு செய்யக் கூடிய யோக்கியதை யாவது இந்த தேசீயக் கூச்சல்காரர்களுக்கு இருக்கிறதா என்று கொஞ்சம் ஆலோசனை செய்து பாருங்கள்! முஸ்லீம்களும், தாழ்த்தப்பட்டவர்களும் மற்ற சிறுபான்மையினரும் தங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், தனித் தொகுதியும் தான் வேண்டுமென்று பிடிவாதம் செய்தனர்; காங்கிரசின் சார்பாகத் திரு. காந்தியவர்கள் முஸ்லீம்களுக்கும் சீக்கியர்களுக்கும் மாத்திரம் தனித் தொகுதியும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் கொடுக்க சம்மதிக்கிறேன்; மற்றச் சிறுபான்மை வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கும் ஒருக்காலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், தனித்தொகுதியும் கொடுக்க சம்மதிக்க மாட்டேன் என்றார்; மற்றும் ஒரு வருணாச்சிரம தரும இந்துக் கூட்டம், இந்திய அரசியலில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமோ, தனித் தொகுதியோ எதுவும் இருத்தல் கூடாது; எல்லாம் பொதுப் பிரதிநிதித்துவமாகவும், பொதுத் தொகுதியாகவுமே இருக்க வேண்டும் என்று கூறிக் கொண்டிருந்தது. இந்த வகையாக மூன்றுவித அபிப்பிராயங்களை பிடிவாதமாக உடைய பிரதிநிதிகள் எவ்வாறு ஒன்று கூடி ஒரு ஏகோபித்த முடிவுக்கு வர முடியும் என்றுதான் கேட்கிறோம். ஆகவே இத்தகைய கூட்டத்திற்கு ஒரு முடிவைக் கட்டுவதற்கு இவர்களல்லாத வேறொருவர்தானே வந்து தீர வேண்டும். வேறொருவரால் தானே ஏதேனும் ஒருவகையான முடிவையும் ஏற்படுத்த முடியும் என்பது உண்மையா அல்லவா என்று யோசனை செய்து பாருங்கள்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், தனித் தொகுதியும் தேசீய அபிவிருத்திக்கு இடையூறு விளைவிக்கக் கூடியது, இவைகளால் எந்தக் காலத்திலும் தேசம் ஒன்றுபட முடியாது, வகுப்புத் துவேஷமும் கலகமும் இன்னும் அதிகப்பட்டு அவை எப்பொழுதும் அழியாமல் நிலைத்து நிற்கவே இடமேற்படும் என்றெல்லாம் கூறி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும், தனித் தொகுதியையும் நமது நாட்டில் அரசியல் கிளர்ச்சி ஆரம்பமான நாள் முதல் இன்றுவரையிலும் ஒரு கூட்டத்தார் கண்டித்து வருகின்றார்கள். இவர்கள் கண்டிப்பது சரியானதாகவும், நமது நாட்டின் நிலைமைகளுக்குப் பொருத்தமானதாகவும், தேசத்துக்கு நன்மையளிக்கக் கூடியதாகவும் இருக்கிறதா என்பதைச் சிறிது கவனிப்போம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும், தனித் தொகுதி தேர்தல் முறையையும் கண்டிக்கின்ற இக் கூட்டத்தாரோ வென்றால், தாம்தான் அரசியல் சுதந்திரங்களையெல்லாம் அனுபவிக்க உரிமையுடையவர்களென்றும், தமக்கே பரம்பரையாக அதிகாரம் செலுத்தும் உரிமை "கடவுள்" என்பவராலேயே கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், மற்ற



RangaRakes tamilnavarasam.com

சமூகத்தார்கள் - அதிலும் தாழ்த்தப்பட்ட சமூகத்தார்கள் எப்பொழுதும் சுதந்திரமில்லாமல் அடிமைகளாக இருந்து உழைத்துக் கஷ்டப்படுவதற்கே உரியவர்களென்றும், அவர்களை எந்த வகையிலும் முன்னேற வொட்டாமல் பரம்பரையாக அவர்கள் அனுபவித்து வந்த கொடுமைகளையே அனுபவிக்கச் செய்வதுதான் நமது கடமை என்றும் நம்பிக்கொண்டும் இவ்வாறே செய்து கொண்டும் இருக்கின்றவர்கள் என்பது அறிவுள்ள மக்கள் அனைவருக்கும் தெரிந்த விஷயமேயாகும்.

ஆனால் பெரும்பாலோராக இருக்கின்ற மேற்கூறிய கூட்டத்தாரால், நசுக்கப்பட்டும், வெறுக்கப்பட்டும், ஒதுக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் கிடக்கும், செல்வமும் செல்வாக்கும் அற்ற கூட்டத்தார் ஜனசமூகத்தில் மதத்தின் பெயராலும், ஜாதியின் பெயராலும் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை அரசியல் மூலம் நீக்கிக் கொண்டு முன்னேற்றமடையும் பொருட்டு, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், தனித் தொகுதியும் இருந்தாலொழிய சட்டசபைகளில் தாங்கள் ஸ்தானம் பெற்று தமது காரியங்களைச் சாதித்துக் கொள்ள முடியாது என்று அறிந்து தங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே வேண்டும் என்று கேட்டு வந்தனர் என்பதும் அறிவுள்ளவர்கள் அறியாததல்ல.

இவ்விரு சார்பார்களின் கோரிக்கைகளில் உண்மையில் அனுதாபத்திற்குரிய கோரிக்கை பிற்கூறிய ஒடுக்கப்பட்ட சிறுபான்மையோருடைய கோரிக்கையேயாகும் என்பதை அறிவுடைய எவராவது மறுக்க முடியுமா? இந்த அனுதாபத்திற்குரிய கோரிக்கையையுடைய மக்களையும் கவனிக்காமல் உயர்ந்த - அறிவுடைய - செல்வமுடைய ஜாதி ஆணவமும், அதிகாரச் செருக்கும் உடைய கூட்டத்தார் கோரிக்கையாகிய பொதுப்பிரதிநிதித்துவமும், பொதுத் தேர்தலும் உள்ள அரசியல் அமைப்பை அளித்தால், இதன் மூலம் திக்கற்ற- தாழ்த்தப்பட்ட-சிறுபான்மை சமூகத்தாரை என்றென்றும் தலைதூக்க முடியாதபடி பாதகஞ் செய்ததாகாதா? என்னும் விஷயத்தை நன்றாய் யோசனை செய்து பார்க்கும் படி வேண்டுகின்றோம். இச்சமயத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், தனித்தொகுதி தேர்தல் முறை சம்பந்தமாகவுள்ள நமது அபிப்பிராயத்தை முன்பு பல தடவைகளில் வெளியிட்டிருந்தாலும் இப்பொழுதும் அதுபற்றிச் சிறிது கூறிவிடுகின்றோம்.

நாமும் மதத்தின் பெயராலும், சாதியின் பெயராலும் பிரதிநிதித்துவம் பெற்று அவைகளின் மூலம் நடைபெறும் அரசியலினால் நாட்டில் சமதர்மம் உண்டாக்க முடியாது. மதங்களின் பாதுகாப்புக்காகவும், தனித்தனி ஜாதிகளின் பாதுகாப்புக்காகவும் அரசியல் உரிமை பெறுகிறோம் என்று இல்லாமல் நாட்டு மக்களின் பாதுகாப்புக்காகவே அரசியல் உரிமை பெறுகிறோம் என்னும் எண்ணமுடைய பிரதிநிதிகளைக் கொண்டு நடைபெறும் அரசாங்கத்தின் மூலமே தேசத்தில் சமதர்மம் தோன்ற முடியும்; மக்கள் சுகமடைய முடியும் என்னும் உறுதியான நம்பிக்கையுடையோம்.



ஆனால் இத்தகைய சமதர்ம நோக்கம் சட்டசபைகளிலும், அரசியல் அதிகாரங்களிலும் அங்கம் வகிக்கும் பிரதிநிதிகளிடம் உண்டாக வேண்டுமானால் முதலில் மதங்களும், ஜாதிகளும் அழிந்து தீர வேண்டும். மதங்களும் ஜாதிகளும் அழிய வேண்டுமானால் முதலில் ஒரு மதத்தினரை ஒரு மதத்தினர் தாழ்வாக மதிப்பதும், துன்பப்படுத்துவதும், ஒரு ஜாதியினரை ஒரு ஜாதியினர் கொடுமைப்படுத்துவதும், அடிமைப் படுத்துவதும், அடக்கியாள்வதும் ஆகிய தற்போது நிகழும் காரியங்கள் அடியோடு அழிய வேண்டும்; ஒரு மதத்தினர்க்கு ஒரு மதத்தினர் ஒரு ஜாதியினர்க்கு ஒரு ஜாதியினர்; எந்த வகையிலும் குறையாத அதிகாரம் படைத்தவராயும், கல்வியறிவு பெற்றவராகவும், செல்வம் பெற்றவராகவும், சுதந்திரம் பெற்றவராகவும் ஆகி விட்டால் மதக் கொடுமைகளும், ஜாதிக் கொடுமைகளும் மாண்டொழிந்து போகும்; மதக் கொடுமைகளும், ஜாதிக் கொடுமைகளும் மாண்டொழிந்தால் மதங்களும், ஜாதிகளும் தாமே மாண்டொழியும். மதங்களும் ஜாதிகளும் கொடுமையான காரியங்களைச் செய்து கொண்டிருப்பதன் மூலமே நிலைத்து நிற்கின்றன என்னும் உண்மையை அறிந்தவர்களுக்கு இது விளங்காமற் போகாது.

ஆகவே இவ்வாறு ஆவதற்கு எல்லா மதத்தினரும், எல்லா வகுப்பினரும் அரசியலில் சமபங்கு பெற்றாக வேண்டியது அவசியம்; அரசியலில் சமபங்கு பெறாவிட்டால் ஒரு ஜாதியினருக்கு ஒரு ஜாதியினர், ஒரு மதத்தினருக்கு ஒரு மதத்தினர் இழைத்துவரும் கொடுமைகளை எந்த வகையிலும் நீக்கிக் கொள்ள முடியாது. இவ்வாறு எல்லா வகுப்பினரும், மதத்தினரும் அரசியலில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு தற்கால நிலைமையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், தனித்தொகுதி தேர்தல் முறையும் இல்லாவிட்டால் முடியவே முடியாது என்பது நீண்ட நாளைய நமது உறுதியான அபிப்பிராயமாகும். ஆகையால் நாம் ஆதி முதல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் தனித் தொகுதி தேர்தல் முறையையும் ஆதரித்து வருகின்றோம்.

ஆகவே தற்காலத்தில் நமது நாடுள்ள சிக்கலான நிலையில் எல்லா வகுப்பினரும் எல்லா மதத்தினரும் அரசியலில் சிறிது அதிகாரம் பெறும்படியான ஒரு ஏற்பாட்டை செய்ய வேண்டுமானால், தற்பொழுது பிரதம மந்திரியால் செய்யப்பட்டிருக்கும் முடிவைத்தவிர வேறு எந்த விதமான முடிவையும் செய்ய முடியாது; செய்வதற்கும் வழியில்லை என்பதே நமது கருத்தாகும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தேசமக்களுக்குக் கடுகளவாவது நன்மை செய்ய வேண்டும் என்னும் அரசியல்வாதிகள் இம்முடிவை ஒப்புக் கொண்டு இதற்குமேல் ஆகவேண்டிய அரசியல் காரியங்களைத் தொடர்ந்து நடத்த வேண்டியதே யோக்கியமான செயலாகும்.



RangaRakes tamilnavarasam.com

அன்றியும் இத்தீர்ப்பின்மேல் பிரிட்டிஷ் பிரதம மந்திரி வெளியிட்டிருக்கும் அறிக்கையையும், இந்திய அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கும் அறிக்கையையும் கவனிப்போர் பிரதம மந்திரியின் மீதோ, இந்திய அரசாங்கத்தின் மீதோ, சிறிதும் குறைகூற இடமில்லை யென்பதையும் அறியலாம். பிரதம மந்திரியின் அறிக்கையில்

> "இம்முடிவு கூடிய விரைவில் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்படும். இதற்குள் எல்லாச் சமூகங்களும் ஒற்றுமைப்பட்டு ஒரு முடிவுக்கு வந்தால் அரசாங்கத்தார் செய்திருக்கும் இத் தீர்ப்பைப் பாராளுமன்றத்தின் முன் வைக்கமாட்டார்கள். சமூகங்கள் ஒரு முடிவுக்கு வராவிட்டால் தான் இம்முடிவு பாராளுமன்றத்தின் முன் வைக்கப்படும்."

என்றும், இந்திய அரசாங்கத்தாரின் அறிக்கையில்

> "எல்லா சமூகத்தினரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரும் சந்தோஷகரமான நிலைமை ஏற்படுவதாயிருந்தால் அதற்கு இடமில்லாமல் செய்துவிட பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பவில்லை. ஆகையால் புதிய இந்திய அரசாங்கச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறும் முன் தனிப்பட்ட மாகாணங்களைப் பொருத்தோ அல்லது பிரிட்டிஷ் இந்தியா முழுவதையும் பற்றியோ சம்பந்தப் பட்ட எல்லாச் சமூகத்தினரும் சேர்ந்து ஒரு ஒற்றுமையான வேறு முடிவுக்கு வந்து விடுவார்களாயின் அம்முடிவை, இந்தத் தீர்ப்புக் குப் பதிலாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் பாராளு மன்றத்திற்குச் சிபார்சு செய்வார்கள்."

என்றும் குறித்திருப்பதைக் காண்பவர்கள் அரசாங்கத்தார் மீது குறை கூற இடமுண்டா என்றுதான் கேட்கின்றோம்.

இனிமேலாவது இம்முடிவு இந்தியாவுக்குப் பொருத்தமில்லாததாக இருந்தால் இந்தியமக்களால் விரும்பப்படாதது என்பது உண்மையாக இருந்தால் இதன் மூலம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், தனித்தொகுதி தேர்தல் முறையும் பெற்றிருக்கிற மக்களால் ஒப்புக்கொள்ளப்படாததாக இருந்தால் காங்கிரஸ்காரர்களும், வகுப்புவாதத்தை விரும்பாத மிதவாதி களும், மற்ற வயிற்றுப்பிழைப்புத் தேசாபிமானிகளும் தங்கள் செல்வாக்கைக் கொண்டு இந்தியாவில் உள்ள சமூகங்களை ஒற்றுமைப் படுத்தி வேறு இவர்கள் விரும்புகின்ற மாதிரியான முடிவைச் செய்து அம்முடிவை எல்லாச் சமூகத்தினரையும் ஒப்புக் கொள்ளச் செய்து பிறகு பிரிட்டிஷ் அரசாங் கத்தாரின் முன் கொடுக்கட்டுமே. இப்படிச் செய்தால் இப்பொழுது பிரதம மந்திரியின் தீர்ப்பு தானே அழிந்து போய்விடுகிறது. இதையும் செய்யாமல் தீர்ப்பையும் ஒப்புக் கொள்ளாமல் கூச்சலிடுவது கையாலாகாத் தனமும்,



சுயநலத்தனமும், ஏதாவது கிளர்ச்சி பண்ணிக் கொண்டிருக்க வேண்டும் என்னும் மனப்பான்மையும், வீண் ஆர்ப்பாட்டமும் ஆகும் என்று நாம் கூறுவதில் எள்ளளவாவது தவறுண்டென்று யாராவது சொல்ல முடியுமா? இது நிற்க நமது நாட்டின் உண்மை நிலையை அறிந்தவர்களும், நிதானமான அரசியல் வாதிகளும் ஆகிய திருவாளர்கள் சர். சாப்ரூ, சர் ரபீந்திரநாத் டாகூர், ஜார்ஜ் ஜோசப், ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரி முதலியவர்கள் இத்தீர்ப் பின் மேல் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயத்தைக் காண்பவர்களுக்கும் நாம் கூறுவதன் உண்மை விளங்காமற்போகாது. ஆகையால் அவர்கள் கருத்துக் களையும் கீழே வெளியிடுகின்றோம்.

> "நாமே நமக்குள் ஒரு சமரசம் செய்து கொண்டிருக்கலாம்; ஆனால் அவ்விதம் செய்து கொள்ளவுமில்லை; செய்துகொள்ளவும் முடியவில்லை.
>
> ஆனால் தற்போதைய காலதேச வர்த்தமானத்தை மனத்தி லிருத்தி தீர்ப்பின் அமைப்புகள் முழுவதையும் பொதுவாக நான் ஆராய்ந்து பார்த்ததில் இத்தீர்ப்பைக் கண்டிக்கவோ அல்லது மிகவும் சங்கடமான இவ்வேலையில் முதன் மந்திரி நல்லெண்ணங் காட்ட வில்லை என்றோ கூற நான் துணியமாட்டேன்."

**சர். சாப்ரூ.**

> "நமது சமூகத்தினர் தக்க முறைகளைக் கொண்டு தற்போதுள்ள கொஞ்ச சுதந்திரத்தையும், மேலான வகையில் உபயோகப் படுத்திக் கொள்ளவேண்டும்."

**– சர். ரபீந்திரநாத் டாகூர்.**

> "வகுப்புத் தீர்ப்பைச் சிலர் விரும்பலாம்; வேறுசிலர் விரும்பா திருக்கலாம்; ஆனால் தற்போதைக்கு இதுவே முடிவான தீர்ப்பாகும். வேறுவழியில்லை என்பதை உத்தேசித்து இதனை ஒப்புக்கொண்டு விடுவதே புத்திசாலித்தனமாகும்."

**– ஜார்ஜ் ஜோசப்.**

> "பல வகுப்பினரும் தங்களுக்குள் சமரசம் ஏற்படுத்திக் கொள்ள தவறிப்போய் அரசாங்கத்தின் கழுத்தில் இச்சங்கடமான கடமையை கட்டிவிட்டுத் தற்போது அதைப்பற்றிக் குறைகூறப்படுவது அழகல்ல .................சமாதானம் வேண்டுவோர் இத்தீர்ப்பைக் கண்ணியமாக ஒப்புக் கொள்ள வேண்டும்."

**– ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரி.**



RangaRakes tamilnavarasam.com

மேற்காட்டிய அபிப்பிராயங்களை நிதான புத்தியுள்ள யாராவது தவறு என்று கூறமுடியுமா? ஆகையால் வீண் ஆர்ப்பாட்டக் காரர்களின் பேச்சுகளுக்குச் செவிசாய்க்காமல் முதலில் வகுப்புக்களும், மதங்களும் ஒழிவதற்கான வேலையைச் செய்ய வேண்டும் என்றும், இவ்வேலைதான் வகுப்பு மத அரசியல் ஒழிவதற்கு வழியென்றும், இதற்குத் தற்சமயம் அரசியல் அமைப்பில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், தனித்தொகுதியும் அவசியம் என்றும் இவைகளைப் பெறுவதன் மூலம் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் மக்கள் கொஞ்சமாவது அரசியல் அதிகாரம் பெற்றுத் தங்கள் சுயமரியாதைக்காக வேலை செய்ய முடியுமென்றும், ஆதலால் பிரதம மந்திரியின் வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பை ஆதரிப்பதே ஒழுங்கு என்றும் கூறுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 28.08.1932**



# "மதத்திற்கு வக்காலத்து"

நமது சுயமரியாதை இயக்கம் தோன்றிய பிறகு, மதத்தின் பேராலும், அரசியலின் பேராலும் பாமர மக்களை ஏமாற்றி வயிறு பிழைத்து வந்த பலருக்குக் கஷ்டமாகி விட்டது. பாமர மக்கள் கொஞ்சம் கண்விழித்துப் பகுத்தறிவு பெற்றுவிட்டமையால் அவர்களைச் சுலபமாக ஏமாற்ற முடியாமல் போய்விட்டது. ஆகையால், இவ்வியக்கத்தின் மூலம் தங்கள் பிழைப்பிற்குப் பாதகம் உண்டான கூட்டத்தார் அனைவரும் நமது இயக்கத்தை மறைமுகமாகவும், சில சமயங்களிலும் வெளிப்படையாகவும் எதிர்த்து வருகின்றனர். இவர்கள் எவ்வளவு தான் எதிர்த்தாலும் இவ்வெதிர்ப்பினால் நமது இயக்கத்தின் ஒரு உரோமங்கூட அசைக்கப் படவில்லை என்பதை நாம் பல தடவைகளில் எடுத்துக்காட்டியிருக்கின்றோம். இதற்கு மாறாக இவ்வியக்கம் ஒவ்வொரு நாளும் தேச மக்களின் மனத்தைக் கவர்ந்து வேரூன்றி வருகிறதென்பதை நாம் எடுத்துக் கூறுவது மிகையேயாகும்.

மதத்திற்காக மிகவும் பரிந்து பேசி, நமது இயக்கத்தை எதிர்க்கும் கூட்டத்தார் யார்? அவர்கள் செய்கையென்ன? அவர்கள் நமது இயக்கத்தின் கொள்கைகளை எதிர்ப்பதன் நோக்கமென்ன என்னும் விஷயங்களைச் சிறிது ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு இவ்வியக்கத்தின் பெருமையும் இதை எதிர்ப்பவர்களின் சிறுமையும் விளங்காமற் போகாது. ஆகையால் அவ்விஷயமாகக் கொஞ்சம் கூற விரும்புகின்றோம்.

இன்று நமது இயக்கத்தைப் பற்றி மறைமுகமாகவும், சில சமயங்களில் வெளிப்படையாகவும் எதிர்த்துப் பிரசாரம் பண்ணிக் கொண்டிருப்பவர்களில் முதன்மையாக இருப்பவர்கள் கீழ்க்காணும் கூட்டத்தினரே யாவார்கள். அவர்கள் அரசியல் வாதிகள், பண்டிதர்கள், புரோகிதர்கள், கோயில் தரும கர்த்தாக்கள், மடத்தலைவர்கள் முதலியவர்கள்.,

இவர்களில் முதலில் அரசியல்வாதிகளை எடுத்துக் கொள்ளுவோம். நமது இயக்கந் தோன்றிய நாள் முதல், நாம் அரசியல்வாதிகளின் புரட்டுக்களையும், சூழ்ச்சிகளையும் வெட்ட வெளிச்சமாக்கி வருகிறோம். "சுயராஜ்யம்" என்பதும், "சத்தியாக்கிரகம்" என்பதும் ஆகிய வார்த்தைகளெல்லாம் பாமர மக்களை ஏமாற்றி ஓட்டுப் பறிப்பதற்காகக் கூறும் தந்திர



RangaRakes tamilnavarasam.com

வார்த்தைகள் என்று கூறி வருகிறோம். மக்களுக்குள் உள்ள வித்தியாசங்கள் ஒழிவதற்கு முன், ஜாதியினாலும், மதத்தினாலும் மனிதனை மனிதன் அடிமையாகவும், மிருகங்கள் போலவும் நடத்துகின்ற நிலை மாறுவதற்குமுன் இந்நிலைமையைக் கொஞ்சங் கூட மாற்றுவதற்கு முயற்சியும் செய்யாமல் "சுயராஜ்யத்"திற்குப் பாடுபடுகிறோம் என்று கூறுவது சுத்த அயோக்கியத் தனத்தைத்தவிர வேறல்ல என்றே கூறி வருகிறோம். ஆகையால் அரசியலை வயிற்றுப் பிழைப்பாகக் கொண்டிருக்கும் கூட்டத்தார் நமது இயக்கத்தை எதிர்ப்பதும், இதைப்பற்றித் தப்புப் பிரசாரம் பண்ணுவதும் இயல்பேயாம். இவ்வாறு செய்வதன் நோக்கம் அவர்களுடைய வயிற்றுப் பிழைப்பில் மண் விழுகிறது என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்பதை அறியலாம்.

இரண்டாவது பண்டிதக் கூட்டத்தார், ஏன் நமது இயக்கத்தைக் கண்டு அஞ்சுகிறார்கள் எதிர்க்கிறார்கள்; என்று பார்ப்போம். நாம் குறிப்பிடும் பண்டிதர்கள் என்பவர்கள், புராணங்களையும், இராமாயணப் பாரதக் கதை களையும், வேதங்களையும், ஆகமங்களையும், ஸ்மிருதிகளை படித்துவிட்டு மூளை மழுங்கி, சொந்த மூளை அதாவது ஆராய்ச்சி அறிவு கொஞ்சங்கூட இல்லாமல், தாங்கள் படித்த புத்தகங்களில் சொல்லப் பட்டவைகள் தான் உண்மை அவைகளின் படி நடப்பதுதான் ஒழுங்கு அவைகளை மீறி நடந்தாலோ, அல்லது அவைகளை நம்பாவிட்டாலோ, "பாவம்" "நரகம்" முதலியவைகள் சம்பவித்துவிடும் என்று நம்பிக் கொண்டிருப்பவர் களேயாவார்கள். இப்படிப்பட்டவர்கள் யாராயிருந்தாலும் அவர்களை யெல்லாம் நாம் "பண்டிதர்கள்" என்று குறிப்பிடுகின்றோம். இப்பண்டிதர்கள் எதிர்ப்பதற்குக் காரணம் அவர்களுடைய வயிற்றுப் பிழைப்பாகும். அவர்கள் புராணப் பிரசங்கம் செய்வதன் மூலமும், வருணாச்சிரம தருமப்பிரசங்கம் செய்வதன் மூலமும் புராணக் கதைகளை வசனங்களாகவும், பாட்டுக் களாகவும் எழுதிப் புத்தகங்களாக அச்சிட்டு விற்பனை செய்வதன் மூலமும் ஜனங்களிடம் காசு பறித்து வந்தார்கள். சுயமரியாதை இயக்கப் பிரசாரத்தால் பொய்ப் புராணங்களுக்கும், அர்த்தமற்ற வருணாச்சிரம தர்மங்களுக்கும் ஆட்டங் கண்டு விட்டபடியால், இவைகளை வயிற்றுப் பிழைப்பாக வைத்துக் கொண்டிருந்த "பண்டிதர்கள்" பிழைப்புக்கும், கௌரவத்திற்கும் ஆபத்து ஏற்பட்டுவிட்டது. ஆகையால் இக் கூட்டத்தார் இவ்வியக்கத்திற்கு விரோத மாக இருப்பது ஆச்சரியமல்ல.

இனி மூன்றாவதாகப் புரோகிதர்களை எடுத்துக்கொள்வோம். புரோகிதர்கள் என்பவர்கள் மதத்தின் பெயரைச் சொல்லி, பல சடங்குகளைப் பாமர மக்களின் தலையிற் சுமத்தி, அவைகளின் மூலம் பொருள் பறித்து ஜீவனம் பண்ணும் சோம்பேறிக் கூட்டத்தாரே யாவார்கள், இக்கூட்டத்தாரின் கையிலேயே உலக மக்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகவும் சிக்கித் துன்புற்று அடிமையாகக்கிடந்து வந்தனர். ஒவ்வொரு நாட்டிலும் தோன்றிய சீர்திருத்தவாதிகள் எல்லோரும் முதலில் புரோகிதர்களின் ஏமாற்றல்களை



ஒழிக்கவே முயன்றிருக்கின்றனர். இம்முயற்சி காரணமாகப் பல தேசங்களில் புரோகிதர்களின் ஆதிக்கங்கள் அழிந்து விட்டன. ஆனால் நமது நாட்டில் மாத்திரம் இன்னும் புரோகித ஆதிக்கம், அழிய வேயில்லை, நமது நாட்டில் இந்தப் புரோகித ஆதிக்கம் இந்து மதத்திலும், கிறிஸ்துவ மதத்திலும், முஸ்லீம் மார்க்கத்திலும் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆகையால் நமது இயக்கம் ஆரம்பமுதலே புரோகிதத்தையும் புரோகிதர்களையும் பலமாகக் கண்டித்து அவர்களின் சூழ்ச்சிகளை வெளிப்படுத்தி வருகிறது. இதன் பயனாக, இந்துக்களில் அனேகர் இப்பொழுது புரோகிதத்தை ஒழித்தும் புரோகிதர்களை பகிஷ்கரித்தும் தங்கள் காரியங்களை நடத்திக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள்; முஸ்லீம்களிலும் முல்லாக்களின் ஆதிக்கத்தையும், அவர்களால் ஏற்படுத்தப்பட்ட "பஞ்சா" வணக்கம், சமாதி வணக்கம் "கூடு" எடுத்தல் முதலிய மார்க்கத்திற்கு விரோதமான காரியங்களையும் ஒழிக்க வேண்டும் என்ற கிளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. முற்றும் புரோகிதர்களின் ஆதிக்கத்திலேயே இருந்து வருகின்ற "ரோமன் கத்தோலிக்க கிறிஸ்துவமத" த்திலும் பல இடங்களில் புரோகிதர்களைப் பகிஷ்கரிக்கும் வேலை ஆரம்பித்து விட்டது. இதனால் ரோமன் கத்தோலிக்கப் பாதிரிகள், அவர்கள் கூட்டங்களிலும், மாதா கோயில்களிலும், சுயமரியாதை இயக்கத்தைத் தாக்கிப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். இவ்வாறு புரோகிதர்களின் சோம்பேறிப் பிழைப்புக்கு ஆபத்து ஏற்பட்ட காரணத்தினாலேயே அவர்கள் நமது இயக்கத்தை எதிர்த்துப் பேசப் புறப்பட்டிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

இனி நான்காவதாகப் புத்தக வியாபாரிகளில் சிலர் நம்மை ஏன் எதிர்க்கிறார்கள்? என்று பார்ப்போம். இவர்கள் புராணக்கதைகளாகிய, பெரிய புராணம், திருவிளையாடல் முதலியவைகளையும், தேவாரம், திருவாசம், நாலாயிரப் பிரபந்தம் முதலிய புத்தகங்களையும் அச்சிட்டும் பாடப்புத்த கங்களாக எழுதி வெளியிட்டும் ஒரு ரூபாய் புத்தகத்தை ஐந்து ரூபாய் விலை வைத்து விற்றும் பணம் சம்பாதிக்கின்றவர்கள். இந்த புராணப் புத்தக வியாபாரிகள் சைவத்தை வளர்ப்பதாகவும் வைணவத்தை வளர்ப்பதாகவும், தமிழை வளர்ப்பதாகவும் கூறிப் பணம் சம்பாதிப்பவர்கள். நமது இயக்கம் தோன்றியபின் இத்தகைய புத்தகங்களின் மதிப்பும் விற்பனையும் குறைந்து விட்டதால், இவர்கள் வியாபாரமும் குறைந்து விட்டது. ஆகையால் இந்தப் புராணப் புத்தக விளம்பர வியாபாரக் கூட்டத்தார் நம்மைப் பற்றி தப்புப் பிரசாரம் பண்ணுவதில் ஒன்றும் ஆச்சரியமில்லை.

அடுத்தபடி ஐந்தாவதாக நம்மை எதிர்க்கும் பத்திரிகைக்காரர்கள் யார் என்பதைப் பார்ப்போம். "சமய போதனை" "சன்மார்க்க போதனை" "நல் லொழுக்க போதனை" என்னும் பெயர்களால் சைவ மதப் பிரசாரம் பண்ணும் பத்திராசிரியர்களும், வைணவமதப் பிரசாரம் பண்ணும் பத்திராசிரியர்களும், கிறிஸ்துவ மதப் பிரசாரம் பண்ணும் பத்திராசிரியர்களும் இன்னும் தேசியப் பத்திரிகை என்று பெயர் வைத்துக் கொண்டு மருந்து வியாபாரங்களும்,



RangaRakes tamilnavarasam.com

புராணப் புஸ்தக வியாபாரங்களும் செய்யும் “கேட்லாக்” பத்திரிகைக் காரர்ளும் நம்மை எதிர்க்கிறார்கள். இவர்கள் எதிர்ப்பதற்குக் காரணம் அவர் களுடைய வயிற்றுப் பிழைப்பு போகிறதே என்பதைத் தவிர வேறு என்ன வாயிருக்க முடியும் என்றுதான் கேட்கிறோம்.

இனி ஆறாவதாகக் கோயில் தருமகர்த்தாக்கள் ஏன் நம்மை எதிர்க் கிறார்கள் என்று பார்த்தால் அதன் உண்மையும் விளங்காமல் போகாது. நமது இயக்கப் பிரசாரம் காரணமாக வரவர கோயில்களுக்குப் போகும் ஜனங்களும் குறைந்து வருகிறார்கள். கோயில் உண்டிகளில் விழும் பணமும் குறைந்து வருகிறது. அன்றியும் நாம் கோயில்களின் சொத்துக்களையெல்லாம் பறிமுதல் செய்து அவைகளை கல்வி, கைத்தொழில், சுகாதாரம் முதலியவைகளுக்குச் செலவு செய்யவேண்டுமென்று கூறி வருகிறோம். இவ்வாறாகி விட்டால், பரம்பரை யாகக் கோயில்களுக்குத் தருமகர்த்தாக்களாக இருந்து கொண்டு அவைகளின் செல்வங்களை அனுபவித்துவரும் கூட்டத்தாரின் சுக வாழ் விற்கு ஆபத்து ஏற்பட்டு விடுமல்லவா? ஆகையால் தான் இக்கூட்டத்தார் நமது இயக்கத்திற்கு விரோதமாக இருந்து வருகின்றார்கள்.

இனி அடுத்தபடி ஏழாவதாக மடாதிபதிகள் நமது இயக்கத்தை எதிர்ப் பதற்குக் காரணம் என்ன என்று பார்ப்போம். இந்தக்கூட்டத்தார், ஏராளமான சொத்துக்களை வைத்துக் கொண்டு அவைகளை நாட்டு மக்களின் நன்மைக் காக ஒரு சிறிதும் பயன்படுத்தாமல் தங்கள் சுக வாழ்வுக்கே செலவு செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் இவர்களுடைய சொத்துக்களோ தேச மக்களுடைய சொத்துக்கள் என்பதில் ஐயமில்லை. அன்றியும் இவர்கள் “மடாதிபதிகள்” என்று பெயர் வைத்துக் கொண்டு பாமர மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதற்குக் காரணம் மதமேயாகும். ஆகையினால் மதத்தையும் அழிக்க வேண்டும் மதத்தின் பேரால் வீணாகச் செலவழித்து வரும் மடாதிபதி களின் சொத்துக்கள் போன்றவைகளையெல்லாம் தேச நன்மைக்குப் பயன்படுத்த வேண்டும் என்று கூறி வருகிறோம். இதனால் இந்த மடங்களின் கூட்டத்தார் நமது இயக்கத்திற்கு எதிராக இருந்து வருகின்றார்கள்.

இனி எட்டாவதாக நாடகக்காரர்களை எடுத்துக் கொள்வோம். மற்ற நாடுகளில் உள்ள நாடகக்காரர்களோ சிறந்த படிப்பாளிகளாகவும், தேசத்தை சீர்திருத்த வேண்டும் என்னும் எண்ணமுடையவர்களாகவும் இருந்து வருகிறார்கள், இதற்குத் தகுந்தபடி பாமர மக்களின் மனத்தில் பகுத்தறிவு உணர்ச்சியை ஊட்டத் தகுந்த சிறந்த நாடகங்களை நடத்தி வருகின்றார்கள். ஆனால் நமது நாட்டு நாடகக்காரர்களில் பெரும்பாலானவர்கள் வெறும் வயிற்றுப் பிழைப்பையே குறியாகக் கொண்டவர்களாதலால் இவர்கள் பாமர மக்களின் அறியாமையை இன்னும் வளர்க்கக் கூடிய மத சம்பந்தமான புராணங்களையே நாடகங்களாக நடத்தி வருகிறார்கள். நமது இயக்கம் பரவு வதன் காரணமாக, இந்தப் புராணப் பிழைப்பு நாடகக் காரர்களுக்கு வருவாயும் குறைய ஆரம்பித்து வருகிறது. ஆதலால், இவர்கள் ஆயிரக்கணக்கான



ரூபாய்களுக்குச் “சீன்”களும், நாடகம் நடத்தும் போதெல்லாம் அதிகப் பணத்தைச் செலவு செய்து விளம்பரமும் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படியும் சரியானபடி பணம் வசூல் ஆவதில்லை. ஆகையால் இவர்களும் இப்பொழுது நம்மை எதிர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதிலும், அதிகமாக நமது இயக்கத்தை மறைமுகமாகத் தாக்கும் நாடகக்காரர்கள் பார்ப்பனர்களே என்பதை நாம் கூற வேண்டியதில்லை. ஏன் எனில், மதத்தினால் பாமர மக்களை ஏமாற்றி வருபவர்கள் பார்ப்பனக் கூட்டத்தார் அல்லவா? ஆகை யால் நாடகக் காரர்கள் நமது இயக்கத்திற்கு எதிரான பிரசாரம் பண்ண ஆரம்பித்திருப்பதும் ஆச்சரியமில்லை.

இனி இவ்வாறு மதத்திற்கும், வருணாச்சிரம தருமத்திற்கும் புராணங்களுக்கும் பரிந்து பேசி, நம்மை எதிர்க்க மேற்கூறிய அரசியல் வாதிகள் பண்டிதர்கள் புரோகிதர்கள் முதலான கூட்டத்தார்க்கு அக்கரை உண்டாகக் காரணமென்ன என்பதைப் பற்றி வாசகர்களே தெரிந்து கொண்டி ருக்கலாம். இக்கூட்டத்தார்கள் அனைவரும் மதத்தின் பெயராலும் வருணாச் சிரம தருமத்தின் பெயராலும், புராணங்களின் பெயராலும், வயிறு வளர்க்கின்ற வர்கள். இவைகளைக் கொண்டு ஏழை மக்களின் செல்வத்தைக் கொள்ளை யடிக்கின்றவர்கள். ஆகையால் தான் இவற்றைத் தடுக்கும் நம்மைப் பற்றித் தப்புப் பிரசாரம் செய்துகொண்டுவருகிறார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆகையால் இனியும் இக்கூட்டத்தாரின் வார்த்தைகளுக்கு ஏமாறாமல் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளும்படி பாமர மக்களுக்கு உதவி செய்வது தான் நமது கடமையாகும். அரசியல்வாதிகளின் பேச்சையும், புராணப் பிரசங்கிகளின் பேச்சையும் புரோகிதர்களின் பேச்சையும் நம்பி தாம் சம்பாதிக்கும் பொருளை இவர்கள் கையிற் கொடுத்து விட்டு தரித்திரமாகவும் அடிமையாகவும் வாழ வேண்டாம் எனப் பாமர மக்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டியதே சுயமரியாதைத் தோழர்களின் கடமையாகும். மதத்திற்கு “வக்காலத்து வாங்கிப்” பேசுபவர்களின் பேச்சை கேட்டு யாரும் ஏமாறப் போவதில்லையென்றும் இவர்களால் சுயமரியாதை இயக்கம் அழிந்துவிடப் போவதில்லையென்றும் எச்சரிக்கை செய்வதுடன், இக்கூட்டத்தாரையும் மதத்தின் பெயரால் பாமர மக்களை ஏமாற்றுந் தொழிலை மேற்கொள்ளாமல் வேறு கௌரவமான தொழிலை செய்து ஜீவிக்குமாறு வேண்டுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 04.09.1932**



RangaRakes tamilnavarasam.com

# கார்ப்பொரேஷனும் பிராமணீய பக்தியும்

சென்னைக் கார்ப்பொரேஷனில் சென்ற 7-9-32 தேதியில் நடந்த கூட்டத்தில் சென்னைக்கு விஜயஞ் செய்யும் கும்பகோணம் சங்கராச்சாரி யாருக்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தளிப்பதாகத் தீர்மானித்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுகிறோம்.

கார்ப்பொரேஷன் சபையானது நகரத்தின் சுகாதார நிலையைக் காப்பாற்றுவதற்கும், நகர ஜனங்களின் க்ஷேமத்தைக் கவனிப்பதற்கும் ஏற்பட்டதென்பதை எவரும் அறிவார்கள். இவைகளின் பொருட்டு நகர மக்களிடம் வரி வசூலித்து அப்பணத்தை நகர மக்களின் க்ஷேமத்திற்காகச் செலவு செய்து வருகிறது. ஒரு நகரத்திற்கு, தேச நன்மைக்காக அதாவது அரசியல் அபிவிருத்திக்காகவும் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் பாடுபடக் கூடிய தலைவர்கள் விஜயஞ் செய்வார்களாயின், அவர்களுக்கு அந்த நகர சபை உபசாரஞ் செய்வது எங்கும் வழக்கமாக இருந்து வருகிறது. இப்படிச் செய்வது அந்தத் தலைவர்களை ஊக்கப் படுத்துவதற்கும் அவர்களுடைய உழைப்பைப் பாராட்டுவதற்கும் அறிகுறியாகும். ஜனங்களின் நன்மைக்காக உழைக்கும் உண்மையான அரசியல் வாதிகளுக்கும் சமுதாய சீர்திருத்த வாதிகளுக்கும் நகர மக்கள் சிறிது உபசாரத்திற்காகச் செலவு செய்வது எந்த வகையிலும் தவறாகாது.

ஆனால், உலக நன்மையைச் சிறிதும் கருதாமல் தம்முடைய ஜாதி நன்மையை மட்டும் கருதுகின்றவர்களும் “மற்ற மதங்கள் யாவும் அழிய வேண்டும், தம்முடைய மதம் மட்டிலும் ஓங்க வேண்டும் என்று நினைக்கின்றவர்களும், மற்ற மக்களெல்லாம் “சூத்திரர்கள்” “இழிந்தவர்கள்” “சண்டாளர்கள்” “அந்நிய மதத்தினர்கள்” அனைவரும் “மிலேச்சர்கள்” ஆகையால் அவர்களுடன் பழகுதலும் பேசுதலும் பாவம், அப்படிச் செய்தால் அதற்காகப் பிராயச்சித்தஞ் செய்து கொள்ள வேண்டும்” என்று கருதுகின்ற வர்களும் ஆகிய குறுகிய மனப்பான்மையுடைய கூட்டத்தார்க்கெல்லாம் பொது ஜனங்களின் வரிப் பணத்திலிருந்து நடைபெறும் ஸ்தாபனம் உபசாரம் பண்ணுவதென்றால் அது எந்த விதத்தில் நியாயமுடையதென்று கேட்கின்றோம்.



உதாரணமாகச் சென்னைக் கார்ப்பொரேஷனை எடுத்துக் கொள்ளு வோம். அதற்கு வரி கொடுப்பவர்களில் கிறிஸ்தவர்களிருக் கிறார்கள்; முஸ்லீம்கள் இருக்கிறார்கள்; ஜைனர்களிருக்கிறார்கள்; புத்தர்களிருக்கிறார் கள்; பார்சிகளிருக்கிறார்கள்; சைவர்களிருக்கிறார்கள்; வைணவர்களிருக் கிறார்கள். இவ்வாறு பல திறப்பட்ட மதத்தினர் களிருக்கிறார்கள்.

ஜாதிகளிலோ ஆதிதிராவிடர்கள், ஆங்கிலேயர்கள், பார்ப்பனர்கள், அல்லாதார்கள் முதலிய இந்தியாவில் எவ்வளவு ஜாதிகள் உண்டோ அவ்வளவு ஜாதியினர்களும் சென்னை நகரில் வாழுகின்றார்கள். இவ்வளவு மதத்தினரிடமிருந்தும், ஜாதியினரிடமிருந்தும் வாங்கப்படும் வரிப் பணத் தினால்தான் கார்ப்பொரேஷன் நடைபெற்று வருகிறது என்பது யாருக்கும் தெரியாத விஷயம் அல்ல.

இந்தக் கார்ப்பொரேஷனால் இப்பொழுது உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் சங்கராச்சாரியாரைப் பற்றி நமது வாசகர்களுக்குத் தெரியாததல்ல. அவர் பிராமணர்களின் ஆதிக்கத்தையும், பிராமணீயத்தையும் வளர்க்க உதவி செய்பவர் சந்நியாசி வேடம் பூண்டவராயிருந்தாலும், யானை, குதிரை, ஒட்டை முதலிய மிருக வர்க்கங்களுடனும், ஆள் மாகாணங்களுடனும் உலக குரு என்று பெயர் வைத்துக் கொண்டு ஊர் ஊராகச் சுற்றுபவர். சுற்றுப் பிரயாணம் பண்ணும் போது, ஆங்காங்கே உள்ள பிராமணரல்லாத பணக்காரர்களிடம், பாத காணிக்கை என்னும் பெயருடன் ஆயிரக்கணக்காகப் பொருள் பறிக் கின்றவர். ஏமாந்து பொருளைக் கொடுக்கும் பார்ப்பனரல்லாதார்களிடம் மேற்படி சங்கராச்சாரியார் நேரே பேசுவது கூட பாவம் என்று நினைத்து பக்கத்தில் ஒரு பிராமணரை வைத்துக் கொண்டு அவரிடம் பேசுவது போல பாவித்துக் கொண்டு பணம் கொடுத்த பார்ப்பனரல்லாதாரிடம் பேசுபவர்; பார்ப்பனரல்லாதாரிடம் பறிக்கும் பொருளைப் பிராமண போஜனம் என்னும் பெயரால் பார்ப்பனர்களுக்கே வயிறு வெடிக்கும்படி விருந்து செய்பவர்; பார்ப்பனரல்லாதார்க்கு அவர்கள் சாப்பிட்ட சாப்பாட்டின் மீதத்தைப் போட் டால் கூட அதனால் தமக்குத் தோஷம் வந்து விடும் என்று நினைப்பவர்; சுருங்கக் கூறினால் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்தி கடவுள், வேதம், புராணம் என்பவைகளின் பேரால் பார்ப்பனரல்லாதார்களை அடிமைப் படுத்துவதற்கு வருணாச்சிரம தருமப் பிரசாரம் பண்ணுபவர்தான் சங்கராச் சாரியார் என்று சொல்லுவதில் எள்ளளவும் ஐயமில்லை.

இத்தகைய ஒரு சிறு கூட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு உலக மக்க ளுக்கு கெடுதியை உண்டாக்கும் மதப்பிரசாரமும் வருணாச்சிரம தருமப் பிரசாரமும் செய்து வரும் ஒருவருக்கு, சகல மதத்தினர்க்கும், சகல ஜாதி யினர்க்கும் பொதுவான ஒரு சபை உபசாரம் செய்வதென்றால் அது பொது ஜன அபிப்பிராயத்திற்கு இசைந்ததாகுமா என்றுதான் கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

அன்றியும், சென்னைக் கார்ப்பொரேஷனில் இது சம்பந்தமான விவாதம் நடந்தபோது சில அங்கத்தினர்கள் எழுப்பிய இரண்டொரு சந்தேகங்களும் கவனிக்கக் கூடியதாகும். அதாவது ஒரு அங்கத்தினர்– "எலெக்ட்ரிக் லிப்டில் ஏறி கவுன்சிலர் அறைக்கு வந்து நம்முடன் கலந்து கொண்டு உபசாரப்பத்திரம் பெற திரு. சங்கராச்சாரியார் ஒரு சமயம் விரும்ப மாட்டார் என நினைக்கிறேன்" என்று கூறினார். இது உண்மையேயாகும். ரயில்வண்டி, மோட்டார்கார், ஆகாய விமானம் முதலிய வாகன வசதிகள் ஏராளமாக இருக்கின்ற இக்காலத்திலும், பல்லக்கின் மேல் ஏறிக் கொண்டு மனிதர்களை சுமக்கச் செய்யும் பெரியார்கள், "எலெக்ட்ரிக் லிப்டி"ன் மேல் அடி வைப்பதற்கு துணிவார் என்பது சந்தேகந்தான். அப்படியேறுவது அவர்களுடைய மத சம்பிரதாயத்திற்கும், பழக்க வழக்கத்திற்கும், "தெய்வீகத்" தன்மைக்கும் விரோதமாக இருந்தாலும் இருக்கலாம். ஆகவே அவர் எப்படி கார்ப்பொரேஷன் சபைக்குள் புகுவார் என்பதில் சந்தேகம் உண்டாவது இயல்பு என்பதை நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம்.

மற்றொரு அங்கத்தினர் "இந்துக்களல்லாத மற்ற அங்கத்தினருடன் கை குலுக்கித் தீட்டுப்பட்டுக் கொள்ள சங்கராச்சாரியார் சம்மதிப்பாரா? என்பதை அறிய விரும்புகிறேன்" என்று ஒரு சந்தேகத்தை எழுப்பினார். அந்த அங்கத்தினர், அந்நிய மதத்தைச் சேர்ந்தவராதலால் சங்கராச்சாரியாரின் உண்மை நிலையறியாமல் இவ்வாறு கேட்டார் என்றே நாம் நினைக்கிறோம். பிராமணர்களைத் தவிர மற்ற இந்துக்களை யெல்லாம், "சூத்திரர்கள்" அதாவது அடிமைப் பட்டவர்கள், விலைக்கு வாங்கப்பட்டவர்கள், வேசி மக்கள் சண்டையில் ஜெயித்துப் பிடித்துக் கொண்டு வரப்பட்டவர்கள் என்று கருதி அவர்களைப் பார்க்கக் கூடச் சம்மதிக்காதவர் என்பதைத் தெரிந்திருந்தால் அவ்வங்கத்தினர் இச்சந்தேகத்தை எழுப்பியிருக்க மாட்டார். ஆதலால் சங்கராச்சாரியார் பிராமணரல்லாத இந்துக்களையே தொட்டுக் கொள்ளாத போது மற்ற மதத்தினரை எப்படித் தொட்டுக் கொள்ளுவார் என்று கேட்கிறோம்.

அன்றியும், "கடவுள்" என்பவரின் முகத்திற் பிறந்ததாகக் கூறிக் கொண்டிருக்கும் கூட்டத்தாரின் தலைவராகிய சங்கராச்சாரியாருக்குக் கார்ப்பொரேஷன் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதாகத் தீர்மானித்திருப்பதில் பல சங்கடங்கள் நேர இடமிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்ட விரும்புகின்றோம்.

முதலில் வேத சம்பிரதாயப்படி நடந்து கொள்ளுகின்ற ஒருவர், "மிலேச்சர்" என்று சங்கராச்சாரியாரால் கருதப்படுகின்ற ஆங்கிலேயர்களின் சம்பிரதாயப்படி அமைந்துள்ள ஒரு சபைக்குள் பிரவேசிக்கலாமா? அச்சபையின் உபசரிப்பை ஏற்றுக் கொள்ளலாமா? என்னும் கேள்விகள் எழ இடமிருக்கின்றன. ஒருக்கால் இவைகளுக்கு ஏதாவது சமாதானம் சொல்லிக் கொண்டு உபசாரத்தை ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தால், அப்பொழுது சங்கராச்சாரியார் சபைக்குள் வரும்பொழுது, அங்குள்ள பிராமணரல்லாத அங்கத்தினர்கள், முஸ்லீம் அங்கத்தினர்கள், கிறிஸ்தவ அங்கத்தினர்கள், ஆதிதிராவிட அங்கத்தினர்கள் இவர்களெல்லாம் சபையில் இருக்கலாமா? இவர்கள் இருக்கின்ற ஒரு கூட்டத்தின் நடுவில் சங்கராச்சாரியார் செல்லலாமா? அப்படி செல்லுவது அவருடைய வேத சாஸ்திரங்களுக்கும் ஏற்குமா? என்னும் கேள்விகளும் எழுகின்றன.

அப்படிச் சங்கராச்சாரியார் சென்றாலும் எல்லா அங்கத்தினர்களும் இருந்தாலும், அங்கத்தினர்களும் சங்கராச்சாரியார் அவர்களும் ஒருவர்க்கொருவர் எவ்வாறு அறிமுகப்படுத்திக் கொள்வது? மரியாதை செய்து கொள்ளுவது என்ற விஷயத்தில் தகராறு ஏற்பட இடமிருக்கிறது. அதாவது சங்கராச்சாரியார் சம்பிரதாயப்படி யாரும் அவரைக் கண்டவுடன் நமஸ்காரம் பண்ண வேண்டும்; அப்பொழுது சங்கராச்சாரியார் நமஸ்காரம் பண்ணிக் கொண்டவர், பிராமணராயிருந்தால் தன் கையில் 'பிரசாதம்' எனும் பெயரால் சாம்பல் கொடுப்பார். பிராமணரல்லாதவராயிருந்தால் மற்றொருவர் கையில் சாம்பல் கொடுக்கச் சொல்வார். இதுதான் சங்கராச்சாரியாரைக் கண்டு கொள்ளும் முறையாகும். கார்ப்போரேஷன் உபச்சாரம் செய்யும் போது இந்த முறையை அனுசரிப்பதா? இம்முறைக்குக் கார்ப்பொரேஷன் அங்கத்தினர்கள் அனைவரும் சம்மதிப்பார்களா?

அல்லது ஆங்கில சம்பிரதாயப்படி, சங்கராச்சாரியார் வந்தவுடன் தலைவர் ஒவ்வொரு அங்கத்தினரையும் அறிமுகம் செய்து வைக்க, சங்கராச்சாரியார் அவ்வங்கத்தினர்களுடன் கைகுலுக்க வேண்டும்; இம்மாதிரி செய்ய அவர் அனுமதிப்பாரா? இப்படிச் செய்தால், அவருடைய கொள்கைக்கும் மதத்திற்கும், வேத சாஸ்திரங்களுக்கும் ஏற்குமா? என்ற கேள்விகளும் எழுகின்றன.

அன்றியும், "சமஸ்கிருதம் ஒன்றுதான் தெய்வ பாஷை. தமிழ் சூத்திரபாஷை, இங்கிலீஷ் போன்ற அந்நிய தேச பாஷைகள், மிலேச்ச பாஷைகள்" என்ற கொள்கையுடைய சங்கராச்சாரியாருக்கு எந்த பாஷையில் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப் போகின்றார்கள் என்ற சந்தேகம் நமக்கு உண்டாகிறது. சங்கராச்சாரியார் கொள்கைப்படி "தெய்வ பாஷை" யாகிய சமஸ்கிருதத்தில் உபசாரப் பத்திரம் வாசிக்க கார்ப்பொரேஷன் துணியுமா? அல்லது "மிலேச்ச பாஷை" யாகிய ஆங்கிலத்தில் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தால் அதை சங்கராச்சாரியார் ஏற்றுக் கொள்ளுவது அவருடைய கொள்கைக்குப் பொருத்தமா? என்ற கேள்விகளும் எழுகின்றன.

இந்தச் சங்கடங்களை யெல்லாம் உத்தேசித்து, சங்கராச்சாரியார் அவர்களே "கார்ப்பொரேஷன் உபசாரத்தை ஏற்றுக் கொள்ள முடியாது" என்று தெரிவித்து விட்டால், இது ஒரு பெரிய கார்ப்பொரேஷன் சபைக்கு

அவமானமல்லவா? இதுவரையிலும் கௌரவம் பொருந்திய கார்ப்பொ ரேஷன் உபசாரத்தை மறுத்தவர் யாரேனும் உண்டா?

ஆகையால் நாம் மேலே கூறிய விஷயங்களையெல்லாம் ஆலோ சித்துப் பார்ப்பவர்கள் கார்ப்பொரேஷன் செய்த தீர்மானம் தவறானது என்பதை உணராமலிருக்க முடியாது. இவ்வாறே மதவாதிகளுக்கும், வருணாச்சிரம தருமிகளுக்கும் கார்ப்பொரேஷன் உபசாரம் செய்யத் தீர்மானிப்பதன் நோக்கம் என்ன என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. எல்லா மத குருக்களுக்கும் கௌரவம் செய்ய வேண்டும் என்று கார்ப்பொரேஷன் தீர்மானிக்குமாயின், அபிப்பிராயப்படுமாயின் பிறகு அதன் உபசாரத்திற்கே கௌரவமில்லாமற் போய்விடும் என்பது நிச்சயம். சாதாரணமாகத் தெருவில் பிச்சையெடுத்துத் திரிகின்ற ஒரு பிச்சைக்காரனும் தன்னை மதகுரு என்று சொல்லிக் கொள்ளலாம். அத்தகைய மத குருமார்களுக்கும் கார்ப்பொரேஷன் உபசாரம் செய்யத் துணியுமா? என்றுதான் கேட்கின்றோம்.

அன்றியும், சங்கராச்சாரியாருக்கு உபசாரம் செய்ய வேண்டுமென்னும் தீர்மானத்தை, அவரால் “சூத்திரா்” என்று கருதப்படுகின்ற திரு. ஜி. நாராயண சாமி செட்டியார் என்னும் பிராமணரல்லாத கனவான் கொண்டு வந்ததைப் பற்றியே நாம் மிகவும் வெட்கப்படுகிறோம். இத் தீர்மானத்தை, “ஜஸ்டிஸ்” கட்சியைச் சேர்ந்த பார்ப்பனர் அல்லாத அங்கத்தினர்கள் ஆதரித்தது அதிலும் வெட்கக் கேடான காரியமாகும்.

அன்றியும் சங்கராச்சரியாருக்கு உபசாரப் பத்திரத்தைத் தயாரிக்க செட்டியார் ஏற்படுத்தியிருக்கும் கமிட்டியில், திரு. வி. சக்கரைச் செட்டியார் என்னும் கிறிஸ்துவ கனவானும், திரு. பஷீர் அகமது சையத் எனும் முஸ்லிம் கனவானும் சேர்ந்திருப்பதன் அர்த்தமும் நமக்கு விளங்கவில்லை.

இவற்றையெல்லாம் நினைக்கும் போது கார்ப்பொரேஷன் சபை நகர நன்மையை கவனிக்கும் சபை மாத்திரமா? அல்லது மதப் பிரசாரம், வருணாச் சிரம தர்மப் பிரசாரம், பார்ப்பனப் பிரசாரம் செய்யும் சபையா? என்னும் சந்தேகங்களும் உண்டாகின்றன.

இதற்கு யார் எவ்வளவுதான் சமாதானம் சொன்னாலும் கார்ப் பொரேஷன் இம்மாதிரி, வருணாச்சிரம தருமப் பிரசாரகர்களுக்கு உபசாரம் செய்வதை மேற்கொள்ளுமானால், அதையும், அதன் அங்கத்தினர்களையும் வருணாச்சிரம தருமசபை, “வருணாச்சிரம தருமப் பிரசாரகர்கள்” “பிராமணிய பக்தர்கள்” என்று பொது ஜனங்கள் காட்டும் குற்றத்தினின்றும் தப்பித்துக் கொள்ள முடியாதென்று தான் நாம் கருதுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 11.09.1932**



# அரசியல்வாதிகளுக்குப் புத்தி வருமா?

சென்ற 5-9-32 ந்தேதி இந்தியா சட்டசபையில் மேன்மைதங்கிய வைசிராய் அவர்கள் செய்த பிரசங்கம் தற்கால நிலைமையில் மிகவும் கவனிக் கத் தக்க தொன்றாகும். ‘காங்கிரசானது பயமுறுத்தலினால் சுயராஜ்யம் வாங்கி விடலாம் என்னும் நோக்கத்துடன் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்தி வருகிறது. காங்கிரஸ் செய்யும் போராட்டமானது பலாத்காரமில்லாதது, சாத்வீகமானது என்ற பெயருள்ளதாயிருப்பினும், உண்மையில் தேசத்தில், கலகத்தையும், அமைதியின்மையையும், பலாத்கார உணர்ச்சியையும் உண்டாக்குவதற்கு காங்கிரசின் கிளர்ச்சியே காரணமாக இருக்கின்றது. ஆகையால், எந்த வகை யிலும், காங்கிரசின் போராட்டத்தை ஒடுக்குவதற்கு வேண்டிய முயற்சியை அரசாங்கம் செய்யாமலிருக்க முடியாது’ என்னும் அபிப்பிராயம் வைசி ராயின் பிரசங்கத்தில் காணக்கிடக்கின்றது. இந்த அபிப்பிராயம் தவறான தென்று நடுநிலையும், உண்மையும், பகுத்தறிவும் உள்ள எவரும் கூறமுடியாது என்றே நாம் கூறுவோம். இதற்கு உதாரணமாகச் சென்ற பம்பாய் கலகத் தையும், வங்காளத்தில் நடைபெற்று வரும் புரட்சி இயக்கத்தையும் கூறலாம். இதையும் வைசிராய் அவர்கள் தமது பிரசங்கத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

பொதுவாகவே, காங்கிரசின் மூலம் சத்தியாக்கிரகம் ‘சட்ட மறுப்பு’, ‘சாத்வீகப் போராட்டம்’ என்னும் பெயர்களால் சட்டத்தையும், ஒழுங்கையும் மீறி நடக்கும் விதத்தை மக்களுக்கு கற்பிக்கப்பட்ட பிறகே தேசத்தில், கலகமும், புரட்சியும், சண்டை சச்சரவுகளும் பெருகலாயின என்னும் உண்மையை யாரும் மறுக்கமுடியாது.

அன்றியும், காங்கிரஸ் இந்த மாதிரியான போராட்டத்தை ஆரம்பித்த தனால் தேசம் அடைந்த லாபந்தான் என்ன என்பதையும் சிறிது ஆலோ சித்துப் பார்த்து உண்மையைத் தெரிந்து கொள்ளுகின்றவர்கள், நாம் கூறு வதைப் பற்றிச் சிறிதும் குறைகூற மாட்டார்கள் என்பது திண்ணம்.

அதாவது காங்கிரஸ் “சுயராஜ்யம்” என்னும் பெயரால் சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தவுடன், உண்மையிலே தேசீய வெறி கொண்ட சில இளைஞர்களும் வேறு வேலை செய்து பிழைக்க வழி தெரியாத மற்றும் பல வாலிபர்களும் அதில் சேர்ந்தார்கள்; தலைவர்கள் என்பவர்கள் இடுகின்ற



RangaRakes
tamilnavarasam.com

கட்டளைகளைச் செய்து, தடியடியும், பிரம்படியும் பட்டுச் சிறைசென்று கஷ்டப்படுகிறார்கள். தலைவர்கள் என்பவர்களில் சிலர் சிறை சென்றாலும் அவர்கள் 'ஏ' வகுப்பில் சௌக்கியமாக உட்கார்ந்திருந்து விட்டு வீடு வந்து சேர்கிறார்கள். கடைசியாக, சட்டசபை தேர்தலோ, ஸ்தல ஸ்தாபனத் தேர்தலோ வருகின்ற காலங்களில், காங்கிரசின் பேரால் தலைவர்களாக விளங்கியவர் களும், காங்கிரஸ் அனுதாபிகளாக விளங்கியவர்களும், ஒன்றும் தெரியாத ஏழை இளைஞர்களைச் சிறைக்கனுப்பக் காரணமாய் இருந்தவர்களும், 'தேசாபிமானி' என்னும் பட்டத்துடன் தேர்தலில் அபேட்சகர்களாக நின்று பதவி பெறுகிறார்கள். இதுதான் சட்ட மறுப்பில் நாம் அடையும் பலன். எந்த வகையில் பார்த்தாலும், ஏழைகளின் உழைப்பும், கஷ்டமும், தியாகமும், பணக்காரர்கள் பட்டம் பதவி பெறுவதற்கே உபயோகப்படுகிறதேயொழிய வேறு கடுகளவாவது ஏழை மக்களின் நன்மைக்கு உபயோகப்படுவதில்லை யென்பதை நாம் அறிந்துதானிருக்கிறோம்.

அன்றியும், நீண்ட நாளாகச் சட்டமறுப்புப் போராட்டம் நடந்து கொண்டிருப்பதனால், நாட்டின் வியாபாரமும், கைத்தொழிலும் பாதிக்கப் படுகிறதே தவிர அவைகளிலும் ஒருவித முன்னேற்றத்தையும் காண வழியில்லாமலிருக்கிறது.

எந்த வகையிலும். சட்ட மறுப்பு இயக்கம் ஒழிய வேண்டுவது அவசியமாகும். ஆகையினால், காங்கிரஸ் தலைவர்கள், புத்திசாலித்தன மாகச் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திவிட்டு, உண்மையில் நாட்டு மக்கள் முன்னேற்றமடையத் தக்க வழியில் உழைப்பார்களானால் அவர்கள் உழைப்பு பலனளிக்கக் கூடியதாகும். இன்றேல் அவர்கள் உழைப்பு வீண் என்பது நமது அபிப்பிராயமாகும். சேனைகளும், துப்பாக்கிகளும், பீரங்கிகளும் உள்ள ஒரு அரசாங்கத்துடன், ஒன்றுமில்லாத பேர்வழிகளாகிய நெல்லிக்காய் மூட்டை கள், "கை ராட்டினத்தாலும்" "ஆத்ம சக்தி" யாலும் எதிர்த்து போர் செய்து வெற்றிபெற முயற்சிப்பது, நமது நாட்டிலுள்ள மதப்பித்து கொண்டவர்களுக்கு "சாத்தியமானது" என்று தோன்றினாலும், உண்மை அறிவுடையவர்களுக்கும் அயல்நாட்டு மக்களுக்கும் சிரிப்பை உண்டாக்காமல் போகாது. ஆகையால் "சத்தியாக்கிரகம்" "ஆத்ம சக்தி" என்று பைத்தியக்காரக் கொள்கைகளையும், அவைகளின் மூலம் உண்டான "சாத்வீகச் சட்ட மறுப்பு" போராட்டம் என்பதையும் அடியோடு நிறுத்திவிடுவது தான் புத்திசாலித்தனமாகும் என்பதை பகுத்தறிவுடையோர் எவரும் மறுக்க முடியாது.

இப்படி இல்லாமல், இன்னும் காங்கிரஸ்காரர்கள் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்திக் கொண்டே போவார்களாயின், வைஸ்ராய் அவர்கள் கூறியிருப்பது போல தேசத்தின் அமைதியை உத்தேசித்து, அவ்வியக்கத்தை அடக்க, அரசாங்கத்தாரும் பொது ஜனங்களும் தங்களால் ஆன முயற்சியை செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அறிவுடைய எவரும் ஒப்புக் கொண்டுதான் தீரவேண்டும்.



அடுத்தபடியாக வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பைப் பற்றி வைஸ்ராய் அவர்கள் கூறியிருக்கும் அபிப்பிராயமும் குறிப்பிடத் தக்கதாகும். அவர், இந்தியப் பிரதிநிதிகள் வகுப்புப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியாத காரணத்தாலேயே பிரிட்டிஷ் பிரதம மந்திரியால் வகுப்புப் பிரச்சினையை முடிவு செய்ய நேர்ந்தது. ஆகவே "அம்முடிவை இந்தியர் ஒப்புக் கொள்ள வேண்டும். அல்லது தங்களுக்குள் வேறு சமரசமான முடிவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அல்லது எல்லாவற்றையும் விட்டுவிட்டு வேறு அரசியல் சுதந்திரம் பெறுவதற்கு முயற்சிக்காமல் சும்மா இருந்துவிட வேண்டியது. இம்மூன்றைத் தவிர வேறு வழியில்லை" என்று கூறியிருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

மூன்றாவது கூறிய அரசியல் சுதந்திரம் வேண்டாம் என்ற விஷயத்தைப் பற்றிப் பேசுவது இதுவரையிலும் இந்தியா அடைந்து வந்திருக் கும் அரசியல் அபிவிருத்திக்கும் நோக்கத்திற்கும். முரண்பாடானதாகும் என்பதை வைசிராயே குறிப்பிட்டு விட்டார். ஆகவே மற்ற இரண்டு விஷயங் களை அதாவது வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பை ஒப்புக் கொள்ளுவது அல்லது வேறு முடிவு செய்து கொள்ளுவது என்ற விஷயத்தை எடுத்துக் கொண்டால் வேறு சமரசமான முடிவு செய்து கொள்ளுவது என்பது நமது நாட்டு அரசியல்வாதிகளால் முடியாத காரியம் என்பதை நாம் கோபுரத்தின் மேல் நின்று கொண்டும் கூறத் தயாராயிருக்கிறோம். ஆகவே இம்முடிவை ஒப்புக் கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை நாம் முன்னமே எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

ஆகையால் இனியேனும் நமது நாட்டு அரசியல் வாதிகள் நாட்டின் உண்மை நிலையையும் அரசாங்கத்தின் பிடிவாதத் தன்மையையும், அதனோடு எதிர்த்து போராட முடியாத நமது சக்தியற்ற தன்மையையும் உணர்ந்து சட்ட மறுப்புப் போராட்டத்தை நிறுத்திவிட்டு வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பையும் ஒப்புக் கொண்டு மேலே ஆக வேண்டிய காரியங்களை செய்ய முன் வருவார்களா என்று கேட்கிறோம்.

உண்மையில் நமது நாடு சுதந்தரமடைய வேண்டுமானால் நமது மக்கள் அனைவரும் சுயமரியாதையுடன் வாழ வேண்டுமானால் கிடைக்கப் போகும் மாகாண சுயாட்சியின் அதிகாரத்தைக் கொண்டு சாதி மத வித்தியாசங்களை ஒழித்துச் சமத்துவத்தை உண்டாக்கித் தேசத்தை முன்னுக்குக் கொண்டுவர முயலுவதே அறிவுடைமையாகும். இதை விட்டு வீண் கூச்சல் போட்டுக் கொண்டு இன்னும் காந்தி விழாவும், நேரு விழாவும், பாரத மாதா விழாவும், தீபாவளிப் பிரசாரமும், நடத்திக் கொண்டு மக்களை மூடர்களாகவும், குருட்டு பக்தியுடையவர்களாகவும், பகுத்தறிவு இல்லாதவர்களாகவும் ஆக்க முயல்வது பிராமணீயப் பிரசாரத்திற்கும், வருணாச்சிரம தருமப் பிரச்சாரத் திற்கு அடிகோலுவதாகுமென்றுதான் நாம் கூறுவோம்.



RangaRakes tamilnavarasam.com

வைசிராய் அவர்களின் பிரசங்கத்தையும், இதுவரையிலும் செய்த அரசியல் ஆர்ப்பாட்டத்தால், நாம் அடைந்த பலனையும் கவனிப்பவர்கள் இந்த முடிவுக்குத்தான் வரக்கூடும் என்று நாம் உறுதியாகக் கூறுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 11.09.1932**



# காந்தியின் வைதீக வெறி

இந்துக்கள் என்பவர்களும், திரு. காந்தியும், காங்கிரசும் தீண்டாதார்க்கு அரசியல் தனித் தொகுதியை ஏற்படுத்துவதை ஆதி முதல் மறுத்து வருவ தற்குக் காரணம், அவர்களை இதுவரையிலும் இருந்தது போலவே எப் பொழுதும் இந்துக்களுக்கு அடிமையாக வைத்திருக்க வேண்டும் என்னும் எண்ணமேயாகும் என்று நாம் கூறி வருகிறோம்.

இவ்வாறு நாம் சொல்லி வந்ததின் உண்மை, இப்பொழுது திரு. காந்திக்கும், இந்தியா மந்திரிக்கும், முதல் மந்திரிக்கும் நடந்த கடிதப் போக்கு வரத்துகளின் மூலம் நன்றாக விளங்கிவிட்டது.

தீண்டாதாருக்குத் தனித் தொகுதி கொடுத்துவிட்டால் அவர்களுக் காகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள், வேறு எந்த உயர்ந்த வகுப்பி னருடைய தயவையும் எதிர்பாராமல் சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப் படலாம். சட்டசபையிலும் அவர்கள் தங்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு, உண்மையாகவும் தைரியமாகவும் போராடலாம்.

அன்றியும், இந்துக்களினின்றும் தீண்டாதாரைத் தனியாகப் பிரிப்பதனால், அவர்களுக்கு மற்றொரு பெருஞ் சாதகமும் உண்டு. அதாவது, தற்போது பிரிட்டிஷ் அரசாங்கம் செய்திருக்கும் வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பின்படி பார்த்தால், ஒவ்வொரு சட்டசபைகளிலும் உள்ள, முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், ஆங்கிலேயர்கள், தீண்டாதார்கள் ஆகிய இவர்கள் எல்லோருடைய தொகையும் ஒன்று சேர்ந்து இந்துக்களின் தொகையைக் காட்டிலும் சிறிது மெஜாரிட்டியாகி விடுகிறது. தீண்டாதாருக்குத் தனித் தொகுதி கொடுத்துப் பிரிக்கா விட்டால், மற்றவர்களின் தொகையைக் காட்டிலும் இந்துக்களின் தொகை சிறிது மெஜாரிட்டியாக இருக்கும்.

மேற்கூறியவாறு, இந்துக்களின் தொகையை விட, தீண்டாதாரை உள்ளிட்ட மற்றவர்களின் தொகை மெஜாரிட்டியாவதன் மூலம் தீண்டா தாருக்கு அவர்கள் கோரிய நன்மைகள் கிடைக்கக் கூடும் என்பதில் ஐய மில்லை. எப்படியெனில், இன்று தீண்டாதார்கள், பொதுத் தெருக்களில் நடக்கும் உரிமைக்கும், பொதுக் குளம், கிணறுகளில் தண்ணீர் எடுக்கும்



RangaRakes tamilnavarasam.com

உரிமைக்கும், பொதுக் கோயில்களில் நுழையும் உரிமைக்கும், பொதுப் பள்ளிக் கூடங்களில் சேர்ந்து படிக்கும் உரிமைக்கும், இன்னும் மற்ற மக்களைப் போல் தாங்களும் தேசத்தில் சமத்துவத்துடன் வாழ வேண்டும் என்னும் உரிமைக்கும் போராடிக் கொண்டு வருகின்றார்கள். இப் போராட்டத் திற்கு எதிராக நிற்கின்றவர்கள் கிறிஸ்தவர்களல்லர்; முஸ்லிம்களல்லர்; ஆங்கிலேயர்களல்லர்; ஆங்கிலோ இந்தியர்களல்லர் என்பது யாரும் அறியாததல்ல. ஆனால் தீண்டாதார்களின் மேற்கண்ட உரிமைகளை மறுத்துப் போராடுகின்றவர்கள், வைதீக இந்துக்கள் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதற்கு உதாரணம், நாசிக், குருவாயூர் முதலிய இடங்களில் நடை பெறும் சத்தியாக்கிரகமும், இன்னும், அடிக்கடி ராமநாதபுரம் ஜில்லாவிலும் மற்றும் பல இடங்களிலும் தீண்டாதாருக்கு உண்டாகும் துன்பமுமே போதியவைகளாகும்.

அன்றியும், தீண்டாதாருக்குச் சுதந்தரம் அளிப்பதன் சம்பந்தமாகச் சட்ட சபைகளில் ஏதாவது தீர்மானங்கள் வருகின்ற காலங்களில் அவைகளை இந்துக்களே எதிர்த்து வருகின்ற செய்தியும் போதுமானதாகும். இத்தகைய மனப்பான்மையுடைய இந்துக்களுடன், தீண்டாதார் சேர்ந்திருப்பதன் மூலம் அவர்களுக்கு எள்ளளவாவது நன்மை கிடைக்கப் போவதில்லை என்பது உறுதியாகும்.

அன்றியும் தீண்டாதாருக்குத் தனித் தொகுதியளிக்காமல், பொதுத் தொகுதியில் ஸ்தானங்கள் ஒதிக்கி வைத்தால் கூட, அதனாலும் அச்சமூகத் திற்கு கடுகளவும் பயன் உண்டாகாது. ஏனெனில் பொதுத் தொகுதியில் உள்ள மற்ற இந்துக்களின் வாக்கையும் பெற்றே அச்சமூகத்தினர் சட்டசபை ஸ்தானம் பெற முடியும். தீண்டாதார்களில் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை அளித்தால் கூட, அவர்களைக் காட்டிலும் உயர்ந்த சாதி இந்துக் களின் வாக்காளர் தொகையே மிகுதியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, இந்துக்களின் தயவினால் தான் தீண்டாதார் பிரதிநிதிகள் சட்ட சபைக்குச் செல்ல முடியும். உயர்ந்த சாதி இந்துக்களின் தயவினால் செல்லும் பிரதிநிதிகள் எவ்வாறு தீண்டாதாராகிய தங்கள் சமூகத்திற்கு உண்மையாகவும், தைரியமாகவும் போராட முடியும் என்று கேட்கிறோம். ஆகையால் தீண்டா தார்களுக்குத் தனித் தொகுதி இல்லாவிட்டால் அவர்கள் முன்னேற்றமும் நீண்ட காலங்களுக்கு இல்லை என்றுதான் முடிவு செய்ய வேண்டும்.

இவ்வுண்மையை உணர்ந்தேதான், வைதீகர்களின் பிரதிநிதியாகிய திரு. காந்தியவர்கள், ஆதி முதல், தீண்டாதாருக்கு தனித் தொகுதி கொடுப் பதைப் பலமாக ஆட்சேபித்துக் கொண்டு வருகிறார். முஸ்லிம்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனித் தொகுதி கொடுக்க ஒப்புக் கொண்ட திரு. காந்தியவர்கள் "தீண்டாதாருக்குத் தனித் தொகுதி கொடுத்தால் எனது உயிரை விட்டாயினும் அதைத் தடுப்பேன்" என்று கூறியதற்கு காரணம் தீண்டாதார்



முன்னேற்றம் கருதியல்ல; இந்துக்களின் முன்னேற்றம் கருதியும், இந்து மதம், வருணாச்சிரம தரும மதம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது கருதியுமே யாகும் என்பது இப்பொழுது நன்றாகத் தெரிந்து விட்டது.

இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டின் போது, சிறுபான்மையோர் சம்பந்தமாக ஒரு முடிவு செய்வதற்கு, திரு. காந்தியுள்பட மற்றப் பிரதிநிதி களும் எவ்வளவோ முயன்று பார்த்தார்கள்; ஆனால் தனித் தொகுதித் தகராறினாலும், ஸ்தானங்களின் எண்ணிக்கையில் உண்டான தகராறினாலும், ஒரு ஒப்பந்தத்திற்கும் வரமுடியாமற் போய்விட்டது. ஆகவே வகுப்புப் பிரச்சினை சம்மந்தமாக ஒரு முடிவுக்கும் வரமுடியாமல், அதைத் தீர்மானிக்கும் விஷயத்தைப் பிரதம மந்திரியிடமே ஒப்படைத்து வந்து விட்டார்கள்.

ஆனால், திரு. காந்தி அவர்களுக்கு மாத்திரம், மற்ற விஷயங்களைக் காட்டிலும், தீண்டாதாருக்குத் தனித் தொகுதியளிக்கக் கூடாது என்னும் விஷயத்தில் மாத்திரம் பெருங்கவலை இருந்ததாகத் தெரிகிறது. இதை திரு. காந்தியவர்களே, இந்தியா மந்திரிக்கு எழுதிய கடிதத்தில் "இந்தியாவிற்கு வந்து, தனித் தொகுதிக்கு விரோதமான பொதுஜன அபிமானத்தை, தீண்டாதார் விஷயத்திலாவது மிகுதிப்படும்படி செய்யலாம் என்று நினைத்தே இந்தியாவுக்குத் திரும்பினேன். ஆனால் அது முடியாமல் போய்விட்டது" என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்து அறியலாம்.

இந்தியா முழுதும் உள்ள தீண்டாதார் ஸ்தாபனங்களும், அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தலைவர்களும் ஆரம்பம் முதல் தங்களுக்குத் தனித் தொகுதிதான் வேண்டுமெனப் போராடி வந்திருக்கின்றனர். இவ் விஷயம் திரு. காந்தியவர்களுக்குத் தெரியும். இதனால், பிரிட்டிஷ் அரசாங் கம், வகுப்பு பிரச்சினை சம்பந்தமாக முடிவு செய்யும் போது தீண்டாதாருக்குத் தனித் தொகுதிதான் அளிப்பார்கள் என்ற விஷயமும் திரு. காந்திக்குத் தெரியும். ஆகையால்தான் அவர் சிறையிலிருந்து கொண்டே, வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பு வெளியாவதற்கு முன்பே, இந்தியா மந்திரிக்கு சென்ற மார்ச்சு மாதம் 11 தேதி எழுதிய கடிதத்தில் தீண்டாதாருக்குத் தனித் தொகுதி கொடுக்கக் கூடாது என முன்னெச்சரிக்கையாக மறுத்திருக்கிறார். அவ்வாறு பிடிவாதத்துடன் மறுத்திருப்பதற்குக் காரணம், இந்து மதம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை யென்பதை அக் கடிதத்தில் உள்ள வாக்கியங்களைக் கொண்டே தெரிந்து கொள்ளலாம்.

> "இந்து தர்மம் சம்பந்தப்பட்ட வரையில், தனித் தொகுதி முறை அச் சமூகத்தை சின்னா பின்னமாகச் சிதைத்து உருப்படாமல் செய்து விடும். நான் சம்பந்தப்பட்ட வரையில் இந்த வகுப்பாரின் தர்ம சம்பந்தமானதும், மத சம்பந்தமானதுமே முக்கியமானதாகும். தர்ம விஷயத்தையும், மத விஷயத்தையும் கவனிக்கும் போது



RangaRakes tamilnavarasam.com

அரசியல் விஷயம் முக்கியமானதா யிருந்தாலும் அதுதானே முக்கியமற்றதாகி மறைந்து விடுகிறது”

என்றும்

“எனது பயமெல்லாம் வெறும் பயமாகி தீண்டாதாருக்கு, பிரிட்டிஷ் சர்க்கார் தனித் தொகுதியளிக்க விரும்பவில்லை என்று ஏற்பட வேண்டுமென்றே நம்புகின்றேன்”

என்றும் குறிப்பிட்டிருப்பதைக் கொண்டு, 7 கோடி தீண்டாதார்களைப் பலி கொடுத்தாவது இந்து மதத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதில், திரு. காந்திக்கு எவ்வளவு பிடிவாதம் இருக்கிறதென்பதை அறியலாம்.

மேற்கூறிய இந்தியா மந்திரிக்கு எழுதிய கடிதத்திலேயே, “அரசாங்கத்தார், தீண்டாதாருக்குத் தனித் தொகுதி அளித்துவிடுவதெனத் தீர்மானித்து விடுவார்களாயின் நான் பட்டினிக் கிடந்து சாவதைத் தவிர வேறு வழியில்லை” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதன்பின் அதாவது பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பு வெளியான பின், “தீண்டாதாருக்குத் தனித் தொகுதி கொடுத்திருப்பதை மாற்றா விட்டால் செப்டம்பர் மாதம் 20ம் தேதி முதல் பட்டினி கிடக்கத் தீர்மானித்து விட்டேன்” என்று பிரதம மந்திரிக்கு ஆகஸ்ட் மாதம் 18 ம் தேதி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அக்கடிதத்திற்கு முதல் மந்திரி திரு. மெக்டனால்ட் கொடுத்திருக்கும் பதில் சரியான பதிலாகும். பிரதம மந்திரியின் பதிலில்,

“நீங்கள் பட்டினிக் கிடந்து உயிர் துறக்க நினைத்திருப்பது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மற்ற இந்துக்களுடன் கூட்டுத் தொகுதி அளிக்க வேண்டும் என்பதற்காக அல்ல; ஏனெனில் இவ்விதக் கூட்டுத் தொகுதி முன்னமே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்துக்களுக்குள் ஒற்றுமை உண்டாக்க வேண்டுமென்னும் எண்ணத்துடனும் அல்ல; அதுவும் முன்னமே அரசாங்கத்தாரின் திட்டத்தில் அடங்கி இருக்கிறது. ஆனால் தற்சமயம், பெருங் கஷ்டங்களுக்கு உட்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட சமூகத்தினர், தங்கள் சார்பாகச் சட்டசபைகளில் பேச, ஒரு சில பிரதிநிதிகளைத் தாங்களாகவே தங்களுக்குள் தேர்ந்தெடுத்து அனுப்பும் உரிமையைத் தடுப்பதற்காக மாத்திரந்தான் நீங்கள் பட்டினி விரதத்தைக் கைகொள்ள எண்ணியிருக்கிறீர்கள் என்று நான் அறிகிறேன்”

என்று குறிப்பிட்டிருக்கும் வார்த்தைகள் உண்மை என்றே நாம் கூறுவோம். திரு. காந்தியின் இந்துமத அபிமானத்தையும், வருணாச்சிரம தருமப் பிடிவாதத்தையும் உணர்ந்தவர்கள் இதை மறுக்க முன் வரமாட்டார்கள்.



பிரதம மந்திரியின் தீர்ப்பின்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு பொதுத் தொகுதியில் “ஓட்” செய்யும் உரிமை யிருக்கிறது. இதனால், உயர்ந்த ஜாதி இந்துக்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஒற்றுமை உண்டாக இடமிருக்கிறது. ஆகையால் இத்தீர்ப்பினால் இந்துக்களினின்றும் தீண்டாதாரைப் பிரித்து விட்டார்கள் என்று குறை கூறுவதற்குச் சிறிதும் இடமில்லை, இப்படி யிருந்தும் வீணாகக் கூச்சலிடுவதெல்லாம் பிரதம மந்திரி குறிப்பிட்டிருப்பது போல, “தீண்டாதார் தங்கள் சார்பாகச் சட்ட சபைகளில் பேச தாங்களே ஒரு சில பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் உரிமையைத் தடுப்பதற்கே” யன்றி வேறல்ல என்பதில் கடுகளவும் ஐயமில்லை.

உண்மையிலேயே திரு. காந்தி அவர்கள் தீண்டாதாரின் நன்மையை உத்தேசித்து அவர்களுக்குத் தனித் தொகுதியளிக்கக் கூடாதெனக் கூறுவாரானால், அவ்வாறு அளித்திருப்பதற்காகப் பட்டினி கிடந்து உயிர்விடுவது அவர்கள் நன்மைக்கே என்று கூறுவாரானால், இதுவரையிலும் அவர் தீண்டாதார்களுக்குச் செய்த காரியம் என்ன என்றுதான் கேட்கின்றோம்? காங்கிரசில் 1920ல் முக்கிய திட்டத்தில் ஒன்றாக யிருந்து வந்த “தீண்டாமை விலக்குதல்” என்னும் திட்டத்தை ஏன் கை விட்டார், காங்கிரஸ் அரசியல் திட்டத்தில் மதப் பாதகாப்பு ஏன் வைத்திருக்கிறார்? மதப் பாதுகாப்பை ஒப்புக் கொண்டால் தீண்டாதார் இன்னும் பரம்பரையாக இப்பொழுது இருப்பது போலவே இருக்க வேண்டியதுதானே. தீண்டாதார்கள் இதுவரையிலும் போராடிக் கொண்டு வரும் எந்த உரிமையைக் கொடுக்கும் படி செய்தார்? ஆகையால் திரு. காந்தியின் இத்தகைய பயமுறுத்தல் உண்மையாக இருந்தாலும், அது தீண்டாதாரின் கேட்டிற்கும், உயர்ந்த சாதி இந்துக்களின் பாதுகாப்பிற்குமே என்று நாம் கூறுவோம்.

அன்றியும், திரு. காந்தி அவர்கள், மற்ற பெருங்காரியங்களையெல்லாம் விட்டு விட்டு இந்தத் தீண்டாதார் விஷயத்திற்கு மாத்திரம் இவ்வளவு பிடிவாதம் செய்வதன் அர்த்தம் விளங்குவது யாருக்கும் கொஞ்சம் சங்கடமாகவேதான் இருக்கக் கூடும். ஜனநாயகத்துவத்தைப் பற்றி பரிந்து பரிந்து பேசும் திரு. காந்தியவர்கள், தேசமக்களின் அபிப்பிராயத்தை மாற்றி, வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பை ஒப்புக் கொள்ளாமல் வேறு ஒரு சிறந்த முடிவைச் செய்வதுதானே. இதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் ஒன்றும் தடை கூறவில்லையே. பிரதம மந்திரி, வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பின் மேல் எழுதி இருக்கும் அபிப்பிராயத்தில், “வேறு சமரசமான முடிவை எல்லாச் சமூகத்தினரும் சேர்ந்து செய்வார்களாயின் அதை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏற்றுக் கொள்ளுவார்கள்” என்று கூறியிருப்பது திரு. காந்தியவர்களுக்குத் தெரியாதா? இங்ஙனமிருக்க, பட்டினி கிடந்து உயிர் துறக்கத் துணிவது எவ்வளவு நேர்மையான செயலாகும் என்றுதான் கேட்கின்றோம்.

ஒரு காரியத்தைத் தானும் செய்யச் சக்தியில்லை. பிறர் செய்வதையும் ஒப்புக் கொள்வதில்லை என்றால், அத்தகைய மனிதரால் யாருக்கு என்ன



RangaRakes tamilnavarasam.com

நன்மையுண்டு என்று ஆராய்ந்து பாருங்கள்.

உண்மையிலேயே திரு. காந்தியவர்கள் உயிர் விடுவதாயிருந்தாலும்., அதற்குப் பயந்து கொண்டு தீண்டாதாருக்கு அளித்திருக்கும் தனித் தொகுதி அமைப்பு மாற்றப்படுமானால், அது ஒரு மனிதரைக் காப்பாற்ற வேண்டி, ஏழுகோடி மனிதர்களைப் பலிகொடுப்பதாகத்தான் முடியும் என்று தான் உறுதியாக நாம் கூறுவோம்.

இச்சமயத்தில் தேசாபிமானப் பட்டத்திற்கும் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் புகழ்ந்து தங்களைப் பற்றி எழுதுவதற்கும் ஏமாந்து ஒருசில தீண்டாத தலைவர்கள் தங்களையும் இந்துக்களென்றும், ஆகையால் தாங்கள் இந்துக்களோடுதான் சேர்ந்திருக்க வேண்டும் என்றும் வீண் ஆர்ப் பாட்டம் செய்பவர்களின் வார்த்தையைக் கேட்டு யாரும் ஏமாற வேண்டாம். அவர்கள் இதுவரையிலும் இந்துக்கள் என்று சொல்லிக் கொண்டு அவர் களுடன் சேர்ந்திருந்ததனால் அடைந்த பலன் என்ன? என்பதை மாத்திரம் பொறுமையோடு சுயநலமில்லாமல் ஆராய்ந்து பார்ப்பார்களாயின் உண்மை யுணர்ந்து கொள்ளாமல் போகமாட்டார்கள்.

**குடி அரசு - தலையங்கம் - 18.09.1932**



# தீண்டாதார்க்கு விமோசனம் உண்டா?

திரு. காந்தியவர்கள் தற்பொழுது உண்ணாவிரதம் ஆரம்பித் திருப் பதைப் பற்றியே எங்கும் பேச்சாக இருக்கிறது. நமது நாட்டு அரசியல்வாதி களும், சீர்திருத்த வாதிகளும், வருணாச்சிரம தரும வாதிகளும் கூட திரு. காந்தியவர்களின் உயிர் காப்பாற்றப்பட வேண்டும் என்பதைப் பற்றிப் பத்திரிகைகளிலும் அறிக்கைகள் வெளியிடுகின்றனர். பொதுக் கூட்டங் களிலும் பேசி வருகின்றனர். நாமும் அவருடைய உயிர் காப்பாற்றப்பட வேண்டுமென்பதை மனப்பூர்வமாக ஒப்புக் கொள்ளுகிறோம்.

ஆனால், திரு. காந்தியவர்கள் எதற்காக உண்ணா விரதமிருக்கிறார்? அவர் உண்ணா விரதமிருப்பதன் மூலம், அவர் கருதுகின்ற காரியமோ, அல்லது ஏழை மக்களுக்கு விடுதலையோ பூரணமாக ஏற்பட்டுவிடுமா? என்பதைப் பற்றி நம்மைப் பொறுத்தவரை ஒன்றும் ஏற்பட முடியாது என்றுதான் கூறுவோம். தாழ்த்தப்பட்ட சமூகத்தார்க்குத் தேர்தலில் தனித் தொகுதி அளித்திருப்பதால், இந்து மதம் பிளவுபட்டு விட்டதென்றும், தாழ்த்தப்பட்ட சமூகத்தாரும் இந்து மதத்திலிருந்து பிரிந்து விட நேர்ந்து விடுமென்றும், ஆகையால், இந்து மதம் காப்பாற்றப்படவும், தாழ்த்தப்பட்ட மக்கள் இந்து சமூகத்திலிருந்து பிரியாமலிருக்கவும் வேண்டுமானால் தனித் தொகுதியை ரத்துச் செய்ய வேண்டும் என்றும் கூறியே இப்பொழுது உண்ணா விரதமிருந்து வருகிறார். திரு.காந்தியவர்கள் சென்ற 20 - 9 - 32ல் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்குப் பேட்டி கொடுத்துப் பேசி கொண்டிருந்தபோது அவர் கூறிய விஷயங்களைக் கவனித்தால் இவ்வுண்மையைத் தெரிந்து கொள்ளலாம்.

> "தனித் தொகுதித் தேர்தல் முறையை ரத்துச் செய்வதன் மூலம் எனது உண்ணாவிரதம் பொதுவாக முடிவு பெறும்; ஆனாலும் எனது விரதத்தின் அடிப்படையான எண்ணம் ஒரு பொழுதும் நிறை வேறியதாகாது. நான் என்னையும் ஒரு தீண்டாதானெனக் கொண்டி ருப்பதனால், தீண்டக் கூடியவர்களுக்கும், தீண்டக்கூடாதவர்களுக் கும் தற்கால சாந்தியாக ஏற்படும் எந்த ஒப்பந்தத்தையும் நான் ஒப்புக் கொள்ள முடியாது. தீண்டாமையை அடியோடு கல்லி எறிந்து விட



RangaRakes tamilnavarasam.com

வேண்டும் என்பதே எனது ஆவல். நான் அதன் பொருட்டே உயிரோடிருக்கிறேன். அதை ஒழிக்க சந்தோஷத்தோடு எனது உயிரை இழக்கவும் தயாராக இருக்கிறேன். இரு சாராருக்கும் நிலையான உடன்படிக்கை ஏற்படவேண்டுமென்பதே எனது ஆவல். இவ்வாறு ஏற்படும் ஒப்பந்தத்தினால் இப்பொழுதே தீண்டாதார்களுக்கு நன்மை ஏற்படவேண்டும். ஆகையால் இந்தியா முழுதும் ஆட்சேபனையின்றி ஒப்புக் கொள்ளக் கூடிய ஒப்பந்தமே ஏற்பட வேண்டும் ஒப்பந்தம். ஏற்பட்டு விட்டது என்று வீண் ஆர்ப்பாட்டம் செய்வதில் பயனில்லை.”

என்று சொல்லியிருப்பதைக் கொண்டு, திரு. காந்தியவர்கள் உண்மையிலேயே தீண்டாதவர்களின் நன்மையைக் கருதியே தான், அதாவது அவர்களுடைய சமத்துவத்தைக் கருதியே தான் உண்ணா விரதமிருந்து வருகிறார் என்று கூறலாம். ஆனால், திரு. காந்தியவர்கள் இதற்குமுன் கூறிக் கொண்டு வந்த சில விஷயங்களை நினைக்கும்பொழுது, இவர் எந்த அளவில் தீண்டாமை ஒழித்தலையும், அவர்களுக்குச் சமத்துவம் கொடுக்க வேண்டுமென்பதையும் ஒப்புக் கொள்ளுகிறார் என்பதில் சந்தேகம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. அதாவது, வருணாச்சிர தருமம் இருக்க வேண்டும். ஆனால் தீண்டாமை ஒழிய வேண்டும் என்றும், “பிறப்பினால் மனிதர்களின் குணத்தில் வேறுபாடுகள் இருப்பதினால் பிறப்பில் வித்தியாசம் உண்டு” என்றும் இதற்குமுன் கூறியிருக்கிறார்.

இப்பொழுது இவைகளையெல்லாம் மறந்து விட்டு, உண்மையாகவே, இந்து சமூகத்துடன் தீண்டாதவர்களும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்று திரு. காந்தியவர்கள் அபிப்பிராயப்படுவதாகவே வைத்துக் கொள்ளுவோம். ஆயினும் இது தீண்டாதாரின் நன்மையின் பொருட்டா அல்லது இந்து மதத்தின் நன்மையின் பொருட்டா என்பதைப் பற்றி ஆராய்ந்தால், இந்துமத நன்மையின் பொருட்டேயென்பது வெளிப்படையாக விளங்கும். இதனை இதற்கும் (உண்ணாவிரதத்திற்கும்)

அரசியலுக்கும் எவ்வகையிலும் சம்பந்தமில்லை. ஆயினும் இதனால் அரசியல் விஷயத்தில் பலன் உண்டாகாது என்று கூறி விடவும் முடியாது. தீண்டாமையை விலக்கத் தகுந்த வழிகளைக் கைக் கொள்ளுவதால் அரசியல் விஷயத்திலும் சிறந்த பயன் உண்டாகும், அன்றியும் **அதில் மதம், தர்மம் சம்பந்தமான விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. நான் தீண்டாமையைக் கண்டிப்பதானது இந்து மதத்தில் உள்ள ஆபாசங்களின் அடிப்படையைக் கண்டிப்பதாகுமென்றே நான் நம்புகின்றேன். எனவே சுயராஜ்ய அரசியல் திட்டத்தைவிட அவ்விஷயம் மிகவும் முக்கியமானது..**



என்று பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் கூறியிருப்பதைக் கொண்டுமே, இந்தியா மந்திரிக்கு திரு. காந்தியவர்கள் எழுதியிருக்கும் கடிதத்தில்,

“இந்து தர்மம் சம்பந்தப்பட்டவரையில் தனித் தொகுதி முறை அச் சமூகத்தைச் சின்னா பின்னமாகச் சிதைத்து, உருப்படாமல் செய்து விடும். நான் சம்பந்தப்பட்டவரையில் இந்த வகுப்பாரின் தர்ம சம்பந்தமானதும், மத சம்பந்தமானதுமே முக்கியமானதாகும். தர்ம விஷயத்தையும் மத விஷயத்தையும் கவனிக்கும்போது அரசியல் விஷயம் முக்கியமானதா யிருந்தாலும் அது, தானே முக்கியமற்றதாகி மறைந்து விடுகிறது.”

என்று குறிப்பிட்டிருப்பதைக் கொண்டும் அறியலாம். இவைகளைக் கொண்டு, திரு. காந்தியவர்கள் உண்மையிலேயே தாழ்த்தப்பட்டார்கள் பால் அனுதாபங் கொண்டு அவர்களுக்குச் சகல சுதந்தரங்களும் அளிக்க வேண்டுமென்று கேட்பதும், இந்து மதம் அழியாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே என்னும் உண்மையை உணர்ந்து கொள்ளலாம். திரு. காந்தியின் சுயராஜியத் திட்டம் கூட மதத்தை அடிப்படையாகக் கொண்ட சுயராஜ்யத் திட்டம் என்பதை நாம் பல தடவைகளில் விளக்கிக் காட்டியுள்ளோம்.

திரு. காந்தியவர்களின் நோக்கப்படி இந்து மதம் காப்பாற்றப்பட வேண்டுமானால் தீண்டாமையை ஒழித்து தீண்டாதார்களையும் இந்துக்களுடன் சேர்த்துக் கொள்ளப்படாத வரையில் இந்து மதம் நிலைத்து நிற்க முடியாது என்ற தீர்மானத்திற்கு திரு. காந்தி வந்து விட்டார் என்றே தெரிகின்றது. மற்ற இந்து மகாசபைக்காரர்களும், முஸ்லீம்களுக்கு எதிரான நோக்கமுடைய மற்ற அரசியல் வாதிகளும் தீண்டாமை ஒழியாவிட்டாலும் அவர்களை இந்துக்களினின்றும் பிரிக்காமலிருந்தால்தான் இந்து மதம் நிலைக்க முடியும் என்பதை உணர்ந்து கொண்டார்கள். இதனாலேயே திரு. காந்தியவர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்தவுடன் பலதிறப்பட்ட அபிப்பிராயமுடையவர்களும் தீண்டாமையை ஒழிப்பதற்கும், தனித் தொகுதியை ரத்து செய்வதற்கும் பம்பாயில் சமரச மகாநாடு கூட்டி ஆலோசனை செய்திருக்கிறார்கள்.

இச்சமயத்தில், தீண்டாதார்களையும், அவர்களின் தலைவர்களையும் சமாதானப்படுத்துவதற்காகப் பல கோயில்களை அவர்களுக்காகத் திறந்து விடப்படுவதாகவும், பல குளங்களிலும் கிணறுகளிலும் தண்ணீர் எடுக்க அனுமதிக்கப் படுகிறதாகவும் பத்திரிகைகளில் காணப்படுகின்றன. உண்மையிலேயே இத்தகைய உரிமைகளும், இன்னும் தீண்டாதார் கேட்கும் உரிமைகளும் தீண்டாதார்களுக்குக் கொடுக்கப் பட்டுவிட்டால், அவர்கள் இந்துக்களோடு சேர்ந்திருப்பது பற்றியோ, அல்லது தனித் தொகுதித் தேர்தலை ரத்து செய்து பொதுத் தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்க ஏற்பாடு செய்வதைப் பற்றியோ நாம் கவலைப்பட போவதில்லை.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் தீண்டாதாருக்கு இத்தகைய உரிமைகளையளிக்க சநாதன தர்ம இந்துக்கள் ஒரு நாளும் சம்மதப்பட மாட்டார்கள் என்றேதான் நாம் கூறுகின்றோம்.

இதற்கு உதாரணம் வேண்டுமானால் இப்பொழுது நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்தாலே விளங்கும். இன்று கோயில்களைத் திறந்து விடப் படுவதாகச் செய்தி வருவதெல்லாம் வட நாட்டிலிருந்து தான் வருகின்றன. அங்கும் பிரபலமாக விளங்கும் பொதுக் கோயில்கள், எதையும் திறந்து விட்டதாகக் காணமுடியவில்லை. அநாமதேய கோயில்களையும் சிலர் தங்கள் சொந்தக் கோயில்களையும் திறந்து விட்டிருப்பதாகத்தான் செய்திகள் கிடைக் கின்றன. தென்னாட்டைப் பொறுத்தவரையில் அந்தப் பேச்சுக் கூட இல்லை. நமது மாகாணத்திலும் சென்னை, சிதம்பரம், திருச்சி, மதுரை, கும்பகோணம், ஸ்ரீரங்கம், திருநெல்வேலி போன்ற பெரிய ஊர்களிலும் தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்றும், அதன் மூலம் திரு. காந்தியின் பட்டினி விரதத் தையும், தனித் தொகுதியையும் மாற்ற வேண்டும் என்றும் கூட்டங்கள் போட்டுப் பேசியிருக்கிறார்கள். ஆனால் இவ்வூர்களில் உள்ள கோவில்களில் பிரவேசிக்கவோ, அவைகளைத் திறந்துவிடச் செய்யவோ முயற்சி செய் வதாகத் தெரியவில்லை.

சென்னையில் கந்தசாமி கோயிலில், சில ஆதிதிராவிடர்கள் சென்ற தாகச் செய்தி வந்தது. மறுநாள் கோயில் அடைக்கப்பட்டுவிட்டது. மைலாப்பூர் கோவிலுக்குள் செல்ல அனுமதி கேட்பதற்காகச் சென்ற உயர்ந்த சாதி இந்துக் களையே கோயிலுக்குள் விடாமல் கதவடைத்து விட்டார்கள். இந்த நிகழ்ச்சி யிலிருந்தே, தென்னாட்டில் உள்ள மற்ற கோயில்களில் தீண்டாதார்கள் செல்ல சுலபத்தில் அனுமதிப்பார்களா? என்பதை ஆலோசித்தால் உண்மை விளங்காமற் போகாது.

அன்றியும், இச்சமயத்தில் கோயில் பிரவேசத்திற்கு வைதீகர்களின் எதிர்ப்புக் கிளம்பியிருப்பதையும் கவனிக்க வேண்டுகிறோம். குருவாயூரில் நீண்ட காலமாக கோயில் பிரவேசத்திற்காகச் சத்தியாக்கிரகம் செய்யப்பட்டும் வைதீக இந்துக்களின் மனம் இன்னும் இரங்கவில்லை. இன்னும் திரு. காந்தியவர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்தும் கூட அங்கு கோயில் கதவு தாழ்த்தப்பட்டவர்களின் பொருட்டு அடைக்கப்பட்டே இருக்கிறது. நாசிக் கிலுள்ள ஆலயத்தில் தாழ்த்தப்பட்டோரை அனுமதிக்க வேண்டும் என்று சொல்லிச் சில இந்துத் தலைவர்கள் முயற்சி செய்வதைக் கண்டு வைதீகர்கள் எதிர் சத்தியாக்கிரகம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். அகமதாபாத்தில் உள்ள காளியின் ஆலயத்தில் தாழ்த்தப்பட்டாரும் போகலாம் எனச் சிலர் முயற்சியால் போடப்பட்டிருந்த விளம்பரத்தைக் கண்டு வைதீகர்கள் பரப்பரப் படைந்து ஒன்றுகூடி அவ்விளம்பரத்தை எடுத்தெறிந்துவிட்டனர், தாழ்த்தப் பட்டார் யாரும் அக்கோயிலுக்குள் நுழைய முடியாதபடி மறியலும் செய்யத் தொடங்கி விட்டனர். பம்பாய் வைஷ்ணவ குருமார்களில் ஒருவரான திரு.



கோகுல நாத்ஜி நௌரோஜி என்பவர் தாழ்த்தப்பட்டவர்களைக் கோயிலில் விட அநுமதிப்பதை மறுத்து ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அதில்,

> “சநாதன தர்மிகள் சம்மந்தப்பட்டவரையில் அவர்களுக்கு மதமே முக்கியமானதாகும், இரண்டாவதாகவே அரசியல் விஷயங் கவனிக்கப்படும். எங்கள் சமயத்திலும் கொள்கையிலும் அரசாங்கம் தலையிடா திருந்தால் அவர்கள் மற்ற விஷயங்களில் எவ்வாறு இருந்தாலும் நாங்கள் மாகாண சட்டசபைகளிலும், இந்தியா சட்ட சபைகளிலும் ஸ்தானங்கள் வேண்டுமென்று போராடமாட்டோம்.”

என்று குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும். இன்னும் பம்பாய் வருணாச்சிரம சுயராஜிய சங்கத்தார் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்

> “சமயமும், சமய சம்பந்தமான கொள்கைகளுமே எங்க ளுக்கு மிகவும் முக்கியமானதாகும். சட்டசபைகள் எங்கள் மதத் திலோ மதாச்சாரத்திலோ தலையிடுவதை நாங்கள் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க முடியாது.”

என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். இன்னும் தென்னாட்டில் உள்ள சிதம்பரம், சீரங்கம், கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருவாரூர் போன்ற ஊர்களில் உள்ள பெரிய கோவில்களில் தீண்டாதாரை அழைத்துக் கொண்டு போக ஆரம்பித்தால் அப்பொழுது கும்பகோணப் பார்ப்பனர்கள் என்ன செய்வார்கள் என்பது தெரியும்.

ஆகையால் உண்மையிலேயே திரு. காந்தியவர்கள் விரும்புவது போலத் தீண்டாதார்களுக்குச் சமத்துவம் கொடுக்கும் விஷயத்தில் வைதீகர் கள் சிறிதும் விட்டுக் கொடுக்கவே மாட்டார்கள் என்பது நிச்சயம். தீண்டா தார்க்குக் கொடுத்துள்ள தனித் தொகுதியை ரத்துச் செய்ய வேண்டும் என்று திரு. காந்தியவர்கள் கூறுவதற்கு மாத்திரம்தான் இன்று வைதீகர்களும் அவரு டைய உயிர் காப்பாற்றப்பட வேண்டும் என்று கூறுகின்றார்கள். இப்பொழுது திரு. காந்தி ‘தனித்தொகுதி ரத்து’ என்னும் பேச்சை விட்டு விட்டுத் தீண்டா தார்க்குக் கோயில் பிரவேசம் போன்ற உரிமைகளைக் கொடுக்க வேண்டும். இன்றேல் பட்டினி கிடந்து இறப்பேன் என்று கூறுவாரானால் இன்று சமரசம் பேச முன் வந்திருக்கும் வைதீகர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் “இந்து மதத்துரோகியாகிய காந்தி பட்டினி கிடந்து இறக்கட்டும். அது பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம்” என்று நெஞ்சிரக்கமில்லாமல் கூற முன்வந்திருப்பார்கள் என்று சத்தியஞ் செய்து கூறுகிறோம்.

ஆகையால் திரு. காந்தி செய்யும் பிடிவாதத்தினால், தீண்டாதார்களும், அவர்களுடைய சமூகத்தைப் பலி கொடுத்து, தனித்தொகுதித் தேர்தல் முறையை ரத்துச் செய்யச் சம்மதித்து திரு. காந்தியின் உயிரைக் காப்பாற்றி னாலும், தீண்டாச் சமூகத்தினரின் அடிமையும், கஷ்டமும் நீங்கப் போவ



RangaRakes tamilnavarasam.com

தில்லையென்றே உறுதியாகக் கூறுவோம். திரு. காந்தியவர்கள், பிடிவாதமாகத் தீண்டாமையை ஒழிப்பதற்கு முயல்வாரானால், முன்பு "தீண்டாமை விலக்குத்" திட்டத்தைக் கொண்டிருந்த ஒத்துழையாமை இயக்கத்தை, நமது நாட்டுப் பார்ப்பனர்கள், சுயராஜ்யக் கட்சியைக் கிளப்பி அதன் மூலம் ஒழித் ததைப் போல இப்பொழுதும் புதிதாக ஏதாவதொரு கட்சியைக் கிளப்பி அதன் மூலம் அடக்கி விடுவார்கள் என்பதில் ஐயமில்லை. அன்றியும் முன்பு போல் திரு. காந்தியையும் மூலையில் உட்கார வைத்து விடுவார்கள் என்பதிலும் ஆட்சேபணையில்லை.

ஆகையால் தீண்டாதார்களின் உரிமைகள் முழுவதும் சட்ட மூலமாக ஏற்பட வேண்டும். ராவ் பகதூர் ஆர். சீனிவாசன் அவர்கள் கூறுவது போல, தீண்டாமை என்பதைக் குற்றமாகக் கருதும்படி சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வாறு அவர்கள் உரிமை முழுவதும் சட்ட மூலம் ஏற்பட்டபின் அவர்களுக்கு எந்தத் தொகுதி இருந்தாலும் கவலையில்லை. இது ஏற்படுவதற்கு முன் அவர்களுக்குரிய தனித்தொகுதி முறையை ஒழிக்க முயல்வது அவர்கள் சமூகத்தை என்றென்றும் விடுதலையில்லாமற் செய்வதற்கு முயலும் சதியாலோசனை என்று தான் நாம் கூறுவோம்.

ஆகையால், தீண்டாதாருக்குள் பிளவுண்டாகும் பொருட்டு அவர் களுடைய தலைவர்களில் சிலரைத் தங்கள் வசமாக்கும் பொருட்டும், தீண்டாதார் சமத்துவத்தைப் பற்றி வெறும் வாய்ப்பேச்சு பேசுவதில் கடுகளவும் பயனில்லை. "தீண்டாதார் பொருட்டு காந்தி பட்டினி கிடக்கிறார். ஆகையால் நாமும் பட்டினி கிடக்க வேண்டும். அவருடைய உயிருக்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டும்" என்று பிரசாரம் பண்ணுவதிலும், பட்டினி கிடப்பதிலும், பிரார்த்தனை பண்ணுவதிலும் பலனில்லை. இந்தப் பட்டினியும், பிரார்த்தனையும் இன்னும் மக்களை மூடர்களாக்கவும் பகுத்தறிவற்றவர் களாக்கவும் தான் பயன்படும். சென்ற 20 -9-32ல் சென்னை மாகாணத்தில் பட்டினி கிடந்த பார்ப்பனர்கள் எத்தனை பேர்? அவர்கள் தீண்டாதாருக்கு அன்றைய தினம் என்ன செய்தார்கள் என்று கேட்கிறோம்.

ஆகையால் தாழ்த்தப்பட்ட மக்களும், அவர்களுடைய தலைவர் களின் பட்டினியையும் பிரார்த்தனையையுங் கண்டு ஏமாற வேண்டாம் என்று எச்சரிக்கை செய்கின்றோம். சட்ட மூலமாகத் தீண்டாதார்களுக்குள்ள தடை களும், துன்பங்களும், கொடுமைகளும் ஒழியாதவரையில் அவர்கள் தனித் தொகுதியை விட்டுக் கொடுத்து கூட்டுத் தொகுதியை ஏற்றுக் கொள்வது அவர் களுடைய அழிவுக்குக் காரணமாகுமென்று தீர்மானமாகக் கூறுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 25.09.1932**



# உண்ணாவிரதப் பலன்

திரு. காந்தியவர்கள் உண்ணாவிரதமிருந்ததன் பலனாகத் தாழ்த்தப் பட்டோர்க்கு ஏற்பட்டிருந்த தனித்தொகுதித் தேர்தல் முறை ரத்து செய்யப் பட்டுவிட்டது. புனாவில் இந்துத் தலைவர்கள் என்பவர்களும், தாழ்த்தப்பட்ட வகுப்புத் தலைவர்கள் என்பவர்களும் கூடிச் செய்து கொண்ட சமரச முடிவை பிரிட்டிஷ் பிரதம மந்திரியவர்கள் ஆட்சேபணையின்றி ஒப்புக் கொண்டு விட்டார். திரு. காந்தியும் தனது உண்ணா விரதத்தை முடித்து விட்டார்.

திரு. காந்தியவர்கள் உண்ணாவிரதமிருந்ததனாலும், தலைவர்கள் என்பவர்கள் சமரச மகாநாடு கூடி ஒப்பந்தஞ் செய்து கொண்டதனாலும், அவ் வொப்பந்தத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் அங்கீகரித்துக் கொண்டு, தாழ்த்தப் பட்டவர்களின் தனித் தொகுதித் தேர்தல் முறையை ரத்து செய்ததனாலும் உண்டான பலன் என்ன என்பதை மாத்திரம் பார்ப்போம்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பின்படி, தாழ்த்தப்பட்டோர்க்கு இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மகாணச் சட்டசபை களுக்கும் ஏற்பட்டிருந்த மொத்த ஸ்தானங்கள் எழுபத்தொன்று. இந்த எழுபத் தொன்று ஸ்தானங்களுக்கும் தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அனை வரும், அந்த வகுப்பினரின் ஓட்டுக்களாலேயே தெரிந்தெடுக்கப் படுவார் களாகையினால், அவர்கள் யாருடைய தயவுக்கும், தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாமல் தங்கள் சமூக நன்மைக்கு உண்மையாகவும், உறுதியாகவும், தைரியமாகவும் போராடலாம். தங்கள் சமூகத்திற்கு எதிராக உள்ள வேறு கூட்டத்தாரின் தயவில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுடைய தயவு தாட் சண்யங்களுக்கும் கட்டுப்பட்டிருக்கும் நிலையில் உள்ள நூற்றுக்கணக்கான பிரதிநிதிகளைவிட, யாருடைய தயவையும் பொருட்படுத்தாமல் சுயேச்சை யாகத் தமது சமூக உரிமைக்குப் போராடும் நிலையில் உள்ள சில பிரதிநிதிகள் இருந்தாலும் போதும் என்பதே நமது அபிப்பிராயம். இதனாலேயே நாம் ஆதி முதல் தாழ்த்தப்பட்டார்க்குத் தனித்தொகுதித் தேர்தல் முறைதான் வேண்டு மென்றும் கூறி வந்தோம். அச்சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இவ்வாறே கூறிவந்தார்கள். ஆனால் திரு. காந்தியவர்கள் பட்டினி கிடந்ததன் பலனாகத் தாழ்த்தப்பட்டார்க்கு ஏற்பட்டிருந்த இந்தச் சௌகரியம் பலிகொடுக்கப்பட்டு விட்டது.



RangaRakes tamilnavarasam.com

இனி இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். இவ்வொப்பந்தப்படி, இந்தியா முழுவதுமுள்ள எல்லா மாகாண சட்டசபைகளுக்கும், பொதுத் தொகுதியின் மூலம் தேர்ந்தெடுக்கப் படும் மொத்த ஸ்தானங்களில் எண்ணிக்கை நூற்றுநாற்பத்தெட்டாகும். இந்த நூற்று நாற்பத்தெட்டு ஸ்தானங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்படும் நூற்று நாற்பத்தெட்டு பிரதிநிதிகளும் இந்துக்கள் ஓட்டினாலும் தாழ்த்தப்பட்டார் களின் ஓட்டினாலும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதில் ஒவ்வொரு ஸ்தானங்களுக்கும் அபேட்சகராக நான்கு பிரதிநிதிகளே முன்வரலாம். இந்த நான்கு பிரதிநிதிகளும் முதலில் தாழ்த்தப்பட்ட வகுப்பு ஓட்டர்களால் மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டு பிறகு அவர்கள் பொதுத் தொகுதியில் போட்டி போட வேண்டும்.

இவ்வாறு தாழ்த்தப்பட்டாருக்கு முன்னிருந்ததைக் காட்டிலும் இரண்டு பங்கு ஸ்தானங்களுக்கு மேல் அதிகமான ஸ்தானங்கள் ஏற்பட்டு விட்ட தனாலும் பூர்வாங்கத் தேர்தல் முறை ஏற்பட்டிருப்பதனாலும் தனித் தொகுதியை விட அதிக சௌகரியம் ஏற்பட்டு விட்டதென்றும் தேசீயப் பத்திரிகைகள் என்பன வெல்லாம் ஒரேயடியாக ஆர்ப்பாட்டம் புரிகின்றன. ஆனால் உண்மையில் எவ்வளவு ஸ்தானங்கள் அதிகப்பட்டாலும் இதனால் தனித்தொகுதியை விட அச்சமூகத்திற்கு ஒன்றும் நன்மையுண்டாகி விட வழியில்லை என்பதில் சந்தேகமில்லை. டாக்டர். அம்பெட்காரின் பிடிவாதத் தினால் பூர்வாங்கத் தேர்தல் முறை ஏற்பட்டிருப்பது ஒன்றுதான், சிலராவது அச்சமூகத்தினரின் நம்பிக்கைக்குப் பாத்திரமுள்ள பிரதிநிதிகள் தேர்ந்தெடுக் கப்பட்டலாம் என்று எண்ண இடமிருக்கிறது.

தாழ்த்தப்பட்டவர்களில் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை அளித்தாலும் கூட, உயர்ந்த ஜாதி இந்துக்களின் ஓட்டர்கள் தொகையே அதிகமாக இருக்கும். இந்நிலையில் தாழ்த்தப்பட்டவர்களாலேயே பூர்வாங்க மாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொதுத் தொகுதியில் நிறுத்தப்படும் நான்கு அபேட்சகர்களில் யார் உயர்ந்த ஜாதி இந்துக்களின் நம்பிக்கைக்குப் பாத்திர மாயிருக்கிறார்களோ அவர்கள் தான் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட முடியும். முற்றும் தாழ்த்தப்பட்டார் உரிமைக்கு அஞ்சாமல் போராடும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படமுடியாது. உதாரணமாக, ஒரு ஸ்தானத்திற்கு நடைபெற வேண்டிய பூர்வாங்கத் தேர்தலில், ராவ் பகதூர், சீனிவாசன், டாக்டர் அம்பெட்கார், திரு. வி. ஐ. முனிசாமி பிள்ளை, ஒரு வெற்றிவேலு இன்னுஞ் சிலர் போட்டிப் போடுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். இவர்களில் முதல் மூவரும், அவ்வகுப்பினரின் மெஜாரிட்டியான ஓட்டர்களால் தெரிந் தெடுக்கப்படுவார்கள் என்பதில் யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. நான்காவதாக, உள்ள வெற்றிவேலு என்பவரிடம் அச்சமூக மக்களுக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும், இந்து சமூகத்தைச் சேர்ந்த பெரிய மிராசு தார்கள், அய்யர், அய்யங்கார்கள் முதலியவர்களின் முயற்சியால் அவர்



நான்காவது அபேட்சகராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். இவ்வாறு பூர்வாங்கத் தேர்தலில், தாழ்த்தப்பட்ட சமூகத் தாரின் முழு ஆதரவோடும் முதன்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ராவ் பகதூர் சீனிவாசன், டாக்டர் அம்பெட்கார் திரு. வி. ஐ. முனிசாமி பிள்ளை ஆகியவர்கள் இந்து மிராசுதாரர்கள் அய்யர், அய்யங்கார்கள் ஆகியவர் களின் சொல்லுக்குத் தாளம் போடும் வெற்றிவேலு ஆகிய நால்வரும் ஒரு ஸ்தானத்திற்கும் போட்டி போடுவார்களானால் இவர்களில் யார் தேர்ந்தெடுக் கப்படுவார்கள் என்று கேட்கின்றோம். பணக்கார மிராசுதார்களின் சொல்லை யும், அய்யர், அய்யங்கார்களின் சொல்லையும், கைகட்டி, வாய்பொத்திக் குனிந்து நின்று கேட்டு அதன்படி நடக்கத் தயாராக இருக்கும் வெற்றிவேலு என்பவரே தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதை யார் மறுக்க முடியும்? ஆகவே இத்தகைய பிரதிநிதிகளாகவே சட்டசபைக்கு வந்து சேர்வார்களாயின் அவர் களால் அச்சமூகத்திற்கு என்ன நன்மை உண்டாகிவிட முடியும்? இத்தகைய பிரதிநிதிகளின் எண்ணிக்கை எவ்வளவு இருந்தால் என்ன?

இப்படி யில்லாமல் பூர்வாங்கத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் நான்கு பிரதிநிதிகளும் அச்சமூகத்தின் நம்பிக்கைக்கும் பாத்திரமுடைய பிரதிநிதிகளாகவே தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் பொதுத்தொகுதியில் போட்டிப் போட்டு வெற்றி பெறும் பிரதிநிதி அச்சமூகத்தின் உண்மையான பிரதிநிதியாக இருக்க முடியும். இவ்வாறே இந்த 148 ஸ்தானங்களுக்கும் பூர்வாங்கத் தேர்தல் நடத்தினாலும் அவைகளுக்கு அபேட்சகர்களாக நின்று வெற்றி பெறும் 592 அபேட்சகர்களும் அச்சமூகத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமுடையவர்களாகத்தான் இருப்பார்களென்று கூற முடியாது. ஆகை யால் புதிய தேர்தல் முறையின்படி, தாழ்த்தப்பட்டோர் சமூகத்தின் உண்மை யான பிரதிநிதிகளாக ஒரு சில பிரதிநிதிகளாவது தேர்ந் தெடுக்கப்படு கிறார்களோ இல்லையோ என்பது சந்தேகம் என்றுதான் கூறுவோம். இக் காரணங்களால் தான் தனித் தொகுதி தேர்தல் முறையைவிட கூட்டுத் தொகுதி தேர்தல் முறை எந்த வகையினும் சிறந்ததல்ல என்று கூறுகின்றோம். தாழ்த்தப்பட்ட சமூகத்தினரும் கூறுகின்றார்கள்.

ஆயினும் பூர்வாங்கத் தேர்தல் முறையை ஏற்படுத்தியிருப்பதன் மூலம் உண்மையுடன் போராடக் கூடிய சில பிரதிநிதிகளாவது சட்டசபைக்கு வரக்கூடும் என்ற நம்பிக்கைக்கு இடமாக இவ்வொப்பந்த மாவது ஏற்பட்டது பற்றிச் சிறிது ஆறுதலடைகின்றோம். இதன் மூலம் திரு. காந்தியவர்களின் பிராணத்தியாகத்தைத் தடுத்த டாக்டர் அம்பெத்கார், சர். சாப்ரூ, திரு. ஜெயகர் முதலியவர்களின் முயற்சியையும் பாராட்டுகின்றோம். ஆனால் திரு. காந்தியவர்களின் பட்டினியின் மூலம் தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சட்டசபை பிரதிநிதித்துவத்தில் ஏற்பட்டிருந்த நன்மையில் முக்கால் பாகம் நாசமாக்கப் பட்டது என்பதையும் கூறாமல் இருக்க முடியவில்லை.



RangaRakes tamilnavarasam.com

அடுத்தபடியாக இவ்வுண்ணாவிரதத்தின் மூலம் ஏற்பட்ட பலன் என்ன என்பதைப் பார்ப்போம். திரு. காந்தியவர்கள் எதைச் செய்தாலும், எதைப் பேசினாலும் “கடவுள் கட்டளை” “கடவுள் அபிப்பிராயம்” என்ற பாடம் படிக்கின்றனவர் என்பது நமக்கு புதிய விஷயமல்ல. நமது நாட்டில் வாழும் குருட்டு நம்பிக்கையுள்ள பாமர மக்களையெல்லாம் ஏமாற்ற வேண்டு மானால், “கடவுளை”யும், “மதத்தை”யும் இழுத்தால் தான் முடியும் என்பது திரு. காந்தியவர்களுக்கு நன்றாய் தெரிந்த விஷயம். மனிதனுடைய செய்கைக் கும், அபிப்பிராயத்திற்கும் மதிப்பு கொடுக்கும் அறிவு இன்னும் நமது மக்களுக்கு உண்டாகவில்லை. ஆகையால் “எனது செய்கை” “எனது அபிப் பிராயம்” என்று சொல்லி யார் எதைச் செய்தாலும், சொன்னாலும், அவைகள் எவ்வளவு உண்மையாயிருந்தாலும், நன்மையுண்டாக்கக் கூடியவைகளா யிருந்தாலும், அவைகளுக்கு நமது தேசத்தில் கௌரவம் ஏற்படுவதில்லை. ஆகையால் தான் திரு. காந்தியார் எதையும் கடவுள் தலையில் போட்டுப் பாமர மக்களை ஏமாற்றுகிறார் என்பதில் கடுகளவு சந்தேகமில்லை. ஆகவே, வழக்கப்படி உண்ணா விரதத்திற்கும் “கடவுளை” இழுத்து விட்டார்.

அன்றியும், தமது உண்ணாவிரதத்தின் நோக்கமும் தனித் தொகுதியை ரத்து செய்வது மாத்திரமன்று, தாழ்த்தப்பட்டார்க்குத் தற்போதுள்ள சமூகத் தடைகளையெல்லாம் ஒழித்து அவர்களையும் இந்து சமூகத்துடன் ஒன்றுபடச் செய்ய வேண்டும் என்று நன்றாக வற்புறுத்திக் கூறினார். இதனால், பலர் அச்சமூகத்தார்க்குக் கோயில் பிரவேச உரிமை அளிக்கவும், மற்றும் குளம், கிணறு, பள்ளிக் கூடம் முதலியவைகளில் சமஉரிமை அளிக்கவும் முயற்சி செய்தனர். இம்முயற்சியும் தீவிரமாக நடந்தது வடநாட்டிலேயாகும். தென் னாட்டில் அவ்வளவு மும்முரமாக நடைபெறவில்லை. ஆனால் பல விடங்களில் உபவாசங்களும், கோயில்களில் பூசைகளும், கூட்டங்களில் பிரார்த்தனைகளும் செய்யப்பட்டன. இவைகளின் மூலம் பாமர மக்களை, “உபவாசம்” “பூசை” “பிரார்த்தனை” முதலியவைகளில் தெய்வத் தன்மை யிருப்பதாகவும், அவைகளின் மூலம் காரிய சித்திகள் உண்டு என்பதாகவும் நம்பச் செய்யப்பட்டன. இத்தகைய முட்டாள் தனந்தான் நமது மக்களை இன்று சோம்பேறிகளாகவும், மூடர்களாகவும், அடிமைகளாகவும் ஆக்கி வைத்திருக்கின்றன என்பதை அறிந்திருந்தும், காந்தி பக்தர்கள் இப்பிரசாரம் பண்ணியது அயோக்கியத்தனத்தைத் தவிர வேறல்ல என்றே கூறுவோம். ஆகவே திரு. காந்தியின் விரதத்தால் நமது நாட்டுக்குக் கிடைத்த இரண்டா வது பலன் “உபவாசம்” “பூசை” “பிரார்த்தனை” என்னும் சோம்பேரித் தனப்பிரச்சாரமும், முட்டாள் தனப்பிரச்சாரமும், குருட்டு நம்பிக்கைப் பிரச் சாரமும் செய்யப்பட்டதுதான்.

திரு. காந்தியின் விருப்பத்தின் படியும், திரு. ராஜகோபாலாச்சாரியின் அறிக்கையின் படியும், உபவாசமும், பிரார்த்தனையும் செய்த நமது நாட்டுப் பார்ப்பனர்களில் யாராவது தீண்டாதார்க்கு என்ன உபகாரம் பண்ணினார்கள்



என்று கேட்கின்றோம். திரு. காந்தி இந்து மதத்தைக் காப்பாற்றப் பாடுபடுகிறார் என்னும் எண்ணத்துடன் அவர் பொருட்டு உபவாசமும் பிரார்த்தனையும் செய்தார்களேயொழிய தீண்டாதார் துயரம் அகல வேண்டும் என்னும் கருத்துடன் இவைகளைச் செய்த பார்ப்பனர் ஒருவரேனும் நமது நாட்டில் உண்டா?

தனித் தொகுதியை ஒழிக்கும் விஷயத்தில் உயிரைவிடத் துணிந்த திரு. காந்தியின் பொருட்டு நாடெங்கும், பத்திரிகைகளும் காந்தி பக்தர்களும் பிரசாரமும், விளம்பரமும் பண்ணியதில் பதினாயிரத்தில் ஒரு பங்காவது, தீண்டாமையை ஒழிக்க உண்ணாவிரத மிருக்கும் திரு. கேளப்பன் பொருட்டுச் செய்யப்படுகிறதா என்று பாருங்கள். குருவாயூர் கோயிலில் தாழ்த்தப்பட் டோரை அனுமதித்தாலொழிய தனது உண்ணா விரதத்தை நிறுத்துவ தில்லையென்று சென்ற 20 - 9 - 32 முதல் திரு. கேளப்பன் அவர்கள் உண்ணா விரதமிருந்து வருகிறார். இதற்காக எத்தனை பேர், உபவாசமும் பிரார்த் தனையும் செய்யப் போகிறார்கள்? இதைக் கொண்டே தீண்டாமையை உண்மையாக விலக்கும் விஷயத்தில் நமது நாட்டு உயர்ந்த சாதி மக்களுக்கு எவ்வளவு கவலையிருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் திரு. காந்தியவர்கள், உண்ணா விரதத்தை முடித்தபின் கூறியுள்ள அபிப்பிராயத்திலும் அதற்குமுன் குறிப்பிட்டது போலவே, “தீண்டாமையை குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் மும்முரமாக வேலை செய்து ஒழிக்காவிட்டால் மீண்டும் உண்ணாவிரதத்தை கைகொள்ளுவேன்” என்று கூறியிருக்கிறார்.

இவ்வாறு உண்ணாவிரதமிருப்பாரானால், அப்பொழுது, தற்சமயம், திரு. கேளப்பன் அவர்களின் உண்ணாவிரதத்தின் பொருட்டு நமது நாட்டு பார்ப்பனர்களும், காந்தி பக்தர்களும் எவ்வளவு கவலை எடுத்துக் கொள்ளு கிறார்களோ அவ்வளவு கவலைதான் எடுத்து கொள்ளுவார்கள் என்று உறுதியாகக் கூறுகின்றோம்.

நாம் சென்ற வாரத்தில் குறிப்பிட்டிருந்தது போலவே ஒரு பார்ப்பன ராவது திரு. காந்தியிடம் அனுதாபங் காட்டமாட்டார் என்பது உண்மை. இப்பொழுதே தீண்டாமை விலக்குக்கு எதிர்ப் பிரசாரங்களும் கண்டனங் களும் புறப்பட்டு விட்டன இன்னும் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகையால் இனி திரு. காந்தியை எந்த பார்ப்பனரும் லட்சியம் பண்ண மாட்டார்கள் என்பது நிச்சயம்.

ஆகையால் உண்மையிலேயே தீண்டாதார்க்கு விமோசனம் உண்டாக வேண்டுமானால் அவர்கள் இந்துக்களை நம்பியிருப்பதனாலாவது அவர்களோடு சேர்ந்திப்பதனாலாவது முடியாது என்பதை அறிய வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

கேவலம் கோயில் பிரவேசத்தால் மாத்திரம் அவர்கள் நன்மை யடைந்து விட முடியாது. கோயில்களின் மேல் பக்தி கொண்டு நம்பிக்கை வைத்துக் கொண்டு அவைகளில் பிரவேசிக்கும் உரிமை மாத்திரம் பெறுவார் களாயின் நன்மைக்குப் பதிலாகத் தற்பொழுது இருப்பதை விட அவர்களுக்கு இன்னும் அதிக தீமையையே உண்டாகும் என்பதில் தடையில்லை கொஞ்சம் நஞ்சம் சம்பாதிக்கும் பொருளையும் கோயில் உற்சவங்களுக்குச் செல்லுவ தன் மூலமும் 'அர்ச்சனைகள்' 'பூஜைகள்' என்பவைகளின் பெயரால் செலவழிப்பதன் மூலமும் இன்னும் வறுமையடையவார்களென்பது திண்ணம். ஆகையால் 'பொதுச் சொத்தாகிய கோயிலில் நமக்கும் செல்ல உரிமையிருக்க வேண்டும்' என்னும் எண்ணத்துடன் மாத்திரம் கோயில் பிரவேசத்தை ஆதரிக்க வேண்டும் என்றுதான் நாம் தாழ்த்தப்பட்ட சமுகத் தார்க்கு எச்சரிக்கை செய்கின்றோம்.

நிற்க திரு. காந்தியின் உண்ணாவிரதத்தின் மூலம் தீண்டாமை விலக்கு விஷயத்தில் வெற்றி ஏற்பட்டதா என்று பார்த்தால் நமது தமிழ்நாட்டை பொறுத்த வரையிலும் ஒன்றுமில்லை என்று தான் சொல்ல வேண்டி யிருக்கிறது.

இனி திரு. காந்தியின் வெற்றி என்று எல்லோரும் பிரசாரம் பண்ணு வதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா? என்று பார்ப்போம். அவர் இதற்கு முன் தாழ்த்தப்பட்டார்களும் பொதுத் தொகுதியின் மூலம் போட்டிபோட்டுச் சட்ட சபைகளுக்கு வரவேண்டும் என்று கூறினாரே யொழிய பொதுத் தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பதைக் கூட ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் இப்பொழுதோ, பொதுத் தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பதையும் அதற்கும் கூடத் தனித் தொகுதித் தேர்தல் போலவே பூர்வாங்கத் தேர்தல் நடத்தும் முறையும் ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆகவே இதில் திரு. காந்தியின் கொள்கைக்கு வெற்றி ஏதாவது இருக்கிறதா? என்று பாருங்கள். தனித் தொகுதித் தேர்தல் முறையை ரத்து செய்த வெற்றியை அவர் கடவுள் சக்தியால் பெற்றார் 'ஆத்ம சக்தி'யால் பெற்றார் என்று கூறுவதும் புரட்டு என்று சொல்வோம். "கடவுள் சக்தி"யும் 'ஆத்ம சக்தியும்' இருந்தால் இவர் ஏன் பட்டினி கிடந்து பிடிவாதம் பண்ண வேண்டும்? பட்டினி கிடந்து பிடி வாதம் பண்ணினால் தான் 'கடவுள் சக்தி'யும் 'ஆத்ம சக்தி'யும் தன்னுடைய அதிகாரத்தைச் செலுத்துமா? ஆகையால் 'கடவுள் சக்தி' 'ஆத்ம சக்தி' என்று பிரசாரம் பண்ணுவதெல்லாம் மக்களை ஏமாற்ற வேண்டிச் செய்யப் படும் பிரசாரம் என்றே சொல்லுவோம்.

ஆகையால் திரு. காந்தியின் உண்ணாவிரதத்தால் நமது நாட்டுக்கு ஏற்பட்டபலன் தீண்டாதார்களின் சட்டசபைப் பிரதிநிதித்துவம் பாதிக்கப் பட்டதும் 'உபவாசம்', 'பிரார்த்தனை' முதலிய மூட நம்பிக்கைகளைப் 'பிரசாரம்' பண்ணப்பட்டதும் தான் என்று அறியலாம்.

**குடி அரசு - தலையங்கம் - 02.10.1932**



# மண்ணுருண்டை மாளவியாக்கள்

திரு. காந்தியார் அவர்கள் தீண்டாதார்க்கு ஏற்பட்டிருந்த தனித் தொகுதியை ஒழிக்கும் பொருட்டுச் சில தினங்களுக்கு முன் உண்ணா விரதமிருக்கத் தொடங்கியதும், அதன் பின் தலைவர்கள் என்பவர்கள் பம்பாயில் சமரச மகாநாடு கூட்டியதும், அதில் தீண்டாதாரின் தனித் தொகுதி முறை பலிகொடுக்கப்பட்டதும் பழய சங்கதிகளாகி விட்டனவென்று கூற முடியாது. இவ்வாறு தலைவர்களின் மகாநாட்டைக் கூட்டி ஒரு சமரச முடிவை யுண்டாக்கப் பாடுபட்டவர்களில் திரு. பண்டித மாளவியாவே முதன்மை யானவர் என்று எங்கும் புகழப்பட்டு வருகிறது. தனித்தொகுதியை ஒழிக்க விரதமிருந்த திரு. காந்தியாரோ தனித் தொகுதியை ஒழிப்பது மட்டும் போதாது, தாழ்த்தப் பட்டார்க்கு "ஜாதி இந்துக்களுக்கு இருந்து வரும் சகல உரிமைகளும் கொடுக்கப்படவேண்டும்" என்று கூறினார். ஆகையால் தீண்டாதார் தலைவர்கள் தனித் தொகுதியை விட்டுக் கொடுத்துப் பொதுத் தொகுதித் தேர்தல் முறையை ஒப்புக் கொள்ளும்படி செய்வதற்காக நாடெங்கு முள்ள காங்கிரஸ் வாதிகளும், சீர்திருத்தவாதிகளும் தீண்டாமையை விலக்கு வதற்கு முயற்சி செய்வதாகப் பாவனைகள் செய்தனர். வடநாட்டில் பல கோயில்களைத் திறந்து விட்டு விட்டதாகவும் சில இடங்களில் தீண்டாத வகுப்பினருடன் உயர்ந்த வகுப்பு இந்துக்கள் சமபந்தி போஜனம் செய்த தாகவும், தண்ணீர் அருந்தியதாகவும், தின்பண்டம் தின்றதாகவும் செய்திகள் வெளிவந்தன.

தீண்டாதார்க்குப் பூணூல் போட்டு தீட்சை செய்வித்து அவர்கள் மீது ஒட்டிக் கொண்டிருக்கும் "சண்டாளத்துவ"த்தைப் போக்க முயற்சித்த திரு. மாளவியா புரோகிதர், ஒரு நிபந்தனையுமில்லாமல் தன்னுடைய வீட்டிற்குத் தீண்டாதாரை அழைத்துச் சென்றதாகவும் தனது வீட்டிலுள்ள சொந்தக் கோயிலைத் தீண்டாதார்க்காகத் திறந்து விட்டதாகவும் பத்திரிகைகளில் வெளிவந்தன. வேதங்களையும், ஆகமங்களையும், ஸ்மிருதிகளையும், புராணங்களையும் உருப்போட்டு உருப்போட்டு மூளையில் சுரணையே இல்லாமல் இருக்கும் மரக்கட்டை வைதீகர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கும் திரு. பண்டித மாளவியாவே பூணூல் போடுதல், தீக்ஷை செய் வித்தல், கங்கையில் குளிப்பாட்டுதல் ஆகிய ஒரு சடங்குமில்லாமலேயே தீண்டாமையை ஒழித்துவிட்டார் என்னும் செய்தியைக் கேட்டவுடன் பத்திரிகைகளெல்லாம் அவரை அளவு கடந்து புகழத் தொடங்கின; வைதீகப்



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனர்கள் ஒன்றும் சொல்லுவதற்கு வழியில்லாமல் திகைப்படைந்தனர்.

ஆனால் நாம் மாத்திரம், இவைகளெல்லாம், தீண்டாதார்களை ஏமாற்றித் தனித் தொகுதித் தேர்தல் முறையை ஒழிப்பதற்காகச் செய்யப்படும் கண்கட்டி வித்தைகள் என்றே கூறிவந்தோம்.

இந்து மதத்தை அப்படியே வைத்துக் கொண்டு இந்துமத சாஸ்திரங்களை அப்படியே வைத்துக் கொண்டு தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று கூறுவது சுத்த அயோக்கியத்தனம் என்று சொல்லிக் கொண்டே வந்தோம். இத்தகைய நமது அபிப்பிராயம் சிறிதும் குற்றமுள்ள தல்ல என்பதைக் காட்ட திரு. மாளவியாவைப் பற்றித் தற்போது வெளி வந்திருக்கும் செய்தி ஒன்றே போதுமானதாகும்.

"வைதீக மாளவியா தீண்டாமையை ஒழிப்பதற்கு முனைந்து விட்டார் என்று புகழப்பட்ட வருணாச்சிரம தரும மாளவியா, களிமண்ணும் கங்கா ஜலமும் எடுத்துக் கொண்டு இங்கிலாந்துக்குக் கப்பலேறிச் சென்ற மாளவியா, பம்பாயைச் சேர்ந்த கல்பதேவி என்னுமிடத்தில் சென்ற 2 - 10 -32ல் ஒரு கூட்டத்தில் பேசும்போது 'பழய கருப்பனே கருப்பன்' என்னும் சங்கதிக்கு வந்து விட்டார். அவர்,

> "சம்பந்தி போஜனம், கலப்புமணம் இவைகளைப் பொறுத்த வரையில் ஜாதிக் கட்டுப்பாடுகளை ஒழிக்கும் விஷயத்தை நான் ஒப்புக் கொள்ள முடியாது. தனிப்பட்ட வகையினாலோ, குடும்ப சம்பந்தத்தினாலோ இம்முறைகளை அனுசரிக்க முயற்சிப்பது முடியாது காரியம்"

என்று பேசியுள்ளார். இதிலிருந்த திரு. மாளவியா புரோகிதரின் மனப்பான்மை என்ன என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஜாதிக் கட்டுப்பாடு அதாவது வருணாச்சிரம தர்மம் இருக்கும் வரையிலும் தீண்டாமை ஒழியும் என்று பகுத்தறியும் மூளையையுடைய எவராவது ஒப்புக் கொள்ள முடியுமா? இன்று நமது நாட்டு மக்கள் ஒருவரை ஒருவர் துவேஷிப்பதற்கும், ஒரு வகுப்பினர்க்கு மற்றொரு வகுப்பினர் கொடுமை செய்வதற்கும் காரணமாயிருப்பது பாழும் ஜாதிக்கட்டுப்பாடு, அதாவது வருணாச்சிரம தருமம் என்பதை கடுகளவு புத்தியுள்ளவர்கள் கூட மறுக்க முன் வரமாட்டார்களே. உயர்ஜாதி இந்துக்கள் தாம் வசிக்கும் தெருவில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடந்தால் தீட்டுப்பட்டுவிடும் என்று நினைப்பது ஜாதி அகங்காரமல்லவா? அவர்கள் தம்முடன் சமத்துவமாக உட்காரக் கூடாதென்று நினைப்பதும், பள்ளிக்கூடங்கள், காப்பி கிளப்புகள் முதலியவைகளில் தம்முடன் சமமாக உட்கார்ந்து படிக்கவோ சாப்பிடவோ இடந்தராமலிருப் பதற்கும் காரணம் அர்த்தமற்ற ஜாதிக் கட்டுப்பாடு அல்லவா? ஆகையால்



ஜாதிக் கடுப்பாட்டை வைத்துக் கொண்டால் ஜாதி உயர்வு தாழ்வை அப்படியே வைத்துக் கொண்டால் வருணச்சிரம தருமம் என்னும் அர்த்தமற்ற கொள்கையை ஒப்புக் கொண்டால் எப்படித் தீண்டாமை அடியோடு போக முடியும் என்று யோசனை செய்து பார்க்கும் படி கூறுகின்றோம்.

உண்மையிலேயே தீண்டாமை ஒழிய வேண்டுமானால் முதலில் சாதி வித்தியாசம் ஒழிந்தாக வேண்டும். சாதி வித்தியாசம் ஒழிய வேண்டுமானால் சாதிக்கட்டுப்பாடும், வருணாச்சிரம தருமங்களும் குழிவெட்டிப் புதைக்கப் பட்டாக வேண்டும். இவைகளை நிறைவேற்றச் சமபந்தி போஜனமும் கலப்பு மணமும் எங்கும் நடைபெற வேண்டும். தீண்டாதார்கள் மக்கள் எல்லாம் வைதீகப் பார்ப்பனர்களின் வீட்டு மாப்பிள்ளைகளாகவும், மருமக்கள் களாகவும் வேண்டும். வைதீகப் பார்ப்பனர்களுடைய மக்களும் தீண்டாதார் கள் வீட்டு மாப்பிள்ளைகளாகவும் மருமக்கள்களாகவும் ஆக வேண்டும். இவ்வாறே ஒவ்வொரு சாதிகளும் தமக்கு மேற்பட்ட சாதிகளுடனும், கீழ்ப்பட்ட சாதிகளுடனும் கலந்து ஒன்றாக வேண்டும். இப்படியே "பஞ்சமா" முதல் "பார்ப்பனர்" வரையுள்ள எல்லா வகுப்புகளும் கலந்து ஒன்றாகும் வரையிலும் ஜாதிகள் ஒழியாது தீண்டாமையும் ஒழியாது.

இன்று இக்காரியங்களுக்குத் தடையாய் இருப்பன இந்து மதமும், அதில் உள்ள வேத, புராண, இதிகாச சாஸ்திரங்களும், அவைகளைப் படித்து விட்டுச் சொந்த புத்தியில்லாதிருக்கும் திரு மாளவியா போன்ற மண்ணு ருண்டைகளுமே யாகும்.

ஆனால் இந்த திரு. மாளவியா பண்டிதர், தீண்டாதார்களுக்குக் கோவில் பிரவேசம் அளிக்க வேண்டும் என்றும், குளம், கிணறு, நடைபாதை, பள்ளிக்கூடம் முதலியவைகளில் சமத்துவம் அளிக்க வேண்டும் என்று மாத்திரம் பேசுகிறார். இதன் பொருட்டுத் தென்னாட்டிற்கும் பிரசாரம் பண்ணவரப் போகிறாராம். அவர் தென்னாட்டிற்கு வருவாரானால் கட்டாயம் அவமானப்படுவார் என்று மாத்திரம் தெரிவிக்க விரும்புகிறோம்.

சாதிகள் ஒழியாமல் - சாதி கட்டுப்பாடுகள் அழியாமல் - வருணாச்சிரம தருமம் மாளாமல் - திரு. மாளவியா சொல்லும் தீண்டாமை ஒழியப் போவ தில்லை; ஒரு சமயம் சட்டத்தின் மூலம் கோயில் பிரவேசம் மற்றும் பொது ஸ்தாபனங்களில் சம உரிமை முதலியவைகளை ஏற்படுத்தாமலும் அதனால் தாழ்த்தப்பட்டார்க்கு எள்ளத்தனையும் நலங்கிடைக்கப் போவதில்லை. உயர்ந்த வகுப்பினர் என்பவர்கள் வாயில்லாப் பூச்சிகளாகிய அவர்களை இன்னும் ஈவு இரக்கமின்றிக் கொடுமைப் படுத்தவே முன்வருவார்கள் என்பது திண்ணம்.

தீண்டாமை ஒழிவதற்காக "இன்னொரு முறை பட்டினிகிடக்கப் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் திரு. காந்தியடிகளும் இதே



RangaRakes tamilnavarasam.com

கொள்கையுடையவர் தான் என்பதை நாம் இப்பொழுது கூறவேண்டிய தில்லை. நமது "குடி அரசு" வாசகர்களுக்கெல்லாம் நன்றாய்த் தெரிந்த விஷயமாகும். ஆகையால்தான் திரு. காந்தியார், திரு. மாளவியா போன்ற வர்களின் ஆதிக்கத்தில் உள்ள 'காங்கிரஸ்" சபையில் மதப் பாதுகாப்பையும் ஜாதிப் பாதுகாப்பையும், சாஸ்திரப் பாதுகாப்பையும், நாகரீகப் பாதுகாப்பை யும் திட்டங்களாக அமைத்து வைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதும் முன்பே பல தடவைகள் விளக்கிக் கூறப்பட்ட விஷயமாகும். ஆகையால் தற்போதைய கொள்கையையுடைய காங்கிரஸ் ஸ்தாபனம் இருக்கும் வரை யிலும் திரு. காந்தியார், திரு. பண்டித மாளவியா போன்றவர்கள் காங்கிரசைக் கைப்பற்றிக் கொண்டிருக்கும் வரையிலும் - ஜாதியோ, வருணாச்சிரம தருமமோ; ஜாதிக் கட்டுப்பாடோ, தீண்டாமையையோ ஒழிவதற்குச் சிறிதும் வழியேயில்லை யென்று சத்தியமாகக் கூறுவோம்.

இது நிற்க, இனி, திரு. மாளவியா அவர்களும் திரு. காந்தி அவர்களும் சொல்லுகிறபடியாவது, கோயில்களிலும் குளம் கிணறு நடைபாதை பள்ளிக் கூடம் முதலியவைகளிலுமாவது தீண்டாதார்க்குச் சமவுரிமையளிக்க நமது நாட்டு வைதீகர்கள் சம்மதிப்பார்களா என்று கேட்கின்றோம். தமிழ் நாட்டில், இப்பொழுதே எங்கும் பகுத்தறிவற்ற மண்ணுருண்டைக் கூட்டத்தார், "மதம் போச்சு, சாஸ்திரம் போச்சு, பழக்க வழக்கம் போச்சு" என்று கூச்சலிட ஆரம் பித்து விட்டார்கள். சில தினங் களுக்கு முன் (2 - 10 - 32) தஞ்சையில் வாயள வில் வைதீகம் பேசும் வக்கீல் பார்ப்பனர்கள் கூடிய வருணாச்சிரம தர்மக் கூட்டத்தில் தீண்டாதார்க்குக் கோயில் பிரவேசம் அளிக்கும் விஷயத்தைக் கண்டித்துத் தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அக்கூட்டத்தினர், கோயில் பிரவேசத்தின் பொருட்டு குருவாயூரில் திரு. கேளப்பன் அவர்கள் உண்ணாவிரதம் இருந்ததைக் கண்டித்தும், கள்ளிக் கோட்டை சாமொரின் அவர்கள் குருவாயூரில் கோயிலைத் தீண்டாதார்களுக்குத் திறந்து விடா மலிருந்த செய்கையைப் பாராட்டியும் தீண்டாமையை ஒழிக்க முயலுவதும், கோயில் பிரவேசமளிக்க முயலுவதும் இந்து மத ஆகம, வேத, புராண சாஸ்திரங்களுக்குப் பொருத்தமுடையதல்ல வென்றும் தீர்மானங்கள் நிறை வேற்றியிருக்கின்றார்கள். இன்னும் கோயில் பிரவேசத்தின் பொருட்டுச் சென்னைச் சட்டசபையில் சட்டம் நிறைவேற்ற அனுமதியளிக்கக் கூடாது என்று கவர்னர் வைசிராய் முதலியவர்களை வேண்டிக் கொள்ளுவதாகவும் தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள்.

மற்றொரு வைதீகராகிய திரு. ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியார் என்பவர் தீண்டாமை ஒழிக்கும் விஷயத்தில் அரசாங்கமே கவனம் செலுத்திவரும் சுதேச முஸ்லிம் சமஸ்தானமாகிய ஹைதராபாத்திற்குப் போய் தீண்டாமை விலக்குக்கு எதிர் பிரசாரம் பண்ணுகிறார். ஹைதராபாத்தில் சென்ற 30 - 9 - 32ல் கூடிய வக்கீல்களில் மகாநாட்டில், திரு. ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியார் தலைமை வகித்துப் பேசும் போது,



> "சமூக, மத சம்பந்தமான விஷயங்களில் அரசாங்கத்தார் தலையிடக்கூடாது"

என்றும்,

> "இந்து மதமும், இஸ்லாம் மதமும் கடவுளால் வெளியிடப் பட்ட மதமாதலால் இவைகளில் சட்டத்தைப் புகுத்துவது சரியாகாது"

என்றும் வைதீகப்பிரசாரம் பண்ணியிருக்கிறார். திரு. ஆச்சாரியார் இந்து மதத்துடன் மதத்தையும் சேர்த்துக் கொண்டு பேசியது முஸ்லிம் மதத்தைப் பற்றி அவருக்குள்ள கவலையைக் காட்டவா? அல்லது ஹைதராபாத் அரசாங்கத்தாரை ஏமாற்றவா? என்று கேட்கின்றோம்.

இன்னும் வைதீக பார்ப்பனர்களுடைய பிடிவாதத்தை அறிய வேண்டு மானால் சில நாட்களுக்கு முன் ஒரு பிரபலமான தமிழ் தினசரி ஒன்றில் பார்ப்பன கனபாடி ஒருவர் எழுதியிருக்கும் ஒரு கட்டுரையில் உள்ள சில விஷயங்களைக் கவனித்தால் உண்மை விளங்கும். அவை:-

> "ஒரு வகுப்பாரது நோக்கத்தை நிறைவேற்ற இன்னொரு வகுப்பாரது உணர்ச்சி பாதிக்கப் படலாகாது. நமது தேசத்தவர் "ஹிந்துக்கள்" என ஒரு வழிப்பாடாய் அழைக்கப்பட்டாலும், வெவ்வேறு வகுப்பிற்குரிய வாழ்க்கையையும் உடையவர்களாகவே இருக்கின்றனர். ஒரு வகுப்பாரைப் புண்படுத்திப் பட்டினிகிடந்து ஒன்றைப் பெறுவது சிலாக்கிய மல்ல"

என்று குறிப்பிட்டிருப்பதைக் கொண்டு, தற்போதிருக்கும், ஜாதி வித்தி யாசங்களும், பழக்கவழக்கங்களும் மாற்றுவதும் மாற்றுவதற்கு முயலுவதும் சரியல்ல என்பதே வைதீகர்களின் எண்ணம் என்பதை உணரலாம். ஆகவே, இனி திரு. காந்தியவர்கள் பட்டினி கிடந்தாலும் அதை எந்த வைதீகரும் ஆதரிக்கப் போவதில்லையென்பதையும் இப்போழுதே நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். மேலும்,

> "உத்சவ காலங்களில் சுவாமி ஊர்வலம் வருவதும், உத்சவ முடிவில் நடக்கப்படும் ரதோத்சவமும் தாழ்ந்த வகுப்பினருக்குக் காட்சி கொடுக்கவே யென்பதை யாவரும் அறியலாம். ரதோத்சவ காலங்களில் தீண்டாதார்கள் என்பவர்களைத் தீண்டலும் தகும் என்பது வைதீகர்களது கொள்கை. எனவே தாழ்த்தப்பட்டவர்களை இந்துக்கள் சமஉரிமை கொடுத்துச் சகோதரர்களாகவே பாவிக் கின்றனர். இப்பொழுது புதிய வழியில் அவர்களைக் கோவில்களில் புகுந்து வணங்கச் செய்ய வேண்டுமெனத் தலைவர்கள் முயலுவதைக் கண்டு வைதீகர்களாகிய நாங்கள் வருந்துகிறோம்."



RangaRakes tamilnavarasam.com

என்று குறிப்பிட்டிருப்பதைக் கொண்டு கோயில் பிரவேச விஷயத்தில் வைதீகர் கொண்டுள்ள மனப்பான்மையை அறியலாம்.

மேற்கூறிய பல விஷயங்களையும் உதாரணங்களையுங்கொண்டு, திரு. மாளவியா பண்டிதர் பிரசாரம் பண்ணப் போவதாகக் கூறும் போலித் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்தைக் கூட ஆதரிக்க எந்த வைதீகரும் தயாராயில்லை என்பதை அறியலாம்.

ஆகவே யாரும் திரு. காந்தியோ அல்லது, திரு. மாளவியாவோ, அல்லது காங்கிரசோ செய்யும் தீண்டாமை விலக்குப் பிரசாரத்தைக் கண்டு ஏமாற வேண்டாம், தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் பண்ணும் காங்கிரஸ் பார்ப்பனர்களை "ஜாதிகளை அழிப்பதற்கும் ஜாதிக்கட்டுப்பாடுகளை அழிப்பதற்கும், காரணமாக இருக்கும் கலப்பு மணத்தையும் சமபந்தி போஜனத்தையும் ஒப்புக் கொள்ளுகிறார்களா" என்று கேட்டால் அவர்களுடைய குட்டு வெளிப்பட்டுப் போகும். சமபந்தி போஜனத்திற்கு அனேகர் ஒப்புக் கொண்டாலும், கலப்பு மண விஷயத்தை ஒப்புக் கொள்ளத் துணிய மாட்டார்கள். இதற்கு நமது நாட்டு பார்ப்பனர்கள் சிலர் மனப்பூர்வமா ஒப்புக் கொண்டாலும், திரு. மாளவியா போன்ற வைதீகர்கள் ஒரு நாளும் ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். ஆகையால் எல்லோருக்கும் இந்து மதப்பிரசாரம் பண்ணும் காங்கிரசிடமும் அதன்பிரச்சாரகர்களிடமும் ஜாக்கிரதையாயிருக்கும்படி எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 09.10.1932**



# ஜஸ்டிஸ் கட்சி கொலை செய்யப்படுமா?

சென்ற வாரத்தில் தஞ்சையில் கூடிய பன்னிரண்டாவது பார்ப்பன ரல்லாதார் மகாநாட்டில் நடந்த மானக்கேடானக் காரியங்களைக் கேட்ட எந்த பார்ப்பனரல்லாதாரும், பார்த்த எந்தப் பார்ப்பனரல்லாதாரும், வெட்கமடைந்து தலையைத் தொங்க விட்டுக் கொள்ளாமலிருக்க முடியாது. தேசத்தின் நன்மைக்காக உழைக்கின்றோம் என்றும், சமூகத்தின் நன்மைக்காக உழைக்கின்றோம் என்றும் சொல்லிக் கொண்டிருக்கும் படித்த கூட்டத்தாரும், பணக்காரக் கூட்டத்தாரும் ஆகிய பார்ப்பனரல்லாதார்களே சாதாரண முறட்டு, அறிவற்ற காலிகளைப்போல் ஒருவரோடு ஒருவர் மோசமாக நடந்து கொண்ட நடத்தையை நினைக்கும் போது உண்மை பார்ப்பனரல்லாதார் இரத்தம் கொதிக்காமலிராது. பார்ப்பனரல்லாதார் கட்சியை எப்படியேனும் குழி தோண்டி புதைத்துவிட வேண்டுமென்று வெகுநாட்களாக முயற்சி செய்து கொண்டிருந்த பார்ப்பனர்களும், பார்ப்பனக் கூலிகளும் சந்தோசப் பட்டுத் தலைகால் தெரியாமல் கூத்தாடவும், பார்ப்பனரல்லாதாரின் சமூக நலத்தைப் போதிய அளவு கவனிக்கா விட்டாலும் ஏதோ பார்ப்பனரல்லாதாரின் நன்மைக்காக உழைப்பதாகச் சொல்லிக் கொண்டாவது ஒரு கட்சி இருக்கிறதே என்று நினைத்துக் கொண்டிருக்கின்றவர்களின் நெஞ்சந் துடிக்கவும் ஆன காரியங்கள் நடந்ததைப் பற்றி நினைக்கும் பார்ப்பன ரல்லாதார் எவரும் ஆத்திரமடையாமலிருக்க முடியாது. ராஜாக்களும், மந்திரிகளும், ஜமீன்தாரர்களும், ஜில்லாபோர்டு தலைவர்களும், தாலுகா போர்டு தலைவர்களும், முனிசிபல் தலைவர்களும், சட்டசபை உறுப்பினர்களும், வியாபாரிகளும், பணக்காரர்களும், நிலச்சுவான்தார்களுமாகிய பார்ப்பனரல்லாதார்கள் ஒன்று கூடிய ஒரு மகாநாடு குழப்பத்தில் நடந்ததென்றால் இதைவிடப் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு அழியாத, வெட்கங்கெட்ட வசை மொழி வேறு என்ன தான் வேண்டும்? மேலே கூறிய பெரிய மனிதர்களென்று சொல்லக்கூடிய பார்ப்பனரல்லாதார்களே ஒரு மகா நாட்டைச் சமாதானத்தோடு நடத்த யோக்கியதை இல்லாமற் போய் விட்டார்கள் என்றால், "பார்ப்பனரல்லாதார்க்கு மூளையில்லை, திறமையில்லை" என்று நினைத்துக் கொண்டும் சொல்லிக் கொண்டிருக்கும், பார்ப்பனர்களுக்குத் தகுந்த பதில் கூறப் பார்ப்பனரல்லாதார்க்கு வாயுண்டா என்று தான் கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

தஞ்சை மகாநாட்டில் எந்த கட்சியினர் செய்தது சரி, எந்த கட்சியினர் செய்தது தப்பு என்பதைப்பற்றி நாம் ஒன்றும் கூற விரும்பவில்லை. ஆனால் எந்தக் கட்சியினராயிருந்தாலும், கூட்டத்தை கலைப்பதற்கென்றும், மகா நாடு நடைபெற வொட்டாமல் சத்தம் போடுவதற்கென்றுமே ஒரு கூட்டத்தை மகா நாட்டுப் பிரதிநிதிகளாக்கிக் கொண்டு வந்ததை விட வெறுக்கத்தகுந்ததும், கண்டிக்கத்தகுந்ததுமான காரியம் வேறில்லை. அதிலும் சத்தம் போடு என்றால் சத்தம் போடவும், பேசாமலிரு என்றால் பேசாமலிருக்கவும் ஆன மக்களையும், வேறு அறிவோ, படிப்போ ஒன்று மில்லாத மக்களையும் பிரதி நிதியாக அழைத்துக் கொண்டு வந்திருந்ததாகச் சொல்லப்படும் விஷயம் இன்னும் கேவலமாகும். அன்றியும், ஜஸ்டிஸ் கட்சியைத் தொலைக்க வேண்டும் என்னும் எண்ணமுடைய காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களும், எப்படியாவது ஜஸ்டிஸ் கட்சியில் பிளவு உண்டாக்கி அதை அதிகாரப் பதவியிலிருந்து வீழ்த்தி, அவ்வதிகாரத்தைத் தாங்கள் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்னும் நோக்கமுடைய இதர கட்சியினரும் மகாநாட்டுக்குப் பிரதிநிதிகள் என்ற பெயருடன் வந்திருந்தது வியப்பைத் தரக்கூடிய செய்தி யாகும். இத்தகைய பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மகாநாடு எப்படி ஒழுங்காக நடக்க முடியுமென்றுதான் கேட்கிறோம். இம்மாதிரியான மக்களை மகா நாட்டுக்குப் பிரதிநிதிகளாக அழைத்து வந்தவர்களும், அழைத்துவர உதவி செய்தவர்களும், அவர்களைப் பிரதிநிதிகளாக ஒப்புக் கொண்டு அனுமதித் தவர்களும் யாராயிருந்தாலும் சரி அவர்கள் செய்கை மிகவும் கண்டிக்கக் கூடியதும், இகழக்கூடியதும் பரிகசிக்கக் கூடியதும் ஆகுமென்றே நாம் கூறுவோம்.

உண்மையிலேயே ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்கள் அனைவரும், பார்ப்பனரல்லாத ஏழை மக்களுக்கும், தேச மக்களுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்னும் எண்ணம் உடையவர்களாயிருந்தால் அவர்களுக்குள் இத்தகைய குழப்பமும், கலகமும், காலித்தனமும் நடந்திருக்க இடமே ஏற்பட்டிருக்காது. இதற்கு மாறாகக் கட்சித் தலைவர்கள் கட்சியின் பெயரால் பட்டம் பதவிகளைப் பெற்று சுயலாபம் பெறுவதில் பிடிவாத முடைய வர்களாகவும், இவ் விஷயத்தில் ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுக்காத வர்களாகவும் இருந்த காரணத்தால் தான் இவ்வாறான கலகம் நேர்ந்தது. சுருக்கமாகக் கூற வேண்டுமானால் மந்திரி உத்தியோகத்தின் பொருட்டு தான் மகாநாட்டில் இம்மாதிரியான மானக்கேடு சம்பவித்தது என்று சொல்லி விடலாம். இதன் பொருட்டே ஒவ்வொருவரும் கூலிக்கு ஆள் பிடித்து பிரதிநிதிகளாகப் பலரைக் கொண்டு வர நேர்ந்தது என்பதிலும் சிறிதும் சந்தேகப்பட வேண்டியதில்லை.

நெல்லூர் மகாநாட்டுக்குப் பின் சென்ற மூன்று ஆண்டுகளாக மகா நாடு கூடாமல், இருந்ததே அக்கட்சித் தலைவர்களுக்குக் கட்சி முன்னேற் றத்திற் கவலை இருக்கிறதா? அல்லது தங்களுடைய சுயநல முன்னேற்றத்தில் கவலையிருக்கிறதா? என்பதைக் காட்டுவதற்குப் போதுமானதாகும்.



அன்றியும் தற்காலத்தில் அக்கட்சியில் உள்ளவர்களில் பலர் சுயநலத்தை உத்தேசித்துக் கட்சியின் அடிப்படையான கொள்கையையே மாற்றிக் கட்சியையே கொலை செய்யச் சில வருஷங்களாக முயன்று கொண்டிருக்கிறார்கள். இத்தகைய பார்ப்பனரல்லாத சமூகக் கொலைகாரர் களும் தஞ்சை மகாநாடு கலகத்தில் முடிந்ததற்கு ஒரு வகையில் காரண கர்த்தாக்களாவார்கள் என்பதையும் மறுக்க முடியாது. அதாவது பார்ப்பன ரல்லாதார் கட்சியை ஆரம்பித்த ஆதிகர்த்தர்களாகிய திரு. டி. எம். நாயர், அவர்களும், சர். பி. தியாகராயர் அவர்களும் பார்ப்பனர்களால் மிதியுண்டு, தாழ்த்தப்பட்டுக் கிடந்த பார்ப்பனரல்லாதார் சமூகத்தை அரசியல் துறையிலும் சமுதாய முன்னேற்றத் துறையிலும், சமவுரிமையடையும்படி செய்ய வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே கட்சியை ஆரம்பித்தார்கள். அக் காலத்தில் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொண்டு தேச நன்மைக்கென்றோ, ஏழைகளின் நன்மைக்கென்றோ ஆரம்பித்த எந்த இயக்கங்களும் சங்கங்களும் கடைசியில் பார்ப்பனர்களின் சுயநலத்திற்கே உபயோகப்படும் படி பார்ப்பனர்கள் செய்து வந்த தந்திரமாகிய அயோக்கியத்தனத்தை ஜஸ்டிஸ் கட்சி ஸ்தாபகர்கள் நன்றாய் அறிந்திருந்தார்கள். ஆகையினால் பார்ப்பனரல்லாதார் கட்சியானது அழியாமல் நிலைத்து நின்று பார்ப்பன ரல்லாதார் சமூகத்திற்குச் சிறிதளவாவது நன்மை செய்ய வேண்டுமானால் அக்கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்ற திட்டத்தை அமைத்து வைத்தார்கள். இனியும் பார்ப்பனரல்லாதார் கட்சி சாவாமல் உயிரோடு இருக்க வேண்டுமானால், கட்சி ஸ்தாபகர்களின் நோக்கத்தையும் திட்டத்தையும் கொலை செய்யாமல் இருக்க வேண்டியதே பார்ப்பனரல்லாதார் கடமையாகும்.

தஞ்சை மகாநாட்டிலோ ஒரு கூட்டம், கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்ப்பதாகத் தீர்மானித்து விடவேண்டும் என்பதற்காக வெகு கஷ்டப் பட்டதாகத் தெரிகிறது. ஆனால் தஞ்சை மகாநாட்டின் பெரும் பாலான பிரதி நிதிகள் பார்ப்பனரைக் கட்சியில் சேர்ப்பதற்கு எதிரான மனப் பான்மை யுடையவர்களாக இருந்தார்களென்ற விஷயம் பார்ப்பனரைச் சேர்க்கும் எண்ணமுடைய கூட்டத்தார்க்குத் தெரியும். ஆகையால் இவர்களும் மகாநாடு சரியாக நடைபெறாமல் போவதற்கு வெளிப்படையாக இல்லா விட்டாலும், மறைமுகமாகப் பல யோக்கிய மற்ற செயல்களைச் செய்து வந்தார்களென்று சொல்லப்படும் விஷயத்தையும் எளிதில் மறுக்க முடியாது.

அடுத்தபடியாகத் தலைவர் தேர்தல் விஷயமும் கலகத்திற்கு ஒரு முக்கியமான காரணமாகி விட்டது. தலைவர் தேர்தல் விஷயமும் தற்கால மந்திரிகளின் உத்தியோக விஷயத்தில் மாறுதலை உண்டாக்குமோ என்ற பயம், மந்திரிகளிடத்திலும், மந்திரிகளின் பாதந்தாங்கிகளிடத்திலும் குடி கொண்டிருந்த காரணமே கலகத்திற்கு முக்கிய காரணம் என்று சொல்லப் படுகின்றது. சில மாதங்களாக மந்திரிகளுக்குள் ஒற்றுமையில்லாதிருந்த



RangaRakes tamilnavarasam.com

விஷயமும், தென்னிந்திய நல உரிமைச் சங்க நிர்வாக சபையில் மந்திரிகளின் மேல் நம்பிக்கை இல்லை என்னும் தீர்மானம் கொண்டுவரப்பட்டுப் பிறகு சமாதான விஷயமும், தஞ்சை மகா நாட்டுக்கு வந்த தலைவர்கள் இரு கட்சியினராக ஒவ்வொரு கட்சிக்கும் தனித்தனியே ஆள்பிடித்துக் கொண்டு வந்த விஷயமும், மந்திரிகளின் உத்தியோக விஷயமே கலகத்திற்கு முக்கிய காரணம் என்பதை நன்றாய் விளக்கிக் காட்டுகின்றன.

ஆகவே ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்கள், சுயநலத்தை முன்னிட்டு யோக்கியப்பொறுப்பில்லாமல் நடந்து கொண்ட காரணத்தினால், பார்ப்பன ரல்லாதார் சமூகத்திற்கு நீங்காத பழியுண்டாகும் படி மகாநாடு குழப்பத்தில் நடந்து, தலைவர் பிரசங்கத்தோடு ஒத்திவைக்கப் பட்டிருக்கின்றது. இனி, ஒத்திவைக்கப்பட்ட மகாநாட்டை நாள் கடத்தாமல், அந்தத் தஞ்சையிலேயே நடத்திக் கட்சியைக் கொலை செய்யாமல் கட்சியின் முன்னேற்றத்திற்கான வழிகளைக் காண்பார்களாயின் அப்பொழுது தான் இப்பொழுது ஏற்பட்டுள்ள அவமானத்திற்கு ஓரளவு பரிகாரம் தேடியதாகும் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

இவ்வாறு மகாநாட்டை மீண்டும் நடத்த ஆரம்பிக்கும் பொழுது, தற்போது மகாநாடு குழப்பத்தோடு முடிந்ததற்குக் காரணமான தலைவர் தேர்தல் பிரச்சினைத் தகராறும், பார்ப்பனரை சேர்க்கும் பிரச்சினைத் தகராறும் முதலில் நிற்கும் என்பதில் ஐயமில்லை. ஆகையால், எவ்வித கலகமும் நடப்பதற்கு இடமில்லாத ஏற்பாடுகளுடன் மகாநாட்டை ஒழுங்காக நடத்துவதில் கட்சித் தலைவர்கள் பெரிதும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

இச்சமயத்தில் நாம் மேற்கூறிய தலைவர் தேர்தல், பார்ப்பனரைச் சேர்த்தல் ஆகிய இரண்டு விஷயங்களைப் பற்றி கட்சியின் அபிவிருத்தியின் பொருட்டு நமது அபிப்பிராயத்தை கூறி விட விரும்புகிறோம். கட்சித் தலைவர் யார் வருவதாக இருந்தாலும் அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை; கட்சித் தலைவர் விஷயத்தில் ஆந்திரர், தமிழர். ஜமீன்தார், ஜமீன்தார் அல்லாதவர், நாயுடு, முதலியார் முதலிய வகுப்புத் துவேஷங்களை கிளப்பி விடுவது வடிகட்டின முட்டாள் தனமும், பொறுப்பற்றத் தன்மையும் என்றே நாம் கூறுவோம். யாராயிருந்தாலும் கட்சியின் அபிவிருத்தியில் நோக்க முடையவர்களாகவும், எதிர்கட்சிக் காரர்களை சமாதானம் பண்ணவேண்டும் என்னும் எண்ணத்துடன் கட்சிக் கொள்கையை விட்டுக் கொடுக்காதவர்களாயும், சுயநலத்தை கருதாதவர்களாயும் கட்சியின் அடிப்படை நோக்கமாகிய சமுதாயச் சீர்திருத்தம் அரசியல் முன்னேற்றம் இரண்டையும் ஒருங்கே நிறைவேற்றக் கூடியவர்களாயும் இருத்தல் வேண்டும். இத்தகைய ஒருவரை தேர்ந்தேடுத்தாலொழிய ஜஸ்டிஸ் கட்சி நிலைத்து நிற்காது என்பதை நாம் மிகவும் உறுதியோடும் உண்மையோடும் அறிவிக்கின்றோம்.



அடுத்தப்படி பார்ப்பனரைச் சேர்க்கும் விஷயத்தில் கட்சியினர் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சில பார்ப்பனர்கள் ஜஸ்டிஸ் கட்சியை வகுப்புவாதக் கட்சி என்றும் அரசியல் கட்சியல்ல வென்றும், தேசத்தின் பிரதிநிதித்துவம் பொருந்திய கட்சியல்ல வென்றும் கூறுகின்றார்களென்று சொல்லிக் கொண்டு கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்க்க முயற்சிப்பது கட்சியைக் கொலை செய்து விட்டுத் தாம் தேசாபிமானப்பட்டம் பெறுவதற்கும் எதிரிகளாகிய பார்ப்பனர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கும் செய்யப்படும் சூழ்ச்சியேயாகும். இவ்வாறு கூறுகின்றவர்களின் புத்தியில் பார்ப்பனர்களின் வகுப்புவாதமும், சுயநலமும் இன்னும் ஒழியவில்லை என்னும் விஷயம் படவில்லையா என்று கேட்கிறோம். இது வரையிலும் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொண்டிருக்கின்ற எந்த இயக்கமாயினும், எந்தச் சங்கமாயினும், தாழ்த்தப்பட்டிருக்கும் பார்ப்பனரல்லாதார் நிலையை உயர்த்தச் சிறிதளவாவது உதவி செய்திருக்கின்றனவா? என்பதை நன்றாய் யோசனை செய்து பார்க்க வேண்டுகிறோம். இப்பொழுதுள்ள ஜஸ்டிஸ் கட்சியானது எவ்வளவுதான் பார்ப்பனர்களின் வசை மொழிகளுக்கு உட்பட்டிருந்தாலும் உண்மையில் தேச மக்களுக்கு நன்மை செய்யும் கட்சியென்பதை தேச மக்கள் ஒப்புக் கொண்டதற்கு அறிகுறியாக மூன்று முறை தேசமக்களின் ஆதரவைப் பெற்று அதிகமான உறுப்பினர்கள் சட்டசபைக்கும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள். இக்கட்சி அரசாங்கத்தாராலும் ஒரு அரசியல் கட்சியென அங்கீகரிக்கப்பட்டு அதிகாரப் பதவியிலும் இருந்து வந்திருக்கின்றது. இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே பார்ப்பனரைச் சேர்க்காத காரணத்தால் கட்சியின் எந்த காரியம் தடைபட்டு விட்டது என்று கேட்கின்றோம்.

ஒருக்கால் இனி கூடப்போகும் மகாநாட்டில் பார்ப்பனர்களையும் கட்சியில் சேர்ப்பதென்று தீர்மானிப்பார்களாயின் அப்பொழுதே கட்சியின் ஆயுட்காலம் முடிந்து விட்டது. திரு. டி. எம். நாயர் அவர்களாலும், சர். தியாகராயராலும் , பனகால் அரசராலும் தோற்றி வளர்க்கப்பட்ட கட்சியை அவர்களுக்குப் பின் வந்த சுயநலங் கொண்ட தலைவர்கள் கொலை செய்தார்கள் என்ற பழியை ஏற்காமல் போக முடியாது என்று எச்சரிக்கை செய்கின்றோம்.

இவ்வாறு பார்ப்பனர்களையும் கட்சியில் சேர்க்கப்பட்டுக் கட்சியும் குழி தோண்டி புதைக்கப்பட்டு அழியக் கூடிய காலம் வந்தாலும் அதனால் பார்ப்பனரல்லாதார் ஊக்கமும் உணர்ச்சியும் பாழாகப்போய் விடாது என்று நாம் நிச்சயமாக நம்புகின்றோம். மீண்டும் பழய கொள்கையையுடைய அதாவது பார்ப்பனர் சம்பந்த மில்லாததும் சமுதாய சீர்திருத்தக் கொள்கையையும் அரசியல் முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு சுத்தமான பார்ப்பனரல்லாதார் கட்சி தோன்றாமல் போகாது என்பதும், தற்போதுள்ள ஜஸ்டிஸ் கட்சியை கொலை செய்வதற்கு முனைந்து நிற்கும்



RangaRakes tamilnavarasam.com

துரோகிகளைப் பொது வாழ்விலிருந்து விரட்ட அவர்கள் பின்வாங்க மாட்டார்கள் என்பதும் நிச்சயம் என்று உறுதியாகக் கூறுகின்றோம்.

ஆகையால் தற்போதுள்ள ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள பொறுப்பாளிகள் உண்மையிலேயே பார்ப்பனரல்லாதார் சமூக நலத்தைக் கருதக் கூடியவர் களாயிருந்தால் பார்ப்பனரல்லாத சமூகத்தாரால் சமூகத் துரோகிகள் என்ற பழியைச் சுமக்க மனமில்லாதவர்களாயிருந்தால் சுயநலமின்றிக் கட்சியின் முன்னேற்றத்தின் விருப்பமுடையவர்களாயிருந்தால் திரு. டி. எம். நாயர் காலத்திலும், சர். தியாகராயர் காலத்திலும், பனக்கால் அரசர் காலத்திலும் இருந்த உண்மையான பார்ப்பனரல்லாதார் கட்சியை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 16.10.1932**



# தீபாவளிக் கொள்ளை நோய்

ஒவ்வொரு வருஷமும் தவறாமல் வரும் பெரிய கொள்ளை நோய் சமீபத்தில் வரப் போகிறது. மக்களுடைய உயிரைக் கவர்ந்து செல்லும் கொள்ளை நோயினால் கூட அதிகக் கஷ்டமில்லை. ஆனால் மக்களை உயிரோடு வைத்து அவர்களுடைய இரத்தத்தையும், செல்வத்தையும், அறிவையும் உறிஞ்சி விடும் கொள்ளை நோய்களுக்கே அதிகமாக அஞ்ச வேண்டும். அத்தகைய கொள்ளை நோய்கள் இந்து மதத்தில் ஏராளமாக இருக்கின்றன. இவைகளில் எல்லாம் மிகவும் பெரியதாகிய கொள்ளை நோய் தான் இவ்வாரத்தில் வருகிறது. அக் கொள்ளை நோய் தீபாவளிப் பண்டிகை யேயாகும். ஆகையால் எல்லா மக்களையும் ஜாக்கிரதையாயிருக்கும்படி எச்சரிக்க வேண்டும் என்பதற்காகவே நாம் அக்கொள்ளை நோயின் கொடுமைகளை எடுத்துக் காட்ட முன்வந்தோம்.

இந்தியர்கள் அவர்களுக்குள்ளும், இந்துக்கள் என்பவர்கள் மற்ற சமூகத்தாரைக் காட்டிலும் செல்வத்திலும், அறிவிலும், வீரத்திலும் தாழ்ந்து அடிமை மனப்பான்மை மிகுந்தவர்களாயிருப்பதற்குக் காரணம், இந்து மதமும், அதன் மூலம் ஏற்பட்டுள்ள பண்டிகைகளுமே என்பதை நமது இயக்கம் நன்றாய் விளக்கிக் காட்டியிருக்கின்றது. இந்து மதமும் இந்து மதத்தின் பேரால் ஏற்பட்டு வழங்கிவரும் பண்டிகைகளும் இல்லாதிருக்கு மானால் நமது மக்கள் எவ்வளவோ உயர்ந்த நிலையிலும், சுதந்திர முடைய வர்களாகவும் அறிவுடையவர்களாகவும் இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இன்று மதத்தையும், மதப்பண்டிகைகளையும், லட்சியம் பண்ணாமல் தங்கள் சொந்த புத்தியின் வழியே நடந்து, இவ்வுலகத்தில், சுகமாக வாழ்வதற்கு வழியைக் கண்டு பிடிப்பதில் முனைந்து நிற்கும் மக்களே பகுத்தறிவு உடைய வர்களாகவும், அடிமைத் தன்மை இல்லாதவர்களாகவும், தரித்திரமில்லாத வர்களாகவும், வாழ்வதை நாம் கண்கூடாகக் காணக்கூடிய நிலைமையிலிருக் கிறோம். இருந்தும் நமது நாட்டு முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதாக ஆர்ப் பாட்டம் புரிந்து கொண்டிருக்கும் எவரும், மற்ற நாட்டு மக்கள் சுதந்திரமடை வதற்குக் கைக்கொண்ட உண்மையான வழிகளைப் பற்றிச் சிந்திக்கவோ அது பற்றி நமது மக்களிடையே பிரசாரம் பண்ணவோ முன் வராமலிருக்கின்றனர். ஆனால் நாம் மாத்திரம் ஆதிமுதல், இந்துமதமும், இந்துமதப் பண்டிகை



RangaRakes tamilnavarasam.com

களும் ஒழிந்தாலொழிய நமது மக்கள், செல்வத்திலோ, அறிவிலோ, சமத்துவத்திலோ ஒரு நாளும் முன்னேற முடியாது என்று சொல்லி வருகிறோம்.

இப்பொழுது நமது கண்முன் நிற்கும் தீபாவளிப் பண்டிகையை எடுத்துக் கொள்ளுவோம். இப்பண்டிகையினால் நமது நாட்டு மக்களுக்கு உண்டாகும் பொருள் நஷ்டம் சரீரத் துன்பம் எவ்வளவு? அன்றியும் சிறு குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரையுள்ள எல்லோர் மனத்திலும் பதியும் மூட நம்பிக்கை எவ்வளவு? இவற்றை எல்லாம் ஜன சமூகத்திற்கு எடுத்துக் காட்டி அவர்களைச் சீர்திருத்த எந்த தேசாபிமானியாவது முயற்சி எடுத்துக்கொள்கின்றானா?

முதலில் இப்பண்டிகையினால் மக்களுடைய அறிவு எவ்வாறு மழுங்க வைக்கப்படுகிறது என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். இதை அறிய வேண்டுமானால் இதன் பொருட்டு - அதாவது இப்பண்டிகையை ‘தெய்வீக’மானது என்று மக்கள் நம்பவைக்கும் பொருட்டு ஏற்பட்டிருக்கும் புராணக் கதையை ஆராய்ந்தாலே இதன் உண்மை விளங்கும். ஆதலால் அக்கதையைக் கீழே குறித்துக் காட்டுகிறோம்.

“பூமி தேவி” என்னும் இந்த மண்ணுக்கும், “மகா விஷ்ணு” என்று சொல்லப்படும் ஒரு தெய்வத்திற்கும் “நரகா சூரன்” என்னும் ஒரு மகன் பிறந்தானாம். அவன் அதிக பலசாலியாக இருந்து கொண்டு பார்ப்பனர்களுக்கு துணைவராகிய “தேவர்கள்” என்பவர்களை யெல்லாம் மிகவும் கஷ்டப்படுத்திக் கொண்டிருந்தானாம். ஆதலால், தேவர்களெல்லாம், தமிழர் குலமாகிய அசுரர் குலத்தைச் சேர்ந்தவனாகச் சொல்லப்பட்ட “நரகாசுர”னுடைய கொடுமையை சகிக்க முடியாமல் “மகாவிஷ்ணு” என்னும் அந்த தெய்வத்தினிடம் சென்று முறையிட்டார்களாம். மகா விஷ்ணு என்பவரும், அந்த நரகாசுரனைக் கொன்று தேவர்களுடைய கஷ்டத்தை நீக்குவதாகக் கூறினாராம். அப்பொழுது பூமிதேவி, நரகாசுரனைக் கொல்லும் போது தன்னையும் உடன் வைத்துக் கொண்டே தன் மகனைக் கொல்லும்படி வேண்டிக் கொண்டாளாம். அதற்கு மகா விஷ்ணுவும் சம்மதித்தாராம்.

அதன் பிறகு மகா விஷ்ணு கிருஷ்ணனாகப் பிறந்து, சத்திய பாமையாகப் பிறந்திருந்த பூமி தேவியையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு போய் ஒரு தீவில் வசித்து வந்த நரகாசுரனைக் கொன்றானாம். கிருஷ்ணன் நரகாசுரனைக் கொன்ற போது, அவன் தான் இறந்த நாளை பூமியில் உள்ளவர்கள் கொண்டாட வேண்டுமென்று “வரம்” கேட்டானாம் கிருஷ்ணனும் அவ்வாறே “வரம்” கொடுத்தானாம்.

இது தான் தீபாவளிப் பண்டிகைக்காகக் கற்பிக்கப்பட்டிருக்கும் கதை. இக்கதையை நம்பி தீபாவளிப் பண்டிகை கொண்டாடும் மக்களை சிறிதாவது புத்தியுள்ளவர்களென்று கூறமுடியுமா என்பதை நன்றாய் யோசனை செய்துப் பாருங்கள்!



முதலில் நமது கண்ணுக்கு முன் காணப்படும் இந்த மண் ஒரு பெண்ணாக இருக்க முடியுமா? இரண்டாவது ‘மகாவிஷ்ணு’ என ஒரு தெய்வம் கடைகளில் விற்கும் பண்டங்களில் இருப்பது போல, பல பெண்ஜாதிகளுடன், ஒரு குருவியின் மேல் உட்கார்ந்து கொண்டோ, அல்லது பாம்பின் மேல் படுத்துக்கொண்டோ, சமுத்திரத்தில் மிதந்துகொண்டோ இன்றும் இருப்பதாகக் கூறப்படுவதும், இதற்குமுன் இருந்ததாகச் சொல்லப்படுவதும் அறிவுக்குப் பொருத்தமான செய்தியா?

இப்படிப்பட்ட ஒரு தெய்வத்திற்கும் மண்ணுக்கும் ஒரு பிள்ளை பிறந்தது என்று சொல்லுவது எவ்வளவு புரட்டு? ஆரம்பமே புரட்டாயிருக்கும் போது மற்றவைகளெல்லாம் எப்படியிருக்குமென்பதை இன்னும் நாம் விரித்துக் காட்ட வேண்டியதில்லை. ஆகவே, இத்தகைய அர்த்தமற்ற கதையைத் “தெய்வீக”முள்ளதாக நம்பிக்கொண்டு, இதன் பொருட்டு ஒரு தேசம் கோடிக்கணக்கான பொருளை ஒரே நாளில் செலவு செய்யுமானால், அதை அறிவுடைய தேசமென்று சொல்ல முடியுமா?

இந்தக் கதையை நம்பியே “நரகசதுர்த்தி” என ஒரு நாளைக் குறிப்பிட்டுக் கொண்டு அன்று விடியற் காலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து முழுகுவதும், எண்ணெய்ப் பலகாரங்களை வயிறு புடைக்கத் தின்பதும் பட்டாசுக் கட்டுகளைக் கொளுத்துவதுமான செயல்களை செய்து பண்டிகை கொண்டாடுகின்றனர்.

இவ்வாறு செய்வதனால், மக்களுக்கு மதப் புரட்டிலும், பண்டிகை புரட்டிலும், புராணப் புரட்டிலும், அவதாரப் புரட்டிலும் பார்ப்பன வம்சத்தைச் சேர்ந்ததேவர்கள் அனைவரும் பரிசுத்தமானவர்கள், உயர்ந்தவர்கள், தமிழர் வம்சத்தை சேர்ந்தவர்களாகிய அசுரர்கள் அனைவரும் அயோக்கியர்கள், தாழ்ந்தவர்கள் என்னும் புரட்டிலும் நம்பிக்கையுண்டாகி, அவர்கள் அறிவு குன்றிப் போகின்றது. அன்றியும், மக்கள், பண்டிதர்கள், புரோகிதர்கள், மதவாதிகள் என்னும் புரட்டர்களுக்கு இன்னும் அடிமையாகவே இருக்கக் கூடிய நிலையையும் அடைகிறார்கள் என்பதை யார் மறுக்க முடியும்?

இனி இப்பண்டிகையினால் உண்டாகும் பொருள் நஷ்டத்தையும், சுகாதாரக் குறைவையும் கவனிப்போம். ஏழை முதல் பணக்காரன் வரையுள்ள எல்லா இந்துக்களும் இதையொரு “தெய்வீக” மான பண்டிகையென்று கருதுவதால், எப்பாடுபட்டாவது எவ்வளவு பணத்தை செலவழித்தாவது, பணமில்லாவிட்டால் கடன் வாங்கியாவது, இதைக் கொண்டாட வேண்டுமென்று தமது அறியாமையால் நினைக்கிறார்கள்.. இவர்களில் பணக்காரர்கள், இப்பண்டிகையின் பொருட்டு எக்கேடு கெட்டாலும், எந்தச் சந்தியில் நின்றாலும் அதைப்பற்றி நமக்கு கவலையில்லை. ஆனால் ஏழைமக்களும், பணக்காரர்களைப் பார்த்தும், அர்த்தமற்ற தெய்வீகத்தையும் புராணக் கதைகளையும் நம்பியும், வீணாக அறிவின்றிக் கஷ்டப்படு



RangaRakes tamilnavarasam.com

கின்றார்களே என்றுதான் நாம் பரிதாபப் படுகின்றோம். ஏழை மக்கள், தீபாவளிப் பண்டிகை வர ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே, பண்டிகை கொண்டாடுவதற்காக பலகாரம் தயார் செய்வதற்கு கடைச் சாமான்கள் வாங்குவதற்கும், புது வேட்டிகள் புடவைகள் வாங்குவதற்கும், பட்டாசுக் கட்டுகள் வாங்குவதற்கும், பட்டினி கிடந்து பொருள் சேர்க்கின்றார்கள். அவ்வாறு சேர்த்து வைத்த பொருளும் போதாமல் கடன் வாங்குகிறார்கள். இவ்வாறு வாங்கிய கடனை கொடுப்பதற்கு வேறு வழியில்லாமல் இவர்கள் தேடி வைத்திருக்கும் நகைகளோ பாத்திரங்களோ விற்கப்படுகின்றன. இவ்வாறு ஏழைமக்கள் பொருள் வீண் நஷ்டமாகிறது.

இதற்கு மாறாக முதலாளிகளாக இருக்கும் ஜவுளி வியாபாரிகளும் மளிகைக் கடைக்காரர்களும், இத் தீபாவளியில் நல்ல லாபம் அடைகிறார்கள். அவர்கள் அடையும் லாபம் ஏழைமக்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருள் என்பதை யார் மறுக்க முடியும். ஆகவே இப்பண்டிகை ஏழைமக்களை இன்னும் பரம ஏழைகளாக்கவும், பணக்காரர்களை இன்னும் கொழுத்த பணக் காரர்களாக்கவும், ஒருவகையில் உதவி செய்கிறதென்பதையும் அறியலாம்.

அன்றியும் வீணாகக் கொளுத்திச் சுட்டு பொசுக்கப்படும், பட்டாசு களும், வாணங்களும், எங்கிருந்து வருகின்றன. இவைகள் பெரும்பாலும் அயல் நாடுகளிலிருந்தே தீபாவளிக்கென்று நமது நாட்டிற்கு வியாபாரத் திற்காகக் கொண்டு வரப்படுகின்றன. சுமார் இரண்டு கோடி ரூபாய் பெறுமான முள்ள பட்டாசுக் கட்டுகளும், வாணங்களுமாவது இந்தத் தீபாவளியில் பொசுக்கப்படுமென்பதில் ஐயமில்லை. இந்த இரண்டு கோடியும் கரியும் புகையுமாக போவதைத் தவிர இதனால் வேறு யாருக்கு என்ன பலன்? நமது தேசப் பணமாகிய இந்த இரண்டு கோடி ரூபாயும் அந்நிய நாட்டுக்குத் தானே போய்ச் சேருகிறது? இன்னும் அன்னிய நாட்டுத் துணிகள் வியாபாரத்தின் மூலம் அயல் நாடுகளுக்குச் செல்லும் பொருள் நாலைந்து கோடி ரூபாய்க்குக் குறையாது என்பது நிச்சயம். இந்த நாலைந்து கோடியும் நமது தேசத்திற்கு நஷ்டம் தானே.

இன்னும் அடை மழை பெய்து கொண்டிருக்கும் இந்த ஐப்பசி மாதத்தில் விடியற்காலையில் எண்ணெய் தேய்த்து முழுகிவிட்டு எண்ணெய் பலகாரங்களைப் போட்டு வயிற்றை நிறப்புவது சரீரசுகத்துக்கு ஏற்றதா என்று தீபாவளியை நம்பும் எந்த முட்டாளாவது யோசித்துப் பார்க்கிறானா? சாதாரணமாக நமது நாட்டில் “காலரா” என்னும் விஷப் பேதி நோய் பரவுவது இந்த தீபாவளி முதல் தான் என்பதை எவரும் அறிவார்கள். எதனால் இந்த விஷப் பேதி உண்டாகின்றது என்பதை அறிந்தவர்கள் இந்தத் தீபாவளிப் பண்டிகையினால் நமது ஜன சமூகத்திற்கு உண்டாகும் தீமையை மறுக்க மாட்டார்கள். சாதாரணமான அஜீரணமே இந்த விஷ பேதிக்கு முதற் காரணமாகும். விடியற்காலத்தில் எண்ணெய் தேய்த்து முழுகி எளிதில் ஜீரண மாகாத மாவு பண்டங்களைப் போட்டு வயிற்றை நிரப்பினால் வயிற்றில் உள்ள



ஜீரணக் கருவிகள் என்ன நிலையடையும்? இதனால் பலவிடங்களில் நமது நாட்டில் விஷ பேதி உண்டாகி விடுகின்றது. இன்னும் பல வகையான நோய்களும் உண்டாகி விடுகின்றன. நாம் கூறுவதில் நம்பிக்கையில்லை யானால் தீபாவளியன்று மறுநாள் நமது நாட்டில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று பாருங்கள்! எத்தனை அஜீரண நோயாளிகள் வருகிறார்களென் பதைத் தெரிந்து கொள்ளலாம். இன்னும் சமாச்சாரப் பத்திரிகைகளைக் கவனித்துக் கொண்டிருப்பீர்களானால் எங்கெங்கே விஷ பேதி உண்டாகி யிருக்கிற தென்பதையும் அறியலாம்.

இதுவுமல்லாமல் பட்டாசுகளிலிருந்து எழும் விஷப் புகையினால் வரும் வியாதிகள் பல. இவ்வாறு தீபாவளி பண்டிகையானது மக்களுடைய மனத்திலும் மூட நம்பிக்கையை உண்டாக்குவதோடு அவர்களுடைய பொருளுக்கும் நஷ்டத்தை உண்டாக்கி சரீர சுகத்தையும் கெடுத்து உயிருக்குக் கூட உலை வைத்துவிடுகிற தென்பதையும் அறியலாம்.

ஆனால் இந்தப் பண்டிகையைப் பற்றியும் இது போன்ற மற்றப் பண்டிகைகளைப் பற்றியும், நமது நாட்டு தேசீயப் பத்திரிகைகளாவது, தேசீய வாதிகளாவது கண்டித்துக் கூறி அவைகளில் உள்ள சூழ்ச்சிகளையும் புரட்டுகளையும் எடுத்துக் காட்டி, மக்களுடைய செல்வத்தை நஷ்டமாகாமற் செய்யவாவது, அவர்களுடைய மூட நம்பிக்கைகளைப் போக்கவாவது முயற்சி செய்கின்றார்களா என்று பார்த்தால் ஒரு சிறிதும் இவ்வாறு செய்வ தாகக் காணோம். இதற்கு மாறாக, இது போன்ற பண்டிகைகளைப் பற்றி யெல்லாம் விளம்பரப்படுத்துவதும், அவைகளின் “பரிசுத்தத் தன்மை”களை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதும் அவைகளைக் கொண்டாடும்படி செய் வதும் ஆகிய காரியங்களையே செய்து வருகின்றார்கள். உதாரணமாக, இந்தத் தீபாவளியைப் பற்றிச் சென்ற இரண்டு மாதங்களாகவே பிரசாரஞ் செய்யப் பட்டு வருவதை அறியலாம். அதாவது தீபாவளி பண்டிகை நமது தேசீய பண்டிகையென்றும் தேவர்களுக்கு விரோதியாயிருந்த நரகாசுரனைக் கொன்று அவர்கள் சுகமடையும்படி விடுதலையுண்டாக்கிய விடுதலை நாள் என்றும், ஆகையால் அன்று எல்லோரும் தேசீய விடுதலையைக் கருதி கதர்வாங்கிக் கட்ட வேண்டும் என்றும், கதர் பக்தர்களும், காங்கிரஸ் பக்தர் களும், தேசீய பக்தர்களும், கதரின் பேராலும், காங்கிரசின் பேராலும், தேசீயத் தின் பேராலும் தீபாவளிப் பிரசாரம் செய்து வருகின்றனர். இவர்கள் செய்யும் இந்த பிரசாரம், மக்களை இன்னும் மூட நம்பிக்கையுடையவர்களாக்கவும், குருட்டுப் பழக்க வழக்கங்களை யுடையவர்களாக்கவும், செய்யப்படும் மதப் பிரசாரமா அல்லவா? என்றுதான் நாம் கேட்கின்றோம்.

நமது நாட்டுத் தேசீயவாதிகளுக்கு, இது போன்ற பண்டிகைகளின் பேரில் உள்ள பக்திதான் இன்று எடுத்தவைகளெல்லாம் அதாவது, தேசீய ராஜீய காரியங்களைக் கூடப் பண்டிகைகளாக்கி அவைகளைத், “தேசீய



RangaRakes tamilnavarasam.com

மதம்" என்னும் ஒரு புதிய மதத்தின் பேரால் கொண்டாடச் செய்ய வேண்டும் என்னும் எண்ணமுண்டாகி அவ்வாறே செய்தும் வருகிறார்கள். இதற்கு உதாரணமாக, காந்தி ஜெயந்தி, நேரு ஜெயந்தி, திலகர் ஜெயந்தி, தாஸ் ஜெயந்தி, லஜபதி நாள், சத்தியாக்கிரக நாள், டண்டி நாள், புனா ஒப்பந்த நாள், உண்ணா விரத நாள் என்பவை போன்ற பல நாட்களைக் குறிப்பிட்ட அவைகளைப் பண்டிகைகள் போலக் கொண்டாடும்படி செய்து வருவதைக் கூறலாம். ஆகவே இத்தகையவர்கள், புராதனமானதென்று சொல்லப்படும் தீபாவளி போன்ற பண்டிகைகளைப் பற்றி பிரசாரம் பண்ணாமல் விட்டு விடுவார்களா?

இன்று தீபாவாளிப் பண்டிகையின் விசேஷத்தைக் கூறிக் கதர்ப் பிரசாரம் பண்ணும் தேசீயவாதிகள் உண்மையில், பகுத்தறிவுடைவர்களா யிருந்தால், நமது நாட்டுச் செல்வம் அன்னிய நாட்டுக்குச் செல்லக் கூடாது என்ற எண்ணமுடையவர்களாயிருந்தால், நமது மக்கள் அனைவரும் அறிவுடையவர்களாக ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்னும் நோக்கமு டையவர்களாயிருந்தால் தீபாவளிப் பண்டிகையையும் இது போன்ற மற்றப் பண்டிகைகளையும் ஒழிப்பதற்கே முயற்சி செய்ய வேண்டும். தீபாவளிப் பண்டிகையை ஒழிப்பதன் மூலம், அன்னிய நாட்டிற்குப் பட்டாசுகளின் மூலம் செல்லும் கோடிக்கணக்கான ரூபாய்களையும், துணிகளின் மூலம் செல்லும் கோடிக்கணக்கான ரூபாய்களையும் செல்லாமல் தடுப்பதனால் நமது நாட் டிற்கு லாபமுண்டா? அல்லது தீபாவளிப் பண்டிகையை கொண்டாடுவதன் மூலம் ஆயிரக்கணக்கான ரூபாய்களுக்குக் கதர் விற்பனை புரிவதனால் லாபமுண்டாவென்று கேட்கிறோம்.

ஆகவே உண்மையாக ஆராய்ந்து பார்த்தால் நமது நாட்டில் உள்ள தேசீயவாதிகளோ, சமயவாதிகளோ, புரோகிதர்களோ, பண்டிதர்களோ, காங்கிரஸ்வாதிகளோ அனைவரும் மக்களை இந்து மதத்தின் பேராலும் பண்டிகைகளின் பேராலும், ஏமாற்றி இன்னும் அடிமைகளாகவே வைத் திருந்து தங்கள் சுயநலத்தைச் சாதித்துக் கொள்ளவே முயற்சி செய்கிறார்கள் என்பதை அறியலாம்.

ஆதலால், உண்மையில் விடுதலை பெற நினைக்கின்றவர், மூட நம்பிக்கையினின்று நீங்க நினைக்கின்றவர்கள், மதமும் பண்டிகைகளும் ஒழிந்து மக்களைப் பிடித்த பீடை நீங்க வேண்டுமென்று நினைப்பவர்கள் அனைவரும், தீபாவளிப் பண்டிகையை அடியோடு ஒழிக்க வேண்டுகிறோம். தீபாவளிப் பண்டிகைக்கென்று, பணத்தையும் செலவு செய்து புத்தியையும் கெடுத்துக் கொள்ளாமல் அந்த நாளையும் மற்றச் சாதாரணமான நாளைப் போலவே கழிக்கும் படி வேண்டுகின்றோம். ஆகவே இக்கொள்ளை நோய்க்கு இடங்கொடாமல், அதைத் தடுக்குமாறு எல்லோருக்கும் எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 23.10.1932**



# கோயில் பிரவேச மசோதா

அடுத்து வரப்போகும் சென்னைச் சட்ட சபைக் கூட்டத்தில், மாஜி மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்களால் சட்டமாக்கும் பொருட்டு ஆலயப் பிரவேச மசோதா ஒன்று கொண்டு வரப்போவதாக அறிகின்றோம். டாக்டர் சுப்பராயன் அவர்கள், சமூக சீர்திருத்த விஷயத்தில் உண்மையான பற்றும் ஆர்வமும், செய்கையளவில் நடத்திக் காட்டும் குணமும் உடையவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே இப்பொழுது அவர் கொண்டு வரப்போகும் ஆலயப் பிரவேச மசோதாவைக் கொண்டு, அவர் வெறும் புகழுக்காகவோ, ஏமாற்றலுக்காகவோ இக்காரியத்தைச் செய்ய முன் வந்திருக் கிறார் என்று யாரும் கூற முடியாது. அவர் எல்லாச் சமூகத்தின்பாலும் கொண்டிருக்கும், உண்மையான சமத்துவ எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டே, தாழ்த்தப்பட்டவர்களுக்கும் கோயில்களில் சமவுரிமை வழங்க வேண்டும் என்னும் அந்தரங்க எண்ணத்துடனேயே இம்மசோதாவைக் கொண்டு வரப்போகிறார் என்று ஐயமறக் கூறுவோம். ஆனால் இம்மசோதா சென்னைச் சட்டசபையில் சட்டமாக நிறைவேறுமா? நிறைவேறாதா? என்பதைப் பற்றி இப்பொழுது நாம் ஒன்றும் துணிந்து கூறுவதற்கில்லை. ஆனால் அரசாங்கத்தார், இம்மசோதாவுக்கு ஆதரவளிக்காவிட்டாலும் கூட, மனம் வைத்தால், சென்னைச் சட்டசபை அரசாங்கத்தின் தயவில்லாமலே, இம்மசோதாவைச் சட்டமாக்கி விட முடியும். எப்படியெனில் இப்பொழுது சென்னைச் சட்டசபையில் அதிகாரத்தில் இருக்கும் கட்சியும், மெஜாரிட்டி யாகயிருக்கும் கட்சியும் ஜஸ்டிஸ் கட்சியாகும். இப்பொழுது ஆலயப் பிரவேச மசோதாவைக் கொண்டு வரப்போகும், திரு. சுப்பராயன் அவர்கள் எதிர்க் கட்சியின் தலைவராவார். ஆகவே திரு. சுப்பராயன் அவர்களின் மசோதாவை அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் ஆதரிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. சட்டசபையின் மெஜாரிட்டிக் கட்சியினரான ஜஸ்டிஸ் கட்சி யினரும் இம்மசோதாவை ஆதரிப்பார்களானால், அது சட்டமாகிவிடு மென்பதற்குச் சந்தேகமில்லை.

ஜஸ்டிஸ் கட்சியினரோ, சமூகச் சீர்திருத்தக் கொள்கையையே அடிப்படை நோக்கமாகக் கொண்டவர்கள். அவர்கள் பல ஆண்டுகளாக எல்லா வகுப்பினர்களுக்கும் ஆலயங்களில் சமவுரிமை இருக்க வேண்டும் என்னும் விஷயத்தை ஆதரித்து வருபவர்கள். ஆகையால், அவர்கள் தமது எதிர்க்கட்சித் தலைவரால் கொண்டு வரப்படும் மசோதா என்ற அற்பமான



RangaRakes tamilnavarasam.com

காரணத்தை மாத்திரம் கருதி, இந்த நல்ல மசோதாவை எதிர்க்கமாட்டார்கள் என்றே நாம் நிச்சயமாக நம்புகின்றோம். ஒரு சமயம் ஜஸ்டிஸ் கட்சியினர், திரு. சுப்பராயன் அவர்களுடைய கட்சிக்கும், தமது கட்சிக்குமுள்ள அரசியல் அபிப்பிராயங்களை முன்னிட்டும், "எதிர்க் கட்சியினர் எந்த நல்ல மசோதா வைக் கொண்டு வந்தாலும் அதை எதிர்ப்பதே நமது கடமை" என்னும் அரசியல் வஞ்சந் தீர்க்கும் கொள்கையை முன்னிட்டும், இம்மசோதாவை ஆதரிக்காமல் நடுநிலைமை வகித்தாலும், அல்லது எதிர்த்தாலும், அது மிகவும் வெறுக்கத்தகுந்த செய்கை யாகுமென்றே நாம் கூறி எச்சரிக் கின்றோம்.

இப்பொழுது வரப்போகும் ஆலயப் பிரவேச மசோதா சட்ட மாகுமானால், அதன் மூலம் எல்லா வகுப்பைச் சேர்ந்த இந்துக்களும், இந்து மதக் கோயில்களில் தடையில்லாமல் செல்லுவதற்கு உரிமையுண்டாகு மென்பது நிச்சயம். ஆதலால் இத்தகைய மசோதா ஒன்று சென்னைச் சட்ட சபையில் வரப்போகிறது என்று தெரிந்த உடனேயே, நமது நாட்டு வைதீகர்கள் அதைக் கண்டனம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இந்த மசோதாவைச் சட்ட சபையில் கொண்டு வர அனுமதியளிக்கக் கூடாது என்று மேன்மை தங்கிய வைசிராய், கவர்னர் முதலியவர்களுக்கு தந்திகளும் தீர்மானங்களும் அனுப்பியிருக்கிறார்கள். இன்னும் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் பல பொதுக் கூட்டங்கள் என்னும் பெயரால் வைதீகர்கள் இம் மசோதாவைக் கண்டித்துக் கொண்டு வருகிறார்கள். தீண்டாதார்களுக்கு ஆலயப் பிரவேசம் அளிப்பது சாஸ்திரங்களுக்கு விரோதம்; மதத்திற்கு விரோதம்; பழக்க வழக்கங்களுக்கு விரோதம்; ஆகையால் தீண்டாதார்க்குக் கோயில் பிரவேசம் அளிக்கும்படியான சட்டஞ் செய்யக் கூடாது என்று கூச்சலிடுகின்றனர். இக்கூச்சலைச் சட்ட சபை உறுப்பினர்களும், அரசாங்கத் தார்களும் ஒரு சிறிதும் லட்சியம் பண்ணாமல், டாக்டர் சுப்பராயன் அவர் களின் மசோதாவைச் சிறந்த திருத்தங்களுடன் சட்டமாகச் செய்ய ஆதர வளிக்க வேண்டுகிறோம். வெகு காலமாக நமது நாட்டில் கோயில் பிரவேசத் திற்குத் தடை செய்து கொண்டிருந்த சமூகம் பார்ப்பன சமூகம் ஒன்றேயாகும். இன்று அச்சமூகத்திலும், பகுத்தறியும் மூளையற்ற – சாத்திரப்பித்தும், சுயநலப் பித்தும் கொண்ட வைதீகர்களே கோயில் பிரவேசத்திற்குத்தடை கூறிக் கொண்டிருக்கின்றவர்கள். ஆதலால். மற்ற சமூகங்களின் ஜனத் தொகையை விட, மிகக் குறைந்த ஜனத் தொகையையுடைய ஒரு சமூகத் திலுள்ள சில எண்ணிக்கையையுடைய வைதீகர்களின் கூச்சலுக்கோ, தடைக்கோ பயந்து சென்னைச் சட்ட சபையானது இம்மசோதாவை நிராகரிக் குமாயின் அதை விட பேடித் தன்மையான செயல் வேறொன்றும் இருக்க முடியாது என்பதை முன்னெச்சரிக்கையாகவே கூறிவிட விரும்புகிறோம்.

இச்சமயம், "தீண்டாதார்களின் ஆலயப் பிரவேசத்திற்குப் பொது ஜனங்கள் விரோதமாக இருக்கிறார்கள்" என்னும் சாக்குச் சொல்ல முடியாது.



இந்தியா முழுவதும், சுதேச சமஸ்தானங்களிலும் கூட, தீண்டாதார்க்கு ஆலயப்பிரவேச உரிமையும், மற்றும் இந்துக்களுடன் சம உரிமையும் இருக்க வேண்டும் என்னும் கொள்கையை ஆதரித்து வருகிறார்கள். பொது ஜனங் களின் அபிப்பிராயம் அவர்கள் சமத்துவ உரிமைக்குச் சாதகமாகவே திரும்பி இருக்கிறது என்பதை நாட்டில் ஒவ்வொரு நாளும் நடந்து கொண்டு வரும் நிகழ்ச்சிகளைக் காண்போர் தெரிந்து கொள்ளலாம். ஆதலால் அரசாங்கத் தாரும், சட்டசபை உறுப்பினர்களும் இச்சந்தர்ப்பத்தைக் கை நழுவ விடாம லிருக்க வேண்டும். இச்சந்தர்ப்பத்தைக் கை நழுவ விட்டு விடுவார்களானால், அவர்கள் பொதுஜன அபிப்பிராயத்தை அலட்சியம் செய்தவர்களாகவும், பொது ஜன நம்பிக்கைக்குச் சிறிதும் தகுதியில்லாதவர்களாகவும், ஆகிவிடு வார்களென்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

டாக்டர் சுப்பராயன் கட்சியினரும், ஜஸ்டிஸ் கட்சியினரும் அரசாங்கத் தாரும், உண்மையிலேயே எல்லாச் சமூகங்களும் ஒற்றுமையடைய வேண்டும் என நினைப்பார்களாயின் "இந்து மத ஆலயங்களில் எல்லோரும் அதாவது எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் செல்லலாம்" என்பதாகச் சட்டம் செய்ய வேண்டும்.

இப்பொழுது திரு. சுப்பராயன் அவர்களால் கொண்டு வரப்போகும் மசோதாவில் "இந்துக்களாக இருக்கும் எல்லா வகுப்பினரும் மட்டும் தான் இந்து மத ஆலயங்களுக்குள் செல்ல உரிமை இருக்க வேண்டும்" என்று கோருவதாகத் தெரிகிறது. ஆகையினால் இதை நாம் மேலே கூறியவாறு திருத்தி அமைக்க முயல வேண்டுகிறோம். இவ்வாறு செய்வது எவ்வகை யிலும் குற்றமாகாது. இன்று முஸ்லிம்களுடைய மசூதிகளில் முஸ்லிம்கள் அல்லாதவர்களும் சென்று தொழுவதற்கு உரிமையுண்டு. முஸ்லிம்கள் அந்நிய மதத்தினரைத் தங்கள் மசூதிக்குள் வரக் கூடாது என்று தடுப்பதாகத் தெரியவில்லை. அது போலவே கிறிஸ்துவர்களுடைய கோயில்களிலும் யாரும் சென்று வணங்கலாம். அங்கு நடக்கும் "ஜபத்தில்" கலந்து கொள்ள லாம். கிறிஸ்துவர்களும் அந்நிய மதத்தினர் தங்கள் கோயில்களுக்குள் வரக் கூடாது என்று தடை செய்வதில்லை. இது போலவே புத்தர் கோயில்களிலும் எந்த மதத்தினர்களும் தாராளமாகச் செல்லலாம் இம்மாதிரியே இந்து மதக் கோயில்களுக்குள்ளும் எல்லா மதத்தினரும், ஜாதி வித்தியாசம் இல்லாமல் செல்லுவதற்கு உரிமையளிப்பதால் என்ன முழுகிப் போய்விடும்? என்று கேட்கிறோம். இவ்வாறு செய்வதனால் பல மதத்தினர்க்குள்ளும் சமத்துவம் உண்டாவதற்கும் வழியாகும். ஆகையால் இம்முறையில் மசோதாவைத் திருத்தியமைத்து நிறைவேற்றச் சென்னைச் சட்டசபை தைரியமாக முன் வருமா? என்று தான் நாம் கேட்கிறோம்.

சென்னைச் சட்டசபையில் இத்தகைய மசோதா சட்டமாக நிறைவேறு மானால், இது இந்தியாவுக்கே ஒரு வழிகாட்டியாக இருக்கும். சென்னைச் சட்டசபைக்கும், இப்பொழுது சென்னைச் சட்டசபையிலிருக்கும், ஜஸ்டிஸ்



RangaRakes tamilnavarasam.com

கட்சிக்கும், ஐக்கிய தேசீயக் கட்சிக்கும் என்றென்றும் அழியாத புகழும் உண்டு. இதற்கு மாறாக இம்மசோதாவைக் கொலை செய்து விடுவார்களாயின், இக்கொலைக்குக் காரணமாக இருந்த கட்சியினர்களுக்கும் தனிப்பட்ட உறுப்பினர்களுக்கும் என்றென்றும் அழியாத வசையே உண்டாகும் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

இனி, இவ்வாலயப் பிரவேச விஷயத்தில், நமக்கு இவ்வளவு அக்கரை இருப்பதற்குக் காரணம் என்னவென்பது நம் தோழர்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமாகும். "எல்லோரும் கோயில்களில் சென்று வணங்கவேண்டும், அங்கு தெய்வமிருக்கிறது; அல்லது கடவுளிருக்கிறது" என்னும் நோக்கத்துடன் நாம் கோயில் பிரவேசத்தை ஆதரிக்கவில்லை. கோயில்களும் தேசத்தின் பொதுச்சொத்து என்ற முறையில் வணங்குவதற்கோ, அல்லது வேடிக்கை பார்ப்பதற்கோ, அல்லது சும்மாவோ, அவைகளுக்குள் நுழையக் கூடிய உரிமை தேசமக்கள் அனைவருக்கும் இருக்க வேண்டும் என்னும் எண்ணத்துடனேயே நாம் கோயில் பிரவேசத்தை முழுமனதுடன் ஆதரிக்கின்றோம். இதற்காகச் சட்டஞ்செய்யப்படும் முயற்சியையும் வரவேற்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 30.10.1932**



# கொழும்பில் ஈ.வெ. இராமசாமி

தமிழ் நாட்டில் நான் செய்துள்ள சிறிய தொண்டை முன்னிட்டும் எமது மேல் நாட்டு பிராயணத்தை முன்னிட்டும் எம்மை உபசரிக்கும் நோக்கமாகச் செய்த வந்தனோபசாரங்களுக்கு நான் எனது உண்மையான நன்றியறிதலை செலுத்துகிறேன். நீங்கள் என்னை அதிகம் புகழ்ந்து விட்டீர்கள். இருந்தும் எனது கொள்கையை நீங்கள் பூரணமாக ஒப்புக் கொள்ளுகிறீர்கள் என்று இதனால் எனக்குத் தோன்றுகிறது.

இன்று உலகத்தில் விடுதலையின் பேரால், சுதந்திரத்தின்பேரால் எவ்வளவு அக்கிரமங்கள் நடக்கின்றன. மதாபிமானம், தேசாபிமானம், கடவுளபிமானம் என்ற பேரால் எத்தனை பேர் வயிறு பிழைக்கின்றனர். லக்ஷக் கணக்கான நமது சகோதரர், உடன் பிறந்தார், ஊணுடையின்றிக் கஷ்டப்பட்டுச் சாகின்ற இந்நாட்களில் அவர்களுடைய இன்னல்களை நீக்க வழி தேடுவதை விட்டுக் கடவுளைப் பற்றி பேசி என்ன பயன்?

நாம் ஆலோசனைக்காரார். அதுவே நமது கொள்கை; அதுவே சுயமரியாதைக் கட்சியின் அடிப்படையான கொள்கை. நமக்குத் தோன்றுகிற எண்ணங்களை ஆலோசித்து அலசிப் பார்க்க வேண்டும். அதற்குப் பயப்படக் கூடாது. எனக்குக் கடவுளைப் பற்றியே கவலையில்லை. உலகத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அதுபோல் கடவுளும் ஒருவர் இருக்கட்டும். அதுபற்றி என்ன விசாரம்? ஆனால் நாள்முழுதும் பாடுபட்டும், வேலை செய்தும் குடிக்கக் கஞ்சிக்கு வழியில்லாது அலையும் நம் சகோதரர்களை திரும்பிப் பார் என்றால் நமது மதப்பிரசாரகர்கள் கடவுளைப் பார் என்கின்றார்கள்.

**மக்கள் கஷ்டத்தினின்றும் விடுதலையடைய வேண்டும். இதற்குச் சம்மதமான கடவுள் இருக்கட்டும் மற்றக் கடவுள்கள் வேண்டாம். இவ்வளவுதான் நாம் சொல்வது.**

**மக்கள் கஷ்டங்களை நிவர்த்தி பண்ண முடியாத தேசபிமானம் வேண்டாம். தேசாபிமானம் நாளைக்கு; இன்றைக்கு வயிற்றுச் சோற்றுக்கு.**



RangaRakes
tamilnavarasam.com

விஷயங்களைப் பரிசோதனைசெய்து பாருங்கள். பார்த்து அதற் கேற்றவாறு நடவுங்கள். உள்ளதை உள்ளவாறே நோக்குங்கள்.

நான் மனிதன். என் அறிவைக் கொண்டு விஷயங்களைத் தேடி இம்முடிவுக்கு வந்தேன். ஒன்றையும் வெறுக்க வேண்டாம். ஒன்றையும் மறுக்கவும் வேண்டாம். அவர் சொல்லிவிட்டார், இவர் சொல்லிவிட்டார் என்று ஒன்றையுஞ் செய்யாதேயுங்கள், இன்னொருவனுக்கு அடிமையாய் உங்கள் மனச் சாட்சியை விற்றுவிட வேண்டாம். எதையும் அலசிப்பாருங்கள். ஆராயுங்கள். எண்ணங்களை அடக்கி ஆண்ட காலம் மலையேறி விட்டது. சுயஅறிவுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டிய காலம் இது.

நாம் எண்ண வேண்டியது, ஆராய வேண்டியதெல்லாம் முன்னேயே எமது ஆன்றோரால் ஆய்விட்டது என்று நீங்கள் கொள்ள வேண்டாம். நான் சொல்லுவது முற்றும் சரியென்றும் நீங்கள் கொள்ள வேண்டாம். எதையும் ஆராய்ந்து உண்மை தேறிக்கொள்ளுங்கள்.

எனக்கு மதாபிமானம் இல்லையென்று நீங்கள் கருத வேண்டாம். 25 வருட காலமாக நான் ஒரு கோவிலில் தர்மகர்த்தாவாகவிருந்து, அக் கோயிலின் கிரமங்களையெல்லாம் ஒழுங்காக நடத்தி வந்தேன். எனக்கு தேசாபிமானம் இல்லையென்றும் நீங்கள் சொல்லவேண்டாம். 1 தடவைக்கு 3, 4 தடவை தேசீய விஷயமாக ஜெயிலுக்குஞ் சென்றேன். ஆனால் இந்த அபிமானமெல்லாம் நம் ஏழைச் சகோதரருக்கு விமோசனம் கொண்டுவராது. ஆதலால் தான் அபிமானமொன்றும் நமக்கு வேண்டாம். மனுஷாபிமானமே வேண்டுமென்று ஜனங்களுக்கு நான் எனக்குத் தோன்றிய வரை போதிக்கத் தலைப் பட்டேன். சோம்பேறி ஞானமும் மதாபிமானமும் பசி கொண்ட மகனுக்கு அவன் பசியைத் தீர்க்குமா? எண்ணத்துக்குச் சுதந்திரம் கொடுங்கள். மனுஷாபிமானத்தையும் சுயமரியாதையையும் காப்பாற்றுங்கள். ஏழைகளின் கஷ்டத்திற்கு நிவாரணந் தேடுங்கள்.

*குறிப்பு : 23-10-1932 ஆம் நாள் கொழும்பு மருதானை எல்பின்ஸ்டோன் காட்சி சாலையில் மலையாளி சுயாபிமானிச் சங்கத்தாராலும் கொழும்பு சுயமரியாதைச் சங்கத்தாராலும் அளிக்கப்பட்ட வரவேற்பு பத்திரம் அளிக்கப்பட்ட கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 30.10.1932**



# கொழும்பில் ஈ. வெ. இராமசாமி

"நான் சாதாரண மனிதனில் ஒருவராக வாழ்ந்து வருகிறேன். யாவரும் என் அபிப்பிராயப்படி நடக்க வேண்டுமென்று திரு. சாரநாதன் கூறினார். அது என் கொள்கைக்கு முற்றிலும் மாறானது. நீங்கள் கேட்டு நீங்களே சிந்தித்து நன்மையானதைச் செய்ய வேண்டுமேயல்லாமல் ஒருவர் கூறுகிறபடி செய்யக்கூடாது. மனிதர்கள் சுய அறிவில் நம்பிக்கை வைக்கவேண்டும். விஷயங்களை நன்றாய் அலசிப் பார்க்க வேண்டும். 100-க்கு 99பேர் ஒப்புக் கொண்டாலும் நீங்கள் அலசிப் பார்த்தே அறிய வேண்டும். உலகத் திலுள்ள சகல தேசங்களிலும் தலைவர்களின் கட்டளைப்படி நடந்தவர்கள் கஷ்டத் திலாழ்ந்து வருகிறார்கள். நடுநிலைமையிலிருந்து விஷயங்களை கிரகிக்க வேண்டும். என்னில் கடவுளிருக்கிறாரென்று நான் கூறவில்லை. நான் கூறும் விஷயங்களை ஆலோசித்துப் பாருங்கள். சகாயத்தைப் பெறுவதற்காகவோ, வேறு சுயநலம் காரணமாகவோ நான் இங்கு வந்திருக்கவில்லை.

நாட்டிலே மக்களிடை பல நிலைமைகளைக் காண்கிறோம். ஒரு கூட்டத்தார் கஷ்டப்படுகிறார்கள், ஒரு கூட்டத்தார் இன்புற்று சுக போகங் களை அனுபவித்து வருகிறார்கள். உலகப் பரப்பில் இந்த வித்தியாச மிருக்கிறது. தேசம், மதம், ஜாதி, பாஷை முதலானவற்றின் பேரால் சரித்திர கால முதல் மக்கள் கஷ்டமடைந்து வருகிறார்கள். அவதார புருஷர்களும், தலைவர்களும் கூறின விஷயங்களை அவர்கள் பின்பற்றி வந்தார்கள். ஆதியில் மனிதர் ஒழிக்க விரும்பின காரியங்கள் இன்று வரை ஒழிக்கப் படவில்லை. அவதார காலங்களிலும் அன்னியராட்சியில்லாத காலங்களிலும் இதே கஷ்டம் நிலவி வந்தது. அதை மாற்றும் காரணத்தை மனிதர் உணர வில்லை. ஆதி முதல் நாம் எடுத்துக் கொண்ட நோக்கம் தீர்ந்த பாடில்லை. ஆகையால் புதிய முறைகளைக் கண்டுபிடிக்க நடுநிலைமை வகித்துச் சிந்திக்க வேண்டும்.

நம்முடைய நாட்டில் பறையனென்றும் பார்ப்பானென்றும், நிழல் படக் கூடாதென்றும் ஒரு பகுதி துவேஷம் வைத்து வருகிறது. பார்ப்பனரைப் பூதேவரென்றும், உயர்ந்த ஜாதியென்றும் சரித்திர காலம் முதல் கருதி வருகிறார்கள். காரணம் மனித சமூக பந்தத்திலில்லாததே உனக்கும் எனக்கும்



RangaRakes tamilnavarasam.com

என்ன வித்தியாசமென்று கேட்டால் மதவிரோதமென்றும், நாஸ்திகமென்றும் கூறப்படுகிறது. இந்த அக்கிரமங்களை அழிக்க முற்படுகிறவன் தேசத் துரோகியென்றும், மதத் துரோகியென்றும் கருதப்படுகிறான். மனுதர்ம சாஸ்திரங்களையும் வேதங்களையும், ஆதாரமாகக் காட்டி கடவுள் சிருஷ்டி, பகவான் செயல், பகவான் வாக்கென்றும் கூறுகிறார்கள். அவற்றை குழி தோண்டிப் புதைக்க நீங்கள் தயாராயிருந்தால் மட்டும் வெற்றி பெற்று விளங்கலாம். தேசாபிமானி உயர்வு தாழ்வை ஒப்புக் கொள்வானாகில் அவனுடைய தேசாபிமானம் நமக்குவேண்டாம்.

ஒருவனுக்கு பைத்தியம் பிடித்திருந்தாலொழிய கடவுளையும் தேசத் தலைவர்களையும், குறை கூற முன்வரமாட்டான். அவன் உண்மைத் தொண்டின் காரணமாகவே குறை கூறுகிறான். மக்களை ஏமாற்றி பிழைத்து வருபவர்கள் தங்கள் நிலைமையை பலப்படுத்த பகவான் கட்டளை என்று முடிச்சு போட்டு வைத்திருக்கிறார்கள். அக்காலத்தில் மனிதர்கள் சோம்பேறி களாயிருந்த படியால் ஆக்ஷேபமின்றி அதற்கு கட்டுப்பட்டிருந்தார்கள். அடிமைத்தன அஸ்திபாரம் வலுத்தவுடன் ஜனங்கள் பகுத்தறிவால் அலசிப் பார்க்க முன்வந்தார்கள். முன்ஜன்மத்தைப் பற்றி இப்பொழுது நினைப் பாரில்லை. அவர்கள் வேதங்களையும், சாஸ்திரங்களையும் மதத்தோடு சேர்த்துத் தீக்கொளுத்தவும் குழி தோண்டிப் புதைக்கவும் முன் வந்திருக் கிறார்கள். சமஉரிமையை ஒப்புக் கொள்ளாதவர்களின் அபாரமான ஆதாரங்கள் குழிதோண்டிப் புதைக்கப்படவேண்டும். ஏழைகள் பட்டினி கிடக்கும் பொழுது ஆஸ்திமான்கள் சுகபோகமாக வாழ்ந்திருக்க முடியாது. **பொறுமை, அடுத்த ஜென்மம், மோட்சம் முதலான போதனைகளெல் லாம்போதும், இறந்து பிறகுதான் பொறுமையின் பலன் கிடைக்கும்.** பொறுமையைப் போதிக்கும் தரகர்கள்வேண்டாம். ஒற்றுமை ஏற்பட்டால் என்ன நேரிடுமோயென்று பயந்தவர்கள் தேசாபிமானம், மதாபிமானமென்று பறை சாற்றி வருகிறார்கள். வெறுப்பையும் பொறாமையுமேற்படுத்தும் மதங்கள் தான் தோன்றின. கீழ் நாட்டின் கஷ்டங்களே மேல் நாட்டிலு மிருக்கின்றன. ஆங்கு மதச் சட்டம் முதலானவையிருப்பதால் கஷ்டப் படுவோர் இருக்கிறார்கள். மாளிகையில் வசிப்போரும் இருக்கிறார்கள். அரசனில்லாத குடியாட்சி நடைபெறும் தேசத்திலும் இதே கஷ்டங்களி ருக்கின்றன. முதலாளிகளிருக் கின்றார்கள். பாதிரிமார்களும் பிரசாரம் செய்து வருகிறார்கள் என்றாலும் மதக் கோட்பாடுகளை வெறுத்தே வருகிறார்கள்.

நம் மக்களின் விடுதலையைக் கருதுவோர் உண்மையோடு நடுநிலை மையில் விஷயங்களை ஆலோசிக்க வேண்டும். அடக்குமுறைகளும் பழிப்புகளுமேற்படலாம் பயந்தவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. நம்பிக்கையும் தியாகம் செய்யும் குணமுமிருந்தால் மட்டும் வெற்றி பெறலாம். நாஸ்திகனென்று பழித்தால் பழிப்போரின் அபிப்பிராயம் அவர்களோ டிருக்கட்டும். ஆக்ஷேபங்களைப் பொருட்படுத்த வேண்டாம். நம்முடைய



சொந்த அபிப்பிராயத்தைக் கடைபிடிக்காதவர்கள் மூடர்களாயிருந்து வந்தார்கள். சில ஜாதியார் படிப்பதை பாவச் செயலாகக் கருதி வந்தார்கள். படிக்க சிலர்க்கு சந்தர்ப்பமேற்படவில்லை. கல்வியறிவில்லாதவர்களை தந்திரக்காரர்கள் ஏமாற்றி வந்தார்கள். பாமரமக்களின் அபிப்பிராயத்தைத் தகர்க்க முயற்சிகளெடுக்கப்பட்டாலும் நாம் பொறுமையை இழக்காமல் நம் காரியத்தில் கண்ணாயிருக்க வேண்டும்.

மதங்களின் பேராலும் சடங்குகளின் பேராலும் மக்கள் எத்தகைய இன்னல்களையடைந்து வருகிறார்கள். கோவில்களுக்கும் உற்சவங்களுக்கும் கோவில் சொத்துக்களுக்கும் எவ்வளவு பொருள் வீணில் விரையம் செய்யப்பட்டு வருகின்றது. திருப்பதியில் வருஷம் 20லட்சம் ரூபாய் காணிக்கை கிடைக்கிறது. காணிக்கை கொடுப்போர் பிரயாணம் செய்து வரும் செலவைப் பாருங்கள். அக்கோவிலுக்கு இரண்டு கோடி ரூபாய் சொத்திருக் கிறது. அரைவட்டி போட்டுப்பார்த்தால் எத்தனை லட்சம் கிடைக்கும். கடவுளுக்காக பட்டை நாமத்தோடு பிச்சையெடுத்த பணம் யார் வயிற்றில் விழுகிறது? கணக்குப் பார்த்தால் பாவமாம். காணிக்கை கொடுத்தவனிலும் அச்சொத்தை அனுபவித்து வருகிறவர்களிலும் ஏதாவது மாறுதலேற்பட்டு வருகிறதா? ஒரு ரூபாய் வட்டியில் சேர்த்து 5000 ரூபாய் காணிக்கை கொடுத்தவன் அடுத்த வருஷத்தில் ஒன்றரை ரூபாய் வட்டி வசூலிக்கிறான். **கஷ்டத்தை அதிகரிக்கவே கடவுள் உணர்ச்சி மனிதரிலேற்பட்டு வரு கிறது.** இதைப்பற்றி சுய அபிப்பிராயங்களைத் தெரிவித்தால் நாஸ்திகமாம். தென்னாட்டில் ஜில்லாவுக்கொரு பெரிய உபத்திரவம் (ஆலயம்) இருந்து வருகிறது. பிழைப்பிற்காக அயல் நாடுகளுக்குச் சென்றால் அந்நாடுகளில் அவர்களுக்கு முன் சுவாமிகள் சென்று விடுகிறார்கள். இந்தியாவில் 35 கோடியில் தாழ்த்தப்பட்டோர் நீங்கலாக 16 கோடி உயர் ஜாதி இந்துக்களிருக் கிறார்கள். நபரொன்றுக்கு இரண்டு கடவுளைக் கும்பிடுவோர் ஏழை ஜனங் களை அயல் நாடுகளுக்குத் துரத்தி வருகிறார்கள். நம் புத்திக் கெட்டின நன்மையான காரியத்தைச்செய்ய வேண்டுமானால் மூடப்பயம் ஒழிய வேண்டும். சுயமரியாதையின் நோக்கம் இதுவே. சாமிகளுடைய சுய மரியாதையற்றத் தன்மையை நாம் அறிந்து வருகிறோம். **தேசபக்தியும் கடவுள் பக்தியும் மதபக்தியுமில்லாத தேசத்தில் மட்டும் வேலையில்லாது கஷ்டப்படும் மக்களிருக்க மாட்டார்கள். அங்கு கொடுமைக்காரரும் ஆஸ்திமான்களுமில்லை. இதை எந்த இடத்திலும் கூறத்தயாராய் இருக்கிறேன்.** நான் கூறுவது தப்பிதமாய்த் தோன்றினால் பைத்தியக்காரனின் கூற்றாக நினைத்துக் கொள்ளுங்கள்."

*குறிப்பு : 23-10-1932 இல் கொழும்பு கால்பேஸ் மைதானத்தில் சுயமரியாதைச் சங்கத்தார் ஆதரவில் மாலையில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 30.10.1932**



RangaRakes tamilnavarasam.com

# கடவுளைப் பற்றி நினைக்க முடியா தொழில் முயற்சி

## மேல் நாட்டினர் முற்போக்கு

“நான் ஓர் நாஸ்திகனல்ல, தாராள எண்ண முடையோன். நான் ஒரு தேசீயவாதியுமல்ல, தேசாபிமானியுமல்ல. ஆனால் தீவிர ஜீவரக்ஷா எண்ண முடையவன். எனக்கு ஜாதி என்பதோ, ஜாதியென்பதின் பேரால் கற்பிக்கப் படும் உயர்வு தாழ்வுகளோ கிடையாது. அத்தகைய எண்ணத்தையே நான் எதிர்ப்பவன். ஆதரிப்பவனல்ல. தாங்கள் மேல் ஜாதியார், உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு, மனிதரது ஜீவாதாரமான உரிமைகளாகிய தெரு வில் நடத்தல், கோவிலுக்குள் செல்லல் முதலியவற்றை மறுத்துக் கொண்டு, ஏனையோர்க்கும் சமத்துவம் வேண்டுமென்று செய்கிற முயற்சியைக் கண்டிக்கிறேன்.”

“காலமெல்லாம் பண்டய பழக்கவழக்கங்களும், மூடக் கொள்கை களும் நிலைத்தே நிற்க வேண்டுமென்றால் ஒரு பறையன் என்று சொல்லப் படுகின்றவனோ, அல்லது சக்கிலி என்று சொல்லப் படுகின்றவனோ, மிருகத்தைவிடக் கேவலமாக நடந்தப்பட்டே வர எப்படி இந்தியா அவன் தாய் நாடு தான் என்று எண்ணமுடியும்? ஒரு பொது சேவைக்கு அவர்களை நம்மோடு ஒத்துழைக்க எதிர்பார்க்க முடியுமா?”

## வேலையில்லாத் திண்டாட்டம்

கஷ்டப்படுகின்ற தொழிலாளிகள் அரசாங்கத்தை நடத்துகின்ற வர்களாயிருக்கவேண்டும். ஜனங்களின் நன்மைக்காக, ஜனங்களாலேயே நடத்தப்படுகின்ற அரசாங்கமாயிருத்தல் வேண்டும். இந்தியாவைப் பற்றி யுள்ள வறுமையை அகற்றக் கூடிய அரசாங்கமாயிருக்க வேண்டும். பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், ஐக்கிய தேசம் முதலியனவெல்லாம் குடியரசு நாடுகளாகவே இருக்கின்றன. ஆனால் எங்கும் வேலையில்லாத் திண்டாட்டமே தலை விரித்து ஆடுகிறது. ரஷ்யா ஒன்றில் மட்டும் வேலை இல்லாத் திண்டாட்டமே கிடையாது. ஒரு சில பிச்சைக்காரர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் வயது சென்றவர்களும், அங்கவீனர்களுமே, அவர்களை அரசாங்கம் போஷிக்கிறது. உண்மையில் அது ஒரு புதிய உலகம் அதுபோல் முன்னொரு





போதும், எந்நாட்டிலும் சீர்திருத்தம் நடந்தேறியதேயில்லை. அந்நாடு தொழி லாளர் மயமாகவே இருக்கிறது. தோட்டி முதல் தொண்டமான் ஈறாக எல் லோரும் அரசாங்கத் தொழிலாளராகவே கருதப்படுகின்றனர் அங்கு எல்லா மனிதரும் சமமாகவே கருதப்படுகின்றனர். மக்களுக்குள் உயர்வு தாழ்வு என்பதே கிடையாது. வியாபாரம், தொழில், வர்த்தகம், கல்வி முதலிய சமூக அபிவிருத்திக்கான தொழில்களெல்லாம் அரசாங்கப் பொறுப்பிலேயே நடைபெற்று வருகின்றன. விவசாயம் ஐக்கிய முறையில் அரசாங்கப் பொறுப்பில் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

“அங்கு சமயமென்பது ஒன்றுமே கிடையாது. ஜனசமூக நன்மையே சமயம். அதுவே சன்மார்க்கம். கிறிஸ்துவ கோயில்களுண்டு. அதற்கு அரசாங் கத்தார் எவ்வித பணஉதவியும் செய்வது கிடையாது. அவர்களுக்கு கடவுளைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ கவலையோ, விசாரமோ கிடையாது.”

“குற்றம் செய்தவர்களை அரசாங்கம் ஒரு நவீன முறையில் தண்டிக் கிறது. அவர்களுக்கு சகல சௌகரியங்களும் செய்து கொடுக்கப்பட்டாலும், அவர்கள் சம்பளத்தில் ஒரு பாகம் அபராதத் தொகையாக பறிமுதல் செய்யப் படுகிறது. பலமுறை குற்றம் செய்தவர்களை சுகாதார நிலயத்திற்கனுப்பி அங்கு அவர்களது மனோ நிலை மாறத்தக்க சிகிச்சைகள் செய்யப்படு கின்றன.”

“பாடசாலைகள் மூலமாயும் சினிமாக்கள் மூலமாயும் இதுவரை கற்றிராத பாமர மக்களுக்கும் தொழிற் முயற்சியை அஸ்திவாரமாகக் கொண்ட கல்வி கற்பிக்கப்படுகிறது. ஒரு மதத்தையும் பின் பற்றாத அரசாங்கம், மத எதிர்ப்பு சங்கத்திற்கு போதிய உதவியளித்து வருகிறது.”

நான் இத்தேசத்தைப் பார்வையிடச் சென்றதின் நோக்கமெல்லாம், அங்குள்ள நிலைமைகளைச் சரிவர அறியவும், அத்தேசத்தைப் பற்றிப் பெருமிதப்படுத்திக் கூறும் கதைகள் உண்மையா வென்று அறியவுமே யாகும். அரசாங்கம் தாம் தேசத்தை புணருத்தாரணம் செய்ய வேண்டுமென்ப திலேயே தீவிர கவனம் செலுத்துவதால் கடவுளைப் பற்றியோ மதத்தைப் பற்றியோ நினைப்பதற்கு அவர்களுக்குநேரமில்லை.”

“எகிப்து நாட்டில் பர்தா( கோஷா) முறை அநேகமாக அழிந்து விட்ட தென்றே சொல்லலாம். சில வயோதிகக் கிழவிகள் மட்டும் அதைவிடவில்லை. எகிப்திய பெண்கள் ஆங்கில மாதரைப் போலவே ஆடை அணிந்து கொள்ளுகிறார்கள். துருக்கி தேசத்தில் அதி தீவிரமான மாறுதல்கள் ஏற்பட் டுள்ளன. சமூகமுன்னேற்றத்தில் துருக்கி மாதர் அதிக பிரயத்தனம் எடுத்து வருகிறார்கள். சமீபத்தில் ஒரு துருக்கி மாது போலீஸ் சூப்பரெண்டாக நியமனம் பெற்றிருக்கிறார்.”

*குறிப்பு : கொழும்பில் 17 – 10 – 32இல் சிலோன் டெய்லி நியூஸ் பத்திரிகை பிரதிநிதியொருவருக்கு பேட்டி கொடுத்துப் பேசியது.*

**குடி அரசு – நேர்காணல் – 30.10.1932**

RangaRakes tamilnavarasam.com

# பரோடாவில் ஆலயப் பிரவேசம்

சுதேச சமஸ்தானங்களில் முற்போக்கான காரியங்களை முதன்மை யாகச் செய்து வரும் சமஸ்தானம் பரோடா சமஸ்தானம் ஒன்றே யென்பதை நாம் கூற வேண்டியதில்லை. அதிலும் தாழ்த்தப்பட்டவர்கள் விஷயத்தில், பரோடா அரசாங்கம் மிகவும் அனுதாபங் கொண்டு அவர்களுக்குப் பல நன்மைகள் செய்து கொண்டு வருகின்றது. தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிள்ளைகளை எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் ஆக்ஷேபனையின்றிச் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனச் சென்ற வருஷத்தில் பரோடா அரசாங் கத்தார் உத்தரவு பிறப்பித்தனர். இவ்வுத்தரவை அகங்காரம் பிடித்த உயர் ஜாதி இந்துக்கள் எவ்வளவோ எதிர்த்தனர்;. பள்ளிக் கூடங்களில் சேரவந்த தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிள்ளைகளுக்கு எவ்வளவோ கஷ்டங்களை உண்டாக்கினார்கள்; தங்கள் பிள்ளைகளை ஜாதி இந்துக்களின் பிள்ளைகள் வாசிக்கும் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பிய தாழ்த்தப்பட்ட வகுப்புக் குடும்பத்தினரின் குடிசைகளை நெருப்புக் கிரையாக்கினர்; அவர்கள் தண்ணீர் எடுக்கும் கிணறுகளில் மண்ணெணெயை ஊற்றிக் குடி தண்ணீ ருக்குத் திண்டாட விட்டனர். இவ்வாறு உயர் ஜாதி இந்துக்கள் தாழ்த்தப் பட்டவர்களுக்குச் சகிக்க முடியாத கொடுமைகளைச் செய்தாலும், அவர்கள் அரசாங்கத்தார் தமக்குக் கொடுத்த சுதந்தரத்தை உபயோகிக்காமல் விட்டு விடவில்லை. அரசாங்கத்தாரும், தாம் பிறப்பித்த உத்தரவை மாற்றாமல், பிடி வாதமாகவே நிறைவேற்றினார்கள். இவ்வகையில் அரசாங்கம் கொண்டிருந்த உறுதியை தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் பால் அனுதாபம் உள்ள எவரும் பாராட்டாமலிருக்க முடியாது.

இப்பொழுது இன்னும் சிறந்த துணிகரமான காரியமாக, தாழ்த்தப் பட்டார் அனைவரும் கோயிலுக்குள் செல்ல உரிமையுண்டு என்றும் உத்தரவு பிறப்பித்ததை நாம் பாராட்டுகிறோம். இதற்கு முன் "போர்" சமஸ்தானத்திலும் இவ்வாறே தாழ்த்தப்பட்ட சமூகத்தார்க்குக் கோயில் பிரவேசம் அளித் திருக்கின்றனர். அதைப் பின்பற்றி பரோடாவும் தைரியத்தோடு வைதீகர் களின் எதிர்ப்பைச் சிறிதும் பொருட்படுத்தாமல் இக்காரியத்தைச் செய்ததைப் பாராட்டுகிறோம்.

இப்பொழுது தான் சென்னைச் சட்டசபையில், "தாழ்த்தப்பட்டவர் களுக்குக் கோயில் பிரவேசம் அளிக்கத்தக்க சட்டத்தை ஏற்படுத்துமாறு





அரசாங்கத்திற்கு சிபார்சு செய்வதாகத்" தீர்மானம் நிறைவேறியிருக்கின்றது. சென்னை அரசாங்கத்தார், இத்தீர்மானத்தை அனுசரித்தும் "பரோடா" "போர்" முதலிய சமஸ்தானங்கள் செய்திருக்கும் உத்தரவுகளைப் பார்த்தும், தாமதமில்லாமல் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கோயில் பிரவேசம் அளிக்கத் தகுந்த சட்டத்தை நிறைவேற்ற முன்வருமா? என்று கேட்கிறோம். சுதேச சமஸ்தானங்கள் இக்காரியத்தைச் செய்த பின்னும், சென்னை மாகாணப் பொது ஜனங்களின் பிரதிநிதியாகிய சட்டசபை இக்காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சிபார்சு செய்த பிறகும் சென்னை அரசாங்கம் மௌனஞ் சாதித்துக் கொண்டு வாளாவிருக்குமாயின் அது நேர்மையும் ஒழுங்கும் ஆகாது என்பதைச் சொல்ல விரும்புகிறோம். அரசாங்கத்தின் நோக்கம் எல்லா வகுப்பினருக்கும் சமத்துவமளிப்பதும், எல்லா வகுப்பினருக்கும் நீதிபுரிவதும் அல்ல வென்று பொது ஜனங்கள் நினைக்கும் படி இருக்கும். ஆகையால் சென்னை அரசாங்கம் சிறிதும் தாமதம் இல்லாமல் "பரோடா" "போர்" முதலிய சமஸ்தானங்கள் செய்தது போலத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கு ஆலயங்களில் சமஉரிமை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறுகின்றோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 06.11.1932**

RangaRakes tamilnavarasam.com

# கத்தோலிக்கப் பெரியார்கள்

சுயமரியாதை இயக்கமும், குடி அரசும், “கடவுள்” என்று சொல்லப் படும் ஒன்றை ஒழிப்பதற்கு என்றோ, அல்லது அது இல்லை யென்று நிலை நாட்டுவதற்கென்றோ அல்லது அது உண்டு யென்று நிலை நாட்டுவதற் கென்றோ தோன்றியவைகள் அல்ல; குறிப்பிட்ட எந்த ஒரு மதத்தின் மீதும் துவேஷம் கொண்டு அதை ஒழிப்பதற்குப் புறப்பட்டவையுமல்ல. ஆனால், ஜாதியின் பேராலோ, அல்லது மதத்தின் பேராலோ அல்லது சாஸ்திரங்களின் பேராலோ மற்ற எதன் பேராலோ ஜன சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் எவ்வித மான உயர்வு தாழ்வுகளையும் ஒழித்து மக்களுக்குள் சமத்துவத்தை உண்டாக் கவே இவ்வியக்கம் ஏற்பட்டதாகும். மனிதர்களை மனிதர்கள் பலவகையான அர்த்தமற்ற காரணங்களைச் சொல்லிப் பரம்பரையாகக் கொடுமைப் படுத்தி வரும் அக்கிரமத்தை - அது எந்த வகையான பரிசுத்தமான பெயரால் நடை பெற்று வந்தாலும் அதை ஒழிக்கவே இவ்வியக்கம் தோன்றியதாகும். இவ் வியக்கத்தின் உண்மைக் கருத்தை உணர்வோர் இதை ஒரு “ஜீவரக்ஷக அறிவியக்கம்” என்று ஒப்புக் கொள்ளாமல் போகமாட்டார்கள்.

ஆனால் மக்களுடைய சமவுரிமைக்கு விரோதமாகவும், அவர்களைக் கொடுமைக்கு உட்படுத்துவதாகவும், அவர்களுடைய அறிவையும், சுதந்திரத் தையும், தடைசெய்வதாகவும் உள்ளவை எவையானாலும், அவை, கடவுளோ, மதமோ, சாஸ்திரமோ, ஜாதியோ, அரசாங்கமோ, மற்று எவையோ அவை களை யெல்லாம் அடியோடு அழிப்பதற்கு இவ்வியக்கம் சிறிதும் பின் வாங்காது.

ஆகையால் இவ்வியக்கத்தைக் கண்டு, மக்கள் அனைவரும் சம வுரிமை பெற வேண்டும் என்று விரும்புகின்ற எவரும் - மனிதர்களின் கையில் அகப்பட்டுப் பரம்பரையாகக் கொடுமையனுபவித்து வருகிற மக்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நினைக்கின்ற எவரும் - ஜாதிக் கொடுமையினின்றும், மதக் கொடுமையினின்றும் மக்கள் விடுபட வேண்டும் என்று விரும்புகின்ற எவரும் - சிறிதும் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. ஆனால், மதத்தினாலோ, ஜாதியினாலோ, மூடச் சடங்குகளினாலோ, சாத்திரங்களினாலோ ஏழை மக்களை அடக்கி வைத்துத் தாமே ஆதிக்கம்



செலுத்த வேண்டும் என்று நினைக்கின்ற வன்னெஞ்சர்கள் அனைவரும் பயப்பட்டுத்தான் ஆக வேண்டும். இத்தகைய வன்னெஞ்சகச் சுயநல பிரியர் களின் ஜீவாதார உரிமைகளை வேரோடு அறுக்க முனைந்து நிற்பதில் சுயமரியாதை இயக்கத்திற்கு ஒப்பாக வேறொன்றையும் கூற முடியாது.

இந்த உண்மையான காரணத்தை உணர்ந்தே, இப்பொழுது இவ் வியக்கத்தைப் பல மதத்தைச் சேர்ந்தவர்களும், பல ஜாதியைச் சேர்ந்த வர்களும், பல கொள்கைகளை உடையவர்களும் ஆதரித்து வருகின்றார்கள். நமது இயக்கத்தில் “கடவுள் இல்லை” என்று சொல்வோரும் இருக்கின்றார்கள் கடவுள் உண்டு என்று சொல்லுவோரும்; நம்புவோரும் இருக்கின்றார்கள். இவ்விஷயம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட அபிப்பிராயமாகும். ஆனால் இயக்கத்திற்குக் கடவுளைப் பற்றிய கவலையே இல்லை.

இந்த நிலையில், இப்பொழுது நமது இயக்கத்தைப் பகிரங்கமாக எதிர்க்கப் புறப்பட்டிருகின்றவர்கள் கத்தோலிக்கக் கிறிஸ்தவப் பாதிரிமார் களேயாவார்கள். இவர்கள் நமது இயக்கத்தைக் கண்டு பயந்து, இப்பொழுது நமது இயக்கத்தையும், குடி அரசையும் எதிர்க்கப் புறப்பட்டிருப்பதன் காரணம் நமக்கு விளங்கவில்லை. ஏழை மக்களைச் சுதந்தரமின்றிக் கட்டுப்படுத்திக் கொடுமைப்படுத்துங் கூட்டத்தார்க்கு நமது இயக்கமும், குடி அரசும் விரோத மாகத்தான் காணப்படும் என்ற உண்மையை வைத்துப் பார்க்கும் போது, இந்த கத்தோலிக்க மதப் பாதிரிமார்கள் சுயமரியாதை இயக்கத்தின் விரோதத்திற்கு இலக்கானவர்களா யிருக்கலாமோ என்ற சந்தேகம் தோன்றுவது இயல்பே யாகும்.

கத்தோலிக்க மதத்திலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்புக் கிறிஸ்தவர்களின் நிலையை எடுத்துக் கொண்டால், அவர்கள் படும் கஷ்டத்திற்கும், இந்து மதத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்கள் படும் கஷ்டத்திற்கும் ஒன்றும் வித்தியாசமில்லை என்றே சொல்லலாம். தாழ்த்தப்பட்டட சமூகத்தைச் சேர்ந்த கிறிஸ்துவர்களுக்கு உயர்குலக் கிறிஸ்துவர்கள் செல்லும் மாதா கோயில் களுக்குட் சென்று அவர்களுடன் சமமாக இருந்து வணங்குவதற்கு உரிமை யில்லை. கிறிஸ்து மத சம்பந்தமாக வைக்கப்பட்டிருக்கும் கலாசாலைகளிலும் சாப்பாட்டு விடுதிகளிலும், உயர்குலக் கிறிஸ்துவர்களுக்குச் செய்து கொடுக்கப்படும் சௌகரியங்கள் தாழ்த்தப்பட்ட சமூக கிறிஸ்தவர்களுக்குச் செய்து கொடுக்கப்படுவதில்லை; இன்னும் இவை போன்ற பல புகார்கள் நீண்ட நாட்களாக இருந்து வருகின்றன. ஆனால் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த கிறிஸ்துவர் வீடுகளில் நடைபெறும் நன்மை தீமை ஆகிய விசேஷங்களில் பாதிரி மார்களுக்கும் கோயில்களுக்கும் சேர வேண்டிய பொருளை மாத்திரம் வாங்குவதில் தவறுவதில்லை. இவ்விஷயங்களெல்லாம் தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவர்கள் மகாநாடுகளின் மூலம் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன.



RangaRakes tamilnavarasam.com

இக்காரணங்களால் இப்பொழுது கிறிஸ்துவர்களில் பலர் பாதிரிமார் களைப் பகிஷ்கரித்துச் சுயமரியாதை முறைப்படி கல்யாணம் முதலிய காரியங் களைத் தாங்களே செய்து கொள்ளத் தொடங்கி விட்டார்கள். இம்முறையில் திருச்சி ஜில்லாவில் மாத்திரம் சுமார் 150 கல்யாணங்கள் வரையிலும் பாதிரிமார்களை நீக்கி நடைபெற்றிருக்கின்றன என்று தெரிகின்றது. இதற்கு ஒரு வகையில் சுயமரியாதை இயக்கமும் குடி அரசும் காரணமாகும் என்பதை அவர்கள் நன்றாய் அறிந்திருக்கிறார்கள். இக்காரணத்தால் தான் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தை எதிர்க்கப் புறப்பட்டிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

அவர்கள், இவ்வியக்கத்தால், தமது மதத்தில் கட்டுண்டு, தமது சொற்களுக்கு அடங்கி நடந்து கொண்டு வரும் பாமர மக்கள் அனைவரும் விழிப்படைந்து விடுவார்கள் என்பதை அறிந்து கொண்டு, தமது முழு அதிகாரத்தையும் செலுத்திக் கத்தோலிக்கக் கிறிஸ்துவர்கள் மத்தியில் சுயமரியாதை இயக்கத்தை பரவாமல் தடுக்க முயலுகிறார்கள். சமீபத்தில் கோயம்புத்தூர் ஜில்லாவில் உள்ள கத்தோலிக்கர்களுக்கெல்லாம், அந்த மதகுருவாகிய "மேற்றிராணியார்" என்பவர் "குடி அரசிலும், சுயமரியாதை இயக்கத்திலும் யாரும் சம்பந்தம் வைத்துக் கொள்ளக் கூடாது, "குடி அரசு" வரவழைத்துப் படிப்பவர்கள் 15 நாட்களுக்குள் அதை நிறுத்தி விட வேண்டும்" என்று ஒரு சுற்றுத் தரவு அனுப்பி, 15 நாட்களில் குடி அரசை நிறுத்தாதவர்களை ஜாதிப்பிரஷ்டம் செய்து விட்டதாகக் கூறப்படுகிறது.

சென்ற 30. 10. 32 - இல் திருச்சியில் நடந்த கத்தோலிக்க வாலிபர் மகாநாட்டில், சுயமரியாதை இயக்கத்தைக் கண்டிப்பதாகவும், வாசக சாலை களிலும் பொதுமேடைகளிலும், பத்திரிகைகளிலும் இவ்வியக்கத்தை எதிர்த்துப் பிரசாரம் பண்ணவேண்டும் என்றும் தீர்மானித்திருக்கின்றார்கள்.

இவ்வாறு பாதிரிமார்களும் அவர்களுடைய பக்தர்கள் சிலரும் செய்யும் வீண் மிரட்டலைக் கண்டு நமது இயக்கமோ, குடி அரசோ சிறிதும் அஞ்சப் போவதில்லை. ஆனால் ஜன சமூகத்திற்கு நன்மையை உண்டாக்கு வதற்கெனத் தோன்றிய இவ்வியக்கத்தைக் கண்டு நடுங்கும் கத்தோலிக்க குருமார்களுக்கும், அவர்களுடைய சீடர்களுக்கும் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகின்றோம்.

கத்தோலிக்க மதத்தில் உள்ள மக்கள், கத்தோலிக்க குருமார்களைப் பகிஷ்கரிக்க ஆரம்பித்திருப்பதற்கும், பாதிரிமார்களின் கட்டுப்பாடுகளை மீற ஆரம்பித்திருப்பதற்கும், சுயமரியாதை இயக்கமே முழுதும் காரணமல்ல; மதத்தினாலும், மத குருமார்களின் நடத்தைகளாலும், கட்டுப்பாடுகளாலும், அந்த மக்களுக்கு உண்டாகி இருக்கும் கஷ்டமே காரணமாகும். ஆகையால் மக்களின் சௌகரியத்திற்கு ஏற்றபடி மதக்கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதும் மதக் கொள்கைகளைத் திருத்தி அமைப்பதுமே மக்களைத் திருப்திப்படுத்தக்



கூடிய செய்கைகளாகும். இதை விட்டு, மக்களுடைய அறிவையும், சுதந்தரத் தையும், சமத்துவத்தையும் வளர்க்க முன் வந்துள்ள சுயமரியாதை இயக்கத்தை ஒழித்து விடுவதென்றால் அது ஒருக்காலும் முடியாத காரியம்.

மத குருமார்கள் சொல்லுவதையெல்லாம் உண்மையென்று நம்பி அவர்களுக்கு அடிமையாக இருக்கும் காலம் மறைந்து வருகிறது. மக்கள் வரவர அறிவு வளர்ச்சி பெற்று வருகின்றனர். "நாமும் மனிதர்" என்ற உணர்ச்சி எல்லா மனிதர்களிடமும் உண்டாகிக் கொண்டு வருகிறது. ஜாதி வித்தியாசங்கள் எல்லாம் பெயரளவில் இருந்தாலும், சில அறிவில்லாதவர்கள் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தாலும், உண்மையில் அது தானா கவே அழிந்து கொண்டே வருகிறது.

மதங்களும், தற்பொழுது புரோகிதக் கூட்டத்தாரின் வயிற்றுப் பிழைப்புக்காக மாத்திரம் அவர்களால் இருப்பதாகச் சொல்லப்பட்டு வரு கின்றதே ஒழிய, பொது ஜனங்கள் அவற்றைச் சிறிதும் லட்சியம் பண்ணுவ தில்லை. பெயரளவில் மதங்கள் உலவி வருகின்றனவேயொழிய உண்மையில் அவைகள் இல்லவேயில்லை; மதக்கட்டளைகளும், மதசாஸ்திரங்களும் பாமர மக்களை ஏமாற்றுவதற்காக மத குருமார்களால் வாயளவில் சொல்லவும் படிக்கவும் மாத்திரம் உபயோகப் படுகின்றனவேயன்றி, அவைகளின் படி நடப்பவர்கள் யாருமில்லை; அவைகள் தாமாகவே அழிந்து கொண்டுதான் வருகின்றன. இன்னும் ஜன சமூகங்களின் பழக்க வழக்கங்களிலும், அதிதீவிரமாக மாறுதல் அடைந்து கொண்டே வருகின்றன. இந்த மாறுதல் களை இனி எவராலும் தடுக்க முடியாது. இன்னும் சில ஆண்டுகளில் இம் மாறுதல் காரணமாக, மதங்களும், ஜாதிகளும், சடங்குகளும் புரோகிதக் கூட்டங்களும் கட்டாயம் அடியோடு அழிந்தே போகும். இந்த மாறுதலை ஒட்டியே சுயமரியாதை இயக்கமும் சீர்திருத்தம் செய்ய உழைத்து வருகிறது. ஆகையால் இவ்வியக்கத்தை அடக்கி விடலாம் எனக் கனவு காண்பதில் ஒன்றும் அர்த்தமில்லை என்று கூற விரும்புகின்றோம்.

சுயமரியாதை இயக்கத்தை எதிர்த்து எவ்வளவு பிரசாரம் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து பார்த்தாகி விட்டது. சைவப்பெரியார்கள் செய்த எதிர்ப்பிரசாரத்தைவிட, வைணவப் பெரியார்கள் செய்த எதிர்ப் பிரசாரத்தைவிட காங்கிரஸ் பெரியார்கள் செய்த எதிர்ப்பிரசாரத்தைவிட கத்தோலிக்கப் பெரியார்கள் ஒன்றும் அதிகமான எதிர்ப்பிரசாரம் பண்ணி விடப் போவதில்லை. அன்றியும், சுயமரியாதை இயக்கமும், குடி அரசும் எப்பொழுதும் எதிர்ப்பிரசாரத்தைச் சந்தோஷத்தோடு வரவேற்குமே யொழிய அதைக் கண்டு அஞ்சுகின்ற வழக்கமில்லை என்பதை இச்சமயத்தில் நினைப்பூட்ட விரும்புகின்றோம்.

ஏனெனில், இது வரையில் எதிர்ப் பிரசாரத்தினால் இவ்வியக்கமும் குடி அரசும் செல்வாக்கும், வளர்ச்சியும், வலுவும் பெற்றனவே ஒழிய சிறிதும்



RangaRakes tamilnavarasam.com

குறைவடையவில்லை. ஆகையால், கத்தோலிக்கர்கள் செய்யும் ஆர்ப்பாட்டத்தால், இப்பொழுது, தமிழ் நாடு, மலேயா, பர்மா, சிலோன் முதலிய இடங்களில் நன்றாக வேரூன்றியிருக்கும் சுயமரியாதை இயக்கமும், குடி அரசும் மற்றய தேசங்களிலும் சென்று பரவும் என்பதில் ஐயமில்லை. ஆகையால், தாராளமாகக் கத்தோலிக்கப் பெரியார்கள் எதிர்ப்பிரசாரம் செய்ய முன் வரட்டும் என்று அறை கூவி அழைக்கின்றோம்.

ஆனால் உண்மை எப்பொழுதாவது வெளிப்பட்டுத்தான் தீரும். உண்மையை எப்பொழுதும் பின்பற்ற மக்கள் தயாராகத்தான் இருப்பார்கள். பொய்யான கட்டுப்பாடுகளும், மக்களை ஏமாற்றுவதற்கு – அடிமைப் படுத்துவதற்கு என்று ஏற்படுத்தி வைத்துள்ள மதக் கட்டுகளும் இனி நிலைத்து நிற்க முடியாது; அழிந்து தான் தீரும் என்று மாத்திரம் கடைசியாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அன்றியும், தங்கள் கொள்கைகளும் செய்கைகளும், நடத்தைகளும், வார்த்தைகளும், பரிசுத்தமானவை; உண்மையானவை; அழிய முடியாத “தெய்வீகத்” தன்மை பொருந்தியவை என்ற உண்மையான நம்பிக்கையுடையவர்களாயிருந்தால் அவர்கள் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. உண்மையான – அழியாத – “தெய்வீக”த் தன்மை பொருந்திய மதத்தைச் சுயமரியாதை இயக்கமோ, மற்ற எதுவோ அழித்து விட முடியாது. ஆதலால் கத்தோலிக்கப் பெரியார்கள் தங்கள் மதத்திலும், தங்களுடைய கட்டுப்பாடுகளிலும், பழக்க வழக்கங்களிலும் உண்மையான நம்பிக்கையுடையவர்களாய் இருந்தால் ஏன் சுயமரியாதை இயக்கத்தையும் குடி அரசையும் கண்டு நடு நடுங்க வேண்டும் என்று கேட்கின்றோம்? ஆகவே, அவர்களுடைய கொள்கையில் அவர்களுக்கே நம்பிக்கையில்லையா என்று கேட்கின்றோம்.

மதக் கட்டுப்பாடுகளினாலும், மதகுருமார்களாலும், தங்கள் அறிவும், சுதந்திரமும், செல்வமும் பாழாகின்றன என்ற உணர்ச்சி பெற்ற மக்களை, “சுயமரியாதை இயக்கத்தோடு சம்பந்தம் வைத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லுவதனாலோ, “குடி அரசைப் படிக்கக் கூடாது” என்று கூறுவதனாலோ அடக்கி விட முடியாது என்று எச்சரிக்கின்றோம். நாலா பக்கமும் அறிவு வெள்ளமும், சுதந்தர வெள்ளமும், சமத்துவ வெள்ளமும் பெருக்கெடுத்து வந்து பெரிய பெரிய அலைகளுடன் மோதும் போது நடுவில் உள்ள மூடப் பழக்க வழக்கம், அர்த்த மற்ற பயங்கரமான கட்டுப் பாடுகள், அறிவுக்குப் பொருந்தாத கோட்டுபாடுகள் ஆகியவைகள் சேர்ந்த மணல் முட்டு எப்படி நிலைத்து நிற்கும்? என்று யோசனை செய்து பார்க்க வேண்டுகிறோம்.

ஆகையால் இனி, எந்த விதமான பிரசாரம் செய்தாலும் ஜாதிப் பகிஷ்காரம், மதப் பகிஷ்காரம், போன்ற பூச்சாண்டிகளைக் காட்டினாலும் பகுத்தறிவுடைய மக்களை பயமுறுத்த முடியாது. ஜாதியும் வேண்டாம், மதமும் வேண்டாம் என்று சொல்லும், சுயமரியாதை இயக்கத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் குடி அரசைப் படிப்பவர்கள், ஜாதி பிரஷ்டத்திற்கும் மதப் பிரஷ்டத்திற்கும் அஞ்சுவார்களா? ஆகையால் கத்தோலிக்கப் பெரியார்களின் மிரட்டலும் ஆர்ப்பாட்டமும் வீண் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 06.11.1932**





RangaRakes

tamilnavarasam.com

# ஆதி திராவிட அபிவிர்த்தி சங்கத்தார் வரவேற்பு

அன்பார்ந்த சகோதரர்களே! சகோதரிகளே!! அக்கிராசனரவர்கள் எம்மைப்பற்றி அதிக புகழ்ச்சியாகக் கூறிவிட்டார்கள். நான் அவைகளுக்கு அருகதையுடையவனல்ல என்றாலும், நமது மக்கள் தங்களது பகுத்தறிவைக் கொண்டு நமது சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை ஒப்புக் கொள்கிறது ஒன்றே எமக்கு திருப்திகரமாகவிருக்கிறது. "தாழ்த்தப்பட்ட மக்கள் ஈடேறும் வழி" என்பதாக என்னை பேசும்படி கேட்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி வியாக்கியானம் அதிகம் செய்ய வேண்டியதில்லை என்றே கருதுகிறேன். ஏனெனில் பாஷாபிமானம், தேசாபிமானம், மதாபிமானம், குலாபிமானம் என்பவைகளின் உட்கருத்தை ஊன்றிக் கவனித்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் ஈடேரும் வழி தானாகவே தோன்றும். எப்படி எனில் குறிப்பிட்ட எந்த விதமான அபிமானத்தை எடுத்துக் கொண்ட போதிலும், அநேகமாக அந்த அபிமானத்தின் பேரால் ஏமாற்றுகளே நடைபெறுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராகவுள்ளவர்கள் இவைகளை ஊன்றிக் கவனித்து - அலசிப்பார்த்து - உரைகல்லில் வைத்து உரசிப்பார்க்க வேண்டும். அவ்வாறு அவர்கள் பார்ப்பார்களேயானால் வாஸ்தவதத்திலே தாழ்த்தப்பட்டவர்கள் ஈடேறும் வழியை எளிதில் கண்டு கொள்வதற்கு ஏதுகரமாக விருக்கும். மக்களது முன்னேற்றத்திற்கு தடைகல்லாக விருக்கும் காரியங்கள் எது வுண்டோ அவைகளை தகர்த்தெரிய வேண்டும். வீணாக - ஆடம்பரமாக நாங்களும் தலைவர்கள் தான் என்று வீரம் பேசிக் கொள்வதில் பயனில்லை. நமக்குப் பகுத்தறிவு இருக்கிறது. அப்பகுத்தறிவின் பயனால் இடையூறாக இருக்கும் காரியங்களை மனோதிடத்துடன் தகர்த்தெறிய முன்வர வேண்டும். அன்றே முன்னேற - ஈடேர வழி ஏற்படுமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

*குறிப்பு : ஆதி திராவிட அபிவிருத்தி சங்கத்தின் ஆதரவில் கொழும்பு கும்பனித் தெரு, சி. எம். எஸ். பாட சாலையில் 22. 10. 1932- இல் நடைபெற்ற வரவேற்பு கூட்டத் தில் ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 06.11.1932**



# ஈ.வெ.ரா. குறிப்பு

தோழர்களே, எனது மேல் நாட்டுச் சுற்றுப் பிரயாணம் ஒருவாறு வெற்றியுடன் முடிந்து 11-11-32 தேதி காலை ஈரோடு வந்து சேர்ந்திருக்கிறேன். நீண்ட பிரயாணத்தினால் நான் சிறிது களைப் புற்றிருந்தாலும் சமீபத்தில் களைப்பு நீங்கி இயக்க வேலையை மும்முரமாய் தொடங்க உறுதி கொண்டி ருக்கிறேன். என்னுடன் கூட வந்த தோழர் ராமநாதன் அவர்கள் என்னை மார் செயில்ஸில் இந்தியாவுக்கு கப்பலேற்றி விட்டு ஜினிவாவுக்கு சென்று இருக்கிறார். அங்கு சில விஷயம் அறிந்து 2 அல்லது 3 மாதத்தில் இந்தியா திரும்புவதாக சொல்லிப் போயிருக்கிறார். அதற்குள் கூடிய சீக்கிரம் நமது இயக்கத் தோழர்கள் பலரை கூட்டிக் கலந்து பேசி ஒரு வேலைத் திட்டத்துடன் தீவிர பிரசாரம் நடத்த உத்தேசித் திருக்கிறேன்.

சீக்கிரத்தில் எனது சுற்றுப் பிரயாணத்தின் விருத்தாந்தங்களையும், காட்சிகளையும், அதனால் நான் கொண்ட கருத்துக்களையும் அதை எந்த அளவுக்கு நாம் பின்பற்ற வேண்டும் என்பதையும் விளக்கி சீக்கிரம் பத்திரிகையில் வெளியிடவும் உத்தேசித்து இருக்கிறேன். நான் இங்கு இல்லாத போது இயக்கத்தை தொடர்ந்து முன்னிலும் பல மடங்கு அதிகமாக எழுத் தாலும் உபன்யாசங்களாலும் மகாநாடுகள் கூட்டியும் மக்களுக்கு உண்மை உணர்ச்சிக்களை ஊட்டி தீவிரமாய் வேலை செய்து வந்த தோழர்கள் யாவ ருக்கும் நான் என் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

## முக்கிய குறிப்பு

இயக்கத் தோழர்களும் இயக்க அபிமான தோழர்களும் இனி ஒருவருக்கொருவர் அழைத்துக் கொள்ளுவதிலும், பெயருக்கு முன்னால் பின்னால் மரியாதை வார்த்தை சேர்ப்பது என்பதிலும் ஒரே மாதிரியாக **"தோழர்"** என்கின்ற பதத்தையே உபயோகிக்க வேண்டும் என்றும், மகா - ள - ஸ்ரீ, கனம், திருவாளர், திரு, தலைவர், பெரியார், திருமதி, ஸ்ரீஜத் என்பது போன்ற வார்த்தைகள் சேர்த்து பேசவோ எழுதவோ கூடாது என்று வணக்கமாய் வேண்டிக் கொள்ளுகிறேன். "குடி அரசி" லும் அடுத்த வாரம் முதல் அந்தப்படியே செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டிருக் கிறேன். **-ஈ.வெ.ரா**

**குடி அரசு - அறிக்கை - 13.11.1932**



RangaRakes tamilnavarasam.com

# ஈ. வெ. இராமசாமியின் கொழும்பு விஜயம்

## கொழும்பு பர்ஷியன் ஹோட்டல் விருந்து

இன்று உலகில் பெரும் பாகத்தில் நடக்கும் தேசப்பக்திக் கிளர்ச்சிக்கும் ஜாதியக் கிளர்ச்சிக்கும் அரசியல் கிளர்ச்சிக்கும் தனது அபிப்பிராயம் மாறு பட்டிருப்பதாகவும் இவ்வித கிளர்ச்சிகள் கஷ்டப்படும் மக்களுக்கு எவ்வித மாறுதலையோ பயனையோ கொடுக்காதென்றும் ஏழை மக்களின் கஷ்டங் களைச் சொல்லிக் கொண்டு அதின் பேரால் சோம்பேரி வாழ்க்கைப் பிரியர் களாலும், பேராசைக் காரர்களாலும் நடத்தப்படும் போட்டி "வியாபாரங்களே" இன்று தேசீயமாயும், ஜாதீயமாயும் மதாபிமானமாயும் இருக்கின்றதே தவிர அவற்றுள் நாணயமோ உண்மையோ சிறிதும் தன்னால் காணக்கூடவில்லை யென்றும், உலகில், ஒரு பெரிய மாறுதல், அதாவது வெடி மருந்து சாலையில் தீப் பிடித்து வெடிக் கிளம்புவது போல் சமீபத்தில் ஏற்படப் போகின்றதென்றும் வாழ இஷ்டமிருக்கின்றவர்கள் அதற்குத் தகுந்தபடி தங்களை ஆக்கிக் கொள்ள வேண்டு மென்றும், இப்போதையப் பெரும்பாக கிளர்ச்சிகள் உலக உண்மைக் கஷ்டத்தைக் கஷ்டப்படும் மக்கள் அறிய முடியாமல் இருப்ப தற்குச் செய்யும் தந்திரமென்றும் பேசினார்.

***குறிப்பு :*** *20-10-1932 இரவு கொழும்பு பர்ஷியன் விடுதியில் தோழர் டி.சாரனாதன் மற்றும் சில செட்டித் தெரு தோழர்கள் ஆகியோர் அளித்த விருந்தில் கலந்து கொண்டு பேசியது.*

**குடி அரசு - சொற்பொழிவு - 13.11.1932**



# கொழும்பு கெயிட்டி தியேட்டர் வரவேற்பு

இந்த சினிமாக் காட்சி பார்ப்பதற்கு மிக அதிசயமாயும் ரம்மியமாயும் காணப்பட்டாலும், இதைப் பார்ப்பதனால் ஏற்படும் பயன் மூடநம்பிக்கையும் அடிமைத் தனமும் தவிர வேறு ஒன்றும் இல்லை என்றும், இந்த மூட நம்பிக்கையும், அடிமைத் தன்மையையும் சோம்பேரிகள் பயன்படுத்திக் கொண்டு ஏழைகளை வருத்தி செல்வம் பெருகிக்கொள்ள பயன்படுகின்ற தென்றும், இனி இப்படிப்பட்ட காட்சிகள் தடுக்கப்பட வேண்டுமென்றும், பகுத்தறிவும், சுதந்தரமும் ஏற்படக் கூடிய விஷயங்களையே நாடகமாகவோ, படக் காட்சியாகவோ காட்ட இந்த தியேட்டர் சொந்தக்காரர் முயற்சிக்க வேண்டுமென்றும், உண்மையான சுதந்திர, சமத்துவத் தேசங்களில் உள்ள காட்சிகள் அப்படித்தான் இருக்கின்ற தென்றும் சொன்னார்.

*குறிப்பு : 21-10-1932 மாலை கொழும்பு கெயிட்டி திரையரங்கில் சில சிங்கள வாலிபர் களால் நடத்தப்பட்ட திரைப்படக் காட்சியைப் பார்த்தும் வரவேற்புப் பத்திரத்திற்கு பதில் அளித்தும் பேசியது.*

**குடி அரசு - சொற்பொழிவு - 13.11.1932**



RangaRakes tamilnavarasam.com

# ஆதி திராவிடர் சங்க வரவேற்பு

தாழ்த்தப்பட்டவர்கள் ஈடேற ஒரே ஒரு வழிதான் உண்டென்றும், அது உலகில் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் எல்லாம் ஒன்று சேர வேண்டிய முயற்சி எடுக்க வேண்டு மென்றும், அம்முயற்சிக்கு எதிரியாய் இருக்கும் சாதனங்களான தேசாபிமானம், மதாபிமானம் என்பவைகளை அடியோடு அழித்து உலக ஏழைகள் அபிமானம் - உலக தாழ்த்தப்பட்டவர்கள் அபிமானம் என்பதன் உணர்ச்சியுடன் வேலை செய்யத் துணிய வேண்டும் என்றும், உலக மனித சமூகத்தை 2 வகுப்பாகத்தான் பிரிக்க வேண்டு மென்றும், அது ஒன்று, தொழில் செய்து கஷ்டப்பட்டு வாழும் ஏழை, மற்றொன்று தொழில் செய்யாமல் மற்றவர்கள் தொழிலின் பயனை அனுபவிக்கும் சோம்பேரி செல்வான்கள் என்றும் இரண்டே பிரிவாகப் பிரிந்து போராடி விடுதலை அடையத் தயாராயிருக்க வேண்டு மென்றும் பேசினார்.

(கடைசியாக ஒரு உபதேசியார் எழுந்து ராமசாமியின் உழைப்பையும் உபதேசத்தையும் தான் பல வருஷங்களாகப் பார்த்து வருவதாகவும், அவர் மூலம் தான் மக்கள் கஷ்டம் ஒழியக் கூடுமென்றும், ஆனால் அவர் கடவுளை நம்பவில்லை யென்று சொல்லுவது தனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறதென்றும் சொன்னார்.) அதற்கு ராமசாமி பதிலளிக்கையில், கடவுளை நம்ப வேண்டும் என்பது ஒரு அடக்கு முறை என்றும், அது அவனவன் சொந்த விஷயமாகப் பாவிக்க வேண்டுமென்றும் கடவுள் மீது சிறிதாவது நம்பிக்கை இருப்பவர்கள் ராமசாமியால் கடவுள் இல்லாமல் போய் விடுமோ என்று பயப்பட வேண்டியதில்லை என்றும், உலகில் நடக்கும் அக்கிரமங்களுக்கும், ஏழைகளை வஞ்சித்து கொடுமைபடுத்தி வேலை வாங்கி சோம்பேரியாய் வாழும் அயோக்கியத்தனத்திற்கும் பெரிதும் கடவுள் நம்பிக்கைக்காரர்கள் தான் காரணஸ்தர்களாகவும் பொருப்பாளிகளாகவும் இருக்கின்றார்களே ஒழிய வேறில்லை என்றும், ஆதலால் கடவுள் நம்பிக்கை போய் விட்டால் உலகம் என்ன கதியாகும் என்று யாரும் பயப்பட வேண்டியதில்லை என்றும் சொன்னார்.

*குறிப்பு : 22-10-1932 இரவு கொழும்பு ராதாபுரம் டிவிஷன் திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிடர் சங்கத்தின் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசியது.*

**குடி அரசு - சொற்பொழிவு - 13.11.1932**



# வைதீகப் பார்ப்பானுக்கும் கோயில் பிரவேச பார்ப்பானுக்கும் சம்பாஷணை

**- தேசியத் துரோகி**

**வைதீகப் பார்ப்பனர்:** என்ன சாஸ்திரிகளே! நீங்கள் கூட பறைப் பசங்களை கோயிலுக்குள் விடுவது சரியென்று சொல்லுகிறீரே! நீரே இப்படிச் சொல்ல ஆரம்பித்துவிட்டால் பிறகு நம்ம சாஸ்திரங்கள் என்ன ஆவது?

**கோயில் பிரேவேச பார்ப்பனர்:** ஆமாம்! என்ன பண்றது! இனி சாஸ்திரத்தையும் மதத்தையும் சொல்லி அந்தப் பசங்களின் சுதந்திரத்தைத் தடுக்க முடியாது. அந்தப் பசங்களும் நம்ம சாஸ்திரத்தில் என்ன சொல்லுகிறது என்று தெரிந்து கொண்டார்கள். அவர்கள் ஏதாவது கேட்கும் போது நாம் சாஸ்திரமென்றோ மதமென்றோ சொன்னால், உடனே அவர்கள் நீங்கள் அவைகளின் படி நடக்கிறீர்களா? என்று கேட்டு விடுகிறார்கள்? அதற்கு நம்மால் சரியான பதில் சொல்ல முடியவில்லை. ஆகையால் அவாள் சொல்றதை ஆமோதித்தால் தான் நம்மையும் நாலு மனுஷாள் நல்லவன் என்று சொல்லுவான்கள் போலிருக்கிறது?

**வை - பா:** இதற்காகவா நாம் பயந்து விடுகிறது? பிறகு நம்ம ஜாதிக்கே ஆபத்து வந்து விடுமே. சாஸ்திரம், பிராமணாளாகிய நம்ம சௌகரியத்திற்கு ஏற்படுத்தியதுதானே! சாஸ்திரத்திற்கே அதிகாரிகள் நாம் தானே! நாம் அதன் படி நடந்தால் என்ன? நடக்காவிட்டால் என்ன? நம்மைக் கேட்க இந்தப் பசங்களுக்கு என்ன அதிகாரமுண்டு?

**கோ. பி: பா** சரிதான் காணும். நீர் சொல்றதை யார் காது கொடுத்துக் கேட்கிறார்கள். சாஸ்திரத்தின்படி நடந்தால் தானே நீ பார்ப்பான்? நீ, பார்ப்பானுக்குச் சொல்லப்பட்ட எல்லா கர்மாக்களையும் செய்கிறாயா? இங்கிலீஷ் படித்து உத்தியோகம் பண்ணும்படி உங்கள் சாஸ்திரம் சொல்லுகிறதா? காப்பி கிளப் வைத்திருக்கிறவனையும், கள் குடிப்பவனையும், கப்பலேறி செல்பவனையும் மிலேச்சர்களாகிய ஆங்கிலேயர்களுடன் கைக்குலுக்குகிறவனையும் பார்ப்பான் என்று சொல்ல உங்கள் சாஸ்திரம் இடங்கொடுக்



RangaRakes tamilnavarasam.com

கிறதா? இப்படிப் பட்டவர்களை யெல்லாம் பார்ப்பனர்கள் என்று நீங்கள் ஒப்புக் கொண்டு அவர்களுக்கு எல்லா விடங்களிலும் சமத்துவம் வழங்கும் போது நாங்களும் ஏன் சமத்துவம் பெறக் கூடாது? என்று கேட்கிறார்களே இதற்கு என்ன சொல்வது?

**வை – பா:** இதற்குத்தானா சமாதானம் சொல்ல முடியாது? காயத்திரி ஜெபம் பண்ணும் சுதந்தரம் பார்ப்பானுக்குத் தான் உண்டு. ஆகையால் அவன் எந்தப் பாபத்தைச் செய்தாலும் காயத்திரி ஜெபம் பண்ணி அதை நீக்கிக் கொள்ளுகிறான். அதனால் அவன் சுத்த பார்ப்பனாகி விடுகிறான் என்ற சமாதானத்தைச் சொல்லுமே.

**கோ – பி – பா:** சரி, நீர் சொல்லற சமதானத்தையே சொல்லுவதாக வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது, அந்தக் காயத்திரி ஜெபத்தை எங்களுக்கும் கற்றுக் கொடுங்களேன்; நாங்கள் அதை ஜெபித்துக் கொண்டு பார்ப்பானாகி விடுகிறோம் என்று சொன்னால் என்ன சொல்லுகிறது?

**வை – பா:** காயத்திரி ஜெபத்தைச் சூத்திராளுக்கும், பஞ்சமாளுக்கும் கற்றுக் கொடுக்கச் சாஸ்திரமில்லை என்று சொல்லி விட்டால் போகிறது.

**கோ. பி. பா:** ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோருக்கும் காயத்திரி மந்திரத்தைக் கற்றுத் கொடுத்துப் பார்ப்பானாக்கி விடுகிறார்களே; அந்த மாதிரி நீங்களும் செய்யுங்களேன்; என்று சொன்னால் என்ன சொல்லுகிறது?

**வை – பா:** ஆரிய சமாஜத்தார் செய்வது தப்பு. அவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவாள் அல்ல; அவாள் முக்கால் நாஸ்திகாள் என்று சொல்லி விடுவது தான் நல்லது.

**கோ. பி. பா:** சரி, நீர் சொல்ற சமாதானத்தைச் சொன்னால் எல்லாரும் கேட்பார்களா? சுயமரியாதைக்காரர்கள் கேட்கும் கேள்விகளுக்குச் சமாதானம் சொல்ல முடியாமலிருக்கிறதே. அவர்கள் ஒரேடியாக, "சாஸ்திரங்களெல்லாம் பொய் அவைகள் பார்ப்பனர்களின் வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்பட்டவை. மனிதர்களுக்குள் சிறிதும் வித்தியாசமே இல்லை. எல்லா மனிதர்களுக்கும் எல்லாச் சுதந்தரங்களும் உண்டு. உலகத்தில் உள்ள வித்தியாசங்கள் எல்லாம் மனிதனால் ஏற்பட்டவை தான், அதுவும் சுயநலத்தால் ஏற்பட்டவைகள்" என்று கூறி சமதர்ம வாதம் புரிகிறார்களே அவர்களை எப்படிச் சமாதானப் படுத்த முடியும்?

**வை – பா:** அடே அப்பா! சுயமரியாதைக்காரர்களா? அவர்கள் பெயரைக் கேட்டவுடனேயே எனது வயிறு கலங்குகிறது. எல்லாம் அவர்களால்



வந்த வினைதான், அவர்கள் சொல்லும் வாதங்களுக்கு ஒன்றும் சமாதானம் கூற முடியாதுதான். அவர்கள் கொடுத்த சாட்டையால்தான், நம்ம ராஜகோபாலச்சாரி கூட இப்பொழுது கோயில் பிரவேசத்தைப் பற்றி அதி தீவிரமாகப் பிரசாரம் பண்ணுகிறார். அவர்களுக்குக் கூற வேண்டிய சமாதானம் ஒன்றுதான். நீங்கள் நாஸ்திகர்கள், உங்களுக்கு ஒன்றும் சொல்ல முடியாது என்று சொல்லி விட வேண்டியது தான். மற்றவர்களிடமும், அவர்களைப் பற்றி "நாஸ்திகர்கள், மதத் துரோகிகள், தேசத்துரோகிகள்" என்று கூறிவிட்டால் சரியாகப் போய்விடும். ஆகையால் அதைப் பற்றிக் கவலை வேண்டாம்.

**கோ – பி – பா:** ஆமாம் ! இவ்வளவு சிரமந்தான் நமக்கு எதற்கு? நம்மால்தான் சாஸ்திரத்தின் படி நடக்க முடியவில்லை. ஏதோ சும்மாவாவது சாஸ்திரம்! சாஸ்திரம்! என்று சொல்லிக் கொண்டு வருகிறோம். ராஜ கோபாலாச்சாரியார் முதலியவர்கள் சொல்லுகிறபடி கோயில்களில் ஆதி திராவிடர்கள் முதலான தாழ்த்தப்பட்டவர்களை யெல்லாம் விட்டு விட்டால் தான் என்ன? சாஸ்திரம் போனால் போகிறது? இனி மேல் தானா சாஸ்திரம் போக வேண்டும், அது தான் முன்னமே போய்விட்டதே!

**வை – பா:** அட பைத்தியமே! உமக்குச் சிறிதும் விஷயம் புரியவில்லையே. ஏதோ, சாஸ்திரம், மதம் என்று சொல்லிக் கொண்டிருப்பதனால் தான் கொஞ்சமாவது நமக்கு மதிப்பிருக்கிறது. நம்மை ஒன்றுந் தெரியாத பாமரமக்களாவது உயர்ந்த ஜாதியென்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள் இல்லா விட்டால் அதுவும் போய்விடுமே! என்ன செய்கிறது?

**கோ. பி. பா:** இப்பொழுதான் நமக்கு என்ன மதிப்பிருக்கிறது? நம்மை எவன் மதிக்கிறான்; இனி மேல் தானா நம்முடைய மதிப்புக் கெடவேண்டும்? யார் நமது வார்த்தையைக் கேட்கப் போகிறார்கள்?

**வை – பா:** அப்படியா? எத்தனையோ சோணகிரிகள் இல்லையா? கும்பகோணத்தில் ராவ்பகதூர் முத்துக் குமரசாமி செட்டியார் அவர்கள் போன்றவர்கள் இல்லையா? அவர்களெல்லாம் நமக்குக் கௌரவும் கொடுப்பதால் தானே நம்ம சாஸ்திரத்தையும் நம்புகிறார்கள்? அவர்கள் கோயில் பிரவேசத்திற்கு எதிராக இல்லையா? அவர்களைப்போல இன்னும் பத்து பணக்காரச் சூத்திராள் நம்மை ஆதரித்தால் போதாதா?

**கோ. பி. பா:** ஓகோ! கோ! இப்பொழுதான் விஷயம் புரிந்தது! நாம் சாஸ்திரத்தின் படி நடக்காவிட்டாலும், நமக்கு அதில் நம்பிக்கையில்லா விட்டாலும், நாம் சாஸ்திரங்களைத் தெய்வீகமானவைகள் என்றும் கடவுளால் ஏற்பட்டவைகள் என்றும், அவைகளை மீறி நடந்தால், பாவம், மதம் போய் விடும், தோஷம் சம்பவிக்கும் என்ற பிரச்சாரம் பண்ணுவதனால், நமக்கு



RangaRakes tamilnavarasam.com

லாபமுண்டு என்று தெரிந்துக் கொண்டேன். இம்மாதிரி பிரசாரம் பண்ணினால்தான், ஒன்றுந்தெரியாத பார்ப்பனரல்லாதார் நம்மை மதிப்பார்கள், நாமும் அவர்களை மிரட்டி மதத்தின் போராலும், சாஸ்திரங்களின் பேராலும் காசு பறிக்கலாம் என்று சொல்லுகிறீர். சரி. இனி நானும் கோயில் பிரவேசப் பேச்சை விட்டு விடுகிறேன். எதிர்ப்பிரசாரம் ஆரம்பித்து விடுகிறேன்.

**வை - பா:** சந்தோஷம், அதுதான் சரி, இப்படிச் செய்தால் தான், சுயமரியாதைக்காரர்கள் தேசாதிகாரிகளாக வரும் வரையிலாவது நம்முடைய சூழ்ச்சிகள் நிலைத்திருக்கும். இன்றேல் பிராமணீயமே அழிந்து போகும்.

**குடி அரசு - உரையாடல் - 13.11.1932**



# இலங்கை உபன்யாசம்

அன்புள்ள தலைவரே! வீரமும், எழுச்சியும், சுயமரியாதை உணர்ச்சியும் உள்ள வாலிபர்களே!!

தலைவரின் முன்னுரையிலும், உபசாரப் பத்திரங்களிலும், மற்றும் பேசியவர்களும் அளவுக்கு மீறி என்னைப் பற்றியும், எனது சிறு தொண்டைப் பற்றியும் புகழ்ந்து கூறி இருக்கிறீர்கள். அப்படிப்பட்ட புகழ்ச்சிகளுக்கு நான் சிறிதும் தகுதியுடையேன் அல்லன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு கூடவே இதன்மூலம் நீங்கள் எனது கொள்கைகளையும், தொண்டையும் ஆதரிக்கிறீர்கள் என்பதை உணர்ந்து மகிழ்ச்சியடைகிறேன்.

## மனித சமூகம்

தோழர்களே! எனது அபிப்பிராயத்திற்கும், முயற்சிக்கும், குறிப்பிடத் தகுந்த அளவு எதிர்ப்பு இருக்கின்றது என்பதை நான் அறியாமலோ, அல்லது அறிந்தும் அவைகளை மறைக்க முயலவோ இல்லை. யார் எவ்வளவு எதிர்த்த போதிலும், யார் எவ்வளவுக்கு தூஷித்து விஷமப் பிரசாரம் செய்த போதிலும், யார் எவ்வளவு எனது அபிப்பிராயம் வெளியில் பரவாமல் இருக்கும் படியும் சூழ்ச்சிகள் செய்து மக்களின் கவனத்தை வேறுபக்கம் திருப்பிய போதிலும், உலகத்தில் எல்லா பக்கத்திலும் வேத புராண சரித்திரகாலம் முதல் இன்றைய வரையிலும் மனித சமூகமானது கடவுள், ஜாதி, மதம், தேசம் என்னும் பேர்களால் பிரிவுபட்டு உயர்ந்தவன் - தாழ்ந்தவன், ஏழை - பணக்காரன், முதலாளி - தொழிலாளி, அரசன் - பிரஜைகள், அதிகாரி - குடி ஜனங்கள், குரு -சிஷ்யன் என்பனவாகிய பல தன்மையில் வகுப்பு வித்தியாசங்களுக்காளாகி மேல் கீழ் தரத்தோடு கட்டுப்பாடான சமுதாயக் கொடுமைகளாலும், அரசாங்கச் சட்டங்களாலும் கொடுமைக்குள்ளாகி வந்திருக்கின்றது - வருகின்றது என்பதை மாத்திரம் யாராலும் மறுக்கவும் மறைக்கவும் முடியாது என்று உறுதியாய்ச் சொல்லுவேன். இவ்வகுப்பு பேதங்களால் மக்கள் படும் துன்பத்தையும். அனுபவிக்கும் இழிவையும் அல்லும் பகலும் காடுகளிலும், மேடுகளிலும், தொழிற்சாலைகளிலும், கஷ்டமான வேலைகளைச் செய்தும், வயிறார கஞ்சி இல்லாமலும் குடியிருக்க மழைக்கும், வெய்யிலுக்கும்,



RangaRakes tamilnavarasam.com

மறைவுக்கும், நிழலும் இல்லாமலும் எத்தனை பேர் அவதிப்படுகிறார்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். அவர்களது நிலைமையை உங்கள் மனத்தில் உருவகப்படுத்திபாருங்கள். இந்தக் கொடுமைகள் எத்தனை காலமாக இருந்து வருகின்றன? இன்றா? நேற்றா? இது அன்னிய அரச ஆட்சியாலா? குடி ஆட்சி இல்லாததாலா? தர்ம தேவதை ஆட்சி, அவதார ஆட்சி, தெய்வாம்ச ஆட்சி இல்லாததாலா? என்பதையும் சிந்தித்துப் பாருங்கள். உலக சரித்திரம் கிடைத்தது முதல் உலகத்தில் எந்த பாகத்தில் எந்த ஆட்சியால் என்றைய தினம் இந்தக் கொடுமைகள் இல்லாதிருந்தது என்பதைச் சற்று நினைவுக்குக் கொண்டு வந்து பாருங்கள்.

## காரணம்

தோழர்களே! இனி இதற்கு அடிப்படையாகவும், அரணாகவும் இருந்து வரும் காரணங்கள் எவை என்பதை நீங்கள் சற்று நடுநிலைமையில் இருந்து சிந்தித்துப் பார்த்தீர்களானால் இக்கொடுமைகளுக்கு முக்கியக் காரணம் முற்கூறிய மதம், கடவுள், ஜாதீயம், தேசீயம் என்பவையாகிய மயக்க உணர்வை மக்களுக்கு ஏற்றி அதன் பயனாக பெரும்பான்மையான மனித சமூகத்தை மடமையாக்கி ஏய்த்து, அடிமைப்படுத்தி தங்கள் சுயநலமே பிரதானமெனக் கருதி சோம்பேறிகளாய் இருந்து கொண்டு சுகம் அனுபவித்து வரும் ஒரு சிறு கூட்ட மக்களின் சூழ்ச்சியே ஒழிய வேறில்லை என்பதைத் தெள்ளத் தெளிய உணர்வீர்கள்.

இந்த சூழ்ச்சிகளை யாராவது வெளிப்படுத்தக் கிளம்பி விட்டாலோ உடனே அப்படிப்பட்ட காரியத்தை நாஸ்திகம் என்றும், மதத்துரோகம் என்றும், தேசத் துரோகமென்றும், தேசீயத்துக்கு விரோதமென்றும் சிலர் சொல்லி அடக்கி விடப்பார்க்கிறார்கள். இப்படிச் சொல்லி அடக்குகின்றவர்கள் யார் என்று பார்த்தாலோ அவர்கள் பெரிதும் மேல் நிலையில் இருந்து கொண்டும், சரீரத்தினால் சிறிதும் பாடு படாமல் சோம் பேரி வாழ்க்கையில் இருந்து கொண்டும் அன்னியன் உழைப்பின் சுக மனுபவிக்கும் ஒரு சிறு கூட்டத்தாரும் மற்றும் அவர்களால் தங்கள் நிலைமையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக என்று ஏற்படுத்தப்பட்டு இருக்கும் அவர்களது கூலிப் பிரசாரகர்களுமே யாவார்கள். அதோடு "ஈன ஜாதி" யாராயும் ஏழைகளாயும் தொழிலாளர்களாயும் கூலிகளாயும் கருதப்பட்டும் கீழ் நிலையில் இருந்து வெகுகாலமாய் தலைமுறை தலைமுறையாக இழிவு படுத்தப்பட்டும் அரைப் பட்டினி கிடந்து உழலும் மக்களிலும் சிலர் அவர்களுடன் சேர்ந்து கொண்டு மேற்கண்டபடி கூப்பாடு போடுவதையும் பார்க்கலாம். இதற்குச் சமாதானம் சொல்லுவதென்பது சிலருக்கு சற்று கஷ்டமானதாகக் காணப்பட்டாலும் கூர்ந்து கவனித்தால் மேற்கண்ட உயர்நிலையை நிரந்தரமாய்க் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்கின்ற கருத்தின் மீது செய்து கொண்டிருக்கும் ஏற்பாடுகளான கடவுள், மதம், தேசீயம், தேசம் ஆகியவற்றின் ஸ்தாபனங்



களும் அவற்றிற்குள்ள கவசமும் காப்பும் அவை சம்பந்தமான பிரசாரங் களுமேதான் காரணம் என்பது தெளிவாய் விளங்காமல் போகாது.

## என்ன செய்ய வேண்டும்?

ஆகையால் மேற்கண்ட - கஷ்டப்படும் மக்களுக்கு விடுதலையும் சமத்துவமும் வேண்டுமானால் முதலில் அக்கவசங்களையும், காப்புகளையும் உடைத்தெறிய வேண்டும். அவற்றின் பிரசாரங்களையும் முறியடித்துத் துரத்த வேண்டும். அஃதில்லாமல் வேறு எவ்வளவு பாடுபட்ட போதிலும் கஷ்டப் படும் மக்கள் ஒரு நாளும் விடுதலை அடைய முடியாது. இக்காரியம் செய்வது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. செய்பவர்களுக்கு மகத்தான உறுதியும் தன்னல மறுப்பும் வேண்டும். அனேக துன்பங்களுக்கும், தொல்லை களுக்கும், பழிப்புகளுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாகத் தயாராய் இருக்க வேண்டும். "ஊரார் நம்மைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள் - சொல்லு வார்கள்" என்பதைப் பற்றிச் சிறிதும் சிந்திக்கக் கூடாது. போலி மானாபி மானங்களையும், கௌரவங்களையும், வசவுகளையும் துச்சமாய் கருத வேண்டும். பாமர மக்களால், சுயநல சூட்சிக்காரர்களால் வசவு கேட்கவும் உயிர் விடவும் கூட தயாராயும் இருக்க வேண்டும். இந்த நிலையில் உள்ளவர் களால் அல்லாமல் வேறு யாராலும் இக்காரியங்கள் ஒரு சிறிதும் செய்ய முடியாது என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

## தானாக ஏற்பட்டதல்ல

தோழர்களே! கடவுள், மதம், ஜாதீயம், தேசீயம், தேசாபிமானம் என்பவைகள் எல்லாம் மக்களுக்கு இயற்கையாக தானாக ஏற்பட்ட உணர்ச்சிகள் அல்ல. சகல துறைகளிலும் மேல்படியிலுள்ளவர்கள் தங்கள் நிலை நிரந்தர மாயிருக்க ஏற்படுத்திக்கொண்டிருக்கும் கட்டுப்பாடான ஸ்தாபனங்களின் மூலம் பாமர மக்களுக்குள் புகுத்தப்பட்ட உணர்ச்சிகளேயாகும். இந்தப்படி புகுத்தப் படவேண்டிய அவசியமும், காரணமும் என்னவென்று பார்த்தால் அவை முற்றும் பொருளாதார உள் எண்ணத்தையும், அன்னியர் உழைப் பாலேயே வாழ வேண்டும் என்கின்ற உள் எண்ணத்தையும் கொண்ட பேராசையும், சோம்பேரி வாழ்க்கைப் பிரியமுமேயாகும்.

## ஆதியில்

ஆதியில் மனிதர்கள் காடுகளில் தனிமையாய் - சுயேச்சையாய் திரிந்த - இயற்கை வாழ்க்கையிலிருந்து சமூக கூட்டு வாழ்க்கைக்கு வரும் போது அவனவன் தன் தனக்கு வேண்டிய சகல காரியங்களையும் தானே செய்து கொண்டும், அவசியமான பரஸ்பர உதவிகளை வழங்கிக் கொண்டும் ஒரே சமூகமாய் சமத்துவமாய் வாழலாம் என்று எண்ணியே ஒழிய மற்றபடி



RangaRakes tamilnavarasam.com

மற்றொருவனை அடிமைப்படுத்தி அவனிடம் தனக்கு வேண்டிய எல்லா வேலையையும் வாங்கிக் கொண்டு ஏய்த்து அவனை உலக சுகபோகங்களில் பட்டினிப் போட்டு தான் மாத்திரம் சோம்பேரியாய் இருந்து வாழ்ந்து கொண்டு எல்லா சுகபோகங்களையும் தானே அனுபவித்துக் கொண்டு இருப்பதற்கோ அல்லது மற்றவனுக்கு அடிமையாய் இருந்து கஷ்டப்பட்டு உழைத்து அவ்வுழைப்பின் பெரும் பயனை மற்றவன் அனுபவிக்க விட்டு விட்டு தான் பட்டினி கிடப்பதற்கோ அல்ல என்பது நேர்மையுள்ள மனிதர் யாவரும் ஒப்புக் கொள்ளத்தக்க விஷயமாகும்.

ஆனால் நாள் ஏற ஏற மக்களுக்குள் சிலருக்கு பேராசையும், பொறாமையும் சோம்பேரித் தனமும் வலுக்க வலுக்க அவற்றிலிருந்து செல்வவானும் அரசனுக்கு குருவும் ஏற்பட்டு பிறகு அவற்றை நிலை நிறுத்த ஆத்மா, கடவுள், வேதம், ரிஷிகள், மகாத்மாக்கள் ஆகியவைகளைக் கற்பித்து பிறகு அவைகளின் மூலம் கடவுள் செயல், முன் ஜென்மம், பின் ஜென்மம், கர்மம், பாவம், புண்ணியம், மேல் உலகம், கீழ்உலகம், தீர்ப்பு நாள், மோக்ஷம், நரகம் ஆகியவைகளும் கற்பிக்க வேண்டியதாய் விட்டது.

இந்த கற்பனைகளின் பயன் தான் பெரும்பான்மையான மக்கள் பாமரர்களாகவும் ஏமாற்றப் படவும், கொடுமைக்குள்ளாகவும் மற்றவர்களுக்கு அடிமையாகி உழைக்கவும் உழைத்தும், சரியான கூலி கிடைக்காமல் பட்டினிக் கிடந்துழல்வதை பொருமையுடன் பொறுத்துக் கொள்ளவுமான காரியங்கள் நடந்து வருவதுடன் அவை எங்கும் என்றும் நிலைத்தும் நிற்கின்றன. எப்படியாயினும் இந்த நிலை அடியோடு அழிபட வேண்டும். அதற்காக அதன் காப்புகளான மேற்குறிப்பிட்ட கடவுள், மதம், தேசீயம், ஜாதியும் என்பவைகளும் அவற்றின் பேறுகளான ஆத்மா, முன் ஜென்மம், கர்மம், தீர்ப்பு, மோக்ஷ நரகம், பாவ புண்ணியம் ஆகியவைகளாகிய போலி உணர்ச்சிகளும் அவற்றின் ஸ்தாபனங்களும் உடைத்தெரியப் பட வேண்டும்.

## தலை விதி

கஷ்டப்படுகிற மனிதர்கள் தாங்கள் பாடுபட்டும் பட்டினி இருக்க நேருவதையும், "யோக்கியமாய்" "நாணயமாய்" நடந்து 'இழிவாய்' 'கீழ் மக்களாய்' கருதப் படுவதுமான தங்களது கொடுமையின் நிலைமைக்கு மற்றவர்களால் தாங்கள் ஏமாற்றப் படுவதுதான் காரணம் என்பதை உணராமல் தங்களுடைய முன் ஜென்ம கர்ம பலன் – தலை விதி – கடவுள் செயல் என்பதாகக் கருதிக் கொண்டு சிறிதும் முன்னேறுவதற்கு முயற்சி செய்யாமலும் சூழ்ச்சியின் தன்மையை உணராமலும் இருப்பதோடு தங்கள் நிலைமையைப் பற்றி சிறிதும் அதிருப்திகூட அடையக் கூடாதென்று கருதி தங்கள் நிலையைப் பற்றி தாங்களே சமாதானமும் சாந்தமும் அடைந்து கொள்ளுகிறார்கள். வெளியில் சொல்லிக் கொள்ளக் கூட வெட்கப்படு



கிறார்கள். ஏனெனில் கஷ்டப்படுகின்ற மக்களுக்கு கடவுள் உணர்ச்சியும் மதமும் இதைத்தான் போதிக்கின்றது. எப்படி என்றால்:–

'ஓ கஷ்டப் படுகின்ற மனிதனே! கஷ்டப் பட்டும் பட்டினி கிடக்கின்ற இளைத்த ஏழை மனிதனே!! நீ உனது முன்ஜென்ம பாப கர்ம பலத்தினால் தலை விதியால் – கடவுள் சித்தத்தால், இம்மாதிரி துன்பத்தை அனுபவிக்கின்றாய். இந்த ஜன்மத்தில் நீ உனக்கேற்பட்ட இந்த நிலைமையை பொறுமையுடன் ஏற்று சமாதானமும் சாந்தமும் அடைந்து இருப்பாயாகில் அடுத்த ஜன்மத்தில் சுகப்படுவாய் மேலான பிறவி பெறுவாய் – அல்லது மேல் உலகில் மோக்ஷம், என்னும் மேன்மையை அடைவாய் – கடவுள் சன்மானம் அருளுவார், என்கின்ற" உபதேசமேயாகும்.

இந்த பொருமை உபதேசமும், சாந்த உபதேசமும், சமாதான உபதேசமும், மக்களை கோழைகளாகவும், முற்போக்கற்றவர்களாகவும் செய்து அவர்களது கஷ்டத்திலிருந்தும், இழிவிலிருந்தும் முன்னேற முடியாமலும் விடுபட முடியாமலும், சுயமரியாதை உணர்ச்சி பெறாமலும் இருந்து உயிர் வாழும் படி செய்து வந்திருக்கிறது.

## இவ்வளவு தானா?

இவ்வளவு மாத்திரம் தானா? இக்கடவுள் உணர்ச்சியும் மதமும் செல்வந்தர்களுக்கும், மிராசுதாரர்களுக்கும், மற்றும் உத்தியோகம் வியாபாரம், லேவாதேவி என்னும் பேர்களால் ஏழைகளிடமிருந்து பெரும் பணம் கொள்ளை கொண்டு மற்றவர்களை பட்டினி போட்டு பெரும் பணம் சேர்க்கும் பணக்காரர்களுக்கும் போதிப்பது என்ன என்பதைப் பார்த்தாலோ அது,

**"ஓ பிரபுக்களே! செல்வவான்களே!! ஏராளமாக மேலும், மேலும் பணம் சேர்க்கும் பணக்காரர்களே!!! லக்ஷிமிபுத்திரர்களே!! நீங்கள் முன்ஜன்மத்தில் செய்த புண்ணிய கர்மங்களால் கடவுள் உங்கள் மீது வைத்த கருணையினால் இவ்வுயர் நிலையை அடைந்திருக்கிறீர்கள், இவ்வேராளமான பண வருவாய்கள் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இச்சுக போகம் உங்களுக்கு கிடைத்ததற்குக் காரணம் கடவுள் சித்தமேயாகும். ஆதலால் நீங்கள் கடவுள் பக்தி உள்ளவர்களாக இருந்து கடவுளுக்குக் காணிக்கை செலுத்துவதன் மூலமும் கடவுளுக்குக் கோயில் கட்டுவதன் மூலம் கடவுள் பக்தர்களான பாதிரி குரு, பிராமணர் முதலியவர்களுக்கு மரியாதை செய்து சத்திரம், மடம் முதலிய உதவி அளிப்பதன் மூலமும் நன்றி செலுத்தி இந்நிலையை நிலை நிறுத்திக் கொள்ளுவதுடன் மோக்ஷ லோகத்திலும் சுலபமாக இடம் சம்பாதித்துக் கொள்ளுங்கள்"** என்பதேயாகும். ஆகவே தோழர்களே! இந்த காரணங்களாலேயே மக்களில்



RangaRakes tamilnavarasam.com

உயர்வு - தாழ்வும், எஜமான் - அடிமையும், முதலாளி - தொழிலாளியும், அரசன் - குடிகளும், குரு - சிஷ்யனும், ஏற்பட்டிருக்கின்றன என்பதை இப்போதாவது உணருகிறீர்களா?

## அரசன்

உலகிற்கு அரசன் அரசாக்ஷி என்பதாக ஒரு வகை இருந்து வருவதின் காரணமெல்லாம் கூட செல்வவான்களின் செல்வங்களை காப்பாற்றவும், சோம்பேரி வாழ்க்கைகளையும், அவர்களது தத்துவங்களையும் பிறர் இகழா மல் இருக்கவுமே ஒழிய மற்றபடி மக்கள் சமூகம் துன்பப் படாமலோ, மற்றவர் களாய் கொடுமைப் படுத்தப் படாமலோ சகல துறைகளிலும் உயர்வு தாழ்வு கொடுமை இல்லாமலோ, இருப்பதற்காக அல்லவே அல்ல என்பதை நீங்கள் உறுதியாய் நம்புங்கள்.

இது போலவேதான் முன் குறிப்பிட்ட கடவுள் மத உணர்ச்சி கற்பிக்கப் படுவதும் ஏழைகள் தாங்கள் படும் கஷ்டங்களுக்கு காரணம் முதலாளிகளின் சூழ்ச்சியும், சோம்பேரிகளின் தத்துவங்களும் என்பதை உணராமல் இருப்பதற்காகவே ஒழிய வேறில்லை.

## உதாரணம்

உதாரணம் வேண்டுமானால், இன்றைய தினம் கஷ்டப் படுவதாகவும், இழிவு படுத்தப்பட்டதாகவும், பட்டினிகிடந்து துன்பப் படுவதாகவும், ஏழை களாகவும் காணப்படும் மக்களில் அனேகரை அணுகி அவர்களது இவ்வித கஷ்ட நிலைக்கு காரணம் என்ன என்று கேட்டுப் பாருங்கள் உடனே அவர் கள் சற்றும் தயக்கமின்றி தங்களின் கஷ்ட நிலைக்கு தங்கள் “தலைவிதி” என்றும் “முன்ஜன்ம கர்ம பலன்” என்றும் “கடவுள் சித்தம்” என்றும் “ஆண்டவன் கட்டளை” என்றும்தான் பதில் சொல்லுவார்களே யொழிய பிற மனிதர்களால் - அரசாங்க சட்டத்தால் - செல்வவான்களின் சூழ்ச்சியால், சோம்பேரிகளின் தந்திரத்தால், தாங்கள் ஏமாற்றப்பட்டு, அடிமைப் படுத்தப் பட்டு , அவதிப்படுவதாக ஒரு நாளும் சொல்ல மாட்டார்கள். ஆதலால் தான் ஏழைகளின் கஷ்டங்களை விலக்க வேண்டுமென்பவர்கள் முதலிய அதற்கு அஸ்திவாரமான காரண காரியங்களை கண்டுபிடித்து அழித்தெரிய வேண்டும் என்று சொல்ல வேண்டியிருக்கின்றது.

## கடவுள்

கடவுள் என்பது அருத்தமும் குறிப்பும் அற்ற வார்த்தையாய் இருந்து வந்த போதிலும் அது மனித சமூகத்தில் 100க்கு 99 மக்களை பிடித்து தன்வயப்படுத்தி மடமையாக்கி ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. கடவுள்



என்ற வார்த்தை கற்பிக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஆயிருந்த போதிலும் கூட கடவுள் என்பது இன்னது என்று குறிப்பாக குளறு படி இல்லாமல் - தெளிவுபட உணத்தியவர்களோ உணர்ந்தவர்களோ இது வரையில் காணக்கிடைக்கவில்லை. பொதுவாக அந்தப்படி ஒரு உணர்ச் சியை மக்களுக்குள் எப்படியாவது புகுத்தி அவர்களைப் பயப்படுத்தி வைக்க வேண்டும் என்கின்ற அவசியத்தினால் அதற்கு என்று வேறு ஒரு (மானச) உலகத்தையும், பாவபுண்ணிய பயனையும், மோக்ஷ நரகத்தையும், கற்பித்து அதை பரப்ப பலவித ஸ்தாபனங்களை உண்டாக்கி அதன் பிரசாரத்தின் பேரால் பிழைக்க ஒரு கூட்டத்தையும் ஏற்பாடு செய்து அக்கூட்டத்திற்கு அதிலேயே பிழைத்துத் தீர வேண்டியதான நிலைமையையும் ஏற்படுத்தி விட்டதால் வெகு சுலபமாகவும் செல்வாக்காகவும், அதன் பிரசாரம் நடக்கவும் மக்களை தன் வயப்படுத்தவும் ஆன காரியங்கள் நடந்து கொண்டே வரு கின்றன. கடவுள் என்றால் என்ன? என்றாலும் கடவுள் என்றால் என்ன? என்பதை உணருவதற்கில்லாமலும் உணர வேண்டும் என்று நினைப்ப தற்கில்லாமலும் இருந்து வருகிறது.

யாராவது கடவுளைப் பற்றி நெருக்கிப் பிடித்துக் கேட்டால் அது முழுவதும் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களையும் செய்கைகளையும் கொண்டிருப்பதும், ஆளுக்கு ஒரு வித வியாக்கியானம் கூறுவதுமாய் இருப்பதோடல்லாமல் வேறு விதமாய் குறிப்பான பதில் கிடைப்பது என்பது அறிதாகவேயிருக்கிறது.

கடவுள் என்பது சர்வ வல்லமையும் சர்வ வியாபகமும், சர்வசக்தியும் கொண்ட ஒரு ஒப்பற்ற தனி பொருளென்று சொல்லப்பட்டு விட்டு உடனேயே அது கண்ணுக்குத் தெரியாதது என்றும், மனதிற்குத் தோன்றாதது என்றும் சொல்லப்படுவதோடல்லாமல் அதற்கு உருவம் இல்லை யென்றும், குணம் இல்லை யென்றும், இன்ன தன்மையது என்று விளக்க முடியாதது என்றும் சொல்லப்பட்டு விடுகின்றது.

## ஒரு வேடிக்கை

இவற்றுள் மற்றொரு வேடிக்கை என்ன வென்றால் இப்படிப்பட்ட ஒரு கடவுள் தன்மையை அதாவது “சர்வ சக்தியும் சர்வ வியாபகமும், உடையதும் கண்ணுக்கும் மனதிற்கும் தென்படாததும், குணமும் உருவமும் இன்ன தன்மையென்று குறிப்பிடக் கூடிய தன்மையும் இல்லாதது”மான ஒரு கடவுளை நிலை நிறுத்தவும் அதைப் பற்றி மக்கள் நம்பிக்கை கொள்ளவும் “கடவுளால் உண்டாக்கப் பட்ட” மக்களிலேயே பலர் வக்காலத்துப் பெற்று கடவுளை நிரூபிக்க ஒழுங்கற்ற முறையிலும் ஒழுக்க ஈனமான முறையிலும் எவ்வளவோ பாடு படவேண்டியிருப்பதுமேயாகும்.



RangaRakes tamilnavarasam.com

மற்றும் அப்படிப்பட்ட வக்காலத்துக்காரர் தங்கள் சொந்த நிலையில் தங்களால் செய்யப்படும் ஒவ்வொரு காரியத்தையும் தாங்களே செய்வ தாகவும் தங்களால் சொல்லப் படும் ஒவ்வொரு விஷயமும் தாங்களே அறிந்து சொல்லுவதாகவும் நினைத்தே பேசியும் நடந்தும் வருகிறார்கள். அது மாத்திரமல்லாமல் மற்றவர்களால் செய்யப்படும் - சொல்லப்படும் ஒவ்வொரு விஷயத்தையும் மற்றவர்கள் தங்களுக்குச் செய்வதாகவும் சொல்லுவதாகவும், எழுதுவதாகவும் கருதுவதுடன், மற்றவர்கள் மீது துவேஷமும், வெறுப்பும், விருப்பும் கொண்டு அவர்களை இன்ன இன்னபடி நடவுங்கள் என்றும் தங்களுக்கு இன்ன இன்ன காரியங்களைச் செய்து கொடுங்கள் என்றும் கோறுகிறார்களேயல்லாமல் "இவையெல்லாம் சர்வ வல்லமை உள்ள கடவுள்" செயலால்தான் நடக்கின்றது, நடந்து விடும் என்ற நம்பிக்கையும் உறுதியும் தைரியமும் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள்.

## மற்றொரு சாரார்

மற்றொரு சாரார் "கடவுளைப் பார்க்கா விட்டாலும், உணரா விட்டா லும் உலகப் படைப்புக்கும் நடக்கும் ஏதாவது ஒரு கர்த்தாவோ காரணமோ இருக்க வேண்டாமா? அப்படிப் பட்ட கர்த்தாவோ காரணமோதான் கடவுள்" என்று சொல்லுகிறார்கள். மற்றொரு சாரர் "உலகத் தோற்றத்திற்கும், நடப்புக்கும் ஏதாவது ஒரு சக்தி (FORCE) ஆவது இருக்கு மல்லவா? அதுதான் கடவுள்" என்கிறார்கள்.

மற்றொரு சாரர் "இயற்கையே - அழகே - அன்பே - சத்தியமே கடவுள்" என்றும் இன்னும் பலவாராக சொல்லுகிறார்கள். ஆனால் நமது நாட்டைப் பொருத்தவரை மக்கள் கடவுளுக்கு மனித உருவம் கற்பித்து சாதாரண மனித வாழ்க்கையிலுள்ள பெண்டு பிள்ளை முதலியவைகளைக் கற்பித்து, செல்வவானுக்குள்ள குணங்களையும் சுகபோகங்களையும் கற்பித்து, அதற்குக் கோவில் பூசை உற்சவம் கல்யாணம் சாந்தி முகூர்த்தம் முதலியவைகளைக் கற்பித்து வணக்கத்திற்காக என்று கோடான கோடி ரூபாய்களை செலவு செய்யச் செய்து மக்களை அதுவும் ஏழைமக்களை வாட்டி வளவெடுத்து தொல்லைப் படுத்தியும் வருகிறார்கள். இப்படியாக கடவுளைப் பற்றி இன்னும் பல விதமாய் அபிப்பிராயங்கள் சொல்லப் பட்டும் காரியத்திலும் பல செய்யப்பட்டும் வருகின்றன. இந்த விதமான கடவுளைப் பற்றி அர்த்தமற்ற - குறிப்பற்ற - பரிகாசத்திற்கும் முட்டாள் தனத்திற்கும் இடமான அபிப்பிராயங்களும் மற்றும் பாமர மக்களை தந்திரக்காரர்கள் ஏமாற்றுவதற்கான முறைகள் கொண்ட கருத்துக்களும் விவகாரங்களும் இன்றோ நேற்றோ அல்லாமல் வெகு காலமாகவே இருந்து வருகின்றது. அன்றியும் இக்கருத்துக்களை மதக்கொள்கைகள் என்பவற்றின் மூலமாகவும் அரசாங்கச் சட்டங்களின் மூலமாகவும் மறுத்துப் பேச இடங்கொடுக் கப்படாமலும் மீறிப் பேசினால் தண்டித்தும் மதவெறியால் என்றும்



கொடுமைப்படுத்தியும் தான் காப்பாற்றப்பட்டும் நிலை நிறுத்தப்பட்டும் வந்திருக்கின்றது.

## இன்றும் கூட

இன்றும் கூட நமது இயக்கப் பிரசாரங்களில் அவற்றின் கொள்கை களைப் பற்றி ஆட்சேபிக்கக் கூடிய வகை சுலபத்தில் இல்லாமல் இருப்பதால் வேறு வழியில் தந்திரமாய் அதாவது "சு. ம. இயக்கக் கொள்கைகள் எல்லாம் சரி, அது ஏழை மக்களுக்குத் தான் பாடுபடுகின்றது. ஏழை பணக்காரன் என்கின்ற வித்தியாசம் கூடாதென்கின்றது. ஆனால் அது கடவுள் இல்லை என்று சொல்லுகின்றது மதத்தை அழிக்கின்றது மக்களை நாஸ்திக மாக்குகின்றது, அதுதான் எமக்குப் பிடிக்கவில்லை. ஆதலால் அதைவளர விடக் கூடாது" என்று சொல்லுவதன் மூலம் நமக்கு எதிர் பிரசாரம் செய் கின்றார்கள். மற்றும் பல இடங்களில் நாம் போகு முன்பே நாஸ்திகன் வந்து விட்டான், மதத்துரோகி வந்து விட்டான் என்று விஷமப் பிரசாரம் செய்து மக்களை நமது பிரசங்கத்தை - நான் என்ன சொல்லுகிறேன் என்பதை கேட்க அனுமதிக்க கூட மறுக்கின்றார்கள். மற்றும் சில இடங்களில் பலாத்கார முறையில் - காலித்தனமான முறையில் நமது பிரசாரத்தை கலைக்க முயற்சிக் கிறார்கள்.

## காரணம்

இதன் காரணம் என்ன வென்று பார்க்கப் போனால் கண்டு பிடிப்பது மிகவும் சாதாரணமான விஷயமேயாகும். அதாவது அவர்களது "எங்கும் நிறைந்த" "எல்லாம் வல்ல" "அவனன்றி ஓர் அணுவும் அசையாததான" கடவுள் நம்பிக்கையும் அப்படிப்பட்ட கடவுளின் அவதாரங்களாலும் கடவுள் அம்சம் பெற்றவர்களாலும் கடவுள் குமாரராலும் உண்டாக்கப்பட்ட மத நம்பிக்கையுமே யொழிய வேறில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதன் கருத்து என்ன வென்றால் எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த கடவுள் உணர்ச்சியும், தத்துவமும், ஒரு சாதாரண மனிதனால் அழிக்கப்பட்டுவிடும் என்றும், கடவுள் அவதாரம், அம்சம், குமாரன், தூதன் ஆகியவர்கள் மூலம் உபதேசிக்கப் பட்ட மதமானது ஒரு சாதாரண மனிதன் முயற்சியால் அழிக்கப் பட்டு விடும் என்றும் இதனால் மனித சமூகத்தின் மேன்மை போய் விடும் என்றும் பயந்தே இம்மாதிரி விஷமப் பிரசாரம் செய்வதாயும், பலாத்கார செயல்கள் கூட செய்ய வேண்டி இருப்பதாயும் தீர்மானிக்க வேண்டி இருக் கிறது. இவ்விதமாக கடவுள் நம்பிக்கையின் பேரால், மத நம்பிக்கையின் பேரால் பலாத்காரச் செயல் - எதிர்ப் பிரசாரம் - விஷமப் பிரசாரம் ஆகியவை கள் செய்யப்படுவது பெரிதும் அறியாமையால் என்றோ, மதத்தையும் கடவுள் தன்மையையும் சரிவர உணராததினால் என்றோ அல்லது மதவெறி கடவுள் வெறி என்றோ சொல்லி விட முடியாது. ஏனெனில் கடவுளும் மதமும் உலகில்



RangaRakes tamilnavarasam.com

மக்கள் தோன்றிய காலமுதலே அவற்றிற்கு எதிரிடையான கருத்துடைய வர்களையும், அவற்றை ஒப்புக் கொள்ளாதவர்களையும் அரசாங்கமும், மத ஸ்தாபனக்காரர்களும் கொன்றும், சித்திரவதை செய்தும், தண்டித்தும், கொடுமை செய்தும் வந்திருப்பதானது கடவுள் மதம் சம்பந்தமான சரித்திரங்களாலும், பிரசார முறைகளாலும் நன்றாய் உணரலாம். இக்கொள்கை முறையை இன்னும் சில சமயக்காரர்களும் கையாண்டு வருவதையும் நம் போன்றவர்கள் கடவுள், மத நம்பிக்கைக்காரர்கள் என்பவர்களால் நடத்தப் படுவதையும் கொண்டு உணரலாம். ஆகவே இதன் கருத்து சுய நலமும் சோம்பேரி வாழ்க்கைப் பிரியமும் ஒழிய வேறில்லை.

## மதம்

மதம் என்பதும் "சர்வ வல்லமையும்" "சர்வ வியாபகமும்" உள்ள தாகச் சொல்லப்படும் கடவுள் உணர்ச்சியை மக்களிடம் பெருக்கவும், அதை நிலை நிறுத்தவும் ஏற்பட்ட ஸ்தாபனங்களாய் இருந்து வருகின்றனவே யொழிய மற்றபடி எந்த மதத்தாலாவது, அதைச் சேர்ந்த உலக மக்கள் வாழ்க்கையிலோ பொருளாதாரத்திலோ சுதந்திரமோ, சமத்துவமோ பெற்று, கேவலம் ஜீவனத்திற்காக மற்ற மனிதனுக்கு அடிமையாகாமல் வாழ்வதற்கு இடமளித்திருப்பதாய் காண முடியவில்லை. ஒரு மதக்காரனே தன் மதத்தைச் சேர்ந்த மற்றொருவனை அடிமைக் கொண்டிருக்கிறான். ஆனால் அவன் மத நம்பிக்கையென்பது "மக்கள் யாவரும் கடவுள் பிள்ளைகள்" "எல்லோரும் சமமானவர்கள்" என்று போதிப்பதாகத்தான் சொல்லுகிறான். ஆனால் ஏழை, பணக்காரன், கூலிக்காரன், எஜமான் என்கின்ற வித்தியாசம் எப்படி ஏற்பட்டது என்பதை மாத்திரம் உணரும்போது "எல்லாம் வல்ல கடவுள் சக்தியையும், சமத்துவ மத போதனையையும்" மறந்து விடுகின்றான்.

மதம் என்பது ஒரு போதை (தரும் - வெறி உண்டாக்கும்) வஸ்து என்று பல அறிஞர் கூறியிருப்பது போல் மதத்தின் ஆதிக்கத்தில் கட்டுண்டு இருப்பவர்களுக்கு ஆவேசமும், வெறியும் உண்டாவது தான் முக்கிய பலனாக இருக்கிறதேயொழிய அது கஷ்டப்படுகின்ற, ஒரு பாவமுமறியாத பாமர மக்களுக்கு காரியத்தில் இன்று என்ன நன்மை செய்திருக்கிறது? செய்கிறது? மதத்தால் மக்களுக்கு என்ன ஒழுக்கம் ஏற்பட்டிருக்கிறது? என்ற கேள்விக்கு ("இது மதத்துரோகமான கேள்வி" என்று சொல்லுவதல்லாமல் வேறு) எவ்விதமான பதிலும் சொல்லுவதற்கு இடம் காணவில்லை.

எல்லா மதங்களும் கடவுள் அருளால், கடவுள் அம்சம் பெற்ற வர்களால், அவரால் அனுப்பப்பட்டவர்களால் ஏற்பட்டதாகச் சொல்லப் பட்டாலும் ஒரு மதத்திற்கும், மற்றொரு மதத்திற்கும் நடப்பு, வேஷங்கள், சடங்குகள் ஆகியவைகளுடன் மற்றும் பல முக்கிய விஷயங்களில் பெருத்த மாறுபாடும், துவேஷமும், வெறுப்பும் சிறிதாவது காணப்படுவானேன், என்பதைப் பார்த்தால் ஒன்றா பத்து மதங்கள் இருந்தால் அதில் ஒன்று



உண்மை போக பாக்கி ஒன்பது மதங்கள் பொய்யாகத் தான் இருக்க வேண்டும். அல்லது ஒவ்வொரு மதமும் வெவ்வேறு கடவுள் அருளால் ஏற்பட்டதாயிருக்க வேண்டுமேயொழிய ஒரே கடவுள் அருளால் ஏற்பட்ட தாயிருக்காது. எப்படியிருந்தாலும் சர்வசக்தி, சர்வ வல்லமை, சர்வ வியாபகம் உள்ள ஒரு கடவுள் அருளால் எந்த மதமாவது ஏற்பட்டது என்று சொல்வது பகுத்தறிவுக்கும், விவகாரத்திற்கும் நிற்காத காரியமேயாகும் அன்றியும் ஒரேமதத்தை அனுசரிக்கிற மக்கள் எல்லோரும் ஒரே மாதிரி நடக்கிறார்கள் என்று சொல்லுவதற்கோ, அல்லது மதசக்தியானது மக்கள் யாவரும் ஒரே மாதிரி நடத்தப்பட பயன்படுகின்றது என்று சொல்லுவதற்கோ இடமில்லா மல்தான் எல்லா மதங்களும் இருந்து வருகிறது. ஏனெனில் ஊருக்கு ஒரு விதம் வகுப்புக்கு ஒரு விதம் நடப்பதுடன் வெளிப்படையாகவே ஒரே ஊரில் ஒரே மதக் கொள்கைக்கு பல வித வியாக்கியானங்களும் ஏற்பட்டு இருப் பதுடன் நடப்புகளும் எண்ணங்களும் வேறுபட்டிருக்கின்றன. ஒரு சமயம் இப்படி மாறுபட்டு நடப்பவர்கள் எல்லோரும் மூட மக்கள் என்றும், மதத்தை சரிவர உணராதவர்கள் என்றும் சுலபமாய் சொல்லி விடலாம். ஆனாலும் அந்த மதத்தை நம்பி அதை தலைமுறை தலைமுறையாக பின்பற்றி வந்த மக்களின் கதி அதுதானா என்பதும் அம்மதத்திற்கு உள்ள சக்தி அவ்வளவு தானா? என்பதுமாவது யோசிக்க வேண்டிய முக்கிய விஷயமல்லவா? என்று கேட்கின்றேன்.

## எது எப்படியிருந்தாலும்

எது எப்படியிருந்த போதிலும் முன் குறிப்பிட்ட அதாவது "சர்வ சக்தி சர்வ வியாபகம் சர்வ தயாளத்துவம் கொண்ட கடவுளால்" சிருஷ்டிக்கப் பட்டவர்களாகவும் "சர்வ சமரசம் கொண்ட மதத்தை"ப் பின் பற்றியவர் களாகவும் உள்ள மக்களுக்குள் ஒருவன் ரிக்ஷா வண்டி இழுத்து கஷ்டப் படவும், ஒருவன் அதின் மேல் சுகமாய் உட்கார்ந்து சவாரி செய்யவும், ஒருவன் கிரீடத்தை அணிந்து பல்லாக்கில் சவாரி செய்யவும் 16 பேர்கள் முக்கி முக்கி சுமந்து செல்லவும் அக்கடவுளும் மதமும் எப்படி அனுமதித்தது என்ற கேள்விக்கு "அது நமக்குத் தெரியாது சர்வ சக்தி உள்ள கடவுள் செயல்" என்பதைத் தவிர இது வரை எந்த கடவுள் நம்பிக்கைக் காரரும் மத நம்பிக் கைக்காரரும் வேறு பதில் சொன்னதாகத் தெரியவில்லை. ஒரு சமயம் இச் செய்கைக்கு முறையே ஒருவனின் அதாவது "ரிக்ஷா வண்டியிழுப்பவனின் முட்டாள்தனமும், சவாரி செய்பவனின் அயோக்கியத்தனமும்" என்று பதில் சொல்லக் கூடுமானாலும் சர்வசக்தியும் சர்வ வியாபகமும் சர்வ தயா பரத்துவமும் உள்ள கடவுளுக்கும் சர்வ மனித சமூக சமத்துவமாகிய மதத் திற்கும் தன்னை ஏற்றித் துதித்துப் பின்பற்றும் மக்களின் இம்மடமையையும், அயோக்கியத் தனத்தையும் நிறுத்த முடிய வில்லை என்பதாவது விளக்குகின்றதா இல்லையா? என்பதை பொருமையோடு பகுத்தறிவுடன் நடுநிலையில் இருந்து யோசித்துப் பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

## சற்று கவனியுங்கள்

தோழர்களே இங்கு சற்று கவனியுங்கள். என்னவென்றால் மேல் சொன்ன கடவுள் உணர்ச்சியும் மத உணர்ச்சியும் மேற்சொன்ன மடமையையும் அக்கிரமத்தையும் ஒழிப்பதற்குச் சிறிதும் பயன் படாமலிருப்பதோடு அம் மடமையையும், கொடுமையையும் நிலை நிறுத்துவதற்கும், அமுல் நடத்துவதற்கும் பயன்பட்டு வருகின்றதா இல்லையா என்பதை பரிசுத்த நிலையிலிருந்து யோசித்துப் பாருங்கள்.

கடவுள், மத உணர்ச்சியானது மக்களின் சுதந்திரத்திற்கும் சமத்துவ வாழ்விற்கும் இவ்வளவு இடையூறுகளுக்கும் தார தம்மியங்களுக்கும் இடந்தராதிருக்குமானால் நான் அவைகளைப் பற்றி இவ்வளவு கவலை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. கடவுள், மத பிரசாரத்தின் பேரால் வயிற்றுப் பிழைப்பு நடத்த வேண்டியவர்களின் பரிதாபத்திற்காகவாவது சும்மா விட்டு விடுவேன் என்பதை நம்புங்கள். ஏனெனில் ஒரு மனிதன் அனாவசியமாய் அர்த்தமும் குறிப்பும் அற்ற வார்த்தைக்காக பைத்தியம் பிடித்திருந்தாலொழிய போராடிக் கொண்டிருக்க முடியாது. ஆனால் அதனால் பாமரமக்கள் சமூகத்திற்கு விளையும் கெடுதியைப் பார்க்கும் போது உண்மையான உணர்ச்சி உள்ளவன் அதை ஒழிக்கப் போராடாமல் இருக்க முடியாது.

## கவலையில்லை

கடைசியாக "உலக உற்பத்திற்கும் இயற்கைத் தோற்றங்களுக்கும் நடப்புக்கும் ஏதாவது ஒரு காரணப் பொருள் இருக்க வேண்டாமா" என்று கேட்பதின் மூலம் எப்படியாவது ஒரு சக்தி உண்டு என்பதை ஒப்புக் கொள்ளச் செய்து அதிலிருந்தே ஒரு கடவுளை கற்பிக்க முயற்சிகள் செய்யப்படுவதையும் அத்தோடேயே சர்வசக்தி, சர்வ வியாபக கடவுள் நம்பிக்கைக் காரர்கள் திருப்தி அடைந்து விடுவதையும் பிறகு அதை அஸ்திவாரமாக வைத்துப் பெரிய ஆகாய கோட்டைகள் கட்டுவதையும் பார்த்திருக்கிறேன். உலக உற்பத்திக்கும் அதில் காணப்படும் தோற்றங்களுக்கும் நடப்புகளுக்கும் விஞ்ஞானம் என்னும் சைன்சை தொடர்ந்து கொண்டே போனால் சமாதானம் கிடைக்கலாமானாலும் பிறகு "சைன்ஸ்சுக்கு யார் கர்த்தா" என்கின்ற கேள்வியும் பிறக்கும். அதை இதுவரை எந்த அறிவாளியும் கண்டு பிடிக்கவில்லை என்று பதில் சொன்னால் "அதுதான் கடவுள்" என்று சொல்லி திருப்தி அடைவார்கள். அப்படியானால் அந்தக் கடவுளுக்கு யார் கர்த்தா அவர் எப்படி உண்டானார், அவரின் நடவடிக்கைக்கு என்ன காரணம் என்பதான கேள்விகளை முன்னைய விஷயங்களுக்கு போடப்பட்ட கேள்விகளைப் போலவே, போட்டோமானால் அப்படிப்பட்ட கேள்வி கேட்கக் கூடாது என்றும், கடவுளும், சக்தியும் தானாக உண்டானதென்றும் அதற்குக் கால வரை இல்லையென்றும் சொல்லுவார்கள். அச்சமாதானத்தால் நாம் திருப்தியடையாவிட்டால் அல்லது இது உங்களுக்கு எப்படித் தெரிந்தது என்று கேட்டால் (அல்லது கடவுள் தானாக உண்டாகும் போது இயற்கை தானாக உண்டாகாதா என்று கேட்டால்) உடனே நம்மை நாஸ்திகன் என்று சொல்லி விடுவார்கள். இந்த மாதிரி நிலையில் தான் ஏதோ யூகத்தின் மீது அதுவும் "ஏதாவது ஒரு காரணம் இருக்க வேண்டாமா" என்கிற யூகத்தின் மீதே "இதுவாயிருக்கலாம் அல்லது அதுவாயிருக்கலாம்" என்கின்ற பொறுப்பற்ற நிலையில் கற்பிக்கப்பட்ட ஒரு கடவுள் என்பதைப் பற்றி நாம் சிறிதும் கவலைப் படுவதில்லை.

## பொறுப்பு ஏற்றுவது

ஆனால் அப்படிப்பட்டதின் மீது மனித வாழ்க்கையின் பொறுப்புகளை சுமத்துவதும், அதை வணங்குவது, தொழுவது, பிரார்த்தனை செய்வது என்பதும், அதை வணங்கினால் பிரார்த்தித்தால் தொழுதால் அதற்காக நேரத்தையும் அறிவையும் பணத்தையும் செலவு செய்தால் பயன் பெறலாம் என்பதும் பிரதிபலன் உண்டென்பதும் பாவங்கள் மன்னிக்கப் படுமென்பதும், மற்றும் மனிதனால் தன் சுயநலத்திற்காகவும் சோம்பேரி வாழ்க்கைப் பிரியத்திற்காகவும் பிறருக்குச் செய்யப்படும் சூட்சிக்கும் அக்கிரமத்திற்கும் கடவுள் செயலே காரணம் எனச் சொல்லி ஏமாற்றுவதைப் பார்த்தால் பிறகு எப்படிப்பட்ட கடவுள் உணர்ச்சியானாலும் அது எங்கிருந்த போதிலும் அதை அழித்தே தீர வேண்டியிருக்கிறது.

## திருடனுக்கும் கடவுள்

அன்றியும் திருடப் போகிற ஒரு திருடன் தான் திருடப் புறப்படு முன் தனக்கு "நல்ல திருட்டுக் கிடைக்க வேண்டும்" என்று கடவுளை பிரார்த்தித்து விட்டுப் புறப்படுகிறான். நல்ல திருட்டுக் கிடைத்தவுடன் அதில் ஒரு சிறு பாகத்தை கடவுளுக்கும் அதன் திருப்பணிகளுக்கும் செலவு செய்து கடவுள் உணர்ச்சியை அனுபவிக்கிறான். இது போலவே ஒரு கொலைகாரனும் தான். விடுதலை அடையக் கடவுளைத் துதித்து விடுதலையடைந்த உடன் கடவுளுக்கு பூசை அபிஷேக முதலியது செய்து நன்றி செலுத்துகிறான். இது போலவே சொத்துக்களை வைத்திருக்கும் உடமைஸ்தனும் தனது சொத்துக்களைத் திருடர்கள் கொள்ளை கொள்ளக் கூடாது என்று கடவுளைப் பிரார்த்தித்து நன்றி செலுத்துகிறான். இது போலவே கடவுள் நம்பிக்கை உள்ள சகல சோம்பேரிகளும் செல்வவான்களும் கடவுள் பிரார்த்தனையின் மீதே தங்கள் வியாபாரத்தை நடத்துகின்றார்கள்.

ஆகவே கடவுள் செயலும் கடவுள் கருணையும் எவ்வளவு ஒழுக்க குறைவுக்கும் அநீதிக்கும் இடம் தருகின்றது என்று பாருங்கள். அவை இதைத் தவிர வேறு எதற்காவது பயன்படுகின்றதா என்றும் பாருங்கள்.


RangaRakes tamilnavarasam.com

## மத விஷயத்திலும்

மதம் என்றால் என்ன என்கிற விவகார காலத்தில் மதவாதிகள் "மனித சமூக வாழ்க்கை ஒழுங்காகவும் ஒரு கட்டுப் பாட்டிற்கு உள்பட்டும் நடை பெறுவதற்காக அனுபோகஸ்தர்களால் வகுக்கப்பட்ட திட்டங்களே மதம் என்றும், மதக் கொள்கைகள் என்றும் அவை காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்றவாறு திருத்திக் கொள்ளக் கூடியது என்றும் சொல்வதுடன் அதற்கு உதாரணமாக அவ்வப்போது பல சீர்திருத்தவாதிகள் தோன்றி புதிய திட்டங்கள் ஏற்படுத்த சீர்திருத்தி இருக்கிறார்கள் என்றும் ஒரு சிலரால் சொல்லப்பட்டு இதுதான் மதம் என்பதின் அருத்தம் என்று சொல்லி அதனிடம் நமக்குத் தகரார் இருக்கக் கூடாது என்கிறார்கள். அப்படியானால் அக்கொள்கைகளின் குண தோசங்களைப் பொருத்தும் அதனால் ஏற்படும் பயன்களைக் குறித்தும் யோசிக்கவும் திருத்தவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ளத் தயாராயிருக்க வேண்டும்.

அப்படிக்கில்லாமல் மதம் என்பது மனித சக்திக்கு மீறிய ஒரு சக்தியையுடைய மக்களால் ஏற்படுத்தப் பட்டது என்றும், அதன் கொள்கைகள் எல்லாம் எங்கும் எக்காலத்திற்கும் ஒரே மாதிரியாய் இருக்கத்தக்கது என்றும், அவைகளில் எக்காலத்திலும் எவ்வித மாற்றமும் ஏற்படுத்த எவருக்கும் உரிமை இல்லை என்றும், அதனால் யாருக்கு எவ்வளவு கெடுதி இருந்த போதிலும் பயனில்லாத போதிலும் பின்பற்றித் தான் ஆக வேண்டும் என்றும் சொல்லப்படுமானால் அப்படிப் பட்ட மதத்தை நாம் சிறிதும் ஒப்புக் கொள்ள முடியாது என்பதுடன் அவ்வித மூட அடுக்கு முறை உணர்ச்சியை கொண்ட மதத்தை என்ன விலை கொடுத்தாவது அழித்தாக வேண்டும். ஏனெனில் அவை மனித சமூக முற்போக்கை தடை செய்வதுடன் மனித சமூக ஒற்றுமைக்கும் சுதந்திரத்திற்கும் சம உரிமைக்கும் இடையூராய் இருக்கின்றன.

மற்றும் மதத்தின் பேரால் அநேக அற்புதங்களும், இயற்கைக்கும் மனித சக்திக்கும் மீறிய காரியங்களும் பலர் செய்ததாகவும் கதைகள் கட்டி மக்களை மூடர்களாகவும், மூட நம்பிக்கைகாரர்களாகவும் ஆக்கப்பட்டு வருகின்றதுடன் ஏராளமான பொருளும் முயற்சியும் நேரமும் மனித சமூக நன்மைக்கும் சமத்துவத்துக்கும் உபயோகப்படாமல் பாழாக்கப் படுகின்றன. அன்றியும் அறிவும் ஆராய்ச்சியும் கட்டுப் படுத்தப்பட்டு அடிமையாக்கப் படுகின்றன. இவ்வளவு கேட்டை எப்படி சகித்துக் கொண்டிருக்க முடியும், ஏன் சகிக்க வேண்டும் என்று யோசித்துப் பாருங்கள்.

## தேசீயம்

தேசீயம், தேசீயம் என்பதும் முற்கூறியவைகளை போன்ற ஒரு போலி உணர்ச்சிதான். ஏனெனில் தேசீய உணர்ச்சி என்பதானது இன்று உலக பொது மக்கள், அதாவது உலகில் எங்கும் பெரும்பான்மையாய் இருந்து வரும்



மக்கள் தொழில் இன்றியும், தொழில் செய்தாலும் ஜீவனத்திற்கும் வாழ்விற்கும் போதிய வசதிகள் இன்றியும் கஷ்டப்படும் ஒரு உண்மையை மறைப்பதற்கும் மற்றும் அப்படிப்பட்ட கஷ்டப்படும் மக்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய நிலைமைக்கு பரிகாரம் தேடுவதை தடைப் படுத்தவும் ஆங்காங்குள்ள செல்வந்தர்களால் அதிகாரப் பிரியர்களால் சோம்பேறி வாழ்க்கை சுபாவிகளால் கற்பிக்கப்பட்ட சூக்ஷியாகும். தேசீயம் என்பதும் மனிதனுக்கு ஒரு மயக்கமும் வெறியும் உண்டாக்கும் வார்த்தையாக ஆகிவிட்டது.

## தேசம் என்றால் எது?

தேசம் என்றால் எது? உலகப் பரப்பு ஐந்து கண்டங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றது. ஒவ்வொரு கண்டத்திற்கும் பல தேசங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு தேசத்திற்கும் பல மாகாணங்கள் இருக்கின்றன, ஒவ்வொரு மாகாணத்திற்கும் பல ஜில்லாக்களும், மற்றும் பல உட்பிரிவுகளும் இருக்கின்றன. இவைதவிர ஒவ்வொரு கண்டத்திலும், தேசத்திலும் மாகாணத்திலும் பல மாதிரியான பிறவிகளும், பல ஜாதிகளும், பல பாஷைகளும், பல மதங்களும், பல உட்பிரிவுகளும், பல பழக்க வழக்கங்களும் இருக்கின்றன. இவை அவரவர்களுக்கு தெய்வக் கட்டளை என்றும் மதக் கட்டளை என்றும் தேசீய கொள்கை என்றும் தங்கள் வாழ்நாளில் எப்பொழுதும் மாற்ற முடியாது என்றும் இவைகளில் எதையும் காப்பாற்ற உயிர் விட்டாவது முயற்சிக்க வேண்டும் என்றும் கருதிக் கொண்டிருப்பதாகும். இவற்றின் பயனாய் மக்கள் ஒருவருக்கொருவர் வேற்றுமை உணர்ச்சி கொண்டிருப்பதை நன்றாய் பார்க்கின்றோம். அன்றியும் உலகத்தில் உள்ள தேசம் முழுவதிலும் உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி, ஏழை – பணக்காரன், கீழ் நிலை – மேல் நிலை, கஷ்டப்படுகின்றவன் – கஷ்டப்படுத்துகிறவன் முதலிய கொடுமைகள் இருந்தும் வருகின்றன. இவற்றுள் என்ன கொள்கைமீது எப்படிப்பட்ட மக்கள் எவ்வளவு விஸ்தீரணத்தை பிரித்துக் கொண்டு தங்களுக்கென தனித்த தேசம் தேசீயம் என்ற ஒன்றைச் சொல்லிக் கொள்ளுவது என்பது எனக்கு புரிய வில்லை. நமது தேசம் என்று எந்த விஸ்தீரணத்தையும் தன்மையையும் தனிப்படுத்திக் கொண்டு பேசினாலும், அதிலுள்ள தன்மைகள் என்னென்னவோ, அதிலுள்ள மனிதர்களின் நிலை என்னென்னவோ, அதுதான் மற்ற எந்த தேசம் என்பதிலும் நாடு என்பதிலும் இருந்து வருகிறது. நாம் குறிப்பிடும் தேசத்தில் உள்ள பெரும்பான்மையான மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகின்றவர்களாகவும் தாழ்மைப் படுத்தப்பட்டவர்களாகவும் இருந்து வருகின்றார்களோ அவ்வளவு நிலையில் தான் மற்ற தேசத்தார் என்கின்ற மக்களும் இருந்து வருகிறார்கள். நம்முடைய தேசம் என்பதிலுள்ள எந்த விதமான மக்களின் துயரம் நீக்கப் பாடுபடுகின்றோம் என்கின்றோமே, அந்த விதமான துயரம் கொண்ட மக்கள் அன்னிய தேசம் என்பதிலும் இருந்துதான் வருகின்றார்கள். நம்முடைய தேசீயம் என்பதிலேயே எந்த விதமான மக்கள் சோம்பேறிகளாகவும் சூழ்ச்சிக் காரர்களாகவும், செல்வவான்களாகவும் அரசாங்க



RangaRakes tamilnavarasam.com

ஆதிக்கக் காரர்களாகவும், குருமார்களாகவும் இருந்து பெரும்பான்மையான பொது ஜனங்களை பல சூழ்ச்சிகளால் அடக்கி ஆண்டு அடிமைகளாக்கி பட்டினி போட்டு வதைத்து தாங்கள் பெருஞ் செல்வம் சேர்த்து வாழ்ந்து சுகபோகம் அனுபவித்து வருகின்றார்களோ அது போலத்தான் அன்னிய தேசம் என்பதிலும் சிலர் இருந்து அந்நாட்டு பெரும் பான்மையான மக்களை கொடுமைப்படுத்தி வருகின்றார்கள். இந்த நிலைமையில் என்னக் கொள்கையைக் கொண்டு எந்த லட்சியத்தைக் கொண்டு உலகப் பரப்பில் ஒரு அளவை மாத்திரம் பிரித்துத் தேசாபிமானம் காட்டுவது என்று கேள்க்கின்றேன்.

துருக்கி தேசத்துக்கும், இந்தியா தேசத்திற்கும் சண்டை வந்தால் இந்திய இஸ்லாமியர்களுக்கு தேசாபிமானம் இந்தியாவுக்கா? துருக்கிக்கா? ஹைதரா பாத்துக்கும் மைசூருக்கும் யுத்தம் தொடங்கினால் ஹைதராபாத் இந்தியர்கள் தேசாபிமானம் மைசூருக்கா? ஹைதராபாத்துக்கா? ஆகவே தேசம் தேசாபி மானம் என்கின்ற வார்த்தைகளும் கடவுள் மதம் என்பது போன்றே ஒரு வகுப்பாருடைய சுய நலத்திற்கு ஏற்ற ஒரு சூழ்ச்சி வார்த்தை என்று சொல்ல வேண்டியிருப்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை. முடிவாகக் கூறும் பட்சத்தில் தேசாபிமானம் என்பது ஒவ்வொரு தேச முதலா ளியும் மற்ற தேச முதலாளிகளுடன் சண்டை போட்டு தங்கள் தங்கள் முதலை பெருக்கிக் கொள்ள ஏழை மக்களை - பாமர மக்களை பலி கொடுப்பதற்காக கற்பித்துக் கொண்ட தந்திர வார்த்தையாகும்.

உதாரணமாக இங்கிலாந்து தேச முதலாளிகள் அமெரிக்கா நியூயார்க் தேச முதலாளிகளுடன் சண்டை போட்டு வெற்றி பெற்று தங்கள் செல்வத்தை மேலும், மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்கின்ற ஆசை ஏற்பட்டால் அல்லது நியூயார்க் முதலாளிகள் வேறு தந்திரத்தின் மூலம் இங்கிலாந்து தேசத்துக்கு முதலாளிகளின் செல்வத்தை கொள்ளை கொள்ள முயற்சிப் பதாயிருந்தால் இங்கிலாந்து தேசத்து முதலாளிகள் இங்கிலாந்து தேசது ஏழைமக்களையும் பாமர மக்களையும் பார்த்து "ஓ இங்கிலாந்து தேசீய வீரர் களே, தேசாபிமானிகளே தேசத்துக்கு நெருக்கடி வந்து விட்டது. இங்கிலாந்து மாதா உங்கள் கடமைகளைச் செய்ய அழைக்கிறாள் ஓடி வாருங்கள், ஓடி வாருங்கள்" என்று கூப்பாடு போடுவார்கள். கூலிகளை அமர்த்தியும் வயிற்றுப் பிழைப்பு பத்திரிகை காரர்களுக்கு எலும்பு போட்டும் பிரசாரம் செய்விப்பார்கள். இது போலவே அமெரிக்க முதலாளியும் தன் தேசம் நெருக்கடி நிலையில் இருப்பதாகவும் அமெரிக்க மாதா அங்குள்ள பாமர மக்களையும், வேலையில்லாமல் வயிற்றுக் கஞ்சிக்கு வகையில்லாமல் பட்டினி கிடக்கும் ஏழை மக்களையும் தங்கள் கடமையைச் செய்ய அழைப்ப தாகவும், கூவிக் கொண்டு கூலி கொடுத்து பிரசாரம் செய்வார்கள். இரண்டு தேச ஏழை மக்களும் மற்றும் சாப்பாட்டிற்கு அறவே வேறு வழியில்லாத மக்களும் கிளர்ச்சியில் சேர்ந்தும் பட்டாளத்தில் சேர்ந்தும் துப்பாக்கியை



தூக்கிக் கொண்டு சண்டைக்குப் போய் ஒருவரை ஒருவர் சுட்டுக் கொன்று கொள்ளுவார்கள் சிறைப்பிடிப்பதின் மூலம் இரு தேச சிறையையும் நிரப்பி விடுவார்கள். கணக்குப் பார்த்தால் இரு கக்ஷியிலும் பத்து லக்ஷக் கணக்கான மக்கள் உயிர் விட்டிருப்பார்கள். பிறகு இருவரும் ராஜியாகப் போயோ அல்லது யாராவது ஒருவர் ஜெயித்தோ இருப்பார்கள்.

ஜெயம் பெற்றவர்களுக்கு முதலோடு முதல் சேரும், அல்லது தங்கள் முதல் என்றும் குறையாத மாதிரியில் பத்திர மேற்பட்டிருக்கும். ஆனால் சுட்டுக் கொண்டு செத்தவர்களுக்கு சுடுகாடும் அவர்கள் பெண் ஜாதிகளுக்கு சிறு பிச்சையும் அல்லாமல் மற்ற ஏழை மக்களுக்கு என்ன பயன் என்பதை யோசித்துப் பாருங்கள். அமெரிக்கா குடி அரசு நாடாவதற்கும் அன்னிய ஆக்ஷியைத் துரத்துவதற்கும் அமெரிக்க ஏழைமக்கள் தொழிலாளி மக்கள் எவ்வளவு பாடு பட்டிருப்பார்கள் எவ்வளவு உயிர்ப்பலி கொடுத்திருப்பார்கள் என்பதை அமெரிக்கா "விடுதலைச் சரித்திரத்தை புரட்டிப் பாருங்கள். இன்று அதன் பயனாக உலகில் அமெரிக்காவிலேயே அதிகமான செல்வவான் களும், வியாபாரிகளும், விவசாயப் பெருக்கும் இருந்து வருகின்றன. ஆனால் ஏழைகள் படும் கஷ்டமும் வேலையில்லாத பட்டினியும் தொழிலாளிகள் அனுபவிக்கும் கொடுமையும் அமெரிக்காவில் இன்றைய தினம் இருந்து வருவது வேறு எந்த நாட்டிற்கும் குறைந்ததல்ல.

தோழர்களே! அமெரிக்கா தேசாபிமானத்தின் தன்மையும் அதன் பயனையும் சிந்தித்துப் பாருங்கள். அமெரிக்கா அன்னிய ஆக்ஷியை ஒழித் தாலும் ஒரு அரசனையே விரட்டி விட்டு "குடிகளின் ஆக்ஷி" ஏற்படுத்திக் கொண்டதாலும் ஏழைமக்களுக்கு என்ன பயன் ஏற்பட்டது என்பதை மற்றொரு தரம் யோசித்துப் பாருங்கள்.

இந்த லங்கையில் இருந்து கொண்டு இந்திய தேசாபிமானம் பேசும் தேசீய வீரர்களைப் பற்றி சற்று சிந்தித்துப் பாருங்கள், அவர்கள் ஏறக்குறைய அத்தனை பேருக்கும் 100க்கு 90 பேர் இந்தியா முதலிய தேசத்தில் இருந்து வந்து இலங்கை தேசத்தை சுரண்டிக் கொண்டு போக இருக்கிறவர்களும் அவர்களுக்கு உதவியாளர்களாய் - அடிமைகளாய் இருப்பவர்களும் ஆகும்.

லேவாதேவிகாரர்கள் பெரிதும் மாதம் 100க்கு 12 வரை வட்டி வாங்கி ஏழை மக்களையும் இலங்கை வாசிகளையும் பாப்பராக்கி கொள்ளை கொண்டு போக வந்தவர்களும், விவசாயக்காரர் பெரிதும் இலங்கை பூமி களை ஏராளமாய் கைப்பற்றி விவசாயம் செய்து கூலிகள் வயிற்றில் அடித்து பொருள் சேர்த்து கொள்ளை கொண்டு போக வந்தவர்களும், வியாபாரிகள் கொள்ளை லாபம் அடித்து இலங்கை செல்வத்தை கொள்ளை கொண்டு போக வந்தவர்களும், உத்தியோகஸ்தர்கள் இலங்கை ஆக்ஷியில் வந்து புகுந்து இலங்கையர்களின் அனுபவத்தில் மண்ணைப் போட்டு பணம் சுரண்டிக் கொண்டிருக்கும் படித்த கூட்டத்தாரும் ஆணவம் பிடித்த வன்னெஞ்ச



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனர்களுமாகக் கூடிக் கொண்டு இந்திய தேசாபிமானக் கூப்பாடு போடுகின்றார்கள்.

வெள்ளைக்காரனான அன்னியன் 100 –க்கு வருஷம் 6 வட்டிக்கு கொடுத்தால் கருப்பனான அன்னியன் 100க்கு மாதம் 6 வட்டிக்கு கொடுக்கிறான். வெள்ளையன் பணக்காரர்களிடம் வட்டி வாங்கினால் கருப்பன் ஏழைகளிடம், கூலிகளிடம் வட்டி வாங்கி கொடுமைப் படுத்துகிறான்.

இந்தப் படி மக்களை சதித்து கொள்ளை அடிப்பவர்களே (வெள்ளையரிலும், கருப்பர்களிலும்) எங்கும் கடவுளபிமானம் மதாபிமானம் தேச அபிமானம் பேசுகிறார்கள்.

ஆகவே இவ்விஷயங்களை அதாவது கடவுள், மதம், தேசம், என்கின்ற விஷயங்களை இனி அறவே மறந்து விடுங்கள். அவை ஒரு நாளும் கஷ்டப்படும் மக்களுக்குப் பயனளிக்காது, உலகில் ஏழை பணக்காரன் என்று இரண்டு வகுப்புக்கள் இருக்கவும் ஏழைகளைத் தொழிலாளிகளை, பணக்காரரும் சோம்பேரிகளும் வஞ்சித்து நிரந்தரமாய் வாழவும் தான் பயன்படும்.

## முடிவு

தோழர்களே! முடிவாக ஒன்று கூறுகிறேன். சரீரத்தினால் நெற்றி வியர்வை சொட்ட கஷ்டப்படும் மக்களை பாருங்கள்,. வேலை இல்லாமல் திண்டாடும் மக்களையும், அவர்களது பெண்டுபிள்ளைகளின் பட்டினியையும், கொடுமையையும் பாருங்கள். வீடு வாசல் இல்லாமல் மூட்டை முடிச்சுகளை தலையில் சுமந்து கொண்டு கஞ்சிக்கு ஊர் ஊராய்த் திரியும் கூலி மக்களைப் பாருங்கள். இவ்வித மக்கள் உலகில் எங்கெங்கு யார் யாரால் கஷ்டப்படுத்தப் படுகிறார்கள் என்பதையும் பாருங்கள். உயர்ந்தவன் – தாழ்ந்தவன், பார்ப்பான் – பறையன், முதலாளி – தொழிலாளி, குரு – சிஷ்யன், மகாத்மா – சாதாரண ஆத்மா, அரசன் – குடிகள், அதிகாரி – பிரஜை என்பவை முதலாகிய பாகுபாடுகளை இடித்துத் தள்ளி தரை மட்டமாக்குங்கள். அதன் மீது தேசம், மதம், ஜாதி என்கின்ற பாகுபாடு இல்லாததும், மனித சமூகம் சமஉரிமை – சமநிலை என்கின்ற கட்டடத்தை கட்டுங்கள். இதைச் செய்ய நீங்கள் உலகில் உள்ள கஷ்டப் படும் எல்லா மக்களுடனும் ஜாதி, மதம், தேசம் என்கின்ற வித்தியாசம் இல்லாமல், பிரிவினைக்கு ஆளாகாமல் ஒன்று சேருங்கள். அப்போது நீங்கள் கண்டிப்பாய் வெற்றி அடைவீர்கள்.

தேசபக்தி தேசீயம் என்னும் சூழ்ச்சியானது பல வருஷங்களாக மக்களை அன்னிய நாட்டு நடப்புகளையும் அன்னிய நாட்டு மக்கள் நிலைமையையும் உணர முடியாமல் செய்து வந்த காரணமே உலக ஒற்றுமை ஏற்பட முடியாமல் இருந்து வருகின்றது.



## தெளிவாய் சொல்ல வேண்டுமானால்

“அன்னிய ஆட்சி” “சுயாட்சி” என்பதெல்லாம் அறவே ஏழை மக்களுக்கு பயனற்றதும் சூழச்சி நிறைந்ததுமேயாகும். சுயாட்சி உள்ள நாட்டிலும், சுயராஜ்யம் உள்ள ஊரிலும் ராஜாவே இல்லாத குடி அரசு தேசத்திலும் பணக்காரன் கொடுமையும், பாதிரியின் சூழ்ச்சியும், ஏழைகளின் கஷ்டமும், பாமர மக்களின் மடமையும் இருந்துதான் வருகின்றது. கடவுள் பக்தியும் மத பக்தியும் தேசாபிமானமும் நிறைந்து ததும்பும் நாடுகளிலும் இக்கொடுமைகள் இருந்துதான் வருகின்றது. கடவுளுக்காகவும், மதத்துக்காகவும் கோடான கோடி ரூபாய் செலவளித்து பலி கொடுத்து பக்தி செலுத்தி வரும் நாட்டிலும் இக்கொடுமைகள் இருந்துதான் வருகின்றன. ஆனால் கடவுள், மதம், தேசீயம் ஆகியவைகள் அழிக்கப்பட்ட அடியோடு இல்லாத இடங்களில் மாத்திரம் பணக்காரக் கொடுமையும், சோம்பேரி வாழ்க்கையும், பட்டினி கஷ்டமும், உயர்வு தாழ்வு நிலையும் காணப் படவில்லை.

அவ்வூராருக்கு கடவுள் மத தேச அபிமானம் இல்லை. மனித சமூக சமத்துவ அபிமானம் மாத்திரமே பிரதானமாய் காணப்பட்டது. அங்கு பணக்காரன் – ஏழை, முதலாளி – தொழிலாளி, அதிகாரி – குடி ஜனங்கள் என்கின்ற வித்தியாசமே காணப்படவில்லை.

அங்குள்ள சகல சொத்திற்கும் அங்குள்ள சகல மக்களும் சம சுதந்திர முள்ளவர்களாய் இருந்து வருகிறார்கள். எல்லா மக்களுக்கும் சரி அளவு வேலையும், போதுமான ஆகாரமும் சுக சௌகரியமும் இருந்து சமமாய் அனுபவிக்கப்பட்டு வருகிறது. “நாளைக்கு என் செய்வது” என்ற கவலையே இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். கடவுளும் மதமும் இல்லாததால் அந்நாடு பூமிக்குள் அமிழ்ந்து போக வில்லை.

அந்நாட்டு மக்களுக்கு ஆண் பெண் அடங்கலுக்கும் ஏற்பட்ட தைரியமும், உயிருக்குத் துணிந்த வீரமும் சமத்துவ உணர்ச்சியும் கடவுளையும் மதத்தையும் நம்பிய தேசாபிமானமுள்ள எந்த நாட்டாரிடமும் காண முடியாதாயிருக்கிறது. நமது நாட்டிலே சகல பொருப்பையும் கடவுள் மீது போட்டுவிட்டு சோம்பேறி ஞானம் பேசுபவர்களே மலிந்து இருக்கிறார்கள். நமது தலைவர்கள் என்பவர்களோ அதைச் சாதிக்கிறேன் இதை செய்கிறேன் என்று பேசி மக்களை ஏய்த்து பயன் அடைவதும், முடியாவிட்டால் கடவுள் மீது பழிபோட்டு நழுவிக் கொள்ளுவதுமானவர்கள். கடவுள் மீது நம்பிக்கையுள்ள நமது மக்கள் வீரமோ ஒரு சிறு உண்மை தியாகம் செய்ய வேண்டி ஏற்பட்டாலும் “நான் எதற்கும் தயார்தான் ஆனால் எனக்கு எதாவது கஷ்டம் வந்து விட்டால் என் பெண்டு பிள்ளைகளுக்கு என்னகதி என்றுதான் யோசிக்க வேண்டியிருக்கின்றது” என்ற அளவோடு நிற்கக் கூடியதாகும். கடவுளை நம்பாதவர்களும், கடவுள் மீது எவ்வித பொருப்பும் போடாத



RangaRakes tamilnavarasam.com

வர்களு மாயிருக்கிறவர்களும், கடவுள் உணர்ச்சியை அடியோடு ஒழித்து கொண்டவர்களுமான மக்கள் உள்ள நாட்டில் "நாளைக்கு என்ன கதி" என்கின்ற பேச்சேகிடையாது. ஒவ்வொருவரும் தன்னம்பிக்கை உடையவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

அந்த நிலைமைதான் "நம் நாட்டுக்கும் மற்றும் உலக மெங்கும் வேண்டும். அதற்காகவே வாலிபர்கள் எல்லோரும் உழைக்க வேண்டும். அதுவே இப்போது நமது முன்னணியில் இருக்கும் வேலையாகும்.

**புரட்சி வாழ்க!**
**பொதுவுடமை ஓங்குக!**

*குறிப்பு : ஐரோப்பா, ஆப்பிரிக்கா தேசங்களில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு 17.10.1932 இலங்கை அடைந்து அங்கு சுற்றுப் பயணம் செய்து, கொழும்பு கண்டி, நாவல் பட்டிய, . . . . ஹட்டன், யாழ்ப்பாணம், பருத்தித்துரை, தூத்துக்குடி, மதுரை முதலிய இடங்களில் பல ஸ்தாபனங்களின் சார்பாக கொடுக்கப்பட்ட சுமார் 20 வரவேற்பிலும் பொதுக்கூட்டங்களிலும் பேசிய சொற்பொழிவு தொகுப்பு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 20.11.1932**



# கோயில் நுழைவும் ஒற்றுமை மகாநாடும்

இன்று "இந்திய தேசீய துறையில் கோயில் நுழைவு பிரசாரத்திற்கும் ஒற்றுமை பிரசாரத்திற்கும்" தான் அதிக விளம்பரங்கள் காணப்படுகின்றன ஏனெனில் தோழர் ராம்சே மாக்டானால்டு அவர்களின் வகுப்புப் பிரச்சினை தீர்ப்புக்காக வென்று தோழர் காந்தியவர்களால் செய்யப்பட்ட பட்டினியின் பிரசாரம் பொது ஜனங்களின் மனதை கவரும் படி செய்து விட்டது. மற்றொரு புறம் வைசிராய் அவர்களின் அடக்குமுறை பெருவாரியான தேசபக்தர்கள் என்பவர்களுக்கு தேசீய வேலை செய்ய இடமில்லாமல் செய்து விட்டதால் எப்படியாவது ஒரு புதியத் துறையைக் கண்டு பிடிக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டு விட்டது. ஆகவே இவ்விரண்டின் பயன்களால் கோவில் நுழைவும் ஒற்றுமை மகநாடும் உச்சஸ்தானம் பெற்று விட்டன.

இக்காரியங்கள் இரண்டும் இன்று தேசீயத்திற்காகவே செய்யப்படுவதாய் கூறப்பட்டும், அந்தப்படி மக்களை நம்பும் படியும் செய்திருந்தாலும் நாம் அதை ஒப்புக் கொள்ள முடியாது. ஏனெனில் தேசீயம் என்பதின் தத்துவம் எப்படி இருந்த போதிலும் இன்றையதினம் தேசீயத்திற்காக வென்று இவ்வளவு பாடுபடுகின்றவர்கள் தோழர் ராம்சே மாக்டனால்ட் தீர்ப்புக்கு முன் இவ்விஷயங்களில் இவ்வளவு பாடுபட்டிருந்தால் அதற்கு ஏதாவது ஓர் அர்த்தமுண்டு என்று சொல்லலாம். அப்படிக்கில்லாமல் வட்ட மேஜை மகா நாட்டில் "எல்லா வகுப்புகளுக்கும் நாங்கள் தான் பிரதிநிதிகள், எதைப் பற்றியும் பேச எங்களுக்குத் தான் உரிமை உண்டு. மற்றவர்களெல்லாம் சரியான பிரதிநிதிகள் அல்ல, சுயராஜ்யம் கொடுத்து விட்டால் வகுப்புத் தகராறுகள் எல்லாம் தானே தீர்ந்து விடும், வகுப்புத் தகராறுக் கெல்லாம் சர்க்காரரே காரணம், தாழ்த்தப் பட்டவர்களுக்கு எங்கள் உயிர் போனாலும் தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்க சம்மதிக்க மாட்டோம்" என்பதாக வெல்லாம் சொல்லிய பின் சர்க்காரே பிரவேசித்து வகுப்புத் தகராறு விஷயத்தில் தங்கள் தீர்ப்புகளை ஏதோ ஒரு விதத்தில் கொடுத்து அந்த வகுப்பு மக்களை தங்கள் சுவாதீனம் செய்து கொண்ட பிறகு இப்போது அவர்களை தங்கள் பக்கம் இழுக்கக் கருதி சர்க்கார் கொடுத்ததைவிட தாங்கள்அதிகமாய் கொடுப்பதாகச் சொல்லுவது போல் பேசி சில ஏற்பாடுகளையும் செய்து கொண்டு கோவில் நுழைவைப் பற்றியும் ஒற்றுமையைப் பற்றியும் பேசினால் இதில் நாணையம்



RangaRakes tamilnavarasam.com

இருப்பதாய் யார்தான் நம்புவார்கள். இதை இந்து சமூகம் செய்யும் இந்து மதப் பிரசாரம் என்று சொல்லாமல் பொது நல நன்மையான காரியம் என்று எப்படி சொல்ல முடியும்? ஏனெனில் தோழர் ராம்சே மாக்டனால்டின் தீர்ப்பானது தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித் தொகுதியின் மூலம் தனிப் பிரதிநிதித்து வம் கொடுத்ததானது அவர்களை (தாழ்த்தப்பட்ட மக்களை) நாளடைவில் இந்து சமூக அடிமை வாழ்விலிருந்து பிரித்து பொது சமூக வாழ்வில் ஒரு அளவு சுதந்திரர்களாக ஆக்கி விடுகிறது. அதாவது மக மதியர்களுக்கு சுமார் 20 வருஷங்களுக்கு முன் கொடுக்கப்பட்ட தனித் தொகுதியானது எப்படி மகமதிய சமூகத்தை இந்து சமூகத்திலிருந்து நிரந்தரமாய் பிரிந்து விட்டதோ அதுபோலவே இந்த தாழ்த்தப்பட்ட சமூகமும் தனித் தொகுதி பெற்றால் கண்டிப்பாய் அது இந்து சமூகத்திலிருந்து பிரிந்தே போய்விட்டதாகத்தான் முடியும். ஆனால் மகமதிய சமூகம் தனித் தொகுதி பெற்ற பின்புதான் அது தன் காலிலேயே நிற்கக் கூடிய ஒரு பலத்தையும் சௌகரியத்தையும் பெற்றது என்பது எவராலும் மறுக்க முடியாததாகும். அது போலவே தாழ்த்தப்பட்ட சமூகமும் தனித் தொகுதி பெற்று விட்டால் அடுத்த 10 வருஷ காலத்திற்குள் அது மற்ற எவருடைய உதவியையும் தயவையும் எதிர்பாராமல் தன் காலிலேயே நிற்கக் கூடிய பலத்தையும் சௌகரியத்தையும் பெற்று விடும் என்பதில் சிறிதும் சந்தேகிக்க இடமில்லை.

இவ்விரு சமூகமும் அதாவது மகமதிய சமூகமும், தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகமும் சமூகவாழ்வில் சுதந்திரம் பெற்று மற்றவர்களுடைய தயவும், பிச்சையும் அவசியமில்லாமல் தங்கள் தங்கள் கால்களிலேயே நிற்கும் படியான நிலைமை ஏற்பட்டு விட்டால் இந்து சமூகம் என்பதானது இன்று சொல்லிக் கொள்வது போல இந்தியாவில் "ஒரு பெரிய பலம் பொருந்திய சமூகம்" என்பதாகச் சொல்லிக் கொள்ள இடமில்லாமல் போவதோடு மகமதிய சமூகமும் தாழ்த்தப்பட்ட சமூகமும் அதனதன் சமூகக் கொள்கை யின் பயனாகக் கலந்து கொள்ள ஒன்றுக் கொன்று அன்னியோன்னியம் ஏற்பட்டு விட நேரும் போது இந்து சமூகம் சிறுபான்மை சமூகம் என்று சொல்லும் படியான நிலைமைக்கும் பரிகசிக்கத் தக்க நிலைமைக்கும் வந்து விடும். அதோடு மாத்திரமல்லாமல் இந்து சமூகத்தில் இருக்கின்ற காரணத்தில் இன்னும் எந்தெந்த உள் சமூகங்கள் சமூக வாழ்வில் சுதந்திரமும் சமத்து வமும் அற்று இழிவு படுத்தப் படுகின்றனவோ அவையெல்லாம் இப்படியே வெளிக் கிளம்பவும் நேரிட்டு விடும். அப்போது இந்து சமூகம் என்பது தானாகவே அழுவாரற்ற பிணமாய் ஒழிந்து விடும். இந்தக் காரணங்களா லேயே மக்களுக்கு சமூக வாழ்வில் சமத்துவமும், சுதந்திரமும் இல்லா விட்டாலுங்கூட இந்து சமூகம் மேன்மையாய் இருந்து ஆதிக்கம் செலுத்து வதை மாத்திரம் விட்டு விடக் கூடாது என்கின்ற இந்து சமூகத் தலைவர்கள் என்பவர்களின் எண்ணமே இந்த ஒற்றுமை மகாநாடுகளுக்கும், கோவில் நுழைவுக்கும் அஸ்திவாரமாய் இருந்து வருகின்றது.



தோழர் ராம்சே மாக்டனால்டின் வகுப்புதீர்ப்பு ஒழிந்து தனித் தொகுதி மாறி, பொதுத் தொகுதி நிலை நின்று அரசியலிலும் இந்து சமூகத்திற்கே ஆதிக்கம் வந்து விட்டது என்று ஆனவுடன் "கோவில் நுழைவு சுயராஜ்ஜியம் கிடைத்தப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றும்" "ஒற்றுமை என்பது சுயராஜ்ஜியம் கிடைத்த பிறகு தானாகவே ஏற்பட்டு விடும்" என்றும் தாராளமாய் சொல்லப்பட்டு விடும். பிறகு 'பழய குருடி கதவை திரடி' என்கின்ற நிலைமை ஏற்படுவதில் சந்தேகமிருக்க நியாயமில்லை.

தவிரவும் இந்த கோவில்களுக்கு செல்வாக்குகள் இருந்த காலத்தில் கோவில் நுழைவைப் பற்றி பேசுவது பெருத்த அபவாதமாகவும், மதத் துரோகமாகவும், கலகாஸ்பதமாகவும் இருந்து வந்தது. இன்றை தினம் உலகத்தில் கோவில்களுக்கு மதிப்பு குறைந்து சில தேசங்களில் கோவிலுக்கு போவது முட்டாள் தனம் என்று கருதப்பட்டும் சில தேசங்களில் கோவில்கள் இடிக்கப்பட்டும் போனபின்பும் நமது நாட்டிலும் கோவில்களின் புரட்டுகள் வெளியாகி அவற்றின் மதிப்பு குறைந்து அதன் பேரால் உயர் நிலையில் இருப்பவர்களுடையவும், வயிற்றுப் பிழைப்பு மதக் காரர்களுடையவும் யோக்கியதை வெளியாகி அவர்கள் மக்களால் வெறுக்கப்பட ஆரம்பித்த பிறகே தான் இப்போது கோவில் நுழைவு இவ்வளவு முக்கியஸ்தானம் பெற்று விட்டது.

கோவில் நுழைவு வெற்றி பெற்றால் இந்து சமூகம் சிறிது பலப்படும் என்றும் இன்னும் கொஞ்சகாலத்திற்காவது அதற்கு அழிவு வராமல் காப்பாற்றலாம் என்றுமே இப்போது கோவில் நுழைவுக்காரர்கள் கருதி வேலை செய்கிறார்களே யொழிய "சர்வ சமரச கடவுளின்" தரிசனத்தையும் அருளையும் தாழ்த்தப்பட்ட மக்கள் அடைய வேண்டும் என்பதாக ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டதற்காக அல்ல என்பதை சிறிது யோசனை உள்ளவர்களும் உணர்ந்து விடக் கூடும். அன்றியும் பகுத்தறிவையும் சம சுதந்திர நோக்கத் தையும் கொண்டு இப்போது கோவில் நுழைவுக்கு ஆதரவு தேட எவரும் வரவில்லை யென்பதும் கோவில் நுழைவு பிரசாரத்தின் உபன்யாசங்களையும் எடுத்துக் காட்டும் ஆதாரங்களையும் பார்த்தால் நன்றாய்விளங்கும் மற்றெதற் கென்றால் "மதத்தில் மத சாஸ்திரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் கோவில் நுழைவை ஆட்சேபிக்க இடமில்லை" என்றுதான் சொல்லப் படுகின்றது. ஆகவே மதத்தில் மதசாஸ்திரத்தில் ஆட்சேபனை இருந்தால் அவர்கள் கதி என்ன ஆவது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். மதத்தையும் மத சாஸ்திரத் தையும் பற்றி பேசி அடைகின்ற ஆதரவு நாணையமான தென்றோ, நிலைக்கக் கூடியதென்றோ நாம் ஒருக்காலும் சொல்லி விட முடியாது. ஏனென்றால் "இந்து மதத்தில்" ஆதரவு இருக்கின்றதா இல்லையா என்பது சுலபத்தில் முடிவு கட்டக் கூடிய காரியமல்ல. ஏனெனில் இந்து மதம் என்று ஒரு மத முண்டா? அதற்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட சாஸ்திரமோ ஆதாரமோ உண்டா என்பது போன்ற விஷயங்களும் விவகாரங்களும் யாவரும் அறிந்ததே



RangaRakes tamilnavarasam.com

யாகும். ஆனால் ஒரு சிலரின் நன்மைக்கு ஏற்ற விதமாக மாத்திரம் சௌகரியத் துக்கு தக்கபடி சமயத்திற்குத் தகுந்தபடி ஆதாரங்கள் தேடலாம், வியாக்கி யானங்கள் செய்து கொள்ளலாம் என்கின்ற சௌகரியம் மாத்திரம் இந்து மதம் என்னும் பேரால் இருந்து வருகின்றது. இந்த சௌகரியமும் சந்தர்ப்பமும் தீர்ந்த பிறகு எப்படி வேண்டுமானாலும் ஆதாரம் கிடைக்கக் கூடும். எப்படி வேண்டுமானாலும் வியாக்யானம் செய்யலாம். ஆதலால் இந்த ஆதரவைக் கொண்டு கோயிலுக்குள் நுழைய விடுவது என்பது ஆபத்தானது என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் இருத்தல் வேண்டும்.

சாதாரணமாய் தீண்டாமை முதலிய ஜாதி வித்தியாசத்திற்கு அஸ்தி வாரமாய் இருப்பது பொருளாதார தத்துவமேயாகும். பொருளாதார வித்தியாச தத்துவத்திற்கு ஆதாரமாய் இருப்பது மதமேயாகும். இந்த இரண்டும் இருக்கிற வரை ஒற்றுமைக் குறைவும், தீண்டாமைத் தன்மையும் ஏதாவது ஒரு வேஷத்தில் இருந்து கொண்டுதான் இருக்கும். தீண்டாமை முதலிய ஜாதி வித்தியாசமானது. ஏதோ முட்டாள் தனத்தினால் ஏற்படுத்தப்பட்டது என்று சொல்லுவது ஒரு நாளும் ஒப்புக் கொள்ள முடியாது. மற்றென்னவெனில் அது மிகவும் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட முன்ஜாக்கிரதையான சுயநல அயோக்கியத் தனத்தினால் ஏற்படுத்தப்பட்டதாகும். அந்நிலை கட்டுப்பாடாகவும் நிலையாகவும் இருப்பதற்கே சாஸ்திர ஆதாரங்களும் மதக் கோட்பாடுகளும் ஏற்படுத்தப் பட்டவைகளாகும். அன்றியும் இன்றையத் தினம் நமது நாட்டில் தீண்டாமையும், ஜாதி வித்தியாசமும் செய்யும் கொடுமையின் பயனெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பெரிதும் பொருளா தாரக் கொடுமையை விளைவிப்பதல்லாமல் மற்றபடி "கடவுள் தரிசனமும் மோட்ச சாதனமும்" கிடைக்காமலிருப்பதல்ல. அப்படிப்பட்ட, அதாவது பொருளாதாரத் துறையில் கொடுமை படுத்தப்பட்ட மக்களுக்கு கோவில் களில் உள்ள கடவுள் தரிசனத்தால் என்ன பயன் கிடைக்கக் கூடும்? ஏதோ அவர்கள் பாடுபட்டு சம்பாதித்த சிறிது பொருளையும் கோவிலுக்கு கொண்டு போய் கடவுள் தரிசனை என்னும் பேரால் தொலைத்து விட்டு அடிமைத் தன்மையையும் பொறுப்பற்ற தன்மையையும் பெற நேரிடுவதைத் தவிர வேறு என்ன லாபம் அடையக் கூடும்? ஆகவே இந்த கோவில் நுழைவுப் பிரசாரம் இப்போது கடவுள் பிரசாரத்துக்கும், மத பிரசாரத்துக்கும், சாஸ்திர புராண பிரசாரத்துக்கும்தான் அஸ்திவாரமாகப் பயன்படுகிறது. என்பதே நமது அபிப்பிராயம்.

நம்மைப் பொருத்தவரை நாம் "கோவில் பிரவேசம்" என்பதற்கு அனுகூலமாகத் தான் இருக்கின்றோம். எதற்காக என்றால் உயர்வு தாழ்வு மேல் ஜாதி, கீழ் ஜாதி என்பவற்றை நிலை நிறுத்தவும் மக்களுக்குள் கொள்வினை, கொடுப்பினை, உண்பன, தின்பன ஆகியவை இல்லாமல் பிரித்து வைக்கவும் அவற்றை அனுபவத்தில் நடத்தவும் நிலைநிறுத்தவும் ஏற்பட்ட பல சூழ்ச்சி ஸ்தாபனங்களில் கோவில் பிரவேசத்தடுப்பும் கோவிலுக்குள் ஏற்படுத்தப்



பட்டிருக்கும் பல வித்தியாசங்களும் முக்கியமானவைகளில் ஒன்று என்ப தாகத்தான் கருதி இருக்கிறோம். ஆதலால் அவற்றை ஒழிக்க கோவில் நுழைவு தடுப்பும் வித்தியாசங்களும் அழிக்கப் பட வேண்டியது அவசிய மாகும். ஆனால் அது பக்திக்காக என்றும் கடவுள் தரிசனைக்காவென்றும் சொல்வதையும் அதன் பேரால் மதம், சாஸ்திரம், புராணம் ஆகியவைகளை பிரசாரம் செய்து மக்களுக்கு மூட நம்பிக்கையை உண்டாக்க முயற்சிப்ப தையும் கண்டிக்காமல் இருப்பதற்கில்லை. ஒற்றுமை என்னும் விஷயத்திலும் மதம், மத வித்தியாசம் என்பவைகள் உள்ளவரை இரு சமூகத்திற்கு உண்மையான ஒற்றுமை என்பதைக் கண்டு பிடிக்க முடியாது. "சுய ராஜ்யம்" என்பது கிடைத்து விட்டாலும் உண்மையான ஒற்றுமை என்பது ஏற்பட்டு விடாது.

உதாரணமாக இன்றைய தினம் துருக்கியும் "சுயராஜ்யம்" பெற்ற நாடு, கிரீஸ் தேசமும் "சுயராஜ்யம்" பெற்ற நாடு. இரு நாடுகளுக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தால் கிரீசில் இருந்த இஸ்லாமியர்கள் பத்து லக்ஷக்கணக் காய் துருக்கிக்கு துரத்தப்பட்டு விட்டார்கள். துருக்கியிலிருந்து கிறிஸ்தவர்கள் பத்து லக்ஷக்கணக்காய் கிரீசுக்கு குடியேறி விட்டார்கள். ஆனால் இதற்கு சமா தானம் "அவர்கள் துரத்தப்பட வில்லை. தானாகவே அவரவர்கள் தேசத்திற்கு ஓடி விட்டார்கள்" என்று சொல்லக் கூடும். எப்படி யிருந்தாலும் அபிப்பிராய பேத மேற்பட்ட காலத்தில் மதம் காரணமாய் சொத்து சுகங்களை விட்டு விட்டு பெண்டு பிள்ளைகளை நாட்டை விட்டு ஓடும் படியாய் ஏற்பட்டு இன்று சாப்பாட்டிற்கில்லாமல் பட்டினியாய் கிடந்து தவிக்க நேரிட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

மற்றும் சில "சுயராஜ்ய" நாடுகளிலும் கத்தோலிக்கர்களுக்கும் புராட் டாஸ்டெண்டுகளுக்கும் அபிப்பிராய பேத மேற்பட்டு பல கொடுமைகள் அடைந்து வருகிறார்கள். இவற்றிற்கெல்லாம் அன்னிய ஆட்சி இருந்து கலகங்களையும் அபிப்பிராய பேதங்களையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற தென்றே சொல்லி விட முடியாது.

ஆகவே மக்களுக்குள் உண்மையான ஒற்றுமை ஏற்பட வேண்டு மானால் தீண்டாமை நீங்கி உண்மையான சமத்துவம் ஏற்பட வேண்டு மானாலும் மதங்கள் ஒழிந்து பொருளாதாரத் துறையில் மக்கள் எல்லோருக் கும் சமத்துவம் இருக்கும் படியான ஏற்பாடுகளுக்கு ஏற்ற காரியங்கள் செய்ய பட்டாலொழிய மற்றெந்த வழியாலும் சாத்தியப் பட கூடியதில்லை என்றே சொல்லுவோம்.

எனவே அதை விட்டு விட்டு ஒற்றுமை மகாநாடுகளுக்கும் கோவில் நுழைவு பிரசாரமும் செய்வது முற்கூறிய படி இந்து மதப் பிரசாரமும் சாஸ்திரப் புராணப் பிரசாரமும் என்றுதான் சொல்ல வேண்டிருக்கிறது. இம் மாதிரி பிரசாரங்களால் நாட்டிற்கோ, மனித சமூகத்திற்கோ ஒரு நன்மை



RangaRakes tamilnavarasam.com

யையும் செய்து விடமுடியாது. இரு சமூகங்களிலும் மேல் நிலையில் உள்ள அதிகாரம் பதவி பட்டம் செல்வம் ஆகியவற்றில் பற்றுக் கொண்ட சில மக்களை திருப்தி செய்யலாம். அவர்கள் சிறிது நாளைக்கு பாமர மக்களை ஏமாற்றி அடக்கி வைக்கலாம். இவ்வளவு தானே ஒழிய சமூக சமத்துவத் தையோ சமூக ஒற்றுமையையோ பொருளாதார சமத்துவத்தையோ நிலை நிருத்தி விட முடியாது.

அரசாங்கத்தாரும் தங்கள் சுய நலத்தை உத்தேசித்து இந்த தந்திரங் களுக்கு உடந்தையாயிருந்து தங்களது இரட்டைப் பங்குக்கு மோச மில்லாமல் நடந்து கொள்ளலாம். அரசாங்க கொள்கையெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்க ளும், ஏழைத் தொழிலாளிகளும் கிளர்ச்சி செய்யும் போது 'படித்தக் கூட்டத் தையும் பணக்காரர்களையும் ஆதரிப்பதற்கும் காப்பாற்றுவதற்குமே தாங்கள் இங்கு இருக்க வேண்டியதாய் இருக்கிறது' என்று சொல்லுவதும், படித்த மக்களும் பணக்காரர்களும் கிளர்ச்சி செய்யும் போது "பாமர மக்களின் நன்மைக்காக தாங்கள் இருக்க வேண்டியதாயிருக்கிறது" என்று சொல்லுவது மான தந்திரங்களை அனுசரித்தே ஆட்சி நடத்த வேண்டியவர்கள் ஆகி விட்டதால் அவர்கள் யாருக்கு எவ்வளவு பங்கு எதில் வேண்டுமானாலும் கொடுக்க சம்மதித்து தங்கள் பங்கை பெருக்கிக் கொண்டு வருகிறார்கள்.

எனவே தேசீயமும், ஒற்றுமையும், அரசாங்கமும், சீர்திருத்தமும் பொருளாதாரத்திலும் சமூக வாழ்விலும் சமத்துவமில்லாமல் இழிவு படுத்தப் பட்ட மக்களை அந்நிலையிலேயே நிலை நிறுத்தி மேல் நிலையில் இருந்து வாழக்கருதும் சோம்பேரிகளுடையவும் செல்வவான்களுடையவும் அரசாங்கங்களுடையவும் சூட்சிகளேயாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 20.11.1932**

20 குடி அரசு

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

### கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இதன் விலை அணா. 0—3—0

### இராமாயண ஆராய்ச்சி.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—3—0

### ஞானசூரியன்.

பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

### மநுநீதி மருமம்.

இதன் விலை அணா. 0—2—0

### இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இதன் விலை அணா. 0—2—0

### சுயமரியாதைத் தாலாட்டு.

இதன் விலை அணா. 0—2—0

### சோதிடப் புரட்டு.

இதன் விலை அணா. 0—2—0

### ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதன் விலை அணா. 0—2—0.

### சுயமரியாதைப்பாடல்.

இதன் விலை அணா 0—2—0.

### தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இதன் விலை அணா 0—3—0

### பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இதன் விலை அணா 0—4—0

### மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இதன் விலை அணா 0—3—0

### அகத்தியர் ஆராய்ச்சி.

இதன் விலை அணா 0—2—0

### கடவுளை நிந்திக்கும் சுயவர்கள் யார்?

இதன் விலை அணா 0 2—0

### கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.





RangaRakes tamilnavarasam.com

# ஹரிஜனங்கள்

இந்திய தேசீயம் என்னும் சுயராஜ்ய முயற்சி தோல்வியடைந்தவுடன் இந்து மதப்பிரசாரம் தொடங்கப்பட்டு அதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருவது யாரும் அறியாததல்ல.

உண்மையைச் சொல்லுமிடத்து இந்திய தேசீயமென்பதே இந்து மத ஆதிக்கமே தவிர வேறல்ல. இக்கருத்தை இதற்கு முன் பல தடவைகளில் விளக்கியிருக்கின்றோம். இந்திய தேசீயம் இந்து மத ஆதிக்கத்திற்கு பாடுபடுகின்றது என்று நன்றாய் விளங்கியதால் தான் இந்து மதத்தின் காரணமாய் உயர் நிலையில் இருப்பவர்களான 100க்கு 90 வீதமுள்ள பார்ப்பனர்கள் காப்பிக் கடை, வக்கீல், குமாஸ்தா உள்பட யாவரும் தேசீயப் பிரசாரத்தை நடத்துகிறார்கள். அதோடு மாத்திரமல்லாமல் மத உணர்ச்சியால் தான், மதத்தின் கற்பனையின் பயனாகத் தான் தாங்கள் செல்வவான்களாக இருக்க முடிகின்றது என்று கருதிய செல்வவான்கள் எல்லோரும் இந்த தேசீய முயற்சிக்கு கோடிக் கணக்கான ரூபாய்களை உதவி வருகின்றார்கள். அதற்கு பிரதி உபகாரமாகவே தான் இந்திய தேசீயத்தில் முக்கிய கொள்கையாக, **"மதத்தையும், மத ஆதாரங்களையும் காப்பாற்றப்படும்"** என்றும், எல்லா மதங்களினுடைய எல்லா ஆதாரங்களையும் எல்லா மதசம்பந்தமான பழக்க வழக்கங்களையும் காப்பாற்றப்படும் என்றும் உறுதி கூறுவதாக திட்டம் போட்டுக் கொண்டார்கள். இதன் பயன் எல்லா மதங்களுக்கும் சமமானது தான் என்பதாகக் காணப்பட்டாலும், பலர் அந்தப்படியே நம்பியிருந்தாலும், மேற்கண்ட கொள்கைகள் அமுலில் இருக்கும் வரை இந்து மத சமூகம் என்பது தான் எப்போதும் மெஜாரிட்டியாகவும், மற்ற மத சமூகங்கள் என்பது எப்போதும் மைனாரிட்டியாகவுமே இருந்து வருவதற்கு ஏதுவாய் இருக்கும். எப்படி ஆன போதிலும் இம்மத பாதுகாப்புகள் என்பவை மேல் ஜாதிக் காரனையும் பணக்காரர்களையும் காப்பாற்றவும் நிலை நிறுத்தவும் பலமான ஆயுதமாக இருந்து வரப் போகின்றனவே தவிர, பல மதங்களிலும் உள்ள தாழ்த்தப் பட்ட மக்களையும், ஏழை மக்களையும் கூலித் தொழிலாளி என்ற மக்களையும் ஈடேற்றச் செய்யப் போவதில்லை என்பதோடு வேறு வழியில் ஈடேற முயர்ச்சித்தாலும் அதைத் தடைப்படுத்தவே பயன் படப்போகிறது என்பது மாத்திரம் உறுதி.



அன்றியும் இன்றைய தேசீய மதப்பிரசாரகர்களும் இந்த விஷயங்கள் தெரிந்து தான் தங்களின் இன்றைய உயர் நிலைக்கும், செல்வ நிலைக்கும் ஆபத்து வந்து விடக் கூடாது என்று கருதியே அவசர அவசரமாக மதப் பாதுகாப்பையும் மத ஆதார பாதுகாப்பையும் வெகு நாளைய பழக்க வழக்க பாதுகாப்பையும் அரசியல் திட்டத்தில் புகுத்தி பந்தோபஸ்த்து செய்து கொண்டார்கள்.

தாழ்ந்த ஜாதி என்பது ஒழியவேண்டுமானால் உயர்ந்த ஜாதி என்பது ஒழிய வேண்டாமா? ஏழ்மைத் தன்மை ஒழிய வேண்டுமானால் பணக்காரத் தன்மை ஒழிய வேண்டாமா? என்பது நடு நிலையில் இருந்து நியாயக் கண்களுடன் பார்த்தால் மூடனுக்கும் விளங்காமல் போகாது. ஆகவே மதம் வேண்டும், சாஸ்திரம் வேண்டும், வர்ணாசிரம தர்மம் வேண்டும், இவ்வளவும் போராமல் வெகு நாளைய பழக்க வழக்கங்களும் வேண்டும். இவ்வளவு மாத்திரம் அல்லாமல் இந்தியாவிலுள்ள சுதேச சமஸ்தான அரசர்களும் அவர்களது ஆட்சிகளும் இருக்க வேண்டும் என்றும் தீர்மானித்துக் கொண்டால் பிறகு சுயராஜ்ஜியம் என்பது என்ன அது யாருடைய நன்மைக்கு பயன்படக் கூடியது என்பது யோசிக்க தக்க விஷயமல்லவா? என்று கேள்க்கின்றோம்.

தோழர் காந்தியுள்பட "சுதேச சமஸ்தான அரசர்கள் இந்தியாவில் இருக்க வேண்டியது சரி" என்று ஒப்புக் கொண்ட பிறகு வட்ட மேஜை மகா நாட்டிலும் ஏற்றுக் கொண்ட பிறகு சுயராஜ்யம் என்பதன் பொருள் என்ன என்பது சிறிது யோசித்தாலும் விளங்காமல் போகாது.

ஆகவே வரப்போகும் சுயராஜ்ஜியத்தில் மதம், சாஸ்திரம், ஜாதி, அரசன், முதலாளி, தொழிலாளி, ஹரிஜனங்கள் ஆகியவைகள் இருக்கும் என்பதும் அந்நிலைகள் காப்பாற்றப்படும் என்பதும் மறுக்க கூடியதல்ல.

தோழர்களே! தேசீய சமதர்ம வாதிகளே இப்படிப்பட்ட சுயராஜிய முயற்சிக்கு - தேசீய முயற்சிக்கு மக்களுக்குள் சகல துறைகளிலும், ஒற்றுமையும் சமத்துவமும் வேண்டும் என்பவர்கள் ஒத்துழைக்க வேண்டியதா? அல்லது தடையாய் இருந்து அம்முயற்சிகளை முறியடிக்க வேண்டியதா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

சென்ற வாரம் நாம் குறிப்பிட்டபடி ஒற்றுமை மகாநாட்டில் என்ன செய்ய முடிந்தது? "இந்து மதத்திற்கு விரோதமாய் இருக்கக் கூடாது, அதைக் குற்றம் சொல்லக் கூடாது' அதன் மோசத்தையும் சூழ்ச்சிகளையும் வெளியிடக் கூடாது" என்கின்ற ஒப்பந்தத்தை மகமதியர்களிடம் பெற்றுக் கொண்டு அதற்கு பதிலாக அவர்களுக்கு ஏதோ சில பிச்சைகள் போல் கொடுத்து ஏமாற்றப் பட்டு விட்டது. அங்கு கூடியிருந்த முஸ்லீம்கள் உண்மையிலேயே சமதர்ம வாதிகளாய் இருந்திருப்பார்களானால் அவர்கள் எந்த விதத்தில் இந்த



RangaRakes tamilnavarasam.com

ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட்டிருக்க முடிந்தது என்பதே நமது கேள்வி? இந்து மதத்தில் உள்ள ஊழல்களும், மோசங்களும், கொடுமைகளும், சூழ்ச்சிகளும் அவர்களுக்குத் தெரியாதா? அம்மதத்தால் 100க்கு 90 மக்கள் பலர் கீழ் ஜாதியாயும், பலர் ஏழைகளாயும், பலர் கூலிகளாயும், பலர் பிச்சைக்காரர் களாகவும் இழிவு படுத்தப்பட்டு கஷ்டப்படுவதும் தெரியாதா?

மகமதிய மதம் தன் சமூகத்தை மாத்திரம் தான் காப்பாற்ற வேண்டியது. அதற்காகவே மற்ற மத மக்கள் எவ்வளவு இழிவும், கொடுமையும் படுத்தப் பட்டாலும் அதற்கு சம்மதித்து பயன் பெற்றுக் கொள்ள வேண்டியதும் என்றுதான் போதிக்கின்றதா? என்று கேள்க்கின்றோம். ஆகவே இந்து முஸ்லீம் ஒற்றுமையானது இந்திய சமூக ஏழை மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பெருத்த ஆபத்தாகவும் எவ்வகையாலும் வேறு வித சிபார்சோ ஆதரவோ வருவதற்கு இடமில்லாமலும் செய்து விட்டது என்பது தான் நமது முடிவு,

அது போலவே பூனா ஒப்பந்தமும் தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்தில் அவர்கள் வெகுகாலமாக கஷ்டப்பட்டு வாதாடி சிறிது கூட இந்து சமூக உயர் நிலை மக்கள் என்பவர்களின் உதவியே இல்லாமல் - அவர்களது எதிர்ப் பையும் சமாளித்து ஏதோ சிறிது தலை தூக்கிப் பார்க்க அடைந்த நிலையை பெரிய பாராங்கல்லைத் தூக்கி அதன் தலையில் போட்டு கசகச வென்று நசுங்கும் படி செய்தது போல் நாசமாக்கப்பட்டு விட்டது. போதாக்குறைக்கு மறுபடியும் என்றென்றைக்கும் தலை தூக்க அவர்களுக்கு ஞாபகமே உண்டாகாதபடி அவர்களுக் கிடையில் கடவுள் பிரசாரமும் மதப் பிரசாரமும் செய்ய புகுந்தாய் விட்டது.

இது "குதிரை கீழே தூக்கிப் போட்டது மல்லாமல் புதைக்க குழியும் தோண்டிற்றாம்" என்ற பழமொழிப் படியே ஆகிவிட்டது. எப்படியெனில் தாழ்த்தப்பட்டவர்கள் அல்லது தீண்டப்படாதவர்கள் என்கின்ற சமூகத்தார் தங்களை உயர்ந்த ஜாதியார் என்பவர்களிடம் இருந்து பிரித்து தங்களுக்குத் தனித்த தொகுதி வேண்டும் என்று கேழ்ப்பதற்கு ஏற்பட்ட காரணம் தான் என்ன?

இந்து சமூகத்துள் தாங்கள் கலந்திருந்தால் தாங்கள் விடுதலை அடைந்து மனிதனாக வாழமுடியாதென்றும், அதற்கு காரணம் இந்து சமூக மதக் கொள்கைகள் என்றும் உணர்ந்தே தென்னாடு முதல் வடநாடு பஞ்சாப் வரையில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் தாங்கள் இந்து மதஸ்தர்கள் அல்ல என்று சொல்லிக்கூடத் தங்களுக்கு தனித்தொகுதி கேட்டார்கள். அப்படிப் பட்டவர்களை இந்துக்கள் தான் என்று சொல்லச் செய்து அவர்கள் தனித் தொகுதியையும் கெடுத்து அவர்களுக்கு ஹரிஜனங்கள் என்று பெயரும் கொடுத்து, அவர்களுக்குள் மதப்பிரசாரம் செய்வது என்பது எப்படிப்பட்ட கொடுமையான காரியமாகும்? என்பதை வாசகர்களே உணர்ந்து கொள்ளவும்.



அவர்களுக்கு ஹரிஜனங்கள் என்று பெயர் சூட்டியதானது அவர் களை எந்த வழியிலாவது தீண்டப்படாதார் அல்லாதவர்கள் என்று குறிப்பிட இடமிருக்கின்றதா என்று பாருங்கள். பறையர் என்றாலும் ஆதி திராவிடர் என்றாலும் ஹரிஜனங்கள் என்றாலும் இவைகளில் எது உயர்ந்த பெயராகும். இந்த மூன்று பெயர்களையும் நினைக்கும் போதே தீண்டாதவர்களுக்கு இடப்பட்ட பெயர் என்றுதான் புலப்படுகின்றதே தவிர இவற்றுள் அவர்கள் தீண்டப்படாதவர்கள் அல்ல என்பதற்கு என்ன அடையாளம் இருக்கிறது.

ஒரு சமயம் இந்துக்கள் அல்லாதவர்கள், மகமதியர்கள், புத்தர்கள் என்று பெயர் வைத்திருந்தாலாவது மற்றக் காரியங்களில் எப்படி இருந்தாலும் தீண்டாதவர்கள் என்கின்ற எண்ணம் தோன்றாதவாறு மறைவு படலாம். அப்படிக்கில்லாததால் இதை "பட்டுக்குஞ்சம் கட்டிய துடப்பக் கட்டை" என்பதுபோல் ஹரிஜனங்கள் என்ற பெயர் இருக்கின்றது என்று தான் சொல்ல வேண்டும். அன்றியும் ஆதிதிராவிடர் என்ற பெயராவது தீண்டாதவர்கள் என்பதை மறைக்காவிட்டாலும் இந்த நாட்டின் பழங்குடிமக்கள் என்ற கருத்தையாவது கொண்டிருக்கின்றது என்பதாக எண்ண இடமுண்டு.

ஆனால் இந்த "ஹரிஜனங்கள்" என்பது அவர்களுக்கு தீண்டாதார் என்ற பட்டத்தை மறைக்காமல் போவதோடு (ஏனெனில் அந்தப் பெயரானது தீண்டப்படாதாருக்கு தோழர் காந்தியால் வைக்கப்பட்ட பெயர் என்பது தெரியாமல் போகாது) ஹரி என்கின்ற ஒரு கடவுளை பூஜிப்பவர்கள் என்றும் அதற்கு பக்தி செய்ய வேண்டியவர்கள் என்றும் ஏற்பட வேண்டியதாய் இருக்கின்றது. தோழர் காந்தி ஒரு வைணவர் ஆனதாலும் தோழர் ராஜ கோபாலாச்சாரியார் ஒரு வைணவர் ஆனதாலும் தங்கள் மதத்தைப் பெருக்க வைணவக் கடவுள் பெயரைக் கொடுக்க வேண்டியதாய் விட்டது.

"சைவ ரத்தம் ஓடும் சைவர்களான சைவ" தேசீயவாதிகள் இதை எப்படிப் பொருத்துக் கொண்டிருக்கின்றார்களோ நமக்கு தெரியவில்லை.

நிற்க,

தீண்டாமை விலக்கு பிரசாரம் என்பதாக பெயரை வைத்து வட நாட்டு பணக்காரர்களிடமும் மதக்காரர்களிடமும் லக்ஷக்கணக்கான பணத்தை வசூல் செய்து தென்னாட்டில் (திருச்சியில்) தீண்டாமை மகாநாடு கூட்டி ஒவ்வொரு ஊர்களிலும் கமிட்டிகள் ஏற்படுத்தி அவைகளுக்கு பணத்தை வினியோகித்து பெரிய பிரசாரங்கள் செய்யப் போவதாய்த் தீர்மானித்திருக் கிறார்கள். இதன் பிரசார வேலைத் திட்டம் என்ன என்பதை தோழர்களே "தேசீய சமதர்மவாதிகளே" சற்று சிந்தித்துப் பாருங்கள். "ஜாதி இந்துக்களிடை யேயும் ஹரிஜனங்கள் இடையே **"ஹரி கதைகள் பஜனைகள் செய்வது"** மேஜிக் லண்டர்ன் படக் காக்ஷிகளுடன் பிரசாரங்கள் செய்வது துண்டு பிரசுரம் வழங்குவது" என்பதாகும்.



RangaRakes tamilnavarasam.com

(இது 23 – 11 – 32 தேதி இந்தியா பத்திரிகையில் 10வது பக்கம் 2வது கலத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அன்றியும் இது அகில இந்திய தீண்டாமை விலக்கு சங்கத் தமிழ் நாட்டு ஸ்தாபன காரியதரிசியால் அனுப்பப் பட்ட உத்தியோக தோரணையான அறிக்கையாகும்).

ஆகவே தேசீயத்தின் போக்கு என்ன? தீண்டாமை விலக்கின் இரகசியம் என்ன? ஹரிஜனங்கள் என்ற பட்டத்தின் சூக்ஷி என்ன என்பதை இப்போதாவது சிந்தித்துப் பாருங்கள்.

**குடி அரசு – தலையங்கம் – 27.11.1932**



# தோழர் எஸ். ராமநாதன்

தோழர் ராமநாதன் அவர்கள் ஐரோப்பாவிலேயே தங்கிக் கொண்ட விஷயத்தைப் பற்றி பல பத்திரிகைகள் பல விதமாக எழுதி பொது ஜனங் களுக்குள் ஒரு வித தப்பு அபிப்பிராயத்தை உண்டு பண்ண முயற்சிப்பதாய் தெரிய வருகின்றது. அது என்னவெனில்

1. தோழர் ராமநாதன் கையில் ஒரு காசு கூட கொடுக்காமல் அவரை காயலாவுடன் பிரான்ஸ் ஆஸ்பத்திரியில் விட்டு விட்டு ஓடி வந்து விட்டதாக ஒரு கூற்று.

2. தோழர் ராமநாதனை மார்சேல்ஸ் நடுத் தெருவில் கையில் ஒரு காசு கூட இல்லாத நிலையில் விட்டு விட்டு வந்ததாக மற்றொரு கூற்று.

3. தோழர் ராமநாதனை மார்சேல்ஸ் தெருக்களில் ஒரு காசு கூட நான் கொடுக்காமல் விட்டு விட்டு வந்து விட்டதாகவும், ஆனால் தன்கையில் தன் தங்கை எவ்வளவோ கஷ்டப்பட்டு சேர்த்து வைத் திருந்ததை அனுப்பி இருப்பதாகவும், அது சிறு தொகை – செலவுக்கு போராதது போலவும், குறிப்பிட்டு இங்கு ஒரு கனவானை தனக்கு கடனாக 300 ரூபாய் அனுப்பும்படி கேட்டுக் கொண்டிருப்பதாய் மற்றொரு கூற்றும். இன்னும் பல.

மேல் கண்ட இவைகளை யெல்லாம் நிரூபிக்க தோழர் ராமநாதனால் எழுதப்பட்ட கடிதங்கள் என்பதாக சில பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கடிதங்களேயாகும்.. அவையாவன

1. 4. 11. 32 தேதி தாருல் இஸ்லாம் உப தலையங்கம்.

“எமது நண்பர் ஒருவருக்குத் திரு. எஸ். இராமநாதன் அவர்கள் எழுதிய கடிதத்திலிருந்து, அவர்கள் ஜினீவாவில் (ஸ்விட்ஜர்லாந்து) இருப்பதாகவும், பிரான்சில் அவரை ஆஸ்பத்திரியில் விட்டு விட்டு, தோழர் ஈ. வெ. ராவும், ராமும் ருஷ்யா போய் விட்டதாகவும் செய்தி எட்டியது.”



RangaRakes tamilnavarasam.com

மற்றொன்று ஜினிவாவிலிருந்து,

2. "நாயக்கரது வருகையைப் பற்றி தெரிந்திருப்பீர்கள் என்று நினைக் கிறேன். கையில் ஒரு காசு கூட இல்லாத நிலையில் அவர் மார்செய்லஸ் வீதிகளில் என்னை விட்டு விட்டு வந்து விட்டார். அது அவருடைய சுபாவம், ஆகையால் அதைப் பற்றிக்குறை கூறுவதற்கில்லை. என்னுடைய சகோதரி சேகரித்து அனுப்பக் கூடிய சிறிய தொகையைக் கொண்டு கஷ்டத்துடன் நாட்களைக் கழித்து வருகின்றேன். தங்களுக்கு வேறு பலவித செலவு இருக்குமென்பது தெரிந்தாலும், தாங்கள் இது சமயம் ரூ. 300 கடனாகக் கொடுக்க கடமைப் பட்டுள்ளீர்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொகையை தங்களால் அனுப்ப முடியாதிருந்தால் கூடுமானதையாவது அனுப்ப வேண்டுகிறேன்" என்பதாகும்.

இவற்றை சிலர் நம்பியும், சிலர் நம்பாமலும், இதன் உண்மைதான் என்னமாய் இருக்கக் கூடும் என்பதை அறிய ஆசைப்பட்டும் இருப்பதாக தெரிய வருகிறது.

இதைப் பற்றி இது சமயம் மிகச் சுருக்கமாகவே விளக்கினால் போதும் என்று கருதுகிறேன். ஏனெனில் தோழர் ராமநாதன் இங்கு பக்கத்தில் ஆஜர் இல்லை என்பது ஒரு புறம் இருந்தாலும் மேல்கண்ட கூற்றுகளைப் பொருத்த வரையில் தான் பொது ஜனங்களும் உண்மை அறிய ஆசைப் படுவார்கள் ஆனதினாலும் பத்திரிகைகளில் காணப்பட்ட மேற்கண்ட கூற்றுக்கள், அவை தானாகவே ஒன்றுக் கொன்று முரணாய் இருப்பதை வாசகர்கள் கூர்ந்து கவனித்தாலே ஒருவாறு உண்மை உணரலாம். ஆனதினாலும், மற்றும் அதைப் பரப்ப முயற்சிக்கின்றவர்களின் மனப் போக்கை கவனித்துப் பார்த்தால் என்ன கருத்துடன் இந்த பிரசாரம் செய்யப் படுகிறது என்பது தெளிவாகுமான தினாலும் வெகு சுருக்கத்திலேயே இருப்பது நலம் என்று கருதுகிறேன்.

தோழர் ராமநாதன் காயலாவுடன் எந்த ஆஸ்பத்திரியிலும் விட்டு விட்டு வரப்படவில்லை என்பது அவர் கடிதங்கள் என்பவைகள் ஒன்றிலி ருந்தே வெளிப்படுகிறது. அவர் கையில் ஒரு காசு கூட இல்லாமல் விட்டு விட்டு வரப்படவில்லை என்பதும் அவரது கடிதங்கள் என்பவைகளின் மற்றொன்றிலிருந்து விளங்குகின்றது. ஆகவே பிரசாரத்திற்கு ஆதாரமான இரண்டு கூற்றுகளும் உண்மையில்லை என்பதை நான் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. ஆனால் தோழர் ராமநாதனால் எனக்கு எழுதப்பட்ட இரண்டு கடிதத்தை இதில் பிரசுரிக்கிறேன்.

அவ்விரண்டு கடிதத்தையும் பார்த்தால் ஒன்று தோழர் ராமநாதன் இந்தியாவுக்கு வர இஸ்டப்படவில்லை என்பதும், நாம் அழைத்தும் அதை மறுத்திருப்பதும், என்னை மாத்திரம் தனியாய் இந்தியாவுக்குப் போகும்படி வலியுறுத்தி இருப்பதும் விளங்கும். (இதன் காரணம் அவரது குடும்பத்தாருக் கும் நெருங்கிய நண்பர்களுக்கும் தெரியும்) மற்றொன்று நான் இந்தியா வந்து சேர்ந்த பிறகு தோழர் ராமநாதனால் ஜினிவாவிலிருந்து எழுதி இருப்பது விளங்கும். அவையாவன:-





Madrid Hospital
17-8-1932

நமஸ்காரம்,

எனக்கு உடம்பு கொஞ்சம் சௌக்கியமாய் விட்டபடியால் உடுப்பு தேவையாய் இருக்கிறது. அதற்கு சவுக்காரம் போடாதவைகளை வீட்டுக் காரியிடம் கொடுத்து போடச் சொல்லி காயவைத்து ஒரு செட் பூட்ஸ் Socks உடன் அனுப்பி வைக்க வேண்டுகிறேன். கை பையில் Brush Paste சவரம் பண்ணிக் கொள்ள கத்தி பெட்டி சோப்பும் கடிதம் எழுத காகிதம், கவர், பென்சில், ஸ்டாம்பும் அனுப்ப வேண்டுகிறேன். அவ்விடமுள்ள என் புஸ்தகத் தில் Bertrand Russel அனுப்புவது நலம்.

**தாங்கள் எனக்காக காலம்கடத்தாமல் மேல் கொண்டு போவதே சரி என்று மறு படியும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.**

இங்கு வேலைக்காரர்களுக்கு ஏதாவது கொடுப்பது வழக்கமாகையால் சில்லரை கொஞ்சம் அனுப்ப வேண்டுகிறேன்.

**ராமநாதன்.**

*குறிப்பு:- இந்த ஆஸ்பத்திரி மாட்ரிட்டுக்கு 6 மைல் தூரத்தில் Tetuan victorias என்ற இடத்தில் கட்டப்பட்டது. அங்கிருந்து மாட்ரிட்டுக்கு எழுதப்பட்டது.*

II

S. Ramanathan
C/O Thomas cook.
Geneva, Switzer Land,
26-10-32.

அன்புள்ள அய்யா,

மேற்கண்ட எனது விலாசத்திற்கு "குடி அரசு" பத்திரிகை அனுப்பி வர வேண்டுகிறேன். மதத்தைப் பற்றிய புத்தகம் வெளியிட்டிருந்தால் நான்கு பிரதிகள் அனுப்பவும். பர்லினில் இருந்த ராமு இந்தியாவுக்குத் திரும்பு வதாகச் சொல்லிவிட்டு இங்கிலாந்து போனதாகக் கேள்விப்படுகிறேன். அவ்விடம் திரும்பிவந்த விபரம் எழுத வேண்டுகிறேன்.

தங்கள் அன்பன்
**ராமநாதன்.**

RangaRakes tamilnavarasam.com

இந்தக் கடிதம் நான் இந்தியாவுக்கு வந்ததுமேல் 13-11-32. தேதியில் ஈரோடு விலாசத்திற்கு கிடைத்தது.

இந்தக் கடிதங்கள் தோழர் ராமநாதனின் நிலையையும், என்ன நடந்திருக்கக்கூடும் என்பதையும் தானாகவே சொல்லும்.

தவிர தோழர் ராமநாதன் கையில் பணம் இல்லை என்பது உண்மை அல்ல என்பதை அவர் மற்றொரு நண்பருக்கு எழுதி இருப்பதாக சொல்லப் படும் கடிதங்கள் ஒன்றின் மூலமாகவே விளங்குமானாலும் அதைப் பற்றியும் சற்று விளக்குவோம்.

அவர் இந்தியாவுக்குத் திரும்புவது இல்லை என்கின்ற விஷயத்தை தனது சகோதரிக்கு சூசனையாய் காட்டி எழுதி செலவுக்கு அனுப்பும் படி எழுதிய கடிதத்தின் மீது அவ்வம்மையார் வருத்தப்பட்டு அவசியம் திரும்பி வரும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டும் மற்றும் அவர் கேட்டப்படி 300 ரூபாய் அனுப்பி இருந்த தொகையின் செக் ஒன்று என்னை அவர் பயணம் அனுப்பும் முதல்நாள் வரையில் மாற்றாமல் வைத்திருந்து அன்று தான் மாற்றிக் கொண்டார். இதோடு அவர் இந்தியாவுக்கு வருவதில்லை என்று சொன்ன பிறகும், அவர் தனக்கு பணம் தேவையில்லை என்று சொன்ன பிறகும் அவர் கப்பலை விட்டு இறங்கும் போது நான் கொடுத்த 5 பவுனும் மற்றும் அவரிடம் சில்லரையாய் இருந்த தொகையும் சேர்த்து சற்றேறக் குறைய 400 நானூறு ரூ. போல் அவர் கைவசம் இருந்தது. அவரது தங்கை அனுப்பிய ரூபாய் சுமார் ஒரு மாத காலமாய் செக்கு மாற்றாமலும், அதிலி ருந்து செலவழிக்கச் செய்யாமலும் இருக்கும்படி வற்புறுத்தியவன் நானே யாகும்.

அன்றியும் அவர் ஜினிவாவுக்குப் போவதாய் பயணம் சொல்லி கொண்டு கப்பல் விட்டு இறங்கும் போது எப்பொழுது தான் இந்தியாவுக்கு வருவதாக உத்தேசம் என்று கேட்டதற்கு, ‘அதைப் பற்றி நான் முடிவு செய்ய வில்லை. இரண்டு மூன்று மாதத்தில் திரும்பலாம் என்று யோசித்திருக்கிறேன்’ என்று சொன்னார்.

எப்படியாவது இந்தியாவிற்கு திரும்பி வருவதுதான் கிரமமாகும் என்றும் சொன்னேன். கப்பல் புறப்பட இருந்ததால் என்னிடம் ரூபாய் பெற்றதும் ஆகட்டும் என்று சொல்லிக் கொண்டு அவசரமாய் கப்பலை விட்டு இறங்கினார்.

ஆகவே கையிலும் பணம் இருக்க நானும் கொடுத்து வந்திருக்க இந்தியாவுக்கு வருவதானால் இனியும் பணம் அனுப்பச் செய்கிறேன் என்று சொல்லியும் வந்திருக்க, தோழர் ராமநாதனை கையில் ஒரு காசும் இல்லாமல் நோயுடன் ஆஸ்பத்திரியில் விட்டு வந்ததும், மார்செல்ஸ் தெருவில் விட்டு



வந்ததும் எவ்வளவு தூரம் உண்மையாய் இருக்கக் கூடும் என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை. நேரில் நடந்த வார்த்தைகள் என்பது எப்படி இருந்தாலும் இதில் பிரசுரிக்கப்பட்ட எல்லா கடிதங்களிலிருந்தும் பொது ஜனங்கள் கருத வேண்டிய விஷயம் மூன்றேயாகும்.

1. தோழர் ராமநாதன் அவருடைய இந்திய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள் என்பவை கற்பனைக் கடிதங்களாக இருக்குமா?

2. அல்லது எனக்கு எழுதப்பட்டக் கடிதங்கள் என்பவை கற்பனையாக இருக்குமா?

3. எல்லாக் கடிதங்களும் தோழர் ராமநாதன் அவர்களால் உண்மையாகவே எழுதப்பட்டிருக்குமானால் அவர் நிலைமைதான் என்னவாக இருக்கக் கூடும் என்பவைகளேயாகும்.

இது விஷயத்தில் எப்படி வேண்டுமானாலும் கருதிக் கொள்ளவோ, முடிவு செய்து கொள்ளவோ வாசகர்களுக்கு பூரண சுதந்திரமும் போதிய அனுபவமும் உண்டு என்றே கருதி இதுசமயம் இத்துடன் முடிக்கின்றேன்.

**ஈ. வெ. ரா.**

**குடி அரசு - அறிக்கை - 27.11.1932**



RangaRakes

tamilnavarasam.com

# அய்ய நாடார் மறைந்தார்

தோழர் ஊ. பு. அ. சௌந்திர பாண்டியன் எம். எல். சி. அவர்களது அருமைத் தந்தையார் பட்டிவீரன்பட்டி, பழமையான பிரபல குடும்பஸ்தரும் பெரும் புகழ் பெற்றவரும் சமூகத்திற்கே நாயகமாய் இருந்து சமூக சமதர்மத் துக்கு வெகுகாலமாகவே போராடிக் கொண்டிருந்த வருமான தோழர் ஊ. பு. அய்ய நாடார் அவர்கள் காயலாவாய் இருந்து 18 தேதி இரவு 10 மணிக்கு காலம் சென்றார் என்ற சேதியைக் கேட்டு வருந்துகின்றோம். தோழர் அய்ய நாடார் அவர்கள் தென்னாட்டில் சமூக சீர்திருத்த முயற்சிகள் ஏற்படுவதற்கு முன்பும் சுயமரியாதை இயக்கம் தோன்றுவதற்கும் முன்பு இருந்தே சகல சமூகமும் ஒன்றுபட வேண்டும் என்றும், உயர்வு தாழ்வு கூடாதென்றும் போராடி வந்ததுடன் மூடப் பழக்கவழக்கங்களையும், திதி திவசம் போன்ற பார்ப்பன சூழ்ச்சிகளையும் அறவே வெறுத்து பிரசாரம் செய்து வந்தவர் களுமாவர். அது மாத்திரமல்லாமல் சுயமரியாதை இயக்கத்திற்கும் அது தோன்றிய காலமுதல் குடும்பத்துடன் சுற்றத்தாருடன் ஒத்துழைத்து அதற்கு அளவு கடந்த ஆதரவு அளித்துவந்தவருமாவார். இப்படிப்பட்ட பெரியார் தனது 60 வயதில் அருமை மனைவியாரையும் கண்கள் போன்ற மக்களாகிய தோழர் சௌந்திரபாண்டியன், ரங்கசாமி மற்றும் சகோதரிகளான பெண் மக்களையும் விட்டு மறைந்தது மிக்க பரிதாபகரமான விஷயமாகும்.

அவரது மக்கள் யாவரும் இயற்கையை உணர்ந்த மதிவள்ளல்கள். ஆனதால் அன்னியரின் தேறுதலும் ஆறுதலும் தேவை இருக்காது என்றே கருதுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 27.11.1932**



# ஆதிதிராவிட வாலிபர்கள் வரவேற்பு

தோழர்களே! நீங்கள் இங்கு எனக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப் பட்டதைப் பற்றியும், தலைவர் புகழ்ந்து பேசியதைப் பற்றியும், நான் சிறிதும் பெருமையாகக் கொள்ளவில்லை. ஏனெனில் நான் பிறந்து வளர்ந்ததும் இந்த ஊர். நீங்கள் பிறந்து வளர்ந்ததும் இந்த ஊர். அன்றியும் சுமார் 10 வருஷத்திற்கு முந்திய வரையில் உங்களுக்கும் எனக்கும் வெகு நெருங்கிய சம்மந்தம் இருந்து வந்திருக்கிறது. ஆதலால் உள்ளூர்க்காரர்கள் நெருங்கிய சம்மந்தம் இருந்து வந்தவர்கள் ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொள்வது என்பது பரிகசிக்கத்தக்கது என்றே கருதுகிறேன். உங்கள் பத்திரத் தில் உள்ளூரிலிருக்கிற உங்களை நான் முன்போல் கவனிக்கவில்லை என்று கண்டு இருக்கிறீர்கள். முன்போல் உங்களுக்குப் பலவித நன்மைகள் செய்ய வில்லை என்று சொல்லுகிறீர்கள். இவைகள் வாஸ்தவமாயிருக்கலாம். ஏனெ னில் நான் இந்த ஊர் முனிசிபல் சேர்மனாய் இருந்த காலத்தில் உங்கள் தெரு விற்கு என்று அதிக சலுகை காட்டினது போல் இப்போது நான் ஈடுபட்டி ருக்கும் காரியத்தில் தனி சலுகை என்றும், பொருள் சம்மந்தமாயும் நான் எதைச் செய்யமுடியும்? என் சொந்தத்திலும் எனக்கு முன்பு இருந்த மாதிரி யான பொருள் வருவாய் கிடையாது. பொதுக் காரியங்களின் உண்மை யாய் உழைப்பவர்களுக்கு வரும்படி இல்லாமல் போவதோடு கைபொருளும் சிதைந்து போய் விடும். ஆதலால் பொருள் மூலமாய் செய்யும் நன்மைகள் செய்வது கஷ்டமான காரியம்.

மற்றபடி நீங்கள் குறிப்பிட்டப் படியே உங்கள் சமூக விஷயத்தில் பொதுவாக ஒரு புரட்சிப் போன்ற காரியத்தை சுயமரியாதை இயக்கம் செய்திருக்கிறது என்று சொல்லுவதைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடை கிறேன். நான் காங்கிரசில் இருக்கும் போதும் தீண்டாதார் விஷயத்தைப் பற்றியே அதிகம் உழைத்திருக்கிறேன். வைக்கம் சத்தியாக்கிரகம் என்பதும் தீண்டாமை விலக்குக்காகத் தான் ஏற்பட்டதே தவிர வேறில்லை. 3 வருடத் திற்கு முன் நடந்த ஈரோடு கோயில் பிரவேசம் என்பதும் அது சம்மந்தமான வழக்கும் தீண்டாமை விலக்கு சம்மந்தமாக ஏற்பட்டதே தவிர வேறில்லை.



RangaRakes tamilnavarasam.com

இன்னும் சுயமரியாதை இயக்கத்திலும் தீண்டாமை விலக்குத் தத்துவம் தான் முக்கிய இடம் பெற்றிருக்கிறது. அது விஷயமாய் சம பந்தி போஜனம், கலப்பு மணம் முதலியவைகள் கூட ஜாதி வித்தியாசம் என்பது சிறிதும் பாராமல் அநேக காரியங்கள் நடை பெற்று வருவதை நீங்கள் உணர்ந்தே இருக்கிறீர்கள். இங்கு சற்று முன் பேசிய தோழர் அன்ன பூரணியம்மாள் ஒரு "பறப்பெண்" அவரை மணம் செய்து கொண்ட இங்கிருக்கும் தோழர் ரத்தினசபாபதி ஒரு "திருநெல்வேலி சைவர்" ஒன்றுக் கொன்று எவ்வளவு வித்தியாசம் பாவிக்கப்படுவது மாறி இன்று "சதிபதி"களாய் உங்கள் முன் விளங்குவதைப் பாருங்கள். உங்கள் சமூகத்துக்கு சகல துறைகளிலும் சர்க்கார் உத்தியோகத்திலும் தனி பிரதி நிதித்துவம் எப்படி வந்தது? ஓர் காலத்தில் "சுயமரியாதை இயக்க மந்திரிகளாய்" இருந்த டாக்டர் சுப்பராயன், தோழர் முத்தைய முதலியார் ஆகியவர்கள் காலத்தில் தான் இது ஏற்பட்டது. அது போலவே சட்டசபை முதலிய ஸ்தாபனங்களிலும் கூட உங்களுக்குத் தனி பிரதிநிதித்துவம் எப்படிக் கிடைத்தது. "உலகமே வெறுத்துத் தள்ளிய" சைமன் கமிஷனை சுய மரியாதை இயக்கம் தான் உங்கள் நன்மைக்காக வரவேற்று, உங்கள் குறைபாடுகளைச் சொல்லிக் கொள்ளும் படி வேண்டிக் கொண்டது டன் உங்கள் குறைபாடுகளையும் அது அறியும்படி செய்தது. அதன் பயன் தான் இப்போது எத்தனையோ பேர் தடுத்தும் சூழ்ச்சி செய்தும் ஒரு அளவா வது நீங்கள் அவைகளிலும் ஸ்தானம் பெற முடிந்தது. உங்களுக்குத் தனிக் கிணறும், தனிக் கோவிலும் கட்ட வேண்டு மென்று சொன்ன தேசியங்களும், மாளவியாக்களும் உங்களுக்கு பொது கிணற்றில் உரிமையும், பொதுக் கோவில்களில் அனுமதியும் கொடுக்கிறோம் என்று வாயலவிலாவது சொல்லக் கூடிய நிலைமை எப்படி ஏற்பட்டது? சுயமரியாதை இயக்கம் உங்கள் நிலைமையை உத்தேசித்தும், தேசீயத்தின் வண்டவாளத்தை வெளிப் படுத்தியும் தீண்டாமை விலக்கின் சூட்சியை வெளியாக்கியும் செய்த பிரசார மல்லவா என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். இந்த காரியங்களுக்காக சுயமரியாதை இயக்கமும், தோழர்களும் பொது ஜனங்களிடத்தில் எவ்வளவு கெட்ட பெயர் வாங்கினார்கள், எவ்வளவு பழிப்புக்கும் தூஷணைக்கும் ஆளானார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா?

இவற்றை யெல்லாம் யோசித்துப் பார்த்தால் உங்களுக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டதா இல்லையா என்பது நன்றாய் விளங்கும். இனிமேல் நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் பட வேண்டியதில்லை. இனியும் 10 வருஷக் காலத்திற்குள் தீண்டாமை இந்திய நாட்டை விட்டு பறந்தே ஓடிவிடும். தேசிய சூட்ச்சி குறுக்கிடாமலிருந்தால் இன்னும் உங்களுக்கு எவ்வளவோ நன்மை ஏற்பட மார்க்கமுண்டு. எப்படி யெனில் உலகம் ஒரு பெரும் புரட்சிக்கு தயாராகிக் கொண்டு வருகின்றது. அப்புரட்சி வெற்றி பெற்றாலும், தோல்வி அடைந்தாலும் தீண்டாமையும், தாழ்த்தப்பட்ட தன்மையும் சமீபத்தில் அழிந்துதான் தீரும். இந்த நாட்டில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்டு 160 வருஷ காலமாகியும் தீண்டாமை ஒழிக்கப் படாமல் இருப்பது பிரிட்டிஷாருக்குப்



பெருத்த அவமானகரமான காரியமாகும். அவர்கள் இனி ஆட்சி செய்ய தகுதியுடையவர்கள் அல்ல என்பதற்கு இந்த ஒரு காரணமே போதும். பிரிட்டிஷார் இந்தியப் பொது ஜனங்கள் மீது, பார்ப்பனர் மீது, இந்து மதத்தின் மீது பழி போடலாமானாலும், இவர்களுக்கு அறிவும் யோக்கியப் பொருப்பும் எங்கு போயிற்று என்ற கேள்விக்கு இவர்கள் என்ன பதில் சொல்லுவார்கள். ஆகவே இனி யாருடைய தயவும் தேவையில்லாமலேயே காரியங்கள் நடந்து விடும். உலகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுயமரியாதை உதயம் ஆகி விட்டது. அதன் முன் எந்த மதமும், எந்தக் கடவுளும், எந்த மகாத்மாக்களும், எந்த தேசியமும், எந்த அரசாங்கமும் இனி தடையாய் இருக்க முடியாது. இவைகள் இத்தனையும் அதன் வேகத்தில் கலந்து கொண்டு உங்களுக்கு நாங்கள் தான் நன்மை செய்தோம் என்று சொல்லி போலி உரிமை கொண்டாடி மக்களை ஏய்க்கவே அவைகள் இப்போது பாடுபடுகின்றன. இந்த ஏய்ப்பில் நீங்கள் சிக்கி விடாதீர்கள். உங்களுக்கு விடுதலை வேண்டுமானால், சமத்து வம் வேண்டுமானால் எந்த மதத்தையும், எந்த கடவுளையும், எந்த தேசீயத் தையும், எந்த மகாத்மாவையும், எந்த அரசாங்கத்தையும் எதிர்பாராதீர்கள். இவைகள் ஒன்றினாலும் உங்களுடைய தீண்டாமையை ஒழித்து சமதர்மம் கொடுக்க முடியாது. உங்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட வேண்டும். அவ்வுணர்ச்சி உண்மையாக உங்களுக்கு ஏற்பட்டால் உங்களை அறியாமலே பெரியதொரு புரட்சி ஏற்பட்டு விடும். அதில் நீங்கள் மாத்திரம் சமத்துவ மடைந்து உலக சுகபோகங்களில் சம சுதந்திரம் பெறுவதோடு நில்லாமல் உலகிற்கே சமதர்மம் வழங்கக் கூடியவர்களாகி விடுவீர்கள். ஆனால் நீங்கள் உண்மை சுயமரியாதை வீரர்களாக வேண்டும். மதத்திற்கு ஆளாவதோ, கடவுளுக்கு அடிமையாவதோ, தேசீயத்திற்கும், அரசாங்கத்திற்கும் அடிமை யாவதோ ஆன காரியங்களில் எதில் கட்டுப்பட்டு விட்டாலும் உங்கள் புரட்சி அடங்கிவிடும், வலுவற்றதாகி விடும். பிறகு பழய கருப்பன்தான் ஆய் விடுவீர்கள்.

நான் ஏன் இப்படி சொல்லுகிறேன்? எனக்கு மதமும் கடவுளும் இருந்திருக்கவில்லையா? இந்த ஊர் கோவில்களைப் போய் பாருங்கள். எங்கள் குடும்பப் பெயர் அங்கெல்லாம் இருக்கின்றதா இல்லையா? நாமம் பூசிக் கொண்டோ சாம்பல் அடித்துக் கொண்டோ இந்த ஊருக்கு வந்த "பாகவதர்" "அடியார்" என்பவர்களான சோம்பேரிகளுக்கெல்லாம் சத்திரம் போல் சாப்பாடு போட்டு வந்ததை நீங்கள் அறியீர்களா? சர்க்காரோடு தோ ளோடு தோள் போட்டு அதிகாரிகளுடன் உரைத்தது நீங்கள் அறியீர்களா? தேசீயத்தில் முன்னணியில் நின்று குடும்பத்துடன் அலைந்ததும் பலதடவை சிறை சென்றதும், நீங்கள் அறியீர்களா? நீங்கள் உள்ளூர்க்காரர்கள். ஆனதால் சகலமும் நேரில் பார்த்தவர்களானதால் இதை உங்களிடம் சொல்லுகிறேன். அயலூர்க்காரர்களுக்கு வேண்டுமானால் இது மயக்கத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கலாம். அப்படி இருக்க இப்போது ஏன் இவைகள் அவ்வ ளவும் புரட்டு என்றும் உங்களுக்கு பயன்படாதது என்றும், பணக்காரர்



RangaRakes tamilnavarasam.com

களுடையவும் சோம்பேரி வயிற்றுப் பிழைப்புக் காரர்களுடையவும் நன்மைக்கு ஏற்ற ஆயுதங்கள் என்றும் ஏன் சொல்லுகிறேன். எல்லாவற்றையும் நான் அனுபவித்து பார்த்து விட்டேன். என்னுடைய 40, 50 வருஷ உலக அனுபவமும் இவைகளை சந்தேகமற விளக்கி விட்டது. ஆகவே நீங்கள் துணிவு கொண்ட புரட்சிக்குத் தயாராகுங்கள். நீங்கள் ஏன் கீழ் ஜாதி? என்று உங்களையே கேள்வி கேளுங்கள். கடவுள் காரணம் என்று தோன்றினால் உடனே அந்தக் கடவுளை தூள்தூளாக உடைத்தெரியுங்கள். மதக் கட்டளை என்று தோன்றினால் அம்மதத்தை சின்னா பின்னமாக்குங்கள் அல்லது அரசாட்சி முறை என்று கண்டால் அதை அழித்திடுங்கள். அல்லது மனிதர் களுடைய சூழ்ச்சி சுயநலப்பித்து என்று தோன்றினால் தைரியமாய் அவர் களிடம் இனிமேல் இந்தப் புரட்டு நடக்காது என்று சொல்லுங்கள். உங்கள் புரட்டுகளை உணர்ந்து விட்டோம் நல்ல தனத்தில் யோக்கியமாய் நடக் கிறீர்களா அல்லது இதற்காக எங்கள் உயிரை இழக்க வேண்டியதுதானா என்று கேளுங்கள்.

இதில் ஒன்றும் தப்பிதமில்லை. ஏனெனில் பாடுபட்ட நீங்கள் பட்டினி கிடக்கவும், கீழ் ஜாதியாய் இருக்கவும், சோம்பேரியாய் இருந்தவர் செல்வ வானாய் இருக்கவும், மேல் ஜாதியாய் இருக்கவும் ஏற்பட்ட முறைகள் எது வானாலும் அதை ஒழிப்பது எவ்விதத்திலும் குற்றமாகாது. அவை புரட்டின் பேரிலும் சூழ்ச்சியின் பேரிலும் சுயநலத்தின் பேரிலுமே கட்டப் பட்ட கட்ட டமாகும். உங்களுக்கு உண்மையான சுயமரியாதை உணர்ச்சி வந்து விட்டால் அது மணலால் கட்டிய வீடு சரிந்து விழுவது போல் அது தானே சரிந்து விழுந்து விடும். ஆதலால் நீங்கள் உங்கள் பங்கை அடைய எதன் பேராலும் பின் வாங்காதீர்கள். உங்களுக்கு எந்த கோவிலுக்குள் போய் எந்தக் கடவுளை வணங்க அனுமதி கிடைத்து விட்டாலும் இதனால் எல்லாம் இன்று நீங்கள் படும் அரை பட்டினி அவஸ்தையையும், அரை நிர்வாண அவஸ்தையையும், கல்வி இல்லாமல் தற்குறிகளாய் மடையர்களாய் ஆக்கி வைத்திருக்கும் பகுத்தறிவற்ற அவஸ்தையும் ஒரு காலமும் நீங்கிவிடப் போவதில்லை. அதற்கு ஏற்ற முயற்சிகளே செய்ய வேண்டும். அதிலே வெற்றிபெற வேண்டும். அதற்காகத்தான் சுயமரியாதை உணர்ச்சி வேண்டுமென்கிறோம்.

*குறிப்பு: வெளிநாடு சென்று திரும்பியபின் ஈரோட்டில் 27. 11. 1932ந் தேதி ஆதிதிராவிட வாலிபர்கள் கொடுத்த வரவேற்பில் ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 04.12.1932**



# ஏன் பயப்பட வேண்டும்?

இன்று இந்தியாவில் சிறப்பாக தென்னிந்தியாவில் எங்கு பார்த்தாலும் எந்தப் பத்திரிகையைப் பார்த்தாலும், எந்த ஸ்தாபனங்களைப் பார்த்தாலும் அவற்றின் உள் மர்மம் "நாஸ்திகத்தை"க் கண்டு நடுங்கி "ஆஸ்திக"ப் பிரசா ரம் செய்வதையே முக்கிய லட்சியமாகக் கொண்டு இருப்பதாகத் தெரிய வருகின்றது.

இதற்கு உண்மையான காரணம் என்னவெனில் இன்றையத்தினம் உலகில் காணப்படும் வலுத்தவன் இளைத்தவன் நிலைமைக்கு அடிக் காரணமாய் இருந்து சோம்பேரிகளுக்கும், பேராசைக்காரர்களுக்கும், முரடர் களுக்கும் ஆதரவாயிருந்து அவர்களது நிலைமையை மேலும் மேலும் பலப்படுத்தி நிலை பெறச் செய்து வந்திருப்பது இந்த ஆஸ்திகமே யாகும். விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் ஆஸ்திகம் என்பதாக ஒன்று இல்லா திருந்திருக்குமானால் உலகில் மேல் ஜாதிக்காரனுக்கு இடமேது? குருமார்கள், முல்லாக்கள், பாதிரிமார்கள், அர்ச்சகர்கள், புரோகிதர்கள், பண்டார சன்னதி கள், பட்டக்காரர்கள், மடாதிபதிகள் ஆகியவர்களுக்கு இடமேது? பிரபுக்கள், முதலாளிகள், லேவாதேவிக்காரர்கள், மிராசுதாரர்கள், பண்ணையார்கள், ஜமீன்தாரர்கள், ராஜாக்கள், மகாராஜாக்கள், இளவரசுகள், லட்சுமி புத்திரர்கள் ஆகியவர்களுக்கு இடமேது?

அன்றியும் இந்த ஆஸ்திகம் என்பது இல்லாதிருந்திருக்குமானால் கீழ் ஜாதிக்காரன், ஏழை, பிச்சைக்காரன், கூலி வேலையாள் முதலிய இழிவு படுத்தப்பட்ட - அடிமைப் படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட மேது? என்பவைகளைக் கூர்ந்த அறிவு கொண்டு நடுநிலை என்னும் கண்ணாடி மூலம் பார்த்தால் யாவருக்கும் இதன் உண்மை நன்கு விளங்கும்.

அன்றியும் இன்றைய ஆஸ்திகப் பிரசாரகர்கள் எல்லாம் எங்கு பார்த் தாலும் சரீரத்தினால் சிறிதும் பாடுபடாமல், நோகாமல் உட்கார்ந்து கொண்டு ஊரார் உழைப்பில் உண்டு உடுத்தித் திரியும் சோம்பேரிகளும் நயவஞ்ச கர்களுமாகவே இருக்கின்றார்களே ஒழிய வேறு யாராவது இவ்வளவு இருக்கி றார்களா? என்பதைக் கவனித்தாலும் உண்மை விளங்காமல் போகாது.



RangaRakes tamilnavarasam.com

மேலும் இந்த ஆஸ்திகக் கூட்டம் எல்லாம் நாத்திகத்திற்கு அணுவளவாவது பதில் சொல்ல யோக்கியதை இல்லாமல் இருந்தாலும் நாத்திகம் பரவுவதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டு பிடித்து அதை சரிப்படுத்துவதற்கு யோக்கியதையோ இஷ்டமோ இல்லாமல் இருந்தாலும் அதைப் பற்றிக் கவனிப்ப தென்பதில்லாமல் ஒரே அடியாய் இது ரஷியப் பிரசாரம், போல்ஸ்விக் பிரசாரம் இவை மக்களை மிருகப் பிராயத்திற்குக் கொண்டு வரும் பிரசாரம், என்று சொல்லிப் பாமர மக்களின் மடமையை உபயோகப் படுத்திக் கொண்டு அவர்களை வெறியர்களாக்கி அதனால் ஆத்திகத்தை நிலைநிறுத்தி விடலாம் என்றே கருதுகிறார்கள். பாமரமக்களும், ஏழை மக்களும் தாழ்த்தப்பட்டு இழிவு படுத்தப்பட்ட மக்களும் என்றென்றைக்கும் மூடர்களாகவே இருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பது தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டிருப்பதாகத் தான் முடியுமே அல்லாமல் மற்றபடி அதனால் யாதொரு பயனும் ஏற்படப் போவதில்லை என்பது மாத்திரம் உறுதி.

நாத்திகம் "ரஷ்யாவிலிருந்து பரவுகின்றது" என்று சொல்லி விடுவதன் மூலமாகவே ஆத்திகர்கள் நாத்திகத்திற்கு ஒரு இழிவு கற்பிக்க முயற்சிக்கின்றார்கள் அதற்கு உதாரணமாக ரஷியாவின் நாத்திக திட்டத்தையும் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

அதாவது ரஷிய சர்க்கார் தங்கள் நாட்டில் 5 வருஷங்களுக்குள் கடவுள், மதம், கோயில் ஆகியவைகள் இல்லாமல் இருக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த 5 -வருஷ நாஸ்த்திக திட்டத்தைப் பற்றி லண்டன் பார்லிமெண்டு மெம்பர் தோழர் ஆதல்டச்சஸ் என்பவர் பேசிய ஒரு விருந்துப் பேச்சில் குறிப்பிட்ட தென்னவென்றால்:-

1. முதல் வருஷத்தில் கோவில்களையும், மார்க்க ஆராதனைகளையும் இடங்களையும் மூடிவிடுவது.

2. இரண்டாவது வருஷத்தில் எந்த வீடுகளிலும் பிரார்த்தனைக்கு இடம் இருக்கக் கூடாது என்பதுடன், சர்க்கார் உத்தியோகத்தில் மத சம்பந்தமான எண்ணமுடையவர்கள் யாவரும் இல்லாமல் செய்து விடுவது மத சம்பந்தமான புஸ்தகங்கள் ஆதாரங்களெல்லாம் அழிக்கப்பட்டாகவேண்டும். நாத்திக படம், நாடகம், சினிமா முதலியவை நூற்றுக் கணக்காக நடத்த வேண்டும்.

3. மூன்றாவது 5 வருஷத்தில் எந்த வீடுகளிலும் கடவுள் என்ற உச்சரிப்பே இல்லாதபடி செய்து விடுவது. இந்த உத்திரவுக்கு கீழ் படியாதவர்களை தேசத்தை விட்டு வெளியாக்கி விடுவது.

4. எல்லாக் கோவில்களையும் பிரார்த்தனை ஸ்தலங்களையும் பொது நன்மைக்கு பயன்படும்படி சினிமா இளைப்பாறும் மண்டபம், காலப் போக்கு ஸ்தலம் ஆகியவைகளாக மாற்றுவது.



5. ஐந்தாவது வருஷத்தில் அதாவது 1-5-37க்குள் கடவுளுக்கு வீடோ வணங்க இடமோ நினைக்க உள்ளமோ ரஷிய எல்லைக்குள் இருக்கக் கூடாது.

என்பதாகும். இந்தக் காரியங்களில் ரஷியர் வெற்றி பெற்று விடுவார்கள் என்பதற்கு இப்போதே அங்கு பல அறிகுறிகள் காணப்படுகின்றன. அன்றியும் ரஷ்யா இந்த நிலை எய்தி விட்டால் அங்குள்ள மனித சமூக விடுதலையும் சமத்துவமும் சுதந்திரமும் பெற்றுக் கவலை இன்றி மேன்மையால் வாழ்வார்கள் என்பதற்கும் அங்கு அநேக அறிகுறிகள் தோன்றுகின்றன. எப்படியெனில் ரஷியர்கள் கடவுளையும் மதத்தையும் அழிக்கவேண்டும் என்று கருதியது இன்று நேற்றல்ல. வெகுகாலமாகவே கருதி வந்திருக்கிறார்கள்.

என்றைய தினம் கஷ்டப்படுகின்ற மக்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏழைமக்களுக்கு, தொழிலாளிகளுக்கு தங்கள் கஷ்டத்தையும் இழிவையும் பசிக் கொடுமையையும் நீக்கிக் கொள்ள வேண்டும் என்கின்ற உண்மையான எண்ணம் உதிக்கின்றதோ அன்றே கடவுளும் மதமும், ஒடித்தான் தீர வேண்டும், மறைந்து தான் ஆகவேண்டும்.

ஆகவே ரஷிய ஜனங்கள் கொடுங்கோன்மையிலும், முதலாளிகள் பிரபுக்கள்மார் ஆதிக்கத்தினாலும் அனுபவித்து வந்த துன்பங்களில் இருந்து மீள வேண்டும் என்று கருதிய நிமிடமே கடவுள் பேரிலும், மதத்தின் பேரிலும், பாய்ந்து அவற்றின் பிடித்தத்தை மக்களிடை இருந்து தளர்த்தி விரட்டி அடிக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்களது வெற்றி முரசொலி **"கடவுளை ஒழிப்பது பணக்காரர்களை ஒழிப்பதாகும்" "மதத்தை ஒழிப்பது உயர்வு தாழ்வை அழிப்பதாகும்"** என்பதேயாகும்.

இந்த முரசை ரஷியாவெங்கும் அடித்து ரஷியமக்களின் உள்ளத்தில் கல்லின் மேலேழுதிய எழுத்துப்போல் பதியவைத்த பிறகுதான் கொடுங் கோன்மை வேருடன் சாய்ந்தழிந்தது பணக்காரத் தன்மை அதன் கிளைகளுடனும் சுற்றங்களுடனும் மறைந் தொழிந்தது.

கடவுளும், மதமும் ஒழிந்து விட்டதால் "மக்களுக்கு" ஆபத்து என்பது ரஷியாவில் இல்லை என்பது ஓரளவுக்கு ருஜூப் படுத்தப் பட்டதை நாமும் நன்றாய் மனப் பூர்வமாய் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் எந்த மாதிரியான மக்களுக்கு ஆபத்து ஏற்பட்டது என்பது தான் இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விஷயமாகும். எனவே எப்படிப்பட்ட மக்களுக்கு ஆபத்து வந்து விட்டது என்றால், இன்றைய தினம் இந்தியாவில் ஆத்தீகப் பிரசாரமும் மதப் பிரசாரமும் செய்யும் மக்களைப் போன்ற மக்களுக்குத் தான் ரஷியாவிலும் கடவுளும் மதமும் ஒழிந்ததால் ஆபத்து வந்துவிட்டது. இப்படிப்பட்ட மக்கள் அங்கு 100க்கு 5 பேர்களோ 7 பேர்களோ தான்



RangaRakes tamilnavarasam.com

அதாவது சக்கிரவர்த்திகளாகவும், அரசர்களாகவும், ஜமீன்தாரர்களாகவும், முதலாளிகளாகவும் பெரியபெரிய உத்தியோகஸ்தர் டாக்டர்கள் வக்கீல்கள் போன்ற பல ஊரான் உழைப்பில் கொள்ளை அடிப்பவர்களாகவும், பாதிரிகளாகவும் முல்லாக்களாகவும், குருமார்களாகவும் மேல் ஜாதிக்காரர்களாகவும் இருந்து வந்த மக்களுக்கே தான் ஆபத்து வந்து விட்டது.

மற்றபடி இவர்கள் தவிர்ந்த மற்ற 100க்கு 90 பேர்களுக்கு மேற்பட்ட ஏழைகள் தொழிலாளிகள் கீழ்மைப்பட்டவர்கள் என்று சொல்லத்தக்க மக்கள் யாவருக்குமே மேன்மை கிடைத்து விட்டது. அதுவும் தூங்கும் போது கீழ்மகனாய் கூலியாய் அடிமையாயிருந்து விழித்தெழும்போது மேன்மகனாய் விடுதலை பெற்றவனாய் சமவுரிமை அடைந்தவனாய் ஆனதுபோல் நிலைமை உயர்ந்து விட்டது.

ஆகவே கடவுளும் மதமும் ஒழிவதின் மூலம் மக்கள் சமூகத்திற்கு எந்த நாட்டிற்கும் இவ்வித "ஆபத்து" நிலைமைதான் ஏற்படக்கூடும். இந்தப்படியான "ஆபத்து" நிலையை தாழ்த்தப்பட்ட அடிமைப்படுத்தப் பட்ட ஏழைத் தொழிலாளிமக்கள் அதுவும் இந்தியாவில் மாத்திரமல்லாமல் ரஷியா தவிர உலகமெங்கணும் 100க்கு 90 பேர்களாயிருப்பவர்கள் மேளதாளம் வைத்து வருந்தி வருந்தி அழைத்து வரவேற்க வேண்டி யவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களை இனி ஹரிபஜனையினாலும் ஆண்டவன் மகிமையினாலும் - அடியார்கள் தூதர்கள் பெருமையினாலும் ஒரு நாளும் மறக்கடித்து விட முடியாது.

உலகத்தில் எந்த ஆண்டவனை நம்பின சமூகமும் எந்த மதத்தை ஏற்ற சமூகமும், இந்த கதியில்தான் இருந்து வருகின்றதே யொழிய "ஆண்டவனையும் அவனை அடையும் மார்க்கத்தையும்" ஒழித்த ரஷியாவைப்போல் மனித சமூகம் உயர்வு தாழ்வு இல்லாமல் சமதர்மமாய் இருப்பதாக யாராவது சொல்ல முடியுமா?

பணக்காரர்கள் கோவில்கள், சர்ச்சுகள், மசூதிகள் கட்டியதினாலும் வேத பாடசாலைகள், யுனிவர்சிட்டிகள் மதரசாக்கள் கட்டி விட்டதினாலேயும் பத்திரிகைக்காரர்கள் வேதத்தின் பெருமையையும், புராணத்தின் மகிமையையும், பக்கம் பக்கமாய் எழுதி "ஆண்டவனையும் மார்க்கத்தையும்" புகழ்ந்து கொண்டு "நாஸ்திகர்"களை வைவதினாலேயும் ஏழை மக்கள், இழிவுபடுத்தப்பட்ட மக்கள், பாடுபட்டுப் பட்டினி கிடக்கும் மக்கள் எழுத்து வாசனை அறிய வகையில்லாமல் தடுத்து தாழ்த்திவைக்கப் பட்டிருக்கும் மக்கள் கண்களில் மண்ணைப் போட்டு விடமுடியுமா? என்றுதான் கேட்கின்றோம்.

இப்படிப்பட்ட மக்கள் எந்த நாட்டில் எந்த மார்க்கத்தில் எந்த ஆண்டவன் படைப்பில் இல்லாமலிருக்கின்றார்கள்? என்று பந்தயம் கட்டி



கேட்கின்றோம். இந்த குறைகளுக்கு கொடுமைகளுக்கு ஆண்டவன் செயல் என்பதல்லாமல் வேறு என்ன பதில் இந்த ஆத்திகர்கள் சொல்லக் கூடும் என்று பணிவாய்க் கேட்கின்றோம். உலகம் தோன்றி பல "லட்சக்கணக்கான" காலங்களாகி விட்டன. "கடவுள்கள்" தோன்றி வெகு காலம் ஆகிவிட்டன. மார்க்கங்கள் தோன்றி ஆயிரக்கணக்கான வருஷங்களாகி விட்டன. இத்தனை கால கடவுள் - மத ஆட்சியிலும் மனித சமூகம் சீர்படவில்லை. கவலையில்லாமல் வயிற்றுக்கு ஆகாரமில்லை. மனிதனுக்கு மனிதன் அடிமைப்பட்டு உழைக்காமல் வாழ முடியவில்லை என்கின்றதான நிலைகள் இன்னமும் இருக்குமானால் இந்த கடவுள்களும், மார்க்கங்களும் இனி அரை நிமிஷமாவது உலகில் இருக்க அருகதை உண்டா என்றுதான் கேட்கின்றோம்.

160 வருஷ காலம் இந்தியாவை பிரிட்டிஷார் ஏகபோக சர்வாதிகார சக்கிரவர்த்தியாய் ஆண்டும் இந்தியாவில் 100க்கு 90 தற்குறிகளும் 100க்கு 97க்கு கீழ் ஜாதியாரும் மற்றும் தீண்டாத ஜாதியும், தெருவில் நடக்காத ஜாதியும் இன்னும் இந்தியாவில் இருப்பதினால் அவர்கள் இந்தியாவை ஆள ஒரு சிறிதும் யோக்கியதை கிடையாது என்று எப்படி சொல்லுகின்றோமோ, அவர்களை விரட்டி அடிக்க எப்படி பாடுபடுகின்றோமோ, அதுபோல் தான் ஏன்? இன்னும் அதற்கும் மேலாகத்தான் இந்தக் கடவுள்களையும் மார்க்கங்களையும் விரட்டி அடிக்க கடமைப் பட்டிருக்கின்றோம். எப்படி எந்த மதமும், எந்த மார்க்கமும் மக்களை சமமாக பாவிக்காது சமமாக ஆக்காது; இதுவரை பாவிக்கவும் இல்லை, ஆக்கவும் இல்லை என்று சொல்லுகிறோமோ, அதுபோல் தான் இன்று உலகில் வேறு எந்த அரசும், ஆட்சியும் மக்களை சமமாக பாவிக்க வில்லை - நடத்தவில்லை என்று சொல்லி எப்படிப் பட்ட ஆட்சியும் வேண்டியதில்லை, சமதர்ம ஆட்சியே வேண்டும் என்கின்றோம். இதனால் யாருக்கு என்ன கஷ்டம் என்பது நமக்கு விளங்கவில்லை. யாராவது "எங்கள் ஆண்டவன் கட்டளை, எங்கள் மார்க்க கொள்கை எங்கள் அரசியல் முறை இதுதான்" என்று சொல்ல வருவார்களானால் குஷாலாய் வரட்டும் மண்டியிட்டு வரவேற்கக்காத்திருக்கிறோம். அவர்களோடு ஒன்றுபடக் கலர முன்னிற்கிறோம். அதில்லாமல் "இது போல்ஷவிக் பிரசாரம்" "இது மனித சமூகத்திற்கு ஆபத்து" "இது தேசீயத்திற்கு ஆபத்து" "இது சுயராஜ்ஜியத்திற்கு ஆபத்து" "இது சட்டத்திற்கும் நீதிக்கும் அமைதிக்கும் ஆபத்து" என்கிறதான பூச்சாண்டிகளைக் கொண்டு ஏழைகள் - பட்டினி கிடக்கின்றவர்கள் - கீழ்மைப் படுத்தப் பட்டவர்கள் கண்களில் முளகு பொடியைத் தூவ முற்பட்டால் கண்கள் போனாலும் உயிர் போனாலும் எத்தனை காலமாவதானாலும் எப்பாடு பட்டாகிலும் இதைச் சாதித்துத் தீர வேண்டு மென்றுதான் சொல்லுவோம் - அவர்களுக்கு இதை தவிர வேறு மார்க்கம் இல்லை என்றுதான் சொல்லுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 04.12.1932**



RangaRakes tamilnavarasam.com

# ஈ.வெ.ராமசாமிக்கு முனிசிபல் உபசாரம்

ஈரோடு முசினிபல் சேர்மென் அவர்களே, ஸ்கூல் போர்ட் காரியதரிசி அவர்களே!! மஹா ஜன ஸ்கூல் ஹெட்மாஸ்டர் அவர்களே,

தாங்கள் வாசித்துக் கொடுத்த உபசாரப் பத்திரத்திற்காக நான் பெருமை கொள்ள வேண்டியவனும் நன்றி செலுத்தவேண்டியவனு மாவேன். ஆனால் இவைகளை எனக்கு நானே செய்து கொண்டது போல் கருதினேயானால் இதனால் ஒரு மகிழ்ச்சியும் நன்றி செலுத்த வேண்டிய அவசியமும் எப்படி ஏற்படும்.

ஏனெனில் இந்த ஊரிலுள்ள மிகப் பழமையான ஸ்தாபனங்களான இம்மூன்றும் அவைவேறு நான்வேறு என்று பிரிப்பதற்கு முடியாத மாதிரியில் ஒன்றிலிருந்து வருகின்ற ஸ்தாபனங்களல்லவா? என்பதை யோசித்துப் பாருங்கள். அவற்றின் நிர்வாகிகளாகிய தாங்களும், மற்றும் தங்கள் சகாக் களும் சகோதரர்கள் போன்ற நெருங்கிய அன்பர்களாய் இருக்கிறவர்கள் அல்லவா என்பதை யோசித்துப் பாருங்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலையில் அளிக்கப்படும் மரியாதைகளை நான் எப்படி போற்றக் கூடும்? எப்படி அரியதென்று எண்ணக் கூடும்? என்றாலும் தாங்கள் எல்லோரும் என்னை உற்சாகப்படுத்தவும் என்னிடம் வேலை வாங்கவும் உங்களுக்கு இருக்கின்ற அவாவை காட்டுவதற்கு ஆக பயன்படுத்திக் கொண்ட ஆயுதங் கள் என்றே கருதி அந்தப்படியே நடக்கிறேன் என்பதாக உறுதி கூறுவதைத் தான் உபசாரத்திற்குப் பதிலாகவும் நன்றி கூறுவதாகவும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தோழர்களே, உங்கள் உபசாரப் பத்திரங்களில் கண்டுள்ள புகழ்ச்சி வாக்கியங்கள் என்னை சந்தோஷிக்கச் செய்யவில்லை அதற்குப் பதிலாக என்னை வெட்கப் படவே செய்தது. ஏனெனில் அந்தப்படி அளவுக்கு மீறி புகழ்ந்து கூறியிருக்கிறீர்கள். என்றாலும் அவற்றில் சுயமரியாதை இயக்கத் தையும் சமதர்மக் கொள்கைகளையும் குறிப்பிட்டுப் பாராட்டி இருப்பதில் நான் மிக மிக திருப்தியும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். இவ்விரண்டு விஷயங் களும் இப்போது நமது நாட்டில் சிலருக்கு எருதுகளுக்கு முன்னால் சிகப்பு



வேஷ்டியைப் போட்டால் அது எப்படி மிரண்டு துள்ளித் துள்ளி குதிக்குமோ அதுபோல் ஒரு விஷயத்தையும் நடுக்கத்தையும் கொடுத்திருக்கிறது. அதனால் எவ்வளவோ தூரம் தங்களை மறந்து கண்டபடி பேசுகிறார்கள். இப்படிப்பட்ட பேச்சுக்கள் எல்லாவற்றையும் ஒரே அடியாய் நான் அலட்சியம் செய்து விடுவதில்லை. சிலவற்றைப் பற்றியாவது நான் சிந்திப்பதுண்டு. அப்படி சிந்திப்பதில் நான் மயங்கத்தக்க விஷயம் ஒன்றும் எட்டாவிட்டாலும் அப்படிப்பட்ட நபர்களில் இதை உத்தேசித்து பார்க்கின்ற போது ஒரு சமயம் நமது லட்சியங்கள் மக்களுக்கு ஏதாவது கெடுதி அளிக்கக் கூடியதோ என்கின்ற எண்ணம் தோன்றி அயரச் செய்வதுண்டு. ஆனால் அப்படிப்பட்ட அயர்வுகளைப் போக்கும் ஒப்பற்ற மருந்து போல் உங்கள் உபசாரப் பத்திர வாக்கியங்கள் காணப்படுகின்றன.

அப்படிப்பட்டவர்களுடைய கூப்பாடுகளுக்கும் ஆவலாதி களுக்கும் தக்க சமாதானங்கள் உங்கள் பத்திரங்களில் இருக்கின்றன. அது மாத்திரம் மல்லாமல் அவைகள் இயற்கைதான் என்றும் அவற்றில் சிறிதும் லட்சியம் செய்யக் கூடாதென்றும் கண்டுள்ள தைரிய வார்த்தைகள் நிரம்பிக் கிடக் கின்றன. ஆகவே அவற்றிற்காக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவன்.

இந்தச் சமயத்தில் நான் ஏதாவது சில வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்று எனக்கு தெரிகிறது. நான் எதைப் பற்றி பேசக் கூடும்? ஸ்தல ஸ்தாபனங்கள், கல்வி என்கின்ற இரண்டு விஷயங்களைப் பற்றிப் பேசுவதே பொருத்தமுடையது என்று கருதுகிறேன்.

தோழர்களே!

நமது நாட்டு ஸ்தல ஸ்தாபனங்கள் என்பதானது நாட்டு மக்களின் நன்மைக்கு ஏற்பட்டது என்று சொல்லப்பட்டாலும் அவற்றின் நிர்வாகப் பரிபாலனமானது சுதந்தரமானது. நாட்டு மக்கள் கையில் ஒப்படைக்கப் பட்டிருப்பதாய் கூறப்பட்டாலும் அவைகள் எல்லாம் உண்மையான நாட்டுமக்கள் நலனுக்கு நடப்பதாகவும் உண்மையான நாட்டு மக்கள் கைக்கும் வந்திருப்பதாகவும் ஒரு சிறிதும் கூற முடியாது. நாட்டு மக்கள் என்றால் யார் நாட்டு மக்களை மாத்திரம் அல்லாமல் உலக மக்களையே இரண்டு விதமாகத் தான் பிரிக்கலாம்.

ஒரு பிரிவில் 1. செல்வவான்கள் 2. முதலாளிகள். 3. மிராசுதாரர்கள். 4. பெரிய வரும்படியுள்ள உத்தியோகஸ்தர்கள், புரோகிதர்கள், படிப் புள்ளவர்கள் போன்றவர்கள் அடங்குவார்கள். மற்றொரு பிரிவில் 1. ஏழைகள் 2. தொழிலாளிகள். 3. பயிரிடும் குடியானவர்கள். 4. கூலியாட்கள் இம்மாதிகள் கீழ் ஜாதிக்காரர்கள், பாமரர்கள் போன்றவர்கள் அடங்குவார்கள். முதல் வகுப்புப் பிரிவில் மொத்த ஜனங்களில் 100க்கு 10பேர்களுக்குள் அடங்கிய



RangaRakes

tamilnavarasam.com

எண்ணிக்கையுள்ளவர்கள் இருப்பார்கள். பிற்பட்ட வகுப்பில் 100க்கு 90 பேர்களுக்கு மேல் இருப்பார்கள்.

ஆகவே மேற்கண்ட இரண்டு வகுப்புகளுக்கு பிரதிநிதிகள் யாராயிருக்கிறார்கள். மேற்கண்ட ஸ்தாபன நிர்வாகங்கள் யார் கையில் இருக்கின்றன என்பவற்றைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். 100க்கு 90 பேர் கொண்ட கஷ்டப்படும், கீழ் நிலைமையிலுள்ள மக்களுக்கு 100க்கு 10 பேர் கொண்ட சுகமனுபவித்துக் கொண்டிருக்கும் மேல் நிலையிலுள்ள மக்கள் இருக்கிறார்கள். இந்த முறையை எப்படி ஜனநாயகம் என்று சொல்ல முடியும், இந்த ஸ்தாபனங்களை எப்படி ஜனப்பிரதிநிதித்துவம் பொருந்தியது என்று சொல்ல முடியும். பெயரளவில் பொது ஜனங்களுக்கு ஓட்டுக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லலாமே ஒழிய பொது ஜன பிரதி நிதித்துவத்திற்கு பயன்படக் கூடியதாய் இருக்கின்றா பாருங்கள். எந்த ஸ்தாபனமும் எந்த நாட்டிலும் இப்படித்தான் இருந்து வருகின்றன. ஏழைகளுக்கு ஏற்ற மாதிரி லட்சியம் மாற்றப்பட்டாலொழிய மற்றப்படி எவ்விதத் திட்டத்திலும் உண்மையான பலன் ஏற்படாது. எவ்வளவோ கஷ்டப்பட்டு ஆட்சிமுறையை மாற்றியிருப்பதாக நினைத்துக் கொண்டாலும் இதுவரை நிர்வாக ஆட்சி எதுவாயிலாவது மாறுபாடடைந்து இருப்பதாகக் கருதமுடியுமா என்று பாருங்கள்.

கஷ்டப்படும் மனிதனுக்கு சுகப்படும் மனிதன் பிரதிநிதியாகவும், ஏழைக்கு செல்வவான் பிரதிநிதியாகவும், தொழிலாளிக்கு முதலாளி பிரதிநிதியாகவும், கீழ் ஜாதிக்கு மேல்ஜாதி பிரதிநிதியாகவும், அடிமைப்பட்டப் பெண் சமூகத்துக்கு ஆதிக்கம் செலுத்தும் ஆண்சமூகம் பிரதிநிதியாகவும் தானே பெரிதும் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிறது. இதை ஞாயம் என்று சொல்ல முடியுமா? எலிகளுக்கு பூனை பிரதிநிதிகளாய் வருவதாய் இருந்தால் பயன் உண்டாகுமா என்று யோசித்துப் பாருங்கள். அன்றியும் இன்றய ஸ்தல ஸ்தாபனங்கள் ஏழைகளுக்கு உதவும் படியாய், ஏழைகள் கிரமமான பிரதிநிதித்துவம் பெரும்படியாய் அமைக்கப்பட வேண்டும். ஏழை மக்களுக்குத் தங்கள் நிலைமையையும் அதன் காரணத்தையும் உணரும் படியாகவும் அதற்குப் பரிகாரம் தேட யோக்கியதை உண்டாகும் படியாகவும் கற்பிக்கப்பட வேண்டும். அவர்கள் பெறும் பிரதிநிதித்துவத்தை சரியானபடி பிரயோகித்துக் கொள்ளவும் கற்பிக்கப்பட வேண்டும்.

இப்போது செல்வவான்களுக்கும் படித்த கூட்டத்தாருக்கும், தங்கள் நிலைமையும் அதை அடையும் விர்த்தி செய்யும் மார்க்கமும், அதற்காக ஸ்தல ஸ்தாபனங்களை எப்படி அடைவது அதில் தங்கள் நன்மை எப்படி மேலும் மேலும் பெருக பயன்படுத்திக்கொள்வது என்பது நன்றாய் தெரியும். அதுபோல் மற்றவர்களைப் பார்க்க வேண்டாமா. தேசத்தின் முன்னேற்றம், விடுதலை, சுதந்திரம் என்பவைகள் பெரும்பான்மையான 100க்கு 90 ஆக



உள்ள மக்கள் சமூகத்தின் முன்னேற்றம் விடுதலை சுதந்திரம் ஆகியவைகளைப் பொருத்ததா 100க்கு 10 பேராக உள்ள மக்களின் ஏற்கனவே உயர் நிலையில் உள்ள மக்களின் நன்மையைப் பொருத்ததா என்று பாருங்கள். நாம் இப்படிச் சொல்லுவதற்கு ஆக வருத்தப் படாதீர்கள். உங்கள் மீது சிறிதும் தப்பிதம் சொல்ல முடியாது. மற்றவர்களை விட ஈரோடு எவ்வளவோ ஏழைகளுக்கு பயன்படக் கூடிய நிலையில் இருக்கிறது. இது மாத்திரமல்ல மற்ற நாடுகளை விட இந்தியா இந்தக் காரியத்தில் அதிக மோசம் என்று சொல்லி விட முடியாது. வெகுகாலமாக நாகரீகத்தில் சிறந்து விளங்கும் ஜெர்மனி தேசம் சமதர்ம ஜனநாயகமாய் இருந்தும் சக்கரவர்த்தியையும் அரசனையும் பட்டத்தில் இருந்து இறக்கி தேசத்தை விட்டு விரட்டி அடித்து ஜனங்களே அரசாட்சி புரிகிறார்கள் என்று சொல்லப்பட்டாலும் அங்கு, இங்குள்ள ஏழைகளை விட அதிக ஏழைகள் கஷ்டப்படுகிறார்கள் மக்களுக்கு வேலையே இல்லாமல் திண்டாடுகிறார்கள். ஒவ்வொரு பெரிய தொழிற்சாலைகளும் வியாபார ஸ்தலங்களும் 3ல் 2 பாகம் மூடிக்கிடக்கின்றன. விபசாரித்தனத்தினால் பணம் சம்பாதித்து வயிறு வளர்க்க வேண்டிய பெண்களின் எண்ணிக்கை லேசானதல்ல. நல்ல கௌரவமான கடைத் தெருக்களில் பெருத்த கூட்டங்களுக்கிடையில் பகல் காலத்தில் கையைப் பிடித்து ரூமுக்கு வரும் படி அழைக்கிறார்கள்.

நல்ல ஆபீசுகள் கம்பெனிகள் இருக்கும் தெருக்களின் மேல் மாடிகள் எல்லாம் பெரிதும் விபசாரப் பிழைப்பு பெண்கள் காணப்படுகிறார்கள். பட்டணங்களை விட்டு தோட்டம் காடுகளில் வசிக்க ஆசைப்படுகிறார்கள் ஜர்மனி ஒரு சமயம் சண்டையினால் தோல்வியுற்றதால் இந்தக் கஷ்டம் அனுபவிக்கின்றதோ என்னமோ என்று நீங்கள் கருதக்கூடும்.

“குபேர பட்டண”மாகிய அமெரிக்காவை எடுத்துக் கொள்ளுங்கள், அமெரிக்கப் பெண்களை லண்டனில் சந்தித்தக் காலத்தில் அவர்களும் தங்கள் ஊர் ஏழைகளின் நிலைமையைப் பற்றிச் சொல்லும் போது அங்கு அநேகர் தொழில் இல்லாமல், வீடு இல்லாமல் பட்டினியாய் அவஸ்தைப் படுவதுடன் ரோட்டுகளில் ரிப்பேருக்காக போடப்பட்டுள்ள முனிசிபல் குழாய்களுக்குள் படுத்துக் கொள்ளுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்தப் படியே இன்னும் சில தேசங்களில் நேரில் பார்த்தோம். இங்கிலாந்து கிராமங்களில் சென்று அங்குள்ள தொழிலாளர்கள் வீடுகளிலிருந்து அவர்கள் வாழ்க்கையில் கலந்து பார்த்ததில் வெறும் உருளைக் கிழங்கையும், முள்ளங்கிக் கீரைகளையும் வேக வைத்து, உப்புத் தூவி சாப்பிடுகிறார்கள். எங்களுக்கும் அதைத்தான் கொடுத்தார்கள். அந்தப் படி கஷ்டப்படும் தொழிலாள ஏழைகள் நம்மிடம் வெகு அன்பாயும் நம் நாட்டு தொழிலாளிகளிடம் அனுதாபமாயும் நடந்து கொள்கிறார்கள். இவற்றிற் கெல்லாம் தேசமோ, தேசாபிமானமோ காரணமல்ல, மனுஷாபிமானமும், கஷ்டப்படும் மக்களின் வகுப்பு அபிமானமுமேயாகும்.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே நமது தேச ஆட்சியினாலும் ஸ்தல ஸ்தாபன ஆட்சியினாலும், மனுஷ அபிமானத்தாலும், கஷ்டப்படும் மக்களை அதிலிருந்து விடுதலை செய்ய அந்த வகுப்பு அபிமானத்தாலுமே தான் ஆட்சி நடத்தப் படும் மாதிரியில் இருக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம். இவை தங்களுக்கு மாறுபாடாகக் காணலாம். ஆனால் நான் சொல்லுவது தான் சரி. நீங்கள் அபிப்பிராயப் படுவது தப்பு என்று நான் சொல்ல வரவில்லை. நான் சொல்லுவதை யோசித்து தாங்கள் காண்பதையும், தாங்கள் அனுபவத்தில் அனுபவிப்பதையும் மற்றும் உலக நிலையை கேள்விப் படுவதையும் சேர்த்து கலந்து ஆலோசித்து தங்களுக்கு தோன்றுகின்ற முடிவுக்கு வரவேண்டு மென்றும் வந்த முடிவுப்படி நடக்க வேண்டு மென்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன் .

*குறிப்பு:- 03.12.1932 இல் ஈரோடு நகர முனிசிபல் வரவேற்பு கூட்டத்தில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 11.12.1932.**



# தொழிலாளர்கள்

முதலாளிகளுக்கு தங்களது வாழ்நாளைப் பற்றிய கவலை என்பதே கிடையாது. மற்றபடி அவர்களது கவலை எல்லாம் தங்களுக்கு வேண்டியது போக மீதி இருப்பதை எப்படி பத்திரப் படுத்துவது, எப்படி பெருக்குவது, எப்படி சுகபோகங்களைப் பெருக்கி அனுபவிப்பது என்பவை போன்றவை களைப் பொருத்ததேயாகும்.

இவர்கள் வேலை செய்து அன்றாடம் கூலி பெற்று ஜீவிக்கும் ஜனங்களைப்போல் நாளை சாப்பாட்டிற்கு என்ன செய்வது, வீட்டு வாட கைக்கு என்ன செய்வது, துணிக்கு என்ன செய்வது, குழந்தை பிறந்து விட்டதே அதற்கு வகை என்ன? அதற்கு பால் எங்கே? படிப்புக்குப் பணம் எங்கே? அதை எப்படி வளர்ப்பது? வியாதி வந்து விட்டதே! எப்படி தப்புவது? வைத்தியனுக்கு பணம் எங்கே? என்பது போன்ற கவலைகளை அவர்கள் அறிந்திருக்கவே மாட்டார்கள். இந்த கவலைகள் எல்லாம் தொழிலில் ஜீவிப்ப வர்களைத்தான் பற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஒருதேசம் என்பது இருப்பதற்கே காரணமும் ஆதாரமும் தொழில் செய்யும் மக்களால் தானே தவிர வேறில்லை. இந்த மக்களின் தொழிலின் பயனை அனுபவிப்பதினால் தான் சிலர் முதலாளிமார்களாகி தங்கள் முதலாளி தத்துவம் நிலை நிற்கவும் பெருகவும் ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்தி அதற்கு ஓர் அரசனை ஏற்படுத்திக் கொண்டு தொழிலாளிகளை அடக்கி வைத்து வாழ்ந்து வருகிறார்கள் அரச னென்றால் ஒரு வேலையும் செய்யாமல் அநாவசியமான ஜீவனாய் இருந்து கொண்டு, வாரம் ஒன்றுக்கு பத்தாயிரம் பவுன்போல் உதவி தொகையும், மேல்கொண்ட தனது முழுச் செலவுக்கும் வேறு படித்தொகையும் பெற்றுக் கொண்டு, தன்னுடைய கையெழுத்தை எங்கு வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் போட்டுக் கொள்வதற்கு முதலாளிமார்களுக்கு அனுமதி கொடுத்து தன் பெயரால் எதையும் செய்யும்படி விட்டுக் கொண்டும், சில சமயங்களில் முதலாளிமார்கள் சொல்லிக் கொடுத்ததை சொல்லிக் கொண்டு இருப்பவரே ஆகும். உண்மையிலேயே இந்தக் காரியம் தவிர மற்றெதுவும் தெரியாத வரையும் சிறிதும் சுயமரியாதை அற்றவர்களையும்தான் மிக நல்ல அரசர் என்று முதலாளிமார்கள் கொண்டாடுவார்கள். இளவரசர் என்பதும்



RangaRakes tamilnavarasam.com

இதே சங்கதியில் சிறிது குறைந்த அளவு கொண்டவர் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

இந்தக் கூட்டங்கள் தொழிலாளிகளிடம் அதாவது வேலை செய்து ஜீவனம் செய்யும் கூலிஜனங்களிடம் மிக அன்பு இருப்பதாகக் காட்டிக் கொண்டு இவர்களுக்காக பரிதாபப்படுகிறவர்கள் போலவும் பேசிக் கொண்டு, தொழிலாளர் சங்கம் என்றும் பொது ஜனசேவை சங்கம் என்றும் ஏற்படுத்தி, அவைகளுக்குத் தாங்களே முழு நிர்வாகிகளாய் இருந்து கொண்டு அவர்களது கூலிக்காரத் தன்மையும், ஏழ்மைத் தன்மையும் நிரந்தரமாய் இருக்கவும், தாங்கள் மேலும் மேலும் முதலாளிகளாகி நிரந்தர பிரபுக்களாக இருக்கவும் ஆன காரியங்களைச் செய்து கொண்டு தொழிலாளர்களை ஏமாற்றிக் கொண்டே வருவார்கள். இன்று இருந்து வரும் தொழிலாளர்கள் சங்கங்கள் தொழிலாளர்களை நசுக்கவும், ஏய்க்கவும் ஏற்பட்டவைகளேயாகும். இன்று உலகில் நடைபெறும் எல்லாவிதமான அக்கிரமங்களுக்கும் அநியாயங்களுக்கும் தொழிலாளிகள் பேரால் பொது ஜனங்கள் பாமர ஜனங்கள் பேரால் ஏற்பட்ட சங்கங்கள், கட்சிகள் ஆகியவைகளேயாகும். இவை ஒரு புறமிருக்க இச்சங்கங்கள் உண்மையாக தொழிலாளிகளுக்கும் பொது ஏழை ஜனங்களுக்கும் பாடுபட என்ற கட்சிகளையும் உண்மையாகவே உலகத்தில் தொழில் செய்து பிழைக்கும் மக்கள் ஆட்சிக்கு வேண்டும் என்று பாடுபடும் கட்சிகளாகிய சமதர்மக் கட்சி பொதுவுடமை கட்சிகளாகியவைகளையும் அழிக்கப்பாடுபடுகின்றன. அவைகளுக்கு நேர் விரோதமாகவே பாடுபடுகின்றன. தொழிலாளிகள் கூடி தங்கள் நலத்தைப் பெருக்குவதற்கும், தங்கள் கஷ்டத்தைக் குறைத்துக் கொள்வதற்கும் தங்கள் வேலைக்குத் தகுந்த கூலிகிடைப்பதற்கும் முயற்சி செய்யப்படும் வேலைகள் எல்லாம் சட்ட விரோதமானதாகப் பாவிக்கப்படுகிறது. தொழிலாளிகளை மோசம் செய்து அவர்களை வாட்டி இம்சித்து வேலைவாங்கி, வயிறார கஞ்சிக்கும். இடுப்பாரத்துணிக்கும் வெளியில் மழை மேல் படாமல் குடியிருக்க வீட்டுக்கும் வகை இல்லாமல் கொடுமைப்படுத்தி மோசம் செய்வது சட்ட சம்மதமாகக் கருதப்படுகிறது. தொழிலாளிகளை மோசம் செய்யும் முதலாளிகள் செயல்களை எல்லாம் தொழில் திறமையாகவும், நிர்வாகத் திறமையாகவும் கருதப்படுகிறது. முதலாளியைத் தொழிலாளி ஏமாற்றுவது நாணயக் குறைவானது, நம்பிக்கைத் துரோகமானது, திருட்டுக் குற்றத்தில் சேர்ந்தது என்பதாக ஆகிவிடுகின்றது. இதற்குக் காரணம் எல்லாம் முதலாளிமார்கள் ஆட்சி வலுத்திருக்கிறது. அவர்களுக்கு சங்கம் இருக்கிறது. அதற்கு அரசாங்கத்தின் சலுகை இருக்கிறது, அவர்களது நன்மைக்கு என்றால் உலக முதலாளிகள் எல்லாம் ஒன்று கூடி விடுகிறார்கள். முதலாளிகள் நன்மையில் ஒவ்வொரு முதலாளிக்கும் கவலை இருக்கிறது. அரசாங்கமும் அவர்கள் கைவச மிருக்கிறது. சட்டசபை அவர்கள் கைவச மிருக்கிறது. சட்டசபையில் 100க்கு 90பேர் அவர்கள் இனத்தவர்களாகவே அவர்களைத் தழுவி ஆதரிப்பவர்களாகவே சேர்ந்து விடுகிறார்கள் ஆனால் தொழிலாளிகளுக்கோ



உண்மையான சங்கம் என்பது இல்லை. ஒற்றுமை என்பது இல்லை. தக்க பிரதிநிதித்துவம் என்பதில்லை ஒன்று படக் கவலையுமில்லை மார்க்கமும் இல்லை, தொழிலாளிகளை முதலாளிகள் தங்கள் நன்மைக்கு உபயோகித்துக் கொள்ளுகிறார்கள் தொழிலாளிகளை ஆயுதங்களாகக் கொண்டுதான் முதலாளிகள் ஒருவரோடொருவர் யுத்தம் செய்து கொள்ளுகிறார்கள். இரண்டு முதலாளிகள் சண்டை போட்டுக் கொள்ளுகிறார்கள். இரண்டு முதலாளிகள் சண்டை போட்டுக் கொள்வதின் பயன் தொழிலாளிக்குத் தான் நஷ்டமாகவும் உயிர் பலியாகவும் முடிகின்றதே தவிர முதலாளிகளுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. சரீரத்தில் வேலை செய்யாத சோம்பேறி அன்னியர்கள் உழைப்பில் வாழ்கின்றவன் ஆகியவர்களுக்கே தொழிலாளிகள் ஓட்டுக் கொடுத்து தங்கள் பிரதிநிதியாக ஆக்கிக் கொள்ளுகிறார்கள். பிறகு இந்த சோம்பேரிகள் ஊரார் உழைப்பில் வாழ்கின்றவர்கள் தொழிலாளிகளின் பிரதிநிதிகளாய் ஆனவுடன் முதலாளிகளாகவே ஆகப்பார்க்கின்றார்கள் அனேகர் முதலாளிகளாகவே ஆகிவிடுகிறார்கள். அனேகர் முதலாளிகளுக்கு உளவாளிகளாயிருந்து தொழிலாளிகள் நலத்தை விற்று தொழிலாளிகளைக் காட்டிக் கொடுத்துத் தாங்கள் வாழ்கிறார்கள்.

சரீரத்தில் பாடுபடுகின்றவன் தவிர, வேறுயாரும் தொழிலாளிகளுக்குப் பிரதிநிதியாக இருக்கக் கூடாது. எந்த சபையிலும் தொழில் செய்பவனே தொழிலாளர் பிரதிநிதியாக இருக்க வேண்டும். உலகின் சகல துறைகளைச் சேர்ந்த ஆட்சிகளும் தொழிலாளர்கள் கைக்குள்ளாகவே வரவேண்டும். அப்படிப்பட்ட ஆட்சிதான் தகும், அப்படிப்பட்ட ஆட்சி தான் பொது ஜன ஆட்சியாகும், அப்படிப்பட்ட பொது ஜன ஆட்சி என்பது உலகப் பொது ஜனங்கள் நன்மைகளை எல்லாம் கருதியதாக இருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் ஒரு தேசத் தொழிலாளிகள் மாத்திரம் அந்த ஆட்சி பெற்றால் போதும் என்பது தற்கொலையேயாகும். அதனால் உலக தொழி லாளர் கஷ்டம் நீங்காது. மற்ற தேசத் தொழிலாளர் கஷ்டம் அதிகரிக்கும். உலக தொழிலாளர் யாவருமே விடுதலை பெற்று ஆட்சிபெறும் மார்க்கந்தான் நிரந்தரமான நன்மையை கொடுக்கும். இல்லாத வரை மற்ற தேச முதலாளிகள் ஒன்று சேர்ந்து தனிச்தேச தொழிலாளர் ஆட்சியை அளிக்கப் பார்ப்பார்கள்.

உலகில் வேலை செய்பவர்களைத் தவிர மற்றவர்கள் இருக்கக் கூடாது. ஒருவர் சௌக்கியமாயிருக்க மற்றவன் கஷ்டப்படுவது, பட்டினி கிடப்பது ஜீவனத்திற்கு மார்க்கமில்லாமல் திண்டாடுவது என்கின்ற நிலைமை எங்கிருந்தாலும் அவைகள் ஒழிக்கப்பட வேண்டும். அவைகளுக்குக் காரணமானவைகள் வேருடன் அழிக்கப்பட வேண்டும்.

யந்திரங்களால் ஏற்பட்டது சரீரங்களால் கஷ்டப்படும் மக்களின் கஷ்டத்தை குறைத்து வேலைகளை சுளுவாகவே ஒழிய மற்றபடி வேலை செய்யும் ஆட்களைப் பட்டினி போட்டு விட்டு முதலாளிகள் கொள்ளை



RangaRakes
tamilnavarasam.com

லாபம் சம்பாதித்து பணம் சேர்ப்பதற்காகவல்ல என்பதை பொது ஜனங்களும் முதலாளிகளும் உணரவேண்டும். யந்திரங்கள் வேலை செய்வதால் ஏற்படும் லாபம் ஏராளமாய் இருக்கும் போது, பொது ஜனங்கள் ஏன் பட்டினி கிடக்க வேண்டும். யந்திர லாபத்திற்கு விதிக்கப்படும் வரிகள் உத்தியோகஸ்தர்கள் சம்பளக் கொள்ளைக்கும் அரசர்கள் அதிகார வர்க்கக்காரர்கள் அனுபவக் கொள்ளைக்கும் மக்களை அடக்க என்று வளர்க்கப்படும் பட்டாள செலவுக் குமே போய் விடுகிறதே தவிர பட்டினி கிடந்து சாகும் மக்களைப் பற்றி கவலையே கிடையாது. அரசாங்கம் தொழிலாளிகளுடையதாகுமானால், பொது ஜனங்களுடையதாகுமானால் இந்த யந்திர சாலை லாபமெல்லாம், பொது ஜனங்களுக்குக் கிடைக்கும், தொழில் செய்பவர்களுக்கெல்லாம் வேலை நேரத்தைக் குறைத்து வேலையைப் பங்கிட்டுக் கொடுத்து ஜீவனத் திற்கு வேண்டியதை கொடுக்க முடியும். முதலாளிகள் வசம் முதலாளிகள் ஆதிக்கத்தில் ஆட்சி இருக்கும் வரை ரூபாய்க்கு 5 ரூபாய் லாபம் கிடைக்கும் படியான தொழிலாயிருந்தாலும் அவை முதலாளிவர்க்கத்திற்கும் அதிகார வர்க்கத்திற்கும் தான் கொள்ளை போகுமே யொழிய ஒரு நாளும் தொழிலாளி வர்க்கம் தாராளமாய் ஜீவிக்கப்பயன் படாது. இந்த சுவல்ப்ப யந்திரத்தின் பயனாகவே இத்தனை பேர்கள் பட்டினி கிடக்கிறார்கள் என்றால் இனியும் அதிகமாக எத்தனையோ மாதிரியான யந்திரங்கள் ஏற்படப் போகின்றது என்று சொல்லிக் கொள்ளப்படுகிறது போல் ஏற்பட்டால், அப்போதைய நிலை என்னாகும் என்பதை யோசித்துப்பாருங்கள். வேலையாளுக்கு வேலை யில்லை ஆனதினால் யந்திரங்கள் வேண்டாம் என்று சொல்லுவதா? அல்லது யந்திரத்தின் வேலை சுளுவின் பயனை வேலையாட்கள் அனுபவிக்க வேண்டுமே தவிர முதலாளிவர்க்கம் கொள்ளை அடிக்கக் கூடாது என்பதா என்பதைப் பற்றி யோசித்துப் பாருங்கள். அதிகாரிகள் அடிக்கும் கொள் ளையை நிறுத்த வேண்டுமானால் முதலாளி ஆதிக்க அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டும் அப்பொழுதுதான் உலகில் எல்லா மக்களும் சுகமாக வாழலாம்.

தொழிலாளர் ஆட்சி செய்யும் அரசாங்கம் நடக்கும் ரஷியாவைப் பாருங்கள். அங்கு யந்திரங்கள் தினத்திற்கு தினம் பெருகி, ஒவ்வொரு யந்திர சாலைகளிலும் பத்தாயிரம் இருபதாயிரம், முப்பதாயிரம் ஆணும் பெண்ணும் சரி சமமாக வேலை செய்கிறார்கள். அங்கு ஒருவருக்குக் கூட வேலை யில்லை என்று சொல்ல முடியாது. ஒருவராவது பட்டினி கிடக்கிறார்கள் என்று சொல்ல முடியாது, ஒருவருக்காவது நாளைக்கு என்ன செய்வது என்ற கவலையே கிடையாது. ஓ தேசீயவாதிகளே! இதற்கென்ன பதில் சொல்லு கிறீர்கள்?

**குடி அரசு - தலையங்கம் - 11.12.1932**



# தேசியத்தின் விளைவு

**- தேசீயத்துரோகி**

1914ம் வருஷம் முதல் 1918ம் வருஷம் வரை நடந்த உலக மகா யுத்தமானது அதில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தேச மக்களையும் தேசீயம் - தேசாபிமானம் என்பவற்றின் பேரால் செய்யப்பட்ட பிரசாரத்தின் பயனாகவே அந்த யுத்தத்தில் சம்மந்தப்படும்படி செய்து. இந்த உலக மகாயுத்தத்தின் பயனாய் கொல்லப் பட்டவர்கள் 9743914 கிட்டத் தட்ட ஒரு கோடிபேர் காயம் பட்டவர்கள் 2,09,27,459 இரண்டு கோடிப் பெயர்களுக்கு மேலானவர்கள் காணாமல் போனவர்கள் 30,00,000. இந்த மகாயுத்தத்திற்கு செலவான துகை 70,00,00,00,000 பவுன் (ஏழு ஆயிரம் கோடி பவுன்) அதாவது 10,00,00,00,00,000 ஒரு லட்சம் கோடி ரூபாய்கள் ஆகும்.

இது நிற்க இன்றைய தினம் உலக யுத்தத்தை எதிர் பார்த்து "தேசாபி மானத்தின் காரணமாக" என்று தேசத்தைக் காப்பாற்றுவதற்காக உலக அரசாங் கங்கள் மொத்தமும் செலவு செய்யும் தொகை சென்ற 1931ம் வருஷத்திற்கு மாத்திரம் 80,00,00,000 எண்பது கோடி பவுன் அதாவது 1080,00,00,000 ஆயிரத்து எண்பது கோடி ரூபாய் ஆகும்.

இதை தினக்கணக்காய் பிரித்தால் தினம் 1க்கு 2000000 பவுன் (இருபது லட்சம் பவுன்) அதாவது நாள் 1க்கு 27000000 இரண்டே முக்கால் கோடி ரூபாய் செலவு செய்யப்படுகின்றது.

பிரிட்டிஷ் அரசாங்கமானது தனது அரசாட்சி வரி வரும்படியில் உள்ள ஒவ்வொரு பவுன் வரும் படியிலும் 13 ஷில்லிங் யுத்த தேசாபி மானத்திற்காக. தேசத்தைக் காப்பாற்ற தேசீய கடனுக்கும் சேனை தளவாடங் களுக்காக அதாவது

| | |
|---|---|
| யுத்தக் கடனுக்கு வட்டி | 0 - 9 - 0 |
| யுத்த வீரருக்கு பென்ஷன் | 0 - 1 - 3 |
| தற்கால ராணுவத்திற்கும் | 0 - 2 - 9 |



RangaRakes tamilnavarasam.com

தரைகப்பல் தளவாடத்திற்கும்

ஆக : 0 - 13 - 0

ஷை பதின்மூன்று ஷில்லிங் போக பாக்கி இருக்கும்

| | |
|---|---|
| ஷில்லிங்கில் கல்விக்கு | 0 - 1 - 5 |
| உத்தியோக பென்ஷன் | 0 - 1 - 3 |
| ஸ்தலஸ்தாபன உதவி | 0 - 1 - 2 |
| வேலை இல்லதவர்களுக்கு பிச்சை | 0 - 1 - 2 |
| வீட்டு வசதி கோர்ட்டு வசதி வகையறாவுக்கு | 0 - 0 - 8 |
| போலீஸ் | 0 - 0 - 6 |
| விவசாயம் சுகாதாரம் | 0 - 0 - 2 |
| சில்லரை | 0 - 0 - 3 |

ஆக : 0 - 7 - 0

ஆக பிரஜைகளின் நன்மைக்கு என்று ஏழு ஷில்லிங்கும் செலவு செய்யப்படுகிறது.

அதாவது மேற்கண்ட யுத்தக் கடன் வட்டிக்காக என்று செலவு செய்யப்படும். 9 ஷில்லிங்கும் முதலாளிமார்களுக்கே போய்ச்சேரும் தேசாபிமானத்திற்காக ஏற்பட்ட காரியத்தின் பயனாய் இன்று முதலாளி மார்கள் தேச அரசினர் வரும் படியில் கிட்டத்தட்ட சரிபகுதியை உலக முள்ள ளவும் அனுபவிக்க மார்க்கம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

எனவே பல கோடிக்கணக்கான மக்களை பலி கொடுத்து காயப்படுத்தி காணாமல் போகச் செய்ததும் அல்லாமல், மக்களிடத்தில் வாட்டிப் பிழிந்து வசூல் செய்யும் வரியிலும் நூற்றுக்கு 65 பாகத்தை தேசத்தைக் காப்பாற்ற என்னும் பேரால் இராணுவத்திற்கும், தள வாடங்களுக்கும் செலவு செய்தும், இந்த தேசத்தில் இன்று பத்து லட்சக் கணக்கான மக்கள் வேலையில்லாமலும், ஜீவனத்துக்கு தங்களுக்கும் தங்கள் பெண்டு பிள்ளைகளுக்கும் அரை வயிற்றுக்கு போதுமான கஞ்சிக்கூட மார்க்கமில்லாமலும் தவித்து வரு கிறார்கள். இது பாமர ஜனங்களுடைய - ஏழை ஜனங்களுடைய தேசாபிமான முட்டாள் தனமா? அல்லது பணக்காரனுடைய 'படித்த' கூட்டத்தாருடைய தேசாபிமான பித்தலாட்டமா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அடுத்த வாரம் தேசீயக்கடன் என்றால் என்ன? என்பதைப் பற்றி எழுதுகிறேன்.

**குடி அரசு - கட்டுரை - 11. 12. 1932**



# புரட்சி என்றால் என்ன? ஏன் பயப்பட வேண்டும்?

சுயமரியாதை உணர்ச்சிக் கொண்ட வாலிபத் தோழர்களே, இன்று நீங்கள் எனக்கு வாசித்துக் கொடுத்த உபசாரப்பத்திரத்திற்கு நான் உண்மை யாகவே மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் இந்த உபசாரப் பத்திரம் உங்க ளுக்குள் தோன்றித் ததும்பும் சுயமரியாதை உணர்ச்சியை முன்னிட்டே (நீங்கள் இதை) வாசித்துக் கொடுத்திருக்கிறீர்கள் என்று உங்கள் உபசாரப் பத்திர வாக்கியங்களில் இருந்தே உணருகிறேன்.

தோழர்களே! உங்கள் உபசாரப் பத்திரத்தின் தலைப்பிலே புரட்சி வாழ்க! பொதுவுடமை ஓங்குக! என்று குறிப்பிட்டிருக்கும் வார்த்தையைக் கண்ட அநேகர் எருதுக்கு முன்னால் சிகப்புத் துணியை விசிறினால் மிரண்டு மிரண்டு துள்ளுவது போல் பயப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் இவ்வளவு பயப்படத் தகுந்த காரண காரியங்கள் ஏதும் அவ்வார்த்தையில் அடங்கி யிருப்பதாய் நான் கருதவில்லை.

ஆனால், அவ்வார்த்தையானது பயப்படத்தக்க முறையில் கற்பிக்கப் பட்டு விட்டது. எது போலென்றால் "பூச்சாண்டி" என்றால் அதற்கு அர்த்தம் இன்னதுதான் என்று தெரியாமலேயே குழந்தைகளைப் பயப்படுத்தி வைத் திருப்பதுப் போல் உங்களில் அநேகரைப் புரட்சி என்றால் அதன் அருத்தம் என்ன? பயன் என்ன? என்கின்ற விஷயம் உணராமல் பயப்படும் படி செய்யப்பட்டாய் விட்டது.

## புரட்சி

புரட்சி என்றால் என்ன? அது பயப்பட வேண்டிய விஷயமா என்பதைப் பற்றி சற்று யோசித்துப் பார்ப்போம்.

சாதாரணமாக ஒரு மனிதன் ஒரு இடம் விட்டு மற்றொரு இடத்திற்குப் போவதற்குத் தரையில் ஒரு மணிக்கு 3 -மைல் வீதம் நடந்து கொண்டிருந்த நிலைமை மாறி, ஒரு மணிக்கு 400 மைல் ஆகாயத்தில் பறக்கும் படியான



RangaRakes tamilnavarasam.com

நிலையை அடைய யோசிப்பானேயானால் நடக்கும் விஷயத்தில் அது ஒரு பெரிய பிரம்மாண்டமான புரட்சியேயாகும்.

இந்தப்படியான புரட்சியில் வெற்றி பெற்ற ஒருவன் ஆகாயத்தில் 1 மணிக்கு 400 மைல் பறக்கும் போது 3 மைல் வீதம் நடையிலேயே இருக்கிற ஒருவன் அதிசயப் பட வேண்டியதுதான். ஆனால் பயப்படுவதற்கு இதில் ஒன்றும் இல்லை. இதனால் யாருக்கும் எவ்விதக் கெடுதியும் இல்லை. எந்த ஒரு காரியத்தையும் மனிதன் அவனுடைய வெகுநாளைய பழக்கம், வழக்கம், நம்பிக்கை ஆகியவைகளுக்கு விரோதமாக ஆக்க முயற்சித்தால் அதைப் புரட்சி என்று தான் சொல்லுவார்கள். ஆனால் அதனால் அனுகூலம் அடைக்கின்றவர்கள் அதை நன்மையான காரியம் என்று சொல்லிப் புகழவும், அதனால் தீமையடைகின்றவர்கள் அதைக் கெட்ட காரியம் என்று சொல்லி இகழவும், சரியான முறையில் எதிர்க்க சக்தி இல்லாதவர்கள் தப்பர்த்தம் கற்பித்து மக்களுக்குள் புகுத்தி அதன் மூலம் எதிர்ப்பு ஏற்படச் செய்வார்கள். ஆனால் மனித சமூகத்தில் புரட்சி என்பது மிகச் சாதாரணமாய் இருந்து காரியத்தில் நடைபெற்று தான் வருகின்றது. மனிதனுக்கு முற்போக்கு அறிவும், அக்கறையும். ஏற்பட ஏற்பட புதிய புதிய உணர்ச்சிகள் தோன்றத் தோன்ற மாறுதல்கள் என்கின்ற புரட்சிகள் உண்டாக்கிக் கொண்டேதான் இருக்கும். புரட்சிகள் என்றால் என்ன? ஒரு விஷயம் அதன் பழக்க வழக்க நிலையில் இருந்து மாற்றம் அடைவதும் அதிலும் அது அடியோடு தலைகீழ் நிலை அடையும்படி மாற்றமடைவதுமேதான் புரட்சி என்று சொல்லப்படுவதாகும். அந்தப்படி இப்போது நம் கண் முன்னாலேயே எவ்வளவோ புரட்சிகளைக் காதால் கேட்டு விட்டோம் கண்ணால் பார்த்து விட்டோம். ஒவ்வொரு புரட்சியிலும் எந்தெந்த தேசம் பூமிக்குள் போய் விட்டது? எந்த சமூகம் பூண்டற்றுப் போய் விட்டது? மாறுதலேற் படும்போது சற்று தடபுடலாய் மக்கள் மிரளுவதும் சிறிது நாளானவுடன் அது இயற்கையாய் ஆகிவிடுவதும், பிறகு அதிலிருந்து மற்றொரு புரட்சி ஆரம்பிப்பதும் சகஜந்தானே. சாதாரணமாக அரசியல் துறையில் ஏற்பட்ட புரட்சியை எடுத்துக் கொள்ளுங்கள். நமது நாட்டில் அரசர்களெல்லாம் "கடவுள் அவதாரங்களல்லவா, கடவுள் அம்சங்களல்லவா, கடவுள் அருள் பெற்றவர்களல்லவா? கடவுள் கடாட்சம் பெற்றவர்களல்லவா" இது தானே அரசனைப் பற்றிய நமது சாஸ்திரங்கள் என்பவைகளிலும் புராணங்கள் என்பவைகளிலும் சொல்லப் பட்ட சத்திய வாக்கு? சமீப காலம் வரை நாம் அரசரை விஷ்ணு அம்சம் என்று சொல்லிக் கொண்டிருக்க வில்லையா? அரசர் கடவுள் அவதார அம்சம் என்பதாகக் கூறிக் கொண்டும் புராணங்கள் படித்துக் கொண்டும் இருக்க வில்லையா? இன்றும் பலர் அம்மாதிரி படித்துக் கொண்டிருக்கிறார்களா? இல்லையா? ஆனால் நாம் இப்போது என்ன சொல்லுகிறோம்? மனித சமூகத்திற்கு அரசன் எதற்கு? என்று கேட்கும் நிலைமைக்கு வந்து விட வில்லையா? எங்களுக்கு ஒரு சக்கரவர்த்தியோ அரசனோ இருப்பது எங்கள் சுய மரியாதைக்கு குறைவு என்று சொல்ல வந்து விட்டோமா? இல்லையா? ராஜபக்தி, ராஜ வாழ்த்து,



அடிமைத் தனம் என்று சொல்ல வந்து விட்டோமா? இல்லையா? அந்தப் படியே பல தேசங்களில் அரசர்கள் ஒழிந்தும் விட்டார்களா? இல்லையா? ஆகவே அரசியல் துறையில் இது ஒரு பெரிய புரட்சியா? இல்லையா? என்று உங்களைக் கேட்கின்றேன். இந்த புரட்சியால் என்ன ஆபத்து வந்து விட்டது? எந்த தேசம் மண்ணில் புதைந்து விட்டது? யார் வாய் வெந்து போய் விட்டது? யார் தலைபோய் விட்டது? அரசர்கள் ஒழிக்கப் பட்ட தேசம் நெருப்புப் பற்றி எரிந்து விட்டதா? அல்லது பாலை வனமாகி விட்டதா? சுமார் 40, 50 வருஷங்களுக்குமுன் அரசாங்கத்தைக் குறை கூறவோ மாற்றவோ யாராவது நம் நாட்டில் கருதியிருப்பார்களா என்று யோசித்துப் பாருங்கள். எந்தப் புராணத்திலாவது, சாஸ்திரத்திலாவது அரசன் வேண்டாம் என்று சொன்னதாகப் பார்த்திருக்கிறோமா? இன்று எப்படி தைரியமாய்ச் சொல்ல வந்து விட்டோம்? இது ஒரு பெரிய புரட்சியா அல்லவா என்று யோசித்துப் பாருங்கள். இது போலவே மக்களில் ஒரு சாராரை "பூதேவர்கள்" (இந்த உலகக் கடவுள்கள்) என்றும் மற்றொரு சாராரை கண்ணினாலும் பார்க்க முடியாதவர்கள் என்றும், சண்டாளர்கள் என்றும் கருதியிருந்தோமா? இல்லையா? இதற்கு வேத சாஸ்திர புராண ஆதாரங்கள், கடவுள் வாக்குகள் இருக்கின்றது என்று சொல்லி "பூதேவர்கள்" காலில் விழுந்து கும்பிட்டும் "சண்டாளர்களை" தெருவில் நடக்க விடாமல் துரத்தி அடித்தும் வந்தோமா இல்லையா? ஆனால் இன்று அவர்களைத் தெருவில் மாத்திரம் அல்லாமல் கோவிலுக்குள் கூட்டிக் கொண்டு போக வேண்டும் என்று சொல்லுகின்றோமா? இல்லையா? இப்படிச் சொல்லுகின்றவர்கள் "மகாத்மா" என்று அழைக்கப்படுகிறார்களா இல்லையா?

மற்றும் இம்மாதிரி "சண்டாளர்கள்" கண்ணுக்கே தென்படக் கூடாது, கிட்டவே வரக் கூடாது என்று இருந்ததெல்லாம் போய் இப்போது அவர்கள் பக்கத்தில் போய் உட்கார ஆள் மேல் ஆள்கள் போட்டிப் போட்டு அய்யங்கார், சாஸ்திரிகள், ராவ்ஜீக்கள், பண்டார சன்னதிகள், பட்டக்காரர்கள் ஆளுக்கு 10 ஆயிரம் 15 ஆயிரம் ரூபாய்கள் (தேர்தல்களில்) செலவு செய்து அந்த ஸ்தானங்களை அடைய முயற்சிக்கிறார்களா இல்லையா? சமூக வழக்கங்களில் 10 வயது பெண்ணை கட்டிக் கொடுக்கா விட்டால் பெற்றோர்கள் "நரகத்துக்கு"ப் போய் விடுவார்கள், பெண்ணும் விபசார தோஷத்திற்கு ஆளாய் விடும் என்று கூறிய வேத சாஸ்திரங்களையும் "ரிஷிகள்" வாக்கியங்களையும் பழக்க வழக்கங்களையும், குப்பையில் தள்ளிவிட்டு 14 வயதான பிறகு, பெண் ருதுவான பிறகு தான் கல்யாணம் செய்ய வேண்டும் இல்லாவிட்டால் தண்டனை அடைய வேண்டும் என்று சொல்லி சட்டம் செய்து விட்டோமா இல்லையா?

எனவே இவைகள் எல்லாம் சமூகப் புரட்சியேயாகும். இதனால் யாருக்கு என்ன ஆபத்து வந்து விட்டது? யார் என்ன கஷ்டப்படுகிறார்கள்?



RangaRakes tamilnavarasam.com

ஆகவே அரசியல் துறையிலும் சமூகத்துறையிலும் எவ்வளவு புரட்சிகள் செய்ய முன் வந்து விட்டோம் - செய்தும் விட்டோம். இவைகள் எவ்வளவு சர்வ சாதாரணமான விஷயமாகவும் மிகவும் ஞாயமானதாகவும், அறிவுடைமையாகவும், மக்கள் சமூகத்திற்கு நன்மை பயக்கக் கூடியதாகவும் கருதப்படுகின்றது என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

மற்றும் "உலகத்தையே படைத்துக் காக்கும் கடவுள்" விஷயம் இன்று உலகில், நம் நாட்டில் என்ன பாடுபடுகின்றது? அக்கடவுளையடையும் மார்க்கமாகிய மத விஷயம் இன்று என்ன பாடுபடுகின்றது? இவைகள் கடவுள் புரட்சி மதப் புரட்சியல்லவா? இதனால் மக்களுக்கு என்ன ஆபத்து வந்து விட்டது? ஆகவே இவ்விஷயங்களில் ஆபத்து, ஆபத்து என்று சொல்லப் படுவதெல்லாம் நன்றாய் யோசித்துப் பார்த்தால் அவற்றால் யார் யார் நன்மை அடைந்து வந்தார்களோ அவர்களுக்குத் தான் சிறிது ஆபத்தாய்க் காணப் படுகின்றதே அல்லாமல் வேறு என்ன? இவர்கள் யார்? இவர்கள் மக்கள் சமூகத்தில் 100க்கு எத்தனை பேர்கள்? என்று பார்த்தால் லட்சியம் செய்யக் கூடிய அளவா என்பது விளங்கும். ஆகவே அரசியல், சமூக இயல், அறிவியல் ஆகியவற்றில் பெருத்த புரட்சிகள் ஏற்பட்டு அவை சாதாரணமாய் நடந்து வருகின்றதை நீங்கள் பார்க்கிறீர்கள். எனவே மேற்கண்ட புரட்சிகள் போல் அதாவது அரசன் ஏன்? உயர்ந்த ஜாதி ஏன்? தாழ்ந்த ஜாதி ஏன்? கடவுள் ஏன்? மதம் ஏன்? என்று சொல்லுவது போலவே இப்போது பணக்காரன் ஏன்? பிரபு ஏன்? முதலாளி ஏன்? ஏழை ஏன்? அடிமை ஏன்? என்று கேள்க்கிறோம். இந்தப்படி ஏன் கேட்கின்றோம்? முதன் முதலில் ஏதோ ஒரு விஷயத்தில் மாறுதலையடைய துணிந்து விட்டோம். அதற்கு ஏற்பட்டிருந்த கட்டுப்பாடு காவல் ஆகியவைகளை அலட்சியம் செய்து விட்டோம். அதே தைரியமும், அதே அறிவும், அதே அவசியமும், அதே முற்போக்கு உணர்ச்சியும் அதற்கு அடுத்த நிலைமைக்கு மக்களைத் தானாகவே கொண்டு போகின்றது.

பட்டாளம், பீரங்கி, ஆகாயக் கப்பல், வெடிகுண்டு, 20 மைல் பீரங்கி விஷப்புகை, வெடி முதலிய பலமும் 'கடவுள் அவதாரமும்' உள்ள அரசனை, நீ வேண்டாம் மூட்டை கட்டிக் கொள் என்று சொல்லக் கூடிய நிலை ஏற்பட்டு அது நியாயமும் அவசியமும் என்று தோன்றிப் பல அரசர்கள் ஒழிக்கப் பட்டும் போன பிறகு, அதை விட கஷ்டமானதும் நினைக்க முடியாததுமான காரியமா இந்த பணக்காரன் ஏன்? ஏழை ஏன்? என்று கேட்கும் விஷயம் என்று தான் கேட்கிறேன். முன்னையதைவிட இதற்கு என்ன அதிக தைரியம் வேண்டும்? என்ன அதிக பலம் வேண்டும்? அல்லது இது என்ன ஒரு பெரிய பாவமான காரியமாகும்? அரசன், ஜாதி, கடவுள், மதம் பழக்க வழக்கம் ஆகியவையெல்லாம் பணக்காரனையும், பார்ப்பானையும், காப்பாற்ற ஏற்பாடு செய்து கற்பித்து வைத்த சாதனங்களே யொழிய இவர்கள் இயற்கையா? காற்றைப் போல் இன்றியமையாததா? எப்பொழுது அவைகளுக்கே ஆபத்து வந்து விட்டதோ அப்பொழுதே பணக்காரர்கள் நிலை காவலில்லா சொத்து



காணாமல் போவது போல், மறைவு பட வேண்டியதுதானே? இதனால் யாருக்கு என்ன நஷ்டம்? உண்மையான நடு நிலைமையும் அறிவும் இருக் கிறவன் இதை எப்படி குற்றம் என்று சொல்ல முடியும்?

இது சாதாரணமாய் அறிவும் முற்போக்கு உணர்ச்சியும் உள்ள எவனுக்கும் தோன்றக் கூடிய காரியம் தானே? இதை வெளியில் சொல்லுவது தப்பு - சட்ட விரோதம் என்று மிரட்டினால் சிலர் வேண்டுமானால் வாயில் சொல்ல பயப்படுவார்கள். ஆனால் இது அவர்கள் மனதில் உதிக்கக்கூடாது என்று சொல்ல முடியுமா? ஒரு சமயம் சிலர் இது சாத்தியப்படுமா? என்று கேட்கலாம். இப்படி கேட்பது வேறு விஷயம். ஒரு விஷயம் சரியா தப்பா என்று கவனித்த பிறகு தான் அது சாத்தியப்படுமா என்கின்றதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

## சாத்தியப்படுமா?

அரசன் வேண்டாம் என்கின்ற விஷயத்தை நாம் அசாத்திய விஷயம் என்றா கருதுகின்றோம்? அரசனுக்கு உள்ள படை, பட்டாளம், வெடி குண்டு, பீரங்கிகளை யெல்லாம் விட, இந்தப் பணக்காரனுக்கும் முதலாளிக்கும் என்ன அவ்வளவு பலமான காவல் இருக்கின்றது? அரசனை விட பணக்காரனுக்கு என்ன அவ்வளவு அதிகமான வேத சாஸ்திர புராணப் பாதுகாப்புகள் இருக்கிறது? அவர்கள் நிலைமையே இப்போது காற்றாய்ப்பறக்கின்றது. பணக்காரர்கள் நிலைமைக்கு என்ன பளுவு இருக்கிறது? வரிசைக் கிரமத்தில் இவர்கள் நிலைமையும் மாற்றமடைய வேண்டியது தானே? சும்மா சமய சந்தர்ப்பம் இல்லாமல் அரசனையும் பார்ப்பானையும் திட்டி, ஊரார் மெச்சும் படி பேசி, கடவுளையும் மதத்தையும் பரிகாசம் பண்ணிக் கொண்டு இருப்பது தான் சுயமரியாதைக் கட்சியின் லக்ஷியமா? என்று யோசித்துப் பாருங்கள்.

ஒரு மனிதனின் சுயமரியாதை உணர்ச்சிக்கு எது எது பாதகமாய் காணப்படுகின்றதோ அவைகளை யெல்லாம் மாற்றுவது தான் உண்மையான சுயமரியாதை இயக்கத்தின் நோக்கமாகுமே தவிர அரசனுக்குப் பதிலாக பார்ப்பானை ஏற்றி வைப்பதும் பார்ப்பானுக்குப் பதிலாக பணக்காரனைப் பட்டத்தில் வைப்பதும் ஒரு நாளும் சுய மரியாதையாகாது; இவையெல்லாம் சுய நலமரியாதையேயாகும்.

அன்றியும் அரசன் வேண்டாம் என்றாலும், பார்ப்பான் வேண்டாம் என்றாலும், பணக்காரன் வேண்டாம் என்றாலும் இதனால் கஷ்டப்படும் மக்கள் 100க்கு 10 பேர்கள் கூட இருக்க மாட்டார்கள். இவை ஒழிந்தால் சுகப்படும் மக்கள் 100க்கு 90 பேர்களுக்கு மேல் இருப்பார்கள். ஆகவே யாருடைய நன்மைக்கு ஏற்ற காரியம் செய்யப் பட வேண்டியது அறிவாளி யின் கடமை என்பதை சிந்தித்துப் பாருங்கள். உண்மையான ஜீவ காருண்யம்



RangaRakes tamilnavarasam.com

உள்ளவர்கள் வெறும் கோழியைத் தலை கீழாக கொண்டு போகப் படுவதை யும், மாட்டின் கழுத்தில் ஒரு சிறு புண் இருப்பதையும் ஜீவ காருண்யம் என்று எண்ண மாட்டார்கள். பெரும் பான்மையான மக்கள் வெகு சிறு பான்மை யோரின் சுயநலத்தால் எவ்வளவு கஷ்டப் படுகின்றார்கள் என்பதைத் தான் கவனிப்பார்கள்.

"ஐயோ இந்தப் புரட்சியால் பணக்காரர்களின் மனம் பதறுமே" என்று ஒரு அறிவாளியும் கருத மாட்டான். எப்படி யெனில் ஒரு திருடனுக்காகப் பயந்து 100 பேர்கள் தங்கள் வீட்டுக் கதவைத் தாளிட்டுப் படுத்துக் கொண்டால் திருடன் பாடு பட்டினிதான். அதனால் திருடன் மனம் பதருமே - ஏமாற்ற மடைய நேரிடுமே - அவன் பிள்ளைக் குட்டிகள் பதறுவார்களென்று சொல்லி எல்லோரும் கதவை திறந்து போட்டே படுத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னால் இதை ஜீவகாருண்ய மென்று நீங்கள் ஒப்பு கொள்ளுவீர்களா? பெரிய மாறுதல்கள் உண்டாக்கபட வேண்டிய அவசியங்கள் ஏற்பட்டால் குறுகிய நோக்கக்காரர்களும் சுயநல நோக்கக்காரர்களும் சில சமயங்களில் மனக் கஷ்டப்படத்தான் நேரும். அதற்கு யார் என்ன செய்ய முடியும். எலியும், பூனையும், பாம்பும், தேளும் போகின்ற கோவிலுக்குள் மனிதர் போவதனால் எத்தனை சங்கராச்சாரிகள் மனம் பதருகிறது? இதில் ஏதாவது நாணையமோ, உண்மையோ இருக்க முடியுமா?

இதற்காக எவ்வித பலாத்காரமும் செய்து தான் ஆக வேண்டும் என்பது நமது கருத்தல்ல ஆனால் பலாத்காரத்துக்கு பலவந்தமாய் வருபவர் களிடமிருந்து எப்படி மீள வேண்டுமோ அதற்கு தயாராய்த்தான் இருக்க வேண்டும். இதற்காக எந்தப் பணக்காரரும் கஷ்டப்பட வேண்டியிருக்காது; யாரும் பட்டினிகிடக்க நேராது. நல்லுணர்வு ஏற்பட்டு விட்டால் இது ஒரு நொடியில் முடியக் கூடிய காரியமேயாகும்.

உலகில் பொருளாதார நெருக்கடியினால் ஏழைகள் தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றால் பணக்காரர்களும் முதலாளிகளும் மாத்திரம் சுகப்படுகிறார்கள் சந்தோஷப்படுகிறார்கள் என்று சொல்லி விட முடியுமா? ஒவ்வொரு கருத்துள்ள பணக்காரனுக்கும் இருக்கின்ற கவலை உங்களுக்குத் தெரியாததா? அவன் அதை சம்பாதிக்கும் வழியில் கஷ்டப்படுவதை விட கவலைப்படுவதை விட அதிகமாகவே அதை காப்பாற்றுவதிலும் கவலைப் படுகிறான்; லாப நஷ்டம் வரும் காலையிலும் அதிக லாபம் வர வில்லையே என்றும் நஷ்டம் வந்து விட்டதே என்றும் தான் கஷ்டப் படுகிறான். எவ்வளவு இருந்த போதிலும் இன்னும் பொருள் சேர வேண்டுமென்றே ஆசைப்படு கிறான். கவலையும் பொறாமையும் அவனுக்குச் சமமாகத்தான் இருந்து வருகின்றது; எவ்வளவோ கஷ்டங்களையும் தொல்லைகளையும் சகித்துக் கொண்டும் பெருங் கவலைக்கு ஆளாய்க் கொண்டும் தான் தன்னைப் பணக் காரன் என்று பிறர் மதிக்க வேண்டுமென்று கருதுகிறான். இதனால்



உண்மையில் லாபம் ஒன்று மில்லை. ஆனால் உலகத்தில் உள்ள பழக்கம் வழக்கம் பெருமையின் முறை ஆகியவைகளுக்கு அடிமைப்பட்டே பணக்காரனாக ஆசைப்படுகிறான். ஆகவே பணக்காரத்தன்மை என்பது போய் விடுவதால் மனித சமூகத்துக்கு ஒரு கஷ்டமும் வந்து விடாது; பணக் காரத்தன்மை போய் விட்டால் எல்லா மக்களின் நன்மையைப் பொருத்த காரியங்களையெல்லாம் கவனிக்க வேண்டிய சமதர்மக் கொள்கை கொண்ட ஆட்சிதான் நடைபெறும்.

மனித சமூகத்தின் கஷ்ட நிலைமைக்கும், இழி தன்மைக்கும், ஓய்வற்ற தன்மைக்கும், சதா கவலைக்கும் காரணமாயிருப்பதே இந்த பணக்காரத் தன்மையும் ஏழ்மைத்தன்மையுமேயாகும்.

மனிதப் பிறவி உயர்ந்த தென்றும், அருமையான தென்றும், மற்ற ஜீவராசிகளை விட மேம்பட்ட அறிவின் பயனை அனுபவிப்பதென்றும் சொல்லுகிறார்கள். நான் அதை ஒப்புக் கொள்ள முடியாது.

இன்றைய மனித சமூகத் திட்டம் சரியென்று ஒப்புக் கொள்வதனால் "அறிது அறிது மானிடராய்ப் பிறத்தலரிது" என்பது சோம்பேரிகள், பகுத்தறி வற்றவர்கள் ஆகியவர்களின் ஞானம் என்று சொல்ல வேண்டியிருப்பதோடு நான் "இழிவு, இழிவு மனிதராய் பிறத்தல் இழிவு" என்றுதான் சொல்லுவேன். மனிதப் பிறப்பின் இழிவுக்கும், கஷ்டத்திற்கும் அவனது இன்றைய வாழ்க்கைத் திட்டமே காரணமாய் இருக்கிறது; மனிதனை விட மற்ற ஜீவப் பிராணிகளில் தன் இனத்தை அடிமை கொண்டு வருத்தி வதைத்து வாழ்கின்ற ஜீவன் மிக அபுரூபமேயாகும்.

மனிதனை விட மற்ற ஜீவ பிராணிகளில் நாளைக்கு என் கதி என்ன? என் பிள்ளை குட்டி பேத்தி பிதிர் ஆகியவர்களுக்கு என்ன கதி? உலகம் உள்ள நாள் வரை நானும் என் சந்ததியும் உலகிலுள்ளவர்களுக்குக் கெல்லாம் மேலாய் வாழ்வதற்கு என்ன மார்க்கம் என்று கருதி தன் சமூகத்தையோ சகல வித அயோக்கியத்தனங்களாலும் வதைத்து நலம் பெரும் ஜீவன்கள் மிக மிக அருமையாகவே இருக்கும். மனித சமூகத்தாலேயே எதை எதை இழிவான கொடுமையான குணம் என்று கருதுகின்றோமோ அவை யெல்லாம் உலகிலுள்ள எந்த இழிவான ஜீவன் என்று சொல்லப்படுவதை விட மனிதனிடத்திலேயே அதிகமாய் இருக்கின்றது. கழுதை மேல் கழுதை சவாரி செய்கின்றதா? புலிமேல் புலி சவாரி செய்கின்றதா? பாம்பு தேள் ஆகியவை மேல் பாம்பு தேள் சவாரி செய்கின்றதா? ஆனால் மனிதன் மேல் மனிதன் செய்கின்றானா இல்லையா! ஆகவே மனிதனிடம் என்ன உயர்வான குணங்கள் இருக்கக் காண்கின்றோம்?

அரசன், ஜாதி, மதம், கடவுள், பணக்காரன் ஆகிய தன்மைகள் எல்லாம் மேல் கண்ட இழி தன்மைக்கும் அக்கிரமத்தன்மைக்கு மனித ஜீவகாருண்ய



RangaRakes tamilnavarasam.com

மற்றத் தன்மைக்கும் அனுகூலமாய் இருக்கின்றதா? இல்லையா?

மனிதன் தனது சமூகத்தை வஞ்சித்துப் பொருள் சேர்த்து "பகுத்தறிவுள்ள" தனது பெண்டு பிள்ளைக்கு பணம் சேர்த்து வைக்க வேண்டுமென்று சொல்லுகிறான். ஆனால் மிருகம், பக்ஷி ஆகியவைகள் பகுத்தறிவு இல்லாத தனது பெண்டு பிள்ளைகளுக்குச் சொத்து சேர்த்து வைக்க கருதுவதில்லை. தனது குட்டிகளையும் குஞ்சுகளையும் அவை தானாக ஓடியாடும் பருவம் வந்தவுடன், தனித்து வாழ்ந்து கொள்ளும்படி கடித்தும் கொத்தியும் துரத்தி விடுகின்றது. அவற்றைப் பற்றிய கவலையோ ஞாபகமோ கூட அவைகளுக்குக் கிடையாது.

மனிதனின் பிறப்பு கடவுளால் என்கிறோம். இறப்பு கடவுளால் என்கிறோம். இவ்விரண்டுக்கும் காரணமாய் காணப்படுவது. மனிதன் நடப்பாய் இருப்பதால் அந்த நடப்பும் கடவுளால் தான் என்று சொல்ல வேண்டியதாகின்றது.

ஆகவே மனிதனின் நடப்பையும் கடவுளால் தான் நடைபெறு கின்றது என்று சொல்லுகிறார்கள். மனிதனுடைய நடப்போ பெரிதும் நான் மேலே சொல்லியது போலவேதான் கவலையும் கொடுமையும் நிறைந்ததாய் இருந்து வருகின்றது. இப்படிப்பட்ட நடப்புக்குக் கடவுளை காரணமாக்குகின்றவர்கள் இதன் பயனாகிய பிறப்பு இறப்புக்குக் கடவுளை காரணமாக்குகின்றவர்கள் கடவுளை மேன்மைப்படுத்தினவர்களா? அல்லது கீழ்மைப்படுத்தினவர்களா? என்று யோசித்துப் பாருங்கள்.

செல்வவான் (சோம்பேறியாயிருந்து வாழ உரிமையுடையவன்) என்கின்ற ஒரு நிலைமை உலகில் இல்லையானால் கடவுளுக்கும் மதத்திற்கும் ஜாதிக்கும் அரசனுக்கும் உலகில் இடம் இருக்குமா? என்று யோசித்துப் பாருங்கள்.

*குறிப்பு : 06-12-1932 ஆம் நாள் ஈரோடு சுயமரியாதை இளைஞர்கள் அளித்த வரவேற்பு பத்திரத்திற்கு பதில் அளித்து பேசியது.*

*(தொடரும்)*

**குடி அரசு - சொற்பொழிவு - 18.12.1932**



# சங்கராச்சாரியும் காந்தியும்

உலக மக்கள் அறிவு விருத்திக்கும், ஒற்றுமைக்கும் சமூக பொருளாதார சமத்துவத்திற்கும், விடுதலைக்கும், சுதந்திரத்திற்கும் பரம விரோதிகளாயிருப்பவர்கள் மதத்தலைவர்களும், மத நம்பிக்கை கொண்ட ஜனத் தலைவர்களுமேயாவார்கள். இவர்களது சூட்சிகள் தான் உலக மக்கள் ஒற்றுமையைப் பிரித்து சின்னாபின்னமாக்கி, வலுத்தவன் இளைத்தவனை வதைத்து, அவனது இரத்தத்தை உருஞ்சி வாழும் முறையை நிலை நிருத்தி வருகிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானல் ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்து மதத் தலைவராகிய போப்பும், அவரது சிப்பந்திகளாகிய பாதிரிக் கூட்டமும் இல்லாதிருக்குமானால் உலக இயற்கை விஷயங்களில் எவ்வளவோ முற்போக்கு பெற்றுள்ள ஐரோப்பியர்கள் இம்மாதிரி நாடு பிடிக்கும் நாட்டு வெறியும், உலக செல்வங்கள் தங்கள் தங்கள் நாடுகளுக்கே வரவேண்டும் என்கின்ற செல்வ வெறியும், அந்தப்படி பல நாடுகளை கொள்ளை கொண்டும் பல தேச மக்களை வதைத்தும் தேடிய பொருள்களை அந்நாட்டு ஏழை மக்களுக்குப் பயன்படுத்தாமல் தாங்கள் (ஒரு சிறு கூட்டம்) மாத்திரமே அனுபவிக்கும் குணமும் ஏற்பட்டிருக்க நியாயமிருக்காது.

அது போலவே ருஷியா தேசத்திலும் "மகாத்மா" டால்ஸ்டாய் என்கின்ற ஒரு மத நம்பிக்கை கொண்ட மனிதர் போன்றவர்கள் ஜனத் தலைவராயில்லாதிருந்தால் அந்நாடு வெகுகாலத்திற்கு முன்னதாகவே அதன் பழைய காட்டுமிராண்டித் தன்மையில் இருந்து மீண்டிருக்கும்.

நம் இந்திய நாட்டின் இன்றைய நிலையைப் பற்றியும் யோசிப்போமேயானால், மேல் கண்ட முட்டுக் கட்டைகள் போலவே மதத் தலைவர்கள் என்னும் சங்கராச்சாரிகள் போன்ற கூட்டத்தாராலும் ஜனத் தலைவர் என்னும் "மகாத்மா" காந்தி போன்றாராலும் இன்றுவரை இந்திய நாடு காட்டுமிராண்டித் தன்மையில் இருந்து மீள வகையின்றித் தத்தளிக்கின்றது.

ருஷியாவின் முன்னேற்றத்திற்கு, அதாவது அதன் காட்டுமிராண்டித் தன்மையிலிருந்து விடபட, டால்ஸ்டாய் எப்படி கடவுள் பெயரையும், மதத்தின் பெயரையும் சொல்லிக் கொண்டு முட்டுக்கட்டையாயிருந்தாரோ



RangaRakes tamilnavarasam.com

அதே போல் ஏன்? இன்னும் அதை விட மோசமாக தோழர் காந்தியின் நாடகத்தால் இந்தியா இன்னும் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முந்திய காட்டுமிராண்டித் தன்மைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றது. மனித சமூகத்திற்கு மௌடீகத் தன்மை அதாவது தெளிவு இல்லாமல் குழப்ப மடைந்து கொண்டிருக்கும் தன்மை பெரிதும் கடவுளையும் மதத்தையும் பற்றியதேயாகும். அந்த இடத்தை நன்றாய் அறிந்து அதை உபயோகப் படுத்திக்கொள்ள வகை தெரிந்தவர்கள் யாராயிருந்தாலும் எவ்வளவு சாதாரண - உண்மையற்ற - நிலையற்ற - பயனற்ற மனிதராய் இருந்தாலும் அவர்கள் ஏதாவது ஒரு வகையில் வெற்றி பெற்றே தீருவார்கள்.

அந்த முறையில் தான் இன்று இந்தியாவானது தோழர் காந்தி கையிலும், சங்கராச்சாரி கையிலும் சிக்கிக் கொண்டு சித்திரவதை செய்யப் பட்டு வருகின்றது. "தொட்டது தொண்ணூரிலும்" தோல்வியடைந்த தோழர் காந்தி, இன்று மக்கள் கவனத்தை கோவிலுக்குத் திருப்பிக் கடவுள் பிரசாரத்தை ஆரம்பித்து விட்டு மக்களுக்கு கடவுள் வெறியை உண்டாக்கி வருகிறார். அவரது சிஷ்யகோடிகள், அதாவது அவரது நாடகத்தில் உப பாத்திரர்களாயிருந்து பிழைத்துத் தீர வேண்டியவர்கள் - புகழடைய வேண்டியவர்கள் எல்லோரும் திருப்பதி உண்டியல்காரர்கள் போல் "பகவான்" நாமத்தை ஸ்மரணை செய்வதிலும் "அவரது பெருமையை" கால க்ஷேபம் செய்வதிலும் ஒரு புரம் பெருத்த பிரசாரம் செய்கிறார்கள். மற்றொரு புரத்திலோ சங்கராச்சாரியாரும், அவரது கூட்டமாகிய பார்ப்பன கோஷ்டியும் கரை புரண்டோடும் காட்டு வெள்ளம் போல் மதப்பிரசாரமும், சாஸ்திரப் பிரசாரமும் செய்கின்றார்கள். "தமிழ் நாடு" "காந்தி" ஆகிய இரண்டொரு பத்திரிகைகள் தவிர ஏனைய "தேசிய" பத்திரிகைகளும், "தேசிய"வாதி களும், "தேச"பக்தர்களும் எப்படியாவது தங்களுக்கு வயிற்றுப் பிழைப்பும், வாழ்வும், புகழும் ஓட்டும் கிடைத்தால் போது மென்று, உப்பு கண்டம் (மாமிசம்) திருட்டுக் கொடுத்த பார்ப்பனர் போல் வாயை மூடிக் கொண்டு ஒரு பக்கம் தலையும் மற்றொரு பக்கம் வாலும் காட்டிக் கொண்டு வாளாய் கிடைக் கின்றார்கள். சமீபகாலமாக ஒரு இரண்டு மூன்று வார காலமாய் அதாவது காந்தி நாடகத்தில் குருவாயூர் கோவில் பிரவேச காந்தி பட்டினி பாகம் நடிக்கத் துடங்கியவுடன் "சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் . . . ." என்பது போலாகி சங்கராச்சாரியும் மற்றும் உள்ள பார்ப்பனர்களும் எழுதும் விஷயங் கள் பத்தி பத்தியாய் கலம் கலமாய் பக்கம் பக்கமாய் பத்திரிகைகளில் கொள்ளை போகின்றன. அவற்றில் இதற்கு முன் சூத்திரன் என்று சொல் வதற்கு பார்ப்பனர்களில் பெரிய பெரிய ஆள்களெல்லாம் பயந்து நடுங்கிக் கிடந்தது போய் இப்போது அக்ஷியபாத்திர பார்ப்பனர்கள் முதல் யாவரும் சூத்திரன், சூத்திரன் என்று வரிக்கொரு வார்த்தையும், சண்டாளன், சண்டாளன் என்று பத்திக்கு பல வார்த்தையுமாக அவசரமாய் அள்ளிக் கொட்டுகிறார்கள். ஏன் என்று கேட்க நாதியில்லை.



இதுதான் இன்றைய தேசிய வேலையாய் போய் விட்டது. கோவி லுக்குப் போய் எவன் 'மோட்ச'மடைந்தாலென்ன? அடையா விட்டா லென்ன? எந்தக் கோயில் இடிந்து நாசமாய்ப் போனால் நமக் கென்ன? இந்த சாக்கை வைத்துக் கொண்டு இந்த யோக்கியர்கள் ஏன் சூத்திரன், சண்டாளன் என்பவைகளை நிர்ணையம் செய்ய பாடுபட வேண்டும்? என்பது தான் நமது கேள்வி.

ஒரு பார்ப்பான் "தீண்டப்படாதவர்கள், ஆதிதிராவிடர், ஹரிஜனங்கள் என்பவர்கள் எல்லோரும் சண்டாளர்கள் ஆனதினால் கோவிலுக்குள் போகக் கூடாது" என்று எழுதுவதும், மற்றொரு பார்ப்பான் "அது சரியல்ல சண்டாளர் என்பது பஞ்சமர்கள் அல்ல. மற்ற யார் என்றால் மேல் ஜாதி பெண்ணுக்கும் கீழ் ஜாதி ஆணுக்கும் பிறந்தவர்கள் தான் சண்டாளர்கள்" என்று எழுதுவதும், அப்படிப் பிறந்தவர்கள் யார் யார் என்று பார்க்கப் போனால் செட்டி, நாயுடு, நாடார், முதலி, கவுண்டர், கோனார், குயவர், நாவிதர் என்று ஒரு "ஸ்மிருதி" சொல்லுவதும், மற்றொரு ஸ்மிருதியில் பார்ப்பனர் தவிர மற்றவர்கள் எல்லாம் என்று சொல்லுவதும், அதாவது "கலியுகத்தில் பிராமணர்கள் தவிர மற்ற க்ஷத்திரியர், வைசியர் கிடையாது. சூத்திரர்தான் உண்டு. அவர்களுக்குள் இருக்கும் ஜாதிகளுக்கு ஆதாரம் கலப்புப் பிரவி, விபசாரப் பிரவி" என்று காணப்படுவதும் இந்த ஆதாரங்களை தைரியமாய் வெளிப்படுத்தி ஜனங்களுக்குள் செல்வாக்கு ஏற்படுத்தி நிலைக்கச் செய்வதும் ஆன காரியங்களே இன்று கோவில் பிரவேசமாகவும், எதிர்ப்பாகவும் இருந்து வருகின்றது.

இதை ஆட்சேபிக்காமல் சகித்துக் கொண்டு இருக்கும் மக்கள் தான் இன்று முதல் நெம்பர் தேசீயப் பத்திராதிபர்களாகவும், தேச பக்தர்களாகவும் விளங்குகிறார்கள். ஓட்டுக்காகவும் வயிற்றுப் பிழைப்புக்காகவும் பத்திரிகை வியாபாரத்திற்காகவும், தீண்டாமை விலக்கு கோவில் பிரவேசம் ஆகிய நடிப்பில் பாத்திரர்களாய் (வேஷதாரிகளாய்) அமர்ந்தவர்களுக்கு மானம், வெட்கம், சொரணை இருப்பதற்கு ஞாயமில்லை. ஏனெனில் பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்பதும், கருமமே கண்ணாயினார் என்பதும் இவர்களை மாத்திரம் விட்டு விடாது. ஆனால் உண்மையில் சமத்துவத்தை விரும்புகிறேன். சமதர்மம் எனது கொள்கை என்கின்ற வீரர்கள் இதை ஏன் சகிக்கிறார்கள் என்கின்ற ரகசியம் மாத்திரம் நமக்கு விளங்கவில்லை.

## இரண்டு ஆச்சாரியார்கள்

யாரோ இரண்டு பேர் சண்டை போட்டுக் கொள்ளுவதில் அதில் சம்பந்தமில்லாதவர்களை எதற்காகச் சூத்திரன் என்றும் சண்டாளன் என்றும், பல ஜாதிக் கலப்பு என்றும் சொல்வது என்பது தான் நமது கேள்வி, அதில் ஒரு கட்சியார் அபிப்பிராயப்படி அதாவது வைதீக சங்கராச்சாரி அபிப்பி



RangaRakes tamilnavarasam.com

ராயப்படி பார்த்தால் தீண்டப்படாதவர்கள் சண்டாளராகிறார்கள். சீர்திருத்த ஆச்சாரியார் அபிப்பிராயப்படி பார்த்தால் பார்ப்பனரல்லாத மற்ற ஜாதியார் சண்டாளராகிறார்கள் இதற்குள் தீண்டாதவர்களும் மற்றவர்களும் சேர்ந்து விடுகிறார்கள்.

இதை யோசித்தோமானால் சங்கராச்சாரி கூட்டம் ஆழாக்கை தலை கீழாகக் குப்புறக்கவிழ்த்தி அளப்பதாய் சொன்னால், சீர்திருத்த ஆச்சாரியார் ஆழாக்கைப் படுக்கை வசத்தில் வைத்து அளந்து போடச் சொல்லுகிறார். இவர்களில் யார் யோக்கியர் என்பதே விளங்கவில்லை.

நம்மைப் பொருத்தவரை படுக்க வைத்து அளக்கும் சீர்திருத்த ஆச்சாரியை விட குப்புறக் கவிழ்ந்து அளக்கும் சங்கராச்சாரியாரையே (கூறை வீட்டில் ஏறிக் கொள்ளிக் கட்டை வைத்து விளையாடுபவரே இரு வரில் யோக்கியர் என்பது போல்) யோக்கியர் என்று சொல்லுவோம்.

## சங்கராச்சாரி

இது நிற்க, சங்கராச்சாரியின் அட்டகாசமும், ஆணவமும், கொள் ளையும் இன்று சென்னையில் தாண்டவமாடுகின்றது. ஏன்என்று கேட் பாரில்லை? பார்ப்பனரல்லாத மக்கள் அவர் காலில் 1000, 2000, 3000, 5000, 10000 ரூ. கணக்காய் கொண்டு போய்க் கொட்டி பெண்டு பிள்ளைகளுடன் விழுந்து கும்பிட்டு பாத தீர்த்தம் வாங்கி சாப்பிட்டு விட்டு வருகிறார்கள். சங்கராச்சாரி கால் கழுவின தண்ணீர் இன்று தங்கத்தை விட ஏன் - வைரத்தை விட அதிக விலைக்கு விற்கப்படுகின்றது. சுயராஜ்யம் கேட்கும் ஆட்களும் காந்தி சுயராஜ்யத்திற்கு அதாவது ராமராஜ்யத்திற்கு 1000, 10000 என்று காந்தி சிஷ்யர்கள் வயிற்றுப் பிழைப்புக்கு அள்ளியள்ளிக் கொடுத்த ஆட்களும் இதில் அதிகம் இருக்கின்றார்கள். இவர்களுக்கு ஏதாவது கடுகளவு அறிவா வது சுயமரியாதையாவது இருக்கின்றதா? என்பது தான் நமது சந்தேகம்.

சங்கராச்சாரி என்றால் என்ன? யாருக்கு சங்கராச்சாரி? அவரது கொள்கை என்ன? நடப்பு என்ன? வேஷம் என்ன? எண்ணம் என்ன? அனுப வம் என்ன? என்பது போன்ற ஒவ்வொன்றையும் யாராவது கவனித்தார்களா? அல்லது கவனித்தும் வேண்டுமென்றே தெரியாதவர்கள் போல் நடந்து கொள்ளுகிறார்களா? என்பது நமக்கு விளங்கவில்லை.

தோழர்களே! சற்று கவனித்துப் பாருங்கள். சங்கராச்சாரியார் என்பவர் ஒரு விதமான "ஆணவம் பிடித்த நாஸ்திகக் கொள்கைக்காரர்" அதாவது கடவுள் என்று ஒரு தனிப் பொருள் கிடையாது என்பதோடு தானே தான் கடவுள் என்ற கொள்கையுடையவர்.



ஆனால் அவர் தினமும் பூஜிக்கும் உருவமோ ஒரு தனிக் கடவுள் உருவம். அதிலும் பெண் கடவுள், அதாவது "சக்தி பூஜை" வேஷமோ, சைவவேஷம், விபூதி பட்டை பட்டையாய் பூசிக் கொள்வது.

நிலையோ சந்யாசி நிலை அதாவது தலை மொட்டை காவிவஸ்திரம்.

அனுபவமோ, ராஜபோகம் யானை - குதிரை - பல்லக்கு படை எடுபிடி ஆள்கள்.

இந்த நிலையில் உள்ள இவரால் பொது மக்களுக்கு ஏற்படும் பயனோ தெண்டவரி அதாவது சர்க்கார் தண்ட வரியை விட மோசமான வரி. பார்ப்பன உத்தியோகஸ்தர்களையும் செல்வாக்கான பார்ப்பன வக்கீல்களையும், பார்ப்பன பத்திராதிபர்களையும் விட்டு மிரட்டியும் தாட்சண்யத்திற்கு கட்டுப் படுத்தப்படக் கூடிய தந்திரத்தைச் செய்தும் மக்களின் விதரை நசுக்குவது போல் நிர்ப்பந்தப் படுத்தி பணம் வசூல் செய்வது.

இப்படி வசூல் செய்யப்பட்ட பணத்தைக் கொண்டு செய்யப்படும் காரியமோ பார்ப்பன சோம்பேறிகளுக்கும், கொட்டாப்புளிகளுக்கும் பானை பானையாய் பாயாசம் வடையுடன் பொங்கிப் போடுவது.

பணங்கொடுத்தவர்களுக்கு பயனோ, கொடுப்பதையும் கொடுத்து சங்கராச்சாரி காலில் பெண்டு பிள்ளைகளுடன் விழுந்து போராக்குறைக்கு அவர் கால் கழுவின தண்ணீரையும் குடித்து விட்டு வந்து வீடு சேருவது.

இவ்வளவோடு இந்த சீன் முடிவு பெருவதில்லை. பணம் கொடுத்த பார்ப்பனரல்லாதார் வீடு வந்து சேருவதற்கு முன்பதாகவே பணம் கொடுத்த பார்ப்பனரல்லாதார்களை பார்த்ததற்காகவும் அவர்களுடன் பேசினதற்காக வும் அந்த தோஷ பரிகாரத்துக்காக இவர்கள் பணத்திலேயே பார்ப்பனர்க்கு தானம் வழங்குவதும், அவரும் குளித்து முழுகி தீட்டைக் கழித்து விட்டு ஜபம் செய்து தோஷத்தை பரிகாரம் செய்து கொள்ளுவதும் ஆகும்.

இவை ஒரு புறமிருக்க இவருக்கு தனியோக்கியதை என்ன என்பதைப் பார்ப்போம். இவர் ஒரு சாதாரண பார்ப்பனர். இவருக்கு முன் அந்தப் பட்டத்தில் இருந்தவர் இவரைப் பிடித்து வைத்து விட்டுப் போனார் என்பதைத் தவிர வேறு ஒரு யோக்கியதையோ அருகதையோ கிடையாது. இவருக்குப் பிறகு யார் அந்தப் பட்டத்துக்கு வருவார் என்பதும் இவர் பிடித்து வைக்கும் ஆளேயொழிய வேறில்லை. இவர் காலம் முடியும் வரை எந்த வழியிலாவது இவருக்கு திருப்தியாய் நடந்து கொள்ளுகின்றவர்கள் அந்த ஸ்தானத்திற்கு அருகதையாகி விடுவார்கள். ஆகவே வாக்கு சுதந்திரம், ஓட்டு சுதந்திரம், ஜனநாயகம் கேட்கின்றோம் என்று சொல்லும் பார்ப்பனர்கள் அதை விட மேலானதாகக் கருதும் தங்கள் மத விஷயத்தில் "ஆத் மாத்த



RangaRakes tamilnavarasam.com

பாரமார்த்திக" விஷயத்தில் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்பதையும் இந்தப்படி நடந்துக் கொள்வது அறிவில்லாமலா அல்லது மேதாவித் தனத்தாலா அல்லது இதுவும் சுயராஜ்யம் தேசியம் என்பதைப் போன்ற ஒரு சூட்சியாலா என்று யோசித்துப் பாருங்கள்.

நிற்க, "சகலத்தையும், துறந்து ஆன்ம கோடிகள் உய்வதற்காக உலகில் தோன்றிய அவதார புருஷரான" "சங்கராச்சாரிய சுவாமிகள்" யானை, குதிரை, பல்லக்கு இதைத் தூக்க 32 ஆள்கள் மற்றும் படைகொடி எதற்கு என்று கேட்பது ஒரு புறமிருக்க இவருக்கு அதாவது இந்த சன்யாசிக்கு "பிச்சைக்கு" என்று தினம் 1க்கு 500 ரூ. அழுவது எதற்காக என்று கேட்கின்றோம். இவர் பக்தாள் வீடுகளுக்குச் செல்லத் தனித்தனி ரேட்டுகள் எதற்காக என்று கேட்கின்றோம்.

இந்தப்படி வசூலித்த பணத்தைக் கொண்டு பொங்கிப் பொங்கிப் போடும் சமாராதனையில் பணம் கொடுத்த பார்ப்பனரல்லாதார் ஏன் கலந்து கொள்ளக் கூடாது என்று கேட்கின்றோம்?

ஒரு சமூகத்தில் எவ்வளவுதான் அடி முட்டாள்கள் இருந்து விட்டாலும் அதை இன்ன அளவு தான் ஏமாற்றுவது என்கின்ற ஒரு பக்ஷாதாபமாவது இருக்க வேண்டாமா? என்று கேட்கின்றோம்.

இவைகளையெல்லாம் நன்றாய் யோசித்துப் பார்த்தோமேயானால் இது ஒரு பார்ப்பனப் பிரசாரம் என்றும் பார்ப்பன ஆதிக்கத்திற்காக செய்யப்படும் பார்ப்பன மத சூழ்ச்சிப் பிரசாரம் என்றும் சொல்லாமல் வேறு என்ன சொல்ல இருக்கின்றது.

காந்தியை மகாத்மா ஆக்கினதில் எத்தனை சோம்பேறிகளுக்கு வயிற்றுப் பிழைப்புக்கும் உத்தியோகம், பதவி புகழ் வேட்டைக்கும் இடம் கிடைத்ததோ அதை விட எத்தனையோ மடங்கு அதிகமான பேருக்கு ஒரு பார்ப்பனரை சங்கராச்சாரி லோக குரு ஆக்கினதில் வயிற்றுப் பிழைப்பு மாத்திரமில்லாமல் உயர்ந்த ஜாதி நிலையும் ஏற்பட்டு வருகின்றது.

சங்கராச்சாரி இன்னார் என்றும் அவருடைய யோக்கியதை இன்ன தென்றும் நம்மைவிட பல மடங்கு அதிகமாகவே பார்ப்பனருக்கும் தெரியு மானாலும் அதை ஒரு சாதனமாய் வைத்து அதாவது கோவில் ஒரு கல்லை நட்டு அதன் மூலமாக மக்களைக் கொள்ளை அடிப்பது போல் மத வியாபாரம் நடத்துகிறார்கள். இந்த மாய்கையில் பார்ப்பனரல்லாத மக்கள் சிக்கி பணத்தை அள்ளிக் கொடுப்பதென்றால் அறிவுள்ள யாருக்குத் தான் வயிறு கொதிக்காது என்று கேட்கின்றோம்.



இந்த லட்சணத்தில் அவர் குருவாயூர் கோவில் பிரவேசத்தைப் பற்றி ஜாமொரீனுக்கு "சண்டாளர்களைக் கோவிலுக்குள் விடாதே" என்று தந்தி கொடுத்திருக்கிறோம் இது எவ்வளவு அயாக்கியத்னமான காரியம் என்று கேட்கின்றோம். இவருக்கும் (அதாவது சங்கராச்சாரிக்கும்) குருவாயூருக்கும் எந்த விதத்தில் சம்மந்தம் என்று கேட்கின்றோம்.

அப்துல்காதருக்கும், ஆடி அமாவாசைக்கும் உள்ள சம்மந்தம் போல் இவரோ, தானே கடவுள் என்பவர், சைவ வேஷக்காரர். சக்தி பூசைக்காரர், சன்னியாசி, துறவி ஆகிய இத்தனைக்கும் சம்மந்தம் இல்லாத ஒரு கல்லுருவம் உள்ள இடம் அதுவும் விஷ்ணுசாமி என்கின்ற பெயர்கொண்ட கல் உருவம் உள்ள கோவில் அதுவும் "பாமர மக்களை உஜ்ஜீவிக்கச் செய்ய அச்சாவதாரமாய் எழுந்தருளி இருக்கும்" இடம், அதுவும் ஒரு மனித உருவ ஸ்திரீயின் வயிற்றில் பிறந்து வளர்ந்து பிறகு கடவுளாகி வந்த ஐதீகத்தை ஆதாரமாய் வைத்து செய்யப்பட்ட உருவத்தினிடம் ஒரு கூட்டத்தாரை மாத்திரம் போக விடப்படக்கூடாது என்றும், அவர்கள் சண்டாளர்கள் என்றும், தந்தி கொடுப்பதென்றால் அதுவும் எப்படிப்பட்ட சமயத்தில் இரண்டு உயிர்கள் அதாவது ஒரு "மகாத்மா" என்னும் உயிரும் மற்றொன்று "மகாத்மா வினது" பிரீதிக்கு பாத்திரமான உயிரும் ஆக "இரண்டு உயிரும் செத்தாலும் சரி அதைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை, கல்லுருவத்தினிடம் மாத்திரம் மனிதனை விட்டு விடாதே" என்கின்ற கருத்தின் மீது தந்தி கொடுப்பதென்றால் இதன் ஆணவத்தையும், அகம்பாவத்தையும் என்னவென்று சொல்வது? ஒரு சமயம் இவருக்கு ஜீவன்களிடத்தில் அன்பும், சமத்துவமும் நேரான ஞானமும் இருந்திருக்குமானால் "யார் செத்தாலும் கவலையில்லை மக்களில் ஒரு சமூகத்திற்கும் ஒருவித இழிவும் இருக்கக் கூடாது எல்லோரையும் உள்ளே விட்டு அவர்களுக்கு உள்ள இழிவை நீக்குங்கள்" என்று தந்தி கொடுத்திருந்தால் இவரை மனித சமூகத்தில் சேர்க்கலாம். அப்படிக்கில்லாமல் இந்தப்படி தந்தி கொடுப்பதை நினைத்தால் இந்த ஸ்தாபனத்தின் அட்டூழியம் எவ்வளவு என்பதுதான் முன் வந்து நிற்கின்றது.

தோழர்கள் காந்தியும், கேளப்பனும் செத்துப் போவார்களே என்று நாம் சிறிதும் கவலை கொண்டு இவ்விதம் எழுதவில்லை. அவர்கள் இருவரும் எப்படியாவது, என்றைக்காவது சாகின்றவர்கள் தாம் என்பது நமக்கு நன்றாய் தெரியும். அவர்கள் தங்களுடைய உயிரை வியாதிக்கும் மூப்புக்கும் பலியாய் கொடுப்பதை விட ஒரு புகழுக்கோ அல்லது தாங்கள் நல்லது என்று நினைக்கிற ஒரு காரியத்திற்கோ பலி கொடுப்போமே என்று எண்ணி இருக்கலாம். அல்லது பல காரணங்களால் வாழ்க்கையில் வெறுப்புத் தோன்றி இருக்கலாம். ஆதலால் நமக்கு அதைப் பற்றி கவலை இல்லை. சங்கராச்சாரியாரின் இப்படிப்பட்ட காரியமும் அவர் ஆதரவால் நடத்தப்படும் பார்ப்பன ஆதிக்கப் பிரசாரமும் சகிக்கக் கூடியதாயில்லை. என்பதற்காகவே



RangaRakes tamilnavarasam.com

இதை எழுதுகின்றோம். சங்கராச்சாரி சென்னையில் இன்னும் ஒரு மாத காலம் தங்கப் போவதாகவும் அதற்கு பல பேர் பார்ப்பனரல்லாதார்களே இன்றும் பல ஆயிர ரூபாய்கள் கொடுக்கப் போவதாகவும் யாரோ ஒரு மார்வாடி சேட் ஒரு மாதத்திய செலவையும் அதாவது சுமார் 10, 20 ஆயிரம் ரூபாயையும் பொருத்துக் கொள்ளப் போவதாகவும் கேள்விப் பட்டோம். இது உண்மையாய் இருக்குமானால் இதை மனதார அனுமதிக்கலாமா? என்பதே தான் இப்போதைய நமது கேள்வி. நாட்டில் உள்ள பண நெருக்கடி எவ்வளவு? ஏழைகள் தொழிலாளர்கள் வேலையில்லாமல் கூலி இல்லாமல் பிள்ளை குட்டிகளுடன் பட்டினி கிடந்து தொல்லைப்படுவது எவ்வளவு? உதாரணமாக எம். எஸ். எம். ரயில்வே தொழிலாளர்கள் வேலையில்லாத காரணத்தால் சிலரால் வேலை நிறுத்தம் செய்யப்பட்டு அவரவர்கள் வீட்டு அடுப்பில் பூனைக்குட்டிகள் தூங்கிக் கொண்டிருக்கின்றன. அவர்களது பிள்ளை குட்டிகள் பட்டினியால் மடிகின்றன.

ஏன் என்று கேட்க நாதியில்லை. ஆனால் சோம்பேறிப் பார்ப்பனர் களுக்கு தின்று கொழுக்க என்று சமாராதனைக்கு பதினாயிரக் கணக்கான ரூபாய் கொள்ளை போகின்றதுடன் வேகின்ற வீட்டில் பிடிங்கினது லாபம் என்பது போல் வேலை நிறுத்தத்தை ஆதரவாய் வைத்துக் கொண்டு தாங்கள் பெரிய மனிதர்களாகவும் நோகாமல் சட்ட சபைக்குப் போகவும் சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதைத் தவிர வேறு என்ன நடக்கின்றது என்று கேட்கின்றோம்.

தேசீயப் பத்திரிகைகள் தொழிலாளர்களிடத்தில் சுயமரியாதைக் கொள்கைகளைப் பற்றி விஷமப் பிரசாரம் செய்து விட்டு தங்கள் பத்திரிகை யில் சங்கராச்சாரி பிரசாரத்திற்கு தினம் 5 கலமும், சீர்திருத்த ஆச்சாரிக்கு தினம் 10 கலமும் இடம் ஒதுக்குவதைத் தவிர மற்றும் இதில் பிரவேசித்தால் தங்களுக்கு ஏதாவது தலைமை ஸ்தானம் கிடைக்குமா என்றும் மீன்கொத்தி குருவிபோல் பார்ப்பதைத் தவிர வேறு என்ன செய்கின்றன என்று கேட் கின்றோம்.

ஆகவே நாம் முடிவாகச் சொல்லுவதென்ன வென்றால் கள், சாராயக் கடை மறியலை விட, அன்னியத்துணி மறியலைவிட மற்றும் கோவில் பிரவேசத்திற்கு உயிர் விடுவதை விட, சங்கராச்சாரி கொள்ளையையும், அட்டூழியத்தையும், அவர் பார்ப்பனரல்லாத மக்களை இழிவு படுத்திப் பிரசாரம் செய்வதையும் அடக்குவதற்குப் பாடுபடுவதே முக்கிய கடமை என்று சொல்லுகின்றோம். ஏனெனில் இது நமது சமூகத்திற்கே அவமானம்! அவமானம்!! அளவு கடந்த அவமானம்!!!

**குடி அரசு - தலையங்கம் - 18.12.1932**



## இங்கிலாந்தில் ஈ.வே.ராமசாமி பிரசங்கம்

# தொழில் கட்சியின் போலித் தன்மை

தோழர்களே!

இந்தியர்களாகிய எங்களை நீங்கள் ஒரு பரிகசிக்கத் தகுந்த சமூகமாகக் கருதலாம். ஆனால் நாங்கள் பிரிட்டிஷ் தொழில்க் கஷியை மிக மிகப் பரிக சிக்கத்தக்க விஷயமாய் கருதுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

ஏனெனில் தொழில் கஷித் தலைவராகியத் தோழர் லான்ஸ்பரி அவர்கள் சிப்பாய்கள் சுடுவதையும், கொல்லுவதையும் தாம் சிறிதும் விரும்புவதில்லை என்று பெருமை பேசிக் கொள்ளுகிறார். ஆனால் எங்கள் கார்வாத் (Gharwath) சேனைகள் நிராயுதபாணிகளான மக்களைச் சுடுவதற்கு மறுத்ததற்காகத் தோழர். லான்ஸ்பரியின் தொழிற்கஷி கவர்ன்மெண்டானது அந்தச் சிப்பாய்களுக்கு 15-வருஷ கடின காவல் தண்டனை விதித்திருக்கிறது என்பதை ஞாபகபடுத்துகிறேன்.

2. தொழிலாளர் சங்கமாகிய டிரேட் யூனியனை ஆதரிப்ப தாகவும், அதில் சேர்ந்து உழைப்பதாகவும் பறை சாற்றுகிறீர்கள். ஆனால் எங்கள் ஏழை இந்திய சுரங்க வேலைக்காரர்களும், மற்ற தொழிலாளிகளும், சேர்ந்து ஒரு ட்ரேட் யூனியன் சங்கம் ஸ்தாபித் ததற்காக அதன் அதிகாரிகளையும், அதற்கு உதவி செய்த பிரிட்டிஷ் தோழர்களையும் வெளியில் இருக்க விடாமல் உங்கள் தொழில் கஷி அரசாங்கமானது மீரத்து சிறையில் அடைத்துப் போட்டு விட்டது.

3. தோழர் லான்ஸ்பரி அவர்கள் இந்தியர்கள் விஷயத்தில் மிக்க அனுதாபமிருப்பதாகவும், இந்தியர்கள் சுடப்படுவதையும், அடிக்கப் படுவதையும், சிறையில் அடைக்கப்படுவதையும் தாம் விரும்புவ தில்லை என்றும் சொல்லிக் கொள்வதாகக் கேள்விப் பட்டேன். ஆனால் தோழர் லான்ஸ்பரி யுடைய தொழில் கஷி அரசாங்க கேபினட்டானது சுமார் 80000 பேர் வரை இந்திய ஆண் பெண்களை



RangaRakes tamilnavarasam.com

ஜெயிலில் அடைத்திருக்கிறது, ஆயிரக்கணக் கான மக்களை சுட்டுத் தள்ளிக் கொண்டிருக்கிறது.

ஆப்ரிடிகன் கிராமங்களின் மீது ஆயிரக் கணக்கான தடவை ஆகாயப் படை மூலம் கொடுமை செய்யப்பட்டிருக்கிறது.

நூற்றுக்கணக்கான பர்மியர்களையும், கிராமத்தாரையும் சுட்டுக் கொன்று இருக்கிறார்கள். இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்?

4. இந்திய சுரங்கங்களில் 10 மணி நேர வேலைக்கு 8 அணா கூலிக்கு இந்தியர்களிடம் வேலை வாங்கப்படுகின்றது. சுமார் 40 ஆயிரம் பெண்கள் தினம் ஐந்தனா கூலிக்கு பூமிக்குள் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

இந்த கொடுமையையும், ஆபாசத்தையும் நிறுத்த தொழில் கட்சி அரசாங்கம் என்ன செய்தது?

5. தோழர் லான்ஸ்பரி அவர்கள் இங்கிலாந்தில் தொழிலாளி களை ஆதரிக்க வேண்டும் என்று பேசுகிறார். ஆனால் இந்திய விஷயத்தில் தோழர் காந்தியையும், இர்வின் பிரபுவையும் கொடுமை யான வட்ட மேஜை மகா நாட்டையும் ஆதரிக்கிறார். அவ்வளவோடு மாத்திரமல்லாமல் இந்தியாவானது இந்திய அரசர்களும், ஜமீன்தாரர் களும், முதலாளிமார்களும், ஐரோப்பிய வியாபாரிகளுமே ஆதிக்கம் வகிக்கும் படியானதும் தொழிலாளிகளுக்கும், குடித்தனக்காரர் களுக்கும் பாத்தியமும் - பொருப்பும், இல்லாததுமான ஒரு அரசியல் சபை மூலம் இந்திய நிர்வாகம் நடக்கும் படியான காரியத்திற்கு உதவி செய்கிறார். இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்?

6. தோழர் லான்ஸ்பரி அவர்கள் யுத்தத்தையும், யுத்த முஸ்தீபை யும் வெறுக்கிறதாக சொல்லுகிறார்கள். ஆனால் இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் துருப்புகளையும், பிரிட்டிஷ் வைசிராயையும் திருப்பி அழைத்துக் கொள்ள மறுக்கிறார்.

7. கடைசியாக இருந்த தொழிற் கட்சி அரசாங்கமானது இரண்டு வருஷ காலத்தில் அனுப்பிய ஆகாய சண்டைக் கப்பல்களையும், வெடிகுண்டுகளையும், மோட்டார் பீரங்கி வண்டிகளையும் கவசம் செய்த மோட்டார் வண்டிகளையும், யந்திரத் துப்பாக்கிகளையும், பிரிட்டிஷ் பட்டாளங்களை யும் கணக்கு பார்த்தால் பால்ட்வின் அரசாங்கமானது தனது 5 வருஷம் ஆட்சியில் அனுப்பப்பட்டதை விட அதிகமாகவே இருக்கிறது. தோழர்களே! இவற்றிலிருந்து பிரிட்டிஷ் தொழிலாளர் பார்ட்டி என்று சொல்லப்படும் சமதர்ம பார்ட்டியின் யோக்கியதையை அறிந்து கொள்வது என்பது எங்க ளுக்கு மிகக் கஷ்டமாகவே இருக்கிறது.



ஆதலால் யாக்ஷையார் தொழிலாளிகளே நீங்கள் இந்த போலி கட்சிகளையும், கொள்கைகளையும், நம்பாமல் மனித சமூக விடுதலைக்கும், சுதந்திரத்துக்கும் சமத்துவத்திற்கும் உண்மையாகவே போராட உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையை எதிர் நோக்கிக் கொண்டிருங்கள்.

*குறிப்பு : 20-06-1932 ஆம் நாள் இங்கிலாந்து மேக்ஸ்ப்ரோ (பான்சிலே) லேக் பார்க்கில் பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் தோழர் லான்ஸ்பரி பேசியதற்கு பதில் அளித்து உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 18.12.1932**



RangaRakes tamilnavarasam.com

# வேலைத் திட்டக் கூட்டம்

இந்த மாதம் 28, 29 தேதி புதன், வியாழக் கிழமைகளில், ஈரோட்டில், சுயமரியாதை இயக்கத்தின் 1933 வருஷத்திய வேலைத் திட்டத்தைப் பற்றி யோசிக்க ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக சுய மரியாதை இயக்கத்து பிரமுகர்களும், தீவிர பிரசாரர்களும் அபிமானிகளும் ஆதரவளிப்பவர்களுமான தோழர் பலருக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக் கிறது. சில முக்கிய பிரபலஸ்தர்களுக்கு அழைப்பு வந்து சேராமலோ, அல்லது அனுப்பத் தவறிப்போயோ இருந்தாலும் இருக்கலாம். அவற்றை யெல்லாம் லட்சியம் செய்யாமல் இயக்க அபிமானிகள் உள்பட யாவரும் விஜயம் செய்து ஒரு வேலைத் திட்டம் நிர்ணயிக்க உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றோம். இதுவரை சுயமரியாதை இயக்கம் பெரிதும் பிரசார நிலை யிலேயே இருந்து வந்திருக்கிறது என்றாலும் அது தோன்றியது முதல் நாளுக்கு நாள் முற்போக்கான, கொள்கைகளையே படிப்படியாய் கைக் கொண்டு பிரசாரம் செய்து வந்திருப்பதின் மூலம் பெரிதும் தமிழ் நாட்டு மக்களின் உள்ளத்தில் ஒரு பெரிய புரட்சி உணர்ச்சியை உண்டாக்கி இருப்ப துடன் குறுகிய நோக்கமும் சுயநல பிரதானமும் கொண்டவர்கள் உள்ளத்தில் பெரும் அச்சத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்கி வந்திருக்கிறது.

தீவிர முற்போக்குகள் ஏற்படுகின்ற எந்த தேசத்திலும், எந்த காலத் திலும் சுயநல மக்களுக்கு இவ்வித அச்சமும் ஆத்திரமும் தோன்றி, சிறிது காலம் புத்தி தடுமாறி தாறுமாறாய் திரிந்து விட்டு கடைசியாய் உள் நுழைந்து கொள்வது இயல்பேயாகும். ஆனால் உண்மையான கவலையோடு மக்களின் முற்போக்கிற்கு உழைக்கின்றவர்கள் இவற்றை லட்சியம் செய்யாமல் புது புது கொள்கைகளுடன் மேலே மேலே போய்க் கொண்டிருப்பார்களேயானால் பழய கொள்கைகள் என்பவை எதிரிகளால் சகிக்கக் கூடியதாகவும் சாதாரண மானதாகவும் கருதக் கூடியதாகி, புதுக் கொள்கைகளோடு மாத்திரம் போரிடு பவர்களாக ஆகிவிடுவார்கள். அப்படிக்கில்லாவிட்டால் குறிப்பிட்ட கொள்கையைப் பற்றியே விவகாரம் நடத்திக் கொண்டிருக்க நேரிட்டு முயற்சிகளுக்கு முன்னேற்ற மென்பதில்லாமல் தேக்கம் உண்டாய் விடும். ஒரு விஷயத்தைப் பற்றி சரியோ, தப்போ என்பதை கவனிக்காமல், எதைச் சொன்னாலும் ஏட்டிக்குப் போட்டியாய் வம்பளந்து வயிறு வளர்ப்பதையே



வாழ்க்கையாய் கொண்ட மக்கள் உலகம் எங்கும் இருந்து தான் வருகின்றார் கள். இவர்களுடைய உதவி யாருக்கும் எவ்வளவு குறைந்த விலைக்கும் கிடைக்கக் கூடும்.

ஆதலால் முற்போக்கால் புதுக் கொள்கைகளால் சுயநல பங்கமடையக் கூடிய மக்கள் இக்கூட்டத்தின் உதவியால் ஒரு சாதாரண விஷயத்திற் கெல்லாம் ஆகாயம் இடிந்து விழப்போவதை தடுக்க வேண்டியவர்கள் போல் மாய்மாலக் கூப்பாடு போட்டு அங்கு மிங்கும் திரிந்து பாமர மக்களை ஏமாற்றி ஆதரவு தேட அலைவார்கள்.

நிற்க, மக்கள் நலத்தில் கவலைக் கொண்டு பொது காரியத்தில் முனைந் திருப்பவர்கள் சிறிதாவது ஏதாவதொரு காரியத்தைச் செய்து சாதிக்க வேண்டும் என்று கருதுவார்களேயானால் அவர்களுக்கு முக்கியமான ஒரு யோக்கியதை இருக்க வேண்டும். அதென்னவென்றால் இப்படிப்பட்ட போலிக் கூப்பாடுகளுக்கும், கூலி மாரடிப்புகளுக்கும் மனம் கலங்காமல் இருக்க வேண்டியதே யாகும். மற்றும் "நமது கொள்கையைப் பற்றி ஊரார் என்ன நினைப்பார்கள். நம்மைப் பற்றி ஊரார் என்ன பேசுவார்கள்" என்கின்ற விஷயத்தைப் பற்றி எவ்வளவுக் கெவ்வளவு கவனியாமல் யாவர் அலட்சிய மாய் இருக்கிறார்களோ அவர்களேதான். அவ்வளவுக்கவ்வளவு புதிய எண்ணங்களையும், புதிய உணர்ச்சிகளையும், புதிய கொள்கைகளையும், மக்களுக்குள் புகுத்தவும், அதை காரிய அனுபவத்தில் கொண்டு செலுத்தச் செய்யவும் தகுதி உடையவர்கள் ஆவார்கள்.

உதாரணமாக நிர்வாணக் கொள்கையை ஒரு நாட்டில் வெற்றி பெற நடத்த வேண்டும் என்று ஒருவன் கருதுவானேயானால் அவன் அக்கொள்கை யின் அவசியத்தையும், சரியா தப்பா என்பதையும் கவனிக்க வேண்டுமே யொழிய மற்றபடி இக்கொள்கையை எடுத்து சொன்னால் மக்கள் என்ன சொல்லுவார்கள் என்று நினைப்பானே யாகில் அக் கொள்கைக்காரன் அந்த வேலைக்கு தகுதி அற்றவனே ஆவான். நிர்வாணக் கொள்கையை பிரசாரம் செய்ய ஆரம்பித்தால் பஞ்சாலை துணியாலை வியாபாரிகள் எல்லோரும் எதிர் பிரசாரத்திற்கு வந்து விடுவார்கள். ஜவுளி வியாபாரிகள், ஆக்கர்கள் எல்லோரும் விஷமப் பிரசாரத்திற்கு வருவார்கள். இவர்கள் வார்த்தைகளைக் கேட்ட சாதாரண பாமரமக்கள் எல்லோரும் நிர்வாணப் பிரசாரர்கள் மீது கல்லெடுத்துப் போடவும் வருவார்கள். இவற்றை சமாளிக்கவோ அல்லது அதன் பயனை அடையவோ தயாராயிருப்பவர்கள் தான் இந்தப் பிரசாரத்தில் புகவேண்டும். இவர்கள் தான் வெற்றி பெறக் கூடும். அப்படிக்கில்லாமல் "நமது உருவப்படம் மூடர் வீட்டில் பூஜையில் இருக்க வேண்டும்" என்று கருதுகின்றவர்கள் இவ்வேலைகளைச் செய்யச் சிறிதும் தகுதியற்றவர்களே யாவார்கள். ஆதலால் தனக்குள் உறுதியும் அதனால் ஏற்படும் பலனை அனுபவிக்க துணிவும் உள்ளவர்களால் தான் பயன்படத்தக்க மாறுதல்களை



RangaRakes tamilnavarasam.com

உண்டாக்க முடியுமென்றும், அப்படிப் பட்டவர்களால்தான் உலகில் தலை கீழான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் எடுத்துக் காட்டுவதற் காகவே இதைக் குறிப்பிட்டோம்.

நிற்க, 1933 ஞூத்துக்கு என்று நாம் வகுக்கப்போகும் திட்டங்களில் பல பொது ஜனங்கள் என்பவர்களும் அரசாங்கத்தார் என்பவர்களும், குற்றங் கூறக் கூடியதாகவும், குற்றமாய் கருதக் கூடியதாகவும் இருக்கலாம். ஆனா லும் அவ்வியக்கத்தில் அத்திட்டங்களில் நம்பிக்கையும் பற்றும் கொண்டவர் களும், முதலாவதாக இத்திட்டங்களை வெளியிட்டால் ஜனங்கள் என்ன சொல்லுவார்கள்; அரசாங்கத்தார் என்ன சொல்லுவார்கள் என்பதை மறந்து, இது சரியா, தப்பா, அவசியமா, அவசியமில்லையா என்பதைத்தான் யோசிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். பொது ஜன அபிப்பிராயம் என்பதை எப்படி லட்சியம் செய்யக் கூடாது என்று சொல்லுகின்றோமே அப்படித்தான் சர்க்கார் (அரசாங்கத்தார்) என்ன சொல்லுவார்கள் - என்ன செய்வார்கள் என்பதையும் லட்சியம் செய்யக் கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகின்றோம். பொது ஜனங்களோ பாமரர்கள் - மூடநம்பிக்கையில் பற்று கொண்டவர்கள் பகுத்தறிவு தடை படுத்தப்பட்டவர்கள். சர்க்கார், என்பதோ சுயநலமே உருவாய் கொண்ட முதலாளித் தன்மையும் எஜமானத் தன்மையும் கொண்டது. அதாவது இந்த இரண்டுப் பிரிவும் முதலாளி (செல்வவான்கள்) களாலும், சோம்பேரி (பார்ப்பனர்கள்)களாலும் நடத்தப் படுவனவாகும். மேற்கண்ட செல்வமும், பார்ப்பனியமும் மதம், அரசாங்கம் என்னும் சாதனங்களாலேயே காக்கப்படுவதாகும். ஆகவே ஒன்றுக் கொன்று சுலபத்தில் பிரிக்க முடியாத சம்மந்தமும் ஆதரவும் கொண்டவைகள். எனவே பொது ஜனங்களானாலும், சர்க்காரானாலும் செல்வவான்களுக்கும் சோம்பேரிகளுக்கும் விபரீதத்தை விளைவிக்கக் கூடிய எந்தக் கொள்கை களையும் எதிர்த்தே தீருவார்கள். ஆதலால் இவ்விரண்டு வகை எதிர்ப்புக்கும் தயாராயிருந்து தான் நாம் நமது திட்டங்களை வகுக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். தீவிரமான, அவசியமான வேலைத் திட்டம் வகுக்க கருதும் தோழர்கள் இந்த இரண்டு எதிர்ப்பையும் சமாளிக்க உறுதி கொண்டு வந்தால் தான் சரியான திட்டங்களை வகுக்க முடியும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இப்பொழுது இரண்டுவகை திட்டங்கள் யோசனைக்கு கொண்டு வருவதற்காக சில தோழர்களால் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஒன்று சுயமரியாதை சமதர்மக் கட்சித் திட்டம் என்னும் பேராலும், மற்றொன்று சுயமரியாதை கட்சி இதுவரையில் செய்து வந்தது போலவே பிரசாரத்தின் மூலமாக பல துறையிலும் சீர்திருத்தங்கள் செய்து மக்களுக்கு உலக ஒற்றுமை யையும் பகுத்தறிவையும், அன்பையும் உண்டாக்குவது என்பது. இரண்டைப் பற்றியும் சுருக்கமாக விளக்க வேண்டுமானால் முன்னையது சில கொள்கை களை வகுத்து அதை நிறைவேற்ற சட்டசபை முதலிய அரசியல் பொது



ஸ்தாபனங்களைக் கைப்பற்றி அதன் மூலம் நடத்துவிப்பது என்பது, பின்னை யது அரசியல் ஸ்தாபனங்களை லட்சியம் செய்யாமல் மக்களிடை பல கொள்கைகளைப் பிரசாரம் செய்து கொண்டே உலகப் புரட்சியை எதிர் நோக்கிக் கொண்டிருக்க வேண்டுமென்பது மற்றொன்று. இந்த இரண்டு வித வேலையும் தனித்தனியே நடத்தப்படலாம் என்பது. ஆகவே இந்த விஷயங் கள் எல்லாம் நன்றாய் பொறுப்புடன் ஆலோசிக்கப்படப் பட்டு ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியமாகும்.

ஆதலால் உண்மை விடுதலையிலும், உண்மை சமத்துவத்திலும் பற்று கொண்ட சுயமரியாதைத் தோழர்கள் அவசியம் விஜயம் செய்து கூட்டத்தின் உத்தேசத்தை நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

**குடி அரசு - தலையங்கம் - 25.12.1932**



RangaRakes tamilnavarasam.com

# குடி அரசு

# 1933-1

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 16

**பெரியார் திராவிடர் கழகம்**

29 இதழியலாளர் குடியிருப்பு

திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்

சென்னை - 600 041

## The Aims and ideals of the Self-Respect Party of South India.

1. The attainment of complete independence from the British and other forms of capitalist Governments.

2. The cancellation of all national debts.

3. Public ownership of Railways, Banks, Shipping and other transport services waters and lands etc.,

4. Public ownership without compensation of all agricultural lands, forests, and estates.

5. Cancellation of all private debts and other obligations incurred by the workers and peasants.

6. Changing of all Native States into one common Indian Federation under the rule of the workers and peasants of India.

7. Improving the life of the workers and peasants of the land by securing for them, more than 7 hours labour, increased wages, State aid for their unemployed, health resorts, free libraries and other cultural facilities.

8. These shall form the main ideals of the Self-Respect Party.

## Self-Respect League.
## Samadharma Party of South India.
### Proposals.

**Preamble:-**

Whereas, the Self-Respect Party, during the past eight years has very largely succeeded in rousing the attention of the mass people to the enormity of their superstitions habits, customs and practices of their religion and caste and of their degraded economic conditions of life.

RangaRakes

tamilnavarasam.com

Whereas, it is becoming increasingly evident that such irrational religious and caste habits and customs and their low economic conditions of life, cannot be done away with, except through state action, and

Whereas, it is further evident that the various political social and religious bodies and institutions are ever more determined to hold the masses in social, religious and economic bondage and degradation, through their political organisation all over the country, and

Whereas, the safeguards adopted by the Round Table Conference for the perpetuation of pernicious religious practices and of inhuman caste distinctions are inimical to and destructive of all rational life of the masses.

**Objects:-**

IT IS HEREBY PROPOSED to form from the body of Self respectors, a political Party called THE SAMADHARMA PARTY OF S. I., to carry out the following main objects, namely,

I. To obtain by constitutional means and methods, the repeal of all irrational safeguards for the private enjoyment of public utilities, for all harmful religious and caste practices and habits, and thereby free the masses from their degrading religious and caste superstitions and habits and improve their economic life.

II. To obtain the adoption of adult suffrage for election of members to all Government, Legislative and Municipal bodies, Local, Provincial and Central.

III. To obtain security of service and minimum wage to all workers in public and private utility services, such as factories, workshops, railways, shipping, transport, post and telegraphs etc.,

IV. To get for the landless workers and agricultural labourers working in cultivable lands, estates and waters, a reasonable share in the produce of such lands, estates and waters.

V. To obtain state sanction for utilising temple, church, mosque and religious funds and incomes, for the education, both literary and vocational, for sanitation and housing of the mass population in the country, and for the maintenance of destitute children and orphans.

VI. To obtain the removal of all caste distinctions among all caste, sects and classes of the Indian community, by removing all caste titles, from all public records and making such retention of caste titles as a disability to hold any kind of public service.



VII. To secure through state action, municipalisation of housing, transport, milk and medical service and establishment of nurseries in Municipalities Taluk and District Boards and Village Unions.

VIII. To set up party candidates to the Legislative Councils, Taluk, District, and Village Boards and Unions and Panchayats, to secure the aforesaid objects of the party.

IX. Party Candidates pledged to these various objects of the party will be elected for the various Legislative Councils, Taluk and District Boards, Village Unions etc.

X . These various measures, acts, and reforms shall be obtained through all constitutional means and methods such as council entry and propaganda by means of lectures, discussions and discourses as well as through the press. Rules and regulations for party funds and organisations etc will be made by a provisional committee of the party called for the purpose.

**குடி அரசு – 01.01.1933**



RangaRakes tamilnavarasam.com

# வேலைத்திட்டக் கூட்ட முடிவு

சென்ற வாரம் தெரிவிக்கப்பட்டிருந்தபடி சுயமரியாதை இயக்க வேலைத்திட்டக் கூட்டம் ஈரோட்டில் தோழர் ஈ.வெ.ரா. வீட்டில் நடைபெற்ற விபரமும் அதன் முடிவும் சுயமரியாதை இயக்க லட்சியம், வேலைத்திட்டக் கூட்ட நடவடிக்கை மற்றொரு பக்கத்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. அக்கூட்டத்திற்கு எதிர்பார்த்ததற்கு மேலாகவே பல ஊர்களில் இருந்தும் சுமார் இருனூறு தோழர்கள் வரை விஜயம் செய்து இருந்தார்கள். பல தோழர்கள் தாங்கள் வர முடியாத அசௌகரியத்திற்கு வருந்தி தந்தியும் கடிதங்களும் எழுதி இருந்தார்கள். என்றாலும் கூட்டத்தின் முடிவை ஏற்று, தங்களால் கூடியவரை கலந்து உழைப்பதாகத் தெரிவித்துக் கொண்டார்கள்.

கூட்டமானது இரண்டு நாளில் நான்கு தடவை கூடி சுமார் 20 மணி நேரம் நடந்தது. பல விஷயங்களைப் பற்றியும் பலமான வாக்கு வாதங்களும் நடந்தது என்றாலும் முடிவில் ஏகமனதாகவே தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன,

முதலாவது சுயமரியாதை இயக்கத்தின் லக்ஷியம் என்பது. அதாவது சென்றவாரக் குடியரசில் “சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையான கொள்கை” என்ற தலைப்பில் பிரசுரித்த விஷயமாகும். இது பலருக்கு ஒரு பெரிய உணர்ச்சியையும், திடுக்கிடக்கூடிய நிலையையும் உண்டாக்கி விட்டதாகத் தெரிகிறது. அதில் சிலருக்கு அந்த கொள்கையே அதிருப்தியைக் கொடுக்கக்கூடியதாய் இருந்ததாகவும் காணப்பட்டது என்பதோடு மாத்திர மல்லாமல், சிலருக்கு அந்த லக்ஷியத்தை அப்படியே ஒப்புக்கொள்ளு கின்றவர்களுக்கும் கூட அதை வெளியில் சொல்லுவது என்பது அதிக பயத்தைக் கொடுத்திருக்கிறதாய்த் தெரிகிறது. எதனாலென்றால் இதைச் சொன்னால் அரசாங்கத்தார் பிடித்து 10 அல்லது 20 வருஷம் தண்டித்து விடுவார்களோ என்று கருதினதினாலேயாகும்.

ஆகவே, எது எப்படி இருந்த போதிலும் சரி, அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை, அதன் சாதக பாதகங்களையும் அதனால் ஏற்படும் பயன்களையும் நன்றாய் விவாதித்து ஆராய்ந்து அறிந்த பின்பே அது சரியா தப்பா என்று முடிவு கட்ட வேண்டும் என்பது தான் நமது கடமையாய்



இருந்தது. அந்தப்படியே நமது அழைப்புக்கு இணங்கி விஜயம் செய்து இருந்த சுமார் 200 தோழர்களும் நன்றாய் இரண்டு நாளும் விவாதித்து பிறகே ஏகமனதாய் ஒரு முடிவுக்கு வந்தார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அதுபோலவே சு. ம. இயக்க வேலைத் திட்டம் என்கின்ற விஷயமும் மேற்கண்டது போன்றவையாய் இல்லா விட்டாலும் அதுவும் ஓரளவுக்கு பெருத்த விவாதத்தைக் கிளப்பி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். எப்படி என்றால் சு. ம. இயக்கம் அரசியலில் தலையிட்டால் இயக்கத்திற்கு கேடுவந்து விடுமென்றும் பலருக்கு அது அசௌகரியமாய் இருக்குமென்றும் சொல்லப்பட்டது. ஆனபோதிலும் சட்டசபை முதலிய ஸ்தாபனங்களை கைப்பற்ற முயற்சி செய்ய வேண்டும் என்றும் அதனால் குறைந்த பட்சம் என்று சற்று அதிகமான பிரசாரம் செய்யவாவது இடமேற்படும் என்றும் கருதி ஏகமனதாய்த் தீர்மானிக்கப் பட்டு விட்டது.

## லக்ஷியம்

நிற்க, சுயமரியாதை இயக்க லக்ஷியம் பொது உடமை இயக்க லக்ஷிய மாய் இருக்கின்றதென்றும், அதற்கு அரசாங்க அடக்குமுறை கொடுமை ஏற்படுமென்றும், அதனால் இயக்கமே அழிவுர வேண்டி வரும் என்றும் பலர் சொல்லக் கேள்க்கிறோம். பலர் பத்திரிகைகளிலும் பிரசங்கங்களிலும் அந்தப்படி குறிப்பிட்டு வருவதையும் பார்க்கின்றோம். இதற்கு நாம் முதலாவதாக கூறும் பதில் என்னவென்றால் அவர்கள் கூறுகின்றபடியே பொது உடமைக் கொள்கையே சு. ம. கொள்கை என்று ஒத்துக் கொண்டே பாராப்போமானாலும் அதனால் ஏற்படும் நஷ்டமென்ன? கஷ்டமென்ன? என்றுதான் கேள்க்கின்றோம். நாம் என்றையத் தினம் சுயமரியாதை இயக்கம் என்று ஆரம்பித்தோமோ அன்று முதலேதான் இவ்வியக்கத்தைப்பற்றி பலரால் இது பொதுவுடமை இயக்கமென்று சொல்லப்பட்டு வந்திருக்கின்றது என்பதோடு சு. ம. இயக்கத்தின் முடிவான லட்சியங்களை எடுத்துச் சொல்லும் போதெல்லாம் நாமும் மேல் கண்ட தத்துவத்தையே தான் சொல்லி வந்திருக் கிறோம். ஆதலால் நாம் புதிதாக எதையும் கொண்டு வந்து புகுத்தி விட வில்லை.

நிற்க மனித சமூகத்துக்கு ஏதாவது ஒரு உண்மையான தொண்டு செய்யவேண்டுமென்று ஒருவன் கருதினால் அவன் ராட்டினத்தின் பெருமை யையும், கோவில்களிலுள்ள கடவுள்களின் பெருமையையும், பகவத்கீதை, புராணங்கள் ஆகியவற்றின் பெருமையையும் உலகிற்கு எடுத்து ஓதிக் கொண்டிருந்தால் போதுமா? என்றும் சகல கொடுமைகளுக்கும், குறைபாடு களுக்கும் அன்னிய நாட்டான் மீது குற்றம் சொல்லி பாமரமக்களை அவன் பக்கம் திருப்பி ஏவிவிட்டுக்கொண்டு இருந்தால் போதுமா என்றும் கேட் கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

நமது நாட்டுக்கு நன்மை செய்ய முற்பட்ட காங்கிரசை 46 வருஷமாய் பார்த்தாய் விட்டது. அதைத் தலைமை வகித்து நடத்த தேசாபிமானிகள், லோகமானியர்கள், தேச பந்துக்கள், மகாத்மாக்கள் வரை முன்வந்த எல்லாப் பெரியார்களின் யோக்கியதைகளையும் பார்த்தாய்விட்டது. அதுமாத்திரமல்ல. அவற்றால் விளைந்த பயன்களையும் பார்த்தாய் விட்டது. இனி விளையப் போகும் பயன்களும் நன்றாய் விளங்கிவிட்டன. ஆகவே இனியும் அறிவுள்ள மனிதன் - மனித சமூகத்தின் ஜீவகாருண்யத்தில் உண்மையான பற்றுக் கொண்ட மனிதன் அவற்றையேதான் இன்னமும் தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டுமா? என்று கேட்கின்றோம்.

அன்றியும் நம்மை ஆட்சிபுரியும் அரசாங்கம் என்பதின் யோக்கிய தையும், அது இந்த 160 வருஷ காலமாய் நமக்கு செய்துவந்த பயன் என்ன என்பதையும் கண்டுவிட்டோம். அது இனி என்ன செய்யபோகின்றது என்ப தையும் தெரிந்துவிட்டோம். சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் நமது அரசாங்கம் ஒரு கசாப்புக்கடைக்காரன் போலவும், நமது காங்கிரஸ் அந்தக் கசாப்புக்கடைக்காரனிடம் வியாபாரம் செய்து விலை பேசி மாமிசம் வாங்கும் வாடிக்கைக்காரன் போலவும், நாமாகிய பொது மக்கள் கசாப்புக்கடைக் காரனது ஆடுகள் போன்றுமே இருந்து வந்திருக்கின்றோம். ஆடுகளாகிய நம்மை வளர்க்கும் விஷயத்தில் கசாப்புக்கடைக்காரனுக்கு இருக்கும் கவலையும் தாராள நோக்கமும் எல்லாம் நம்மை வெட்டி விற்பனை செய்வ தில் அதிகலாபம் கிடைக்கும்படியான ஆசை முயற்சியே யொழிய வேறில்லை.

இனியும் அரசாங்க சீர்திருத்த திட்டங்களையும் காங்கிரஸ் தலைவர் களுடைய தேசீய வேலை முறைகளையும் நம்பிக்கொண்டும் அவற்றிற்காக உழைத்துக்கொண்டுமே இருப்போமானால் கசாப்புக்கடைக்காரனை நம்பிய ஆடுகளின் கதியே ஆவோம்.

இதற்கு ஒரு சிறு உதாரணம் எடுத்துக்காட்டுகிறோம். அதென்ன வென்றால், சமீப வட்டமேஜை மகாநாட்டின் முடிவை எடுத்துக் கொள்ளுங் கள். வட்டமேஜை மகாநாட்டின் அடிப்படையான கொள்கை யானது அதா வது இந்திய அரசியல் எப்படி அமைக்கப்படவேண்டும் என்ற விஷயமானது காங்கிரசினுடையவும் காந்தியாருடையவும் பூரண சம்மதத்தைப்பெற்றது என்பதை நன்றாய் ஞாபகத்தில் இருத்துங்கள்.

**எப்படியென்றால்,**

உப்பு சத்தியாக்கிரகத்தில் சிறைசென்ற தேசீயவீரர்கள் விடுதலை பெறுவதற்காக தோழர் இர்வின் பிரபுவிடம் தோழர் காந்தி செய்து கொண்ட ராஜி ஒப்பந்தத்தில் வட்ட மேஜை மகாநாட்டின் அடிப்படையான பெடரல் கவர்ண்மெண்ட் சிஸ்டம், அதாவது சமஸ்டி அரசாங்கம் என்னும் மகாராஜாக்களும், ஜமீன்தாரர்களும், முதலாளிகளும் சேர்ந்து ஆதிக்கம்



செலுத்தும் ஆட்சிக் கொள்கையை ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்து விட்டுத்தான் விடுதலை செய்யப்பெற்றார்கள் என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

ஏறக்குறைய சென்ற 30 வருஷ காலமாய் அரசியல் துரையில் ஏற்பட்டுவந்த சீர்திருத்தமென்பதெல்லாம் 'ஜனநாயக ஆட்சி' 'குடிக ளுடைய ஆட்சி' 'சுயராஜ்யம்' என்னும் பேரால் பாமரமக்களை ஆயுதமாக வைத்துக் கிளர்ச்சி செய்யப்படுவதும், அதன் பயனாய் ராஜாக்களுக்கும், ஜமீன்தாரர்களுக்கும்' முதலாளிகளுக்கும் ஆதிக்கங்கள் ஏற்படுத்திக் கொள்ளுவதுமாகவே இருந்து வந்திருக்கின்றது. ஆனால் இந்தத்தடவை செய்யப்பட்ட கிளர்ச்சியின் பயனாய் ராஜாக்கள், ஜமீன்தாரர்கள், முதலாளிகள் என்பவர்கள் மாத்திரமல்லாமல் மகாராஜாக்கள் என்பவர்களுக்கும், இந்திய ஆட்சி ஆதிக்கம் கொடுக்கப்பட்டு அதை நிலைநிறுத்துவதற்காக எல்லா மதங்களுக்கும் பாதுகாப்பு அளித்துக் கையொப்பமும் போட்டாய்விட்டது. இந்தப்படியான அரசியல் சீர்திருத்தமே 1933 லோ 34 லோ அமுலுக்கு வந்து விடப்போகின்றது. இதை யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம். இதற்காக அடிபட்டவர்களுக்கும், உதைபட்டவர்களுக்கும், சிறை சென்றவர் களுக்கும், தேசாபிமானி, தேசிய வீரர், தேசபக்தர் என்ற பட்டமும், தலைமை வகித்து நடத்தியவர்களுக்கு மகாத்மா, கவர்னர், மந்திரி முதலிய பட்டமும், பதவியும் அல்லாமல் வேறு என்ன நடக்கக்கூடும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

இதுசமயம் உலகிலுள்ள மற்ற தேச அரசியல் சீர்திருத்தக் கிளர்ச்சி களானது அரசர்களை ஒழிப்பதற்கும் அரசாட்சிக்கு பாமர மக்கள் மீது இருக்கும் ஆதிக்கத்தைக் குறைப்பதற்குமாக கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன. நமது நாட்டிலோ அரசர்களுக்கும், மகாராஜாக்களுக்கும் அவர்களது ஆதிக்க அரசாட்சிக்கும் படிப்படியாய் அதிக பலம் ஏற்படுத்தவே கிளர்ச்சிகள் நடை பெறுகின்றன.

சென்ற பல வருஷக் கிளர்ச்சியை நினைத்துப்பாருங்கள். நமது நாட்டின் ஆக்ஷிக்கு சென்ற சீர்திருத்தங்களால் ஸ்டேட் கவுன்சில் ராஜாங்க சபை என்று ஒன்று புதிதாக உண்டாக்கப் பட்டது. அதன் கருத்து என்ன? முதலாளிமாரையும், ஜமீன்தாரையும் கொண்ட ஒரு தனிச்சபை ஆக்ஷிக்கு பொருப்பாய் தலைமையாய் இருக்க வேண்டும் என்று கருதி செய்யப்பட்டு வந்ததல்லவா?

இது இந்திய அரசியல் நிலைமை சீர்திருத்தம் என்பதற்கு முன் இருந்த நிலைமையை விட அதிக மோசமான நிலைமைக்குக் கொண்டுவந்ததா அல்லது முற்போக்கான நிலைமைக்கு கொண்டு வந்ததா என்று பாருங்கள். இதற்கு தேசியமும், காங்கிரசும் காரணமாயிருந்ததா இல்லையா என்பதையும் யோசித்துப் பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

அதுபோலவே இப்போது வட்ட மேஜையால் வரப்போகும் அரசியல் சீர்திருத்தம் முதலாளி ஜமீன்தார் மாத்திரமல்லாமல் மகாராஜாக்களும் கலந்த சபையின் ஆக்ஷிக்கு ஆளாக இருக்க வேண்டும் என்கின்ற நிலைமைக்கு வந்து விட்டதா இல்லையா என்பதை நன்றாய் யோசித்துப் பாருங்கள்.

இதைப்பற்றி ஆரம்ப காலத்திலேயே தோழர்கள் மகாகனம் சீனிவாச சாஸ்திரிகள் ரங்கசாமி அய்யங்கார்கள் சிவசாமி அய்யர்கள் சி.பி. ராமசாமி அய்யர்கள் வியாக்கியானங்கள் செய்து புகழ்மாலை பாடும்போதே நாம் எடுத்துச் சொன்னோம்.

இந்தியா முழுவதிலுமே நம்மைத் தவிர வேறு யாருமே இந்த மகாராஜாக்கள் கூட்டுறவு கொண்ட அரசியல் திட்டத்திற்கு ஆட்சேபணை சொல்ல முன்வரவே இல்லை. இந்த நிலைமையில்தான் தோழர் காந்தியும், காங்கிரசும் ராஜி பேசிக் கையொப்பமிட்டாய் விட்டது. இனி இதை மாற்ற வேறு என்ன வழி இருக்கின்றது என்று யோசித்துப்பாருங்கள். ஆகையால் எப்படியாவது நாம் இந்த மகாராஜாக்கள், ஜமீன்தாரர்கள், முதலாளிமார்கள் ஆதிக்கம் கொண்ட ஆட்சியை அழிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். அப்படிப்பட்ட ஆட்சி பிரிட்டிஷாரால் நடத்தப்படுவதானாலும் சரி, இந்தியரால் நடத்தப்படு வதானாலும் சரி, மற்ற எவரால் நடத்தப்படுவதானாலும் சரி நமக்கு அதைப்பற்றி கவலை இல்லை. அடியோடு ஒழிக்க வேண்டியதுதான் கடமையாகும்.

உதாரணம் காட்டவேண்டுமானால் ‘பீரங்கியால் சுடப்படவேண்டும்’ என்ற முடிவை ஒப்புக்கொண்ட பிறகு அந்த ‘பீரங்கியை யார் சுடுவது’ என்பதில் சண்டை போட்டுக் கொண்டிருப்பதில் பயன் உண்டா என்று கேட்கின்றோம்.

நமது தேசீயம் இப்போது “யார் சுடுவது” என்பதில்தான் சண்டை போடுகின்றது. ஆனால் நமது சுயமரியாதை இயக்கமோ பீரங்கியை உடைத்து சின்னா பின்னமாக்குங்கள்; இந்த வேலைக்கு தேசீயம் வேண்டாம்; செய்யவருகின்றவர்களை எல்லாம் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று தான் சொல்லுகின்றது. இது சரியா தப்பா என்று யோசித்துப்பாருங்கள்.

வட்டமேஜை மகாநாடானது என்றைய தினம் காங்கிரசினிடமும், காந்தியினிடமும் பிடரல் சிஸ்ட்டத்திற்குக் கையெழுத்து பெற்ற அன்றே முடிவு பெற்றுவிட்டது. இனி அதை யார் எப்படி திருத்தினாலும் அதனின் முக்கிய பயன் ஒன்றும் மாறுதலை அடைந்து விடாது.

இந்த நிலையில் இன்று இந்தியா மாத்திரம் இருப்பதாகக் கருதி விடாதீர்கள். உலகத்தில் உள்ள “தேசீயக்கிளர்ச்சி”கள் என்பவைகள் எல்லாம் ஆங்காங்குள்ள பாமர மக்களை ஏமாற்றி, கூலிகளை அமர்த்தி இந்தப்படியே தான் வேலை செய்து, சரீரத்தினால் பாடுபட்டு வாழும் மக்களை வதைத்து



வாழ்ந்து வருகின்றன. இதனால்தான் நமது சுயமரியாதை இயக்க லக்ஷியம் உலக லக்ஷியமாய் உள்ளதை கைகொண்டு இருக்கிறது. இந்த லக்ஷியத்தால் ஒன்றும் ஆபத்து வந்து விடப்போவதில்லை. அப்படி ஏதாவது ஒரு ஆபத்து வருவதாய் இருந்தாலும் அந்த ஆபத்தானது மக்கள் சமூகத் தினிடம் உண்மையான கவலை உள்ளவனுக்கு மேல் கண்ட ஆட்சியின் கீழ் வாழ்ந்து வருவதை விட கடினமானதாக இருக்காது. ஒரு சமயம் யாருக்குக் கடினமான தாக இருக்கும் என்று யோசிப்போமானால் சோம்பேரிகளுக்கும் ஊரார் உழைப்பில் வாழ்கின்றவர்களுக்கும், முதலாளிகளுக்கும், ஜமீன்தாரர் களுக்கும், ராஜாக்களுக்கும் மகாராஜாக்களுக்கும் கடினமாய் இருக்கலாம்.

அதனால் நமக்கு என்ன? என்றையத்தினம் நாம் அந்த சமூகங்கள் பெரும்பான்மையான மனித சமூகத்தின் இன்ப வாழ்வுக்கும் சுதந்திர வாழ்வுக்கும் இடையூறாய் இருக்கின்றது என்று கருதி விட்டோமோ அன்றே அவற்றின் நாசகாலத்தை எதிர்பார்க்க வேண்டியவர்களாகவும் அதற்கு நம்மால் ஆன எல்லா காரியத்தையும் செய்து தீரவேண்டியவர்களாகவும் ஆகிவிட்டோம். ஆதலால் அதைப்பற்றி கவலை இல்லை.

மற்றபடி வேலைத்திட்டத்தைப் பற்றி மற்றொரு சமயம் எழுதுவோம்.

**குடி அரசு – தலையங்கம் – 01.01.1933**



RangaRakes tamilnavarasam.com

# வேண்டுகோள்

நமது மாகாணத்தில் ஆங்காங்குள்ள சுயமரியாதை சங்கத்தார்களும் மற்றும் அதன் லக்ஷியத்தையே லக்ஷியமாய்க் கொண்டு நடைபெற்று வரும் சங்கத்தார்களும் தங்கள் தங்கள் சங்கத்தின் ஊர் பேர், நிர்வாகஸ்தர்கள் பெயர், அங்கத்தினர் கள் எண்ணிக்கை முதலியவைகளைக் குறித்த விபரம் ஒன்று உடனே தெரிவிக்க வேண்டுகிறோம். ஏனெனில் துண்டு பிரசுரங்களையும், சிறு புத்தக வெளியீடுகளையும் அப்போதைக்கப்போது அனுப்பி வரவும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளவும், சங்கங்களைக் குறித்து ஒரு சிறு புத்தகம் வெளியிடவும் வேண்டியிருப்பதால் அதன் விபரங்களை உடனே அனுப்பக் கோருகின்றோம். உடனே சீக்கிரத்தில் புதியதாய் ஏற் படுத்தக் கூடியதையும் ஏற்படுத்தி விபரம் தெரிவிக்க விரும்புகின்றோம்.

**குடி அரசு - வேண்டுகோள் - 01.01.1933**



# சுயமரியாதை இயக்க லட்சியம், வேலைத்திட்டக் கூட்ட நடவடிக்கை

## திருத்தப்பட்டபடி நிறைவேறிய சுயமரியாதை இயக்க லக்ஷியம்.

1.பிரிட்டிஷ் முதலிய எந்தவித முதலாளித் தன்மைகொண்ட ஆட்சி யிலிருந்தும் இந்தியாவை பூரண விடுதலை அடையச் செய்வது.

2. தேசத்தின் பேரால் கொடுக்கப்படவேண்டிய எல்லா கடன்களை ரத்து செய்வது.

3. எல்லா தொழிற்சாலைகளையும், ரயில்வேக்களையும், பாங்கி களையும், கப்பல் படகு நீர் வழி போக்குவரத்து சாதனங்களையும் பொது மக்களுக்கு உரிமையாக்குவது.

4. எந்தவிதமான பிரதிப் பிரயோஜனமும் கொடுபடாமல் தேசத்தில் உள்ள எல்லா விவசாய நிலங்களையும், காடுகளையும் மற்ற ஸ்தாவர சொத்துக்களையும் பொது ஜனங்களுக்கு உரிமையாக்குவது.

5. குடியானவர்களும், தொழிலாளிகளும், லேவாதேவிக்காரர் களிடம் பட்டிருக்கும் கடன்களையெல்லாம் (கேன்சில்) செல்லுபடி யற்றதாக ஆக்கி விடுவது, அடிமை ஒப்பந்தங்களை ரத்து செய்து விடுவது.

6. சுதேச சமஸ்தானங்கள் என்பவைகளை யெல்லாம் மாற்றி இந்தியா முழுவதையும் தொழிலாளிகள், குடியானவர்கள், சரீர வேலைக்காரர்கள் என்பவர்களுடைய நேரடியான ஆட்சிக்கு கொண்டு வருவது.

7. தொழில் செய்பவர்கள் 7 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யக்கூடாது என்பதுடன், அவர்களுடைய வாழ்க்கை நிலை உயர்த் தப்படுவது. தொழிலாளிகளுக்கு கூலியை உயர்த்தி, அவர்களது



RangaRakes tamilnavarasam.com

சுகவாழ்க்கைக்கு வேண்டிய சவுகரியங்களையும் இலவச நூல் நிலையங்கள் முதலிய வசதிகளையும் ஏற்படுத்துவது. தொழில் இல்லாமல் இருக்கின்றவர்களை சர்க்கார் போஷிக்கும் படியும் செய்வது.

என்பவைகள் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையான லட்சியங்களாகும்.

## திருத்தப்பட்டபடி நிறைவேறிய வேலைத்திட்ட தீர்மானம்

சுயமரியாதை இயக்கமானது தென் இந்தியாவில் சென்ற 7, 8 வருஷ காலமாக பாமர மக்களிடையே ஏராளமாய் புதைந்து கிடந்த ஜாதி, மதம் முதலியவைகளைப் பற்றிய குருட்டு நம்பிக்கைகள் மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவைகளைப் பற்றியும், பொருளாதாரத் தன்மையின் கீழ்நிலையைப் பற்றியும் செய்து வந்த புரட்சி பிரசாரத்தின் பலனாய் ஒரு பெருத்த உணர்ச்சியைக் கிளப்பி விட்டிருப்பதாலும், பகுத்தறிவுக்கு ஏற்காத முறையில் நடைபெற்று வரும் மேல்கண்ட பழக்க வழக்க முறைகளை சட்ட மூலமாகவன்றி வேறு வழியில் ஒழிப்பது என்பது முடியாது என்கின்ற அபிப்பிராயம் நாளுக்கு நாள் பலப்பட்டு வருவதாலும்,

பாமர மக்களைப் பல அரசியல் ஸ்தாபனங்களும், சமூக கட்டுப்பாடுகளும் அந்தந்த விஷயங்களில் அடக்கியும், பொருளாதாரத் துறையில் ஒடுக்கியும் வைப்பதற்கு சாதனமாக அரசியல் ஸ்தாபனங்களே உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது என்பது ஆட்சேபிக்க முடியாத உண்மையாய் இருப்பதாலும்,

வட்டமேஜை மகாநாட்டின் பயனாய் பாமர மக்களின் பகுத்தறிவு வளர்ச்சிக்கு நாசத்தை உண்டாக்கும் கொடுமையான பழய பழக்க வழக்கங்களுக்கும் மனிதத் தன்மைக்கு முரணான ஜாதி வித்தியாசங்களுக்கும் மற்றும் பல கெடுதிகளுக்கும் பாதுகாப்பும், ஆக்கமும் அளிப்பதாய் இருப்பதாலும்,

சுயமரியாதை இயக்கத்தாருக்குள் சமதர்ம (Socialist party) கட்சி என்பதாக ஒரு அரசியல் பிரிவை ஏற்படுத்தி, அதற்கு அடியிற் கண்ட திட்டத்தை வகுத்து, அதன் மூலம் பரிகாரம் தேடுவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

### திட்டங்களாவன:-

1. பொது ஜன சௌகரியங்களுக்கு ஏற்பட்ட சாதனங்களை தனிப்பட்ட மனிதர்கள் அனுபவிப்ப தென்பதற்கும் ஜாதிமத சம்பந்தமான கொடுமைகளுக்கும் பாதுகாப்புகளாய் இருக்கும் அறிவுக்கு ஒவ்வா முறைகளை ரத்து செய்ய வேண்டும். பாமர ஜனங்களை அவர்களது பொருளாதாரக் கொடுமையில் இருந்தும், ஜாதி மதக் கொடுமையில் இருந்தும் விடுவித்தும் சுதந்திர மனிதர்கள் ஆக்குவதற்கும், பொது ஜன அவசியத்திற்கு என்று ஏற்படுத் தப்படுகிற தொழில் முறைகள் போக்குவரத்து சாதனங்கள் ஆகியவைகளின் நிர்வாகத்தையும் அதன் இலாபத்தையும் தனிப்பட்ட மனிதர்கள் அடையாமலிருப்பதற்கும் வேண்டிய காரியங்களை அரசியல் ஸ்தாபனங்களின் மூலமாகச் செய்ய வேண்டும்.

2. எல்லாச் சட்டசபை, முனிசிபல் தாலூக்கா ஜில்லா சபை ஆகியவற்றின் தேர்தலுக்கு வயது வந்த யாருக்கும் ஓட்டுரிமை ஏற்படும்படி செய்ய வேண்டும். தனிப்பட்ட தொழிற்சாலைகள், ரயில், கப்பல் முதலியவைகளில் தொழிலாளிகளுக்கு எப்பொழுதும் தொழில் இருப்பதற்கு ஒரு ஜவாப்தாரித்தனத்தையும் அவர்களுடைய நல்வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியத்தை நிர்ணயப் படுத்தி அதற்கு ஒரு உறுதிப் பாட்டையும் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. நில சொந்தக்காரர்களாயில்லாமல் விவசாயத்தில் ஈடுபட்ட தொழி லாளிகளுக்கு வெள்ளாமையில் ஒரு ஞாயமான பங்குவிகிதம் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

4. கோவில், பிரார்த்தனை இடங்கள் முதலிய மத ஸ்தாபனங்களின் சொத்துக்கள், வரும்படிகள் ஆகியவைகளைப் பொது ஜனங்களின் தொழில், கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, அனாதைப் பிள்ளைகள் விடுதி ஆகியவைகளுக்கு பயன்படுத்த அனுமதி பெற வேண்டும்,

5. இந்திய சமூகத்தில் ஜாதி மத பிரிவு முதலியவைகளைக் குறிக்கக் கூடிய குறிப்புகள் எதையும் பொது ஆதாரங்களில் (ரிகார்டுகளிலிருந்து) எடுத்து விடுவதற்கும், அம்மாதிரிப் பட்டம் உடையவர்களைப் பொது வேலைகளில் இடம் பெறாமல் இருக்கும்படி செய்வதற்கும் அனுமதி பெறுதல்.

6. முனிசிபாலிடி முதலிய ஸ்தல ஸ்தாபனங்களின் மூலமாகவே போக்குவரவு சாதன வசதி, வீட்டு வசதி, பால் வசதி, வைத்திய வசதி முதலியவைகள் நடை பெறும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

7. இவைகளை நிறைவேற்ற சட்டசபை, முனிசிபாலிட்டி முதலிய ஜனப் பிரதிநிதி ஸ்தாபனங்களுக்கு மேல்கண்ட கட்சியினர் பேரால் அபேக்ஷகர்களை நிறுத்த வேண்டும்.

8. கட்சி அபேட்சகர்கள் மேல் கண்ட திட்டங்களுக்கு உறுதிகூறி கையெழுத்திட வேண்டும்.


RangaRakes
tamilnavarasam.com

9. மேல்கண்ட சட்டங்கள், சீர்திருத்தங்கள் முதலியவைகளை எல்லாம் சட்டசபைப் பிரவேசம் மூலம், பிரசங்க மூலம், சொல்லுவதன் மூலம், பத்திரிகைத் துண்டுப் பிரசுரம் முதலியவைகள் மூலம் சட்டத்தை அனுசரித்துச் செய்ய வேண்டியது.

**குடி அரசு - 01.01.1933**



# காந்தியின் மற்றொரு ராஜி

## தீண்டாமை ஒழிப்பா? நிலைப்பா?

அரசியலில் வேலையற்றதினால் பாமர மக்களுக்கு தம் மீது ஏற்பட்ட சலிப்பையும், வெறுப்பையும் தீர்த்துக் கொள்ளுவதற்காக சமூகத்துறையில் ஏதோ பெரியதொரு சீர்திருத்தம் செய்வதாக வெளிப்பட்டு, அவ்வெறுப்பை மாற்றிக் கொள்ளலாம் என்று கருதிய தோழர் காந்தியவர்கள் "பிள்ளையார் செய்யப் போய் குரங்காய் முடிந்தது" என்ற பழமொழிப்படி மக்களின் அதிகமான வெறுப்புக்கு ஆளாக நேரிட்டு, இப்போது அதிலிருந்தும் தப்பு வதற்கு ஒரு பெரிய குட்டிக் கரணம் போடவேண்டியதாய் ஏற்பட்டு விட்டது.

அதென்னவெனில் தோழர் காந்தி, இர்வின் பிரபுவிடம் செய்து கொண்ட ராஜியின் பயனாய் இந்திய ஏழை மக்களின் மீது பணக்காரர்கள் ஆட்சியையும், முதலாளி ஆட்சியையும் இந்திய மகாராஜாக்கள் ஆட்சி யையும் எப்படி நிரந்தரமாய் இருக்கச் செய்து விட்டாரோ அதே போல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று கள்ளிக்கோட்டை சாமூதிரினிடமும், சாஸ்திரிகளிடமும் செய்து கொள்ளும் ராஜியானது தீண்டப்படாத மக்களுக்கு தீண்டாமை என்பது என்றும் நிரந்தரமாய் இருக்க ஏற்பாடு செய்து தீர வேண்டிய நிலைமைக்கு வந்து சேர்ந்து விட்டது. இதுபார்ப்பன தேசீயவாதி களுக்கு ஓர் பெரிய வெற்றியேயானாலும் பார்ப்பனரல்லாத "தேசீயவாதிகள்" இதற்கு என்ன பதில் சொல்லுவார்களோ தெரியவில்லை. என்றாலும் எப்படியோ தமிழ்நாடு பத்திரிகையும், தோழர் வரதராஜலுவும், ஜஸ்டிஸ் பத்திரிகையும் ஒரு வழியில் தைரியமாய் இதன் இரகசியத்தை வெளியாக்கி விட்டன. என்றாலும் மற்றவர்கள் என்ன சொல்வார்களென தெரியவில்லை. என்னவோ சொல்லிக் கொள்ளட்டும். தேசீயம் என்பது அழியும் வரையோ, அல்லது தேசீய வாதிகள் என்பவர்கள் வாழ வேறு மார்க்கம் கண்டு பிடிக்கும் வரையோ இப்படிப்பட்ட விஷயங்களில் அவர்கள் தைரியமாய் உண்மை சொல்ல முடியாதாதலால் காந்தியாருக்கும், அவரது பார்ப்பன வலக்கை களுக்கும் பின் தாளம் போட்டுத்தானாக வேண்டும். அவர்களைப்பற்றி இப் போது நாம் கவலைப்படவில்லை. ஆனால் தீண்டப்படாதார் என்ற மக்கள் இதற்கு என்ன பதில் சொல்லுவார்கள் என்பது ஒரு சிக்கலான பிரச்சினை யாகவே இருக்கின்றது.



RangaRakes tamilnavarasam.com

மக்களுக்கு உண்மையான சுயமரியாதை உணர்ச்சி என்பது இல்லாத காரணத்தால் தான் உலகில் அரசனும், குருவும், பணக்காரனும் மேல் ஜாதிக்காரனும் ஏற்பட இடமுண்டாயிற்று என்பதோடு, ஏழையும் தொழிலாளியும் கூலியும் "சூத்திரனும்" (அடிமையும்) "சண்டாளனும்" ஏற்பட இடமுண்டாயிற்று என்றும் தைரியமாய் கூறுவோம்.

இந்த காரணத்தால்தான் இன்று நமது "தெய்வத்தன்மை" பொருந்திய "ஞானபூமி" யாகிய இந்தியாவில் 16 கோடி "சூத்திரர்" (அடிமை) என்பவர்களும். 7 கோடி "தீண்டாதார்கள்" "சண்டாளர்கள்" என்பவர்களும் பல ஆயிரக்கணக்கான வருடங்களாய் இருந்து வருவதுடன் இவற்றை இன்றும், என்றும் நிலை நிருக்க வென்று சங்கராச்சாரி "லோக குருக்களும்" "மகாத்மாக்களும்" இருந்து வருவதுடன் இவர்களுக்கு இடமும், ஆக்கமும் அளிக்க "ஜாதி மத நடுநிலைமை" வகிக்கும் "மகா காருண்யம் நிறைந்த" சக்கரவர்த்திகள், மகாராஜாக்கள் ஆட்சிகளும் இருந்து வருகின்றன.

சாதாரணமாக ஆட்சி என்பது மக்களுக்கு சமதர்ம நீதி செலுத்தவே ஒழிய, அதாவது எளியோரை வலியோர் வஞ்சித்து வதைக்காமல் இருப்பதற்கே ஒழிய பூனைக்கு குரங்கு மத்தியஸ்தமாய் இருந்த கதைபோல் "எப்படியோ வலிமை பெற்ற அயோக்கிய மூர்க்கர்களுக்கும், அவர்களால் வலிமையற்ற சாதுக்களுக்கும் நடுநிலைமை வகிப்பதற்கு" அல்ல என்பதை உலகில் எந்த அரசாட்சியும் இதுவரை உணர்ந்து நடந்ததாக தெரியவில்லை. என்றாலும் தாழ்த்தப்பட்ட மக்களாகிய தீண்டாதார் என்னும் மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி கடுகளவாவது இருக்குமானால் அவர்கள் ஒருநாளும் உதைத்த காலுக்கு முத்தமிடுவது போல் இந்த கோவில் நுழைவு சூட்சிக்கு ஆளாகி இருக்கவே மாட்டார்கள்.

ஏனெனில் இன்றைய கோவில் நுழைவு கிளர்ச்சியில் "கடவுளை நம்புகிறவன் தான் கோயிலுக்குள் போக இஷ்டப்பட வேண்டும்" என்றும் இன்றைய கோயில் பிரவேசக் கிளர்ச்சி " கடவுளை நம்புகிறவர்களைப் பற்றியது தான்" என்றும் நன்றாய் விளக்கமாய் பறையடிக்கப் பட்டிருக்கிறது.

அது மாத்திரமல்லாமல் " இந்துக்கள் தான் இந்துக் கோவில்களுக்குச் செல்ல ஆசைப்படலாம்" என்றும் "இந்துக்கள் தான் கோயில் பிரவேச முயற்சியில் கலந்துகொள்ளலாம்" என்னும் நிபந்தனைகளும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆகவே, கடவுளைப்பற்றிய நம்பிக்கை இல்லாதவனுக்கும், தன்னை ஹிந்து என்று சொல்லிக்கொள்ள இஷ்டப்படாதவனுக்கும் இந்த கோவில் நுழைவு கிளர்ச்சியில் கலந்து கொள்ளவோ, கோவிலுக்குள் போக ஆசைப்படவோ செய்வது நியாயமாகாது என்பது வெளிப்படை அதனாலேயே அப்படிப்பட்ட அனேகர் அதில் கலந்து கொள்ளாமல் இருந்தாலும் இருக்கலாம்.



இவை ஒரு புறமிருக்க உண்மையிலேயே கடவுள் அதாவது "சகலத்தையும் படைத்து, காத்து, நடத்தும் சர்வ சக்தியுள்ள" ஒரு கடவுளையும், முன் பின் ஜன்மம் உள்ள இந்து மதத்தையும் நம்புகின்ற, ஒப்புக் கொள்ளுகின்ற ஒரு இந்து தீண்டாதவன் என்கின்றவன் கோவிலுக்குள் பிரவேசிக்க முயலுவது அறிவுடைமையா? அல்லது சுயமரியாதை உடமையா? என்று பார்த்தால் இரண்டுமற்ற தன்மை என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் ஒரு ஆஸ்திக இந்து சர்வ சக்தி உள்ள கடவுளால் தான், முன் ஜன்ம கர்மத்தால் தான், தான் பிறந்ததாக கருதியாக வேண்டும். அன்றியும் தான் தீண்டப்படாதானாய் பிறந்ததற்கும் அல்லது கருதப்படுவதற்கும் அந்த கடவுள்தான் காரணம் என்பதையும் உணர்ந்தாக வேண்டும். ஆகவே தன்னை இந்த நிலை ஆக்கிய ஒரு கடவுளை-அதாவது தீண்டத்தகாதவனாய் ஆக்கிய ஒரு கடவுளை - தீண்டத்தகாதவன் என்று சொல்லும்படி செய்த ஒரு கடவுளைப் போய், அதன் இருப்பிடம் சென்று தரிசிப்பது, பூஜிப்பது, பிரார்த்திப்பது, வணங்குவது என்பவைகளான காரியங்கள் அணுவளவாவது சுயமரியாதைக்கு ஏற்றதா? என்று கேள்க்கின்றோம். இந்தப் படியான சுயமரியாதை அற்ற மக்களைக் கொண்ட நாட்டுக்கு "தேசீயம்"" வேண்டும், "சுயராஜ்ஜியம்" வேண்டும் என்று சொல்லிக் கொள்வதில்-அதற்காக பாடுபடுகின்றோம் என்று சொல்லப்படுவதில் ஏதாவது அர்த்தம் இருக்க முடியுமா என்றும் கேள்க்கின்றோம்.

இவை ஒரு புறம் இருக்க, தீண்டாதார் சமூகம் என்பதாக ஒரு சமூகம் இந்த நாட்டில் நிரந்தரமாய் இருப்பதற்காக இந்த கோவில் நுழைவு என்னும் பேரால் ஒரு புதிய சூக்ஷி செய்யப்படுவதாய்த் தெரின்றது. அதென்ன வென்றால் இப்பொழுது தீண்டாதாராய்க் கருதும் ஒரு சமூகத்திற்கு ஹரி ஜனங்கள் என்று புதிதாக ஒரு பெயரை இட்டு அதை அவர்களையே ஒப்புக் கொள்ளச் செய்தாய் விட்டது,

இதனால் இந்த ஹரிஜனங்கள் என்கின்ற பெயர் உலகில் உள்ளவரை தீண்டாதவர்கள் என்பவர்கள் இருந்தே தீருவார்கள் என்பது திண்ணம். அதுபோலவே இப்போது தோழர் காந்தியார் ஜாமொரினிடமும், சாஸ்திரிகளிடமும் செய்துகொள்ளும் ராஜி ஒப்பந்தப்படி தீண்டப்படாதார் கோவிலுக்கு போக என்று ஒரு தனி நேரம் ஏற்படுத்திக் கொண்ட பிரகு இந்தக் கோவில்கள் உள்ள வரையிலும் தீண்டாதார் என்கின்ற கூட்டம் இருந்தேதான் தீரும்.

தீண்டாதார் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கோவிலுக்குப் போய் வணங்கிவிட்டு வருவதும் அவர்கள் வெளியே வந்தவுடன் அக்கோவிலுக்கு சுத்தி (சம்ரோட்சணை) செய்வதுமான காரியங்கள் அத்தீண்டப்படாதார் என்பவர்களை தினம்தினம் எவ்வளவு இழிவுபடுத்தி அவ்விழிவை நிலைக்கச் செய்கின்றது என்பதை நினைத்துப்பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

இன்றைய தினம் தீண்டாதாருக்கு யாராவது உண்மையான-பயன் தரும்படியான - அவர்களது இழிவு நிரந்தரமாய் நீங்கும் படியான நன்மை செய்கின்றவர்கள் இந்நாட்டில் உண்டு என்றால் அதில் தோழர் **டி. ஆர். ராமச் சந்திர அய்யர்** என்பவரே முதன்மையாவார் என்று சொல்லுவோம். ஏனெனில் அவர்தான் உண்மையை தைரியமாய்ச் சொல்லுகின்றார். அதாவது "**தீண்டாதார் என்பவர்கள் இந்துக்கள் அல்ல**" என்கின்றார்கள். அதையே தான் நாமும் சொல்லுகின்றோம். வெகுகாலமாகவே சொல்லியும் வந்திருக் கின்றோம். மற்றும் அவர் சொல்லுகிறபடி அரசாங்க சட்டமும் ஏற்பட்டு விடுமானால் (அந்தப்படி ஏற்படுவதை தோழர் காந்தியே கெடுத்தார்) அன்றே இந்தியாவைப் பிடித்த தீண்டாமைக் கொடுமை மாத்திரமல்லாமல், அடிமைத் தன்மைக் கொடுமையும் ஜாதி ஆணவமும் ஒழிந்தது! ஒழிந்தது!! ஒழிந்தது!!! என்றே சொல்லுவோம். எப்படி என்பது இந்துக்கள் அல்லாத கிறிஸ்து வரை யாவது மகமதியரையாவது மற்ற எவரையாவது தீண்டாதவர்கள் என்று சொன்னால் என்னபலன் கிடைக்கும் என்று பார்த்தால் விளங்கிவிடும். ஆகவே இன்று தோழர் டி. ஆர். ராமச்சந்திர அய்யரைக் குற்றம் சொல்லு பவர்களை நாம் தீண்டாதாரின் எதிரிகளென்றே சொல்லுவோம். தீண்டாத வர்கள் இந்துக்கள் அல்லவானால் அவர்களை பின்னையார் என்று சொல்லுவது என்று சிலர் கேள்க்கக் கூடும். அவர்கள் யாராயிருந்தாலும் நமக்குக் கவலை இல்லை. கழுதைகள் என்று அழைத்தாலும் சரி, நாய்கள் என்று அழைத்தாலும் சரி நாம் அதைப்பற்றி இவ்வளவு கவலைப் படுவதில்லை. ஏனெனில் இன்று தீண்டாதாரை தீண்டாதார் என்று கருதும் மக்கள் நாய்களையும், கழுதைகளையும் தீண்டாதார் என்று கருதுவதுமில்லை அவற்றைத் தீண்டாமல் இருப்பது மில்லை. தீண்டினால் குளிப்பதுமில்லை. மற்ற விஷயங்களிலும் கழுதை களுக்கும் நாய்களுக்கும் உள்ள சுதந்தரங் களை தீண்டாதார்களுக்கு அளிக்கவும் அவர்கள் சம்மதிப்பதுமில்லை.

அவைகளைப் பொருத்தவரை மாத்திரமல்லாமல் உண்மையைப் பேசப்போனால், இந்துக்கள் என்று சொல்லிக்கொள்வதன் காரணமாம் 'சூத்திரர்கள்' என்று அழைக்கப்படுகின்ற 15 கோடி மக்களைக்கூட சூத்திரர் கள் என்ற பெயரை எடுத்துவிட்டு கழுதை என்றோ, நாய்கள் என்றோ பெயரைக் கொடுக்கலாமா என்றால் அதற்கும் நாம் ஆட்சேபிக்க வர மாட்டோம்; முதலில் ஓட்டுக் கொடுப்போம்.

ஏனெனில் "இந்து மத" மனிதசமூகத்திதல் "சூத்திரன்" என்பவ னுக்கு உள்ள மதிப்பு அநேக விஷயங்களில் ஒரு நாயிக்கு உள்ள மதிப்பை விட கீழாகவே இருந்து வருகின்றது. நாய் போகக்கூடிய இடத்தில் "சூத்திரன்" போக முடியாது. பன்றி போகக்கூடிய இடத்தில் "தீண்டாதார்" என்பவர் போக முடியாது என்பதை நினைப்புக்குக் கொண்டு வந்தால் இதன் நியாயம் விளங்கும்.



தீண்டாதாருக்கு தனிக் கிணறு, தீண்டாதாருக்கு தனிப்பள்ளிக்கூடம்- தீண்டாதாருக்கு தனிக் கோவில் எல்லாம் இன்று இருந்துவருவது தவிர, இனி தோழர் காந்தியால் தீண்டாதாருக்கு தனி நேரமும் ஏற்பாடு செய்யபோகின்றது என்றால் இதை அறிவும், சுயமரியாதை உணர்ச்சியும் உள்ள மனிதசமூகம் எப்படித்தான் பொருத்துக்கொண்டு இருக்க முடியும் என்பதை யோசித்துப் பாருங்கள். உண்மையாக சுயமரியாதை ஆட்சி இன்று இருக்குமானால் இப்படிச் செய்கின்றவர்கள் கண்டிப்பாய் தண்டிக்கப்படுவார்கள் என்று தான் சொல்லவேண்டி வருகின்றது.

இன்றைய கோவில் நுழைவு கிளர்ச்சி தீண்டாமை ஒழிப்பு வேலையா? அல்லது தீண்டாமையை என்றைக்கும் நிலை நிறுத்தும் வேலையா? என்று யோசித்துப்பார்த்தால் அதன் உண்மை விளங்கும்.

இதைப்பற்றி தமிழ்நாடு பத்திரிகை எழுதுகையில் இதனால் "தீண்டா தார்" மக்களுடைய இழிவும் மேல் ஜாதியினுடைய உயர்வும் மறுபடியும் உறுதியாக்கப்பட்டதென்றே சொல்லலாம்" என்றும், "இந்த யோசனை ஒப்புக் கொள்ளப்படுமாயின் தீண்டாதாருடைய தாழ்மைக்கு புதிய முத்திரையிட்டது போல் ஏற்படுகின்றது" என்றும் எழுதி இருக்கிறது. சுதேசமித்திரன் முதலிய கலப்பற்ற பார்ப்பனப் பத்திரிகைகளும், சில கலப்புப் பத்திரிகைகளும் வாய் மூடி மௌனம் சாதிக்கின்றன. ஆனால் அவைகள் தீண்டாதார்கள் பெயர் களைச் சொல்லிக் கொண்டு சட்ட சபைக்கு போகவும், ஊரைக் கொள்ளை அடிக்கவும் வலை வீசுகின்றவைகளாய் இருப்பதால் இந்தப்படி வஞ்சகமாய் நடந்து கொள்ளவேண்டி இருக்கிறது.

ஆனாலும் இவைகளின் வண்டவாளத்தை சீக்கிரத்தில் மக்கள் உணர்ந்து அவர்கள் ஆசையைக் கனவாகும்படி செய்யப் பொதுமக்களுக்கு யோக்கியதை ஏற்படாமல் போகுமென்று நாம் கருதவில்லை. எவை எப்படி யிருந்த போதிலும் தேசிய புரட்டு, கதர் புரட்டு, மறியல் புரட்டு, சத்தியாக் கிரகப் புரட்டு ஆகியவைகளை யெல்லாம் விட இந்த தீண்டாமை விலக்குப் புரட்டு கோவில் நுழைவுப் புரட்டு கொடுமை! கொடுமை!! மகா கொடுமை!!! என்று சொல்லுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 08.01.1933**



RangaRakes
tamilnavarasam.com

# இந்தியாவின் ஜனத் தொகையும் கல்வி நிலையும்

சென்ற பத்து வருஷத்திற்கு முன் எடுக்கப்பட்ட ஜன கணித கணக்குப் படி இந்திய ஜனத்தொகை சுமார் 32 கோடியாகும். இப்பொழுது அதாவது 1931ல் எடுத்த ஜனக்கணிதப்படி இந்திய ஜனத்தொகை சுமார் $35^1/_4$ கோடியாகும், இவர்களில் 100க்கு 11 பெயர்களே பட்டணங்களில் வசிக்கின்ற வர்கள். பாக்கி 89 பெயர்கள் கிராமவாசிகள். 100க்கு 67பேர்கள் விவசாய ஜீவிதக்காரர்கள். பாக்கி 100 க்கு 33 பேர்கள் கூலி தொழிலும் மற்றும் பல வகை உத்தியோகம் முதலிய ஜீவிதங்களிலும் வாழ்கின்றவர்கள். ஜன சங்கையும், அவர்களது வாழ்க்கையும், ஜீவனமும் இந்நிலையில் இருக்க இனி இவர்கள் கல்வி நிலையைப் பற்றி சற்று விசாரிப்போம்.

## கல்வி விகிதம்

மேல்கண்ட 1931ம் வருஷத்திய ஜன கணிதப்படி மொத்த ஜனத் தொகையில் பகுதி சமூகமாகிய ஆண் சமூகத்தில் 100க்கு $15^1/_2$ பேரும், மொத்த ஜனத்தொகையில் மற்றப்பகுதி பேர்களாகிய பெண் சமூகத்தில் 100க்கு $2^3/_4$ இரண்டே முக்கால் பேர்களுமே எழுதப் படிக்க கற்று இருக்கிறார்கள் என்று மேற்படி கணக்கு புள்ளி விபரத்தில் இருந்து தெரிகின்றது, "வாசித்திருக் கிறார்கள்" என்றால் பி.ஏ., எம்.ஏ., வாசித்தவர்கள் என்றோ, அல்லது தமிழ் முதலிய தம் தம் தாய் பாஷைகளையா தமிழாவது நன்றாக எழுதப்படிக்கத் தெரிந்திருக்கிறார்கள் என்றோ கருதி விடுவது ஏமாற்றத்தைக் கொடுக்கக் கூடியதாகும். எனவே மேல் கண்ட புள்ளி விபரமானது தங்கள் தங்கள் பெயர்களை எழுதுவதற்கே, அதற்குள்ள எழுத்துக்களை வேறு ஒருவர் எழுதிக் காட்டினாலொழிய எழுதமுடியாத விற்பன்னர்களையும் சேர்த்துக் கூட்டிக்கணக்கெடுத்த புள்ளி விபரமே ஆகும்.

ஆண் பெண் அடங்க மேல் கண்ட $35\ ^1/_4$ கோடி ஜனங்களிலும் மேல் கண்ட மாதிரி கையெழுத்துப் போடக்கூடியவர்களையும் சேர்த்து கணக்குப் போட்டு மொத்த ஜனத்தொகை விகிதாசாரம் பார்த்தோமானால் 100க்கு $9^1/_4$ பேர்வழிகள் தான் மேற்கண்டவாறு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்னும் கணக்குக்கு வரக்கூடும்.

ஆகவே இந்திய மக்களின் கல்வியறிவு 100-க்கு $9^1/_4$ பேர்வழிகள் தான் மேற்கண்டவாறு எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாகிறார்கள்.

இதற்குத் தான், அதாவது இந்த மக்களைக் கொண்ட நாட்டுக்கு தான் ஞானபூமி என்றும், கம்பன் காளிதாசன் வள்ளுவர் ஔவை பிறந்த பூமி என்றும் பேசி இந்தியாவின் கல்வி ஞானத்தைப் பற்றி சதா புகழ் மாலை பாடிக் கொள்ளப்படுகின்றது.

## தாழ்த்தப்பட்டார் விகிதம்

இது ஒரு புறமிருக்க இக்கல்வியின் பிரிவினையைப் பற்றி சற்று விவரித்துப் பார்ப்போம். இந்திய மக்களில் சராசரி 100க்கு $9^1/_4$ பேர்தான் கையெழுத்துப் போடத்தெரியும் என்ற கல்வி கற்றிருக்கின்றார்கள் என்றாலும் இதில் எல்லா சாதியிலும் எல்லா சமூகத்திலும் எல்லாப் பிரிவிலும் இந்த சராசரி 100க்கு $9^1/_4$ பேர் என்கின்ற கணக்கு விகிதமாவது இருக்கின்றதா என்று பார்த்தால் அந்தப்படி பார்ப்பது என்பதே ஒரு பெரிய வகுப்பு வாதமாகவும் வகுப்பு துவேஷமாகவும் தான் முடியும். அதோடுமாத்திரமல்லாமல் சற்று அழுத்திப் பேச ஆரம்பித்து விட்டோமேயானால் பிறகு அது ஒரு பெரிய தேசத்துரோகமாகவும் முடிந்து விடும். பிறகு இந்த தேசத்துரோகம் என்ற தீர்ப்புக்கு தோழர் காந்தியின் மேலொப்பமும் ஏற்பட்டு விடும். ஆனால் நாம் அதற்கு பயப்படப் போகின்றோமா? தலைக்கு மேல் போகும் வெள்ளம் ஜாண் போனா லென்ன? முழம் போனா லென்ன? ஆகவே பிரித்து கணக்குப் பார்த் தால் இந்தியாவில் உள்ள அநேக வகுப்புகளில் 100க்கு 100 பேர் தற்குரிக ளாகவும் சில வகுப்புகளில் 100-க்கு 100 பேர் எழுதப்படிக்கத் தெரிந்த வர்களாய் மாத்திரமல்லாமல் பி.ஏ., எம்.ஏ., முதலிய பட்டம் பெற்ற பண்டிதர் களையும் கொண்ட வகுப்பினர்களாகவும் சமூகமாய் இருக்கிறார்கள்.

உதாரணமாக சில ஊர்களில் பார்ப்பனர்களை எடுத்துக்கொண்டால் 100-க்கு 100பேர் படித்து இருக்கிறார்கள். பல ஊர்களில் பறையர்களை எடுத்துக்கொண்டால், பள்ளர்களை எடுத்துக்கொண்டால், சக்கிலியர்களை எடுத்துக்கொண்டால் மற்றும் இது போன்ற பல தாழ்த்தப்பட்ட வகுப்புகளை எடுத்துக்கொண்டால் 100-க்கு 100-பேர் எழுத்து என்றால் ரூபாய்க்கு எத்தனை படி என்று கேட்க்கக்கூடிய தற்குறிகளாகவே இருக்கிறார்கள்.

## பெண்கள்

பெண்கள் சமூகமும் அப்படியே சில சமூகத்தில் பார்ப்பனர் சமூகத் தில் சில இடங்களில் 100-க்கு நூறு பெண்கள் படித்தவர்களாகவும் அவர்கள் அல்லாத மற்ற அனேக சமூகத்தில் 100-க்கு 100 பெண்கள் எழுத்து வாசனை


RangaRakes
tamilnavarasam.com

அறியாதவர்களாகவும் இருக்கிறார்கள். இவற்றைப்பற்றி யாராவது கேட்டால் அதாவது "பார்ப்பனர் மாத்திரம் ஆணும், பெண்ணும் 100-க்கு 100 பேர் எப்படி படித்தார்கள்? பரையர்கள், பள்ளர்கள் முதலிய வகுப்பார் மாத்திரம் 100-க்கு 100பேர் ஏன் தற்குரிகளாய் இருக்கிறார்கள்" என்று கேட்டால் இதற்கு பதில் இது வகுப்பு துவேஷம் அல்லது வகுப்பு வாதம் என்று சொல்லுவதைத் தவிர வேறு சமாதானம் இல்லவே இல்லை.

## கொடுமை! கொடுமை!!

பார்ப்பானும், பாப்பாத்தியும் கோவணம் கட்டிக்கொண்டு பாடுபட்டு, மண்வெட்டி, தண்ணீர் பாய்ச்சி தெருவில் கல் உடைத்து கஷ்டப்பட்டு சம்பாதித்து படித்தார்களா? மற்றபடி பறையனும், பள்ளனும், பஞ்ச கச்சம் போட்டு பட்டு வேஷ்டி உடுத்திக்கொண்டு, மூன்று வேளை குளித்து முழுகி நகத்தில் அழுக்குப்படாமல் தெருத்திண்ணையில் உட்கார்ந்து வண்ணமே ஊரானிடமெல்லாம் கும்பிடும் காணிக்கையும் பெற்று, சாம்பலையும் ஆசீர்வாதத்தையும் கொடுத்து படித்தார்களா என்று யோசித்துப் பாருங்கள். பாடுபட்ட கூட்டமெல்லாம் பட்டினியாய் கிடப்பதோடு, தற்குறிகளாக இருக்கவும், பாடுபடாத கூட்டமெல்லாம் தின்று கொழுக்கவும், பி.ஏ., எம். ஏ., படித்து மாதம் 1000, 10000 கணக்காய் சம்பாதித்து, கெம்பு வைரத்தோடும், பனார்ஸ் பெங்களூர் புடவையும், பீச்சுரோட் மோட்டார் சவாரி உல்லாசமாக யிருக்கவும் எப்படி ஏற்பட்டது? என்பதுதான் இங்கு கவனிக்கவேண்டிய விஷயமாகும். எனவே இதைப்பற்றி பேசப்போனால் இதை சோஷியலிச மென்றோ போல்ஷவிசமென்றோ, கம்யூனிசமென்றோ சொல்லி விட்டால் போதுமா? இது கம்யூனிசமாய் இருந்தால் என்ன, அவர்கள் பாட்டனிசமான கொள்ளை கொலைகாரிசமாய் இருந்தால் என்ன? மேற்கண்டபடி நடக் கின்றதா இல்லையா என்பதும் இந்த நிலை திருத்தப்பாடடைய வேண்டுமா வேண்டாமா என்பதும் தான் இங்கு நமது கவலை.

## அரசாக்ஷி யோக்கியதை

உலகத்திலேயே நாகரீக அரசாட்சி என்று பேர் வாங்கிய பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு வந்து 150 வருஷ காலம் ஆன பிறகும் பார்ப்பான் 150க்கு 150 பேர் படித்திருக்கவும், பறையன் 150க்கு 150 பேர் தற்குறியா யிருக்கவும் காரணம் என்ன என்பதற்கு என்ன பதில் சொல்லக்கூடும். இப்படிக்கேட்பதை அராஜகம் என்றோ போல்ஷவிசம் என்றோ சொல்லி இனியும் ஏமாற்றவோ மிரட்டவோ முடியுமா? என்று கேட்கின்றோம்.

பார்ப்பனர் முதலிய "உயர்ந்த" ஜாதியார் என்பவர்கள் செய்யும் வேலையையும் அதனால் ஏற்படும் பலனையும், பறையன் முதலான 'தாழ்ந்த' ஜாதியார்கள் என்பவர்கள் படும்பாட்டையும் அதனால் ஏற்படும் பயனையும் சற்று சிந்தித்துப் பார்க்கட்டும். சோம்பேரிகள் - ஊரார் உழைப்பில் பயன்



அடைபவர்கள், கொள்ளை கொள்ளையாய் சம்பாதிக்கவும் பொருள் சேர்க்கவும், அவர்கள் வீட்டுப் பிள்ளைகள் தலைமுறை தலைமுறையாய் வயிற்றிலிருந்து வரும்போதே புஸ்தகத்துடன் வரவும் தலைமுறை தலை முறையாய் படிக்கவும் தலைமுறை தலைமுறையாய் மாதம் 400, 500, 1000, 5000 வீதம் சம்பாதிக்கவும், பாடுபடுகின்றவன் கஷ்டப் பட்டு உழைப்பவன் ஏழையாகவே இருக்கவும் அவன் பிள்ளை குட்டிகள் வயிற்றிலிருந்து வரும்போதே ஏர், மண்வெட்டி, சம்மட்டியுடன் வரவும் தலைமுறை தலை முறையாய் தற்குறியாகவே யிருக்கவும் தலைமுறை தலைமுறையாய் இருக்க இடமில்லாமல் ஒண்ட நிழல் இல்லாமல் பட்டினியினால் நோயினால் மடியவு மான நிலைமைக்கு யார் காரணம்? யார் காரணமாயிருந்தாலும் அக் காரணங்களும் காரணஸ்தர்களும் அடியோடு அழிய வேண்டாமா? அழியா விட்டாலும் ஒழிய வேண்டாமா? ஒழியாவிட்டாலும் மாறவேண்டாமா என்று கேட்கின்றோம்.

இம்மாதிரியாகக் கல்வித்துறையில் உள்ள அக்கிரமம், கொடுமை, கொலைபாதகத் தன்மை மற்றெதிலும் இல்லை என்று தைரியமாய்ச் சொல்லு வோம். பச்சையாய்ச் சொல்லவேண்டுமானால் மாடு மேய்க்கத் தெரியாத வர்கள் எல்லாம் படிப்பு என்னும் சாக்கால் மந்திரியாகி - சட்டமெம்பராகி மாதம் 5000, 6000 ரூபாய் வீதம் சம்பளம் வாங்கிக் குடித்துக் கூத்தாடிக் கொண்டு இருப்பதும், மண் வெட்டி கூலி வேலை செய்து பயிர் செய்து அரண் மனை கட்டி கோட்டை கட்டி அரசனைக் காப்பாற்று கின்றவர்கள் எல்லாம் படிப்பில்லை என்னும் காரணத்தால் இடுப்புக்குத் துணி போராமல் வயிற்றுக் கஞ்சி போராமல் வதைக்கப்படுவது என்பது நியாயமா? இந்நிலை அடியோடு அழிய வேண்டாததா என்று மறுபடியும் கேட்கின்றோம்.

சென்ற 10 வருஷத்திற்கு முந்தின ஜன கணிதத்தில் 100க்கு 7 பேர்கள் தான் படித்தவர்கள் இருந்தார்கள் என்று கூப்பாடு போட்டது இந்த "காருண்ய சர்க்கார் நாகரீக சர்க்கார்" காதுக்குக் கேட்கவில்லை என்று சொல்லி விட முடி யுமா? அல்லது இந்த "பொது ஜன தலைவர்கள் மகாத்மாக்கள்" காதுகளுக்கு கேட்கவில்லை என்று சொல்லிவிட முடியுமா? 10, 12 வருஷ காலமாக ஒத்துழையாமை, சுயராஜ்யக் கிளர்ச்சி, உப்பு சத்தியாக்கிரகம், பரதேசி மறியல், ஹரிஜன சேவை ஆகிய காரியங்கள் எவ்வளவு நடந்தன? எத்தனை கோடி ரூபாய்கள் இந்தக் காரியங்களுக்காக என்று வசூல் செய்து ஊரிலுள்ள சோம்பேரி கூட்டம் பெண்டு பிள்ளைகளுடன் கொள்ளை கொண்டன. ஆனால் இந்த மாதிரியான கல்வி நிலையைப் பற்றி ஏதாவது மூச்சுப் பேச்சு உண்டா என்று கேழ்க்கின்றோம். அது போல காருண்ய நாகரிக சர்க்காருக்கும் நல் அரசாட்சி செய்ய வேண்டும் என்ற ஆசையால் இந்திய மக்களை காப்பாற்ற தங்களால் அல்லாமல் மற்றவர்களால் முடியவே முடியாது என்ற முடிவால் செலுத்தி வந்த தர்ம நீதி ஆட்சியால் இந்த 10 வருஷ காலத்தில் மக்களுக்கு ஏற்பட்ட கல்வி அறிவுஞானம் எவ்வளவு? என்பதை ஒரு கடு



RangaRakes tamilnavarasam.com

களவு அறிவுள்ள நடுநிலைமை ஞானமுள்ள ஒரு மனிதன் கவனித்தால் இதைவிட கொடுங்கோலாட்சியும் இந்தத் தலைவர்கள் மகாத்மாக்கள் என்பவர்களை விட ஏழை மக்கள் துரோகிகளும் உலகத்தில் வேறெங்காவது இருக்கின்றார்கள் என்று சொல்ல முடியுமா என்று கேள்க்கின்றோம். அர்த்த மற்ற உப்பு சத்தியாக்கிரகத்திலும் சூட்சி நிறைந்த கோவில் நுழைவிலும் தான் கவலை இருக்கின்றதே தவிர அதைப் பற்றிய விளம்பரங்களே விஷத்தைப் போல் மக்கள் மனத்தில் புகுத்தபடுகின்றதே தவிர இந்த தாழ்த்தப் பட்ட மக்கள் கல்வி அறிவைப் பற்றி பேசப்படுகின்றதா? அதற்காக ஒரு கடுகளவு கவலை கொள்ளப்படுகின்றதா என்று பாருங்கள். இதன் கருத்தென்ன? எந்தக் காரணத்தாலாவது உலகில் 100க்கு 90 மூடர்கள் எழுத்து வாசனை அற்ற பாமரர்கள் இருந்தால் தான் 100க்கு 10 வீதமாவது அயோக்கியர்கள், சோம் பேரிகள், பேராசைக்காரர்கள், ஊரார் உழைப்பில் வயிர் வளர்ப்பவர்கள், ராஜாக்கள், மகாராஜாக்கள், சக்ரவர்த்திகள், ஜமீன்தாரர்கள், மகாத்மாக்கள், சங்கராச்சாரிகள், பண்டார சன்னதிகள், புரோகிதர்கள், குரு மார்கள் முதலாகிய பகல் கொள்ளைக் கூட்டம் வாழமுடியும் என்பதேயாகும். ஆதலால் இந்நிலையில் மக்களுடைய கல்வியைப்பற்றியோ, அறிவைப் பற்றியோ, பகுத்தறியும் ஞானத்தைப்பற்றியோ பேசுவது என்பது அரசாங்கங் களுக்கும் தேசியத்திற்குமே விறோதமான காரியமாகிவிடும். ஆகவே சுய மரியாதை சமதர்மக் கட்சியார் என்பவர்கள் அரசியலில் பிரவேசித்து சட்டசபைகளுக்கு போவதானால் அவர்கள் அடுத்த மூன்று வருஷக்காலத்திற்குள் கல்வித் துறையில் தாழ்த்தப்பட்டவர்களில் 100-க்கு இத்தனை வீதம் உள்ள மக்களுக்கு நன்றாய் எழுதப்படிக்க கற்றுக்கொடுப்பது என்பதாக ஒரு மூன்று வருஷத் திட்டம் போட்டு அதில் பெரும்பாலும் உழைப்பதாகவும் உறுதி செய்து கொள்ள வேண்டும். கள்ளுக்கடை மறியலும், பரதேசி துணி மரியலும், கோவில் நுழைவும் பார்ப்பன காங்கிரசுக்கும் வயிற்றுப் பிழைப்பு தேசீயத் திற்கும் விட்டுவிட வேண்டியதே ஒழிய அவைகள் இந்தக் கல்விக் கொடுமை யைவிட பிரமாதமான காரியமமல்ல. ஆகையால் இவ்விஷயத்திற்கு இப் போதே ஒரு திட்டம் வகித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 08.01.1933**



# நாடார் மகாஜன சங்கம்

சென்ற டிசம்பர் மாத இறுதியில் சென்னையில் கூடிய நாடார் மகாநாடு, நாடார் வாலிபர் மகாநாடு, நாடார் கல்வி மகாநாடு ஆகியவைகளின் தலைவர் களின் சொற்பொழிவுகளும், தீர்மானங்களும் இன்று நமது பத்திரிகையின் வேறிடத்து பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. பொருளாதார நெருக்கடியால் பல்வேறு தொல்லைகளுக்குட்பட்டு வரும் உலகிற்கும், சுயமரியாதை இழந்து பரிதவிக்கும் இந்திய மக்களுக்கும் நாடார் மகாநாட்டுத் தலைவர்களின் சொற்பெருக்குப் போதிய வழி காட்டியாயிருக்கு மென்பதில் கிஞ்சித்தும் ஐயமின்று. வாலிபர்கள் மகாநாட்டிற் றலைமை வகித்த தோழர் கூ. கா. ஆ. பெரியசாமி அவர்களின் தம் சொற்பொழிவு பல நுண்பொருளை அடக்கிக் கொண்டிருக்கிறது என்பதில் ஒரு சிறிதும் மிகையாகா. வருமைநோய், வேலையில்லாத் திண்டாட்டம்! பொருளாதார நெருக்கடி!! பஞ்சம்!!! என்று துன்பவாழ்வைப் போக்க வழிதெரியாது பரிதவிக்கும் உலகிற்கு, “ருஷிய தேசத்தின் மாஸ்கோ என்ற நகரிலுள்ள 8 முதல் 13 வயதுவரையுள்ள பள்ளிச் சிறுமிகள் ஒரு சங்கமாகச் சேர்ந்து படிக்கும் நேரம் நீங்கலாக மற்ற நேரங்க ளில் படியாத தொழிலாளர்கள் வசிக்குமிடங்களுக்குச் சென்று அவர்களுக் குப் படிப்புச் சொல்லிக்கொடுக்கிறார்கள். மற்றும் தேச முன்னேற்றத்திற்கான வழிகளில் சித்தத்தைச் செலுத்தி வருகிறார்கள். சிறு பிராயத்திலிருந்தே இவர்களுக்குத் தொழில் விவசாயம், ரசாயனம் முதலிய கல்விகளோடு தேகப் பயிற்சிக்கான வகையிலும் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. தேசப்புனருத் தாரண கைங்கிரியத்தில் சிறுவர் சிறுமிகள் ஈடுபடுகிறார்கள். இதனாலன்றோ, வேலையில்லாத் திண்டாட்டமும் வருமைப் பிணியும், வியாபார மந்தமும், பொருளாதார நெருக்கடியும், அடிமைத் தனமும் அந்நாட்டிலில்லை. ருஷியா வின் முற்போக்கைக் கண்டு இதர வல்லரசுகளும் திடுக்கிடுகின்றதென்றால் அந்நாட்டின் செல்வச் சிறப்பை சொல்லவும் வேண்டுமோ” என்று குறிப்பிட்டி ருப்பது நாம் அடிக்கடி உலகப் பொருளாதாரக் கஷ்ட நிவர்த்திக்கு சமதர்மமே வேண்டுமென்று கூறி உண்மையை வலியுறுத்தியிருப்பது நாடார்கள் மட்டு மல்ல மக்களனைவருமே கவனிக்கத்தக்கதாகும். மகாநாட்டின் தீர்மானங் களிற் பெரும்பாலும் நமது சமதர்மக் கொள்கைகளை ஆதரித்தே இருக்கிற தென்று கூறலாம். நாடார் மக்கள் தங்கள் தலைவர்களின் சொற்பொழிவு களையும் தீர்மானங்களையும் நன்குணர்ந்து யாண்டும் சமதர்மம் நிலவச் செய்ய ஆவன புரிய முன் வருவார்களாக.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 08.01.1933**



RangaRakes tamilnavarasam.com

# “சுப்பராயன் மசோதா” விளம்பரம்

கோவில் பிரவேச மசோதா என்னும், டாக்டர் சுப்பராயன் மசோதா வுக்கு சிறிது காலத்துக்கு முன் ஜிண்டான் மாத்திரைக்குச் செய்யப்பட்ட விளம்பரத்துக்கு மேலாகவே செய்யப்பட்டு வருகின்றது. இவ்விளம்பரம் தோழர் ராஜகோபாலாச்சாரி சிபார்சின் மீது தோழர் காந்தியாலும் செய்யப் பட்டு வருவதைக் கண்டு டாக்டர் சுப்பராயனைப் பாராட்டாதவர்கள் இல்லை. டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கு இது ஒரு சகட யோகமேயாகும். ஆனால் மசோதாவின் யோக்கியதை என்ன என்பதையும், பயன் என்ன என்பதையும் இதன் கருத்து என்னவென்பதையும், எதை உத்தேசித்து இந்தப் பித்தலாட்ட பிரசாரம் மகாத்மாக்களாலும், தேசீய பத்திரிக்கைகளாலும் நடைபெருகின்றது என்பதை சீக்கிரத்தில் நாமே விவரமாக வெளிப்படுத்த இருக்கிறோம். சிறிது தாமதம் ஆவதால் ஒன்றும் முழுகிப்போகாது. ஆதலால் அது சம்மந்தமாக வந்திருக்கும் பல வியாசங்களை வெளியிடாததற்கு நிருபர்கள் பொருத்துக் கொள்வார்களாக.

**குடி அரசு - செய்தி விளக்கக் குறிப்பு - 08.01.1933**



# கத்தோலிக்கர்களுக்கோர் விண்ணப்பம்

நமது பகுத்தறிவு இயக்கத்தை தாக்கி எழுதும் முறையில் திருச்சி “கிங்ஸ் ரோலி” என்ற ஆங்கில மாதச் சஞ்சிகையையும், சர்வவியாபி என்ற ஒரு தமிழ் வாரப் பத்திரிகையும் நம்மை திட்டி எழுதியிருந்தவைகளை நமக்கோர் நற்சாட்சிப் பத்திரமாக எண்ணி நமது கொள்கைகளை ஆதரிக்கும் அமெரிக்கா, ஐரோப்பாவிலுள்ள பகுத்தறிவு இயக்க ஸ்தாபனங்களுக்கு அதன் பிரதிகள் சிலவற்றை வாங்கி அனுப்பினோம். அவர்கள் நமது தொண்டைக் கண்டு மகிழ்ந்து அதற்கு வெகுமதியாக

1. Priest the Women and the Confessional
2. Question for Catholics
3. Roman Catholicism Analyzed
4. Fifty years in the church of Rome
5. Confession of a Nun

முதலிய புத்தகங்களை அனுப்பியுள்ளார்கள். அவைகளின் மொழி பெயர்ப்பு இனி குடி அரசில் வெளியாகிக் கொண்டு வரும். கத்தோலிக்கர் களுக்கும் மற்ற வைதீக கிறிஸ்துவர்களுக்கும் நாமாக ஏதாவது சொல்வதா யிருந்தால் தான் அவர்கள் கோபித்துக் கொள்ள இடமேற்படலாம். ஆத லாலேயே இனி கத்தோலிக்கு பாதிரிகளும், பிஷப்புகளும் மற்றும் கிறிஸ்துவ அறிஞர்களும் சொன்னவற்றையே முதலில் சமர்ப்பிக்கிறோம். இதற்கும்கூட கோபிப்பார் களோ என்னமோ தெரியவில்லை. நம்மைக் கண்டிப்பவர்கள் நாம் எழுதிய வைகளை எடுத்து ஓதியோ, எழுதியோ அவற்றிற்கு சமாதானத்துடன் கண்டித் தால் மிகவும் நன்றி உள்ளவர்களாய் இருப்போம் என்பதை அன்பு டன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 08.01.1933**



RangaRakes tamilnavarasam.com

## காந்தியாரின் தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமை ஒழிப்பா? நிலைப்பா என்று சென்ற வாரம் நாம் தலையங்கம் எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கும். அதற்கு பதில், அல்லது சமாதானம் என்று கருதும்படி தோழர் காந்தியவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையிலும், மோர்வி மாஜி திவானுக்கு அளித்த பதிலிலும் காணப்படும் அடியிற்கண்ட விஷயங்கள் நமது கருத்தை ஊர்ச்சிதப் படுத்துவதாக இருக்கின்றதா? இல்லையா என்பதைச் சற்று கூர்ந்து கவனிக்கும்படி வாசகர்களை வேண்டுகின்றோம். தோழர் காந்தியார் கூறுவதாவது:-

"நான் கலப்பு மணத்தையும், சமபந்தி போஜனத்தையும் ஆதரிப்பதில்லை" (ஏன்?)

"சுத்தமில்லாமல் இருப்பவர்களையும், மாட்டு மாமிசம் சாப்பிடுபவர்களையும் ஆலயத்துக்குள் பிரவேசிக்க அனுமதிக்கக் கூடாது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்" என்று கூறி இருக்கிறார்.

காந்தியார் அறிக்கை கூறுவதாவது:-

எனது ராஜி பிரேரேபணையை யார் கண்டித்தாலும் நான் வாப்பீசு வாங்கிக் கொள்ளப் போவதில்லை.

மத விஷயத்தில் நிர்ப்பந்தமென்பது இருக்கக் கூடாது.

மத விஷயத்தில் பிறர் கொண்டுள்ள நம்பிக்கையை முக்கிய விஷயத்திற்கு இணங்கிய அளவுக்கு மதித்து நடக்க வேண்டும்.

ஹரிஜனங்களுடைய ஆலயப்பிரவேசத்தை ஆட்சேபிக்கின்றவர்களும் மத சம்பந்தமான மன சாந்தியை அடைய உரிமைபெற்று இருக்கிறார்கள்.

ஆதலால் அவர்களுக்கு உரிய அந்த மன சாந்தியை பரிக்காத மாதிரியில் தான் ஒரு திட்டம் தயாரிக்க வேண்டும்.

கோவிலுக்குள் சில ஜாதியார் சென்றால் அங்குள்ள விக்கிரகத்தின்



சக்தி குறைந்து போகின்றது என்கின்ற உணர்ச்சி பலருக்கு இருந்து வருகின்றது.

அம்மாதிரி உணர்ச்சி உள்ளவர்களை சட்டத்தைக் கொண்டோ, ஆயுதத்தைக் கொண்டோ, பலவந்தத்தைக் கொண்டோ விடும்படி செய்வது என்பது முடியாத காரியம். (அப்படி ஆனால் பின் எதற்காக பட்டினியும், மெஜாரிட்டி கையெழுத்தும் "சுப்பராயன் மசோதா"வும்?)

இந்து மதத்தில் தங்களுக்கு உள்ள அந்தஸ்த்தை நிலைநாட்டிக் கொள்ளுவதற்காக ஒருவர் பெற்றிருக்கும் நியாயமான கோரிக்கைகளை அவருக்கு மறுத்து அவர்கள் மனதை புண்படுத்துவதை ஹரிஜனங்கள் விரும்பவில்லை என நான் கருதுகிறேன்.

(அப்படியானால் பார்ப்பனர்களை பூதேவர்கள் என்று ஒத்துக் கொள்ள வேண்டியது தான்.)

சம்ரோக்ஷணை என்பது ஆட்சேபகரமான காரியம் தான். அதை ஒப்புக்கொள்ளுவது தீண்டாமையை ஒப்புக் கொண்டதாகும். என்றாலும் இதை ஒப்புக் கொள்ளுவது வைதீகர்களுக்கு காட்டும் ஒரு தயவாக இருக்கும்.

மனித வர்க்கத்தில் தீண்டாமை என்பது ஏதாவது ஒரு ரூபத்தில் சகஜமாக இருந்து தான் தீரும்.

அது மனிதனுடைய தொழில் அல்லது நடத்தையைப் பொருத்ததாக இருக்கும். அப்படிப்பட்ட தீண்டாமையை ஒழிப்பது இந்த இயக்கத்தின் நோக்கமல்ல.

என்று எழுதி இருக்கிறார்.

இது 12-1-33 சு-மி பத்திரிகையில் காணப்படுகின்றது. இதிலிருந்து ஹரிஜன கோவில் பிரவேசத்தின் யோக்கியதையும், தீண்டாமை விலக்கின் தத்துவத்தையும், மதக் கொடுமையை ஒழிக்கும் சம்மதத்தையும் தோழர்களே யூகித்தறிந்து கொள்ளுவீர்களாக.

**குடி அரசு - கட்டுரை - 15.01.1933**



RangaRakes tamilnavarasam.com

# "சுப்பராயன் மசோதா" வின் இரகசியம்

டாக்டர் சுப்பராயன் அவர்களின் மசோதாவானது தீண்டாமை ஒழிப்பு விஷயத்தில் ஏதோ பிரமாதமான நன்மை செய்துவிடப்போவதாக ஜனங்களுக்குள் பிரசாரம் செய்யப்பட்டு வருவதைப்பற்றி முன் ஒரு குறிப்பு காட்டி இருந்தோம்.

அதன் இரகசியம் என்ன என்பதும், எதற்காக அந்தப்படி பிரசாரம் செய்யப்படுகின்றது என்பதும் அநேகர் அறிந்திருக்கவே மாட்டார்கள். இருந்தபோதிலும் அந்த மசோதாவின் யோக்கியதை என்ன என்பதும் அதனால் என்ன பயன் ஏற்படும் என்பதும் அடியில் குறிப்பிட்ட தோழர் சி. ராஜகோபாலாச்சாரியாரின் இரண்டொரு வாக்கியத்தில் இருந்து ஒருவாறு உணரலாம். அதாவது,

"டாக்டர் சுப்பராயனின் கோவில் பிரவேச மசோதாவை அவர்கள் (வைதீக ஜனங்கள்) எதிர்க்க வேண்டிய அவசியமே ஏற்படாது.

ஹரிஜனங்களை கோவிலுக்குள்விட்டே தீரவேண்டுமென்றும், அம்மசோதா சொல்லவில்லை. அம்மசோதா சட்டமானவுடன் ஹரி ஜனங்கள் கோவிலுக்குள் நுழைந்து விடுவார்கள் என்று யாரும் எண்ணிக் கொள்ள வேண்டாம்" என்று 9-1-33-ந் தேதி சுதந்திரச்சங்கு என்னும் பேப்பரில் 5-வது பக்கம் இரண்டாவது கலத்தில் எழுதி இருக்கிறார். இதைப்பற்றி வியாக்கி யானம் ஒன்றும் தேவையில்லை என்றே கருதுகிறோம்.

நிற்க, இந்த விளம்பரத்தின் இரகசியம் என்ன என்பது பற்றி மற்றொரு சமயம் வெளியாகும்.

**குடி அரசு - கட்டுரை - 15.01.1933**



# ஸ்பெயினும் இந்தியாவும்

ராஜாவை விரட்டி அடித்த பிறகும் ஸ்பெயின் தேசத்தில் முதலாளி களுடைய ஆட்சியே 'குடி அரசு' ஆட்சி என்னும் போர்வையைப் போற்றிக் கொண்டு அதாவது இந்தியாவில் எப்படி சுயராஜியம்-தேசீயம் என்னும் போர் வையை போத்திக் கொண்டு முதலாளிகளுடைய ஆட்சிக்கு காங்கிரசின் மூலம் சிறிது காலமாய் அஸ்திவாரம் போடப்பட்டு வருகின்றதோ அதுபோல் நடந்து வந்தது. இன்றும் அப்படியே நடந்து வருகிறது என்றாலும் இப்போது அங்கு இந்த முதலாளிக் குடி அரசு ஆட்சியையும் அழிக்க ஒரு கூட்டம் துணிந்து வெளியில் கிளம்பி வந்து, தேசீயத்தையும் ஒழித்து, போலிக் குடி அரசையும் ஒழிக்கப் புரட்சி செய்து பொது உடமை ஆட்சி ஆக்க முயற்சித்து ஒரு அளவுக்கு வெற்றியும் பெற்று வருகின்றதாக தெரியவருகிறது. ஸ்பெயினைச் சேர்ந்த கட்டலோனியா மாகாணத்தில் கிண்டிகலிஸ்ட் (அனார்க் கிஸ்ட்) அதாவது சர்க்கார் ஆட்சி என்பதே இல்லாமல் எல்லாம் தன்னரசு நாடாகவே இருக்க வேண்டும் என்கின்ற ஒரு வித கொள்கை மீது ஒரு பெரிய இயக்கம் நடந்து வருகின்றது. அந்த மாகாணத்தில் இந்த இயக்க மெம்பர்கள் தான் மெஜாரிட்டியாய் இருக்கிறார்கள். இவர்கள் ஸ்பெயின் தேசீய இயக்கத் திற்கும் "குடி அரசு" என்கின்ற இயக்கத்திற்கும் எதிராய் இருப்பவர்கள். ஆனாலும் ஒரு அளவில் பொது உடமை ஆட்சிக்கு சிறிது அனுதாபம் காட்டு கின்றவர்களாய் இருக்கிறார்கள். இந்த பொது உடமைக் கொள்கையிலும் ஸ்பெயின் தேச முழுவதிலுமே இரண்டு கட்சியார்கள் உண்டு. அதாவது ஒரு கட்சியார் இன்று ரஷியாவில் நடக்கும் ஸ்டாலினுடைய பொது உடமைக் கொள்கையை ஒப்புக் கொள்ளுகின்றவர்கள்.

மற்றொரு கட்சியார் ட்ராட்ஸ்க்கியினுடைய (இவர் முன் லெனினுடன் வேலை செய்து வந்தவர். இப்போது ஸ்டாலினால் நாடு கடத்தப்பட்டு வெளி நாட்டில் இருப்பவர்) பொது உடமைக் கொள்கையை ஒப்புக் கொள்ளுகின் றவர்கள். இவ்விருவருடைய பொது உடமைக் கொள்கைக்கும் உள்ள வித்தி யாசத்தை உணர வாசகர்கள் ஆசைப்படக் கூடும். அவ்வளவு விபரமாய் விளக்க நமக்கும் தெரியாது. ஆனாலும் தெரிந்தவரை சிறிது விளக்குவோம். என்ன வித்தியாசமென்றால் இப்போது ரஷ்யாவில் நடைபெறும் ஸ்டாலினின் பொது உடமைக் கொள்கையானது ரஷ்யா தேசத்தை மாத்திரம் பொருத்த



RangaRakes tamilnavarasam.com

பொது உடமை என்றும் அதில் தேசீய வாடை வீசுகிறதென்றும் ட்ராட்ஸ்க் கியால் குற்றம் சொல்லப்படுகின்றது. ட்ராட்ஸ்க்கியின் பொது உடமைக் கொள்கையானது உலகம் முழுவதும் பொது உடமைக் கொள்கை ஏக காலத்தில் ஆக வேண்டும் என்றும், இதில் ரஷியாவென்றும், ஜர்மனி என்றும், இந்தியா என்றும் தேசீய உணர்ச்சியே இல்லாமல் எங்கும் பொதுவான புரட்சி நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டது என்று சொல்லப் படுகின்றது. இதை ஸ்டாலின் கட்சியார் குற்றம் சொல்லுகின்றார்கள். காரணம் என்னவென்றால் ஒவ்வொரு தேசமாகத்தான் பொது உடைமை ஆட்சியாக ஆக்கப்படக்கூடும் என்றும், அப்படிக்கில்லாவிட்டால் உலக முழுவதும் முதலாளி தொழிலாளி, புரட்சி ஒரே சமயத்தில் ஒன்றாய் சாதிக்க முடியா தென்றும், தோல்வி ஏற்பட்டால் எல்லா தேசத்தையும் அந்த தோல்வி பாதிக்கு மென்றும், அந்தந்த தேச மக்களுக்கு அந்தந்த தேசத்திய புரட்சியை விட்டு விட வேண்டும் என்றும் சொல்லுவதாகச் சொல்லுகின்றார்கள்.

இதற்கு டிராட்ஸ்கி சொல்லும் பதில் என்னவென்றால் உலகப் பரப்பில் ஒரு தேசம் மாத்திரம் பொது உடைமை ஆகி விட்டால் மற்ற தேச முதலாளி கள் எல்லாம் ஒன்று சேர்ந்து எதிர்த்துப் போர் தொடங்கி அதைக் கெடுத்து விடுவார்கள் என்றும் தனித் தேசத்திய பொது உடைமை என்றைக்கு இருந்தா லும் ஆற்றோரத்திய வீடு போல் ஒரு நாளைக்கு வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்பட்டு விடும் என்றும் சொல்லுவதாகச் சொல்லுகிறார்கள்.

இந்தப்படி இன்னும் அனேக வித ஆட்சேபணை சமாதானங்கள் உண்டு. இந்த இரண்டு கட்சியும் ஐரோப்பிய தேச முழுவதிலுமுள்ள முக்கிய நாடுகளிலெல்லாம் இருந்துவருகின்றது. இருகட்சிக்கும் புஸ்தகங்கள் துண்டு பிரசுரங்கள் உண்டு. ஆனால் ஸ்பெயினில் ஸ்ட்ராட்ஸ்க்கி கட்சியே பலம் பெற்று இருப்பதாய் தெரிய வருகிறது.

நிற்க ஸ்பெயினில் தற்சமயம் இருந்து வரும் குடி அரசுக்கு சற்று பலம் குறைவு என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் அங்கு தற்சமயம் உள்ள குடிஅரசானது முன்குறிப்பிட்டதுபோல் ஒரு வகை முதலாளி குடிஅரசு ஆகத்தான் இருக்கிறது. ஆதலால் இதற்கு கிண்டிகலிஸ்ட் கட்சியாரும் இரண்டு வகை கம்யூனிஸ்ட் கட்சியாரும் பொது தொழிலாளிகளும் விரோதி களாகவே இருக்கிறார்கள். குடிஅரசு கவர்ன்மெண்டானது நாஸ்திக கொள்கை யாய் இருப்பதால் பாதிரிகளும் ஆஸ்திக முதலாளிமாரில் சிலரும் மற்றும் பழய ராஜாவுக்கு சேர்ந்தவர்களும் விரோதிகளாய் இருக்கிறார்கள். ஆனால் இந்த குடி அரசு சர்க்காருக்கு இப்போது உதவியாய் இருப்பவர்கள் எல்லாம் நமது நாட்டு (இந்திய) காங்கிரசுக்கு உதவி இருப்பது போல் சில முதலாளி களும் (உத்தியோகத்தை எதிர்பார்த்த) படித்த கூட்டத்தாரும் அவர்களது கூலிகளான சில தேசீய வாதிகள் என்று சொல்லிக் கொள்ளப் படுபவர்களுமே ஆவார்கள். இவர்களுக்கு மேல் கண்ட தொழிலாளர் கூட்டத்தாரிடையும்



பொது உடமை கூட்டத்தாரிடையும், தன்னரசு கூட்டத்தாரிடையும் மதிப்பு கிடையாது. இந்த மூன்று கூட்டத்தாரும் எக்காரணம் பற்றியாவது ஒன்று சேர்ந்தால் அந்த நிமிஷமே ஸ்பெயின் முழுவதுமே ஒரு வினாடியில் பொது உடமை நாடு ஆகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. இன்றைய ஸ்பெயின் குடி அரசை நிர்வாக விஷயத்தில் அதிகமாக குற்றம் சொல்லி எதிர் பிரசாரம் செய்பவர்களும், துண்டு பிரசுரம் வழங்குப வர்களும் பெரிதும் பாதிரிக் கூட்டங்களே ஆவார்கள். ஆதலால் ஸ்பெயின் குடி அரசானது சிற்சில விஷயங்களிலாவது பாதிரிகளுக்கு நல்ல பிள்ளையாய் நடக்க வேண்டி இருக்கின்றது. அதுபோலவே பொது உடமைக்காரரின் தயவை பெற சில விஷயங்களில் அவர்களுக்கு அனுகூலமாகவும் நடக்க வேண்டி இருக் கின்றது ஆகவே ஸ்பெயின் குடி அரசின் கொள்கைக்கு ஏதாவது ஒரு உதாரணம் காட்ட வேண்டுமானால் நமது சென்னை அரசாங்க மந்திரி சபையையே தற்சொரூபமான உதாரணமாய்க் காட்டலாம்.

சென்ற 5, 6 வருஷ காலமாய் சென்னை மந்திரி சபைகளுக்கு எப்படி யாதொரு வித கொள்கையுமில்லாமல் எப்படியாவது உத்தியோகம் நிலைத்தால் போதும் என்கின்ற ஒரே "பலமான" கொள்கை மீது மந்திரிகள் நிர்வாகம் நடை பெற்று வந்தனவோ அது போலவே தான் ஸ்பெயின் குடி அரசு அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட கொள்கை இல்லாமல் நடந்து வருகின்றது. மக்களுக்கு உண்மை உணர்வு வந்து விட்டால் இம்மாதிரி கொள்கையற்ற ஆட்சி ஒழிந்து தான் தீரும். ஆதலால் தான் இன்று ஸ்பெயின் தேசத்தில் ஏற்பட்ட சில மக்களின் உண்மை உணர்வானது இன்று அந்த தேசத்தில் இரண்டொரு நகரங்களில் பொது உடமை ஆட்சி நிருவப்பட்டு விட்டதாக தினசரிகளில் காணப்படுகின்றது. (இதன் முடிவு எப்படி இருந்தாலும்) என்றைக்கிருந்தாலும் ஒரு நாளைக்கு, ஏன், வெகு சீக்கிரத்தில் ஸ்பெயின் தேச முழுவதுமே பொது உடமை தேசமாக ஆகித்தான் தீரும். ஜர்மனியும் இப்போது தனது முதலாளிக் கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு வெகு சீக்கிரத்தில் பொது உடைமை ஆட்சிக்கு ஓட்டம் பிடிக்கும் என்பதில் நமக்கு சந்தேகமில்லை.

**இந்தியாவிலோ** கைராட்டினமும், கோவில் பிரவேசமும் தான் தாண்டவமாடுகின்றது. இதைத்தான் தேசியமாகவும், சுயராஜ்யமாகவும், குடி அரசாகவும், புரட்சியாகவும் பாமர மக்கள் கருதும்படி காந்தியார் மூலம் பிரசாரம் நடைபெற மில் முதலாளிகளும், கோடீஸ்வரர்களும் பண உதவி செய்து வருகிறார்கள். இதற்கே அடிபிடி சண்டையும் சனாதனதர்மம், வருணாச்சிரம தர்மம் சண்டைகளும் எதிர்ப்புகளும் நடப்பதுடன் இதற்கு வேதத்தில் சாஸ்திரத்தில் ஆதாரமிருக்கின்றதா இல்லையா என்கின்ற விவகார சபைகளும் நடந்த வண்ணமாயிருக்கின்றன.



RangaRakes tamilnavarasam.com

சட்டசபை வீரர்களின் தீவிரச் செயல்களோ "பிச்சை கொடுப்பவனை தடுக்கக்கூடாது" என்று சொல்லத் தக்க விஷயங்களையே தீர்மானங்களாக கொண்டு போவதாய் இருக்கின்றன.

அதாவது யாராவது, எவரையாவது கோவிலுக்குப் போக அனுமதி கொடுத்தால் அதை சர்க்கார் தடுக்கப்படாது என்பதாகும்.

இதற்கே பொது மக்களை இருகூட்டமாய் கிளப்பி விட்டு இந்த சட்டத்திற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று ஒரு கூட்டமும், அனுமதி கொடுக்கக்கூடாதென்று ஒரு கூட்டமும், காதடைபடும்படி கூப்பாடு போடச் செய்யப்பட்டு வருகிறது. இரண்டுக்கும் தேசீயவாதிகளும் சுயராஜ்யவாதி களுமே காரணமாகும் (தப்பித் தவரி வைசிராய் பிரபு இந்த தீர்மானம் சட்ட சபைக்கு வருவதற்கு உத்திரவு கொடுக்க மறுத்துவிட்டால் அந்தச் சாக்கி லேயே யெல்லா பொருப்புகளையும் சர்க்கார் தலையில் போட்டு விட்டு தாங்கள் பெரிய தீண்டாமை விலக்கு வீரர்களாய் விளங்கிவிடலாம் என்கின்ற சூட்சியே இதில் விளங்குகின்றது) மற்ற சோம்பேரிகள் விளம்பரக்காரர்கள் இதில் எதிலாவது ஒன்றில் சேர்ந்து தங்கள் பெயர் விளம்பரமானால் போதும் என்று கருதிக்கொண்டிருப்பதே பெரிய தேச சேவையாய் இருந்து வரு கின்றது. எப்படியானாலும் இதன் கடைசி முடிவானது பணக்காரனும், படித்த சோம்பேரிக் கூட்டமான உத்தியோகஸ்தனும், இவர்களுக்கு நடுத் தூண் களாயிருக்கும் மதமும், கோவிலும், சாஸ்திரங்களும் என்றும் சிரஞ்சீவியாய் இருக்கப்போகிறது. "தேச பக்தர்கள், தேசிய வாதிகள்" முதலியவர்கள் கதி, ' வெரும் நாய் சந்தைக்குப் போய் வெள்ளிக்கோலில் அடிபட்டது' என்பது போல் நாளைக்கு ஏதாவது இந்தப் பணக்காரனையும், உத்தியோகஸ் தனையும் திட்டி காலம் கடத்துவதற்கு ஏதாவது ஒரு இயக்கமோ வழியோ கிடைக்காதா என்று தேடவேண்டியதைத் தவிர வேறு ஒரு வேலையும் கிடைக்கப் போவதில்லை. இத்தனை சந்தடியில் 'கல்யாணசந்தடியில் தாலிகட்ட மறந்தது' போல் பிரிட்டிஷ் முதலாளிகள் சங்கதி மறந்து போய் அவர்கள் என்றும் பதினாராக வாழப்போகின்றார்கள் என்பதில் யாரும் கடுகளவு சந்தேகமும் படவேண்டியதில்லை.

**குடி அரசு – தலையங்கம் – 15.01.1933**



# வருந்துகிறோம்

## ராவ்பகதூர் அப்பாசாமி முதலியார் மரணம்

9-1-33 இரவு செங்கற்பட்டு பிரபல வியாபாரியும், ஜமீன்தாரும், நிலச்சுவான்தாருமான தோழர் ராவ்பகதூர் அப்பாசாமி முதலியார் அவர்கள் சென்னையில் உயிர் துரந்தார் என்ற சேதியைக் கேட்டு மிக வருந்துகிறோம். இவர் செங்கற்பட்டில் நடந்த முதலாவது சுயமரியாதை மகாநாட்டிற்கு மூல புருஷராயிருந்து நடத்தினவர். சீர்திருத்தத் துறையில் வெகு தூரம் முற்போக்கு டையவர். ஏழைகளிடத்தில் மிகுதியும் அன்பும் இரக்கமும் உடையவர். இவர் இறந்தது அந்த ஜில்லாவாசிகளுக்கு ஒரு பெருங்குறைவேயாகும்.

**குடி அரசு – இரங்கல் செய்தி – 15.01.1933**



RangaRakes tamilnavarasam.com

# நேற்றும், இன்றும்

**– சுமைதாங்கி**

ஓ தேசியவாதிகளே! தேசியப் பத்திராதிபர்களே!!

சுயமரியாதைப் பிரசாரங்கள் நடக்கின்ற பக்கங்களில் கலகங்கள் நடப்பதாகவும், அடிதடிகள் நடப்பதாகவும் கற்பனைகள் செய்தும் இழிபிறப்பு ரிபோர்ட்டர்களின் நிரூபங்களை நம்பியும் நடவாத சங்கதிகளை பத்திரிகை களில் போட்டு "நேற்று" மகிழ்ந்தீர்கள்.

சுயமரியாதை இயக்கம் செத்தது என்று பூனை கண்ணை மூடிக் கொண்டு பால் குடித்தால் உலகத்தார் கண்களும் மூடப்பட்டிருக்கும் என்று கருதிய திருட்டுப் பூனைகள் போல் நடித்தீர்கள். முடிவில் என்ன நடந்தது? என்று பார்த்திருப்பீர்கள்.

அதாவது உங்கள் வயிர் வளர்ப்புக்கு ஆதாரமாயிருக்கும் காங்கிரசின் யோக்கியதை – ஹரிஜன சேவையின் யோக்கியதை "இன்று" எப்படி இருக் கின்றது? எத்தனை பக்கம் கலகம்? எத்தனை பக்கம் தடியடி? எத்தனை பக்கம் கல்லடி? எத்தனை பக்கம் ரத்தக்காயம்? எத்தனை பக்கம் மண்டை உடை? எத்தனை பக்கம் விரட்டி அடித்தல்? எத்தனை பக்கம் காங்கிரஸ்காரரே கூட்டத்தை கலைத்துக் கொண்டு வாலை இடுக்கிக் கொண்டு ஓட்டம் பிடித்தல்? எத்தனை பக்கம் புரட்டு? இவைகள் தேசீயப்பத்திரிகைகளிலி லேயே சேர்ந்த நிரூபர்கள் பேரால் காணப்படுகின்றதே, இவை பொய்யா? இதைச் செய்தவர்கள் எல்லாம் புத்திசாலிகளா? அல்லது மடையர்களா? மேன் மக்களா? அல்லது கீழ்மக்களா? தேசீயவாதிகளா? தேசத்துரோகிகளா? அல்லது இதைச்செய்தவர்கள் எல்லாம் வீரர்களா? அல்லது காங்கிரஸ் காரர்களுக்குப் புத்தி கற்பித்தவர்களா? யோசித்துப்பாருங்கள் தட்டிப்பேச ஆளில்லாத காரணத்தால்தானே சண்டப்பிரசண்டர்களாய் விளங்குகிறீர்கள்? "அளந்த வள்ளம் அட்டாலியில் இருக்கும்" என்பதை அறியாமல் தானே போக்கிரித்தனமாய் எல்லாம் எழுதிவிட்டீர்கள்.



மற்றும் செருப்படி ஜோட்டடி என்றெல்லாம்... ... ... தனமாய் எழுதி மகிழ்ந்தீர்களே! இப்பொழுது உங்களுக்கு உங்கள் சங்கதியே பட்டதெல்லாம் போதும் என்று ஆய்விட்டதே! ! இனியாவது புத்தியாய், யோக்கியமாய் பிழையுங்கள் என்று ஞாபக மூட்டவே இதை எழுதினேன். ஆத்திரப்படுவதில் பயனில்லை. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும் என்பது உண்மை அனுபவமாய் விடவில்லையா? மற்றும் தோழர் காந்திக்கு கொடும்பாவி சட்டி திருப்பூரில் இழுக்கப்படவில்லையா? தோழர் காந்திக்கு கருப்புப்புஷ்பம் கராச்சியில் கொடுக்கவில்லையா? தோழர் காந்திக்கு கருப்புக் கொடி பம்பாயில் பிடிக்கவில்லையா? தோழர் காந்தி மீட்டிங்குகளில் தமிழ் நாட்டில் குழப்பம் நடக்கவில்லையா? காந்தி ஒழிய! காந்தீயம் ஒழிய!! காங்கிரசு ஒழிய!!! என்று கராய்ச்சியில் ஆயிரக்கணக்கான பேர் கூப்பாடு போடவில்லையா? "கடவுள் சித்தமில்லாமல் காந்தியும் காங்கிரசும் ஒழியாது" என்று தோழர் காந்தி உலகத்தாருக்கு தைரியம் சொல்லவில்லையா? சுயமரியாதைக் கூட்டத் தில் காலித்தனம் செய்தது காங்கிரஸ்காரர்கள் என்பதை காங்கிரஸ்காரர்களே மறுக்கமுடியாது. ஆனால் காங்கிரஸ் கூட்டத்தில் "காலித்தனங்கள்" செய்ய மேல் கண்ட நடவடிக்கைகளில் ஒரு சிறிதும் சுயமரியாதைக்காரர்களால் நடத்தப்பட்டது அல்ல என்பதை நீங்களே ஒப்புக்கொள்ளுவீர்கள்.

ஆகவே, ஜனங்களுக்கு காலித்தனங்கள் செய்ய இன்று உபாத்தியாயர் களாய் இருப்பது எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், யாருடைய சிஷ்யர்கள் என்று சொல்லிக்கொண்டு திரிபவர்கள் என்பதை இப்போதாவது உலகம் உணரட்டும்.

**குடி அரசு – கட்டுரை – 15.01.1933)**



RangaRakes tamilnavarasam.com

## மதிப்புரை

"இளைஞர் பாடல்கள்" என்ற தமிழ் நூலொன்று வரப்பெற்றோம். அஃது கோவைத் தமிழ்ச்சங்க அமைச்சரும், பொதுநல உழைப்பாளரும், தமிழ் மொழி வல்லுனருமான தோழர். ராவ்சாஹிப் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் பி.ஏ.பி.எல். அவர்களால் இயற்றப் பெற்று கோவைத் தமிழ்ச் சங்கத் தாரால் வெளியிடப்பட்டது. இந்நூல் எளிய நடையில் புதியமுறையில் இளைஞர்களுக்கு உணர்வு ஊட்டும் நோக்குடன் கடவுள், ஞாயிறு ஒழுக்கம், நிலா, மறை, யாறு, கல்விளையாட்டு, ஆகாயவிமானத்தில் முதல் அநுபவம், நாட்டுப்பற்று அல்லது தாய்நாடு முதலிய பல்வேறு பொருள்களைப் பற்றியும் மலையும் அணியும். ஹாதிம்தாய் என்னும் சிறுகதைகளை விளக்கியும் செய்யுள் ரூபமாக சாதாரண மக்களும் அறியும் வண்ணம், எழுதப்பட் டுள்ளது. கடவுளுணர்ச்சியையும், சோதிடப்பெருமையையும், இயற்கைக் காட்சியின் தன்மையையும், தேசீய உணர்ச்சியையும் கார்த்திகைத் திருநாள் முதலிய பல விழாக்களின் அருமையையும் பற்றிய நம்பிக்கை உடையோருக் கும் தமிழின் பெருமையையும் கவிச் சுவையை அறிய விரும்புபவர்களுக் கும் இந்நூல் மகிழ்ச்சியைத் தரத்தக்கதாகும் என்பதில் ஐயமில்லை. ஆனால் தமிழ் பெருமையையும் கவி இன்பக்கலையையும் மக்களுக்கு ஊட்ட வேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீது இயற்றப்படும் நூல்கள் இம்மாதிரி ஆத்திகப் பிரசாரத்துக்கும் பயன்படும்படியாய் இல்லாமல் பகுத்தறிவு பிரசாரத்திற்கே பயன்படும்படி இருந்தால் மாத்திரமே அவை மக்கள் சமூகத் திற்கு நன்மை பயக்க, நீடூழி வாழ இடமுண்டு. அங்கனமில்லாமல் இனியும் தேரையும், திருவிழாவையும், நோன்பையும், விரதத்தையும் கொண்ட புராணக்கதைகள் தமிழ் பெருமை வேஷத்தில் வந்தாலும், கவி யின்பக்கலை வேஷத்தில் வந்தாலும் அவற்றிற்கெல்லாம் உலகில் இனி இடம் கிடைப்பது என்பது மிக அருமையே யாகும்.

எனினும் தோழர் இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்களால் இயற்றப் பட்ட இந்நூல் 100 க்கு 75 பாகம் யாவரும் பாராட்டும் வண்ணமே அமையப் பட்டிருக்கிறது கண்டு மகிழ்ச்சியடைகிறோம். வேண்டுவோர் கோவை தமிழ் சங்கத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**குடி அரசு – நூல் மதிப்புரை – 15.01.1993**



## எலெக்ஷன் கூத்து

**– சித்திரபுத்தன்**

தமிழ் நாட்டில் ஸ்தல ஸ்தாபனங்களில் புதிய சீர்திருத்தத்தின்படி என்று நடைபெறும் எலக்ஷன்கள் (தேர்தல்) சம்பந்தப்பட்ட காரியங்களில் எல்லாம் ஏதாவது குழப்பமும், சண்டையும், கலகமும், அடிதடியும், கொலைகளுமான காரியங்கள் அவ்வளவுமோ அல்லது ஏதாவது ஒன்றோ நடந்த வண்ண மாகவே இருக்கிறது. அது மாத்திரமல்லாமல் தேர்தல் அதிகாரிகள் நடவடிக் கைகளும் மிக மிக மோசமாகவே இருக்கின்றன.

இனிமேல் தேர்தல்கள்–எலக்ஷன்கள் ஏற்பட்டவுடன் அதன் அபேக்ஷ கர்களை காவலில் வைத்து விட்டு எலக்ஷன்கள் நடத்தப்பட்டால் ஒழிய கலக மும், கொலையும் நடக்காமல் இருக்குமா என்கின்ற விஷயம் சந்தேகமாகவே இருந்து வருகின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நிலையோ மிக மிக மோசமாயிருக்கின்றது. பெரிய பொறுப்புள்ள அதிகாரிகள் முதல் சாதாரண போலிங் ஆபீஸர்கள் என்பவர்கள் வரை மோசமாகவே நடந்துகொள்ளு கின்றார்கள்.

ஒரு சிறு கதை சொல்லுகின்றோம். ஒரே ஒரு ஊரில் ஒரு எலக்ஷன் நடந்தது அதற்கு நின்ற இரண்டு அபேட்சகர்களும் "எலக்ஷன் அதிகாரி யிடம் சென்று எலக்ஷன் எப்படி இருந்தாலும் தங்களுக்கே அனுகூலமாய் இருக்க வேண்டுமென்று தனித்தனியே கேட்டுக் கொண்டு ஆளுக்கு 100 ரூ. வீதம் இரண்டுபேரும் "இரகசியமாய்" கொடுத்து விட்டுவந்து விட்டார்கள். அதற்கு ஏற்றாப் போல் எலக்ஷனிலும் போலிங் ஆபீசர்களது "தவறுதல்" களால் சில தப்பிதங்கள் நடந்தது. இதை ஆதாரமாய் வைத்துக் கொண்டு (தான் தோல்வி அடைந்து விடக் கூடும் என்று கருதிய) ஒரு அபேக்ஷகர் முடிவு சொல்லும் (டிக்ளேர் செய்யும்) அதிகாரிக்கு மறுபடியும் கொஞ்சம் பணம் கொடுத்து தன்னையே டிக்ளேர் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதுகேட்ட மற்ற அபேட்சகரும் ஓடி மறுபடியும் கொஞ்சம் பணம் கொடுத்தார். இரண்டையும் வாங்கிக் கொண்டார். அதிகாரி யோசித்தார் யாருக்கு அனு கூலம் செய்தால் தனக்கு நல்லது என்று பார்த்தார். மற்றும் பல சங்கதிகளைப் பார்த்து ஒரு கட்சிக்கு அனுகூலமாக தீர்ப்பு கூறி கொஞ்ச ஓட்டு பெற்ற "கவைனையே" டிக்ளேர் செய்தார். வெற்றிபெற்றதாக முடிவு கூறினார்.



RangaRakes tamilnavarasam.com

அதற்கு ஏதோ காரணமும் குறிப்பிட்டு விட்டார். ஆகவே மறுபடியும் பணம் கொடுத்த எதிர் அபேட்சகர் தைரியமாய் அதிகாரி வீட்டுக்குப் போய் "இது தானா யோக்கியதை" என்றார். அதிகாரி ரகசியமாய் வீட்டுக்குள் அழைத்து வாங்கின பணத்தை கையில் கொடுத்து "சந்தர்ப்பம் வேறு விதமாய் போய் விட்டதால் இப்படிச் செய்ய நேர்ந்தது. ஆனால் வருத்தப்படாதே கோர்ட்டுக் குப் போனால் உனக்கு தான் அனுகூலமாகும். மன்னித்துக் கொள் என்று கேட்டுக் கொண்டார். அபேட்சகனோ ஓட்டர் வீட்டுக்கு அலைந்தது போறாமல் எலக்ஷன் ஆபிஸ் வீட்டுக்கு அலைந்தது போறாமல் இனி கோர்ட்டுக்கும், வக்கீல் வீட்டுக்கும் நீதிபதி வீட்டுக்கும் அலையும்படியா செய்கிறாய்? என்று ஏதோ தனக்கு மிக புத்தி வந்துவிட்டது போல் பேசியது மல்லாமல் அப்படித் தான் கோர்ட்டில் அனுகூலமானால் எனக்கு என்ன பிரயோஜனம்? இப்பொழுது நீ அனுகூலம் செய்திருந்தால் எனக்கு சமீபத்தில் நடக்கும் தலைவர் தேர்தலில் 1000மோ, 2000மோ கிடைத்திருக்கும். அதெல்லாம் பாழாய் போனது மல்லாமல் இன்னமும் 500ரோ 1000மோ செலவு அல்லவா செய்ய வேண்டி இருக்கிறது.

அதற்கும் இனி அப்பீல் செய்தால் அப்புறம் வேறே செலவு செய்ய வேண்டி இருக்கிறது. இவ்வளவும் செய்து அனுகூலம் ஆகாமல் போய் விட்டால் என்ன பண்ணுவது? அல்லது நமக்கு அனுகூலம் ஆச்சுதென்றே வைத்துக் கொண்டாலும் மந்திகளோடு மந்தியாய் நாற்காலியில் சிறிது நேரம் உட்கார்ந்துவிட்டு வருவதைவிட வேறு என்ன செய்ய இடமுண்டாகும்? ஆதலால் இனி மேல் இந்த கிரகத்தைப்பற்றி நினைப்பதே இல்லை. நீ மாத்திரம் நல்லா இருந்தால் சரி, கடவுள் தான் உன்னைக் கேட்கவேண்டும். என்று சொல்லிக்கொண்டு வெளியில் வந்து விட்டார். அதிகாரி உடனே கதவை மூடித் தாழ்போட்டுக் கொண்டார். என்பதாக ஒரு கதை தேசீய மதத் தைச் சேர்ந்த சுயராஜ்ய புராணத்தில் எலக்ஷன் அத்தியாயத்தில் காணப் பட்டது.

இது நிற்க இன்னும் சிலர் தங்கள் எலக்ஷனில் எவ்வளவு பணம் செலவு செய்தாலும், அதிகாரிகளுக்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும், சிபார்சு பிடித்தாலும் ஓட்டர்களுக்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும், வெற்றிபெற முடியாது என்று கருதினால் எதிர் அபேட்சகரை அடிப்பதாக, உதைப்பதாக மிரட்டுவதும், அடிக்க ஏற்பாடு செய்வதும், கொலை செய்யவே ஏற்பாடு செய்வதுமான காரியங்கள் நடைபெறுகின்றன. இதற்கும் இரண் டொரு கதைகள் தேசீய புராணத்தில் இருக்கின்றன.

ஆனால் அவற்றை சிறிது நாள் பொறுத்து வெளியிடுவேன். இந்த மாதிரி அதிகாரிகளை பணம் கொடுத்து "தொந்திவு" செய்வதும் அபேட்சகர் களை அடிதடி, கலகம், வசவு, கொலை முதலியவைகள் செய்து தொந்திரவு செய்வதுமான காரியங்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் உள்ள இரண்டு முக்கிய மான குற்றங்களினாலேயேதான் நடைபெறுகின்றன. அவை என்னவெனில்,



1 ஸ்தல ஸ்தாபன தலைவர்கள் வசம் கண்ட்ராக்டுகள் கொடுக்கும் அதிகாரம் இருப்பது.

2 ஸ்தல ஸ்தாபனத்திற்கு உத்தியோகஸ்தர்கள் – சிப்பந்திகள் நியமிக்கும் அதிகாரம் இருப்பது.

ஆகிய இந்த இரண்டு காரியங்களையும், ஸ்தல ஸ்தாபனங்களின் தலைவர்களிடம் இருந்து எடுத்து விட்டால் அதாவது கண்ட்ராக்ட் கொடுப்ப தும், சிப்பந்திகளை நியமிப்பதும் இவர்களிடம் வேலை வாங்குவதுமான இரண்டு காரியங்களையும் பிரசிடெண்ட் – சேர்மென் என்பவர்களிடம் இருந்து எடுத்துவிட்டால் கண்டிப்பாய் மேலே குறிப்பிட்ட மாதிரியான குற்றங் கள் நடக்கவே நடக்காது. அன்றியும் தலைவர் ஸ்தானங்களுக்கு வருகின்றவர் களும், யோக்கியமாய் இருக்க முடியும்.

அப்படிக்கில்லாவிட்டால் எவ்வளவு யோக்கியமும், நாணயமுமான தலைவர்கள் தலைமை ஸ்தாபனத்துக்கு வந்தாலும் தங்களைத் தலைவர் களாக்குவதற்கு உதவி செய்ததாகச் சொல்லிக்கொள்ளப்படும்–கருதப்படும் நபர்களுக்கு எல்லாம் உதவி செய்து தீர வேண்டியதாய் அவரவர்கள் "மனசாட்சி" வற்புறுபுறுத்தியேயிருக்கிறது.

இதை உத்தேசித்தே அனேகம் பேர் ஒவ்வொரு கட்சியில் சேர்ந்து கொண்டு "மகா அக்கரை" யுடன் பாடுபடவேண்டியதாய் இருக்கிறது, (குறைந்த அளவு) பாடுபட்டதாகவாவது காட்டிக் கொள்ள வேண்டி இருக் கிறது. சிலர் இருவரிடமும் யோக்கியர்போல்–வெகு அக்கரைக்காரர்கள் போல் நடந்துகொள்ளவோ அல்லது குறைந்த அளவு கோள் சொல்லியாவது நம்பிக்கைப் பாத்திரர்களாய் நடந்துகொண்டதாகக் காட்டிக் கொள்ளவாவது வேண்டியதாய் இருக்கின்றது. ஆகவே மத ஸ்தாபன இலாக்கா புதிய மந்திரி யாகிய தோழர். பொப்பிலி ராஜா சாயபாவது இதைக்கவனித்து தனது காலத் தில் இதே காரியத்தை சாதித்துவிட்டுப்போனால் நாட்டுக்கு ஒரு வழியா வது நன்மை செய்தவர் என்று சொல்லிக் கொள்ள அருகதை உடையவராவார். டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஸ்தல ஸ்தாபன இலாக்காவிலும் மற்றும் சிலதிலும் செய்த பல நன்மைகள் அவர் இன்னமும் எந்தக்கட்சியில் சேர்ந்து மக்களை எவ்வளவு ஏமாற்றினாலும், மறக்கக்கூடியதல்ல. அது போலவே தோழர் முத்தையா முதலியார் அவர்களும் உத்தியோக வினியோக விஷயத் தில் செய்த காரியம் என்றும் மறக்கக்கூடியதல்ல. அதுபோல் ஏதாவது ஒருகாரியம் பொப்பிலி ராஜாவும் செய்தால் நன்மையாய் இருக்கும்.

**குடி அரசு – கட்டுரை – 22.1.1933**



RangaRakes tamilnavarasam.com

# எது நல்ல ஜோடி ?

வருணாச்சிரம தரும தோழர் ராமச்சந்திரய்யர் “ஹரிஜனங்கள்” என்பவர்களை ஹிந்துக்கள் அல்ல என்று சொன்ன விஷயத்தைச் சுயமரியாதை இயக்கத்தோர் ராமசாமியும் ஆமோதித்து விட்டாராகையால் ராமச்சந்திர அய்யரும் ராமசாமியும் ‘நல்ல ஜோடி’ என்று சுதந்திரச் சங்கு என்னும் பத்திரிகை எழுதி இருக்கிறது.

என்றாலும் அதே பத்திரிகையின் வேறொரு இடத்தில் அந்த ஜோடிக்கு உவமை சொன்னதில் உண்மையைச் சொல்லி விட்டது. எப்படி எனில் இரண்டும் சரியான ஜோடி அல்ல வென்றும் சிறிது கூட பொருந்தாத ஜோடி என்றும் மக்கள் நன்றாய் உணரும்படி தன் மனதிலுள்ள உண்மையை தன்னை அறியாமலே வெளிப்படுத்தி விட்டது.

அதாவது, “இருவரும் சேர்ந்த நல்ல ஜோடி என்பது காராம் பசுவும் காளை எருமையும் ஒரு வண்டியில் கட்டப்பட்டு ஓட்டப்படுவது போலிருக்கிறது” என்று உவமை காட்டி எழுதி இருக்கிறது. ஆகவே காராம் பசுவும் காளை எருமையும் சரியான ஜோடி என்று யாராவது ஒப்புக் கொள்ளுவார்களா? ஒரு நாளும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். சுதந்திரச் சங்கு ஆசிரியரும் கூட தான் ஒரு குறிப்பிட்ட ஜாதியார் என்கின்ற முறையிலிருந்து விலகி தனியே நடு நிலையில் நீதிபதி என்கின்ற முறையில் இருந்து காராம் பசுவையும் காளை எருமையையும் ஒன்றாய் நிறுத்திப் பார்ப்பாரானால் இரண்டும் சரியான ஜோடி என்று ஒரு நாளும் தீர்ப்பெழுதமாட்டார். ஆனால் இப்படி எழுதுவதற்கு உள்ள காரணங்களை வெளிப்படுத்திக்கொண்டிருக்கும் வேலையைப் பிரதானமாகக் கருத இதுசமயம் நமக்கு நேரமில்லை, இங்கு இடமும் இல்லை.

## நாம் சேர்க்கும் ஜோடி

ஆனால் நாம் இப்போது ஒரு ஜோடியைச் சேர்த்து வெளியில் காட்டுகிறோம். இது சரியான ஜோடியா? அல்லவா என்று நடுநிலைக் கண்களைக் கொண்டு பார்த்து முடிவுகாணத் தோழர்களை வேண்டிக்கொள்ளுகின்றோம்.



அதாவது:- “சுதந்திரச் சங்கு பத்திராதிபரின் தலைவரான “மகாத்மா” காந்தியையும் தோழர் வருணாச்சிரம ராமச்சந்திரய்யரின் தலைவரான “லோககுரு” சங்கராச்சாரியாரையும் ஒரு ஜோடியாகச் சேர்க்கிறோம். இரண்டையும் சரிபார்த்து எது நல்ல ஜோடி அதாவது சுதந்திரச்சங்கு மூலத்தில் சேர்த்துவிட்டு வியாக்கியானத்தில் பிரித்து விட்ட ஜோடி நல்ல சரியான ஜோடியா? அல்லது “குடி அரசு” சேர்த்த ஜோடி நல்ல சரியான ஜோடியா? என்பதை நல்ல நடுநிலைமைக் கண்ணாடிகொண்டு பார்த்து முடிவு செய்யுங்கள். ஒரு சமயம் “குடி அரசின்“ கண் காமாலைக் கண்ணாயிருந்தாலும் இருக்கலாம். அது பார்க்கும் கண்ணாடி வர்ணக் (துவேஷ) கண்ணாடியாய் இருந்தாலும் இருக்கலாம். ஆதலால் வாசகர்களையே ஆராய்ந்து தீர்ப்புச் சொல்லும்படி விரும்புகிறோம்.

1. சங்கராச்சாரி இந்துமதத் தலைவர், இந்துமத அதிகாரி, இந்து மதத்தைக் காப்பவர். காந்தியும் தானே இந்துமதமாய் இருப்பவர். இந்து மதத்தைக் காக்கவே சுயராஜ்யம் கேட்பதாய்ச் சொல்லுகிறவர்.

2. சங்கராச்சாரி இந்துமத வேதசாஸ்திர புராண இதிகாசங்களை ஒப்புக்கொண்டு பிரசாரம் செய்பவர். காந்தியும் இந்துமத வேதசாஸ்திர புராண இதிகாசம் ஆகியவைகளை ஒப்புக்கொண்டு வியாக்கியானம் எழுதி பிரசாரம் செய்பவர்.

3. சங்கராச்சாரி வருணாச்சிரமத்தையும் “பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன்” என்கின்ற 4- வருணங்கள் பிறவியிலேயே உண்டு என்பவர். காந்தியும், வருணாச்சிரமமும் மேல்கண்ட நான்கு வருணப் பிறவியிலேயே உண்டு என்பவர்.

4. சங்கராச்சாரியும், சுதர்மம் அதாவது அவனவன் வருணத் திற்கேற்ற தொழிலையே அவனவன் செய்ய வேண்டும் என்று உபதேசிப்பவர். காந்தியும் அவனவன் வருணதர்மத் தொழிலையே செய்ய வேண்டும் என்று சொல்லுபவர்.

5. சங்கராச்சாரியும் ஜாதிப் பிரிவை ஒப்புக்கொள்வதுடன் ஒரு ஜாதிக்கு மற்றொரு ஜாதி சமபந்தி போஜனமோ, கலப்புமணமோ கூடாது என்று சொல்லுபவர். காந்தியும் ஜாதிப் பிரிவை ஒப்புக் கொண்டும் கலப்பு மணம் சமபந்தி போஜனம் ஆகியவைகளை ஒப்புக்கொள்ளாமலும் இருக்கிறவர். சங்கராச்சாரியும் பிறவியில் ஜாதி உண்டு என்கின்றவர். காந்தியும் பிறவியில் ஜாதி உண்டு என்கிறவர்.

6. சங்கராச்சாரியும் முன்பின் ஜன்மம், தலைவிதி, கர்மம் என்பவைகளை ஒப்புக்கொள்ளுகிறவர். காந்தியும் முன்பின் ஜன்மம், கர்மம், தலைவிதி ஆகியவைகளை ஒப்புக்கொள்ளுகிறவர்.



RangaRakes tamilnavarasam.com

7. சங்கராச்சாரி மனுதர்மம் பராசர தர்மம் ஆகியவைகளை ஒப்புக் கொள்ளுபவர். காந்தியும் மனுதர்மம் பராசர தர்மம் ஆகியவைகளை ஒப்புக்கொள்ளுபவர்.

8. சங்கராச்சாரி தன்னை லோக குரு என்று அழைப்பதை ஒப்புக் கொள்ளுபவர். காந்தியும் தன்னை மகாத்மா என்று அழைப்பதை ஒப்புக்கொள்ளுபவர்.

9. சங்கராச்சாரி பரமசிவனுடைய அம்சமாக கருதப்பட பார்ப்பனர் களால் புராணக் கதைகள் எழுதி பிரசாரம் செய்யப்படுபவர். காந்தியும் மகாவிஷ்ணு அவதாரமாய் கருதப்பட பிராமணக் கவிகளால் எழுதி யும் சுதந்திரச்சங்கு முதலிய அனேக பார்ப்பனர்களால் பிரசாரமும் செய்யப்படுபவர்.

10. சங்கராச்சாரியும் இந்தமாதிரி படத்தையும், பிரசாரத்தையும் வெட்கப்படாமல் பொறுத்துக் கொள்ளுகிறவர். காந்தியும் வெட்கப் படாமல் இப்படிப்பட்ட பிரசாரங்கள் நடைபெறுவதை ஆக்ஷேபிக்கா மல் பார்த்துக் கொண்டிருப்பவர்.

11. சங்கராச்சாரி தீண்டாதாருக்குக் கோவில் பிரவேசம் கொடுத்தால் இந்துமதமே போய்விடும் என்பவர். காந்தியும் தீண்டாதாருக்குத் தனிப்பிரதிநிதித்துவம் கொடுத்தால் இந்துமதமே போய்விடும் என்பவர்.

12, சங்கராச்சாரி தீண்டாதார் கோவிலுக்குள் போனால் கோவில் தீட்டுப்பட்டுவிடும் என்கிறார்.

காந்தி, புண்ணியார்ச்சனை (சம்ரோக்ஷணை) செய்து தீட்டைப் போக்கிக் கொள்ளலாம் என்கிறார்.

13. சங்கராச்சாரி மனிதனுக்கு தீண்டாமை உண்டு என்கிறார். காந்தியும் மனிதனுக்கு தீண்டாமை உண்டு என்கிறார்.

14. சங்கராச்சாரி மாடு தின்பவர்கள் - சண்டாளர்கள், கோவிலுக்குள் போக உரிமை இல்லாத ஜாதி என்கிறார். காந்தியும் மாடு தின்பவர் கீழ்ஜாதி கோவிலுக்குள் அனுமதிக்கக் கூடாத ஜாதி என்கிறார்.

15. சங்கராச்சாரி ராமராஜ்யம் வேண்டுமென்கிறார். காந்தியும் ராம ராஜ்யம் ஸ்தாபிப்பதற்காகவே உயிர் வாழ்கிறேன் என்கிறார்.

16. சங்கராச்சாரி சுயராஜ்யத்தை விட மதம் பெரியது என்கிறார். காந்தி யும் மதத்திற்காகத்தான் சுயராஜ்யம் கேட்கிறேன் என்கிறார்.



17. சங்கராச்சாரி பொது உடைமைக் கொள்கை கூடாது. அது கடவுள் ஆக்கினைக்கு விரோதம் என்கிறார்.

காந்தியும் பொது உடைமைக் கொள்கை கூடாது. அதை ஒழிக்கத் தான் உப்புசத்தியாக்கிரகம் ஆரம்பித்து மக்கள் கவனத்தை அதில் திருப்பிவிட்டேன் என்கிறார்.

18. சங்கராச்சாரிக்கு மடம் உண்டு காந்திக்கும் மடம் (ஆச்சிரமம்) உண்டு.

19. சங்கராச்சாரிக்கும் அடிமைகள் போன்ற பக்தர்கள் உண்டு. காந்திக் கும் அடிமைகள் போன்ற பக்தர்கள் உண்டு.

20. சங்கராச்சாரிக்கும் முதலாளிமார்கள் ஊரார் உழைப்பில் வாழ்கின்ற வர்கள் பணம்கொடுத்து பிரசாரம் செய்விக்கிறார்கள்.

காந்திக்கும் முதலாளிமார்கள் ஊரார் உழைப்பில் வாழுகிறவர்கள் பணம்கொடுத்து பிரசாரம் செய்விக்கிறார்கள்.

21. சங்கராச்சாரியும் எதற்கும் பகவான் கட்டளை இடுகிறதாகச் சொல்லுகிறார். காந்தியும் எதற்கும் பகவான் கட்டளையிட்டதாகச் சொல்லுகிறார்.

22. சங்கராச்சாரி பூஜை ஜபம் செய்கிறார். காந்தியும் பிரார்த்தனை பஜனை செய்கிறார்.

23. சங்கராச்சாரிக்கு டி. ஆர், ராமச்சந்திரய்யர் போன்ற வருணாச் சிரமிகள் உதவியாளர்களாக இருக்கிறார்கள். காந்திக்கும் மாளவியா போன்ற வருணாச்சிரமிகள் உதவியாளர்களாக இருக்கிறார்கள்.

24. சங்கராச்சாரிக்கு காவி உடுத்தியிருந்தாலும் சென்றவிடமெல் லாம் இந்திரபோகம். காந்திக்கும் அரைத்துணி கட்டியிருந்தாலும் சென்ற விடமெல்லாம் ராஜபோகம் நடக்கிறது.

25. சங்கராச்சாரி காலில் ஜனங்கள் விழுகின்றார்கள். காந்தி காலி லும் ஜனங்கள் விழுகின்றார்கள்.

26. சங்கராச்சாரியையும் பார்ப்பனர்கள்தான் லோககுருவாக்கி னார்கள். காந்தியையும் பார்ப்பனர்கள் தான் மகாத்மா ஏன் அவதார புருடராய் ஆக்கினார்கள்.

27. சங்கராச்சாரி விக்கிரக ஆராதனையை ஆதரித்துப் பிரச்சாரம் செய்கிறார். காந்தியும் விக்கிரக ஆராதனையை ஆதரித்து அதை நிலைத்துவைக்க உதவி செய்கிறார்.



RangaRakes tamilnavarasam.com

28. சங்கராச்சாரி பெண்களை சீதை, நளாயினி, சந்திரமதிபோல் இருக்கச் சொல்லுகிறார். காந்தியும் பெண்களை சீதை, நளாயினி, சந்திர மதிபோல் இருக்கச் சொல்லுகிறார்.

29. சங்கராச்சாரி படம் கடவுள் படம்போல் பாவிக்கப்பட்டு அதை வீடுகளில் கோவில்களில் பூஜையில் வைக்கப்பட்டிருக்கிறது. காந்தி படமும் கடவுள் படம் போல் பாவிக்கப்பட்டு அனேக வீடுகளிலும் ரதம், தேர்களிலும் கூட வைத்துப் பூஜிக்கப்படுகிறது.

ஆகவே ஒரு நல்ல சரியான ஜோடிசேர்க்க சுதந்திரச் சங்கு இனியும் என்ன என்ன விஷயங்களில் பொருத்தம் தேவை என்று கருதுகின்றது என்று தெரிந்தால் நம்மால் ஆனவரை முயற்சித்துப் பார்க்கின்றோம். முடியா விட்டால் இவ்வளவுதான் இதற்கு மேல் நல்ல ஜோடி சேர்க்க நம்மால் ஆக வில்லை என்று கண்ணியமாய் ஒப்புக்கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 22.01.1933**



# வரவேற்கின்றோம்

45 மாத காலமாய் விசாரணை நடந்துவந்த "மீரத் சதிவழக்கு" கேசு ஒரு வழியில் முடிவடைந்துவிட்டது, அதாவது 27 எதிரிகளுக்கு, 3 வருஷ முதல் ஆயுள் பரியந்தம் சிறைக்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த தண்டனையைப்பற்றி நாம் சிறிதும் கவலைப் படவில்லை. இந்த 27 பேர் மாத்திரம் அல்ல இன்னும் ஒரு 270 பேர்களும் சேர்த்து தூக்கில்போடப்பட்டி ருந்தாலும் சரி நாம் அதற்காகக் கவலைப்படப் போவதில்லை. ஏனென்றால் இந்தத் தோழர்கள் சிறையிலிருப்பதாலோ, தூக்கில் கொல்லப்படுவதாலோ அவர்களது கொள்கையாகிய பொதுவுடமைக் கொள்கை என்பது, அதாவது முதலாளிகளின் ஆதிக்க ஆட்சியை சிதைத்து, நசுக்கி சரீரத்தினால் பாடுபடுகின்ற மக்களுடைய ஆட்சிக்கு உலக அரசாங்கங்களையெல்லாம் திருத்தி அமைக்க வேண்டும் என்கின்ற கொள்கையோ, உணர்ச்சியோ, அருகிப் போய்விடும் என்கின்ற பயம் நமக்கு இல்லை. அல்லது இன்று தண்டனை அடைந்த தோழர்கள் தான் இக்கொள்கைக்கு கர்த்தாக்கள் ஆவார் கள், கர்மவீரர்கள் ஆவார்கள். ஆதலால் இவர்கள் போய்விட்டால் இந்தக் கொள்கையைக் கொண்டு செலுத்த உலகில்வேறு ஆட்கள் இல்லாமல் போய்விடுமே என்கின்ற பயமும் நமக்கு இல்லை. அல்லது இந்த தோழர்கள் ஜெயிலில் கஷ்டப்படாமலோ, அல்லது தூக்கு மேடையில் உயிர்விடாமலோ, இருப்பார்களானால் உலகத்தில் சுகமாக நெடுநாளைக்கு ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு வாழப்போகிறவர்கள் என்றாவது நாம் கருதவில்லை.

உண்மையைப் பேசப்போனால் அவர்கள் உண்மையான கர்ம வீரர்களாய் இருப்பார்களானால் வெளியில் இருப்பதைவிட சிறையில் கவலை யற்று சுகமாகவே இருக்கநேரிடும். ஏனெனில் உண்மையாக வேலை செய்து வரும் சமதர்மத் தொண்டர்களுக்கு வெளியில் இருக்கும் கவலையும், தொல்லையும், பொருப்பும் மற்றும் அவர்களுடைய வாழ்க்கையில் இருக்கும் பலவித உபத்திரவங்களும் கொஞ்சநஞ்சமல்ல.

கொள்கையில் இருக்கும் உண்மை ஊக்கமே இவ்வளவையும், சகித்துக்கொண்டு வேலை செய்யச் சொல்லுகின்றது.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் இத்தொண்டர்கள் ஜெயிலில் இருப்பதின் மூலம் அவர்கள் ஜெயிலில் வதியும் ஒவ்வொரு வினாடியும், அவர்களது கொள்கையானது அவர்களைப் போன்ற 1,10,100,1000 கணக்கான தொண்டர்களைத் தட்டி எழுப்பி ஊக்கப்படுத்திக்கொண்டே தான் இருக்கச்செய்யும். அன்றியும் தூக்கு மேடையில் உயிர்விட்டு இருப்பார்களேயானால் அவ்வுயிரின் ஞாபகம் எப் பொழுதும் உண்மை தொண்டர்களின் உள்ளம்விட்டு அகலாமல் சதா அவர் களைத்தட்டி ஓட்டிக்கொண்டேதான் இருக்கும். இன்றையத் தினம் உலகில் உள்ள முக்கிய கொள்கைகளில் பல அவை சரியாயிருந்தாலும், தப்பாய் இருந்தாலும் அக் கொள்கையைக் கைக்கொண்டவர்களின் தியாகத்தை மதித்தே கொள்கைகள் பரவவும், நிலைநிறுத்தவும் செய்கின்றது என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. ஆனால் பிற்காலத்தில் அதற்கு ஆயும் குறைவும், சக்திக்குறைவும் ஏற்படுகிறது என்பது கால தேச வேறுபாட்டாலும், அபிப்பிராய வேறுபாட்டாலும் கொள்கையின் பயனற்ற தன்மையாலுமே யொழிய வேறில்லை.

இன்று எத்தனையோ கொள்கைகள், பிரசாரம் பண்ணப் பதினாயிரக் கணக்கான ஆட்கள் இருந்தும் பிரசாரத்திற்கு பத்துலட்சக்கணக்காண ரூபாய் கள் வருமானம் இருந்தும் அவை சடங்கு முறைபோல் நடைபெருவதையும், சில மறைந்துபோய்கொண்டு வருவதையும், மறைந்தே போய்விட்டதையும் நாம் சரித்திரங்களில் பார்ப்பதோடு மாத்திரமல்லாமல் நேரிலும் பார்த்து வரு கின்றோம். ஆகவே இன்றைய உலக நிலையில் சிறப்பாக இன்னாட்டு மக்க ளின் உணர்ச்சி நிலையில் இருந்து ஒரு அறிவாளியாயிருப்பவன் சிந்தித்துப் பார்ப்பானேயானால் பொதுவுடமைக் கொள்கை என்பதை இனி இந்தமாதிரி 27 பேரை தண்டித்தோ, அல்லது 2700000 இருபத்தி ஏழு லட்சம் பேரை "சமணர்களைக் கழுவேற்றியது" போல் நடுத்தெருவில் நிறுத்தி கழுவேற்றிக் கொன்றோ செய்வதன்மூலம் அடக்கிவிடலாம் என்று நினைப்பது கொழுந்துவிட்டெறியும் பெரும் நெருப்பை நெய்யைவிட்டு அணைத்து விடலாம் என்று எண்ணுவதுபோல்தான் முடியும்! கண்டிப்பாய் அப்படித் தான் முடியும்!! கட்டாயம் அப்படியேதான் முடியும்!!!

ஏன்? எப்படி? என்கின்ற கேள்விகள் பிறக்கலாம். இன்றையத்தினம் பொதுவுடமைக் கொள்கை உணர்ச்சி என்பது பெரிதும் இந்தியாவில் ஏற்பட்ட தல்ல. ஐரோப்பிய நாடுகளில் நடைபெரும் காட்சிகளையும், அவற்றின் அனுபவங்களையும் கண்டு தோன்றிய உணர்ச்சியேயாகும். ஐரோப்பாவில் சரிபகுதிக்கு மேற்பட்ட விஸ்தீரணமுள்ள தேசம் ஆகிய ரஷியா முழுவதும் பொதுஉடைமைக் கொள்கையே தாண்டவமாடி ஆட்சிபுரிகின்றது. அதன் ஜனத்தொகை இங்கிலாந்தைப்போல் நான்கு மடங்குகொண்டது. மற்றும் ஜர்மனி தேசத்திலும் பொது உடைமைக் கொள்கை உணர்ச்சி கரைபுரண்டு ஓடுகிறது. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பிரான்சிலும், சைனாவிலும் பொது உடைமைக் கக்ஷிகள் தங்களது பிரசாரங்களை தாராளமாய் நடத்து



கின்றன. ஜப்பானில் 1932-ம் வருஷத்தில் மட்டும் 7000 பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிறைசென்றதும், இப்பொழுது 2000 பேர் சிறை யிடப்பட்டதும் ஜப்பானில் பொதுவுடமைக் கொள்கை உரம் பெற்றிருப்பதை நன்கு விளக்குகின்றது.

ஸ்பெயின் தேசத்திலோ இன்றோ, நாளையோ இதற்குள் ஒருசமயம் நடந்து இருக்குமோ என்று சொல்லும்படியாகப் பொது உடைமைக் கிளர்ச்சி யும், புரட்சியும் தாண்டவமாடுகின்றன. இவைகள் ஆங்கிலப் பத்திரிகைகளில் காணப்படும் விஷயங்களே தவிர கற்பனை என்றோ, கட்டுக் கதை என்றோ சொல்லி ஏய்த்துவிட முடியாது.

இந்தியாவிலும் இன்றும் வாலிபர்கள் உள்ளத்தை அறியும் கருவி ஒன்று இருந்து பரிசோதித்துப் பார்ப்போமேயானால் பத்து லக்ஷக்கணக்கான வாலிபர்கள் உள்ளம் முழுவதையும் கவர்ந்து அவர்களது இரத்தத்தைக் கொதிக்கச் செய்து கொண்டிருக்கும் உணர்ச்சி பொது உடைமை கொள்கை யைப் பற்றியதென்றே தான் கண்டுபிடிக்க முடியும். அல்லாமலும் கொள்ளை நோய்க்கும், தொத்து நோய்க்கும், பட்டினிக்கும், வேலையில்லாத் திண்டாட் டத்திற்கும், மூப்புக்கும், சாக்காட்டிற்கும், நெஞ்சடைப்பிற்கும், தற்செயலாய் ஏற்படும் ஆபத்துக்கும் பலியாகக் கொடுக்கப்படும்- கொடுத்துத் தீர வேண்டியதாயிருக்கும்-கொடுக்காமலே கோழிக்குஞ்சை கருடன் தூக்குவது போல் நமக்குத் தெரியாமலே போகும் படியாயிருக்கும் இந்த அற்ப உயிரை, அதாவது ஒரு மனிதனுடைய சரீரத்தில் உள்ள ரோமம் முழுவதும் எண்ணிப் பார்த்து அதில் ஒரு ரோமம் குறைந்தால் அந்த மொத்த எண்ணிக்கை எவ்வளவு விகிதம் குறைவுபடுமோ அதற்குச் சமானமான அதாவது இந்தியா வின் 35 கோடி ஜனத்தொகையில் ஒரு மனிதன் குறைந்துவிட்டால் 35 கோடி யில் எத்தனை விகிதாச்சாரம் குறையுமோ அதுபோன்ற நிலையில் உள்ள உயிர்களை இப்பேர்ப்பட்ட அதாவது 100க்கு 99 மக்கள் ஏழைகளாக, கூலி களாக, இழிவான வாழ்க்கை நடத்துபவர்களாக இருந்துகொண்டு பார்ப்பனர் களாலும், பணக்காரர்களாலும், அரசாங்கங்களினாலும் வதைக்கப்படும் பூச்சி புழுப்போன்ற மக்களின் விடுதலைக்கும், அவர்களது மான வாழ்க் கைக்கும், அவர்களது உழைப்பின் பயனை அவர்களே அனுபவித்துக் கொண்டிருப் பதற்குமான காரியத்திற்கு உயிர்விட நேர்ந்தால் எந்தப் பேதை பின் வாங்கு வான், மனவருத்தமடைவான் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

ஆகவே மீரத்வழக்கு சரியாய் விசாரணை செய்திருந்தாலும் சரி, அக்கிரமமாய் விசாரித்து இருந்தாலும் சரி, ஒரு காசு செலவில்லாமல் விசாரித்து இருந்தாலும் சரி, ஒருகோடி ரூபாய் செலவுசெய்து விசாரணை நடத்தி இருந்தாலும் சரி, மற்றும் அதன் தீர்ப்பு நியாயத் தீர்ப்பாய் இருந்தாலும் சரி, அநியாயமான தீர்ப்பாய் இருந்தாலும் சரி அவற்றில் பிரவேசித்து நேரத்தையும் யோசனையையும் பாழாக்க நாம் சிறிதும் கவலைகொள்ளாமல்



RangaRakes
tamilnavarasam.com

மீரத்து முடிவை நாம் மேளதாளத்தோடு வரவேற்பதுடன், தண்டனை அடைந்த தோழர்களை மனமார, வாயார, கையாரப் பாராட்டுகின்றோம். முக்காலும் பாராட்டுகின்றோம். இனியும் நமக்கும் நம்போன்ற வாலிபர்களுக்கும் அதாவது நம் போன்ற மான உணர்ச்சி கொண்ட வாலிபர்களுக்கும் இந்தப் பெரும் பேரு கிடைக்கப் பெறும் நிலையை அடைய முடியவில்லையே என்று நமக்காகவும் எமதருமைத் தோழர்களான வாலிபர்களுக்காகவும் வருந்தி மற்றுமொரு முறை வரவேற்கின்றோம்.

நிற்க சர்க்காரால் இப்பிரசாரங்களை அடக்குவதற்கு தங்களுக்கு ஒரு ஆதாரம்வேண்டுமே என்கின்ற கவலைகொண்டு எதிரிகள் என்பவர்கள் பலாத்காரம் செய்ய பிரசாரம் செய்தார்கள் என்று ஒரு சாக்கு கற்பிக்கப் பட்டிருக்கிறது. நம்மைப் பொருத்தவரை பலாத்காரம் என்பதை எப்போதும் வெறுத்தே வந்திருக்கின்றோம். பலாத்காரம் இல்லாமலே நமது லட்சியங்கள் நிறைவேற வேண்டும் என்றே ஆசைப்பட்டு வந்திருக்கின்றோம். ஆனால் எந்த சமயத்திலும் பலாத்காரம் கூடவே கூடாதென்றும், நமக்கு விரோதமாக ஏற்படும் பலாத்காரத்தையெல்லாம் பொறுத்துக்கொண்டே இருக்க வேண்டும் என்றும் சொல்ல நம்மால் முடியவில்லை. பாம்பை அடிக்காதீர்கள் என்று சொல்லலாமே தவிர பாம்பு கடிக்கவரும்போது தடுக்காமலோ, தட்டாமலோ இருந்து முத்தமிட்டு கடிபடுங்கள் என்று சொல்லக்கூடிய இயற்கைக்கு மீறியதான போலி அஹிம்சையை வேஷத்துக்காக உபதேசிக்க இப்போது நாம் தயாராய் இல்லை.

தவிரவும் 100க்கு 90 மக்களாய் உள்ளவர்களை வஞ்சித்து, வதைத்து, கொடுமைப்படுத்தி, அமுத்தி வைத்து கொள்ளை கொள்ளும் தன்மையை வெளியிடுவது பலாத்காரமானால் இவ்வித பலாத்காரத்தை மனிதத்தன்மை யுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் வரவேற்க வேண்டும் என்றும், இவ்வித பலாத்காரத்தில் தவராது இறங்கி வேலை செய்யவேண்டும் என்றும் தான் விண்ணப்பித்துக் கொள்ளுகின்றோம். யோக்கியமான சர்க்காருக்கு பலாத்காரம் உண்டாகாமல் இருப்பதைத் தடுக்க வேண்டும் என்கின்ற உணர்ச்சி கடுகளவாவது இருக்குமானால் இவ்விதப்பிரசாரம் தாராளமாய் நடைபெறும் விஷயத்தில் அதற்கு இடையூறாய் ஏற்படும் எவ்வித பலாத்காரச் செய்கைகளையும் தடுத்துப் பிரசார பாதைகளை செப்பனிட்டு ஒழுங்காக்கி கொடுக்க வேண்டியது பொறுப்பும் கடமையுமாகும். ஆதலால் இவ்வித போலி பலாத்காரப் பூச்சாண்டிக்கு பொதுவுடமைக் கொள்கையில் ஆர்வ முள்ள தோழர்கள் பயப்படமாட்டார்கள் என்றும் உண்மையிலேயே எந்த வழியிலும் பலாத்காரம் ஏற்படுவதை வெறுப்பார்கள் என்றுமே நம்பு கின்றோம்.

அடக்கு முறை பயன்படுமா? வெற்றிபெறுமா என்கின்ற விஷயத்தில் நாம் ஒரு சிறிதும் கவலைகொள்ளவும் இல்லை. அடக்கு முறையில் இந்த



இயக்கம் தோல்வி அடைந்து போகுமோ என்று பயப்படவும் இல்லை. இந்த அபிப்பிராயத்தை நாம் பிரத்தியட்ச ஒரு அனுபவத்தைக்கொண்டே சொல்லுகின்றோமே அல்லாமல் நமது சொந்த தைரியத்தையே ஆதாரமாய்க் கொண்டு சொல்லுவதாக யாரும் நினைக்கக் கூடாதென்றே கருதுகின்றோம். ஏனெனில் பொதுவுடமைக் கொள்கை பிரசாரம் செய்யப்படுவதை தடுக்கவோ அடக்கவோ அடக்கு முறைகளைக் கையாளும் விஷயத்தில் ரஷிய சார் சக்ரவர்த்தி அரசாங்கத்தை விட இனி உலகில் வேறு யாராலாவது அதிகமான அடக்கு முறையைக் கையாண்டு விட முடியும் என்பதாக நாம் கருதி விட முடியாது. அன்றியும் சாரை விட கொடுங்கோன்மை அடக்கு முறைக்கு முதற்பரிசு பெற இந்த உலகத்தில் வேறு எந்த அரசாங்கத்தாலும் இன்று முடியவே முடியாது என்றும் சொல்லுவோம். அந்த சார் அரசாங்கத்தால் செய்யப்பட்ட அடக்கு முறைக் கொடுமைகளில் பலவற்றின் சின்னங்களை நேரிலேயே பார்த்திருக்கிறோம். பலரின் சரீரத்தில் உயிருடன் தோல் உரிக்கப் பட்டு, அத்தோல்களை நகங்களுடன் காட்சி சாலைகளில் வைக்கப்பட்டிருக் கின்றதையும் கண்கள் குத்தப்பட்ட சின்னங்களையும் பார்க்க நேரிட்டது.

எனவே இவைகளைவிட இனி எப்படி கொடுமைப்படுத்தி மக்களை அடக்கிவிடமுடியும் என்பது நமக்கு விளங்கவில்லை. அன்றியும் அப்படிப் பட்ட அடக்கு முறை நடத்திய அரசாட்சிகள் அடைந்த பலன்களையும் காதால் கேட்டுவிட்டோம், கண்ணால் பார்த்தும் விட்டோம். அதனால் கொள்கை ஒழிந்துவிடவும் இல்லை, பிரசாரகர்கள் மறைந்துவிடவும் இல்லை. அதற்கு பதிலாக முழு வேகத்துடன் வெற்றிபெற்று ஜெகஜ்ஜோதியாய் உலகக் கண்கள் கூசும்படி விளங்குகின்றதையே பார்க்கின்றோம். அதனால் தான் வரவேற்கின்றோம் என்று மறுபடியும் சொல்லுகின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 22.01.1933**



RangaRakes tamilnavarasam.com

# ஏன் வரி குறைக்க வேண்டும்?

"விளை பொருள்களுக்கு விலை குறைந்து போனதால் வரிகளைக் குறைக்க வேண்டு" மென்று மிராசுதாரர்கள் கூக்குரல் இடுகின்றார்கள். விலை குறைந்த காரணத்தைக் கொண்டு வரியைக் குறைக்கும் படியான நிலைமை ஏற்பட்டு விட்டதா என்பதை வாசகர்கள் ஊன்றிக் கவனிக்க வேண் டும் என்று ஆசைப்படுகின்றோம். வரிவசூல் செய்வதானது விளை பொருள்களின் விலையை உத்தேசித்தா அல்லது "அரசாங்கம் நடைபெற வேண்டும்" என்கின்ற காரணத்துக்காகவா என்பதை முதலில் யோசித்துப் பார்க்க வேண்டும்.

அந்தப்படி யோசித்துப் பார்த்தால் அரசாங்கம் நடைபெறுவதற்காகத் தான் வரி வசூலிக்கப்படுகின்றது என்பது யாவருக்கும் விளங்கும். ஆகவே இது வரையில் பூமி மீதோ, வியாபாரத்தின் மீதோ மற்றும் பலவற்றின் மீதோ போடப்பட்ட வரி யெல்லாம் அரசாங்கம் நடைபெறுவதற்காகவே அரசாங்க செலவை உத்தேசித்து அதற்கு ஏற்றபடி வரி வசூல் செய்யப் பட்டு வருகின்றது.

ஆதலால் இப்போது வரியைக் குறைக்க வேண்டுமானால் அரசாங்கம் நடைபெறுவதற்கு என்று ஏற்பாடு செய்திருக்கும் செலவைக் குறைத்தால் ஒழிய வரியைக் குறைக்கமுடியாது. அப்படி இருந்தும் பல துரைகளில் அரசாங்க வருமானம் குறைந்து போய் விட்ட தென்று கருதி அரசாங்கம் நடைபெற வேண்டிய செலவை குறைப்பது என்கின்ற முறையில் சில துறை களில் செலவைக் குறைத்திருக்கிறது என்றாலும், அக்குறைவுகள் பெரிதும் கல்வி (மக்களுக்கு அவசியம் செய்து தீர வேண்டிய) இலாகாவிலேயே அதிகமாய் குறைக்கப்பட்டு விட்டது. மேலும் இரண்டொரு இலாக்காவில் வரியும் அதிகப்படுத்தியுமாய் விட்டது. அதாவது வருமானவரி ஸ்டாம்பு வரி, கோர்ட் செலவு விகிதவரி, தபால் கார்டு, கவர் முதலிய வரி மற்றும் பல வழிகளில் ஏழைகளையே பாதிக்கும் படியான துறைகளில் வரியை உயர்த்தி கொடுமை செய்தாய் விட்டது. ஆனால் வரிப் பணங்களில் 100க்கு 75 பாகத்திற்கு மேல் மாதம் 1க்கு 100, 200, 500, 1000, 2000, 4000, 5000, 10000, 20000 ரூபாய்கள் வீதம் சம்பளமாக கொள்ளை அடிக்கும் உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தில் கைவைக்க அதைக் குறைக்க அரசாங்கமும் நடுங்குகின்றது. தலைவர்களும், ஜனப்பிரதிநிதிகளும் நடுங்குகின்றார்கள். அதிகவரி! அதிகவரி!! பொருக்க முடியாத - தாங்க முடியாத வரி!!! என்று கூப்பாடு போடுகின்ற மிராசுதாரர்களும்கூட சம்பளத்தைப் பற்றி பேச நடுங்குகின்றார்கள். அது ஒன்றும் குறைந்தாகவும் தெரியவில்லை. இப்படி இருக்கையில் எதற்காக வரியை குறைப்பது என்பது தான் நமக்கு விளங்க வில்லை. இன்று நடக்கின்ற அரசாங்கம் உண்மையிலேயே பணக்காரர் களுக்கு - மிராசுதாரர்களுக்காகவே தான் நடைபெறுகின்றது. ஆனால் அரசாங்கம் நடைபெற வசூலிக்கப்படும் வரியில் பெரும்பகுதி ஏழை களிடமேதான் வரி வசூலிக்கப்படுகின்றது. ஸ்டாம்பு, கள்ளு, சாராயம், கஞ்சா, அபினி, உப்பு, வெளிநாடுகளில் இருந்துவரும் சாமான்கள் மீதும், சில்லரை தொழிலாளிகள் மீதும் வியாபாரத்தின் மீதும் மற்றும் பலவழிகளிலும் வசூலிக்கப்படும் வரியெல்லாம் 100-க்கு 99 பேர்களாய் இருக்கும் ஏழை மக்களையே பாதிக்கும்படியாய் இருக்கின்றது. மிராசுதார்கள் அதிகமான சொத்துக்களை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் வரியைக் குறைக்க ஏன் இவ்வளவு அவசரமும், ஆத்திரமும் படுகின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. இவர்களுக்கு எவ்வளவு வரி போட்டாலும் வரி கொடுத்தது போக இவர்களுக்கு சாப்பாட்டிற்கு இடம் இருந்தே தீரும். ஆனால் இவர்களது குடிக்கும், கூத்திக்கும், தர்பாருக்கும், மோட்டாருக்கும், கல்யாண கருமாதிகளில் பார்ப்பன பாகவதர்களுக்கு அழுவதற்கும் வேண்டு மானால் பணம் காசு குறையலாம். இதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும். இந்திய தொழிலை காப்பாற்ற என்ற சாக்கின்பேரில் அன்னிய நாட்டு சாமான்கள் மீது போடப்படும் வரி கொடுமை! கொடுமை!! முக்காலும் கொடுமை!!! இந்திய கைத்தொழிலை காப்பாற்றுவதாக வைத்துக் கொண்டா லும் அதன் கொள்ளையெல்லாம் முதலாளிமார்கள்தான் 100-க்கு 10, 20, 30, 50 வீதம் லாபம் அடைகின்றார்களே தவிர ஏழைக் கூலிக்கும், தொழி லாளிக்கும் என்ன லாபம்?

இன்னும் இதுபோன்ற பித்தலாட்ட வரி எவ்வளவு வசூலிக்கப் படுகின்றது? ஆகவே வரி குறைப்பதைப்பற்றி யோசிப்பதானால் முதலில் பெரிய சம்பளங்களைக் குறைக்கவேண்டும். பிறகு ஏழைகளை கொடுமைப் படுத்தும் வரியைக் குறைக்கவேண்டும். கடைசியாக மிராசுதாரர்களின் விஷயத்தை கவனிக்க வேண்டும். இது தான் யோக்கியமான - செங்கோல் அரசாங்கத்தின் முறை அப்படிக் கில்லையானால் கொடுங்கோல் அரசாங்கத் தின் முறை என்று தான் சொல்லுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 22.01.1933**



RangaRakes tamilnavarasam.com

# கான்சாகிப் சேக்தாவுத் அவர்கட்குப் பாராட்டு

தோழர்களே! இன்றுதோழர் சேக்தாவுத் அவர்கட்கு கான்சாயபு பட்டம் கிடைத்ததைப் பாராட்டுவதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு என்னைத் தலைமை வகிக்கக் கேட்டுக் கொண்டதற்கு நன்றி செலுத்துகிறேன்.

இம்மாதிரியான பட்டங்களை சுமார் 15, 20 வருஷங்களுக்கு முன்பு கருதியதைப் போல் இதுசமயம் மக்கள் அவ்வளவு மேன்மையாகக் கருதுவதில்லை.

உதாரணமாக இரண்டொரு வருஷங்களுக்கு முன் ஒரு நண்பருக்கு கிடைத்த ஒரு பட்டத்திற்கு பெருத்த பாராட்டுதல்கள் நடக்கும்போது நான் அவரைப் பார்த்து "பட்ட சம்பந்தமான பாராட்டுவிழா தொந்திரவு உங்களுக்கு இனி கொஞ்சநாளைக்கு இருக்கும். உங்கள் மனமும் சந்தோஷத்தில் ஆழ்ந்திருக்கும்" என்று சொன்னேன். "பட்டங்களால் பிரமாதமான பலன் இல்லாவிட்டாலும் இந்த சந்தோஷத்திற்காவது இடமிருக்கிறதே" என்று சொன்னேன். அதற்கு அவர் அப்படிக்கூட இதில் ஒன்றும் பெருமைப்பட இடமில்லை என்றார். உடனே நான் ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் இதோ இவ்வருஷம் பட்டம் வழங்கி இருக்கும் லிஸ்ட்டைப் பாருங்கள். எனக்கும் பட்டம் கிடைத்திருக்கிறது. இன்னொரு வருக்கும் பட்டம் கிடைத்திருக்கிறது. அவரைப்பற்றியோ, தங்களுக்கும், உலகத்திற்கும் நன்றாய்த்தெரியும், சர்க்காருக்கும் நன்றாய்தெரிந்திருக்கலாம். ஆகவே நான் பட்டம் கிடைத்ததே என்று பெருமைப்படவா? அல்லது என்னையும், அவரையும் ஒரே லிஸ்டில் சேர்த்திருக்கிறார்களே என்று அவமானப்படவா என்று சொன்னார். அந்தச் சமயம் எனக்கு மிகவும் பரிதாப மாகவே இருந்தது. இதற்காகப் பாராட்டுவதா? அனுதாபப்படுவதா என்பது எனக்கே புரியவில்லை. இம்மாதிரியாகவேதான் பெரும்பான்மையான பட்டங்கள் பயன்பெறுகின்றன. ஆகவே பட்டங்களுக்கு யோக்கியதை யையும், செல்வாக்கையும் உண்டாக்க வேண்டும் என்கின்ற உத்தேசத்தில் ஒன்று இரண்டு தகுந்த நபர்களுக்கு அளிக்கப்படுகிறது என்று தான் நான் கருது கிறேன். உண்மையிலேயே கான்சாயபு பட்டமானது தோழர் ஷேத் தாவுத் துக்கு வந்து சேர்ந்ததால் இவருக்கு ஏதாவது அதிக பெருமை ஏற்பட்டு



விட்டது என்று சொல்ல எனக்கு இஷ்டமில்லை. ஆனால் அந்தப் பட்டம் இவரை வந்து அடைந்து (அடைக்கலம் புகுந்து) பெருமை அடைந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

இனி வருங்காலத்தில் பட்டங்கள் லட்சியமற்றதாக ஆகிவிடும்.

இப்பொழுதே பார்க்கலாம். பட்டம் பெற்றவர்களைவிட ஜெயிலுக்கு போனவர்கள் ஜனங்களுக்காக பாடுபடுகின்றவர்கள் என்று கருதியே அதிக மாக மதிக்கச் செய்கின்றார்கள் என்பதாகும்.

உண்மையில் பார்த்தாலும் ஏழை ஜனங்களுக்காகப் பாடுபடுகின்ற வர்கள் தங்கள் பட்டத்துக்கு உரியவர்கள் என்று சர்க்கார் பெரிதும் கருது வதில்லை என்பதை யாரும் அறியலாம்.

இதற்குக் காரணம் எப்படி இருந்தாலும் ஏழை ஜனங்களுக்கும், சர்க்காருக்கும் நல்ல பிள்ளையாய் இருக்க சுலபத்தில் இனி முடியாது. ஜனங் களுக்கு அறிவும், அனுபவமும் ஏற ஏற அனேக விஷயங்கள் தலைகீழ் புரட்சியை அடைவது இயல்பேயாகும். ஆகவே அதற்குத் தகுந்தபடி திருத்துப்பாடடைய வேண்டியது அறிவுடைமையாகும். இன்று இந்த ஊரில் பட்டம் உடையவர் தோழர் ஷேக்தாவுத் அவர்களேயாகும்.

இதற்குமுன் யாராவது இருந்தார்களா என்றால் அதுவும் இவருடைய தகப்பனாரேயாகும். இவரது தகப்பனார் தோழர் கே. அலாவுதீன் சாயபு அவர்கள் கான்பஹதூர் பட்டம் வழங்கப்பட்டவர். ஆனால் அது இவருக்குக் கூட- இந்த ஊரில் அனேகருக்கு கூட தெரியாது. ஏனெனில் அந்தக் காலத்திலேயே அதை அவர் அவ்வளவு பிரமாதப்படுத்திக் கொள்ளவில்லை. தோழர் கே. அலாவுதீன் சாயபு அவர்கள் இந்த ஊர் பொது நடவடிக்கை விஷயத்தில் அக்கால மாதிரிக்கேற்றபடி எல்லாப் பொருப்புகளையும் வகித்து வந்தவர். இவரைப் போலவே மிகவும் அடக்கமானவர், கூட்டங்களில் பேசவேமாட்டார். அதுபோலவே இவரும் யெல்லாப் பொருப்புகளையும் வகித்து இருக்கின்றார். ஆனால் பேசுவதில்லை. பேசவேண்டி ஏற்பட்டு விடுமோ என்று அவர் அனேக கூட்டங்களுக்கு போவதில்லை. போனாலும் பின்னால் ஒளிந்துகொள்வார். ஆனால் இன்று அவர் பேசியதில் எவ்வளவு கருத்துக்கள் இருந்தது என்பதை பாருங்கள். என் விஷயத்தைப்பற்றி பேசிய பல விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்கள் எல்லாம் அறிவும், கருத்தும் நிறைந்தவைகளாகும். இதுவரை வேறு யாருடைய நிர்வாகத்திலும், ஈரோடு முனிசிபாலிட்டியானது இவ்வளவு ஒற்றுமையாய் கலகமில்லாமல் நிர்வாகத்திற்கு எவ்வித குந்தகமும் இல்லாமல் நடைபெற்று வந்ததாகக் கண்டுபிடிப்பது கஷ்டமான காரியமாகும். ஊர் ஒற்றுமைக்கும், ஊர் ஜனங்களுக்கு முனிசிபாலிட்டியிடம் இருக்கும் மதிப்புக்கும் ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன்.



RangaRakes tamilnavarasam.com

இந்த முனிசிபாலிட்டியில் இந்த ஊருக்கு மின்சார விளக்குத் திட்டம் ஒன்று ஏற்பாடு செய்து அதைச் சொந்தத்தில் வைத்து நடத்துவதற்குப் பணங்களும் ஏற்பாடுசெய்து காரியங்கள் துவக்கப்படும்போது சர்க்காரார் தங்களுக்கு உள்ள அதிகாரத்தை தப்பு வழியில் செலுத்தி அதற்கு உரிய அனுமதியை ஒரு வெள்ளைக்கார முதலாளி கம்பெனிக்கு அளித்துவிட்டார்கள்.

நமது மந்திரிகள் ஈரோடு முனிசிபாலிட்டி நன்மையைவிடத் தங்கள் உத்தியோகம் நிலைக்கவேண்டிய நன்மையையே அதிகமாய் கணித்து ஆட்டுக் குட்டிக்கும் புலிக்குமுள்ள கதைபோல் "நீ செய்திருக்காவிட்டாலும் உன் தகப்பன் செய்திருப்பான்" என்று சொல்லி அதாவது உமக்கு முன் இருந்தவர்கள் நடத்திய நிருவாகத்தால் இந்த முனிசிபாலிட்டி லைசென்ஸ் பெறத் தகுதி அற்றது என்று சொல்லி விட்டார்கள். இதைப்பற்றி நான் குற்றம் சொல்ல முடியாது. ஏனென்றால் மனிதர்களின் சராசரி யோக்கியதைக்கு இது குறைந்ததல்ல. ஆதலால் அப்போதைய மந்திரிகள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதைப் பிரதானமாய் கருதியதை குற்றமாகக் கருதவில்லை. ஆனால் அதை ஈரோடு ஜனங்கள் தங்களை அலட்சியமாய் கருதியதாய் கருதி இப்போது முன் குறிப்பிட்ட மின்சார திட்டம் வெள்ளைக்கார கம்பெனியாரால் நிறைவேற்றி அமுலுக்கு கொண்டுவந்து ஒரு வருஷமாகியும் அதை நிவர்த்தில்லாத இரண்டொருவர் தவிர மற்றும் யாரும் அதை உபயோகப் படுத்திக் கொள்ளாமல் இருக்கிறார்கள். இது பாராட்டக் கூடியதேயாகும். இனியும் இதுபோலவே ஒற்றுமையாயும் பொருப்பாயும் பொது ஜனங்களுடைய நன்மைக்கும், முற்போக்குக்குமான காரியங்கள் நடைபெறவேண்டுமென்றே விரும்புகிறேன்.

*குறிப்பு : 15.01.1933 இல் ஈரோடு முனிசிபல் சேர்மன் கே.ஏ.ஷேக் தாவுது சாயபு அவர்களுக்கு 'கான் சாயபு' பட்டம் கிடைத்ததற்கு முனிசிபல் அலுவலக அதிகாரிகளால் நடத்தப்பட்ட பாராட்டு விழாவிற்கு தலைமை யேற்று ஆற்றிய உரை,*

**குடி அரசு - சொற்பொழிவு - 22.01.1933**



# விபசாரத் தடை

மதுரையில் விபசாரத் தடை மசோதா அமுலுக்கு வந்திருப்பதாக தெரிய வருகின்றது. சென்னையிலும் அது முன்னமேயே அமுலுக்கு வந்துவிட்டது. மற்ற ஜில்லாக்களுக்கும் அது உடனே அமுலுக்கு வரவேண்டியதாகும். குறைந்த அளவு 30 ஆயிரம் ஜனங்கள் உள்ள ஈரோட்டில் 300 பேர்களுக்கு குறையாத விபசாரிகள் என்போர்கள் அதாவது ஒரு அணா இரண்டு அணா ரேட்டு முதல் விபசாரித்தனம் செய்து ஜீவிக்க வேண்டிய பெண்கள் இருந்து வருகின்றார்கள் என்றால் மற்ற பெரிய பட்டணங்களைப் பற்றி கேள்க்கவும் வேண்டுமா?

விபசாரத்தடை மசோதா வருவது என்பது சற்று தாமதானாலும் ஆங்காங்குள்ள போலீஸ் அதிகாரிகளாவது இவ்விஷயங்களில் சற்று கவலை செலுத்தி அவர்கள் (விபசாரிகள்) தெருவில் நின்று மக்களை அழைப்பதையும், தெருக்களில் சில்லரைக் கலகங்களை ஏற்படுவதையும், இவர்கள் பயனாய் ஆபாச பேச்சுவார்த்தைகள் நடப்பதையும் மற்றும் சில வாலிபர்கள் காலித்தனமாய் நடக்க ஏற்படுவதையும் ஒருவாறு தடுக்கலாம் என்றே கருதுகின்றோம்.

இப்படிப்பட்ட காரியங்களில் சின்ன சிப்பந்திகள் பிரவேசிக்க இடம் கொடுக்காமல் சற்று மேல் அதிகாரிகளாய் இருப்பவர்களே பிரவேசித்து ஏதாவது செய்ய முயற்சிப்பார்களானால் உடனே காரியம் கை கூடும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 29.01.1933**



RangaRakes tamilnavarasam.com

## ஈ.வெ.ராவுக்கு கோவை முனிசிபல் சங்கத்தார் வாசித்த உபசாரப் பத்திரமும் பதிலும்

அன்பு கொண்ட நகரசபை தலைவரவர்களே! அங்கத்தினர்களே!! மற்றும் இங்கு கூடியுள்ள தோழர்களே!!!

கோவை நகரசபையின் சார்பாக எனக்கு வாசித்தளித்த உபசாரப் பத்திரத்திற்கு நான் மிகுதியும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவனேயாவேன். ஆனால் அவ்வுபசாரப் பத்திரத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளுகின்றேன் என்று சொல்லுவேனேயானால் நான் உண்மையற்ற புகழை ஏற்றுக் கொண்டவன் என்னும் குற்றத்திற்காளானவனாவேன். ஏனெனில் தீண்டாமை விலக்கிலும், பொது நல சேவையிலும், அரசியலிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் நான் ஏதோ பெரிய வேலைகள் செய்திருப்பதாக உங்கள் உபசாரப் பத்திரத்தில் புகழ்ந்து இருக்கிறீர்கள். உண்மையில் பார்ப்போமானால் அத்துரையில் பொது மக்களுக்கு என்ன காரியம் செய்திருக்கிறேன் என்று இன்று உங்கள் முன்னிலையில் நான் சொல்லக் கூடும்?

தோழர்களே! இந்தியாவில் பார்ப்பனர்களும் படித்த கூட்டத்தாரும் செல்வவான்களுமாகிய ஊரார் சரீர உழைப்பில் வாழ்வதற்கென்றே உயிர் வாழும் கூட்டங்களை அப்படியே வைத்துக் கொண்டு தீண்டாதாருக்கு பாடு பட்டிருக்கின்றேன், ஏழைகளுக்கு பாடுபட்டிருக்கின்றேன், தொழிலாளிக்கு பாடுபட்டிருக்கின்றேன் என்று ஒருவர் ஒப்புக் கொள்ளுவதானால் அப்படி பட்ட அவர், நான் மாத்திரமல்ல மற்றும் எப்படிப்பட்ட தேச பக்தர் ஆனாலும், தேசீயவாதி ஆனாலும், தேசப் பாதுகாப்புக்காக தேச மக்களுக்காகவே உயிர் வாழ்கின்றேன் மூச்சு விடுகின்றேன் என்று சொல்லுபவர்களானாலும் அதில் ஏதாவது நாணயமோ, உண்மையோ, அறிவுடைமையோ பலன் தரும் தன்மையோ இருக்க முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள்.



### பொதுநலசேவை என்பது புரட்டு

நான் வெகுநாளைக்கு முன்பதாகவே (Social service is a humbug) சோஷியல் சர்விஸ் இஸ் ஏ ஹம்பக். அதாவது சமூக சேவை என்று சொல்வது முழுப் புரட்டு என்றும் அதன் கருத்து பணக்காரர்களையும் முதலாளிகளையும் சோம்பேரிகளையும் காப்பாற்றக் கோட்டை கட்டுதல் என்றும் சொல்லி இருக்கிறேன். இந்த அபிப்பிராயம் எனது மேல் நாட்டு சுற்றுப் பிரயாணத்தில் முன்னிலும் அதிகமாய் பலப்பட்டது என்று தான் சொல்லுவேன். நான் ஸ்பெயினில் ஒரு பெண்ணினிடம் பேசிக் கொண்டிருக்கும் போது அந்தம்மாள் பேச்சு சந்தர்ப்பத்தில் என் வேலை என்ன என்று கேட்ட காலத்தில் நான் சாதாரணமுறையில் ஏதோ என்னாலான பொது ஜன சேவை செய்கிறேன் என்று சொன்னேன். அதற்கு உடனே அந்தம்மாள் “பொது ஜன சேவை என்பது முழுதும் பித்தலாட்டம் என்றே நாங்கள் கருதுகிறோம்” என்று சொன்னார்கள். பிறகு நமது இயக்க விஷயத்தை சொன்ன பிறகு ஒரு அளவில் அந்தம்மாள் சரி என்று சொன்னார்கள். நமது நாட்டு பொதுஜன சேவை என்பதை என்ன என்று சற்றுயோசித்துப் பாருங்கள்.

### தீண்டாமை விலக்கு

தீண்டாமை விலக்கு என்றால் ஒருவனைதொட்டு விடுவதாலும் கோயிலுக்குள் புகவிட்டுவிடுவதாலும் தீண்டாமை விலகிப் போய் விட்டது என்று கற்பித்து, அந்தப்படியே இந்நாட்டு மக்களை நம்பச் செய்து, அவ்வளவு செய்தாலே போது மென்று சொல்லி அதற்கே பெரிய புரட்சி செய்ய வேண்டியதாய் ஏற்பாடு செய்து வைத்திருக்கிறோம். அப்படிச் சொல்லுகின்றவர் களையே மகான்கள்-மகாத்மாக்கள்- பொது ஜன சேவைக்காரர்-தீண்டாமை விலக்கு வீரர்-வைக்கம் வீரர்-என்றெல்லாம் ஆக்கி விட்டோம்.

“கங்காதரா மாண்டாயோ என்ற ஒரு வண்ணாத்தி அழுகைக்குரல் அரசன் வீடுவரை அழச்செய்து விட்டது” என்ற கதை போல் இந்த காரியமே இப்போது தேசீய சேவையாய் - பொது ஜன சேவையாய் - சுயராஜிய சேவையாய் - அன்னிய ஆட்சியை விரட்டி அடிக்கும் சேவையாய் ஆக்கப் பட்டு எங்கு பார்த்தாலும் இதே தப்பட்டை அடிக்கப் படுகின்றது. அது மாத்திர மல்லாமல் மக்கள் எல்லோராலும் அப்படியே கருதப்படுகின்றது. இதனால் எல்லாம் உண்மை தீண்டாமை எப்படி விலகும்? தீண்டாமை விலக்கு என்றால் தீண்டாதவனைத் தொடுவதும் அவனை “மோட்சத்திற்கு அனுப்ப” என்று கோவிலுக்குள் கொண்டு விடுவதும் தானா? என்று கேட்கின்றேன். ஒரு மனிதனுக்கு சாப்பாடும் உடையும், இடமும், கல்வியும் வேண்டுமா? மனிதனைத் தொடுவதும் “செத்த பிறகு அனுபவிப்பதுமான மோக்ஷமும்” வேண்டுமா? என்று கேட்கின்றேன்.



RangaRakes tamilnavarasam.com

தொடவும் கோவிலுக்குள் போகவும் விடப்பட்டு விட்டால் அவனுக்கு உண்டியும், உடையும், இடமும், கல்வியும் கிடைத்துவிடும் என்று சிலர் சொல்ல வருவார்கள். அப்படியானால் இன்று தொடவும், கோவிலுக்குள் போகவும் உரிமையுடையவர்களும் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் அவற்றை அனுபவித்து வருபவர்களுமான மனிதர்கள் எல்லாம் இன்று சோறும், துணியும், குடிசையும், படிப்பும் உடையவர்களாய் இருக்கிறார்களா? என்பதை சிந்தித்துப்பாருங்கள். சோற்றுக்கும், துணிக்கும் வழியென்ன? என்று கேள்க்கும்போது கல்லில்போய் முட்டிக் கொள்ளக் கூட்டிவிட்டதால், அது பொதுநல சேவை ஆகுமா? ஜீவகாருண்யமாகுமா? சமதர்மமாகுமா? என்று யோசித்துப் பாருங்கள். அல்லது ஏழைகள் படும் கஷ்டத்துக்கு வழி என்ன என்று கேட்கும்போது ஒரு நாளைக்கு ஏதோ இரண்டு மூட்டை அரிசியை வேகவைத்துப் போட்டு தர்மத்துக்கு வந்து சாப்பிடுங்கள் என்று தண்டோறா அடித்துவிட்டால் ஏழைகளின் பசியாற்றிய சேவை ஆகிவிடுமா? என்று யோசித்துப்பாருங்கள். எனவே இப்படிப்பட்ட காரியங்களை நாணைய மானதும், பயன் தரத்தக்கதும், அறிவுடைமையானதும் என்று எப்படிச் சொல்ல முடியும்?

## அரசியல்

நமது சுயராஜ்ஜியப் புரட்டும், ஸ்தல சுயாட்சிப்புரட்டும் இப்படித்தானே இருக்கின்றது. சுயராஜ்ஜியமென்றால் யாருக்கு என்று யோசித்துப்பாருங்கள். நாளைவரும் சுயராஜ்ஜியத்தில் 100-க்கு 90 மக்களாய் உள்ள ஏழைகளுக்கு என்ன புதியவசதி ஏற்படப்போகின்றது? ஏழைகள், தொழிலாளிகள், கடன் காரர்கள், ஏழை விவசாயக்கூலிகளான படிப்பில்லாதவர்கள் முதலாகிய மக்களுக்கு முறையே பணக்காரன், முதலாளி, லேவாதேவி, பாங்கிக்காரன், நிலச்சுவான், ஜமீன்தாரன், படித்த பார்ப்பனன் ஆகியவர்கள்தானே போய் பிரதிநிதிகளாக உட்காரப்போகின்றார்கள். தீண்டாதார்கள் என்பவர்கள் “இந்து மதத்தை விட்டுவிடுவோம், எங்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம் வேண்டும்” என்று கேட்டதின் பயனாய் சிறிது பிரதிநிதித்துவமாவது கிடைத் தது. கோவிலுக்குள் வாருங்கள் என்று சிலர் கூப்பிடுகின்றார்கள். மற்றபடி மேல்கண்ட வகுப்பாருக்கு என்ன பலன் கிடைத்தது? என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். அவர்கள் குறைகளை நீக்கிக்கொள்ள அரசியலில் எங்காவது எந்த சட்ட சபைகளிலாவது இடமளிக்கப்பட்டிருக்கின்றதா? இதுபோல்தானே இன்று ஸ்தல சுயாட்சியும் இருந்து வருகின்றது.

முனிசிபல் கௌன்சிலிலோ, தாலூகா ஜில்லா போர்டுகளிலோ, பட்டக் காரர்களும், ஜமீன்தாரர்களும், வெள்ளியங்கிரிக் கவுண்டர்களும், ரத்தின சபாபதி முதலியார்களும், ஷண்முகஞ் செட்டியார்களும் மற்றும் இது போன்றவர்களும்தான் எங்கும் போட்டிபோட்டு அவரவர்கள் “பெரியவீட்டு” சொத்துகளைப்போல் பங்குபோட்டுக்கொள்ளுவதுபோல் மோதல்கள்



நடக்கின்றனவேயொழிய உண்மையான ஏழை, கூலி, தொழிலாளி, பயிர் செய்பவன் போட்டி போடவோ வெற்றிபெறவோ முடிக்கின்றதா என்று பாருங்கள். சொத்தின் பேரிலும் படிப்பின் பேரிலும்தான் ஓட்டர் லிஸ்ட்டும், அபேட்சகர் லிஸ்ட்டும் தயாரிக்கப்பட்டிருக்கிறதே தவிர சொத்தும், படிப்பும் இல்லாத மக்கள் கதி என்ன? என்பதை யோசித்துப்பாருங்கள். தோழர்களே இந்த மாதிரியான பொது நல சேவை, சுயராஜ்ஜிய சேவை, தேசீய சேவை, தீண்டாமை விலக்கு சேவை ஆகியவைகளால் என்ன காரியங்கள் ஆகப் போகின்றது என்றுகருதி இருக்கிறீர்கள். நான் யாருடைய மனதையும் நோகும் படி செய்வதற்காகப் பேசவில்லை. என்னுடைய பொது நல சேவையையும், தீண்டாமை விலக்கு வேலையையும், சிலாகித்து சிலாகித்து திருப்பித் திருப்பி உபசாரப்பத்திரத்தில் எழுதிப் புகழ்ந்திருக்கிறீர்கள். நான் எப்படி அவைகளை ஒப்புக்கொள்ள முடியும். அதைக்கேட்டு நான் வெட்கப்படத்தானே வேண்டி யிருக்கிறது. உண்மையான பொதுநல சேவையோ தீண்டாமை விலக்கு வேலை நான் என்ன செய்துவிட்டேன்? இப்போது ஏதோ செய்யவேண்டும் என்று கருதுகிறேன் என்றாலும் அதற்கு எவ்வளவு எதிர்ப்பு, எவ்வளவு தொல்லைகள் இருக்கின்றன என்று யோசித்துப்பாருங்கள். நான் செய்ய நினைக்கும் பொது ஜனசேவை தீண்டாமை விலக்கு வேலை என்பவை மதத்துரோகம், கடவுள் துரோகம், ஜாதித்துவேஷம், வகுப்புத்துவேஷம், தேசீயத்துரோகம். ராஜத்துரோகம் என்றெல்லாம் ஆகிவிடுகின்றன. ஆகை யால் இந்நிலையில் சுலபத்தில், உண்மையான பொதுநல சேவையும், தீண்டாமை விலக்கு சேவையும், காரியத்தில் பயன்படும்படி செய்யமுடியும் என்று நான் நினைக்கவில்லை. பொது நல சேவை என்றால் என்ன? தீண்டாமை விலக்கு என்றால் என்ன? என்பதை மக்களுக்கு தெரியும்படி செய்தாலே போதும் என்று நினைக்கிறேன். அந்த வேலைதான் செய்ய வேண்டியது முக்கிய கடமையாய் இருக்கிறது என்று கருதியிருக் கிறேன்.

இந்த வேலை இந்தியாவுக்கு மாத்திரம் அவசியம் என்று நான் கருதிவிடவில்லை. “தீண்டாமை” என்பது இல்லாத ஊரிலும், அன்னிய ஆட்சி என்பது இல்லாத ஊரிலும், ஏகாதிபத்தியமோ, சக்கரவர்த்தியோ, ராஜாக்களோ இல்லாத ஊரிலும் இப்படித்தான் இருக்கிறது. “குபேர பட்டணம்” என்று சொல்லும் அமெரிக்காவிலும், சக்கரவர்த்தியை ஒழித்து சமதர்ம ஆட்சி நடத்தும் ஜர்மனியிலும், சொந்த தேச அரசர் ஆளும் இங்கிலாந்திலும், அரசரை விரட்டி அடித்த குடி அரசு நாடான ஸ்பெயினிலும் இந்த கதிதான் இருக்கிறது. சில இடங்களில் ஒரு கட்டிலில் பகுதி படுக்கையை வாடகைக்கு விட்டு ஜீவிக்கவேண்டி இருக்கின்றன. வெரும் சகிக்க முடியாத பட்டினிக்காகவே பெண்கள் தெருக்களில் வந்து கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு போய் விபசாரித்தனம் செய்து ஜீவிக்கவேண்டி இருக்கின்றன.

இதற்கெல்லாம் காரணம் முதலாளிகளின் ஆட்சியே தவிர வேறு ஒன்றும் இல்லை என்றே உணருகிறேன்.



RangaRakes tamilnavarasam.com

தோழர்களே! இவைகள் என் சொந்த அபிப்பிராயமே யொழிய தர்க்கித்து முடிவுகண்டு முடிந்த முடிவு என்று சொல்ல வரவில்லை. நான் பார்க்கும் கண்ணாடி துவேஷக் கண்ணாடியாய், பாரபட்சக் கண்ணாடியாய் இருக்கலாம். ஆகையால் நீங்கள் இவற்றை உங்கள் நடு நிலைக்கண்ணாடிகொண்டு பார்த்து உங்களுக்கு தோன்றியபடி நடவுங்கள் என்று சொல்லுவதோடு, மறுமுறையும் எனக்கு இவ்வித சந்தர்ப்பமளித்து ஊக்கமளித்ததற்காக உங்கள் எல்லோருக்கும் உங்கள் பிரதிநிதியாகிய கோவை முனிசிபல் அங்கத்தினர்களுக்கும் அவர்களது அக்கிராசனாதிபதி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*குறிப்பு: 22.01.1933 இல் கோவை முனிசிபல் சங்கத்தாரால் வழங்கப்பட்ட உபசாரப் பத்திரத்திற்கு பதிலளித்து பேசிய உரை,*

**குடி அரசு - சொற்பொழிவு - 29.01.1933**



# இந்தியப் பெண்களுக்கும் இடம்

## நளபாக அடுப்பும், சப்ரமஞ்சக்கட்டிலும் பிரசவ ஆஸ்பத்திரியுமா?

சென்னையில் கூடியபெண்கள் சங்கத்தில், பெண்கள் நலனுக்கென்று, சில பெண்கள் கூடி, சில தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள் என்பதாகத்தெரிய வருகிறது. அவற்றின் ஒரு தீர்மானமானது இந்திய ஸ்திரீ ரத்தினங்கள் நளபாக அடுப்பும், சப்ர மஞ்சக்கட்டிலும், பிரசவ ஆஸ்பத்திரியும் தவிர வேறு இடத்திற்குத் தகுதியானவர்கள் அல்ல என்கின்ற மனப்பான்மையைக் காட்டுவதாய் இருக்கின்றது.

அதாவது, "சிறுவர் பாடசாலைகளில் சிறுமிகளுக்கு அவசியமாக வேண்டப்படும் சங்கீதம், கோலாட்டம், பின்னல், குடித்தன சாஸ்திரம் இவைகளைப்போதிக்க வேண்டியதிருப்பதால் சிறுவர் பாடசாலைகளையும், சிறுமிகள் பாடசாலைகளையும் ஒன்றாகச் சேர்க்கக் கூடாது"

என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

இந்தியப் பெண்கள் தாம் ஐரோப்பிய நாடுகளிலுள்ள மிருகங்களை விட கேவலமான நிலையில் இருப்பதைப்பற்றி சிறிதாவது கவலையோ, வெட்கமோ அடைந்ததாகத் தெரியவில்லை. "கல்வியறிவுள்ள மேதாவிப்" பெண்களான ஸ்திரீ ரத்தினங்களைப் பற்றியே நாம் பேசுகின்றோம்.

இவர்கள் நிலையே இப்படியானால், பிள்ளை பெரும் யந்திரங்களான மற்ற 'வநிதாரத்தனங்களை'ப் பற்றிப் பேசவும் வேண்டுமா? மேல் நாட்டுப் பெண்களின் இன்றைய யோக்கியதையை எடுத்துக்கொண்டால் அவர்கள் எந்நாட்டு ஆண் பிள்ளைகளுடனும், எத்துறையிலும் போட்டி போடத் தகுந்த கல்வியும், தொழில் திறமையும் கொண்ட சக்தியையும் உடையவர்களாய் இருக்கிறார்களே ஒழிய இந்திய "ஸ்திரி ரத்தினங்கள்" கோருகிற மாதிரி சங்கீதம், கோலாட்டம், பின்னல், குடும்ப சாஸ்திரங்கள் ஆகியவைகளைக் கற்று சீதையைப் போலவும், சந்திரமதியைப் போலவும், திருவள்ளுவர் பெண் ஜாதியான வாசுகியைப் போலவும், நளாயினியைப் போலவும் இருக்கத் தகுதியற்றவர்களாகவே இருப்பார்கள்-இருக்கிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

உதாரணமாக இதன்கீழ் உலகப் பிரசித்திபெற்று வாழ்கின்ற ஒரு 6,7 பெண்களைப்பற்றி மாத்திரம் குறிப்பிடுகின்றோம்.

1. எலினார் மிச்சேல் (Eleanormitchell) என்கிற ஐரோப்பிய மாது ஒரு நிமிடத்துக்கு 1000 எழுத்துகள் டைப்பு அடிக்கக்கூடிய சக்தியோடு கடந்த ஐந்து வருஷ காலமாக உலகிற் சிறந்த டைப்பிஸ்டாக முதற் பரிசு பெற்று வருகிறாள்.

2. மிஸ். ஆமிஜான்சன் (Amy Johnson) என்கின்ற ஐரோப்பிய மாது, இந்தியாவுக்கும், இங்கிலாந்துக்கும் ஆகாய விமானத்தில் அதி வேகமாய்ச் செல்லக்கூடிய கீர்த்தி பெற்றிருக்கிறாள்.

3. ஜார்ஜ் என்னும் செல்வப் பேர் வாய்ந்த ஜாயி கூப்பர் (Joyeecooper) என்கிற ஒரு ஐரோப்பிய ஆங்கில மாது தண்ணீரில் நீந்துவதில் ஆண்களைவிட கீர்த்தி பெற்றிருக்கிறாள். அத்துடன் தன்னைப்போலவே நீந்துவதில் பேர்பெற்ற, பீரியன் இசன் (Brian Hession) என்கின்ற ஒரு ஆண் மகனையே மணக்கப் போவதாக உறுதி கொண்டிருக்கிறாள்.

4. மிஸஸ் கார்நல் (Cornell) என்கிற மற்றொரு மாது. பெண்கள் சரீர அப்பியாச சங்கத்திற்கு காரியதரிசியாயிருந்து கொண்டு சர்வ தேச சரீர அப்பியாச சங்க பந்தயங்களில் அதிகம் தூரம் தாண்டும் பந்தயத் தில் முதலாவதாக தாண்டி, முதல் பரிசு பெற்று அட்லாண்டா (Atalanta) "என்கின்ற தெய்வம்" போல் பிரக்கியாதி பெற்றிருக்கிறாள்.

5. சோனியா ஹென்ஜ் (Sonia Henje) என்கின்ற மற்றொரு மாது, உரை பனியின் மீது சரிந்து நடக்கும் ஒருவித பந்தயத்தில் உலகப் போட்டி யில் வெற்றி பெற்ற (World Champion) உலக சாமர்த்தியசாலி என்ற பட்டம் பெற்றிருக்கிறாள்.

6. மிஸஸ் ஸட்டூவர்ட் (Stewart) என்கின்ற மாது மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் விடுவதில் உலகத்தில் அதிக வேகமாய் விட்டவர் களின் அளவையெல்லாம் மீறி 1930ல் ஒரு மணிக்கு 130 மைல் வேகத்தில் விட்டு வெற்றி பெற்றிருக்கிறாள்.

7. பெட்டி கார்ஸ்டேர்ஸ் (Betty Carstairs) என்கிற மாது 400-டன் எடையுள்ள மோட்டார் படகை தண்ணீரில் செலுத்தி பெரும் பெரும் பந்தயங்களில் வெற்றி பெற்று "மோட்டார் படகு ராணி" எனப்பெயர் பெற்றிருக்கிறாள்.

இப்படி இன்னமும் அநேக பெண்களை பிரத்தியட்ச காட்சியாக இன்றும் ஐரோப்பாவில் காணலாம்.



துருக்கியில் (கோஷா) படுதாவில் இருக்கவேண்டிய ஒரு மாது போலீஸ்இலாக்கா இன்ஸ்பெக்டர் ஜனரலாயும், மற்றொரு மாது அன்னிய நாடுகளுக்குச் சென்று பேசும் பிரதிநிதியாகவும் இருக்கிறாள்.

மற்றும் ரஷியா முதலிய தேசங்களில் ரயில்வே இன்சின் ஓட்டுதல், பெரிய யந்திரசாலைக்குத் தலைமை வகித்தல் மற்றும் வைத்திய இலாக்கா தலைமை அதிகாரியாயிருத்தல் முதலிய அநேக காரியங்கள் திரமையாய் நடத்துகிறார்கள். இந்திய "ஸ்திரீ ரத்தினங்கள்" - கடைந்தெடுத்த அடிமை ரத்தினங்களாயிருப்பதற்கு ஏற்ற சங்கீதம், கும்மி, கோலாட்டம், பின்னல், குடும்ப சாஸ்திரம் ஆகியவை படிக்க ஏற்பாடு செய்யப்படுகிறார்கள். ஆதலால் தான் அவர்கள் ஆண் பிள்ளைகள் கூடயிருந்து படிக்கக் கூடாது என்றும் தீர்மானம் செய்திருக்கிறார்கள் போலும்! இதைப் பார்த்த யார் தான் வெட்கப்படாமல் இருப்பார்கள்.

ரஷிய தேசத்தின் ஜனத்தொகை 17 கோடி என்றால், 17 கோடி மக்களும் ஆண் பெண் அடங்க மனிதத்தன்மை பெற்ற மனிதர்களாகவே இருக்கிறார் கள். இவர்கள் யாவரும் அத்தேச எல்லாக் காரியங்களையும் கவனிக்க அரு கதையுள்ளவர்களாகவும், ஆட்சிபுரியச் சக்தியுடையவர்களாகவும் இருப்ப தோடு, இவ்வளவு பேர்களின் "குடும்ப காரியங்களை" கவனிக்க ஆண்களும் பெண்களுமாய்ச் சேர்ந்து 100க்கு ஒருவரோ, இருவரோ மாத்திரம் பெண்ணோ, அல்லது ஆணோ குடும்ப சாஸ்திரம் படித்திருந்தால் போதும் என்கின்ற நிலையில் இருக்கிறார்கள். மற்றவர்கள் சுதந்திர சாஸ்திரத்தில் தீரர்களாயிருக் கிறார்கள்.

இந்தியாவில் 34 கோடி மக்கள் இருந்தாலும் இவர்களில் பகுதியாகிய 17 கோடி பேர்களான ஸ்திரீ ரத்தினங்கள் ஆடல், பாடல், குடும்ப சாஸ்திரம், கோலாட்டம், பின்னல் கும்மி கற்றவர்கள் என்று கழித்துவிட்டால் மீதி எவ்வளவு என்று பாருங்கள்.

அன்றியும், இந்த ஆடல், பாடல், கும்மி, கோலாட்டம், குடும்ப சாஸ்திரம் ஆகியவற்றில் வாழும் ஸ்திரீ ரத்தினங்கள் வயிற்றில் பிறக்க நேர்ந்த பிண்டங்களாகிய ஆண்களுக்குத்தான் எவ்வளவு யோக்கியதை இருக்க முடியும் என்று யோசித்துப்பாருங்கள்.

மேற்கண்ட ஸ்திரீ ரத்தினங்களின் ஆடல், பாடல்களுக்குத் தாளம் போடவும், கோலாட்டத்திற்குக் கோல் சீவிக்கொடுக்கவும், குடும்ப சாஸ்திரத்து வித்தாயிருக்கவும் தவிர வேறு என்ன வேலைக்கு லாயக்குடையவர்கள் ஆவார்கள் என்பது நமக்கே விளங்கவில்லை. பெண்கள் முன்னேற்றத்திலும் கூட பார்ப்பனீயப்பேய்த் தன்மை புகுந்து நாட்டைப் பாழாக்குகின்றதென்றால் பிறகு இவர்களுக்கு வேறு என்னதான் கதி என்பது நமக்கு விளங்கவில்லை.



RangaRakes tamilnavarasam.com

ஏனெனில் பச்சைப் பார்ப்பனீயத்தில் தான் பெண்களுக்கு இந்த யோக்கியதை கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

நிற்க, கற்ப ஆட்சி கூடாதென்றும், கல்யாண ரத்து கூடாதென்றும் தீர்மானங்கள் செய்ததும்கூட இந்த ஸ்திரீ ரத்தினங்கள் தான் என்றால் இவர்களே கூடிய கூட்டங்களில், கும்மி, கோலாட்டம், ஆடல், பாடல், பின்னல் குடும்ப சாஸ்திரங்களுக்குத் தான் பெண்கள் லாயக்கு என்று தீர்மானிப்பதில் அதிசயம் ஏதும் இருப்பதாக நமக்குக் காணமுடியவில்லை.

அன்றியும், ஆண் பிள்ளைகளுடன் பெண் பிள்ளைகள் சேர்ந்து படிக்கக்கூடாது என்பதின் கருத்தும் நமக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் ஆண்களுடன் பெண்கள் சேர்ந்து படிப்பதால்-பழகுவதால், பெண்கள் மீது ஆண்களுக்கு உள்ள குருட்டு மோகம் குறைந்து விடுமோ என்னமோ என்கின்ற பயம் காரணமாய் இருந்தாலும் இருக்கலாம் என்றுதான் எண்ண வேண்டியிருக்கின்றது.

ஆண்களுடன் பெண்கள் நெருங்கிப் பழகவும், சேர்ந்து படிக்கவும் இடம் கொடுத்து விட்டால் கண்டிப்பாய் இன்றைய தினம் பெண்களுக்கு உள்ளது போன்ற அடிமை நிலையான குடும்ப சாஸ்திரம் என்னும் அடுப்பூதும் நிலையும், குழந்தை விவசாயம் செய்யும் பண்ணை நிலையும், கும்மி, கோலாட்டம், ஆடல், பாடல்களால் அல்லாமல் ஜீவிக்க முடியாத நிலையும், அதாவது பெண்களுக்கு மேற்கண்டவைகளே முக்கியமானது என்கின்றதான நிலைகள் பறந்தே போய் விடும். ஒரு சமயம் மேல்கண்டவைகள் எல்லாம் கலைஞானமென்றும் அவைகள் இல்லாவிட்டால் மிருகங்களுக்குச் சமானமென்றும், சில சனாதன மேதாவிகள் சொல்லக் கூடும். அப்படியானால் அந்த அருங்குணங்கள் இல்லாத ஆண்கள் கலைஞானமற்ற, மிருகங்களுக்கு சமானமானவர்களா என்று அவர்களைப் பணிவுடன் கேட்கின்றோம்.

அப்படிக்கில்லாமல் ஒரு சமயம் ஆண்களுக்கேற்ற கலை வேறு, பெண்களுக்கேற்ற கலை வேறு என்று சொல்லுவார்களானால் அந்தப் புத்தியைத்தான் என்ன செய்தாவது ஒழிக்க வேண்டும் என்று நாம் சொல்லுகின்றோம். அந்தப் புத்தியின் உணர்ச்சி தான் பெண்களை கும்மி, கோலாட்டம், ஆடல், பாடல், குடும்ப சாஸ்திரம் ஆகியவை வேண்டும் என்று சொல்லுகின்றது என்று சொல்லுகின்றோம்.

தவிர இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றிய ஸ்திரீ ரத்தினங்களில் நமக்குத் தெரிந்த, அறிமுகமுள்ள தோழர் பெண்களும் சிலர் இருந்திருக்கிறார்கள். அவர்களை ஒன்று கேட்கின்றோம். அதாவது அவர்களுடைய இன்றைய வாழ்க்கையில் கோலாட்டமும். சங்கீதமும், பின்னலும், குடும்ப சாஸ்திர மென்பதும் எவ்வளவு தூரம் பயன்படுகின்றது? அதனால் அவர்களது முன்னேற்றம் எவ்வளவு ஏற்பட்டிருக்கின்றது? என்று அறிய விரும்புகின்றோம்.

எனவே இந்த ஸ்திரீ ரத்தினங்கள் இந்தியப் பெண்களுக்கு அடிமைப்பட்ட மிருகத்திலும் கேவலமாய் சமயல் காரியாகவும், ஆயம்மாளாகவுமே இருந்து வரும் பெண்கள் ரத்தினங்களுக்கு அவர்களை மனித ரத்தினங்களாக்க எப்படி பிரதிநிதிகளாயிருக்க தகுந்தவர்கள் என்பதுதான் நமக்கு புரியாத விஷயமாயிருக்கின்றது.

**குடி அரசு - தலையங்கம் - 29.01.1933**





RangaRakes tamilnavarasam.com

# சுயமரியாதையைப் பற்றி காந்தி அபிப்பிராயம்

சென்றவாரம் வெளியான தினசரி பத்திரிகைகளில் தோழர் காந்திய வர்களால் கலப்புமணத்தையும், சமபந்தி போஜனத்தையும் ஆதரிப்பதில்லை என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த வாரம் வந்த தினசரிகளில் சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட ஆகாரத்தையும் சுயமரியாதையை லட்சியமாய் கொண்ட கலப்பு மணத்தையும் தான் ஆதரிப்பதாகச் சொன்ன தாய் காணப்படுகின்றது.

இதைப் பார்க்கும்போது ஒரு கேள்வி புறப்படுகின்றது. அதாவது சம ஜாதி மக்களால் சமைக்கப்பட்ட ஆகாரம் சம ஜாதி மக்களுடன் கூட இருந்து உண்ணும் ஆகாரம் ஆகியவைகள் சுகாதார முறைப்படி சமைக்கப் பட வேண்டிய அவசியமில்லையா என்ற கேள்வி பிறக்கின்றது. ஒரு சமயம் இரண்டு வித மக்களுடனும் கலந்து உட்கார்ந்து உண்ணும் ஆகாரத்துக்கும் சுகாதாரமுறை பக்குவம் வேண்டுமானால் அதை இந்த சமயத்தில் தனியாய் குறிப்பிடக் காரணம் என்ன? என்கின்ற கேள்வி பிறக்கின்றது.

அதுபோலவே சுயஜாதி மணம் செய்து கொள்வதானாலும் சுய மரியாதை இலட்சியம் இருக்க வேண்டியது அவசியம் என்றால் கலப்பு மணத்தைப் பற்றிச் சொல்லும் போது மாத்திரம் சுயமரியாதை இலட்சியத்தைப் பற்றிக் கவலைப்படுவானேன்? என்கின்ற கேள்வியும் பிறக்கின்றது. ஒரு சமயம் கலப்பு மணம் இல்லாவிட்டால் திருமண விஷயத்தில் சுயமரியாதை இலட்சியம் தேவையில்லையோ என்கின்ற சந்தேகமும் பிறக்கின்றன.

எது எப்படி இருந்தாலும் கலப்பு மண விஷயத்திலாவது மக்களுக்கு சுயமரியாதை இலட்சியம் இருக்க வேண்டும் என்றும் தோழர் காந்தி ஒப்புக் கொண்டதைக் குறித்து நாம் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியவில்லை.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 29.01.1933**



# இந்தியாவில் பெண்கள் நிலை

தோழர்களே! இந்தியப் பெண்கள் நிலைமையைப் பற்றி பேசுவ தென்றால் அது மிகவும் பரிதாபகரமான விஷயமாகும். அங்குள்ள ஆண், பெண், வித்தியாசமானது முதலாளி தொழிலாளிக்கு உள்ள வித்தியாசத் தைவிட மிகக் கடினமானது. ஒரு தொழிலாளியானவன் எப்படியாவது பணம் சம்பாதித்துக் கொண்டானேயானால் அவன் மெள்ள மெள்ள முதலாளி கூட்டத் தில் கலந்து கொள்ளக்கூடியவனாகி விடுவான். ஆனால் இந்தியப் பெண்களோ அப்படியில்லை. அவர்கள் எந்த நிலையிலும் ஆண்களுக்கு அடிமையாகவும், அவர்களுடைய அனுபவப் பொருளாகவும், ஆண் களையே தெய்வமாகக் கருதி பூஜித்து தொண்டு செய்து கொண்டிருக்க வேண்டியவர்களாகவும் இருப்பார்கள்.

## பெண் இழிவான பிறவி

இந்தியாவில் இந்து பெண்கள் இந்துமத சம்பிரதாயப்படி பாப ஜன்மங் களாகக் கருதப்படும். அதாவது சென்ற ஜன்மத்தில் அவர்கள் செய்த பாப காரியங்களால் இந்த ஜன்மத்தில் பெண்களாய்ப் பிறக்கிறார்கள் என்பது ஒரு சாஸ்திர விதி. ஒரு குடும்பத்தில் எத்தனை பெண் குழந்தை இருந்தாலும் அக்குடும்பத்திற்கு ஆண் குழந்தை இல்லாவிட்டால் அதை பிள்ளையில்லாத குடும்பம் என்றே சொல்லுவது வழக்கம். ஒரு வீட்டில் ஒரு பெண் குழந்தை பிறந்தால் அது அவ்வீட்டுக்கு அதிருப்தி தரத்தக்க விஷயமாகவே கருதப் படும். ஆண் குழந்தை பிறந்தால் வெகு திருப்தியுடன் ஆடம்பரச் செலவு செய்வார்கள். ஏதாவது ஒருசபை அல்லது கூட்டம் யாரும் பேசாமல் நிஸப்த மாய் இருப்பதாய் இருந்தால் அதைப்பார்த்து “என்ன பெண் பிறந்த வீடு போல் இருக்கிறதே” என்று கேட்பது வழக்கம். எவ்வளவு பெண் குழந்தை இருந்தாலும் ஒருவனுக்கு ஆண் குழந்தை இல்லாவிட்டால் வேறு குடும்பத் தில் இருந்து ஒரு ஆண்பிள்ளையை சுவீகாரம் எடுத்துக் கொள்வார்களே ஒழிய பெண் குழந்தையை வார்சு குழந்தையாய்க் கருதுவதில்லை.

பெண்கள் எந்த நிலையிலும் சுதந்திரத்திற்கு அருகதை அற்றவர்கள் என்பதே மதசம்பிரதாயம். ஒரு பெண்ணானவள் குழந்தைப் பருவத்தில் தாய் தகப்பன் மேற்பார்வையிலும், வாலிபப்பருவத்தில் புருஷன் மேற்பார்வை



RangaRakes
tamilnavarasam.com

யிலும், வயோதிகப் பருவத்தில் தன் மக்கள் மேற்பார்வையிலும் இருக்க வேண்டுமே ஒழிய, சுதந்திரமாய் இருக்க விடக்கூடாதென்று மனுதர்ம சாஸ் திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது மாத்திரமல்லாமல் பெண்களை கடவுள் பிறவியிலேயே விபசாரியாய் பிறப்பித்திருப்பதால், அவர்களை சர்வ ஜாக்கிரதையாக காவல் காக்க வேண்டும் என்று மத சாஸ்திரத்தில் எழுதப்பட்டி ருக்கின்றது.

## பெண்களுக்கு கல்வி கூடாது

பெண்களுக்கு கல்வி கற்பிப்பதும் மதசாஸ்திர விரோதமான காரிய மாகும். இவ்வளவு நாகரீகமான காலத்திலும் இந்தியாவில் மொத்த ஜனத் தொகையில் 100-க்கு ஒருவர் வீதந்தான் பெண்கள் கல்வி கற்றிருக்கக்கூடும். அப்படிக் கற்றிருந்தாலும் அந்தக்கல்வி அவர்களது வாழ்க்கையில் யாதொரு காரியத்திற்கும் பயன்படுவதில்லை. பெண்களுக்கு கற்றுக்கொடுப்பதெல்லாம் வீட்டு சமையல் வேலை முதலிய வேலைகளைச் செய்யத்தான் கற்றுக் கொடுப்பது வழக்கம். சிறு பருவ முதலே அவர்களை ஆண் குழந்தைகளிடம் இருந்து பிரித்து வைக்கவேண்டுமென்று கருதுவதால் பொதுப்பள்ளிக் கூடங்களுக்கு அவர்களை அநேகமாய் அனுப்பவே மாட்டார்கள். மற்றபடி சிறு குழந்தைப்பருவத்தில் யாருக்காவது சங்கீதம் பாட்டு முதலியவை கற்றுக் கொடுக்கப்பட்டாலும் அவை அப் பெண்ணின் வாழ்க்கையில் சிறிதும் பயன்பட சந்தர்ப்பம் இருப்பதே கிடையாது.

## கல்யாணம்

கல்யாண விஷயம் என்பது மிகவும் பரிதாபகரமானது. அநேகமாக பெண்களுக்கு 10, 12 வயதிற்குள்ளாக கல்யாணம் ஆகிவிடும். பிறந்த ஒரு வருஷத்திலிருந்தே எப்பொழுது வேண்டுமானாலும் கல்யாணம் செய்யலாம். சில வகுப்புகளில் எப்படியானாலும் 10 வயதிற்குள் கல்யாணம் செய்தாக வேண்டும் என்கின்ற நிர்ப்பந்தம் உண்டு. கல்யாணம் என்பது பெண்கழுத்தில் ஆண் ஒரு கயிற்றை கட்டுவதுதான் கல்யாணம். தாலிகட்டுகின்றது என்கின்ற சடங்கு வரையிலும் பெண்ணுக்கு மாப்பிள்ளை இன்னார் என்றே அடை யாளம் தெரியாது. மாப்பிள்ளைக்கும் பெண் இன்னார் என்றே அடையாளம் தெரியாது. கல்யாணம் என்பது பெண் மாப்பிள்ளை ஆகியவர்களின் பெற்றோர்கள் செய்து கொள்ளும் ஏற்பாடே ஒழிய, பெண் மாப்பிள்ளை ஆகிய இருவருடைய சம்மதம் என்பது கிடையாது. பெண்ணுக்கும் மாப் பிள்ளைக்கும் பொருத்தம் என்பது ஜோசியத்தின் மூலமும், சகுனத்தின் மூலமும் பார்ப்பதே தவிர பிரத்தியட்ச யோக்கியதை முதலியவைகளைக் கொண்டு பார்ப்பதில்லை. 5, 10 வயதுள்ள சிறு பெண்களுக்கு 40, 50 வயதுள்ள மாப்பிள்ளையை கல்யாணம் செய்வதும் உண்டு. 10 வயது பையனுக்கு 20 வயது பெண்ணை கட்டுவதும் உண்டு. 60, 70 வயது கிழவனுக்கு சிறு



பெண்களை கல்யாணம் செய்வதும் உண்டு. சென்ற வருஷத்தில்கூட 90 வயது கிழவன் ஒரு சிறு பெண்ணை கலியாணம் செய்து கொண்டான். பெண்ணின் தாய் தகப்பன்மார் யாருக்கு கல்யாணம் செய்து கொடுப்பதானாலும் பெண் சம்மதித்துதான் ஆகவேண்டும். பெண் ஏதாவது தனது அதிருப்தியை காட்டினால் அது பெண்ணின் கற்புக்கே விரோதமானது என்று சொல்லி விடுவதால் பெண் தன்னை யாருக்கு கொடுக்கப்படுவதானாலும் சம்மதித்தாகவேண்டும்.

## புருஷன் வீட்டில் பெண் நிலைமை

கல்யாணம் செய்யப்பட்ட பெண் புருஷன் வீட்டு வேலைக்கே கல்யாணம் செய்யப்பட்டதாய் கருதி புருஷன் வீட்டில் மாமனார், மாமி, நாத்தி, கொழுனன் ஆகியவர்களுக்கு வேலையாளாக இருந்து சகல வேலையையும் பார்க்கவேண்டும். சில வகுப்புகளில் பெண் புருஷனின் தகப்பன்மாருக்கும், சகோதரர்களுக்கும்கூட பெண்சாதியாய் இருக்க வேண்டும். இதற்கு சட்டத் திலும் இடமுண்டு. பெண் தாய் வீட்டிலிருந்து புருஷன் வீட்டிற்கு போகும் போது அழுதுகொண்டே போகும். பெற்றோர்கள் பெண்ணுக்கு சொல்லி அனுப்பும் புத்திமதி யெல்லாம் "புருஷன் வீட்டில் உள்ளவர்களுக்கு பணிந்து, நல்ல வேலைக்காரியாய் நடந்துகொள்" என்றுதான் சொல்லி அனுப்புவார்கள். அந்தப்பெண்ணை புருஷன் எவ்வளவு கொடுமையாய் நடத்தினாலும் கேள்வி கிடையாது. சில சமயங்களில் புருஷனுடைய பெற்றோர்கள் கொடுமைப்படுத்தினாலும் கேள்வி கிடையாது. புருஷன் எவ்வளவு அயோக்கியனாகவும், குடிகாரனாகவும், சூது, விபசாரம் செய்பவனாகவும், இருந்தாலும் பெண்ணுக்கு கேள்க்க அதிகாரம் கிடையாது.

அவன் வரும்படி இல்லாமல் திரிந்தாலும் பெண் தானே கூலி வேலை செய்தாகிலும் அவனுக்கு போடவேண்டும். பெண் இவற்றையெல்லாம் தனது முன் ஜன்மத்தின் கர்ம பலனென்று எண்ணிக்கொள்ள வேண்டும்.

## கல்யாண ரத்து கிடையாது

புருஷன், மேல்கொண்டு எத்தனை பெண்சாதி வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொண்டு வாழலாம். எத்தனை தாசிகளை வேண்டுமா னாலும் வைத்துக் கொள்ளலாம். இந்து மத கடவுள்கள் 60 ஆயிரம் பெண் களை கட்டிக்கொண்டதாகவும், 12 ஆயிரம் தாசிகள் வைத்திருந்ததாகவும் மத ஆதாரங்கள் உண்டு. எந்த நிலையிலும் கல்யாண ரத்து என்பது கிடையவே கிடையாது. பெண்ணுக்கு ஒரு தடவை கல்யாணம் ஆகிவிட்டால் சாகும்வரை அவனிடமேதான் இருந்தாக வேண்டும். புருஷன் கொடுமை சகிக்காமல் பெண் தாய் வீட்டுக்கு போய்விட்டால், புருஷன் கோர்ட்டில் தாவா செய்து டிக்ரி பெற்று பெண்ணை சுவாதீனம் செய்து கொள்ளலாம். ஆனால்



RangaRakes tamilnavarasam.com

பெண்ணுக்கு புருஷனிடமிருந்து ஜீவனாம்சம் பெறத்தான் பாத்தியமுண்டு. அதுவும் பெண் விபசாரி என்று புருஷன் ருஜூப்படுத்திவிட்டால் அந்த ஜீவனாம்சமும் இல்லை.

## சொத்துரிமை

பெண்ணுக்கு தகப்பன் சொத்தில் சிறிதும் பங்கு கிடையாது. புருஷன் சொத்திலும் பங்கு கிடையாது.

## விதவைத்தன்மை

புருஷன் இறந்துவிட்டால் பெண் விதவை என்று அழைக்கப்படுவாள். புருஷன் இறக்கும்போது அவள் எவ்வளவு செல்வத்துடன் மேன்மையாய் இருந்தாலும், கணவன் இறந்தவுடன் இவள் ஒரு அபசகுன உருவமாக ஆகி விடுவாள். நகை அணியக்கூடாது, புஷ்பம், வாசனை, நல்ல உடுப்பு ஆகியவை அணியக்கூடாது. ஒரே வேளை - அதுவும் சத்தற்ற ஆகாரந்தான் சாப்பிட வேண்டும். சில வகுப்புகளில் தலையை மொட்டையடித்து, வெள்ளை உடுப்பு அணிந்து கொண்டு வீட்டிற் குள்ளாகவே வீட்டு வேலைகள் செய்து கொண்டு இருக்க வேண்டும். விதவையைக் காணுவது அபசகுனமாகப் பாவிக்கப்படும். விதவைக்கு குடும்ப காரியங்களில் அல்லது சடங்குகளில் எவ்வித பாத்தியமும் கிடையாது. சாப்பாட்டுக்கு மாத்திரம் பெற பாத்திய முண்டு. வேறு கல்யாணம் செய்து கொள்ளவும் கூடாது. 5 அல்லது 10 வயதில் புருஷன் இறந்து போனாலும் பெண் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது. ஆனால் புருஷன் தனது பெண்ஜாதி இறந்த 10 நாளிலேயே கல்யாணம் செய்து கொள்ளலாம்.

அவன் எவ்வளவு கிழவனாயிருந்தாலும் மறுமணம் செய்து கொள்வதில் எவ்வித ஆட்சேபணையும் கிடையாது. புருஷன், குழந்தை இல்லா விட்டாலும், ஆண் குழந்தை இல்லா விட்டாலும் வேறு கல்யாணம் செய்து கொள்ளலாம். பெண் தனது குழந்தை பருவத்தில் புருஷன் இறந்து போனாலும் வேறு கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது.

## தனி வகுப்புகளில்

இவை பொது நிலைமையாகும். இனி சில தனி வகுப்புகளில் உள்ள பெண்கள் நிலைமையைப் பற்றி சில குறிப்பிடுகின்றேன். சில வகுப்புகளில் பெண்கள், ஆண்கள் கண்களுக்கே தென்படக்கூடாது உடம்பு, தலை, முகம் ஆகிய எல்லாவற்றையும் ஒரு துணியினால் போர்த்தி மூடிக் கொள்ள வேண்டும். கண்கள் மாத்திரம் தெரியும்படி ஓட்டை விட்டு பார்த்துக் கொண்டே போக வேண்டும். பெண்கள் தனியே எங்கும் போகக்கூடாது. சிறு பெண்ணை அதாவது 8, 10, 12 வயது பெண்ணை 20, 30, 40 வயதுக் காரர்களுக்கு கட்டிக் கொடுத்தாலும் கல்யாணமான அன்று இரவே படுக்கை



வீட்டில் பெண்ணையும் ஆணையும் தனியாய் படுக்க வைத்து விடுவார்கள். அவன் அதை காமாகாரமாய் எப்படி மிருகத்தனமாய் வேண்டுமானாலும் சில சமயங் களில் நடத்துவான்.

சில வகுப்புகளில், மகனுக்கு கல்யாணம் செய்த பெண் மாமனாருக்கும் பெண்ஜாதியாய் இருந்தாக வேண்டும். 10 வயது பையனுக்கு 20 வயது பெண்ணை கல்யாணம் செய்து பையன் 18 வயது நிரம்புவதற்குள் பெண்ணுக்கு 2, 3 குழந்தைகள் பிறந்து விடும். அது மாமனாருக்கோ அல்லது புருஷனுடைய அண்ணனுக்கோ பிறந்ததாக இருந்தாலும் அக்குழந்தைகள் சட்டபடி பிறந்த லெஜிட்டிமேட் குழந்தைகளாகவே பாவிக்கப்படும்.

சில வகுப்புகளில் குடும்பத் தலைவன் மாத்திரம் ஒரு பெண்ணை கல்யாணம் செய்து கொண்டு அவனுடைய சகோதரர்கள் உள்பட யெல்லாருமே அப்பெண்ணை பெண்ஜாதியாய் அனுவிப்பது உண்டு.

சில வகுப்புகளில் ஒரு குடும்பத்தில் மூத்தவன் மாத்திரம்தான் கலியாணம் செய்து கொள்ளலாம். மற்ற இளைய சகோதரர்கள் வேறு ஜாதி பெண்களை வைப்பாட்டியாக வைத்துக் கொண்டிருப்பது வழக்கம். இந்தப்படி வைப்பாட்டியாக வைத்துக் கொண்ட பெண்களுக்கு குழந்தைகள் பிறந்தால், அவற்றை தகப்பன் காப்பாற்ற வேண்டும் என்கின்ற நிபந்தனை இல்லை. தகப்பன் சொத்தில் அவைகளுக்கு பங்கும் இல்லை.

சில வகுப்புகளில் உயர்ந்த ஜாதிக்காரன் என்கின்ற பிராமணன் மற்ற வகுப்புப் பெண்களைக் கூப்பிட்டால் அவனுக்கு அவள் இணங்கியே ஆக வேண்டும்.

பிராமணன், ஒரு பெண்ணினுடைய புருஷனைக் கூப்பிட்டே அவனுடைய பெண்ஜாதி மீது தனக்கு ஆசையாய் இருப்பதாகவும், அவளை அழைத்து வரும்படியும் கேட்டால் புருஷன் உடனே அழைத்துக் கொண்டு போகவேண்டும். பெண் சம்மதிக்காவிட்டால் நிர்பந்தப்படுத்தி, அல்லது கொடுமைப்படுத்தி சம்மதிக்கச் செய்வதுமுண்டு. சில வகுப்புகளில் குரு கூப்பிட்டால் இணங்கியே ஆகவேண்டும். முன் குறிப்பிட்ட, அதாவது ஒரு குடும்பத்தில் மூத்தவன் மாத்திரம் கல்யாணம் செய்து கொள்ளலாம் மற்றவன் வேறுவகுப்பில் வைப்பாட்டி வைத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்ட வகுப்பில் பெண்கள் மீதி ஆகி அனேக பெண்கள் சாகும் வரை கல்யாணம் இல்லாமல் கன்னிப் பெண்ணாகவே இருந்து சாவது வழக்கம். இப்படிப்பட்ட பெண்களுக்கு அவர்கள் செத்த பிறகு பிணத்திற்கு ஒருவனைக் கொண்டு தாலிகட்டச் செய்து பிறகு நெருப்பில் வைத்துக் கொளுத்தி விடுவது வழக்கம்.

சில வகுப்புகளில் கடவுளுக்கு பெண்ஜாதி ஆகிறது என்று கோயிலில் வைத்து கடவுளை கல்யாணம் செய்து கொண்டதாக ஏற்பாடு செய்து பொது விபசாரியாய் வாழச் செய்வது உண்டு. இவர்களுக்குப்பெயர் தேவதாசி.



RangaRakes tamilnavarasam.com

ஒரு கல்யாணமான பெண்ணுடன் மற்றொரு ஆண் சம்பந்தம் வைத்துக் கொண்டதாகத் தெரிந்தால் அந்த ஆண் சட்டப்படி தண்டனைக்குள்ளாவான். பெண்ணை ஜாதியை விட்டு தள்ளி வைத்துவிடுவதுமுண்டு.

ஒரு பெண் விபசாரியாய் ஆகிவிட்டால், அல்லது தேவதாசியாக இருந்தால் சொத்து வைத்துக் கொண்டு சுதந்திரமாய் இருக்கலாம். இல்லாவிட்டால் சொத்து உரிமை இல்லை, சுதந்திரமும் இல்லை.

இந்து விதவைகள் நிலைமையைப் பற்றியும், அவர்கள் சம்பந்தமான சட்டங்களைப் பற்றியும் விபரமாய் மற்றொருசமயம் நேரிடும்போது பேசுகிறேன்.

*குறிப்பு: ஐரோப்பாவில் பெண்கள் கூட்டத்தில் இந்தியப் பெண்கள் நிலையைப் பற்றி பேசியது,*

**குடி அரசு - சொற்பொழிவு - 05.02.1933**



# கோவை உபசாரப் பத்திரங்கள்

தலைவரவர்களே! கோவை சுயமரியாதை இயக்கத் தலைவரே!! வாலிபத் தோழர்களே!!! மற்றும் இங்கு கூடியுள்ள தோழர்களே!!!! உங்கள் பத்திரங்களின் மூலம் உங்களுக்குள்ள ஆவேசம் இன்ன தென்று நன்றாய் விளங்குகின்றது. அவற்றையெல்லாம் என்னைப் புகழும் வழியில் காட்டிவிட்டீர்கள். நான் அப்புகழ்ச்சிகளை ஒப்புக் கொள்ளக்கூடுமா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆனால் ஒன்றை மட்டும் ஒப்புக் கொள்ளுகிறேன். அதாவது என்னென்ன காரியம் நான் சாதித்து விட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்களோ, அந்த காரியங்கள் எல்லாம் அவசியம் நடந்தாக வேண்டும் என்றும், அதற்காக நாம் எல்லோரும் பாடுபட வேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளுகிறேன்.

## சீர்திருத்தம்

தவிர அப்பத்திரங்களின் இரண்டொரு இடங்களில் நமது இயக்கம் சீர்திருத்த இயக்கமென்றும், பொது நல இயக்கமென்றும், குறிப்பிட்டிருக்கிறீர்கள், அவைகளை நான் ஒப்புக் கொள்வதில்லை. **நமது இயக்கம்** சீர்திருத்த இயக்கமல்ல. ஆனால் அழிவு வேலை இயக்கம் என்றே சொல்லுவேன். சீர்திருத்தம் என்றால் எதை சீர்திருத்துவது? இன்றைய நிலைமையில் மனித வாழ்க்கைக்கு, சமத்துவத் தன்மைக்கு பெரும்பான்மையான மக்களாகிய ஏழை மக்கள் படும் கஷ்டமும், தரித்திரமும் இழிவும் நீங்குவதற்கு அனுகூலமாக என்ன கொள்கைகள், நடை முறைகள் இங்கு இருக்கின்றன? என்று பாருங்கள். அதாவது மத சம்பந்தமாகவோ கடவுள் சம்பந்தமாகவோ, பொருளாதார முறை சம்பந்தமாகவோ, அரசியல் சம்பந்தமாகவோ ஏதாவது ஒரு கொள்கை மனித சமூக ஜீவகாருண்யத்திற்காவது சமத்துவத்திற்காவது ஏற்றதாய் இருக்கின்றதா? என்று பாருங்கள். இருந்தால்தானே சீர்திருத்தம் செய்வீர்கள்? மதம்-கடவுள் பொருளாளன் அரசன் இவர்கள் எல்லோரும் மக்களை வருத்தி வஞ்சித்துக் கொடுமைப்படுத்தி வாழும் மக்களாவார்கள். இவர்கள் எல்லோருமே ஒரு தாயின் வயிற்றுப் பிள்ளைகள். ஆளுக்கொரு வேலை பார்க்கின்றவர்கள். இவர்களுக்கு அனுகூலமாகவே எல்லாம் இருக்கின்றன. இவைகளில் எதை சீர்திருத்தம் செய்தாலும் செய்ய நினைத்தாலும்



RangaRakes tamilnavarasam.com

அவை இன்னும் வெகு காலம் நிலைத்திருப்பதற்கு தான் பயன்படுமே தவிர மாறுதலை உண்டாக்க முடியாது. இவைகள் எல்லாம் அழித்தொழிந்தால் ஒழிய கஷ்டம் நீங்கப்போவதில்லை.

உதாரணமாக "மகா விசேஷம்" பொருந்திய ஒரு (பேரூர்) தீர்த்தக் குளத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அது "ஒரு கடவுளால் உலகிலுள்ள மக்களின் சர்வபாவமும் நீங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட பொற்றாமரைக் குளமாய்" இருக்கலாம். அதன் புராணமானது "அக்குளத்து நீரில் ஒரு துளி மேலே பட்ட மாத்திரத்தில் சகல பாபமும் தீர்ந்து வெகு காலத்திற்கு சொர்க் கத்தில் இருக்கக் கூடிய மகத்துவமுடைய" தென்று கடவுளே சொன்னதாக இருக்கலாம். ஆனால் இன்றைய தினம் அக்குளத்து நீரில் ஒரு துளி மேலே பட்டால் சொரியும், ஊரலும், குஷ்டநோயும் உண்டாவதாய் இருந்தால் அதை நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் முனிசிபாலிட்டி என்ன செய்யும்? தண்ணீரை சுத்தமாக்க மருந்துகள் போடலாம் என்று சொல்லுவீர்கள். மருந்து கள் போட்டபின்னும் அத்தண்ணீரின் குணம் அப்படியே இருந்தால் என்ன செய்வீர்கள்? தண்ணீரை யெல்லாம் இரைத்து வெளியில் கொட்டி கிணற்றை சுத்தம் செய்வீர்கள். அந்தப்படி சுத்தம் செய்தபின்பும் அத்தண்ணீரின் குணம் அப்படியே இருந்தால் பிறகு என்ன செய்வீர்கள்? அக்கிணற்று நீர் ஊற்றமே விஷத்தன்மை பொருந்தியது என்று கருதி அக்குளத்தில் யாரையும் இரங்கச் செய்யாமல் செய்து குப்பை செத்தைகளைக் கொட்டி அதை மூடி விடுவீர்களா இல்லையா? இதைச் செய்யாமலிருந்தால் முனிசிபாலிட்டியாரையாவது பொது மக்களையாவது அறிவுடைய மக்கள் என்று நாம் கூறுவோமா?

ஆகவே மனித சமூகத்திற்கு தீங்கை இழைத்து வரும் விஷயம் கடவுள் சொன்னதானாலும், மதம் சொன்னதானாலும் அல்லது கடவுளும், மதமும், அரசாங்கமும் ஆனாலும் அவைகளை அழிக்கத் தைரியம் கொள்ள வேண்டும். நாம் எல்லோரும் வெகு காலமாகவே முன்னோர் காலந்தொட்டு மத சீர்திருத்த வாதிகளாகவும், கடவுள் சீர்திருத்த வாதிகளாகவும், ஒழுக்க சீர்திருத்த வாதிகளாகவும், அரச சீர்திருத்த வாதிகளாகவும் இருந்து பார்த்தாய் விட்டது. நமது முன்னோர்கள் காலம் தொட்டு ஆயிரக்கணக்கான வருஷங்களாய் சீர்திருத்தவாதிகளாய் இருந்தும் பார்த்தாய் விட்டது. எந்த துறையில் சீர்திருத்தமடைந்திருக்கிறோம். ஏழை "சீர்திருந்தமடைந்து" நாளுக்கு நாள் பட்டினியும், நோயும், இழிவும் அடைந்து கொண்டே போகி றான். பணக்காரனும் சோம்பேரியும் சீர்திருத்தமடைந்து நாளுக்குநாள் பெரும் பணக்காரனாகி, பிரபுவாகி, ஜமீனாகி, ராஜாவாகி தலைமுறை தலைமுறை ஜமீனும், ராஜாவுமாய் ஆகிக்கொண்டே போகின்றான். சீர்திருத்தத்தின் பலனைக் காண்பதற்கு இன்னும் வேறு என்ன உதாரணம் வேண்டும். ஆகவே ஏழைத்தன்மை, பணக்காரத்தன்மை என்கின்ற இரண்டு தன்மையும் உலகில் இருக்கக்கூடாது என்று அவைகளை அடியோடு அழிப்பது நல்ல வேலையா? அல்லது அத்தன்மைகள் எந்த ரூபத்திலாவது என்றும் இருக்கும்படி



சீர்திருத்தம் செய்வது நல்ல வேலையா? என்று யோசித்துப்பாருங்கள். அழிவு வேலைக்கு எதிர்ப்புத்தான் சீர்திருத்த வேலை என்பது. தீமைகளுக்கு காவல்தான் சீர்திருத்தம் என்பது. ஆகவே தீமைகளை அழிக்க வேண்டுமா னால் அவற்றின் காவல்களையும், காப்புகளையும் முதலில் நிர்த்தூளியாக்க வேண்டும்.

அரசனையானாலும், மதத்தையானாலும், கடவுளையானாலும், நாம் எதிர்ப்பதும், அழிக்க முற்படுவதுமான காரணமெல்லாம் இவை தீமைக்கு காவலாய் இருக்கின்றன என்கின்ற ஒரே நோக்கமேயல்லாமல் அவைகளிடம் நமக்கு பொறாமையோ, துவேஷமோ ஏற்பட்டதாலல்ல. ஏழ்மைக் கஷ்ட மில்லாமலும், பணக்காரக்கொடுமை இல்லாமலும், பார்ப்பன உயர் சாதி இல்லா மலும்-பறைய தாழ்ந்த ஜாதி இல்லாமலும் முதலாளி ஆதிக்கமில்லாமலும்- கூலி அடிமைத்தன்மை இல்லாமலுமிருப்பதற்கு ஆதாரமான மதம், கடவுள், அரசன், சட்டம், நீதி, தர்மம் ஆகியவர்களை நாம் அழிப்பதில்லை. அவை களைப்பற்றி நமக்கு கவலையே இல்லை. இவர்கள் விஷயத்தில் நாம் மதத் துரோகியோ, கடவுள் துரோகியோ, ராஜத்துரோகியோ சட்டம் மறுக்கவோ, அதர்மக்காரனாகவோ நாம் சிறிதும் விரும்பவில்லை.

ஏழை பணக்காரத்தன்மையையும் கீழ்மேல் ஜாதியையும், முதலாளி அடிமையையும் கொண்டதான நிலைமைகள் நடைபெற ஆதரவாயிருக்கும் கடவுள், மதம், அரசன், தர்மம், சட்டம் ஒழிந்தே ஆகவேண்டும். ஆதரவா யிருக்கும் கடவுள், மதம், அரசன் என்பவைகள் மாத்திரமல்ல இவைகளை அனுமதித்துக்கொண்டிருக்கும் அரசாங்கமும், நீதி, ஒழுக்கம், பழக்கம், வழக்கம் முதலியன என்பவையையும், நாங்கள் அழித்தே தீருவோம். ராஜத் துரோகி, கடவுள் துரோகி, மதத்துரோகி பூச்சாண்டிகள் இனி சுயமரியாதைக் காரர்களிடம் செல்லாது.

சுயமரியாதைக்காரர்களிடம் மாத்திரமல்ல, வெகு சீக்கிரத்தில் உலகத்தி லேயே அவைகளுக்கு இடமில்லாமல் போகப்போகின்றது. இது காலவரையும் கஷ்டப்படும் மக்கள் தங்கள் தலைவிதியின் மீதும், கடவுள் மீதும், பழி போட்டுக்கொண்டு தலைவிதியை மாற்றவும் கடவுள் தயவு பெறவும் என்று, மேலும் மேலும் கஷ்டப்பட்டுக்கொண்டே இருந்துவந்தார்கள். ஆனால் இப்போது சுயமரியாதைக்காரர்களால்-நாத்திகர்களால், கடவுள் மதத் துரோகி களால் ஜனங்கள் உண்மையை உணர்ந்து கொண்டார்கள். இவைகள் சோம் பேரிகளும், பணக்கார முதலாளிகளும் செய்யும் சூழ்ச்சியும், பித்தலாட்ட முமே யொழிய வேறல்ல என்றும், கடவுளும் மதமும் இந்த பித்தலாட்டக்காரர் கற்பனைகளே தவிர வேறு இல்லை என்றும் உணர்ந்துகொண்டார்கள். நன்றாய் உணர்ந்துகொண்டார்கள். இப்பொழுது இவைகளை எப்படி ஒழிப்பது? என்பதில்தான் கவலையாய் இருக்கிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

வேகமாய்ப் போகவேண்டிய – போவதற்கு தயாராய் இருக்கிற – மோட்டார் காருக்கு முன்னால் பனை மரத்தைக் கொண்டுவந்து போட்டது போல், இன்று கடவுளும், மதமும், அரசாங்கமும் குறுக்கே கொண்டு வந்து போடப்பட்டு இருக்கின்றன. இவை வெகு நாளையத்த கடவுளாய் இருந்தாலென்ன? அவதார புருஷர்களால் உண்டாக்கப்பட்ட மதமாய் இருந்தாலென்ன? சட்டப்படி அமைக்கப்பட்ட அரசாங்கமாய் இருந்தால் என்ன? ஒழிய வேண்டும் என்ற முடிவுக்கு வந்த பின் அவை தானாக ஏற்பட்டால் என்ன சட்டப்படி ஏற்பட்டால் என்ன? சும்மா ஏற்பட்டால் என்ன? ஒழியவேண்டுமா? வேண்டாமா? என்பது தானே முக்கிய விஷயம்.

## பொதுநலம்

அதுபோலவேதான் பொது நல சேவை என்பதும், மனித சமூக சம தர்மத்துக்கு விரோதமானதேயாகும். பொது நலம் என்றால் என்ன? எல்லோருக்குமே நன்மை செய்ய வேண்டுமென்பதுதான் அதன் பொருளாக முடியும். கொடுமைப்படுத்துகிற கூட்டத்துக்கும் – கொடுமைப்படுகின்ற கூட்டத்துக்கும் நன்மை செய்வதென்றால் அதனால் என்ன பிரயோஜனம் ஏற்படும். கஷ்டப்பட்ட – படுகின்ற கூட்டத்துக்குத் தான் நன்மை செய்ய வேண்டும்.

ஆகவே நாம் ஒரு கூட்டத்தாருக்குத்தான், ஒரு வகுப்பாருக்குத்தான் நன்மை செய்கின்றவர்களாவோம். அது மற்றொரு வகுப்பாருக்கு தீமையாய்த் தோன்றலாம். நமக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. திருடனுக்கும் திருட்டுக் கொடுப்பவனுக்கும் எப்படி நன்மை செய்ய முடியும். “திருட்டுப்புத்தியை விட்டுவிடு, இல்லாவிட்டால் விட்டு விடும்படி செய்வேன்” என்பதுதான் திருடனுக்குச் செய்யும் நன்மையாகும். இதை நன்மையாகத் திருடன் மதிப்பானா? ஆதலால் நமது சேவை ஒரு நாளும் பணக்காரனுக்கும், முதலாளிக்கும் நன்மையாய் காணமுடியாது. அவர்களுக்கு இனியும் நன்மை செய்வது என்பது நமது கொள்கையுமல்ல. ஆகவே நாம் பொதுநல சேவைக்காரரல்ல. நாம் புரட்சிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுவோம். நமக்கு சீர்திருத்தக்காரர்களும், பொதுநலசேவைக்காரர்களும் பெரிய விரோதிகளே யாவார்கள். புரட்சி ஆரம்பித்த காலங்களில்தான் சீர்திருத்தங்கள், பொதுநல சேவைகள் புறப்படும். எதற்கு? புரட்சிகளை அடக்குவதற்கு. ஆகையால் நாம் எந்த வித சீர்திருத்தவாதிகளுடனும் எந்த வித பொதுநலவாதிகளுடனும் சேராமல் தனித்து நின்றே புரட்சி செய்ய வேண்டும்.

## புரட்சி

தலை கீழாய் கவிழ்ப்பது தான் புரட்சியாகும். இதற்காக யாரும் பயப்படக்கூடாது. குழந்தைகளை பூச்சாண்டி பேர் சொல்லி மிரட்டுவது போல் நம்மையும் “புரட்சி என்று வாயில் சொல்லாதே, மனதினாலும் நினையாதே, வாய் வெந்துபோகும்” என்று பலர் சொல்லுவார்கள். இனி அந்தக் கதை பலியாது. புரட்சி செய்து வெற்றி பெற்ற தேசங்களையும், மக்களையும் பார்த்து விட்டோம். நாமும் சில விஷயங்களில் புரட்சி செய்தும் பார்த்துவிட்டோம். ஜாதிப் புரட்சி செய்தோமே என்ன ஆய் விட்டது? வெற்றி மார்க்கத்தில் செல்லுகிறோமா இல்லையா? மதப்புரட்சி செய்தோமே என்ன முழுகிப் போய் விட்டது? தத்துவார்த்தம் பேசி அதைக் காப்பாற்றப் பாடுபடுகின்றார்களே ஒழிய புரட்சி செய்தவர்களுக்கு என்ன ஆபத்து வந்தது? கோவில் நுழைவுப் புரட்சி என்ன ஆய் விட்டது? இப்போது அதுசட்ட சபைக்கு வந்து விட்டது. கோயிலுக்குள் விடுவதற்கு மனமில்லாதவனும்கூட நம்முடன் சேர்ந்து கொண்டு கோவிந்தா போட வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டானா இல்லையா? அரசியல் புரட்சியும் செய்கின்றோம். அரசனே வேண்டியதில்லை என்றும் சொல்லுகின்றோம். பல தேசங்களில் இப்புரட்சிகள் வெற்றி பெற்றும் இருக்கின்றன. இவற்றை நாமும் தைரியமாய் சொல்லவும் முன்வந்து விட்டோம். என்ன ஆய்விட்டது? நம்மைப் பொருத்தவரை இந்தப் புரட்சிகளை எல்லாம் நாம் ஏன் செய்தோம். ஏழை மக்கள் கஷ்டம் நீங்கவும் பாடுபடுகின்ற மக்களை சோம்பேரிகள் ஏய்த்து அவர்களது பலன்களை எல்லாம் அடையாமல் இருக்கவும் தான் செய்தோமே ஒழிய செய்கின்றோமே ஒழிய மற்றப்படி யாரிடமாவது குரோதமோ வெறுப்போ பொறாமையோ துவேஷமோ பலவந்தமோ மனதில் வைத்துச் செய்தோமா? என்று யோசித்துப் பாருங்கள். மனிதன் என்று ஒருவன் இருப்பானேயானால் அவன் முன் மற்றொரு மனிதன் கஷ்டப்படுவதைப் பார்த்தால் எவனும் பரிதாபப் பட்டுத்தான் தீருவான். சகிக்க முடியாத கஷ்டம் வந்து விட்டால் அவனுக்கு பாபமோ, நரகமோ, சட்டமோ, நீதியோ, பழக்கமோ, வழக்கமோ ஒன்றும் எதிரில் இருக்க முடியாது.

ஆதலால் இன்றைய நிலைமையானது சகிக்க முடியாத கஷ்டத்தாலும் வேறு அனேக வழிகளில் பார்த்துப்பார்த்து முடியாததாலும் ஏற்பட்டதாகும்.

நாம் அடுத்த ஜன்மத்தை நம்பி வெகுகாலம் வீணாக்கி விட்டோம். மேல் லோகத்தை நம்பி வெகுகாலம் வீணாக்கிவிட்டோம். தலைவிதியை நம்பி வெகு காலம் பாழாக்கி விட்டோம். ஒழுக்கத்தையும், நியாயத்தையும், சட்டத் தையும் நம்பி வெகு காலம் நாசமாக்கி விட்டோம். இப்போதும் தேசத்தையும், தேசீயத்தையும் நம்பி மறுபடியும் வெகு காலம் பாழாக்கி வருகிறோம். இவைகளை நம்புவது இவைகளுக்கு கட்டுப்படுவது இவைகளுக்காக பாடுபடுவது எல்லாம் முட்டாள்தனம் என்பதை உணர்ந்தோம். இனி மனித சமூக விடுதலைக்கும், ஒரு மனிதனை மற்றொரு மனிதன் அடக்கி அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்துவதை ஒழிப்பதற்கும், ஒரு மனிதனின் உழைப்பை மற்றொரு மனிதன் அனுபவித்துக்கொண்டு சோம்பேரியாய் வாழ்வதை அழிப்பதற்கும் பாடுபடவேண்டும் என்றுதான் சொல்லுகின்றேன்.



RangaRakes tamilnavarasam.com

இது குற்றமானால் இது பாபமானால் இந்தக் குற்றத்தையும், பாபத்தையும் குஷாலாக ஒவ்வொருவரும் செய்யவேண்டியதுதான் வரவேற்க வேண்டியது தான். ஆனால் நமது கருத்தும், செய்கையும் பரிதாபத்தை ஆதாரமாய்க் கொண்டதாகவும், குரோதத்தையும், பலாத்காரத்தையும் வெறுத்ததாகவும் இருக்க வேண்டுமெயொழிய மற்றபடி வீண் அர்த்தமற்ற ஆத்திரத்தையும், துவேஷத்தையும், முரட்டுத் தனத்தையும் குறிகொண்டதாய் இருக்கக் கூடாது.

*குறிப்பு: 30.01.1933 இல் கோவை சுயமரியாதைச் சங்கத்தாராலும் மற்ற சங்கத்தாராலும் வழங்கிய உபசாரப் பத்திரத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 05.02.1933**



# தீண்டாமை விலக்கு இரகசியம்

இது சமயம் இந்தியாவில் நடைபெற்று வரும் "தீண்டாமை விலக்கு" வேலையானது தீண்டாதாரெனக் கருதப்படும் மக்களுக்கு சமூக வாழ்விலுள்ள சகலவித கஷ்டத்தையும் ஒழிப்பதற்காக ஏற்பட்டதல்லவென்றும் அதுவெரும் இந்து மத பிரசாரத்திற்காகவே துவக்கப்பட்டு, அந்த முறையிலேயே நடந்து வருகின்ற தென்றும் இதற்கு முன் பல தடவைகளில் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம்.

உண்மையான தீண்டாமை விலக்கு என்பது மனித சமூக ஜீவ காருண்யத்தையும் எத்துறையிலும் சமதர்ம தத்துவத்தையும் கொண்டதே ஒழிய அது எந்த விதமான மத சம்பந்தத்தையும் கொண்டதல்ல வென்பதே நமது துணிபு. அன்றியும் அது பெரிதும் பகுத்தறிவையும், சுகாதாரத்தையும், சமதிருஷ்டியையும் மாத்திரமே கொண்டு யோசிக்கப்பட வேண்டியதே தவிர, மற்றபடி வேறு எந்த விஷயத்தையும் பற்றி கவனிக்க அதில் சிறிதும் இடமில்லை என்பதும் நமது துணிபாகும். ஆனால், இன்று நடைபெறும் தீண்டாமை விலக்கு பிரசாரம் என்ன கருத்தின் மீது என்ன ஆதாரத்தின் மீது நடைபெறுகின்றது என்பதைச் சற்று சிந்தித்துப்பாருங்கள்.

முதலாவதாக, இந்தப் பிரச்சினை இப்போது இவ்வளவு தூரம் விளம்பரப்படவும், முக்கியமானதாய்க் கருதப்படவும் ஏற்பட்ட காரணம் என்ன? என்பதை சற்று யோசிப்போம். அதாவது, சென்ற வருஷம் நடந்த சட்ட மறுப்பு மறியல் கிளர்ச்சிகளின் போது ஆங்காங்குள்ள தேசியத் தலைவர்கள் என்பவர்களை தீண்டப்படாத மக்கள் என்பவர்களும், அவர்களுக்காக வேலை செய்து வருபவர்களும் சில கேள்விகள் கேட்டதும் அதற்கு அத்தேசியத்தலைவர்கள் பதில் உரைத்ததும் யாவரும் அறிந்ததேயாகும். என்ன வென்றால் "ஐயா தேசிய தலைவர்களே! தேசிய வாதிகளே!! சிறிது காலத்திற்கு முன் தீண்டாமை ஒழியாமல் இந்தியாவுக்கு சுயராஜ்யம் வராது என்றும், வந்தாலும் நிலைக்காது என்றும் சொன்னீர்களே! இப்போது தீண்டாமையைப் பற்றிய பேச்சை அடியோடு மறந்து விட்டு வேறு எது ஏதோ பேச்சுப் பேசுகிறீர்களே இதன் மர்மம் என்ன"? என்று கேட்ட காலத்தில் தோழர் காந்தியார் உள்பட "இப்போது தீண்டாமை என்பது அவ்வளவு



RangaRakes tamilnavarasam.com

முக்கியமானதல்ல, சுயராஜியமே முக்கியமானது. ஏனெனில் சுயராஜியம் வந்துவிட்டால் தீண்டாமையை ஒரே ஒரு உத்தரவில் ஒழித்துவிடுவோம். ஆதலால் இப்போது உப்புக் காய்ச்சுவதும், மதுவிலக்கு மறியல் செய்வதும், அன்னியத் துணி விலக்கு மறியல் செய்வதுமே தான் முக்கியமான காரியம்" என்று சொல்லி வந்ததும் அதற்கு தீண்டப்படாத மக்களும் அவர்களது அனுதாபிகளும் பதில் சொல்லுகையில்,

"தீண்டாமையை சுயராஜியம் வந்த பிறகு ஒரு உத்திரவில் ஒழித்து விடக்கூடுமானால் உப்பு வரியையும், கள்ளுக்கடைகளையும், அன்னியத் துணிகளையும் ஒரு உத்திரவில் ஒழித்து விட முடியாதா" என்று கேட்டதும் வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

இந்தக் கேள்விக்கும் பதில் சொல்லும் முறையில் தோழர் ராஜ கோபாலாச்சாரியார் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்போது "எந்தெந்த விஷயத்தை எவ்வெப்பொழுது கவனிப்பது என்பதான காரியங்கள் காந்தி யாருடைய இஷ்டத்தைப் பொருத்ததாகையால் அதைப் பற்றி நாங்கள் ஒன்றும் பதில் சொல்ல முடியாது" என்று பதில் சொன்னதும் வாசகர்கள் அறிந்ததேயாகும்.

இப்படி இருக்க உப்புவரி நீக்கப்படாமலும், கள்ளுக்கடை எடு படாமலும், அன்னியத்துணி நிறுத்தப்படாமலும் இருக்கும்போதும், சுயராஜ்யம் ஏற்படாமல் இருக்கும்போதும் இப்போது திடீரென்று தீண்டாமை விலக்குக்கு ஏற்பட்ட அவசரமென்ன? என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள்.

தீண்டப்படாத மக்களுக்கும், அவர்களிடம் உண்மையான அனுதாபம் உள்ளவர்களுக்கும், தீண்டாமை விலக்கு விஷயத்தில் காங்கிரசினிடமும், தேசியத்தலைவர்கள் என்கின்றவர்களிடமும் இருந்த நம்பிக்கையானது அடியோடு மறைந்துபோய் அவர்கள் "புற மதஸ்தர்" களையும் அரசாங்கத் தாரையும் அடைக்கலம் புக உறுதி செய்து கொண்டு சிலர் புறமதம் புகுந்தும், அரசாங்கத்தாரிடம் தங்களுக்கு தனிப்பிரதிநிதித்துவம் கேட்டும் அது பெறுவதற்காக புற மதஸ்தர்கள் என்பவர்களுடன் சில ஒப்பந்தம் செய்து கொண்டும் தைரியமாய் வெளிக் கிளம்பியதுடன் தீண்டாதார் தலைவர்கள் என்பவர்களும் தீண்டாதாருக்குத் தலைவர் என்றும் இந்தியர்களுக்கும் ஏக தலைவர் என்றும் சொல்லிக்கொள்ளப்பட்ட காந்தியாரையே "நீர் எங்க ளுக்குத் தலைவருமல்ல பிரதிநிதியுமல்ல நாங்கள் உங்களை தலைவராகவோ பிரதிநிதியாகவோ ஏற்றுக்கொள்வது மில்லை" என்று லண்டன் வட்ட மேஜை மகாநாட்டில் உலகோரறிய கர்ஜ்ஜனை புரிந்ததோடல்லாமல் வெகு கடுமை யாகத் தாக்கி பேசியும், அதாவது காந்தியாரைப்பார்த்து "நாங்கள் ஒருவரை எங்கள் பிரதிநிதி அல்ல என்று சொன்ன பிறகும்கூட சிறிதும் வெட்கமில்லா மல் மறுபடியும், மறுபடியும் எங்கள் பிரதிநிதி என்று பாத்தியம் கொண்டாடு



வது ஒழுங்கானவர்களுக்கு அழகல்ல" என்றும் சொன்னதும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும்.

இப்படிச் சொன்ன பிறகே அரசாங்கத்தார் காந்தியார் தடுத்ததையும் லட்சியம் செய்யாமல் தீண்டாதாருக்கு தனிப் பிரதிநிதித்துவம் கொடுத்து தீண்டப்படக் கூடாதவர்களுக்கே தங்களது தீண்டாமையை நீக்கிக்கொள்ள அவகாசம் ஏற்படுத்திவிட்டதும் வாசகர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

இவ்வளவும் தவிர இந்த இரண்டு வருஷகாலத்தில் சென்னை மாகாணத்திலும், சுதேச சமஸ்தானங்களிலும் மாத்திரம் ஆயிரக்கணக்கான தீண்டப்படாத பேர்கள் என்பவர்கள் இந்துமதம் என்பதைவிட்டு விட்டு புற மதங்கள் என்பவைகளைத் தழுவிக்கொண்டதும், இந்து மதத்தில் இருந்த வர்களிலும் அனேகர் தங்களுக்கு "மதமும் வேண்டாம், கோவிலும் வேண டாம், கடவுளும் வேண்டாம்" என்று சொன்னதும் அந்தப்படியே பலபல மகாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதும், இந்த தீர்மானங்கள் இந்தியா தேசம் முழுவதும் அனேகர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டும், பிரசாரங்கள் செய்யப்பட்டும், வெற்றி முரசுகள் அடிக்கப்பட்டதும் வாசகர் களுக்குத் தெரியும்.

இவ்வளவு அல்லாமல் மற்றும் ஒரு பெரிய கிளர்ச்சி அதாவது, "காங்கிரசும், தேசீயமும், காந்தீயமும், பணக்காரர்களுக்கும், மேல் ஜாதிக்காரர் களுக்கும், படித்த மக்களுக்குந் தான் பிரதிநிதித்துவம் பொருந்தியதே யொழிய ஏழைகளுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், குடியானவர்களுக் கும், தொழிலாளிகளுக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்ல"வென்று சொல்லி, காங்கிரசு ஒழிய வேண்டும், காந்தீயம் ஒழிய வேண்டும் என்று காந்தியார் முன்னிலையிலேயே கோஷமிடப்பட்டு, கருப்புக்கொடி பிடித்ததும் அவருக்கே கருப்புமாலை போட்டதும் ஆகிய காரியங்களும், வாசகர் களுக்கு நினைவிருக்கும்.

ஆகவே இவ்வளவு காரியங்களும் நடந்த பிறகும், மற்றும் தேசீயத் தலைவர்களுக்கு இதுசமயம் வேறு எந்தவிதமான கிளர்ச்சியும் மும்முரமாய்ச் செய்ய முடியாமல் போனபிறகும் தான் "தீண்டாமை விலக்கு" – "ஹரிஜன சேவை" – "கோவில் பிரவேசம்" ஆகிய காரியங்கள் தாண்டவமாடுகின்றன. அதுவும் எதற்காக என்றால் மதத்துக்காக என்றும், அதிலும் இந்துக்கள்தான் இதில் ஈடுபட வேண்டும் என்றும் இது கலப்பற்ற மதப்பிரசாரமே என்று பெயரிட்டும், வரையறுத்தும் கிளர்ச்சிகள் செய்யப்படுகின்றன.

பிரசார முறைகள் எப்படியிருக்கின்றன? என்று பார்த்தாலோ அவை தீண்டாமைக்கு மதத்தில் ஆதாரமில்லை என்று ஒருவர் சொல்லுவதும், தீண்டாமைக்கு மதத்தில் ஆதாரமிருக்கின்றது என்று மற்றவர்கள் சொல்லு வதும், தீண்டாமை ஒழிந்தால் ஜாதி முறை கெட்டுப்போகும் என்று ஒருவர்



RangaRakes tamilnavarasam.com

சொல்லுவதும், தீண்டாமை ஒழிந்தால் ஜாதி முறை கெடாது என்று மற்றவர் சொல்லுவதும், தீண்டாமை ஒழிந்தால் வருணாச்சிரம முறை ஒழிந்துவிடும் என்று ஒருவர் சொல்லுவதும் தீண்டாமை ஒழிந்தால் வருணாச்சிரம முறை அழியாது என்று ஒருவர் சொல்லுவதும், தீண்டாமை பாராட்டாவிட்டால் கோவில்களின் பரிசுத்தத்தன்மை கெட்டு விடும் என்று ஒருவர் சொல்லுவதும், பரிசுத்தத்தன்மை கெட்டு விட்டால் சுத்தம் செய்து கொள்ளலாம் என்று மற்றவர்கள் சொல்லுவதும் இன்னும் இதுபோன்ற பிற்போக்கான முறைகளில் தான் பிரசாரங்கள் நடைபெற்று வருகின்றன.

தோழர் காந்தியவர்களே மாடுதின்பவர்கள் கோவிலுக்குள் பிரவே சிக்கத் தகுதியற்றவர்கள் என்றும் தீண்டாதவர்கள் கோவிலுக்குள் சென்று வந்த பிறகு கோவிலை சுத்தி செய்ய வேண்டுமென்பதை அனுமதித்தும் ஜாதி முறைகளையும் வருணாச்சிரம பிரிவுகளையும், தொழில்களையும் ஆதரித் தும் பேசி அவைகளைப் பலப்படுத்தி வருவதும் யாவரும் அறிந்ததே தவிர மற்றபடி யாரும் இதைக் கற்பித்துச் சொல்லுவதல்ல.

மற்றும் தீண்டாமை ஒழிக்க சட்டம் செய்ய இந்திய சட்ட சபையில் மசோதா கொண்டு வந்து விளம்பரம் பெற்ற தோழர் சி. எஸ். ரங்கையர் அவர் களுக்கும் தன்னுடைய மசோதாவால் வருணாச்சிரம முறையும், ஜாதி பாகு பாடு முறையும் கெடாதவாறு பார்த்துக்கொள்ளுவதாக டில்லி தீண்டாதார் மகா நாட்டுத் தலைமை உரையில் சொல்லியிருக்கிறார். இதுவும் இவ்வார தினசரி களில் காணப்படுகின்றனவேயொழிய நாமாகக் கற்பித்துக் கூறுபவையல்ல.

மற்றும் தோழர் பண்டித மாளவியா அவர்கள் தமது தீண்டாமை விலக்குத் திட்டத்தில் தீண்டாதார்களுக்குப் பூணூல் போட வேண்டுமென்றும், பிராயச்சித்தம் செய்ய வேண்டுமென்றும், பழைய மாமிசம் மாட்டு மாமிசம் சாப்பிடக்கூடாதென்றும், சாராயம் குடிக்கக்கூடாது என்றும், துளசி மாலை அஷ்டாக்ஷர மந்திரம் அல்லது ருத்திராக்ஷ பஞ்சாட்சரமந்திரம் ஆகிய ஏதாவதொரு மந்திரமும், தீக்ஷையும் பெற்று இருக்க வேண்டுமென்றும், ஸ்நானம், ஜபம், தபம் முதலியவைகள் செய்யவேண்டுமென்றும், இவை களுக்குக் கட்டுப்பட்டு தீண்டாதார்களுக்கு ஆலயப்பிரவேசம் கொடுக்க லாமென்றும், திட்டம் போட்டிருக்கிறார்கள்.

மற்றும், தோழர் ராஜகோபாலாச்சாரியாருடைய தீண்டாமை பிரசாரத் திலும் “ நந்தன்” “திருப்பாணன்” ஆகியவர்களின் உதாரணத்தைச் சொல்லி அவர்கள் கோயில் பிரவேசம் பெற்ற நிபந்தனையைக்காட்டி பிரசாரம் செய்வதுமான முறையிலேயே தீண்டாமை விலக்கும் ஹரிஜன சேவையும் கோயில் பிரவேசக் கிளர்ச்சியும் நடைபெறுகின்றன. இவைகளை நன்றாய் கூர்ந்து யோசித்துப் பார்த்தால், இந்த சேவைகளிலும், கிளர்ச்சிகளிலும் உண்மையான தீண்டாமை விலக்கு என்பதின் வாசனையாவது காணப் படுகின்றதா என்று கேட்கின்றோம்.



சுயமரியாதைக்காரர்கள் தீண்டாமை விலக்கு கிளர்ச்சியில் காங் கிரசுக்காரருடன் சேர்ந்து ஒத்துழைக்கவில்லை என்று சில இடங்களில் காங்கிரசுக்காரர்களாலும் பாமரமக்களாலும் பழி கூறப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது. உண்மையான-நாணையமான தீண்டாமை விலக்குக்காரர் களுக்கு இந்த மாதிரியான மேல் கண்ட சூட்சிக் கிளர்ச்சியில் சேர மனம் வருமா என்பதை சற்று நிதானமாய் யோசித்துப் பார்க்கும்படியாய் வேண்டு கின்றோம். ஒரு மனிதனை, ஒருமனிதன் தீண்டக்கூடாது என்பதற்கு என்ன காரணம்? என்று கேட்டு அதற்கு தகுந்த நியாயத்தை எடுத்துச் சொல்லுவதை விட்டு விட்டு வருணாச்சிரமம் ஜாதிமுறை மாட்டு மாமிசம், பஞ்சாட்சரம், அஷ்டாச்சரம், நந்தன், பாணன் ஆகிய பேச்சுகளும் நிர்ப்பந்தங்களும் நிபந்தனைகளும் ஏன் பேசப்பட வேண்டும்? என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

இது சமய சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் மதத்தையும் ஜாதி யையும் காப்பாற்றும் வேலையைச் செய்வது என்கின்ற சூட்சியே தவிர மற்ற படி இதில் உள்ள நாணையமோ நன்மையோ என்ன இருக்கின்றது? மதங் களால், ஜாதிகளால் நாட்டிற்கும் மனித சமூகத்திற்கும் ஏற்பட்ட கெடுதிகளை உணர்ந்து அவைகளை ஒழித்து மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கருதியிருக்கின்ற மக்கள் இந்த சூட்சிக் கிளர்ச்சியில் சேர முடியுமா என்பதை மறுபடியும் யோசியுங்கள்.

உலக நடப்புக்கு சமூக வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு கொள்கையோ, திட்டமோ வேண்டாமா என்றால், வேண்டும் என்றே நாமும் ஒப்புக் கொள்ளு கிறோம். ஆனால் அது எல்லோருக்கும் சமமாய் இருக்க வேண்டும் என்றுதான் சொல்லுகின்றோம்.

ஆகவே, மேற்கண்ட எல்லோருக்கும் சமமான திட்டம் என்பது இந்தத் தீண்டாமை விலக்கு கோவில் பிரவேசக்கிளர்ச்சி ஹரிஜன சேவை ஆகிய வைகளில் கடுகளவாவது இருக்கின்றதா என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

மேலும் இன்று நடக்கும் மேல்கண்ட கிளர்ச்சிகள் எதற்காக, எதுவரை நடக்கப்போகின்றது என்பதை சற்று கவனித்தோமானால் உண்மை விளங்கி விடும். அதாவது தீண்டப்படாத மக்களின் தனித்தொகுதி வாயில் மண்ணைப் போடவும் (போட்டாய் விட்டது) மற்றும் இந்த முடிவு (ராஜிமுடிவு) ஆட்சேபிக் கப்படாமல் சட்ட மூலமாய் உறுதிப்பட்டு வெளியாகும்வரை தீண்டப்படாத மக்களுக்கு ஏதோ பிரமாதமான நன்மைகள் செய்யப்போவதாகக் காட்டவும், அவர்கள் தங்கள் தனிப்பிரதிநிதித்துவம் போய்விட்டதை ஞாபகத்துக்கு கொண்டு வந்து கவலைப்படாமல் இருக்கவும், ஆன காரியங்களுக்காகவே இவை நடைபெறுகின்றன. அன்றியும் அரசியல் சீர்திருத்த சம்பந்தமாய் காங் கிரசின் கூப்பாடுகளுக்கு விரோதமாய் மகமதியர்களோ, கிறிஸ்துவர்களோ, தீண்டப்படாதார்களோ தட்டிப்பேசாமல் இருப்பதற்காக சர்வ கட்சி மகாநாடு,



RangaRakes tamilnavarasam.com

இந்து முஸ்லீம் மகாநாடு, தீண்டாமை விலக்கு வேலை ஆகியவைகள் மூலம் அமுத்தி வைக்கவும், ஆன காரியங்களுக்கே இவை நடைபெருகின்றன. அரசியல் சீர்திருத்தம் என்பது வெளியாகி அது உறுதியானவுடன் "கையை வளை பார்ப்போம்" என்று இந்த காங்கிரசுக்காரரும், மேல்ஜாதிக்காரரும் சொல்லப்போகின்றார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆகையால் மதமும், ஜாதியும், மனிதசமூக முன்னேற்றத்திற்கும், ஒற்றுமைக்கும், சமத்துவத்திற்கும் விரோதமாய் இருக்கின்றன என்று கருதியவர்கள் எவரும் இன்றைய தீண்டாமை விலக்குக்கும், மத நடுநிலைமைக்கும், மத ஒற்றுமை மகாநாட்டிற்கும் சிறிதும் சம்மந்தம் வைத்துக்கொள்ள முடியாத நிலைமையிலேயே இருக்கிறார்கள் என்பதோடு மாத்திரமல்லாமல் அதன் உள் அந்தரங்கங்களையும் , அவற்றின் பலாபலன்களையும் வெளியில் எடுத்துச்சொல்ல வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள்.

**குடி அரசு - தலையங்கம் - 05.02.1933**



# வருந்துகிறோம்

சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டு சதா உழைத்துவரும் மாயவரம் தோழர் சி. நடராஜன் அவர்களது அருமைத் தாயாரும் நாளது 1-2-33 தேதி காலை மரணமடைந்த சேதி கேட்டு வருந்துகிறோம். சென்ற 7, 8 மாதங்களுக்கு முன்புதான் தோழர் நடராஜனது தந்தையாரும், அவரது சகோதரியும் காலஞ்சென்றார்கள். அம்மையாரவர்கள் அன்று முதல் தனது கணவன் இறந்த துக்கத்தாலும், குமாரத்தி இறந்த துக்கத்தாலும் ஆழ்ந்தவராகி அதே கவலையாய் இருந்து இம்மாதம் முதல் தேதி காலமாகி விட்டார். இதெல்லாம் அதிசயமற்ற காரியமாயினும், இயற்கையேயாயினும் தந்தையையும், தாயையும் 8 மாத காலத்தில் பரி கொடுக்க நேர்ந்த தோழர் நடராஜனவர்களைப் பற்றியும், அவரது இளைய சகோதரரான சப் ரிஜிஸ்டரார் தோழர். சி. சுப்பையா பி. ஏ. அவர்களைப் பற்றியும் அனுதாபப்படாமல் எவரும் இரா. அம்மையாரவர்கள் கடைசிவரையிலும் மாயவரம் செல்லும் சுயமரியாதைத் தொண்டர்களுக்கும், அன்பர்களுக்கும் பொங்கிப் பொங்கிப் போடுவதில் சிறிதும் சலிப்பில்லாமல் சந்தோஷத்துடனேயே உபசரிப்பார்கள். பெரும்பான்மையான தொண்டர்களுக்கு மாதக்கணக்காய் இளைப்பாருவதற்கு மாயவரம் தோழர் நடராஜன் அவர்கள் வீடு ஏற்றதாய் இருந்துவந்ததற்கும் காரணம் இந்த அம்மையாரின் அன்பு நிறைந்த உபசாரமேயாகும். அப்படிப்பட்ட அம்மையார் காலமானதானது மிகவும் விசனிக்கத்தக்கதாகும்.

தோழர்கள் நடராஜனும், சுப்பையாவும், அவர்களது சிறிய தந்தையார் முத்தையாவும் இயற்கையை செவ்வனே உணர்ந்த ஞானவான்களானதால் அவர்களுக்கு உலக வழக்கப்படியான ஆறுதல் தேவையில்லை என்றே கருதுகிறோம்.

**குடி அரசு - இரங்கலுரை - 05.02.1933**



RangaRakes
tamilnavarasam.com

# "காந்தியின் மிரட்டல்"

காந்தியவர்கள் "உயிர் விடுகிறேன்! உயிர் விடுகிறேன்" என்று சர்க்காரை மிரட்டலாம், தாழ்த்தப்பட்ட வகுப்பாராகிய தீண்டப்படாதார் என்பவர்களை மிரட்டலாம். ஆனால் பார்ப்பனர்களை மாத்திரம் மிரட்ட முடியாது. ஏனென்றால் இந்த 'மகாத்மா' உயிர்விட்டால் அவருக்கு சமாதி கட்டி, குருபூஜை, உற்சவம் செய்யச் செய்து விட்டு அதன் பேராலும் பலருக்கு பிழைப்பு ஏற்படுத்திக் கொண்டு மற்றொரு மகாத்மாவையும் சிருஷ்டி செய்து கொள்ள அவர்களால் முடியும். ஆதலால் காந்தி மிரட்டல் பார்ப்பனர்களிடம் மாத்திரம் செல்லாது. ஆகையால் காந்தி மகாத்மா பட்டம் நிலைக்க வேண்டு மானால் ஹரிஜன சேவையை விட்டு விட்டு "மதத்திற்காகத்தான் சுயராஜியம் கேட்கின்றேன்" என்று உப்புக் காய்ச்சும் வேலைக்கோ, ராட்டினம் சுத்தும்படி செய்யும் வேலைக்கோ, ஏழைகள் பணக்காரர்களைப் பார்த்து பொறாமைப் படக் கூடாது என்ற உபதேசம் செய்யும் வேலைக்கோ திரும்புவது தான் நல்ல யோசனையாகும். இல்லா விட்டால் எப்படியாவது ராஜி செய்து கொள்ளுவது எல்லாவற்றையும் விட நல்லதாகும்.

**குடி அரசு - கட்டுரை - 05.02.1933**



# உள்ள கோவில்கள் போறாதா ?

இன்று இந்தியாவில் பத்து லட்சக்கணக்கான கோவில்கள் இருக்கின் றன. அவைகளில் அனேகம் குட்டிச் சுவர்களாக மாறி கழுதைகள் போய் ஒண்டுவதற்குக்கூட லாயக்கில்லாத நிலையில் இருக்கின்றன. இனி இருக்கவும் போகின்றன. இப்படி இருக்கையில் கல்கத்தாவில் புதிதாக ஒண்ணரை லட்சம் ரூபாய் செலவு செய்து ஓர் புதுக்கோயில் கட்டி அதில் ஆதிதிராவிடர்களை அனுமதித்திருக்கிறார்களாம். இதை தேசியப்பத்திரிகைகள் போற்றுகின்றன. இது என்ன அக்கிரமம்? எவ்வளவு முட்டாள்தனம்? என்பதையோ சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம். பழய கோவில்களில் ஆதித்திராவிடர்களை விட வில்லையானால் அதற்காக புதுக்கோவில்கள் கட்டுவது பித்தலாட்டமான காரியமா? அல்லவா? தீண்டப்படாதவர்களுக்குக் கோவில் பிரவேசம் மறுப்பது உயர்வு தாழ்வு பேதத்தைக் காட்டுவதாய் இருக்கின்றதே என்று சொன்னால் அதற்கு பதில் புதுக்கோவில் கட்டி அவர்களுக்குப் பிரவேச மளித்துவிட்டால் உயர்வு தாழ்வு ஜாதி வித்தியாசம் ஒழிந்து விடுமா என்று கேள்க்கின்றோம். தேசீயம் என்ற பித்தலாட்ட சூழ்ச்சி என்று ஆரம்பமானதோ அன்று முதல் இன்றுவரை தேசீயத்தலைவர் முதல், வாலர்கள் வரையில் ஒவ்வொரு விஷயத்திலும் இந்தமாதிரியான சூழ்ச்சிகளும், பித்தலாட்டங் களுமே நடைபெற்று மக்களையும், முழு மூடர்களாக்கி வருகின்றது. என்றுதான் இந்த புரட்டுகளும், கேடுகளும் ஒழியுமோ?

**குடி அரசு - செய்தி விளக்கக் குறிப்பு - 05.02.1933**



RangaRakes
tamilnavarasam.com

# புதுமை! புதுமை!!
# என்றும் கேட்டிராத புதுமை!!!

**– சித்திரபுத்திரன்**

புதுமை! புதுமை!! என்றும் கேட்டிராத புதுமை!!! என்றால் என்ன?

முதலாவது:– வெகுநாளாய் மறைந்திருந்த சித்திரபுத்திரன் திடீரென்று தோன்றியது ஒரு புதுமை.

இரண்டாவது:– சித்திரபுத்திரன் வெளியிடப் போகும் சேதி ஒரு புதுமை.

மூன்றாவது:– வேடிக்கை புதுமை என்ன வென்றால்,

தோழர்களே! கும்பகோணத்தில் நடைபெறப்போகும் மகாமக விசேஷத்தில் ஒரு புதுமையான வியாபாரம் நடைபெறப் போகின்றது.

தேசத்தில் பஞ்சம்! பஞ்சம்!! பணப்பஞ்சம்!!! நில்லு நில்லு யாருக்கு பஞ்சம்?

சோற்றுக்கு இருந்தால் மாத்திரம் போதாது. நாடகத்துக்கு பணம் வேண்டாமா? குடிக்கிறதுக்கு பணம் வேண்டாமா? கூத்தியாளுக்கு பணம் வேண்டாமா? மோட்டாருக்கு பணம் வேண்டாமா? இந்த இழவுகள் எல்லாம் எப்படியோ போகட்டும் என்றால் எலக்ஷனுக்காவது பணம் வேண்டாமா? நில்லு நில்லு ஒரு சங்கதி என்னவென்றால் எலக்ஷனுக்கு பணம் என்னத் துக்கு? செலவு செய்த பணம் மெம்பர்–பிரசிடெண்ட் உத்தியோகம் கிடைத்த வுடன் சம்பாதித்து ஆன செலவும் போக மீதியும் ஏற்படுமே அதை ஏன் இதில் சேர்க்கிறாய் என்று கேட்பீர்கள். அது சரியான கேள்வியாகாது. ஏனெனில் தோற்றுப் போகிறவர்களுக்கும் செலவாகும். பிரசிடென்ட் போட்டி சேர்மன் இல்லாவிட்டால் மெம்பர்களுக்குப் பணம் கிடையாது. மற்றும் பல காரணத் தாலும் எலக்ஷன் செலவு உண்டு. சிநேகிதனுக்காக என்று எத்தனை பேர் “இதாவது ஒரு வேலை கிடைத்ததே” என்று வீட்டுப் பணத்தை பாழாக்கு கிறவர்கள் எவ்வளவு பேர்? ஆகவே பல வழிகளிலும் மிராசுதார்களுக்க



பணம் வேண்டியிருக்கிறது. கல்யாணத்தை வேண்டுமானாலும் பணத்துக்காக கொஞ்சநாள் தாமதிக்கலாம், இழவுக்கு ஒரு நாளாவது பொருக்க முடியுமா? ஆகையால் அதற்கும் வேண்டியிருக்கிறது.

போதாக் குறைக்கு சர்க்காரும் சுயமரியாதைக்காரன் பேச்சைக் கேட்டுக்கொண்டு திரிகின்றது. நில்லு நில்லு. சந்தடி சாக்கில் இதென்ன புது சங்கதி? என்று கேட்கலாம். விசேஷம் ஒன்றும் இல்லை. தஞ்சாவூர் மிராசு தாரர்கள் மேற்கண்ட செலவை யெல்லாம் உத்தேசித்து நெல்லு கலம் 0–14–0 அணா ஆகிவிட்டதால் சர்க்காருக்குக் கிஸ்தி கட்ட பணமில்லை என்று கருதி “மிராசுதார் கூட்டம் போட்டு” “தீர்மானம் நிறைவேற்றி” கிஸ்து குறைக்க வேண்டும்; வசூலுக்கு வாய்தா கொடுக்க வேண்டும் என்றெல்லாம் கேட்டார்கள். இதைக் கண்ட சுயமரியாதைக்காரன் பிச்சை போடா விட்டாலும் நாயை இஸ்கே படுத்தி விடாமலாவது இல்லாமல் “என்னத்துக்காக வரி தள்ள வேண்டும். குடிக்கும் கூத்திக்கும் வைதீகத்திற்கும் செலவுக்குப் பணம் இல்லாவிட்டால் அதற்கு சர்க்காரார் பொருப்பாளியா? கண்டிப்பாய் யாருக்கு வரி குறைத்தாலும் தஞ்சாவூருக்கு மாத்திரம் வரி குறைக்கக்கூடாது” என்று சர்க்காருக்கு கம்பி இல்லாத தந்தி பேசி கடைசியில் “கூட்டமும்” “தீர்மான மும்” குப்பைத் தொட்டியில் போடும்படி செய்து விட்டார்களே. இந்த சு.ம.காரருடைய நன்றி கெட்டத்தனம் எவ்வளவு என்று பாருங்கள். சு.ம. வுக்கு வேலை செய்கிற வெட்டி ஆள்கள் எல்லாம் தஞ்சாவூர் ஜில்லாக்காரர். இதனால் வெகுகுடும்பம் கெட்டுப்போய் வெகு பேர்கள் சோம்பேரிகளாகி விட்டார்கள். சு.ம. காரனை வண்டியில் வைத்து முதல் முதல் இழுத்தவர்கள் தஞ்சாவூர் ஜில்லாக்காரர்கள். தஞ்சாவூர் ஜில்லாக்காரர் தான் 6 குதிரை கட்டி இழுத்தவர்கள். தஞ்சாவூர் ஜில்லாகாரர்தான் சு.ம. காரன் வீட்டு சுவற்றில் ஒரு சதுர அடி சுவறுகூட கண்ணுக்குத் தெரிய மார்க்கமில்லாமல் வீட்டுக்கார அம்மாள் கோபப்பட கோபப்பட சுவரெல்லாம் ஆணி அடித்து மாட்டி இருக்கும் “உபசாரப் பத்திரம்” எல்லாம் முக்கால் வாசி முனிசிபாலிட்டி உள்பட தஞ்சாவூர் ஜில்லாக்காரருடையது தான், இன்னும் என்ன என்னமோ இவ்வளவும் இருக்க தஞ்சாவூருக்கு வரி குறைக்க வேண்டாம் என்றால் இது எவ்வளவு நன்றிகெட்ட தனம் – உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கும் தனம் என்று பலர் கேள்கக்கூடும். இதைப் பற்றி பிறகு பேசிக் கொள்ளலாம்.

இது எப்படியோ இருக்கட்டும் எடுத்த சங்கதியை விட்டு விட்டு சித்திர புத்திரன் எங்கெங்கோ வாய் வைத்து விட்டான் என்ற இலக்கணப் பிழை ஏற்படாமல் பழைய சங்கதிக்குப் போகலாம்.

ஆகவே இப்படிப் பட்ட பஞ்ச காலத்தில் ஒரு புதுமையான வியாபாரம் நடைபெறப் போகின்றது. என்ன அநியாயம்! என்ன அநியாயம்!! என்ன அநியாயம்!!! மனதில் நினைக்கவே பயமாய் இருக்கிறது, வாயில் பேசவே பயமாய் இருக்கிறது. எப்படிதான் உலகமறிய கையில் எழுதுவது என்று



RangaRakes tamilnavarasam.com

தோன்றுகின்றது. ஆனாலும் புதுமையை வெளிப்படுத்தாத பத்திரிகை இருந்தென்ன? செத்தென்ன? இந்த நல்ல புதுமையை வெளியிடாத சித்திர புத்திரன் இருந்தென்ன அந்தமானுக்கு போயென்ன? ஆகையால் போவதற் குள் அதை வெளியிட்டு விட்டு போய்விடலாம் என்று துணிந்து சொல்லத் துணிகின்றேன்.

அதாவது விபசாரத்தனம் என்றால் இத்தனை காலம் பெண்களுக்கு மாத்திரந்தான் சொந்தமாய் இருந்தது. இப்போது சுயமரியாதை இயக்கம் ஏற்பட்ட பிறகு அது ஆண்களுக்கும் சொந்தமாய் விட்டது. எப்படி என்றால் சு. ம. காரன் பெண்களை காப்பாற்றப் போவதாய்ச் சொல்லி "விபசாரதோஷம் பெண்களுக்கு மாத்திரம் தான் சொந்தமோ ஆண்களுக்கும் அது. ஏன் சொந்தமாய் இருக்கக்கூடாது" என்று பேசிப் பேசி சும்மா கிடந்த ஆண்களைத் தூண்டிவிட்டு கொஞ்சங் கொஞ்சமாய் ஆண்களையும் விபசார தோஷத்துக்கு ஆளாகும்படி செய்து விட்டார்கள். அது இப்போது "தோலைக் கடித்து, துருத்தியைக் கடித்து, செருப்பைக் கடித்து கடைசியில் வேட்டை நாய் ஆனது" போல் ஆண்கள் விபசாரித்தனமானது பெண்கள் விபசாரித்தனம் போலவே அதாவது திருட்டுத்தனமாய்ச் செய்து வெளிப்படையாய் செய்து, வீட்டை விட்டுக் கிளம்பி கூத்தியாளாகி விலை மாதாகிச் சந்து பொந்து குச்சுக்காரியாகி, கடைசியாக உற்சவத்தில் வியாபாரம் நடத்தும் குச்சுக்காரி என்கின்ற நிலைமைக்கு எப்படி வந்துவிட்டதோ அது போலவே ஆண்களும் விபசாரனாகி மாமாங்க உற்சவத்தில் சில அறைகள் வாடகைக்கு வாங்கிக்கொண்டு பணத்துக்காக பெண்களிடம் பணம் வாங்கிக் கொண்டு விபசாரத்தனம் செய்வது என்கின்ற துணிவின் மீது இப்போதே பலர் கும்பகோணம் வந்து இறங்கிவிட்டார்கள். அதற்காக சில வீடும் பிடித்துக் கொண்டார்கள். இவர்களுக்கு தரகர்களாக சில பெண்களையும் அழைத்து வந்திருக்கிறார்கள். அவர்கள் உற்சவத்திற்கு பெண் விபசாரிகளுக்கு தரகர் களாய் இருக்கும் ஆண் தரகர்கள் மற்ற ஆண்களிடம் எப்படி வந்து, சார் கொஞ்சம் பொடி கொடுக்கிறீர்களா என்று கூப்பிட்டு, இந்த கடுக்கன் எங்கு வாங்கினீர்கள்! இந்த மோதிரம் எங்கு வாங்கினீர்கள் ஜில்லல்லென்று ஜொலிக்கின்றதே என்று ஆரம்பித்து மெள்ள மெள்ள சங்கதி ஆரம்பிப்பது போலவே சில பெண் தரகர்களும் உற்சவத்திற்கு வந்த பெரிய இடத்து பெண்களிடம் சென்று அம்மா கொஞ்சம் சுண்ணாம்பு கொடுக்கின்றீர்களா? என்று ஆரம்பித்து இந்த கம்மல் எங்கு வாங்கினீர்கள்? இந்த புடவை எங்கு வாங்கினீர்கள் என்று பேசி மெள்ள மெள்ள சங்கதிகள் பேசத் தர்ப்பித்து செய்து கூட அழைத்துக்கொண்டு போயிருக்கிறார்கள்.

இதற்காக நகைகள், உடுப்புகள் சென்னை எஸ். எஸ். ஆனந்தம் கம்பெனியிலும், திருச்சி சிங்காரம் கம்பெனியிலும், சென்னை அருணகிரி கம்பெனியிலும் பலவித மருந்துகள் வாங்கிக்கொண்டு, நில்லு நில்லு இதென் னையா புதுமையிலும் புதுமை விபசாரத்தில் பணம் சம்பாதிக்க



போகிறவனுக்கு மருந்தென்ன என்று கேள்க்கலாம். விபசாரத்தில் பெண்க ளுடன் ஆண்கள் போட்டிபோட முடியாது. ஏனென்றால் அது கடவுளே பெண்களிடம் கருணை வைத்து அவர்களை எவ்வளவு வேண்டுமானாலும் விபசாரம் செய்யப்பட இடம் கொடுத்துவிட்டான். ஆண்கள் மீது கோபப் பட்டோ அல்லது பொறாமைப்பட்டோ வரையறை ஏற்படுத்திவிட்டான். இந்த வைத்தியர்கள் கடவுளோடு போட்டி போடத்துணிந்து இப்போது என்ன என்னமோ மருந்துகள் செய்திருக்கிறார்களல்லவா. ஆதலால் இந்த மருந்து களையும் வாங்கிக்கொண்டு போயிருக்கிறார்கள். இதனால் பெண்கள் விபசாரித்தனத்துக்கு ஆண்கள் கொடுக்க வேண்டிய சார்ஜைவிட ஆண்கள் விபசாரத்திற்கு பெண்கள் கொடுக்கவேண்டிய சார்ஜ் கொஞ்சம் அதிகமாகத் தான் இருக்கும். ஏனென்றால் மருந்துக்கு பணம் வேண்டியிருக்குமல்லவா? ஆதலால் கும்பகோண மாமாங்கத்துக்கு போகின்ற ஆண்கள் ஷோக் பேர் வழிகள் குடும்ப சகிதமாய் போவதானால் நில்லு! நில்லு!! போவதானால் என்பதென்ன போய்த்தானே ஆகவேண்டும். ஏனென்றால் மகாமக புராணம் படித்தால் அந்த சங்கதி தெரியும். மாமாங்கக் குளத்தில் குளிக்கும் போது பெண்ஜாதியும் புருஷனுமாய் குளித்தால் தான் புண்ணியம். இல்லாவிட்டால் புண்ணியமும் போய் பாபமும் ஏற்படுவதல்லாமல் செலவு பண்ணின காசும் வீணாய் விடும். ஆதலால் சம்சாரத்துடனேயே போயாக வேண்டும். இப்படிப் பட்ட மற்ற செலவும் இரட்டிப்பாய் விடும். இந்த பஞ்ச காலத்தில் சர்க்காரர் வரி குறைக்காத காலத்தில் மிராசுதாரர்கள், பிரபுக்கள், ஜமீன்தாரர்கள், மற்ற செல்வவான்கள் மாமாங்கம் போவதென்றால் இந்தப் புதிய வியாபாரத்தில் நிலைமை கஷ்டமாக ஏற்பட்டு விட்டது.

நிற்க, இந்த மாதிரி ஆண்களும் விபசார வியாபாரம் செய்வது என்பது மேல் நாட்டில்தான் வழக்கத்திலிருப்பதாய் கேள்விப்பட்டது உண்டு. ஆனால் நமது நாட்டில் சில ஆண்கள் இந்த மகாமக புண்ணிய காலத்தை உத்தேசித்து வயிற்றுக்கொடுமைக்காக பணம் சம்பாதிக்க இந்தமாதிரி ஒரு வழி கண்டு பிடித்து உற்சவத்தின் போது கடை போட்டிருக்கிறார்கள் என்றால் இது புதுமை அல்லவா?

இந்த மாதிரி ஆண்கள் விபசாரக்கடைகள் மற்ற புண்ணிய க்ஷேத்திரங் களுக்கும் போகும் போல் தோன்றுகின்றது. ஆதலால் சென்னை மாகாண விபசாரச் சட்டத்தில் விபசாரம் என்பதற்கு வியாக்கியானம் செய்யும் போது "பெண்ணாயிருந்தாலும், ஆணாயிருந்தாலும் பணத்துக்காக விபசாரத்தனம் செய்தால்" என்று ஒரு திருத்தம் போடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இதற்கெல்லாம் காரணம் இந்த மாதிரி "புண்ணிய க்ஷேத்திரங்கள்" என்றுதான் சொல்லவேண்டும். எப்படிப்பட்ட சட்டம் செய்தாலும் புண்ணிய க்ஷேத்திரங்கள், புண்ணிய தீர்த்தங்கள், புண்ணிய மூர்த்தங்கள் ஒழிந்தா லல்லது விபசாரத்தை நிறுத்திவிடலாம் என்று நினைத்து சட்டம் செய்வது



RangaRakes
tamilnavarasam.com

சட்டசபை அங்கத்தினர்களின் முட்டாள்தனம் என்றுதான் சொல்லுவேன். இந்தப் புதுமை இதற்கு முன்னும் இரண்டொரு புண்ணியக்ஷேத்திரங்களில் இருந்து வந்திருக்கின்றது. அது எங்கே என்றால் பிள்ளைவரத்துக்காக என்று செல்லும் க்ஷேத்திரங்கள் சிலவற்றில் ஆண் விபசாரகர்கள் சிலர் இருந்து பணம் சம்பாதித்து வந்திருக்கிறார்கள், வருகிறார்கள். ஆனால் அது மத சம்பந்தமான கணக்கில் தாக்கலாய் வந்ததால் அதைப் பற்றிய விளம்பரம் இல்லாமல் இருந்தது. ஆனால் இப்போது ஆண்களுடைய குஷாலையும் சௌகரியத்தையும் எதிர்பார்த்து வயிற்றுக் கொடுமைக்காக பெண்கள் நடத்துவதுபோல் பெண்களுடைய குஷாலையும் சௌகரியத்தையும் ஆண்களின் வயிற்றுக் கொடுமையையும் உத்தேசித்து வியாபார முறையில் ஆண்கள் இந்த விபசாரித்தனம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். முதல் முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த புது வியாபார முறையானது இந்த மகா புண்ணிய ஸ்தலமாகிய கும்பகோண க்ஷேத்திரத்தில் அதுவும் மகா புண்ணிய காலமான 12 வருடத்திற்கு ஒரு தடவை வரும் மகாமகபுண்ணிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் எல்லாம் வல்ல விசாலாட்சி சமேத விஸ்வநாத ஸ்வாமிகள் இதை என்றும் நிலைபெறவும், எங்கும் பரவவும் அருள் புரிவாராக.

"எவ்வளவு தான் தெய்வத்தன்மை இருந்த போதிலும் (தெய்வத் தாலாவ தெனினும்) மனுஷ எத்தனமும் இருந்தாக வேண்டும்" என்பது போல் மகாமகத்துக்கு வரும் சதிபதிகள் ஒருவரைப்போல் ஒருவர் ஆண்களைப் போல் பெண்கள் நடந்து கொள்ள வேண்டும் என்கின்ற முறையில் இந்தப் புதுத்தொழிலை ஆதரிப்பார்களாக. பாவமோ புண்ணியமோ தோஷமோ விசேஷமோ எல்லாம் ஆண்களைப் போலவே தானே ஒழிய பெண்களுக்கு என்று வேறு வித மாறுதல் இல்லை. இருந்தாலும் மகாமகத் தீர்த்த ஸ்நானத்தின் பயனாய் சர்வ தோஷமும் பாவமும் பரந்துபோகும். ஆகையால் கவனிக்க கவனிக்க தயவு செய்து கவனிக்கக் கோறுகிறேன்.

**குடி அரசு - கட்டுரை - 12.02.1933**



# "காருண்ய" சர்க்கார் கவனிக்குமா?

விபசாரத் தடுப்பு மசோதா சென்னையிலும், மதுரையிலும், சீரங்கத்திலும் அமுலுக்கு கொண்டுவரப்பட்டாய்விட்டது. மற்றும் பல ஊர்களிலும் அமுலுக்குக் கொண்டுவர முயற்சிக்கப்படுவதாய் தெரிய வருகிறது. விபசாரத் தடுப்பு மசோதா அமுலுக்கு கொண்டுவர அவசியமாகின்ற பட்டணங்கள் எது எது என்று ஒருவர் அறிய விரும்பினால் அதற்காக கஷ்டப்பட்டு தகவல் தேடவேண்டிய அவசியமே இல்லை. ஒரே ஒரு சுருக்கமான வழியில் கண்டுபிடித்து விடலாம். எப்படி யென்றால் "இந்துமத" ஐதீகப்படி புராண சாஸ்த்திர நிச்சயப்படி, எந்த எந்த ஸ்தலங்கள் புண்ணிய க்ஷேத்திரங்களோ, அதாவது கண்ணால் பார்க்க முக்தி, காதால் கேட்க்க முக்தி, காலால் மிதிக்க முக்தி, நெஞ்சால் நினைக்க முக்தி, அதுமாத்திரமல்லாமல் எந்த எந்த க்ஷேத்திரங்களை கண்டவரைக் கண்டால் முக்தி, கேட்டவரைக் கேட்டால் முக்தி, நினைத்த வரை நினைத்தால் முக்தி, மிதித்த வரை மிதித்தால் முக்தி என்று இருக்கின்றனவோ அந்தந்த க்ஷேத்திரங்களையெல்லாம் குறித்து பட்டியல் போட்டோமேயானால் உடனே விபசாரத்தடுப்பு சட்டம் அமுலுக்கு வர வேண்டிய ஊர்கள் இவ்வளவுதான் என்று கண்டுபிடித்து விடலாம். அந்த முறையில்தான் இப்போது மதுரையும், சீரங்கமும் ஷி சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட வேண்டிய புண்ணிய க்ஷேத்திரங்களாகி விட்டது.

ஆனால் இப்போது நாம் வெகு அவசரமாக ஒரு புண்ணிய க்ஷேத்திரத்திற்கு, அச்சட்டம் அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். அது எது என்றால் அதுதான் மகா புண்ணிய க்ஷேத்திரமாகவும் 12 வருஷத்திற்கு ஒருமுறை மகாமகா புண்ணிய க்ஷேத்திரமாகவும் விளங்கப்போகும் நமது மகாமக க்ஷேத்திரமாகிய கும்பகோணமேயாகும்.

மார்ச்சு மாதத்தில் நடைபெறப்போவதாய்ச் சொல்லப்படும் மகாமக விசேஷம் என்பதற்கு தமிழ்நாட்டில் ஆஸ்பத்திரியில் கிடக்கும் விபசாரிகள் முதல்கொண்டு, கை கால்கள் முடக்கமேற்பட்டு நீட்டவும், குருக்கவும் முடியாமல் அவஸ்தைப் படும் விபசாரிகள் கூட கால்களுக்கும், கைகளுக்கும் தப்பைகள் வைத்துக்கட்டி நிமிர்த்துக் கொண்டு க்ஷேத்திர யாத்திரை



RangaRakes tamilnavarasam.com

போய்க்கொண்டிருக்கிறார்கள். எதற்காக என்கின்ற சந்தேகம் சில தோழர்களுக்கு தோன்றலாம். எதற்காக? தாங்கள் இது வரை செய்த பாவத்தை அந்தக் கிணற்றிலுள்ள மண்ணை, சேற்றை எடுத்து தடவிக் கொண்டால் சகல பாவமும் தீர்ந்து விடுமே என்கின்ற நம்பிக்கைக்காகவா என்றால் அல்லவே அல்ல. இந்த "புண்ணிய காலத்தில்" கும்பகோணக் குருக்கள் பார்ப்பனரும், காப்பி கிளப்பு, டிராமா, சினிமாக் கதை காலக்ஷேபக் கம்பெனி மற்றும் சுதேசி வியாபாரி முதலியவர்களும் சம்பாதிக்கும் புண்ணியம் போல், தாங்களும் கடை வைத்துப் புண்ணியம் (பணம்) சம்பாதிக்கலாம் என்கின்ற எண்ணத்தின் மீதே யாத்திரை புறப்படுகிறார்கள். அந்த ஊரில் ஏற்கனவே ஒரு கூட்டம் உண்டு. சரித்திரகாலம் தொட்டு பேர்பெற்ற கும்பகோண அய்யர்களைக் காப்பாற்றும் விபசாரிகளும், கஞ்சிக்கில்லாத காரணத்தால், உற்சவ காலத்தில் மட்டும் தற்கால சாந்தியாய் விபசாரத்தை மேற்கொள்ளுகின்றவர்களும் சிலர் உண்டு. போதாக்குறைக்கு வெளி ஊர்களிலிருந்தும் பல கூட்டங்கள் புறப்பட்டு இருக்கின்றன.

ஆகவே அந்த "புண்ணியோதய" காலத்தில் கும்பகோணம் முழுவதும் என்ன காரியத்தில் ஈடுபட்டிருக்கும் என்பதை மனக்கண்ணால் உருவகப்படுத்திப் பார்த்தால் விஷயம் விளங்காமல் போகாது. விபசாரத்தடுப்பு மசோதா என்பது உண்மையாகவே விபசாரத்தைத் தடுப்பதற்கு ஏற்பட்டது என்று இருந்தால் அது கும்பகோண க்ஷேத்திரத்தின் மகா புண்ணியோதய காலமாகிய மகாமக காலத்தில் அல்லாமல் வேறு எதற்கு அவசியமானது என்பது நமக்கு விளங்கவில்லை. ஆகையால் "காருண்ய" சர்க்கார் இந்த விபசாரிகளிடம் காருண்யம் வைப்பதை சிறிது நாளைக்கு ஒத்திப்போட்டு விட்டு, மகாமகத்துக்கு வரும் குட்டிச்சுவர்களான ஆண்களிடம் காருண்யம் வைத்து உடனே டெம்பர்வரியாகவாவது கும்பகோணத்திற்கு விபசாரத் தடுப்பு சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 12.02.1933**



## மகாமகம்

மகாமகம் அல்லது மாமாங்கம் என்பதாக ஒரு பெரிய திருவிழா அடுத்த மாதம்(மார்ச்சு மாதம்) 10 தேதியில் கும்பகோணத்தில் நடத்த ஏற்பாடுகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகின்றது. சுமார் ஒரு லட்சம் ஜனங்களுக்கு மேலாகவே வந்து கூடுவார்கள் என்று கணக்கிடப்பட்டு, ரயில்வேக்காரர்கள் பல பிளாட்டுப்பாரங்களையும், கொட்டகைகளையும் போடுகிறார்கள். அதற்குத் தகுந்தபடி கூட்டங்களை வரவழைக்க அநேகவித சித்திரப் படங்களை அச்சடித்து ரயில்வே ஸ்டேஷன்களின் மேடைகளில் எல்லாம் கட்டித் தொங்கவிட்டும், பத்திரிகைகளுக்குப் பணங்கொடுத்துப் பிரசுரிக்கும்படி செய்தும் மற்றும் பல வழிகளிலும் விளம்பரம் செய்கிறார்கள்.

சாதாரணமாகக் கும்பகோணமானது ஒரு அழகான பட்டணம் என்றோ, சுகாதார வசதியான பட்டணமென்றோ, வேறு ஏதாவது ஒரு வழியில் மக்கள் அறிவுக்கோ, தொழிலுக்கோ, பயன்படத் தகுந்த விசேஷம் பொருந்திய பட்டணமென்றோ யாரும் சொல்லிவிட முடியாது. அது ஒரு புராதனமான பட்டணம் என்பதோடு, நாளுக்குநாள் க்ஷீண திசை அடைந்துவரும் தோற்றமுடைய பழங்காலமுறைக் கட்டடங்களையும் உடைய ஊராகும். அதில் வசிக்கும் மக்களோ பெரும்பாலோர் பார்ப்பனர்களும் "மேல் ஜாதி" மிராசுதாரர்களுமாகும்.

கும்பகோணப் பார்ப்பனர்கள் என்றால் மிக தந்திரசாலிகள் என்பார்கள். கும்பகோணம் மாத்திரமல்ல தஞ்சாவூர் ஜில்லா முழுவதுமே உள்ள பார்ப்பனர்கள் பழைய ராஜாவின் தர்மத்தினாலும் மற்றும் தஞ்சை ஜில்லாவிலேயே ஏற்பட்டிருந்த இரண்டு முதல்தர காலேஜினாலும் சாப்பாடும், கல்வியும் சுலபமாய் இருக்கும் இடத்திலேயே கிடைக்கக்கூடிய நிலைமை இருந்ததால் படித்துப் பட்டம் பெறவும், அதற்கேற்ற உத்தியோகங்கள் பெறவும் சௌகரியம் ஏற்பட்டு இந்த மாகாணத்தில் அவர்களே முக்கியமானவர்களாய் இருந்து வந்திருக்கிறார்கள்.

சுமார் 25 வருஷங்களுக்குமுன் தமிழ் நாடு மாத்திரமல்ல சென்னை மாகாண முழுவதிலும் தஞ்சை ஜில்லா பார்ப்பனர்களே திவான்களாகவும், பிரபல வக்கீல்களாகவும், முன்சீப், ஜட்ஜி, டிப்டி கலெக்டர் போலீஸ் இன்ஸ்



RangaRakes tamilnavarasam.com

பெக்டர், சூப்பிரண்டுகளாகவும் மற்றும் பல பெரிய பதவி உடையவர் களாகவும் ஆக நேர்ந்து பிரபலமாகிவிட்டார்கள். இந்தக் காரணங்களால் கும்பகோண பார்ப்பனர்களுக்கு அதிகமான விளம்பரம் ஏற்பட வசதி யாகிவிட்டது. அங்குள்ள மிராசுதாரர்களும், ஏறக்குறைய பார்ப்பனர்களை காப்பியடித்து தங்களையும் மேல்ஜாதிக்காரர்கள் என்று விளம்பரப்படுத்திக் கொள்வதோடு நின்றுவிட்டார்களே தவிர, கல்வியில் அவர்களுடன் போட்டி போடவோ, உத்தியோகம் பெறவோ முடியாதபடி பார்ப்பனர்கள் செய்து வந்த சூழ்ச்சியை வென்று முன்னேற முடியவில்லை. ஆதலால் பணம் சேர்ப்ப திலும், பூமியை பெருக்குவதிலும் மாத்திரம் கவலைகொண்டு ஆள் ஒன்றுக்கு 1000 வேலி 2000 வேலி என்பதாக நிலத்தை பெருக்கிக்கொண்டார்கள். இரண்டு கூட்ட மும் சிறிதாவது சரீரத்தினால் உழைக்காமல், ஏழைகள், உழைப் பாளிகள் ஆகியவர்களின் பாட்டினாலேயே வாழ்ந்து வருகிறார்கள். இதைத் தவிர மற்றபடி அந்த ஜில்லாவுக்கும், கும்பகோணத்துக்கும் வேறு உண்மை யான யோக்கியதை ஒன்றும் கிடையாது.

ஆனால் மற்றொரு யோக்கியதையும் உண்டு. அது மேற் சொன்னவை களைவிட மிகவும் மோசமான யோக்கியதையேயாகும். அதென்னவென்றால் தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு விசேஷ ஸ்தலங் களாகும். பாடல் பெற்ற ஸ்தலங்களாகவும், பூலோக வைகுண்டமாகவும், பூலோக சுவர்க்கமாகவும் மற்றும் இந்தியாவில் உள்ள முக்கிய புண்ணிய க்ஷேத்திரங்கள், புண்ணிய தீர்த்தங்கள், புண்ணிய மூர்த்தங்கள் என்பவைகள் எல்லாம் தஞ்சை ஜில்லாவிலேயே ஒவ்வொரு கிராமத்தில் ஒவ்வொன்று பிரதி பலிப்பதாக கதைகளும், புராணங்களும் கர்ன பரம்பரை விசேஷங்களும் உண்டு. தஞ்சாவூர் ஜில்லாக்காரர்கள் படித்துவிட்டு வெளியிடங்களுக்கு சென்று ஆங்காங்குள்ள செல்வங்களை கொள்ளைகொண்டு போய் சேர்ப்பது ஒன்று, கிராமங்கள் தோரும் புண்ணிய க்ஷேத்திரங்களும், பாடல் பெற்ற க்ஷேத்திரங்களுமாய் இருப்பதால் மற்ற ஊர்களில் இருக்கும் மூடர்கள் எல்லாம் பாடுபட்டுத்தேடிய பணங்களை மூட்டை கட்டிக்கொண்டுபோய் அந்த ஜில்லாவில் அழுதுவிட்டு வரும் மடத்தனம் இரண்டு. ஆகிய இவை களால் மாத்திரமல்லாமல், மைசூர், குடகு தேசத்தில் இருந்து வரும் காவேரியானது சேலம் கோயமுத்தூர் ஜில்லா வழியாக வந்தாலும் சேலம் ஜில்லாகாரர்களுக்கு குடிப்பதற்குக்கூட மார்க்கமில்லாமல் செய்துவிட்டும், கோயமுத்தூர் ஜில்லாக்காரருக்கு ஒரு செண்டு பூமிகூட பயிராவதற்கு உதவா மல்படி ஏமாற்றி விட்டு எல்லா தண்ணீரும் நேரே தஞ்சை ஜில்லா சென்று ஜனங்கள் வெளிக்கு போவதற்குக் கூட இடமில்லாமல் எல்லா நிலமும் நஞ்சை பயிராகும்படியும் செய்து கொண்ட சூட்சியால் ஏற்பட்ட லாபம் மூன்று. இந்தப் படியாக "இயற்கை" வளம் பெற்ற தஞ்சை ஜில்லாவுக்கு மகாமக விசேஷம் என்னும் ஒரு புரட்டு யோகமும் சேர்வதில் அதிசயமொன்று மில்லை. ஆனால் இப்போது நாம் இதை ஏன் எடுத்துக்காட்ட வருகிறோம் என்றால், நமது மக்கள் இத்தனை காலம் தான் மூடர்களாய், மடையர்களாய்,



கடையர்களாய் இருந்து இவ்விதப் புரட்டுகளுக்கும், சூட்சிகளுக்கும் ஆளாகி, நஷ்டமும், கஷ்டமும், இழிவும், ஏமாற்றமும் அடைந்து வந்தோம் என்றாலும் இனியும் பாரம்பரியமாய் தலைமுறை தலைமுறையாய் அடைய வேண்டுமா என்பதை ஞாபகப்படுத்தவே இதை எழுதுகிறோம்.

**மகாமகம்**

தோழர்களே! மகாமகம் என்றால் என்ன? என்பதை சற்று விசாரித்துப் பாருங்கள். இதை அறிவதற்காக நாம் ஆவல் பட்டு தேடினோம். கும்பகோண ஸ்தல புராணம் என்பதில் இருப்பதாக அறிந்தோம். அதை வரவழைத்துப் பார்த்தோம். அதில் உள்ளதை வெளியிடுகின்றோம்.

> "கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, காவேரி, சிந்து, கோதா வரி, சரயு, தாமரபரணி" ஆகிய ஒன்பது நதிகளும் ஒன்பது கன்னிகை களாக வெளி வந்து, வெள்ளியங்கிரிக்குச் சென்று பரமசிவனை அடைந்து, "உலகத்தில் உள்ள மக்கள் எல்லோரும் எவ்வளவோ கொடியதாகிய பாவங்களைச் செய்து விட்டு எங்களிடத்தில் வந்து ஸ்நானம் செய்து அவர்களது பாவங்களை எங்களுக்கு கொடுத்து தீர்த்துக் கொண்டு போய் விடுகிறார்கள். அந்தப் பாவங்களை யெல் லாம் பெற்றுக் கொண்ட நாங்கள் எப்படி அவைகளை போக்கிக் கொள்ளுவது" என்று கேட்டார்கள். அதற்கு பரமசிவனார், "கும்ப கோணத்திலே, தென்கிழக்கிலே ஒரு தீர்த்தம், உண்டு. 12 வருஷத்துக்கு ஒரு முறை மாசி மாதம் மகாமக நாளன்று அதில் குளிப்பீர்களானால் உங்கள் பாவங்கள் துலைந்து போகும்" என்று சொன்னார். அந்த 9 கன்னிகைகளும் "கும்ப கோணம் எங்கே இருக்கின்றது" என்று கேட்டார்கள். அதற்கு பரமசிவனார் அந்த 9 கன்னிகைகளையும் பார்த்து "நீங்கள் காசிக்குப் போயிருங்கள், அங்கிருந்து நான் விஸ்வேஸ்வரன் என்னும் பெயருடன் உங்களை கும்பகோணத்திற்கு அழைத்துப்போகிறேன்" என்று சொன்னார். அந்தப்படியே கன்னிகை கள் காசிக்குப் போயிருந்தார்கள். பரமசிவனார் அவர்களை காசி யிலிருந்து கும்ப கோணத்துக்கு அழைத்துச் சென்று மகாமக குளத்தைக் காட்டி குளிக்க வைத்தார். பிறகு சிவபெருமானும் அந்த கன்னிகைகளும் கும்பகோணத் திலேயே கோவில் கொண்டு விட்டார் கள்." ஆதலால் இதில் அந்த காலத்தில் குளித்தவர்களுக்கு சர்வ பாவ மும் துலைந்து சர்வ மங்களமும் உண்டாகும்" என்று கண்டிருக் கின்றது.

தோழர்களே! இதுதான் கும்பகோண ஸ்தல மகத்துவமும், தீர்த்த மகத்துவமும், கோவில் மகத்துவமும் ஆகும். இதற்கு அப்புறம் அந்தக் குளத்தில் எப்படிக் குளிப்பது. அதற்காக பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனப் பெண்களுக்கும் எப்படி, எவ்வளவு பணம் கொடுக்கவேண்டியது என்கின்ற



RangaRakes tamilnavarasam.com

விஷயங்களும் எந்தெந்த இடத்தில் குளிப்பது, எந்தெந்த சாமியை எப்படி எப்படி கும்பிடுவது என்கின்ற விஷயமும் இருக்கின்றது.

இந்தக் கதையை ஆதாரமாக வைத்த இந்த மகாமக உற்சவத்திற்காக எவ்வளவு ஆர்பாட்டங்கள், எவ்வளவு விளம்பரங்கள், எவ்வளவு பணச் செலவுகள், எவ்வளவுகஷ்டங்கள் என்பதை யோசித்துப்பாருங்கள். இந்துக் கள் மடையர்கள், அஞ்ஞானிகள், மூடர்கள் என்று ஒருவன் சொன்னால் உடனே கோபப்பட்டுக்கொள்ளத்தான் கற்றுக் கொடுக்கப்பட்டு இருக்கின் றோமே அல்லாமல் அறிவைக்கொண்டு பார்க்கின்றோமா?

இந்த கும்பகோணத்துக்கும், அங்குள்ள மாமாங்கக் குளத்திற்கும் உள்ள விசேஷம் போலவே உலகத்தில் உள்ள அனேக சாக்கடைகளிலும், பட்டிக் காடுகளிலும், குப்பைமேடுகளிலும் உள்ள குழவிக் கல்லுகளுக்கும், நீரோடைகளுக்கும், குளங்களுக்கும், குட்டைகளுக்கு மெல்லாம் புராணங் களும், கதை ஆதாரங்களும், ஐதீகங்களும் இருந்து வருகின்றன. பொதுவாக இது போன்ற எந்தக்காரியங்களுக்கும் விசேஷம் என்பதெல்லாம் இரண்டே இரண்டு வாக்கியங்கள் தான் அடங்கி இருக்கின்றன.

1. சர்வ பாபங்களும் நிவர்த்தியாகிவிடும்.

2. வேண்டியதெல்லாம் அடையலாம்.

என்கின்றவைகளே யாகும்.

இந்த இரண்டு காரியமும் யோக்கியமான காரியமாயிருக்குமா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

மனிதன் செய்கின்ற பாவமெல்லாம் இந்த மாதிரியான காரியங்களால் தீர்ந்து போவதாயிருந்தால், உலகத்தில் எந்த மனிதனாவது பாப காரியங் களைச் செய்யத் தவருவானா? தயங்குவானா? என்று யோசித்துப்பாருங்கள்.

மனிதனுக்கு வேண்டிய – அவன் ஆசைப்படும் படியான காரியங்கள் எல்லாம் இந்த மாதிரியான சிறு காரியங்களால் கை கூடிவிடுவதாய் இருந்தால் மனிதனுடைய முயற்சி – நடத்தை – ஒழுக்கம் என்பவைகளுக்கெல்லாம் அவ சியமும், நிபந்தனையும், வரையரையும் எதற்காக வேண்டும் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

நிற்க, பாவமுள்ள மனிதர்கள் நதிகளில் ஸ்நானம் செய்ததால் நதி களுக்கு அந்தப்பாவங்கள் ஒட்டிக்கொண்டது என்பதில் ஏதாவது அறிவோ, உண்மையோ இருக்க முடியுமா? அந்த நதிகள் அந்தப் பாவத்தை தொலைக்க மற்றொரு தீர்த்தத்தில் போய் குளிப்பது என்று மகாமக தீர்த்தத்துக்கு வந்து குளிப்பதானால் இதில் ஏதாவது புத்தி இருக்கின்றதா? நாணையம் இருக்கின் றதா? என்று யோசித்துப்பாருங்கள். இத்தனை பாவங்களையும் ஏற்றுக்



கொண்ட மகாமக தெப்பக்குளம் அதன் பாவத்தைத் தீர்க்க எந்த உருவெடுத்து எந்த குளத்தில் போய் குளிப்பது என்பதையும், பிறகு அந்தக்குளம் வேறு எந்த குளத்துக்குப்போய் பாவத்தைத் தீர்த்துக்கொள்ளும் என்பதையும் யோசித்தால் கடுகளவு அறிவுள்ளவனாவது இதை ஏற்க முடியுமா என்று பாருங்கள். இதையெல்லாம் கவனித்தால் மதத்தின் பேரால், பாப புண்ணியத் தின்பேரால், கடவுள் பேரால், தீர்த்தம் ஸ்தலம் மூர்த்தி என்னும் பெயர்களால் மக்கள் எவ்வளவு தூரம் ஏய்க்கப்பட்டு, கடையர்கள், மடையர்கள் ஆக்கப் படுகின்றார்கள் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

மற்றும் அந்த புராணத்திலேயே இந்த மகாமகக் குளத்துக்குள் வடக்கு பாகத்தில் 7 தீர்த்தங்கள் இருப்பதாகவும், கிழக்கு பாகத்தில் 4 தீர்த்தங்கள் இருப்பதாகவும், நடுமத்தியில் 660000000 அருபத்தி ஆறு கோடி தீர்த்தம் இருப்பதாகவும், இந்த மகாமக குளத்தில் முழுகினால் இத்தனை தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்த புண்ணியம் கிடைக்குமென்றும் எழுதி, அந்தப்படி ஒரு சித்திரமும் வரையப் பட்டிருக்கின்றது. இது எவ்வளவு பரிகசிக்கத்தக்க விஷயம் என்று பாருங்கள். இதை எழுதினவன் எவ்வளவு அயோக்கியன் அல்லது எவ்வளவு மூடன் என்பதல்ல இப்போதய நமது கேள்வி. மற்றென்ன வென்றால் இதைப்படித்துப்பார்த்து இதன்படி நடப்பார்கள் என்று நம்பிய மக்களை இவன் எவ்வளவு முட்டாளாகவும், அடிவண்டலாகவும் கருதி இருக்கவேண்டும் என்பதுதான் நமது கேள்வியாகும்.

தீர்த்தம் என்றாலும், நதி என்றாலும், குளம் என்றாலும் என்ன என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். நதி என்றால் மழைபெய்வதால் ஏற்படும் வெள்ளங்கள் எல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடும் ஓடை அல்லது நீர்போக்காகும்.

குளம் என்றால் இந்தமாதிரி ஓடையில் இருந்து வழி வைத்து தண்ணீர் நிறப்புவதோ, அல்லது மழை, வெள்ளத்தால் ஊரில் உள்ள அசுத்தங்களையும், கசுமாலங்களையும் அடித்துக்கொண்டுவந்து குளத்தில் விழுந்து தேங்கி யிருப்பதேதான். மற்ற குட்டித்தீர்த்தங்கள் என்பதும் கிணற்றுக்குநீர் ஊற்றம் போன்ற ஊற்றேயாகும். இந்தத் தண்ணீர்களுக்கு எல்லாம் அந்தந்த இடத்தை அனுசரித்த குணங்களேதான் உண்டு. மற்றபடி அவற்றில் ஒருமனிதன் செய்யும் பாவம் என்பதைப் போக்கவோ, அவன் ஆசைப்பட்டதைக் கொடுக் கவோ ஆன சக்திகள் எப்படி இருக்கக்கூடும் என்பது ஒரு மனிதனுக்கு தெரியாதா என்றுதான் கேட்கின்றோம்.

மாமாங்க குளம் என்பது மேல் கண்டமாதிரியான ஒரு சாதாரண தெப்பக்குளம். மகாமக சமயத்தில் அதில் உள்ள தண்ணீர் அவ்வளவையும் இறைத்து விட்டு வெறும் அடிவண்டலையும், சேற்றையும் மாத்திரம் மீதி வைத்து அதிலும் கந்தகப் பொடியைக் கலக்கி விடுவார்கள். அந்த சேரானது கருப்புக் களிமண் போல் இருக்கும். அந்தக் குளத்தின் விஸ்தீரணமோ சுமார்



RangaRakes tamilnavarasam.com

500 அடி சதுரம் இருக்கலாம். அடிமட்டம் சுமார் 200 அடி சதுரம் இருக்கலாம். இதில் லக்ஷம் பேர்கள் குளிப்பது என்றால் எப்படி சாத்தியமாகும். அந்தக் குளத்தில் இறங்கி அந்த சேற்றில் கொஞ்சம் எடுத்துச் சரீரத்தில் பூசிக்கொள்ள வேண்டியதுதான். பிறகு இந்த அசிங்கம் போவதற்கு வேறு குளத்தில் குளிக்கவேண்டியதுதான். இதுதான் வழக்கமாம். ஒரு கிறிஸ்தவரோ, ஒரு மகமதியரோ இந்தப்படி செய்தால், அதை நாம் பார்க்க நேர்ந்தால் அப்போது நாம் என்ன என்று சொல்லுவோம்.

மிஸ். மேயோ நமது பழக்க வழக்கங்களைப்பற்றியும், சடங்குகளைப் பற்றியும் தீர்த்தங்களைப்பற்றியும் எழுதியதைப்பார்த்து கோபித்துக் கொண்டோம். ஆனால் இந்த மாதிரி சேற்றில் குளிப்பதால் நாம் செய்த பாவங்கள் எல்லாம் தீர்ந்து விடும் என்று கருதி இருக்கிற முட்டாள்தனமான பேராசைக்காக நாம் வெட்கப் படுவதில்லை என்றால் பிறகு எந்த விதத்தில் நாம் அறிவாளிகள், யோக்கியர்கள், மனிதத்தன்மையுடையவர்கள் என்று யோசித்துப் பாருங்கள். இந்த மாமாங்கத்தால் எத்தனை லக்ஷ ரூபாய் ரயில்க் காரன் கொள்ளை அடிக்கப் போகிறான்? எத்தனை லக்ஷ ரூபாய் பார்ப்பான் கொள்ளை அடிக்கப் போகிறான் என்பதை சிந்தித்துப்பாருங்கள். இவை ஒரு பக்கம் இருப்பதோடு கூட்ட நெருக்கடியில் உயிர்ச்சேதம் எவ்வளவு, திருட்டு எவ்வளவு, இவை தவிர இப்பொழுதே அங்கு கும்ப கோணத்தில் காலராவும் அம்மையும் வந்து விட்டது. இதற்காககொட்டகை கட்டி அங்கு கட்டிலும் படுக்கையும் போட்டாய்விட்டது. பிளேக்குக்கும் கொட்டகையும் போட்டாகி விட்டது. அதுவும் தான் தன் பாபத்தைத் தீர்த்துக் கொள்ள அங்குவரப் போகின்றது. சுடுகாட்டுக்காக 10 ஏக்கர் நிலம் ஒதுக்கி வைத்து அங்கு சில குளிகளும் தயாராய் முனிசிபாலிட்டியார் வெட்டி வைத்திருக்கிறார்கள்.

கும்பகோணத்துக் கொசுக்களோ அந்த ஊர் பார்ப்பனர்களையும் குச்சிக்காரிகளையும்விட எத்தனையோ பங்கு மோசமானவைகள் என்று சொல்லலாம். ஏனெனில் இது அவர்களை விட மோசமாக வெளியில் இருந்து வருகின்றவர்களின் இரத்தத்தை உரிஞ்சக் காத்துக் கொண்டு இருக்கின்றது. மாமாங்கத்துக்கு போய் வந்தவனுக்கு வரப் போகின்ற மலேரியா காய்ச்சல் அடுத்த மாமாங்கம் வந்தா லொழிய தீராது. இந்த நிலையில் உள்ள மகாமகம் என்ன புண்ணியத்தைக் கொடுக்கும் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

**குடி அரசு - தலையங்கம் - 12.02.1933**



# ரஷியாவும் அட்வெகேட் ஜெனரலும்

ருஷ்ய (பொது உடமை)க் கொள்கைளைப் பற்றி பேசுவதோ, பிரசாரம் செய்வதோ குற்றமான தென்பதாகப் பல நண்பர்கள் பயந்து அடிக்கடி புத்தி கூறி வருகின்றார்கள். பலர் இதை எடுத்துக்காட்டி பாமர ஜனங்களை மிரட்டி வருகின்றார்கள்.

ஆனால் இவர்களை யெல்லாம் பைத்தியக்காரர்களாக்கத் தக்க வண்ணமும், வீண் பூச்சாண்டி காட்டி பயப்படுத்துகின்றவர்களாக்கும் வண்ண மும், சென்னை மாகாண சட்ட நிபுணரும், அட்வொகேட் ஜெனரலும் (சர்க்கா ருக்கு சட்ட சம்பந்தமான யோசனை சொல்லு பவரும்) ஆன தோழர் அல் லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் சென்னை ஓரியண்டல் யூனிவர்சிடி சங்கத்தின் ஆண்டு விழாவில் மாணவர்களிடையும் மற்றும் பண்டிதர் களிடையும் பேசும் போது நன்றாய் விளக்கிக்காட்டி இருக்கிறார்.

அதாவது, "ருஷியாவில் ஒரு திட்டம் ஏற்படுத்தி இருக்கிறார்கள், அதில் சில கெடுதல்கள் இருந்தாலும் மேலான நன்மைகளும் இருக்கின்றன. ருஷிய திட்டம் உலக முழுதுக்குமே நல்ல பாடம் கற்பிக்கக் கூடியதாய் இருக் கின்றது. கைத்தொழில் அபிவிர்த்தி விஷயத்தில் ருஷியா இப்போது உலகத் திலேயே தலை சிநத்து விளங்குகின்றது" என்றும், "முதலாளிக்கும் தொழி லாளிக்கும் உள்ள சம்பந்தம் நிர்ணயிக்கப்பட வேண்டும்" என்றும் பேசி இருக்கிறார். ரஷிய திட்டம் என்றால் என்ன? அது எப்படி ஏற்பட்டது? என்பதை யோசித்தால், பொது உடமைப் பிரசாரம் செய்வதோ "மக்களுக்கு அதை எடுத்துக்காட்டுவதே தப்பு" என்கின்ற விஷமப்பிரசாரம், சோம்பேரி களின் சுயநலப் பிரசாரம் என்பது யாவருக்கும் வெளியாகி விடும். திருச்சி யிலும், புதுச்சேரியிலும், சென்னையிலும் இருந்து வெளியாகும் சில மதப் பிரசார பத்திரிகைகள் ரஷியா என்றால் மிரண்டு மிரண்டு பாராங் கல்லில் முட்டி மண்டையை உடைத்துக்கொள்ளுகின்றன. ஆனால் இன்று அவர்கள் காப்பாற்றப் போவதாய் வேஷமிடும் மதங்களுக்கு ஆதாரபீடமாக இருக்கும் மேல் நாடுகளிலும் மற்றும் பல நாடுகளிலும் இருக்கும் நிலைமைகளைப் பார்ப்பார்களேயானால் இந்த பகல் வேஷங்கள் பரிகசிக்கத்தக்க வேஷம் என்பதை உணர்ந்து வெட்கப்படுவார்கள். அதுமாத்திரமல்லாமல் அந்தந்த



RangaRakes tamilnavarasam.com

மதங்களில் கட்டுப்பட்ட வாலிபர்களும் இவர்களை முன்னே விட்டுப்பின்னே பரிகசிப்பார்கள். ஆதலால் பொதுவுடமை, சமதர்மம் என்கின்ற கொள்கை களுக்கும், வார்த்தைகளுக்கும் விரோதமாக மதப்பிரசாரப் பிழைப்புக்காரர் களும், சோம்பேரிக் கூட்டங்களும் செய்யும் விஷமப் பிரசாரத்தையும், சூழ்ச்சிப் பிரசாரத்தையும், வயிற்றுப்பிழைப்புப் பிரசாரத்தையும் கண்டு சிறிதும் கவலையோ லட்சியமோ கொள்ளாமல், கொள்கைகளின் தத்துவங் களும், பயன்களும், ஏழை மக்களுக்கும், உழைப்பாளிகளுக்கும் நன்மையா தீமையா என்பதை மாத்திரம் கவனித்து அதன்படி நடக்கவேண்டுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 12.02.1933**



# ஈ.வெ.ராவுக்கு சென்னிமலை யூனியன் போர்டார் வரவேற்பு

தோழர்களே! இன்று இவ்வூர் யூனியன் போர்டார் அழைப்புக்கு இணங்கி வந்த சமயம் உற்சவக் கூட்டத்திற்காக ஒரு பொதுக்கூட்டம் கூட்ட வேண்டுமென்று சொன்னதால் இங்கு பேச ஒப்புக்கொண்டேன். ஆனால் இங்கு கூடியிருக்கும் நீங்கள் பெரிதும் இந்த உற்சவத்திற்காக வந்தவர்கள்.

நான் பேசும் விஷயம் உங்கள் மனத்திற்கு திருப்தியாய் இருக்காது, ஆனாலும் உங்கள் மனதை புண்படுத்தவேண்டும் என்று நான் பேசவர வில்லை. ஆனால் இதன் பயன் என்ன என்று யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளவே நான் சில விஷயங்களைப் பேசுகிறேன்.

இன்றைய உற்சவமும், கொண்டாட்டமும் என்ன கருத்தைக் கொண் டது? சுப்பிரமணியசாமிக்கு கல்யாணம். கல்யாணம் செய்து கொண்ட சாமி தேர்மீது ஊர்கோலம் வருகின்றார். இதற்காக இத்தனை ஆயிரம் ஜனங்கள் வீடு வாசல், வேலை வியாபாரம் முதலியவைகளை விட்டு விட்டு வந்து இன்று இங்கு கூட்டத்தில் நெருக்கப்படுகிறார்கள். பலர் காவடி தூக்கி ஆடுகிறார்கள். சாமிக்குக் கல்யாணம் என்பதில் ஏதாவது அறிவு இருக்கிறதா? வருஷந்தோறுமா கல்யாணம் செய்வது? இந்த காவடி தூக்கிக்கொண்டு கண்டபடி குதிப்பதிலும் உளருவதிலும் ஏதாவது அருத்தம் இருக்கிறதா? இதை அன்னிய மதக்காரனோ அன்னிய தேசத்தானோ பார்த்தால் என்ன சொல்லுவான்? வேறு மதக்காரன் இந்தபடி ஆடினால் நாம் என்ன சொல்லு வோம். நமது அறிவுக்கும் நாகரீகத்திற்கும் இது தானா அடையாளம்? எத்தனை வருஷகாலமாக இந்தப்படி மூடக்கொள்கையில் ஈடுபட்டு வரு கிறோம்? என்ன பலனைக் கண்டோம். மனிதனுக்கு முற்போக்கே கிடை யாதா? 2000, 3000 வருஷத்திற்கு முந்திய நிலை நம்மிடம் சிறிதும் மாற வில்லை. இம்மாதிரி நடவடிக்கை நம்மை மிருக பிராயக்காரன் என்று காட்டு வதுடன் நமது பணம் எவ்வளவு செலவாகின்றது, நமது நேரமும் ஊக்கமும் எவ்வளவு செலவாகின்றது பாருங்கள். கடவுளைப் பற்றிய எண்ணங்களும் பக்திகளும் நமக்கு என்ன பலனைக் கொடுக்கின்றன? அதிக பக்திக்காரன் தனக்கு வேண்டியதெல்லாம் கடவுள் தருவார் என்று எண்ணுகின்றான்.



RangaRakes tamilnavarasam.com

கடவுளைப் பற்றி அதிகமாய் அறிந்தவன் சகலமும் கடவுள் செயல் அவனன்றி ஓரணுவும் அசையாது என்று எண்ணுகிறான். மனிதனுடைய முற்போக்கையும் அவனது கஷ்டத்தையும் கொடுமையையும் நிவர்த்தி செய்து கொள்ளுவதையும் இந்த எண்ணங்கள் தடைப் படுத்துகின்றன.

பல ஆயிர வருஷங்களாக ஒருவன் கீழ் ஜாதியாய் இருப்பதற்கும் கல்வி அறிவு பெறாமல் இருப்பதற்கும் சதா உழைத்து உழைத்து பாடுபட்டும் பட்டினியாயும் போதிய ஆதாரமும் வசதியும் இல்லாமலும் இருப்பதற்கும் இந்த எண்ணங்களே காரணமாகும் இது போலவே பாடுபடாத சோம்பேரிகள் கோடீஸ்வரர்கள் ஆகவும் தலைமுறை தலைமுறையாய் பிரபுக்களாகவும் மேல் ஜாதிக்காரர்களாகவும் இருப்பதற்கும் இந்த எண்ணங்கள் தான் காரணம். இந்த எண்ணங்கள் பணக்காரனுக்கும் சோம்பேரிக்கும் (பார்ப்பானுக்கும்) தான் அனுகூலம். தொழிலாளிக்கும், கூலிக்காரனுக்கும், பண்ணைய ஆளுக்கும் கெடுதியே ஆகும்.

ஏழைகள் தங்கள் தரித்திரத்திற்கும் கஷ்டத்துக்கும் கடவுளும் தலைவிதியும் தான் காரணம் என்று சொல்லிவிடுவாரேயாகில் அவர்கள் எப்படி தரித்திரத்தை நீக்கிக்கொள்ள முடியும்? அவன் தன் பாட்டின் பயனை எவன் அனுபவிக்கிறான்? ஏன் அனுபவிக்கிறான்? என்று பார்த்து அவை களை தடுக்கவேண்டும். இந்த காரியம் செய்ய ஒரு கடவுளும் ஒப்பாது. ஏனென்றால் கடவுளையும் தலைவிதியையும் பணக்காரனும் சோம்பேரியும் தான் உண்டுபண்ணுகிறான். ஆகையால் அவைகளை தங்களுக்கு தகுந்த மாதிரியாகத் தான் உண்டு பண்ணிக்கொள்ளுவார்கள். இதில் உங்களுக்கு சந்தேகம் வேண்டாம். இங்கு மாத்திரம் அல்லாமல் எல்லா தேசங்களிலும் பணக்காரர்கள் தங்கள் நன்மைக்கும் அது ஸ்திரமாய் இருப்பதற்கும் இந்த மாதிரியாகத்தான் கடவுளை சிருஷ்டித்து அதைப் பிரசாரம் செய்யப் பாதிரி களை ஏற்படுத்தி அவர்களுக்கு பணம் கொடுத்து காப்பாற்றி வருகிறார்கள். இந்தப் புரட்டுகளை உலகில் வெகு பேர் அறிந்திருந்தாலும் ரஷியா தேசத் தார்கள் தான் முதன் முதலில் இதை அழித்து நிர்த்தூளியாக்கிப் பணக்காரத் தன்மையையும் பாதிரித் தன்மையையும் ஒழித்தார்கள். ரஷியா தேசமானது இந்தியாவைப்போலவே பணக்காரருடையவும், பார்ப்பனர் (பாதிரி) களுடை யவும் ஆதிக்கத்தில் இருந்து ஏழை மக்களை வாட்டி வதைத்து வந்தது. ஆனால் அவர்கள் அதற்குக் காரணம் கடவுள் புரட்டும், மதப்புரட்டும் என்பதை உணர்ந்து அந்த இரண்டையும் அழிக்கத் தொடங்கி இன்று எலலோரும் சமமாய் வாழுகின்றார்கள். அங்கு சோம்பேரியோ, பிரபோ, பணக்காரனோ, முதலாளியோ, மிராசுதாரனோ, ஜமீன்தாரனோ கிடையாது. எல்லோரும் பாடுபடவேண்டியது. அதன் பயனை எல்லோரும் சமமாய் அனுபவிக்க வேண்டியது. ஒருவனை ஒருவன் ஏய்க்கவோ, ஒருவன் பாடு பட்டதை ஒருவன் அனுபவிக்கவோ முடியாது.



ஆனால் இன்று இங்கு "கடவுள் செயலால்" இருக்கும் தேசத்தில் ஒரு மனிதனுக்கு 1000 ஏக்கர் 10000 ஏக்கர் பூமி கூட இருக்கிறது. பூமிக்குச் சொந்தக்காரன் என்பவன் உழுவதில்லை, விதைப்பதில்லை, தண்ணீர் இறைப்பதில்லை, பாத்தி கட்டுவதில்லை, அறுப்பு அறுப்பதில்லை. ஆனால் விளைந்த வெள்ளாமையை எல்லாம் தன் வீட்டில் கொண்டு போய்க் கொட்டிக் கொள்ளுகிறான். உழுது, விதைத்து, தண்ணீர் பாய்ச்சி, அறுப்பு அறுத்த ஆளுக்கு ஒருபடி போராதா, இரண்டுபடி போராதா என்று அரை வயிற்றுக்குத்தான் கொடுக்கிறான். துணி வேண்டுமானால் தர்மத்துக்கு இனாம் கொடுப்பது போல் அரைத் துணி கொடுக்கிறான். வீடு வேண்டு மானால் காட்டில் கை அகலம் இடம் காட்டுகிறான். இதெல்லாம் பிச்சை கொடுப்பது போல் கொடுக்கிறான். ஆனால் மிராசுதாரனோ இவ்வளவையும் விற்று மாடி வீடு, மோட்டார் வண்டி, தேவடியாள், பிராந்தி, உஸ்கி, நாடகம், சினிமா, தாலூகா, ஜில்லா போர்டு மெம்பர், பிரசிடெண்ட்டு, முனிசிபல் சேர்மென் ஆகியவைகளுக்கு பதினாயிரக்கணக்காக வாரி செலவு செய்து ராஜ போகம் அனுபவிக்கிறான். இந்த அக்கிரமங்களுக்கு உடந்தையாய் இருக்கிற கடவுளும், அனுமதித்துக் கொண்டிருக்கிற கடவுளும், இன்னமும் நமது நாட்டுக்கு வேண்டுமா என்று கேட்கின்றேன். கடவுள் புரட்டு ஒழிந்தா லொழிய இந்த மிராசுதாரர்கள் ஒழியமாட்டார்கள். இவர்களது இப்படிப்பட்ட அகந்தையும் ஆணவமுமான காரியங்களும் ஒழியாது. உங்கள் தரித்திரங் களும் ஒழியாது.

ஆகையால் இவைகளை யெல்லாம் நன்றாய் யோசித்து உங்கள் கஷ்டத்திற்கும் அறிவீனத்திற்கும் காரணம் என்ன என்று கண்டுபிடித்து அதன் படி நடவுங்கள்.

*குறிப்பு: 09.02.1933இல் சென்னிமலை போர்டு பள்ளிக்கூடத்தில் சென்னிமலை யூனியன் போர்டாரால் வழங்கப்பட்ட உபசார நிகழ்ச்சியைத் தொடர்ந்து மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை,*

**குடி அரசு – சொற்பொழிவு – 19.02.1933**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ் ஸ்தம்பித்து விட்டது

## 'சுதேசமித்ரன்' 'தமிழ் நாடு' 'இந்து' அபிப்பிராயம்

தற்கால காங்கிரஸ் நிலமையை பற்றி "சுதேசமித்திரன்" பத்திரிகையில் நாளது மாதம் 11-ந் தேதி தலையங்கத்தில் காணப்படும் சில குறிப்புகளாவன:-

"இந்தியாவில் தற்கால நிலையில் சீர்திருத்தங்களுக்காகப் போராடி வற்புறுத்தும் சக்திகள் குறைந்து கொண்டிருக்கின்றன. சீர்திருத்தங்களுக்காக வெகுவாக பிரயாசைப்பட்ட தேசீய உணர்ச்சியானது தலைவரிழந்து சக்தி குறைந்து வருகிறது".

"இந்நிலையை எவ்விதம் பரிகரிப்பது? சோர்வடைந்திருக்கும் ராஜிய கிளர்ச்சிக்கு எவ்விதம் புத்துயிரளிப்பது".

"காங்கிரஸ் ஸ்தாபனமானது, தனது சக்திகளை, பல துறைகளில், பல பிரச்சனைகளில் திருப்பி வலுவற்றதாகச் செய்துக்கொள்ளக்கூடாது. இதர பிரச்சனைகள் சமுதாய வாழ்விற்கு எவ்வளவு முக்கியமானதாயினும், இந்த சமயத்தில் ராஜிய பிரச்சனையே முதல் பெறவேண்டும். சட்ட மறுப்பு கொள்கை வெற்றி பெறுவதற்கு, ஆதியில் எவ்வளவு சௌகரியங்களிருந்த போதிலும் தற்காலம் அது பயன்படாதென்றோ அல்லது அதற்குத் தேவையான உணர்ச்சி தேசத்தில் இல்லையென்றோ அவர்கள் கருதுவார்களானால், உடனே தேசத்தின் நலத்தை உத்தேசித்து தங்கள் திட்டத்தை திருத்தி அமைத்து விடவேண்டும்".

என்ற குறிப்புகள் ஷை தலையங்கத்தில் காணப்படுகின்றன.

ஆகவே, இதன் உண்மைத் தத்துவம் என்ன என்பதை வாசகர்கள் ஊகித்து பார்க்க வேண்டுமாய் விரும்புகின்றோம். அரசியல் கிளர்ச்சி தோல்வியடைந்து விட்டதென்றும், மற்றும் தலைவர்கள் என்பவர்கள் தீண்டாமை, விலக்கு, பரதேசி மறியல், சுதேசிப்பிரசாரம் மற்றும் தபாலாபீஸ் பகிஷ்காரம் முதலிய பல சில்லரை விஷயங்களில் கவனத்தைச் செலுத்தி தொண்டர்களும், தலைவர்கள் என்கின்றவர்கள் தங்கள் தங்களிஷ்டப்படி தலைவிரி கோலமாய் திரிந்ததின் பலனாய் கிளர்ச்சி ஸ்தம்பித்து விட்டது.



வலுகுறைந்து விட்டது, வெற்றிபெற போதியதாக இல்லை. தேசம் இதுசமயம், போதிய உணர்ச்சி பெற்றதாயில்லை என்றும், ஆதலால் தீண்டாமை முதலிய விஷயங்களையும் மறியல், பகிஷ்காரம் முதலிய பல விஷயங்களையும் விட்டு விட்டு குறிப்பாக, சிறப்பாக ஆலய பிரவேச விஷயத்தில் கவனம் செலுத்துவதை விட்டு விட்டு ஒரு புதிய திட்டத்தை அதாவது சர்க்காரோடு ஒத்துழைத்து ஏதாவது ஒரு வழியில் காங்கிரஸ் தோல்வியுறவில்லையென்றும் வெற்றி பெற்ற தென்றும் பாமர மக்கள் நினைக்கும் படியாக ஒரு தந்திரம் செய்ய வேண்டும் என்று சூசனைக் காட்டுவதாகவே இருக்கிறது. இந்த அபிப்பிராயம் சுதேசமித்திரனுக்கு மாத்திரம் இப்பொழுது தோன்றி இருப்பதாக அதைக்குற்றம் கூறுவதற்கில்லை. ஏனெனில் மற்றொரு பத்திரிகையாகிய.

### "தமிழ் நாடு"

"தமிழ்நாடு" பத்திரிகையும் அதே பிப்பிரவரி *மீ* 11-தேதி தனது தலையங்கத்தில் காங்கிரசின் வீழ்ச்சியைப் பற்றி சிறிது சூசனைக் காட்டியிருக்கிறது. என்ன வென்றால்.

"காங்கிரஸ் இயக்கத்தின் வேகம் குன்றிவிட்டதால் தோழர் காந்தி தீண்டாமை விலக்குப்போர் தொடுத்திருக்கிறார்" என்று எழுதியிருக்கிறது.

இந்த இரண்டு பத்திரிகைக்குமுள்ள வித்தியாசம் என்னவென்றால் சுதேசமித்திரன் பத்திரிகையானது தோழர் காந்தி அவர்கள் "தீண்டாமை" விலக்கு கோவில் பிரவேசம் முதலிய வேலைகளில் பிரவேசித்ததால் காங்கிரஸ் ஸ்தம்பித்துப் போய்விட்டதென்று சொல்லுகிறது.

"தமிழ்நாடு" பத்திரிகையோ அந்தப்படி சொல்லாமல் காங்கிரஸ் இயக்கம் ஸ்தம்பித்துப்போய் விட்டதால் தோழர் காந்தி "தீண்டாமை விலக்கு" வேலையைத் தொடங்கி இருக்கிறார் என்றெழுதி இருக்கிறது.

எது எப்படி இருந்தாலும் இரண்டு தேசீய பத்திரிகைகளும் காங்கிரஸ் ஸ்தம்பித்துப்போய் விட்ட தென்பதை கண்ணியமாக ஒப்புக்கொள்ளுகின்றன.

### ஹிந்து

இதோடு "ஹிந்து" பத்திரிகையின் யோக்கியதையும் சற்று கவனிப்போம். அதாவது "இந்து" பத்திரிகையின் லண்டன் நிருபர் எழுதிய கடிதமொன்று பிப்பிரவரி *மீ* 14-ந்தேதி சுதேசமித்திரன் பத்திரிகையில் மொழி பெயர்த்திருப்பதாவது.

"சட்டத்தினாலும் இராணுவத்தினாலும் ஏராளமான பலத்தையுடைய இந்திய கவர்மெண்டானது ஒற்றுமையற்றதும் சரியான ஒரு தலைவரற்றதும் ஆன காங்கிரஸிற்கு தோற்றுப் போவதென்பது, லேசான காரியமல்ல".



RangaRakes tamilnavarasam.com

“ராஜிய இயக்கம் சரியாக நடத்தப்படவில்லையென்று அநேக ஜனங்கள் அபிப்பிராயப் பட்டிருக்கின்றார்கள். சென்ற சில வருஷங்களாக (காங்கிரஸ்) செய்து வந்திருப்பது கண் மூடித்தனமாய் எதிரில் முட்டிக் கொள்ளுவது போலிருப்பதால், அது இந்திய கவர்மெண்டை அசைக்க முடியவில்லை”.

“மகாத்மா காந்தி உலக ஜனங்களின் மதிப்பைப் பெற்றிருக்கிறார் என்றாலும் இக்கால ராஜியத் துறையில் வெற்றி பெற அவர் அருகதையற்றவர்”.

“சட்ட மறுப்பியக்கம் பிரமாதமான பலனைத் தந்துவிடு மென்று பல தேசியவாதிகள் அளவுக்கு மீறி நம்பினது சிரிப்பாக விருக்கிறது”.

“இப்படி வீண் நம்பிக்கை கொள்ளவேண்டாமென்று எங்களில் சிலர் அப்பொழுதே எச்சரிக்கை செய்தோம். நாங்கள் நினைத்தது சரியென்று இப்பொழுது ஏற்பட்டு விட்டது. இந்தியாவின் கட்சி நியாயமானதென்ற எங்களுடைய நம்பிக்கை குறையவில்லை. ஆனால் இந்தியாவின் இலட்சியத்தை அது குறுக்கு வழியில் போய்ப்பெற்று விடாதென்று தெரிந்து கொள்ள விசேஷ சாமர்த்தியம் தேவையில்லை”.

“இந்தியாவின் கோட்டையைப்பிடிக்கப் பெறும் கூச்சல் மாத்திரம் போதா தென்பது, அனுபவத்தில் தெரிந்து விட்டது. ஆர்ப்பாட்டங்கள் மறியல்கள், பகிஷ்காரங்கள் ஆகியவைகள் வெற்றி பெற்றுவிட முடியுமானால் இதற்குள் வெற்றி பெற்றிருக்கவேண்டும்”.

“சட்டசபைகளுக்கு வெளியில் தேசீயவாதிகள் மூடத்தனமாக வேலை செய்து வந்திருப்பதுபோல், சட்டசபைகளில் அவர்கள் சரியான வேலை செய்து வந்திருந்தால் அடக்குமுறைக்குக் கையாளாகச் சட்டசபைகளை உபயோகித்திருக்க முடியாது. காங்கிரஸ் சேர்ந்து சட்டசபையில் கவர்ன்மெண்டை நெருக்கி வந்திருப்பார்களாயின் ஒத்துழையாமைக் காட்டில் அவர்கள் சஞ்சாரம் செய்து வந்ததில் அடைந்துள்ளதைக் காட்டிலும் அதிகப் பலனை அடைந்திருப்பார்கள்”.

“இப்போது மகாத்மா தீண்டாமையை ஒழிக்க முனைந்திருப்பது போல் ராஜீயத்துறையில் முனைந்திருக்கவில்லை என்று தெரிகின்றது. இந்த மத சம்பந்தமான பிரச்சனையை கிளப்பிவிட்டதால் ராஜீயப்பிரச்சனை சிறிது அசட்டைச் செய்யப்பட்டுவிட்டதாக இங்கு சிலர் நினைக்கின்றார்கள்” என்று எழுதி இருக்கிறது.

ஆகவே “சுதேசமித்திரன்”, “தமிழ்நாடு”, “இந்து” ஆகிய மூன்று “தேசீய” பத்திரிகைகளும் உள்ளதை ஒரு அளவுக்கு ஒப்புக்கொண்டன. ஆனால் “சுதேசமித்திரன்” “இந்து” ஆகிய இரண்டு பார்ப்பனத் தேசீயப்



பத்திரிகைகளும் காந்தியை தீண்டாமை வேலையை விட்டு விட்டு சர்க்காரோடு ஒத்துழைக்கும்படி ஜாடை காட்டுகின்றன. “தமிழ் நாடு” பத்திரிகை வருணாச்சிரமத்தையும் ஜாதிப்பிரிவையும் ஒழிக்க வேலை செய்யும்படி சொல்லுகின்றது. ஆனால் தொண்டர்கள், தேச பக்தர்கள், தேசியவாதிகள் இதை எப்படி ஒப்புக்கொள்ளமுடியும்? ‘அரசியலுக்குவேறு வேலை வேண்டாமா?’ எலக்ஷன்களில் வெற்றி பெறுவதற்கு வேறு தந்திரங்கள் வேண்டாமா? சிலருக்கு சாப்பாட்டிற்கே வேறு வழி வேண்டாமா? ஆகையால் மேல்கண்ட பத்திரிகைகள் இதற்கு ஒரு வழி காட்டுமா என்று கேழ்ப்பார்கள்.

**குடி அரசு – கட்டுரை – 19.02.1933**



RangaRakes tamilnavarasam.com

# ரகசியம் வெளிப்பட்டதா?

காங்கிரசினுடையவும், காந்தியினுடையவும், கொள்கைகளும் அது சம்பந்தமான கிளர்ச்சிகளும், முதலாளிமார்களுக்கும், உயர்ந்த ஜாதிக் காரர்கள் என்பவர்களுக்கும் மாத்திரமே நன்மை பயக்கத் தக்கதென்றும், காங்கிரசும், காந்தியும், பணக்கார முதலாளிகளுடையவும், 'படிப்பாளி' களாகிய சோம்பேரிகளுடையவும் ஆயுதங்களே என்றும் இந்த 7, 8 வருஷ காலமாகவே நாம் தெரிவித்துக்கொண்டு வந்திருக்கின்றோம்.

இதன் பயனாய் தேசியப்புலிகள்-தேசபக்த வீரர்கள் என்பவர்கள் நம்மீது சீறிப்பாய்ந்து நம்மை தேசத்துரோகி என்றும், மதத்துரோகி என்றும் பட்டம் சூட்டி கண்டபடி வைததோடல்லாமல் குத்திவிடுவதாகவும், சுட்டு விடுவதாகவும் வீரம் பேசி ரத்தத்தில் (தோய்த்து) கையெழுத்துச் செய்த பல எச்சரிக்கைக் கடிதங்களையும் அனுப்பினார்கள்.

இவை மாத்திரமல்லாமல் தேசியப்பத்திரிகை என்பவைகளும் மதப் பத்திரிகை என்பவைகளும் நமக்கு இழைத்த தீங்குகளுக்கும் கொடுத்த தொல்லைகளுக்கும் அளவேயில்லை. ராமசாமியையும் சுயமரியாதை இயக்கத்தையும் அடியோடு ஒழித்தாலொழிய தேசியம் வெற்றிபெறாது என்றும், இவற்றை ஒழிப்பதே ஒரு பெரிய தேசிய வேலை என்றும் பேசி னார்கள், எழுதினார்கள். சோம்பேரிகளையும் காலிகளையும் ஏவியும் விட்டார்கள்.

மற்றும் மேடையில் ஏறிப்பேச சௌகரியம் கிடைக்கப்பெற்றவர்கள் எல்லாம் சுயமரியாதை இயக்கத்தையும் ராமசாமியையும் வைவதும், பேனாப் பிடித்து எழுத சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றவர்கள் எல்லாம் சுயமரியாதை இயக்கத்தையும் ராமசாமியையும் தாக்கி எழுதுவதுமான காரியங்களையே நடத்திவந்தார்கள்.

எல்லாவற்றையும் விட இந்த இரண்டு வருஷ காலமாய் அதாவது சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு, மறியல் என்கின்ற பெயர்களால் சிலருக்கு ஜெயிலுக்குப்போக சந்தர்ப்பம் கிடைத்தவுடன் அவர்கள் எல்லாம் ஜெயிலி லிருந்து வெளியாகும்போதே ஒவ்வொருவரும் தங்களை பெரிய வீரர்கள்



என்றும், சூரர்கள் என்றும், பிரமாதமான காரியத்தைச் செய்து சாதித்துவிட்ட மேதாவிகள் என்றும் நினைத்துக்கொண்டு ஜெயில் வாசல்படியிலிருந்து வெளிவரும் போதே சுயமரியாதை இயக்கத்தையும் ராமசாமியையும் சின்னா பின்னமாகக் கிழித்தெரிந்து விடப்போவதாய் கருதி ஆவேசத்துடனேயே வருவதும் தலைகால் தெரியாமல் துள்ளித் துள்ளிக் குதிப்பதுமாய் நடந்து வந்தார்கள்.

ஆனால் நம்மைப் பொருத்தவரை நாம் இதை உணர்ந்தும் ஒரு அளவுக்கு இதன் பயனை அனுபவித்துக் கொண்டுமிருந்தாலும் கூட உப்பு சத்தியாக்கிரகம் தொடங்கும்போதே இந்த சத்தியாக்கிரகம் மக்களுக்கு யாதொரு பயனையும் அளிக்கா தென்றும் இது எந்த விதத்திலும் வெற்றி யடைந்ததாக கருதும்படியாகவாவது யாதொரு குறிப்பையும் உண்டாக்கா தென்றும் இது **பொஸ்ஸ் என்று போய்விடும்** என்றுமே எழுதினோம். மற்றும் இதனால் ஏதாவது பலன் ஏற்பட்டதாகச் சொல்லிக்கொண்டாலும் அது பணக் காரர்களுக்கும் சோம்பேரி வாழ்க்கைக்காரர்களான மேல் ஜாதிக்காரர்கள் என்பவர்களுக்கும் தான் பயன் அளிக்குமே தவிர ஏழை மக்களுக்கும் கஷ்டப்பட்டு உழைக்கும் மக்களுக்கும் யாதொரு பயனையும் உண்டாக்காது என்றும் பந்தயங்கட்டி கூறிவந்தோம்.

கடைசியாக என்ன நடந்தது? என்பதை சற்று சிந்திப்போம். முதல் மூச்சு (உப்பு) சத்தியாக்கிரகமானது பம்பாய் மில் முதலாளிகளினுடைய பண உதவியாலும், பார்ப்பனர்களுடைய பத்திரிகையின் உதவியாலும், பிரசார உதவியாலும் பதினாயிரக்கணக்கான மக்களை ஜெயிலுக்கு அனுப்ப முடிந்தும், கடைசியாக எதை எதிர்த்து சத்தியாக்கிரகம் துடங்கப்பட்டதோ அதிலேயே (சைமன் கமிஷனின் வட்டமேஜை மகாநாட்டிலேயே) தானாகவே போய் கலந்து கொள்ளுகிறது என்கின்ற நிபந்தனையின் மீது ராஜியாகியே எல்லோரும் ஜெயிலில் இருந்து வெளிவரவேண்டியதாயிற்று. அதாவது "சட்ட மறுப்பை நிறுத்திக் கொள்ளுகிறேன், ராஜாக்களும் மகாராஜாக்களும் ஜமீன்தாரார்களும், முதலாளிமார்களுமாய் 100க்கு 90 பேர் கூடிப்பேசி இந்தியாவின் அரசியல் சுதந்திரங்களைத் தீர்மானிக்கப்போகும் வட்ட மேஜை மகாநாட்டில் நானும் கலந்து கொள்ளுகிறேன், அதுவும் அவர்களுடைய நிலைமைக்கு அதாவது அந்த ராஜாக்கள், மகாராஜாக்கள், ஜமீன்தாரர்கள் முதலாளிமார்களுடைய இன்றைய நிலைமைக்கு எவ்வித குறைவும் ஏற்படாதபடி தீர்மானிக்கப்போகும் கூட்டத்தில் கலந்து கொள்ளுகிறேன்" என்பதாக ஒப்புக்கொண்டு "ராஜி" பேசித்தான் ஜெயிலில் இருந்து விடுதலை யாக வேண்டியிருந்தது.

அந்த ராஜியும், வட்டமேஜை மகாநாட்டுக்கு காங்கிரசும் காந்தியும் சென்று வரும் வரையில் தான் இருக்க முடிந்ததே தவிர வேறில்லை. ஆகவே அது முடிந்தவுடன் மறுபடியும் ஒரு தடவை சத்தியாக்கிரகமோ மறியலோ



RangaRakes tamilnavarasam.com

தொடங்கித் தீரவேண்டியதாய் விட்டது. இதிலும் முதலாளிகளுடைய பண உதவியும் பார்ப்பனர்களுடைய பத்திரிகை உதவியும் பிரசார உதவியும் தாராளமாய் கிடைத்தது என்றே சொல்லலாம். இதனாலும் பதினாயிரக் கணக்கான பேர் மறுபடியும் ஜெயிலுக்கு போனார்கள் என்றும் சொல்லலாம். ஆனால் என்ன நடந்தது? முன்போல ஒரு ராஜி என்பதற்கு கூட மார்க்க மில்லாமல் மன்னிப்புக் கேட்டாலொழிய, அதாவது இனிமேல் அப்படிச் செய்வதில்லை யென்று சொன்னாலொழிய வெளியில் விடுவதில்லை என்று சர்க்கார் சொல்லும் நிலையில் இருக்கிறது. காந்தியும் ஏதோ ஒரு வழியில் சர்க்காருக்கு அந்தவித உறுதியைக் கொடுத்துவிட்டோ அல்லது அந்தவித உறுதி சர்க்காருக்கு ஏற்படும்படி ஏதாவது ஒரு சூசனையைக் காட்டிவிட்டோ விடுதலை ஆகப்போகின்றார் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. ஆனால் இவற்றினால் எல்லாம் கஷ்டப்படும் மக்களுக்கு ஏற்பட்ட பலன் என்ன என்பதுதான் நமது கேள்வி.

புதிய சீர்திருத்தம் என்பது அதன்பாட்டுக்கு தானாகவே சைமன் கமிஷன் தீர்மானித்தபடி அல்லது ஒரு வழியில் சற்று அதிகமானால் மற்றொரு வழியில் சற்று குறைந்து ஏதோ ஒரு வழியில் அரசாங்கத்தாருக்கும் முதலாளிமார்களுக்கும் சுதேச ராஜாக்கள், ஜமீன்தாரார்கள், பெரிய உத்தியோகஸ்தர்கள், பார்ப்பனர்கள் ஆகியவர்களுக்கும் எவ்வித மாறுதலும் குறைவும் இல்லாமலும் அவர் களுக்கு என்றென்றைக்கும் எவ்வித குறையும் மாறுதலும் ஏற்பட முடியா மலும் ஒரு சீர்திருத்தம் வரப்போகின்றது - வந்தாய் விட்டது என்பது உறுதி. இந்த சீர்திருத்தமானது பெரிதும் பணக்காரக் கூட்டமும், சோம்பேரிக் கூட்டமுமே நடத்திவைக்கத்தகுந்த மாதிரிக்கு இப்பொழு திருந்தே பிரசாரங்கள் நடந்தும் வருகின்றன. ஆகவே ஏதோ ஒரு வழியில் அந்த வேலை முடிந்து விட்டது. இனி இந்த நிலையில் அரசியல் மூலம் ஏழைகளுக்கு ஏதாவது ஒரு சிறு பலனாவது உண்டாகும் என்று சொல்வ தற்கில்லை.

இப்படி யெல்லாம் முடிந்ததற்கு ஏதாவது ஒரு இரகசியம் இருந்துதான் ஆகவேண்டும். அந்த ரகசியம் என்ன?என்பதுதான் இந்த தலையங்கத்தின் கருத்து.

இவ்விதக் கிளர்ச்சிகளையெல்லாம் காங்கிரசின் பேரால் காந்தி யவர்கள் சென்ற இரண்டு வருஷங்களுக்கு முன் ஆரம்பித்த காலத்திலேயே இதை (இந்த சட்ட மறுப்பு உப்பு சத்தியாக்கிரகம்) எதற்காக ஆரம்பிக்கின் றேன் தெரியுமா? என்று சர்க்காருக்கும் மற்றும் முதலாளிமாருக்கும், உயர்ந்த ஜாதியாராகிய சோம்பேரிக் கூட்டங்களுக்கும் தெரியும்படியாக, ஒரு விளம் பரம் வெளிப்படுத்தி இருக்கிறார். அவ்விளம்பரம் என்ன என்று ஞாபகப் படுத்திப் பார்த்தால் இதன் இரகசியம் இன்னதென்று விளங்கிவிடும். **அதென்னவென்றால்,**



**“நான் இன்று இந்தக்கிளர்ச்சி (உப்பு சத்தியாக்கிரகம்) ஆரம்பிக்கா விட்டால் இந்தியாவில் பொது உடமைக்கிளர்ச்சி ஏற்பட்டுவிடும். ஆகை யால் (அதை அடக்கவும் மக்கள் கவனத்தை அதில் செல்லவிடாதபடி வேறு பக்கத் தில் திருப்பவும்) இதை (உப்பு சத்தியாக்கிரகத்தை) ஆரம்பிக்கின்றேன்”** என்று சொல்லியிருக்கிறார்.

அன்றியும் இவ்வித கிளர்ச்சிகளால் சர்க்காருக்கு ஏதாவது கெடுதி ஏற்பட்டதா அல்லது அவர்களின் நிலைமைக்கு ஏதாவது குறைவு ஏற்பட்டதா என்று பார்த்தால் யாதொரு குறைவும் ஏற்பட்டுவிடவில்லை. அதுபோலவே தோழர் காந்திக்கும் ஏதாவது கெடுதியோ குறைவோ ஏற்பட்டதா என்று பார்த் தால் அதுவும் ஒரு சிறிதுமில்லை. அதற்கு பதிலாக காந்திக்கு உலகப் பிரசித்தமான பெரிய பேர் ஏற்பட்டு விட்டது. உலகத்திலுள்ள பாதிரிகளும் செல்வவான்களும் அவர்களை ஆதரிப்பவர்களும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய் புகழ்ந்த வண்ணமாகவே இருக்கிறார்கள். காந்தியவர்கள் சிறைப்பட்டதிலாவது அவருக்கு ஏதேனும் கெடுதி ஏற்பட்டதா என்று பார்த்தால் ஒன்றும் இல்லை. சிறையில் அவருக்கு ராஜபோகத்தில் குறைவில்லை. அவருடைய உபதேசத்தைக் கேட்க ஜெயில் வாசற்படியில் எப்போதும் ஆயிரக்கணக்கான பேரும் அவருடைய தரிசனையைப்பார்க்க எப்போதும் பதினாயிரக்கணக்கான பேரும் நின்ற வண்ணமாய் இருந்ததோடு இருக்கிறதோடு இந்தியாவிலுள்ள முதலாளித்தன்மைகொண்ட பத்திரிகைகள் எல்லாம் தங்கள் தங்கள் பத்திரிகைகளில் அரைவாசிப் பாகத்துக்கு மேலா கவே காந்தியின் புகழும், அவரது திருவிளையாடல்களும், அவரது உபதேசங்களுமாகவே நிறப்பப்படுகின்றன. அவரது அத்தியந்த சிஷ்யர் களுக்கும் யாதொரு குறைவுமில்லை. சென்ற விடமெல்லாம் சிறப்புடனே பதினாயிரக் கணக்கான கூட்ட மத்தியில் வரவேற்று உபதேசம் கேட்கப் படுவதாகவே யிருக்கின்றன. காந்தி அவர்களது குடும்பத்துக்கும் யாதொரு குறைவும் இல்லை. அவர்களுக்கும் அது போலவே நடைபெறுகின்றன.

ஆனால் போலீசார் கைத்தடியால் அடிபட்டு உதைபட்டு அறைபட்டு மயங்கிக் கிடந்தவர்களுக்கும், காயப்பட்டவர்களுக்கும், சிறையில் சென்று கஷ்டப்பட்டவர்களுக்கும் என்ன நடந்தது? என்று பாருங்கள். ஜெயிலிலும் பணக்காரனுக்கும் சோம்பேரிகளுக்கும் ஏ.பி. வகுப்புகளும் பாடுபடுகின்ற கூட்டத்திற்கு சி. வகுப்புமாய்த்தான் இருந்தது. (இதற்காக தோழர் காந்தி ஒரு நேரம் பட்டினி இருந்திருப்பாரானால் ஜெயிலிலும் இந்தக்கொடுமை இருந்திருக்க முடியுமா? அதுவேறு சங்கதி) ஆகவே ஒரு அறிவாளி நடுநிலைமையாளி இந்த சுமார் 2 வருஷ காலமாக இந்தியாவில் நடைபெற்ற காந்தி திருவிளையாடல்களை நன்றாய் கூர்ந்து கவனித்து இருப்பானே யானால் தோழர் காந்தி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு என்று சொல்லப்படும் முதலாளி ஆதிக்கத்திற்கு ஒரு ஒற்றறாக கவர்ன்மெண்டாருடைய ஒரு இரகசிய அனுகூலியாக இருந்து வந்தவர் என்றும் ஏழை மக்கள் சரீரத்தால்



RangaRakes tamilnavarasam.com

பாடுபட்டு உழைக்கும் மக்களுக்கு துரோகியாய் இருந்து வந்திருக்கிறார் என்றும் சொல்ல வேண்டுமே ஒழிய வேறு ஏதாவது சொல்லமுடியுமா? என்று கேட்கின்றோம். பணக்காரனும் சோம்பேரியும் காந்தியை புகழ்கின்றான். வெளிநாட்டுப் பாதிரியும் பணக்காரனும் ஆதிக்கத்தில் இருப்பவனும் காந்தியைப் புகழ்கின்றான். சர்க்காரும் அவருக்கு மரியாதை காட்டுவதுடன் அவருக்கு இன்னமும் அதிக செல்வாக்கும் மதிப்பும் ஏற்பட வேண்டிய தந்திரங்களை யெல்லாம் பாமர ஜனங்களுக்கு தெரியாமல் படிக்கு செய்து கொண்டும் வருகின்றன.

இவைகளைப் பார்த்தால் எந்த மூடனுக்கும் இதில் ஏதோ இரகசிய மிருக்க வேண்டும் என்று புலப்பட்டு விடும்.

ஏனெனில், நாளைய தினம் தோழர் காந்தியவர்கள் "இந்த சர்க்காரோடு நான் ஒத்துழைக்க வேண்டியவனாகி விட்டேன். ஏனெனில் சட்டசபைகள் மூலம் அனேக காரியங்கள் ஆக வேண்டியிருக்கின்றது. ஆதலால் ஒத்துழை யுங்கள் இல்லா விட்டால் பொது உடமைக்காரரும் சமதர்மக்காரரும் சட்ட சபையைக் கைப்பற்றி தேசத்தை - மனித சமூகத்தை பாழாக்கி விடுவார்கள்."

என்று (மதராஸ் காங்கிரசுக்காரர் "ஜஸ்டிஸ் கட்சியை அழிக்க சட்ட சபைக்கு போய் மந்திரிகளை ஆதரிக்க வேண்டியிருந்தது" என்று சொன்னது போல்) சொல்லுவாரேயானால் (சொல்லப் போகிறார்) அப்போது ஜனங்கள்- பாமர ஜனங்கள் யாதொரு முணு முணுப்பும் இல்லாமல் உடனே கீழ்படிவ தற்குத் தகுந்த அளவு காந்திக்கு எவ்வளவு செல்வாக்கும் பெருமையும் வேண்டுமோ அவ்வளவும் ஏற்படுத்த வேண்டியது இன்று சர்க்கார் கடமை யாய் இருந்து வருகின்றது. இவ்வளவோடு நிற்கவில்லை காந்தியின் புண்ணிய கைங்கரியம். மற்றும் கொடுமைப்படுத்தப்பட்ட மக்களாகிய உழைப்பாளி களான தீண்டாத வகுப்பார் என்பவர்கள் எப்படியோ முன்னுக்கு வருவதான ஒரு வழியை அடைந்தவுடன் அவர்களையும் என்றென்றும் உழைப்பாளி களாகவே ஊராருக்காக கஷ்டப்படும் மக்களாகவே இருக்கும்படியான மாதிரிக்கு அவர்களை ஹரிஜனங்கள் என்னும் பேரால் ஒரு நிரந்தர ஜாதி யாராக்கி வைக்கவேண்டிய ஏற்பாடுகளும் நடக்கின்றன. அதைப்பற்றி தோழர் அம்பெத்காரின் அறிக்கையும்-காந்தியாரின் மறுமொழியும் தமிழ்நாடு பத்திரிகையின் தலையங்கமும் ஆகிய சுருக்கங்களை மற்றொரு பக்கம் பிரசுரித்திருக்கிறோம். அதைப்பார்த்தால் ஒரு அளவுக்கு விளங்கும்.

காந்தியாரின் சுயராஜ்ஜியக் கொள்கைகளில் முக்கியமானது வருணாச் சிரமதர்மமும், ஜாதிமுறையும் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பதாகும். 'காந்தியின் வருணாச்சிரம கொள்கைக்கு வேறு அருத்தம்' என்று சிலர் சொல்லுவதானாலும் அந்த வேறு அர்த்தம் இன்னது என்பதை காந்தியாரே பல தடவை சொல்லியிருக்கிறார் அதாவது பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என நான்கு வருணம் பிறவியில் உண்டு



என்றும் அவர்கள் ஒவ்வொருவரும் முறையே அறிவு பலம் வியாபாரம் சரீரத்தினால் உழைப்பு ஆகியவைகளிலேயே ஈடுபடவேண்டியவர்கள் என்றும் சொல்லுகிறார். ஜாதி முறைக்கும் காந்தியார் கூறும் தத்துவார்த்த மானது தொழில்களுக்காக ஜாதிமுறை ஏற்பட்டதென்றும் அந்த ஜாதி முறையும் பிறவியிலேயே ஏற்பட்டதென்றும் அந்தந்த ஜாதியானுக்கு ஒரு பிறவித் தொழில் உண்டென்றும் அந்தந்தத் தொழிலையே-அவனவன் ஜாதிக்கு ஏற்ற தொழிலையே அவனவன் செய்து தீர வேண்டும் என்றும் சொல்லுகின்றார். இவ்வளவோடு மாத்திரமல்லாமல் "இந்தமாதிரியான வருணாச்சிரம மர்ம முறையையும், ஜாதி முறையையும் நிலைநிறுத்தவே சுயராஜ்ஜியத்திற்கு பாடுபடுகிறேன்" என்றும் கூறுகிறார். இந்த முறையில் காந்தியாரால் யாருக்கு லாபம் யாருக்கு சுகம் என்பதையும் யாருக்கு நஷ்டம், யாருக்கு கஷ்டம் என்பதையும் வாசகர்களையே சிந்தித்துப்பார்த்து முடிவு செய்துகொள்ளும்படி விட்டுவிடுகின்றோம். ஆகையால் காந்தியாரின் அரசியல் கிளர்ச்சியின் ரகசியமும் தீண்டாமை விலக்கு கிளர்ச்சியின் ரகிசியமும் இப்போதாவது மக்களுக்கு வெளியிட்டதா இல்லையா என்று கேள்க்கிறோம். தலையங்கம் நீண்டுவிட்டதால் வருணாச் சிரமத்தைப்பற்றி மற்றொரு சமயம் எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 19.02.1933**



RangaRakes tamilnavarasam.com

# மாமாங்கம்

கும்பகோணத்தில் நடைபெறப்போகும் மாமாங்க விஷயமாய் சென்ற வாரம் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம். மாமாங்கம் என்பது இந்து மதத்தில் சம்மந்தப்பட்ட ஒரு புண்ணிய (நல்ல) காரியமாக பாவிக்கப்படு கின்றது என்றாலும், அது பெரிதும் சுயநலக்காரர்களாகிய முதலாளிமார்கள், சோம்பேரி வாழ்க்கைக்காரர்கள் ஆகிய இருகூட்டத்தாரின் விளம்பரங்களின் மூலமாகவே அது பிரபலப்பட்டு மக்கள் அதில் ஈடுபடுகின்றார்கள். மாமாங்கத்தை விளம்பரம் செய்யும் இவர்கள் மூன்று வகையாவார்கள். ஒன்று பார்ப்பனர்கள், இரண்டு வியாபாரிகள், மூன்று ரயில்வேக்காரர்கள். இம் மூவருக்கும் அனுகூலக்காரராகவும் கூலிக்காரராகவும் இருக்கும் சில பத்திரிகைக்காரர்கள் மூலமே அதிக விளம்பரமாகின்றது.

இதன் பயனாய் மாமாங்கத்திற்கு பல ஜனங்கள் வருவார்கள் என்று நாடகக்காரர்கள், சினிமாக்காரர்கள், சூதாட்டக்காரர்கள், விபசாரக் குச்சிக் காரிகள் மற்றும் முடிச்சவிழ்க்கும் (சட்டைப் பை) திருடர், தந்தித்திருடர், கத்திரிக் கோல் திருடர் முதலிய திருட்டுவகைக்காரர்களும் ஏராளமாய் வந்து, தங்கள் தங்கள் தொழில்களை நடத்துவார்கள். அங்கு ஏற்கனவே உள்ள சாராயக்கடைகளிலும் வெகு நெருக்கடியாய் வியாபாரம் நடக்கும். இவைகள் தவிர அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய் முதலிய ஆகாரத்திற்கு அவசிய மாய் வேண்டிய சாமான்களாக இல்லாமல் வேறு அநேகவித சாமான்கள் அதாவது விளையாட்டு சாமான்கள், வேடிக்கை சாமான்கள்-அதிசய சாமான்கள் - அற்புத சாமான்கள், பிரபுக்கள் வீட்டில், மகாராஜாக்கள் வீட்டில் இருக்கத்தக்க சாமான்கள் ஆகிய போக போக்கிய சாமான்களே ஏராளமாய் வரும்.

இவை தவிர காப்பிக்கடை, சோத்துக்கடை இவைகள் புதிய புதிய பெயர்களால் நன்றாய் விளம்பரம் செய்யப்பட்டு, எச்சில் மீது எச்சில் படிந்து, எச்சில் குளத்தில் சாப்பிடுவது போல் ஓட்டல்கள் விளங்கும். இவைகள் தவிர காலரா, மலேரியா, இன்புளுயன்சா, அம்மை, பிளேக்கு முதலிய தொத்து நோய்களும் உண்டாகும். மற்றும் கூட்ட நெருக்கடியில் பலர் நசுக்குண்டு சாகலாம்.



இவைகள் தான் மேல் கண்ட விளம்பரங்களால் ஏற்படும் பயனே தவிர வேறு என்ன ஏற்படக்கூடும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். மாமாங்க சம்பந்தமான இந்த உண்மைகளை வெளிப்படுத்தி பாமர ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்ததற்காக மிக மிக கோபங்கொண்டு மெயில் பத்திரிகையில் அதன் நிரூபர் ஒரு சேதி எழுதி இருக்கிறார். அதன் சுருக்கமாவது:-

“சுயமரியாதை இயக்கத் தலைவர்களும், சில காங்கிரஸ்காரர்களும் சேர்ந்து மகாமக பஹிஷ்காரம் செய்யப் புறப்பட்டு சில துண்டுப் பிரசுரங்கள் மாயவரத்திலிருந்து வெளிப்படுத்தி வருகிறார்கள். ஆனால் அவர்கள் வெற்றி பெற மாட்டார்கள். ஏனென்றால் சுயமரியாதைக்காரர்களை நாஸ்திகர்கள் என்றே ஜனங்கள் கருதுவதால் இவர்கள் பேச்சை யாரும் கேட்க மாட்டார்கள். அன்றியும் இவர்கள் இப்படிச் சொல்லுவதாலேயே அனேகம் பேர் மாமாங் கத்துக்கு வருவார்கள். ஆதலால் சுயமரியாதைக்காரர் வேலை பயன்படாது” என்று எழுதப் பட்டிருக்கிறது.

சுயமரியாதைக்காரர்கள் நாஸ்திகர்கள் என்பதினாலேயே அவர்கள் நல்லது சொன்னாலும்கூட ஜனங்கள் கேட்கமாட்டார்கள் என்கின்ற தைரியம் “மெயில்” நிரூபருக்கு எப்படி ஏற்பட்டதோ தெரியவில்லை.

நாஸ்திகர் அல்லாதவர்கள் அவ்வளவு பெரிய மூடர்கள் என்று மெயில் பத்திரிகையின் நிரூபர் கருதி இருப்பது அவரைத்தான் ஏமாற்றமடையச் செய்யுமே ஒழிய மற்றபடி சுயமரியாதைக்காரரை ஒன்றும் செய்துவிடாது.

மாமாங்கத்திற்கு ஜனங்கள் போவதினால் சுயமரியாதைக்காரருக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை. மாமாங்கத்திற்கு ஜனங்கள் போகாமல் இருந்து விடுவதால் சுயமரியாதைக்காரருக்கு லாபம் ஒன்றும் வந்துவிடப் போவ தில்லை.

கால தேச நிலைமையை உத்தேசித்து இந்த மாதிரி முற்போக்குள்ள காலத்தில் எங்கோ ஒரு சுகாதாரமற்ற ஆபாச ஊரில் உள்ள ஒரு சேற்றுத் தண்ணீரில் குளிப்பதற்காக மக்கள் 10, 20, 100, 200 ரூ. வீதம் செலவு செய்து கொண்டு போய், பலவித துன்பங்களையும் நோய்களையும் சம்பாதித்துக் கொண்டு வருவது அறிவுடமையா என்ற கருத்தின் மீதுதான் இந்தப்பிரசாரம் செய்கிறார்களே ஒழிய வேறு காரியம் ஒன்றும் இல்லை. இந்திய மக்களுடைய - (சிறப்பாய்) தென்னாட்டு மக்களுடைய பகுத்தறிவை அளப்பதற்கு இந்த கும்பகோண மாமாங்கமே ஒரு முக்கிய அளவு கருவி என்றே நினைக் கின்றோம்.

அன்றியும் இதுவரை செய்துவந்த பகுத்தறிவு பிரசாரமானது எவ்வளவு தூரம் பயன்பட்டது என்பதையும் அறிய இது ஒரு சந்தர்ப்பமும் ஆகும்.



RangaRakes tamilnavarasam.com

தவிர ஆங்காங்குள்ள பகுத்தறிவு சங்கத்தாரும், சுயமரியாதைச் சங்கத்தாரும், அதன் சார்புடைய மற்ற சங்கத்தாரும், தேசியவாதிகள் என்பவர்களும் இந்த மாமாங்கப் புரட்டைப் பற்றி பாமர ஜனங்களுக்கு நன்றாய் விளக்கிப் பிரசாரம் செய்து அவர்களை இந்த மாதிரியான கஷ்டத்தில் இருந்தும், நஷ்டத்தில் இருந்தும் மீட்பார்களாக.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 19.02.1933**



# 'மெயில்' பத்திரிகையின் கூற்று

சென்னை "மெயில்" பத்திரிகையானது தனது 11-2-33 தேதி தலையங்கத்தில் எழுதுவதாவது:-

"சுயமரியாதை இயக்கமானது எல்லா மதங்களையும் துணிகரமாகத் தாக்கி வருவதுடன் மதங்களை அழிக்க வேண்டுமென்று பலமான பிரசாரம் செய்து வருகிறது. இதற்குக் காரணம் சர்க்கார் மத நடுநிலைமை வகித்திருக்கிறது என்ற ஒரே சாக்குத்தான். இதன் பயனாய் இப்பொழுது மத விஷயமான பிரசாரங்களுக்கு பொது மேடைகளில் இடமில்லாமல் போய் விட்டது. கோவிலிலும், பள்ளிவாசல்களிலும், சர்ச்சுகளிலும் மாத்திரம் தான் தனியாய் பேச முடிகின்றது. இதனால் சோவியத் ரஷியாவில் மதம் அழிந்தது அத்தேசம் நாசமுற்றது போல் இங்கும் நேரலாம் என்று கருத இடமேற்படுகின்றது. மத விஷயம் மறுபடியும் பொது மேடைகளுக்கு தாராளமாய் வரவேண்டுமானால் பள்ளிக்கூடங்களில் மதத்தைப் புகுத்தியாக வேண்டும். தோழர் காந்தியையும் தீண்டாமை விலக்குப் பிரசாரம் செய்வதை விட்டு விட்டு சுயமரியாதைக் கட்சியை ஒழித்து அதன் பிரசாரத்தை அடக்கும் விஷயத்தில் பாடுபட்டால் அது மிகவும் பயனளிக்கும்"

என்பது விளங்க எழுதி இருக்கிறது. இதைப் பார்த்து நாம் ஒன்றும் ஆச்சரியமடையவில்லை. ஏனெனில் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி இதுவரை இந்து மதக்காரரும் இஸ்லாம் மார்க்கக்காரரும், கிறிஸ்து சமயக்காரரும் எவ்வளவு தூரம் தாக்க வேண்டுமோ, குறையும் பழியும் கூற வேண்டுமோ, அவ்வளவு தூரம் தாக்கி, குறை கூறியும் அந்தப்படியே பிரசாரம் செய்தும் பாமரமக்களை ஏவியும் வருகிறார்கள்.

ஆனால் மேற்கண்ட இந்த பலமதக்காரர்களைப் போலவே மனப்பான்மையும், ஊரார் உழைப்பில் வாழும் சுகவாழ்வும் கொண்ட செல்வ வான்கள் என்னும் மற்றொரு மதக்காரர், அதாவது பணக்கார சுகவாசி மதக்காரர்கள் ஆன "மெயில்" பத்திரிகை இனத்தாரும் தங்களது நலத்திற்கும் ஆபத்து வருமோ என்னமோ என்ற பயத்தால் நம்மை ஏதோ ஒருவழியில் தாக்கியாக வேண்டியவர்கள் தான். ஆதலால் இவர்கள் இப்போது தாக்குவதில் நமக்கு அதிசயமொன்றுமில்லை.



RangaRakes

tamilnavarasam.com

ஆனால் ஒவ்வொரு தாக்குதல்காரர்களும் தாங்கள் தாக்குவதற்காகச் சொல்லும் காரணம்தான் இங்கு யோசிக்கத் தகுந்தது.

அதாவது, சுயமரியாதைப் பிரசாரத்தால் மதங்கள் ஒழிந்து கடவுள் உணர்ச்சி மறைந்து போகுமானால் இந்த மதப் பாதுகாப்பாளர்கள் என்பவர்கள் மக்களுக்கு "மோக்ஷம் கிடைக்காமல் போய் விடுமே" "கடவுள் சன்மானம் கிடைக்காமல் போய்விடுமே" "எல்லோரும் நரகத்துக்குப் போய் விடுவார்களே" என்றுதானே கஷ்டப்படவேண்டும். அப்படிக்கெல்லாம் இல்லாமல், எதற்கெடுத்தாலும் சுயமரியாதைகாரர்களை உச்சரிப்பதுடன், சோவியத் ருஷியாவை ஜெபித்து, சர்க்காரைக் கூப்பிட்டு பூச்சாண்டி காட்டுவதின் இரகசியம் என்ன என்பதைக் கவனித்தால் மதத்தின் இரகசியமும், கடவுள் உணர்ச்சியின் இரகசியமும் தானாய் விளங்கிவிடும் என்றே கருதுகிறோம்.

சோவியத் ருஷியாவில் மதமும் கடவுளுணர்ச்சியும் போய்விட்டதால் அது கடலுக்குள் முழுகிப் போய்விடவுமில்லை. காற்றில் பறந்து போய் விடவுமில்லை. தீப்பற்றி எறிந்து விடவுமில்லை.

மற்றபடி சோவியத் ருஷியாவைப் பற்றி யாராவது ஏதாவது யோக்கியமான - உண்மையான குற்றம் சொல்லவேண்டுமானால் அங்கு (சோவியத் ருஷியாவில்) "ஒருவன் உழைப்பை ஒருவன் அனுபவிப்பதில்லை. எல்லோரும் எல்லோருக்காகவும் பாடுபட வேண்டியது பலனை எல்லோரும் சரி சமமாய் அனுபவிக்கவேண்டும் என்கிறார்கள்" இந்தப்படியே நடக்கிறார்கள். இது தான் அங்குள்ள கெடுதி. இந்தக்கெடுதி சோவியத் ருஷ்யாவைத் தாண்டி அதற்கு 250 மைல் தூரத்திலிருக்கும் இந்தியாவுக்கும் வந்துவிடுமேயானால் யாருக்கென்ன ஆபத்து வந்துவிடும். அல்லது இந்தியா எந்த சமுத்திரத்தில் மூழ்கிவிடும். எந்தக்காற்றில் பறந்துவிடும் அல்லது எந்த நெருப்பில் எறிந்து சாம்பலாகிவிடும். புலி வருகின்றது! புலி வருகின்றது!! என்று போலி மிரட்டு மிரட்டுவதானது புலி வருவதைத் தடுத்துவிட முடியாது. அந்தப்படி புலியும் கிடையாது. பசுதான் வரப்போகிறது.

ஆகவே இவ்வித மிரட்டல்களையும், பழிசுமத்தல்களையும் இனியாவது இந்தக்கூட்டங்கள் கை விட்டுவிடும் என்று கருதுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 19.02.1933**



# மாமாங்கத்தில் பார்ப்பன கும்மாளம்

கும்பகோண மாமாங்கம் பார்ப்பனர்கள் புரட்டு என்றும், அவர்களது விளம்பரங்களுக்கும் பெருமைக்கும், லாபத்துக்கும் ஆதாரம் என்றும் நாம் சொன்னோம். இப்போது அது சரியா? இல்லையா? பாருங்கள். "தோழர்கள் ரங்கசாமி ஐயங்கார் பொருட்காட்சியை திறந்தார். சி. ஆர். சீனிவாசய்யங்கார் சங்கீத மகாநாட்டைத் திறந்தார், விசாலாட்சி பாடினார். முத்தையா பாகவதர் கதை செய்தார். டி.பி. கல்யாணராம சாஸ்திரிகள் வரவேற்பு தலைவர். ராமசாமி அய்யர், டைகர் வரதாச்சாரியார், கணபதி சாஸ்திரி, அலமேலு ஜெயராமய்யர், மற்றும் குமரய்யர், சுப்பைய்யர், ராமசாமி சாஸ்திரி, ரங்காச்சாரி, சுந்தரகனபாடி, சிங்கார கனபாடி, ஆச்சாரிய ஸ்வாமிகள் என்றெல்லாம் பார்ப்பன நபர்களே எங்கும் தோன்றுவதும் ஏதோ இரண்டொரு பார்ப்பனரல்லா முண்டங்கள் இவர்களுக்கு வால்பிடிப்பதுமாய் இருப்பதை அவர்களது (பார்ப்பனர்களது) பத்திரிகைகளிலேயே காணலாம். ஆகவே மாமாங்கம் பார்ப்பனர் சூட்சி என்றும், அவர்களது வாழ்வுக்கே ஏற்பட்டதென்றும் சொல்லுவதில் என்ன பிழை இருக்கிறது. இதை பார்ப்பனரல்லாத சோணகிரிகள் உணர வேண்டாமா?

**குடி அரசு - செய்தி விளக்கக் குறிப்பு - 19.02.1933**



RangaRakes tamilnavarasam.com

# "மாமாங்கத்தின் அற்புதம்"

**- சித்திரபுத்திரன்**

**புராணமரியாதைக்காரன் கேள்வி:-** ஐயா, சுயமரியாதைக்காரரே கும்ப கோண மாமாங்க குளத்தில் ஒரு அற்புதம் நடக்கின்றதே அதற்கு சமாதானம் சொல்லும் பார்ப்போம்.

**சுயமரியாதைக்காரன் பதில்:-** என்ன அற்புதமய்யா?

**பு-ம:-** மாமாங்கக்குளம் எவ்வளவு சேராய் இருந்தபோதிலும், கூழாயிருந்த போதிலும் அதில் அவ்வளவு ஜனங்கள் குளிக்கிறார்களே அந்த குளத்துத் தண்ணீர் ஏன் குறைவதில்லை. இதற்கு பதில் சொல் பார்ப்போம்.

**சு-ம:-** இது ஒரு நல்ல புத்திசாலித்தனமான கேள்விதான். இதன் காரணம் சொல்லுகிறேன், சற்று தயவுசெய்து கேள்க்க வேண்டும். அதாவது மாமாங்க குளத்தில் உள்ள தண்ணீரையெல்லாம் முனிசிபாலிட்டியார் இரைத்து விடுவார்கள். பிறகு ஒரு இரண்டு அடி உயரத் தண்ணீர் மாத்திரம் அதில் இருக்கும். அடியில் சிறிது மணலும் கொட்டி வைப்பார்கள். ஜனங்கள் தண்ணீரில் இறங்கியவுடன் மணல், சேரு, ஜனங்களின் அழுக்கு ஆகிய எல்லாம் சேர்ந்து குழம்புமாதிரி அழுக்கு நிரமாக ஆகிவிடும். குளிக்கிர ஜனங்களுடைய உடம்பு, துணிகள் எல்லாம் சேற்று வேஷக்காரன் போல் கருப்பாக ஆகிவிடும். இந்த நிலையில் குளிக்கும் ஒவ்வொரு நபரும் கொஞ்சம் கொஞ்சம் தண்ணீரை தனது வேஷ்டி நனையும் அளவுக்கு குளத்தைவிட்டு வெளியில் எடுத்துக் கொண்டு போகிறான் என்பது வாஸ்த் தவம்தான். ஆனால் அதற்கு பதிலாக ஒவ்வொரு நபரும் ஆண்பெண் அடங்கலும் அக்குளத்தில் கொஞ்சம் கொஞ்சம் தண்ணீர் விட்டு விட்டுத்தான் போகிறார்கள்.

**பு-ம:-** அதெப்படி தண்ணீர் விட்டுவிட்டுப்போகிறார்கள்? நமக்கு அது புரியவில்லையே அவர்களிடம் தண்ணீர் ஏது?

**சு-ம:-** இதுவும் நல்ல கேள்விதான், பதில் சொல்லுகிறேன். மாமாங்க



காலத்தில் கூட்டம் அதிகம். தெருக்களில் எங்கும் பக்கத்தில் மறைவே இருக்காது. ஒரு மனிதன் வீட்டைவிட்டுப் புறப்பட்டால் மாமாங்க குளத்துக்கு போவதற்குள் நசுங்கி பஜ்ஜியாய் விடுவான். இதன் மத்தியில் அவன் மூத்திரம் பேய வேண்டுமானால் வழியில் காலோடு பேய்ந்து கொள்ளவேண்டும் அல்லது குளத்துக்கே போய் ஆகவேண்டும். ஆகவே யாரும் காலோடு பேய்ந்து கொள்ள சம்மதிக்க மாட்டார்கள். எப்படியாவது அடக்கி, அடக்கி அவசரமாய் குளத்துக்குப் போகும்வரை அடக்கிக் கொண்டுதான் போவார் கள். குளத்தில் இரங்கி துணியை நனைத்துக்கொண்டவுடன் இவர்களை அறியாமலே மூத்திரம் வந்துவிடும். அந்த மூத்திரம் மாமாங்க தீர்த்தத்துடன் தீர்த்தமாய் இரண்டரக்கலந்துவிடும். அப்போது அவர்களால் செலவாகும் தண்ணீர் கிட்டத்தட்ட சரிசமமாகவே பார்த்தியாகிவிடும். ஆகவே வரவும், செலவும் சரியாகிவிடும்.

**பு-ம:-** அந்தப்படி அந்தக் குளத்தில் மூத்திரம் சேருமானால் தண்ணீரில் ஒருவித நாற்றமிருக்காதா?

**சு-ம:-** நாற்றமிருக்கத்தான் செய்யும், தீர்த்தத்தண்ணீரை முகந்து பார்ப்பது மகா பாவம் என்று அவர்களுக்கு சொல்லி வைக்கப்பட்டிருக் கின்றதல்லவா? ஆதலால் யாரும் முகந்து பார்க்கமாட்டார்கள். ருசியும் பார்க்க மாட்டார்கள். ஏனென்றால் அது அவ்வளவு அழுக்காகவும் குளம்பாகவும் இருக்கும். அன்றியும் இன்னும் ஒரு விஷயம் என்னவென்றால் முனிசிபாலிட் டியார் குளத்துத் தண்ணீரில் கெந்தகப்பொடிபோட்டு வைத்திருக்கிறார்கள். ஆதலால் மூத்திர நாற்றம் எது? கந்தக நாற்றம் எது? என்று சுலபத்தில் கண்டு பிடிக்கவும் முடியாது. ஆகவே சிலவுக்கும், வரவுக்கும் தானாகவே சரியாய் போய்விடும். இதற்குக் கடவுள் அற்புதம் ஒன்றும் தேவையில்லை.

**குடி அரசு - உரையாடல் - 26.02.1933**



RangaRakes tamilnavarasam.com

# எதை நம்புவது!

**– சித்திரபுத்திரன்**

தீண்டாமையை ஒழிக்கப்பட்டினி கிடக்கும்படி கடவுள் கட்டளை இட்டிருப்பதாக காந்தி சொல்லுகிறார்.

தீண்டாமையை நிலை நிறுத்துவதற்காக யானை குதிரைகளுடன் பல்லக்கு சவாரி செய்யும்படி கடவுள் கட்டளையிட்டிருப்பதாக சங்கராச்சாரி யார் சொல்லுகிறார்.

அவனன்றி ஓரணுவும் அசையாது. ஆதலால் மேற்கண்ட இரண்டு காரியங்களும் கடவுள் திருவிளையாடல் என்று கடவுள் பக்தர்களான ஆஸ்தி கர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த மூன்றும் முட்டாள் தனமும், சுயநலம் கொண்ட போக்கிரித் தனமும், பித்தலாட்டமும், ஏமாற்றலும் அல்லது இதில் ஏதாவது ஒன்றாகத்தான் இருக்க வேண்டுமே ஒழிய வேறில்லை என்றும் ரஷியர்கள் சொல்லுகிறார்கள்.

இவற்றுள் எதை நம்புவது, எதை நம்பினால் உண்மையில் தீண்டாமை ஒழிய முடியும்?

**குடி அரசு – கட்டுரை – 26.2.1933**



# திருவாங்கூரில் சமதர்ம முழக்கம்

தோழர்களே! இன்று நான் பேசப்போவது உங்களுக்கு சந்தோஷமாக இருக்காது. ஏனெனில் நீங்கள் அநேகமாய் இன்று இங்கு நடக்கும் உற்சவத் திற்காக வந்தவர்கள். மிகுந்த பக்திவான்கள். நானோ அவற்றையெல்லாம் வீண் தெண்டம் என்றும், புரட்டு என்றும் சொல்லுகிறவன். அதுமாத்திரமல் லாமல் உங்களது கடவுள் உணர்ச்சி, மத உணர்ச்சி, ஜாதி உணர்ச்சி, தேச உணர்ச்சி ஆகியவைகளையும், உங்களது சமூகத்தில் வெகுகாலமாய் இருந்துவரும் பழக்க வழக்கங்களையும் குற்றம் சொல்வதோடல்லாமல் அடியோடு அழித்து ஒழித்துவிட வேண்டுமென்றும் சொல்லுகின்றவன். இதை நீங்கள் பொறுத்துக் கொண்டிருப்பீர்களா என்பது எனது முதல் சந்தேகமாகும். நீங்கள் பொறுத்தாலும் சரி பொறுக்காவிட்டாலும் சரி அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஏனென்றால் உங்களிடம் நான் முதலிலேயே என்னிஷ்டப் படி பேச அனுமதி வாங்கிவிட்டேன். ஆனால் நீங்கள் நான் பேசப்போவதைப் பற்றி வருத்தப்படுவதற்குமுன் ஒரு விஷயத்தை மாத்திரம் கவனித்துப்பார்க் கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அதென்னவென்றால் நான் ஏன் இப்படிப் பேசுகிறேன். இதனால் எனக்கு என்ன லாபம்? இந்தப்படி பேசுவதனால் யாராவது எனக்கு பணம் கொடுப்பார்களா? ஒரு மனிதன் என்னைப் போல் வயது சென்ற "கிழவன்" ஒருவன் ஜாதியைக் குற்றம் சொல்லவும், மதத்தைக் குற்றம் சொல்லவும், கடவுளைக் குற்றம் சொல்லவும், கோவிலைக் குற்றம் சொல்லவும், தேசத்தைக் குற்றம் சொல்லவும், அரசாங்கத்தைக் குற்றம் சொல்ல வுமான ஒரு கஷ்டமும் துக்கமுமான காரியத்தை ஏன் செய்ய வேண்டும். நான் இதற்குமுன் இவைகளையெல்லாம் ஒரு காலத்தில் ஆதரித்திருப்பது உங்களில் பலருக்கு நன்றாய்த் தெரியும். தேசியத்திற்காக பலதடவை சிறை சென்றதும் உங்களுக்குத் தெரியும். அப்படியிருக்க இப்போது இப்படிச் சொல்ல என்ன காரணம்? என்பதை யோசித்துப் பாருங்கள். இவைகளால் மக்கள் சமூகத்திற்கு ஏற்பட்ட நன்மை என்ன? என்று யோசித்துப்பாருங்கள்.

உலக சரித்திரம் கிடைத்த காலந்தொட்டு ஜாதி, மதம், கடவுள், தேசம், சமூகம், அரசாங்கம் ஆகியவை இருந்து தான் வந்திருக்கின்றன. இவை களைப் பற்றிய அபிமானங்களும், சீர்திருத்த முயற்சிகளும், பெரியார்களும், மகாத்மாக்களும் அவ்வப்போது தோன்றியும், பல சீர்திருத்தக் காரியங்களைச்



RangaRakes tamilnavarasam.com

செய்தும் தான் வந்திருக்கின்றனர். இவைகள் எல்லாம் மனிதசமூகத்திற்கு என்ன பயன் அளித்திருக்கின்றன? குறைந்தது ஒரு ஆயிரம் அல்லது 2000 வருஷ சரித்திரங்களையோ அல்லது அக்கால நிலையை உணர்த்தும் புராணக் கதைகளையோ எடுத்துக் கொண்டீர்களேயானால், அன்றைக்கும் இன்றைக் கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதை யோசித்துப்பாருங்கள். 2000 வருஷத்திற்கு முன் இருந்த சண்டாளனும், ஏழையும், கஷ்டப்படும் கூலியும், பட்டினி கிடந்து, பசியால் வாடி, மழையால் நனைந்து வெயிலால் காய்ந்து உடுக்க உடையில்லாமல் படுக்கப் பாயில்லாமல் இருக்க இடமில்லாமல் அலைந்து திரிந்து அவதிப்படும் மக்களும் கோடிகோடியாய் இன்றும் இருந்து தான் வருகின்றார்கள் என்றால் இதுவரை இருந்து வந்த மத அபிமானமும், கடவுள் அபிமானமும், தேச அபிமானமும், அரச அபிமானமும் ஆகியவை கள் இக்கொடுமைகளை ஒழிக்கவோ, அல்லது இனிமேல் உலகில் இக் கொடுமைகள் இல்லாமல் செய்யவோ முடியவில்லை என்றால் இன்னமும் எத்தனை நாளைக்கு அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருப்பது போன்ற முட்டாள் தனமான வேலைகளாகிய மேற்படி அபிமானங்களை காப்பாற்றிக் கொண்டிருப்பது என்று கேட்கிறேன்.

சமீபகாலம்வரை அரசர்களை விஷ்ணு அவதாரமென்றும், விஷ்ணு அம்சமென்றும் சொல்லி வந்ததுடன் ஒவ்வொரு கூட்டங்களிலும் ராஜ விசுவாசத் தீர்மானம் செய்த பிறகே காரியங்களை துடங்கியும் வந்தோம். அதுபோலவே சர்வத்திற்கும், கடவுளே ஆதாரபூதம் என்றும் அவர் அருள் பெறுவதே எல்லாவற்றிற்கும் அவசியமானதென்றும் கருதி எந்தக் காரியம் செய்தாலும், எந்த எண்ணத்தை நினைத்தாலும், எந்தப் பேச்சைப் பேசினாலும், கடவுளை நினைத்து கடவுளை ஸ்தோத்தரித்த பிறகுதான் மற்ற காரியங்களை செய்துவந்தோம். அதுமாத்திரமா "கோயிலில்லா ஊரில் குடி இருப்பது பாவம்" என்று காடுமேடுகளில் எல்லாம் ஊர் கிராமங்களிலெல்லாம் கோயில் கள் கட்டினோம். சில கோயில்கள், கோட்டைகள் போல் கொத்தளங்கள் போல் கட்டி பல சுற்றுப்பிரகாரங்கள் விட்டு மதில்களும், வானமளாவக் கோபுரங்களும் கட்டி தங்கத்திலும், வெள்ளியிலும், தாம்பிரத்திலும், சாமிகள் செய்து ரத்தினங்களால் நகை போட்டு ஊரில் யார் பட்டினிகிடந்தாலும் எந்தக் குழந்தைக்கு பால் இல்லாவிட்டாலும், யாருக்கு வேஷ்டி துணி இல்லாமல் நிர்வாணமாய் இருந்தாலும், யாருக்கு பெண்டு இல்லாமல் கஷ்டமாய் இருந்தா லும் சிறிதும் லட்சியமில்லாமல் பால் பழம் பஞ்சாமிர்த அபிஷேகமும் ஆராதனையும், பட்டு பீதாம்பர உடையும் வருஷா வருஷம் கல்யாண திரு விழாக்களும், வைப்பாட்டி திருவிழாக்களும் செய்த வண்ணமாய் இருந்த துடன் மக்களில் கோடிக்கணக்கான பேருக்கு நாள் ஒன்றுக்கு ஒரு வேளை சாப்பாட்டிற்கும் விதி இல்லாவிட்டாலும் எண்ணிலடங்கா கடவுள்களுக்கு தினம் 4-வேளை 5-வேளை 6-வேளை மூட்டை மூட்டையாய் பொங்கிப் போட்டு ஆராதனை அம்சை செய்து வந்தோம்.



இவ்வளவு தானா ஒவ்வொரு கோவிலுக்கும் , ஒவ்வொரு சாமிக்கும் வருஷம் 10 லட்சம், 20 லட்சம் வரும்படி வரும்படியான பெருமைகளையும், சொத்துக்களை தேடிவைத்தோம். மத விஷயத்திலும் எத்தனையோ லட்சக்கணக்கான பெயர்கள் அடிக்கடி உயிரைக்கொடுத்து மதத்திற்காக என்று தலையைச் சிறைத்தும், கத்தரித்தும், முகத்தைச் சிறைத்தும், வளர்த்தும், காதை ஓட்டை செய்தும், மூக்கை ஓட்டை செய்தும், மண்ணைப்பூசியும், சாம்பலைப் பூசியும், சேற்றைப் பூசியும், சாணியை சாப்பிட்டும், மூத்திரத்தைக் குடித்தும், பட்டினி கிடந்தும் மற்றும் என்ன என்னவோ காட்டுமிராண்டித்தனமான காரியங்களைச் செய்தும் மதத்தைக் காப்பாற்றினோம். இதுபோலவே தேசத்திற்கு என்றும் அடிபட்டும், உதைபட்டும், சிறைசென்றும், தூக்கு மேடையில் உயிர்விட்டும் அன்னிய தேசத்தாருடன் போர்புரிவதென்னும் காரியத்தில் 10 லட்சக்கணக்கான பேர் உயிர்விட்டும் தேசாபிமானம் காட்டி னோம். இவ்வளவும் இன்று என்ன ஆயிற்று. பழய நிலையை வளர்க்கின்றதா அல்லது புதிதாக ஏதாவது சௌகரியம் செய்ததா? யோசித்துப்பாருங்கள். இன்று இன்னாட்டில் தற்குறிகள் எவ்வளவு பேர்கள்? 100க்கு $87\frac{1}{2}$ பேர் தற்குறிகளல்லவா? இன்னாட்டில் ஏழைகள் பாடுபட்டும் பட்டினி கிடப்பவர் கள், தங்கள் பிள்ளைக்குட்டிகளை காப்பாற்றமுடியாமல் மானத்தை விற்றும், விபசாரித்தனம் செய்தும் ஜீவிக்க வேண்டியவர்கள் எத்தனைபேர் யோசித் துப் பாருங்கள். இந்த மேல்கண்ட அபிமானங்களுக்கு மரியாதை கொடுத்து இன்னும் எத்தனை ஆயிரம்வருஷம் பரீக்ஷை பார்ப்பது? அவைகளை சீர்திருத்தம் செய்ய இன்னும் எத்தனை வருஷம் காத்திருப்பது? என்பதை யோசித்துப் பாருங்கள். நான் சொல்லுவதென்ன வென்றால் இனி இந்த அபிமானங்களால் அதாவது ஜாதி, மத, கடவுள், தேசம், அரசு ஆகிய அபிமானங்களால் யாதொரு பயனும் இல்லை யென்றும் அவைகள் போலி யும், சூட்சியும் நிறைந்த ஏமாற்றல்கள் என்றும் தைரியமாய்ச் சொல்லுகின் றேன். ஆகையால் அதை விட்டு விட்டு மனுஷ்ய அபிமானம் என்கின்ற முறையில் ஒருவருக்கு ஒருவர் அபிமானம் வைத்து அன்பு வைத்து மனிதருக்காக மனிதர் உழைப்பதும் அபிமானம் வைப்பதும் என்கின்ற கொள்கையை ஏற்று நடத்த வேண்டும் என்று தான் சொல்லுகின்றேன்.

இனி ஜாதி மதம் கடவுள் தேசம் அரசு ஆகிய எவற்றிற்கும் சிறிதும் இடம்கொடாமலும் மனித அபிமானத்திற்காக மேல் கண்டவைகளில் எதை வேண்டுமானாலும் இழக்கவும் தயாராய் இருக்க வேண்டும். அன்றுதான் எல்லோரும் மனிதர்களாக இருக்க முடியும். இதனால் ஆபத்து ஒன்றும் ஏற்பட்டு விடாது என்றே எண்ணுகிறேன். ஆனால் இவைகளை நீங்கள் நன்றாய் யோசித்துப்பாருங்கள். பழய காரியங்கள் பயனளிக்காததாலேயே தான் இதைப்பற்றி பேசுகிறேன். உங்கள் புத்தியைக்கொண்டு ஆராய்ந்து பார்த்து உங்களுக்கு சரியென்று பட்டத்தைச் செய்யுங்கள். நான் சொல்லுவது குற்றமாகவும் துவேஷமாகவும் இருந்தாலும் இருக்கலாம்.



RangaRakes
tamilnavarasam.com

தோழர்களே! இன்றைய மகாநாடு முடிவடைந்துவிட்டது என்றாலும் நிகழ்ச்சிக்குறிப்பில் எனது முடிவுரை பாக்கி இருக்கிறது இனிநான் என்ன சொல்வது என்பது விளங்கவில்லை. ஆனாலும் ஒரு விஷயத்தில் எனது அபிப்பிராயத்தைச் சொல்ல ஆசைப் படுகிறேன். அதென்னவென்றால் இன்று எல்லோரும் கோவில் பிரவேசத்தைப்பற்றி பேசினார்கள், நானும் ஒரு காரணம் பற்றி கோவில் பிரவேசத்திற்கு முயற்சித்தவன் தான். ஈரோட்டில் தேவஸ்தானக் கமிட்டியால் கோவில் பிரவேசம் பாசாக்கினதும் அந்தத் தீர்மானப்படி சிலர் கோவிலுக்குச் சென்றதும் அதனால் கேசுகள் நடந்து தண்டனை ஆனதும் உங்களுக்கு தெரிந்திருக்கலாம். அதனால் பிரயோ ஜனமில்லை என்கின்ற முடிவுக்கு வந்ததோடு புதிதாக கோவில் பிரவேசம் பெறப்போகும் மக்களுக்கு புதிய கஷ்டங்களும் விளையக்கூடும் என்றே கருதிவிட்டேன். இப்பொழுது வரவர கோவில்களே தேவையில்லை என்றே தோன்றி விட்டது. கடவுளைப்பற்றிய நம்பிக்கை எப்படி இருந்தாலும் கோவிலும், பூசையும், உற்சவமும் அவசியமா? என்று யோசித்துப்பாருங்கள். தோழர் கேளப்பன் அவர்களே கடவுள் உண்டோ இல்லையோ தனக்கு தெரியாது என்று சொன்னார். இந்தமாதிரி சந்தேகப்பட்ட காரியத்துக்கு எவ்வளவு செலவு, மெனக்கேடு, கஷ்டம் என்பதை யோசித்துப் பாருங்கள். கடவுள் இருப்பதாக வைத்துக்கொண்டாலும் அது எல்லோருக்கும் ஒன்று போல் இல்லாமல் மக்களை பாழ்படுத்துகிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு அர்த்தம், ஒவ்வொரு குணம், ஒவ்வொரு தோற்றம் சொல்லுகிறார்கள். இந்த மாதிரி இப்போது ஏதாவது ஒரு வஸ்துவைப்பற்றி ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரி சொன்னால் அதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்களா? அல்லது அந்த வஸ்த்துவை நம்புவீர்களா? எந்தக் கடவுளுக்கு எப்படிப்பட்ட தத்து வார்த்தம் சொன்னாலும் அதனால் ஏற்படுகிற பயன் என்ன என்பதும், அதில் என்ன வித்தியாசம் என்பதும் யோசிக்க வேண்டிய காரியமாகும். கோவில் களை எல்லாம் இடித்துவிடுவதால் எந்தக் கடவுளுக்கும் எவ்வித நஷ்டமும் ஏற்பட்டு விடாது. ஆகையால் யாரும் பயப்பட வேண்டாம். அனாவசியச் செலவும், மதியீனமும் விலகிவிடும். நீங்கள் எந்த முறையில் கடவுளை நிர்ணயத்தாலும் எந்த முறையில் எவ்வளவு நல்ல கருத்தில் மதத்தை நிர்மாணித்தாலும் பலன்கள் எல்லாம் ஒன்றாகத்தான் இருக்குமே தவிர மூடநம்பிக்கை கடவுளைவிட குருட்டுப் பழக்க மதத்தைவிட சீர்திருத்த கடவுளும் பகுத்தறிவு மதமும் ஒன்றும் அதிகமாய் சாதித்துவிடப்போவதில்லை.

எப்படியானாலும் ஒரு கடவுளை சிருஷ்டிப்பதாயிருந்தால் "அவர் நமது கண்ணுக்குத் தெரிய மாட்டார் அவரை வணங்கினால் பிரார்த்தித்தால் பயன் உண்டு" என்றுதான் சொல்லியாக வேண்டும். எப்படிப்பட்ட மதத்தை சிருஷ்டித்தாலும் அதற்கு ஒரு உபதேச கர்த்தாவை சிருஷ்டித்தாக வேண்டும். அக்கர்த்தாவுக்கு தெய்வீக தன்மை ஏற்படுத்தித்தான் ஆக வேண்டும். அவர் மூலமாக ஒரு வேதத்தை ஒப்புக் கொண்டு தான் ஆக வேண்டும். அவ்வேதம் கடவுளால் அவருக்கு சொல்லப்பட்டது என்பதை ஒப்புக் கொண்டு தான்



ஆகவேண்டும். அதை மாற்றுவதற்கு யாருக்கும் அதிகாரமில்லை என்று சொல்லித்தானாக வேண்டும். பிறகு அந்தப்படி நடக்காதவனையோ, அல்லது அந்தக் கர்த்தாவை ஒப்புக் கொள்ளாதவனையோ வையவோ, கொலை செய்யவோ முயற்சித்தாக வேண்டும். இவ்வளவும் மாத்திரம் அல்லாமல் அந்த வேதத்திற்கு சுயநலக்காரர்கள் சோம்பேரிகள் ஆகியவர்கள் தங்கள் நலத்துக்கு ஏற்ற மாதிரியாகச் செய்து கொள்ளும் கருத்தை எவனாவது மாற்றிச் சொன்னால் அது எவ்வளவு உண்மையாய் இருந்தாலும் அவன் மீது பாய்ந்து தான் ஆகவேண்டும். இந்தப்படி தான் இது வரை நடந்துவந்திருக்கிறது. ஆகவே எந்த வழியில் எந்த மாதிரியில் எவ்வளவு நல்ல முறையில் கடவுளையும், மதத்தையும், வேதத்தையும் சிருஷ்டித்துக் கொண்டாலும் அது மனித சமூகப் பெரும்பான்மை மக்களுக்கு ஆபத்தையும், கேட்டையும் பிரிவினையும் முறட்டுத்தனத்தையும் குரோதத்தையும் அடிமைத்தனத்தை யும் உண்டாக்கியே தீரும். இதுவே இன்றைய எல்லா மதத்தினுடையவும் அனுபோகம்! பிரத்தியட்ச அனுபோகம்!!

ஆதலால், கடவுள், மதம், வேதம் என்கின்றதான கற்பனைகளை ஒழிப்பதும் அழிப்பதுந்தான் மனிதனுக்கு உண்மையான விடுதலையே ஒழிய மனிதனை கடவுள் உணர்ச்சியில் புகுத்தி மத வெறியில் ஆழ்த்தி வேதத்திற்கு அடிமையாக்கி கல்லில் முட்டிக் கொள்ள கோவிலுக்குள் தள்ளுவது மிகவும் மோசமும், கெடுதியுமான காரியமாகும்.

*குறிப்பு: திருவாங்கூரைச் சேர்ந்த பரூரை அடுத்துள்ள மூத்த குன்னத்தில் பரூர் காஸ்மாபாலிட்டன் புரோக்ரிசிங் சங்கத்தாரால் 11.02.1933 & 12.02.1933 இரண்டு நாள்களில் நடைபெற்ற மாநாட்டில் 12.02.1933இல் மாநாட்டிற்கு தலைமையேற்று ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 26.02.1933**



RangaRakes tamilnavarasam.com

# வருணாச்சிரமம்

சென்றவாரக் "குடியரசு" பத்திரிகையின் தலையங்கத்தில் "இரகசியம் வெளிப் பட்டதா? என்ற தலைப்பில் காந்தியவர்களினுடையவும், காங்கிர சினுடையவும், அரசியல், சட்டமறுப்புக் கிளர்ச்சியின் தத்துவம் இன்னது என்பதை ஒருவாறு விளக்கினோம். ஆனால் அத்தலையங்கத்தின் இறுதியில் காந்தியின் வருணாச்சிரமத்தைப் பற்றி மற்றொரு சமயம் எழுதுவதாக எழுதியிருந்தோம். அந்தப்படியே இவ்வாரம் "வருணாச்சிரமம்" என்பது பற்றி சில விஷயங்கள் எழுதுகின்றோம். வருணாச்சிரமம் என்பதைப்பற்றி இதற்கு முன் பல தடவை எழுதி இருக்கிறோம். ஆதியில் நாம் வருணாச் சிரமத்தைப் பற்றி எழுதிய காலத்தில் சில தேசீய வாதிகள் காந்தியின் வருணாச்சிரமம் இன்னது என்பதை நாம் அறியாமையால் குற்றம் சொல்லுவதாக பல "தேசியவாதிகளும்" "தேசீயப்பத்திரிகைகளும்" நம் மீது பழி சுமத்தி வந்தன. ஆனால், தோழர் காந்தியவர்களே தனது வருணாச் சிரமத்துக்கு நன்றாய் வெளிப்படையான வியாக்கியானம் செய்த பிறகு, அதாவது தேசிய வாதிகள் வேதத்தைப் போல் வாசித்து வந்த "யங் இந்தியா" என்ற பத்திரிகையில் எழுதிய பிறகு "இந்த ஒரு விஷயத்தில் (வருணாச் சிரமதர்ம விஷயத்தில் மாத்திரம் காந்தியாருடன் அபிப்பிராயப் பேதம் கொள்ளுகின்றோம்" என்று வெளிப்படையாக எழுத ஆரம்பித்து விட்டன. ஆனால் இந்தப்படி எழுதிய தேசீய பத்திரிகைகள் எல்லாம் முழுவதும் பார்ப்பனரல்லாத "தேசிய வாதிகளின்" பத்திரிகைகளே ஒழிய ஒருபார்ப்பன தேசியப் பத்திரிகையாவது இது சரி யென்றோ, தப்பு என்றோ சொல்லாமல் திருடனைத் தேள் கொட்டியதுபோல மௌனம் சாதித்தன. காந்தியாரின் பரம சீஷர்களான தோழர்கள் ராஜகோபாலாச்சாரி, ஜவஹர்லால் நேரு முதலியவர் கள் கூட இந்த காந்தி வருணாச்சிரம தர்மத்தைப் பற்றி ஒருவார்த்தையும் நாளது வரையும் பேசாமல் இருக்கின்றார்கள். பார்ப்பனரல்லாத தேசீய வாதிகள் என்பவர்கள் காந்தி வருணாச்சிரமத்தை ஒப்புக் கொள்ள வில்லை யானாலும் கண்டித்து வந்தாலும் காந்திக்குள்ள செல்வாக்கினாலும் அவரை விட்டுப் பிரிந்து தனித்து நிற்க சக்தியற்றதினாலும், பாமர மக்களின் அறிவின்மைக்கு பயந்தும், காந்தியாரின் திருவிளையாடல்களுக்கெல்லாம் பின்தாளம் போட்டே ஆகவேண்டி இருந்ததால் இதை போதிய அளவு வெளியாக்கி அதன் கெடுதிகளை எடுத்துச் சொல்ல தைரியமற்றவர்



களாகவும் மனமற்றவர்களாகவும் இருக்க வேண்டியவர்களாகிவிட்டார்கள். "தமிழ் நாடு" மாத்திரம் ஏதோ ஒரு அளவுக்குத் துணிந்து எழுதிற்று என்னவாம்.

காந்தியார் வருணாச்சிரம தர்மத்துக்கு அவர் "யங் இந்தியா" பத்திரிகையில் எழுதிய வியாக்கியானத்தை இப்பொழுதும் ஒரு முறை எடுத்து எழுதுகிறோம். அதாவது :-

**1. "வருணாச்சிரம தர்மங்களில் கூறப்படும் நான்கு வருணாச்சிரம தர்மங்களிலும் எனக்கு நம்பிக்கை உண்டு.**

**2. அந்த வருண தர்மப் பாகுபாடுகள் பரம்பரையான தொழில்களைப் பொருத்தே ஏற்பட்டவை.**

**3. அதாவது, 1. பிராமணர், 2. க்ஷத்திரியர், 3. வைசியர், 4. சூத்திரர்.**

**4. அவர்களின் தொழில்களாவன.**

A. **பிராமணர் உபதேசம் செய்தல், கல்வி கற்பித்தல்.**

B. **க்ஷத்திரியர் பகைவர்களினின்று காத்தல்.**

C. **வைசியர் வியாபாரம், விவசாயம் செய்தல்.**

D. **சூத்திரன் சரீரத்தால் உழைத்து மேல் கண்ட மூன்று வருணத் தாருக்கும் ஏவல் வேலை செய்தல்.**

**இது தான் எனது வருணாச்சிரம தர்ம முறை. இந்த முறையை இந்து சமுகம் தவறி நடந்ததாலேயே வருண தருமம் அழிந்துவிட்டது. கலப்பு விவாகத்தால் நாட்டில் ஒற்றுமையும், சாந்தமும் ஏற்பட்டு விடாது** என்று எழுதி இருக்கிறார்.

இந்த அபிப்பிராயமோ, வியாக்கியானமோ தோழர் காந்தியார் தன்னுடைய சொந்த வியாக்கியானம் என்று சொன்னாலும், இதே அபிப்பி ராயம் தான் மனுதர்ம சாஸ்திரத்திலும் மற்றும் பல ஸ்மிருதிகளிலும், புராணங் களிலும் இருந்து வருகின்றது. ஆகவே இதில் காந்தியார் அபிப்பிராயத்தால் வியாக்கியானத்தால் எவ்வித மாறுதலும் ஏற்பட்டுவிடவில்லை. ஒரு சமயம் ஏதாவது மாறுதல் உண்டா என்று ஆழ்ந்து கவனித்தால், மனுஸ்மிருதியில் வருணதர்மம் கெடாமல் அரசன் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று இருக்கின்றது. ஆனால் காந்தியாரின் ஸ்மிருதியானது, "வருணதர்மத்தைப் பற்றி அரசன் கவனிக்காததால் அரசனைத் தள்ளிவிட்டு வருண தர்மத்தைக் காப்பாற்றும் அரசாங்கத்தை ஏற்படுத்தி, வருணாச்சிரம தர்மிகள் கையில் ராஜியத்தை ஒப்புவிக்க வேண்டும்" என்கிறது. அதற்காகவே அதாவது



RangaRakes tamilnavarasam.com

“வருணாசிரம தர்ம முறையைக் காப்பாற்றவே நான் சுயராஜியத்திற்கு பாடு படுகிறேன்” என்கிறார். ஆகவே காந்தியவர்களின் வருணாச்சிரமதர்மம் என்பது எப்படிப்பட்ட வியாக்கியானத்தையும், தத்துவ அடிப்படையையும் கொண்டிருந்தாலும் அவற்றின் தத்துவமெல்லாம் பொருளாதாரத்தையும் மற்றவன் உழைப்பால் சிலர் வாழும் சோம்பேரி வாழ்க்கையையுமே அடிப்படையாகக் கொண்டது என்பதே நமதபிப்பிராயம். எப்படியெனில் பார்ப்பான் பாடுபடாமல் ஊரார் உழைப்பில் வாழவேண்டியதற்கு தகுந்த படியே அவனுக்கு உபதேசம், கல்வி கற்பித்தல் என்று சொல்லப்பட்டிருக் கின்றது. கல்வி கற்பித்தலும், உபதேசமும் யாருக்காக என்று பார்த்தோ மேயானால், உபதேசம் பெறவும் கல்வி கற்று கொள்ளவும் ஆளுகளே கிடையாது என்றுதான் விளங்கும். பெரும்பான்மையான வருணத்தார் என்னும் “சூத்திரர்கள்” என்பவர்கள், மற்றவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்கிற உபதேசத்தைத் தவிர வேறு என்ன இருக்கிறது. மற்றவர்கள் சொல்படியே நடக்கவேண்டியவனுக்கு என்ன உபதேசம் என்ன கல்வி வேண்டி யிருக்கிறது? என்பதை யோசித்துப்பாருங்கள்.

க்ஷத்திரியர்களால் தான் “சூத்திரர்களுக்கு” என்ன பிரயோஜனம்? யார் வந்தாலும், எந்த ராஜா வந்தாலும் சூத்திரன் முதல் மூன்று பேருக்கும் தொண்டு செய்யவேண்டியவனாகத்தானே இருக்கிறான். ஆதலால் க்ஷத்திரியன் என்பவனாலும் சூத்திரனுக்கு பலன் இல்லை.

வைசியனும் அப்படியேதான். ஆனால் வைசியனுக்குத் தான் பணம் சேர்த்துக் கொள்ள அதிகாரம் உண்டு, சூத்திரனிடம் வேலை வாங்க அதிகாரம் உண்டு. அதனால்தான் சூத்திரனை பணம் சேர்க்கவிடக்கூடாது என்றும், சேர்த்துவிட்டால் பிராமணன் பலாத்காரமாய்க்கூட பிடுங்கிக்கொள்ளலாம் என்றும் மனுதர்மம் சொல்லுகின்றது. ஆனால் பிரிட்டிஷ் தர்மத்தில் சூத்திரன் பணம் சேர்க்கலாம். ஆனாலும் அதை வரி, கோர்ட்டு வக்கீல், கோயில், குளம், சடங்கு, பண்டிகை முதலியவைகளின் மூலம் பிடிங்கிக் கொள்ளலாம் என்று இருந்து வருகின்றது. ஆனால் காந்தி தருமத்தில் சூத்திரன் கைக்கு பணம் வந்து சேரவே முடியாதபடி சூத்திரர்கள் கையில் ராட்டினத்தைக் கொடுத் தாய்விட்டது.

அதுமாத்திரமல்லாமல் சூத்திரர்களுக்குக் காந்தியாரால் செய்யப்படும் உபதேசமும் அதை அனுசரித்தே செய்யப்பட்டிருக்கிறது. அதென்ன வென்றால்:-

1. ராட்டினத்தையே சுற்ற வேண்டும்.

2. கைத்தரியில் நெய்யவேண்டும்.

3. மாடுமேய்த்து பால் தயிர் விற்கவேண்டும்.



4. செருப்புத் தைக்கவேண்டும்.

5. பணப் பெட்டிகளில் வெள்ளி நாணையம் இருக்கக்கூடாது.

6. பம்பாய் மில் முதலாளிகள் (வைசியர்கள்) போல் பணக்காரர்களாக ஆசைப் படக் கூடாது.

என்றெல்லாம் உபதேசம் செய்திருப்பதோடல்லாமல் “இது தான் எனது சுயராஜ்ய வேலைத்திட்டம்” என்றும் இந்த 2,3 வருஷ சட்டமறுப்பு, சத்தியாக் கிரகம் எல்லாம் இதற்காகத்தான் செய்யப்பட்டதென்றும் சொல்லியிருக்கிறார். (இந்த உண்மை அறிய வேண்டியவர்கள் 1931-ஜூன் மாதம் 12, 13-ந் தேதி “இந்து” “சுதேசமித்திரன்” “தமிழ்நாடு” பத்திரிகைகளைப் பார்த்தால் நன்றாய் விளங்கும். இதில் சிறிதும் தப்பில்லை. இன்றைக்கு தோழர் காந்திக்கு எழுதிக் கேட்டாலும் ஒப்புக்கொள்ளுவார்).

ஆகவே இந்தவித சுயராஜ்ஜியம் யாருக்கு நல்லது என்பதை யோசித்துப்பாருங்கள்?

இன்றையதினம் உலகம் முழுவதும் எவ்வித வகுப்பு வித்தியாசமும் கூடாது என்றும், குறிப்பாக ஏழை, பணக்காரன், தொழிலாளி, முதலாளி, சோம்பேரி, பாட்டாளி என்பவை கூடாதென்றும் சொல்லி முயர்ச்சித்து உல கையே புதிய உலகம் ஆக்க வேண்டுமென்று பாடுபடுகின்ற காலத்தில், இந்தியாவில் “அன்னிய ஆட்சியை விறட்டுவது” என்ற தந்திர வார்த்தையை உபயோகித்துக் கொண்டு, அன்னிய ஆட்சி மாத்திரமல்லாமல் உலகத்தில் உள்ள எந்தவித கேடான ஆட்சியைவிட கேடான ஆட்சியானதும் 2500 வருஷங்களுக்கு முன் இருந்த பழைய ஆட்சிக்கும், வருணாச்சிரம ஆட்சிக் கும் கொண்டு போகப்பாடுபடுவதென்றால் இதை எப்படித்தான் சுயமரியாதை யும், சுதந்திரவீரமும் உள்ள மனிதன் ஒப்புக்கொள்ளமுடியும் என்பதை யோசித்துப்பாருங்கள்.

மற்றும் காந்தியார் வட்டமேஜை மகாநாட்டிற்குப் போனதும் கூட வருணாச்சிரமும், ஜாதி முறையும் மேல் நிலையில் பரம்பரையாய் மேல் நிலையில்இருக்கவும், கீழ் நிலையில் இருப்பவர்கள் பரம்பரையாய் கீழ் நிலையில் இருக்கவும் ஏற்பாடு செய்வ தற்கே ஒழிய மக்கள் யாவரும் சமமாய் இருக்க ஏற்பாடு செய்வதற்கென்று யாராவது சொல்ல முடியுமா? என்று கேள்கின்றோம். தோழர் காந்தி தனது ’வருணாச்சிரமத்திலும் ஜாதி முறை யிலும், உயர்வுதாழ்வு இல்லை, எல்லாரும் சமமாய் பாவிக்கப் படுவார்கள்’ என்று சொல்லுகின்றார் என்றாலும் பிரிவு உண்டு என்றும் அவனவனுக்கு ஆதியில் விதித்த வருணத்தொழில், ஜாதித் தொழில் என்பதையே தான் அவனவன் செய்தாகவேண்டும் என்றும் சொல்வது சமதர்மத்திற்கும், சமத்து வத்திற்கும் ஏற்றதாகுமா என்பதை யோசித்துப் பாருங்கள்? முதலாளியும், தொழிலாளியும் இருப்பான், பார்ப்பானும் பறையனும் இருப்பான்; ஆனால்



RangaRakes tamilnavarasam.com

மேல் நிலையில் உள்ளவனைப்பார்த்து கீழ் நிலையில் உள்ளவன் வித்தியாசம் பாராட்டப்படாது என்றும் கீழ் நிலையில் உள்ளவனைப்பார்த்து மேல் நிலையில் உள்ளவன் வித்தியாசம் பாராட்டப்படாது என்றும் சொன்னால் இதற்கு என்ன அருத்தம்? என்பதை வாசகர்கள்தான் யோசித்து முடிவுகட்டவேண்டும். மேல்நிலையில் உள்ளவன் பாடுபடாமல் சுகமாய் கூட கோபுரம் மாடமாளிகை கட்டிக்கொண்டு மக்கள் மீது பல்லக்கு சவாரி செய்வது அவன் வருணதர்மமென்றும், கீழ் நிலையில் உள்ளவன் ஓட்டைக்குடிசையில் வசித்துக்கொண்டு போதிய ஆகாரமும் சௌகரியமும் இல்லாமல் பல்லக்கு சுமப்பது இவனது வருண தருமமென்றும் சொல்லி இந்த இரண்டு நிலைக்கும் வித்தியாசம் பாராட்டக்கூடாது என்று சொன்னால், இது யாருக்கு சுகம் யாருக்கு கஷ்டம் என்பதை யோசித்துப் பாருங்கள். பல்லக்கு சுமப்பவன் இரண்டுக்கும் வித்தியாசமில்லை என்று கருதினாலும் பல்லக்கு சுமப்பவன் பாரமானது சவாரி செய்பவனுக்கும், சுமப்பவனுக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லாமல் ஒன்றுபோல் சமமாய் இருக்குமா என்பது தான் நமது கேள்வி.

இந்த வருணாச்சிரமம், ஜாதி முறை, ஏழைகள் இருக்கவேண்டிய தன்மை, ராட்டினம் ஆகிய விஷயங்களைப் பொறுத்த காந்தியாரின் அபிப்பிராயங்களேதான் நம்மை காந்தி சுயராஜ்ஜியத்தை விட "அன்னிய ஆட்சி" என்பது ஆயிரம் மடங்கு மேலானது என்று கருதச்செய்கின்றது.

காந்தி சுயராஜ்ஜியப்படி இந்த நாட்டில் தப்புக்கொட்ட பறையரும், செருப்புத் தைக்க சக்கிலியும், மலமெடுக்கத் தோட்டியும், மாடுமேய்க்க குடி மக்களும் பல்லக்கு ஏறப் பார்ப்பானும், கொள்ளை அடிக்கச் செட்டியும், குதிர்களில் தானியங் களைக்கொட்டிக் கொள்ள ஜமீன்தாரனும், மிராசுதாரனும் இருந்தே தீருவான், அதுவும் தலைமுறை தலைமுறையாய் இருந்தே தீருவான். ஆனால் அன்னிய ஆட்சியிலும், இந்த நிலை இருக்குமென்று யாராவது சொல்லலாம். ஆனாலும் காந்தி சுயராஜியம் மாதிரி இந்தநிலைகள் ஜாதி முறைப்படி வருணதருமப்படி இருக்காது. பறையனுக்கு பல்லக்கேற சந்தர்ப்பம் வந்தாலும் வரும், பார்ப்பானுக்கு செருப்பு தைக்க சந்தர்ப்பம் வந்தாலும் வரும், செட்டிக்கு மாடு மேய்க்க சந்தர்ப்பம் வந்தாலும் வரும் க்ஷத்திரிய சிங்குக்கு பங்கா இழுக்க சந்தர்ப்பம் வந்தாலும் வரும். ஆதலால் அன்னிய ஆட்சி முறையாலாவது எல்லோருக்கும் பந்தயத்தில் இடமேற்படும். காந்தி ஆட்சி முறைப்படி பந்தயமே கிடையாத பாரம்பரிய அனுபவம் தான் நிலைக்கும்.

ஆனால் இந்த முறையாகிய போட்டியும் சாந்தமற்று சதா மேல் நிலையைப் பற்றி கவலை இருப்பதும் மனித சமூகத்துக்கு நல்லதா என்று கேழ்க்கலாம். நல்லது என்றே நாம் சொல்லுவோம். ஏனெனில் எல்லாருக்கும் கஷ்டம் இருக்கின்றது என்று தோன்றினால் தான் கஷ்ட நிவர்த்திக்கு மார்க்கம்





கிடைக்கும். மார்க்கம் தேடவும் மனம் வரும். நமது நாட்டு பழைய வழக்கங்களும் மக்கள் பலர் ஜாதியின் பயனாய் மனிதத் தன்மையற்று மிருகங்கள் போல் பாடு படவும் அது வெகுகாலமாய் நிலைத்திருக்கவும் காரணமே இந்த வருண தருமமும் ஜாதி முறையுமேயாகும். வருண தருமமும் ஜாதி முறையும் இந்த நாட்டில் இல்லாம லிருந்திருந்தால் இன்று காணப்படும் ராட்டினங்கள் நெருப்பில் எறிக்கப்பட்டு எத்தனை காலமாயிருக்கும் என்பதையோசித்தால் தானாகவே விளங்கும். ஆதலால் வருணாச்சிரமமும் ஜாதி முறையும் ஏழைகளை ஏமாற்றவும் அவர்கள் செல்வவான்களுடையவும் சோம்பேரிகளுடையும் சூழ்ச்சிகளையும் அறியாமல் இருக்கச் செய்யவும் பணக்காரர்களையும் பார்ப்பனர்களையும் காப்பாற்றவும் செய்யப்படும் தந்திரங்களே ஒழிய வேறில்லை. ஆகவே என்ன விலை கொடுத்தாவது இன்றைய காந்தியவர்களின் வருணாச்சிரம சுயராஜ்ஜியத்தையும் ஜாதிமுறை தொழில் ஆட்சியையும் அதையே திட்டமாக ஏற்றுக்கொண்ட காங்கிரசையும் மக்கள் ஒழித்தாக வேண்டியது சுயமரியாதையின் சமதர்மத்தின் முதல் கடமையாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 26.02.1933**

RangaRakes tamilnavarasam.com

# காந்தியின் ஆலயப் பிரவேச நோக்கம்

தோழர் காந்தியவர்கள் தாழ்த்தப்பட்ட தலைவர் ஒருவருக்கு ஆலயப் பிரவேச நோக்கத்தைப் பற்றி எழுதிய நோக்கத்தில் அடியில் கண்டகுறிப்புகள் காணப்படுகின்றன. அவையாவன:- "ஆலயப்பிரவேசத்தால் மட்டும் தீண்டாமை தீர்ந்து விடும் என்று நான் நினைக்கவில்லை" "ஆனால் பிறருடன் சரிசமமாக ஆலயப்பிரவேச உரிமை பெறாதவரை தீண்டாமை தீராது" "ஆலயப் பிரவேசத்தால் பொருளாதாரம் கல்வி முன்னேற்றம் ஏற்படும்" என்ற குறிப்புகள் இருக்கின்றன. இவைகளில் ஏதாவது இன்றைய அநுபவத்திற்கு ஒத்து இருக்கின்றதா என்பதை யோசிக்கவேண்டும். இந்து மதத்தில் தீண்டாத ஜாதியார் என்கின்ற கூட்டமல்லாமல் தீண்டக்கூடிய மக்கள் பல கோடிக்கணக்கான பேர்கள் ஆலயப்பிரவேச சம உரிமையை தாராளமாய் அனுபவித்து வருபவர்களாகவே இருந்தும் பல வகுப்புகளில் இன்று நூற்றுக்கு தொண்ணூற்றேழு பேர்கள் தற்குறிகளாகவும், நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பேர் போதிய இடமும் துணியும் உடையும் இல்லாமலும் அவர்களது பிள்ளை குட்டிகளுக்கு கல்வி கொடுக்கவோ நோய்க்கு மருந்து கொடுக்கவோ முடியாமலும் இருப்பதின் காரணம் என்னவென்று கேட்கின்றோம். இன்று மக்களுக்கு பொதுவாக அதாவது இந்திய மக்களுக்கு மதம், ஜாதி, தீண்டாதவர், தீண்டக்கூடியவர் என்கின்ற பாகுபாடே இல்லாமல் நூற்றுக்கு தொண்ணூறு பேர்கள் மனிதத்தன்மையிழந்து மானத்தை விற்று கஷ்ட ஜீவனம் ஜீவிக்க வேண்டியவர்களாகவும் அநேகர் அப்படிச் செய்தாலும் ஜீவிக்க முடியாதவர்களாகவும் மிருகங்களுக்கு இருக்கும் நிலைமையும் இல்லாமலும் இருந்து வருகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? இப்படிப்பட்டவர்களுக்கு என்ன மார்க்கம்? என்றுதான் கேட்கின்றோம். ராட்டினத்தையும் கோவிலையும் காட்டுவது யோக்கியமான மார்க்கமா? மோசடியான மார்க்கமா? என்பதை வாசகர்களே யோசித்துப் பாருங்கள். இப்பொழுது தீண்டக்கூடிய மக்களுடைய பட்டினிக்கும், படிப்புக்கும் காந்தியார் கண்டு பிடித்த மருந்து ராட்டினமாகும். தீண்டப்படாத மக்களுடைய பட்டினிக்கும் படிப்புக்கும் காந்தியார் கண்டு பிடித்திருக்கும் மருந்து ஆலயங்கள் ஆகும். ஆகவே இந்த வைத்தியரின் சக்தியை நீங்களே மதியுங்கள். இந்த மாதிரி வைத்தியங்களால் காந்தியார் பணக்காரர்களுக்கும்,



பணக்காரர் கொள்கைகொண்ட அரசாங்கத்திற்கும் உள்ஆளாய் இருந்து உதவி செய்தவர் ஆகிறாரா அல்லது ஏழைகளுக்கும் தீண்டப்படாத மக்களுக்கும் நண்பராய் இருந்து உதவி செய்வராகிறாரா என்பதை உணர்ந்துபாருங்கள்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 26.02.1933**



RangaRakes
tamilnavarasam.com

# சேலத்தில்
# ஈ. வெ. ராமசாமி, முத்துச்சாமி வல்லத்தரசு
## வரவேற்புப்பத்திரங்கள் - பொதுக்கூட்டம்

தலைவரவர்களே! தோழர்களே!!

தலைவரவர்கள் என்னைப்பற்றி புகழ்ந்து பேசியதில் நான் மேல் நாட்டிற்குச் சென்றதில் ஏதோ பல அறிய விஷயங்களை அறிந்து கொண்டு வந்திருப்பதாக கூறி நான் ஏதோ பல அரிய விஷயங்களை சாதித்து இருப்ப தாகவும் கூறினார். நான் எனது மேல் நாட்டு சுற்றுப்பிராயணத்தில் ஒன்றும் புதிதாக கற்றுக்கொண்டு வரவில்லை. என்னுடைய அபிப்பிராயங்களும், எண்ணங்களும், ஆசைகளும் எனது மேல்நாட்டு சுற்றுப் பிரயாணத்தால் பலப்பட்டன, அசைக்க முடியாத அளவு உறுதி கொண்டு விட்டன. மற்றும் எனது ஆசை வெறும் கனவு ஆசை அல்லவென்றும், எனது அபிப்பிராயம் நடைமுறையில் சாத்தியமில்லாத ஆகாயக்கோட்டை அபிப்பிராயம் அல்ல என்றும், நான் எதையும் அமிதமாக எண்ணி மனப்பால் குடிக்கவில்லை என்றும் உணர்ந்தேன். அதற்கு ஆதாரமாக அநேக விஷயங்களை பிரத்தி யக்ஷத்தில் பார்த்து எனது கொள்கையும் ஆசையும் சாத்தியமே என்றும், சர்வ சாதாரணமே என்றும் அறிந்தேன். இது தான் எனது மேல் நாட்டுச் சுற்றுப் பிராயணச்சேதியென்றும் சுற்றுப்பிரயாண அனுபவமென்றும் ஒரு வார்த்தை யில் சொல்லி முடிக்கின்றேன். மற்றும், தோழர் முத்துசாமி வல்லத்தரசு அவர்கள் பேசியபோது பார்ப்பனக் கொடுமையையும், சூழ்ச்சியையும் பற்றிப் பேசியதுடன் பார்ப்பனீயத்தைப் பூண்டர ஒழிக்க வேண்டுமென்று சொன்னார். அதுவே எனது அபிப்பிராயம் என்பதை உங்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. ஆனால் பார்ப்பனீயப் பூண்டை அழிப்பதால் பார்ப்பனீ யம் ஒழிந்து விடும் என்று நான் கருதவில்லை. ஏனெனில் பார்ப்பனப் பூண்டு தானாக முளைப்பதில்லை. அதற்கு ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன், அதாவது,



இந்த மண்டபம் நிறைய கொசகொசவென்று கொசுக்கள் இருந்து உங்களை உபத்திரவம் செய்வதாய் வைத்துக் கொள்ளுங்கள். அந்த கொசுக்கள் உங்களுடைய ரத்தத்தை உருஞ்சுவதாக வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும். கொசுக்களைப் பிடித்துப் பிடித்து நசுக்கி விட்டால் போதுமா? இந்த மண்டபத்தை சுத்தம் செய்து வெள்ளை யடித்து புகைபோட்டு இம்மண்டபத்துக்குள் இருக்கும் கொசுக்களைக் கொன்று விட்டால் போதுமா? நன்றாய் யோசித்துப் பாருங்கள். இதனால் எல்லாம் கொசு உபத்திரவம் தீர்ந்து விடாது, முதல் நாள் கொன்ற கொசுக் களுக்குப் பதிலாக மறுநாள் புதிய கொசுக்கள் வந்து புகுந்து விடும்.

மற்றும் ஒரு இடத்தில் ஒரு வியாதி ஏற்பட்டால் வியாதி வந்தவனுக்கு பார்த்துப் பார்த்து மருந்து கொடுத்து கொண்டு வருவதால் வியாதியை ஒழித்துவிட முடியாது. வியாதியின் மூலாதாரத்தைக் கண்டு பிடித்து அதை அடியோடு அழிக்கவேண்டும். அதுபோலவே கொசுக்கள் இந்த மண்டபத் திற்குள் வருவதற்கு காரணம் என்ன என்பதைக் கண்டு பிடித்து அதை அழிக்க வேண்டும். இந்த மண்டபத்தில் இவ்வளவு அதிகமான கொசுக்கள் கொச கொசவென்று இருக்கின்றதென்றால் இதற்குக்காரணம் இங்குள்ள ஓதம், அருகிலுள்ள நீர்த்தேக்கம் அதிலுள்ள அசுத்தம் அழுக்கு ஆகிய காரணங் களால் தான் கொசுக்கள் உண்டாகின்றன என்பதை நன்றாய் அறியவேண்டும். கொசு உபத்திரவம் கூடாதென்கின்றவர்கள் மேற்கண்ட அசிங்கங்களையும், நீர்த்தேக்கங்களையும் ஒழிக்கவேண்டும். அக்கம் பக்கம் உள்ள எல்லா இடமும் சுத்தமாக வைக்கப்படவேண்டும். அப்பொழுது தான் கொசுக்கள் ஒழியும். இல்லா விட்டால் "வெட்ட வெட்டத் தழையும்" என்பது போல எவ்வளவு அழித்தாலும் வட்டியுடன் பெருகும் என்பதே எனதபிப்பிராயம்.

ஆகையால் அதுபோலவே பார்ப்பனர்கள் எப்படி உண்டானார்கள், அவர்கள் தொல்லை எதனால் ஏற்பட்டது, அதை எது பாதுகாத்து வளர்க் கின்றது? என்பவைகளைக் கண்டு பிடித்து அவற்றை அழியுங்கள், நசுக் குங்கள். அதுதான் பார்ப்பனீயத்தை ஒழிக்கும் மார்க்கமாகும். இல்லாத வரையில் நமது பாடெல்லாம் வீணாகிவிடும். அன்றியும் மற்றவர்களால் வீண் கூச்சலும், குரோதமும், துவேஷமும் என்று தான் சொல்லப்பட்டுவிடும்.

ஆகையால் நாம் இவ்விஷயங்களில் முன்னைய அபிப்பிராயங்களை சிறிதும் மாற்றிக்கொள்ளாமல் மூல காரணங்களைக் கண்டு அதை அழிக்கும் வேலையில் ஈடுபடவேண்டும் என்று சொல்லுகின்றேன்.

அது என்ன வென்றால்? பார்ப்பான் என்பது மேல் ஜாதிக்காரன் என்கின்ற தத்துவத்தின் மீது கட்டப்பட்டிருக்கின்றது. மேல் ஜாதிக்காரன் என்பது பாடுபடாமல் சோம்பேரியாயிருந்து ஊரார் உழைப்பில் வயிறு வளர்ப் பது என்கின்ற தத்துவத்தின் மீது கட்டப்பட்டிருக்கின்றது. இதை நன்றாய் உணர்ந்து இந்த தத்துவ அடிப்படையை இடித்தெரிய முயன்றோமானால்



RangaRakes

tamilnavarasam.com

பார்ப்பனர்கள் என்கின்ற வார்த்தையே நாட்டில் இல்லாமல் போய்விடும். பார்ப்பனர் மாத்திரமல்ல, ஒரு ஜாதிக்கு மற்றொரு ஜாதி மேல் என்கின்ற தத்துவமே அழிந்து விடும். அதுமாத்திரமல்ல ஜாதி முறையே அடியோடு அழிந்து விடும்.

சாதாரணமாக இன்று பார்ப்பன ஜாதியை மாத்திரம் ஒழித்து விட்டால் போதுமா? என்று பாருங்கள். இந்த நாட்டில் பார்ப்பனர்கள் கூடாதென்று சொல்லுகின்றபோது அதற்கு அடுத்த ஜாதியராய் விளங்கும் சைவர்கள் முதலியவர்களுக்கு இருக்க இடமுண்டா? என்று யோசித்துப்பாருங்கள். சைவன் என்றால் என்ன? பார்ப்பானைப்போலவே சரீரத்தால் வேலை செய்யாத சோம்பேரி என்று தானே அர்த்தம். எவனெவன் தன்னை மேல் ஜாதிக்காரன் என்று சொல்லிக்கொள்ளுகிறானோ அவனெல்லாம் சரீரத்தில் வேலைசெய்யாமல் மற்றவர்கள் உழைப்பில் வாழுகின்றவன் - வாழ ஆசைப் படுகின்றவன் என்றுதானே அர்த்தம்.

ஆகவே, ஜாதியை ஒழித்தாக வேண்டும் என்றும் எல்லோரும் சரீரத்தால் பாடுபட்டாகவேண்டும் என்றும் நிபந்தனை ஏற்படுத்தியாக வேண்டும். பாடு படாதவனுக்கு இந்த நாட்டில் இடமில்லை என்று ஆக்கி விட வேண்டும். அப்பொழுதுதான் பார்ப்பானும் ஒழிவான், பார்ப்பானால் வேறு எந்த வகையிலும் இந்த நாட்டில் இல்லாமல் ஒழியும்.

மேல்நாடுகளில் கூட பல இடங்களில் இந்தக்கொடுமை அதாவது சோம்பேரிகளின் சூழ்ச்சியும் கொடுமைகளும் இருந்துதான் வருகின்றன. அதற்காகத்தான் இன்று அநேக பாகங்களில் சோம்பேரி பாட்டாளி சண்டைகளும் கிளர்ச்சிகளும் குழப்பங்களும் நடந்து கொண்டிருக்கின்றன. ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வையுங்கள். அதென்னவென்றால் இந்த சோம்பேரி ஜாதிகளுக்கோ வகுப்புகளுக்கோ ஆதரவும் ஆக்கமும் அளித்துக் காப்பாற்றி வர மற்றொரு கூட்டம் இருக்கின்றது. அதுவும் ஒழிந்தாகவேண்டும் என்பதை கருத்தில் இருத்தினால் தான் இந்த ஏமாற்றமும் கொடுமையும் ஒழிந்துபடும். அதென்னவெனில் அது தான் பணக்கார வகுப்பு, முதலாளி வகுப்பு, மிராசுதார் வகுப்பு என்பனவாகியவைகளாகும். இந்த வகுப்புகளால்தான் பார்ப்பனீயம் அதாவது சோம்பேரித் தத்துவம் இருந்து வருகின்றது. அதையும் மாற்றியோ அழித்தோதான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் சுலபத்தில் பார்ப்பனீயம் ஒழிந்துவிடாது.

*குறிப்பு 19.02.1933 இல் சேலம் சுயமரியாதை சங்கத் தோழர்களால் மனுர்குல தேவாங்க பள்ளிக் கூடத்தில் நடைபெற்ற வரவேற்பில் ஆற்றிய உரை.*

தோழர்களே! சுயமரியாதை இயக்கம் என்பது பற்றி பேசுவேன் என்று துண்டுப் பிரசுரங்களில் காணப்பட்டிருக்கின்றன. சுயமரியாதை இயக்கம் என்ன? என்பது பற்றி பொது ஜனங்களுக்கு ஒரு விதத்தில்



சுயமரியாதை இயக்கத்தார்களைவிட அதன் எதிரிகளே அதிகமாகப் பிரசாரம் செய்திருக்கிறார்கள்.

அதாவது, சுயமரியாதை இயக்கம் நாஸ்திக இயக்கம் என்றும் அது கடவுள், மதம், காங்கிரஸ், அரசன் ஆகியவைகளுக்குத் துரோகமான இயக்கமென்றும், காங்கிரசுக்காரர்களும், இந்து, இஸ்லாம், கிறிஸ்துமதக் காரர்களும் அரசாங்கத்துக்கு விண்ணப்பம் செய்தும் அரசாங்க மந்திரி களுக்கும், சட்ட மெம்பர், மதம் காப்பாற்றும் போலீசு மெம்பருக்கும் தூது நடந்த வண்ணமாயும் விண்ணப்பங்கள் அனுப்பிய வண்ணமாயும் இருக்கின் றார்கள். போதாக்குறைக்கு வெள்ளைப்பத்திரிகையாகிய "மெயில்" பத்திரிகை யும் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி அரசாங்கத்திற்கும், காங்கிரசுக்கும், காந்திக்கும் எச்சரிக்கை செய்து சுயமரியாதை இயக்கத்தை அழிக்கச் சொல்லி சூசனை காட்டுகின்றது. அரசாங்கமும் தன்பங்கைச் செலுத்துகின்ற அளவிற் கென்று சுயமரியாதைக்காரர்கள் பின்னால் C.I.D. களை விரட்டிக் கொண்டே இருக்கிறார்கள்.

ஆகவே சுயமரியாதை இயக்கத்தைப்பற்றித் தெரியவேண்டுமானால் அவ்வியக்கத்தின் விரோதிகள் யார் என்பதைத் தெரிந்தாலே விளங்கிவிடும். இவ்வியக்கம் தோன்றிய காலம் முதல் எவ்வளவோ தொல்லைகளுக்கும், எதிர்ப்புகளுக்கும் ஆளாகவேண்டியிருந்தது என்பதையும் பார்த்தாலும் விளங்கி விடும்.

ஆகவே இவ்வியக்கத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள இனி என்ன சொல்ல வேண்டும் என்பது எனக்குத் தெரியவில்லை. மற்றபடி இவ்வியக்கக் கொள்கைகள் சரியா தப்பா என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டியது அவசியமென்றே கருதுகிறேன்.

தோழர்களே!

இந்தப்படிக்கு ஒரு இயக்கம் அதாவது இத்தனை மக்களுக்கு அதிருப்தி ஏற்படும்படி ஒரு இயக்கம் எதற்காக நடத்தப்படவேண்டும்? என்பதை யோசித்துப்பாருங்கள். ஒரு மனிதனுக்கு "நல்லபேர்" வாங்குவ தற்கும் சோம்பேரியாய் இருந்து வாழுவதற்கும் சுலபமானதும், சுகமானது மான பலவழிகள் இருக்கும்போது ஏன் இந்தக் கஷ்டமானதும், பழியும் தொல்லையும் இருக்கக்கூடிய வேலையில் ஈடுபட்டிருக்கின்றோம் என்பதை யோசித்துப்பாருங்கள். எனது சொந்தத்திற்கு ஒரு கௌரவமும் பெருமையும் வேண்டுமானால் நான் சம்பாதித்துக்கொள்ள முடியும். ஆனால் அவைகளால் மக்களுக்கு என்ன நன்மை ஏற்படக்கூடும் என்பதை ஆலோசித்துப்பார்த்தாய் விட்டது. மதத்திற்கு நல்ல பிள்ளையாய் இருந்தேன். அரசாங்கத்திற்கும் நல்ல பிள்ளையாய் இருந்தேன், காங்கிரசுக்கும் நல்ல பிள்ளையாய் இருந்தேன், பார்ப்பனர்களுக்கும் நல்ல பிள்ளையாய் இருந்தேன், பார்ப்பனர்கள் அல்லாத



RangaRakes tamilnavarasam.com

வர்களுக்கும் நல்ல பிள்ளையாய் இருந்தேன். ஒவ்வொருவரும் தன்தன் சுயநலத்துக்கு அனுகூலமாய் இருந்தால் மாத்திரம் நம்மை நல்லபிள்ளை என்று சொல்லுகிறார்களே ஒழிய கஷ்டப்படுகின்ற மக்களுடைய நலத்தை கவனிக்க ஆரம்பித்தால் நம்மை விரட்டவும் நம்மை விட்டு ஓட்டம் பிடிக்கவுமே செய்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல் நம்மைத் தூற்றவும் ஆரம்பிக்கிறார்கள். இந்தக் கூட்டங்களுக்கு உழைத்தது காட்டில் கத்தியது போலவே ஆய்விட்டதுடன் கஷ்டப்படுபவர்களுக்கு யாதொரு பயனும் ஏற்படாததோடு சோம்பேரித் தன்மைக்கும் முதலாளித்தனத்துக்குமே ஆக்கமளிக்கத் தக்கதாய்விட்டது.

இதனால்தான் இப்போது கஷ்டப்பட்டு உழைத்தும் முன்னுக்கு வராமலும் தாழ்த்தப்பட்டும் இழிவுபடுத்தப்பட்டும் இருக்கும் மக்களுக்கு உழைக்கவேண்டியது மனிதர் கடமை என்று உணர்ந்தேன். அதுதான் சுயமரியாதை இயக்கம் என்பதும்.

எந்த மதமும் கடவுளும், அரசாங்கமும், ஏழைகள் தலையில் தான் சவாரி செய்கின்றனவே ஒழிய முதலாளிமார்களை ஏன் என்றே கேள்ப்ப தில்லை. அவர்களுடைய விருத்திக்கு உதவி செய்தே வருகின்றன. கேவலம் ஒரு தீண்டாமை என்கின்ற காரியம் எவ்வளவு அக்கிரமமென்றும், அயோக் கியத்தனமானதென்றும், ஆதாரமற்றதென்றும் எல்லா மனிதனுடைய அறிவுக்கு பட்டிருந்தும் இன்று அதை ஒழிப்பது என்றால் எவ்வளவு கஷ்டமாய் இருக்கின்றது என்று பாருங்கள்?

தீண்டாமை ஒழியவேண்டுமா? வேண்டாமா? என்ற பிரச்சினையை முடிவு செய்ய "சாஸ்திரம் என்ன சொல்லுகின்றது? சாஸ்திரிகள் என்ன சொல்லுகின்றார்கள்?" என்று பார்ப்பதும் சாஸ்திரிகளுடன் தர்க்கம் செய்வ தும் புத்தியுள்ள காரியமென்றோ நாணையமான காரியமென்றோ சொல்ல முடியுமா? என்பதை யோசித்துப்பாருங்கள்.

சாஸ்திரம் பார்ப்பதென்றால் என்ன அர்த்தம். இன்றைய தினம் தீண்டா மையில் கஷ்டப்படும் மக்களுடைய கஷடத்தை நீக்குவதற்காக இன்றைக்கு 2500 வருஷங்களுக்கு முன் இருந்த மக்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று பார்ப்பது என்பது தானே அதன் அர்த்தம். கஷ்டப்படுகின்ற பறையர், சக்கிலியர்கள் முதலிய மக்களின் கஷ்டத்தை நீக்க சோம்பேரியாய் இருந்து ஊரார் உழைப்பில் வயிறு வளர்த்து தொந்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கும் சாஸ்திரிகளைப் போய் கேள்ப்பது என்பதும் அவர்களிடம் தர்க்கித்துக் கொண்டிருப்பதும் யோக்கியமான காரியமா என்று யோசித்துப்பாருங்கள். இந்தக் காரியங்களால் சாஸ்திரங்களையும் சாஸ்திரிகளையும் ஒப்புக்கொள்ளு கின்றோம் என்றுதானே அர்த்தம். இன்றைய மனித சமூக முன்னேற்ற காரியங்களில் சாஸ்திரங்களுக்கும், சாஸ்திரிகளுக்கும் என்ன வேலை இருக் கிறது? பாடுபடும் மனிதனின் சுக துக்கத்தைப்பற்றிப் பேச பாடுபடுபவனுக்கு



உரிமையே ஒழிய சோம்பேரிகளுக்கு எப்படி உரிமை உண்டாகும். ஆகவே இன்றைய நியாயமும், அதிகாரமும் சோம்பேரிகள் கையில் இருக்கின்றது என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்? இந்த நிலைமையை அடியோடு அழிக்கவேண்டும் என்றுதான் சுயமரியாதை இயக்கம் சொல்லுகின்றது. எல்லா மதங்களினுடைய யோக்கியதையும் எல்லா அரசாங்கத்தினுடைய யோக்கியதையும் இப்படித்தான் இருக்கின்றன. இந்தக் கொடுமையுள்ள தீண்டாமை என்பது இந்த மனித சமூகத்தில் எவ்வளவு காலமாய் இருந்து வருகின்றது? இதை ஒழிக்க இதுவரை எந்தமதம் எந்த அரசாங்கம் பாடுபட்டு ஒழித்தது? கிறிஸ்துவ மதமும், இஸ்லாம் மதமும் தங்கள் மதத்துக்கு வந்து விட்டால் தீண்டாமை ஒழிந்துபோகும் என்கின்றன வேயொழிய இந்த அக்கிரமம் நாட்டில் எப்படி இருக்க முடியும்? ஏன் இருக் கின்றன? என்கின்ற கவலைகள் அவைகளுக்கு இல்லை. இருக்குமானால் கேவலம் ஏதோ அற்ப காரியங்களுக்கெல்லாம் உயிரை விடவும் தலையை வாங்கவும் மக்களுக்கு போதிக்கின்ற மதங்கள் இக்கொடுமைக்கு உயிர்விட ஏன் துணிந்திருக்கக்கூடாது. அரசாங்கங்களும் இந்த தேசத்தில் வெகு காலமாக சுமார் 5000 வருஷமாக இருந்து வருவதாக சரித்திரங்கள் காணப் படுகின்றன. ஒரு அரசாங்கமும் இந்த தீண்டாமையை ஒழித்து மனிதனை மனிதனாக்கச் செய்யவே இல்லை. அனேக பெரிய காரியங்களையும் நாகரிக காரியங்களையும் செய்து சாதித்ததாக கதைகள், புராணங்கள் சரித்திரங்கள் எழுதிவைத்து மகிழ்கின்றன. ஆனால் தீண்டாமை விஷயத்தில் அவை செய்ததென்ன என்றால் தலைகுனிந்துதான் ஆகவேண்டும். அது போலவே எந்தக் கடவுளாவது இந்த மாதிரியான ஒரு கொடுமையை நிவர்த்தித்ததா? இல்லையே. ஆனால் மதமும் அரசாங்கமும் கடவுளும் எல்லா மக்களுக்கும் பொது என்று வாயில் பேசுகின்றன; வெட்கமில்லாமல் எழுதிக் கொள்ளு கின்றன. அந்தப்படி எல்லா மக்களுக்கும் பொதுவாய் காரியத்தில் என்ன செய்திருக்கின்றன? தீண்டாமை என்கின்ற இந்த ஒரு விஷயத்தில் ஒன்றும் இதுவரை செய்ய முடியாத மதங்களும் அரசாங்கங்களும் கடவுள்களும் இனி ஏழைகளுக்கு அதாவது செல்வவான்களால் கொடுமைப் படுத்தப்படும் ஏழைகளுக்கு என்ன காரியத்தைச் செய்துவிட முடியும்? மதமும், கடவுளும் அரசாங்கங்களும் மேல் ஜாதிக்காரர்களுக்கும், முதலாளிமார்களுக்கும் கையாள்களேயாகும். ஆதலால் தான் ஜாதிக்கொடுமையும், பணக்காரத் திமிரும் ஒழிய வேண்டுமானால் அவைகளின் ஆயுதங்களான கடவுள், மதம் அரசன் ஆகியவை சம்மந்தமில்லாத ஒரு ஆட்சியால் முடியும் என்று சுயமரியாதை இயக்கம் சொல்லுகின்றது. அதன்மீது கோபித்து என்ன செய்ய முடியும். அதில் கலந்துள்ள சிலரை தூக்கில் போடலாம். சிறை வைக்கலாம். அந்த உணர்ச்சியை ஒழித்துவிட முடியுமா? என்று யோசித்துப்பாருங்கள். இன்று உலகில் நாகரீகம் பெற்று முன்னணியிலிருக்கும் தேசங்களிளெல்லாம் இந்த உணர்ச்சிகள் தான் தாண்டவமாடுகின்றன. ஆனால் படித்த மக்கள் என்பவர்களும், பணக்காரர்கள் என்பவர்களும், பார்ப்பனர், பாதிரிகள்



RangaRakes tamilnavarasam.com

என்பவர்களும் இதற்கு விரோதமாகத் தான் இருக்கின்றார்கள். இவர்களால் ஒன்றும் ஆகப்போவதில்லை என்பது உறுதி. எப்படி யெனில் பணக்கார ஆதிக்கமும், பாதிரி ஆதிக்கமும் மேலோங்கி இருந்த ருஷிய தேசத்தில் அவை ஒழிந்த உடன் அங்கு இன்று தீண்டாமையும் இல்லை, பணக்காரக் கொடுமையும் இல்லை. இந்தநிலை அந்த தேசத்துக்கு எப்படி வந்தது என்று கேட்பீர்கள். அங்கு முதலில் மதத்தையும், கடவுளையும் ஒழித்த பிறகுதான் ஏற்பட்டது என்பதை நீங்கள் யாவரும் உணர்ந்திருக்கலாம். இந்தக் காரணங் களால் தான் மதத்தையும், கடவுளையும் குற்றம் சொல்லுகின்றோமே ஒழிய வேறில்லை. மற்றபடி குரோதம் கொண்டோ, வெறுப்புக்கொண்டோ அல்ல. ஆதலால் நீங்களும் எவ்வித குரோதமும், துவேஷமும் இல்லாமல் பொறுமையாய் நடு நிலையிலிருந்து யோசித்துப்பார்த்து உங்களுக்குத் தோன்றுகிறபடி செய்யுங்கள்.

*குறிப்பு: 19.02.1933இல் சேலம் விக்டோரியா மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் மற்றும் 20.03.1933இல் இராசிபுரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஆகியவற்றில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்,*

**குடி அரசு - சொற்பொழிவு - 05.03.1933**



# காங்கிரசும் ஒத்துழைப்பும்

சுயமரியாதை இயக்கத்திற்குள்ளாக சுயமரியாதை சமதர்மக்கட்சி என்ப தாக ஒருகிளை தோன்றி அது சட்டசபை ஸ்தல ஸ்தாபனங்கள் முதலியவை களைக் கைப்பற்றவேண்டும் என்ற ஏற்பாடுகளைச் செய்தவுடன் காங்கிரஸ் தலைவர்கள் என்போர்கள் சிலருக்குள்ளும் சட்டசபைக்குச் செல்லவேண்டும் என்கின்ற ஆசை தோன்றி அதை வெளிப்படுத்த சமயம் பார்த்துக்கொண்டே இருந்து அதற்கு சில சாக்குகள் ஏற்பாடு செய்து இப்போது மெள்ள மெள்ள வெளியாக்கிவிட்டார்கள்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், "காங்கிரசுக்காரர்கள் வைதீகர்களைப்போல் பிடிவாதக் காரர்கள் அல்ல. அவர்களுக்கு சட்டசபைகளின் மூலம் பலன் ஏற்படும் என்று தோன்றினால் உடனே சட்ட சபைகளுக்குச் செல்வார்கள்" என்று குறிப்பிட்டி ருந்ததை வாசகர்கள் படித்திருக்கலாம். இந்த அறிக்கையின் கருத்தானது காங்கிரஸ் சட்டசபை நுழைவை அனுமதிக்கப்போகின்றதென்றும், ஆகை யால் சட்டசபை செல்ல ஆசையுள்ளவர்கள் காங்கிரசை விட்டு விட்டு வேறு கட்சியில் சேர்ந்துவிட வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளுவதேயாகும். அன்றியும் அதற்கேற்றாற்போல் சட்டசபைகளை லக்ஷியம் செய்தும் ஆதரித்தும் தோழர் காந்தியவர்கள் "அநேக விஷயங்களுக்கு சட்டம் தடையாயிருப்பதால் அத்தடையை விலக்க சட்டம் செய்ய வேண்டும்" என்று அடிக்கடிபேசியும், எழுதியும் வருவதின் மூலம் ஜனங்களுக்கு சட்டசபையின் அவசியமும், பிரதானமும் விளம்பரம் செய்யப்பட்டு வருகின்றதுடன் தோழர் ராஜகோபாலாச்சரியார் தீண்டாமை விலக்கு, கோவில் பிரவேசம் ஆகிய மசோதாக்களின் சாக்குகளை வைத்துக்கொண்டு அடிக்கடி டெல்லிக்குப் போவதும் சட்டசபை மெம்பர்களுடன் பேசுவதும் அவர்களுக்கு அறிக்கை விடுவதுமான காரியங்களால் சட்டசபை பிரவேசம் அவசியம் என்று .ஜனங் களுக்குப் படும்படி செய்வதும், அதில் ஜனங்களுக்கு மோகம் உண்டாகும்படி செய்வதுமான காரியத்தைச் செய்துவருகிறார்.

இந்தக்காரணங்கள் சட்டசபை பிரவேசம் என்பதை மாத்திரம் காட்டு வதாயில்லாமல் காங்கிரசானது சர்க்காருடன் ஒத்துழைக்கத் தயாராயிருக் கின்றது என்பதையும் வெளிப்படுத்த ஒரு தந்திரமாகும்.



RangaRakes tamilnavarasam.com

ஏனெனில் லார்ட் வில்லிங்டன் பிரபு "தோழர் காந்தியையும் மற்ற சில காங்கிரசு தொண்டர்களையும் விடுதலை செய்யவேண்டுமானால் காங்கிரசின் சட்டமறுப்புக் கொள்கை மாறவேண்டும்" என்றும், தோழர் காந்தியவர்கள் சட்ட மறுப்பு செய்வதில்லை என்று சூசனை காட்டவேண்டும் என்றும் பல தடவை சொல்லி வந்திருப்பதை உத்தேசித்து சர்க்காருக்கும் இந்த விஷயம் தெரியட்டுமென்று கருதி இப்படிச் செய்கிறார்கள். இதைக்கண்ட பின்பு சர்க்காரார் உடனே காங்கிரசுக்காரர்களை விடுதலை செய்து விடவும் கூடும்.

இந்த சமயம் காங்கிரசுக்காரருடைய உதவி சர்க்காருக்கு மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் இந்நாட்டில் மாத்திரமல்லாமல் உலகம் முழுவதிலுமே இது சமயம் ஏற்பட்டிருக்கும் சமதர்ம உணர்ச்சியை வீழ்த்தி ஒழிக்க ஐரோப்பிய வல்லரசுகள் எல்லாம் இந்தியாவைத்தான் நம்பியிருக்கின்றன. அதாவது இந்தியாவைத் தனது சொத்தாகக் கொண்ட பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வலுவேதான் இன்று உலக சமதர்மத்திற்கு எதிராயிருக்கின்றது என்று தைரியமாயிருக்கின்றன. அன்றியும், இந்தியா தனது சொத்து என்கின்ற உரிமை பிரிட்டனுக்கு என்று ஒழிக்கப்படுகின்றதோ அன்றே உலக சமதர்ம உதயகாலம் என்று அநேக சமதர்மவாத நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். உண்மையும் அப்படியே தான் இருக்கின்றது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தியா பிரிட்டிஷாருக்குச் சொந்தம் என்கின்ற தத்துவம் மாறாமல் இருப்பதற்காகவே புதிய அரசியல் சீர்திருத்தத்தில் மகாராஜாக்களைப் பிணைத்தும், மற்றும் காங்கிரசையும் காந்தியாரையும் பிணைத்தும் கொண்டதுமான காரியங்களாகும்.

எந்தக் காரணத்தை முன்னிட்டாவது இந்தியா பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுபடவேண்டுமானால் காங்கிரசும் அதன் அஸ்திவாரமான இந்திய முதலாளித் தன்மையும் ஒழிந்தாலொழிய முடியவே முடியாது என்பது பிரிட்டனுக்கு நன்றாய் தெரியும். அதுவே உண்மையுமாகும்.

ஆதலால்தான் வெகு சீக்கிரத்தில் முதலாளி தத்துவத்தின் மீது கட்டப்பட்டிருக்கும் காங்கிரசும், முதலாளி தத்துவ ஆட்சியாகிய சர்க்காரும் தங்களுடைய போட்டியை விட்டுவிட்டு வெகு சீக்கிரத்தில் வெளிப்படையாகவே தோளோடு தோள் பிணைந்து வெளிக்கிளம்பி சமதர்ம உணர்ச்சியை நசுக்கப் புறப்படப் போகிறார்கள். இதுவே நமது உறுதி, அதன் சூசனைகளே தான் இப்போது சர்க்கார் காந்தியையும் காங்கிரசுக்காரரையும் விடுதலை செய்ய "காங்கிரஸ் இனிசட்ட மறுப்பு செய்வதில்லை" என்ற சூசனையை கேட்பதும் காந்தியும், காங்கிரஸ் சட்டசபையைக் கைப்பற்ற வேண்டும் என்று கருதுவதாகச் சொல்வதன் மூலம் சர்க்காரோடு ஒத்துழைக்கப் போகின்றோம் என்கின்ற சூசனையைக் காட்டுவதுமான காரியங்களாகும். இந்த சூசனைகளானது வெகு சீக்கிரத்தில் சர்க்காரும், காங்கிரசும் ஊடலில் இருந்த நாயகனும் நாயகியும் ஊடல் தீர்ந்தபின் அடையும் காதல் பாவத்தின் பலன் போல் கட்டிப் புரளச்செய்யப் போகின்றது என்பதில் சிறிதும் சந்தேகப்பட இடமே இல்லை.

இதை தேசீயவாதிகள், தேசியப் பத்திரிகைகள் என்பவைகள் மேள தாளத்தோடு ஆதரித்து வரவேற்கப்போகின்றார்கள் என்பதிலும் யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை.

இப்பொழுதே தேசிய பத்திரிகைகள் இது விஷயத்தில் தங்களது அபிப்பிராயங்களை தெரிவித்துவிட்டன. அதாவது தமிழ்நாடு பத்திரிகையானது தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சட்டசபை என்றவுடன் "ஆச்சாரியாருக்கு இப்பொழுதாவது புத்திவந்ததா" என்று கேட்டு விட்டு இதை "நல்ல யோசனை" என்றும் சொல்லிவிட்டது. இந்து, சுதேசமித்திரன் என்ற பார்ப்பன பத்திரிகைகளும் காங்கிரஸ் ஸ்தம்பித்துப்போய் விட்டது, ஆதலால் வேறு ஏதாவது ஒரு வழி கண்டுபிடித்தாகவேண்டும் (என்று எழுதுகின்ற பாவனையில்) "காங்கிரசு சட்டமறுப்பில் செலவழித்த ஊக்கத்தை சட்டசபையில் செலவழித்திருந்தால் எவ்வளவோ பலன் அடைந்திருக்கலாம்" என்றும் எழுதிவிட்டன.

சுயராஜ்யா என்னும் ஆந்திர பார்ப்பன தேசிய பத்திரிகையும் சட்டசபை பிரவேசமே நல்ல மருந்து என்று கருதி இருப்பதாக ஜனங்களுக்கு காட்டிக்கொண்டுவிட்டது. ஆகவே சட்டசபை தேர்தல் வந்தவுடன் காங்கிரஸ் வாதிகளை, தேசிய வாதிகளை சட்டசபைகளுக்கு அனுப்புங்கள் என்று காந்தியும் ராஜகோபாலாச்சாரியும் "ஸ்ரீமுகம்" (உத்திரவு) வெளியிட வேண்டியதும் அதை மற்ற தேசியபத்திரிகைகள் கொட்டை எழுத்தில் வெளிப்படுத்தி விளம்பரம் செய்யவேண்டியதும் தான் பாக்கி இருக்கிறது. சிறையிலிருந்து வெளியாகும் தொண்டர்களுக்கு தேர்தல்வரை என்ன வேலை கொடுப்பது என்பதுதான் இப்போது காந்திக்கும் ஆச்சாரியாருக்கும் பெரிய கவலை என்றாலும் அதை உத்தேசித்தே ஹரிஜன வேலையை சிருஷ்டித்துப் பார்த்தார்கள். ஆனால் இதில் பட்டினி விரதப்புரட்டுகள் வந்து புகுந்ததால் அதன் செல்வாக்கும் இப்பொழுது ஒரு வழியில் குறைந்து போய்விட்டது.

ஆகவே இப்போது எப்படியாவது சிறிது காலத்திற்கு அதாவது அடுத்த தேர்தல்வரை காங்கிரசு ஸ்தம்பித்தது-ஸ்தம்பித்தபடிதான் இருக்கும். தேர்தல் வந்தவுடன் இந்து சுதேசமித்திரன் வேண்டிக்கொண்டிருப்பது போலவே காங்கிரஸ் இரட்டிப்பு முயற்சியுடன் வெளிக்கிளம்பக் கூடும். எப்படி இருந்தபோதிலும் சமதர்ம உணர்ச்சியையும், புரட்சியையும் இந்த தந்திரங்கள் எல்லாம் அழித்துவிடமுடியாது என்கின்ற தைரியத்திலேயே தான் நாம் இருக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 05.03.1933**


RangaRakes
tamilnavarasam.com

# உண்மைத் தோழர் மறைந்தார்

சுயமரியாதை இயக்கத்தின் உண்மைத் தோழர் எஸ். ராமச்சந்திரன் அவர்கள் 26-2-33 ந் தேதி மறைந்து விட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் நாம் திடுக்கிட்டுப் போய் விட்டோம். நாம் மாத்திரமல்ல, சுயமரியாதை இயக்கத்தில் கடுகளவு ஆர்வமுள்ள எவரும் இச்சேதி கேட்டவுடன் திடுக் கிட்டிருப்பார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தோழர் ராமச்சந்திரனை இழந்தது சுயமரியாதை இயக்கத்திற்கு ஈடு செய்ய முடியாத ஒரு பெரு நஷ்டமேயாகும். தோழர் ராமச்சந்திரனைப் போன்ற உறுதியான உள்ளமும், எதற்கும் துணிந்த தீரமும் மனதில் உள்ளதை சிறிதும் எவ்விதி தாட்சண்யத் திற்கும் பின் வாங்காமல் வெளியிடும் துணிவும் சாதாரணமாக வெகு மக்களிடம் காண்பது என்பது மிக மிக அரிதேயாகும். பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்காக என்ற கிளர்ச்சி சுயமரியாதை இயக்கத்தில் வீறு கொண்டிருந்த காலத்தில் தோழர் ராமச்சந்திரன் அவர்கள் தாலூக்கா போர்டு முதலிய பல ஸ்தாபனங்களில் தலைவராய் இருந்த சமயம் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது **"இனி இந்தக் கையால் ஒரு பார்ப்பனருக்காவது உத்தி யோகம் கொடுப்பதில்லை"** என்று ஒரு உறுதிமொழி கூறி அதை ஒரு விரதமாய் கொண்டிருப்பதாக விளம்பரப்படுத்தினார். மற்றம் அவரது திருநெல்வேலி சு.ம. மகாநாட்டின் தலைமை உரையில் (1929-ம் வருஷத்தில்) வருங்காலத்தில் சுயமரியாதை இயக்கத்தால் ஏற்படும் பலன் இன்னின்னவை என்று குறிப் பிட்ட சயமத்தில்,

"உலகம் எல்லாம் வழங்கப்படும் ஒரு பாஷை ஏற்படும்.

உலகம் எல்லாம் ஒப்புக்கொள்ளும் ஒரு கொள்கை ஏற்படும்.

உலகம் எல்லாம் ஒரு ஐக்கிய ஆட்சி நாடாகும்.

உலகத்திலுள்ள சொத்துக்கள் பூமிகள் எல்லாம் உலகத்திலுள்ள மக்களுக்குச் சொந்தமாகும்.

வேலை செய்யாத சோம்பேரிகள் ஒருவர் ஒருவர் கூட இருக்க மாட்டார்கள். குற்றங்கள் குறைந்து விடும் நோய்கள் அகன்று விடும். மனித



ஆயுள் இரட்டித்து விடும். மக்கள் வாழ்வில் உள்ள கவலைகள், பொறாமை கள் நீங்கி ஒருவருக்கொருவர் அன்பும் நட்பும் கூட்டுறவு முயற்சிகளும் தாண்டாவமாடுவதுடன், மக்கள் சதா சந்தோஷத்துடன் இருப்பார்கள் என்று கர்ஜித்ததுடன், தீண்டாமை என்பது மதக்கொள்கையைச் சேர்ந்தது என்பது முழுப்புரட்டென்றும் அது முழுதும் பொருளாதார சூழ்ச்சியின் அடிப் படையைக் கொண்டது" என்றும் பேசி இருக்கிறார்.

இந்த தத்துவங்களில் ஒரு சிறிதும் மாற்றமில்லாமல் இன்று சு. ம. இயக்கம் வேலை செய்து வருவதைப் பார்ப்பவர்கள் இவ்வியக்கம் யாதொரு புதிய வழிகளிலும் செல்லவில்லை என்பதை உணர்வார்கள். தோழர் ராமச்சந்திரன் நல்ல வாக்கு விசாலமுள்ள வக்கீலாகவும் தகுந்த வரும்படியும் மேலும் மேலும் பெரிய நிலைக்கு வரக்கூடிய நிலையும் சௌகரியமும் இருந்தும் அவைகளை லட்சியம் செய்யாமல் இயக்கத்திலேயே கவலைக் கொண்டு மற்றவைகளை அலட்சியம் செய்து வந்த உண்மைச் சுயமரியாதை வீரரேயாவர். இவரது வயது 48, அதாவது 1884-ல் பிறந்தவர் இவ்விளம் வயதில் இப்படிப்பட்ட உற்ற தோழரை இழக்க நேர்ந்தமைக்கு யாரே வருந் தாமல் இருக்க முடியும்? இவருக்கு 4-ஆண் மக்களும் 3- பெண்மக்களும் உண்டு. இவரது வாழ்க்கைத் துணைவியார் ராமனாதபுரம் ஜில்லா போர்டு அங்கத்தவராகவும் சிவகங்கை தாலூகா போர்டு அங்கத்தவராகவும் தகுந்த கல்வி ஞானமுள்ளவராகவும் இருக்கின்றார்கள்.

எனவே இவ்வம்மையார் இயற்கையை மதித்து துணைவரின் பிரிவை சடுதியில் மறந்து அவரது சுயமரியாதை இயக்கத்தில் அவரது கொள்கை களையே கொண்டு உலக விடுதலைக்கும் உலக இன்பத்துக்கும் உழைக்க முன்வருவார்கள் என்றே ஆசைப்படுகின்றோம்.

**குடி அரசு - இரங்கலுரை - 05.03.1933**



RangaRakes tamilnavarasam.com

## ஈரோட்டில் குச்சிக்காரிகள் தொல்லை

ஈரோட்டில் குச்சிக்காரிகள் தொல்லை அதிகரித்து விட்டதென்றும் இதன் பயனாய் காலித்தனங்களும், பொதுஜன சாவதானத்துக்கு அசௌகரியங்களும் ஏற்பட்டு பல திருட்டு, ரகளை, அடிதடி, ஆபாசப் பேச்சுவார்த்தைகள் முதலியவைகளும் ஏற்படுகின்றன என்று 29-1-33 தேதி "குடி அரசு"ப் பத்திரிகையில் எழுதியிருந்ததுடன் இவற்றைச் சீக்கிரத்தில் ஒழிக்கபோலீசார் தக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும், விபசாரத் தடுப்பு சட்டத்தின் அமுல் ஈரோட்டிற்கும் கொண்டுவர வேண்டுமென்றும் தெரிவித்துக்கொண்டோம்.

சமீபத்தில் ஈரோடு போலீசு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர்கள் சிறிது கவலை கொண்டு ஏதோ சில எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டதாகவும் தெரிகின்றது. ஆனால் காரியத்தில் தக்க மாறுதல்கள் எதுவும் ஏற்பட்டதாய் தெரியவில்லை.

ஆகையால் இப்போதும் பல தோழர்கள் முயற்சி எடுத்து போலீசு சூப்ரண்ட்டெண்ட் அவர்களுக்கு இக்கஷ்டங்களைக் குறித்து விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதாகத் தெரிகின்றது. அதில் தோழர்கள், மு.ச. முத்துக்கருப்பஞ் செட்டியார், ஆர். பழனியப்ப செட்டியார். ஈ. என். குப்புசாமி ஆச்சாரி, எ. கோவிந்தசாமி நாயக்கர், எஸ். வேலுச்சாமி, சுப்பிரமணியம், ஈஸ்வரன், செலமேலு, நாதன், ரத்தினசபாபதி முதலிய பலர் கையெழுத்திட்டு விண்ணப்பம் செய்துகொண்டதாகத் தெரிகின்றது.

ஆதலால் இனியாவது உடனே போலீசு இலாக்காதாரர்களும், முனிசிபாலிடியாரும் கவனித்து தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

முனிசிபல் கவுன்சில் மூலம் ஈரோட்டிற்கு விபசாரத் தடைச் சட்டம் அமுலுக்கு வரவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி சர்க்காருக்கு அனுப்பவேண்டும் என்றும் விரும்புகின்றோம்.



ஈரோட்டில் சற்று ஏறக்குறைய 300 பேர்களுக்குக் குறையாமல் 500க்கு மேற்படாத பெண்கள் பணத்துக்கு விபசாரம் செய்கின்ற கீழ்தர விபசாரிகளாக இருப்பதாக தகவல் எட்டுகின்றது. சில வீதிகளில் மரியாதையான மக்கள் வாழ்வதற்கு யோக்கியதையே இல்லாமல் இருந்து வருகின்றது. ஆகையால் இதை உடனே கவனிக்க வேண்டுமென்று விரும்புகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 05.03.1933**



RangaRakes tamilnavarasam.com

## விருதுநகர் ஆண்டு விழா

### ஈ. வெ. இராமசாமியும் வல்லத்தரசும் 1000 பேர் ஊர்வலம்

தலைவரவர்களே! வாலிபதோழர்களே! மற்றும் பல சங்கத்தினர்களே! இன்று இந்த ஆண்டுவிழாவுக்காக வந்த எனக்கு நீங்கள் அளித்த வரவேற்புக்கும், என்னிடம் காட்டிய அன்புக்கும் ஆர்வத்திற்கும் நான் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த ஆடம்பர வரவேற்பும் உபசாரப் பத்திரங்களும் எவ்வளவு உணர்ச்சியுடையதானாலும் கிளாச்சியாய் இருந்தாலும் ஏதோ ஒரு அளவுக்கு இயக்க பிரசாரத்திற்கும் வளர்ச்சிக்கும் ஊக்கமூட்டுவதற்கும் மக்கள் கவனத்தை இழுப்பதற்கும் பயன்படுகின்றது என்று சொல்லப்படுவதாய் இருந்தாலும் இப்போது வரவர எனக்கு இவைகள் ஒரு சடங்கு முறை போலவே தோன்றுகின்றன. இந்தப்படி வாயில் சொல்லிக் கொண்டே நானும் இந்த காரியங்களுக்கு உடன் பட்டுக் கொண்டே வருகின்றேன் என்றும் இவை அனாவசியம் என்றோ தவறு என்றோ பட்டவுடன் நிருத்திவிட வேண்டியதே கிரமமாகும் என்றும் சொல்வதில் குறை இருப்பதாக நினைக்கவில்லை.

ஆனால் இப்போது நிறுத்தப்படுவது சிலருக்கு அதிருப்தியாகவும், சிலருக்கு விஷமம் செய்யஇடம் கொடுப்பதாகவும் இருக்கக்கூடும் என்றும் ஒரு சமயம் இயக்கத்தைப் பாதிக்கக் கூடியதாகும் என்றும், சில நண்பர்கள் சொல்வதால் நானும் நீங்களும் வெகு ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதும் சமீபத்தில் நடக்கப் போவதுமான மாகாண மகாநாட்டில் ஊர்வலம் உபசாரப்பத்திரம் மலர் மாலை ஆகிய ஆடம்பரங்களை நிறுத்துவது என்பதை ஒரு தீர்மானமாக நிறைவேற்றிவிட்டு இவைகளை நிறுத்தப்பட வேண்டுமென்று கருதி இருக்கிறேன்.

தோழர்களே! இதுபோலவே இனியும் அனேக விஷயங்கள் சடங்குகள் போல் சு.ம. இயக்கத்திலும், நடைபெற்று வருகின்ற விஷயம் எனக்குத் தெரியும். அவைகளையெல்லாம் சிறிது சிறிதாக குறைத்து வந்து முடிவில் அடியோடு எடுத்து விட முயற்சித்து வருகிறேன். இப்படிப்பட்ட



பல காரணங்களால் தான் சு-ம இயக்கம் புரட்சி இயக்கமென்று சொல்லப் படுகின்றது.

ஒரு ஏழைக்கும், செல்வவானுக்கும், ஒரு முதலாளிக்கும் அவனது காரியஸ்தர்களுக்கும், ஒரு எஜமானுக்கும், அவனது அடிமைக்கும், இருந்து வரும் வித்தியாசங்களும் நடப்புகளும், வெறும் சடங்குமுறை போலவும் பழக்க வழக்கம் என்பதை ஆதாரமாய்க் கொண்டும் நடந்து வருகின்றனவே ஒழிய அதில் ஏதாவது நியாயமோ அறிவுக்குப் பொருத்தமான காரணங்களோ இருக்கின்றனவா என்று பாருங்கள். முதலாளி சுகப்படுவது, தொழிலாளி கஷ்டப்படுவது என்பது எதை ஆதாரமாய்க் கொண்டது என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். பார்ப்பான் மேல்ஜாதி, பறையன் கீழ்ஜாதி என்பதற்கு எது ஆதாரமோ அதுதான் இந்த ஏழை பணக்காரன், முதலாளி தொழிலாளி, என்கின்ற பழக்கத்திற்கும், நடப்புக்கும் ஆதாரமாய் இருக்கின்றது. பார்ப்பான், பறையன், மேல்ஜாதி, கீழ்ஜாதி ஆகியவை கூடாது என்றும் நாம் கூறும்போது நம்முடன் கூட இருந்து யார் யார் நமக்குப்பின் தாளம் போட்டார்களோ அவர்கள் எல்லாம் இப்போது முதலாளி, தொழிலாளி. ஏழை, பணக்காரன் என்கின்ற பாகுபாடும், வித்தியாசமும் ஏன் என்று கேள்க ஆரம்பித்தவுடன் நம்மைவிட்டு ஓட ஆரம்பித்துவிட்டார்கள். அதுமாத்திரமல்ல நம்மை குறைகூறவும் ஆரம்பித்துவிட்டார்கள். இதன் பயனாய் நமக்கு புதியபுதிய எதிரிகள் உண்டாகிக்கொண்டு வருகின்றார்கள். பணக்காரர்களைவிட சோம்பேரியாய் இருந்து இயக்கத்தின் பெயரைச் சொல்லி வயிறுவளர்த்துக் கொண்டவர்கள் எல்லாம், இப்பொழுது புதிய எதிரிகளாக வருவார்கள். இவைமாத்திரமல்ல இனியும் தாய், தகப்பன், அண்ணன், தம்பி முதலியவர்களும் எதிரியாவார்கள். மற்றும் நம்ம பின்னால் மேலுக்காய் திரிந்து கொண்டிருந்த தோழர்களைப் பற்றியோ வென்றால் சொல்ல வேண்டியதேயில்லை. இனி நாளாக நாளாக இவ்வியக்கத்திற்கு ஏழை மக்களும் பாடுபட்டு உழைத்து தங்கள் பயனை அன்னியர்கள் அனுபவிக்கவிட்டுக் கொண்டு கஷ்டப் படுகின்ற மக்களுந்தான் நமக்கு உற்ற துணைவர்கள் ஆவார்கள்.

பணக்காரர்களை நம்பி அவர்கள் தயவால் சோம்பேரியாய் இருந்து வாழ்ந்து வரும் மக்கள் ஒருநாளும் நமக்கு உதவிபுரியமாட்டார்கள். இவர்கள் சங்கதிகளே இப்படியிருக்குமானால் அரசாங்கத்தினரின் யோக்கியதையைப் பற்றி நான் சொல்லவேண்டுமா? ஆகவே மேற்கண்ட எதிர்ப்புகளைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் தைரியமாய் தலைகொடுத்து அவைகளை சமாளித்தாக வேண்டும் என்பதில் குற்றமென்ன என்பதை யோசித்துப் பாருங்கள்.

நாம் யாரை விரோதித்தாலும் யாரை நேசித்தாலும் நமது கருத்து ஒன்றேயாகும். அதாவது படித்தவர்கள் என்றும், பணக்காரர்கள் என்றும், அரசாங்கத்தார் என்றும் சொல்லிக்கொண்டு ஏழைகளின் ரத்தத்தை எவரும் உரிஞ்சக்கூடாது என்பதேயாகும்.



RangaRakes tamilnavarasam.com

படித்தவனும், பணக்காரனும், அரசாங்கமும் பாடுபட்டு உழைக்கும் மக்களுடைய நன்மைக்கும், அம்மக்களுடைய உழைப்பின் பயன் முழுவதும் அம்மக்களே அடையும்படியான காரியத்திற்கும் எதிரிகளாய் இருப்பவன்களேயானால் அவன்கள் எல்லோரும் உலகில் இல்லாமல் மறைய வேண்டியவர்களேயாவார்கள். இதற்காக உழைக்காத இயக்கமோ மனிதனோ உலகில் இருப்பதும், இறப்பதும் இனி ஒன்றேயாகும். மற்றும் மனித சமூகத்தினிடம் ஓய்வு சாந்தி நிலவி, பொறாமை, துவேஷம் அசூயை, ஆகியவை ஒழிய வேண்டுமானால் சமதர்மத்தைத் தவிர வேறு வழியில்லை.

*குறிப்பு: 28.02.1933 இல் நடைபெற்ற விருதுநகர் நாடார் பரிபாலன சங்க ஆறாம் ஆண்டு விழாவில் விருதுநகர் நாடார் பரிபாலன சங்கத்தார். இளைஞர் சுயமரியாதை சங்கத்தார். ஆதிதிராவிடர் சங்கத்தார். நித்தியானந்த வாசக சாலை ஆகிய நான்கு சங்கத்தாராலும் அளிக்கப்பட்ட வரவேற்புப் பத்திரத்திற்கு பதிலளித்து பேசியது.*

**குடி அரசு - சொற்பொழிவு - 12.03.1933**



# விருதுநகரில் சுயமரியாதைப் பொதுக்கூட்டம்

தோழர்களே! எனது ஐரோப்பிய யாத்திரையிலோ குறிப்பாக ரஷிய யாத்திரையிலோ நான் கற்றுக்கொண்டு வரத்தக்க விஷயம் ஒன்றும் அங்கு எனக்குக் காணப்படவில்லை. ஆனால் நமது சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் மிகவும் சரியானவை என்றும் அக்கொள்கைகளால் தான் உலகமே விடுதலையும் சாந்தியும் சமாதானமும் அடையக்கூடும் என்று தெரிந்தேன். இதுதான் உங்களுக்கு ஐரோப்பாவுக்குச் சென்று வந்தவன் என்கின்ற முறையில் சொல்லும் சேதியாகும்.

நாம் இந்த 7, 8 வருஷ காலமாகவே படிப்படியாய் முன்னேறி வந்திருக்கின்றோம் என்பதை நமது இயக்க வேலையை முதலில் இருந்து கவனித்து வந்திருப்பவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

சுமார் 15, 20 வருஷங்களுக்கு முன்பாக நாம் எந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று கருதினாலும் எது மக்களுக்கு நன்மையானது என்று கருதினாலும் அதையெல்லாம் அரசாங்கத்தைக் கொண்டே செய்யச் சொல்லி கெஞ்சுவோம். அதற்கு பார்ப்பனர்களையே தரகர்களாய் வைத்து அவர்கள் சொன்னபடி யெல்லாம் கேட்டு அவர்கள் பின்னால் திரிவோம், அவர்கள் சொல்லுவதையே நன்மை என்று கருதுவோம். அன்றியும் அது அரசாங்கம் வேறு பார்ப்பனர்கள்வேறு என்று சொல்ல முடியாத காலமாய் இருந்தது. அந்தக் காலத்தில் பெரும் பணக்காரன், ஜமீன்தாரன், மீராசுதாரன் என்பவர்கள் எல்லாம் பார்ப்பனர்கள் காலடியில்தான் கிடந்தார்கள். அதிலிருந்து ஒரு பெரும் புரட்சி உண்டாயிற்று. அது தான் ஜஸ்டிஸ் கட்சி புரட்சி என்பது. அது தோன்றிய பின்பு பார்ப்பனரல்லாத செல்வவான்களுக்கும் பார்ப்பன ரல்லாத படித்தவர்கள் என்பவர்களுக்கும் சற்று செல்வாக்கு தோன்றிற்று. பார்ப்பனர்களையே நம்பி இருந்த அரசாங்கமானது பார்ப்பனரல்லாதாரைத் தட்டிக் கொடுத்து அவர்கள் ஆதரவில் இருக்க வேண்டியதாயிற்று. இதன் பயனாய் பார்ப்பனர்கள் அரசாங்கத்திற்குத் தொல்லை கொடுக்கக்கருதி பார்ப்பனரல்லாத பாமர ஜனங்களை வசியம் செய்யத்தக்க சில புதிய சூக்ஷிகளைக் கையாள ஆரம்பித்தார்கள். அதன் பயனாய் பார்ப்பனர்கள் தன்மை இன்னது



RangaRakes tamilnavarasam.com

என்றும் அரசாங்கத்தின் தன்மை இன்னது என்றும் ஓரளவுக்கு வெளியாயிற்று. பிறகு அவை ஒரு புரட்சியாய் ஆயிற்று. அந்த இரண்டுவித கிளர்ச்சியும் சுயநலங்களையே அதாவது முன்னணியிலிருந்து கிளர்ச்சி செய்பவர்கள் அதிகாரமும் பதவியும் பெருவழியும் கவலை கொண்ட பாமர மக்களை ஆயுதமாக வைத்து போர் நடத்தியதால் இரண்டும் பலமற்று ஒரு தடவை ஜஸ்டிஸ் கட்சி வெற்றி பெறுவதும் மறுதடவை காங்கிரஸ் கட்சி வெற்றி பெறுவதுமாக நிலையில்லாமல் இருந்து வந்தது. இந்த மாதிரியில் ஜஸ்டிஸ் கட்சி என்பதும் ஒரு தடவை நல்ல தோல்வியடைய வேண்டி ஏற்பட்டது.

இந்த சந்தர்ப்பம் நமக்கு நல்ல சந்தர்ப்பமாய் கிடைத்ததால் நாம் சமூக வாழ்க்கையில் ஒரு கிளர்ச்சி செய்ய முடிந்தது. இந்த மாதிரியான ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்காத பக்ஷம் நமது வேலைக்கு அவ்வளவு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது.

ஏனெனில் பார்ப்பனரல்லாதார்கள் ஜாதி வித்தியாசங்களையும் அதற்கு ஆதாரமான மத சம்பிரதாயங்களைப் பற்றியும் இவ்வளவு தூரம் கிளர்ச்சி செய்ய சம்மதித்து இருக்கவேமாட்டார்கள். பார்ப்பனரல்லாதாரியக்கம் என்னும் ஜஸ்டிஸ் கட்சி தோல்வியடைந்து மறுபடியும் அது வெற்றியாவதற் குள் சுமார் 4 வருஷ காலத்துக்குள் அபரிமிதமான காரியங்களைச் செய்திருக் கிறோம். இதை சமூக சம்பந்தமான ஒரு புரட்சி என்றே சொல்லவேண்டும்.

இப்பொழுது மேல்கண்ட அரசியல் கிளர்ச்சியும் சமூகக் கிளர்ச்சியும் நடத்தப்பட்டது போலவே தான் இப்போது பொருளாதாரத் துறையிலும் ஒரு கிளர்ச்சி செய்ததாக வேண்டியிருக்கின்றது. இது வெற்றி பெறுமா? இல்லையா? என்பதைப் பற்றி நாம் கலலைப்பட வேண்டியதில்லை. இது நியாயமா? அநியாயமா? அல்லது அவசியமா? அவசியமற்றதா? என்று தான் பார்க்கவேண்டும். அரசியலைப்பற்றி என்னென்ன குற்றம் சொன்னோமோ சமூகத்தில் ஜாதி மதங்களைப்பற்றி என்னென்ன குற்றம் சொன்னோமோ அவைகள் எல்லாம் இன்றைய பொருளாதார இயலிலும் இருப்பதைக் காங்கின்றோம். எப்படி அரசாங்கம் என்பதற்காக சில மக்களின் உழைப்பு வீணாகின்றதோ, எப்படி மேல் ஜாதியான் என்பதற்காக சில ஜனங்கள் இழிவு படுத்தப்படுகின்றார்களோ அதுபோலவே தான் பணக்காரன் முதலாளி என்பதற்காக பல மக்களின் உழைப்பு வீணாக்கப்படுவதுடன் இழிவு படுத்த வும் படுகிறார்கள். இந்தக் காரணங்களால் பொருளாதார இயலில் ஒரு பெரும் கிளர்ச்சி செய்யவேண்டியது இப்போது அவசியமாகின்றது. இது இன்று நமது நாட்டுக்கு மாத்திரம் அவசியம் என்று காணப்பட்டதாக நினைக் காதீர்கள். இன்று உலகில் எங்கும் இவ்வுணர்ச்சி பரவி தாண்டவமாடுகின்றது.

ரஷியா தேசத்தில் இவ்வுணர்ச்சி தோன்றி பெரும் புரட்சியாக மாறி வெற்றி பெற்று இன்று காரியத்தில் நடைபெற்றும் வருகின்றது. ரஷியாவில் அரசியல் ஆதிக்கமோ ஜாதிமத ஆதிக்கமோ செல்வவான் ஆதிக்கமோ



ஒன்றுமே கிடையாது. அந்த நாட்டிலுள்ள வாலிபர்களுக்கு அரசியல் என்றால் என்ன மதம் என்றால் என்ன ஏழை பணக்காரன் என்றால் என்ன என்கின்றவைகளுக்கு அருத்தமே தெரியாது.

மனிதரில், வாழ்க்கையில், கவலையில், பொருப்பில் ஒருவருக் கொருவர் எவ்வித வித்தியாசத்தையும் அறியார்கள். அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை இங்கும் ஏற்படுவதில் யாருக்கும் எவ்வித கஷ்டமோ நஷ்டமோ இருக்காது. பணக்காரனென்றும் மேல் ஜாதிக்காரன் என்றும் அரசன் என்றும் சொல்லிக் கொள்ளப்படுவதில் ஒருவித செயர்க்கை திருப்தி ஏற்படுவதைத் தவிர இவற்றின் பயன்களால் இவர்கள் கவலையற்று, அதிருப்தியற்று சாந்தியாய் மனச் சமாதானமாயிருக்கிறார்கள் என்று யாரும் சொல்லிவிட முடியாது.

உலகம் தோன்றிய காலம்தொட்டு இதுவரை எத்தனையோ பேர் சாதாரண மனுஷர்களாகவும் ரிஷிகளாகவும், மகான்களாகவும் அவதார புருஷர்களாகவும் தெய்வத்தன்மை பொருந்தியவர்களாகவும் ஏற்பட்டு மக்கள் சமூக நன்மைக்காக என்று எவ்வளவோ காரியங்கள் செய்தாகி விட்டது. இவற்றால் வாழ்வில் மனிதனுக்கு எவ்வித சௌகரியமோ உயர்வோ ஏற்பட்டதாக சொல்வதற்கில்லை. இது மாத்திரமல்லாமல் மனித சமூக நன்மைக்காக, நல்ல வாழ்வுக்காக, முன்னேற்றத்திற்காக என்று எவ்வளவோ மதங்களும் அரசாட்சிகளும் சீர்திருத்தங்களும் தோன்றின. அவைகளும் இன்றை வரை எந்த ஆட்சியிலோ, எந்த மதத்திலோ எந்த சீர்திருத்தத்திலோ ஏதாவது ஒரு காரியம் சாதித்ததாக காணப்படவேயில்லை.

மக்களுக்கு சுக துக்கம் பொது என்றும் ஒருவன் சுகப்படுவதும் ஒருவன் கஷ்டப்படுவதும் இயற்கை என்றும் இவையெல்லாம் கடவுள் செய லென்றும், மாற்றமுடியாதவை என்றும் சொல்லப்பட்டு அந்தப்படியே மக்க ளையும் நம்பச்செய்து சிலர் கஷ்டப்படவும் சிலர் சுகப்படவுமான முறைகள் நிலைநிறுத்தப் பட்டனவே ஒழிய வேறு ஒன்றும் இல்லை.

இன்றைய தினம் இருந்து வரும் எந்த அரசியலை, எந்த மத இயலை, எந்த செல்வ இயலைக் கொண்டும் மேல்கண்ட அக்கிரமங்களை ஒழித்து விடக்கூடும் என்றோ மக்கள் யாவரையும் சமமாக ஆக்கிவிடக்கூடும் என்றோ நினைப்பது முட்டாள் தனமேயாகும், ஆதலால் ஏதாவதொரு புதிய முறையைக் கொண்டுதான் ஆகவேண்டும். அதைப்பற்றி பிறத்தியார் என்ன சொல்லுவார்கள் என்கின்ற கவலையை சிறிதும் வைக்கக்கூடாது. அது கிளர்ச்சி என்று சொல்லப்பட்டாலும், புரட்சி என்று சொல்லப்பட்டாலும் நாம் பயப்பட வேண்டியதில்லை. கிளர்ச்சியும் புரட்சியும் உலக இயற்கை, மனித இயற்கை, நடப்பு இயற்கை. கிளர்ச்சியிலும், புரட்சியிலும் பிரிக்க முடியாமல் கலந்து இருக்கிறான் என்பதை ஒவ்வொரு மனிதனின் நடப்பையும், உணர்ச்சியையும் கவனித்துப் பார்த்தால் விளங்கிவிடும் நாம் எவ்வித



RangaRakes tamilnavarasam.com

சுயநலத்தையோ பலாத்காரத்தையோ குறிவைத்து இப்படி பேசவில்லை. ஆனால் மக்கள் படும் கஷ்டத்தைப் பார்த்து சகிக்க முடியாமல் பரிதாபத் தாலேயே தான் இப்படிப் பேசுகிறோம்.

*குறிப்பு: 28.02.1933 இல் விருதுநகர் அம்மன் கோவில் முன்பு சுயமரியாதை சங்க சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை,*

**குடி அரசு - சொற்பொழிவு - 12.03.1933**



# ஈரோடு பெண் பாடசாலையில் பெற்றோர்கள் தினம்

ஈரோடு கவர்ன்மெண்ட் பெண்கள் பாடசாலையின் பெற்றோர்கள் தினவிழாவானது ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் சரஸ்வதி ஹாலில் தோழர் இ,எஸ். கணபதி அய்யரவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது கொண்டாட்டத்திற்கு பெரியவர்களும் குழந்தைகளுமாக சுமார் 1000 பேருக்கு மேலாகவே கூடி இருந்தார்கள், பெண்கள் அதிகமாகக் காணப்பட்டார்கள்.

விழாவானது கும்மி, கோலாட்டம் சிறு விளையாட்டு முதலியவை களுடன் நடந்த தென்றாலும் அவற்றுள் சாவித்திரி சத்தியவான் என்கின்ற ஒரு புராணக்கதையை நாடகரூபமாக நடத்திக் காட்டப்பட்டதானது மிகவும் குறிப்பிடத்தக்கதாய் இருந்தது. நாடக பாத்திரங்கள் எல்லாம் சுமார் 10 வயது முதல் 16 வயதுக்குள்பட்ட அப்பள்ளிக்கூட மாணவப் பெண்களாகவே இருந் தார்கள். நாடகமானது கூடியவரை மிகவும் அருமையாக நடித்துக் காட்டப் பட்டது. இம்மாதிரியாக ஒரு நாடகம் நடித்துக் காட்ட அம்மாணவிகளை தர்ப்பித்து செய்த பெண் பள்ளிக்கூட தலைமை உபாத்தியாயரும், மற்றும் உதவி உபாத்தியாயர்களும் பாராட்டப் படத்தக்கவர்களே ஆவார்கள். மாணவர்களுடைய அறிவும் சுபாவ ஞானமும் சிலாகிக்கத் தக்கவையாகும். ஆனால் ஒரு விஷயம் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அதாவது இவர்கள் நடித்துக் காட்ட எடுத்துக் கொண்ட புராணக்கதையின் முட்டாள் தனத்தையும், மூட நம்பிக்கையையும் குருட்டு பக்தியையும் வெளிப்படுத்தாமலும் அறிவு வளர்ச்சிக்காக படிப்பிக்கப்படும் பெண்களை இவ்விதம் பகுத்தறிவற்ற பிராணி கள் பிராயத்துக்கு ஆளாக்கி வைப்பதைப் பார்த்து வருந்தாமல் இருக்க முடியவில்லை என்பதேயாகும்.

மேற்படி கதையில் ஆரம்ப முதல் கடைசி வரை எந்த இடத்திலாவது பகுத்தறிவுக்கு ஒத்த விஷயம் கடுகளவாவது காணப்படுகின்றதா என்பதை யோசித்தால் இது யாவருக்கும் எளிதில் விளங்கும். கதைச்சுருக்கமாவது:-

"சாவித்திரி என்கின்ற ஒரு பெண் நந்தவனத்தில் விளையாடும் போது சத்தியவான் என்கின்ற ஒரு பையன் வேட்டையாடி நந்தவனத்திற்கு வந்து



RangaRakes tamilnavarasam.com

சேர்ந்து பெண்ணைப்பார்த்து மையல் கொள்ளுவது, பெண்ணும் பையனைப் பார்த்து மையல் கொள்ளுவது, பிறகு இருவருக்கும் கல்யாண ஏற்பாடு நடை பெறுவது, அது சமயம் மணமகன் ஒரு வருஷத்தில் செத்துப்போவான் என்று தெரிவது, தெரிந்தும் பெண் அவனையே மணம் செய்து கொள்ள விரும்புவது, பிறகு மணம் நடந்த பின் ஒரு வருஷத்தில் மணமகன் செத்துப் போவது, பிறகு மணமகள் எமன் பின்னால் எமனை விடாமல் தொடர்ந்து திரிந்து எமனை ஏமாற்றி தன் புருஷனை பிழைக்க வைத்து மகிழுவது" என்பதாகும்.

இதற்கு ஆதாரம் அப்பெண்ணின் கற்பு என்று சொல்லி அதனால் பெண்கள் எல்லோரும் கற்பாயிருக்க வேண்டுமென்ற கருத்தைக் கொண்டு கதையை முடிப்பது.

இக்கதை ஆரம்பமுதல் அந்தம் வரை எந்த இடத்திலாவது பகுத்தறிவுக்கு ஒத்த விஷயம் இருக்கின்றதா? அல்லது இன்றைய அனுபவத் திற்கு ஒத்த விஷயங்கள் இருக்கின்றனவா? என்பதை இதில் யோசிக்கத் தக்கதாகும்.

இக்கதையில் ஜோசியம் பொய்த்துப்போய் விட்டது. எமன் ஏமாற்றப் பட்டுவிட்டான். கற்பு வெற்றி பெற்றது என்கின்ற மூன்று விஷயங்கள் காணப்படுகிறேன். ஜோசியத்தை நாம் நம்புவதில்லை, ஆதலால் ஜோசியம் பொய்த்துப்போவதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை.

எமனையும் நாம் அப்படி ஒன்று இருப்பதாக ஒப்புக்கொள்ளு வதில்லை. ஆதலால் அதைப்பற்றியும், அவனது புத்திசாலித்தனத்தைப் பற்றியும் நாம் கவலைப்படுவதில்லை,

கற்பு என்பதாக ஒன்று இருப்பதாகவும் நாம் கருதவில்லை. ஆதலால் அதைப்பற்றியும் நாம் கவலைப்படவில்லை.

ஆனால் ஒரு விஷயத்தைப்பற்றி மாத்திரம் மக்களுக்கு ஞாபகமூட்ட கடமைப்பட்டுள்ளோம். சாவித்திரி கற்புள்ளவளாயிருந்ததால் தன் புருஷன் இறந்து போனவனை பிழைக்க வைத்தாள் என்று சொல்லி மற்றவர்களையும் கற்பாய் இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகின்ற கதைப்படியே அக் கதையை உண்மை என்றே வைத்துக்கொண்டு பார்ப்போமேயானால் இன்று உலகில் அல்லது இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான விதவைகளில் ஒரு குழந்தை விதவையாவது ஒரு மங்கை விதவையாவது கற்புள்ள விதவை யாயிருந்திருக்கமாட்டார்களா? அல்லது ஒரு விதவையாவது தன் புருஷன் இறந்ததைக் குறித்து விசனப்பட்டுத் தனது கற்பை ஈடுகாட்டி அப்புருஷன் பிழைக்கவேண்டுமென்று வருந்தியிருக்க மாட்டார்களா? அந்தப்படி கற்பாய் இருந்து வருந்தி இருந்தால் இறந்த கணவன்களில் ஒருவராவது பிழைத்து இருக்கமாட்டாரா? என்பவற்றை யோசித்தால் இன்று பெண்களில் சிறப்பா



கவும், குறிப்பாகவும் விதவைகளில் ஒருவர் கூட கற்புள்ள பெண்மணிகள் இல்லையென்றுதானே அர்த்தமாகின்றது. அல்லது ஒருவரும் இம்மாதிரி முயற்சிக்கவில்லை என்றுதானே அர்த்தமாகிறது. இவை ஒருபுறமிருக்க 3, 4, 5, 7, 10 வயதுகளுக்குள்பட்ட குழந்தைகள் கூட விதவைகளாக ஆகிவிடு கின்றனவே அவைகள் கூடவா கற்பில்லாத பெண்மணிகளாயிருக்கும் என்பதை யோசித்தால் அப்பொழுது பெண்கள் கற்பாயிருக்க முடியவே முடியாது என்பதாகத்தானே எண்ண வேண்டி யிருக்கிறது. அல்லது இக்கதை பொய்யும், முட்டாள் தனமும் நிரம்பியது என்றுதானே சொல்லவேண்டும். சாத்தியமேயில்லாத காரியத்தில் – பலனே யில்லாத காரியத்தில் மக்கள் புத்தியை இழுத்துவிடுவதால் லாபமென்ன? என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டியது அறிஞர் கடமையாகும்.

இக்கதையின் சாரமானது கதையிலுள்ள எமன் என்பவன் ஏமாந்து போய் வரம் கொடுத்து முட்டாள்பட்டம் கட்டிக் கொண்டதுபோல் பெண்கள் சமூகமும் ஏமாந்து போய் இம்மாதிரியான கதைகளை நடத்தி நிரபராதிகளான பெண் சமூகத்தை – விதவை சமூகத்தை ஏன் இம்மாதிரி குற்றங்களுக்கு ஆளாக்கவேண்டும் என்று ஒருவர் கேள்பதானால் அதற்கு என்ன பதில் சொல்ல முடியும்?

ஆகையால் இனியாவது அருமையான ஞானமுள்ள இளங் குழந்தை களை மிக்க போதனா சக்தியும் ஊக்கமும் உண்மை உழைப்பில் கவலையும் கொண்ட நமது கவர்ன்மெண்ட் பெண்பாடசாலை உபாத்தியாயர்கள் பகுத்தறி வுக்கு ஒத்ததும் அனுபவத்திற்கு ஏற்றதுமான விஷயங்களில் பாடுபட்டு பிள்ளைகளை முன்னுக்கு கொண்டுவர வேண்டும் என்று ஆசைப்படு கின்றோம்.

பகுத்தறிவிலும் பெண்களது உண்மையான முன்னேற்றத்திலும் கவலை கொண்டவர்கள் இதை எடுத்துக்காட்டாமல் இருக்க முடியாது.

**குடி அரசு – கட்டுரை – 12.03.1933**



RangaRakes tamilnavarasam.com

# ஸ்தல ஸ்தாபன சுயாக்ஷிகளின் மோசம்

I

இன்று இந்தியாவில் சுய ஆட்சியின் பேரால் நடைபெறும் அக்கிரமங்கள் - அயோக்கியத்தனங்கள் - ஒழுக்க ஈனங்கள் - நாணையக் குறைவுகள் ஆகியவைகளில் எல்லாம் தலைசிறந்து விளங்குவது ஸ்தல சுயாட்சியென்று சொல்லப்படும் ஸ்தல ஸ்தாபன நிர்வாகங்களேயாகும் என்று வெற்றி முரசுடன் கூறலாம்.

நம்நாட்டு ஸ்தல ஸ்தாபன உலகத்தை எடுத்துக்கொண்டோமே யானால் அதன் தலைப்பு முதல் கடைசி வரையில் உள்ள ஒவ்வொரு நிலைமையும் தீவத்திக்கொள்ளை போலவே நடந்து வருகின்றனவே அல்லாமல் மற்றபடி அவை யாருக்காக - யாது காரணத்திற்காக ஏற்பட்டதோ அந்த தத்துவம் சிறிதும் இல்லாததை ஸ்தல ஸ்தாபன வாழ்வில் கலந்துள்ள அனுபவமுள்ள எவரும் சுலபத்தில் அறியலாம்.

மற்றும் இந்தியாவுக்காக கேட்கப்படும் சுயாட்சியும் இந்தியாவுக்காக அளிக்கப்படும் சுயாட்சியும் ஏழை மக்களையும், பாமர மக்களையும் ஏமாற்றி வதைத்து பணக்காரரும், சோம்பேரிகளும், காலிகளும் வாழ்வதற்கும் கொள்ளை அடிப்பதற்கும் ஏற்றதே ஒழிய வேறில்லை என்பதும் நன்றாய் விளங்கும்.

இன்றைய ஸ்தல சுயாட்சியின் தன்மைகளை ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் ஒருவன் எப்படிப் பட்டவனானாலும் அவன் பணம் செலவு செய்தால் - காலிகளைக் கைவசப்படுத்தி காலித்தனம் செய்தால் யாரும் எப்படிப்பட்டவர்களும் ஸ்தல ஸ்தாபனங்கள் கைவசப்படுத்திக் கொண்டு, தான் செலவிட்ட பணத்தையும் வட்டியுடன் எடுத்துக்கொண்டு தனக்கு உதவி செய்த காலிகளுக்கும் தாராளமாக அனுகூலம் செய்து விட்டு மேல் கொண்டும் புதையல் எடுப்பது போல் பணமும் செல்வாக்கும் சம்பாதித்துக் கொள்ளு வதற்கு ஏற்ற ஆட்சி அல்லது ஸ்தாபனம் என்று தான் சொல்ல வேண்டும்.



ஸ்தல சுயாட்சியின் நிர்வாகம் என்பதற்கு கொள்ளை அல்லது காலித்தனம் என்றுதான் இனி பதிப்பிக்கப்படும் அகராதியில் அருத்தம் எழுத வேண்டியதுமாகும்,

நிற்க, அரசாங்கத்தாரே இந்த இலாக்கா முழுவதையும் தங்கள் கையில் வைத்தும் ஸ்தல ஸ்தாபனங்கள் முழுவதும் ஜனப்பிரதிநிதிகள் என்பவர்களுடைய ஆதிக்கமே இல்லாமல் தாங்களே ஏகபோகமாய் நடத்தி வந்தது மான ஒரு காலத்தை எடுத்துக்கொண்டு அந்தக்கால நிர்வாகத்தையும் இன்றைய நிர்வாகத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்போமே யானால் இனி வரப் போகும் சுயராஜ்ய போக்கு எப்படியிருக்கு மென்பதையும் ஒருவாறு இப்போதே நிர்ணயம் செய்து விடலாம்.

முதலாவது ஒற்றுமையாய் சகோதர பாவமாய், கட்டுப்பாடாயிருக்கின்ற ஒரு ஊருக்குள் ஸ்தல சுயாட்சி என்கின்ற "பிசாசு" போய் புகுந்த மாத்திரத்தில் வேற்றுமை, கட்சிப் பிரதிகட்சி, கலகம், காலித்தனம், அடிதடி, கொலை வரையில் நடைபெற வழி திறக்கப்பட்டுவிடுகின்றது. பிறகு எவ்வளவு யோக்கியனானாலும் அதில் பிரவேசித்தால் அயோக்கியன் ஆய்த் தீரவேண்டிய நிலையை ஏற்பட்டுவிடுகின்றதுடன் அனாவசியமாய் ஒருவருக்கொருவர் வர்மம் ஏற்பட இடமுண்டாகின்றது.

மேல்கண்ட இந்தக் காரியங்கள் எல்லாம் நாணையமாய் நடைபெரும் ஸ்தல ஸ்தாபன சுயாட்சிகளிலேயே காணக் கூடியதாய் இருக்கின்றன என்றால் இனி நாணையக் குறைவாய் நடைபெறும் ஸ்தல ஸ்தாபன சுயாட்சிகள் என்பவைகளில் என்ன நடைபெறும் என்பதை எடுத்துக் காட்ட வேண்டுமா என்று கேள்கிறோம்.

தேர்தல்கள் என்னும் தலைப்பை எடுத்துக் கொண்டால் ஒரு முனிசிபல் ஓட்டருடைய ஓட்டு 100ரூ. வீதமும், ஒரு தாலூகா போர்டு மெம்பருடைய ஓட்டு 5000ரூ. வீதமும், ஒரு ஜில்லா போர்டு மெம்பருடைய ஓட்டு 10000 பத்தாயிரம் ரூபாய் வீதமும் வாங்கி தேர்தல்களில் வெற்றி பெரும் விஷயங்கள் நமக்கே நன்றாய் தெரியும்.

ஒரு முனிசிபல் கவுன்சிலர் எலக்ஷனுக்கு பத்தாயிரம் ரூபாயும், ஒரு தாலூகா போர்டு வைஸ்சேர்மன் எலக்ஷனுக்கு 20000 இருபது ஆயிரம் ரூபாயும், ஒரு ஜில்லாபோர்டு மெம்பர் எலக்ஷனுக்கு இருபது ஆயிரம் 20000 ரூபாயும் ஒரு ஜில்லாபோர்டு பிரசிடெண்ட் எலக்ஷனுக்கு ஒரு லட்சத்தி பதினாலு 114000 ஆயிரம் ரூபாயும், செலவு செய்து வெற்றிபெற்ற தேர்தல்களும் நமக்குத்தெரியும். நமக்குமாத்திரமல்லாமல் சர்க்காருக்கும் இந்த விஷயங்கள் தெரியும் என்று கூடச் சொல்லலாம். சில இடங்களின் தேர்தல்களில் எதிர் அபேட்சகர்கள் கொலை செய்யப்பட்டதும் ஓட்டர்கள் கொலை செய்யப்பட்டதும், கட்சி உதவியாளர் கொலை செய்யப்பட்டதும்



RangaRakes tamilnavarasam.com

நமக்குத் தெரியும். தேர்தலில் நின்று விட்டால் அபேட்சகர்கள் எதிர் அபேட்சகர்களுக்கு பயந்து ரிவால்வரும் கையுமாய் தூக்கமில்லாமல் திரிவதும் நமக்குத்தெரியும்.

தேர்தல் தலைப்பை விட்டுவிட்டு தேர்தல் முடிவு தலைப்பை எடுத்துக் கொண்டால் அது ஒரு பெரிய அத்தியாயமாகவே காணப்படும். எலக்ஷன் முடிவைப்பற்றிய விவகாரங்கள் பத்து பன்னிரண்டு வருஷத்துக்கு முன்பு கலக்டர்களுக்கு இருந்தபோது அவை ஒழுங்காய் நடைபெறவில்லை என்று புகார்கள் ஏற்பட்டு கோர்ட்டுகளின் அதிகாரத்துக்கு விட்டதில் அது வக்கீல்களுக்கு ஒரு புதிய லாபமாய் ஏற்பட்டதோடு கட்சிக்காரர்களுக்கு 15 நாளில் முடிவு பெறும் விஷயம் மூன்று வருஷம் இழுக்கப்பட்டு முன்னிலும் அதிகமான கஷ்டமும் செலவும் ஏற்பட்டதல்லாமல் ஒரு வழியிலாவது அனுகூலம் ஏற்பட்டதென்று சொல்லுவதற்கில்லாமல் போய்விட்டது. எலக்ஷன்கள், ஸ்தல ஸ்தாபன தலைவர்கள் நடத்துவதில் ஏற்பட்ட அக்கிரமங்களை தடுப்பதற்காக எலக்ஷன் நடத்தும் வேலைகளை தனி அதிகாரிகளிடமும் ரிவினியு அதிகாரிகளிடமும் விட்ட பிறகு அவர்களுக்கு இது ஒரு புதிய வரும்படிக்கு இடமாக ஏற்பட்டதே ஒழிய அது சம்பந்தமான குற்றங்கள் குறைந்ததாக சொல்லுவதற்கில்லை. ஏனெனில் கணக்கு வழக்கில்லாத எலக்ஷன் தகராறு விவகாரங்கள் கோர்ட்டுகளில் நடந்தவண்ணமாகவே இருக்கின்றன. கோர்ட்டு முடிவுகளோ பெரும்பாலும் பிராதுக்காரனுக்கு பயன்படாமல் அபேட்சகரின் உத்தேசம் நிறைவேராமல் போனபின்பே முடிவு செய்யப் படுகின்றன.

வியாபார முறையிலும், அதிகார தாட்சண்ணிய முறையிலுமே ஓட்டுகள் உபயோகப்படுத்த சௌகரியமேற்பட்டு விட்டபடியால் ஓட்டுகள் வெளிப் படையாகவே பதிவாகவும், எலக்ஷன் ஸ்தலத்திலேயே ரொக்கவிலைக்கே விற்கவுமான அவசியமும், சௌகரியமும் ஏற்பட்டுவிட்டது.

இனி நிர்வாக முறையை எடுத்துக்கொண்டோமேயானால் அது இவை எதற்கும் இளைத்ததல்ல என்றுதான் சொல்லவேண்டும். நிர்வாகங்கள் பெரிதும் ஸ்தல ஸ்தாபன தலைவர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும் சொந்த குடும்பச் சொத்துக்கள் போலவே பாவிக்கப்பட்டு சகோதரர்கள் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வது போலவே அதன் சொத்துக்களை பங்கிட்டுக்கொள்வது வெளிப்படையான-எல்லோராலும் ஒப்புக்கொள்ளத் தக்கதான காரியமாய் இருந்து வருகின்றது. ஏனெனில் அந்த ஸ்தானங்களை அடைய அவரவர்கள் பட்ட பாடுகளையும், பணங்கள் செலவழித்ததையும் தெரிந்தவர்களுக்கு இது சரியென்றே தோன்றிவிடுகிறது. ஓட்டர்களும் இந்தமாதிரியான காரியங் களைப்பற்றி குற்றம் சொல்லவோ, நினைக்கவோ அருகதையற்றவர் களாகவே இருக்கிறார்கள். ஏனெனில் ஒருவன் முனிசிபாலிடியில் 10 அணா கொடுத்து தன்னை ஒரு ஓட்டராக பதிவு செய்து கொண்டால் 2-ரூபாய் முதல்



5-ரூபாய் 10-ரூபாய் வீதம் பணம் வாங்கிக்கொண்டு ஓட்டு போடலாம் என்கின்ற தைரியம் ஒவ்வொரு ஓட்டருக்கும் ஏற்பட்டு விட்டது. 500, 1000, 2000ரூ. செலவுசெய்து கௌன்சிலராகவோ, மெம்பராகவோ ஆகிவிட்டால் சேர்மென், பிரசிடெண்ட் எலக்ஷன்களில் ஓட்டு செய்வதில் அசலுக்கு மேல் 500, 1000 லாபம் சம்பாதித்துவிடலாம் என்கின்ற தைரியம் ஏற்பட்டு விட்டது. இது மாத்திரமல்லாமல் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு உத்தியோகம் சம்பாதித்துகொடுக்கலாம் என்றும் கன்றாக்ட்டுகள் எடுத்து லாபம் சம்பாதித் துக் கொள்ளலாம் என்றும் ஆசை ஏற்பட்டு விடுகின்றது.

சில போர்டுகளிலும், கௌன்சில்களிலும் பகுதி கன்றாக்ட்டு தலைவருக் கும், பகுதியில் மூன்றில் ஒருபாகம் வைஸ்பிரசிடெண்டுக்கும், மீதி மூன்றில் இரண்டு பாகம் மெம்பர், கௌன்சிலர்களுக்கும் என்று பங்குபிரித்துக் கொள்ளப்படுகின்றது.

சில போர்டுகளில் மோட்டார் பஸ் போக்குவரத்து பூராவும் பிரசிடெண் டுக்கும், கன்றாக்டுகள் முழுவதும், வைஸ் பிரசிடெண்டுக்கும் மெம்பர் களுக்கும் என்று பாகம் பிரித்துக்கொள்ளப்படுகின்றது.

இவ்வளவும் தவிர பொய் கணக்கு, பொய் பில், சாமான்களில் கமிஷன் முதலியவைகளிலும் ஏராளமாகக்கொள்ளை அடிக்கப்படுகின்றன.

இவை ஒருபுறமிருக்க நிர்வாகச் செலவுகள் என்பதில் தலைவர் களுக்கும், அங்கத்தினர்களுக்கும் சிறிதும் பொறுப்பு கிடையாது. சிப்பந்திகளுக்கு கொடுக்கப்படும் சம்பளமோ, "குருட்டுக் கோமுட்டிக்கடையில் அள்ளாதவன் பாவி" என்றொரு பழமொழி உண்டு. அதுபோல் உலகத்தில் உபயோகமற்ற பிராணிகளுக்கும் வேறு எந்த வழியிலும் பிழைக்க முடியா ஜீவன்களுக்கும் முனிசிபாலிட்டியும், தாலூக்கா ஜில்லா போர்டுகளும் தான தர்ம சத்திரங்கள் போலும் பஞ்சராப்போல் போலும் இருந்து வரு கின்றன. பி.ஏ., எம்,ஏ., படித்து பாஸ் செய்து விட்டு 25ரூ. சம்பளத்துக்கு ஆயிரக் கணக்கான மக்கள் திண்டாடுகின்ற இந்தக்காலத்தில் எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு மாதம் 10 ரூபாய் சம்பளத்துக்கு திண்டாடுகின்ற இந்தக் காலத்தில் ரூபாய் ஒன்றுக்கு பட்டணம் படியால் 8 படி அரிசி விற்கின்ற இத்தக்காலத்தில் ஸ்தல ஸ்தாபனங்களிலுள்ள சம்பளக்கொள்ளைகள் நினைத்தால் உண்மையான உள்ளமுள்ளவர்களுக்கு நெஞ்சம் பதராமல் இருக்கவே முடியாது. இதைப்பற்றி மற்றொரு சமயம் குறிப்பிடுவோம்.

சம்பளக்கொள்ளை ஒரு புறமிருக்க ஸ்தல ஸ்தாபன தலைவர்களுக்கு வேண்டியவர்களுக்கும் அங்கத்தினர்களுக்கு வேண்டியவர்களுக்கும் தங்கள் தேர்தல்களில் உதவி செய்தவர்களுக்கும் அவர்களுக்கு வேண்டிய வர்களுக்கும் உத்தியோகங்கள் கொடுக்கப்பட வேண்டுமே என்பதற்காக பழைய உத்தியோகஸ்தர்களை வெளியே அனுப்புவதும் புதிய புதிய



RangaRakes tamilnavarasam.com

உத்தியோகங்களை அனாவசியமாய் உற்பத்தி செய்வதும் அவர்களுக்கு அளவுக்கும் தகுதிக்கும் மீறின சம்பளங்களை ஏற்படுத்திக் கொடுத்து வருவது மான அக்கிரமமும் கொள்ளையும் இன்று எந்த ஸ்தல ஸ்தாபனத்திலாவது இல்லை என்று சொல்லமுடியாது.

ஆகவே இன்றைய ஸ்தல ஸ்தாபனங்களில் எந்தவிதமான கொள்ளை, நாணையக்குறைவு, அயோக்கியத்தனம் பொறுப்பற்ற தன்மை முதலிய கொடுமைகள் இல்லை என்று சொல்லக்கூடுமா?

இந்தக் காரணங்களாலேயே ஸ்தல ஸ்தாபனங்களுக்கு புதிய புதிய உரிமைகள் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படுவது ஒருபுறமிருந்தாலும் ஸ்தல ஸ்தாபனத் தலைவருக்கும் அங்கத்தினர்களுக்கும் இருந்த அதிகாரங் கள் இந்த 15 வருஷ காலமாக சிறிது சிறிதாக பறிமுதல் செய்து கொண்டே வரப்படுகிறது என்பதையும் அந்தப்படி இன்னும் பறிமுதல் செய்யவே பொது ஜனங்கள் விரும்புகின்றார்கள் என்பதையும் யாவரும் மறுக்க முடியாது, இப்பொழுது சமீபத்தில் சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட ஜில்லா முனிசிபாலிட்டி திருத்த சட்டப்படி முனிசிபாலிட்டிகளுக்கு ஸ்பெஷல் ஆபீசர் அல்லது நிர்வாக உத்தியோகஸ்தர்களை நியமித்து அவர் வசம் சிப்பந்திகள் நியமனம் கன்றாக்ட்டு வினியோகம் முதலிய நிர்வாக காரியங் களை ஒப்புவித்து விடுவது என்பதாக ஏற்பாடாயிருக்கின்றது. அந்த ஏற் பாட்டை ஒரு முனிசிபாலிட்டி கூட பாக்கியில்லாமல் சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு விடுமானால் ஒரு அளவுக்கு முனிசிபல் நிருவாகம் யோக்கியமுடையதாகலாம் என்பதே நமதபிப்பிராயம். சில முனிசிபாலிட்டி யின் தலைவர்களும் அங்கத்தினர்களும் பணம் காசு விஷயத்தில் நாணைய மாயிருக்கலாம் என்றாலும் அவர்களும் உத்தியோக வினியோகம், கன் றாக்ட்டு வினியோகம் ஆகிய காரியங்களில் சொந்தத்தில் பயனடையா விட்டாலும் முனிசிபாலிடிக்கு நஷ்டமில்லாமல் செய்ய முடிகின்றதா என்பதும் இதன் பயனாய் அங்கத்தினர்களுக்கும் தலைவர்களுக்கும் அபிப்பிராய பேதமோ அதிருப்தியோ கட்சியோ ஏற்படுவதற்கு இட மில்லாமல் இருக்கின்றதா என்பது சந்தேகமேயாகும்.

ஆதலால் நல்ல நிர்வாகம் என்று வெகு ஜனங்களாலும் சர்க்காராலும் பெயர் வாங்கினதும் தலைவர்கள் அங்கத்தினர்கள் ஆகியவர்களின் மீது நாணைய விஷயத்தில் சிறிதும் சந்தேகப்படுவதற்கு இடமில்லாமலிருக் கிறதென்று சொல்லிக்கொள்ளப்படுவதுமான ஈரோடு, கோயமுத்தூர் முதலிய முனிசிபாலிடிகளுக்கு அந்த முனிசிபாலிடியின் வேண்டுகோளின் மீதே ஸ்பெஷல் ஆபீசர் அல்லது எக்சி கூட்டிவ் ஆபீசர் என்பவர் நியமிக்கப்படு மானால் அது மற்ற முனிசிபாலிடிகளுக்கு வழிகாட்டியாக இருக்க முடியும் என்பதோடு ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் ஒரு அளவுக்காவது யோக்கிய முடையதாகச் செய்ய கூடியதாகவும் இருக்கும்.



இனி இதுபோலவே லோகல் போர்டு, ஜில்லா போர்டுகளுக்கும் இம்மாதிரியாக ஸ்பெஷல் ஆபீசர் நியமிக்க சென்னை ஸ்தல ஸ்தாபன மந்திரி உடனே ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கோறுகிறோம்.

ஏனெனில் 10 முனிசிபாலிடிகளில் நடக்கும் அக்கிரமங்களும், நஷ்டங் களும், மற்ற ஒழுக்கமற்ற காரியங்களும் ஒரு ஜில்லா போர்டில் நடப்பதற்கு சமானமாகும்படி ஜில்லா போர்டுகளில் அவ்வளவு பெரிது கைகள் கையாளப் படுகின்றன. முனிசிபாலிட்டியில் ஆயிரக்கணக்காக பணங்கள் கொள்ளை போகும் என்றால் ஜில்லா போர்டில் பதினாயிரக் கணக்காக லக்ஷக்கணக்காக கொள்ளை போக இடமிருக்கிறது. சிலதுகளில் போய்க் கொண்டு இருக் கின்றன.

இன்றைய ஜில்லாபோர்டு தலைமை ஸ்தானங்களும், அங்கத்தினர்கள் ஸ்தானங்களும் 100-க்கு 90-ஸ்தானங்கள் ராஜாக்கள், ஜமீன்தார்கள், பெரிய பெரிய நிலச்சுவான்தாரர்கள் பெருத்த வியாபாரிகள் என்று சொல்லத் தகுந்த வன்னெஞ்சக் கொடுமையாளர்கள் கொள்ளைக்கூட்டத் தலைவர்கள் என்கின்றவர்கள் கையிலேயே சிக்குண்டு கிடக்கின்றன. அவர்கள் அந்த ஸ்தானங்களை அடைய நாம் முன்கூறியபடி 10000, 20000, 50000, 100000 ரூபாய்கள் வீதம் செலவு செய்து அடைந்திருக்கிறார்கள். அந்த செலவை வட்டியுடன் அடைய எதிர்பார்க்காதவர்கள் மிகச்சிலர் தான் இருக்க முடியும். இவர்கள் இப்படிக்கொள்ளை அடிக்க ஆரம்பித்து மற்றும் மேற்சொல்லப் பட்ட காரியங்களும் நடைபெறுமானால் கஷ்டப்பட்டு பாடுபடும் பொது மக்களுக்குத் தான் நஷ்டமும், கஷ்டமும் வசதிக் குறைவும் ஏற்படும். ஆதலால் இன்றைய அரசாங்கம் உண்மையாகவே பொது ஜனங்களுடைய பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்று சொல்லிக்கொள்ள ஆசையிருக்குமானால் அது உடனே இந்தக்காரியத்தை அதாவது எல்லா முனிசிபாலிட்டிகளுக்கும் எல்லா தாலூகா ஜில்லாபோர்டுகளுக்கும் ஒரு நிர்வாக அதிகாரியை நியமிக்க ஏற்பாடு செய்து அந்தப்படி நியமித்துவிட்டு வேறுகாரியம் பார்க்கவேண்டு மென்று விரும்புகின்றோம். மற்றபடி மாதிரிகளைப்பற்றியும் சட்டசபை அங்கத்தினர்களைப்பற்றியும் அந்த நிர்வாகம் தேர்தல் ஆகியவைகளைப் பற்றியும் மற்றொரு சமயம் எழுதுவோம்.

**குடி அரசு – தலையங்கம் – 12.03.1933**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனர்களின் தேசியம்

**– சித்திரபுத்திரன்**

பார்ப்பனர்கள் என்ன நோக்கத்துடன் தேசியம் தேசியம் என்று கூப்பாடு போடுகிறார்கள் என்பதைப் பற்றி பல தடவைகளில் நாம் வெளியிட்டிருக்கிறேன். தேசியம் என்ற சூழ்ச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டதற்கு காரணமே பார்ப்பனீயமான சனாதன தர்மங்களை பலப்படுத்தவே ஒழிய வேறில்லை. தேசியம் என்கின்ற வார்த்தைக்கு அநேகமாய் மக்கள் மனதில் இத்தேசத்திய பழைய நாகரீகம் சனாதனதர்மம் பழக்க வழக்கம் என்பவை களையே பிரதானமாகக் கொள்ளும்படி பிரசாரம் செய்து வந்ததும் அதற்காக இந்தியபுராண இதிகாசங்களை ஆதாரமாக எடுத்துக் காட்டி பிரசாரம் செய்து வந்ததும் வாசகர்கள் அறிந்ததே. இக்கருத்தைக் கொண்டேதான் கராச்சி காங்கிரஸ் சுயராஜ்ய திட்டம் ஏற்பாடு செய்திருக்கிறது. மற்றும் இந்திய நாட்டை "பாரத மாதா" (பூமிதேவி) என்று அழைப்பதும் "பாரததேசம்" என்று சொல்லு வதும் எல்லாம் இக்கருத்தை ஆதாரமாய்க்கொண்டதே ஒழிய வேறில்லை. தேசீயம் என்பதற்கு அரசியலை சம்பந்தப்படுத்திய கருத்தும் இந்தியாவின் பழைய நாகரீகத்திற்கும், பழக்க வழக்கத்திற்கும், சனாதன தர்மத்திற்கும் ஏற்ற அரசியலை ஸ்தாபிக்கச் செய்த சூழ்ச்சியே தவிர வேறல்ல.

இன்றுகூட ஆங்கில ஆட்சியானது சனாதன தர்மப்படி–மனுதர்மப்படி ஆட்சி நடத்தப்படுவதாய் இருந்தால் இன்றைய தேசீயமும் சட்டமறுப்பும், ஒத்துழையாமையும் எல்லாம் பறந்தோடிப்போகும்.

இந்தக் காரணத்தினாலேயேதான் தோழர் காந்தியும், மகாத்மா வாக்கப்பட்டார். ஆனால் இதுசமயம் காந்தியின் செல்வாக்கு வேறுவழியில் ஒரு அளவு குறைந்துபோன காரணத்தினால் அதை புதுப்பிக்கவும் காந்தியின் பிரயத்தினமோ, தயவோ சிறிதும் இல்லால் தீண்டாமை விலக்கும், ஆலயப் பிரவேசமும் கிளர்ச்சி பெற்றதன் காரணமாய் காந்தியார் இதில் பங்குபெற கருதி வலிய வந்து கலந்துகொள்ளவேண்டியேற்பட்டதாலும் "தேசீயவாதி" களான பார்ப்பனர்களுக்கு இப்போது சிறிதுகஷ்டம் ஏற்பட்டுவிட்டது. சென்னை தேசீய பார்ப்பனர்கள் இருக்குமிடம் தெரியவில்லை. தோழர்கள் சத்தியமூர்த்தி, ஏ.ரங்கசாமி அய்யங்கார், கே. பாஷ்யம் மற்றும் எத்தனையோ சென்னை பார்ப்பனர்களுடைய பேச்சையும், மூச்சையும் காணோம். தோழர் சத்தியமூர்த்தியின் விலாசமே கண்டுபிடிப்பது கஷ்டமாய் இருக்கிறது. அவருடைய முழுசேவையும் தோழர் ராஜா சர். அண்ணாமலையின் குடும்பத்தாருக்கு கண்ராக்ட்டாய் (சோல் ஏஜன்ஸி) விட்டுவிட்டார். அவரைப் பற்றி கவிபாடவும் அவர் கோரும் பொது வாழ்வு காரியங்களை காங்கிரஸ் பிரதிநிதியாய் இருந்து நிறைவேற்றிக்கொடுக்க முன்னோடும் பிள்ளையாய் இருப்பதுமே அவருடைய சுயராஜ்ய தபசாயும், அவரது பிறப்புரிமையாயும் ஆகிவிட்டது. ஆனால் தோழர் ராஜா சர். அண்ணாமலை கொடுக்கும் பணங்கள் எல்லாம் சத்தியமூர்த்திக்கே சேர்ந்தது. தோழர் ஏ. ரங்கசாமி அய்யங்காரோ சங்கராச்சாரி கூட்டத்தினர்களை ஆதரித்து அவர்களை மேன்மைப்படுத்துவதன் மூலமும் மற்றும் சில பணக்காரர்களை விளம்பரப் படுத்துவதன் மூலமும் பெருமையும், பணம் சம்பாதிப்பதே அவருடைய காங்கிரஸ் பிரசாரமாகவும், தேசீய பிரசாரமாகவும் ஆகிவிட்டது. தோழர் கே. பாஷியம் அடுத்த சட்டசபை தேர்தல் வரை தலை நீட்டமாட்டார். குட்டி தேசீய வாதிகளான ஒரு கூட்டம் அதாவது, தோழர் எம்.எஸ். சுப்பிரமணிய அய்யர் போன்றவர்கள் மேல் குறிப்பிட்ட தேசியவாதிகளின் உத்திரவுக்கு இணங்க காந்தியின் செல்வாக்கை குறைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்கு உதாரணம் 7-3-33 ந் தேதி "தமிழ் நாட்டில் பிரசுரித்து இருக்கும் தோழர் எம்.எஸ், சுப்பிரமணிய அய்யர் பிரசங்கத்தைப்படித்துப் பார்த்தால் தெரியவரும். இந்த அவசரத்தில் தோழர் ராஜகோபாலாச்சாரி, டாக்டர் ராஜன் கூட்டத்தை நான் மறந்து விட்டதாக சிலர் சொல்லக்கூடும். ஒரு நாளும் மறக்கவில்லை. முன் கூறிய கூட்டமும் இந்தக் கூட்டமும் சகோதரர்களே ஆவார்கள். முன் கூறிய கூட்டம் வாதிக்கு வக்கீலாக இருந்து கொள்ளை அடித்தால் பின் கூறிய கூட்டம் பிரதிவாதிக்கு வக்கீலாய் இருந்து கொள்ளை அடிப்பவர்களாவார்கள். வரும்படியை சமமாக பங்கிட்டுக் கொள்ளுவார்கள்.

தோழர்கள் ராஜகோபாலாச்சாரியாரும், ராஜனும் எந்த அளவில் சீர்திருத்தக்காரர்கள் என்பதை கவனித்தால் யாவருக்கும் சுலபத்தில் உண்மை விளங்கிவிடும். ராஜகோபாலாச்சாரியும், ராஜனும் அவர்களது ஜாதி உயர் வுக்கு உரிய ஏதாவது ஒரு சின்னத்தை விட்டு இருக்கிறார்களா? என்பதைக் கவனித்துப்பாருங்கள்.

1, உச்சிக்குடிமை,

2. வடகலை, தென்கலை பிரிவுப்படி நாமம்,

3. பூணூல்,

4. பஞ்சகச்சம்,

5, சந்தியா வந்தனம்,

6. நன்மை தீமைகளில் பார்ப்பனர்க்குரிய சடங்குகள்





RangaRakes tamilnavarasam.com

முதலிய காரியங்களை எவ்வளவு ஜாக்கிரதையாய் அனுஷ்டிக் கிறார்கள் என்பதும் இவர்கள் பிரசங்கங்களில் பாரதம், ராமாயணம், நாலாயிரப் பிரபந்தம், முதலிய வைணவ மத சாஸ்திர பிரசாரங்கள் எவ்வளவு நடைபெறு கின்றன என்படதும் கவனித்துப்பார்த்தால் சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார் கோஷ்டிப் பிரசாரத்துக்கு ராஜகோபாலாச்சாரி, ராஜன் கோஷ்டி பிரசாரம் ஏதாவது கடுகளவாவது இளைத்ததா என்பது விளங்கும்.

நம் தென்னாட்டில் இன்றைய பொது வாழ்வில் முன்னுக்கு வர வேண்டும் என்கின்ற ஒருவனுக்கோ அல்லது விளம்பரம் பெறவேண்டும் என்கின்ற ஒருவனுக்கோ அல்லது அதிகாரம், பதவி, சட்டசபை, ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கத்தினர் முதலியவை பெறவேண்டும் என்பவர் களுக்கோ அவர்கள் பார்ப்பனராயிருந்தாலும், முஸ்லீம்களாய் இருந்தாலும் கிறிஸ்தவர்களாய் இருந்தாலும், பார்ப்பனரல்லாதார்களாய் இருந்தாலும், ராஜா சர்களாய் இருந்தாலும், ஜமீன்தாரர்களாய் இருந்தாலும் பெரும்பணம் பூமி படைத்த செல்வவான்களாய் இருந்தாலும், இந்த இரண்டு கூட்டத்தில் ஏதாவதொரு கூட்டத்திற்கு அடிமையானாலொழிய அல்லது வாய்பூசினா லொழிய வேறு மார்க்கமில்லாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட இவர்கள் சங்கதியே இப்படியானால் மற்றபடி வயிற்றுச்சோத்துக்கு வேறுவழி யில்லாமல் எப்படி நடந்தாவது வயிறு வளர்க்கலாம் என்ற சில தேசபக்தர் களைப்பற்றி நான் சொல்ல வேண்டுமா? என்று கேள்கின்றேன். ஆகவே இன்றைய நிலைமையைப் பார்த்தால் பார்ப்பனர்களின் தேசியம் ஓரளவுக்கு வெற்றிபெற்று வருகின்றது என்று தான் சொல்லவேண்டும். காரணம் என்ன வென்றால் பார்ப்பனரல்லாத மக்களுக்குள் தலைவர்கள் என்பவர்கள் முதல் வாலர்கள் என்கின்ற வரை சுயமரியாதையில் போதிய கவலை இல்லாமல் எப்படியாவது அவரவர்கள் தனித்த முறையில் வாழ்ந்தால் போதும் என்கின்ற சுய நலத்தன்மையானது அவர்களை மறுபடியும் கீழ் நிலைக்கு கொண்டு வரும்படி செய்கின்றது. இதற்கு நான் என்ன செய்ய முடியும்? இந்தக் காரணங்களால்தான் பார்ப்பான் ஜாதி திமிரும் பார்ப்பனரல்லாதவர்களில் உள்ள பணத்திமிரும் மொத்தத்தால் உள்ள படிப்புத்திமிரும், உத்தியோக அதிகாரத்திமிரும் எல்லாம் ஒருங்கே அழியவேண்டும் என்று சுயமரியாதை இயக்கம் சொல்லுகின்றதுபோல் தோன்றுகிறது.

**குடி அரசு - கட்டுரை - 19.03.1933**



# இராணுவம்

இந்திய சட்டசபை வரவு செலவு திட்டத்தின் விவாதத்தின் போது ராணுவ சம்மந்தமாய் பேசிய பல இந்திய பிரதிநிதிகள் என்னும் கனவான்கள் ராணுவத்தை இந்திய மயமாக்கவேண்டும் என்றும் இந்தியர்களையே ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் வாதம் செய்திருக் கிறார்கள்.

ஒவ்வொரு தேச மக்களையும் அடிமைகளாக்கி அத்தேச சரீர உழைப்பாளிகளினுடைய உழைப்பின் பயன்களை யெல்லாம் சோம்பேரி களும், சூட்சிக்காரர்களும் அனுபவித்துக் கொண்டிருப்பதற்கும், மனிதர் களுக்கு சுயமரியாதை உணர்ச்சியில்லாமல் மதம், கடவுள், அரசன் என்னும் பெயர்களால் வேதம், விதி சட்டம் என்பவைகளுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதற்குக் காரணமாயிருப்பது இந்த ராணுவ ஸ்தாபனமேயாகும். எப்படி யெனில் கடவுள் கட்டளையால் ஏற்பட்ட வேதத்தின் கொள்கையை அனுசரித் துச் செய்யப்பட்ட சட்டத்தை நிர்வகித்து வரும் அரச ஆட்சிக்கு எதிராக ஏற்படும் கிளர்ச்சிகளையும், சாதனங்களையும் அடக்கி, ஒடுக்கி அழிக்கவே ராணுவம் என்பது வெகு காலமாக இருந்து வருகின்றது.

இந்த ராணுவத்திற்கு ஏற்படும் செலவுகள் அவ்வளவும் சரீரத்தால் பாடுபட்டுழைக்கும் மக்களின் உழைப்பின் பயனிலிருந்தே கொடுக்கப்படு கின்றன. (எப்படியெனில் ஒரு நாட்டிற்கு உழைப்பாளியின் உழைப்பின் பயனாய் அல்லாமல் வேறு வழியில் செல்வமேயில்லை.)

ராணுவச் செலவு மாத்திரமல்லாமல் ராணுவத்திற்காக சேர்க்கப்படும் மக்களும், உழைப்பாளிகளுடைய மக்களும், சகோதரர்களுமே யாவார்கள்,

ஆகவே இதனால் ராணுவச் செலவும் உழைப்பாளிகளுடையது என்பதும், ராணுவ மக்களும் உழைப்பாளிகளின் சகோதரர்கள் என்பதும் தெளிவாய் விளங்குவதோடு எதற்காக இந்த ராணுவம் என்று யோசித்தால் மேற்கண்ட உழைப்பாளிகளாகிய தொழிலாள மக்கள் தாங்கள் உழைத்துப் பாடுபட்ட தொழிலின் பயனை அவ்வுழைப்பாளிகள் அடையமுடியாமல் அவர்கள் என்றென்றும் உழைப்பாளிகளாகவே இருந்து உழைத்துக்



RangaRakes
tamilnavarasam.com

கொண்டே வருவதற்காக அவர்களை அடக்கி வைத்திருக்கும் காரியத்திற்கே பயன் படுத்துவதாகும் என்பதும் விளங்குகின்றது.

எப்படியென்றால் ராணுவம் என்கின்ற பெயரால் ஒரு கூட்ட மக்களை துப்பாக்கி, பீரங்கியுடன் வைத்திருக்காவிட்டால் உழைப்பாளியின் பயனை நோகாமல் அனுபவித்துக் கொண்டிருக்கும் சோம்பேரிக் கூட்டமும், பணக்கார முதலாளி கூட்டமும், இவ்விரண்டு கூட்டத்தாலும் ஏற்படுத்தப்பட்டு ஆதரித்துக் காப்பாற்றிவரும் அரசாங்கமும் அரை நிமிட நேரமும் உலகிலிருக்க இடமேயில்லை.

இதிலிருந்து ஒரு ராணுவ வீரன் என்பவன் எப்படிப் பட்டவன்? ஒரு தொழிலாளி என்பவன் யார்? என்று பார்த்தால் ஒரு தாய் வயிற்றில் பிறந்த இரண்டு சகோதரர்களில் ஒருவன் பாடுபடவும் மற்றொருவன் அப்பாட்டின் பயனை அப்பாட்டாளி அடையாமல் பாடுபடாத சோம்பேரி அடைய உதவியாளனாயிருக்கவுமான வேலைகளுக்கமருகிறவர்கள் என்பது விளங்கும்.

ஆகவே ஒரு பாட்டாளி-ஒரு தொழிலாளி அவனது உழைப்பின் பயனை அவனே அடையவேண்டுமானால் அவனது சகோதரனே ராணுவ வீரனாய் வந்துசுட்டுக் கொல்லும் கொடுமையை நிறுத்தினால் ஒழிய முடியவே முடியாது என்பதை உணர்ந்த எந்த உழைப்பாளியும் தன் சகோதரன் ராணுவத்துக்கு போவதற்கு சம்மதிக்கவேமாட்டான். அரசாங்கம் என்பதின் ரகசியமே இதில்தான் இருக்கின்றது.

எனவே இன்று ஒரு உழைப்பாளியின் உழைப்பானது உழைப்பாளியைப் பட்டினி போடுவது மாத்திரமல்லாமல் அவனையே சுடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் சமீபத்தில் இரண்டு வருஷ காலமாய் நடந்த உப்பு சத்தியாக்கிரகம் - சட்டமறுப்பு ஆகிய கிளர்ச்சிகளில் தடி-அடிபட்டவர்களும், தடியால் அடித்தவர்களும் யார் என்று பார்த்தோமானால் இருவரும் சகோதரர்களே ஆவார்கள். ஆனால் அடித்தவர்களுக்கு எஜமானன் அரசாங்கம் அடிபட்டவனுக்கு எஜமானன் முதலாளியும் சோம்பேரியான பார்ப்பானும் ஆவார்கள். இருவர் போட்டியின் பயனாய் இரு கூட்டத்திற்கும் ஆளுகளாய் இரு சகோதரர்கள் அடிபட்டார்கள் என்பது தான் உண்மையான முடிவு. இதுபோலவே தான் ஒரு தேசத்துக்கும், மற்றொரு தேசத்துக்கும் சண்டைவந்தால் இருதேச சகோதரர்களும் இருதேச முதலாளிகளுக்காக, அரசர்களுக்காக ஒருவரை ஒருவர் சுட்டுக்கொன்று கொள்ளுகிறார்கள். இரு சகோதரர்களுக்கும் போதை உண்டாகும்படி தேசாபிமானம் என்கின்ற கள்ளை ஊற்றுவதுடன் இரு சகோதரர்களில் மற்றொரு சகோதரர்களாகிய உழைப்பாளிகளின் உழைப்பின் பயனாய் சேர்த்த பணத்தையே



கூலியாகக் கொடுத்து கோயில்களில் நிரபராதியான ஆடுகளை கடவுள் பக்திக்காகப் பலிகொடுப்பதுபோல் யுத்தரங்கத்தில் தேச பக்திக்காக பலி கொடுத்து விடுகின்றார்கள். இந்தப்படி பலியான மக்களின் சகோதரர்களுக்கு ஏதாவது பயன் உண்டா என்று பார்த்தால் அவர்கள் மறுபடியும் பாடுபட்டு உழைத்து மறுபடியும் இப்பேர்ப்பட்ட யுத்தம் ஏற்பட்டால் அதில் பலி கொடுப்பதற்காக சகோதரர்களையும், அவர்களுடைய செலவுக்கு பணங்களையும் கொடுத்துக்கொண்டு வருவதைத்தவிர வேறுவேலை கிடையாது. இந்தக் காரியமேதான் இன்றோ, நேற்றோ இருந்து மாத்திரமல்லாமல் ராமாயண பாரதகாலம் என்பது தொட்டு அக்றோணி, வள்ளம், மூலபெலம் என்பதாக கோடிக்கணக்கான மக்களை பலிகொடுத்ததாக சொல்லப்படுவதுமாகும். இதனால்தான் ராணுவத்திலிருப்பவர்களுக்கு வீரர்கள் என்றும், ராணுவத்தில் யுத்தத்தில் சாகின்றவர்களுக்கு வீரசொர்க்கம் கிடைக்குமென்றும் சொல்லி ஏமாற்றுவதுடன் அவர்களிடம் வேறு எவ்வித வேலையும் வாங்காமல் வளகிடாய்கள் போலவும் சும்மாவைத்து வளர்த்துவருவதுமாகும்.

இப்படிப்பட்ட காரியத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்தாபனத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று கருதாமல் அதை இந்திய மயமாக்க வேண்டும் என்கின்ற விஷயத்தில் வாதப்பிரதிவாதங்கள் நடந்ததும், தங்கள் தங்கள் வகுப்புக்கு இந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்றுவாதங்கள் நடந்ததும் மிகவும் வருந்தத்தக்கதேயாகும். ஒரு சமயம் அந்த பதவியையும், பணத்தையும் இந்தியர்கள் அடைவது நன்மையல்லவா என்று சிலர் கேட்கலாம். இந்தக்காரியத்தில் இந்தியர்கள் என்பது இந்த நிலையில் சிறிதும் பொருந்தாது என்றே சொல்லுவோம். ஏனெனில் இது சமயம் உலகத்திலுள்ள ராணுவ வீரர்கள் என்பவர்கள் எல்லாம் தங்களுடைய உண்மையான நிலையை உணர்ந்து தேசம் என்றும், சட்டம் என்றும், நீதி என்றும், பாதுகாப்பு என்றும் சொல்லிக்கொண்டு தங்கள் சகோதரர்கள் உழைப்பிலேயே சாப்பிட்டுக் கொண்டு தங்கள் சகோதரர்களையே அடக்கி ஒடுக்கி சுட்டுக்கொண்டு வருகிறோம் என்பதை நன்றாய் உணர்ந்துகொண்டு வருகின்றார்கள். இந்திய ஜனங்களுக்கு கடுகளாவாவது இந்த உணர்ச்சி வரவேண்டுமானால் முதலில் அவர்களுக்குள் இருந்துவரும் ஜாதிப்பிரிவு உணர்ச்சியும் மதப்பிரிவு உணர்ச்சியும் மறைந்தாக வேண்டும், இவ்விரண்டு உணர்ச்சியும் மறைந்தாலொழிய அதிலும் குறிப்பாக ஜாதிப்பிரிவு உணர்ச்சி ஒழிந்தாலொழிய ஒரு சமூகம், அல்லது ஒரு மனிதன் ராணுவத்திற்கு லாயக்கில்லை என்றே சொல்லுவோம். ஏனென்றால் இந்திய வருணதருமப்படியும், ஜாதி தருமப்படியும் ஒவ்வொரு வருணத்துக்கும் ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு லக்ஷியம் இருந்து வருகின்றது.

இப்படிப்பட்ட இவர்கள் ராணுவத்திற்கு போனால் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் சுட்டுக் கொள்ளுவார்களே ஒழிய எதிரிகளை சுடுவார்கள் என்று எதிர்பார்ப்பது மிகவும் அருமையான காரியமாகும்.



RangaRakes

tamilnavarasam.com

இதற்கு ஒரு சிறு உதாரணம் கூறுவோம். அதாவது போலீசுக்கு ஆள் களைச்சேர்த்து பயிர்ச்சிகொடுத்துவரும் வேலூரில் உள்ள போலீசு சிப்பாய் களை அவர்களது மேல் அதிகாரியானவர் எல்லா போலீஸ்காரர்களும் ஒன்றாய் உட்கார்ந்து சாப்பிடவேண்டும் என்று சொன்னதற்காக உடனே இரண்டு “மேல்ஜாதிக்கார” போலீஸ்காரர்கள் ராஜீனாமா செய்துவிட்டார்கள் என்றும் இதைப்பற்றி சட்டசபையில் கேள்விகேட்டு அந்த அதிகாரி மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஜனங்கள் எதிர்பார்க் கிறார்கள் என்றும் சுதேசமித்திரன் என்னும் ஒரு “தேசியப்பத்திரிகை” 11-3-33ந் தேதி தனது நிருபர் பெயரால் ஒரு நீண்ட வியாசம் எழுதி இருக்கின்றது.

இந்தக் காரியம் ஒன்றா சுதேசமித்திரனின் தேசியத்திற்கு விரோத மானதாக இருந்திருக்கவேண்டும், அல்லது பொது ஜனங்களுக்கே இது ஒருவிரோதமான காரியமாய் இருந்திருக்கவேண்டும். எப்படி இருந்தாலும் ராணுவத்தை இந்த ஜனங்களைக் கொண்ட இந்திய மயமாக்கலாமா என்பது தான் நமது கேள்வி. இது சமயம் வேலூர் போலீசார் வெட்டிசாதம் சாப்பிட்டுக் கொண்டு சோம்பேரியாய் இருக்கின்ற சமயமானதால் இரண்டு போலீசுக் காரர்கள் ராஜீனாமாக் கொடுத்துவிட்டதினால் ஒன்றும் முழுகிப்போய்விட வில்லை. தவிரவும் இந்த சமயம் பழசு போனால் புதிசு தானாக வரக்கூடிய சமயமுமாகும்.

ஆனால் யுத்தத்துக்கு தயார் செய்யப்பட்ட ஒரு நெருக்கடியான சமயத்தில் இம் மாதிரியான ஒரு நிலைமை அதாவது ஒரு யுத்தத்துக்குபோன இடத்தில் ஒவ்வொரு ராணுவ வீரனும் ஒன்றாய் உட்கார்ந்து சாப்பிட வேண்டிய நிலைமை ஏற்பட்டு ராணுவ அதிகாரி அந்தப்படி உத்திரவு போட்ட உடன் இந்த இந்திய மயமாக்கிய போர்வீரர்கள். (வேலூரில் செய்தது போலவே) உடனே ராஜிநாமாக் கொடுத்து விடுவார்களேயானால் யுத்தத்தின் தன்மை என்னவாய் முடியும் என்பதை சற்று இந்திய தேசியவாதிகளும், இந்தியா சட்டசபை பிரதிநிதிகளும், தேசியப் பத்திராதிபர்களும் சிந்தித்துப் பார்ப்பார்களாக.

இந்தியன் என்பவனுக்கு ஒவ்வொரு வருணத்துக்கும், ஒவ்வொரு ஜாதிக்கும் சாப்பாட்டில் ருசி வேறு, சமையல் செய்வதில் பக்குவம் வேறு, சமையல் செய்வதற்கு சமையல்காரனுடைய ஜாதி வேறு, சமையல் செய்ய வேண்டிய இடம் வேறு, சமைக்கப்படவேண்டிய சாமான்கள் வேறு, சாப்பிடு வதற்கு இடம் வேறு என்று இப்படிப்பட்ட அநேகமானவேறுவேறுகள் வேண்டுமானால் பிறகு இதற்குத் தகுந்த மனச்சாட்சிகளும் வேறு வேறு வேண்டுமா? ஆனால் இதை விசாரித்து நடவடிக்கை நடத்தி நீதி செலுத்த சட்டசபை மெம்பர்களும் வேறு வேறு வேண்டியிருக்குமானால் இவை சாத்தியப்படுமா? என்பதை யோசித்துப் பாருங்கள். சாத்தியப்பட்டாலும் இந்த



யோக்கியதை கொண்ட ராணுவத்தையுடைய ஆட்சி உருப்படி ஆகுமா? என்று கேட்கின்றோம்.

ஒரு மனிதனுடன் கூட இருந்து உண்ணுவதால் தனது யோக்கியதை கெட்டுபோய் விடுகின்றதென்று ஒருவன் தனது உத்தியோகத்தை ராஜினாமாக் கொடுத்துவிட்டு ஓடுவதும் இதை விசாரித்து இந்தப்படி உத்திரவு போட்ட மேலதிகாரியின் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு தேசியப் பத்திரிகை எழுதுவதுமானால் இந்த நாட்டுக்கு ஒரு சுயராஜ்யம் வேண்டுமா? அல்லது இந்த நாட்டை நான் கொல்லையிலும் நெருப்பு வைத்துக் கொளுத்தி சாம்பலாக்கி சமுத்திரத்தில் கரைத்து விட்டு பாலைவன மாக ஆக்கிவிட வேண்டுமா? என்றுதான் கேட்கின்றோம். அன்னிய ஆட்சி இருக்கும் போதே ஏற்கெனவே இந்த நாட்டை ஜமீன்தாரர்களும், சோம்பேரி களான பார்ப்பனர்களுமே ஆளுகிறார்கள். இனி சுயாட்சி என்பது கிடைத்து தட்டிப் பேசவே ஆளில்லாத நிலையில் சாட்சிக்குக்கூட ஒரு அன்னியன் இங்கில்லாத ஒரு நிலை ஏற்பட்டு விடுமானால் இந்த நாட்டு உழைப்பாளி மக்களின் கதி - தாழ்த்தப்பட்ட மக்களின் கதி என்ன ஆவது என்பது தான் நமது கவலை இந்த நாடு சமதர்ம நாடு ஆகவேண்டுமானால், இந்த நாட்டில் முதலாளிகளையும், மேல் ஜாதிக்காரர்கள் என்னும் சோம்பேரிகளையும் காப்பாற்றும், பாதுகாக்கும் அரசியலும், மற்றப் பாதுகாப்புகளும் அடியோடு அழிக்கப்பட வேண்டுமானால் ராணுவத்தை இந்திய மயமாக்குவது என்பது ஒருநாளும் கூடாத காரியமேயாகும். இந்திய மயமாக்கவேண்டும் என்று சொன்னவுடனே வகுப்புவாரி உரிமை வந்தே தீரும். ஒவ்வொரு வகுப்புக்கு ஒரு சிப்பாய்-ராணுவ அதிகாரி ஏற்பட்டே தீரும். அதிலும்கூட இப்போதைய போலவே சூட்சிக்காரர்களும், தந்திரக்காரர்களும், மேல் ஜாதிக்காரர்களும் அதிகமான எண்ணிக்கை ஸ்தானங்களை எப்படியாவது கைப்பற்றியே தீருவார்கள். இவர்கள் எப்பொழுதும் உழைப்பாளிகள் மேலும், பாட்டாளிகள் மேலும் சமதர்மத்துக்கு வாதாடுபவர்கள் மேலுமேதான் இவர்களது துப்பாக்கி யையும், மிஷின் பீரங்கிகளையும் திருப்புவார்களே ஒழிய ஒரு நாளும் ஏழைகளை வஞ்சித்து அவர்களது உழைப்பைக் கொள்ளை கொள்கின்ற வர்கள் மீதும் அவர்களை அடக்கி வைத்திருப்பவர்கள் மீதும் திருப்பவே மாட்டார்கள். ஆதலால் இந்த நிலையில் இந்தியா ஒரு நாளும் சமதர்ம நாடாக முடியவே முடியாமல் போய்விடும்.

ரஷியா முதலிய சில நாடுகளில் இன்று ஏதாவது ஒரு அளவில் சமதர்மங்கள் விளங்குகின்றன என்றால் அங்குள்ள ராணுவ வீரர்கள் தங்களில் ஆளுக்கு ஒரு சமையல் அரையும், சாப்பாட்டு இடமும் தேடுகின்ற வர்களாய் இல்லாமல் இருந்ததுடன் அவர்களது சகோதரர்கள் மீது துப்பாக்கியைத் திருப்பாமல் அவர்களை வஞ்சித்து ஏமாற்றி அவர்களது உழைப்பை உண்டுவந்த முதலாளிகள், ஜமீன்தாரர்கள் சோம்பேரிகள்



RangaRakes tamilnavarasam.com

குருக்கள்மார்கள் மீது திருப்பியதினாலும் அந்தப்படி அவர்கள் திருப்பி இராவிட்டாலும் தங்களது சகோதரர்கள் மீது திருப்ப மறுத்ததாலுமே ஒழிய வேறில்லை.

ஆகையால் இந்தியாவுக்கு சுயராஜியம் தேடவும் ராணுவத்தை இந்திய மயமாக்கவும் முயற்சிக்கும் தேசியவாதிகளும் தேசபக்தர்களும் தேசப்பிரதிநிதிகளும் மகாத்மாக்களும் தயவு செய்து முதலில் சமையல் கூடங்களையும் சாப்பாட்டு மண்டபங்களையும் எல்லாருக்கும் ஒன்றாக ஆக்க முயற்சிப்பார்களாக.

**குடி அரசு - தலையங்கம் - 19.03.1933**



## தோழர். R. K. ஷண்முகம்.

தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் இந்தியா சட்டசபைக்குத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பது கேட்டு பார்ப்பனர்களும், அவர்களது அடிமையாயிருந்து வயிறு வளர்த்துத் தீர வேண்டிய பேறுபெற்ற பார்ப்பனரல்லாதாரும், அவ்விருகூட்டத்தினது பத்திரிகைகளும் தவிர்த்து மற்றைய எல்லோருமே ஆனந்தக்கடலில் மூழ்குவார்கள் என்பதிலைய மில்லை.

தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் ஒரு பார்ப்பனராயிருந்திருந் தால் இன்று அரசியல் உலகில் மகாகனம் என்னும் பட்டம் பெற்ற சீனிவாச சாஸ்திரி பார்ப்பனரும், சர். பட்டம் பெற்று மற்றும் பல போக போக்கியங் களையும், மாதம் 20 ஆயிரம் 30ஆயிரம் வரும்படியையும் உடைய சர். சி. பி. ராமசாமி அய்யர்ப் பார்ப்பனரும் ஷண்முகத்திற்குப் பின்னால் 5-வது 6-வது ஸ்தானங்களில் இருப்பதற்குக்கூட தகுதி உடையவர்கள் என்று சொல்லிக் கொள்ளப்பட மாட்டார்கள். மகாகனம் சாஸ்திரிக்கு தோழர்கள் கோக்கேல், காந்தி ஆகியவர்கள் வெளிப்படையாகவும், இரகசியமாகவும் ஆதரவு கொடுத்தும் அரசாங்கத்திற்கு சிபார்சு செய்தும் இந்தியாவிலுள்ள "முக்கிய" பத்திரிகைகள் என்பனவெல்லாம் (பார்ப்பனர்களை ஆசிரியராகவும், நிருபர்களாகவும் கொண்டிருக்கும் காரணத்தால்) "சாஸ்திரி மணலைக் கயிராகத் திரித்து வானத்தை வில்லாக வளைத்து விடுவார்" என்று புகழ்ந்து வந்ததாலுமே இந்தியப் பொதுமக்களுக்கு இன்ன விஷயத்தில் குறிப்பாக இன்ன காரியத்தைச் செய்தவர் என்றோ, அதனால் இன்ன பலன் இன்ன மக்களுக்கு ஏற்பட்டதென்றோ சொல்லுவதற்கு சிறிதுகூட இடமில்லாத ஒரு வாத்தியார் பார்ப்பனர் மகாகனமாகி இந்திய மக்களுடைய பிரதிநிதியென்று உலகம் முழுவதும்விளம்பரம் பெற்று வாழ முடிந்தது.

அதுபோலவே தோழர் சர். சி.பி. ராமசாமி அய்யருக்கும் ஹைக்கோர்டு ஜட்ஜுகளில் இரண்டொருவருடைய சலுகையும், கோகேல், காந்தி இவர் களைப் போலவே அரசியல் உலகில் விளம்பரம் பெற்ற பெசண்டம்மை யாரின் வெளிப்படையாகவும், இரசியமாகவும் சர்க்காருக்குச் செய்த சிபார்சு களும், மற்றும் பல வழிகளில் பெற்ற அரசாங்கத் தலைமை அதிகாரிகளின்



RangaRakes tamilnavarasam.com

ஆதரவுகளும், தேசியபார்ப்பன பத்திரிகைகளின் விளம்பரங்களும் எல்லாம் சேர்ந்து அவரையும் ஒரு பெரிய மனுஷியனாக்கச்செய்ததோடு வருஷம் பல லக்ஷம் ரூபாய் வரும்படிக்கு ஆளாக்கியும் விட்டுவிட்டது.

ஆனால் தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்களுக்குத் தோழர் காந்தி முதல் எதிரியாயிருந்து முட்டுக்கட்டை போட்டவைகளையும், பார்ப்பனப் பத்திரிகைகள் செய்து வந்த விஷமங்களையும், சூட்சிகளையும் தாண்டியும் பார்ப்பனர்களின் அடிமைகளாயிருந்த பல பார்ப்பனரல்லாத கோடாரிக் காம்புகள் செய்து வந்த தொல்லைகளிலிருந்து சமாளித்து அரசாங்கத்தையும் (தோழர் மோதிலால் நேரு "தேசியவீர" ராயிருந்தபோது அவருக்கு வலக்கை யாயிருந்து) எதிர்த்தும் யாருடைய தயவில்லாமலும், எந்தப்பத்திரிகையுடைய (பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் ஆகிய இருவர்களுடைய) ஆதரவில்லா மலும் மேற்படி பத்திரிகைகளின் நிருபர்களுடைய அயோக்கியத்தனமான விஷம நிருபங்களுக்கெல்லாம் மார்பைக் கொடுத்தும் தானாகவே இந்த நிலைமை அடைந்தார் என்பதை எல்லா மக்களும் அறிய வேண்டும் என்பது நமது ஆசை.

இந்த உத்தியோகத்தால் தோழர் ஆர். கே. ஷண்முகத்துக்கு மாதம் 4000 ரூபாய் லாபமே யொழிய மற்றபடி இந்திய ஏழை மக்களுக்கு-பாடுபடும் மக்களுக்கு ஒரு காதொடிந்த ஊசிக்கும் மார்க்கமில்லை என்பது நமக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் அப்படி ஒரு உத்தியோகமும், பதவியும் இருக்கும் வரையிலும் அதை ஏதாவது ஒரு மாம்சப் பிண்டமாவது அனுபவித் துத்தான் தீரவேண்டும் என்கின்ற நிலைமை இருக்கின்ற வரையிலும் வெறும் அனாமதேயங்கள் அடைந்து தாழ்த்தப்பட்ட அதாவது பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு இழிவும், தாழ்மையும் நிரந்தரமாய் இருக்கச் செய்வதற்கு பாடுபடும் மக்களோ, அல்லது இப்படி ஒரு கஷ்டமான, கொடுமையான நிலைமை ஒன்று இருக்கின்றது என்பதை அறியாத ஒரு தேசா போகமோ அடைவதைப் பார்க்கிலும் இப்படிப்பட்ட ஒரு அறிஞரும், சாமார்த்திய வாளியும், தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்தில் கவலையும் அவர்களது தாழ்மைக்கும், இழிவுக்கும் அஸ்திவாரமான காரணத்தை நன்றாய் உணர்ந்த வரும், அதை வேருடன் களைந்து வெந்நீரை ஊற்றி பூண்டர அழிக்க வேண்டும் என்கின்ற ஆசையும் உறுதியும் கொண்ட ஒருவர் அனுபவிப்பதில் எந்த மூடனும் பொறாமைப்படவே மாட்டான்.

அன்றியும் தோழர் ஆர். கே. ஷண்முகம் இன்று ஒரு வெரும் ஆசாமி அல்ல என்றும் இப்படிப்பட்ட பட்டம் பதவி முதலிய வேட்டைகளுக்காக தேசிய வேஷமோ, வகுப்பு வேஷமோ, மதவேஷமோ, தெய்வ பக்தி வேஷமோ மகான் வேஷமோ போட்டுக் கொண்டு பாமரர்களை ஏமாற்றும் பாஷாண்டியல்ல வென்றும், சொல்வதோடு ஜாதி, மதம், கடவுள், தேசம், வகுப்பு, அரச ஆட்சி முதலிய சகல விஷயங்களையும் புரட்டென்று ஒதுக்கித் தள்ளி சரீரத்தால் பாடுபடும் மக்களுடைய மேன்மைக்கும், சமூகத்தால் இழிவு படுத்தப்படும் மக்களுடைய விடுதலைக்கும் உழைக்கும் உண்மை இயக்கமாகிய சுயமரியாதை இயக்க சங்கத்துக்குத் தலைவராயிருக்கின்ற ஒரு வீரராவார் என்றும் சொல்லுவோம்.

சுயமரியாதைச் சங்கமானது பார்ப்பனர்களும், பார்ப்பனர்களது அடிமை களாகிய பார்ப்பனரல்லாத தேசியவாதிகள் என்பவர்களும் தூற்றி வருவதும், மதவாதிகள் தூற்றி வருவதும், சர்க்காரும் கண்காணித்து வருவதும் சுயமரியாதை இயக்கமென்றாலே நாக்குசுட்டு விடுமென்றும், சர்க்கார் கோபித்துக்கொள்வார்கள் என்றும், அதிகாரிகள் கஷ்டப்படுத்துவார்கள் என்றும் சொல்லப்பட்டு வருவதுமான ஒரு இயக்கமாகும்.

அதுமாத்திரமல்லாமல் சுயமரியாதை இயக்கம் அரசாங்கத்தையே கவிழ்க்கப்பார்க்கின்றது என்றும், மதத்தையே அழிக்கப்பார்க்கின்றது என்றும், கடவுளையே ஒழிக்கப்பார்க்கின்றது வென்றும், வேத சாஸ்திரங்களை எறிக்கப்பார்க்கின்றதுவென்றும் பல முண்டங்கள் ஒப்பாரி இட்டு மாரடித்து அழுவது மாத்திரமல்லாமல் அரசாங்கத்துக்கு மகஜரும், விண்ணப்பமும், தூதும் அனுப்புவதல்லாமல் பத்திரிகைகளிலும் பத்தி பத்தியாய் எழுதி திண்ணைப்பிரசாரம் செய்யப்படுவதற்கு ஆளாகி இருக்கும் ஒரு இயக்கமாகும்.

அப்படிப்பட்ட ஒரு இயக்க ஸ்தாபனத்துக்குத் தலைவராயிருக்கின்ற ஒருவர் இந்தியா சட்டசபை ஸ்தாபனத்துக்கும் தலைவராகத் தெரிந்தெரிந் தெடுக்கப் பட்டாரென்றால் அதுவும் எல்லாக் கட்சியாராலும் ஏகமனதாய்த் தெரிந்தெடுக்கப்பட்டார் என்றால் இப்படிப்பட்ட இவரைத் தலைவரா யடைந்தது இந்தியா சட்டசபைக்கே ஒரு பெரிய கௌரவமென்றே சொல்ல வேண்டும்.

ஆகவே தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்களைத் தனது தலைவ ராகக் கொண்ட இந்திய சட்டசபையைத்தான் நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 19.03.1933**



RangaRakes tamilnavarasam.com

# “தொழிலாளர் நிலைமை”

தோழர்களே!

இது பரியந்தம் தோழர் பொன்னம்பலனார் “வாலிபர் கடமை என்ன?” என்பது பற்றி விபரமாக உங்களுக்கு எடுத்துச் சொன்னார். அவர் சங்கராச் சாரியாரின் விஷயத்தைப் பற்றிப் பேசும்போதும் மத சம்பந்தமான அக் கிரமங்களைக் கூறும் போதும் கடுமையாகப் பேசியதாக நீங்கள் கருதலாம். சகிக்க முடியாத அக்கிரமங்கள் மதத்தின் பேரால் நடைபெறும் பொழுது அதை மேல் பூச்சாகப் பேசிப்போவதற்கு சாத்தியப்படாததாகவே இருக்கிறது. சென்னையில் கொள்ளையடித்தது போன்று மக்களிடம் மூடத்தனத்தைப் புகட்டி கொள்ளையடிப்பதை நேரில் சென்னையில் போய்ப் பார்த்திருந் தீர்களானால் தெரியும். இவ்விஷயத்தில் அவர் வாலிபரும் உணர்ச்சியுள்ள வருமாதலால் மிக்க ஆவேசத்துடனே தான் பேசினார். இன்னும் கவனித்தால் இன்றையதினம் கேவலமாக மக்களை மதிக்கப்படுகிற தீண்டாமை விலக்குக் கிளர்ச்சிக்கும் காங்கிரசில் பிரபல தேச பக்தர்கள் என்பவர்களும், ஏன் தோழர் காந்தியாரும்கூட உண்மையில் மத சாஸ்திர சம்மந்தமான அபிப்பிராயங் களைக் காட்டுவதன் மூலம் தீண்டாமை விலக்குக்குத் தடைசெய்து வரு கிறார்கள். சங்கராச்சாரி பிரசங்கமும் மதசம்பந்தமானதுதான். மத சம்பிரதாயப் படிக்கு இருவரும் நம்மை தேவடியாள் மக்கள் (சூத்திரர்கள்) சண்டாளர்கள் என்று தான் சொல்லுகிறார்கள். மதத்தைப் பொறுத்தவரையில் ஒற்றுமை யாவதற்கு வேறு வழியுண்டா என்பது யோசித்தால் எதுவும் கிடையாது. நமக்குள் வெகு காலமாக ஒற்றுமை இல்லை என்றுதான் சொல்லிக்கொண்டு வந்தோம். ஆனால் காந்தி காங்கிரஸ் வந்தபின்பு சுயராஜ்யம் ஏற்பட்டால் ஒற்றுமை ஏற்பட்டுவிடும் என்று சொல்லிக்கொண்டு இருந்து இன்றைக்கு யார் கோவிலுக்குள் போகலாம் என்ற கேள்வி வைதீகர்களைக் கேட்டுக் கொண்டிருந்தால் அவர் இன்று அரசியல் சங்கராச்சாரி என்பதற்கு என்ன தடை. சங்கராச்சாரிக்கும் காந்தியாருக்கும் மத விஷயத்திலும், ஜாதி வர்ணம் என்பதிலும் நெருங்கிய சம்பந்தம் உண்டு தான். இன்று கோவிலுக்கு போக வேண்டுமென்றோ, போக வேண்டாமென்றோ போகாதேயுங்கள் என்றோ சொல்வதில் நமது விஷயமும் வராமலில்லை. கோவிலுக்குப் போவது விஷயமாக தடை செய்யப்பட்ட மக்களுக்கு இன்றும் தடை ஏற்படுத்தி



அதற்கு ஆதாரம் சொல்லி உயர் ஜாதி என்பது இருக்க வேண்டும். என்று சொல்லி ஆதாரம் காட்டவே இம்மடாதிபதிகளும் சங்கராச்சாரிகளும் கிளம்பி வருணதர்மத்தைப் பலப்படுத்துகிறார்கள். இவர்கள் விஷயத்தை ஒப்புக் கொண்டு விடுவதால் நமது நிலைமை மாறப்போவதுமில்லை. பழைய நிலைமை கெட்டிப்படும். மாறவேண்டுமானால் அடியோடு இம்மத சம்பந்தமான வழக்கம் மாற்றப்பட ஒரு புரட்சி ஏற்பட வேண்டும். தோழர் பொன்னம்பலனார் சொல்வதைப்போன்று இவ்விஷயமும் மத சம்பந்தமான அக்கிரமங்களையும் தடுக்க வேண்டுமானால் தைரியமாக எடுத்துச் சொல்ல வேண்டியது தான். ஏனெனில் சமூகத்திற்கு விளக்கிக் காட்டக்கூடிய அளவுக்கு வரும் பொழுது தைரியமாகக் கண்டித்துப் பேசுவதினாலேதான் மக்கள் மனதில் படுகிறது. அதிலும் சங்கராச்சாரி கொள்ளையைப் போன்ற அக்கிரமங்களைத் தடுக்க வேண்டுமானால் கண்டிப்பாக எவ்வித எதிர்ப்புக் கும் அஞ்சாது சொல்லித் தீரவேண்டியதாகவே இருக்கிறது.

சங்கராச்சாரி போன்றவர்களும், லோககுருக்களும் சொல்லித் திரி கின்ற மதத்தை ஒப்புக்கொண்டால் இன்று உங்களைப் போன்ற தொழிலாளி களும் கூட தொடப்படாத மக்களாகவே ஆகிவிடுகின்றீர்கள். இதற்கு ஆதாரம் நமது புராணமும் காந்தியார் வர்ணாசிரம தருமமும் ஜாதிமுறையுமே போதுமானது.

ஏனெனில் இந்து மதத்திலுள்ள எந்த சாஸ்திரங்களும், சரீரத்தால் பாடுபட்டுழைக்கும் மக்களைத் தீண்டக்கூடாத ஜாதி என்றே சொல்லுகிறது. அதற்கு நாம் இதுவரை கொடுத்து வந்த மரியாதையாலேயே இக்காலமுள்ள இத்தனை ஜாதிகளும் இருக்கிறது. மத தரகர்கள் சங்கராச்சாரிகள் சொல்வ தற்கும் சேர்த்து மரியாதை செய்தால் அடுத்த நாளே இன்னும் பல கோடி மக்கள் தீண்டாதார் ஆகிவிடுவார்கள் என்பதற்குச் சந்தேகமே இல்லை. வேண்டுமானால் வருணாசிரம தருமம் தவறாமல் நடைபெற்று வரும் மலையாளத்தில் இன்றைக்கும் உழைத்துக்கொட்டும் மக்கள் குளத்திலுள்ள தண்ணீரையும் தொடக்கூடாது, தொட்டால் தீட்டு என்று சொல்வது மட்டுமல்ல அடி உதை, அப்புறம் சட்டப்படி கைதியாகி சிறை செல்ல வேண்டியதுதான். அதே வருணாச்சிரம முறைப்படி இன்று தோழர் காந்தியாரும் கூட மலை யாளத்தில் கோவிலுக்குள் போக முடியாது. லஜபதிராயும் ஜவகர்லாலையும் கூட மலையாளத்தில் ஆலயத்தில் அனுமதிக்கப்படவில்லை என்பது உங்களுக்குத் தெரியாததல்ல, லஜபதியும், காந்தியும் அனுமதிக்காத கோவில் இன்று எத்தனை ஆபாசப் பார்ப்பனர்கள் நுழைந்து அக்கிரமங்கள் செய் கிறார்கள் என்பவைகளை தான் தோழர் பொன்னம்பலனாரவர்கள் விளக்க மாகச் சொன்னார்கள். இவைகள் எல்லாம் கவனித்தால் சங்கராச்சாரி காந்தி மாளவியாக்கள் சொல்லிய எந்தப்புராணத்தையும் ஒப்புக்கொள்வதின் மூலம் என்ன ஏற்படுகிறது என்பது விளங்கவில்லையா? இதை தடுத்து அடியோடு நிறுத்தப்பட வேண்டுமானால் பலமான பிரசாரம் மட்டும் போதாது புரட்சியும்



RangaRakes tamilnavarasam.com

சட்டமும் அவசியமாகவே இருக்கிறது. எத்தனை தான் பணத்தைக் கொட்டிக் கொடுத்து காலில் விழுந்து கும்பிட்டு பெண்சாதி பிள்ளையுடன் அழுக்கு நீரைக் குடித்தாலும் பின்னும் நம்மைச் சூத்திரன், வேசி மகன், அடிமை, சண்டாளன் என்றுதான் சொல்லுகிறான் என்பதை இக்கூட்டத்தில் யாரேனும் மறுக்க முடியுமா என்று தான் கேட்கிறேன். (தொடர்ச்சி 02.04.1933 குடி அரசு)

*குறிப்பு: 05.03.1933 ஆம் நாள் அனுப்பப்பாளையம் பாத்திரத் தொழிலாளர் சங்க கூட்டத்தில் ஆற்றிய உரை,*

**குடி அரசு - சொற்பொழிவு - 26.03.1933**



# அரசியல் சீர்திருத்தம்

அரசியல் சீர்திருத்தத்தின் குறிப்புகள் "வெள்ளைக் காகித" அறிக்கை என்னும் பேரால் வெளிவந்து இருக்கிறது. அதைப்பற்றிய வாதப்பிரதிவாதங் கள் இந்தியப் பத்திரிகைகளின் பக்கங்கள் பூராவையுமே கவர்ந்து கொண்டு தினமும் சேதிகள், பிரசங்கங்கள், அபிப்பிராயங்கள், தீர்மானங்கள் என்கின்ற ரூபங்களாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

என்றாலும் இதைப்பார்த்து நமக்குப் பதினைந்தடுக்குள்ள ஒரு மாளிகையில் நெருப்புப் பிடித்துக் கொளுந்து விட்டெறியும்போது அந்த வீட்டைக்கட்ட வேலை செய்தவனும், குடியிருக்க வீடில்லாமல் சமீபத்தில் ஒரு மரத்து நிழலில் பொங்கிச் சாப்பிட்டு விட்டு வேலையில்லாமல் தலைக்குக் கையை வைத்துத் தரையில் நாளையச் சாப்பாட்டிற்கு வழி என்ன என்று ஏங்கிப் படுத்துக்கிடக்கும் ஒருவனுக்கு எவ்வளவு கவலையிருக்குமோ அவ்வளவு தான் இன்றைய சீர்திருத்த முயற்சியிலோ, வெள்ளைக்காகித அறிக்கை யிலோ நமக்குக் கவலையுண்டு.

ஏனெனில் அந்த வீட்டை நெருப்புப்பற்றி எறிவதிலிருந்து காப்பாற்றப் படுவதில் இந்த மரத்தடியில் பொங்கித் தின்று கிடப்பவனுக்கு யாதொரு பயனுமில்லை.

மற்றும் அந்த வீடு அடியோடு வெந்து சாம்பலாகுமானால் அதை மறுபடியும் புதுப்பித்துக் கட்டுவதன் மூலம் இந்த வீடு வாசலற்ற - வேலையற்ற ஏழைத் தொழிலாளிக்கு ஏதாவது வேலை கிடைத்துச் சற்று கஞ்சிக்காவது வழியுண்டாகும்.

அந்தப்படி பார்க்கும் முறையில் நாம் இந்த வெள்ளைக்காகித அறிக்கையில் இந்திய மக்களுக்கு லாபம் என்ன? நஷ்டம் என்ன என்று பார்த்தால் நஷ்டம் இருந்தவரையில்தான் நமக்கு-ஏழை மக்களுக்கு-தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தொழிலாள உழைப்பாளி மக்களுக்கு நன்மை என்று தான் சொல்லவேண்டும். எப்படி யென்று பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

இந்திய ஏழை மக்களின் பேரால் சுயராஜ்யம் கேட்கப் புறப்பட்டு இன்றைக்குச் சுமார் 40 வருஷ காலம் இருக்கும். இது வரையில் 2, 3 தொகுதி யாய் சுயராஜ்யம் -அரசியல் சீர்திருத்தம் வழங்கப்பட்டாய் விட்டது. அதைப் பெற்று அமுலில் நடத்தியும் ஆய் விட்டது.

இதனால் இந்திய ஏழை மக்களுக்கு என்ன பயன் ஏற்பட்டது? சோம்பேரிகளாகிய பார்ப்பனர்களுக்கு-பிச்சையெடுத்துப் பிழைக்க வேண்டியவர்கள் என்னும் பார்ப்பனர்களுக்கு உத்தியோகங்கள் எவ்வளவு? அதுவும் எப்படிப்பட்ட உத்தியோகங்கள் என்று பார்த்தால்,

கவர்னர் நிர்வாக சபை அங்கத்தினர், ஜட்ஜுகள், கலெக்டர்கள், திவான்கள் முதலிய 10000, 5000 4000, 3000, 2000, 1000 ரூ. வீதம் மாதம் கிடைக்கத்தக்க இப்படிப்பட்ட உத்தியோகங்கள் கிடைத்தது. மற்றும் அவ்வகுப்பு 100க்கு 100பேர்கள் என்றும் மண்வெட்டியை கையில் தொடாமலும், மூட்டைத் தூக்காமலும் வாழ்வதற்கு சௌகரியம் ஏற்பட்டது. பலர் சர் ஆனார்கள். சிலர் மகாகனம் ஆனார்கள்.

மற்றபடி முதலாளிமார்களுக்கும், பணக்காரர்களுக்கும் 100க்கு 100வீதம் லாபம் கிடைத்து பெரிய பெரிய முதலாளி-மில் சொந்தக்காரர்கள்-கோடீஸ்வரர்கள் ஆனார்கள்.

மிராசுதாரர்களும், லேவாதேவிக்காரர்களும், ஜமீன்களாகி, ராஜாக் களாகி, கோடீஸ்வரர்களாகி பரம்பரை ராஜாக்கள் ராஜ வம்சஸ்த்தார்கள் ஆனார்கள்.

மற்றும் பலர் மந்திரிகளானார்கள். மகாத்மாக்களானார்கள்,

ஏழைகள் என்ன ஆனார்கள்-ஏழைத் தொழிலாளிகள் என்ன ஆனார் கள்? என்றென்றும் ஏழைகளே ஆனார்கள் என்பதல்லாமல் வேறென்ன?

இதுபோலவே இனியும் வரப்போகும் சுயராஜ்ஜியத்தில்-சீர்திருத் தத்தில் இந்த நிலையைத் தவிர வேறு எந்த நிலையை எதிர்பார்க்க முடியும்? ஆதலால் இது "நல்ல சீர்திருத்தமாய்" இருந்தால் என்ன "நாசமாய்ப்போன சீர்திருத்தமாய்" இருந்தால் என்ன என்றுதான் கேட்கின்றோம்.

"ஆத்து நிறைய தண்ணீர் போனாலும் நாய்க்கு சளப்புத் தண்ணீர் (நக்கி சாப்பிடும்) தண்ணீர்தான்" என்ற பழமொழியும் "நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப் புல் சுமக்கும் வேலைதான்" என்ற பழமொழியும் இந்த இந்திய சுயராஜ்ய சீர்திருத்தத்திற்கே மிகவும் பொறுத்தமாயிருக்கின்றது என்று தான் சொல்லவேண்டும்.



வரப்போகும் சுயராஜ்யத்தின் யோக்கியதையைப் பார்க்கவேண்டு மானால் அதற்காகச் செய்யப்பட்ட கிளர்ச்சியின் யோக்கியதையைப் பார்த் தாலே அறிவுள்ளவனுக்குத் தானாக விளங்கிவிடும்.

அதாவது இந்த 10 வருஷ கிளர்ச்சியின் தலைவரான தோழர் காந்திய வர்கள் செய்த கிளர்ச்சியின் தத்துவங்கள் என்ன என்று பார்ப்போமானால்,

1. **"பிராமணர்களுக்கு"** (பார்ப்பனர்களுக்கு அவன் எவ்வளவு அயோக்கியனாக இருந்தாலும் பிரவி மாத்திரத்தாலேயே உயர்ந்த ஜாதியான் அதாவது சரீரத்தினால் வேலை செய்யப்படவே கூடாதவன் என்கின்ற தத்துவம் கொண்ட) **வருணாச்சிரம தருமமும்,**

2. **"க்ஷத்திரியர்களுக்கு"** (காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் பயனா யும், ரவுண்டேபிள் கான்பரன்சுக்கு சென்று வந்ததின் பயனாயும், சுதேச சமஸ்தான ராஜாக்கள் ஜமீன்தாரர் ஆகியவர்களுக்கு) **பாது காப்பும்,**

3, **"வைசியர்களுக்கு"** (மில் முதலாளிகளுக்கு 100-க்கு 100 வீதம் லாபம் சம்பாதிக்கத் தகுந்த மாதிரி) **அன்னியதுணி பகிஷ்காரமும்,**

4, **"சூத்திரர்களுக்கு"** (ஏழைகளுக்கு நாள் 1-க்கு 10-மணி நேரம் வேலை செய்தால் ஒரு அணாகூலி அதுவும் அந்த துணியை வாங்கு கிறவர்கள் ஒரு ரூபாய், துணிக்கு இரண்டு ரூபாய் விலை போட்டு வாங்கினால் மாத்திரம் அந்த ஒரு அணாகூலியும் கிடைக்கதக்க) கை ராட்டினமும், (அவன் எவ்வளவு மேலான அறிவும், ஞானமும், இருந் தாலும் அவனவன் ஜாதிமுறை படியான வேலையே செய்யவேண்டும் என்னும்படியான) **சுதர்ம ஜாதிமுறையும்,**

5, **"பஞ்சமர்களுக்கு"** (தீண்டப்படாதவர்கள் என்பவர்களுக்கு என்றும் அவர்களது தாழ்ந்த தன்மை நிலைத்திருக்கவும் அவர் களுக்கு மூடநம்பிக்கை பலப்பட்டு முன்னேறாமல் அவதிப்படவும் ஆஸ்ப தமான) **ஹரிஜன பட்டமும், கோவில் பிரவேசமும்,**

6, **"அறிஞர்களுக்கு"** (இனி படித்த பல ஜாதி கூட்டத்தாருக்கு காங்கிரசின் பேரால்) **சட்டசபை பிரவேசமும்**

தான் இதுவரை அரசியல் கிளர்ச்சியால் பல உள்பிரிவு, தலைப்பு பெயர்களாய் இருந்து கிளர்ச்சி நடந்துவந்திருக்கின்றது. இந்தக் கிளர்ச்சிக்கு எது கிடைக்க வேண்டுமோ அது கிடைத்துவிட்டது. ஒரு சமயம் இந்த மேல் கண்ட தலைப்புகளுக்கு பூராவும் நன்மையும், பாதுகாப்பும் இல்லாமலிருந் தால் அதற்காக வேண்டுமானால் இனியும் "போராது போராது" என்று சிறிது கூப்பாடு, வெளிவேஷக் கூப்பாடு அதுவும் அதாவது வேறு ஒருவர்



RangaRakes tamilnavarasam.com

வீட்டுக்கு இழவுக்குப்போன பெண்கள் ஒப்பாரி வைத்தும், மாரடித்தும் அழும் சடங்கு நடக்கும்போது மாரடித்துக்கொண்டும், அழுவது போன்ற வேஷ அழுகையே அழுவதாயிருந்தால் இருக்கலாம்.

ஆகவே காந்தியார் இஷ்டப்படியும், காங்கிரஸ் கோரிக்கைப் படியும் சுயராஜ்ஜியம் கிடைத்து விட்டது. இதில் இனி சில வார்த்தை திருத்தங்கள் மாத்திரம் பாக்கி இருந்தால் இருக்கலாம். ஆனால் ஏழைகளுக்கு வேண்டிய சுயராஜ்ஜியம் - தொழிலாளிகளுக்கு வேண்டிய சுயராஜ்ஜியம் என்றதின் வாசனையோ நிழலோ, சிறிது கூட இல்லை என்றும் அதற்கான நாம் செய்ய வேண்டிய வேலையும், கிளர்ச்சியும் வேறு என்றும், அதன் முதல்படி இந்த காங்கிரஸ் சூழ்ச்சிகளையும் அதற்காக மேற்கண்ட தலைப்பு கிளர்ச்சி திட்டங் களையும் அடியோடு ஒழிக்க வேண்டியது தான் என்பதோடு நமக்கு இந்த **சுயராஜ்ஜியம் வேண்டவே வேண்டாம் என்றும் தொழிலாளி ராஜ்யமே வேண்டும்** என்றும் சொல்லுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 26.03.1933**



# குடி அரசு "குபேர" பட்டணத்தின் சிறப்பா? சிரிப்பா?

அமெரிக்கா தேசத்தை இந்திய மக்கள் குபேர பட்டணமென்று சொல்வதுண்டு. குபேரபட்டணமென்றால் செல்வம் தாண்டவமாடும் பட்டண மென்று பெயர். உண்மையிலேயே அங்கு மற்ற நாடுகளைவிட செல்வம் அதிகந்தான்.

உலகில் பல பாகங்களிலுள்ள செல்வங்களும் பல வழிகளில் அமெரிக்காவுக்குப் போய்ச் சேருகின்றன. அமெரிக்கா செல்வம் மற்ற நாடுகளுக்கு வியாபார மூலமாகவும், லேவாதேவி மூலமாகவும் முதலாக அனுப்பப்பட்டு வட்டியும் லாபமும் ஏராளமாய் அடைகின்றது.

மகா யுத்தத்திற்காக மற்ற தேசங்கள் பட்ட கடன்களில் பெரும்பகுதி இன்னமும் கட்டுவளியாகாமல் எல்லா தேசமும் அமெரிக்காவுக்குக் கடனாளி யாகவேயிருக்கின்றது.

இது மாத்திரமா, அமெரிக்கா என்றால் அது ஒரு பெரிய பழமையான "குடியரசு நாடு" சக்கிரவர்த்தியில்லாமல், அரசன் இல்லாமல் "பிரஜைகளால் பிரஜைகளுக்காக" ஆளப்படும் "ஜனநாயக" ஆட்சியுள்ள நாடு என்றும் சொல்லப்படுவதாகும்.

அதன் (குடியரசு-ஜனநாயக) தலைவர் தேர்தலுக்கு பத்து லட்சக் கணக்கான நபர்கள் ஏழைகள், தொழிலாளிகள் ஆகிய மக்கள் ஓட்டுச் செய்துதான் தலைவர் (தேர்தல் நடந்து) நியமிக்கப்படுவது "கண்டிப்பான" சட்ட முறையாகும்.

இப்படியெல்லாம் இருந்தும் என்ன பயன்? **இன்று அந்நாட்டில் ஒன்றரை ( 1 $^1/_2$ ) கோடி மக்களுக்கு-அமெரிக்கக் குடி மக்களுக்கு-ஓட்டுச்செய்ய உரிமை உள்ள மக்களுக்கு-கஞ்சியுமில்லாமல் வேலையுமில்லாமல் தெருவில் திண்டாடித் திரிகிறார்கள்** என்றால், இது அக் குபேர பட்டணத்துக்கு சிறப்பா? அல்லது சிரிப்புக்கிடமானதா? என்பதை யோசித்துப்பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

அமெரிக்கத் தொழிலாள மக்களின் உதவியால் தான்-அவர்களது ரத்தவேர்வை வெளிப்படும்படியான உழைப்பினால் தான் அமெரிக்கா நாடு "குபேர பட்டணம்" என்கின்ற பெயரை அடைந்ததும், அது மற்ற தேசத்திய செல்வங்களை இழுத்துக் கொண்டதுமாகும்.

இன்று உலகத்திலுள்ள பெரிய பெரிய தொழிற்சாலைகள் என்பனவை கள் பலது அமெரிக்காவில்தான் இருக்கின்றன.

உலக மார்க்கட்டுகளுக்குப் பல தேசங்கள் அனுப்பப்படும் சாமான் களின் கணக்குகளில் அமெரிக்கா தேசம் அனுப்பப்படும் சாமான்கள்தான் அதிகமான அளவுடையது. இருந்தும் என்ன பிரயோஜனம், இன்று உலகில் எங்குமில்லாத அளவு அங்கு(15000000) ஒன்றைக் கோடிமக்களுக்கு தொழிலில்லை யென்றால் இந்த குபேர பட்டணம் குடி அரசு தேசம் என்பதின் அருத்தம் என்ன என்று கேட்கின்றோம். ஒன்றறைக்கோடி மக்களுக்கு வேலை இல்லை என்றால் இந்த ஒன்றறைக்கோடி மக்களின் பெண்டு பிள்ளைகள், குழந்தை குட்டிகளையும் சேர்த்துக் கணக்குப் போட்டுப் பார்த்தால் எத்தனை கோடி மக்கள் பட்டினியாய்க் கிடக்கின்றார்கள் என்று பாருங்கள்.

இது மாத்திரமா? அமெரிக்கா தேசமானது 10 அடுக்கு, 20 அடுக்கு, 50 அடுக்கு, 100 அடுக்கு மாடிகள் கொண்ட கட்டிடங்கள் வானமளாவ இருக்கின்றன வென்றும், சிங்கார நந்தவனங்கள், ஜலக்கிரீடை நிலபாவிகள், கால் பந்து, கைப்பந்து, விளையாட்டுகள் விளையாடும் மைதானங்கள் முதலியவைகள் எல்லாம்கூட மேற்படி வானமளாவிய மண்டபங்களில் இருக்கின்றன வென்றும் சொல்லப்பட்டதும் "இந்திரலோக" மென்றும், "பொன்னுலக" மென்றும் மாறுபெயர் கொடுத்தழைக்கப் படுவதுமான அமெரிக்காவிலுள்ள மக்களில் லட்சக்கணக்காண பேர்களாகிய மேற்படி வானமளாவிய மண்டபங்களையும் கூட கோபுரங்களையும் கட்டிய மக்கள் இன்று அங்கு குடியிருக்க, குடியிருக்கக்கூட அல்ல, பகலெல்லாம் தெருத் தெருவாய் திரிந்து விட்டு இரவில் போய் சிறிது நேரம் படுத்தோ உட்கார்ந்தோ கண் அயர்ந்து தூங்கக்கூட இடமில்லாமல் முனிசிபாலிடியார் தெருக்களில் ரிப்பேர் செய்வதற்காக போட்டிருக்கும் குழாய்களுக்குள் போய்ப் படுத்துக் கொள்வதும் பெரிய ஜலதாரைகளுக்குள் இரங்கிப் படுத்துக் கொள்வதுமா யிருக்கிறார்கள் என்றால், வானமளாவிய கட்டடம் இருப்பதின் இரகசியம் என்ன என்று பாருங்கள்.

இந்த அமெரிக்கா தேசமானது ஒரு காலத்தில் அன்னிய அரசர் ஆதிக் கத்திலிருந்து விடுதலை பெற்று சுயராஜ்யம் பெறவும், முடி அரசிலிருந்து விடுதலை பெற்று குடிஅரசு பெறவும் எத்தனை லட்சக்கணக்கான மக்களைப் பறிகொடுத்துத் துப்பாக்கி பீரங்கிக் குண்டுகளுக்கு இறையாக்கி பாலா கத்தி ஈட்டிகளுக்கு இலக்காக்கி கை யொடிந்து, கால் முறிந்து, கண் போய், மூக்குப்



போய், காது போய் உயிர் விட்டு இருக்கவேண்டும் என்பதையும், அப்படி உயிர் விட்டவர்கள் எல்லாம் யாராயிருப்பார்கள் என்பதையும் கவனித்துப் பாருங்கள்.

அது மாத்திரமல்லாமல் இன்று வானமளாவிய மண்டபத்தில் "இந்திரன்" கள் போல் "குபேரன்" கள் போல இருக்கின்றவர்கள் யார்? கஞ்சிக்கு வகையில்லாமல் பெண்டு பிள்ளைகளுடன் தெருவில் திரிந்து ஒண்டவும், ஒதுங்கவும் இடமில்லாமல் தியங்கிப் பரிதவிப்பவர்கள் யார்? என்பதையும் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

இப்படியே இன்று அதாவது அமெரிக்காபோல் அவ்வளவு இல்லை யானாலும் (4500000) நாற்பத்தி ஐந்து லட்சம் பெயர்கள் இங்கிலாந்தில் ஏழை மக்கள் தொழில் இல்லாமல் வாடிவதைகின்றார்கள். சுயாட்சி குடி அரசு ஆட்சி பெற்ற நாடுகளாகிய ஜர்மனியிலும் அப்படியே, ஸ்பெயினிலும் அப்படியே, கிரீசிலும் அப்படியே (ரஷியா தவிர) மற்ற நாடுகளிலும் அப்படியே தான். வேண்டுமானால் எண்ணிக்கையில் சிறிது வித்தியாசமிருக்கலாம். ஆகவே சுயாட்சி, குடிஆட்சி, சுயராஜ்ஜியம் குடி அரசு ஆட்சி என்பவைகளின் புரட்டு களை இதிலிருந்து தெரிந்துகொள்ளுங்கள்.

இன்றைய அரசர்களும், குடி ஆட்சி தலைவர்களும் முதலாளிகளின் பிரதிநிதிகள் என்று மாத்திரம் சொன்னால் போராது முதலாளிகளேயாவார்கள்.

அவர்களுக்கு எதிர்ப்புக்காரர்களாய் எதிர் கட்சியில் இருப்பவர்களாய் இருந்துகொண்டு ஜனங்களின்--ஏழைகளின்-தரித்திர நாராயணர்களின் பெயர்களை சொல்லிக்கொண்டு சுயராஜ்ஜியத்திற்கும் குடி அரசுக்கும் கிளர்ச்சி செய்யும் "வீரர்கள் ஏழைப்பங்காளர்"களாக இருப்பவர்கள் இந்த முதலாளிகளும், ஜமீன்தாரர்களும், மற்றும் இவர்களுடைய பிரதிநிதிகளுமே யாவார்கள். இதில் யாருக்கும் எவ்விதத்திலும், சந்தேகம் வேண்டியதில்லை என்று வற்புறுத்திக் கூறுவோம். சந்தேகமிருந்தால் மேல்கண்ட அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்பெயின், ஜர்மன் ஆகிய தேசத்தை இன்று பாருங்கள். அப்பொழுது உங்களுக்கு உண்மை விளங்கிவிடும். அப்பொழுதும் உங்களுக்கு உண்மை விளங்கவில்லையானால் நீங்கள் இந்த "இம்பா" நாட்டில் (இந்த உலகத்தில்) இருப்பதைவிட "உம்பர்" நாட்டில் (இங்கு இல்லாமல்) இருப்பதே மேலான காரியமாகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 26.03.1933**



RangaRakes tamilnavarasam.com

## காரைக்குடியில் போலீஸ் அட்டூழியம்

காரைக்குடியில் இம்மாதம் 3-ந்தேதி வெள்ளிக்கிழமை மாலையில் கல்லுக்கட்டு என்கின்ற ஒரு ஒதுக்கு இடத்தின் வேலிக்கு உட்புரமாக தோழர் ஜீவானந்தம் அவர்கள் தீண்டாமை என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் சில பார்ப்பனர்களின் ஏவுதலின் பேரில் ஒரு போலீசு சப் இன்ஸ்பெக்டர் கூட்டத்துள் புகுந்து திடீரென்று தோன்றி தோழர் ஜீவனாந்தத்தை யாதொரு முகாந்திரமும் இல்லாமல் கண்ணத்தில் அடித்த தாகவும் காரணம் சொல்லி அடித்தால் நலம் என்று தோழர் ஜீவானந்தம் மரியாதையாய்ச் சொல்லியும் மறுபடியும் பலமாக பல தடவை அடித்ததாகவும் உடனே கூட்டம் கலைந்து விட்டதாகவும், அந்த சப் இன்ஸ்பெக்டர் ஜீவானந் தத்தை அடித்தது மாத்திரம் போதாமல் தோழர் கணபதி என்பவரையும் தெருவில் வழிமறித்து அடித்ததாகவும், பிறகு மறுபடியும் கொஞ்ச தூரத்தில் சென்று கொண்டிருந்த தோழர் ராமசுப்பையா அவர்களையும் ஓடி வழிமறித்து பல அடிகள் கன்னத்தில் அடித்ததாகவும், ஏனய்யா? என்ன காரணமய்யா? சொல்லிவிட்டு அடியுங்களையா என்று கேட்டும் சிறிதும் லட்சியமில்லாமலும் ஈவு இரக்கமில்லாமலும் கண்டபடி அடித்ததாகவும் பிறகு தோழர் ராம சுப்பையா அவர்கள் நாட்டுக் கோட்டை நகரத்தார் என்று தெரிந்தவுடன் அந்த சப் இன்ஸ்பெக்டர் தனக்கு மேலால் ஏதாவது கேள்வி வரக்கூடுமோ என்று பயந்து மூவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப்போய் நியூ சென்சுக்கு சார்ஜ் செய்து கையெழுத்து வாங்கிக் கொண்டு விட்டதாகவும் பத்திரிகைகளில் கண்ட சேதிகளாலும் நேரில் விசாரித்த விசாரனையினாலும் தெரிய வருகிறது.

இந்த நடவடிக்கைகளைக் கண்டித்துப் பொதுக்கூட்டம் போட்டு தீர்மானங்கள் செய்திருப்பதாகவும், இனியும் பல இடங்களில் போலீசாரின் இவ்வித அயோக்கியத்தனமான காரியத்தைக் கண்டித்தும் இந்த சப் இன்ஸ் பெக்டர் மீது தக்க நடவடிக்கை எடுத்து அவருக்குப் புத்தி கற்பிப்பதுடன் இனி எந்த போலீஸ்காரரும் இவ்வித மடத்தனமும் அயோக்கியத்தனமும் பார்ப் பனர்களுக்கு குலாமாயிருந்து இவ்வித இழிவான காரியமும் செய்யாமல் இருக்க எச்சரிக்கும்படியும் அதிகாரிகளுக்குத் தெரிவிப்பதாக தீர்மானங்கள் பலர் செய்திருப்பதாகவும் செய்யப் போவதாகவும் தெரிய வருகின்றது.

போலீஸ் இலாக்காத் தலைமை அதிகாரிகளும், நிர்வாக இலாக்காத் தலைமை அதிகாரிகளும் இதைப்பற்றி இனி என்ன செய்யப் போகின்றார்கள்



என்பதைப் பார்க்கலாம். என்றாலும் அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அந்த "ஜாதியார்" அந்தந்த "ஜாதி" ப்புத்தியைத்தான் காண்பிப்பார்கள். ஒருவர் செய்த அயோக்கியத்தனத்தை அதே உத்தியோகத் தாயிக்குப் பிறந்த மற்றொருவர் அதை மூடிப்பூசி மெழுகும் முறையில் தான் காரியம் செய்வார் கள். 100ல் ஒருவர் 1000ல் ஒருவர் உத்தியோக ஜாதி அபிமானத்தையே பிரதானமாய்க் கருதாமல் ஞாயம் செய்தாலும் செய்வார்கள். ஆதலால் அதைப்பற்றி கவலையில்லை.

ஆனால் சட்ட சபைப் பிரதிநிதிகள் என்கின்ற முடத்தெங்குகள் கோழிக் குஞ்சுகள் பொரித்ததுபோல் பொல பொல வென்று நூற்றுக்கணக்கான மக்கள் பொது ஜனப் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டும் பட்டம் பரிவட்டங்கள் பெற்றுக்கொண்டும் பொதுஜனங்கள் பேரால்-பொதுஜனங்கள் பணத்தில் படிச் செலவு செய்து கொண்டும் வாழ்கின்ற இந்த ஜனப்பிரதி நிதிகள் என்பவர்கள் இந்த இருபது நாளாய் சட்டசபையில் இதைவிட வேறு என்ன வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்பது தான் நமது வேடிக்கைக் கேள்வியாகும்.

தோழர் கே. பாஷ்யம் ஐயங்காரையும் மற்றும் ஏதேதோ அணாமதேய மாம்ச பிண்டங்களையும் பற்றி "அவரை யேன் அடித்தார்கள்" இவருக்கு "ஏன் மோர் கொடுக்கவில்லை" என்பது போன்ற பல கேள்விகள் கேட்டு சர். உஸ்மான் தயவையும் தோழர் கிருஷ்ணய்யர் தயவையும் பெற்ற இந்தப் புலிகள் இந்த மாதிரியான அதாவது பொதுஜன சேவை செய்கின்றவர்களும் ஏழை மக்களுக்காகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தங்கள் சொந்தப் பணத்தை செலவு செய்துகொண்டு யாதொரு சுயநலமும் எதிர்பாராமல் பாடுபடுகின்ற மரியாதையான வாழ்க்கையுள்ள மக்களை இம்மாதிரி தெரு வில் நடக்கும்போது குடிகாரன் வெறிகாரன் போல் ஓடி மரித்து கத்திரிக்காய் பட்டணம்போல் கன்னங்கன்னமாய் பல்லில் ரத்தம் வரும்படி அடிக்கின்றது என்றால். இதைப்பற்றி ஒரு கேள்வியாவது கேட்கவோ ஒரு அவசரத் தீர்மானமாவது கொண்டுவரவோ வேண்டியது அவசியமில்லாமலும், அவசர மில்லாமலும் போனதுதான் நமக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பவர்களுக்குக்கூட இதைப்பற்றிய உணர்ச்சி இல்லாமல் போனது நமக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. இதிலிருந்து நாம் ஒன்றுதான் சொல்ல முடியும். அதாவது அரசாங்கம் என்பதும் ஜனப்பிரதிநிதி என்பதும் ஒரே யோக்கியதை உடையது தான் என்றும் அரசாங்கம் என்பது ஏழை மக்கள் என்னும் பிணத்தைத் தின்னும் குள்ளநரி என்றால் பொதுஜன பிரநிதிகள் என்பவர்கள் அப்பிணத்தைக் கொத்திக் கொத்தி தின்னும் கழுகுக்கு சமானமானவர்களே ஒழிய நரியை விரட்டுகின்றவர்கள் அல்ல என்றுதான் முடிவு செய்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 26.03.1993**



RangaRakes tamilnavarasam.com

# செட்டிநாட்டில் தோழர் ஈ. வெ. இராமசாமி

## கடவுளுக்கு ஒரு வார நோட்டீஸ்

தலைவரவர்களே! தோழர்களே! சமதர்மம் என்பது நமக்கொரு புதிய வார்த்தை அல்ல, எல்லாச் சமூகத்தாரும் எல்லா மதஸ்தர்களும் விரும்புவதும் அந்தப்படியே யாவரும் நடக்க வேண்டுமென்றும் எதிர்பார்ப்பதும், ஒவ்வொரு சமூகத்தானும், ஒவ்வொரு மதஸ்த்தனும் தங்கள் தங்கள் சமூகங்களிலும், மதங்களிலும் இருக்கின்றதென்று சொல்லி பெருமை பாராட்டிக் கொள்ளுவதுமான வார்த்தையேயாகும். ஆனால் காரியத்தில் மாத்திரம் உண்மையான சமதர்ம தத்துவங்களை எடுத்துச்சொன்னால் 'இது சாத்தியப்படுமா' என்று பேசுவதாகவும் இது நாஸ்திகமென்றும், துவேஷமென்றும் சொல்லுவதாகவே இருக்கிறது. எச்சமதர்மக் காரனையாவது அழைத்து உங்கள் சமூகத்தில் மதத்தில் சமதர்மம் இருக்கிறது என்றாயே நீ ஏன் இப்படியிருக்கிறாய், அவன் ஏன் அப்படியிருக்கிறான், நீ ஏன் எஜமானனாயிருக்கிறாய், அவன் ஏன் அடிமையாயிருக்கிறான், நீ ஏன் பிரபுவாய், செல்வந்தனாயிருக்கிறாய், அவன் ஏன் ஏழையாய், தரித்திரனாய், பிச்சைக்காரனாய், பட்டினிகிடப்பவனாயிருக்கிறான்? உனக்கு ஏன் மூன்றடுக்கு மாளிகை? அவனுக்கு ஏன் ஓட்டைக் குடிசை கூட இல்லை? நீ ஏன் வருஷம் 10000 கணக்காய் லாபம் பெருக்கி ராஜபோகம் அனுபவித்து லக்ஷாதிபதியாய் விளங்குகின்றாய்? அவன் ஏன் நஷ்டப்பட்டு, கை முதலை இழந்து கடன் காரனாகிறான்? நீ ஏன் பிச்சை கொடுக்கத் தகுந்தவனானாய் அவன் பிச்சை வாங்கத் தகுந்தவனானான்? நீ ஏன் பாடுபடாமல் வேதத்தையும், மந்திரத்தையும் சொல்லிக் கொண்டு நோகாமல் வயிறு வளர்க்கின்றாய்? அவன் ஏன் பாடுபட்டு இடுப்பொடிந்து, கூன்விழுந்து இளைத்துப்போகிறான். உன் பிள்ளை ஏன் பி.ஏ., எம்.ஏ., ஐ.சி.எஸ். பாரிஸ்டர் படிக்க முடிந்தது? அவன் பிள்ளை ஏன் கையெழுத்துப் போட கூடத் தெரிந்து கொள்ள முடியவில்லை என்பன போன்ற சாதாரணமான பொதுக்கேள்விகளைக் கேட்டால் சமதர்மம் மதக்காரர்கள் என்பவர்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள் என்று யோசித்துப் பாருங்கள்.

முட்டாள்தனமானதும், போக்கிறித்தனமானதுமான பதிலைத்தான் சொல்லுவார்கள். அதென்னபதிலென்றால் "ஐந்து விரல்களும் ஒன்றுபோல் இருக்கின்றனவா? ஒன்று உயர்வு, ஒன்று தாழ்வு ஆகத்தானே கடவுள் சிருஷ்டியின் இயற்கை இருக்கின்றது என்று சொல்லுகிறார்கள். இந்தப் பதிலைப் படித்த மேதாவிகளான பி.ஏ., எம்.ஏ., பண்டிதர்களும், சாஸ்திரிகளும், குருமார்களும், பாதிரிகளும் மௌலானாக்களும், தத்துவஞானி என்பவர்களும், மகாத்மாக்கள் என்பவர்களும் அரசியல் ஞானிகள் சீர்திருத்தக்காரர்கள், பரோபகாரிகள், ஆஸ்திகர்கள், பிரமஞானிகள், பிரம சமாஜக்காரர்கள் முதலாகிய எல்லாப் 'பொருப்பு வாய்ந்த' கனவான்களும் சொல்லுகின்றார்களென்றால் இந்தக் கூட்ட மக்களோ, மதமோ, அரசியலோ, ஞானமோ, சமதர்மமாகுமா என்று யோசித்துப்பாருங்கள்.

ஏழை பணக்காரக் கொடுமைக்கும், சோம்பேறி உழைப்பாளி தன்மையில் உள்ள வித்தியாசத்திற்கும் "ஐந்து விரல்களும் ஒன்று போலிருக்கின்றனவா" என்கின்ற உதாரணத்திற்கும் ஏதாவது பொருத்தமிருக்கிறதாவென்று யோசித்துப் பாருங்கள். இந்த பதிலை ஒன்றா முட்டாள்த்தனம் அல்லது போக்கிறிதனமான பித்தலாட்டத்தனம் என்று தானே சொல்லவேண்டும். இன்னும் வெளிப்படையாகப் பேச வேண்டுமானால் இன்று காணப்படும் மதம், ஜாதி, சமூகம், அரசாங்கம், ஞானம், தத்துவ சாஸ்திரம் முதலியவைகளெல்லாம் சமதர்மத்துக்கு விரோதமான சூஷி எண்ணத்தின் மீது கட்டப்பட்டவைகளென்று தான் சொல்லவேண்டும். இதுமாத்திரமல்லாமல் இவைகளெல்லாவற்றிற்குமாதாரமாய்க் கொள்ளப்படும் கடவுள் என்ற தன்மையும் இந்த உண்மை சமதர்மத்திற்கு விரோதமான தன்மைகளை நிலைநிறுத்தவும் அதன் குற்றங்களை உணராமலிருக்கவும், திருத்துப்பாடு செய்யாமலிருக்கவும் தந்திரக்காரர்கள் செய்த சூஷியேயாகும். அல்லவென்றால் இச்சூட்சிகளைக் கண்டுபிடிக்க முடியாத திருத்துப்பாடு செய்துகொள்ள முடியாத மூட மக்களின் அறியாமை உணர்ச்சியேயாகும்.

இன்றையத்தினம் வார்த்தையில் சமதர்மமே யொழிய காரியத்தில், வாழ்க்கைத் தத்துவத்தில் எங்கே சமதர்மம் இருக்கிறது?

ஒருவனுக்கு மகிமையில், சம்பாதனையில், அல்லது சொத்தில் இத்தனையில் ஒரு பங்கு என்று பிச்சை கொடுத்துவிட்டால் அது சமதர்மமாகிவிடுமா? ஒருவனை தொட்டுக் கொண்டால் அது சமதர்மமாகிவிடுமா? ஒருவன்கூட இருந்து சாப்பிட்டுவிட்டால் அது சமதர்மமாகிவிடுமா? ஒருவனைக் கோவிலுக்குள் விட்டுவிட்டால் அது சமதர்மமாகிவிடுமா? ஒருவன் கூடஇருந்து கடவுளைப் பிரார்த்தனை செய்தால் அது சமதர்மமாகிவிடுமா? ஒருவன் கஞ்சித்தொட்டிவைத்து எல்லோருக்கும் கஞ்சி ஊற்றினால் அது சமதர்மமாகிவிடுமா? ஒரு சத்திரம் கட்டி வைத்துவிட்டால் அது சமதர்மமாகிவிடுமா? எல்லோரையும் ஒன்றாய் உட்கார்ந்து படிக்கச் சொன்னால் சமதர்மமாகிவிடுமா? எல்லோரும் ஒன்றாயிருந்து கும்பிட ஒரு கோவில் கட்டி விட்டால் சமதர்மமாகிவிடுமா வென்றுயோசித்துப்பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

இவற்றால் இதைசெய்கின்ற மனிதனுக்கோ, இதை அனுபவிக்கின்ற மனிதனுக்கோ, முறையே நஷ்டமென்ன? லாபமென்ன? இவையெல்லாம் வெரும் பித்தலாட்ட சமதர்மங்கள்.

உலகம் பொது, உலகத்திலுள்ள செல்வம் போக போக்கியம் பொது, உலகத்தில் மனிதவாழ்க்கைக்கு வேண்டிய காரியத்திற்காக மனிதன் செய்ய வேண்டிய வேலைகளெல்லாம் பொது, அதனால் ஏற்படும் பலன்களெல்லாம் எல்லா மக்களுக்கும் பொது-சரிபாகம் பிரித்துக்கொள்ளத்தக்கது. இதற்கு மீறி நடந்தால் குற்றம்-தண்டிக்கத்தக்கது என்று எந்த மதம், எந்த சமூகம், எந்த அரசாங்கம், எந்த அரசியல் ஞானம், எந்த மதத் தத்துவஞானம், எந்த மகாத்மா முதலியவைகள் கூறுகின்றன என்பதை சிறிது யோசித்துப் பாருங்கள். மத வெறி காரணமாக தன்தன் மதம் சமதர்ம மதம் என்பதும், சமயவெறி காரணமாக தன் தன் சமயம் சமதர்ம சமயமென்பதும் அரசியல் வெறி-சூக்ஷி காரணமாக தன் தன் அரசியல் முறை சமதர்மம் என்பதுமான பித்தலாட் டங்கள் தான் நடைபெறுகின்றனவேயல்லாமல் உண்மை சமதர்மம் எங்கே இருக்கின்றது? எதில் இருக்கின்றது என்பதை நடுநிலையிலிருந்து யோசித்துப் பாருங்கள்.

அரசனும், ஆண்டியும் ஒன்றாயிருந்து ஒரு ஓட்டலிலிருந்து சாப்பிட்டால், ஒரு கோயிலில் கும்பிட்டால், ஒரு பள்ளிக்கூடத்தில்படித்தால், ஒரு தெருவில் நடந்தால், ஒரு குளத்தில் தண்ணீர் சாப்பிட்டால், ஒரு காற்றை சுவாசித்தால் இவையெல்லாம் எப்படி சமதர்மமாகிவிடும்? என்று யோசித்துப் பாருங்கள். இதைச் சொல்லி மக்களை இன்னும் எத்தனை காலத்திற்கு உண்மையான சமதர்ம மில்லாமல் கொடுமைப்படுத்தி ஏழைகளின்-தொழில் செய்து, பாடுபடும் பாட்டாளிகளின் ரத்தத்தை சோம்பேரிகளும், சுயநலக் காரர்களும், வன்னெஞ்சக்காரர்களும் உரிஞ்சும்படி விட்டுக்கொண்டிருப்பது என்பதை யோசித்துப் பாருங்கள். மேல்கண்ட கொடுமைகளுக்கும், பித்தலாட் டங்களுக்கும் உயர்வு தாழ்வுகளுக்கும் என்ன சமாதானமிருக்கின்றது. ஆண்டவன் செயல், 'கடவுள் சித்தம்' 'அவனவன் முன் ஜென்மப்பலன்' என்று சொல்வதோடு 'ஐந்து விரல்களும்' ஒன்று போல் இருக்கின்றனவா என்று கேட்கும் கேள்வியுமல்லாமல் வேறு என்ன? ஆண்டவன் செயலை ஒப்புக்கொள்ளாதவனும் ஐந்துவிரலும் ஒன்று போலிருக்குமா என்கின்ற சமாதானத்தை ஏற்றுக்கொள்ளாதவனும் இந்த சமாதானத்தைப்பற்றி என்ன சொல்லக்கூடும்? இந்த சமாதானம் போக்கிரித்தனமானதும், முட்டாள் தனமானதும், பித்தலாட்டமானதும் என்று தானே சொல்லித்தீர வேண்டும். ஐந்து விரல்களும் ஒன்றுபோலிருக்கின்றனவா வென்று கேட்டவர்கள் அரசியலில் சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் கேட்பதின் கருத்து என்ன? ஒன்றாய் சாப்பிடவும், ஒன்றாய் பிரார்த்தனை செய்யவும், ஒன்றாய் படிக்கவும், ஒன்றாய் உத்தியோகம் பார்க்கவும், ஒன்றாய் அதிகாரம் செலுத்தவும், உரிமைகள் கேழ்ப்பதின் அர்த்தம் என்னவென்று யோசித்துப்பாருங்கள்.



வெள்ளைக்காரன் இந்த நாட்டுச் சொந்தக்காரன் அல்லாததால் இந்த நாட்டை விட்டுப்போய் விட வேண்டும் என்கின்றோம். அதே முறையில் பணக்காரனும், மிராசுதாரனும், ஜமீன்தாரனும் பாடு படாதவர்களானதினால் அவர்கள் மற்றவர்கள் பட்டபாட்டின் பலன்களை அனுபவிக்கத் தகுதியுடை யவர்கள் அல்லவாதலால் அவைகளை எல்லாம் பாடு படுவர்களுக்கு விட்டு விட்டு அவர்களும் மண்வெட்டி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் சொன்னால் "ஐந்து விரல்களும் ஒன்று போலிருக்கிறதா? ஆண்ட வன் செயலுக்கு யார் என்ன செய்யக்கூடும்?" என்றால் இது போக்கிரித் தனமான சமாதானமா? இல்லையா வென்று யோசித்துப்பாருங்கள்.

சில சமயக்காரர்கள்-சீர்திருத்த வாதிகள் பிறவியில் ஜாதி உயர்வு தாழ்வு கூடாது என்கின்றார்கள். காரணம் என்னவென்றால் சமதர்மம் என்கின்றார்கள். இது சரிதான். ஆனால் பிறவியில் பணக்காரர்கள், ஜமீன் தாரர்கள் ராஜாக்கள், பிரபுக்கள், ஏழைகள், வெட்டியான்கள் என்னும் வகுப்பு களும் பணவிஷயமான-தொழில் விஷயமான வித்தியாசங்களும் இருப்பது சமதர்மமா என்று கேட்டால் அதை "ஆண்டவன் - செயல்" என்கின்றார்கள். இது நியாயமா அல்லது அயோக்கியத்தனமா வென்று யோசித்துப்பாருங்கள். போலி சமதர்மத்தையும், ஆண்டவனையும், ஐந்துவிரல்களையும் போக்கிரி கள் தங்கள் சுயநலத்துக்கு தகுந்தபடி உபயோகித்துக்கொண்டு மூடர்களை நம்பச் செய்து, மோசம் செய்து வருகின்றார்கள். ஆதலால் சமதர்மத்தில் உண்மையான திருஷ்டியுள்ளவர்கள் இந்த ஆண்டவனை - சமதர்மத்துக்கு விறோதமான ஆண்டவனை போக்கிறிகளும், சோம்பேரிகளும் தங்கள் சுயநலத்துக்கு உபயோகித்துக்கொண்டு தொழில் செய்யும் பாட்டாளி களையும், ஏழைமக்களையும் ஏமாற்ற உபயோகிக்கும் ஆண்டவனை அடியோடு ஒழிக்க வேண்டியதுதான் சமதர்மத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டும் வேலையாகும்.

ஏனெனில் ஆண்டவன் என்கின்ற ஒரு சாக்கு சொல்ல இடமில்லை யானால் உலகிலுள்ள அயோக்கியத்தனங்களுக்கும், கொடுமைகளுக்கும், பித்தலாட்டங்களுக்கும், எந்த மனிதனாலும் எப்படிப்பட்ட சமாதானமும் சொல்ல முடியவே முடியாது. அப்படி வேறு எந்தசமாதானமும் சொல்லப்பட்ட போதிலும் அந்த சமாதானங்கள் அரை நிமிஷநேரம் கூட நிலைக்காது. ஆண்டவன், கடவுள், பகவான் என்கின்றதான வார்த்தைகள் அர்த்தமற்றதும் வெகுகாலமாகச் சொல்லிச்சொல்லி மக்களைப் பயப்படுத்தி அவர்களது ரத்தத்தில் ஊரச்செய்து விட்டதினாலும், அந்த ஒரு வார்த்தைக்குத் தான் உழைப்பாளிகளான மூட ஜனங்கள் பயப்படுகின்றார்கள்.

உண்மையான சமதர்மத்தைவிரும்புகின்ற மக்கள் எவ்வளவுதான் ஆஸ்திகர்களா யிருந்தாலும் கொஞ்ச காலத்திற்காவது அவர்களது கடவுளை பகிஷ்காரம் செய்து வைத்துத்தான் ஆக வேண்டும். அல்லது ஐந்து நாள் பத்து



RangaRakes tamilnavarasam.com

நாள் வாய்தாக் கண்டு கடவுளுக்கு ஒரு நோட்டீஸாவது கொடுத்தாக வேண்டும். அதாவது,

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பாடுபடும் மக்களாகிய நாங்கள் அதுவும் ஜனங்களிடம் பக்தி கொண்டு, உனது படைப்பு களான உலக மக்களுக்கு விவசாயம் செய்து தானியங்களை உண்டாக்கியும் தொழில்கள் செய்து சாமான்களை உண்டாக்கியும், வேலைகள் செய்து அவை களை நாட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தும் கொடுத்த மக்களாகிய நாங்கள் இன்று மாத்திரமல்லாமல், வெகு காலமாய் வீடு இல்லாமல், போதிய துணிக ளில்லாமல் ஆகாரமில்லாமல் அவஸ்தைப்பட்டு பட்டினி கிடக்கின்றோம். மேற்கண்ட பாடுகள் படாத சோம்பேறிகள் ராஜாவாகவும், ஜமீன்தாரனாகவும், முதலாளியாகவும், குருவாகவும், மதப்பிரசாரகனாகவும், பெரிய பெரிய அதிகாரியாகவும் இருந்து கொண்டு அளவுக்கு மேல் அனுபவித்துக்கொண்டு மனம் பதரும்படி செல்வங்களை வீணாக்கிக்கொண்டு வாழ்கின்றார்கள். இவைகளையெல்லாம் ஒரு வாரத்தில் சரிசெய்து எல்லோருக்கும் செல்வத் தையும், வேலையையும் சரி சமமாக்கி சமதர்மத்தை ஏற்பாடு செய்கின்றாயா? இல்லையா? ”

என்று ஒரு நோட்டீஸ் கொடுத்து விட வேண்டும். ஒரு சமயம் ஆஸ்திகர்களான கடவுள் பிரசாரகர்கள் இதற்கு-இவ்வளவு பெரிய காரியத் திற்கு ஒரு வாரம் போறுமா வென்று கேழ்ப்பார்கள். கடவுள் சர்வசக்தியும் நினைத்த மாத்திரத்தில் எதையும் செய்யக்கூடிய வல்லமையும் உடையவர் என்று சொல்லப்படுவதால் ஒரு வார நோட்டீஸே அதிக காலம் என்று சொல்லலாம். ஆகையால் அந்த வாய்தாவில் சமதர்மம் ஏற்படாவிட்டால் அதை ஒழித்து அந்த உணர்ச்சியையே அப்படி ஒரு விஷயமோ, வஸ்துவோ, பொருளோ ஒன்று இருந்ததாகவே ஞாபகத்திற்கு வரமுடியாமல் செய்து சமதர்மத்தை நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும்.

அப்படிக்கில்லாமல் செக்கு மாடு சுற்றுவது போலும், அறைத்த மாவையே திரும்பத்திரும்ப அரைப்பது போலும், ஆண்டவன் செயல், ஆண்டவன் செயல் என்று சொல்லிக்கொண்டும் ஆண்டவனை தினம் 5-தடவை 10-தடவை பிரார்த்தித்துக்கொண்டும், பூஜை, உற்சவம், பிரார்த்தனை செய்யச்செய்து கொண்டுமிருப்பதில் பயனென்னவென்பதை யோசித்துப் பாருங்கள்.

சமதர்மம் என்று நாம் சொல்வது எல்லா மக்களுடைய, எல்லா மத மக்களுடைய, எல்லா உலக மக்களுடைய சமத்துவத்தைப் பொருத்ததே யொழிய யாரோ, ஒரு சில சமூகத்திற்கோ, வகுப்புக்கோ, மதத்திற்கோ, தேசத் திற்கோ என்பதாக அல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் மனிதனின் வாழ்க்கைக்கு சமதர்மம் என்பது ஒப்பற்ற சாந்தியையும், மனத் திருப்தியையும், நிம்மதியையும் அளிப்பதாகும். இன்று மனித சமூகமென்



பதில் எந்த ஒரு தனிமனிதனுக்கும் அவன் எந்த நிலையில் இருப்பவனா னாலும், எந்தப் பதவியிலிருப்பவனானாலும் சாந்தியோ, மனதிருப்தியோ, நிம்மதியோ, உண்மையான சந்தோஷமோ, பரஸ்பர அன்போ, பொறாமை யற்ற தன்மையோ இருக்கின்றதா வென்பதை யோசித்துப் பாருங்கள்.

*குறிப்பு: 20.03.1933 இல் சிவகங்கை அரண்மனை வாசல் மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 02.04.1933**



RangaRakes
tamilnavarasam.com

# சைனா - ஜப்பான் யுத்தம்

சைனாவுக்கும், ஜப்பானுக்கும் சுமார் ஒன்றரை வருஷ காலமாக யுத்தம் நடைபெற்றுவருகின்றது. இதுவரை யுத்தத்தில் லட்சக்கணக்கான மக்கள் மடிந்து விட்டார்கள். பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிந்தும் விட்டன.

இந்த யுத்தத்தின் தத்துவம் "வலுத்தவன் இளைத்தவனை உதைத்து அவனிடமிருப்பதை பிடுங்கிக்கொள்ளலாம்" என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

நம்மைப் பொருத்தவரையில் சீனாவை சீனாக்காரனாண்டாலும்சரி, ஜப்பான்காரனாண்டாலும் சரி இதில் ஒன்றும் நமக்கு பிரமாதமான கவலை யில்லை. ஆனால் இதில் நடைபெறும் சூழ்ச்சிகள் ஒழிக்கப்படவேண்டிய தாகும்.

சர்வதேச சங்கம் என்று ஒன்றிருப்பது யாவருக்கும் தெரியும். அது "உலக சமாதானத்துக்காக இருந்து வருகிறது" என்று சொல்லப்படுவதாகும். எப்படியென்றால் 1914ல் ஏற்பட்ட பெரிய யுத்தத்தின் பயனாய் அநேக உயிர்ச் சேதங்கள் பொருள் சேதங்கள் ஏற்பட்டு உலக பொதுஜனங்களுக்கும் அதிக மான கஷ்டங்களைக் கொடுத்து விட்டதால் "இனி ஒருவருக்கொருவர் நாடு பிடிக்கும் ஆசைகொண்டு யுத்தம் செய்து கொள்ளக் கூடாது" என்பதற் காகவே ஏற்பட்டதாகும்.

ஆனால் இதை நாம் ஒரு நாளும் சரி என்று ஒப்புக்கொள்வதில்லை. ஏனெனில் ஒரு தேசத்தை மற்றொரு தேசத்தானாளுவதும், ஒருவன் அதிக பூமி வைத்துக்கொண்டு மற்றொருவனுக்கு சிறிய பூமியை விட்டு அத்துட னேயே அவனை இருக்கச் செய்வதும், ஒரு நாட்டிற்கு அதிக சௌகரியமும் ஒரு நாட்டுக்குச் சௌகரியக் குறைவும் இருப்பதும் ஆகியவையான இப்படிப்பட்ட நிலையில் "இனி ஒருவரும் நாடு பிடிக்கும் ஆசையில் சண்டை பிடிக்கக்கூடாது" என்று தீர்மானம் செய்து கொண்டால் அது சிறிய நாடுகளுக்கும், ஒருகாலத்தில் தோல்வியடைந்து தனது நாடுகளை அன்னிய னுக்கு விட்டு விட்ட நாடுகளுக்கும், அன்னியன் ஆதிக்கத்தில் சிக்குண்டு



அடிமைப்பட்டுத் தவிக்கும் நாடுகளுக்கும் கஷ்டமாகத்தான் இருக்கும். பிற நாட்டானிடம் சென்று தங்கள் குறைகளை எடுத்துச்சொல்லி விடுதலை பெறுவதற்கும் இடமில்லாமல் போய்விடும்.

ஆதலால் இது சூதாடிகள் தங்கள் சூதாட்ட முடிவில் ஜெயித்துக் கொண்டவர்களும் தோற்றுவிட்டவர்களும் சேர்ந்து "இனிமேல் நாம் யாவரும் சூதாடக்கூடாது" என்று ஒரு ஒப்பந்தம் பேசிக்கொண்டால் எப்படி அது ஜெயித்தவர்களுக்குத்தான் லாபமாகவும் தோற்றவர்களுக்கு நஷ்ட மாகவும் இருக்குமோ அதுபோன்ற ஒப்பந்தமேயாகும். அப்படியிருந்தும் அந்தப்படி ஒரு ஒப்பந்தம் செய்துகொண்ட பிறகாவது அது கிரமமாய் நடைபெறுகின்றதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. எப்படியெனில் இப்போது சைனா தேசத்தையும் ஜப்பான் தேசம் துன்புறுத்தி யுத்தத்தில் ஜெயிக்கப்பார்க்கிறது. இதற்கு ஜப்பான் சொல்லும் காரணம் "எனது ஜனத் தொகை அதிகமாய் விட்டது, தொழில் திறமையில் நான் மேன்பாடடைந்து விட்டேன். எனக்கு இன்னும் அதிகமான துறைமுகங்கள் வேண்டும். ஆதலால் சைனாவைக் கைப்பற்ற வேண்டியிருக்கிறது என்கின்ற காரணமே ஒழிய வேறில்லை" என்கின்றது.

இதை பிரிட்டிஷ் பத்திரிகைகளில் சிலது ஆதரித்தும் எழுதுகிறது. அதாவது "ஜப்பான் தேசம் தனது நெருக்கடியாலும் அடிக்கடி ஏற்பட்ட பூகம்பத் தொல்லைகளாலும் மிகவும் கஷ்டப்படுகிறது. இதற்கு ஏதாவதொரு வழி ஏற்பட்டுத்தானாகவேண்டும்" என்று எழுதியிருக்கிறது.

இதுதான் ஜப்பானின் நிலைமை. ஆனால் சர்வதேச சங்கம் தங்களது ஒப்பந்தங்களை மீறி ஜப்பான் நடந்ததற்கு என்ன செய்தது என்று பார்ப் போமானால் எழுத்தில் ஜப்பானை ஊரார் மெப்புதலைக்கு பொய் மிரட்டு மிரட்டுவதும் காரியத்தில் ஜப்பானுக்கு வேண்டிய ஆயுதங்களைக் கடனாக என்று கொடுப்பதும், ராணுவ வீரர்களை ரகசியமாயனுப்புவதும் சண்டைக்கு வேண்டிய சண்டைக் கப்பல் சண்டை ஞானம் முதலியவைகளை ரகசியமாய் உதவுவதுமாயிருக்கின்றதாம்.

இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் " சைனாவை ஜப்பான் கைப்பற்றா விட்டால் அது ரஷ்ய செல்வாக்காலும், ஆதிக்கத்தாலும் சைனா முழுவதும் பொதுவுடமை தேசமாகிவிடும்" என்றும், "சைனாவும், ரஷ்யாவும் பொதுவுடமை தேசமாகி விட்டால் இந்தியாவே பொதுவுடமை ஆட்சிக்கு தலைமை ஸ்தாபனமாகிவிடும்" என்றும் "அப்போது மற்ற தேசங்கள் எல்லாம் வலிய வந்து பொதுவுடமையை சரணமடைய வேண்டி ஏற்பட்டு விடும் என்றும் சர்வதேச சங்கமும் சிறப்பாக பிரிட்டனும் கருதுகின்ற காரண மேயாகும்.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே சர்வதேச சங்கம் இப்பொழுது எதற்கு என்னமாயிருக்கின்றது என்று பார்த்தால் அது முதலாளிகளின் கூட்டுறவுச் சங்கமாகவும், ஏழைகளை வஞ்சித்து வதைக்கும் சதிகார சங்கமாகவும் தான் இருக்கின்றது.

இதில் தலை சிறந்து விளங்குவது பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மென்பதே பொதுவுடமைக்காரர்களின் முடிவு. அதுவே உண்மையுமாகும். மற்ற அரசுகளும் பொதுவுடமையை எதிர்க்கவோ ஒழிக்கவோ பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் தான் தூண் போல நம்பியிருக்கின்றது. இந்தியாவும் இந்திய முதலாளிகளும், இந்திய சமஸ்தானங்களும், இந்திய அரசியல் கிளர்ச்சிகளும் பிரிட்டிஷுக்கு அடிமையாகவும் பிரிட்டிஷ் கொள்கைகளைப் பின்பற்றுவனவாகவும் பிரிட்டிஷைப் போலவே பொதுவுடமைக் கொள்கையை வெறுப்பாகவும் இருப்பதால் இந்தியாவுக்கு என்ன அதிகாரம் என்ன சுதந்தரம் கொடுத்தாலும் தங்களுக்கு அழிவுவராதென்கின்ற தைரியம் பிரிட்டிஷுக்கு இருப்பதால்-இந்திய ஆதாரத்தால் பிரிட்டிஷும் உலகில் ஒரு பெரிய வல்லரசாக இருந்து சர்வதேச சங்கத்தை ஆட்டிவைக்கின்றது. பிரிட்டிஷ் பார்த்து உண்மையான முறையில் ஒரு மிரட்டு மிரட்டியிருக்குமானால் ஜப்பான் நடுநடுங்கி யுத்தத்தை விட்டு மன்னிப்புக்கூட கேட்டிருக்கும். ஆனால் பிரிட்டிஷானது அப்படிச் செய்வதற்கு பதிலாக ஜப்பானுக்கு யுத்தக்கப்பல்கள் தளவாடங்கள், தளகர்த்தர்கள், பணம் ஆகியவைகளை சப்ளை செய்கிறது என்றும், இன்று சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் சைனாவுடன் ஜப்பான் சண்டை செய்யவில்லை என்றும் பிரிட்டிஷ் தான் ஜப்பான் பேரால் சண்டை செய்கின்றது என்றும் சொல்லத்தக்க மாதிரியில் லண்டனிலேயே சேதிகள் வெளியாகின்றன. இதை நம்பாமல் இருக்க போதிய காரணம் இல்லை.

இந்த சண்டைக்குப் பெயர் சீனா ஜப்பான் சண்டை என்றோ, பிரிட்டிஷ் சைனா சண்டையென்றோ சொல்வதையெல்லாம்விட முதலாளி தொழிலாளி சண்டையென்று சொல்லுவதுதான் சரியான பெயர் என்பது நமது கருத்து.

நிற்க, இந்திய தேசியமும் சீனா ஜப்பான் சண்டையை முதலாளி தொழிலாளிச் சண்டை என்று அறிந்து கொண்டதினாலேயே அதைப்பற்றி காதிலேயே போட்டுக் கொள்ளாமல் தனது முதலாளித் தனத்தைக் காப்பாற்ற யாருக்கோ வந்த விருந்து போல் நடித்துக்கொண்டிருக்கின்றது.

இது விஷயத்தைப்பற்றி தோழர் சக்லத்வாலா அவர்கள் பேசியிருக்கும் பேச்சை மற்றொரு பக்கத்தில் காணலாம். அதிலிருந்து சீனா ஜப்பான் யுத்த ரசசியமும், பிரிட்டிஷ் நிலைமையும், இந்தியத் தேசியத் தலைவராகிய தோழர் காந்தியின் நிலைமையும் ஒருவாறு விளங்கும். மற்ற விபரம் பின்னால் எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 02.04.1933**



# மாரியம்மன்

## வரவேற்கின்றோம்

மக்கள் மாரியம்மன் பண்டிகையின் பேரால் காட்டுமிராண்டித்தனமாக தப்புகளைக் கொட்டிக் கொண்டும் மலைவாச லம்பாடிகள் ஆடுவதுபோன்ற ஆட்டங்களையும் ஆடிக்கொண்டும் கீழ் மக்கள் நடப்பதுபோன்ற வேஷங்களைப் போட்டுக்கொண்டும், ஆபாசமான பேச்சுகளைப் பேசிக்கொண்டும், ஆயிரக்கணக்கான ரூபாய்களை பாழாக்கிக்கொண்டும் செய்துவரும் அக்கிரமம் இந்த நாட்டில் அறியாதார் யாரும் இல்லை.

இது நாளாக நாளாக அதிகமாகின்றதே தவிர மக்களுக்கு அறிவு வந்து, இந்த பழயகால நிலைமை சிறிதாவது மாறி இருக்கின்ற தென்று சொல்லுவதற்கே இல்லை.

முழுமுதற் கடவுளென்று சொல்லப்பட்ட விஷ்ணு, சிவன் என்கின்ற கடவுள்களின் "பாடல் பெற்ற ஸ்தல" உற்சவம் பூசை முதலியவைகள் எல்லாம் கூட இப்பொழுது பெரிதும் குறைந்து வருகின்றன. இந்த உற்சவ வரும்படிகளும் சரி பகுதிக்கு குறைந்தும் வருகின்றன.

ஒரே கடவுள் என்று சொல்லுகின்ற அல்லாசாமியின் உற்சவமும் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது. ஆனால் இந்தமாரிகருப்பன், காத்தவராயன் என்று சொல்லப்பட்ட "கீழ்த்தர பரிவார தேவதைகள், என்று சொல்லப்படும் சாமிகளின் பக்தர்கள் செய்யும் ஆர்ப்பாட்டம் இப்போது அளவுகிடையாது. இந்த "தேவதைகளை" வணங்குவதும் இவைகளுக்கு உற்சவம் செய்வதும் கீழ் மக்களாயிருப்பவர்களது செய்கை என்று அனேக சைவ வைணவ பண்டிதர்கள் எழுதி இருக்கின்றார்கள். அன்றியும் மாரி என்றால் என்ன அது எப்படிப்பட்ட தெய்வம் அதன் கதை என்ன என்பது யாருக்காவது தெரியுமா? அது அறிவுள்ள மக்களால் ஒப்புக் கொள்ளக் கூடியதா? என்று பார்த்தால் அது கடைசியில் சைபராகத்தான் முடியும், இம் மாதிரி அர்த்தமற்றதும் அனாகரீகமானதும் காட்டுமிராண்டித்தனமானதுமான காரியங்களை மதத்தின் பேரால், கடவுள்களின் பேரால் சற்றும் மான வெட்க



RangaRakes tamilnavarasam.com

மில்லாமல் செய்து கொண்டிருக்கின்ற மக்கள் நம்மை நாஸ்திகமென்றும், மத தூஷணை என்றும், கடவுள் தூஷணை என்றும் சொல்லுவது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. இந்த லட்சணத்தில் இந்த மாரியாயி என்கின்ற சாமிகள் ஒரு ஊருக்கு இரண்டு மூன்று இருந்துகொண்டு ஏககாலத்தில் உற்சவம் செய்து சிறுபிள்ளைகளின் புத்தியை மூடமாக்கி அவர்களையும் காட்டுமிராண்டிகள் போல குதிக்கும்படி செய்வது மிகவும் அக்கிரமமான காரியமாகும். இதற்கு வியாபாரிகள் என்று சொல்லப்படுவோர்கள் கடைகடைக்கு 10-ம் 5-ம் கொடுத்து இதை வளர்ப்பது என்பது அதி மூடத்தனமும் அக்கிரமுமான காரியமாகும்,

மற்றும் இப்படிப்பட்ட காரியங்கள் பொது ஜனங்கள் சுகாதாரத்திற்கு எவ்வளவு கெடுதி என்றும் கட்சிப்பிரதி கட்சிகளால் பொதுஜன அமைதிக்கு எவ்வளவு பங்கம் என்றும் நாம் எடுத்துக்காட்டவேண்டியதில்லை.

உதாரணமாக ஈரோட்டில் 3 மாரியம்மன்கள் உண்டு. இவைகள் கட்சி யில்லாமல் நடந்த காலமே அருமை. தவிர ஒவ்வொரு கோவிலும் ஊருக்குள் வீடுகளுக்கு மத்தியில் இருக்கின்றது. உற்சவ காலத்தில் இரவு எல்லாம் தப்புக்கொட்டுவது அக்கம் பக்கத்திய ஜனங்களுக்கு தூக்கம் இல்லாமல் செய்துவிடுகிறது. இவற்றுள் ஒன்று குழந்தைகள் பெண்கள் ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில் இருக்கிறது. இதற்குப் பெரிய மாரியம்மன் என்று பெயர். இந்த கோவிலில் தப்பட்டை அடிப்பதால் ஆஸ்பத்திரி வியாதியஸ்தர்களுக்கு அதிக தொல்லை உண்டு. ஆதலால் இந்த வருஷம் ஆஸ்பத்திரி நிர்வாகஸ்தர் சர்க்காருக்கு விண்ணப்பம் போட்டு இரவு பத்து மணிக்கு மேல் கோவிலில் தப்புக் கொட்டக்கூடாது என்ற உத்திரவை கோவில் அதிகாரிகளுக்கு சார்வு செய்திருப்பதாய்த் தெரிகின்றது. இந்தப் பெரிய மாரி இந்த உத்திரவு போட்ட வர்களையும் கேட்டவர்களையும் என்ன செய்யுமென்பது இனிமேல் பார்க்கக் கூடிய விஷயமானாலும் இந்த உத்திரவை நாம் இப்போது மனமார வரவேற் கின்றோம்.

## போலீசுக்கு ஒரு வார்த்தை

கடைசியாக போலீசுக்கு ஒரு வார்த்தை. இந்த பண்டிகையை உத்தே சித்து வாலிபர்களில் பலர் பலவித ஆபாசமான வேஷம் போட்டு பொது ஜனங்களை பணம் கொடுக்கும்படி தொந்திரவு செய்வதும் குடித்து விட்டு கண்டபடி தப்புக்கொட்டிக்கொண்டு ஆபாசமான வார்த்தைகளைப் பேசிக் கொண்டு திரிவதுமான காரியங்களை போலீசார் கவனித்து நியூ சென்சுக்கு சார்ஜ் செய்வதன் மூலம் இக்காரியங்களைச் செய்தால் அதனாலும் வாலிபர் களுக்கு பல நன்மைகள் ஏற்படும் என்றும் இப்படிச் செய்வதையும் மனமார வரவேற்போம் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 02.04.1933**



## சர்வமத கண்டனம்
# மதப்பிரசாரம்

மதப் பிரசாரகர்கள் என்பவர்கள் 100க்கு 99பேர்கள் மதத்தை பற்றி எங்கோ மூலை முடுக்குகளிலோ அல்லது வேதம் வேதாந்த சாஸ்திரம் என்பவைகளில் உள்ளவற்றை எடுத்து தங்கள் இஷ்டபடி வியாக்கியானம் செய்தோ பிரசாரம் பண்ணிக் காட்டி பாமர மக்களை ஏமாற்றி தங்கள் தங்கள் மதம் பெரிதென்று பேசி சண்டப் பிரசண்டர்களாகிறார்களே ஒழிய அந்த மதத்தை சேர்ந்த 100 க்கு 99 முக்கால் பாக மக்களிடத்தில் அந்த மதத்தின் பேரால் நடக்கின்ற காரியங்களைப் பற்றி எடுத்துச் சொல்லி தங்கள் மதத்தின் யோக்கியதையை நிர்ணயிக்கும் யோக்கியர்கள் இன்று மிக மிக அருமை யாகவே இருக்கிறார்கள். ஒவ்வொரு மதத்துக்கும் வேதமிருக்கிறது புராண மும் இருக்கின்றது. ஒவ்வொரு மதத்திலும் 100க்கு 99 முக்காலரைக்கால் மக்கள் புராணப்படி தான் புராணத்திலுள்ள வேஷக் குறிபடிதான் நடக்கின் றார்களே ஒழிய வேறில்லை. அதாவது ஒவ்வொரு மதத்ததுக்கும் தலை மயிரில் மத தத்துவம் இருக்கிறது, உடையில் மத தத்துவமிருக்கிறது. ஆகாரத் தில் மத தத்துவமிருக்கிறது, மனிதவாழ்க்கை சம்பந்தம், புணர்ச்சி பந்துத் துவமுறை ஆண் பெண் தத்துவம், கல்யாணம், உற்சவம் சொத்துரிமை முதலாகியவைகளிலும் மத தத்துவம் இருக்கின்றது. இவை மாத்திரமல்லாமல் ஒவ்வொருவரும் தங்கள் கடவுளை ஆதாரம் வைத்து அவர் வார்த்தையில் நம்பிக்கை வைத்துத் தான் இவற்றில் அனேகத்தை நிர்தாரணம் செய்கின் றார்கள். ஒரு மதத்தை விட்டு மற்றொரு மதத்திற்கு ஜனங்கள் மாறிக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஒவ்வொரு மதத்திலும் சீர்திருத்தக்காரர்கள் தினம் ஒரு சீர்திருத்த முறையை பிரசாரம் பண்ணிக் கொண்டு தான் இருக் கிறார்கள். ஒவ்வொரு மதத்திலும் சீர்திருத்த விரோதிகள் மத வெறியர்கள் பலாத்காரச் செய்கையை நம்பியோ சர்க்கார் தயவை எதிர்பார்த்தோ தங்கள் மதத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கின்ற வைதீகர்கள், சனாதன தர்மிகள், மகான்கள் இருந்து கொண்டிருக் கிறார்கள். இந்த நிலையில் எந்த மதத்தை மாத்திரம் தனியாக நாம் குற்றம் சொல்ல முடியும் என்பது யோசிக்கத் தக்கது.

**குடி அரசு - கட்டுரை - 02.04.1933**



RangaRakes tamilnavarasam.com

# கேசவ பிள்ளை

தோழர் கேசவ பிள்ளையை சென்னை மாகாணஅரசியல் உலகம் நன்றாய் அறியும்.

அவர் பழயகாலத் தலைவர் கோஷ்டியில் சேர்ந்தவர். பழய சட்ட சபைகளில் அவர் அதிகம் காரியங்கள் செய்தவர். ஆனால் அவர் பார்ப்பன ராய் இல்லாததால் அவரைப்போல வேலை செய்த பார்ப்பனர்களுக்கு கிடைத்த பெருமையும் பயனும் இவருக்கு கிடைக்காமல் போனதில் அதிசய மில்லை. பொதுவாழ்வில் சுமார் 40 வருஷகாலம் கலந்திருந்தும் அவரது வாழ்க்கை ஒரு சாதாரண நிலையிலேயே இருந்தது குறிப்பிடத்தக்கது. மற்ற தலைவர்களைப் போல ஆடம்பரமும் பண வருவாயும் பிரதானமாக அவர் எதிர்பார்க்கவுமில்லை, அவர் எந்த விஷயத்தில் கவலை எடுத்து உழைத் தாலும் அதை மனப்பூர்வமாக உணர்ந்து மனப்பூர்வமான அக்கரையுடனும், உண்மையான கவலையுடனுமே உழைத்து வந்திருக்கிறாரே ஒழிய பொய் யாகவோ, கூலிக்காகவோ அல்லது ஏதாவது ஒரு சுயநல பலனை உத்தே சித்தோ உழைத்தவர் என்று சொல்லுவதென்றால் அது சுலபத்தில் முடியாத காரியமேயாகும். விளம்பரப்படுத்திக்கொள்வதில் அவருக்குப்பிரியம் கிடையாது.

அவருக்கு 'சர்' பட்டம் கிடைத்திருக்கலாம். ஆனால் அதை பார்ப்பனப் பத்திரிக்கைகள் கெடுத்துவிட்டன. ஆனாலும் அவரைப்பற்றிய அபிப்பிராயம் பொதுமக்களுக்கு ஒரே விதத்தில்தான் உண்டு. அதாவது நன்மையான விஷயங்கள் தவிர இன்ன தீமை செய்தவரென்றோ தீமையில் கலந்திருந்தாரென்றோ யாவரும் சொல்லுவதற்கில்லை. இப்படியே இவர் 70வருஷகாலம் ஜீவித்து காலமாயிருக்கிறாரென்றால் இந்தியாவின் நிலைக்கு இதை அர்ப்ப ஆயுள் அல்லது போறாத ஆயுள் என்று சொல்லிவிடமுடியாது. அவருடைய குடும்பத்தாரும் போதிய அளவுக்கு திருப்திகரமாகவே இருக்கிறதாக அறிகிறதுடன் விவேகிகளானதால், பிரரது அனுதாபம் கூட தேவை இருக்காதென்றே கருதுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 02.04.1933**



# "தொழிலாளர் நிலைமை"

இவைகளை ஒழிப்பதற்கு இம்மாதிரி கண்டிப்பாக பேசுவதன் மூலம் நாம் கெட்ட பெயர் வாங்கிக் கொள்ள வேண்டியது தான். தோழர் பொன்னம் பலனார் கூறுவது நடு நிலைமையிலிருந்து யோசிக்கும் எவருக்கும் அக்கிரமம் என்றோ பொய் என்றோ ஏற்படாது.

சாமியைப் பற்றிக் குறை கூறுவதும் அக்கிரமமல்ல. கடவுள்களின் பேரால் இந்நாட்டில் சகிக்க முடியாத கொடுமைகள் நடப்பது எவ்வளவோ சொல்லிப் பார்த்தாகி விட்டது. எத்தனையோ கோடி ரூபாய்கள் வீணாக்கப் படுவதை தடுக்க எங்கள் இயக்கம் எவ்வளவோ சொல்லியும் வந்தது. இனி என்ன செய்வது இனியும் பச்சை பச்சையாகவே பேசினாலும் மக்கள் மனதில் பட்டு அவர்கள் திருந்த வேண்டும் என்ற எண்ணமே தவிர வேறு யாரிடத்திலும் துவேஷமோ சண்டையோ எங்களுக்கு கிடையாது. அவ்வித நோக்கத்துடனும் இது பேசப்படவே இல்லை.

கடவுளின் பேரால் மதத்தின் பேரால் மத ஆச்சாரிகள் புரோகிதர்கள் குருக்கள் பாதிரிகள் சங்கராச்சாரிகள் செய்யும் அநீதியும் அக்ரமமும் எவ்வளவு? சுயமரியாதைக்காரன் அவர்களின் குறைகளை கூறுவதிலுள்ள அக்கிரமம் எவ்வளவு என்பதை விசாரிக்க ஒருகமிஷன் ஏற்படுத்தி தீர்ப்புக் கூறச்செய்தால் சுயமரியாதைக்காரன் அயோக்கியத்தனமாகப் பேசுகிறானா அல்லது சங்கராச்சாரியும் அவரது கூட்டமும் பேசுவதும் எழுதுவதும் எழுதி வைத்திருப்பவைகளும் அயோக்கியத்தனமானதா என்பது வெளியாகும்.

சு. ம. காரர்கள் வாயில் பேசுகிறார்கள், இது நாளை காற்றோடு காற்றாப் பறந்து போகும். ஆனால் சங்கராச்சாரி கூட்டம் எழுத்தில் நம்மை நாய் பன்றி யிலும் கடையாய் எழுதி வைத்திருக்கிறார்கள். இதில் யார் அயோக்கியர்கள்.

மேலெழுந்த வாரியாக கவனிப்பதில் பிரயோசனமில்லை சுய மரியாதைக்காரன் சொல்வது என்ன என்பதை சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் எந்த அறிவுள்ள மனிதனும் சு. ம. காரன் மேல் குற்றம் சொல்ல முன்வர மாட்டான்.



RangaRakes tamilnavarasam.com

இன்று நடக்கும் அக்கிரமங்களை யெல்லாம் மக்களுக்கு விளக்கி காட்டி அதனால் வரும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் அனுபவிக்கவே சுயமரியாதைக்காரன் தயாராயிருந்து வந்திருக்கிறான். இதுவே காரணமல்லாது சங்கராச்சாரியையோ அரசியல் சங்கராச்சாரி காந்தியையோ அனாவசியமாக குற்றம் சொல்லிக் கொண்டு திரியும் வேலை சு. ம. காரனுக்கு இல்லை.

## தொழிலாளியின் நிலைமை.

தோழர்களே!

இந்நாட்டில் அல்லது உலகத்தில் தொழிலாளர்கள் என்னும் கூட்டம் எப்படி ஏற்பட்டது, அது ஏன் ஏற்பட்டிருக்கவேண்டும், தொழிலாளர் கடமை என்ன அவர்கள் நலனுறும் வழி எப்படி, அவர்களது தொழில் உழைப்பு சரியாக இருந்தும் அவர்களது வீழ்ச்சி வறுமைக்குக் காரணம் என்ன, இன்றும் இவர்கள் யாரால் எதனால் இந்த நிலைமையிலிருக்கிறார்கள் என்ற விஷயங்களை முதலில் கவனிக்க வேண்டும்.

தொழிலாளர்கள் என்பவர்கள் யார் என்றால் சரீர உழைப்பாளிகளேதான். பலர் பலவிதமான தொழில்களைச் செய்யலாம், ஒருவர் வெட்டலாம் ஒருவர் சுமை சுமக்கலாம், மற்றவர் முடையலாம், இன்னொருவர் சிறைக்கலாம் வெளுக்கலாம், மற்றொரு கூட்டம் புது புது விதமாக மக்களுக்கு வேண்டிய சாமான்களையும் செய்யலாம் - இவர்கள் முதலியவர்கள் எல்லாம் தொழிலாளிகளே ஆவார்கள். இவர்கள் ஏன் பிரிக்கப்பட்டு ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை யோசித்தால் உண்மையும் அதிலுள்ள பலத்த சூழ்ச்சியும் விளங்காமல் போகாது.

மனிதன் ஆதியில் நாகரீகமில்லாமல் காட்டுமிராண்டித்தனமாகவும், கூட்டுறவு முறை என்பது சிறிதும் இல்லாது தனித்தனியே வாழ்ந்து வந்த காலம் நாகரீகம் என்பது தெரியாமலும் ஏதோ கிடைக்கும் வஸ்துவைத்தின்று தண்ணீர் குடித்து விட்டு வெட்டவெளிகளிலோ கல்பாறைகளிலோ படுத்து உறங்கிய காலம் நீங்கி மனிதன் மனிதனுடன் கூடி சமூகமாய் வாழ ஆரம்பித்த காலத்திலேதான் தொழிலாளி ஏற்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் மனிதன் காட்டுமிராண்டித்தனத்திலிருந்து விடுபட்டவுடன் பெண்டுபிள்ளை என்ற பாசம் ஏற்பட்டு கூடி வாழ நினைத்ததால் தனக்கென ஒரு குடிசை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியமாயிற்று. குடிசை கட்டவேண்டுமானால் அதற்குறிய சாமான்கள் கம்பு கழிகள் முதலியன திருத்தி அமைக்க தொழில்கள் செய்துதான் தீரவேண்டும். அதில் ஒருவருக்கொருவர் கூடி உதவி செய்துதான் ஆகவேண்டும். குடிசை வாழ்க்கையிலிருந்து இன்னும் கொஞ்சம் வாழ்வு உயர உயர அறிவுசிந்தனா சக்தியும் வளர வளர வாழ்க்கையில் சுகமாக இருக்க வேண்டி பல சௌகரியங்களை செய்து கொண்டான். அச்சௌகரியங்களை யடைவதற்கு தன்னாலும், பிறராலும் தேவையான



வேலைகள் அவசியமாக இருந்தது. எனவே அவ்வப்போது தோன்றிய யுக்திக்குத் தகுந்த பிரகாரம் மனிதனுக்கு தேவைக்கு தகுந்த உபகரணங்களிலிருந்து இன்று நிலைமை வரையிலும் தொழில்கள் ஏற்பட்டன. முன் சொன்னபடி குகையிலிருந்து வந்ததற்கு பதிலாக குடிசைவேண்டும்போது அடுத்தவனும் சேர்ந்து கட்டிக்கொண்டான் என்ற முறையிலேயேதான் வர வர அறிவுக்குத் தகுந்தபடி தொழில் விருத்தியும் கூட்டுறவும் பெருகிவந்தது. அந்த நிலையில்தான் தனி மனிதன் குடும்ப மானான். இதனால் நாளாவட்டத்தில் அறிவு விருத்தியால் சிலருக்கு சோம் பேறித்தனம் ஏற்பட்டு அடுத்தவன் உழைப்பில் 3-வது மனிதன் உழைப்பில் சுகம் அனுபவிக்க எண்ணம் தோன்றிற்று. சோம்பேறித்தனமாக உண்டு உறங்குவதற்கே யோசனை கண்டுபிடிக்கவே இப்போதுள்ள துன்பங்கள் ஆதிகாலத்தில் ஏற்பட்டன. அதை எப்படி வைத்துக் கொண்டாலும் சரி, ஒருவன் உழைக்க அதில் மற்றவன் வாழ விரும்பும் காலம் ஏற்பட்ட அன்றே இத்தனை சூழ்ச்சிகளும், தீங்கும் ஏற்பட்டன. நிற்க,

இப்போது தொழிலுக்கு என்றே அவனுக்கு கூலியும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. நிலம் ஒருமனிதன் தனக்குச் சொந்தம் என்று சொல்லிக் கொண்டு ஒய்யாரமாக நாமம், விபூதியையணிந்துகொண்டு காலையிலும், மாலையிலும், வந்து ஏண்டா அதைச் செய்யவில்லை, இதைச்செய்யவில்லை என்று அதிகாரம் செய்து விட்டுப்போவான். ஆனால் நிலத்தில் வேலை செய்யும் தொழிலாளியோ, நிலம் கல்லும் முள்ளுமிருந்தாலும் அதை வெட்டி உழுது நீர் இறைத்து விதைத்து அறுத்துவிளையும் தான்யத்தை மலை போலக் குவித்து வைத்து ஓடோடியும் முதலாளி என்பவனை அழைத்துக் கொண்டு வந்து அளந்து கொட்டிவிட்டுதான் இரத்த வேர்வை சொட்ட சொட்ட பாடுபட்டதற்கெல்லாம் 1, 2 கலம் மட்டும் பெற்றுக் கொண்டு திருப்தியடைய வேண்டும். இது கிருஷித்தொழில் செய்யும் தொழிலாளிகளுக்கு மட்டுமல்ல. மற்ற ஒவ்வொரு தொழிலும் இதுபோலவே சோம்பேறியே ஊதியமடைகிறான். இம்முறை மாற்றப்படாமலிருப்பதற்கு தொழிலாளிகள் பணம் காசு மீந்து மிச்சப்படுத்தி முன்னேறிவிடாமலிருப்பதற்கும் ஜாக்கிரதை யான பாதுகாப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. ரூபாய்க்கு பத்துபடி சோளம் விற்றால் தொழிலாளிக்கு சம்பளம் மாச 1க்கு 28படி சோளமிருக்கும் 5படி சோளமாக விற்றால் மாதச்சம்பளம் 2 அல்லது 3ரூபாயாகத்தான் இருக்கும். எனவே இம்மாதிரி தொழிலாளிகள் முன்னேறாமலும் முதலாளிகள் அல்லது சோம்பேறி கூட்டத்தினர்கள் ஆதிக்கம் எப்போதும் வலுவடையவே அதற்கு சாமி மதம் சாத்திரம் புராணம் ராணுவம் அரசு முதலியவைகள் முதலாளிகளால் ஏற்படுத்தியிருக்கிறது. இக்கொடுமைகள் நீங்கி இனி உலகமே சாந்தியை யடைந்து உலக ஒற்றுமை சகோதரத்துவம் எல்லாம் உண்டாகவே முதலாளி தொழிலாளி சமத்துவம் என்னும் கிளர்ச்சி ஏற்பட்டது. உலகப் போராட்டத்திற்கும் அதிருப்திக்கும் கஷ்டத்திற்கும் காரணம் பாடுபடுகிறவன்



RangaRakes
tamilnavarasam.com

சோம்பேறி அல்லது தொழிலாளி அவன் உழைப்பைத் தின்கிறவன் என்றும் இரண்டுவித தத்துவம் இருப்பதுதான்.

இது மாற்றப்பட்டு உலகில் தொழிலாளியன்றி சோம்பேறிக்கு இட மில்லை என்று சொல்லக்கூடிய நாளில்தான் "மனித சமூகம் தனது நிலையை அடைந்தது" என்று சொல்லமுடியும். அல்லது மிருகத்திலும் கேவலம் என்றுதான் சொல்லவேண்டும். மனிதனைத்தவிர உலகில் வேறு எந்த ஐந்துவேனும் அடுத்ததை ஏமாற்றி அடுத்த ஐந்துவின் உழைப்பில்தான் வாழவேண்டும் என்று இவ்வளவு சூழ்ச்சி செய்வதில்லை. ஆனால் மனித சமூகத்தில் மாத்திரம்தான் இந்த எண்ணம் இருந்துவருகிறது. இது மாறுவது தான் உண்மையான (மனிதசமூகத்தின்) முன்னேற்றமாகும். எந்த மனிதனாவது சோம்பேறிகளுக்கு பாடுபடவென்று பிறப்பதற்கு முடியவே முடியாது. வழக்க மில்லாத இயற்கைக்கு மாறான முறை இன்று மக்களிடமிருந்து வருகிறது.

அதுவும் உயர்ந்த லட்சியத்தின் பேரால் மதம், கடவுள், அவதார புருடர்கள் என்பவர்களின் வாக்கு சட்டம் ஆகியவைகளினால் அரசாட்சி முறையினால் பெரும்பான்மையான மக்கள் ஒரு சிறுகும்பலுக்கு உழைத்துப் போடவேண்டியதிருக்கிறது. இதைமாற்றி விடாமல் ஜாக்கிரதையாக பலவித பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது. அந்த பந்தோபஸ்து தான் தொழிலாளர் களிடையில் கடவுள் உணர்ச்சியைப் புகுத்தியதாகும். கடவுள் உணர்ச்சி மத நம்பிக்கைகளால் தான் கஷ்டப்படும் எந்த மனிதனும் நாம் பாடுபடவே பிறந்தோம் என்று கருதுகிறான். அது தலைவிதி ஜன்மப் பலன் என்று எண்ணுகிற இழிதகமைக்கு ஆதாரமாகிறது.

சாதாரணமாக நீங்கள் ஒரு கஷ்டப்பட்டு நிலத்தை வெட்டி உழுது பண்படுத்தி, விதைத்து அறுத்து முதலாளிக்குக் கொடுக்கும் ஒரு தொழி லாளியை ஏன் நீ இத்தனைபாடுபட்டுத் தேடிய தானியத்தைக் குவித்து கொடுத்து விட்டு நீ மட்டும் ஏன் சரியாக உணவுக்கும் இல்லாமல் பட்டினியாக ஓட்டைக் குடிசையில் முடக்கிக்கிடக்கிறாயா என்றும் ஏன் உனது உழைப்பின் பலனை நீ அனுபவிக்க முடியவில்லை என்றும் நீதானே எல்லாம் பாடுபட்டவன் என்றும் கேட்டீர்களானால் அவன் "நான் என்னசெய்வேன். நான் தான் பாடு பட்டேன், உழைத்தேன், அறுத்தேன், குவித்தேன். ஆனாலும் நமக்கு அநுபவிக்க கொடுத்துவைக்க வேண்டாமா? நமது தலைவிதிப்படி தானே எதுவும் நடக்கும்" என்று சற்றும் தயங்காமல் கூறுவான். அதுமட்டுமா. நமது கிரகம் என்றும் கிடைத்ததை உண்டு இருக்கவே கடவுள் கட்டளை என்றும் சொல்லுவான். ஆனால் முதலாளி என்பவனைப்பற்றி அவன் ஏன் பாடுபடாமல் அனுபவிக்கிறான் என்றால் போன ஜன்மத்தில் புண்ணியம் செய்தவன், லட்சுமி புத்திரன், கொடுத்துவைத்தவன் என்பது போன்ற வார்த்தைகளைச் சொல்வானே யன்றி மனம் நோகமாட்டான் எந்த தொழி லாளியாயும் நாம் தான் உழைத்தோம், நாம் தான் உழைத்தோம், நாம்



அனுபவிப்பது தான் ஒழுங்கு, முதலாளி என்பது வெறும் சூழ்ச்சி தன்மை, அவனது செயல்கள் அக்கிரமமானது என்று எவனும் சொல்லவுமாட்டான்.

ஒரு கொத்தன் நாலு அடுக்கு ஐந்து அடுக்கு மாடி கட்டிக் கொடுத்து விட்டு அவன் மட்டும் மேல் கூரையும், சுவருமில்லாத ஈரமுள்ள "குடிசை" யில் பாயும், தலையணையுமின்றி படுத்து தூங்குவான். அவனையும் அந்தப்படி கேளுங்கள் அவனும் அவ்விதமே தலைவிதி என்று தான் பதில் சொல்வான். காசு மாலைகளையும், வைர நகைகளையும், சங்கிலியும் செய்து கொடுக்கும் தொழிலாளியின் மனைவி மக்களுக்கு கழுத்திலோ நூல் சரடு தான் இருக்கும். பட்டாடைகள் உயர்ந்த கம்பளங்கள் நெய்து கொடுக்கும் நெசவுத் தொழிலாளியும் தனது இடுப்பில் உடம்பை மறைக்கப் போதிய துணி இருக்காது. அவனது குழந்தைகளோ 10, 12 வயது வரையில் கோவணம் கட்டியே தான் அலையும் அவனும் நான் என்ன செய்வேன் எனது தலைவிதி முன் ஜென்மபலன் என்றுதான் சொல்லுவான். பாத்திரத் தொழிலாளர்களாகிய நீங்களும் அனலிலிருந்து காய்ந்து கொட்டியிடித்து அழகாக பாத்திரங்களைச் செய்து கொடுத்து விட்டு கூலிக்கு மண்டை யுடைத்துக் கொண்டு சோம்பேரிக் கூட்டத்தினர் மட்டும் தான் உல்லாசமாக வாழவும், நீங்கள் நாளுக்கு நாள் தரித்திரப்படவும் ஏன் என்று கேட்டால் நாம் என்ன செய்வோம். எல்லாம் கடவுள் பகவான் ஆண்டவன் என்று தான் சொல்வீர்கள். எந்த காரியத்திலும் பகவான் தலைவிதி சாமி மதம் என்பதை நம் மூளை புகுத்தியதால்தான் தொழிலாளிக்கு முதலாளி உயர்ந்தவன் உழைப்பாளி ஒடுங்கியே இருந்து தீரவேண்டும் என்ற நிபந்தனை ஏற்பட்டது.

ஆதியில் தொழிலாளி என்பதாகவே ஒரு (ஜாதி) திட்டம் ஏற்பாடு செய்து அடக்கியாள நினைத்த அன்றே தொழிளாளிக்கு அறிவிருந்து ஏன் நான் அடங்கி வாழவேண்டும் என்று கேட்டிருந்தால் இன்று முதலாளி தொழிலாளி என்னும் கூட்டமோ வித்தியாசமோ இருக்காது. ஆனால் கடவுள் உணர்ச்சியானது உங்களை அடங்கச்செய்து விட்டது. என்றைக்கும் வித்தியாசமிருக்கவே கடவுள் என்னும் ஒன்றைப் புகுத்தி அதுவும் புறண்டு விட்டால் என்ன செய்வது என்று மதத்தையும் ஜாதியையும் ஏற்படுத்தி தொழிலை பெயர்கொடுத்து அதை ஜாதியாக்கி ஜாதியில் உயர்வுதாழ்வு கற்பித்து அதைக் காப்பாற்றவே அரசாங்கம் போலீஸ் என்பதும் வைத்து முதலாளி தொழிலாளி முறை நிரந்தரமாகவே இருக்கச்செய்கிறது.

இந்த தொழிலாளி ஜாதி என்பதே மறைந்துவிட வேண்டுமானால் முதலாளித்தன்மை என்பது உலகில் எங்கும் இருக்கவேகூடாது என்று கூறவும் அதற்காக வேலை செய்யவும் தைரியமாக நீங்கள் முன்வரவேண்டும். முதலில் அரசாங்க சட்டங்கள் மாற்றப்பட வேலை செய்ய வேண்டும். அதை விட்டு விட்டு இன்னும் கடவுள்கடவுளென்று கத்திக்கொண்டிருந்தால் ஒருநாளும் அடிமை புத்தி விலகப் போவதில்லை.



RangaRakes tamilnavarasam.com

திடீரென உங்கள் வருமையை நினைத்து இயற்கையாக உங்கள் இரத்தத்திலிருக்கும் உணர்ச்சியால் இரண்டொரு தடவை நீங்கள் முயற்சிக் கலாமே தவிர அதனால் நீங்கள் வெற்றியடைய முடியாது. நிச்சயமாக வெற்றிபெற வேண்டுமானால் கடவுள் தன்மை மதத்தின் பேராலுள்ள குருட்டு நம்பிக்கை, குறுகிய நோக்கம் ஒழித்து முன்வரவேண்டும். கடவுளும் மதமும் ஒழிந்த அந்நாளே தொழிலாளியின் விடுதலை நாளாகும்.

கடவுள் உணர்ச்சியை நீங்கள் எவ்வளவு விடாப்பிடியாகக் கொண்டாலும் காலமாறுபாட்டால் உங்கள் சந்ததிகள் அதை பின்பற்றுவது குறைந்து போகும். தொழிலாளிகளின் இத்தினை துன்பத்தைக்கண்டும், பார்த்தும், அனுபவித்தும் வந்த ஒரு தொழிலாளி இத்தனை ஆபத்துக்கும் தப்பி திருட்டுத்தனம் உண்மை மறுப்பு முதலிய பித்தலாட்டங்கள் எல்லாம் செய்து ஒருசமயம் நாளை அவனும் ஒரு முதலாளியாக ஆகிவிட்டால் தான் தொழிலாளியாக இருந்த காலத்திலுள்ள சம்பவங்களை மறந்துவிட்டு முதலாளி வர்க்கத்தில் ஐக்கியமாகி தொழிலாளிகளை கசக்குவான் என்பதில் சந்தேகமில்லை. அவனும் முதலாளியிடம் அடிமையாகவே இருந்து தந்திரமாக பிழைத்து முதலாளியை ஏமாற்றித்தான் வந்தவனாதலால் தன்கீழுள்ள தொழிலாளியையும், சந்தேகித்து கவனிப்பான். ஆனால் இன்று உலகமெங்கும் கிளர்ச்சி செய்யப்படும் நமது முயற்சியானது முதலாளி தொழிலாளியாகவோ, தொழிலாளி முதலாளியாகவோ மாறிவிட முடியாது.

நமது முயற்சி உலகத்திலேயே முதலாளி தொழிலாளி வேற்றுமை ஒழிந்து முதலாளியென்றோ, தொழிலாளியென்றோ ஒரு தனி வகுப்பு இல்லாமல் யாவரும் சமமாக வாழ வேண்டும் என்பதேயாகும். இன்னும் நமது பிரயத்தனம் எது என்றால் இனி எக்காலத்திலும் அவ்வேற்றுமைகள் உண்டாகிவிடாமலும் மனித சமூகத்தில் உயர்வு தாழ்வு என்ற எவ்வித பிரிவுகளும் இல்லாமலும் இருக்க வேண்டும் என்பதாகும்.

ஒரு ஊரில் அல்லது ஒரு மாகாணத்தில் மட்டும் தொழிலாளி இல்லை, முதலாளி இல்லை என்றாய்விட்டால் மாத்திரம் போதாது. உலகிலேயே மக்களுள் முதலாளி தொழிலாளி ஏழை பணக்காரன் என்பதுள்பட எப்படிப்பட்ட முதலாளி ஆதிக்கம் என்பதும் இருக்கவேகூடாது.

இம்முறைகள் இலேசான மாறுதலின்மூலமாகி விடாது. சுலபத்தில் நிலைபெற்றும் விடாது. ஆதலால் கடுமையான சட்டங்கள் மூலமும், பிரசாரங்கள் மூலமும் மக்களின் மனமாற்றமடைந்த பிறகுதான் இன்பமாக வாழமுடியும்.

தொழிலாளி அடிமையாக நிரந்தரமாக வாழவேண்டுவதற்கு கிரமமாகவே இப்போதுள்ள ஜாதி சமூக முறை சட்டம் ஒழுக்கம் மத தர்மம் அரசாங்கம் என்பவை எல்லாம் இருக்கிறது. உலகில் இம்மாதிரியான வேற்றுமை தனிப்பட்ட கூட்டத்தின் ஆதிக்கம் என்பவை இல்லை என்றால்



அரசாங்கம் ஜெயில் போலீஸ் இராணுவம் வேண்டியதில்லை. இன்று ஒரு நாடு தவிர உலகிலுள்ள அரசாங்கம் ராணுவமெல்லாம் பணக்காரனுடைய பாதுகாப்புக்கும் தொழிலாளிகளை அடக்கவுமே ஏற்பட்டது.

இராஜா என்றால் இக்கூட்டத்தில் பொறுக்கி எடுக்கப்பட்ட சோம்பேரிகளின் பிரதிநிதி என்றுதான் அர்த்தம்.

இவைகள் எல்லாம் ஒழிவது என்று வந்துவிட்டால் உலகில் துவேஷம் ஆச்சரியம் அதிருப்தியே இருக்காது. இதற்கு வெறும் சங்கமும் பிள்ளையார் வணக்கமும் செய்து கூட்டம் போடுவதால் எதையும் அசைத்து விட முடியாது.

நமது முயற்சிகளை முதலாளிகள் கெட்டியான அஸ்திபாரத்துடன் எதிர்ப்பார்கள். இவைகளை தாங்கவும் தயாராக இருக்க வேண்டும். தொழிலாளர் நன்மைக்கு என்று வாயளவில் பேசுவதினால் எதுவும் வந்து விடாது.

சாதாரண கிளர்ச்சி கூட்டத்தின் மூலம் கொஞ்சம் கூலி அதிகமாக வேண்டுமானால் கிடைக்கலாம்-இவைகளால் முன்னேற்றம் எதுவும் இல்லை. முதலாளிகளுடன் வாதாடி 2 அணா அதிகமாக சம்பாதித்தால் மாத்திரம் போதாது. நீங்களும் தகுந்தபடி சுகப்படாமல் தற்கால வாழ்க்கை முறையில் முதலாளியைக் காப்பியடித்து அவனைப் போலவே நீங்களும் செலவு செய்து விடுவதும் 4 அணா மீதமிருப்பதை ஆடம்பரமாக செலவுச்செய்துவிட்டு மறுபடியும் முதலாளியிடமே போய் கெஞ்சுவதும், வாய்கட்டி, வயிற்றைக் கட்டி 10-ரூ. சம்பாதித்தால் உங்கள் மனைவி மக்கள் தேருக்கும், திருவிழாவிற்கும், பண்டிகைக்கும் செலவு செய்வதும் தொழிலாள முன்னேற்றமாகாது. ஏனெனில் கடவுளும் சாமியும், பூதமும், தொழிலாளர்களுக்கென்றே ஏற்படுத்தி வைத்திருக்கிறது. எவ்விதத்திலாவது 10, 5 மீதப்படுத்தி வைத்து தொழிலாளி முன்னேறினால் முதலாளி தத்துவத்தை எதிர்க்க நேரிடும் அல்லவா? ஆதலால் வருடம் 4 உற்சவம், 12 பண்டிகை எடுத்ததெற்கெல்லாம் சடங்கு சாத்திரம் என்று ஏற்படுத்தி வைத்து சாம்பிலுக்காக முதலாளிகளையும் கொஞ்சம் செலவு செய்யச்செய்து தொழிலாளியை முழுப் பாப்பாராக்க ஓர் நல்ல வழி-இன்று மாரியம்மனுக்காக முதலாளி 5-ரூ. ஆடு வெட்டினால் தொழிலாளி என்பவன் 10-ரூ. ஆடுவெட்டினால்தான் பெருமையுண்டெனக் கருதி அதன் படியும் செய்கிறான். இவைகளை யெல்லாம் சமூகக் கட்டுப்பாடுகள் வழக்கங்கள் என்பதின் மூலம் மக்கள் பணம் கொட்டப்படுவதை கவனிக்க முடியாமல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

தொழிலாளிகள் அதிகமாக இருந்தால் அவர்களுக்குச் சமீபமாகவே 4 கள்ளுக்கடை, 2சாராயக்கடைகளும் வைத்துவிடுவார்கள். எல்லா விஷயத்திலும் முதலாளியுடன் போட்டி போட்டு சிலவு செய்தால் பழய கருப்பன் கருப்பன் தான் என்பதைத் தொழிலாளர்கள் சமூகம் கண்டிப்பாக உணர வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

இம்முறையில் தொழிலாளித்துவம் இருப்பது சமூக மூலம் ஸ்திரப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதைக் கவனித்துப்பார்த்தால் விளங்கும். இவை ஒழிய வேண்டுமானால் அஸ்திவாரம் அதாவது சமூகம், ஜாதி, மதம், கடவுள் என்பவைகள் தான் முதலில் வெட்டி எறியப்படவேண்டும். நமது முதல் வேலை இவ்வேற்றுமைகளுக்கு அஸ்திவாரம் எங்கே என்று கண்டு பிடிப்பதுதான். கடவுள், சாமி, மதம் என்பவைகளை குறைபேசுகிறான் என்றே முதலாளிகளை குறை கூறுவதாகவோ நீங்கள் வருத்தப்படக்கூடாது. கடவுள் என்னும் உணர்ச்சி தொழிலாளர்களிடமிருந்து நீங்காதவரை ஒருக்காலும் முன்னேற்றமில்லை என்பதை மீண்டும் மீண்டும் வலி உருத்தவே இப்படிச் சொல்லுகிறேன்.

சாமியைத்தான் இழிவாகப் பேசுகிறேன் என்று கருதுவீர்கள். சாமி எங்கிருந்து வந்தது என்பது முன்னமேயே கூறினேன். முதலாளிகள் சூழ்ச்சியே சாமி ஏற்படுத்தியது. அச்சாமிகளினால் திருப்தியடைந்து வயிறு வளர்க்கும் ஒரு சோம்பேறிகள் தவிர வேறு எவனும் கடவுள்களின் யோக்கிய தைகளைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. யோசித்துப் பார்த்தால் அதன் புரட்டுவெட்ட வெளிச்சமாகும். இத்தனை ஆண்டுகளாக இருந்த கடவுள்களால் உங்களிடமுள்ள எந்தக் குறையைக்கடவுள்கள் நிவர்த்தித்து விட்டது என்று பார்க்க வேண்டும். இன்றைக்குத் தொழிலாளியை இந் நிலைமையில் வைத்திருக்க அவன் உழைப்பைக் கொள்ளைக் கொண்டு வாழும் முதலாளி சுகப்பட அக்கடவுள் ஏன் பார்த்துக்கொண்டிருக்கிறது என்பதை யோசித்துப்பாருங்கள். வேண்டுமானால் தினசரி வாழ்க்கை யிலும்கூட அக்கடவுள் உணர்ச்சி தொழிலாளியைக் கெடுத்து வருவதைத் தவிர வேறு வழி காணோம். முதலாளியும் சாமிக்கு பூஜை தடபுடல் செய்தால் தொழிலாளியும் அவ்விதமே. தொழிலாளியும் பண்டிகை கொண்டாடுகிறான். ஏழை என்பவன் தனது சக்திக்குத் தகுந்தாற் போல் செலவு செய்யாமல் தனது சக்திக்கு மீறிப் பணக்காரனைப்பார்த்து செலவு செய்து கஷ்டப்படுகிறான். பணக்காரன் செலவு செய்வதில் பரவாயில்லை. 1000 பேர் தலையில் கையை வைத்து எந்த ஏழை வயிற்றிலாவது மண்ணடித்து அவன் ஆட்டம் போடுவான். நீயும் கையில் காசு இல்லாமல் கடன் வாங்கி அதைப்போலவே செலவு செய்தால் நஷ்டப்படுவதுமல்லாமல் பின்னும் அவனுக்கே அடிமை யாக வாய் பொத்தி நின்று முதலாளி ஆதிக்கத்தையும் எதேச்சாதிகாரத்தையும் உண்டாக்க உதவி செய்தவனாகிறாய். ஒரேவிதமாகவே நீங்கள் இருக்க வேண்டும். என்றைக்கும் மீறக்கூடாது சூழ்ச்சியே என்றைக்கும் அடிமையாக இருக்க வேண்டும் என்னும் சூழ்ச்சியேதான் இம்முறையான சோம்பேறிகள், முதலாளிகள், புரோகிதர்கள், பாதிரிகள், குருக்கள் என்பவர்களால் ஏற்படுத் தப்பட்டிருக்கிறன. உண்மையில் நீங்கள் கடவுளை நம்பிக்கொண்டிருந்தும் அதுபாடுபடும் மக்களைப் பட்டினி போட்டும் சோம்பேறி தின்று கொழுத்து சுகப்படவும் வைப்பது யோக்கியதையா? கள், கடவுள் பேரைச் சொல்லிச் செய்யும் பித்தலாட்டம் இன்னுமா விளங்கவில்லை.



உலகத்தில் எப்பாகத்திலேனும் இம்முறைகொஞ்சமேனும் இருந்தால் அங்கு வேற்றுமையும் கொடுமையும் இருந்தே தீரும். இக்கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டுமானால் பெரிய புரட்சி வேண்டும். ஆயிரக்கணக்கான வருஷமாக இருக்கும் இச்செயலை ஒழிக்க மிக்க தைரியம் வேண்டும். எந்த தேசத்தில் அரசன் பணக்காரன் இருக்கிறானோ அந்தத் தத்துவம் இருக் கிறதோ அங்கெல்லாம் சாமி பூதங்களிருக்கவும், முதலாளி கூட்டம் வாழவும் தொழிலாளி பட்டினிகிடக்கவும் சோம்பேறி சுகப்படவுமே தான் இருக்கிறது.

மற்ற தேசத்துடன் நமது நாட்டையும் ஒத்துப்பார்த்தால் தொழிலாளி யின் நிலைமை கொஞ்சம் அதிகமாகவே, கஷ்டமாகவே இருக்கிறதே தவிர குறைவில்லை என்று சொல்லலாம். நமது முறையீடுகளையும் துன்பங்க ளையும் கண்டு மிக்க அனுதாபியைப்போலவே இன்று பெரிய தேச பக்தன் என்று சொல்லுகிறவர்கள் நம்மிடம் வந்து சேர்ந்து நம்மை விட ஆயிரம் பங்கு அதிகமாக முதலாளிக் கொடுமைகளை ஒழிக்க வேண்டும் என்றே பேசுவான். இந்த அக்கிரமம் சகிக்க முடியாது என்றே பேசுவான். ஆனால் நம்ம தயவால் கொஞ்சம் பதவி கிடைத்த உடனே முதலாளியிடம் சேர்ந்து கொண்டு உடனே தொழிலாளிகள் செய்வது அக்கிரமம் என்று கூப்பாடு போடுவான். ஏன் என்று கேட்டால் அக்கிரமம் செய்வது முதலாளியல்ல, சர்க்கார் தான் காரணம் என்று முதலாளியிடம் 5 ரூபாய் வாங்கிக்கொண்டு நம்மிடம் சமாதானம் சொல்லி சர்க்காரை சுட்டிக்காட்டி விட்டு இஸ்கே படுத்தி விட்டு விடுவான். நாமும் அவன் சொன்னபடி சர்க்காரிடம் முட்டிக்கொண்டு துப்பாக்கிக்கும், தடியடிக்கும், உயிரைவிடவும் போய்விடுவோம்.(தொடர்ச்சி 16.04.1933 குடி அரசு)

*(26.03.1933 குடி அரசு – அனுப்ப பாளையம் சொற்பொழிவு தொடர்ச்சி)*

**குடி அரசு – சொற்பொழிவு – 02.04.1933**



RangaRakes tamilnavarasam.com

# சம்பளக்கொள்ளை

இந்தியாவுக்கு இன்று உள்ள முதல் கொடுமையும், கடைசிக் கொடுமையும், சம்பளக்கொள்ளை கொடுமையே யாகும்.

இந்தியாவைப் போல் உள்ள ஏழை நாடு உலகில் எங்குமே இல்லை என்று சொல்லிக் கொள்ளுகிறோம். ஆனால் இந்தியாவைப் போல சம்பளக் கொள்ளை உள்ள நாடு உலகில் எங்குமே இல்லை. இதைப் பல தடவைகளில் நாம் எடுத்துக்காட்டி இருக்கிறோம். இந்திய அரசியல் கிளர்ச்சியிலும் இதைப் பற்றி அடிக்கடி பேசப்படுகின்றது. என்றாலும் இதற்கு அஸ்திவாரமான குற்றத்தை அரசாங்கத்தின் மீது திருப்பப்பட்டு விடுகின்றபடியால் பாமர ஜனங்கள் உண்மையை உணர்ந்து திருத்துப்பாடு செய்வதற்கு மார்க்கமில்லாமல் போய்விடுகின்றது.

சம்பளக் கொள்ளை என்றால் ஒரு சாதாரணக் கொள்ளை என்று யாரும் கருதிவிடக்கூடாது. அது சம்மந்தமாக ஒரு சிறு புள்ளி விபரத்தை கீழே குறிப்பிடுகின்றோம். அது பழைய குறிப்புகளேயானாலும் இது சமயம் இன்றைய இந்தியாவின் நிலைக்கும் அரசியல் நிலைக்கும் சற்று கவனித்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

என்னவெனில் பிரிட்டிஷின் முழு ஆட்சிக்கும் பொறுப்பேற்று தலைமை வகித்து நடத்தும் பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு மாதம் 1க்கு 5500 ரூ. சம்பளமே கொடுக்கப்படுகிறது. ஆனால் பிரிட்டிஷ் சுதேசமாகிய இங்கிலாந்து தேசத்திய மக்களின் சராசரி வரும்படி மாதம் ஒன்றுக்கு 72 ரூபாயாகும்.

இது போலவே பிரஞ்சு தேசத்திய பிரசிடெண்டு என்னும் தலைவருக்கு மாதம் 1க்கு 1500 ரூபா சம்பளமேயாகும். பிரஞ்சு தேசத்து மக்களின் சராசரி வரும்படியும் நபர் 1க்கு மாதம் 1க்கு சுமார் 100 ரூபாயாகும்.

அமெரிக்க தேசம் உலகத்திலேயே செல்வம் பொருந்திய தேசம் என்று சொல்லப்படுவது, அந்த தேச மக்களின் சராசரி வரும்படி மாதம் 1க்கு நபர் 1க்கு சுமார் 120 ரூபாய் ஆகும். அந்த தேசத்தின் மாகாண கவர்னர்களுக்கு சராசரி மாதம் 1க்கு 1000 ரூபாய் வீதமே கொடுக்கப்படுகின்றது.



ஆனால், நபர் ஒன்றுக்கு மாதம் 1க்கு 3ரூபாய் சராசரி வரும்படி உள்ளது என்று சொல்லப்படும் இந்தியா தேசத்து வைசிராயிக்கு மாதம் 1க்கு 20000 இருபது ஆயிர ரூபாய் சம்பளமும் மாகாண கவர்னர்களுக்கு மாதம் 1க்கு 10000 பத்து ஆயிரம் ரூபாயும் நிர்வாக சபை அங்கத்தினர்களுக்கு முறையே மாதம் 1க்கு 6500, 5500 வீதமும் மாகாணம் 1க்கு மந்திரிகள் உள்பட 4, 5, 6, 7 பேர்கள் வீதமும் இருந்து மேற்கண்டபடி சம்பளங்கள் பெற்று வருகின்றார்கள் என்றால் இந்த சம்பளங்களை நிர்வாகச் செலவு என்று சொல்லுவதா, சம்பளத்தின் பேரால் அடிக்கும் பகல் கொள்ளை என்று சொல்லுவதா என்பதை வாசகர்களே முடிவுகட்டிக்கொள்ள விட்டு விடுகின்றோம்.

நிற்க, இது மாத்திரமல்லாமல் இந்திய அரசாங்க பொதுஜன சிப்பந்திகளுடைய சம்பளமும் இது போன்ற ஒரு கொள்ளையாகத் தான் இருந்து வருகின்றது. இன்று இந்தியாவில் தானியம் அதாவது ஆகாரத்துக்கு வேண்டிய நல்ல அரிசியானது ரூபா 1க்கு 6 பட்டணம் படியாக விற்கின்றது. ஒரு மனிதனுக்கு குடும்பத்தில் சராசரி குழந்தைகள் உள்பட 5 பேர்கள் இருப்பதாக வைத்துக் கொண்டாலும்கூட இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு பட்டணம் படியில் அதிகமான கணக்குப் போட்டாலும் ஒருபடி அரிசிக்கு மேல் சாப்பிட முடியாது. இந்தப்படியே கணக்கு போட்டுப் பார்த்தாலும் குடும்பம் 1க்கு மாதம் 1க்கு 6ரூபாய் அரிசி தான் பிடிக்கும். மற்ற சாப்பாட்டுச் செலவு மாதம் 6ரூபாய் ஆகலாம். வீட்டுவாடகை, எதிர்பாராத சந்தோஷ செலவு மாதம் 8ரூபாய் ஆகலாம். ஆக இந்தியாவில் ஒரு குடும்பம் போதுமான நிலையில் வாழுவதற்கு குறைந்தது என்று வைத்துக் கொண்டாலும் சராசரி மாதம் 20 ரூபாய் போதுமானதாகும். இதற்கு குறைந்து இருப்பது அநியாயம் என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளுகின்றோம்.

ஆனால், மாதம் 1க்கு நூறு, இருநூறு, ஐநூறு, ஆயிரம், இரண்டாயிரம், ஐயாயிரம், பத்தாயிரம், இருபதாயிரம் ரூபாய்கள் வீதம் கொடுப்பது எதற்காக என்பது நமக்கு புரியவில்லை. சர்க்கார் சம்பந்தத்தில் உத்தியோகம் வகிக்காதவனுக்கு இன்று மாதம் 1க்கு சரீர வேலைக்காரனுக்கு 8 ரூபாய் வீதமும், புத்தி வேலை, எழுத்து வேலைக்காரர்களுக்கு இருபது அல்லது முப்பது ரூ. வீதம் தான் சாதாரண சம்பளமாகவும், அதிகச் சம்பளமாகவும் இருந்து வருகின்றது. இதுதான் இன்று நல்ல ஜீவனக்காரர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் 100க்கு 80 மக்களின் வரும்படியாயிருக்கின்றது. இதற்கும் இந்த மக்கள் சராசரி தினம் 10 மணி நேரம் வேலை செய்கின்றார்கள் என்றும் சிலர் 16 மணி நேரம் வேலை செய்கின்றார்கள் என்றும் சொல்ல வேண்டி இருக்கின்றது.

இது போல் மாதம் 8 முதல் 20 ரூபா வரையில் உள்ள சம்பளத்துக்குக்கூட வேலை கிடைக்காமல் திண்டாடும் மக்கள் 3வது 4வது பாரம் படித்தவர்களும் எஸ்.எஸ்.எல்.சி. மெட்ரிகுலேஷன் படித்தவர்களும் பி.ஏ. வரை படித்தவர்களும் இந்த சென்னை மாகாணத்தில் மாத்திரம் பல லட்சக்



RangaRakes tamilnavarasam.com

கணக்காய் இருக்கின்றார்கள் என்று பந்தயம் கட்டி கூறலாம். இந்தப்படி படித்துவிட்டு வேலையில்லாமல் பரதவித்து திண்டாடி தெருவில் மக்கள் லட்சக்கணக்காய் அலையும் போது என்ன அவசியத்தை உத்தேசித்து இந்த சம்பளக் கொள்ளை இந்த நாட்டில் இருந்து வருகின்றது என்பது கவனித்தால் அதன் சூட்சி நன்றாய் விளங்கும். “நிர்வாகச் செலவு தலை கனத்துப்போய் விட்டது” என்பதின் கருத்து சம்பளக்கொள்ளை என்பதைத் தவிர வேறு யாதொரு காரணமும் கிடையாது என்பதும் விளங்கும்.

இந்த சம்பளக் கொள்ளையின் காரணமே வரி உயர்வுக்கும், வரிக் கொடுமைக்கும் காரணமேதவிர வேறு ஒன்றும் இல்லை. ஆனால் இதை எந்த தேசீய வாதிகளும் கவனித்து தீவிர நடவடிக்கைகளை யெடுத்துக்கொள்வதே கிடையாது. அரசியல் வாதிகள் தேசியவாதிகள் என்பவர்கள் ஜனங்களிடம் ஓட்டுக்கு வரும்போது “வரியைக் குறைக்கின்றோம்” என்று சொல்லி ஓட்டுக் கேழ்ப்பதும் அரசாங்க சிப்பந்திகளிடம் வந்து அவர்களது “சம்பளங்களை உயர்த்துகிறோம்” என்று சொல்லி தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்வதுமான சூழ்ச்சிகளைச் செய்கிறவர்களாகத்தான் இருக்கிறார்களே ஒழிய சம்பளத்தைக் குறைக்க வாதாடி வரியைக் குறைப்பது என்கின்ற திட்டம் நமது நாட்டின் எந்த ஸ்தாபனத்திலும் இல்லை.

ஒரு வேலைக்கு ஒரு ஆள் தேவையானால் அந்த ஆளுக்கு பெரிதும் எந்தக்காரணத்தை அஸ்திவாரமாகக் கொண்டு சம்பளம் ஏற்படுத்த வேண்டும் என்றால் அந்த ஆளின் வாழ்க்கைச் செலவை உத்தேசித்து என்றுதான் சொல்லுவோம். ஆனால் அந்த செலவில் ஏதாவது சிறிது வித்தியாசம் அதுவும் அந்த ஆள் பார்க்கவேண்டிய உத்தியோக நிலைமைக்கு வேண்டிய அளவான சவுகரிய வித்தியாசம் எவ்வளவோ அதற்கு ஏற்றபடி கொடுக் கலாம் என்றும் சொல்லுவோம். அப்படிக்கில்லாமல் அதிகமான செலவையும் போட்டு கணக்கு கூட்டி அதற்கும் மேலாக தாராளமாய் மாதம் 100, 200, 1000, 5000 மீதி ஆகும்படியும் சம்பளம் ஏற்படுத்துவது என்றால் இதற்கு என்ன பெயர் கொடுப்பது என்பதை இப்போதே யோசித்துப் பாருங்கள்.

ஒரு தேசத்து மக்களை அந்த தேசத்து பொது நிர்வாகத்திற்கே ஏன் இந்தப்படி வித்தியாசமாக பிரிக்க வேண்டும்? அதுவும் அந்த தேசத்து மக்கள் கஷ்டப்பட்டுத் தேடிய பொருளையே பலவிதத்தும் வரி ரூபமாகக் கொள்ளை கொண்டு அதை இந்தப்படி ஒரு சிலர் கொள்ளையடிக்க ஏன் இடந்தர வேண்டும்? என்பனவாகியவற்றை யோசித்தால் மனம் பதருகின்றது. அரசியல் ஆதிக்கத்திலும், அரசியல் கிளர்ச்சியிலும் இதுவரை பார்ப்பனர் களே ஆதிக்கம் கொண்டிருந்ததாலும் வரி கொடுக்க வேண்டிய மக்கள் எல்லோரும் 100க்கு 99 பேர் பார்ப்பனரல்லாதார்களாகவே இருந்தாலும் சம்பளம் பயன் பெரும் மக்கள் பெறும்பாலும் 100க்கு 90மக்கள் பார்ப்பனர் களாகவே இருந்ததாலும் இந்தப்படியான சம்பளக் கொள்ளைகள் ஏற்பட



வேண்டியதாயிற்று. ஆனால் இப்போது ஜனங்கள் படுகின்ற கஷ்டத்தையும், நஷ்டத்தையும், பரதவிப்பையும் பார்த்தால் இந்த சம்பளக் கொள்ளையை ஒழித்தாகவேண்டியது முதற்கடமை என்றே தோன்றுகின்றது.

சம்பள விஷயத்தில் இவ்வளவு வித்தியாசம் வைத்து இருப்பதானது அதுவும் பாடுபடுகிற சிப்பந்திகளுக்கு குறைந்த சம்பளமும் அதிக நேர உழைப்பும், பாடுபடாத சிப்பந்திகளுக்கு சோம்பேரிகளுக்கு கொஞ்சம் நேர வேலையும் அதிக சம்பளமும் இருக்கின்ற முறை அடியோடு ஒழித்தே ஆக வேண்டும். மற்றும் இவற்றைப் பற்றிய விபரங்களை மற்றொரு சமயம் எழுத லாம் என்று விட்டு விட்டு முக்கியமான மற்றொரு விஷயத்தில் மக்களுக்கு உள்ள கஷ்டத்தைப்பற்றி சிறிது குறிப்பிட்டு விட்டு இதை முடிக்கின்றோம்.

அதென்ன வென்றால் ஆங்கிலம் கற்பிக்கும் உபாத்தியாயர்களின் சம்பளத்தைப்பற்றிய விஷயமேயாகும்.

## உபாத்தியாயர்

வருஷம் ஒன்றுக்கு 365 நாள் என்றால் இந்த பள்ளிக்கூட உபாத்தி யாயர்களுக்கு பொது லீவுகள் 120 நாளும் சனி ஞாயிறு லீவுகளில் 70 நாள் களும் மொத்தம் குறைந்தது சுமார் 180 நாள் அதாவது 6 மாத காலம் பள்ளிக் கூடம் இல்லாத லீவுநாட்களாகும். இந்த ஆறு மாத காலங்கழிந்த மற்ற ஆறு மாத காலங்களிலும் அவர்கள் வேலை பார்க்கும் நேரம் தினம் 1க்கு காலையில் $2^{1}/_{2}$ மணியும், மாலையில் $2^{1}/_{2}$ மணியும் ஆக 5 மணி அல்லது $4^{1}/_{2}$ மணி நேரம் தான் வேலை பார்க்கின்றார்கள். ஒரு வருஷத்தில் 6 மாத வேலைக்கு அதுவும் தினம் $4^{1}/_{2}$ மணி நேர உழைப்புக்கு சம்பளம் என்னவென்று பார்த்தால் மாதம் 1–க்கு பி. ஏ. எல். டி. என்பவர்களுக்கு 70 ரூபாயில் இருந்து சாதாரணமாக 250 ரூபாய் வரையில் இருந்து வருகின்றது. இந்த சம்பளங்கள் பெரிதும் வரிப்பணத்தில் இல்லாமல் பிள்ளைகளிடமிருந்தே வசூலிக்கப்படுகின்றன. இந்த சம்பளக் கொடுமை காரணமாகவே 100க்கு 95 பிள்ளைகள் ஆங்கிலத் தில் ஒரு எழுத்துக்கூட கற்க முடியாமல் இருந்து வருகின்றனர். பணமுள்ள பிள்ளைகள் மாத்திரம் தான் படிக்கக்கூடியதாக இருப்பதற்குக் காரணம் இந்த உபாத்தியார்களின் சம்பளக்கொள்ளை என்பதைத் தவிர வேறு என்ன காரணம் சொல்லக்கூடும்?

“படித்தவர்களுக்குத்தான் உத்தியோகம்” என்றும் “பணக்காரர்கள் வீட்டுப்பிள்ளைகள்தான் படிக்கக்கூடும்” என்றும் ஏற்பாடு செய்திருப்பதை பொது ஜன ஆட்சி என்று சொல்லுவதா? பணக்காரர்கள் ஆட்சி என்று சொல்லுவதா? என்பதை யோசித்துப்பாருங்கள். எல்லாப்பிள்ளைகளுக்கும் சாதாரணமாய் படிக்கக்கூடிய சௌகரியம் செய்திருந்தால் பொது உத்தி யோகங்களில் இந்த சம்பளக்கொள்ளை ஏற்பட்டே இருக்காது.



RangaRakes tamilnavarasam.com

இந்த நிலையில் எப்படிப் பிற்பட்ட வகுப்புகள் - தாழ்த்தப்பட்ட வகுப்புகள் முன்னேற்றமடைய முடியும்? என்று கேட்கின்றோம்.

சாதாரணமாக, ஒரு பி.ஏ. எல்.டி.யை *மீ* 30ரூபா சம்பளத்தில் ஆரம்பிப்பது உறுதி என்று சொல்லி இன்றைய தினம் ஒரு விளம்பரம் வெளிப்படுத்தி விட்டு டிரெய்னிங் (போதனா முறை) பள்ளிக்கூடம் ஒன்று ஆரம்பித்தால் இந்த மாகாணத்தில் மாத்திரம் இன்று பி.ஏ., எம்.ஏ. க்களிலிருந்தே குறைந்தது 5000 விண்ணப்பங்கள் எதிர் பார்க்கலாம். இவர்களிடம் இப்போதைய பி. ஏ. எல்.டி. களிடம் வாங்கும் வேலையைவிட 4 பங்கு வேலை அதிகமாக வாங்கலாம். இப்படி இருக்க கல்வியின் பேரால் உபாத்தியாயர்கள் என்கின்ற உத்தியோகத்திற்கு எவ்வளவு பணம் விரையமாகி எவ்வளவு பேர் படிக்க முடியாமல் போய் விடுகின்றது என்பதையும் உணர வேண்டுகின்றோம்.

இவ்வளவு பணம் செலவு செய்தும் உபாத்தியாயர்கள் என்பவர்கள் இவ்வளவு பணம் பொது மக்களிடம் இருந்து அடித்துப் பிடுங்குவது போல் பிடிங்கி அனுபவித்தும் சராசரி 100க்கு 25 பிள்ளைகள்கூட பாசாவதே கஷ்டமாய் இருக்கின்றதென்றால் இக்கல்வியின் அக்கிரமத்தையும், உபாத்தியாயர்களின் பொருப்பற்ற தன்மையையும், கொடுமையையும் பற்றிச் சொல்ல வேறு என்ன உதாரணம் வேண்டும் என்று கேட்கின்றோம்.

இந்த லட்சணத்தில் இருக்கும் கல்வி நிருவாகத்திற்கு சர்க்கார் செய்யும் செலவு எவ்வளவு என்பதையும் நிர்வாக அதிகாரிகள் மந்திரி உள்பட மாதம் 5000, 3000, 2000, 1000, 500, 200 என்பதாக அடிக்கும் கொள்ளை எவ்வளவு என்பதையும் பார்த்தால் யார் மனந்தான் பதறாமலிருக்க முடியும்.

### வக்கீல்

இது ஒரு புறமிருக்க வக்கீல் என்கின்ற ஒரு கூட்டம் அடிக்கும் கொள்ளைக்கும், அவர்களால் ஏற்படும் அயோக்கியத்தனத்திற்கும் ஏதாவது ஒரு எல்லை காட்ட யாராலாவது முடியுமா? என்று பாருங்கள்.

எவ்வளவு குறைவாகக் கணக்குப்போட்டு பார்த்தாலும் இந்த மாகாணத்தில் மாத்திரம் சுதேச சமஸ்தானங்கள் உள்பட சுமார் 12500 வக்கீல்களுக்கு குறையாமல் இருப்பார்களென்றே கருதுகிறோம். இவர்கள் வாழ்க்கை மனித சமூக வாழ்க்கைக்கு அனுகூலமானதா பிரதிகூலமானதா என்பதை வக்கீல்களைக் கேட்டாலே 100க்கு 99 $^{7}/_{8}$ பேர்கள் நன்றாய் சொல்லுவார்கள். என்ன சொல்லுவார்களென்றால் **“மனித சமூக ஒழுக்கத்திற்கும் சமாதானத்துக்கும் நாங்கள் “நரையான்கள்” போல் இருக்கின்றோம்”** என்றே சொல்லுவார்கள். இந்நரையான்களால் ஏற்படும் கெடுதிகள் கள்ளுக்கடை, சாராயக்கடை, விபசாரவிடுதி, சூதாடுமிடம், மத உபதேசம் ஆகிய எல்லா கொடுமைகளைவிட எத்தனையோ மடங்கு அதிகமானதென்றே சொல்லலாம். இப்பேர்ப்பட்ட அதாவது நன்மைக்கு நரையான் போன்றதும் தீமைக்கு பிறப்பிடம் போன்றதுமான இந்த வக்கீல்களால் பொதுமக்களால் பாழாக்கப்படும் உழைத்துத் தேடிய செல்வம் எவ்வளவு? நேரம் எவ்வளவு? மனக்கவலை எவ்வளவு? மற்றும் இந்தக்கூட்டங்களை ஆதரிக்க அதாவது இந்த வக்கீல்கள் தங்கள் கொடுமையைச் செய்வதற்கு அனுகூலமாக ஏற்பட்டிருக்கும் கோர்ட்டுகள் தன்மையும் வெரும் சூதாட்ட மண்டபம் என்பதல்லாமல் அதற்கு வேறு ஏதாவது பெயர் வைக்கக்கூடுமா என்பதையும் வாசகர்களே யோசித்துப் பார்க்கட்டும். ‘நியாயம்’ பெறுவதற்கு மாத்திரம் எவ்வளவு செலவு செய்யவேண்டி இருக்கிறது? நியாயஸ்தலத்துக்கு மாத்திரம் பொது ஜனங்களது பணத்தில் எவ்வளவு பணம் செலவு ஆகின்றது? என்பவைகள் நினைப்பதற்கே பயமான காரியமாகும். ஒரு சென்னை ஐகோர்ட்டை மாத்திரம் ஒழித்தால் 100000 பேர்கள் நன்றாக சாப்பிடவும், படிக்கவும் போதிய செல்வம் மீதியாகும்.

இப்படிப்பட்ட நிலைமையில் இந்தியாவை ஏழை தேசம் என்றழைப்பதா அல்லது இந்திய தேசத்தாராலேயே ஒருவரை ஒருவர் ஏமாற்றி வஞ்சித்து வதைத்து சாப்பிடும் நர மாம்ச பக்ஷண தேசம் என்று அழைப்பதா என்பது நமக்கு விளங்கவில்லை.

இப்படிப்பட்ட காரியங்கள் உற்பத்தியாவதற்கு அனுமதி கொடுத்து ஆதரித்துவரும் சர்க்காரின் யோக்கியதையையும் இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் “வரிப்பணத்தையும் மேல்பார்வை உத்தியோகத்தையும் எங்கள் கையில் கொடுத்துவிட வேண்டும்” என்று கேட்கும் தேசியத்தையும் முதலாளிகள் ஆட்சி என்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும். ஆதலால் இக்கொடுமைகள் ஒழிய முதலில் முதலாளிகள் ஆட்சியும், முதலாளிகள் தேசியமும் ஒழிக்கப்படவேண்டியதே முக்கிய காரியமாகும் என்பதையும் இக்காரியத்தை சுயமரியாதை இயக்கம் செய்யப்போகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 09.04.1933**



RangaRakes tamilnavarasam.com

# ஈரோடு முனிசிபாலிடி கவனிக்குமா ?

## வைத்திய உதவி

இன்றைய நிலையில் ஈரோடு முனிசிபல் எல்லைக்குள்பட்ட ஜனங்களுக்கு பொது வைத்திய உதவி பொருப்புள்ளதாகவும், போதுமானதாகவும் இல்லை என்பதைக் குறிக்க வருந்தவேண்டியிருக்கின்றது. ஈரோட்டிலிருந்த முனிசிபல் ஆஸ்பத்திரியானது சுமார் 12-வருஷங்களுக்கு முன் சர்க்கார் ஆஸ்பத்திரியாக மாறின போது முனிசிபல் நிர்வாகத்தைவிட சர்க்கார் நிர்வாகம் சற்று மேலாகவே இருக்குமென்று ஜனங்கள் கருதினார்கள். அந்தப் படியே சில காலம் நடந்தும் வந்தது.

ஆனால் நாளாக நாளாக அந்த ஆஸ்பத்திரிக்கு பொது ஜனங்களுடைய தயவைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்கின்ற மாதிரியிலேயே அதன் மேலதிகாரிகளால் நடைபெற்று வருவதாய் காணப் படுகிறது.

இதற்கு முக்கியகாரணம் சர்க்கார் நிர்வாகமேயாகும். ஈரோடு ஆஸ்பத்திரி டவுன் ஜனங்கள் 35000 பேருக்கும், சமீப சுற்றுப் பக்கத்து ஜனங் கள் சுமார் 20000 பேருக்குமாக 50000 பேருக்கு மேல் பயன்பட வேண்டிய தாய் இருந்து இவர்களில் பெரிதும் ஏழைமக்களுக்கு ஆகவே இந்த ஆஸ்பித் திரி இருந்து வருகின்றது. இப்படிப்பட்ட ஆஸ்பத்திரியில் ஒரு சர்க்கார் சம்பள டாக்டர் இருக்கிறார் என்றாலும் கௌரவ டாக்டர்கள் என்பதாக இரண்டு மூன்று பிரைவெட் டாக்டர்களை நியமித்திருப்பதால் சம்பள டாக்டருக்கும் சம்பளமில்லாத டாக்டர்களுக்கும் மற்றும் தங்களுக்குள்ளும் ஒருவருக் கொருவர் உள்ள ஆசையாலும், பொறாமையாலும் ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளிகளின் சிகிச்சை பெரிதும் பாதிக்கப்படுவதோடு நோயாளிகள் விஷயத்தில் யாருக்கும் பொருப்பில்லாமல் கடன் கட்டுகிறமாதிரியில் நடைபெறுகின்றது. பணம் கிடைக்கக்கூடிய வைத்தியம் - பணக்காரன் வைத்தியம்- நாளை மறுநாள் தன்னையே குடும்பவைத்தியராக ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் வைத்தியம் முதலாகிய இவைகள் தான் சிறிது கவலையாய் கவனிக்கப்படுகின்றதே தவிர ஏழைகள் தொழிலாளிகள் பாடு கஷ்டம்தான்.



கௌரவ வைத்தியர்களை ஏற்படுத்தியதின் பயனை ஒரு வார்த்தையில் சொல்லவேண்டுமானால் பிரைவேட் டாக்டர்கள் பிரைவேட்டாக பணம் வாங்கிக்கொண்டு செய்யும் வைத்தியத்திற்கு ஆஸ்பத்திரியில் இருந்து மருந்துகளை எடுத்துக் கொடுக்க பயன்படுகின்றது என்றுதான் சொல்ல வேண்டும். மற்றும் பிரைவேட் டாக்டர்கள் தங்கள் தொழிலை விர்த்தி செய்து கொள்ள ஆஸ்பத்திரி பயன்படுத்தப்படுகின்றது என்றும் சொல்ல வேண்டும்.

இது எப்படியோ போகட்டும் என்றாலும் பொது ஜனங்களுக்கு இதனால் இருக்கும் அசௌகரியம் மிகவும் கவனிக்கத்தக்கதாய் இருக்கின்றதுடன் மற்றொரு விஷயம் என்னவென்றால் குதிரை கீழேதள்ளியது மல்லாமல் குளியும் தோண்டிற்றாம் என்பதுபோல் பெண்கள் சம்பந்தமான குழந்தைகள் சம்மந்தமான வைத்தியம் பார்க்கும் லேடி (பெண்) டாக்டர் ஸ்தானம் ஒன்று சுமார் 25 வருஷ காலமாக இந்த ஆஸ்பத்திரிக்கு இருந்து வந்தது இந்த கௌரவ டாக்டர் முறை அதிலும் போய் புகுந்து அந்த சம்பள டாக்டரையே எடுத்து விடும்படி செய்துவிட்டது. இப்போது ஈரோட்டிற்கு பெண் டாக்டர் இல்லை. பொதுவாக இந்தியாவில் அதிலும் தமிழ் நாட்டில் கௌரவ உத்தியோகங்கள் எந்த நிலைமையில் எவ்வளவு கண்ணியத்தில் நடைபெறுகின்றன என்பதை நாம் எடுத்துக்காட்டத் தேவையில்லை. அதிலும் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம் என்றும், என்ன தப்பு செய்தாலும் தொழில் மரியாதையை அனுசரித்து மேல் அதிகாரிகளும் சகோதரத் தொழிலாளிகளும் அத் தப்பிதத்தை வெளிக்குக் காட்டாமல் ஆதரித்தே ஆகவேண்டும் என்கின்ற கொள்கை யுடைய டாக்டர் உத்தியோகம் ஒரு கௌரவ உத்தியோகமாக இருந்தால் அதன் கொடுமையை யாரால்தான் வர்ணிக்கமுடியும்? ஆதலால் இன்று மேல்கண்ட 50ஆயிரம் ஜனங்கள் கொண்ட ஈரோட்டில் குழந்தைகளும் பெண்களுமான சுமார் 30ஆயிரம் பேர்களுக்கு வைத்தியம் மிகவும் பரிதாபகரமாகவே இருந்து வருகின்றது. இங்கு மிஷின் ஆஸ்பத்திரி ஒன்று இருக்கின்றது என்றாலும் அது ஒரு மத சம்பந்தமானதும், மதப் பிரசாரத்தைக் குறிக்கொண்டதும், பொது ஜனங்களுக்கு எவ்விதத்திலும் பொறுப்புக்குக் கட்டுப்படாததுமாகும்.

ஆதலால் அதைப்பற்றி நாம் பேசுவதற்கு நமக்கு எவ்வித அருகதையும் உரிமையும் கிடையாது.

நிற்க, இன்றைய மக்கள் சாவுகளிளெல்லாம் அதிகமான சாவும், அநியாயமான சாவும், காயலாவும், பெண்கள் பிரசவ சாவும் காயலாவுமேயாகும். அதோடு பிரசவ குழந்தைகள் வியாதியும் பெண்கள் வியாதியுமே இயற்கையிலே அதிகமாயிருக்கின்றது என்று சொல்லுவது மிகையாகாது.

இது சமயம் ஈரோட்டில் பிரசவக் கேசுகளைக் கவனிக்க எப்படிப்பட்ட ஏழையானாலும் வீடுகளுக்கு யாராவது வரவேண்டுமானால் 5ரூபாய், 10



RangaRakes tamilnavarasam.com

ரூபாய் கொடுக்காமல் முடியவே முடியாது. முனிசிபல் மருத்துவச்சிகளின் ரேட்டோ, சர்க்கார் டாக்டர், கௌரவ டாக்டர்கள், பிரைவேட் டாக்டர்கள் பீசுகளைவிட அதிகமாகவும் நோயாளிகளிடம் மரியாதையில்லாமல் நடந்து கொள்ளுவதும் அதிகாரம் செலுத்துவதுமான காரியங்கள் அதிகமென்றே சொல்ல வேண்டும். ஆகையால் இந்த நிலையில் பெண்கள் வைத்திய வசதிநிலை இது சமயம் ஈரோட்டில் மிகவும் மோசமாகவே இருந்து வருகின்றது. இந்த ஆண் பெண் வைத்திய வசதி விஷயங்களிலும் இதில் நடக்கும் கொடுமை விஷயங்களிலும் இன்னும் அநேக உண்மைகளை எடுத்துக்காட்டலாம் என்றாலும் அவை கிணறு வெட்டப் பூதம் புரப்பட்டது போல் ஆகிவிடுமாதலால் பொதுவாக இக்கஷ்டங்களைப்பற்றி சர்க்காருக்கு முனிசிபாலிடியார் எடுத்துச் சொல்லி அவர்கள் செவிசாய்க்காமல் போனால் உடனே முனிசிபாலிடி சார்பாகவாவது ஒரு லேடி டாக்டரை இந்த ஊருக்கு வரவழைத்து ஒரு சிறிய கட்டடத்தில் மருந்துகள் வைத்துப் பெண்களுக்கும் சிறப்பாக பிரசவப் பெண்களுக்கும் இலவச வைத்திய வசதி கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கோருகின்றோம்.

ஈரோடு முனிசிபாலிடியில் இப்பொழுதுள்ள இரண்டு மருத்துவச்சி களையும், எடுத்துவிட்டால் மாதம் 60ரூ. மீதியாகும். 20ரூ. அல்லது 25 ரூபாயில் ஒரு மருத்துவச்சியும் மாதம் 50 அல்லது 60 ரூபாயில் ஒரு லேடி அசிஸ்டெண்ட சர்ஜனைப் போட்டு விட்டால் முனிசிபாலிடிக்கு இப்பொழு திருப்பதைவிட மாதம் 20 அல்லது 25 ரூபாய்தான் அதிக செலவாகும். மருந்துகள் அவரவர்களே வாங்கிக் கொள்ளுவார்கள். ஏழைகளுக்கு ஏதோ மாதம் 5 அல்லது 10 ரூபாய் மருந்துகள் வாங்கினால் சரிசெய்துகொள்ளலாம். இது முக்கியமான விஷயமானதால் முனிசிபல் கௌன்சிலர் கனவான்கள் இதை அவசியம் கவனிப்பார்கள் என்று கருதுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.04.1933**



# தஞ்சை ஜில்லா மகாநாடு

இம்மாதம் 8, 9 தேதிகளில் தஞ்சை ஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாடு நாகபட்டணத்தில் சிறப்பாக நடைபெற்ற விபரம் மற்றொரு பக்கம் காணலாம். அதை ஊன்றிப் பார்ப்பவர்களுக்கும், நேரில் மகாநாட்டு நடவடிக் கைகளைக் கவனித்தவர்களுக்கும், தமிழ் நாட்டில் எந்த இயக்கத்தை எப்படிப் பட்ட கொள்கையை மக்கள் ஆண், பெண், இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் முதலியவர்கள் விரும்புகின்றார்கள்? எதில் ஊக்கமாய் இருக்கின்றார்கள்? என்பது விளங்கும்.

மகாநாடு நாகையில் நடைபெற வொட்டாமல் செய்ய வெளியிலிருந்து செய்யப்பட்ட சில சூட்சிகள் மகாநாட்டுக்கு எதிர்பார்த்த அளவுக்கு மேல் கூட்டம் சேர்த்துக் கொடுத்து அதி விமரிசையாய் அதாவது ஒரு மாகாண மகாநாடு போல் நடத்திக் கொடுத்து விட்டது. ஆகையால் அத்திருக் கூட்டத் தாருக்கு மகாநாடு நடத்தியவர்களின் நன்றியறிதல் உரியதாக வேண்டும் என்பதில் குற்றம் இல்லை. மகாநாடு நடக்க 2, 3 நாட்கள் இருக்கும்போது சுமார் 150 கையெழுத்துக் கொண்ட விண்ணப்பம் ஒன்று அவ்வூர் கலெக்டருக்குச் சமர்ப்பித்து மகாநாட்டை நிறுத்த 144 உத்திரவு போட வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இதே போல் இதற்கு முன் 1931ம் வருஷம் நடந்த நாகை மகாநாட்டிலும் பலர் பொதுஜனங்களிடம் விஷமப் பிரசாரம் செய்ததும், தெருக்களில் காலித்தனம் செய்ததும், அது சம்மந்தமாய் அடி தடி நடந்து கிரிமினல் கோர்ட்டுகளில் விசாரணைகள் நடந்ததும் பலருக்கு ஞாபகமிருக்கலாம். அப்படி யெல்லாம் இருந்தும் அம்மகாநாடு தோழர் ஊ. பு. அ. சௌந்திர பாண்டியரவர்கள் தலைமையில் விசேஷமாய் நடைபெற்றதும் ஞாபக மிருக்கலாம்.

அதுபோலவே இந்த மகாநாட்டுக்கும் மேல் குறிப்பிட்டபடி பல தடுப்பு கள் செய்ய முயற்சிகள் பல செய்யப்பட்டிருந்தாலும் அவ்வூர் ஸ்தல அதிகாரி யாகிய கலெக்டர் அவர்கள் உள்ளூர் இந்து, முஸ்லீம், கிறிஸ்தவ பிரமுகர்கள் பலரை அழைத்துத் தனியே விசாரித்து உண்மை இன்னது என்று அறிந்த பின்பு 144 உத்திரவு போட மறுத்ததுடன் மகாநாடு சிறப்பாய் நடக்க வேண்டு



RangaRakes
tamilnavarasam.com

மென்று கோருவதாகவும் வெளிப்படையாய் தெரிவித்துக்கொண்டாராம். அதுபோலவே அங்குள்ள போலீஸ் அதிகாரிகளும், சில காங்கிரஸ் தொண்டர்களும், சில முஸ்லீம் பிரமுகர்களும், சில கிறிஸ்தவ நண்பர்களும் 2 நாளும் மகாநாட்டுப் பந்தலில் இடைவிடாது கூடவே இருந்து மகாநாட்டை உற்சாகப் படுத்தி ஆனந்தித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றும் ஒரு விசேஷம் என்னவென்றால் இரண்டொரு முக்கிய அதிகாரிகள் மற்ற ஜனங்களுக்குத் தெரியாமல் கூட்டத்திற்கு வந்து விஷயங்களைக் கவனித்துச் சென்றதாகவும் இரண்டொரு பிரசங்கங்களைப்பற்றி தாங்கள் இதுவரை இப்படிப்பட்ட கருத்துக்கள் கொண்ட பிரசங்கங்கள் கேட்டதில்லை என்றும், அவற்றில் கடுகளவாவது குற்றம் சொல்ல இடமில்லை என்றும், இதுதான் இனி இந்தியாவுக்கு வேண்டியதும், நடைபெறப்போவதுமானதென்றும் சொன்னதாகவும் திருப்திகரமாய் தெரிய வந்ததாகும்.

கூட்டத்திற்கு சுமார் 250 முஸ்லீம்களுக்குக் குறையாமல் இரண்டு நாள் 4 வேளைகளில் இருந்ததும், பெண்கள் 100 பேர்கள் வரை சதா கூடியிருந்ததும், கலப்பு மணம், விதவை மணம், கல்யாண ரத்து மணம், புரோகிதமற்ற மணம் ஆகியவைகளுக்கு அங்கேயே பல பேச்சு வார்த்தைகள் தனித் தனியே பிரமுகர்களிடத்தில் நடைபெற்றதும் சில கல்யாணப் பேச்சுகள் முடிவு பெற்றதும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க வந்த தோழர் வல்லத்தரசு அவர்களையும் மகாநாட்டுக்குத் துவக்குவிழா வாற்ற வந்த தோழர் நீலாவதி அம்மையாரையும், மேல்நாட்டுக்குச் சென்றுவிட்டு நாகைக்கு முதல் முதல் வரும் தோழர் ராமசாமியையும் பார்க்கவும் அவர்களுடைய சொற்பொழிவைக் கேட்கவும் என்று தஞ்சை ஜில்லாவிலும் தென்னாற்காடு ஜில்லாவில் உள்ள கிராமங்களிலும் முக்கிய பட்டணங்களிலுமிருந்து வந்த வாலிபர்கள் சுமார் 1000 பேர்களுக்கு மேலாகவே இருப்பார்கள் என்பதுடன் அவர்களுக்கு அங்கு காணப்பட்ட உற்சாகத்திற்கு அளவு கூறவேமுடியாது என்று சொல்வதில் சிறிதும் அதிகமில்லை. ஆனால் ஒரு விஷயம், சென்ற வருஷத்திற்கு முந்தியவருஷ மகாநாடுகளில் காணப்பட்டதான செல்வவான்கள் உத்தியோகஸ்தர்கள், ஸ்தல ஸ்தாபனங்களின் தலைவர்கள் என்கின்ற கூட்டங்கள் பூதக்கண்ணாடி வைத்துத்தான் தேடிப்பார்க்கவேண்டி இருந்தது. கூடுமானவரை மறைந்துகொள்ளவே முயற்சித்திருக்கிறார்கள் என்றும் தெரியவந்தது. என்றாலும் வாலிபர்களாய் உள்ள செல்வவான்களும் வாலிபர்களாய் உள்ள சில உத்தியோகஸ்தர்களும் வந்து இருந்ததுடன் தங்களை தைரியமாகவும் உறுதியாகவும் மகாநாட்டு நடவடிக்கைகளில் காட்டிக் கொண்டார்கள். ஆகவே மேற்கண்ட காரியங்களில் இருந்து சுயமரியாதை இயக்கத்தின் போக்கு இன்னது என்பதும் அது எந்த தன்மையில் விளங்குகின்றது என்பதும் வாசகர்களுக்கு ஒருவாறு விளங்கக்கூடும் என்றே கருதுகின்றோம்.



தவிர மகாநாட்டு தலைவர் தோழர் வல்லத்தரசு அவர்களது தலைமை உபன்யாசம் சற்று நீண்டதாய் இருந்தாலும் அவ்வுபன்யாசமானது சுயமரியாதை இயக்கத்தின் 4, 5 வருஷ சரித்திரத்தை ஒருவாறு விளக்கி அதன் படிப் படியான விருத்தியையும், முற்போக்கையும் சுட்டிக்காட்டுவதாய் இருக்கின்றது என்பதுடன் வாலிபர்களுக்கு உற்சாகத்தையும் பிற்காலத்தில் பலமான நம்பிக்கையையும் உண்டாக்கும் தஸ்தாவேஜாயிருக்கிறது.

மகாநாட்டுக்கு துவக்க விழாவாற்றிய தோழர் நீலாவதியம்மையாரின் உபன்யாசம் ஆண்களைத் திடுக்கிடச் செய்தும், பெண்கள் நிலைமையை எடுத்துக்காட்டி ஆண்மக்களை வெட்கி தலைகுனியச் செய்தும்விட்டது. அதுபோலவே வரவேற்புத் தலைவர் தோழர் சிவராமசாமி அவர்கள் சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர். ஆனாலும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர். ஆனாலும் தைரியமாய் முன்வந்து இந்தப் பொருப்புள்ள பதவியை ஏற்றுக் கொண்டதோடு பல தத்துவங்கள் கொண்ட உபன்யாசமானது போற்றத்தக்கதேயாகும்.

நிற்க அங்கு மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒரு முக்கிய தீர்மானமாவது:-

> "சென்னை மாகாணத்தில் தஞ்சை ஜில்லாவை ஒரு "மாடல் ஏரியா வாக" (பகுதியாக) எடுத்துக்கொண்டு சுயமரியாதை இயக்க ஜில்லா, தாலுக்கா, கிராமங்களை ஏற்படுத்தி நமது வேலைத்திட்டத் திற்கண்ட துறைகளிலும் வேலை செய்து காண்பிக்க ஒரு கமிட்டி நியமிக்க இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது"

என்பதாகும்.

இது அன்று அங்கு கூடியுள்ள இளைஞர்கள் ஊக்கத்தாலும் வேகத்தின் உணர்ச்சியாலும் ஏற்பட்டது என்று சொல்லக்கூடுமானாலும் உண்மையிலேயே தஞ்சை ஜில்லாவானது இது சமயம் இயக்க சம்பந்தமான எந்த அபிப்பிராயத்துக்கும் தலை சிறந்து விளங்கத் தயாராயிருக்கின்றது என்பதில் ஆக்ஷேபணை இல்லை. ஆனாலும் தஞ்சை ஜில்லாவிலுள்ள பார்ப்பனர்களைவிட மிகக் குறுகிய நோக்கமே அந்த ஜில்லா மிராசுதார்களும், செல்வவான்களும் பார்ப்பனரல்லாத வக்கீல்களில் பலரும் ஸ்தல ஸ்தாபனங்களில் கலந்துள்ளவர்களுமானவர்களின் மனப்பான்மை இருந்து வருகின்றது என்பதை ஒளிக்காமல் சொல்லித் தீர வேண்டியதாய் இருக்கின்றது.

தஞ்சை ஜில்லாவில் இதுசமயம் பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சி மேற்கண்ட கூட்டத்தார்களில் முன் இருந்ததில் 100க்கு 25 பாகம் கூட இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இதற்குக் காரணம் பார்ப்பனர்கள் தங்கள் ஜாதி உயர்வு போய் விட்டால் தங்கள் நிலை மோசமாகிவிடும் என்று எப்படிப் பயப்படுகின்றார்களோ அதேபோல் பார்ப்பனரல்லாத மிராசுதாரர்



RangaRakes tamilnavarasam.com

கள் முதலியவர்களும் தங்களுக்குள் ஏற்பட்ட கட்சிப் பிணக்கால் பார்ப்பனர் விரோதம் வந்தால் தாங்கள் கவிழ்ந்து விடுவோம் என்ற பயமும் பணக்காரத் தன்மைக்கு உண்டான உயர்வும், மதிப்பும் போய்விட்டால் தங்கள் நிலை மிகமோசமாய்ப் போய் விடுமே என்ற கவலையும் சேர்ந்து அவர்களை உலக நடப்பில் இருந்தே தள்ளி ஒதுக்கி வைத்து விட்டதுடன் சதாகாலமும் உத்தியோகம், பதவி, பணக்கொள்ளை என்கின்ற “பேய்கள்” பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கின்றன.

இதன் பயனாய் அந்த நாட்டு மிராசுதாரர்கள், பெரிய மனிதர்கள், ஸ்தல ஸ்தாபன தலைவர்கள் என்பவர்கள் பார்ப்பனரல்லாதாராய் இருந்தாலும் ஏழை மக்களின் தாழ்த்தப்பட்ட மக்களின் நன்மைகளுக்கும், விடுதலை களுக்கும் பார்ப்பனர்களைப் போலவே பெரிய எதிரிகளாகவும் முட்டுக் கட்டையாகவும் தான் இருக்கிறார்கள்.

எனவே தஞ்சை ஜில்லாவை சுயமரியாதை மாடல் சென்டராக ஆக்குவது என்பது அந்த ஜில்லாவில் உள்ள மேல்கண்ட கூட்டத்தாரின் யோக்கியதையை வெளியாக்கி பொது ஜனங்களுக்கு அவர்களிடம் இருக்கும் பயத்தையும், பயத்தினால் ஏற்பட்ட மரியாதையையும் ஒழிக்க வேண்டும் என்பதே முக்கிய காரியமாகும். இந்தக் காரியத்தை ஒவ்வொரு ஜில்லாவிலும் செய்து வருவதுதான் சுயமரியாதைத் தொண்டின் முக்கிய தத்துவமாகும்.

ஆதலால் தஞ்சை ஜில்லா வாலிபர்கள் அவர்கள் மகாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தைக் காரியத்தில் நடத்திக் கொடுப்பார்கள் என்றே கருதுகிறோம்.

அந்தப்படி இவர்கள் நடத்திக்காட்டி விட்டார்கள் என்பதற்கு அத் தாட்சி என்னவென்றால் இனிவரப்போகும் தேர்தல்களில் செல்வவான்களின் நிலை என்ன ஆகின்றது என்பதேயாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 16.04.1933**



# போலீஸ் யோக்கியதை

உப்பு சத்தியாக்கிரக சட்டமறுப்பு காலங்களில் இருந்து போலீசாருக்கு ஒரு புதிய யோக்கியதை ஏற்பட்டுவிட்டது. அதாவது போலீசு எவ்வளவு அக்கிரமமாகவும், அயோக்கியத்தனமாகவும் நடந்துகொண்டாலும் அதற்கு எவ்வித கேள்வியும், கேழ்ப்பாடும் கிடையாது என்பதாகும். போலீசு இலாக் காத் தலைமை அதிகாரிகளுக்கும் நிர்வாக தலைவர்களுக்கும் சட்டசபை அங்கத்தினர்கள் கேட்ட கேள்விகளாலும், தேசிய பத்திரிகைகள் வைத வசவுகளாலும், பொது ஜனங்கள் மண்ணை வாரித்தூற்றி “சாபம்” கொடுத்து சபித்ததாலும், புத்தியும் நாணையமும், யோக்கியப் பொருப்பும் காப்புக்காச்சி மறத்துப் போய்விட்டதுடன் அவர்களது தோல் காண்டாமிருகத் தோலுக்கு சமமாய் போய்விட்டது. இனி எந்தக் காரணத்தை முன்னிட்டும் போலீசு இலாக்காவை திருத்தவோ, அவர்களுக்கு நல்ல புத்தி வரும்படி செய்யவோ யாராலும் முடியாது என்கின்ற பதவியை அது அடைந்து வருவதாகத் தெரியவருகின்றது. இது அந்த இலாக்காவுக்கு ஒரு கௌரவம்தான் என்றாலும் நம்மைப் பொருத்தவரை இனி நம்மால் போலீசு இலாக்காவைத் திருத்த முடியாவிட்டாலும் போலீசு இலாக்காவினால் நாமாவது திருத்துப்பாடடைந்து இனிமேல் இப்படிப்பட்ட விஷயங்கள் நம் கண்ணில் தென்படாமலும், காதில் கேட்கப்படாமலும் உள்ள நிலையை அடையவேண்டியது அவசியம் என்று கருதுகின்றோம். ஏனெனில்,

சமீப காலத்துக்குள் இரண்டு இடங்களில் போலீசு அட்டூழியம் ஏற்பட்டு விட்டது.

ஒன்று காரைக்குடியில் ஒரு நாட்டுக்குக் கோட்டை நகரத்து வாலிப ரையும் மற்றும் இரு தோழர்களையும் தெருவில் நடக்கும் போது அடித்து துன்புறுத்தி அரஸ்ட் செய்தது.

இரண்டு நீடாமங்கலத்தில் தோழர் கே. ராமையாவையும் மற்ற இரு நண்பர்களையும் தெருவில் நடக்கும் போது ஒரு நண்பரை யார் அடிக்கிறார் என்று ஒருவர் தலை நிமிர்ந்து பார்த்ததற்காக அடித்து துன்புறுத்தி அரஸ்ட் செய்து மூன்று நாள் தண்டித்து கொடுமைப்படுத்தியது ஆகிய காரியங்களுக் கும் மற்றும் அவர்கள் குடிகாரன், வெறிகாரன் போலும் கீழ் மக்கள் என்ப



RangaRakes tamilnavarasam.com

வர்கள் போலும் வைவதும் நடந்து கொள்ளுவதுமான காரியங்களைப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

சுயமரியாதைக்காரர்கள் எந்த இடத்திலாவது இதுவரை போலீசு அல்லது நீதி நிர்வாக இலாகா உத்திரவுகளை மீறியோ அல்லது சட்டம் என்பதற்கு விரோதமான காரியங்களைச் செய்தோ இருந்தால் இவ்வித காரியங்களைப்பற்றி பேசவோ, எழுதவோ ஒருநாளும் வெளிவர மாட்டோம். அனாவசியமாய் பார்ப்பனர்கள் இடம் கூலி பெறவும் அகஸ்மாத்தாய் தங்கள் அயோக்கியத்தனமான நடவடிக்கைகளும் முட்டாள்த்தனமான நடவடிக் கைகளும். பிரசங்கத்தில் வெளியாய் விட்டதாகக் கருதிக்கொண்டும் இந்தப் படி நடந்து கொண்டால் அதன் எல்லை முழுவதையும் பார்த்து விட வேண்டும் என்றும் அந்த இலாக்காவின் யோக்கியதையை வெளிப்படுத்தி விட வேண்டும் என்பது தான் நமது கருத்து.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 16.04.1933**



# "தொழிலாளர் நிலைமை"

நமது கவனத்தை அரசாங்கத்தாரும் வேறு ஏதாவது ஒரு வழியைக் காட்டித் திருப்பி விடுவார்கள். ஆனால் உண்மையில் முதலாளிகளின் ஆதிக்கத்திற்கும், அன்புக்கும் விரோதமில்லாமலே தான் அரசாங்கத்தார் நடந்து கொள்ளுவார்கள். அப்படிக்கில்லா விட்டால் அரசனுக்கும், அவனு டைய சிப்பந்திகளுக்கும் உலை வைக்க உடனே முதலாளி வர்க்கம் வேலை செய்ய ஆரம்பித்துவிடும். உண்மையில் தொழிலாளிகளுக்கு தீங்கு இழைத்துக் கொண்டிருப்பது முதலாளி வர்க்கம் தான் என்பதை மக்கள் அறியமுடியாமல் பல தேச பக்தர்கள் என்பவர்கள் முதலாளிகளிடம் கூலி பெற்றுக்கொண்டு நம்மை சர்க்கார் பக்கம் திருப்பி விட்டு விடுகிறார்கள். இப்போதும் இந்நாட்டில் உள்ள கஷ்டத்திற்கு காரணம் சர்க்கார் என்றுதான் நீங்கள் கருதுகிறீர்களே தவிர முதலாளிகள் என்று நீங்கள் கருதுவதில்லை. சர்க்காரால் தொழிலாளிக்கு அதிக நஷ்டமில்லை.

இத்தேசத்திற்கு வெளிநாட்டு சர்க்கார் வருமுன் தொழிலாளிகள் எல்லாரும் எந்தவிதமான தொழில் செய்பவராக இருந்தாலும் அவர்களது சோற்றுக்கு மட்டும் கணக்குப் பார்த்து கூலி கொடுக்கப்பட்டு வந்தது. மாதம் மாதம் சாப்பாடு மட்டும்தான் போட்டு தினம் 24 மணியில் 20 மணி நேரம் வரை மாடுகளைப்போல் வேலை வாங்கிவந்தார்கள். அதிலும் இந்திய சுதேச அரசர்கள் அரசாண்ட காலத்தில் மக்களை ஆடுமாடுகளைப்போல பட்டியில டைத்து வைத்துத்தான் வற்புறுத்தி வேலை வாங்கினார்கள். அதற்கு முன் அரசாண்ட இராமன், கிருஷ்ணன் என்பவர்களின் காலத்திலோ தொழிலாளர் களின் நிலைமையைக் கேட்க வேண்டியதில்லை. மனுதர்ம முறை தவறாமல் தான் வேலை வாங்கி இருப்பார்கள் என்பதில் என்ன சந்தேகம். காளிக்கும், கருப்பனுக்கும் மனிதர்களைப் பலி கொடுப்பார்கள். அக்காலத்திலும் தொழி லாளர்கள் நிலை மிக மோசமாகவேதான் இருந்துவந்ததற்கு ஆதாரமுண்டு. அன்னியர் அரசு வேண்டாமென்றால் அதை விடக் கொடுமையான அரசு வருணாச்சிரம அரசு என்பது, ஆகவே அது சுதேசி அரசானாலும், காந்தி அரசானாலும் நமக்கு வேண்டியதில்லை. எந்த அரசாங்கம் இந்நாட்டில் ஏற்பட்டாலும் மேல் கீழ் ஜாதி முதலாளி, தொழிலாளி பிரிவு ஆகிய வேற்றுமை நிலை ஒழிக்கப்படும்வரை நாம் முட்டிக்கொள்ள வேண்டியது தான். உயிரையும் விடும்படியான கிளர்ச்சி செய்ய வேண்டியதுதான்.



RangaRakes tamilnavarasam.com

மேனாடுகளில் அன்னிய அரசு, ராஜா அரசு ஆகியவை இல்லாத சுதேச அரசு, குடி அரசு நாடுகள் பல இருக்கின்றன. ஆயினும் அவை பேருக்குத் தான் ஜனங்கள் ஆட்சி என்பது தவிர அரசாட்சி செலுத்துவது ஆதிக்கம் வகிப்பது எல்லாம் பணக்காரக்கூட்டம் தான். அங்கு இன்று லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான தொழிலாளிகள் பட்டினிதான் கிடந்து வாடுகிறார்கள். உலகத்தில் குபேரநாடு என்று சொல்லப்படும் அமெரிக்காவின் யோக்கிய தைப் பற்றி வெளியில் சொல்லவேண்டியதில்லை. அங்குதான் வேலை யில்லாத் திண்டாட்டம் இன்னும் அதிகமாக இருக்கிறது. 1½ கோடி மக்களுக்கு வேலையில்லை, பட்டினி தான் இருக்கிறது, அங்கு வேறு நாட்டான் வந்து அரசாளவில்லை. ஒரு அரசன் இருந்து அரசாள வில்லை. உள்ளூர்க்காரன்-சொந்தக்காரன்-குடிகள் தான் அரசாளுகிறான். அப்படியிருந்தும் தொழிலாளி யின் நிலையானது ஏன் இவ்வளவு கேவலமாக வந்திருக்கிறது என்பதை கவனித்தால் காரணம் விளங்காமல் போகாது. இந்தியாவில்தான் “வெள்ளைக் காரன் அரசாளுகிறான் இதனால் வேலை இல்லை கஷ்டம் பஞ்சம்,” என்று குறை கூறப்படுகிறது. அவசர சட்டங்கள், அடக்கு முறைகள் என்று அலரப் படுகிறது. ஆனாலும் ஆங்கில அரசாட்சி யிலும் அல்லது இனி வரப்போகும் காந்தி அரசாட்சியிலும், இங்குள்ள தொழிலாளிகளுக்கு என்ன பயன் ஏற்படும். கருப்பன் அரசாண்டால் இன்னும் ஒரு 50 சங்கராச்சாரியும் ஊருக்கு 10 மடமும் 20 கோவிலும் ஏற்பட்டு இன்றும் மக்களை கொள்ளையடிக்கப் பட்டு மக்களை ஒன்றுபடவிடாமல் சாதிக்கு சாதி சட்டம்போட்டு நசுக்கு வதைத் தவிர வேறு என்ன வழிபிறக்கும்? என்பது இதுவரை சுயராஜ்யம் கேட்கும் தேசீயவாதிகள், தேசபக்தர்கள் மகாத்மாக்கள் சொல்வதிலிருந்தும், எழுதுவதிலிருந்தும் தெரியவில்லையா? ஆங்கில ஆட்சியிலேனும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்வதாக ஏதோ 100-க்கு 4, 2 அனு கூலங்கள் ஏற்பாடு செய்ததாக, செய்வதாக சொல்லப்படுகிறது. கொள்ளை, திருட்டு, ஜாதிமுறை இவைகள் தடுக்கப்படுவதற்கு கடுமையான சட்டங்கள் கையாளப்படுகிறது துவேஷமிருக்கக்கூடாது என்று சொல்லிக் கொள்ளப் படுகிறது.

ஆயினும் இப்போதுதான் சங்கராச்சாரி இங்கு தங்கப் பல்லாக்கு போட்டு மனிதன் மேல் சவாரி செய்கிறான். பார்ப்பானோ பகற்கொள்ளை யடிப்பது போன்று அவனுக்குத் துணையாக வருகிறான். பாதிரிகளோ மக்கள் அறிவைக் கெடுத்து மோட்சத்திற்கு அனுப்ப உபதேசிக்கின்றனர். முல்லாக் கள், புரோகிதர்கள் என்பவர்களின் கொடுமையிலிருந்து மக்களை மீட்க வழியைக் காணோம். காட்டுமிராண்டி தனமாகவே எல்லா மதக் காரர் களாலும் உற்சவம் பண்டிகைகள் கொண்டாடப்பட்டும் நரபலிகூட கொடுப் பதும் சரி என்று மக்கள் மனதில் பதிந்திருக்கும் எண்ணத்தையும் மாற்றும் முறையில் எதுவும் கவலை எடுத்துக் கொள்ளக்காணோம்.

ஆனால் சுயராஜ்யம் என்றும் மதம் என்றும் அதுவும் மதஒழுக்கம் வருணாச்சிரமம், தவறாமல் சுயராஜ்யம் வேண்டும் என்றும் கேட்கின்றார்கள்



அவர்களது கோரிக்கைப்படி சுயராஜ்யம் வந்துவிட்டால் அதில் தொழிலாளர் கள் நிலைமை தீண்டப்படாதார் நிலைமை, தாழ்த்தப்பட்ட பார்ப்பனரல்லாதார் நிலைமை என்ன ஆகும் என்று சொல்லவும் வேண்டுமோ?

எந்த ராஜா எந்த தேசத்திலானாலும் இந்தியாவிலானாலும் ஆண்டா லும் இங்கு பாடுபடுபவன் நாளெல்லாம் பாடுபட்டு மடியவும் சோம்பேறி இருந்து தின்கவும் தான் இருக்கிறதே ஒழிய வேறு வழி என்னவென்று கேட்டால் உடனே பதில் சொல்லாது மழுப்பிவிட்டு எல்லாம் சுயராஜ்ஜியம் வந்தால் சரியாகப் போய்விடும் என்பான். சுயராஜ்யத்தில் எப்படி சரியாகப் போய்விடும் என்று கேட்டால் அரசாங்கம் செய்வது தான் தப்பு இந்நாட்டில் அன்னிய அரசாங்கம் இருப்பதுதான் இத்தனைக்கும் காரணம் என்று அரசாங்கத்தை ஒழிக்க வரும்படி தூண்டுவான். ஆனால் அரசாங்கத்தை எதிர்க்கும்படி காட்டிவிட்டு அவன் மட்டும் ஜட்ஜியாகவோ, வக்கீலாகவோ மாதம் 4000, 5000 சம்பளம் வாங்கிக்கொண்டு தன் பிள்ளை குட்டி பந்துக்களுக்கும் அரசாங்கத்திலே அதிகாரம் வாங்கிக் கொடுத்து தைரியம் ஏற்படுத்திக் கொள்வான். அன்னிய பாஷை விரோதம், அடிமைப்புத்தியை வளர்க்கும் என்றும் இனி பள்ளிக்கூடங்களுக்கு செல்லாதீர்கள் என்றும் உங்களுக்கு உபதேசம் செய்ய ஆரம்பிப்பார்கள். ஆனால் தமது குழந்தை களை மட்டும் எம். ஏ., பி.ஏ., படிக்கவைத்து மேல் படிப்புக்குச் சீமைக்கு அனுப்பி அங்கிருந்தே உத்தியோகத்தோடு வந்து சேர வழிசெய்து கொள்வான். தொழிலாளியின் மக்கள் அவன் சொல்வதையே சரி என நம்பி நாளெல்லாம் பாடுபட்டு முட்டாள்களாக, முதுகெலும்பு ஒடிய வேலை செய்து மீதமிருக்கும் 2, 1 ரூபாயும் சங்கராச்சாரிக்கும், மாரியம்மனுக்கும் கொட்டி விட்டு மோட்சத்திற்கு போக வழி கேட்பார்கள். தனது செல்வாக்கு இன்னும் ஆயிரக்கணக்கான வருடங்களாக இருப்பதற்கும் தனது சூழ்ச்சிகள் மறைக்கப்படுவதற்கும் தொழிலாளர்களின் விழிப்பை மடக்கி விடுவதற்கும் தான் முதலாளி அன்னிய அரசாங்கத்தை சுட்டிக் காட்டுகிறான். முதலாளி களின் கூலிகளில் தான் சுயராஜியம் பேசுகிறார்கள். தொழிலாளித்துவம் இங்கு நிலைத்திருப்பதற்குக் காரணம் இதுதான் என்று அவனுக்கு நன்றாகத் தெரியும்.

வெளிநாட்டிலிருந்து துணி வந்து இந்தியாவில் விற்றாலும் இந்தியா விலிருந்து ஏற்றுமதி செய்து வெளிநாட்டில் விற்றாலும் லாபம் யாருக்கு கொள்ளை லாபம் சம்பாதிப்பது முதலாளி கூட்டம் தானே. தொழிலாளி அவன் தேவைக்குத் தகுந்ததைச் செய்து கொடுக்கவேண்டியது அன்றி இவன் அடையும் ஊதியம் ஏதாவது உண்டா? மத்தியிலிருக்கும் தரகனுக்கு கிடைக்கும் லாபம்கூட தொழிலாளி - உற்பத்தி செய்கிறவன் - நெசவுக்காரன் ஆகியவனுக்குக் கிடைப்பது இல்லை. (தொடரும்)

*குறிப்பு: 02.04.1933 குடி அரசு - அனுப்ப பாளையம் சொற்பொழிவு தொடர்ச்சி*

**குடி அரசு - சொற்பொழிவு - 16.04.1933**



RangaRakes tamilnavarasam.com

# ரஷ்ய நீதி

ரஷ்ய தேச ஆட்சியின் கொள்கையை உலகம் முழுவதுமே வெருக் கப்பட வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு பிரசாரம் செய்து வருவதாய் காணப்பட்டு வருகின்றது. எது போலவென்றால் சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் பெரிதும் பார்ப்பனர்களுக்கு விரோதமாய் இருந்ததால் பார்ப்பனர்களின் செல்வாக்கால் அது ஒரு காலத்தில் எப்படி எல்லா மக்களா லும் வெறுக்கப்பட வேண்டுமென்று பிரசாரம் செய்வதாய் காணப்பட்டதோ அதுபோல்.

ரஷியா ஆட்சிக் கொள்கையானது சுருக்கமாகச் சொல்லப்பட வேண்டுமானால் அது உலக பணக்காரர்களுக்கு விஷம் போன்றதும் ஏழை மக்களுக்கு "சஞ்சீவி" போன்றதுமாகும். இன்றைய உலகம் பணக்காரர்கள் கையில் சிக்குண்டு, பணக்காரர்களுக்கு அடிமைப்பட்டு, பணக்காரர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதால் பணக்காரர்கள் 100க்கு 10- பெயர்களே யாயினும், அவர்களே உலக மக்களாகக் காணப்படுவதும், ஏழை மக்கள் 100க்கு 90-பேர்களாயினும் அப்படி ஒரு கூட்டம் இருப்பதாக உலகுக்கு ஞாபகத்துக்கே வரமுடியாமலும் இருந்து வருகின்றது.

ஆனால் ரஷ்யாவிலோ அப்படிக்கில்லாமல் பணக்கார ஆதிக்கம் ஒழிந்து ஏழைமக்கள் பணக்காரர்கள் கையினின்று விடுபட்டு சுதந்திரம் பெற்று ஏழை-பணக்காரன், முதலாளி-தொழிலாளி என்கின்ற வேற்றுமை இல்லாமல் எல்லோரும் ஒரே இனம் (அதாவது மனித இனம்) என்கின்ற தலைப்பில் எல்லோரும் ஓர் குடும்ப மக்களாய் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த நிலை பணக்காரர்கள் புரோகிதர்கள் ஆதிக்கமுள்ள நாடுகளுக்கு எதிரான நிலையானதினால் பணக்கார உலகம் ரஷியாவை தூற்றவும், பழிக்கவும், வெறுக்கவும், விஷமப் பிரசாரம் செய்யவும் ஆன காரியங்களில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதில் அதிசயமொன்றுமில்லை. இந்த நான்கைந்து வருடகாலமாக ரஷியாவைப் பற்றி பலவாறு அதாவது ரஷிய மக்களுக்கு போதிய ஆகாரமில்லை யென்றும், கோடிக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடி மடிகின்றார்கள் என்றும், கொடுங்கோன்மை முறையால் ஆளப்பட்டு வருகின்றதென்றும், அந்நாட்டு ஆட்சியில் நீதி என்பதே கிடையாது என்றும்,



மற்றும் பலவிதமாக அதைத் தூற்றிப் பழித்து, இழித்து பிரசாரங்கள் செய்யப்பட்டு வந்தன. அங்குள்ள நன்மைகள், மேன்மைகள் எதுவாயினும் அவற்றை பரிசுத்தமாய் வடிகட்டினாற்போல மறைத்தும் வந்தன. எப்படி இருந்தும், எவ்வளவு விஷமப் பிரசாரம் செய்தும், சூரிய வெளிச்சத்தை உள்ளங்கையால் மறைக்க முடியாதுபோல ரஷியா நிலைமை இப்போது உலக மக்களுக்கு வெளியாகின்றது. வரவர ரஷிய சேதிகளின் உண்மையை வெளிப்படுத்தும் விஷயத்தில் ஜனங்களுக்குள்ள பயம் நீங்கியும் வருகின்றது. அது மாத்திரமல்லாமல் இந்த 4, 5 மாத காலமாய் ரஷிய சேதிகளை வெளிப் படுத்துவது ஒரு நாகரீகமாயும், ரஷிய சேதிகளைப் பற்றிப் பேசுவது ஒரு சத்கால க்ஷேபமாகவும் ஏற்பட்டுவிட்டது. இதன் பயனாய் இப்போது ரஷிய சேதிகள் இல்லாத பத்திரிகைகளும், ரஷியா பிரஸ்தாபமில்லாத பிரசங்கங் களும் மிகமிக அருமையாகப் போய்விட்டது என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஆகவே ரஷிய பூச்சாண்டி திரை நீங்கப்பட்டு வெட்ட வெளிச்சத்தில் வெள்ளைக் கண்ணாடி மூலம் பார்க்கக்கூடியதாக இருந்து வருகின்றது.

சமீப காலத்தில் ரஷியாவைப் பற்றி ஒரு பரபரப்பு இருந்து வந்தது நேயர்களுக்கு தெரிந்திருக்குமென்றே எண்ணுகின்றோம்.

அதாவது ரஷிய ஆட்சியானது சில பிரிட்டிஷ் பிரஜைகளின் மீது குற்றம் சாட்டி சிறை பிடித்து வைத்திருப்பதாயும், அதுபழிவாங்கும் எண்ணத் துடன் கற்பனையாய் செய்யப்பட்டிருப்பதாயும், ஆனதினால் ரஷ்யாவுடன் பிரிட்டிஷ் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், வியாபாரத் துறையில் ரஷிய வியாபாரத்தை நிறுத்தி அந்தச் சரக்கு பிரிட் டிஷூக்குள் வராமல் தடுத்துவிட வேண்டுமென்று பல புதிய சட்டங்களையும் செய்தும் அதன் மூலம் ரஷிய வியாபாரத்தை பகிஷ்கரிக்கவும் முயற்சித்து வந்தது யாவருமறிவார்கள்.

விஷயம் என்னவென்றால் ரஷியாவில் இயந்திரத் தொழில் முறை விருத்திக்கு அனுகூலமான மின்சார விசை நிலையங்கள் கொஞ்சகாலமாக ஒன்றன்பின் ஒன்றாய் பழுது ஆய்க்கொண்டு வந்ததுடன் அதனால் ரஷியத் தொழில் முறை கெட்டு பெரிய நஷ்டம் ஏற்பட்டும் வந்தது. ரஷ்ய ஆட்சி நிர்வாகிகள் இதைப்பற்றி சந்தேகப்பட்டு அதன் காரணத்தைக் கண்டுபிடிக்க முயன்றதில் சில பிரிட்டிஷ் கம்பெனிக்காரர்களின் நன்மைக்காக ரஷ்யா விலுள்ள சில பிரிட்டிஷ் இஞ்சினீர்கள் சில ரஷ்யர்களுக்கு லஞ்சம் கொடுத்து அவர்களைக் கைவசப்படுத்தி அதன்மூலம் அங்குள்ள மின்சார நிலையங் களுக்குக் கெடுதியை விளைவித்து வந்தார்கள் என்பதாகக் கண்டு பிடிக்கப் பட்டு அந்த பிரிட்டிஷ் இஞ்சினீயர்களையும் அதற்கு உளவாயிருந்த ரஷ்ய சதிகாரர்களையும் கண்டுபிடித்துச் சிறை செய்து அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்த விஷயத்தை பிரிட்டிஷ்



RangaRakes tamilnavarasam.com

முதலாளி வர்க்கம் அறிந்து இதனால் தங்களுக்குப் பெரிய உலகப்பழியும் அவமானமும் வந்து விட்டதே என்று கருதி இச்செய்கைகளை மறைக்க ஆசைப்பட்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மூலம் ரஷ்யரை மிரட்டிப் பார்த்த தல்லாமல் ரஷ்யாவின் மீது பழியும் சுமத்தினார்கள்.

ஆனால் ரஷ்யர்கள் இவை எதற்கும் பயப்படாமல் தைரியமாய் அது விஷயத்தில் தாங்கள் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்து உலகத்தின் முன்பு தங்களுடைய திறனையும், தைரியத்தையும் நியாயம் வழங்கும் முறையையும் காட்டிக்கொண்டார்கள். எப்படி என்றால் இந்த சதிக்குற்றத்தில் சம்மந்தப்பட்ட 18-குற்றவாளிகளில் பிரிட்டிஷ் குற்றவாளிகள் 6-பெயர்கள் (இவர்கள் ஆறு பேர்களும் பிரிட்டிஷ் இஞ்சினீயர்களாவார்கள். மீதி ரஷிய குற்றவாளிகள் 12 பேர்கள். இந்த பதினெட்டு பெயர்களையும் நீதிமன்றத்தில் நிறுத்தி வெளிப்படையாய் எதிரிகளுக்கு தகுந்த வக்கீல்களை வைத்து வாதாட சந்தர்ப்பம் கொடுத்து அந்த வக்கீல்களுக்கு யோசனை சொல்லவும் விசார ணையின் யோக்கியதையை கவனிக்கவும் தக்க வண்ணம் பிரிட்டிஷ் பிரதி நிதிகள் வந்து கோர்ட்டில் ஆஜராக சம்மதித்தும் விசாரணை நடத்தி வந்தார்கள். இந்த விசாரணையால் பிரிட்டிஷ் இஞ்சினீயர்களான குற்றவாளி கள் சிலர் தங்கள் குற்றங்களை தங்கள் வாய் மூலமாக ஒப்புக்கொள்ளவும் நேர்ந்து விட்டதுடன் சாக்ஷிகள் மூலம் குற்றங்கள் தாராளமாய் ருஜுவும் ஆகிவிட்டன.

இதன் மீது ரஷ்ய நீதிபதியானவர் பிரிட்டிஷ் குற்றவாளிகள் 6 பேர்களில் ஒருவருக்கு விடுதலையும் இருவருக்கு முறையே 3 வருஷம் 2 வருஷம் வீதம் தண்டனையும், மூவருக்கு தேசப் பிரஷ்டமும் செய்துவிட்டு, ரஷ்யக் குற்றவாளிகள் பன்னிருவர்களில் ஒருவரை விடுதலை செய்து விட்டு பாக்கி பேர்களை 10 வருஷம் 8வருஷம் 2 வருஷம் 3வருஷம் வீதமும் இதில் ஒரு பெண்ணும் இருந்ததால் அவருக்கு $1\frac{1}{2}$ வருஷமும் தண்டனை விதித்தார்கள். அப்பீலுக்கும் இடம் கொடுத்திருக்கிறார்கள்.

இதிலிருந்து ரஷ்ய ஆட்சி நீதி வழங்கும் முறையை ஒருவாறு உணரலாம். இந்தக் குற்றங்களை சாதாரண குற்றம் என்று யாரும் சொல்லிவிட முடியாது. இதன் உள் எண்ணமும் இதனால் ஏற்படக்கூடிய நஷ்டமும் எவ்வளவு கடுமையானது என்பதை நாம் விவரிக்க வேண்டியதில்லை. இப்படிப்பட்ட குற்றம் ரஷ்யர்கள் பிரிட்டிஷுக்குள் வந்து செய்திருந்தால் அது எப்படிப் பாவிக்கப்பட்டு எவ்வித தண்டனை அளிக்கப்பட்டிருக்கும் என்பதை அவரவர்கள் சொந்த முறையில் யோசித்துப் பார்த்தால் தெரிய வரும். அப்படிப்பட்ட இந்த கடுமையான சதிக்குற்றத்திற்கு இருவருக்கு 2-வருஷம் 3-வருஷம் தண்டனையும் மற்ற மூவருக்கு தங்கள் நாட்டை விட்டு அவர்களது சொந்த நாட்டுக்குப் போய் விடும்படியும் தீர்ப்புச் செய்தி ருக்கிறார்கள் என்றால் இதற்கு மேலான காருண்யமும், அருளும் உள்ள நீதி இந்த உலகத்தில் எங்காவது கிடைக்கமுடியுமா? என்பதை யோசித்தால் ரஷ்ய



நீதியின் பெருமை விளங்கும். இந்த நீதி "ராம" ராஜ்யத்திலோ அல்லது சுயாட்சி தேசத்திலோ கூட எதிர்பார்க்க முடியுமா என்பதும் யோசிக்கத் தக்கதாகும்.

இது இப்படியிருக்க இதன் உண்மையையும் யோக்கியதையும் பார்த்து பிறகு ஒரு முடிவுக்கு வரலாம் என்கின்ற யோசனை சிறிதுமின்றி வேண்டு மென்றே அவசரப்பட்டு ரஷியர்கள் மீது உலக மக்களுக்கு வெறுப்பு ஏற்படும் படி தூற்றப் பழித்து சில பகிஷ்கார முறைகளை கையாடினதும் பிரிட்டிஷாரின் புத்திசாலித்தனத்தையோ, ராஜ தந்திர முறையையோ நல்ல எண்ணத்தையோ காட்டுவதாக இல்லாமல் போனது குறித்து யாரும் வருந்தாமல் இருக்க முடியாது.

எப்படியிருந்த போதிலும் இந்த தடபுடல் விஷமப் பிரசாரத்தின் பயனாய் ரஷியாவுக்கு நன்மையே ஏற்பட்டது என்றுதான் சொல்லவேண்டும். எப்படியெனில் ரஷியாவின் நீதியை உலகம் அறிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது என்பதேயாகும்.

நிற்க ரஷியாவின் மீது எப்படியாவது ஒரு சமயத்தில் ஏதாவது ஒரு சாக்கை வைத்து (" நீ இல்லாவிட்டாலும் உன் தந்தையாவது செய்திருப்பான்" என்கின்ற ஆட்டுக்குட்டி-ஓநாய்க் கதையைப் போல்) ஒரு குற்றம் சுமத்தி அதனிடம் வம்புச் சண்டைக்குப் போயாவது ரஷியாவில் இன்று நடைபெறும் பொதுவுடமை ஆட்சியை ஏழை மக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் அனு கூலமான ஆட்சியை ஒழித்து மற்ற நாடுகளில் நடைபெறுவது போன்ற பணக் கார ஆட்சியை ஏற்படுத்தவேண்டும் என்கின்ற எண்ணம் இந்த உலகில் இன்று பிரிட்டிஷாருக்கு மாத்திரமல்லாமல் எல்லா தேசத்து ஆட்சிக்காரர் களிடமும் இருந்து வருகின்றது. அதற்கு ஆங்காங்குள்ள முதலாளிகளாலும், பாதிரி, புரோகிதர்களாலும் தண்ணீர்விட்டு பாதுகாத்தும் வரப்படுகின்றது. ஆனாலும் ஏழைமக்கள் சரீரத்தில் பாடுபட்டு தொழில் செய்து வாழும் மக்கள் கண்விழித்து சுயமரியாதை உணர்ச்சி பெற்று விட்டதால் முதலாளி ஆட்சி யின் எண்ணங்கள் கருகி வாடி வருகின்றன.

அன்றியும் ரஷிய ஆட்சி "முதலாளித்துவ ஆட்சிகளின் தயவி னாலோ அல்லது கருணையினாலோ நாம் வாழலாம்" என்கின்ற எண்ணத் தின்மீது ஒரு சிடுக்கை நேரம்கூட இல்லை. ஆனால் அதற்கு பதிலாக இந்த உலக முதலாளிகள் மாத்திரமல்லாமல் இன்னும் "செவ்வாய் மண்டல" முதலாளிகளின் எதிர்ப்பையும், அவர்களது சக்தியையும், சூழ்ச்சிகளையும், நன்றாய் அறிந்து எந்த நேரமும் எதிர்பார்த்து நின்று கொண்டு இருக்கின்றது. அது எப்படிப்பட்ட யுத்தத்தையும் வரவேற்று ஒரு கை பார்த்து விட துணிந்து இருப்பதுடன் உலக முழுமைக்கும் தன்னுடைய ஆட்சிக் கொள்கையை உகந்தளித்து உதவி புரியக் காத்தும் இருக்கின்றது.



RangaRakes
tamilnavarasam.com

ஆனால் ஏழை மக்களுக்கும் கஷ்டப்பட்டு பாடுபடும் தொழிலாளி மக்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் உண்மையான சுயமரியாதை உணர்ச்சி உண்டாக்க வேண்டியதுதான் இப்பொழுது பாக்கியிருக்கின்றது.

**குடி அரசு - தலையங்கம் - 23.04.1933**



# ஒன்பதாவதாண்டு

நமது "குடி அரசு"க்கு எட்டாண்டு நிறைந்து ஒன்பதாமாண்டு துவக்கமாகின்றது என்னும் விஷயத்தை அறியும் வாசகர்கள் மகிழ்ச்சி அடையாமல் இருக்க மாட்டார்கள்.

குடி அரசு தோன்றும் போது இன்னாட்டில் எல்லாத் துறையிலும் செல்வாக்குப் பெற்று, சகல விதத்தும் ஆதிக்கம் அடைந்து, மக்களை வஞ்சித்து அழுத்தி வைத்திருந்த பார்ப்பனர்களுக்கு விரோதமாகவே காணப்பட்டது. அதன் பயனாய் குடி அரசு எங்கு பார்த்தாலும் "பார்ப்பனத் துவேஷமயமாக"வே விளங்கி வகுப்புத் துவேஷியாயிற்று. இதன் பயனாய் சர்வ வல்லமையுடைய பார்ப்பன சமூகத்தினுடையவும், பார்ப்பன பத்திரிகை களினுடையவும், பார்ப்பன அதிகாரிகளினுடையவும் சர்வ சக்தி கொண்ட எதிர்ப்புகளை சமாளித்து முதல் ஆண்டைக்கழித்து இரண்டாம் ஆண்டில் பிரவேசித்தது.

இரண்டாமாண்டில் அப்பார்ப்பனர்களின் "வஜ்ஜிராயுத" மாய் இருந்த "காங்கிரசிற்கு விரோதமாய்" த் தோன்றி அதனோடு வாதாட வேண்டியதாகி குடி அரசு தேசத்துரோகியாக விளங்கி தேசிய வாதிகளின் எதிர்ப்புக்கும், தொல்லைக்கும் ஈடு கொடுத்து வந்தது. இந்த சமயத்தில் குடி அரசு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய வேலை மாத்திரம் அல்லாமல் பார்ப்பனர் களாலும், அவர்களது ஆயுதங்களான காங்கிரசினாலும் முறியடிக்கப்பட்டு மூலையில் உட்கார வைக்கப்பட்டிருந்த ஜஸ்டிஸ் கட்சிக்கும் உழைக்க வேண்டியதாகி அதன் பயனாய் குடி அரசு "சர்க்கார் தாசனாக"விளங்கிற்று. எப்படியோ ஒரு விதத்தில் காங்கிரசினுடையவும் தேசபக்தர்களுடையவும் எதிர்ப்பு களையும், தொல்லைகளையும் சமாளித்து இரண்டாம் வருஷத்தைக் கடந்து மூன்றாம் வருஷத்தில் பிரவேசித்து விட்டது.

மூன்றாம் வருஷமும் குடி அரசு மேற்கண்ட மகத்தான எதிர்ப்புகளில் சிக்கி சண்ட மாருதத்தில் சிக்கிய குப்பை கூளம் போல் பறக்கடிக்கப்பட வேண்டி இருந்தாலும் அவ்வெதிர்ப்புகளைச் சிறிதும் லக்ஷியம் செய்யாமல் அதிலிருந்து மற்றுமோரடி.முன்னேரிற்று என்று சொல்லும்படியாக பார்ப்பன அஸ்திவாரங்களான சாஸ்திரம், புராணம், இதிகாசம் என்று சொல்லும்படியான



RangaRakes tamilnavarasam.com

மகத்தான செல்வாக்கும், மதிப்பும், மரியாதையும் பெற்றிருந்த ஆதாரங்களுக்கும் விரோதமாய் தோன்றி குடி அரசு எங்கு பார்த்தாலும் "இந்து மதத் துவேஷியாய்" விளங்கி பார்ப்பனர்கள், காங்கிரசுக்காரர்கள், ஆகியவர்களுடைய எதிர்ப்புக்கு மாத்திரமல்லாமல் இந்து சமூக பண்டிதர்கள் பாமர மக்கள் என்பவர்கள் எல்லோருடைய எதிர்ப்புக்கும், தொல்லைகளுக்கும் ஆளாகி அதிலிருந்தும் மீண்டு மூன்றாம் ஆண்டைக் கடந்து நான்காம் ஆண்டில் பிரவேசித்து விட்டது.

நான்காம் ஆண்டில் குடி அரசு இந்து மதம் என்னும் பழம் பெரும் பூதத்தோடு வெளிப்படையாய் போர் புரிய ஏற்பட்டது மாத்திரமல்லாமல் பார்ப்பனீயத்துக்கும், காங்கிரசுக்கும், இந்து மதத்துக்கும் அபயஸ்தம் கொடுத்து "உலகம் போற்றும் மகாத்மா" என்று விளங்கிவந்த தோழர் காந்தியாருடன் போராடவும் அவரது "சக்ராயுதம்" ஆகிய கதருடன் போராடவுமான ஒரு கஷ்டத்தில் சிக்கி இந்தியா முழுவதுமுள்ள இந்திய மக்கள் எல்லோருடையவும் எதிர்ப்புக்கும் ஆளாகி ஆலையில் சிக்கிய கரும்பு போல் நசுக்குற்று சத்து வேறு சக்கை வேறாகப் போய் விட வேண்டிய நிலைமையை சமாளித்து நான்காம் ஆண்டைக் கடந்து ஐந்தாம் ஆண்டில் பிரவேசித்து விட்டது.

ஐந்தாம் ஆண்டில் குடி அரசு பார்ப்பனர், காங்கிரஸ், மத ஆதாரங்கள், தோழர் "மகாத்மா" காந்தி, "கதர்" என்பவைகளின் யோக்கியதைகளை வெளியாக்கி அவதிப்பட்டு அது சம்பந்தமான எதிர்ப்புகளை சமாளிக்கின்ற கஷ்டத்தோடு இல்லாமல் சர்வ சக்தியும், சர்வ வியாபகமும் கொண்டது என்று சொல்லப்படும் "கடவுள்" உடனேயும் போராடவேண்டிய அளவுக்கு "பச்சை நாஸ்திகமாகி" உலகிலுள்ள எல்லா மக்களுடைய வெறுப்பும், அதிருப்தியும், எதிர்ப்பும் சமாளிக்க வேண்டியதாகி ஓரளவு அதிலிருந்தும் சமாளித்து ஐந்தாம் ஆண்டைக் கடந்து ஆறாவது ஆண்டிற்குள் பிரவேசித்து விட்டது.

ஆறாவது ஆண்டில் குடி அரசுக்கு சற்று பொது ஜன எதிர்ப்பு பலமாகத் தோன்றியதாக சிலர் நினைத்தவுடன் குடி அரசு குன்றி விடுமோ என்று கருதிய சிலர் அதாவது குடி அரசின் பெயரைச் சொல்லிக்கொண்டும் சுயமரியாதை இயக்கத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டும் வாழ்க்கையை நடத்தத் தீர்மானித்திருந்த சில "சுயமரியாதை நண்பர்களின்" ஆசைக்கு பங்கமேற் பட்டதால் அக்கூட்டத்தினர்களின் எதிர்ப்புக்கும் ஆளாகியதோடு குடி அரசை ஆதரிப்பவர்களாக வேஷம்போட்டுபயனடைந்து கொண்டிருந்த சில "பெரிய மனிதர்கள்" (அதாவது ஜஸ்டிஸ் கட்சியார்கள்) என்பவர்களுடைய அதிர்ப்த்திக்கும், அலட்சியத்திற்கும் ஆளாகவேண்டி இருந்தது. இதை சமாளிப்பது ஒரு முக்கிய காரியமாய் இருந்தாலும், முற்பட்ட புதிய எதிர்ப்புகளையும் அது அடையத் தவரவில்லை. அதுமாத்திரமல்ல, ஆறாவது ஆண்டில் "எல்லா மதங்களுக்கும் விரோதி" என்ற பெயரையும் பெற்றது.



எப்படி இருந்தும் இவையனைத்திற்கும் தலைகொடுத்து ஆறாவதாண்டைக் கடந்து ஏழாம் ஆண்டில் பிரவேசித்து விட்டது.

ஏழாம் ஆண்டோ மிக மிக நெருக்கடியான ஆண்டாய் கழிய வேண்டியதாயிற்று. "சகல மதங்களும் ஒழிக்கப்பட வேண்டும்" என்று வெளிப்படையாய் தீர்மானம் போடப்பட்டுவிட்டது. ஏழை பணக்காரத் தன்மை அழிக்கப்படவேண்டுமென்றும் பிரசாரம் தொடங்கப்பட்டுவிட்டது. கொஞ்சம் கொஞ்சமாய் கூட்டம் குறைய ஆரம்பித்துவிட்டது. வாலிபர்களே கும்பல் கும்பலாய் வந்து கூடினார்கள். கொள்கைகள் "பெரியோர்" களால் பரிகசிக்கத்தக்கதாய்விட்டது. பழிப்புகள் பலத்துவிட்டன. இவைகள் எல்லாம் சுலபமாய் சமாளிக்கக் கூடியதாய் இருந்தாலும் மற்றொரு பக்கம் பத்திராதிபருக்கு உடல் நிலை குன்றிவிட்டது. ஓய்வெடுக்கவேண்டிய அவசியமேற்பட்டுவிட்டது. கடைசியாய் பத்திராதிபர் பொறுப்பை தோழர் சிதம்பரனார் வசம் ஒப்படைத்துவிட்டு, பத்திராதிபர் மேல்நாட்டுக்கு சென்றுவிட்டார். இந்தச்சமயத்தில் இவ்வளவு எதிர்ப்பும், உள் கலகமும், பொருளாதார நெருக்கடியும் இருந்தும் ஒன்றையும் சட்டை செய்யாது தென்னாட்டில் இயக்கத்தை சந்து பொந்துகளிலும், கிராமங்களிலும் பரவும்படி செய்துவிட்டதுடன் தாராளமாய் ஏழாவது ஆண்டைக்கடந்து எட்டாவது ஆண்டில் நுழைந்து விட்டது.

எட்டாவது ஆண்டு சமதர்ம ஆண்டாய் திகழ்ந்தது. பத்திராதிபர் மேனாட்டு சுற்றுப்பிரயாணத்தில் இருந்து திரும்பியதும் வழக்கம்போல் எதிர்ப்புகள் ஒரு புறமிருந்தாலும், புதிய எதிரிகள் பலர் தோன்றி இருந்தாலும், சர்க்கார் பயம் நிமிஷத்துக்கு நிமிஷம் இருந்தாலும் குடி அரசு எட்டாவது ஆண்டில் புரட்சி கோலம் கொண்டுவிட்டது. வாசகர்களுக்கு சமதர்மப் பைத்தியத்தை ஊட்டி விட்டது. அதன் நோக்கத்தையும், திட்டத்தையும் உறுதியுடன் வெளிப்படுத்திவிட்டது. அதன் பயனாய் உண்மை தோழர்களை வடிகட்டி வருகின்றது.

இந்த நிலையில் எட்டாம் ஆண்டைக்கடந்து 9–ம் ஆண்டில் பிரவேசிக்கின்றது. ஆரம்பம் வெகு உக்கிரமான எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டிய பொருப்புகள் அதன் தலைமீது விழுந்து கிடக்கின்றது என்பதை இந்து முஸ்லீம் கிறிஸ்துவ வருணாச்சிரமக் காரர்களும், சனாதனதர்மிகளும் உருமும் உருமலைப்பார்த்தாலே தெரிய வரும். அவர்கள் தங்கள் குற்றத்தைச் சிறிதும் கவனியாமல் தங்கள் சனாதன தர்மங்களுக்கு ஏற்பட்ட ஆபத்தை குடி அரசு போன்ற முயற்சிகளைக் குறைகூறி பாமர மக்களுக்கு போதை உண்டாக்கி உசுப்படுத்தி விடுவதினாலும் ஆபத்தினின்று தப்பித்துக் கொள்ளலாம் என்று மனப்பால் குடித்துவருகிறார்கள். இது அவர்களுக்கு ஏமாற்றத்தைத் தரும் என்பதில் ஐயமில்லை.



RangaRakes tamilnavarasam.com

பாமர மக்கள் என்றும் மூடர்களாகவே இருந்துகொண்டு மதப் பைத்தியத்தால் கடவுள் உணர்ச்சியால் பாடுபட்டு பாடுபட்டு சோம்பேறி களுக்கு உழைத்துப் போட்டுக்கொண்டே இருப்பவர்கள் என்று நினைப்பது பெரியதொரு முட்டாள்தனமேயாகும். எல்லா "புண்ணிய மதத்திலும், எல்லா புண்ணிய வேதத்தை-மார்க்கத்தை ஒப்புக்கொண்டவர்களிலும் ஏழையும், பாடுபட்டு பட்டினி கிடப்பவனும், இழிதொழில் செய்பவனும் இருந்து கொண்டுதான் இருக்கிறான்.

பணக்காரனும் சோம்பேரியும் பாடுபடாமல் மேன்மையாய் மதிக்கப் படுபவனும் இருந்துகொண்டுதான் இருக்கிறான். இந்தப்புரட்டை ஒழிக்க எந்த சத்தியவேதத்தாலும், புண்ணிய மார்க்கத்தாலும் முடியவில்லை. அப்படி யானால் பின்னை எதற்காக இந்த மதங்கள் இருக்க வேண்டும்? இனியும் எய்த்துப்பிழைக்கவா என்பதை யோசிக்கும்படி வேண்டுகிறோம்.

சமீப காலத்தில் இரண்டுமாத காலமாய் சிறப்பாய் ஒரு மாத காலமாய் கத்தோலிக்க கிறிஸ்துவ பாதிரிகளின் அட்டகாசம் தலைகால் தெரியாமல் தாண்டவமாடுகின்றது. வியாதியின் பயனாய் ஏற்பட்ட ஜன்னி சேஷ்டைக்கு சற்று பலம் அதிகமாக இருக்கும். ஜன்னி நின்றவுடன் உள்ள பலமும் போய் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்க வேண்டியதாகும். அதுபோலவே சமீபத்தில் அழிந்து மறையப் போகும் கத்தோலிக்க மதம் சுயமரியாதை இயக் கத்தை அழித்துவிட வேண்டுமென்று கூட்டம் கூடி தீர்மானித்து இந்த 10 நாளாய் மதிப்புக்குறிய 'மெயில்' பத்திரிகையில் பக்கம் பக்கமாய் கண்டண வியாசங்களும் அதற்கு ஏற்ற தலையங்கங்களும் வந்த வண்ணமாயிருக் கின்றன.

கத்தோலிக்க மதம் இந்த காரியங்கள் செய்வது நமக்கு சிரிப்பை உண்டாக்குகின்றதே தவிர சிறிதுகூட அதை ஒரு லட்சியம் செய்யவேண்டிய காரியம் என்றே நமக்குத் தோன்றவில்லை.

இன்றைய நிலையில் உலகில் உள்ள சூட்சி மதங்களில் இந்து மதத் தைவிட கத்தோலிக்க மதம் ஒன்றே தலைசிறந்த மதம் என்றே கருத வேண்டியிருக்கின்றது. மத சம்மந்தமான காரியங்கள் ஒருபுரம் இந்து மதத் தோடு நீ சிறந்தவனா, நான் சிறந்தவனா என்று போட்டி போடுவதா யிருந்தாலும் அதன் அரசியல் சூட்சிக்கு எதுவும் நிகரில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

ஏனெனில் இந்தியாவில் கிறிஸ்துமதத்திற்கு, ஆக்கமும் அஸ்திவார முமான இடம் தென்னிந்தியாவாகும். தென்னிந்தியாவில் கிறிஸ்தவர்களின் பெருக்குக்கு கத்தோலிக்க மதத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களேயாகும்.

கிறிஸ்தவர்கள் எண்ணிக்கையில் பகுதிக்கு மேற்பட்ட ஜன சமூகம் தாழ்த்தப் பட்ட கிறிஸ்தவர்கள். இந்த தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களுடைய



எண்ணிக்கையை சர்க்காருக்கு எடுத்துக்காட்டி அதற்காக அந்த விகிதாச்சாரம் கிராண்டு தொகை, ஓட்டர் தொகை, உத்தியோகத்தொகை, ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர் தொகை, சட்டசபை அங்கத்தினர் தொகை, ஆகியவைகளை அதிகமாகப் பெருகின்றார்கள். இப்படிப்பட்ட ஸ்தல ஸ்தாபனங்கள் ஏதாவது ஒன்று இந்த தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கள் அடையமுடிகின்றதா என்பதை யோசித்துப் பார்த்தால் உண்மை விளங்காமல் போகாது. மதத்தின் பேரால் செய்யப்படும் இழிவான மோசம் என்பதற்கு இதைவிட வேறு எதையாவது உதாரணம் காட்டமுடியுமா என்று கேட்கின்றோம்.

மதம் ஏழை மக்களை - பாமர மக்களை வஞ்சிக்க - மோசம்செய்ய - சதிசெய்ய ஏற்பட்டது என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும். இந்து மதத்திலாவது சுயமரியாதை இயக்கத்தின் "நாஸ்திகத் தினாலும்" "மதத்துரோகத்தினாலும்" "வகுப்புத் துவேஷத்தினாலும்" தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு அளவுக்காவது எல்லாவற்றிலும் பிரதிநிதித் துவம் ஏற்பட்டு விட்டது. இதற்குக்காரணம் என்னவென்று பார்த்தால் "இந்து ஆதித்திராவிட மக்கள் மதத்தை விட்டு வெளியே போய்விடத் துணிந்ததும் சிலர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியது, சிலர் பச்சை நாஸ்திகர்கள் ஆன துமே தவிர வேறில்லை. அதுபோலவே ஆதிதிராவிட கிறிஸ்தவர்கள் என்பவர்களும் தங்கள் விடுதலைக்கு, சுதந்திரத்துக்கு, சுயமரியாதை பெறுவதற்கு மதத்தை விட்டு வெளியாகி தான் தீருவார்கள். யார் சொன்னா லும் இனி அது தடைப்படப் போவதில்லை என்பதே நமது அபிப்பிராயம். கத்தோலிக்க பாதிரிகள் சட்டசபைத் தேர்தலில் யாருக்கு ஓட்டு வாங்கி கொடுக்கிறார்கள் என்பதை கவனித்துப் பார்த்தால் அவர்களுடைய யோக்கி யதை விளங்காமல் போகாது, கத்தோலிக்க ஆதிதிராவிடர்கள் எப்போது உத்தியோகம் பெறுவது? எப்போது சட்ட சபை அங்கத்தினராவது? எப்போது மந்திரியாவது இதற்குத்தக்க சமாதானமான பதில் நடுநிலையிலிருந்து செல்லட்டும் என்று தான் கேட்கின்றோம். இந்து ஆதிதிராவிடர்கள் பலபேர் பி.ஏ., பி.எல்., ஆகி பலபேர் சட்டசபை அங்கத்தினர்கள் ஆகி, பல பேர் ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர்கள் ஆனதோடல்லாமல் நாளைக்கு அவர்கள் மந்திரி களும் ஆகப்போகின்றார்கள் என்று பந்தயம் கூற தயாராய் இருக்கிறோம்.

கத்தோலிக்க பாதிரிகள் சர்க்கார் தங்கள் கையில் இருக்கின்றதென்ற ஆணவத்தால் வண்டி வண்டியான பொய்யும் புழுகும் கூறி உங்களுக்கு அதை செய்கின்றோம், இதை செய்கிறோம் என்று வாயடி அடித்து பல லட்சக் கணக்கான மக்களை தங்கள் மதத்திற்கு இழுத்து அதன் பேரால் சீமையில் இருந்து சில பாதிரிகள் இந்தியாவுக்கு வந்து ஐ.சி.எஸ். வெள்ளைக்காரர்கள் ஒரு கூட்டம் பிழைக்க வழித்தேடிக் கொண்டதல்லாமல் இவர்கள் செய்த காரியம் என்ன என்று தான் மறுபடியும் கேட்கின்றோம். நமது ஒன்பதாம் ஆண்டு வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியை கத்தோலிக்க பாதிரிகளுக்கு நோட்டீஸ் கொடுக்கவே தெரிவித்துக் கொள்ளுகிறோம். நமக்கு எந்த



RangaRakes tamilnavarasam.com

மதமானாலும், எந்த தேசமானாலும் ஜாதிமத தேச வித்தியாசமில்லாமல் ஏழை மக்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் நம்மால் கூடிய வரை கவனித்து அவர்களது இழிவையும், துன்பத்தையும் அழிக்க வேண்டுமென்பது தான் கொள்கையாகும். ஆகவே கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பெயரினால் சர்க்காரிடம் பெற்ற பங்கில் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட பறைய, சக்கிலிய, பள்ள கிறிஸ்தவர்களுக்கு விகிதாசாரம் கொடுத்து கிறிஸ்தவரானாலும் பறையனாய், சக்கிலியனாய், பள்ளனாய், பார்ப்பானாய், உடையாராய், சைவ வேளாளராய், நாடாராய் இருக்க வேண்டும் என்கின்ற சூழ்ச்சியையும், புரோகிதக் கொள்ளையையும் ஒழிக்காத வரை இந்திய கத்தோலிக்க உலகம் அஸ்தமாகித்தான் தீரும் என்பதை வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ளு கிறோம். இதற்காக சுயமரியாதை இயக்கத்தோடு முட்டிக் கொள்ளுவது கல்லில் முட்டிக் கொள்ளுவதேயாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 30.04.1933**



# லால்குடி தாலுகா ஆதிதிராவிட கிறிஸ்தவர்கள் மகாநாடு

தலைவரவர்களே! தோழர்களே!! இன்று உங்களை இவ்வளவு பெரிய கூட்டமாகக் காண்பது எனக்கு மிகுந்த சந்தோஷமாக இருக்கிறது. நீங்கள் எல்லோரும் இங்கு எதற்காக இந்த வெய்யில் காலத்தில் கஷ்டப்பட்டு வந்து சேர்ந்து கூடியிருக்கின்றீர்கள். உங்களுடைய இன்றைய நோக்கமெல்லாம் இந்து மதத்தில் எவ்வளவோ காலமிருந்து கீழான ஜாதியாய் கருதப்பட்டு நீங்கள் அடைந்து வந்த இழிவைப் போக்கிக் கொள்வதற்காக வேறு மதத்தில் வந்துசேர்ந்தும் அங்கும் அந்த இழிவு இருந்து உங்களைப் பழைய கருப்பனாகவே நடத்தி வந்தால் எப்படியாவது அந்த இழிவை போக்கிக் கொள்ள வேண்டுமென்ற உணர்ச்சியின் மீது இந்த மகாநாட்டைக் கூட்டி நீங்கள் எல்லோரும் இங்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். ஆனால் இந்த மகா நாட்டில் பலர் ஆவேசமாய் பேசிவிடுவதினாலும், பலர் அதிதீவிரமான தீர்மானங்கள் செய்து விடுவதினாலும் உங்களுக்கு ஏதாவது ஒரு பெரிய பலன் கிடைத்து விடுமா? என்று பார்த்தால் அது முடியாது என்றுதான் தோன்றுகிறது. ஏனெனில் இம்மாதிரி தீர்மானங்களும், இம்மாதிரி ஆவேசப் பேச்சுகளும் வெகுகாலமாக நடந்துகொண்டேதான் வருகிறது. ஆனால் இவையெல்லாம் மேல்ஜாதிக்காரர்கள் என்பவர்களால் அலட்சியமாக கருதி அசட்டை செய்யப்பட்டுதான் வருகிறது. உங்களுக்கு மதப்பித்தின் பயனாக சு. ம. உணர்ச்சி இல்லை யென்பதை உங்கள் பாதிரிமார்கள் நன்றாய் உணர்ந்தி ருக்கிறார்கள். கட்டுப்பாட்டை மீறி நீங்கள் ஏதும் செய்யமாட்டீர்களென்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்களும் மதத்திற்காகவும், கடவுளுக் காகவும் எவ்வளவு கஷ்டங்களையும் , இழிவுகளையும் பொறுத்துக்கொண்டு வெறும் வாயினாலே மாத்திரம் எதையாவது பேசிக்கொண்டிருப்பீர்களே யொழிய கட்டுப்பாடுகளை மீறவோ உங்கள் இழிவுக்குக் காரணமானவற்றை உதறித் தள்ளவோ அதை அழிக்க முயற்சிக்கவோ ஒரு நாளும் சம்மதிக்க மாட்டீர்கள்.

உண்மையான விடுதலை உங்களுக்கு வேண்டுமானால் உங்கள் இழிவுக்கும், அடிமைத் தன்மைக்கும் அஸ்திவாரமான ஆதாரத்தை அழிக்க



RangaRakes tamilnavarasam.com

நீங்கள் தைரியம் கொள்ள வேண்டும். அந்த தைரியம் எவ்வித கட்டுப்பாடுகளையும், நம்பிக்கைகளையும் உடைத்தெரிய தக்கதாகயிருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் வீணே வாய்ப்பேச்சிலும், காகிதத் தீர்மானத்திலும் சாதித்து விடலாமென்று கருதுவது பைத்தியகாரத்தனமாய் தான் முடியும். நீங்கள் கீழ் ஜாதி என்பதும், தொடக்கூடாதவர்களென்பதும், சமத்துவமளிக்காமல் தனியாய் வைக்கப்பட வேண்டியவர்களென்பதும் ஆகிய காரியங்களுக்குவென்றும் மதமோ, பழக்கவழக்கமோ, சாஸ்திரமோ, கடவுள் செயலோ என்பதெல்லாம் வெறும் பித்தலாட்டமேயாகும். உங்களுடைய கீழ் சாதி தன் மைக்கும் மேற்கண்ட காரியங்களுக்கும் யாதொரு சம்பந்தமுமே கிடையாது. உண்மையான காரணத்தைச் சொன்னால் ஒரே நிமிஷத்தில் நீங்கள் அவர்கள் மீது பாய்ந்து சின்னாபின்னமாய்க் கிழித்தெறிந்து விடுவீர்களென்று கருதி ஏதேதோ சாக்கு போக்குகளைச் சொல்லி உங்களை ஏமாற்றுவதற்கு கடவு ளையும், மதத்தையும், பழக்க வழக்கத்தையும் சொல்லி வருகிறார்கள். கடவுள் மதத்தினர் கட்டளை என்றபடி பழக்க வழக்கங்கள் என்ற முறைப்படி யார் நடக்கிறார்கள்? அவர்கள் சொந்த விஷயத்தை பொறுத்த மட்டில் எவ்வித கட்டுப்பாட்டிற்கும் பழக்க வழக்கத்திற்கும் கடவுள் மத கட்டளைக்கும் கீழ்படியாமல் தங்கள் இஷ்டம் போலவே சமயத்திற்கேற்றபடியே நடந்து கொள்கிறார்கள். ஆனால் பிறத்தியானை அடக்கி ஆண்டு அடிமை கொள்வதற்காக மாத்திரம் இந்தப்படி சொல்லி பயன் பெறுகிறார்கள்.

கீழ் ஜாதி என்பதாக ஒரு பிரிவு எதற்காக? யாரால் ஏற்படுத்தப்பட்டது என்பதின் ரகசியத்தை உணர்ந்தால் பிறகு அதை அழிக்கும் விஷயம் வெகு சுலபமாக விளங்கி விடும்.

கீழ் ஜாதி, மேல் ஜாதி என்று சொல்வதின் தத்துவம் என்பதைப் பாருங்கள். ஒரு பார்ப்பானையும், ஒரு பறையனையும் கூட்டிவந்து நிறுத்தி கீழ் ஜாதி, மேல் ஜாதி என்பது அவர்களிடத்தில் எப்படி விளங்குகிற தென்று பார்த்தால் மேல் ஜாதி என்பவன் பாடுபடாமல் சோம்பேறியாய் இருந்து ஊரார் உழைப்பில் வாழ்கிறவன் என்பதும், கீழ் ஜாதி என்பவன் பாடுபட்டு உழைத்து உழைப்பின் பயனையெல்லாம் அன்னியருக்கே அழுதுவிட்டு வீடில்லாமல், துணியில்லாமல், கஞ்சியில்லாமல், கல்வியில்லாமல், மிருகத்திலும் கேடாய் வாழ்கிறவன் என்பதும் நன்றாய் விளங்கும். ஆகவே கீழ் ஜாதி தன்மை ஒழிய வேண்டும் என்று கருதுகிற ஒருவன் அன்னியருக்காக நாம் உழைக்கப் பிறந்தோமென்கிற எண்ணத்தை விட்டு விட்டு நமது உழைப்பின் பயனை சோம்பேறிகள், பாடுபடாத மக்கள் அனுபவிக்க விடக்கூடாது என்கிற உறுதி கொண்டு, பிறவியில் நமக்கும் மற்றவருக்கும் எவ்வித வித்தியாமுமில்லை என்கின்ற உறுதியோடு சோம்பேறி கூட்டத்தோடு எவன் போர் தொடுக்க முனைந்து நிற்கின்றானோ அவனே இவ்வித இழிவுகளை நீக்கிக்கொள்ள அருகதையுள்ளவனாக ஆகிறான். அதைவிட்டு விட்டு மதக்கட்டளையை



மதிப்பவன், பாதிரிகளின் சொல்லுக்கு கீழ்படிந்துதான் ஆக வேண்டும். கடவுள் நம்பிக்கையை கொண்டவன் அவனவன் தற்கால நிலைமைக்குக் காரணம் “கடவுள் சித்தம்” என்பதை ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும். மத கட்டளையையும், கடவுள் நம்பிக்கையையும் கொண்ட ஒரு அடிமை ஒரு தாழ்ந்த ஜாதிக்காரன் ஒரு நாளும் விடுதலை அடையவோ, முன்னேற்ற மடையவோ முடியவே முடியாது. மத கட்டளையும், கடவுள் நம்பிக்கையும், மேல்ஜாதிக்காரனுக்கும், பாதிரிகளுக்கும், முதலாளிகளுக்கும் தான் மேன்மையையும், அனுகூலத்தையும் அழிக்கக் கூடியதாகும். இந்த நாட்டில் 1000 கணக்கான வருஷங்களாக ஏழை மக்களும் தாழ்ந்த ஜாதிக்காரர்களும் இருந்துதான் வருகிறார்கள். அவர்கள் அன்று முதல் இன்றுவரை மத பக்தியும், கடவுள் பக்தியும் கொண்டு அதற்காக எவ்வளவோ பணத்தையும், நேரத்தையும், செலவு செய்து தங்கள் கஷ்டங்களும், இழிவுகளும் ஒழிய வேண்டுமென்று பிரார்தனை செய்து கொண்டு தான் வந்திருக்கிறார்கள். ஏழைகளின் எண்ணிக்கை குறைந்ததா? கீழ் ஜாதிக்காரர்களின் எண்ணிக்கை குறைந்ததா? அல்லது இவர்களுடைய கஷ்டமாவது ஒழிந்ததா? யோசித்துப் பாருங்கள்.

உலகில் எவ்வளவோ அதிசயங்களும், அற்புதங்களும், முன்னேற்றமான காரியங்களும் நாளுக்குநாள் விருத்தியடைந்தும் அதற்கு தகுந்த படி தொழில் முறைகளும், யந்திர சௌகரியங்களும், ஒன்றுக்குப் பத்து நூறாய் உயர்ந்தும் இவற்றின் பயனாய் லட்சாதிபதிகள் பத்துலட்சாதிபதியாகவும், பத்து லட்சாதிபதிகள் கோடீஸ்வரர்களாகவும்தான், முடிந்ததேயொழிய உங்களுடைய நிலைமை அன்றும் இன்றும் ஒரே மாதிரியாகத்தான் இருந்து வருகிறது. நீங்கள் ஒரு உயிருள்ள இயந்திரம் போல் தான் இருக்கிறீர்கள். இயந்திரங்களுக்கு எப்படி எண்ணை ஊற்றினால் எண்ணையிருக்கிற வரையில் ஓடுகிறதோ அதுபோல் உங்களுக்கு ஏதாவது ஆகாரம் கொடுத்தால் அது ஜீரணமாகிறவரையில் வேலை செய்துவிட்டு மடிவது என்கிற முறையில் தானிருக்கிறீர்கள்.

உங்களுக்கு உங்களுடைய பிரதி பிரயோஜன மெல்லாம் உங்களுடைய வயிற்றுக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுதான். அதுவும் நீங்கள் சாகாமலிருப்பதற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தான் என்பதாகப் பதினாயிர வருஷங்களுக்கு முன்பதாகவே நிர்ணயிக்கப் பட்டுவிட்டது. இந்த நிர்ணயத்தை மீறி நீங்கள் அதிகம் கேட்காமல் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் உங்களை பறையர், சக்கிலியர் என்று சொல்லி தீண்டாத சாதியார்களென்று ஆக்கியும் உங்கள் அண்ணன்மார்களை யெல்லாம் ‘அடிமை’ ‘பார்ப்பானின் வைப்பாட்டி மகன்’ ‘சூத்திரன்’ என்று சொல்லி தாழ்ந்த ஜாதியும் ஆக்கிவைக்கப்பட்டிருக்கிறது. உங்களுக்கு ஜீவனத்திற்காக என்று கொடுக்கப்படும் கூலிகளும் உங்கள் மீதுள்ள கருணையினால் என்று நினைத்து விடாதீர்கள். இந்த ஆகாரமும் இல்லாமல் மடிந்து போவீர்களேயானல் நாளைக்கு மேல் ஜாதிக்காரர்களுக்கும் முதலாளிமார்களுக்கும்



RangaRakes
tamilnavarasam.com

வேலை செய்ய ஆள் இல்லாமல் போகுமே என்கின்ற சுயநல கருணை கொண்டுதான் மாடு வளர்க்கிறவன் தீனி போடாவிட்டால் பால் கறக்காதே. பாடுபடாதே என்று கருதி அதற்கு தீனிபோடுவது போல் உங்களுக்கும் ஜீவனத்திற்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலை மாறவேண்டு மென்பதில் தான் உங்களுடைய முக்கிய வேலையாக இருக்க வேண்டுமே யொழிய சும்மா பறையர் பட்டம் போனால் போதும், கிறாதியை எடுத்து விட்டால் போதும், கோயிலுக்குள் நுழைய விட்டால் போதும் என் றெல்லாம் கருதுவதில் பிரயோசனமில்லை. கிறாதி வித்தியாசமில்லாமலும் பறஜாதி பட்டம் இல்லாமலும் கோயிலுக்குள் போய் தொழுகிற உரிமை யுடனும் இருக்கின்ற கோடிக்கணக்கான மக்கள் கஞ்சிக்கு வகையில்லாமல் இருக்க, வீடில்லாமல் ஊர் ஊராய் பிச்சைக்காரர்கள் போல் லம்பாடிகள் போல் திரிவ தையும் மரத்து நிழல்களில் தலைக்கு கல்லையோ, கையை மடக்கியோ வைத்து படுத்துக்கொண்டிருப்பதை இன்றையதினம் எங்கும் பார்க்கலாம். இதற்குக் காரணம் என்ன என்று கருதுகிறீர்கள்.

ஆகவே உங்களுடைய கிளர்ச்சியானது பொருளாதாரத் துறையில் நீங்கள் மற்றவர்களால் ஏமாற்றப்படுவதும் வஞ்சிக்கப்படுவதும் ஒழிய வேண்டுமென்பதையே அஸ்திவாரமாகக் கொண்டிருக்கவேண்டும். அதில் தான் உங்கள் விடுதலை இருக்கிறது. எந்தக்கடவுளும், எந்த பாதிரியும் இதற்கு வகை செய்ய முடியாது?

உங்கள் மதங்களை எல்லாம், உங்கள் கடவுள் கட்டளை எல்லாம் "பொறு பொறு" "அவசரப்படாதே" "ஆத்திரப்படாதே" உனது வாழ்வில் உள்ள எல்லா துன்பங்களையும், எல்லா இழிவுகளையும் பொருமையோடு பொறுத்துக் கொண்டிருந்தால் நீ செத்த பிறகு மேல்லோகத்தில் கடவுள் உன்னுடைய பொறுமைக்காக நல்லசன்மானம் கொடுப்பார். அடுத்த ஜன்மத்தில் நல்ல பிறவி பெறுவாய் பொறுத்தார் பூமியாள்வார் என்று தான் உபதேசிக்கும் இந்த உபதேசத்தை ஆயிரக்கணக்கான வருஷங்களாக கேட்டு கேட்டு அதன்படி பொறுமையாய் இருந்து வந்ததின் பலன் தான் இன்றும் இன்னமும் நீங்கள் பொறுமையாகவே இருந்து இழிவடைந்து கஷ்டப்பட்டு சீக்கிரம் செத்து கடவுளிடம் சன்மானம் பெற வேண்டியவர்களாக இருக் கின்றீர்கள்.

ஆகவே செத்த பிறகு மேல் லோகத்தில் அல்லது அடுத்த ஜன்மத்தில் பயன் பெறலா மென்கின்ற பித்தலாட்ட, சுயநல சூட்சியான உபதேசத்தை அடியோடு மறந்து இந்த ஜன்மத்தில் நீங்கள் சாவதற்கு முன் உங்கள் இழிவுக்கும், கஷ்டத்திற்கும் என்ன பரிகாரம் என்பதைக் கவனித்து அதற்குத் தக்கது செய்ய முன் வாருங்கள். இந்தப்படி நினைத்து தைரியமாய் முன் வந்த மக்கள் தான் இன்று உலகில் ஒருபக்கத்தில் அடிமையாய் கூலியாய் இழி ஜாதியாய் ஏழையாய் இல்லாமல் மனிதனாய் கவலையற்று தேசமே ஒரு



குடும்பமாகவும் எல்லோரும் ஒரு தாய் வயிற்று சகோதரர்களாகவும் வாழ்ந்து வருகின்றார்கள்.

ஆகவே இந்த விஷயங்களை கவனித்து நன்றாய் ஆலோசித்து தங்களுக்கு சரி என்று பட்டதை பின்பற்றுங்கள் என்பதை தெரிவித்துக் கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு: 23.04.1933 இல் களத்தில் வென்றான் பேட்டை கிராமத்தில் நடைபெற்ற இலால்குடி தாலூக்கா ஆதிதிராவிட கிருஸ்தவர்கள் மாநாட்டில் சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 07.05.1933**



RangaRakes tamilnavarasam.com

# ஈரோடு சுதேசி வர்த்தக சங்க ஆண்டுவிழா

தலைவரவர்களே! தோழர்களே!!

இன்று இந்த ஆண்டு விழாவில் நானும் ஏதோ சில வார்த்தைகள் பேசவேண்டுமென்பதாக தலைவர் அழைக்கிறார். நேரம் அதிகமாய்விட்டது நானும் பேசவேண்டியிருக்குமென்று கருதவே இல்லை. அதோடு என்ன பேசுவது என்பதும் இன்னமும் முடிவு செய்யவில்லை. ஆனபோதிலும் ஒரு 10 நிமிஷம் "சுதேசி வர்த்தகம்" என்கின்ற தலைப்பைப் பற்றிப் பேசு கிறேன். ஏனெனில் இந்த ஆண்டுவிழா சுதேச வர்த்தக சங்க ஆண்டுவிழா வாதலால் அதையே தலைமையாய் வைத்து பேசுகிறேன்.

தோழர்களே சுதேசி வர்த்தகம் என்பதில் இரண்டு வார்த்தை இருக் கிறது. அதாவது ஒன்று சுதேசி, மற்றொன்று வர்த்தகம்.

## சுதேசியம்

இதில் முதலில் சுதேசியம் என்பதைப் பற்றி பேசுகிறேன். சுதேசியம் என்பது ஒரு அருத்தமற்றதும், சுயநலம் நிரப்பிய சூட்சியால் கற்பிக்கப்பட்டது மான வார்த்தை என்பது எனது அபிப்பிராயம். ஏனெனில் தேசீயம் என்பதையே புரட்டு என்று வெகு நாளாக நான் சொல்லி வந்திருப்பது உங்களுக்குத் தெரியும். தேசீயம் தேசாபிமானம் என்பவைகளைப் பற்றி பல அறிஞர்கள் மிகக்கண்டித்தும், இழித்துக்கூறியும் எழுதி இருக்கிறார்கள். தேசாபிமானம் என்பது ஒருமனிதனுக்கு அவன் பிழைக்கும் மார்க்கத்துக்கு கடைசியான அயோக்கியத்தனம் என்று ஒரு அறிஞர் கூறி இருக்கிறார். இப்படி இன்னும், பலரும் கூறி இருக்கிறார்கள். இப்படி பலர் பலவிதமாக கூறி இருந்தாலும் என் அனுபவத்தில் இந்த அபிப்பிராயங்கள் பிரத்தியட்ச ருஜுக்களால் பலப்பட்டு வருகிறதை பார்க்கிறேன்.

நிற்க சுதேசியம் என்பதற்கு எல்லை எது என்பதை முதலில் யோசித்துப் பாருங்கள். பரந்த உலகத்தில் பல கோடி மக்களின் வாழ்க்கை சம்மந்தப்பட்ட விஷயங்களில் நாம் எந்த அளவுக்கு என்ன வித்தியாசத்தின் மீது தேசங்களை பிரிப்பது என்பதை யோசித்துப்பாருங்கள். இந்தியாவை மாத்திரம் ஒரு தனி தேசம் என்று எந்தக் கணக்கின் மீது பிரித்துக் கொள் ளுவது? இந்தியாவும் ஒரு காலத்தில் 56 தேசங்கள் சேர்ந்ததாக இருந்து ஒரு தேசத்திற்கும், மற்ற தேசத்திற்கும் சண்டையும், வேற்றுமையும் இருந்துதான் வந்திருக்கிறது. பூகோள அளவுப்படி நமது சென்னை மாகாணத்தை எடுத்துக் கொண்டுபாருங்கள். தமிழ்நாடு, ஆந்திரதேசம், கேரள நாடு, கர்னாடக தேசம் என 4 பெரிய பிரிவுகளாகவும் பாஷைகளாகவும் பலவேறுபட்ட ஆச்சார அனுஷ்டானங்களையும் வேறுபட்ட நடை, உடை, பாவனைகளையும் கொண்டிருப்பதோடு ஒருவருக்கொருவர் வேற்றுமை உணர்ச்சி கொண்டே இருக்கிறோம். அன்றியும் அவரவர்களுக்கு தங்கள் தங்கள் நாட்டின் அபிமானமே இருந்து வருகின்றது. மதத்திலும் இந்தியாவனாது பல மதங் களையும், பல உள் மதப்பிரிவுகளையும் கொண்டதாகவே இருந்து வருகிறது. பாஷாபிமானத்தின் மூலம் ஒன்றுக்கொன்று மாறுபட்ட உணர்ச்சியும், மதாபி மானத்தின் மூலம் ஒன்றுக்கொன்று வேறுபட்ட உணர்ச்சியும் வெளிப்படை யாய் தாண்டவமாடுவதை யாராவது இல்லை என்று சொல்ல முடியுமா? இந்த நிலையில் தேசியம் என்பதில் என்ன உண்மை இருக்கிறது. ஆனால் இது சமயம் பேசப்படும் சுதேசியம் என்பது வர்த்தகத் துறையைப் பொருத்த தாகவே இருக்கிறது. ஆதலால் வர்த்தக சுதேசியத்தைப் பற்றியே பேசுவோம்.

வெறும் சுதேசியத்தை ஆதாரமாய் வைத்து நடத்தப்படும் வியாபாரத் தில் பொதுஜனங்களுக்கு என்ன லாபம் ஏற்படக்கூடும். தேசீயத்தை ஆதாரமாய் வைத்து நடத்தும் வியாபாரமும், தேசியத்தை ஆதாரமாய் வைத்து நடத்தும் அரசியலும் நாட்டுக்கு எவ்வித பயனும், முன்னேற்றமும் அளிக்கத் தக்கதாய் இருக்காது. அதில் ஈடுபட்ட சிலருக்கு தனிப்பட்ட சுயநலம் உண்டா கலாம். ஆனால் அதில் சிறிதும் நாணையம் கூட இருக்க முடியாது.

உதாரணமாக சுதேசியக் கூப்பாடு போட்டு வெகுபணம் செலவு செய்து சுதேசியப்பிரசாரம் செய்து பதினாயிரக்கணக்கான மக்களுக்கு தேசிய வெறியை உண்டாக்கிய இன்னாட்டில் உத்தியோகம், பத்திரிகை முதலியவை கள் எல்லாம் தேசியத்தையே பிரசாரம் செய்து வந்தும் நமது நாடு இன்று எல்லாத்துறையிலும் மதம், ஜாதி, வகுப்பு, அரசியல், தொழில், கல்வி, கலை, ஞானம், நாகரிகம் முதலிய எல்லாக் காரியங்களும் பரதேசத்தில் மூழ்கிக் கிடக்கின்றது என்பதை நான் சொல்லாமலே அறிவீர்கள். இதற்கென்ன காரணம் பரதேசத்தின் ஆதிக்கம் என்றோ, பரதேசிகளின் சூட்சி என்றோ, வலிமை என்றோ சொல்லி விட்டால் போதுமா?

பரதேசம் ஒன்று இருக்கின்றது என்று தெரியாத காலத்திலும் பரதேச விஷயங்கள் நமக்கு எட்டுவதற்கு மார்க்கமில்லாதிருந்த காலத்திலும் எல்லாம் சுதேசமாகத் தான் இருந்து இருக்கும். அப்படி இருந்த இந்த நாடு இன்று ஏன் பரதேசியத்தால் கவரப்பட்டுக் கிடக்கிறது? சுதேசியம் என்கின்ற அபி மானத்தை மாத்திரம் கட்டி அழுதோமே அல்லாமல் பரதேசியம் வந்து


RangaRakes tamilnavarasam.com

புகாமல் இருக்கத் தகுந்த மாதிரி நடந்து கொள்ள நமக்கு யோக்கியதை யில்லாமல் போய்விட்டது. நமது சுதேசியம் நமது முற்போக்கையும் அறிவு விர்த்தியையும், புதுமையையும் தடைப்படுத்தி விஷயங்களுக்கு புதிய குணவிசேஷங்களை உண்டாக்க மார்க்கமில்லாமல் போய் விட்டது.

இன்றும் கூட மேல் காட்டிய எல்லாத் துறைகளிலும் சுதேசியத்தைவிட பரதேசியமே பெரும்பாக மக்களால் மதிக்கப்படுகின்றது. ஆனால் தனிப்பட்ட கூட்டத்தார்களின் நபர்களின் நன்மைக்கே சுதேசியம் பெரிதும் பேசப் படுகின்றது.

**"செட்டி முடுக்கா, சரக்கு முடுக்கா** என்பது பழமையானதும், அர்த்த புஷ்டியுமுடையதான ஒரு பழமொழி.

சரக்கு முடுக்காய் இருக்குமானால் சுதேசியம் பேசவேண்டியதே யில்லை. சரக்கை பழைய நிலையிலேயே வைத்துக்கொண்டு சுதேசியம் பேசுவது செட்டி முடுக்கில் காரியம் சாதித்துக்கொள்ள நினைப்பதையே ஒக்கும். அதுபோலவே தான் ஒவ்வொரு துரையிலும் மதம், கல்வி, அரசியல், கலைஞானம், வியாபாரம் தொழில் ஆகிய ஒவ்வொரு துரையிலும் நாம் சரக்கு முடுக்காக்க வேண்டும்.

நல்ல வஸ்துக்களை நல்ல கொள்கையை நயமான வழியில் பயன் படும்படி செய்ய வேண்டும். அப்போது பரதேசியம் தானாக பரந்தோடி விடும் அதில் கவலையில்லாமல் இருந்தால் ஒரு நாளும் சுதேசியம் வெற்றி பெறாது.

இது தவிர சுதேசியத்தில் மற்றொரு சூட்சி என்ன வென்றால் சுதேசியத் திற்கு யந்திரம் கூடாதாம்! இது எவ்வளவு பித்தலாட்டமான யோசனை. இன்று உலகில் மக்கள் யாராவது எந்தத் துறையிலாவது யந்தீரத்தை உபயோகிக்கா மல் இருக்கிறார்களா? யந்திரம் என்றால் என்ன அருத்தம்? அறிவு, பிரயோகம் அல்லது (புரோகிரசிவ்) முன்னேற்றம் என்றுதானே பொருள். அறிவுப் பிரயோகமும், முன்னேற்றமும் வேண்டாம் என்று எந்த மனிதனாவது சொல்லமுடியுமா? தவிரவும் யந்திர பயன் என்ன என்று பாருங்கள். யந்திர மானது மனிதனுடைய சரீரக் கஷ்டத்தை-நேரக்கேட்டைக் குறைக்கிறது என்பதில்லாமல் அது வேறு என்ன கெடுதி செய்கின்றது, யந்திரத்தின் பயனை மக்கள் அடையவொட்டாமல் எவனோ ஒரு அயோக்கியன் (முதலாளி) கொள்ளையடிக்கிறான் என்றால் அதற்கு யந்திரத்தை ஒழிப்பதா? அல்லது அந்த முதலாளியை ஒழிப்பதா என்பதை யோசித்துப்பாருங்கள்.

அன்றியும் இன்று யந்திரத்தை பகிஷ்காரம் செய்து அதற்கு பதிலாக என்று உபயோகிக்கப்படும் கைராட்டினம் யந்திரமா அல்லவா? ஒரு கைராட்டினத்தில் ஒரு மனிதன் ஒரு நாளைக்கு 1500 கெஜம் நூல் நூற்பதாக வைத்துக்கொள்ளுங்கள். இந்த 1500 கெஜ நூலையும் ராட்டினத்தை உடைத்து அடுப்பு எறித்துவிட்டு வெறுங்கையால் நூற்பதாய் இருந்தால் ஒரு ஆள்



தினம் ஒன்றுக்கு 15 கெஜம் நூல்தான் நூற்க முடியும். அப்படியானால் ஒரு ராட்டினம் ஒரு நாளில் ஒரு ஆளால் நூற்கப்படும் 1500கெஜ நூலை 100 ஆளைக்கொண்டு வேலை செய்யச் சொல்லலாம் அல்லவா? இந்த கை ராட்டினம் 100பேருடைய வேலையை கெடுத்துவிடுகிறதல்லவா? ஆதலால் ராட்டினத்தையும் அடுப்பெரித்து விட்டு ஏன் கையினாலேயே நூற்கச் சொல்லக்கூடாது என்று யோசித்துப் பாருங்கள்.

யந்திரத்திற்கும், கைத்தொழிலுக்கும் வியாக்கியானம் சொல்ல காந்தி ஒருவர் தான் பாஷியக்காரரா என்று கேட்கின்றேன். அப்படிப்பட்ட காந்தி யாரே புதிய முறையில் ராட்டின யந்திரம் கண்டுபிடிக்க ஒரு லட்ச ரூபாய் பரிசு கொடுப்பதாக அறிக்கை இட்டு இருக்கிறாரே அதற்கு பெயர் யந்திரம் அல்லவா?

தோழர்களே! இந்த மாதிரி சுதேசியமெல்லாம் முதலாளிகள், ஆமதாபாத் முதலாளிகள் பிழைக்க சூழ்ச்சியே ஒழிய வேறில்லை.

## வியாபாரம்

இது சமயத்தில் வியாபாரம் என்பதைப்பற்றியும் சில வார்த்தைகள் பேசுகிறேன்.

வியாபாரம் என்பது பொதுஜனங்களுடைய நன்மைக்காக பொதுஜன சௌகரியத்துக்காக ஏற்பட்டது. அதாவது ஒரு குடும்பத்தார் அக்குடும்பத் திலுள்ளவர்கள் ஆளுக்கொரு தொழிலை சமமாக எடுத்து உழைத்து சமமாக பயன் அடைவது என்கின்ற தத்துவத்தில் ஏற்பட்டதே தவிர வேறில்லை.

ஆனால் நாம் எப்படி வியாபாரத் தொழிலை நடத்துகின்றோம். பயிரிடு கின்றவன் கஷ்டம் எவ்வளவு? அதைப் பண்டமாக்கி, வஸ்துக்களாக்கி வைக்கிற தொழிலாளியினுடைய கஷ்டம் எவ்வளவு? அதை மக்களுக்கு சுலபத்தில் கிடைக்கும்படி கொண்டுவந்து சேர்க்கும் கூலியாளுடைய கஷ்டம் எவ்வளவு? இவற்றை யெல்லாம் கஷ்டப்பட்டு செய்த பின்பு கடையில் கொண்டு வந்து வைத்து விலை சொல்லி எடுத்துக் கொடுக்கச் செய்தும் பணத்தை வாங்கி பெட்டியில் போடச் செய்வதுமான வியாபாரியுடைய கஷ்டம் எவ்வளவு? முற்கூறியவைகளில் 100ல் ஒரு பங்கு கஷ்டம் இந்த வியாபாரிகளுக்கு உண்டா? என்று பாருங்கள், ஆனால் ஊதியம் அடைவதில் மேல்கண்ட முதல் மூன்று பாட்டாளிகளைவிட 100 பங்கு அதிகமான ஊதியத்தை வியாபாரி என்கின்ற முறையில் அடைகிறான். 10 வருஷத்தில் ஒரு வியாபாரி லட்சாதிபதி ஆகிவிடுகிறான். அவன் வீடுவாசல் அனுபவங் கள் எப்படி உயர்ந்துவிடுகிறது என்று பாருங்கள். காரணம் என்ன? வியாபாரம் என்கின்ற தொழில் அவ்வளவு கொடுமையான தொழில். அதாவது திருடன் மற்றவர்களை பணம் அபகரிப்பதுபோல் வியாபாரியும் மற்ற ஜனங்களை



RangaRakes tamilnavarasam.com

வஞ்சித்து பணம் சம்பாதிக்கிறான் என்பதேயாகும். ஆதலால் இன்றைய வியாபார நிலை அழிக்கப்படவேண்டிய தொன்றாகும்.

வியாபாரத்தில் நாம் உண்மையான சுதேசியத்தை விரும்பி அது இந்த நாட்டு மக்களுக்கு பயன்படத்தக்க வழியில் சுதேசியமாக்கவேண்டும் என்று இருந்தோமேயானால் கடைசியாக இன்றைய வியாபார முறையை அழித்து முன்காலத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் பண்டமாற்ற முறையை புதுப் பிக்க வேண்டும். அல்லது லாபத்தைக் குறைத்து நிர்ணயிக்க வேண்டும். அப்போது தான் வியாபாரம் ஒரு யோக்கியமான சமாதானமான தொழிலாகும். அன்றியும் மக்கள் வஞ்சிக்கப்படாமல் தங்கள் கஷ்டத்தை மற்றொருவர்கள் ஏமாற்றியடையாமல் இருக்கச் செய்வதற்கும் அனுகூலமாக இருக்கும்.

அதில்லாமல் சுதேசியம் பேசுவதும், வியாபார விருத்தி முன்னேற்றம் பேசுவதும் ஏழைகளை, பாடுபடுகின்றவர்களை இன்னம் அதிகமாக எப்படி வஞ்சிப்பது என்பதேயாகும் என்பதோடு இப்போதைய வியாபார முறைக்கு வேறு சரியான வெள்ளையான பெயர் கொடுக்க வேண்டுமானால் பகல் கொள்ளை என்ற வார்த்தை தான் உபயோகிக்க வேண்டும். திருட்டு என்பதற்கு என்ன அருத்தம்? ஒருவனுடைய பொருளை மற்றவன் எடுப்பது தனது அல்லாததைத் தான் எடுப்பது என்பது திருட்டு. அதுபோலவே ஒருவனுடைய உழைப்பை மற்றவன் அனுபவிப்பது திருட்டா அல்லவா? பொருள்களை உற்பத்தி செய்பவனுக்கும் அவைகளை வாங்கி அனுபவிப் பவனுக்கும் மத்தியில் மத்தியஸ்தர்கள் அல்லது நடு மனிதன் எதற்கு? இந்த முறையே அக்கிரமமல்லவா? இன்று உலகில் உள்ள செல்வவான்கள் எல்லாம் நடு மனிதர்களே அல்லாமல் வேறு யாராவது இருக்கிறார்களா? யோசித்து பாருங்கள். ஆதலால் வியாபாரம் ஜன சமூக நன்மைக்கு ஏற்றதாய் இருக்க வேண்டுமானால் தரகர் நடுமனிதர் மிடில் மேன் (Middle-man) தன்மை ஒழிய வேண்டும். அப்படிக்கில்லாமல் வியாபார விருத்தியைப் பேசுவது திருட்டுத் தொழிலை எப்படி விருத்தி செய்வது எப்படி சாமர்த்தியமாய் திருட மார்க்கம் கண்டு பிடிப்பது என்று யோசிப்பதையே ஒக்கும் என்பது எனதபிப்பிராயம்.

*குறிப்பு: 28.04.1933 இல் ஈரோட்டில் நடைபெற்ற ஈரோடு சுதேச வர்த்தகர் சங்க ஆண்டுவிழா ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 07.05.1933**



# மற்றொரு பட்டினி விரதம்

தோழர் காந்தியவர்கள் 8-ந் தேதி சோமவாரம் முதல் 21-நாள் பட்டினி விரத மிருக்கப்போவதாக ஒருவிளம்பரம் வெளியிட்டிருக்கிறார். இது பத்திரிகைகளுக்கு ஒரு பெரிய விருந்தாகும். காங்கிரஸ்காரர்களுக்கும் ஒரு பெரிய திருவிழாவாகும்.

தோழர் காந்திக்கு இந்தப்பட்டினி விரதம் புதியதல்ல. அவருக்கு ஏதாவது ஒரு விஷயத்தில் அதிகமான கவலை இருக்கிறது என்பதை உலகத் திற்கு அறிவிக்க இந்த பட்டினி விரதம் என்பதைத்தான் தக்க ஆயுதமாகக் கொண்டிருக்கிறார். தோழர் காந்தி அவர்கள் ஒத்துழையாமை கிளர்ச்சி நடத்தியகாலத்தில் சுயராஜ்ஜியம் பெற இந்து முஸ்லீம் ஒற்றுமையை மிகவும் முக்கியமானது என்று தான் கருதி இருப்பதாக தெரிவிக்கவேண்டிய சந்தர்ப் பம் வந்த காலத்தில் இந்தமாதிரியாக ஒரு 21 நாள் பட்டினி விரதத்தை வெளிப் படுத்தினார். கடைசியாக அது என்ன பயன் விளைவித்தது என்பதும். இந்து-முஸ்லிம்கள் அந்தப் பட்டினியை எவ்வளவு தூரம் லட்சியம் செய்தார்கள் என்பதும் யாவருக்கும் வெட்ட வெளிபோல் தெரிந்த காரிய மேயாகும்.

பிறகு ஒரு தடவை தனது ஆஸ்ரமத்தில் ஏதோ சில ஒழுக்க ஈனங்கள் நடந்து விட்டதாகக் கருதி அவ்வொழுக்க ஈனங்களை வெறுப்பதற்கு அறிகுறியாக 6 நாள் பட்டினி விரதமிருப்பதாக விளம்பரம் செய்தார். அதன் பயனாய் என்ன ஏற்பட்டது என்பதும் ஒரு அளவுக்கு பொதுஜனங்கள் தெரிந் திருப்பார்கள்.

அதற்குப் பிறகு சென்ற வருஷக் கடைசில் தீண்டாதார் என்பவர் களுடைய தனித்தொகுதியை ஒழிப்பதற்கு என்று ஒரு காலம் குறிப்பிடாத பட்டினி விரதத்தை வெளிப்படுத்தினார், அதில் பூரணவெற்றி பெற்றார். ஏனெனில் தீண்டப்படாத மக்கள் என்பவர்கள் திக்கற்றவர்களாகவும், போதிய முற்போக்கு ஞானமில்லாதவர்களாகவும் இருந்ததால் அவர்களை சுலபத்தில் ஏமாற்றிவிடவோ, அல்லது நிர்ப்பந்தித்து அடக்கியாளவோ சாதாரணத்தில் முடித்துவிட்டது.



RangaRakes tamilnavarasam.com

அதற்குப் பிறகு குருவாயூர் ஆலயப்பிரவேச விஷயமாய் ஒரு கால வரையரையற்ற பட்டினி விரதத்தை வெளிப்படுத்தினார். அது சனாதன தர்மிகள் அதாவது நல்ல தெட்டுப்பட்ட பார்ப்பனர்களைப் பொருத்ததா கையால் அவர்கள் எல்லாத் துறையிலும் முன்னேற்றமடைந்த கூட்டத்தாரா னதால் அவர்கள் காந்தியின் பட்டினியை ஒரு சாதாரண ஜீவஜெந்து பட்டினி போலக்கூட மதியாமல் அலட்சியம் செய்துவிட்டார்கள். பிறகு அது எப்படி எப்படியோ மெழுகப்பட்டுவிட்டது. அன்றியும் "நீ ஏன் பட்டினிகிடந்து சாகவில்லை" என்று கேட்க யாருக்குத்தான் மனம் வரும்?

இப்போது மறுபடியும் ஒரு காலவரையுள்ள அதாவது 21 நாள் வாய்தா பட்னி விரதமொன்று ஏற்கப்போவதாக விளம்பரப்படுத்திவிட்டார். நாளை திங்கள் கிழமை முதல் இந்தப் பட்டினிவிரதம் அமுலுக்கு வரக்கூடும்; இதற்குள் பத்திரிகைகள் இந்தப்பட்டினியை எவ்வளவு பிரமாதப்படுத்தக் கூடுமோ அவ்வளவு விளம்பரப் பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். ஏறக்குறைய 100-க்கு 90 பத்திராதிபர்கள் தங்கள் சொந்த நிலையில் தோழர் காந்தியின் பட்டினியைப் பற்றி கூட்டம் சேர்த்துக் கொண்டு பரிகாசம் பண்ணி பேசிக் கொண்டிருந்தாலும் பத்திரிகையில் எழுதும்போது இதை பிரமாதப் படுத்தி ஆத்ம சக்தி என்றும், தெய்வீக சக்தி என்றும், ஏதேதோ சில முட்டாள் தனமானதும், சூழ்ச்சிகளானதுமான வார்த்தைகளைப் போட்டு நிரப்பி விளம்பரப்படுத்துவதில் சிறிதும் தயங்குவதில்லை. ஏனெனில் இந்தியாவில் இந்திய மக்களால் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைகள் அவ்வளவும் அனேக மாய் ஒன்று இரண்டு தவிர மற்றவை எல்லாம் காந்தியையும், காந்தியவர்கள் செய்கை, குணம் முதலியவைகளையும் புகழ்ந்து கவிபாடி வாழவேண்டிய தன்மையிலேயே இருந்து வருகின்றது. ஆரம்பத்தில் அதே பிரசாரம் செய்து பாமர மக்களுக்கு முன்னிலும் அதிகமாக காந்தி "மகத்துவம்" உண்டாக்கி விட்டார்கள். ஆனால் இப்போது அது எவ்வளவு பரிகசிக் கத்தக்கதானாலும் இன்று யாராவது உண்மையை எழுதினால் தங்கள் பத்திரிகை வாழ்வுக்கே ஆபத்து வந்துவிடுமே என்ற பயம். ஆகையால் பொய் வேஷம் போட்டு ஆடவேண்டியதாய் போய் விட்டது.

நிற்க பட்டினி விரதத்தின் தத்துவம் என்ன என்பதைப்பற்றி சற்று ஆராய்ச்சி செய்து பார்ப்போம்.

பட்டினியில் 'ஒரு ஆத்மசக்தி' இருப்பதாகச் சொல்லப் படுகிறது.

ஆத்ம சக்தி என்பது மனித சக்திக்கு மீறின ஒரு சக்தி என்றும் கருதப் படுகிறது.

இந்த ஆத்ம சக்தி என்பது ஒரு காரியத்திற்கு பிரயோகிப்பது என்பது மனித சக்தியில் செய்யவேண்டிய காரியம் எல்லாம் செய்து பார்த்து முடியா மல் போன காலத்தில் உபயோகிக்கப்படும் ஆயுதமாகவே கொள்ளப்



படுகிறது. அல்லது மனித சக்தியால் செய்ய முடியாது என்று கருதிய ஒரு காரியம் யாராலாவது செய்யப்பட்டுவிட்டால் அது ஆத்ம சக்தியால் செய்யப் பட்டது என்று சொல்லப்படுகிறது. ஆனால் பிரஸ்தாப பட்டினி விஷயத்தில் உள்ள ஆத்ம சக்திக்கு இரண்டுவித அவசியம் காட்டப்படுகிறது. ஒன்று ஏதோ ஒரு காரியம் சாதிப்பதற்கு என்றும் மற்றொன்று ஆத்மசுத்தி செய்து கொள்வதற்கு என்றும் சொல்லப்படுகின்றது. இவ்வளவோடு மாத்திரம் நிற்க வில்லை. "இந்த பட்டினிக்கு எவ்வித நிபந்தனையும் இல்லை" என்று ஒரு இடத்திலும், "இதற்கு எவ்வித நோக்கமும் இல்லை" என்று ஒரு இடத்திலும் "இந்த பட்டினியை எப்போது வேண்டுமானாலும் துவக்கி கொள்ளலாம்" என்றும், மற்றும் "ஒரு மகத்தான சீர்திருத்தம் நடை பெறும் போது ஒழுக்க மற்றதும், ஆபாசமான காரியங்களும் ஏற்படாமல் இருப்பதற்கும் காரியம் துரிதப் படுத்தப்படவும் பட்டினி ஏற்கப்படவேண்டியது அவசிய" மென்றும் கூடியவரை பட்டினியை ஏற்க வேண்டாம் என்றும் தனக்குள்ளாகவே எதிர்த்துப்போராடி பார்த்தும் தன் மனச்சாட்சி ஏற்றுக் கொள்ளும்படி செய்தது என்றும் "பட்டினி ஒரு மத சம்மந்தமானது" என்றும் இந்த "மத சம்பந்தமான இயக்கம் அதன் கர்த்தாக்களின் புத்தி சாதுர்யத்தால் வெற்றி பெற்று விடா" தென்றும் "ஆத்மார்த்த வலிவே வெற்றிக்குக் காரணம்" என்றும் தோழர் காந்தியே சொல்லி இருக்கிறார். இவற்றையெல்லம் அறிவோடு யோசித்துப் பார்த்தால் இந்த பட்டினி விரதத்தில் உள்ள உண்மை பொருள் அற்ற தன்மை நன்று விளங்கும். எப்படி இருந்த போதிலும் தோழர் காந்தி அவர்கள் இந்த பட்டினி விரதம் முட்டாள் தனமாக ஆரம்பித்து விட்டது என்று யாரும் கருதி விடக் கூடாது.

பூனா ஒப்பந்தத்தை திருத்த வேண்டுமென்று தோழர் அம்பேத்கார் கூறிய விஷயமொன்று, சில மாகாணம் அதை ஆட்சேபிப்ப தொன்று, இதற்கு முன் கூறிய குருவாயூர் கோவில் பட்டினி ஆரம்பிக்க முடியாமல் போனதால் பொது ஜனங்களிடை ஏற்பட்ட பழிப்பு ஒன்று சனாதனதர்மிகள் தோழர் காந்தியை பரிகாசம் செய்ய ஆரம்பித்ததென்று, சட்ட மறுப்பு இயக்கம் ஸ்தம்பித்தும் காந்தியாரை வெளியில் விட சர்க்கார் நிபந்தனை கேட்ட தென்று, காங்கிரசுக் காரருக்கு வேலையில்லாமல் போனதின் பயனாய் சற்று உணர்ச்சி உள்ள வாலிபர்கள் எல்லாம் காங்கிரசையும், காந்தியாரையும் எதிர்த்து வைது கொண்டும், பொதுவுடைமையிலும், சமதர்மத்திலும் பற்றுக் கொண்டு அதில் போய் சேருவதென்று முடிவு செய்து பலர் அந்தப்படியே செய்து வரவதொன்று, ஹரிஜன சேவை என்பதன் இரகசியம் வெளியாகி ஹரிஜனங்களில் பெரும் பாலோர்களே அதை லட்சியம் செய்யாமல் போன தென்று, காங்கிரசில் இருந்து வரும் தென்னாட்டு பார்ப்பனத் தலைவர்கள் என்பவர்களின் நடத்தையில் பொது ஜனங்களுக்கு நம்பிக்கையில்லாமல் போனதுடன் அவர்கள் சூட்சிகள் சிலவற்றை காந்தியார் அறிந்து வெட்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டதென்று, மற்றும் ஏழை தொழிலாள மக்கள் காந்தியை தங்கள் எதிரிகளாக கருதி இருப்பதையும் அவர்கள் மத உணர்ச்சி



RangaRakes tamilnavarasam.com

களை வெறுப்பதையும் காந்தியாருக்கு நன்றாக விளங்கிவிட்ட தொன்று, காந்தியையோ, காங்கிரசையோ சிறிதும் லட்சியம் செய்யாமல் லண்டன் மகாநாடு நடப்பதொன்று, இப்படியாக இன்னும் பல காரியங்கள் காந்தியாருக்கு பட்டினி விரதமனுஷ்டிப்பதன் மூலம் ஏதோ ஒரு கிளர்ச்சியை உண்டாக்கி தீர வேண்டிய அவசியத்தைக் கொண்டு வந்து விட்டது.

எது எப்படியிருந்தாலும் நம்மைப் பொறுத்தவரை சத்தியாக்கிரகத்தையும், பட்டினி விரதத்தையும் ஒன்று போலவேதான் கருதுகிறோம்.

சத்தியாக்கிரகம் எப்படி சண்டித்தனமானது என்று சொல்லுகின்றோமோ அப்படியேதான் அதைவிட மேலாகவே பட்டினியையும் சண்டித்தனம் என்று தான் சொல்லுகின்றோம். அனுபவத்தில் பார்த்தாலே இதன் உண்மை விளங்கும். ஜனங்களில் சிலரும், குழந்தைகளில் பலரும் பட்டினி இருப்பதாக அதாவது வீட்டில் குடும்பத்தில் சாப்பிடமால் கோபித்துக் கொண்டிருப்பதாகக் காட்டுவதின் கருத்து என்ன என்பதைக் கவனித்தால் இதன் உண்மை விளங்கும். நியாயம் சொல்லி மெய்ப்பிக்க முடியாமலோ, கை பலத்தால் சக்தியை காட்ட முடியாமலோ போன சமயத்தில் சாப்பிடுவதில்லை, மண்டையை உடைத்துக் கொள்ளுகிறேன், தற்கொலை செய்து கொள்ளுகிறேன், எங்கேயாவது ஓடிப்போய் விடுகிறேன் என்பது போன்ற காரியங்களால் காரியத்தை சாதிக்க முற்படுவது இயற்கையாக இருப்பதைப் பார்க்கின்றோம்.

தவிரவும் ஏதாவதொரு காரியத்தில் ஒருவருக்கு இருக்கும் உண்மையான ஆர்வத்தைக் காட்டிக் கொள்ளவேண்டுமானால் இதுதான் (பட்டினி தான்) கடைசி வழியாகும்.

ஏனெனில் முதலில் ஒத்துழையாமை என்று சொன்னார். அதற்கு பிணக்கு என்று பேர் வைத்து நடத்திப் பார்க்கப்பட்டாய் விட்டது. பிறகு சத்தியாக்கிரகம் என்று சொன்னார். அதனால் சிறிது கஷ்டங்கள் அனுபவிப்பது என்று சொல்லி அந்தப்படியும் பார்த்தாய் விட்டது. இரண்டும் உத்தேசித்த வெற்றியைகொடுக்க வில்லை என்றாய் விட்டதால் மூன்றாவது காரியம் தனது உயிரை கொடுப்பதாக சொல்ல வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டது. தவறான மார்க்கத்தில் இழுத்துச் செல்லப் பட்டவர்களுடைய கதியெல்லாம் இப்படித்தான் நடந்து வந்திருக்கிறது என்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் பார்க்கலாம். ஒரு காலத்தில் இந்தக் காரியங்களுக்கு மதிப்பு இருந்தது என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் இன்று மக்கள் அடைந்திருக்கும் முன்னேற்ற அளவுக்கு இந்த மாதிரி பழய கால தந்திரங்கள் பயனளிக்குமென்று நம்மால் கருத முடியவில்லை.

எப்படி இருந்தபோதிலும் தோழர் காந்தியாரின் இந்தக்காரியங்கள் எல்லாம் வெற்றிபெற்றாலும், தோல்வி அடைந்தாலும் உண்மையானதாய் இருந்தாலும் தந்திரமானதாய் இருந்தாலும், பொதுவாக இவை மனித சமூகத்தில் உள்ள பெரும்பான்மையான மக்களுக்கு கேட்டை விளைவிப்பதேயாகும். காந்தியென்றாலே இப்போது ஒரு மனிதத் தன்மைக்கு மீறின சக்தியுடையவர் என்கின்ற எண்ணத்தைப் பார்ப்பனர்களும், வயிற்றுப் பிழைப்புப் பத்திரிகைகளும், சில சுயநலமிகளும் (இது சுலபமான காரியமாயிருந்ததால் பாமர மக்களுக்குள் இந்த மாதிரி ஒரு அக்கிரமமான காரியத்தைச் செய்து விட்டார்கள். தோழர் காந்திக்கு செல்வாக்கு உண்டாக்கியதன் பயன் எல்லாம் இப்போது மத புரட்டுகளையும் மத சூட்சிகளையும், நிலை நிறுத்தப்படும் தன்மைகளை பலப்படுத்தவே பயன்பட்டு வருகிறது.

உதாரணமாக தோழர் காந்தி ஒவ்வொரு வார்த்தைக்கும் "கடவுள் கட்டளை இடுகிறார்" "கடவுள் சொல்லுகிறார்" "கடவுள் தன்னோடு பேசுகிறார்" என்று மக்கள் நம்பும்படியாகவே பேசியும் சூசனை காட்டியும் வருகிறார். இதன்பயன் என்னமாய் முடியும் என்று பார்த்தால் ஏசுநாதர், முகமது நபி, என்பவர் போன்றவர்களின் கூட்டத்தில் தோழர் காந்தியும் சேர்க்கப்பட வேண்டும் என்கின்ற ஒரு உணர்ச்சி மூட மக்களுக்கு ஏற்படக்கூடும் என்பதைத் தவிர வேறில்லை. அவர் எப்படியோ முதலாளிமார்கள் இடம் இருந்து பணம் வசூல் செய்து பார்ப்பனர்கள் கையில் கொடுத்து விடுகிறார். பார்ப்பனர்களோ இந்தப் பணங்களைக் கொண்டு மகாத்மா தன்மையை பலப்படுத்தும் வேலைக்கும் நிலை நிறுத்தும் வேலைக்கும் பிரசாரத்திற்கும் பல தலைப்பின் கீழ் செலவு செய்கின்றார்கள். தற்காலம் வேலையில்லா திண்டாட்டமும் சோம்பேறி வாழ்க்கைப் பிரியமும் சேர்ந்து பல வாலிபர்களை புராண காலக்ஷேபம் மதப்பிரசாரம் முதலியவைகளில் இழுத்து விட்டு விடுகிறது. இதற்கு நாம் என்ன செய்வது என்பது நமக்கு விளங்கவில்லை.

சாதாரண ஆத்மா விஷயமே சந்தி சிரிக்கும் போது மகாத்மா விஷயம் எப்படி பட்டதாய் இருக்க முடியும் என்பதை வாசகர்கள் தான் முடிவு கட்டி கொள்ள வேண்டும். ஆகையால் சுயமரியாதை இயக்க தோழர்களுக்கு இந்த சமயம் நாம் ஒன்று சொல்லுகின்றோம். அதாவது இந்த பட்டினி விபரத்தைப் பற்றி அவர்கள் பேசாமலிருப்பதே நல்லது என்பதுதான்.

**குடி அரசு - தலையங்கம் - 07.05.1933**





RangaRakes
tamilnavarasam.com

# தோழர் காந்தி

தோழர் காந்தி அவர்கள் இப்போது இருந்துவரும் பட்டினி விரதத்தில் தீண்டப்படாத கிறிஸ்தவர்கள் விஷயமாயும் பாடுபடுவாராம், "போகட்டும் பாவம்". இத்தனை நாளைக்குப் பிறகாவது கிறிஸ்தவ தீண்டாதார் விஷயம் அவருடைய ஞாபகத்துக்கு வந்தது பற்றி ஒரு விதத்தில் மகிழ்ச்சியே. ஆனால் இவையெல்லாம் சுயமரியாதை இயக்கத்துடன் போட்டி போடத் தென்னிந் தியப் பார்ப்பனர்களின் சூத்திரக்கயரின் சக்த்தியேயாகும் என்பதில் மாத்திரம் சிறிதும் ஐயமில்லை.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 07.05.1933**



# கெண்டைக் குஞ்சுகள்

**- குறும்பன்**

## பரமசினைப் பார்த்தீர்களா?

ஆகாய விமானத்தில் போய் இமயமலையின் அதிக உயரமான சிகரமாகிய 'எவரஸ்ட்' டைப் பார்த்துவிட்டு வந்தார்கள், என்று பத்திரிகை கள் கூறுகின்றன.

"அங்கே எங்கள் பரமசிவம் இருந்திருப்பாரே, பார்த்தீர்களா" என்று கேட்க வேண்டுமென்று லோகோபகாரப்பிள்ளை ஆவலோடிருக்கிறார்.

## மாமாங்கம்

**உபாத்தியாயர்:-** சமீபத்தில் நடந்த மகாமகத்தை (மாமாங்கம்) பற்றி நீ தெரிந்து கொண்ட தென்ன?

**பிராமணப்பையன்:-** நமது ஹிந்துக்கள் இந்தப் பண நெருக்கடியான காலத்தில்கூட எவ்வளவு கடவுள் பக்தியோடு இருக்கிறார்கள், என்பதைக் காட்டுகிறது சார்.

**உபாத்தியாயர்:-** சரி, நீதெரிந்து கொண்டதென்ன?

**சு.ம. பையன்:-** யோக்கியமாய் உலகத்தில் வாழ்வதைவிட ஏமாற்றிக் கொண்டே வாழ்வது ரொம்ப லகுவு என்பது தெரிகிறது சார்.

## ஆஸ்திகக் குழந்தைகள்

"குறித்த அளவுக்குமேல் உஷ்ணமோ குளிர்ச்சியோ ஒருவன் உடம் பில் ஏற்பட்டதும் அவன் இறந்து விடுவதற்குக் காரணமென்ன? என்று வைத்தியப் பள்ளிக்கூட (Medical school) ஆசிரியர் வகுப்புப் பிள்ளைகளைக் கேட்டார்,



RangaRakes tamilnavarasam.com

**‘ஹிந்து’ மாணவன்:–** அது அவனுடைய தலைவிதி சார்.

**கிறிஸ்து மாணவன்:–** அது கர்த்தனுடைய கட்டளை சார்.

**முஸ்லீம் மாணவன்:–** அல்லாஹ்விடைய ஆக்ஞை சார்.

இந்த பதில்களைத் தப்பு என்று சொல்கிறவர்களெல்லாம் பச்சை நாஸ்திகர்கள் என்பதே நமது அபிப்பிராயம்.

## கொசுவலையா? கடவுளா?

“கொசுக்கள் நிறைந்த இடத்தில் நீ வசிக்கிறாய். உன்னிடம் 5 ரூபாய் தான் பணமிருக்கிறது. நீ கடவுளுக்காக ஒரு பிரார்த்தனை செய்ய வேண்டியிருக்கிறது. நீ கொசுவலை வாங்குவாயா? பிரார்த்தனைக்குச் செலவிடுவாயா? காரணங்களோடு விடை கூறவும்” என்று ஒரு சுகாதார உபாத்தியார் பரீட்சைக் கேள்விகளில் கேட்டிருந்தார்.

“நான் கொசுவலைதான் வாங்குவேன். ஏனெனில் நமது உடம்பைப் பார்த்துக் கொண்டல்லவா கடவுளைப் பற்றி பிறகு நினைக்க வேண்டும்” என்று 46 குழந்தைக்கு 44 குழந்தைகள் பதில் எழுதியிருந்தன.

இந்த 44 குழந்தைகளும் சு.ம. காரர் வீட்டுக் குழந்தைகள் அல்ல என்பதைக் கடவுளுக்காக வக்காலத்து வாங்கியிருக்கும் வக்கீல் குழாங்களுக்கு அர்ப்பணம் செய்கிறோம்.

## “பிச்சையெடுக்குமாம் பெருமாள்:–”

நீடாமங்கலத்திலும், காரைக்குடியிலும் சு. ம. தோழர்களைப் போலீசார் அகாரணமாய் அடித்து விட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

ஊரை ஏமாற்றிச் சேர்த்திருக்கும் பார்ப்பான்கள் பணத்தைப் பிடுங்குவதற்கு நல்ல யோசனை செய்தீர்கள். போலீஸ்காரர்களே! விடாதீர்கள்! பஸ். ஜட்கா இல்லாத ஊர்களில் இது ஒரு சரியான வழிதான்!

## திடீர் சந்தேகம்

**ஒருவன்:–** வருணாச்சிரமக் கட்சிக்கும் ‘ஜஸ்டிஸ்’ கட்சிக்கும் என்ன வித்தியாசம்?

**மற்றவன் :–** வருணாசிரமக் கட்சியிலிருப்பார்களெல்லோரும் பூணூல் போட்டிருக்கிறார்கள், “ஜஸ்டிஸ்”கட்சியில் இருப்பார்களுக்கு அது கிடையாது.



RangaRakes

**(ஒரு திருத்தம்:–** அதிலும் இரண்டொரு பதில் வெட்டு உண்டு. இதிலும் இரண்டொரு பதில் வெட்டு உண்டு)

**குடி அரசு – உரையாடல் – 07.05.1933**



tamilnavarasam.com

# வடஆற்காடு ஜில்லா சுயமரியாதை மகாநாடு

தலைவர் அவர்களே! தோழர்களே! !

இன்று இந்த மகாநாட்டுக்கு வந்த எனக்கு இங்குள்ள பல சங்கங்களால் வரவேற்பு பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டதற்கு பதில் சொல்லுவேன் என்று தலைவர் சொன்னார். வரவேற்புப் பத்திரங்களை ஒரு சடங்காகவே கருதி வருகிறேன், அவை புராணக் கற்பனைகள் போல் இருக்கின்றனவே ஒழிய உண்மைகள் மிக அருமையாகவே இருக்கின்றன. அப்படிப்பட்ட சில விஷயங்களினுடைய பாராட்டுதலும் எனக்குச் சேர வேண்டியதில்லை. அவைகள் எல்லாம் எனக்குத் துணையாய் இருந்து என்னுடன் ஒத்துழைத்து எனக்கு ஊக்கமும், உற்சாகமும் ஊட்டிவந்த வாலிபர்களுக்கே சேர வேண்டியதாகும். ஆதலால் அப்புகழ்ச்சிகளை அவர்களுக்கே சமர்ப்பித்து விடுகிறேன்.

தோழர்களே! இம்மாநாட்டுக்குத் தலைமை வகித்த தலைவர் தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி.எல். அவர்கள், தான் ஒரு சின்னப் பையன் என்றும், தன்னை தலைமைப் பதவியில் உட்கார வைத்து நான் வேடிக்கை செய்கிறேனென்றும் சொன்னார். இந்த இயக்கம் இன்று ஏதாவது ஒரு அளவுக்காவது மதிக்கத்தகுந்த அளவுக்கு பயன்பட்டு வருகின்றது என்று சொல்லப்படுமானால் அதற்கு காரணம் இந்தமாதிரி "சின்னப் பையன்களே" காரணமாகும். இப்படிப்பட்ட சின்னப் பையன்கள் இந்த இயக்கத்தில் இருப்ப தினாலேயே தான் எனக்கு ஒருபுரம் வயது வளர்ந்தாலும் வாலிபமும் கூடவே வளர்ந்து வருகிறது. எனது சவகாசம் முழுவதும் சின்னப்பையன்களிடமே இருப்பதினால் தான் சின்னப்பையன் தன்மை எனக்கு இன்னமும் இருந்தும் வளர்ந்தும் வருகிறது. என் ஆசை யெல்லாம் நான் எப்போதும் சின்னப் பையன்கள் மாதிரியே இருக்க வேண்டு மென்பதோடு பெரிய ஆளுகள் மாதிரி ஆகக்கூடாது என்பதுமாகும்.

இத்தலைவரவர்கள் நமது இயக்கத்தில் கலந்திருப்பது இயக்கத்திற்கு ஒரு அளவிட முடியாத ஆதரவாகும் என்பதைப்பற்றி நான் உங்களுக்கு



எடுத்துக் காட்டவேண்டியதில்லை. ஆனால் அவருக்கு வேண்டுமானல் பெருத்த நஷ்டம் ஏற்படலாம். ஏனெனில் அவருக்குள்ள ஊக்கமும் உற்சாக மும், அறிவும் வேறு கட்சிகளில் பயன்படுத்தப்படுமானால் அவர் பெருத்த பதவியையும், செல்வத்தையும் அடையத் தக்கவராவர். ஆதலால் அது அவ ருக்கு நஷ்டமாகலாம். ஆனால் பெரும் பெரும் பதவிகளையும், செல்வம் சேர்க்கும் முறைகளையும் இன்னமும் நாம் நிலைக்கவைக்கப் போவதானால் தான் அவருக்கு அது நஷ்டமாகும். எனக்கு இருக்கும் நம்பிக்கைப்படி பார்த்தால் வெகு சீக்கிரத்தில் பெரும் பதவிகள் என்பவைகளும், செல்வம் சேர்க்கும் முறைகள் என்பவைகளும் ஒழிந்து விடுமென்றே கருதுகிறேன்.

## நமது இயக்கம்

நமது இயக்கம் இப்போது ஏதோ ஒரு புதிய துறையில் இறங்கி விட்டதாக வரவேற்புத் தலைவர் வார்த்தைகளிலிருந்தும், மகாநாட்டுத் தலைவர் வார்த்தையில் இருந்தும் ஊகிக்க இடம்கொடுத்தது. இந்த அபிப்பி ராயம் நம் இயக்கத்திற்கு தூண்கள் போல இருந்து ஆதரவளித்துவந்த, உதவிபுரிந்து வந்த இன்னும் பல அறிஞர்கள் உள்ளத்திலும் தோன்றி இருப்பதாக அறிகிறேன். அவ்வளவோடு மாத்திரமல்ல, இக்கருத்தின் மீது இயக்கத்துக்கு சிலருடைய பாராமுகமும் ஏற்பட்டு வருகிறதையும் உணரு கிறேன்.

காரணம் என்னவென்றால் சுயமரியாதை இயக்கம் இதுவரை சமூக முன்னேற்ற இயக்கமாக இருந்தது மாறி இப்போது பொருளாதாரத்திலும், அரசியலிலும் பிரவேசித்து விட்டதாகவும் இதனால் இயக்கம் ஆதரவு அற்று அரசாங்க அடக்கு முறைக்கு ஆளாக்கி நசித்துப்போகுமென்றும் சொல்லுகி றார்கள். சிலர் தாங்கள் அரசாங்க ஆக்கினைக்கு தயாராயில்லை என்றும் ஆதலால் இதில் கலந்து கொள்ள முடியாது என்றும் சொல்லுகிறார்கள்.

இக்கூட்டத்தார் எல்லோருக்குள்ளும் மகிழ்ச்சியடையத்தக்க ஒரு விஷயமிருக்கிறது. அதென்ன வென்றால் அரசாங்க அடக்கு முறைக்கு ஆளாக முடியாது என்கின்ற காரணம் மாத்திரமே அல்லாமல் இக்கொள்கை விஷயத்தில் ஆட்சேபணையிருப்பதாக காணப்படவில்லை என்பதேயாகும். இது எப்படியிருந்த போதிலும் விஷயத்தை சற்று கவனித்துப்பார்ப்போம்.

## சமூக முன்னேற்றம்

சமூக முன்னேற்றமென்றால் என்ன? எந்த சமூக முன்னேற்றம் என்பதை நாம் கவனிக்க வேண்டும். மனித சமூக முன்னேற்றம் என்பது மனிதர்கள் குளிப்பது, மதக்குறி இடுவது, புராணங்கள் படிப்பது, கோவில் குள யாத்திர உற்சவம் செய்வது முதலாகிய இவைகள் தானா? அல்லது ஜாதி வித்தியாசம் ஒழிப்பது, சத்திரம் சாவடி கட்டுவது பள்ளிக் கூடம் வைப்பது



RangaRakes tamilnavarasam.com

முதலியவைகள் தானா? இந்த மாதிரியான சமூக முன்னேற்றம் பல ஆயிர வருஷ காலமாக நடந்து வந்திருப்பதை சரித்திர வாயிலாக அறிகிறோம். இதற்காக ஆயிரக்கணக்கான மகாத்மாக்களும், முனிகளும், ரிஷிகளும், கடவுள் தூதர்களும், அவதாரங்களும், கடவுள் அம்சங்களும் தோன்றி ஞானோபதேசம் செய்து வண்டிவண்டியான ஆதாரங்கள் சப்ளைகள் செய்தும் கடவுள்கள் பேரால் வெளியானவை என்று சொல்லியும் கட்டுப் பாடுகள் செய்து வைத்திருப்பதும் நாம் பார்க்கிறோம். இவற்றிற்காக உலகத் தையும், உலக மக்களையும் தேசமென்றும், மதம் என்றும், ஜாதி என்றும், வகுப்பு என்றும் பிரித்து இவற்றின் பேரால் பல ஸ்தாபனங்களையும் ஏற்ப டுத்தி 10 லட்சக்கணக்கான மக்கள் மதாச்சாரியார், உபதேசியார், மடாதிபதியார் முதலிய பேர்களால் வாழ்ந்து வருவதையும் பார்க்கின்றோம். இவ்வளவெல் லாம் இருந்தும் மனித சமூக முன்னேற்றத்திற்கு என்ன பலன் ஏற்பட்டது என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

சுமார் 2000, 3000 வருஷத்திற்கு முந்திய மக்கள் சமூக நிலையை எடுத்துக் கொண்டால் அதில் இன்று என்ன மாறுதல், என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது? அந்தக்காலத்தில் இருந்த கொடுமை, ஏழ்மை, உழைப்புக் கஷ்டம், மனக்கவலை, அடிமைத்தனம் எல்லாம் இன்றும் இருந்துதான் வருகின்றது. ராமர் காலத்தில், அரிச்சந்திரன் காலத்தில் இருந்து வந்த மேல் ஜாதி, கீழ் ஜாதி, பெண்ணடிமை, பிரபு, கூலிக்காரன், பிராமணன், சண்டாளன் முதலிய கொடுமைகள் இன்றும் இருந்துதான் வருகிறது. பெண்களுக்கு உரை போட்டு தம்பூர் போலும், தலைகாணி போலும் வைத்திருக்கும் கொடுமை இன்று இல்லையா? பெண்களை விற்கும் கொடுமையும், அடிமை கொள்ளும் கொடுமையும் இன்று இல்லையா? ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி இன்று இல்லையா? மக்களை தெருவில் நடக்க விடாமை, தொடமுடியாமை, கண்ணால் பார்க்க முடியாமை ஆகிய மூர்க்க குணங்கள் இன்று இல்லையா? யாதொரு பாடும் படாமல் ஒரு நாளைக்கு நாலு வேளை, ஆறு வேளை சாப்பிடுகின்ற மக்களும் ஒரு நாளைக்கு 10 மணி நேரம் 12 மணி நேரம் பாடு பட்டும் அவர்கள் பெண்டு பிள்ளைகள் இரண்டு நாளைக்கு ஒரு தரம் கூட சமயல் செய்ய யோக்கியதை இல்லாத மக்களும் இல்லையா? இவைகள் எல்லாம் மதக் கட்டளை, கடவுள் சித்தம், அரசாங்க விதி என்பவைகளின் மீதே நடந்து வருகின்றனவா இல்லையா? என்பவைகளை யோசித்துப் பாருங்கள்.

மனித சமூக முன்னேற்றம் என்பதில் நாணையமாயும், யோக்கிய மாயும் பாடுபடுவதாய் இருந்தால் மேல்கண்ட கொடுமைகளை யெல்லாம் ஒழிக்க வேண்டுமா வேண்டாமா? என்று யோசித்துப் பாருங்கள். மனித சமூகம் என்றால் இதில் எந்த தேசத்தானாவது, எந்த மதத்தானாவது, எந்த சமயத்தானாவது, எந்த ஜாதியானாவது விலக்கப்பட முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். எல்லா தேசத்திலும், எல்லா மதத்திலும், எல்லா ஜாதி



யிலும், எல்லா அரசாங்கத்திலும் இந்தக் கொடுமைகளைப் பார்க்கின்றோம். சிலர் “எங்கள் மதத்தில் தீண்டாமை, பார்க்காமை முதலியவை இல்லை” என்று சொல்லக்கூடும். தீண்டாமை, பார்க்காமை என்பது ஒரு மதத்தையே அடிப்படையாகக் கொண்டதல்ல என்பதே எனது அபிப்பிராயம். தீண்டாமை என்பது ஒரு கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. அதென்ன வென்றால் ஒருவன் பாடுபடாமல் ஊரான் உழைப்பில் வாழவேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.

உதாரணமாக பறையன் என்றால் என்ன? அவன் சதா கஷ்டமான வேலையைச் செய்ய வேண்டியவன் என்பதே. பார்ப்பான் என்றால் என்ன? அவன் சரீரத்தால் வேலையே செய்யக் கூடாது என்பதே. எங்காவது பார்ப்பனன் போட்டர் வேலை, மண்வெட்டி வேலை, வீதி கூட்டும் வேலை, கக்கூஸ் எடுக்கும் வேலை, வண்டி இழுக்கும் வேலை, பியூன் வேலை முதலிய கஷ்டமான வேலை செய்கிறானா? பார்ப்பனப் பெண்களாவது காட்டு வேலை, தோட்ட வேலை, வீட்டுக்கூலி வேலை முதலியவைகள் செய் கின்றார்களா? இதற்காகத்தான் ஜாதி பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்கை கள் அதாவது இந்த மாதிரி பல ஜனங்கள் கஷ்டப்படுவதும், சில ஜனங்கள் சுகப்படுவதுமான நிலை எந்த தேசத்தில் எந்த மதத்தில் எந்த ராஜரீகத்தில் இல்லை என்று யோசித்துப்பாருங்கள். நன்றாய் யோசித்துப்பாருங்கள். இதை சீர்படுத்த வேண்டுமானால் எந்த விதமான சமூக முற்போக்கு வேலை செய்வது?

பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் வேலை செய்யா மல் சமூக முற்போக்கு எப்படி ஏற்படும்? ஒரு சமூகத்துக்கு பொருளாதாரமும் அரசியலும் அவசியமானதா அல்லவா? இந்த இரண்டையும் விட்டு விட்டு செய்யும் முற்போக்குக்காக நமது சுயமரியாதை இயக்கம் தேவையே இல்லை. சும்மா அலங்காரமாக, வேடிக்கையாக புராண முட்டாள் தனத்தையும், பார்ப்பன சூட்சியையும் பேசி காலங்களிப்பது மாத்திரமே சுயமரியாதை இயக்கத்தின் வேலையானால் சுயமரியாதை இயக்கம் அழிந்து போவதே மேலான காரியம் என்று சொல்லுவேன்.

அரசியலைப்பற்றியும், பொருளாதாரக் கொடுமையைப்பற்றியும் பேசுவதே குற்றமான காரியம் என்று சில தோழர்கள் கருதி இருப்பதாகத் தெரி கின்றது. அது வீண் பயங்காளித்தனமேயாகும். இந்த மாதிரி பயங்காளித்தனம் கொண்ட மனதினால் ஒரு காரியமும் செய்ய முடியாது. அரசியலுக்காகவும், பொருளாதாரத்துக்காகவும் நாம் யாரையும் அடிக்கவோ, தடுக்கவோ, குத்தவோ, சுடவோ, வெடிகுண்டு எறியவோ அல்லது எவ்வித பலாத்காரத்தை உபயோகிக்கவோ வேண்டுமென்று நான் சொல்ல வரவில்லை. ஜாதி வித்தியாசம் ஒழிய வேண்டும் என்பதற்கு நாம் எத்தனை பேரைக் கொன்றுவிட்டோம், யாரை சுட்டோம், யார் மீது வெடிகுண்டு போட்டோம்,



RangaRakes tamilnavarasam.com

வெறும் நமது வாய்க் கிளர்ச்சியின் பயனாகவே நமது அபிப்பிராயத்தை தயவு தாட்சண்யம் இல்லாமல் வெளியிட்டதின் பயனாகவே மனித சமூகத்திற்குள் ஒரு உணர்ச்சியை உண்டாக்கி விட வில்லையா? "சுயராஜ்யம் கிடைத்த பின்பு தீண்டாமையை விலக்கிக் கொள்ளலாம்" என்று சொன்ன தோழர் காந்தி இரண்டு வருஷத் திற்குள் இன்று "தீண்டாமை ஒழிய 21 நாள் பட்டினி கிடக்கிறேன்" என்று சொல்லவும், "இந்தப் பட்டினி வெகு நாளைக்கு முன்னதாகவே இருந்திருக்க வேண்டும்" என்று சொல்லவும் கூட நாம் செய்துவிட்டோமா இல்லையா? என்று யோசித்துப்பாருங்கள். நமது பயமற்ற, தாக்ஷண்ணியமற்ற உண்மை பிரசாரத்தால் பார்ப்பன ஆதிக்கம் இந்த 4, 5 வருஷத்தில் எவ்வளவு தூரம் அடக்கப்பட்டது. ஆனால் அப்பொழுதே பணக்கார ஆதிக்கத்தையும் நாம் சரியானபடி கண்டிக்காததால் பணக்கார ஆதிக்கம் தலைதூக்க ஆரம்பித்து விட்டது. இப்போது அது பார்ப்பன ஆதிக்கத்துக்கு உதவி புரிகின்றது. ஆதலால் பொருளாதார துறையில் இரங்கி தைரிமாய் தாக்ஷண்ணிய மில்லாமல் அக்கொடுமையை வெளியாக்கினால் கண்டிப்பாய் பணக்கார ஆதிக்கத்துக்கு சாவுமணி அடிப்பதோடு பொருளாதாரக் கொடுமையும் சற்றாவது குறையும்.

பொருளாதார உயர்வு தாழ்வைப் பற்றியும், கொடுமையைப்பற்றியும், அது சம்மந்தமாக அரசியலைப்பற்றியும், நாம் பேசும்போது பயங்காளிகளுக்கும், சுயநலக்காரர்களுக்கும், ரஷியா ஞாபகம் வந்துவிடுகின்றது. இது பைத்தியக்காரத்தனமே யாகும். "அன்னிய அரசாங்கமே வேண்டியதில்லை. எங்கள் தேசத்தை எங்களிடம் ஒப்புவித்து விட்டு வெளி நாட்டார் வெளியாகிவிட வேண்டும்" என்று சொல்லும் தேசியவாதிகளின் அரசியலை விட நம்முடைய அரசியல் கொடுமையானதல்ல. முட்டாள் தனமானதல்ல.

## நாம் என்ன சொல்லுகின்றோம்?

அன்னியன் என்பதற்காக யாரையும் நாட்டைவிட்டு போகும்படி சொல்லுவதில்லை. அன்னியர் ஆட்சி என்பதற்காக எந்த ஆட்சியையும் நாம் அழிக்க வேண்டும் என்பதில்லை.

ஆனால் நாம் என்ன சொல்லுகிறோம். முதலாளித் தத்துவமுரை கொண்ட ஆட்சி வேண்டாம், பாடுபடும் மக்கள் அதன் பயனை அடையும் படியான முரைகொண்ட ஆட்சி வேண்டும் என்று தான் சொல்லுகிறோம்? ஏனெனில் உலகத்தில் பாடுபடும் மக்களோ, 100-க்கு 90-பேர்கள் இருக்கிறார்கள். சோம்பேரிகள் பாடுபடாமல் ஊரார் உழைப்பில் வாழுகின்றவர்கள் 100-க்கு 10-பேர்கள் தான் இருப்பார்கள். ஆதலால் 100-க்கு 90-பேருக்கு அனுகூலமான ஆட்சி அவர்களுடைய நலனுக்காக அவர்களாலேயே ஆட்சி புரியக் கூடிய ஆட்சியாக இருக்க வேண்டும் என்கிறோம். இதனால் என்ன தப்பு, இது ஏன் முடியாத காரியமாகவேண்டும். இதை ராஜத்துவேஷம் என்றோ, வகுப்பு துவேஷம் என்றோ சொன்னால் அதற்காக பயந்துவிடுவதா என்று கேழ்க்கின்றேன். அப்படியானால் வருவதுதான் வரட்டுமே. என்ன முழுகிப்போய்விடும்? சதா சர்வகாலம் உழைத்து சோம்பேரிகளுக்குப் போட்டு விட்டு பட்டினியாகவே ஒரு சமூகம் உலகில் உயிர் வாழ வேண்டுமானால் அந்த சமூகம் பூண்டற்றுப் போவதில் யாருக்கு என்ன சங்கடம். சோம்பேரிகள்தானே இதற்காக வருத்தப்படவேண்டும். கசாப்புக் கடைக்காரனுக்காகவே ஆட்டுச் சமூகம் இருக்கின்றது என்றால், அந்த ஆட்டு சமூகம் உலகில் அற்றுப்போவது ஆடுகளுக்கு நஷ்டமா? என்று யோசித்துப் பாருங்கள்.

உதாரணமாக தஞ்சாவூர் ஜில்லாவை எடுத்துக் கொள்ளுங்கள். காவேரி ஆற்றுப் பாசனம் முழுவதும் அங்குதான் பயன்படுகின்றது. எத்தனை ஆறுகள் ஓடுகிறது. கொல்லைக்கு போகக்கூட இடமில்லாமல் ஜில்லாவின் பெரும்பாகம் நஞ்சையாக இருக்கிறது. ஜில்லா போர்டு, தாலுகா போர்டு முனிசிபாலிட்டி எல்லாம் "பொதுஜனங்கள்" கையிலேயே இருக்கிறது. இருந்து என்ன லாபம்? சிலர் கொள்ளை அடிக்கிறார்கள். சிலர் 1000 ஏக்ரா, 5000 ஏக்ரா, 10000 ஏக்ரா என்பதாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மனிதர்கள் மாத்திரமல்லாமல் கோயில், மடம் முதலியவைகளுக்கும் இதுபோலவே லட்சக்கணக்கான ஏக்ராவும், செல்வமும் இருக்கிறது.

இங்குள்ள சுவாமிகளுக்கும், மடாதிபதிகளுக்கும் உர்ச்சவம், திருக் கல்யாணம், கோபனம் ஆகியவைகளுக்கு கணக்கு வழக்கிலடங்காத பொருள் செலவழிக்கப்படுகின்றது. இவ்வளவும் இருந்து பயன் என்ன?

சிங்கப்பூர், பினங்கு, மலேயா, மோரிசு, பிஜி. கண்டி முதலிய இடங்களில் இருக்கும் கூலிகளில் அதிகமான விகிதாச்சாரம் தஞ்சாவூர் ஜில்லாக்காரர்களாகவே இருந்து வருகிறார்கள். தஞ்சாவூரில் அன்ன சத்திரங்களுக்கும் சமஸ்கிருத காலேஜுகளுக்கும் குறைவில்லை என்றால் இதன் கருத்து என்ன? என்று யோசித்துப்பாருங்கள். பாடுபடும் மக்கள் பறையனாய், பள்ளனாய், சாம்பனாய் கஞ்சிக்கு வகையில்லாமல் நாட்டை விட்டு வேறு நாட்டுக்கு போய் நாயிலும், கழுதையிலும் கடையாய் பாடு படுவதும் சோம்பேறிகள் அன்னச்சத்திரத்தில் சாப்பிட்டு சமஸ்கிருத காலேஜில் வாசிப்பதும் அங்குள்ள மிராசுதாரர்கள் தினம் தினம் நிலா விருந்தும், சதுரும், பாட்டுக்கச் சேரியும், ஜலக்கிரீடையும் அனுபவிப்பதும் அங்குள்ள மடாதிபதிகள் ராஜபோகம் அனுபவித்துக் கொண்டிருப்பதும் சகிக்கக்கூடிய காரியமா? என்று யோசித்துப் பாருங்கள்.

இதுபோலவே இன்னமும் எத்தனை ஜில்லாக்கள் எத்தனை மாகாணங்கள், எத்தனை தேசங்கள் இருந்து வருகிறது. இன்னும் "நமது சுதேச" ராஜாக்களை எடுத்துக்கொண்டால் அவர்களின் யோக்கியதையை சொல்ல


RangaRakes tamilnavarasam.com

வேண்டுமா? அநேக ராஜாக்கள் தங்கள் தேசத்தினுடைய மொத்த வருமானத்தில் 100 க்கு 75 விகிதம் தேவடியாளுக்கும், குதிரைப் பந்தயத்துக்கும், விருந்துக்கும், மோட்டாருக்கும், வசந்தோற்சவத்திற்கும் பாழாக்குகிறார்கள்.

## படிப்பு விஷயத்தில்

நமது நாட்டில் இவ்வளவு கொள்ளைக்கும், அக்கிரமங்களுக்கும், அயோக்கியத்தனத்திற்கும் பணம் இருந்தும் படிப்பு விஷயத்தில் 100 க்கு 12 பேர்கள் அதுவும் பார்ப்பனர்களும், பணக்காரர்களும் மாத்திரமே படிக்க முடிந்தது என்றால் இந்த ஆட்சியைப் பற்றியோ, அரசாங்கத்தைப் பற்றியோ எப்படிப் பேசாமல் இருப்பது என்று யோசித்துப் பாருங்கள். நாம் உண்மையான மனித சமூகத்திற்குப் பாடுபடுவர்களாயிருந்தால் மேல்கண்ட அக்கிரமங்களுக்கும் கொடுமைகளுக்கும் காரண பூதங்களாயிருப்பனவைகளை அழித்தே ஆகவேண்டும். அது கடவுளானாலும், மதமானாலும், அரசாங்கமானாலும் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டியதேதான். கடவுள் பக்தர்களும், மதபக்தர்களும், எங்கள் மீது பாய்வதில் பயனில்லை. தங்கள் தங்கள் கடவுள் மீதும், மதத்தின் மீதும் பாய்ந்து அவைகளுக்கு புத்திவரும்படி செய்யுங்கள். நாங்கள் கடவுளும், மதமும் மேல் கண்ட அயோக்கியத்தனங்களுக்காக சோம்பேறிகளால் சூட்சிக்காரர்களால் மூடர்களால் கற்பிக்கப்பட்டதென்றே கருதுகின்றோம். ஆதலால் நாங்கள் அதைப்பற்றி லட்சியம் செய்வதில்லை. இன்றைய அரசியலையும் சோம்பேரிகளுக்கும் பணக்காரர்களுக்கும் காப்பளிக்க ஏற்பட்ட கவசம் என்றே கருதுகிறோம்.

ஆகையால் அவைகளையும் அடியோடு மாற்றி பாடுபடுபவர்களுக்கும் ஏழைகளுக்கும் காப்பளிக்கக்கூடியதான ஒரு ஆட்சியை அமைக்க வேண்டும் என்று கருதுகிறோம்.

இப்படிக் கருதுவதால் ஆபத்து வந்து விடும் என்று கருதுகிறவர்கள் எங்களையே இந்த ஆபத்துக்குள்ளாக்கிவிட்டு மரியாதையாய் விலகி தப்பித்துக் கொள்ளட்டும். அதைப்பற்றி எங்களுக்கு பயமில்லை. ஆனால் எங்களுக்கு முட்டுக் கட்டை போட வேண்டாம் உள்ளே இருந்து துரோகம் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறோம். எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. இவைகளை எல்லாம் அடிதடி குத்து வெட்டு ரத்தக்களரி இல்லாமல் சாதிக்க இடமிருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். இதை ஒப்புக்கொள்ளுகிற எந்த ஸ்தாபனத்துடனும் கலந்து வேலை செய்ய தயாராய் இருக்கிறோம். நாங்கள் காங்கிரசுக்கு எதிரிகள் என்று இந்த ஊரில் சிலர் கருதியிருப்பதாய் கேழ்விப்பட்டோம். இந்தக் கொள்கைகள் காங்கிரசுடைய கொள்கைகளாய் இருந்தால் நாங்கள் காங்கிரஸ்காரர்கள் தான். வருணாச்சிரமம் இருக்க வேண்டும், ஜாதி இருக்கவேண்டும், "ராஜாக்கள்" இருக்க வேண்டும், முதலாளிகள் இருக்க வேண்டும், மதம் வேண்டும், வேதம் புராணம் இதிகாசம் இருக்க வேண்டும், இன்றைக்கு இருக்கிற தெல்லாம்



இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு இவைகளை எல்லாம் பலப்படுத்த நிலைக்கவைக்க வேண்டி 'வெள்ளைக்காரன் மாத்திரம் போகவேண்டும்' என்கின்ற காங்கிரசோ, சுயராஜியமோ, தேசியமோ, காந்தியமோ சுயமரியாதை இயக்கத்திற்கு வைரியே யாகும். சுயமரியாதை இயக்கத்தார்களால் அழிக்கப்பட வேண்டியவைகளில் இந்த காங்கிரசும், காந்தியமும் ஒன்றாகும். சுயமரியாதை இயக்கம் தமிழ் நாட்டில் மாத்திரம் இருப்பதாய் கருதுகிறீர்கள் அது தவறு. உலகில் எங்கும் எந்த மூலை முடுக்குகளிலும் இருக்கிறது. இந்தியாவில் மலையாளம், ஆந்திரம், வங்காளம், பம்பாய், பஞ்சாப் முதலிய அனேக மாகாணங்களில் இருக்கிறது. அவை களைப் பார்க்கும்போது நமது சு. ம. இயக்கம் மிகவும் வேகமற்ற சக்தி குறை வான தன்மையில் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். நாம் யாரையும் பார்த்து காப்பி அடிக்கிறவர்கள் அல்ல. நமது தகுதிக்கு நிலைமைக்கு ஏற்ற அளவில் இருக்கின்றோம். பலாத்காரத் தன்மையையோ இரகசிய முறை யையோ நாம் அடியோடு வெறுக்கிறோம். நமது கொள்கை நியாயமும், நேர்மையும் ஆனதால் நமக்கு பலாத்காரமும், ரகசியமும் வேண்டாம்.

தோழர்களே நாம் தைரியமாயும், நேர்மையாயும், ஒற்றுமையாயும், கவலையாயும் வேலை செய்தோமேயானால் நம்ம ஆயுளிலேயே நமது இச்சை பூர்த்தியாவதைக் காணலாம்.

*குறிப்பு: 07, 08.05.1933 நாள்களில் திருப்பத்தூரில் நடைபெற்ற வட ஆற்காடு ஜில்லா முதலாவது சுயமரியாதை மாநாட்டில் ஆற்றிய உரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 14.05.1033**



RangaRakes

tamilnavarasam.com

# 'மே' தினம்

# சமதர்மப் பெருநாள்

**1933-வருடம் மே மாதம் 21-தேதி ஞாயிற்றுக்கிழமை சுயமரியாதையோரால் தமிழ்நாடு முழுமையும் கொண்டாடப்படும்.**

உலகெங்கும் கடந்த 50 வருஷமாக மே தினத்தை ஓர் பெருநாளாகத் தொழிலாளர், கிருஷிகள் முதலியோர் கவனித்து வருகின்றார்கள். தாழத்தப் பட்டவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும், ஏமாற்றப்பட்டவர்களுக்கும் இந்நாள் வொன்றே உவந்த தினமாகும். இந்நாளில் கோடான கோடி மக்கள் தாங்கள் படும் கஷ்டங்களையும், குறைகளையும் தெரிவிப்பான் வேண்டி, ஆங்காங்கு கூட்டங்கள் போடுவதும், ஊர்வலம் வருவதும், உபன்யாசங்கள் செய்வதும் வழக்கமாயிருந்து வருகிறது. இவ்வருஷம் 'மே' தினமாகிய சென்ற திங்களில் (1933, மே, 1-வ) ஆங்கில நாட்டிலும் (England) பிரான்சிலும் (France) ருஷ்யாவிலும் (Russia) ஜெர்மனி (Germany) இட்டலி (Italy) அமரிக்காவிலும் (America) இந்தியாவிலும் (India) ஜப்பானிலும் (Japan) மற்றுமுள்ள தொழிலாளர், முதலாளி தேசங்களில் கோடான கோடி மக்கள் தம்தம் குறைகளைத் தெரிவித்தும், குறைகளுக்குப் பரிகாரம் தேடியும், யோசித்தும், பற்பல தீர்மானங்கள் செய்தும் வந்திருக்கின்றனர். இந்த வருஷம் பாரிஸ் பட்டணம், இந்நாளை தொழிலாளர் விடுமுறை நாளாகக் கொண்டாடியது. சமதர்ம நாடாகிய சோவியத் ருஷியாவில் 16 கோடி ஆண், பெண் குழந்தைகள் அடங்கலாக யாவரும், ருஷியா தேச முழுமையும், இத் தினத்தைக் கொண்டாடினார்கள். சமதர்மிகளாகிய நாமும் இத்தினத்தைக் கவனிக்காமலிருப்பது பெருங்குறைவேயாகும். இம்மாதம் முதல் நாள் கடந்து விட்ட போதிலும், **வருகிற ஞாயிற்றுக்கிழமை மே மாதம் 21 தேதி சுயமரியாதை சமதர்ம சபைகள்** யாவும், சமதர்ம கொள்கைகளை ஏற்றுக் கொண்ட சங்கங்கள் யாவும், அத்தினத்தை பெருந்தினமாகக் கொள்ளல் மிக்க நலமாகும். அன்று காலையிலும், மாலையிலும், அந்தந்தக் கிராமங்களிலும், பட்டணங்களிலும் சமதர்மிகள் ஊர்வலம், சமதர்ம சங்கீதங்களுடன் வரலாம்.



ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டி சமதர்மம் இன்னதென்றும், தொழிலாளருக்கும் விவசாயிகளுக்கும் விளக்கமுறச்செய்யலாம். துர்ப்பழக்க வொழுக்கங்களை வொழிக்குமாறு பல தீர்மானங்களைச் செய்யலாம். இவ்விதமாக ஒழுங்காகவும், நியாய முறைப்படி கூட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**ஈ. வெ. ராமசாமி**

**குடி அரசு - அறிக்கை - 14.05.1933**



RangaRakes tamilnavarasam.com

# நாகம்மாள் மறைவு

## எல்லாம் நன்மைக்கே

எனதருமைத் துணைவி, ஆருயிர்க் காதலி நாகம்மாள் 11-5-33 தேதி மாலை 7-45 மணிக்கு ஆவி நீத்தாள். இதற்காக நான் துக்கப்படுவதா? மகிழ்ச்சி யடைவதா? நாகம்மாள் நலிந்து மறைந்தது எனக்கு லாபமா? நஷ்டமா? என்பது இதுசமயம் முடிவு கட்ட முடியாத காரியமாய் இருக்கிறது.

எப்படியிருந்தாலும் நாகம்மாளை "மணந்து" வாழ்க்கைத் துணை யாகக் கொண்டு 35 வருஷகாலம் வாழ்ந்து விட்டேன். நாகம்மாளை நான் தான் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு இருந்தேனேயல்லாமல் நாகம் மாளுக்கு நான் வாழ்க்கைத் துணையாக இருந்தேனா என்பது எனக்கே ஞாபகத்துக்கு வரவில்லை. நான் சுயநலவாழ்வில் 'மைனராய்' 'காலியாய்' 'சீமானாய்' இருந்த காலத்திலும் பொதுநல வாழ்வில் ஈடுபட்டு தொண்டனாய் இருந்த காலத்திலும் எனக்கு வாழ்வின் ஒவ்வொரு துறையின் முற்போக் குக்கும் நாகம்மாள் எவ்வளவோ ஆதாரமாய் இருந்தாள் என்பது மறுக்க முடியாத காரியம். பெண்கள் சுதந்திர விஷயமாகவும், பெண்கள் பெருமை விஷயமாகவும் பிரத்தியாருக்கு நான் எவ்வளவு பேசுகிறேனோ-போதிக்கி றேனோ அதில் நூற்றில் ஒரு பங்கு வீதமாவது என்னருமை நாகம்மாள் விஷயத்தில் நான் நடந்துகொண்டிருந்தேன் என்று சொல்லிக் கொள்ள எனக்கு முழு யோக்கியதை இல்லை.

ஆனால் நாகம்மாளோ பெண் அடிமை விஷயமாகவும், ஆண் உயர்வு விஷயமாகவும், சாஸ்திர புராணங்களில் எவ்வளவு கொடுமை யாகவும், மூர்க்கமாகவும், குறிப்பிட்டிருந்ததோ அவற்றுள் ஒன்றுக்குப் பத்தாக நடந்து கொண்டிருந்தாள் என்பதையும் அதை நான் ஏற்றுக் கொண்டிருந்தேன் என்பதையும் மிகுந்த வெட்கத்துடன் வெளியிடுகிறேன்.

நாகம்மாள் உயிர் வாழ்ந்ததும், வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய தனக்காக அல்ல என்பதை நான் ஒவ்வொரு விநாடியும் நன்றாய் உணர்ந்து வந்தேன். இவைகளுக்கெல்லாம் நான் சொல்லக்கூடிய ஏதாவ தொரு சமாதானம் உண்டென்றால் அது வெகு சிறிய சமாதானமேயாகும்.



அதென்னவென்றால், நாகம்மாளின் இவ்வளவு காரியங்களையும் நான் பொதுநல சேவையில் ஈடுபட்ட பிறகு பொதுநல காரியங்களுக்கும், சிறப்பாக சுயமரியாதை இயக்கத்திற்குமே பயன்படுத்தி வந்தேன் என்பது தான். நாகம்மாள் நான் காங்கிரசிலிருக்கும் போது மறியல் விஷயங்களிலும், வைக்கம் சத்தியாக்கிரக விஷயத்திலும், சு. ம. இயக்கத்திலும் ஒத்துழைத்து வந்தது உலகம் அறிந்ததாகும்.

ஆகவே நாகம்மாள் மறைந்தது எனக்கு ஒரு அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா? ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா? இன்பம் போயிற் றென்று சொல்லட்டுமா? உணர்ச்சி போயிற்றென்று சொல்லட்டுமா? ஊக்கம் போயிற்றென்று சொல்லட்டுமா? எல்லாம் போயிற்றென்று சொல்லட்டுமா? எதுவும் விளங்கவில்லையே.

எது எப்படி இருந்த போதிலும் நாகம்மாள் மறைவு ஒரு அதிசய காரிய மல்ல. நாகம்மாள் இயற்கையை எய்தினாள். இதிலொன்றும் அதிசயமில்லை.

நாகம்மாளை அர்ப்ப ஆயுள்காரியென்று யாரும் சொல்லிவிட முடியாது. நாகம்மாளுக்கு 48 வயதே ஆனபோதிலும் அது மனித ஆயுளில் பகுதிக்கே சிறிது குறையான போதிலும் இந்திய மக்களில் சராசரி வாழ் நாளாகிய 23 $^{1}/_{2}$ இருபத்தி மூன்றரை வயதுக்கு இரட்டிப்பென்றே சொல்ல வேண்டும். **செத்தால் சிரிக்க வேண்டும், பிறந்தால் அழுக வேண்டும்** என் கின்ற ஞானமொழிப்படி நாகம்மாள் செத்ததை ஒரு துக்க சம்பவமாகவும், ஒரு நஷ்ட சம்பவமாகவும் கருதாமல் அதை ஒரு மகிழ்ச்சியாகவும், லாபமாகவும் கருத வேண்டும் என்றே நான் ஆசைப்படுகின்றேன். ஆசைப்படுவது மாத்திரமல்லாமல் அதை உண்மையென்றும் கருதுகிறேன்.

எப்படியெனில் எனது வாழ்நாள் சரித்திரத்தில் இனி நிகழப்போகும் அத்தியாயங்களோ சிறிது விசேஷ சம்பவங்களாக இருந்தாலும் இருக்கலாம். அதை நாகம்மாள் இருந்து பார்க்க நேரிட்டால் அந்த அம்மாளுக்கு அவை மிகுந்த துக்கமாகவும் துயரமாகவும் காணக்கூடியதாய் இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமிருக்காது. அத்துடன் அதைக்கண்டு சகியாத முறையில் யானும் சிறிது கலங்கக்கூடும்.

ஆதலால் நாகம்மாள் மறைவால் எனக்கு அதிக சுதந்திரம் ஏற்பட்ட துடன் "குடும்பத் தொல்லை" ஒழிந்தது என்கின்ற ஒரு உயர் பதவியையும் அடைய இடமேற்பட்டது.

இது நிற்க, நாகம்மாள் மறைவை நான் எவ்வளவு மகிழ்ச்சியான காரியத்திற்கும், லாபமான காரியத்துக்கும் பயன்படுத்திக் கொள்கின்றேனோ அந்த மாதிரி எனது மறைவையோ எனது நலிவையோ நாகம்மாள் உபயோகப்



RangaRakes tamilnavarasam.com

படுத்திக்கொள்ள மாட்டாள். அதற்கு நேரெதிரிடையாக்குவதற்கே உபயோகித்துக் கொள்வாள். ஆதலால் நாகம்மாள் நலத்தைக் கோரியும், நாகம்மாள் எனக்கு முன் மறைந்தது எவ்வளவோ நன்மை.

என்னருமைத் தோழர்கள் பலருக்கு நாகம்மாள் மறைவு ஈடு செய்ய முடியாத நஷ்டம் என்று தோன்றலாம். அது சரியான அபிப்பிராயமல்ல. அவர்கள் சற்று பொறுமையாய் இருந்து இனி நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளைக் காண்பார்களானால் அவர்களும் என்னைப் போலவே நாகம்மாள் மறைவு நலமென்றே கருதுவார்கள். நாகம்மாளுக்கு காயலா ஏற்பட்ட காரணமே எனது மேல் நாட்டுச் சுற்றுப்பிரயாணம் காரணமாய் ஒரு வருஷ காலம் பிரிந்து இருந்திருக்க நேர்ந்த பிரிவாற்றாமையே முக்கிய காரணம். இரண்டாவது ரஷ்ய யாத்திரையினால் எனக்கு ஏதோ பெரிய ஆபத்து வரும் என்று கருதியது.

மூன்றாவதாக நமது "புதிய வேலைத்திட்டங்களை" உணர்ந்த பின் ஒவ்வொரு நிமிஷமும் தனக்குள் ஏற்பட்ட பயம். ஆகிய இப்படிப்பட்ட அற்ப காரணங்களே அவ்வம்மைக்கு "கூற்றாக" நின்றது என்றால் இனி இவற்றை விட மேலானதான பிரிவு, ஆபத்து, பொருளாதாரக் கஷ்டம் முதலியவை உண்மையாய் ஏற்பட இருக்கும் நிலை அவ்வம்மைக்கு எவ்வளவு கஷ்டமாய் இருக்கும் என்று நினைத்துப் பார்க்கும் தோழர்கள் நாகம்மாள் மறைவுக்கு வருந்த மாட்டார்கள் என்றே கருதுகிறேன். 2, 3 வருஷங்களுக்கு முன்பிருந்தே நான் இனி இருக்கும் வாழ்நாள் முழுவதையும் (சங்கராச்சாரிகள் போல) - (அவ்வளவுக்கு ஆடம்பரத்துடனல்ல,) (பண வசூலுக்காக அல்ல) சஞ்சாரத்திலேயே, சுற்றுப் பிரயாணத்திலேயே இருக்க வேண்டும் என்றும் நமக்கென்று ஒரு தனி வீடோ அல்லது குறிப்பிட்ட இடத்தில் நிரந்தர வாசமோ என்பது கூடாதென்றும் கருதி இருந்ததுண்டு. ஆனால் அதற்கு வேறு எவ்விதத் தடையும் இருந்திருக்க வில்லை என்றாலும் நாகம்மாள் பெரிய தடையாய் இருந்தாள், இப்போது அந்த தடை இல்லாது போனது ஒரு பெரிய மகிழ்ச்சிக்குரிய காரியமாகும். ஆதலால் நாகம்மாள் முடிவு நமக்கு நன்மையைத் தருவதாகுக.

**- ஈ.வெ.ரா.**

**குடி அரசு - தலையங்கம் - 14.05.1933**

## அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அசூயை | - | பொறாமை |
| அத்தியந்த | - | மிகவும் நெருக்கமான |
| ஆக்கினை | - | கட்டளை |
| ஆஸ்பதம் | - | இடம், பற்றுக்கோடு |
| கெம்பு | - | சிவப்பு இரத்தினக்கல் |
| சகடயோகம் | - | குருவுக்கு ஆறு, எட்டு, பன்னிரண்டிற் சந்திரன் இருத்தலால் உண்டாகும் பலன் |
| சந்தியா வந்தனம் | - | சந்தி வணக்கம் |
| சாக்காடு | - | இறப்பு |
| சிடுக்கை நேரம் | - | பெண்கள் தலைமுடியில் சிக்கு எடுக்கும் நேரம் |
| சிலாகித்தல் | - | புகழ்தல் |
| தர்க்கீத்து | - | விவாதித்து |
| தர்ப்பித்து | - | பயிற்சி, ஒழுக்கம் |
| தியங்கி | - | சோர்வடைந்து, புத்திமயங்கி, கலங்கி |
| நிர்த்தூளி | - | முழு அறிவு |
| நிர்தாரணம் | - | நிலை நிறுத்தல் |
| பஞ்சராப்போல் | - | பறவைக்கூடு போல் |
| பார்த்தியாகிவிடும் | - | இணையாகிவிடும், பகரமாகிவிடும் |
| பரியந்தம் | - | எல்லை, முடிய |
| பரதவித்து | - | வருந்தி |
| பிரக்கியாதி | - | புகழ் |
| முடத்தெங்கு | - | கோணலாக வளர்ந்த தென்னை |
| வதியும் | - | தங்கும் |
| வனிதா | - | பெண், மனைவி |
| வைரி | - | பகைவன் |

RangaRakes
tamilnavarasam.com

# குடி அரசு

# 1933-2

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 17


பெரியார் திராவிடர் கழகம்

29 இதழியலாளர் குடியிருப்பு

திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்

சென்னை - 600 041


## கதர்

கதரைப் பற்றியும், அதை அரசியல் பிழைப்புக்காரர்கள் எப்படி உபயோகித்துக் கொண்டு வருகிறார்கள் என்பதைப் பற்றியும், கதர் புரட்டு என்கின்ற தலைப்பின் கீழ் இதற்கு முன் பல வியாசங்கள் எழுதியும், சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் வந்திருக்கின்றோம். இதன் பயனாய் அரசியல் வாழ்வுக்காரர்களும், அரசியலில் கலந்து கொள்ளுவதன் மூலமாய் மக்களை ஏமாற்றி பயனடையக் கருதும் சில சுய நலக்காரர்களும், தவிர மற்ற மக்கள் யாவரும் கதரை அடியோடு பஹிஷ்கரித்து இருப்பதும் யாவரும் அறிந்ததேயாகும். ஆனால் இப்போதும் அதைப் பற்றி ஏன் எழுதுகிறோம் என்று சிலர் கருதலாம்.

இது எழுதவேண்டியதற்கு ஏற்பட்ட முக்கிய காரணம் என்னவென்றால், சுயமரியாதை இயக்கத்தை பழிக்கவும், தூற்றவும், அதன் மீது மூடப் பாமர மக்களுக்கு வெறுப்பு உண்டாக்கவுமான, இழிதகைப் பிரசாரத்துக்கு அனுகூலமாக சில காங்கிரஸ்காரர் என்று சொல்லிக்கொண்டு சோம்பேரியாய் இருந்து வயிர்வளர்க்கும் வீணர்கள் “சுயமரியாதைக்காரர்கள் கதரை வெறுக்கிறார்கள்” என்றும் “ஏழை மக்களைக் காப்பாற்றும் கதருக்கு விரோதமாய் இருந்து ஏழைகளுக்கு துரோகம் செய்கிறார்கள்” என்றும் பொதுக்கூட்டங்களில் விஷமப் பிரசாரமும், திண்ணைப் பிரசாரமும் செய்து வருவதால் கதரின் வண்டவாளத்தை ஏழை மக்களே அறியட்டும் என்கின்ற எண்ணத்தின் மீது கதர் என்ற தலைப்பின் கீழ் மறுபடியும் சில குறிப்புகள் எழுத முன்வந்தோம்.

கதர் என்பது எது என்றால் “பஞ்சை கையினால் அரைத்து, கையினால் கொட்டி, கையினால் நூற்று, கையினால் நெய்த துணிக்கு” கதர் என்று பெயர். இவற்றுள் கையால் பஞ்சை அரைப்பது என்பது இப்போது சாத்தியமற்ற காரியமாகப் போய்விட்டது. யந்திரத்தினால் தான் (ஜின்னிங் செய்ய) அரைக்க முடிகின்றது.

கதரைப்பற்றி கதரை ஆரம்பித்த-கண்டு பிடித்த கதர் கர்த்தாக்கள் ஆரம்பத்தில் கதருக்காக சொன்ன காரணங்கள் யாவரும் அறிந்ததேயாகும். அதாவது,

RangaRakes tamilnavarasam.com

1. “யந்திரம்” என்பது பேயின் பிரதி பிம்பம் ஆதலால் யந்திர உலகத்தை அழித்து கையினால் வேலை செய்யும் பழய கால வாழ்க்கையை புதுப்பிக்க வேண்டியது அவசியமானதால் எல்லோரும் கைராட்டினத்தில் நூல் நூற்க வேண்டியது என்பதை முக்கிய காரணமாகவும்,

2. இரண்டாவதாக அவனவனுக்கு வேண்டிய சாதனங்களை அவன வனே உற்பத்தி செய்துகொள்ளும் தன்னம்பிக்கை தன்மையை அடையவேண்டும் என்கின்ற தத்துவத்தில் முதலாவதாக அவனவனுக்கு வேண்டிய துணியை அவனவனே நூற்று அவனவனே நெய்து கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்பட்டது.

3. அதன் பிறகு மூன்றாவதாக இந்தியாவுக்கு வேண்டிய துணியை இந்திய மக்களே நூற்று நெய்து கட்டிக் கொள்வார்களேயானால் இங்கிலாந்து தேசம் வரட்சி அடைந்து தரித்திரம் பொங்கி இந்தியர்களிடம் சரணாகதி அடைந்து “சுயராஜ்ஜியம்” கொடுத்து விடுவார்கள் என்றும் சொல்லப்பட்டது.

4. நான்காவதாக கைராட்டினத்தால் நூல் நூற்பதானால் இந்தியாவில் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிற ஏழை மக்களுக்கு கதர் ஒரு ஜீவனோபாயமாக இருக்கும் என்றும் அதனால் அனேக ஏழைகளுக்கு வேலை கொடுக்கலாம் என்றும் சொல்லப்பட்டது.

மற்றும் கதர் வேலைத்திட்டமானது இந்தியாவுக்கு சுயராஜ்ஜியம் கிடைக்கும் வரைதான் அமுலில் இருக்குமே தவிர, சுயராஜ்ஜியம் கிடைத்த பிறகு ஏழைகளுக்கு வேறு தொழில்கள் ஏற்பாடு செய்வதன் மூலம் கதர் திட்டம் எடுத்து விடப்படும் என்றும் சொல்லப்பட்டது. இவைகள் தவிர இன்னும் எத்தனையோ காரணங்களை கதருக்காக சமயோசிதம் போல் ஆளுக்குத் தகுந்தபடி அவ்வப்போது சமாதானமாகச் சொல்லப்பட்டும் வந்தது. இவ்வளவும் சொன்னவைகள் போராமல் வீர வைணவர்கள் வீர சைவர்கள் என்பவர்கள் போல் வீர கதர்காரர்கள் தங்களுடைய அதி தீவிர கதர் பக்தியைக் காட்டுவதற்கு தக்கிளியினால் நூல் நூற்றுக்கொண்டு அதாவது பக்தர்கள் சிறிது ஒழிந்த நேரம் கிடைத்தாலும் சிவசிவ, ராம ராம, என்றும் உரு ஜபிப்பது போல் ஒழிந்த நேரம் எல்லாம் தக்களியினால் நூல் நூற்றுக் கொண்டே இருப்பதின் மூலம் செய்கையில் காட்டிவந்தார்கள். இன்றும் சிலர் அம்மாதிரி செய்தும் வருகிறார்கள். மற்றும் ராட்டினத்தின் மூலமாகவோ, தக்கிளியின் மூலமாகவோ நூல் நூற்பதை தேசிய தவமாகவும், அது ஒரு ஆத்மார்த்த தத்துவமாகவும் சொல்லப்பட்டது.

இவைகள் தவிர கதர் கட்டாதவர்கள் தேசிய சபையில் அங்கத்தினராயிருக்க அருகதை அற்றவர் என்றும், மற்றும் ராட்டினத்திலோ, தக்கிளியிலோ நூல் நூற்று தேசிய சபைக்கு நூலையே சந்தாவாகக் கொடுக்க வேண்டு மென்றும் சொல்லப்பட்டது.

இவ்வளவும் தவிர ஒரு முக்கிய விசேஷ மென்ன வென்றால் இந்த பத்து வருஷ காலத்தில் இந்த கதர் திட்டத்திற்காக கதர் இயக்கத்திற்கும் பிரசாரத்துக்கும் ஒரு கோடிக்கு மேற்பட்ட ரூபாய்கள் பொது ஜனங்களிடம் வசூல் செய்து செலவழிக்கப்பட்டு வந்திருப்பதாகும்.

இவ்வளவு சக்திகளையும், லட்சியங்களையும், தத்துவார்த்தங்களையும், மகிமைகளையும், பிரசாரச் செலவையும் கொண்ட கதர் நாளதுவரை பொருளாதாரத்திலோ அரசியலிலோ “ஆத்மார்த்தத்திலோ” தொழில் முறையிலோ ஏழை மக்களுக்கு-இந்தியப் பொருளாதாரத்துக்கு ஒரு அம்மன் காசு அளவு (அம்மன் காசு என்பது கால் அணாவுக்கு ஐந்துகொண்ட புதுக்கோட்டை நாணயம்) பலனாவது கொடுத்திருக்கிறதா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டியது அறிவுடையோருடையவும், நடு நிலைமையோருடையவும் கடமையாகும்.

கதருக்கு முதலில் கூறப்பட்ட காரணங்களாகிய யந்திரம் கூடாது என்பதானது இனி உச்சரிப்பதற்கே முடியாத காரியமாய்ப் போய்விட்டது. ஏனெனில் யந்திரம் என்பது அறிவு வளர்ச்சியுடையவும், முற்போக்கு முயற்சியினுடையவும் அறிகுறியாகும். அறிவு வளர்ச்சியும் முற்போக்கு முயர்ச்சியின் பயனும் கூடாது என்று சொல்ல இந்த இருபதாவது நூற்றாண்டில் பயித்தியக்கார ஆஸ்பத்திரியிலும் கூட மனிதன் இருக்க மாட்டான். அன்றியும் கதர் கர்த்தாவாகிய காந்தியாரே நூல் நூற்பதற்கு அதாவது குறைந்த நேரத்தில் அதிகமான நூல் உற்பத்தி செய்யத்தகுந்த ஒரு யந்திரம் (ராட்டினம்) கண்டு பிடித்துக் கொடுப்பவருக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுப்பதாக விளம்பரம் செய்து இரண்டு வருஷகாலமாய் முயற்சித்து வருகிறார். அந்தப் படி ஒரு ராட்டினம் ஒருவரால் கண்டு பிடிக்கப்பட்டால் அப்போது அதை யந்திரம் என்று சொல்லாமல் என்ன சொல்ல முடியும்? ஒரு சமயம் “சக்ராயுதம்” என்று காந்தியார் பெயரிடக்கூடும். (ஆரியம் (கேப்பை) அரைக்கும் கல்லுக்கும் யந்திரம் என்று தான் பெயர்) ஆகவே அந்தப் பருப்பு இனி வேகாது.

அதற்கு அடுத்த காரணங்களாகிய கதர் இங்கிலாந்தை பட்டினி போட்டு விடும் என்று சொல்லுவது. ஒரு தடவை ராமா என்றால் சகல பாவமும் போய்விடும் என்பது போன்ற சங்கதிக்குத்தான் சமமாகச் சொல்ல வேண்டுமே ஒழிய மற்றபடி அதில் யாதொரு உண்மையும் இருக்க இடமில்லை. மற்றும் மேலே கூறப்பட்ட மற்ற காரணங்களும் அதுபோலவே பரிகசிக்கத் தக்கதாகத்தான் ஆகிவிடும். நிற்க,



RangaRakes tamilnavarasam.com

மற்றபடி அவனவனுக்கு வேண்டியதை எல்லாம் அவனவனே செய்து கொள்ளக்கூடிய சக்தியை ஒவ்வொருவனும் அடைய வேண்டுமென்பதானது ஆதியில் மனித சமூகம் காடுகளிலும், மலைப்பொந்துகளிலும் காட்டு மிராண்டிகளாய், காட்டுமனிதர்களாய் திரிந்தவர்களுக்குத்தான் இது சாத்தியப்பட்டிருக்கக்கூடும். எப்படியெனில் ஒரு மனிதனுடைய தேவை காய், கிளங்கு தவிர வேறொன்றும் இல்லாதிருந்திருக்கும். ஆனால் இப்போதைய காட்டு மிராண்டிக்கும், காட்டு மனிதனுக்கும் கூட இது சாத்தியமாகக் கூடியதல்ல என்றே சொல்லுவோம்.

மேற்கண்ட கொள்கை மூடமக்கள் காதுக்கு இனிமையானதாகவும், ஞாயமானதாகவும் காணக்கூடும். கருத்துக்கு இதைவிட முட்டாள் தனமான கொள்கை வேறு ஒன்றுமில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் மனித சமூகம் கூடி வாழவேண்டுமானால் கூட்டுறவும் ஒருவருக்கொருவர் சேர்ந்து செய்து கொள்ள வேண்டிய அவசியமும் இல்லாமல் இருக்க முடியவே முடியாது.

## ஏழைகளுக்கு பலனுண்டா?

எனவே இப்போது சிறிது செல்வாக்கு இருக்கும் ஒரே ஒரு காரணமாகிய "கதர் ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கக்கூடியது" என்பதில் ஏதாவது உண்மையோ, நாணையமோ இருக்கின்றதா? என்று பார்ப்போம்.

கதரைப்பற்றிய நமது ஆராய்ச்சி அனுபவத்தில் நூல் நூற்பது ஒரு வெட்டி வேலை என்பதோடு, அது ஏழைகளை ஏமாற்றி நிரந்தரமாய் ஏழை வகுப்பு என்று ஒன்று இருந்து வருவதற்காகச் செய்யப்படும் சூட்சி என்றே முடிவேற்பட்டிருக்கிறது.

## ஏன் வெட்டி வேலை?

ஏன் ராட்டினத்தில் நூல் நூற்பதை வெட்டி வேலை என்கிறோம் என்றால் ராட்டினத்தால் ஆணோ, ஒரு பெண்ணோ ஒரு நாளைக்கு 10 மணி நேரம் நூல் நூற்பதால் ஒரு அணா அல்லது ஒன்றே காலணா கூலி கிடைக்கின்றது என்பது கதர் நிபுணர்கள் கணக்கு. இந்தப்படி கதர் நூலில் கூலி கிடைப்பதில்லை என்றும், நூல் நூற்பதின் மூலம் நூல் நூற்கும் கூலியும் போய் கையிலிருந்தும் பணம் கொஞ்சம் நஷ்டமாகின்றதென்றும் நாம் சொல்லுகின்றோம். எப்படியெனில் இதை சற்று வாசகர்கள் கவனமாகவும். நுட்ப அறிவு கொண்டும் கவனித்துப் பார்த்தால் தான் விளங்கிக் கொள்ளக்கூடும். இல்லாத பக்ஷம் "பார்ப்பான் வயிற்றில் கொட்டும் பண்டம்" மேல் லோகத்தில் ஆவி ரூபமாய் இருக்கிற "பெற்றோர்களுக்குப் போய்சேருகின்றது" என்கின்ற மாதிரியில் தான் "கதர் நூற்றால் ஒரு அணா கூலி கிடைக்கின்றது" என்கின்ற பொய் நம்பிக்கை உண்டாகிவிடும்.



## கதர் விளக்கம்

54, இஞ்சு அகலமுள்ள கதர் துணி 10 கஜம் கொண்டது $4^1/_2$ ராத்தல் இடை இருக்கும். இதில் சேதாரம், கஞ்சி, கனம் போனால் மீதி 4 ராத்தல் பஞ்சுக்குத் தான் நூற்கப்பட்ட கூலி கொடுக்கப் பட்டிருக்கும். அதாவது ராத்தல் ஒன்றுக்கு 5 அணா கூலி வீதம் 4 ராத்தலுக்கு 1-4-0 கூலி கொடுக்கப் பட்டிருக்கும்.

ஆனால், இந்த 10 கஜம் கதர் துணி என்ன விலைக்கு விற்கப் படுகின்றது என்று பார்த்தால் இன்று 5-10-0க்கு விற்கப்படுகின்றது. இந்த 54, இஞ்சு அகலம் 10 கஜம் துணி இந்திய மில் நூலால் நெய்யப்பட்ட துணி இன்று ஈரோடு பஜாரில் சலவை செய்தது கஜம் ஒன்றுக்கு 0-3-6 வீதம் (10 கஜத்துக்கு) 2-3-0க்கு தாராளமாய் கிடைக்கின்றது. இது கதரை விட எவ்வளவோ மடங்கு துணி மிகவும் நைசாயும், முருக்காயும், கெட்டியாயும் இருப்பதை யாரும் பார்க்கலாம்.

ஆகவே 2-3-0வுக்கு கிடைக்கும்படியான துணியைவிட மட்டமானதும், முருக்கும், கெட்டியும் இல்லாததுமான முரட்டுத் துணியை கதர் என்கின்ற காரணத்தால் 5-10-0 விலை போட்டு வாங்குதன் மூலம் 4ராத்தல் துணிக்கு 3-7-0 அதிக விலை கொடுத்து வாங்குகிறோம். இந்த 3-7-0 அதிகம் கொடுக்கும் பணத்திலிருந்து தான் நூல் நூற்றவர்களுக்கும் 1-4-0 கொடுக்கப் படுகின்றதே தவிர கதரின்-துணியின் பொருமானத்தில் இருந்து கொடுக்கக் கூடியதல்ல என்பதை புத்தியில் பதியவைக்க வேண்டுகிறோம்.

கதர் நூற்பதால் ஜனங்களுக்கு ஒரு ராத்தல் ஒன்றுக்கு நூற்பவர்களுக்குக் கொடுத்த கூலி போக மேல்கொண்டு 0-8-9 அணா வீதம் நஷ்டமேற்படுகிறது. இது தவிர 2 ராத்தல் பஞ்சில் நூற்கப்பட வேண்டிய துணிக்குப் பதிலாக 4 ராத்தல் பஞ்சு செலவாகின்றது. இதுவும் தவிர 6 மாதத்திற்கு வரக்கூடிய துணி 4 மாதத்திலேயே கிழிந்து விடுகின்றது. மற்றும் துணி முரடாகவும், உபயோகத்துக்கு அசவுகரியமாகவும் இருந்து வருகின்றது.

இதில் தான் ஏழைக் கூலிகளுக்கு தினம் 10 மணி வேலை செய்தால் 15 பை அதாவது 0-1-3 கூலி கிடைக்கிறது என்று சொல்லி ஏமாற்றுகின்றார்கள். இந்த ஏமாற்றத்தை அறிந்து கொள்ளாத மூடர்கள் தான் கதரால் ஏழைகளுக்கு லாபம் என்று சொல்லலாமே தவிர பொருளாதாரக்கணக்கும், புள்ளி விபரமும் தெரிந்தவன் கதரால் மக்களுக்கு ராத்தல் ஒன்றுக்கு 0-13-9 வீதம் பொது ஜனங்கள் பணம் நாசமாகின்றது என்றும், ஒன்றுக்கு இரண்டாக பஞ்சு வீணாகின்றது என்றும்தான் சொல்லித் தீரவேண்டும். இதிலிருந்து நமக்கு தோன்றுவ தென்னவென்றால் 'ஏழைமக்களை' 10 மணி நேரம் உழைக்க செய்து வேலை வாங்கிக் கொண்டு அவர்களுக்கு 0-1-3 அணா



RangaRakes tamilnavarasam.com

கூலி கொடுப்பதை விட அவர்களை சும்மா உட்காரவைத்து சாப்பாடு போடுவதானால் மேல்கண்டபடி பொதுஜனங்களை ஏமாற்றி நஷ்டமடையச் செய்யும் பணத்தில் இருந்து இன்னம் இரண்டு பங்கு ஜனங்களுக்கு சாப்பாடு போடலாம் என்று தைரியமாய்ச் சொல்லலாம் என்பதேயாகும்.

அன்றியும் கதர் இலாகாவிலோ, வியாபாரத்திலோ கலந்திருப்ப வர்கள் புண்ணிய க்ஷேத்திரங்களில் நாமம், விபூதி, உருத்திராட்சம், துளசி மணி விற்பதில் தங்கள் பக்தியைக் காட்டுவது போல் கதர் தொழிலில் ஈடு பட்டு வயிறு வளர்ப்பதன் மூலமும் பணம் சம்பாதிப்பதன் மூலமும் தங்கள் பக்தியைக் காட்டுகிறார்கள். இதைக் கண்டு பாமர மக்கள் ஏமாந்து பின் பற்றி வருகிறார்கள்.

காந்தியாரின் தத்துவார்த்தமும், காங்கிரசு தயவும், 10 லக்ஷக்கணக்கான ரூ. செலவு கொண்ட காங்கிரஸ் தொண்டர்கள் பிரசாரமும் இல்லாவிட்டால் கதர் விற்பனையாகி "ஏழைகளுக்குப் பயன்படுமா" என்பதை யோசித்துப் பாருங்கள். இந்தப்படி ஒருவர் தயவில் பிழைப்பது தானா "ஏழைகள்" பிழைக்கும் வழி என்றும் இது எத்தனை நாளைக்கு நடக்கும் என்றும் கேட்கின்றோம்.

ஆகவே இந்திய மக்களின் பொது அறிவையும் தேசிய ஞானத்தை யும் மதிக்க இந்தக் கதர்பக்தி ஒன்றே போதுமானது.

இந்திய தேசிய தலைவர் என்பவர்களின் நாணையத்தையும், யோக்கியப் பொருப்பையும் கவனிக்கவும் இந்த கதர் பிரசாரம் ஒன்றே போதுமானது. இந்திய தேச பக்தர்கள், தேசீய வாதிகள், தேசத்தொண்டர்கள் ஆகியவர்களின் பகுத்தறிவுக்கும், விடுதலை ஞானத்திற்கும் இந்தக் கதர் பிரசாரமே போதுமானது.

இந்திய பாமரமக்களின் மத சம்மந்தமான அறிவுக்கு அவர்களது சடங்கு ஆச்சாரம், ராமாயணம், பாரதம், பெரியபுராணம். திருவிளையாடல் புராணம் ஆகிய விஷயத்தில் உள்ள நம்பிக்கை முதலியவை எப்படி அளவு கருவியாய் இருக்கின்றதோ அது போல்தான் இந்திய மக்களது பொருளாதார ஞானத்துக்கும், அரசியல் ஞானத்துக்கும் ஏழைகள் விடு தலைக்கும் அவர் களது கதர் தத்துவமே அளவு கருவியாய் இருந்து வரு கின்றது.

கடைசியாக ஏழை மக்களை காப்பாற்றுவது என்பது ஒரு மனிதனி டத்தில் இருந்து 3-7-0வை ஏமாற்றிப் பறித்து ஒரு மனிதனுக்கு 1-4-0 வை கொடுப்பது அல்ல என்றும், ஏழைகள் யார்? அவர்கள் ஏன் ஏழைகளாய் இருக்கிறார்கள்? ஏழைகள் என்கின்ற மக்களே இல்லாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்? என்பதை கவனித்து அதற்கு ஏற்றபடி நடப்பதுதான் நாணையமான காரியமாகுமே ஒழிய இந்தமாதிரியான பித்தலாட்டங்களால்



ஒருநாளும் ஏழ்மைத் தன்மை நீங்கிவிடா தென்றும் உறுதியாய்ச் சொல்லுகிறோம்.

உதாரணமாக இந்த 10 வருஷ காலமாய் கதர் நூல் நூற்றவர்களுக்கு கொடுத்த கூலியைக் கணக்குப் பார்த்தால் கதர் பிரசாரத்துக்குச் செலவழிக்கப் பட்ட பணத்தைவிட கொஞ்சமாகத் தான் இருக்கும். ஆனால் அவர்கள் பெயரைச் சொல்லி பொது ஜனங்களை ஏமாற்றி அடைந்த பணம் கதர் நூற்ற "ஏழைகளுக்கு" கொடுத்ததைவிட 3 மடங்கு அதிகமாக இருக்கும் என்று தைரியமாய்ச் சொல்லுவோம்.

ஆகவே இனிமேலாவது கதர் பக்தர்கள் தங்களுடைய ஆவேசத் தில் சுயமரியாதைக்காரர்களை வையாமலும், பழிசுமத்தாமலும் வேறு வழியில் தங்கள் வயிற்றுப் பிழைப்பைப் பார்த்துக் கொண்டு இருப்பார்கள் என்று நம்புகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 16.07.1933**



RangaRakes tamilnavarasam.com

# "குடி அரசை" ஒழிக்க பண வசூலாம்

"குடி அரசை" எதிர்த்துப் போராட கத்தோலிக்கர்கள் நிதி என்ற பெரிய தலைப்பின் கீழ் "கத்தோலிக் லீடர்" என்ற ஆங்கில பத்திரிகையில் ஒரு முறை யீடு காணப்படுகிறது.

கத்தோலிக்க கிறிஸ்தவ பாதிரிகள் சு.ம. இயக்கத்தின் மீதும், 'குடி அரசின்' மீதும், ஆத்திரங்கொண்டு, அவைகளை அழிப்பது என்கிற முடிவு கொண்டு நிதி வசூல் செய்து வருகிறார்கள். அவர்களின் வேண்டுகோளின் பிரகாரமே இது வரையிலும் ரூ. 250க்கு மேல் பணம் சேர்த்திருப்பதாகவும் நமக்குத் தெரிய வருகிறது. சபாஷ்! கத்தோலிக்கர்களே!! மெச்சினோம் புத்திசாலித்தனத்தை!!!

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 16.07.1933**





## குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், லெனினும்.
விலை அணா 0—4—0

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.
இதன் விலை அணா. 0—8—0.

இராமாயண ஆராய்ச்சி.
முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.
இதன் விலை அணா. 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.
இதன் விலை அணா 0—2—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.
இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?
இதன் விலை அணா 0—2—0

அகத்தியர் ஆராய்ச்சி.
இதன் விலை அணா 0—2—0

ரஷ்யாவைப் பற்றி பெர்னாட்ஷா.
விலை அணா 0—1

கடவுளை நிந்திக்கும் கயவர்கள்
இதன் விலை அணா 0

கடவுளும், பிரபஞ்சமும்.
இதன் விலை அணா 0—1

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

இராமசாமியின் இலங்கை உபன்ய

இந்தியாவின் குறைபாடுகள்.

Crux of the Indian Problem

இராமலிங்க சுவாமிகள் பாடல் திர

சுயமரியாதைப்பாடல்.
விலை அணா 0—2—

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 0—2

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

தீராத வெள்ளை நோய்க்கு உத்திரவாதம்.

கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள் பூவிழல்!!

"தமிழன்"

குஷ்டம்

சுயமரியாதை தத்துவ இதங்கள்.

செவிடு!!

Post Box No-11413 Calcutta- (k)

"Sri" Works Calcutta.

'புரட்சி' ஒங்குக பொது உடமை தோணுக!!"



RangaRakes tamilnavarasam.com

## "CAPITAL"
## ("மூலதனம்")

பொது உடமைக் கொள்கைகளைப் பற்றிய நூல்களில் எல்லாம் தலை சிறந்து விளங்குவதும் அது சம்பந்தமான எவ்வித சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் சமாதானம் காணக் கூடியதுமான ஒரு புத்தகம் எது என்றால் காரல் மார்க்ஸ் அவர்களால் சுமார் 60, 70 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட (Capital) கேப்பிட்டல் என்கின்ற ஆங்கிலப் பெயருடைய புத்தகமே யாகும்.

இந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு முன் இதற்கு வேண்டிய விஷயங்களைத் தொகுக்கவும், மேல் ஆதாரங்களைக் கண்டு பிடிக்கவும் தோழர் காரல் மார்க்ஸ் அவர்கள் 1485 புஸ்தகங்களை வாசித்துப் பார்த்து விபரம் தெரிந்து கொண்ட பிறகு அந்நூலை எழுதி இருக்கிறார்.

ஜெர்மனியில் கென்சிங்டன் என்னுமிடத்திலுள்ள ஒரு கட்டிடத்தின் ஒரு அரையில் இருந்து கொண்டு இந்த புத்தகம் எழுதி இருக்கிறார்.

கொஞ்ச காலத்துக்கு முன் மாஸ்கோவில் காரல் மார்க்ஸ் இறந்த 51 வது வருடப் பூர்த்திவிழாக் கொண்டாடும்போது மேல்கண்ட கட்டிட அரை போல் மாஸ்கோவில் ஒரு அரை கட்டி அதில் மேற்குறிப்பிட்ட 1485 புத்தகங்களையும் வைத்து அதை ஒரு புத்தகசாலை மாதிரி செய்து யாவரும் வந்து படிப்பதற்கு அனுகூலமாகச் செய்து வைத்திருக்கிறார்கள். இந்தக் கட்டிடத்துக்கு "காரல் மார்க்ஸ் மனை" (மார்க்ஸ் ஹவுஸ்) என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இன்றும் யார் வேண்டுமானாலும் போய் பார்க்கலாம்.

**குடி அரசு - செய்தி விளக்கக்குறிப்பு - 23.07.1933**



## காந்தீயத்தின் கதி

தோழர் காந்தியவர்கள் அரசியலில் தலையிட்டு தலைமை ஸ்தானத்தை அடைந்ததற்கு முக்கிய காரணம் ஒருபுறம் அவர் போட்டுக்கொண்ட மத சம்மந்தமான வேஷமும், கடவுள் சம்மந்தமான பேச்சும் மற்றும் சத்தியம், அகிம்சை, சத்தியாக்கிரகம், ஆத்ம சுத்தம், ஆத்ம சக்தி, பரித்தியாகம், தவம் முதலிய வார்த்தைகளும், மற்றொரு புறம் அவரது சிஷ்யர்கள் அரசியலின் பேராலும், தேசீயத்தின் பேராலும், தங்கள் வாழ்நாளைக் கழிக்க ஏற்பாடு செய்துகொண்ட தொண்டர்கள், தேசீய வாதிகள், பத்திராதிபர்கள் ஆகிய கூட்டத்தார்கள் காந்தியாரைப்பற்றி அவர் ஒரு ரிஷி என்றும், முனிவர் என்றும், கிறிஸ்து என்றும், நபி என்றும் மகாத்மா என்றும் விஷ்ணுவின் அவதாரமென்றும், சொல்லி பிரசாரம் செய்ததும், இனி ஒருபுறம் காந்தியைக் கடவுளாகவும், விஷ்ணுவாகவும் மற்றும் பலவிதமாகவும் சித்திரங்கள் எழுதி படம் போட்டு விளம்பரம் செய்ததும், மற்றும் லௌகீகத்திலும், வைதீகத்திலும் விளம்பரம் பெறவும் சுயகாரிய சித்தி பெறவும் ஆசைப்பட்ட பணக்காரர்களும், படித்தவர்களும் முறையே லக்ஷக்கணக்காகத் திரவிய சகாயமும் பிரசாரமும் செய்து வந்ததுமாகிய காரியங்களுமாக எல்லாம் சேர்ந்து அவரை அரசியல் சர்வாதிகாரியாக ஆக்கிவிட்டது.

இதனால் பாமர ஜனங்கள் தங்களது பகுத்தறிவை சிறிதாவது உபயோகப்படுத்தி காந்தீயத்தை ஆலோசித்துப் பார்க்க கூடாமற் போய் விட்டது. எப்படியெனில் கடவுள் பக்தி, மத பக்தி ஆகியவைகளுக்கு எப்படி ஒரு மனிதன் அடிமைப்பட்டு 'கடவுள்' அற்புதம் மத அற்புதம் ஆகிய பலவைகளைக் கண் மூடித்தனமாய் நம்புகிறானோ அது போலவே காந்தீயத்துக்கும் பகுத்தறிவு பிரயோகமே சிறிது கூட இல்லாமல் செய்து விட்டது.

இந்தியாவின் கல்வியற்ற தன்மையும், பாமரத் தன்மையும், மதக் கற்பனையும் எந்த மனிதனை வேண்டுமானாலும் கடவுள் தன்மையுடையவனாகவும் மனித சக்திக்கு மீறின மகாத்மாவாகவும் ஆக்குவதற்கு மிக அனுகூலமாகவே இருந்து வருகின்றன. அன்றியும் எந்த விஷயத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு அதற்கு தெய்வீகப் பூச்சோ, மதப்



RangaRakes tamilnavarasam.com

பூச்சோ சிறிது கொடுத்து விட்டால் சுலபத்தில் யாரையும் நம்பும்படி செய்து விடலாம்.

உதாரணமாக இதுவரை எத்தனை சாதுக்கள், சித்தர்கள், ரிஷிகள், மகாத்மாக்கள், துறவிகள், ஞானிகள் முதலியவர்கள் ஏற்பட்டு எவ்வளவோ அபூர்வ காரியங்கள் செய்ததாகவும், பார்த்ததாகவும் இன்றும் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றன என்பதைக் கவனித்தால் உண்மை விளங்கிவிடும். ஆகையால் இந்திய ஜனங்களினிடையில் காந்தியார் அரசியல் தலைமை ஸ்தானம் பெற்றதில் அதிசயமொன்று மிருக்க ஞாயமில்லை.

தோழர் பெசண்டம்மையாரும் தோழர் காந்தியைப் போலவே பகவத்கீதைப் பிரசாரத்தாலும் கடவுள்களிடத்திலும், மகாத்மாக்களிடத்திலும் தான் தினம் பேசுவதாகவும், முன் ஜென்மம், பின் ஜென்மம் முதலியவைகள் எல்லாம் தனக்குத் தெரிகின்றதாகவும் சொன்னதாலும் மற்றும் என்னென்னமோ சொல்லிக் கொண்டதாலும், அந்த அம்மாளும் அரசியலில் தலைமை வகிக்கப்பெற்று கொஞ்சகாலம் சர்வாதிகாரியாக இருந்து இந்தியா மாத்திரமல்லாமல் ஒரு காலத்தில் உலக முழுவதுமே விளம்பரம் பெற்றிருந்ததைப் பார்த்தால் காந்தீயத்திற்கும், பெசண்டீயத்திற்கும் ஒற்றுமை இருப்பதைக் காணலாம். ஆதலால் காந்தியாருக்கு இருந்த செல்வாக்குக்கும், மதிப்புக்கும் அவரை பின்பற்ற ஆட்கள் இருந்துவந்ததற்கும், யாருக்கும் எவ்வித தத்துவார்த்தமும், தனிக்காரணமும் சொல்லவேண்டியதில்லை.

ஆனால் அது இன்று என்ன கெதியில் இருக்கின்றது என்பதுதான் இந்தக் கட்டுரையின் முக்கிய பாகமாகும்.

பெசண்டீயத்தின் கதியே காந்தீயமும் அடைந்து வருகின்றது. காந்தியார் உலகிலுள்ள மற்ற இயக்கங்களையும், மதங்களையும், மத ஆதாரங்களை யும் ஒரு தட்டில்வைத்து தானும் பகவத்கீதையும், இந்துமதமும் ஒரு தட்டில் இருந்துகொண்டு ஞானம்பேசி வந்ததற்கும், அதற்கு இந்தியா இடம் கொடுத்து வந்ததற்கும் காரணம் என்னவென்றால் எடுத்ததற்கெல்லாம் **சத்தியம், சத்தியாக்கிரகம், அஹிம்சை, ஆத்மசுத்தம், ஆத்மசக்தி, பரித்தியாகம், கடவுள் கட்டளை** ஆகிய அர்த்தமற்ற மொழிகளும், தன் இஷ்டப்படி வியாக்கியானம் செய்வதற்கு இடமுள்ளதும், தந்திரமானதுமான வார்த்தைகளை உபயோகப் படுத்தி வந்ததுமாகும்.

இதுவரையில் அவைகள் எப்படி இருந்தபோதிலும்-இருந்ததாகச் சொல்லப் பட்டபோதிலும் இன்று அக்காந்தீயத்தின் நிலை எப்படி இருக்கின்றது என்று பார்க்க வேண்டியது அறிவுள்ள மனிதனின் கடமையாகும்.

தோழர் காந்தியாரது சத்தியத்திற்கும், சத்தியாக்கிரகத்திற்கும், ஏதாவது யோக்கியதை ஏற்பட்டதா? அல்லது அவரது ஆத்ம சுத்தத்திற்கும், தியாகத்திற்கும், அஹிம்சைக்கும், கடவுள் செயலுக்கும் ஏதாவது பயன் உண்டாயிற்றா? என்பனபோன்ற காரியங்களைச் சற்று கவனித்துப் பார்ப்போம்.



தோழர் காந்தியார் யாரிடம் இருந்து பயன் பெறுவதற்காக சத்தியமாய் நடந்து சத்தியாக்கிரகம் செய்தாரோ அவர்களிடமிருந்து ஒரு காதொடிந்த ஊசியை பெறுவதற்குக்கூட இவரது சத்தியமும், சத்தியாக்கிரகமும் பயன் படாமல் போனது இன்று யாவருக்கும் தெரிந்த விஷயம். இவரது சத்தியாக்கிரகத்தின் பயன் எல்லாம் “உடும்பு வேண்டாம் கையை விட்டால்போதும்” என்கின்ற பழமொழிப்படி சத்தியாக்கிரகத்தின் பயனாய் சிறையிலடைக்கப் பட்டவர்களை விடுவிப்பதற்காக சர்க்காரோடு ராஜிபேசி இனிமேல் சத்தியாக்கிரகம் அல்லது சட்டம் மறுப்பு செய்வதில்லை என்று சொல்லி ஒப்பந்தம் பேசி சத்தியாக்கிரகிகளை விடுதலை செய்ய வேண்டியிருந்ததே யாகும். மறுபடியும் செய்த சத்தியாக்கிரகமானது ‘சத்தியாக்கிரகி வெளிப் படையாய் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டும். இல்லா விட்டால் சிறையி லிருக்க வேண்டும்” என்கின்ற நிலையில் கொண்டுவந்து விட்டுவிட்டது.

ஆத்ம சுத்திக்காகவும், ஆத்ம சக்திக்காகவும் செய்த காரியமெல்லாம் ஆத்ம சுத்தியானவர்களையும், ஆத்ம சக்தி உடையவர்களையும் கண்ணினால் பார்ப்பதற்கும் பேட்டி கொடுப்பதற்கும் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்பதற்கும் கூட வில்லிங்டன் பிரபுவால் அருகதை அற்றவர்களாகச் செய்து விடப்பட்டது. இவைமாத்திரமல்லாமல் நம்பிக்கை அற்றவர்களாவும் வாக்குத் தத்தப்படி நடவாதவர்களாகவும் நம்பிக்கை துரோகம் செய்தவர்களாகவும், சர்க்கார் சொல்லும் படி செய்துவிட்டது. இனி என்ன செய்யவேண்டியது பாக்கி இருக்கிறது என்பது நமக்கு புலப்பட வில்லை.

நிற்க சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு முதலாகிய காரியங்கள், அதில் ஈடுபட்ட மக்களை எல்லாம் தோல்வியடையச் செய்துவிட்டதென்றும் இனி அத்தகைய விஷயங்களை கைவிட்டுவிட்டு வேறு மார்க்கம் தேடவேண்டும் என்றும், தேசீய வாதிகளும், தேசீயப்பத்திரிக்கைகளுமே கூப்பாடு போட ஆரம்பித்து விட்டன.

மேலும் சத்தியாக்கிரகத்தினுடையவும், சட்டம் மறுப்பினுடையவும், உயிர், கடைசி மூச்சில் இருக்கின்றதென்றும், அது எப்படியாவது காந்தியார் தோல்வி அடையவில்லை யென்றும், ராஜி செய்து கொண்டாரென்றும் பொதுமக்கள் நினைக்கும்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதுவே போதும் என்கின்ற ஒரு போலி அபிமானத்திற்காகக் காத்திருக்கிறது என்றும், அப்படிக் காத்திருப்பது சுயமரியாதைக்கும், சத்தியத்துக்கும் ஏற்றதல்ல வென்றும், சத்தியாக்கிரகம் (தோற்றுவிட்டது) செத்துப்போய்விட்டது என்பதை தைரியமாயும், நாணையமாயும் ஒப்புக்கொள்ளவேண்டும்



RangaRakes tamilnavarasam.com

என்றும், தேசீயவாதிகளும், தேசீயப் பத்திரிகைகளுமே கூக்குரல் இட ஆரம்பித்துவிட்டன.

ஆகவே இதிலிருந்து ஆத்ம சுத்தியும், சத்தியாக்கிரமும், சத்தியமும் இதுவரை யாதொரு பலனையும் கொடுக்காமல் இருந்து வந்திருப்பதை யாரும் அறியலாம்,

1921-ம் வருஷ முதல் கள்ளுக்கடை சத்தியாக்கிரகம், அன்னிய ஜவுளிக்கடை சத்தியாக்கிரகம் பள்ளிக்கூட சத்தியாக்கிரகம், உப்புக் காச்சும் சத்தியாக்கிரகம், கோவில் சத்தியாக்கிரகம், முதலிய அனேக சத்தியாக் கிரகங்கள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. அஹிம்சையின் பேரால் அனேகர் அடி, உதை முதலியவைகள் அடைந்தும் வந்தார்கள், ஆத்ம சுத்திக்காகவும், இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகவும், சத்தியாக்கிரகிகளுக்குள் "தப்பான" காரியங்கள் நடந்து விட்டதற்காகவும்.

மற்றும் பல காரியங்களுக்காகவும் பல பட்டினி விரதங்கள் இருந்து மாய் விட்டன. இவ்வளவும் போதாமல் பல தடவைகளில் காந்தியார் கடவுளிடம் பேசியுமாய் விட்டது. அசரீரி மூலம் காந்தியாருக்குப் பல கட்டளை இட்டும் ஆகிவிட்டன. இவ்வளவும் போதாமல் தினம் பிரார்த் தனைகளும், ஜபங்களும், தபசுகளும், மௌன விரதபிரார்த்தனைகளும் முறை தவராமல் நடந்தும் வருகின்றன. இவைகள் எல்லாம் எதற்காக? யாருடைய நன்மைக் காக வெனச் செய்யப்படுகின்றனவோ, அவர்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டது? அல்லது யாரிடமிருந்து பெறுவதற்காக, யாருக்கு நல்ல புத்தி வருவதற் காகச் செய்யப்பட்டதோ அவர்களையாவது என்ன செய்து விட்டது? என்று பார்த்தால் ஒன்றும் இல்லையென்பதோடு தோல்வியையும், இழிவையும் கொண்டு வந்து விட்டது என்றும் சொல்லித் தீரவேண்டியது அவசியமாயிருக்கிறது. இதற்கு காந்தியாராகட்டும் மற்றவர்கள் தானாகட்டும் என்ன காரணம் சொல்லக்கூடும்? ஒன்று சத்தியாக் கிரகத்துக்கும் சத்தியத்துக்கும் ஆத்ம சக்திக்கும் கோரிய பலனைக் கொடுக்க கூடிய சக்தி இல்லை என்று சொல்லவேண்டும்; அல்லது காந்தியாரின் சத்தியத்திலோ, சத்தியாக்கிரகத் திலோ, ஆத்ம சக்தியிலோ, தியாகத்திலோ, கடவுளைக்கண்டதிலோ உண்மையில்லை என்றாவது சொல்லியாக வேண்டும்.

பொது ஜனங்கள் பாமரர்களாயிருப்பதாலும், படித்தவர்கள் என்று சொல்லக்கூடியவர்களும், பணக்காரர்கள் என்று சொல்லப்படுவர்களும் தேசிய பத்திரிகை பிழைப்புக்காரர்களும் அயோக்கியர்களாகவும், சுயநலக் காரர்களாகவும் பொறுப்பற்றவர்களாகவும் இருப்பதால் இம்மாதிரி பிரச்சினைகளுக்கே இடமில்லாமல் ஜனங்களை ஏமாற்றி விடக்கூடும் என்றாலும் பகுத்தறிவுக்காரர்களுக்கு இவ்விஷயங்கள் தெரியாமல் இருக் கும்படி செய்துவிட இனி யாராலும் முடியாது.



இந்நிலையில் ஒரு விஷயத்தை மாத்திரம் நாம் ஒப்புக் கொள்ள பின் வாங்கவில்லை. அதென்னவென்றால் தோழர் காந்தியுடையவும், அவரு டைய பிரதம சிஷ்யர்களுடையவும் அந்தரங்க எண்ணம் ஒரு அளவுக்குக் கைகூடி வந்திருக்கின்றது என்பதாகும்.

எப்படியெனில், தோழர் காந்தியின் முயற்சியெல்லாம் பார்ப்பனீய மும், பணக்காரத்தன்மையும் இந்தியாவில் நிலைத்திருக்க வேண்டும் என்பதே யாகும். இந்த எண்ணமே தான் அவருடைய பார்ப்பன-பணக்கார "சிஷ்யர் கள்" (நண்பர்கள்) உடையதும் ஆகும். இந்த எண்ணம் அவரிடம் இருப்ப தற்கு ருஜுவு என்னவென்றால் (பணக்காரர்கள் பிழைக்க) ஏழை களுக்கு ராட்டினம் கண்டுபிடித்திருப்பதும் பார்ப்பனர்கள் பிழைக்க பகவத் கீதை வருணாச்சிரமம், ஜாதி முறை, தொழில் முறை ஆகியவைகளைக் காப்பாற்றுவதாக சுயராஜ்யத்திட்ட பிரஜா உரிமையில் ஏற்பாடு செய்திருப் பதும், வட்ட மேஜையில் இந்திய சமஸ்தானாதிபதிகளின் ஆட்சிகளையும் ஜாமீன்தாரர்கள் முதலியவர்களின் நிலைமையும் ஒப்புக்கொண்டதுமே போதிய காரணங்களாகும். நாம் சொல்வதை நம்புவதற்கு இவ்வளவும் வாசகர்களுக்கு போதிய திருப்தியைக் கொடுக்கவில்லை என்றால் மற்றும் ஒரு ஆதாரம் எடுத்துக் காட்டுகிறோம். அதென்னவென்றால் உப்பு சத்தியாக்கிரகம் ஆரம்பித்த காலத்தில் தோழர் காந்தி அவர்கள் தான் எதற் காக உப்பு சத்தியாக்கிரகம் ஆரம்பித்தார் என்று காரணம் சொல்லும் போது, "நான் இந்த இயக்கத்தை ஆரம்பிக்கவில்லையானால் தேசத்தில் பொது வுடமைக் கிளர்ச்சி ஏற்பட்டு விடும்" என்று ஒரு காரணம் காட்டியிருக் கிறார். (இதனால் தான் பணக்காரர்கள் காந்தீயத்திற்கு தாராளமாய் பணம் உதவ முன்வர வேண்டியதாயிற்று)

அன்றியும் தாழ்த்தப்பட்டவர்களின் தனிமுறையை ஒழித்து ஹரிஜன இயக்கம் என்று ஒன்று ஆரம்பித்து அதற்கும் பிர்லா போன்ற முதலாளி கூட்டத்தில் இருந்து 10 லக்ஷக்கணக்கான ரூபாய் பெற்று செலவு செய்து தீண்டப்படாதவர்கள் என்பவர்களிலும் சிலரை விலைக்கு வாங்கி கோவில் பிரவேசக் கிளர்ச்சி, புராணப்பிரசாரம் முதலியவைகள் செய்ததன் பலனாய் இந்து சமூகம் என்பதில் பிறருக்கு பாடுபட்டு உழைப்பதற்கு என்று ஒரு பெரிய கூட்டத்தை என்றும் நிலைக்கவைக்க வேண்டிய காரியங்கள் செய்யப்பட்டாய் விட்டது. இந்தக் காரணங்களால் தான் தோழர் காந்தியா ரின் அந்தரங்க எண்ணம் ஒரு விதத்தில் பலித்து விட்டது என்று சொன் னோம். இதே எண்ணம் கொண்ட அவரது அத்தியந்த நண்பர்களின் எண்ணமும் ஒருவாறு பலித்து விட்டது.

மற்றபடி தோழர் காந்தியவர்கள் எதிர்பார்ப்பதாக வெளிப்படையாய் சொன்ன காரியங்கள் தோல்வியேற்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.



RangaRakes tamilnavarasam.com

நம்மைப் பொருத்த வரையில் உப்பு சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பித்த காலத்திலேயே இதில் நாணையம் இல்லை என்றும், இது கடைசியில் பொஸ்ஸென்றுபோய் விடுமென்றும், இதனால் மக்களுக்கு வீண் தொல்லையே விளையுமென்றும் அதோடு அனேக நல்ல காரியங்கள் செய்யப்படுவதையும் இந்த கிளர்ச்சி தடுத்து விடுமென்றும் பல தலையங்கங்கள் எழுதி யும், பல இடங்களில் பேசியும் வந்திருக்கிறோம். இதற்காக தேசியப் பிழைப் புக்காரரிடம் வசவும், பழிப்பும் அடைந்தும் வந்திருக்கிறோம். ஆனால் முடிவில் நாம் எதிர்ப்பார்த்ததற்கு மேலாகவே காந்தீயத்தின் கதி ஏற்பட்டு விட்டது.

இப்போது காந்தீயத்தின் கவலை யெல்லாம் காந்தீயம் தோற்று விட்டது என்பதில் 100க்கு 95 மக்களுக்கு ஆட்சேபனை இல்லை. என்றாலும் அது தோற்றுவிட்டது என்று ஜனங்கள் சொல்லாமல் இருப்பதற்கு ஒரு மார்க்கம் கண்டு பிடிக்க வேண்டும் என்பதும் வைசிராய் ராஜிக்கு வர மாட்டேன் என்கிறார் என்ற பெயரை ஏற்படுத்தி விட்டால் சர்க்கார் மீது ஜனங்களுக்கு கொஞ்சம் வெறுப்பு ஏற்பட்டால் அதை உபயோகித்து ஏதாவது செய்யலாமா என்று யோசிப்பதுமாகும். இதை சில காந்தி பக்தர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்னலாம். ஆனால் அவர்களை ஒன்று கேட்கின்றோம். அதாவது காந்தீயம் தோல்வி அடையவில்லை, ஆனாலும் தேசியப் பத்திரிக்கைகள் எழுதுவது போல் காந்தீயமானது நாட்டிற்கு பயன் படாமல் போய் விட்டது என்பதையாவது ஒப்புக் கொள்ளுகின்றார்களா? இல்லையா? என்பதேயாகும். அதையும் ஒரு சமயம் காந்தி பக்தர்கள் ஒப்புக் கொள்ள வில்லையானால் அவர்களை மற்றொரு கேள்வி கேட்கின்றோம். அதென்ன வென்றால்,

ஒரு வாதியானவன் ஒரு பிரதிவாதியின் மீது தாவா போட்டு விசாரணை முடிந்த பிறகு பிரதிவாதியிடம் ராஜியாய் போகிறேன் என்று கேட்கப் போனால் இதற்கு என்ன அருத்தம்? வாதிக்கு விசாரணையின் போக்கிலிருந்து தன் கேசு ஜெயிக்காது என்றும், தோற்றுவிடும் என்றும் தோன்றிவிட்ட காரணமா? அல்லது வாதியின் கண்ணியமும் பெருந் தன்மையும் காரணமா? என்று கேட்கின்றோம்.

நிற்க, இப்போது காங்கிரசுக்காரர்களிலேயே அனேகம் பேர் காந்தீயம் தோற்றுவிட்ட தென்றும், சத்தியாக்கிரகமும், சட்ட மறுப்பும் செத்து விட்ட தென்றும், ஆதலால் இனி சட்டசபைக்கு போக வேண்டும் என்றும் தாராளமாய் சொல்ல முன் வந்து விட்டார்கள். எல்லா தேசீயப் பத்திரிக்கைகளும் அப்படியே எழுதத் துணிந்தும் விட்டன. தோழர். காந்தி வைஸ்ராயைப் பார்க்க அனுமதி கேட்பது கூட இந்திய தேசீய காங்கிரசுக்கு சுயமரியாதையற்ற தன்மையை உண்டாக்கி விட்டதென்றும் எழுதிவிட்டன.



இவற்றுள் ஒரு பிரபல தேசீய பத்திரிகையானது "காந்தியார் தன்னுடைய மரியாதையைக் காப்பாற்றுவதற்காக காங்கிரசின் மரியாதையை விற்று விட்டார்" என்றுங்கூட எழுதிவிட்டது.

காந்தியாரைப்பற்றியோ, சட்ட மறுப்பைப் பற்றியோ குறைகூற இனி சொல்ல வேண்டிய பாக்கி ஒன்றும் இல்லாமல் எல்லாம் சொல்லி ஆய் விட்டது. நமக்கு இவைகள் எதுவும் புதுமையாக தோன்றவில்லை. ஏனெனில் இதெல்லாம் நாம் முன் சொன்ன மாதிரி ஆரம்பத்திலேயே எதிர்பார்த்த தாதலால் அதிசய மொன்றும் இல்லை. கடைசியாக ஒன்று கேட்டு விட்டு இதை முடித்து விடுகிறோம். காங்கிரசுத் தொண்டர்கள் என்பவர்கள் இந்த அளவோடாவது ஒரு பாடம் கற்றதாக முடிவு செய்து கொண்டு இனி அப்படிப் பட்ட சூட்சிக் காரியங்களிலும், பயனற்ற காரியங்களிலும் சம்பந்தப்படாமல் தேசம், ஜாதி, மதம், ஏழை, பணக்காரன், எஜமான் அடிமை என்பனவாகிய வித்தியாசமில்லாத உண்மையான சமதர்மத்துக்கு உழைக்க வருவார்களா? அல்லது செத்த பாம்பை எடுத்து ஆட்டப்போகும் காந்தீயத் திருவிளை யாடலில் மறுபடியும் போய் சேரப்போகின்றார்களா? என்பதே யாகும்.

**குடி அரசு – தலையங்கம் – 23.07.1933**



RangaRakes tamilnavarasam.com

# கத்தோலிக்க மதஸ்தர்கள் யோக்கியதை

அமெரிக்க கத்தோலிக்க தினசரியிலிருந்து கீழ்கண்ட செய்தியை நியூயார்க் உண்மை நாடுவோர் (Truth seeker) பத்திரிகை பிரசுரித்திருக்கிறது. அதாவது சிங்சிங் ஜெயிலில் உள்ள பல திறப்பட்ட மதங்களைச் சார்ந்த கைதிகளின் விபரம் கீழ் வருமாறு:-

| | |
|---|---|
| கத்தோலிக்கர்கள் | 855 |
| பிராட்டடஸ்டண்ட் | 518 |
| யூதர்கள் | 177 |
| கிறிஸ்தவ விஞ்ஞானிகள் | 20 |
| மகமதியர்கள் | 2 |
| புத்தர்கள் | 1 |
| மதமற்றவர்கள் | 8 |
| | 1,581 |

சிங்சிங் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களில் கால்வாசிப் பேர்களே கத்தோலிக்கர்களாக இருந்தும், நாட்டில் குற்றம் செய்து சிறைக்காவலில் அடைபட்டிருக்கும் (அ) யோக்கியர்களின் கணக்கு 100-க்கு 50-க்கு மேல் ஆகின்றது. ஆனால் மதமற்றவர்களின் கணக்கு 1/2 பர்செண்டேயாகும். மதவெறிக்குத் தகுந்தார்போல் குற்றவாளிகளின் எண்ணிக்கை விபரம் காணப்படுவதை வாசகர்கள் கவனிப்பதோடு, மதம் மக்களை யோக்கியப் பொருப்பற்றவர்களாக்கவே பயன்படுத்துகிறதென்பதையும் இதுசமயம் ஞாபகப் படுத்திக் கொள்ளவும் விழைகின்றோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 23.07.1933**



# ருஷியாவின் வெற்றி

## ஐந்து வருட திட்டத்தின் பலன்

ருஷியாவில் 1917ல் நிகழ்ந்த புரட்சிக்குப் பின்னர் அந்நாடு உலக மக்களின் கவனத்தைப் பெரிதும் தன்பால் இழுத்துக்கொண்டது. சமதர்ம நோக்கமுடைய ஆன்றோர்களும், பொருளாதார நெருக்கடியால் கஷ்டப் படும் ஏழை மக்களும் ரஷ்ய சமதர்மத் திட்டத்தின் நுண்பொருளை நன் குணர்ந்து தத்தம் நாடுகளிலும் அத்திட்டங்களைப் புகுத்தி மிகுந்த தீவிரமாய் ஒரு பக்கம் பிரசாஞ் செய்துவர, ஊரார் உழைப்பில் உடல் நோவாதுண்டு வாழும் சோம்பேறிச் செல்வவான்களும் அவர்களின் தரகர்களான புரோகிதர் களும், அவர் தம் பத்திரிகைகளும் முதலாளித்துவ அரசாங்கமும் சமதர்ம உணர்ச்சியை ஒழிக்கப் பற்பல சூழ்ச்சி முறைகளையும், மிருகத்தனமான பயங்கர ஆட்சி முறையையும் கையாண்டு வருவதும் ருஷியாவைப்பற்றிப் பொய்யும் புழுகுமான வியாசங்களை உலமெங்கும் பரப்பி அந்த ஆட்சி முறையை பலவாறு குற்றஞ் சொல்லி அங்கு பட்டினியும், பஞ்சமும் நிறைந் திருக்கின்றனவென்று கூறியும் வேறு பல தீய முறைகளைக் கையாடி வரு கின்றனர். ருஷியாவின் சமதர்மக் கொள்கை ஒரு பொழுதும் நடை முறை யில் சாத்தியமாகாது என்று புகன்ற ராஜ தந்திரிகளும், ருஷியாவில் தனியு டைமை யொழிந்து பொதுவுடைமை மிளிர்வதால் அங்கு மக்களின் முயற்சி யும், அறிவும் குன்றி உற்பத்திகள் குறைந்து போய்விடும் என்று தர்க்க ரீதியாய் மொழிந்த பொருள் நூலாசிரியர்களும் தங்கூற்றுத் தவறொன்று தானே இன்று ஒத்துக்கொள்ளும்படி செய்து விட்டதோடு ஐரோப்பிய வல்லரசுகளெல்லாம் ரஷியாவை அலட்சியம் செய்து வாழ முடியாத நிர்பந்தத்திற்குள் வந்து விட்டதென்பதை எவரும் மறுக்க முடியாது.

ரஷிய சமதர்மத் திட்டமோ இன்னும் முற்றுப் பெறவில்லை. உலக மெங்கும் சமதர்ம ஆட்சியாய் விளங்குங் காலத்திலே சமதர்ம ஆட்சியின் திட்டம் வெற்றி பெறுமென்று கூறலாம். இப்பொழுது ரஷியா உலகத்திலுள்ள முதலாளித்துவத்தோடு போரிட்டுக் கொண்டிருக்கிறதென்றே கூறவேண்டும். அப்போரில் தமது எதிரிகளை நிர்த்தாக்ஷண்யமாகத் தண்டித்து வருவதை



RangaRakes tamilnavarasam.com

நியாய புத்தியுள்ள எவரும் தவறென்று கூறத் துணியார். ரஷியாவில் மனிதனுக்கு சுதந்தரம் அதிகமில்லையென்று கூறப்படுகிறது. தனிமனிதனுடைய சுதந்திரத்திற்குப் போதிய இடமிருப்பதாகக் கூறப்படும் நாட்டிலுள்ள மக்களைவிட ரஷ்ய மக்களுக்கு அந்நாட்டில் அதிக சுதந்திரமும் உரிமையுமிருப்பதோடு ஜார் சக்கரவர்த்தியின் கொடிய ஆட்சியில் உண்ண உணவும், உடுக்க உடையும், ஒண்ட நிழலும், படுக்கப் பாயுமின்றி கோடானுகோடி மக்கள் தவித்து ஆயிரக்கணக்காய்-இல்லை-லட்சக்கணக்காய் பட்டினியாலும் நோயாலும் மடிந்த ரஷியா நாட்டிலே பட்டினியென்றால் இன்னதென்பதை எவருமறியாதபடி, நோய் என்றால் இன்னதென்பதை உணராதபடியும் நாளைக்கு உணவிற்கு என்செய்வது, வியாதியால் இரண்டு நாள் படுத்துக்கொண்டால் நமது நிலையென்ன? நமது குடும்பத்தின் கதியென்ன? என்றகவலையே அறியாத மக்களாய் வாழும்படி செய்து நாடெங்கும் சாந்தியும் சமாதானமும் நிறைந்திருக்கும்படி இச் சுருங்கிய காலத்திற்குள் சோவியத் ஆட்சி செய்து உலகத்திலுள்ள எல்லா முதலாளித்துவ அரசாங்கங்களும் திடுக்கிடச் செய்து விட்டதென்பதை நன்கு அறியலாம்.

## ஐந்து ஆண்டு திட்டம்

பஞ்சத்தாலும் கொடுங்கோன்மையினாலும் பொருளாதார நிலையிற் மிக மிகக் கேவலமாயிருந்த ரஷியாவை உன்னத நிலைக்குக் கொண்டுவர சோவியத் ஆட்சியினர் 5 வருடத்திட்டமொன்று தயாரித்து ஐந்து ஆண்டுகளுக்குள் இன்னின்ன வேலைகளைப் பூர்த்தி செய்துவிட வேண்டுமென்று திட்டம்போட்டுக் கொண்டு வேலை ஆரம்பித்தனர். வேலையற்று, கொள்ளையும் விபசாரமும் புரிந்து வந்த மக்களெல்லாம் தொழில் முறையில் ஈடுபட்டு தங்களின் துற்செயலை ஒழித்து நாட்டின் நலனைக் கோரி உழைக்க ஆரம் பித்து விட்டனர். பொருள் உற்பத்தி ஐந்து வருடத் திட்டத்தில் எதிர் பார்த்ததை விட அதிக வெற்றிபெற்று விட்டது. தங்கள் ஆட்சி முறையைப் பற்றி பெருமைபேசிக்கொண்டு கர்வம்கொண்ட ஐரோப்பாவும், அமெரிக்காவும் உலக வர்த்தகத்தில் ரஷியப் போட்டியை எதிர்த்து போராட முடியவில்லை. உலகத்து மார்க்கட்டிலெல்லாம் ரஷியக் கோதுமை போய் மோதி உலக பொருளாதார உற்பத்தி ஸ்தானங்களையெல்லாம் திடுகிடுக்கும்படி செய்து விட்டது.

‘பசி வந்திடப் பத்தும் பரந்துபோம்’ என்னும் பழமொழியைப் போல் பசியால் வாடும் மக்களிடம் சுதந்திரம், உரிமை முதலியவைகளைப் பற்றி கதை கூறுவதில் பயனென்ன? பட்டினியால் வாழும் மக்களுக்கு முதலில் கொடுக்க வேண்டியது வயிறு நிறம்பும்படி ஆகாரந் தான் கொடுக்க வேண்டுமென்ற உண்மையை சோவியத் அரசாட்சி அறிந்து கொண்டதோடு தனி சொத்துரிமையை ஒழித்து பொது உடமையை மேற்கொண்ட தங்கள் ஆட்சிக்கு பிற தேசம் உணவுப் பொருளைக் கொடுத்து ஒரு பொழுதும் உதவி செய்யாது என்பதையும் நன்கறிந்து 5 வருடத் திட்டத்தில் உணவுப்



பொருள்களைப் பெருக்குவதைப் பிரதானமாகக் கொண்டனர். ஐந்து வருடத்திற்குள் இத்தனை டன் கோதுமை, இத்தனை டன் பாரம் பருத்தி, இவ்வளவு யந்திரங்கள், இவ்வளவு ஆடுமாடுகள், இவ்வளவு தொழிற்சாலைகள் உற்பத்தியாக வேண்டும், இத்தனை மாணவர்களுக்கு படிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டு மென்று திட்டம் போட்டு வேலை ஆரம்பித்தார்கள். நான்கு வருடத்திலே ஐந்து வருடத் திட்டத்திற் கண்ட பெரும்பாலானவைகள் பூர்த்தியாகி விட்ட தால் திட்டத்தை அதிகப்படுத்தி வேலை செய்தனர். இதன் விபரமெல்லாம் அரசாட்சியாரால் வெளியிடப்பட்டிருக்கும் சோவியத் ஆட்சியின் பொருளாதார நிலை என்னும் நூலில் விரிவாய்க் காணலாம். இத்திட்டத்தின் வெற்றியைக் கண்டு இத்தகைய திட்டங்களை ஏற்படுத்தி தாங்களும் வேலை செய்யலாம் என்பது பற்றி பற்பல அரசாங்கங்களும் யோசித்து வருகின்றன.

ஒவ்வொரு நாடும் இத்தகைய திட்டம் போட்டு வேலை ஆரம் பித்தால் உலகிலே தேவைக்கு அதிகமான பொருள் உற்பத்தியாகி, உற்பத்தியான பொருள்கள் விலையாகாமல் பலவிதத் தொல்லைகள் ஏற்படுவது நிட்சயம். இதையே ரஷியாவும் எதிர்பார்க்கின்றது. தேவைக்கு அதிகமான பொருள் உற்பத்தி செய்ய மனிதனுக்கு சக்தி இருக்குமானால் பாடுபட்டு உழைக்கும் தொழிலாளி அரை வயிற்றிற்கும் சோறு கிடையாது தவிப்பதன் காரண மென்ன என்பதை ஏழைமக்கள் நினைக்க முற்படுவர். அப்பொழுது தான் முதலாளிகளும், முதலாளித்துவ அரசாங்கங்களும் தங்களை எப்படி வஞ்சித்து ஏழைகள் பட்டினியினால் தியங்கும்படி செய்கிறார்கள் என்பதின் உண்மை வெள்ளிடை மலையெனத் துலங்கும்.

## ருஷிய சமுதாய அமைப்பு.

உலகத்திலே இன்று நிகழ்ந்து வரும் முறைகளென்ன? கோடிக்கணக்கான மக்கள் தினசரி 8 மணிநேரம், 10 மணிநேரம் வேலைசெய்து வருகின்றார்கள். இதன் பலனை முதலாளி வர்க்கத்தினர் அனுபவித்து வருகின்றனர். இதனால் பெறும் பொருளை என்ன செய்வதென்று முதலாளிகள் அறியாது மனிதனுக்கு அவசியமில்லாத பல தேவைகளை உண்டாக்கிக்கொண்டு வருகின்றார்கள். உதாரணமாக ஒரு மனிதன் ஏறிச் செல்ல ஒரு குதிரை பூட்டிய வண்டி போதுமானது. தன்னிடத்தில் ஏராளமான பணமிருக்கிறது என்ற திமிறினால் அதே வண்டியில் 2 குதிரை, 4 குதிரை, 6 குதிரை பூட்டியோடும் படியான வண்டியைச் செய்து அதற்கென்று பல மனிதர்களை குறைந்த சம்பளத்தில் வேலையாளாக வைத்துக் கொள்கிறான். உண்மையான உணவுப் பொருளை உண்டாக்கவேண்டிய பல மனிதர்களை தனக்காக உபயோகித்துக் கொள்கிறான். இவன் தன் அவசியத்திற்கு மேற்பட்ட குதிரைகளை உபயோகித்துக் கொள்வதால் குதிரை விலை அதிகமாய் விடுகிறது. இவன் பணக்காரனாவதற்கு உழைத்து உழைத்து தன் உடலைக் கெடுத்து,



RangaRakes tamilnavarasam.com

ஒண்ட இடமின்றி தெருவில் கூடுதலால் கஷ்டப்பட்டுக்கொண்டு படுத் துறங்கும் தொழிலாளி குதிரை வாங்கப் பணமில்லாது மாடு போல் தனது வேலைகளுக்கு தனது வண்டியைத் தானே இழுக்கவேண்டியதிருக்கிறது. பணக்காரன் வண்டியில் பூட்டிய தேவைக்கு அதிகமான குதிரை ஒன்றை இந்த வண்டியில் பூட்டினால் தொழிலாளிக்கு எவ்வளவு உதவியாயிருக்கும். இதன் நுண் பொருளை ஆய்ந்துதான் ரஷ்ய சமதர்மம் ஆட்சி அமைக்கப் பட்டிருக்கிறது.

## பொதுவுடமைத் தத்துவம்

உலகிலேயே உற்பத்தி செய்யும் செல்வத்திலே உற்பத்தி செய்துவரும் தொழிலாளிக்கு சரிசமமான பங்கு கிடைத்திருந்தால் உலகிலே இன்று காணக்கிடக்கும் பொருளாதார நெருக்கடியும் வேலையில்லாத் திண்டாட்ட மும் உண்டாயிராதென்பதே பொது உடமை இயக்கத்தினரின் எண்ணம்.

ரஷிய பொது உடமை முறை உலகிலுள்ள ஏனைய நாடுகளும் பின்பற்றி தொழில் உற்பத்தியை அதிகப்படுத்தினால் தொழிலாளியினுடைய உண்மையாண நிலை வெளிப்பட்டுவிடும். உழைப்பதற்கென்று ஒரு வகுப்பும் அதன் பலனை அனுபவிப்பவர் என்றே மற்றொரு வகுப்புமின்றி எல்லோரும் உழைக்க வேண்டுமென்று எல்லா அரசாட்சியாரும் சட்டம் செய்து விட்டால் ஒவ்வொரு மனிதனும் ஒரு நாளைக்கு 1 மணி நேரம் உழைத்து விட்டு உலகிலே தன் உணவிற்கு வேண்டியதைச் சம்பாதித்துக் கொண்டு இன்பமாய் அமைதியோடு வாழமுடியும்.

## பொதுவுடமை என்றால் என்ன?

“எல்லா உயிர்ப் பிராணிகளுக்கும் பொதுவாக வுள்ள இந்த உணவுப் பிரச்சினை தீர்ந்து விட்டால் மக்கள் தங்களிடமுள்ள மனிஷீகத் தன்மையை விருத்தி செய்து கொள்ளமுடியும். பொதுவுடமையின் நோக்கமும் இதுவே யாகும். வருமானத்தை உழைப்பாளிகள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வ தென்பதே இதன் பொருள். வயிற்றுப் பசிக்கு உணவுதேடுங் காலமும் தூங்கும் நேரமும் தவிர மீதமுள்ள நேரம் தன் வயிற்றுக்கும் பிறருக்கும் கட்டுப்படாது சுதந்திரமாய் வாழுங்காலம். அது மக்களெல்லோருக்கும் சம மாக இருக்க வேண்டுமென்பதே பொதுவுடமையின் உண்மையான தத்து வம்” என்று ஓரிடத்தில் பேராசிரியர் பெர்னாட்ஷா பெரிதும் வியாக்கியானம் செய் துள்ளார்.

இந்நிலை அடைய உலகிலுள்ள எல்லா தேசத்தினரும் பொது வுடமைக் கொள்கையை ஒப்புக்கொண்டு நடந்தால் தான் முடியும். இந்தக் கருத்துடன் தான் இன்றைய ரஷிய ஆட்சி நடந்து வருகிறது. இந் நன்னோக் கம் வெற்றி பெற ஒவ்வொரு நாட்டிலும் எதேச்சாதிகாரமுள்ள தொழிலாளி யின் பிரதி நிதிகளிருக்க வேண்டுமென்பதே சோவியத் நிபுணர்களின்



கருத்தாதலின் ரஷியாவில் அவர்களுக்குத் தகுந்த தற்போதைய அரசியல் முறையை நிறுவியுள்ளார்கள்.

## முதலாளிகளென்போர் யார்?

ஐந்து வருடத்தில் தொழிலாளிகளின் உடல் நலம், அறிவு விருத்தி முதலான நலனைப் பெருக்க பெரிதும் திட்டங்கள் ஏற்படுத்தினர். அங்குள்ள உற்பத்திப் பொருள்களை எவ்விதத் தடங்கலுமின்றி சர்க்காரே பிற நாடுகளில் கொண்டு விற்பனை செய்தனர். சில தொழிலில் லாபமும், சில தொழிலில் நஷ்டமும் ஏற்பட்டாலும் சர்க்காரே முதலாளியாக இருப்ப தால் நஷ்டத்தை லாபம் வரக்கூடிய பொருளிலிருந்து ஈடு செய்து கொள்ள முடிகிறது. உற்பத்தி செலவுகளை யெல்லாம் கழித்து 100க்கு 10 அல்லது 20 பாகம் தொழிலாளி களின் அபிவிருத்திக்காகச் செலவழித்து வருகிறார்கள். ஒவ்வொரு தொழிற்சாலைகளிலும் தொழிலாளர்களுக்கு விளையாடுமிடம், வாசகசாலை, குழந்தைகளுக்குப்பால் கொடுக்கவும், தாலாட்ட அறைகளும், தொட்டிலும், இன்னும் பல வசதிகளும் செய்யப்பட்டிருப்பதோடு, ஆகாய வசனி (ரேடியோ) மூலம் சோவியத் ஆட்சி முறையைப் பற்றி பிரசங்கங்கள் மூலம் அறிவு விருத்தி செய்யப்பட்டு வருகிறது.

சோவியத் ஆட்சியினர் எதையும் ஆராய்ந்தே செய்வர். ஆய்ந்து நலமென்று கண்டால் இன்னதை இவ்வளவு காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டுமென்று திட்டம் போட்டுக் கொள்ளுகிறார்கள். உடனே அமலுக்குக் கொண்டு வருகிறார்கள். உற்பத்தி அதிகப்படுத்துவதென்றால் அதன் நோக்கத்தை தொழிலாளர்க்கு விளக்கிக் கூறி அவர்களுக்கு உற்சாக மூட்டி எளிதில் தங்கள் நோக்கத்தில் வெற்றியடைந்து கொள்கிறார்கள்.

## விவசாயம்

ரஷியாவில் எல்லா நிலையங்களையும் சர்க்கார் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு மக்களை ஓர் இயந்திரம் போல் பாவித்து வருகிறார்கள் என்பது தவறு. விவசாயத்திற்கு லாயக்கான பூமிகளில் சில பாகம் சர்க்கார் பண்ணைகள்; சில பாகம் பல குடியானவர்கள் கூட்டுறவாகப் பயிரிடும் பண்ணைகள்; மற்றொரு பாகம் தனி விவசாயிகள் தனியாகப் பயிரிடும் நிலம் எனப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இயந்திரக்கலப்பைகளை உபயோகித் தால் தான் அதிகமான விளைவை எதிர்பார்க்க முடியும். சிறு சிறு நிலங்களாக இருந்தால் இயந்திரக் கலப்பையால் உழ முடியாது. எனவே தான் சர்க்கார் பொருளா தாரத்திற்கு அவசியமான இயற்கை மூலங்களும் மூலதனமும் பொதுவாக இருக்கவேண்டுமென்று விதி ஏற்படுத்தியுள்ளார்கள். ஆகவே தான் ஐந்து ஆண்டுத் திட்டம் (1928–1933) ஏற்படுத்தி அதற்குள் நிலத்தில் 100க்கு 20 பாகத்தை கூட்டுறவு விவசாயமாக்கி சிறுசிறு வயல்களாக ஏற்படுத்தியிருந்த வரப்புகளையெல்லாம் வெட்டி ஒரே சமமான பாகமாக்கி



RangaRakes tamilnavarasam.com

இயந்திர விவசாயத்திற்கு ஏற்ற விதமாக்கி விடவேண்டுமென்று திட்டம் போட்டனர். 4 ஆண்டுகளுக்குள் 100க்கு 60 பாகம் கூட்டுறவு விவசாயத் துக்கு முன் வந்துவிட்டது. விவசாயம் விருத்தியாக வேண்டும், விருத்தி யாகவேண்டும் எனக் கூவும் வீண் வெற்றுரைகளை அங்கு காணமுடியாது. இன்ன ஜில்லாவில் இவ்வளவு கோதுமைகளை விளைவிக்க வேண்டும் என்று சர்க்கார் திட்டம் போடுவார்கள். உடனே அதை அமுலுக்கு கொண்டு வர ஸ்தல சோவியத்துக்கு உத்தரவு கொடுக்கப்படும். அதை உடனே அவர்கள் நடத்த முனைந்து விடுவார்கள். இதன் பயனாக இன்று அங்கு 100க்கு 80பங்கு விவசாயம் சர்க்கார் பண்ணை யாக இயந்திரங்களின் மூலம் நடைபெருகிறது. 40,000 இயந்திர விவசாய கலப்பைகள் அங்கு வேலை செய்து வருகின்றன.

ரஷியா, விவசாயத்தைப் போல் கைத்தொழிலையும் அபிவிருத்தி செய்ய முனைந்து வேலைசெய்து விருத்தி செய்துவருகிறது. அதன் கைத் தொழில் அபிவிருத்தியை கீழ்கண்ட புள்ளிவிபரங்களால் நன்கறியலாம்.

தண்டவாளத்தில ஓடும் கார்கள் 12,000 என்று திட்டம் போட்டார்கள். 1931 க்குள்ளாக 20,000 தயாராகி விட்டன. 1933 க்குள் 825 ரயில் வண்டிகள் செய்ய வேண்டுமென்று திட்டம் போட்டார்கள். 1932 க்குள் 812 வண்டிகள் செய்யப்பட்டு விட்டன. 1913 ம் வருடத்தில் 170 லட்சம் ஜோடுகள் தயாராயின. 1931 ல் 768 லட்சம். இது திட்டத்திலிருந்து 167 லட்சம் அதிகம். 1913ல் 94,000 டன் சோப் உற்பத்தி செய்து விட்டனர். 1931ல் 1,89,000 டன் உற்பத்தி செய்து விட்டனர்.

## முன்னேற்றம்

உலகத்திலுள்ள பெரிய இரும்புத் தொழிற்சாலைகளில் ஒன்று ரஷியா விலிருக்கிறது. அதன் பிரதம அதிகாரியாய் ஒரு இந்தியரே இருந்து வருகிறார். இங்கிலாந்தில் இரும்பு உற்பத்தி 40 லட்சம் டன்னிலிருந்து 95 லட்சம் டன் ஆக 35 வருடமாயிற்று. அமெரிக்காவில் இத்தகைய முன்னேற்றம் அடைய 8 வருடமாயிற்று. ஜெர்மனியில் 10 வருடம் சென்றது. ஆனால் ரஷியா 1 வருடத்தில் இந்த முன்னேற்றத்தை யடைந்து விட்டது. நிலக்கரியில் 530 லட்சம் டன் உற்பத்தியை செய்யத் திட்டம் போட்டு வேலை ஆரம்பித்தது. வெற்றியும் கண்டுவிட்டது. ரஷியாவில் 1930ம் ஆண்டில் புகை ரதங்கள் (மோட்டார்கள்) செய்யப்படவில்லை. 8550 கார்களுக்குத் தனி பாகங்கள் பொருத்தி வண்டியாகச் செய்யப்பட்டன. இப்பொழுது நாள் ஒன்றிற்கு 65 மோட்டார்கள் ரஷியாவிலே உற்பத்தி செய்யப்படுகிறது.

விவசாயத்திலே 100க்கு 20 பாகம் தவிர மற்றவைகள் சர்க்காருக்கே உரியது. சர்க்காரைத் தவிர தனி மனிதர்கள் ஒருவருக்கொருவர் கடன் கொடுத்து வாங்கினாலும், வியாபாரஞ் செய்தாலும் கிரிமினல் குற்றமாக ரஷியாவில் கருதப்படுகிறது.

எண்ணெய் உற்பத்தி செய்யும் தேசங்களில் ரஷியா இரண்டாவது ஸ்தானத்தையும் இயந்திர உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும் விவசாய இயந்திரக் கருவிகளில் முதலாவதாகவும் இடம்பெற்று விளங்குகின்றது.

தங்க உற்பத்தியின் மதிப்பு அவர்கள் திட்டத்திற்கு ஒன்றரை மடங்கு அதிகமாகக் கிடைத்து விட்டது.

## கல்வி

1914 ல் 70,00,000 குழந்தைகள் கல்வி பயின்றனர்; 1928 ல் 1,50,00,000 படிக்க வேண்டுமென்றும் 1933ல் 1,70,00,000 படிக்க வேண்டுமென்று திட்டம் போட்டு வேலை செய்து வெற்றிபெற்று விட்டனர்.

ரஷியாவில் முதியோர்களுக்கும் கல்வி கற்பிக்கப்படுகிறது. 1928 ல் வாசக சாலை 22,000 இருந்தன. 1933 ல் 34,000 ஆக்கி விட்டார்கள். ஊர் ஊராய்க் கொண்டுபோகும் லைபரெரிகள் 40,000-ஏற்படுத்தி விட்டனர். ரேடியோவின் மூலம் பலவிடங்களில் கல்வி கற்பிக்கப்படுகிறது. 1928 ல் 3,50,000 ஆகாயவசனிகள் (ரேடியோக்கள்) இருந்தன. 8,250 சினிமா நிலையங் களிருந்ததை இப்பொழுது 50,000 மாக அதிகப்படுத்தப் போகின்றார்கள்.

ரஷியாவின் இத்தகைய வெற்றிக்கு முக்கிய காரணம் தாங்கள் செய்யப் போகும் காரியத்தை முதலில் திட்டமிட்டுக் கொண்டு அதில் தொழிலாளருக்கு போதிய ஊக்கமும் கொடுக்கும்படி தங்கள் நோக்கத்தைக் கூறி அவர்களுக்கு உற்சாகமாய் விடுவதால் தொழிலாளிகட்கு என்ன கஷ்ட நஷ்டம் போதிலும் ஊக்கங் குன்றாது வேலையையே கருத்தாகக் கொண்டு வேலை செய்து வருகின்றனர்.

## இந்திய நாடு

பிற நாடுகள் இத்தகைய நோக்கங்களை கையாண்டு திட்டத்தைக் கண்டு வெற்றியடைந்து கொண்டு போகும்பொழுது இந்தியா வாளா விருக்கு மேயானால் சீக்கிரத்தில் பொருளாதார நெருக்கடி யென்னும் சூழலில் பட்டு அதோ கதியாய் விடுமென்பது நிட்சயம்.

சில மாதங்களுக்கு முன் ரஷியா தோழர் ஒருவர் கவி. ரவிந்தரநாத் தாகூருக்கு நிருபம் ஒன்று எழுதியிருந்தாராம். அதில் சோவியத் ஆட்சியில் தொழில் முன்னேற்றமடையக் காரணம் என்னவென்று கருதுகிறீர்கள்? உங்கள் தேசம் அத்தகைய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாயிருப் பவை எவைகள்? என்று வினாவியிருந்தார். அதற்கு கவி-தாகூர் “தங்கள்



RangaRakes tamilnavarasam.com

நாட்டில் செல்வப் பெருக்கை தனி மனிதர்களிடமிருந்து எல்லாப் பொது மக்களுமடங்கிய சமுதாயத்திற்கு பயன்படுமாறு செய்திருப்பதுதான் உங்கள் ரஷிய நாட்டின் வெற்றிக்கு காரணம் சமுதாய விசயங்களில் முயர்ச்சியற்று எல்லாம் இறைவன் செயலென்றிருப்பதே எங்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் இருக்கிறது" என்று பதில் எழுதியிருந்தார்.

**குடி அரசு - கட்டுரை - 23.07.1933**



# தோழர்களே! கவலைப்படாதீர்கள்

காங்கிரஸ் ஸ்தாபனங்கள் மூடப்பட்டது பற்றியும், காந்தீயம் தோற்றுப் போய் விட்டது பற்றியும் பலர் மகா விசனப்படுவதாகத் தெரிய வருகிறது. இன்றைய வரையில் காங்கிரசும், காந்தீயமும் நம் மக்களுக்கு என்ன வித மான பயனை உண்டாக்கிற்று என்பதைப்பற்றி நாம் அதிகம் எழுத வேண்டியதில்லை.

காங்கிரஸ் ஏற்பட்டு ஏறக்குறைய ஐம்பது வருஷ காலமாகின்றது. ஐம்பது வருஷ காலத்தில் அரசாங்கத்தாரால் காங்கிரஸ் கேட்டபடி (சீர்திருத் தங்கள் என்னும் பேரால்) எவ்வளவோ அதிகாரங்களும், பதவிகளும் இந்திய மக்களுக்குக் கொடுக்கப்பட்டுமிருக்கின்றன. இதன் பயனாய் நாட்டில் கோடீஸ்வரர்கள் பெருகினார்கள். பதினாயிரக்கணக்கான ஏக்கரா பூமியுடைய ஜமீன்தாரர்கள், மிராஸ்தாரர்கள் அதிகமானார்கள். மாதம் 1 க்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பளம் வாங்கும் பெரும் பதவியாளர் களும், உத்தியோகஸ்தர்களும் ஏராளமானார்கள். மாதம் 1000, 10000 ரூபாய் வரும்படி சம்பாதிக்கும் வக்கீல்களும், டாக்டர்களும் லக்ஷக்கணக்கில் பெருகினார்கள்.

தவிர மற்றொருபுரம் பாடுபடாமல் தேசத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு சோம்பேறியாய் இருந்து வாழும் மக்கள் பலர் பெருகினார்கள். அதாவது "வைதீகத்தில்" ஒரு கூட்ட மக்கள், எப்படி குருமார்களென்றும், பாதிரிமார்களென்றும், சன்னியாசிகளென்றும், சாமியார்களென்றும் சொல்லிக் கொண்டு ஊரார் உழைப்பில் வாழ ஆசைப்பட்டு வேஷம் போட்டுத் திரிகின் றார்களோ அதுபோல், காங்கிரசின் பேரால் ஒரு கூட்ட மக்கள், தேசீயத் தலைவர்கள், தேச பக்தர்கள், தேசீயவாதிகள், தேசாபி மானிகள், தேசீயத் தொண்டர்கள் என்பதாகப் பல பெயர்களை வைத்துக் கொண்டு யாதொரு வேலையும் இல்லாமல், எவ்விதப் பொருப்புமில்லாமல் பதவி பெறவும், வயிறு வளர்க்கவும் ஏற்பட்டார்கள்.

இவைகளைத் தவிர காங்கிரசானது ஏழை மக்களுக்கும்-தாழ்த்தப் பட்ட மக்களுக்கும், மற்றும் நாள் 1க்கு 14 மணி நேரம் 18 மணி நேரம், மழை யிலும், வெய்யிலிலும், காடுகளிலும், கழனிகளிலும், மலையிலும், சமுத்திரத்



RangaRakes tamilnavarasam.com

திலும், பட்டரைகளிலும், தொழிற்சாலைகளிலும், வியாபார ஸ்தலங்களிலும் அலைந்து மிருகங்கள் போல் உளைத்து போதிய ஆகாரமில்லாமல், சுகாதாரம், வைத்தியம் முதலிய வசதிகள் இல்லாமல், தங்கள் தங்கள் பிள்ளை குட்டிகளுக்குப் படிப்பு, உடை முதலியவைகளில்லாமல் ஓட்டைக் குடிசை களில் வதிந்து மடியும் மனித ஜீவன்களுக்கு என்ன பயன் ஏற்பட்டது என்று கேட்கின்றோம்? அல்லது காங்கிரஸ் ஏற்பட்டதற்குப் பின் இவர்கள் விஷயத்தில் என்ன மாறுதல் ஏற்பட்டது என்று கேட்கின்றோம்?

இந்த நிலையில் இப்படிப்பட்ட யோக்கியதையுள்ள காங்கிரசானது மூடப்படுகின்றதே, மறைந்து போகின்றதே, செத்துப்போகின்றதே என்று சிலர் விசனப்படுவதைப் பார்த்தால் நமக்கு ஆச்சரியமாகவே தோன்று கின்றது.

இந்த 50 வருஷ காலமாய் காங்கிரசினால் நாட்டுக்கு என்ன-என்ன காரியங்கள் ஏற்பட்டதோ-காங்கிரசினால் மக்களுக்கு என்னென்ன உணர்ச்சி கள் ஏற்பட்டதோ அவைகளை யெல்லாம் இன்று அடியோடு அழித்துத்தீர வேண்டிய அவசியத்தில் உலகம் இருக்கும்போது, அப்படிப்பட்ட காங்கிரஸ் ஒழிந்து போவதனால் மக்கள் மகிழ்ச்சியடைய வேண்டியதிருக்க எதற்காக விசனப்படுகின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்திய தேசீயக் காங்கிரஸ் என்பது ஒரு விபசாரித்தனத்திற்கொப் பான ஸ்தாபனமாய் இருந்துவந்தது என்று சொன்னால், சமதர்ம ஞானம் உள்ள எவரும் வாய் பேசாமல் ஒப்புக்கொண்டாக வேண்டும் என்றே சொல்லுவோம். ஏனெனில் ஏழை மக்கள் பெயரையும், பாமர மக்கள் பெயரையும், கஷ்டப் படும் மக்கள் பெயரையும் சொல்லிக்கொண்டு, அந்த ஏழை மக்களுக்கு மேற்கண்ட காங்கிரஸ் ஸ்தாபனம் செய்து வந்த அக் கிரமங்களுக்கும், கொடுமைகளுக்கும், பித்தலாட்டங்களுக்கும், ஏதாவது எல்லைகட்ட முடியுமா என்று கேட்கின்றோம்?

மக்களுக்கு, அவர்களுடைய மனிதத்தன்மைக்கு அடிப்படை யானதும், மிகவும் முக்கியமானதுமான கல்வி விஷயத்தை எடுத்துக் கொண் டோமேயானால்-முதலாளிகள் குழந்தைகள், ஜமீன்தாரார்கள் குழந்தைகள், உத்தியோகஸ்தர்கள் குழந்தைகள், மேல் ஜாதிக்காரர்கள் குழந்தைகள் ஆகியவர்கள் தவிர மற்றபடி, நாட்டில் 100 க்கு 90 பேர்களா யிருக்கும் சாதாரண மக்களின் குழந்தைகள் படிப்பில் பூஜ்யமாகவே யிருந்து வரு கிறார்கள். கையெழுத்துப் போடக்கூடத் தெரியாதவர்கள் அதிகம் பேர்கள் இருந்து வருகின்றார்கள். சுகாதாரத்தைப்பற்றி எடுத்துக் கொண்டால் அதுவும் மேல் குறிப்பிட்ட வகுப்பார்களைத் தவிர மற்றபடி 100 க்கு 90 மக்கள் சுகாதாரம் அற்று, நோயாளியாகவும் வைத்திய வசதி அற்றவர்களாக வும் மிக்க மெலிந்த வர்களாகவும் இருந்து அகாலத்தில் மரணமடைந்து வருகிறார்கள். ஜீவனோ பாய விஷயத்திலும் வயிறார உண்பதற்கும் தங்கள்



பிள்ளை குட்டிகளை சாதாரண நிலையிற்கூட போஷிப்பதற்கும் முடியாம லும் 100 க்கு 75 குழந்தைகள் தங்களது 6 வது 7 வது வயதிலேயே தங்கள் வயிற்றுக்குக் கூலி வேலை செய்து தீர வேண்டிய வர்களாகவும் இருந்து வருகிறார்கள். மனிதனுக்கு வேண்டிய முக்கிய காரியங்களாகிய கல்வி, சுகாதாரம், ஜீவனம் முதலாகிய விஷயங்களில், ஒரு சிறு மாறுதலைக்கூட செய்ய முடியாத ஸ்தாபனங்கள் இருந்தென்ன? செத் தென்ன? என்பதை நடுநிலையிலிருந்து யோசிக்கும் எந்த அறிவாளியும் கடுகளவுகூட காங்கிரசு செத்துப் போகின்ற தென்று விசனப் படமாட்டான் என்றே சொல்லுவோம்.

கல்வி முதலிய மேற்கண்ட விஷயங்களில் காங்கிரசினால் ஒன்றும் செய்ய முடியாமல் போனதற்கு காங்கிரஸ் பக்தர்கள் சர்க்கார் பேரில் குறை கூறலாம். ஆனால் அந்த காங்கிரஸ் பக்தர்களை ஒன்று கேட்கின்றோம். அதென்னவென்றால் பணக்காரர்கள், மேல் ஜாதிக்காரர்கள் என்பவர்களு டைய கல்வி, சுகாதாரம், ஜீவனோபாயம் முதலிய விஷயங்களிலும் மற்றும் பெரும் பெரும் சம்பளம், அதிகாரம், பதவி பெறுவதற்குத் தகுதியான கல்வி, சுகாதார ஜீவனோபாய உத்தியோக விஷயத்திலும், இந்த 40, 50 வருஷங் களுக்குள்ளாக காங்கிரசினால் எவ்வளவு சீர்திருத்தங்கள், அனுகூலங்கள் ஏற்பட்டு, அக்கூட்டத்தார்கள் பயன் அடைந்து வருகின்றார்களா? இல் லையா? உதாரணமாக, வக்கீல், வைத்தியம், கணிதம், இஞ்சினீர், ஐ.சி.எஸ்., பி.சி.எஸ். முதலிய படிப்பு விஷயத்தில் எவ்வளவு முற்போக்கு, எவ்வளவு சம்பள உயர்வு, எவ்வளவு உத்தியோக அதிகரிப்பு முதலிய காரியங்கள் நடை பெறவில்லையா? என்று கேட்கின்றோம்.

இவைகள் எல்லாம் எப்படி ஏற்படச் செய்ய முடிந்தது என்று பார்த் தால் காங்கிரஸ் துரோகமும், ஒழுக்க ஈனமும் நன்றாய் விளங்கிவிடும்.

ஆகவே ஒரு நாட்டில் செல்வவான்களுக்கும், மேல் ஜாதிக்காரர் களுக்கும் மாத்திரம் அனுகூலமாயும், ஏழைகளுக்கும், பாடுபடும் மக்களுக் கும் பிரதிகூலமும், துரோக சிந்தனையும் உள்ளதாயுமுள்ள ஒரு ஸ்தாபனம் செத்துப்போகுமேயானால் ஜனங்கள் அதற்காக மகிழ்ச்சி யடைவதுடன் எந்தக் காரணத்தை முன்னிட்டும் அது மறுபடியும் தலை எடுக்காமல் இருக் கும்படி ஆழக் குழி தோண்டி புதைத்து அதன்மீது குத்துக்கல்களை நட வேண்டியது சமதர்ம அறிஞர்களின் கடமையாகும்.

காங்கிரசின் அயோக்கியத் தனங்களும், துரோகங்களும், பாமர ஜனங் களுக்கு வெளியாகக் கூடிய நல்ல ஒரு சமயத்தில், அதை மறைக்க தோழர் காந்தியாரைப் பிடித்து அவரை மகாத்மாவாக்கி அவர் மூலம் மத சம்மந்த மான உணர்ச்சிகளை மக்களுக்குள் புகுத்தச் செய்து, காங்கிரஸ் பித்தலாட் டங்களுக்கெல்லாம் வேறுவித பாஷ்யம் கூறி, வருணாசிரமமென்றும், பரம் பரைத் தொழில் முறை என்றும், ஏழ்மைத்தன்மையையும், துன்பத்தையும், கஷ்டத்தையும் அனுபவிப்பதே மேல் என்றும் “தத்துவஞானம் பேசச்



RangaRakes tamilnavarasam.com

செய்து மக்களை ஏமாற்றி மறுபடியும் காங்கிரஸ் படுகுழியில் விழும்படி யான காரியத்தைச் செய்வித்து வந்தார்கள்". "கெட்டிக்காரன் பொய் எட்டு நாளை யில் தெரிந்துவிடும்" என்பதுபோல் காந்தீயத்தின் யோக்கியதை இப்போது இந்தப் பத்து வருஷத்தில் விளங்கிவிட்டதால் இரண்டும் சேர்ந்து மண் வீடு சரிவதுபோல் காங்கிரசும், காந்தீயமும் "உன்னால் நான் கெட்டேன், என்னால் நீ கெட்டாய் " என்று ஒன்றை யொன்று சொல்லிக்கொண்டு மாள வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டது.

இந்திய தேசீய காங்கிரசும், காந்தீயமும், அழிந்தொழிந்து போவது என்பது இந்திய ஏழை மக்களுக்கு மாத்திரமல்லாமல், உலக ஏழை மக்கள் இயக்கத்திற்கே அதாவது **சமதர்ம உலகத்திற்கே** பெரிய லாபகரமான காரியமாகும்.

இந்தியாவில் சமதர்மக்கொள்கை என்றைக்காவது ஒரு நாள் ஏற்படும் என்று நினைப்போமேயானால் அது தேசீய காங்கிரசும், காந்தீய மும் ஒழிந்த நாளாகத் தான் இருக்குமே தவிர அவை ஒழியாமல் ஏற்படாது என்பது உறுதி.

இந்தியாவைவிட பலமடங்கு அரசியல் கொடுமையும், பணக் காரக்கொடுமையும், பார்ப்பனீய (பாதிரித்தன்மை)க்கொடுமையும் அநாகரி கக் கொடுமையும், அடிமைத் தன்மைக்கொடுமையும் இருந்து வந்த ரஷிய தேசத்துக்கு சமதர்ம உணர்ச்சி எப்பொழுது ஏற்பட்டது என்று பார்ப்போமே யானால் அங்கும் டால்ஸ்டாயிசம் என்னும் வைதீகப் புடுங்கலிசம் (காந்தீயம்) ஒழிந்த பிறகு தான் ஏற்பட்டதே ஒழிய வேறில்லை. ரஷிய மகாத்மாவான டால்ஸ்டாய் என்பவரும், தோழர் காந்தியாரைப் போலவே ஏழ்மை வேஷமும், கடவுளைத் தேடும் தொழிலும், கடவுள் அருளுடன் கலந்திருக்கும் தன்மையையும் கொண்டவராக இருந்துவந்தவர். அவருக்கு செல்வாக்கு இருக்கும்வரை, ரஷியா மக்களுக்கு இந்த உலக வாழ்வு விஷயத்தில் கவலை இல்லாமல் "செத்தபின் வாழும் மேல் உலக வாழ்க்கை யிலேயே கவலை உண்டாகும்படியான உணர்ச்சியே வலுத்திருந்தது. ஏழை களுடைய கஷ்டம் இன்னது, தொழிலாளிகளுடைய கஷ்டம் இன்னது என்று உணராமலும், அனுபவ ஞானமில்லாமலும், ஏழ்மைத்தன்மை யையும், உழைப்பையும் சிலாகித்துப் பேசி மக்களுக்குப் பிரசாரம் செய்து வந்தவராவார்.

அப்படிப்பட்ட டால்ஸ்டாயிசம் ஒழிக்கப்பட்ட பிறகுதான் முன் சொன்னபடி மக்களுக்கு சமதர்ம உணர்ச்சி பரவத்தொடங்கி நாட்டையும், புரட்சிக்கு தயாராக்கி முதலாளித் தன்மையையும், பாதிரித்தன்மையையும், ஏகாதிபத்தியத்தன்மையையும் இருந்த இடம் தெரியாமல் செய்து இன்றைய ரஷியக் குழந்தைகளுக்கு "ஒரு காலத்தில் சார் (சக்ரவர்த்தி) என்பவன் இருந்தான் அவனுக்கு முதலாளி என்ற அடிமைகளும், பாதிரி என்ற தரகர் களும் இருந்தார்கள்" என்று கதை சொல்லும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆதலால் அந்த நிலைமை இந்தியாவில் ஏற்படக்கூடிய தின் அறிகுறியாக இருந்த காங்கிரசும், காந்தீயமும் அழிவதானால் நாம் மகிழ்ச்சி அடையவேண்டுமேயல்லாமல் யாரும் அதற்காக கவலைப்பட வேண்டிய தில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.



காந்தீயமும், காங்கிரசும் மறைபடவேண்டிய தேற்பட்டதற்கு பணக் காரர்களும், பார்ப்பனர்களும், படித்துவிட்டு உத்தியோகத்துக்கு காத்திருக் கும் சோம்பேரிகளும் தான் விசனப்படவேண்டுமே தவிர மற்றபடி மனித சமூகத் தினிடம் அன்பு கொண்டு சமநோக்குடன் மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற ஆசையுள்ள மக்களுக்கு வேலையில்லாமல் போய்விடுமே என்று எவரும் பயப்பட வேண்டியதில்லை.

**அப்படிப்பட்ட சமதர்ம நோக்கமுள்ள உண்மைத்தொண்டர்களை இரண்டு கையையும் நீட்டி மண்டியிட்டு வரவேற்க சமதர்ம இயக்கம் காத்திருக்கிறது.** அது உலக மக்கள் எல்லோரையும் பொறுத்த இயக்கம் ஜாதி, மதம், வருணம், தேசம் என்கின்ற கற்பனை நிலைகளை எல்லாம் தாண்டிய இயக்கம். பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், ஹரிஜனன் என்கின்ற வருணங்களை ஒழித்து எல்லோரும், எப்பொழுதும் மனிதரே என்று கூவும் இயக்கம். ஏழை என்றும், பணக்காரன் என்றும், முதலாளி என்றும், தொழிலாளி என்றும், எஜமான் என்றும், கூலி என்றும், ஜமீன்தாரன் என்றும், குடியானவன் என்றும் உள்ள சகல வகுப்புகளையும், வேறுபாடுகளையும் நிர்மூலமாக்கி தரைமட்டமாக்கும் இயக்கம். மற்றும் குரு என்றும், சிஷ்யன் என்றும், பாதிரியென்றும், முல்லாவென்றும், முன்ஜன்மம் பின் ஜன்மமென்றும், கர்ம பலன் என்றும்; அடிமையையும், எஜமான னையும், மேல் ஜாதிக்காரனையும், கீழ்ஜாதிக்காரனையும், முதலாளியையும், தொழிலாளியையும், ஏழையையும், பணக்காரனையும், சக்கரவர்த்தியையும், குடிகளையும், மகாத்மாவையும், சாதாரண ஆத்மாவையும், அவனவ னுடைய முன்ஜன்ம கர்மத்தின்படி அல்லது ஈஸ்பரன் தம் கடாக்ஷப்படி உண்டாக்கினார் என்றும் சொல்லப்படும் அயோக்கியத்தனமான சுயநலங் கொண்ட சோம்பேரிகளின் கற்பனைகள் எல்லாம் வெட்டித்தகர்த்து சாம்ப லாக்கி எல்லோருக்கும் எல்லாம் சமம் எல்லாம் பொது என்ற நிலையை உண்டாக்கும் இயக்கம். ஜாதி, சமய தேசச் சண்டையற்று உலக மக்கள் யாவரும் தோழர்கள் என்ற சாந்தியும், ஒற்றுமையும் அளிக்கும் இயக்கம். இன்று உலகெங்கும் தோன்றி தாண்டவமாடும் இயக்கம். ஆதலால் அதில் சேர்ந்து உழைக்க வாருங்கள்! வாருங்கள்!! என்று கூவி அழைக்கின்றோம்.

**குடி அரசு – தலையங்கம் – 30.07.1933**



RangaRakes
tamilnavarasam.com

# ஏன் தோற்றார்?

**– சித்திரபுத்திரன்**

**கேள்வி :–** தோழர் காந்தியார் ஏன் தோல்வி அடைந்தார்?

**பதில் :–** காந்தியார் அரசியலில் தலையிட்டபோது சமூக சீர்திருத் தத்தைப்பற்றியே பிரதானமாய்ப் பேசி பாமர ஜனங்களிடம் செல்வாக்குப் பெற்றார். அதாவது,

தீண்டாமை ஒழியாமல் சுயராஜ்ஜியம் கிடைக்காது என்றும் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படாமல் சுயராஜ்ஜியம் கிடைக்காது என்றும், மதுபானம் ஒழியாமல் சுயராஜ்ஜியம் கிடைக்காது என்றும் சொன்னார்.

ஒவ்வொரு வீட்டிலும் ராட்டினம் சுற்றப்பட்டாலொழிய சுயராஜ்ஜியம் கிடைக்காதென்றார்.

நாளாக நாளாக தீண்டாமையை ஒழிப்பதை ஒரு பக்கம் பேசிக் கொண்டு மற்றொருபுரம் வருணாச்சிரம தர்மத்தை ஆதரித்தார். ஜாதிப்பிரிவு முறை ஜாதிப்படி தொழில் முறை அப்படியே இருக்கவேண்டும். ஆனால் ஜாதிகளில் மேல் கீழ் வித்தியாசம் கூடாது என்று சொல்லிப் பூசி மெழு குகிறார்.

பிராமணனாய் பிறந்தாலொழிய பிராமணனாக முடியாது என்று சொன்னார். அப்புரம் சுயராஜ்ஜியம் கிடைத்துவிட்டால் தீண்டாமை தானே ஒழிந்துவிடும் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்.

கடைசியாக சுயமரியாதைக்காரர்கள் கிளர்ச்சியால் தீண்டப்படாத வர்கள் என்பவர்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிடைத்து விட்ட பிறகு அதை ஒழிக்க ஹரிஜன இயக்கம் என்று கோவிலுக்குள் விட வேண்டும் என்று ஒன்று ஆரம்பித்து, அவர்களைக் கிளர்ச்சி செய்து, கடைசியாக அக்கிளர்ச்சியையும், பட்டினியில் ஆரம்பித்து சட்டசபையில் கொண்டுபோய் விடப்பட்டாய் விட்டது. இதனால், இனி சட்டம் ஏற்படும் வரை கோவிற்பிரவேசம் முடியாது என்று தீர்மானமாய் விட்டது.



இந்து முஸ்லிம் ஒற்றுமைப் பிரச்சினையும் 21–நாள் பட்டினி விரதத் தையும் கடந்து, அதுவும் தீண்டாமை ஒழிப்பைப் போலவே, சுயராஜ்யம் கொடுக்கப்பட்டு விட்டால் இந்து முஸ்லிம் ஒற்றுமையும் தானாக ஏற்பட்டு விடும் என்றும், தோழர் காந்தியாராலேயே சொல்லப்பட்டு விட்டது.

மதுவிலக்குப் பிரச்சினையும் சுயராஜ்யம் கிடைத்தாலொழிய மதுவை விலக்க முடியாது என்று முடிவு கட்டப்பட்டது.

ராட்டின விஷயமும் சில வீடுகளில் மாத்திரம் சிறிது நாளே சுற்றி விட்டு முடிவில் கரையானுக்கும் நெருப்புக்கும் ஆளாயின.

ராட்டின தத்துவமும் மாறிவிட்டது. அதாவது ராட்டினம் வெள்ளைக் காரனுடன் சண்டை போட ஒரு ஆயுதமென்றும், கதர் ஒரு தேசீய உடை யென்றும், தேசீய சின்னமென்றும் சொல்லப்பட்டு விட்டது.

ஆகவே காந்தியாரின் சுயராஜ்ய நிபந்தனைகள் ஒன்றுகூட நிறை வேறப் படாமல் போய் விட்டதால் காந்தியார் வாக்குப் படியே சுயராஜ்யம் கிடைக்காமல் போய் விட்டது. இதனால் காந்தியார் தோல்வியடைய வேண்டியது நியாயமே ஆயிற்று.

**கே :–** இப்பொழுது, காந்தியார் என்ன செய்யப்போகிறார்?

**ப :–** ஜெயிலுக்குப் போகப் போகிறார்.

**கே :–** ஏன் ஜெயிலுக்குப் போகிறார்?

**ப :–** வில்லிங்டன் பிரபு பேட்டி அளிக்க மறுத்த பாவத்திற்கு பிராயச் சித்தம் செய்து கொள்ளுவதற்காக ஜெயிலுக்குப் போகிறார். இது வெளிப் படையான அர்த்தம். மற்றொரு தத்துவார்த்தம் என்னவென்றால் அவர் வெளியிலிருந்து கொண்டு என்ன வேலை செய்வது என்பது ஒரு பெரிய பரிசுப் பிரச்சினையாய் விட்டது. இரண்டாவது காந்தியார் வெளியில் இருந் தால் தோல்வியை ஒப்புக் கொண்டதாக ஆகிவிடும். ஆதலால் ஜெயிலில் இருக்கும் வரை அவரை இந்தக் கேள்வி கேட்க யாருக்கும் சந்தர்ப்பம் வாய்க்காது. அன்றியும் போர் இன்னும் முடியவில்லை என்கின்ற அருத்தத் தையும் கொடுக்கும். ஆதலால் ஜெயிலில் இருப்பதே உத்தமம் என்று கருதி விட்டார்.

**கே :–** வில்லிங்டன் பிரபு காந்தியாரை ஜெயிலில் வைத்து விடுவாரா?

**ப :–** ஜெயிலில் வைக்காவிட்டால் சர்க்கார் தோற்றுப் போய் விட்டார் கள். என்னை ஜெயிலில் வைக்கவிருந்த சர்க்காருக்கு சக்தியில்லை என்று முன் ஒருதரம் உப்பு சத்தியாக்கிரகத்தின் போது காந்தியார் சர்க்காரை பரிகாசம் செய்ததுபோல இப்போதும் பரிகாசம் செய்வார். அப்போது



RangaRakes tamilnavarasam.com

வில்லிங்டன் பிரபுக்கு ரோஷம் வந்து உடனே ஜெயிலில் வைத்துவிடுார். (வைத்து விட்டார்: ப-ர்)

“யாரைவிட்டது காண் சுயமரியாதை எவரைவிட்டது காண்” என்கின்ற பல்லவிப்படி இன்றைய காந்தி வில்லிங்டன் சண்டை சுயராஜ்யத்தைப் பொருத்ததல்ல, பின்னை என்னவென்றால் அது முழுச் சுயமரியாதையைப் பொருத்ததேயாகும். எப்படியெனில் தோற்றுப்போனாலும் பரவாயில்லை. ஊரார் சிரிப்பார்களே! என்பதுதான் கவலை என்று ஒருவர் சொன்னதுபோல் ரோஷம்தான் பாதிக்கின்றது.

**கே:-** அதென்ன அப்படிச் சொல்லுகிறீர் சுயராஜ்யம் கிடைக்கவில்லையே என்ற கவலை மக்களுக்கு இருக்காதா?

**பதில்:-** சுயராஜ்யம் என்றால் என்ன என்று எனக்கும் தெரியாது உமக்கும் தெரியாது. காந்தியாரும் இதுவரை விவரித்ததும் இல்லை; ஒத்துழையாமையின் போது ஒருவர் காந்தியாரை உம்முடைய சயராஜ்யத்துக்கு அர்த்தமென்னவென்று கேட்டார். அதற்கு பதில் காந்தியார் அது இப்போது சொல்லமுடியாது என்று சொல்லிவிட்டார். கடைசியாக காங்கிரசில் முடிவு செய்யப்பட்ட பூர்ண சுயேட்சை காங்கிரசின் லட்சியம் என்பதுதான் சற்று விளக்கமாக ஜனங்களுக்கு தெரிந்தது. அதென்னவென்றால் ஆங்கிலேயர் இந்தியாவைவிட்டுப் போய்விட வேண்டியதாகும்.

**கேள்வி:-** அப்படியானால் அது எப்பொழுது முடியக் கூடிய காரியம்?

**பதில்:-** அது காந்தியாரின் மற்றொரு பட்டினி விரதத்துக்குப் பிறகுதான் சொல்லமுடியும்.

**கேள்வி:-** அதுவரை நாம் என்ன செய்வது?

**பதில்:-** அஹிம்சை, ஆத்மசக்தி, சத்தியம், சத்தியாக்கிரகம் என்கின்ற கடவுள் தன்மைகளில் நம்பிக்கை இல்லாமல் கையில் வலுத்தவன் காரியம் என்பதில் நம்பிக்கை வைத்து, ஜாதி மதம் தேசம் என்கின்ற வித்தியாசமில்லாமல் உலகில் உள்ள ஏழை மக்கள் எல்லோரும் ஒன்று கூடும்படியான மார்க்கத்தை செய்து ஏமாற்றுகின்றவர்களை ஒழிக்க முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும்.

## ஒரே ஒரு கேள்வி !

**காங்கிரசுக்காரன் கேள்வி:-** கடவுள் இல்லை என்று சொல்லுகின்றீர்களே அப்படியானால் ஒரு மனிதன் ஏன் பணக்காரனாய் இருக்கின்றான்? ஒரு மனிதன் ஏன் ஏழையாய் இருக்கிறான்.



**சுயமரியாதைக்காரன் பதில்:-** தனி உடமைக்கொள்கையை ஒழித்து பொதுவுடமைக் கொள்கையை ஏற்படுத்தாததால் ஒருவன் பணக்காரனாகவும், ஒருவன் ஏழையாகவும் இருக்க முடிகின்றது.

**குடி அரசு - உரையாடல் - 06.08.1933**



RangaRakes tamilnavarasam.com

# தோழர் காந்தி மறுபடியும் சிறைப்பட்டார்

தோழர் காந்தியவர்கள் தனது 35-சகாக்களுடன் ஆமதாபாத்தில் வைத்து சிறைப்படுத்தப்பட்டு விட்டார். இதைப்பற்றி சுதேசமித்திரனும், தமிழ் நாடும் ஹிந்துவும் எழுதி இருப்பதுபோல் இதில் ஒன்றும் அதிசய மில்லை. ஆனால் அப் பத்திரிகைகளுக்கு காங்கிரசின் குற்றத்தையும், காந்தியார் குற்றத்தையும், அவ்விருவர்களுடைய பயனற்ற வேலைகளையும், எடுத்துக் காட்ட இப்பொழுதாவது ஓரளவு தைரியத்துடன் வெளி வந்தது ஒரு பெரிய ஆச்சரியமேயாகும்.

இதில் சுதேசமித்திரன் பத்திரிக்கையானது காந்தி அரஸ்டைப் பற்றி தனது ஆகஸ்டு 1-ந் தேதி தலையங்கத்தில் "மரண தண்டனைக்கு உள் பட்டிருக்கையில் ஜனங்களின் மதிப்புக்கு பாத்திரரான தலைவர்கள் காரிய சாத்தியமானவைகளாவும், பலன் தரத்தக்கவைகளாகவுமுள்ள வழிகளை விட்டுவிட்டு தங்களுடைய கொள்கையின் விசேஷத்தை மெய்ப்பிப்பதிலேயே கருத்துடையவர்களாக இருக்கிறார்களென்றும், காங்கிரசை பின்பற்றுவோரான சாமான்ய ஜனங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால் உடனே - கைதியாகி சிறை செல்லுவதை விட்டுவிட்டு அனுபவ சாத்தியமான காரியங்களை கவனிக்கவேண்டும்" என்பதாகவும் எழுதியிருக்கிறது.

இதன் கருத்து என்னவென்பதை நாம் அதிகம் விளக்க வேண்டியதில்லை. காங்கிரசின் பேரால் காந்தியார் செய்துவந்த காரியங்கள் சாத்தியப்படக்கூடிய காரியமில்லையென்றும், அனுபவத்தில் எவ்வித பலனையும் தரத்தக்கது அல்லவென்றும், காங்கிரஸ் மரணதண்டனை அடைந்துவிட்டதென்றும், காந்தியார் அதைக் கவனிக்காமல் பயனற்றதும், சாத்தியமற்றதுமான தன்னுடைய கொள்கைக்கு பெருமை உண்டாக்குவதற்காக வேண்டி மறுபடியும் பாடுபடுகிறார் என்றும் ஆதலால் அதையாரும் பின்பற்றக்கூடாதென்றும் அதற்காக ஒருவரும் ஜெயிலுக்கு போகக்கூடாதென்றும் தெளிவாய் விளக்கி எழுதியிருக்கிறது. தமிழ் நாடு பத்திரிகையும், காந்தி தவறு செய்துவிட்டார். காங்கிரஸ் தவறான வழியில் போய்விட்டது என்று குறிப்புக் காட்டிக் கொண்டும் வந்திருக்கிறது. காங்கிரஸ் கலைக்கப்பட்டு, காந்தியாரின் கொள்கைகளுக்கு மதிப்பும், செல்வாக்கும் குறைந்துபோன பிறகு



இவ்வளவு தூரம் கண்டித்து எழுதும் "தைரியம்" வாய்ந்த பத்திரிகைகள், காந்தியார் உப்பு சத்தியாக்கிரஹம் ஆரம்பித்த காலத்தில் இம்மாதிரி தைரியம் கொண்டு "காந்தியாரின் கொள்கைகள் பயனற்றது. யாரும் பின் பற்றக் கூடாது" என்று எழுதி பிரசாரம் செய்து வந்திருந்தால் அதனால் எவ்வளவோ பயன் ஏற்பட்டி ருக்கும். அப்படிக்கில்லாமல் அந்தக் காலத்தில் கூடவே கோவிந்தா போட்டுக் கொண்டு காந்தியாரைப் பற்றி விகாரமான முறையிலும், அருவெறுக்கத்தக்க முறையிலும் விளம்பரப்படுத்திக் கொண்டும், ஒரு சாதாரண மனிதன்கூட செய்வதற்கு வெட்கப்படும்படியான மாதிரியில் அவரைப் புகழ்ந்து கொண்டும், அவருடைய காரியங்களை ஒவ்வொன்றையும் ஜனங்கள் பின்பற்றும்படியான மாதிரியில் பாமர ஜனங்களை ஏமாற்றி உற்சாகப் படுத்திக் கொண்டுமிருந்து விட்டு, இன்றையதினம் தானாய் வெட்டவெளியான பிறகு, தாங்களும் ஆளுக்கு ஒரு கல்லெடுத்துப் போட வந்துவிட்டார்களென்றால் இவர்களின் தைரியத்துக்கு எதை ஒப்பிடுவது? இவ்விஷயத்தின் தமது மாகாணத் தேசீய பத்திரிக்கைகள் என்று சொல்லிக்கொள்பவை மாத்திரமல்லாமல் இந்தியாவிலுள்ள அநேக தேசியப் பத்திரிகைகள் என்பவைகளும் இதே மாதிரியாகவே முன் நடந்து விட்டு, இப்போது காந்தியாரையும், காங்கிரசின் யோக்கியதையும் வன்மை யாகக் கண்டித்து எழுதுகின்றன.

"மொகுடு சச்சினதரவாத்த முண்டகு புத்தி வச்சினதி" என்று தெலுங்கில் ஒரு பழமொழியுண்டு. அதற்கு புருஷன் (காந்தீயம்) இறந்தபிறகு "முண்டை"க்கு அதாவது விதவைக்கு (தேசீயப் பத்திரிகைகட்கு) புத்தி வந்தது என்பது அதின் அருத்தம். அதுபோல் காரியங்களெல்லாம் நடந்து விட்ட பிறகும், இயற்கையிலேயே அதன் யோக்கியதைகள் வெளியான பிறகும், அதைப்பற்றி எடுத்துச் சொல்லுவதற்கும் அதிக தைரியம் ஒன்றும் வேண்டியதில்லை. அதனால் விசேஷ பலன்களும் ஏற்பட்டு விடப்போவதில்லை. ஆனால் இனி மேலாவது தேசிய பத்திரிகைகள் எழுதுவதுதான் "வேதவாக்கு" என்று நினைத்துக் கொண்டிருக்கிற மூடப் பாமர மக்களுக்கு இப்பத்திரிகைகள் என்ன வழி காட்டப்போகின்றன? என்பது தான் அவர்களைப் பற்றிய பிரச்சினைகளாகும். "தமிழ் நாடு பத்திரிகை ஒரு அளவுக்கு சமதர்மக் கொள்கைகளை பயங்காளி பாஷையிலாவது எழுதிவருவது பற்றி யாவரும் மகிழ்வார்கள்." "சுதேசமித்திரன்" பத்திரிகையோ உலகம் எப்படியானாலும் சரி, யார் எக்கேடு கெட்டாலும் சரி, ஸ்தல ஸ்தாபனங்கள், சட்டசபைகள் முதலியவைகளெல்லாம் முன்போல் பார்ப்பனர்களே கைப்பற்ற வேண்டும். பார்ப்பன ஆதிக்கமே நிலைத்திருக்கவேண்டும். மனிதர்கள் எல்லாம் புராணக் குப்பைகளிலே புரண்டு பார்ப்பனர்களின் காலைக் கழுவின ஜலத்தைச் சாப்பிடுவதன் மூலமாகவே "மோட்சத்திற்குப் போக வேண்டும்" என்கின்ற பிரச்சாரமே செய்து வருகின்றதே தவிர கடுகளவாவது பொது ஜனங்களுடைய நன்மையைப்பற்றின கவலையே இல்லாமல் நடந்து கொண்டு வருகின்றது. தமிழ் நாட்டு தேசியத் தலைவர்களான



RangaRakes tamilnavarasam.com

தோழர் சத்தியமூர்த்தி முதலியோர்களும், காந்தியாரின் தவறுதலைப் பற்றியும், காங்கிரசின் தவறுதலைப் பற்றியும் பேசும்போதெல்லாம் ஸ்தல ஸ்தாபனங்களையும், சட்டசபைகளையும், கைப்பற்ற காந்தியார் உதவி புரிய வில்லையே என்கின்ற ஒரு காரணத்தைத்தான் பிரதானமாக வைத்துப் பேசு கின்றார்களே தவிர வேறில்லை.

இப்பொழுது சமீபத்தில் தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் காந்தி யாரின் ஆலோசனைப்படி காங்கிரஸ் தலைவரான தோழர் ஆனே அவர்கள் பிறப்பித்த அறிக்கையை எதிர்த்து வேலை செய்யப்போவதாக ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். சட்டசபை ஆவலுள்ளவர்களும் ஸ்தல ஸ்தாபன ஆவலுள்ளவர்களும் இந்த அறிக்கைக்குச் சாதகமாக ஆதரவளிப் பார்கள் என்பது நமக்குத் தெரியும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையிலும், தேசீயமென்பதன் அர்த்த மெல்லாம் அரசாங்கத்தையும், அதிகாரத்திலிருப்பவர்களையும் யோக்கியப் பொறுப்பற்ற முறையில் வைவதும், அதன் மூலம் மூடப் பாமர மக்களிடம் செல்வாக்குப் பெறுவதும், அதன் பயனாய் சட்டசபைகளிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் பதவிபெறுவதும் அப்பதவியையே தங்களது வாழ்க் கைக்கு ஆதாரமாய் வைத்துக் கொள்ளுவதும் என்பது தான் இன்று நமது நாட்டில் தேசியமாய் விளங்கி வருகிறது. இதற்கு உதாரணம் வேண்டும ானால் இந்தியா வெங்கும் "மாசற்ற" தேசீயவாதியெனப் பேர் பெற்ற தோழர் சத்திய மூர்த்தியவர்களின் வாழ்க்கையையும், "ஜாதகத்தையும்" எடுத்துக் கொண்டு பார்த்தாலே மேலேகண்டபடி நாம் சொல்லுவது சரியா? தப்பா? என்பது யாவருக்கும் சுலபத்தில் விளங்கிவிடும். பிரசித்திப்பெற்ற இப்பெரிய தேசீயவாதியின் போக்கே இப்படியிருக்கும்போது மற்றபடி குட்டி தேசீயவாதிகளான மாகாண, ஜில்லா, தாலூகாக்களில் மாத்திரம் விளம்பரம் பெற்ற தேசீயவாதிகளைப் பற்றி நாம் விவரித்துக் கூறவேண்டியதில்லை.

நிற்க, இந்தியாவிலுள்ள இன்றைய தேசீயத்திற்கு என்ன கொள்கை இருக்கின்றது என்று எவருக்குத் திட்டமாய்ச் சொல்ல முடியும்? என்று யோசித்துப் பார்த்தால் மற்றொரு புரத்தில் காங்கிரஸ் தேசீயத்தின் யோக்கியதை என்ன என்பதும் வெளியாகும். உலகம் பூராவுமுள்ள தேசீயத் தில் என்ன இருக்கிறதோ அது தான் இந்தியாவிலுள்ள தேசியத்திலுமிருந்து வருகிறது. அது என்னவென்றால் தேசீயம் பேசி, பாமர மக்களை ஏமாற்றி ஒரு கட்சி அதிகாரத்திலிருப்பதும் மற்றொரு கட்சி தோன்றி தேசீயம் பேசி அதிகாரத்திலிருப்பவர்களைத் தள்ளி விட்டு தாங்கள் போய் அதிகாரத் திலிருக்க முயற்சிப்பதும், அப்படி முயற்சிக்கும் கட்சி ஒவ்வொன்றும் தங்களைத் தேசீயக் கட்சி என்று சொல்லிக் கொண்டு அதிகாரத்திலும் பதவியிலுமிருப் பவர்களை சதா வைது கொண்டிருப்பதும் தான் தேசீயக் கட்சி என்பதன் திட்டங்களாயிருந்து வருகின்றன.



ஆனால் எல்லா தேசீயக் கட்சியும் பாமர ஜனங்கள் நம்மைக்காகவும் ஏழை ஜனங்கள் நன்மைக்காவும் பாடுபடுவதாகவே சொல்லிக்கொண்டு பாமர ஜனங்களுக்கும், ஏழை ஜனங்களுக்கு முள்ள குறைகளை எடுத்து வர்ணித்து ஏமாற்றுவதையே பிரசாரமாய் கொள்வதாய் இருக்குமானாலும், கக்ஷி ஜெயித்து அதிகாரமும், பதவியும் பெற்று விட்டால் அவர்களுக்காக என்ன செய்வது என்பதற்கே திட்டமில்லாமல், அதன் பயன் முழுவதும் மேல் நிலையிலுள்ளவர்களும், தனிப்பட்ட நபர்களும் மாத்திரம் பயன் அனுபவிப் பதாய் இருந்து வருவதையேதான் நாம் கண்கூடாகப் பார்த்து வருகின்றோம்.

இந்திய தேசீய காங்கிரசும், காந்தீயமும் இந்தக் கொள்கையிலும், திட்டத்திலிருந்து சிறிது விலகினதல்ல என்பதே நமது முடிபு.

உதாரணமாக, காந்தியாரின் கதர் திட்டத்தைப் பற்றி நாம் அதிகம் விளக்க வேண்டியதில்லை. ஏனெனில் ஏழைகளைக் காப்பாற்ற இது தான் வழி என்று அவர் முடிவு செய்து விட்டார். ஆகவே அதன் யோக்கியதை தானாக விளங்கும். தீண்டாமை விலக்கு என்பதின் தத்துவம் எல்லாம் காந்தி யாருக்கு ஹிந்து மதத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதையே பிரதான மாய்க் கொண்டது என்பது யாரும் அறிந்ததேயொழிய இதில் ரகசியம் ஒன்றுமில்லை.

மதுவிலக்கு என்பது ஏழைக் கூலி ஜனங்களின் செல்வாக்கைப் பெறச் செய்யப்படும் சூழ்ச்சியேயல்லாமல், தோழர் காந்தியார் மதுவிலக்குக் காகக் கையாளும் முறையால் மதுவிலக்கு ஏற்படாது என்பதும், மதுவை அடியோடு ஒழித்துவிட முடியாது என்பதும் அதுவிஷயத்தில் அவர் இது வரை கையாண்ட முறைகள் எல்லாம் தோல்வியே அடைந்திருக்கிறது என்பதும், அவரே நன்றாய் உணர்ந்ததாகும்.

மற்றப்படி அன்னியத் துணி பகிஷ்காரம் என்பதெல்லாம் ஆலை முதலாளிகளுக்கு லாபம் கொடுத்து வந்திருக்கிறது என்பதைத் தவிர, அதற்குப் பதிலாக முதலாளிகள், பகிஷ்காரப் பிரசாரத்துக்கு ஏராளமாய் பணம் உதவி வருகிறார்கள் என்பதைத் தவிர வேறு ஒரு பயனும் கண்டு விடவில்லை.

மற்றும் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைப் பிரசாரத்தின் தத்துவமும், ஒவ்வொரு மதமும் தன் தன் சுயநலத்தையே பிரதானமாய்க் கருதவும் மதவெறியை அதிகமாக்கவும் ஒன்றுக்கொன்று அவநம்பிக்கை கொண்டு என்றும் ஒற்றுமையாவதற்கு மார்க்கமில்லாமல் தனித் தனியே தலைவிரித் தாட ஏற்பட்டதல்லாமல் அதிலும் எவ்வித பயனும் ஏற்படுவதற்கில்லை.

இவை ஒரு புரமிருக்க சாத்தான் தன்மைகொண்ட சர்க்காரை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்து அதையொழித்து விடுவது என்று சொல்லிக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டு, சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு முதலிய காரியங்களெல்லாம் காந்தியாரைப் பற்றிய ஒரு விளம்பரத்துக்கும் பாமர ஜனங்களிடையே ஒருபோலி – உயிரற்ற கிளர்ச்சி ஏற்பட்டு யேற்றப்பட்டு சோர்வும், அவ நம்பிக்கையும் அடைய வுந்தான் பயன்பட்டதே தவிர ஒரு அளவுக்காவது சாத்தான் அரசாங்கத்தை அசைக்கவோ, அல்லது அது இக்கிளர்ச்சிகளை லட்சியம் செய்யவோ தக்க மாதிரியில் இதுவரை பயன்படவில்லை. ஒரு சமயம் சர்க்கார் ஏதாவது தாங்கள் இதை லட்சியம் செய்ததாக காட்டிக் கொண்டிருப்பார்களே யானால் அது போலித்தனமாய் பாமர மக்கள் ஏமாறு கின்றதற்காக காட்டிக்கொண்டிருக்கக் கூடியதாய் இருக்குமே தவிர வேறில்லை. ஏனென்றால் இந்த சத்தியாக் கிரகத்தால் தாங்கள் மிகவும் பயந்துவிட்டதாகக் காட்டிக் கொண்டால் தான் கஷ்டப்படும் மக்கள் வேறு வழியில் பிரவேசிக்காமல் இந்தப் பைத்தியக்காரத் தனத்திலேயே முழுகி இருப்பார்கள் என்கின்ற எண்ணத்தைக் கொண்டு அவர்கள் பயந்தவர்கள் போல் நடித்திருக்கலாம். அல்லது தங்களை ஆதரித்து நிற்கும் ஜனங்களுக்கு ஒரு போலித் திருப்தியை உண்டாக்க வெண்ணி அப்படி நடந்து இருக்க லாமே ஒழிய ஒரு நாளும் சத்தியாக்கிரகக் கொள்கையோ, தேசீயக் கொள் கையோ எதுவும் இது வரையில் சர்க்காரை லட்சியம் செய்யும்படி செய்யவே யில்லை என்று தைரியமாய்ச் சொல்லு வோம். அன்றியும் இம்மாதிரி ஒரு போலி இயக்கம் நாட்டில் இருந்துகொண்டு ஜனங்களின் உணர்ச்சிகளையும், ஊக்கத்தையும் கவர்ந்து பாழாக்கிக்கொண்டு வருவதில் சர்க்காருக்கும், முதலாளிமாருக்கும் எவ்வளவோ லாபகரமான காரியம் என்று சொல்ல வேண்டும். ஆனால், இதற்காகக் கஷ்டப்படுவதும், நஷ்டப்படுவதும் பாமர ஜனங்களே ஒழிய மற்றபடி முதலாளிமார்களோ உத்தியோகஸ்தர்களோ சர்க்காரோ சிறிதுகூட இல்லவே இல்லை.

இந்தப் போலிக் கிளர்ச்சியை அடக்க அரசாங்கத்தார் எடுத்துக் கொள்ளும் போலி முயற்சிக்கு செலவழிக்கப்படும் காரியங்களுக்குச் செய்யப் படும் செலவுகளுக்கு ஆக ஜனங்களின் வரிப்பணமே செலவழிக் கப்படுகின்றது. இந்த வரியால் பணக்காரர்களுக்கு எவ்வித நஷ்டமும் ஏற்பட்டு விடுவதில்லை. ஆனால் புதிய வரிகளாலும் ஜனங்களுக்குச் சர்க்கார் செய்ய வேண்டிய கடமைகளைக் குறைப்பதாலும் ஏழை ஜனங் களும் நடுத்தர ஜனங்களுமே கஷ்டப்படுகிறார்கள்.

ஆதலால் பாமர ஜனங்கள் இது வரை தாங்கள் முட்டாள்தனமாய் ஏமாந்து முதலாளி ஆதிக்கத்துக்கு தூணான தேசீயப் பித்துக்கொண்டு அலைந்த முட்டாள் தனத்தை விட்டுவிட்டு எப்படி நடந்தால் முதலாளி தத்துவம் ஒழிக்கப்படும் என்றும், எப்படி நடந்தால் முதலாளி தத்துவ ஆட்சி அழிக்கப்படும் என்பதையும் கவனித்துப் பார்த்து அதற்கு ஏற்ற கொள்கை கொண்ட இயக்கத்துக்குப் பாடுபடும்படியும் அதற்குத் தங்களால் கூடிய சர்வ தியாகங்களையும் செய்யும் படியும் வலியுறுத்துகின்றோம்.



மற்றபடி ஒரு காதொடிந்த ஊசிக்கும் பயனில்லாமல் காந்தியாருக்கு உலக விளம்பரம் சம்பாதித்துக் கொடுப்பதிலும் சோம்பேறிகளாய் இருந்து ஒரு சிலர் வாழ வாழ்க்கை ஏற்படுத்திக் கொடுக்கும் தேசீயத்துக்கு ஆக்கம் தேடிக் கொடுப்பதிலும் ஏழைமக்களும் சரீரத்தால் உழைத்து பாடுபட்டுப் பிழைக்கும் மக்களும் கலந்துகொள்ளுவது என்பது தற்கொலையே ஆகும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு – தலையங்கம் – 06.08.1933**



RangaRakes tamilnavarasam.com

# சுயமரியாதைக்காரனுக்கும் புராணமரியாதைக்காரனுக்கும் சம்பாஷணை

**– சித்திரபுத்திரன்**

**சு-ம:-** ஒரு மனிதன் உயர்தரப்படிப்பு அதாவது பி.ஏ., எம்.ஏ., ஐ.சி.எஸ் முதலிய படிப்புப் படித்து பட்டதாரியாயிருப்பதற்கும் மற்றும் தொழில் சம்மந்தமான படிப்பில் நிபுணத்துவம் பெற்று இருப்பதற்கும், மற்றொரு மனிதன் அவற்றை அடையாமல் தன் கையெழுத்துப் போடக்கூடத் தகுதியில்லாமல் இருப்பதற்கும் என்ன காரணம் சொல்லுகிறாய்?

**பு-ம :-** அவனுக்குப் போதிய அறிவு இல்லாமல் இருக்கலாம். ஆதலால் அவன் அவற்றை கற்க முடியாமல் போயிருக்கும்.

**சு-ம :-** அப்படிச் சொல்ல முடியாது. இதோ பார் இந்த மனிதனை, அவன் எவ்வளவு சுருசுருப்பாகவும், புத்திசாலித்தனமாய் பேசக்கூடியவனாகவும், மண்வெட்டுவதிலும், பாரம் சுமப்பதிலும், கோடாரியால் விறகை வெட்டுவதிலும் எவ்வளவு புத்திசாலித்தனத்தைக் காட்டுகிறான். நாம் நான்கு பேர் சேர்ந்தால் கூட செய்ய முடியாத வேலையை அவன் ஒருவனே செய்வது எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது பார். இப்படிப்பட்டவனை புத்தியில்லாதவன் என்று சொல்லிவிட முடியுமா? ஆதலால் இவனுக்கு அறிவு இருக்கிறதே இவன் ஏன் பட்டதாரியாகவில்லை?

**பு-ம :-** அப்படியானால் அவன் தாய், தந்தையர்கள் இவனைப் படிக்கப் போதிய கவலை எடுத்துக் கொள்ளாமலிருக்கலாம்.

**சு-ம:-** இதோ, அவன் தகப்பனார் வந்துவிட்டார். அவரைக் கேட்டுப் பார். அவர் தன் மகன் படிக்க வேண்டுமென்ற ஆசையுடன் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பார்த்ததாக தானே சொல்லுகிறார். அப்படியிருந்தும் ஏன் அவர் குமாரன் படிக்கவில்லை?

**பு-ம :-** ஒரு சமயம் அவர் குமாரனுக்குப் படிக்கவேண்டுமென்ற கவலையில்லாமலிருந்திருக்கலாம்.



**சு-ம :-** அப்படியும் சொல்ல முடியவில்லையே. அவர் மகனைக் கூப்பிட்டுக் கேட்டுப்பார். அவன் தான் படிக்கவேண்டுமென்று எவ்வளவோ ஆசைப்பட்டு அலைந்து திரிந்து பார்த்ததாகவும், காரியம் கைகூடாமல் போய்விட்டதாகவும் சொல்லுகிறானே இதற்கென்ன சமாதானம் சொல்லுகிறாய்?

**பு-ம :-** அப்படியானால் அதாவது மகனும் புத்திசாலியாயிருந்து, தகப்பனுக்கும் தன் மகன் படிக்கவேண்டு மென்கின்ற ஆசையும் இருந்து பிள்ளையும் படிக்க ஆவலுள்ளவனாய் இருந்து படிக்காதவனாயிருக்கிறான் என்றால் ஒரு சமயம் அவன் தகப்பனுக்கு தன் பிள்ளையைப் படிக்க வைக்கப் பணம் இல்லாமலிருந்திருக்கலாம்.

**சு-ம :-** இதுதான் சரியான பதிலாகும். அப்படியானால் அவன் தகப்பனுக்கு ஏன் பணமில்லாமல் போய்விட்டது?

**பு-ம :-** இது ஒரு கேள்வியாகுமா? பணம் என்பது அவனவன் பாடுபட்டுச் சம்பாதித்திருக்க வேண்டியதாகும்.

**சு-ம:-** சரி என்றே ஒப்புக்கொள்ளுகிறேன். இந்த மனிதன் பாடுபடவில்லை என்று நீ சொல்லுகிறாயா? இந்த மனிதன் கல் உடைக்கிறார், இவர் சம்சாரம் விறகு கொண்டு வந்து விற்கிறார், வெளியில் வேலைக்குப் போய் வந்த நேரம் போக மீதி நேரத்தில் பெரிய கட்டைகளை வீட்டில் போட்டு கோடாரி கொண்டு பிளந்து சிறு சிறு சுமையாக அழகாகக் கட்டி வைக்கிறார். போதாக்குறைக்கு இவரின் தாயார் வயது சென்ற கூன் விழுந்த கிழவியம்மாள் புட்டும், முருக்கும் சுட்டு வீட்டுக்கு முன்னால் இருந்து விற்றுக் கொண்டே யிருக்கிறார்கள். இரவில் 4 மணி நேரம் மாமியும், மருமகளும் தினம் ராட் டினத்தில் நூல் நூற்றுக்கொண்டே இருக்கிறார்கள். இப்படியெல்லாம் இருக்க இவர்கள் பாடுபடவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

**பு-ம:-** இதெல்லாம் சரிதான். என்ன பாடுபட்டாலும் பணம் சேருவதற்கு பிராப்தம் வேண்டாமா? ஜன்மாந்திர கர்ம பலன் அதற்கு அனுசரணையாக இருக்க வேண்டாமா? பையனுக்கும் அவன் தலையெழுத்து பலமாயிருக்க வேண்டாமா? இவ்வளவும் இருந்தாலும் பகவானுடைய அனுக்கிரகமும் தாராளமாய் இருக்க வேண்டாமா? இவ்வளவு சங்கதிகள் தேவை இருக்கும் போது "பையன் கெட்டிக்காரன், புத்திசாலி, தகப்பனுக்கும் படிப்பிக்க ஆசையிருந்தது, குடும்பத்திலும் பெற்றோர்கள் ஆளுக்கொரு கஷ்டப்பட்டார்களே, இப்படியெல்லாம் இருந்தும் பையன் ஏன் படிக்க வில்லை" என்றால் இது என்ன கேள்வி? இவை எல்லாம் என்ன நம்முடைய இச்சையா? அப்படியானால் நான் ஆகாயத்தில் பறக்க வேண்டுமென்றால் பறந்துவிட முடியுமா? நான் ராஜா



RangaRakes tamilnavarasam.com

ஆகவேண்டுமென்றால் ஆகிவிட முடியுமா? நான் மகாத்மா ஆகவேணும் என்று ஆசைப்பட்டால் ஆகிவிட முடியுமா? நமக்கெல்லாம் மேலாக ஒன்று இருந்து கொண்டு நம்மை நடத்துகின்றது என்கின்ற ஆஸ்திக ஞானத்தை உணர்ந்தோமேயானால் இப்படிப்பட்ட நாஸ்திக உணர்ச்சிக் கேள்விக்கெல்லாம் இடமே இருக்காது.

**சு-ம:-** அப்படியா சங்கதி, சரி உன் கடையைக் கட்டு. நான் சொல்வதை சற்று கவனமாய்க் கேள். பிறகு உன்னுடைய ஆஸ்திக ஞானத்தின் யோக்கி யதையைப் பார்ப்போம்.

**பு-ம:-**சரி சொல்லு பார்க்கலாம்.

**சு-ம:-** ஒரு ஆயிரம் ஏக்கரா பூமியும், 250 வீடுகளும், 1000 ஜனங்களும் உள்ள ஒரு கிராமத்தை எடுத்துக்கொள்ளுவோம். அந்த பூமியும், அந்த வீடுகளும் அங்குள்ள மற்ற செல்வங்களையும், வியாபாரங் களையும் அந்த ஒரு ஆயிரம் ஜனங்களுக்கும் பொதுவாக்கி விடுவோம். அந்த ஆயிரம் பேர்களுடைய வாழ்க்கைக்கும், அனுபவங்களுக்கும் வேண்டிய சாதனங்கள் என்ன என்ன என்பதாக ஒரு கணக்குப் போட்டுப் பார்த்து அவைகளை யெல்லாம் அங்கேயே உற்பத்தி செய்ய ஒரு திட்டம் போட்டுக் கொள்ளுவோம். அதற்கு ஏற்ற தொழிற்சாலைகளைக் கட்டி அத் தொழிற்சாலையில் வயது வந்த எல்லா மக்களையும் ஆண், பெண் அடங்க லும் எவ்வளவு நேரம் வேலை செய்தால் போதுமோ அவ்வளவு நேரம் வேலை செய்தாக வேண்டும் என்று ஒரு ஏற்பாடு செய்து கொள்ளுவோம். அவர்களுடைய குழந்தைகளை எல்லாம் ஒரு இடத்தில் கொண்டு வந்து சேர்த்து அவர்கள் எல்லோரையும் ஒரே மாதிரியாக ஆகாரம், துணி முதலிய வைகள் கொடுத்து ஒரே மாதிரி போஷித்து எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட வயதுவரை ஒரே மாதிரியான கல்வியைக் கொடுத்து, கடவுள் செயல், மதம், முன் ஜன்ம பலன், தலைவிதி, தலையெழுத்து முதலிய வார்த்தைகள் அவர்கள் காதில் விழாமலும், அப்படிப்பட்ட எண்ணங்கள் அவர் மனதில் உதிக்காமலும் இருக்கும்படி ஜாக்கிறதையாய் காவல் வைப் போம். பிறகு அவர்களுக்கு 14 அல்லது 15 வயது ஆனவுடன் அவர்களு டைய இயற்கை ருசிக்கும், மனப்போக்குக்கும் ஏற்ற தொழிலையும்-வித்தை யையும் கற்றுக்கொடுப்போம். அவற்றில் அவர்கள் 18, 19 வயதுவரை அனு போகம் பெற்ற பிறகு அவரவர்களுக்கு ஏற்ற வேலை செய்யும்படி தொழிற் சாலைகளுக்கு அனுப்பிக் கொடுப்போம். இதன் பயனாய் உண்டா கும் பயனை அந்தக் கிராமத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் சரி பங்கு கிடைக் கும்படிக்கும், இந்த கொள்கைகொண்ட அந்த கிராம பஞ்சாயத்து நிர்வாகம் நடக்கும்படிக்கும் ஏற்பாடு செய்வதோடு ஒவ்வொரு மனிதனும் தன் பங்குக் குக் கிடைக்கக் கூடிய சாதனத்தை அவனவன் அனுபவித்தே தீரவேண்டுமே ஒழிய எவனும் மீதி வைக்கக்கூடாதென்றும் திட்டம் செய்வோம்.



மற்றும் நொண்டி, முடம், வேலைக்கு லாயக்கற்றது, வயது சென்றது ஆகியவர்களைப் போஷிக்க ஒரு திட்டம் போட்டு அதற்கு வேண்டிய அளவு சாதனங்களையும் தனித்தனியாக எடுத்து ஒதுக்கி வைத்துக்கொள்ளு வோம். பிறகு இந்தக் கிராமத்தில் உள்ள ஆயிரம் பேருக்கும் ஏதாவது அவசர காலங்களில் எதிரிகளால் தொல்லை ஏற்பட்டால் அதை சமாளிக்க பயிற்சி கொடுத்து அது மறந்து போகாமலிருக்கும்படி அடிக்கடி பரீக்ஷை செய்து வருவோம். இந்தக் கிராமத்தில் உள்ள 1000 பேருக்கும் வசிப்பதற்கு ஒரே அளவான இடம் கொண்ட வீடுகள் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கி விடுவோம். இந்த கிராமத்து ஜனங்கள் பூராவும் சந்தோஷம் அனுபவிக்கவும் நேரப் போக்கு உண்டாகவும், சுகாதார சௌக்கியமும், உலாவ நந்தவனமும் முதலிய போகபோக்கியங்களுக்கு ஏற்பட்ட சாதனங்களை கூடியவரையில் பொதுவிலேயே உற்பத்தி செய்து வைத்து இலவசமாகவே அனுபவிக்க உதவுவோம்.

ஆண் பெண் சேர்க்கைத் துணை விஷயங்களுக்கு அவரவர்களுக்கு இஷ்டப்பட்டவர்களுடன் மாத்திரம், இஷ்டம் உள்ள வரையில் மாத்திரம் துணைவர்களாயிருக்க ஏற்பாடு செய்வோம். ஆக, இவை முதலிய காரியங் களை ஒழுங்காக பாரபக்ஷமில்லாமல் நடத்தி வருவதாயிருந்தால் நீ மேலே சொன்ன **பிராப்தம், ஜென்மாந்திர கரும பலன், தலையெழுத்து, பகவா னுடைய அனுக்கிரகம், நமக்கு எல்லாம் மேலாக ஒன்று இருந்து கொண்டு நம்மை நடத்துகிறது** என்கின்றதான வார்த்தைகளுக்கும், கொள்கைகளுக்கும், எண்ணங்களுக்கும் இடமுண்டா என்று யோசித்துப் பார்.

*குறிப்பு:- இந்த சம்பாஷணையானது தனிவுடமைத் தத்துவத்தில் தான் கடவுள், கடவுள் செயல் முதலியவைகள் உண்டு என்றும், பொது உடமைத் தத்துவத்தில் அவைகளுக்கு வேலையில்லை என்றும், தனிவுடமைத் தத்துவத்தை நிலை நிறுத்தவே மேல்கண்ட கடவுள், கடவுள் செயல் முதலிய கற்பனைகள் ஏற்படுத்தப் பட்டு அது நிலை நிறுத்தப்பட்டு வருகின்றது என்பதையும் குறிப்பிடவே எற்பட்ட தாகும். மற்றபடி அரசியல் சம்மந்தமாக மற்றொரு சமயம் எழுதுவோம்.*

**குடி அரசு - உரையாடல் - 13.08.1933**



RangaRakes tamilnavarasam.com

## யந்திரத்தின் பெருமை

யந்திரங்களை எல்லாம் "பேயின்" அம்சம் என்று கூறி வந்த காலம் ஒன்று இருந்தது. அந்தக்காலம் மக்களுக்கு காட்டுமிராண்டி உணர்ச்சியைப் பரப்பப்பட்ட காலம் என்றே சொல்ல வேண்டும். அல்லது முதலாளித் தன்மையின் சூட்சிப் பிரசார காலம் என்றே சொல்ல வேண்டும். சுதந்திர அறிவை உபயோகித்து கூர்மையான ஆராய்ச்சி செய்தபின், எவருக்கும் பாமரத் தன்மையாலும் சூட்சிப்பிரசாரத்தாலும் ஏற்பட்ட தன்மைகள் மாறி விடும்.

உலகில் ஒவ்வொரு நாட்டிலும் இம்மாதிரியான பாமரத்தன்மையும் சூட்சி ஆதிக்கமும் இருந்து வந்ததெனினும் அவை அறிவுக்கு மதிப்புத் தோன்றிய பிறகு மறைந்துகொண்டே வருகிறது. பெரும்பாகம் மறைந்தும் விட்டது.

அதுபோல்தான் நம் இந்தியாவிலும் இன்னும் சில விஷயத்தில் காட்டுமிராண்டித் தன்மையும், பாமரத்தன்மையும்; புத்தியையும் அனுபவ பலன்களையும், உபயோகித்துப் பார்க்காத பல விஷயங்களும் இருந்துவரு கின்றன. அவற்றில் ஒன்றே யந்திரங்களைப் பேயின் தத்துவமென்பதும். இந்தத் தத்துவம் பெரும்பாலும் நீங்கிவிட்டதென்றாலும் சூட்சிப் பிரசாரத் தின் பயனாய் சிற்சில இடங்களில் இன்னும் சிறிது பேசப்பட்டே வருகின்றது.

யந்திரங்கள் பேயின் தன்மை என்று பலர் சொல்லி பிரசாரத்துக்கு ஆதாரமாய் எடுத்துக்காட்டப்படும் அத்தாட்சி என்னவென்றால் யந்திரமா னது குறைந்த நேரத்தில் அதிகமான சாமான்களை உற்பத்தி செய்து விடு கின்றதால் வேலை செய்து பிழைத்துத் தீரவேண்டிய ஜனங்களுக்கு வேலை இல்லாமல் போய் விடுகின்றது என்றும் அதனால் பல பேர் பட்டினி கிடக்க நேரிடு கின்றதென்றும் சொல்லப்படுவதாகும்.

இப்படிப்பட்ட கொள்கையை உடையவர்கள் அவ்வளவு பேரும் மனிதரில் ஒரு சாரார் (பெரும்பாலோர் கடவுள் சித்தத்தாலோ அல்லது வேறு காரணத்தாலோ) தூங்கவேண்டிய நேரம் போக மற்ற வாழ்நாள் அவ்வளவும் பாடுபட்டே சரீரத்தால் கஷ்டப்பட்டே ஜீவித்து வாழ வேண்டியவர்கள் என் கின்ற எண்ணத்தைக் கொண்டே பேசுகின்றவர்களாயிருக்கின்றார்களே ஒழிய வேறில்லை.



உலகத்தில் இந்தியாவைத் தவிர மற்ற நாடுகளில் பெரும்பாகமான நாடுகள் யந்திரப் பெருக்கு ஏற்பட்டு யந்திரப்பெருக்கு இல்லாத நாட்டின் செல்வங்களைக் கவர்ந்து செல்வம் பொங்கும் நாடுகளாகவே ஆகிவரு கின்றன; என்றாலும் அங்கெல்லாம் கூட ஜனங்களுக்கு வேலையில்லாக் கஷ்டம் இருந்து தான் வருகின்றது என்பதை நாம் ஒப்புக்கொள்ளு கின்றோம்.

ஆனால் மேற்குறிப்பிட்ட மற்ற நாடுகளிலுள்ள மக்கள் தங்களுக்கு வேலையில்லாமல் போனதற்காக யந்திரங்கள் காரணமென்று கருதி அதற்காக யந்திரங்களையெல்லாம் பேயின் தன்மை என்று சொல்லி அப்பேயை ஓட்டுவதற்கு ராட்டினத்தை உடுக்கையாய்க் கொண்ட ஒரு பூசாரியால் யந்திரங்களை உடைத்துக் குப்பையில் போட்டு விட்டு சரீரத்தால் (கைராட்டினத்தால்) பாடுபடும்படியான வழியை யாரும் பின்பற்றவில்லை. பின்னர் என்ன செய் கிறார்கள்-செய்தார்களென்று பார்த்தால் யந்திரங்களின் பெருமைகள் நன்றாய் விளங்கும்.

யந்திரங்கள் ஏற்பட்டதின் பயனாய் ஜனங்கள் கஷ்டப்பட்டு வேலை செய்யும் வேலைத் தன்மையை அது ஒழித்ததே தவிர பணவருவாய்த் தன்மையை அது ஒழித்துவிடவில்லை.

ஒரு தேசத்தில் மக்கள் கஷ்டப்பட்டு ஜீவிக்கவேண்டிய அவசியம் இல்லாமல் போய் விடுமேயானால் அதனால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஜனங்கள் கஷ்டப்படாமல் வாழவேண்டியதா? அல்லது கஷ்டம் இல்லாத தால் செத்துப் போகவேண்டியதா? என்பதை யோசித்தால் யந்திரத்தின் தன்மை இன்னது என்பது விளங்கிவிடும்.

ஆகவே யந்திரப்பெருக்கால் கொஞ்ச நேரத்தில் அதிக சாமான் உற்பத்தி ஆகின்றதென்றால் அது தொழிலுக்கு ஏற்பட்ட ஒரு லாபமே ஆனதால் அதனால் ஏற்படும் பயனை தொழிலாளியே அடைய வேண்டியது நியாயம் என்பது யாருக்கும் புலனாகும்.

ஆதலால் வேலையில்லாதவர்களுக்காகப் பரிதாபப்பட்டு மனம் இறங்கித் துக்கப்படும் மக்கள், தொழிலாளிகளுடைய உரிமையை அவர் களுக்கு வாங்கிக் கொடுக்க முயலாமல் தொழிலாளிகளின் உரிமையைக் கொள்ளைகொண்டு போகின்றவர்களிடம் கருணையும் தயவும் வைத்து அவர்களை (முதலாளியை) சும்மா விட்டு விட்டு அந்த முதலாளியை ஒழிப்ப தற்காக பட்டினி கிடந்து "விரதத்துடன்" விரட்டிக்கொண்டு போகும் தொழிலாளியைத் தடுத்து அவன் கையில் ராட்டினத்தைக் கொடுத்து உட்கார வைப்பதென்றால் இது தொழிலாளிகளை வஞ்சிப்பதாகுமா? அல்லது அவர் களுக்கு நன்மை செய்வதாகுமா? என்பதை யோசிக்க வேண்டுகிறோம். கூடிய சீக்கிரத்தில் இந்தியாவுக்கு விவசாயத்துறையிலும் யந்திரங்களே பெருகப் போகின்றது என்பது நமது நம்பிக்கையாகும்.



RangaRakes tamilnavarasam.com

விவசாயத்துக்கும் யந்திரமென்றால் விவசாயத்தை ஒரு "கைத் தொழில்" முறை போலவே பாவித்து விவசாயத்தில் உள்ள சகல வேலைக ளுக்கும், அதாவது உழுதல், விதைத்தல், நீர்ப்பாய்ச்சுதல், அருப்பு அறுத்தல், தாம்பு அடித்துத் தான்யமாக்கி மூட்டையில் போட்டுத் தைத்தல் ஆகிய காரியங்களை யந்திரங்கள் மூலமாகவே செய்விப்பதாகும். உழுவதற்கு ஏக்கர் 1 க்கு 2 மாடுகள், ஒரு கலப்பை, ஒரு ஆள்வீதம் நாள் கணக்காய் பாடுபடா மல், ஆயிரம் ஏக்கர், ஐநூறு ஏக்கர் கொண்ட விஸ்தீரணத்துக்கு ஒரு ஆளைக் கொண்ட ஒரு மோட்டார் கலப்பை (டிராக்டர்) வீதம் லக்ஷக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமிகளை சில நாள்களில் வெகு சில ஆட்களைக் கொண்டே உழவும். அதுபோலவே அறுப்பு அறுக்கவும், தானியமாக்கவும் ஆயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமிக்கு ஒரு மோட்டார் (கம்பூன் என்னும்) அருப்பு யந்திரத்தைக்கொண்டு சில நாளில் வெகுசில ஆட்களால் செய்யும்படியாகவும் செய்துவிட்டால் முதலில் வேலை செய்து கொண்டிருந்த லக்ஷக்கணக்கான ஆட்களுக்கு வேலைக்கு என்ன மார்க்கம் என்பதையும், அதுபோலவே லக்ஷக்கணக்கான மாடுகளுக்கு என்ன வேலை என்பதையும் பற்றி யந்திரத்தைப் பிசாசு அம்சமென்று சொல்லு கின்ற ராட்டின உடுக்கை கொண்டு யந்திரப்பிசாசுகளை ஓட்டும் பூசாரி களைக் கேட்கின்றோம்?

யந்திரங்களைத் துவேசிக்கின்ற ஒவ்வொருவரும், முதலாளி ஆதிக் கத்திற்கு அடிமையாகவோ-அல்லது முதலாளித்துவத்தை அறியாத ஞான சூன்யர்களாகவோ இருக்கின்றவர்களே தவிர சிறிதாவது தொழிலாளி (சரீரத்தினால் கஷ்டப்பட்டு உழைக்கும் மக்களின்) நிலைமையைக் கண்டு இறக்கப்படத் தகுதியுடையவர்களல்லவென்பதே நமது பலமான அபிப்பிராய மாகும்.

ஏனெனில் யந்திரப்பிசாசை ஓட்டும் பூசாரிகள் என்பவர்கள் மனிதனுக் குள்ள கஷ்டத்தை ஓட்டுவதற்குப் பதிலாக அவன் சுகப்படுவதற்கு அதாவது அவனுடைய கஷ்டத்தை அகற்றுவதற்கு ஏற்பட்ட சாதனத்தை ஓட்டப் பார்க்கிறார்களே தவிர வேறில்லை.

யந்திரம் கூடாதென்றால் மனிதனுக்கு அறிவு விர்த்தி கூடாது என் பதுதான் அதன் அருத்தமாகும். அப்படியானால் யந்திரங்களைப் பேயின் அம்சம் என்று சொல்லுவதைவிட யந்திரங்களைக் கண்டுபிடித்த ஞானவான் களைப் பேயர்கள் என்றும், கொடுமைக்காரர்கள் என்றும் கொலைக்காரர்கள் என்றும், அயோக்கியர்கள் என்றும், பாவிகள் என்றும் சொல்லி அவர்களை எல்லாம் தேடிப் பிடித்து ஒழித்துவிடுவதே நாம் கஷ்டப்பட்டு உழைத்து வாழவேண்டிய மக்களுக்கு செய்யும் அருந்தொண்டாகும் என்று கருதிவிடலாம்.



இது சற்றாவது அறிவுடைமையோ அல்லது யோக்கியமுடை மையோ ஆகிய காரியமாகுமா? என்று கேள்கின்றோம். நிற்க உலகில் கைத் தொழில்வகைக்கும் விவசாயத்தொழில்வகைக்கும் யந்திரங்களை உற்பத்தி செய்து யந்திரத்தால் செல்வம் பெருக்கிய, தேசங்களில் முதன்மையான தேசம் அமெரிக்காவேயாகும். அப்படிப்பட்ட அமெரிக்காவில்தான் கோடீஸ்வரர்களான ஆண்களும், பெண்களும் பலர் இருக்கின்றார்கள். மணிக்கு ஆயிரக் கணக்கான ரூபாய் வருமானமுள்ளவர்கள் அங்கு பலருண்டு என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். அந்தத் தேசமும் அன்னிய ஆட்சி என்பதிலிருந்து விடுபட்டு குடிகளுடைய ஆட்சி என்னும் குடி அரசு நாடாகவே விளங்கி வருகின்றது. இப்படியெல்லாம் இருந்தும் அந்தத் தேசத்தில் இன்று 2 கோடி பேர்களுக்குமேல் வேலை இல்லாமல் இருப்ப தாகப் பத்திரிக்கைகளில் காணப்பட்டது. இந்த 2-கோடி பேர்களில் வீடு வாசல் இல்லாமல் இரவில் முனி சிபல் ரிப்பேர் குழாய்களிலும் ஜலதாரை டிச்சு வளைவுகளிலும் தூங்கிவிட்டு பகலில் தெருவில் திரிகின்ற மக்களும் உண்டு என்று அமெரிக்கர் மூலமே கேட்டு அறிந்தோம். இப்படி எல்லாம் இருந்தும் அமெரிக்க வேலையில்லாத் தொழிலாளிகளோ அல்லது அவர் களிடம் அனுதாபமுள்ளவர்களோ ஒரு நாளும் யந்திரங்களை பேயின் அம்சம் என்று சொல்லிக்கொண்டு ராட்டின உடுக்கையின் மூலம் யந்திரப் பிசாசுகளை ஓட்ட முயலவே இல்லை.

பின்னர் என்ன செய்தார்கள் என்றால் வேலையில்லாத ஆட்களும் அவர்களது அனுதாபிகளும் முதலாளிகள் மேல் பாய்ந்தார்கள். சமதர்மக் கொள்கையை நாடுமுற்றும் பிரசாரம் பண்ணினார்கள். முதலாளிகளை துவேஷித்தார்கள். கஷ்டப்படும் மக்களுக்கு யந்திரங்கள் உதவி செய்ய ஏற்பட்டும் அதன் பயனை கஷ்டப்படும் மக்கள் அடையாமல் முதலாளிகள் அடைவதை நன்றாய் தொழிலாளிகள் உணர்ந்தார்கள். ஒன்றும் மார்க்கம் ஏற்படவில்லையானால் பொதுஉடைமைக் கொள்கை என்கின்ற ஒரு ஆயுதம் இருக்கின்றது என்பதை முதலாளிகளுக்கு எச்சரிக்கையாகக் காட்டினார்கள். இப்போது யந்திரப்பேய்களை ஓட்டாமல் யந்திரங்களை அழிக்காமல் யந்திரங்களை வெறுக்காமல் வேலையற்ற தொழிலாளிகளுக்கு வேலை கிடைத்துவருகின்றது. தொழிலாளிகளின் குறைகள் ராட்டினம் சுற்றாமலே பஞ்சாய் பறந்துவருகின்றது. ராட்டினம் சுற்றுவதில் ஆத்மசக்தி வளருகிற தென்றும் அது விஷ்ணுசக்கரமென்றும், அது சுற்றும்போது அதில் ஒரு ஓங்கார சக்தி புறப்படுகின்றதென்றும் அது வற்றாத சமுத்திரமென்றும் சொல்லும்படியான இந்த அவிவிவேக ஆபாசக் கற்பனைகள் ஒன்றும் அவர்களுக்கு (அமெரிக்கத் தொழிலாளிகளுக்கு) கற்பிக்காமலே வேலை யில்லாத் திண்டாட்டம் என்னும் "பேய்" 'நான் பிழைத்தேன் எங்களப்பன் பிழைத்தான்' என்று சொல்லாமல் ஓடிமறைந்து வருகின்றது. இந்த மூன்று மாதத்தில் 30 லட்சம் பேருக்கு வேலை கிடைத்துவிட்டது. இந்த வருஷ



RangaRakes tamilnavarasam.com

முடிவிற்குள் பாக்கி பேருக்கும் வேலை கிடைக்குமாம். இதன் காரணம் என்ன என்பதை அறிஞர்கள் யோசிக்க வேண்டு மென்பதுதான் நமது நோக்கமாகும்.

அதாவது ஒரே ஒரு காரியத்தால் தான் இவ்வளவு வேலையில்லாத பேர்களுக்கும் வேலை கிடைத்துவிட்டது. அந்தக் காரியம் என்னவென்றால் நாம் இந்த நான்கு வருஷகாலமாய் "குடி அரசில்" அவ்வப்போது குறிப்பிட்டு வந்த காரியமேயாகும்.

அதுதான் தொழிலாளிகள் செய்துவரும் வேலை நேரங்களை குறைக்க ஏற்பாடு செய்ததேயாகும்.

அமெரிக்க குடிஅரசு தலைவரான பிரசிடென்ட் ரூஸ்வெல்ட்டானவர் தம்தேசத்தில் அனேகருக்கு வேலை இல்லாத காரணத்தால் பொதுவுடமைக் கொள்கை பரவிவிடும் என்ற காரணத்தைக் கொண்டு தொழிற்சாலைகளில் இப்போது வேலை செய்துவரும் நேரத்தில் தினம் ஒன்றுக்கு ஆள் ஒன்றுக்கு சுமார் 1-மணி நேர வேலையை குறைத்தார். அதாவது ஒரு மனிதன் ஒரு வாரத்திற்கு (6-நாளைக்கு) சுமார் 45-மணி நேரம் வேலை செய்வதை வாரம் ஒன்றுக்கு 40 மணிநேரம்தான் வேலை செய்ய வேண்டும் என்பதாக உத்திரவு போட்டார். ஆள் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு 5-மணி நேரம் வேலை செய்வதைக் குறைத்ததின் மூலம் இந்த மூன்று மாதத்துக்குள் வேலையில்லாத முப்பது லட்சம் பேருக்கு வேலை கிடைத்துவிடும் என்றும், ஏறக்குறைய இந்த வருஷ முடிவிற்குள் வேலையில்லாத எல்லோருக்கும் வேலை கிடைத்து விடும் என்றும் அறிக்கைவிட்டுவிட்டார். இதற்கு காரணம் தொழிலாளிக ளுடைய கிளர்ச்சியேயாகும். அதோடு தொழிலாளிகள் பிறரை அதாவது சட்டசபைக்கும், ஸ்தல ஸ்தாபனத்துக்கும் போகவேண்டியவர்களும், மந்திரியாக வேண்டியவர்களும், தொழிலாளர்களை படிக்கட்டுகளாய் உப யோகித்துக் கொள்ளுபவர்கள் மூலம் தங்கள் கிளர்ச்சிகளைச் செய்யாமலும் தொழிலாளிகள் அல்லாத சோம்பேறி வாழ்க்கைக்காரரை தங்களுக்கு தலைவர்களாகவும், வழிகாட்டிகளாகவும் வைத்துக்கொள்ளாமல் பாடுபட்டு வந்ததாலுமே அவர்கள் (அமெரிக்க தொழிலாளிகள்) வெற்றிபெற்றார்கள். நம் நாட்டு தொழிலாளிகளுக்கு முதலாளிகள் அக்கிரமங்களை எடுத்துக் காட்டா மல் கடவுளின் பெருமையையும், மேல்உலக மோட்ச வாழ்க்கையின் அருமை யையும் பிரசாரம் செய்துவரப்படுகிறது. ஆனால் அமெரிக்க தொழிலாளிகள் கடவுளையும், மோட்ச வாழ்க்கையையும், துக்ஷமெனக் கருதி எல்லா மக்களுக்கும், எல்லாப்பொருளும் எல்லா சுகபோகமும் சமம் என்கின்ற பொதுவுடமைத்தத்துவம் போதிக்கப் பட்டு, அதை அவர்கள் கைக்கொண்டு வெற்றிபெற்றார்கள். இப்பொழுது நமது நாட்டு தொழிலாளிகளும், தொழி லாளர்களிடம் அபிமானமிருக்கும் தர்மப் பிரபுக்களும் பொதுவுடமைக் கொள்கையோ தலைவிதிக்கொள்கையையோ மறுப்பதிலோ பிரசாரம் செய்யாவிட்டாலும் "பிச்சை போடாவிட்டாலும், நாயைப் பிடித்துக்கட்டு" என்பதுபோல் இயந்திரங்கள் பிசாசின் அம்சம் என்கின்ற முதலாளித் தன்மைக்கு அனுகூலமான முட்டாள் பிரசாரத்தையாவது இனிச்செய்யாமல் இருக்கும்படிக்கும் செய்ய இடம் கொடுக்காமல் தொழிலாளிகளைப் பார்த்துக்கொள்ளும் படிக்கும் எச்சரிக்கை செய்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 13.08.1933**





RangaRakes
tamilnavarasam.com

# மீரத்கேஸ் அப்பீல் முடிவு பாராட்டத்தக்கதே

மீரத் சதி வழக்கு என்பது பொதுவுடைமைக் கொள்கையை பிரசாரம் செய்ததற்காக ஏற்பட்டதென்பதும், அதில் பொதுவுடைமைப் பிரசாரம் செய்த தாக ருஜுக்கள் விடப்பட்டிருப்பதோடு சில எதிரிகள் பொதுவுடைமைக் கொள்கை தங்களுடைய கொள்கை என்பதாக ஒப்புக்கொண்டிருப்பதும், அவ் வழக்கை சிறிதாவது கவனித்தவர்களுக்கு நன்கு விளங்கும். எதிரிகளின் வக்கீல்கள் சிலரின் வாதங்களிலும் இந்த விஷயங்கள் ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பதாய் காணப்படுவதும் விளங்கும். இப்படி எல்லாம் இருந்தும் பலருக்கு (மெஜாரிட்டியாருக்கு) விடுதலையாகியிருப்பதும், மற்றும் பலருக்கு மாதக்கணக்கிலும், ஒன்று இரண்டு வருஷக்கணக்கிலும் தண்ட னையைக் குறைத்து இருப்பதையும் கவனித்துப்பார்த்தால் பொதுவுடைமைக் கொள்கை விஷயமாக நமது மக்கள் பலருக்குள்ள பயமும், நடுக்கமும் நிவர்த்தியாகத் தக்க அம்சங்கள் பல அதில் மிகுந்து இருப்பதை உணரலாம்.

அதென்னவென்றால் **ஒரு மனிதன் பொதுவுடைமைக் கொள் கையை கொண்டவனாக இருப்பதும் அதை எடுத்து பிறருக்கு விளங்க உரைப்பதும் மற்றவர்களையும் பொதுவுடைமைக் கொள்கையை ஏற்றுக் கொள்ளும்படி பிரசாரம் செய்வதும் எவ்விதத்தும் குற்றமாகாது** என்பது விளங்கும்.

அன்றியும், பொதுவுடைமைக் கொள்கைப் பிரசாரமானது மேல் கீழ் லோகம் உண்டு என்பதை மக்களுக்குப் பிரசாரம் செய்வதை விடவும், முன்பின் ஜென்மங்கள் உண்டு என்று பிரசாரம் செய்வதைவிடவும், செத்த பின் மனிதன் மறுபடியும், அதே சரீரத்தையும், அதே "உயிரை" யும் கொண்டு எழுப்பப்படுவான் என்று பிரசாரம் செய்வதை விடவும், மனிதனுக்கு முன் ஜென்ம கர்ம பலனாலும், கடவுள் அருளாலும் செல்வம் சேருகின்றதும் முன் ஜென்ம கர்மவினையால் தரித்திரனாய் இருக்கிறான் என்று பிரசாரம் செய் வதை விடவும், பெண்கள் ஆண்களுக்கு அடிமை என்றும் அவர்கள் உரை போட்டு மூடிவைக்க வேண்டியவர்கள் என்றும்,



RangaRakes

அவர்களுக்கு தங்கள் இஷ்டப்பட்ட புருஷனைச் சேர உரிமை இல்லை என்றும் ஆண்களுக்கு தங்களுக்கு இஷ்டப்பட்ட பெண்களைச்சேர- ஒருஅளவு வரையிலோ அல்லது எவ்வளவு பேர் வேண்டுமானாலும் அவ்வளவு பேரையும் சேர உரிமை உண்டு என்றும் பிரசாரம் செய்வதைவிடவும், மனித வகுப்பில் 4 வருணம் உண்டு என்றும், ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு தொழில் உண்டு என்றும் அது தலைமுறை தலைமுறையாய்ப் பார்த்து வரவேண்டிய தொழில் என்றும், மனித ஜாதியில்- மேல் கீழ் ஜாதி தீண்டாத ஜாதி முதலியவைகள் உண்டு என்றும் பிரசாரம் செய்வதைவிடவும், பொதுவுடைமைக்கொள்கை பிரசாரமானது-அதாவது உலகிலுள்ள செல்வங்கள், போகபோக்கியங்கள் மக்களின் தேவைக்கான சாதனங்களுக்காக உழைக்க வேண்டிய உழைப்பு கள், மக்கள் எல்லோருக்கும் பொது என்றும் சரி சமத்துவ பங்கு உண்டு என்றும் பிரசாரம் செய்வது முட்டாள்தனமானதென்றோ, கொடுமையான தென்றோ, அயோக்கியத்தனமானதென்றோ நம்மால் ஒரு நாளும் சொல்ல முடியாது என்பதுடன் எந்த முட்டாள் அரசாங்கத்தாலும், கொடுங்கோன்மை அரசாங்கத்தாலும்கூட பொதுவுடைமைக் கொள்கையைக் குற்றமானது என்று சொல்லவும், அதற்காகத் தண்டிக்கவும் முடியாது என்பதும் நமது கெட்டி யான அபிப்பிராயமாகும்.

பொதுவுடைமைக்கொள்கை சட்டவிரோதமானதென்றும், நியாய விரோதமான தென்றும், மத விரோதமான தென்றும், கடவுள் உணர்ச்சிக்கு விரோதமான தென்றும், கூப்பாடு போடுகின்றவர்கள் எல்லாம் முதலாளிக் கூட்டமும், சோம்பேறிக்கூட்டமும், அவர்களது கூலிகளுமே தவிர மற்றப்படி சமநோக்கும், சுதந்திர உணர்ச்சியும், நீதி ஆட்சியும், கொண்ட மக்களின் கூப்பாடுகள் அல்ல என்பதே நமது அபிப்பிராயம்.

பொதுவுடைமைக் கொள்கையைப் பிரசாரம் செய்வதால் யாதொரு "கெடுதி" யுமே அடியோடு நேர்ந்துவிடாது என்பதாக நாம் சொல்லவர வில்லை. யாதொரு பாடும்படாத சோம்பேறிகளின் ஆதிக்கமும், அவர் களது செல்வப்பெருக்கும் ஒழியலாம். கோயில்கள், சோம்பேறிகளை வளர்க் கும் அன்னசத்திரங்கள், சோம்பேறிகளின் தலைவர்களான குருக்கள், பண்டாரங்கள் பாதிரிகள் ஆகியவர்களின் மடங்கள் இடிபடலாம். முதலாளி வர்க்கத்தினர்களின் ஆட்சிக்கும், ஏகாதிபத்தியத்தன்மைக்கும் முடிவுகாலம் கிட்டலா மென்பது உறுதியாகும். ஆனால், இதனாலெல்லாம் பொது ஜனங் களுக்கு-அதாவது சரீரத்தினால் கஷ்டப்பட்டு உழைத்து வாழும் ஜனங்களுக்கு என்ன கெடுதி உண்டாகக்கூடும். ஆதலால் பொதுவுடைமைப் பிரசாரம் செய்யப்படுவதாலும் அதை மக்கள் கைக்கொண்டு அது பயன் பெறுவதற்கேற்ற முறைகளைக் கையாண்டு வேலை செய்து வெற்றி அடைவதினாலேயும் யாதொரு குற்றமும் இல்லை எனக்கருதியே பொதுவுடைமைப் பிரசாரம் செய்ததாகவோ, அதில் சம்மந்தப்பட்டதாகவோ



tamilnavarasam.com

கருதி பல எதிரிகளை விடுதலை செய்திருக்கிறார்கள்.

முதலாளித்துவ ஆட்சியில் இவ்வளவு நியாயமாவது கிடைத்ததற்கு நாம் நியாயாதிபதிகளை பாராட்டாமல் இருக்கமுடியாது.

ஒரு சமயம் இவர்கள்-அதாவது பொதுவுடமைப் பிரசாரம் செய்த மக்கள் விடுதலை ஆகாமல் கடுந்தண்டனை தண்டிக்கப்பட்டார்கள் என்றோ, தூக்கிலிடப் பட்டார்கள் என்றோ வைத்துக் கொள்ளுவோம். 200 கோடி மக்கள் உள்ள உலகத்தில் அல்லது 35 கோடி மக்கள் உள்ள இந்தியா வில் ஒரு 27 பேர்களையோ அல்லது 270 பேர்களையோ அல்லது 2,700 பேர்களையோ அல்லது 27,000 பேர்களையோ அல்லது 2,70,000 பேர்களை யோ தூக்கி லிடுவதால் உலகம் மறைந்து போகுமா? அல்லது ஒரு கோடு தாழ்ந்து போகுமா? என்று யோசித்துப்பாருங்கள்.

வருஷம் ஒன்றுக்கு வெள்ளம், புயல்காற்று, பூகம்பம் ஆகியவை களாலும், காலரா, பிளேக், வைசூரி, க்ஷயம் முதலிய தொத்து வியாதிகளாலும் சாகின்ற மக்கள் எத்தனைபேர்; துஷ்டமிருகங்களாலும், ஜெந்துக்களாலும் சாகின்ற மக்கள் எத்தனைபேர்; இவர்கள் இப்படி சாவதால் உலகுக்கோ, மனித சமூகத்துக்கோ என்ன நன்மை ஏற்படுகின்றது என்று சிந்தித்துப் பாருங்கள். பயனற்ற காரியத்துக்கும், வேஷத்துக்கும் தற்பெருமைக்கும், கஷ்டப்பட்டு உயிர்விடுவதைவிட ஒரு புதிய உலகத்தையே சிருஷ்டித்து வைத்து மனித ஜீவர்களின் மனவேதனையையும், சரீர வேதனையையும் நீக்குவதற்காக உயிர்விடும் பேற்றைவிட ஒரு நாட்டுக்கோ, ஒரு மனிதனுக்கோ வேறு பேறு இல்லை என்றே சொல்லுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.08.1933**



# தொழிலாளிகள் தொண்டு

இயந்திர ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஏதாவது உதவி செய்யவேண்டுமானால் இன்றைய நிலையில் தொழிலாளி களுக்கு வேலை நிறுத்தம் செய்யும்படி போதிப்பதிலேயே உண்மையான அனுகூலம் ஏற்பட்டுவிடாது.

தொழிலாளிகளுக்கு, மில் ஏஜண்டுகளும், நிர்வாகிகளும் அடிக்கும் கொள்ளையைப்பற்றி விளக்கிக் காட்டவேண்டும். ஏனென்றால் தொழிற் சாலைகளில் முதல் போட்ட முதலாளிகள் அடையும் லாபத்தைவிட நிர்வாகி களும், உத்தியோகஸ்தர்களும் அடிக்கும் கொள்ளையே அதிகம். நிர்வாக ஏஜெண்டுகளுக்கு பொருப்புக் கிடையாது. உதாரணமாக ஒருவர் துணி நெய்யும் ஆலையையோ, ஒரு நூல் நூற்கும் ஆலையையோ ஏற் படுத்தி விட்டாரேயானால் அதன் நிர்வாக ஏஜெண்டு என்கின்ற முறையில் தனக்கு ஒருசம்பளம், கமிஷன் முதலிய லாபங்களை ஏற்படுத்திக் கொள் ளுகிறார். இவருக்கு இந்தச் சம்பளமும், கமிஷனும் மில்லுக்கு லாபம் வந்தா லும் நஷ்டம் வந்தாலும் அதைப்பற்றி பொருப்பு இல்லாமல் கிடைத்து வரும்படி ஏற்பாடு செய்துகொள்ளுகிறார். இது தவிர சுயநலமாகவும், நம்பிக்கைத் துரோகமாகவும் மற்ற தனது நண்பர்களுக்கு அல்லது தனக்குப் பலபேர்களில் வேண்டியவர்கள் என்பவர்களுக்கு நன்மை செய்யவேண்டும், தாக்ஷண்யம் காட்ட வேண்டும் என்பதற்காகவும் நடந்துகொள்ளும் முறை யில் ஆலைக்கு ஏற்படும் நஷ்டம் அதிகமாக ஏற்பட்டுவிடுகின்றது. மில் லின் ஏஜண்டு தொழில் அனுபோகம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தொழில் பார்ப்பதில் தனக்கு அதிக தொந்திரவு இல்லாமலிருப்பதற்காக வேறு பல நிர்வாகஸ்தர் களை நியமிப்பதில் அதிக சம்பளம் கொடுத்து மில் லுக்கு நஷ்டம் உண்டாக்கி விடுகின்றார். மற்றும் மானேஜர், இஞ்சினீயர் என்பவர்கள் போன்ற உத்தி யோகஸ்தர்களுக்கும் அதிக சம்பளம் கொடுப் பதில் மில்லுக்கு நஷ்டம் உண்டாக்கி விடுகின்றார். மில் ஏஜண்ட் அதாவது மேனேஜிங் ஏஜண்டு என்பவர் உத்திரவாதம் இல்லாத நிலையில் தனக்கு ஏராளமான வருவாயை உண்டாக்கிக் கொண்டிருப்பதோடு சாயந்தரம் 4- மணிக்கு மோட்டார்காரில் ஆபீசுக்கு வந்து 4, 5 கடிதங்களில் கையெழுத் தைப் போட்டுவிட்டு நேரே அங்கிருந்து கிளப்புக்குப் (club) போய்விடுவார். அங்கு டென்னிஸ், சீட்டு (சூது) ஆட்டம் ஊர்பெரியதன உற்சாகப்பேச்சு



RangaRakes tamilnavarasam.com

மற்றும் சில காரியங்களில் கேளிக்கை முதலிய உல்லாச வாழ்க்கையில் அதிகக் கவலைகொண்டு வாழ்ந்துவருவார்.

மில் சம்மந்தமாகத் தனது சகல காரியங்களை ஆதரிக்கவும், தனது திறமையைப்பற்றி புகழவும் தன் இஷ்டப்படி சில டைரக்டர்களை தெரிந் தெடுத்து அவர்களில் சிலருக்கும் ஏதோ சிறிதளவு மில் ஆலையின் சம்மந்த மாக தாக்ஷண்யம் காட்டிவரவேண்டும். இவ்வளவு அக்கிரமச் செலவுகளும் பொருப்பற்ற காரியங்களும் நிர்வாக துஷ்பிரயோஜனங்களும் தாண்டி மில்லுக்கு பங்கு போட்ட முதலாளிமாருக்குப் போட்டி போட்டுக் கொண்டு லாபம் பங்கிட்டுக் கொடுக்கமுயல வேண்டும். ஆகவே இவைகளுக் கெல்லாம் யார் தலையிலாவது கையைவைத்துத் தீரவேண்டியதாய் நேரிடு கிறது என்பதை விளக்கிக்காட்டி தொழிலாளர்களுக்குப் போதிக்க வேண்டும். தொழிலாளிகளே நேரில் சட்டசபை, ஸ்தல ஸ்தாபனங்கள் முதலியவை களுக்குப் போய் அவர்களது நன்மைக்கு ஏற்ற சட்டங்களையும், சௌகர் யங்களையும் செய்து கொள்ளக் கற்பிக்கப்படவேண்டும். முதலாளிகளுக் கும் -தொழிலாளிகளுக்கும் மத்தியில் இருக்கும் தரகர்களை ஒழிக்கும்படிக் கும், சர்க்காருக்கும்-தொழிலாளிகளுக்கும் மத்தியில் இருக்கும் தரகர்களை யும் ஒழிக்கும்படிக்கும் தொழிலாளிகளுக்கு கற்றுக் கொடுத்தால்தான் அவர்கள் தங்களுக்கும், தங்களால் செய்யப்பட்ட வேலையின் பயனாய் ஏற்பட்ட சாமான்களை வாங்கி அனுவிப்பவர்களுக்கும் இடையில் உள்ள தரகர்களை ஒழிக்கமுடியும். தொழிலாளர் நன்மை, தொழிலாளர் விடுதலை, தொழிலாளர் சுதந்திரம் என்பதின் ரகசியமெல்லாம் தரகர்களை ஒழிப்பதிலும் அழிப்பதிலுந் தான் இருக்கின்றதே யொழிய வேறு எதிலுமில்லை. இந்த உண்மையை அறிந்த தொழிலாளி தான் தனது உலகத்தை ஆளமுடியும். அப்படிக் கில்லாதவரையில் “சுயராஜ்யத்தில் தான்” அதாவது தேசீய முதலாளிகளின் ஆக்ஷியில்தான் தொழிலாளியாய் இருக்க முடியும்.

## சமூகத்தொண்டு

நாம் ஏதாவது மனித சமூகத்துக்கு தொண்டு செய்யவேண்டுமானால் வைதீகர்களுடைய கொடுமைகளையும், பணக்காரர்களுடைய அக்கிரமங்க ளையும், பொது ஜனங்களுக்குள் (முக்கியமாய் ஏழைப்பாமரக் கூலி ஜனங் களுக்குள்) பிரசாரம் செய்ய வேண்டும்.

இதற்கு சர்க்காரை துவேஷிக்கவேண்டியதோ, அல்லது சட்டம் மீற வேண்டியதோ போன்ற அவசியம் ஒன்றும் இன்று இல்லை.

குறிப்பு:- இவைகளுக்கு உதாரணம் வேண்டுமானால் கீழே தரு கிறோம்.

இங்கிலாந்தில், தொழிலாளிகளுடைய ஆட்சியே உலக ஆட்சியாய் இருக்கவேண்டுமென்கின்ற பொதுவுடமைக் கட்சியார் என்பவர்கள், அங்கு



தொழில் கட்சி என்கின்ற அரசியல் கட்சியையும், டிரேட் யூனியன் என்னும் தொழிலாளர் கட்சியையும் முதலில் ஒழிக்கவேண்டும் என்று தான் பாடு படுகிறார்கள். ஏனெனில் இப்போது அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்தின் கொடுமையும், அக்கிரமமும், தொழிலாளிகளுக்கு நேரே தெரிகின்றபடியால் அவர்களுக்கு அதைப்பற்றி எடுத்துச்சொல்லி விளங்கவைக்க வேண்டிய காரியம் ஒன்றும் இல்லை.

ஆனால் அதற்கு எதிர் கட்சியில் இருந்து அந்த அரசாங்கத்தைத் தங்கள் வசப்படுத்தி தாங்கள் ஆதிக்கம் செலுத்த சூழ்ச்சி செய்யும் அதே கூட்டத்தார்களின்-அதாவது இப்பொழுது ஆட்சியில் இருக்கும் கூட்டத் தைச் சேர்ந்தவர்களுடைய சூழ்ச்சிகளாகிய “தொழிலாளர் இயக்கம்” “டிரேட் யூனியன் இயக்கம்” ஆகியவைகளின் சூழ்ச்சிகளால் தொழிலாளர்கள் ஏமாந்துபோய் விடுகிறார்கள். ஆதலால் அவர்களின் சூழ்ச்சியை வெளிப் படுத்த வேண்டியதாகின்றது என்பது அவர்களது (பொதுவுடமைக்காரர் களது) கருத்து. இந்த வேலையைச் செய்வதில் அரசாங்கத்தாரோடு நேரே விரோ தித்துக் கொண்டாக வேண்டும் என்கின்ற அவசியமில்லை. முதலாளி ஆதிக்கங்கள் ஒழியும்போது அவற்றுள் ஒரு உறுப்பாகிய முதலாளி வர்க்க ஆட்சி ஒழிந்தே தீரும். ஒரு சமயம் அரசாங்கத்தை நேரே தாக்க வேண்டி இருந்தாலும் அது முதலாளித்துவம் தடுத்துக்கொண்டிருக்கிறது என்கின்ற காரணத்துக்காகவும் ஏகாதிபத்திய தத்துவத்தைக் கொண்டிருக்கின்றது என் கின்ற காரணத்துக்காகவும், அந்த அளவுக்கு தாக்கவேண்டியதே ஒழிய அது இன்ன தேசத்து ஆட்சி, இன்ன ஜாதி ஆட்சி என்பதற்காக தாக்க வேண்டிய அவசியமே இல்லை.

இந்த விபரங்கள் எல்லாம் தொழிலாளர்கள் அறிந்து அவர்கள் வேலை செய்தாலொழிய தொழிலாளர் துயரம் ஒருநாளும் தீர்ந்துவிடாது.

வெள்ளையர் கையிலிருக்கும் ஆட்சியைப் பிடுங்கி கருப்பர்கள் கையில் கொடுத்துவிடுவதாலும் சாத்தியப்பட்டுவிடாது. இந்தக் கொள்கை யால் வெள்ளை முதலாளிக்கு பதிலாக கருப்பு முதலாளிதான் ஆட்சி செய்யக்கூடிய நிலைமை வந்துவிடும்.

முதலாளித் தன்மையில் கருப்பு முதலாளியைவிட வெள்ளை முத லாளியே மேலானவன். அவனுக்கு அற்பபுத்தி கிடையாது. எப்படி என்றால் தொழிலாளி பிறவியில் கீழ்ஜாதி என்று கருதமாட்டான். சமமாய் இருக்க உரிமை இல்லை என்று சொல்லமாட்டான். மேலே வேஷ்டி போடக் கூடாது, குழந்தைகளுக்கு கீழ் வேஷ்டி கட்டக்கூடாது என்பதுபோன்ற “வேத” விதிகள் “தர்ம சாஸ்திர” நிபந்தனைகள் வெள்ளையனுக்கு கிடையாது.

ஆகையால் தொழிலாளிகளுக்கு முதலாளி ஆதிக்கம் ஒழிய வேண்டும் என்கின்ற ஒரு நோக்கம்தான் இருக்கவேண்டும்.

**குடி அரசு - கட்டுரை - 13.08.1933**



RangaRakes tamilnavarasam.com

# தோழர் பி. சிதம்பரம்

நாகர்கோவில் பிரபல வழக்கறிஞரும், நமது சுயமரியாதை இயக்கத் திற்கோர் தூண் போன்றவரும், நமது மகாநாடுகள் பலவற்றில் தலைமை வகித்து அரிய சொற்பொழிவாற்றியவருமான தோழர் பி. சிதம்பரம் பி.ஏ., பி. எல். அவர்கள் திருவிதாங்கூர் சட்டசபைக்கு வர்த்தகத் தொகுதியில் அபேட்சகராக நின்று போட்டியின்றித் தெரிந்தெடுக்கப்பட்டதற்கு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

தோழர் சிதம்பரம் தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமைமிக்குடையார், சரித்திர ஆராய்ச்சியில் நிபுணத்துவமுடையார், சட்ட ஆராய்ச்சியில் வல்லுநர், சமய ஆராய்ச்சியில் பேரறிஞர். சமதர்மப் பற்றுடையார். இவர் சட்டசபைக் குத் தேர்ந்தெடுக்கப் பெற்றது, நமது சுயமரியாதை இயக்கத்திற்கு ஓர் பெரும் வெற்றியென்றே கருதுகிறோம். இவர் தேர்தலால் திருவிதாங்கூரில் வருணாச் சிரம ஆதிக்கம் ஒழிந்து எங்கும் சமத்துவமும், சுயமரியாதையும் பொங்கிப் பொலிந்து மக்களெல்லோரும் சாந்தியும், சமாதானமுமுற்று சமதர்ம நெறியை அடைவார்கள் என்று பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 13.08.1935**



# மோசம்போனேன்! ஈஸ்வரா!

**- ஒரு தொழிலாளி**

உலகில் நடைபெற்றுவரும் சகல காரியங்களும் ஈஸ்வரனாகிய உன்னாலேயே நடத்தப்பட்டு வருவதாக நான் நம்பி மதிமோசம் போனேன்! 'அவனன்றி ஓரணுவுமசையாது' என்ற சோம்பேரி வேதாந்தத்தை உண்மை யாக நம்பி இந்தக்கதிக்கு ஆளானேன். நான் பிறந்ததிலிருந்து இதுவரை அரை வயிற்றுக் கஞ்சிக்கு ஆலாய்ப் பறப்பதற்கு, நான் "முன்ஜென்ம" த்தில் செய்த "பாவமே" காரணமென நம்பி என்னை நானே கெடுத்துக் கொண் டேன்! ஒரு சில ஆசாமிகள் மட்டும் நகத்தில் அழுக்குப்படாமல் என் போன்ற ஏழைத் தொழிலாளிகளின் உதவிகொண்டு இன்ப வாழ்வு நடாத்தி வருவதற்கு அவர் கள் "முன்ஜன்மத்தில்" செய்த "பூஜா" பலனே காரணம் என நம்பி நான் முழுமூடனானேன்! "கடவுளை நம்பினவர் கைவிடப்படார்" என்றதை மெய்யென நம்பி எனது தற்போதைய இழிந்த நிலைக்கு ஆளானேன்!

நான் சுகவாழ்வை அடையவேண்டுமானால்-என்போன்ற ஏழைத் தொழிலாளிகள் இன்ப வாழ்க்கையை எய்த வேண்டுமானால் முதலில் ஈஸ்வர நம்பிக்கையிலிருந்து விடுவித்துக் கொள்வதன் மூலமே அதை அடைய முடியும் என்ற உண்மையை இப்போதே உணரும் பாக்கியத்தை யடைந்தேன். ஆகவே ஏ! "ஈஸ்வரா" இனி நான் மதிமோசம் போக மாட்டேன்! உன் பெயரைக் கூறி அதன் மூலம் சுயநல முதலாளிக் கூட்டங் களும், மன்னர் கூட்டங்களும் இனி என்னை-எனது தொழிலாளர் குழுவை-ஒருக்காலும் ஏமாற்றவிடமாட்டேன்! இது நிச்சயம்! இது உறுதி!! இது சத்தியம்!!!

என்போன்ற ஏழைத்தொழிலாளர்கள் குடிக்கக் கால்வயிற்றுக் கஞ்சிக்கு வழியின்றியும், வசிக்கக் குடிசையின்றியும், கட்டத் துணி யுமின்றியும் கஷ்டப்பட்டு வந்திருப்பதற்கு-வருவதற்கு முக்கிய காரணம் நீயே என்பது பளிச்சென எனக்கு புலனாகிவிட்டது! எனவே எங்கள் கஷ்ட நஷ்டங்களுக்கு ஆதிமூலமாயிருந்து வரும் உன்னை ஒழிக்க நான் முன்வந்து விட்டேன்! உன்னை நினைக்க நினைக்க என்நெஞ்சு



RangaRakes tamilnavarasam.com

பகீரென்கிறது! ஓ! பணக்காரர்களின் பந்துவே! உன் ஜம்பம் இனி என்னிடத்தில் செல்லாது.

உன்னாலேயே நான் இந்த இழி நிலைக்கு ஆளானேன் என்பதை இப்போது உணர்ந்துகொண்டு விட்டேனாதலால், நான் முக்கால்வாசி விடுதலையை அடைந்துவிட்டேனென்பது மிகையாகாது. ஆம்! இனி முதலாளிகள், அரசர்கள் என்ற சுயநலக்காரர்களிடத்திலிருந்து வெகு சுலபமாக நான் விடுதலையடைந்து விடுவேன்! உனது பேராலேயே சுயநலக் கூட்டத்தார் எங்களை ஏமாற்றி வந்திருக்கிறார்க ளாதலால் இப்போது உனது பேர் எங்களிடம் செல்லுபடியாகப் போவதில்லையாதலால் இனி முதலாளிகள் பாடு அந்தரத்தில் தான் தொங்கப்போகிறது. உன்னையே நாங்கள் சட்டை செய்யாதபோது முதலாளிக்கூட்டத்தார்தான் எம்மாத்திரம்?

நான் எனது ஐம்பது வருட அனுபவத்தில் நடந்திருப்பவற்றில் இரண்டொரு விஷயங்களைக் கூற ஆசைப்படுகிறேன். எனது ஏழாவது வயதில் பீடித் தொழிற்சாலையில் மாதம் ஒரு ரூபாய் சம்பளத்திலமர்ந்தேன். எனது பெற்றோர் பரம்பரை ஏழைகளாதலால் நான் அரைவயிற்று கஞ்சிக்கும் வழியின்றி வாழ்ந்தேன். பதினைந்து வயதுவரையில் பீடித் தொழிற்சாலையில் ஏழு ரூபாய் சம்பளம் பெற்று வந்தேன். அதன்பின் பஞ்சாலையில் 11 ரூபாய் வேலையில் அமர்ந்தேன். 25 வயதுவரையில் அதே வேலையிலிருந்து வந்தேன். எனது பெற்றோர்கள் வேலை செய்யச் சக்தியில்லாதவர்களாக ஆகிவிடவே, குடும்பப் பாரம் என் தலையிலேயே வந்து விழுந்தது. நான் பட்ட பாடு ஒருநாய்கூடப் பட்டிராது! பதினொரு ரூபாயை கொண்டு எப்படி ஜீவிப்பது! நான் தினந்தோறும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருந்து வந்தபோதெல்லாம் எனது பெற்றோர் “நீ ஏன் வருந்துகிறாய்! கடவுள் நமக்குக் கொடுத்து வைத்தது இவ்வளவுதான், இதைக் கொண்டு நாம் திருப்தியடைய வேண்டியது தான்! வீணாக வருத்தப் படாதே” என்பார்கள். எனக்கு இந்தச் சமாதானம் முதலில் சரியானது போலத்தோன்றிவந்ததானாலும் நாளாக ஆக அந்த நம்பிக்கையில் ஆட்டங்கொடுக்கலாயிற்று. கடவுள் சர்வ தயாபரர் என்கிறார்களே எல்லாம் செய்ய வல்லவர் என்கிறார்களே அப்படியிருந்தால் என் போன்றவர்கள் சதா துன்பப்படுவதற்கும், ஒரு சிலர் மட்டும் க்ஷேமமாக வாழ்ந்துவருவதற்கும் காரணமில்லையே என்ற ஒரு எண்ணம் ஏற்பட லாயிற்று. இதற்கு அவரவர் கர்மபலனே காரணம் எனச் சிலர் கூறினார்கள். இதையும் என்னால் ஒப்புக்கொள்ளமுடியவில்லை, ஏனென்றால் எந்த ஒரு மனிதரையும் முதலில் படைத்தவர் கடவுள் என்று ஒரு கூற்றிருந்து வருவதால், கடவுளாலேயே அப்படிச் செய்யப்பட்டு வருவதாக நான் உணர்ந்தேன். முதலிலேயே கடவுள் ஒவ்வொருவரையும் நல்லவர்களாகப் படைக்காமல் சிலரை ஒருவிதமாகவும், வேறு பலரை மற்றொருவிதமாகவும் படைக்கிறார் என்று நினைக்க இடம் ஏற்படுகிற தல்லவா! அப்படியாயின் கடவுள் சர்வ



தயாபரர் என்று எப்படி நம்பவோ, ஏற்கவோ கூடும்? இந்த எண்ணம் எனக்கு உண்டாகவே பலத்த குழப்பமாக விருந்தது. கடவுள் இருக்கிறார் என்பது உண்மைதானா? அவர் இருந்தால் அவர் தயாபரர் தானா? அப்படி அவர் ஜீவதயாபரராகவிருந்தால் எல்லாரும் சுகமாக வாழும்படி செய்யாமல் ஒரு சிலர்மட்டும் சுகமாக இருக்கவும் பெரும்பாலர் துக்கக் கடலில் ஆழ்ந்திருக்கவும் அவர் செய்வாரா? என்பதைப் போன்ற கேள்விகள் எனக்குள்ளேயே எழுந்து என்னைச் சுயேச்சை சிந்தாக்கிரந்தனாக்கிற்று. ஆகவே கடவுளாவது மண்ணாங்கட்டியாவது என்ற உண்மையை அடையும் பேறு பெற்றேன்!

ஒரு சில சுயநலக் கூட்டத்தார் தாங்கள் மட்டும் சுகமாக வாழவிரும்பி அதற்காகக் கற்பிக்கப்பட்ட கற்பனையே கடவுள் என்பது நன்றாக விளங்கி விட்டது. ஆகவே அந்தக் கடவுள் நம்பிக்கையிலிருந்து என்று விடுதலை அடைகிறோமோ அன்றே முக்கால் விடுதலையை அடைந்துவிட்டதாகத் திட்டமாகக் கூறலாம்.

கடவுள், கர்மபலன், மறுபிறவி என்ற வெற்று வெடிகளால் நாம் ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறோம் இவற்றை நாம் உதறித் தள்ளிவிட்டு மேலே நிமிர்ந்து பார்க்க வேண்டும். நாம் சதா ஈன நிலைமையில் உழல்வதன் காரணங் களைக் கண்டு அதன் அஸ்திவாரத்தில் கைவைக்கவேண்டும். அதுதான் கடவுள் என்ற கற்பனையே என்பது நன்கு விளங்கும். நம்மைச் சதா இக் கட்டுகளிலும், கஷ்டங்களிலும், இழி நிலைமையிலுமிருக்கச் செய்து வருவது அந்தக் “கடவுளே” யாகும். அவர் தயாபரராகவிருந்தால் நம்மை இப்படித் துன்புறவும், முதலாளிக்கூட்டம் எப்போதும் இன்புறவும் செய்து வருமா? என்பதை நன்கு யோசித்துப்பாருங்கள்! “முன்ஜென்மத்தால் அவரவர் செய்திருக்கும் செயல்களுக்கேற்ப இப்போது நடக்கின்றன” என்றால் முதலில் எல்லோரையும் படைத்தவர் கடவுளே என்கிற படியால், அப்போதே அதாவது முதலிலேயே ஏன் எல்லாரையும் ஒரே மாதிரியாகப் படைத்திருக்கக்கூடாது என்பதை யோசித்துப் பாருங்கள்!

ஆகவே ஏழைகளை ஏணிகளாக உபயோகித்து அதன் மூலம் சிலர் நகத்தில் அழுக்குப்படாமல் வாழ்ந்து வரச்செய்து வைத்திருக்கும் கடவுள் போன்ற கட்டுப்பாடுகளை உடனே உடைத்தெரியுங்கள். நம்மைக் கண் விழிக்கச் செய்து வரும் சுயமரியாதை இயக்கத்தைப் போற்றி, நமது உண்மையான நன்றியையளித்து அந்த இயக்கத்தில் நாமும் இரண்டறக் கலந்து நம்மைக்கெடுத்து வந்திருக்கும் கடவுள், மதம், முடியரசு என்பவைகளை அடியோடு ஒழிக்க ஆண்மையோடு முற்படுங்கள். ஆண்டவன் நம்பிக்கை அடியோடு ஒழிக! புரட்சி ஓங்குக!! பொதுவுடமை வாழ்க!!!

**குடி அரசு – கட்டுரை – 13.08.1933**



RangaRakes tamilnavarasam.com

# நாகர்கோவிலில் ஈ.வெ. இராமசாமி

## முகவுரை

தோழர்களே! தோழர் பி. சிதம்பரம் அவர்கள் எம்.எல்.ஏ. ஸ்தானம் பெற்றதற்காக ஏற்பட்ட பாராட்டு விழவிற்குத் தலைமை வகிப்பது என்பது எனக்கு மிக்க மகிழ்ச்சியாவேயிருக்கின்றது. இதற்காகவே குற்றாலத்தி லிருந்து தேக அசௌக்கியத்தை கவனிக்காமல் வந்திருக்கின்றேன்.

தோழர் சிதம்பரம் அவர்கள் சுயமரியாதை இயக்கத்திற்கு தூண் போன்றவர் அவரது எழுத்துக்களும், அபிப்பிராயங்களும் எனக்கு தீவிரமாய் செல்ல படிகள் போல் உதவின. நமது நாட்டில் உள்ள ஆராய்ச்சி அறிஞர் களில் தோழர் சிதம்பரம் முக்கியமான ஒருவராவர். அவர் இந்த 6, 7 வருஷ காலமாய் இயக்கத்துக்கு செய்துவந்திருக்கும் தொண்டு மிகவும் போற்றக் குரியதாகும். இயக்கத்தின் பேரால் அவர் யாதொரு பயனையும் அடைந்த தில்லை என்பதையும், இயக்கத்தால் அவருக்கு பல கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டதும் எனக்குத் தெரியும். இப்பேர்ப்பட்ட ஒருவரை சுயமரியாதைச் சங்கம் பாராட்ட வேண்டியது கடமையாகும். ஆதலால் தான் நான் இத் தலைமைப் பதவியை மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்கவந்தேன் ஆனால் இந்த சமயத்தில் எனது பழய நண்பர் தோழர் சிவதாணுப்பிள்ளை M.L.A. அவர்கள் என்னை இத்தலைமைப் பதவிக்கு பிரரேபிக்கும் சடங்கை நடத்து கையில் சடங்குகளில் சொல்லப்படுவது போலவே என்னைப்பற்றி என்னென்னமோ புகழ்ந்து கூறினார். அவைகள் பெரிதும் எனக்கு பொருத்த மற்ற தாததால் எனக்கு திருப்தியைக் கொடுக்கவில்லை என்று சொல்லுவதை தோழர் சிவதாணுப்பிள்ளை அவர்கள் மன்னிப்பார்களாக. ஏதோ என் புத்திக்கு சரியென்று பட்டவகையில் நான் சிறிது தொண்டு செய்து வரு கிறேன். அது எனது கடமை என்று கருதிச் செய்கிறேன். அதற்கு எவ்வளவு புகழ்ச்சி வேண்டிய தவசியமில்லை. அன்று நான் கொண்ட அனேக அபிப்பிராயங் களுக்கு இன்று நான் மாறுபட்ட அபிப்பிராயமுடையவனாய் இருக்கிறேன். இனி நாளை எவ்வித அபிப்பிராயம் ஏற்படும் என்று எனக்கே தெரியாது. உலகம் மாறிக்கொண்டிருப்பது. மனிதனின் அறிவு சதா நேரமும்



படிப்பிலேயே இருக்கிறது. அப் படிப்புக்குத் தக்க அபிப்பிராயங்கள் ஏற்பட்டுக்கொண்டு தானிருக்கும். இந்நிலையில் தோழர் சிவதாணுப்பிள்ளை அவர்களுடைய ஒரு அபிப்பிராயத்துக்கு நான் மாறுபட்டிருப்பதற்கும் அவர் மன்னிப்பாராக. அதாவது எனது தீவிரமான சில அபிப்பிராயங்கள் அபிப்பிராய பேதத்துக்கு இடமானதென்றும் அதைப்பற்றி பேச எவருக்கும் உரிமை இல்லை என்றும் சொன்னார். அதை நான் தாழ்மையுடன் பலமாய் மறுக்கிறேன்.

ஏனெனில் அது எனது கொள்கைக்கு விரோதமானதாகும். ஒருவன் எப்படிப்பட்ட மனிதனாயினும் மனிதத் தன்மைக்கு மேற்பட்டவன் என்று சொல்லப்படுபவனாகிலும் அவனது அபிப்பிராயங்கள் எப்படிப்பட்ட மனி தனாலும் பரிசோதிக்கப்படவும், தர்க்கிக்கப்படவும் தக்கதாகும் என்பதே எனதபிப்பிராயமாகும். யாருடைய அபிப்பிராயத்தையும், எந்த விதமான அபிப்பிராயத்தையும் ஆட்சேபிக்கவும், அடியுடன் மறுத்து எதிர்க்கவும் யாருக்கும் உரிமையுண்டு என்பதும் எனது அபிப்பிராயம். ஆதலால் எனது அபிப்பிராயங்களைப் பற்றி குறைகூறவோ, தர்க்கிக்கவோ, யாரும் தகுதியு டையவர்கள் அல்ல என்று தோழர் சிவதாணுப்பிள்ளை அவர்கள் சொன் னதை நான் ஏற்க முடியாமல் இருக்கிறது.

ஒரு விஷயத்தை வேண்டுமானால் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதாவது எந்த மனிதனுக்கும் அவனது அபிப்பிராயம் என்னும் பேரால் எதையும் சொல்ல உரிமையுண்டு. அதை தடுப்பது என்பது யோக்கிய மற்ற காரியமாகும். யார் எதைச் சொன்னாலும் சொல்ல அவகாசமளித்த பிறகுதான் அதை மறுத்துப்பேசவேண்டும் என்று பேசிவிட்டு சுயமரியாதைக்காரர் சட்டசபையில் செய்யக்கூடிய வேலை என்பது பற்றி பேசியதாவது:-

## சு.ம. வும் சட்டசபையும்

சுயமரியாதைக்காரர்கள் சட்ட சபைக்கு போக வேண்டுமென்பது சுயமரியாதை சமதர்மக் கட்சித் திட்டமாகும்.

சட்டசபையில் கட்சித்திட்டத்தை நிறைவேற்றிவைக்க முடியுமா? என்று சிலர் கேட்கக்கூடும். எல்லாம் செய்யாவிட்டாலும் பெரும்பான்மை யான விஷயங்களை சட்ட சபை மூலம் செய்விக்கலாம் என்கின்ற நம்பிக்கை உண்டு. அன்றியும் சு.ம.காரர்கள் சட்டசபையைக் கைப்பற்ற வேண்டும் என்று சு.ம. சமதர்மத்திட்டம் வகுத்திருக்கிறது. இவை யெப்படியிருந்தாலும், சு.ம. இயக்கத்தைப் பொருத்த வரையில் அதன் கொள்கைகளைப் பிரசாரம் செய்ய சட்டசபை முதலிய ஸ்தாபனங்களை உபயோகித்துக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஏனெனில் சட்டசபையில் செய்யவேண்டிய காரியம் இன்னது என்று இப்போதைய சட்டசபை மெம்பர்களுக்கே தெரி யாது என்றும், ஓட்டர் களுக்கும் தெரியாதென்றும் நான் கூறுவேன். அன்றி



RangaRakes tamilnavarasam.com

யும் அதை வெளியில் பிரசாரம் செய்யவும் கூட சில கூட்டத்தார் இடம் கொடுக்காமல் காலித்தனம் செய்து தடுத்து வருகிறார்கள். அப்படிப்பட்ட காலிக்கூட்டங்களுடன் போராடிக்கொண்டு பிரசாரம் செய்துகொண்டிருப் பதைவிட சட்டசபையில் பிரசாரம் செய்வது மிகவும் பலனளிக்கக் கூடிய தாய் இருக்கும். சட்டசபை நடவடிக்கைகளில் ஒரு மனிதன் தனது அபிப்பி ராயத்தைத் தாராளமாய் வெளியிட இடமுண்டு. பொருமையுடன் கேட்டாக வேண்டும். பத்திரிக்கைக்காரார்கள் அதையோக்கியமான முறையில் (திரித்துக் கூறாமல்) தான் வெளியிட்டாக வேண்டும். சட்டசபை நடவடிக்கை ரிகார்டுகளில் நாணைய மாய் எழுதி வைக்கப்படும். இந்த நிலையுள்ள வரையில் சட்டசபைகள், பிரசாரத்துக்கு ஏற்ற இடமாகும். ஆதலால் அவை களில் சு.ம.காரர் அமர வேண்டியது அவசியமான காரியம் என்று நான் கருதுகிறேன்.

தவிர சட்டசபையில் பேசவேண்டிய அநேக விஷயங்கள் சு.ம கொள்கைகாரர்களுக்குத் தான் தெரியும். அவர்கள் தான் தைரியமாய்ச் சொல்ல முடியும் என்று முன் சொன்னேன். உதாரணமாக இன்றைய வியா பாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். வியாபாரம் என்றால் ஒருவகை திருட்டு என்றும் பலர் செல்வத்தையும், உழைப்பையும் சிலர் அனுபவிப்பது என்பது தான் சு-ம.காரருடைய அருத்தமாகும்.

விவசாயிகளுக்கும், பொது ஜனங்களுக்கும் இடையில் ஒரு தரகர் இருக்கக் கூடாது. அதுபோலவே தொழிலாளிகளுக்கும், பொதுஜனங்களுக் கும் இடையில் தரகர் இருக்கக் கூடாது என்பது சு.ம. காரர்களின் வியாபார சம்மந்தமான கொள்கையாகும். இதைவேறு எந்த மெம்பராவது தைரியமாய் சொல்ல முடியுமா? சு.ம. மெம்பர்கள் தான் சொல்லுவார்கள்.

அதுபோலவே வரி விஷயங்களில் செல்வவான்களை விட்டு விட்டு இப்போது ஏழை மக்களையே துன்புறுத்துகிறோம்.

உதாரணமாக விவசாயத் துறையில் இன்று உள்ள வரித்திட்டமானது அக்கிரமான முறையில் போடப்பட்டு வருகிறது. அதாவது ஒரு ஏக்ரா காரனுக்கு என்ன விகிதம் வரிபோடுகின்றோமோ அதே திட்டம் தான் 1000 ஏக்கர்காரனுக்கும் வரிபோடப்படுகின்றது. இதை மாற்றியாக வேண்டும். இன்கம்டாக்ஸ் (வருமான வரியைபோல்) இவ்வளவு ஏக்கர் பூமிக்கு மேல் பட்டவர்களுக்குத் தான் வரி என்றும், அதுவும் இத்தனை இத்தனை ஏக்கர் பூமிக்கு மேல் உள்ளவனுக்கு இன்ன இன்ன வீதம் வரி என்றும் திட்டம் செய்யவேண்டும். அப்படிக்கில்லாததால்தான் சிறு விவசாயக்காரர்கள் நாளுக்கு நாள் நசிந்து பெரும் பெரும் நிலச்சுவான்தாரர்கள், ஜமீன்தாரர்கள் பெருகி வருகிறார்கள். இந்த ஞானம் மற்ற மெம்பர்களிடம் இல்லை, இருந் தாலும் எடுத்துச்சொல்ல தைரியம் இல்லை.



அதுபோலவே கல்வி விஷயத்திலும் பள்ளிக்கூடம் அதிகம் வைக்க வேண்டும் என்பது தான் மற்ற மெம்பர்களுடைய கருத்தேயொழிய எப்படிப் பட்ட படிப்பு யாரைக்கொண்டு படிப்பிப்பது என்பது பற்றிய ஞானமும் மற்ற மெம்பர்களுக்குப் போதாது. முதலாளித் தன்மை ஒழியும் படியான மார்க்கப் படிப்பும், மூடநம்பிக்கை ஒழியும் படியான படிப்பும் படிப்பிக்கச் செய்யப் படும் என்கின்ற விஷயம் அவர்களுக்குத் தெரியவே தெரியாது. இவை சு.ம. மெம்பர்களால் தான் முடியும். அவர்களுக்குத்தான் தெரியும். ஆகையால் இதுபோன்ற அனேக விஷயங்களை உத்தேசித்தே சு.ம. காரர்கள் சட்ட சபைக்குப்போக சமதர்மத்திட்டம் வகுத்திருக்கிறார்கள். அந்தப்படி இங்கு, முதல் முதலாக தோழர் சிதம்பரம் அவர்கள் தெரிந்தெடுத்து அதுவும் போட்டியின்றி தெரிந்தெடுக்கப்பட்டது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

## முடிவுரை

தோழர்களே! இன்றைய கொண்டாட்டம் இனிது முடிந்தது. ஆனால் தலைவர் முடிவுரை என்ற விஷயம் நிகழ்ச்சிக் குறிப்பில் பாக்கியிருக்கிறது. முடிவுரையாக இரண்டொரு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அது உபன்யாசகர்கள் பேசியதைப்பற்றியே பெரிதும் பேசுகிறேன்.

முதலாவது உபன்யாசகர் தோழர் ராமையா அவர்கள் எலக்ஷன் களில் கைக்கூலி (லஞ்சம்) நடைபெறுவதாகச் சொன்னார். லஞ்சம் என்பது தருமம் என்பது போன்ற சாதாரண பழக்கச் சொல்லாய் வழங்குகிறது. தருமத்தொகை களைவிட லஞ்சத் தொகைகளே அதிகமாக இருந்து வருகிறது. லஞ்சம் கொடுக்கல் வாங்கல்களைப்பற்றி பேசுகிறவர்களும், வருத்தப்படுகின்ற வர்களும் இன்று அநேகமாய் லஞ்சம் கொடுத்து பயன் பெறாமல் ஏமாந்த வர்களும் லஞ்சம் கிடைக்காமல் போனவர்களுமாய்த் தான் இருந்து வருகிறார்கள். நாட்டில் லஞ்சத்துக்கு இழிவு யில்லாமல் போய் விட்டது. காரியசித்திக்கு அதையே முக்கிய சாதனமாய் பெரும்பான்மை மக்கள் கருதியும் பயன்படுத்தியும் வருகிறார்கள். லஞ்சம் கேவலமானது, இழிவா னது, பாவமானது என்றெல்லாம் சொல்லி வந்தும், சட்டம், சாஸ்திரம், வேதம் ஆகியவைகளிலும் கண்டிருந்தும், ஏன் இன்று வெகு தாராளமாய் நடைபெற்று வருகின்றது என்கின்ற காரணம் சு.ம. காரனுக்குத் தான் தெரியும். மற்றவனுக்குத் தெரியாது. மற்றவனைக் கேட்டால் “காலம் கெட்டுப் போய் விட்டது, தருமம் அழிந்து விட்டது சர்க்கார் லாய்க்கில்லை” என்று பிதற்று வார்கள். எந்தக் காலத்தில் லஞ்சம் இல்லாததை நாம் பார்த்தோம். எந்த தர்மத்தில் லஞ்சம் இல்லை? எந்த அரசாங்கத்தில் லஞ்சம் இல்லாமல் போய் விடும்? என்று நான் அவர்களையே கேட்கின்றேன். இன்றைய அரசாங்கம் ஒழிந்து ஜனங்கள் கோருகிற “பூரண சுயராஜ்யம்” ஏற்பட்டாலாவது லஞ்சம் ஒழிந்துவிடுமா? என்று கேட்கின்றேன். லஞ்சம் என்பது முதலாளி ஆதிக் கத்தின் (இயற்கை) தர்மமாகும். பணம் உள்ளவன் பணமில்லாதவனுக்கும்,



RangaRakes tamilnavarasam.com

பணத்தாசை பிடித்தவனுக்கும் கொடுப்பது என்பது தான் லஞ்சமாக இருந்து வருகிறது.

எலக்ஷன்களில் ஓட்டு வேண்டியவர்கள் ஓட்டு உடையவர்களிடத்திலிருந்து வாங்குவதற்குக் கொடுக்கும் விலையை லஞ்சம் என்கின்றோம், இது இன்று இங்கு மாத்திரம் தானா நடைபெறுகின்றது? இந்தியாவெங்கும் நடைபெறுகின்றது. லஞ்சத்தின் மீதே தான் எல்லாத் தேர்தல்களும், தேர்தல் பிரசாரங்களும், மற்ற பிரசாரங்களும் நடந்து வருகின்றது. பணம் இருக்கிறவன் பணம் இல்லாதவனுக்கு எந்தத் காரணத்தைக் கொண்டு கொடுத்தால் தான் என்ன? பணம் இல்லாதவன் பணம் இருக்கிறவனிடம் எந்தக் காரணத்தைக்கொண்டு கேட்டால்தான் என்ன? பணம் உள்ளவனும் பணம் இல்லாதவனும் உலகத்தில் இருக்கும்வரை லஞ்சம் பிச்சை முதலானவைகள் ஒழியவே ஒழியாது. இதுதான் அதன் இயற்கை தர்மமாகும். இயற்கையை உணர்ந்தவர்கள் இன்றைய நிலையில் லஞ்சத்தைக் குறை கூறமாட்டார்கள். நமக்குக் கொடுக்கவும் வாங்கவும் சக்தியும் யோக்கியதை இல்லையே என்று கருதுபவர்கள் தான் லஞ்சத்தைக் குற்றம் சொல்லுவார்கள். உலகில் லஞ்சம் ஒழியவேண்டுமானால் தனி உடமைத் தர்மம் அழிந்து ஒழிந்து பொது உடமை நிலை ஏற்பட்டால்தான் முடியும். அதில்லாதபடி லஞ்சத்தை ஒழிக்க வேண்டும் என்று பேசுவது மனுதர்மம் பேசுவதேயாகும்.

சட்டசபைக்கு நிற்கும் எவரும் போட்டியேற்பட்டால் லஞ்சம் கொடுக்காமல் 100க்கு 99 தேர்தல்களில் முடியவேமுடியாது. புரட்டு, பித்தலாட்டம், அயோக்கியத்தனம் செய்யாமல் முடியவே முடியாது. சிலர் சொல்லுவார்கள் எல்லோருக்கும் ஓட்டு இருந்தால்தான் முடியுமா யென்று கேட்பார்கள். அப்போதும், லஞ்சம் கொடுத்துத்தான் ஆக வேண்டும். கொஞ்சம் ஓட்டு இருக்கும்போது சொந்தமுதலில் லஞ்சம்கொடுத்தால் நிரம்ப ஓட்டு இருக்கும் போது சர்க்கார் முதலில் லஞ்சம் கொடுக்கவேண்டும்.

ஒரு கிராமத்துக்கு கோவில் கட்ட பொருள் கொடுக்கவேண்டும். ஒரு கிராமத்துக்கு சாவடி கட்ட பொருள் கொடுக்கவேண்டும். இப்படிப் பலவிதமாய் லஞ்சம் கேட்பார்கள். கொடுத்துத்தானாய் வேண்டிவரும். எங்கள் ஜில்லாவில் ஒரு எலக்ஷன் வீரர் உண்டு. அவர் விவசாயிகளிடம் சென்று வரிகுறைப்பதாய் சத்தியம் செய்வார். உபாத்தியாயர் மணியக்காரர் கணக்குப் பிள்ளை முதலிய உத்தியோகஸ்தர்களிடம் சென்று சம்பளம் உயர்த்திக் கொடுப்பதாய் கற்பூரத்தை அணைத்து சத்தியம்செய்வார். இது ஒன்றிற் கொன்று முரணானதா இல்லையா? பாருங்கள். சம்பளம் குறைத்தால்தான் வரியைக் குறைக்கமுடியும். வரியை உயர்த்தினால் தான் சம்பளம் உயர்த்த முடியும். ஆதலால் புரட்டுப் பித்தலாட்டம் பேசி இரண்டு குற்றம் செய்வதை விட லஞ்சம் கொடுப்பதின் மூலம் ஒரு குற்றம் செய்வது மேலானதாகும். எனவே லஞ்சம் ஒழியவேண்டுமானால் இன்றைய பொருளாதார நிலைமை அடியோடு மாற்றியாகவேண்டும். இது மற்ற எந்த மெம்பர்களுக்கும் தெரியாது. சு.ம. காரருக்குத்தான் தெரியும்.

சட்டசபை மெம்பர்கள் அரசாங்கம் என்பதை ஜன சமூக நன்மைக்கு ஏற்ற ஒரு ஸ்தாபனமாகவும், அதுவும் ஜனசமூக உண்மை பிரதிநிதித்துவம் கொண்ட பஞ்சாயத்தார்களாகத்தான் கருத வேண்டுமே ஒழிய அதை ஒரு அதிகார ஸ்தாபனமாகவோ, யோக்கிய பதவி வகிக்கும் ஸ்தாபனமாகவோ கருதக்கூடாது. நம் நாட்டு அரசாங்கங்களின் நிலைமை என்ன என்று பார்ப்போமானால் அரசனுக்காகவும், அதிகாரிகளுக்காகவும்தான் பிரஜைகளும், பிரஜைகளின் உழைப்புகளும், செல்வங்களும் இருப்பதாய் இருக்கின்றதே ஒழிய ஜனங்களின் சௌக்கியத்துக்கும், கவலையற்ற தன்மைக்கும், திருப்திக்கும் அரசாங்கமும், அதிகாரிகளும் இருப்பதாய் சொல்லவே முடியாது. அரசர்களுடையவும், அதிகாரிகளுடையவும் சம்பளங்களை ஒரு மனிதனுடைய சராசரி வரும்படிக்கு சமமாய் கொண்டு வரப்படாத அரசனும், அதிகாரமும் ஒரு கொள்ளைக் கூட்டத் தலைவனுக்கும்; கொள்ளைக் கூட்டத்திற்குமே ஒப்பிடப்படுவார்கள்.

“ஒரு மனிதனுக்கு மாதம் 4000, 5000, 10000 ரூபாய் வீதம் சம்பளம் கொடுக்காவிட்டால் அந்த உத்தியோகத்தை அவன் சரியாய் பார்க்க மாட்டான் லஞ்சம் வாங்காமல் இருக்கமாட்டான் பாரபட்சமில்லாமல் இருக்க மாட்டான்” என்று சொல்லப்படுகிறது. இதனால் அந்த உத்தியோகங்கள் பார்ப்பவர்கள் பரம அயோக்கியர்களென்றும், அவர்களை யோக்கியர்களாக இருக்கச் செய்வதற்கு இந்தப்படி லஞ்சம் கொடுக்கப்படுகிறது என்றுதானே பொருளாகின்றது. ஆகவே அந்த அயோக்கியர்களின் அயோக்கியத்தனம் 5000, 10000 தான் பெறும் என்றும் அதற்குமேல் பெறாதென்றும் நாம் எப்படி நிர்ணயிக்க முடியும். ஏன், மேலும் 5000, 10000 பெறாது அவர்கள் ஏன் ஆசைப்பட மாட்டார்கள். அதற்கு என்ன அளவு கருவி இருக்கின்றது? என்று யோசித்துப்பாருங்கள். ஆகவே யோக்கியமான ஆட்சியினால் ஜனங்களின் ஆட்சியினால் சம்பளங்களின் கொள்ளையையும் லஞ்சத்தையும் ஒழிக்கவேண்டும். இவைகளையெல்லாம்தான் சு.ம. காரர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

*குறிப்பு: 13.08.1933 இல் நாகர்கோவில் மினாம்பிக நாடக மண்டபத்தில் சுயமரியாதை இயக்கத் தலைவரான தோழர் பி.சிதம்பரம் அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் தலைமையேற்று ஆற்றிய உரை.*

**குடி அரசு – சொற்பொழிவு – 20.08.1933**





RangaRakes tamilnavarasam.com

## ஜமீன்தாரல்லாதார் மகாநாட்டில் சொற்பொழிவு

தோழர்களே! மொத்த விஸ்தீரணத்தில் மூன்றிலொரு பாக பரப்புக்கு மேல் ஜமீன் முறை ஆக்ஷியிலிருக்கும் இந்த சேலம் ஜில்லாவில் முதல் முதலாக இன்று இங்கு ஜமீன்தாரல்லாதார் மகாநாடு ஒன்று கூட்டப்பட்ட தானது எனக்கு மிகுதியும் மகிழ்ச்சியைக் கொடுப்பதாகும்.

நாம் உலக பொதுஜனங்களுக்குச் செய்யவேண்டிய வேலைகளின் முக்கியத்துவம் எல்லாம் இம்மாதிரியாக பல அல்லாதார்கள் மகாநாடுகள் கூட்டி அவர்களது ஆதிக்கங்களையும், தன்மைகளையும் ஒழிப்பதில் தான் பெரிதும் அடங்கியிருக்கின்றது. இன்னும் இதுபோலவே பல மகாநாடுகள் கூட்ட வேண்டியிருக்கிறது. சுயமரியாதை மகாநாடுகள் கூட்டப்படும் இடங் களில் இம்மாதிரி மகாநாடுகள் அடிக்கடி கூட்டப்படுமென்று எதிர்பார்க்கி றேன். உதாரணமாக லேவாதேவிக்காரர்கள் அல்லாதார் மகாநாடு, முதலாளி கள் அல்லாதார் மாநாடு, தொழிற்சாலை சொந்தக்காரர்கள் அல்லாதார் மகா நாடு, வீடுகளின் சொந்தக் காரர்கள் அல்லாதார் மகாநாடு, நிலச்சுவான்தார் அல்லா தார் மகாநாடு, மேல்ஜாதிக்காரர்கள் அல்லாதார் மகாநாடு, பணக் காரர்கள் அல்லாதார் மகாநாடு என்பது போன்ற பல மகாநாடுகள் கூட்டி இவர்களின் அக்கிரமங்களையும், கொடுமைகளையும், மோசங்களையும் பொது ஜனங்களுக்கு விளக்கிக் காட்டி அவைகளை ஒழிக்கச்செய்ய வேண் டியது நமது கடமையாகும்.

உலகில் எந்த எந்த ஸ்தாபனங்களால், எந்த எந்த தன்மைகளால், எந்த எந்த மனிதக் கூட்டங்களால் மனிதசமூகத்திற்கு இடஞ்சல்களும், சமத்துவத் திற்கும், முற்போக்குகளுக்கும் தடைகளும், சாந்திக்கும் சமாதானத்துக்கும் முட்டுக்கட்டைகளும் இருக்கின்றனவோ அவைகளெல்லாம் அழிந் தொழிந்து என்றும் தலை தூக்காமலும், இல்லாமலும் போகும்படி செய்ய வேண்டியது தான் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய லக்ஷியமாகும்.

மனித சமூகத்துக்கு உள்ள தரித்திரத்திற்குக் காரணம் செல்வவான் களேயாகும். செல்வவான்கள் இல்லாவிட்டால் தரித்திரவான்களே இருக்க



மாட்டார்கள். மேல்வகுப்பார் இல்லாவிட்டால் கீழ்வகுப்பார் இருக்கவே மாட்டார்கள். ஆதலால் தான் இம்மாதிரி அல்லாதவர்கள் மகாநாடு கூட்ட வேண்டு மென்கின்றோம்.

இன்று ஏன் முதன்முதலாக ஜமீன்தார் அல்லாதார் மகாநாடு கூட்டி னோமென்றால் இன்றைய உலக ஆதிக்கம் அவர்கள் கையிலேயே இருந்து வருகின்றது. இதற்கு முன் இந்நாட்டு ஆதிக்கம் பார்ப்பனர்கள் கையிலேயே இருந்தது.

அதற்காகவே நமது இயக்கம் பல பார்ப்பனர் அல்லாதார் ஸ்தாபனங் களும், மகாநாடுகளும், வாலிபசங்கங்களும் புதிய முறையில் தோற்றுவித் தும் கூட்டுவித்தும் பார்ப்பனக் கொடுமைகளையும் மோசங்களையும் ஒரு வாறு பாமர மக்களுக்கு விளக்குவதில் முனைந்து நின்று வேலைசெய்ததின் பயனால் ஒரு அளவுக்குப் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிப்பதில் வெற்றி பெற்றோம். ஆனால் அந்தப் பார்ப்பன ஆதிக்கம் ஒழிந்தது என்கின்ற சந்தோஷத்தை அடைவதற்குள் அதற்குப்பதிலாக அதுபோன்ற கொடுமை யும் மோசமுமான ஜமீன்தார் ஆதிக்கம் தலைதூக்கி தாண்டவமாட ஏற்பட்டு விட்டது. முன்பிருந்த கெடுதியும் தொல்லையுமே பார்ப்பன ஆதிக்கம் என்னும் பேரால் இல்லாமல் ஜமீன்தார் ஆதிக்கம் என்னும் பேரால் இருந்து வருகின்றன.

பார்ப்பனர்களைப் போலவே ஜமீன்தார்கள் பிறவியின் காரண மாகவே பரம்பரை உயர்வுள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்ளப்படு பவர்கள். பார்ப்பனர்களைப் போலவே ஜமீன்தார்கள் இன்றைய ஆட்சி முறைக்கு தூண்கள் போலவும் இருந்துவருகின்றவர்களாவார்கள். பார்ப்பனர் களைப் போலவே ஜமீன்தார்கள் என்பவர்கள் உலகத்துக்கு வேண்டாதவர் களும், உலக மக்கள் கஷ்டங்களுக் கெல்லாம் காரணமாயிருப்பவர்களுமா வார்கள்.

இந்த ஜமீன்தார்கள் எப்படி ஏற்பட்டார்கள்? எப்படியிருந்து வரு கின்றார்கள்? இவர்களது செல்வமும், மேன்மையும் எதற்குப் பயன்படுகின் றன? என்பவைகளை யோசித்துப்பார்த்தால் இவர்கள் உலகுக்கு வேண்டாத வர்கள் என்பதும், ஒழிக்கப்பட வேண்டியவர்கள் என்பதும் நன்றாய் விளங்கும்.

இன்றைய தினம் சாதாரணமாய் ஜமீன்தார்கள் என்றால் என்ன? என்று பார்ப்போமானால் ஒரு விஸ்தீரணமுள்ள பிரதேசத்தை சொந்தமாக உடைய வர்கள் என்றும், அந்த வீஸ்தீரணத்திலுள்ள பூமிகளுக்கு உள்ள வரி (கிஸ்தி) இந்த ஜமீன்தார்களுக்கே சேர்ந்தது என்றும் அதில் ஏதோ ஒரு பாகம் சர்க்கா ருக்குச் செலுத்தி விட்டு பாக்கியை தாங்களே அனுபவிப்பவர்கள் என்றும் தான் அருத்தமாய் இருந்து வருகின்றது.



RangaRakes

tamilnavarasam.com

பொதுவாக பூமிகளுக்குக் கிஸ்தி அதாவது நிலவரிகொடுப்பது என்பது எதற்காக வழக்கத்திலிருந்து வருகின்றது என்றால் பயிரிடும் மக்களின் நன்மைக்கும் பத்திரத்திற்குமான காரியங்களைச் செய்யவே பயிரில் ஒரு பங்கு கொடுக்கப் படுவதாகும். அது போலவே சர்க்கார் வாங்கும் நில வரிகளுக்கும் மற்றபடியான வரிகளுக்கும் சரியாகவோ, தப்பாகவோ ஒரு வரவு செலவுத்திட்டம் காட்டி அதன்படி படிப்பு, சுகாதாரம், நீதி, பத்திரம், போக்கு வரவு சாதனம் முதலிய காரியங்களுக்குப் பயன் படுத்தி வருவதாய்ச் சொல்லியும், கணக்கு காட்டியும் வருகிறார்கள். ஆனால் இந்த ஜமீன்தார்களால் குடிகளிடமிருந்து வாங்கும் நில வரிக்கும், வாரத்துக் கும் இது போல் குடி ஜனங்களுக்கு என்ன பிரதிப்பிரயோஜனம் இருந்து வருகின்றது? என்பதை நாம் முக்கியமாய் கவனிக்கவேண்டும். ஜமீன்தார் கள் தங்கள் வரும்படியில் சர்க்காருக்கு ஏதோ ஒரு சிறு பாகம் கொடுப்ப தாய்ச் சொல்லப்படுவதெல்லாம் குடிகளிடமிருந்து வரியை எப்படியாவது வசூலிப்பதற்கும், ஜமீன்தார்கள் என்ன அக்கிரமம் செய்தாலும் குடிகளால் ஜமீன்தாரர்களுக்கு ஆபத்து இல்லாமல் இருப்பதற்கும் கூலியாகவே ஒழிய மற்றபடி ஜமீன் குடி களுடைய நன்மைக்கு என்பதாக எண்ணங் கொண் டல்ல என்பதே என தபிப்பிராயம். இந்த ஜமீன்தாரர்களுக்கு இந்தப் பதவி வந்ததற்குக் காரணம் எல்லாம், ஆதியில் அன்னிய சர்க்கார் இத்தேசத்துக்கு வந்த போது அவர்களுக்கு வேண்டிய சௌகரியம் செய்து கொடுத்தும், இங்குள்ள எதிர்ப்புகளை அடக்கி ஒடுக்க உதவி செய்ததுமான காட்டிக் கொடுத்த காரியங் களுக்குத்தான் 'சன்மானமாய்' (லஞ்சமாய்) கொடுக்கப் பட்டதேயொழிய வேறில்லை.

இப்படிப்பட்ட இந்த ஜமீன்தாரர்களின் யோக்கியதையை நான் உங்களுக்கு அதிகமாய் சொல்லிக்காட்ட வேண்டிய அவசியமில்லை. அவர் களுடைய அருங் குணங்களில் எல்லாம் குடிப்பதும், கூத்திமார்கள் வைப் பதும், பந்தய சூது ஆடுவதும் தலை சிறந்த குணங்களாகும். மேலும் இப்பொ ழுது சிறிது காலமாய் அதாவது பார்ப்பன ஆதிக்கம் ஒடுங்க ஆரம்பித்த பின்பு அரசியல் தேர்தல்களை பணத்தின் மூலம் வியாபார முறையில் நடத்தி வெற்றி பெற்று ஆதிக்கமடைந்து பெருமை அடை வதையும், பணம் சம்பாதிப்பதையும் மற்றொரு அருங்குணமாய் கொண்டி ருக்கிறார்கள்.

மற்றபடி இவர்களிடம் என்ன யோக்கியதை இருக்கிறது? இவர்களால் தேசத்துக்கோ, மனிதசமூகத்துக்கோ என்ன பயன்? என்று பார்த்தால் ஒன்றும் இல்லை என்பது தெற்றென விளங்கும். இன்றைய ஜமீன்முறை நாளடைவில் எல்லா பூமியும் அவர்கள் கைக்கே போய்ச் சேரும்படியானதாகவும், எல்லா அதிகாரமும், பதவியும் அவர்கள் கைக்கே போய்ச் சேரும்படியான மாதிரி யிலும் தான் இருந்து வருகின்றது.



ஏனெனில் வரி கொடுக்க முடியாத பூமிகளும், வரிகொடுக்கவும், செலவுக்கும் வரும்படி போதாமல் இருந்துவரும் குடியானவனுடைய பூமிகள் முழுவதும், பணக்காரர்களாயிருக்கின்ற, ஜமீன்தாரர்களுக்குத் தான் நாளா வட்டத்தில் போய்ச் சேருகின்றதாய் இருக்கிறது. இந்தக் காரணத்தால் தான், ஒவ்வொரு ஜமீன்தாரர்களுக்கும் லக்ஷக்கணக்கான ஏக்கர் பூமிகள் இருந்து வருகின்றன. இதுபோலவே தேர்தல்களிலும், அது எப்படிப்பட்ட தேர்தலாய் இருந்தாலும், ஜமீன்தாரர்கள் தாராளமாய் 40000, 50000, ஒரு லட்சம் இரண்டு லட்சம், என்கின்ற கணக்கில் ரூபாய்களை வாரி இறைத்து எலக்ஷன்களில் வெற்றி பெற்றும், மற்றும் வேறு இடங்களில் வெற்றிபெற்ற வர்களுக்கு 1000, 5000 என்கின்ற கணக்கில் ரூபாய்களை கொடுத்து அவர் களை தங்கள் அடிமையாக்கியும், சகல பதவிகளையும், அதிகாரங்களையும் சுவாதீனப் படுத்திக் கொள்ளவும் முடிகின்றது. இந்த மாதிரி விலை கொடுத்து தங்களின் செல்வத்தின் பயனாயும் செல்வாக்கின் பயனாயும் பெற்ற பதவி யும் அதிகாரமும் ஆதிக்கமும் எந்த வழியில் உபயோகப்படுத்தினாலும் கேள்வி கேட்பாடு இல்லாமல் செலாவாணியாகி வருகின்றதைப் பார்க் கின்றோம்.

ஜமீன்தாரர்களின் நடவடிக்கைகளை நாம் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இன்று யாரும் இல்லை என்றே நினைக் கின்றேன். சில ஜமீன்தாரர்கள் அவர்கள் எல்லைக்குள்பட்ட விஸ்தீரணத்தில் எந்தப் பெண் ருதுவானாலும் அவர்களே தான் முதலில் சாந்தி முகூர்த்தம் செய்ய வேண்டும் என்கின்ற (எழுதாத) சட்டம் அமுலில் இருந்து வருவது எனக்குத்தெரியும். இதில் ஒன்றும் அதிசயம் இருப்பதாக யாரும் நினைக்க வேண்டியதில்லை. இந்தச் சட்டம் சில மதகுருக்கள்மாருக்கும் இருந்து வருவது எனக்குத்தெரியும். இது தவிர தனது குடிஜனங்களிடம் இருக்கும் நல்லபெண், நல்லமாடு, குதிரை முதலியவைகள் ஜமீன்தாரர்களுக்கே சொந்தமானது என்கின்ற முறையும் சில இடங்களில் இருந்துவருவது எனக்குத் தெரியும்.

மற்றும் பல ஜமீன்தாரர்கள் சுகவாசமும், வெளிநாடு சுற்றுப் பிரயா ணமும் 100, 200 கணக்கான மனைவிகளும், வைப்பாட்டிகளும், ஆயிரம் இரண்டாயிரக் கணக்கான தாசிகள் விபசாரிகள் ஆகியவர்கள் சம்மந்தமும் வைத்துக் கொண்டிருப்பதுடன் 40, 50, 100, 200 குதிரைகளும் 10, 20, 30 மோட்டார் கார்களும், 10, 20 அய்யர்கள் என்று பெயர்வழங்கும் மாமாக் களையும் உடையவர்களாக இருந்துகொண்டு நெல்லு, மரத்தில் காய்க் கின்றதா? கொடியில் காய்க்கின்றதா? செடியில் காய்க்கின்றதா? என்றுகூட தெரியாதவர்களும் வேஷ்டிகள் செடியில் காய்க்கின்றதா? அல்லது தரியில் நெய்யப்படுகின்றதா? என்று தெரியாதவர்களும் ஏராளமாய் இருக்கிறார்கள். இவர்கள் வாழ்க்கை நிலையை அவர்களது பள்ளிக்கூட வாழ்வில் இருந்தே கவனித்தால் பெரும்பாலும் ஒவ்வொருவர்களுடைய யோக்கியதையும்



RangaRakes tamilnavarasam.com

விளங்கும். சாதாரணமாக சென்னை மாகாணத்தை எடுத்துக் கொண்டோ மேயானால் வருஷமொன்றுக்கு ஜமீன்தாரர்களுக்கு குடிகளிடமிருந்து சுமார் இரண்டரைக் கோடி ரூபாய் வரையில் கிஸ்தி (நிலவரி) கிடைக்கின்றது. இதில் அரைக்கோடி ரூபாய் மாத்திரமே இவர்கள் சர்க்காருக்கு செலுத்தி விட்டு பாக்கி இரண்டுகோடி ரூபாய்களை இந்த ஜமீன்தாரர்கள் அனுபவித்து வருகின்றார்கள். இந்த இரண்டு கோடி ரூபாயில் 100 க்கு 90 பாகம் ரூபாய்கள் நான் மேல் குறிப்பிட்ட வழியிலேயே பாழாக்கப்படுகின்றன.*

இந்த நிலவரியானது சென்னை அரசாங்கத்தாருக்கு மாகாணம் பூரா விலும் கிடைக்கும் நிலவரிக்கு 3-ல் ஒருபங்குக்கு மேலான தென்றே சொல்லுவேன். இந்தப்படி விளைவின் பயனாய் உண்டான செல்வம் அது வும் எத்தனை ஏழைக்குடியானவன், விவசாயக் கூலிக்காரன் ஆகியவர்கள் பெண்டு பிள்ளைகள் சகிதம் தங்கள் சரீரங்களை தினம் 8-மணி முதல் 15-மணி வரையில் வியர்வைப் பிழிந்து சொட்டு சொட்டாய் சேர்த்த ரத்தத்திற்கு சமானமான செல்வத்தை, ஒரு கஷ்டமும், ஒரு விபரமும் அறியாதவர்களும், ஒரு பொருப்பும் இல்லாதவர்களுமான ஜமீன்தார்கள் சர்க்காரில் லைசென்சு பெற்ற கொள்ளைக்கூட்டத்தார்கள் போல் இருந்து கொண்டு மக்கள் பதரப்பதர வயிறு வாய் எரிய எரிய கைப்பற்றி பாழாக்குவதென்றால் இப் படிப் பட்ட ஒரு கூட்டம் உலகில் இருக்கவேண்டுமா? என்றும் இவர் களின் தன்மையையும், ஆதிக்கத்தையும் இன்னம் வைத்துக் கொண்டிருக்கும் ஒரு ஜன சமூகம் சுயமரியாதையை உணர்ந்த-ஜனசமூகமாகுமா? என்பதைப் பற்றியும் யோசித்துப்பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். சாதாரண மாக ஜமீன் என்கின்ற மேற்கண்ட தன்மை, நாட்டில் அடி யோடு இல்லாமல் இந்த லாபங்களையும் அதாவது இந்த 2 கோடி ரூபாய் களையும் சர்க்காரே நேராய் அடைவதாய் இருந்தால் அதனால் மக்களுக்கு எவ்வளவு பயன் ஏற்படுத்தலாம் என்பதையும் யோசிக்க வேண்டுகிறேன்.

ஆதலால் மேல்ஜாதி, கீழ்ஜாதி முறை கூடாதென்றும், குருக்கள் முறை கூடாதென்றும் எப்படி நாம் பல துறைகளில் வேலை செய்கின்றோமோ அது போலவேதான் ஜமீன்தாரன்-குடிகள் என்கின்ற தன்மையும், முறையும் கூடாதென்று வேலைசெய்ய நாம் கட்டுப்பட்டவர்களாய் இருக்கின்றோம் என்ற இச்சிறு வார்த்தைகளோடு இந்தத்தீர்மானத்தை நான் பிரேரே பிக்கிறேன்.

## தீர்மானங்கள்

1. உலக செல்வத்தை ஒரேபக்கம் சேர்க்கும் முறையை ஒழிப்பதற்கும், உலகப் பொருளதார, சமத்துவத்துக்கும் பாடுபடுகிற மக்கள் அதன் பயனை சரிவர அடையவேண்டும் என்பதற்கும், ஜமீன்தார் முறையானது பெருத்த கெடுதியாகவும், தடையாகவும் இருந்துவருவதால் ஜமீன்தார் தன்மையை அடியோடு ஒழிக்கப் பகுத்தறிவுக்கு ஏற்றவழியிலும், பொருளாதார சமத்துவ



நியாய வழியிலும் சுயமரியாதை இயக்கம் பாடுபடவேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரேபித்தவர்:- ஈ.வெ.ராமசாமி
ஆமோதித்தவர்:-கே.வி.அழகர்சாமி

*குறிப்பு:- 20.08.1933 இல் இராசிபுரத்தில் நடைபெற்ற சேலம் ஜில்லா ஜமீன்தாரால்லாதார் மாநாட்டில் மாநாட்டின் முதல் தீர்மானத்தை முன்மொழிந்து அற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 27.08.1933**

| *ஜமீன்கள் பெயர் | ஜமீன்கள் குடிகளிடமிருந்து வசூலிக்கும் வருட மொத்த வரி ரூ | ஜமீன்கள் அரசாங்கத்திற்கு செலுத்தும் வருட வரி ரூ |
|---|---|---|
| ரூ.பர்லாக்கிமிடி | 498400 | 79787 |
| விஜயநகரம் | 2016269 | 494816 |
| பொப்பிலி (முதல் மந்திரி) | 621313 | 83453 |
| ஜெயபூர் | 1202018 | 15988 |
| பிதாபுரம் | 597930 | 262782 |
| தேவகோட்டா | 281170 | 79495 |
| வெங்கடகிரி | 1168353 | 36873 |
| கார்வெட்நகர் | 571110 | 173842 |
| காலாஹாஸ்தி | 582550 | 172982 |
| சிவகங்கை | 676937 | 253451 |
| ராமனாதபுரம் | 1169705 | 292627 |
| எட்டியாபுரம் | 296256 | 77985 |
| மற்ற ஜமீன்கள் | 12630585 | 2636005 |
| மொத்தம் ரூ. | 22312598 | 4991947 |

சர்க்கார் வரி போக ஜமீன்தார்கள் வருஷா வருஷம் தங்கள் சொந்தத்தில் அனுபவிக்கும் தொகை ரூ. 17320641.



RangaRakes tamilnavarasam.com

# சேலம் மகாநாடுகள்

சேலம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு இம்மாதம் 19, 20-தேதிகளில் ராசிபுரத்தில் நடைபெற்றதின் நடவடிக்கை விபரங்களும், மகா நாட்டுத் தலைவர், வரவேற்புத் தலைவர் முதலியவர்கள் உபன்யாசங்களும், தீர்மானங்களும் மற்றொரு பக்கத்தில் காணலாம்.

சென்ற வருஷம் சேலத்தில் நடந்த முதலாவது ஜில்லா சுயமரியாதை மகாநாட்டிலும், சுமார் 3 வருஷங்களுக்குமுன் ராசிபுரத்தில் நடந்த முதலாவது தாலூக்கா மகாநாட்டிலும் சிலரால் உண்டாக்கப்பட்ட இரண்டொரு அசௌகரியங்களும், இடையூறுகளும் மற்றும் எதிர்ப்பிரசாரங்கள் முதலியவைகளும், இந்த மகாநாட்டில் சிறிதுகூட தலைகாட்டுவதற்கில்லாமல் மறைந்து போனதும் இச் ஜில்லாவாசிகளுடைய பூரண ஒத்துழைப்பையும், ஆதரவையும் தாராள மாய்க் கொண்டிருந்ததல்லாமல் சுமார் 2000 பேர்களுக்கு மேற்பட்ட பிரதி நிதிகள் ஜில்லாவின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் விஜயம் செய்து மிகுந்த உற்சாகத்துடன் நடைபெற்றதும் இச் ஜில்லாவில் இந்த இரண்டு வருஷத் திற்குள் பகுத்தறிவு வளர்ச்சியும், சமதர்ம உணர்ச்சியும் மிகத் தாராளமாய் பரவியிருப்பதற்குத் தக்கதோர் சான்றாகும். நிற்க, மற்றொரு விசேஷம் என்ன வென்று பார்ப்போமானால் **ஜமீன்தாரல்லாதார் மகாநாடு** ஒன்று அங்கு கூட்டப் பட்டதேயாகும். இம்மகாநாடு கூட்டப்பட்டதும் அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய நோக்கமென்ன? அதன் கொள்கை என்ன? அதற்காக ஏற்படுத்திக் கொண்டிருக்கும் திட்டங்கள் என்ன? என்பனவைகளை விளக்குவதாகும்.

சுயமரியாதை இயக்கத்தின் லட்சியங்கள், கொள்கைகள் ஆகியவைகளைப் பற்றி, யார் பழித்தபோதிலும், யார் திரித்துக்கூறிய போதிலும், யார் அதை தூஷித்து விஷமப் பிரசாரம் செய்த போதிலும், யார் அதை வெளியில் பரவவொட்டாமல் தடுத்த போதிலும், யார் அதை வெகு சிறு-அற்ப லக்ஷியம் என்று கூறிய போதிலும், யார் அதை காரியத்தில் செய்ய முடியாத ஒரு அசாத்தியமான லக்ஷியம் என்று சொன்ன போதிலும் அவைகளையெல்லாம் ஒரு சிறிதும் லக்ஷியம் செய்யாமல் தனது முடிவான லக்ஷியத்திற்கு ஏற்றபடி நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டே



வந்திருப்பதுடன் அதற்கு ஏற்ற கொள்கைகளையும், திட்டங்களையும் அமைத்துப் பரப்புவதில் தீவிரமாய் சென்று கொண்டுதான் இருக்கின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி யாகும்.

சாதாரணமாய் ஒரு லக்ஷியம் கைகூடிற்று அல்லது செல்வாக்கும் பெற்று விட்டது என்று சொல்லப்பட வேண்டுமானால் அந்த லட்சியத்தின் எதிரிகளால் செய்யப்படும் சூழ்ச்சிகள் என்னும் பல தத்துவங்களையும் தடை களையும் சமாளித்துத் தாண்டியாக வேண்டும்.

அவையாவன:-

1. ஒரு லக்ஷியத்தை அதன் எதிரிகள் ஒழிக்க வேண்டுமானால் அப்படி ஒன்று இருக்கின்றது என்பதை தாங்கள் உணராதவர்கள் போலவும், உணர நேர்ந்தாலும் அதை வெகு அலட்சியமாய் கருதுகின்றவர்கள் போலவும் காட்டிக் கொள்வதன் மூலம் அதை ஒழிக்கப் பார்ப்பது.

2. அந்த லக்ஷியம் மேற்கண்ட அலட்சிய நிலையை தாண்டிவிடு மானால் பிறகு அதை வெகுகடினமாய் வெறுப்பது போல் காட்டுவதன் மூலம் ஒழிக்கப் பார்ப்பது.

3. பிறகு அதை திரித்துக்கூறி விஷமப்பிரசாரம் செய்வதன் மூலம் ஒழிக்கப் பார்ப்பது.

4. பிறகு கலகங்களாலும், கலவரங்களாலும் பிரசாரத்தை தடுப்பதன் மூலம் ஒழிக்கப் பார்ப்பது.

5. இவ்வளவையும் தாண்டி விட்டால் பிறகு அக்கொள்கைகளுக்கு எதிர்ப்பிரசாரம் செய்வதன் மூலம் அதை ஒழிக்கப் பார்ப்பது.

இப்படியாக பல தத்துவங்களையும் (தொல்லைகளையும் துன்பங்களையும், எதிர்ப்புகளையும்) தாண்டி விட்டால்தான் குறைந்த அளவு ஒரு இயக்கம் சொல்வாக்குப் பெற்று விட்டது என்றாகிலும் சொல்லலாம்.

ஆகவே நமது சுயமரியாதை இயக்கம் இந்த தத்துக்களில் எதின் தொல்லைகளுக்கும் ஆளாகாமல் இருந்து தப்பித்துக் கொள்ளாமல், ஒவ்வொன்றிற்கும் ஆளாகி எவ்வளவோ கஷ்டங்கள் நஷ்டங்கள் அடைந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. அவை ஒவ்வொன்றையும் பற்றி விளக்க முயற்சிப்பது பழைய குப்பைகளைக் கிளறுவதேயாகும்.

எது எப்படி இருந்தபோதிலும் சுயமரியாதை இயக்கம் தோன்றக் காரணமே ஏழை மக்களுடையவும், பாமர மக்களுடையவும் தாழ்த்தப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டு கஷ்டப்படும் மக்களுடையவும் பெரிதும் அவர்



RangaRakes tamilnavarasam.com

களுடைய நன்மைக்கும், சமத்துவத்துக்கும் என்று இருந்தாலும் இப்போது அது எல்லா மக்களுடைய சமத்துவத்துக்கும் சாந்திக்கும் திருப்திக்கும் கவலையற்ற தன்மைக்குமே பாடுபடவேண்டும் என்கின்ற லக்ஷியத்தைக் கொண்டிருக்கிறது.

இந்த லக்ஷியம் உலகத்துக்கு-மனித சமூகத்துக்குக் கேடானதானாலும், அற்பமானதானாலும் அசாத்தியமானதானாலும் அதை பற்றிய கவலை யில்லாமல் சுயமரியாதை இயக்கமானது தனது கருத்திலேயே கவலை கொண்டிருக்கிறது.

ஒரு மனிதன் தான் ஒருகாரியத்தைச் சாதித்துவிட்டுப் போக வேண்டும் என்பதற்காக உயிர்வாழவேண்டும் என்கின்ற அவசியத்தைச் சுயமரியாதை இயக்கம் ஒப்புக்கொள்ளுவதில்லை. ஆனால் மற்றென்ன வென்றால் ஒரு மனிதன் உயிர் வாழ்ந்திருப்பதினால் அவ்வுயிர் உள்ள வரையில் காரியம் செய்யவேண்டியது கடமை என்பதற்காக ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்பதுதான் சுயமரியாதை இயக்கக்காரர்களின் வாழ்வின் லக்ஷியமாகும். அதாவது:

சுயமரியாதைக்காரர்களின் லக்ஷியம் எல்லாம் அவர்களது வாழ்வு ஒரு நல்லகாரியத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும். அவர்களது உயிர் (சரீரம் இயங்கும் தன்மை) ஒரு அனாவசியமானதும், அறியாததுமான ஒரு நோய்க்கோ, (அபாய) எதிர்பாராதது சம்பவத்துக்கோ ஆளாகி முடிவடைந்துவிடாமல் ஒரு நல்ல காரியத்தைச் செய்வதில் பயன்பட்டு முடிவடைந்துவிடவேண்டும் என்பதைத் தவிர வேறில்லை.

காரியம் நல்லதா? கெட்டதா என்பதற்குச் சுயமரியாதைக்காரர்களின் அளவு கருவியெல்லாம் அவர்களது பகுத்தறிவேயல்லாமல் "ஆண்டவன்" கட்டளையோ, "பெரியோர் வாக்கோ" "ரிஷிகள் மகாத்மாக்கள்" என்பவர்கள் எழுதிவைத்த வேத சாஸ்திர புராண நீதிகளோ அல்ல என்பதும் அவர்களது அபிப்பிராயம்.

ஆதலால் சுயமரியாதைக்காரர்கள் வாழ்வு அவர்களது அறிவுக்குச் சரியென்று பட்டகாரியத்தில் செலவிடப்பட வேண்டியது என்பதைத் தவிர வேறில்லை. சுயமரியாதைக்காரர்கள் மனிதன் செத்துவிட்டானேயானால் (சரீர அசைவு புலன் உணர்ச்சி அடங்கி விடுமேயானால்) பிறகு அவனுக்கு வேறு எவ்வித சம்மந்தமும், தொடர்பும் உலகிலோ வேறெங்கிலுமோ கிடையா தென்பதாக கருதி இருக்கின்றவர்கள். சுருங்கக்கூறில் ஆத்மா என்றோ ஜீவன் என்றோ ஒன்று இருப்பதாகவும் மற்றும் சரீரத்துக்கும், சரீரத்துள்ள உருப்புகள் உருப்புகளின் அமைப்புகள் அமைப்புகளினால் ஏற்படும் செய்கைகள் ஆகியவற்றிற்கு அன்னியதான ஒருவஸ்து இருக்கிறது என்பதாகவும் அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. ஆகையால் சரீரம்



இயங்கும் தன்மையில் இருக்கும் போது அத்தன்மைக்கு ஏற்ற காரியங்களைச் சாத்தியப்படக்கூடிய அளவு, அவ்வளவையும் பிரயோகித்துச் செய்துவிடுவது என்கின்ற முடிவில் இருக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்கு கடமையைத்தவிர வேறொன்றையும் பற்றிய லக்ஷியமும் கவலையும் இல்லை. இந்நிலையில்தான் மனிதசமூக நன்மைக்கு மாறான காரியங்களை அழிக்கவேண்டும் என்கின்ற தத்துவத்தில் முதலில் ஜமீன்தார்கள் தன்மையும் முறையும் ஒழியவேண்டும் என்பது (முக்கியமானவைகளில்) ஒன்றாகும்.

மனிதசமூக வாழ்வுக்கு ஜமீன்தார்தன்மை ஒரு விஷ ஜந்துக்கு ஒப்பானதாகும். மனிதர்கள் தரித்திரம், பசி முதலிய கஷ்டங்களுக்கு ஆளாகி சுகவாழ்வு இல்லாமல் அடிமை நிலையில் இருப்பதற்கு இந்த ஜமீன்தார்கள் என்னும் விஷ ஜெந்துக்களே காரணமாகும்.

இந்த ஜமீன் முறையானது உலக வாழ்க்கைக்கு அல்லாது எந்த விதத்தில் அவசியமானது என்பது நமக்கு விளங்கவில்லை. இவர்களால் மனித சமூகத்திற்கு என்ன நன்மை என்பதும் விளங்கவில்லை. பெரும் பெரும் பரப்புள்ள பூமிகளை தங்களுடையது என்று செய்து கொள்ளவும் அவற்றை பெரும் எண்ணிக்கை கொண்ட மக்கள் பாடுபட்டு உழுது பயிர்செய்து பாதுகாத்துத் தானியமாக்கி, ஜமீன்தாரர்களுக்குக் கொடுக்கவும், அவர்கள் "தயவு செய்து" "கருணை வைத்து" விளைவில் ஒரு பாகத்தை பயிரிட்ட குடியானவர்களுக்குக் கொடுப்பதும், அது எந்த விதமான காரியத்துக்கும் பிரதிப் பிரயோஜனமாய் இல்லாமல் வெள்ளாமைக்கு அடுத்த பட்டம் வரும்வரை அந்தக் குடியானவன் செத்துப்போகாமல் உயிர் வைத்து இருந்து மறுபடியும் உழுது பயிர் செய்து தானியமாக்கித் தனது குதிரில் கொண்டு வந்து கொட்டுவதற்காக வேண்டிமாத்திரம் எவ்வளவு அவசியமோ அவர்களுக்குத் 'தருமம்' செய்யவுமாயிருக்கிறார்கள்.

மற்றபடி இந்தப்படியாக இவர்களுக்குக் கிடைத்த செல்வத்தில் மற்றொரு சிறு பாகம் சர்க்காருக்கு "தருமம்" செய்கிறார்கள். அதாவது இந்த செல்வத்தில் பாடு பட்டு உழைத்த குடியானவர்கள் பங்கு கேட்காமல் இருக்கவும், இந்த குடியானவர்கள் இந்த ஜமீன்தாரர்களின் அக்கிரமங்களுக்கு எவ்வித பரிகாரமும் தேடாமலிருக்கவும் லஞ்சம் என்று சொல்லுவதற்குப் பதிலாக சர்க்கார் கிஸ்து என்ற சொல்லின் பேரால் ஒரு அளவு கொடுக்கிறார்கள். மற்றபடி ஒவ்வொரு ஜமீன்தாரர்களுக்கும் மீதியாகும் 10 லக்ஷம் 20 லக்ஷக்கணக்கான ரூபாய்கள் என்ன கதி ஆகின்றன என்று பார்த்தால் அதன் உண்மை நன்கு விளங்கும்.

மற்றும் இதுபோலவே இன்னும் இரண்டொரு கூட்டம் உண்டு- அதாவது லேவாதேவிக்காரர்கள், மில் முதலாளிகள் முதலாகியவர்களாவார்கள்.



RangaRakes tamilnavarasam.com

லேவாதேவி என்பது ஒரு கொடுமையான தொழிலாகும். அதற்கு வேறுபெயர் சொல்லவேண்டுமானால் சட்டப்படி கொடுமைப்படுத்திக் கொள்ளை யடிப்பதேயாகும். ஜமீன் தன்மையின் பயனாய் எப்படி உலக நிலங்கள் எல்லாம் நாளாவட்டத்தில் சிலருக்கே சொந்தமாகிவிடுகின்றதோ அதே போல் லேவாதேவி யென்பதும் உலக செல்வங்களையெல்லாம் சிலருக்கே சொந்தமாக்கும் சூட்சியே யாகும். இவர்களாலும் உலகத்திற்கு யாதொரு பயனும் கிடையாது. கேடே அதிகமாகும்.

மற்றும் மில் (யந்திரசாலை) முதலாளிகள் என்பவர்களும் பாடுப்பட்டு உழைக்கும் மக்கள் பயனை அனுபவித்துக்கொண்டு பெரும்பான்மை மக்களை என்றும் ஏழைகளாக-தாழ்த்தப்பட்டவர்களாக வைத்திருப்ப வர்கள். இந்தக்கூட்டத்தாரும் நாட்டுக்கு அவசியமில்லாதவர்களே யாவார்கள்.

இந்த மூன்று கூட்டமும் ஒரு நாட்டில் இருக்குமானால் அந்த நாட்டுக்கு எப்படிப்பட்ட "சுயராஜ்யம்" "குடியரசு" "குடி ஆட்சி" கிடைத்த போதிலும் அது ஒரு வினாடி கூட ஜனநாயகமாக இருக்க முடியவே முடியாது. ஏனெனில் மேல்கண்ட கூட்டம் எப்பொழுதும் செல்வம் பெருக்கிக்கொண்ட கூட்டமாகவும், மற்ற கூட்டம் என்றும் ஏழைக் கூட்ட மாகவும் தான் இருக்கும். ஆகவே செல்வவான்கள் ஏழைகளின் வாக்கை (ஓட்டுகளை) விலைக்கு வாங்கி தாங்களே ஆட்சிக்காரர்களாய் வந்து விடக்கூடும். இதற்கு உதாரணம் வேண்டுமானால் சென்னை அரசாங்க நிர்வாகத்தையும் சென்னை மாகாண ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தையும் பார்த் தால் நன்றாய் விளங்கும். சென்னை மாகாண முதல் மந்திரி ஒரு ஜமீன்தார், சென்னை (நகர) ஸ்தலஸ்தாபன சபைத் தலைவர் ஒரு லேவாதேவிக்காரர் என்பதும் பிரத்தியட்ச உண்மையாகும். வெளி ஜில்லாக்களிலும் இது போலவேதான் ஒரு பெரிய முதலாளியோ, அல்லது லேவாதேவிக்காரரோ, அல்லது ஜமீன்தாரரோதான் தலைவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் அந்தப் பதவிகளை அடைந்ததற்கு காரணம் எல்லாம் அவர்கள் பண (க்கொழுப்பு) விசேஷமேயொழிய புத்தி (க்கொழுப்பு) விசேஷமல்ல என்பது எந்த மனிதனுக்கும் தெள்ளென விளங்கும் சேதியாகும்.

ஆதலால் இந்தக் கூட்டங்கள்தான் மனிதசமூக நீதிக்கும், சமத்துவத் துக்கும், சகோதரத்துவ உரிமைக்கும் நரையான் போன்றவர்கள் ஆவார்கள். இந்த உண்மைகளை யெல்லாம் உணர்ந்த சேலம் ஜில்லாக்காரர்கள் சுயமரியாதை மகாநாடுடன் ஜமீன்தாரல்லாதார் மகாநாடு கூட்டினது பாராட்டத்தக்கதாகும். இனி அடுத்து கூடும் மகாநாடுகளில் லேவாதேவிக் காரர் அல்லாதார் மகாநாடு முதலியவைகளும் கூட்டி இக்கூட்டத்தார்களை பொதுவாழ்வில் தலைகாட்டாமல் செய்யவேண்டியது சுயமரியாதை இயக்கத்தார்களின் முக்கியக் கடமைகளில் முதன்மையானதென்று



தெரிவித்துக் கொள்ளுகிறோம். மற்றும் சேலம் ஜில்லா 2 வது சுயமரியாதை மகாநாட்டை நடத்திக்கொடுத்த வேளுக்குரிச்சி மிட்டாதார் தோழர் சோம சுந்திரம் அவர்களையும் தோழர் காவேரி அவர்களையும், தோழர் எஸ். வி. லிங்கம் அவர்களையும், மற்றும் சேலம், ராசிபுரம் வாலிப தோழர்களையும், பெரியோர்களையும் பாராட்டுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 27.08.1933**



RangaRakes tamilnavarasam.com

# "வெடிகுண்டு"

சுயமரியாதை இயக்கக் கொள்கையை ஆதரித்து மதுரையில் 'வெடி குண்டு' என்னும் பத்திரிகை தோன்றி தொண்டாற்றி வருவது யாவரும் அறிந்ததேயாகும். வியாபார முறையை விட்டும், சமயத்திற்கு தகுந்தபடி மாறிக்கொள்வதை விட்டும், தனக்கு என்று ஏதாவது ஒரு கொள்கையும் இல்லாமல் "பரிசுத்தமாய்" இருக்கும் நிலையை விட்டும் நடைபெறும் பத்திரிக்கைகள் நமது நாட்டில் அதாவது பகுத்தறிவற்று பாமரத்தன்மை பூண்டு இருக்கும் ஜனங்கள் மலிந்தநாட்டில், கவலையற்று நடைபெறுவது என்பது மிக மிக கஷ்டமான காரியமாகும். இந்தக் காரணத்தால் இதுசமயம் "வெடிகுண்டு" பத்திரிகை மிக்க நெருக்கடியில் நடைபெறுகிறது என்று நாம் கேள்விப்படுவதில் அதிசயமொன்றுமில்லை. இருந்தபோதிலும் மதுரை சுயமரியாதை சங்கத்துக்கு மிகுதியும் ஆதரவளித்து வருபவரும், முனிசிபல் கௌன்சிலரும் செல்வாக்கும், செல்வமும் பொருந்தியவருமான தோழர் ஆ. அ. ஆறுமுகம் அவர்களது உதவியாலும் ஆதரவாலும் ஒருவாரு நடத்தப் பட்டு வருகிறது என்றாலும் சதா சர்வகாலமும் ஒரு பத்திரிகை ஒருவரின் ஆதரவையும், உதவியையும் கோறி நிற்காமல் தன் காலிலே தைரியமாய் நிற்கவேண்டுமாதலால் சுயமரியாதை இயக்க அன்பர்களும், அபிமானி களும், அதை ஆதரிப்பது மாத்திரமல்லாமல் அது கிராமங்கள் மூலை முடுக்குகள் தோறும் செல்லும்படியான அளவுக்கு உதவிசெய்ய வேண்டு மாய் வேண்டுகிறோம்.

**குடி அரசு - மதிப்புரை - 27.08.1933**



# மனிதன் ஒரு ஜீவப்பிராணியே
## உருப்புகளின் அமைப்புக்குத் தக்கபடியே பகுத்தறிவு

**- தோழர் ஈ.வெ.ராமசாமி**

உலகில் உள்ள ஒவ்வொரு ஜீவராசிகளும் தன் தன் சரீரத்தில் பற்றுக் கொண்டவைகளாவே இருந்துவருகின்றன. அந்தச் சரீரப்பற்று என்பது சரீரமானது ஜீவித்திருப்பதற்கு ஆதாரமானது என்கிற தத்துவத்தினாலேயே ஏற்பட்டதாகும். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிக்காத ஜீவன் கிடை யவே கிடையாதெனலாம். ஆனால் எல்லா ஜீவராசிகளும் என்றைக்காவது ஒரு நாள் ஜீவிப்பற்று செத்தே போகும் என்பது மாத்திரம் அனுபவ சித்தாந்தமாகும்.

உலகிலுள்ள மற்ற எல்லா ஜீவராசிகளைப்போலவே மனிதவர்க்கம் என்னும் ஜீவராசியும் ஒன்றாகும். ஒரு மனிதனும் ஒரு யானையும் ஒரு எறும்பும் ஒருசிறு பேனும் பூதக் கண்ணாடிமூலம் பார்த்தரியத் தக்க அதி நுட்பமான ஒரு கிருமியும் எல்லாம் ஒரே தத்துவத்தைக் கொண்ட ஜீவ ராசிகளாகும்.

ஆனால் அவை தோற்றத்திலும்-செயலிலும் வேறுபட்டிருக்கலாம். அப்படியானால் "மனிதனுக்கும் கழுதைக்கும் வித்தியாசமில்லையா?" என்று ஒருவர் கேட்கலாம். ஜீவ தத்துவத்தில் வித்தியாசமில்லை என்றுதான் பதில் சொல்லுவேன். ஏதாவது வித்தியாசம் உண்டு என்று சொல்லவேண்டு மானால், ஒரு நாய் ஜீவனுக்கும் ஒரு கழுதை ஜீவனுக்கும் என்னவிதமான வித்தி யாசமோ அந்தவிதமான வித்தியாசந்தான் உண்டு என்று சொல்லலாம். ஆனால் அவ்வித்தியாசம் அளவில் (டிக்கிரியில்) ஜாஸ்தியாகவோ, கம்மி யாகவோ இருக்கலாம் என்று தான் கொள்ளவேண்டும்.

இன்னும் பேசப்போனால் தாவரவர்க்கங்களும் ஜீவவர்க்கங்களுங் கூட தத்துவத்தில், அதாவது உற்பத்தி தத்துவத்திலும், வாழ்வு தத்துவத்திலும், அழிவு தத்துவத்திலும், ஒரே தத்துவத்தை ஆதாரமாய்க் கொண்டு இருந்து வருகின்றன என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

வித்தின்மூலம் எப்படி மரம் செடிகள் புல்பூண்டுகள் உற்பத்தியாகின் றனவோ, அதுபோல ஆண்-பெண் சேர்க்கையில் விந்து மூலம் ஜீவப் பிராணிகள் உற்பத்தியாகின்றன. வித்தில்லாமல் எப்படி சில தாவர வர்க்கங் கள் உற்பத்தியாகின்றனவோ அதுபோல் தான் ஆண் பெண் சேர்க்கை யில்லாமல் பல ஜீவ வர்க்கங்களும் உற்பத்தியாகின்றன.

தாவர வர்க்கங்களில் ஒன்றுக்கொன்று வித்தியாசமும், மாறுபட்ட சக்தி யும் இருப்பதுபோலவே ஜீவவர்க்கத்தினிடமும் ஒன்றுக்கொன்று வித்தியாச மும், மாறுபட்ட சக்தியும் இருந்துவருகின்றது.

மனித ஜீவவர்க்கத்தினிடமுள்ள சில குணங்கள் எப்படி மற்ற ஜீவராசி களுக்கு இல்லையோ, அதுபோன்றே மற்ற ஜீவராசிகளுக்கு உள்ள சில குணங்கள் மனித ஜீவ வர்க்கத்திற்கு இல்லாமல் இருப்பதை நாம் பார்க் கின்றோம்.

ஒரு கழுதைக்கும், ஒரு குரங்குக்கும் உள்ள வித்தியாசத்தைக் கணக்குப் பார்த்து, ஒரு குரங்குக்கும் ஒரு மனிதனுக்கும் உள்ள வித்தியாசத் துடன் ஒப்பிட்டுப் பார்ப்போமானால் பின்கண்ட வித்தியாசத்தின் அளவு அதிகமாய்க் காணமுடியாது.

ஆகவே மனித ஜீவன் ஜீவப்பிராணிகளிலெல்லாம் மேலானதென்றும் -தனிப்பட்டதென்றும் அதற்கு மாத்திரமே சில தனி தத்துவங்களுண்டு என்றும் கருமம், மதம், மேல்லோக வாழ்வு, கடவுள், கடவுள் தண்டனை, மன்னிப்பு, சன்மானம் ஆகியவை சொந்தமென்றும் மனிதனுக்கே சில உயர்ந்த தத்துவங்கள்-கடமைகள் பிரார்த்தனைகள், முதலியவை உண் டென்றும் சொல்லுவதில் ஏதாவது அர்த்தமிருக்க இடமுண்டா? என்று பார்த் தால் இவைவெறும் கற்பனைகளென்றே விளங்கும். மற்றும் "கடவுளுக்கும்" மனிதனுக்கும் இருக்கும் சம்மந்தமும், பொறுப்பும் மற்ற ஜீவராசிகளுக்கு இல்லை என்று சொல்லமுடியுமா? என்பதும் விளங்கும். அதுபோலவே "பாவமும் புண்ணியமும் சொர்க்கமும் கடவுள் பதத்தை", அடையக்கூடிய தன்மையும் மற்ற ஜீவராசிகளுக்கு இல்லையென்று சொல்லமுடியுமா? என்பதும் விளங்கும்.

ஒரு பூச்சியின் செய்கைக்கு 'பாவம்' 'புண்ணியம்' உண்டானால் தான் ஒரு மனிதனின் செய்கைக்கும் பாவம் புண்ணியம் உண்டாகமுடியும்.

மனிதனுக்குள்ள பகுத்தறிவு என்பது கடவுளால் தனிப்பட்ட காரியத் துக்காகக் கொடுக்கப்பட்டது என்றால், ஒரு யானைக்குள்ள தும்பிக்கை யை யும், ஒரு நாரைக்குள்ள நீண்ட மூக்கையும், ஒரு முள்ளம்பன்றிக்கிருக்கும் செதிள் முள்ளுகளையும், தேளுக்குள்ள கொடுக்கையும், பாம்புக்குள்ள விஷத்தையும் போன்றவைகளையெல்லாம் கடவுளால் தனிப்பட்ட



காரியங்களுக்காக கொடுக்கப்பட்டது என்றுதானே சொல்லவேண்டும். ஆதலால் ஒரு யானைக்குத் தும்பிக்கை விசேஷ உறுப்பாகவும் நீண்ட அவயவமாகவும் இருப்பது போலவே மனிதனுக்கு 'பகுத்தறிவு' க்குள்ள நரம்புக்கூட்டும் மூளையின் பரிமாண அதாவது அதிக சிந்தனா சக்திக் குள்ள உறுப்புகள் என்பவை விசேஷ உறுப்பாகவோ, விசேஷ சக்தி யாகவோ இருக்கின்றதென்பதேயல்லாமல் அதற்கு மாத்திரம் ஒரு தனி விசேஷத்துவம் இல்லை என்பதே எனது அபிப்பிராயம்.

உதாரணமாக ஜீவப்பிராணிகளுடைய இந்திரியங்களின் விசே ஷத்தை எடுத்துக் கொள்வோமானால் ஒரு எறும்புக்கு இருக்கும் மூக்கு மோப்பசக்தி ஒரு மனிதனுக்குக் கிடையாது. உதாரணமாக சர்க்கரையோ, பிஸ்கோத்தோ ஒரு பெட்டிக்குள் இருக்குமானால் அதை மனிதனால் மோப்பத்தின் மூலம் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் ஒரு சிறு எறும்பு கண்டுபிடித்துவிடும். அதுபோலவே பக்ஷிகளின் (கண்) பார்வை சக்தி ஒரு மனிதனுக்குக் கிடை யாது. உதாரணமாக சமீப தூரத்தில் இருந்தும் மனித னுக்குத் தென்படாத ஒரு வஸ்துவானது பூமிக்குமேல் ஒரு மைல் இரண்டு மைல் உயரத்தில் பறக்கும் பக்ஷியின் மிகச்சிறிய கண்களுக்குத் தென்பட்டு அப் பக்ஷியால் அது தூக்கிச் செல்லப்படுகின்றது. மீனுக்கு இருக்கும் நீந்தும் சக்தி மனிதனுக்கு இல்லை. உடும்புக்கு இருக்கும் பிடித்துக்கொள்ளும் அவையவ சக்தி மனிதனுக்கு இல்லை.

இதுபோலவேதான் ஒரு விஷயத்தில் மனிதனுக்குள்ள மூளை அவையத்தின் சக்தி மற்ற ஜந்துக்களுக்கு இல்லை என்று சொல்லவேண்டும். இந்த வித்தியாசங்களெல்லாம் அமைப்பில் ஜீவனுக்கு ஜீவன் மாறுபட்டி ருப்பதுபோன்ற ஒரு வித்தியாசமே தவிர, மனிதனுக்கு மாத்திரம் ஏற்பட்ட ஒரு தனித்தத்துவ உயர்குணம் என்று சொல்லிவிட முடியாது.

"பகுத்தறிவு என்பது மனிதனுக்கு மாத்திரந்தான் உண்டு; அது தனிக் காரியத்திற்காகக் கடவுளால் கொடுக்கப்பட்டது" என்று சொல்லப்படுமா னால் பகுத்தறிவு இருக்கின்றது என்கிற காரணத்திற்காக மனிதன் எந்த விதத்தில் மேலான நிலையில் உள்ளவனாய் இருக்கிறான் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். மற்ற "பகுத்தறிவில்லாத " ஜீவனுக்கு உள்ள என்ன "குறைகள்" பகுத்தறிவுள்ள மனிதனிடம் இல்லாமல் இருக்கிறதைக் காண்கின்றோம்?

ஆகாரம், நித்திரை, ஆண் பெண் சேர்க்கை ஆகிய தேவைகளில் மற்ற ஜீவன்களிடமுள்ள தேவைகளே மனிதனிடமும் காணப்படுகின்றன; இன்னும் பேசப்போனால் மற்ற ஜீவன்களைவிட அதிகமாகவும் காணப்படு கின்றன. ஆசை என்கிற ஒரு "கெட்ட" குணம் மற்ற ஜீவன்களைவிட மனித ஜீவனிடம் அதிகமாகவே காணப்படுகின்றது. அதிருப்தி என்கிற "கெட்ட" குணம் மனிதனிடமே அதிகமாய் இருக்கின்றது. கவலை என்கின்ற



RangaRakes tamilnavarasam.com

“கெட்ட” குணமும் மனிதனுக்கே அதிகமாய் உண்டு. தன் இனத்தை அடிமைப்படுத்தி அதைக் கொடுமைப்படுத்திவாழும் ‘கெட்ட’ குணம் மனிதஜீவனிடத்தி லேயே அதிகமாய் இருந்துவருகின்றது. மற்றஜீவன் களுக்கு உள்ளது போன்ற வஞ்சகம் ஏமாற்றம் முதலிய குணங்கள் மனிதனி டத்திலேயே அதிகமாய் இருந்துவருகின்றன. தனக்குத் தெரியாததையும், புரியாததையும் பற்றி நம்புதல், பேசுதல், நம்பச்செய்தல் முதலிய மூடத் தன்மைக்குணம் மனித ஜீவனிடத் திலேயே அதிகமாய் இருந்துவருகின்றது. நம்பிக்கைக்கும், நடவடிக்கைக்கும் சம்மந்தமில்லாத குணம் மனித ஜீவனி டமே இருந்து வரு கின்றது. ஒரே விஷயத்தை இரண்டுவிதமாய் நம்பும் சுயபுத்தியற்ற தன்மையும் மனிதனிடமே இருந்து வருகின்றது.

இதுபோன்ற எத்தனையோ கெட்ட குணங்கள் மனிதஜீவன் தனது பகுத்தறிவின் பயனாகவே உடைத்தாயிருக்கின்றது. ஆகையால் பகுத்தறி வின் “மேன்மையால்” மனித ஜீவன் சிறந்தது என்று எப்படி சொல்லிக் கொள்ளமுடியும் என்பதே நமது கேள்வியாகும். மேலும், மேற்கண்ட காரணங்களாலும், மற்றும் பல காரணங்களாலும் மனிதஜீவன்களில் பெரும் பான்மை யானவை மற்ற ஜீவராசிகளைவிட இழிவுத்தன்மையுடையது என்பதும் நமது அபிப்பிராயமாகும். “ஜாதியின்” பேரால் உயர்வு தாழ்வு “மதத்தின்” பேரால் வேற்றுமை உணர்ச்சி, “தேசத்தின்” பேரால் குரோதத் தன்மை முதலான இழிகுணங்கள் மனிதனிடமே அதிகமாய் காண்கிறோம். மற்றும் “கடவுளின்” பேரால் மேல்கீழ்நிலை முதலாகிய அயோக்கியத் தன்மைகள் மனித ஜீவனிடமே உண்டு. பகுத்தறிவின் காரணமாக மனித ஜீவன் உயர்ந்தது என்று சொல்லவேண்டுமானால், மேற்கண்ட கெட்ட-தீய- இழிவான அயோக்கியத் தனமான குணங்கள் என்பவைகள் எல்லாம் மனிதனிடம் இல்லாமல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மற்ற “பகுத்தறிவில்லா” ஜீவராசிகளைவிட மனிதஜீவன் மூளை விசேஷம் முதலிய அவயவத்தை நன்மைக்காகப் பிரயோகித்துக்கொண்ட ஜீவன் என்று சொல்லப்படும். அஃதில்லாத நிலையில் எவ்விடத்திலும் மனிதஜீவன் மற்ற ஜீவபிராணிகளை விட உயர்ந்ததல்ல என்பதோடு பலவிதத்திலும் தாழ்ந்தது என்றும்சொல்ல வேண்டியிருக்கிறது.

**(“நகரதூதன்”)**

**குடி அரசு - கட்டுரை - 03.09.1933**



# கபடநாடகக் கடவுள்

**- சித்திரபுத்திரன்**

தோழர் காந்தியவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் கடவுள் கட் டளைப்படி செய்வதாகச் சொல்லி வருவது யாவரும் அறிந்ததாகும். பலர் அதை உண்மையென்று நம்பியும் வருகிறார்கள். ஏன் அந்தப்படி இருக்கக் கூடாது என்று வாதமும் பேசுகிறார்கள். தோழர் காந்தியவர்கள் ஏர்வாடா சிறையில் சென்றவாரம் இருந்தகாலத்தில் ஹரிஜனங்களுக்கு வேலை செய்ய சகல சௌகர்யங்களும் சர்க்கார் தனக்கு அளிக்காவிட்டால் பட்டினிகிடக்க வேண்டுமென்று கடவுள் கட்டளை இட்டதாகச் சொல்லி பட்டினி இருந்தார். சர்க்காரை எந்தவிதமான தனி சுதந்திரமும் கடவுள் கேட்க வேண்டாம் என்று சொன்னார் என்று, வேண்டியதில்லை என்றார். பிறகு ஹரிஜன சேவை செய்ய கடவுள் சொல்லுகின்றார் என்று சொல்லி சில சுதந்திரம் கேட்டார். சர்க்கார் சில சௌகரியங்கள் கொடுத்திருப்பதாகத் தெரிவித்தவுடன் பட்டினியை நிறுத்தும் படி கடவுள் கட்டளையிட்டதின் பிரகாரம் பட்டி னியை நிறுத்திவிட்டதாக சர்க்காருக்கு வாக்கு கொடுத்துவிட்டார். பிறகு மாலையில் கடவுள் அந்த வாக்கை நிறைவேற்றமுடியாமல் மறுபடியும் காந்தியாரைப் பட்டினி கிடக்கும்படி செய்ததுமாத்திரமல்லாமல் காந்தி யாரை மன்னிப்புக்கேட்கும்படியும் செய்து விட்டார்.

கடவுளின் இந்தமாதிரியான வாக்குத்தவருதலானது அனாவசியமாய் காந்தியார் தலையில் பழிவிழுந்து மன்னிப்பும் கேட்டுக்கொள்ளச் செய்த தென்றால் கடவுளின் யோக்கியப்பொருப்பற்ற தன்மைக்கு வேறு ருஜு வேண்டுமா? எது எப்படியானால்தான் என்ன எவ்வளவு வாக்குத் தவறுதல் கள் ஏற்பட்டால்தான் என்ன யார் எவ்வளவு மன்னிப்புக்கேட்டுக் கொண் டால்தான் என்ன முடிவில் காரியம் கைகூடவேண்டியது தானே புத்தி சாலித்தனமான லட்சியமாகும். ஆதலால் கடவுள் தனது பக்தனாகிய காந்தி யாரை விடுதலை செய்விப்பதற்காக என்ன என்ன எல்லாம் செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டியது தான் கடமையாகும். அதிலும்



RangaRakes tamilnavarasam.com

“கபட நாடக சூஸ்தரதாரி யாகிய கடவுள்” என்னதான் ஏன்தான் செய்ய மாட்டார். “கடவுள் செயலைப் பற்றிப் பேச எவருக்கும் யோக்கியதையும், உரிமையும் இல்லை” ஆதலால் நாம் இதுபேசியதுகூட அதிகப்பிரசங்கித் தனமென்று இப்பொழுது கருதுவ தால் மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டியதுதான்.

**குடி அரசு - கட்டுரை - 03.09.1933**



# இந்திய சுதேச சமஸ்தானங்கள்

இவ்வாரம் சிம்லாவில் நடந்த இந்திய சட்ட சபைக்கூட்டத்தில் இந்திய சுதேச சமஸ்தானங்களின் பாதுகாப்புக்காக என்று “இந்தியாவில் அரசர் பெரு மானின் சர்வாதிகாரத்துக்கு உள்பட்ட சமஸ்தானங்களின் பாதுகாப்புச் சட்டம்” என்பதாக ஒரு புதிய சட்டம் அரசாங்கத்தாராலேயே கொண்டுவரப் பட்டிக் கிறது.

இந்தச் சட்டம் இப்போது கொண்டுவருவதற்குள்ள அவசியத்தை இந்திய அரசாங்க ஹோம்மெம்பர் எடுத்துச் சொல்லும்போது “இந்தியாவில் அரசர் பெருமானின் சர்வாதிகாரத்திலுள்ள சமஸ்தானங்களின் நிர்வாகத் தைக் கவிழ்க்கவோ, அச்சமஸ்தானங்கள் விஷயமாய் பிறர் துவேஷங் கொள்ளும் படி செய்யவோ செய்யப்படும் முயற்சிகளைத் தடுக்க இச்சட்டம் செய்யப்படுகின்றது” என்று சொல்லியிருக்கிறார்.

சுதேச சமஸ்தானங்கள் என்பவைகள் பிடிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு வந்தகாலம் முதல்கொண்டே இருந்து வருபவையாகும். சில அதற்கு முன்பு இருந்தே - இருந்து வருவனவுமாகும். அப்படியிருக்க இத்தனை காலம் பொருத்து இப்பொழுது அவைகளைக் காப்பாற்ற என்ப தாக புதியசட்டம் ஒன்று ஏன் செய்யப்படவேண்டும் என்பதைக் கவனித்தால் அதில் ஏதோ ஒரு இரகசியம் இருக்கவேண்டுமென்பது விளங்காமல் போகாது. இதுபோலவே தான் சுமார் 5, 6 வருஷங்களுக்கு முன்னால் மதத் தலைவர்களைக் காப்பாற்ற என்று ஒரு சட்டம் செய்யப் பட்டது. மதங்களும், மதத் தலைவர்களும் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஆகி இருக்கலாம். அப்படியிருக்க 1927ம் வருஷத்தில் மேல்கண்டபடி “மதத் தலைவர்கள் மீது துவேஷம் உண்டாகும்படியோ, ஒரு மதத்தைச் சேர்ந்தவர் களுக்கு மனவருத்தம் உண்டாகும்படியோ செய்யப்படும் காரியங்களைத் தடுக்க” என்பதாக ஒரு சட்டம் செய்து கொண்டார்கள். இது சமஸ்தான ஆதிக்கங்களைக் காப்பது போலவே மத ஆதிக்கத்தைக் காப்பாற்றவே செய்யப்பட்டதாகும். ஆனால் அக்காலத்திலேயே இதைப்பற்றி நாம் மதக் கொள்கைகள் அறிவுக்கும், மனிதனுடைய சுயேச்சைக்கும் விரோதமாய் இருக்குமானால் அதை ஆக்ஷேபிக்கவோ, கண்டிக்கவோ எவருக்கும்



RangaRakes tamilnavarasam.com

உரிமை இருக்கக்கூடாது என்று சட்டம் செய்வதானது பகுத்தறிவைத் தடுத்து மூடநம்பிக்கையையும், அடிமைத்தனத்தையும் வளரச் செய்வதாகுமென்று சொல்லி பலமாக ஆக்ஷேபித்திருந் தோம். அதுசமயம் இந்தியா முழுவ திலுமே நம்மைத்தவிர வேறுயாரும் இவ்விதமான கொடுங்கோன்மை அடக்குமுறைச் சட்டத்தை ஆக்ஷேபித்ததாகத் தெரியவில்லை. இந்திய சட்டசபையில் உள்ள எல்லா அங்கத்தினர்களும் அச்சட்டத்தை ஆதரித் தார்கள் என்றாலும் நம் ஆக்ஷேபணையின் பலனாக ஏதோ சில மாறுதல்கள் மாத்திரமே செய்யப்பட்டது.

ஒருவரையொருவர் தூஷித்தால், ஒருவர்மேல் ஒருவருக்குத் துவேஷம் உண்டாகும்படி நடந்துகொண்டால் அதைத் தண்டிக்க ஏற்கனவே சட்டம் இருந்துவந்தும் திடீரென்று "மதத்தலைவர் பாதுகாப்பு" சட்டத்தை உண்டாக்கிவிட்டார்கள். அந்தப்படி ஒரு சட்டம் செய்யவேண்டு மென்று அந்தக்காலத்தில் சர்க்காருக்கு முதன்முதலில் யோசனை சொன்ன வர் ஒரு சென்னை மாகாணத்து தமிழ்நாட்டுப் பார்ப்பனரேயாகும். சுயமரி யாதை இயக்கத்தின் போக்கைப்பற்றி அநேக பார்ப்பனர்கள் அக் காலத்தில் பத்திரிக்கையில் ஓலமிட்டதைப் பார்த்தே ஒரு சட்ட நிபுணப் பார்ப்பனர் **ரங்கிலாரசூல்** என்ற துண்டுப்பிரசுரத்தை சாக்காக வைத்து இம் மாதிரி யோசனை சொன்னவுடன் அரசாங்கத்தார் இதே சாக்கென்று ஒரு வாரத்தில் சட்டம் கொண்டுவந்து எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேற்றிக் கொண் டார்கள்.

போதாக்குறைக்கு இப்பொழுது இந்திய சுதேச சமஸ்தானங்களைப் பற்றி யாரும் அந்த சமஸ்தானங்கள் மீதோ, சமஸ்தானாதிபதிகள் மீதோ துவேஷம் உண்டாகும்படி பேசவும், எழுதவும்கூடாது என்பதாக ஒரு சட்டம்கொண்டு வந்திருக்கிறார்கள். இதை எந்த தேசீயவாதிகளும் எதிர்த்து சரியாக ஆக்ஷேபிப்பதாகத் தெரியவில்லை.

ஒரு தேசத்தை, அல்லது ஒரு சமூகத்தை ஒருவர் ஆக்ஷி புரிவது என்பது அந்த தேசத்துமக்களின் நன்மைக்காகவே ஒழிய ஆக்ஷி புரிவோ ரின் நன்மைக்காக அல்லவென்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட நியாய மாகும். அப்படியிருக்க ஒருவருடைய நன்மைக்காக செய்யப்படும் ஆக்ஷியில் உள்ள குறைகளைத் திருத்தவோ, மாற்றவோ ஒரு தேச மக்க ளுக்கோ, ஒரு சமூக மக்களுக்கோ உரிமை இல்லையென்று சொல்வதானால் அந்த ஆக்ஷியை மனிதத்தன்மை கொண்ட ஆக்ஷி என்று எப்படிச் சொல்லிக் கொள்ளமுடியும்? ஒரு ஆட்சியின் குறைகளை, கொடுமைகளை உண்மையாய் உள்ளபடி வன்மையாய் எடுத்துச் சொல்லும்போது குற்ற மிருக்கிறவர்கள் மீது அதாவது குறை ஏற்படும்படியான ஆட்சி செலுத்து பவர்கள் மீது யாருக்கும் அதிர்ப்தியோ, வெறுப்போ, துவேஷமோ உண்டா வது இயற்கையேயாகும். அப்படியிருக்க ஒருவர் மீது துவேஷமுண் டாகும்படி ஒருவர் பேசினால் அது குற்றமென்றால் யார் என்ன செய்தாலும்,



எப்படி ஆட்சியை நடத்தினாலும் பேசாமல் சகித்துக்கொண்டு அடங்கி இருக்க வேண்டு மென்பதுதான் அதன் கருத்தாகும். அனாவசியமாய் பொய்யாய் ஒருவர்மீது துவேஷமுண்டாகும்படி ஒருவர் நடந்து கொண் டால் அதற்கு ஏற்கனவே சட்டமிருந்து வருகின்றது என்பதை மேலே காட்டி இருக்கின்றோம். அது போராது என்று இப்போது தனிச்சட்டம் செய்வதானது யோக்கியமான முறை யல்லாமல் அடக்கு முறை மூலம் மக்களை அடக்கி ஆள சௌகரியம் செய்து கொள்வதேயல்லாமல் இதை நியாயமென்றோ, நல்ல அரசாட்சி முறை யென்றோ சிறிதும் சொல்லமுடியாது.

இந்தியாவில் உள்ள பெரும்பான்மையான சுதேச சமஸ்தானங்களின் யோக்கியதையானது அனேக விஷயங்களில் பிரிட்டிஷ் இந்திய ஆட்சியை விட அனேக மடங்கு மோசமானதென்று தைரியமாய்ச் சொல்லு வோம். தெளிவாய்ச் சொல்லவேண்டுமானால் அனேக சுதேச சமஸ்தானங் களின் ஆட்சியானது கொள்ளைக் கூட்டத்தாரின் காட்டு ராஜாங்க ஆட்சி போல் நடந்து வருகின்றன.

குடிகளுக்காக குடிகளின் நன்மைக்காக நாம் ஆட்சி செலுத்து கின்றோம் என்கின்ற உணர்ச்சியேயில்லாமலும், உணர்ச்சி ஏற்படுவதற்கே இடமில்லாமலும், அனேக சமஸ்தானங்கள் இருந்துவருகின்றன.

இந்தியாவில் ஏறக்குறைய மூன்றிலொரு பங்கு விஸ்தீரணத்துக்கு மேலாகவே சுதேச சமஸ்தான ஆட்சிகளின் கீழ் இருந்து வருகின்றது. அதாவது இந்தியாவின் மொத்தப்பரப்பு (விஸ்தீரணம்) 17,73000 பதினேழு லட்சத்து எழுபத்துமூவாயிரம் சதுரமைலாகும். இதில் 675000 ஆறுலட்சத்து எழுபத்தி ஐயாயிரம் சதுரமைல் விஸ்தீரணமுள்ளதேசம் சுதேச சமஸ்தானங் களின் ஆட்சியின் கீழ் ஆளப்பட்டு வருகின்றது.

சுமார் 80000000 எட்டு கோடி இந்திய ஜனங்கள் அவ்வாட்சியில் இருந்து வருகின்றனர்.

மேல்கண்ட $6^3/_4$ லட்சம் சதுரமைல் விஸ்தீரணத்தையும், 8கோடி ஜனத்தொகையையும் கொண்டதான பரப்புகள் 562 ராஜ்யங்களாகப் பிரிக்கப் பட்டு அவை 562 சுதேச சமஸ்தானங்களாகி 562 அரசர்களால் ஆளப்பட்டு வருகின்றன. இந்த ராஜ்யங்களில் எல்லாம் பெரியது ஹைதராபாத் ராஜ்ஜிய மாகும். இதற்கு விஸ்தீரணம் 82700 சதுரமைல். இதன் ஜனத்தொகை 12500000. இதன் மொத்த ரிவுனியூ வருமானம் 65000000 ஆறரைக்கோடி ரூபாய். இதில் ராஜாவாகிய ஹைதராபாத் நவாப்பு தன் சொந்த செலவிற்கு என்று எடுத்துக் கொள்ளும் தொகை 5000000 அரைக்கோடி ரூபாயாகும். இதுதவிர அந்த நவாப்புக்கு 400 கோடி ரூபாயுள்ள சொந்த சொத்திலிருந்து வரும் வரும்படி வருஷம் ஒன்றுக்கு ஒருகோடி ரூபாயாகும். ஆகவே வருஷம் ஒன்றுக்கு



RangaRakes tamilnavarasam.com

ஒன்றரைக்கோடி ரூபாயை வரும்படியாக உள்ள ஒருபெரிய முதலாளியால் (பூஷ்வாவால்) ஹைதராபாத் தேசம் ஆளப்பட்டு வருவதாகும்.

மற்ற சமஸ்தானங்களில் சுமார் 40 சமஸ்தானங்கள்தான் வருஷம் 1-க்கு மொத்த ரிவினியூ வருமானம் 10 லட்சரூபாய்க்குமேற்பட்டவை களாகும். மற்றவைகள் எல்லாம் அதைவிட குறைந்த வரும்படியுடையவை களேயாகும். சுமார் 400 சமஸ்தானங்கள் வருஷம் ஒன்றுக்கு ரிவினியூ வருமானம் ஒரு லட்ச ரூபாயைவிட குறைந்த வருமானமுடையவையாகும். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இவற்றுள் 15 சமஸ் தானங்கள் ஒரு மைல் விஸ்தீரணத்துக்குக்கூட குறைந்த பரப்புள்ளவைக ளாகும். மூன்று சமஸ் தானங்களில் ஒவ்வொன்றிலும் 100 பிரஜைகளைவிடக் குறைவாகயிருக்கின்றார்கள். ஐந்து சமஸ்தானங்களுக்கு ஒவ்வொன்றின் வருஷவரும்படி ரூபாய் 100 வீதம்கூட இல்லாமல் இருக்கிறது.

உதாரணமாக அவாச்சார் (Avachar) என்கின்ற சமஸ்தானம் 1-மைல் விஸ்தீரணம் 32 பிரஜைகளும் 72 ரூபாய் வருஷ ரிவினியூ வருமான முடைய தேசமாகும்.

இப்படிப்பட்ட ராஜாக்கள் தங்கள் தேச ரிவினியூ வரும்படியில் 12ல் ஒருபாகம் முதல் சரிபகுதி வரையில் தங்கள் சொந்த செலவுகளுக்கு எடுத்துக் கொண்டு மீதியையும் தங்கள் இஷ்டத்திற்கு ஏற்றபடியே பிரஜை களுக்கென்று செலவழித்துக்கொண்டு இருந்து வருகிறார்கள்.

ஒவ்வொரு சுதேச சமஸ்தான ராஜாக்களின் யோக்கியதைகளை அதாவது இந்தூர், ஆள்வார், மிஸ்டர் “A” முதலிய ராஜாக்களின் யோக்கிய தையை நினைத்துப் பார்த்தோமேயானால் அவர்களது ஆட்சியின் கீழ் மக்கள் குடிகளாய் வாழ்வதைவிட மானம்கெட்ட வாழ்க்கை வேறு ஒன்றும் இல்லை என்றே தோன்றும். உலகில் உள்ள கூடா ஒழுக்கங்கள் எல்லாம் ஒருருவாய்த்திரண்டு வந்தது போன்ற அரசர்கள் எத்தனையோபேர்கள் நமது சுதேச சமஸ்தானங்களில் இருந்துவருகிறார்கள் என்பது யாரும் அறியாததா?

இவர்களில் சில அரசர்கள் தங்கள் பெண்ஜாதிகளுக்கு செலவிடும் அளவில் மூன்றில் நான்கில் ஒருபாகம் தொகைகூட தனது பிரஜைகளின் கல்விக்குச் செலவுசெய்யாதவர்களும் தங்களது மோட்டார்கார்களுக்காகச் செலவு செய்யும் தொகையில் பகுதி அல்லது 3-ல் ஒருபாகம்கூட தனது தேசப்பிரஜைகளின் சுகாதாரம், வைத்தியம் ஆகியவைகளுக்குச் செலவு செய்யாதவர்களுமாய் இருக்கிறார்கள் என்பதற்கு தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன. சுதேச சமஸ்தானப்பிரஜைகளுக்கு அவர்கள் தங்கள் தேச வரும்படியில் இத்தனையில் ஒருபாகம்தான் தன்சொந்த செலவுக்கு



எடுத்துக்கொள்ளலாம். இத்தனை பெண்டாட்டிகள் கட்டிக்கொள்ளலாம் என்பதான நிர்ணயமே இல்லாதவர்களாய் இருக்கிறார்கள்.

“இந்தியா சக்கிரவர்த்தியின் சர்வாதிகாரத்துக்கு உள்பட்ட சமஸ் தானங்கள்! என்றுவெகு பெருமையாய் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சொல்லிக் கொள்ளுகின்றார்களே ஒழிய அந்த சர்வாதிகாரத்தன்மையை ஒரு சிறிதாவது இந்திய சமஸ்தான அரசர்களின் ஒழுக்கத்துக்கோ, அவர்களது வாழ்கை நிலையின் தன்மைக்கோ குடிகளின் க்ஷேமத்தைக் கவனிக்க வேண்டிய அவசியத்துக்கோ செலவழித்ததாகச் சொல்லுவதற்கு இடமே காண முடியாமல் இருந்துவருகின்றது. இந்திய சமஸ்தான அரசர்களில் பெரும்பான்மையானவர்களுடைய நடவடிக்கையும், யோக்கியதையும் அரசாக்ஷிமுறையும் பார்த்த ஒருவன் எந்த விதத்தில் அவர்கள் நிலையை வெளியில் எடுத்துச் சொல்லாமல் இருக்கவோ, அவர்களை ஒழிக்க முயற்சி செய்யாமலிருக்கவோ முடியுமென்பது நமக்கு விளங்கவில்லை. 562 பேர் களில் யாரோ ஒன்று இரண்டு சமஸ்தான அரசர்கள் ஒருசமயம் “யோக்கியர் களாக” இருந்தாலும் இருக்கலாம் அதுவும் “கூரைவீட்டின் மீது இருந்து கொண்டு கொள்ளிக் கட்டையை எடுத்து விளையாடிக்கொண்டிருக்கிறானே அவனே எல்லோரிலும் யோக்கியன்” என்று சொல்லுவது போன்ற யோக்கியமாய் இருந்தாலும் இருக்கலாம். இதற்காக அரசர்பெருமானின் சர்வதிகாரத்துக்கு உள்பட்ட 562 “சமஸ்தான நிர்வாகத்தைப் பற்றி துவேஷங் கொள்ளும்படி யாரும் செய்யக் கூடாது” என்று சட்டம்செய்வது என்றால் லார்ட்வில்லிங்டன்துரை மகனாரின் அடக்குமுறைச் சட்டம் என்பவைகளி லெல்லாம் இதுவே தலைசிறந்த உண்மையான அடக்குமுறைச் சட்டம் என்றே சொல்லவேண்டி இருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவின் வரிஆள் ஒன்றுக்கு 6 ரூபாய்வீதம் ஆகின்றது என்றால் அனேக சுதேசசமஸ்தானங் களின் வரி ஆள் ஒன்றுக்கு 20ரூ. வீதம் வசூலாக்கப்படுகின்றது. 1-ஆள் ஒன்றுக்கு 6-ரூபாய் வீதம் வரிவசூலிக்கும் பிரிட்டிஷ் இந்தியாவில் படிப்புக் காக நபர் ஒன்றுக்கு 8 அணாவீதம் செல விழிக்கப்படுகின்றது என்றால் ஆள் ஒன்றுக்கு 20 ரூ. வீதம் வரி வசூலிக்கப்படும். சில சுதேச சமஸ்தானங்கள் படிப்பு விஷயத்தில் ஆள் ஒன்றுக்கு 6-அணா வீதமும், 3-அணா வீதமும் தான் செலவு செய்கின்றனர். இவர்கள் பெயரை வேண்டு மானாலும் பொதுநலத்தை உத்தேசித்து வெளியிட நமக்கு ஆக்ஷேபனை யில்லை. ஆதலால் முறையே நவ்நகர், கட்ச்சு முதலாகிய சமஸ்தானங்க ளாகும். இதுபோல் இன்னும் பல சமஸ்தானங்கள் இருந்து வருகின்றன.

தவிர இந்திய சுதேச சமஸ்தானத்தில் உள்ள எல்லா ராஜாக்களுமே தங்கள் சொந்தச் செலவுக்கென்று எடுத்துக்கொள்ளும் தொகையானது ஐரோப்பிய அரசர்களும், சக்கிரவர்த்திகளும் எடுத்துக்கொள்ளும் விகிதாச் சாரத்தை விட 60 பங்கு 70, 100 பங்கு 200, 1000 பங்கு அதிகமாக எடுத்துக் கொள்ளு கிறார்கள். உதாரணமாக ஐரோப்பா கண்டத்தில் டென்மார்க்



RangaRakes tamilnavarasam.com

தேசத்து அரசருக்கு இருபத்திமூன்றரைக்கோடிரூபாய் வரி வருஷவரு மானம். நமதுபிக்கானியர் சமஸ்தான அரசருக்கு வருஷம் 60 லக்ஷம் ரூபாய் வரி வருமானம் ஆனால் டென்மார்க்குதேசஅரசர் வருஷம் 7 லக்ஷம் ரூபாயே தனது சொந்த செலவுக்கு எடுத்துக்கொள்ளுகிறார். பிக்கானியர் தேசத்து அரசர் வருஷம் பதிமூன்றரை லக்ஷரூபாய் தனது சொந்தசெலவுக்கு எடுத்துக் கொள்ளுகிறார். இதை விகிதாச்சாரம் பார்த்தால் டென்மார்க்கு அரசர் தனது தேச வருமானத் தில் 350ல் ஒருபாகம் எடுத்துக்கொள்ளுகிறார். பிக்கானியர் சமஸ்தான அரசர் தனது தேச வரும்படியில் 4-ல் ஒருபங்கு தனது சொந்தச் செலவுக்கு எடுத்துக்கொள்ளுகிறாரென்று சொல்லவேண்டி யிருக்கிறது.

பொதுவாகப் பார்க்கப்போனால் ஐரோப்பிய அரசர்கள் தங்கள் வரும் படிக்கும், தாங்கள், தங்கள் சொந்தச் செலவுக்கும் எடுத்துக்கொள்ளும் தொகைக்கும், இந்திய சமஸ்தான அரசர்கள் வரும்படிக்கும் அவர்கள் தங்கள் சொந்த செலவுகளுக்கு எடுத்துக்கொள்ளும் தொகைக்கும் வித்தியா சத்தையும், மற்ற விஷயங்களையும் கணக்குப் பார்த்தால் இந்த சமஸ்தானங் களையும், சமஸ்தானாதிபதியும் பாதுகாக்கச் சட்டம் வேண்டுமா அல்லது மாற்றவோ, கவிழ்க்கவோ சட்டம் வேண்டுமா என்பது நன்றாய் விளங்கும்.

அதற்காகவே சில புள்ளிவிபரங்கள் கீழே தருகிறோம். இது சர்க்கார் கணக்கேயாகும். அதாவது:-

தனது தேச மொத்தவரும்படியில் இங்கிலாந்து தேச ஜார்ஜ் அரசர் 1600 ல் ஒருபங்கும், பெல்ஜியம் அரசர் 1000 ல் ஒருபங்கும், நார்வே அரசர் 700ல் ஒருபங்கும், நாதர்லேண்ட் அரசர் 600ல் ஒருபங்கும், இட்டாலி அரசர் 500 ல் ஒருபங்கும், ஜப்பான் சக்கிரவர்த்தி 400 ஒருபங்கும் தான் தங்கள் சொந்த செலவுக்கு பெறுகிறார்கள்.

ஆனால் இந்திய சமஸ்தானாதிபதிகளோ என்றால், தங்களது மொத்த ரெவனியூ வரும்படியில் திருவாங்கூர் மஹாராஜா 17-ல் ஒருபாகமும், மைசூர் மகாராஜா 14ல் ஒரு பாகமும், ஹைதராபாத் நவாப் 13ல் ஒருபாகமும் பரோடா மஹாராஜா 12ல் ஒரு பாகமும், காஷ்மீர் மஹாராஜா 5-ல் ஒரு பாகமும், பிக்கானியர் மஹாராஜா 4ல் ஒருபாகமும் இன்னும் சிலர் 3ல் ஒரு பாகமும் சிலர் 2ல் ஒருபாகமும் தங்கள் சொந்தசெலவுக்கு எடுத்துக்கொண்டு அக்கிரமமான போகபோக்கியங்களை அனுபவிக்கிறார்கள். ஆதலால் இந்திய சமஸ்தானா திபதிகளின் ஆட்சிகளென்பவை ஒரு பக்கா முதலாளித் தன்மை ஆட்சி களென்பதில் யாருக்குமே ஆட்சேபனை இருக்காது. இவர் களுக்கு ஏழை மக்கள் சரீரத்தால் கஷ்டப்பட்டுவாழும் தொழிலாளி மக்கள் ஆகியவர்களின் வாழ்க்கையைப்பற்றியோ அவர்களது மனிதத் தன்மை யைப் பற்றியோ ஒருசிறிது ஞாபகமாவது, கவலையாவது இருக்கவே இருக்காது. இருக்க இடமுல்லை.



இந்த ராஜாக்கள் என்பவர்கள் ஒருவித சுகபோகங்களை அனுபவிக் கவே தோன்றியவர்கள் என்பது அவர்களது பிறப்பும் பதவியும் ஏதோ முன்ஜென்ம கர்மவசத்தால் புண்ணியத்தால் பூஜாபலத்தால் கிடைத்தது என்பதும் தவிர மற்றபடி அவர்களுக்கு ஆட்சியிலிருக்கும் பொறுப்பு என்ன தங்கள் நடவடிக்கைகள் எப்படியிருக்கவேண்டும் என்பனவாகியவைகள் தெரியவே தெரியாது. இந்த லக்ஷணத்தில் இந்த சுதேச சமஸ்தானதிபதிக ளான ராஜாக்கள் தெய்வ அம்சம் பொருந்தியவர்களென்றும், விஷ்ணு அம்சமே உடகில் அரசனாய் அவதரிக்கின்றது என்றும் சொல்லப்படுவ தோடு ஒவ்வொரு ராஜாங்கமும் ஒவ்வொரு கடவுளுக்குச் சொந்தமான தென்றும், அக்கடவுள்களின் பிரதிநிதிகளாகவோ, தாசர்களாகவோ இருந்து இந்த ராஜ்யங்கள் அரசாளப்படுகின்றன என்றும் சொல்லிக்கொள்ளவும் படுகின்றன.

இந்தப்படியெல்லாம் ஊரார் உழைப்பில் வயிறு வளர்க்கும் சோம் பேரிக்கூட்ட பார்ப்பனர்கள் கற்பித்து பிறருக்கும் அந்தப்படி பிரசாரமும் செய்து எப்படிப்பட்ட கொடுங்கோன்மை ஆட்சியிலும் தாங்கள் மாத்திரம் நோகாமல் சரீரத்தால் எவ்விதபாடும் படாமல் சோம்பேரி வாழ்க்கையை நடத்திக்கொண்டு அவ்வயோக்கிய அரசர்களுக்கு அடுத்தபடியில் இருந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.

நமது தேச பக்தர்களுக்கோ, தேசீய வாதிகளுக்கோ, தேசீய தலைவர் களுக்கோ இவைகளையெல்லாம்பற்றி ஒரு சிறிதுகூட கவலையே கிடை யாது. அவர்களுடைய கவலை எல்லாம் "அன்னியன் ஏன் நமது தேசத்தை ஆளுகிறான், வைசிராய்க்கு ஏன் இவ்வளவு சம்பளம், இவ்வளவு அதிகாரமேன்" என்கின்ற பல்லவியும் பேச்சும்தான் தெரியுமேயொழிய வேறு ஒன்றையும் பற்றிய விபரமும் தெரியாது, கவலையே கிடையாது என்று தான் சொல்ல வேண்டும்.தேசிய பத்திரிகைகளோ பெரிதும் இம்மாதிரி ராஜாக்களிடம் பணம் வாங்கிக்கொண்டு அவர்களையும் அவர்களது நிர்வாகத்தையும் புகழ்ந்து எழுதுவதும், பணம் கொடுக்காதவனை வைவதும் தவிர வேறொரு கவலையுமில்லை.

மேற்கண்ட யோக்கியதை கொண்ட ராஜாக்கள் தங்கள் தங்கள் சமஸ் தானங்களைப் பாழாக்கி அந்நாட்டு மக்களை மிருகங்களாகப் பாவித்து அக்கிரம, அனியாய ஆட்சிபுரிவது உலகம் அறிந்திருந்தும் போறாக் குறைக்கு இந்த "தர்ம ராஜாக்களை" பிரிட்டிஷ் இந்திய ஆட்சியிலும் கொண்டுவந்து கலக்கி அதுவும் எப்படி என்றால் அவர்களைப்பற்றியும் அவர்கள் தேசத்தைப்பற்றியும், அவர்கள் நிர்வாகத்தைப்பற்றியும் பேச நமக்கு எவ்வித அதிகாரமில்லாமலும், நம்ம தேசஆட்சியின் தலையில் அவர்கள் வந்து உட்கார்ந்து கொண்டு ஆதிக்கம் செலுத்தும்படியாகவும் கொள்கைகொண்ட சமஷ்ட்டி (பிடரல்) ஆட்சியைக் காங்கிரசும், அதன் ஏக



RangaRakes
tamilnavarasam.com

தலைவரான "மகாத்மா"க்களும் ஒப்புக்கொண்டு அதைப்பற்றி ஆக்ஷேபிப்பதில்லை என் கின்ற நிபந்தனையின் மீது வட்டமேஜை மகா நாட்டில் போய் கலந்து கொண்டார்கள் என்றால் தேசீயத்தின் அயோக்கியத்தனத்துக்கும், சூட்சிக்கும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும் என்பது நமக்கு தோன்றவில்லை.

பழய பழக்க வழக்கங்களையும், மதக்கொள்கைகளையும், வருணாச்சிரமத்தையும் காப்பாற்றும் விஷயத்தில் வெள்ளைக்கார அரசர்கள் அசார் சமாய் இருந்து விடுவார்கள் என்கின்ற கருத்துக்கொண்டே காங்கிரசுக்காரர்கள் அம்மகாநாட்டுக்குச்சென்றார்கள் என்றும், நமது நாட்டுப் பார்ப்பனர்கள் இந்திய ஆட்சியில் கருப்பு சமஸ்தானாதிபதிகளையும் கொண்டு வந்து கலக்கினதுமான காரியங்கள் செய்தார்கள் என்றும் இந்திய ஏழை மக்கள், தொழிலாளி மக்கள் ஆகியவர்களின் கிளர்ச்சிகள் வலுத்துவிடுமே யானால் அதை அடக்க அதிக சிரமப்பட்டு நாம் ஏன் கெட்டபேரை வாங்கிக் கொள்ள வேண்டும் என்று கருதி கருப்பு சமஸ்தானாதிபதிகள் மூலமே அடக்கச் செய்யலாம் என்கின்ற சூழ்ச்சி மீதே பிரிட்டிஷாரும் இந்த தந்திரம் செய்திருக்கிறார்கள் என்றும்தான் நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. எப்படியிருந்தபோதிலும் பிரிட்டிஷ் முதலாளித்தன்மைஆட்சியும், அவர் களது ஏகாதிபத்திய ஆணவமும் ஒழிவதற்கு முன் இந்த இந்திய சமஸ்தான முதலாளித்தன்மை ஆட்சியும், அவர்களது பொருப்பற்ற கொடுங்கோன்மை கூடா ஒழுக்கஆட்சியும் அழிந்து மறைந்து ஒழிய வேண்டியது அவசரமும் அவசியமுமான காரியமாகும் என்பதே நமதபிப்பிராயம். அப்படி இருக்க இப்போது அவர்களையும் சமஸ்தானங்களையும் காப்பாற்ற புதிதாக ஒரு சட்டம் செய்வது மிகமிகக் கொடுமையான காரியம் என்றே சொல்லுவதுடன் இச்சட்டம் அச்சமஸ்தானாதிபதிகளை இன்னமும் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள் என்று சொல்லி லைசென்சு அனுமதிச்சீட்டு கொடுத்தது போலவும் ஆகிறது என்பதே நமதபிப்பிராயம்.

**குடி அரசு - தலையங்கம் - 03.09.1933**



## சம்பாஷணை

## வம்பனுக்கும் - கம்பனுக்கும்

**- சித்திரபுத்திரன்**

**வம்பன்:-** என்ன அய்யா கம்பரே! அனாவசியமாக வெள்ளைக் காரர்களையெல்லாம் இந்த நாட்டைவிட்டு வெளியில்போங்கள் என்று சொல்லுகின்றீரே! இது நியாயமா?

**கம்பன்:-** சொன்னால் என்ன அய்யா முழுகிப்போய்விட்டது. அவர் களுக்கு இங்கு என்ன வேலை? அவர்கள் என்ன நம்ம மதமா? ஜாதியா? ஜனமா? போ என்றால் போகவேண்டியதுதானே?

**வம்பன்:-** அப்படிச் சொல்லிவிடலாமா திடீரென்று. அவர்களும் நம்மைப் போல் மனிதர்கள்தானே; இந்த நாட்டுக்கு அவர்கள் வந்து சுமார் 400, 500 வருஷத்துக்கு மேலாகின்றது. அதுமாத்திரமல்ல இந்த நாட்டு அரசாட்சி பெற்று சுமார் 200 வருஷமாகின்றது. அப்படியிருக்க நீ போ வெளியில் என்று சொல்லுவது நியாயமா?

**கம்பன்:-** 400, 500 வருஷமாய் விட்டதால் ஒருவனுக்குப் பாத்தியம் வந்துவிடுமா? 200 வருஷம் ஆண்டால் அவனுக்கே என்றைக்கும் நிரந்தர மாகிவிடுமா? ஆயிரம் வருஷம் ஐந்நூறு வருஷம் இருந்த மரஞ்செடிகளை வெட்டித்தள்ளி காடுகளைத் திருத்துவதில்லையா? 4000 வருஷம் 5000 வருஷமாய் இருக்கிற பாறைக் கல்லுகளையெல்லாம் டைனாமெட்டு வைத்து உடைத்து தூளாக்கி அப்புரப்படுத்துவதில்லையா? ஆதலால் வேண்டாம் என்றால் போய்விட வேண்டியதுதானே.

**வம்பன்:-** வேண்டாம் என்றால் போக வேண்டியதுதானே என்றால் எனக்குப் புரியவில்லை. வேண்டாம் என்பதற்கு ஏதாவது சட்டப்படி நியாயம் சொல்லுகின்றீர்களா? அல்லது கை பலத்தைப் பொறுத்து நியாயம் சொல்லு கின்றீர்களா?

**கம்பன்:-** சட்டமென்ன? கைபலமென்ன? இந்த இரண்டும் நமக்குக் கிடையாது. நம் இஷ்டம் தான்.



RangaRakes tamilnavarasam.com

**வம்பன்:-** அப்படியானால் அந்த இஷ்டத்துக்காவது ஒரு காரணம் வேண்டாமா?

**கம்பன்:-** காரணம் என்ன? காரணம் அவர்களால் இந்த 200 வருஷமாய் நமக்கு என்ன பிரயோஜனம் என்ன சாதித்தார்கள்? நமது நாட்டுச் செல்வத்தையெல்லாம் கொள்ளை கொண்டு போகின்றார்கள். அவர்களிடத்தில் நியாயம் என்பதில்லை, கருப்பனுக்கு ஒரு நீதி, வெள்ளையனுக்கு ஒரு நீதி, இது போதாதா? அவர்கள் இந்த தேசத்தை விட்டுப் போக வேண்டியதற்குக் காரணம்?

**வம்பன்:-** அவர்கள் ஒன்றும் செய்யவில்லை என்று சொன் னால் போதுமா? (1)இந்த 200 வருஷகாலத்தில் இந்தியா எவ்வளவு நாகரீகம், கல்வி அறிவு பெற்றிருக்கிறது. அவர்கள் வருவதற்கு முன் 100க்கு 99 தற்குறிகளாயிருந்தோமே. பார்ப்பான் காலத்தைவிட வெள்ளைக்காரன் காலம் மோசமா? (2) பணம் கொள்ளை அடிக்கிறார்கள் என்றால் யாருடைய பணம்? பாடுபடுபவர்கள் பணத்தை நம்ம பணக்காரனும் கொள்ளை அடித்தான், வெள்ளைக்காரனும் கொள்ளை அடித்தான், பணக்காரன் கொள்ளை அடிக் கும் பணமும், மோட்டார் பெட்ரோல், ரயில், சீப்பு, சோப்பு, டிரஸ், பிராந்தி, உஸ்கி, பெட்டி, பேழை முதலிய சாமான்கள் வாங்கி எல்லாம் வெளி நாட்டுக் குத்தான் அனுப்பிவிடுகிறான். (3) நீதி விஷயத்திலும், இங்கும் பார்ப்பானுக்கு ஒரு நீதி, பறையனுக்கு ஒரு நீதி, ஏழைக்கு ஒரு நீதி, பணக்காரனுக்கு ஒரு நீதி, கோவில், குளம், வீதி, பள்ளிக்கூடத்திலும், மேல் ஜாதிக்கு ஒரு நீதி, கீழ் ஜாதிக்கு ஒரு நீதி, சம்பளத்திலும் ஒருவனுக்கு மாதம் 6000 ரூபாயும், ஒருவனுக்கு மாதம் 6 ரூபாயும், ஒரு ஜாதி பாடுபடவேண்டும், ஒரு ஜாதி சோம்பேரியாய் இருந்து வாழ வேண்டும். இப்படி அநேக வித்தியாசங்கள் அக்கிரமமாய் இருக்கும்போது வெள்ளைக்காரனை மாத்திரம் ஏன் குற்றம் சொல்லுகிறாய்? அவன்போய்விட்டால் இதெல்லாம் திருத்துப்பாடாகி விடுமா?

**கம்பன்:-** ஆகுதோ இல்லையோ அதைப்பற்றிக் கவலையில்லை. நாங்கள் எப்படியோ எங்களுக்குள் அடியோ உதையோ போட்டுக் கொள்ளுகிறோம். வெள்ளைக்காரன் மாத்திரம் இனி அரை நிமிஷமும் வேண்டாம். அவ்வளவுதான் நம்ம சங்கதி.

**வம்பன்:-** சரி எப்படியோ நடக்கட்டும் எல்லாருக்கும் ஒத்தது எனக்கும் ஆகட்டும். நானும் வேணுமானால் உன்னுடனேயே சேர்ந்து கொள்ளுகிறேன். ஆனால் ஒரு சேதி.

**கம்பன்:-** என்ன சேதி?

**வம்பன்:-** இந்தியாவிலிருந்து கொளும்பு, சிங்கப்பூர், பினாங்கு, செய்கோன், கொச்சின், சைனா முதலிய ஊர்களுக்கு நம்ம ஆளுகள் 10-



லட்சக்கணக்காகப்போய் அந்த தேசங்களை கொள்ளையடித்து கோடிக் கணக்காக ரூபாய்கள் கொண்டு வந்து இங்கு எத்தனையோ பேர் லட்சாதி பதிகளாகவும், கோடீஸ்வரர்களாகவும் பிழைக்கிறார்களே! அதுமாத்திரமல்ல இன்னும் வெகுபேர் அந்த தேசங்களில் கொள்ளை அடித்துக் கொண்டு இருக்கிறார்களே! இதற்கு என்ன செய்கின்றது?

**கம்பன்:-** செய்வது என்ன? அந்த ஊர்க்காரர்கள் பார்த்துப் போ என்று சொன்னால் போய்விடவேண்டியதுதான்.

**வம்பன்:-** அப்படியானால் சைய்கோன் அரசாங்கம் இந்திய "வெள்ளைக்காரர்"களாகிய நாட்டுக்கோட்டை செட்டியார்களுக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டதாமே. இனி அவர்கள் என்ன செய்ய வேண்டும்.

**கம்பன்:-** செய்வதென்ன இந்த இரண்டு வருஷ சங்கராந்தி நாட்டுக் கோட்டை செட்டியார்கள் மேல் தான் வந்திருக்கின்றது. மரியாதையாய் மூட்டை கட்டிக்கொண்டு இந்தியாவுக்கு திரும்பவேண்டியதுதான்.

**வம்பன்:-** அப்படியானால் இப்பொழுது தேசீயவாதிகள் உள்பட எல்லோரும் சேர்ந்து என்னமோ ஆபத்து வந்துவிட்டதாக இதற்குக் கூச்சல் போடுகிறார்களே அது ஏன்? இதற்கு இந்திய சட்டசபையில் அவசரப் பிரேரேபணை எதற்காக? "போ என்றால் போய்விட வேண்டியதுதானே" "இவர்களால் செய்கோனுக்கு என்ன நன்மை" "செய்கோனை கொள்ளை அடித்து பொருள் திரட்டி இந்தியாவுக்கு கொண்டு வருவது நியாயமா?" என்று செய்கோன்காரர்கள் சொல்வதில் என்ன தப்பு என்ற யோசித்துப் பாருங்கள்.

**கம்பன்:-** எதற்கும் எதற்கும் ஒப்பிட்டுப் பேசுகிறீர்? இது உமக்கு ஒரு வெள்ளைக்காரன் சொல்லிக் கொடுத்ததுதானோ? திரைகடலோடியும் திரவியம் தேடு என்று ஔவை பாடி இருக்கிறாளே திரைகடல் என்றால் இந்தியாவுக்குள் என்றுதான் அருத்தமோ?

**வம்பன்:-** சரி அப்படியானால் எல்லோருக்கும் எல்லா தேசத்தாருக்கும் இந்த உரிமை உண்டா? இல்லையா?

**கம்பன்:-** என்ன நியாமய்யா நீர் பேசுகிறது. வெரும்வம்பு பேசுகிறீரே நியாயம் அநியாயம் இல்லையா?

**வம்பன்:-** சரி அப்படி வாருங்கள் நியாயம் பேசலாம். நியாயம் என்றால் என்ன? கம்பன் சொன்னதா? காளிதாசன் சொன்னதா? ராமன் சொன்னதா? கிருஷ்ணன் சொன்னதா? வள்ளுவன் சொன்னதா? புத்தன் சொன்னதா? கிறிஸ்து சொன்னதா? முஹம்மது சொன்னதா அல்லது காந்தி சொல்வதா?



RangaRakes tamilnavarasam.com

சங்கராச்சாரி சொல்வதா? சத்தியமூர்த்தி சொல்வதா? மற்றும் யாராரோ சொல்லுவதா? என்பவைகளை நியாயம் என்று வைத்துப் பேசுவதா னால் உலகம் உள்ளவரை நியாயம் பேசித் தீராது.

**கம்பன்:-** பின்னை என்னதான் பண்ணித் தொலைக்கச் சொல்லுகிறீர்.

**வம்பன்:-** தங்களுக்குப் புத்தி இருக்கின்றது என்று ஒப்புக் கொள்ளு கிறீர்களா?

**கம்பன்:-** ஆம் ஒப்புக் கொள்ளுகிறேன்.

**வம்பன்:-** சரி எனக்கு புத்தியிருக்கின்றது என்று ஒப்புக் கொள்ளு கின்றீரா?

**கம்பன்:-** சரி ஒப்புக்கொள்ளுகிறேன்.

**வம்பன்:-** அப்படியானால் நாம் இருவருமே நம் புத்தியை-அறிவைக் கொண்டு பேசுவோம். நம் இருவர் புத்திக்குட்பட்டதை நாம் சரி நியாயம் என்று ஒப்புக்கொள்ளுவோம். இதில் ஒன்றும் தடை இல்லையே.

**கம்பன்:-** தடை இல்லை.

**வம்பன்:-** முதலாவது மக்களை மதத்தின்பேரில் பிரிக்கலாமா? தேசத்தின்பேரால் பிரிக்கலாமா? ஜாதியின்பேரால் பிரிக்கலாமா? அல்லது பாடுபட்டு உழைக்கும் மக்கள் சோம்பேறிகளாய் இருந்து உழைப்பாளிகளை ஏய்த்து வாழுகின்ற மக்கள் என்று இரண்டுவித வகுப்பாய் பிரிக்கலாமா? என்பதை முதலில் முடிவு செய்வோம். ஆகவே எப்படிப் பிரிக்கின்றது சொல்லுங்கள் பார்ப்போம்.

**கம்பன்:-** இப்படிச் சொன்னால் எனக்கு ஒன்றும் புரியவில்லையே.

**வம்பன்:-** இது உங்களுக்குப் புரியாதல் என்ன? சற்று தயங்குவதாகத் தெரிகின்றது. நியாயம் என்று தோன்றுவதைச் சொல்லவேண்டியதுதானே.

**கம்பன்:-** நீர்தான் சொல்லுமே.

**வம்பன்:-** சொல்லுகிறேன் நன்றாய் யோசித்துப்பாரும். என்ன வென்றால் மனிதர்களைப் பிரிக்கவேண்டுமென்றால் இரண்டு வகையாய்த் தான் பிரிக்கலாம்.

**கம்பன்:-** எப்படி?

**வம்பன்:-** பாடுபட்டு உழைக்கும் மக்கள் ஒரு வகுப்பு. அப்படிப் பாடுபட்டு உழைக்கும் மக்களின் உழைப்பின் பலனை பல பலவித



வழிகளால் ஏமாற்றி அனுபவிக்கிறவர்கள் ஒரு வகுப்பு ஆக இரண்டு வகுப்பாகத் தான் பிரிக்கலாம்.

**கம்பன்:-** சரி அப்புறம்.

**வம்பன்:-** இந்தப்படி ஏமாற்றிவாழும் மக்களைப் பார்த்து நீயும் உன் விகிதாச்சாரம் உழைத்து விகிதாச்சாரம் கூலி எடுத்துக்கொள் என்று சொல்ல வேண்டும்.

**கம்பன்:-** சரி அப்புறம்.

**வம்பன்:-** அந்தப்படி நாம் சொல்லுவதை அவர்கள் கேட்கா விட்டால் ஊரைவிட்டு நாட்டைவிட்டு தேசத்தைவிட்டு வெளியில் போகிறாயா இல்லையா? என்று கேட்கவேண்டும்.

**கம்பன்:-** அவன் போகமாட்டேன் என்றால் என்ன செய்வது.

**வம்பன்:-** வெள்ளைக்காரன் போகமாட்டேன் என்றால் என்னசெய்ய வேண்டுமென்கிறாயோ அதைச்செய்ய வேண்டியதுதான்.

**கம்பன்:-** இதில் வெள்ளைக்காரனும் சேர்ந்தவன்தானே.

**வம்பன்:-** அவர்கள் பாட்டன்கூட சேர்ந்தவனேயாவான்.

**கம்பன்:-** அப்படியானால் சரி.

**குடி அரசு - உரையாடல் - 10.09.1933**



RangaRakes
tamilnavarasam.com

# கல்யாணக் கஷ்டம்

நமது நாட்டில் சிறப்பாக இந்து சமூகம் என்பதில் கல்யாணம் என்னும் விஷயம் மிகவும் கஷ்டமும், நஷ்டமும் தரத்தக்க காரியமாயிருந்து வரு கின்றது. ஆனால் கல்யாணம் செய்கின்றவர்களோ, செய்து கொள்ளுகின்ற வர்களோ இந்த கஷ்ட நஷ்டங் களைப் பற்றி கவனியாதவர்கள் போலவும், இது எவ்வளவு கஷ்டமானாலும் நஷ்டமானாலும் அடைந்துதான் தீரவேண்டும் என்றும், இது சமூக வாழ்க்கைக்கு அவசியமாய் அடைந்துதீர வேண்டிய கஷ்ட நஷ்டமென்றும் கருதுகிறார்கள். இது மாத்திரமல்லாமல் இவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகி நடைபெறும் கல்யாணங்கள் நடக்கும் போது ஒருவித சந்தோஷத்தையும், பெருமையையும் கூட அடை கின்றார்கள். இது பழக்கத்தினாலும் வழக்கத்தினாலுமேயாகும்.

கல்யாண காலங்களில் கல்யாணக்காரருக்கு உண்டாகும் கஷ்ட நஷ்டங்களைப் போலவே கல்யாணத்துக்கு வரும் மக்களுக்கும் கஷ்ட நஷ்டம், வேலைக்கேடு முதலிய பல தொல்லைகளும் விளைகின்றன.

100க்கு 90 கல்யாணங்கள் தங்கள் நிலைமையை சிறிதும் லட்சியம் செய்யாமல் கௌரவத்தையும், ஜம்பத்தையுமே பிரதானமாகக் கருதி பிரத்தி யார் பெருமையாய் பேசிக்கொள்ள வேண்டுமே என்கின்ற காரியத்திற் காகவே, கடன் வாங்கியும், நாணயத்தைக் கெடுத்துக் கொண்டும், அன்னி யருக்கு கஷ்டத்தைக் கொடுத்தும் கல்யாணத்தை நடத்துகிறார்கள். விருந்து, நகை, துணிமணி, ஊர்வலம், பந்தல், ஆடல், பாடல் முதலிய அசௌகரி யங்கள் வெறும் பெருமையையும், ஜம்பத்தையும் குறியாகக் கொண்டே நடத்தப்படுகின்றன. எவ்வளவு பணம் செலவு செய்தாலும், எவ்வளவு ஆடம்பரமாய் செய்தாலும் அவையெல்லாம் இரண்டு-மூன்று நாள் தமா ஷாக முடிகின்றதே தவிர அடுத்த வாரத்தில் அதை பற்றிய பெருமை ஒன்று மேயில்லை. ஆனால் அந்தக் கல்யாணச் செலவானது பல குடும்பங்களை நாசமாக்கிவிடுகின்றதுடன், பல ஏழைக்குடும்பங்களுக்கும் பெரும்பாரமாகி வெகுநாளைக்கு அக்கடன் தொல்லை தீருவதேயில்லை. நம்நாட்டுப் பெண் களுக்கு கல்வி அறிவில்லாததாலும் அடிமை ரத்தம் ஊறிப்போயிருக்கிற படியாலும், அவர்கள் சிறிதாவது கல்யாணச் செலவாலும் கடன்தொல்லை யாலும் ஏற்படுகின்ற பலனை லட்சியம் செய்வதே இல்லை.



நாட்டுக்கோட்டை சமூகத்திலும், பார்ப்பன சமூகத்திலும் கல்யாண சம்மந்தமான செலவும், மெனக்கேடும் சொல்லி முடியாது. இருசமூகமும் சரீரத்தால் சிறிதும் உழைக்காமல் யார் செல்வத்தை அட்டைபோல் உருஞ்சு கின்றவர்களானதால் அவர்களுக்கு இதுசமயம் கஷ்டமில்லாத காரியமா யிருக்கலாம். ஆனால் அவர்களும் சமீப காலத்தில் கஷ்டப்படப் போகின் றார்கள் என்பதிலும் மனவேதனை அடையப்போகின்றார்கள் என்பதிலும் சந்தேகமில்லை.

நிற்க, கல்யாணம் என்றால் ஒரு பெண்ணும், ஒரு ஆணும் சேர்ந்து வாழ்க்கை நடத்தப் போகிறார்கள் என்பதைவிட வேறு எவ்விதக் கருத்தும் அதில் பொதிந்திருக்க அவசியமில்லை. இதற்காக செலவும், மெனக்கேடும், கஷ்டமும் எதற்கு என்பது நமக்கு விளங்கவில்லை. சிக்கனக் கல்யாணம் என்றும், சீர்திருத்தக் கல்யாணம் என்றும் சிலர் செய்கிறார்களானாலும் அது பெரிதும் ஒருவித நாகரீகக் கல்யாணமாய் தான் முடிந்து விடுகின்றதே தவிர, சிக்கனமும் நன்மை உண்டாக்கத்தக்க சீர்திருத்தமும் அவைகளில் அதிக மாய் இருப்பதாகத் தெரியவில்லை.

அயலூரிலிருந்து பந்துக்கள், சிநேகிதர்கள், அறிமுகமானவர்கள் முதலியவர்களை எதற்காக வரவழைக்க வேண்டும் என்பது நமக்கு விளங்க வில்லை. அதற்காக ஒரு விருந்தோ, அல்லது அரை விருந்தோ தான் எதற்காக நடத்த வேண்டும் என்பதும் நமக்கு விளங்கவில்லை.

கல்யாண ஜோடியின் பிற்கால வாழ்க்கையில் சில சட்ட சம்மந்தமான ஆக்ஷேபணைகள் அநேக காரியங்களில் ஏற்படும் என்பதற்காக அதிலி ருந்து தப்ப சில சடங்குகளை சாட்சியாக்க செய்யப்படுகின்றன என்று சொல் லப்படுகின்றது. இது அனாவசியமான சமாதானமாகும். ஏனெனில் கல்யா ணங்களுக்காக ஒரு சட்டம் இருக்கிறது. அதாவது சிவில் மேரேஜ் ஆக்டு என்ப தாகும். அந்தப்படி கல்யாணம் செய்வதற்கு மூன்று ரூபாய் தான் செல வாகும். அதாவது ஜில்லா ரிஜிஸ்டரார் முன்னிலையில் ஆணும் பெண்ணும் சென்று கையெழுத்துப் போட்டு விட்டு வருவதேயாகும். இதற்கு இரண்டு சாட்சிகள் தம்பதிகளைத் தெரியும் என்பதற்காகக் கையெழுத்துப் போட்டால் போதும். இந்தக் கல்யாணமானது மிகவும் கெட்டியானதும் பந்தோபஸ் தானதுமான கல்யாணமாகும். எப்படியெனில் சாதாரண வழக்க கல்யாண மானது எவ்வளவு பணம் செலவு செய்து எவ்வளவு ஆடம்பரமாகச் செய்த போதிலும், விவாகம் வரும்போது இது சட்டப்படி செல்லாது என்றோ, கல்யா ணமே செய்து கொள்ளவில்லை என்றோ, வைப்பாட்டியாக வைத்திருந்தேன் என்றோ வாதாடி சாட்சிவிட்டால் சாக்ஷிகளைப் பொருத்துத்தான் தீர்ப்பா குமே ஒழிய மற்றபடி கல்யாணம் என்று சொன்னதாலேயே செல்லுபடி யானதாக ஆகி விடாது. இப்படிப்பட்ட அநேக கல்யாணங்கள் மேல்கண்ட காரணங்கள் சொல்லி ரத்து செய்து கொள்ளப்பட்டும் குறைந்த பிரதிப் பிரயோஜனத்தோடு முடிவடைந்தும் இருக்கிறது. ஆனால் மேல்குறிப்பிட்ட



RangaRakes tamilnavarasam.com

ரிஜிஸ்டர் கல்யாணம் என்பது எந்த விதத்திலும் மறுக்கக்கூடியதாகாது. அரசாங்கம் உள்ளவரை ஆதாரம் இருந்து வரும்.

அன்றியும் சாதாரண கல்யாணத்தைவிட பத்திரமானதுமாகும். சுலபத்தில் ஆணோ, பெண்ணோ மறுமணம் செய்து கொள்ளவும் முடியாது. ஆதலால் ரிஜிஸ்டர் கல்யாணம் என்பது மிக சிக்கனமானதும், சுருக்க மானதும், கெட்டியானதும், பந்தோபஸ்தானதுமாகும். பந்துக்களுக்கும், சிநேகிதர்களுக்கும் விஷயம் தெரியவேண்டுமானால் பத்திரிகைகளில் பிரசுரம் செய்து விட்டு ரிஜிஸ்டர் ஆனதும் துண்டு விளம்பரம் வழங்கி விட்டால் நன்றாய் வெளியாகி விடும். ஆதலால் சிக்கனக் கல்யாணம், சீர்திருத்தக்கல்யாணம் என்பவைகளை நடத்த விரும்புவோர் ரிஜிஸ்டர் மூலம் செய்து விடுவதே சிறந்த காரியமாகும்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் விருந்து போடுவதும், புதுத் துணிகள் வாங்கி வினியோகிப்பதும், கல்யாணத்துக்கு என்று நகைகள் செய்வதும் அனாவசியமும், பெரு நஷ்டமுமான காரியம் என்றே சொல்லு வோம். செலவு செய்ய தகுதி உள்ள பணங்கள் கடன் வாங்காத சொந்தப் பணமாயிருக்கு மானால், ரிஜிஸ்டர் செய்வதற்கு முன்பு பெண்ணின் பேரால் ஒரு பாங்கியில் போட்டு பெருகச் செய்து பின்னால் பிள்ளைகளை வளர்ப் பதற்கும் அதன் கல்விக்கும் உபயோகித்தால் அது பெருத்த அனுகூலமான காரியமாய் முடியும்.

நமது நாட்டுப் பணக்காரர்கள் கல்யாணத்துக்கு 1000, 10000 ரூபாய்கள் செலவு செய்வார்களே ஒழிய குழந்தை பெற்றால் குழந்தையை சுகாதார விதிப்படியும், பெற்ற தாயுக்கு தொந்திரவு இல்லாமலும் வளர்க்க வழியும் தெரியாது; இஷ்டமும் இருப்பதில்லை.

பிள்ளை வளர்ப்பு விஷயமாய் தாய்மார்கள் கஷ்டப்படுவதை ஹைக் கோர்டு ஜட்ஜி வேலையில் இருக்கிறவனுக்குக்கூட (இந்தியனுக்கு) தெரிவ தில்லை. ஒரு அன்புள்ள புருஷன் தன் பெண்ஜாதியின் சுகத்திலும், சந்தோஷத்திலும் கவலையுள்ளவனாய் இருக்கிறான் என்றால் அவன் கர்ப்பத் தடை முறையை கையாளுபவனாய் இருக்க வேண்டும். இல்லா விட்டால் குழந்தை பிரசவ விஷயத்திலும் குழந்தையை வளர்க்கும் விஷயத்திலும் தாயிக்குத் தொந்திரவு இல்லாமல் இருக்கும்படி செய்ப வனாய் இருக்க வேண்டும். இந்தக்காரியம் செய்ய கொஞ்சம் பணம் செலவாகும். அதாவது ஒரு தாதியை வைக்க வேண்டும். அத் தாதிக்கு மீ 5 முதல் 10 ரூபாய்வரை கொடுத்தால்போதும். இந்தக்காரியம் செய்ய நமது பணக்காரர்கள் எவருக் குமே தோன்றுவதில்லை. ஆனால் குழந்தைகளுக்கு அனாவசியமான துணி மணிகள் நகைகள் முதலியவைகளில் ஏராளமான பணங்கள் செலவு செய் வார்கள். மற்ற சாதாரண குடும்பக்காரரும் கல்யாணத் துக்கும் சாந்தி முகூர்த்தத்துக்கும் பிள்ளைப்பேரு சடங்குக்கும் ஏராளமான



பணம் செலவு செய்வார்களே ஒழிய, பிள்ளையை ஒழுங்காய் வளர்க்க சௌகரியம் செய்ய மாட்டார்கள். ஆதலால் மேல்கண்ட செலவுகளை யெல்லாம் நன்றாய் சுருக்கி சிக்கனம் செய்து தாதிகள் வைத்து பிள்ளைகள் வளர்க்கும் முறைக்குச் செலவிடவேண்டும். தாதிகளைத் தயார் செய்ய ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தி நூற்றுக்கணக்கான பெண்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். அல்லது பொதுவாகக் குழந்தைகள் வளர்க்கும் இடம் ஏற்படுத்தி அங்கு குழந்தை களைக் கொண்டுபோய்விட்டு சுகாதார ஒழுங்கு முறைப் படியும், நல்ல பழக்க வழக்கம் குணங்கள் பழகும் ஒழுங்கு முறைப்படிக்கும் வளர்க்கச் செய்ய வேண்டும். இக்காரியங்களால் பெற்றோர்களுக்கு எவ்வளவு லாபமும், சந்தோஷமும் சௌக்கியமும் இருக்கின்றது என்பதும், குழந்தைகளுக்கு எவ்வளவு சௌக்யமும் நல்ல பழக்கவழக்கங்களும் குணங்களும் ஏற்படு கின்றது என்பதும், யோசித்துப் பார்ப்பவர்களுக்கு விளங்காமல் போகாது. ஆதலால் சிக்கன சீர்திருத்தக் கல்யாணம் செய்கின்ற வர்கள் இனிமேல் இவ்விஷயங்களைப் பற்றி கவனம் செலுத்துவார்களாக.

**குடி அரசு - கட்டுரை - 10.09.1933**



RangaRakes tamilnavarasam.com

# பொது உடமை

பொது உடமை என்கின்ற வார்த்தையானது மக்களின் காதுகளில் படும்போதே அது ஒரு பயங்கர சப்தம்போல் கருதப்படுகின்றது. கொஞ்ச காலத்திற்குமுன் நாஸ்திகம் என்கின்ற வார்த்தையும் இந்தப்படிதான் மக்கள் காதுக்கு ஒரு பெரிய அதிருப்தியானதும், வெறுப்பானதுமான சப்தமாகக் கருதப்பட்டுவந்தது. என்றாலும் இப்போது, அது ஒரு தர்க்கவாதத்துக்கு ஏற்றதாகவும், சிலர் அதை ஒரு நாகரீகமாகக் கருதவும் சிலர் அவ்வார்த்தையின் கருத்தை, சாதாரண நோக்கத்தோடு கவனித்து "அது அவரவர்கள் அபிப்பிராயம்" என்பதாகவும், சிலர் ஜனசமூக வாழ்க்கைக் கட்டுப்பாட்டிற்கு "அந்தப்படி (கடவுள் என்பதான) ஒரு அபிப்பிராயம் இருந்தால் நல்லது" என்றும் கருதும் படியாகவும் இருந்துவருகின்றது. நாஸ்திக விஷயத்தில் இப்போது ஆத்திரங்காட்டுபவர்கள் எல்லாம் மதப்பிரசாரத்தினால் வாழலாம் என்று கருதுகின்றவர்களும், மதப் பிரசாரத்தை தங்களது வாழ்க்கைக்கு ஆதாரமாய்க் கொண்டவர்களும் தவிர மற்றவர்களுக்கு அதைப்பற்றி சிறிதும் கவலையே இல்லாமல் இருந்து வருகின்றது. பொது ஜனங்களில் நாஸ்திகத்தைப்பற்றி எந்தக் கூட்டத்திற்காவது சிறிது அதிருப்தி இருக்கும் என்று கருத வேண்டுமானால் அது போதிய கல்வி அறிவு பெறாத சமூகமும், முரட்டுக் கட்டுப்பாட்டுக்குள் இருந்துவரும் பிடிவாத சமூகமும், தங்களைத் தவிர வேறு வித உலக அபிப்பிராயம் இருக்கின்றது என்றுகூட உணரமுடியாமல் வைத்திருக்கும் பாமரக்கூட்ட சமூகமும் ஆகியவர்களுக்குள்ளாக இருந்துவரலாம். பொதுவாக 100க்கு 10 அல்லது 12 பேரே படித்த மக்களும், 100க்கு 80, 90 பேர்கள் தற்குறிகளாகவும் இருக்கும் ஒரு தேசத்து மனித சமூகத்தில் நாஸ்திகத்தை வெறுக்கும் ஜனங்கள் சிலராவது இருக்கிறார்கள் என்பதில் அதிசயமொன்றுமில்லை. ஏனெனில் நாஸ்திகம் என்பது அறிவு வளர்ச்சியினாலும், ஆராய்ச்சித் திரத்தினாலும், சுதந்திர உணர்ச்சியாலும் ஏற்பட வேண்டிய விஷயமே ஒழிய; கடவுள் சொன்னார் என்று எழுதப்பட்ட புஸ்தகங்களில் என்ன சொல்லியிருக்கிறது என்றும்; தங்களைக் கடவுள் அவதாரமாகவோ, தூதர்களாகவோ குமாரர்களாகவோ சொல்லிக் கொண்டவர்கள் என்ன சொன்னார்கள் என்றும், பெரியோர்கள், ரிஷிகள், நபிமார்கள், நாயன்மார்கள், தீர்க்கத்தரிசிகள், ஆள்வார்கள், சித்தர்கள், ஞானிகள், மகாத்மாக்கள் என்று சொல்லப்பட்டவர்கள் என்ன



சொன்னார்கள் என்றும், அவர்கள் சொன்னதாக ஏற்பாடு செய்த ஏடுகளிலும், புத்தகத்திலும் என்ன எழுதியிருக்கினறது என்றும் கவனித்து அவைகளுக்கெல்லாம் அடிமையாகி இருக்கும் அது விஷயத்தில் சுதந்திரமும், சுய அறிவும் இல்லாத மக்களுக்கு விளங்கக் கூடிய காரியம் அல்ல.

ஆகையால் அறிஞர்கள் அவ்விதமக்களின் கூப்பாடுகளை லட்சியம் செய்யாமல் இருந்துவருவதுடன் ஆராய்ச்சியையும், சுயபுத்தியையும் பற்றி பிரசாரம் செய்துவருகிறார்கள். ஆதலால்தான் இப்போது நாஸ்திகம் என்னும் வார்த்தையானது மிகச் சாதாரண வார்த்தையாகவும், நாகரீக ஆராய்ச்சி அபிப் பிராயமாகவும் கொள்ளப்பட்டு வருகின்றது என்று சொன்னோம்.

அதுபோலவே பொதுஉடமை என்னும் வார்த்தையானது அது பற்றிய ஆராய்ச்சியே இல்லாத காரணத்தாலும் சுயநலத்தின் காரணமாய் அவ்வார்த்தைக்கு எதிராகவே பிரசாரங்கள் நடைபெறுவதாலும் பொது ஜனங்களுக்கு பொது உடமை என்றால் வெறுப்பாயும், பயமாயும் தப்பிதமாயும் தோன்றலாம். எந்தப் புதிய கொள்கையும், அபிப்பிராயங்களும் ஆரம்பகாலத்தில் பாமர மக்களிடை வெறுப்பாகவும் கஷ்டமாகவும்தான் தோன்றும். இதற்கு நாம் உதாரணங்கள் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஏனெனில் புதிய அபிப்பிராயங்களையும், கொள்கைகளையும் கொண்டு வந்து புகுத்தியவர்கள் சரித்திரங்கள் என்பவைகளைப் பார்த்தால் இது தானாகவே விளங்கிவிடும். ஆதலால் பொது உடமை என்னும் வார்த்தையும், கொள்கையும் பொது ஜனங்களால் பாமரமக்களால் சுயநலங்கொண்ட சோம்பேறிக் கூட்டங்களால் ஆதரிக்கப்படுகின்றதா? வரவேற்கப்படுகின்றதா? வெறுக்கப்படாமல் இருக்கின்றதா? என்பவைகளைப்பற்றி கவனிக்காமல் அதுவிஷயமாய் நமக்குத் தோன்றியதை எழுதலாம் என்றே கருதுகிறோம்.

பொது உடமை என்பது ஒரு குடும்பத்தில் உள்ள சொத்துக்கள், வரும்படிகள், தொழில்கள், லாபநஷ்டங்கள், இன்ப துன்பங்கள், போகபோக்கியங்கள், பொருப்பு கவலைகள் முதலாகியவைகள் எல்லாம் எப்படி அக்குடும்ப மக்களுக்கு பொதுவோ அதுபோல் தான் ஒரு கிராமத்திலோ, ஒரு பட்டணத்திலோ, ஒரு மாகாணத்திலோ, ஒரு தேசத்திலோ, ஒரு கண்டத்திலோ, ஒரு உலகத்திலோ உள்ள மேற்கண்டவைகள் எல்லாம் ஆங்காங்குள்ள அவ்வளவு பேருக்கும் பொதுவானது என்பதாகும். சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமானால் பொது உடமைக் கொள்கையின் கடசி லட்சியம் உலகம் பூராவும் ஒருகுடும்பம். உலக மக்கள் எல்லோரும் சகோதரர்கள். உலகத்தில் உள்ள செல்வம் இன்பம் போகபோக்கியம் முதலியவை எல்லாம் அக் குடும்ப சொத்து. குடும்பமக்கள் (உலகமக்கள்) எல்லோருக்கும் அக்குடும்ப சொத்தில் (உலகசொத்தில்) சரிபாகம் என்கின்ற கொள்கையேயாம். ஆகவே பொது உடமை என்பது ஒரு கணக்குப் பிரச்சினை (Mathematic Problem) ஆகும்.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே இப்படிப்பட்ட கருத்துக்கொண்ட பொது உடமைக் கொள்கையை வெறுக்கவோ, எதிர்க்கவோ நியாயமான முறையில் யாதொரு காரண மும் இருப்பதாய் நமக்குத் தோன்றவில்லை.

ஆனால் சகோதரனுடைய பங்கை மோசம்செய்து சகோதர துரோகத்தின்மூலம் அதிகப் பங்கை ஆசைப்படுகிற மனப்பான்மை உள்ளவனும், குடும்ப வேலைகளில் தனக்குள்ள சரிபாகப் பொருப்பை தான் ஏற்றுக்கொள்ளாமல் மற்ற சகோதரர்களையே அதிகமாய் உழைக்கச் செய்து தான் சோம்பேரியாய் இருந்து அதிகப்பங்கை அடைந்து மற்றவர்களுக்கு போதுமான அளவு கூலி கொடுக்காமல் வஞ்சித்து ஏமாற்ற வேண்டும் என்கின்றதான மனப்பான்மை உள்ளவனும்தான் பொதுவுடமைக் கொள்கையை வெறுக்கவும் எதிர்க்கவும் கூடும்.

நிற்க, மற்றொரு விதத்திலும் பொதுவுடமைத் தத்துவம் என்பது எல்லா ஜனங்களாலும் மதிக்கத்தக்கது என்கின்றதான வேதாந்த தத்துவம் என்பதும் ஆகும். எப்படியெனில் எல்லா சரீரத்திலும் வசிக்கும் ஆத்மா ஒன்றே என்றும், எப்படி ஒரே சூரியன் பதினாயிரம் குடம் தண்ணீரில் பதினாயிரம் சூரியனாகக் காணப்படுகின்றதோ அதுபோல் கோடானுகோடி ஜீவராசிகளினுள்ளும் கோடானகோடி ஆத்மாவாகக் காணப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது. ஆதலால், ஒவ்வொரு சரீரத்திலும், வெவ்வேறு ஆத்மாவாக இருக்கின்ற தென்றோ ஒவ்வொரு ஆத்மாவுக்கும் வெவ்வேறு வித சைதன்னிய அதாவது ஞானமோ, வேற்றுமை உணர்ச்சியோ இல்லை என்கின்ற தத்துவமே வேதாந்தமாகும். ஆதலால் அப்படிப் பட்ட வேதாந்தக் கொள்கைக்கு பொதுவுடமைத் தத்துவம் எவ்விதத்திலும் விரோதமானதல்ல.

மதக்கொள்கைகளுக்கும், பொதுவுடமைத் தத்துவம் விரோதமானதாக இல்லை. எப்படியெனில் எல்லா மதமும் மக்கள் யாவரும் சகோதரர்களென்றும், ஒருவருக்கொருவர் சகோதர உணர்ச்சியுடனேயே இருக்க வேண்டும் என்றும், எல்லோரையும் எல்லோருமே சகோதரர்களாகப் பாவிக்க வேண்டும் என்றும், எல்லோருமே ஒரேவித இன்பத்தையும், ஒரே வித செல்வத்தையும் அடையவேண்டுமென்றே கற்பிக்கின்றதாகச் சொல்லப்படுகின்றது. ஆதலால் பொதுவுடமைத் தத்துவம் எந்த மதக் கொள்கைக்கும் விரோதமானது என்று சொல்லிவிடமுடியாது.

மற்றும் பொதுவுடமைத் தத்துவமானது ஆஸ்த்திகம் என்பதற்கும் விரோதமானதல்ல. ஏனெனில் ஆஸ்திகமென்பது கடவுள் என்பதாக ஒன்று இருக்கின்றதென்றும், அது பாரபட்சமற்றது என்றும், சர்வ சக்தியும், சர்வ வியாபகமும் உடையது என்றும் அதுவே உலகத்தையும், உலகத்திலுள்ள வஸ்த்துக்களையும், ஜீவர்களையும் சிருஷ்டித்தாரென்றும், உலகமும் உலக வஸ்த்துக்களும் அந்த ஜீவர்களுக்காகவே சிருஷ்டிக்கப்பட்டவை என்றும் கருதுவதேயாகும். ஆகவே அப்படிப்பட்ட கருத்துக்கு எல்லா மக்களும்



சகோதரர் என்கின்ற கொள்கையும், எல்லாப் பொருள்களும் இன்பதுன்பங்களும், எல்லா மக்களுக்கும் சரிசமமான பொது என்பதையும் எந்த ஆஸ்திகர்களும் ஆட்சேபிக்கவோ, எதிர்க்கவோ முடியாது என்பது விளங்கும்.

மேலும் மகாத்மாக்கள் என்பார்களுக்கும், பொதுவுடமைத் தத்துவம் வெறுப்பாகவோ, விரோதமாகவோ இருக்க நியாயமில்லை. ஏனெனில் மகாத்மா தத்துவம் என்பது எல்லா ஜீவர்களையும் சரிசமமாய்ப்பார்ப்பதும், எல்லா ஜீவர்களிடத்திலேயும் ஒரே ஆத்மா பரிணமிக்கின்றது என்பதை உணருகின்ற வர்க்கமாகும். ஆதலால் அப்படிப்பட்ட தத்தவமுடையவர்களுக்கு பொதுவுடமைத் தத்துவம் என்பது ஆட்சேபிக்கத்தக்கதாவதற்கு இடமில்லை. இவைதவிர கிருஷ்ணன், புத்தர், ஏசு, மகம்மது, குருநானக், ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி என்று சொல்லப்படுபவர்களான அங்கீகரிக்கப்பட்ட மதத் தலைவர்கள், சீர்திருத்தவாதிகள் என்பவர்களுடைய கொள்கைகளுக்கும், லட்சியங்களுக்கும், எல்லா மக்களும், சகோதரர்கள், எல்லா சொத்தும் பொதுவானது என்னும்படியான கொள்கை கொண்ட பொதுவுடமைத் தத்துவம் விரோதமாகவோ, ஆட்சேபிக்கத்தக்கதாகவோ இருக்கும் என்று சொல்லுவதற்கில்லை.

மற்றும் தேசியம் என்பதற்கோ, தேசீயவாதிகள் என்பவர்களுக்கோ, பொதுவுடமைத் தத்துவம் விரோதமானது என்று சொல்லுவதற்கும் இடமிருக் கக்காரணமில்லை. ஏனெனில் தேசீயவாதிகளுடைய கொள்கையெல்லாம் தங்கள் தேசத்து செல்வத்தை மற்றொரு தேசத்தார் கொள்ளை கொள்ளக் கூடாது என்பதும் தங்கள் தேச ஆட்சியை மற்றொரு தேசத்தார் ஆளக் கூடாது என்பதுமே முக்கியமானதாகும். ஆதலால் இதே கொள்கை கொண்ட தான அதாவது ஒருவருடைய உழைப்பின் பயனை மற்றவர்கள் கொள்ளை கொள்ளக்கூடாது என்பதும், ஒருவர்மீது ஒருவர் ஆதிக்கம் கொள்ளக்கூடாது என்பதும் எல்லோரும் சமமாய் உழைக்க வேண்டும். எல்லோரும் சமமாய் அடையவேண்டும். எல்லோருக்காக எல்லோரும் ஆட்சிசெலுத்தவேண்டும் என்னும் கொள்கை கொண்ட பொதுவுடமை தத்துவத்தை ஆட்சேபிக்க நியாயமே இல்லை. மற்றபடி சமூக சேவைக்காரருக்கோ, பொது நல சேவைக் காரருக்கோ, நீதிக்கோ, பகுத்தறிவிற்கோ, பொதுவுடமைத் தத்துவம் மாறான தென்றோ ஆட்சேபிக்கத்தக்கதென்றோ சொல்வதற்கு எந்தவிதத்திலும் ஆதாரம் இருப்பதாய் தெரியவில்லை.

ஆனால் யாருக்கு விரோதமாகவும், ஆட்சேபிக்கத்தக்கதாகவும் கெடுதி தரத்தக்கதாகவும் இருக்கும் என்று பார்ப்போமேயானால் சுயநலம் கொண்ட மக்களாகிய சக்கிரவர்த்தி, அரசர், பாதிரி, குரு, முதலாளி, ஜமீன்தாரன், மிராசுதாரன், மேல்ஜாதிக்காரன் (பார்ப்பான்) என்று சொல்லப்படுபவர்களுக்கும் இவர்களுக்கு கூலிகளாய் இருப்பதினாலேயே உயர்வான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்களுமான மக்களுக்கும் ஆட்சேபனையாய் இருக்கலாம். இவர்களுடைய ஆட்சேபனைகளை நாம்



RangaRakes tamilnavarasam.com

லட்சியம் செய்ய வேண்டியதில்லை.

ஏனெனில் இவர்கள் யோக்கியதைகளை நன்றாய் உணர்ந்து இவர்களால் மக்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களையும், இழிவுகளையும் அறிந்து இவர்கள் தன்மைகளை ஒழிக்க வேண்டும் என்றும் மாற்றவாவது வேண்டுமென்றும் மக்கள் வெகு நாளாகவே பாடுபட்டு வருகிறார்கள்.

உதாரணமாக ஏகாதிபத்தியத் தன்மை கூடாதென்றும், தனிப்பட்ட நபர்களான அரசர்களுடைய ஆட்சிகள் கூடாதென்றும் கிளர்ச்சிகள் வெகுகாலமாகவே நடந்து வருகின்றன. இதன் பயனாகவே சில ஏகாதிபத்தியங்கள் ஒழிந்து சில அரச ஆட்சிகளும் வீழ்ந்து, பொது ஜனஆட்சி என்றும், குடிகளுடைய ஆட்சி என்றும் சொல்லும்படியான ஆட்சிகள் ஏற்பட்டும் இருக்கின்றன. இனியும் ஏற்படுத்தும் முயற்சிகளும் நடந்து வருகின்றன. ஆதலால்தான் அவற்றைப்பற்றி நாம் கவனிக்க வேண்டியதில்லை என்றோம். மற்றபடி மேல் ஜாதிக் கொடுமையையும், நன்றாய் உணர்ந்து அதை ஒழிக்க வேண்டும் என்றும் முயற்சி செய்ததோடு சில ஒழித்தும் வருகிறோம். மற்றபடி ஜமீன்முதலாளி முதலியவர்களுடைய கொடுமைகளையும் அநீதியான வழியில் அவர்கள் செல்வம் பெருக்குவதையும் நன்றாய் உணர்ந்து அவர்களது கொடுமைகளை ஒழிக்கவும், அவர்களது அநீதிகளில் இருந்து மீளவும் முயற்சிகள் செய்து கொண்டுதான் வருகிறோம். கடைசியாக குருமார்கள், பாதிரிமார்கள் என்று சொல்லுகின்ற கூட்டத்தார்களின் யோக்கிய தைகளும் அறிஞர்கள் உணர்ந்ததேயாகும். எப்படியெனில் குரு, பாதிரி, முல்லா, புரோகிதர்கள் என்கின்ற கூட்டத்தார்கள் அரசர்கள், செல்வவான்கள், சோம்பேரிகள் ஆகியவர்களுடைய லைசென்சு பெற்ற கூலிகளேயாவார்கள். இவர்களுடைய உழைப்பின் பயன் எல்லாம் அரசர்களுக்கும், செல்வவான்களுக்கும், சோம்பேறி கூட்டத்தார்களான மதப் பாஷாண்டிகளுக்குமே பயன்படத்தக்கதாதலால் இவர்களது அதிருப்தியைப் பற்றியோ, அழுகையைப் பற்றியோ, நாம் சிறிதும் கவலைப்பட வேண்டியதில்லை. இருந்தபோதிலும் இந்த கூட்டத்தாரும் சாவதானமாய் இருந்து நல்லறிவைக் கொண்டு யோசித்துப் பார்ப்பார்களானால் பொதுவுடமைத் தத்துவம் என்பது தங்கள் கூட்டத்தாருக்கும் கெடுதி இல்லை என்பது விளங்கும். எப்படியெனில் பொதுவுடமைத் தத்துவத்தினால் மனித ஜீவனுக்கு ஏற்படப்போகும் முக்கியமான மாறுதலும், அனுகூலமும் என்னவென்றால் மனிதனுக்குக் கவலை என்பது 100-க்கு 90 பாகத்துக்கு மேலாகவே குறைந்து போகும். இதுதவிர அதிர்ப்தி, பொறாமை என்று சொல்லும்படியான இயற்கை குணங்கள் என்பவைகள் எல்லாம் குறைந்து விடும். இவைகளில் ஏதாவது ஒரு அளவும், பொதுவுடமைத் தத்துவத்திலும் இருக்கும் என்று தர்க்கத்துக்காக சொல்லவந்தாலும் அதுவும் பொது நலத்தை உத்தேசித்து இருக்குமே ஒழிய சுயநலத்தை உத்தேசித்து இருக்க முடியவே முடியாது. அதுபோலவே மனிதனுக்கு துக்கம் என்பதும் பெரும் பாகமும் மறைந்து போகும். இப்போது மேற்குறிப்பிட்டதான கவலை அதிர்ப்தி, ஆசை, பொறாமை, துக்கம் முதலிய குணங்கள் தனி மனிதனில் ஆகட்டும், மனித சமூகத்தில் ஆகட்டும் எந்த நிலைமையில் இருக்கின்ற வர்களுக்கும் இருந்துதான் வருகின்றது.

அரசனுக்கோ, செல்வவானுக்கோ, குருவுக்கோ, பார்ப்பானுக்கோ, மற்றும் பெரும் பதவியில் இருக்கின்றவன் என்பவனுக்கோ இல்லை என்று சொல்லிவிட முடியாது. இவர்களுக்கு உள்ள பெருமையெல்லாம் அன்னியர்கள் இவர்களைப் பெருமையாய் நினைக்கிறார்கள் என்பதைத் தவிர தங்கள் தங்களுக்கு சொந்தத்தில் துக்கமும், கவலையும் இல்லாதவர்கள் இல்லவே இல்லை.

மத சம்மந்தமான ஆதாரங்களில் காணப்படும், மோட்சத்திற்கும், முத்திக்கும் சொல்லப்படும் கருத்தெல்லாம் கவலையும், துக்கமும் அற்ற தன்மை என்று தான் சொல்லப்படுகின்றதே ஒழிய மற்றபடி வேறு ஒரு லோகத் தில் போய் வெல்வெட்மெத்தையில் சதா தூங்கிக் கொண்டிருப்பது என்று சொல்லப்படவில்லை. ஆனால் இப்படி எங்காவது ஒன்று இரண்டு இடத்தில் சொல்லப்படுவதாய் சொல்லப்பட்டாலும் அது புரோகிதர்களுடையவும், முல்லாக்களுடையவும், பாதிரிகளுடையவும் கூட்டத்தாரின் வயிற்றுப் பிழைப்புக்காகக் கற்பித்துக் கொண்ட புராணப்பிடுங்கல் கற்பனை என்பதை எல்லா தத்துவ ஜன அறிஞர்களும் ஒப்புக் கொள்ளுகின்றார்கள். ஆகையால் பகுத்தறிவுள்ள மனித ஜீவர்கள் வாழ்க்கையில் கவலையும் துக்கமும் இல்லாத ஒரு நிலையை ஒருநாளும் வெறுக்கவோ, மறுக்கவோ முடியவே முடியாது.

ஆகவே பொது உடமை என்பது பொது மனித தர்மமென்றும் சகோதரத் தன்மையும், சமத்துவத் தன்மையும் கொண்டதென்றும் வேதாந்த தத்துவத்துக்கும், ஆஸ்திகத்தன்மைக்கும் தத்துவத்துக்கும் ஏற்றது என்றும் மதத் தலைவர்களுக்கும் தேசீயத்துக்கும், நீதிக்கும், பகுத்தறிவுக்கும் ஒத்ததென்றும் அரசர்களுக்கும் செல்வவான்களுக்கும் பாதிரிப் புரோகிதக் கூட்டங்களுக்கும் நன்மை பயக்கக்கூடியதென்றும் பொது உடமைத் தத்துவமேதான் மோட்ச நிலை என்பதும் முத்திநிலை என்பதுமாகும் என்றும் ஒருவாறு சுருக்கமாய் விளக்கிக்காட்டியிருக்கிறோம், இனி பொது உடமைத் தத்துவம் சாத்தியமா என்பதும், எப்படி ஏற்படுத்துவது என்பதும் எந்த எந்த அளவில் இன்று நமது நாட்டிலும் இருந்து வருகின்றது என்பதும் முதலாகிய விஷயங்களைப் பற்றி மற்றொரு சமயம் சாவகாசமாய் எழுத எண்ணியுள்ளோம். அல்லது யாராவது இவ்விஷயத்தில் ஆராய்ச்சியுள்ள தோழர்கள் வியாசரூபமாக எழுதினாலும் பொருத்தமானதை மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கக் காத்திருக்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 10.09.1933**





RangaRakes
tamilnavarasam.com

## கடன்பட்டவர்களுக்குச் சிறைவாசம்

கடன்பட்டவர்கள் கொடுக்க சக்தி அற்றுப்போவது ஒரு சாதாரண சம்பவமேயன்றி அது ஒரு குற்ற (கிரிமினல்) நடவடிக்கையாகாது. கடன் கொடுத்து வாங்குவது என்பது ஒரு சூதாடுவது போன்ற காரியம். அதாவது பிரைஸ்சீட்டு போட்டவன் தனக்கு பிரைஸ் (லாபம்) எதிர்பார்ப்பது போன்ற காரியமாகும். எப்படியெனில் கடன் கொடுத்து வாங்குவது என்பதில் எவ்வித கருணையும், அன்பும், தரும சிந்தனையும், உபகாரமும் கிடையவே கிடையாது. வெரும் லாபத்தை வெளிப்படையாய் எதிர்பார்த்துக் கடன் கொடுப்பது தவிர வேறில்லை. பிரைஸ் சீட்டு போடுபவனும், லாபத்தை எதிர்பார்த்தே போடுகிறானே ஒழிய வேறில்லை.

ஆகவே ஒருவனுக்குப் பிரைஸ் வரவில்லையானால் பிரைஸ் சேர்த்தவனை ஜெயிலில் வைக்க முடியுமா? அதுபோல் கடன் கொடுக்கப் பட்டவன் திருப்பிக் கொடுக்க சக்தியற்றுப் போனால் அதை ஒரு குற்றமாகக் கருதுவதும், அதை ஒரு குறைவாகக் கருதுவதும் முதலாளி ஆதிக்கத் தன்மையாகுமே ஒழிய அது சமதர்ம நீதியாகாது. அன்றியும் அது கொடுமையானதும், முட்டாள் தனமானதுமான குணமுமாகும்.

கடன் வாங்கினவனிடம் சொத்து இருந்தால் அதை எந்த வகையிலும் வசூலித்துக் கொள்வதுதான் தகுதியாகுமே ஒழிய சிறைப்படுத்துவதும், குற்றவாளியாகவும், யோக்கியதைக் குறைவாயும் கருதுவது என்பது கூடவே கூடாது.

இதைப்பற்றி சுமார் 4, 5 வருஷங்களுக்குமுன் "குடி அரசு"ப் பத்திரிகையில் ஒரு வியாசம் எழுதப்பட்டுமிருக்கிறது.

இது நிற்க சமீபத்தில் லண்டனில் வெளியாகும் ஸ்பெக்டேட் என்னும் பத்திரிகை இது விஷயமாய் எழுதியிருப்பதாக "தமிழ்நாடு" பத்திரிகையில் கூறியதாவது:–

> "கடன்பட்டோரைச் சிறைக்கு அனுப்புவதென்பது காட்டுமிராண்டித் தனமான கர்நாடகப் பழக்கமாகும். ஒருவர் கடன்





> கொடுக்க இயற்கையிலேயே சக்தியற்றிருக்கலாம் அல்லது வேலை உண்டாகப் பெறாதவர்களாய் இருக்கலாம். அத்தகை கையாள வேண்டுமேயன்றி, அவர்களைச் சிறைப்படுத்துவதால் யாருக்கும் நன்மையில்லை"

என்று குறிப்பிட்டிருக்கிறது. கொலைசெய்தவர்களுக்குக் கொலை தண்டணை விதிப்பதே அனாகரீகமென்றும், அது ஒழிக்கப்படவேண்டுமென்றும் பகுத்தறிவுள்ள தேசங்களில் கிளர்ச்சி செய்யப்பட்டுவருகின்றது. அப்படியிருக்க கடன்வாங்கித் திருப்பிக் கொடுக்கச் சக்தியற்றவனை ஜெயிலுக்கு அனுப்புவது என்பது முதலாளித்தன்மையின் கொடுமையேயாகும். முதலாளித்தன்மை ஆட்சி ஒழிக்கப்பட்ட நாடுகளில் இப்படிப்பட்ட கொடுமைகள் தலைகாட்ட முடியாது.

ஆதலால் இந்திய அரசாங்கத்தார் சீக்கிரத்தில் அறிவுபெற்று கடனுக்காக மக்களைச் சிறைப்படுத்தும் காட்டுமிராண்டித்தனமான வழக்கத்தை உடனேயொழித்துவிடுவார்களாக.

அன்றியும் கடன் பாக்கிக்காக ஒரு குறிப்பிட்ட வரும்படியைத் தவிர வேறு சொத்தோ வரும்படியோ இல்லாமலிருக்குமானால் அந்த வரும்படி அவனுடைய குடும்பச் செலவுக்கு மாத்திரம் போதுமானதாய் இருக்குமானால் அம்மாதிரி கடனை வஜா வைத்து விடுவதோடு, டிக்கிரியை நிறைவேற்ற அனுமதியளிக்கவே கூடாது என்பதையும் சட்டமாக்கி விட வேண்டும். இந்தப்படி செய்தால்தான் கடன் கொடுப்பவர்களால் எந்தக் குடும்பமும் கெடாமல் இருக்கமுடியும் என்பதும் நமது அபிப்பிராயமாகும்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 10.09.1933**

RangaRakes

tamilnavarasam.com

# இரகசிய காரணங்கள்

## பரஸ்பர புகழ்ச்சி சங்கம்

**– சித்திரபுத்திரன்**

**கேள்வி:–** தோழர் C.F. ஆண்ட்ரூஸ் அவர்கள் தோழர் காந்தியாரிடத்தில் அதிக அன்புகாட்டிவருவதன் காரணம் என்ன?

**பதில்:–** தோழர் காந்தியாருக்கு இந்தியப் பாமர மக்களிடம் அதிக மதிப்பு இருக்கிறது. ஆதலால் வெள்ளைக்காரர் காந்தியாரிடம் அதிக அன்பு இருப்பதாய் காட்டிக் கொண்டால் அந்த வெள்ளைக்காரரிடம் இந்தியர்களுக்கு அன்பு ஏற்படுமல்லவா? இதற்கு உதாரணம் வேண்டுமானாலும் சொல்லுகிறேன். தோழர் காந்தியவர்களை தனக்கு சரிசமமாய் பாவித்து சர்க்காரோடு ராஜிபேசிய தோரணையில் சம்பாஷணை நடத்தி ஒப்பந்தம் செய்து இருவர் கையெழுத்தும் ஒரு ஆதாரத்தில் இருக்கத்தக்க மாதிரியாய் நடந்து காந்தியிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் இருப்பதுபோல் காட்டிக்கொண்ட இர்வின் பிரபு இந்தியர்களின் அன்பையும், மதிப்பையும் பெற்று காந்தியார் வாயிலேயே இர்வின் பிரபுவை மகாத்மா என்று சொல்லும்படியாகக் கூட ஏற்பட்டு விடவில்லையா? ஆதலால் காந்தியாரிடம் மரியாதையும், மதிப்பும், பக்தியும் இருப்பதாக ஆண்ட்ரூஸ் துரை இர்வின் பிரபு போன்றவர்கள் அல்லாமல் ஒரு சாதாரண ஜீவன்–அதாவது வெருப்பாகவும், கேவலமாகவும் கருதப்படும் ஜீவன் நடந்து கொண்டாலும் அது இந்திய மக்கள் மதிக்கவும், மரியாதை செலுத்தவும், புகழ்ந்து உதவுமான யோக்கியதை யை அடைந்துவிடும்.

**கேள்வி:–** தோழர்கள் சீனிவாச சாஸ்திரியார் மாளவியா போன்ற பார்ப்பனர்கள் காந்தியாரின் கொள்கைகளை ஒப்புக் கொள்ளாவிட்டாலும் காந்தியார் நடவடிக்கைகளை ஆதரிக்காவிட்டாலும் ஏன் காந்தியாரை புகழ்கின்றார்கள்? அன்றியும் தோழர் சாஸ்திரியார் மாளவியா ஆகியவர்கள் தனது கொள்கையை ஒப்புக் கொள்வதில்லை என்றும், செய்கையை ஆதரிப்பதில்லை யென்றும் தெரிந்தும் கூட காந்தியார் ஏன் இவர்கள் இருவரிடமும் மரியாதையும், மதிப்பும் வைத்து புகழ்கின்றார்?



**பதில்:–** பரஸ்பர புகழ்ச்சி சங்கம் என்பதாக ஸ்தாபனமில்லாத பரம்பரை சங்கம் ஒன்று உண்டு. அதன் கொள்கை ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொள்ளுவதின் மூலம் மக்களிடத்தில் மதிப்புப் பெருவது என்பதாகும். காந்தியாரை வெறுக்கும் மக்கள் சாஸ்திரியாரிடத்தில் மதிப்புள்ளவர்களாய் இருப்பார்கள். சாஸ்திரியாரை வெறுக்கும் மக்கள் காந்தியாரிடம் மதிப்புள்ளவர்களாயிருப்பார்கள். அது போலவே மாளவியாவை வெருக்கும் மக்கள் காந்தியாரிடம் மதிப்புள்ளவர்களாய் இருப்பார்கள். காந்தியாரை வெருக்கும் மக்கள் மாளவியாவிடம் மதிப்புள்ளவர்களாய் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களெல்லோரும் எல்லா மக்களிடமும் மதிப்பும், ஆதரவும் பெறவேண்டு மானால் தங்களில் ஒருவரை ஒருவர் குற்றம் சொல்லாமல் ஒருவருக்கொருவர் புகழ்மாலை சூடிக்கொண்டால்தான் முடியும். ஆகவே இந்த மூவர்களுடைய வாழ்க்கையும் பொது ஜனங்கள் பேராலே ஏற்பட்டுவிட்டதால் பரஸ்பர புகழ்ச்சி சங்கத்தில் இம்மூவர்களும் ஆயுள் அங்கத்தினர் ஆகவேண்டியது அவசியமாகிவிட்டது.

சாஸ்திரியார் வெள்ளைக்காரர்களிடத்தில் மதிப்பு உண்டாக்கிக் கொண்டவர் ஆதலால் அவர் காந்தியாரைப் பற்றி வெள்ளைக்காரர் களிடத்தில் மதிப்பாய் பேசுவார். அதற்காக காந்தியார் சாஸ்திரியாரிடம் அன்பும், மதிப்பும் இருப்பதாய் காட்டி அவரை பஹுமானிக்க வேண்டியதாயிற்று.

மற்றபடி சாஸ்திரியாரால் அவர் வாத்தியாராய் இருந்த காலம் முதல் அவர் மகாகனம் ஆகி நாளதுவரை இந்திய ஜனசமூகத்துக்கு ஏதாவது ஒரு கடுகளவு உபயோகம் ஏற்பட்டதென்று யாராலாவது சொல்லமுடியுமா? அன்றியும் 1920 வருஷத்திய ஒத்துழையாமையின்போது காந்தியாரை அராஜகம் என்றும் அவரை கைதியாக்கவேண்டும் என்றும் அரசாங்கத்துக்கு சிபார்சு செய்வது போல் பேசியதும் அதன்பின் மகாகனம் பட்டம் கிடைத்து அனுபவித்து வருவதும் யாரும் அறியாததா? இந்த காந்தியாரே அறியாததா? அப்படி இருக்க காந்தியார் ஏன் சாஸ்திரியாரை புகழ்கின்றார் சாஸ்திரியாருக்கு ஏன் விளம்பரம் கொடுக்கின்றார் என்றால் அதற்கு வேறு என்ன காரணம் இருக்கமுடியும்? அதுபோலவே மாளவியா அவர்களும் காந்தியாருக்கு அனேக விஷயங்களில் நேர்மாறான அபிப்பிராயம் கொண்டிருந்தும் ஏன் புகழுகிறார்? ஆகவே இந்தப்படி ஒருவரை ஒருவர் புகழ்ந்து தீரவேண்டியது பொது ஜனங்கள் பேரால் வாழவேண்டியவர்களுக்கு அவசியமான காரியமாகும்.

**கேள்வி:–** பொதுஜனங்கள் பேரால் வாழுகின்றவர்கள் எல்லோரும் இப்படித்தானா?

**பதில்:–** 100–க்கு 90 பேர்கள் இப்படித்தான்.

**கேள்வி:–** அப்படியானால் அதை ஏன் எல்லோரும் பின்பற்றக் கூடாது.



RangaRakes tamilnavarasam.com

**பதில்:–** பொதுஜனங்கள் பேரால் வாழ்பவர்களுக்குத்தான் இது அவசியமாகும். பொதுஜனங்களுக்காக வாழ்பவர்களுக்கு இது அவசிய மற்றதாகும் என்பதோடு இது விரோதமான பலனையும் தரும். ஆதலால் தான் சிலர் அதாவது பொதுஜனங்களுக்காக வாழுகின்றவர்கள் தங்கள் அபிப் பிராயத்துக்கு மாறுபட்டவர்கள் யாராய் இருந்தாலும் அவர்களை தங்குதடை இன்றியும், தயவு தாட்சண்யமின்றியும் கண்டித்துப் பேசி கெட்ட பெயரை சம்பாதித்துக் கொள்வதுடன் விளம்பரம் பெறாமலும் போகின்றார் கள். இந்தப்படி கெட்டபேர் வாங்கவேண்டியதும் அல்லது கெட்டபேர் வருமே என்று பயப்படாமல் இருக்கவேண்டியதும் பொது ஜனங்களுக்காக வேலை செய்கின்றவர்கள் கடமையாகும். பொதுஜனங்களால் பொதுக் காரியங்கள் என்பவைகளுக்காக பாபி என்று பேர் வாங்குபவர்களாலேயே பொது ஜனங்களுக்கு அனேக நன்மையான காரியங்கள் நடந்திருக்கின்றன. இன்னும் ஏதாவது நடக்கவேண்டுமென்றாலும் அப்படிப்பட்டவர்களால் தான் முடியும். இன்றையதினமும் நான் தைரியமாய் சொல்லுவேன் என்னவென்றால் படித்த வர்களாலும், பார்ப்பனர்களாலும், பாதிரிகளாலும் "தேசீயப் பத்திரிகைக் காரர்களாலும், மதப் பத்திரிகைக்காரர்களாலும் எவன் எவன் எதிரியாய், விரோதியாய், தூற்றப்படுபவனாய், விளம்பரம் தரக் கூடாத வனாய் கருதப் படுகின்றானோ" அப்படிப்பட்டவர்களால்தான் மனித சமூகத்திற்கு நன்மை உண்டாகப்போகின்றது. உண்டாகியும் இருக்கின்றது. ஆதலால் பொது ஜனங்களுக்காக வாழுபவர்கள் பரஸ்பர புகழ்ச்சி சங்கத்தில் அங்கத்தி னர்களாய் இருக்க மாட்டார்கள்.

ஒரு மனிதன் உண்மையாகவே பொதுஜன நன்மைக்கு? (பொதுஜன நன்மையென்றால் கஷ்டப்படும், இழிவுபடும் மக்களுடைய நன்மைக்கு?) அனுகூலமானவராய் இருக்கின்றான் என்று பார்க்கவேண்டுமானால் அதற்குப் பரீட்சை என்னவென்றால், அந்த மனிதன் சுகப்படும் பெருமை அடைந்திருக்கும் மக்களுக்கு விரோதமாய் இருக்கிறானா? அந்த சுகப்படும் மக்களால் விரோதியாய் பாவிக்கப்பட்டு பாமர ஜனங்களுக்குள் பாபி என்று பரப்பப்படுகிறானா? என்பதை அறிந்து பிறகுதான் அப்படிப்பட்டவனை ஏழைமக்களின் தாழ்த்தப்பட்ட மக்களின் நண்பன் என்று எண்ண வேண்டும். அப்படிக்கு இல்லாமல் எவனெவன் சோம்பேறிக் கூட்டப் படிப் பாளிகளாலும் சூட்சிக்கூட்ட பார்ப்பனப் பாதிரிகளாலும் ஏமாற்றி வயிறு வளர்க்கும் தேசீயப் பத்திரிகைக்காரர்களாலும் புகழப்படுகிறானோ விளம்பரப்படுத்தப்படுகி றானோ அவனெல்லாம் ஏழைமக்களின் தாழ்த்தப் பட்ட மக்களின் – பாடுபட்டு உழைக்கும் மக்களின் விரோதிகள் என்றே கருதவேண்டும். இதுதான் அளவு கருவி.

**குடி அரசு – கட்டுரை – 17.09.1933**



# ரங்கநாதர் லாட்டரி அடிக்கிறார்

**– சித்திரபுத்திரன்**

ஸ்ரீரங்கம் ரங்கனாதர் குடும்பச் செலவுக்கு இந்தபத்து வருஷகாலமாய் லாட்டரி அடித்துக் கொண்டு வந்திருக்கிறார். இதைப் பார்த்து நான் ஒரு சிறிதும் வருத்தமோ–அதிசயமோ அடையவில்லை, ஏனெனில் உலகில் சோம்பேறிகள் கஞ்சிக்கே லாட்டரி அடிக்கவேண்டும் என்பதுதான் எனது ஆசை.

இந்த ரங்கனாதன் என்னும் ஆசாமி ஒரு பெண்டாட்டிக்கு இரண்டு பெண்டாட்டி கட்டிக்கொண்டு போதாக்குறைக்கு ஒரு கூத்தியாரையும் வைத்துக்கொண்டு இருக்கும் மனிதன். இவன் சோத்துக்கு லாட்டரி அடிக்க வேண்டியது சகஜமேயாகும். அதிலும் இந்த பாழும் ரங்கனாதன் யாதொரு வேலையும் செய்யாமல் தினம் ஐந்துவேளை சாப்பிட்டுவிட்டு என்னேரமும் விட்டம்போல் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டேயிருந்தால் இப்படிப்பட்ட சோம்பேறிகள் சோத்துக்கு லாட்டரி அடிக்கவேண்டியது அவசியம்தானே. இதில் அதிசயமென்ன இருக்கின்றது? நமது ஜனங்களுக்கு புத்தி இருக்கு மானால் இந்த ரங்கனாதனை இந்த பூலோகத்தைவிட்டு வைகுண்டத்திற்கே அனுப்பி இருப்பார்கள். நமது ஜனங்களுக்கோ கடுகளவு புத்தியும் கிடையாது. பிரத்தியார் சொல்லையும் கேழ்ப்பதில்லை. ஆகையால் இந்த ரங்கனாதன் லாட்டரி அடிக்கிறது மாத்திரமல்லாமல் இந்த ரங்கனாதனிடம் பக்திசெலுத்தி வழிபடும் மக்களும் சோத்துக்கும், கஞ்சிக்கும் லாட்டரி அடிச்சால்தான் நமக்குச் சந்தோஷமாய் இருக்கும். ஏன் என்றால் எப்படிப் பட்ட கடவுளை வணங்குகிறார்களோ அப்படிப்பட்ட குணம்தான் வணங்கு பவர்களுக்கும் உண்டாகும் என்பது ஒரு ஆஸ்திகக் கொள்கையாகும்; இது உண்மையானால் இப்படித்தானே இருக்கவேண்டும். இந்தக் கடவுள்கள் ரஷ்யாதேசத்தில் இருக்குமானால் இந்தப்படி சோம்பேறியாய் எந்நேரம் பார்த்தாலும் படுத்துக் கொண்டே ஊரார் உழைப்பில் வயிறு வளர்ப்பதற்கு துப்பாக்கி குந்தாவினால் இடித்து எழுப்பி வேலை வாங்குவார்கள். அந்தப்படி வேலை செய்யா விட்டால் மேல்லோகத்துக்கு அனுப்பிவிட்டு



RangaRakes tamilnavarasam.com

பக்தர்களுக்கு "உங்களுடைய கடவுள் சோம்பேறியாய் இருந்ததால் மேல்லோகத்துக்கு அனுப்பப்பட்டு விட்டார். வேண்டுமானால் நீங்களும் சீக்கிரம் மேல்லோகம் சென்று அவரைச் சந்தித்துக் கொள்ளுங்கள்" என்று கடிதம் எழுதிவிடுவார்கள்.

நம்முடைய நாடு சோம்பேறிகள் அதிகம் உள்ள நாடு ஆனதால் இந்தக் கடவுள்களை இன்னம் வைத்துக் கொண்டு இந்தப்படி லாட்டரி அடிக்கச் செய்ய வேண்டியிருக்கிறது.

ஓ ரஷ்யக் கொள்கையே! இந்தக் கடவுள்களை ஒழிக்கவாவது சீக்கிரம் இந்தியாவுக்கு வரமாட்டாயா? கஷ்டப்பட்டு உழைக்கும்மக்கள் முப்பது கோடிபேர்கள் இரண்டு கையையும் கூப்பி கூவி அழுது அழைக்கின் றோமே உனக்கு மனம் இளகவில்லையா?

**குடி அரசு - கட்டுரை - 17.09.1933**



# "ஹரிஜன" இயக்க ரகசியம்

ஆக்ராவில் கூடிய "ஹரிஜன " (தீண்டப்படாதார்) மகாநாட்டில் "ஹரிஜனங்களுக்கு பொருளாதார விஷயத்திலும், கல்வி விஷயத்திலும் முன்னேற்றம் ஏற்பாடு செய்வதைவிட ஆலயப்பிரவேசத்தைப் பற்றியே அதிகமாக வற்புறுத்துவது ஒப்புக் கொள்ளத்தக்கதல்ல" என்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு தோழர் காந்தியவர்கள் "ஹரிஜனம்" பத்திரிகையில் பதில் சொல்லுகையில்,

"ஹரிஜனங்களுக்குப் பொருளாதார முன்னேற்றமும், கல்வி முன் னேற்றமும் ஜாதி இந்துக்கள் தாங்களாகவே செய்யவேண்டிய காரியமாகும். பொருளாதாரம், கல்வி ஆகிய துரைகளில் ஹரிஜனங்கள் உயர்த்தப்பட்டு விட்டால் மதத்துரையில் அவர்கள் சமத்துவமானவர்களாகி விடமாட்டார் கள். ஆதலால் ஹரிஜனங்கள் ஆலயப்பிரவேசத்தை விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், ஜாதி இந்துக்கள் தங்களுக்கு எந்த நிபந்தனைகள் மீது கோவில்கள் திறக்கப்பட்டிருக்கின்றனவோ அதே நிபந்தனைகளின் மீது ஹரிஜனங்களுக்கு கோவில்களை திறந்துவிடவேண்டும்" என்பதாக எழுதியிருக்கிறார்.

இதிலிருந்து ஹரிஜன வேலையின் இரகசியம் என்ன என்பதைப்பற்றி நாம் இதற்கு முன் எழுதிவந்த விஷயம் உண்மை என்பது நன்றாய் விங்கும். "ஹரி" ஜனங்களுக்கு வேண்டியதெல்லாம் ஜாதி இந்துக்களைப் போன்ற கல்வியும், ஆகாரமுமாகும். ஆனால் காங்கிரசும், காந்தியாரும், ஹரிஜனங் களுக்கு கொடுப்பது ஆலயப்பிரவேசமாகும். இதன் இரகசியம் ஹரி ஜனங்கள் பொருளாதாரத் துறையிலும், கல்வியிலும், முன்னேறி விட்டால் ஜாதி ஹிந்துக்களுக்கு அடிமைகள் இல்லாமல் போய்விடுவார்கள். அப்பொழுது வருணாச்சிரம தர்மம் அழிந்துபோக நேரிடும். ஆதலால் ஹரிஜனங்கள் பொருளாதாரக் கிளர்ச்சியும், கல்விக் கிளர்ச்சியும் செய்வதற் கில்லாமல் செய்வதற்கு அவர்களை கோவிலுக்குள் கொண்டுபோய்த் தள்ளிவிட்டால் கடவுள்மீது பக்தி ஏற்பட்டு தங்கள் கையிலுள்ள காசையும் சாமிக்கு அழுது விட்டு தங்களுக்கு கல்வியும், பணமும் வேண்டுமென்று



RangaRakes tamilnavarasam.com

கடவுளையே கேட்டுக்கொண்டு பழயபடியே மூடர்களாக இருக்கச் செய்துவிடலாம் என் கின்ற தந்திரமே ஒழியவேறில்லை.

ஆதலால் ஹரிஜனங்களுக்கு "ஆலயப்பிரவேசம், ஆலயப் பிரவேசம்" என்று சத்தம் போடுவதெல்லாம் அவர்களது பொருளாதார முயற்சிக்கும், கல்வி முயற்சிக்கும் முட்டுக்கட்டை போடுவதாகுமே தவிர வேறொன்றும் அல்ல என்பதே நமது அபிப்பிராயம். இதை ஹரிஜனங்கள் என்பவர்களும் நன்றாய் தெரிந்துகொண்டதற்கு நாம் மிகுதியும் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால் காங்கிரசினிடமிருந்து பணம் பெற்று வயிறு வளர்க்கும் ஹரிஜனங்களும் காங்கிரசின் பிச்சையினால் லஞ்சத்தினால் அல்லாமல் வேறுவழியில் வயிறு வளர்க்கவோ, விளம்பரம் பெறவோ, யோக்கியதை இல்லாத ஹரிஜனங்களும் தங்கள் சமூகத்தை துரோகம் செய்து காங்கிரசின் சூழ்ச்சிக்கு இடம்கொடுத்து வருவதில் நமக்கு ஆச்சரியமில்லை. எந்தக் கூட்டத்திலும் எந்த இயக்கத்திலும் இப்படிப்பட்ட நபர்கள் 100-க்கு ஒன்று இரண்டு இருந்துகொண்டுதான்வரும். ஆதலால் "ஹரி"ஜன சமூகத்திலும் இப்படிப்பட்டவர்கள் இருப்பது இயற்கையேயாகும். எனவே சம தர்மக் கொள்கையில் நம்பிக்கையோ, அனுதாபமோ உள்ளவர்கள் இந்த ஆலயப்பிரவேசத்தின் தந்திரத்தை உணர்ந்து பொருளாதார சமத்துவத்திற்கே உழைத்து வருவார்களாக.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 17.09.1933**



# ஸ்தல ஸ்தாபன அலங்கோலம்

ஈரோடு தாலூகா போர்டு தலைவர் தேர்தல் சம்மந்தமாய் ஏற்பட்ட வழக்குகள் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இதுசமயம்

1. ஹைகோர்ட்டில் இரண்டு அப்பீல்கள் ஸ்டே புரசீடிங்ஸ் ஆர்டர்களுடன் இருந்து வருகின்றன.

2. ஈரோடு டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில் இன்ஜங்ஷனுடன் ஒரு சூட் இருந்து வருகிறது.

3. ஈரோடு ஸ்டேஷனரி சப்மேஜிஸ்டிரேட் கோர்ட்டில் பழய பிரசிடெண்டு மீது சட்டப்படி அதிகாரமில்லாத காலத்தில் பிரசிடெண்டு செய்யவேண்டிய வேலைகளை செய்ததாக ஒரு பிராது, ஆக 3 இடங்களில் விவகாரங்கள் நடக்கின்றன.

ஈரோடு தாலூகா போர்டு பிரசிடெண்டாயிருந்த தோழர் பழைய கோட்டை பட்டக்காரர் அவர்கள் கோயமுத்தூர் ஜில்லா போர்டு வைஸ்பிரசிடெண்டானவுடன் ஈ.தா.போ. பிரசிடெண்டு வேலைகாலியானதினால் அதற்கு முன்பு ஈ.தா.போ. வைஸ்பிரசிடெண்டாயிருந்த தோழர் வி.எஸ். ராஜாக் கவுண்டரும், தோழர் எஸ்.கே. சென்னியப்ப கவுண்டரும் அபேக்ஷகர்களாயிருந்ததில் தோழர் வி.எஸ்.ராஜாக்கவுண்டர் வெற்றிபெற்றார். தோல்வி உற்றவர் இந்த எலக்ஷனை மாற்றி தன்னை தெரிந்தெடுத்ததாகக் கருத வேண்டுமென்று ஆக்ஷேபித்து ஒரு விண்ணப்பம் கொடுத்ததால் எலக்ஷன் (ஓட்டுகள் வெளிப்படையாய் செய்யப்பட்டிருக்கிறபடியால்) செல்லாது என்றும் வேறு எலக்ஷன் நடைபெறவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டு விட்டது. இந்த தீர்மானத்தை ஒப்புக்கொள்ளாமல் வாதி, பிரதிவாதிகள் இருவரும் தங்கள் தங்களையே தெரிந்தெடுக்கப்பட்டதாக தீர்மானிக்க வேண்டுமென்று ஹைகோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

இதன் மத்தியில் இந்த பிரசிடெண்டு எலக்ஷன் ஆனபிறகு அவரது வைஸ்பிரசிடெண்டு வேலை காலிஆகிவிட்டதால் வை.பி.எலக்ஷன் ஆனதில் சித்தோடு தோழர் ராமசாமிக்கவுண்டர் வை.பி. ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் பழைய வைஸ்பிரசிடெண்டு தோழர் வி.எஸ்.ராஜாக்



RangaRakes tamilnavarasam.com

கவுண்டருக்கு பிரசிடெண்டு எலக்ஷன் கேன்சல் ஆனவுடன் அவர் தானே வைஸ்பிரசிடெண்டு என்பதாக சொல்லி புதியதாய் எலக்ஷனான வைஸ் பிரசிடெண்டு ராமசாமி கவுண்டருக்கு சார்ஜ் கொடுக்க மறுத்துவிட்டார். இதனால் வைஸ்பிரசிடெண்டு தோழர் ராமசாமி கவுண்டர் டி.மு.கோர்ட்டில் தன்னை வைஸ் பிரசிடெண்டாக கருதவேண்டுமென்று சொல்லி ஒரு தாவா போட்டு தோழர் ராஜாக்கவுண்டர் வைஸ்பிரசிடெண்ட் வேலைபார்க்கக் கூடாது என்று இன்ஜங்ஷன் வாங்கி இப்போது தானே வைஸ் பிரசிடெண டாய் இருந்து வருவதுடன் பிரசிடெண்டு வேலைகள் பூறாவும் பார்த்து வருவதுடன் பிரசிடெண்டு எலக்ஷனுக்கு (தோழர் ராஜாக்கவுண்டர் தான் வைஸ் பிரசிடெண்ட் என்று கருதி இம்மாதம் 1-ம் தேதி குறிப்பிட்டிருந்ததை மாற்றி தோழர் ராமசாமிக் கவுண்டர் வைஸ் பிரசிடெண்ட் உத்தியோகம் ஏற்றவுடன்) இம் மாதம் 15 தேதி போட்டிருந்தார். தோழர் ராஜாக்கவுண்டர் இதை ஆக்ஷேபித்து ஹைக்கோர்ட்டில் விண்ணப்பம் போட எலக்ஷன் நடைபெறக்கூடாதென்று ஸ்டே புரசீடிங்ஸ் ஆர்டர் பெற்று இருக்கிறார்.

இதன் மத்தியில் ஒரு மெம்பரான தோழர் கே.எஸ்.பெரியசாமிக் கவுண்டரால் தோழர் ராஜாக்கவுண்டர் தனக்கு அதிகாரமில்லாத காலத்தில் தன்னை வைஸ் பிரசிடெண்டு என்று சொல்லிக்கொண்டு வேலை பார்த்தது குற்றம் என்று ஈரோடு சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒரு பிராது கொடுத் திருக்கிறார்.

இப்படியாக 3 கோர்ட்டுகளில் விவகாரங்கள் இருக்கின்றன. யார் ஜெயித்தாலும் யார் தோற்றாலும் கடைசியில் இந்த செலவுகளுக்கும் மெனக் கேடுகளுக்கும் பரிகாரம் வெற்றிபெற்று பதவி அனுபவிப்பவர்கள். இந்தப் பதவியின் மூலம் தான் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டிவரும். ஏனெனில் மற்ற போர்டுகளில் அனேகம் இப்படித்தான் நடந்து வருகின்றன.

இன்றையதினம் ஸ்தலஸ்தாபனங்களில் நடக்கும் நாணையக் குறைவான காரியங்களும், யோக்கியப்பொறுப்பற்ற காரியங்களும், போலீசி லும் இல்லை, வக்கீல்களிடமும் இல்லையென்று தாராளமாய்ச் சொல்லலாம்.

அந்தந்த இடங்களில் இருக்கும் செல்வாக்குள்ள மிராசுதாரர்கள் குடி களைத் துன்பப்படுத்த மணியம் வேலையை ஒரு லைசென்சாய் உபயோகித்து வந்தார்கள். ஆனால் இப்போது அப்படிப்பட்டவர்களுக்கு இந்த ஸ்தல ஸ்தாபனங்களின் பதவிகள் அரசாங்கத்தினிடமும் பொது ஜனங்களிடமும் பெற்ற பெரிய லைசென்சாக இருந்துவருகின்றன.

இம்மாதிரி ஸ்தாபனங்களுக்கு தலைவர்களையோ, அங்கத்தி னர்களையோ, அரசாங்கத்தார் நியமனம் செய்த காலத்தில் இல்லாத குற்றங் களும், அக்கிரமங்களும் இப்போது ஜனங்கள் தெரிந்தெடுக்கும்போது அதிய மாயும் அனேக விஷயங்கள் புதியதாகவும் இருந்து வருகின்றனவே



தவிர இதில் ஒன்றும் குறையவே இல்லை என்று சொல்லலாம்.

அதற்கு உதாரணம் வேண்டுமானால் இந்த இருபது முப்பது வருஷ காலமாய் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இருந்துவந்த அதிகாரங்களும், நம்பிக் கைகளும் எடுபட்டுப்போய்விட்டது ஒன்றே போதுமானது. இந்தக் காரணங் களாலேயே இப்பொழுது முனிசிபாலிட்டிகளுக்கு நிர்வாக உத்தியோ கஸ்தர்களை சர்க்கார் நியமித்துவிட்டார்கள். அதுபோலவே ஜில்லா போர்டு களுக்கும், தாலூகாபோர்டுகளுக்கும் நியமிக்கவேண்டியது மிகமிக அவசர மாகும்.

இதுதவிர ஜில்லாபோர்டையும், தாலூகா போர்டையும் அடியோடு எடுத்துவிட்டு ஜில்லா போர்டு வேலைகளை கலெக்டர்களைக் கொண்டும், தாலூகா போர்டு வேலைகளை டிப்டி கலெக்டர்களைக் கொண்டும் பார்த்து வரும்படி செய்தால் பணம் சரிபங்கு மீதியாகும். ஜனங்களுக்கும் இரண்டு பங்கு நன்மை ஏற்படும்.

இவைகளையெல்லாம்விட மனித சமூகம் கொள்ளை, திருட்டு, புரட்டு, அயோக்கியத்தனம், கொலை பாதகத்தனம் ஆகிய "அருங்" குணங் களை கற்றுக்கொள்வதற்கு ஆரம்பப்பாட சாலையாக இடங்கொடுத்து வரும் ஒரு தன்மையும் ஒழிந்து மனிதர்களை நன்னடக்கையுடன் இருக்கச் செய்யும்.

ஏனெனில் செல்வவான்கள் எண்ணம் எப்பொழுதும் மோசத்திலும் அயோக்கியத் தனத்திலுமே ஊருகிறது. அதிலும் கிராமங்களிலுள்ள செல்வ வான்களது எண்ணத்தைப் பற்றிக் கேட்கவேவேண்டாம். அதிலும் ஸ்தல ஸ்தாபனப் பதவிகள் என்னும் லைசென்சையும் அவர்கள் கையில் கொடுத்துவிட்டால் அதைப்பற்றி விவரிக்கவும் வேண்டுமா என்று கேட் கின்றோம்.

இம்மாதிரியான காரியங்கள் அரசாங்கத்தின் யோக்கியதையையும் அவர்களது நடவடிக்கையையும் தான் பிரதிபலிக்கின்றது என்று சொல்ல வேண்டியிருக்கிறதே ஒழிய வேறு ஒன்றுமே இல்லை. ஆகையால் யோக்கிய மான ஆட்சியில்தான் யோக்கியமான நடவடிக்கைகளைக் காணமுடியு மென்கின்ற முடிவுப்படி இன்றைய ஆட்சித்தன்மைகளை ஒவ்வொரு துறை யிலும் அடியோடு மாற்றியாக வேண்டியதாய் இருக்கின்றது என்பதையும் அதற்காக வெகு தீவிரமான புரட்சி முறைகளையும், கையாள வேண்டியிருக் கிறதென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 17.09.1933**



RangaRakes tamilnavarasam.com

# வாலிபர் கடமை

## பொதுவுடமைக்கும் சுயராஜ்யத்துக்கும் சம்மந்தமில்லை

சுயராஜ்யம் என்பது அரசியலைப் பொருத்தது. அது எந்த தேசத்தை, யார் ஆளுகிறது என்பதையே முக்கியமாய் கொண்டதாகும். பொதுவுடமை என்பது பொருளாதாரத்தையே முக்கியமாய் கொண்டதாகும். பொதுவுட மைக் கொள்கையைப்பற்றிய விஷயத்தில் ஆட்சிசெய்பவர்கள் யார் என் பதைப் பற்றியோ, எந்த தேசம் ஆதிக்கமுள்ளதாய் இருக்க வேண்டு மென்று எல்லை கட்டுவதிலோ பிரவேசிக்கவேண்டிய அவசியமே இல்லை. பொது உடமை என்பது மேல் குறிப்பிட்டபடி வெறும் பொருளாதாரப் பிரச்சி னையே ஆகும். அதுவொரு கணக்குப் பிரச்சினை என்றும் சொல்லலாம். உலகத்தை ஒரு குடும்பமாக்கி உலக மக்களை ஒரு குடும்பமக்களாக்கி உலக செல்வத்தையும் சுக துக்கதையும் அக்குடும்பத்துக்குப் பொதுவாக்கி அக்குடும்ப மக்கள் எல்லோரும் அக்குடும்ப சொத்துக்களை சரிசமமாய் அனுபவிக்கும்படி செய்யும்முறையே பொது உடமைத் தத்துவமாகும்.

இதனால் யாருக்கும் ஏற்றத்தாழ்வோ ஜாஸ்தி கம்மியோ இல்லாமல் இருக்கும் என்கின்ற முடிவின்பேரிலும் உலகவாழ்க்கையில் மக்கள் உயர்வு தாழ்வும் ஜாஸ்திகம்மியும் அனுபவிப்பது மனித இயற்கை என்றும் இந்தப் படி இருக்கவே மனிதன் ஏற்பட்டவன் என்றும் இந்தப்படியான வித்தியாச வாழ்வு அமைப்பு அவனவன் முன்ஜன்ம கர்மப்படியும் கடவுள் சித்தப்படி யும் ஏற்பட்டதென்றும் சொல்லும் கொள்கையை அடியோடு தப்பு என்கின்ற முடிவின்பேரிலும் இப்பொதுவுடமைக் கொள்கை கண்டுபிடிக்கப்பட்டு அது சில இடங்களில் அனுபவத்தில் இருந்து வருகின்றது.

ஆகையால் இக்கொள்கையை வற்புறுத்துகின்றவர்கள் இன்னார் ஆள வேண்டும் என்கின்ற பிடிவாதம் இல்லாமல் இன்ன கொள்கையின் மீது ஆளப்படவேண்டும் என்கின்ற பிடிவாதத்துடன் கிளர்ச்சியோ புரட்சியோ செய்து புரட்சி ஏற்படுத்தவேண்டியது வாலிபர் கடமையாகும்.

**குடி அரசு - கட்டுரை - 17.09.1933**



# இன்னுமா காந்தீயம்?

காந்தீயம் படுத்துவிட்ட தென்றும், அதனால் இதுவரையில் எவ்வித பயனும் ஏற்படவில்லை என்றும், அதை இனியும் பரீக்ஷிப்பதால் யாதொரு பயனும் ஏற்படாது என்பதோடு அது முட்டாள் தனமும், தற்கொலையு மாகும் என்றும், இமயமலை முதல் கன்னியாகுமரி வரை இன்று ஒரே அபிப் பிராயமாக இருந்து வருகின்றது. ஆனால் தோழர் காந்தியவர்கள் மாத்திரம் தான் "பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்ற பழமொழிபோல் தன்னுடைய சொந்த கௌரவத்தை முன்னிட்டு இதை ஒப்புக்கொள்ளாமல் இருப்பதாக காட்டிக்கொண்டு இருப்பது தான் தோல்வி அடையவில்லை என்றும் தனது கொள்கை பயனற்று (வெத்தி வேட்டாய் புஸ்ஸ்ஸென்று) போகவில்லை யென்றும், பாமர ஜனங்களைக் கருதும்படி செய்யவேண்டும் என்கிற துறை யிலேயே தனது முயற்சியை எல்லாம் செலவழித்து வெகுதீவிரமாய் உழைத்து வருகிறார். இந்த உழைப்புக்கு அவருடைய பிரதம சிஷ்யர்கள் சிலரும் காந்தீயத்தாலன்றி வாழ முடியாத சில காந்தீய சன்னியாசிகளும், காந்திமட சன்னியாசிகளும் தங்கள் தங்களால் கூடிய அளவு உதவி புரிந்து வருகின்றார்கள். என்றாலும் காந்தீயத்தால் பிழைத்து வந்த பத்திரிகைகாரார் கள் அநேகர் இனி இதை நம்பினால் பயன்படாது என்று கருதியதோடு வில்லிங்டனார் அடக்குமுறைக்கு பயந்தும் வேறு வழியில் திரும்பிக் கொண்டதால் இனி யார் எப்படிப்பட்ட உதவி செய்தாலும் அது மறுபடியும் தலைதூக்க முடியாத காரியமாய் போய்விட்டது.

தோழர் காந்தியாருக்கு பத்திராதிபர்களின் ஆதரிப்பு குறைந்து விட்டது என்று தோன்றியவுடன், மிதவாதிகள் என்னும் கூட்டத்தையாவது பிடித்து ஏதாவது பரிகாரம் தேடிக்கொள்ளலாமா என்று பார்த்ததில் அவர் களும் கைவிட ஆரம்பித்துவிட்டார்கள். ஏனெனில் மிதவாதிகள் என்பவர் கள் தங்கள் தேர்தல்களுக்குப் பங்கம் ஏற்படாமல் இருக்கவேண்டிய அளவுக்கு மாத்திரமே காந்தியாரின் பெயரை உபயோகித்துக் கொண்டி ருந்தவர்களே ஒழிய அவர்களுக்கு காந்தியாரிடத்தில் கடுகளவு நம்பிக் கையோ அனுதாபமோ ஒரு நாளும் இருந்ததில்லை. ஆகவே இனிமேல் தேர்தலில் நிற்கின்றவர்கள் காந்தியாரின் பெயரை உபயோகிக்கவேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் தெரிந்து கொண்டவுடன் அவர்களும் காந்தியாரை அலட்சியம் செய்ய தீர்மானித்து விட்டார்கள்.



RangaRakes tamilnavarasam.com

நிற்க, இப்போது காந்தியார் தனது ஒவ்வொரு வார்த்தையிலும், தான் எதிர்பாராமல் சிறையிலிருந்து விடுதலையாகி விட்டதாகச் சொல்லிக் கொண்டே வருவதை வாசகர்கள் கவனித்து இருந்தால் அதிலிருந்து ஒரு விஷயத்தை உணரலாம். அதென்னவெனில் இப்போது ஜனங்களில் அதிகம் பேருக்கு காந்தியார் அனாவசியமாய் பட்டினியிலிருந்து விடுதலையானார் என்றும், அப்பட்டினிக்கு விடுதலையாக வேண்டும் என்கின்ற காரணம் அல்லாமல் மற்றபடி வேறு எவ்வித நியாயமான காரணமும் இருக்க இட மில்லை என்றும் கருதி இருப்பதால் இக்கருத்தைமாற்றவே அவர் “நான் எதிர்பாராமல் விடுதலை அடைந்துவிட்டேன்” “எதிர்பாராமல் விடுதலை அடைந்து விட்டேன்” என்று அடிக்கடி சொல்லிக்கொள்ள வேண்டிய தாகிவிட்டது.

காந்தியார் முதல் முதலில் விடுதலை அடைந்ததும் பட்டினியின் காரணத்தினாலேயாகும். அதாவது தீண்டப்படாத மக்களின் தனித் தொகுதியை ஒழிக்க என்று பட்டினி இருந்ததாகும்.

அரஸ்டு செய்யப்பட்டு விடுதலை அடைந்ததும் பட்டினியின் காரணத்தினாலேயாகும். அதாவது தனது சகாக்கள் சில தப்பிதம் செய்ததற் காக என்று பட்டினி கிடந்து விடுதலை அடைந்ததாகும்.

இப்போது விடுதலை அடைந்ததும் பட்டினியின் காரணத்தினா லேயாகும். அதாவது சிறையில் ஹரிஜன வேலை செய்ய சர்க்கார் அதிக சௌகரியம் அளிக்காததினால் என்று பட்டினி இருந்ததாகும்.

இப்படியே ஒவ்வொரு தடவையும் தான் பட்டினி கிடப்பதாகச் சொல்லி பட்டினி ஆரம்பித்தவுடன் சர்க்கார் விடுதலை செய்து கொண்டே வந்திருக்கிறார்கள்.

( இந்தத்தடவை மாத்திரம் சர்க்காரார் முன்போல் உடனே விடுதலை செய்துவிடாமல் பலாத்காரமாய் ஆகாரத்தைச் செலுத்த துணிவு கொண் டார்கள் என்றாலும் தோழர் ஆண்ட்ரூஸ் முதலியவர்கள் பிரவேசத்தினால் விடுதலை செய்துவிட்டார்கள்.)

அப்படி இருக்க இந்தத் தடவையும் தான் பட்டினி ஆரம்பித்தால் சர்க்கார் தன்னை விடுதலை செய்துவிடுவார்கள் என்று தோழர் காந்தி எதிர் பார்க்காமல் இருந்திருக்கமுடியுமா என்பதை வாசகர்கள்தான் முடிவுசெய்து கொள்ள வேண்டும்.

அன்றியும் இந்த விடுதலைக்கு தோழர் ஆண்ட்ரூசால் ஏதாவது ஒப்பந்தம் நிகழ்ந்திருந்தாலும், நிகழ்ந்திருக்கலாம் என்றும் சிலர் கருது கிறார்கள். இது எப்படி இருந்தாலும் தோழர் காந்தியவர்கள் முன்பு விடுதலை அடைந்தவுடன் எப்படி “தனிப்பட்ட சட்ட மறுப்பு செய்யவேண்டியது தவிர



வேறு ஒரு மார்க்கமும் தனக்கு இல்லை” என்று சொன்னதுடன் இந்த சட்டமறுப்பு செய்து சிறைசெல்லவேண்டியதின் அவசியத்தைப்பற்றி சொல்லும்போதும், “நான் வெளியில்வந்து ஜனங்களுடன் பழக நேர்ந்ததில் படித்தவர்களும், படிக்காதவர்களும், மேல்ஜாதிக்காரரும், கீழ்ஜாதிக்காரரும், பணக்காரர்களும், ஏழைகளும் சீர்குலைந்திருப்பதைக் கண்டதாகவும் அவர்கள் தங்கள் உடமைக்கும், சுதந்திரத்திற்கும் ஆபத்து வருமென்று பயப்படுவதாகவும் ஆதலால் அஹிம்சையில் நம்பிக்கையுள்ள நான் சிறைபுகுவதைத் தவிர வேறு வழியில்லை” என்று சொல்லி சிறைபுகுந்து இருக்கிறார்.

ஆனால் இப்போது வெளிவந்த காந்தியவர்கள் வெளிவந்தது முதல் இவ்வளவு நாள்யோசித்தும் தோழர் ஜவஹர்லால் உடன் இரண்டு மூன்று நாள் கலந்து பேசியபிறகும் வெளியிட்டு இருக்கும் அறிக்கையில் கூறுவது என்னவென்றால் “நான் இனி ஒருவருஷ காலம் சட்ட மறுப்பிலிறங்கி சிறைபுகுவதில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்” என்றும் இந்த ஒரு வருஷகாலத்துக்குள் தான் சட்ட மறுப்புச்செய்து சிறைக்குச்செல்லுவது அற்பத்தனம் என்றே தனக்கு படுகின்றது என்றும் விளக்கமாகச் சொல்லி விட்டார். சிறிது நாளைக்குமுன் தான் “தேசம் சீர்கெட்ட நிலையில் இருக்கும் போது அஹிம்சையில் நம்பிக்கையுள்ள சத்தியாக்கிரகி சிறையிலிருக்க வேண்டும்” என்று சொன்னவர் இப்போது ஒரு மாதத்திற்குள் “இந்த சமயத் தில் ஜெயிலுக்கு போகக்கூடாது” என்றும் “ஜெயிலுக்குப் போவது அற்பத் தனம்” என்றும், சொல்லும்படியான நிலைமை எப்படி ஏற்பட்டதென்பது நமக்கு புரியவில்லை. ஒரு சமயம் தேசம் சீரடைந்துவிட்டதாக கருதிவிட் டாறோ என்பதும் விளங்கவில்லை.

அல்லது ஒருசமயம் வில்லிங்டன் துரைமகனாரின் சண்டித்தனம் காந்தியாரின் சண்டித்தனத்தை ஜெபித்து விட்டதோ என்னமோ என்றும் நினைக்கவேண்டியிருக்கிறது.

காந்தியாருக்கு வில்லிங்டனாரிடம் போய் நேரில் பேசி ராஜி என்ற பேரால் ஏதாவது ஒருவழியில் தனது நிலையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்காது, வில்லிங்ட னாரோ இதை அறிந்துகொண்டு ஒரே பிடிவாதமாய் கல்உளி சித்தன்போல் சண்டித்தனம் செய்கிறார். அதென்னவென்றால் சட்டமறுப்பை நிறுத்தி விட்டேன் என்று சொன்னால் ஒழிய காந்தியாரின் முகத்தில்கூட விழிக்க மாட்டேன் என்று சிறு குழந்தைகள்போல் ஹடம்சாதிக்கிறார். இந்த நிலையில் காந்தியார் மறுபடியும் சிறைக்குச் சென்று பட்டினி இருந்தால் வில்லிங்டன் அரசாங்கம் என்ன செய்யும் என்பது காந்தியாருக்கு நன்றாய் தெரியும் ஆதலால் இரண்டு சண்டிகள் தங்களது சண்டித்தனத்தை நடத்திக்கொண்டே போனால் (இரண்டு நேர்கோடுகள் எப்படி ஒன்று சேராதோ அதுபோல்) ஒரு



RangaRakes tamilnavarasam.com

முடிவுக்குவர முடியாதநிலை ஏற்பட்டுவிடுமாதலால் ஏதாவது ஒரு சண்டி (பலக்குறையுள்ள சண்டி) வழிக்குவந்து சற்று இறங்கிவந்தால்தான் முடியு மெனக் கருதி காந்தியாரே "பெரும் தன்மையுடன்" இறங்கிவந்து, சரி வில்லிங் டனார் இஷ்டப்படிதான் ஆகித் தொலையட்டுமே எனக் கருதி இனிமேல் (ஒருவருஷ காலத்துக்கு) சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு முதலிய எந்தக் காரியத்தையும் செய்து ஜெயிலுக்குப் போவதில்லை என்று வாக்குக் கொடுக்க வேண்டிய அவசியத்திற்கு ஆளாக வேண்டியதாய் போய் விட்டதோ என்பதும் விளங்கவில்லை.

எப்படி இருந்தாலும் இந்தக்காரியம் இவ்வளவும் காந்தியார் தன் இஷ்டப்படி செய்யாமல் "நன்றாய் பிரார்த்தனை செய்து ஆழ்ந்த சிந்தனை என்னும் யோகத்தில் இறங்கி பகவானுடைய உத்திரவு பெற்றபின்பே அதாவது பகவானின் உத்திரவுப்படியே செய்து வருகிறேன் என்கிறார். ஆத லால் (கடவுள் நம்பிக்கையுள்ள) வேறு எவருக்கும் இதில் குற்றம் கண்டு பிடிக்க இடமில்லை".

இதுதவிர தோழர் காந்தியார் மற்றொரு விஷயத்தையும் ஒளிக்காமல் சொல்லிவிட்டார். அதென்னவென்றால் நான் பொதுத்தொண்டில் இறங்கிய காலம் முதல் ஒரு காரியம் ஏதோ ஒரு வழியில் முடிவுபெற்றுவிட்டால் அடுத்தபடியாக என்ன செய்யவேண்டுமென்பது தெளிவாக முன்னதாக தெரிந்துவிடும். ஆனால் (இந்த எதிர்பாரத விடுதலையினால்) இப்போது என்னை இருட்டு (அறியாமல்) மூடிக்கொண்டது. எனது உடமை என்ன என்பது எனக்கு விளங்கவில்லை என்று சொல்லுகிறார்.

"ஒவ்வொரு காரியத்தையும் கடவுள் பிரார்த்தனை செய்து ஆழ்ந்து யோசிப்பவர்" யோக்கியதை இப்படியிருக்குமானால் இனிமற்ற சாதாரண ஆத்மாக்களுக்கு என்ன விளங்கக் கூடுமென்பதை வாசகர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். ஆகவே காந்தீயத்தின் நிலை இப்போது எப்படி இருக்கின்றது என்பதற்கு இது ஒரு தக்க சந்தர்ப்பமாகும்.

இனி மற்றொரு வீரரின் நிலையைப்பற்றி சிறிது யோசிப்போம். அதாவது காந்தியாருக்குப் பின் இந்திய தேசியத் தலைவராக வரவேண்டும் என்று வாலிபர்களால் எதிர் பார்க்கப்படும் தோழர் ஜவஹர்லால் அவர் களைப் பற்றியேயாகும்.

இவர் தன்னை பொதுவுடமைக்காரர் என்று பொதுஜனங்கள் கருதும் படியும் நடந்து வந்திருக்கிறவர். ஆனால் காந்தியாரின் அபிமான புத்திரர் என்றும், அந்தரங்க சிஷ்யர் என்றும் காட்டிக்கொள்வதால் கிடைக்கும் பய னையும் விட்டுவிட சம்மதிக்காதவர். அல்லது காந்தியாரின் தாக்ஷண்ணியத் துக்குக் கட்டுப்பட்டவர் என்றாவது சொல்லியாகவேண்டிய நிலையிலிருப் பவர்.



காந்தியாரிடத்திலும், காந்தீயத்தினிடத்திலும் சலிப்பும், வெறுப்பும், அவநம்பிக்கையும் கொண்ட வாலிபர்கள் பலருக்கு தோழர் ஜவஹர் லாலிடத்தில் ஒருவித நம்பிக்கை இருந்து வருவதை நாம் அறிகிறோம்.

ஆனால் இந்த நம்பிக்கைகள் ஜவஹர்லால் அவர்களின் ஏதோ இரண் டொரு வாய் வார்த்தையைக் கேட்டு ஏமாந்து போய்க் கொண்டிருப் பதாலேயே ஒழிய அவருடைய செய்கையைக் கொண்டோ அல்லது அவரது உறுதியான அபிப்பிராயத்தைக்கொண்டோ என்று சொல்லி விடுவ தற்குப் போதிய ஆதாரம் ஒன்றையும் நம்மால் காணமுடியவில்லை. அவ ருக்கு இரணடுவித மனப்பான்மை இருந்துவருகிறது என்பதே நமதபிப் பிராயம்.

அதாவது வானதத்துவ நிபுண உபாத்தியாயர் ஒருவர் பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளுக்கு கிரஹணத்தைப்பற்றிப் போதிக்கும் போது கிரஹணம் என்பதில் உண்மையை வானசாஸ்திரப்படி போதித்து விட்டு அதாவது பூமியும் சூரியனும் சுற்றுவதினால் ஒன்றின் நிழலில் ஒன்று மறைபடும்போது ஏற்படும் மறைவுக்கு கிரஹணம் என்று சொல்லப்படு கின்றது என்று சொல்லிவிட்டு அதே வாத்தியார் தன்வீட்டுக்குப் போன வுடன் சூரிய சந்திரர்களுக்கு ஏற்பட்ட சாபதண்டனையாக ராகு, கேது என்கின்ற பாம்புகள் விழுங்குகின்றன என்று கருதி ஸ்நானம், ஜபம், விரதம் முதலியவைகள் செய்வது போல் தோழர் ஜவஹர்லால் அவர்கள் வாலிபரி டம் பேசும்போது ஒரு விதமாகவும் பிறகு காந்தியாரிடம் இருக்கும்போது ஒருவிதமாகவும் நடந்துவருகிறார். இவை இரண்டில் அவருடைய உண்மை யான மனப்பான்மை என்ன என்று கண்டுபிடிப்பது கஷ்டமாகவே இருக் கிறது. ஆனால் அரசியல் உலகில் உள்ள மற்ற பெரியவர்கள் என்று சொல்லப்படுகின்ற அனேகருக்கு ஜவஹர்லால் அவர்களிடம் மதிப்பு இல்லை என்பதும், ஜவஹர்லால் அவர்களுக்கும் மற்ற பெரியார்களில் காந்தியாரைத்தவிர மற்றவர்களிடம் மதிப்பு இல்லையென்பதும் கவனித்துப் பார்த்தவர்களுக்கு நன்றாய் விளங்கும்.

ஜவஹர்லால் அவர்களின் பொதுவுடமைக் கொள்கையையும், அவரது பூரண விடுதலை கொள்கையையும், வெளி தேசத்து பொது உடமைக் கொள்கைக்காரர்களும் பூரண விடுதலைக்காரர்களும் நம்பி அவரை உலக ஏகாதிபத்திய மறுப்பு சங்கத்திற்கு உபதலைவராக தெரிந் தெடுத்து இருந்தார்கள். ஆனால் தோழர் ஜவஹர்லால் அவர்கள் காந்தி-இர்வின் ராஜியை ஒப்புக் கொண்டவுடன் இவரை மேற்படி உபதலைவர் பதவியில் இருந்து நீக்கி விட்டார்கள். இதற்காகவேண்டியே ஜவஹர்லால் அவர்கள் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஒரு போர் நிறுத்த (அதாவது தர்க்கால சாந்தியாய் இளைப்பாரு வதாக செய்து கொண்ட) நிபந்தனைகளே தவிர சமாதான உடன்படிக்கை அல்ல என்று பல தடைவ கூறினார். இப்போதுகூட



RangaRakes tamilnavarasam.com

அப்படியே சொல்லி வருகிறார் என்றாலும் இவரை உபதலைவர் பதவியிலிருந்து நீக்கிவிட்டது மாற்றப்படவில்லை.

இவர் இந்தமாதிரி காந்தி-இர்வின் ஒப்பந்தத்துக்கு வியாக்கியானம் சொன்னதினாலேயே வில்லிங்டன் பிரபு "ஒப்பந்தப்படி காங்கிரசுக்காரர்கள் நடந்துகொள்ளவில்லை" என்று சொல்லி ராஜியை அலட்சியம் செய்ய வேண்டியவரானார்.

இப்போது தோழர் ஜவஹர்லால் அவர்கள் சிறையிலிருந்து காந்தி யாரைச் சந்தித்துப் பேசியபிறகு வெளியிட்டிருக்கும் அறிக்கையில் காந்தி யாரின் இன்றைய நடவடிக்கைகள் எல்லாம் அவருடைய (காந்தியாருடைய) சொந்த விஷயமே ஒழிய தேசிய விஷயமல்லவென்றும் ஆனாலும் அத னால் தேசீய விஷயம் பாதிக்கப்படலாம் என்றும் சொன்னதோடு தேசீய விஷயம் வேறு என்றும் சொல்லி இதற்கும் அதற்கும் சம்மந்தமில்லை யென்று ஜனங்கள் கருதும்படி பிரிவுபடுத்திக் கூறிஇருக்கிறார்.

இதுமாத்திரமல்லாமல் சத்தியாக்கிரகம் என்பதில் மதததத்துவம் இருக் கிறது என்பதை தான் நம்புவதில்லை என்றும் அது ஒழுக்கமுள்ளதா, அனுபவத்தில் பலன் தரத்தக்கதா என்பதைப் பொருத்தேதான் தான் சம்மந் தப் பட்டிருந்ததாயும் தெரிவித்திருக்கிறார். இதிலிருந்து காந்தியாருடைய தத்துவத்தை இவர் தேசீய பொதுக்காரியத்தைச் சேர்ந்தது என்று கருத வில்லை என்பதும் எல்லாவற்றையும் இவர் அப்படியே ஒப்புக்கொள்ளு பவர் அல்ல என்பதையும் காட்டிக்கொள்ளுகிறார் என்றே கருதவேண்டி இருக்கிறது.

ஆனால் இந்த அபிப்பிராயம் இவருக்கு எதுவரையில் இருக்கும் என்று கண்டுபிடிக்க முடியாது. மறுபடியும் காந்தியாருக்கு நெருக்கடியான சமயம் வரும்போது மறுபடியும் வேதாளம் முருங்கமரத்தில் ஏறிவிட்டது என்பது போல காந்தியின்றிக் கதி இல்லை என்கின்ற அடிமை மந்திரத்தை உச்சரித்து விடுவார் என்று நான் இவரது பழய நடவடிக்கையில் இருந்து கருதவேண்டி இருக்கிறது.

இவ்வளவும் தவிர இந்த இரண்டு மூன்று நாளாய் தோழர்கள் காந்தியும், ஜவஹர்லாலும் பேசிய பேச்சுக்கள் வெளியிட தைரியமற்றதாய் விட்டதும் வெளிப்படையானதும், தெளிவானதுமான ஒரு அறிக்கையை வெளியிட முடியாமல் இரண்டருத்தமுள்ள வார்த்தைகளையும், வாசகங்க ளையும் கொண்டே இருவரும் அறிக்கை வெளியிட்டிருப்பதும் இனியும் இருவருக்குள்ளும் ஒரு முடிவு ஏற்படாமல் இனியும் இருவரும் செய்து கொள்ளும் கடிதப்போக்குவரத்தினாலேயே விளக்கக்கூடும் என்று முடிவு செய்து கொண்டதும் ஆகிய காரியங்களால் இருவருக்கும் பலமான அபிப் பிராய பேதம் இருப்பதாகவும் உணரக்கிடக்கின்றது. இனி இருவருக்கும் இடையில் பஞ்சாயத்து தரகர்கள் சரோஜனிதேவி போன்றவர்களின் தூதினால் இன்னும் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

எது எப்படியானாலும் இப்போது ஜனங்கள் செய்யவேண்டிய வேலை என்ன என்பது இது வரையில்செப்பனிடமுடியவில்லையென்பதும், காந்தீயம் கடைசி மூச்சில் இருக்கின்றது என்பதும் அது அடியோடு புதைக் கப்பட்டு பல தேசீயவாதிகள் என்பவர்களாலேயே "உத்திரக்கிரிகைகள்" நடந்துவருகின்றது என்பதும் தெளிவாய் விளங்குகின்றது.

ஆனால் தீவிர உணர்ச்சி உள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் வாலிபர்களுக்கு இவைகளை ஒப்புக் கொள்ள வெட்கமாயிருப்பதும் துணிந்து வந்து காந்தீயத்திற்கு எதிரான காரியங்களைச் செய்ய தைரிய மில்லாமல் இருப்பதும் பார்க்க நமக்குப் பரிதாபமாகத்தான் இருக்கின்றது. என்றாலும் இதைத்தவிர வேறு மார்க்கமில்லையென்றும் இன்னும் எத்தனை நாளைக்கு இம்மாதிரி வெட்கப்பட்டும் தைரியமற்றும் கிடந்தாலும், தங்களை வீரர்கள் என்று காட்டிக்கொள்ள இனியும் எத்தனை தரம்தான் ஜெயிலுக்குப் போனாலும் முடிவில் சு.ம. கொள்கைகளைத்தான் ஒப்புக்கொண்டு அதன் படிக்குத்தான் நடந்து ஆகவேண்டுமென்றும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 17.09.1933**



RangaRakes
tamilnavarasam.com

## பாராட்டுகிறோம்

### "குச்சுக்காரி"கள் தொல்லை ஒழிப்பு

ஈரோட்டில் குச்சுக்காரிகள் தொல்லை என்பதாகவும், விபசாரிகள் தொல்லை என்றும் தலையங்கங்கள் கொண்ட இரண்டு வியாசங்கள் "குடி அரசி"ல் உபதலையங்கங்களாக எழுதி அதைக் குறித்து போலீசாரும், முனிசிபாலிட்டியாரும் முயற்சியெடுத்து "விபசார ஒழிப்பு" சட்டத்தை ஈரோட்டிற்கு அமுலில் வரும்படி செய்யவேண்டுமென்று வேண்டிக் கொண்ட விஷயம் நேயர்களுக்குத் தெரியுமென்றே நினைக்கிறோம்.

அந்தப்படியே ஈரோடு முனிசிபல் கௌன்சிலில் கௌன்சிலர் தோழர் கேசவலால் அவர்களால் ஒருதீர்மானம் கொண்டுவரப்பட்டு தோழர் ஈ.எஸ்.கோவிந்தசாமி நாயுடு அவர்களால் ஆமோதிக்கப்பட்டு மற்ற எல்லா கௌன்சிலர்களாலும் ஏகமனதாய் ஆமோதிக்கப்பட்டு சேர்மென் அவர்களுடைய பலமான குறிப்பின்மேல் கவர்ன்மெண்டுக்கு அனுப்பப்பட்டதில் கவர்ன்மெண்டார் அதை ஏற்று ஈரோட்டிலும், கோயமுத்தூரிலும் இந்தச் சட்டம் அமுலுக்குவரும்படி ஏற்பாடு செய்யப்பட்டு அடுத்த மாதம் அக்டோபர் ஒன்றாம் தேதி முதல் அமுலுக்குவர விளம்பரம் செய்யப் பட்டாய்விட்ட விபரம் நமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுவிஷயமாய் ஈரோடு முனிசிபல் கௌன்சிலர்களையும், பிரத்தியேகமாய் தோழர் கேசவலாலையும், சேர்மென் அவர்களையும் பாராட்டுவதுடன் அவர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அன்றியும் போலீஸ் அதிகாரிகள் இதற்கு அனுகூலமாய் இருந்து வந்ததற்காக அவர்களையும், கவர்ன்மெண்டாரையும் பாராட்டுகிறோம்.

இந்தச் சமயத்தில் ஒருவிஷயத்தை மறுபடியும் ஈரோடு முனிசிபல் கௌன்சிலர்களுக்கும், சேர்மென் அவர்களுக்கும் தெரிவித்து கொள்ளுகிறோம். அதாவது ஈரோட்டுக்கு ஒரு பெண்டாக்டர் அவசியமாய் இருப்பதையும், ஏனெனில் சர்க்கார் சம்பளப் பெண்டாக்டரை எடுத்துவிட்டு கௌரவ டாக்டரை நியமித்து இருப்பதால் அது போதாததால் தனியே பொது ஜன சேவகராக ஒருடாக்டர் வேண்டியிருப்பதால் தயவுசெய்து ஒரு பெண் டாக்டரை முனிசிபாலிட்டியார் தங்களுக்குச் சௌகரியப்பட்ட சீக்கிரத்தில் நியமிக்க வேண்டும் என்று முன் தெரிவித்துக்கொண்டதை இப்போது ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

அதோடு ஈரோடு காரைவாய்க்கால் ஓடையில் தேங்கிநிற்கும் ஜல தாரைக் கசுமாலத் தண்ணீரால் கொசுக்கள் உற்பத்தியாகி அதிகம்பேருக்கு மலேரியா காய்ச்சல் எற்படுவதால் அந்தத் தேக்கத்தை ஒழிக்க ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 17.09.1933**



RangaRakes
tamilnavarasam.com

# சமதர்ம வெற்றி

நாம், சமதர்ம இயக்கத்திட்டம் அடி கோலி, சட்டசபைகளையும், ஸ்தல ஸ்தாபனங்களையும் கைப்பற்ற வேண்டும் என்றுதீர்மானித்தபொழுது நம் எதிரிகள் தம் பத்திரிகைகளில் "இந்த நாஸ்திக சு.ம.காரர்களின் இத் திட்டத்தின் படி நமது நாட்டில் ஒரு சிறு ஸ்தானத்தையும், எந்த ஸ்தல ஸ்தாபனத்திலும் அடையமுடியாது என்பதையும் அப்படியடைய முயற்சிக் கும்படி நாம் பகிரங்கமாய் அறை கூவி அழைக்கின்றோம்" என்று எழுதின.

ஆனால் அதன் பின், நமது தோழர்களால் பல ஜில்லா போர்டு, தாலுக்காப்போர்டு, முனிசிபால்டி முதலியவைகளில் பல ஸ்தானங்கள் கைப்பற்றப்பட்டதுடன் சென்ற மாதம் நமது இயக்கப் பிரமுகர் தோழர் பி.சிதம்பரம் திருவிதாங்கூர் ஸ்ரீமூலம் அஸம்பிளிக்கு போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இப்பொழுது நமது இயக்கப்பிரமுகர்களில் ஒருவரும்புதுக்கோட்டை பெரும் கலகத்திற்கே காரண பூதரென்று சிலகாலம் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டவரும் இளைஞரேறுமான தோழர் அட்வகேட் கே. முத்துசாமி வல்லதரசு பி.எ.பி.எல். மறுமுறையும் புதுக்கோட்டை சட்டசபைக்குஅபேட்ச கராக நின்று அதிகப்படியான ஓட்டுகளால் நமது மாற்றலர் தலைகவிழ வெற்றி பெற்றது கண்டு நாம் அடங்கா மகிழ்சியடைவதோடு நாட்டில் சமதர்ம இயக்கத்திற்கிருந்து வரும் செல்வாக்கைகண்டு நமது கொள்கையில் நாம் மேலும் மேலும் அதிக உருதியுடையவராகின்றோம்.

தோழர் வல்லத்தரசு வெற்றி பொதுவாய் நமது நாட்டு ஏழைத் தொழி லாளர்களுக்கும், சிறப்பாய் புதுக்கோட்டை சமஸ்தான ஏழைத்தொழிலாள மக்களுக்கும் விசேஷ பயனளித்து புதுக்கோட்டை சமஸ்தானம் சமதர்ம ஆட்சியாய் விளங்கும் என்று பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 17.09.1933**



# பட்டேல் ஞானோதயம்

தோழர் பட்டேல் அவர்கள் ஒரு பெரிய தியாகி என்றும், தேசபக்தர் என்றும், தேசீயவாதி என்றும் பலர் கருதிக்கொண்டிருப்பது நமக்குத் தெரியும். ஆனால் அவரைப்பற்றிய நமது அபிப்பிராயமெல்லாம் நமது தென்னாட்டில் தியாகி என்றும், தேச பக்தர் என்றும் தேசியவாதி என்றும், பெயர் வாங்கி இருக்கும் தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரியார் அவர்களைப் போல், படேல் அவர்கள் ஒரு ஆல் இந்தியா சத்தியமூர்த்தி என்பதேயாகும்.

இந்த கருத்து நாம் அவரை முதல் முதல் எப்போது சந்தித்தோமோ அப்போதே கொண்டதாகும். என்றாலும் தோழர் காந்தியவர்கள் தோழர் படேலின் வசவுக்கும், எதிர்ப்புக்கும், மார்பைக்காட்ட தைரியமில்லாமல் அவரை கைவசப்படுத்தக் கருதி ஒருகாலத்தில் "பட்டேலின் தொடையின் மீது நான் தலைவைத்துப் படுத்துக்கொண்டிருக்கும் போது எனது உயிர் போகுமானால் அதை ஒரு பாக்கியமாகக் கருதுவேன்" என்று சொல்லி தோழர் பட்டேலை தட்டிக்கொடுத்து தப்பி வந்தார். இதன் பயனாக தோழர் பட்டேல் அவர்களும் தீவிர ஒத்துழையாமை காலத்தில் இந்திய சட்டசபைத் தலைவர் பதவிபெற்று "பெரிய தியாகி" யாகி ஏராளமாய் பணம் சம்பாதித்து, உலக விளம்பரம் முதலிய பலன்களைப் பெற்றார். அவர் பார்ப்பனர்களுக்கு தாசராய் இருந்த காரணத்தால், வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவத்தை எதிர்த்த தால் பார்ப்பனப் பத்திரிகைகள் அவரை தோழர் சத்தியமூர்த்தியை விட பெரிய தேசபக்தராகவும், தியாகியாகவும் ஆக்கிவிட்டன.

மதத்தில் எப்படி பார்ப்பனர்களும், பார்ப்பனர் எழுதிவைத்த புஸ்தகங்களுமே பார்ப்பனரல்லாதார்களுக்கு குருவாகவும், வேதமாகவும் இருந்து வந்ததோ அது போல் அரசியலிலும் பார்ப்பனர்களே குருவாகவும், பார்ப்பனப் பத்திரிகைகளே வேதமாகவும் இருந்ததால் பார்ப்பனரல்லாத வாலிபர்கள் அப்படியே நம்பிவிட்டார்கள்.

அது எப்படியோ இருக்கட்டும் இப்போது சீர்திருத்தம் ஏற்பட்டு அது அமுலுக்கு அடுத்த வருஷக்கடைசியில் வரக்கூடும் என்று தெரிந்தவுடன், பழயவாடை அடிக்க ஆரம்பித்துபுதிய ஞானம் பெற்று இந்திய மக்களுக்கு புதிய ஞானோபதேசம் செய்ய வந்து இருக்கிறார்.



RangaRakes tamilnavarasam.com

"அதாவது இங்கிலாந்து இருதயமற்றதென்பதே எனது அபிப்பிராயம். இந்தியாவினால் இங்கிலாந்து மகோன்னத நிலையடைந்து விட்டது. இங்கிலாந்து இந்தியாவை உதறித்தள்ளி விட முடியாது. இங்கிலாந் துக்கு பலவந்த நிர்ப்பந்தம் ஏற்பட்டா லொழிய இந்தியாவைவிட்டு விடாது.

காந்தியாரின் உபதேசங்களெல்லாம் தவறு, என்று உணர்கிறேன். சமாதானம் செய்துகொள்வதற்கெல்லாம் போதிய காலங்கள் காந்தியாருக்கு அளிக்கப்பட்டு விட்டது. காந்தியாருக்குள்ள அவ்வளவு அதிக அதிகாரங்கள் வேறு எந்த தலைவருக்கும் இந்தியாவில் இல்லை. ஆனால் அவரால் ஏற்பட்ட முடிவான பலன்களெல்லாம் வெறும் பூஜ்யமேயாகும், காந்தீயத்தினால் நாங்களெல்லாம் வெற்றியே ஏற்படாதென்கிற துணிந்த முடிவுக்கு வந்து விட்டோம். நாங்கள் ஒரு புதிய வேலைத்திட்ட முறையை ஒரு புதிய தலைவரின் கீழ் நடத்த விரும்புகிறோம்."

என்கின்ற குறிப்புகளைக்காட்டி ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறார் என்றாலும், இந்த செய்தி எதுவரையில் இருக்கும் என்பதுயாவரும் சந்தேகப்படக்கூடியது தான். ஏனெனில் தோழர் காந்தியாருக்கு ஏதாவது ஒரு விதத்தில் மறுபடியும் செல்வாக்கு வந்துவிடுமானால் "காந்தியின்றிக் கதி மோட்சமில்லை" என்கின்ற பல்லவியைப்பாட ஆரம்பித்துவிடுவார் என்பதில் யாவரும் சந்தேகப்படவேண்டியதில்லை.

**குடி அரசு - கட்டுரை - 24.09.1933**



# கேரளத்தில் சுயமரியாதை இயக்கம்

கேரளம் என்பது மலையாள நாட்டைக் குறிப்பிடுவதாகும். மலையாள நாடு என்பது திருவாங்கூர் ராஜ்யத்தையும், கொச்சி ராஜ்யத்தை பிரிட்டிஷில் மலையாள ஜில்லாவையும் சேர்த்து குறிப்பிடுவதாகும். இவற்றுள் நமது சுயமரியாதை இயக்கமானது எவ்வளவு தூரம் பரவியிருக்கின்றது என்பதை விளக்கவே இதை எழுதுகின்றோம்.

கொச்சி, திருவாங்கூர் ஆகிய இரு ராஜ்யங்களும் "சுதேச சமஸ்தானங்கள்" ஆகும். இந்த இருநாடும் சுதேச ராஜாக்கள் என்பவர்களால் இந்து மத சம்பிரதாயங்களைப் பிரதானமாய் கருதி ஆட்சிபுரியப் படுவதாகும். ஹிந்து மதத்தை அதன் உண்மைத் தத்துவமான வருணாச்சிரம தரும முறைப்படி ஜாதி வித்தியாசங்களைக் கடுமையாய் அனுஷ்டித்து வந்ததின் பயனாகவே மேல் ஜாதிக் கொடுமைகள் தாங்காமல் அந்த இரு நாடுகளிலும் மொத்த ஜனத்தொகையில் கிட்டத்தட்ட சரிபகுதி ஜனங்கள் இந்து மதத்தை விட்டு இந்துக்கள் அல்லாதவர்களாய் விட்டார்கள். அதாவது, அவர்கள் கிறிஸ்த்தவர்களும், இஸ்லாமானவர்களும், யூதர்களும், புத்தர்களுமாய் இருந்து வருகிறார்கள். பாக்கியுள்ள பகுதியில் அரையே அரைக்கால் வாசிப்போர்கள் இன்றும் தாழ்ந்த ஜாதி மக்களாய் கருதப்பட்டு தீண்டப்படக் கூடாதவர்களாய்க் கருதப்பட்டு வருகின்றார்கள். இதன் பயனாய் இந்த தீண்டப்படக்கூடாத மக்கள் என்பவர்களில் இப்போது சுயமரியாதை உணர்ச்சி பெற்று சகல வித கட்டுப்பாடுகளையும் உடைத்தெரியத் துணிந்து முன்னணியில் நிற்பவர்கள் ஈழவ சமூகத்தார் என்று சொல்லப்படும் வகுப்பார்களேயாவார்கள். இவர்களின் எண்ணிக்கை அந்த இரண்டு சமஸ்தானங்களிலும் மொத்தம் சுமார் 15 லக்ஷம் ஆகும். பிரிட்டிஷின் தீயர் சமூகம் என்னும் ஈழவர்களையும் சேர்த்தால் 25 லட்சம் ஆகும். இந்த 25 லட்சம் ஈழவத் தோழர்களும் வைக்கம் சத்தியாக்கிரகம் ஆரம்பித்த காலம் தொட்டு தங்களைக் கட்டுப்படுத்தியுள்ள ஒவ்வொரு கட்டுப்பாடுகளையும் உடைத் தெரியக் கருதி பல முயற்சிகள் செய்து அவற்றில் பெரிதும் வெற்றி பெற்று, இப்போது அவர்கள் அத்தனை பேரும் அதாவது 25 லட்சம் பேரும் ஒருமித்து ஒரே அபிப்பிராயமாக தங்களுக்கு இனி "மதமே வேண்டியதில்லை" என்கின்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்றால், மற்றபடி அந்த ராஜ்ய



RangaRakes
tamilnavarasam.com

தாழ்த்தப்பட்ட மக்களின் சுயமரியாதை உணர்ச்சிக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும் என்பது நமக்குப் புரியவில்லை. எப்படியெனில் கேரள நாட்டு ஈழவ சமூகங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவானதான சமுதாய ஸ்தாபனம் ஒன்று உண்டு. அதன் பெயர் "ஸ்ரீ நாராயணகுரு தர்ம பரிபாலன யோகம்" என்று சொல்லப்படும். இது அவர்களது சீர்திருத்தத் தலைவரான ஸ்ரீநாராயண குரு சுவாமி பேரால் ஏற்பட்டதாகும். இவர்களது ஒவ்வொரு வருடாந்திர மகாநாட்டிலும் மதத்தைப் பற்றி வாக்குவாதங்கள் நடந்து வந்து, இந்த வருஷத் தில் கூட்டப்பட்ட வருடாந்தர (S.N.D.P.) மகாநாட்டில் இந்தப்படிக்கு அதாவது, ஈழவ சமூக மக்கள் மதத்தில் நம்பிக்கை அற்றவர்கள் என்றும், அவர்களுக்கு மதம் தேவையில்லை என்றும், எந்த ஈழவரும் இனி தங்களை இந்து என்றோ, அல்லது வேறு எந்த மதஸ்தர் என்றோ, சொல்லிக் கொள்ளக் கூடாதென்றும் தீர்மானித்துக் கொண்டார்கள்.

இந்த மகாநாட்டுக்கு சென்னை சட்டசபை மெம்பரும், பி.எ.பி.எல் – லும், பெரிய பாங்கீக்காரரும், "மிதவாதி" என்னும் பத்திரிகையின் ஆசிரியருமாகிய கள்ளிக்கோட்டை தோழர் சி.கிருஷ்ணன் (பி.ஏ. பி.எல், எம்.எல்.சி.) அவர்கள் தலைமை வகித்து இருக்கிறார். இவரது தலைமையில் பல ஆயிரக் கணக்கான பிரதிநிதிகள் கூடி பெருத்த கரகோஷத்துக்கு இடையில் அளவுக்கு மீறிய உற்சாகத்துடனும், ஆர்வத்துடனுமே இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இந்தத்தீர்மானமானது முதலில் கேரள யுவர் சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டு அந்த யுவர்களால் கிராமம் கிராமமாய்ப் பிரசாரம் செய்யப் பட்டு பிறகு இந்த சமூக மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

சுமார் 4, 5 வருஷங்களுக்கு முன் இதே S.N.D.P. மகாநாடானது முதுகுளம் என்னும் ஊரில் நடந்த பொழுது அங்கு ஈழவர்கள் எல்லோரும் இந்து மதத்தை விட்டு வேறு மதத்திற்குப் போய்விடுவது என்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டு பெருத்த கலவரம் நடந்து அந்த மகாநாட்டில் ஆரிய சமாஜக்காரர்கள் தங்கள் மதத்துக்கு வரும்படி அழைத்தும், கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்துக்கு வரும்படி அழைத்தும், புத்தர்கள் தங்கள் மதத்துக்கு வரும்படி அழைத்தும் கடைசியாக ஒரு முடிவும் ஏற்படாமல் மதத்தை வெறுப்பதாக மாத்திரம் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் குடி அரசில் படித்திருக்கலாம். அது புகைந்து கொண்டே இருந்து இப்போது தைரியமாக மதமே வேண்டியதில்லை என்கின்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணம் கேரள ஈழவ சமுதாயத்திலகம்போல் விளங்கும் தோழர் கே. அய்யப்பன் பி.ஏ. எம்.எல்.சி. அவர்களுடைய சுயமரியாதை பிரசார முயற்சியும், அவரது பத்திரிகையாகிய "சகோதரன்" பத்திரிகையின் பிரசாரமும், கள்ளிக்கோட்டை தோழர் சி.கிருஷ்ணன் பி.ஏ., பி.எல். எம்.எல்,சி., அவர்கள் பிரசாரமும், அவரது மிதவாதி பத்திரிகையுமாகும். தோழர் கே.அய்யப்பன் அவர்களால் மற்றும் ஒரு பத்திரிகை நடத்தப்படுகின்றது. அதாவது நமது ரிவோல்ட் பத்திரிகையைப் போல் ஒரு



மாதப் பத்திரிகையானது மதமறுப்பையும், கடவுள் மறுப்பையும், பிரதானமாய்க் கொண்டு "யுக்திவாதி" என்னும் பேரால் நடத்தப்படுகின்றது. இந்த யுக்திவாதிப் பத்திரிகைக்கு தோழர் ராமவர்மதம்பான் முதலிய சில படித்த மேதாவியான இந்துக்கள் என்பவர்களும், தோழர்கள் ஜோசப் பி.ஏ., பி.எல்., டாக்டர் அந்தோணி எம்.பி., பி.எஸ்., முதலிய கிறிஸ்துவர்களும், தோழர் எம்.கே.இப்ராஹிம் பி.ஏ., எம்.எல்சி., முதலிய முகமதியர்களும் உப பத்திராதிபர்களாகவும், விஷயதானம் செய்பவர்களாகவும் இருந்து வருகிறார்கள். தோழர் அய்யப்பன் அவர்களுக்கு மத உணர்ச்சியைப் பற்றியும், கடவுள் உணர்ச்சியைப் பற்றியும் உள்ள வெறுப்பானது சுமார் 10, 15 வருஷகாலமாகவே இருந்து வருவதைக் கேரள மக்கள் நன்றாய் உணர்வார்கள். ஈழவ சமுதாயத்தில் இன்று உள்ள கடவுள், மத வெறுப்புணர்ச்சிக்கு வித்து ஊன்றியவர் நமது தோழர் அய்யப்பன் அவர்களே ஆகும் என்பதாகத் தாராளமாய்ச் சொல்லலாம். இன்று கேரளத்தில் கிறிஸ்துவ சமுதாயம் என்பதிலும் பல ஆயிரக்கணக்கான பேர்களை கடவுள் பற்றில்லாதவர்களாகவும் மதப் பற்றில்லாதவர்களாகவும் காணலாம். அங்கு பாதிரிமார்கள் ஏழைக் கிறிஸ்தவர்களைத்தான் மத மறுப்புக்காகத் தண்டிக்கிறார்கள்.

சற்று செல்வமும், செல்வாக்கும் உள்ளவர்களாய் இருந்தால் கெஞ்சவும், பெண்கள் மூலமாகச் செல்வாக்குப் பிடித்துக் கேட்டுக் கொள்ளவுந்தான் செய்கிறார்கள்.

உதாரணமாக யுக்திவாதிப் பத்திரிகைக்கு ஒரு லோயர்கிரேட் உபாத்தியாயர் ஒரு வியாசம் எழுதியதற்காக அவரை டிஸ்மிஸ் செய்து மதப் பிரஷ்டம் செய்து விட்டார்கள். அதைவிட வேகமான மற்றொரு வியாசத்தை ஒரு பணக்காரக் கிறிஸ்தவர் எழுதியதற்கு அந்த ஊர் சாமியார் அந்தப் பணக்காரர் வீட்டுக்குச் சென்று "இனிமேல் நீங்கள் யுக்திவாதிக்கு வியாசம் எழுதுவதாய் இருந்தால் தயவுசெய்து உங்கள் பெயரைப் போடாதீர்கள்" என்று மாத்திரம் கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டுக் கொண்டு வந்தாராம்.

இதுபோலவே முகம்மதியர்களிலும் தோழர் M.K.இப்ராஹிம் B.A., M.L.C., அவர்களைப் பின்பற்றும் முஸ்லீம்வாலிபர்கள் பலரைக் காணலாம்.

அதுபோலவே எல்லா சமய சமூகப் பெண்மக்களையும் நமது கொள்கையில் தீவிரமாய் ஈடுபடச் செய்தது தோழர் அய்யப்பன் அவர்களின் துணைவி தோழர் பார்வதி பி.ஏ, எல்.டி., அவர்களாவர். இந்த மாதிரியாகக் கேரள நாட்டில் சுயமரியாதை இயக்கம் எல்லா மத மக்களிடத்திலும், எல்லாச் சமூகத்தாரிடத்திலும் கூத்தாடுகின்றதை யாரும் பார்க்கலாம். இதில் மற்றொரு விஷயம் என்னவென்றால் அந்நாட்டு வாலிப மக்களுக்கிடையில் பொது உடமைக் கொள்கையானது வீறுகொண்டு நிற்கிறது என்பதேயாகும். இந்தப் பொது உடமைக் கிளர்ச்சிக்கு, கேரளத்தில் பல வாலிப வக்கீல்களும், 2, 3 தடவை சிறைசென்று வந்த பல நாயர் வாலிபர்



RangaRakes tamilnavarasam.com

களும் தங்கள் முழு ஆதரவையும் கொடுத்து வருவதைப் பார்க்கின்றோம். ஆகவே கேரளத்தில் உள்ள 25 - லக்ஷம் ஈழுவத் தோழர்களும் மத உணர்ச்சியை விட்டும் கடவுள் உணர்ச்சியை விட்டும் பொது உடமைக் கொள்கையை கைக்கொண்டும் எவ்வித தியாகத்துக்கும் தயாராய் இருக்கிறார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இதன் பயனாக இன்று கேரள ஈழவர்கள் நிலை இந்தப் பத்து வருஷங்களுக்குமுன் இருந்ததை இப்போது ஒரு பெரிய புரட்சியில்லை என்று சொல்லும்படியான மாதிரியிலேயே தலை கீழாக மாறி இருக்கின்றது.

இதன் காரணம் என்ன என்று பார்ப்போமேயானால் இந்த சமூகமானது மேல் ஜாதியார் என்கின்ற பார்ப்பனர்களாலும், அவர்களுடைய விந்துக்குப் பிள்ளையாய்ப் பிறப்பதே மேன்மை என்று கருதிக் கொண்டிருந்த நாயர் சமூகத்தாலும் அடக்கி, ஒடுக்கி வைத்திருந்த கொடுமையே, இன்று அந்த ஈழவ சகோதரர்களைக் கண்விழிக்கச் செய்து தயவு தாட்சண்ணிய மன்றியும், நமக்கு தடையின்றியும் முன்னேறுவதற்கு தூண்டுகிறது. இந்த ஈழவ தோழர்கள் தோழர் காந்தியின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் சீறி விழுவார்கள். காதுகளை பொத்திக் கொள்ளுவார்கள். ஈழவர் அகராதியில் காந்தியென்றால் பார்ப்பனர்களின் ஒற்றர், பணக்காரர்களின் லைசென்சு பெற்ற சேவகர் என்றே குறித்து வைத்திருக்கிறார்கள்.

ஆனால் இந்திய வாலிபர்களில் அநேகர் உள்ளங்களில் இந்தப் படியான ஒரு உணர்ச்சி ஏன் இல்லை என்று கேட்கலாம்.

இந்தியாவில் காங்கிரஸ் என்னும் ஒரு இயக்கம் பணக்காரர்களுக்காகவும், பார்ப்பனர்களுக்காகவும் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் நடைபெறுவதால் அவ்வியக்கம் அனேக வாலிபர்களின் உள்ளக்கிளர்ச்சியையும், ஊக்கத்தையும் தியாகத்தையும் வீரத்தையும் விலைக்கு வாங்கிக் கொள்ளு கின்றது.

ஆதலால் தான் இந்தியாவில் கேரளத்தைப் போல காணமுடியவில்லை. கேரளத்தில் பணத்தினாலோ, பணம் வைத்தோ இயக்கம் நடத்துகின்றவர்களுமில்லை.

ஈழவ சமுதாய பெண்மக்களின் நிலைமையை நாம் குறிப்பிட்டோமேயானால் அதை ஒரு தமிழ்நாட்டு தோழர் நம்புவதே கஷ்டமாய் இருக்கலாம். எல்லாத்துறையிலும் பெண்கள் ஆண்களுக்குச் சமமானவர்களாயிருக்கிறார்கள். ஒவ்வொரு பெண்கள் ஒரு மணி நேரம், இரண்டு மணிநேரம் பேசும்போதும் அவர்கள் மதத்தை மறுப்பதும், அவர்களது வார்த்தைகளில் கடவுள், கடவுள் செயல் என்பது போன்ற வார்த்தைகளை கண்டனம் செய்வதும் தவிர வேறு எவைகளையும் காணவே முடியாததுமாகும்.



கேரளநாட்டுப் பெண்மணிகள் அதிதீவிரமாக சுயமரியாதைக் கொள்கைகளை மேற்கொண்டு தொண்டாற்றி வருவதற்கு காரணமாயிருப்பவர் தோழர் அய்யப்பன் பி.எ., எம்.எல்.சி (கொச்சி) அவர்களின் அருமைத் துணைவியார் தோழர் பார்வதி பி.எ.எல்.டி. அவர்களாகும் என்று கூறினோம். அவர்களால் பெண்கள் விடுதலைக்கென்று மலையாளத்தில் “ஸ்ரீ” என்று ஓர் பத்திரிகையும் வெளியிடப்பட்டு வருகிறது.

இப்படிப்பட்ட ஈழவ சமூகம் திருவிதாங்கூர் ராஜ்ய அரசியலில் ஒத்துழையாமையை அனுஷ்டிக்கக் கூடிய தைரியத்துடனும் பலத்துடனும் இன்றைய தினம் இருக்கிறார்கள்.

அதாவது திருவாங்கூர் சமஸ்தான பிரஜைகளில் மூன்றில் ஒரு பங்குக்கு மேற்பட்ட தங்கள் சமூகத்திற்கு அரசியலில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவமும், தேர்தல்களில் தனித்தொகுதி முறையும் கொடுக்க வேண்டும் என்றும் ஜனத்தொகைக்குத் தகுந்த விகிதாச்சாரம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டு, அந்த பார்ப்பனீய அரசாங்கமாகிய திருவாங்கூர் அரசாங்கத்தால் கவனிக்கப்படாததால் இவ்வருஷம் நடந்த சட்டசபை தேர்தலில் ஒத்துழையாமையை அனுஷ்டித்து விலகி நின்றிருக்கிறார்கள். ஏதோ இரண்டு மூன்று பெயர்கள் மாத்திரம் தங்களது சுயநலத்தைக் கருதி அரசாங்க தயவுக்கு கருதி கட்டுப்பட்டுப் போய் தீரவேண்டியதாய் விட்டது என்றாலும், சமுதாயத் தலைவர்களும் சுலபமாய் போகக் கூடியவர்களுமான அனேகர் அந்தப்பக்கம் திரும்பிப் பார்க்கவே இல்லை.

ஒரு தாழ்த்தப்பட்ட சமூகம் என்பது அரசாங்கத்தோடு ஒத்துழையாமை செய்து சட்டசபையை வெறுப்பதென்றால் அச்சமூகத்துக்கு எவ்வளவு தூரம் முற்போக்குணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை உணரலாம்.

ஆகவே இன்று கேரளமானது தனது ஜனத்தொகையில் கிட்டத்திட்ட பகுதியை மத உணர்ச்சியையும், கடவுள் உணர்ச்சியையும் வெறுக்கும்படியும், பொதுவுடமைக் கொள்கையையே தங்கள் கொள்கையாய் கொள்ளும் படியும் சர்க்காரோடு ஒத்துழையாமையும் செய்யும்படியான நிலைமைக்கும் வைத்துக் கொண்டிருக்கின்றது என்பதைக் கேட்க நமது சுயமரியாதைத் தோழர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்றே கருதுகிறேன்.

**குடி அரசு - தலையங்கம் - 24.09.1933**



RangaRakes tamilnavarasam.com

# ஜவஹர்லால் - காந்தி

தோழர் ஜவஹர்லால் அவர்கள் காந்தியாருக்கு எழுதியகடிதத்தின் ஆரம்பத்தில், ராஜீய கோரிக்கை என்ன என்பதில் வாசகம் தெளிவாயில்லை என்றும், மக்களை தப்பான வழியில் நடக்கும்படியான பிரசாரம் நடந்து வருகிறதென்றும் ஆதலால் அதை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் சொல்லிவிட்டு ராஜீய கோரிக்கைகளை தெளிவுபடுத்தும் முறையில் பூரண சுயேட்சை என்று காங்கிரஸ் தீர்மானித்திருப்பதற்கு பொருள், ராணுவம் அன்னியநாட்டு சம்மந்தம் பணம் ஆகியவைகளில் பூரண ஆதிக்கம் இருக்க வேண்டுமென்பதே என்றும் விளக்கி இருக்கிறார். அதன்பிறகு தன்னைப் பொருத்தவரையில் இப்பொழுது அவர் இன்னும் அதிகமாகப் போகவேண்டி இருப்பதாகவும், அந்த நிலைமையையும் தெளிவுபடுத்துவ தாகவும் சொல்லி, மேல்கண்ட அதிகம் என்பதின் கருத்தை விளக்குகையில் பாமரமக்களுடைய வாழ்க்கை நிலைமையை உயர்த்தவும், அவர்களுக்கு பொருளாதார சௌகரியம் ஏற்படுத்தவும், அவர்கள் சுதந்திரத்தோடு வாழ வும், வேண்டுமானால் இந்தியாவில் அதிகமான உரிமைகளையும், சலுகை களையும், அனுபவித்து வரும் கூட்டத்தார்கள் அவற்றை விட்டுக்கொடுத்தா லொழிய வேறு எவ்வழியிலும் முடியாது என்றும் விசேஷ தனி உரிமையை யும், சலுகை யையும், பாமர ஜனங்களுக்கு அனுகூலமாக திருப்பவேண்டும் என்றும், அப்பொழுதுதான் சுதந்திரம் என்பது ஏற்பட்டதாகச் சொல்ல முடியும் என்றும், சொல்லிவிட்டு. தனிப்பட்ட விசேஷ உரிமையும், சலுகை யும் அனுபவித்து வருபவர்களில் முறையே பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும், இந்திய சமஸ்தானாதி பதிகளும், இன்னும் பலருமாவார்கள், என்றும்,

இவர்கள் எல்லோருடைய தனி உரிமைகளையும், சலுகைகளையும், ஒழிக்கும் விஷயத்தில் யாரையும் புண்படுத்த விரும்பவில்லை என்றும்,

ஆனாலும் பொது ஜனங்களின்-பாமர மக்களின் உழைப்பினால் ஒரு சிலர் பெருமையுடன் வாழும் முறையை ஒழித்துத் தான் ஆகவேண்டும் என்றும், இதனால் சிலருக்கு அல்லது ஒரு வகுப்பாருக்கு நஷ்டம் உண்டாய்த்தான் தீரும் என்றும்,

ஆனால் பாமர மக்கள் நிலை எவ்வளவு கேவலமாய் இருக்கிறது என்பது யாவரும் அறிந்ததே. ஆதலால் அவைகள் அவசியமாக ஒழிக்கப்படவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.



இதற்கு பதில்விடுத்த தோழர் காந்தியாரின் கடிதத்தில் கராச்சி காங்கிர சுக்கு பிறகு ஏற்பட்ட நிகழ்ச்சியின் அனுபவத்தினால் தனக்கு பூரண சுயேட்சை தீர்மானத்திலும், தோழர் ஜவஹர்லால் சொல்லும் பொருளாதாரத் திட்டத்திலும், நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது என்றும், பூரண சுயேட்சையே முடிவான லட்சியம் என்றும் முடிவாகி திட்டமாகி விட்டது என்றும், பொருளாதார விஷயத்தில் தோழர் ஜவஹர்லால் அபிப்பிராயத்தில் தானும் கலந்து கொள்ளுவதாகவும், ஆனாலும் தான் அவ்வளவு தீவிர எண்ண மில்லாதவராய் இருப்பதாகவும், மற்றும் இருந்தபோதிலும் இந்தியா ஒன்றுபடும்வரை சமஸ்தானாதிபதிகள் தங்கள் அதிகாரத்தில் பெரும் பாகத்தை விட்டுக் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லி இருக்கிறார்.

இவற்றுள் தோழர் ஜவஹர்லால் அவர்கள் கூறியிருக்கும் கோரிக்கை கள் மிதவாத பாஷையில் இருந்தாலும் பயமும், தாட்சண்யமும் அதற்குள் வழிந்திருந்தாலும், அவரது கருத்தையும், உணர்ச்சியையும் நாம் ஒப்புக் கொள்ளுகின்றோம். ஆனால் இந்த அளவுக்கு இப்பொழுதுதான் போவ தாகச் சொல்லுகிறார். இப்பொழுதாவது இவ்வளவு தூரம் வந்திருப்பதற்கு நாம் மகிழ்ச்சி அடையவேண்டியதேயாகும்.

தோழர் காந்தியவர்களோ தந்திரமான வார்த்தைகளால் இவற்றை வெகு சுலபமாக கவிழ்க்கப் பார்க்கிறார். காந்தியவர்களின் வார்த்தைகள் அவர் எல்லா வகுப்பாருக்கும் எப்பொழுதும் தானே தலைவராய் இருக்க வேண்டுமென்கின்ற ஆசையையும், எல்லோரும் எப்பொழுதும் தன்னை போற்றவேண்டுமென்கின்ற ஆசையையுமே வளியவளிய நிரப்பிக் கொண் டிருக்கிறது. எல்லோராலும் போற்றப்பட வேண்டும் என்று கருதிய எவரா லும் உலகுக்கு யாதொரு பயனும் ஒரு நாளும் ஏற்பட்டதில்லை. பொதுப் படையான வார்த்தைகளாலும், இரண்டருத்தம் கொடுக்கும் வார்த்தை களாலும் மக்களை ஏமாற்றிப் பெருமை சம்பாதிக்க வேண்டும், சுயநலம டைய வேண்டும் என்பதே தலைவர்கள் என்பவர்களுடைய குண மாகவும், மகான்கள் என்பவர்களுடைய குணமாகவும் இருந்து வருகின்றது. இப்படி இருந்து வருவதற்கு காரணம் மக்களின் மடத்தனமும், கூலிகளின் தொண்டு மேயாகும்.

இனிவரும் சகாப்தத்திலாவது இந்தக்குணம் ஒழிந்துபோக வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். ஆதலால் இதற்கு மருந்து இனி அரைவினாடி நேரமாவது இந்திய மக்களின் அரசியல் தத்துவத்திலேனும் பொருளாதார தத்துவத்திலேனும், மதசம்பந்தமென்னும் சமுதாய வாழ்க்கை முறைத் தத்து வத்திலேனும், காந்தியாருக்கு யாதொரு வேலையும் இல்லாமல் செய்து விடுவதேயாகும்.



RangaRakes tamilnavarasam.com

தோழர் ஜவஹர்லால் அவர்கள் காந்தியாருக்கு எழுதிய கடிதத்தின் முதல்வாக்கியத்தில், அதாவது வழவழத்த வார்த்தைப் பிரயோகமும் மக்களை தவறான வழியில் நடத்திச் செல்லத்தக்க பிரச்சாரமும் நடந்ததால் குழருபடி ஏற்பட்டுவிட்டது என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியிருப்பது, முழுவதும் தோழர் காந்தியாரைக் குறிப்பதும் அவருக்கே மிகச் சரியாய் பொருந்தக் கூடியதுமாகும். தோழர் ஜவஹர்லால் இவ்வளவு சொல்லிய பின்பும் தோழர் காந்தி மறுபடியும் அதே மாதிரியே பேசுகிறார்.

அதாவது பூரணச் சுயேச்சை என்பதுதான் தனது முடிவான லக்ஷியம் என்று முடிவு செய்து கொண்டதாகவும், அதற்குமேல் தோழர் ஜவஹர்லால் போன அளவுக்கு போகத் தக்க அளவு தீவிர எண்ணமில்லை என்றும், அரசர்கள் கொஞ்சகாலத்துக்காவது இருக்க வேண்டும் என்றும், ஆனால் அவர்கள் ஜனங்கள் பிரதிநிதியாய் இருக்க வேண்டுமென்றும், சொல்லுகிறார். இது அரசர்களுக்கும் முதலாளிகளுக்கும் பாமர மக்களுக்கும் எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக ஆவதற்கும் ஏற்ற வார்த்தையே தவிர பாமர ஜனங்களின் கஷ்டத்தை அடியோடு போக்குவதற்கு ஏற்றவார்த்தையே யல்ல.

மற்றும் தோழர் காந்தியாரின் அல் அறிக்கையில் எவ்வளவு முரணான கருத்துக்கள் இருக்கின்றது என்பதைப் பார்த்தால் அவரது தலைமை இனி நாட்டுக்குப் பயன்படுமா என்பதும் விளங்கும்.

அதாவது அடுத்த ஆகஸ்டு மாதம்வரை, தான் சட்டமறுப்பில் கலந்து கொள்ளப் போவதில்லையாம். ஆனால் சட்டமறுப்புச் செய்கின்றவர்களுக்கு யோசனை சொல்லுபவராகவும் வழிகாட்டியாகவும் இருப்பாராம்.

தன்னைச் சுற்றிலும் இருள் சூழ்ந்து கொண்டிருக்கிறதாம். ஆனால் வைசிராயோடு ஒரு சமாதானம் செய்து கொள்ளுவதில் சாத்தியமான எல்லா வழிகளாலும் கவனம் செலுத்துவாராம். அரிஜனவேலையும் செய்வாராம். இவை எவ்வளவு முன்னுக்குப் பின் முரண் என்பதை வாசகர்களையே யோசித்துப் பார்க்க விரும்புகிறோம்.

மேலும் சட்டமறுப்பில் கலந்துகொள்ளச் சுதந்திரமற்றவர் என்று கருதிக் கொள்ளும் ஒருவர் சட்டமறுப்புச் செய்பவர்களுக்கு யோசனை சொல்லவும் வழிகாட்டவும் மாத்திரம் எப்படிச் சுதந்திரமுடையவராவார் என்பது நமக்கு விளங்கவில்லை.

தன்னைச் சுற்றிலும் இருள் சூழ்ந்து கொண்டிருப்பதாகக் கருதிக் கொள்ளும் ஒருவர், ஒரு பெரிய காரியமாகிய சர்க்காரோடு சமாதானம் செய்து கொள்ளும் விஷயத்திலும் அரிஜன சேவை விஷயத்திலும் எப்படித் தகுதியுடையவராவார் என்பதையும் வாசகர்கள் தான் முடிவுகட்ட வேண்டும்.



மற்றும் தான் என்ன செய்வதென்பதே தனக்குத் தெரியாமல் திகைப்பதாகக் கருதிக் கொண்டிருக்கிற ஒருவர், இனிஅடுத்த ஒரு வருஷத்துக்கு மக்கள் செய்ய வேண்டிய வேலைத் திட்டத்தை கூறுவதற்கு முன்வருவது எவ்வளவு முன்னுக்குப் பின் முரண் என்பதை யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

ஆகவே இந்த நிலையில் இனி இந்திய மக்களின் துன்பத்தைப் போக்கி, அவர்கள் யாவரும் சரிசமமாகத் தனிப்பட்ட கவலையற்று வாழ வேண்டும் என்று ஆசைப்படுகின்றவர்கள் இம்மாதிரியான வழவழ, குழகுழ, போன்ற வார்த்தையுடையவர்களையும் முன்னுக்குப் பின் சதாசர்வகாலமும் முரணாய் பேசிக்கொண்டும் நடந்து கொண்டும், ஒவ்வொன்றுக்கும் கடவுள் பேரால் தத்துவார்த்தம் சொல்லிக்கொண்டு இருப்பவர்களை எதிர்பாராமலும் பின்பற்றாமலும் இருக்கவேண்டும் என்பதே நமது அழுத்தமான அபிப்பிராயமாகும்.

தோழர் ஜவஹர்லால் அவர்கள் எவ்வளவு மிதவாதப் பேச்சு பேசியிருந்தாலும் இந்த அளவுக்காவது அந்த அபிப்பிராயங்களை அமுலுக்குக் கொண்டுவரச் செய்ய என்ன ஏற்பாடு செய்யப் போகிறார் என்பது நமக்கு விளங்கவில்லை.

முதலாவது காந்தியாரை விட்டுப் பிரிந்து தன் காலில் நடக்கத் தைரியம் கொள்ளுவாரா? என்பதும், இரண்டாவது இவரது இந்த கொள்கைகளைக் "காங்கிரஸ்" ஏற்றுக்கொள்ளுமா? என்பதும், மூன்றாவது "காங்கிரஸ்" ஏற்றுக் கொள்ளாவிட்டால் இவர் தனித்து நின்று ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அதன் மூலம் வேலை செய்யச் சக்தியும் தைரியமும் இருக்கின்றதா? என்பதும் முக்கியப் பிரச்சனையாகும்.

இதன்படி நடக்காமல் வெறும் அறிக்கையின் மூலம் அபிப்பிராயங்களை வெளியிட்டுக் கொண்டே இனியும் இருப்பதானால், இப்போது எப்படியோ ஒருவழியில் பொது ஜனங்களில் அனேகருக்கு குறிப்பாய் வாலிபர்களுக்குத் தோன்றியிருக்கும் ஒரு உத்வேகமான எழுச்சியையும் ஊக்கத்தையும் பாகுபடுத்தி "பெருமையை" அடைய முழு யோக்கியதை உடையவரேயாவார் என்பது நமது அபிப்பிராயம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 24.09.1933**



RangaRakes tamilnavarasam.com

# பெசண்டம்மையாரின் முடிவு

தோழர் அன்னிபெசண்ட் அம்மையார் 20-9-33ந் தேதி மாலை 4-மணிக்கு சென்னை அடையாற்றில் முடிவெய்தி விட்டார்கள். அம்மையாரின் வாழ்வு பெண்மணிகளுக்கு ஒரு படிப்பினையாகும். ஆண்களுக்கும் ஓர் அறிவுருத்தல் ஆகும்.

பெண்கள் "பாபஜென்மம்" என்றும், "பேதமையென்பது மாதர்க் கணிகலம்" என்றும், பெண்கள் ஆண்களின் காவலுக்குட்பட்டு இருக்க வேண்டியவர்கள் என்றும், அறியாமையும், அயோக்கியத்தனமும், முட்டாள் தனமும், மூர்க்கத்தனமும் கொண்ட வாக்கியங்களை பொய்யாக்கி அவற்றில் பொதிந்துள்ள சூழ்ச்சிகளை வெளியாக்கவென்றே தோன்றியவர் என்று கருதும்படியானவர் நமது பெசண்டம்மையார்.

தோழர் பெசண்டம்மையார் ஒரு பாதிரியாரின் மனைவியாவார். பாதிரி களின் கொடுமையும், பித்தலாட்டமும் அம்மையாரை நாஸ்திகமாக்கி, தெய்வம் இல்லை என்று பிரசாரம் செய்யும்படி செய்தது. பிறகு புருஷனை விட்டுப் பிரிந்தார். பிறகு கர்ப்பத்தடையை யாவருக்கும் பிரசாரம் செய்து வந்தார். கர்ப்பத்தடையை சட்ட சம்மந்தமாக்கினார். அக்காலத்திலேயே அரசாங்கத்தையும் எதிர்த்து பிரசாரமும் செய்தார்.

பின்னர் தனது 32-ம் வயதுக்கு மேல் மறுபடியும் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தார். பிறகு பல புத்தகங்களை எழுதினார். அதன் பிறகு பிரம்ம ஞான சங்கத்தில் சேர்ந்தார். அதன் பிறகு இந்தியாவுக்கு வந்தார். வந்து அச் சபையின் உலக தலைவரானார்.

பிறகு சென்னையை வாசஸ்தலமாகக் கொண்டார். கிறிஸ்து மதத்தை கண்டித்து இந்துமத தத்துவ பிரசாரம் என்னும் பார்ப்பன மதப்பிரசாரம் செய்தார்.

இதனால் சென்னையில் உள்ள விபூதிபூசும் பார்ப்பனரிடம் மிக செல்வாக்கு அடைந்தார். ஹை கோர்ட்டு ஜட்ஜுகள் உள்பட அனேக பெரிய பதவியாளர்களை தனக்கு சிஷ்யராகக் கொண்டார். அரசாங்கத்திலும், ஓரளவு



செல்வாக்குப் பெற்று விபூதிப் பார்ப்பனர்களுக்கு அச்செல்வாக்கை பெரிதும் உதவினார். இதுகண்டு பொறாத சென்னை நாமம்போடும் அய்யங்கார் பார்ப்பனர்கள் அம்மையாருக்கு பல தொல்லைகளை விளைவித்தார்கள். அவற்றை சமாளிக்க (முன் பார்ப்பன மதப்பிரசாரம் செய்தது போலவே) அரசியலில் தலையிட்டு அரசியல் பிரசாரமும் செய்தார்கள். இதன் பயனாயும், அம்மையாரின் அபார சக்தியாலும் இந்தியா முழுமைக்கும் அரசியல் தலைவராயும் விளங்கினார்.

காலஞ்சென்ற தோழர்கள் தாஸர், பாலர், நேரு முதலியவர்கள் எல்லாம் அம்மையாருக்கு சிஷ்யர்களாக இருந்தார்கள். அம்மையார் ஓடி ஆடித்திரிய சக்தி உள்ளவரையில் ஐயங்கார் கூட்டத்தை பொது வாழ்வில் தலை எடுக்க வொட்டாமல் செய்து கொண்டே வந்தார். இதன் பயனாகவே (அம்மை யாருக்கு அரசியலிலும் மதத்திலும் செல்வாக்கு இருக்கும்வரை) தோழர் சி.விஜயராகவாச்சாரியராகிய ஐயங்கார் காங்கிரஸ் பிரசிடெண்டாக முடியாமலேயே போய்விட்டது. இந்தக் காரணத்தால் சென்னை ஐயங்கார்கள் அரசியலில் "அமிதவாதிகள்" ஆகி தோழர்கள் சி.எஸ்.கஸ்தூரி ரங்கய்யங் கார் சி.விஜயராகவாச்சாரியார், சி.ராஜகோபாலாச்சாரியார், எஸ்.சீனிவாசய்யங் கார், முதலிய அய்யங்காரர்கள் ஒன்று சேர்ந்து, மறுபடியும் அம்மையாரின் அரசியல் செல்வாக்கை ஒழிக்க வேண்டியவர்களானார்கள். இதற்குப் பார்ப்பனரல்லாத தோழர்கள் பி.வரதராஜலு, வி.ஓ.சிதம்பரம் பிள்ளை, ஜார்ஜ் ஜோசப், ஈ.வெ.ராமசாமி முதலியவர்களையும், அய்யர் பார்ப்பனரில் தோழர் எஸ்.சத்தியமூர்த்தி அய்யர் முதலியவர்களையும், பயன்படுத்திக் கொண்டு அம்மையாரை எதிர்த்து அம்மையாருக்குப் பல தொல்லைகளும் கொடுத் தார்கள். அம்மையாருக்குச் சரியான போட்டித் தலைவராக தோழர் காந்தி யாரைப் பிடித்துக் கொண்டுவந்து மகாத்மாவாக்கினார்கள்.

இதன் பயனாகவும் அம்மையாரின் வயோதிகத்தின் பயனாகவும் அம்மையார் அரசியலில் சிறுகச்சிறுக, விட்டுக் கொடுத்துக் கொண்டே வந்துவிட்டார்கள் என்றாலும் அரசாங்கத்தின் மூலம் தனது விபூதிப் பார்ப்பன அய்யர் சிஷ்யர்களுக்கு அளவுகடந்த உதவி செய்து கொண்டே வந்தார். தோழர் சர்.சி.பி. போன்றவர்கள் எல்லாரும் உயர்ந்த அந்தஸ்திற்கு அம்மையாராலே ஆக்கப்பட்டவர்கள் ஆவார்கள். அம்மையாரின் அபார சக்தியை ஒரு வார்த்தையில் சொல்லவேண்டுமானால், அம்மையார் இந்த உலகம் முழுவதும் ஒரு ஆட்சிக்கு உட்படுத்தி அதன் தலைமை ஸ்தானத் தைக் கொடுத்தால் அதை ஒருகையிலும், அதன் ராணுவ ஆட்சியை மற்றொரு கையிலும் உலக மத (போப்) குருவேலையை உபவேலையாக வும், பார்க்கத் தகுதியும் ஆற்றலும் உடையவர் என்றே சொல்லுவோம். ஆகவே பெண்களுக்கு எவ்வளவு ஞானம் எவ்வளவு தைரியம் எவ்வளவு சக்தி இருக்கின்றது என்று கணிப்பதற்கு அம்மையார் ஒரு ஒப்பற்ற சாதனமா வார். அப்படிப்பட்ட அம்மையார் தனது 86-வது வயதில் முடிவெய்தது



RangaRakes tamilnavarasam.com

பற்றி யாரும் வருந்தவேண்டியதே இல்லை. ஏனெனில் இனி தன்னால் யாதொருகாரியமும் செய்யமுடியாமல் போய்விட்டதென்றால் உடனே முடி வெய்துவிட வேண்டியது தான் நல்லறிவின் குறிப்பாகும்.

ஆகவே அம்மையாரைத் "தாயைப்போலவும் குருவைப்போலவும் தெய்வத்தைப்போலவும்" கருதி அம்மையாரைப் போற்றி வந்த அவரது சிஷ்யர்கள் பெரிதும் மனிதஜீவ இயற்கையை உணர்ந்த ஞானவான்கள் ஆதலால் அப்படிப்பட்டவர்களுக்கு பிறரது அனுதாபமோ ஆறுதலோ அவசியம் இல்லையென்றே கருதுகிறோம்.

**குடி அரசு - இரங்கல் செய்தி - 24.09.1933**

# ஒரு எச்சரிக்கை

தமிழ்நாட்டில் உள்ள பார்ப்பனப் பத்திரிகைகள் எல்லாவற்றிற்கும் இன்று தோழர் ஷண்முகத்தின் பதவி மிக்க வயிற்றுக் கடுப்பாய் இருந்து வருகின்றதை நாம் உணர்ந்து வருகின்றோம். இவற்றுள் ஒரு விகடப் பத்திரிகை மிக்கக் கேவலமான முறையில் நடந்து கொண்டிருக்கிறதைப் பற்றிப் பல தோழர்கள் நமக்குப் பல வியாசங்கள் எழுதி இருக்கிறார்கள். அவற்றை இப்போது நாம் பிரசுரிக்கவில்லை. தயவு செய்து அப்பத்திரிகை அம்மாதிரி நடந்து கொண்டதற்காக வருந்தாதவரை அந்த வியாசங்களை நாம் பிரசுரித்துத் தீரவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

விகடத்துக்கும் விஷமத்துக்கும் குரோதத் தன்மைக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கப்பட மாட்டாது என்று நினைப்பது ஏமாற்றத்தைத் தரும் என்பதை எச்சரிக்கை செய்தே, அந்தச் செய்கையைப் பின்வாங்கிக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 24.09.1933**



RangaRakes
tamilnavarasam.com

# சங்கராச்சாரிக்கு அவமரியாதையா?

## டிப்டி கலைக்டர் தர்பார்

சென்ற 22-9-33 வெள்ளிக்கிழமை இரவு தஞ்சையில் முகாமிட்டுள்ள சங்கராச்சாரியைப் பார்க்க அவ்வூர் டிப்டி சூப்ரெண்டெண்டான ஒரு பிராமணரல்லாத கனவான் குடும்ப சமேதராய் சென்றிருந்தார். அது சமயம் சங்கராச்சாரியாரின் முகாமில் நின்று கொண்டிருந்த - தஞ்சை டிவிஷன் ஹெட் குவார்ட்டர் டிப்டி கலைக்டர் அவர்கள் ஷியாரை அழைத்து எவ்வாறு மேலே ஷர்ட் போட்டுக்கொண்டு போகலாமென்று வினவினார். அதன் பேரில் இருவர்களுக்கும் சில வாக்கு வாதங்கள் நிகழ்ந்தது.

இதுவிஷயமாக தஞ்சையில் பெருத்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. சங்கராச்சாரியின் முன்பு சட்டை போட்டுக்கொண்டு போகக்கூடாதென்பது பழக்கத்தில் இருப்பதாகவே ஒத்துக்கொண்ட போதிலும், அதை அமுல் நடத்த (Enforce) டிப்டி கலைக்டருக்கு என்ன சம்மந்தமுன்டென்பதும், அதற்கு சங்கராச்சாரிக்கு ஆள் மாகாணம் இல்லையா என்றும், ஷை டிப்டி கலைக்டர் அந்த வேலையைத்தானே வகித்துக் கொண்டு சங்கராச்சாரியாலும் அவர் சிப்பந்திகளாலும் செய்ய சாத்தியப்படாததான காரியத்தை தான் தன் அதிகார பதவியை கொண்டு அமுல் நடத்தி, மதத்தைக் காப்பாற்ற செய்யும் சூழ்ச்சி யாயென்றும் நமக்கு விளங்கவில்லை.

எந்த பிரத்தியேக அதிகாரத்தைக் கொண்டு டிப்டி கலைக்டர் நடந்து கொண்டார் என்கிற விஷயத்திற்கு வல்லத்திற்கு விஜயமாகியிருக்கும் ஜில்லா கலைக்டருக்கு ரிப்போர்ட் செய்யப் பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

**(ஒருநிருபர்)**

**குடி அரசு - செய்தி விளக்கம் - 01.10.1933**



### கொச்சி, திருவாங்கூர், திருநெல்வேலி

# தொழிலாளர் மகாநாடு

தோழர்களே!

உங்களுடைய மகாநாட்டில் தலைமை வகிக்கும் பேற்றை எனக்களித்து இந்த சந்தர்ப்பத்தில் எனது அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்ள வசதி அளித்ததற்கு எனது நன்றியறிதலை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என்னைப்பற்றிப் பல தோழர்கள் கவிராயர்கள் போல் புகழ்ந்துகூறியதற்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாகிலும் அப்புகழ்ச்சி உரைகளுக்கு நான் தகுதியுடையவனல்ல என்றும், அப்புகழ்ச்சிகளில் ஏதாவது ஒரு பாகத்துக்காவது தகுதியுடையவனாக என்னை ஆக்கிக் கொள்வதற்கு அவைகளை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறேன் என்று உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என்னைப்பற்றிப் பேசிய சிலர் வைக்கம் சத்தியாக்கிரகத்தைப் பற்றி பிரஸ்தாபித்து அதை நடத்துவித்ததும் அது வெற்றியாய் முடிவு பெற்ற காரணமாய் இருந்ததும் நானேயாவேன் என்று பேசினார்கள். அதையும் ஒப்புக்கொள்ள முடியாமைக்கு நான் வருந்துகிறேன். வைக்கம் சத்தியாக்கிரகத்தில் பெயரளவுக்கு என் பெயர் அடிபட்டாலும் அதன் உற்சாகமான நடப்புக்கும், வெற்றிக்கும் வாலிப தோழர்களுடைய வீரம் பொருந்திய தியாகமும், சகிப்புத்தன்மையும், கட்டுப்பாடுமே காரணமாகுமென்று தெரிவித் துக் கொள்ளுகிறேன்.

நிற்க, தோழர்களே! தொழிலாளர் பிரச்சினை என்பது உலக மக்கள் சமூகத்தின் பிரச்சினையேயாகும். ஏனெனில் உலக மக்களில் 100-க்கு 90 பேருக்கு மேம்பட்டவர்கள் தொழிலாளிகள் என்னும் தலைப்பின் கீழ்தான் வருவார்கள். எப்படியெனில் தொழிலாளிகள் என்றாலே மனித சமூகத்தில் சரீரத்தினால் பாடுபட்டு வேலை செய்து ஜீவனம் செய்யும் மக்களாவார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இந்தப்படி ஜீவனம் செய்வதிலும் அன்னியருக்காக என்று பாடுபட்டு அன்னியர் சுகமாய் போக போக்கியத்துடன் சரீரத்தினால் பாடுபடாமல் வாழக் கூடிய ஒரு கூட்டத்திற்காக என்று உழைத்துவிட்டு மேலும் மேலும் உழைப்ப தற்கும், தாங்கள் சீக்கிரம் இறந்து விடாமல் இருப்பதற்கும், தங்கள் ஜீவ தசைக்குப் பிறகும் அன்னியருக்கு உழைத்துப் போடுவதற்காக சந்ததிகளை ஏற்படுத்தி அவர்களையும் அன்னியருக்கு உழைக்கவே தற்பித்து செய்யவும், எவ்வளவு வேண்டும் அவ்வளவை மாத்திரமே அடைவதற்கு தகுதியுடைய வர்களாக தங்களை ஆக்கிக் கொண்டிருக்கிற வர்களாவார்கள்.

ஆகவே இப்படிப்பட்ட மக்கள்கள் உலக மக்கள் சமூகத்தில் 100-க்கு 90 பேர்களுக்கு மேலானவர்களாய் இருப்பதால் தான் இப்படிப்பட்ட தொழி லாளர்களுடைய பிரச்சினையை உலக மக்கள் பிரச்சினை என்று சொல்ல வந்தேன். ஆனால் இப்படிப்பட்ட பெரும் சமூகப்பிரச்சினையை ஒரு தனிப் பிரச்சினை என்பதாக (தொழிலாளர் பிரச்சினை என்று) ஒதுக்கி வைத்திருப் பதும் மிக சிறுதொகை கொண்ட தனிப்பட்ட வகுப்பார்களது பிரச்சினையை அதாவது பாடுபடாமல் அன்னியர் உழைப்பால் வாழும் மக்களாகிய எஜ மானத் தன்மை-முதலாளித் தன்மை கொண்ட 100 க்கு 10 பேர்களாய் உள்ள மக்களின் பிரச்சினையை பொதுப் பிரச்சினையாக ஆக்கி அதைப்பற்றியே எல்லா மக்களும் கவனிக்கும்படியானதா யிருந்து வரும் காரணம் என்ன என்று உங்களில் பலர் கருதலாம். அதற்குக் காரண மெல்லாம் உலகம் பாடுபடாத சோம்பேறிக் கூட்டத்தார், சூழ்ச்சிக் கூட்டத் தார் ஆகிய முதலாளித் தன்மை, புரோகிதத்தன்மை கூட்டத்தார் என்பவர் களின் ஆதிக்கத்தில் இருப்பதால் அப்படிப்பட்ட அவர்களுடைய பிரச்சி னையை உலகப் பொதுப்பிரச்சினையாக ஆகிவிட்டது. முன் குறிப்பிட்ட தொழிலாளிக் கூட்டத்தார் எண்ணிக்கையில் பெரும்பான்மையானவர் களாய் இருந்தும், ஆதிக்கமற்றவர்களாகவும் அடிமைத்தனத்தின் பேரி லேயே தங்களது வாழ்வை நிர்ணயித்துக் கொண்டவர்களாகவும் இருந்து கொண்டு இந்தத் தன்மையையே உலக இயற்கை என்று கருதிக் கொண்டி ருப்பதால் (தொழிலாளர் பிரச்சினை) 100-க்கு 90 மக்களது பிரச்சினை பொது பிரச்சினையாகக் கருதப் படுவதற்கில்லாமல் போய் விட்டது.

ஆகவே தொழிலாளி மக்கள் பிரச்சினை உலக மக்கள் பிரச்சினை என்கின்ற கருத்தின் மீதே அது சம்மந்தமாக எனக்குப் பட்ட சில விஷயங் களை உங்களுக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தோழர்களே! இன்றைய உலக நிலை அதாவது மனித சமூகத்தின் வாழ்க்கைத் தன்மையானது துக்கம் கவலை அதிர்ப்தி, சாந்தியற்ற தன்மை, ஒருவருக்கொருவர் தாழ்ந்த தன்மை, ஒருவரை ஒருவர் அடக்கி ஆளும் தன்மை ஆகியவைகளுக்கு ஆளாகி அவதிப்பட்டுக் கொண்டு இருக்கத் தக்கதாகவே இருந்து வருகிறது. இந்த நிலையானது இன்று நேற்று ஏற்பட்டது



என்று சொல்லி விடுவதற்கு இல்லாமல், உலகம் தோன்றியதாகச் சொல்லப் படும் காலமுதல் நாளது வரையிலும் எவ்விதமான மாறுதலும் இல்லாமலே இருந்து வருகிறது. மனித சமூகத்தில் உள்ள இவ்விதமான கஷ்டங்களையும், கொடுமைகளையும் குறைகளையும் நிவர்த்திப்பதற்காக வென்று வெகுகால மாகவே அதாவது நமக்கு சரித்திர பூர்வமாய் விளங்கும் பல ஆயிரக் கணக் கான வருஷங்களாகவே அநேக மனிதர்கள், கடவுள், கடவுள் அவதாரம், கடவுள் குமாரன், கடவுள் தூதன், கடவுள் தன்மை பெற்றவர் என்னும் பெயர்களாலும், ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள், மகாத்மாக்கள், ஞானிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் என்ற பெயர்களாலும் தோன்றி எவ்வளவோ காரியங்கள் திருத்தப்பாடுகள் உண்டாக்கியதாக எழுதி வைக்கப்பட்டும் சொல்லப்பட்டும் வருகின்றது. மேல்கண்ட ஒவ்வொருவருடைய தோன்றுத லுக்கும் காரணமாக, பெரிதும் உலகத்தில் தர்மம் குன்றிவிட்டதாகவும், அதர்மம் அதிகரித்துவிட்டதாகவும், துஷ்டர்களால் சாதுக்கள் கஷ்டப்படு வதாகவும், வலியோரால் எளியோர்கள் துன்பப்படுவதாகவும் அவைகளை யெல்லாம் போக்குவதற்காகவென்றே தோன்றி அதர்மத்தை ஒழித்து துஷ்டர்களை சிக்ஷித்து சாதுக்களையும், ஏழைகளையும், கஷ்டப்படும் மக்களையும் ரக்ஷிப்பதற்காகவே தோன்றினார்களென்றும் சொல்லப்பட்டு வருகிறது.

மற்றும் இந்த "தெய்வாம்சம் பெற்றவர்கள்" என்ற கூட்டத்தவர்களால் மனித சமூக வாழ்க்கையின் ஒழுங்குக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் வேதங்கள், நீதி சாஸ்திரங்கள், மற்றும் நீதியைப் போதிக்கும் சாதனங்கள் என்பவைகளும் எண்ணிக்கைக்கும், எல்லைக்கும் கட்டுப்படாத அளவுக்கு குவிந்து கிடக்கின்றன. இவைகளின் பயனாகவெல்லாம் அநேக காலமுதல் நாளது வரையில் பெரும்பான்மையான மனித சமூகத்திற்கு சிறிதாவது கஷ்டமோ துன்பமோ, கவலையோ, ஒழிந்திருப்பதாகச் சொல்லமுடியுமா? என்று யோசித்துப் பாருங்கள்.

எப்படிப்பட்ட கடவுளோ, அவதாரமோ, கடவுள் தன்மை பெற்றவர் களோ, ஞானிகளோ, மகான்களோ தோன்றிய காலங்களிலும் மற்றும் அவர் களது ஆதிக்கத்திலும் ஆக்ஷியிலும் உலகம் இருந்துவந்த காலங்களிலுங் கூட ஜனசமூகத்திற்கு இன்று இருக்கிற கஷ்டமேதான் இருந்துவந்திருக் கின்றதென்பதை எந்த சரித்திரத்திலும் காணலாம்.

"தர்மராஜ்யம்" "ராமராஜ்யம்" "சத்தியகீர்த்தி ராஜ்யம்" என்று சொல்லும்படியான காலங்களில் எல்லாம்கூட இன்று காணப்படும் கொடு மையும், அதர்மமும், கஷ்டமும், தரித்திரமும், அடிமைத் தன்மையும் இருந்து கொண்டுதான் வந்திருக்கிறது என்பது சரித்திரங்களிலும், சாஸ்திரங் களிலும், புராணங்களிலும் தாராளமாய் காணப்படுகின்றன.



RangaRakes tamilnavarasam.com

எனவே இவற்றிற்கெல்லாம் காரணமென்ன? இப்படிப்பட்ட பெரியார்கள் என்பவர்களால் மனிதச் சமூகத்திற்குள்ள கஷ்டங்கள், துன்பங்கள் ஏன் ஒழிக்கப்படவில்லை? இவர்களால் எல்லாம் ஆகாத காரியம் நம்மால் ஆகி விடுமா? என்பனபோன்ற விஷயங்களை யோசித்து ஒரு முடிவுக்கு வந்த பிறகேதான் நாம் இன்று என்ன செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றோம் என்பதை யோசிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அப்படிக்கெல்லாம் இல்லாமல் கூடிக்கூடிப் பேசி பழைய பாடங்களையே படித்து கஷ்டப்படுபவர்களைப் பார்த்து பரிதாபப்பட்டு அவர்களது கஷ்டங்களை இவர் வந்துப்பேசி கண்ணீர்விட்டுப் போவதென்பது 'அரைத்த மாவை அரைத்ததுபோலும், சிரைத்த தலையை சிரைத்தது போலும்' ஆகுமே யொழிய பலன் தரத்தக்க காரியம் எதுவுமே நம்மால் முடியப்போவதில்லை.

ஆகவே ஏன் இந்த பழைய நிலை மாறவில்லையென்றும், மாற்றுவதற்காக தோன்றிய பெரியார்கள் எல்லாம் ஏன் தோல்வி அடைந்துவிட்டார்கள் என்றும் யோசித்துப் பார்ப்போமேயானால் முறையே அதன் காரணமும் அப்படிப்பட்டவர்களின் தவறுதலும் நமக்கு நன்றாய் விளங்கும்.

எனக்குத் தோன்றியவரையிலும் "பெரியார்"களுடைய முயற்சிகளெல்லாம் வெற்றிபெறாமல் போனதற்குக் காரணம் அப்பெரியார்கள் கஷ்டநிலை என்பதற்குக் காரணம் என்ன என்பதையே அவர்கள் சரியாய் உணரவில்லை என்றுதான் சொல்லுவேன். அஸ்திவாரத்தில் உள்ள கோளாறுகளை லக்ஷியம் செய்யாமல் மேலும் மேலும் கட்டிடங்கள் கட்டியதாலேயே கட்டின கட்டிடங்களெல்லாம் இடிந்து விழுந்து கொண்டே வந்துவிட்டன. இதனால் இன்று இடிந்து விழுந்த-பழுதுபட்ட சாமான்களும், வாழ்வுக்கு தவாக் குட்டிச்சுவர்களுமாகத்தான் அம்முயற்சியின் பலன்கள் காணப்படுகின்றன. ஆதலால் தான் பயன்படவில்லை.

ஒரு விவகாரத்தை ஒழிக்க (பைசல் செய்ய) முன்வந்த ஒருவன் ஐந்தும் + ஐந்தும் =பனிரெண்டு (5+5=12) என்று கருதிக்கொண்டு விவகாரத்தை தீர்க்க முற்படுவானேயானால் அப்படிப்பட்டவனால் விவகாரம் சரியான தீர்ப்பு அடைய முடியுமா? அதுபோலவே உலகக் கஷ்டத்தைப் போக்குவதற்குத் தோன்றிய அவதாரங்கள் (பெரியார்கள்) எல்லாம் மனித சமூகத்தின் கஷ்டங் களுக்கு காரணமாயிருப்பது மனித சமூகத்திலுள்ள சிலரின் சூழ்ச்சியென்றும் அக்கிரமமான நடத்தையென்றும் கருதாமல் தங்களால் நிரூபிக்கச் சாத்தியமற்றதும் தங்களுக்கே புரியாததுமான ஒரு வஸ்துவைக் கற்பனை செய்துகொண்டு அதற்கே சகல சக்திகளையும் கொடுத்து எல்லாவற்றிற்கும் அதையே பிணையாக்கி அதன்பேரிலேயே எல்லாப் பழிகளையும்போட்டு அதற்கும் தங்களுக்கும் சம்பந்தம் இருப்பதாகக் காட்டி அதன் தயவினா லேயே உலகக் கஷ்டங்களைப் போக்க



முயற்சிப்பதாகச் சொல்லி அந்தப் படியே மக்களையும் நம்பச் செய்துவிட்டு போய்விட்டார்கள். இப்பொழுது தோன்றுகிறவர்களும் தங்களை "மகான்கள்" என்றும் "ஞானிகள்" என்றும் உலகக் கஷ்டத்தை ஒழிப்பதற்கு கடவுள் அருளால் தோன்றி கடவுள் அரு ளால் இருந்து, கடவுள் கட்டளைப் படி நடந்து வருவதாகவும் சொல்லுகிற படியால் அவர்கள் ஒரு காரியத்தையும் செய்ய முடியாமல் இருப்பதோடும், கஷ்டங்களையும், கஷ்டத்திற்கு ஆதாரமாக இருப்பவைகளையும் என்றும் நிலைத்திருக்கக்கூடியதாகவே செய்துவருகிறார்கள்.

இவ்வளவோடு மாத்திரமல்லாமல் இத்தனை பெரியார்கள் என்பவர்களும் தங்கள் முயற்சியால் வெற்றிபெறாமல் போனதற்குக் காரணம் என்னவென்பதைக் கண்டுபிடிக்க சக்தி இல்லாமல் போய்விட்டதால் அவர்கள் அச்சக்தியற்ற தன்மையைத் தைரியமாய் ஒப்புக்கொள்ள இஷ்டப்படாமல் "இவ்விதக் கஷ்டங்களும், துன்பங்களும் கீழ்மேல் நிலையும், அதிருப்தியும், சாந்தமற்ற நிலையும் மனித சமூகத்திற்கு தவிர்க்க முடியாதது" என்றும் "இதுவே உலக இயற்கை" என்றும் சொல்லிவிட்டுப்போய் இருக்கிறார்கள். இதைத்தான் இன்று சகல துரைகளிலும் அடக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மனிதசமூகம் ஒட்டும் நம்பிக்கொண்டு இயற்கையையோ, தெய்வத்தின் அருளையோ, எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

இதன்றி இனி மற்றொரு காரணம் என்னவென்றால் அதாவது இன்றைய மேல்கண்ட நிலைகள் மனித சமூகத்துக்கு பெருந்துன்பமாய் இருந்தும் மனிதனுக்கு பகுத்தறிவு என்பதான ஒரு விசேஷ சிந்தனா சக்தி இருந்தும் அத்துன்பத்தை ஒழித்துக் கொள்ள அது பயன்படாமல் போனதற்கு மற்றொரு காரணம் என்னவென்றால் மனித வாழ்க்கையில் மனிதன் தான் இன்று உயிருடன் இருக்கும்போது அனுபவிக்கும் கஷ்டங்கள், துன்பங்கள் ஆகியவை எல்லாம் லட்சியம் செய்யத்தக்க தல்லவென்றும் அதாவது இந்த வாழ்வே நிலையற்றதென்றும் "மனிதன் இறந்தபிறகு தீர்ப்பு நாளிலோ, அல்லது மற்றொரு உலகமாகிய மேல்லோகத்திலோ" அனுபவிக்கப்போகும் விஷயங்களே முக்கியமானதென்றும் அதைப் பற்றியே மனிதன் கவலை செலுத்தவேண்டும் என்றும் மதங்கள் மூலம் கற்பிக்கப் பட்டதும் ஒரு முக்கிய காரணமாகும். இத்தியாதி காரணங்களே-இந்த விதமான கற்பனைகளே மனித சமூகத்தின் துக்கங்கள் ஒழிக்கப்படுவதற்கு இடையூராய் இருந்து வந்திருக்கின்றன.

அப்படிக்கில்லாமல் இருக்குமானால் உலகில் உள்ள ஜீவராசிகளில் எல்லாம் விசேஷமானது என்றும் மனித ஜீவனுக்கு உயர்ந்த ஞானமும், அறிவும், சிந்தனாசக்தியும் இருந்து வருகின்றது என்றும் சொல்லப்பட்ட ஒரு சமூகம் இவ்வித கீழ்நிலையில் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாய் இருந்து வந்திருக்க முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

இது இப்படி இருக்க தொழிலாளிகளுக்கு உள்ள கஷ்டங்களைப் பற்றி சிறிது ஆராய்வோம்.

தோழர்களே! உலகமானது தொழிலாளர்களாலேயே நிர்மாணிக்கப் பட்டு தொழிலாளர்களாலேயே நடைபெற்று வருவதாய் இருந்தாலும் உலக வாழ்க்கையில் உள்ள சகலவிதமான தொல்லைகளுக்கும், துன்பங்களுக்கும், கவலைகளுக்கும் தொழிலாளிகளே ஆளாகிவருகின்றார்கள். சகல ஐஸ்வர் யங்களும், சுகபோகத்துக்கு வேண்டிய சகல சாதனங்களும் தொழிலாளி களாலேயே உண்டாக்கப்படுவதாய் இருந்தாலும் தொழிலாளிகளுக்குத் தான் வயிரார உண்ண உணவில்லை என்கின்ற குறையும், இடுப்பார துணி இல்லை என்கின்ற குறையும், இருக்க இடமில்லை என்கின்ற குறையும், நாளைக்கு என்ன செய்வது என்கின்ற கவலையும் மற்றும் காயலா வந்தால் வைத்தி யத்துக்கு என்ன செய்வது, பெண்ஜாதி பிரசவத்திற்கு என்ன செய்வது, பிள்ளை படிப்புக்கு என்ன செய்வது, சாவு, கல்யாணம் ஆகியவை களுக்கு என்ன செய்வது என்பதுபோன்ற அனேக கவலைகள், குறைகள் இருந்து வருகின்றன. தொழிலாளிகள் அல்லாத மனிதருக்கோ இவ்வித கவலைகள் ஏதுமில்லை இவர்களுக்குள்ள கவலையெல்லாம் தொழிலாளி களின் உழைப்பால் சமித்த பொருளை எப்படிப் பத்திரப்படுத்துவது, எப்படி மேலும் மேலும் பெருக்குவது, எப்படி அதிகமான சுகபோகங்களை அனுப விப்பது என்பது போன்ற கவலைகளேயாகும். இன்னும் ஏதாவது கவலை இருக்குமானால் அது நாமே உலகில் பெரிய சீமானாக எப்படி ஆவது நாம் செத்த பிறகும் நமது பெருமையும், புகழும், செல்வமும் நமது பிள்ளை களுக்கும், நமது பேரன்களுக்கும் உலகமுள்ள அளவும் எப்படி நிலைத் திருப்பது என்பது போன்றவைகளுமேயாகும்.

இவைகள் தவிர முதலாளிகள் என்பவர்கள் தங்கள் நிலை என்றும் நிலைத்திருக்கவும், தொழிலாளிகள் என்னும் பேரால் உலக பெரும்பான்மை யான மனித சமூகம் தங்களை எதிர்க்காமலும், தாக்காமலும் இருப்பதற்காக வேண்டிய பந்தோபஸ்துக்காக ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியவர்களுமாகின்றார்கள். நாளாவட்டத்தில் அந்த ஆட்சியின் ஆதிக்கத்தையும் தங்கள் கைக்குள் கொண்டுவந்துவிடவே முயற்சிப்பவர் களாகவுமிருந்து வருகிறார்கள். இதனால் முதலாளிகளின் வாழ்வுக்கும், செல்வம் சேர்ப்பிப்பதற்கும் மாத்திரம் தொழிலாளிகள் பாடுபடுகிறார்கள் என்பதில்லா மல் இந்த முதலாளிகளை காப்பாற்றவும் தொழிலாளிகளை அடக்கவுமான காரியத்தின் செலவுக்கும் இந்த தொழிலாளிகளே பாடுபட்டு உழைக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இத்தியாதி காரணங்களால் சரீரத்தால் பாடுபட்டு உழைக்கும் மக்களாகிய தொழிலாளிகளுடைய நிலை மையை நாளுக்குநாள் அடிமைத் தனத்திலும், தரித்திரத்திலுமே அமிழ்த்தப் படுகின்றது.



ஆதலால் தொழிலாளிகளது கஷ்டமும், துன்பமும், அடிமைத்தன மும், கவலையும் குறையும் நீங்கவேண்டுமானால் முதலாளித்தன்மை என்பது இல்லாமல் போயே ஆகவேண்டும். அப்படிக்கில்லாமல் வேறு எப்படிப்பட்ட காரியம் செய்தாலும் தொழிலாளி துன்பமும், இழிவும், தரித்திர மும் ஒருநாளும் ஒழியாது மனிதனுக்கு இருக்கும் தரித்திரமும், துன்பமும், குறைவு என்பதெல்லாம் மற்றவனை விட நாம் அதிகமாய் கஷ்டப்படுகின் றோமே மற்றவரைவிட நாம் தாழ்மையாய் வாழ்கின்றோமே மற்றவன் நம்மை அடக்கி ஆளுகின்றானே என்கின்ற மனப்பான்மைகளேயாகும். இந்த மனப்பான்மை இருக்கவேண்டுமானால் மற்றவனுக்கும் நமக்கும் வித்தியாசம் காணப்படாத ஒரு நிலையை உண்டாக்குவதேயாகும்.

உதாரணமாக 100 வருஷத்திற்கு முன் 50 வருஷத்திற்கு முன் மனிதர் களின் சாதாரண வாழ்க்கை இருந்ததைவிட இன்றைய வாழ்க்கைத் திட்டங்கள் அனேக வழிகளில் ஒரு அளவுக்கு உயர்ந்திருக்கின்றது என்பது பிரத்தியட்சம். அப்படியிருந்தும் அந்த அளவுக்கே மற்ற நிலையில் உள்ள வர்கள் திட்டமும் உயர்ந்துவிட்டதால் திட்டம் உயர்ந்தாலும் நிலைமையும் தன்மையும் முன்போலவேதான் இருக்கின்றது. தொழிலாளிகளின் கவலை யெல்லாம் தங்களுக்கு எவ்வளவு வேண்டும் என்பதல்ல. தங்களுடைய நிலைமை மற்ற யாருடைய நிலைமைக்கும் தாழ்ந்ததாக இருக்கக்கூடாது என்பதேயாகும்.

எந்தக் காரணத்தை முன்னிட்டாவது பாடுபடும் மக்கள் நிலை தாழ்ந் திருக்கவும் பாடுபடாத மக்கள் நிலை உயர்ந்திருக்கவும், ஆதிக்கம் செலுத்த வும் கூடாது என்பதுதான் தொழிலாளர்கள் கிளர்ச்சியின் முக்கிய தத்துவமாய் இருக்கவேண்டும்.

அப்படிக்கில்லாமல் ஏதோ 2 அணா 4 அணா கூலி உயர்த்தப்படு வதற்காக போராடுவதென்பது பயனற்றதேயாகும். ஏனெனில் நமது கிளர்ச்சி யில் 2 அணா கூலி உயர்த்தித் தருவானேயானால் தொழிலாளிகளால் செய்யப்படும் சாமான்களின்பேரில் முதலாளிகள் ஒன்றுசேர்ந்து நாலணா விலை அதிகப்படுத்தி விடுவார்கள். அந்த உயர்ந்த விலையைக் கொடுத்து சாமான் வாங்கவேண்டியவர்கள் தொழிலாளிகளேயாவார்கள். ஆகவே முதலாளிகள் தொழிலாளிகளுக்கு வலதுகையில் கூலி அதிகம் கொடுத்து இடது கையில் அதைத் தட்டிப் பிடுங்கிக் கொள்ளுவார்கள். முதலாளி களுடன் கூலித் தகராற் என்பது முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையில் உள்ள புல்லுருவிக் கூட்டமான தரகர்களுடைய சூட்சியேயாகும். 4 அணா கூலிக்கு வேலை செய்ய மக்கள் இன்று 14 அணா கூலி பெருவது எனக்குத் தெரியும். இதன் பயனாய் அவனுடைய நிலை சிறிதுகூட உயர்ந்ததாக சொல்ல முடியாது. அடிமைத்தன்மையும், தரித்திரமும் அவனைச் சூழ்ந்து கொண்டே இருக்கின்றது. 4 அணா கூலிகொடுத்த



RangaRakes
tamilnavarasam.com

முதலாளி அப்போது இருந்ததைவிட இப்போது 14 அணா கொடுக்கும் போது எத்தனையோ பங்குமேன்மையாய் மோட்டாரிலும், ஆகாய ரதத் திலும் செல்லுகிறான். சந்திரகாந்த மண்டபத்தில் வசிக்கிறான். ஒரு நாளைக்கு 4 அல்லது 5 கையெழுத்துப் போடுவதுடன் அவனது வேலை முடிவடைந்து விடு கின்றது. இந்த நிலையை அவர் பிள்ளைபிள்ளை தலைமுறைக்குப் பத்திரப் படுத்திக் கொள்ளுகிறான். தொழிலாளி நிலை இந்த அளவுக்கு உயர்ந்து இருக்கிறதா பாருங்கள். அவன் பிள்ளைகள் 3-வது, 4-வது பாரம்வரையில் கூட படிக்க முடியவில்லை. ஓதம் (ஈரம்) இல்லாத இடத்தில் படுக்க முடிய வில்லை. இடுப்புக்குத் தவிர மேலுக்குத் துணியில்லை. இந்த நிலையில்தான் இருக்கிறார்கள்.

(தொடரும்)

*குறிப்பு : 05.09.1933 (கொச்சி) 10.09.1933 (ஆலப்புழை) 23.09.1933 (திருநெல்வேலி) ஆகிய இடங்களில் நடைபெற்ற தொழிலாளர்கள் மாநாடுகளில் தலைமையேற்று ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 01.10.1933**



# நமது வருத்தம்

**- ஈ.வெ.ரா**

திருநெல்வேலியில் நடந்த தீண்டாமை மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தலைமைத் தமிழா சிரியர் தோழர் எஸ்.சோமசுந்திரபாரதியார் M.A., B.L., அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தார். அம்மகாநாட்டிற்கு வரவேற்பு கழகத்தலைவராக இருக்க திருநெல்வேலி தோழர் சாவடி கூத்தநயினார் பிள்ளை அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தார். இவ்வேண்டுகோளுக்கிணங்க இரு தோழர் களும் தங்கள் கடமைகளை ஆற்ற மகாநாட்டிற்கு வந்திருந்தார்கள். இங்கு ஒரு விஷயம் குறிப்பிடவேண்டியதாகும்.

அதாவது அவர்கள் இருவரும் காங்கிரஸ் கொள்கையில் பற்றுள்ள வர்கள், ஆஸ்திகர்கள், காங்கிரஸ் தீண்டாமை விலக்கு ("ஹரிஜன முன் னேற்ற") வேலை கமிட்டியில் அங்கம் வகிப்பவர்கள் ஆவார்கள். இவற்றை யெல்லாம் சுயமரியாதை மகாநாட்டைக் கூட்டிய தோழர்கள் அறிந்தே அவர்களை தலைமை வகிக்கக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதாகும்.

அன்றியும் மகாநாட்டில் தோழர் சோமசுந்திரபாரதியாரைத் தலைமைப் பதவிக்கு நான் பிரேரேபிக்கும் போதே தோழர் பாரதியாருக்கும் நமக்கும் விசேஷ அபிப்பிராய பேதங்கள் உண்டு என்றும், அப்படியிருந் தும் இம் மகாநாட்டிற்கு நாம் அவர்களை தலைமை வகிக்க அழைத்திருப்ப தும், அவர்கள் இணங்கி வந்திருப்பதும், ஆகிய இரண்டு காரியத்தையும் பார்ப் போமேயானால் நாம் அழைத்ததைவிட அவர் ஒப்புக்கொண்டு வந்திருப்பதே போற்றக்கூடியதென்றம், இதுவே அவரது உதாரத் தன்மை யைக் காட்டு கின்றதென்றும் சொன்னதோடு, நமக்கும் அவருக்கும் உள்ள முக்கிய அபிப்பிராயபேதமென்னவெனில் தோழர் பாரதியார் ஒரு சீர்திருத்த நோக்கமுடையவர் என்றும், அதாவது எதையும் அழித்துவிடாமல் அப்படியே வைத்துச் சீர்திருத்தம் செய்வதன் மூலம் மனித சமூகத்திற்கு விடுதலை யையும், மேன்மையையும் உண்டாக்கக் கருதி இருக்கிறவர் என்றும், நாம் அப்படிக்கில்லாமல் சீர்திருத்தத்தில் நம்பிக்கை வைத்து அதற்குக் கொடுக்க வேண்டிய சலுகையெல்லாம் கொடுத்துப் பார்த்து



RangaRakes tamilnavarasam.com

அதற்காகக் காத்திருக்க வேண்டிய காலமெல்லாம் காத்துப் பார்த்து அந்த அனுபவத்தின் மீது இப்போது நாம் பல விஷயங்களில் தலைகீழ் புரட்சி வேலையிலும், பல விஷயங்களில் பெரியதொரு அழிவு வேலையிலும் ஈடுபட்டிருக்கிறவர்கள் என்றும், ஆனபோதிலும் அவரவர்கள் அபிப்பிராயத் துக்கு பங்கமில்லாமல் ஏதாவது ஒரு பொது லட்சியத்துக்கு இருவரும் கூடி உழைக்கக்கூடுமானால் அதனால் பயன் உண்டு என்று தோன்றுமானால் யாரும் பின்வாங்க வேண்டியதில்லை என்றும், அதனால் காரியம் கெட்டு விடுமோ என்று பயப்படவேண்டியதில்லை என்றும், பேசி கடைசியாக மற்ற வைதீகர்கள், சைவர்கள் ஆகியவர்களைப் போல் அதாவது "சுயமரியாதைக் காரர்களைப் பார்ப்பதே பெரிய பாவம்" என்று கருதாமல் நமது வேண்டு கோளுக்கு இணங்கி இங்கு வந்திருப்பதற்கு பாராட்டுவதாகவும் சொல்லி பிரேரே பித்தேன். இந்தப்படி சொல்ல வேண்டியதும் பிரேரேபணை செய்ய வேண்டியதும் மரியாதையும் பத்ததியும் நியாயமும் என்றே நான் நினைத்து அந்தப்படி செய்தேன்.

தோழர் பாரதியவர்கள் தலைமை வகித்து தலைமைப் பிரசங்கம் செய்யும்போது முதலில் தன்னை நான் விலக்கிப் பேசி இருக்க வேண்டிய தில்லை என்றும் தான் இம்மகாநாட்டுக்கு வந்ததில் அதிசயமொன்றுமில்லை யென்றும், மகாநாட்டார் தன்னைத் தேடி அழைத்ததே பெரிதென்றும், சுய மரியாதைக்காரர்களுக்கு உள்ள மனித சமூகத்திற்கு விடுதலை ஏற்பட வேண்டும் என்கிற ஆசையிலும் மனித சமூகம் மேன்மையடைய வேண்டும் என்கின்ற ஆசையிலும் தான் ஒரு சிறிதும் குறைந்தவரல்ல வென்றும் சொல்லிவிட்டு தீண்டாமையைப் பற்றி பேசும்போது தீண்டாமை ஒழிய வேண்டுமென்பது யாவரும் ஒப்புக் கொள்ளவேண்டிய விஷயம் என்றும் அதற்கு உலகில் எந்த சமயமும் விரோதமாய் இருப்பதாக யாரும் கருத வேண்டியதில்லை என்றும், சைவர்கள் தங்களை சைவர்கள் என்று சொல்லிக் கொள்ள வேண்டுமானால் தீண்டாமை பாராட்டக் கூடாதென்றும் சொல்லி அதற்கு ஆதாரமாக இரண்டொரு சைவ மேற்கோள்களை எடுத்துக் காட்டினார். அதுபோலவே வைணவர்களும் தீண்டாமையை பாராட்ட நியாயமில்லை என்றும், தீண்டாமை பாராட்டுகின்றவர் வைணவராக இருக்க முடியாதென்றும் சொல்லி அதற்கு ஆதாரமாக ராமானுஜருடைய விஷயத்தை எடுத்துச் சொன்னார். இந்த சந்தர்ப்பத்தில் தோழர் முத்துசாமி வல்லத்தரசு அவர்கள் எழுந்து ராமானுஜர் தனது பெண்ஜாதியை தன் இஷ்டப்படி நடவாததற்காக விலக்கி விட்டாரல்லவா என்ற ஒரு கேள்வி கேட்டார். அந்த சமயம் சிலர் சிரித்தார்கள். இந்தக் கேள்வி அந்தச் சமயத் துக்கு அவசியமற்றது என்பது எனதபிப்பிராயம். ஆனபோதிலும் அதற்குத் தலைவர் இப்படிப்பட்ட கேள்விகளை மற்றொரு சமயம்கேட்டால் எனக்குத் தெரிந்த பதிலை நான் சொல்ல எப்பொழுதும் தயாராய் இருக்கிறேன். ஆனால் இது சமயமல்ல என்பதாக சொல்லிவிட்டு, ஆனபோதிலும் இந்தக் கேள்விக்கும் பதில் சொல்லுவதாகச் சொல்லி ராமானுஜர் சுயமரியாதைக்



கொள்கைப்படிதான் நடந்தாரென்றும், தனது மனைவியார் நடத்தை பிடிக்கா விட்டால் அவர் என்ன செய்வது என்று யோசித்துத்தானே தனது மனைவியை விட்டு நீங்கிக் கொண்டாரே ஒழிய தனது மனைவியை நீக்கிவிடவில்லை என்றும் சொன்னார்.

இதற்கும் பலர் சிரித்தார்கள். சிலர் கையும் தட்டினார்கள். அப்போது பாரதியார் "பரிகாசம் செய்பவர்கள் பரிகசிக்கப்படுவார்கள்" என்பதாக ஒரு பழமொழி உண்டு என்பதாகச் சொல்லிவிட்டு மேலால் பேசும்போது தோழர்கள் ஜீவானந்தம், குப்தா முதலிய 2, 3 பேர்கள் தலைவர் பேசும்போது அடிக்கடி மத்தியில் பிரவேசித்து தலைவரை கேள்விகள் கேட்க ஆரம்பித் தார்கள். இந்த சமயத்தில் நான் தலைவர் அனுமதியின் பேரில் எழுந்து இந்த தோழர்களை கேட்டுக் கொண்டு, தலைவர்பேசும்போது மத்தியில் மத்தியில் பேசுவது அழகல்ல என்று சொன்னேன். அதற்கு தோழர் வல்லத்தரசு அவர் கள் சந்தேகம் ஏற்பட்டால் என்ன செய்வது என்றார். தோழர் குப்தா அவர் கள் எங்கள் உணர்ச்சியை இப்படி ஒடுக்கக்கூடாது என்றும் சந்தேகங்களை கேட்டுத்தான் ஆகவேண்டும் என்றும் சொன்னார். தோழர் ஜீவானந்தம் அவர்களும் வாயில் ஏதேதோ சத்தம் கேட்காமல் பேசிக் கொண்டிருந்தார். இந்த சமயத்தில் தலைவர் நீங்கள் எல்லோரும் ஏககாலத்தில் உபன்யாசம் செய்வதாய் இருந்தால் என் உபன்யாசத்தை நிறுத்திக் கொள்ளு கிறேன் என்று சொல்லிய பிறகு அவர்கள் உட்கார்ந்தார்கள். பிறகு தலைவர் பாரதியார் அவர்கள் எழுந்து மறுபடியும் பேசும்போது தான் சமய ஆதாரங் களைப்பற்றி பேசுவதானது சுயமரியாதைக்காரர்களை திருப்புவதற்காக அல்லவென்றும் தீண்டாமை விலக்குக்கு சமயம் இடம் கொடுக்கவில்லை என்று கருதி இருக்கிறவர்களுக்கும், சமயத்தில் நம்பிக்கை உள்ளவர் களுக் கும், ஆகவே இதை பேசியதாகவும் இனி மற்ற விஷயங்களைப்பற்றி பேசு வதாகவும் சொன்னார். இந்தப்படி சொல்லிக் கொண்டிருக்கும்போது தோழர் வல்லத்தரசோ, அல்லது தோழர் குப்தாவோ அப்படிப்பட்டவர்கள் அதாவது சமய நம்பிக்கைக்காரர்கள் இங்கு யாரும் இல்லை என்று சொன்னார்.

அப்பொழுது தோழர் கூத்தநயனார் பிள்ளை அவர்கள் நாமம் போட்ட சிலரும் விபூதி பூசிய சிலரும் உருத்திராட்சம் கட்டிய சிலரும் வந்திருப்பதாகக் காட்டினார். இந்நிலையில் தலைவர் உபந்யாசம் முடிந்ததும் முதல் தீர்மானம் என்னால் பிரேரேபிக்கப்பட்டது. அதில் அது சம்பந்தமான பல விஷயங் களைச் சொல்லி பிரேரேபித்த பிறகு அதை ஆமோதிக்க தோழர் ஜீவாநந்தம் அவர்கள் வெகு ஆத்திரத்துடன் எழுந்தார். அது சமயம் நான் தோழர் ஜீவாநந்தம் அவர்களை நீங்கள் ஆமோதிக்க வேண்டாம், வேறு யாராவது ஆமோதிக்கட்டும் என்று பலவிதத்திலும் வணக்கமாகக் கேட்டுக்கொண்டும், எனது வேண்டுகோள் பயன்படாமல் அவர் தான் ஆமோதித்துத்தான் தீரு வேன் என்றதின்பேரில் அவர் அனுமதிக்கப்பட்டு எழுந்து, தலைவரையே சுட்டிச் சுட்டி தீர்மானத்துக்குச் சம்பந்தமில்லாத பல



RangaRakes
tamilnavarasam.com

விஷயங்களைப் பேசி தீர்மானத்தை ஆதரித்தார். பிறகு தோழர் வல்லத்தரசு அவர்கள் பேச வேண்டுமென்று எழுந்து தீர்மானத்தைப்பற்றி ஒரு வார்த்தையும் பேசாமல் கடசிவரை தலைவரையே பலவித கடினமான வார்த்தைகளால் கண்டபடி வைதுவிட்டு உட்கார்ந்தார். (அந்த வார்த்தைகள் எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆனாலும் இதுசமயம் வெளியிட விரும்பவில்லை) பிறகு இரண்டொரு தீர்மானங்கள் நிறைவேறி தலைவர் முடிவுரை நடந்தபிறகு என்னை தலைவருக்கு நன்றி செலுத்தும்படி தோழர் குற்றாலலிங்கம் அவர்கள் கட்டளையிட்டதற்கிணங்க நான் எழுந்து நடந்த சம்பவத்திற்கு வருந்தி தலைவருக்கு வருத்தம் தெரிவித்துக் கொள்ளும் முறையில் மகாநாட்டில் ஒழுக்கமுறை தவறி நடந்து கொண்ட தோழர்கள் செய்கையை கண்டித்து பேசுகையில் குறிப்பிட்டதாவது சுயமரியாதைக்காரர்களைப் பற்றி பலர் கண்டபடி பழி கூறித் திரியும் காரியங்களை மெய்ப்பிக்க அனுகூலமாகும் படி இன்று இங்கு சில தோழர்கள் வேண்டுமென்றே ஒழுங்கு முறைகளை அலக்ஷியம்செய்து நடந்து காட்டிவிட்டார்கள். தலைவரைப்பற்றி நான் பிரேரேபிக்கும்போதே எல்லா விபரங்களையும் தெரிவித்திருக்கின்றேன். இம்மாதிரி மனப்பான்மையுள்ள தோழர்களுடன் இனி ஒத்துழைப்பதினால் நன்மையைவிட கெடுதியே அதிகமாக ஏற்படும் என்று தோன்றுகிறது. இதுவரை நமது இயக்கத் தோழர்கள் பலரின் நடத்தையால் நான் அதிகக் கஷ்டமடைந்திருக்கிறேன். எனக்கு சொந்தத்தில் ஏற்பட்ட கஷ்டங்கள் பழிகள், நஷ்டங்கள் ஆகியவைகளைப்பற்றி நான் எப்போதும் கவலைப் படவில்லை. அதைப்போக்கிக் கொள்ள நான் முயற்சிக்கவும் இல்லை. ஆனால் இம்மாதிரி நடவடிக்கைகளால் இயக்கத்தின் யோக்கியதை கெட்டுப் போகின்றதென்றே நான் வருந்துகிறேன். இன்றைய மாதிரியை நான் வன்மையாய்க் கண்டிக்கிறேன். இதனால் இப்படிப்பட்ட தோழர்கள் கோபித்துக் கொண்டுபோய், இதற்குமுன் கோபித்துக்கொண்டு போனவர்கள் செய்கின்ற மாதிரி எவ்வளவு இடையூறு செய்தாலும் அதற்குத் தலை கொடுக்கத் தயாராயிருக்கிறேன். அதை எல்லாம் எதிர்பார்த்தே நான் இப்படி பேசுகிறேன். இதற்கு முன்னும் நான் இப்படி கண்டிப்பதாய் இருந்ததாலேயே இயக்கம் ஓரளவுக்காவது உயிருடன் இருக்கிறது.

இதுபோல் அநேகரின் இடையூறுகளையும் தொல்லைகளையும் சகித்துக் கொண்டுதான் இயக்கத்தை ஒரு அளவுக்கு நிலை நிறுத்திக் கொண்டு வந்திருக்கிறேன். இந்தத் தோழர்கள் தங்களது இப்படிப்பட்ட மனப்பான்மையை மாற்றிக் கொள்ளாவிட்டால் இவர்களுடன் ஒத்து உழைப்பது சாத்தியமற்றதாகிவிடும். ஜஸ்டிஸ் கட்சியுடனும் சில பணக்காரர்களுடனும் நான் கலந்திருந்தது வாஸ்தவமே. ஆனால் அது எனது சுயநலத்துக்கு அல்ல. அவர்களை இயக்கத்துக்கு எவ்வளவு பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு அவர்களுடன் கலந்து வந்திருக்கிறேன்.



RangaRakes

நமது சொந்த விஷயத்தில் ஒருவர் நடந்து கொண்டதற்காக ஒருவரை இகழ்வதும், வைவதும், பொதுக் கூட்டங்களில் பேசுவதென்பதும் சிறிதும் ஒழுங்காகாது. இந்தக் கூட்ட நடவடிக்கையைப் பார்த்தபிறகு இனியும் நமக்கு மகாநாடுகள் வேண்டுமா என்றும் மகாநாடுகள் நடத்த நமக்குத் தகுதி உண்டா என்றும் பயப்படும்படியாக ஆகிவிட்டது. மத்தியான மகாநாட்டுக்கு வரலாமா வரக்கூடாதா என்றுகூட யோசிக்கிறேன். ஏதோ என் சக்தி அனுசாரம் எனக்குள்ள ஊக்கத்தைக் கொண்டு என் அபிப்பிராயத்தை தெருவில் நின்று பேசி விட்டுப் போவதே மேல் என்றுகூட யோசிக்கிறேன். நான் ஏன் இவ்வளவு வருத்தமாய் பேசுகிறேன் என்றால் தப்பாகவோ சரியாகவோ இதன்பழியும் பொறுப்பும் என் தலைமீது இருக்கிறது என்று கருதியும் மற்ற தோழர்களுக்கு சிறுவயது வாலிப ரத்தம் என்கின்ற சாக்குகள் இருக்கின்ற மாதிரி எனக்கு சாக்கு இல்லை என்றும் கருதுவதாலேயேயாகும்.

ஒவ்வொருவருடைய அபிப்பிராயமும் உணர்ச்சியும் தனித்தனியே தாண்டவமாட வேண்டுமென்றால் ஒழுங்குமுறை என்பதற்கு அர்த்தமே இல்லை. தனித்தனி அபிப்பிராய சுதந்திரம் என்பது அனேக பரீட்சைக்கும் அனுபவத்திற்கும் பிறகு மாறி இப்போது ஒரு தனி அபிப்பிராயத்தின்கீழ் நடந்தாகவேண்டியதாய் இருந்துவருகிறது. இப்படியெல்லாம் இருக்க ஒவ்வொருவரும் எழுந்து தங்கள் தங்கள் உணர்ச்சிப்படி சபையில் நடப்பது என்றால் சபைக்குத் தலைவர் எதற்கு? ஆகவே இங்கு இந்த மகாநாட்டுத் தலைவரிடம் நடந்த மாதிரிக்கும் அவரை அனாவசியமாய் வைத மாதிரிக்கும் நான் இன்று வருந்தாமல் இருக்கமுடியவில்லை என்பதோடு, தலைவரை வணக்கத்துடன் மன்னிப்பும்கேட்டுக் கொள்கிறேன். முக்காலும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு இந்தமாதிரி தோழர்கள் மத்தியில்தான் இந்த 7, 8 வருஷங்களாக இந்த பிரச்சாரமும் செய்துவருகிறேன். இன்னும் பல தோழர்களின் கதை கேட்டால் தலைவரவர்களே அதிசயப் படுவார்கள். அதையெல்லாம் இங்கு விரிக்க நான் ஆசைப்படவில்லை. ஆதலால் தலை வரவர்கள் எனது கஷ்டமான பரிதாபகரமான நிலையைக் கண்டாவது இன்றைய சம்பவங்களை மறந்துவிடவேணுமாய் மறுபடியும் மறுபடியும் வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன் என்று சொன்னேன். முற்பகல் மகாநாடு முடிந்தபிறகு பிற்பகல் தோழர்கள் பாரதியாரவர்கள் சாவடி கூத்த நயினார் பிள்ளை அவர்கள் ஜாகைக்குச் சென்று தனிப்படவும் இருவருக் கும் சமாதானம் சொல்லிவிட்டு பிறகு பிற்பகல் தொழிலாளர் மகாநாட்டுக்கும் வந்து எனது கடமைகளைச் செய்தேன்.

மகாநாடு முடிந்தபிறகும் கடைசியாக தோழர் வல்லத்தரசு அவர்கள் மறுபடியும் பேச எழுந்து அப்பொழுதும் ஒரு முறை சில கடின பதங்களை உபயோகித்து விட்டு கடைசியாக இம்மாதிரி மகாநாடுகளில் சுயமரியாதை இயக்கக்காரர்கள் அல்லாதவர்களை உள்ளே புகவிடக்கூடாதென்றும், அவர்களை சேர்க்கவே கூடாதென்றும், சேர்த்ததால்தான் இப்படி நடந்ததென்றும்



tamilnavarasam.com

ஆதலால் தான் நடந்துகொண்டமாதிரி சரி எனப்பொருள்படவும் பேசி முடித்தார்.

ஆகவே இந்தமாதிரி நடவடிக்கையால் எனது மனம் சற்று புண்பட்டு விட்டதுடன் எனது நம்பிக்கையும் சற்று ஆட்டம் கொடுத்துவிட்டது. இது ஒரு புறமிருக்க நல்ல சமயத்தில் அதாவது நமது இயக்க கொள்கைகள் நம் எதிரிகளாலும் மற்றும் இந்தியாவில் உள்ள பல்வேறு கட்சிக்காரர்களாலும் ஒப்புக்கொள்ளத்தக்க சமயமாகவும் எல்லா இந்திய ஸ்தாபனம் என்னும் காங்கிரசுக்காரர்களாலும் ஒப்புக் கொள்ளக்கூடிய சமயமாய் இருக்கும் போதும், சுயமரியாதைக்காரர்கள் அல்லாதவர்களை உள்ளேவிடக் கூடாது என்றும் உள்ளேவிட்டால் இப்படித்தான் நடக்கும் என்கின்ற பொருளிலும் பேசினால் நலம் விளையுமா என்பது யோசிக்கத்தக்கதாகும்.

உண்மையைப் பேசப்போனால் சுயமரியாதைக்காரர்கள் என்று சொல்லி, கூடவே அளவளாவிக் கொண்டிருக்கிறவர்களைவிட காரியத் திலும் கொள்கையிலும் ஒழுங்கிலும் எவ்வளவோ சரியாய் நடந்து கொண்டு சுயமரியாதைக்காரர்கள் என்பவர்களில் சிலருடைய நடத்தைக்காகவும் வசவுக்காகவும் பயந்து கொண்டு கலந்துகொள்ள முடியாமல் இருக்கிறவர் கள் பலர் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆதலால் சுய மரியாதைக்காரர்கள் அல்லாதவர்கள் உள்ளே வந்தால் இப்படித்தான் நடக்கும் என்று நாம் எப்படி சொல்லமுடியும். இதுவரை நடந்த நமது மகாநாடுகளில் நமது சங்கங்களில் நமது கூட்டங்களில் எத்தனையோ வித அபிப்பிராயமுள்ளவர்களை கலக்கிக்கொண்டுதான் இருக்கிறோம். அவர் களால் எல்லாம் இயக்கத்திற்கு பலன்பெற்றிருக்கிறோமேயொழிய அவர்க ளால் அல்லது அவர்களுக்காக நமது கொள்கைகள் எதையும் விட்டுக் கொடுத்துவிடவில்லை. ஆதலால் இனியாவது இயக்க தோழர்கள் என்ப வர்கள் தங்கள் செய்கை சரியா தப்பா என்று யோசித்துப் பார்த்து தக்கபடி நடந்து கொள் வார்கள் என்கின்ற நம்பிக்கையின் மீது எழுதுகிறேன்.

தோழர் பாரதியாரவர்களையும் மகாநாட்டில் தெரிவித்துக் கொண்டது போலவும் தனியே தெரிவித்துக்கொண்டது போலவும் பத்திரிகை மூலமும் மேல்படி சம்பவத்துக்கு எனது வருத்தத்தை தெரிவித்து மற்றுமொருமுறை இச்சம்பவத்தை மறந்துவிடும்படியாக வேண்டிக்கொள்ளுகிறேன்.

**குடி அரசு - தலையங்கம் - 01.10.1933**



# மதக்கிறுக்கு

உலகில் மதங்கள் ஏற்பட்டு பல ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஆகி இருந்தாலும் மதங்களை ஏற்படுத்தினவர்கள் எல்லாம், அல்லது மதங்களின் மூல புருஷர்கள் எல்லாம் தெய்வீகச் சக்தி பொருந்தியவர்களா யும், தெய்வ சம்மந்தமுடையவர்களாயும், தீர்க்கத் தரிசன ஞானமுள்ள மகாத்மாக்களாயும் இருந்தார்கள் என்று சொல்லப்பட்டும் எல்லா மதக் கட்டளைகளும் தெய்வங் களாலேயே மூல புருஷர்கள் மூலம் உலகத்திற்கு இறக்கப்பட்டது என்று சொல்லப்பட்டும் இருந்தாலும் சதா சர்வ காலமும் அந்த அந்த மதப் பிரசாரம் செய்யப்படாவிட்டால் மதம் ஒழிந்து போய் விடுமே என்கின்ற பயம் எல்லா மதஸ்தர்களிடமும் இருந்துதான் வரு கின்றது. இந்தக் கருத்திலும், காரியத்திலும் உலகில் இன்னமதம் உயர்வு, இன்னமதம் தாழ்வு என்று சொல்லுவதற்கில்லை.

சாதாரணமாக ஒரு கோடி ரூபாயோ, அல்லது இரண்டு கோடி ரூபாயோ கையில் வைத்துக் கொண்டு ஆயிரம் ஆளுகளோ, அல்லது இரண்டாயிரம் ஆளுகளையோ நியமித்து 5, 6 பாஷைகளில் பத்திரிகைக ளையும் வைத்துக் கொண்டு ஏதோ ஒரு தாழ்த்தப்பட்ட மிருகத்தின் பேரால் ஒரு மதத்தைக் கற்பித்து அம்மிருகத்துக்கு சில “தெய்வீகத்தன்மை”யை கற்பித்து அது பல “அற்புதங்கள்” செய்ததாகக் கதைகள் கட்டிவிட்டு பிரசாரங்கள் செய்ய ஆரம்பித்துவிட்டால் கண்டிப்பாக சில வருஷத்திற்குள் லக்ஷக்கணக்கான மக்களை அம்மதத்தைப் பின்பற்றுபவர்களாகச் செய்து விடலாம். பிறகு அந்த மதத்தை எவனாவது குற்றம் சொல்லுவானேயானால் அவன் தண்டிக்கப் படவோ, வையப்படவோ, அடிக்கப்படவோ, கொலை செய்யப்படவோ ஆளாகும்படியும் செய்துவிடலாம்.

ஆதலால் மதங்களுக்கு ஜீவநாடியாய் இருந்துவருவது பணமும் பிரசாரமுமே அல்லாமல் அவற்றின் தெய்வீகத் தன்மையோ, உயர்ந்த குணமோ என்று எதையும் யாரும் சொல்லிவிடமுடியாது.

“சமீபகாலத்தில் ஒரு கிராமத்தில் ஒரு பெண்ணை ஒரு “பேய் பிடித்துக்கொண்டு” அந்த பெண்ணும் தலைவிரித்து ஆடத்தொடங்கினாள். அதற்காக ஒரு பேயோட்டியைக் கூப்பிட்டு அந்தப் பேயை ஓட்டச் சொன்ன



RangaRakes tamilnavarasam.com

தில் அந்தப் பேயோட்டி இந்தப் பெண்ணைப் பிடித்திருக்கும் பேய் யார் என்று கண்டுபிடிப்பதில் 2-நாள் செலவழித்து கடைசியாக 5, 6 வருஷத்திற்கு முன்னால் அவ்வூர் கிணற்றில் விழுந்து செத்துப்போன ஒரு மராட்டியன் அடுத்த ஜன்மத்தில் நாயாய் பிறந்து இந்தப் பெண் வீட்டில் வெகு செல்ல மாய் வளர்ந்து இந்தப் பெண்ணிடமும் மிக அன்பாய் இருந்து ஆறு மாதத்திற்கு முன் அதுவும் கிணற்றில் விழுந்து செத்து போனதால் அது பேயாகி அந்தப் பெண்ணைப் பிடித்துக் கொண்டது என்று சொன்னான். இதை அந்த ஊர்க் காரர்கள் நம்பினார்கள் என்ற குறியை இந்தப் பெண் தெரிந்தவுடன் பேய் ஆடும்போது அடிக்கடி நாய்மாதிரி குலைப்பதும் சிற்சில சந்தர்ப்பங்களில் மராட்டி பேச்சுமாதிரி பேசுவதுமாய் இருந்தாள். அதுமாத்திரமல்லாமல் தன்னைப் பிடித்திருக்கும் பிசாசு நாய்ப்பிசாசுதான் என்பதைக் காட்டுவதற்காக சில சமயங்களில் மலத்தைச் சாப்பிடவும் செய் வாள். மற்றும் வேறு பல நாய்களுக்கும் தின்பண்டம் போட்டு சதா 7, 8 நாய் களுடன் காமாதுர விளையாட்டும் விளையாடுவாள். இதைப் பார்த்த எல்லோருமே சிறிது கூடச் சந்தேகமில்லாமல் இந்தப் பெண்ணைப் பிடித் திருப்பது நாய்ப்பிசாசுதான் என்று தீர்மானித்துக் கொண்டார்கள்.”

மதங்களும் இதுபோலவேதான் தன்னை ஒரு மதக்காரன் என்று காட்டிக் கொள்ள வேண்டுமானால் மதக் குருக்கள் அல்லது மதகர்த்தர்கள் அல்லது மதப் பிரசாரக்காரர்கள் என்று சொல்லப்படுபவர்கள் என்ன சொல்லு கின்றார்களோ, எப்படி நடந்தால் மதபக்தி உடையவன் என்று சொல்லுவார் களோ அந்தப்படி நடக்கத்தான் ஒவ்வொரு மதபக்தனும் ஆசைப் படுகிறான்.

மதம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதென்றும் சைன் சுக்கும், மதத்துக்கும் சம்மந்தம் பார்க்கக் கூடாதென்றும் பகுத்தறிவு வேறு, மதக் கோட்பாடுகள் வேறு என்றும் இந்தக் காலம் வேறு அந்தக் காலம் வேறு என்றும் பெரியார்கள் நியமனங்களுக்குக் காரணகாரியங்கள் தேடக்கூடாது என்றும் ரிஷிமூலம், நதிமூலம் பார்க்கக்கூடாது என்றும் எல்லா மதக்காரர் களும் சொல்லி விடுவதால் உலகில் எந்த மூடனும் எதையும் சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம் என்கின்ற தைரியத்தின்மீதே மத ஆபாசமும், மத அயோக்கியத்தனங்களும் உலகில் நிலைத்து வருகின்றது.

இந்த லட்சணத்தில் உள்ள மதங்களுக்கு ஆள் பிடிக்கவேண்டும் என்கின்ற ஆர்வத்தின் மீது மதமாற்றப் பிரசாரங்களும் நடந்து வருகின்றன என்றால் இது “புழுத்ததின் மீது நாய் விட்டையிட்டது” என்கிற பழ மொழிப் படி மனிதர்களை மேலும், மேலும் மூடர்களாக்குவதாகவே இருந்து வரு கிறது. சாதாரணமாக இந்திய மக்களில் 100-க்கு 92 பேர்கள் தற்குறிகள், எழுதப்படிக்கத் தெரியாத மூடர்கள், இவர்களிலும் 100-க்கு 90 பேர்கள் நல்ல ஜீவனத்துக்கு மார்க்கமில்லாமல் வயிற்றுப்பிழைப்புக்கு எதையும் செய்ய



லாம் என்று கற்பிக்கப்பட்டிருக்கிறவர்கள். இப்படிப்பட்ட இவர்களிடத்தில் எது சொன்னால் ஏராது? என்ன சொன்னாலும் நம்பும்சக்தி எழுத்து வாசனை அறியாத மூடர்களுக்கே அதிகம். ஆதலால் இப்படிப்பட்ட ஜனங்களிடம் மதப் பிரசாரம் செய்து மதமாற்றுதல் வேட்டை ஆடுவது என்பது யாவருக் கும் சுலபமான காரியமாகும்.

இந்திய மக்களின் கல்வி அறிவு வாசனை அற்ற தன்மையும், பாமரத் தன்மையும், அடிமைத் தன்மையும் எல்லாம் சேர்ந்து உலகத்தில் வேறு எந்த தேசத்திலும் இல்லாத அவ்வளவு மதங்களும், மத வேற்றுமைகளும், மதமாற்றமும் தாண்டவமாடுகின்றன. இந்தியாவில் இந்துக்கள், கிறிஸ்து வர்கள், முஸ்லீம்கள், புத்தர்கள், யூதர்கள், பாரசீகர்கள், சீக்கியர்கள், ஆரிய சமாஜிகள், வைணவர்கள், சைவர்கள், ஸ்மார்த்தர்கள் முதலிய கடவுள் மாறு பாடுள்ளவர்களும், மதக்கர்த்தாக்கள் மாறுபாடுள்ளவர்களும், மதக்கோட் பாடுகளின் அருத்த மாறுபாடுள்ளவர்களுமாக எத்தனையோ பிரிவினர்கள் இருந்துகொண்டு வெகுகாலமாகவே மதமாற்றப் பிரசாரம் செய்து கொண்டு தான் வருகிறார்கள்.

ஆனால் இந்த மதங்களில் மனித வாழ்க்கை தத்துவத்தில் ஏதாவது ஒன்றுக்கொன்று பிரமாத வித்தியாசங்கள் இருக்கின்றதா என்று பார்த்தால் ஒன்றுமே காணமுடியாத நிலையில்தான் இருந்துவருகின்றன.

எல்லா மதத்துக்குமே-ஒரு கடவுள் உண்டு.

மேல்லோகமுண்டு.

மோட்ச நரகமுண்டு.

ஆத்மா உண்டு.

செத்தபிறகு இந்த ஆத்துமா அல்லது மனிதன் அவனவன் நன்மை தீமைக்கு ஏற்றவிதம் மோட்ச நரகம் அனுபவிப்பது என்கின்ற கொள்கை களை வைத்து வித்தியாசமில்லாமல் நடந்து வருகின்றது.

பிரத்தியட்ச அனுபவத்தில் எல்லா மதத்திலும் “அயோக்கியர்கள்” “யோக்கியர்கள்” இருந்து வருகிறார்கள்.

எல்லா மதத்திலும் ஏழைகள், பணக்காரர்கள் இருக்கிறார்கள். எல்லா மதத்திலும் எஜமான், கூலியாள் இருக்கிறார்கள். எல்லா மதத்திலும் உற்சவம், பண்டிகை இருக்கின்றன. எல்லா மதத்திலும் வணக்கம், தொழுகை, பிரார்த்தனை, ஜபம், தபம் இருக்கின்றன. எல்லா மதக் கடவுள்களும் தொழுகை, பிரார்த்தனை, வணக்கம், பூசை ஆகியவைகளுக்கு பலன்கள் கொடுக்கின்றன.



RangaRakes tamilnavarasam.com

எல்லா மதக் கடவுள்களும் கண்களுக்கு தோன்றாததும் மனத்திற்கு படாததும், ஆதி, அந்தம், ரூபம், குணம், பிறப்பு, இறப்பு முதலியவைகள் இல்லாதவைகளுமாகவே இருக்கின்றன. எல்லா மதங்களும், கண்களுக்கும் மனதிற்கும் தோன்றக் கூடிய எந்த வஸ்துவுக்கும் ஒரு கர்த்தா இருக்க வேண்டும் என்றும், ஆனால் கண்களுக்கும், மனதிற்கும் எட்டாத ஒரு வஸ்துவாகிய கடவுளுக்கு ஒரு கர்த்தா இல்லையென்றும் தான் சொல்லு கின்றன. ஒரு மதமாவது என் கடவுள் கண்ணுக்குத் தெரியக்கூடியது என்றோ, என்வேதமாவது தனது கோட்பாடுகள் எல்லாம், மக்கள் எல்லோ ரும் ஏற்று நடக்கக் கூடியதாய் இருக்கின்றது அல்லது நடக்கக் கூடியதாய் செய்ய சக்தி உள்ள தாய் இருக்கின்றது என்றோ சொல்ல யோக்கியதை உடையதாக இல்லை. எல்லா மதக்காரர்களுக்கும் பசி, தாகம், நித்திரை, புணர்ச்சி, இன்பம், துன்பம், ஒன்று போலவே இருக்கின்றன. எல்லோருடைய வேதம் கடவுளாலும் கடவுள் தன்மை உடையவர்களாலும் தான் உண்டாக் கப்பட்டதாய் சொல்லப் படுகின்றன. எல்லா மதக்காரர்களுக்கும் ஒவ்வொரு வித அடையாளம் இருக்கின்றன. இந்த நிலையில் மதப்பிரசாரத்தால், மதமாற்றத்தால் மனிதர் களுக்கு என்ன லாபம் என்பது விளங்கவில்லை.

சாதாரணமாக இந்தியர்களில் 8 கோடி முஸ்லீம்கள் இருக்கிறார்கள். 1 கோடி கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். சுமார் 10 கோடி வைணவர்கள் இருக் கிறார்கள், 5 கோடி சைவர்கள் இருக்கிறார்கள்.

மற்றும் கலப்பு மதம் உள்ளவர்கள் மதக் குறிப்பு இல்லாதவர்கள் ஏராளமாய் இருக்கிறார்கள் என்று உத்தேசமாகச் சொல்லக்கூடுமானாலும் இவர்கள் பெரும்பான்மையோர் சமீப காலங்களில் அதாவது சுமார் 1000, 2000 வருஷங்களுக்குள் மதமாற்றமடைந்தவர்கள் என்று சொல்லலாமா னாலும் இவர்களின் வாழ்க்கையில் உயர்வு தாழ்வு என்ன? என்பதை நன்றாய் பார்ப்போமேயானால் ஒருவித மேன்மையும் எந்த ஒரு தனி மதக் காரருக்கும் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

அதாவது அரசியலிலாகட்டும், பொருளியலிலாகட்டும், அறிவியலி லாகட்டும், சமூதாய வாழ்க்கையிலாகட்டும், ஆண் பெண் தன்மையிலா கட்டும், எல்லோரும் ஒரு மாதிரியாகவேதான் இருந்து வருகின்றார்கள்.

ஆகையால் இந்தியாவுக்கோ, அல்லது உலகத்துக்கோ இனி மதம் ஒழிப்புப் பிரசாரம் வேண்டுமா? அல்லது மதம் மாற்று பிரசாரம் வேண்டுமா? என்பதை ஒவ்வொரு அறிவாளியும் யோசிக்க வேண்டியது முக்கிய கடமை யாகும். மதம் மாற்றுதல் மதப்பிரசாரம் ஆகிய காரியங்களால் சமீப காலத் திற்கு முன்பு உலகிலும், குறிப்பாக இந்தியாவிலும், சிறப்பாக தென்னிந்தியா விலும் நடந்த முட்டாள்தனமான-மூற்கத்தனமான பலாத்காரக் கொடுமைச் செயல்களும், கலகங்களும், அடிதடிகளும், குத்து வெட்டுகளும், கொலை களும், சித்திரவதைகளும் எவ்வளவு என்பதற்கு சரித்திரங்கள், புராணங்கள்



பிரத்யபட்ச அனுபவங்கள், எத்தனையோ மலிந்து கிடக்கின்றன. இவை களையெல்லாம் உத்தேசித்தாவது இனிவரும் சுயமரியாதை அறிவியக்க சமதர்ம உலக ஆட்சியில் மதவிஷயத்தைப்பற்றி ஆதரித்து எவராவது தெரு வில் நின்று பேசினாலும், தெருவில் புஸ்தகங்கள் வைத்து விற்பனை செய் தாலும் பத்திரிகைகளில் எழுதினாலும் அவர்களெல்லாம் கடுமையான தண்டனைக்குள்ளாவார்கள் என்று சட்டம் செய்யப்படுமானால், உலக மக்கள் பிரிவினையற்று, குரோதமற்று, மடமையற்று தோழோடு தோழ் புனைந்து தோழர்கள் போல் வாழமுடியும் என்பதோடு மத தத்துவங்களின் பலனால் இன்று உலக மக்கள் அனுபவிக்கும் உயர்வு தாழ்வு நிலை ஒழிந்து சகல துறைகளிலும் சமத்துவத்துடன் வாழ முடியும் என்றும் வற்புறுத்திக் கூறுகிறோம். இந்த அபிப்பிராயமானது மதங்கள் தெய்வத்தினாலும் தெய் வாம்சம் பெற்ற வர்களாலும் உண்டாக்கப்பட்டது என்கின்ற நம்பிக்கையை உறுதியாயும் உண்மையாயும் உடையவர்களுக்கு விரோதமாய் இருக்காது என்றும் கருதுகிறோம். ஏனெனில் அப்படிப்பட்ட மதப்பிரசாரம் இல்லா விட்டால் மறைந்து போகும்-அழிந்துபோகும் என்று அவர்கள் (மதபக்தர் கள்) பயப்பட மாட்டார்கள்.

**குடி அரசு - தலையங்கம் - 08.10.1933**



RangaRakes tamilnavarasam.com

# முதல் மந்திரி கவனிப்பாரா?

சமீபத்தில் நடந்த திருப்பத்தூர் தாலூகா மகாநாட்டுக்காக வாணியம் பாடிக்குச் சென்றிருந்ததில் அங்குள்ள முனிசிபல் நிர்வாகம் மிக மோசமாய் இருக்கக்கண்டோம். முனிசிபாலிட்டியில் எப்பொழுதும் இந்து முஸ்லீம் உணர்ச்சி தகராறு இருப்பதால் அவ்விடத்திய அநேக முக்கிய காரியங் களை சரியாய் கவனிக்கமுடியாமல் போகின்றதாய் தெரிகிறது. ஊர் ரோட்டு கள் மிக சீர்கேடாய் இருக்கிறது. சுகாதாரம் நடுத்தெருவில் ஜலதாரை (கசு மாலத் தண்ணீர்) ஓடுகிறது. ரோட்டின் இரு மருங்கும் கச்கூசாக உபயோகப் படுத்தப்படுகின்றன. வேறு பல உள்துரைப் புகார்கள் இருப்பதாகச் சொல்லப் படுவதைக் கவனிக்காவிட்டாலும், மத உணர்ச்சித் தகராறுகள் இருப்பதாகச் சொல்லப்படுவதைக் கவனிக்காவிட்டாலும் இதன் பயனாகவே அல்லது வேராலோ நல்ல நிர்வாகம் கெட்டிருக்கிறது என்பது பிரத்தியட்சம். இதுசமயம் அங்கு காலரா பலமாக இருக்கிறது. 100 கேசுக்கு 80 கேசு இறந்து போகின்றது. இந்தக் கொடிய தொத்து வியாதிக்கு எவ்வித முயற்சி எடுத்துக் கொண்டதா கவும் காணப்படவில்லை. சுகாதார அதிகாரிகளைக் காணவே முடியவில்லை. தாலுகா ஜில்லா போர்டாவது கவனித்ததாகத் தெரியவில்லை.

இதுதவிர இந்து முஸ்லீம் ஜனசமூகம் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட சரிசமமாய் இருந்தும் ரிவினியூ வரும்படியும் அதுபோலவே இருந்தும் கவுன்சிலர்களின் எண்ணிக்கை முஸ்லீம்களில் பகுதிதான் இருப்பதாகத் தெரிகின்றது. பெண்களுக்கு ஸ்தானமே ஒதுக்கப்படவில்லை. இந்தக்குறை கள் இந்துக்கள் என்பவர்கள் மனதில் புகைந்து கொண்டிருப்பதாலேயே நிர்வாகத்தில் கட்சியோ இல்லாவிட்டால் மனஸ்தாபமோ இருந்துவர காரண மாய் இருக்கிறது. மத வித்தியாசம் உள்ளவரை எங்கும் இப்படித்தான் இருக்குமானாலும் இவ்விதக் கட்சி மனஸ்தாபங்களும் நிர்வாக சீர்கேடு களும் முதிர்ந்து பொதுஜனசமூகத்துக்கு பெருங்கெடுதிக்கு இடம் கொடாமல் இருப்பதற்காக சர்க்கார் இதை கவனித்து இவை உண்மை என்று உணர்வார் களானால் தயவு செய்து வாணியம்பாடி முனிசிபாலிட்டிக்கு உடனே ஒரு நிர்வாக அதிகாரியை நியமிக்கவேண்டுமாய் தெரிவித்துக்கொள்ளுகிறோம். தோழர் கனம் முதல் மந்திரி அவர்களும் இதை கவனிப்பார் என்று எதிர் பார்க்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை -15.10.1933**



# தீபாவளி - முட்டாள்தனம்

தோழர்களே!

தீபாவளி கொண்டாடப்போகிறீர்களா? அதன் கதை தெரியுமா? பகுத்தறிவுள்ள மனிதனுக்குப் பிறந்தவர்களாய் இருந்தால் இம்மாதிரி இழி வும், பழிப்பும், முட்டாள் தனமுமான காரியத்தைச் செய்வீர்களா? தீபா வளியை விளம்பரம் செய்கின்றவர்கள் யார்? சோம்பேறியும், துரோகியும், அயோக்கி யர்களுமான கழுகுக் கூட்டமல்லவா?

கதர் கட்டினால் தான் சரியான தீபாவளி என்று பல சுயநல சூக்ஷிக் காரர்கள் சொல்லுகிறார்கள். இது மகா மகா பித்தலாட்டமாகும். இதற்கும் பார்ப்பன அயோக்கியர்களுடன் அரசியல் அயோக்கியர்களும் சேர்ந்து அனுகூலமாயிருந்து மக்களை ஏமாற்றுகிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும். சொன்னதை எல்லாம் கேட்பதுதானா பார்ப்பனரல்லாத மக்களின் நிலை? மலம் சாப்பிட்டால் மோக்ஷம் வரும் சுயராஜ்யம் வரும் என்றால் கண்ணை மூடிக்கொண்டு சாப்பிடுவதுதான் மததர்மமா? தேசீய தர்மமா? மதத்துக்காக மாட்டு மலம் சாப்பிடுவது போல் அரசியலுக்காக பணத்தை வீணாக்குவதா? சென்னையில் தீபாவளிக்கும், கதருக்கும் செய்யப்பட்டி ருக்கும் விளம்பரம் குச்சிக்கார தாசி விளம்பரத்தையும் தோற்கடித்து விடும் போல் காணப்படுகின்றன. இந்த செலவுகள் யார் தலையில் விடியும் தெரியுமா? புத்தி இருந்தால் பிழைத்துக்கொள்ளுங்கள். கோபிப்பதால் பயனில்லை.

*குறிப்பு: ஒவ்வொரு சு.ம.சங்கத்திலும் நாளையே தீபாவளியைப் பற்றி பொதுக்கூட்டம் கூட்டி மக்களுக்கு தீபாவளிப் புரட்டையும் கதர் புரட்டையும் எடுத்துச் சொல்லக் கோருகிறோம்.*

**குடி அரசு - அறிக்கை - 15.10.1933**



RangaRakes tamilnavarasam.com

## காந்தி ஜயந்தி

கிருஷ்ண ஜயந்தி ஒழிந்து 8 நாள்கூட ஆகவில்லை. அதற்குள் காந்தி ஜயந்தி தோன்றிவிட்டது. "தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்" என்பது போல் ஜனங்களின் மூடத்தனத்தை ஆயுதமாக வைத்துக் கொண்டு அநேக அக்கிரமங்கள் நாட்டில் நடைபெறுகின்றன.

தோழர் காந்தியவர்கள் இந்திய அரசியலில் தலையிட்டு இன்றைக்கு ஏறக்குறைய 15 வருஷங்கள் ஆகின்றன. இந்தப் பதினைந்து வருஷ காலங்களில் அவர் கோடிக்கணக்கான ரூபாய்களை வசூலித்து செலவு செய்யச் செய்தார். பதினாயிரக்கணக்கான நபர்களை அடி, உதை, வசவு முதலியவைகள் படச்செய்தார். 40 ஆயிரம் 50 ஆயிரக்கணக்கான பேர்களை சிறை செல்லச் செய்தார். இந்திய அரசியல் உலகில் மிதவாதிகள், அமித வாதிகள், ஜஸ்டிஸ்காரர்கள், இந்து, முஸ்லீம்கள், சீக்கியர்கள் முதலிய எல்லாக் கூட்டத்தாரிடமும் சர்வாதிகாரப் பட்டமும் பெற்றார். மேல்ஜாதிக்காரர்கள், ஏழைகள், பணக்காரர்கள் முதலிய எல்லோருக்கும் தாமே தர்ம கர்த்தாவாக கருதப்பட்டார். காங்கிரஸ் ஸ்தாபனம் என்பதைத் தனது கால் சுண்டுவிரலால் மிதித்து அடக்கித் தனது இஷ்டம் போல் ஆட்டிவைத்தார் என்கின்றதான பெருமைகளை எல்லாம் பெற்றவர் என்பவராவார்.

அன்றியும் (ஆத்மா என்பதாக ஒன்று உண்டா? இல்லையா? என் கின்ற வாதம் தலை நிமிர்ந்து நிற்கின்ற காலத்தில்கூட) பெரும்பான்மை மக்க ளால் மகாத்மா என்று கொண்டாடப் படும்படியாகவும் செய்துகொண்டார்.

இன்னும் அநேக காரியம் செய்தார் என்றும் வைத்துக்கொள்ளலாம். இவையயெல்லாம் சாதாரண (அதாவது சராசரி) மனிதனால் செய்துகொள்ள முடியாத காரியம் என்றும் ஒப்புக்கொள்ளுவோம். ஆனால் இவ்வளவு செய்தும் இவ்வளவு சக்திஉடையவராய் இருந்தும், இவ்வளவு பெருமை பெற்றும் இவரால் மனித சமூகத்துக்கு நடந்த காரியம் என்ன? இதனால் எல்லாம் ஏற்பட்ட பலன் என்ன? என்பதே அறிவியக்கக்காரர்கள் கவனிக்க வேண்டிய விஷயம். இதுஒருபுறமிருக்க,



இப்போது அப்படிப்பட்ட காந்தியாரின் ஆட்ட பாட்டமெல்லாம் அடங்கி கடைசியில் "எல்லாம் கடவுள் செயலில்" வந்து நின்று "எனக்கு ஒன்றும் புரியவில்லையே" "என்னை இருள் சூழ்ந்து கொண்டதே" "மேலால் என்ன செய்வது என்பது எனக்கு விளங்கவில்லையே" "கடவுள் ஒரு வழிகாட்ட வேண்டியிருக்கிறதே" என்கின்ற பல்லவியில் வந்து விட்டார்.

இவ்வளவோடு மாத்திரமல்லாமல் அவரிடம் உள்ள கடைசி ஆயுதத் தையும் காட்ட ஆரம்பித்துவிட்டார். அதாவது பொதுவுடமைப் பூச்சாண்டி யைக் காட்டுவது. எப்படியெனில் தன் வாயால் ஒன்றும் சொல்லாமல் தன்மீது எவ்வித பொறுப்பும் போட்டுக்கொள்ளாமல் தோழர் ஜவகர்லால் அவர்கள் வாயினால் பொருளாதாரத்தைப் பற்றிப் பேசுவதன் மூலம் பொதுவுட மையை ஜாடைகாட்டச் செய்து ஓரளவுக்கு அதை ஒத்துக்கொள்ளுவது போல் (பின்னால் எப்படி வேண்டுமானாலும் பேசுவதற்கு இடம் வைத்துக் கொண்டு) பேசி சர்க்காரை மிரட்டுகிறார்.

அதாவது தன்னுடன் சர்க்கார் ராஜிக்கு வரவில்லையானால் "பொது வுடமைக் கிளர்ச்சிக்கு இடம் கொடுத்து விடுவேன்" என்கின்ற ஜாடை. இதைப் பற்றி மற்றொரு சமயம் விவரிப்போம்.

இதை ஏன் அடிக்கடி சொல்லுகிறோம் என்றால் தோழர் காந்தியார் முன்பு பட்டினியினிமித்தம் வெளி வந்து பூனா மகாநாடு நடத்தி விட்டு மறு படியும் தனிப்பட்ட சத்தியாக்கிரகம் செய்து சிறை செல்லும் போது சர்க்கா ருக்குக் கொடுத்த ஒரு ஸ்டேட்மெண்டில் இதே மாதிரி சர்க்காரை மிரட்டு வதற்குப் பொதுவுடமை ஜாடையை உபயோகித்துக் கொண்டார்.

அதாவது "ஜனங்களிடம் நான் கலந்து பார்த்ததில் மேல் ஜாதிக் காரருக்கும், கீழ்ஜாதிக்காரருக்கும், பணக்காரருக்கும், ஏழைகளுக்கும், பெண் களுக்கும், ஆண்களுக்கும் இடையில் சீர்கெட்டு இருக்கிறதாக அறிந்தேன். இதனால் சொத்துக்கும், உயிருக்கும் ஆபத்து வந்து விடுமோ என்று அவர வர்கள் பயப்படுகிறார்கள். இந்த சமயத்தில் அஹிம்சாவாதியான நான் ஜெயிலில் இருப்பதே முறை" என்று சொல்லியிருக்கிறார். இதற்கு ராஜ கோபாலாச்சாரியாரும் ஒத்துப்பாடி இருக்கிறார்.

இப்பொழுது ஜெயிலில் இருந்து வந்த பிறகும் முன்காட்டியபடி தோழர் ஜவகர்லாலின் பொருளாதாரத் திட்டத்தை ஒப்புக்கொள்ளுவ தாகவும் ஆனால் அவ்வளவு தூரம் போக முடியாதென்றும் சொல்லுகிறார். எவ்வளவோ முக்கியமானதும் அவசியமானதும், கட்டாயம் நடந்து தீர வேண்டியதுமான ஒரு கொள்கையைக் காரியத்தில் நடத்துவிக்கின்றதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யாமல் அல்லது அதுசெய்ய முடியாவிட்டால் பேசாமல் வாயை மூடிக்கொண்டாவது இருக்காமல் அதை வீண்மிரட்டலுக்



RangaRakes tamilnavarasam.com

கும் தனது சுயநலத்துக்கும் உபயோகப்படுத்தி "அதில் பலாத்காரம் வந்து விடும் ரத்தக்" களரி ஏற்பட்டுவிடும் என்றெல்லாம் பேசி கெடுக்கச் செய்வது என்றால் யார் தான் இச்செய்கையை பொருக்கமுடியும்?

அன்றியும் மனித சமூகத்திய இயற்கை சக்திகளையெல்லாம் பாழாக்கி இயற்கையான வழிகளையெல்லாம் அடைத்துச் செல்வவான்களையும், சூட்சிக்காரர்களையும் (பார்ப்பனர்களையும்) சுவாதீனப்படுத்திக் கொண்டு காரியத்துக்கு உதவாத வழிகளில் மக்களைத் திருப்பி மனித சமூகத்தைப் பாழாக்கி வைத்த பெருமையை என்றென்றும் கொண்டாடுவதற்கு அறிகுறியாய் காந்தி ஜயந்தி வருஷா வருஷம் கொண்டாடுவதென்றால் இதன் அக் கிரமத்திற்கு எப்படித்தான் பரிகாரம் செய்வது என்பது நமக்கு விளங்க வில்லை. தோழர் காந்தியாருக்கு இன்று ஜயந்தி கொண்டாடுவதற்கு வேண்டிய யோக்கியதை வந்ததற்குக் காரணம் (இவரால் இதுவரை மக்களுக்கு யாதொரு பயனும் ஏற்படவில்லை என்றாலும்) பார்ப்பனர்களுக்கு அனுகூலமாய் இருந்து வந்த காரணமே ஜயந்தி கொண்டாடும் யோக்கியதையை சம்பாதித்து கொடுத்து விட்டது. நமது நாட்டுப் பார்ப்பனர்களுக்கு இருக்கும் அபார சூழ்ச்சித் தன்மைக்கும் அற்புத புரட்டுத் தன்மைக்கும் இந்த காந்தி ஜயந்தி ஒரு பெரும் உதாரணமாகும். இன்று ஜயந்தி கொண்டாடத்தக்க "பெரியார்கள்" எல்லாம் இந்த யோக்கியதை அடைந்தவர்கள் தான் என்பதும் விளக்க இது ஒரு உதாரணமாகும்.

கம்ப ராமாயணத்தில் ஆரம்பத்தில் கம்பன் பார்ப்பனர்களுக்குச் சொன்ன காப்பு விருத்தத்தின்படியே தோழர் காந்தியாரும் பார்ப்பனர்களை உயர்த்தி அவர்களுக்கு அடி பணிந்து வந்ததாலேயே இன்று காந்தி ஜயந்தி நடந்து வருகிறது. அதாவது,

"உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்,
நிலை பெறுத்தலும் நீங்கலு நீங்கிலா,
அலகிலா விளையாட்டுடையா ரவர்,
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே"

என்ற பாட்டுப்பாடியே தூணைத் துரும்பாக்கவும், துரும்பைத் தூணாக் கவும் உள்ள பார்ப்பன சக்தியில் இன்று எவ்வளவோ காரியங்கள் அஸ்தி வாரம் சிறிதுகூட இல்லாமல் நடந்துவருகிறது. அதில் ஒன்றுதான் இந்த காந்திஜயந்தி. இதுபோலவே மற்றொரு விஷயம் என்னவென்றால்,

தோழர் அன்னிபெசண்டம்மையார் செத்து பத்து நாள்கூட ஆக வில்லை. ஆனாலும் அந்தம்மையாரின் சூக்ஷம சரீரம் அதற்குள் பூலோக ஜனங்களோடு பேச ஆரம்பித்து விட்டது. இந்த அம்மையாருக்கும் இவ்வளவு யோக்கியதை ஏற்பட்டதின் காரணம் அந்தம்மாளும் பார்ப்பனீய தாசராய் இருந்து பார்ப்பனப் பிரசாரம் செய்து வந்து செத்ததேயொழிய வேறு ஒன்றுமில்லை.



தவிர, தோழர் காந்தியாருக்கு ஜெயந்தி கொண்டாடும் விஷயத்தில் பார்ப்பனரல்லாத மக்களுக்கு கடுகளவு புத்தியோ சுயமரியாதை உணர்ச்சியோ இருந்திருக்குமானால் பார்ப்பனரல்லாதார் இதில் கலந்து கொள்ளமுடியுமா? என்பதை வாசகர்கள் தான் யோசித்துப் பார்க்க வேண்டும். ஜாதி பாகுபாடு (வருணாச்சிரமம்) விஷயத்தில் தோழர் காந்தியவர்கள் பார்ப்பனரல்லா தாருக்கு நிரந்தர இழிவை உண்டாக்கி இருக்கும் விஷயமும், ஹரிஜன இயக்கம் என்னும் பேரால் செய்துவரும் சூட்சியும் பார்ப்பனரல்லாத மக்கள் தெரியாது என்று சொல்லிவிடமுடியாது. வருணாச்சிரம தர்மத்தை ஆதரிப்ப தினாலும் உறுதிப்படுத்துவதினாலும் பார்ப்பனரல்லாதார் நிலை என்னவா கின்றது?

அன்றியும் "ஹரிஜன முன்னேற்ற" விஷயத்தில் காந்தியார் தனது வாக்கு மூலத்தில் குறித்தது என்னவென்றால்,

"கோவில், குளம், கிணறு, பள்ளிக்கூடம் முதலியவைகளில் பிராமணரல்லாதவர்களுக்கு ஏற்பட்டுள்ள சலுகைகள் அனைத்தும் தீண்டப் படாத வர்களுக்கு ஏற்படவேண்டும்".

"இதுவரை தீண்டப்படாதவர்களாகக் கருதப்படுபவர்கள் இனி சூத்திரராகக் கருதப்படுவார்கள்"

"தீண்டாமை ஒழிந்தபின் பிராமணர்களுக்கும் தீண்டாதவர்களுக்கும் எப்படிப்பட்ட சம்மந்தம் எப்படிஇருக்குமென்றால் பிராமணர்களுக்கும், பிராமணரல்லாதார்களுக்கும் இருந்துவரும் சம்மந்தம் போலிருப்பார்கள்".

"வருணாச்சிரமதர்மத்தை மதத்தின் தத்துவக் கொள்கைகளுக்கு ஏற்றபடி சீர்திருத்தம் செய்யப்படவேண்டும்"

என்று சொல்லியிருக்கிறார்.

இது "ஜெயபாரதி" என்னும் பத்திரிகையின் காந்தி ஜெயந்தி மலர் 9ம் பக்கத்தில் காந்தியாரின் வாழ்க்கைச் சம்பவ நிகழ்ச்சி என்ற தலைப்பின் கீழ் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

இதைப்பற்றி முன்பு ஒருதடவை எழுதியும் இருக்கிறோம். பார்ப்பனரல்லாத தேசீயவாதிகள் என்று சொல்லிக்கொள்ளும் இரண்டொருவர்கள் இடமும் இதைப்பற்றிப் பிரஸ்தாபித்தும் இருக்கிறோம். ஆனால் அவர்கள் தேசம் பெரியதேயொழிய தேசத்தில் தன்னுடைய நிலைமை எப்படி இருந்தாலும் கவலை இல்லை என்ற உணர்ச்சி உள்ளவர்கள் போலவே காட்டிக்கொண்டார்கள்.



RangaRakes tamilnavarasam.com

மானத்தை விற்று மனிதத்தன்மையை இழந்து வாழ்ந்து தீரவேண்டிய அளவு சோம்பேறிகளும், கோழைகளுமானவர்களுக்குத் "தேசம் பெரிது" என்கின்ற சாக்கு ஒரு உற்ற தோழனாய் இருந்து வருகின்றது, வந்தும் இருக்கிறது என்று கருதிக்கொண்டு அந்த சம்பாஷணையை நிறுத்திக் கொண்டோம்.

ஆகவே இப்படிப்பட்ட நிலையில் பார்ப்பனரல்லாதவர்களை நிரந்தரமாய் வைக்கப் பாடுபட்ட ஒரு "மகானின்" ஜெயந்திக்குப் பார்ப்பன ரல்லாதார் கூடியிருந்து கொண்டாடுவதென்றால் இதற்கு என்னபேர் வைப்பது என்பது நமக்கு விளங்கவில்லை. விஷயம் இவ்வளவோடு முடியவில்லை. ஏனென்றால் காந்தி ஜயந்தியை விட மானமற்றதும், இழிவா னதும் மடமை யானதுமான ஒரு காரியமாகிய தீபாவளி என்னும் ஒரு பண்டிகையையும் நாளை கொண்டாடப்போகும் சுயமரியாதை அற்ற தன்மை, காந்தி ஜயந்திக்கு ஒரு உதாரணமாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 15.10.1933**



# சி.டி. நாயகம்

தோழர் சி.டி.நாயகம் அவர்கள் கூட்டுறவு (கோவாப்பரேட்டிவ்) உதவி ரிஜிஸ்ட்ரராக இருந்து அந்த இலாக்காவில் உள்ள பார்ப்பன ஆதிக்கத்தை யும் ஆக்ஷிகளையும் அறிந்து ஓரளவுக்காவது அவைகளை அகற்ற எவ்வளவோ அவர் முயற்சித்து வந்தது யாவருக்கும் தெரிந்த விஷயமாகும். இதன் பயனாய் பார்ப்பனர்களாலும் பார்ப்பனக் கூலிகளாலும் அவர் எவ்வளவோ தொல்லைகளைச் சமாளிக்க வேண்டியிருந்ததும் யாவருக்கும் தெரிந்த விஷயமாகும்.

அப்படிப்பட்ட வீரமும், தீரருமான நாயகம் இப்போது தனது 55-வது வயதில் உத்தியோகத்தைவிட்டு நீங்கி பென்ஷன்பெற்று வாழ்ந்துவரு கிறார். இனி இவரது வாழ்நாள் பெரும்பாலும் பொதுஜன வாழ்விலேயே கழிக்கப் படும் என்பதில் யாருக்கும் ஆக்ஷேபனையிராது.

தோழர் நாயகம் அவர்களும் அவரது வாழ்க்கைத் துணையாரும் மக்களும் சுயமரியாதை இயக்க விஷயத்தில் மனப்பூர்வமாய் ஈடுபட்டு உழைத்து வந்ததும் யாவரும் அறிவர்.

ஆதலால் தோழர் நாயகம் அவர்கள் உத்தியோகத்திலிருந்து விலகி யது சுயமரியாதை இயக்கத்துக்கு ஒரு பெரும் ஆதரவு என்பதைத் தெரி வித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 15.10.1933**



RangaRakes tamilnavarasam.com

# தோழர்கள் சிங்காரவேலுக்கும் பொன்னம்பலத்துக்கும் சமாதானம்

சென்ற வாரத்திற்கு முந்திய வாரம் தோழர் சிங்காரவேலு அவர்களால் ஒரு வியாசம் எழுதப்பட்டிருந்ததை நேயர்கள் அறிந்திருப்பார்கள். அதற்கு நாம் ஒரு சமாதானம் எழுதியிருக்கவேண்டும். ஆனால் பிறகு பார்த்துக் கொள்ளுவோம் என்று சற்று அசதியாக இருந்துவிட்டோம். இதற்குள் மற்றொரு வியாசம் தோழர் பொன்னம்பலம் அவர்களால் எழுதப்பட்டு இவ்வாரம் மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே மேற்கண்ட இரண்டு வியாசத்தைப்பற்றியும் இவ்வாரம் நமத பிப்பிராயத்தை எழுதலாம் என்று கருதி இத்தலையங்கம் எழுதுகிறோம்.

## தோழர் சிங்காரவேலுக்கு

தோழர் சிங்காரவேலு அவர்களின் வியாசத்தின் கருத்தைச் சுருக்க மாகக் கூறவேண்டுமானால், "சமதர்மவாதி அல்லாதவர்களையும் சம யோசிதமாய் பேசுபவர்களையும், மேல் பூச்சுக்கு அனுகூலமாய் முகம் துடைக்கப் பேசுகின்றவர்களையும் நம் இயக்கத்தோடு சம்மந்தம் வைத்துக் கொள்ள இடங்கொடுக்கக் கூடாது" என்பதேயாகும்.

மேலும், "அப்படிப்பட்டவர்கள் நம் மகாநாடுகளில் தலைமை வகிக்கவிட்டு வருகின்றபடியால் கூட்டத்தில் குழப்பமும், மாச்சரியமும், விறோதமும் ஏற்படுகின்றன" என்பதும் அவரது வியாசத்தின் கருத்தாகும்.

இந்தக் கருத்துக்கள் சற்றேரக்குறைய திருநெல்வேலி மகாநாட்டு நிகழ்ச்சிகளை சரி என்று ஆதரிப்பதாகவே நமக்குத் தோன்றுகின்றது. ஆத லால் இதற்கு நமது சமாதானத்தைக் கூறவேண்டியது நம் கடமையாகும்.

சுயமரியாதை இயக்கத்துக்கு சில திட்டங்களை லட்சியமாகவும் சில திட்டங்களை காரியாம்சையில் நடத்தவும் ஈரோடு வேலைத்திட்டக் கூட்டத் தில் தீர்மானித்திருப்பது யாவரும் அறிந்ததே என்றாலும் காரியாம்ச திட்டத் திற்கு சுயமரியாதை சமதர்ம திட்டம் என்பதாகப் பெயர் கொடுத்து அதை



மாகாண மகாநாட்டில் ஊர்ச்சிதப்படுத்த எதிர்பார்த்து அதுவரையில் அத் திட்டங்கள் பிரசார தத்துவத்தில் இருக்கவேண்டுமென்கின்ற கருத்தின்மீது பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது.

அன்றியும் இப்படி இரண்டுவிதமாக அதாவது லக்ஷியம் ஒரு விதமாகவும், திட்டம் ஒரு விதமாகவும் பிரித்து ஏற்பாடு செய்ததற்குக் காரணமும் அப்போதே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதென்னவென்றால், லட்சியத்தை இப்போதே எல்லோரும் ஒப்புக் கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாதென்றும், லட்சியத்தை ஒப்புக் கொள்ளாதவர்களும் கூட நம்முடன் இருந்து வேலை செய்யத்தக்க மாதிரி யிலும் கூடியவரை யாரும் ஆக்ஷேபிக்க முடியாத மாதிரியிலும் ஒரு திட்டம் வகுக்கவேண்டும் என்கின்ற எண்ணத்தின்மீதுமே ஒரு திட்டம் வகுத்து அதற்கு சமதர்ம திட்டம் என்று பெயர் கொடுத்திருப்பது அக் கூட்டத்தில் இருந்த யாவருக்கும் தெரிந்த விஷயமாகும்.

மேற்கண்ட திட்டம் இரண்டையும் சுயமரியாதை இயக்கத்தில் இருந்த - இருக்கின்ற தோழர்கள் எல்லோரும் ஒப்புக் கொண்டவர்கள் என்றோ, மறுக்காதவர்கள் என்றோ, ஆக்ஷேபித்து எதிர்ப்பிரசாரம் செய்யாதவர்கள் என்றோ, சொல்லிவிட முடியாது.

இன்றும் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றவர்களுக்குள்ளாகவே சிலர் ஆக்ஷேபித்தும், மறுத்தும், எதிர்ப்பிரசாரம் செய்து கொண்டும் அவைகளை ஒழிக்க கட்சி சேர்க்கவும் இரகசியமாகவும் வெளிப்படையாகவும் முயற்சி செய்தும் வருவது அநேக ருக்குத் தெரிந்த விஷயமேயாகும். இந்தக்காரியங்கள் செய்ய அவர்களுக்கு இப்பொழுது உரிமை இருக்கின்றது என்று கருதித்தான் அப்படிப்பட்ட வர்களையும் இயக்கக்காரர்கள் என்று கருதி வருகிறோம்.

இது ஒருபுறமிருந்தாலும், சமதர்மத் திட்டத்தை ஒப்புக்கொண்டவர் கள் யார்? ஒப்புக்கொள்ளாதவர்கள் யார்? என்று கண்டுபிடிக்க நம்மிடம் என்னவிதமான அளவு கருவி இருக்கிறது? நம்மிடம் என்ன விதமான மெம்பர் லிஸ்ட்டு இருக்கின்றது?

அன்றியும் ஒரு தோழர் ஆஸ்திகறாயிருந்து விட்டதாலேயே அவர் சு.ம. இயக்க சமதர்ம கட்சியில் மெம்பராக அருகதையற்றவறாக ஆகிவிடு வாறா? ஒரு ஆஸ்திகறும் சமதர்ம திட்டத்தை ஒப்புக் கொள்ளாதவறுமான ஒருவர் நம் மகாநாட்டுக்கு வந்ததாலோ கலந்து கொண்டதாலோ, ஒரு கூட்டத்திற்கு தலைமை வகித்ததாலோ நம் இயக்கம் ஒழிந்து போகுமா? அல்லது ஆடிப்போகுமா? அப்படிப்பட்டவர்கள் வந்தால் சுயமரியாதைக் காரர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் கலகமும், கூச்சலும், குழப்பமும்



RangaRakes tamilnavarasam.com

ஏற்படும்படி செய்துதான் ஆகவேண்டுமா? என்று தோழர் சிங்காரவேலு அவர்களை பணிவாய் வினவுகின்றோம்.

நாம் பல தடவைகளில் தெரிவித்து இருப்பதுபோல் சங்கராச்சாரி என்பவர் நமது மகாநாட்டிற்கு தலைமை வகிக்க ஒப்புக்கொண்டாலும் ஏற்றுக் கொள்வதில் நமக்கு ஆட்சேபனை இல்லை என்று இப்போதும் சொல்லு கின்றோம். ஏனெனில் அவர் நமது கூட்டத்திற்கு வருவதற்கு முன் நம் லட்சியங்களையும், கொள்கைகளையும், திட்டங்களையும், உணர்ந்து கொண்டுதான் வருவார். அப்படி இல்லாவிட்டாலும் கூட அவரது உபதேசத் தாலோ பிரசாரத்தாலோ நமது இயக்க கொள்கைகள் மறைந்துவிடும் அல்லது மறைக்கப்பட்டுவிடும் - அல்லது நமது கொள்கைக்காரர்கள் சங்கராச்சாரி போன்ற - அப்படிப்பட்டவர்கள் பிரசங்கங்களைக் கேட்டு மனம் திரும்பிவிடு வார்கள் என்று நாம் பயப்படவேண்டியதில்லை.

இந்த எண்ணத்தின் மீதும், துணிவின்மீதும்தான் ஈரோடு மகாநாட் டிற்கு இந்து (மத) மகாசபையின் தலைவரான தோழர் ஜெயகரவர்களை தலைவராகப் போட்டு நடத்தி இருக்கின்றோம். சில ஜில்லா மகாநாடுகளில் புத்தமத தலைவராகிய தோழர் பி.லெக்ஷிமிநரசு அவர்களை தலைவராகப் போட்டு நடவடிக்கைகள் நடத்தியிருக்கின்றோம். மற்றும் பல மகாநாடு களில் பழுத்த ஆஸ்திகர்களையும் போட்டு இருக்கின்றோம். அனேக கூட்டங்களில் ஆஸ்திகர்கள், முதலாளிகள் ஆகியவர்கள் தலைமையில் காரியங்கள் நடத்தி இருக்கின்றோம்.

இதுவரையில் அனுபவத்தில் நமது பக்கத்தை முழுவதும் ஒப்புக் கொள்ளாதவர்கள் தலைமையில் எத்தனையோ மகாநாடுகளும், கூட்டங் களும் நடந்தும் அதனால் நமது இயக்க லட்சியங்களோ, கொள்கைகளோ திட்டங்களோ மாறிவிட்டதாகவோ, பலங்குறைந்து விட்டதாகவோ, சிலராவது மனந்திரும்பிவிட்டதாகவோ சொல்வதற்கு இல்லாமல் இருந்து வந்திருக்கிறது என்றுதான் கருதுகிறோம்.

நாம் இன்று பிரசார நிலையில் இருக்கின்றோம் என்பதையும், நமது காரியத்திட்டங்களை எல்லோரிடமும் பரப்பவேண்டும் என்கின்ற வேலை யில் இருக்கின்றோம் என்பதையும் வேறு ஒரு கருத்துள்ள தோழரின் பிரசாரத்தால் நாம் ஏமாந்துவிடமாட்டோம் என்பதையும் சந்தேகமற உணர்ந் தோமேயானால் அதற்காக நமக்குள் பயமோ குழப்பமோ உண்டாக சிறிதும் இடமில்லை.

சில ஆஸ்திக ஸ்தாபனங்களும் சில முதலாளிகள் ஸ்தாபனங்களும் இந்த இரு கூட்டத்தாரின் ஆயுதமான காங்கிரசும்தான். சுயமரியாதைக்காரர் களை உள்ளேவிட்டால் தங்களுக்கு ஆபத்து வந்துவிடும் என்று பயப் படுவதும், சுயமரியாதைக்காரர்கள் கூட்டத்தில் கலகமும், கூச்சலும்,



குழப்பமும் உண்டாக்கும் இழிதொழில்களைச் செய்து கலைக்கப் பார்ப்பது மான காரியங்கள் நடைபெறுகின்றதை நாம் பார்த்துவருகின்றோம்.

ஏனெனில் அவர்களுடைய நிலை அந்தமாதிரி பலமற்றதும் உண்மையற்றதும், சூக்ஷிநிறைந்ததும், அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் நிற்காத துமாய் இருப்பதால் அவர்கள் பயந்து மாச்சரியங்கொண்டு துவேஷித்து மூர்க்கத்தன மான காரியங்களைச் செய்ய வேண்டியவர்களாகின்றார்கள்.

நமக்கு அப்படிப்பட்ட அவசியம் என்ன என்பது விளங்கவில்லை. தோழர் சிங்காரவேலு அவர்கள் "நமது லக்ஷியத்துக்கு-கொள்கைகளுக்கு, திட்டத்துக்கு விரோதமானவர்களைச் சேர்க்கக்கூடாது" என்று மாத்திரம் சொல்லியிருந்தாலும் அதற்குச் சாதாரண சமாதானமே போதுமானதாயிருக் கலாம். அப்படிக்கில்லாமல் அப்படிப்பட்டவர்களை நமது இயக்கக் கொள்கைகளை ஒப்புக் கொள்ளாதவர்களைச் சேர்த்தால் "குழப்பமும், விரோதமும், மாச்சரியமும் நேரிடுகின்றன" என்று சொல்லியிருப்பதானது சிறிதும் ஒப்புக் கொள்ள முடியாத விஷயம் என்று வலியுறுத்திச் சொல்ல வேண்டியிருப்பதற்கு வருந்தவேண்டியதாய் இருக்கிறோம். இதுவரையில் நடந்திருக்கும் மகாநாடுகளுக்கும், பிரசாரங்களுக்கும் பெரும்பாகமான உதவிகளும் நமது கொள்கைகளை ஒப்புக் கொள்ளாதவர்களிடமிருந்து ஏற்பட்டிருக்கின்றதென்பதை யாரும் மறுக்கமுடியாது.

அதோடு மாத்திரமல்லாமல் அப்படிப்பட்டவர்களைச் சேர்த்ததாலும், தலைமைவகிக்க விட்டதாலும் அப்படிப்பட்டவர்கள் பெரிதும் மனமாற்ற மடைந்து நமது கொள்கைகள், திட்டங்கள் எல்லாவற்றையும் அடியுடன் தழுவாவிட்டாலும் பெரும்பாகங்களில் மனம் திரும்பியும், சிலவற்றைத் தழுவியும் இருக்கிறார்களே ஒழிய சுயமரியாதைக்காரர்கள் யாரும் மனம் திரும்பி விடவில்லை.

நிற்க நமது சமதர்மத் திட்டத்தின்படி அடுத்துவரும் தேர்தலில் சுயமரியாதைக்காரர்கள் நிற்கவேண்டுமானால் நாஸ்திகர்களும் முதலாளிகள் அல்லாதவர்களுமாகவே கிடைத்துவிடுவார்களா? என்று யோசிக்கும்படி வினயமாய் வேண்டுகின்றோம்.

முதலாளிகளாய் இருந்தாலும் சரி, ஆஸ்திகர்களாய் இருந்தாலும் சரி அதைப்பற்றி விசேஷமாய்க் கவனிக்காமல் சமதர்மத்திட்டத்தை ஒப்புக் கொண்டு கையெழுத்துப் போட்டு சட்டசபைக்கு நின்று வெற்றிபெற்ற பிறகு அத்திட்டத்தை நிறைவேற்றத் தகுந்த சட்டம் செய்ய வேலை செய்வாரா இல்லையா? என்பதைத்தான் நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும் என்ப தாகத்தான் நாம் கருதியிருக்கிறோம். இந்தப்படிக்கானால்தான் சட்ட சபைப் பிரவேசம் என்பதையும் சட்டத்திற்கு கட்டுப்பட்டு திட்டங்களை நிறை வேற்ற முயற்சிப்பது என்பதையும் நமது வேலைத் திட்டமாக வைப்பதில் அருத்தம் உண்டு. அப்படிக்கு இல்லையானால் சமதர்ம திட்டத்தை வெறும்



RangaRakes
tamilnavarasam.com

காகிதத் திட்டம் என்பதாகத்தான் சொல்லவேண்டியிருக்கும் என்று பயப் படுகின்றோம்.

அரசாங்க சட்டத்தை மதித்து அச்சட்டத்திற்குட்பட்ட கிளர்ச்சி செய்து காரியத்தை சாதிக்கக் கருதியிருக்கும் நாம், ஆஸ்திகர்களையும், முதலாளி களையும் உதவிக்கு அதுவும் நமது கொள்கைக்கு திட்டத்திற்கு பாதகமில் லாமல் அவர்களாக சம்மதித்து வருபவர்களை ஏற்றுக்கொள்வதால் நமது காரியம் கெட்டுப் போகுமென்றோ, அதற்காக கூச்சலும் குழப்பமும் ஏற்பட வேண்டியது கிரமம் என்றோ கருதி பயப்படவேண்டுமா? என்றும் அறிய விரும்புகிறோம்.

## தோழர் பொன்னம்பலம்

நிற்க, தோழர் பொன்னம்பலனார் எழுதியிருக்கும் இவ்வாரக் கட்டுரையில் சுயமரியாதை இயக்கம் ஆரம்பத்தில் ஈடுபட்டிருந்த பார்ப்ப னீயத்தை ஒழிக்கும் முயற்சியிலும் பார்ப்பன ஆதிக்கத்தை அழிக்கும் முயற்சி யிலும் இன்னமும் ஈடுபட்டிருக்காமல் அதை விட்டு விட்டு வேறு வழியில் அதாவது சமதர்மம் பொதுவுடமை என்கின்ற வழியில் பிரவேசித் தது தப்பு என்றும் அதனால் பழயபடி பார்ப்பனீயம் துளிர்த்து வருவதாக வும், பார்ப்பன ஆதிக்கம் தலை விரித்தாடுவதாகவும் குறிப்பிட்டுவிட்டு நாம் ஏதோ பார்ப்பன மாய்கையில் சிக்கி இருப்பதாகவும் பொருள்பட மிக்க ஆத்திரத்துடன் பல விஷயங்களைக் கொட்டியிருக்கிறார். அதற்கும் சிறிதாவது சமாதானம் கூறவேண்டும் என்றே கருதுகின்றோம்.

முன்போல் பார்ப்பனீயத்தின் கொடுமைகளை வெளியாக்கும் வேலையிலும் பார்ப்பன ஆதிக்கத்தை ஒடுக்கும் வேலையிலும் நமது முயற்சி முழுவதும் இல்லை என்பதை நாம் ஓரளவுக்கு ஒப்புக் கொள்ளு கின்றோம். ஆயினும் சுயமரியாதை இயக்கத்தின் லட்சியமெல்லாம் அதுவேதான் என்பதை நம்மால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. பார்ப்பனீ யத்துக்கும் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் காரணமாயிருப்பது மதம் என்பதை நமது தோழர் பொன்னம்பலனார் அவர்கள் உணர்ந்திருப்பார். அம்மதத்தை ஒழிப்பதில் நாம் முன்னையைவிட இப்போது பலமடங்கு தீவிரமாய் இருக்கின்றோம் என்பதையும் தோழர் பொன்னம்பலம் அவர்கள் அறிவார்.

பார்ப்பனீயத்தையும், பார்ப்பன ஆதிக்கத்தையும் அழிக்க வேண் டிய அவசியம் நமக்கு எதனால் ஏற்பட்டது? பார்ப்பனீயத்தின் பேராலோ, பார்ப்பனர் பேரிலோ, ஏற்பட்டது துவேஷமா? வெறுப்பா? வஞ்சகமா? என் பதை யோசித்துப்பார்க்க விரும்புகின்றோம். ஒரு நாளுமல்ல மற்றென்ன வென்றால், பார்ப்பனீயமும் பார்ப்பன ஆதிக்கமும் ஏழை மக்களை- தாழ்த்தப் பட்ட மக்களை என்றென்றும் தலை எடுக்கவொட்டாமல் அமுத்தி நசுக்கி வருவதற்கு ஆதரவாய் இருக்கின்றதென்றும், தாங்களே என்றென்றும்



மேன்மையாயும் ஆதிக்கமாயும் இருந்துவரத்தக்கதாய் இருக்கின்றதென்றும் கருதியே அதனுடன் போர் புரிந்து வந்தோம். ஆனால் அப்போரின் பலன் என்ன ஆயிற்று என்று பார்ப்போமானால் பார்ப்பனர்களின் ஆதிக்கம் சில குறைவுபட்டது. அரசியல் துறையில் பார்ப்பன ஆதிக்கத்திற்கு சாவுமணி அடிக்கத்தக்க நிலைமையும் ஓரளவுக்கு ஏற்பட்டது. ஆனால் இதனால் ஏற்பட்ட பயன் என்ன என்று பார்ப்போமானால் சில பார்ப்பனரல்லாதார் பார்ப்பனர்களின் ஸ்தானத்துக்கு வந்தார்கள். பார்ப்பனர்களைப் போலவே நடந்தார்கள். ஏழைகளையும், தாழ்த்தப்பட்டவர்களையும், தலைதூக்க விடாமல் இருக்க பார்ப்பனர்களுக்கு கையாளாக இருந்து வேலை செய்து வருகின்றார்கள் என்பதுதான் வெளிப்படையாகத் தெரிகின்றது.

தோழர்கள் Dr. சுப்பராயன் முத்தையா முதலியார் ஆகியவர்கள் காலத்தில் பார்ப்பனரல்லாதார்களுக்கென்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்கென் றும் அரசியலில் என்ன காரியங்கள் செய்யப்பட்டனவோ அதற்குமேல் நாளது வரை ஒரு இம்மியளவாவது முற்போக்கு ஏற்பட்டது என்று சொல்ல முடியாத நிலையிலேயே இருந்து வருகிறது.

உதாரணமாக சொல்லவேண்டுமானால் பார்ப்பனரல்லாதார் பெயரைச் சொல்லிக் கொண்டு பெரிய மனிதனாகி மந்திரி பதவியையும், பார்ப்பன ரல்லாதார் இயக்கத்தலைவர் பதவியையும் பெற்ற தோழர் முனிசாமி நாயுடு அவர்கள் பதவிக்கு வந்தவுடன் பார்ப்பனர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் பார்ப்பனரல்லாதார் நன்மைக்காகவே தோழர் முத்தையா முதலியார் அவர்களால் உத்தியோகங்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவப்படி வினியோகிக்கவேண்டும் என்று செய்யப்பட்டிருந்த விதியை ஒழிக்க வேண்டும் என்றும் பாடுபட்டதோடு சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒரு இயக்கம் இருக்கின்றதா என்று அறியாதவர்போலும் பல தடவைகளில் அதை அலட்சியமாய் பேசியும் நடந்தும்வந்தார். இந்த காரியம் சுய மரியாதை இயக்கம் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்கபாடுபட்டதற்கும் தோழர் முனிசாமி நாயுடு அவர்கள் தலைவராவதற்கும், முதல் மந்திரியாவ தற்கும் ஓரளவாவது காரணமாய் இருந்ததற்கு ஏற்பட்ட பலனாகும். இதுமாத்திரமல்ல மற்ற மந்திரிகள் நிலைமையை யோசித்தால் இனியும் வெட்கக்கேடாகும். ஒரு மந்திரியார் ஒரு பொதுக் கூட்டத்தில் "சுயமரி யாதை இயக்கத்தின் நிழலில் தான் நாங்கள் இன்று மனிதர்களாய் வாழு கின்றோம்" என்று கோஷம் செய்தார். அவர் கண்களுக்கு இன்று ரூபாயைத் தவிர வேறு வஸ்துவே உலகத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. பார்ப்பனர் கள் தான் அவர்களுக்கு மனிதர்களாக காணப்படுகின்றார்கள். மற்றொரு மந்திரியோ "சுயமரியாதை இயக்கமே தனது மூச்சாய் இருந்து வருகின்றது" என்று நடித்தவர். ஆனால் இன்று அவர் கொடுக்கும் உத்தியோகம் 100-க்கு 97 பார்ப்பனருக்கு. அவரது மந்திரிகள் எல்லாம் பார்ப்பனர்களே. தாசி வீட்டுக்கு போவதானாலும் பார்ப்பன தாசிகள் வீட்டுக்கேதான் போக



RangaRakes tamilnavarasam.com

வேண்டுமென்ற அவ்வளவு பார்ப்பன அபிமானியாயிருந்துவருகிறார். மற்றும் இப்போது பார்ப்பன ரல்லாதார் தலைவர் என்று சொல்லிக்கொள்ளு கின்ற பணக்காரர்களின் யோக்கியதையும் முன்சொன்ன மந்திரி போலவும் பார்ப்பனர்களையே தூதாட்களாகவும் தங்கள் பதவி வேட்டைக்கு ஒற்றர் களாகவும் வைத்து பார்ப்பனீய ஆதிக்கத்தை விட மோசமான ஆதிக்கம் செலுத்தி வருகின்ற வர்களாவார்கள்.

தோழர் பொன்னம்பலம் அவர்கள் விரும்புவது போல் பார்ப்பனீ யத்தை ஒழிக்கவும் பார்ப்பன ஆதிக்கத்தை வீழ்த்தவும் இன்னமும் எவ்வளவு தான் பாடுபட்டாலும் இன்றைய நிலையில் இருந்த பலன் தான் ஏற்படுமே ஒழிய வேறு ஒன்றையும் நாம் கனவு கூட காணமுடியாத நிலை யில் தான் இருக்கிறோம்.

பார்ப்பானை ஒழித்து பணக்காரன் கையில் ஆதிக்கத்தை வாங்கிக் கொடுக்க சுயமரியாதை இயக்கம் இருக்கின்றது என்று சொல்லுவதானால் கஷ்டப்படும் மனித சமூகத்துக்கு இவ்வியக்கத்தினால் எவ்வித பலனும் ஏற்படாதென்பதே நமதபிப்பிராயம்.

ஆதலால் சமதர்மத்தையும் பொதுவுடைமைக் கொள்கையையும் விட பார்ப்பனீய ஒழிப்பும், பார்ப்பன ஆதிக்க அழிப்பும் பிரதானம் என்பதை ஒப்புக்கொள்ள முடியாமைக்கு வருந்துகிறோம்.

தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியை அழிக்க தாம் சட்டசபைக்குப்போகவேண்டும் என்று சொல்லித் துணிந்தது சத்திய மூர்த்தி யின் சாமர்த்தியமும் துணிவும் என்று நாம் ஒருநாளும் ஒப்புக்கொள்ள முடி யாது. அந்தப்படி அவரைச் சொல்லச் செய்வது பார்ப்பனரல்லாத பணக் காரரின் பணமும் பார்ப்பனரல்லாத பணக்காரரின் சூழ்ச்சியுமேயாகும். அவரது நிலைமையாரும் அறிந்ததே. அவரது அரசியல் ஞானமும் முயற்சி யும் எல்லாம் வயிற்றுப்பாட்டிற்கே ஒழிய வேறு ஒரு பிரமாத காரியத்திற்கு மல்ல. ஆதலால் அவருக்கு ஒரு சிறு உத்தியோகமோ வயிற்றுப் பாட்டிற்கு ஒரு வழியோ ஏற்பட்டுவிட்டால் அவரால் யாருக்கும் எவ்வித தொல்லை யும் இல்லாமல் போய்விடும். தோழர்கள் டாக்டர் சுப்பராயன் அவர்கள் மந்திரிகாலமும், குமாரராஜா அவர்கள் மேயர் காலமும் ஒரு அளவுக்காவது அமைதியாய் நடைபெற்று வந்ததற்குக் காரணம் தோழர் சத்தியமூர்த்தி அவர்களது அமரிக்கைத் தன்மையேயாகும். “அப்படிப்பட்ட” சத்திய மூர்த்தி “இப்படிப்பட்ட” அமரிக்கையாய் இருப்பது சும்மா முடிந்திருக் குமா?

ஆதலால் அவரது கூச்சலைப்பற்றி நாம் அவ்வளவு கவனிக்க வேண்டியதில்லை. ஏனெனில் ஜஸ்டிஸ் கட்சியின் உதவியில் வாழ்ந்து கொண்டு ஜஸ்டிஸ் கட்சியை வைவதென்றால் அதில் இரகசியமில்லாமல்



இருக்காது. ஏனெனில் ஜஸ்டிஸ் கட்சிக்காரருக்குள்ளாகவே, அடுத்ததடவை தலைவராவது யார்? யார் யார் மந்திரியாவதென்ற விஷயம் இன்னமும் தீர்மானமில்லை என்பதோடு அக்கட்சித் தலைவர்கள் என்பவர்களே ஒரு வரை ஒருவர் அழுத்த வேலைசெய்துவருகின்றார்கள். ஆதலால் அவ் வேலையின் பயனே தோழர் சத்தியமூர்த்தியின் “துணிவுக்கும் ஆணவத் திற்கும்” காரணமென்பது நமதபிப்பிராயம்.

தவிர சில பத்திரிகை, தோழர் ஷண்முகத்தினிடம் பொறாமைகாட்டி அவரை இழிவுப்படுத்தியும் இழிவுப்படுத்துவதற்காக தோழர் பட்டேல் அவர்களை உயர்த்திக்காட்டி ஷண்முகத்தைத் தாழ்த்திப் பேசுவதையும்பற்றி தோழர் பொன்னம்பலனார் குறிப்பிட்டிருக்கிறார். அதுவும் பார்ப்பன சூட்சி என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனாலும் பொது ஜனங்கள் இதில் ஏமாந்துபோக மாட்டார்கள். பொது ஜனங்கள் முட்டாள்களாய், மூடர்களாய் இருந்தால் அதற்கு நாம் என்ன செய்யலாம்.

தோழர் பட்டேல் அவர்கள் “எல்லா இந்திய சத்தியமூர்த்தி” என்று முன்னமே சிலதடவை எழுதியிருக்கிறோம்.

அவர் காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்குப் போகக்கூடாது என்று தீர்மானித்திருந்த காலத்தில் காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாய் சட்ட சபையை ஒழிப்பதற்கென்று சொல்லிக்கொண்டு, சட்டசபைக்குப் போய் அங்கு மீ 4000 ரூபாய் சம்பளமுள்ள உத்தியோகத்தை அடைந்து சட்ட சபையை ஒழிப்பதற்குப் பதிலாக அதற்கு முட்டுக்கட்டை போடுவதற்கும் பதிலாக தலைமைவகித்து ஒழுங்காய் நடத்திக்கொடுத்து சட்ட சபையை நிலைக்க வைத்துவிட்டுப் போன வீரர். “சட்டசபையை ஒழுங்காய் நடத்துவ தற்காக நாள் ஒன்றுக்கு பத்துத்தடவை வைசிராய் பிரபு வீட்டிற்குப் போவேன்” என்று சொன்ன “முட்டுக்கட்டை வீரராவார்”. அன்றும் ஒத்து ழையாமையை ஒழிக்கச் சூட்சி செய்தவர். இன்றும் “காந்தி தலைவராய் இருக்க யோக்கியதை இல்லை” என்று சொல்லி வேறு தலைவரை நியமிக்க வேண்டுமென்று சொன்னவர். எந்தக்காலத்தில் எந்தவேலையில் அவர் நாணயஸ்தராய், யோக்கியராய், வீரராய் நடந்துகொண்டார் என்பது நமக்கு விளங்கவில்லை. தோழர் சத்தியமூர்த்தியைப்போல் வாய்ப்பேச்சில் வீரரா னவர். சர்க்காருக்குத் தொந்திரவில்லாமல் முட்டுக்கட்டை போடமுடியாமல் சட்டசபையை அழிக்காமல் வேகமாய், கடினமாய் பேசிவிட்டு வில்லர் என்ற பேர்வாங்கினவர். அவர் போல் தோழர் ஷண்முகம் இல்லையென்று சொல் வதில் ஒருவித அர்த்தம் உண்டுதான். ஆனால் பார்ப்பனர்கள் அந்தக் காரியங்களை உணர்ந்தும் ஷண்முகத்தின் மீதுள்ள பொறாமையால் ஏதோ உளரித் தீரவேண்டிய முறையில் குலைக்கின்றார்களென்றால் அதற்காகவே கொள்கையை மாற்றிக் கொள்ளவேண்டும் என்பது நமக்குப் பரிகாசமாய் தோன்றுகின்றது.



RangaRakes tamilnavarasam.com

மூன்றாவதாக ஒரு பார்ப்பனப் பத்திரிகை வாணியம்பாடி மகா நாட்டைப்பற்றி விஷமப் பிரசாரம் செய்திருப்பதை குறிப்பிட்டிருக்கிறார். நாளது வரை எந்தப் பார்ப்பனப் பத்திரிக்கையாவது சுயமரியாதை இயக் கத்தைப் பற்றி விஷமத்தனமாயும் அயோக்கியத்தனமாயும் நடக்காதிருந்து இந்த பத்திரிகை மாத்திரம் நடந்திருந்தால் அதை ஒரு பிரமாதமாகக் கருதலாம். பாம்புக்கு விஷமிருப்பதைப் பற்றி கோபிப்பதில் என்ன புத்தி சாலித்தனமோ அதுதான் பார்ப்பன பத்திரிகை நமது விஷயத்தில் அயோக் கியத்தனமாய் நடந்து கொள்வதைப்பற்றி கோபிப்பதாகும். ஏனெனில் நமது இயக்கம் பார்ப்பனீயத்தையும், பார்ப்பன ஆதிக்கத்தையும், ஒழிப்பதை ஒரு திட்டமாகக் கொண்டது என்றிருக்கையில் பார்ப்பனர்களும் பார்ப்பனப் பத்திரிக்கைகளும் நம் விஷயத்தில் யோக்கியமாய்-நாணையமாய் நடந்து கொள்ளும் என்று எதிர்பார்ப்பது நமது முட்டாள்தனமேயாகும். பார்ப்பன ரல்லாத மக்கள் வயிற்றுப் பிழைப்புக்காகத்தான் அப்பத்திரிகைகளை ஆதரிக்கிறார்கள். வாங்கி விற்கிறார்கள். சுதேசமித்திரன் இந்து முதலிய பத்திரிகைகளின் யோக்கியதைகளை அறிந்தவர்களுக்கு இந்த "அரைடிக்கட்" பத்திரிகை, என்பதின் யோக்கியதை குற்றமாகத் தோன்றாது.

இந்து சுதேசமித்திரன் பத்திரிகைகளுக்கு நாட்டில் செல்வாக்கு இருக்கும்வரை, இந்தியாவுக்கு வெள்ளைக்கார முதலாளிகள் ஆட்சி மேலானது என்பதுதான் நமதபிப்பிராயமாயிருந்து வருகிறது. ஏனெனில் தங்களை இழிவுபடுத்தி தங்கள் சமூகத்தை அடிமையாக்கி வாழ்ந்துவரும் ஸ்தாபனத்தை ஒரு மக்கள் ஆதரிக்கின்றார்கள் என்றால், அந்த மக்கள் "விடுதலை" பெற யோக்கியதை உடையவர்கள் என்று எந்த மூடனாவது ஒப்புக்கொள்ள முடியுமா? இவற்றையெல்லாம் பார்த்துத்தான் இந்த நாட்டுக்கு வேண்டியது சமதர்மமும், பொதுவுடமைத் தத்துவமும் என்ற முடிவுக்கு வந்தோமேயொழிய வேறில்லை. பார்ப்பனரல்லாத மக்கள் அறிவோடு, மானத்தோடு நடந்துகொள்ள யோக்கியதை உடையவர்கள் என்றால், பார்ப்பன ஆதிக்கத்தை ஒழித்து பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பதில் அருத்தமுண்டு; அப்படிக்கில்லாமல் பார்ப்ப னீயத்தை அழித்து பார்ப்பன அடிமை கையில் ஆதிக்கத்தை கொடுப்ப தற்கு பாடுபடுவதென்றால், அது கொள்ளிக்கட்டையை எடுத்து தலையை சொரிந்து கொள்வதேயாகும். என்றாலும் எல்லாக்காரியத்தையும், ஏககாலத் தில் செய்கின்ற முயற்சியில்தான் நாம் இருக்கின்றோமேயொழிய அவற்றை அடியுடன் விட்டுவிடவில்லை என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 22.10.1933**



# கேள்வியும் - பதிலும்

**- சித்திரபுத்திரன்**

**கேள்வி:-** பெண்களுக்கு புருஷர்கள் என்றைக்குச் சுதந்திரம் கொடுப்பார்கள்.

**பதில்:-** கற்பு என்கின்ற வார்த்தையும் விபசாரதோஷம் என்கின்ற வார்த்தையும் என்று ஒழிக்கப்படுகின்றதோ அன்றுதான் பெண்கள் முழு விடுதலையடைய முடியும்.

இன்று பெண்களிடம் புருஷர்கள் முழுவிடுதலையும் பெற்றிருப்ப தற்குக் காரணம் ஆண்கள் தங்களுக்குள் கற்பு என்பதையும், விபசார தோஷம் என்பதையும் அடியோடு ஒழித்துவிட்டதாலேயே சட்டப்படி முழுவிடுத லையும் பெற்று இருக்கிறார்கள்.

ஆதலால் பெண்கள் விடுதலை பெறவேண்டுமானால் ஆண்களைப் போல் நடக்கவேண்டும். மற்றபடி அப்படிக்கில்லாமல் "புல் என்றாலும் புருஷன், கல் என்றாலும் கணவன்" என்றோ, ஆண்கள் தங்கப்பாத்திரம் அதை யார் தொட்டாலும் கழுவக்கூடவேண்டியதில்லை துடைத்துவிட்டால் போதும்; பெண்கள் மண்பாத்திரம் வேறுயாராவது தொட்டால், கழுவினால் கூட தீட்டுப்போகாது. அதை உடைத்து குப்பைத்தொட்டியில் எறிந்தாக வேண்டும் என்கின்ற முறை இருக்கின்றவரை பெண்களுக்கு விடுதலையோ, சுதந்திரமோ கிடையாது. ஆதலால் பெண்களும் தங்களை மண்சட்டி என்று எண்ணாமல் தாங்கள் தங்கப்பாத்திரம் என்று எண்ணிக்கொள்ள வேண்டும்.

**குடி அரசு - வினா விடை - 29.10.1933**



RangaRakes tamilnavarasam.com

# இன்றைய ஆக்ஷி ஏன் ஒழிய வேண்டும்?

இந்தியாவில் இன்றைய அரசாங்கமானது ஆட்சி முறையில் எவ்வளவு தூரம் பாமர மக்களுக்கு விரோதமாகவும், பணக்காரர்களுக்கு அனுகூலமாகவும் இருக்கின்றது என்கின்ற விஷயம் ஒருபுறமிருந்தாலும், நிர்வாக முறையானது ஏழைக்குடி மக்களுக்கு மிகவும் கொடுமை விளை விக்கக்கூடியதாகவே இருந்து வருகின்றது.

அரசியல் நிர்வாகத்திற்கென்று குடிகளிடம் இருந்து வசூலிக்கப்படும் தொகைகள் 100க்கு 75 பாகம் அக்கிரமமான வழிகளிலேயே-பெரிதும் செல்வவான்களுக்குப் பயன்படும் மாதிரியிலேயே-சிலரை செல்வவான் களாக்குவதற்குமே நடைபெறுகின்றன. பாமர மக்கள்-ஏழை மக்கள் ஆகிய வர்களின் உழைப்பெல்லாம் வரியாகவே சர்க்காருக்கு போய் சேர்ந்து விடு கின்றது. அந்த வரிகள் பெரிதும் சம்பளமாகவே செலவாகி விடுகின்றன. இதன் பயனாய் ஒரு நல்ல ஆட்சியினால் குடிகளுக்கு என்ன விதமான பலன்கள் ஏற்படவேண்டுமோ அப்பலன்களில் 100க்கு 5 பாகம் கூட ஏற்படாமல் இருந்து வருகின்றன.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு வந்து சுமார் 175 வருஷ கால மாகிய பிறகும் இன்றும் கல்வித் துறையில் 100க்கு 8 பேர்களேதான் நம்மவர் கள் படிக்கத்தெரிந்தவர்களாக இருக்கிறார்கள் என்றால் அதுவும், பெரிதும் பணக்காரர்களும், மேல் ஜாதிக்காரர்களுமே என்றால் இந்த நிர்வாக மானது ஏழைகளுக்குப் பயன்படும் முறையில் தனது வரிப் பணத்தைச் செலவு செய்து இருக்கின்றது என்று சொல்லமுடியுமா? என்று கேட்கின்றோம்.

ஆனால் அரசாங்கத்திற்கு வரி வருமானங்கள் மாத்திரம் நாளுக்கு நாள் விஷம் ஏறுவது போல் உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

நமக்குத் தெரியவே இந்தியவருமானம், வருஷம் ஒன்றுக்கு 75 கோடி ரூபாயாக இருந்தது இன்று வருஷம் 1-க்கு 175கோடி ரூபாயாக ஆகி யிருக் கின்றது.

இராணுவச் செலவுக்கு வருஷம் 20 கோடி ரூபாயாக இருந்தது 7 கோடியாகி, இன்று 60 கோடியாக இருந்து வருகின்றது.



மற்ற அநேக துறைகளிலும் உத்தியோகச் செலவுகள் இதுபோலவே உயர்வாகி வருகின்றது.

உதாரணமாக கல்வித்துறையை எடுத்துக்கொண்டால் கல்விஇலாக்கா உத்தியோகச் செலவுகள் இதுபோலவே வளர்ந்திருக்கிறது. ஆனால் கல்விப் பெருக்கத்தில் மாத்திரம் சென்ற 10-வது வருஷத்திற்குமுன் 100-க்கு 7 பேரா யிருந்த கல்விவான்கள் இன்று 100-க்கு 8 பேராகத்தான் ஆகி இருக்கிறார்கள் என்றால் இந்த நிர்வாகம் ஏழை மக்களுக்கும், பொது மக்களுக்கும் அனுகூலமானது என்று எப்படிச் சொல்லமுடியும்? ரூ. ஒன்றுக்கு பட்டணம் படியால் 6 படி 7 படி சில இடங்களில் 8 படி அரிசிவீதமும் கிடைக்கக்கூடிய இந்தக் காலத்தில்- B.A.M.A. படித்த மக்கள் மாதம் 15ரூ 20ரூ. சம்பளம் கூட வெளியில் கிடைக்காமல் திண்டாடுகின்ற இந்தக் காலத்தில் அரசாங்க நிர்வாக உத்தியோகங்களில் ஏராளமான ஆட்களை நியமித்துக்கொண்டு அவர் களுக்கு மாதம் 100, 200, 500, 1000, 5000 வீதம் சம்பளங்களை அள்ளிக் கொடுப்பதென்றால் இப்படிப்பட்ட அரசாங்கமும், அரசாங்க நிர்வாக உத்தி யோகங்களும் இந்திய பாமர ஏழை குடி மக்களைச் சுரண்டும் கூட்டுக் கொள்ளை ஸ்தாபனம் என்று சொல்லவேண்டியதா? அல்லவா? என்று கேட்கின்றோம்.

இன்றைய ஆட்சியானது அழிக்கப்படவேண்டியது என்பதற்கு இந்த ஒரு உதாரணம் போதாதா என்றும் கேட்கின்றோம். ஆட்சி நிர்வாகம் என்பது சுத்த விளையாட்டுத்தனமாகவும், யோக்கியப் பொருப்பற்ற தனமாகவும் இருந்து வருகின்றது என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும். சென்னை மாகாணமானது சுமார் 20 வருஷங்களுக்கு முன்பு 2-மந்திரிகளாலேயே நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது யாவரும் அறிந்ததாகும். ஆனால் இப்பொழுது 7-மந்திரிகளால் நிர்வாகம் செய்யப் பட்டு வருகின்றது. இதன் பயனாய் மக்கள் அடைந்த பயன் என்ன என்பதை கவனித்தோமா னால் மேலே கூறியபடி 2-மந்திரிகள் இருக்கும்போது 100-க்கு 7-பேர் படித்த வர்களாய் இருந்தது இப்போது கல்விக்காக என்று ஒரு தனி மந்திரி மாதம் 5000 ரூ. சம்பளத்தில் ஏற்படுத்தி அந்த இலாக்காவில் 20-வருஷங்களுக்கு முன் இருந்ததைவிட 100-க்கு 200-பங்கு பணம் அதிகம் செலவழித்தும் இன்றும் 100-க்கு 8-பேர் படித்தவர்களாய் இருக்கிறார் கள் என்கின்ற அளவில் தான் அபிவிருத்தி காட்டப்படுகின்றது. ஆனால் இந்த மந்திரிப் பதவிகள் இந்தப்படி 100-க்கு 350-பங்கு வளர்ந்ததற்கு காரணம் என்ன என்று பார்ப்போமானால் ஆட்சிமுறையை ஒரு திருட்டு தனம்போலவும் மந்திரிப் பதவிக்காரர்கள் அந்த திருட்டில் தங்களுக்கு ஒரு பாகம் கூட்டு கொடுக்காவிட்டால் அத்திருட்டைக் காட்டிக் கொடுத்து விடு வோம் என்று மிரட்டி பங்கு பெற்றது போலவும்தான் ஆகி இருக்கின்றதே தவிர வேறு ஒன்றுமே இல்லை.



RangaRakes tamilnavarasam.com

இப்படி 100-க்கு 8-வீதமான கல்வி என்பதும் செல்வவான் வீட்டுப் பிள்ளைகளுக்கு மாத்திரம் கிடைக்கும்படியாகவேதான் கல்வியின் தத்துவ மும், கல்வி இலாக்காவும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

உதாரணமாக ஒரு பையன் S.S.L.C., படித்து வெளிவர வேண்டுமா னால் மாதம் 1-க்கு 5-4-0 ரூ. சம்பளம் கொடுக்கவேண்டும். அவன் புத்தகம் முதலியவைகளுக்கு மாதம் 2-ரூ வீதம் செல்லும். ஆக மாதம் 7-4-0 ரூ. வீதம் ஒரு மாணவனுடைய படிப்புக்கு வேண்டி இருக்கிறது. இந்த தொகை யான மாதம் 7-4-0 ரூ. கூட 4,5 பேர்களைக்கொண்ட ஒரு குடும்பத்திற்கு வரும்படி இல்லாத மக்கள் நம் நாட்டில் 100-க்கு 60,70 பேர்கள் இருப்பார்கள் என்றால் இவர்கள் வீட்டுப்பிள்ளைகள் எல்லாம் எப்படி படிக்கமுடியும் என்பதை யோசித்துப் பார்த்தால் கல்வி தத்துவத்தின் புரட்டும், அயோக்கியத் தனமும், சுலபத்தில் விளங்காமல்போகாது. மேற்கண்ட கல்விச் செலவானது மாதம் 7-4-0 ரூ. என்பது பட்டணத்துப் பிள்ளைகளுக்குத்தானே ஒழிய, கிராமாந்திர பிள்ளைகளுக்குப் பட்டினங்களுக்குச் சென்றுபடிக்க மாதம் 17-4-0 ரூ. ஆகிவிடுமென்பதை நினைத்துப்பார்த்தால் 100-ல் 1 பிள்ளையாவது குறைந்த யோக்கியதா பக்ஷப்படிப்பு என்னும் S.S.L.C., படிப்பு படிக்க முடி யுமா என்று கேட்கின்றோம். மக்கள் நிலை இந்தப்படி இருக்கும்போது இந்தப்படிப்பு சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயர்களுக்கு மாதம் 75 முதல் 350 ரூ. வரை சம்பளம் கொடுப்பது என்றால் இது எவ்வளவு கொடுங் கோன்மையான நிர்வாகம் என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும். மாதம் ஒன்றுக்கு 30-ரூ. 35-ரூ. சம்பளத்தில் வேலைக்கு வருவதற்கு 100 க் கணக்கான பி.ஏ., எல்.டி., கள் இன்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப்படி பலர் அமர்ந்தும்இருக்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல் பி.ஏ., எல்.டி., படிப்பையும் பரீட்சையையும், வஞ்சகமில்லாமல் இன்னம் சிறிது தாராளமாய் விட்டால் மாதம் ஒன்றுக்கு 20 ரூபாயிலும் 25 ரூபாயிலும் கிடைக் கும்படியாக ஆயிரக் கணக்கான பி.ஏ.,எல்.டி., உபாத்தியாயர்களைக் காண லாம். அப்படிக்கெல்லாம் இருக்க படிப்புக்காக மக்களிடம் இருந்துவசூலிக் கும் வரியையும் அபாரமாக்கி தனிப்பட்ட முறையில் படிப்புக்காக பெற் றோர்கள் செய்யவேண்டிய செலவையும் அபாரமாக்கி அவ்வளவையும், உபாத்தியாயர்களுக்கும் படிப்பு இலாகா நிர்வாக உத்தியோகஸ்தர்கள் என்ப வர்களும் வீணாய் கொட்டிக் கொடுத்து அந்தக் கூட்டத்தைச் செல்வான் களாகவும் ராஜபோகக்காரராகவும் ஆக்குவதல்லாமல் அந்தப்படிப்பால் மக்களுக்கு பலனும் இல்லாமல் செய்து மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 92-பேர்களை கையெழுத்துக்கூடப் போடத் தெரியாமல் தற்குறிகளாய் வைக்கப்பட்டிருக்கிறதென்றால் இந்த அக்கிரமங்களை மக்கள் எப்படித் தான் சகித்துக்கொண்டிருப்பது என்பது நமக்கு விளங்கவில்லை.

இப்படிப்பட்ட கொடுமைகளையும் அயோக்கியத்தனங்களையும் மக்கள் என்றென்றும் தெரிந்துகொள்ளாமலும், தெரிந்தாலும் சகித்துக் கொண்டும் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் பள்ளிக் கூடத்தில் பிள்ளைகளுக்குக் கடவுள்செயல் பிரசாரத்தையும் ராஜ பக்தி பிரசாரத்தையும் கொண்ட புஸ்தகமும் படிப்பும் கற்பிக்கப்படுகின்றது என்று தீர்மானிக்க வேண்டியதாய் இருக்கிறது.

ஆயிரம் சமாதானம் சொன்ன போதிலும் இன்றைய ஆக்ஷி முறை யும் நிர்வாக முறையும் முதலாளித் தன்மை கொண்டது என்பதிலும், இவை ஏழைமக்களுக்கு விஷம்போன்றது என்பதிலும், கண்டிப்பாக இவை அழிக்கப்பட்டே ஆகவேண்டும் என்பதிலும் நமக்குச் சிறிதும் சந்தேகமோ தயவோ தாக்ஷண்யமோ தோன்றவில்லை. ஆனால் இப்படிப்பட்ட சூழ்ச்சி ஆக்ஷித் தன்மைக்கு இந்தியாவில் இன்று தூண்கள் போல் இருந்து வரு பவை முதலாளித்தன்மையும் புரோகிதத்தன்மையுமே பிரதானமாகும். அதற்கேற்ற முறையிலேயே காங்கிரசும்-காந்தீயமும் வேலை செய்து கொண்டு வந்திருக்கின்றது என்பதுடன் அதில் இருந்தால் தங்களுக்குப் பதவி கிடைக்காது எனக்கருதி வெளிவந்து அவற்றோடு போட்டி போட்டுக் கொண்டு இருக்கும் மற்ற அரசியல் ஸ்தாபனங்களுமே நடுத்தூண்களாய் இருந்து வருகின்றன.

இந்தக் காரணத்தால் தான் நாம் காங்கிரசை அழித்தாகவேண்டும் என்றும் காந்தீயத்தை ஒழித்தாக வேண்டும் என்றும் அதே தத்துவம் கொண்ட, மற்ற அரசியல் கிளர்ச்சிகளையும் ஒழிக்கவேண்டும் என்றும் புரோகித சம்மந்தமான எந்த உணர்ச்சியையும் அடியோடு புதைத்தாக வேண்டும் என்றும் கூப்பாடு போடுகின்றோம்.

இக்கூப்பாட்டைக் கண்டு முதலாளிகளும் முதலாளிகளின் கூலி களும் உத்தியோக வர்க்கங்களும் உருமுவதில் நமக்கு அதிசயமொன்று மில்லை. ஆனால் ஏழைமக்கள் தொழிலாளிகள் சரீரத்தால் சதாகாலமும் பாடுபட்டு துன்பப்படும் கூலிமக்கள், முதலாளிகளுக்கும் முதலாளிகள் கூலி களுக்கும் ஆதரவளிப்பதும் அவர்களை அண்டுவதும் நமக்கு அதிசய மாய் இருக்கின்றது.

ஆகையால் வரப்போகும் தேர்தல்களில் ஏழை மக்கள் தொழிலாளி கள் ஆகியவர்கள் இவற்றை உணர்ந்து ஏமாந்து போகாமல் நடந்து கொள் வார்களாக.

**குடி அரசு - தலையங்கம் - 29.10.1933**


RangaRakes
tamilnavarasam.com

# பட்டேல் பட்டுவிட்டார்

தோழர் வித்தல்பாய்பட்டேல் அவர்கள் 22-10-33-ந்தேதி ஜினிவாவில் காலமாய்விட்டார் என்ற செய்தியைக்கேட்ட இந்தியமக்கள் மிகுதியும் வருத்தமடைவார்கள்.

பட்டேல் அவர்கள் அரசியல் உலகத்தில் மிக்க புகழப்பெற்றவர் வாக்குவல்லவர், யாவரும் பிரமிக்கத்தக்கபடி விஷயங்களுக்கு வியாக்கியானம் செய்யும் கூர்மையான புத்திசாதுரியமுமுள்ளவர். பம்பாய் நகரசபைத் தலைவராகவும் இந்திய சட்டசபைத் தலைவராகவும் இருந்து அவற்றுள் மிக்க கியாதி பெற்றவர். இந்தியாவில் மாத்திரமல்லாமல், ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளிலும் இந்திய அரசியலின் மூலம் புகழ்பெற்றவர். எப்படிப்பட்ட அரசியல் வாதியும் பட்டேலை எதிர்ப்பதென்றால் மிகவும் பயப்படுவார்கள். தோழர் காந்தியாருக்கு பட்டேலிடம் எப்பொழுதும் சிறிது பயம் உண்டு. ஒரு காலத்தில் பட்டேலின் துடையின்மீது தன் தலை இருக்கும் போது தனது உயிர் போக நேரிட்டால் அதுவே தனக்கு ஒரு பெரிய பாக்கியமாகும் என்று தோழர் காந்தி பேசி பட்டேலை புகழ்ந்திருக்கிறார். உப்பு சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு முதலிய காரியங்கள் பட்டேலுக்கு இஷ்டமில்லாத காரியங்களாகும். அதனாலேயே அவர் கடைசிகாலத்தில் பெரிதும் மேல் நாட்டில் இருக்கவேண்டியதாயிற்று என்று சொல்லவேண்டும்.

கடைசியாக அவர் இந்தியாவுக்கு அனுப்பிய செய்தியில் தோழர் காந்தியவர்களின் அரசியல் தலைமைப்பதவி இந்தியாவுக்கு சிறிதும் பயன்படாதென்றும் வேறு தலைவரைக்கொண்டு தான் வேறுவழியில் கிளர்ச்சி செய்யப்படவேண்டுமென்றும் சொன்னவர். அவரது தர்க்கங்களிலும் மற்றும் எவ்வளவோ கவனமான சம்பாஷணைகளிலும் தமாஷ் கலந்தே இருக்கும். இப்படிப்பட்ட பெரியார் 62 வயதில் காலமாகிவிட்டார் என்பது இந்திய அரசியலில் கலந்த மக்களுக்கு பெரிதும் விசனத்தைக் கொடுக்கக்கூடிய சம்பவமாகும் என்பதில் ஆட்சேபணையில்லை.

**குடி அரசு - இரங்கலுரை - 29.10.1933**



# கர்ப்பத்தடை I

கர்ப்பத்தடையைப்பற்றி இந்நாட்டில் சுயமரியாதை இயக்கமும், குடிஅரசுப் பத்திரிகையும் சுமார் 7,8 வருஷங்களுக்கு முன்பிருந்தே மகாநாடுகள் கூட்டி தீர்மானங்கள் மூலமாகவும், பிரசங்கங்கள் மூலமாகவும், வியாசங்கள், தலையங்கங்கள் மூலமாகவும், பொதுஜனங்களுக்கு எடுத்துச் சொல்லிப் பிரசாரம் செய்து வந்திருக்கின்றன.

மேல்நாடுகளிலும் கர்ப்பத்தடையைப்பற்றி சுமார் 70, 80 வருஷமாகப் பிரசாரம் செய்துவரப்படுவதாகவும் தெரியவருகிறது.

தோழர் பெசண்டம்மையார் சுமார் 50 வருஷங்களுக்கு முன்பாகவே கர்ப்பத்தடைப் பிரசாரத்தில் கலந்திருந்து பிரசாரம் புரிந்ததாகவும், மற்றும் கர்ப்பத்தடை பிரசாரமானது, சட்டவிரோதமானதல்ல என்று வாதாடி கர்ப்பத்தடை பிரசாரத்துக்கு அரசாங்கத்தை அனுமதிக்கும்படி செய்ததாகவும், அவ்வம்மையார் சரித்திரத்திலிருந்தும் விளங்குகின்றது.

இவைகள் மாத்திரமல்லாமல் மேல்நாடுகளில் இன்றும் பல தேசங்களில் தனிப்பட்ட நபர்களாலும், சங்கங்களாலும் கர்ப்பத்தடை பிரசாரங்களும், அது சம்மந்தமான பத்திரிகைகளும், புத்தகங்களும் ஏராளமாய் இருந்துவருகின்றன. இவைகளையெல்லாம்விட மற்றொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் கர்ப்பத்தடைப் பிரசாரம் செய்ய பல அரசாங்கங்கள் அதற்கென ஒரு இலாக்காவை ஏற்படுத்தி அதன்மூலம் பிரசாரங்கள் செய்தும் வருகின்றன. மற்றும் அனேக இடங்களிலும் வியாபார ஸ்தலங்களிலும் கர்ப்பத்தடைக்கு ஏற்ற சாதனங்கள் விற்கவும் படுகின்றன.

இந்தப்படி உலகத்தில் பல்வேறு இடங்களில் பலவிதங்களாக கர்ப்பத்தடை பிரசாரங்கள் நடந்து பெரிதும் அனுபவசாத்தியமாகி பலர் அதன் பயனை தனிப்பட்ட முறையில் அடைந்து சுகத்தையும், க்ஷேமத்தையும் பெற்று வாழ்ந்து வருகின்றார்கள்.

எனவே கர்ப்பத்தடைப் பிரசாரமும், முறையும் உலகமெல்லாம் பரவி மிகுதியும் செல்வாக்கடைந்த பிறகு இப்போதுதான் நமது நாட்டில் கர்ப்பத்



RangaRakes tamilnavarasam.com

தடை என்பதைப்பற்றி எண்ணவும், பேசவும் சிலர் துணிந்து முன்வந்திருக் கிறார்கள்.

அதுவும் இந்தியநாட்டின் பொருளாதாரம், சுகாதாரம், சமூக வாழ்க்கைச் சுதந்திரம் ஆதாரம், உடல்கூறு ஆதாரம் முதலியவைகளின் தாழ்ந்த நிலைமைக்குப் பரிகாரம் செய்ய வேறு எத்தனையோ வழிகளில் பல நிபுணர் களும், தலைவர்களும் வெகுகாலமாக முயற்சித்தும் பயன் படாமல் போன பிறகே வேறு வழியில்லாமல் இந்த உண்மையைப் பின்பற்ற வேண்டியவர் களானார்கள்.

இந்தக் கர்ப்பத்தடை பிரச்சினையில் குழந்தைகளே இல்லாத வர்களான "வறடர்" களும் முட்டை இட்டுக் குஞ்சுகள் பொரிப்பது போல் ஏராளமான அதாவது 10-பிள்ளைகள், 20 பிள்ளைகள் பெற்றவர்களாகிய "புத்திரபாக்கியம்" உடையவர்களும், சட்ட சம்மந்த நிபுணர்களும், மத சம்மந்தமான நிபுணர்களும், டாக்டர்களும் தாராளமாய் கலந்திருப்பது கர்ப்பத்தடை வெற்றிக்கு அறிகுறி யென்றே சொல்லவேண்டும். ஆனால் கர்ப்பத்தின் பயனால் வேதனையடைந்து கஷ்டப்பட்டு, தொல்லைப்பட்டு அடிமைகளாக வாழும் பெண் மக்கள் போதிய அளவு வெளிவந்து இப் பிரச்சினையில் கலந்து ஆதரவளிக்காதது வருந்தக்கூடிய விஷயமானாலும் பெண்கள் தங்களைத் தாங்களே பாபஜன்மம் என்றும், கீழான பிறவி என்றும் பிறவியிலேயே பிரம்மனால் விபசாரிகளாய் பிறப்பிக்கப்பட்டு விட்டதால் என்றென்றும் புருஷர்களுக்கு அடிமையாய் இருந்து அவர்களது காவலி லேயே வாழ்ந்து தீரவேண்டியவர்கள் என்றும், பேதைகள் என்றும் கருதிக் கொண்டிருக்கின்ற பிறவிகளான பெண்கள் இம்மாதிரியான காரியங்களில் கலந்துகொள்ளாததற்கு ஆகவும் இக் கஷ்டங்களிலும், கொடுமையிலும் தொல்லையிலும் இருந்து விடுதலையாவதற்கு முயற்சி யெடுத்துக் கொள்ளா ததற்காகவும் இவர்கள் மீது குறைகூறுவது 'இருட்டில் ஏன் வெளிச்ச மில்லை' என்று கேட்பதையே யொக்கும்.

ஆனபோதிலும் ஏதோ இரண்டொரு ஸ்திரீகள் கலந்திருப்பதையும் சுயமரியாதை இயக்கத்தில் மாத்திரம் அனேக ஸ்திரீகள் கர்ப்பத் தடை பிர சாரம் செய்து வருவதையும் பார்க்கும்போது ஒரு அளவுக்காவது மகிழ்ச்சி அடைய வேண்டியது நியாயமாகும்.

நிற்க நமது பிரசாரத்தின் பலனாகவும், மற்றும் பலர் முயற்சியாலும் நமது சென்னை மாகாணத்தில் அரசாங்கமானது கர்ப்பத்தடையின் அவசியத்தை உணர்ந்து அரசாங்க வைத்திய ஸ்தாபனங்கள் மூலமாக கர்ப்பத் தடைபிரசாரம் செய்து பார்க்கலாம் என்கின்ற எண்ணங் கொண்டவு டன் மனித சமூகப் பொருப்பற்ற பிற்போக்குவாதிகள் மதத்தின்பேரால் கர்ப்பத்தடை கொள்கையையும், பிரசாரத்தையும் கண்டிக்கப் புறப்பட்டு கூப்பாடு போடுகிறார்கள் என்பதைக் கேழ்க்க யாரும் வருந்துவார்கள்.



அப்படிப்பட்ட எதிர் பிரசாரங்களில் ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர் கள்தான் முதன்மையானவர்களும், தடையானவர்களுமாய் இருக்கிறார்கள் என்றால் யாரும் ஆச்சரியப்படமாட்டார்கள். ஏனெனில்

இந்தக் கூட்டத்தாருக்கு அறிவைப்பற்றியோ, மனிதத்தன்மையைப் பற்றியோ, பிரத்தியக்ஷபிரமாணங்களைப்பற்றியோ சிறிதும் கவலை கிடை யாது. இவர்கள் மனிதசமூகத்தை மிருகங்கள் என்றும், அடிமைகள் என்றும் கருதி கேவலமாய் நடத்தும் முரட்டு மூர்க்கக் கொள்கையைக் கையாளு கின்றவர்கள். சுருங்கக்கூறுவதால் ரோமன் கத்தோலிக்கர்கள் பிற மனிதர் களைப் பாவிப்பதிலும், பிறமனிதர்களிடம் நடந்துகொள்வதிலும், பிற மனிதர்களை மதிப்பதிலும் இந்தியத் தென்னாட்டுப் பார்ப்பனர்களைவிட மிக மிகமோசமானவர்கள் என்றும் அவர்களது மதக்கொள்கையும் தென் னாட்டுப் பார்ப்பன மதத்தைவிட மிகமிக மோசமும் முட்டாள்தனமும், சுய நலமும் கொண்டவைகள் என்றும் சொல்லலாம்.

மேலும் தங்கள் வாழ்வுக்கும், தங்கள் மேன்மைக்கும் பார்ப்பனர்கள் கொஞ்சகாலத்துக்கு முன்பாகக் கூட மனிதசமூகத்தை எவ்வளவு கேவல மாக, சூட்சியாக, முட்டாள்தனமாக, கொடுங்கோன்மையாக நடத்தி வந்தி ருக்கிறார்கள் என்பதற்கு அவர்களது வேதங்களும், புராணங்களும், அரசியல் சட்டங்களும், "தர்ம" சாஸ்திரங்களும் ஆதாரமாய் எடுத்துக் காட்டாய் இருந்து வருகின்றனவோ, அதுபோலவே கத்தோலிக்கர்களின் சரித்திரமும் இருந்து வந்திருக்கின்றது. இருந்தும் வருகின்றது என்றும் சொல்லவேண்டியிருக்கின்றது.

அவர்களுடைய தற்காலயோக்கியதைகளை உணரவேண்டுமானால் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி அவர்கள் நடந்துகொள்ளும் மாதிரியில் இருந்தே ஒருவாறு உணரலாம். ஆதலால் தான் இப்படிப்பட்ட இவர்கள் கர்ப்பத்தடையைப்பற்றி எதிர்ப்பிரசாரம் செய்யப் புறப்பட்டிருப்பதில் யாருக் கும் ஆச்சரியம் இருக்க நியாயமில்லை. ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்கள் கர்ப்பத்தடையை எதிர்ப்பது என்பது இன்று நேற்றல்ல. வெகு காலமாகவே எதிர்த்துவந்திருக்கிறார்கள். அதே புத்தியை இந்தியாவிலும் காட்டி யிருக்கிறார்கள்.

கர்ப்பத்தடையை இவர்கள் எதிர்ப்பதற்கு ஒரு இடத்திலாவது பகுத்தறிவுக்குப் பொருத்தமான நியாயத்தையோ, மனித சமூக நன்மைக்கு ஏற்றதான நியாயத்தையோ எடுத்துச் சொல்லி மெய்பிக்க இவர்களால் இது வரையிலும் முடியாமலே போய்விட்டது. மற்றபடி இவர்களது எதிர்ப்புக்கு உள்ள ஆதாரங்கள் எல்லாம் மதத்தை அடிப்படையாகக் கொண்ட ஆதாரங்களே ஒழிய வேறில்லை.



RangaRakes tamilnavarasam.com

பகுத்தறிவு ஆதாரமும், விஞ்ஞான ஆதாரமும் பிரத்தியட்சஅனுபவ ஆதாரமும் இல்லாத எவ்வித எதிர்ப்புகளிலும், தடைகளிலும் பெரும் பாலும் சூக்ஷிகளும், புரட்டுகளும், சுயநலங்களும், பித்தலாட்டங்களுமே தான் மறைந்திருக்கின்றன என்பதே நமதபிப்பிராயம். அதிலும் இம்மாதிரி யான எதிர்ப்புகள் மதத்தின்பேரால் ஏற்பட்டு நன்மையான காரியங்களுக் கெல்லாம் முட்டுக்கட்டையாயிருக்குமானால் அதில் சுயநலமும், சூட்சியும், புரட்டும், பித்தலாட்டமும் மாத்திரமல்லாமலும் பெரும்பாலும் அயோக்கியத் தனங் களுக்கு ஆதரவுதேடும் தன்மையும் இருக்குமென்பதும் நமதபிப்பி ராயமாகும்.

இந்தக் காரணங்களால்தான் மனிதனுக்கு அறிவும் பிரத்தியக்ஷ அனுபவமும், பஞ்சேந்திர உணர்ச்சியின் பலாபலனும் இருக்கும்போது இவைகளையெல்லாம் லக்ஷியம் செய்யாததும் இவைகளுக்கு மாறுபட்டது மான மதம் என்பது எதற்காக உலகில் இருக்கவேண்டுமென்பது நமது முதல் கேள்வியாகும். அதனாலே தான் இப்படிப்பட்ட மதங்கள் என்பவைகள் எல்லாம் ஒழியவேண்டும் என்று முழுமூச்சுடன் நாம் போராடிவருகின்றோம். சிறிதுகாலத்துக்கு முன்கடவுள் பேரால் தேவதாசிகள் என்கின்ற ஒருமுறை இருக்கக்கூடாது என்று ஒருவிதகிளர்ச்சி ஏற்பட்ட காலத்தில் தோழர் சத்திய மூர்த்தி அய்யர் போன்ற தேசபக்தர்கள் பலர் தேவதாசிதன்மை ஒரு மேலான தன்மையென்றும், அது கடவுள் கைங்கரியமென்றும், அதனால் புண்ணிய முண்டு என்றும் கூப்பாடு போட்டது அனேகருக்கு ஞாபகமிருக்கும். அதற்கு பதில் அளிக்கும் முறையில் நாம் "அப்படிப்பட்ட மேலானதும், சிரேஷ்டமானதும், புண்ணியமானதுமான காரியத்தை புண்ணியத்தில் நம்பிக்கையுள்ள வகுப்பார்கள் தங்கள் குடும்பங்களில் உள்ள பெண் களுக்குக்கொடுத்து இப்பொழுது தேவதாசிகளாய் இருக்கின்ற பெண்களை குடும்பப் பெண்களாக ஏன் ஆக்கிவிடக்கூடாது"? என்று கேட்ட பிறகு அந்த சமாதானத்தை விட்டுவிட்டு "தேவதாசிகள் என்கின்ற வகுப்பை ஒழித்து விடுவது மதத்திற்கும், ஆகமத்துக்கும் விரோதமானது" என்று சொல்ல வந்தார்கள். இதற்கும் பதில் குடிஅரசு சொல்லும் வகையில் "மனித தன்மைக்கும், சுயமரியாதைக்கும், மதமும், ஆகமும் விரோதமாய் இருந் தால் எதை ஒழிப்பது" என்றுகேட்டபோது தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் "ராமசாமியும், வரதராஜுலுவும் இன்றைக்குத் தேவதாசியை வேண்டா மென்று சொல்லுவார்கள். நாளைக்கு கோவிலுக்கு பூஜை செய்ய அர்ச்சகரே வேண்டாமென்று சொல்லுவார்கள்; ஆதலால் மதத்துக்கும், ஆகமத்துக்கும் சிறிதும் விரோதமான காரியம் எதுவும் செய்யக்கூடாது" என்றார். இதன்பிறகு தான் இந்து மதத்தின் யோக்கியதை முன்னையைவிட அதிகமாக சந்தி சிறிக்க ஏற்பட்டு தேவதாசிமுறை ஒழிக்க சட்டம் செய்ய முடிந்தவுடன், சாரதா சட்டம் செய்யவும் சுலபமாய் முடிந்து விட்டது. பார்ப் பனர்கள் பேச்சைக்கேட்டு சில முஸ்லீம்கள் கூட குழந்தைகளை கல்யாணம் செய்து கொண்டு காரியாதி களைச் செய்வதைத்தடுக்கும்படியான சட்டம்



செய்வது முஸ்லீம் மதத்துக்கு விரோதம் என்பதாகபோட்டகூச்சல்கள்கூட லட்சியம் செய்வாரற்று குப்பைத் தொட்டிக்குப்போய் விட்டது.

ஆகவே தேவதாசி ஒழிப்பு, குழந்தை மணம் ஒழிப்பு, கர்ப்பத்தடை ஆகிய விஷயங்களுக்கு எதிர்ப்புகள் எல்லாம் மதங்களின் முட்டாள் தனங்க ளையும் அவற்றிற்குள் அடங்கிக்கிடக்கும் மோசங்களையும், சூக்ஷிகளையும், வெளிப்படுத்த ஒரு தக்க சாதனமாய் ஏற்பட்டிருப்பதற்கு நாம் மிகுதியும் மகிழ்ச்சி அடைகின்றோம். ஏனெனில் இவற்றின் மூலம் மதங்கள் மனிதசமூக நன்மையை விட– சுகாதாரத்தைவிட– உடல் கூற்றின் தத்துவநிலையைவிட– பொருளாதார நலத்தைவிட வேறுபட்டதாகவும் முக்கியமானதாகவும் பாவிக்கப்படுகின்றனவென்பதை உலகம் அறியச் செய்துவிட்டது. ஆதலால் மதத்தின்பேரால் வரும் எதிர்ப்புகள் எல்லாம் மதங்களை ஒழிக்க நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு அனுகூலம்என்றே கருதி வரவேற்போமாக.

நிற்க கர்ப்பத்தடை முறையை கத்தோலிக்கர் மதத்தின் பேரால் எதிர்ப்பதில் மூன்று முக்கிய காரணங்கள் எடுத்துச்சொல்லி வருகிறார்கள்.

1. கடவுளுக்கு விறோதமாம்.

2. வேதத்துக்கு விறோதமாம்.

3. இயற்கைக்கு விறோதமாம்.

இந்த மூன்று காரணங்களும் முற்றும் முட்டாள்தனமும், மோசமும் நிறைந்த கற்பனைக் காரணங்கள் என்பதுடன் முன்னுக்குப்பின் முரணான காரியங்கள் என்பதுமாகும் என்பதே நமதபிப்பிராயம். இதைப்பற்றி அடுத்தவாரம் விளக்குவோம்.

**குடி அரசு – தலையங்கம் – 05.11.1933**



RangaRakes tamilnavarasam.com

## மீண்டும் பார்ப்பன சூழ்ச்சி

தேசீயத்தின் பேராலும், காங்கிரசின் பேராலும், இதுகாறும் சென்னை மாகாண பார்ப்பன அரசியல் வாதிகள் செய்து வந்த சூழ்ச்சிகளையும் புரட்டு களையும் நாம் அப்போதைக்கப்போது வெளிப்படுத்தி வந்திருக்கிறோம். இப்பொழுது தோழர் காந்தி முதலியவர்கள் காங்கிரசுக்கு தகனக்கிரியை செய்து பார்ப்பன தேசீயப் புரட்டுக்கு ஆதரவு இல்லாமல் செய்து விட்டதால். ஒரு புதிய ஏற்பாடு செய்யவேண்டிய அவசியம் பட்டம் பதவிகளை நாடும் காங்கிரஸ் அரசியல் வாதிகளுக்கு ஏற்பட்டு விட்டது. அதற்காகவே தோழர்கள் சத்தியமூர்த்தி, சி.எஸ். முத்துரங்க முதலியார், எம்.பக்தவத்சலம் ஆகியோர்களால் "காங்கிரஸ் சுயராஜீயக் கட்சி" என்ற பேருடன் ஒரு புதிய கட்சி பழயபடி சென்னையில் ஸ்தாபித்திருப்பதாகத் தெரிகிறது. "அடுத்த தேர்தலிலே சட்டசபை ஸ்தாபனங்களையும், ஸ்தல ஸ்தாபனங்களையும் கைப்பற்ற முயற்சி செய்வதும், வெள்ளை அறிக்கையையும், சமூக தீர்ப்பை யும் எதிர்த்துப் பிரசாரம் செய்வதும், சுயராஜ்யத்துக்காகப் போராடுவதும் இந்தக் கட்சியின் நோக்க" ங்களென்று வெளியிடப்பட்டிருக்கிறது. இதை ஊன்றிக் கவனிக்கும் பொழுது இது மக்களுக்கு இப்பொழுது நன்றாய் தெரிந்து போய் விட்டிருக்கிற, பழய பார்ப்பனீய சூழ்ச்சியின் புதிய வேஷமேயன்றி வேறல்ல என்பது தெற்றெனெ விளங்கும். இதுவரையில் இப்பார்ப்பன காங்கிரஸ்வாதிகளும், அவர்களுடன் சேர்ந்து "ஒத்துக்கு மத்தளம் போடும்" சில முடத்தெங்குகளும் செய்து வந்த "தேசியப் பிரசாரத்தாலும்", "சுயராஜ்யப் போராட்டத்தாலும்" நமது மாகாணத்திலுள்ள பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்ட நஷ்டங்கள் சொல்லுந்தரமல்ல. அப்படியிருக்க, மீண்டும் இவ்வித சூழ்ச்சிக்கு இடம் கொடுக்கலாமா என்று கேட்கிறோம். தங்களுடைய சொந்தப் பிழைப்புக்காகவும், தங்கள் சொந்த வகுப்பு நலத்துக்காக அதிகாரத்தையும், அரசாங்க பதவிகளையும் கைப் பற்றுவதற்காகவும் பார்ப்பனர்கள் ஒன்றன்பின் ஒன்றாக இவ்வித புரட்டு களையும் சூழ்ச்சிகளையும் செய்து கொண்டுதான் இருப்பார்கள். ஆனால் சுயநல முன்னேற்றத்தைக் கருதியோ, அல்லது ஏமாளித்தனத்தினாலோ மற்றவர்கள் இவ்வித மோச முயற்சிகளுக்கு ஆதரவு செய்வதைப்பற்றித் தான் மனம் வருந்துகிறோம்.



எனவே இந்தப் புதிய கட்சிக்கு ஆதரவு கொடுக்காமல், அதற்கு "கர்ப்பத்திலே இறந்த குழந்தை"யின் கதியே நேரிடும்படி செய்வது பார்ப்பனரல்லாத மக்களின் கடமையாகும் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு – துணைத் தலையங்கம் – 05.11.1933**



RangaRakes tamilnavarasam.com

# எது துவேஷம்?

நவம்பர் 1-11-33ந்தேதி வெளியான சுதேசமித்திரன் பத்திரிகையில் கர்ப்பத்தடை ஆதரிப்புக்கூட்ட நடவடிக்கை வெளியாயிருப்பதில் பார்ப்பனர்கள் பேசியதை விபரமாய் பிரசுரித்துவிட்டு "வரதராஜலு நாயுடு தமிழில் பேசினார்" என்று ஒருவரியில் முடித்து விட்டது. ஆங்கிலத்தில் பேசிய பார்ப்பனர்களின் பேச்சை தமிழில் மொழிபெயர்த்து விரிவாகப் பிரசுரிப்பதும், தமிழில் பேசிய பார்ப்பனரல்லாதார் பேச்சை ஒரே வரியில் தமிழில் பேசினார் என்று பிரசுரித்திருப்பதையும் கவனித்தால் இந்த பார்ப்பன பத்திரிகையின் துவேஷ மனப்பான்மை நன்கு விளங்குகிறதல்லவா? இங்கிலீஷ் பேச்சுகளையெல்லாம் மொழி பெயர்த்து பிரசுரித்த இந்தப் பத்திரிகை தோழர் வரதராஜலுவின் தமிழ் பேச்சை பூராவாகப் போடாததற்குக் காரணம் என்ன? தமிழ் மொழிமீதுள்ள வெறுப்பா? அல்லது பார்ப்பனரல்லாதார் மீதுள்ள பார்ப்பன துவேஷமா? என்றுதான் கேட்கிறோம். பார்ப்பனப் பத்திரிகைகளை ஆதரிக்கும் தமிழ் வாசகர்கள் இதைச் சிந்தனை செய்வார்களாக.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 05.11.1933**



# அகில கூட்டுறவாளர்கள் தினம்

## ரஷ்யாவின் கூட்டுறவு வாழ்க்கை விபரங்கள்

### ரஷியக் கூட்டுறவு முறை

தலைவரவர்களே! தோழர்களே!! எனக்கு இன்று பேச சந்தர்ப்பம் கொடுத்து எனது அபிப்பிராயங்களை எடுத்துச்சொல்ல அனுமதி கொடுத்த தோழர் கணபதி ஐயர் அவர்களுக்கும், தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியறிதலை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கடைசியாக பேசவேண்டியவனாக இருக்குமென்று கருதினேன். ஆனால் நான் முதலிலேயே பேச ஏற்பட்டுவிட்டது. ஆனபோதிலும் எனது அபிப்பிராயங்களை சொல்லிவிடுகிறேன்.

நான் (கோவாப்ரேடிவ்) கூட்டுறவு சங்கங்கள் என்ற விஷயத்தில் ஆதியில் கொஞ்சம் அக்கரை கொண்டவனாய் இருந்தவன். முதல் முதலாக நம்முடைய சென்னை ரிஜிஸ்ட்ரார் தோழர் ராமச்சந்திரராவும், அதுசமயம் டிப்டி கலைக்டராக இருந்த தோழர் நாராயணசாமி அவர்களும் இங்கு கோவாப்ரேடிவ் ஸ்தாபனம் ஏற்படுத்த முதல் முதல் என்னிடமே வந்தார்கள். எங்கள் வீட்டில்தான் கூட்டம் கூட்டப்பட்டது. பாங்கு புஸ்தகத்தைப் பார்த்தாலும் நான்தான் முதல் பங்குக்காரனாக இருப்பது தெரியவரும். அதற்காகப் பெரிதும் நானும் அந்தக் காலங்களில் உழைத்திருக்கிறேன். என்றாலும் இன்றைய நிலைமையானது நான் கோவாப்ரேடிவ் சொசைட்டிகளிலிருந்து சிறிது விலகி அலக்ஷிய அபிப்பிராயமுடையவனாக இருக்கிறேன். ஏனெனில் எங்கு பார்த்தாலும் கக்ஷியும் சுயநலத்துக்கு ஸ்தாபனங்களை உபயோகித்துக்கொள்வதும் அதன் உத்தேசங்களுக்கு விரோதமாக பணக்காரர்கள் ஆதிக்கம் செலுத்துவதுமாய் இருந்துவருவதேயாகும். தோழர் கணபதி ஐயர் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்பு என்னிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது நம்முடைய நிலைமையானது இப்படித்தான் இருக்க முடியுமென்று குறிப்பிட்டார். அதுமிக உண்மையேதான். ஏனெனில் நம் நாட்டில் நிலைபெற்றுள்ள பல்வேறுவிஷயங்களையும், முறைகளையும் அடியோடு மாற்றாமல் நம்முடைய ஜனசமூகத்திற்கு நன்மையைக் கொண்டு வந்துவிடுவது என்பது கொஞ்சமும் முடியாத காரியமாகும்.



RangaRakes
tamilnavarasam.com

ரஷ்யா நாட்டின் கூட்டுறவு முறைகளைப்பற்றி பேசுபவன் என்று உங்களுக்கு தலைவர் எடுத்துச்சொன்னார். சர்வ விஷயத்திலும் ஐக்கிய பாவமான கூட்டுறவு முறையானது சாத்தியப்படுமா என்று ஒருகாலத்தில் கருதி இருந்தேன். ஆனால் எனது மேல்நாட்டு அனுபவங்களினால் அதிலும் குறிப்பாக ரஷ்யாவின் கூட்டுறவு முறைகளைக் கவனித்துப் பார்த்ததினால், கூட்டுறவு முறையைப் பற்றிய எனது எண்ணம் சாத்திய மாகக் கூடிய தென்பது மிக்க பலமாக உறுதிப்பட்டது.

என்னைப்பொருத்தவரையில் என்னைப்பற்றி யார் என்ன நினைத்துக் கொண்டிருந்தபோதிலும் எனது முடிவான லக்ஷியம் அதாவது எனது எண்ணம் ஈடேறுமானால் அது உச்சஸ்தானம் பெற்ற உயரிய கூட்டுறவு வாழ்க்கை முறையாகத்தானிருக்கும் என்பதுதான் என் அபிப்பிராயம்.

கூட்டுறவு என்கிற உயரிய சரியான நிலையானது நம்முடைய நாட் டில் ஏற்பட்டுப்போனால் ஜனசமூகமானது கவலையற்று-சஞ்சலமற்று நாளைக்கு என் செய்வோம் என்று ஏங்கித் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலைமையற்று நிம்மதியாக-சவுக்கியமாக குதூகுலமாக வாழவழி ஏற்பட்டு விடும்.

நம்முடைய நாட்டில் ஏதாவது ஒருசங்கம் ஏற்பட்டால் அதைப்பற்றி நம்முடைய மக்கள் என்ன கருதுகிறார்களென்றால் அதில் தங்களுக்கு எவ் வளவு தூரம் லாபமிருக்கிறதென்றும் அதைத் தங்கள் பெருமைக்கும், வாழ்வுக்கும் எவ்வளவு தூரம் (சுயநலத்திற்கு) பிரயோஜனப்படுத்திக் கொள் ளலாமென்றும் தான் கருதிக்கொண்டு அதில் சம்மந்தம் வைத்துக் கொள்ளு கிறார்களே ஒழிய அதனால் உலக நன்மைக்கு-ஜன சமூக மேம்பாட்டிற்குப் பாடுபடவேண்டுமென்பதைப்பற்றிய கவலையை அறவே விட்டு விடு கின்றார்கள்.

அதுபோலவே நம்முடைய கோவாபரேடிவ் ஸ்தாபனங்களிலும் இருந்துவருகிறது. அந்த ஸ்தாபனத்திலுள்ள மக்களுக்குள்ளாகவே கூட்டுறவு உணர்ச்சி கூட கிடையாதென்றே உறுதியாகச் சொல்லலாம். ஆனால் ஏதோ சிலர் அவரவர்கள் தங்களுடைய நன்மைக்காகவும் பட்டம் பதவிகளுக்காகவும் கௌரவத்திற்காகவும் ஏதோ சம்பந்தம் வைத்திருப்ப தினால் மாத்திரம் என்ன பலன் ஏற்பட்டுவிடும்?

சாதாரணமாக இந்த ஊர் கூட்டுறவு ஸ்தாபனத்தை எடுத்துக்கொள் ளுங்கள். அதில் 2000, 3000 பேர்கள் வரை பங்குதார மெம்பர்களாக இருக் கின்றார்கள். ஆனால் இந்த ஸ்தாபனத்தினால் உருப்படியாக பொது மக்க ளுக்கு என்ன நன்மை ஏற்பட்டு விடுகிறது? ஒருசில சொற்பபேர்கள், ஏதோ எப்படி கடன் பெறலாமென்று பெருத்த பிரயாசை எடுத்துக்கொள்பவர்களே சில அனுகூலங்கள் அடைகிறார்கள். இவர்களுக்கு ஷ ஸ்தாபனத்தைப்



பற்றிய கவலையே இல்லை. இன்றை உலக எல்லா வாழ்க்கையும் இப்படித் தான் இருக்கிறது. வெறும் குற்றத்தையே பேசுவதால் பயனில்லை. ஆனாலும் இவைகள் தக்க படிப்பினையாக இருக்க உதவ வேண்டும். கூட்டுறவு வாழ்க்கையென்றால் பிறருக்கு நாம் எவ்வாறு சகாயம் செய்வது எவ்வாறு உதவி செய்வது என்கிற விஷயங்களே நமது வாழ்க்கை யின் முக்கிய லக்ஷியமாய் இருக்கவேண்டும். என்பதாகும். இவைகளில் தனித்தனி மனிதனைப்பொறுத்த தத்துவம் என்பதே கூடாது.

சாதாரணமாக நாம் நம்மிடையே ஒருவரை புதிதாகக் கண்டால் அதாவது சந்தித்தால் அவருடைய நிலை என்னவென்றும், உத்தியோகம் என்னவென்றும் வினவஆசைப்படுகிறோம். அவர் ஒரு பெரிய உத்தியாகஸ் தனாகவோ, பணக்காரனாகவோ இருந்தால் ஒரு தனி மதிப்பும், ஒரு குமாஸ் தாவாக இருந்தால், கூலியாக இருந்தால், ஒரு தனிமதிப்பும் தான் கொடுக் கின்றோம். இது தான் நம்முடைய நாட்டில் ஒரு மனிதனை மதிப்பதைப் பற்றிய முறையாகும். ஆனால் ரஷ்யாவிலோ இங்குள்ள இதுபோன்ற கேள்விகளை அங்கு யாரும் கேட்பதில்லை. அங்கு ஒருவருடைய உத்தி யோகத்தைப் பற்றியோ, செல்வத்தைப் பற்றியோ சிறிதும் யோசிப்பதே இல்லை; விசாரிப்பதுமில்லை. ஒருவனைக் கண்டதும் அவன் (Socialservice) சமுதாயசேவை என்ன செய்திருக்கிறான் என்று மட்டுமேதான் பிரதானமாக கவனிப்பார்கள், அதைத்தான் கேட்பார்கள். ஒருவர் பிறருக்கு என்ன நன்மை புரிய ஏற்றுக்கொள்ளுகிறார் என்பது தான் மனிதனை அறிய முக்கிய தத்து வமாகும். அதுதான் அங்கு அவனுடைய பெருமையைக் காட்டுவதாகும். அங்கு உத்தியோகத்தைப் பற்றிய பேச்சோ, வருமானமோ, மேல்கீழ் வரும்படி என்பது போன்ற பேச்சோ, எங்கும் எவ்வித ரூபத்திலும் கிடை யாது. அங்கு எங்கும் யாவரும் சமுதாய வேலை செய்வோரேயாவார்.

நான் ரஷ்யாவில் இருந்த காலத்தில் ஒரு நியாயஸ்தலத்தைப் பார்வை யிட அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு ஒரு குற்றவாளியை விசாரிக்கக் கண்டேன். அவன் ஒரு விசேஷ நாளில் குடித்து வெறியனாகி கலகம் செய்தான் என்பதான குற்றவாளி. இவனை அந்த விசாரனை ஸ்தலத்தில் என்ன கேள்வி கேட்டார்கள் என்றால் உன்னுடைய Social Service Work (சமுதாய ஊழிய வேலை) என்ன என்பதேயாகும். அவன் அதற்கு எனக்கு Social Service சமுதாய வேலை இல்லைஎன்றான். இதைக் கேட்டதும் நியா யாதி பதியும் ஜூரியான ஒருபெண்ணும் 'உனக்குசமுதாய வேலையில் லாமல் போய் விட்டது என்கிறாயே வெட்கமில்லையா? என்னை உலகுக்கு உப யோகப்படுத்திக் கொள்ள வகையற்றவனாக இருக்கிறேன் என்று சொல் லுவது அவமானகரமானதாகத் தோன்றவில்லையா?" என்று கடிந்தார். அதற்கு அவன் எல்லா சோஷியல் சர்வீசையும் சிறு பிள்ளைகளாகிய கம்சமால் கூட்டத்தார் எடுத்துக்கொள்ளுகிறார்கள், நான் என்ன செய்வது என்றான். அந்தம்மாள் வெட்கம், வெட்கம், என்றாள். இவைகளைக் கேட்ட



RangaRakes tamilnavarasam.com

பிறகு தான் சோஷியல் சர்விஸ் (Social Service) என்பவைகளைப்பற்றி அதிகம் அறிய விசாரணை செய்தேன். சமூக ஊழியம்செய்வது தான் தங்கள் வாழ்க்கையின் கௌரவம் என்பதை முதலாகவும் அடுத்தபடி கூட்டுறவு வாழ்க்கையே மேலானதாகவும் அவர்கள் கருதி நடக்கிறார்கள்.

ரஷ்யர்களுடைய வாழ்க்கையானது உற்சாகமாகவும் சந்தோஷ மாகவும் இருப்பதற்குக் காரணம் அவர்கள் Social Service சும் கூட்டுறவு வாழ்க்கையை நடத்த முனைந்து நிற்பதேயாகும். அவர்கள் வாழ்க்கையில் மேற்போட்டுக்கொள்ளும் இந்த வேலையானது மனிதனுடைய கவலை துன்பம், மனச்சோர்வு என்பவைகளே இல்லாமல் செய்து விடுகிறது. அங் குள்ள சர்வ ஜனங்களுடைய எண்ணமெல்லாம் பிறருக்கு எவ்வளவு தூரம் நன்மைசெய்யவேண்டும்? என்றே குடிகொண்டிருக்கிறது. இந்த நோக்க மில்லாத மனிதனை மனிதனல்ல என்று வன்மையாக அவர்கள் உணர்ந் திருக்கிறார்கள்.

நம்முடைய நாட்டில் உத்தியோகத்தின் பேராலும் மற்ற பதவிகளின் பேராலும் 1000, 2000, 5000, 7000 ரூபாய்கள் கொள்ளை கொள்வது போன்ற கொடுமைகள் ரஷ்யாவில் கிடையாது. அங்கு உள்ளவர்களுக்கு தனக்கு வேண்டிய அளவுக்கு மேல் வரும்படி-லஞ்சம்-லாவணம் என்பன போன்றவைகளே அடியோடு கிடையாது. அங்கு ரூபாய் 10,20 கூட கடன் கொடுக்கும் முறையோ,கடன்படும் முறையோ கிடையாது. அதுகுற்றமாகும்.

ஆனால் அந்தமுறைகள் எல்லாம் நம்முடைய நாட்டின் இன்றைய நிலைமைக்கு சாத்தியமில்லை என்று சொன்னாலும் நம் நாட்டு நிலைமை களை எல்லாம் அடியோடு மாற்றி அமைத்துத்தான் ஆகவேண்டும். இக் கருத்தைத்தான் நான் வலியுறுத்திக் கூறுகின்றேன். இது சிறிது சிறிதாய் கோவாப்பரேட்டிவ் ஸ்தாபனங்களின் மூலம்செய்யலாம். நம்முடைய நாட்டில் அளவுக்கு மீறிய செல்வச் செருக்கு கொண்டவர்களையும்-கல் நெஞ்சம் படைத்த கணத்த முதலாளிமார்களையும் ஒரு பக்கத்தில் வெகு பந்தோபஸ்தாய் வைத்துக் கொண்டிருக்கின்றோம். மற்றொரு பக்கத்தில் வேலையில்லாத்திண்டாட்டக்காரர்களையும் பிச்சைக்காரர்களையும் வைத் துக் கொண்டிருக்கிறோம். இவைகளெல்லாம் ஏன் இப்படி இருக்கிறது? இது போன்ற நிலைமை ரஷ்யாவில் இல்லையே! ஆதிக்கக்காரனுக்கும்-ஆதிக் கத்திற்கும் கொஞ்சமாவது இடமிருக்கிறவரையிலும் தொல்லைப்படுகிறவர் களும்- தொல்லையும், தரித்திரமும், ஏழ்மையும் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்யும்.

இன்று காலை முதல் மாலை வரையிலும் என்னிடம் வந்து 5, 6 பேர்கள் வரைவந்து "வேலைகொடு-வேலைகொடு" என்று வருந்தினார்கள். ஒருவருக்கு கலைக்டருக்கு சிபார்சு கடிதம், தாசில்தாருக்கு சிபார்சு கடிதமும் எழுதித்தர வேண்டுமாம். ஒருவர் தனது குழந்தைகளுக்கு அம்மை



போட்டிருக்கிறது, சம்சாரத்திற்கும் உடல்நோவு, நான் என்னசெய்வேன். 4 மாதமாக வேலையில்லையே காப்பாற்றுவாறில்லையே என்று கதறினான். நான் அவருக்கு 2 படி புழுங்கல் அரிசி கொடுக்கும்படி வீட்டிற்கு சீட்டு கொடுத்தேன். இதுபோன்ற கொடுமைகளின் தன்மையை இன்று என்னுடன் தங்கியிருந்த நண்பரும் நன்கறிவர். எங்கும் வேலை இல்லை என்ற கூக்குரல் அதிகரித்து விட்டது. ஏன் வேலை இல்லாமல் போய் விட்டது? வேலை இல்லாமை எப்படி ஏற்படும்? என்று யோசித்துப்பார்த்தீர்களா? ஒரு வேலைக்காரன் காலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை வேலை செய்கின் றான். ஒரு தையல்காரன் 3-மிஷின்களை வைத்துக்கொண்டு ஒரு நாளைக்கு 5ரூ. 10ரூ. சம்பாதிக்கின்றான் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஒருவன் அதிக நேரம் வேலைசெய்து அதிகப்பணம் ஒருவனே சம்பாதிப்பது எதற்கு? இவை களையெல்லாம் கணக்குப்போட்டு ஒரு ஒழுங்குமுறைப் படுத்தி ஒரு கூட்டுறவு முறையில் அமைத்தால் அவனவனுக்கு தேவை யான அளவுக்கு ஒவ்வொருவருக்கும் கண்டிப்பாக போதியபலன் கிடைக்கும்.

நம்முடைய நாட்டில் அடிப்படையான மாறுதல் செய்யாவிட்டால் கூடிய சீக்கிரத்தில் நாம் என்ன கதிக்கு ஆளாகவேண்டிவரும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

நாம் செலவழிப்பதில் வகைதகையற்ற முறையில் வீண்செலவு செய்துவருகின்றோம். கூட்டுறவு முறையில் நமது வாழ்க்கையை நடத்தி னால் இன்றைய நமது செலவில் எட்டில் ஒருபாகம் தான் செலவு ஏற்படும் பாக்கி இன்னும் 8-பேருக்கு உதவும்.

உதாரணமாக ரஷ்யர்களின் சாப்பாட்டு முறையைக் கவனியுங்கள். அங்கு சாப்பாடும் கூட்டுறவு முறைதான். அங்கு ஒரு இடத்தில் நாள் ஒன்றுக்கு ஒருவேளைக்கு நாற்பதினாயிரம் பேர்கள் சாப்பிடுமிடத்தைக் கண்ணுற்றேன். ஆனால் இங்குள்ள நிலைமை என்ன? ஒரு வீட்டில் சமையல் செய்வதென்றால் தேவைக்கு மேல் அதிகமாய்த்தான் போட்டுச் சமைக்கிறார் கள்-4,5 பேர்கள் உள்ள ஒரு குடும்பத்திற்கு ஒரு பெண் கண்டிப்பாக சமையலுக் கென்று ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு குடும்ப சமையலுக்கு என்றும் ஒரு தனி அரை. பாக்கி வசதிகளுக்கென்று கொள்ளை கொள்ளை யான இடமும் ஒதுக்கிவைத்துக்கொண்டு என்ன அக்கிரமமான தீங்குகளை வசதியற்ற எளியவர்களுக்கு உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம்.

ரஷ்யாவிலுள்ள மேல் சொன்ன பொது சமையல் சாலையில் (General Kitchen) 970 பேர்கள் தான் வேலையிலீடுபட்டிருக்கிறார்கள் என்று நான் கணக்குக்கேட்டுத் தெரிந்தேன். நம்முடைய நாட்டில் 4-பேர் களுக்கு ஒரு பெண்வீதம் சமையலுக்கு ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிற கணக்குப்படி 40000 பேர்களுக்கும் எத்தனைப் பெண்களை ஒதுக்கித் தள்ளி கொடுமைக்



RangaRakes tamilnavarasam.com

காளாக்குவது? என்றுதான் யோசித்துப் பார்க்கும்படி கோறுகிறேன். நம்முடைய சமையலைப்பற்றி ஏதாவது பந்தோபஸ்து உண்டா? சமையலரையையும் சாப்பாட்டுச் சாமான்களையும் சமைத்தபிறகும் அங்கு தினம் டாக்டர் சரியான பரிசோதனை செய்கிறார். ஒரு பெரிய எம்.டி.டாக்டர் அதற்கென்றே ஒவ்வொரு கூட்டுறவு சமயலுக்கு உண்டு. இங்கு நாம் என்ன செய்கிறோம்? சல்லீசான சரக்குகளை வாங்கிப்போட்டு வெந்தும் வேகாமல் அவித்துத் தின்று, சாப்பாட்டின் காரணமாகவே பெரும்பாலும்நோய் அடைகின்றோம். மேல் நாட்டின் வாழ்க்கையில் எவ்வளவு கஷ்டக்குறைவு, அனுகூலம், மிச்சம், சுகாதாரம், சௌக்கியம் ஆகியவைகள் கவனிக்கப் படுகிறதென்பதையோசியுங்கள். அங்கு ஒரு ரொட்டிக்கிடங்கில் (Bakery) நாள் ஒன்றுக்கு 250 டன் ரொட்டிகள் ஒரேசமயத்தில் செய்யப்படுவதைப் பார்த்தேன். கூட்டுறவு முறையினால் ஒருநாள் ஒன்றுக்கு ஒரு இடத்தில் இருபதினாயிரம் முப்பதுஆயிரம் வீதம் ஷர்ட்டுகள் டிரௌசர்கள், ஜாக்கட்டுகள் தயாரிக்கப்படுகின்றன. அங்கு அத்தனைபேரும் வேலையிலேயே ஈடுபட்டிருக்கின்றனர். அங்கு மிகக்குறைந்த சிலவு தான்.

இங்கு நாம் துணி வாங்கிக் கொடுத்தால் காலே அரைக்கால் பாகம் திருட்டும் சேதமாகிறதென்றும் சொல்லலாம். அங்கு அப்படியில்லை. துணியை அப்படியே 200, 300 வீதம் மடிப்பு மடித்து முதலிலேயே சின்ன சின்ன வேலைக்கானவைகளுக்கு அதாவதுபாக்கெட், கழுத்துப்பட்டை கைப்பட்டை முதலானவைகளுக்கு ரம்பத்தில் அறுப்பது போன்ற மிஷினில் அருத்து எடுத்துக்கொண்டு பாக்கியை அப்படியே சேதாரம் இல்லாமல் முழுதும் உபயோகப்படுத்திவிடுகிறார்கள்.

அங்கு ரஷ்யாவில் 2,000–3,000 ஜனங்கள் சந்தோஷமாக சௌக்கியமாக போதிய சுகாதாரத்தோடு ஒரே கட்டிடத்தில் நிறம்பி வாழ்வதைப் பார்த்தேன். இங்கு நம்முடைய ஒருவீட்டை என்ன அனாவசியமாக 3, 4 அடுக்கு மெத்தைகளுடன் கட்டுகிறோம். அதில் பகுதி பாகம் நாம் உபயோகப்படுத்துவதுகூட இல்லை. அப்படி உபயோகப்படுத்தும் பாகத்தில் சுத்தம் சுகாதாரம் இருப்பதில்லை. நம்முடைய வீட்டை நிரப்புவது ஒடிந்து போன மத்து கெட்டுப்போன நாற்காலி முரம் கூடை கிழிந்துபோன பாயும் அவிந்து போன தானிய குப்பைகளால்தான். இந்த முட்டாள் தனத்திற்காகவா நாம் பெரும்வீடு வைத்துக்கொண்டுவாழுகிறோம்? என்று யோசித்துப்பாருங்கள்.

அங்கு எப்படி வீட்டு வசதி முறை இருக்கின்றதென கேட்கலாம். சர்வாதிகாரியான ஸ்டாலினுக்கும் சாதாரண தொழிலாளிக்கும் சுமார் 10, 16 அடிக்கும் உள்ள ஓர் அளவு இடந்தான். அங்கு ஒரே மாதிரிசாதிக்காய் கட்டிலும், மேஜையும் சிறப்பாக இருக்கும். அங்கு ஒரு சிறு 4 – 4 உள்ள கக்கூசு நூற்றுக்கணக்கானவர்களுக்கு உபயோகப்படுகிறது. தோட்டியே



கிடையாது. அது கக்கூஸா என்று நாம் சந்தேகப்பட்டே போய்விடுவோம். அவ்வளவு சுத்தம் அதில் எவ்விதவாடையும் இருக்காது அழகுஒழுங்கான முறை எல்லாம் சேர்ந்திருக்கிறது. இங்கு ஒருவீட்டுக்கு 5 பேருக்கு ஒரு கச்கூசாக இருக்கிறது. அதற்கு எவ்வளவு இடம்? அப்படியிருந்தும் என்ன சகிக்க முடியாத சுகாதாரக்குறைவு? இங்கு 300பேர்களுக்கு ஒருதோட்டிவீதம் இருப்பானென்று நம்புகிறேன். இந்த 30,000 பேர்கள் உள்ள ஈரோட்டில் எத்தனை தோட்டிகள்? எத்தனை வீடு, தெருக்கூட்டுகிறவர்கள்? எத்தனை வேலைக்காரர்கள்? இப்படியிருந்தும் இங்கு அசுத்தம் அசுத்தந்தானே என்றும் அதிஅக்கிறமமாக இருக்கிறது. அங்கு கக்கூசுக்கு பக்கதிலேயே படுக்கை அறை இருக்கும் அங்குள்ள முறை கஷ்டத்திற்கே இடமில்லை வழியுமில்லை.

ஒவ்வொருகூட்டுபண்ணையிருக்கும் இடத்திலும் ஒவ்வொரு தொழில் சாலைக்கும் ஒரு நல்ல Park பார்க் சினிமா, விளையாட்டு இடம், டிராமா சுகாதார வசதிசாலை எல்லாம் அமையப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் உள்ள 5000 பேருக்கும் 1000 கூட்டுறவுபேருக்கும்முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டுசம்பளம் ஒரே அளவு தான் கொடுக்கப்பட்டு வருகிறது. மேல்கெண்ட மீதியை அக்கூட்ட பொதுஜனங்களுடைய நன்மைக்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

## கூட்டுறவு சிக்கனம்

இங்கு ஒரு மனிதனுக்கு ஒருவண்டியிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் அவன் எப்பொழுதும் போய்க்கொண்டிருக்கிறானா? 10மணி நேரத்திற்கும் வீணில் தீனிபோட்டு 8மணி நேரத்திற்கும் குறைவாகவே வேலை வாங்குகிறான். 3 மணிநேரத்திற்கு அனுபவிப்பதினால் பாக்கி 7 மணிநேரகூலியும் செலவும் வீணாகிறது. இப்படியேதான் தனிப்பட்டவர்கள் தன்மையால் உண்டாகும் நாசங்கள். அநேகம் நம்முடைய நாட்டில் தேச செழிப்பும் அனுபவப்பொருள்களுற்பத்தியும் ஒன்றுக்கு எட்டாக விளங்கு கிறதா இல்லையா? ஆனால் மக்களின் கஷ்டத்திற்குக் காரணம் என்ன? தனித்தனி என்னும்உணர்ச்சி ஒழிய வேண்டுமா–வேண்டாமா? கவலையற்று வாழ்வது தான் சிறந்தது அதற்கு கூட்டுறவு முறையே தான் பெரிதும் தேவையானது.

இந்த ஈரோடு முனிசிபாலிட்டியை எடுத்துக்கொள்ளுங்கள். அது ஒன்று சேர்க்கப்பட்டு பலருக்கும் வாழ்க்கை வசதிகளை பூர்த்தி செய்விக்கிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். அதனால் எவ்வளவு பிரயோசனப்படும்? எவ்வளவு செலவு மிச்சமாகும்? எவ்வளவு அனுகூலம்? எவ்வளவு லாபம்? எல்லாவற்றிலும் நன்மையே தான் ஏற்படும். அப்படிக்கின்றி தனிப்பட்டவர்கள் நன்மைக்கு மாத்திரம் ஏன் எதுவும் இருக்கவேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

ஒரு ஹோட்டலை பொதுவாக பல குடும்பங்களுக்கு சேர்த்துவைத்து நடத்தினால் இரண்டணாவுக்கும் கீழாகவே நல்ல சாப்பாடுபோடலாம். அது சத்துள்ளதாகவும், சுகாதாரமுறைப்படியும் இருக்கும். நம்வீட்டில் சமையல் என்னும் பேரால் சரிபாக சாமான் வீணாய்போகிறது. நம்முடைய நாட்டில் என்ன பொதுப்பிரியம் இருக்கிறது? பொது அலுவல்களில் டாக்டர் பரீக்ஷை செய்து என்ன சௌக்கியமாக எத்தனை காரியங்களைச் செய்யலாம். இது போலவே வியாபாரத்திலும் கடையில் பேரம் செய்யும்போது கிராமக் குடியானவனிடம் 9 சாக்குப்போட்டு விட்டு 10 சாக்கு என்று பித்தலாட்டம் செய்வது தெரியும். ஒன்றுக்கு ஒன்ரரையாய் எடுத்துக்கொள்வது தெரியும். இது நானும் செய்திருக்கிறேன். நம்மிடம் நிறைந்திருப்பது பொய், சரக்கோ கலப்படம், உபயோகிப்பதோ முக்கால் அளவுள்ளபடிதான். இவைகளினா லெல்லாம் எவ்வளவு நஷ்டம்? இவைகளை எல்லாம் கூட்டுறவு முறையில் லக்ஷியம்கொண்ட ஜனத் தலைவர்கள் என்பவர்கள் ஏன் Control செய்து அடக்கித்தடுக்கக் கூடாது? ஒவ்வொரு தனிப்பட்டவனையும் ஒன்றுபடுத்தி நீயும் வா எல்லோரும் ஒரு காரியத்தை செய்வோம். எல்லோரும் லாபம் பெறுவோம். அதிக லாபமும் அதிக ஓய்வும் எடுத்துக்கொள்ளும் என்று ஏன் கூட்டுறவுத்தன்மையை பிரவேசிக்கக்கூடாது?

இம்முறைகள் என்றைக்காவது தலைதூக்கிதான் ஆகவேண்டும். இதற்காக பொதுவுடமை வேண்டுமா? பொதுவுடமை பேச்சே வேண்டிய தில்லை. ஆனால் இன்றே கூட்டுறவு தன்மையைக் கைப்பற்றுங்கள், வட்டி விஷயத்திலும் பாங்குகளில் ஏராளமான ரூபாய் தூங்குகிறது. இங்கு வட்டி 10க்கு மாதம் கால் ரூபாய் வாங்குகிறானே? என்ன கொடுமை? ரஷ்யாவில் லேவாதேவியும் செய்யக்கூடாது? ஒருவனுக்கு ஐந்து ரூபாய் கடன் கொடுத் தால் அது அங்கு திருட்டு ஆகிவிடுகிறது. ஆபத்தில் உதவுவதென்றால்-கஷ்டத்துக்காகயிருக்குமென்றால்-ஏன் ஆபத்தும், கஷ்டமுமான நிலைமை யும் ஏற்படும் என்பது தான் அங்கு கேட்கப்படும் கேள்வியாகும்.

ஜனசமூகம் கவலையற்று வாழஒழுங்கான முறை கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறையேயாகும். நான் அதிகமாகச் சொல்லவரவில்லை. இவை களைத்தான் சொல்ல நினைத்தேன். இதற்கு மக்கள் தயாராகிவிடவேண்டும். சுயநலத்தை ஒதுக்கி வைத்துவிடவேண்டும்-பலருடைய நன்மைக்கும் என்று கருதி இரங்கவேண்டும். இவற்றைச் சர்க்கார்செய்யவேண்டியதா? பொது ஜனங்கள் செய்யவேண்டியதா? என்பது ஆஸ்திகர்கள் விதி பெரிதா? மதி பெரிதா? ஏன்று தர்க்கிப்பதை ஒத்ததாகும். இவ்விவகாரங்களில் வலுத்த வன், வாய்ப்பேச்சுக்காரன் தான் ஜெயமடைவான். சர்க்கார் தான் ஜனங்கள்; ஜனங்கள் தான் சர்க்கார் என்பதை உணருங்கள். நமது சரீரத்தில் கஷ்டம் ஏற்பட்டால் நமக்கென்னவென்று நாம் இருப்போமா? அதுபோல் நமது உணர்ச்சிகள் இருக்கவேண்டும். சிப்பியானது திறந்திருக்கும் பொழுது மழை ஜலம் விழும்போது தான் முத்தாகிறது. அதுபோல் தான் நமது உணர்ச்சிகள்



பக்குவப் படுத்தி சரிப்படுத்தி வைத்துக்கொண்டு தயாராகவே இருக்க வேண்டும். அப்பொழுது கண்டிப்பாக பலன் ஏற்பட்டுவிடும். நம்முடைய அபிப்ராயந்தான் ஜனசமூக அபிப்பிராயம் என்று தன்நம்பிக்கையுடன் நாம் வேலை செய்யவேண்டும். நமது உடலில் பழைய தனித்தனித் தத்துவ இரத்தத்தை எடுத்துவிட்டுக் கூட்டுறவுத் தன்மை என்ற இரத்தத்தைப் பாய்ச்ச (Injeet) செய்யவேண்டும். இது நம்மால் முடியுமா? என்று இருக்கக்கூடாது. கண்டிப்பாய் இதுமுடியாமல் போய்விடாது.

நம்முடைய மக்கள் மடத்தனத்தில் இருக்கின்றார்கள். அதனால் முடியாது என்றோ அறியாமை அந்தகாரம் சூழ்ந்திருக்கிறது. அதனால் முடியாதென்றும் சொல்லி விடமுடியாது. 1914-18 வருஷத்தில் நடந்த கொடிய மகாயுத்தத்தைக்கூடக் கேள்விப்படாத ரஷ்யர்களே இருக்கிறார்கள். இப்பொழுதும் (Czar) ஜார் அரசன் இருந்து அரசாளுகின்றான் என்றே கருதிக் கொண்டிருக்கும் காட்டுமிராண்டிகளும் அங்கு இருக்கத்தான் செய்கின்றார் கள். இதனால்எல்லாம் அங்கு சகித்துக்கொண்டிருந்த கூட்டுறவு தன்மை ஏற்படாமல் போய்விட்டதா? எப்படிகாய்ந்த தீய்ந்த சருகில் அதி வேகமாய் நெருப்புத்தீ பற்றிக்கொள்ளுகிறதோ அப்படியேதான் அங்கு மதம் ஒழிந்து-கடவுள் மாய்ந்து-அரசர்கள் மண்ணாங்கட்டிகளாகி செல்வவான்கள் பனிக்கட்டிகளாகி மழை பெய்தாலும் வெய்யில் அடித்தாலும் கெடுவது போல்கெட்டு 16 கோடிஜனங்களும் கூட்டுறவு வாழ்க்கைக்காரராக்கிவிட்டது என்பதை நீங்கள் ஞாபகத்தில் நன்கு பதியவைத்துக்கொண்டு இந்நாட்டு கொடுமை ஒழிப்புக்கு தைரியங்கொண்டு திடங்கொண்டு போராடி உழையுங் கள். உங்கள் உணர்ச்சிகள் இவைகளுக்கு எப்பொழுதும் அனுகூலமாகவே இருக்கட்டும்.

*குறிப்பு:- 04.11.1933 இல் ஈரோடு மகாஜன உயர்நிலைப்பள்ளி சரஸ்வதி அரங்கில் அகில கூட்டுறவாளர்கள்தினக் கொண்டாட்ட நிகழ்ச்சியில் ரஷியாவில் உள்ள கூட்டுறவு முறையைப் பற்றி ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 12.11.1933**



RangaRakes tamilnavarasam.com

# “கெடுவான் கேடு நினைப்பான்”

**– தோழர் ஈ.வெ.இராமசாமி**

கெடுவான் கேடு நினைப்பான் என்பது ஒரு பழமொழியாகும். இது இரு கக்ஷியாரும் ஒப்புக்கொள்ளக்கூடிய பழமொழியாகும்.

எந்தெந்த இரு கக்ஷியார் என்றால் பஞ்சேந்திரியங்களுக்குப் புலனாவதைத்தவிர வேறு வஸ்து கிடையாது என்கின்ற முடிவைக்கொண்ட “மெடீரியலிஸ்டு” (Materialist) என்னும் கக்ஷியாரும், பஞ்சேந்திரியங்களுக்கும் எட்டாத ஒரு வஸ்து இருக்கிறது என்கின்ற முடிவைக்கொண்ட “ஸ்பிரிச்சுவலிஸ்ட்டு” (Spiritualist) என்னும் கக்ஷியாரும் ஆகிய இரு கக்ஷிக்காரர்களும், அதாவது “நாஸ்திகர்களும்” “ஆஸ்திகர்களும்” ஆகிய இரு கக்ஷிக்காரர்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய பழமொழியாகும்.

இந்தப் பழமொழியின் கருத்து என்னவென்று தெரிந்திருக்கின்றோமென்றால், அன்னியருக்குக் கேடுசெய்யவேண்டுமென்றோ, கேடு உண்டாக வேண்டும்மென்றோ நினைப்பவன் கெட்டுப்போவான் என்பதாகும்.

இதை ஆஸ்திகர்கள் எந்த முறையில் ஒப்புக்கொள்ளுகின்றார்கள் என்றால், மனிதர்களில் ஒவ்வொருவருடைய நடவடிக்கைகளையும், எண்ணங்களையும் தனித்தனியே கவனித்து அந்தந்த நடவடிக்கைக்கும், எண்ணத்துக்கும் தகுந்த பலனைக் கொடுப்பதற்கு சர்வ சக்தியும், சர்வ வியாபகமும் உள்ள கடவுள் என்பதாக ஒரு ஜீவனோ ஒரு சக்தியோ உண்டு என்றும், அது பிறருக்குக் கேடு செய்தவனையும், கேடுநினைத்தவனையும் அறிந்து அப்படிப்பட்டவனுக்குத் தண்டனையாக கெடுதிசெய்வதனால் அவன் கெடுவான், கெட்டுப்போவான் என்றும் கருதுகின்றார்கள்.

நாஸ்திகர்கள் அதாவது சர்வ சக்தியும், சர்வ வியாபகமும் உள்ள கடவுள் என்பதாக ஒரு ஜீவனோ, அல்லது ஒருவஸ்துவோ, ஒரு ஆவியோ இருந்துகொண்டு மனித சமூகத்தின் ஒவ்வொரு மனிதனின் நடவடிக்கைகளையும், எண்ணங்களையும் கவனித்து அதற்கேற்ற பலன்களை அவரவர்களுக்குக் கொடுத்துவருகிறார் என்பதை முழுதும் நம்பாதவர்களின் வர்க்கம்



இந்த கெடுவான் கேடுநினைப்பான் என்கின்ற பழமொழியை எப்படி ஒப்புக்கொள்ளுகின்றார்கள் என்றால், சமூக வாழ்வில் பிறருக்குக் கேடு செய்கின்ற மனிதனும் கேடு நினைக்கின்ற மனிதனும் பிறமனிதர்களால் கேடுசெய்யப்படுவதும் மற்றும் இவனது கெட்ட செய்கையைக் கண்ட கேட்ட பிறரால் வெறுக்கப்படுவதும், துவேஷிக்கப்படுவதும் பெரிதும் சகஜமான சம்பவங்களல்லவா? ஆகவே பிறருக்குக் கேடு செய்ய நினைத்து, பிறரால் வெறுக்கப்படவும் துவேஷிக்கப்படவும் ஆன மனிதன் கேட்டிற்கு ஆளாவதும் சகஜமாகும்.

“பெருமையும் சிறுமையும் தான் தர வருமே” என்ற பிரத்தியக்ஷ பழமொழிப்படியே “நன்மையும் தீமையும் தான் தர வருமே” என்பதும் யாவராலும் ஒப்ப முடிந்த விஷயமாகும்.

ஆனால் இந்த வியாசத்தில், இப்பழமொழிக்கு நாஸ்திக சம்பிரதாயமானகருத்தை ஆதாரமாய் எடுத்து கொள்ளாமல் ஆஸ்திக சம்பிரதாயமான கருத்தை ஆஸ்திகர்கள் என்பவர்களே சரியானபடி ஏற்றுக்கொள்ளுகின்றார்களா என்ற பிரச்சனையை முக்கியமாய் வைத்து வேடிக்கை முறையில், இராமாயணத்தின் நடவடிக்கை எப்படிப்பட்டது; அதைப் பிறர் எப்படி மதிக்கிறார்கள் என்கின்றவைகளை எடுத்துக் காட்டவும், இந்தப் பழமொழி ஆஸ்திக சம்பிரதாயப்படி பார்ப்பவருக்கு இராமாயணம் என்பது ஒரு படிப்பினையாகும் என்பதைக் காட்டவும் எழுதப்பட்டதாகும்.

## “கெடுவான் கேடு நினைப்பான்”

இராமாயண புராணத்தின் கதைப்படி “தசரதனும், இராமனும், பரதனுக்குக் கேடு நினைத்ததால் கெட்டார்கள்” என்பது இவ்வியாசத்தின் கருத்தாகும்.

இராமாயணக் கதைப்படிக்கு தசரதனுக்கு நான்கு ஆண்பிள்ளைகள். இவற்றுள் ராஜ்ஜியப் பட்டமானது பரதனுக்குச் சொந்தமானது. எப்படி எனில் பரதனுடைய தாயாராகிய கைகேயியை தசரதன் மணக்க ஆசைப்பட்டு, கேகய ராஜனிடம் சென்று அவனது பெண்ணான கைகேயியை தனக்குத் தரும்படி கேழ்க்க கேகய மன்னன், தசரதனின் யோக்கியதையையும் நடத்தையையும் தெரிந்து “உனக்கு ஏற்கனவே பல ஆயிரக்கணக்கான மனைவிகள் இருப்பதால் நான் என் மகளை உனக்குக் கொடுக்கமுடியாது” என்று மறுத்துவிட்டான். இதற்குத் தசரதன், அந்தப்பெண்ணின்மேல் உள்ள ஆசையால் கேகய மன்னனிடம் வணங்கி “அய்யா எனக்கு எத்தனை மனைவிகள் இருந்தாலும் உனது மகளையே நான் பிரதான மனைவியாய்க் கொள்வேன். உனது மகள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே ராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்வேன்” என்று வாக்குத் தத்தம் செய்துகொடுத்து கைகேயியை மணந்துகொண்டான்.



RangaRakes tamilnavarasam.com

அந்தப்படி மணந்துகொண்ட தசரதன் கைகேயியையே பிரதான நாயகியாக அனுபவித்து வந்து அவள் மூலம் ஒரு ஆண் குழந்தையையும் (பரதனை) பெற்று, அது வளர்ந்து பெரியதாகி பட்டத்துக்கு யோக்கியமான வுடன் தசரதன் கெட்ட எண்ணங்கொண்டு, அதாவது ராஜ்ஜிய பட்டாபி ஷேகத்தைப் பரதனுக்குக் கொடுக்காமல் இராமனுக்குக் கொடுக்கவேண்டு மென்று நினைத்துவிட்டான்.

இந்தவிதமான கெட்ட எண்ணம் தசரதனுக்கு உண்டாகும் படியாகவே இராமனும், மிக்க தந்தரமாக யோக்கியன் போலவும், தகப்பனாருக்கு மிகவும் வேண்டியவன் போலவும் நடந்து வந்ததுடன், தகப்பனாரின் ஆசைக்கு ஏற்ற வண்ணமாகவும் நடந்து வந்திருக்கிறான்.

இருவரின் கெட்ட எண்ணமும் முதிர்ந்து, கடைசியாக ஒருநாள், பட்டத்துக்கு (பரதன் வாக்குறிதிப்படி) உரியவனாகிய பரதனை அவனது பாட்டனார் ஊருக்கு அனுப்பிவிட்டு, அவன் இல்லாத சமயம் பார்த்து திடீரென்று ஒரேநாளில் இராமனுக்கு பட்டாபிஷேகம் செய்வதாய் ஏற்பாடு செய்து அவசர அவசரமாய் (திருட்டுத்தனமாய்) பட்டாபிஷேக காரியங்கள் செய்ய சூக்ஷிசெய்துவிட்டான்.

ராஜ்ஜிய பட்டமானது பரதனுக்கு வெகு காலத்துக்கு முந்தியே தன் தகப்பனால் வாக்குக்கொடுக்கப்பட்டு விட்டாய் விட்டது என்பது இராமனுக்கு தெரிந்திருந்தும் அதைச் சிறிதாவது இராமன் லக்ஷியம் செய்து தகப்பனிடம் மறுத்துக் கூறாமலும், அதுதான் போகட்டுமென்றாலும், சரி யொத்த சகோதரனான பரதன் ஊரில் இல்லாத போது இப்படிப் பட்டதொரு முக்கியமான காரியத்தைச் செய்வது யோக்கியமான காரியமாகாது என்றா வது தகப்பனுக்கு புத்திகூறாமலும், தான் புத்தி கூறியும் தகப்பன் ஒரு சமயம் இராமனின் யோசனையை ஒப்புக்கொள்ளமாட்டேன் என்று சொல்லி இருந்த போதிலும் கூட "பட்டத்துக்கு உரியவனும் எனது அன்புள்ளவனு மான சகோதரன் பரதன் இல்லாமல் இப்படிப்பட்ட காரியத்திற்கு நான் சம்மதிக்க மாட்டேன்" என்று ராமன் ஒரு வார்த்தையாவது சொல்லாமலும், ஆளில்லாத சமயம் பார்த்து திடிரென்று தகப்பன் சொன்னவுடன் தானும் சம்மதித்து பேராசையுடன் பட்டம் கட்டிக்கொள்ள இசைந்தான் என்றால், இவ்விருவரும், அதாவது தசரதனும் ராமனும் பரதனுக்குக் கேடு நினைத்தார் கள் என்ற முடிவின் பேரில் ஆஸ்திகர்கள் கொள்கைப் படியே, கேடு நினைத்தவர்கள் கெடாமல் இருக்க முடியாது என்பதை ஆஸ்திகர்கள் எல்லோரும் ஒப்புக் கொண்டு தான் ஆகவேண்டும்.

அன்றியும் இந்த சூக்ஷியை அறிந்த கைகேயியானவள், அதாவது பரதனுடைய தாயாரானவள், தன் புருஷனான தசரதனுக்கு பல விதத்தில் எடுத்துச் சொல்லியும், பிடிவாதம் செய்தும், ஒன்றும் கேழ்க்காமல் தசரதன் இவ்வுண்மைகளை மறைத்துக் கைகேயியைக் கெட்டவளாக்கி உலகம்



முழுவதும் கைகேயியை நிந்திக்கும்படி செய்து தன் காரியத்தைச் சாதித்துக் கெள்ள முயற்சிக்கிறான்.

இச்சூக்ஷியும் பிடிவாதமும் எல்லாம் இராமன் அறிந்திருந்தும், பட்டா பிஷேகத்தை ஒத்தி வைக்கக்கூட தகப்பனுக்கு யோசனை சொல்லாததால் கடைசியாக, கேடு நினைத்தவர்கள் கெடவேண்டியதாகவே நேர்ந்து விட்டது.

அதாவது எவ்விதம் என்றால் தசரதன் தனது சூக்ஷி வெளிப் பட்டு விட்டதால் இனி தான் அரசனாய் இருந்து ஆக்ஷி புரிவதில் உலகம் தன்னை மதிக்காது என்றும் இகழும் என்றும் கருதி தற்கொலை செய்து கொண்டு இறக்கவேண்டியவனேயாகிவிட்டான்.

இராமனுடைய பேராசையையும் சூக்ஷியையும் நன்றாய் அறிந்த கைகேயி இராமனை ராஜ்ஜியத்திற்குள் இருக்க விட்டால் பரதனுக்கு ஏதா வது கேடுசெய்துவிடுவான் என்று கருதி ராஜ்ஜியத்தை விட்டு வெளியேறும் படி செய்துவிட்டாள். ஆனால் இராமன் இந்தப் பழியுடன் வேறு எங்கும் போய் வாழ்வதற்கு முடியாமல் காட்டிற்குப்போக வேண்டியதாய் முடிந்து விட்டது. காட்டிற்குப் போனவனும் அங்கும் சும்மா இராமல், மறுபடியும் எப்படியாவது, அயோத்திக்கு வந்து அரசாள வேண்டும் என்கின்ற ஆசையை வைத்துக் கொண்டு அதற்குவேண்டிய சூக்ஷிகளை எல்லாம் செய்து பரதனையும் மோசம் செய்து தனது செருப்பைக் கொடுத்தனுப்பி அந்த செருப்பை வைத்து தன் பேரால் அரசாளவேண்டும் என்று சொல்லி ராஜ்ஜிய சுதந்திரத்தை தனக்கு ஆக்கிக்கொள்ள நினைத்ததால் காட்டிலும் இராமனுக்குப் பல தொந்திரவுகள் ஏற்பட்டதோடு, இராமனால் கைகேயிக்கு எவ்வளவு கெட்டபேர் ஏற்பட்டதோ அதைவிட அதிகக்கெட்டபேரும் இழிவும் இராமன் பெண்ஜாதியான சீதைக்கும் ஏற்பட்டது.

சீதையை இராவணன் தூக்கிகொண்டுபோனதும், இராமன் இராவ ணனை சூழ்சியாய்க் கொன்றதும், எப்படியென்னால், இராவணனைக் கொன்றுவிட்டால் அந்தப் பட்டம் இராவணன் தம்பியாகிய விபீஷணனுக் குக் கொடுப்பதாகவும், வாலியைக் கொன்று அந்தப் பட்டத்தை வாலியின் தம்பி சுக்ரீவனுக்குக் கொடுப்பதாகவும் இப்படியெல்லாம் தில்லுமல்லும் செய்து ஜெயித்துத் தன் பெண்ஜாதியை (சீதையை) அழைத்துவந்ததும், அவளை இராமன் வைத்து வாழமுடியாமல் இராமனாலேயே சீதைக்கு விபசார தோஷம் கற்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டும், பிறகு அதைக்கூட லக்ஷியம் செய்யாமல் சேர்த்துக்கொண்டும், அப்படி சேர்த்துக்கொண்டதும் விபசார தோஷத்தைப் பொருட்படுத்தாமலோ, அல்லது விபசார தோஷத் துக்கு சீதை ஆளாகவில்லை என்ற பரிசுத்த எண்ணத்தோடோ அல்லாமல், தான் பட்டாபிஷேகம் செய்து கொள்ளும்போது பெண்ஜாதி இல்லாமலும், அல்லது பெண்ஜாதியை விபசார தோஷத்திற்காக வெளிப்படுத்திவிட்ட



RangaRakes

tamilnavarasam.com

இராமன் என்கின்ற பழியுடன் இருக்ககூடாது என்றும் கருதித் தனக்குப் பட்டாபிஷேகம் ஆகும்வரை, கூட வைத்திருப்பதுபோல் பாசாங்கு செய்து, பட்டாபிஷேகம் ஆனபின் சீதையினது கர்ப்பத்தைச் சந்தேகப்பட்டு தானாய் தள்ளினதாய் இருக்ககூடாது என்று கருதி அதற்கும் ஒரு சூழ்ச்சி செய்து, அதாவது சீதையின் கர்ப்பத்தைப்பற்றி ஏதோ ஓர் வண்ணான் குற்றம் சொன்னதாக ஏற்பாடுசெய்து, ஏனென்றால் அந்தப்புரத்தில் ஸ்திரீகள் கர்ப்பவதியாய் இருக்கும் சேதி வெளியில் முதல்முதல் வண்ணார்களுக்குத் தான் தெரியுமாதலால் அந்த வண்ணான்தான் சொன்னான் என்றால் உல கோரும் சீதையும் நம்புவார்கள் என்று அவன் மீது பழிபோட்டு, பெண் ஜாதியை கர்ப்பத்துடன் காட்டுக்கு அனுப்பவேண்டியதாகி, காட்டில் அந்தம் மாள், (சீதை) இராமன் இல்லாமலேயே "ஒட்டைக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாப்பாள்" என்பதுபோல் மற்றொரு பிள்ளையும் பெற்றுக் கொள்ள நேர்ந்து, அந்த இரண்டு பிள்ளைகளாலேயே இராமன் யுத்தத்தில் தோல்வி அடைந்து, கடைசியாக இவ்வளவு வியாகூலங்களுடனும், கஷ்டங் களுடனும், பழிகளுடனும் இராமன் சாகவேண்டியதாக ஏற்பட்டது.

இராமன் என்றையதினம் பரதனை ஏய்த்து ராஜ்ஜியப் பட்டாபி ஷேகம் பெற வேண்டுமென்று நினைத்தானோ, அன்றுமுதல் சாகும்வரை துக்கத்தையும், அவமானத்தையும், கஷ்டத்தையுமே அதிகமாய் அடைந் தானென்றுதான் சொல்லவேண்டும்.

ஆகவே "கெடுவான் கேடுநினைப்பான்;" என்னும் பழமொழியை ஆஸ்திக தர்மப்படி நம்புகின்றவர்கள், இராமாயணக் கதையை இப் பழ மொழிக்கு ஒரு உதாரணமாய்க்கொள்ள ஒப்புக்கொள்ளவேண்டும். அப்படிக் கில்லாவிட்டால் இக்கேடு நினைத்த தசரதன், இராமன் இருவர்களும் ஏன் கேடு அடையவில்லை என்பதற்குச் சமாதானம் சொல்லவேண்டும். தசரத னும் இராமனும் கேடுநினைக்கவில்லையென்றால், கதையில் உள்ளபடியான கேடுகளும், துன்பங்களும், தொல்லைகளும் அவர்களுக்கு ஏன் ஏற்பட்டன வென்பதற்காவது சமாதானம் சொல்லியாகவேண்டும்.

**குடி அரசு - கட்டுரை - 12.11.1933**



## ஈரோடு அர்பன் பாங்கு

### அறிக்கைப் பத்திரக் குறிப்பு

ஈரோடு அர்பன் பாங்கியானது சுமார் 20 வருஷத்துக்கு முன் இவ்வூரில் ஸ்தாபிக்கப்பட்ட பொழுது அதற்கு பெரிதும் பார்ப்பனரல்லாத மக்களே பிரயத்தனக் காரராகவும், ஆதரவுக்காரர்களாகவும் இருந்தாலும் அது நாளாவட்டத்தில் பார்ப்பனர்கள் அதிகாரத்துக்கும் ஆட்சிக்கும், ஆதிக்கத்துக்கும் உள்ளாகி பாங்கி சிப்பந்திகளும், நிர்வாகிகளும் பார்ப்பன அக்கிரமமாகவும் பார்ப்பன நன்மைக்கு ஒரு கோட்டையாகவும் வந்து முடிந்ததுடன் மற்ற ஊர்ப் பொதுக்காரியங்களிலும் பார்ப்பன ஆதிக்கத் தைப் புகுத்துவதற்கு பாங்கியின் செல்வாக்கை உபயோகப்படுத்தக் கூடிய நிலைமை ஏற்பட்டு விட்டது. இதன் பிறகே சமீப காலத்தில் இரண்டொரு பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் இதையறிந்து பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லிவந்ததின் பயனாய் சிருகச்சிருக பார்ப்பன ஆதிக்கம் குறையத் தலைப்பட்டு இப்போது இந்த இரண்டு வருஷமாய் அப்பாங்கின் நிர்வாகத் தைப் பொருத்தவரை அடியோடு பார்ப்பனரல்லாதார் கைக்கு வந்திருக் கின்றது என்றே சொல்லலாம்.

இதன் பயனாய் அப்பாங்கின் நல்ல நிர்வாகத்துக்கு முட்டுக்கட்டை யாய் பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சிகள் அளவிடற்பாலதன்று. பதவி இழக்க நேரிட்ட பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாத ஆளுகளையே பிடித்து அவர் களுக்கு பூச்சுற்றி விட்டு கலகம் செய்ய விடுதல் முதலாகிய காரியங்கள் முதல் தினம் ஒரு வசவு நோட்டீஸ் பிரப்பித்தல் வரை அநேக சூழ்ச்சிகள் செய்ததுடன் பாங்கிக்கு நாணயக் குறைவையும், கெட்டபெயரையும் உண்டாக்க எவ்வளவோ விஷமப் பிரசாரமும் செய்துவந்தார்கள். ஆனால் பார்ப்பனர்களின் இவ்வளவு சக்திகளையும், சூக்ஷிகளையும் நன்றாய் அறிந்தவரும், எதற்கும் அஞ்சாத நெஞ்சையுடையவரும், எவ்வித நஷ்டத் துக்கும், பழிப்புக்கும், மிரட்டலுக்கும் சிறிதும் பின்வாங்காதவரான தோழர் எம். சிக்கையா அவர்கள் துணிவுடன் பாங்கின் தலைமைப் பதவியை யேற்று கலங்காமல் இருந்து நிர்வாகம் நடத்திவந்ததின் பயனாகவும் மற்றும் அவருக்கு உதவியாக இருந்து எதற்கும் பயப்படாமல் இருக்கும்படி



RangaRakes tamilnavarasam.com

தைரியமூட்டி உற்சாகத்தை அளித்துவந்த டைரெக்டர்களான தோழர்கள் வி.வி.சி.வி. பெரியசாமி முதலியார், சா.ராமசாமி நாயக்கர், வி.வி.சி.ஆர். முரு கேச முதலியார், எஸ்.வி.சி.ராமலிங்க முதலியார், கே.எம். சீனிவாசம்பிள்ளை, என்.எம்.ஷண்முகசுந்திர முதலியார், ஈ.எஸ்.கோவிந்தசாமி நாயுடு, கே.காதர் சாயபு, ஈ.ஒய்.உமர்நவாஸ்கான் சாயபு, வி.வெங்கடசாமி ரவுத் ஆகியவர்களது உதவியாலும் இவ்வளவு சூக்ஷிகளும் கலகங்களும் சிவில் கிரிமினல் விவகாரங்களும் விஷமப்பிரசார துண்டுப் பிரசுரங்களும் டிபாசிட்டுகாரர் களுக்கு பொய் தகவல்களைக் கொடுத்து டிபாசிட்டுகளைத் திருப்பிவாங்கிக் கொள்ளச் செய்தல் முதலிய சில்லரை விஷமங்களும் ஆகியவைகளில் ஒரு சிறிதும் பயன்படாமல் போனதுடன் பாங்கியின் நிலைமையானது முன்னை விட ஒவ்வொரு துரையிலும் அபிவிருத்தி அடைந்திருப்பதோடு சில அயிட்டங்களில் எப்போதையும்விட மேலான நிலையை அடைந்திருக் கின்றது.

எப்படியெனில் இவ்வருஷம் நமக்குக் கிடைத்திருக்கும் அறிக்கை யைப் பார்த்ததில் அடியில் கண்ட குறிப்புகள் காணக் கிடைத்தன. அதாவது:-

பாங்கியால் வாங்கப்பட்டிருக்கும் டிபாசிட் துகைகள் தற்போதிய நிர்வாக சபையார் காலத்தில் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது. ஷை யார் நிர்வாக ஆரம்பத்தில் பாங்கில் டிபாசிட்டுகளின் துகை ரூ.3,23,000 ஆக இருந்தது. ஆனால் 30-6-33ல் ரூபாய் 4,00,000க்கு அதிகரித்திருக்கிறது. பாங்கு ஆரம்பமுதல் எப்பொழுதாவது இவ்வளவு டிபாசிட்டு துகை இருந்ததாக இந்த பாங்கு அறிக்கை ஸ்டேட்மெண்டிலிருந்து காணவே முடியவில்லை. இதன் காரணம் பாங்கு மீது மாத்திரமல்லாமல் பாங்கை நிர்வகிப்பவர் மீதும் இந்த பாங்கானது மெம்பர்களுக்கும், மெம்பரல்லாத டிபாசிட்டுத்தாரர்களுக்கும் உள்ள நம்பிக்கை யென்றே சொல்லவேண்டும். ஒரு பாங்கு செவ்வனே நடைபெற்று வருவதற்கு உள்ள முக்கிய அரிகுறி தவணைகடந்த கடன்களின் துகையின் குறைவே ஆகும். பார்ப்பன ஆதிக்கத்தில் அதாவது தற்போதிய டைரக்டர்கள் பொறுப்புவைக்கும் முன்பு சுமார் ரூபாய் 65000 வரை பல வருஷங்கள் தவணை கடந்த கடன் துகை இருந்துவந்தது.

ஆனால் சென்ற வருஷ இறுதியில் தோழர் சிக்கையா அவர்கள் தலைமையில் கொண்ட பார்ப்பனரல்லாத டைரெக்டர்கள் நிர்வாகக் கால மாகிய (30-6-33) ல் ரூ.36, 297 க்கு குறைந்து போயிருக்கிறது. சுமார் 2 வருஷங் களுக்கு முன்பு இருந்த நிலைமையை விட ஷை காலத்தில் பண நெருக்கடி அதிகரித்தே இருந்தது என்பது யாவரும் அறிந்ததே. அப்படி இருந்தும் சிறத்தையுடன் பாங்கு நன்மையை உத்தேசித்து தாச்சண்யமின்றி சாமர்த்தி யத்துடன் அவைகளை வசூலித்து பாங்கின் நிலைமையை



மேன்மையுறச் செய்த சிறப்பு நிர்வாக சபையாருக்கும், விசேஷமாக தலைவர் தோழர் எம். சிக்கையா அவர்களுக்கும் உரியது. தவணை கடந்த கடன்கள் விஷயத்தில் பாங்கின் நிலைமை இந்த ஜில்லாவிலும், இன்னும் இம் மாகாணத்திலுள்ள பல ஐக்கிய பாங்குகளைக் காட்டிலும் மேன்மையதாக இருக்கிறது. 30-6-33ல் ஷை கடன்களின் துகை மொத்தக் கடன் நிலுவையில் 100க்கு 16 விழுக்காடு தான் ஏற்பட்டிருந்தது. இவ்வளவு வட்டி குறைந்த காலத்திலும் வழக்கம் போல் வட்டி கொடுக்கப்பட்டதுடன் வழக்கம்போல் காப்புத்துகையும் ஒதுக்கிவைக்க முடிந்திருக்கிறது.

பாங்கின் பாதுகாப்பு திரவியம் (Reserve Fund) நாளது தேதியில் ரூ.32,808க்கு அதிகரித்திருக்கிறது. மெம்பர்களின் சங்கியையும் அதிகரித்து தற்போது 1,882 மெம்பர்கள் ரூ.89,599 செல்லான பாங்குத் துகையு டனிருக்கிறார்கள். பாங்கின் முதலீடு (Working Capital) ரூபாய் 4,41,413 லிருந்து ரூ.5,15,477க்கு அதிகரித்திருக்கிறது. இவ்வளவு துகை பாங்கு ஸ்தாபிக்கப் பட்டது முதற்கொண்டு இருந்ததில்லை யென்றும் தெரியவருகிறது.

பாங்கின் புதிய கடன்கள் கொடுக்கும் விஷயத்தில், தற்போதுள்ள வியாபாரமந்தம், பணநெருக்கடி இவைகளை உத்தேசித்து, கடன் மனுக் களை ஊன்றி பரிசீலனைசெய்யஏற்பட்டதால் துகை சிறிது குறைய அதன் காரண மாக லாபமும் முன் வருஷத்தைக் காட்டிலும் சற்று குறையக்காரணம் ஏற்பட்டது. இந்நிலைமை எல்லா ஐக்கிய பாங்குகளிலும் இன்னும் இதர பாங்குகளிலுமே காணப்படுகிறது. என்றபோதிலும் முன் வருஷங்களைப் போலவே மெம்பர்களுக்குப் பங்குத்தொகையின் பேரில் 100க்கு 9வீதம் டிவி டெண்டுகொடுக்க போதுமான லாபமிருந்தது.

நமது ஈரோடு அர்பன் பாங்கு பார்ப்பனரல்லாதார் கைக்கு நிர்வாகம் வந்ததின்பயனாய் மேல் குறிப்பிட்டபடி எத்தனையோ சூட்சிக்கும், தொல் லைக்கும், விஷமப் பிரசாரத்துக்கும் ஆளாக நேர்ந்தாலும் தோழர் சிக்கையா அவர்களது முயற்சியாலும், மற்ற டைரக்டர்களது ஆதரவாலும் பல துரைகளிலும் என்றும் இல்லாத அபிவிருத்தியடைந்தும் இந்த ஜில்லா விலும், இந்த மாகாணத்திலும் உள்ள அநேக பாங்குகளைவிட மேன்மை யாயும் இருந்து வந்திருப்பதை அறிந்து நாம் மகிழ்ச்சியடைவதுடன் பிரசி டெண்டையும், டைரெக்டர்களையும் பாராட்டுகின்றோம்.

**குடி அரசு - குறிப்புரை - 12.11.1933**



RangaRakes
tamilnavarasam.com

# குடி அரசுக்கு பாணம்

**– ஈ.வெ.ரா**

குடி அரசு பத்திரிக்கைக்கு இந்திய அரசாங்க அவசரசட்டப்படி பாணம் போட்டாய் விட்டது. அதாவது நவம்பர் மாதம் 20ம் தேதிக்குள் தோழர் எஸ்.ஆர்.கண்ணம்மாள் உண்மை விளக்கம் அச்சுக்கூட சொந்தக் காரர் என்கின்ற முறையில் 1000 ஆயிரம் ரூபாயும், குடி அரசு பத்திரிக்கை யின் பிரசுர கர்த்தாவாகவும், வெளியிடுவோராகவும் இருக்கிறார் என்கின்ற முறையில் 1000 ஆயிரம் ரூபாயும் ஆக 2000 ரூபாய் கோயமுத்தூர் ஜில்லா மேஜிஸ்டிரேட்டிடம் ஜாமீன் கட்டவேண்டுமென்று நோட்டீஸ் சார்வு செய்யப்பட்டாய்விட்டது.

இதைப்பற்றி நாம் வருத்தமடையவில்லை. கவர்ன்மெண்டார் மீதும் நிஷ்டூரப்படவுமில்லை. இதுவரையிலும் இப்படிச்செய்யாமல் விட்டுவைத் திருந்ததற்கு நன்றி செலுத்தவும், மகிழ்ச்சியடையவுமே கட்டுப்பட்டி ருக்கிறோம்.

முதலாளிவர்க்க ஆக்ஷியாகிய இன்றைய அரசாங்கத்தின் சட்டப்படி குடிஅரசு ஆரம்பித்தகாலம் முதல் இந்த நிமிஷம்வரை குடி அரசின் ஒவ்வொரு இதழிலும், ஒவ்வொரு வாக்கியத்திலும் கண்ட விஷயங்கள் குடி அரசைக் கொல்லத்தக்க பாணம்விடக்கூடத் தகுதியுடையவைகளே என்பதில் நமக்குச் சிறிதும் ஐயமில்லை. ஆதலால் இந்த அரசாங்கம் இதுவரை விட்டு வைத்தது அதிசயமேயாகும்.

“குடி அரசு” தோன்றி இந்த 8 $^1/_2$ வருஷகாலமாக நாளுக்கு நாள் முற்போக்கடைந்து பணக்கார ஆதிக்க ஆட்சியை ஒழித்து சரீரத்தால் கஷ்டப் படும் ஏழை மக்கள் ஆட்சியை உண்டாக்கவேண்டும் என்கின்ற கவலை கொண்டிருக்கிறது என்பதிலும் இக்காரியம் கைகூடுவதற்கு பார்ப்ப னீயம், புரோகிதம், பாதிரித்தன்மை முதலியவைகளோடு இவற்றிற்கு ஆதிக் கம் கொடுத்துவரும் எல்லா மதங்களும் ஒழியவேண்டும் என்பதிலும் கவலையுடன் உழைத்து வந்துள்ளது என்பதில் சிறிதும் ஆட்சேபணை யில்லை.



இதற்காக இக்கூட்டங்களின் யோக்கியதைகளை கண்ணாடிபோல் வெளிப்படுத்தும் தொண்டை பிரதானமாய்க் கருதி அதைச் செய்து வந்திருக் கிறது என்பதையும் நாம் மறைக்கவில்லை. இனியும் அதைத்தான் முதலில் செய்யக் காத்திருக்கிறோம் என்பதையும், தைரியமாய் தெரிவித்துக் கொள் கிறோம். இந்தத் தொண்டுகள் செய்ய இடமில்லையானால் குடி அரசு பத்திரிகை இருக்கவேண்டிய அவசியமுமில்லை.

சிறிது காலத்துக்கு முன் நாம் தெரிவித்துக்கொண்டபடி இனிநம்மால் நமது கடமையைச் செய்யமுடியாதென்று தெரிந்தால் நாம் இருப்பதைவிட இறப்பது மேல் என்பதுபோல் “குடி அரசு” தன் கடமையை ஆற்ற முடிய வில்லையானால் அது எதற்காக இருக்க வேண்டும்? ஆதலால் அது மறைந்து போக நேரிட்டாலும் ஆசிரியன் என்கின்ற முறையில் நமக்குக் கவலை யில்லை.

ஆனால் பதிப்பாளர் என்கின்ற முறையிலும், பிரசுரகர்த்தா என்கின்ற முறையிலும் அதன் அத்தியந்த நண்பர்கள் என்கின்ற முறையிலும் சிலருக்குக் “குடி அரசு” மறைவதில் அதிகக் கவலையிருந்து வருகின்றதாக அறிகிறோம். ஜாமீன் துகை கட்டவும் முயற்சிக்கிறார்கள். விஷயம் எப்படி முடியும் என்று முடிவுகட்டமுடியவில்லை. நமது உடல் நிலை இந்த 5, 6 மாதமாய் அதிகமாய் சீர்கெட்டுவிட்டது. மயக்கமும், மார்வலியும் அதிகம், கால்களில் நீர்ஏறி வீக்கம் கண்டிருக்கிறது. காதுகளும் சரியாய் கேட்ப தில்லை. ஆதலால் எப்படி ஓய்வெடுப்பது என்று எண்ணியதுடன் இனி உயிர் வாழ்வதும் உலகுக்குபாரம் என்றே எண்ணினோம். இந்த நிலையில் “குடி அரசு” நின்றுபோக ஏற்பட்டால் தோழர் நாகம்மாள் மறைவு ஏற்பட்டது போலவே மற்றொருவிதத்தில் நமக்கு நன்மை என்றே கொள்ளவேண்டிய தாகும். ஆனால் என்ன நடக்கின்றனவோ பார்ப்போம்.

நிற்க இதன் பயனாய் “குடி அரசி”ன் கொள்கைகள் மறைந்து விடுமோ என்றாவது, அது இவ்வளவு நாள் செய்துவந்த வேலைகள் கெட்டுப் போகுமோ என்றாவது யாரும் பயப்படவேண்டியதில்லை.

நமது கொள்கைகள் எங்கும் வேரூன்றிவிட்டன. பிரசாரம் என்கின்ற கொடி எங்கும்பரவிவிட்டது. “குடிஅரசோ” சுயமரியாதைக்காரரோதான் இக் கொள்கைகளைப்பரப்ப இருக்கிறார்கள் என்பதாக இனிகருதவேண்டிய தில்லை. “குடிஅரசு”ம் சு.ம. காரரும் சொன்னதையே நாமும் திருப்பிச் சொல்லவேண்டிய காலம் வந்துவிட்டதே; என்று வெட்கப்பட்டுக் கொண்டு வேறு போர்வைக்குள் இருந்து வேறு பாஷையில் குடி அரசுக் கொள்கை யைச் சொல்லவும் பிரசாரம் செய்யவும், வெகு “தொண்டர்களும்” “தலைவர் களும்” இந்தியாவெங்கும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்கும் இதுசமயம் ஒரு சந்தர்ப்பம் கொடுத்ததுபோலவும் ஆகும்.



RangaRakes tamilnavarasam.com

மற்ற விபரங்கள் பல தோழர்களைக் கலந்தபிறகு வெளியாக்கப் படும். ஆதலால் கோவை ஜில்லா சுயமரியாதை (ஈரோடு) மகாநாட்டிற்கு "குடி அரசு" அபிமானத் தோழர்கள் எல்லோரும் அவசியம் விஜயஞ்செய்து இது விஷயமாய் ஒரு முடிவு கட்டும் விஷயத்தில் கலந்துகொள்ளவேண்டுமாக பிரத்தியேகமாய் வேண்டிக்கொள்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 12.11.1933**

# குடி அரசுக்கு நோட்டீஸ்

(1931-ம் வருஷத்திய இந்திய பத்திரிக்கைகள் (அவசர அதிகார) சட்டத்தின் 3-வது பிரிவினுடைய (3-வது) உட்பிரிவின்படி)

கோயமுத்தூர் ஜில்லா ஈரோட்டிலிருந்து பிரசுரிக்கப்படுகின்றதும் 1931ம் வருடத்திய இந்தியபத்திரிகைகள் (அவசர அதிகார) சட்டப்பிரிவு களின்படி செக்யூரிட்டி வாங்கப்படாததுமான, "குடி அரசு" என்ற பெய ருள்ள பத்திரி கையின் 1933 ஜுலை 30ம்தேதி இதழிலே 1932ம் வருஷத்திய கிரிமினல் சட்ட திருத்தச்சட்டத்தினால் (XXFI of 1932) திருத்தபெற்ற ஷை சட்டத்தின் 4வது செக்ஷன், (1) சப்செக்ஷனின் (டி) பிரிவில் விவரிக்கப்பட்ட தன்மையுள்ள வார்த்தைகள் (அதன் இங்லீஷ் மொழிபெயர்ப்பு ஒன்று இத் துடன் அனுப்பப் பட்டிருக்கிறது) பிரசுரிக்கப்பட்டிருப்பதாக லோக்கல் கவர்ன்மெண்டுக்கு தெரியவருகிறபடியால் 1931ம் வருஷத்திய இந்திய பத்திரிகைகள் (அவசர அதிகார) சட்டம் (XXIII of 1931) 7-வது செக்ஷனில் (3) சப்செக்ஷனின்படி , ஷை பத்திரிகையின் பிரசுரதாரராகிய எஸ்.இராமசாமி நாயக்கர் மனைவி எஸ்.ஆர். கண்ணம்மாள், 1933 நவம்பர் 20-ந் தேதி அல்லது அதற்கு முந்தி ரூ.1,000 (ஆயிரம் ரூபாய்) ரொக்க பணமாக அல்லது இந்திய கவர்ன்மெண்டு செக்யூரிட்டி பாண்டுகளாக கோயமுத்தூர் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் செக்கியூரிட்டி கட்டவேண்டும் என்று லோக்கல் கவர்ன்மெண்டார் இதனால் அறிவிக்கின்றனர்.

(கவுன்சிலின் கவர்னர் உத்திரவுப்படி) ஆக்டிங் சீப் செக்ரட்டரி.

"குடி அரசு" பத்திரிகை அச்சடிக்கப்படுகிற "உண்மைவிளக்கம்" அச்சுக்கூட சொந்தக்காரரான தோழர் கண்ணம்மாளுக்கு இவ்விதமாக ரூ.1,000 ஜாமீன் கேட்டு ஒரு நோட்டீசு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆக 2000 ரூபாய் ஜாமீன் கேட்கப்பட்டிருக்கிறது.

**குடி அரசு - அறிக்கை - 12.11.1933**



RangaRakes tamilnavarasam.com

# நாதர்ஷா படுகொலை

## தோழர் அமானுல்லா கருத்து

தோழர் அமானுல்லா ஆப்கானிஸ்தான் அரசராயிருந்த காலத்தில் அந்நாட்டு மக்களிடை இருந்துவந்த மூடபழக்கவழக்கங்களை அகற்றி நாட்டை முன்னேற்ற முயன்றார். அது முல்லாக்களுக்கும் வைதீகர்களுக்கும் பிடியாததால் அவர்கள் சதி செய்து அவரை நாட்டைவிட்டு ஓடும்படி செய்தார்கள். அதன்பின் தண்ணீர்க்காரன்மகன் பாட்சா சாக்கோ சிலநாள் அரசைக் கைப்பற்றி அட்டகாசம் செய்தான். பிறகு அவனை தொலைத்துவிட்டு மீண்டும் தோழர் அமானுல்லாவை அமீர் ஆக்கப்போவதாகச் சொல்லிக் கொண்டு ஜெனரல் நாதர்கான் பாட்சா சாக்கோவின் மீதுபடை எடுத்து சென்று வெற்றி பெற்றதும், அதன் பின் மாஜி அமீரை அழையாமல் தாமே ஆப்கானிஸ்தான் அரசராக முடி சூடிக்கொண்டதும் பத்திரிகை வாசகர்கள் எல்லாருக்கும் ஞாபகமிருக்கலாம்.

அப்படியிருக்க சென்ற 8-ந் தேதி மாலை 2-45மணிக்கு நாதர்ஷா தமது அரண்மனை அந்தப்புரத்திலிருந்து வந்து கொண்டிருக்கையில் ஒரு ஆப்கன் மாணவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தக் கொலையைப்பற்றி "ராய்ட்டா" பிரதிநிதி அமானுல்லாவைக் கண்டு பேசியதில் அவர் கூறியதாவது:-

என் சீர்திருத்த முறைகளை கைக்கொண்டு, நான் ஆப்கானிஸ்தானத்துக்கு திரும்பவேண்டும் என்று ஆப்கன் ஜனங்கள் விரும்பினால் நான் திரும்பிச் சென்று எனது முழுபலத்துடனும் தேசத்துக்கு தொண்டு செய்ய தயாராக இருக்கிறேன்.

ஆப்கானிஸ்தானத்தில் நாதர்ஷாவின் ஆட்சி மிகவும் கண்டிக்கத் தக்கது-அது பயங்கர ஆட்சியாயிருந்தது, அவர் பற்பல சமூகங்களைச் சேர்ந்த அறிவாளிகள் பலரை படுகொலை செய்திருக்கிறார். எனவே, நாதர்ஷா ஒழிந்ததற்காக நான் சிறிது சந்தோஷமடையாமலிருக்க முடியாது.



ஆயினும் ஆப்கானிஸ்தானை சேர்ந்தவராயிருப்பதால் அவர் மரணம் எனக்கு பூரண சந்தோஷத்தை அளிக்கமுடியாது.

நாதர்ஷா அவருடைய ஜனங்களுக்கு மாத்திரமல்ல, ஆப்கானிஸ்தானுக்கு பக்கத்திலுள்ள நாடுகளுக்கும் மிகுந்த ஆபத்தை விளைவிக்க கூடியவராக இருந்தார் என்று கூறினாராம்.

**குடி அரசு – செய்தி விளக்கம் – 12.11.1933**



RangaRakes
tamilnavarasam.com


குடி அரசு

பெண் ஏன் அடிமையானாள்?

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?



# தமிழ் அன்பர் மகாநாடு

தமிழ் அன்பர் மகாநாடு என்பதாக பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஆதரவு தேடும் ஒரு மகாநாடு சென்னையில் அடுத்த மாதம் கிருஸ்துமஸ் வாரத்தில் நடக்கப்போவதாக அறிக்கைகள் வெளியாகிக்கொண்டு வரு கின்றன.

இம்மகாநாட்டைப் பற்றி சென்றவாரத்திற்கு முந்திய வார இதழில் தோழர் அ. இராகவன் அவர்களால் "தமிழ் அன்பர் மகாநாடு மற்றொரு பார்ப்பன சூக்ஷியே" என்னும் தலைப்பின்கீழ் ஒரு நீண்ட வியாசம் எழுதப் பட்டதை "குடி அரசு" வாசகர்கள் படித்திருக்கலாம். ஆனால் அவ் வியாசத்தில் கண்ட இரண்டொரு விஷயங்களை மாத்திரம் நாம் ஆதரிக்க முடியவில்லை.

அவற்றுள் முக்கியமான ஒரு விஷயம் என்னவென்றால் "இக் கமிட்டிக்கு கடிதம் எழுதி தமிழர்களுக்காகவும், தமிழுக்காகவும், தைரியமாக அஞ்சாது போரிடும் ஆற்றல்மிக்க தோழர்களான ஈ.வெ.ராமசாமி, நாகர் கோவில் பி.சிதம்பரம், டாக்டர் வரதராஜலு, கா. சுப்பிரமணிபிள்ளை, சாத்தூர் கந்தசாமி முதலியார், சுவாமி வேதாசலம், மதுரை கார்மேகக் கோனார் போன்ற சுமார் 10 பேர்களை சேர்க்கவேண்டும். இன்றேல் அம்மகாநாட்டில் கலந்து கொள்ள மறுக்கவேண்டும்" என்று எழுதப்பட்டிருக்கும் வாசகத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் மேல்கண்ட இப்பதின்மரை சேர்த்துக் கொண்டதால் மாத்திரம் இம்மகாநாடு தமிழன்பர்கள் மகாநாடு என்பதாக தோழர் அ. ராகவன் கருதும் மாதிரியில் ஆகிவிடுமா என்று கேள்க்கிறோம்.

இம்மகாநாட்டின் சூக்ஷிகளிலெல்லாம் முதன்மையான சூக்ஷி என்ன வென்றால், பார்ப்பனர்கள் தமிழர்கள் என்னும் தலைப்புக்குள் புகுந்து கொண்டு மக்களுக்குள் இருந்துவரும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என் கின்ற உணர்ச்சியை நசுக்கி, பழயபடி பார்ப்பன ஆதிக்கம் ஒன்று மாத்திரமே இந்நாட்டில் இருக்கும்படி செய்யவேண்டும் என்பதும் அதற்காக சில பார்ப்பனரல்லாத செல்வவான்களையும், எதையும் விற்று தங்கள் சுய நலத்தையே நாடும் சில பார்ப்பனரல்லாத மக்களையும் சேர்த்துக் கொண்டு



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனரல்லாத சமூகம் முழுமையுமே ஏமாற்றிவிடலாம் என்பதேயாகும். இப்படிப்பட்ட சூட்சிக்கூட்டத்தில் மேல் குறிப்பிட்ட ஒரு 10 பேருக்கு இட மிருந்துவிட்டதால் மாத்திரமே அக்கூட்டத்தின் கருத்தை நிறைவேறாமல் செய்துவிடமுடியும் என்று நம்மால் நினைக்கமுடியவில்லை. அன்றியும் இப் பத்துப்பேர்கள் அக்கூட்டத்தில் சேர்க்கப்பட்டு விடுவார்களானால் அம் மகாநாட்டைக் கூட்டினவர்களது கருத்து நிறைவேறுவதற்கு வசதி அதிகப் பட்டது என்று தான் சொல்ல வேண்டும். அன்றியும் இந்தப் பத்துபேருக்கு சமானமான வேறு பார்ப்பனரல்லாதார்கள் அக்கூட்டத்தில் இல்லை என்றும் சொல்லிவிட முடியாது.

நமது நாட்டில் தமிழ் கற்றறிந்த பார்ப்பனரல்லாத மக்கள் பெரும் பான்மையானவர்களுக்கு பகுத்தறிவில்லை என்று நாம் சொல்லுவதற்கு தமிழ் பண்டிதர்கள் மன்னிக்கவேண்டுமென்று கோறுகிறோம். ஏனெனில் தமிழ் பாஷையைக்கற்று பண்டிதர்களானவர்கள் 100-க்கு 99 பேர்கள் மதவாதி களாகவும் மதத்துக்காக தமிழைக் கற்றவர்களாகவும் தமிழில் மதத்தைக் காண்கிறவர்களாகவும் இருந்துவருவதுடன் தங்கள் புத்தியை மதத்துக்கு பறி கொடுத்து மதக் கண்ணால் தமிழைப் பார்க்கின்றவர்களாகவே இருக்கின் றார்கள். தமிழ் நாட்டில் அறிவுக்கு மரியாதை கொடுத்த பண்டிதர் ஒருவரை யாவது காண்பது கஷ்டமாகவேயிருக்கின்றது.

ஆனால் பார்ப்பனர்களில் அப்படிக்கில்லை. பார்ப்பான் எவ்வளவு தமிழ் கற்றிருந்தாலும் தன் சுயநலத்தையோ பகுத்தறிவையோ ஒருநாளும் பறிகொடுக்க மாட்டான். அவன் எங்காவது பகுத்தறிவை உபயோகிக்காத வன் போல நடந்து கொண்டாலும் அது தன் சுயநலத்துக்காக பிறத்தியாரை ஏமாற்ற அப்படிக் காட்டிக்கொள்வானே ஒழிய உண்மையில் முட்டாளாக இருப்பது மிக்க அருமை.

மேல்நாடுகளில் பண்டிதர்கள் பெரும்பாலோர்கள் தங்கள் பாண்டித் தியத்தில் சிறிதும் மதத்தைக் கலப்பதுமில்லை, மத நம்பிக்கையைப் பிர யோகிப்பதுமில்லை.

இதற்கு ஒரு காரணம் சொல்லலாம். மேல்நாட்டில் மதத்தைப் படிக்கா மல் பண்டிதராகலாம். கீழ் நாட்டிலோ மதத்தைப் படித்தால்தான் பண்டித ராகலாம். ஆதலால் இங்கு பண்டிதர் வேறு, மதம் வேறு என்று சொல்லு வதற்கு இடமே இல்லை. இதனால் தான் நமது நாட்டில் பகுத்தறிவு என்றால் பண்டிதர் களும், பண்டிதைகளும் நடுங்குகின்றார்கள். பகுத்தறிவு என்ற வார்த்தையே பண்டிதர்கள் காதுக்கு "நாராசமாய்" இருந்துவருகின்றது. இந்தக்கூட்ட பண்டிதர்களுக்கு அறிவு உலகில் மதிப்பு ஏற்பட வேண்டும் என்று கருதுவது "சூரியனைக் கையில் பிடிக்க வேண்டும்" என்று சொல்லுவதையே ஒக்கும்.



உதாரணமாக மதத்தையும் மத மேற்கோள்களையும் தள்ளிவைத்து விட்டு ஒரு பதினைந்து நிமிஷம் பேசுங்கள் பார்ப்போம் என்றால் பேசக் கூடிய தமிழ் பண்டிதர்கள் எத்தனை பேர்கள் நம் நாட்டில் கிடைப்பார்கள் என்று பார்த்தால் இவ்வுண்மை விளங்கிவிடும். மதத்தை நீக்கிய-மத சம்மந்தப்படாத தமிழ் புத்தகம் இலக்கிய வடிவத்திலோ இலக்கண வடிவத் திலோ சரித்திர வடிவத்திலோ விஞ்ஞான ஆராய்ச்சி வடிவத்திலோ காண்ப தென்பது "குதிரைக் கொம்பாக" இருக்கிறது. இப்படிப்பட்ட நூல்களைப் படித்த பண்டிதர்கள் பரிசுத்த பகுத்தறிவுவாதிகளாக இருப்பார்கள் என்று எப்படி எண்ணமுடியும்? பகுத்தறிவுக்காரருக்கு பயந்த சில பண்டிதர்கள் தங்கள் வாய்சாமார்த்தியத்தால் மத சம்மந்தமான சில கோட்பாடுகளையும் ஈரருத்தம் உள்ள சில வாக்கியங்களையும் விஞ்ஞான முறைக்கும் பகுத்தறி வுக்கும் பொருத்த முயற்சிக்கிறார்கள் என்றாலும் விஞ்ஞானத்துக்கு மாறு பட்டதையும் பகுத்தறிவுக்கு மாறுபட்டதையும் தள்ளி வைக்க சம்மதிக் கிறார்களா என்றால் அவர்களுக்கு நம்மை வையத்தான் அல்லது நம் மீது குறைகூறத்தான் தெரியுமே ஒழிய தங்கள் நிலைக்கு வெட்கப்படவோ வருந்தவோ சிறிதும் தெரியவே தெரியாது. இந்த நிலையில் தமிழ்க் கல்வி அமைந்துவிட்டதால் இந்தப் படிப்புப்படித்த தமிழ் பண்டிதர்களை பார்ப் பனர்கள் தங்கள் இஷ்டப் படிக்கு ஆட்டிவைத்து தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ளத் துணி வதில் அதிசயமொன்றுமில்லை. இந்த நிலையுள்ள தமிழ் பண்டிதர்கள் "மயிலைக்கண்ட பச்சோந்தியானது தானாகவே வந்து தனது கண்ணை கொத்திக் கொள்ள வசதி கொடுக்கும்" என்று சொல்லும் வாசகம்போல் தமிழ் பண்டிதர்கள் தாங்களாகவே பார்ப்பனர்களுக்கு அடிமையென்று ஒப்புக் கொள்ளுவதிலும் அதிசயமில்லை.

தமிழ் துறையில் பார்ப்பனர்கள் செய்யும் அட்டூழியங்களை இதுவரை எந்த பார்ப்பனரல்லாத பண்டிதர்களாவது எடுத்துச் சொன்னதே கிடையாது. இங்கிலீஷ் பாஷையில் பார்ப்பனர்களுக்கே எல்லா ஆதிக்கமும் இருந்து வருகிறது. உபாத்தியாயர்கள் பார்ப்பனர்கள், புஸ்தகம் எழுதுகிறவர்கள் பார்ப்பனர்கள், இலாக்கா அதிகாரிகள் பார்ப்பனர்கள், பரிக்ஷகர்கள் பார்ப்ப னர்கள் சமஸ்கிருத பாஷையிலோ இதைவிட அதிகமான ஆதிக்கம் புதிதாக வந்து நுழைந்த ஒரு அனாமதேய ஹிந்தி பாஷையிலோ இன்னும் அதிக மான ஆதிக்கம். தமிழ் பாஷையில் பார்ப்பனர்கள் ஆதிக்கத்துடன் பார்ப்ப னரல்லாதவர்கள் ஆதிக்கமும் சிறிது உண்டு என்று சொல்லக் கூடுமானால் அந்த சிறிதும் பார்ப்பனர்களின் அடிமைகளான பார்ப்பனரல்லாதார்களாய்த் தான் இருக்க முடியுமே ஒழிய மற்றபடி சுதந்திரப் பார்ப்பனரல்லாதாரை சுலபத்தில் காண முடியாது. இந்தப்படியான கல்வியின் ஆதிக்கம் பாஷை யின் ஆதிக்கம், இலாக்காவின் ஆதிக்கம் அவர்கள் கையில் இருந்து வரு கின்றதை இன்னும் அதிகமாய் பலப்படுத்திக் கொள்ளவே இந்த சூட்சி மகாநாடு கூட்டப்படுகின்றது என்பதே நம்முடையவும் அபிப்பிராயமாகும்.



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனரல்லாத தமிழ் பண்டிதர்களையும் தமிழில் ஞானமோ தமிழ் மக்களிடத்தில் அன்போ தமிழ் பாஷைக்கும் தமிழ் மக்களுக்கும் உலகில் சுயமரியாதை இருக்க வேண்டும் என்ற கருத்தோ கொண்ட பார்ப்பனரல்லாத மக்கள் இம்மகாநாடு சம்பந்தத்தில் இருந்து கண்டிப்பாய் விலகிக் கொண்டு இதன் சூட்சியைத் தைரியமாய் வெளியாக்க வேண்டுமென்று நாம் எச்சரிக்கை செய்கின்றோம்.

அரசியலின்மூலம் பெருமை பெற்றுப் பணம், கீர்த்தி, பதவி முதலியன சம்பாதிக்கக் கருதும் ஒரு கூட்டமக்கள் மனித சமூகத்துக்கு க்ஷய ரோகம் போன்றவர்கள். தங்களது மானம்-ஈனம் ஜீவகாருண்யம்-பொது நன்மை ஆகியவைகளை அடியோடு துறந்து திரிகின்றவர்களானதால், அப்படிப் பட்டவர்கள் பார்ப்பனர்களைவிட்டுச் சிறிதும் விலகி நிற்கமுடியாத காரணத்தால் பார்ப்பனர்களுக்கு அடிமையாய் இருந்து அவர்கள் இஷ்டப் படி ஆடட்டும். அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. வெகுசீக்கிரத்தில் அவர்கள் ஒருவர் காதை ஒருவர் பிடித்துக் கொண்டு “உன்னால் நான் கெட்டேன்” “உன்னால் நான் கெட்டேன்” என்று ஒருவரையொருவர் சொல்லிக் கொண்டு தோப்புக்கரணம் போடும் காலம் சீக்கிரம் வரப்போகின்றது.

ஆதலால் அவர்களைப்பற்றி கவனிக்காமல், இந்த மகாநாட்டை காரணமாக வைத்தாவது தமிழ் பண்டிதர்கள் பார்ப்பனர்களை விட்டுவிலகி நிற்பார்களாக. இந்தப் பண்டிதர்கள் சுமார் 40, 50 வருஷங்களுக்கு முன்னால் இருந்தே பார்ப்பனர்களை விட்டுவிலகி இருப்பார்களேயானால் இன்றையத் தமிழின் நிலைமையும் தமிழ் பண்டிதர்கள் நிலைமையும் வேறாக இருந் திருக்கும். இன்று அப்படிக்கில்லாமல் பண்டாரசன்னதிகள் என்பவர்களிடம் கூட பார்ப்பனத் தமிழ் பண்டிதர்களுக்கே மதிப்பு இருக்கிறது. தமிழ்ச் சங்கம் என்பதில் கூட பார்ப்பனர்களுக்கே ஆதிக்கம் இருந்துவந்திருக்கிறது. அது மாத்திரமல்லாமல் பார்ப்பனரல்லாத தமிழ்க்கற்ற வித்துவான்கள் என்பவர்களை பார்ப்பன வித்துவான்கள் அமுக்கிவைக்கவே பார்க்கிறார்கள்.

சமீப காலத்தில் தமிழில் மிக மேன்மையாய் தேரிய ஒரு பார்ப்பன ரல்லாதாருக்கு அதாவது சென்னை டி.பி. மீனாக்ஷிசுந்திரம், எம்.ஏ., பி.எல். (இவர் பார்ப்பனருக்கு அனுகூலமாகவும் சுயமரியாதை இயக்கத்துக்கு விரோதமாகவும் வேலை செய்வதற்காக காங்கிரசினால் 2,000 ரூ. கொடுத்து உதவி செய்யப்பட்ட தோழர் டி.பி. கிருஷ்ணசாமிப் பாவலரது தம்பியாவார்) இவர் கல்வி விஷயத்தில் மிக்க தேர்ச்சியுடையவர். பல விஷயங்களில் பண்டிதர். தமிழை ஒரு சந்தோஷத்திற்காக படித்து இம்மாகாண மாணவர்களில் உயர்தர வகுப்பில் தேறியவர். தமிழில் உயர்தர வகுப்பில் தேரியவருக்கு பரிசளிக்கவென்று திருவாடுதுறை பண்டார சன்னதியவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட 1,000 ரூபாய் பரிசை பரிசு முறைப்படிக்கு அடைய தகுதி உடையவர். இப்படிப்பட்ட இவர் பார்ப்பனரல்லாதாராய் இருப்பதால்



இவ்வருஷப் பரிசு இவருக்கு வழங்கப்படாமல் போயிற்று. இந்தப் பெருமை தோழர் மகா மகோபாத்தியாயர் வே. சாமிநாதையர் அவர்களுக்கே சேர்ந்தது. பார்ப்பனரல்லாதார் செய்யும் தற்காப்பு காரியங்கள் பார்ப்பன துவேஷமாய் போய்விடுகிறது. பார்ப்பனர் செய்யும் சகலவித கொடுமைகளும் அவர்களை பட்டதாரிகளாகவும் பதவிதாரர்களாகவும் ஆக்கிவிடுகிறது.

இம் மகாநாடு கூடி வெற்றியுடன் நடைபெற்றால் (நடைபெறத்தான் பேகிறது) பார்ப்பன ஆதிக்கம் தமிழ் பாஷையை அடிமைப்படுத்தி புஸ்தக மெழுதல் விற்பனை முதலியவைகளைத் தங்கள் சுவாதீனமாகச் செய்து விடும் என்பது உறுதி-உறுதி-உறுதி.

தமிழ் அன்பர் மகாநாடு அறிக்கையின் முதல் வாக்கியத்தில் காணப் படும் விபரம்:

தென் இந்திய மொழிகளிலே உள்ள இலக்கியங்கள் வளம்பெறுவதற்கும், பொது ஜனங்களிடையே கல்வி அறிவு பரவுவதற்கும் உயரிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக **“புத்தக ஆசிரியர்கள், பிரசுர கர்த்தாக்கள், புத்தக வியாபாரிகள், உபாத்தியாயர்கள் புத்தகாலய அதிகாரிகள் முதலியோர்களை சேர்த்து மகாநாடு ஒன்றைக் கூட்டுவிக்க வேண்டுமென்ற புத்தகாலய பிரசுர சங்கம் உத்தேசித்திருக்கிறது”** என்று வியக்தமாய் கண்டிருக்கிறது. அதோடு இம் மகாநாட்டைக் கூட்டுகின்றவர்கள் யார்? அக்கமிட்டி அங்கத் தினர்கள் நிர்வாகிகள் யார்? என்பவைகளை தோழர் ராகவன் வியாசத்திலேயே எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இம்மகா நாட்டின் முக்கிய தீர்மானமாக புஸ்தகம் எழுதுவது, பிரசுரிப்பது விற்பது ஆகிய காரியங்கள் எப்படியாவது பார்ப்பனர்கள் கையிலும் அவர்களது ஆதிக்கத்திலும் சிக்கும்படியாகவும் அவர்களே நிர்வாகஸ்தார்களாகவும் இருக்கத்தக்க மாதிரிக்கு ஒரு தீர்மானம் செய்து பார்ப்பன வாழ்க்கைக்கு ஒரு பெரும் மான்ய மாக செய்யப்படப் போகிறது என்பதில் நமக்கு சிறிதும் சந்தேகமில்லை. இதில் சிறிது சிந்தினதும் வழிந்து ஒழுகினதும் ஏதாவது இருக்குமானால் அது பார்ப்பனரல்லாதவர்களுக்குப் பிச்சையாகக் கிடைத் தாலும் கிடைக்கலாம்.

இப்படிப்பட்ட சிறுபிச்சைக்கு ஆசைப்பட்டு சில பார்ப்பனரல்லாத தமிழ் பண்டிதர்கள் தங்களுடைய பெயரை இம் மாநாட்டுக்கு கொடுத்து பார்ப்பனரல்லாத மக்களை வஞ்சிக்க இடம் கொடுப்பது மிகுதியும் மோசமான காரியம் என்றே சொல்லுவோம். தோழர்கள் டி.கே. சிதம்பரநாத முதலியார், எஸ். வையாபுரி பிள்ளை போன்றவர்கள் தங்கள் உத்தியோக தாக்ஷண்யத்தால் இதில் கலந்து கொள்ள வேண்டியவர்களானாலும், தோழர்கள் ஆர்.சி. நமசிவாயமுதலியார், திரு.வி.கல்யாணசுந்திரமுதலியார் போன்றவர்கள் இதில் எப்படி கலந்திருக்க சகிக்கிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. இந்த இரு தோழர்களும் தமிழ் பண்டிதர்கள் என்கின்ற முறையில்



RangaRakes tamilnavarasam.com

தங்கள் தலையிலும், மற்ற தமிழ் பண்டிதர்கள் தலையிலும் மண் போட்டவர்களாகப் போகிறார்கள் என்பதே நமதபிப்பிராயம். நிற்க,

இம் மகாநாட்டுக்கு பார்ப்பன ஆதிக்கத்துக்கு பயப்படாத "தமிழன் பர்கள்" யாராவது போவார்களானால் **"புத்தகங்கள் பிரசுரிப்பதில் அறிவுக் கல்விவேறு, மதக்கல்விவேறு"** என்று பிரித்து தனித்தனியாய் புத்தகம் எழுதப்பட வேண்டும் என்றும், அப்புத்தகம் எழுதும் இலாக்கா **அரசாங்கத்திற்கே உட்பட்டிருக்கவேண்டுமே ஒழிய தனிப்பட்ட நபர் களுக்கோ சங்கங்களுக்கோ சற்றும் சம்மந்தம் இருக்கக்கூடாது** என்றும் ஒரு தீர்மானம் செய்ய முயற்சிக்க வேண்டும். **சர்க்கார் கொடுக்கும்படிப்பு என்பது அறிவுக்கு ஆகவே ஒழிய மதத்துக்காக அல்லவென்பதை உறுதிப்படுத்த வேண்டும்.** விஞ்ஞானத்திலும் பகுத்தறிவிலும் யார் மேன் மையுற்றிருக்கின்றார்களோ அவர்கள்தான் அறிவுக்கல்வி புத்தகங்கள் எழுதத் தகுதியுடையவர்கள் என்றும் தீர்மானிக்கப்பட வேண்டும். இப்படிச் செய்ய ஆரம்பித்தால் மகா நாட்டின் யோக்கியதை தானாகவே வெளிபட்டு விடும்.

**குடி அரசு - தலையங்கம் - 19.11.1933**



# துறையூர் சப் ரிஜிஸ்டிரார் அமுல்

பொதுஜன ஊழியன் தோழர் வி.ஜி.பிச்சை எழுதுகிறார்:-

துறையூரில் திரு. சி.எம். சுப்பிரமணிய சாஸ்திரி என்பவர் சப் ரிஜிஸ்ட ரராயிருக்கிறார். அவர் பத்திரம் ரிஜிஸ்ட் செய்யப்போகும் விபரந்தெரியாத பார்ப்பனரல்லாதாருக்கு ரிஜிஸ்டர் விஷயமாக தெரியாத சங்கதிகளை சொல்லிக் கொடுத்தும் உதவி செய்வதற்கு பதிலாக அவர்களை மிரட்டி நஷ்டத்துக்கு உள்ளாக்குகிறார்.

உதாரணமாக சென்ற 10-ந் தேதி பழனியாண்டி முத்திரியன் என்ப வரும், நானும் ஒரு வீட்டுக் கடன் பத்திரம் ரிஜிஸ்டர் செய்ய அவரிடம் போனோம். அவர் மேற்படி பழனியாண்டி முத்திரியனைக் கூப்பிட்டு எந்த ஊர் என்று கேட்க அவர் ஆதனூர் என்று சொன்னாராம். அதற்கு, பத்திரத் தில் உள்ளூர் என்றுதான் இருக்கிறது. ஆதனூர் என்று போடவில்லை என்று அவர் மிரட்ட, பழனியாண்டி என்னை உதவிக்கு அழைத்தார். நான் போய் உள்ளூர் என்பது ஆதனூரில் ஒரு பாகம் என்றும் அப்படியே சர்க்காரால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் சொன்னேன். அவர் அதைக் கேட் காமல் துறையூர் டிவிஷனில் உள்ளூர் என்ற கிராமமே கிடையாது என்று கூறி மேற்படி பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்ய மறுத்துவிட்டார்.

பிறகு மறுநாள் ஊர் கர்ணத்துடன் மேற்படி பழனியாண்டியை அனுப்ப மேற்படி பத்திரம் ரிஜிஸ்டர் ஆகிவிட்டது. முந்தினதினம், துறையூர் டிவிஷனில் இல்லாத மேற்படி உள்ளூர் கிராமம் மறுநாள் எப்படி அங்கு நுழைந்ததோ தெரியவில்லை. முந்தினநாள் அவர் மறுத்ததால் எங்களுக்கு ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களைப் பாருங்கள்.

இரண்டாவது 22-வயதுள்ள ஒரு பெண் பத்திரம் ரிஜிஸ்டர் செய்ய வந்தாள். சப்-ரிஜிஸ்டிரார் அந்தப் பெண் இன்னும் மேஜராகவில்லை என்று ரிஜிஸ்டர் செய்ய மறுத்து விட்டார். அந்தப் பெண்ணுக்கு வயது 22 என்றும், கையில் குழந்தை இருக்கிறதென்றும் கூடச் சான்றிருந்த கர்ணம் எவ்வளவோ சொல்லியும் அதை ஒப்புக்கொள்ளாமல் பிறப்பு சர்ட்டிபிக் கேட் கொண்டு வரச்சொன்னாராம்.



RangaRakes tamilnavarasam.com

கர்ணம் அதற்குத் துறையூரில் 20 வருடத்துக்கு முந்தின ஜனன மரண ரிஜிஸ்டர் இருக்குமா அல்லது முசிரிக்குப்போய் வாங்க வேண்டுமா என்று கேட்க சப்-ரிஜிஸ்டிரார் இவ்விடம் வாய்ப்பேச்சு ஒன்றும் கூடாது, மனு எழுதிக்கொண்டு வந்து கொடு என்றாராம்.


கடைசியில் கர்ணம் அந்த 3 ரூ. பத்திரத்தைக் கிழித்து விட்டு தன் கையில் இருந்த இரண்டேகால் ரூபாய்க்கு வேறு பத்திரம் வாங்கி, முந்தினதிலும் குறைந்த தொகைக்கு பத்திரம் எழுதி அந்தப் பெண்ணின் தகப்பனை கார்டியனாகப் போட்டு ரிஜிஸ்டர் செய்ய வேண்டியதாயிற்று.

இப்படியெல்லாம் ஒன்றும் அறியாத ஏழைக்குடிகளை அனாவசியமாக கஷ்டப்பட படுத்துவது சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு அடுக்குமா? ஆகையால் துறையூருக்கு நல்ல அனுபோகமுள்ள ஒரு பார்ப்பனரல்லாத சப்-ரிஜிஸ்டிராரை நியமித்தால் ஜனங்களுக்கு பெரிதும் அனு கூலமாயிருக்கும் என்று அதிகரித்து தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(இவ்வாறே பலபார்ப்பன சப்-ரிஜிஸ்டிரார்கள் ஜாதி துவேஷத்தினால் தங்களிடம் பத்திரம் ரிஜிஸ்டருக்கு வரும் பார்ப்பனரை ஒரு விதமாகவும் பார்ப்பனரல்லாதாரை ஒரு விதமாகவும் நடத்துவதாகவும், சில இடங்களில் பார்ப்பனரல்லாதாரை மேல் வேட்டியை எடுக்கும்படி செய்து அவமானப் படுத்துவதாகவும், பத்திரம் ஒன்றுக்கு இவ்வளவு மாமூல் கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதாகவும் நமக்கு பல இடங்களிலிருந்தும் புகார் கடிதங்கள் வந்து குவிந்து கிடக்கின்றன. இத்தகைய பார்ப்பன சப்-ரிஜிஸ்டிரார்கள் தாங்கள் பொதுஜன ஊழியர்களென்பதை மறந்துவிட்டு, சட்ட விரோதமான முறையில் நடந்து கொள்வதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். நாம் ஆதிமுதலே கூறிவந்திருக்கிறபடி அரசாங்க உத்தியோகங்களை வகிக்க, பார்ப்பனருக்கு லாயக்கில்லை என்பதற்கு இது தக்க அத்தாட்சியாகும். மேல் அதிகாரிகள் இவ்வித ஒழுங்கீனங்களை சரிப்படித்திடும் பொதுஜனங்கள் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று வற்புறுத்தி குறிப்பிடுகிறோம். அரசாங்க இலாகாக்களில் நூற்றுக்கு 90 வீதம் உத்தியோகங்களை ஜாதித் துவேஷமுள்ள ஒரு சிறிய வகுப்பார் கைப்பற்றியிருப்பதே இவ்விதக் கேடுபாடுகளுக்கு மூல காரணமாயிருக்கிறது. இந்த நிலைமை அடியோடு மாற்றப்பட வேண்டியது அத்தியாவசியம் என்று சர்க்காருக்கு எடுத்து காட்ட விரும்புகிறோம்.)

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 19.11.1933**




20 குடி அரசு

குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், லெனினும். விலை அணா 0—4—0

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இராமாயண ஆராய்ச்சி.

ஞானசூரியன்.

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு. இதன் விலை அணா 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை. இதன் விலை அணா 0—4—0

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

அகத்தியர் ஆராய்ச்சி. இதன் விலை அணா 0—2—0

ருஷ்யாவைப் பற்றி பெர்னாட்ஷா. விலை அணா 0—1—0.

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? இதன் விலை அணா 0—2—0

கடவுளும், பிரபஞ்சமும். இதன் விலை அணா 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா? விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம். விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.

Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

சுயமரியாதைப்பாடல்.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்) விலை அணா 0—2—0

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

The crux of the Indian Problem By Dr. PARANJPYE (in English.) விலை ரூ. 1—0—0

"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

தீராத வெட்டை நோய்க்கு உத்திரவாதம்.

"தமிழன்"



RangaRakes tamilnavarasam.com



ரிஜிஸ்டர்டு நெ. M. 2992. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

| | | |
|---|---|---|
| 1 | ஈரோடு, ... 11-உ (26—11—1933) | மலர் 1. |

வெளியீடு 1.

## பெண் ஏன் அடிமையானாள்?

... இதன் விலை அணா 3.

வெளியீடு 2.

## முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.

... சர் T. ... தோழர் K. M. ... B. A. B. L. ... இதன் விலை அணா 3.

வெளியீடு 3.

## நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் Why I am not a Christian? என்ற ... பெர்ட்ரண்ட் ரஸல் (Bertrand Russell) ... தோழர் S. ... B. A. ... விலை அணா 3.

வெளியீடு 4.

## மதம் என்றால் என்ன?

... G. இங்கர்சால் ... M. A., B. L., ... இதன் விலை அணா 2.

இங்கர்சாலின் சொற்பொழிவு (அச்சில்), விரைவில் வெளிவரும்.

விலாசம்:— பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

# புரட்சி

"குடி அரசை" ஒழிக்கச் செய்த முயற்சியால் "புரட்சி" தோன்ற வேண்டியதாயிற்று. உண்மையிலேயே பாமர மக்களின் அதாவது பெரும் பான்மையான மக்களின் ஆக்ஷியாகிய குடி அரசுக்கு உலகில் இடமில்லை யானால் கண்டிப்பாகப் புரட்சி தோன்றியே தான் ஆக வேண்டும்.

அந்த ஐதீகப்படியே புரட்சி தோன்றி இருப்பதால் "புரட்சி"யை புரட்சியில் பற்றுள்ள மக்கள் யாவரும் வரவேற்பார்கள் என்பதில் நமக்குச் சிறிதும் ஐயமில்லை.

நமது முதலாளிவர்க்க ஆக்ஷியானது தனது காவலாளிகளாகிய பாதிரி வர்க்கத்திற்கு அடிமையாக இருக்க வேண்டியிருப்பதால் "குடி அரசை" அதன் முதுகுப்புறத்தில் குத்திவிட்டது. இந்தக் குத்தானது "பாதிரி வர்க்கத்தை ஒழித்தால்தான் முதலாளி வர்க்கத்தை அழிக்க முடியும்" என்ற ஞான போதத்தை உறுதிப்படுத்திவிட்டது.

ஆதலால் நமது "புரட்சி"யானது "குடி அரசை"க்காட்டிலும் பதின் மடங்கு அதிகமாய் பாதிரி வர்க்கத்தை அதாவது மதப்பிரசார வர்க்கத்தை அடியோடு அழிப்பதையே கங்கணமாய்க் கொண்டு வெளிவரவேண்டி யதாகிவிட்டது.

இதன் காரணமாய் "புரட்சி" எந்த நிமிஷத்தில் குத்துப்பட்டாலும் படலாம். எந்த வினாடியில் கொலையுண்டாலும் உண்டாகலாம். ஆனால் சுயமரியாதை புரட்சியானது இனி ஒரு நாளும் மறையாது. அது வெற்றி பெறும் வரை ஒரு க்ஷணமும் ஓய்வு கொள்ளாது என்பது மாத்திரம் உறுதி.

காங்கிரஸ் காரியதரிசியான தோழர் ஜவஹர்லால் அவர்கள், தான் இதுவரை மத விஷயமாய் புரட்சி செய்யாமல் ஏமாந்து விட்டதைப்பற்றி மனமார வருந்தியும் மதவிஷயத்தில் தான் அலட்சியமாய் இருந்த ஒவ்வொரு நிமிஷமும் முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கம் பலப்பட்டு வருவதற்கு இடம் கொடுத்தாகி விட்டது என்று வியக்தமாக எடுத்துச் சொல்லியும் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டார்.



RangaRakes tamilnavarasam.com

மதமே மனிதனுடைய சுயமரியாதைக்கு விரோதி.

மதமே மனிதனுடைய சுதந்திரத்திற்கு விரோதி.

மதமே மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு விரோதி.

மதமே மனித சமூக சமதர்மத்துக்கு விரோதி.

மதமே கொடுங்கோலாட்சிக்கு உற்ற துணை.

மதமே முதலாளி வர்க்கத்துக்கு காவல்.

மதமே சோம்பேறி வாழ்க்கைக்கு ஆதரவு.

மதமே உழைப்பவனைத் தரித்திரத்தில் ஆழ்த்தி உழைக்காதவனை உச்சத்தில் வைப்பதற்கு உதவி என்கின்ற முடிவின்பேரிலேயே "புரட்சி" தோன்றியிருக்கிறது என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டாம்.

ஆதலால் மனித சமூகத்தில் சமதர்ம வாழ்க்கையை ஏற்படுத்த மதங்களை முதலில் அழித்தாக வேண்டும் என்று காங்கிரஸ் காரியதரிசி தோழர் ஜவஹர்லால் அவர்கள் இப்போதாவது கண்டுபிடித்ததற்கோ அல்லது தைரியமாய் வெளியிட்டதற்கோ நாம் உண்மையிலேயே மகிழ்ச்சி யடைகின்றோம்.

சோம்பேறித்தனமாய் வாழ நினைத்து சுயமரியாதை இயக்க நிழலில் திரிந்தவர்களுடையவும், பட்டம், பதவி, அதிகாரம், செல்வம் ஆகியவைகள் அடையக் கருதி சுயமரியாதை இயக்கப் போர்வை போட்டுக் கொண்டி ருந்தவர்களுடையவும் ஆதரவு நம் "புரட்சி"க்கு இனி சிறிதும் எதிர்பார்க்க முடியாது என்பதை நன்றாய் உணர்ந்தே "புரட்சி" தோன்றியிருக்கிறது.

ஆதலால் பாடுபட்டு உழைத்து ஊரானுக்குப் போட்டு விட்டு பட்டினி யாயும் சமூக வாழ்வில் தாழ்மையாயும் வாழும் மக்களின் ஆதரவையே "புரட்சி" எதிர்பார்த்து நிற்கிறது.

வெள்ளை முதலாளிகளை ஒழித்துக் கருப்பு முதலாளிகளைக் காக்கும் வேலைக்கு இன்று "புரட்சி" வெளிவரவில்லை. அல்லது வெள்ளை ஆட்சியை ஒழித்துக் கருப்பு ஆட்சியை ஏற்படுத்த "புரட்சி" தோன்றவில்லை. அதுபோலவே இந்து மதத்தை ஒழித்து, இஸ்லாம், கிறிஸ்து மதத்தைப் பரப்ப "புரட்சி" தோன்றியதல்ல.

அதுபோலவே, இஸ்லாம், கிறிஸ்து மதத்தை ஒழித்து இந்து மதத்தை நிலைநிறுத்த புரட்சி வெளிவரவில்லை.



சகல முதலாளி வர்க்கமும், சர்வ சமயங்களும் அடியோடு அழிந்து, மக்கள் யாவரும் சுயமரியாதையுடன் ஆண் பெண் அடங்கலும் சர்வ சமத்துவமாய் வாழச் செய்யவேண்டும் என்பதற்காக புரட்சி செய்யவே "புரட்சி" தோன்றியிருக்கிறது.

அது உயிருள்ளவரையும் அதன் கடமையைச் செய்து கொண்டு இருக்கும்.

ஆதலால் "புரட்சி"யில், ஆர்வமுள்ள மக்கள் "புரட்சியை" ஆதரிக்க வேண்டுகிறோம்.

**புரட்சி - தலையங்கம் - 26.11.1933**



RangaRakes tamilnavarasam.com


குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,



# கோவை ஜில்லா
# சுயமரியாதை மகாநாடு – பெண்கள்மகாநாடு

## சுயமரியாதை மகாநாடு

தோழர்களே! தோழர் அய்யப்பன் அவர்களை நான் சுமார் 9, 10 வருஷமாய் அறிவேன். வைக்கம் சத்தியாக்கிரகத்தில் அறிமுகமானோம். வைக்கம் சத்தியாக்கிரகக் கிளர்ச்சிக்கு அவர் ஒரு முக்கிய காரணஸ்தர். அவர் இந்துமதப்படியும், மலையாள நாட்டுச் சம்பிரதாயப்படியும் வர்ணாச்சிரமத் தர்மப்படியும் தீண்டாத வகுப்பைச் சேர்ந்தவர். எனக்கு மலையாள தேசம் 30,40 வருஷங்களாகத் தெரியும். வியாபார முறையில் அங்கு சென்று தாமதிப்பதுண்டு. அந்தக் காலத்தில் அய்யப்பன் வகுப்பார் வீதியில் நடந்தால் மோட்டார் கார் ஆரன்கொடுப்பதுபோல் அவர்கள் ஹா, ஹா என்று கத்திக் கொண்டு போக வேண்டும். ஏனெனில் மோட்டார் கார் எப்படி ஜனங்கள் தனது சக்கரத்தில் சிக்காமல் இருப்பதற்காக ஆரன் ஊதித் தான் வருவதை முதலிலேயே தெரிவிக்கிறதோ அதுபோல் ஈழவர் முதலியவர்கள் மற்றவர் கள் தங்கள் அருகாமையில் வந்து தீட்டுப்பட்டு தோஷமடை யாமலிருப்பதற்கு, ஹா, ஹா என்ற கூப்பாடு போட்டுக் கொண்டே இருக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள்.

ஆனால் இப்போது தோழர் நாராயணகுருஸ்வாமி அவர்கள் முயற்சியாலும், அய்யப்பன் முதலியோர் கிளர்ச்சியாலும் அக்கொடுமைகள் ஒழிந்து சட்டசபை அங்கத்தினர் முதலிய ஸ்தானம் பெற்று சுமார் 20 லக்ஷம் ஜனங்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மலையாள தேச ஈழுவசமுதாயம் ஒட்டுக்கும் உள்ள ஸ்தாபனமாகிய எஸ்.என்.டி.பி.யோக காங்கிரசில் தங்களுக்கு மதமே வேண்டியதில்லை என்றும், தாங்கள் யாரும் இனிமேல் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளக்கூடாது என்றும் தீர்மானங் கள் செய்ததற்குக் காரணம் தோழர் அய்யப்பனேயாவார். அவர் ஒரு பத்திராதிபர். அவர் மனைவியாரும் பி.ஏ, எல்.டி. யுடன் ஒரு பத்திராதிபரும் ஒரு ஜட்ஜின் குமாரத்தியும் ஆவார். இருவரும் சேர்ந்தே உழைத்து வரு கிறார்கள். மலையாளத்தில் அய்யப்பன் என்கின்ற பெயர் ஒவ்வொரு



RangaRakes
tamilnavarasam.com

வருக்கும் வீட்டுப் பேர்போல் வளங்குகின்றது. மலையாள வாலிபர்களை யெல்லாம் இன்று அவர் பொதுவுடமை சமதர்மவாதியாக ஆக்கிவைத் திருக்கிறார்கள். அவரது பொதுவுடமைக் கட்சியில் அனேக நாயர் வாலிபர் களும் மகம்மதிய வாலிபர்களும், கிறிஸ்துவ வாலிபர்களும் கூட இருக் கிறார்கள்.

நமது மகாநாட்டில் லெனின் படத்தை திறக்க ஒப்புக் கொண்டிருந்த தோழர் கொச்சி இப்றாஹிம் பி.ஏ., எம்.எல்.சி. அவர்கள் கொச்சி சட்ட சபையில் பொதுவுடமைக் கக்ஷி சார்பாக அங்கம் பெற்றிருக்கிறவர்.

ஆனால் அவர் இன்று சிறையிலிருக்கிறார். இங்கு வர விடக் கூடா தென்று தான் அவரை கொச்சியில் சிறைப்படுத்தியிருக்கிறார்கள் என்றே கருதுகிறேன். அவர்கள் கடன் மறுப்புப் பிரச்சாரமும் செய்து சிறிய ஒரு கடன் துகையை செலுத்தாமல் ஜெயிலுக்குப் போனவர். இப்படிப்பட்ட கிளர்ச்சி களெல்லாம் திருவாங்கூரிலும், கொச்சியிலும் நடத்துபவர்களில் தோழர் அய்யப்பன் பிரதானப்பட்டவர். இவரை நமது நாட்டுக்கு வரவழைக்க வேண்டுமென்று தோழர் குருசாமிக்கும், எனக்கும் நீண்டநாள் எண்ணம். ஆதலால் அவரைக் கேட்டுக் கொண்டேன். உடனே, சம்மதித்து வந்திருக் கிறார்.

*குறிப்பு : – கோவை மாவட்ட சுயமரியாதை மாநாட்டுத் தலைவரை வழிமொழிந்து ஆற்றிய உரை.*

## பெண்கள் மகாநாடு – தலைவர் முன்மொழிவு

தோழர்களே! சுயமரியாதை இயக்கமானது இந்த நாட்டில் 8, 9 வருஷ மாக நடந்து வருகின்றது. இதைப்பற்றி பலருக்கு விருப்பு வெறுப்பு உண்டு. யார் யாருக்கு இந்த இயக்கத்தினால் லாபம் இல்லை என்று கருதுகிறார்களோ அவர்கள் எல்லோரும் இந்த இயக்கத்தைக் குற்றம் சொல்வதுண்டு. என்ன குற்றமென்றால், சுயமரியாதை இயக்கம் கற்றறியாத மூடர்கள் இயக்கம். பொறுப்பற்றவர்கள் இயக்கம், அது காலிகள் இயக்கம் என்றெல்லாம் பேசு வார்கள். சிலர் இதிலுள்ள பெண்களைப் பற்றியும் தாருமாராய்ப் பேசுவ துண்டு. சிலர் இனி இதில் பிழைப்புக்கு மார்க்கமில்லை என்று கண்டவர்கள் இந்த இயக்கம் செத்துப்போச்சு, கெட்டுப்போச்சு என்று சொல்வதுமுண்டு.

ஆனால் இன்று இந்த மாகாணத்தின் எல்லா பாகத்திலிருந்தும் வந்திருக்கும் நீங்கள் எல்லோரும் பார்த்து அறிய உங்களுக்கு ஒரு அருமையான சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. இதில் இருக்கின்றவர்கள் படிப் பற்றவர்களா? காலிகளா? பொறுப்பற்றவர்களா? இயக்கம் செத்துப் போயி ருக்கிறதா? பாருங்கள். எங்கள் இயக்கம் சிலருக்கு ஓட்டு வாங்கிக் கொடுக் கச் சக்தியில்லாததால் சிலருக்குப் பிடிக்கவில்லை என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். சிலருக்குக் காங்கிரஸ் முதலிய ஸ்தாபனங்கள் போல்



சாப்பாட்டுக்கு வகைசெய்ய சக்தியில்லாததால் இதையே நம்பி ஜீவிக்க வேண்டிய சிலரால் வசவு கேட்க நேரிடுகிறது என்பதை ஒப்புக் கொள்ளு கிறேன். ஆனால் இதிலிருக்கிறவர்களைப் பாருங்கள்.

முதலாவதாக இம் மகாநாட்டைத் திறந்து வைத்த தோழர் லி.ரா.ரங்க நாயகி அவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். அந்தம்மாள் இந்த ஜில்லாக் காரார். பண்டிதர் பரீட்சை பாஸ்செய்த வித்வான். தகுந்த பொறுப்புள்ள உத்தி யோகத்தில் இருக்கிறவர். அவர் துணைவரும் ஒரு பண்டிதர், இருபதினா யிரக் கணக்கான பிரதிகள் வெளியாகும் பத்திரிகையின் ஆசிரியர். ரங்க நாயகி அம்மாளின் திரனை அவர்களது உபந்யாசத்தின் மூலமாகவே நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதுவரை லி.ராமசாமி மாத்திரம் நம் இயக்கத்தில் இருந்து வந்தார். அவர் “குடி அரசு” ஆசிரியராய் இருந்தது கூட உங்களுக்குத் தெரியும். ஆனால் துணைவியாரும் வந்திருப்பதானது இயக்கம் வளர்ந்து விட்டதா? செத்துவிட்டதா பாருங்கள். அவரது உபந்யாசத்தில் “இரண் டொரு விஷயம் தவிர மற்றதெல்லாம் ஒப்புக் கொள்ளுகிறேன்” என்று சொன்னார். அந்த இரண்டொரு விஷயமும் அம்மையார் அபிப்பிராயப் படியே நாம் ஒப்புக் கொள்ளத் தயாராயிருக்கிறோம். ஆதலால் அதை எங்களுக்கு எடுத்துச் சொல்லி எங்களைத் திருத்த வேண்டுமென்று தான் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அதுபோலவே மகாநாட்டு வரவேற்புத் தலைவர் தோழர் சிவானந்தம் வள்ளியம்மாள் அவர்களும் “தொண்டமண்டல வேளாள” ஜாதியைச் சேர்ந்தவர். அவரது துணைவர் தோழர் ஏ.ஆர். சிவானந்தம் அவர்கள் நமது இயக்கத்தில் ஆரம்பத்திலிருந்து அபார வேலை செய்து வருகிறார். அம்மை யாரும் அவருக்கு உதவியாகவே இருந்து வந்திருக்கிறார்.

அதுபோலவே தோழர் சி.டி.நா. சிதம்பரம் அம்மையார் ஆங்கிலத் தில் எம்.ஏ. படித்தவர். அவரது துணைவர் தோழர் சி.டி.நாயகம் அவர்கள் சர்க்கார் உத்தியோகத்தில் மாதம் 500 ரூ. சம்பளமுள்ள கொவாப்ரேடிவ் டிப்ட்டி ரிஜிஸ்டார் என்னும் பெரிய உத்தியோகஸ்தராக இருந்தவர். அவரது பிள்ளைகள் பெரிய பெரிய உத்தியோகத்தில் இருக்கிறார்கள். பெண் பிள்ளைகள் எல்லாம் பி.ஏ. படித்திருக்கின்றனர். இன்று கூட வந்திருக்கும் அவரது இச்சிறிய பெண் குழந்தைகூட பி.ஏ. அவர்கள் குடும்பம் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட மக்களுக்கு எவ்வளவு வேலை செய்தி ருக்கிறது என்பதை அறிய ஆசையுள்ளவர்கள். இவரைப்பற்றி சட்டசபை யில் தோழர் சத்தியமூர்த்தி போன்ற பார்ப்பனரும், அவரது அடிமைகளாகிய சில பார்ப்பனரல்லாத சட்ட சபை மெம்பர்களும், கேட்ட கேள்விகளைப் படித்துப்பார்த்தால் தெரிய வரும். அவர் உத்தியோகத்தையும், பணத்தையும் பிரதானமாய் எண்ணியிருந்தால் இன்னம் 4, 5 வருஷம் உத்தியோகத்தில் இருக்கக்கூடும். அவர்கள் குடும்பத்துடன் இப்போது நமது இயக்கத்துக்கு வேலை செய்து வருகிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

தோழர் நாயகம் அவர்கள் "திருநெல்வேலி சைவ வேள்ளாளர்" குலம் என்பதைச் சேர்ந்தவர். ஆனாலும் இவர் குடும்பத்தை பொருத்தவரை வெகுகாலமாகவே ஜாதி வித்தியாசம் இல்லை. அனேக விதவை விவாகம் செய்திருக்கிறார்கள். அனேக சுயமரியாதை விவாகம் செய்திருக்கிறார்கள், சுயமரியாதை மகாநாடு எங்கு கூடுவதாகப் பத்திரிகைகளில் பார்த்தாலும் அழைப்பில்லாமல் போய் விடுவார்கள். ஆகவே நமது இயக்கத்துக்கு இப்படிப்பட்ட ஒரு பெரும் ஆதரவு அளித்து வந்த தோழர் சிதம்பரம் அம்மாள் அவர்கள் இன்று இப்பெண்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க இசைந்து இரண்டு நாளைக்கு முன்னமே குடும்பத்துடன் வந்திருப்பதையே நான் சுயமரியாதை இயக்கப் பெண்களைப்பற்றி குறைகூறும் "பெரியார்" களது கூற்றுக்கும் இயக்கம் செத்துப் போய்விட்டது என்று கூறும் வீரர்களது கூற்றுக்கும் சமாதானமாகச் சொல்லி பிரேரேபிக்கிறேன்.

*குறிப்பு:- கோவை மாவட்ட பெண்கள் மாநாட்டுத் தலைவரை முன்மொழிந்து ஆற்றிய உரை.*

## நன்றியுரை

தோழர்களே இப்போது இப்பெரியார்களுக்கு நமது நன்றிசெலுத்தும் கடமைக்கு எழுந்து நிற்கிறேன். இவ்விழாவின் தலைமையில் டாக்டர். வரத ராஜுலு நாயுடு அவர்கள் பேசியதை கேட்டீர்கள். தோழர் முதலியார் அவர்கள் பேசியதையும் கேட்டீர்கள். அவற்றுள் நமக்கு மாறுபட்ட அபிப்பிராயங்கள் பிரமாதமாக ஒன்றும் காணப்படவில்லை. ஆனால் அவர்கள் சிற்சில மாறுதல் இருக்கிறதென்றும் நாம் மிக தீவிரமாகப் போவதாகவும் சொன்னார்கள்.

தோழர்களே! எனது பொதுவாழ்வுக்கு தோழர் வரதராஜுலு நாயுடு அவர்களே காரணமாவார். அவரது கூட்டுறவு அந்தக் காலத்தில் எனக்குக் கிடைத்திருக்காவிட்டால் அக்காலத்திய எனது தொழிலின் பயனாய் இன்று நான் ஒரு சமயம் ஒரு பெரிய முதலாளியாகவும் வணிகனாகவும் இருந்திருப்பேன். அல்லது ஒரு சமயம் அம்முயற்சியால் அனாமதேய பாப்பராகவும் இருந்திருப்பேன். எப்படியிருந்தாலும் அவரது நேசமே நான் இன்று இந்நிலைக்கு வந்ததற்குக் காரணம். அப்படி இருக்க நான் தீவிரமாய் போய் விட்டதாகச் சொல்லுகிறார். ஏன் குருவை மிஞ்சின சிஷ்யன் உலகில் இல்லையா? ஒரு சமயம் அதுபோல் இருக்கலாம் என்றாலும் எனது மூக்கணாங்கயிற்றை அவர் கையில் கொடுக்க இப்போதும் எனக்கு ஆக்ஷேபனையில்லை. நிதானமாய் என்னை ஓட்டிச் செல்லட்டும். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அன்றியும் உண்மையிலேயே அவர்களுக்கு நமது இயக்க சம்மந்தமாய் அபிப்பிராய பேதம் இல்லை என்றே இப்போதய அவருடைய உபன்யாசத்தில் இருந்து அறிகிறேன். ஏதோ சில காரியத்துக்கு என்றுதான் அபிப்பிராய பேதம் இருக்கிறது என்று சொல்லு கிறார் என்று



கருதுகின்றேன். ஆதலால் அவர்களது வரவால் உபன்யாசத்தால் நமக்கு அதிக பலமும், ஆதரவும் ஏற்பட்டது என்பதே எனது அபிப்பிராயம். அதற்காக நாம் நன்றி செலுத்தவேண்டியதே. தோழர் முதலியார் அவர் களுக்கும் நன்றி செலுத்த வேண்டியது நமது கடமையாகும். அவரது உடல்நிலையில் நாம் கூப்பிட்டவுடன் கட்டுப்பட்டது மதிக்கத்தகுந்ததாகும். அவர்களால் தான் எனக்கு வைக்கம் வீரர் என்னும் பட்டம் கொடுக்கப்பட்டது. இப்போது நான் அதை பெருமையாகக் கொள்ளவில்லையானாலும் அப்போது அந்தப் பெயரால் நான் மகிழ்ந்து பரவசப்பட்டது எனக்குத் தெரியும். எல்லோருக்கும் பெயர் வைக்கும் பெருமை தோழர் முதலியா ருக்கே இருந்தது. கம்பர் கம்பராமாயணம் பாடியிருக்கவில்லையானால் தமிழ்நாட்டில் ராமாயணத்துக்கும் ராமனுக்கும் எப்படி மதிப்பிருந்திருக்காதோ அதுபோல் தோழர் முதலியார் அவர்கள் காந்தியாரை, எம்பெருமாள் என்றும், அடிகளார் என்றும், எம்மான் என்றும், பெம்மான் என்றும் கவிபாடா திருந்திருந்தால் காந்தியாருக்குத் தமிழ்நாட்டில் இவ்வளவு மரியாதை கூட இருந்திருக்காது. நான் அனேகமாய் தோழர் முதலியார் அவர்களால் தான் ஒத்துழையாமையில் அவ்வளவு ஈடுபட்டது. நாங்கள் மூவரும் அதாவது, நாயுடுகார், முதலியார், நான் என்கின்ற மூவரும் சேர்ந்து அந்தக் காலத்தில் பார்ப்பனர்களுக்கு தேசபக்தியின் பேரால் எவ்வளவோ உழைத்து விட்டோம். பார்ப்பனர் சூழ்ச்சியறிந்து அவர்கள் ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டிய முக்கிய சமயத்தில் பிரிந்து விட்டோம்.

அந்தக் காலத்து எங்கள் சக்திக்கு ஒரு சிறு உதாரணம் சொல்லுகின்றேன் கேளுங்கள். நான் காங்கிரஸ் காரியதரிசியாயும், தலைவனாகவும் இருந்த காலங்களில் தமிழ்நாடு வாலிபர்களை தேசிய வீரர்களாக்க வென்று வி.வி.எஸ்.ஐயர் என்னும் ஒரு தேசீயப் பார்ப்பனர் காங்கிரசை 10,000 ரூபாய் கேட்டபோது அதற்கு நானே பிரதானமாய் இருந்து ரூபாய் அனுமதிக்கப்பட்டது. அந்தப் பணம் குருகுலம் என்று ஒரு ஆச்சிரமம் வைத்து அதில் பார்ப்பனப் பிள்ளைகளை வீட்டிற்குள் வைத்தும் பார்ப்பனரல்லாத பிள்ளை களை வெளியில் வைத்தும் சாப்பாடு போட்டு வருணாச்சிரம தர்மம் கற்றுக் கொடுக்கப் பயன் படுத்தப்பட்டதுடன் இதன் பேரால் தமிழ் மக்களிடம் மற்றும் 20, 30 ஆயிரம் ரூபாய் வரை வசூல் செய்யவும் பட்டது. இதற்கு "தமிழ் நாடும்" "நவசக்தியும்" ஆதரவும் அளித்தன. இந்த சூழ்ச்சியான அக்கிரமம் சகிக்காமல் நான், முதலியார் அவர்களிடம் மாயவரத்தில் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டேன். அப்போது அவர் டாக்டர் நாயுடு அவர்கள் பேரில் புகார் சொல்லி நாயுடு அவர்கள் "தமிழ்நாடு"வில் ஆதரிப்பதால் நான் ஆதரிக்க வேண்டியிருக்கின்றது என்றார். இருவரும் நாயுடு அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டோம். அவ்வளவு தான் சங்கதி. உடனே டாக்டர் குருகுலத்தின் மீது போர் தொடுத்தார். தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள் தோழர் கள் ராஜகோபாலாச்சாரியார், சீனிவாசய்யங்கார் உள்பட எல்லோரும் நாயுடு அவர்களுக்கு விரோதமாய் எவ்வளவோ



RangaRakes tamilnavarasam.com

தொல்லை விளைவித்தும் பயன்படாமல் கடைசியில் குருகுலம் அடியோடு அழிந்து அதில் இப்போது படைக்கள்ளியும், நெரிஞ்சி முள்ளும் வளரும் படியும், பாம்பும், பூச்சியும் வாழும்படியும் ஆய்விட்டது. அதுபோலவே மற்ற காரியங்களிலும் மூவரும் ஒத்து வேலை செய்திருந்தால் பார்ப்பன ஆதிக்கம் இந்தியாவை விட்டு ஓடி இருக்கும். உண்மையிலேயே சொல்லுகின்றேன். இதுவரை நாங்கள் மூவரும் ஒரு அபிப்பிராயமாய் இருந்திருந்தால், இந்து, சுதேச மித்திரன் முதலிய பார்ப்பனப் பத்திரிகைகள் இருந்திருக்குமா? இருந்தாலும் இந்தமாதிரி பார்ப்பனப் பிரசாரம் செய்து பார்ப்பனரல்லாத மக்களின் முன்னேற்றத்தைத் தடுத்து முட்டுக்கட்டை போட்டு இழிவுப்படுத்தி விடுமா? யோசித்துப் பாருங்கள். நாம் எந்த சாஸ்திரத்தை, எந்த தத்துவத்தை ஒழிக்க வேண்டும் என்று சொல்லுகின் றோமோ அதையே கலம் கலமாய், பக்கம் பக்கமாய் அப்பத்திரிகைகள் எழுதி வருகின்றன. சங்கராச்சாரியின் வருணாச்சிரம பாஷ்யமும் சூத்திரன் யார்? சண்டாளன் யார்? என்கின்ற தத்துவமும், இன்னமும் பக்கம் பக்கமாய் எழுதி வருகின்றன. குட்டிப் பத்திரிகைகளெல்லாம் பயமின்றி குலைக் கின்றன. இவற்றின் சூக்ஷிகளை மக்கள் அறியும்படி செய்ய முடியவில்லை. பார்ப்பனரல்லாத பார்ப்பனக் கூலிகளையும் ஒழிப்பதென்றால் நாம் மூவரும் சேர்ந்தால்தான் முடியும். ஏன் என்று கேழ்க்க இப்போது நாதியற்றுப் போய் விட்டது. மூன்று பேர் அடுப்புக் கல்லைப் போல் பயனற்று வாழ்கின்றோம் என்பது தான் எனது எண்ணம். இனியாவது ஒத்து இருந்தோமானால் பார்ப்பனரல்லா பெருமக்கள் சம தர்மம் பெற்று, சுயமரியாதை அடைந்து சோம்பேறி வாழ்க்கைக்காரரும், சூழ்ச்சி வாழ்க்கைகாரரும் அழிவு பெற மாட்டார்களா? என்பதுதான் எனது ஆசையே தவிர முதலியாரும் நாயுடு வும் வந்து சேர்ந்தால் தான் ஏதோ சொந்தத்தில் பெருவாழ்வு வாழ்ந்து விட லாம் என்று கருதவில்லை.

தோழர்கள் முதலியாரையும் நாயுடுவையும் சில சோம்பேறி வயிற்றுச் சோற்று தேசபக்தர்களென்கின்ற காலிகள் சிலர் வைவார்களென்பது எனக்குத் தெரியும்.இவர்கள் என்ன பாவம் பண்ணிவிட்டார்களென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். பார்ப்பனர்கள் கூலிகொடுத்து காலிகளை ஏவிவிட்டு அவர்களை வையச் சொல்லுவார்கள். இதற்கொரு சிறு உதாரணம் கூறு கிறேன். கொஞ்சகாலத்துக்கு முன்பு தோழர் வரதராஜுலு அவர்கள் ஜஸ்டிஸ் ஆபீசுக்குச் சென்றிருந்தாராம். இதை ஒரு பார்ப்பன ஒற்றர் கண்டுபிடித்துச் சுதேசமித்திரனுக்கும், இந்துவுக்கும் தெரிவித்து விட்டார். இதைப் பெரிய பெரிய எழுத்தில் அப்பத்திரிக்கைகள் "ஜஸ்டிஸ் ஆபீசில் வரதராஜுலு நாயுடு" என்று தலைப்புக் கொடுத்து எழுதிவிட்டன. உடனே நாயுடுகார் சமாதானம் சொல்ல ஆரம்பித்து விட்டார். இதிலிருந்து பார்ப்பனர்களுக்கு எவ்வளவு ஆதிக்கம் இருக்கிறது என்று நினைத்துப் பாருங்கள். இவ்வித மிரட்டலுக்கெல்லாம் இனிபயப்பட மாட்டார்களென்றே நினைக்கிறேன்.



நமது தோழர்களுக்கும் ஒன்று தெரிவித்துக் கொள்கிறேன்:–

நம்மில் சில தோழர்கள் இவர்களை நாம் வரவழைத்ததால் நமது கொள்கைகளோ, திட்டங்களோ மாறுபட்டுவிட்டது என்று ஓலமிட்டு நம்மை வைய ஒருவழி தேடக்கூடும் அல்லது உண்மையிலேயே சிலர் அப்படி நினைத்து பயப்படக் கூடும். அது சரியல்ல. அவர்கள் வந்ததால் நமக்குப் பலமேற்பட்டது. அனேக காங்கிரஸ்காரர்கள் பாமர ஜனங்கள் டாக்டர் நாயுடு அவர்களை ஒரு பெரிய தேசீயவாதி என்றும் நம்மை ஒரு தேசத் துரோகி என்றும் கருதியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் கூட இன்று நம்மையும் மதிக்கும்படி செய்து விட்டோம். ஏன்? நாம் சொல்லுபவை களையே தான் டாக்டர் நாயுடு அவர்களும் இன்று பலமாக அழுத்திச் சொல்லி இருக்கிறார். ஆதலால் லாபம் நமக்குத்தான். எப்படியென்றால் சொம்பிலிருந்து ஊற்றினால் தண்ணீர் என்பார்கள். கெண்டியால் ஊற்றினால் தீர்த்தம் என்பார்கள். உத்திரணிலில் ஊத்தினால் தான் மதிப்பது வழக்கம். அதுபோல் அவர் வாயிலிருந்தே நமது கொள்கைகள் முழுவதும் வந்து விட்டன. இனி அவர்களைப் பின்பற்றுபவர்களும் நமது கொள்கைகளை ஒப்புக் கொள்ளாவிட்டாலும் வையவாவது மாட்டார்கள். அதுபோலவே தோழர் முதலியார் அவர்களும் மதத்தைப் பற்றிப் பேசிய இரண்டொரு இடம் தவிர மற்றதெல்லாம் அனேகமாக நமது கொள்கையைத் தழுவியதே ஆகும். மதவிஷயமாய் தோழர் முதலியார் அவர்களது இப்போதைய அபிப்பிராயத் தைப் பற்றி கவலையில்லை. அவர் நம்மைத் திருப்பட்டும் அல்லது நமது வழிக்குத் திரும்பட்டும் அல்லது அவரவர் அபிப்பிராயம் அவரவரிடமிருக்கட்டும். ஒரே மேடையில் இருவரும் அவரவர் அபிப்பி ராயம் சொல்ல நம் இருவருக்கும் உரிமை வேண்டும். ஒருவருக்கொருவர் சொந்த விரோதம் வேண்டாம். பகைத்துக் கொள்ள வேண்டாம். மூவரும் மனித சமூக புல்லுருவியும், க்ஷயரோகக் கிருமியுமாகிய பார்ப்பனீயத்தை அழிப்பதிலும் முதலாளித்துவத்தை ஒழிப்பதிலும் ஒன்றாய் இருக்க வேண்டும் என்பது தான் எனது எதிர்கால ஆசை.

தோழர்களே கடைசியாக ஒன்று சொல்லுகிறேன். அதென்னவென் றால் இவர்களிருவரும் என்னைப் பார்ப்பனீயத்துக்கு இட்டுச் சென்று விடுவார்கள் என்கின்ற பயம் உங்களுக்கு வேண்டாம். தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் என்னை நம்பினாலும் நம்புவார்கள். முதலியாரையோ, நாயுடுவையோ எப்போதும் ஒரு பார்ப்பனரும் நம்ப மாட்டார்கள். இவர்கள் பூணூல் போட்டுக் கொண்டால் கூட சேர்க்க மாட்டார்கள். அது மிக மிக உறுதி. உப்புச் சத்தியாக்கிரகத்தில் தோழர் ராஜகோபாலாச்சாரி சிறைப்பட்ட தும் தோழர் முதலியாருக்கு சர்வாதிகாரம் கொடுப்பதாய்ச் சொல்லி அவரும் தயாராயிருந்தார். ஆனால் அந்தப்படி செய்யவில்லை. ஒரு சாதாரண பார்ப்பனருக்கே கொடுக்கப்பட்டது. முதலியார் பேர் அடிபட்டதால் அவர் பத்திரிகை ஒழிந்தது தான் மிச்சம். இப்பொழுது வரப் போகும் காந்தியார்



RangaRakes tamilnavarasam.com

வரவேற்பு கமிட்டிக்கு நாயுடு அவர்களை பார்ப்பனர் சேர்க்கவில்லை. ஒரு 3-வது வகுப்பு பார்ப்பனர்தான் தலைவராய் இருக்கிறார். ஆனால் பார்ப்பன ரல்லாதார் இடமிருந்துதான் பணம் வசூல் செய்யப்படுகிறது. ஆதலால் பார்ப்பனீயம், புரோகிதம், முதலாளித்துவம் ஆகிய கொடுமையை அழிக் கும் விஷயத்தில் நமக்குப் பெரியதொரு ஆதரவு கிடைத்திருக்கிறது என் கின்ற நம்பிக்கையின்பேரில் அவர்களது கருணை நிரம்பிய விஜயத்துக்கும் அவர்களது அரிய உபதேசத்துக்கும் நான் உங்கள் சார்பாகவும், என் சார்பாக வும் மனப்பூர்த்தியான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அவர்களது விஜயத்தில் இங்கு அவர்களுக்குப் போதிய சௌகர் யமும், மரியாதையும் அளிக்கத் தவறியதற்கும் மன்னிக்கும்படி அவர்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு:- 25, 26.11.1933 நாள்களில் ஈரோடு டவுன் முனிசிபல் ஜெனரல் பிரைமரி பள்ளியில் நடைபெற்ற கோவை மாவட்ட சுயமரியாதை மாநாடு மற்றும் பெண்கள் மாநாடுகளில் ஆற்றிய உரை.*

**புரட்சி - சொற்பொழிவு - 03.12.1933**



# லெனின் - நாகம்மாள் உருவப்படத் திறப்புவிழா

தோழர்களே! இப்போது நடக்கப்போவது படத் திறப்புவிழா. இதை நடத்திக் கொடுக்கச் சென்னை தோழர்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களையும் கல்யாணசுந்திர முதலியாரவர்களையும் கேட்டுக் கொண் டோம். அவ்விரு பெரியார்களும் நமது வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து இங்கு விஜயம் செய்துள்ளார்கள். நமது இயக்கக் கொள்கைகள் முழுமையும் அவர்கள் ஒப்புக் கொள்ளுகின்றவர்களல்ல. பல விஷயங்களில் நமக்கும் அவர்களுக்கும் பலமான அபிப்பிராய பேதம் உண்டென்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அப்படியிருந்தும் நாம் ஏன் அவர்களைத் தேடிப் போனோம்? அவர்களது விஜயத்தால் நமது கொள்கைகளுக்கும், அபிப்பி ராயங்களுக்கும் ஆதரவும் பலமும் கிடைக்குமென்கின்ற எண்ணத்தி னால்தான். இந்தச் சங்கதிகள் அவர்கள் தெரிந்தே தங்களது ஆதரவும் இவ்வியக்கத்துக்கு இருக்கட்டும் என்கின்ற பெருந்தன்மையான தயாள குணத்துடனேயே இங்கு விஜயம் செய்திருக்கிறார்கள். எனக்கும் அவர் களுக்கும் சில காலமாய் அபிப்பிராயபேதம் இருந்து வந்தது. அதைப்பற்றி நாங்கள் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டும் வந்திருக்கிறோம். ஆனால் எல்லாம் ஒரே தத்துவத்தின் மீதேயொழிய வேறில்லை. அதாவது மனித சமூகத்துக்கு அவரவர்களால் கூடுமான தொண்டைச் செய்ய வேண்டும் என்கின்ற தீவிர அவாவினாலேயே ஒழிய அவரவர்கள் சொந்தவீட்டு வாழ்க்கைப் பிழைப்புக்காக அல்ல. அபிப்பிராயப் பேதங்கள் ஏற்படுவது சகஜம். முன் ஏற்பட்ட அபிப்பிராய பேதங்கள் சரியல்லவென்று தோன்று வதும் சகஜம். ஒவ்வொரு மனிதனுக்கும் சரீர அமைப்பில் அபிப்பிராயங்கள் ஏற்படுவதற்கு காரணமாகிய மூலாதார அமைப்புகள் வேறு. அதன் பயனாய் அபிப்பிராயபேதம் ஏற்பட்டுத்தான் தீரும். அதுபோலவே அபிப்பிராயங் கள் மறுபடியும் ஒற்றுமைப்பட்டும் வரும்.

அந்த முறையிலேயே இப்போது இவ்விரு பெரியார்களுடைய அபிப் பிராயங்கள் பலது நமது அபிப்பிராயங்களுக்குப் பிரமாதமான மாறுபாடில்லா விட்டாலும் பலது ஒற்றுமையாகவும் இருந்து வருவதை நான் “தமிழ்நாடு” பத்திரிகை மூலமாகவும், “நவசக்தி” பத்திரிகை மூலமாகவும்



RangaRakes tamilnavarasam.com

தோழர் முதலியார் அவர்களால் எழுதப்பட்ட "சமரச சன்மார்க்க போதம்" என்னும் புத்தகத்திலுள்ள பல வாக்கியங்கள் மூலமாகவும் உணர்ந்தேன்! அப்போதே நான் அவர்களது ஒற்றுழைப்பையும் கூட்டுறவையும் பெற ஆசைப்பட்டேன். நமது இயக்கத்தில் எனக்குள்ள பற்றானது எங்கெங்கெல் லாம் நமக்கு ஆதரவு கிடைக்குமோ அங்கெல்லாம் நுழைந்து ஆதரவு பெற வேண்டும் என்கின்ற ஆத்திரத்தை உண்டாக்கியிருக்கிறது. அது எவ்வளவு கொஞ்சமானாலுஞ் சரி என்று தான் ஆசைப்படுகிறேன். நமது இயக்கத்துக்கு மாறுபட்ட சில அபிப்பிராயங்கள் அவர்களிடம் இருக்கிறதென்றாலும் அவ் வபிப்பி ராயங்களையும் அவர்கள் நமக்கு உபதேசிக்கட்டும். அது சரியா னால் தான் நாம் ஒப்புக் கொள்ளுவோமே தவிர டாக்டர் வரதராஜுலுவும், கல்யாண சுந்திர முதலியாரும் சொல்லுகின்றார்களே என்று நினைத்து நாம் ஏமாந்துவிட மாட்டோம். அப்படிப்பட்டவர்கள் சு.ம. இயக்கத்தில் இருப்பார் களென்று நான் நம்பவேயில்லை. நமது இயக்கத்தில் இல்லை. நமது இயக்கத் தத்துவமே அதுதான். அதாவது "கடவுள்" சொன்னதாகச் சொன்னதையே ஒப்புக் கொள்ளாமல் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்கின்ற நாம் இவர்கள் சொல்வதைக் கண்மூடிக் கொண்டு ஒப்புக் கொள்ளப்போகிறோமா?

அபிப்பிராய பேதத்தைத் தெரிவிக்க இடங் கொடுத்தால், அதைத் திருத்தவோ அல்லது நாம் திருந்தவோ சமயமும், இடமும் ஏற்படுமாதலால் அவர்களது எவ்வித அபிப்பிராயமும் நமக்குப் பலன்படக் கூடியதேயாகும். சுமார் 10-வருஷங்களுக்கு முன்பு நான் இவர்களைப் பின்பற்றியே நடந்த வன் என்பது உங்களுக்குத் தெரியும். இவைகளையெல்லாம் உத்தேசித்துத் தான் நாங்கள் அவர்களை வரும்படி கேட்டுக் கொண்டோம். அதற்கிணங்கி விஜயஞ்செய்திருப்பதைப் பெருமையாகவே கருதுகிறேன்.

தவிர, இப்பெரியார்களை தோழர். நாகம்மாள் உருவப்படத்தை திறந்து வைக்கவே நாம் கேட்டுக் கொண்டோம். தோழர் லெனின் அவர்க ளின் உருவப்படத் திறப்பு விழாவிற்கு தலைமை வகிக்க தோழர் எம். சிங்காரவேலு அவர்களையும் திறந்து வைக்க கொச்சி பொதுவுடைமைவாதி தோழர் கே.எம். இப்ராஹிம், பி.ஏ., எம்.எல்.சி. அவர்களையும் கேட்டுக் கொண்டோம். ஆனால் தோழர் சிங்காரவேலு அவர்கள் காயலாபட்டு விட்டதாகவும் தோழர் கே.எம். இப்ராஹிம் கடன் மறுப்பு பிரசாரத்தில் சட்ட மறுப்பு செய்து சிறைபட்டு விட்டதாகவும் தெரிவித்து விட்டதால் அந்தப் படத் திறப்பு விழாவையும் ஆற்றும்படி இவர்களையே வேண்டிக் கொண்டு டாக்டர் வரதராஜுலு அவர்களை தலைமையை ஏற்றுக் கொள்ளும்படி உங்கள் சார்பாக வேண்டி கொள்ளுகின்றேன்.

*குறிப்பு: ஈரோடு ஸ்டாலினா மண்டபத்தில் 26.11.1933ல் நடந்த படத்திறப்பு விழாவில் தலைமை முன்மொழிவு உரை .*

**புரட்சி - சொற்பொழிவு - 03.12.1933**



# கோவை ஜில்லா (ஈரோடு) மகாநாடு

கோயமுத்தூர் ஜில்லா மகாநாடு ஈரோட்டில் சென்ற மாதம் 25, 26 தேதிகளில் நடைபெற்ற விபரம் மற்ற பக்கங்களில் பார்க்கலாம். மகாநாடு மிக்கச் சிறப்பாகவும், பிரதிநிதி ஜனங்களின் மனதைக் கவரத் தக்கதாகவும் நடை பெற்றிருக்கின்ற தென்பதை அதிலிருந்து உணரலாம்.

அதோடு இம் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தவர்கள், திறப் பாளர்கள், வரவேற்புத் தலைவர்கள், உருவப் படத் திறப்பாளர்கள் ஆகிய வர்கள் பெரிதும் நமது மகாநாட்டுக்குப் புதிதானவர்களென்றும் காணப் படலாம். சுயமரியாதை மகாநாட்டுக்குத் தலைவர், திறப்பாளர் ஆகியவர்கள் கொச்சி ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள். பெண்கள் மகாநாட்டுத் தலைவர், திறப்பாளர் ஆகியவர்களில் தலைவர் தோழர் நாயகம்-சிதம்பரம் அம்மாள் அவர்கள் இதற்குமுன் நமது மகாநாடுகளில் கலந்திருந்தாலும் அவர்கள் நமது மகாநாட்டில் தலைமை வகித்தது இதுவே முதல் தடவை. திறப்பாள ராகிய தோழர் பண்டிதை லி.ரா. ரங்கநாயகி அம்மாள் அவர்கள் சுய மரியாதை உலகத்துக்குப் புதியவர்களேயாவார்கள்.

உருவப்படத் திறப்புவிழாவுக்கு தலைமை வகிக்கவும், விழா நடத்தவும் வந்த தோழர்கள் Dr.வரதராஜுலு, கல்யாண சுந்தர முதலியார் ஆகியவர்கள் நம் இயக்கத்துக்கு புத்தம் புதியவர்களென்றே சொல்ல வேண்டும். நம் இயக்கத்தைக் குறை கூறியவர்கள் என்றும் கூற வேண்டும். நமது இயக்கத் துக்கும் அவர்களது கொள்கைக்கும் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தி யாசம் என்று சொல்லப்பட்டது என்றும் சொல்ல வேண்டும். நாமும் அவர்களை அப்படியே சொன்னோம் என்பதையும் மறைக்க வில்லை. ஆனால் அவர்கள் இப்போது நம்மை சில விஷயங்களில் மாத்தி ரம் நாம் அதி வேகமாய் போய்க் கொண்டிருக்கிறோம் என்று கருது கிறார்கள். நாமும் அவர் கள் பல விஷயங்களில் நமது கொள்கைக்கு அனு சரணையான அபிப்பிராயங்கள் கொண்டிருக்கிறார்களென்று கருதுகிறோம்.

இதன் உண்மைகள் எப்படியோ இருக்கட்டும். இருவர் நிலைக்கும் பிரமாத வித்தியாசம் அதாவது கூடிக் கலந்து நாமும், அவர்களும் ஒற்றுமை யாய் இருந்து நம் அடிப்படையான கொள்கைக்கேற்ற தொண்டை நடத்த



RangaRakes tamilnavarasam.com

முடியாத அளவு, வித்தியாசமான நிலைமையில் இன்று இல்லை என்பதை நாமும் உணர்கிறோம். அவர்களும் உணர்கிறார்கள் என்றே கருதுகின்றோம்.

இந்த உண்மையை அவர்களது உபந்யாசங்களில் இருந்தே அறியலாம். மேலும் "தமிழ்நாடு" பத்திரிகையானது சுமார் 2-வருஷகாலமாகவே பச்சையாய் சமதர்மத்தை ஆதரித்து வந்திருக்கிறது. காங்கிரசின் போக்கையும் காந்தியாரின் கொள்கைகளையும் ஒப்புக் கொள்ளாமல் நம்மைப் போலவே பல தடவை தாக்கி வந்திருக்கிறது. பார்ப்பனீயத்தையும், பார்ப்பன ஆதிக்கத்தையும் கண்டிப்பதில் அது பின் வாங்கினதுமில்லை. நமது இயக்கத்துக்கும் அது தன்னாலான உதவி செய்து வந்திருக்கிறது - வருகிறது.

ஆகவே அப்பத்திரிகையின் உதவியையும் டாக்டர் வரதராஜுலு அவர்கள் கூட்டுறவையும் நாம் அனுபவிக்க நேருவது நமக்கு நன்மையேயாகும்.

தோழர் கல்யாணசுந்திர முதலியார் அவர்களது அபிப்பிராயங்கள் பார்ப்பன ஆதிக்கத்தை வெறுத்து நிற்கின்றதென்றே உணர்கிறோம். சமதர்மத்தை முழுதும் ஆதரிக்கின்ற தென்றே கருதுகிறோம். தொழிலாளர் விஷயங்களில் அவருக்கு எப்போதும் கவலையுண்டு. தொழிலாளர்களுக்காக எதுவும் செய்ய அவர் துணிந்திருக்கிறார் என்பவைகளில் யாருக்கும் உறுதியான நம்பிக்கையுண்டு. ஆதலால் அவர்களது கூட்டுறவும் நமக்கு நன்மையையே பயக்கும் என்பது நம் உறுதி.

மற்றபடி நம் அபிப்பிராயங்களுக்கு மாறுபட்ட எண்ணங்கள் சில அவர்கள் இருவர்களிடமும் இருக்கலாமென்றே வைத்துக் கொள்வோம். அதனால் நமக்கு பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிடாது. மகாநாட்டின்போது அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் நாம் ஆக்ஷேபித்துத் தீர வேண்டிய அம்சம் எதுவும் நமக்குத் தென்பட்டதாக நமக்கு ஞாபகமில்லை.

கடவுள் நம்பிக்கையைப் பற்றியும் மத நம்பிக்கையைப் பற்றியுங்கூட அவர்கள் நம்மைக் கட்டாயப் படுத்தவில்லை. எதையும் வலியுறுத்திச் சொல்லவுமில்லை. அவற்றில் தங்களுக்குச் சிறிது நம்பிக்கை இருப்பதாகக் காட்டிக் கொண்டிருக்கலாம். அவை உண்மையான கடவுள் மத நம்பிக்கையானால் நமக்குக் கவலையில்லை. உண்மையான நம்பிக்கையென்பது அனுபவத்தில் முன்னுக்குப் பின் முரணாய்த் தீருமானதால் சீக்கிரம் மாறியே தீருவார்கள். பொய்யான-உலக மெய்ப்புதலுக்கான கடவுள் மத நம்பிக்கையானால் சமயத்திற்குத் தகுந்த படி அவற்றைத் திருப்பிக் கொள்வார்கள். ஆதலால் நம்மீது அந்நம்பிக்கைகளைப் புகுத்துகின்ற வரையில் நாம் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. எந்த விதத்திலும் உலகப் பொது எதிரிகளான பார்ப்பனர்கள் விஷயத்தில் நம்மைப் போலவே அவர்களும் அபிப்பிராயம் கொண்டிருப்பதால் பொது எதிரிகளை ஒழிக்க



ஒன்று சேர்ந்தாக வேண்டியதே புத்திசாலித்தனமாகும். அரசாங்க விஷயத்திலும், உலகப் பொது எதிரிகளாகிய ஏகாதிபத்தியங்களை அழிப்பதிலும், முதலாளிகள் ஆதிக்கங் களை ஒழிப்பதிலும், முதலாளித் தன்மை அரசியல்களை ஒழிப்பதிலும் நம்மைப் போலவே அவர்களும் கருத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் அவற்றில் நாம் ஒன்று சேர்வது அவசியமேயாகும்.

ஏழை மக்கள் பெயரைச் சொல்லிக் கொண்டு காங்கிரஸ் என்னும் பெயரால் ஒரு கூட்டம் (பார்ப்பனர்கள்) மக்களை ஏய்ப்பதை ஒழிக்க வேண்டியதும், பார்ப்பனரல்லாதார் பெயரைச் சொல்லிக் கொண்டு பார்ப்பனரல்லாதார் கட்சி என்னும் பெயரால் ஒரு கூட்டம் (பணக்காரர்கள்) மக்களை ஏய்ப்பதை ஒழிக்க வேண்டியதும் நமக்கு எவ்வளவு அவசியமோ அது போலவே தொழிலாள மக்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு தொழிலாளர் சங்கம், டிரேட் யூனியன் என்னும் பெயர்களால் ஒரு கூட்டம் (சிவராவ்கிரி முதலிய கூட்டத்தார்கள்) மக்களை ஏய்ப்பதையும் ஒழிக்க வேண்டியதும் இப்போது நமக்கு மிகவும் அவசியமாகும். இக்காரியத்திற்கும் தோழர்கள் நாயுடு, முதலியார் ஆகியவர்களது கூட்டுறவு நமக்கு அவசியமேயாகும். ஆதலால் இம்மகாநாட்டுக்கு அவர்களை அழைத்ததையும் அவர்கள் மகாநாட்டுக்கு விஜயம் செய்ததையும் நாம் மனமார பாராட்டுகின்றோம்.

இதிலிருந்து, நாம் கருத்திலிருத்த வேண்டியது என்னவென்றால் நமது இயக்க கொள்கைகளுக்கு ஆதரவளிப்பவர்கள் நமது தோழர்கள், நேயர்கள் ஆவார்கள். நமது கொள்கைகளுக்கு எதிர்ப்பு அளிப்பவர்கள், எதிர்மாறாகச் சூக்ஷி செய்கின்றவர்கள் நமது எதிரிகள் ஆவார்கள் என்றுதான் கருத் திலிருத்த வேண்டும்.

தோழர் சி.டி. நாயகம் அவர்கள் தனது குடும்ப சமேதராய் நமது இயக்கத்துக்கு உழைத்து வந்தவர்கள் என்றாலும் அவர்கள் இப்போது பென்ஷன் பெற்றுவிட்டதால் இனி நமக்கு அவர்களது முழு நேர உழைப்பும் கிடைக்கும் படியாக ஏற்பட்டதானது மற்றொரு பலமேயாகும். தோழர். பண்டிதை வி.ரா. ரங்கநாயகி அம்மாள் அவர்களது வருகையும், நமது இயக்கத்துக்கு புதியதொரு ஆதரவாகும். இவைகளின் பயனாய் நமது இயக்கம் முன்னிலும் வேகமாய்ச் செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டதென்றே கருதுகிறோம். மற்றும் இயக்கத்திலிருந்து பல காரணங்களால் பிரிந்துவிட்டதாகவும் நிஷ்டூரப்பட்டுக் கொண்டிருந்ததாகவும் காட்டிக் கொண்டிருந்த பல தோழர்கள் அதாவது அய்யாமுத்து, கண்ணப்பர், கோவை சி.பி. சுப்பையா, ராவணதாஸ் முதலிய இன்னும் பல தோழர்கள் மகாநாட்டிற்கு வந்திருந்ததும் காரியங்களில் கலந்து கொண்டதும் மகிழத்தக்க காரியமாகும்.



RangaRakes
tamilnavarasam.com

இவைகளையெல்லாம்விட மகாநாட்டு நடவடிக்கைகளில் நாம் மிகுதியும் பாராட்டி மகிழ்ச்சியடையத்தக்க காரியம் ஒன்று உண்டு; அதென்ன வென்றால் மகாநாட்டிற்கு விஜயம் செய்த கனவான்கள் தங்கள் அபிப்பிராயங்களை தெரிவிக்கும் முறையில் இயக்கக் கொள்கைகளையும் தோழர் ஈ.வெ.ராமசாமியையும் ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ அல்லது தாக்கியோ பேச நேரிட்ட சமயங்களில் எவ்வித சந்தடியும் ஒழுங்குத் தவறுதலான நடவடிக்கையும் எவரிடமிருந்தும் காணாமல் இருந்ததானது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுத்ததோடு சிறிது தைரியத்தையும் கூட ஊட்டிற்று என்று மனமாற தெரிவித்துக் கொள்கிறோம். சிலருக்குப் பேச சந்தர்ப்பம் கொடுபடவில்லை என்ற வருத்தம் இருந்ததாகக் கண்டாலும் அது உடனே மறந்து போயிருக்கும் என்றே கருதுகிறோம்.

மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் இப்போது அவசரமாயும், அவசியமாயும் காரியத்தில் செய்து காட்ட வேண்டிய தீர்மானங்கள் இரண்டாகும். அவை முதலாவது தோழர் காந்தியவர்கள் தென்னாட்டிற்கு வந்து தீண்டாமை விலக்கு என்னும் பேரால் நடத்தப்போகும் வருணாச்சிரமதப்பிரசாரத்தை பகிஷ்கரிப்பதாகும்.

இரண்டாவது சமீபத்தில் நடைபெறப் போகும் தமிழன்பர் மகாநாடு என்னும் பேரால் பார்ப்பனர்கள் ஆதிக்கத்துக்காக செய்யப்படும் பார்ப்பன சூட்சி மகாநாட்டை பகிஷ்கரிப்பதாகும். இவ்விரண்டு காரியங்களையும் செய்யவேண்டுமானால் பெரியதொரு கிளர்ச்சி உடனே செய்ய வேண்டியிருக்கிறது. இதற்காக உடனே சென்னையில் ஒரு பகிஷ்காரத் திட்டக் கூட்டம் ஏற்பாடு செய்து பிரசங்கம், துண்டுப் பிரசுரம் முதலியவை மூலம் பிரசாரம் செய்ய வேண்டியதாகும். பல சங்கங்களிலும் இப்பகிஷ்காரத் தீர்மானத்தை நிறைவேற்றி பத்திரிகைகளுக்கு அனுப்ப வேண்டும். தோழர் காந்தியாருக்கும், தமிழன்பர் மகாநாட்டு நிர்வாகிகளுக்கும் அனுப்ப வேண்டும். இன்று கூடும் இராமநாதபுரம் ஜில்லா சுயமரியாதை மகாநாட்டிலும் இதைப்பற்றிப் பேசி ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியமாகும்.

கடைசியாக மகாநாட்டுக்கு அதிக உதவி செய்த மாயவரம் தோழர் நடராஜன் முதலியவர்களுடையவும், முனிசிபாலிட்டி, தாலுகா போர்டு லண்டன்மிஷின் பள்ளிக்கூடம், மகாஜன பள்ளிக்கூடம், அர்பன் பாங்கு முதலிய ஸ்தாபனங்கள், தலைவர்கள், அதிகாரிகள், சிப்பந்திகள் ஆகியவர்களுடையவும் உதவி மிகவும் பாராட்டத்தக்கதே ஆகும். காரியதரிசிகள் தோழர்கள் எஸ்.வி.லிங்கம், எஸ்.ஆர். கண்ணம்மாள் ஆகியவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியும் மகாநாடு சிறப்பாய் நடைபெறுவதற்குக் காரணமாகும்.

**புரட்சி - தலையங்கம் - 03.12.1933**



# இராமநாதபுரம் ஜில்லா சு.ம.மகாநாடு காந்தி பகிஷ்காரம்

இராமநாதபுரம் ஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாடு சென்ற வாரம் சிவகங்கையில் வெகு சிறப்பாய் நடந்தேறியிருக்கும் விபரம் மற்ற பக்கங்களில் காணலாம்.

அவற்றுள் மகாநாட்டுத் தலைவர் தோழர் எஸ்.ராமநாதன் அவர்கள் “இயக்கக்கொள்கைக்குத்தக்க திட்டங்களை வகுத்துக்கொள்ளவில்லை” என்றும் “காரியத்திற் கடமைகளை உணரவில்லை, வேலை தொடங்கவில்லை” என்றும் கூறியிருப்பதையும்,

வேறு சிலர், காந்தியவர்கள் வரவை பகிஷ்காரம் செய்த தீர்மானத்தை தவறு என்று கூறி கண்டித்திருப்பதையும்பற்றி சிறிது சமாதானம் கூற வேண்டியது அவசியம் என்று கருதுகின்றேம்.

முதலாவது, தோழர் ராமநாதன் அவர்கள் கூறும் குறைக்குச் சமாதானம் இயக்கத்திற்கு கொள்கைகளும் திட்டங்களும் வகுக்க என்று ஈரோட்டில் சென்ற வருஷம் டிசம்பர் மாதத்தில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்து, தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 250 தோழர்கள் வரை விஜயம் செய்து, இரண்டு நாள் தாராள விவகாரத்திற்குப் பிறகு இயக்கத்திற்கென்று ஒரு லக்ஷியமும் ஒரு திட்டமும் வகுக்கப்பட்டிருப்பதை யாவரும் அறிவார்கள். அந்த லக்ஷியமும் திட்டமும் இதுவரை, சுமார் 120 சங்கங்களால் ஒப்புக் கொள்ளப்பட்டும், சுமார் 10, 20 மகாநாடுகளில் நன்றாய் விவாதிக்கப்பட்டும் 2,3 மகாநாடுகளில் தோழர் ராமநாதன் அவர்களாலேயே எதிர்த்து ஆக்ஷேபணைகள் கூறி மறுக்கப்பட்டு அம்மறுப்புகளுக்கு ஆங்காங்கு அவ்வப்போது சமாதானம் கூறப்பட்டு அநேகமாய் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு இருப்பதும் தோழர் ராமநாதன் அவர்களுக்கும் மற்றும் அம் மகாநாடுகளுக்குச் சென்ற அநேகருக்கும் தெரியும். இந்நிலையில் சுயமரியாதை இயக்கத்திற்கு திட்டங்கள் வகுத்துக் கொள்ளவில்லை என்பது நமக்குப் புரியவில்லை.



RangaRakes

tamilnavarasam.com

இது ஒருபுறமிருக்க, தோழர் ராமநாதன் அவர்கள் சுமார் 3,4 சு.ம. மகா நாடுகளில் பொதுஜனங்களுக்குத் தனது அபிப்பிராயத்தையும் கொள்கை களையும் திட்டங்களையும் எடுத்துச் சொல்லத்தக்க வசதி உள்ள தலைமை யை வகித்தும் இருக்கிறார். அவைகளில் எதிலாவதொன்றிலாவது "அக் குறையை" நீக்கத்தக்க திட்டங்களை வகுத்துக் குறிப்பிட்டதாகவும் தெரிய வில்லை. ஆனால் தான் விஜயமாகும் மகாநாடுகள் தோறும் சிலவற்றுள் "லக்ஷியத்தையும் திட்டத்தையும் எதிர்ப்பதாகவும்" சிலவற்றுள் "லக்ஷியம் அர்த்தமற்றது. திட்டம் பயனற்றது" என்று சொல்லுவதாகவும் சிலவற்றுள் "லக்ஷியம் ஒப்புக்கொள்ளக்கூடியது, திட்டம் பயனற்றது" என்று சொல்லு வதாகவும் தான் தெரியவருகின்றது. ஒரு இயக்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும்பற்றி மாறு அபிப்பிராயப்படவும் மறுக்கவும் யாருக்கும் உரிமையுண்டு. ஆனால் அவ்வியக்கத்தில் இருக்கின்றவர்களுக்கு அவ் வுரிமையுடன் கூடவே அதற்கு பதிலாக, வேறு எதையாவது தான் கருதி இருப்பதை காட்டவேண்டிய அவசியமும் இருக்கவேண்டியது நியாய மாகும்.

மற்றபடி தனிப்பட்ட முறையில், இருக்கிறதா? இல்லையா? என்பதை விவகாரத்துக்கு இடமானதாகக் கொள்வதானாலும், மகாநாடுகளுக்குத் தலைமை வகித்து தலைமைப்பேருரை நிகழ்த்துங்காலையில் குறைகள் கூறப்படும்போது அதற்குப் பரிகாரமும் கூறவேண்டியது யாரும் எதிர் பார்க்கத்தக்க தர்மமாகும்.

நிற்க, இம்மகாநாட்டுத் தலைவரால் மற்றொரு குற்றமும் கூறப் பட்டிருக்கிறது. அதாவது,

**"வேலை துடங்கவில்லை என்பதை நாம் அனைவரும் வருத்தத்துடன் ஒப்புக்கொள்ளவேண்டும். இனியாவது நமது கடமை களை உணர்ந்து அவைகளைச் செலுத்த வேண்டிய முறையில் காரியாம் சையில் ஈடுபட ஒருப்படுவோமென்கின்ற நம்பிக்கையில் இம் மகா நாட்டின் நடைமுறைகளை அமைப்போமாக"** என்று கூறி இருக்கிறார். இதையும் அர்த்தம்செய்து கொள்ளத்தக்க சக்தி நமக்கு இல்லை.

என்ன வேலை துடங்கவில்லை? நமது கடமை என்ன? காரியாம் சையில் ஈடுபடுவது என்பது எப்படி? ஆகிய விஷயங்களை அறிய ஆசைப்பட எவருக்கும் உரிமையுண்டு. ஆதலால் அவைகளை அத் தலைமை உரையிலாவது, முடிவுரையிலாவது கூறப்பட்டிருக்குமானால் மிகவும் அழகாயிருந்திருக்கும் என்பதோடு சமாதானம் சொல்லவேண்டிய அவசியமும் நேர்ந்திருக்காது.

மற்றபடி அபிப்பிராய பேதங்கள் இயற்கையானதும் அவசிய மானதுமாகையால் மற்றும் சில விஷயங்களைப் பற்றி இப்பொழுது பேச அவசியமில்லை என்ற அளவில் அடுத்த விஷயத்தைக் கவனிப்போம்.



## காந்தி பகிஷ்காரம்

தோழர் காந்தி அவர்களது தமிழ் நாட்டு விஜயத்தைப் பொது மக்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் அவருக்குப் பண முடிப்பு சமர்ப்பிக்க யாரும் பணம் கொடுக்கக்கூடாதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டி ருப்பது உண்மையேயாகும். இதிலென்ன தப்பிதம் இருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை.

வாலிப உலகில் காந்தியார் சுமார் 5, 6 வருஷகாலமாகவே பகிஷ்கரிக் கப்பட்டு வருகிறார்என்பது யாவரும் அறிந்ததே. கராச்சியிலும், பம்பாயிலும் மற்றும் இரண்டொரு இடங்களிலும் காந்தியார் வரவுக்குக் கருப்புக்கொடி பிடித்ததும் கையில் கருப்பு புஷ்பம் கொடுத்தும் **"காந்திஜி திரும்பிப்போ"** என்று மக்கள் கூவியதும் அனேகருக்குத் தெரியும். அப்படிக் கூடியவர்கள் வெறும் சோத்து ராமன்கள் அல்ல. பின்னை யாரென்றால் தூக்கு மேடையில் ஒருகாலும் காந்தி பகிஷ்காரத்தில் ஒரு காலும் வைத்துக்கொண்டு மனித சமூக சமதர்ம இன்ப வாழ்வுக்கு உயிரைத் தத்தம் செய்து வைத்திருந்த வாலிபர் களேயாவார்கள்.

ஆதலால் காந்தி பகிஷ்காரம் என்பது ஒரு ஒப்பற்ற மனித சமூக சுயமரியாதைத் தத்துவம் கொண்டதே ஒழிய, ஓட்டுப் பெறவோ சோம்பேறிக் கூட்டங்களுக்கு அன்னசத்திரம்வைப்பது போன்ற சோம்பேறி மடங் கட்டவோ ஏற்பட்ட வேலையல்ல என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளு கின்றோம். "சுயமரியாதைக்காரர் பகிஷ்காரம் வெற்றி பெறுமா" என்பது வேறு சங்கதி.

"பெரியபாளையத்து அம்மன்" உற்சவத்துக்கு, சீலையையும் வேஷ்டியையும் அவிழ்த்துப் போட்டு ஆடுவதற்கும், அதைப் பார்ப்ப தற்கும் அதற்குப் பணம் கொடுப்பதற்கும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் போகிறார்கள். அதைப் பகிஷ்கரிக்கச் செய்த பிரசாரங்களில் எட்டில் ஒரு பங்குகூட இன்னமும் வெற்றிபெறவில்லை. ஆதலால் வெற்றி தோல்வி என்பவைகளிலேயே காரியங்களின் யோக்கியதாம்சங்கள் இருக்கின்றன என்று கருதினால் விஷயங்களின் தன்மையில் ஏமாந்துபோக நேரிடும்.

"காந்தியாரைப் பகிஷ்கரிப்பது அறிவீனம்" என்று சில பத்திரிகை கள் எழுதுகின்றன. ஆனால் இப்பத்திரிகைகள் "காந்தியாரைப் பகிஷ்கரிப் பது பெரிய பாவம்" என்று சொல்லும் மேதாவிகளைவிட ஒருபடி மேலான வைகளென்றே சொல்லலாம்.

காந்தியார் எதற்காக வருகிறார்? அவருக்குக் கொடுக்கும் பணம் எதற்குப் பயன்படும்? அவரை யார் கூட்டிவந்து காட்டி பணம் பெருகி றார்கள்? காந்தியார் கொள்கை என்ன? என்பவைகளைப்பற்றி இவர்கள்



RangaRakes tamilnavarasam.com

யோசித்து இருந்தால் உண்மைத் தன்மையில் இப்படிப் பேசியும் எழுதியும் இருக்கமாட்டார்கள்.

காந்தியார் தீண்டாமைவிலக்குப் பிரசாரம் செய்ய வருகிறார் என்று வைத்துக்கொள்வோம். தீண்டாமை எதிலிருந்து உற்பத்தியாயிற்று? ஹிந்து மதத்தில் தீண்டாமைக்கு ஆதாரம் இருக்கின்றதோ இல்லையோ என்பது ஒரு பிரச்சினையேயானாலும் இந்துமத சம்பிரதாயப்படிக்கு என்றுதானே இன்று தீண்டாமை இருந்து வருகின்றது.

தோழர் காந்தியவர்கள் "தீண்டாமைப் பேயை" ஓட்ட வேண்டு மென்பது "மதத்தைப் புனிதமாக்கவே" ஒழிய தீண்டாதார்களைப் பற்றிய கவலையால் அல்ல என்பது யாவரும் உணரக்கூடியதேயாகும். மதத்தைப் புனிதமாக்குவது என்பது எதற்காக என்றால் இந்து மதம் குற்ற முடையதாகி அது பலராலும் குற்றம் சொல்லும் நிலைமைக்கு வந்தது சீக்கிரத்தில் கழிந்துபோகத்தக்க நிலைமைக்கு வந்துவிட்டதாதலால் அக்குற்றங்களை களைந்து சீக்கிரம் அழிந்துபோகக்கூடுமான நிலைமையில் இருக்கும் இந்துமதத்தை காப்பாற்றவேண்டும் என்பதற்காக என்பது காந்தியவர்களு டையவும் அவரைக் கூட்டிவந்து வேடிக்கை காட்டும் பார்ப்பனர்களு டையவும் அவ் வேடிக்கையில் வசூலாகும் பணங்களைக்கொண்டு வயிறு வளர்க்கும் மத-தேச பக்தர்களுடையவும் கருத்து என்றே வைத்துக் கொள்ளலாம். இதை சுயமரியாதைக்காரர்கள் அல்லது மனித சமூக ஒற்றுமை யிலும் பரஸ்பர அன்பிலும் கவலையுள்ளவர்கள் அல்லது இந்தியா ஒரு தேசமாகி இந்திய மக்கள் ஒற்றுமையுடன் பரஸ்பர அன்புடனும் சமாதானத் துடனும் சகோதரத்துவத்துடனும் நம்பிக்கையுடனும் வாழவேண்டும் என்று கருதுகின்ற உண்மை தேசபக்தர்கள் அல்லது தேசியவாதிகள் என்பவர்கள் ஒப்புக்கொள்ள முடியுமா என கேட்கின்றோம்.

தீண்டாமை விலக்கு என்பது ஒரு பொதுஜன தர்மம் அல்லவென்றும் அது இந்துக்களை மாத்திரம் சேர்ந்த வேலையென்றும் தோழர் காந்தியார் ஆயிரம் தடவை சொல்லி இருக்கிறார். இதிலிருந்தே தீண்டாமை விலக்கு என்பது ஒரு மதப்பிரசாரம் என்பதாக ஒரு சாதாரண மனிதனுக்கும் விளங்கவில்லையா என்று கேட்கின்றோம்.

காந்தியாரின் தீண்டாமை விலக்குப் பிரசாரத்தினால் "இந்திய தேசியத்திற்கே ஜாதிப்பாகுபாடானது இயற்கை விரோதியாய் இருக்கின்றது" என்று தேசியவாதிகள் தேசபக்தர்கள் என்பவர்களால் சொல்லப்படுகின்ற ஜாதிப் பாகுபாடுமுறை அழிந்து விடுமா?

அல்லது "இந்திய சமுதாய மக்களின் சுயமரியாதை வாழ்வுக்கே விரோதமாய் இருக்கிறது" என்று எல்லாப் பார்ப்பனரல்லாத மக்களாலும் ஏக மனதாய் ஒப்புக் கொள்ளப்படுகின்ற வருணாச்சிரம தர்மமுறை தோழர் காந்தியார் தீண்டாமை விலக்குப்பிரசாரத்தால் ஒழிந்துவிடுமா என்று தேச பக்தர் தேசியவாதிகள் பார்ப்பனரல்லாத சுயமரியாதையுடைய மக்கள் என்று சொல்லிக்கொள்கின்றவர்கள் ஆகிய எல்லோரையுமே வணக்கத்துடன் கேட்கின்றோம்.

மனிதன் தனக்கு எழுதவும் பேசவும் தெரிந்துவிட்டதாலேயே தன்னை பூரண மனிதன் என்று நினைத்துக் கொள்ளலாம் என்பது ஒரு நாளும் ஒப்புக்கொள்ளத் தக்கதாகாது. மனிதன் மதிக்கப்படவேண்டுமா னால் அவனது எழுத்தும் பேச்சும் பொருத்தவரையிலாவது எதற்கு பயன் படுகிறது என்ப தைப் பொருத்ததேயாகும். இன்றைய தினம் காந்தியாருக்கு பாமரமக்களிடம் உள்ள செல்வாக்கின் பயனாய் காந்தியைப் புகழ்ந்து கூறும் ஒரு கிறாமபோன் தகடு (அது யார் கூறியதாய் இருந்தாலும்)க்கு கூட மதிப்பும் பக்தியும் இருந்துவருவது யாவரும் அறிந்ததே யாகும்.

காந்தியார் பல தடவைகளில் ஒவ்வொரு ஜாதியாரையும் பார்த்து "ஜாதிப்பாகுபாடுகள் அவசியம்" என்றும் அவனவன் தகப்பன் செய்த தொழில் (அவனவன் ஜாதித்தொழில்) அவனவன் செய்யவேண்டும் என்றும் சொல்லி வருவதும், இதை அனுசரித்துத் தனது ஆச்சிரமத்தில் இன்றைய தினம்கூட தீண்டப்படாத ஜாதியாருக்குத் தோல் பதனிடும் வேலை செய்ய வும், பழகவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுத்து வருவதும் யாவரும் அறிந்தாகும்.

ஜாதிகள் அழியவேண்டும் என்று நாளது வரை தோழர் காந்தியார் தன் வாயினால் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை என்றும் ஆனால் ஜாதிகள் இருக்க வேண்டுமென்று பல தடவை சொல்லி இருக்கிறார் என்றும், நாம் பந்தயங்கட்டிக் கூறத் தயாராயிருக்கிறோம். இதை மறுக்கும் மனிதர் யாராயிருந்தாலும் தயவு செய்து முன்வரட்டும் என்று தலைவணங்கி அழைக்கின்றோம். இதற்கு யோக்கியமில்லாதவர்கள் காந்தி பகிஷ்காரம் பாவம் என்றும், அறிவீனம் என்றும் சொல்லுவதில் பயன் என்ன? என்பது நமக்கு விளங்கவில்லை.

வருணாச்சிரம விஷயத்தில் தோழர் காந்தியார் "பிராமணன், க்ஷத்திரி யன், வைசியன், சூத்திரன் என்கின்ற நான்கு வகுப்பு இருக்க வேண்டும்" என்றும், ஐந்தாவதான சண்டாளர் என்கின்ற வகுப்புக் கூடாதென்றும் அச்சண்டாளர் என்னும் வகுப்பை சூத்திரர் என்னும் வகுப்புடன் சேர்க்க வேண்டும் என்றும் சொல்லுகிறார். இதற்கு ஆதாரம் இரண்டொரு மாதத் திற்கு முன் 'குடி அரசி' லேயே எடுத்துக்காட்டியிருக்கிறோம். அதாவது,

தீண்டாதவர்கள் கோயிலுக்குப் போனால் அவர்கள் நிற்கவேண்டிய இடம் எது என்று கேட்கப்பட்ட கேள்விக்கும் தீண்டாமை என்பது போய் விட்டால் தீண்டாதவர்களாய் இருந்தவர்களுக்கு இந்து மதத்தில் அவர்


RangaRakes
tamilnavarasam.com

களுடைய நிலைமை என்ன என்றும் கேட்கப்பட்ட கேள்விக்கும் தோழர் காந்தியவர்கள் அளித்த பதில், **"அவர்கள் (தீண்டப்படாதவர்கள்) சூத்திரர்களுக்குச் சமமாக அதாவது சூத்திரர்கள் இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டியவர்களாகப் பாவிக்கப்படுவார்கள்"** என்று சொல்லியிருக்கிறார்.

இவைகளுக்கெல்லாம் காந்தி பகிஷ்காரத்தைக்கண்டு துள்ளிக் குதிக்கின்றவர்கள் என்ன பதில் சொல்லுகின்றார்கள் என்று கேட்கின்றோம்.

பார்ப்பனர்களுக்கு இது சமயம் ஒரு காந்தியார் வேண்டியது மிக அவசியமாகும். ஏனெனில் தர்ம கிளர்ச்சியும் ஏற்படுகிற காலங்களில் எல்லாம் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருப்பதாக சரித்திரம் இருக்கின்றது. அச்சரித்திரங்களில் பலவற்றை சுயமரியாதைக்காரர்கள் முழுப்பொய் என்றாலும் அவை பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை என்றும் நிலை நிறுத்திக்கொள்ள நடந்து கொள்ள வேண்டியதற்குவழி காட்டிகள் என்பது ஒரு முடிவு. ஆதலால் பார்ப்பனர்களுக்கும் சோம்பேறிகளுக்கும் ஆதரவளிக்கும் காந்தியாருக்கும் பிரசாரத்துக்கும் தாழ்த்தப்பட்ட மக்களும் பின் தள்ளப்பட்ட மக்களும் ஏன் ஆதரவளிக்கவேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

## பண முடிப்பு

காந்தியார் பேரால் வசூலிக்கப்படும் பணம் நாளைக்கு என்ன கதி அடையப்போகிறது என்பதைப் பற்றி சிறிது சிந்திக்க வேண்டுகிறோம்.

கதருக்கு வசூல் செய்த பணம் கதர் இலாக்காவுக்கு அதாவது நிர்வாகத்தில் 100க்கு 90 பேர்கள் பார்ப்பனர்களாயிருந்து மாதம் 250, 200, 150, 100, 50 என்கின்ற கணக்கில் சம்பளமாக கொள்ளை அடித்து வயிறு வளர்ப்பதற்கும் பார்ப்பனரல்லாதவர்களையும் அவர்களது இயக்கத்தையும் முயற்சியையும் வைது திரிவதற்கும் ஒரு சோம்பேறிக் கூட்டம் அனுபவிக்கப் பயன்படுத்தப்பட்டது-படுகிறது என்பதை யாரோ மறுக்கவல்லார்? இன்றும் ஆங்காங்கு காந்தி பண முடிப்பு வசூல் செய்வதெல்லாம் பார்ப்பனரல்லாதாரிடமிருந்தும் வசூல்நிர்வாகம் செய்வதெல்லாம் பெரிதும் பார்ப்பனருமாயிருந்தும் வருவது யாவரும் அறிந்ததேயாகும். மொத்த வசூல் தொகைகள் பார்ப்பனர்களிடம் ஒப்புவிக்கப்பட்டு அவற்றில் ஒரு சிறிது வேறு வழியில் பிழைக்க வகையற்றவர்களும் தங்கள் சுயமரியாதையை விற்றுப் பிழைத்துத் தீர வேண்டியவர்களுமான இரண்டொரு "கனவான்களுக்கு" அதாவது தீண்டாதார் வகுப்பைச் சேர்ந்த இரண்டொருவருக்கும், பார்ப்பனரல்லாத வகுப்பைச் சேர்ந்த இரண்டொருவருக்கும் கொடுத்து விட்டு மீதி அவ்வளவும் பார்ப்பனர்கள் மூலமே பெரிதும் பார்ப்பனர்களுக்கே பயன்படப் போகின்றது. தீண்டப்படாதவர்களுக்கு ஒரு நாளைக்கு தலைக்கு எண்ணையும், குளிக்கச் சோப்பும் இடுப்புக்கு (விற்காமல் கட்டுக் கடையாயிருக்கும்) இத்துப்போன கதர்த்துணியும் கொடுத்து அவர்கள் குடியிருக்கும் வீதியை ஒருநாளைக்கு கூட்டியும் விட்டால் தீண்டப்படாதவர்களுடைய கஷ்டம் நீங்கி அவர்கள் வாழ்ந்து விடமுடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள். விற்காத கதர்களை விற்க இது ஒரு தந்திரம். காந்தியாரின் தீண்டாமை விலக்குக் கொள்கையில் இருக்கின்ற புரட்டுகளையும் கொடுமைகளையும் விட தீண்டாமை விலக்குக்காக செய்யப்படும் வேலைத் திட்டங்களில் அநேக புரட்டுகளும், பித்த லாட்டங்களும், மோசங்களும் இருப்பதோடு அக்கூட்டத்தார்கள் மற்ற ஜனங்களை எவ்வளவு முட்டாள்களாகக் கருதியிருக்கிறார்கள் என்பதும் சிறிது யோசித்தால் விளங்காமல் போகக் கூடிய சங்கதி அல்ல.

நிற்க, "தோழர் காந்தியார் வரவை வைதீகர்களும் கண்டிக்கிறார்கள், சுயமரியாதைக்காரர்களும் கண்டிக்கிறார்கள். ஆதலால் இருவர்கள் செய்கையும் அக்கிரமம் என்றும், காந்தியார் நடுநிலைமையுடன் இருக்கிறார் என்பது விளங்குகின்றதென்றும்" சிலர் தர்மநியாயம்பேசுகிறார்கள். இது உண்மையறியச் சக்தியற்றவர்கள் வாதம் என்றே சொல்லுவோம். வைதீகர்கள் காந்தியாரை எதிர்ப்பது மாட்டுக் கடைதரகு வியாபாரம் போல் ஒருபெரும் சூட்சியேயாகும். இது தோழர் காந்தியும் வைதீகர்களும் நம்மை ஏமாற்ற ஏற்கனவே பேசிவைத்துக்கொண்டு செய்யப்படும் தந்திரமாய் இருந்தாலும் இருக்கலாம். வியாபாரிகள் இப்படித்தான் செய்வார்கள். அதாவது ஒரு கடையில் ஒரு சாமானுக்கு ஒரு குமாஸ்தா ஒரு விலை சொன்னால் அந்த விலையைப்பற்றி வாங்குகிறவனுக்குச் சிறிதும் சந்தேகம் தோன்றாமல் இருப்பதற்காக பக்கத்திலிருக்கும் முதலாளியானவன் குமாஸ்தாவைக் கண்டபடி வைவது போல் வார்த்தைகள் உபயோகப்படுத்தி "அந்தச் சரக்குக் கொடுக்கமுடியாது. அதன் விலை குமாஸ்தாவுக்குத் தெரியாது. அதற்கு அவன் பொருப்பில்லாதவன்" என்றெல்லாம் சொல்லிக் கொண்டி ருப்பான். இதைக் கேட்ட வாங்க வந்தவன் "இந்த விலைக்காவது கொடுத்தால் போதும். குமாஸ்தா ரெம்பவும் நல்லவன். நமக்கு வேண்டியவன்" என்று கருதி விலையைப்பற்றியும் சரக்கைப்பற்றியும் சிறிதும் யோசிக்காமல் சொன்னபடி கேட்டுவிடுவான். இந்தத் தந்திரமே இன்று தீண்டாமை விலக்கிலும், கோவில் நுழைவிலும், தீண்டாமை விலகியபின் தீண்டாதவர்கள் நிலை என்ன என்பதிலும் பிரயோகிக்கப்பட்டுவருகின்றது. இதை அறியாத மக்களும், சுயநலமிகளும் நம்மைக் குறை கூறுகிறார்கள். நமக்கு இதைப் பற்றிச் சிறிதும் கவலை இல்லை. ஆனால் காந்தியார் விஜயமானது மக்களு டைய சுயமரியாதைக்கு விரோதமென்றும், அவருக்குக் கொடுக்கப்படும் ஒவ்வொரு காசும், பிற்பட்ட மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும் நிரந்தர கெடுதியையும் இழிவையும் உண்டாக்கத் தக்க தென்றும் நாம் பலமாக அபிப்பிராயப்படுகின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

தோழர் காந்தியாரைவிட வைதீகர்களும், சனாதன தர்மிகளும் எத்தனையோ பங்கு மேம்பட்டவர்கள் என்பது நமது அபிப்பிராயம். எப்படியெனில் வைதீகர்களுடைய அக்கிரமம், அயோக்கியத்தனங்கள் என்னப்பட்ட விஷமானது நன்றாகக் குருடனுக்கும் மூடனுக்கும் தெரியும் படியாக இருக்கின்றன.

காந்தியாரின் விஷம் மேலே சக்கரைப் பூச்சுப் பூசி எப்படிப்பட்ட "அறிவாளி" யும் எடுத்துச் சாப்பிடும்படியான மாதிரியில் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

ஆதலால் வைதீகர்களது விஷத்தை யாரும் சாப்பிட்டுச் செத்துப் போகமாட்டார்கள் என்பதோடு அவ்விஷங்கள் வைதீகர்களையே கொல்லுவதற்குத்தான் பயன்படும் என்றும் சொல்லலாம். ஆனால் காந்தியாரின் விஷம் எல்லோரையும் அருந்தச் செய்து எல்லோரையும் கொல்லத்தக்க மாதிரியில் பூச்சுப் பூசப்பட்டிருக்கிறது என்பதோடு காந்தியாரை மகாத்துமாவாக்கி பின் சந்ததிகளையும் கொல்லச் செய்யத் தக்கதாகும் என்று சொல்லலாம்.

ஆதலால் வைதீகப் பிரசாரத்தையும், சனாதனப் பிரசாரத்தையும் பகிஷ் கரிப்பதைவிடகாந்திபிரசாரத்தைப் பகிஷ்கரிக்கவேண்டியது அவசியமும் அவசரமுமான காரியமாகும்.

**புரட்சி - தலையங்கம் - 10.12.1933**



# "தமிழ் அன்பர்" மகாநாடு

சென்னையில் நடைபெற இருக்கும் தமிழ் அன்பர் மாகாநாட்டைப் பற்றி இரண்டொரு சுயமரியாதை மகாநாடுகளிலும், பல சுயமரியாதை சங்கங்களிலும் அம்மகாநாடானது பார்ப்பனர்கள் தமிழர் மீது ஆட்சி செலுத்த வும் தமிழ்ப்பண்டிதர்களை அடிமை ஆக்கிக்கொள்ளவும் பார்ப்பனரல்லாத உபாத்தியார்களை அடக்கிவைக்கவும் பார்ப்பனர்களில் பலருக்கு உத்தியோகமும் வருவாயும் ஏற்படுத்தவும் செய்யப்படும் ஒரு சூழ்ச்சி என்பதோடு தமிழ் கல்வி என்பதையே தங்கள் இஷ்டப்படி மாணாக்கர்களுக்கு ஊட்டுவதற்கு ஏற்ற தந்திரம் என்றும் பேசி அதை பகிஷ்கரிக்கத் தீர்மானித்திருப்பது யாவரும் அறிந்திருக்கலாம். அந்தப்படியே ஒரு பலமான உணர்ச்சியும் தமிழ் மக்களுக்குள் இருந்து வருவதையும் பார்க்கலாம்.

ஆனால் இதை அறிந்த பார்ப்பனர்கள், கவர்னர் பிரபு தங்கள் மகாநாட்டை ஆசீர்வதித்திருப்பதாவும், யூனிவர்சிட்டியார் தங்களை ஒப்புக் கொண்டு தங்களுக்குப் பணம் கொடுத்திருப்பதாகவும் பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் தங்களுடன் கலந்திருப்பதாகவும் பிறர் நம்பும்படி எவ்வளவோ தந்திரங்கள் செய்து வருகிறார்கள். பார்ப்பனர் ஆதிக்கத்திற்கு பயந்த சிலர் தங்கள் பெயரைக் கொடுத்திருப்பதுடன், சில பத்திரிகைகளும் அந்த தந்திரங்களுக்கு உதவி செய்து வருகின்றன.

இது நிற்க, அம்மகாநாட்டை பகிஷ்கரிக்கவேண்டுமென்ற தீர்மானம் ஒருபுறமிருக்க. அம்மகாநாட்டில் பிரேரேபிக்க என்று சில தீர்மானங்கள் அனுப்பப்பட்டிருப்பதாய்த் தெரியவருகின்றது. இது அம்மகாநாட்டுக்குச் சென்று அங்கு நமது தீர்மானங்களை செய்யமுயற்சித்துப் பார்ப்பதால் அம்மகாநாட்டை நாம் பகிஷ்கரித்து சரி என்று மக்களுக்கு எடுத்துக்காட்ட செய்த காரியமாயிருக்கலாம்.

இருந்தாலும் அத் தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதையும், ஏற்றுக்கொண்டாலும் நிறைவேற்றப்படத்தக்க ஆதரவு கிடைக்காது என்பதையும் இப்போதே நாம் 'ஜோசியம்' சொல்லுவோம்.



RangaRakes tamilnavarasam.com

ஏனென்றால் அம்மகாநாட்டில் பார்ப்பன சூட்சியே மூளையாய் இருப்பதோடு பணக்காரர்கள் ஆதிக்கமும், பார்ப்பனீயப் பணக்கார அரசாங்க ஆதிக்கமும் அதற்கு அடிமைப்பட்டு உதவியாய் இருப்பதால் சுலபத்தில் நாம் வெற்றி பெற்றுவிட முடியாது.

ஆனால் பார்ப்பன சூட்சியையும் பணக்கார ஆணவத்தையும், அவை இரண்டையும் அஸ்திவாரமாய்க் கொண்ட ஆட்சியையும் ஒழிக்க வேண்டு மென்று மக்கள் பலரும் ஒருமனதாய் நினைப்பதற்கு இதுபோன்ற மகா நாடுகளின் நடவடிக்கைகள் அனுகூலமாய் இருக்குமென்பதில் ஐய மில்லை.

இதிலிருந்து ஒரு விஷயம் தெரிந்துகொள்ளவேண்டியது நமக்கு அவசியமாயிருக்கிறது. பார்ப்பனர்களின் இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் இருந்தாவது இனி பண்டிதர்கள் என்பவர்களுக்கும் பார்ப்பனரல்லாத ஏழை உபாத்தியாயர்கள் என்பவர்களுக்கும் புத்திவருமா? என்பதுதான். அப்படி அவர்களுக்குப் புத்தி வந்ததற்கு அறிகுறி என்னவென்றால் அவர்கள் சமதர்ம இயக்கத்தில் சேரவேண்டியதுதான். சமதர்மப் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் எழுதிப் பரப்ப வேண்டியதுதான். அதை விட்டு விட்டு இராமாயணத்திற்குத் தத்துவார்த்தம் சொல்லிக்கொண்டிருப்பதில் பய னில்லை என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

**புரட்சி - துணைத் தலையங்கம் - 10.12.1933**



# நகர பரிபாலன சபை அமைப்பு

தோழர்களே!

இன்று இந்நகர பரிபாலன சபை ஆண்டுவிழாவிற்கு நான் பேச வேண்டுமென்றோ பேசச் சந்தர்ப்பம் ஏற்படும் என்றோ சிறிதும் நினைக் கவே இல்லை. இவ்வூர் வாலிபர்கள் பலர் நான் பேசியாக வேண்டுமென்று ஆசைப்படுவ தாகவும், மற்றும் எனது மேல்நாட்டுப் பிரயாணத்திற்குப் பிறகு முதன் முதலாக இங்கு வந்திருப்பதால் எனது பழைய நண்பர்கள் பலர் நான் பேச வேண்டுமென்று விரும்புவதாகவும் முனிசிபல் மானேஜர் அவர்கள் சொல்லி விரும்புவதால் ஏதாவது பேசலாமென்று முன்வந்திருக் கிறேன். ஆனால் இவ்விழா பிரமுகர்களுக்கு நான் ஏதாவது விபரீதமாய் பேசி விடுவேனோ என்கின்ற பயம் அதிகமாய் இருப்பதாகத் தெரிகிறது கண்டு பரிதாபப்படுகிறேன். என்றாலும் நான் பேசுவதில் பலருக்கு அதிருப் தியும், அபிப்பிராயபேதமும் காணப்படுவது மிக சகஜமேயாகும். அபிப்பி ராய பேதங்களுக்கு முக்கிய காரணமென்னவென்றால் நம் நாட்டு மக்கள் பெரும்பாலும் பழக்கவழக்கங் களிலும், பழைமைகளிலும் பழங்கால நூல் களிலும் பழங்காலப் பெரியோர்கள் என்பவர்கள் வாக்குகளிலுமே முழு நம்பிக்கைவைத்து தண்டவாளத்தின்மீது ரயில் போவதுபோல் ஒரே போக் காய்ப் போய்க்கொண்டு அதையே மேன்மையாய்க் கருதிக் கொண்டிருப்ப தால் அவற்றிற்கு மாறுபட்ட எதினிடத்திலும் அதிருப்தி மாத்திரமல்ல, அபிப்பிராய பேத மாத்திரமல்லாமல் வெறுப்பும், துவேஷமும், பகைமை யும் கூடக் கொள்ளுவது சகஜமேயாகும். ஆனால் நான் அந்தப்படி மக்கள் நினைக்கவேண்டுமென்கின்ற எண்ணத்தின்மீது எதையும் பேசுவதில்லை. நான் ஒரு சுதந்திர மனிதன், எனக்கு சுதந்திர நினைப்பு, சுதந்திர அனுபவம், சுதந்திர உணர்ச்சி உண்டு. அதை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன், நீங்கள் என்னைப் போலவே உங்களது சுதந்திர நினைப்பு, அனுபவம், உணர்ச்சி ஆகியவைகளால் பரிசீலனைசெய்து ஒப்பக் கூடியதை ஒப்பி, தள்ளக் கூடிய தைத் தள்ளி விடுங்கள் என்கின்ற நிபந்தனையின்பேரில் தான் எதையும் தெரிவிக்கிறேன். எப்படிப்பட்ட பழைமை விரும்பி களானாலும் இதற்கு இடம் கொடுக்கவில்லையானால் அது நியாயமும், ஒழுங்குமாகாது. ஆத லால் நடுநிலையில் இருந்து கேட்கும்படி வேண்டிக் கொள்கிறேன்.



RangaRakes tamilnavarasam.com

இன்று என்னை "நகர பரிபாலன சபை அமைப்பும், வேலையும்" என்பது பற்றிப் பேச விழா பிரமுகர்கள் விழைவதாகத் தலைவரவர்கள் அறிவித்துள்ளார். இவ்விஷயம் பற்றிப் பேச எனக்கும் மிகவும் மகிழ்ச்சியே.

நகர பரிபாலன சபை என்பது நகரில் பாழும் மக்களின் நலனைக் குறித்துக் கவலைகொண்டு அவர்கட்கு வேண்டுவன செய்யும் கடமையை ஏற்ற சபை என்பது பொருள் என்றே கருதுகின்றேன். அச்சபையை நிர்வாகிப்பவர்கள் அந்நகர மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டு நகர மக்களின் பிரதிநிதிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளுகின்ற மக்கள் ஆவார்கள். இதுபோலவே ஜில்லா பரிபாலன சபை, தாலூக்கா பரிபாலன சபை, கிராமப் பரிபாலன சபை, மாகாண பரிபாலன சபை என்பது போன்றவைகளுமாகும். ஆனால் நாம் காணும் இப்பரிபாலன சபைகள் என்பவை எப்படி அமைக் கப் பட்டிருக்கின்றன வென்றால் நகர் முதலியவைகளில் வாழும் செல்வ வான் களது பரிபாலன சபைகளாகவே அமைக்கப் பெற்றிருக்கின்றன.

எப்படியெனில் அச் சபைகளில் அமருகின்றவர்களுக்கென ஏற்படுத் தியுள்ள யோக்கியதாம்சை என்ன? அவர்களைத் தெரிந்தெடுப்பவர்களின் யோக்கியதாம்சை என்ன என்று யோசித்துப்பார்ப்போமேயானால் அப்படிப் பட்டவர்களுக்கு ஏதாவது ஒரு சொத்து உடைமையைப் பொறுத்தே அத் தகுதிகள் இருந்துவருவதைக் காணலாம். சொத்துடைமை இல்லாத எவருக் காவது தகுதி இருக்கக் காணுவோமேயானால் அத் தகுதியும் அந் நகர தாலூக்கா, ஜில்லா, மாகாண மக்களில் 1000-க்கு ஒருவருக்குக்கூட இருக்க முடியாததான படிப்பு உடைமையைப் பொறுத்தே ஏற்படுத்தப்பட்டுள்ள தகுதியேயாகும். அதாவது ஒன்றா, ஒரு குறிப்பிட்ட சொத்து இருக்க வேண்டும். அல்லது ஒரு குறிப்பிட்ட படிப்புப் பட்டம் இருக்கவேண்டும். இந்த இரண்டும் இல்லாதார் தகுதி இல்லாதாராகவே கருதப்பட்டிருக்கிறது. ஆதலால் மேற்கண்ட பரிபாலன சபைகளின் அமைப்புகளானது பொது மக்களது சபையாக அமைக்கப்படவில்லை என்பதே எனது அபிப்பிரா யம். பிரத்தியட்ச அனுபவத்தில் காணவேண்டுமென்றாலும் நீங்கள் காண லாம். எந்தப் பரிபாலன சபைகளை வேண்டுமானாலும் எடுத்துக் கொள் ளுங்கள். அவற்றில் வீற்றிருப்போர் யாவர் என்று நோக்குங்கள். அவற்றின் தலைவர்கள் யாவர் என்று நோக்குங்கள். மற்றும் அவர்கள் எல்லோரையும் தெரிந்தெடுப்பவர்களும், தெரிந்தெடுக்கப்படுபவர்களும் தங்கள் கடமை களை, பொறுப்புகளை உணர்ந்தவர்களாய் இருக்கின்றார்களா என்று பாருங் கள். சொத்துடைமையைத் தகுதியாகக் கொண்ட மக்களின் சபைப் பிரதிநிதி கள் தங்கள் தங்கள் சொத்துடைமையைப் பெருக்குவதைக் கடமையாகக் கொள்ளுவார்களா அல்லது சொத்தில்லாதவர்கள், படிப்பில்லாதவர்கள் ஆகிய ஏழை பாமர மக்களின் நலன் பெருக்கத்தைக் கடமையாகக் கொள் ளுவார்களா என்பதை இயற்கைத் தத்துவம் என்னும் கண்ணினால் பாருங் கள். ஆகவே நகரபரிபாலன சபைகளின் அமைப்பே பொது மக்களின்



நலத்திற்கு ஏற்றதாய் இருக்கமுடியாமல் அமைக்கப்பட்டிருக்கிறது. அவை களில் ஒழுக்கத்தையோ நாணயத்தையோ காண்பதென்பது மிக மிக அரிதாகவே இருக்கத்தக்கதாய் இருக்கிறது. தெரிந்தெடுத்தல்கள் (எலக்ஷன் கள்) என்பவைகளைப்பற்றி யாவரும் வெளிப்படையாய் அறிந்த விஷயமே யாகும். தெரிந்தெடுப்பவன் எவருக்குமே ஏறக்குறைய 100-க்கு 99-பேருக் குமே தெரிந்தெடுப்பவனின் கடமை என்ன என்பதே தெரியாது. ஒவ்வொரு தெரிந்தெடுப்பவனும் அவனவன் சுயநலம், தாட்சண்யம் ஆகியவைகளைக் கவனித்தே வியாபார முறையில் தெரிந்தெடுக்கிறான். தெரிந்தெடுக்கப்படு பவனும் தனது சுயநலம், தற்பெருமை தற்காப்பு ஆகிய வைகளைக் கருத்தில் வைத்தே தெரிந்தெடுக்கப் பாடுபட்டு தெரிந்தெடுக் கப்பட்டவனா கிறான். ஆகவே தெரிந்தெடுப்பு முறை பெரிதும் சுயநலத் தையே அஸ்தி வாரமாய் கொண்டு உலவுகின்றது.

பொதுஜனங்கள் பேரால், சில ஜனங்கள் புகழ்பெற்று செல்வம் பெருக்கி மகிழ்வது என்பதே நகரபரிபாலன சபையின் அமைப்பாகவும் வேலையாகவும் இருந்து வருகின்றது.

இதுபோல் தான் ஜில்லா, தாலூக்கா பரிபாலன சபைகளுமாகும். ஜில்லா தாலூக்கா சபைகள் என்பது நகரங்கள் தவிர்த்த கிராமங்களையே பொறுத்தது. கிராமங்களில் உள்ள பெரும்பான்மை மக்களான விவசாயக் கூலிகளுக்கு இந்தச் சபைகள் பிரதிநிதி சபையாகுமா? சின்ன குடியானவர் களுக்கு இது பிரதிநிதி சபையாகுமா? பூமி இல்லாதவனுக்கும் ஒரு ஏக்கரா, அரை ஏக்கரா பூமி உள்ளவனுக்கும் 1000-ஏக்கர் 10,000-ஏக்கர் பூமி உள்ளவர் கள் பிரதிநிதிகளானால் இது எதற்கு பயன்படும்? அந்த ஒரு ஏக்கரா அரை ஏக்கரா பூமியையும் பிடுங்கி 1000-ஏக்கர்காரன் 1500-ஏக்கர் காரனாகவும், 10,000-ஏக்கர் காரன் 15,000 ஏக்கர் காரனாகவும் மற்றவர்களை ஏழைகளா கவும், பாப்பர்களாகவும் ஆக்கத்தான் பயன்படும். மற்றும் தங்கள் அதிகார ஆணவங்களைக் கொண்டு விவசாயக் கூலிமக்களை அடக்கி ஒடுக்கி துஷ்ட மிருகங்கள் மாதிரியிருந்து நடத்தத்தான் பயன்படும்.

இந்தப்படி நாடுமுழுவதும் நடக்கிறதா இல்லையா பாருங்கள். நகர பரிபாலன சபைகளின் செல்வங்கள் அவற்றில் உள்ள உத்தியோகஸ்தர் களும் கண்ட்ராக்டர்களும் சாப்பிடவும் இவற்றுள் பரிபாலன சபையார் களுக்கும் பங்கு இருக்கவுமே பெரிதும் பயன்படுகின்றன. ஒருபாகம் பொது ஜனங்களுக்கும் பயன்படுகின்றது என்று சொல்லப்பட்டாலும் அதுவும் பெரிதும் செல்வவான்களுக்கும், படித்தவர்கள் என்று சொல்லப்படும் சோம்பேரிகளுக்குமே போய்ச் சேருகின்றன.



RangaRakes tamilnavarasam.com

மாகாண பரிபாலனசபைகளை எடுத்துக்கொள்ளுங்கள். அவைகளில் ஜமீன்பேரால் மக்கள் ரத்தத்தை உரிஞ்சும் கொள்ளைக்காரர்கள், லேவா தேவியின் பேரால் மக்கள் ரத்தத்தையும் எலும்பில் உள்ள ஊன்களையும் உரிஞ்சும் கொள்ளைக்காரர்கள், மிராசுதாரர்கள் பெயரால் விவசாய கூலி களின் ரத்தத்தையும் எலும்பு ஊன்களையும் மனிதத் தன்மையையும் கொள்ளை கொண்ட துஷ்டமிருகங்களுக்கொப்பானவர்கள், வன்னெஞ்ச வியாபாரிகள், படித்தவர்கள் என்னும் ஈவு இரக்கமற்ற சோம்பேரிக் கூட்டங் கள் ஆகியவைகளே நிறையப் பெற்றிருக்கின்றன. இவர்களது எண்ண மென்ன? கடமை என்ன? செய்கை என்ன? என்பவைகளை நான் விவரிக்க வேண்டுமா? பிரத்தியக்ஷத்தில் நீங்கள் அறியாதது எதை நான் சொல்ல வேண்டும்?

ஆதலால் இச்சபைகளின் அமைப்பையும், வேலைத்திட்டத்தையும் நடவடிக்கைகளையும் கண்ட ஒருவன் யோக்கியனாய் இருப்பானாயில் இவைகளைக் கலைக்க வேண்டுமென்றுதான் சொல்லுவானே ஒழிய சீர்திருத்த வேண்டுமென்று சொல்வதுகூட மிகக்கஷ்டமாய்தான் இருக்கும். ஆனால் சிறிது காலமாகவே நான் கொண்ட அபிப்பிராயப்படிக்குதான் நகரபரிபாலனங்களின் ஆதிக்கங்கள் நாளாவட்டத்தில் குறைந்துவருவது பற்றி மகிழ்ச்சியடைகின்றேன். என்னவெனில் நகரபரிபாலன சபைக்கு இருந்துவந்த அதிகாரங்கள் இந்த 20-வருட காலத்தில் அதாவது பாமர மக்களுக்கு "சுயாட்க்ஷி" உணர்ச்சி ஊட்டி செல்வவான்களும், படித்த சோம்பேறிகளும் ஏமாற்ற ஆரம்பித்த காலம்முதல், நாளுக்குநாள் ஏற் கனவே இருந்த அதிகாரங்கள் பறிக்கப்பட்டே வருகின்றன. இனி ஜில்லா தாலூக்கா சபைகளின் அதிகாரங்களும் பறிக்கப்படவேண்டுமென்ற விருப் பங்களும் செல்வாக்குப் பெற்றுவருகின்றன. இதிலிருந்தே பரிபாலன சபை களின் அமைப்பும் வேலையும் ஒழுங்காக இல்லை என்பது யாவரும் அறிந்ததாகும். நம் நாட்டில் நகரபரிபாலனசபைகள் ஏற்பட்டு 50-வருஷங் களுக்கு மேலாகியும் இன்னமும் மக்களுக்கு அவற்றின் கடமையும் பொறுப்பும் தெரியவில்லை என்றால் நாம் நம் சமூகத்தின் பேரால் வெட்கப் பட வேண்டாமா என்று யோசித்துப்பாருங்கள்.

எப்படிப்பட்ட நகரத்திலும் ஒரு வீட்டுக்காரன் பொது இடத்தில் ஒரு அடி நிலமாவது சேர்த்துக்கட்டிக் கொள்ளவே பார்க்கிறான். அதில் அவன் வெட்கப்படுவதில்லை. பொது சொத்து என்றால் கொள்ளை அடிக்கத்தகுந் தது என்பதே ஒவ்வொருவனுடையவும் எண்ணமாய் இருந்து வருகின்றது. இப்படிப்பட்ட எண்ணமுடையவர்கள் ஒருநாளும் பொது நிர்வாகத்துக்கு அருகதையுடையவர்களாகமாட்டார்கள். இப்படிப்பட்ட ஜனங்களின் பிரதி நிதிகளும் நம்பிக்கைக்கும் கடமைக்கும் உரியவர்களாகமாட்டார்கள் என்று வலியுறுத்தி கூறுவேன். எந்தப் பெண்ணும் தன் வீட்டுக் குப்பைகூளம் அசிங்கம் ஆகியவற்றை பக்கத்துவீட்டுப்புரம் கொட்டுவதிலும் தன் வீட்டுப் பிள்ளையை எதிர்வீட்டுப்புரமோ அல்லது பக்கத்துவீட்டுப்புரமோ இருத்தி மலஜலம் கழிக்கச்செய்வதையுமே கடமையாகவும், நீதியாகவும் கொண்டி ருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை 50-வருஷமாய் திருத்த முடியாத பரிபாலனசபை அமைப்பும் வேலையும் இனி எப்பொழுது திருந்தப் போகின்றது?

மேல்நாடுகளில் இவ்விஷயங்கள் ஓரளவு கவனிக்கப்படுகின்றன என்றாலும் அங்கும் போதிய வேலைகள் செய்திருப்பதாய் கனப்பட வில்லை.

உண்மையான நகரபரிபாலன சபைகள் என்பவைகள் ஒரு அரசாங்கம் என்பதின் வேலைகள் எல்லாவற்றையுமே மேற்போட்டுக் கொண்டு வேலை செய்து வரத்தக்கதாய் இருக்க வேண்டும். அவைகள் நகரின் பெரும் பான்மையான மக்களான தொழில் செய்துவாழும் மக்களு டைய முழு பிரதிநிதிகளாகவே இருந்து அவர்களது நன்மையையே பெரி தும் கவனிக்கத் தக்கதாய் இருக்கவேண்டும். பொதுஜனங்களை உத்தேசித்து பொதுஜனங்களுக்காக நடைபெறும் எந்தக் காரியத்தையும் வியாபாரத்தை யும் தனிப்பட்ட மனிதன் நடத்திப்பயன்பெற இடமே இருக்கக்கூடாது. உதாரணமாக வியாபாரங்கள் தொழிற்சாலைகள் மற்றும் மக்களுக்கு வேண்டிய ஆகாரசாமான் போகபோக்கிய சாமான் போக்குவரவு வசதி, கல்வி முதலிய எல்லா நிர்வாகங் களும் நகர பரிபாலன சபையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு அதன் லாபங்கள் முழுமையும் நகர மக்களின் வாழ்க்கைக் கும் கல்விக்கும் சுகபோகத்துக்கும் சரிசமமாய் பயன்படத்தக்கதாகவே இருக்கவேண்டும். உற்பத்தி செய்பவனுக்கும் அனுபவிப்பவனுக்கும் மத்தி யில் மிடில் மேன் கூடவே கூடாது. நகர சிவில் கிரிமினல் போலீசு முதலிய காரியங்களும் நகர பரிபாலனத்துக்குள்ளாகவே அடங்கியதாய் இருக்க வேண்டும். ஜட்ஜிகள், போலீசு அதிகாரிகள் சிறைக்கூடத் தலைவர்கள் முதலிய எல்லா அதிகாரிகளும் நகரபரிபாலன சபையின் அதிகாரிக ளாகவே இருக்க வேண்டும்.

இந்த முறையில்தான் ரஷியதேசத்தில் நகர்சபைகள் நடப்பதை பார்த்தேன். ஓட்டர்கள் சங்ககூட்டத்தில் ஜட்ஜியை நிருத்தி கேள்விகள் கேட்கப் பட்டதை நேரில் பார்த்தேன். ஜட்ஜி நகரஜனங்களால் தெரிந்தெடுக் கப்பட்டவராவார். அவரும் ஒரு தொழிலாளியேயாவார். ஒவ்வொரு தெரிந் தெடுக்கப்பட வேண்டிய ஸ்த்தானத்திற்கும் தெரிந்தெடுக்கப்பட்டவரிடம் இருந்து வேலைவாங்கவும் அவர் கடமையை சரியாய் உணர்ந்து பொருப்பு டன் நடக்கின்றாரா என்பதைக் கவனிக்கவும் ஒரு தனிக்கமிட்டி உண்டு. அக்கமிட்டிக்கு அவர்கள் என்றும் பொறுப்பாளிகளாய் இருக்க வேண்டும் என்கின்ற முறையிலேயே எல்லா ஸ்தல ஸ்தாபனங்களும், வேலை முறை களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. நிற்க,


RangaRakes
tamilnavarasam.com

நமது நாட்டு ஸ்தாபனங்களில் ஸ்தாபன சிப்பந்திகளின் நிலைமை மிகவும் பரிதாபத்துக்கும், கண்டனத்துக்கும் உரியதாகும். சிப்பந்திகளுக்கு சர்க்கார் சிப்பந்திகள் போல பென்ஷன் இல்லை. அவர்கள் ஒரு எஜமான ருக்குத் திருப்தியாய் நடக்க முடியாவிட்டால் வேறு இடத்திற்கு மாற்றிக் கொள்ளவோ, மாற்றப்படவோ மார்க்கமில்லை. இந்தக் காரணங்களால் மனச்சாட்சிப்படி நடக்கமுடியாமலும் சுதந்திரத்துடன் இருக்க முடியாமலும் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

நகர பரிபாலன சபை அங்கத்தினர்களும், தலைவர்களும் எப்படிப் பட்ட யோக்கியதை உடையவர்கள் என்று மேலேயே சொன்னேன். அப்படிப் பட்டவர்களிடம் இருந்து காலந்தள்ள வேண்டிய அவசியத்தில் மனிதன் வாழ்வது மிகவும் கொடுமையான வாழ்வேயாகும். ஒரு எஜமானன் காலா வதியாகி அவனது மறுதேர்தலுக்கு ஏதாவது அபிமானம் காட்டினால் அடுத்து வருகிற எஜமானன் கல்நெஞ்சுடன் நசுக்கிவிடுகிறான். அபிமானம் காட்டவில்லையானால் அதே எஜமானன் திரும்பவும் வந்தால் அப்படியே செய்து விடுகிறான். மற்றும் சிப்பந்திகள் தங்கள் கடைமையை நிர்தாட்சண் ணியமாய் ஒருநிலையாய் செலுத்துவதானால் எஜமானாய் இருப்பவன் பொது ஜனங்களின் சாடியைக் கேட்டுக்கொண்டு கொடுமைப் படுத்தி விடுகிறான்.

ஆதலால் சிப்பந்திகள் சமயத்துக்குத் தகுந்தபடி நடந்து தங்கள் பணத்தை பெருக்கிக் கொள்வதிலேயே கருத்துள்ளவர்களாகிவிடுகிறார்கள்.

ஸ்தல ஸ்தாபனங்கள் நகர பரிபாலன சபைகள் ஒழுங்குபட வேண்டு மானால் சிப்பந்திகள் எல்லாம் சர்க்கார் சிப்பந்திகள் ஆகவேண்டும். சிப்பந்தி கள் விஷயத்தில் நகரபரிபாலன சபைத் தலைவர்களுக்கு சிறிதும் அதிகாரம் இருக்கக்கூடாது. இதுபோல் இத்துறையிலும் பல மாறுதல்கள் ஏற்பட வேண்டியிருக்கிறபடியால் பொதுவில் இன்றைய நிலையில் ஸ்தல ஸ்தாப னங்களை எடுத்துவிட்டு, சர்க்கார் மேல்பார்வையில் பொது ஜனங்களுக்கு ஜவாப்தாரித்தனமுள்ள முறையில் நடத்தப்படுவதே கூடியவரை மேலான தென்று சொல்லலாம். தோழர்களே நான் இன்று எடுத்துக்கொண்ட விஷயத்தில் சரியாய் பேசியதாக எனக்குத் திருப்திப்படவில்லை. எவ்வ ளவோ நிர்பந்தங்களுக்கிடையில் பேசியிருக்கிறேன்.

ஆனால் தோழர் கலியாணசுந்திர முதலியாருடன் வந்து உங்கள் முன்னிலையில் பேச நேர்ந்ததைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் கூட்டங்களில் கெட்ட பேர் உண்டு. அதை மாற்றிக்கொள்ள வேண்டு மென்கின்ற ஆசையே முதலியாருடன் வந்துபேசினேன். பூவுடன் சேர்ந்து நாறும் மணம்பெற்றது என்பது போல் அவரோடுவந்து பேசியதில் நான் சரியாய் என் அபிப்பிராயங்கள் முழுவதும் சொல்ல முடியவில்லை. ஆனாலும் ஒரு அளவுக்கு எனக்கு மிகவும் சந்தோஷமே. இவ்வளவு நேரம் நீங்கள் பொறுமையாய்க் கேட்டதற்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*குறிப்பு:- 10.12.1933 இல் திருப்பூர் யுனிவர்சல் எலக்ட்ரிக் திரையரங்கில் நடைபெற்ற திருப்பூர் முனிசிபல் உத்தியோகஸ்தர் முதலாவது ஆண்டுவிழாவில் ஆற்றிய உரை.*

**புரட்சி - சொற்பொழிவு - 17.12.1933**



RangaRakes

tamilnavarasam.com

## ஆஸ்திகனா? - நாஸ்திகனா?

**- சித்திரபுத்திரன்**

**நாஸ்திகன்:-** "பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியாவை விடுதலை செய்விக்க வேண்டும்" என்று பேசுகிற, பாடுபடுகிற தேசாபிமானிகள், தேசியவாதிகள், தேச பக்தர்கள் ஆகியவர்கள் ஆஸ்திகர்களா? நாஸ்திகர்களா?

**ஆஸ்திகன்:-** ஆஸ்திகர் என்றால் என்ன?

**நா:-** சர்வ சக்தியும் சர்வ வியாபகமும் உள்ள சர்வேஸ்வரன் ஒருவன் உண்டு. உலகம் முழுமையும் உண்டாக்கி ஆண்டு வருகிறான். அவ(னது சித்தம்) னன்றி ஒரு அணுவும் அசையாது என்கின்ற முடிவை உடையவர்கள்.

**ஆ:-** நாஸ்திகர் என்றால் என்ன?

**நா:-** மேற்கண்ட முடிவை ஒப்புக் கொள்ளாதவர்கள். ஆகவே "பிரிட்டிஷ் ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டும்" என்ற தேச பக்தர்கள் முதலியவர்கள் ஆஸ்திகர்களா? நாஸ்திகர்களா?

**ஆ:-** பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிக்க வேண்டும் என்கின்றவர்களுக்கும் ஆஸ்திக நாஸ்திகத்துக்கும் என்ன சம்பந்தம்?

**நா:-** சர்வ சக்தி, சர்வ வியாபகம், சர்வஞ்ஞத்துவம் உள்ள கடவுளின் திருச்சித்தமில்லாமல் இந்தியாவுக்கு பிரிட்டிஷ் ஆதிக்கம் வந்திருக்க முடியுமா?

**ஆ:-** ஒரு நாளும் வந்திருக்க முடியாது.

**நா:-** அப்படிப்பட்ட கடவுளுக்கு பிரிட்டிஷ் ஆதிக்கம், இந்தியாவுக்கு மிக மிக இன்றியமையாத அவசியம் என்ற முடிவேற்படாமல் திருச்சித்தம் ஏற்பட்டிருக்குமா?



**ஆ:-** ஏற்பட்டிருக்காது.

**நா:-** அப்படியானால் சர்வ சக்தி, சர்வ வியாபகம், சர்வஞ்ஞத்துவம் உள்ள ஒரு கடவுளுடைய முடிவுக்கும் திருச்சித்தத்திற்கும் விரோதமாக இந்தியாவில் இருந்து பிரிட்டிஷாரின் ஆதிக்கம் ஒழிந்துவிட வேண்டுமென்று கருதுவதும் முயற்சிப்பதும் கடவுளுடைய சர்வசக்தி........... முதலியவைகளை நம்பாமலா அல்லது கடவுளின் அப்படிப்பட்ட சக்திகளுடன் எதிர்த்து போட்டிபோட்டுப் பார்க்கவா?

**ஆ:-** கடவுளின் சர்வ சக்தியை நன்றாய் அறிந்து தினமும் கடவுளிடம் பேசும் மகாத்மா காந்திகூட இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிக்கவேண்டுமென்று தானே கருதுகிறார்.

**நா:-** அது வேறு சங்கதி. உம்மைக் கேட்டதற்கு நீர் பதில் சொல்லும்.

**ஆ:-** எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. காந்தியார் வரப்போகிறார். அவரைக்கேட்டு நான் பதில் சொல்லுகிறேன்.

**நா:-** உன் சங்கதியே அதாவது நீ நாஸ்திகனா? ஆஸ்திகனா? என்கின்ற சங்கதியே உனக்குத் தெரியாமல் திண்டாடுகிற நீ, சுயமரியாதைக்காரர்கள் நாஸ்திகர்கள் என்று சொல்லுவது மடத்தனமும் போக்கிரித்தனமுமான காரியமா இல்லையா? அல்லது இவ்விரண்டிலொன்றா இல்லையா? ஆதலால் இந்த சங்கதிக்கு சரியான பதில் தோழர் காந்தியிடமிருந்தோ அல்லது அவரது பாட்டனாரிடமிருந்தோ தெரிந்து வந்து எனக்குச் சொல்லுகின்ற வரையில் "சு.ம. காரர் நாஸ்திகர்" என்று எங்காவது, மூலை முடக்குகளிலாவது, சந்து பொந்துகளிலாவது பேசுவாயேயானால் உன்னைப்போல் அயோக்கியன், இழிதகமை உள்ள மனிதன் அற்பன், மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்கும் சோம்பேறிக் கூட்ட வஞ்சகன் வேறு யாரும் இல்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்.

**புரட்சி - உரையாடல் - 17.12.1933**



RangaRakes tamilnavarasam.com

# இனிப் பலிக்காது

## சர்ச்சும் கன்னியா மடமும் பணக்காரர்களும்

**- சித்திரபுத்திரன்**

ஸ்பெயின் தேசத்தில் ஏற்பட்ட புரட்சியின் பயனாய் சோம்பேரி மடங்களுக்கும் ஏமாற்றுக்கூட்டத்திற்கும் யோக்கியக் கூட்டத்திற்கும் சரியான ஆபத்துகள் வந்திருக்கின்றதை பத்திரிக்கை சேதிகளில் காணலாம். அதாவது ஸ்பெயின் தலைநகராகிய மேட்ரிட் நகரில் இருந்து கிருஸ்த்துவ கோயில்கள் என்னும் சோம்பேரி மடங்கள் இடிக்கப்பட்டும் கன்யாமாடங்கள் என்னும் ஏமாற்றுக் கூட்டத்தாரின் மடங்கள் நெருப்பு வைத்துக் கொளுத்தப்பட்டும் பணக்காரார்கள் என்னும் அயோக்கியக்கூட்டம் உயிரோடு ஒரு கட்டிடத் திற்குள் அடைந்து நெருப்பு வைத்துக்கொளுத்த ஏற்பாடு செய்யப்பட்டும் வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

கோயில்களில் கடவுள் இருப்பதாகவோ அல்லது அவைகள் கடவுள் பிரார்த்தனைக்காக ஏற்பட்டவைகளாகவோ இருக்குமானால் கன்னிகா ஸ்திரீகள் கடவுள் சேவை செய்பவர்களாகவோ அல்லது கடவுளுக்கு ஆக ஒழுக்கமுள்ளவர்களாக நடப்பவர்களாகவோ இருப்பார்களானால்-பணக்காரர்கள் தங்கள் முன் ஜன்மத்தில் செய்த நற்கருமங்களால் செல்வம் பெற்றவர்களாகவோ அல்லது கடவுளின் திருச்சித்தால் செல்வம் அடைந்தவர்களாகவோ இருப்பார்களேயானால் இவைகள் முறையே இடிபடவும் நெருப்பு வைத்து எரிக்கவும், உயிருடன் அடைந்து கொள்ளி வைத்துக் கொளுத்தவும் ஆன நிலைமை ஏன் ஏற்படுகிறது என்பது நமக்கு விளங்கவில்லை. உண்மையிலேயே கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று கூறுகின்றவர்கள் இச்செய்கையை கண்டபின் கோயில்கள் கன்யாமாடங்கள் பணக்காரர்கள் ஆகியவை உலகில் இருப்பதற்கு கடவுளுக்கு இஷ்டமில்லை. ஆதலால் அவைகள் கொளுத்தப்படுகின்றன என்று எண்ண வேண்டும். அல்லது புரட்சிகாரர்கள் கடவுளைவிட சக்தியுடையவர்கள் அதனால்தான் இவைகளை கொளுத்த நினைத்தார்கள் என்று சொல்லவேண்டும். அப்படிக் கில்லாமல் தொட்டதற்கெல்லாம் இது வேத விரோதம் இந்துமத விரோதம் என்கின்ற பூச்சாண்டிகள் இனிப்பலிக்காது.

**புரட்சி - செய்தி விளக்கக்குறிப்பு - 17.12.1933**



# ஜவார்லாலும் பொது உடமையும்

தோழர் ஜவர்லால் அவர்கள் தனது அரசியல் கொள்கையை விளக்கி பிரிட்டிஷ் ஜனங்களுக்குத் தெரியச் செய்வதற்காக ஒரு லண்டன் நிருபருக்கு எழுதிய கடிதத்தில் பொதுவுடமைக் கொள்கையைத் தான் ஆதரிப்பதாகவும், ஆனால் இப்போது ஜனங்கள் எல்லோரும் பொதுவுடமை எனக் கருதும் கொள்கையைத் தான் ஆதரிக்கவில்லை என்றும், அத்தகைய பொதுவுடமைக் கட்சியைத் தான் சேர்ந்தவரல்லவென்றும் குறிப்பிட்டிருப்பதாக ராய்ட்டர் தந்தி கிடைத்திருக்கிறதாகப் பத்திரிக்கைகளில் காணக் கிடக்கிறது. இது உண்மையானால் தோழர் ஜவார்லாலுக்கு இந்தக் குணம் காந்தியாரின் சாவகாசத்தால் ஏற்பட்ட குணம் என்றுதான் சொல்லவேண்டும். தோழர் காந்தியார் தான் இரு கூட்டத்தாரிடையும் நல்ல பிள்ளையாவதற்கு இவ்விதத் தந்திர மொழிகள் கூறி இருகட்சியாரையும் ஏமாற்றிப் பெருமை அடைவதை அனுசரித்துவருகிறார். உதாரணமாக

"வர்ணாச்சிரமதர்மம் வேண்டும். ஆனால் எனது வர்ணாச்சிரமம் வேறு" என்பார்.

"ராம ராஜ்யத்துக்காக நான் பாடுபடுகிறேன். ஆனால் எனது ராமன் வேறு" என்பார்.

"ஜாதிபாகுபாடுகள் இருக்க வேண்டும். ஆனால் ஜாதி என்பதற்கு எனது கருத்துவேறு" என்பார்.

"ராஜாக்கள், ஜமீன்தார்கள் இருக்கவேண்டும். ஆனால் அவர்கள் ஏழைகளுக்காக இருக்கவேண்டும்" என்பார்.

"பிரிட்டிஷாருக்கு இந்திய அரசியலில் சில பாதுகாப்புகள் இருக்க வேண்டும். ஆனால் அது இந்தியாவின் நன்மைக்காக இருக்க வேண்டும்" என்பார்.

"ஏழைகள், தொழிலாளர்கள் க்ஷேமமாய் இருக்கவேண்டும். ஆனால் அவர்கள் பெட்டியில் பணம் இருக்கக்கூடாது" என்பார்.



RangaRakes tamilnavarasam.com

“தீண்டாமை ஒழியவேண்டும். ஆனால் தீண்டப்படாதவர்கள் சூத்திரர் களுக்கு சமானமாய் கருதப்படவேண்டும்” என்பார்.

“தீண்டத்தகாதவர்களுக்கு கோவிலுக்குள் சமஉரிமை இருக்க வேண்டும். ஆனால் கோவிலுக்குள் சூத்திரர்கள் இருக்கும் இடத்தில் தான் அவர்கள் இருக்கவேண்டும்” என்பார்.

இந்தப்படி எந்த விஷயங்களிலும் “ஆனால்” போட்டுத் திருப்பி விடுவது அவரது சாமர்த்தியம் என்பதை தோழர் காந்தியாரை ஒரு மனிதர் என்று கருதியிருக்கும் யாவரும் அறிவார்கள்.

அதுபோலவே தோழர் ஜவார்லால் அவர்களும் “ஆனால்” போட வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டது மிக்கப் பரிதபிக்கத் தக்கதாகயிருப் பதுடன் நமக்கு ஒருபெரும் ஏமாற்றத்தைத் தரத்தக்கதாகவும் இருக்கிறது.

தோழர் ஜவார்லால் அவர்கள் இதற்கு முன்னும் இப்படி இரண் டொருதடவை செய்திருந்தாலும் அதாவது தனக்கு மதத்தில் நம்பிக்கை இல்லையென்று சொல்லிவிட்டு பிறகு தனது தகப்பனார் எலும்பைக் கங்கை யில் கொண்டு போய் கொட்டி தகப்பனுக்கு மோட்சத்தைத் தேடி யிருந்தாலும்.

காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை முதலில் ஆட்சேபித்துவிட்டு பிறகு அதை ஒப்புக்கொண்டு பிறகு அதை “அது ஒரு ராஜி ஒப்பந்தமல்ல. ஆனால் சண்டையில் இருகட்சியாரும் இளைப்பாறுவதற்காகச் செய்து கொண்ட மத்தியகால ஓய்வு, ஒப்பந்தம்” என்று சொல்லி யிருந்தாலும் இனி அப்படிச் செய்யமாட்டார், ஒரே உறுதியாய் இருப்பார். காந்தியாரின் தாட்சண்யத்துக்கும் கட்டுப்படமாட்டாரென்று இருந்தோம்.

இப்பொழுது அந்த நம்பிக்கை ஏமாற்றமடையத் தக்கவண்ணம் பல்டியடித்திருக்கிறார். “நான் ஒரு பொதுவுடைமைக் கொள்கைக்காரன், ஆனால் ஜனங்கள் எல்லோரும் பொதுவுடமை எனக் கருதும் பொது உடமையை நான் சேர்ந்தவனல்ல” என்று சொல்வதில் இந்திய பாமர ஜனங் களையும் வாலிபர்களையும் ஒருபுறமும், பிரிட்டிஷ் ஜனங்களையும், செல்வ வான்களையும் மற்றொருபுறமும் திருப்தி செய்யத்தக்க அம்சம்தவிர இதில் வேறு ஏதாவது சரக்கு இருக்கின்றதா என்பது நமக்கு விளங்கவில்லை.

அடிக்கடி மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளான தலைவர்களின் இவ்வித அபிப்பிராயங்களால் உண்மையும் அவசியமுமான கொள்கைகளும் அதை அமுலுக்கு கொண்டுவர முயற்சிக்கும் மக்களு டைய உழைப்பும் எவ்வளவு தூரம் பாதிக்கப்படத்தக்கதாகி விடுகின்றது என்பதை நாம் எடுத்துக்காட்டவேண்டியதில்லை. ஒரு சமயம் இவ்வித அபிப்பிராயத்தை தோழர் ஜவார்லால் அவர்கள் “தனக்கு தோன்றியதை வஞ்சனை இல்லாமல் வெளியிட்டிருக்கிறார். அதில் ஒன்றும் உள் எண்ணம் இல்லை” என்று சொல்லுவதானால் தோழர் ஜவார்லால் தனது பொது உடமைக் கொள்கைகள் என்பவை எவை? பொதுஜனங்களால் சொல்லிக் கொள்ளப் படுகின்ற பொது உடமைக்கொள்கைகள் என்பவை எவை? அவை இரண் டிற்குமுள்ள வித்தியாசங்கள் எவை? என்பவைகளை விளக்கி இருப்பாரானால் அது மிக்க அழகாய் இருந்திருக்கும். அப்படிக்கில்லாமல் இந்தியாவுக்கு வேண்டிய பொது உடமைக்குதானே தான் பாஷ்யக்காரர் என்பதாக ஆகவேண்டுமென்றோ அல்லது பொதுஉடமைக் கொள்கை களை குற்றமாக சர்க்கார் கருதுவார்களானால் “எனது பொதுஉடமைக்கு அருத்தம் வேறு” என்று சொல்லுவதற்கு இடம் இருக்கட்டும் என்றோ அல்லது வேறு என்ன காரணத்தாலோ இப்படிக் குழப்புவாரானால் அது மனித சமுகத்தின் முற்போக்கை எவ்வளவு பாதிக்கின்றது என்பதை யோசித்துப் பார்க்கும் வேலையை வாசகர்களுக்கே விட்டுவிடுகின்றோம்.

எந்தக்காலத்தில் அரசியல் என்னும் பேரால் இங்கிலீஷ் படித்த வக்கீல் கூட்டம் வியாபாரம் செய்யத் தொடங்கினார்களே அன்றுமுதல் இன்றுவரை பொது வாழ்வு இந்தப்படியாகவே பாம்புக்கு வாலும், மீனுக்கு தலையுமாக காட்டும் தோரணையில் நடந்தேவந்து தேசம் முற்போக்கடைவது கெட்டுப்போனதுடன் சுமார் 25, 30 வருஷங்களுக்கு முன் இருந்த நிலை மைக்கு பின் தள்ளப்பட்டும் போயிற்று. குறைந்த அளவு காந்தியாரின் ஆதிக்கம் இந்நாட்டில் ஏற்பட்டிருக்கவில்லையானால் இந்தியாவில் இன்றைக்கு எவ்வளவோ பெரிய கிளர்ச்சிகள் ஏற்பட்டு ஒரு பயனுள்ளதும் பொறுப்புள்ளதுமான புரட்சி ஏற்பட்டிருக்கக்கூடும் என்று உறுதியாய்க் கூறுவோம். காந்தியாரின் எண்ணம், பேச்சு, எழுத்து செய்கை எல்லாம் பிற்போக்கிற்கே ஆதரவாய் இருந்திருக்கின்றதுடன் மக்களின் எழுச்சிகள் அடங்கி, சுய அறிவும் ஒடுங்கி மக்களுக்குள் மழுங்கிக் கிடந்த மத எண்ணங் களை தலைதூக்கினதுடன் வெறுக்கப்பட்டுக் கிடந்த பழமைகளும் புத்துயிர் பெற்று விட்டன. இனி நாடு முற்போக்கடையாவிட்டாலும் காந்தி காலத்தில் ஏற்பட்ட தீங்கான பிற்போக்குகள் மாறுவதற்கு இனியும் குறைந்தது 10 வருஷத்துக்காவது பலமான முறட்டு முயர்ச்சிகள் வேண்டும் என்றே சொல்லுவோம். இந்நிலையில் தோழர் ஜவார்லால் நிலைமை இப்படியானது பற்றி எவரும் வருந்தாமலிருக்க முடியாது. நிற்க,

பொதுவுடமை என்பதுபற்றி யாரும் பயப்பட வேண்டியதில்லை. எந்த அர்த்தத்தில் பொதுவுடமையை எடுத்துக்கொண்டாலும் அதற்கு எப்படிப் பட்ட வியாக்கியானம் செய்வதாயிருந்தாலும் பலாத்காரச் செயலில் பிரவேசமில்லாமல் பலாத்காரத்தைப் பிரசாரம் செய்யாமல் பொதுவுடமைத் தத்துவம் ஏற்பட பிரசாரம் செய்வதில் முயற்சி செய்வதில் எவ்வித தப்பித மும் இல்லை என்பதே நமது அபிப்பிராயம். இதை சென்ற வருஷமே தெரி



RangaRakes tamilnavarasam.com

வித்து இருக்கிறோம். அதற்குப் பிறகு பல அரசாங்க உயர்தர நீதிஸ்தல தீர்ப்பு களும் தாராளமாய் இருக்கின்றன.

சென்ற வாரத்தில் கல்கத்தா பிரசிடெண்சி மேஜிஸ்டிரேட் தோழர் எஸ்.கே.சின்ஹா அவர்கள் ஒரு வழக்கில் ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறார். அவ்வழக்கின் எதிரியானவர் நமது சுயமரியாதை இயக்கத்திற்கு அதன் லட்சியம் என்பதாக வகுக்கப்பட்டிருக்கும் கொள்கைகள் அவ்வளவையும் அப்படியே குறிப்பிட்டு பிரசாரம் செய்து வந்திருக்கிறார். அதை மேஜிஸ் திரேட் அப்படியே எடுத்துத் தனது ஜட்ஜ்மெண்டில் குறிப்பிட்டு அந்தப்படி ஒருவன் பிரசாரம் செய்வது எவ்வித குற்றமுமாகாதென்றுகூறி எதிரியை விடுதலை செய்திருக்கிறார். அதை மற்றொரு பக்கம் காணலாம்.

அன்றியும் உலக செல்வங்களான பொருள்களும், பூமிகளும் பொது ஜனங்கள் எல்லோருக்கும் சொந்தமாக்கப்பட்டு அவற்றின் பலன்கள் எல்லோருக்கும் பொதுவாக சரிசமமாக இருக்கும்படி செய்வதையும் அதற்கு ஏற்றதொரு ஆட்சியை ஏற்படுத்தி நடத்துவதில் பொதுஜனங்கள் எல்லாருக்கும் உரிமை இருக்கும்படி செய்வதும் ஆன பொதுவுடைமைக் கொள்கையானது குற்றமானது என்பதாக இதுவரை எந்த அரசாங்கமும் கூற வில்லை. மேலும் உலகிலுள்ள எல்லா அரசாங்கங்களும் இக்கொள்கை யைப் பிரசாரம் செய்ய அந்தந்த நாடுகளில் இடம் கொடுத்தே வருகின்றன.

இவை ஒரு புறமிருக்க நாமும் நமது பகுத்தறிவைக் கொண்டு யோசிப்போம்.

உதாரணமாக, ஒரு தனிப்பட்ட மனிதன் சமூக வாழ்வில் எந்தக் காரணத்தினாலோ உயர்ந்த ஜாதியானாகப் பாவிக்கும் யோக்கியதையை அடைந்து சில தனி உரிமைகளை அடைந்து வருவதை இன்றையதினம் நாம் ஆக்ஷேபித்து அப்படிப்பட்ட ஒரு தனி உரிமை யாவருக்கும் இருக்க வேண்டும் என்றும், அது எல்லோருக்கும் சரி சமத்துவமாய் இருக்க வேண் டும் என்றும், அதன் நிருவாகம் எல்லோருக்குமே இருக்கவேண்டும் என்றும் கூறுகிறோம். இவற்றிற்கு சில சட்ட இடையூறுகள், பழக்க வழக்க இடையூறு கள் இருந்தாலும் அவைகளையும் மாற்றிப் புதிய சட்டங்களையும், புதிய பழக்கங்களையும் செய்யவேண்டுமென்கின்றோம்.

இப்படிச் சொல்வது அவ்வுயர் ஜாதிக்காரனுக்குத் துவேஷமாகவோ, அல்லது வேறு ஏதாவதொரு தப்பிதமாகவோ இருக்கின்றது என்று கருதி நாம் குற்றவாளிகளாக்கப்படுகிறோமா என்பதை யோசித்துப் பாருங்கள்.

அதுபோலவே ஒரு தனிப்பட்ட மனிதன் எந்தக் காரணத்தினாலோ ஒரு நாட்டை லட்சக்கணக்கான ஜீவன்களையும், ரூபாய்களையும் பறி கொடுத்து ஜெயித்து அரசனாகி ஏக சக்கிராதிபதியாகி அந்நாட்டின் மீது ஆதிக்கம் பெற்று வெகுகாலமாக ஆட்சி செலுத்தி பெருமையடைந்து



வருவதை இன்று நாம் ஆக்ஷேபித்து "ஒரு நாட்டை ஆளும் பொறுப்பு அந்த நாட்டு ஜனங்களாகிய எங்கள் எல்லோருக்கும் இருக்கவேண்டுமே ஒழிய சண்டையிட்டு ஜெயித்து விட்டதினாலேயே ஒரு தனிப்பட்ட மனிதன் அந்நாட்டை தனக்கு சொந்தமென்று ஆளுவது-அதிகாரம் செலுத்துவது என்பவை எங்களுக்கு இஷ்டமில்லை. ஆதலால் அதை மாற்ற நாங்கள் கிளர்ச்சி செய்வோம், புரட்சி செய்வோம், அதற்கு ஏற்ற சட்டங்கள் செய்து கொள்ளவும் முயற்சிப்போம். இதை யார் தடுத்தாலும் அத்தடுப்புக்கு நாங்கள் கட்டுப்படமாட்டோம்" என்று சொல்லுகின்றோம்.

இப்படிச் சொல்லுவது இன்று எந்த சட்டத்திற்கு உள்பட்டது? அல்லது எந்த சட்டப்படி குற்றமாகப் பாவிக்கப்படுகின்றது. இதை எந்த அரசாங்கம் துவேஷமாகக் கொள்ளுகிறது? ஏதாவது ஒரு அரசாங்கம் துவேஷமாகக் கொள்ளுகின்றது என்றாலும் அதற்காக எல்லோரும் பயந்து அக்கிளர்ச்சியை விட்டுவிடுகிறோமா?

அதுபோலவே தான் ஒரு தனி மனிதன் எந்தக் காரணத்தினாலேயோ செல்வங்கள் தன் கைக்கு வரும்படியான முறைகள் செய்து நாட்டு மக்கள் பாடுபட்டு உழைக்கும் பயன்கள் தனக்கு வந்து சேரும்படியான ஏற்பாடு செய்து அதன் மூலம் ஒருவன் பொருளும், பூமியும் சேர்த்துப் பணக் காரனாகிவிட்டால் அந்தச் செல்வத்தைப் பொது ஜனங்கள் பார்த்து "அது எங்களுடைய செல்வம், நாங்கள் பாடுபட்டதால் நீ சேர்த்துக்கொள்ள முடிந் தது. ஆதலால் எங்கள் எல்லோருக்கும் அதில் அனுபவமும் ஆதிக்கமும் இருக்க வேண்டு"மென்று சொன்னால், அல்லது அதற்கேற்ற சட்டங்கள் செய்ய வேண்டுமென்று சொன்னால் இது எந்த சட்டப்படி குற்ற மாகும்? இதை யார் எப்படி ஆக்ஷேபிக்க முடியும்? என்பது நமக்கு விளங்கவில்லை.

உலக வாழ்க்கையின் எந்தக் கொள்கையையும், எந்த திட்டங்க ளையும், எந்த அனுபவங்களையும் புரட்டி, அல்லது மாற்றி அமைத்துக் கொள்ளவும் அனுபவத்தில் கொண்டுவரவும் மனித சமூகத்திற்கு உரிமை யுண்டு என்பதை யாரும் ஆக்ஷேபிக்க முடியாது. ஆளும் மனிதனுக்கும், ஆளப்படும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தம் எப்படியோ அப்படித்தான் செல்வவான்களுக்கும், பாட்டாளிகளான ஏழை மக்களுக்கும் உள்ள சம்பந்தமாகும்.

ஒரு கொடுங்கோல் அரசன் எப்படி தனது ஆட்சிக்குப் பீரங்கியை யும், துப்பாக்கியையும், வெடிகுண்டையும், பட்டாளத்தையும் காவலாக வைத்திருக்கிறானோ அதுபோல்தான் ஒரு செல்வவான் தனது செல்வத் துக்குக் கச்சேரி யையும், சிறையையும், போலீசையும் ஆதரவாய் வைத் திருக்கிறான். ஒரு கொடுங்கோலரசை ஒழிப்பதற்கு எப்படி நாம் பீரங்கியை யும், துப்பாக்கியையும், வெடிகுண்டையும் கையாளுகின்ற மக்களைக் கூப்பிட்டு "தோழர்களே அரசர்கள் சொல்படி கேளாதீர்கள். இனி இதில்



RangaRakes tamilnavarasam.com

சம்பந்தப்படாதீர்கள். விலகி எங்களுடன் சேர்ந்துக் கொள்ளுங்கள். கடைசியில் நம் எல்லோருக்கும் பொறுப்பும் பங்கும் பெறலாம்" என்று சொல்ல வேண்டுமென்கிறோமோ அதுபோல்தான் தனிப்பட்ட மனிதனின் செல்வத் தன்மையை ஒழிப்பதற்கும் அதை பொதுவாக்குவதற்கும் அதே போன்ற வழிகளைப் பின்பற்ற வேண்டியதாகும்.

அதுபோல்தான் உயர்ந்த ஜாதி என்னும் பேரால் தனிப்பட்ட உரிமைகளை அடைந்து வருவதையும் ஒழிக்க அப்படிப்பட்ட வழிகளை பின் பற்ற வேண்டியதாகும். இவைகளை எல்லாம் எந்தக் காரணத்தை முன் னிட்டும் குற்றம் என்றோ சட்ட விரோதமான காரியம் என்றோ சொல்லிவிட முடியாது.

ஆதலால் மனிதசமூக வாழ்க்கையில் மாறுதல்களைச் செய்வதிலும் புதிய வாழ்க்கை முறைகளைப் புகுத்துவதிலும் மனித சமூகத்துக்குப் பூரண சுதந்திரம் உண்டு என்பதை ஒவ்வொருவரும் கருத்தில் இருத்தவேண்டும் என்பது நமது அபிப்பிராயம். அதற்கு இடமில்லாத மனிதசமூகத்தை சுயமரியாதை அற்ற சமூகம் என்றேதான் சொல்லவேண்டும்.

ஆனால் இப்படிப்பட்ட காரியங்களால் உயர்நிலையில் இருப்பவர்களுக்கு அதிருப்தி ஏற்படலாம். அதனால் எதிர்ப்பும் ஏற்படலாம். இவையும் இயற்கையேயாகும். அப்படிப்பட்ட அதிருப்திகள் எதுவும் நீடித்து நிற்காது. ஒரு அரைத் தலைமுறைக்குள் அவ்வதிருப்திகள் மறைந்து விடும். பிறகு உலக சுபாவமே - வாழ்க்கை முறையே இப்படித்தான் என்ற எண்ணம் எல்லோருடைய மனதிலும் ஏற்பட்டுவிடும். பிறகு அதிருப்தியோ எதிர்ப்போ ஆன காரியங்களுக்கு இடமே இருக்காது.

ஆதலால் இதற்காக யாரும் பயப்பட வேண்டியதில்லை. பின் வாங்கவும் வேண்டியதில்லை.

**புரட்சி - தலையங்கம் - 17.12.1933**



# ஏன் சுயமரியாதை இயக்கத்தில் சேரவேண்டும்?

1. அது ஒன்றேதான் மக்கள் சமூகவாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு தாழ்வும் இருக்கக்கூடாது என்று கூறி சமதர்மத்துக்கு போராடுகின்றது.

2. அது ஒன்றேதான் மனிதசமூகம் பொருளாதாரத் தன்மையில் ஒருவருக்கொருவர் பணக்காரன் ஏழை என்கின்ற வித்தியாசம் இல்லாமல் எல்லாப் பொருளும், பூமியும் எல்லோருக்கும் சரிசமமாய் இருக்க வேண்டும் என்று கூறி சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

3. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் சகல துறைகளிலும் சரிசமத்துவம் இருக்க வேண்டும் என்று கூறி சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

4. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஜாதி, மதம், வருணம், தேசம், கடவுள் ஆகிய அபிமானங்களை அறவே ஒழித்து உலக மனித சமூக நேய, ஒருமையே வேண்டும் என்று கூறி சமதர்மத்திற்குப் போராடுகின்றது.

5. அது ஒன்றேதான் உலகில் உழைப்பாளி என்றும், முதலாளி என்றும் பிரிவினையே இல்லாமல் சகல தேவைகளுக்கும், சகல மனிதர்களும் சரிசமமாகப் பாடுபட்டு அவற்றின் பயனை எல்லோரும் சரிசமமாக அனுப விக்க வேண்டும் என்று கூறி சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

6, அது ஒன்றேதான் ஒவ்வொரு மனிதனும் எவற்றிற்கும் எவ்விதத் தும் அடிமையாகாமல் அவனவன் அறிவு, ஆராய்ச்சி, உணர்ச்சி, காட்சி ஆகிய வைகளுக்கு இணங்கி நடக்க சர்வ சுதந்திரமும் இருக்க வேண்டும் என்று கூறி சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

**புரட்சி - பெட்டிச் செய்தி - 17.12.1933**



RangaRakes tamilnavarasam.com

## வடநாட்டில் சுயமரியாதை வெற்றி

மத்திய மாகாணம், பீரார் ஆகிய இருமாகாணங்களின் தொழிலாளர்கள் விவசாயிகள் கட்சி (The workers and Peasants' Party)யென்று சமதர்மத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன் காரிய நிர்வாக கமிட்டி அங்கத்தினர்களாக பிரபல தொழிற் சங்கத் தலைவர்களும், சோஷியலிஸ்ட் தலைவர்களுமாக பலர் இருக்கின்றனர். முக்கியமாக குறிப்பிடத்தக்க நாகபுரி தோழர் ஆர்.எஸ்.ராய்க்கர் எம்.ஏ., எல்.எல்.பி. அவர்களும், அம்ரோதி பி.ஜி.தேஷ்பாண்டே அவர்களும் பெரிதும் இதில் அதிக ஊக்கமெடுத்து உழைக்கின்றார்கள். நமது சுயமரியாதை லட்சியத்தின் வெற்றிக்கு இதுவும் எடுத்துக் காட்டாகும்.

**புரட்சி - செய்தி விளக்கம் - 17.12.1933**



## தமிழ் அன்பர் மகாநாடு

### அதிகாரிகள் மறுப்பு

தமிழன்பர் மகாநாடு என்ற பார்ப்பனர் சூழ்ச்சி மகாநாட்டு சார்பில் நடைபெறப் போகிற புத்தகக் காட்சியை திறந்து வைப்பதாக வெளியிட்டிருந்த கல்வி இலாக்கா தலைவர், டைரக்டர் ஆப் பப்பிளிக் இன்ஸ்ட்ரஷன் என்னும் அதிகாரியானவர் இப்போது மறுத்து விட்டதாக தெரிகிறது. ஆதலால் அவருக்கு பதிலாக இராமநாதபுரம் இராஜாவை அந்தக் காட்சியை திறந்து வைக்கக் கேட்டு அவர் ஒப்புக்கொண்டிருப்பதாக பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே மிகச்சிறு வயதுள்ளவரான ஒரு பெரியாரைத் தேடிப்பிடித்தது மிக புத்திசாலித்தனமான காரியமென்பதற்காக பாராட் டுகிறோம்.

**புரட்சி - செய்தி விளக்கம் - 17.12.1933**



RangaRakes tamilnavarasam.com

# சென்னையில் காந்தி “விஜய” அலங்கோலம்

## கடற்கரைக் கூட்டம் குழப்பத்தில் கலைந்தது
## காந்தி-சுயமரியாதைக்காரர் பேட்டி

தோழர் காந்தி சென்னைக்கு விஜயம் செய்ததானது பெரிதும் அலங்கோலத்தில் முடிந்ததாகத்தெரிகிறது. பொது ஜனங்கள் காந்தியை வரவேற்க விரும்பவில்லை என்பதை சந்தேகமற வெளிப்படுத்தி விட்டார்கள். ஆதிதிராவிடர் குடியிருக்கும் பல இடங்களிலும் கருப்புக் கொடிகளும், காந்தி பகிஷ்கார விளம்பரங்களும் காணப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

சென்ற 20 உ மாலை சென்னை கடற்கரையில் காந்தியாரை வரவேற்க கூட்டப்பட்ட கூட்டம் குழப்பத்திலும் கூக்குரலிலுமே முடிந்ததாகத் தெரிகிறது. அன்று மாலை ஏறக்குறைய நாற்பதினாயிரம் பேர் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் கூடியிருந்ததாகவும் முதலிலிருந்தே அமளி ஏற்பட்டு விட்டதாகவும் சொல்லப்படுகிறது. அந்தக் கூட்டத்தைப்பற்றி பத்திரிகைகளில் காணப்படும் விபரங்களைக் கவனித்தால் காந்தியார் சென்னையில் பட்ட அவதியை எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

“தமிழ் நாடு” பத்திரிகையில் அந்தக்கூட்டத்தைப்பற்றி காண்பபடும் விபரத்தின் சாரம் வருமாறு :- “கூட்டம் குழப்பத்திலும், பெண்கள் குழந்தைகள் துயரத்திலும் முடிந்தது. அனேக பெண்களும் குழந்தைகளும் கூட்டத்தில் மிதிபட்டும் நசுக்குண்டும் காயங்கள் அடைந்ததாகவும், அனேகர் தங்கள் பணம் துணிமணி நகைகளை தவறவிட்டதாகவும் தெரிகிறது. கூட்டத்தை சமாளித்து அமைதியை உண்டு பண்ண தொண்டர்கள் செய்த முயற்சியெல்லாம் வீணாயிற்று, தொண்டர்கள் ஜனங்களை பின்னால் பிடித்துத் தள்ளுவதும் ஜனங்கள் தொண்டர்களை பின்னால் பிடித்துத் தள்ளுவதுமாக இருந்தனர். அனேக தொண்டர்களுக்கு கூட்டத்தில் அடியும் கிடைத்தது. ஒரு தொண்டருக்கு கன்னத்தில் செருப்படியும் கிடைத்தது. தோழர் சத்தியமூர்த்தி கூட்டத்தில் அகப்பட்டுக்கொண்டு தனது தலைப்பாகை முதலியவற்றை பறிகொடுத்துவிட்டார். தொண்டர்கள் அவரைக் கூட்டத்திலிருந்து விடுவித்து அழைத்துச் சென்றனர். நிலைமை அதிக மோசாகிவிட்டது. தோழர் காந்தி அனைவரையும் அமைதியாக இருக்கக்



கேட்டும் அமைதி ஏற்படவில்லை. சிலர் கூட்டத்தில் மணலை வாரி எறிந்தனர். காந்தியார் ஐந்து நிமிட நேரம் பேசின பின் கூட்டத்தை விட்டுச் சென்று விட்டார். அதன் பின்னும் கூட்டம் கலையாமல் ஜனங்கள் மேடைப் பக்கமாக ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு வந்தார்கள்”.

ஜஸ்டிஸ் பத்திரிகை இந்தக் கூட்டத்தைப் பற்றிய செய்திகளைப் பிரசுரித்திருப்பதில் “அது வரவேற்பு கூட்டமா அல்லது பகிஷ்காரக் கூட்டமா” என்று தலைப்புக்கொடுத்திருப்பது கவனிக்கத்தக்கது. காந்தியார் பேசுகையில் போலீசார் அங்கு சேர்ந்தனர். அவர்களாலும் கூட்டத்தை சமாளிக்க முடியவில்லை. ஆகையால் கூட்டத்தை கலைத்துவிட வேண்டியதாயிற்று. காந்தியார் மிகவும் கஷ்டத்துடனே தமது மோட்டார் வண்டிக்கு போய் சேர்ந்தார் என்று ஜஸ்டிஸ் பத்திரிகை கூறுகிறது.

“காந்தியார் கூட்டத்துக்குள் போவதற்குள்ளும், வெளியே போவதற்குள்ளும் அவர் பிழைத்து வெளியேறுவாரா என்ற திகில் பலருக்கு இருந்து கொண்டே இருந்தது. பிரசங்கம் முடிந்து திரும்பும்போது அவர்கள் தடுமாறி இரண்டுதரம் தன்னுடன் வந்த நண்பர்கள் மீது சாய்ந்துவிட்டார்” என்று ஜெயபாரதி தனது தலையங்கத்திலே கூறுகிறது.

மேலும் குழப்பத்தில் முடிந்த இந்தக் கூட்டத்தைப்பற்றி தமிழ்நாடு பத்திரிகை எழுதியிருக்கிற தலையங்கத்திலே, “மகாத்மாகாந்தி ரயில் வண்டியில் வந்து இறங்கியது முதல் நடைபெற்ற சகல கூட்டங்களிலும் கஷ்டமும், கலவரமுமே அதிகமாயிருந்து வருவதை யாவரும் கவனிக்கவேண்டும்” என்று எழுதியிருப்பது கவனிக்கதக்கது.

தோழர் காந்தி தமிழ்நாட்டில் காலடி வைத்தது முதல் அவர் சென்ற இடங்களில் எல்லாம் பொதுஜனங்களிடை கூச்சலும், குழப்பமும், கஷ்டமும் கலவரமுமே ஏற்பட்டுவருகின்றன. இனிமேல் அவர் போகிற இடங்களில் ஜனங்களுக்கு என்ன துயரம் நேரிடுமோ என்ற சந்தேகம் உதயமாகின்றது.

சென்ற 22-ந்தேதி வெள்ளிக்கிழமை காலை 6-30மணிக்கு தோழர்கள் எஸ். ராமநாதன், எஸ். குருசாமி, குஞ்சிதம், கே.எம். பாலசுப்பரமணியம் அ. பொன்னம்பலம், ப. ஜீவானந்தம், சகுந்தலா, காந்தம் முதலிய பல தோழர்கள் சென்னை மைலாப்பூர் நாகேஸ்வரராவ் பந்துலு வீட்டுக்கு சென்று காந்தியாரை கண்டு பேசினார்கள். சுயமரியாதை தோழர்கள் கேட்ட கேள்விகளுக்கு காந்தியார் சரியான பதில் கொடுக்காமல் “நான் எனக்கு தெரிந்தபடி பிரசாரம் செய்கிறேன். நீங்கள் உங்கள் இஷ்டப்படி பிரசாரம் செய்யுங்கள்” என்று சொன்னதாகத் தெரிகிறது. அந்த விபரங்கள் அடுத்த வாரம் வெளிவரும்.

**புரட்சி – கட்டுரை – 24.12.1933**



RangaRakes
tamilnavarasam.com

# காந்தி பிரசாரம் பார்ப்பன சூட்சியே

காந்தி பகிஷ்காரக் கிளர்ச்சிகளைப்பற்றி குற்றமாகவும், பரிகாசமாக வும் பாமர ஜனங்களை நினைக்கச் செய்ய, பார்ப்பனப் பத்திரிக்கைகள் கட்டுப் பாடாக சூட்சி செய்கின்றன.

இதற்கு ஆதாரமாக அவைகள் எழுதிக்காட்டும் ஒரே ஆதாரம் என்னவென்றால் காந்தியை சனாதன தர்மிகளும் பகிஷ்கரிக்கிறார்கள். அரசாங்கத்தாரும் பகிஷ்கரிக்கிறார்கள். அதுபோலவேதான் சுயமரியாதைக் காரர்களும் பகிஷ்கரிக்கிறார்கள் என்று பல்லவி ஆரம்பித்து மூன்று பேரை யும் ஒன்றாக்கி இவைகள் ஏதோ சுயநலம் என்றும் வைத்து பிரமாதமான பொதுநலத்துக்கு விரோதமாய் ஏதோ பெரிய அக்கிரமம் செய்கிறார்கள் என்று படும்படியாக எழுதிவருகிறார்கள். இதுபரம்பரை வழக்கம்போல் பார்ப்பன தந்திரமே ஒழிய வேறில்லை என்பதை பார்ப்பனரை அறிந்தவர் கள் யாவரும் அறிவார்கள். ஆங்கிலோ இந்திய சர்க்கார் காந்தி விஜயத்திற்கு அனுகூலமாகச் சகல ஏற்பாடுகளும் செய்து இருக்கிறார்கள் என்பதை ஜனங்களுக்குத் தெரியாது என்று கருதி இப்படி எழுதுகின்றனபோலும். சர்க் காரார், சர்க்கார் அதிகாரிகளை மாத்திரம் அதில் கலந்துகொள்ள வேண்டா மென்று சொல்லுகின்றார்களே யொழிய ஜனங்கள் காந்தியைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று சொல்ல வில்லை. இது சர்க்காரின் தந்திரமேயாகும்.

காந்தியார் பிரிட்டிஷ் சர்க்காருக்கு இதுவரை யாதொரு கெடுதியை யும் உண்டாக்கிவிடவில்லை; உண்டாக்க நினைத்ததும் இல்லை. அன்றியும் அவர் இச் சர்க்காரை நிலைநிறுத்தப் பாடுபடுகின்றவர். அதோடு மாத்திர மல்லாமல் சர்க்காரின் ஒற்றரும் ஆவார். இதை முன் எத்தனையோ தடவை நாம் எழுதி வந்திருக்கிறோம்.

தோழர் காந்திக்கு எவ்வளவு விளம்பரம் கொடுத்து அவரை எவ் வளவு பெரிய தேசபக்தராக்க வேண்டுமோ அவ்வளவுக்கு அவரை உயர்த்தி உலக மதிப்பேற்படுத்தி வந்திருக்கிறார்கள்.

காந்தியார் இல்லாமல் இருந்திருப்பாரானால் 5, 6 வருடங்களுக்கு முன்பாகவே பாமரமக்களுக்கு ஓரளவாவது ஆதிக்கம் வர மார்க்கம் ஏற்பட்டிருக்கும். அப்படிக்கில்லாமல் முதலாளிமார்களுக்குத் தாசராய் இருந்து முதலாளிமார்கள் ஆதிக்கம் ஒருசிறிதும் குறையாமல் இருக்கத் தக்க வண்ணம் ஒப்பந்தம் பேசிக்கொண்டு அதற்குத் தகுந்தபடியே பேசியும், எழுதியும் வந்ததின்பயன் எல்லாம் சர்க்காருக்கு அனுகூலமாகி சர்க்காருக் குப் பலமும் ஏற்பட்டுவிட்டது. இந்தக் காரணங்களாலேயேதான் காந்தியாருக்குச் சர்க்கார் இவ்வளவு மதிப்பும், தனி மரியாதையும் கொடுத்து வருகிறார்கள். "தோழர் காந்தியுடன் சர்க்கார் நல்ல சமயத்தில் ராஜிசெய்து கொள்ள மறுத்து விட்டார்கள்" என்று பல தேசீயப் பத்திரிக்கைகள் சர்க்காரை குறைகூறி பிதற்றுகின்றன. அது உண்மையறியச் சக்தியற்ற தன்மையேயாகும். அல்லது ஜனங்களை ஏமாற்றச் செய்யும் சூட்சியாகும். சர்க்காருக்கு டெல்லி ஒப்பந்தம் போல் காந்தியாரிடம் ஒரு பயனற்ற ஒப்பந் தம் செய்து கொண்டு அதனால் காந்திக்கும் வெற்றி ஏற்பட்டது என்கின்ற பெயர் உண்டாவதற்கும் இடம் கொடுத்து தேச பக்தர்களையும், தேசீயப் பத்திரிக்கைகளையும் "காந்திக்கு ஜே" என்று கூப்பாடுபோட்டு "காந்தி வெற்றி பெற்றார் சர்க்கார் தோல்விய டைந்தார்" என்று சொல்லிக் கொண்டி ருக்கும்படி செய்ய சர்க்காருக்குத் தெரியாமல் போகவில்லை. ராஜிபேச ஒப்புக்கொள்வதால் காந்தியார் ஏதோ பெரிய பெரிய பிரச்சினைகளை வற் புறுத்தி சர்க்காருக்கு ஆபத்து வரும்படி யான திட்டங்களைக் கொண்டுவந்து போட்டு கஷ்டப்படுத்துவார் என்கின்ற பயம் சர்க்காருக்கு ஏற்பட்டு அத னால் ராஜியை மறுத்தார்கள் என்று புத்தி உள்ளவர்கள் சொல்லிவிட முடி யாது. ஏனெனில் பாமர மக்களின் நன்மைக் கும் சுதந்திரத்திற்கும், காந்தி கொள்கைக்கும் வெகு வித்தியாசம் உண்டு என்பது சர்க்காருக்கு நன்றாய் தெரியும். ஆனால் வேறு காரணம் என்ன என்று கேட்கலாம். அக்காரணம் என்னவென்றால் காந்தியாரிடம் பேசிச் செய்து கொள்ளும் ராஜியானது பொது ஜனங்களால் ஒப்புக்கொள்ளப்படுமா? காந்தியாருக்கு அவ்வளவு செல்வாக்கு இருக்கிறதா? காந்தியின் பிரதிநிதித்துவத்தை எல்லா ஜனங் களும் ஏற்றுக்கொள்ளுவார்களா? என்கின்ற பயமும் சந்தேகமுமேயாகும்.

ஏனெனில் காந்தி – இர்வின் ஒப்பந்தமே சந்தி சிரித்து விட்டது. அதை காந்தி ஒப்புக்கொண்டதாலேயே வாலிப உலகில் காந்தியாரின் பெருமை மிக மிகக் குறையத் தலைப்பட்டு விட்டது. தோழர்கள் ஜவகர்லால் நேருவும், போசும் மற்றும் பலரும் அப்பொழுதே ஆக்ஷேபித்து விட்டுப் பிறகு காந்தியாரின் செல்வாக்குக் குறைந்து விடுமே என்பதற்காக காந்தியாரின் தனி நலத்தை உத்தேசித்து ஒப்புக்கொண்டவர்கள் போல நடித்தார்கள். ஆதலால் அது போலவே இந்த ராஜியும் ஆகிவிடும் என்கின்ற பயத்தினாலேயே சர்க்கார் ஒரு ராஜி பேச்சு நாடகம் நடிக்க காந்தியாருக்கு இடம் கொடுக்க வில்லையே தவிர வேறில்லை.

அதுபோலவே தான் வருணாச்சிரம சனாதன தர்மிகளும் காந்தியார் வார்த்தையைத் தாழ்த்தப்பட்ட மக்களும் பிற்பட்ட மக்களும் ஒப்புக்



RangaRakes tamilnavarasam.com

கொள்ள வேண்டும் என்பதற்காக பல தந்திரங்கள் செய்வதில் காந்தியாரை எதிர்ப்ப தாகவோ, பகிஷ்கரிப்பதாகவோ வேஷம் போடுவதும் ஒன்றாகுமே தவிர வேறில்லை. இதன் உண்மையை அறியவேண்டுமானால் 18-12-33ந்தேதி "சுதேசமித்திரன்" 3-வது பக்கம் 4-வது கலம் "காந்தியாரின் சென்னை விஜயம்" என்ற தலைப்பில் காந்தி விஜய நிகழ்ச்சிக் குறிப்பு விவரத்தில் காந்தி யாரை சனாதனப் பிரமுகர்கள் அழைத்திருப்பதையும் காந்தியார் ஒப்புக் கொண்டால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதை யும் பற்றிய ஒரு அறிக்கை இருப்பதையும் காணலாம். ஆனால் இந்த அறிக்கைக்கு "காந்திஜீக்கு அறைகூவல்" என்ற தலைப்பெயர் கொடுத் திருப்பது மாத்திரம் பார்ப்பன சூழ்ச்சியாகும். ஏனெனில் மற்றவர்கள் இந்த ரகசியத்தை அறிந்து விடுவார்கள் என்ற பயத்தினாலேயாகும். இவ்வறிக்கை யில் பல சனாதன பிரமுகர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்பதோடு ஒரு சங்கராச்சாரி யாரும் விஜயம் செய்வார்என்றும் கண்டிருக்கிறது.

ஆகவே இந்த சூழ்ச்சிகள் எல்லாம் யாரை ஏமாற்றுவதற்கு என்பதை யாரும் சுலபமாய் உணரலாம்.

மேலும் காந்தி நிதிக்குப் பணம் கொடுத் திருப்பவர்களையும், காந்தி விஜயத்தை நடத்தி நிர்வாகம் செய்கின்றவர் களையும் யார் என்று பார்த்தால் இவை பார்ப்பன ஏற்பாடா? இல்லையா? என்றும் தெரிந்து கொள்ளலாம். இதை பற்றிமுன் ஒரு தடவையும் எழுதியிருந்தோம். ஆனாலும் மற்றொரு தரமும் ஞாபகப்படுத்துகிறோம்.

நிற்க, காந்தி பண்டுக்கு சனாதன தர்மிகள் பலர் பணம் கொடுத்து இருக்கிறார்கள். கோவிலுக்குள் தீண்டப்படாதவர்களை விட சம்மதிக்காத வர்கள் பணம் கொடுத்திருக்கிறார்கள். வருணாச்சிரம தர்மிகள் பணம் கொடுத்தி ருக்கிறார்கள்.

ஆனால் தீண்டப்படாதவர்கள் என்பவர்கள் பெரும்பாலும் பகிஷ்கரிக் கிறார்கள். காந்தியாரைத் தங்களுக்காக ஒன்றும் பேசவேண்டாம் என்கிறார்கள். பார்ப்பனரல்லாதாரில் பெரும்பான்மையோர் சிறப்பாக பாமர மக்களும் பகிஷ்கரிக்கிறார்கள். இதற்கெல்லாம் அர்த்தம் என்ன என்று கேட்கின்றோம். இவைகள் ஒரு புறமிருக்கட்டும்.

இன்னும் இப்பார்ப்பனப் பத்திரிக்கைகாரர்களை ஒன்று கேட்கின் றோம். இவர்கள் சூழ்ச்சியில்லாதவர்களாகவும், பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்தப்பாடுபடும் வஞ்சகர்களல்லாதவர்களாகவும், உண்மையை மறைத்துப் பொய்யை உண்மையாய்க் காட்டும் இயல்பு இல்லாதவர்களா கவும், நாணய மான பொது நோக்குடையவர்களாகவும் இருப்பார்களானால் இப்போதாவது இது சம்மந்தமான நமது கேள்விகளுக்கு பதில் சொல்லி விட்டு காந்தி பகிஷ்காரத்தைக் கண்டிக்கட்டும், நமக்கு ஆக்ஷேபணை யில்லை.



அக்கேள்விகளாவன:-

காந்தியார் வருணாச்சிரம வாதியா அல்லவா?

அவர் வருணாச்சிரமப் பிரசாரம் செய்கிறாரா இல்லையா ?

காந்தியார் "பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்று நான்கு முக்கிய பிரிவு இருக்கவேண்டும்" என்று சொல்வதுடன்,

"சூத்திரன், முதல் மூன்று வருணத்தாருக்கும் கீழாகவும், அவர் களுக்குத் தொழில் செய்பவனாகவும் இருக்கவேண்டும்" என்று சொல்லு கிறாரா இல்லையா?

"பிராமணன், பின் மூன்று வருணத்தாருக்கும் மேலானவன், மேலான தொழிலையே செய்யவேண்டியவன்" என்று தொழில் முறைகளையும் பிரித்துக் காட்டி இருக்கிறாரா இல்லையா?

பிறவியில் ஜாதிப் பாகுபாடுகள் இருக்க வேண்டும்" என்று சொல்லு கின்றாரா இல்லையா?

தீண்டப்படாதவர்களுக்குத் தோல் பதனிடும் துர்நாற்றம் நிறைந்த வேலை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறாரா இல்லையா?

"சூத்திரர்கள் தொழிலாளிகள் பணம் சேர்க்கக் கூடாது" என்று சொல்லுகிறாரா இல்லையா?

வருண பேதம் நிறைந்ததும் ஜாதிக் கொடுமைகள் உள்ளதுமான புராணங்களை, ஆட்சிகளைப் புத்துயிரளித்து நிலை நிறுத்தப்பாடுபடுகிறாரா இல்லையா?

"தீண்டாதவர்களைச் சூத்திரர்களுடன் சேர்க்க வேண்டும்" என்று சொல்லுகிறாரா இல்லையா?

இவைகளில் ஏதாவது வர்ணாச்சிரம தர்மத்துக்கோ, சனாதன தர்மத்துக்கோ, பார்ப்பனீயத்துக்கோ விரோதமென்று சொல்ல முடியுமா? என்பனவாகியவைகளை தங்கள் பத்திரிகைகளில் எடுத்துப்போட்டு அதற்கு நேர் நேராகப் பதில் எழுதி பகிஷ்காரக்காரர்களைக் கண்டித்தால் அது மனிதத் தன்மையையும், வீரமும் ஆண்மையும் பொருந்திய காரியமாகும். அப்படிக்கில்லாமல் அயோக்கியத்தனமாய், இழிதன்மையாய், சூட்சியாய், பித்தலாட்டமாய் பாமர ஜனங்களை ஏய்க்கக் கருதி விஷமப் பிரசாரம் செய்வது என்பது மிக மிகக் கேவலமானது என்பதோடு இத்தகைய பிரசாரத்தை எதிர்த்து அடக்கவேண்டியது மனிதத் தன்மையுள்ளவர்களின் கடமையாகும். மற்றொரு விஷயமும் நாம் எடுத்துக்காட்டாமல் இருக்க முடியவில்லை.



RangaRakes tamilnavarasam.com

அதாவது பார்ப்பனரல்லாதாரில் சிலர் இக்கூட்டத்தாருடன் கலந்து கொண்டிருப்பதால் பார்ப்பனர்கள் ஆணவமாய் "இந்தப் பகிஷ்காரம் வெற்றி பெறப்போவதில்லை. .இதனால் வரவேற்பு அதிகப்படும்" என்று கூற இடமேற்படுகின்றது. இந்த ஆணவம் பார்ப்பனருக்கு இன்று நேற்றல்ல, வெகுகாலமாக இருந்துவருவது நமக்குத் தெரியும். உதாரணமாக தர்மபுரியில் டாக்டர்.பி.வரதராஜுலு அவர்கள் தலைமையில் 1922-ல் கூடிய தாலூக்கா கான்பரன்சில் பார்ப்பன சூட்சியைப்பற்றி தலைமை உரையில் நாயுடு அவர்கள் மிக வன்மையாய் கண்டித்துப்பேசி சுயமரியாதை உள்ள பார்ப்பனரல்லாதார் பார்ப்பனருடன் இனி ஒத்து தேச சேவை செய்ய முடியாது என்று சொன்னதோடு பார்ப்பனர்களின் தேச சேவை என்பதெல்லாம் பார்ப்பன சமூக ஆதிக்கத்திற்கேற்ற சுயநல சேவையே ஒழிய வேறில்லை என்று இதை நம்பிப் பார்ப்பனரல்லாதார் சிலர் ஏமாந்துவருகிறார்கள் என்றும் சொன்னார். அதற்குத் தோழர் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஒரே பதில்தான் சொன்னார்கள். அதாவது,

புத்தர் தொல்லை, முஹம்மதியர் ஆட்சிகாலத் தொல்லை முதலிய எத்தனையோ தொல்லைகளைச் சமாளித்துவந்த பார்ப்பனர்கள் இதற்கெல்லாமா பயந்துவிடப்போகிறார்கள். பார்ப்பனருக்கு விரோதமாக இதுவரையும் ஒரு காரியமும் எவரும் சாதித்துக் கொள்ளமுடியவில்லை. ஆதலால் நீங்களும் சொல்லிவிட்டுப்போங்கள் என்று சொன்னார்.

அதுபோலவே 1922-ல் திருப்பூரில் தோழர் வாசுதேவய்யரவர்கள் தலைமையில் நடந்த மாகாண மகாநாட்டின்போது கோயில் பிரவேசத் தீர்மானத்தைப்பற்றித் தோழர் ஈ.வெ.ராமசாமி பேசிய சந்தர்ப்பத்தில் ஜாதிக் கொடுமையுள்ள இராமாயணத்தை சுட்டுப்பொசுக்கவேண்டும் என்று சொன்ன சமயம் தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் இது ஒன்றும் ஆகக் கூடிய காரியம் அல்லவென்றும் வீணாய்ப் பெயரைக்கெடுத்துக்கொள்வதை விட வேறு பயன்கிடைக்கப் போவதில்லை என்றும் சொன்னதோடு அன்று இரவு நடந்த மாகாணக் காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி தேர்தலில் தோழர் ஈ.வெ.ராமசாமி யுடன் தோழர் டி. ஆதிநாராயண செட்டியார் போட்டி போட்டதில் தோழர் ஆதிநாராயண செட்டியாருக்கு 23 ஓட்டுகளும் தோழர் ராமசாமிக்கு 94 ஓட்டுகளும் கிடைத்தபொழுது தோழர் ராஜகோபாலாச்சாரியார் தோழர் ராமசாமியைப் பார்த்து "நீங்கள் இராமாயணத்தின்மீது பாயாதிருந்திருந்தால் உங்களுக்கு இன்னும் ஒரு 10,15 ஓட்டுகள் கிடைத்திருக்கலாம்" என்றும் பாராட்டிப் பேசினார்.

இந்த விபரங்கள் 1926-27 "குடி அரசு" மலர்களில் காணலாம்.

ஆதலால் பார்ப்பனர்களுக்கு இப்போது இருக்கும் அகங்காரம் எல்லாம் "இது ஜெயிக்காது" இதைப்போல் எத்தனையோ பெயரைப் பார்த்தாய்விட்டது" என்கிற அகம்பாவமே ஆகும்.



பார்ப்பனர்களுக்கு எதுவரையில் இந்த அகங்காரமும், ஆணவமும் இருக்கும் என்று பார்ப்போமேயானால் பார்ப்பனரல்லாத சமூகத்துக்குப் பெரும்பான்மை மக்களுக்கு மனிதத் தன்மையும், சுயமரியாதை உணர்ச்சியும் வரும்வரை இப்படித்தான் பேசுவார்கள். ஆனாலும் ஒரு அளவுக்குப் பார்ப்பனரல்லாதார் வெற்றிபெற்றுவிட்டார்கள் என்பதை ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும். அதற்கு ஒரு உதாரணம் வேண்டுமானால் ஒரு காரியத்தில் பார்க்கலாம். அதாவது இன்று காந்தியாரைப்போல் எந்த ஒரு பார்ப்பனரையாவது அல்லது எந்த ஒரு சங்கராச்சாரியாரையாவது பொதுக்கூட்டம் போட்டு வீதியில் நின்று காந்தியார் சொல்வது போல் "பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்கின்ற நான்கு வருணம் இருக்கவேண்டும். சூத்திரன் முதல் மூன்று வருணத்தாருக்கு சேவை செய்யவேண்டும். ராமராஜ்யம் வேண்டும், சூத்திரர்களும், தீண்டாதவர்களும் தான் ஒன்றாக வேண்டும், மற்ற வருணத்தாருடன் அவர்கள் கலக்கக் கூடாது" என்பது போன்ற வார்த்தைகளைச் சொல்லிவிட்டுத் தப்பித்துக்கொள்ள முடியுமா? என்று பார்த்தால் அப்போது தெரியும் பார்ப்பனரல்லாதார் வெற்றிக்கு உள்ள பலமும் காந்தி கொள்கைக்கு உள்ள பலமும் என்று சொல்லுவோம்.

எனவே விபீஷணனை ஆழ்வாராக்கி ராஜ்ய பட்டம் கொடுத்து ராவணனைக் கொன்றதாக உள்ள கதையைப்போல் ஏதோ ஒரு வக்கீல் ஆசாமியைப் பிடித்து அவரை மகாத்மாவாக்கி அவருக்கு இந்திய ஜனப் பிரதிநிதித்துவம் என்பதில் சர்வாதிகாரியாக்கி பார்ப்பனரல்லாத சமூக சுயமரியாதைப் புனருத்தாரணத்தைக் கொல்லச் செய்யும் சூழ்ச்சியின் தன்மையைப் பிறர் அறிந்து கொண்டார்களே என்று வெட்கப்படாமல் பகிஷ்காரம் ஜெயிக்காது என்று வீரம் பேசுவதில் எவ்வளவு வெட்கங்கெட்ட தனமும், சொரணையற்ற ஆணவமும் இருக்கின்றது என்று யோசித்தும் பார்க்க விரும்புகிறோம்.

காந்தியாருக்குச் சில முனிசிபாலிட்டிகள் வரவேற்புக் கொடுக்கின்றனவாம். முனிசிபாலிட்டி, தாலூகா, ஜில்லா போர்டுகள் யோக்கியதை நாம் அறியாததல்ல.

சங்கராச்சாரிக்கு வரவேற்புக்கொடுத்த முனிசிபாலிட்டி அவரது தாசருக்கு வரவேற்புக் கொடுப்பதில் அதிசயம் கண்டுபிடிக்க வேண்டியதேயில்லை. சங்கராச்சாரி சேவையைவிட, பார்ப்பனருக்கு காந்தியார் சேவை குறைந்ததல்ல. ஆதலால் பார்ப்பன ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்ட- பயந்த முனிசிபாலிட்டிகளும், போர்டுகளும் வரவேற்பு அளிக்கத்தான் செய்கின்றன. எப்படியாவது முனிசிபாலிட்டிகளிலும், போர்டுகளிலும் தங்களுக்குப் பெருமையும், சுயநலமும் இருக்க வழிவேண்டும் என்கின்ற ஒரு நோக்கத்தைத்தவிர வேறு நோக்கம் கொண்டவர்களுக்கு இடமில்லாமலே அவை அமைக்கப்பட்டிருக்கின்றன.



RangaRakes
tamilnavarasam.com

வைசிராயுக்கும், கவர்னர்களுக்கும், மந்திரிகளுக்கும் வரவேற்பு ஒரு புறமும், "அப்பதவிகளை ஒழிக்கவேண்டுமென்னும் தேசபக்தர்களுக்கு" ஒரு புறமும், சனாதனதர்மிகளுக்கும் சங்கராச்சாரிக்கும் ஒரு புறமும், "சீர் திருத்தவாதிகளுக்கு" ஒரு புறமும், இவர்கள் இத்தனை பேர்களது கொள்கை களையும் ஒழிக்கவேண்டும் என்கின்றதான சுயமரியாதைக் காரர்களுக்கு ஒரு புறமும் வரவேற்பளித்து தங்கள் நிலையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியத்திலிருப்பவர்கள். ஏனென்றால் ஸ்தல ஸ்தாபனங்களில் பார்ப்பனீயமும், பணக்காரத்தன்மையுமே கொண்டவர்கள் தான் 100க்கு 90 பேர்கள் இருக்கிறார்கள். ஆதலால் இவ்வரவேற்புகளால் காந்தியாருக்கு பெருமையும் வெற்றியும் ஏற்பட்டு விட்டதாகச் சொல்லுவதெல்லாம் வெறும் வெளிமயக்கேயன்றி வேறல்ல.

ஆதலால் காந்தி பகிஷ்காரத்தைக் கண்டிப்பவர்கள் யோக்கியமும் நேர்மையும் உள்ளவர்களாகவும், சூக்ஷியும் இழி தன்மையும் இல்லாதவர் களாகவும் இருந்தால் நாம் எந்த எந்தக் காரணத்தைக் காட்டி பகிஷ்கரிக்க வேண்டும் என்று சொல்லுகின்றோமோ அந்தக் காரணங்களை எடுத்துக்கூறி அவைகள் தப்பு என்பதாகக் காட்டிய பிறகு கண்டிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

**புரட்சி - தலையங்கம் - 24.12.1933**



ரிஜிஸ்டர் நெ. M. 2992.

# புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:— ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மலர் 1. | ஈரோடு, ஸ்ரீமுக-ஆம் மார்கழி-மீ 17-உ (31—12—1933) | மலர் 6.

காந்தியத்தை ஒழிப்பது வர்ணாச்சிரமத்தை ஒழிப்பதாகும்.

காந்தியார் பணக்காரத் தரகர்.

காந்தியார் பார்ப்பனரின் கையாள்.

ஏன் சுயமரியாதை இயக்கத்தில்

## சேரவேண்டும்?

1. அது ஒன்றேதான் மக்கள் சமூகவாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு தாழ்வும் இருக்கக்கூடாது என்ற சமதர்மத்துக்கு போராடுகின்றது.

2. அது ஒன்றேதான் மனிதசமூகம் பொருளாதாரத்தன்மையில் ஒருவருக்கொருவர் பணக்காரன் ஏழை என்கின்ற வித்தியாசம் இல்லாமல் எல்லாப் பொருளும், பூமியும் எல்லோருக்கும் சரிசமமாய் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

3. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் சகல அமைப்புகளிலும் சரிசமத்துவம் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

4. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஜாதி, மதம், வகுப்பு, தேசம், கடவுள் ஆகிய அபிமானங்களை அறவே ஒழித்து உலக மனித சமூக தோழமை வேண்டும் என்ற சமதர்மத்திற்குப் போராடுகின்றது.

5. அது ஒன்றேதான் உலகில் உழைப்பாளி, முதலாளி என்பது போன்ற பிரிவினையே இல்லாமல் சகல தேவைகளுக்கும், சகல மனிதர்களும் சரிசமமாய் பாடுபட்டு அவற்றின் பயனை எல்லோரும் சரிசமமாக அநுபவிக்க வேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

6. அது ஒன்றேதான் ஒவ்வொரு மனிதனும் எவற்றிற்கும் எவ்விதத்திலும் அடிமையாகாமல் அவனவன் அறிவு, ஆராய்ச்சி, அநுபவம் ஆகியவைகளுக்கு இணங்கி நடக்க சர்வ சுதந்திரம் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப்போராடுகின்றது.

"ஹரிஜன" சேவை வர்ணாச்சிரமத்தின் வேறு வேஷம்.

கதர் பொருளாதார புரட்சிக்கு முட்டுக்கட்டை.





RangaRakes tamilnavarasam.com

# தமிழன்பர் மகாநாடு

**-ஈ.வெ.கி**

சென்னையில் இம்மாதம் 23, 24 களில் கூடிய தமிழன்பர் மகாநாடு ஒரு சுயநலக் கூட்டத்தார்களால் கூட்டப்பட்டு அதன் பலன்களை அச்சுய நலக் கூட்டத்தவர்களுக்கே பயன்படுமாறு உபயோகப்படும்படியான முறையில் கடத்தப்போவதாக நம் புரட்சியில் பல கட்டுரைகளும், தலையங்கமும் எழுதப்பட்டன. அதைக் கண்டிப்பாய் பகிஷ்கரிக்கும்படி இரண்டு ஜில்லா மகாநாடுகளும், பல சங்கங்களும் தீர்மானங்கள் நிறைவேற்றி பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

தென்னாட்டில் தமிழ் கற்று அதில் பாண்டித்யம் பெற்று அன்பு பூண்டிருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் மலித்திருக்க, தமிழென்றால் வேப்பங்காயெனக் கருதும் சில ஆரியப்பார்ப்பனர்கள் பெருக்காக தங்களுக்கு இசைந்த இரண்டொரு தமிழர்களையும், இரண்டொரு மகம்மதியர்களையும், கிறிஸ்தவர்களையும் சேர்த்துக்கொண்டு தமிழர் மகாநாடு என்று போடாது தமிழன்பர் மகாநாடு என்று ஓர் மகாநாட்டைக் கூட்ட ஆரம்பித்ததே இம்மகாநாட்டைக் கூட்டியவர்களின் சூழ்ச்சியை விளக்கப் போதிய சான்றாகும்.

அடுத்தபடியாக அதன் நடவடிக்கைகளில் அங்கம் பெற்றவர்களாகிய புத்தகாலய பிரசார சங்கத்தலைவர், வரவேற்புக்கழகத் தலைவர் முதலியோர்களின் யோக்கியதைகளைப் பற்றிக் கவனித்தால் அதன் உட்கருத்து விளங்காமற் போகாது. அதாவது தோழர் கே.வி.கிருஷ்ணசாமி ஐயர் என்பவர் தமது ஜீவனமாகிய வக்கீல் தொழிலில் இன்றையத் தினத்தில் கோர்ட்டுகளில் எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே நடத்தப்பட வேண்டும் என்பதாக ஏற்பட்டு விட்டால் இவருக்குள்ள தமிழின் அன்பு அப்பொழுதே விளங்கிவிடும். அடுத்தபடியாக "மகாமகோபாத்யாயர்" பட்டம் பெற்றவரைக் கவனித்தால் தமிழ் மக்களும் ஆரியமக்களும் அவரிடம் ஒரு பதவியை எதிர்பார்க்கிற காலத்தில் அவரது தமிழன்பு, வடமொழியன்பு, தமிழரன்பு ஆசியரன்பு என்பது எத்தகையதென விளங்கும்? மகாநாட்டுத் திறப்பாளர் விஷயத்தில் அவரால் ஏற்படுத்தப்பட்ட கல்லூரியில் பார்ப்பன ஆதிக்கத்திற்கோ, தாக்ஷண்யத் திற்கோ, பயத்திற்கோ உள்பட்டதாகக் காணப்படும் தமிழ் பாஷைக்கும், தமிழர்களுக்கும் ஏற்படுத்தி நடத்தப்பட்டு வரும் முறையே போதுமான அத்தாக்ஷியாகும்.

அடுத்தபடியாகத் தலைவரவர்களைப்பற்றி அவருக்கு ஏற்பட்டிருக்கும் கல்வி உத்தியோகத்தில் முதன்மையான உத்தியோகம் அமையப்பெற்றிருந்தும் அக்கல்வி இலாக்காவில் தமிழுக்கு எவ்வளவு ஆதிக்யம் வழங்கப் பெற்றிருக்கிறதென்பதை யோசித்தால் தானே விளங்கிவிடும். மகாநாட்டுத் தலைமைப் பதவியில் தீர்மான காலங்களில் ஒன்றில் நடந்து கொண்ட மாதிரியும் மனப்பான்மையையும், நடுநிலைமைக்கும் போதுமான காரணங்களாகும்.

தவிர இம் மகாநாடானது ஒற்றுமையைக் கொண்டதும், நல்லெண்ணத்தின் முதிற்சியைக் கொண்டதாகவும் ஏற்படுத்தவில்லை என்பதற்கு அறிகுறியாகிய போலீஸ் பந்தோபஸ்தை விரும்பி ஒரு போலீஸ் கமிஷனர், 2 சப் இன்ஸ்பெக்டர், ஒரு சார்ஜெண்டு, 12 கான்ஸ்டேபிள்கள் அடங்கிய ஒரு போலீஸ் கச்சேரியாக மகாநாட்டை ஆக்குவித்து அதில் வந்தவர்களினுடைய கையெழுத்துகளை வெள்ளைக்காகிதமாகிய முச்சலிக்கையில் கையெழுத்து வாங்கிய பிறகே மகாநாட்டை ஆரம்பிக்கப்பட்டதெனின் அதற்கிருக்கும் யோக்கியதையும், மனப்பான்மையும், நல்லெண்ணமும், நம்பிக்கையும் எத்தன்மை வாய்ந்த தென்பது கவனித்தவர்களுக்கே புலப்படும்.

தவிர தமிழ் எழுத்துக்களைப் புதுப்பித்து சீர்ப்படுத்தவேண்டிய தீர்மானத்துக்கு அநுசரணையாக ஏற்படுத்திய கமிட்டியை ஏற்படுத்தும் போது ஷ கமிட்டிக்கு ஒரு பெண்மணியையாவது அங்கத்தினராக தேர்ந்தெடுக்காதது பெண்ணுலகத்திற்கே கல்வி விஷயத்தில் பொறுப்பேற்று நடத்தும் அறிவும், ஆசையும், ஆற்றலும், இல்லை எனப் பகிரங்கப்படுத்தி அவமானத்தை உண்டாக்கும் தீர்மானமாகுமென்றே கருத இடமேற்படுகிறது. திறப்பாளர் ராஜா சர். அண்ணாமலையார் தமது திறப்பு விழாவாற்று முறையில் ஆற்றிய சொற்பொழிவில் "தமிழன்பர்களே அறிவு அனைவருக்கும் பொது அது ஒருவருக்கே உறியதன்று, அதனை ஆடவரும் பெற வேண்டும், மகளிரும்பெறவேண்டும், ஏழையும் பெறவேண்டும் தனிகரும் பெற வேண்டும்" என்று கூறிஇருப்பதற்கும் மேல்கண்ட கமிட்டியில் பெண் மணிகளில் ஒருவரையாவது சேர்க்காதிருப்பதற்கும் சம்பந்தம் எப்படி இருக்கிறதென்பது நமக்கு விளங்கவில்லை. ஒவ்வொரு தமிழனும் இன்னும் பள்ளியில் ஔவைப்பிராட்டியின் நீதிமொழிகளைக் கற்று அதன்படி நடக்கிற வனைத் தான் பண்டிதனென்றும், பெரியோர் என்றும் பெயர் பெற்று விளங்குவதையும் நாம் பார்க்கலாம். அப்படி இருக்க போர் வீரர்களாகவும், நீதிபதிகளாகவும், வழக்கறிஞர்களாகவும், தபாலாபிசர்களாகவும், கல்வியதி





RangaRakes tamilnavarasam.com

காரிகளாகவும் உத்தியோகங்களில் பெண்மக்களைச் சேர்த்து நடத்தி வருகிற இக்காலத்திலும் கூட நாம் நமது பெண்மக்களுக்காக கல்வி சம்பந்தமாகக்கூட ஒரு ஆதிக்கம் தருவதற்கு முற்பட விரும்பவில்லையானால் அது மிகமிக பிற்போக்கான காரியமென்றே சொல்லுவோம். ஏனெனில் இந்த தமிழன்பர் மகாநாட்டில் சுமார் 1-15 பண்டிதைகளான பெண் மணிகள் விஜயமாகியிருந்தும், அவர்களில் பெரும்பான்மையோர் பெரிய பெரிய மகாநாட்டுக் கூட்டங்களில் பேசும் திறமையும் பத்திரிக்கைகளில் கட்டுரைகள் எழுதும் ஆற்றலும் அமைந்தவர்களாகவிருக்கும்பொழுதும் புறக்கணித்ததானது விவசாயி நிலத்தைப் பண்படுத்தாது வித்தை ஆராய்வது போலும், அழகுறச் செய்து கொள்ளுபவர் தலையிருக்க உடலை அலங்கரிப்பது போன்றதென்பதே நமது கருத்து. ஆகையால் இத்தகைய மகாநாடுகள் நம் நாட்டிற்காவது, மக்களுக் காவது பயனளித்து முற்போக்கடையும் வழிகளில் உபயோகப்படும் என்கிற முறையில் நடத்தப்படவில்லை என்பது நமதபிப்பிராயம். மற்ற நடவடிக்கைகளைக் குறித்து பின் தெரிவிக்கப்படும்.

**புரட்சி - தலையங்கம் - 31.12.1933**



# கோவைச் சிறையில் தோழர் ராமசாமி

## இந்திய சட்டசபைத் தலைவரின் சந்திப்பு

## கண்ணம்மாள் ஜாமீனில் விடுதலை

26-12-33 உ அன்று 11 மணிக்கு கோயம்புத்தூர் ஜில்லா மாஜிஸ்டிரேட் தோழர் வெல்ஸ் ஐ.சி.எஸ். முன்பு தோழர் ஈ.வெ.ராமசாமி அவர்களின் சகோதரியும் குடி அரசுப் பத்திரிகையின் பிரசுதாரருமான தோழர் கண்ணம் மாளை ஜாமீனில் விடவேண்டுமென கொடுத்திருந்த மனுவின்பேரில் விவாதம் நடைபெற்றது. தோழர் கண்ணம்மாள் சென்ற வாரம் தோழர் ராமசாமியுடன் கைது செய்யப்பட்ட விவரம் நண்பர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஜாமீனில் தோழர் கண்ணம்மாளை விடவேண்டுமென்று தோழர் டி.டி. ரத்தினசபாபதி பிள்ளை இன்று கலெக்டர் முன்பு வாதிக்கையில் அக்டோபர் மாதம் 29 தேதி வெளிவந்துள்ள குடி அரசுப் பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்டுள்ள கட்டுரைக்கு தோழர் கண்ணம்மாள் நேர் ஜவாப்தாரியல்ல வென்பதாகவும் ஷை வியாசமானது வாக்குத்தாரர்களுக்குக் கூறப்பட்ட ஓர் சாதாரண போதனைதான் ஆகும் என்பதாகவும். எனவே அது ராஜ நிந்தனையாகாது என்பதாகவும், இப்போது வியாசத்தை பற்றி யோசிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் கூறியதோடு எதிரி ஒரு பெண்ணாக இருப்பதை முன்னிட்டும், தேக அசௌகரியத்துடன் இருப்பதை முன்னிட்டும், சாட்சிகள் கலைக்கப்படுவார்கள் என்று நினைப்பதற்கு இடமில்லாமல் இருப்பதை முன்னிட்டும், தோழர் கண்ணம்மாளை ஜாமீனில் விட வேண்டுமென்று பல வழக்குகளில் நடந்த மேற்கோள்களை எடுத்துக்காட்டி வாதாடினார்.

ஜாமீனில், தோழர் கண்ணம்மாளை விடுவதை, மனுவில் கண்டுள்ள காரணங்களைக் கொண்டு எதிர்ப்பதாக போலீஸ் பிராசிக்கியூட்டிங் இன்ஸ்பெக்டர் தோழர் வரதராஜுலு நாயுடு கூறினார். இது விஷயமாக யோசிக்கச் சிறிது சாவகாசம் வேண்டும் என்று கூறினாலும், தோழர் கண்ணம்மாள் நோய்வாய்ப்பட்டிருப்பது வாஸ்தவந்தான் என்பதாகவும் கூறினார்.



RangaRakes tamilnavarasam.com

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு மாஜிஸ்திரேட் தோழர் கண்ணம்மாளை ஜாமீனில் விடுதலை செய்ய உத்திரவிட்டிருப்பதாகக் கூறினார்.

தோழர் டி.டி. ஆர் பிள்ளைக்கு உதவியாக தோழர்கள் ஈரோடு வேணு கோபால், சென்னை கே.எம்.பாலசுப்பிரமணியம், கோவை நஞ்சுண்டையா முதலிய வக்கீல்கள் ஆஜரானார்கள்.

“புரட்சி” பத்திரிகை பிரசுரகர்த்தாவும் பதிப்பாளருமான தோழர் எஸ். ஆர். கண்ணம்மாளை, அவர்மீது கொண்டு வரப்பட்டிருக்கும் வழக்கு விசாரனை முடியும் வரை ஜாமீனில் விட வேண்டுமென கோவை ஜில்லா மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மனுச் செய்து கொள்ளப்பட்டது. ஜில்லா மாஜிஸ் டிரேட் அவரை ரூ.500 சொந்த ஜாமீனும், அதே துகைக்கு மற்றும் ஒரு நபர் ரூ.500 ஜாமீனும் கொடுத்தால் விடுதலை செய்யும்படி உத்திரவிட்டார்.

தோழர் கண்ணம்மாள் 26 உ ஜாமீன் கொடுத்து விடுதலையடைந்து அன்றிரவே மெயிலில் ஈரோடு வந்து சேர்ந்தார். தோழர் ஈ.வெ. ராமசாமி, எஸ்.ஆர். கண்ணம்மாள் இவர்கள் இருவர்மீதும் கொண்டு வரப்பட்டிருக்கும் வழக்கு ஜனவரி மாதம் 4 தேதி கோவை ஜில்லா மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணை வரும்.

தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்களை கோவைச் சிறையில் இந்திய சட்டசபைத் தலைவர் தோழர் சர். ஆர். கே. ஷண்முகம் பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., அவர்களும், தோழர்கள் ஈ.வி. கிருஷ்ணசாமி, எஸ். ராமசாமி, கே.எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்., வி. வேணுகோபால் பி.ஏ., பி.எல்., முதலியவர்களும் சென்று பார்த்து வந்தார்கள். 4-1-34ல் தமிழ்நாடு ஆசிரியர் தோழர் டாக்டர் பி. வரதராஜுலு அவர்கள் பார்த்து வரப்போவதாகத் தெரிய வருகிறது.

**புரட்சி - துணைத் தலையங்கம் - 31.12.1933**



# நாகரீகமென்றால் என்ன?

தோழர்களே! இனி அடுத்தபடியாக நிகழ்ச்சிக்குறிப்பில் கண்டுள்ள விஷயம். அக்கிராசனர் முடிவுரை எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் அனேக கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லுவேன் என்று எனக்கு முன்பு பேசிய நண்பர் கூறினார். நான் எப்பொழுதும் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தயாராயிருக்கிறேன். ஆனால் எல்லாக் கேள்விகளுக்கும் சரியான - முடிவான பதில் சொல்லக் கூடிய சகலகலாவல்லவனென்று எண்ணி விடாதீர்கள். நான் சொல்லும் அபிப்பிராயம் தான் முடிவானதென்றோ, அதுவே முடிந்த ஆராய்ச்சியின் சரியான கருத்து என்றோ, நீங்கள் கருதக் கூடாது.

விவகாரம், நியாயம் என்ற இரண்டு வார்த்தைகளையும் உபயோகப் படுத்தும் விதத்தை சரியாக உணர்ந்து கொள்ளும்படி கோருகிறேன். நியாயம் வேறு-விவகாரம் என்பதும் வேறு. விவகாரம் என்பது வலுத்தவன் ஆதிக் கத்தையும், தந்திர சூக்ஷிகளையும், பணச் செல்வாக்கையும் பொருத்து முடிவு பெற்றுவிடும். ஒருவன் தன்னிடம் சக்தி இல்லாத காரணத் தால்-பேசும் திறமை, எடுத்துக்காட்டும் அனுபோகம் ஆகியவை இல்லாத காரணத்தால்-ஒரு விஷயத்தைப் பற்றி வாதித்துத் தோல்வியுற்று விட்டால் அது நியாயம் கண்டு பிடித்தாகிவிடுமா? அது போல் உங்கள் வாய் அடங்கும்படி நான் பதில் சொல்லி விட்டதாலேயே நான் சொன்னது சரி என்று சொல்லிவிட முடியாது. உங்களுக்கு எடுத்துச் சொல்லி மெய்ப்பிக்க முடியாததாலேயே நான் சொன்னது தப்பு என்றும் சொல்லிவிட முடியாது. ஆதலால் எனக்குத் தெரிந்த பதில் சொல்லுகிறேன். அதை ஆராய்ச்சி செய்து பிறகு ஒரு தக்க முடிவுக்கு வாருங்கள்.

இன்றைய தினம் இங்கு பேச எடுத்துக் கொண்ட விஷயம் “இந்தியா வின் தற்கால நாகரீகம்” என்பதாகும். இது ஒரு கூடாத விஷயமல்ல. மிக்க ருசிகரமானதும் விரிந்த பொருள்களைக் கொண்டதுமான நல்ல விஷயத் தையே நீங்கள் இங்கு பேச எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

“நாகரீகம்” என்கின்ற வார்த்தைக்குப் பொருளே பிடியில் சிக்காத ஒரு விஷயமாகும். ஒவ்வொருவரும் ‘நாகரீகம்’ என்பதற்கு ஒரு தனிப்



RangaRakes tamilnavarasam.com

பொருள் கூறி வருகிறார்கள். கண்ணோட்டம் என்கிற தலைப்பின் கீழ் குறளில் நாகரீகம் என்கிற வார்த்தை வள்ளுவரால் உபயோகப்படுத்தப்பட்டி ருக்கிற தாக நான் 10, 20 வருஷங்களுக்கு முன்பு பார்த்ததாக ஞாபகம். அது தாக்ஷண்ணியம், அடிமை என்கிற பொருளில் உபயோகப்படுத்தப்பட்டி ருப்பதாகவும் எனக்கு ஞாபகம்.

நாகரீகம் என்கிற வார்த்தைக்கு எந்தக் கருத்தை வைத்துக் கொண்டு பேசினாலும் மக்கள் சமூகம், நடை, உடை, ஆகாரம் மற்றும் எல்லா பாவனை களிலும் பெரிதும் மாறுபட்டிருக்கிறது. எந்த ஆதாரத்தினால் தான் இவைகள் வேறுபட்டிருக்கிறதென்று கூறமுடியாது. எப்படியோ எல்லாம் மாறுதலில் தான் போய்க்கொண்டிருக்கிறது. நம்முடைய பெண்கள் முன்பு முழங்கைக்குக் கீழும் இரவிக்கை அணிந்து வந்தார்கள். பின்பு மேலேறியது. மறுபடி கீழே இறங்கியது. இப்பொழுது மறுபடியும் மேலேயே போய்க் கொண்டிருக்கிறது. மேல் நாட்டு ஸ்திரிகளும்-தெருக்களில் தெருக் கூட்டு வது போன்ற ஆடைகளை முன்பு அணிந்து வந்தார்கள். அந்த காலத்தில் துணிகளைத் தூக்கிப் பிடித்துக் கொள்ள பணம் படைத்தவர்கள் ஆள்களை நியமித்துக் கொண்டிருந்தார்கள். அது அக்கால நாகரீகம். இப்பொழுதோ என்றால் ஆடை விஷயத்தில் மேல் நாட்டுப் பெண்களும் எல்லாம் சுருக்கிக் கொண்டு விட்டார்கள். அதை நாம் இப்பொழுது நாகரீகமென்று தான் கருதுகிறோம்.

நாம் இவைகளைப்பற்றி எல்லாம் பேசும் பொழுதும் யோசிக்கும் பொழுதும் எந்தவித பற்றுதலும் இல்லாமல் அதாவது ஜாதி, மதம், தேசம் என்பன போன்ற பற்றுகளை விட்டு விட்டு (Free யாக) சுயேச்சையாக சீர்தூக்கிப் பார்த்தால் தான் விஷயங்கள் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். அதன் உண்மையும் அப்பொழுது தான் விளங்கும்.

ஒரு காலத்தில் சாம்பலைப் பூசிக் கொண்டு சிவ சிவா என்று ஜெபிப்பது தான் யோக்கியமாகக் கருதப்பட்டது. இன்றைய கால தேச வர்த்த மானங்கள் மேல் சொன்ன விஷயத்தை கேலி செய்கிறது.

புருஷன் பெண்ஜாதி என்கிற இரு சாரர்களை எடுத்துக் கொண்டா லும், முன்பு கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன் என்று மதித்து அடுப்பூதுவதே ஒரே கடமையென்று நடந்து வந்த பெண்களைப் பற்றி பெரிதும் மதித்து வந்தார்கள். ஆனால் இன்றோ புருஷனிடம் மனைவி யானவள் நான் உனக்கு வேலைக்காரியா? அடிமைப்பட்ட மாடா? ஜாக் கிரதையாயிருந்தால் சரி, இல்லாவிட்டால் எனக்கும் சம அந்தஸ்தும் சம உரிமையும் சர்வ சுதந்திரமும் உண்டு என்று கர்ஜனை செய்யும் பெண் களையே நாகரீகம் வாய்ந்தவர்களென்று கருதுகிறோம்.



முன்பு புராணத்தைப் பற்றியும் மதத்தைப் பற்றியும் பேசுவது தான் வித்வத் தன்மையாக இருந்தது. ஆனால் அது இன்று குப்பையாகி பரிகசிக் கத் தக்கதாக ஆகிவிட்டது. புத்திக்கும் அறிவிற்கும் பொருத்தமில்லாத முரட்டுப் பிடிவாதத்தில் முன்பு நம்பிக்கையிருந்ததை சிலாகித்துப் பேசி னோம். ஆனால் இன்றைய தினம் பிரத்தியக்ஷமாக எதையும் எடுத்துக் காட்டித் தெளிவுபடுத்துவதையும்-விஞ்ஞானம் போன்றதான அறிவியக்க நூல்களைக் கற்றுணர்ந்த வல்லுணர்களையுமே நாம் பெரிதும் மதித்து வருகின்றோம்.

நாகரீகம் என்பது நிலைமைக்கும் தேசத்திற்கும்-காலப் போக்கிற்கும் தக்கவாறு விளங்குகிறது. காலதேச வர்த்தமான-வழக்கத்தையேயொட்டி "நாகரீகம்" காணப்படுகிறது.

காலப்போக்கானது எந்த தேக்கத்தையும் உண்டாக்குவதில்லை. ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றவும்-புரட்சி ஏற்படவும் செய்கிறது.

மீசை, தலைமயிர் இவைகளைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டுப் பேசினீர் கள். எது நாகரீகமென்று கருதுகின்றோமோ அது பெருத்த அஜீர்ணத்துக்கு வந்துவிடுகிறது. மீண்டும் அந்த நிலைமையானது மாறிக்கொண்டு போகத்தான் செய்கின்றது.

ஒரு விஷயமானது வாய் சாமர்த்தியத்தினால் செலவாணியாகிவிடும். அது மெய்யோ-பொய்யோ சரியோ-தப்போ எப்படியும் இருக்கலாம்.

நாம் ஏன் எதற்காக உழைத்துப் பாடுபடவேண்டும்? பகுத்தறிவு படைத்த நாம் பாடுபட்டுத்தான் ஆகவேண்டுமா? நாகரீகம் என்பது சதா உழைத்துத் தான் உண்ண வேண்டுமா? என்கிற கேள்விகள் எழுந்து மக்கள் சமூகம் கஷ்டம் தியாகமின்றி நலம்பெற முயற்சிக்கலாம். இது நாகரீகமாக கருதப்பட்டு பயன் அடைந்தாலும் அடையலாம்.

இன்றைய அரசியல் விஷயத்தில் இராட்டை சம்பந்தப்பட்டிருக்கிறது. இது ஆயிர வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்டு நாகரீகமாக பாவிக்கப் பட்டி ருந்தது. பின்பு குப்பையில் தள்ளப்பட்டது. பிறகு மீண்டும் அது வெளிப் படுத்தப்பட்டு அதற்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுக்கப்பட்டு இராட்டை சுற்றுவதும்-தக்ளி நூல் நூற்பதும் நாகரீகமாகக் கருதப்பட்டது. ஆனாலும் அதுவும் ஒழிந்து போயிற்று என்றே சொல்லலாம். இவைகளையெல்லாம் எந்தவிதமான (தேசம், மதம், ஜாதி) பற்றுதலுமில்லாத பொதுமனிதன், பொது நோக்கோடு கவனித்தால் உண்மை விளங்காமல் போகாது.

நாம் ஓர்காலத்தில் தேசம், தேசீயம்-தேசப்பற்று என்பதை நாகரீக மாகக் கருதி வந்திருக்கிறோம். ஆனால் இன்றோ அவைகளையெல்லாம் உதறித் தள்ளி மனித ஜீவகாருண்யம் உலக சகோதரத்துவம் மக்கள்



RangaRakes tamilnavarasam.com

அபிமானம் (Citizen of the World) என்று கருதுவதையே பெரிதும் நாகரீக மாகக் கருத முன் வந்துவிட்டோம்.

ஒருகாலத்தில் நாகரீகமாக கருதி வந்ததை இன்று நாம் பரிகசித்து வருகிறோம். ஒரு மனிதன் தான் நாயக்கன், முதலி, வைணவன், சைவன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப் பாராட்டிக்கொண்டு ஒவ்வொரு வரும் தாங்கள் அதிக மேல் சாதிக்காரனாவதற்குச் சைவ-வைணவப் போக்கைப் பற்றிக் கொண்டு பூணூலையும் நாமத்தையும் போட்டுத் தங்கள் மதத்தையும் சிலாகித்துப் பிதற்றிக் கொண்டும் வந்தான். ஆனால் இன்றைய தினம் இவைகளையெல்லாம் புத்திகெட்ட தனமென்றும், முற்போக்குக்கு முரணான தென்றும் கூறி வெகுவாகக் கண்டனம் செய்து வருகிறோம். ஒரு காலத்தில் தனித் தனித் தத்துவம் நாகரீகமாகக் கருதப்பட்டது. உதாரணமாக ஒரு தனித்தனி ஜாதி நன்மையும்-தேச நன்மையும் சிலாக்கியமாகக் கருதப் பட்டது. ஆனால் ஒரு ஜாதியின் அனுகூலம் பிற ஜாதியானுக்குப் பாதகம் என்பதையும் ஒரு தேச நன்மை மற்றொரு தேசத்திற்கு பொல்லாங்கு என்ப தையும் நாம் இன்று நன்கு உணர ஆரம்பித்துவிட்டோம்.

தோழர்களே! நான் குறிப்பாக ஒரு விஷயத்தைப் பற்றி வற்புறுத்தி இங்கு கூற விரும்புகிறேன். அதாவது நாம் அனுபவ முதிர்ச்சியால் அறிவு ஆராய்ச்சியால் நாம் முற்போக்காகிக் கொண்டு வருகிறோம் என்பதேயாம். நாம் எல்லா மனிதர்களையும் அறிவின் உணர்ச்சியால் ஆழ்ந்து கவனிக் கிறோம். உதாரணமாக வியாபாரிகளை-மக்கள் சமூகத்தின் நலனைக் கொடுத்து லாபமடையும் கோஷ்டியைச் சேர்ந்தவர்களென்றும், லேவா தேவிக்காரர்களை-மனித சமூக நாசகர்த்தாக்களென்றும் மத ஆதிக்கங் கொண்ட வர்க்கத்தினர்களையும்-மனித சமூக விரோதிகளென்றும் கண்டிக் கின்றோம்.

நாகரீகம் என்பது பிடிபடாத ஓர் விஷயமென்று முன்பே கூறினேன். நம்நாட்டு பெண்கள் எப்படி Belt (பெல்ட்) கட்டாமல் சீலைகட்டுகிறார் களென்றும் அது இடுப்பில் எவ்வாறு தங்கியிருக்கிறதென்றும், தலைக்கு ஊசி இல்லாமல் பெண்கள் எவ்வாறு மயிர்களை சேர்த்து முடிந்துகொள்ளு கிறார்களென்றும், நாம் சாப்பாட்டுக்கு தினம் ஒரு இலை (Plate) எப்படி சிலவு செய்கிறோம், என்ன மகத்தான நஷ்டமென்றும், மேனாட்டார் ஆச்சரியப் பட்டு நம்மவர்களை கேட்பவரையும் கேட்டிருக்கிறோம். ஒவ்வொருவரும் அவர்களின் செய்கையை சரியாக உணராததினால் சிலதை ஆச்சரியமாக கருத நேரிடுகிறது.

நம்மிடையேயுள்ள சாதி அபிமானம் சொந்தகார அபிமானம், பாஷா அபிமானம், தேசாபிமானம் எல்லாம் தொலையவேண்டும். இல்லாவிட்டால் எந்த நல்ல விஷயத்திலும் நாம் முடிவு காணுவது சரியாக ஆகிவிடாது.



காந்தியார் மேனாட்டில் முழங்கால் துண்டோடு-போதிய ஆடை யின்றி போன பெருமையைப் பற்றி ஒரு நண்பர் குறிப்பிட்டார். இது எவ்வளவு தூரம் புத்திசாலித்தனமானதாகும் சௌகரியத்திற்காவும்-நன்மைக்காவும் அங்கு அதிக ஆடைகளை பந்தோபஸ்துக்காக அணிந்து கொள்ளாமல் பிடிவாதத்தோடு-கேவலம் இந்திய தர்மம் என்ற வெறும் எண்ணத்திற்காக குளிரில் விரைத்துபோக இங்கிலாந்து வாசம் செய்தது எவ்வளவு தூரம் நியாயமான செய்கையாகும்?

புதிய எண்ணங்களும் புதிய எழுச்சிகளும்-புதிய காரியங்களும் நிகழுகின்றன. நீங்களும் காலப்போக்கின் உயரிய பலனை வீணாக்காது பகுத்தறிவை மேற்போட்டுக்கொண்டு ஜனசமுதாய நன்மையை தேடி பாடு பட முன்வாருங்கள். உங்களுடைய முயற்சிக்கு எல்லாம் வெற்றியே உண்டு. வெறும் கடவுள் நம்பிக்கை கொண்டிருந்தவர்களும்கூட தங்களுடைய போக்கை மாற்றிக்கொண்டு முயற்சி மெய்வருத்தகூலி தரும் என்றுசொல்லி வருகிறார்கள். ஆகவே தோழர்களே! நீங்கள் தன் நம்பிக்கைகொண்டு-மக்களின் விடுதலைக்கு சரியான வழிகளில் பகுத்தறிவை அடிப்படை யாகக்கொண்டு போராட வாருங்கள்.

*குறிப்பு:- ஈரோடு London Missionary Society யின் போதனாமுறை பாடசாலையில் நடைபெற்ற Library Association கூட்டத்தில் "இந்தியாவில் காணப்படும் இன்றைய நாகரீகம்" என்ற பொருள் பற்றி நிகழ்ந்த விவாத முடிவில் ஆற்றிய முடிவுரை.*

**புரட்சி - சொற்பொழிவு - 31.12.1933**



RangaRakes tamilnavarasam.com

# குடி அரசு

## (புரட்சி)

## 1934 – 1

### பெரியாரின் எழுத்தும் பேச்சும்

### தொகுதி 18

பெரியார் திராவிடர் கழகம்
29 இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் – திருவான்மியூர்
சென்னை – 600 041

## நாஸ்திகர் மகாநாடு

சென்னையில் நாஸ்திகர் மகாநாடானது சென்ற டிசம்பர் மாதம் 31-தேதி கூட்டப்பட்டது. இது நமது நாட்டிற்கே ஒரு புதுமையானதும், மக்களுக்கு ஒருவித புத்துணர்ச்சியை உண்டுபண்ணக்கூடியதுமாகும்.

நாஸ்திகமானது தற்காலம் இன்னாட்டிற் சிலருக்கு மட்டில் புதுமையெனத் தோன்றுமாயினும் இது தொன்றுதொட்டே இருந்து வந்திருப்பதாக நம்மவர்களின் புராண இதிகாசங்களால் விளக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக இராமாயண காலத்திலும் நாஸ்திகம், கதாநாயகனான ராமனுக்கு உபதேசிக்கப்பட்டதாகவும், அவன் மறுத்துவிட்டதையறிந்த உபதேசிகள் அதற்கு அவனின் இளமைப் பருவந்தான் காரணமென்றறிந்து பிறகு கொஞ்ச காலஞ் சென்று வாசிட்டம் என்கிற முறையில் உபதேசிக்கப் பட்டதாகவும், அவனும் அதை மறுக்காமல் ஒப்புக்கொண்டதாகவும் ஒரு அத்தாட்சி காணப்படுகிறது.

மற்றொரு உதாரணம் என்னவென்றால் தேவேந்திரனானவன் தனது லௌகீக அலுவல்களை விட்டு விட்டு வைதீக மார்க்கத்தை அநுஷ்டித்து வந்த சமயத்தில் அவனது நாடும், நாட்டுக் காரியங்களும் குன்றி வருகிறதைக் கவனித்து வந்த அவன் குருவாகிய வியாழன் (பிரகஸ்பதி) என்போன் தனது சீடனான இந்திரனுக்கு நாஸ்திகத்தை உபதேசித்து அவனது ராஜ்யத்தையும், ராஜ்ய காரியாதிகளையும் சீரும் சிறப்புடன் நடத்தி வரச்செய்ததாகவும் காணப்படுகிறது.

ஆகையால், இது வெகுகாலமாக ஒரு சிறு சுயநலக் கூட்டத்தவர்களால் தங்களின் வாழ்க்கை நலன்களுக்காக மறைத்து வைத்து, அதற்குப் பதிலாகத் தங்களுக்கே பலன் தரத்தக்க முறைகளுக்குட்பட்ட வகுப்பு வேறுபாடுகளுக்கும், மத வேறுபாடுகளுக்கும், ஏழை பணக்கார வித்தியாசங்கள் முதலியவை களுக்கும் வேண்டிய வகைகளைக் கொண்ட ஆஸ்திக தத்துவத்தைக் கூறும் நூல்களைக் கற்பித்து அப்போதிருந்த அரசர்களைத் தங்கள் வசப்படுத்தி சட்டங்களையும் அதுகளுக்கு அநுசரணையாக ஏற்படுத்தி நமது மக்களை அடக்கி ஆண்டு வந்திருக்கிற காரணங்களின் முதிர்ச்சியினால்தான் இது புதுமையென்பதில் ஆச்சரியமேயில்லை.

இம்மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த மக்களில் பெரும்பான்மை யோர்கள் யாரென்று பார்த்தால் அவர்கள் தமிழில் பண்டிதத் திறமை

RangaRakes
tamilnavarasam.com

வாய்ந்தவர்களேயாகும். பண்டிதத் திறமையை இதிற் குறிப்பிடவேண்டிய தெதற்காகவென்றால், தற்போதுள்ள தமிழ் பாண்டித்யத்தில் தான் மதம், ஜாதி, கடவுள் என்கின்ற குறைபடா நம்பிக்கையை அலசாமல் முழுசு முழுசாகப் புகுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் அவைகளைத் தங்கள்பால் மணம் மாறிய சிறு வயது முதல் கொண்டு 20 - 30 வருடம் வரையாவது படித்துப் படித்து தங்கள் தங்கள் மனதிலும் (இன்னம் சொல்லுங்கால்) ரத்தம், நாடி, நரம்பு, எலும்பு, தசை, தோல் முதலியவைகளிலும் கூடப் புகுத்திப் பதிய வைத்திருப்பவர்களின் கூட்டத்தில் தேர்ச்சியடைந்தவர்களின் தன்மையைத்தான் பண்டிதத் திறமை என்பார்கள். இத்தகைய திறமை வாய்ந்தவர்களே இம்மகாநாட்டில் முக்கியமாக கூடியிருந்ததும் பங்கெடுத்துக்கொண்டதும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இதைக்காட்டிலும் மற்றொரு விசேடம் என்னவென்றால் பெண்மக்கள் விஷயம், இவர்களிலும் பண்டிதைகளானவர்களே பெரும்பான்மையானவர்கள் என்றால் இந்த மகாநாட்டின் முன்னேற்றங்களில் இதைவிட வேறு என்ன முற்போக்கான அறிகுறி வேண்டும்? இம்மகாநாட்டை கூட்டியதினின்று மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் புத்துணர்ச்சியின் காரணமாக இது முதற்கொண்டாவது தங்கள் தங்கள் வாழ்நாட்களை அழித்து வரும் மூட நம்பிக்கைகளையும், அடிமைப் புத்தியையும் மூடப்பழக்க வழக்கங்களையும் ஒழித்து தன்னம்பிக்கையையும், தன்மதிப்பையும், தன் முயற்சியையும் பெற்று தன்னைப்போல் பிறரையும் நேசித்து, சகோதரத்துவத்துடனும், சமத்துவத்துடனும், சுதந்தரத்துடனும் வாழ இடமுண்டாவதுடன் பொருளாதார விஷயத்திலும் அனாவசியமாக நேரங்களையும், பணங்களையும், ஊக்கங்களையும், உழைப்புகளையும் விரயமாக்காமல் மக்கள் வாழ்க்கைக்குப் பலன் தரும் வழிகளில் உபயோகப்படுத்தி வாழ்வார்களென்று நம்புவதற்கு அறிகுறிகளான ஷை மகாநாட்டின் தீர்மானங்களே போதிய சான்றாகும். அதாவது முதல் தீர்மானத்தில் ''மனித ஒற்றுமைக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் பெருந்தடையாகவிருப்பது கடவுள் நம்பிக்கையும் அதிலிருந்து ஏற்படுகிற மத சம்பிரதாயங்களுந்தான் என்று இம்மகாநாடு நிச்சயமாக உணர்வதால் மனிதர் தன்நம்பிக்கையோடும், தன் முயற்சியோடும் முன்னேற்றமடைய வேண்டில், கடவுள் நம்பிக்கையை பூரணமாக ஒழிக்க வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது'' என்பதாகும். இத்தீர்மானமானது நடைமுறைக்கு வரும்போது மனிதற்களுக்குள் ஒற்றுமை நிலவிவரும். அப்போது சமூகமானது முன்னேற்றமடையும் என்பதும் இவைகளைத் தடுத்துவருவது ''கடவுள்'' நம்பிக்கை என்பதும் காணப்படுகிறது. அக்கடவுளின் நம்பிக்கை அமையவேண்டி மத சம்பிரதாயங்கள் வேண்டியிருக்கிறதென்றும் ஏற்படுகிறது. எப்படியென்றால் கடவுள் என்கிற ஒரு கற்பனைக்கு ஆசைப்படும்படியாகவும், ஆதாரமாகவும் காட்டப்படுகிற நியாயங்களாகிற மறுஜன்மம், மோக்ஷம், சுவர்க்கம், நரக



முதலியவைகளோடு சாஸ்திர புராண இதிகாசங்களாகிற நூல்களால் ஏற்படுகிற சம்பிரதாயங்களே காரணமாகிறபடியாலும், அப்படிப்பட்ட மத சம்பிரதாயங்களே காரணமாகிறபடியாலும், அப்படிப்பட்ட மத சம்பிரதாயங்களே மக்களுக்குள் உயர்வு தாழ்வுகளைக் கற்பிப்பதால் ஒற்றுமைக்கு வழியற்று வேற்றுமைகளைக் கிளப்பிவிடுவதால் வேற்றுமைப்பட்ட பிறகு மனிதர்கள் முன்னேற்றமும் சிதைவுறுவதாலும்தான் இப்படிப்பட்ட கெடுதல்களுக்கு மூலகாரணமாகிற ''கடவுள்'' நம்பிக்கை ஒழிய வேண்டுமென முதல் தீர்மானம் வற்புறுத்துகிறது. இது இடைவிடாது நிலவி நீடித்து மக்களுக்குப் பயனளித்தல் வேண்டுமென்கிற ஆர்வத்துடனேயே தான் அதற்குத் தகுதியுடைய இளைஞர்களுக்குள் இத்தீர்மானம் முதிர்ச்சியுற வேண்டுமென்றும் அதற்கிடையூறுகளாக, தாத்காலிக பள்ளிப்பாடப் புத்தகங்களில் ஷை இன்னல்களைப் புகுத்தாவண்ணம் பிரசாரம் செய்யவேண்டுமென்றும் இரண்டாவது தீர்மானம் கூறுகிறது. இவைகளுக்கெல்லாம் விரோதமாக நடந்து வரும் காந்தீயத்தை மூன்றாவது தீர்மானத்தால் கண்டித்து, இவைகளைப் பின்வரும் மக்களும் அனுஷ்டித்து ஒழுகுமாறு ஒரு சங்கத்தை ஸ்தாபித்து நடத்திவர வேண்டுமென்று நான்காவது தீர்மானத்தினால் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இன்னமும் இதைக் குறித்துச் சொல்லப் புகுங்கால் இம்மகாநாட்டைக் கூட்டியவர்கள், இதைத் திறந்துவைத்த திறப்பாளர், இதை நடத்திவைத்த தலைவர், தீர்மானங்களைக் கொண்டுவந்தவர்கள் முதலியோர்களின் தன்மை முதலியவைகளைக் கவனித்தால் இம் மகாநாட்டின் ஏற்றம் இப்படிப்பட்டதென விளங்கும்.

அதாவது இம் மகாநாட்டை கூட்டுவிக்க முயற்சி எடுத்துக் கொண்டவர்களான தோழர் அ. பொன்னம்பலம், தோழர் ப. ஜீவானந்தம் ஆகிய இருவரும் மேற்படி மகாநாட்டுக்குக் காரியதரிசிகளாக அமைந்து எடுத்துக்கொண்ட முயற்சிக்கும், சிரமத்துக்கும் அளவே இல்லை. இவ்விருவரும் தமக்கு எல்லாவற்றையும்விட மக்கள் முன்னேறுவதே பெரும் பயனாகக் கருதி, அதற்காகவே தங்கள் மனதும், வாக்கும், உழைப்பும் பயன்படல் வேண்டுமென்கிற ஒரே ஒரு உட்கருத்துக்கொண்டு தன்னலம் சிறிதும் பாராமல் முக்காலங்களிலும் உழைத்து வரவேண்டுமென்கிற விரதம் கைக்கொண்டொழுகும் குணமும், ஆசையும், சக்தியும், உழைப்பும் வாய்க்கப் பெற்றவர்கள் ஆவார்கள் என்பதை நமது சுயமரியாதை உலகம் நன்கறிந்திருக்குமென்றால் நாம் வேறு சொல்லவேண்டியதென்ன இருக்கிறது.

அடுத்தபடியாக மகாநாட்டைத் திறந்து வைத்தவர் யாரெனில் தோழர் நீலாவதி அம்மையார். இவரின் பெருமையும், வீரமும், தன்மையும், சொல் வன்மையும், தன்னலங் கருதா உழைப்பும், இன்னம் மற்ற அவரது குணாதிசயங்களும் நாம் எடுத்துச் சொல்லாமலே விளங்கக்கூடிய பெருமை வாய்ந்தவர்களாவார்கள். இம் மகாநாட்டுக்குத்



RangaRakes tamilnavarasam.com

தலைமை வகித்து இம் மகாநாட்டை வெற்றிகரமாக நடத்திவைத்த பெரியார் தோழர் ம. சிங்காரவேலு அவர்களைப் பற்றியோவெனில் அவர் ஆராய்ச்சியிலும், அனுபவத்திலும், வயதிலும் முதியவர் என்றாலும் ஆராய்ச்சியின் பலன்களையும், அனுபவத்தின் பலன்களையும் மற்ற உயரிய விஷயங்களையும் மக்களுக்குப் பயன்படுமாறு செய்விப்பதிலும் களைப்பு, சலிப்பு, பயம், பின் தாங்கல் முதலியவைகளைக் கனவிலும் கண்டிராத ஒரு இளைஞரை ஒத்தவராவார். இப்படிப்பட்டவர்களால் நடத்தப்பெற்ற மகாநாட்டின் சிறப்பும், பலன்களும் எப்படி அமைந்திருக்கும் என்பதை நாம் கூற வேண்டியதில்லை. ஆகையால் சாதாரணமாக உலகில் கடவுள் உண்டாயிருந்தாலும் இல்லாதிருந்தாலும் நாஸ்திகம் என்கிற சொல் உச்சரிக்கும் போதே ஜனங்களுக்கு ஒரு விதமான வெறுப்பும், கோணுதலும் ஆன மனப்பான்மை உண்டாவது வழக்கமாக இருந்து வந்ததை, இம் மகாநாட்டைக் கூட்டுவித்து நடத்திவைத்துக் கொடுத்தவர்களால் மனித முன்னேற்றத்துக்கு எதிர்தட்டான எவையும் ஒழித்தாக வேண்டும் என்பதும் அப்படிச் செய்வது நீடித்துவரும் வகையை ஊக்கத்துடன் தெரிந்து நடத்தப்படவேண்டும் என்றும் அது மக்களைவிட இளைஞர்களுக்குத்தான் முக்கியமானதாகக் கருதி அவர்களுக்கு பாட புத்தகமூலம் ஏற்படுகிற இன்னல்களைக் களையும் வண்ணம் பிரசாரம் செய்யப்பட வேண்டுமென்றும் இத்தகையவைகளுக்கு விரோத வர்க்கமான காந்தீயத்தை ஒழிக்க வேண்டுமென்கிற கருத்துக்கொண்டதும் மக்களின் முன்னேற்றமே பலனாகவும் கொண்ட இம் மகாநாட்டின் கருத்துக்களால் மாற்றிவிடப்பட்டதென்றே சொல்லுவோம். மேலும் நாஸ்திகம் என்கிற சத்தத்தைக் கேட்டபோதே ஜனங்கள் தங்களை பொய், களவு, சூது, கொலை முதலிய குற்றங்களுக்கு மேல் செய்துவிட்டவன் வருந்துவதுபோல் கஷ்டப்படுபவர்களான நம் மக்கள் இம் மகாநாட்டின்போது கலந்துகொண்டு தாங்களும் அங்கத்தவர்களாகச் சேர்ந்து உழைக்க முன்வந்துள்ளவர்கள் எனில் அதற்கு மூல காரணம் இன்னதென்பது யோசித்துப் பார்ப்பவர்களுக்கு விளங்காமற் போகாது. ஆகவே இத்தகைய மகாநாடுகள் நமது நாட்டில் ஆங்காங்கு நிறுவி மக்களின் அறியாமையைப் போக்கி மக்களுக்குப் பயன்பட்டு வரும் முறைகளில் வேண்டியவைகளை அறிவித்தும், தீர்மானித்தும், நடைமுறையில் நடந்தேறும் வண்ணம் செய்வித்தும் வருவது அத்தியாவசியமாகும்.

**- ஈ.வெ.கி.**

**புரட்சி - தலையங்கம் - 07.01.1934**



# வருந்துகிறோம்

ஜோலார்ப்பேட்டை பிரபல கண்டிராக்டர் தோழர் வரதராஜலு (முதலியார்) அவர்கள் 5-1-34ல் காலமானார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். இவர் வயோதிக வாழ்க்கையினரானாலும் ஐதீகத்தையே பின்பற்றிவிடாது காலப்போக்கின் உயரிய தன்மையை உணர்ந்து நமது ‘சமதர்மம்’ போன்ற லக்ஷயங்களைப் போற்றியதோடு அதற்காக நின்று தொண்டாற்றிய தோழர்களைப் பெரிதும் ஊக்கமூட்டிப் பேராதரவு நல்கியவராவார். மற்றும் நமது இயக்கத்திற்கு உறுதுணையாக நின்று சீரிய ஊழியம் செய்ய தோழர் வி. பார்த்தசாரதி அவர்களை நமக்கு ‘தத்தம்’ செய்துள்ள சிறப்பாளருமாவார். இத்தகைய பெரியார் மறைந்ததற்காக இயற்கையை செவ்வனே உணர்ந்த தோழர் வி. பார்த்தசாரதி அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எவ்வித ஆறுதலும் தேவையில்லை என்றே நம்புகிறோம்.

**புரட்சி - இரங்கலுரை - 07.01.1934**



RangaRakes tamilnavarasam.com



20 புரட்சி

குடி அரசு
பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், மௌனமும்.

இராமாயண ஆராய்ச்சி.

ஞானசூரியன்.

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

பகுத்தறிவு ஆராய்ச்சிப் புத்தக வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.

கடவுளும், பிரபஞ்சமும்.

சத்தியாக்கிரகம சண்டித்தனமா?

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

Case of the Indian Problem

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

பகுத்தறிவு ஆராய்ச்சிப் புத்தகம்

முன்னேற்றம். பிரசண்ட மாருதம்

# தாலுகா போர்டுகளின் அழிவு

நமக்கு சர்க்காரால் அளிக்கப்பட்ட ஸ்தல ஸ்தாபன அதிகாரங்களில் தாலுகா போர்டு நிர்வாகம் என்பதும் ஒன்றாகும். இதானது துவக்கப்பட்டு நம்மவர்களால் நடத்தப்பட்டு வரும் கொஞ்ச காலத்திற்குள்ளாகவே இதை நிர்வகித்து வரும் அங்கத்தவர்களாலேயே ''பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது'' என்றதற்கொத்த நடைமுறையில் அதன் ஒழுக்கக் குறைவாலும், சுயநல முதிர்ச்சியினாலும், ஒழுக்கயீனமான நடைமுறைகளாலும், சிவில், கிரிமினல் வியாஜ்ய விவகாரங்களாலும் நடத்தப்பட்டு வந்ததாக ஏற்பட்டதோடு பொருளாதார முறையிலும் மிக நெருக்கடியான தன்மையிலும் அமைக்கப்பெற்று விட்டதால் இந்த சொல்ப நன்மையும் கூட நம்மவர்களின் அந்தஸ்திற்கு கெட்டதாக மாறி விட்டதானது மிகவும் விசனிக்கத்தக்கதாகும். இதுகளைக் குறித்து பல தடவைகளிலும் நமது ''குடி அரசு'' வாயிலாகவும், நமதியக்கத் தோழர்களால் சொற்பொழிவுகளின் வாயிலாகவும், நமது இயக்க மகாநாடுகளின் தீர்மான மூலமாகவும் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதை வாசகர்கள் அறிந்திருப்பார்கள்.

மேலும் இதை நடத்தி வருபவர்கள் இதை ஒரு பொதுநல சேவைக்கான ஸ்தாபனம் என்றும், இது மக்களின் நம்மைக்கே அமைக்கப்பட்டிருக்கிறதென்கிற நினைவேயில்லாமல் இது ஒரு தனிப்பட்ட மனிதரின் சுயநலத்திற்கும், சௌகரியத்திற்கும், கௌரவத்திற்கும், அதிகார தோரணைக்கும் தங்கள் தங்கள் செல்வாக்குக்கும் ஏற்பட்டதாகக் கருதி அதற்காக எத்தனை பணம் செலவானாலும், எத்தனை எதிர்ப்புகள் தோன்றினாலும், யார் யார் விரோதம் வந்தாலும், வேறு என்ன வந்தாலும் ஒரு கை பார்த்து விடலாம் என்கிற நினைவோடு இத்தகைய ஸ்தாபனங்களில் அதிகார ஆதிக்யம், கௌரவம், செல்வாக்கு முதலியவைகளை இச்சித்தே பெரும்பான்மையோர் இவற்றில் நுழைந்து நிர்வாகம் செய்து வந்ததின் காரணமே இன்று இத்தகையவைகள் நம்மவர்களுக்குப் பொறுத்தமற்றதென நிரூபித்து விட்டதுடன் இவைகளுக்கு ஆதாரமாயுள்ள ஸ்தாபனங்களை நடத்துவதில் பணக்கஷ்டமதிகரிப்பதால் அவற்றை எடுத்துவிட வேண்டுமென்று சர்க்காரும் நினைத்துவிட வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டதென்றால் இதைவிட அவமானம் வேறு வேண்டுமா? தவிரவும் இந்த ஸ்தாபனங்களை நிர்வகிக்க வருபவர்களால் மக்களுக்கு ஏற்பட வேண்டிய நன்மைகள்தான் இவ்வாறாகப் பிரயோகிக்கப்



RangaRakes tamilnavarasam.com

பட்டதெனில் ஷை நிர்வாகத்தில் காரியம் நடத்தி வரும் சிப்பந்திகள், உபாத்திமார்கள், உபாத்தினிமார்கள் முதலியவர்களாவது இவர்களால் நன்மையைப் பெறாவிட்டாலும் துன்பமாவது இல்லாதிருக்குமாவெனில் அது சம்பந்தமான ஊழல்கள், அவைகளைக் குறித்து நாம் சொல்லாமலே விளங்கக் கூடியவைகளாகும். இத்தகைய பரிதாபகரமான நிலைமையை பொதுப் பணங்களையும், பொது அதிகாரங்களையும் பொதுமக்களுக்கே உபயோகமாகும்படி இனிமேலாவது அவைகளைப் பொதுமக்களுக்காக எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்பதை உத்தேசித்து நமது காருண்ய கவர்ன்மெண்டார் தற்போது வந்திருக்கும் ஒரு ஒப்பற்ற முடிவைப்பற்றி நாம் அவர்களைப் பாராட்டாமலிருக்க முடியாது.

அதாவது தாலூகா போர்டுகளை ஒழித்துவிட வேண்டும் என்று சென்னை சர்க்கார் தீர்மானித்திருப்பதேயாகும். இது சில சுயநலக்காரர்களுக்கு மட்டும் நஷ்டத்தையும், ஏமாற்றத்தையும் உண்டு பண்ணினாலும் பெரும்பான்மையாக பொது ஜனங்களுக்கு நன்மையை அளிக்கக்கூடியதாக இருக்கிறபடியால் இத்தீர்மானம் பொதுவாக எல்லோராலும் போற்றத்தக்க காரியமென்பதில் நமக்கு சிறிதளவும் ஐயமில்லை என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம். மேலும் தாலூகா போர்டுகள், கிராம பஞ்சாயத்துக்களின் நிலைமையைப் பொருத்த விஷயங்களில் குறைபாடு உள்ளவைகளையும் கூட இனி பஞ்சாயத்துக்களை சீர்திருத்த முறைகளில் அதிகப்படுத்தி வைக்கப்படும் என்கிற ஏற்பாட்டின் மூலம் நிவர்த்திக்கப்படுமெனவும் நம்புகிறோம். எப்படியெனில் நிலவரியின் பகுதியிலிருந்து ஜில்லா போர்டுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் ஆகிய ஸ்தாபனங் களுக்கும் பிரித்துக் கொடுத்து வந்ததானது இனி தாலூக்கா போர்டுகள் ஒழியப்போவதாலும் ஷை துகைகளிலிருந்து ஜில்லா போர்டுக்கும், பஞ்சாயத்துக்கும் செலவழிக்க நேருவதாலும் பஞ்சாயத்துக்களை இன்னமும் அதிகப்படுத்தி சீர்திருத்த முறையில் விமர்சனமாக நடைபெறவைக்க இடமேற்படுவதாலும் சில எதிர்பாராத நன்மை கிராமத்தவர்களுக்கு அதிகமாக ஏற்படக்கூடும். பட்டினவாசிகளைவிட கிராமவாசிகள்தான் அதிகமான சீர்திருத்தத்திற்கும் முற்போக்குக்கும் லாயக்குள்ளவர்களாகையால் மேற்படி நன்மைகள் அவர்கள் விஷயத்தில் இன்னம் கொஞ்சம் அதிகமாக உபயோகப்படும் என்கிறோம். எப்படியெனில் கிராமாந்திரங்களில்தான், உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்கிற பாகுபாடுகளின் ஆதிக்யமும் அவைகளால் ஏழை மக்களுக்குள்ள கஷ்ட நஷ்டங்களும் அதிகரித்து, துன்புறுத்தி வருகின்றனவாதலால் இத்தகைய பஞ்சாயத்துக்களின் அதிகரிப்பினாலும் அதன் விமர்சனமான நடைமுறையினாலும் கஷ்ட நஷ்டங்களுக்கு அடிப்படையான அறியாமையும் விலகி ஒருவாறு முற்போக்கடைவார்களென்று நம்பவும் இடந்தருகிறது.



இன்னமும், சொல்லப் புகுங்கால் தாலூகா போர்டுகளின் தேர்தல் காலங்களின் போது மக்களுக்கு ஏற்படுகிற கஷ்டங்களும், நாணயக் குறைவுகளும், பணச் செலவுகளும், விரோதங்களும், வேலை மினக்கேடுகளும், அலைச்சல், கெஞ்சுதல், பயமுறுத்தல், ஓட்டுக்கு விலைபேசுதல் முதலிய விஷயங்களால் ஏற்படுகிற கஷ்டங்களும் தேர்தல் முடிந்த பிறகு தேர்தல் ஞாயமானதா? தப்பானதா? எனத் தெரிந்து கொள்ள அவைகளால் ஏற்படுகிற கோர்ட்டுச் சிலவு, ரெயில், கார் முதலிய போக்குவரத்துச் சிலவுகள், சாக்ஷிப்படி, வக்கீல் பீசு முதலிய விரயங்களும் தாலூக்கா போர்டுகளை அழிப்பதால் ஒழிந்து விடக்கூடும் என்றும் சொல்லலாம்.

தவிர, ஒவ்வொரு தாலூக்கா போர்டுகளிலும் 100-க்கு மேற்பட்டு 250 கிராமங்கள் வரை ஒன்று சேர்த்து நிர்வகித்து வந்ததான நிர்வாகத்துக்கு 10 முதல் 25 மெம்பர்கள் அமைக்கப்பட்டிருந்ததைப் பஞ்சாயத்து போர்டுகள் அதிகரிக்கும் போது அந்தந்த போர்டுகளுக்கும் மெம்பர்களின் விகிதாசாரம் வரும்போது மெம்பர்களாகிய நிர்வாகிகள் அதிகரிப்பார்கள். அப்போது சொல்ப துகையினர்களால் நிர்வகிக்கப்பட்ட ஸ்தலமானது பஞ்சாயத்து போர்ட் அதிகரிப்பினால் ஆயிரக்கணக்கான ஜனங்களால் நிர்வகிக்கப்படலாம். அப்பொழுது நிர்வாகமானது ஒன்றுக்கொன்று மேன்மையுற நடத்த எத்தனமும் ஊக்கமும் உண்டாகி நல்ல முறையில் நடத்தப்படலாமெனவும் நம்ப இடமேற்படுகிறது. இதனால் ஜனநாயகத்வ முறையை அமுலுக்குக் கொண்டு வர இதுவும் ஒரு நல்ல சந்தர்ப்பமென்பதில் ஆக்ஷேபணை இல்லை.

ஆகையால், இது போலவே சர்க்காரால் நமக்கு வழங்கப்பட்டிருக்கிற பல பொது ஸ்தாபனங்களில் நம்மவர்களால் ஏற்பட்டிருக்கிற பல ஊழல்களையும், இன்னல்களையும் கவனித்து அததுகளுக்கேற்றவாறு அப்போதைக்கப்போது காலதாமதமாக்காமல் தக்க பரிகாரங்களைத் தேடி மறுபடி இன்னல்களும், ஊழல்களும் பிரயத்தனப்பட்டாலும் கூட யாராலும் ஏற்பட முடியாத முறையில் கவர்ன்மெண்டார் அமைத்து வைப்பார்களென நம்புகிறோம்.

**புரட்சி - தலையங்கம் - 14.01.1934**



RangaRakes tamilnavarasam.com

# தோழர் ஈ.வெ.ரா. ஸ்டேட்மெண்டு

**சமதர்மப் பிரசார உண்மை விளக்கம்**

இ.பி.கோ. 124-A செக்ஷன்படி தொடரப்பட்டுள்ள ''பொதுவுடைமை'' பிரசாரத்திற்காகவும் ''இராஜ நிந்தனை'' என்பதற்காகவுமுள்ள வழக்கு கோவையில் 12-ஆம் ஆரம்பிக்கப்பட்ட போது தோழர் ஈ.வெ. இராமசாமி அவர்கள் கோவை ஜில்லா கலெக்டர் G.W. வெல்ஸ் I.C.S. அவர்கள் முன் தாக்கல் செய்த ஸ்டேட்மெண்ட்:-

என் பேரில் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் வழக்குக்கு ஆதாரமே கிடையாது.

2. வழக்குக்கு அஸ்திவாரமான 29-10-33 தேதி ''குடி அரசின்'' தலையங்கத்தை இப்போது பலதரம் படித்துப் பார்த்தேன். அதை நான் எழுதினேன் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன்.

3. அதில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களுக்காவது வாக்கியங்களுக்காவது ராஜத்துவேஷக் குற்றம் சாட்டப்படுமானால் இன்றைய அரசாங்க முறை, நிர்வாக முறை முதலியவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து குறைகளை எடுத்துச் சொல்லவோ, அவற்றால் மக்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களை விலக்கப் பரிகாரம் தேட ஏற்பாடு செய்யவோ யாருக்கும் சுதந்திரம் கிடையாது என்றுதான் முடிவு செய்யப்பட்டதாகும்.

4. என்ன காரணத்தைக் கொண்டு என்மேல் ஆதாரமற்ற இந்தப் பிராது தொடரப்பட்டிருக்கிறது என்று யோசித்துப் பார்த்தால் என்னுடைய சமதர்மப் பிரசாரத்தை நிறுத்தி விடச் செய்வதற்காக முதலாளி வர்க்கமோ அல்லது மத சம்பிரதாயக்காரர்களோ செய்த சூழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. வியாசத்தின் விஷயத்திலாவது, பதங்களிலாவது, நோக்கத்திலாவது சாட்டப்பட்ட குற்றத்தின் அமைப்பே கிடையாது.

5. முக்கியமாய் அதில் சொல்லப்பட்ட விஷயம் எல்லாம் கல்வி இலாக்காவின் சம்பளங்கள் அதிகமென்றும், பிள்ளைகளுக்கு கல்விச்செலவு அதிகமென்றும், அதற்கேற்ற பயன் விளைவதில்லையென்றும், ஏழைகளுக்கு கல்வி பரவ சௌகரியம் இல்லை என்றும், இப்படிப்பட்ட முறையால் லாபம் பெறும் பணக்காரர்களும், அதிகார வர்க்கத்தாரும் உத்தியோகஸ்தர்களும் சொல்லுவதைக் கேட்டு ஏமாந்து போகாமல் வரப்போகும் (சீர்திருத்த) எலெக்ஷன்களில் ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டும் என்று ஏழை பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டியதேயாகும்.

6. நான் 7,8 வருஷ காலமாய் சுயமரியாதை இயக்க சமதர்ம பிரசாரம் செய்து வருகிறேன். சமூக வாழ்விலும் பொருளாதாரத்திலும் மக்கள் யாவரும் சமத்துவமாய் வாழவேண்டுமென்பது அப்பிரசாரத்தின் முக்கிய தத்துவமாகும்.

7. நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை நாட்டு மக்கள் யாவரும் சமமாய் அனுபவிக்கவேண்டும் என்பதும் அவ்வுற்பத்திக்காக செய்யப்பட வேண்டிய தொழில்களில் நாட்டு மக்கள் எல்லோரும் சக்திக்குத் தக்கபடி பாடுபடவேண்டும் என்பதும் அத்தத்துவத்தின் கருத்தாகும்.

8. அவ்வியக்க லட்சியத்திலோ, வேலைத் திட்டத்திலோ, பிரசாரத்திலோ, அதற்காக நடைபெறும் ''குடி அரசு''ப் பத்திரிகையிலோ பலாத்காரம், துவேஷம், இம்சை இடம் பெற்றிருக்கவில்லை. எந்த விதத்திலாவது அவை நமது நாட்டில் இடம் பெறுவது என்பதும் எனக்கு இஷ்டமான காரியம் அன்று.

9. இதற்கு அத்தாட்சி வேண்டுமானால் பல வருஷங்களாக இரகசியப் போலீஸ் இலாக்கா சுருக்கெழுத்து அறிக்கைக்காரர்கள் எனது பிரசங்கத்தை விடாமல் குறித்து வைத்திருக்கும் அறிக்கைகளையும், சுமார் பத்து வருஷத்திய ''குடி அரசு'' பத்திரிகையின் வியாசங்களையும் சர்க்கார் கவனித்து வந்தும் என்மேல் இத்தகைய வழக்கு இதற்கு முன் ஏற்படுத்தியதில்லை என்பதே போதும்.

10. அரசாங்கமானது முதலாளித் தன்மை கொண்டதாய் இருப்பதால் அது இத்தகைய சமதர்மப் பிரசாரம் செய்யும் என்னையும் எப்படியாவது அடக்க வேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதில் அதிசயமில்லை. தற்கால அரசாங்க ஆட்சியில் பங்குபெற்றுப் போகபோக்கியமும், பதவியும், அதிகாரமும் அடைந்துவரும் பணக்காரர்களும் மற்றும் மதம், ஜாதி, படிப்பு என்கிற சலுகைகளைக் கொண்டு முதலாளிகளைப் போலவே வாழ்க்கை நடத்துகின்றவர்களும் இப்படிப்பட்ட அரசாங்கத்திற்கு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் உதவி செய்து தீர வேண்டியவர்களாய் இருப்பதால் அவர்களும் இம்முயற்சிக்கு அனுகூலமாய் இருப்பதிலும் அதிசயமில்லை.

11. பல நூற்றாண்டுகளாக உலக வாழ்க்கையில் கடவுள் செயல் என்றும் இயற்கை என்றும் கருதும்படியாகச் செய்து நிலை நிறுத்தப்பட்டு நடைபெற்று வரும் சமூக அமைப்பையும், பொருளாதார முறையையும்





RangaRakes tamilnavarasam.com

மாற்றுவது என்பது சிலருக்கு இஷ்டப்படாத காரியமாய் இருந்தாலும் அவற்றை மாற்றி அமைத்தாலொழிய மக்கள் வாழ்க்கைகளில் உள்ள அனேக கஷ்டங்களும் குறைகளும் நிவர்த்தியாகி சௌக்கியமாகவும் திருப்தியாகவும் வாழ முடியாது என்பது எனது உறுதி.

12. இப்படிப்பட்ட ஒரு மாருதல் உண்டாக ஆசைப்படுவதும் அதற்காக பலாத்காரம், துவேஷம், இம்சை ஆகியவைகள் இல்லாமல் பிரசாரம் செய்வதும் குற்றமாகாது.

13. ஏதாவது ஒரு கொள்கைக்கு பிரசாரம் பரவ வேண்டுமானால் அக்கொள்கையில் நம்பிக்கை கொண்டவர்கள் அக் கொள்கைக்கு இடையூறு செய்பவர்களால் அடக்கு முறைக்கு ஆளாக வேண்டியதும் அவசியமேயாகும். அதற்காக நாமே வலுவில் போய் கஷ்டத்தைக் கோறி எடுத்துக் கொள்ளக் கூடாது என்றாலும் தானாகவே ஏற்பட்ட ஒரு நல்ல சந்தர்ப்பத்தை யாரும் இழந்து விடக் கூடாது. இந்தப் பிரசாரத்தை தடுக்க வேண்டுமென்று கருதி இந்த வழக்கைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் எப்படியாவது எனது வியாசத்தில் துவேஷம், வெறுப்பு, பலாத்காரம் முதலியவைகள் இருப்பதாக கற்பனை செய்து தீர வேண்டியவர்கள் ஆகிவிட்டார்கள். அந்தப்படி செய்யப்படும் கற்பனைகளால் நான் தண்டிக்கப்பட்டாலும் பொதுவாக என் மீது நம்பிக்கையும் நல்ல எண்ணமும் உடையவர்களும் சிறப்பாக எனது கூட்டு வேலைக்காரத் தோழர்களும் தப்பான அபிப்பிராயம் கொள்ளக்கூடுமாதலால் அப்படிப்பட்ட கற்பனைகளை மறுத்து உண்மையை விளக்கி விட வேண்டுமென்றே இந்த ஸ்டேட்மெண்டைக் கொடுக்கக் கடமைப்பட்டவனானேன்.

14. இதனால் பொதுஜனங்களுடைய கவனிப்பு இன்னும் அதிகமாவதோடு அவர்களது ஆதரவும் பெற நேர்ந்து கிளர்ச்சிக்கு பலமேற்படக் கூடுமாதலால் என் மீது சுமத்தப்பட்ட இந்த வழக்கில் ஒரு ஸ்டேட்மெண்டை மாத்திரம் கொடுத்து விட்டு எதிர் வழக்காடாமல் இப்போது கிடைக்கப்போகும் தண்டனையை மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன்.

15. இந்நிலையில் சர்க்கார் என்னைத் தண்டித்தாலும் சரி அல்லது இந்த பிராதுக்கு போதிய ஆதாரமில்லை என்று நியாயத்தையும் சட்டத்தையும் லக்ஷியம் செய்து வழக்கைத் தள்ளி விட்டாலும் சரி இப்படிப்பட்ட அடக்கு முறையை வரவேற்குமாறு எனது தோழர்களுக்கு வழிகாட்ட எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்.

புரட்சி - அறிக்கை - 21.01.1934



# சைவர்களின் மனப்பான்மை

சைவர்கள் என்பவர் சிவனை முழுமுதற் கடவுளாக எண்ணி வழிபடுபவர்களாவார்கள். சிவ என்னும் சொல் மங்களகரம் என்றும் அன்பே உருவாகக் கொண்டது என்பது முதலாக பல பொருள்களையும் குறிக்கத்தக்கதாகும். இப்படிப் பொருள்படும் வாக்கியத்தின் வாச்சியனை வழிபடுபவர்கள்தான் சைவர்கள் என்று கூறுகிறார்கள். இத்தகையோர்களின் இலக்கணங்கள் எப்படியிருக்க வேண்டுமென்பதைக் குறித்து சைவாகமங்களில் விசேடமாகக் கூறப்பட்டிருக்கிறது. அவைகளை விரிக்கிற் பெருகுமென முக்கியமானவற்றை மட்டில் இங்கு குறிப்பிடுகிறோம்.

மன மொழி காயங்களால் தன்னைப் போற் பிறரை நேசித் தொழுகல் என்பன போன்றவைகளாகும். இத்தகைய அரிய குண சமூகத்தோடு கூடிய சைவப் பெரியார்களில் தானும் ஒருவராக எண்ணிக் கொண்டு அநேக சைவக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றி வரும் கோவை சேக்கிழார் நிலையம் தோழர் சி.கே. சுப்பிரமணிய முதலியார் B.A. அவர்கள் ஜனவரி மாதம் 18 உ ''தமிழ்நாடு'' பத்திரிகையில் ''அரை குறை சாஸ்திர ஞானம் கூடாது'' ''சோதிட சாஸ்திர ஆராய்ச்சி'' ''நவக்கிரகங்களுடன் என்ன சம்பந்தம்'' என்கின்ற தலைப்புகளின் கீழ் எழுதிய கட்டுரையின் துவக்கத்தில் ''கிழிந்த பஞ்சாங்கத்தையும் தற்பைப் புல்லையும் நம்பாதே'' என்று சொல்லுபவர் சுயமரியாதைக்காரர் என்றும், ''சுயமரியாதைக் கொடியை ஏற்றியிருப்பவர்கள்கூட நல்ல நாளும் இராகு காலமும் பார்த்தே தீருகிறார்கள்'' என்றும், அதை நான் பார்த்திருக்கிறேன் என்றும், மற்றும் பல விஷயங்களையும் எழுதி, கடைசியாக திருஞான சம்பந்த நாயனார் சரித்திரத்தைப் பற்றி சொல்லும் போது பெரிய புராணமானது ''அருக்கன் முதற்கோள் அனைத்தும் அழகிய உச்சங்களிலே பெருக்க வலியுடன் நிற்கப் பேணிய நல் ஓரை எழத்திருக்கிளரும் ஆதிரை நாள்'' அவர் அவதரித்த காலம் என்று சொல்லுகிறார். அதாவது ''அவர் அவதரித்த காலத்திலே ஒன்பது கிரகங்களும் உச்சம், நல்ல லக்கினம், நக்ஷத்திரம் திருவாதிரை இப்படி ஒரு சாதகம் போட்டுப் பார்த்து சோதிடர்கள் பலன் சொல்லுவார்களேயானால் சுவாமிகள் சரித்திரத்திற்கு ஒத்தே இருக்கும்'' என்றும் மேற்படி பத்திரிகையில் காணப்படுகிறது. சோதிட சாஸ்திரமானது வான சாஸ்திர சம்பந்தமுடையது. இது கணிதத்தையே ஆதாரமாகக் கொண்டது என்பது மறுக்கப்படத்தக்கதல்லவென்றாலும்



RangaRakes tamilnavarasam.com

அது தற்போது மக்களிடம் புழங்கி வருகின்ற மாதிரியையும், அதனால் மக்கள் எத்தகைய துன்பத்திற்காளாகி ஏமாற்றமடைந்து துன்புற்று வருகிறார்கள் என்பதையும் கவனிக்கும்போது, மக்களின் வாழ்க்கையில் அது தன்முயற்சிக்கும் தன் மதிப்புக்கும் தன் நம்பிக்கைக்கும் முற்றும் முறண்பட்டதாகவே காணப்படுவதுடன் அதை மக்களுக்குப் போதித்துப் பலன்களைச் சொல்லி ஏமாற்றி சாந்தி, கிரகப் பிழை என்பவைகளால் ஒரு கூட்டத்தினர் காசு பறித்து நோகாமல் வயறு வளர்க்கப் போதிய சாதனங்களாகவிருக்கிறது என்கிற முறையில் அது மிகவும் கண்டிக்கத் தக்கதாகவே இருக்கிறது. தற்கால விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் எல்லோரும் எந்த நவக்கிரகங்களின் பலா பலன்களைத் தெரிந்து அவற்றின் மூலமாக உலகுக்கு மிகவும் உபயோகப்படும் படியான சாதனங்களைக் கண்டுபிடித்து உலகுக்கு உதவினார்களென்று தோழர் சி.கே. சுப்பிரமணிய முதலியார் சொல்ல முற்படுவாராவென்று கேட்கின்றோம்.

தவிர, சுயமரியாதைக்காரர்கள் எந்த மகாநாட்டில் எந்தக் கொடியேற்று விழாவில் ராகுகாலம் நல்ல நாள் பார்த்து ஆற்றினார்களென்பதையாவது விளக்குவாரா? எந்தச் சோதிட சாஸ்திரம் தேவை என்கின்றாரோ அதே சாஸ்திரம் சொல்லி வந்த ரிஷிக் கூட்டங்களில் சேர்ந்த 'மனோஜயந்து மாண்டவ்ய' என்ற ''மாண்டவ்யர்'' என்பவரின் உறுதி மொழியை தோழர் சி.கே. சுப்பிரமணியம் அறியார் போலும். அதாவது நாள்கள் சமயங்களைப் பார்த்துச் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களைக் காட்டிலும் மனமானது திடப்பட்ட காலத்திலேயே செய்தல் நலமென்று சொல்லிய மாண்டவ்ய மகரிஷியின் வாக்கியங்களைக் கவனித்திருப்பாரேயானால், அவலை நினைத்து உரலை இடித்தற்கொப்பாக சோதிடத்தை நினைத்துச் சுயமரியாதைக்காரரை இடித்தெழுதித் தாக்கி இருக்க மாட்டார். மேலும் இவருக்காவது சோதிட ஆராய்ச்சி இருந்திருக்குமானால் திருஞான சம்பந்தர் பிறந்ததைச் சொல்லும் பெரிய புராணச் செய்யுளின் பிரகாரமும் அதன் கீழ் வரைந்துள்ள பொருளின் பிரகாரமும் யோசித்து பார்த்திருந்தால், அரைகுறை சாஸ்திர ஞானம் கூடாதென எழுதியிருக்கமாட்டாரென நினைக்க வேண்டி இருக்கிறது. எப்படி எனில் திருஞான சம்பந்தர் பிறந்த காலம் ஒன்பது கிரகங்களும் உச்சம் என்றும் நல்ல லக்கினம் என்றும் நக்ஷத்திரம் திருவாதிரை என்றும் காணப்படுகிறது. ஒன்பது கிரகங்கள் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது ஆகும். சூரியன் உச்சம் பெற்றான் என்றால் அவன் உச்ச வீடாகிய மேட ராசியிலிருக்க வேண்டுமென்பதாகும். அதுபோல் சந்திரன் உச்சம் பெற்றான் என்றால் அவன் இடப ராசியிலிருக்க வேண்டும். சந்திரன் 2¼ இரண்டேகால் நக்ஷத்திரத்திற்கு ஒரு ராசி வீதம் அஸ்வனி நக்ஷத்திரம் முதல் கார்த்திகை கால்பாகம் வரை மேஷ ராசி கார்த்திகைபின் முக்காலும் ரோகணியும் மிருகசீர்ஷம் முன்னரையும்



சேரும்வரை சந்திரன் இடப ராசியிலிருப்பான். பிறகு மிருகசீர்ஷம் பின்னரையும் திருவாதிரையும் புனர்பூசம் முன்முக்காலும் சேர்ந்து சந்திரன் மிதுன ராசியிலிருப்பான் என்பது சோதிட அரிச்சுவடியின் பாடம். திருவாதிரை நக்ஷத்திரத்தில் திருஞானசம்பந்தர் பிறந்திருப்பாரே யானால் சந்திரனுக்கு உச்சம் எப்படி ஏற்படும்? சந்திரனுக்கு உச்ச வீடு ரிஷப ராசியாயிற்றே! இப்படி இருக்க கிரகம் 9ல் சந்திரனும் ஒருவனாகும்போது அவனுக்கும் உச்சமெங்கே? சோதிட சாஸ்திர ஆராய்ச்சியில் அரைகுறை சாஸ்திர ஞானம் கூடாதென்றால் யாருக்குக் கூடாதென்பதுதான் தெரியவில்லை. ஒருக்கால் திருஞானசம்பந்தர் சரித்திரத்தைச் சொன்ன பெரியபுராண கர்த்தாவுக்கா? அல்லது அதை வசனமாக மொழி பெயர்த்தவருக்கா? அல்லது அவைகளைச் சொல்லி திரிகிற சைவப் பெரியார்களில் ஒருவரெனவும் தமிழ்ப் பண்டிதர்களில் ஒருவரெனவும் நடித்துத் திரியும் தோழர் சி.கே. சுப்பரமண்ய முதலியார் பி.ஏ. அவர்களுக்கா? அல்லது சாஸ்திர ஞானத்தில் அரை குறை கூடாதென இவரெழுதும் வியாசத்தின் காரணமாக வம்புக்கிழுக்கப்பட்ட சுயமரியாதைக்காரருக்கா? என்பதுதான் நமக்குப் புலப்படவில்லை. உலகமானது கிருஸ்துவர், மகம்மதியர், புத்தர், சமணர் முதலிய பல்வேறு மதத்தையும் இயக்கத்தையும் கொண்ட சமூகங்களை அடக்கிக் கொண்டிருக்கும்போது சோதிடத்தை ஒப்புக் கொள்ளாத சுமார் 100க்கு 95க்கு மேல்ப்பட்ட மக்கள் இவ்வுலகப் பரப்பிலிருக்கிறார்கள் என்பதாக ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில், தன் முயற்சியாலும் தன்னம்பிக்கையாலும், தன் மதிப்பாலும் அனேக நூதன விஷயங்களையும் சாதனங்களையும் விஞ்ஞான சாஸ்திர மூலம் மக்களுக்குப் பயன்படுத்துமாறு கண்டுபிடித்து மக்களுக்கு உதவி வரும் இக்காலத்தில், மதம் மக்களுக்கு அபின் என்று கண்டுகொண்டு அவைகளை உதறித் தள்ளிவரும் இக்காலத்தில், மூடப்பழக்க வழக்கங்களும் ஜாதி சமயங்களும் மக்களுக்கு அடிமைப் புத்தியையும் அறியாமையையும் உண்டாக்கி பாழ்படுத்தி வருகிறதென்றறிந்து அவைகளை வேறுடன் களைந்தெறியும் இக்காலத்தில், மாண்டவர்களை எப்படிப் பிழைப்பிப்பதென ஆராய்ச்சி செய்து அத்துறைகளிலும் வெற்றிகரமான முடிவுகளையும் அநுகூலங்களையும் அடைந்து வரும் இக்காலத்தில், மக்கள் இன்னமும் எப்படி சுகித்துவரச் செய்யலாம் என்று ரஷ்யாவின் தலைவர் யோசித்துத் திட்டங்களைக் கற்பித்து வருமிக்காலத்தில், இதைப்பார்த்து அமெரிக்காவின் தலைவர் தம் நாட்டு மக்களின் பொருளாதார சங்கடத்தையும் மற்ற வேலையில்லாத சங்கடங்களையும் தொலைத்து சுகவாழ்வு ஏற்படுத்த எந்தெந்த திட்டங்களை உபயோகிக்கலாமென யோசித்து வரும் இக்காலத்தில், இதைப் போன்றே மற்ற நாடுகளில் சிலதுகளும் யோசித்து வரும் இக்காலத்தில், இவ்வித சோதிட சாஸ்திர வீண் ஆராய்ச்சிகளுக்கும், புரட்டுகளுக்கும் இடமேயில்லை என்று இங்கே குறிப்பிட விரும்புகிறோம். நமது தோழர் சி.கே. சுப்ரமணிய முதலியார் பி.ஏ. அவர்கள் ''அரைகுறை



RangaRakes tamilnavarasam.com

சாஸ்திர ஞானம் கூடா''தென்னும் கட்டுரை மூலம் சுயமரியாதைக்காரர்களைத் தாக்க நினைத்து எழுதியவற்றை ஆராயும் தோறும் அவர் விஷயத்தில் ''மணற் சோற்றில் கல்லாராய்வது'' போன்ற பாமர விஷயங்கள் காணப்படுமாயின் இவரது ஆங்கில பி.ஏ. பட்டத்துக்கும், தமிழ் புலமைக்கும், சமயப் பற்றிற்கும், சாஸ்திர ஞானத்திற்கும் என்ன மதிப்பேற்படும் என்பது நமக்கு விளங்கவில்லை. ஆயினும் இனிமேலாவது நமது இயக்கத்தவர்களை நமது முதலியாரவர்கள் தோழமை கொண்டு அவர்களிடமிருக்கும் உயர்ந்த தன்மைகளாகிற தன்னலங்கருதாமை, பிறருழைப்பில் வாழாமை, மக்கள் நலத்துக்காகவே தங்கள் உடல், பொருள், ஆவிகளைத் தத்தம் செய்துழைத்தல் முதலிய பொதுநலச் சேவைகளையும், தூக்கு மேடையிலும் கூட சுயமரியாதைக்காரர்கள் இல்லாதவைகளைச் சொல்லி இவரைப் போல் தற்பெருமைக்கு இச்சிக்கமாட்டார்கள் என்பவைகளையும் உள்ளபடி அறிந்து தமது பட்டம் பதவிகளுக்குத் தகுதியாகவும் சைவர் என்பதற்குத் தகுதியாகவும் தமது மனப்பான்மைகளை மாற்றிக் கொண்டு ஒழுகுவார் என்னும் நம்பிக்கையில் இதைப்பற்றி விரிக்காமல் இத்துடன் விட்டனம்.

**புரட்சி - தலையங்கம் - 21.01.1934**



# தோழர் O.C. சீனிவாசன் மறைவு

கொச்சி ஈழுவ சமுதாய வீரரும் பிராமணரல்லாதார் இயக்கத்தின் உயரிய மேம்பாட்டிற்கு ஆரம்ப கால முதல் பெரிதும் உழைத்தவரும் சமதர்ம லட்சியத்தில் தீவிர பற்றுடையவருமாகத் திகழ்ந்த சென்னை தோழர் O.C. சீனிவாசன் அவர்கள் 18-1-34ல் பஸ் விபத்தால் அகோர மரணமடைந்தார் என்ற செய்தி கேட்டு பெரிதும் வருந்துகிறோம். தோழர் O.C. சீனிவாசன் அவர்கள் பாழான வர்ணாச்சிரம தர்மத்தையும் அதைப் போன்றதான இன்றைய முதலாளி - தொழிலாளி, பணக்காரன் - ஏழை என்ற கொடுமைகளையும் அறவே அகற்றப் பெரிதும் துணிவோடு தொண்டாற்றிய வாலிப வீரராவார். வாலிப உலகம் ஆண்மை, தியாகம் என்ற இரு குணங்களையும் பின்பற்றுவதற்கு அவர் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவர்.

உதாரணமாகச் சென்ற மூன்று வருஷங்களுக்கு முன்பு கொச்சி சமஸ்தான S.N.D.P. யோகத்தில் தலைமை தாங்கி மதப் பிரசாரத்தையும் உயர்வு தாழ்வுக்கான பொல்லாத வர்ணாஸ்ரமத்தையும் பற்றி வடநாட்டு பெருத்த பழுத்த வைதீகப் பண்டித மதன் மோகன மாளவியா அவர்கள் நெஞ்சில் மான ஈனமில்லாது பேசியகாலையில் நமது அருங்குணங்களமைந்த வீரர் ஆண்மையோடு தீப்பொறி பறக்கத் தனது தொப்பியை (Hat) அவர் முகத்திற்கு நேரே வீசி அவரது பிரச்சாரம் சிறிதும் செலாவணியாக விடாமல் மாளவியை உடனே மலையாள நாட்டை விட்டு விரட்டிய பேராற்றல் மிக்கவரில் குறிப்பிடத்தக்க முக்கியஸ்தராவர்.

நாற்பது ஆண்டுகளே நிறைந்த வீர சீனிவாசனை வாலிப உலகம் இழக்கப் பெரிதும் துயருறுகிறது என்பதில் ஐயமில்லை. அண்மையில் சென்னையில் நடைபெற்ற அகில இந்திய ஆசார சீர்திருத்த மகாநாட்டில்தான் தமிழர்களின் உயரிய வாழ்க்கைக்கு வீரகர்ஜனை செய்து மைலாப்பூர் பார்ப்பனீயத்திற்குக் குழி தோண்டிப் புதைத்து, தமிழர்களின் ஆண்மைக்கு ஆக்கம் தேடிக் கொடுத்த சீரியராவார். இப்பேர்க்கொத்த நமது தோழர் சீனிவாசன் அவர்கள் மறைவுக்கு வருந்துகிறோமெனினும் இயற்கையின் போக்கை உணர்ந்த நாம் அதன் மூலமே ஆறுதலுறுவதோடு அவரது அருமை மனைவியாரும், குடும்பத்தாரும் ஆறுதல் பெறுமாறும் வேண்டுகின்றோம்.

**புரட்சி - துணைத் தலையங்கம் - 21.01.1934**



RangaRakes tamilnavarasam.com



"PURATCHI"

# புரட்சி

ஏன் சுயமரியாதை இயக்கத்தில்

சேரவேண்டும்?

# ஈ.வெ. ராமசாமிக்கும் ச.ரா. கண்ணம்மாளுக்கும் ‘‘ஜே’’

நமதியக்கங் கண்ட தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் மீதும், தோழர் சா.ரா. கண்ணம்மாள் அவர்கள் மீதும் சென்ற அக்டோபர் மாதம் 29-ந் தேதியில் ‘‘குடி அரசி’’ல் எழுதிய ‘‘இன்றைய ஆக்ஷி ஏன் ஒழிய வேண்டும்’’ என்கிற தலையங்கத்தின் காரணமாக சர்க்காரால் துடரப்பட்ட ராஜநிந்தனை வழக்கை விசாரித்து வந்த கோவை ஜில்லா நீதிவான் ஆகிய தோழர் ஜி.டபள்யூ. வெல்ஸ், ஐ.சி.எஸ். அவர்கள் சென்ற ஜனவரி மாதம் 24-ந் தேதியன்று கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்திருக்கிறார்.

அதாவது தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்களுக்கு 6- மாதம் வெறுங் காவல் தண்டனையும் 300 ரூபாய் அபராதமும் தோழர் சா.ரா. கண்ணம்மாள் அவர்களுக்கு 3-மாதம் வெறுங் காவல் தண்டனையும் 300 ரூபாய் அபராதமும், ஷை அபராதத் துகை செலுத்தாத பக்ஷம் மேற்கொண்டு தலா ஒவ்வொரு மாதத் தண்டனையென்றும் தீர்ப்பளிக்கப்பட்டு காவலிலிருந்து வருகிறார்கள். எழுதப்பட்ட விஷயம் தப்போ, சரியோ என்றாவது, தண்டிக்கப்பட்ட விஷயம் தப்போ, சரியோ என்றாவது தற்போது நாம் கூற முன்வரவில்லை. ஏனெனில் அவைகளை வாசகர்களே நன்கறிந்திருக்கலாமென்கிற நம்பிக்கையேயாகும்.

ஆயினும் நமதியக்கத்தவர்களும் நமதியக்கத்தில் அபிமானமும், அனுதாபமும் கொண்டவர்களும் இனி என்ன செய்ய வேண்டுமென்பது தான் தற்போது எழ வேண்டிய முக்கிய பிரச்சினையாகும். இவ்விதப் பிரச்சினையைத் தீர்க்கத் தற்சமயத்தில் நாம் ஆராய்ந்து அதற்கேற்றபடி நடத்த வேண்டிய பொறுப்புக்குட்பட்டிருக்கிறோம் என்றால் அது மிகையாகாது. அதாவது நமது தமிழ்நாட்டில் நமதியக்கத்தின் பேரால் நிறுவப்பட்டிருக்கும் சங்கங்களின் எண்ணிக்கையானது நமது காரியாலயத்திற்கு இதுகாறும் கிடைத்திருக்கும் தகவல்களிலிருந்து அறியக் கூடியது சுமார் நூத்திப்பத்து என்பதாகும். நமது தோழர்கள் சிறைப்பட்டதிலிருந்து இனிமேல் ஒவ்வொரு கிராமங்கள் தோறும் நமதியக்கச் சங்கங்கள் நிறுவப்பட்டு அவைகளுக்குத் தலைமையாக ஒரு சங்கம் அவைகளின் தாலூக்கா தலைநகரில் ஏற்படவேண்டும். அப்படி ஏற்படுகிற தாலூக்காக்களின் சங்கங்களுக்குத் தலைமைச் சங்கமாக தாலூக்காக்களின் ஜில்லாக்களின்



RangaRakes tamilnavarasam.com

தலைநகர்களில் தலைமைச் சங்கங்களாக நிறுவப்பட்டு, ஒவ்வொரு சங்கங்களிலும் அங்கத்தினர்களை ஏராளமாகச் சேர்க்கப்பட்டும் பிரசாரங்களை முன்னிலும் அதிகமாக மக்களுக்கு சமதர்ம உணர்ச்சியுண்டாகும் படியாகவும் சர்க்கார் மீது எவ்வித துவேஷ உணர்ச்சி உண்டாக்காமலும் நமதியக்க உணர்ச்சியையே முன்னிலுமதிக ஊக்கங்களுடன் முன்னேறும்படி உண்டாகுமாறு பிரசாரம் செய்து வரவேண்டும். அதனால் மக்களுக்குள் ஒருவித வித்தியாசமற்ற ஒற்றுமையை உண்டாக்கி, அறியாமையையும் அடிமைப் புத்தியையும், மூடப்பழக்க வழக்கங்களையும் வேரோடு களையும்படியான திறன் உண்டாகும்படிக்கும் பிரசாரங்கள் நடைபெற வேண்டியதே முக்கியமான கடமையாகும்.

அப்பொழுதுதான் நமதியக்கத் தத்துவங்களையும், கொள்கைகளையும் சர்க்கார் உள்ளபடி அறிந்து தாம் (சர்க்கார்) நமதியக்கத்தின் பேரில் கொண்டுள்ள தப்பபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ளவும் நம்முடன் சேர்ந்துழைத்து நமது இயக்கத்திற்கேற்ற சட்டங்களையும், திட்டங்களையும் உண்டாக்க முற்படவும் எத்தனிப்பார்கள். நமது நாட்டு மக்களுக்கு ஒரு விதப் புத்துணர்ச்சியும் உண்டாகலாம். நமதியக்கத்தின் கொள்கைகளையும் தத்துவங்களையும் நம் மக்களிடையில் பரப்பி வருவதில் செய்ய வேண்டிய பிரசாரத்தின் மூலமும், எழுத வேண்டிய கட்டுரைகள் முதலியவைகளின் மூலமும் நமக்கேற்படுகிற அனேகமாயிரக்கணக்கான எதிர்ப்புகளுக்கும், முட்டுக்கட்டைகளுக்கும் சர்க்கார் தண்டனை முதலிய இன்னல்களுக்கும் எதிர்பார்த்துத் தயாராகவுள்ள தியாகத்தோடுள்ளவர்களுக்கேதான் அவைகள் கைகூடிவரும் என்பது ஒவ்வொரு இயக்கத்தின் ஸ்தாபகர்களுடைய சரித்திர வாயில்களால் நன்கறிந்தவைகளானபடியால் அதை நாம் இங்கு சொல்லத் தேவை இராதென்றே நினைக்கிறோம். ஆகையால் நமதியக்கத் தத்துவங்களையும், கொள்கைகளையும் நம்நாட்டு மக்களிடையில் பரப்பி அவர்கள் யாவரும் மற்ற நாட்டு சமதர்ம இயக்கத்தவர்களுடன் சமமாக பசி, தரித்திரம், அறியாமை, அடிமைத்தன்மை முதலிய பிணிகள் அணுகாமல் சுகமாக அதாவது செல்வவான்களுக்கொப்ப தங்கள் வாழ்க்கையை நடத்தி சுகம் பெற்று வாழ்ந்து வரவேண்டுமென்கிற ஒரு கருத்து கொண்டுதான், தமது உடல், பொருள், ஆவிகளைத் துறந்து மனமொழி காயங்களால் இராப்பகலன்றி உழைத்து வந்தவர்கள், இன்று அதே காரணத்திற்காக சிறையிலிருக்க நேர்ந்திருக்கிறது என்றால், எந்த இயக்கத்திற்காகவும், எந்தக் கொள்கைக்காகவும், எந்த எண்ணத்திற்காகவும், எந்த நலன்களுக்காகவும் சிறைப்பட்டார்களோ அந்தந்த கொள்கையும், எண்ணமும், நலன்களும் நம்நாட்டு மக்களுக்கு உண்டாகி வாழவேண்டும் என்கிற எண்ணமுடைய ஒவ்வொருவரும் இனிச் செய்ய வேண்டிய தென்னவென்பதில் தங்கள் தங்கள் கருத்தைச் செலுத்திப் பார்த்தால் எவ்வித முன்னேற்றங்களுக்கும் சங்கங்களும், பிரசாரங்களுமே உற்ற துணையாகும். ஆகையால் அவைகளை முன் தெருவித்துக் கொண்டபடி



நிறுவி பிரசார மூலம் நமது மக்களுக்கு விடுதலையளிக்குமாறு நமதியக்கத் தோழர்களையும், நமதியக்கத்தில் அனுதாபமும், அபிமானமும் உள்ள தோழர்களையும் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மற்றும் நமது கொள்கை சமதர்மமும், சமத்துவமுமானதற் கேற்றபடி நமதியக்கத்தவர்களும் ஒருவருக்கொருவர் சமானமானவர் களேயாவர்கள். நமது ஈ.வெ.ரா. உடனும் சா.ரா.க.வுடனும் மற்றுமுள்ள இயக்கத்தவர்களும் சமமேயாவார்களாகையால் தற்பொழுது நமதியக்கப் பிரசாரங்களிலும் மற்ற நிர்மாண வேலைத் திட்டங்களிலும் ஒரு ஈ.வெ.ரா.வும், சா.ரா.க.வும் இல்லாதபோது நமதியக்கத்திலுள்ள அனைவர்களும் அவர்களைப் போலராகி அவர்கள் தற்போது நம்மிடையில்லாத குறையை நிவர்த்திக்க முற்படுவார்களென்றே நம்புகிறோம்.

**- ஈ.வெ.கி.**

**புரட்சி - தலையங்கம் - 28.01.1934**



RangaRakes tamilnavarasam.com

# தோழர் K. ராமசாமி

நமது ஈரோடு முனிசிபல் கவுன்சில் செகரிடரி தோழர் K. ராமசாமி (முதலியார்) அவர்கள் அடுத்த பிப்ரவரி மாத முதல் வேலூர் முனிசிபாலிட்டிக்குக் கமிஷனராக சென்னை சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் என்ற செய்தி கேட்டுப் பெரிதும் சந்தோஷமடைகிறோம்.

தோழர் K. ராமசாமி அவர்கள் சென்ற 10 வருஷங்களாக நமது ஈரோடு முனிசிபாலிட்டியில் நல்ல தேர்ந்த அனுபவம் பெற்றவர். ஈரோடு நகரின் உயரிய மேம்பாட்டிற்கும், தண்ணீர் வசதிக்கும், சுகாதார நலனுக்கும், உல்லாசகாலப் போக்குக்கான வசதிகளுக்கும் தகுந்த நிர்மான வேலைகளைச் செய்தவராவார். இவர் கீழ்தர முனிசிபல் ஊழியர்களின் மேம்பாட்டிற்கு அரும்பாடுபடுபவர். முனிசிபல் போன்ற ஸ்தல ஸ்தாபன கீழ்தர ஊழியர்களுடைய உத்தியோகத்துக்கும் சந்தோஷ வாழ்வுக்கும் சர்க்காரின் உத்தரவாதம் அவசியம் வேண்டற்பாலது என்ற உயரிய கிளர்ச்சியில் ஈடுபட்டவராவர். இவர் ஈரோடு நகர மக்களின் நன்மதிப்பையும், முனிசிபல் கவுன்சிலின் முழு நம்பிக்கையையும் பெற்றவர்.ஆகவே இப்பேர்ப்பட்ட தோழர் K. ராமசாமி அவர்கள் நமது ஈரோடு முனிசிபாலிட்டியை விட்டுப் பிரிகிறார் என்ற முறையில் வருந்துகிறோமென்றாலும் அவர் வேலூர் முனிசிபாலிட்டியின் கமிஷனர் பதவிக்குச் சென்னை சர்க்காரால் உயர்த்தப்படுகிறார் என்ற முறையில் நாம் சந்தோஷப்படுவதோடு அவர் மென்மேலும் நல்ல பதவிகள் பெற்று நாட்டு மக்களுக்கு ஸ்தல ஸ்தாபன இலாகாவில் நலன் பல செய்ய இச்சிக்கின்றோம்.

**புரட்சி - துணைத் தலையங்கம் - 28.01.1934**



# தற்காலம் நமக்கு வேண்டியதென்ன?

தற்காலம் நமது நாட்டுக்கு வேண்டியது வர்ணாஸ்ரமமாகிற (மக்களுக்குள் ஆண்டானடிமை, உயர்ந்தோன், தாழ்ந்தோன் வேறுபாட்டுகளை விர்த்தி செய்கிற) வெறியைக் கிளப்ப மக்களுக்குள் பரப்பி வர வேண்டுமா? அல்லது மக்கள் யாவரும் பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை என்கிற சமத்வக் கொள்கைகளைக் கிளப்பி அவைகளை மக்களுக்குள் பரப்பி வரவேண்டுமா? ஆகிய இந்த இரண்டு கேள்விகளைப் பற்றியும் நமது மக்களிருக்கும் நிலைமையையும், அந்தஸ்தையும் பற்றியும் யோசித்து தற்காலம் இவ்வித வேறுபாடுகளை ஒழித்து வந்திருக்கிற அந்நிய நாட்டு மக்கள் நிலைமையையும் அந்தஸ்தையும் கவனித்துப் பார்த்தால் நம் நாட்டின் மக்களுக்கு இத்தருணத்திற்கு வேண்டியது எது என்பது விளங்காமற் போகாது. ஆகையால் வர்ணாஸ்ரம மொழிந்த சமத்வக் கொள்கையாகிற நன்மருந்தே இன்றியமையாத சாதனமாகும். ஏனெனில் நம் நாட்டு மக்களை வெகு காலமாகப் பீடித்து அடிமை, அறியாமையாகிய கொடிய நோய்வாய்ப்படுத்தி உருவழித்து வரும் சமயம், சாதி, ஆச்சிரமம் முதலியவைகளுக்கு தாத்காலிகத்திற்கேற்ப உய்விக்கக் கூடியது அம்மருந்தேயாகும்.

உதாரணமாக வர்ணாச்சிரப் பேதமில்லாத (பிறப்பினால் உயர்வு தாழ்வில்லாத) கிருஸ்துவ, முஹம்மதிய, புத்த என்கிறவைகளுக்குட்பட்ட ஜன சமூகஸ்தர் இன்றைக்கும் அரசாட்க்ஷி புரிந்து வருவதும் வேற்றுமைக்குட்பட்ட நம்மவர்கள் வேற்றுமைக்குட்படாத முன் சொன்னவர்களால் ஆளப்படுவோர்களாக வாழ்விலும், பேச்சிலும், எழுத்திலும், நடத்தை அநுபவம் முதலியவைகளிலும் சுதந்திரங்களை இழந்து அடிமைகளாகவும் அறியாமையால் சூழப்பட்டவர்களாகவுமே வாழ்ந்து வருவது நிதர்சனமாகப் பார்த்து வருகிறோம். இன்னமும் சொல்லப் புக்கால் உலகத்தில் சிறந்து மேம்பாடடைந்து வரும் வளர்ச்சிக்கு ஆதாரமாயுள்ள நாகரீக முதிர்ச்சியின் பயனாய் ஏற்பட்டிருக்கிற மதமொழிப்பு என்னுங் கொள்கையினால் மதமென்பதேயில்லாத ஒரு தேசத்தில் (ரஷ்யாவில்) பார்த்தால் மக்களுக்குள் பிறப்பினால் உயர்வு, தாழ்வில்லை என்பதோடு ஏழை, பணக்காரன் என்னும் வேறுபாடுகூட ஒழிந்து யாவரும் சமமென்பதைக் காண்கிறோம்.



RangaRakes tamilnavarasam.com

இப்படியாக மேன்மேலும் நாகரீகம் விர்த்தியாகி அதன் மூலம் மக்கள் விடுதலையடைந்து சமூகம் விருத்தியடைந்து வரும் இக்காலத்திலும் அவ்வித விருத்திகளுக்கு முள்வேலி இட்டது போலுள்ளதற்கேற்றபடியாகிற வர்ணாச்சிரம தர்மம் இருக்க வேண்டுமென்றும் அதன் பயனாக ஒரு சிலர் கொடுமைக்குள்ளாக்கப்பட்டு விட்டார்கள், அவர்களை உத்தரிக்க மீண்டும் அவ்வித வர்ணாஸ்ரமத்துக்குட்பட்ட ரீதியாக ஆதரிக்க வேண்டும், அதற்காக நிதி திரட்ட வேண்டுமென்றும், அந்நிதிக்கு எவரும் தங்களாலியன்றவைகளை என்னிடம் தாருங்கள் என்றும் சொல்லி சர்வ வல்லமையுள்ள வஸ்துவென்று சொல்லப்படுகிறதே உருவெடுத்து வந்தது என்று வைத்துக் கொண்டாலும் அப்படிப்பட்ட ஒரு பெரியார் எவராயினும் அவரை நம்நாடு தற்போதிருக்குமிவ்வித நிலைமைகளிலும் வரவேற்கலாமா? அல்லது பஹிஸ்கரிக்கலாமா? வென்பதை நமது நேயர்களுக்கே யோசித்துப் பார்க்கும்படி விட்டுவிடுகிறோம்.

இன்னமும் நாம்தான் இவ்விதம் யோசிக்கிறோமாவென்றால் வர்ணாச்சிரமங்களை நிலை நாட்டி வைப்பதற்கென்றே பரம்பரையாக இருந்து வருபவர்களுக்கெல்லாம் குரு அதாவது ஜகத்குரு சங்கராச்சாரியாரும் கூட இத்தகைய பெரியாரின் தன்மையைக் கண்டித்து வருகிறார். உதாரணமாக, பூரி சங்கராச்சாரியார், தேவகோட்டையில் சில வாரங்களுக்கு முன்பு பேசியிருப்பதை வாசகர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டுகிறோம்.

> அதாவது ‘‘காந்தி ஒரு ஹிந்துவாக இருந்து கொண்டு தீண்டாமை யொழிப்பு பேச உரிமையில்லையென்று வேதங்களில் 259 ஆதாரங்கள் இருப்பதாகவும், விக்கிரக ஆராதனையொழிப்புக்காரரான ஆர்ய சமாஜத்தாரையும் அவர் சேர்த்துக் கொண்டிருக்கிறார் என்றும், வடஇந்தியாவில் ஆரிய சமாஜிகள் ஆதிதிராவிடர்களுக்கு ஆலயப் பிரவேசம் வேண்டுமென பலத்த பிரசாரம் செய்கிறார்களென்றும், மத்தியில் ஏதும் திருத்தம் செய்ய வேண்டியிருந்தால் நான் சொல்லுகிறேன் என் அபிப்பிராயம் அப்படித்தான் செய்ய வேண்டுமென்பதுதான் வீரர்கள் வழக்கமென்றும், இயேசுக் கிறிஸ்து, மகம்மது முதலியவர்கள் அப்படித்தான் செய்தார்களென்றும், ஆனால் காந்தியோ ‘‘வருணாச்சிரமம் உண்டு, ஆதிதிராவிடருக்கு கோவில் பிரவேச உரிமையும் வேண்டும்’’ என்று சொல்லுவது வீரர் வாழ்க்கை யாகாதென்றும், அவர் சூழ்ச்சி செய்து மக்களை ஏய்க்கப் பார்க்கிறார் என்றும், அதற்கு ஏமாறக்கூடாதென்றும் கூறி, மேலும் குறிப்பிட்டதாவது நாஸ்திகத் தலைவர்கள் பலரை எனக்கு நேரில் தெரியும். அவர்களுக்கு வேதத்தில் நம்பிக்கை யில்லை யென்று சொல்லிக் கொண்டு அவர்கள் கொள்கையை பிரசாரம் செய்கிறார்கள். அவர்கள் நேர்மையை நான் போற்றுகிறேன். ஆனால் காந்தியோ சூழ்ச்சி செய்கிறார்’’



என்பதாகும். மற்றும் இப்பெரியார் யாருக்காக இவ்வளவு கஷ்டப்பட்டு உத்தரிக்கப் போகிறார்களோ, அத்திருக்குலத்தடியார்களாகிற ஹரிஜனங்களென்று சொல்லப்பட்டவர்கள்கூட சென்னையிலும், கொச்சி, திருவாங்கூர் முதலிய மலையாள நாடுகளிலும் விருதுநகர் போன்ற இடங்களிலும் இன்னும் மற்ற பிரதேசங்களிலுள்ளவர்கள் ஆங்காங்கே கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து எங்களை உத்தரிக்க தாங்கள் வேண்டுவதில்லை என ஆயிரம், பதினாயிரம், லக்ஷம் கையெழுத்திட்ட அறிக்கைப் பத்திரங்களையும் அப்பெரியார் முன் சமர்ப்பிக்கப்பட்டும் வந்திருக்கிறது.

இது மட்டுமல்ல இன்னும் இப்பெரியாருக்கு இவர் செல்லு மிடங்களிலெல்லாம் பகிஷ்காரங்களும் நிகழுமென்பதற்கு அநேக அறிகுறிகளும் காணப்படுகின்றன.

நம் நாட்டிற்கு இவ்விதமாக அவசியப்பட்டிருக்கிற இப்பெரியார் பின் எதற்காக இங்கெல்லாம் விஜயம் செய்கிறார்? யார் யார் பெயரால் யார் யாரைப் பிழைக்க வைக்கப் பார்க்கிறார்? இவ்வித சுற்றுப் பிரயாணங்களாலும் நிதி திரட்டல், முடிச்சு வாங்கல்களாலும் யாருடைய முன்னேற்றம் விருத்தி? யாருடைய முன்னேற்றம் பாழ்? லாபம் யாருக்கு? நஷ்டம் யாருக்கு? என்பவைகளும் நம் நாட்டு மக்களுக்கு நிலைமைக்கு வேண்டுவது யாது? என்பவைகளைச் சிந்தித்து ஏற்ற வழிகளில் அவரவர்கள் கடமைகளைச் செய்ய முற்பட வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

**புரட்சி - தலையங்கம் - 04.02.1934**



RangaRakes tamilnavarasam.com

# வருத்தம்

நமது இயக்க பிரபல தோழர்களில் முக்கியஸ்றான தோழர் ஏ.பொன்னம்பலனார் அவர்களின் சகோதரர் மாணிக்கம் அவர்கள் நேற்று இரந்தார் என்பதையறிந்து விசனிக்கிறோம். சென்ற ஆண்டு தங்கையையும், இவ்வாண்டு தம்பியையும் பிரிந்த தோழர் பொன்னம்பலனாருக்கு நாம் ஆறுதல் கூற விரும்பவில்லை என்றாலும் வயோதிகர்களான அவரின் தாய் தந்தையர்களுக்கு ஆறுதல் கூற ஆசைப்படுகிறோம்.

**புரட்சி - இரங்கல் செய்தி - 04.02.1934**



# பரோடா பெண்கள் முன்னேற்றம்

## புதிய சட்ட விபரம்

பரோடா சமஸ்தானத்திலுள்ள இந்துப் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இந்து சமுதாயச் சட்டத்தை பின்வருமாறு திருத்தி புதிய சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். திருத்தப்பட்ட அந்தப் புதிய சட்டப்படி ஒரு இந்து பொதுக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்துபோனால் அவருடைய விதவை அந்தக் குடும்பத்தில் ஒரு பங்காளி ஆகிவிடுகிறாள். விதவைகளின் முந்தின நிலைமையில் இந்தச் சட்டம் ஓர் பெரிய மாறுதலை உண்டுபண்ணி விட்டிருக்கிறதென்று சொல்லலாம். முந்தியெல்லாம் ஒரு விதவைக்கு அவள் புருஷன் குடும்பத்திலே சோறும், உடையும்தான் கிடைக்கும். வேறு எவ்வித உரிமையும் கிடையாது. இந்தச் சட்டப்படி ஒரு விதவையானவள் தன் புருஷன் குடும்பத்தின் மற்ற நபர்களைப்போல் ஒரு சம பங்காளி ஆகிவிடுகிறாள். சொத்தில் தனக்குள்ள பாகத்தைப் பிரித்துக்கொடுக்கும்படி கேட்பதற்குக் கூட இந்தச் சட்டத்தினால் உரிமை ஏற்பட்டிருக்கிறது.

புருஷனுடைய சொத்து அவர் தானே சம்பாதித்த தனி சொத்தாயிருந்தால் பழய சட்டப்படி அவருடைய மகனுக்கும், பேரனுக்கும், பேரன் மகனுக்கும்தான் கிடைக்கும். இந்த வார்சுகள் இல்லாமலிருந்தால் மாத்திரம் விதவைக்குக் கிடைக்கும். இப்போது இந்தப்புதிய சட்டத்தினால் மகன், பேரன் முதலியவர்களைப் போலவே விதவையான பெண்ணும் சமபாகம் கிடைக்க உரிமை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. விதவையான ஒரு மருமகளுக்கும், தாய்க் கிழவிக்கு அதாவது மாமியாருக்கு அடுத்தபடியான அந்தஸ்து ஏற்படுகிறது.

இதற்கு முன்னெல்லாம் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொடுத்துவிட்டால் அதன்பின் அவளுடைய தகப்பன் குடும்பத்தில் அவளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. புருஷன் வீட்டில் சாப்பாட்டுக்கு கஷ்டமாயிருந்தாலும் கூட அவளுடைய தகப்பன் குடும்பத்திலிருந்து சம்ரட்சனை பெற அவளுக்கு உரிமை இருந்ததில்லை. இதனால் பல பெண்கள் கஷ்டம் அனுபவிக்க நேரிட்டிருந்தது.

இந்தப் புதிய சட்டப்படி இந்த நிலைமை மாற்றப்பட்டிருக்கிறது. எப்படியெனில் புருஷன் இறந்தபின் ஒரு பெண் தன் தகப்பன் வீட்டிலேயே



RangaRakes tamilnavarasam.com

வசித்து வருவாளானால், அவளுடைய மாமனார் வீட்டில் அவளுக்கு சம்ரட்சனை செலவு கொடுக்க வழியில்லாமல் இருக்கும்போதும் தகப்பனுக்கு அவளை வைத்துக் காப்பாற்ற சக்தி இருக்கும்போதும் தகப்பன் குடும்பத்தாரே அவளுடைய ஜீவனத்துக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று இந்த புதிய சட்டம் கூறுகிறது.

கலியாண மாகாத பெண்ணுக்கு இதுவரையில் சம்ரட்சணையும் கலியாணச் செலவும் தான் கொடுக்கப்பட்டு வந்தது. சொத்து பாகப் பிரிவினை காலத்தில் இவ்விரண்டுக்கும் பதிலாக சகோதரனுடைய பங்கில் நாளில் ஒரு பாகம் கொடுக்கப்படுவதும் உண்டு. ஆனால் சொத்து பங்கு போட்டுக்கொடுக்கும்படி கேட்க உரிமை கிடையாது.

இந்தப் புதிய சட்டப்படி அவள் தன் பாகத்தைத் தனியாகப் பிரித்துக் கொடுத்துவிடும்படி கேட்கலாம். இதனால் கலியாண மாகாத பெண்களுக்கு அதிக சுதந்தரமும், சுயாதீனமும் ஏற்பட்டிருக்கிறது.

சீதன விஷயமான பாத்தியதையைப்பற்றி பழய சட்டத்திலிருந்த சில சிக்கல்களும் நீக்கப்பட்டிருக்கின்றன.

முந்தின சட்டப்படி பெண்கள் தங்களுக்குக் கிடைக்கிற சொத்துக்களை அனுபவிக்க மாத்திரம் செய்யலாம் - விற்பனை செய்ய முடியாது. இப்போது பெண்கள் 12,000 ரூபாய் வரையில் தங்கள் சொத்துக்களை விற்பனை செய்யவோ, அல்லது வேறு விதமாக வினியோகிக்கவோ ஷை புதிய சட்டம் பூரண உரிமை அளிக்கிறது. இந்தப் புதிய சட்டத்தினால் பரோடா நாட்டுப் பெண்களுக்கு அதிக உரிமைகளும், பாதுகாப்புகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விதமே பிரிட்டிஷ் இந்தியாவிலும், மற்ற சமஸ்தானங்களிலும், இந்து சட்டம் திருத்தப்படுமாயின் பெண்கள் முன்னேற்றத்துக்குப் பெரிதும் அனுகூலமாயிருக்கும்.

**புரட்சி - கட்டுரை - 04.02.1934**



# துணுக்குகள்

## ஆதிதிராவிடர் இல்லையோ?

அடுத்த மார்ச்சு, ஏப்ரல் மாதத்தில் நிர்வாக சபையில் ஓர் இடம் காலியாகும் என்று ஏஷ்யம் கூறப்படுகிறது. இக்காலியாகும் இடத்தில் யார்? உட்கார்வது என்பதுபற்றி எல்லாப் பத்திரிகைகளும் ஏஷ்யம் கூறி சிலர் பெயரை சிபார்சும் செய்கிறது. வகுப்புத் துவேஷத்தை வெறுக்கும் சகவர்த்தமானியான ‘‘சுதேசமித்திரன்’’ ஒரு ஐயங்கார், அல்லது ஐயர் கனவான் பெயரை சிபார்சு செய்வதுடன், முன்பு பனகால் காலத்தில் காபினெட்டில் ஓர் பிராமணர் இருக்க வேண்டுமென்பதற்காகவே மந்திரியாக ஒரு பிராமணரை நியமித்ததாகவும் அந்நியாயப்படி இன்று ஓர் பிராமணர் அவசியம் என்று கூறுகிறது.

இதுவரை பெரிய உத்தியோகங்களில் ஐயர், ஐயங்கார், ஆச்சாரியார் எல்லாம் நீண்ட நாள் இருந்து பார்த்துவிட்டார்கள். அதைப்போன்றே முஸ்லீம், கிருஸ்துவர், முதலியார், நாயுடு, தமிழர், தெலுங்கர், கேரளர் முதலிய யாவரும் இருந்து பார்த்துவிட்டார்கள் என்று நமது சகவர்த்தமானிக்கு இவைகளைக் கூறுகிறோம். ஆனால் இதுவரை இந் நாட்டில் ஜனசங்கையில் நாலில் ஒரு பாகத்தினரான ஆதிதிராவிடர் என்பவர்களில் ஒருவர்கூட இதுவரையில் அங்கு இருந்து பார்த்ததில்லை. இன்று ஆதிதிராவிட முற்போக்கைக் குறித்து எங்கும் பலத்த கிளர்ச்சி இருக்கிறது. ஆதலால் சகலரும் ஒன்றுசேர்ந்து ஆதிதிராவிட கனவான் ஒருவர் அங்கு வர முயற்சிக்கக் கூடாதா? என்பதே!

நமது மாகாண ஆதிதிராவிட சமூகத்தலைவர்கள் தங்களுக்குள்ள அற்ப அபிப்பிராய பேதங்களை விட்டொழித்து ஒரு ஆதிதிராவிட கனவான் அங்குவர முயற்சிப்பார்களா? அல்லது இன்றுள்ளது போன்ற உயர்தர ராஜதந்திரிகளின் முன்னோடும் பிள்ளையாக மட்டும் இருந்தும் தங்கள் காலத்தைக் கடத்த ஆசைப்படுகிறார்களா? ஆதிதிராவிடர்கள் ஒன்றுபட்டால் இது கிட்டாது போகுமென்று நாம் நினைக்கவில்லை.

## விதவையிலும் பணக்காரனீயமா?

நமது சட்டசபையில் கனம் கல்வி மந்திரியவர்கள் ஐஸ்ஹவுஸ் என்பதிலுள்ள விதவைகள் விடுதிக்கு வருடம் செலவுக்கும், உபகாரச்



RangaRakes tamilnavarasam.com

சம்பளத்துக்கும் ரூபாய் 27-ஆயிரம் செலவாவதாகக் கூறியிருக்கிறார். அத்துடன் அவ் விதவை விடுதியில் பிராமணப் பெண்கள் 62-பேர் என்றும், பிராமணரல்லாதார் விதவைகள் பன்னிரண்டே பேர்களென்றும் கூறியுள்ளார்.

விதவைகள் மணத்தை எதிர்க்கும் வைதீகம், வைதீகப் பிராமணீயம் இவர்களிடம் நாம் எதுவும் சொல்லவில்லை. சீர்திருத்த விதவை மணத்தை, விதவைகள் முற்போக்கை விரும்புகிறவர்களுக்கே கூறுகிறோம். விதவைகளில் கூடவா பணக்காரனீயமும், பார்ப்பனீயமும் இருக்க வேண்டும். இதற்குக் காரணர் விதவைகள் விடுதியில் தலைமை உத்தியோகம் ஓர் பிராமண விதவை அம்மாளிடமும், விதவை விடுதியில் உள்ள உபாத்தியாயினிகளில் பெரும்பாலும் பிராமண அம்மாள்களாலேயே நிரப்பப்பட்டிருக்கிறதென்றும் ஜஸ்டிஸ் பத்திரிகையில் பல முறை செய்தி வந்திருக்கிறது. கனம் கல்வி மந்திரியவர்கள் விதவை விடுதி தலைமையைத் திருத்தியமைத்து வருடந்தோறும் வரும் பிராமணரல்லாத விதவைகள் மனுக்கள் குப்பைத் தொட்டிக்குப் போகாதிருக்கச் செய்ய இனியாவது தவறக் கூடாதென்று கூறுகிறோம்.

## கேள்வி முறை ஏது?

சென்ற சட்டசபையில் கூட்டத்தில் "இனாம்தார்கள் குடிகள்" சம்பந்தமாக ஓர் மசோதா செய்யப்பட்டதை எல்லா விடங்களிலும் கண்டித்து தீர்மானங்கள் அனுப்பப்படுகிறது. பத்திரிக்கையின் செல்வாக்கு இனாம்தார்களின் குடிகள் நன்மையைவிட, இனாம்தார்கள் நன்மை கோரியே பெரிதும் உபயோகப்படுத்தப்படுகிறது. சர்கார் இம்மசோதாவுக்கு ஆதரவு காட்டியபோதிலும் அதை பயன்படாதடிக்க செய்யப்படும் முயற்சி மிக அதிகமாகும். இதற்குக் காரணம் இனாம்தார்கள்தான் பெரும்பாலும் பத்திரிக்கையைப் படிக்கும், ஆதறிக்கும் கூட்டமாக இருக்கிறார்கள், இனாம்தார்கள் குடிகளில் பெறும்பான்மையானவர்களுக்கு தங்களுக்கெல்லாம் நன்மையை கொடுக்கக்கூடிய திட்டம் ஒன்று வந்திருக்கிறதென்பதே தெரியாத விஷயமாகும். இனாம்தார்களின் குடிகள் அவர்களின் நலம் கருதி செய்யப்பட்ட மசோதாவின் செய்தியை அரியும்படிச் செய்ய சர்க்கார் விளம்பர அதிகாரிகளாவது முயல வேண்டும்.

## எல்லாம் பொதுவுடமையா?

இனாம்தார்கள் குடி விஷயமாய் விவாதம் நமது சட்டசபையில் நடக்கும்போது ஓர் சட்ட நிபுணர் கூறினார் இனாம்தார்களுக்கு சொந்தமானதை பரிமுதல் செய்யும் உரிமை இச்சட்டத்துக்கு இருக்கிறது. இது பொதுவுடமை தத்துவம் என்றார். மற்றோர் பிரபலஸ்தர் கூறினார் இச்சட்டம் செய்தல் ரஷ்ய பொதுவுடமையை வரவேற்பது போலாகுமென்றார். இதற்கு பதிலளித்த கனம் மந்திரியாரோ! இவ்விதம் சட்டம் செய்யாதிருத்தலானது ரஷ்யப் பொதுஉடமையை இங்கு கூப்பிட



இடமுண்டாகுமென்றார். இவ்விதம் தொட்டதெல்லாம் பொதுவுடமையாக தோன்றுகிறது. இதைப்போன்றே ஐக்கிய மாகாணத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள விவசாயிகள் கஷ்ட நிவாரண மசோதாவை, அம்மாகாண பேங்கர்கள் சங்கத்தார் தெரிந்து கவர்னருக்கு அனுப்பியுள்ள ஓர் மகஜரில் - பொதுவுடமைக்கொள்கையை இம் மசோதா மூலியம் ஒப்புக்கொள்வது போலாகிறது என்று காட்டியிருக்கிறது. இவ்விதம் பிரபுக்கள் சர்க்கார் செய்யும் ஒவ்வொன்றையும் - பொதுவுடமை என்று சொல்கிறார்களே! இதற்காக இவர்கள்மீது சர்கார் ஏதும் நடவடிக்கை எடுக்காதா?

## பொக்கிஷமெம்பர் பொய்யரா?

நாட்டில் மிராசுதாரர்கள் துயரச் சத்தம் மிகவும் பலமாகப் போய்விட்டது. நிலவரி மட்டுமல்ல, தண்ணீர் வரியையும் சேர்த்து நூற்றுக்கு 25 விகிதம் குறைக்க வேண்டுமென்று நேற்று சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இவ்வாதத்தில் மிராசுதார்களோ வரி கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்கிறார்கள். கவர்ன்மெண்டு பொக்கிஷ மெம்பர் அவர்களோ மிராசுதார் கூச்சல் வெறுங் கூச்சல் என்கிறார். இருக்கும் ரிசர்வு பண்டைக் காலி செய்வதற்காகவே நிலவரி குறைக்கவேண்டுமென்று தீர்மானம் கொண்டுவரப்பட்டிருப்பதாகக் கூறுகிறார். இவ்விரண்டில் எது உண்மை என்பதும், உண்மையாகவே கஷ்ட நிலையிலுள்ள விவசாயிகளை சர்க்கார் கவனிக்கிறார்களா? இல்லையா? என்பதும் நம்முடைய விவாதமல்ல. பொக்கிஷ மெம்பர் சொல்வதில் சிறிது உண்மையுண்டு. அத்துடன் மிராசுதார்களுக்கே இவ்வளவு கஷ்டமானால், மிராசுதார்களிடம் வேலை செய்யும் சோகமுடைய விவசாயக்கூலிகளின் நிலைமை என்ன? என்பதை சிந்திக்க மிராசுதார்கள் தவறமாட்டார்கள் அல்லவா? அவர்கள் குறைகளை சொல்ல எந்த சட்டசபை இருக்கிறது!

## தேர்தல் நாடகமா?

தாலுகா போர்டுகளை ஒழித்து விடுவதா? இல்லையா? என்று கடைசி முறையாக சட்டசபையில் விவாதிக்கப்பட்டது. கனம் முதல் மந்திரியார் இன்றுள்ள 208 தாலூகா போர்டுகளில் பாதி போர்டுகள் தங்கள் செலவுக்குக்கூட வழி தேடிக்கொள்ள முடிவதில்லை என்கிறார். ஆதலால் 208 போர்டுகளையும் இழுத்துப் பூட்டிவிட வேண்டுமென்கிறார். இது இன்றைய மந்திரி முயற்சிமட்டுமல்ல. சென்ற ஏழு வருடமாக இருந்த மூன்று மந்திரி சபையும் ஆதரித்த முயற்சியே யாகும். ஆனால் முன்பு மந்திரி கட்சியமைத்தவர்களே இன்று இதை எதிர்க்கிறார்கள். எதிர்ப்புக்குத் தோதாகப் பல நியாயங்களைக் கூறுகிறார்கள். ஏழு வருடங்களில் 500-க்கு மேற்பட்ட பஞ்சாயித்து சபைகள் உண்டாகிவிட்டது. தாலூகா போர்டுகளின் வருமானத்தில் பாதி பாகத்தை அது விழுங்கி



RangaRakes tamilnavarasam.com

விடுகிறது. இதற்கு பஞ்சாயித்து போர்டுகளை கலைக்க வேண்டியதுதானா? 208 போர்டுகளுக்கு பயப்படுகிறவர்கள் 500 போர்டுகளுக்கு அதிகம் பயப்படுவார்கள். அடுத்த தேர்தலில் தாலூகா போர்டுகளைக் காப்பாற்றிய சலுகையைக்காட்டி, தங்கள் கட்சிக்கு தாலூகா போர்டுகளின் செல்வாக்கை உபயோகப்படுத்திக் கொள்ளவே சிலர் இன்று எண்ணுகிறார்கள். இன்றைய சட்ட சபையின் நிலைமையைதான் இவ்விவாதம் காட்டக்கூடியதாக இருக்கிறது.

**புரட்சி - துணுக்குகள் - 04.02.1934**



20 புரட்சி

குடி அரசு
பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், மோக்ஷமும்.

கைவல்யம் அல்லது கடவுள் விளக்கம்.

பொதுவுடைமைத் தத்துவங்கள்.

இராமாயண ஆராய்ச்சி.

ஞானசூரியன்.

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.

நான் ஏன் இந்து அல்ல?

மதம் என்றால் என்ன?

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

பேயோட்டுதல் மெய்யா? பொய்யா?

அகத்தியர் ஆராய்ச்சி.

சகல கடவுளை நிந்திக்கும் கலவர்கள் யார்?

கடவுளும், பிரபஞ்சமும்.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

இந்தியாவின் குறைபாடுகள்.

Crux of the Indian Problem

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

கதர்-சூட தம்பிக்கை (இங்கிலீஷ்)

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

முன்னேற்றம். 'பிரசண்ட மாருதம்'




RangaRakes tamilnavarasam.com

மதத்தைத் தூஷிக்கும் மாபெருங் குற்றத்திற்கேற்பட்டுள்ள 295 ஏ– பிரிவுக்குள்ள வியாக்கியானத்தின்

# விமர்சனமும் புத்தி நுட்பமும்

''ரீசன்'' என்னும் ஆங்கிலப் பத்திரிகையானது ரோமன் கத்தோலிக்கர்களையும் முஸ்லீம்களையும் தாக்கி அன்னோர் மதங்களைப் புண்படுத்தக் கூடியதான கட்டுரைகளை எழுதி பிரசுரித்ததாக டாக்டர் ஸி.எல். டிவாய்ன் மீது கொண்டு வரப்பட்ட வழக்கைப் பொம்பாயில் மாகாணப் பிரதம நீதிவான் ஸர். ஹோர் முஸ்டியர் தாஸ்தூர் அவர்கள் விசாரித்துத் தமது சட்ட ஆராய்ச்சியின் நிபுணத்துவமான அறிவு நுட்பத்தால் பாரபக்ஷமற்ற நடுநிலைமையான தீர்ப்பளித்திருக்கிறார்.

**தீர்ப்பின் விபரமாவது:–**

டாக்டர் சட்டத்தில் சொன்ன செய்கைகள் எண்ணங்கள் என்கிற பாகுபாடுகளின் தன்மைகளை அனுசரித்துத்தான் எந்தச் சட்டங்களும், பிரிவுகளும் அவைகளுக்குப் பலன்களும் அமைக்கப்பட்டிருப்பதை இது விவகாரத்தை விசாரித்த நீதிவான் உணர்ந்தவராதலால் இவரின் தீர்ப்பில் செய்கையைவிட எண்ணத்துக்கே மதிப்பளித்துத் தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

இத்தகைய நீதிவான்களின் பாரபக்ஷமற்ற நடுநிலைமையாலும், சட்ட நிபுணத்வத்தாலும், விசாரித்தறியும் புத்தி நுட்பத்தாலுமே தான் ''அரசாக்ஷி'' என்னும் பதத்தின் உண்மையான பொருள்களால் மக்களுக்குள்ள இன்னல்களாகிற ''சிறியதைப் பெரியது நலிதல்'' முதலியன விலகி சமாதான முறையில் வாழ்விக்க முடியுமேயல்லாது நோக்கம்போலும் ஆளைப்போலும் தீர்ப்பளித்தால் அவர்களால் மக்கள் என்ன பலனை அடையமுடியும்? ஆகையால் இவ்விதத் தீர்ப்பை நாம் மனமார வாழ்த்துகிறோம்.

அதாவது டாக்டர் டிவாய்னி ''மூடநம்பிக்கையின்றிப் பகுத்தறிவை ஆதாரமாகக் கொண்டு விஷயங்களைத் தீர்மானம் செய்யும் ஆற்றலுடையவர் என்கிற ஹோதாவில் அவர் மத சமுதாய சம்பந்தமான சில நம்பிக்கைகளைக் கண்டித்து கட்டுரைகளை எழுதி இருக்கிறாரே ஒழிய மற்றவர்களுடைய மத உணர்ச்சியைப் புண்படுத்த வேண்டுமென்கிற



RangaRakes tamilnavarasam.com

உத்தேசத்தோடு எழுதவில்லை'' என கூறியிருப்பதே மேற்படி வியாக்கியானத்தின் விமர்சனமாகும். மற்றும் ''பகுத்தறிவற்ற மூடநம்பிக்கைகளை ஒழிக்க முற்பட்டுள்ள ஒரு ஸ்தாபனமானது சிற்சில மதங்களின் சிற்சில நம்பிக்கைகளைக் கண்டித்துத்தான் தீரும். அவ்விதம் கண்டிப்பது அத்தகைய நம்பிக்கையுள்ள சிலருக்கு மனோ வேதனையைக் கொடுக்காமலிருக்காது என்பதே அந்த நியாயாதிபதியின் புத்தி நுட்பமாகும்.

**புரட்சி - தலையங்கம் - 11.02.1934**



# பத்திரிகாசிரியர் ஏ. ரங்கசாமி ஐயங்கார் மரணம்

ஏ. ரங்கசாமி ஐயங்கார் நீண்ட நாள் பத்திரிகை ஆசிரியராகவிருந்து வந்ததின் பயனாக தென்னாட்டில் தமிழ் பத்திரிகையாகிய ''சுதேசமித்திரன்'' வாயிலாகவும், ஆங்கிலப் பத்திரிகையாகிய ''இந்து'' பத்திரிகை வாயிலாகவும் மக்களுக்கு அரசியல் துறைகளை ஒருவாறு புகட்டிவருவதில் முன்னேற்ற மடைந்தவராவார். அவர் மக்கள் விடுதலைக்கு போராடும் வழிகளிலும் அவரது வர்ணாசிரம தத்துவங்களுக்கு எவ்வித உபாதைகளும் உண்டாக்காமல் பாடுபட்டு வருபவர்களில் தலைசிறந்து விளங்கினார்.

காங்கிரஸில் அவர் மிக்க ஊக்கத்துடனும், முயற்சியுடனும் உழைத்துத் தன்வசமாக்கி தனது கருத்துக்கிசைந்த முறைகளில் தொண்டாற்றி வந்தவராவார். எந்த காரியத்தில் ஆனாலும் தமக்கு வேண்டியதை எப்படியும் பிரவேசித்து செய்து முடிக்குந் திறமை வாய்ந்தவர்.

வர்ணாச்சிரமத்தை வெறுப்பவர்களைத் தவிர மற்றவர்களுக்கு அவர் எப்போதும் விரோதியாக இருந்துவந்தவரே அல்லர். அத்துடன் அவர்களை தமது பத்திரிகைகளிலும் மிகுந்த சலுகைகளுக்கு பாத்திரர்களாக்கியும் வைப்பார்.

பத்திரிகையை முன்னேற்றமடையச் செய்து அதைப் பெரும்பான்மையோரான மக்களிடம் பரவி வரவேண்டுமென்கின்ற விஷயத்தில் அவரெடுத்துக்கொண்ட சிரமமும், முயற்சியும் அளவிடற் பாலதன்று. இத்தகைய குணசமூகங்களோடு வாழ்ந்து வந்து தமது பகுதி வயதினில் நோய்வாய்ப்பட்டு தமது ஆருயிர்க் காதலி, காதலர்களையும், துணைவரையும் இஷ்டமித்திரர் பந்து ஜன சமூகங்களையும் விட்டுப் பிரிந்ததானது மிகவும் துக்ககரமானதாகும். அன்றியும் பத்திரிகை உலகத்திற்கும் மற்றுமுள்ள நண்பர்களுக்கும் ஒரு ஈடுசெய்யக் கூடாத நஷ்ட்டமேயாகும். இன்னமும் அவருடைய விரோதிகளுக்கும்கூட அவர் பிரிவானது அவ்விரோதிகளின் புத்தி கூர்மையையும் ஊக்கத்தையும் கொள்ளைகொண்டு விட்டதென்றே சொல்லலாம். நமது ஐயங்கார் ஆருயிர் துறந்தார் என்பதைக் கேழ்க்கும்போதே மனம் திடுக்கிட்டுவிட்டது.



RangaRakes tamilnavarasam.com

இனிச் செய்வதென்ன இருக்கிறது. உலகம் இயற்கையின் வழிசென்று கொண்டிருக்கும்போது அதையேதான் சமாதானமாகக் கொள்ள வேண்டியவர்களாகிறோம்.

அவர் குடும்பத்தவர்களுக்கு நமது மனமாழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**புரட்சி - துணைத் தலையங்கம்** - 11.02.1934



# தோழர் சே. நரசிம்மன்

மாயனூர் கிராம சீரமைப்பு நிலையத்தின் தோழர் சே. நரசிம்மன் எம்.ஏ. அவர்கள் சமீபத்தில் இறந்துவிட்டார் என்று அறிய பெரிதும் துக்கிக்கிறோம். சமீபகாலமாக நமது ''குடி அரசு'', ''புரட்சி'' வார இதழ்களில் அவர் எழுதிவந்த பாலும், தேனும் கலந்த கட்டுரைகளை வாசித்துப் புதிய உத்வேகத்தையும், இன்பத்தையும் பெற்றிருந்த நமது வாசகர்களுக்குப் பெரிதும் துக்கமேற்படுமென்பதிலும் ஐயமில்லை.

தோழர் நரசிம்மன் அவர்கள் பிறவியினால் உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக்கொள்ளக்கூடியவரானாலும் அவர் பாழான பழைய வர்ணாஸ்ரம தர்மத்தையும், இன்றைய முதலாளி, தொழிலாளி என்பதான வேறுபாட்டையும் எவ்வளவு தூரம் மனப்பூர்வமாக வெறுத்து அதை ஒழிப்பதற்காகவே இந்தியர் ஊழியர் சங்கத்தின் சார்பாகவும் நமது பத்திரிகைகளின் மூலமாகவும் தொண்டாற்றியுள்ளார் என்பதை நாம் விரிக்க வேண்டுவதில்லை. ஆங்கிலத்திலும், தமிழிலும் நன்கு நமது கொள்கைகளை வலியுறுத்தி எழுதுவதில் மிகத் திறமைபெற்றிருந்த நமது அருமை நண்பரை நாம் இழந்தது ஒரு விதத்தில் பெரிய நஷ்டமேயாகும். அதிலும் வாலிப உலகத்திற்கு அவரது ஆண்மையும், தீவிர உணர்ச்சியும் பெரிதும் வேண்டற்பாலதான இந் நல்ல சந்தர்ப்பத்தில் நாம் அவரை இழக்க ஏற்பட்டது சமீபத்தில் ஈடுசெய்ய முடியாத நஷ்டமுமாகும். என்றாலும் துயரத்தால் வருந்தும் நம் தோழர் சே. நரசிம்மன் அவர்கள் குடும்பத்தாருக்கும், மாயனூர் கிராம சீரமைப்பு நிலையத்தாருக்கும் நமது துக்கத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களும் ஆறுதல் பெறுமாறும் வேண்டுகிறோம்.

**புரட்சி - துணைத் தலையங்கம்** - 11.02.1934



RangaRakes tamilnavarasam.com

# தோழர் சி.பி. ராஜகோபால் பாரதி

பிற்போக்கான சமூகத்தார்களின் மேம்பாட்டிற்காகவும் நமது பெண்கள் சமூக விடுதலைக்காகவும் குறிப்பாக விதவைகளின் துயரத்தைப் போக்குவதற்காகவும் கடந்த பல வருஷங்களாக தளராது நல்ல ஊழியம்செய்து வந்த திருச்சி தோழர் சி.பி. ராஜகோபால் பாரதியார் அவர்கள் மரணமானதற்கு வருந்துகிறோம்.

பெண்கள் முன்னேற்றத்திற்காக நல்ல அரிய நூல்களை எழுதி தமிழ் நாட்டிற்குத் தந்து உதவியதும் நாயுடு சமூக ஒற்றுமைக்காகவும் பெரிதும் பாடுபட்டு அகில இந்திய நாயுடுகள் மகாநாட்டை கோவையில் கூட்டுவித்து செய்த தொண்டையும், திருச்சி ஜில்லா விதவா விவாக சங்கத்தின் அமைப்பாளராகவும் தலைவராகவும் இருந்து செய்த அரிய ஊழியத்தையும் எளிதில் யாரும் மறத்தற்கியலாது. இப்பேர்க்கொத்தவர் தனது மிக வயோதிக திசையில் மரணமானது இயற்கையே யென்போம். அவரைப் பிரிந்த குடும்பத்தார்களுக்கு நமது அனுதாபம் உரித்தாகுக.

**புரட்சி - துணைத் தலையங்கம்** - 11.02.1934



# தோழர் சிவப்பிரகாசம்

ஜஸ்டிஸ் கக்ஷியைத் தோற்றுவித்தவர்களில் ஒருவரும் செல்வாக்கு மிகுந்த வக்கீலும், சென்னை கார்ப்பரேஷன் கவுன்சிலருமான தோழர் சிவப்பிரகாசம் முதலியார் அவர்கள் 2-2-34ல் திடீரென்று இறந்து போனதைக் கேட்டு வருந்துகிறோம். நல்ல அருங்குணங்களும் பொதுஜன சேவை நோக்கம் மிகுந்தவருமாகத் திகழ்ந்த தோழர் சிவப்பிரகாசம் அவர்களின் மரணத்திற்கும் துயருறுவதோடு அவரது குடும்பத்தாருக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறோம்.

**புரட்சி - துணைத் தலையங்கம்** - 11.02.1934



RangaRakes tamilnavarasam.com

# இக்காலத்திலுமா பண்டை நாகரீகப் பெருமை?

பண்டைக்காலத்தில் நமது பாரதநாட்டில் தமிழர்களின் நாகரீகம் எப்படி இருந்தது என்னும் விஷயத்திலும் பாஷையானது எப்படி தனித்து விளங்கி வந்தது? என்னும் விஷயத்திலும் மக்கள் எப்படி வாழ்ந்து வந்தார்கள் என்னும் விஷயத்திலும் இன்னும் பலவாறான விஷயத்திலும் நமது வித்வ சிகாமணிகளும், பண்டிதமணிகளும் பேசித் தங்கள் அரிய காலத்தையும், புத்தியையும் செலுத்தி தற்போதைய மக்கள் நிலைமைக்குத் தங்களால் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தவர்களாக நினைத்துக் காலங்கடத்தி வருகிறார்கள். இது இந்தக் காலத்தில் நம்நாட்டு மக்களுக்கு எவ்வளவு முற்போக்கையுண்டு பண்ணுமென்பதையும் நம் மக்களுக்குத் தற்காலத்தில் எவ்விதமான உணர்ச்சியும், ஊக்கமும், நினைவும் வேண்டியிருக்கிறது? என்பதையும் யோசித்தால் நமக்கு வேண்டியது இதுவா? என்பது விளங்காமல் போகாது.

நம் நாட்டாரும் மற்ற நாட்டாரோடு சம வாழ்வு, சம அந்தஸ்து, சம உரிமை இல்லாமல் உழன்று பசி, தரித்திரம், நோய், அற்பமான வருவாய், சுதந்திரமற்ற அடிமை வாழ்வு முதலிய கொடும் வியாதிகளின் மிகுதியால் அவதிப்பட்டு அல்லலுற்று வாழ்ந்து வரும் இந்நெருக்கடியான சந்தர்ப்பத்தில் என்ன செய்யவேண்டுமென்பதும், இத்தகைய இழிந்த நிலைமைகளுக்கு அடிப்படையான மூல காரணமென்னவென்பதைச் சிந்தித்து ஊன்றி யோசிப்பார்களேயானால், இவ்விதமான பண்டைப் பெருமைகளால் வீண் காலக்ஷேபம் செய்யமாட்டார்கள் என்றே நினைக்கிறோம்.

ஏனெனில் தற்சமயம் நமது மக்களுக்கு மற்ற நாட்டு மக்களுக்கு அமைந்துள்ள வாழ்க்கைகளுக்குச் சமமாகவேனும் நமது மக்களின் வாழ்க்கைகள் அமையவேண்டுமாயின் முதலில் நமக்குள் சமத்துவத்தைப் பரப்பி வரவேண்டியதே இன்றியமையாத தாகுமென்பதை யாவரும் மறுக்கத்தகாதவைகளில் முதன்மையாகு மென்பது நமது உறுதியாகும். அத்தகைய சமத்துவத்திற்கு நமக்குள்ளிருக்கும் ஜாதி, மதம் முதலிய வேறுபாடுகளை வேருடன் கில்லி எறிந்து தீரவேண்டும். இவைகளுக்குப் போதிய அறிவு வளர்ச்சிக்கேற்ற விஷயங்களைக் கல்வியின் மூலமாகவாவது அது துரிதத்தில் முடியாமற்போகுமாயினும் பிரசார மூலமாகவேனும்



சந்தர்ப்பத்திற்கேற்றபடி சாத்தியமான முறைப்படியாவது நமது மக்களுக்குப் புகட்டி வரவேண்டுமென்பதையாவது யாவரும் செய்து வரவேண்டிய கடமைக்குட்பட்டிருக்க நமது பண்டைத் தமிழிலும், நாகரீகத்திலுமா இன்று நமது ராஜதானியில் சிறுபான்மைத் தொகுதியோரான ஒரு முகமதிய கவர்னரும், மைசூர், திருவாங்கூராகிய இரண்டு பெரிய சுதேச ராஜ்யங்களுக்கு இரு முகமதிய திவான்களும் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை யோசித்தால் விளங்காமற் போகாது. நமது சமூகம் பெரும் பான்மையான எண்ணிக்கையிருந்தும் நமக்குள்ள ஜாதி, மத வேறுபாடுகளின் முக்கிய காரணத்தாலன்றோ நமது கவர்ன்மெண்டாரும் நம்மை ஒரு சமூகமென்று அழைக்கவும் கூட மறுத்த நம்மை மகமதியரல்லாதார் என்று ஒரு அனாமதேயப் பேர் வழிகளைப்போல் அழைக்கவும் அந்தப் பெருமை அழியாதிருக்க அவர்கள் சட்டம் முதலிய தேர்தல் தஸ்தாவேஜுகளிலும் அழியாமல் பதித்தும் வைத்திருக்கிறார்கள். நம்மீது நமது கவர்ன்மெண்டாருக்கும் மற்றுமுள்ளவர்களுக்குமுள்ள மதிப்பைக் காட்டுவதற்கு அதுவே போதுமான அத்தாக்ஷியாகும். இப்படி நமது பெரும்பாலான மக்களின் உழைப்பிலும் நமது வரிப்பணத்திலும் ஆதிக்கம் செலுத்தி வருகிற சர்க்காரும் அன்னிய மதத்தினரும் இன்னும் சொல்லப்புக்கால் அந்நிய நாட்டினரும்கூட நம்மைக் கேவலமாக எண்ணி, மதித்து ஏளனம் செய்து புறக்கணித்துவரும் இந்த சமயத்திலும் கூடவா நமது பண்டைத் தமிழும், நாகரீகமும் நம்மை அத்தகைய இழிதன்மையிலிருந்து உத்தரித்து விடப்போகிற தென்பதை மறுமுறையும் சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம். இங்கு மகம்மதியர்களில் ஒருவரை நமது ராஜதானிக்கு கவர்னராகவும், மற்றுமிரு ராஜ்யங்களினுடைய திவான் பதவியைக் காட்டி இருப்பது பொறாமைக்காகக் கூறியதாக பாவிக்காமல் அவர்கள் மதத்தில் பிறவியினால் உயர்வு தாழ்வு இல்லை என்கின்ற கொள்கையின் முதிர்ச்சியால் அத்தகைய பெறுதற்கரிய ஸ்தானங்களை அடைந்தார்கள் என்று அவர்கள் கொள்கைகளைப் பாராட்டவே கூறியதாகுமே ஒழிய வேறுவிதமாக அல்ல வென்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

நமது பண்டைத் தமிழும் நமது பண்டை நாகரீகமும் சொல்லிக் கொண்டு வருவதின் போக்கைச் சிந்திக்கும்போது பள்ளிப் பிள்ளைகளின் பழய பெருமைகளைப் பேசிக்களிக்கும் சம்பிரதாயத்தை ஒக்குமே ஒழிய வேறல்ல. அதாவது ஒரு தனவந்தன் வீட்டுப்பையன் குதிரையின் மீது சவாரி செய்து பள்ளிக்கு வந்து கொண்டிருக்கும்போது, ஒரு கிழிந்ததும் அழுக்கடைந்துள்ளதுமான ஆடையைத் தரித்துக் கொண்டிருக்கும் ஒரு ஏழைப்பையன் ஷை தனவந்தரின் பையனைப் பார்த்துவிட்டு எங்கள் தாத்தாகூட இதைவிட ஒரு உயர்ந்த குதிரை மீதுதான் எப்போதும் சவாரி செய்வாரென்று சொல்லி மகிழ்வதையொக்கும். தாத்தா குதிரை சவாரி செய்த இருப்பிடத்தில் ஏற்படக்கூடிய காய்ப்புகூட இவனிருப்பிடத்தில் உண்டா என்றால் அதுவுமிராது. இம்மாதிரியான பிரயோசனமற்ற



RangaRakes tamilnavarasam.com

விஷயங்களால் மக்களுக்கு ஏற்படும் பயன் யென்னவென்பதே நமது கேள்வி. இந்த வித்வ சிகாமணிகளும் பண்டிதமணிகளும் இப்படியாக பழந்தமிழின் நாகரீகத்தையும் பண்டைத் தமிழின் மாண்பையும் பற்றி ஒரு பக்கம் பேசி வருகையில் மற்றொரு பக்கம் சனாதனிகள் கூட்டம் போட்டுக் கொண்டு ராஜப்பிரதிநிதியவர்களிடம் எங்கள் ஜாதி மத வேறுபாடுகளில் சர்க்கார் தலையிடக் கூடாதென கேட்டுக் கொள்ளப்போவதும் அத்தகையக் கூட்டங்களுக்கு துணைப்படையாக நமது ஜில்லா போர்டு தலைவரும் வைசிராய் சட்டசபை மெம்பருமான ஒரு செல்வாக்குள்ள தமிழ் மக்களின் மாபெரும் தலைவரெனப்படுவோரும் சென்று வந்தவுடன் ஷை சனாதனிகள் கூடி கோவையில் கூட்டிய ஒரு சனாதனிகள் கூட்டத்திற்கும் தாம் வரமுடியாமைக்கு வருந்துவதாகவும் ஷை கூட்டத்தில் தமக்கிருக்கும் ஆர்வத்திற்கும் அபிமானத்திற்கும் அறிகுறியான வாழ்த்துக் கடிதமும் விடுத்திருப்பதும் நடை முறைகளில் காணப்படுகிறது.

மற்றொரு பக்கம் தோழர் காந்தியார் வருணாச்சிரம தர்மத்துக்குள் புகுத்தப்பட்ட ஹரிஜன சேவையின் பேரால் அவர்களை ஷை கட்டுத் திட்டங்களிலிருந்து மீளாதபடி முன்னேற்றப் பணம் திரட்ட திக்விஜயம் செய்து வருவதுமாக நிகழ்ந்து வருகிறது.

இவ்வித நிகழ்ச்சியால் மக்கள் சமத்துவத்திற்கு வழி ஏற்படாதென்றும், ஆகையால் தங்கள் வரவு இத்தருணம் இம்முறையில் நல்வரவாகாது என அதைப் பகிஷ்கரிக்க நாங்கள் உறுதிகொண்டு முன் வந்திருக்கிறோம். அதன் அறிகுறிக்காக எங்கள் கையில் இதோ கருப்புக்கொடி பிடித்துக் கொண்டிருக்கிறோ மென்பதை மூடப்பழக்கங்களிலாழ்ந்து உழலும் மக்கள் மனதிற்படும்படியாக நமதியக்கத்தவர்கள் முன்வந்தால், அதுவும்கூட சமாதானக் குறைவை உண்டாக்கும் என்கிற பாணத்தைப் பிரயோகிக்கும்படி சர்க்காரைத் தூண்டிவிட சிற்சில சுயநலக் கூட்டங்களும் அக்கூட்டங்களின் முறைகளால் தாங்களும் முன்னேற முயலும் சில தமிழர்களும் அதில் பங்கெடுத்துக் கொள்ள முயலுகிற இக்காலத்திலும் கூட நாம் மக்களுக்குள் வேற்றுமைகளை உண்டு பண்ணக்கூடிய முறைகளை கண்டிக்காமலிருக்க முடியாதென்பதைச் சொல்லப் பின் வாங்கமாட்டோம்.

ஆகையால் இத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பத்தில்தான் நமது சுயமரியாதை இயக்கத்தவர்கள் நமது முழு மனதையும், சக்தியையும் காலத்தையும் வினியோகித்து நமது லக்ஷியத்தையும் கொள்கைகளையும் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்தோங்கி வளர்த்து மக்களுக்குள் பயன்படத் தக்க மாதிரியில் நடைமுறையில் வெற்றிகரமாக நடத்திக் காட்டும் வண்ணம் திட்டங்கள் வகுக்க ஏற்படுத்தப்பட்ட காலத்தில் ஷை இடத்துக்கு விஜயம் செய்து காரியங்களை நடத்தி வைக்க வேணுமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

புரட்சி - தலையங்கம் - 18.02.1934



# யாருக்கு? பாதுகாப்பு

## மன்னர்களுக்கா? பட்டினிகளுக்கா?

நமது இந்திய சட்டசபையான எங் பார்லிமெண்டில் மாமூல் கூட்டங்கள் நடக்கும். இக்கூட்டகாலங்களில் பல தீர்மானங்களைப் பற்றி விவாதிக்கப்படும். சில தீர்மானம் கொண்டு வரப்பட அனுமதி கோரப்படும். பல தீர்மானங்கள் நீண்ட நேரம் பேசி ஓட் எடுக்க நேரமில்லை என்ற காரணம் காட்டி விட்டு விடப்படுவதுமுண்டு. இதில் சில சமயங்களில் தப்பித் தவறி பொது மக்களுக்கு நல்ல பலனை விளைவிக்கக்கூடிய தீர்மானங்களைப் பற்றியும் பேசப்படுவதுண்டு. இவைகளில் இரண்டொன்று அதன் ஆதி உருவைவிடப் பலமற்றதாகச் செய்யப்பட்டு, பெயருக்கு நன்மையானதென்றும் கவனிக்கப்படுகின்றதென்றும் சொல்லுகிற நிலைமையிலாவது நிறைவேற்றி வைக்கப்படும். ஆனால் இதுவரையில் மில் தொழிலுக்குப் பாதுகாப்பு, ‘‘கமிட்டி மெம்பர்களுக்குச் செலவுக்குப் பணம்’’ ஜமீன்தார்கள் உரிமைகளுக்கு வேலி, ராஜாக்களின் அந்தஸ்துக்குப் பாதுகாப்பு என்பது போன்றவைகளுக்கு வரும் தீர்மானங்கள் நிராகரிக்கப் பட்டதாகவோ, நீண்ட காலம் வீண் கால தாமதம் செய்யப்பட்டதாகவோ யாரும் கூற முடியாது.

இந்த முறையிலேதான் இப்பொழுது நடைபெறும் கூட்டத்திலும் முக்கியமான பல தீர்மானங்கள் பிரேரேபணை செய்ய வேண்டியவர்கள் ஆசனத்தில் இல்லாததால் ஒத்தி வைக்கப்பட்டது. இவ்வாபத்துகளில் தவறி ஓர் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அது வேலையில்லாதவர்களுக்குப் பரிகாரம் தேடப்படுதல் என்பதேயாகும். இதற்கடுத்தாற்போல் இந்திய மன்னர்களுக்குப் பாதுகாப்பளிக்க ஓர் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற வேண்டிய நிலையில் இருக்கிறது. இவ்விரண்டு தீர்மானங்களும் முறையில் ஒன்றேயாயினும், போக்கிலும், லட்சியத்திலும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாச முடையதாகும். இவ்விரு தீர்மானங்களும் விவாதத்திற்கு வந்த காலத்தில் மன்னர் பாதுகாப்பு மசோதாவைப்பற்றி விவாதம் நடந்தபோது காட்டப்பட்ட உற்சாகமும், ஆர்ப்பாட்டமும் வேலையற்றவர்களுக்குப் பாதுகாப்பளிக்க விவாதம் நடந்த காலத்தில் காட்டப்படவில்லை. பெயருக்கு ஓர் சட்டமென்கிற முறையிலேயே வேலையற்றவர்கள் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

இந்திய மன்னர்களுக்குப் பாதுகாப்பளிக்கப்பட வேண்டுமென்று இன்று பத்து வருடங்களுக்கு முன்பு கூறப்பட்டது. அதே காலத்தில் தான் இந்நாட்டில் வேலையில்லாமல் மடியும் தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பளிக்கப்பட வேண்டுமென்பதற்கு ஓர் கமிட்டியும் நியமித்து மாகாண வாரியாக இதற்கு மார்க்கம் கண்டுபிடிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மாகாணச் சர்க்கார்களோ மத்திய சர்க்காரிடம் பழி போட்டார்கள். கடைசியாக தீர்மானம் மூலியமாக வரும்போது அதன் பெயருக்கும் அத்தீர்மானத்தின் வார்த்தைகளுக்கும் வெகு தாரதம்மியம் உண்டாகிவிட்டது. ஆனால் இந்திய மன்னர்களுக்குப் பாதுகாப்பு அல்லது இந்திய மன்னர்களின் அந்தஸ்துக்குப் பாதுகாப்பு பரிபூரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது. இந்திய மன்னர்கள் எத்தகையவர்கள் என்பது பற்றியும் அவர்களுக்கு அவர்கள் அந்தஸ்துக்குப் பாதுகாப்பு என்றதின் பேரால் இந்திய சமஸ்தானக் குடிகள் இன்னம் எவ்வளவு காலத்துக்கு கொடுமையாக நடத்தப்படப் போகிறார்கள் என்பது பற்றியும் பன்முறை எடுத்துக் கூறியிருக்கிறோம். இப்பாதுகாப்பை காட்டி இந்திய மன்னர்கள் பரிபூரணமாக தங்களை நம்பும்படி செய்வதற்காகவே இந்திய சர்க்கார் இதைச் செய்தாலும் செய்திருக்கலாம்.

சமஷ்டி அரசியல் முறையை காந்தி ஆதரித்த போதிலும் அவர் சிஷ்யர்கள் ஆதரித்த போதிலும் இந்திய சமஸ்தானத்தில் உள்ள 8 கோடி மக்களும் அப்படியே கண்டிக்கிறார்கள் என்பது சர்க்காருக்கும் மன்னர்களுக்கும் நன்கு தெரியாததல்ல. அதைப் போன்றே பிரிட்டீஷ் இந்தியாவில் உள்ள பொதுமக்கள், ராஜாக்களின் கூட்டுறவை கொண்டதாக உள்ள சீர்திருத்தத்தை வெருக்கிறார்கள் என்றும், இங்குள்ள குட்டிப்பணக்காரர்கள் ஜமீன்தார்கள் இவர்களின் கொடுமையிலிருந்து தப்பமுடியாது தவிக்கிறார்கள் என்றும், எந்த ஸ்தாபனங்களும் அவர்களாலேயே பெரிதும் பணச் செல்வாக்கால் கைப்பற்றப்படுகிறது என்றும் ஓலமிடுகிறார்களென்பதும் தெரியாததல்ல. இச்சிறு பிரபுக்களின் எதேச்சாதிகாரமே இப்படி இருக்கும்போது, இவர்கள் அண்ணனான பெரிய பணக்காரர்கள் மகாராஜாக்கள் இவர்கள் கொடுமையில் சிக்க தாமே சம்மதிப்பது மகத்தான ஆபத்தென்பதை உணர்ந்திருப்பதும் சமஷ்டி முறையை மறுப்பதும் சர்க்கார் உணராததல்ல.

இந்திய சர்க்கார், மன்னர்கள் தங்களைப் பரிபூரணமாக நம்பியிருக்கச் செய்ய இச்சட்டம் அவசியமென்று கருதி கொண்டு வந்திருக்கலாம். இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் பிரிட்டீஷ் இந்திய பிரஜைகளின் உரிமைக்கும் சமஸ்தான இந்திய பிரஜைகளின் உரிமைக்கும், தடை ஏற்படுமேயாயினும் ஒரு முறையில் இது நிறைவேற்றப்படுவதால் கொடுமை முதிர்ந்து பொங்கிப் பெரிதாகுமென்றும், அதனால் பரிகாரம் கிடைக்கப் புது நிலமை ஏற்படுமென்றும்கூட சிலர் நம்பலாம். எப்படியாயினும் இதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் இந்திய சர்க்காரும் சட்டசபை மெம்பர்களும் ஏழைப்பட்டவர்கள் பாதுகாப்பில் ஊக்கம் காட்டாது போனதைக் கண்டுதான் நாம் வருந்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

> ''வேலை இல்லாத கஷ்டத்திலிருந்தும், சம்பளக் குறைவிலிருந்தும் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு அநுபவ சாத்தியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்''

என்று ஓர் தீர்மானம் தோழர் ஜோஷியால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதிலிருந்தே இந்நாட்டிலுள்ள ஏழை எளியவர்கள் பரிபூரண காப்பு பெற்று விடுவார்கள் என்று நாம் நம்பவில்லை. ஆனால் இவ்விரு தீர்மானங்களும் சட்டசபையில் விவாதிக்கப்பட்ட நடைமுறையிலிருந்து இந்நாட்டுப் பொது மக்கள் சட்டசபைக்கு யார் யார் எதிர்காலத்தில் சென்றால் பயனுண்டு என்பதை உணரவும், வாசாகோசரமாகப் பேசிவிட்டு தீர்மானங்களின் உயிர் வாங்கப்பட்டு செத்த நிலையிலாவது அத்தீர்மானத்தை நிறைவேற்றி ஓர் விளம்பரம் பெற பெரிதாக எண்ணமுடையவர்கள் செல்வதால் யாருக்காவது பலனுண்டா என்பதையும் உணர இடமேற்படுமென்று நம்புகிறோம்.

இதனால் சட்டசபைக்குதான் மதிப்புண்டா? அல்லது அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மக்களுக்குத்தான் பலனுண்டா? அல்லது இவர்கள் யாவரும் வாழும் நாட்டுக்காவது கௌரவம் உண்டா என்பதை வாசகர்கள் யோசித்துப் பார்க்க வேண்டுமென்பதற்காகவே இதை விளக்கிக் கூற விரும்புகிறோம்.

இந்நாட்டில் எதிர்கால சுயராஜ்ய ஆட்சிக்குப் பூர்வாங்கமானது இந்திய சட்டசபையென்று சொல்லப்படுகிறது. அதாவது எங் பார்லிமெண்டு என்கிறார்கள். இந்த எங் பார்லிமெண்டில் பத்து வருட காலமாகப் பட்டினி கிடந்து மாள்பவர்களுக்குப் பரிகாரம் கிடைக்க வேண்டுமென்று தொடர்ச்சியாய்க் கத்தப்பட்டு பத்தாவது வருடத்தில் பதில் கிடைத்தது என்ன?

அனுபவ சாத்தியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பதில் கிட்டியிருக்கிறது.

ஆனால் எங் பார்லிமெண்டின் தலைமை இடமான தாய்ப்பீடமான இங்கிலாந்து பார்லிமெண்டிலோ?

பட்டினி கிடக்கிறார்கள் - மடிகிறார்கள் என்ற சப்தம் உண்டாகி இருக்குமேயானால் இதற்குப் பரிகாரம் பத்து நிமிடத்தில் கிடைக்கிறதேயன்றி பத்து வருடங் கழித்து சாத்தியமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதாகக் கூறியிருக்க முடியுமா?

இந்தியப் பார்லிமெண்டான இந்தியா சட்டசபையில் தோழர் ராமகிருஷ்ணன் (ரெட்டியார்) இந்தியாவில் 400 லக்ஷம் பேருக்கு


RangaRakes tamilnavarasam.com

ஒருவேளைச் சாப்பாட்டுக்குத் தகராறாக இருக்கிறது என்று கூறியபோது அது அங்குள்ளவர்களில் எவரையும் திடுக்கிடச் செய்யவில்லை. உலகில் எந்த நாட்டிலும் வேலையற்றவர்கள் தொகை பத்து அல்லது இருபது லட்சத்துக்கு மேல் இல்லையே. இங்கு நானூறு லக்ஷம் பேர் பட்டினி ஜாதியாராக இருக்க வேண்டுமாவென்று கேட்கப்பட்ட போதுகூட எந்த மெம்பரும் இதற்காக வெட்கப்படவில்லை. அவர்கள் பிறந்து வளர்ந்த நாட்டின் மக்கள். அவர்கள் யார் பேரால் பிரதிநிதித்துவம் பெற்று சட்டசபையை அலங்கரித்து உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்களோ அவர்களைப் பற்றி ஒரு நிமிடம் கூட சிந்திக்க அவர்களுக்கு அவகாசமில்லை. இதற்குக் காரணம் என்ன?

பட்டினி என்பதை இன்னதெனத் தெரியாதவர்கள், பட்டினியைப் பற்றி பேசப்படும் போது பதறி எழவில்லை என்று கூறுவது ஆச்சரியமல்ல. இங்கிலாந்தில் உள்ள வேலையற்றவர்களுக்கு உணவளிக்கச் செலவிடப்படும் தொகை இந்நாட்டில் தினமும் வரியின் பேரால் இங்கு வசூலிக்கப்படுகிறது. ஆனால் இந்நாட்டின் ஜன சங்கையில் 8ல் ஒரு பகுதியினர் வேலையற்று, உணவற்று, இடமற்றுத் தவிக்கிறார்கள் என்றால் இதற்கு ''அநுபவ சாத்தியமான'' என்று பதில் கூறப்படுகிறது. நமது சட்டசபை தோழர்கள் இந்நாட்டில் உள்ள 260 மன்னர்களின் மதிப்பை, கௌரவத்தை காப்பாற்றுவதில் செலவிடப்படும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் 4-கோடி மக்கள் பட்டினியால் மடிகிறார்கள் என்பதில் காட்ட முடியாமற் போனது உண்மையில் மிக்கக் கேடானதாகவே தோன்றுகிறது.

இச்சட்டசபையில் பட்டினி கிடக்கும் ஜாதியில் 4 பேர் பிரதிநிதியாக இருந்திருப்பார்களேயானால் ''அனுபவ சாத்தியமான'' என்று சொல்லியிருக்க முடியுமா?

இந்நாட்டில் வேலையற்றவர்கள் என்பவர்கள் கோடிக்கணக்கானவர்கள் என்று சட்டசபை மெம்பர்களே கூறியிருக்கிறார்கள். இவர்களில் நூற்றுக்கு 72 பேர்கள் விவசாயத் தொழிலாளர்கள் என்று கூறப்படுகின்றது. இவர்களை மாகாண விகிதம் கணக்கெடுத்து அவர்களின் பட்டினிக்குப் பரிகாரம் தேட வேண்டிய பொறுப்பு இந்திய சட்டசபையினுடையதாகும். ஆனால் இந்திய நாட்டில் விவசாயிகளைப் பற்றி கவனிப்பவர்கள் எத்தனை பேர்? இவர்களின் அன்றாடக் கஞ்சிக்கு வழியென்ன? என்பதில் கவனம் செலுத்த சட்டசபை மெம்பர்களும், சட்டசபையும் முற்படாவிட்டாலும், எதிர் காலத்தில் வேலை செய்யவாவது வழிவிட்டதற்கு நாம் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ஏனெனில் இந்நாட்டில் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் சேர்ப்பதோ பட்டினி கிடப்பவர்களுக்கு பரிகாரம் தேடுவதோ அல்லது பட்டினி கிடக்கிறார்களே என்று சொல்வதே சட்ட விரோதமானதாகுமென்று அஞ்சுகிறார்கள். இப்பயம் நீங்க பம்பாய் உத்தியோக மெம்பர் மிஸ்டர் செ.பி.சிலேடன் அவர்கள் ''விவசாயத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு சங்கமோ, கட்டுப்பாடோ இல்லை'' என்றும், சட்டசபையிலும் அவர்களுக்கென்று பிரதிநிதித்துவம் கிடையாதென்றும், இவைகள் உண்டாக முயல வேண்டுமென்றும் கூறியிருக்கிறார். எங்கும் விவசாய தொழிலாள சங்கங்களை ஏற்படுத்தி வேலையற்றவர்களுக்கு பரிகாரம் தேடுவதில் சகலரும் முயலுதல் இன்றியமையாதனவாகும்.

அடுத்தார்போல் பட்டினி கிடப்பவர்களைப் பற்றி எங்கும் எடுத்துச் சொல்லலும், அதற்கு பரிகாரம் தேடுதலும் அதுவும் சாத்தியமான பரிகாரம் தேடுவதிலும் சர்க்காருக்கு கோபமிருக்குமோ என்ற பயத்தில் பலர் இன்று இங்கிருக்கிறார்கள். அதைப் போலவே பட்டினி கிடப்பவர்களும் தாங்கள் எலும்பும் தோலுமாய் ஆகிவருவதற்குப் பட்டினியே காரணமென்றும், இப்பட்டினியை எடுத்துச் சொல்லி அதற்கு அவர்கள் சாத்தியமான பரிகாரம் தேடிக் கொள்வது தப்பல்ல என்றும் பட்டினி கிடப்பவர்கள் உணரவும் இடமேற்பட்டுவிட்டது. இனி அவர்கள் பட்டினி கிடப்போர் பரிகாரமடைய முயல இச்சட்டம் இடம் கொடுத்ததற்குத்தான் நாம் இதைப் பாராட்டுகிறோம்.

சமஸ்தானப் பாதுகாப்பு மசோதா சர்க்காராலேயே கொண்டு வரப்பட்டதாகும். இந்திய மன்னர்களில் ஹத்து மீறிப் போகின்றவர்களை அவ்வப்போது சர்க்கார் தலையிட்டு மன்னர்களுக்கு ஓய்வு கொடுத்து விட்டு ஸ்பெஷல் உத்தியோகஸ்தர்கள் மூலம் பரிபாலித்து வருவதை நாம் மறந்துவிடவில்லை. சில எதேச்சாதிகார மன்னர்கள் சர்க்காரின் நல்லெண்ணத்தில் சந்தேகம் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கும்; அச்சந்தேகத்தை நிவர்த்திக்கவே சர்க்காரார் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள் என்றும் கூட நாம் நினைக்க ஏதுவிருக்கிறதேயாயினும் இவ்விருவர்கள் நட்புக்காக சமஸ்தான பிரஜைகளின் மூலாதாரமான உரிமைகளைக் கட்டுப்படுத்திக்கூட தாங்கள் மன்னர்கள் ஆதரிக்கும் கருத்தை நிறைவேற்ற சர்க்கார் முயலுகிறார்கள் என்றும் சந்தேகப்படாமல் இருக்க முடியாது. இவ்வளவும் செய்வது நமக்குத் தீதேயாயினும் நாம் கண்டிக்கும் சமஷ்டியல் அரசியல் முறைக்குப் பாதுகாப்பேயாயினும் சட்ட மெம்பர் ''மன்னர்கள் ஹத்து மீறிப் போனால் சர்வாதிகாரப் பீடம் உடனே தலையிடத் தயங்காது'' என்று கூறியிருக்கிறார். இதற்கு முன்பு உதயபுரி, இந்தூர், நாபா, ஆள்வார், தேவாஷ், காஷ்மீரம், ராம்பூர் முதலிய பல சமஸ்தான விஷயங்களில் இதுவரையில் இவ்விதம் நடந்து வந்திருக்கிறார்களேயானாலும் நாம் உறுதிமொழியைப்பற்றி எதுவும் கூற விரும்பவில்லை. ஆனால் பரிதாபப்படுகிறோம்.

பிரபல பேரறிஞர் **மிஸ்டர் பிரடரிக் அதர்ட்டன்** ''இந்தியாவிலுள்ள முன்னூற்று சொச்சம் சிற்றரசர்களுக்கும், ஜமீன்தாரர்களுக்கும் இறுதி காலம் கிட்டிவிட்டதென்று நன்கு உணர்ந்து கொண்டார்கள். இங்கிலாந்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன் எதேச்சாதிகாரம் செலுத்திய பிரபுக்கள்



RangaRakes tamilnavarasam.com

எக்கதிக்கு இலக்கானார்களோ அக்கதிக்கே இவர்களும் காலக் கிரமத்தில் இலக்காகி விடுவார்கள் என்பது உறுதி. இன்னும் சில வருடங்களில் இவர்களுடைய நாட்டுப் பங்களாக்களில் தனியே சுககாலம் கழிப்பதைக் காணலாம். முன்னூற்றுச் சொச்சம் பேர்களில் இருநூற்று முப்பது பேர்கள் ''மாக்ஷிமை தங்கிய மகாராஜாக்கள்.'' இவர்கள் தங்களை நோக்கி விரைந்து வரும் வெள்ளத்தினின்று எப்படி தப்பிப் பிழைப்பது என்று சிந்தை கலங்கி இருக்கிறார்கள்'' என்று எழுதுகிறார்.

மன்னர் பாதுகாப்பு சட்டமோ கேவலம் 260 தனி நபர்களின் நன்மையைப் பொறுத்தது. வேலையற்றவர்கள் பாதுகாப்போ இந்நாட்டில் கணக்கில் கிட்டிய 4-கோடி பேர்களையும், கிட்டாத பலகோடி மக்களின் நன்மையை, உரிமையை இவைகளைப் பற்றி மட்டுமல்ல கோடிக் கணக்கான மக்களின் பட்டினி வயிறுகளுக்கு பரிகாரம் தேடுவதையும் பொறுத்ததாகும். ஆதலால் அடுத்தாற் போல் வரும் கூட்டத்தில் இந்நாட்டு ஏழைத் தொழிலாளர் பாதுகாப்பைப் பற்றி சற்று கவனம் செலுத்தி மன்னர்களை மட்டும் சர்க்காரார் காப்பாற்ற வில்லை, நமக்கும் பாதுகாப்பளிக்க சர்க்காரார் தவறுவதில்லை என்ற நம்பிக்கை பொது மக்களுக்கு உண்டாகுமாறு சர்க்காரும், இந்திய சட்டசபை மெம்பர்களும் முயற்சிக்கக் கோறுகிறோம்.

**புரட்சி - தலையங்கம் - 25.02.1934**



# சாம்பியன் திட்டம் சாகடிக்கப்படுமா?

வழக்கம் போலவே இவ்வருடமும் நமது மாகாண சட்டசபையின் முன் இவ்வாண்டின் 34, 35 வருட வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. சட்ட சபையிலுள்ள எதிர் கக்ஷிகளின் பிரசங்கிகளும், அதிகாரத்திலுள்ள கக்ஷியின் அங்கத்தினர்களில் அதிர்ப்தியுற்றோர்களென்போர் சகலரும் வரவு செலவு திட்டத்தைப்பற்றி பேசித் தீர்த்தார்கள். மூன்று நாள் இதற்காக வென்றே ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கத்தினர்களின் அபிப்பிராயங்களறிதல், ஆலோசனைகளை கேட்டல் என்கின்ற முறையில்தான் எதிர் கக்ஷியினர் விவாதங்களுக்கு இடமும் நேரமும் ஒதுக்கப்படுவது வழக்கம். இம்மாமூல் சடங்கிற்கு பின்போ மாகாண சர்க்கார் நடைமுறை முக்கிய உருப்பினர்களான நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள், அதாவது மந்திரிகள், லா மெம்பர், ஹோம் மெம்பர், பொக்கிஷ மெம்பர் என்ற ஆறு கனவான்களும் முதல் இரண்டு தினங்களிலும், நடந்த பிரசங்கத்தைத் தோற்கடித்து விடக் கூடிய மாதிரியில், ஏன் இன்னும் அதிகமாகக் கூடவே பேசினார்கள். இத்துடன் இவ்வருட வரவு செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இதில் நமது வாசகர்களுக்கு விசேஷ கவனம் செல்ல வேண்டுமென்பது அவசியமல்ல. அப்படியாயினும் இதை மேல் வாரியாகவேனும் கவனியாது நாம் இருந்துவிடுவதற்கில்லை. நமது மாகாண கல்வி மந்திரியான திவான் பகதூர் கனம் எஸ். குமாரசாமி (ரெட்டியார்) அவர்கள் தனது இலாகா சம்பந்தமாக சகோதர அங்கத்தினர்கள் செய்த உபன்னியாசங்கட்கு - அபிப்பிராயங்கட்கு பதில் சொல்லும் முறையில் முதலில் (தமது) இலாகாவைப் பற்றி அங்கத்தினர்கள் அதிகம் கவனம் செலுத்தவில்லை என்பதை எடுத்துக்காட்டி - வேடிக்கையாக அல்ல - சகோதர அங்கத்தினர்கள் நிலவரி விஷயமாக விசேஷ ஊக்கம் காட்டப்பட்டதே இதற்குக் காரணம் என்றும் எடுத்துரைத்திருக்கிறார். கல்வி சம்பந்தமாகவும், தமிழ் வளர்ச்சி சம்பந்தமாகவும் ஏதேனும் புது வாக்குறுதிகள், நோக்கங்கள் எடுத்துறைக்கக் கூடுமென்று எதிர்பார்த்தோர் பெரிதும் ஏமாற்றமடைந்தார்கள் என்று சொன்னபோதிலும், கனம் எஸ்.குமாரசாமி அவர்களின் சமாதானப் பிரசங்கத்தின் முற்பகுதியில் பெரும்பாகம் இந்நாட்டுப் பக்திமான்களுக்கு செலவிடப்பட்டதைக்



RangaRakes tamilnavarasam.com

கண்டு திடுக்கிட்டுப் போனோம். இன்று பல வருடங்களாக நமது மாகாணத்தில் ஆரம்பக் கல்வியைச் சீர்திருத்தி அமைக்கப் பல முயற்சிகள் செய்யப்பட்டதில் மிஸ்டர் சாம்பியன் அவர்களின் ஆரம்பக் கல்வித் திட்டம் மிக முக்கியமானதாகும். இத்திட்டத்தில் சில மாறுதலை நாம் விரும்புவதுண்டெனினும், இத்திட்டம் முழுதும் அலக்ஷியப்படுத்தக் கூடியது அல்லது நிறுத்தி வைக்க வேண்டியது என்று சொல்ல எவரும் துணியார். ஆனால் கனம் கல்வி மந்திரியவர்கள் ‘‘சாம்பியன் திட்டமானது இன்னும் ஸ்தல ஸ்தாபனங்களில் அபிப்பிராயம் கேட்பதிலேயே இருக்கிறது. இது கிடைத்த பின்னரே கவர்ன்மெண்டார் முடிவு செய்வதாக இருக்கின்றனர்’’ என்று கூறிவிட்டார்.

இப்பதிலானது ஆரம்பக் கல்வியைப் பற்றியும், மிஸ்டர் சாம்பியன் திட்டத்தினால் சீர்திருத்த முறையில் அறிவாளிகளாக வெளிவரும் இளைஞர்களையுடையதாக எதிர்காலம் இருக்க முடியுமா? என்பதில் நம்பிக்கை வைத்த நம்மை ஏமாறச் செய்து விட்டது.

மிஸ்டர் சாம்பியன் அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்பக் கல்வித் திட்டத்தை அத்திட்டம் வெளியான தினத்திலேயே கண்டனம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இக்கண்டனம் ரோமாபுரியைக் கூட எட்டியது எனலாம். இக்கண்டனம் செய்த ஒரு கூட்டத்தாரின் சௌகரியத்துக்காக ஓர் உயரிய திட்டத்தைக் கைவிடுவது தவறு என்பதுடன் அத்திட்டம் தயாரிக்க முதலில் இடமளித்த எந்திரத்தையும், அத்திட்டம் தயாரிக்கப்பட்ட காலத்தில், அதில் சாக்ஷியம் கொடுத்த எண்ணற்ற பொறுப்பேற்றவர்களின் முயற்சியையும் அலக்ஷியப்படுத்துவதுபோல் கூட கனம் மந்திரியவர்கள் சமாதானம் இருக்கிறது என்பதையும் நாம் எடுத்துக்காட்டாமல் இருப்பதற்கில்லை.

இந்நாட்டில் உள்ள ஜனசமூகம் என்றால் அது ஒரு சில வைதீகர்களையோ, அவர்களைப் பாராட்டி வரவேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளவர்களையோ குறிப்பிடுவதல்ல. எதிர்த்தவர்களான அறிவிற் பெரியோர்கள் சொல்லும் காரணங்கள்தான் என்ன? சுருக்கமாக சொன்னால் எக்காரணத்தினாலோ, எடுத்ததற்கெல்லாம் கண்டனம் செய்வதற்காக இப்போது இம்மாகாணத்தில் சிலர் கிளம்பி இருக்கிறார்கள். இவர்களின் செல்வாக்கு, கூட்டுறவு ஆகியவைகளுக்காக பயந்து நமது மாகாண கல்வி மந்திரியவர்கள் தமது காலத்திலேயே இத்திட்டத்திலுள்ள உயரிய முறைகள் பலதை இல்லாவிட்டாலும், சிலதையாவது, செய்யாமல் போகப் போவதில்லை யானாலும் இச்சமயத்தில் இதை எடுத்துக் காட்டாமலிருக்க முடியவில்லை.

சாம்பியன் திட்டம் அமுலுக்கு வரக்கூடாது என்று கண்டித்தும் சர்க்காரை மிறட்டியும் இதுவரையில் வெளிவந்த சகல செய்திகளையும் நாம் பார்த்தோம். அதில் அறிவின் வளர்ச்சிக்கு, ஜனசமூக வாழ்க்கையின் நன்மைக்கு, முரணானதாகவோ, புறம்பானதாகவோ, எதுவும் திட்டத்தில்



இருப்பதாக எடுத்துக்காட்டுவதான கண்டனம் இல்லை. இந்நாட்டு எல்லா மக்களும் தங்களை ஆதரிப்பதாக பிரமாண்டமான பொய் மூட்டை மீதே கண்டனக் கோட்டைகள் கட்டப்பட்டிருக்கிறது. இதற்காகவா நமது கனம் கல்வி மந்திரியவர்கள் மலைக்கப் போகிறார்கள்? இதைவிடத் திடுக்கிடக் கூடிய பல கண்டனங்கள் தோன்றிய போதெல்லாம் சமாளித்த மந்திரியாரிடம் நமக்கு நம்பிக்கை இல்லாமலில்லை. வீண்கூச்சல் எதற்கு என்று அலக்ஷியமாக பிரஸ்தாப பதில் கூறப்பட்டிருந்தாலும், எதிர்காலத்தில் தன் கடமையைத் திறம்படச் செய்ய கனம் மந்திரியவர்கள் தவறாது இருப்பாராக.

கண்டனக்காரர்கள் சொல்லும் காரணங்களில் பிர்மாண்டமான காரணங்கள் என்னவென்று பார்ப்போம்.

1. இன்று கல்விக்காக செலவிடப்படும் பணத்தைவிட மூன்று மடங்கு பணச்செலவாகும் என்பது.

பணச்செலவு அதிகமென்பதில் இவர்கள் விடும் கண்ணீர் வாஸ்தவமானால் தங்கள் தர்ம ஸ்தாபனங்களுக்கு என்று வருடா வருடம் வாங்கும் இலக்ஷக்கணக்கான ரூபாயிலிருந்து சிறிது குறைத்து இக்கல்வித் திட்டத்துக்குப் போட்டுவிடப் போகிறார்களா? என்று பார்த்தால் அது இன்று நடக்கக் கூடியதல்ல என்பதுடன் கண்டனக்காரர்கள் தங்கள் மதப்பிரசாரத்துக்கு எதையும் கையாளும் தந்திர முறையிலேயே முதலில் பணச் செலவு என்ற பேரால் கண்டனம் என்றார்கள் என்று சொல்லலாம்.

2. பிறப்பினால் உயர்வு தாழ்வு, மதத்தினால் உள்ள வித்தியாசம், மதத்தினால் உள்ள சலுகை இவைகளுக்கு தீங்கிழைப்பதாக இருக்கிறதாம்.

இவர்கள் சொல்லும் ‘‘தீங்கிழைப்பதாக இருக்கிறது’’ என்பவைகள் எத்தனை இலக்ஷம் ஏழை எளியச் சிறுவர்கள் ஆரம்பக் கல்வியைப் பெற முடியாது தடுக்கிறது என்பதையும், கல்விக்காகக் கொடுக்கப்படும் பணம் - அவர்கள் பேரால் சர்க்காரால் தாறாளமாக செலவிடப்பட்ட போதிலும் அவை முழுதும் அவர்களுக்குப் போகவே மிஸ்டர் சாம்பியன் திட்டம் உதவி செய்யத் தூண்டுகிறது என்பதிலும், இவர்கள் காட்டும் கண்டனம் நியாயமுடையதாக இருக்க இயலுமா?

3. ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் ஆண், பெண் இருபாலரும் ஒன்றாகப் படிப்பது தவறு.

நமது மாகாண முதல் மந்திரியாக இருந்தவர்களில் இருவர்கள் மிஸ்டர் சாம்பியன் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தும், பின்பும் இம்முறையை ஆதரித்து இருக்கிறார்கள் என்றும் இதற்காக மந்திரிகளை மகாஜனங்கள் பாராட்டியிருக்கிறார்கள் என்றும் சொல்வதுடன் ஒரு முதன்மந்திரியார் ஆரம்பக் கல்விச் சாலைகளில் மட்டுமல்ல உயர்தர பட்டம்



RangaRakes tamilnavarasam.com

பெறும் சர்வகலா சாலைகளிலும் இம்முறை கையாளப் படவேண்டும் என்றும் இன்றுள்ள முறை மாறி, புது முறையில் படிப்பும், பள்ளியும் பாடமும் வருகிற காலத்தில் உபாத்தினிகளாகவே சகலரும் நிறைந்திருக்க வேண்டும் என்றும் கூட சொல்லியிருப்பதை மட்டும் இங்கு ஞாபகமூட்டுகிறோம்.

இன்றுள்ள கிறிஸ்துவ கலா சாலையில் முக்கிய வகுப்புகளிலும், வைத்திய கலா சாலையில் பல வகுப்புகளிலும், நகரங்களில் பெண்கள் ஹைஸ்கூல்கள் இல்லாத இடங்களிலும், கிராமங்களில் பெண் பள்ளிக் கூடங்கள் இல்லாத இடங்களிலும் கிராமங்களிலுள்ள கிறிஸ்துவ பாடசாலைகளுக்குச் சென்றால் பெண்கள் கிறிஸ்துவ மதத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்ற பயமுள்ள இடங்களிலுமுள்ள கல்விச் சாலைகளில் பெண்கள்- சிறுமிகள் சென்று கல்வி கற்று வருகிறார்களா? இல்லையா? என்று மட்டும் வினவுகிறோம்.

4. ஜனக்குறைவால் ஒரு மதத்தார் தற்காலம் ஒரு சிறிய பாடசாலையை ஸ்தாபித்து, பின்னர் ஜனங்கள் அதிகரிக்கும்போது பாட சாலையை மென்மேலும் விருத்தியாக்க மேல் வகுப்புகளுக்குச் சர்க்கார் அங்கீகாரம் கிடைக்க இடமில்லை என்பது.

இதில் பள்ளிக் கூடங்கள் ஏற்படுவது என்பது மக்களின் கல்விக் குறையை நிரப்புவதற்காகவா? அல்லது ஜனக்குறைவாக உள்ள மதக்காரர்கள் பள்ளிக்கூடம் வைத்து அது மூலியமாக மதத்தை வளர்க்க பள்ளிக் கூடங்களா?

எம்மதம் குறைய ஆரம்பிக்கிறதோ அவர்கள் பணத்தைக் கொண்டே குறைவுபட்ட எண்ணிக்கையுள்ள மதம் பெருக வேண்டுமென்ற எண்ணமா? தனி முறையில் என்று ஆரம்பிக்கப்பட்டுள்ள பல சிறு - மதப்பிரசார ஆரம்பக் கல்விச் சாலைகளில் மதமாறுதல், அதனால் குழப்பம், கலகம் உண்டாவதாலும், கிராமங்களிலிருப்போர் பயந்து பள்ளிக்கு சிறுவர்களை அனுப்ப மறுக்கிறார்கள் என்ற குறையை நிவர்த்திக்கவே சாம்பியன் திட்டமானது புது மாறுதலை செய்ய ஏற்பட்டது.

முன் சொன்ன நொண்டிக் காரணங்களைக் காட்டி மிரட்டும் மதக் கிறுக்கர்களின் கண்டனத்தை பொறுட்படுத்தாது, விரைவில் ஆரம்பக் கல்வி முறையில் தங்கள் கடமையைச் செய்ய மாகாண கல்வி இயந்திரம் தயங்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறோம். ஸ்தல ஸ்தாபனங்கள் மீது பழியைப் போட்டு அதன் மறைவில் எவரும் மறைய ஆசைப்படுவது நியாயமாகாது. மதக் கிறுக்கர்களின் கண்டனத்தை மட்டும் சர்க்கார் பெரிதுபடுத்தினதாக பொது ஜனங்கள் உணர்ந்தால் அவர்களும் தங்கள் கண்டனங்களைச் சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி சர்க்கார் கடமையைச் செய்தொழிக்குமாறு சர்க்காரை கேட்டுக்கொள்ள பொது ஜனங்களுக்குத் தெரியுமேயாயினும் சர்க்கார் அது வரையில் இதை வளரவிடக்கூடாதென்றும் எடுத்ததற்கெல்லாம் மதமிருப்பதாகக் கூறும் பரிதாபத்துக்குறியவர்களிடம் கோபம் கொள்ளாமலும் அவர்கள் கண்டனத்தைக் கண்டு அஞ்சாமலும், தாங்கள் நியமித்த கமிட்டி, தாங்கள் விரும்பிய அறிக்கை இவைகளுக்காக செலவான பணம், இவைகள் அத்தனையையும் அலட்சியப்படுத்திய வைதீகர்களிடம் அலட்சியத்தைக் காட்டி ஆரம்பக் கல்வி திட்டத்தில் சர்க்கார் தங்கள் கடமையைச் செய்ய தவறாதென்ற எண்ணம் எங்கும் உண்டாகச் செய்ய கேட்டுக்கொள்ளுகிறோம்.

**புரட்சி - தலையங்கம் - 04.03.1934**



RangaRakes
tamilnavarasam.com

# மன்னார்குடி மகாநாடு

நமது மாகாண சமதர்ம மகாநாடானது 4 - தேதி ஞாயிறன்று மன்னார்குடியில் சிறப்பாக நடந்தது. மகாநாட்டுக்கு சமதர்ம தோழர் எம். சிங்காரவேலு அவர்கள் தலைமை வகிப்பதாக இருந்தும் திரேக அசௌக்கியத்தினால் அவர் வர முடியாமல் போனதினால் 3 - தேதியன்று மகாநாடு நடைபெறவில்லை. ஆனால் அன்று மகாநாட்டுக் கொட்டகையில் தோழர் ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில், வந்திருந்த இரண்டாயிரத்துக்கதிகமான பிரதிநிதிகளைக் கொண்டு ஒரு பொதுக் கூட்டம் நடந்தேறியது.

4 - தேதியன்று மகாநாட்டுக் கொட்டகையில் மகாநாடு ஆரம்பமாயிற்று. வரவேற்புத் தலைவர் தோழர் எம். தருமலிங்கம் அவர்களின் வரவேற்புத் தலைவர் பிரசங்கம் நடந்ததும், தோழர் எஸ்.ராமநாதன் எம்.ஏ.பி.எல்., அவர்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். முன், தலைமை வகிக்கவிருந்த தோழர் எம். சிங்காரவேலு பி.ஏ.பி.எல்., அவர்களால் தயாரிக்கப்பட்டிருந்த அச்சடித்திருந்த அக்கிராசனப் பிரசங்கத்தைத் தோழர் எஸ். இராமநாதன் அவர்கள் வாசித்தார். அக்கிராசனர் முன்னுரைக்குப் பின் மகாநாட்டுத் தீர்மானங்களைத் தயாரிப்பதற்கு விஷயாலோசனைக் கமிட்டி நியமிக்கப்பட்டது. பகல் 11 மணியிலிருந்து பிற்பகல் மூன்று மணி வரை விஷயாலோசனை கமிட்டிக் கூட்டம் தோழர் எஸ். ராமநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் முதலில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது நமது ஈரோடு சமதர்ம வேலைத் திட்டத் தீர்மானமாகும்.

தோழர் எஸ். ராமநாதன் அவர்கள் வழக்கம்போல் வேலைத் திட்டத்தை எதிர்த்தார். இரண்டொரு தோழர்கள் அவர் கூறியதற்கு ஆதரவு காட்டினார்கள். நீண்ட விவாதத்திற்குப் பின்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மற்ற தீர்மானங்கள் தயாரிக்கப்பட்ட பின்பு விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் முடிந்தது.

மாலையில் மகாநாட்டுக்குத் தோழர் ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் மகாநாடு ஆரம்பமாயிற்று. சகல தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.



மாகாண மகாநாட்டுக்குப் போதுமான விளம்பரம் இல்லாவிட்டாலும் பல ஜில்லாக்களிலிருந்தும் 200, 300க்கு மேற்பட்ட பிரதிநிதிகளும் ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் 500, 600க்கு மேற்பட்ட பிரதிநிதிகளும் விஜயஞ் செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சமதர்ம வேலைத் திட்டமானது தயாரிக்கப்பட்ட ஓறாண்டு முடிவுக்குள் மாகாணச் சமதர்ம மகாநாட்டைக் கூட்டி வேலைத்திட்டத் தீர்மானங்களை நிறைவேற்ற முன்வந்த மன்னார்குடி வரவேற்பு கமிட்டியைப் பாராட்டுகிறோம்.

சமதர்மத் திட்டமோ, லட்சியமோ பயனற்றது என்றும் அத்தீர்மானங்கள் ஒழுங்குப்படி அமைக்கப்படவில்லையென்றும் வீண் புகார் கூறுகிறவர்களுக்குத் தலைவர் எம். சிங்காரவேலு அவர்களின் ஆராய்ச்சி மிகுந்த தலைமை பிரசங்கமானது தக்கப் பதிலளிக்கப் போதுமானதாகும்.

அறியாமையாலோ, பொறாமையாலோ, பயத்தினாலோ இவைகள் ஒன்றுமில்லை என்றால் சுயநலத்தாலோ நமது திட்டத்தைப் பற்றி வீண் புகார் சொல்லும் நண்பர்கள் இருந்தால் அவர்களுக்கும் தலைவரின் பிரசங்கமானது தக்க பதிலை எடுத்துக் கூறுவது போல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. சமதர்ம திட்டம் ஒன்றினாலல்லது வேறு எத்திட்டத்தாலும் ஒரு காது ஒடிந்த ஊசி அளவு கூட இந்நாட்டு ஏழை மக்களுக்கு பலன் இல்லை என்பதற்கு தலைவரின் நீண்ட பிரசங்கமே போதுமானதாகும்.

வரவேற்பு கழகத் தலைவர் தோழர் தர்மலிங்கம் அவர்களைப் பற்றி தஞ்சை ஜில்லா வாசிகள் நன்கறிவார்கள். அந்த ஜில்லா அரசியல் பார்ப்பனர்களால் பலவித கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகியும் தமது கொள்கையில் விடாப் பிடியாக உறுதியுடன் நிற்குமவரின் பிரசங்கம் வேறொரு இடத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

மன்னார்குடியில் வரவேற்புக் கமிட்டியார் எதிர்பார்த்ததைவிட ஏராளமான பிரதிநிதிகள் விஜயம் செய்தும் சகலருக்கும் தக்க விதம் சௌகரியங்கள் அமைத்துக் கொடுத்த வரவேற்புக் கழகத் தலைவர் எம். தர்மலிங்கமவர்களைப் பாறாட்டுவது போல் காரியதரிசிகளையும் பாறாட்டுகிறோம். மகாநாட்டுத் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டவர்களின் தலைவர்களாக உள்ளவர்களில் தோழர் இராமையாவையும் சொங்கண்ணாவையும் பாறாட்டுகிறோம்.

நமது தலைவர் சிறை புகுந்த ஒரு மாதத்துக்குள் இரண்டு தாலுகா மகாநாடுகளும் ஒரு மாகாண மகாநாடும் நடந்ததொன்றே நமதியக்கமானது தலைவருடன் மறையும் என்ற பொய் பிரசாரக்காரர்களுக்கு தக்க பதிலாக இருக்குமென்று நம்புகிறோம்.

தமிழ் நாடெங்குமுள்ள நமது தோழர்களும் சங்கங்களும் மாகாண மகாநாட்டின் தீர்மானங்களை கவனித்து அநுஷ்டானத்தில் கொண்டு வர முயல ஆசைப்படுகிறோம்.

**புரட்சி - தலையங்கம் - 11.03.1934**



RangaRakes tamilnavarasam.com

# சர்வ ஜன வாக்கா?

தொட்டதற்கெல்லாம் சர்க்கார் பொது ஜன அபிப்பிராயம் அறிந்து, அது சாதகமாக இருந்தால்தான் தாங்கள் செய்வதாக சொல்லுகிறார்கள். அத்துடன் மட்டுமல்ல, ஒன்றைப் பற்றி யோசிக்கக் கூட சர்வஜன வாக்கு கேட்கிறார்கள். நாம் உணர்ந்த வரையில் என்றும் சர்க்கார் சர்வஜன வாக்குப்படி நடந்ததாக கூறமுடியாது. சென்ற பத்து ஆண்டுக்கு முன்பு பத்து வயது பெண்களை இடுப்பொடிக்கக் கூடாது, பொட்டுக் கட்டக் கூடாது என்று பிரச்சினை உண்டான காலத்தில் கூட சர்வஜன வாக்கு எடுக்க வேண்டு மென்றார்கள்; எடுத்தார்கள். சிறு பெண்களுக்குப் பொட்டு கட்டுவதை ஆதரிப்பதாக கூறினார்கள். பொது ஜனங்களுக்கு விரோதமாகவே அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்பின் பல சீர்திருத்த தீர்மானங்களிலும் பொதுஜன வாக்கு விரோதமாக இருந்தும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் சர்க்கார் அவைகளை நிறைவேற்ற உட்பட்டதற்கு காரணம் ஜனசமூக நன்மை என்பதற்கும் பொது ஜன வாக்கு என்று இவர்கள் எடுப்பதற்கும் சம்மந்தமில்லை என்பது நன்கு உணர்ந்ததேயாகும்.

இந்நிலையில் இரண்டு மாதம் காந்தி பாபு ஆலயப் பிரவேசத்துக்கு ஆதி திராவிடர்கட்கு இடமளிக்க வேண்டுமென்று இம்மாகாண முழுதும் பிரசாரம் செய்த பின் பொது ஜன அபிப்பிராயம் அறிந்தும் அது விரோதமாக இருப்பதாக கூறுகிறார்கள். காந்தியடிகளின் நேரான பிரசாரத்திற்கு பின்பும், லக்ஷக்கணக்கான மக்கள் வரவேற்ற பின்பும், இரண்டு லக்ஷ ரூபாய் பாத காணிக்கைக்குப் பின்பும் காந்தி சொன்ன ஆலயப் பிரவேச ஆதரவுக்கும் கை தட்டுதலுக்குப் பின்பும் ஓட்டு எடுப்பதில் விரோதம் என்றால் இதற்கு சரியான சமாதானம் சொல்ல நமக்குத் தெரியவில்லை. போகட்டும். இத்தீர்மானத்துக்கு வந்த கெதியானது, நாளைய ஜுன் மாதம் வரவிருக்கும் தீண்டாமை விலக்கு மசோதாவுக்கும் வந்துவிடாதிருக்க சர்க்காரும் ஆதிதிராவிட சகோதரர்களும் முயலுவார்களாக. ஆலயங் கட்ட ஹரிஜன நிதியை உபயோகிக்க கூடாதென்ற நமது மாகாண ஹரிஜன கமிட்டியும் தனது சக்தியை தீண்டாமை விலக்கு மசோதாவுக்கு சாதகமாக வேலை செய்வார்கள் என்று நம்புகிறோம்.

**புரட்சி - துணைத் தலையங்கம்** - 11.03.1934



# 3 லக்ஷமா?

ரஷிய நாட்டில் தீக்கிரையாக்கப்பட்டது போக மிஞ்சிய சில புத்தகங்களில் புறாதன காலத்து கையெழுத்து பிரதியான ‘‘பைபிள்’’ ஒன்று பிரிட்டீஷ் பொது ஜனங்கள் 3 லக்ஷ ரூபாய் கொடுத்து வாங்கினார்களாம். இது அங்குள்ள மதத்தின் பேரால் உள்ள செல்வ செறுக்கை காட்டுகிறது. அதே தினத்தில் தான் பதினாயிரக்கணக்கான வேலையற்றோர் ஊர்வலக் காக்ஷியும் அங்கு நேர்ந்தது. பைபிளுக்கு கொடுத்த பணம் பட்டினிக்கு கொடுத்தால் சோறாகும். பட்டினிகாரர்களுக்கு பைபிள் ஒருக்கால் இனி சோறு போடுமா? என்று பார்க்கலாம்.

**புரட்சி - துணைத் தலையங்கம்** - 11.03.1934



RangaRakes tamilnavarasam.com

# மீண்டும் சுயராஜ்ய கக்ஷியா?

காங்கிரஸ் ஒழிந்து விட்டதென்றும் அதனால் நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு இதுவரையில் விமோசனம் ஏற்படவில்லை என்றும், அதை இன்னும் உயிரோடு வைத்துப் பார்ப்பதில் யாதொரு சிறிய நன்மையும் பெற முடியாதென்றும், ஆனால் காங்கிரசை உயிர்ப்பிக்க காந்தி பக்தர்கள் முயற்சிப்பது நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டுமென்றே முட்டுக்கட்டை போடுவதாகுமென்பதோடு, அது பெரும் முட்டாள்தனமும் தற்கொலைக்குச் சமானமானதாகுமென்றும், இந்திய மக்களில் சகலரும் இன்று உணர்ந்து இருக்கிறார்கள்.

இந்த நிலையில் சில காங்கிரஸ் தலைவர்கள் சமீபத்தில் டில்லியில் கூடி, சட்டசபைகளைக் கைப்பற்றுவதா? இல்லையா? என்பதைக் குறித்து, தக்க முடிவிற்கு வர முயன்றார்கள். ஆனால் இன்றைய தினம் காங்கிரஸ் கக்ஷியில் எந்த இருவர்களுடைய அபிப்பிராயமும் ஒரே விஷயத்தைக் குறித்துங்கூட முழுதும் ஒன்றாக பரிணமிப்பதில்லை என்கிற இரகசியம் நாம் அறிந்ததேயாததால், அவர்கள் எந்த முடிவிற்கும் வராமல் கலைந்து போய் விட்டார்கள் என்பதில் நாம் சிறிதும் ஆச்சரியப்படவில்லை.

வர்ணாசிரம தர்மத்திற்கு முலாம் பூசி, அது வேண்டுமென்று நம்பிக்கை கொண்டிருப்போரும், பழைய ''ராம'' ராஜ்யங்களை சிருஷ்டித்து அதுவே குடிஆட்சி என்று நிலை நிறுத்தக் கங்கணங் கட்டிக் கொண்டிருப்போரும் ஜாதிப் பாகுபாடுகள், தொழில் வேற்றுமைகள் இவைகளை அறவே ஒழிக்கப் பயனுள்ள வேலைகளைச் செய்யாது, இவைகளையே இன்னும் நீடித்து வைத்திருக்க விரும்புவோரும், தீண்டாமை ஒழிய வேண்டும், ஆனால் ஹரிஜனம் என்பதின் பேரால் தீண்டாதார்கள், சூத்திரர்களாகவே மதிக்கப்படவேண்டுமென்போரும், மன்னர்கள் சமஸ்தானாதிபதிகள் முதலியோர் சாஸ்வதமாக ஆதிக்கமே செலுத்தி அரசுரிமை செய்யட்டுமென்போரும், பிரிட்டிஷாருக்கு இந்திய அரசியலில் முக்கிய பாதுகாப்புகள் இருக்கட்டுமென்போருமான காங்கிரஸ்காரர்கள் இன்று சுயராஜ்ய கட்சிப் போர்வையைப் போத்திக் கொண்டு, சட்டசபை ஸ்தாபனங்களைக் கைப்பற்ற, ''தங்களின் பூர்வ கால சம்பவங்களை'' மறந்து விட்டு வெளி வந்து விட்டார்கள்.



உதாரணமாக நமது மாகாண தேசீயவாதியான சத்தியமூர்த்தி தனது வடநாட்டுச் சுற்றுப் பிரயாணத்திற்கப்பால் கீழ்கண்ட செய்தியை பத்திரிகை நிருபருக்கு அறிவுறுத்தியுள்ளார். அதாவது ''ஜனங்களிடையே கட்டுப்பாடு ஏற்படுத்தி மூன்று கோடி 60 லக்ஷம் ஓட்டர்களுக்கும் ராஜீய ஞானம் உண்டு பண்ணி, அவர்களை ஒன்று திரட்டுவதே நாம் செய்யக் கூடிய வேலை. காங்கிரஸ் மகாசபை ஜனங்களின் உண்மையான பிரதிநிதி சபையென்பது வாஸ்தவமாயின், ஓட்டர்களின் ஆதரவைப் பெற்று அவர்களுடைய பிரதிநிதிகளாக இருந்து காங்கிரஸ்காரர்கள் வேலை செய்ய வேண்டும். யார் தங்களுக்கு தெளிவான ஒரு வழியைக் காட்டப் போகிறார்கள் என்று மகாஜனங்கள் ஆவலாய் இருக்கிறார்கள்.''

தோழர்களே! சத்தியமூர்த்தி போன்றவர்களின் ஆதிக்கத் தாண்டவத்திற்கு இடங்கொடுக்கப் போகின்றீர்களா? இவர்கள் முன் இருந்து சாதித்தது நாம் அறிந்தது தானே! மற்றும் இப்பேர்க் கொத்தவர்களின் சிறிய எண்ணமுங்கூட நம் நாட்டிற்கு எவ்வளவு அபாயகரமானதென்பதை விளக்கிக் கூறத் தேவையில்லை.

நமது இந்திய சட்டசபை - மாகாண சட்டசபைகள் - ஸ்தல ஸ்தாபனங்கள் முதலியவைகள் இந்திய பொதுஜன பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்பது உண்மை. ஆனால் பொது ஜனங்களுடைய பிரதிநிதிகள் மாத்திரம் அங்கு இல்லை. அங்குள்ளவர்களில் 100-க்கு 98 பேர்கள் தங்களுக்கு மாத்திரமே தாங்களே பிரதிநிதிகளென்னும் பணக்காரக் கூட்டத்தார், செல்வவந்தர் கூட்டத்தார், வகை துகை அறியாத படித்த கூட்டத்தார் முதலானவர்களாவார்கள்.

இதைப் பார்த்து இன்றையதினம் நம்நாட்டிலுள்ள ஒவ்வொரு ஏழை மகனும், கூலிக்காரனும், தொழிலாளியும், விவசாயியும் கஷ்டப்பட்டு அவதிப்படுபவனுமாகியவர்கள், அதிருப்திப்பட்டு ஆத்திரமடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நல்ல மார்க்கம் ஏற்பட வேண்டியது பெரிதும் அவசியமே.

ஆனால் இந்த நிலையில் சுயராஜ்யக் கட்சியாரின் சட்டசபைப் பிரவேசம், கஷ்டப்பட்டு அவதிப்பட்டு கொடுமைப்படுபவருக்கு எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போன்ற கொடுமையாகுமேயன்றி, வேறு எந்த சிறு குண்டூசி நன்மையும் ஏற்படப்போவதில்லை என்பது பகிரங்க ரகசியம்.

இன்றைய மக்களின் விழிப்பிற்குக் காரணம், அவர்களின் சுயமரியாதை உணர்ச்சியேயாகும். இந்த விழிப்பானது நமது தமிழ்நாட்டில் மாத்திரம் நின்றுவிடாது. அகில இந்தியா முழுதும் ஏற்பட்டிருக்கிறது.

சமதர்ம சோஷியலிஸ்ட் அபிப்பிராயங்களைக் கொண்டு கேரளத்திலும், பஞ்சாபிலும், பம்பாயிலும், மத்திய மாகாணத்திலும்,



RangaRakes tamilnavarasam.com

கான்பூரிலும் இன்னும் சில இடங்களிலும் தக்க இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு நல்ல வேலைகள் செய்து வருகின்றனர். இன்றைய தினம் இந்தியாவில் நிலைபெற்றுள்ள எல்லா விஷயங்களிலுமுள்ள அதிருப்தியை ஆங்காங்கு வெளிக்காட்டி வருகிறார்கள். அவர்களெல்லோரும் நம் நாட்டில் நிலவும் பல்வேறு விஷயங்களையும், முறைகளையும் அடியோடு மாற்றாமல் நம்முடைய ஜனசமூகத்திற்கு எவ்வித நன்மையையும் கொண்டு வந்து விடுவதென்பது முடியாத காரியமென்பதை உணர்ந்திருக்கிறார்கள். பல மக்கள் கஷ்டப்படுவது, சிலர் சுகம் அனுபவிப்பது என்கிற நிலை எந்த இடத்தில் எந்த அமைப்பில் இருந்தாலும் அடியோடு அழிக்கவே முயல வேண்டும். முதலாளி தொழிலாளி என்கிற பேதமோ, ஆண்டான் அடிமை என்கிற அமைப்போ, தொண்டமான் தோட்டி என்கிற தொல்லையோ, ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமோ இன்றி, எல்லோரும் சரிநிகர் சமமான அந்தஸ்து நிலை எய்த வேண்டுமென்கிற அழுத்தமான அபிப்பிராயம் எங்கும் ஊறிப் போய்விட்டது.

ஆகையால் சுயமரியாதைத் தோழர்களே! நாட்டின் உத்வேகம் நம் பக்கமே சார்ந்திருக்கிறதென்பதை உணர்ந்து நமது இயக்க லக்ஷியத்திற்கு விரோதமானவர்களையும் நம் லட்சியத்தை நன்கு உணர சந்தர்ப்பம் கொடுத்து நாமே எங்கும் ஆதிக்கமும், பலமும், செல்வாக்கும் பெற வேண்டுமென்பதில் அதிகக் கவலையும் ஊக்கமுமெடுத்துத் தளராது உழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

நமது தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாணச் சமதர்மப் பேருரையில் ''சமதர்ம ஞானத்தைப் பொது மேடைகளிலிருந்து தெரிவிப்பதுடன், சட்டசபைகளிலும், மற்ற ஸ்தாபனங்களிலும் நுழைந்து பொது மக்களிடம் நெருங்க வேண்டுமென்று'' கூறியிருப்பதை ஒவ்வொருவருக்கும் ஞாபகமூட்டுகிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சமீபத்தில் 4வது சுயமரியாதை மாகாண மகாநாட்டை நாளது ஆகஸ்டு மாதத்தில் திருச்சியில் கூட்டுவதென்று நமது சுயமரியாதைச் சங்கத்தின் மத்திய சபைக் கூட்டத்தார் கடந்த 11-ந் தேதி சென்னையில் கூடி தீர்மானித்திருப்பது மிக விசேஷிக்கத் தக்கது. இதன் விபரம் பிறிதொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். எனவே, நமது தோழர்கள் யாவரும் நமது இயக்க வளர்ச்சிக்குத் திருச்சியில் ஒன்று கூடி மேற்காட்டிய நல்ல முடிவிற்கு வரக் கோருகிறோம்.

அதோடு நம்நாட்டின் பழைய வர்ணாஸ்ரம தர்மத்தை யொத்த இன்றைய முதலாளி, தொழிலாளி என்ற முறையையும் புரோகிதர் ஆட்சியையும், வியாபாரிகள் கொள்ளையையும் பணக்காரர்கள், சிற்றரசர்கள் போன்றவர்களின் ஆதிக்கத்தையும் மறைமுகமாகவேனும் ஆதரிக்க ஒருப்படும் எந்தக் கட்சியானாலும் அது தக்கவாறு திருத்தி சமதர்ம லக்ஷியம் பெறச் செய்வதும் நமது கடமையாகும். மற்றும் நமது இயக்க வேலைத் திட்டமாகிய பொதுவுடமைத் தத்துவத்தை அதாவது நிலங்கள், தொழிற்சாலைகள், போக்குவரத்து வசதிகள் முதலியனவற்றை பொதுவாக்கி அந்தந்த ஸ்தாபனங்களில் உழைத்துவரும் விவசாயிகள், தொழிலாளர்கள் முதலியவர்களுக்கு அதனுடைய வருமானங்கள் யாவற்றையும் உபயோகப்படச் செய்து உழைக்கத்தக்க முன்னணி வேலைத் திட்டத்தை தீவிரப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம்.



மற்றும் தோழர் C.D. நாயகம் அவர்களின் கட்டுரையை இவ்வாரம் ''புரட்சி''யின் 3 -ம் பக்கம் பிரசுரித்திருப்பதை வாசகர்கள் ஊன்றிப் படித்தால் எந்தத் திட்டம் மக்களுக்குப் பயன்படுமென்பது விளங்காமற் போகாது.

**புரட்சி - தலையங்கம் - 18.03.1934**



RangaRakes tamilnavarasam.com

# துணுக்குகள்

**பட்டினிக் குரல் கேட்க வில்லையா?**

இவ்வாரத்தில் லண்டனில் லார்டு லெஸ்டியும், சர் எட்மெண்டு லெஸ்டியும் மாதாக் கோவிலுக்குக் கோபுரம் கட்டுவதற்கு இரண்டு லட்சத்து இருபதினாயிரம் பவுன் நன்கொடை அளித்திருக்கிறார்கள். இவர்களுக்கு அங்கு பட்டினியின் மிகுதியால் அவதிப்படும் பாட்டாளியின் கூக்குரல் காதில் விழவில்லையா? லண்டன் ஹைடி பார்க்கில் 75000 பட்டினி வீரர்கள் எட்டு மேடைகளில் அலறியதை, அந்த மதப் பித்தம் பிடித்த கடவுள் வெறியர்கள் சிறிது சிந்தித்துப் பார்த்திருந்தால் ''இயேசு'' கோபித்துக் கொண்டிருப்பாரோ?

**பாசிசமா? சோஷியலிசமா?**

மேனாடுகளில் ''பாசிசம்'' ''சோஷியலிசம்'' என்று அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தலைமை ஸ்தானமான பிரிட்டனில் இன்று பாசிசம் முறியடிக்கப்பட்டிருக்கிறது. லண்டனில் நிகழும் கவுண்டி கவுன்சில் எலக்ஷன்களே பார்லிமெண்டரி எலக்ஷன்களின் எதிர் காலத்தைக் குறிப்பிடுவதாகும். லண்டன் முனிசிபல் எலெக்ஷன்களான கவுண்டி கவுன்சில் தேர்தலேதான் இன்றைய தினம் பார்லிமெண்டுக்கு அடுத்த முக்கியமானதாகும். இப்போர்க்கொத்த தேர்தலில் தொழிலாளர்களே முன்னையை விட நன்கு வெற்றி பெற்றிருக்கிறார்கள். எலெக்ஷன்களுக்கு முந்தி 34 ஸ்தானங்களே பெற்றிருந்த தொழிலாளர்கள் இன்று 69 ஸ்தானங்களைக் கைப்பற்றி விட்டார்கள். லண்டன் கவுண்டி கவுன்சிலில் தொழிலாளர்கள் பெரும்பான்மையோர் ஸ்தானம் பெற்றது இதுவேதான் முதல் தடவையாகும். இதிலிருந்தே, பாசிசமா? சோஷியலிசமா ? மேனாடுகளில் தலை நிமிரும் என்பதைக் கவனிக்கவும்.

புரட்சி - **துணுக்குகள்** - 18.03.1934



# சைவ மகாநாடு

தமிழ் பாஷையின் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாயிருந்தவர் களும் - தமிழை வளர்த்த சமணர், பௌத்தர் முதலியவர்களைச் சூழ்ச்சியால் கொன்ற சைவர்கள் - இல்லை - வேளாளர்கள் தமிழர்களின் பேரால் திருநெல்வேலியில் மகாநாடு கூட்டுகிறார்கள். தமிழர்களே! ஏமாந்து விடாதீர்கள்.

புரட்சி - **அறிவிப்பு** - 18.03.1934



RangaRakes tamilnavarasam.com

# முதலாளிகள் ஆதிக்கம் உஷார்!

இந்திய நாட்டின் தொழிலாள வகுப்பார்கள் தங்கள் அடிமைச் சங்கிலிகளை அறவே தகர்த்தெறிய, பரிபூரணமாக இன்னும் முற்படவில்லை என்றாலும், ஓர் அளவிற்கு அவர்கள் சமீப காலத்தில் விழிப்படைந்திருக் கிறார்கள் என்பது மாத்திரம் மறுக்க முடியாத உண்மையாகும். தொழிலாளர்களுடைய விழிப்பிற்குக் காரணம், அவர்களுடைய சகிக்க முடியாத கொடிய துன்பங்களும் கஷ்டங்களுமேயாகும்.

தொழிலாளர்களுக்கு, முதலாளிகளோ அல்லது அரசாங்கத்தாலோ இன்றையத் தினம் 'கிருபா கடாக்ஷம்' காட்டப்படுகிற தென்று சொன்னால், அது அந்த தொழிலாளிகளின் உழைப்பின் பயனாகவே, நியாயமாக கிடைக்க வேண்டிய வரும்படியிலிருந்து கொஞ்சம் கொடுத்து, தொழிலாளர்கள் வயிறு ஒட்டி, வாடி வதங்கி சாகாமலிருக்கச் செய்து, மீண்டும் சாஸ்வதமாக தங்களுக்கே ஊழியம் செய்து கொண்டிருப்பதற்கே தவிர, மற்றப்படி நியாய புத்தியையோ, கருணைப் பிரவாகத்தையோ அல்லது பச்சாதாப இரக்க புத்தியையோ, கொண்டதல்லவென்று துணிந்து கூறுவோம்.

இன்றைய தினம் முதலாளியானவன், ஒரு தொழிலாளியைப் பற்றி எப்பேர்க்கொத்த மனோ நிலையைக் கொண்டிருக்கிறான் என்று முடிவு கட்டுவதற்கு, அவனுடைய நடைமுறை வாழ்க்கையை பரிசீலனை செய்யுங்கள். ஒரு முதலாளிக்கு, அவனுடைய நாய்க்குட்டியோ, மைனாக் கிளியோ, எருமைமாடோ செத்துப் போனால், அதை நஷ்டமாகக் கருதி துக்கப்படுகிறான். ஆனால், ஒரு தொழிலாளி செத்துப் போனால், அந்தப்படி கூட துக்கப்படுவதைக் காணோம். தொழிலாளர்களுடைய இந்த பரிதாப நிலைமைக்கு யார் என்ன சமாதானம் கூறக்கூடும்.

தொழிலாளர்கள் தங்களுடைய நியாயமான உரிமையைப் பாதுகாத்துக் கொள்ள, இன்னும் தக்க சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்றாலும், ஆங்காங்கே தொழிலாள சமூக விழிப்பின் காரணமாக, சில தொழிற்சங்க ஸ்தாபனங்களும், டிரேட் யூனியன் சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டு வந்திருக்கின்றன, வருகின்றன. இவற்றில் சில முதலாளிமார்களின் சூழ்ச்சிக்கு அடங்கியதும், தொழிலாளர்களை வஞ்சித்து துரோகம் செய்வதுமாகும். இது போன்ற ஸ்தாபனங்கள் நாட்டில் புதிய அரசியல் சீர்திருத்தங்கள் வழங்க உத்தேசிக்கப்படும் காலம் முதல், ஒரு சில சுயநலப் பித்தர்களால் உண்டாக்கப்படுவது சர்வ சாதாரணமாகும். இதைத்தக்கவாறு தொழிலாளத் தோழர்கள் கவனித்து - பிறர் சூழ்ச்சிக்கு இடம் கொடுத்து விடக்கூடாது. (தொழிலாளர்களாகிய) தங்களின் ஆதிக்கத்தையே பரப்பப் பெரிதும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுகிறோம்.



முதலாளி வகுப்பின் ஆதிக்கம் ஒழிந்தாலொழிய தொழிலாளி விடுதலை பெற மார்க்கமில்லை என்பதை இன்றைய தினம் யாரும் ஆட்சேபனையின்றி ஒப்புக் கொள்வர். அதோடு ஜாதி அபிமானத்தாலோ - மத அபிமானத்தாலோ தேசாபிமானத்தாலோ, கடவுளபிமானத்தாலோ தொழிலாளர்களுடைய முற்போக்கு கிஞ்சிற்றும் ஏற்படுவதற்கு வழியில்லை என்பதும், சமீப காலத்தில் நாம் அனுபவப் பூர்வமாகக் கூட கண்டறிந்த உண்மையாகும்.

உதாரணமாக இந்தத் தத்துவத்தை இரண்டு மாதங்களுக்கு முன்பு கூடிய அகில இந்திய டிரேட் யூனியன் காங்கிரசானது ஓர் அளவிற்கு நன்கு உணர்ந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. தொழிலாளர்களுடைய சரித்திரத்திலேயே மிகவும் சிலாகிக்கத்தக்க ஒரு விசேஷ சம்பவமும் இந்த மகாநாட்டில் நிறைவேறியது. அதாவது ''மகாத்மா காந்தி உள்ளிட்ட மாபெரும் தேசீயத் தலைவர்களெல்லாம்'' நாட்டின் முற்போக்கிற்கு தீங்கு விளைக்கும் ''தேசத் துரோகிகள்'' என்று பகிரங்கமாகவும், வன்மையாகவும், ஆத்திரத்தோடும் எடுத்துக்காட்டப்பட்டுக் கண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தொழிலாளர்களுடைய விழிப்பு நிலை. ஒருவாறு இவ் விதமாக இருப்பதால், தொழிலாள தோழர்களுக்கு ஒரே ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட்டுவிட்டு இதனை முடித்து விடுகின்றோம். அதாவது தொழிலாளியின் முன்னேற்றத்திற்கு தொழிலாளிகளையே நம்புங்களென்பதேயாகும்.

**புரட்சி - தலையங்கம் - 25.03.1934**



RangaRakes tamilnavarasam.com

# ஜெர்மன் சர்வாதிகாரியும் வேலையில்லாத் திண்டாட்டமும்

ஜெர்மனியில் வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாகப் பல லெக்ஷம் ஜனங்கள் தங்கள் வயிற்றுச் சோற்றுக்கே திண்டாட்டமாகி, இருப்பதா இறப்பதா என்ற ஆலோசனையில் ஆழ்ந்து கிடந்தனர். அவர்களது வயிற்றுக்கு உணவு கிடைக்கவும், அவர்களுக்கு வேலை கிடைக்கவும், சில திட்டங்களை வகுத்துக் கோடிக்கணக்கான பொருளை அதற்கென ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் செலவழித்து வேலையில்லாது திண்டாடும் பெரும்பாலோருக்கு வேலை கொடுத்து வருவதாகவும், இது பெரும் மெச்சத் தகுந்த காரியமென்றும் பல முதலாளி அரசாங்கங்கள் பறை சாற்றுகின்றன.

ஆனால் நாம் இது முதலாளி ஆட்சியின் அழிவிற்கு முன்னால் செய்யப்படும் கடைசி முயற்சி என்று கருதுவதுடன், கண்டிப்பாய் இன்று இல்லாவிட்டாலும் இன்னும் பத்து வருடங்களிலாவது இம்முறை சமதர்மத்தில் தான் கொண்டு போய்விடும் என்று பரிபூரணமாக நம்புகிறோம். ஏனெனில் இன்று முதல் ஒரு ஐந்து வருடங்களுக்கோ அல்லது பத்து வருடங்களுக்கோ செய்யக் கூடிய பெரும் வேலைத் திட்டத்தையும் அதற்குப் பொருளையும் ஹிட்லர் உண்டு பண்ணி வேலையற்றவர்களுக்கு வேலை கொடுத்து அவர்களது உயிர் பசியால் உடலை விட்டுப் பிரிய முடியாத அளவிற்கு ஆகாரம் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தலாம். ஆயினும் எத்தனை காலத்திற்கு ரோட்டுகள் போடுவது, காடுகள் சீர்திருத்துவது, கட்டடங்கள் கட்டுவது போன்ற வேலைகள் இருக்கும். இவைகளைச் செய்து முடித்த பின் அந்நாட்டில் அவர்களுக்கு என்ன வேலை கிடைக்கும். அந்த நிலையில் அவர்களது கடைசி முயற்சி என்ன என்பதை வாசகர்களே யோசிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

**புரட்சி - துணைத் தலையங்கம்** - 25.03.1934



# சர்.கே.வி. ரெட்டி

சமீபத்தில் ஸர்.எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் தமது சட்ட மந்திரி பதவியிலிருந்து விலகிக் கொள்ளப்போவதாகவும் அந்த ஸ்தானத்திற்கு ஸர். கூர்மா வெங்கிடரெட்டி நாயுடு அவர்கள் நியமிக்கப்படப் போவதாகவும் ஒரு செய்தி கிடைத்துள்ளது. இது உண்மையானால் நாம் கொள்ளும் மகிழ்ச்சிக்கு அளவில்லை யென்றுதான் சொல்ல வேண்டும். ஸர். ரெட்டி அவர்கள் சென்ற முப்பது வருடங்களாக சமூக சீர்த்திருத்தம் அவசியம் என்பதையும் அதற்கு பார்ப்பனீயம் முட்டுக்கட்டையாக இருந்து வருகிறதென்பதையும் உணர்ந்து பார்ப்பனரல்லாதார் முன்னேற்றம், பார்ப்பன மத ஆதிக்கத்தினின்று விடுபடுவதுதான் என்பதை எழுத்திலும், பேச்சிலும், செய்கையிலும் காட்டி வரும் ஒரு சீர்திருத்தப் பிரியர். நிற்க நமது மாகாண பார்ப்பனரல்லாதார் கக்ஷியென வழங்கும் ஜஸ்டிஸ் கக்ஷி, ஸர்.கே.வி. ரெட்டி நாயுடு அவர்களுக்கு பல துரோகங்களைச் செய்திருப்பினும், அவர் அதைப் பொருட் படுத்தாது பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கும் இயக்க வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றிய புனிதர். ஸர்.கே.வி. ரெட்டி நாயுடு அவர்களது திறமையை அறிந்த அவர்களது சகாக்கள் பொறாமையினால் அவரை ஒதுக்கி வைத்திருந்த போதிலும், அரசாங்கத்தார் அவரது திறமையை உணர்ந்து அவ்வப்போது அவருக்குரிய ஸ்தானத்தை அவருக்கு கொடுத்து வருவதை பாராட்டுகிறோம்.

**புரட்சி - துணைத் தலையங்கம்** - 25.03.1934



RangaRakes tamilnavarasam.com

# மீண்டும் பார்ப்பனீயமா?

மாகாணப் பார்ப்பனீயம் மீண்டும் அறைகூவி அழைக்கிறது. இதற்கு மாகாணப் பார்ப்பனரல்லாதார் அளிக்கப்போகும் பதில் யாது? இன்றைய மாகாணச் சர்க்கார் நமது பார்ப்பனர் அல்லாதார் கட்சியில் நடைபெற்று வருகிறது. சென்ற மாதத்திற்கு முன் மாகாணச் சட்டசபையில் இனாம்தார்களின் பார்ப்பனப் பணக்காரர்களின் குடிகளுக்கு நியாயம் வழங்க ஓர் சட்டம் நிறைவேறியது. இச்சட்டத்தால் இனாம்குடிகளுக்குப் பரிபூரண நன்மை எதுவும் ஏற்படாவிட்டாலும் ஓர் சாதாரண உரிமையை மட்டும் ஒப்புக்கொள்வதாகவே அச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதைக் கண்டு மாகாணப் பார்ப்பனீயம் ஒன்றுபட்டு எதிர்க்க முயற்சித்தது. முடிவில் மாகாணக் கவர்னர் பெருமானைப் பேட்டிகண்டு நிறைவேற்றப்பட்டுள்ள இனாம் குடிகள் சட்டத்திற்கு ஓர் திருத்தம் கொண்டுவரும்படி இன்றைய பிராமணீயம் செய்துவிட்டது. இதற்கு மாகாணப் பார்ப்பனரல்லாதார் கட்சி செய்யப்போகும் பரிகாரம் யாது என்பதுதான் நமது கேள்வியாகும்.

அதிகாரத்தில் உள்ள சட்ட சபையில் மெஜாரிட்டியாகவுள்ள ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் சர்க்கார் மெம்பர்களுடைய பரிபூரண ஒத்துழைப்பையும் பெற்று இச் சட்டத்தை நிறைவேற்றினார்கள். இச் சட்டத்தால் இனாம்தார்களுக்கு எத்தகைய கஷ்டமோ, நஷ்டமோ நேர்ந்துவிடவில்லை. ஆனால் இம் மாகாணப் பார்ப்பனீயத்திற்கு செல்வாக்கா? அல்லாதார்களியக்கத்திற்கு ஆதரவா? என்பதைப் பரீட்சிப்பதுபோலவே இச்சட்டம் எண்ணப்பட்டது. சட்டசபையில் எதிர்க்கட்சி மெம்பர்களில் பலரும் இதை ஆதரித்தார்கள். அப்படியிருந்தும் மாகாணப் பார்ப்பனர்கள் தங்களின் ஆதிக்கத்திற்குப் புது உயிர் கொடுக்க இச் சம்பவத்தை உபயோகித்துக்கொள்ள எண்ணியதால் அவர்கள் முழுச் சக்தியும் ஒன்று கூடி மேன்மைதங்கிய கவர்னர் பெருமான் அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுவிட்டது.

இந்த நெருக்கடியான நிலைமையில் நமது மாகாணச் சட்டசபையில் உள்ள ஜஸ்டிஸ் கட்சி, அதன் தலைவர்கள் இவர்கள் ஒன்றுபட்டு தங்களின் முந்திய செய்கையை மீண்டும் உறுதிப்படுத்தப்போகிறார்களா? அல்லது கவர்னர் பெருமான் திருத்தம் கொண்டுவர ஆசைப்படுவதால் நாம் மீண்டும் பழைய முறையை வற்புறுத்தினால் சர்க்கார் பெரிய மனிதர்களின் கோபம் வந்துவிடும் என்று பயந்து நாளைய நிலைமையைக் கைநழுவவிடப் போகிறார்களா? என்பது தெரிந்துவிடவேண்டும்.



தாங்கள் செய்த நியாயமான ஓர் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்புங்கூட, மாகாணப் பார்ப்பனர்கள் அத்தனைபேரும் எதிர்த்துத் தோற்கடிக்கச் செய்து விட்டார்களே! என்ற ரோஷம் கடுகளவு நமது அல்லாதார் தலைவர்களுக்கு இருந்துவிட்டால் நாளை வரவிருக்கும் திருத்தமும் தோற்கடிக்கப்படப்போவது நிச்சயம். ஆனால் அவ்விதம் செய்வார்களா? மே. த. கவர்னர் பெருமான் அடுத்தமாதம் விலகப்போகிறவர். தன்னை வந்து கேட்டுக்கொண்ட பார்ப்பனப் பிரதிநிதிக் கூட்டத்தார்களின் வேண்டுகோளின்படி மீண்டும் ஓர் சான்ஸ் கொடுக்க தாம் சம்மதப்படுவதாக அவர் கூறிவிட்டது ஆச்சரியமல்ல. மே.த. கவர்னருக்குச் சட்டசபையிலுள்ள மெஜாரிட்டி மெம்பர்கள் இச்சட்டத்தை ஆதரிப்பதும், ஆதரித்ததும் நன்கு தெரியும். இச் சட்டம் நிறைவேற்றப்படுவதால் மாகாண க்ஷேமத்துக்கோ, இனாம்தார்கள் க்ஷேமத்துக்கோ, குடிகள் க்ஷேமத்துக்கோ பெரும் ஆபத்து வருமென்று மே. த. கவர்னர் நினைத்தால் முன்னமேயே வேறு நிலைமை ஏற்பட்டிருக்கும்; இதை அக்காலத்தில் சர்க்கார் மெம்பர்கள் ஆதரித்து இருக்கவுமாட்டார்கள். ஆனால் சட்ட பூரணமாக நிறைவேற்றப்பட்டபின்பு இம்மாகாணத்தில் ஏற்பட்ட புது நிலைமைதான் இன்று மாகாணச் சட்டசபையை மீண்டும் தன்னால் செய்யப்பட்ட சட்டத்திற்குத் திருத்தம் வரும்படியான நிலைமையை உண்டுபண்ணிக்கொள்ளச் செய்தது. ஆதலால் ஜஸ்டிஸ் கட்சிக்காரர் முதலில் கவர்னர் பெருமான் கோபித்துக்கொள்ளுவாரென்று பட்டிக்காட்டான் சொல்லவிருக்கும் சமாதானத்தைச் சொல்லித் தப்பிக்க முடியாது. திருத்தம் வந்தால் தைரியமாக அதை எதிற்கச் சற்றும் தயங்கக்கூடாது. அப்படித் தயங்கினால் இவர்கள் இனாம்தார்களின் குடிகளிடம் பரிதாபப்படாமல் மாகாணப் பார்ப்பனீயத்துக்கு விரோதமாக க்ஷாத்திரத்தின்மேல் செய்யப்பட்ட செய்கை என்று மே.த. கவர்னரிடம் பார்ப்பனப் பிரதிநிதிகள் கூறியது உண்மையாகிவிடும்.

கவர்னர் பெருமான் இவர்கள் செய்கையை பின்பு கேவலமாக எண்ண இடமேற்பட்டாலும் ஏற்படக் கூடுமாதலால் அதற்கு இஷ்டப்படமாட்டார்கள் என்று நம்புகிறோம். மாகாணச் சட்டசபையில் மைனாரிட்டியாகத் தனது கட்சி இருக்கும்போதும் தனது திறனால், ராஜதந்திரத்தால், சுயநலமின்மையினால் சட்டசபையில் மெஜாரிட்டி கொண்டு வரமுடியும் என்பது காலம் சென்ற பனகால் மன்னனின் முடிவாகும். அவ்விதம் கொண்டுவந்தும் அக்கால மந்திரி கட்சிகளைச் சிதர அடித்தும் இருக்கிறார். அத்துடன் மட்டுமல்ல, மாகாண எல்லையைத் தாண்டி மத்திய சர்க்காரின் செய்கையிலும் தலையிட்டுத் தனது சமூகமான பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு விரோதமாக இருந்த ஒருவரை சர்.சி.பி. ராமசாமி ஐயர் அவர்களைச் சட்டமெம்பராக வர முடியாது செய்தார் என்று ஹிந்து பத்திரிகையே எழுதியிருக்கிறது. அக்கக்ஷியின் பின் தலைவர்கள் இன்று மத்திய சர்க்காரிடம் தங்கள்



RangaRakes tamilnavarasam.com

செல்வாக்கை உபயோகிக்க வேண்டாம். மாகாண சர்க்கார் பகிரங்கமாக எதிர்க்கும் ஓர் செய்கைக்கும் எதிராக நிற்கவேண்டாம். மாகாண மே. த. கவர்னராலும், சர்க்கார் மெம்பர்களாலும், ஒரே மனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டு, பெரும்பான்மையான ஓட்டுகளினால் மூன்று மாதத்திற்கு முன் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை காற்க வழி இல்லை என்றால் இது மிக இழிவு போன்றதாகும்.

**ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களே!**

ராஜா பனகால் இறந்ததும், நமது கட்சி சிதர ஆரம்பித்தது. ஹிந்து ஆசிரியர் ஏ. இரங்கசாமி ஐயங்கார் காலமானதும் மாகாண பார்ப்பனர்கள் ஒன்றுபட்டு விட்டார்கள். இது உங்கள் கட்சிக்கு வெட்டப்பட்ட பெரும்பள்ளத்தில் மீண்டும் மண் தோண்டுவதாகும். சர்.சி.பி. கட்சியும், ரைட் ஆனரபில் சாஸ்திரி கட்சியும், வெங்கட்டராம சாஸ்திரிகள் கட்சியுடன் ஒன்றுபட்டு விட்டது. இதை இவர்களின் விரோதிகளாய் இருந்த சீனிவாச ஐயங்கார் கட்சியும், எ. இரங்கசாமி கட்சியும், ஒன்றுபட்டு ஆதரிக்கிறது. இவர்கள் அத்தனை பேருக்கும் நேற்று வரையில் பரம விரோதியாக இருந்த குட்டி காந்தி தோழர் சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் கட்சி ரிஜிஸ்டர் செய்த கட்சியாக ஒன்றாக்கிவிட்டார். சுருங்கச் சொன்னால் தொழிலாளி பேரால் உள்ள பார்ப்பன தலைவர்கள், மதத்தின் பேரால் உள்ள வைதீகப் பார்ப்பன தலைவர்கள், அரசியலில் பல கட்சி பேரால் தனித்தனி ராஜ்யம் நடத்திய பார்ப்பன தலைவர்கள் இவர்கள் அத்தனை பேரும் ஒன்றாகிவிட்டார்கள். ஓட்டல் பார்ப்பானும் இனாம்தார் சட்டத்தை கண்டிக்கிறான், உத்தியோக பார்ப்பன தலைவரான அல்லாடி அய்யர்வாளும் இனாம்தார் சட்டத்தை கண்டிக்கிறார். இவைகளுக்கு அர்த்தம் இனாம்தார்கள் சட்டத்தால் சிதரி சீறழிந்து கிடந்த - ஐயர் - ஐயங்கார் - சாஸ்திரி - ஆச்சாரி ஆகிய சகல ஆரியரும் ஒன்றாகி விட்டார்கள் என்பதே அர்த்தமாகும். இதை அகில இந்திய பார்ப்பன - தாஸாதி தாஸனாகவும் - சம்பந்தியாகவும் உள்ள - நமது காந்தி பாபுவும் ஆதரிக்கிறார். மயிலை ஐயங்கார் - வீட்டுக்கு - காந்தி விஜயம் இதைத்தான் காட்டுகிறது. மாகாண முழுவதும் உள்ள சகல பார்ப்பனரும் ஒன்றாக இருப்பதும், இம்மாகாணத்திலுள்ள நான்கு தினசரி ஆங்கில பத்திரிகைகளும், மூன்று தமிழ் தினசரி பத்திரிகைகளும், குட்டிப் பத்திரிகைகளும், மாகாண பார்ப்பனீயத்துக்கு ஆதரவு காட்டி எங்கும் இனாம்தார்களுக்கு ஆபத்து என்ற ‘‘கெங்காதரா மாண்டாயோ’’ எனும் கூச்சல் போடுவதும் மே.த. கவர்னருக்கு தெரியும். ஆதலால் அவர் திருத்தத்தை ஆதரித்தார். இதை கண்டு கலங்காது முன் சொன்ன பலத்தைவிட 100க்கு 97 பேர்களாக உள்ள மக்களின் எதிர்ப்பு இனி ஏற்படும் என்பதை ஜஸ்டிஸ் கட்சியார் இன்று சர்க்காருக்கு உணர்த்த வேண்டும். இவ்விதம் உணர்த்துவது சட்டவிரோதமல்ல.



ஜஸ்டிஸ் கட்சியாரால் கொண்டுவரப்பட்ட, நிறைவேற்றப்பட்ட ஓர் சட்டம், சில பார்ப்பன கனவான்களின் எதிற்புக்கு பயந்து உடைத்து எரியப்படுமானால், அது இனி இம்மாகாணத்தில் பார்ப்பனீயத்தை எதிர்த்து எவனும் வாழ முடியாது என்பதைத்தான் காட்டும். நீங்கள் பார்ப்பனரல்லாதாருக்கு பெறும் நன்மை எதுவும் செய்யாவிட்டாலும், உங்களால் தீமை வராது இருக்கும்படியாகவாவது நீங்கள் நடந்து கொள்ளவேண்டும். நாளை வரும் திருத்தம் பெறும் கட்டுப்பாடுடன் எதிர்க்கப்பட்டு, இம்மாகாணப் பார்ப்பனீயத்துக்கு சாவு மணி அடிக்கப்போகின்றீர்களா? அல்லது சிலர் சொல்லுகிறபடி திருத்தம் வரும்போது சண்டப் பிரசண்டமாகப் பேசி விட்டு ஓட்டு எடுக்கும்போது வெளியே சென்றுவிடப் போகிறீர்களா? என்று பார்ப்பனரல்லாத சமூகம் பார்த்துக்கொண்டிருக்கிறது. திருத்தத்தை எதிர்க்க முடியாவிட்டாலும், எப்படியும் திருத்தம் சட்டசபையில் நிறைவேற்றப்படுமானால் ஜஸ்டிஸ் கட்சி அத்தனை பேரும் சட்டசபையை விட்டு, வீரர்களாக வெளிவர தயாறாக இருக்கிறீர்களா? அப்படி இருப்பீர்கள் என்று தெரிந்திருந்தால், இந்நிலை ஏற்பட்டுகூட யிருக்காது. எப்படியோ ஏற்பட்டு விட்டது. இனியாவது உங்களை நம்பிய கோடானு கோடி மக்கள் பார்ப்பனர் முன் நிமிர்ந்து நடக்கும்படியாகச் செய்யத் தவரக்கூடாது.

நமது முதன் மந்திரி அவர்களுக்கு, கனம் அல்லாடி ஐயர் அவர்கள் இச்சட்டம் போன்றதுகள் வந்தால் - ரஷ்யாவின் பொதுவுடைமை உடனே வந்துவிடும் என்று பொய்க்கதை கூறி உங்களை பயமுறுத்தும் போது அதை ஆண்மையுடன் தாங்கள் மறுத்ததை மாகாணப் பார்ப்பனரல்லாதார் மறந்துவிடவில்லை. அத்துடன் மட்டுமல்ல. ரஷ்யாவில் ஏற்பட்ட கலகம் இங்கு உண்டாகாதிருக்க அதைத் தடுக்கும் பொருட்டு இந்நாட்டு ஏழைக் குடிகளுக்குப் பாதுகாப்பும் நம்பிக்கையும் உண்டாவதற்காகவே இச் சட்டம் கொண்டுவந்ததாகக் கூட தாங்கள் கெம்பீரமாகக் கூறியது இன்னும் கேட்டுக்கொண்டு இருக்கிறது. நாளைய திருத்தம் தோற்கடிக்கப்படாமல் போனால் அது உங்கள் கட்சிக்கு மட்டும் நஷ்டமென்பதல்ல. உங்கள் கட்சியின் பேர் எந்தக் கோடிக்கணக்கான மக்களின் பேரால் இருக்கிறதோ அவர்களுக்கு துரோகம் செய்ததாக ஆகும் என்பதையும் ஞாபகமூட்ட ஆசைப்படுவதுடன் இந்நிலை ஏற்பட ஜஸ்டிஸ் கட்சி இடம் கொடாது என்று சிறிது உள்ள நம்பிக்கையே இதைப்பற்றி வற்புறுத்தத் தூண்டியது.

நாளை சட்ட மெம்பராக வரவிருக்கும் கனம் சர்.கே.வி. ரெட்டி நாயுடு அவர்கள் ஜஸ்டிஸ்கட்சி முயற்சியால் சிபார்சால் லா மெம்பராக வரவில்லை என்பது பார்ப்பனத் திண்ணைப் பிரசாரமாகும். சர். ரெட்டி நாயுடு அவர்களைவிட தகுந்த ஓர் கனவான் இம் மாகாணத்தில் இல்லை யென்பதைப் பார்ப்பனீயம் ஒப்புக்கொண்டாலும் லா மெம்பர்



RangaRakes tamilnavarasam.com

நியமனமானது பார்ப்பன சிபார்சால் வந்ததாக முழுப் பொய் பிரசாரத்தைச் செய்துவருகிறார்கள். இதற்குக் காரணம் ஓர் மாகாணத்தில் மேன்மை தங்கிய கவர்னரிலிருந்து சகல நிர்வாகக் கமிட்டி மெம்பர்களும் பார்ப்பனரல்லாதார் கட்சியாகவிருக்கும்போது இதில் ஓர் அய்யருக்கு இடம் கொடுக்கப்படல் நியாயம் என்பது அவர்கள் ஆசையும் முயற்சியுமாகும். அடுத்த காலியாகும் இடத்துக்கு ஓர் அய்யர் பிரபு வருவதற்கு மாகாணப் பார்ப்பனர்கள் இன்றுவரை செய்துவரும் பிரயத்தனம் அளவிட முடியாதனவாகும். வகுப்புவாதத்தை வெறுப்பதாகக் கூறும் தினசரி ஆங்கில தமிழ் பார்ப்பனப் பத்திரிகைகள், அல்லாடி அய்யர்வாள் இருக்க வேண்டுவது அவசியமென்று பறையடிக்கிறது.

இனாம்தார் மசோதாவுக்குத் திருத்தம் வந்து அது நிறைவேறிவிடும் பட்சத்தில் அதன்பின் ஜஸ்டிஸ்கட்சி செய்யப்போவது யாது? பார்ப்பனீயம் நிலைநாட்டப்படுமானால் அதன்பின் பார்ப்பனரல்லாதாருக்கு உண்டாக்கப்பட்ட நஷ்டத்துக்குப் பார்ப்பனரல்லாதார் கட்சி செய்யப்போகும் பரிகாரம் யாது? இம் மாகாணப் பார்ப்பனர் அல்லாதார் கட்சி செய்யப்போவதென்ன என்பதை நாம் பொருத்திருந்து பார்ப்போம்.

**- நமது அரசியல் நிருபர்**

புரட்சி - கட்டுரை - 25.03.1934



# நாகபட்டினம்

## சுயமரியாதைச் சங்கம்

*18.3.34-ந் தேதி மாலை 6.30 மணிக்கு சங்கமெம்பர் கூட்டம் சங்கத் தலைவர் தோழர் எஸ்.பி. கிருஷ்ணன் தலைமையில் கூடியது. அது சமயம். சங்க ஜனவரி, பிப்ரவரி மாதங்களின் வரவு சிலவு கணக்குகளை வாசித்து ஒப்புக்கொள்ளப்பட்டது. பின் வருஷாந்திர அறிக்கை தயாரிக்கவும், கணக்குகளை ஆடிட் செய்யவும் கமிட்டியொன்று தேர்ந்தெடுக்கப்பட்டபின் சுயமரியாதை சங்க மத்திய சபையின் கூட்ட முடிவைப் பற்றி ஆலோசனைக்கு எடுத்து கொண்டபோது தஞ்சை சுயமரியாதைச் சங்கக் காரியதரிசி தோழர் ஆளவந்தார் அவர்கள் ஜில்லா தாலூகா சங்கங்கள் சரியான முறைப்படி எங்கும் அமைக்கப்படாமலிருப்பதால் எல்லோரும் மாகாண சங்கத்திற்கு வருஷ சந்தா நான்கணா செலுத்தி பதிவு செய்துகெள்ள முடியாதென்றும், மத்திய சங்கத்தில் மெம்பர்களாயில்லாதவர்களுக்கு மாகாண மகாநாட்டில் ஓட்டு கொடுக்க உரிமை கிடையாதென்பதில் ஏதோ சூழ்ச்சியிருப்பதாகவும் கூறினார். அதை ஆதரித்து தோழர்கள் கே.எஸ்.முஜிபுல்லா, வி.சாமிநாதன் ஆகியவர்கள் பேசினார்கள். மத்தியசங்கத்தார் இப்பொழுதாவது மாகாண மகாநாடு கூட்ட முன் வந்தது பற்றி பாராட்டுவதாகவும், கூடிய விரைவில் ஜில்லா சங்கத்தை ஏற்படுத்தி மத்திய சங்கத்தார் தீர்மானப்படி ஜில்லாவுக்கு 1000-அங்கத்தினர்களையாவது சேர்க்க வேண்டுமென்ற தீர்மானத்தை தோழர் டீ.எஸ். மணி பிரரேபிக்க என்.எம். சாமி ஆமோதிக்க மார்ஷல் ஆதரிக்க, ஓட்டுக்கு விடப்பட்டதும் சமத்துவமாக ஓட்டு இருந்ததால் தலைவரின் காஸ்டிங் ஓட்டால் மத்திய சங்கத்தாரின் தீர்மானத்தை ஆதரிக்கும் தீர்மானம் நிறைவேறியது. முடிவுரையோடு இரவு 11 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.*

**பத்திராதிபர் குறிப்பு:-** விருதுநகரில் நடந்த 3-வது சுயமரியாதை மகாநாட்டில் அமைக்கப்பட்ட கமிட்டி சென்ற 11-3-34 சென்னையில் கூடியது; இவ்வளவு காலம் கழித்தாவது வேலை செய்யும் நோக்கத்தோடு கூடியதையும், கூடி இயக்க வளர்ச்சிக்காக செய்துள்ள தீர்மானத்தையும் பாராட்டுகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

நிற்க நாகை சங்கத்தில் நடந்த விவாதத்தை நோக்கும்போது, அவர்களிடையே உண்டாகியுள்ள ஒரு சில சந்தேகங்களை நீக்க வேண்டி அடியில் கண்டுள்ள விஷயங்களை அவர்களது நினைவிற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறோம்.

1. செங்கற்பட்டில் கூடிய நமது முதலாவது மகாநாட்டில் அமைக்கப்பட்டுள்ள சங்க அமைப்பு விதிகளின்படி நமது இயக்கத்தில் ஒரு மத்திய சங்கமும் (மாகாண சங்கம் Central League) மற்ற எல்லா சங்கங்களும் கிளை சங்கங்களாகவும் தான் இருக்க முடியும். ஜில்லா தாலூக்கா கிராமம் முதலிய சங்கங்கள் கிடையாது.

2. அந்தந்த ஊரில் ஏற்படும் சங்கமும் சென்ட்ரல் லீக் என்னும் மாகாணச் சங்கத்திற்குத் தங்கள் சங்கத்தில் சேர்ந்துள்ள அங்கத்தினர் ஜாபிதாவையும் அவர்களின் சந்தாத் துகை அணா நாலையும் அனுப்பவேண்டியதும் ஏற்கனவே உள்ள திட்டமேயொழிய புதிய திட்டமல்ல.

3. நான்காவது மகாநாடு கூடும்வரை வசூலாகும் சந்தாப் பணத்தை மாகாணக் கமிட்டிக்குச் செலவழிக்கக்கூடாதென தீர்மானித்திருப்பது ஒன்றுதான் புதிது. இந்தத் தீர்மானம் நமது தோழர்களுக்கு கமிட்டியிடம் நம்பிக்கை ஏற்பட வேண்டியே செய்யப்பட்டிருப்பதாகக் கருதுகிறோம். ஆகவே மாகாணக் கமிட்டியின் திட்டத்தை நிறைவேற்ற எல்லா கிளைச் சங்கங்களும் முன்வர ஆசைப்படுகிறோம்.

புரட்சி - பத்திராதிபர் குறிப்பு - 25.03.1934



# நமது நாகரீகம்

உலகில், மக்கள் அடைந்துவரும் நிலைமையைக் காட்டு மிராண்டித் தன்மையென்றும், அநாகரீக வாழ்வென்றும், அரை நாகரீக நிலைமை என்றும், நாகரீக நிலைமை என்றும் வகுத்து வருகின்றார்கள். காட்டு மிராண்டித் தன்மையில் மக்கள் விலங்கினங்களைப் போல், வீடுவாசலின்றி நாளைக்கு வேண்டுமென்ற பகுத்தறிவின்றி, மிருகாதிகளைப் போல் அங்கும் இங்கும் இரை தேடி வாழ்ந்து வந்த வாழ்க்கையாகும். இவ்வாழ்க்கையில், இன்றைக்கும் சில மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இலங்கையிலிருக்கும் வேடர்களும், ஆப்பிரிக்காவில் வாழ்ந்துவரும் காட்டு மனிதர்களும், பிஜீ தீவில் சில காலத்திற்கு முன் வாழ்ந்து வந்த மக்களும் இன்றைக்கும் காட்டுமிராண்டித் தன்மையிலே இருந்து வருகின்றனர். இந்நிலைமையிலுள்ள மக்களுக்குக் கல்யாணமென்ற கூட்டுறவு கிடையா. பெண்களைச் சட்டி பானைகளைப் போல் ஆண்டு அனுபவித்து வருகின்றார்கள். இதற்கு மேற்பட்ட மக்கள் நிலைமையில் மனித சமூகம் சிறுசிறு கிராமங்களில் வசித்து வரத் தலைப்பட்டனர். கிராம தலைவர்களென்றும் கிராமச் சங்கங்களென்றும், சமூக வாழ்க்கையை உண்டாக்கிக் கொண்டு தத்தம் கிராமங்களில் சில காலம் தங்கியிருந்து, வேறு பிரதேச கிராமங்களைக் கைக்கொண்டு, ஏகதேசமாக நிலங்களையும் பயிர் செய்து வந்த காலம் அநாகரீகக் காலமென்று சொல்லப்படும். ஆண்களையும் பெண்களையும் அடிமைப்படுத்தி வந்த காலமிதுவே. அடுத்தடுத்து ஒரு சமூகத்தார் மற்றொரு சமூகத்தாரோடு போர் புரிந்து வந்த காலமுமிதுவே. இந்த அநாகரீக காலத்தில் அம்பு, வில் ஆயுதங்களும், எலும்பு, தோல் சக்கிமுக்கி கற்களை ஆயுதங்களாகவும் ஆபரணங்களாகவும் தரித்து வந்திருக்கின்றனர். மனிதர் இறந்தால் அவருடைய ஆன்மா உலகில் திரும்ப உலாவுமென்ற எண்ணமும் இக்காலத்தில் தோன்றியதாக ஊகிக்கலாம். அந்த வாழ்க்கையில் பொருளை வாங்குவதும் விற்பதும் கிடையாது. இவ்வித வாழ்க்கையில் அரேபியர், நமது நாட்டில் குறவர், மறவர் இன்னும் அனேக ஆப்பிரிக்க மக்களும் வாழ்ந்து வருகின்றனர். அரை நாகரீக வாழ்க்கையில் மக்கள் நகரங்களிலும் பட்டினங்களிலும் சில ஆயிரம் பெயர்கள் தங்கி வாழ ஆரம்பித்தனர். பயிர்த் தொழில் முக்கியமாக உயிர் வாழ்விற்கு அத்தியாவசியமாக ஏற்பட்டது. தலைவனை அரசனென்றும், பாதுகாப்பிற்கு வீரர்களென்றும், மந்திரி பிரதானிகளென்றும் இந்த அரை



RangaRakes tamilnavarasam.com

நாகரீக காலத்தில் ஏற்பட்டது. சொத்துரிமையும் இந்தக் காலத்தில் உண்டாகியது. போக்குவரத்திற்கு வண்டிகளும், ரதங்களும் ஏற்பட்டன. பண்டைக் காலத்து பண்ட மாற்றுக்குப் பதிலாக நாணய செலாவணி ஏற்பட்டது. பண்டைக்கால அடிமைகளும் இந்த வாழ்க்கையிலிருந்து வந்தனர். பெண்களுக்குச் சுதந்திரம் ஒன்றுமில்லாமலே புருஷனுக்கு அடங்கி நடக்க வேண்டுமென்ற மனப்பான்மையும், இவ்யுகத்தில் ஏற்பட்டது. கல்விக்கும் கேள்விக்கும் சிற்சில ஸ்தாபனங்களும் உண்டாயின. காட்டு மிராண்டித் தன்மையில் வீட்டிற்கு வீடு கிராமத்திற்குக் கிராமம் சண்டை போட்டுக் கொண்டு வந்தது போய், தேசத்திற்காக சண்டை போடும் நிலைமை உதித்தது. சிற்சில பண்டங்களில் வர்த்தகமும் செய்து வந்தார்கள். நாடு நகரங்களில் ஆயிரம் பதினாயிரக்கணக்காக வாழ ஆரம்பித்தனர். மதங்களும், புராணங்களும் உற்பத்தியாயின. குற்றவாளிகள் கொடூரமாக நடத்தப்பட்டு வந்தனர். ஆடு, மாடு, குதிரை முதலிய மிருகங்கள் மனிதனுக்கு உபயோகப்படும்படியாக பழக்கப்பட்டும் வந்தன. சிற்சில நீதி ஸ்தலங்களும் ஏற்பட்டுள்ளன. அநாகரீக காலத்தில் உண்டான தலைவன் இந்த (செமி) அரை நாகரீகத்தில் அரசனாக மாறினான். அவனுக்கு தெய்வத் தன்மையும் ஏற்பட்டது. மக்கள் ஓரிடத்தில் நிலைத்து வாழ்ந்து வர ஆரம்பித்த காலமிது.

இந்தக் காலம், பாரத இராமாயண வாழ்க்கை நடந்து வந்ததாகச் சொல்லும் காலமாகும். தற்போது இந்த அரை நாகரீகத்தில் அப்சீனியர்களும் தென் அமெரிக்க வாசிகளும் சிற்சில பஸ்பிக் தீவிலுள்ள மக்களும் பெரும்பான்மை இந்திய மக்களும் வாழ்ந்து வருகின்றனர். பூர்வ காலத்தில் தமிழர்கள் அடைந்த நாகரீகமும் இந்த அரை நாகரீகமென்றே கருதப்படும். பண்டைக் கால ஈஜிப்ட் தேச நாகரீகமும் அப்சீனியன், கார்டியன், பபிலோனியன் நாகரீகங்களும் இந்த அரை நாகரீகத்தைச் சேர்ந்தவை. மத்திய கால ஐரோப்பிய நாகரீகமும் இந்த அரை நாகரீகத்திலே மூழ்கிக் கிடந்தது. கிரீஸ், ரோமாபுரி நாகரீகமும் இந்த நாகரீக காலத்தைச் சேர்ந்தவை.

இந்த அரை நாகரீகத்திலிருந்து பெறப்பட்ட நாகரீகம் தற்கால நாகரீகமாகும். இதன் முக்கிய இலக்கண மென்னவெனில் லட்சக்கணக்காக மக்கள் நாடு நகரங்களில் வாழ்ந்து வர ஆரம்பித்தனர். ஒருவருக்கொருவர் சண்டை செய்து கொள்ளாமல், நியாய ஸ்தலங்களை ஏற்படுத்திக் கொண்டு தங்கள் விவாதங்களைத் தீர்த்துக் கொள்ள ஆரம்பித்தனர். அவரவர்களின் அபிப்பிராயங்களை முறட்டுத்தனத்தில் அடக்கி ஆள்வதை விட்டு விட்டு விவாத மூலமாக பகுத்தறிவைக் கொண்டு மாற்றிக் கொள்ள ஏற்பட்ட காலமுமிதுவே. பொதுஜன வாக்கென்று ஏற்பட்ட காலமுமிதுவே. அரசுகள் செய்வதெல்லாம் ஒத்துக் கொள்ள வேண்டுமென்ற கட்டாய திட்டத்தை மாற்ற ஏற்பட்ட காலமுமிதுவே. உலகிலுள்ள பொருள்கள் சரிசமத்துவமாக உலகில் உழைப்பவர்களுக்கு



உரியது என்ற எண்ணம் முளைத்ததும் இந்தக் காலமுமாகும். கொடூர தண்டனைகளால் அடக்குவது மிருகத் தன்மையென்ற மனப்பான்மை ஏற்பட்டதும் இந்தக் காலத்தில்தான். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் உலக மக்கள் யாவருக்கும் உரியது என்ற பேரிறைச்சல் எழுந்ததும் இக்காலமே. பெண்கள் ஆண்களுடன் உலக வாழ்க்கையில் சரிசமத்துவ உரிமையுடையவர்கள் என்ற மனப்பான்மை உண்டான காலமுமிந்த நாகரீக காலமே. ஏக தேசமாக சிற்சிலரே சர்வ ஞானத்தைப் பெற்று வந்த காலம் போய், சர்வ மக்களும் பெற வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வரும் காலம் இந்த நாகரீக காலமே! எவ்வித அடிமைத் தனமும், மக்கள் வாழ்க்கையினின்றும் நீக்க வேண்டுமென கட்டாயப்படுத்துவதும் இந்த தற்கால நாகரீக காலத்தில்தான்.

தற்கால நாகரீகம், பண்டை கால காட்டுமிராண்டி, அநாகரீக காலங்களிலிருந்து பெறப்பட்டு வந்தமையால், அந்தந்த காலத்து வாழ்க்கை, தற்கால நாகரீகத்திலும் அங்குமிங்கும் நிறைந்து கிடக்கின்றன. அந்தந்தக் காலத்து பழக்கவழக்கங்களும், நீதி நெறிகளும், நம்பிக்கை களும் கோட்பாடுகளும் மாறி வருகின்றன. காலதேச வர்த்தமானப்படி மேற்கண்ட சட்டதிட்டங்களும், விலக்கு விதிகளும் மாறுகின்றன. ஆனால் அப்படி மாறி வந்தும், காலதேச வர்த்தமானங்களுக்கு உதவாத உபயோகமற்ற திட்டங்கள் அடிபட்டுப் போகாமல், தற்கால நாகரீகத்தில் அங்குமிங்கும் நிலைத்து வருகின்றன. தற்கால நாகரீகத்தில் உபயோகமற்ற பலவித கொள்கைகளும், கோட்பாடுகளும் சிதறுண்டு வந்த போதிலும், முழுமையும் நாசமடையவில்லை. அவைகள் நாசமடைய வேண்டில் அவைகள் என்னவையென்று பொது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். முதலாவது அரசுகளின் ஏகாதிபத்தியமும், காட்டு மிராண்டியின் வாழ்க்கையினின்றே தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறது. ஆதிகால காட்டுமிராண்டித் தலைவன், தன்னைச் சேர்ந்த குடும்பத்தவர்களையும், சுற்றியுள்ள மக்களையும் அடக்கியாண்டு வந்தான். அதைப் போலவே, இன்றைக்கும் ஏகாதிபத்திய அரசுகளும் எல்லா உலக சுக போகங்களை தங்களுடையதென்று கோடானுகோடி மக்களை அடக்கியாண்டு வருகின்றனர்.

காட்டுமிராண்டி, புலித்தோலையும், கோரப் பற்களையும், எலும்புகளையும், மண்டை ஓடுகளையும், அம்பு, விற்களையும் கொண்டு தன்னை அலங்கரித்துக் கொண்டு கிராம மக்களை பயப்படுத்தி வந்ததைப் போல, தற்கால அரசுகளும் சேவகர்களையும், சிப்பந்திகளையும், இராணுவத்தையும், இராணுவத் தலைவர்களையும் கொண்டு பல கோடி மக்களை அடக்கி ஆண்டு வருகின்றனர். மந்திரங்களையும், தந்திரங்களையும் கொண்டு காட்டு மிராண்டித் தலைவன் தனது பிரஜைகளைப் பயமுறுத்தி வந்ததைப் போல் இக்காலத்து அரசர்களும் மூட மதங்களையும், புராண



RangaRakes tamilnavarasam.com

இதிகாசக் கதைகளையும் கொண்டு பலகோடி மக்களைப் பயமுறுத்தி வருகின்றனர். பண்டைக் காலத்தில் காட்டு மிராண்டிகள், பெண்களையும், பிள்ளைகளையும் கொடூரமாக நடத்தி வந்ததைப் போல இன்றைக்கும் கோடான கோடிப் பெண்களும் சிறுவர்களும் கொடூரமாக நடத்தப்படுகின்றனர். அந்தக் காலத்தில் உழைப்பவனுடைய உழைப்பையும் அதன் பயன்களையும், ஆதிகால அநாகரீகத் தலைவன் தனது சுகபோகத்திற்கு விறையமிட்டு வந்ததைப் போல், இன்றைக்கும் முதலாளிகளென்றும், நிலச் சுவான்தார்களென்றும் பெயர் படைத்த பல்லாயிரம் பேர், பலகோடி பல்லாயிரம் மக்களின் உழைப்பையும், அதனாற் பெரும் பயனையும், அபகரித்துக் கொண்டு வருகின்றனர். பொது மக்கள், அந்தக் கால தந்திரத்தையும், சூழ்ச்சியையும் தெரிந்து கொண்டால் தனது ஆதிக்கத்திற்கு அபாயம் வருமென்று அநாகரீகத் தலைவன் எண்ணி வந்ததைப் போல் இன்றைக்கும், நாகரீகமடைந்தவனெனச் சொல்லும் அரசனும், பொது மக்கள் விஞ்ஞானமடைந்ததால் தனது ஆதிக்கத்திற்கே அபாயம் வருமென எண்ணி வருகின்றான். ஆதிகால அடிமைத்தனம் தற்காலத்தில் பல்வேறு ரூபமாக சமூக வாழ்க்கையில் நிறைந்துள்ளது. முக்கியமாக மந்திர தந்திரங்களால் கட்டுண்டு கிடக்கும் மக்களின் அடிமைத்தனம் அறவே ஒழிய வேண்டும். மதங்களும், இதிகாச புராணங்களும் மக்களின் அடிமைத் தனத்தை நீடிக்கச் செய்து வருவது தடை பட வேண்டும். ஏகாதிபத்திய அரசர்களால், அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் கோடான கோடி மக்கள் அடிமைத் தனத்திலிருந்து விடுபட வேண்டும். பண்டை கால துற்பழக்க வழக்கங்களால் தாழ்த்தப்பட்ட பலகோடி பெண்மக்கள், சரி சமத்துவ சுதந்திரத்தைப் பெற வேண்டும். சொந்தக்காரர்களாலும், நிலச்சுவான்தார்களாலும் அடிமைப்படுத்தப்பட்ட கோடான கோடி குடிமக்கள் நிலத்திலும் நீரிலும் சரிசமத்துவம் பெறவேண்டும். உழைப்பவனுக்கே தனது உழைப்பின் முழுப் பயன் சேர வேண்டும். இதுதான் தற்கால நாகரீகத்தின் சரிசமத்துவ வாழ்க்கை. உலக மக்களில் எவனுக்காகினும் இந்த **சரி சமத்துவ சமதர்மம்** குறைவுபடுமேயானால், அது காட்டு மிராண்டி அநாகரீக வாழ்க்கையேயொழிய நமது நாகரீகமாகா.

**புரட்சி - தலையங்கம் - 01.04.1934**



# துணுக்குகள்

## லண்டன் மாணவர்கள்

குடியேற்ற நாடுகளில் உள்ள மக்கள், பரிபூரண சுயேச்சையோடு வாழவேண்டுமென்கிற கிளர்ச்சியால், பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்திற்கு அழிவை உண்டாக்க வேண்டுமென்கிற கோட்பாடு லண்டன் சர்வகலாசாலைகளில் ஏற்பட்டு வருவதானது அங்கு சர்வகலாசாலை அதிகாரிகளிடையே சிறிது பீதியை உண்டாக்கி வருகிறது. 12 இந்தியப் பொதுவுடமை வாதிகளைத் தவிர்த்து கணக்குப்பார்த்தாலும், அங்கு வசித்துவரும் சில ஆயிர இந்திய மாணவர்களும் கிரேட் பிரிட்டனில் ஸ்திரமாக நிலைபெற்றுள்ள சிலரும் பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்திற்கு விரோதமான இயக்கத்திலேயே சார்ந்துள்ளனர் என்பது பகிரங்க இரகசியம். அங்கு சர்வகலாசாலை யூனியன்களில் நிகழும் தர்க்க வாதத்தின் போது இரு இந்தியர்கள், பொதுவுடமை தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதும், இருபது பேர் தொழிலாளர்களுக்காகவும், சமுதாய ஜனநாயகத்துவ கொள்கைகளுக்காகவும் பரிந்து பேசுவது வாடிக்கையாகும். இந்த மாதத்தின் முதல் வாரத்தில் ருசிகரமான இரண்டு சர்வகலாசாலை மீட்டிங்குகள் நடைபெற்றன. அதில் ஒன்று கேம்பிரிட்ஜ் மாணவர்களின் சோஷியலிஸ்ட் கழகத்தாரால் கேம்பிரிட்ஜில் கூட்டப்பட்டதாகும். இதில் பென் பிராட்லேயும், சக்லத்வாலாவும் முக்கிய பேச்சுக்காரர்களாவார்கள்.

பிரிஸ்டல் சர்வகலாசாலையில் வருஷாந்திர விழா சனிக்கிழமை (3-3-34) இரவு நடந்தது. சர்வகலாசாலையின் ‘இன்டர் நேஷனல் சோஷியலிஸ்டு குரூப்’ மீட்டிங்கை ஆரம்பித்தது. அன்று பேச எடுத்துக்கொண்ட விஷயம் ‘‘ஜனநாயகத்துவமும் - இந்திய விவசாயிகளும்’’ என்பதைப் பற்றியதாகும். இந்த விழாவில் பேச லார்டு லாயிட் அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவரால் வர முடியாததின் காரணமாக அவர் தனக்குப் பதிலாக சர் லூயிஸ்டு ஆர்ட்டை நியமித்து அனுப்பியிருந்தார். சர்வகலாசாலை மாணவர்களின் சார்பாக இந்திய விவசாயிகளின் ஜனநாயகத்துவ முறைகளுக்குப் பரிந்து பேச, வாலிப இந்திய மாணவரான மிஸ்டர் சிங் நியமிக்கப்பட்டிருந்தார். பிரிட்டிஷ் சோஷியலிஸ்ட் மாணவர்கள் தங்களுக்காகப் பேச ஏகாதிபத்தியத்தின்



RangaRakes tamilnavarasam.com

நேர் எதிர்ப்புவாதியான மிஸ்டர் பிராட்வாலை நிறுத்தியிருந்தார்கள். ஆனால் கடைசி நிமிஷத்தால் அவருடைய பெயரை மாற்றிவிட்டு ஷாபூர்ஜி சக்லத்வாலா பெயரை புகுத்திவிட்டார்கள்.

சர் லூயிஸ்டு ஆர்ட் ஒரு மணி நேரத்திற்கு அதிகமாக, ஜாக்கிரதையாக தான் எழுதி வைத்திருந்த பேச்சைப் படித்தார். இந்தியர்கள் பன் நெடுங்காலமாக ஒரு மனிதனின் குடைக்கீழ் இருக்க நம்பிக்கைக் கொண்டவர்களென்றும், இந்திய விவசாயிகள் ஒரு மகாராஜாவையோ அல்லது ஒரு நவாபையோ தான் விரும்புகிறார்களென்றும், அவர்கள் எந்த பார்லிமென்ட் தலைவரையும் விரும்பவில்லையென்றும், எவ்வாறு இந்தியாவின் பல ஜாதி பாழை வகுப்பார்களை பெரிய மொகல்களும் பீஷ்வாக்களும் ஆண்டார்களென்றும், வழக்கமான அழகான சம்பிரதாயப் பேச்சில் சித்தரித்துக் காட்டினார். மிஸ்டர் சிங் பேசும் பொழுது இந்தியர்கள் 4000-கி.மு. காலத்திலேயே ''குடி யாட்சியை'' இந்தியாவில் நிறுவி அதனை ஆண்மையோடு நடத்தியிருக்கின்றார்களென்றும், இன்றையதினம் இந்திய கிராமவாசிகள் அறியாமையில் மூழ்கியிருந்த போதிலும் ''பஞ்சாயத்து'' மூலமாகவே இந்தியாவில் சாந்தியை ஏற்படுத்தலாமென்றும் தக்க ஆதாரங்களோடு எடுத்துக் காட்டினார். சக்லத்வாலா பேசும் பொழுது, சர் லூயிஸ்டு ஆர்ட் பேசியது யோக்கியமானதானாலும், அவருடைய நோக்கம் முற்றிலும் தவறான எண்ணம் கொண்டதென்றும் அவருடைய பரிசீலனை முறைகளும் முடிவுகாணும் தன்மைகளும் முழுதும் தப்பானதென்றும் எடுத்துக்காட்டிப் பேசினார். பின்னால் சக்லத்வாலா பேசிக்கொண்டிருக்கும் பொழுது கன்சர்வேடிவ் கக்ஷியைச் சேர்ந்த பார்லிமெண்டு (பிரிஸ்டல் பிரிவு) அங்கத்தினரான லார்டு ஆப்ஸ்லே ''இந்தியாவுக்குத் தேவையான ஜனநாயகத்துவத்தைப் பற்றியதில்'' குறுக்கு கேள்வி கேட்டார். இதற்கு சக்லத்வாலா பதில் சொல்லும்பொழுது 1918-ஷு 'க.கி' எலெக்ஷன் அனுபவத்தினாலாவது அல்லது 1924-ஷு ஜினோவிய்ப் போர்ஜரியாலாவது அல்லது 1931-ஷு பின்மணி எலக்ஷனைக் கொண்டாவது, இன்றைய பார்லிமெண்டரி முறையானது உண்மையான ஜனநாயகத்துவம் கொண்டது என்று எவர் துணிந்து பேசுவாரானாலும் அந்த இங்கிலீஷ்காரரின் அறியாமைக்கும் அகம்பாவத்திற்கும் தான் பெரிதும் ஆச்சரியப்படுவதாகக் கூறினார்.

### மார்க்ஸ் விழா

7-தேதி புதன்கிழமையன்று கார்ல் மார்க்ஸ் இறந்த 51-வது வருஷ விழாவுக்காக லண்டனில் உள்ள புரட்சி தொழிலாளர்கள், மார்க்ஸ் ஞாபகார்த்த வாசகசாலையாரும், தொழிலாளர் பள்ளிக்கூடத்தாரும் குறிப்பிட்டிருந்தவாறு மார்க்ஸ் புதைக்கப்பட்ட ஹைய்கேட் சவக்காட்டில் கூடினார்கள். அன்று பேசியதில் முக்கியஸ்தர் ஆர். பேஜ் ஆர்னாட் என்பவராவர். அவர் பேசும் பொழுது காரல் மார்க்சைப் பற்றியும் அவருடைய உயிர் தோழரான பிரடிரிக் என்ஜல்சைப் பற்றியும் சிலாகித்துப் பேசி, அவருடைய உபதேசங்கள் தடுக்க முடியாத சம்பவங்களாக இன்று நிகழ்ந்துவருவதாகவும், தொழிலாள பாட்டாளி மக்கள் தங்களைத் தாங்களே நன்கு உணர்ந்து தங்களின் விடுதலைக்குப் போராட முனைந்து விட்டார்களென்றும், உலகத்தின் ஆறில் ஒரு பகுதியான ஐக்கிய சோவியத்தில் ஸ்டாலினின் தலைமையின் கீழ் ''மார்க்சிசம்'' வெற்றிபெற்று விட்டதாகவும், இங்கு (இங்கிலாந்தில்) மார்க்சின் சவத்திற்குமேல் நிற்கும் நாம் உழைப்பாளிகளான பாமரர்களின் சர்வாதிகாரத்தால் அண்மையில் மார்க்ஸிசத்தின் வெற்றியையும், தொழிலாள வகுப்பாரின் விடுதலையையும், குடியேற்ற நாடுகளில் வாழும் மக்களின் சுயேச்சையையும், சோஷியலிசத்தின் ஸ்தாபிதத்தையும் காணுவோமென்று கூறி முடிவாக ''எல்லா தேசங்களிலுமுள்ள பாடுபடும் மக்களே ஒன்று சேருங்கள்'' என்று பேசி முடித்தார்.

### குஜராத்தில் சோஷியலிசம்

சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பம்பாய் சோஷியலிஸ்டு குரூப்பாரின் வேலைத்திட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு குஜராத்தி சோஷியலிஸ்ட் பிரிவு ஒன்று வாலிப காங்கிரஸ் ஊழியர்களைக் கொண்டு பரேடாவில் கடந்த மார்ச்சு மாதம் 17 தேதியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சோஷியலிஸ்ட் நோக்கங்கொண்ட குஜராத்தி வாலிபர்கள் அதில் கலந்து கொள்ளும்படி ஓர் அறிக்கையும் வெளியாகி இருக்கிறது.

**புரட்சி - துணுக்குகள் - 01.04.1934**



RangaRakes tamilnavarasam.com




# உணவுக்கு வரி

பண்டைக்கால அரசுகள் முதல், தற்கால அரசுகள் வரையிலும் எல்லா அரசுகளும், உணவுக்கு வேண்டிய பொருள்கள் மேல் வரிகளைச் சுமத்தி, அவைகளின் விலையை உயர்த்தி வந்திருக்கின்றார்கள். இத்தியாதி வரிகளை நியாயமென்றே எண்ணி வந்திருக்கின்றார்கள். இந்த வரிகளுக்கு நிலத்தீர்வையென்றும், ஜலத்தீர்வையென்றும், சுங்கத்தீர்வையென்றும் அழைக்கின்றார்கள். இவ்வரிகளை விதித்து வரும் தற்கால அரசுகள் இவ்வரிகள் இயற்கையாக நியாயமானவைகளா? அநியாயமானவைகளா? என்று பகுத்தறிவைக்கொண்டு உணர்ந்தாரில்லை. ஏதோ ஆதிகால முதல் உண்பண்டம், தின்பண்டங்களின் மேல் வரி விதித்து வந்திருக்கின்றார்களாகையால், அந்தப் பழக்கத்தைப் போலவே, அந்தந்த சமயங்கட்கு ஏற்றவாறு பற்பல வரிகளை உணவுப் பொருளின் பேரில் விதித்து வருகின்றார்கள்.

தற்கால ஓர் முனிசிபாலிடியை எடுத்துக் கொள்வோம். எந்தெந்தப் பொருள்களுக்கு வரிகளை விதித்து வருகிறார்களென்பதை சற்று கவனிப்போம். பட்டணங்களில் வரி விதிக்கப்படாத உணவுப்பொருள்கள் யாதொன்றுமில்லை. பால்கொடுக்கும் பசுவுக்கு வரி, பதார்த்தங்களை விற்பதற்கு வரி, அவைகளை விற்கும் தொழிலுக்கு வரி, அவைகளை விற்கும் இடங்களுக்கு வரி, தோசைக் கடை முதல், நெய், சர்க்கரை, மளிகை, உப்பு, வெற்றிலை பாக்கு, சீனி, கற்கண்டு, பிஸ்கட், மிட்டாய், தினைமாவு, தேன் முதலிய சகலவித சொற்ப பண்டங்கட்கெல்லாம் முனிசிபல் வரி விதிக்கப்பட்டு வருகின்றன.

இத்யாதி வரிகளை நேரல்லாத வரிகள் என்று கூறுவார்கள். ஆனால், இவ்வித உண்பண்டம் தின்பண்டங்களின் மேல், நேரல்லாத வரிகளோடு, முக்கிய உணவுகளின் பேரிலும் வரி விதிக்கப்பட்டு வருகின்றன. அரிசி, கோதுமை, கம்பு, கேழ்வரகு, பருப்பு முதலிய தானியங்களின் பேரிலும் பலவித வரிகளைச் சுமத்தி வருகின்றார்கள்.

அரசாங்கத்தாரால் விதிக்கப்படும் இத்யாதி வரிகளும் போதாமல், போக்குவரத்துக்கு வேண்டிய வண்டி, ரயில், கப்பல், தோணி, படகு முதலியவைகட்கு சுமை வரியும் கொடுக்க வேண்டி வருகின்றது. இவ்வரிகளின் அக்கிரமத்திற்கு மேலான ஒரு வரி உண்டு. அவை நிலத்தீர்வை எனப்பெயர். இந்த நிலத்தீர்வை நீர்வரியையும் சேர்ந்தது.



RangaRakes tamilnavarasam.com

விளையும் பொருள்களை விளைவிப்போன் ஒருவன். ஆனால், விளைவுக்கு வேண்டிய உழைப்புக்கு யாதொரு சம்மந்தமுமில்லாதவன், இந்நிலத்தீர்வையைக் கைக் கொள்ளுகின்றான். நிலத்தை இவன் கொண்டு வந்ததில்லை. இந்நிலத்தை ஓரிடமிருந்து, மற்றொரிடத்திற்கு கொண்டு போகவும் முடியாது. கற்ப காலங்களாக, இந்நிலங்கள் இருந்த இடத்திலேயே இருந்து வருகின்றன. மனிதன் உலகில் தோன்றுவதற்கு முன்னமே விளை நிலங்களிலிருந்து வருகின்றன. இந்நிலத்தை ஆதிகாலமுதல், தற்காலம் வரையில் மனிதனைத் தவிர மற்றெல்லா ஜீவன்களும் பூமியின் மேல் விளையும் பொருள்களை அந்தந்த உயிர்கட்கு வேண்டிய அளவு வரிவிதியா தொன்றுமின்றி அனுபவித்து வந்திருக்கின்றன. ஆனால் மனிதரில் சிலரே இயற்கைக்கு விரோதமாக விளைபொருள்களை யாதொரு உழைப்புமின்றி அனுபவித்து வருகின்றார்கள். இதுதான் அக்கிரமத்திலும் அக்கிரமமான நிலவரி என்பார்கள். பட்சிகள் யாதொரு சட்ட திட்ட நிபந்தனைகளின்றி, விருட்சங்களில் உண்டாகும் கனிகளை உண்டு வாழ்ந்து வருகின்றன. புழு, பூச்சி, வண்டு, புல்லினங்கள் யாவும் தத்தமக்கு வேண்டிய பொருள்களை வரிவிதிப்பின்றி, விளையும் பொருள்களை இலவசமாக உண்டு வாழ்ந்து வருகின்றன. கோடான கோடி வருடங்களாக வரி, சுங்கம் இன்னும் பலவித சுமைகளின்றி, கோடான கோடி உயிர்கள் அனுபவித்துவரும் உணவுப் பொருள்களை, நேற்று உலகில் தோன்றிய மனிதன் ஒருவனே, மக்கள் போதுமான வரையிலும் உண்ணுவதற்கு முடியாமல் வரிச்சுமைகளை மேலும் மேலும் விதித்து வருகிறான். இந்தக் கொடுமை மனிதனைத் தவிர யாதொரு உயிர்களிடமுமில்லை. இது மனிதனால் உண்டாக்கப்பட்ட முதல் கொடுமை.

இந்தக் கொடுமையை விளைவிக்க வேண்டியதற்கு ஏதாகிலும், இயற்கையிலாகிலும், பகுத்தறிவிற்காகிலும் பொருத்தமுளதாவென்று பார்ப்போம். உணவுப் பொருள்களின் பேரில் வரிகளைச் சுமத்தி, அகவிலைகளையும் உயர்த்தி மக்களின் உழைப்பின் பயனையும் குறைத்து, மக்களுக்குப் போதுமான உணவு கிடைக்க வொட்டாமல் செய்வது என்ன தர்ம நீதியென்று கேட்கின்றோம்? முக்கியமாக இந்த வரிச்சுமைகளால், பெரும்பான்மையான மக்கள் பயனடைந்தாலும் ஒருவாராக ஒத்துக்கொள்ள இடமுண்டு. இவ்வரிகளின் பெரும்பான்மையான பயனை சிலர்களே அனுபவிப்பார்களேயாமாகின், இவை எந்த யுக்திக்குப் பொருந்தும்? இவ்வரிகளின் முழுப்பயனும் ராணுவத்திற்கும், உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கும், அனாவசியச் செலவுகளுக்கும் உபயோகப்பட்டு வருமாயின், இது எவ்வித நியாயத்திற்குப் பொருந்துமென்று கேட்கின்றோம்? ஒரு நாட்டுக்கு வரிகளின் மூலம் 160 கோடி வந்தால், அதில் மூன்றிலிரண்டு பங்கு உணவின் பேரில் விதித்த நேரல்லாத வரியுமானால், அவ்வரியில், 50 கோடி இராணுவச்



செலவுக்கும் மூன்று கோடி உணவுப் பொருளபிவிருத்திக்கும் சிலவானால், இவ்வாறாகச் செலவழிப்பதை என்ன மதியீனமென்று நினைப்பது?

உணவுப் பொருள்களின் பேரில் வரிவிதிக்காமல், ராணுவத்தை எவ்விதம் காப்பாற்ற முடியுமென்பார்? அதற்கு, நமது நேரான விடை என்னவென்றால், ராணுவத்தால் என்ன நன்மை என்று கேட்கின்றோம்? ராணுவப்படை இல்லாமல் போமாகிற் தேசமாகிலும், உலகமாகிலும் தலை கீழாகக் கவிழ்ந்து விடுமா வென்றும் கேட்கின்றோம்? வேற்றரசர்கள் நாட்டைப் பிடித்துக் கொள்ளுவார்களென்று எவர் சொல்கின்றார்கள். அதனால் பெரும்பான்மை மக்களுக்கு, தற்கால கஷ்டங்களைவிட வேறு அதிகமான கஷ்டம் என்ன நேர்ந்து விடுமெனக் கேட்கிறோம்? அல்லது தற்கால சுகத்தைவிட, பெரும்பான்மை மக்கள் என்ன அதிகமான சுகத்தைப் பெறுவார்களென்றும் கேட்கின்றோம்? வயிற்றுக்கு எட்டாத உணவு கிடைக்காதிருக்கும் வரையில் இராமன் ஆண்டாலென்ன? அல்லது இராவணன் ஆண்டாலுமென்ன வென்றும் கேட்கின்றோம்.

ராணுவ முதலிய சிப்பந்திகள் தேச தற்காப்பிற்கு இல்லாமற் போமாகில், உள் நாட்டில் குழப்பம், கொலை, களவு முதலிய சச்சரவுகள் உண்டாகுமென்பார்கள். ஏன்? வயிற்றுக்கு உணவு சரி சமத்துவமாக யாவருக்கும் தத்தம் உழைப்பின் பயனாகக் கிடைக்குமாயின், மக்கள் எதற்காக குழப்பம் செய்வார்கள்? இவ்வளவு இராணுவ, சேவக சிப்பந்திகளிலிருந்தும், கொலை, களவு முதலிய உள்நாட்டுக் குழப்பங்கள் ஏன் உலாவுகின்றன? இந்தக் குழப்பங்களை அடக்க எத்தனை சிவில், கிரிமினல் கோர்ட்டுகள்? எத்தனை ஜட்ஜுகள், மாஜிஸ்டிரேட்டுகள்? எத்தனை வெட்டியான், தலையாரிகள்? இவ்வளவெல்லாமிருந்தும், ஒரு நாட்டின் ஜெயில்களில் கொடுங் குற்றவாளிகள் ஆயிரம், பதினாயிரம், லட்சக்கணக்காக அடைபட்டுக் கிடப்பானேன்?

தேச தற்காப்பிற்கு சேனை சிப்பந்திகளும், இராணுவப் படைகளும், கோர்ட்டுக் கச்சேரிகளும், ஜெயில் சப்ஜெயில்களும் அத்யாவசியமென வேண்டுமென்போர் கூறும் கூற்று அறியாமையால் கூறும் கூற்றென அறிக! சண்டையும், போரும், கலகமும், குழப்பமும் உண்டாவதற்கு ஆதி காரணமாக நிற்பது, பொருளாதார வித்தியாசத்தால் என அறிக! ஒருவனுக்கு இருந்து மற்றவனுக்கு இல்லாமையே, எல்லாவித குழப்பங்களுக்கும் காரணகர்த்தாவாக நிற்பதென அறிக! நாட்டிலுள்ள மக்களுக்கெல்லாம் சரி சமத்துவமாக வாழ்க்கைத் திட்டம் ஏற்படுமாயின், ராணுவ சிப்பந்திகள் ஏன்? கோர்ட்டு கச்சேரிகள் ஏன்? கலக குழப்பங்கள் ஏன்? நாட்டு மக்களது சமூகம் உன்மத்த சமூகமா! ஓரறவு, ஈரறிவு, மூவறிவு, நாலறிவு உடைத்தாயிருக்கும் கீழ்த்தர சீவராசிகள், பல கோடி நூராயிரம் வருடமாக கோர்ட்டு கச்சேரியின்றி, ஜெயில், சப்ஜெயில்களின்றி தத்தம் வாழ்வுக்கு வேண்டிய உணவைப் புசித்துக் கொண்டு இன்று



RangaRakes tamilnavarasam.com

வரை வாழ்ந்து வருகையில், பஞ்சறிவுடைய மனிதன், யாதொரு அடக்கு முறை ஸ்தாபனங்களின்றி தனது சமூக வாழ்க்கையை ஏன் நடத்த மாட்டான்? அதுவல்ல காரணம் பஞ்சறிவுடைய மனித வாழ்க்கையில் ஓர் கொடுங்கோல் திட்டம் புகுந்து கொண்டிருப்பதால் இத்தியாதி கேடும், வினையும் மனித சமூகத்தில் நிறைந்துள! அதுதான் பொருளாதார வித்தியாசத் திட்டமாகும். அதுதான் ஒருவருக்கிருந்தும், மற்றொருவனுக்கு இல்லாதிருக்கும் திட்டமாகும். இந்தத் திட்டத்தைக் காப்பதற்கே ஏற்பட்ட சேனை சிப்பந்திகளும், கோர்ட்டுக் கச்சேரிகளும், ஜெயில்களும், அடக்குமுறைகளுமேயல்லாமல் தேச தற்காப்பிற்குமல்ல. உள் நாட்டுக் குழப்பங்களையடக்குவதற்குமல்ல. சரிசமத்துவமாக மக்கள் வாழ்க்கை நடத்துவதற்குமல்ல.

கோடிக்கணக்காக, கோடி வருடங்களாக புழு, பூச்சி, விலங்கினங்கள் யாவும் உணவுப் பொருள்களைத் தடை யாதொன்றுமின்றி உண்டுகளித்து வருவதால், அடக்கு முறைகளும் அடக்குமுறை ஸ்தாபனங்களுமின்றி நீடூழி காலமாக வாழ்ந்து வருவதைப் போல், மக்களுக்கு வரி, சுங்கம் முதலிய கொடிய சுமைகள் இல்லாவிடில், மக்களும் இன்னும் பல்லாயிரம் கோடி வருடம் சுகித்து வாழ்வார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

மக்கள் வாழ்க்கையில், காலப் போக்கிற்கொத்தவாறு பற்பல நற்பழக்கங்களும், துற்பழக்கங்களும் உண்டாயின. அவைகளில், உணவுப் பொருள்களின் மேல் சிற்சில கற்பனா காரணங்களால் வரி சுமத்தப்பட்டு நாட்டில் வறுமை விளைய நேர்ந்தது. நாட்டிலுள்ள வறுமையையாகிலும், உலகிலுள்ள வறுமையையாகிலும் போக்க வேண்டுமானால், முதலில் உணவுப் பொருள்களின் மேல் ஏறியுள்ள எல்லா வரிச்சுமைகளும் நீங்க வேண்டும். இந்த நியாயம் இவ்வாறிருக்க தற்கால ராஜ்யங்கள், உணவுப் பொருள்களின்மேல் வரிகளைச் சுமத்துவது உன்மத்தமாகுமே யொழிய மதியாகா!

**புரட்சி - தலையங்கம் - 08.04.1934**



# காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி

பழைய காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி, இவ் வருடத்தில் ‘புனர் ஜன்மம்’ எடுத்ததைப் பற்றி, சட்டசபை மோகம் பிடித்தவர்களுக்கு திருப்திகரமாயிருக்குமென்பதைப் பற்றி, யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. காந்தியாரும், இந்த சுயராஜ்யக் கட்சியின், ‘புனர் ஜன்மத்தை’ வாழ்த்தி வரம் கொடுத்த விஷயத்தைக் குறித்தும், யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. இவ்வித உபாயங்கள், முதலாளித் தத்துவத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் உண்டு. இந்த அனுபவத்தை ஒட்டியே, சுயராஜ்யக் கட்சியினர், திரும்பவும் தங்கள் கட்சியைப் புதுப்பிக்க ஆரம்பித்தனர்; காந்தியாரும் முதலாளித் தத்துவத்தில் சன்னது பெற்றவராதலால், சுயராஜ்யக் கட்சிக்கு மங்கள வாழ்த்தும் கூறினார். சுயராஜ்யக் கட்சி இன்று எடுத்த புனர் ஜன்மத்திலாகிலும் அல்லது காந்தியார் அதன்மேல் பன்னீர் தெளித்ததனாலாகிலும், தேசத்தில் பெரும்பான்மையோருக்கு எவ்வித சுதந்திரமாகிலும் நன்மையாகிலும் யாரும் கோர வேண்டியதில்லை. தேசமும், தேசத்து மக்களும், பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காட்டால் பண்டை கால முதல், கஷ்டப்பட்டு வந்ததைப் போல, இந்தப் ‘புனர் ஜன்மத்தைப்’ போன்ற ஆயிர மாயிரம் ‘புனர் ஜன்மங்கள்’ சுயராஜ்யக் கட்சியார் எடுத்த போதிலும், அவ்வித ‘புனர் ஜன்மங்களையெல்லாம்’ காந்தியார் வாழ்த்தி வந்த போதிலும், தேசம் இந்நிலையில் இருந்து தாழ்வடையாமற் போன போதிலும், இருக்கும் நிலையிலேயே இருக்குமென்பதற்குச் சந்தேகமேயில்லை. எவ்வித துக்கமும் நிவர்த்தியாவதற்கு இடமில்லை. இதற்கு அத்தாட்சி வேண்டுமானால், தேச விடுதலையை சதாகாலமும் எதிர்த்து வரும் ‘‘டெய்லி மெயிலைப்’’ போன்ற ஆங்கிலப் பத்திரிகைகள் சுயராஜ்யக் கட்சியின் ‘புனர் ஜன்மத்தை’ ஆவலுடன் வரவேற்று வருவதே போதும்.

‘‘சரித்திரம் திரும்பத் திரும்பத் தானே ஒப்பிக்கும்’’ என்று ஓர் ஆங்கிலப் பழமொழியுண்டு. அப்பழமொழியின்படி சில வேளைகளில் தேச சரித்திரம் தான் பாடிய பல்லவியையே பாடிக்கொண்டு வரும். ஜர்மனியில் ஏகாதிபத்திய சக்கிரவர்த்திக்குப் பின்னால் ஏகாதிபத்திய ஹிட்லர் வந்தான். ரஷ்யாவிலும் ஜார் ஆட்சிக்குப் பதிலாக கெரன்ஸ்கி ஆட்சி வந்தது. இட்டாலியில் அம்போல்ட் இருந்த இடத்தில் முசோலினி வந்தான். ஆங்கில நாட்டிலும் கன்சர்வேட்டிவ் கட்சிக்குப் பதிலாக,



RangaRakes tamilnavarasam.com

நாஷனலிஸ்ட் கட்சி வந்தது. இம்மாறுதல்களில், சொல்-மாறுதல்களே ஒழிய, நாடு அடையும் பலன் ஒன்றுமில்லை. ''அவன் தம்பி அங்குதன்'' என்றவாறு, வெவ்வேறு பெயர்களைப் போத்திக் கொண்டு வந்த அரசாட்சிகளே யொழிய, முதலாளித் திட்டத்தின் மனப்பான்மையும், நோக்கமும், கோரிக்கையும் எந்த விதத்திலும் மாற்றின பாடில்லை. எல்லாம் முதலாளி என்ற சாயத்தில் தோய்ந்தவைகளே. சுயராஜ்யக் கட்சி இதற்கு மாறுபட்டதல்ல. நேற்று பயனற்ற சுயராஜ்யக் கட்சியே இன்று 'புனர் ஜன்மம்' எடுத்திருக்கிறது. அந்த சுயராஜ்யக் கட்சியின் தலைவர்களே, இன்று 'புனர் ஜன்மம்' எடுத்த சுயராஜ்யக் கட்சியிலும் இருக்கின்றனர். அவர்களும் முதலாளி தத்துவத்திலிருந்து எதையும் விட்டுக் கொடுக்காதவர்கள். தற்கால சுயராஜ்யக் கட்சியினர்களாகிய இவர்களும், ஒன்றும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை. அந்த சுயராஜ்யக் கட்சியினர்களும் முதலாளிகள்தான் - இந்த சுயராஜ்யக் கட்சியினர்களும் முதலாளிகள்தான். தேசம் எவ்விதம் உருப்படப் போகின்றது?

முதலில் ஒத்துழையாமையை எதிர்த்து சட்டசபைகளைக் கைப்பற்றி, சட்டசபைகளை நடக்காவண்ணம், முட்டுக் கட்டைகளைப் போட்டு 100-ல் 98 தேசமக்களுக்கு விடுதலை கொண்டுவரப் போகின்றோமென்று தொடை தட்டிய சுயராஜ்யக் கட்சியினர், கடைசியில் அரசாங்கத்து மேஜையினின்று விழும் எலும்புகளைத் தாவிப்பிடித்த அகோர நடவடிக்கையை, தேசம் மறந்துவிடவில்லை. இக்கட்சிக்குத் தலைவரான காலஞ்சென்ற தேசபந்துதாஸ், காந்தியாருக்கு விரோதமாகச் சட்டசபைப் பிரவேசத்தை 'ஞானஸ்னானம்' செய்வித்த போது அதனால் 100-க்கு 98 இந்திய மக்கள் சுபேக்ஷத்துக்காகவே சட்டசபைப் பிரவேசத்தை ஆரம்பித்தோமென்று தேச முழுமையும் திக் விஜயம் செய்து வந்தார். அவர் இறந்த இரண்டொரு வருடத்துக்குள்ளாகவே காலஞ்சென்ற மோதிலால் நேருவின் தலைமையில், சுயராஜ்யக் கட்சியினர் டாடா கம்பெனியில் வேலை செய்து வந்த பல்லாயிரம் தொழிலாளிகளில் ஒருவருக்கேனும் ஒரு பைசாகூட அவர்கள் கூலியில் உயர்த்த சம்மதிக்காமல், யாதொரு நிபந்தனையுமின்றி பொது மக்கள் உழைப்பின் பயனாக வந்த ஐம்பது லட்ச ரூபாயை தாராளமாக டாடா கம்பெனியாருக்குத் தானமிட்டனர். தேச பந்துவின் தலைமையிலேயே நடந்த கயா காங்கிரஸில், தொழிலாளர் கட்சி என்பதை 1922-ல் ஸ்தாபித்து, அதற்குப் பிரபல அங்கத்தினர்களை ஏற்படுத்திய பிறகு அவர்களில் சிலர் வேலை செய்ய ஆரம்பித்ததும், அவர்கள் தலையில் தண்ணீரை ஊற்றித் தணிக்கச் செய்ததும் அந்தச் சுயராஜ்யக் கட்சியினர்களே. அக்கட்சியினரே இப் 'புனர் ஜன்ம' மெடுத்த சுயராஜ்யக் கட்சியிலிருந்து வருகிறபடியால், தேசமக்களுக்கு எவ்வித நன்மையும் இப் 'புனர் ஜன்மத்தில்' கிடைக்கப் போவதில்லை.



எவ்வித நல்லெண்ணத்தோடும் எவ்வித இனிப்பான சொல்லோடும், பொது மக்களுக்குத் தாங்கள் சுகப்பேற்றை நாட்டுக்குக் கொண்டுவருவதாகச் சொல்லிய போதிலும், காங்கிரஸ் திட்டம் இவர்களை எந்த நன்மையும், சட்ட சபைக்குள்ளாகிலும், அல்லது அதன் வெளியேயாகிலும் செய்துவிடப் போவதில்லை. கராச்சியின் காங்கிரஸ் திட்டம், சுயராஜ்யக் கட்சியினர்களின் கைகளையும், கால்களையும் விலங்கிட்டு ஸ்தம்பிக்கச் செய்திருக்கிறது. தனிவுடைமையை யாரும் அசைக்க முடியாது. பொதுவுடைமையை யாரும் நினைக்கவும் கூடாது. மக்களின் மூட நம்பிக்கை இருந்தவாறே இருக்க வேண்டும். கோவில்களில், கல்லுக்கும் கட்டைக்கும் பஞ்ச கவ்வியத்தால் (தேன், பால், பழம், தயிர், கோமயம்) அபிஷேகம் செய்துகொண்டேயிருக்க வேண்டும். முதலாளிகள் வியர்த்தங்களைத் தடுக்கப்படாது. தொழிலாளர்கள் தங்கள் தொழிற்சாலைகளில், விவசாயிகள் தங்கள் நிலங்களில், யாதொரு பொதுச் சுதந்திரமுமின்றிக் கொடுத்த கூலியைப் பெற்று வாழவேண்டும். இவ்வித வரையறைகளில் கட்டுண்டு கிடக்கும் காங்கிரஸ் கட்சியினர், எந்தப் பேரை வைத்துக் கொண்டு அரசியலை நடத்த முன் வந்த போதிலும், நாட்டிற்கு எவ்வித நன்மையும் விளையப் போவதில்லை. மக்களுக்குப் பொதுவுடமையும், பொது ஆதிக்கமும், பொது உரிமையும் எந்த அரசியல் திட்டத்தில் அடையக் கூடுமோ, அந்தத் திட்டம் ஒன்றுதான் தேசத்தைச் சுகப்படுத்துமேயல்லாது, சுயராஜ்யக் கட்சியினர், காங்கிரஸ் பெயரை வகித்த போதிலும், வேறு எந்தக் கட்சியினரின் பெயரை வகித்த போதிலும் சட்டசபைகளில் உள் நுழைந்து முட்டுக் கட்டை போட்ட போதிலும், அல்லது வெளியிலிருந்து சத்யாக்கிரகம் செய்த போதிலும், மக்களுக்கு யாதொரு நன்மையும் விளைவிக்கப் போவதில்லை என்பது நிச்சயம்.

காந்தியார் சுயராஜ்யக் கட்சியினரை நேற்று வாழ்த்தியதாகப் பொது வதந்தி ஒன்று நாட்டில் உலாவுகின்றது. இவர் எந்த ஸ்தாபனத்தைத்தான் வாழ்த்தாமலிருந்தார். இவர் ஒத்துழைத்த ஸ்தாபனங்கள் யாவும் முடிவில் குட்டிச் சுவர்களாகத்தான் முடிந்தது. இவரை நம்பி ஆற்றில் இறங்கியவர்கள் யார்தான் கரை ஏறினார்கள்? இவர் ஆதரித்து வந்த எந்த இயக்கமும் சம்பூரணமாக முடிவடைந்ததாகச் சொல்வதற்கில்லை. ஆரம்பித்த ஒவ்வொரு இயக்கத்தையும் நடுவாற்றில் தியங்கவிட்டு, தான் ஒருவரே கரை ஏறினார். போயர் சண்டையைக் குருக்கரிடம் கலந்திருந்து கொண்டு போயர்களின் விரோதிகளுக்கே உதவி செய்ய ஆரம்பித்தார்! 1906-ம் வருடத்தில், ஜுலூக்களை கிளப்பி விட்டு, அவர்களை நாசமாக்க அவர்களின் விரோதிகட்கே உதவி புரிந்தார்!! 1918-ம் வருடத்தில் சிம்லாவில் கூடிய மகாநாட்டில், மகாயுத்தத்தில் இந்தியர்களை படையினராக அனுப்ப, 'பகீரதப் பிரயத்தனம்' செய்தார். மகாயுத்தம் முடிந்த பிறகு தான் உதவி செய்த ஆங்கிலேயர்களையே இந்தியர்களைக் கொண்டு எதிர்க்கச் செய்தார்!!! இந்தக் கிளர்ச்சி ஆரம்பித்ததும், எங்கே



RangaRakes tamilnavarasam.com

பொது மக்கள் தமது கட்டுக்கு அடங்காமல் போகின்றார்களோவெனப் பயந்து அவ்வியக்கத்தைப் பர்டோலியில் நிறுத்திவிட்டார்!!!! உப்புச் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்து, ''ஒன்று சுயராஜ்யம் வர வேண்டும், அல்லது எனது உடல் நீரில் மிதக்க வேண்டும்'' எனச் சபதமிட்டு, ஆயிரக்கணக்கான சத்தியாக்கிரகிகளை ஜெயிலில் அமுக்கச் செய்து, தான் மாத்திரம் உண்ணாவிரதத்தைப் பூண்டு விடுபட்டார்!!!!! நேற்று, வட்டமேஜை மகாநாட்டிலிருந்து திரும்பி, பயனற்ற சத்தியாக்கிரகத்தைத் திரும்பவும் ஆரம்பித்து, அதையும் கைவிட்டு, தீண்டாதாருக்கு 'வைகுண்டத்தை'த் திறந்துவிடுவதாக ஊர் பிரதட்சணம் வந்து, அதையும் கைவிட்டுவிட்டு பூகம்ப சேவையில் தலையிட்டுக் கொண்டார்!!!!!! நாளை அதையும் நடுத்தெருவில் விட்டுவிட்டு, இமய மலைக்குச் சென்று சந்யாசி வேடம் பூண்டு, தபசு புரிந்தாலும் புரிவார்!!!!!!! இவரை நம்பிய தேசம், அதோகதியடையுமென்பதற்கு என்ன சந்தேகம்?

காந்தியார் சட்டசபைப் பிரவேசத்தை ஆதரித்ததாக நாடெங்கும் முழங்குகிறது. சட்டசபையில் நுழைந்து என்ன செய்ய வேண்டுமென்பதைக் குறிப்பிட்டாரில்லை. இந்திய நாட்டு முப்பத்தைந்து கோடி மக்களில், இவர் ஒருவர்தான் சட்டசபையில் நுழையாத உண்மையான சத்தியாக்கிரகியாம்! இந்த வீர மொழியைக் கேட்டு நகைக்காத சிறுவர்கள் யாருமில்லை! இவருடைய ஆதரவின் பேரில் காங்கிரஸ் கட்சியினர்களும், சட்டசபையில் நுழைய உத்திரவு அளிக்க வேண்டுமென, அரசாங்கத்தாரை கைகூப்பி வணங்குகின்ற கேவலக் காட்சியைக் காண, இவ்வளவு கேவலத்திற்கு நமது சுயராஜ்யக் கட்சியினர் இறங்கிய நிலைமை பரிதபிக்கத் தக்கதாயிருக்கிறது. இந்நிலைமைக்குக் கொண்டு வந்தவர் காந்தியார் ஒருவரே. இவர் நாட்டில் அரசியல் துறையில் தலைமை வகித்திருக்கும் வரை, இவர்பால், மூடமக்கள் மூடபக்தி வைத்திருக்கும் வரை, நாடு இன்னும் கேவல நிலைமைக்கு வருமென்பதற்கு ஐயமில்லை. இதனைத் தடுத்து மக்களுக்குப் பகுத்தறிவையூட்டி இந்திய மக்களை அடிமைத்தனத்தினின்றும் மூட மத ஜாதி வித்தியாசத்தினின்றும் விடுவிப்பது **சமதர்மிகள்** கடமையாகும்.

**புரட்சி - தலையங்கம் - 15.04.1934**



# காந்தியின் கடைசி காலம்

பிரசித்திபெற்ற ஏப்ரல் மாதத்தில்தான் தோழர் காந்தி அன்று தோன்றினார். இன்று பதினைந்து வருடங்களுக்கு முன்பு அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர்களுள் கடையராக இருந்த காந்தி, அகில இந்தியத் தலைவராகத் தோன்ற ஆரம்பித்தது ஏப்ரல் மாதச் சத்தியாக்கிரக வாரம் என்பதில்தான். அதே ஏப்ரல் மாதத்தில் மீண்டும் காந்தி இந்நாட்டின் விடுதலைக்குக் காது ஒடிந்த ஊசிக்கும் பயனில்லை என்று சொல்லத்தக்க நிலைக்கு வந்துவிட்டார். ஆனால் வழக்கம்போல் காந்தியின் கடவுள் அவருக்குத் தோன்றித் தனி மனிதரின் சட்டமறுப்பை நிறுத்து என்று சொன்னதாக சொல்லுகிறார். அத்துடன் மட்டுமல்ல, இதுவரையில் இந்திய நாட்டில் அவரின் ''சத்தியாக்கிரகத்தின்'' முறையை, தத்துவத்தை, உணர்ந்தவர், அனுஷ்டிக்கக்கூடியவர் ஒருவர் கூட இல்லையென்றும் ஒப்புக்கொண்டுவிட்டார். பதினைந்து வருடங்களுள் மூன்று முறை ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி, ஓய்ந்த காந்தியடிகளையும், மகா அவரது சத்தியத்தையும், அவரது சொந்தக் கடவுளையும் போற்றாவிட்டாலும் தூற்றாமலாவது இருப்போமாக! காந்தியடிகளின் கடைசி தோல்விக்குப்பின்பு அவர் நீண்டகாலமாக விரும்பும் ஹிமய உச்சிக்குச் செல்ல நாம் ஆசைப்படுகிறோம். அவரது ராட்டையும் அங்கு செல்வதாக.

இன்று பதினைந்து வருடங்களுக்கு முன்பு காந்திக்குக் கடவுள் தோன்றி கூறியது எதற்கெனில்: ரௌலட் சட்டம் ஒழிய வேண்டும். கிலாபத் அநீதிக்குப் பரிகாரம் தேடவேண்டுமென்பதாகும். எந்தக் கடவுள் காந்திக்கு இச் செய்தியைக் கூறியதோ அப்பொழுதே காந்தி அக் கடவுளை நோக்கி 33 கோடி மக்களும் இவ்விரண்டு தீங்குகளும் மறையப் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்றார். இப் பிரார்த்தனைக்கு ஜாலியன்வாலா பாக்கில் கடவுள் தக்க கூலியைப் பக்தர்களுக்குக் கொடுத்தார்.

நாம் புத்திசாலிகளாக இருந்திருந்தால் அன்றே காந்தியை இவ்வுலகில் கடவுள் பிரார்த்தனையால் மாறுதல் அடைந்த நாடுகளோ, பிரார்த்தனையால் பாதுகாக்கப்பட்ட தேசங்களோ, பிரார்த்தனையால் சுகமடைந்த சமூகமோ உண்டா என்று கேட்டிருக்கவேண்டும். ஆனால் பிரார்த்தனையினால் கஷ்டமடைந்த தேசத்தையும், பிரார்த்தனையென்ற மூட நம்பிக்கையில் சிக்கி முழு முட்டாள்களான நாடுகளையும் நாம் பார்த்திருக்கிறோம். அதற்கு அத்தாட்சி வேண்டுமானால் நாமும் நமது நாடும் முதன்மையானதாகவே எடுத்துக்கொள்ளலாம்.



RangaRakes tamilnavarasam.com

ஐரோப்பிய நோயாளி என்ற துருக்கி, பிரார்த்தனையையும், பிரார்த்தனையின் தலைவனான கலிபாவையும் அடியோடு விரட்டியடித்த பின்பு தான் உலகிலேயே முதன்மையான நாடுகளுடன் ஒன்றாக இன்று விளங்க ஆரம்பித்தது. புராதன நாகரீகம் பெற்ற ரோம் தலைநகருடைய இத்தாலி உலகக் கிறிஸ்தவர்களின் குருவான போப் அரசரை அடக்கி உட்கார வைத்தபின்புதான் ஐரோப்பிய வல்லரசுகளில் பலம் பொருந்தியவைகளுள் ஒன்றாக மாற ஆரம்பித்தது.

வைசூரி, காலரா, மலேரியா இத்தகைய பிணிகளுக்குத் தனித்தனியாக வணங்கும் தெய்வக் கோவில்களை இடித்தெரிந்து அந்தந்த இடங்களில் அந்தந்தத் தெய்வங்கள் பாதுகாத்து வந்ததாகக் கருதப்பட்ட பிணிகளுக்குத் தக்க மருந்துகளைக் கொண்ட வைத்தியசாலையை ஏற்படுத்திய பின்புதான் அமெரிக்காவும் கண்டு அஞ்சும் நிலைமைக்கு, ஜப்பான் வர ஏதுவாயிற்று. இதைப் போன்ற நாடுகள் பல உண்டு. ஆனால் எந்த நாடும் தெய்வ வழிபாட்டினால் ஓர் சிறிது பலனையாவது அடைந்ததை நாம் அனுபவத்தில் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு காந்தியாரோ, கிலாபத் அநீதிக்கும், ரௌலட் சட்டத்துக்கும் பிரார்த்தனை செய்யச் சொன்னார். ஸ்மர்னா நிதிக்கு உதவச் சொன்னார். அங்கோரா கஷ்டத்துக்குப் பரிகாரம் தேடச் சொன்னார். நாம் தோழர் காந்தி சொன்னதுக்கெல்லாம் பிரார்த்தனைகளைச் செய்தோம். நம்மில் ஒருவருக்காவது முதலில் நாம் பிரார்த்தித்துக்கொண்ட ''கலிபா'' பின்பு நம்மால் கொண்டாடப்பட்டதும், பிரார்த்தனை செய்யப்பட்டதுமான அங்கோராவினால் தூக்கி எறியப்பட்டதைக் கண்டிக்க மனம் வரவில்லை. 40 கோடி முஸ்லீம்களின் ''மதகுரு'' என்று பெயர்படைத்த கலிபாவை வெள்ளைக்காரர்கள் அலக்ஷியப்படுத்தினார்கள் என்று வெள்ளைக்காரரைக் கண்டித்தோம். ஆனால் பின்னால் நம்மால் கொண்டாடப்பட்ட அங்கோராவால் ''கலிபா'' தூக்கி எரியப்பட்ட காலத்தில் ''கலிபா'' கடலில் விழாமல் இங்கிலாந்தில் காப்பாற்றப்பட்டதிற்காக இங்கிலாந்தை போற்றவுமில்லை. இதை செய்த அங்கோறாவின் அதிபரும், நமது முஸ்தபா கமால் பாக்ஷாவை கண்டிக்கவும் இல்லை. இவை எல்லாம் எதை காட்டுகிறது. நமது இந்திய மக்களின் முட்டாள்தனத்தையும், மூடநம்பிக்கையுமே காட்டுகிறது.

காந்தி தனது மகத்தான தவரை உணர்ந்து அதற்கு தக்கபடி அறிக்கை வெளியிடவில்லை. தனது தோல்வியையும், ஏமாற்றத்தையும், கண்ணியமாக எடுத்துச்சொல்லி, தன்னை நம்பிய நாட்டையும், நாட்டு மக்களையும் மகத்தான கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக்கிய பெரும் குற்றத்தை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் எதிர்காலத்திலும் இந்நாட்டு மக்களை நிரந்தரமாக மூடராக்கும் எண்ணத்திலேயே எதேதோ, வியாக்யானங்கள் கூறி, சட்டமறுப்பை நிறுத்திவிட்டதாக



கூறுகிறார். நிறுத்திவிட்டேன் என்றால், இதுவரையில் நடந்து வந்ததுதான் என்ன என்பதை பகுத்தறிவுள்ள மக்கள் யோசிக்காமல் போகார்.

ஐரோப்பிய யுத்தத்துக்கு பின் உலகில் சகல தேசங்களும் மகத்தான மாறுதல்களை அடைந்து விட்டது. புதுமாறுதலை அடைந்த தேசங்கள் அதன்பின் தோன்றிய கஷ்ட நஷ்டங்களையும் நிவர்த்திசெய்து நல்ல நிலைமையை அடைந்து வருகிறது. ஆனால் தெய்வீகத்தை நம்பிய நமது நாட்டிலோ ஐரோப்பிய யுத்தத்துக்கு முன்பு ஏற்பட்ட துயரக்குரல் ஓயாது இன்னும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

காந்தி சட்டமறுப்பை நிறுத்திவிட்டார். இதற்கு முன்பே டெல்லியில் நமது திருவல்லிக்கேணி சாஸ்திரியும், அவர் அண்ணன் டாக்டர் அன்சாரியும், களிமண் மாளவியாவும் சட்டமறுப்பை நிறுத்தி சட்டசபை போக முடிவுசெய்து விட்டார்கள். புதிதாக உயிர் கொடுக்கப்பட்ட சுயராஜ்ய கக்ஷிக்கு காந்தியும் ஆசீர்வாதம் செய்து விட்டார்.

இனி நாம், சுயராஜ்யக் கக்ஷியின் பேரால் இந்நாட்டில் தோன்ற விருக்கும் ஏமாற்றங்களை களைந்தெரிய வேண்டிய வேலையை மேல்போட்டுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்று கடவுள் சொன்னதின் பேரால் சட்ட மறுப்பை விட்டு விட்டேன் என்பதற்குப் பதிலாக, கவர்ன்மெண்டார் தலை எடுக்க விடாமல் செய்துவிட்டதால் சட்டமறுப்பை விட்டு விட்டேன் என்று காந்தி சொல்லி இருந்தால் அது நாணயமாக இருந்திருக்கும்.

காந்தி தனது சிஷ்யர்களில் யாரோ ஒருவர், எவரோ ஒருவர், செய்ததாகச் சொன்ன செய்கையை ஆதாரமாகக் கொண்டு, சட்டமறுப்புகளை எல்லாம் விட்டு விட்டேன், எனது குருட்டுத்தனத்தை உணர்ந்தேன் என்பதற்குப் பதிலாக, எனது சிஷ்யர்களில் முட்டாள்கள் போக எஞ்சியவர்கள் சட்டசபைக்கு போக முடிவுசெய்து விட்டதால்தான் சட்ட மறுப்புகளை நிறுத்தி விட்டேன் என்று சொல்லியிருக்கலாம். யாரோ பெயர் சொல்ல முடியாத ஒருவர் எவரோ, பெயர் சொல்லக்கூடாத ஒருவரின் செய்கைக்காகத்தான், தனது போர்வாளை உரையில் போட்டேன் என்பது நியாய மனமுடையவனுக்குச் சரியாகத்தான் தோன்ற முடியுமா? வீச்சு நின்றதற்குக் காரணம் வீச்சுக்கு இடமில்லை என்றும், வாள் உரையில் போனதற்குக் காரணம் வீசச் சொன்ன (முதலாளி) காங்கிரஸ் பணக்காரர்களே! என்பதும் இன்று பொதுமக்கள் நன்குணர ஆரம்பித்துவிட்டார்கள். ஆதலால் காந்தியோ, அவர் சிஷ்யர்களோ, இன்னும் நாட்டை ஏமாற்ற எண்ணுவது இவர்களுக்குத் தீங்காகும் என்று அஞ்சுகிறோம்.

சட்டமறுப்புகளில் தீவிரமாக பலமுறை சிறை சென்றவர்களுள், சட்ட மறுப்பை முதல்படியாக வைத்து இந்நாட்டில் மிக பிரம்மாண்டமானதும், பயங்கரமானதுமான பொருளாதார புரட்சியை உண்டாக்க ஓர் கூட்டம்



RangaRakes tamilnavarasam.com

வேலைசெய்கிறது என்பதை சர்க்கார் முன்பே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அவர்கள் பயங்கரமான கொள்ளையையும், கொலைகளையும் தொடர்ந்து செய்வதையும் எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். இதை உணர்ந்த காங்கிரஸ் பிரபுக்களோ முதலில் அலக்ஷியமாக இல்லாவிட்டாலும், எப்படியாவது வெள்ளைக்காரன் பயந்து, இந்தியநாட்டு மில்கார முதலாளிகளுக்கும், காங்கிரஸ் பிரபுக்களுக்கும் சலுகை காட்டட்டும்; கிடைத்தவரையில் லாபம் வரட்டும் என்று முதலில் எண்ணினார்கள். ஆனால் இவர்கள் பணத்தைக்கொண்டு இந்நாட்டில் தோன்றிய சட்ட மறுப்பு இயக்கம், இச்செல்வாக்கைக் கொண்டே, எதிர்காலத்தில் பயங்கரப் புரட்சியை உண்டாக்கி தங்களுக்கே தீங்கிழைக்கப் போவதாகச் சந்தேகித்ததும் பிரபுக்கள் தங்கள் பாதுகாப்பாளரான காந்தியடிகளிடம் கூறினார்கள். உடனே காந்தி சட்டமறுப்பை நிறுத்தி அவ்வாளை உறையில் போட்டுவிட்டார். இப்பதினைந்து வருடங்களில் மூன்று நான்குமுறை, பதினாயிரக்கணக்கான ஆண், பெண்கள் செய்த தியாகம் (முட்டாள் தனமானது) பயனற்றது. இத்தனை லெக்ஷம் சட்ட மறுப்புக்காரர்களில் ஒருவர்கூட அதன் தத்துவத்தை உணரவில்லை என்றும் கர்வமாகக் கூறுகிறார். முதலில் தானே சட்டமறுப்பை கண்டுபிடித்ததால் தானே அதற்கு சர்வாதிகாரி, என்னைவிட நன்கு தெரிந்தவர் எவருமில்லை என்கிறார்.

ஹிந்துமதம் சொல்லுகிறபடி ஒருவன் செய்து மோக்ஷத்துக்குப் போகிறேன் என்பதற்கும், ஒரு வருடம் சந்தியாவந்தனம் செய்தால் பார்ப்பான் உயிருடன் ஆகாயத்தில் பறக்கலாம் என்பதற்கும், சட்டமறுப்புக்கு நானே சிருஷ்டிகர்த்தா அதை என்ன செய்வது என்பது எனக்கு மட்டுந்தான் தெரியும் என்று காந்தி சொல்லுவதற்கும் நமக்கு வித்தியாசம் தெரியவில்லை. எதிர்காலத்தில் அந்தராத்மா, காந்திக்கு சொல்லப்போவது இன்னும் என்னென்ன என்பது எவருக்கு தெரியும்?

ராயல் கமிஷனாக இருந்து சைமன் கமிஷனாக பெயர்பெற்ற கூட்டத்தில் இந்தியநாட்டு முதலாளி காங்கிரஸ்காரர்களுக்கு இடமில்லை என்று சட்ட மறுப்பு தோன்றியதும், சட்டமறுப்பு செய்ததும், அப்பொழுது தோல்வியை ஒப்புக்கொள்ள பயந்து காந்தி - இர்வின் ஒப்பந்தம் என்ற ஏமாற்று நாடகம் நடந்தது. வட்டமேஜை மகாநாட்டுக்கு காந்தி சென்றும் ஹிந்துமத காங்கிரஸ் பிரபுக்கள் சொல்வதை சர்க்கார் கேட்கவில்லை; இந்நாட்டு எட்டுக்கோடி முஸ்லீம்களுக்கும் 8-கோடி ஆதிதிராவிடர்களுக்கும் சர்க்கார் இரக்கம் காட்டுவதை கண்டித்தும் பயனில்லாதுபோனதால், மீண்டும் சட்ட மறுப்புப்போர் தொடங்கப்பட்டது. இதை சட்டைசெய்யாது முதன் மந்திரியின் அறிக்கை வெளிவந்ததும் ஆப்பை பிடுங்கிய குரங்கின் கதையை காந்தி அடைந்தார். ஹரிஜனம் பட்டினி என்ற பெயரால் பரிதாபத்துக்குறிய ஆதிதிராவிடர்களெனப் பட்டவர்கள் ஏமாற்றப்பட்டார்கள். பழிக்கு பயந்து முதன் மந்திரியும் காந்தி உயிரைக் காப்பாற்றினார். மிகுதியுள்ள 8 கோடி முஸ்லீம்களை மிரட்ட வழி இல்லை. கிடைத்தவரை கிட்டவிருக்கும் சீர்திருத்தத்தில் முஸ்லீம்கள் வெற்றியடையாதிருக்க வழி என்னவென்று பார்த்தார்கள். இன்றுள்ள நிலைமைக்கு சட்டசபையைக் கைப்பற்றி அதன் பேரால் ஏதாவது செய்து பார்க்கலாமா? என்பது தேசீயப் புலிகளின் திட்டமாகும். இப்புரட்டுகளுக்கு ராஜதந்திர முறையில் காந்தியடிகள் தனி சட்ட மறுப்பையும் நிறுத்தி விட்டார் என்பதேயாகும். அகில இந்திய வர்த்தக சம்மேளனத்தில் தலைவர் தோழர்களின் ரஞ்சன் சர்க்கார் தமது தலைமைப் பிரசங்கத்தில் சட்ட மறுப்பு இயக்கத்தைச் சேர்ந்த ஒரு சாறார் அவசியமானால் ஓர் சமுதாய பொருளாதார புரட்சியை ஏற்படுத்தவே, சட்ட மறுப்பை முதல்படியாக உபயோகிக்க முயலுவதாகத் தெரிகிறது. பலாபலன்களை கவனியாது ஒரே பிடிவாதமுள்ள நோக்கம் கொண்டவர்களின் கைக்கு இவ்வியக்கம் மீறிவிட்டால் நாம் என்ன செய்வது என்பது பற்றியே சற்று ஆலோசிக்க வேண்டும்? அவ்வித நிலைமை ஏற்படாது என்று யார்தான் கூற முடியும் என்று கேட்கிறார் என்று கூறியதற்கும், காந்தி சட்ட மறுப்பை நிறுத்தியதற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு.

மதன் மோகன் மாளவியாவோ, வைசிராய் பிரபுவை மீண்டும் கண்டு சமூகத் தீர்ப்பை மாற்றவேண்டுமென்று கேட்கப்போகிறார். பயனில்லையானால் லண்டனுக்கும் சென்று கிளர்ச்சி செய்யப்போகிறார். நமது காந்தி பாபுவோ அந்தராத்மா கட்டளைப்படி சட்ட மறுப்பை நிறுத்தி விட்டதாக அறிக்கை போட்டு விட்டார். உலக சரித்திரத்தில் எந்த விடுதலை வீரனும் கடவுளுடன் பேச்சு வார்த்தை வைத்துக்கொண்டு அடிக்கடி சம்பாஷித்து நாட்டை காப்பாற்றியதாக நமக்குத் தெரியவில்லை. காந்தி இன்னமும் இந்நாட்டு மக்களை மில்காரர்களின் கொடுமைக்கும், பிர்லாக்களும், ஐயங்கார்களும், ஆச்சார்யார்களும் ஏமாற்றி மிதித்து கொழுத்து திரிய வழிதேடவே தனது கடவுள் பல்லவியைப் பாடுகிறார். இந்நாட்டு லெக்ஷக்கணக்கான மக்களின் கஷ்டத்தையும், தியாகத்தையும் வியர்த்தமாக்கி, கஷ்டப்பட்டவர்களின், கஷ்டப்படுபவர்களின் பெரும் கூட்டம் அதன் பலனை அனுபவிக்காதபடி செய்வதைக்கண்டு நாம் கவலையடையாவிட்டாலும், இன்னமும் மதத்தின் பேரால் மக்களை மூடராக்க எண்ணுவதைப்பார்க்கும்போது வாளாய் இருப்பதற்கில்லை. காந்தி சிஷ்யர்கள் பலவித எண்ணங்களை மனதில் வைத்துக்கொண்டு சட்ட மறுப்பை நிறுத்து மறிக்கையை வரவேற்றபோதிலும், அதற்கு நியாயமற்ற காரணங்கள் காட்டுவதைக் கண்டிக்க தைரியமில்லாது இருந்த போதிலும் தோழர் நரிமன் போன்ற இரண்டொருவர் செய்தி நமக்கு ஆறுதலைக் கொடுக்கிறது.

சத்தியாக்கிரகமென்பது பரமார்த்திக முறையில் கையாளப்படவேண்டிய ஆயுதமென்றும், சுயராஜ்யத்திற்காக இனி யாரும் கையாளக்கூடாதென்று


RangaRakes tamilnavarasam.com

காந்தி சொல்கிறார். காங்கிரசானது சுயராஜ்யத்திற்காக ஏற்பட்டது. பரமார்த்திகத் துறையில் சில பரீட்சைகள் செய்து பார்ப்பதற்குக் காங்கிரஸ் சபை ஏற்படவில்லை... காந்தியின் பேச்சுகளும் அறிக்கைகளும் சில சமயங்களில் சரியாக அர்த்தம் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கிறது. தமக்குள்ளாகவே சிந்தனை செய்து பார்த்திலும், பகவானைப் பிரார்த்தித்ததின் மூலமும் ஒரு முடிவுக்கு வந்ததாகச் சொல்கிறார்.

தோழர் புலாபாய் தேசாய்:- மகாத்மாவின் எல்லாச் செயல்களுக்கும் ஆத்மார்த்த ஆதாரமிருக்கிறதென்று ஒப்புக்கொள்ள மனமில்லாதவர்களுக்கு அறிக்கையின் கருத்தை உணர்ந்துகொள்வது கஷ்டம்.

இத்தகையவர் இரண்டொருவர் இருந்தபோதிலும், எதிர்காலம் சிறிது நம்பிக்கையை தமக்கு ஊட்டுகிறது. முஸ்லீம்கள் தங்களை பின்பற்றுவதாக கூறுவதற்கே வடநாட்டு சத்திய மூர்த்தியான டாக்டர் அன்சாரியை சுயராஜ்யக் கக்ஷிக்காரர்கள் தலைவராகப் பிடித்துப்போட்டு இருக்கிறார்கள். மீண்டும் முஸ்லீம்களுடன் சமாதான உடன்படிக்கை செய்யப்போவதாக தேசியவாதிகள் கூறுகிறார்கள்.

இதில் ஜனாப் ஜின்னாவோ, அவர்தம் சகாக்களோ - ஏமாறுவார்கள் என்று நாம் கருதவில்லை. அடுத்த மே மீ முதல் தேதியில் அ.இ.கா. கமிட்டி கூடப்போகிறது என்கிறார்கள். அதன் முடிவு என்னவென்பதையும் அதற்குள் அத்தராத்மாக்கள் சொல்லுவதையும் நாம் அலுப்புறாது பார்ப்போமாக!

தேசீயப் புலிகளின் பரிபூரண சுயேச்சைப் புரட்டும், பிரட்டானியம் நீங்கிய சுயாக்ஷிப் புரட்டும் வெளிப்பட்டுவிட்டது. சட்டசபைப் பிரவேசமே இவர்கள் லெக்ஷிய மென்பதாகிவிட்டது. இவர்கள் சட்டசபையில் புகுந்தால் வெட்டி முறிக்கப்போவது என்னவோ. ஆயினும் காங்கிரஸ் தடபுடலில் சிக்காது சர்க்கார் சற்று புத்திசாலித்தனமாக இந்திய சட்டசபைத் தேர்தலை இன்னும் ஓர் ஆண்டு ஒத்திவைத்துவிட்டால் லார்டுவில்லிங்டன் மிகுந்த ராஜதந்திரியென்பது நிருபணமாகிவிடும். காந்தி அந்தராத்மா, தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால் பின் சொல்லப்போவது என்ன? ஒத்துழைப்பா? ஒத்துழையாமையா? காந்தி தன் சிஷ்யர்கள்கூட ஒத்துழையாமை செய்வதைத்தான் பார்க்கமுடியும்.

**- நமது அரசியல் நிபுணர்**

**புரட்சி - கட்டுரை - 15.04.1934**



# நல்ல சந்தர்ப்பம்

இந்திய நாட்டின் பரிபூரண விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட காந்தியின் இயக்கங்கள் ஒரு வழியாய் முடிவடைந்துவிட்டன. காந்தியும் அவரது சகாக்களும் பத்து வருடங்களுக்குப் பிறகாவது தங்களது தப்பான வழியை உணர்ந்து தங்கள் போக்கைத் திருப்பியது மிகவும் போற்றத்தக்கதே. காந்தியின் உப்பு சத்தியாக்கிரக திருவிளையாடல்களின் பயனாய் ஏற்பட்ட அடக்கு முறையால் இந்திய அரசியல் விடுதலைக் கிளர்ச்சிகள் ஒரு வகையில் ஸ்தம்பித்துப் போய்விட்டனவென்பதைக் காந்தியே ஒப்புக் கொள்வார். இந்தப் பரிதாபகரமான நிலையிலிருந்து தப்பவும் ''இந்து மதம்'' என்ற போர்வையில் பார்ப்பனர்கள் தங்களது ஆதிக்கத்தை மீண்டும் நடத்தவும் ஒரு வழியையும், சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்து வந்தனர் நமது தேசீயவாதிகள். இவர்களது திக்கற்ற நிலையை நன்குணர்ந்த லார்டு வெல்லிங்டன் இந்திய சட்டசபையைக் கலைத்து மறு தேர்தல் நடத்தப் போவதாக ஒரு நாடகம் நடித்தார். திக்கு முக்காடி இறக்குந் தருவாயில் தண்ணீரில் தவிக்குமொருவன் தனதெதிரில் வரும் ஒரு துரும்பைக்கூட கைப்பற்றித் தனது உயிரை நிலைக்க வைக்கப் பார்ப்பது சகஜமே. எனவே இந்த நிலையில் காந்தியார், தான் இந்த நாட்டின் அரசியல் இயக்க சர்வாதிகாரி என்று தன்னைத் தானே விளம்பரப்படுத்திக் கொண்டு தனது சட்ட மறுப்பியக்கத்தை வாபீஸ் வாங்கிக் கொள்வதாகவும், சுயராஜ்யக் கட்சி என்ற பழைய பார்ப்பனக் கூட்டத்திற்கு சட்ட ரீதியாக அரசியல் கிளர்ச்சி நடத்த இடந்தருவதாகவும் வெளியிட்டுத் தனது கௌரவத்தை நிலை நிறுத்திக் கொள்ள எத்தனித்தார். சமயத்தை எதிர்பார்த்து வந்த பார்ப்பனர்களும் அகில உலக ராஜீய நாடக நடிகரான கனம் சாஸ்திரியார் முதல் தேவதா கைங்கர்யப் பிரியர் சத்தியமூர்த்தி வரையில் ஒரே கூட்டமாக திடீரெனக் கிளம்பி இந்த நாட்டை ஒரு கலக்கு கலக்க எத்தனித்துள்ளனர்.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் நாட்டின் நிலையையும், நாட்டு மக்களுக்கு இவர்களது எத்தனங்களால் ஏற்படுத்துவதாகப் பிரகடனம் செய்யும் பரிகாரங்களையும் சமதர்மிகளாகிய நாம் கவனிக்குமளவில் இந்த சில்லரைச் சீர்திருத்தங்களால் எவ்வித பயனுமில்லையென்று கருதுவதுடன் இந்த நல்ல சந்தர்ப்பத்தை இந்தப் பிற்போக்காளரது திட்டங்களால் பொது ஜனங்களுக்கு நன்மை உண்டாவதைவிட தீமையே அதிகரிக்குமென்பதையும் பகிரங்கப்படுத்த உபயோகித்துக் கொள்ள வேண்டியது மிக அவசியமெனக் கருதுகிறோம்.

**புரட்சி - கட்டுரை - 22.04.1934**



# தோழர் ஜவஹர்லாலும் சர்.சி.பி.யும்

சர்.சி.பி. ராமசாமி அய்யர் ஆதியில் ஆடிய ஆட்டங்களும், அவர் பிரபல தேசீயவாதியாக விளங்கிய கதையும், ஹோம் ரூல் கிளர்ச்சிக்காரராக விளங்கிய கதையும், பனகால் அரசர் அவர்களால் அடக்கி விடப்பட்ட கதையும் அகில உலகம் அறிந்த விஷயம்.

சர்.சி.பி. சென்னை மயிலாப்பூர் வாசியாக கருதப்பட்ட போதிலும் தஞ்சை ஜில்லாவிலுள்ள திருப்பனந்தாள் மடத்து பழைய ஏஜண்ட் ராமசுவாமி அய்யரின் பௌத்திரர் என்ற முறையில் தஞ்சை ஜில்லாவாசிதான் என்பதை நாம் அறிவோம். இந்தக் கனவான் அரசியல் உலகில் எந்தப் படித்தரத்தில் வைக்கப்பட்டிருக்கிறார் என்பது பொது ஜனங்களுக்கு நன்கு தெரியும். இப்பெருமான் காந்தியின் ஒத்துழையாமை முழு வேகமாய் இருந்து சட்டசபைகளுக்கு அபேக்ஷகர்களாக நிற்பதிற்குக் கூட ஆட்கள் கிடைக்காத காலத்தில், பல்லாரி ஜில்லாவின் பிரதிநிதியாக இந்திய சட்டசபைக்குச் சென்று காந்தியை விடவேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சினை ஓட்டுக்கு விடப்பட்ட காலத்தில், நடுநிலைமை வகித்து உலக மக்களின் முழு கவனத்தையும் பெற்ற ராவ் பகதூர் ஒருவர் தலைமையில் இந்திய அரசியல் நிலையைப் பற்றி பேச முற்பட்டது வெகு பொருத்தமானதென்றே கருதுகிறோம். தலைமை வகித்த ராவ்பகதூர் சுப்பிரமணிய பந்துலு அவர்களோ, பிரசங்கம் செய்த சர்.சி.பி. ராமசாமி ஐயரோ நாட்டிற்குச் செய்துள்ள தொண்டினையும், தோழர் ஜவகர்லால் அவர்கள் செய்துள்ள தொண்டினையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானால், தோழர் ஜவகர் தலைசிறந்து விளங்குவார். தோழர் ஜவகர்லால் முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளை நாட்டில் பரப்புவதாக விஷமப் பிரசாரம் செய்யும் ஐயர், ஜவகர்லால் நேரு அவர்களின் பொது வுடமைக் கொள்கையைக் கண்டு கொண்ட பீதியின் காரணமாகவே எழுந்த பிதற்றலாகக் கருதுகிறோம்.

எனினும் தோழர் ஜவகர், காந்தியின் கீழ் நின்று சமதர்மத் திட்டங்களை, எவ்வளவு உயர்த்தி கூப்பாடு போட்டாலும் செயலளவில் பொது ஜனங்களுக்குப் பயன்படாது என நிச்சயமாக நாம் நன்கு அறிந்தபோதிலும், நிச்சயமாக இந்நாட்டில் செய்யப்பட வேண்டிய ஒரு முக்கிய வேலையை தைரியமாய் வெளிப்படுத்திய காங்கிரஸ்காரர் என்ற முறையில் தோழர்



RangaRakes tamilnavarasam.com

ஜவகர்லால் அவர்களை போற்றுகிறோம். சாதி சமய சங்கடங்கள் அழிக்கப்பட்டு, ஏழை பணக்காரன் என்ற வித்தியாசங்களுக்கு அடிப்படையாக இருந்துவரும் பொருளாதார அமைப்புகள் மாற்றப்பட வேண்டிய அவசியத்தை வற்புறுத்திய தோழர் ஜவஹர்லால் நேருவை சமஸ்தானாதிபதிகளின் அறியாமையை ஆயுதமாக உபயோகித்து சுகபோகங்களை அனுபவித்து வரும் ஐயர் கூட்டத்தார் வெறுப்பது சகஜமே.

**புரட்சி - செய்தி விளக்கம் - 22.04.1934**



# சீர்திருத்தக் காந்தி

சமரஸமே காந்தியாரின் பாலிஸி. காந்தியாரை சர்வாதிகாரியாகக் கொண்டு காங்கிரஸ் பெருமையடித்துக் கொள்கிறது. காந்தியாரின் தலைமையில் காங்கிரஸ் விவசாயிக்கும் ஜமீன்தாருக்கும், தொழிலாளிக்கும், முதலாளிக்கும், ஒடுக்கப்பட்டவனுக்கும், உயர்ஜாதிக்காரனுக்கும் ஒரே சமயத்தில் ஒத்தாசை செய்ய முயல்கிறது. தற்கால பொருளாதார, சமூக ஸ்தாபனங்களை மாற்றியமைக்காது விவசாயிக்கும், தொழிலாளிக்கும் ஒடுக்கப்பட்டவனுக்கும் நீதி செலுத்த முடியுமென்று காந்தியார் கனவு காண்கிறார். ஏன்? அவர் சீர்திருத்தவாதி; சமதர்மியல்ல.

காந்தியாரின் சீர்திருத்தம் பலிக்காது. அவரைப் போல் முயன்ற அநேகர் முடிவில் தோல்வியடைந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக நடப்பது உலகத்தில் முடியாத காரியம். காந்தியார் முடியாத காரியத்தை முடிக்க முயன்று காலத்தை வியர்த்தமாக்குகிறார். ‘எலியையும் பூனையையும்’ ‘ஆட்டுக் குட்டியையும் ஓநாயையும், ‘தவளையையும் பாம்பையும்’ ஒரே பொழுதில் ஆதரிக்க முடியாது. முதலாளி, ஜமீன்தார், உயர் ஜாதிக்காரர்களைப் பூரணமாய் ஆமோதிக்கவும் காந்தியாருக்கு முடியவில்லை. அவர்களை எதிர்த்து உழைப்பாளிகளோடு சேர்ந்து கொள்ளவும் காந்தியாருக்குத் துணிச்சல் இல்லை. முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் ஊஞ்சலாடுகிறார். வாலிபர்களே! சீர்திருத்தக் காந்தியின் மாய வலையிலிருந்து வெளிவந்து சமதர்மத் தொண்டாற்றுங்கள்.

**புரட்சி - கட்டுரை - 22.04.1934**



RangaRakes tamilnavarasam.com

# திருச்சி தேவருக்கு துணை

திருச்சி முனிசிபல் சபைத் தலைவரும் நீலகிரி முனிசிபல் சபைத் தலைவரும் இன்று சர்க்கார் உத்திரவை சந்தித்து இருக்கிறார்கள். நீலகிரி முனிசிபல் சபைத் தலைவரை, அவர் ஏன் ராஜினாமா செய்யக் கூடாதென்பதற்கு சரியான காரணம் காட்டுமாறு நமது மாகாண முதல் மந்திரியான கனம் பொப்பிலி கேட்டு இருக்கிறார். இவ்விதம் கேட்பது தப்பு என்று 'ஹிந்து'கூட கோபித்துக் கொள்கிறது. இதைப் போன்றுதான் திருச்சி நகரசபை தலைவரை கேட்டதும் தப்பு என்று நாம் சொல்கிறோம்.

திருச்சி, நீலகிரி இவ்விரண்டு நகரசபைத் தலைவர்களையும் நாமும் தமிழ் நாட்டாரும் நன்கு அறிவோம். இவர்களை இவ்விதம் விலக்க காரணம் கேட்பதும் நியாயமானது என்று நமக்கு தோன்றவில்லை. நியாயமல்ல என்பதுடன் இவ்வித உத்திரவுகளும் மே.த.க. தலையீட்டினாலாவது உடனே வாபீஸ் வாங்கிக் கொள்ளப்படுமென்று நம்புகிறோம். மே.த.க. முன்பு மதுரை ஜில்லா போர்டில் ஜாடையாக புத்தி மதி கூறி சமரசம் உண்டாக்கினது போல் இதனையும் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

**நடப்பு**

முனிசிபல் சபை சம்பந்தமாக கோர்ட்டுகளில் வந்த வழக்குகள் பலதையும், முனிசிபல் சபை நடவடிக்கைக் காலங்களில் அங்கத்தினர்களுக்குள் நடக்கும் வாக்கு வாதங்களையும் தொடர்ந்து படிப்பவர்கள் திருச்சி, நீலகிரி முனிசிபால்டிகளைப் பற்றி தவறாக எண்ணமாட்டார்கள்.

முனிசிபல் மோட்டார்களுக்கு எண்ணை வாங்கியதாக கணக்கு காட்டிவிட்டு, காலி பெட்ரோல் டின் வாங்கிய எண்ணை அளவுக்கு இல்லையே என்று கேட்கப்பட்ட சபைத் தலைவர், முனிசிபல் எருக்கள் முழுவதையும் தன் வீட்டு நிலத்தில் கொட்டிவிட்டுக் குப்பைகளை ஏன் குத்தகைக்கு விடக்கூடாது என்று கேட்கப்பட்ட காலத்தில் கையை விரித்த முனிசிபல் சபைத் தலைவர்! முனிசிபல் செலவின்படி சேர்மெனால் கையொப்பமிட்டு கிழிக்கப்பட்டு செக்கானது பேங்கில் மாற்றப்பட்டு அச்செலவினம் எங்கு போக வேண்டுமோ அங்கு போகாததால், பாங்கிகாரன் முனிசிபல் சபைக்கு லாயர் நோட்டீஸ் கொடுத்ததும் அதைப் பற்றி கேள்வி கேட்டதும், பேந்த பேந்த விழித்த தலைவர், இதைப் போன்ற வேடிக்கை விநோத நகர சபை தலைவர்கள் நமது மாகாண முனிசிபால்டிகளில் பலர் இருந்தார்கள்; இப்பவும் இருக்கிறார்கள். இவர்களில் எந்த பிரிவையும் சேர்ந்தவர்கள் திருச்சி, நீலகிரி நகரசபைத் தலைவர்கள் அல்ல. அவ்விதம் சர்க்கார் உத்திரவிலும் இல்லை. ஸ்தல அதிகாரிக்கும் ஸ்தல ஸ்தாபன அதிகாரிக்கும் வந்த சண்டையின் சப்தம் போலவே, உத்திரவின் தொனி தொனிக்கிறது. மிக அற்பமான பிரச்சினையில் முதலில் வருத்தம் தோன்ற ஆரம்பித்திருக்கிறது.





தண்ணீர் சப்ளை செய்ய வேண்டிய எந்திரம் எதெது, எந்த குழாய் வழியாக நகரத்துக்குள் தண்ணீர் வந்தது. இஞ்சினீர் சூபரவைசர் இவர்களில் யார் யார் வேலை பார்க்கலாம் என்பது போன்ற மிக அற்பமான பிரச்சினையிலிருந்து பிறந்த புழுவானது நாக்கு பூச்சியாகி, பல்லியாகி, ஓணானாகி, உடும்பாகி, பாம்பாகி நல்ல பாம்பு ஆச்சப்பா என்ற கதையாக சேர்மெனை ஏன் விலக்கக் கூடாது என்று ஜி.ஓ. கேட்கிறது.

பல்லியாய் இருக்கும் போது அல்லது ஓணானாக மாறின போது நமது கனம் முதல் மந்திரியும் முனிசிபல் சபை முக்கியஸ்தர்களும் சந்தித்து கலந்து பேசி இருந்தால், இன்று பாம்பாக மாற இடமிருந்திருந்திருக்க முடியாமல் போயிருக்கும். போனது போச்சு, சென்னை சர்க்கார் முக்கியஸ்தர்களும் சட்டப்படிதான் போவதாக எண்ணி நடந்து இருக்கிறார்கள். இரு நகரசபை தலைவர்களும் சட்ட மீறுதலுக்கு ஆளாகாதுதான் நடந்து இருக்கிறார்கள். முடிவிலோ சர்க்கார் அவர்களுக்குள்ள, அதிகார தோரணையில் எதேச்சாதிகாரமாக நடந்துவிட்டார்கள்.

இதை அவ்விரு நகர மகா ஜனங்களும். தமிழ்நாட்டில், அவ்விரு சபைத் தலைவர்களின் விரோதிகளும்கூட ஒப்புக் கொள்கிறார்கள். இப்பயமுருத்தல் அனாவசியம். இனியும் இக்கடுமையான நிலை, மிகக் கடுமையாகக் கூடாது என்று ஆசைப்படுவதுடன் விரைவில் நல்ல செய்தி கிட்டுமென்பதை எதிர்பார்க்கிறோம்!

பார்ப்பான்தான் உத்தியோகத்துக்கு லாயக்கானவன், பார்ப்பன கவுன்சிலர் ஜகாவாக இருக்ககூடாது, எப்படியும் பார்ப்பான் அண்டிக் கெடுப்பான் என்று சுயமரியாதைக்காரன் சொல்லும் போது சீறும் மேதாவிகளே மு. தலைவர்களே! இச்சம்பவங்களை உங்களுக்காகவே எடுத்துக் காட்டுகிறோம். இவ்விரு தலைவர்கள் மு.ச. இருந்து விலகினாலும் இவர்கள் நகரத்துக்கு இவர்கள்தான் தலைவர்கள் என்பதை சர்.சி.பி.யோ, சிங்கமய்யங்காரோ, மூர்த்தியோ மறுக்க முடியாது. மறுத்து வால் ஆட்ட முடியாது என்றாலும், பார்ப்பனீயம் எந்தெந்த விதமெல்லாம் பார்ப்பனர் அல்லாதாரை அல்லல் படுத்துகிறது என்று பார்த்தீர்களா?

RangaRakes

tamilnavarasam.com

தலைவரே! உமது செய்கை நியாயமானது, நீவிர் தஞ்சையில் செய்த தியாகத்துக்கு இன்று பலன் அனுபவிக்கிறீர். நல்ல பாம்புக்குப் பால் வார்த்தாலும், அது நல்ல விஷத்தைத் தான் கக்கும். இதைக் கண்டு திடுக்கிடுதல் வீரன் செய்கையன்று. உமது உதவியையும், துணையையும் நொடிக்குள் மறந்து உமது நியாயமான செய்கை மீது குற்றம் கற்பித்து விடும்படி முதன் மந்திரியை தூண்டியது எது? அவரின் செல்வச் செருக்கும் அர்ப்பனுக்கு வந்த வாழ்வுமா? அல்ல. திருச்சியில் உள்ள சில ஐயர், ஐயங்கார் இவர்களின் உறவு அவசியமென்ற கனம் மந்திரியின் எண்ணமே உம்மை ஏன் ராஜீனாமா செய்யக்கூடாதென்று கேட்கச் செய்தது வாஸ்தவம். தேவரே நீவிர் தலை நிமிர்ந்து உம்மை இழிவுபடுத்த எண்ணிய மந்திரியை, மாஜி மந்திரியாக ஆகும்படி செய்ய முயல்வீரா? அது உம்மால் முடியாததா?

**புரட்சி - கட்டுரை - 22.04.1934**



# நமது கடமை

உலக முழுமையும், அந்தந்த நாடுகளில் அந்தந்த கக்ஷிகள் அரசியலைப் பிடித்து அந்தந்த தேசவாசிகளுக்கு நன்மை புரிகின்றோமென்று சொல்லிக் கொண்டு, பற்பல துவாராக்களில் உழைத்து வருகின்றன. நமது ஆங்கில நாட்டின் நாஷனலிஸ்ட் கட்சி, அதாவது தேசீயக் கக்ஷி என்று வழங்கும் ஒரு சார்பார், தோழர் ராம்சே மக்டொனால்டின் தலைமையின்கீழ் ஆங்கில நாட்டு அரசியலை நடத்தி வருகின்றார்கள். இவர்களுடைய முக்கியப் போக்கு என்னவெனில், இருக்கும் சமூகதிட்டத்தை வைத்துக் கொண்டு அங்கோர் சீர்திருத்தம், இங்கோர் சீர்திருத்தத்தைக் காட்டி, ஆண்டு வருவதாகும். பிரான்ஸ் நாட்டிலும், பழைய சேம்பர் ஆவ் டிப்புடிஸ் என்ற பழைய பார்லிமெண்டை வைத்துக் கொண்டு முதலாளி, சிறு முதலாளி இயக்கங்களைப் பாதுகாத்து வருகின்றனர். ஜர்மனியில் ஏகாதிபத்திய கெய்சர் ஆட்சியை உடைத்தும், மழை நின்றும் தூவானம் நிற்கவில்லை என்பது போல் ஜெர்மனியைப் பிடித்த ''சனியன்'' ஒழியவில்லை. அவ்வுலகில், பெரும்பான்மையோர் தொழிலாளர், விவசாயிகளாக விருக்கின்றனர். ஏகாதிபத்திய அரசில் பட்டு வந்த கஷ்டங்களுக்கு விமோசனமின்றி அத்தேச வாசிகள் தற்போது பாசிஸ்டிகள் கையில் அகப்பட்டுக் கொண்டு வருந்துகின்றனர். அமெரிக்க நாடு டிமோக்கிராட்டிக்களென்றும், ரிப்பப்ளிக்கர்களென்றும் இவ்விரு கட்சிகளின் நடுவில் தவித்து தியங்குங்காலை, ரூஸ்வெல்ட் என்னும் பெரியோர் சோஷலிசத்தை முதலாளித் திட்டத்துக்குள் நுழைந்து பார்க்கலாமாவென்று பரீக்ஷித்து வருகின்றார். மற்ற அமெரிக்க ஐரோப்பிய சிற்றரரசுகளிலும் மேல் போன்ற பெரிய அரசுகள் தட்டித் தடுமாறிக் கொண்டு வருவதைப்போல் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. இந்த ராஜ்யங்களில் ஒன்றிலேனும், சாந்தமாகிலும், சமாதானமாகிலும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஐரோப்பிய, அமெரிக்க உலக மெங்கும் குழப்பங்களே அதிகரிக்கின்றன. கஷ்டங்களும் அதிகரிக்கின்றன.

ஐரோப்பா, அமெரிக்க உலகம் நிலை குலைந்து வருந்தி வருங்காலை, ஏனைய நாடுகளில் அதனினும் பதின்மடங்கு கேடாயிருப்பதைக் காணலாம். ஜனப்பெருக்கிலும், தரித்திரத்திலும் உயர்ந்த நாடு சீன தேசமெனலாம். அதில் 40 கோடி மக்கள் இரண்டு, மூன்று



RangaRakes tamilnavarasam.com

தளகர்த்தராட்சியில் கட்டுண்டு கலகங்களிலேயே மூழ்கிக் கிடக்கின்றனர். அந்நிய அரசுகளால் அந்நாட்டு கக்ஷிகள் தூண்டப்பட்டு, முன்னுக்கு போக வொட்டாமல் தடுக்கப்பட்டு வருகின்றனர். அந்நாட்டு தேசீயக் கக்ஷியார் மாலுமியற்ற கப்பலைப்போல் தட்டுத் தடுமாறி நிற்கின்றனர். இன்னது வேண்டுமென்ற துணிவும் அற்று, நாற்பது கோடி மக்கள் பற்றில்லாத வாழ்க்கையில் மிதந்து வருகின்றனர். விளையும் நிலங்கள் தேசமுழுதும் நிறைந்திருந்தும் உலக நதிகளுக்கெல்லாம் பெரிய நதிகள் நிலங்களை நீர்ப்பாய்ச்ச செய்து வந்தும் அடுத்தடுத்து பஞ்சங்களால் கோடிக்கணக்கான மக்கள் பசியால் சாகின்றனர். இந்த பயங்கரமான துர்பாக்கியத்தில் சீனர் இருந்துவந்தும், முதலாளி ஆதிக்கத்தில் கட்டுண்ட ஜப்பான் தேசம், அதன் உள் நாட்டுக் குழப்பத்தையும் வறுமையையும் கவனியாது, சீன தேசத்தைப் படையெடுத்து, சென்னை ராஜதானிக்கொப்பான நீர்வளம், நிலவளம் பொருந்திய மஞ்சூரிய நாட்டைப் பிடித்துக் கொண்டது. தன்னுடைய நாட்டில் உண்டாயிருக்கும் அதிருப்திக்கு பரிகாரம் ஒன்றும் தேடாது, அயல்நாடுகளைப் பிடிக்கும் வண்ணம் தனது போர்த்தலத்தை அதிகரித்துக் கொண்டே வருகிறது. உலக சமாதானத்தை உருவமாக எடுத்திருக்கும் சோவியத் நிலங்களை அபகரிக்கவும் ஜப்பான் பார்க்கிறது. இத்யாதி குழப்பத்தில் உலக பேரரசுகளும் சிற்றரசுகளும் தடுமாறிக் கொண்டிருக்க, நமது இந்திய தேசத்தின் நிலைமை என்ன? இந்த வேதமோதும் நாடாகிலும் சுகப்பட்டு வாழ்கின்றதா?

''சுயராஜ்யம் யாருக்கு?'' என்ற புத்தகத்தின் முதல் பாகத்தை வாசித்தவர்கள், நமது இந்திய நாட்டின் தற்கால நிலைமையை எளிதில் உணர்ந்திருக்கலாம். பகிர் முகத்தில் விசேஷமொன்று மில்லாமையாகத் தோன்றினபோதிலும் அந்தர் முகத்தில் அதிர்ப்தியே நிறைந்துள்ளது. ரயில்கள் ஓடுகின்றன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோயில்களுக்கும், குளங்களுக்கும் யாத்திரை செல்கின்றனர். தேரும், திருவிழாக்களும் கோவில்களில் குறைவில்லை. சர்க்கார் வரி வசூலாகி வருகின்றது. சேனை, சிப்பந்திகளும், போலீசும், தத்தம் காபந்துகளைச் செய்து வருகின்றனர். இதன் மத்தியில் மக்கள் வாழ்க்கை பரிதாபகரமாக இருந்து வருவது பார்வையிலேயே தோன்றும். இந்த உள்நாட்டு மக்களின் தீமையை பரிகரிக்க இதுவரை ஆண்டுவந்த அரசியல் திட்டங்களுக்குப் பதிலாக புதியதோர் திட்டம் வருகையை யாவரும் எதிர்பார்க்கின்றார்கள்.

இந்த திட்டமாவதென்ன? அரசியல் மத்திய சபையில், 100-க்கு 200 பேர் அங்கத்தினர் நியமிக்கப்படப்போகின்றனர். இவர்களை நியமிக்க முப்பது லட்சம் வாக்காளர்கட்குப் பதில், மூன்று கோடி வாக்காளர்கள் வரப்போகின்றார்கள். நிலம், நீர், வீடுவாசல் இல்லாத இருபது கோடி மக்களுக்கு ஓட்டுறிமை இல்லை. மகமதியர்களுக்குச் சில தனிப்பிரதிநிதிகளும், இந்துக்களுக்குச் சில தனிப் பிரதிநிதிகளும் சிற்சில மாகாணங்களில் கொடுக்கப்படுகின்றன. முதலாளி வகுப்பைச் சேர்ந்த நிலச்சுவான்தார்களும், வர்த்தகர்களும் சட்டசபைகளில் நிறைந்திருக்கப் போகின்றார்கள். தனிச் சொத்துரிமை, மதப் பாதுகாப்பு, ஜாதிக்காதரவு புதிய திட்டத்திலும் காக்கப்படப் போகின்றன. இனி தேச மக்களுக்கு என்ன வேண்டும்? இந்த பாதுகாப்புகளோடு ஐந்நூற்றம்பத்தாறு சிற்றரசுகளும் ஏகாதிபத்திய ஆட்சியில் கலந்து கொள்ள போகின்றனர். இவர்களுடைய நவரத்தினங்களிழைத்த தலைப்பாகைகளும், வயிர முடிகளும், வயிரத் தோடாக்களும், நவரத்தினமிழைத்த கண்டசரங்களும், காதுகளில் ஜொலிக்கும் வயிரக் கடுக்கன்களும் மகத்தான சட்டசபைகளில் ஜொலிக்கப் போகின்றன. இந்தக் காட்சியைக் காணும் முப்பது கோடி மக்களின் பசி ஆறிவிடுமன்றோ? தீரா வியாதிகளும் தீர்ந்து விடுமன்றோ? நாடும், நகரமும், தேசம் முழுமையும் பாலும், தேனும், தினைமாவும் நிறைந்தோடுமன்றோ? இந்த முக்கிய அம்சியங்களை எதிர்த்து முட்டுக் கட்டை போடவோ அல்லது ஒத்துழைக்கவோ, காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சி ''மறு ஜெனன''மெடுத்துள்ளது. லெல்கர்கள், தங்களது சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்துகின்றனர். மூஞ்சேக்களும் இந்து மகாசபைகளை வலுக்கப்பார்க்கின்றார்கள். அரசாங்கமும் இந்தக் கட்சிகளை ஆவலுடன் எதிர்பார்க்கப் போகின்றது. இதன் மத்தியில் நமது அதாவது சோஷியலிஸ்டுகள் வேலை என்ன?

முக்கியமாக நமது பல்வேறுபட்ட, பல பேர்களால் வழங்கப்பட்ட சங்கங்களை ஒன்றுபடுத்த வேண்டும். பலவிதக் கொள்கை களையும் அபிப்பிராயங்களையும் ஒரே முகமாக மாற்றி, தேசத்திலுள்ள மக்களுக்கு உணவும், நிலமும், உலக சமாதானமும் அடைய வேண்டி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் தேட வேண்டும். தற்காலத்திற்கு வேண்டியவை மக்களது உடலும் உயிரும் பொருந்தி வாழவேண்டியதே. இந்தத் தத்துவத்தை உணர்ந்தவர்கள் ஒருவரே. மற்ற எல்லாவிதக் கட்சியினரும் பயனற்ற வியர்த்தமான காரியங்களை மேல் போற்றிக் கொண்டு, அரசாங்கத்தில் நுழைகின்றார்கள். ஜாதி, மதம், பொருள், செல்வம், செல்வாக்கு, சுகபோகம் இவைகளை நாடுகின்றவர்களால் தற்கால அரசுகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் சோசியலிஸ்டு களோவெனில் எது வொழிந்தால் மக்கள் சுகப்படுவார்கள். அவர்களைப் பிடித்தாட்டும் தீவினைகள் ஒழியும்? என்ற மனப்பான்மை மேற்கொண்டவர்கள், இந்த மனப்பான்மையை பெருக்க வைப்பதுதான் நமது முக்கிய கடமை.

**புரட்சி - தலையங்கம் - 22.04.1934**


RangaRakes
tamilnavarasam.com

# மே தின
# விசேஷ அறிக்கை

அடுத்த வாரம் 29- தேதி வெளிவரும் நமது ''புரட்சி''யில் **மே தினம் கொண்டாட வேண்டிய விதம் முதலியன விபரமாக அறிவிக்கப்படும்.**

1. மே மாதம் முதல் தேதி செவ்வாய்க்கிழமையன்று சகல நகரங்களிலும், கிராமங்களிலும் பொதுக்கூட்டங்களிட வேண்டும்.
2. பிற்பகல் அந்தந்த ஊர் சங்கக் காரியாலயங்களிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு பொதுக் கூட்டமிட வேண்டிய இடத்திற்குச் செல்ல வேண்டும்.
3. பொதுக்கூட்டத்தில் உபன்யாச நிகழ்ச்சிகள் நடந்ததும் மே தின அறிக்கை தலைவரால் படிக்கப்பட்டு பொதுக்கூட்டத்தினர் அங்கீகரிக்கச் செய்ய வேண்டும்.
4. நாளது 29-ந் தேதி ''புரட்சி''யிலும் 30-ந் தேதி ''பகுத்தறிவி''லும் மே தின அறிக்கை வெளிவரும்.

புரட்சி - அறிக்கை - 22.04.1934



# மே தினம்

**மே - மாதம் 1 - தேதி தொழிலாளர் பண்டிகை.**

**உலகத் தொழிலாளர் ஒன்றுபடும் நன்னாள்,**

**இந்தியத் தொழிலாளர்களே!**

**மே திருநாள் கொண்டாடத் தவறாதீர்.**

**சுயமரியாதைச் சங்கங்கள்**

**ஒவ்வொன்றும் மே திருநாள் கொண்டாடுமாக!**

புரட்சி - அறிவிப்பு - 22.04.1934



RangaRakes tamilnavarasam.com

# தொழிலாளிக்கு லாபத்தில் பங்கா?

**காந்தி – ஏமாறாதீர்கள்**

பிரஞ்சு இந்தியாவில் கிருஸ்தவர்கள் ஏகபோக உரிமை அநுபவிப்பதை போல, தமிழ்நாட்டில் பார்ப்பனர் ஏக போக உரிமைக்காரர்கள். இவர்களைப் போலவே பம்பாய், ஆமதாபாத் மில்கார முதலாளிகளாகும். இந்திய சர்க்கார் ராணுவத்துக்கும், வெள்ளைக்கார மாஜி உத்தியோகஸ்தர்கள் பென்ஷனுக்கும் பணம் ஒதுக்க ஒருக்கால் மறந்தாலும் மறப்பார்கள். நமது வடநாட்டு மில் முதலாளிகள் தங்கள் சங்கதியை மறப்பதில்லை. கதர் துணிக்கு கதர் பக்தர்கள் வரிப்பணம் கொடுப்பதைப் போலவே மில்கார முதலாளிகளுக்கும், சர்க்காரும் வரி நஷ்டமடைவதைப் போல், மில் துணி, நூல் இவைகளை உபயோகப்படுத்துகிறவர்கள் வரி கொடுக்க வேண்டும்.

சில வருடங்களுக்கு முன்பு ஆமதாபாத் மில் தொழிலாளிகளுக்குள் ஓர் பலமான ஒற்றுமையுண்டாகி பெரும் கிளர்ச்சி செய்து சிறிது பலன் அடைந்தார்கள். இவ்வருடம் ஆமதாபாத் மில் முதலாளிகள் தங்கள் மில்லுகளில் ஆள் குறைப்பு திட்டத்தையும் கூலி குறைவு திட்டத்தையும் கையாள ஆரம்பித்ததும், மில் தொழிலாளிகள் பலமாக விழித்துக் கொண்டார்கள். முன்பு நடந்த ஒப்பந்தத்துக்கு விரோதமாக, மில் முதலாளிகள் செய்வதாக கூறினார்கள். மில் முதலாளிகளோ நஷ்டம் அதிகமாவதால் இம்முறையை கையாள்வதாக கூறினார்கள். இதற்கு தொழிலாள சங்க உத்தியோகஸ்தர்கள் மில்லுகளில் நஷ்டம் என்பது பொய் என்றும், மில் வரவு செலவு கணக்கில் நஷ்டமென்பது உண்மையானால், தாங்கள் இனியும் மில்களில் வேலை செய்து அரை வயிற்று கஞ்சிக்கு கூலி பெற்றுக் கொள்கிறோம், மில் வேலையிலேயே அழுது எலும்பு உருகியவர்கள் எங்கள் கிராமங்களுக்கு செல்கிறோம், கணக்கை காட்டுங்கள் என்று கேட்டார்கள். இதற்கு சரியான நாணயமான பதில் கூறாது, தொழிலாளி மில் கணக்கை பார்க்க கேட்பதா? கொடுப்பதா? அது மில் முதலாளிகளின் சுதந்திரத்தில் தலையிடுவதாகும் என்று வேறு பதில் கூறி காலம் கடத்தி வந்தார்கள்.

## கிறாக்கி

பம்பாய் மாகாணத்தில் பெரிதும் மில் தொழிலாளிகளுக்குள் பொது வேலை நிறுத்தம் நாளை 23-ந் தேதி என்று தெரிந்ததும் இதில் ஆலை தொழிலாளர்களுடன் இவர்கள் சேராது பிரிக்க ஓர் தந்திரம் செய்துவிட்டார்கள். காந்தியை பிடித்து சமாதானம் என்று இன்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். சென்ற 4 மாதத்துக்குள் ஆறு, ஏழு தடவை தொழிலாள யூனியன் உத்தியோகஸ்தர்கள் சொல்லி வந்ததுக்கெல்லாம், காதுகொடாது வேறு வேலை இருக்கிறது என்று சால்ஜாப்பு சொல்லி வந்த காந்திபாபுவும் இன்று சமாதானத்துக்குப் புறப்பட்டு விட்டாராம். இந்நெருக்கடியில் ஆமதாபாத் மில் தொழிலாளிகள் என்ன செய்யப் போகிறார்கள்.

## வாஸ்தவமா

காந்திஜீயின் யோசனைப்படி மில் தொழிலாளிகளும், மில் முதலாளிகளும் ஒரு சமரசத் திட்டம் தயாரித்து வருகிறார்கள்.

1. ஜீவனத்துக்கு இன்றியமையாதனவான, ஓர் குறைந்த பட்சமான சம்பள திட்டம் நிர்ணயிக்கப்படும்.
2. கம்பெனியின் பங்குதாரர்களுக்கு கிடைக்க வேண்டிய லாபம், ஏஜண்டுகளுக்கு கமிஷன், கட்டிடம் சாமான்கள், போதுமான நிதி, இம் மூன்று வித செலவினங்கள் போக, மிஞ்சி லாபமேற்பட்டால் இன்ன வீதாச்சாரப்படி அதை மில் முதலாளிகளும், தொழிலாளிகளும் பங்கு போட்டுக் கொள்வது என்பது பற்றி வரையருக்கப்படும்.
3. பங்குதாரர்களுக்கு 100-க்கு 8 வீத லாபம் கிடைத்தால் போதுமென்றும் ஏஜண்டுகளுக்கு இப்போதைய கமிஷனில் பாதிகொடுத்தால் போது மென்பதும், தொழிலாள சங்க உத்தி யோகஸ்தர்களின் அபிப்பிராயமாகும். போன உடன்படிக்கையின் காலத்தில் காந்தி முன்பு செய்யப்பட்டும், முதலாளிகள் இந்த ஆறு மாத காலமாக காந்தியை அலக்ஷியபடுத்தி இருந்தாலும், அவ் விதம் சொல்வதாக காந்தி தொழிலாளிகளை ஏமாற்றி இருந்தாலும், எதிர்காலம் ஏமாறாமலும், சகோதரத் தொழிலாளிகளை காட்டி கொடாதும் இருப்பார்களா?

**புரட்சி - கட்டுரை - 22.04.1934**



RangaRakes tamilnavarasam.com

# ரஷ்யாவின் மேம்பாடு

சமீப காலமாக முதலாளித்துவ நாட்டில் ஏற்பட்டிருக்கும் அளவு கடந்த பொருளாதார நெருக்கடியை வாசகர்கள் நன்கு அறிவார்கள். ஆனால் சோவியத் ருஷ்ய நாடோ சமதர்மத் திட்டத்தால் பொருளாதார முற்போக்குடன் தலைநிமிர்ந்து பிறநாடுகள் வெட்கித் தலைகுனியும்படி, முன்னேறிச் செல்லுகின்றன. ஒவ்வொரு முதலாளித்துவ ராஜ்யத்திலும் 3 கோடி, 4 கோடி பேர்கள் வேலையில்லாமல் திண்டாடி அவதியுறும் போது, ரஷ்யாவோ தங்கள் நாட்டில் ''வேலையில்லாது ஏங்குவோரோ அல்லது நாளைக்கென் செய்வோம் என்று கவலையுறுவோறோ'' இல்லாமல் செய்து விட்டது.

ரஷ்யாவைப் பற்றி முதலாளித்துவ நாடுகளும் - அரசுகளும் செய்யும் விஷமப் பிரசாரமானது 1916-18 வருஷங்களின் மகாயுத்தப் புளுகுகளுக்குச் சமானமாகும்.

சோவியத் ரஷ்யர்களின் முதல் 5 வருஷ திட்டத்தின் முக்கிய நோக்கமானது:- பொருள்கள் உற்பத்தி விஷயத்திலும், அதன் அபிவிருத்தி விஷயத்திலும் பழைய ரஷ்யர்கள் கொண்டிருந்த முறையை அடியோடு மாற்றி நவீன முறையால் அதிக மேம்பாட்டிற்கு உழைத்து வெற்றி பெருதல் என்பதாகும். விவசாய விஷயத்தில் கூட்டுப் பண்ணைத் தொழில் முறையையும், இயந்திர நாகரீக முறையையும் கைக்கொள்ளுதல் என்றும் நிர்மாணித்ததுமாகும்.

உரிமை பாதுகாப்பு என்பதே 5 வருஷ திட்டத்தின் முக்கிய இரகசியமாகும். இதன்படி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ரஷ்யத் திட்டம் வெற்றி ஏற்பட வேண்டுமென்பதாகும்.

ரஷ்யர்களின் 5 வருஷய திட்ட வெற்றியானது அவர்களுடைய பூர்வாங்க திட்டத்திற்கு மேல் ஒரு மடங்கு அதிகப்பட்டிருக்கிறது. ரஷ்யர்களின் உற்பத்திப் பொருள்கள், கைத்தொழில் வளர்ச்சிகள் முதலியன அளவுக்கு மீறி ஏற்பட்டிருக்கின்றன.

தனித்தனி முதலாளிகளாக நாட்டை வசப்படுத்தியிருந்ததை ஐக்கிய அபேதவாத சமதர்மக் குடியரசு நாடானது உலகத்திலேயே ஒன்றுபட்ட ஒரே நிலமாக செய்து அனைவருக்கும் சரிநிகர் பயனையளித்துவிட்டது என ஸ்டாலின் கூறுகிறார்.



ரஷ்யாவில் 10 லக்ஷம் பேர் வேலையில்லாமல் திண்டாடியதை 40 ஆயிரம் பேராகக் குறைக்க வேண்டுமென்ற ஒரு நோக்கமும் முதலாவது ஐந்து வருடத் திட்டத்தில் இருந்தது. ஆனால் 1930 வருடத்திற்குள் சமதர்ம நாடான ரஷ்யா அடியோடு வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றி விட்டது.

தொழிலாளர்களுடைய வாழ்க்கையின் உயர்வும் 5 வருஷ திட்டத்தால் மேம்படுத்தப்பட்டிருக்கிறது. சம்பளங்கள் தாராளமாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. வாழ்க்கையில் சதா சந்துஷ்டியாக யிருக்கத் தக்க எல்லா சாதனங்களும் அங்கு சமதர்மிகளால் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

**புரட்சி - கட்டுரை - 22.04.1934**



RangaRakes tamilnavarasam.com

# மே தினம்

மே தினம், அதாவது பிரதி வருஷத்திய மே மாத முதல் நாளை உலகமெங்கும் உழைப்பவர்களால் பெரு நாளாக கொண்டாடப்பட்டு வருகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கடைசியில், முதல் அமெரிக்க தேசத்தில், தொழிலாளர், கிருஷிகர் அடங்கிய மக்கள் 8-மணி நேரத்திற்கு மேல் தொழிற்சாலைகளிலும், வயல்களிலும், நிலங்களிலும் வேலை செய்வது அநீதி என்றும், அதனை வற்புறுத்துவது அதனினும் அநீதி என்றும், 8-மணி நேர உழைப்பே போதுமானதென்றும் ஒரு கிளர்ச்சி புறப்பட்டது. அக்கிளர்ச்சியை முதலாளிகள் அடக்க முயன்றனர். அவ்வடக்கு முறை, மே மாதம் முதல் நாள் கொடூரமாக முடிந்ததன் பயனாக, எளிய தொழிலாளர், விவசாயிகளின் இரத்தம் சிந்தியபடியால், அந்நாள் தொழிலாளர்களின் மாபெரும் தியாக ஞாபகார்த்தமாகக் கொண்டு உலக முழுமையும் அத்தினத்தைக் கொண்டாடிக் கொண்டு வருகின்றார்கள்.

தொழிலாளர் உலகில் முதலாளித் திட்டம் ஏற்பட்டது முதல் 8-மணி நேரம் மாத்திரமல்ல, அவர்கள் உழைத்து வந்தது 10-மணி நேரம், 12 -மணி நேரம், 16- மணி நேரம் ஊண் உறக்கமின்றி உழைத்து வந்திருக்கின்றார்கள். சுரங்கங்களிலும், குன்றின் மேற்களிலும், புயல் காற்றிலும், பெரும் வெள்ளத்திலும் உழைத்து வருகின்றார்கள் . தொழிலாளர்களில் முதியோர் மாத்திரமல்ல, சிறு குழந்தைகளும் தூங்க வேண்டிய இரவிலும் உழைத்து வருகின்றனர். அனுதினமும் வேகா வெய்யிலிலும், குளிரிலும் தீக்ஷண்யத்திலும், வயலிலும், பாலைவனத்திலும் உழைத்து வருகின்றவர் யார்? இவ்வளவு கஷ்டமும் தங்கள் வயற்றுக்கு மட்டிலும் தானா? மணிக்கு 100 மைல் ஓடும் எக்ஸ்பிரஸ் வண்டியில் ஆயிரக்கணக்கான பிரயாணிகளுடைய உயிர் ஒரு சிக்னல் மென் அதாவது, அடையாளம் காட்டும் ஒரு கூலிவயமிடமிருக்கின்றது! அவனைப் பன்னிரண்டு மணி நேரம் இரவில் விழித்திருக்க வேண்டுமென்றால் இதனினும் கொடுமை எங்குளது. இவன் 8-மணி நேரம் வேலை செய்வதுதான் உசிதமென்று வாதமிட்டால், அவனை மிஷின் கன்களைக் கொண்டு கொல்லுவதென்றால் யாரால் பொருக்க முடியும். இத்தியாதி கொடுமைகளைப் போக்கி, உலகத்தில் தொழிலாளருக்கு நியாயத்தை ஸ்தாபிக்க நேர்ந்த தினம் இந்நாளாகும்.



சென்னை புளியந்தோப்பில் பன்னீராயிரம் நெசவுத் தொழிலாளர்கள் ஐந்து மாத காலமாக பசியும் பட்டினியாயும் கிடக்க நேரிட்ட காலையில் அவர்களுக்குப் பதிலாக வேலைக்குப் போகும் கருங்காலிகளை நிறுத்த எத்தனித்த காலையில், அமைதிக்கும் ஒழுங்குக்கும் ஏற்பட்டுள்ள அதிகாரிகள் தொழிலாளர் எழுவரைச் சுட்டுக் கொன்றனர்!! இத்தியாகத்தைக் கொண்டாடும் தினமும் மே தினமாகும்.

1905-ம் வருஷத்தில் வீணாக ஜப்பானியர் மேல் படையெடுத்த ஜார் சக்கிரவர்த்தியின் கொடுமையைத் தடுக்க முயன்ற ரஷியத் தொழிலாளிகள், பதினாயிரக்கணக்காக கொல்லப்பட்ட ஞாபக தினமும் இத்தினமாகும்.

**பிரான்சு தேசம்** புரட்சிக்கு பின்பு பிரான்சு நாட்டில், அநீதியும் கொடுமையும் மிகுந்து வந்தபடியால் பிரான்சு தேச தொழிலாளிகளும், விவசாயிகளும் ஒன்று சேர்ந்து, பாரீஸ் நகரத்தில் ஏகாதிபத்திய ஆட்சியை, தீ கம்யூன் என்ற உழைப்பவர்கள் ஆட்சியை ஸ்தாபித்த காலை, முதலாளிகளுடைய தந்திரத்தால் கொல்லப்பட்ட லட்சக் கணக்கான பிரான்சுத் தொழிலாளர்களுடைய ஞாபகத்தைக் குறிக்கும் தினம் இம் மேதினமாகும்.

ஆங்கில நாட்டினும் நிலவரியிலும், நிலங்களை இழந்ததாலும் மனம் பொறாத தொழிலாளர்கள் சார்ட்டிஸ்ட் என்ற இயக்கத்தைக் கிளப்பியதன் காரணமாக, அக்கூட்டத்தைச் சேர்ந்த அனைவரையும் நாசப்படுத்திய ஞாபகப் படுத்தப்படும் தினம் இத்தினமாகும்.

சீன நாட்டில் சன்யாட்சன் என்ற பெரியோர் ஸ்தாபித்த தேசீயத்தை அபிவிருத்தி செய்ய ஏற்பட்ட தொழிற்கட்சியை நாசமாக்கிய ஞாபக தினமும் இதுவாகும்.

நேற்று தென்இந்திய ரயில்வேயில் முப்பதினாயிரம் பேர்கள் வேலை நிறுத்திய காலையில் அவர்களின் தலைவர்கள் நிரபராதிகளாகிய பதினெட்டு பேரை, பத்து வருஷம் சிறை வாசமிட்ட ஞாபக தினமும் இத்தினமாகும். இவ்விதமாக உலகம் முழுமையும் அந்தந்த நாடுகளின் தொழிலாளர் இயக்கங்கள் தோன்றிய நாள் முதல் பல்லாயிரக்கணக்காக கஷ்டப்பட்டு, மாண்டு மடிந்த உழைப்போர்களுடைய தியாகத்தை ஞாபகார்த்தமாக கொண்டாட இத்தினம் ஏற்பட்டுள்ளது.

உலகில் உயிர் முளைத்த கால முதல், கஷ்டமும் தியாகமும் அவ்வுயிர் களுடன் கலந்தேயிருக்கின்றன. இது பிரபஞ்ச வாழ்க்கையிலொன்றாகும். கஷ்டமில்லாமல் தியாகமில்லாமல் ஒன்றும் கை கூடுவதாக வில்லை. உலகத்தின் மேல் நடப்பது, பெரும்பான்மை மக்களுக்கு முள் கம்பளத்தின் மேல் நடப்பதைப் போல் ஒத்திருக்கின்றது. முள் கம்பளத்தின் மேல்



RangaRakes tamilnavarasam.com

நடக்க யாருக்குத்தான் மனம் வரும்? ஆனால் அக்கம்பளத்தின் மேல் நடந்தால்தான், சுகப் பேற்றையடைய முடிகின்றது. இதைத்தான் தொழிலாளர் இயக்கத்துக்கு ஆசானாகிய காரல் மார்க்ஸ் என்பார் லோகாயுதத்தின் முரண் என்பார். கஷ்டமில்லாமல் சுகமில்லை. சுகமும் கஷ்டமில்லாமல் கிடைப்பதில்லை. இதுதான் சமதர்மத் தத்துவத்தின் முரண்பாடு. பொது உடைமைக்காரர் யாராகிலும், இந்தப் பிரபஞ்ச முரண்பாட்டை அலட்சியம் செய்ய முடியாது. சோஷலிஸ்ட் அனைவரும் இந்த பிரபஞ்ச முரண்பாட்டை அடிப்படையாக வைத்து தங்கள் தத்துவத்தைக் கட்ட வேண்டும். சுதந்திரம் வேண்டுமானாலும், ஸகோதர தத்துவம் வேண்டுமானாலும், சரிசம தத்துவம் வேண்டுமானாலும் தியாகத்தால் தான் அடைய முடியும்.

உடலுக்கு உணவு வேண்டுமானால், அறிவுக்குக் கல்வி வேண்டுமானால், தியாகம் அன்னியில் எதையுமடைய முடியாது! சுகம், துக்கம்; துக்கம், சுகம் வாழ்வில் பிணை கொண்டிருக்கிறபடியால், தியாக மூர்த்திகள் செய்து வரும் தியாகம் உலக ஞாபகத்தில் இருந்து கொண்டேயிருக்கும். இவ்வித தியாக மூர்த்திகளின் ஞாபகத்தைக் கொண்டாடும் தினம் இந்த மே மாதம் முதல் தேதியாகும்.

இந்த மே தின ஞாபகம் ஏகாதிபத்திய ஆட்சிக்கல்ல, செல்வத்திற்கும் சம்பளத்திற்குமல்ல, கொடுங்கோன்மைக்குமல்ல, உலக மக்களனைவரும் உண்டு உடுக்கவும், இருந்து வாழவும், சந்ததி விருத்தி செய்யவும், அந்த சந்ததியார் உலக சுகப் பேற்றை பெறவும் செய்யும் தியாகமாகும்.

தற்போது உலகம் பலவித இடுக்கண்களால் கஷ்டப்பட்டு வருகின்றது. இல்லாமையும் வறுமையும், பஞ்சமும், வெள்ளமும் உலகை ஒருபுறம் வருத்தி வர கொடுங்கோன்மைக் கட்சிகளாலும், முதலாளிகளின் அட்டூழியத்தாலும், வறுமையாலும் உலக நெருக்கடி அதிகரிக்கும் போலும்! உலகம் பிற்போக்கால் ரொம்பவும் கஷ்டப்பட வேண்டிவரும் போலும்!! உலக நெருக்கடி குறைந்த பாடில்லை. சேனைத் தளங்கள் உலகில் அதிகரித்து வருகின்றன. மகாயுத்தத்தின் முன்னிருந்த சேனைத்தளங்களைவிட எண்மடங்கு அதிகரித்திருக்கின்றன. இத்யாதி வியர்த்தங்களால் உலக மக்கள் இனிவரும் மாபெரும் யுத்தத்தில் மடியப் போகின்றனர். இனிவரும் யுத்தம் உலகில் விளைபொருள் போதாதென்பதற்கல்ல. செய்பொருள் செய்ய முடியவில்லை என்பதற்கல்ல. வல்லரசுகளின் ஆணவத்தாலும் அகம்பாவத்தாலும் விளையப் போகும் மகா பாதகமென அறிக!!! இம்மாபெரும் கேட்டைத் தடுப்பதற்கு உலகில் ஒருவரேயுளர். அவர்களால்தான் ரஷ்ய தேசம், புரட்சிக்குப் பின் நடந்த உள்நாட்டுக் கலகம் அடக்கப்பட்டது. வெளிநாடுகளின் உதவி பயன்படாமல் போயிற்று. போலண்ட் தேசத்து நெருக்கடியைச் சாக்காக வைத்துக் கொண்டு வல்லரசுகள் சோவியத் அரசை நசுக்கச் செய்த முயற்சி வீணானதாயிற்று. இவர்கள் யாரெனில் அகில உலக தொழிலாளர்களாவர். இவர்கள் தான் உலக சமாதானத்தை நிலைக்க வைக்க வலிமை கொண்டவர். இவர்கள்தான் அகில உலகப் போரை நிறுத்த வல்லவர். இவர்களுக்கு வேண்டியதொன்றே. அதாவது, அகில உலகத் தோழர்கள் ஒற்றுமைப்பட்டு சுகத்திலும், துக்கத்திலும் ஒன்றுபட்டு வாழ வேண்டிய தொன்றே. இந்த ஒற்றுமைக்காக உலகத் தொழிலாளர் பல்லாண்டுதோறும் பட்ட கஷ்ட நிஷ்டூரங்களையெல்லாம் ஞாபகப்படுத்தும் தினம் மே மாதம் முதல் தேதியாகும்.

**புரட்சி - தலையங்கம் - 29.04.1934**



RangaRakes tamilnavarasam.com

# பம்பாயில் பயங்கர வேலை நிறுத்தம்

உலக முழுவதும் தொழிலாளர் நிலைமை படுமோசம். இந்தியாவிலோ சொல்ல வேண்டியதில்லை. எண்ணெய்க் கொப்பரையில் வெந்து கொண்டிருக்கிறார்கள் தொழிலாளிகள். பொருளாதார நெருக்கடி சில காலமாக மனித வர்க்கத்தை இறுகப்பிடித்து உலுக்கி வருகிறது. கல்நெஞ்ச முதலாளிகள் ஈவிரக்கமின்றிச் சம்பளக் குறைப்பால் தொழிலாளிகளை உயிரோடு உடம்பை உரிக்கும் சித்திரவதை செய்து வருகிறார்கள். இன்றைய இந்தியத் தொழிலாளர் வாழ்வோ அழுவாரற்ற பிணமாகவும், சீந்துவாரற்ற சவமாகவுங் கிடக்கிறது. கடந்த ஒரு வாரமாய்ச் சம்பளத்தைக் குறைத்ததினால் பம்பாய்த் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். பம்பாய் ஆலைகள் 57-ல் 43 ஆலைகள் மூடப்பட்டுவிட்டன. 8 ஆலைகள் மாத்திரம் திண்டாட்டத்தின் பேரில் வேலை நடத்தி வருகின்றன. 80 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். பம்பாயில் துப்பாக்கிப் பிரயோகமும், அடிதடிகளும், கல்வீச்சும் நடந்த மயமாயிருக்கிறது. உயிர்ச் சேதமும், படுகாயமும் கோரக் காட்சியளிக்கிறது. பம்பாய் அமளி துமளியாய்க் கிடக்கிறது.

பொறுப்பு வாய்ந்த இந்திய சர்க்கார் தொழிலாளிகளை அனாதைக் குழந்தைகளாய்ப் பாவித்துக் கைவிட்டுவிட்டதாக தெரிகிறது. யதேச்சாதிகாரிகளான ஹிட்லரும், முசோலினியுங்கூட தொழிலாளிகளைக் கௌரவித்து ஒத்தாசை புரியும் நிர்பந்தத்திலிருக்கும் இந்நாள் ஜனநாயகத்துவத்தை நீட்டி நீட்டிப் பேசும் பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதியான இந்திய சர்க்கார், பம்பாய்த் தொழிலாளிகளுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைக் கவனியாது தூங்கிக் கொண்டிருப்பது மானக் கேடாகும். தன் கையே ஆபத்துக்குதவும் என்று தொழிலாளிகளுக்கு எடுத்துக்கூற ஆசைப்படுகிறோம். தொழிலாளர் தலைவர்கள் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டு தொழிலாளர் சங்கங்களை பெயரளவிலன்றி உண்மையாகவே பலப்படுத்தி சக்தியைப் பெருக்க வேண்டிக் கொள்கிறோம். பம்பாய்த் தொழிலாளருக்கு ஆதரவு காட்டும் பொருட்டு 6500 பேர் டில்லியில் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். நாகபுரியிலும் மே 1 -ந் தேதி வேலை நிறுத்தம் ஆரம்பமாகுமென்று தெரியவருகிறது. தென்னாட்டுத் தொழிலாளிகளும், சமதர்மிகளும் பம்பாய்த் தோழர்களுக்கு ஆதரவு காட்டுந் தோரணையில் மே தினத்தன்று தீர்மானங்கள் நிறைவேற்றி ஆவன செய்யக் கோறுகிறோம்.

**புரட்சி - துணைத் தலையங்கம் - 29.04.1934**



# பகுத்தறிவு

நமது ''பகுத்தறிவு'' தினசரியானது நாம் எதிர்பார்த்ததற்கு அதிகம் வளர்ச்சியடைந்து வருகிறது. நேற்றுடன் ஒவ்வொரு நாளும் 3200 காப்பிகள் வெளிவந்தது. தமிழ்நாட்டில் நமதியக்க சம்பந்தமாக உள்ள சகல செய்திகளும் பிரதி தினமும் தாராளமாக வெளிவர வேண்டு மென்பதற்காகவே இத்தினசரி ஆரம்பிக்கப்பட்டது. தினசரி தனது கடமையை தைரியமாகச் செய்ய ஊக்கம் காட்டிய வெளியூர் சந்தாதாரர்களையும் ஏஜண்டுகளையும் பாராட்டுகிறோம். மூவாயிரத்து இருநூறாக இருப்பது இன்னம் அதிகமாகாததற்கு காரணம் சந்தா அனுப்பாத சந்தாதாரர்களுக்கும் முன்பணம் அனுப்பாத ஏஜண்டுகளுக்கும் நாம் பத்திரிகை அனுப்பாததேயாகும். இன்னும் இரண்டு தினத்துக்குள் சேலம், திருச்சி, திருப்பத்தூர், பொள்ளாச்சி, கோவை இவ்வூர் ஏஜண்டுகள் கேட்டுக் கொண்டபடியால் அன்றாடம் பேப்பர் மாலைக்குள் கிடைக்கும்படி செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

**புரட்சி - அறிவிப்பு - 29.04.1934**



RangaRakes tamilnavarasam.com

# காளியப்பன்

நாகை தோழர் காளியப்பன் அவர்கள் மலாய் நாடு சுற்றுப் பிரயாணம் இவ்வாரமில்லை. இன்னும் இரண்டு வாரத்திற்குள் அவர் மலாய் நாட்டிற்குப் புறப்படுவார்.

தோழர் காளியப்பனின் ''டார்வின்'' என்ற குழந்தை இறந்ததென்று தெரிய விசனிக்கிறோம். குழந்தையை இழந்த வருத்தத்திலுள்ள அவருக்கு ஆறுதல் கூறுகிறோம். அடுத்தவாரம் ஈரோட்டிற்கு வருவார்.

**புரட்சி - இரங்கல் செய்தி** - 29.04.1934



# தொழிலாளர்

மாமூல் சம்பளத்தில் பாதிக்குக் குறைவாகக் குறைப்பதை பம்பாய் நெசவு ஆலைத் தொழிலாளர்கள் கண்டிக்கிறார்கள். இதற்கறிகுறியாகவே ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து நேற்று 23-ந் தேதியிலிருந்து இன்றுடன் ஏழு தினங்கள் பொது வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் வேலை நிறுத்தக்காரர்களின் எண்ணிக்கை மூன்று ஆயிரமேயாகும். இன்றுவரை சுமார் ஒரு லக்ஷத்துக்கு மேல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் கலந்திருக்கிறார்கள். பல தலைவர்கள் கைது செய்யப்பட்டும் இதுவரையில் மில் முதலாளிகளோ சர்க்காரோ சமாதானம் செய்ய முன் வரவில்லை. பம்பாய் கார்ப்பரேஷன் தலைவர் இன்று சமாதானத்துக்கு முயல்கிறார். டெல்லியிலும், நாகபுரியிலும், கராச்சியிலும் உள்ள நெசவுத் தொழிலாளிகள் அனுதாபங் காட்டுகிறார்கள். விரைவில் பரிகாரம் ஒரு முடிவேற்படுமா?

**புரட்சி - துணைத் தலையங்கம்** - 29.04.1934



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ்

காங்கிரஸ் காரியக்கமிட்டியும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியும் மே மீ 18, 19ந் தேதிகளில்தான், பாட்னாவில் நடைபெறுமாம். அதற்கு முன்பு 2ந்தேதி ராஞ்சியில் அகில இந்திய சுயராஜ்யக் கக்ஷி கூட்டம் நடைபெறும் என்று தெரிகிறது. இவ்விரண்டு கூட்டங்களின் ஆரம்ப வேகம் தடைபெற்று விட்டாலும் கூட்டங்கள் என்னமோ, நடைபெறும். காந்தி சொன்னபடி சட்டசபை பிரவேசமும், சட்ட மறுப்பு நிறுத்தத்தீர்மானமும் முதலில் நடைபெறும். எதிர்காலத்தில் இவர்கள் வேலைதிட்டம் என்ன என்பதை கமிட்டி முறையே வெளியிட்டுவிடும். கமிட்டி கூடும் தேதிகளில் சில தலைவர்கள் அபிப்பிராயப் பேதப்படுவது போலவே, கமிட்டிகளின் வேலைத்திட்டம் தயாரிப்பதில் அபிப்பிராய பேதமிருக்கிறது. புது திட்டம் என்ன சொல்லப்போகிறது என்பதை பார்ப்போம்.

**எப்போ**

அடிமையென்றும் ஆரியனென்றும் அகல வைத்து ஆண்டுவரும் ஆண்மைகொண்ட அர்ப்பப் பயல்களின் அகம்பாவங்கள் அடியோடொழியும் அன்னாள் வருவதெப்போ?

பெண்களெல்லாம் பேதையென்றும், பிள்ளைபெறும் பிண்டமென்றும், பின்புத்திக்காரரென்றும், பிராணன்போக பித்து தரும் பிறவியென்றும் பிராணிகள் போல் பிதற்றிவரும் பிரகஸ்பதிகளின் பேடித்தனம் பிணமாகும் கால மெப்போ?

கடவுளென்றும், கர்த்தரென்றும் காரணமற்ற பெயரைக்காட்டி கஞ்சிக்குக் காற்றாய் பறக்கும் கபடமற்றவர்களின் காசைப்பறித்து காலாட்டி சோறுதின்னும் கயவர்களின் காசில் இடிகள் மின்னலோடு விழ, காலம் வருவதெப்போ?

உன் உடமை என்னுடமையென்று கன்னத்திலடித்து மண்ணில் பிறந்த மானிடனை கண் தெரியாமல் சின்னா பின்னமாகப் பின்னப்படுத்தி வரும் காசுத் திமிர் கொண்ட கடுங்கோலனை சின்னப்படுத்தி மண்ணிலுள்ள எப்பொருளும் எல்லாருடையதே என்ற சப்தம் எங்கும் தொனிக்கும் காலம் வருவதெப்போ?

**புரட்சி - துணுக்குகள் - 29.04.1934**



# சென்னை கார்பரேஷனில் படைஎடுப்பா?

சென்னையில் மே மாதம் கடைசி வாரத்தில் நடக்கும் கார்பரேஷன் கூட்டத்தன்று, சென்னையில் வேலையற்று பசி பட்டினியால் வருந்தி வாடும் தொழிலாளர்களின் கூட்டம் ஒன்று திரண்டு சென்று சென்னைக் கார்பரேஷன் கட்டிட வாயிலில் முற்றுகையிடுமென்று இன்று ஓர் செய்தி கிடைத்திருக்கிறது. இது வாஸ்தவமானால் எந்த எண்ணத்துடன் இது ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இதை வரவேற்கிறோம்.

இம்மாகாணத்தின் தலைநகரான சென்னையில் ''உயர்தரப் படிப்பு'' படித்தவர்கள் மட்டும் வேலையில்லாது 2400க்கு அதிகம் இருப்பதாகவும், இவையன்றி, தங்க இடமோ செய்ய வேலையோ இல்லாது, எச்சல் இலை சோற்றை தின்றுவிட்டு டிராம்வே லையன்களிலும், வால்டோக்ஸ் ரோட்டிலும், சாக்கடை ஓரங்களிலும் படுத்துறங்கி காலம் கழிப்போர் 8000க்கு அதிகம் இருப்பதாகவும், இவைகளன்றி மாமூல் தொழிலற்ற தோழர்களும் உண்டு. உணர்ந்தவர்களுக்கு இச்செய்தி ஆச்சர்யத்தைக் கொடுப்பதிற்கில்லை.

ஆனால் இந்த வேலையற்ற தொழிலாளிகளைத் திரட்ட முயலுகிறவர்கள் பெயரைக் கேட்டே சிறிது கவலைப்படுகிறோம். தான் ஏழைகளின் தாதா! என்று பத்திரிகைகளில் விளம்பரப்படுத்திக் கொண்டு ஏமாந்தவர்களை உனக்கு விரோதமாக தூண்டிவிடுவேன் என்று முதலாளிமாரை பயமுருத்தி, இத்தொல்லையில் இருந்து தப்ப விரும்பும் முதலாளிகளிடம் பணம் பெற்று தங்கள் பெண்டு பிள்ளைகளுடன், சுகமாக வாழும் தலைவர்கள் சென்னையில் பலர் உண்டு. அவர்கள் சொன்னதை நம்பிச் சென்று உதையும் அடியும் பெற்று திரும்பிய, திரும்பும் தொழிலாளிகளும் பலருண்டு. இத்தகைய கூட்டங்களிலெதும் இக்கார்ப்பரேஷன் முற்றுகையில் தலையிடாது இருப்பார்களேயானால் இப்பட்டினிப்போர் சிறிது பலனை அடையக்கூடும்.

சென்னை கார்ப்பரேஷன் தோழர் சத்தியமூர்த்திக்கும், தோழர் வெங்கட்டறாம சாஸ்திரிக்கும் சொந்தமாக இருப்பது போல் அதன் சில நடவடிக்கைகளிலிருந்து உணர இடமிருக்கிறது. மீண்டும் பார்ப்பன



RangaRakes tamilnavarasam.com

ஆக்ஷியை கார்ப்பரேஷனில் நிலைக்கச் செய்யவும் சென்னை கார்ப்பரேஷன் கமிஷனராக ஓர் பார்ப்பனரைக் கொண்டு வரச் செய்யப்படும் முயற்சிகளுக்கு உதவியாக இக்கிளர்ச்சி இருக்காதென எண்ணுகிறோம்.

பம்பாய் கார்ப்பரேஷன் தலைவர் வேலையற்றோர் பிரச்சினையை தீர்க்க சிறிது உதவி செய்ய ஏற்பாடுகள் செய்வதை அறிவீர்கள். நமது சென்னை கார்ப்பரேஷன் தலைவரும், தனது கடமையைச் செய்ய தவறார் என்றே எண்ணுகிறோம்.

**புரட்சி - துணைத் தலையங்கம் - 29.04.1934**



# அன்சாரியும் அபேதவாதமும்

அளவுக்கு மேற்பட்ட பிரசாரத்துக்குப் பின் அகில இந்திய காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர்களும், அகில இந்திய சுயராஜ்யக் கட்சியின் தூண்களும் ராஞ்சியில் கூடினார்கள். காந்தியார், ஆச்சாரியார், சரோஜினியார் முதலிய பழைய பிரபல தலைவர்கள் அங்கு விஜயமானார்கள். அந்தரங்கமாகவும், பகிரங்கமாகவும், சம்பாஷணை மூலியமும், பல கூட்டங்கள் நடந்தது. கடைசியாய் சில தீர்மானங்கள் செய்ததாக எல்லா பத்திரிகைகளுக்கும் கிடைக்கும்படி செய்தி அனுப்பி இருக்கிறார்கள்.

இது வரையில், சுயராஜ்யக் கட்சியார் சட்டசபையில் போய் என்ன செய்யப்போகிறோம் என்பதை பற்றி பல பிரசங்கங்கள் செய்திருக்கிறார்கள். இவையாவும் ஒன்றுக்கொன்று மிகுந்த முரண்பட்டதாகவே இருந்து வந்தது. சீர்திருத்த அறிக்கையை கண்டிப்பது மட்டும் எங்கள் நோக்க மென்பவர்களும், முஸ்லீம்களுக்கு அதிக சலுகை காட்டப்பட்டதை - மட்டும் கண்டித்தவர்களும் சட்ட சபையில் புகுந்து சர்க்காரை திக்கு முக்கலாடச் செய்வதே எங்கள் நோக்கமென்றவர்களும், காந்தி சொன்ன ஆலயப்பிரவேச தீர்மானத்துக்காகவே சட்ட சபை போகிறோம் என்றவர்களும், சட்ட சபையில் வரும் ஆலயப்பிரவேச மசோதாவை தோற்கடிக்கவே நான் போகிறேன் என்ற மூர்த்தி போன்றோரும், இவ்விதம் பலவிதமான பிரசங்கம் செய்த தலைவர்கள் அங்கு கூடி தீர்மானங்களை தயாரித்து இருக்கிறார்கள்.

இத்தீர்மானங்கள் 18-ந் தேதி கூடவிருக்கும் காங்கிரஸ் கமிட்டி பாட்னா கூட்டத்துக்கு பின்பே உயிருடையதாகுமென்று தெரிவதால், நாம் அதிகம் அதைப்பற்றி பிரஸ்தாபிப்பது பயனற்றதாகவும் இருக்கலாம். இந்த ராஞ்சி கூட்ட தீர்மானங்களை நமது மாகாணப் பத்திரிகைகளில் ஜஸ்டிஸ் ஒன்று தவிர ஏனைய சகல பத்திரிகைகளும் அப்படியே ஆதரித்து எழுதி வருவதுதான் மிக விசேஷமானதாகும். ஐயர், ஐயங்கார், ஆச்சாரியார், இப்பத்திரிகைகள் தான் இப்படி எழுதுகிறதென்று எண்ணி விடுவதற்கில்லை. நமது அல்லாதார்கள் பத்திரிகைகள் இருக்கிறதே இவைகளும் இக்கூட்ட நடவடிக்கைகளைப் பற்றி தங்களின் உண்மை நிலையை வெளியிடாதது பெருந்தவறாகும். இவைகள் எதற்காக பயப்படுகிறது என்பதையும், பயப்படவில்லையானால், ராஞ்சி திட்டமானது எந்த முறையில் நாணையமானது என்பதையும்



RangaRakes tamilnavarasam.com

ஏன் பகிரங்கமாக எழுதக்கூடாது. இவ்விதம் இவர்கள் நடந்தால் தமிழர்கள் கண் விழிக்கும் காலத்தில் தங்களின் இழி செய்கையைப் பார்த்து ஏளனமாக எண்ண மாட்டார்களா? என்பதையும் சிந்தித்து பார்த்த பின்பாவது, ஐயருக்கும், ஐயங்காருக்கும் பயப்படாது தங்கள் கடமையை செய்யுமென நம்புகிறோம்.

ராஞ்சியில் கூடிய கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானங்கள்:-

1. அகில இந்திய சுயராஜ்யக் கட்சியை ஏற்படுத்த முடிவு செய்கிறது.
2. அக்கட்சி இந்திய சட்டசபைக்கு அபேக்ஷகர்களை நிறுத்த முயலுதல்.
3. இக்கட்சிக்கு ஓர் வேலைத் திட்டம். இதன் வேறு பெயர் அபேதவாத திட்டமென்பது.
4. சுயநிர்ணய சுதந்திரத்தை யொட்டி தேசத்தின் எதிர்கால அரசியலை நிர்ணயித்துக் கொள்வதற்காக, பிரதிநிதித்வ சபையை இனி கூட்டிவைக்க வேண்டுமென்பது.
5. அரசியல் திருத்த அறிக்கையை நிராகரிக்கிறது. (ஆனால் வகுப்பு பிரச்சினை முடிவில், பிரதிநிதித்வ முறையைப்பற்றி வெளியிடப்பட்டுள்ள விஷயங்களை ஏற்றுக் கொள்வதைப்பற்றியோ, நிராகரிப்பதைப்பற்றியோ யோசிப்பதற்கு இது ஏற்ற சமயமல்லவென்று கருதுகிறது.)

நமது தேசீயத் தியாகிகள் இன்று பத்து வருடங்களாக இந்நாட்டின் ஏழை மக்களின் நன்மைக்காகச் செய்து வந்துள்ள முயற்சியின் பலனாய் என்ன நன்மைகள் ஏற்பட்டு இருக்கின்ற தென்பதையும், இதுவரையில் அவர்கள் பொதுஜனங்களை யேமாற்ற எத்தகைய ஜெகஜாலங்களையெல்லாம் செய்து வந்திருக்கிறார்கள் என்பதையும், இவர்கள் உழைப்பின் பயனாய் மக்களின் நித்திய வாழ்க்கையில்; புத்தி களிமண்ணானதுடன், புதிய சீர்திருத்தத்தினால் அதிக அரசாங்க செலவு இவைகளைத் தவிர வேறெந்த நன்மையையும் இதுவரையில் நாம் கண்டதில்லை. இந்த முறையிலேயே இன்று தங்கள் நலத்திற்காகவே பொதுஜனப் பெயரால் ஓர் நாடகம் நடிக்கிறார்களென்பதை நாம் சொல்லாமலிருப்பதற்கில்லை.

உதாரணமாக ராயல் கமிஷன் நியமித்து, அது இந்திய நாட்டில் விசாரணை செய்த பிறகுதான் சீர்திருத்தம் பார்லிமெண்டில் கொண்டுவர வேண்டுமென்றார்கள். சைமன் கமிஷன் நியமனமானதும், அதில் இந்தியரில்லை; ஆதலால் அதை பகிஷ்கரிக்க வேண்டுமென்றார்கள். அதே சமயத்தில் எல்லா இந்தியக் கூட்டத்தைக் கூட்டினார்கள். அதில் சுயராஜ்யத் திட்டமென்று நேரு திட்டத்தைத் தயாரித்தார்கள்.

இத் திட்டத்தை எல்லா முஸ்லிம்களும் ஆதி திராவிடர்களும் எதிர்த்தார்கள். சர்வ கட்சி மகாநாட்டைக் கூட்டி நேரு திட்டம் நிறைவேற்றப்படுமென்றார்கள். அதே சமயத்தில் இந் நாட்டுக்கு விஜயஞ் செய்த கமிஷனிடம் ஹிந்து மகாசபைப் பேராலும், சீர்திருத்தச் சங்கப் பேராலும், தனித்தனி தலைவர்கள் பேராலும், சைமன் கமிஷனிடம் நேரில் சொல்லாமல் புத்தகம் அடித்துத் தங்கள் கோரிக்கைகளை வெளியிட்டார்கள்.

இக் கமிஷன் அறிக்கையை இங்கிலாந்தில் யோசிக்கும்போது இந்தியப் பிரதிநிதிகளும் இருக்க வேண்டுமென்றார்கள். இதற்குள் இந் நாட்டில் இத் தேசீயத் தலைவர்களின் சமூகத்தாரால் பாதிக்கப்பட்டு நைந்து ஏமாந்திருந்த சமூகங்களான, முஸ்லீம்களும், ஆதிதிராவிடர்களும் தங்கள் குறைகளை கமிஷனிடம் சொல்லியதால், இவைகளுக்கு பரிகாரம் கிடைத்துவிடுமோ என்று இவர்கள் பயந்து உப்புக்காச்ச புரப்பட்டார்கள்.

இங்கிலாந்து வட்டமேஜை மகாநாடானது உண்மை பிரதி நிதித்துவமுள்ளதல்ல வென்றார்கள். டாக்டர் அன்சாரி ஒருவர்தான் முஸ்லீம்களின் உயிர் நாடி; அவர் இல்லாத வட்ட மேஜை மகாநாடு வட்ட மேஜை மகாநாடல்ல; நாலு மூலை மகாநாடு என்றார்கள். அகில இந்திய முஸ்லீம்களின் முயற்சிக்கு எதிரிடையாக டாக்டர் அன்சாரியை பிடித்து தேசீய முஸ்லீம்கள் கட்சி என்று கத்தினார்கள்.

பின் பிரதிநிதித்துவமற்றதென்ற வட்ட மேஜைக்கு காந்தியும், சரோஜினியும், மாளவியாவும், ராதாபாயும், ரெங்கசாமி ஐயங்காரும் சென்றார்கள்.

அங்கு இவர்களுக்கு சகல சௌகரியங்களும் செய்து கொடுத்தும் அன்சாரி வராததற்கு வருந்தினார்கள்.

முதன் மந்திரி மெக்டனால்டு ''நீங்களெல்லோரும் ஒன்று கூடி ஓர் திட்டம் தயாரியுங்கள்; அதைப்பற்றி ஆலோசிப்போம்'' என்றதற்கு, அது இவர்களால் முடியவில்லை. முஸ்லீம்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் விசேஷ சலுகை காட்டப்பட்டதைக் கண்டித்தார்கள். இங்கு வந்து எல்லா சட்டங்களையும் மீறு என்றார்கள். இறுதியில் புனா பட்டினியும், ஆதிதிராவிட ஏமாற்றமும் தான் மிஞ்சியது.

இந்த நிலைமையில் இதுவரையில் இவர்கள் சொல்லி வந்ததுக்கும், செய்து வந்தவைகளுக்கும், அல்லது தீர்மானித்ததுக்கும் நடந்து கொண்டவைகளுக்கும் ஏதாவது கடுகளவு சம்பந்தமோ, நாணையமோ, யோக்கியதையோ இருக்கிறதா? என்பதை சிந்திக்கக் கோருகிறோம்.

அடுத்தாற்போல் இன்று அபேதவாதத்திட்டமும் மீண்டுமொரு சர்வகட்சி மகாநாடும் என்கிறார்களே! இதிலாவது ஏதாவது உண்மையோ உருப்படியான நன்மையுடைய செய்கையோ இருக்கிறதா? என்பதையும் சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு இவைகளெல்லாம், இவர்கள் கண்மூடித்தனமாகச் செய்யவில்லை என்பதும், மனதில் கொண்ட சூழ்ச்சியின் பயனாகவே, அன்சாரியைப் பிடித்து, அபேதவாதத்திட்டம் தயாரித்து, அகில இந்திய சர்வகட்சி கூட்டம் போடப் போவதாகக் கூறுகிறார்கள் என்பது விளங்காமல் போகாது.


RangaRakes tamilnavarasam.com

இன்று அன்சாரிக்கும் அபேதவாதத்துக்கும், அகில இந்திய கூட்டத்துக்கும் வந்த அவசியமென்ன? இதற்காகவா? இவ்வைந்து வருடமாக சட்ட மறுப்புகள், உப்புப் போர்கள், ஈச்சமரம் வெட்டுதல், பாங்கி மறியல், ஜவுளிக்கடைகள் மறியல் உண்ணாவிரதம் பல ஆயிரம்பேர் சிறைவாசம் என்பதை எல்லாம் யோஜித்தால், இக்கஷ்ட முழுவதையும் ஓர் கூட்டத்தார் தங்கள் நன்மைக்கு உபயோகப்படுத்திக்கொள்வதிலேயே கருத்துடையவர்களாக இருக்கிறார்கள் என்பது நன்கு தெரிய வரும்.

பாமர மக்களை ஏமாற்ற எந்தெந்த வார்த்தைகளையும், எந்தெந்த பேர்களையும், எப்படி உபயோகிக்க வேண்டுமென்பது நமது தேசீய தியாகிகளுக்கு தெரியாததல்ல.

மௌலானா மகமதிலிக்கும், ஷௌகதலிக்கும் கொடுத்த சிரப்பைவிட, காலம் சென்ற பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராய் அவர்களுக்கு கொடுத்த சிறப்பைவிட, மதிப்பைவிட, விளம்பரத்தைவிட அதிகம் இன்று டாக்டர் அன்சாரிக்கு கொடுத்துவிடவில்லை.

லெக்ஷக்கணக்கான பொது மக்கள் கூடிய கூட்டத்தில் அலி சகோதரர்களது சட்டைப் பைக்குள் என்றவர்கள் முஸ்லீம்கள் நன்மையையும், முஸ்லீம்களை ஏமாற்றும் வடநாட்டு ஹிந்து தலைவர்களின் புரட்டையும் அலி சகோதரர்கள் எடுத்துரைத்ததும் அவர்கள் தேசத்துரோகிகள் என்று தூற்றப்பட்டதையும் யாராவது மறந்துவிட முடியுமா?

சட்டசபையில் முட்டுக்கட்டை போடப்போகிறோம் என்று ஓட் பெற்றுக்கொண்டு இந்திய சட்டசபையில் சர்க்காருடன் ஒத்துழைப்பது அயோக்கியத்தனமானதல்லவா? சர்க்காருடன் முட்டுக்கட்டைபோட எண்ணமில்லையென்றால் கண்ணியமாக சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் இந்திய சட்டசபையில் இனி ஒத்துழைக்கவே போகிறோமென்று ஏன் சொல்லக்கூடாது? என்று லாலாஜீ கேட்டதும் தேசீயப் புலிகள் கண்ணுக்கு லாலாஜீ தேசத் துரோகியாய் மாறிவிடவில்லையா? இது வடநாட்டுப் பார்ப்பனத் தலைவர்கள் செய்கையென்றால், நமது மாகாணத்தில் ‘‘ஜஸ்டிஸ்’’ கட்சிக்காரர்களை எதிர்த்து தோற்கடிக்கிறவரையில் தோழர்கள் டாக்டர் வரதராஜுலுவும் திரு.வி. கல்யாணசுந்திரமும், நமது தலைவர் ஈ.வெ.ராமசாமியும் இம் மாகாண எல்லாப் பார்ப்பனர்களாலும் கொண்டாடப்பட்டதும், வண்டிகளில் வைத்து இழுக்கப்பட்டதும் இவர்கள் படத்தை எங்கு பார்த்தாலும் திறந்து வைத்து தென்னாட்டுத் திலகர், தமிழின் மணம், வைக்கம் வீரரென்றெல்லாம் புகழ்மாலை பாடிய நமது தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள் இவர்கள் சட்டசபைத் தேர்தல் காலத்தில் இந்திய சட்ட சபைக்குத் தமிழ்நாட்டின் ஆறு ஸ்தானங்களுக்கும் ஆறு ஐயங்கார் பார்ப்பனர்களைத்தானா போடவேண்டுமென்று கேட்டதும் இம்மூவரும் தேசத் துரோகியாகவும், சர்க்கார் தாசர்களாகவும் மாறிவிட்டது யாருக்குத் தெரியாது?



இப்படிப்பட்ட மலைகளெல்லாமே தூளாகிக் கருவேப்பிலையாகி இந்நாட்டு அகில இந்தியப் பார்ப்பனர்களால் உபயோகப்படுத்தப்பட்டு வந்ததெனில், இவர்களையே தங்கள் வேலை முடிந்ததும் பார்ப்பனர்கள் காலை வாரியெறிந்துவிட்டார்களென்றால் டாக்டர் அன்சாரி விளம்பரப் படுத்தப்படுவதில் ஆச்சர்யமொன்றுமில்லை.

இன்று இவர்களால் ஏமாற்றப்பட வேண்டுவது முஸ்லீம் சமூகமாகும். இதற்கு முன்னதாகவே விளம்பரமாகி இருக்கும் ஓர் முஸ்லீம் கனவானைப் பிடித்து தங்களின் திருவிளையாடல்களைத் தொடங்கி விட்டார்கள். அதுவும் சமூகத் தீர்ப்பைப் பற்றி ஒன்றும் சொல்லாமல், அரசியலறிக்கையை கண்டிப்பதில் மட்டும்தான் அன்சாரி ஒத்து வருகிறார். இவர்கள் எதிர்காலத்தில் கூட்டப்போகும் அகில இந்திய சர்வ கட்சி மகாநாடு இருக்கிறதே அக்காலத்தில் இவர்கள் திட்டத்தை நாம் பார்த்துக் கொள்ளலாம்.

அபேதவாதமா? இது மிக உற்சாகமுள்ள பதம் என்பதற்காகவே இதை பிடித்து போட்டார்கள். லாகூரில் கூடிய அ.இ.கா. தீர்மானித்த திட்டமே சுயராஜ்ய திட்டமென்றதுக்கு உள்பட்டே இன்று அபேதவாத சுயராஜ்ய கட்சி வேலைத்திட்டமும் தயாரிக்கப்பட்டிருப்பதாக அதன் தலைவர்களே ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். லாகூர் காங்கிரஸ் தீர்மானமான சுயராஜ்ய தீர்மானத்தைப்பற்றி அன்றே நாம் கண்டித்து கூறியிருக்கிறோம். அதிலுள்ள பாதுகாப்புகள் பயனற்ற ஏமாற்ற சொற்கள் என்று எழுதியிருக்கிறோம்.

கோவில் நுழைய அநுமதி கிடைக்காதவர்கள் 7 கோடி இருக்கிறார்கள். ஹிந்துக்கள் 18 கோடி என்றால் இதில் 7 கோடி போக மிஞ்சிய 11 கோடியில் ஒரு கோடிக்கு உட்பட்ட பார்ப்பான் பிழைக்கவே அது இருக்கிறதே தவிர, பெரும்பகுதி மக்களுக்கு 18 கோடிபேருக்கு 1 கோடி பார்ப்பானுக்குள்ள சுதந்திரமில்லையே? மதப்பாதுகாப்பு என்றால் 1 கோடிக்கா 18 கோடிக்கா என்று கேட்டோம்.

நிலப்பாதுகாப்பு என்றார்கள். இந்நாட்டில் உள்ள 35 கோடி மக்களில் 33 கோடி மக்களுக்கு நிலச் சொந்தம் என்றாலே இன்னதெனத் தெரியாதே! 35 கோடி மக்களுக்காக உள்ள நிலத்தை இரண்டு மூன்று கோடி மக்கள் ஆண்டு அநுபவிக்கிறார்களே? நிலப்பாதுகாப்பு என்றால் 33 கோடி மக்களுக்கா 2 கோடி நிலச் சொந்தக்காரர்களுக்கா என்றும் கேட்கிறோம்.

இதைப்போன்றே ஏனையவைகளுமிருக்கிறது. ‘‘சுயராஜ்யம்’’ என்றார்கள். ‘‘குடியேற்ற நாட்டு சுயராஜ்ய’’மென்றார்கள், ‘‘பரிபூரண சுயராஜ்யம்’’ என்றார்கள். இம்மூன்றும் பழசாகி விட்டதால், மக்கள் மனதை கவருகிறமாதிரியில் தோழர் இளைய நேரு ‘‘பொதுவுடமை திட்டமென்றார்.’’ இது சட்ட திட்டத்திற்கு உட்பட்டதா உட்படாததா?



RangaRakes tamilnavarasam.com

என்று பேசிக்கொண்டார்கள். அதற்குள் சில பிரபுக்களிடம் பணம் பரித்து, பிரபுக்களாக வாழ்பவர்கள் பொதுவுடமை என்றால், காங்கிரஸ் இயக்கத்தில் பணக்காரர்கள் மில் சொந்தக்காரர்கள் இவர்கள் பிரிந்து விடுவார்கள் என்று கண்டிக்க புரப்பட்டதைக் கண்டதும், புதிதாக பணக்காரனையும் பாமர மக்களையும், ஒரே வார்த்தையில் ஏமாற்றுகிற மாதிரியில் ‘அபேதவாதம்’ என்ற பெயரைச் சேர்த்து இருக்கிறார்கள்.

ஆதலால் அன்சாரி பேரைப் பார்த்து முஸ்லிம்கள் ஏமாந்துவிடக் கூடாதென்று நாம் சொல்வதைப் போலவே, அபேதவாதம் என்ற பதத்தைப் பார்த்ததும் தமிழ் நாட்டு பொது ஜனங்களும், சிறப்பாக இந்நாட்டின் க்ஷேமத்தில் முழு ஆசை கொண்ட தமிழ் நாட்டு காங்கிரஸ் தோழர்களும், ஏமாந்துவிடக்கூடாது என்றும் எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

இனி நமது மாகாண சுயராஜ்ய கக்ஷி பேரால் இப்பொழுதே பார்ப்பன கூலிகள், பார்ப்பன தலைவர்கள், சட்டசபைத் தேர்தலுக்கு பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டதால், அடுத்த தேர்தலில் இந்திய சட்டசபைக்கு இம்மாகாணப் பிரதிநிதியாக போக யார் யார் தகுதியுடையவர்கள் என்பதை முடிவு செய்வதற்குள் இன்றைய சுயராஜ்யக்கக்ஷி பிரசார கூலிகளின் வீண்கூச்சலில் ஏமாறாது உஷாராக இருக்க வேண்டுமென்று மட்டும் கேட்டுக்கொள்கிறோம்.

**புரட்சி - தலையங்கம் - 06.05.1934**



# சுயராஜ்யக் கட்சி

அடுத்த தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு மீண்டும் காங்கிரஸ்காரர்கள் தங்கள் தேர்தல் முழக்கத்தை ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் தேர்தல் முழக்கம் அளவு கடந்தது என்று சொல்லத்தக்க நிலைக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். அத்துடன் மட்டுமல்ல. இவர்கள் இந்நாட்டு மக்களை என்றென்றும் தங்கள் காலின் கீழ் மிதித்தே வாழ்வதற்கு எதைச் செய்ய வேண்டுமோ அதையும் செய்து வருகிறார்கள். இம் முறையானது இவர்கள் ஏழை மக்களை இதுவரை ஏமாற்றியதைவிட கொடுமையானது.

சீர்திருத்தத்தில் வரும் பங்குவிகிதங்கள் இந்நாட்டில் இதுவரையில் இல்லாத முறையிலெல்லாம் வரவிருக்கிறது. இதை மக்கள் சாதாரணமாகக் கவனித்தால் தங்களின் தந்திர முறைகளை உணர்ந்து தங்களைத் தட்டிப் பேசித் தாக்க ஆரம்பிப்பார்கள். இப்படி மக்கள் விழிக்காதிருக்க என்ன செய்வதென்று யோசித்து அத் துறையில் இறங்கிவிட்டார்கள். சீர்திருத்தத்தில் தங்களுக்கு வெறுப்பிருப்பது போலவும் வெறுப்புடைய இந்த சீர்திருத்தத்தால் மகத்தான பிளவு இந்நாட்டில் உண்டாகுமென்று தாங்கள் நம்புவதாகவும் இத்தகைய பயனற்றதையும், பிளவு உடையதையும், வெள்ளைக்காரர்கள் தங்கள் மீதும் தங்கள் நாட்டுமீதும் பலவந்தமாக திணிப்பதாகவும், இந்திய தேசபக்தர்கள் இவைகளுக்கு இம்மிகூட சம்பந்தமில்லாது இருந்ததால்தான் இன்று வெள்ளை அறிக்கையை காந்தியும் காங்கிரசும் எதிர்ப்பதாகவும் பாமர மக்கள் எண்ணும்படிசெய்ய வேண்டுமென்பதே இவர்கள் அவாவாகும். இப்படி மக்கள் மனதை வேறுவழியில் திருப்பிவிட்டால் இவர்கள் மாமூல் காரில் மகிழ்ச்சியுடன் சுற்றி வாழலாம் என்பதும் இவர்கள் எண்ணம். இப்படி இவர்கள் சொல்லி விடுவதில் உண்மை கொஞ்சமாவது இருக்கிறதா? என்பதை சிந்திக்கக் கோருகிறோம்.

அறிக்கைப் பிரயோஜனமற்றது, எங்களுக்குப் பிடிக்காதது அத்துடன் வகுப்புவாதமும் நிறைந்திருக்கிறது என்பதுவே இவர்களின் முதல் பல்லவியாகும். இந் நாட்டின் சகல மக்களுக்கும் நன்மையுண்டாகக் கூடியமாதிரியில் ஓர் திட்டத்தை தயார் செய்ய ஒரு கூட்டம் இனி கூட்டப் போகிறோம் என்பது அனுபல்லவியாகும். இவைகள் உண்மையா?



RangaRakes tamilnavarasam.com

இந்நாட்டில் 1926-ம் வருடத்திலிருந்து 1931ம் வருடம் வரையில் கூடிய, அகில இந்திய சம்மேளனங்களெத்தனை, அகில இந்திய காங்கிரஸ்களெத்தனை அகில இந்திய சர்வ கட்சி மகாநாடுகளெத்தனை, அகில இந்திய சமஷ்டியல் மகாநாடுகளெத்தனை, இன்னும் ஞாபகம் கூட இல்லாத எத்தனையோ ''பெயரினால்'' அகில இந்திய கூட்டங்களை இக்கூட்டத்தார் கூட்டியதையும், நேரு திட்டம் போன்ற வஞ்சனை நிறைந்த பல அரசியல் திட்டங்கள் தயார் செய்ததையும் இவைகள் அத்தனையும் எறிந்து தணலானதையும் பொது மக்கள் மறந்தா? விட்டார்கள்! ஐந்து வருடங்களில் சுமார் 20க்கு உள்பட்ட அகில இந்திய மகாநாடும், 10க்குள்பட்ட அகில இந்திய அரசியல் திட்டங்களும் தயார் செய்யப்பட்டு ஒன்றிலாவது ஒற்றுமையையோ, ஐக்கியத்தையோ காண முடியாது தானே? லண்டனுக்குச் சென்றார்களென்பதையும், பொது மக்கள் மறந்து விட்டார்கள் என்று இவர்கள் நம்புகிறார்களா?

லண்டன் வட்டமேஜை மகாநாட்டில் 15 - தினங்கள் முதலில் திட்டம் ஒன்றுபட்டு தயாரிப்பதில் வீணாக்கப்பட்டதா? இல்லையா? என்று வினவுகிறோம். 1931-ம் வருடம் 18-ந் தேதியன்று பிரதம மந்திரி அவர்களால் இந்திய பிரதிநிதிகள் ஒன்றுபட்ட மனத்துடன் வருமாறும், ஒரு திட்டம் தயார் செய்யுமாறும் கேட்டுக்கொண்டாறா? இல்லையா? இது நடந்த பதினைந்து தினம் கழித்து ஒவ்வொரு பிரிவிலும் இருவர் வீதம், சிறுபான்மையோர் கமிட்டி நியமிக்கப்பட்டு ஒருவாரம் இராப்பகலாக சிந்திக்க வில்லையா? இக் கூட்டத்துக்குக்கூட காந்தி தலைமை தாங்க வில்லையா? இவ்வளவு முயற்சிகளுக்குப் பின் மீண்டுமொருமுறை முதன் மந்திரியார் இந்திய பிரதிநிதிகளை சமரச முடிவுக்கு வருமாறு வேண்டிக் கொள்ளவில்லையா! என்றும் கேட்கிறோம். இத்தனைக்கும் பின்பு, காந்தி முஸ்லீம்களையும் கிறிஸ்தவர்களையும் சேர்த்துக்கொண்டு ஆதிதிராவிடர்களை சதி செய்ய முயலவில்லையா என்று கேட்கிறோம். இப்பிரமாண்ட முயற்சிகளுக்குப் பின் அதாவது, இந்திய நாட்டு பிரதிநிதிகள் தங்களுக்குள்

1. இன்னின்ன அதிகாரங்களும், உரிமைகளும் எங்களுக்கு இருக்க வேண்டும்.
2. அதை இங்குள்ள பிரிவினர்களான நாங்கள் இன்ன விகிதப்படி அனுபவித்துக்கொள்ளுகிறோம் என்பது போன்ற ஓர் திட்டத்தை தயார் செய்ய முடியாமல் போகவில்லையா என்று கேட்கிறோம். இதன் பின்பு தானே! பிரிட்டீஷ் கனம் முதன் மந்திரி கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டார்.

**அறிக்கை:**

1. இந்தியாவுக்கு மாகாண முழுதும் சுய ஆட்சியும் மத்திய அரசாங்கத்தில் பொறுப்புள்ள ஆட்சியுமே கொடுக்கப்படும்.



2. இராணுவ இலாக்காவும், வெளிநாட்டுச் சம்பந்த இலாக்காவும், கவர்னர்ஜெனரல் பொறுப்பில்தான் இருக்கும்.
3. சில நிபந்தனைகளும், சில நீதி சம்பந்தமான பொருப்பை மத்திய அரசாங்கத்துக்குக் கொடுக்கப்படும்.
4. இந்தியாவின் செல்வ நிலைக்குத் தீங்கு வராத நிலையில் பாதுகாக்கும் பொருப்பு கவர்னர் ஜெனரல் இடமே இருக்கும்.
5. குறைந்த வகுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பும் கவர்னர்ஜெனரல் இடமே இருக்கும்.
6. தேசத்தின் அமைதியைப் பாதுகாக்கும் பொருப்பும் அவருடையதே.
7. உங்களால் இதுவரையில் சிறுபான்மை வகுப்புப் பிரச்சினையைச் சமரசமாகத் தீர்த்துக்கொள்ள முடியவில்லை.
8. இனியாவது நீங்கள் முயன்று ஓர் முடிவுக்கு வாருங்கள்.
9. இல்லாவிட்டால் நானே முடிவுசெய்து விடுகிறேன்.
10. இந்தியாவிலுள்ள எல்லா வகுப்புகளுக்குள்ளும் சமரசம் ஏற்படாததே பொருப்பாட்சி ஏற்படுத்தத் தடையாக இருக்கிறது. இவைகளை ஒருமுறை ஞாபகப்படுத்திப் பாருங்கள். அன்று பிரிட்டிஷ் முதல் மந்திரியார் தான் தரப் போவதாகச் சொன்ன அதிகார உரிமை எல்லையைவிட இன்று ஏதாவது குறைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதா, அல்லது அன்று மந்திரியார் சொன்ன அதிகார அளவு இருக்கிறதே அதைப் போதாதென்றும் அதிக மதிகாரம் இருக்க வேண்டுமென்றும் கேட்டவர்கள் யாராவது இன்று இருக்கிறார்களா? அதிகார அளவில், உரிமை அளவில் அன்று முதன் மந்திரி சொன்னதற்கு ஒத்துத் தாளம் போட்டவர்கள்தானே அத்தனை வ.மே.ம.நா. பிரதிநிதிகளும். இதில் காந்தி, மாளவியா, சரோஜினி, சாப்ரூ இவர்கள் மாட்டேன் என்றவர்களா? அன்று பார்ப்பவர்களுக்குப் பிரிட்டீஷ் மந்திரியார் கூறிய அதிகார எல்லை இருக்கிறதே, உரிமை அளவு இருக்கிறதே இதில் எதிர்த்துப் பேசியவர்கள் எவறாவதுண்டா? எதிர்த்துத் தாங்கள் கூறுவதை மந்திரியும் மற்றவர்களும் ஒப்புக்கொள்ளச் செய்தவர்கள் தான் யாரேனும் உண்டா. இவைகளை சிறிது சிந்தித்தாலே சீர்திருத்த அறிக்கையை எதிர்க்கும் காங்கிரஸ்காரர்களின் யோக்கியதை நன்கு தெரியும்.

இவ்விதம் உரிமை பெருகுவதில் இதை விட அதிகம் ஒன்றுமில்லை என்று காந்தி உள்பட சகலரும் தலையை ஆட்டி விட்டு இங்கு வந்து திடுக்கிட்டேன் என்றால் இது நாணையமானதா? இதுதான் போகட்டும் மேலே சொன்ன அளவுக்கு கொடுக்கப்போகும் உரிமைகளை பங்கு போடுவது அதாவது இன்னின்ன சமூகத்தாருக்கு இவ்வளவு தான் என்று முடிவு செய்வது இருக்கிறதே! அதிலாகிலும் நாணையமுண்டா!



RangaRakes tamilnavarasam.com

இன்று கண்டிப்பதைப் பாருங்கள். பஞ்சாப்பிலும், வங்காளத்திலும், எல்லைப்புறத்திலும் முஸ்லீம்களுக்கு அதிக உரிமை கூடாது என்று சொன்னார்கள். இன்றும், சகல இந்து வடநாட்டு பார்ப்பனர்களும் இதைத்தான் சொல்லுகிறார்கள்.

அடுத்தாற்போல் வகுப்பு உரிமை வழங்கப்பட்டது இருக்கிறதே! அது கூடாது என்றார்கள்.

இப்பங்கு விகிதமானது வற்புறுத்திக் கொடுக்கப்பட்டதா? என்பதே இன்றைய முக்கிய கேள்வியாகும். வற்புருத்தியல்ல. நமது காந்தி மாளவியா - சரோஜனி உள்பட அத்தனை பிரதிநிதிகளும், எங்கள் நாட்டில், நாங்கள் யார் யார் எவ்வளவு உரிமையை அனுபவிக்க வேண்டும் என்பதைப்பற்றி முடிவு செய்துகொள்ள முடியவில்லை. ஹே முதன் மந்திரியே! நீங்களே கூறும் முடிவுக்கு நாங்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டு ஒத்துப் போகிறோம் என்று சொன்னதுடன் அவ்விதம் எழுதி கையொப்பமிட்டுக் கொடுத்து விட்டு வந்த பின்புதானே? முதன் மந்திரியார் பங்கு விகிதாச்சாரத்தை வெளியிட்டார் என்று கேட்கிறோம்.

இவர்கள் ஒப்புக்கொள்வதுடன் மட்டுமல்ல உறுதி கூறுவதாகவும் கூட எழுதியிருக்கிறார்களா? இல்லையா? என்றும் கேட்கிறோம். சீக்கியர், ஹிந்து, முஸ்லீம் பிரச்சினையைத் தீர்க்கும்படி கொடுத்த கடிதத்தில் காந்தி, கையெழுத்து போடவில்லை. ஆனால், மாளவியா, சரோஜினி, ரங்கசாமி ஐயங்கார், பிர்லா, இவர்களும் தர்பங்கா மகாராஜா நரேந்திரநாத், மூஞ்சே, ஜெயக்கர், இவர்களும் ஸர். ஸாப்ரூ, சாஸ்திரி, செத்தல் வாட்பாத்ரோ, சேத்னா, இவர்களும் கையொப்பமிட்டார்களா இல்லையா என்று கேட்கிறோம். இவைகளை நேரில் காந்தி பார்த்தாரா இல்லையா என்றும் கேட்கிறோம்? மேலேகண்ட கையொப்ப நகல்களின் கருத்துப்படி ஓர் கடிதம் தனியாகக் காந்தியால் முதன் மந்திரிக்கு கொடுக்கப்பட்டதா இல்லையா என்று வினவுகிறோம்? அத்துடன் முதன் மந்திரிக்கு காந்தி எழுதிய கடிதத்தில் தான் மாளவியாஜி எழுதிய கடிதத்தில் கையெழுத்து இடாததால், பிரதம மந்திரியின் தீர்ப்பை காங்கிரஸ் எதிர்க்குமென்பது அர்த்தமல்ல என்றும் குறிப்பிட வில்லையா? இவ்விதம் அங்கு நடந்து கொண்டவர்கள், கையெழுத்திட்டவர்கள் இங்கு மீண்டும் ஒவ்வொருவராகக் கிளம்பி கண்டிக்கிறோம் என்பது நாணையமானதாக இருக்க முடியுமா? இதில் ஒரு வேடிக்கை என்ன வென்றால் நேற்று ராஞ்சியில் கூடிய கூட்டத்தில் வகுப்புப் பிரிவினை சம்பந்தமான பிரச்சினையைப்பற்றியொன்றும் சொல்லாமல் ஒதுக்கி வைத்துவிட்டு அரசியலறிக்கையை மட்டும் கண்டிக்கிறோம் என்றார்களே! அதிலும் ஓர் முஸ்லீம் தலைமையில். இதற்கு முன்பு வட்டமேஜை மகாநாட்டிலும் இவ்விதமோர் தீர்மானம் கொண்டு வந்தபோது இது ஏமாற்றும் தீர்மானம். பங்கு விகிதத்தைக் கூறி பின்பு எவ்வளவு வேண்டுமென்பதை முடிவு செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்படவில்லையா. ஆனால் ராஞ்சியிலோ அத்தகைய பிரதிநிதிகள் பிர்லா மாளிகையில் ஹிந்து மகாசபையார் கூட்டத்தில் தலைவரென்று பேரெடுக்க ஆசை உள்ள ஓர் முஸ்லீம் தலைமையில் நடந்த ஏமாற்றும் நாடகம்தானே இது?

வட்டமேஜை மகாநாட்டுக்கு சென்ற ஓர் முஸ்லீம் கனவான் காந்தி மந்திரிக்கு எழுதிய கடிதத்தில், இன்ன நிபந்தனை மீதுதான் காங்கிரஸ் வகுப்புத் தீர்ப்பை ஒப்புக்கொள்ளுமென்று குறிப்பிடவில்லையே என்று கேட்கிறாரே இதற்குத் தான் தேசீய வாதிகள் என்ன சொல்லப்போகிறார்கள்.

நாளை பாட்னாவில் கூடவிருக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் வெள்ளை அறிக்கை கண்டனப் புரட்டு நடக்கும். அத்துடன் அன்சாரியின் அபேதவாதத் திட்டமும் தோழர் மசானியின் அபேதவாதத் திட்டமும் ஆலோசனைக்கு வருகிறது. இக் கூட்டத்திலும் இன்னும் எந்த மாதிரியான நாடகத்தை நடத்துகிறார்கள் என்று பார்ப்போம். நமது தலைவர் சிறையினின்று விடுபட்டு வந்துவிடுவார்.

தமிழ்நாட்டு ஐயர்களும் ஐயங்கார்களும் அசம்பளி தேர்தலுக்கு ஆர்ப்பாட்டம் செய்யும் இன்று, நமது தலைவர் வெளிவருவது மகிழ்ச்சியூட்டக் கூடியதாகுமென்று நம்புகிறோம்.

தலைவர் தோழர் ஈ.வெ. இராமசாமியே! வருக! நின்வரவு நல்வரவாகுக! தமிழ்நாட்டுக்கு தேவையாகுக! என்று கூறி வரவேற்கிறோம்.

**புரட்சி - தலையங்கம் - 13.05.1934**



RangaRakes

tamilnavarasam.com

# முஸ்லீமும் பிராமணரும் ஒன்றா?

வீரசிங்கம்பேட்டைக்கலவரவழக்கை விசாரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அதற்காக ஸ்பெஷல் மாஜிஸ்ட்டிரேட்டும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஒருவாரமாக விசாரணையும் நடந்துவருகிறது.

இவ் வழக்கு நடந்துவருகையில் அப்பிரதேச நிலையைச் சரிப்படுத்தத் தண்டப் போலீசாரைச் சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். இத் தண்டப் போலீசின் செலவினத்தை இக்கிராமவாசிகளே ஒப்புக்கொள்ள வேண்டுமென்று சர்க்கார் அறிக்கை கூறுகிறது. இதைப்பற்றி நாமெதும் கூற விரும்பவில்லை. ஆனால் இத் தண்டப் போலீசுக்கு ஆகும் செலவீனம் இருக்கிறதே அதைப் பற்றி விபரம் கூறும்போது மேற்படி கிராமவாசிகள் கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு மேற்படி கிராமத்திலுள்ள 'பிராமணர்கள் முஸ்லீம்கள்' இவர்கள் நீங்கலாக என்று கூறியிருப்பதுதான் நமக்குப் பெரும் சந்தேகத்தை உண்டாக்குகிறது.

இன்றைக்கெல்லாம் மாதம் 450 ரூபாய்க்குள்தான் டிவிஷனல் மாஜிஸ்ட்டிரேட் தெண்டச் சிலவு மாதா மாதம் விதிக்கக்கூடும். 300 வீடுகள் அங்கே இருக்கிறதென்று வைத்துக்கொண்டால், வீட்டுக்கு மாதம் ஒன்றரை ரூபாய் வரக்கூடும். ஒரு வருடத்திற்குப் பதினெட்டு அல்லது இருபது ரூபாய்க்கு அதிகம் வருவதற்கில்லை. இது ஓர் பிரமாதமான சிலவென்றுகூட நாம் கருதவில்லை. தெண்ட தீர்வை கொடுக்க வேண்டியவர்களில் முஸ்லீம்களை விலக்கி இருப்பது கூட ஓர் விதத்தில் நியாயம். ஆனால் பார்ப்பனர் நீக்கம் நியாயமானதா? என்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

எந்தவிதம் எண்ணி அல்லது கருதி இவ்விதிவிலக்கு சர்க்காரால் புகுத்தப்பட்டது என்பதை அறிய நாம் ஆவலுருவதைப் போலவே, நமது வாசகர்களும் ஆசைப்படக்கூடும்.

சர்க்கார் உத்திரவில் 'கருதுவதால்' என்ற பதம் முஸ்லீம்களைப்பற்றி சொல்வது நியாயம். அவர்கள் மாரியம்மன் என்பதை ஓர் தெய்வமாக அவர்கள் கருதுவதில்லை. இக் கலக வழக்கு சகாப்தத்துக்கும் அவர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை சர்க்கார் கருதுவது முற்றிலும் நியாயம்.

ஆனால் ஐயரை, பிராமணர்களை விதி விலக்கின் மூலியம் விலக்க கருதுவதுதான் நமக்கு விளங்காததில் ஒன்றாக இருக்கிறது. ''ஹிந்து'' என்ற மதத்தினர்களின் சாமிகளில் ஒன்று மாரியம்மனாகும். ஹிந்து மதத்தில் முதன்மையானவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் பிராமணர்கள். இவர்கள் வீடு அக்கிராமத்தில் 5 அல்லது 6 வீடுகள் இருக்கக்கூடும். ஆறு அய்யர்மார் வீட்டுக்கு தெண்ட வரி விதிக்க வேண்டுமென்று சொல்ல அவ்வளவு குறுகிய மனப்போக்கு நமக்கில்லை. சர்க்கார் அப்படிச் செய்தால் ஓர் பிராமணரல்லாத தேவரிடமோ, சேர்வையிடமோ, அவர்கள் சென்று, சூத்திரர்களால் பிராமணர்களுக்கு தெண்ட தீர்வை கூட கொடுக்க வேண்டியிருக்கிறது, இந்த பாவம் லேசில் போகாது என்றால், ஐயருக்கு தேவரிடம் இரண்டு மூன்று வருடத்துக்கு கொடுக்கக்கூடிய அளவு பணம் வசூலாகி விடும் என்பதும் நமக்கு தெரியாததல்ல! ஆனால் இச்சிறு உத்திரவினால் மற்றவர்கள் உரிமை, மற்றவர்களின் நியாயமான நிலைமை, இவைகள் சீர் குலைக்கப்பட்டு, சின்னா பின்னமாக இட மேற்பட்டு விடுமோ! என்றுதான் அஞ்சுகிறோம். பண மிச்சத்துடன் மட்டும் பார்ப்பனர்கள் பங்கு இதில் லாபமாய் விடுகிறது என்று கூற முடியாது.

ஐயர்மாரை விலக்கியது தவறி வந்ததா? சரியானதா? அல்லது ஆங்கில பதப்பிரயோகம் அசந்தர்ப்பத்தால் வீழ்ந்து விட்டதா(!) என்பதை எல்லாம் சிந்திக்க வேண்டுமெனக்கூறி இக் குறிப்பை இத்துடன் நிறுத்துகிறோம்.

**புரட்சி - துணைத் தலையங்கம் - 13.05.1934**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ் நிலை

அகில இந்திய தேசிய காங்கிரஸ் என்பது தோழர் காந்தியார் அவர்கள் கைப்பிள்ளையான பிறகு, தக்கதொரு விளம்பரமும், மதிப்பும் பெற்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அதனால் ஏற்பட்ட நன்மையென்ன என்று பார்ப்போமானால் ஒன்றுமில்லை என்று சொல்லுவதோடு மாத்திரம் நின்று விடுவதற்கில்லாமல், இந்திய மனித சமூகத்தின் பத்து வருஷத்திய முன்னேற்றத்தைத் தடுத்து விட்டதோடு, இந்தியா தேசத்தை இருபது வருஷ கால தூரம் பின்னால் போகும்படியும் திருப்பிவிட்ட தென்பது நமது அபிப்பிராயம். இது பொது விஷயங்களைப் பற்றியதாகும்.

இந்திய அரசியல் விஷயத்தைப் பற்றி கவனிப்போமானால், காங்கிரசின் இன்றைய நிலையானது 1923-24ம் வருஷத்தின் நிலையே யாகும். எப்படி என்றால் ''ஒத்துழையாமை தற்காலீகமாக ஒத்திவைக்கப்பட்டது'' என்ற தீர்மானம் அப்போது செய்தவுடன் அது எந்த நிலை அடைந்ததோ அதே நிலையை அதாவது ''சட்ட மறுப்பை தற்காலீகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது'' என்கின்ற நிலைக்கு வந்திருக்கின்றது. இதைத் தெளிவான வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், காங்கிரஸ் 10 வருஷத்திற்கு முன் எந்த இடத்திலிருந்து தவறிவிட்டதோ, அந்த இடத்திற்கே இப்பொழுது (பத்து வருஷகாலம் வழி தெரியாமல் திண்டாடி விட்டு, பழையபடி தான் முதலில் தவறு செய்த இடத்திற்கே) திரும்பி வந்து சேர்ந்திருக்கிறது என்று சொல்லலாம். இன்னும் விளக்கமாக சொல்ல வேண்டுமானால் காங்கிரஸ் சரியான வழி கண்டுபிடிக்க முடியாமல் திண்டாடுகிற தென்பது ஒரு பக்கமிருந்தாலும், தப்பான வழியில் போய்க் கொண்டிருப்பதை நிறுத்தி சரியான வழியைக் கண்டுபிடிப்பதற்காக தியங்கிக் கொண்டிருக்கிறதென்பதாகும்.

ஆனால் 1924ல் காங்கிரசிற்கு கிடைத்த தப்பான வழிகாட்டிகளையே தான் 1934லிலும் அடைந்துவிட்ட தென்று சொல்லாமல் இருக்க முடியவில்லை, 1924ல் காங்கிரசின் போக்கை கெடுத்து அது செய்த ''தியாகத்தை'' பயன்படுத்திக் கொண்டு பொது வாழ்க்கையை நாணையக் குறைவாக்கி இழிவு படுத்தின மக்களாகிய சுயராஜ்யக் கட்சியார் என்பவர்களே இப்பொழுதும் அதன் ''தியாகத்தை'' பயன்படுத்திக் கொண்டு அதை இழிவு படுத்தி பயன் பெற அதற்கு வழிகாட்டிகளாவதற்கு (காங்கிரசை) சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.



நம்மைப் பொருத்த வரையில் நாம் சுயராஜ்யக் கட்சிக் கொள்கையைப் பற்றியும் அதன் தலைவர்களைப் பற்றியும், கொள்கையினுடையவும் தலைவர்களுடையவும் நாணயங்களைப் பற்றியும் முன் கொண்டுள்ள அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ள யாதொரு காரணமும் ஏற்பட்டுவிடவில்லை. ஆதலால் பழைய அபிப்பிராயத்தையே கொண்டு இருக்கிறோம். சுயராஜ்யக் கட்சியின் கொள்கையும் நாணையமும் எவ்வளவோ மோசமாய் இருந்தும் அதற்கு 1924-ல் சிறிது பலம் இருந்ததற்கு காரணம் தேசபந்து தாஸ் அதில் இருந்ததே யாகும். இப்பொழுது அப்படிப்பட்டவர்கள் யாரும் அதில் இல்லை. ஆதலால் அக்கட்சிக்கு சிறிதாவது யோக்கியதை ஏற்பட்டு விடுமோ என்று எவரும் பயப்பட வேண்டியதில்லை. சுயராஜ்யக் கட்சியில் தேச பந்து தாசின் ஸ்தானத்தை இப்போது தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் பூர்த்தி செய்திருப்பதால் அக்கட்சியைக் கண்டு யாரும் கவலைப்பட வேண்டியதுமில்லை. ஏனெனில் தோழர் சத்தியமூர்த்தி சுயராஜ்யக் கட்சிப் பிரமுகராய் இருப்பதாலேயே அக்கட்சியானது கெடுப்பாறின்றி கெடும் பேற்றை அடைந்து விடும் என்பது உறுதி.

சுயராஜ்யக் கட்சியை வளர்த்து வாலிபம் செய்தவர்கள் தாஸ், நேரு போன்ற பெரியார்கள் என்று சொல்லப் பட்டாலும், அதைப் பெற்ற தாய் தகப்பன்மார்கள் தென்னிந்திய அய்யர், அய்யங்கார் பார்ப்பனர்களாகிய தோழர்கள் சத்தியமூர்த்தி அய்யர், ரெங்கசாமி அய்யங்கார் போன்றவர்களேயாகும். ஆனால் அந்தப்படி அவர்களை செய்து தீரும்படி செய்தது ஜஸ்டிஸ் கட்சியாகிய பார்ப்பனரல்லாதார் கட்சியேயாகும், ஆதலால் இன்றைய தினமும் தென் இந்தியாவில் ஜஸ்டிஸ் கட்சி இருப்பதால் - அதுவும் அதிகாரத்தில் இருப்பதால் இன்றைய தினமும் சுயராஜ்யக் கட்சி ஏற்படுத்த வேண்டியது அய்யர், அய்யங்கார்களுக்கு அவசியமேயாகும்.

சுயராஜ்யக் கட்சியின் தலைவர்களுக்கு விவரம் சொன்னது போலவே அதன் கொள்கைக்கும் ஒரு உதாரணம் சொல்ல வேண்டி இருக்கிறது. என்ன வென்றால் காங்கிரஸ் தீர்மானத்திற்கு விரோதமாய் அதன் கட்டளைகளுக்கு மாறாக சுயராஜ்யக் கட்சியார் சென்னை சட்ட சபையில் அங்கம் பெற்று முட்டுக்கட்டை போடுவதற்கு பதிலாக, மந்திரிகளை அழைத்து சட்டசபை நடைபெற உதவி செய்து வந்த குற்றத்தைப்பற்றி காங்கிரஸ்காரர்கள் கேள்வி கேட்ட காலத்தில் சுயராஜ்யக் கட்சியார் சொன்ன சமாதானம் என்ன வென்றால்:

''நாங்கள் அந்தப்படி செய்யாதிருந்தால் ஜஸ்டிஸ் கட்சியார் அந்த ஸ்தானத்தைப் பெற்று தேசத்தைக் கெடுத்து விடுவார்கள். ஆதலால் அப்படிச் செய்ய (மந்திரி சபையை அமைத்து உதவி செய்ய) நேரிட்டது''

என்று சொன்னார்கள். இதை யாரும் இதற்குள் மறந்திருக்க மாட்டார்கள். இன்றைய தினமும் ஜஸ்டிஸ் கட்சி உயிருடன் (அதிகாரத்தில்)



RangaRakes tamilnavarasam.com

இருப்பதால் அதை ஒழிக்க காங்கிரஸ் கட்டளையையோ கொள்கைகளையோ சுயராஜ்யக் கட்சி மீறி தான் ஆகவேண்டி இருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆதலால் ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிர்ப்பாகத்தான் சுயராஜ்யக் கட்சி உண்டாக்கப்படுவதும் அதை காங்கிரசு அனுமதிப்பதுமான காரியங்கள் செய்யப் போகிறதே தவிர வேறில்லை.

இது ஒருபுறமிருக்க இதிலிருந்து வாசகர்கள் நாம் ஜஸ்டிஸ் கட்சியை முழுதும் ஆதரிப்பதாக கருதிவிட மாட்டார்கள் என்றே கருதுகிறோம். சுயராஜ்யக் கட்சி என்பது எப்படி அய்யர் அய்யங்கார்களைக் கொண்ட பார்ப்பனக் கட்சி என்றோமோ அது போலவே ஜஸ்டிஸ் கட்சியும், ஜமீன்தாரர்களையும், முதலாளிமார்களையும் கொண்ட செல்வவான்கள் கட்சி ஆய்விட்டது என்று தைரியமாய்ச் சொல்லுவோம். ஜாதி ஆதிக்கத்தையும் ஆணவத்தையும் இல்லாமல் செய்ய வேண்டும் என்று நினைக்கின்ற ஒரு உண்மையான மனிதன் செல்வ ஆதிக்கத்தையும், ஆணவத்தையும், இல்லாமல் செய்ய வேண்டுமென்று நினைக்காமல் இருக்கவேமாட்டான். மனித சமூகத்துக்கு ஜாதி ஆதிக்கத்தால், ஆணவத்தால் என்ன என்ன குறையும், கொடுமையும், மானக்கேடும் இருக்கிறதோ அவ்வளவும் சில சமயங்களில் அதற்கு மேலாகவும் செல்வ ஆதிக்கத்தாலும், செருக்காலும் மக்களுக்குக் குறையும், கொடுமையும், மானக்கேடும் இருந்தே வருகிறது. ஆதலால் இவையிரண்டும் ஒழிக்கப்பட இந்த இரண்டு கட்சிகளும் அழிக்கப்பட வேண்டியதுதான். இதை எந்த ஆதாரத்தின் மீது சொல்லுகிறோம் என்றால், அவைகளின் கொள்கைகளையும் அவைகளால் மக்களுக்கு ஏற்பட்ட பிரத்தியட்சப் பலன்களையும் அவற்றின் தலைவர்களின் யோக்கியதைகளையும், நாணயங்களையும் ஒருவாறு திருப்திகரமாய் அறிந்த பிறகே சொல்லுகின்றோமே ஒழிய வேறில்லை.

ஆனால் ஜஸ்டிஸ் கட்சியென்பது மனித சமூகத்தில் சகல மக்களுக்கும் அரசியலைப் பொருத்தவரையிலாவது சம சுதந்திரமும், சம சந்தர்ப்பமும், சம பிரதிநிதித்துவமும் கிடைக்க முயற்சி செய்கிறோம் என்ற கொள்கையை ஒப்புக்கொண்டதால் சுயராஜ்யக் கட்சியை ஒழிக்கவேண்டிய அவசரத்தைப் போல் அவ்வளவு அவசரத்தில் அதை (ஜஸ்டிஸ் கட்சியை) ஒழிக்க முற்படாமல் இருந்ததோடு சில சமயங்களில் ஆதரவு அளித்து அதைப் பயன்படுத்திக்கொள்ளவும் முற்பட்டோமென்பதையும் ஒப்புக்கொள்கிறோம்.

இன்று உலகில் இனி இரண்டு கட்சிகள்தான் (முடிவு காணும் வரை) ஒன்றோடொன்று போர் புரிந்துகொண்டு இருக்க இடமுண்டு. அதாவது ஒன்று சோம்பேறி வாழ்க்கைப் பிரியர்களாகிய மேல் ஜாதிக்காரர்கள், செல்வவான்கள், படித்தவர்கள் என்கிறவர்களைக் கொண்டதாகும். மற்றொன்று பாடுபட்டு உழைப்பவர்களாகிய தொழிலாளிகள், ஏழைமக்கள்



ஆகியவர்களைக் கொண்டதாகும். இவற்றைத் தவிர மற்ற கட்சிகள் எல்லாம் சைவ சமாஜம், அன்னதான சமாஜம் போன்றதான ''மோட்ச''லோகம் போக வேண்டிய பூமி பாரக் கட்சிகளேயாகும்.

காங்கிரசானது எவ்வளவுதான் தெய்வீகத் தன்மை, மதத் தன்மை ஆத்மார்த்தீகம் சத்தியம் அகிம்சை என்பன போன்ற வார்த்தைகளின் மறைவில் இதுவரை வாழ்ந்து வந்ததென்றாலும் இப்பொழுது அவ்வளவு காவல்களுமொழிந்து நிராயுதபாணியாய் நின்று கவலைப்பட வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது.

இதைப் பற்றி அதாவது காங்கிரசின் யோக்கியதை குறைந்து போனதைப் பற்றி நாம் ஏதும் மகிழ்ச்சியடையவில்லையென்றாலும் தெய்வீகம், ஆத்மார்த்தீகம், மதம், சத்தியம், அகிம்சை என்பவைகளைத் திருகாணி பீரங்கி போன்று மனித சமூகத்திற்குக் கேட்டை விளைவிக்கும் வார்த்தைகளுக்கு யோக்கியதை போய் அவைகளை நிர்வாணமாய்ப் பார்க்கக் கூடிய நிலைமை மக்களுக்கு ஏற்பட்டதைக் குறித்து மகிழ்ச்சியடையாமலிருக்க முடியவில்லை.

இனி காங்கிரசோ வேறு ஏதாவது ஒரு ஸ்தாபனமோ எல்லா மனித சமூகத்தின் பேரால் இருந்து நாட்டில் வேலை செய்ய வேண்டுமானால், அது சமூகத்தில் உள்ள எல்லா மக்களையும் ஒன்று போல் காண்பதாயும் எல்லா மக்களுக்கும் ஒன்று போல் போக போக்கியம் அளிப்பதாயும் இருக்கத்தக்க கொள்கையை லட்சியமாய்க் கொண்டதாய் இருந்தால்தான் வேலை செய்ய அருகதை உடையதாகும். அப்படிக்கில்லாமல் இருப்பது பயனற்றதும் இருக்க வேண்டிய அவசியமில்லாததுவுமேயாகும். காங்கிரசில் இப்படிப்பட்ட யோக்கியதையாவது இந்த வாசனையாவது இருக்கிறதா என்று பார்ப்பதற்குக் காங்கிரசுக்குக் குடும்பத்துடன் ஈடுபட்டு சகல வித்தியாசங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்துக் காங்கிரஸ்காரர்களால் சிறிதும் சந்தேகப்பட இடமில்லாமல் இருந்து வந்தவரும் காங்கிரஸ் காரியதரிசியுமான தோழர் ஜவஹர்லால் அவர்கள் அபிப்பிராயம் காங்கிரஸ்காரர்களால் ஆட்சேபிக்க முடியாததாகும். ஆகவே அப்படிப்பட்டவர் காங்கிரசைப் பற்றி சொன்னதென்னவென்றால் ''காங்கிரசானது இதுவரை செல்வவான்களுக்காகவே உழைத்து வந்தது. ஏழைகளுக்காக உழைக்கவே இல்லை. காங்கிரசினால் ஏழைகளுக்கு யாதொரு பயனுமேற்படவில்லை'' என்று சொல்லியிருக்கிறார்.

தோழர் சுபாஷ் சந்திர போஸ் அவர்களும் இதுபோலவே ஏன் இதைவிட ஒரு அடி அதிகமாகவே முன்னால் வந்து ''காங்கிரசானது தொழிலாளிகளையும் ஏழை விவசாயிகளையும் வஞ்சித்துப் பொதுஜனங்களை ஏமாற்றி வந்திருக்கிறது. அதிலுள்ள தலைவர்கள் தங்கள் நன்மையையும் கௌரவத்தையும் பிரதானமாய்க் கருதினார்களேயொழியப் பொதுஜன நன்மையை லட்சியம் செய்யவில்லை''யென்று பேசியிருக்கிறார்.



RangaRakes tamilnavarasam.com

மற்றபடி, மற்ற பொது ஜனங்களில் பல அறிவாளிகளின் அபிப்பிராயத்தைப் பற்றி நாம் விவரிக்க வேண்டியதில்லை. இப்படிப்பட்ட நிலையிலுள்ள காங்கிரசானது இப்போது ''பைத்தியம் தெளிந்து போய் விட்டது. உலக்கை எடுத்துக்கொண்டு வா, கோமணம் கட்டிக் கொள்ளலாம்'' என்று சொல்வது போல் காங்கிரஸ் மேன்மையடைந்துவிட்டது - அதாவது ''சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்துவிட்டேன், சுயராஜ்யக் கட்சியை சட்டசபைக்கு அனுப்புகிறேன்'' என்று சொல்லுகிறது. இந்த நிலையிலுள்ள காங்கிரசுடன் மனித சமூக நன்மையைக் கருதுகின்றவர்கள் எப்படி ஒத்துழைக்க முடியும் என்பது ஒவ்வொருவரும் யோசிக்கத் தகுந்ததாகும்.

சமீபத்தில் பாட்னாவில் கூடிய காங்கிரஸ்காரர்கள் கூட்டத்தில் சமதர்மக் கொள்கையை சுயராஜ்யக் கட்சிக்காரர் ஒப்புக் கொள்ள முடியாதென்று தோழர் சத்தியமூர்த்தி அய்யர் சொன்னதாகத் தெரிகிறது. அவர் வார்த்தைக்கு மதிப்பேது என்று சொல்லப்பட்டதும் தோழர் காந்தியாரும் சமதர்மக் கொள்கையை ஆட்சேபிக்கப் போகிறார் என்ற வதந்தி பலமாய் இருக்கிறதென்று சுதேசமித்திரன் பத்திரிகையில் சூசனை சாட்டப்படுகிறது. எனவே சமதர்மக் கொள்கையைக் காங்கிரஸ் ஒப்புக் கொள்ளவில்லையானால் மேல் ஜாதிக்காரர்களையும் செல்வவான்களையும் மதக் குருக்கள்களையும் மனுதர்ம சாஸ்திரங்களையும் காப்பாற்ற இனியும் எல்லோரும் சேர்ந்து காங்கிரசில் உழைக்க வேண்டுமா என்று கேட்கிறோம். இதற்காக இனியும் ஒரு ஐம்பது வருஷத்தைப் பாழாக்க வேண்டுமா என்றும் கேட்கிறோம்.

உலகமெங்கும் நமது காங்கிரஸ் போன்ற பணக்கார ஸ்தாபனங்கள் பாழ்பட்டு ஏழைகள் விடுதலை ஸ்தாபனங்கள் பலப்பட்டு வருகிற காலத்தில் நம் நாட்டில் மாத்திரம் அவற்றிற்கு முட்டுக் கட்டை போடுவது போல் காங்கிரசின் பேரால் சமதர்மத்தை வழி மறிப்பதானது வஞ்சகமும் துரோகமுமான காரியமாகும். இந்த விஷயங்களைப் பாமர மக்கள் அறிய முடியாமலிருக்கும்படி அவர்களை ஏமாற்ற ''சட்டசபைக்குப் போய் வெள்ளைக்காகித அறிக்கையை துவம்சம்படுத்தி விடுகிறோம்'' என்று வீரம் பேசி சட்டசபைப் பக்கம் மக்கள் கவனத்தைத் திருப்பப் படுகிறது. இதுவும் வழக்கம் போல் காங்கிரசினுடைய ஒரு சரியான தந்திரமே ஆனாலும் இதனாலெல்லாம் பாமர மக்கள் என்றைக்குமே ஏமாந்திருப்பார்களென்று நினைத்திருப்பதானது நினைக்கிறவர்களுக்கே ஏமாற்றத்தைக் கொடுக்குமே யொழிய வேறில்லை யென்பதோடு இந்தக் கருமத்தின் பலனை அடைந்தே தீரவேண்டி வருமென்பதை எச்சரிக்கை செய்கிறோம்.

ஜஸ்டிஸ் கக்ஷியும் மற்றும் சில ஜாதி வகுப்பு சங்கங்களும் எலக்ஷன் வரும்போது தங்கள் மகாநாடுகளைக் கூட்டி தாங்கள் சட்ட சபைக்குப் போகவும், எல்லோரும் தங்களுக்கே ஓட்டு செய்யும் தீர்மானங்கள் செய்து கொள்ளுவது போல், சுயராஜ்ய கக்ஷியும் தேர்தல்கள் வரும்போது மகாநாடுகள் கூட்டி, தாங்களே சட்டசபைக்குப் போக வேண்டும் என்றும், தங்களுக்கே ஓட்டு செய்ய வேண்டும் என்றும் தீர்மானங்கள் செய்வது வழக்கமாகிவிட்டது. இப்படிப்பட்ட தீர்மானங்களைக் கொண்டு எலக்ஷனில் வேலை செய்யும் வாலிபவீரர்கள் அநேகர் நாக்கில் ஜலம் சொட்ட வாயைத் திறந்து கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் இதனால் எல்லாம் மனித சமூகத்துக்கு தீமையே ஒழிய நன்மையேதும் உண்டாகப் போவதில்லை என்பது உறுதி.

இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பாட்னா மகாநாட்டின் மற்ற முடிவுகளை தெரிந்த பின்பு, மற்ற விவரங்களைப் பற்றி நாம் இப்போது என்ன செய்ய வேண்டியது என்பதைப் பற்றியும் பின்னால் எழுதுவோம்.

**புரட்சி - தலையங்கம் - 20.05.1984**



RangaRakes tamilnavarasam.com

# தோழர் ஈ.வெ.ரா. விடுதலை

தோழர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் 15ந் தேதி ராஜமகேந்திரம் ஜெயிலிலிருந்து விடுதலையாகி, 16ந் தேதி சென்னை வந்து அங்கிருந்து அன்றே புறப்பட்டு 17ந் தேதி ஈரோடு வந்து சேர்ந்தார். அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை, சேலம் ஆகிய ஸ்டேஷன்களுக்கு ஆங்காங்குள்ள சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்கள் வந்து சந்தித்துப் பேசிப் போனார்கள்.

ராஜமகேந்திரம் ஜெயிலில் வெயில் கொடுமையால் சிறிது கருத்தும் இளைத்தும் போயிருக்கிறார். ஆனால் உடல் சௌக்கியமாய் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார். சமீபத்தில் வெயில் கொடுமைக்காக எங்காவது குளிர்ச்சியான இடத்துக்குப் போகக் கருதி இருக்கிறார்.

ஜெயிலில் தோழர் ஈ.வெ.ரா.வுக்கு தோழர் வரதராஜுலு நாயுடு அவர்கள் முயற்சியில் A-கிலாஸ் சௌகரியம் கிடைக்கப்பட்டது என்றாலும், அந்த ஜெயிலில் கிளாஸ் பிரிவுகளுக்குப் போதிய சௌகரியம் இல்லாததால் B-கிலாஸ் கைதியாகவே இருந்து வருகிறேன் என்று ஜெயில் அதிகாரிகளுக்குச் சொல்லிவிட்டு பி.கிளாஸ் கைதியாகவே இருந்து வந்தார். அங்கு சாப்பாடும் ஒரு பத்திரிகையும் தவிர மற்றபடி C கிளாஸ் கைதி போலவே நடத்தப்பட்டார். சாப்பாடுகூட ரொட்டி, பால் என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை. C கிளாஸ் கைதிகளுடனேதான் வைக்கப்பட்டிருந்தார். ஒரு பிளாக்கில் உள்ள 32 அறைகளில் 28 கருப்புக்குல்லாய் கைதிகளுடன் 29 வது கைதியாகவே இருந்து வந்தார். வெராண்டா இல்லாத 7×10 ரூமில் காலை முதல் மாலை வரையில் வெயிலில் இருக்கும்படியான நிலையில் இருக்க நேர்ந்தது என்பதோடு அறையை விட்டு வெளியில் வந்தாலும் வெய்யலில் இருக்க வேண்டியதைத் தவிர வேறு மார்க்கமில்லாத ஜெயிலாய் இருந்தது என்பதோடு பிளாக்கை விட்டு வெளியில் போவதற்கில்லாமலும் வேறு யாருடனும் பேசுவதற்கு இல்லாமலும் நிர்ப்பந்தத்தில் வைக்கப்பட்டிருந்தார். இந்தப்படி வைக்க மேல் அதிகாரிகளிடம் இருந்து உத்திரவு வந்ததாகத் தெரிகிறது. மற்றபடி வேறுவித அசௌகரியமில்லை என்பதாகத்



தெரிகிறது. நிற்க ஈரோடு வந்த பிறகு கோவை, திருச்சி, தஞ்சை, நாகை, சேலம், திருச்செங்கோடு முதலிய இடங்களிலிருந்து சுமார் 50 தோழர்கள் வரை வந்து இருக்கிறார்கள்.

**‘‘புரட்சி’’ ஆபீஸில் ‘‘பகுத்தறிவு’’**

நிற்க, ஆபிஸ் நிர்வாகம் முன் போலவே நடைபெற்று வருகிறது. பகுத்தறிவு தினப்பதிவு நடைபெற்று வருவது அவருக்கு இஷ்டமில்லை. அதைப்பற்றி நண்பர்களுக்குள் அபிப்பிராய பேதம் இருந்து வருகிறது.

**புரட்சி - துணைத் தலையங்கம் - 20.05.1934**



RangaRakes tamilnavarasam.com

# தோழர் ஈ.வெ.ரா. ஈரோடு விஜயம்

தோழர்களே!

நான் சிறைவாசம் சென்றுவிட்டு வந்ததைப் பாராட்டுவதற்காக என்று இக்கூட்டம் கூட்டப்பட்டு என்னைப்பற்றி பலர் பலவிதமாகப் புகழ்ந்து பேசி இருக்கிறார்கள். இது ஒருவித பழக்க வழக்கத்தை அனுசரித்திருப்பதாக மாத்திரம் நான் கருதுகிறேனே ஒழிய இதில் ஏதாவது நல்ல பொருள் இருப்பதாக நான் கருதவில்லை. முதலாவதாக இப்பொழுது நான் மற்றவர்களைப் போல் சிறை செல்ல வேண்டுமென்று கருதி நானாக சிரைக்குப் போகவில்லை. ஆனால் சிறைக்குப் போகக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டால், அதற்காக பயந்து பின் வாங்காமல் அதையும் ஒரு நன்மையாகவே பயன்படுத்திக் கொள்ளலாமென்பதைக் காட்டுவதற்காகவே நான் சிறை செல்ல நேர்ந்தது.

அதாவது குடி அரசு பத்திரிகையில் என்னால் எழுதப்பட்ட ஒரு சாதாரணமானதும், சப்பையானதுமான வியாசத்திற்காகத்தான் நான் சிறைக்குப் போக நேரிட்டதே தவிர, மற்றப்படி செல்லத்தக்க ஒரு சரியான காரியம் செய்துவிட்டு சிறைக்குப் போகவில்லை. சர்க்கார் இந்தக் ''குடி அரசு''ப் பத்திரிகையின் பழைய இதழ்களைப் புரட்டிப் பார்த்தால் என்னை வருடக்கணக்காய் தண்டிக்கக்கூடியதும், நாடு கடத்தக்கூடியதுமான வியாசங்கள் நூற்றுக்கணக்காக தென்படலாம். ஆனால் அவர்கள் அந்தக் காலத்திலெல்லாம் கவனித்ததாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் ஏன் கவனிக்கவில்லை என்பதை இப்போது நான் கவனித்துப் பார்த்தால் காங்கிரசிற்கு பாமர ஜனங்களிடத்தில் இருந்த செல்வாக்கின் பயனாய், நமது வியாசங்களை பொது ஜனங்கள் லட்சியம் செய்யமாட்டார்கள் என்கின்ற தைரியத்தால் சர்க்கார் அப்பொழுது சும்மா இருந்தார்கள் என்று தோன்றுகிறது.

ஆனால் இப்பொழுது இப்படிப்பட்ட சிறிய வியாசங்களையும் கண்டு, இவ்வளவு வல்லமை பொருந்திய சர்க்கார் பயப்படும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்ட தென்பது நன்றாய்த் தெரிகிறது.

இதிலிருந்து நாம் என்ன நினைக்க வேண்டி இருக்கிறதென்றால் நமது அபிப்பிராயத்தை மக்கள் மதிக்க ஆரம்பித்து விட்டார்கள் என்றும், சுயமரியாதை கொள்கையை ஜனங்கள் ஆதரிக்கிறார்கள் என்றும், சர்க்கார் இப்போது உணர்வதாகத்தெரிகிறது. அன்றியும் மற்றும் பல புதிய புதிய தீவிரக் கொள்கைகளையும் ஜனங்கள் வரவேற்கிறார்கள் என்பதும் தெரிகிறது. இதுவரை நமது நாட்டில் இருந்து வந்த அபிப்ராயங்கள் எல்லாம் ''வெள்ளைக்காரருக்கு இந்நாட்டில் என்ன வேலை, அவர்களுக்கு ஏன் ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பளம், கருப்பு மனிதனுக்கு ஏன் நூற்றுக்கணக்கான பத்துக் கணக்கான ரூபாய்கள் சம்பளம்? அவர்களுக்கு ஏன் பெரிய அதிகாரம், நமக்கு ஏன் சின்ன அதிகாரம் என்பது போன்ற பிரச்சினைகளே தேசீயம் என்னும் பேரால் முக்கியமாய் இருந்து வந்தது. இதன் பயனாய் அரசாங்கத்தார்களும் இங்குள்ள பணக்காரர் படித்தவர் மேல் ஜாதிக்காரர் ஆகிய ஒரு சிறு கூட்டத்தாருக்கு மாத்திரம் ஏதாவது வாய்ப்பூசி மக்களின் ''தேசீய அபிலாஷைகளை'' திருப்தி செய்து வந்து கொண்டும் இருந்ததால் பாமர ஜனங்களின் எண்ணம், உணர்ச்சி, ஊக்கம் எல்லாம் அதிலேயே ஈடுபட்டுக் கிடந்தது. ஆனால் இப்பொழுதோ நாட்டில் வரவர அந்த எண்ணங்கள் மறையத் தொடங்கிவிட்டன. அவை வேறு விதமாக பரிணமிக்க ஆரம்பித்து விட்டன.

எப்படிஎன்றால் ''வெள்ளையனுக்கு ஏன் 1000, 5000 ரூபாய் சம்பளங்கள், கருப்பனுக்கு 100, 50, 10, 5 ரூபாய் வீதம் சம்பளம் என்பது போய், மனித சமூகத்தில் யாராயிருந்தாலும் ஒருவனுக்கு ஏன் 5000, 10000 ரூபாய் சம்பளம், மற்றவனுக்கு ஏன் 5 ரூபாய் 10 ரூபாய் சம்பளம் என்கின்ற உணர்ச்சி தோன்றி எல்லா மக்களும் ஜாதி, மதம், தேசம் என்கின்ற பேதமும் பிரிவுமில்லாமல் சகலரும் சமமாய் பாடுபட வேண்டும், பயனை சமமாய் அடைய வேண்டும் என்கின்றதான ஒரு சமதர்ம உணர்ச்சியில் திரும்பி விட்டது. இந்த நிலைமையானது ஆட்சிக்காரருக்கு மாத்திரமோ, அல்லது அரசாங்க உத்தியோகஸ்தருக்கு மாத்திரமோ விரோதமானதென்றோ, அடக்கி விடவேண்டிய தென்றோ தோன்றாமல் நம் நாட்டில் உள்ள எல்லா பணக்காரர்களுக்கும், எல்லா மேல்ஜாதிக்காரர்களுக்கும் (அதாவது பாடுபடாமல் வயிறு வளர்க்கவும், போகபோக்கியம் அனுபவிக்கவும் கருதும் மக்களுக்கும்) படித்தவர்கள் என்கின்ற கூட்டத்திற்கும் தோன்றிவிட்டதுடன் இவர்களால் வாழ்ந்து வந்த மதப்புரோகிதர்கள் என்பவர்களுக்கும் தோன்றிவிட்டது. ஆதலால் இந்தக் கூட்டத்தார்கள் எல்லோருமே அக்கொள்கைக்கு எதிரிகளாய் இருப்பதில் நான் அதிசயப்படவில்லை என்பதோடு, இதற்காக நான் ஜெயிலுக்குப்போக நேரிட்டதிலும் அதிசயமில்லை.

நிற்க இப்பொழுதுள்ள நிலையில் ஜெயிலில் அதிக கஷ்டமில்லை. முன்பு சிறிது கஷ்டம் இருந்தது உண்மைதான். 1921ம் வருஷத்தில் நானும், இங்குள்ள தோழர்கள் ஈஸ்வரன், ஜெயா முதலியவர்கள் கைதியாக்கப்பட்டபோது, கையில் குட்டை போடுவதும், துன்பப்படுத்துவதுமான



RangaRakes tamilnavarasam.com

தொல்லைகள் மிகுந்திருந்தன. அந்தக்காலத்தில் பட்ட கஷ்டங்கள் இப்பொழுதொன்றுமில்லை. அப்பொழுது இங்குள்ள தோழர் ஜெயாவை ஜெயிலில் இருந்து வண்டியில் போட்டு வெளியில் அழைத்து வரப்பட்டது. உயிர் பிழைப்பாரோ என்றுகூட சந்தேகிக்கப்பட்டது. இப்பொழுது ஜெயிலில் கஷ்டமில்லை என்பதோடு, என் போன்றவர்கள் அங்கு வெகு மரியாதையாக சாமி, பாபுஜி என்று உள்ளிருப்பவர்களாலும் அழைக்கப்படுவதோடு கூட, ஜெயில் அதிகாரிகள் பயந்து நடக்கும்படியான நிலைமையிலேயும் இருக்கிறது. என்னைப் பொருத்தவரையில், நான் பி. வகுப்பில் இருந்தாலும், எனக்கு வெண்ணையும் பாலும், பழமும், சில சமயங்களில் மாமிசமும் கிடைத்துவந்தது. அதுபோல் இங்கு எனக்கு வீட்டில் கூட திரேக நிலைமைக்கு ஏற்ற சாப்பாடு கிடைக்க மாட்டாது. வெய்யிலின் கொடுமைதான் தாங்க முடியவில்லை. ராஜமகேந்திர ஜெயில் எவ்வளவு கேவலமான நிர்வாகமுடையதாய் இருந்தாலும், கஷ்டமான ஜெயில் அல்ல. Habitual Prisoners என்னும் கருப்புக்குல்லாய்க்கார திருடர்கள் ஜெயிலாய் இருந்தபோதிலும், கைதிகள் எவ்வித கேள்வி கேட்பாடு இல்லாமல், இஷ்டப்படி உள்ளே திரியலாம். கைதிகளுக்கு வேலையும் கிடையாது. அங்கும் கஞ்சா குடியும், பீடி, சிகரெட்டு குடிப்பதும், வெத்திலைபாக்கு புகையிலை போட்டு ஆனந்தப்படுவதும் சர்வ சாதாரணம். ஜெயிலுக்குள்ளேயே கைதிகள் கஞ்சா செடி வளர்க்கிறார்கள். அந்த செடியில் ஏதாவது சில பூக்களை சொருகிவைத்து பூச்செடி மாதிரி செய்து விடுகிறார்கள். அதை ஜெயில் சூப்ரண்டு கவனிப்பதில்லை. மற்ற சில்லரை அதிகாரிகள் வழக்கம்போல் அதனால் லாபமடைகின்றார்கள். நான் பல ஜெயிலில் பார்த்திருந்தாலும், ராஜமகேந்திரபுரம் ஜெயில்போல் பொருப்பற்றதும், அதிக குற்றங்கள் நடப்பதுமான ஜெயில் பார்த்ததில்லை. சூப்ரண்டு நல்லவர் என்று சொல்லலாம். ஆனால் நிர்வாகத் திறமை போராது. சிப்பந்திகளுக்கு பணமே பிரதானம். அவர்கள் அடிக்கடி கைதிகளால் அவமானப்படுவதை லக்ஷியம் செய்வதில்லை. அங்குள்ள டாக்டர்களும் அப்படியே. இவற்றைப் பற்றி மற்றொரு சமயம் பேசுகிறேன்.

எனக்கு கோவை சிறையிலிருக்கும்போது காலில் வீக்கம் இருந்தது. அந்த வீக்கம் ராஜமகேந்திர ஜெயிலுக்குபோன பிறகு தானாக வடிந்துபோய்விட்டது.

நிற்க சட்ட மறுப்பு இயக்கத்தைப்பற்றி சிலர் பேசினார்கள். அவ்வியக்கம் சர்க்கார் அடக்குமுறையினாலேயே நின்றுவிடவில்லை. அந்தக் கொள்கையானது மக்களால் அலக்ஷியப்படுத்தப்பட்டு வெறுத்துத் தள்ளப்பட்டு விட்டதால் அது நிறுத்தப்படவேண்டியதாயிற்று. ஒன்றுக்கு முதவாத கொள்கையை கட்டிக்கொண்டு மாரடிப்பது பைத்தியக்காரத்தனமென்று பொது மக்கள் உணர்ந்துவிட்டார்கள். சட்ட மறுப்பு கட்சியே பொஸ்ஸென்று



போய்விடுமென்றும், அது மக்களுக்கு கஷ்டத்தையே விளைவிக்கும் என்றும் மக்களுக்கு 10 வருஷ காலமாக எச்சரிக்கை செய்து வந்தவர்களில் நானும் ஒருவன். அதன் பயனாய் தேச பக்தர்கள், தேசீய வாதிகள் என்பவர்களால் நான் பலமாய்த் தாக்கப்பட்டேன் என்றாலும், முடிவில் சட்ட மறுப்பு பயனற்றதாகவும் பைத்தியக்காரத்தனமாகவுமே முடிந்தது.

நான் ஜெயிலுக்குப்போய் கொஞ்ச வருஷங்களாகி விட்டது. இதற்குமுன் ராஜத்துவேஷ கேசில் அரஸ்ட் செய்யப்பட்டு இருந்தாலும், சர்க்காரே அவைகளை வாபீஸ் வாங்கிக்கொண்டார்கள். பிறகு சமீபத்தில் திருச்சியில் கத்தோலிக்க கிருஸ்தவ திருமணத்தின் போது போலீசாரால் அரஸ்ட் செய்யப்பட்டும் முடிவில் வழக்கே தொடராமல் போய்விட்டது.

மற்றபடி நான் இப்போது வெளியில் வந்ததில் இந்த இரண்டு நாளிலேயே, ஏன் வந்தோம் என்றே தோன்றுகிறது. இப்பொழுது என்ன செய்வதென்றே புரியவில்லை. மற்றும் சிவில் விவகாரத்துக்காக அரஸ்ட் செய்யப்பட்டேன். ஆனால் காயலா நிமித்தம் இரண்டு மாதத்திற்குள்ளாகவே விடுதலை செய்யப்பட்டேன் என்றாலும், இவைகள் எல்லாம் ‘‘தேசபக்தன்’’ என்ற பெயர் அடைய முடியவில்லை. ஆனால் இப்பொழுது சர்க்கார் அந்தக் குறையை நிவர்த்தி செய்து விட்டார்கள். இதன் பயனால் அறியாமை மிகுந்த பாமர ஜனங்களால் நான் பாராட்டப்படக்கூடும். மற்றபடி அறிவாளிகள் நான் ஜெயில் சென்றதைப் பாராட்ட யாதொரு விஷயமுமில்லை. இதில் எந்த வித்தியாசமும் அடங்கியிருக்கிறதாக சொல்வதற்கும் இடமில்லை. எப்படி இருந்தபோதிலும் அரசியலைப் பற்றி நான் கொண்ட அபிப்பிராயம் இன்று இந்தியா முழுதும் பரவி விட்டது. அது மாத்திரமல்ல. உலகமெங்கும் சட்டமிருக்கிறது. நமது இந்தியாவை எடுத்துக்கொண்டால் நமது அபிப்பிராயங்களைக் கொண்ட கக்ஷிகள் மத்திய மாகாணத்திலும், ஐக்கிய மாகாணத்திலும், பம்பாயிலும், பஞ்சாபிலும், கல்கத்தாவிலும் இருந்து வருகிறது. நாம் ‘‘முன்னதாக தெரிவித்தது பிசகு’ என்று மட்டும் சொல்லலாம். அந்த ‘தப்பு’ நம்மீது இருந்தாலும் இப்பொழுதுள்ள வாலிப இந்தியா அங்கீகரிக்க முன் வந்ததைப் பார்த்து நாம் பூரிப்படையாமல் இருக்க முடியவில்லை. நமது மாகாணத்தைப் பொருத்தவரை காங்கிரஸ்காரர்களும் நாமும் எப்படியாவது ஒன்று சேர்ந்து வேலை செய்ய வேண்டுமென்று யோசனை கூறப்பட்டது. காங்கிரஸ் அதற்குத் தன்னை தகுதி உடையதாக்கிக்கொண்டால் நான் தயாராயிருக்கிறேன்.

நிற்க, சுயராஜ்யக் கக்ஷியின் யோக்கியதையைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால், நமது பழைய குடி அரசைப் புரட்டிப் பார்த்தால் தெரியவரும். சுயராஜ்யக் கக்ஷியின் யோக்கியதையை அறிய ஆசையுள்ளவர்கள் ஒரே ஒரு விஷயத்தைக் கொண்டு தெரிந்து



RangaRakes tamilnavarasam.com

கொள்ளலாம். அதாவது அதன் தலைவர்கள் பிரமுகர்கள் ஆகியவர்கள் யார் என்று பார்த்தாலே போதும்! தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களே (!) அதன் முக்கிய தலைவராய் விளங்குகிறார். மற்றபடி நான் அதைப்பற்றி அதிகம் சொல்லவேண்டுவதில்லை. (தொடரும்)

குறிப்பு: *20.10.1933 குடி அரசில் 'ஏன் இன்றைய ஆட்சி ஒழிய வேண்டும்' என்ற தலைப்பில் தலையங்கம் எழுதியதற்காக 6 மாத சிறை தண்டனைக்குப் பின் 15.05.1934 இல் விடுதலை பெற்று வெளிவந்தபோது 17.05.1934 இல் ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்கத்தாரால் நடத்தப்பெற்ற பாராட்டுக் கூட்டத்தில் பாராட்டுக்குப் பதில் அளித்து ஆற்றிய சொற்பொழிவு.*

**புரட்சி - சொற்பொழிவு - 20.05.1934**



# ''சுயராஜ்யக் கக்ஷி செத்தது அது நீடூழி வாழ்க''

சுயராஜ்யக் கக்ஷியாரின் யோக்கியதை நாடறிந்ததென்றும் அதற்கு நல்ல பேர் இல்லையென்றும் ஒரு வாரத்திற்குள்ளாகவே அதன் தலைவர்கள் என்போர்கள் தெரிந்து கொண்டு விட்டதால், அதை அது பிறந்த ''தீட்டு'' வீட்டிற்குள்ளாகவே கழுத்தைத் திருகி கொன்றுவிட்டு காங்கிரசே சட்ட சபைகளுக்கு போட்டி போட வேண்டும்; ஆனால் சுயராஜ்யக் கக்ஷி பிரமுகர்களே சட்ட சபை போட்டி கமிட்டியில் இருக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்து கொண்டார்கள். இது மக்களை ஏய்க்கச் செய்த சூழ்ச்சியே ஒழிய, மற்றபடி சட்டசபையில் போய்ச் செய்யப்போகும் காரியத்தில் எவ்வித மாறுதலும் இல்லை என்பதோடு, சட்ட சபைக்கு அபேக்ஷகர்களாக தெரிந்தெடுக்கப் போகும் நபர்களிலும் எவ்வித மாறுதல்களும் ஏற்படப் போவதில்லை.

**புரட்சி - துணைத் தலையங்கம் - 27.05.1934**



RangaRakes tamilnavarasam.com

# பகுத்தறிவு

''பகுத்தறிவு'' பத்திரிகை தொடங்கி சற்று ஏறக்குறைய ஒரு மாத காலமே ஆகின்றது. நடந்த வரை லாபமும் இல்லை நஷ்டமும் வெகு சுருக்கமே ஆகும். இந்தச் சிறிது காலத்தில் சொல்ப நஷ்டத்தில் மக்களுக்கு ஏதோ ஒரு அளவில் குறிப்பிடத்தக்க ஒரு பலனைக் கொடுத்திருக்கின்றது என்று தைரியமாய் சொல்லலாம் என்றாலும், இனியும் இது நடத்தப்பட வேண்டியது அவசியமில்லை என்றே கருதுகிறோம். பத்திரிகைகள் மனித சமூகத்திற்கு அவசியமானது என்பதில் நமக்குச் சிறிதும் அபிப்பிராய பேதமில்லை. ஆனால் அவை இரண்டு காரியங்களுக்கே முக்கியமான தேவையாகும். ஒன்று உலக வர்த்தமானங்களை மக்களுக்கு அறிவித்து மக்களது அறிவை உலக இயலை உணர்ந்து நடந்து கொள்ளச் செய்வது. இரண்டு புதிய அபிப்பிராயங்களை வெளிப்படுத்தி மனித சமூகத்தை முற்போக்கடையச் செய்வதாகும்.

ஆனால் இன்றைய பத்திரிகை உலகமானது இந்த இரண்டு காரியங்களின் பேராலேயே பெரிதும் நடத்தப்படுவதாக சொல்லப்படு மானாலும், உண்மையில் பார்க்கப் போனால் வெகு சில பத்திரிகைகளே இக்கொள்கைக்கேற்ப நடத்தப்படுவதாகக் காணப்படும்.

பத்திரிகை நடத்துவது என்பது ஒன்று நடத்துபவரின் ஜீவனோபாயத்தை முக்கிய குறிக்கோளாகக் கொண்டது. இரண்டு, தனது சுயநலத்தையும், கீர்த்தியையும் உத்தேசித்து தம் தம் வாழ்க்கைப் பெருமையையே குறிக்கோளாகக் கொண்டு நடத்தப்படுவது.

இப்பொழுது நடைபெறும் பத்திரிகைகளில் அனேக பத்திரிகைகளைப் பின் சொல்லப்பட்ட இந்த இரண்டு தலைப்பு களுக்குள்ளாகவே சேர்க்கலாம் என்றாலும், முன் சொல்லப்பட்ட கருத்துக்களுடன் நடைபெறும் பத்திரிகைகள் இல்லை என்று சொல்லிவிட முடியாது.

பரலோகத்தையும் சுவர்க்க லோகத்தையும் காட்டி வயிறு வளர்க்கும் தொழில் புரட்டையும் இழிவையும் விட பத்திரிகை நடத்தி வயிறு வளர்க்கும் தொழில் கேவலம் என்று சொல்லிவிட முடியாது.

இன்றைய தினம் அரசியலில் தலையிட்டு சிறிது நாளாவது வேலை செய்து அதன் பயனாய் ஒருவர் தேசபக்தன் என்றோ அல்லது



தேசீயத் தலைவர் என்றோ அழைக்கப்பட நேரிட்டு அப்படிப்பட்டவருக்கு தகுதியான ஜீவனோபாயத்திற்கு மார்க்கம் இல்லாதிருக்குமானால் அவர்கள் கண் முன்னும் மனதின் முன்னும் சதா இருந்து கொண்டு இருப்பது ''ஒரு பத்திரிகை நடத்த வேண்டும்'' என்கின்ற ஆசையும் உற்சாகமுமேயாகும். இதைக் குற்றம் என்று நாம் சொல்ல வரவில்லை. இயற்கையின் ஆட்சி என்றே சொல்லுகிறோம். சில வன்மனம் படைத்தவர்கள் இந்த இயற்கை ஆட்சியில் இருந்து தப்பி இருக்கிறார்கள். சிலர் தப்ப முடியாமல் இயற்கையை எய்தி விடுகிறார்கள்.

இதன் பயனாகத்தான் இந்தப் பத்து பதினைந்து வருஷ காலத்தில் ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் தோன்றி மறைய ஏற்பட்டன.

அதில் ஒன்று நமது பகுத்தறிவாய் இருக்கலாமா? என்று யாராவது கேட்டால் இல்லை என்று அடியோடு மறுத்துச் சொல்வதற்குப் போதிய ஆதாரம் இருப்பதாகச் சொல்லமுடியாது.

பகுத்தறிவு டிக்களரேஷன் ஐந்து வருஷத்துக்கு முன்னாலேயே பெற்றிருந்தது. தினசரியாக நடத்துவதற்காக அல்ல. அதை ஒரு மாத வெளியீடாகவும் வருடசந்தா 8 அணாவில் நடத்துவதாகவும் உத்தேசித்து சிறு புத்தக அளவில் கோர்வையாகத் தொடர்ந்து நடத்த உத்தேசப்பட்டு டிக்களரேஷன் வாங்கப்பட்டு, பல காரணங்களால் நடத்த முடியாமல் போய்விட்டதென்றாலும் அதை பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தின் சார்பாக ஒரு மாத வெளியீடாக முயற்சி செய்து சமீப காலத்தில் டிக்களரேஷன் புதிப்பிக்கப்பட்ட தென்றாலும் சில வாலிபர்களின் உள்ளத்தெழுந்த அதிருப்தியும் ஆத்திரமும் இவ்வளவு சடுதியில் தினசரியாக நடத்தச் செய்து விட்டது. அதாவது சுயமரியாதை இயக்கத்திற்கு ஒரு தினசரி தேவை என்றும் இப்பொழுது நாட்டில் நடமாடும் தினசரிகளில் பெரும்பான்மையானவை சுயமரியாதை இயக்கத்திற்கு உதவி செய்யாவிட்டாலும் இடையூறும் பழியும் உண்டாகும்படி செய்யவே முயற்சிக்கின்றன என்றும் நினைத்தது. ஆதலால் ''நமக்கென்று ஒன்று இருக்க வேண்டும்'' என்ற கருத்தால் ஏற்பட வேண்டியதாயிற்று. இக்கருத்து சரியா தப்பா? என்பதைப் பற்றி இப்போது நாம் ஏதும் சொல்ல ஆசைப்படவில்லை. அன்னியர்கள் அதுவும் நமது கருத்துக்கு மாறுபட்டவர்கள், அவ்வளவோடு மாத்திரம் இல்லாமல் தங்கள் தனிப்பட்ட நலனுக்கோ தங்கள் சமூகத்திற்கோ கடும் விரோதி என்று நம்மையும் நமது கொள்கைகளையும் கருதியவர்கள் நம்மால் தயவாகவோ தாக்ஷின்யமாகவோ நடத்தப்படாதவர்கள் நமது கொள்கைகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் இடந்தராததும் பத்திரிகை ஒழுங்கு முறைப்படி நடந்து கொள்ளாததும் குற்றம் என்று நாம் கருதுவோமேயானால் அது முட்டாள்தனமும் சுயமரியாதை அற்ற தனமும் நமது தோல்வியை ஒப்புக்கொண்ட தனமும் ஆகுமே தவிர வேறில்லை.



RangaRakes tamilnavarasam.com

அன்றியும் அப்படிப்பட்ட பத்திரிகைகள் நமக்கு எவ்வளவு கெடுதி செய்தது என்றாலும் அனுகூலம் செய்யவில்லை என்றாலும் நமது கொள்கைகளோ இயக்கமோ ஆரம்பத்திலிருந்து நாளதுவரை முற்போக்கிலும் மேம்பாட்டிலும் இருந்து வருகின்றனவே ஒழிய பிற்பட்டு விடவில்லை. ஆதலால் அன்னியர்கள் மீதும் ஆத்திரம் கொள்ளவும் இடமில்லை. அன்றியும் அவரவர்கள் வாழ்க்கைக்குத் திட்டம் கோலிக்கொள்ள தனி உடைமை உலகத்துக்கு சுதந்திரமுண்டு.

சுயமரியாதை இயக்கத்துக்கு இது சமயம் ஒரு பத்திரிகைக்கு மேல் அதுவும் வாரப் பத்திரிகையாக அல்லாமல் மற்றெவ் விதத்திலும் நடத்த நாட்டில் இடம் இல்லை. எப்படி யென்றால் சுயமரியாதை இயக்கத்திற்காக இயக்கச் சார்பாய் என்று இதுவரை சுமார் 20 பத்திரிகைகள் வரையில் தினப்பதிப்பு வாரப்பதிப்பு மாதப்பதிப்பு என்பதாக ஏற்பட்டு அவைகள் பெரிதும் மறைந்து போய் இருக்கின்றன. அதனால் இயக்கத்துக்கும் கெட்டபெயர் ஏற்பட்டும் இருக்கிறது. இந்த உண்மைகளையும் அனுபவங்களையும் கண்டபிறகும் நாம் இனியும் இயக்கத்தின் பேரால் பத்திரிகைகளைப் புதிது புதிதாய் தொடங்குவது என்பது மனதாரத் தெரிந்த தப்பான காரியத்தைச் செய்கின்றோம் என்பதாகும்.

அன்றியும் இது சமயம் பத்திரிகை உலகம் நெருக்கடியில் இருக்கிறது. செல்வாக்குள்ள பத்திரிகைகள் கூட பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டன. சில 100-க்கு 50 வீதம் சந்தாதாரர்கள் குறைந்துவிட்டன. பத்திரிகைகளின் விலைகளும் சில நூற்றுக்கு ஐம்பது வீதம் குறைக்கப்பட்டுவிட்டன. இந்த நிலையில் சில பத்திரிகைகள் எவ்வித உற்சாகமும் அவசியமும் இல்லாமல் **''ஆரம்பித்து விட்டோமே இனி நிறுத்தினால் அவமானமே''** என்கின்ற தத்துவத்திற்காகவே நடைபெறுகின்றன. இந்த நிலையில் ''பகுத்தறிவு'' தினசரி நடத்துவது என்பது வேண்டுமென்றே தொல்லையையும் நஷ்டத்தையும் ஏற்றுக் கொள்வதாகும் என்று தோன்றுகிறது.

நிற்க, இது சமயம் தமிழ்நாடு பத்திரிகை ஏதோ ஒரு அளவுக்காவது சுயமரியாதை இயக்கச் செய்திகளை பிரசுரித்து வருவதை அறிகிறோம். அது மாத்திரமல்லாமலும் அது மிகக் குறைந்த விலையாகிய ½ அணாவுக்கு இறக்கப்பட்டும் விட்டது. கொள்கை விஷயத்திலும் சமீப காலமாக அதன் போக்கு நமக்கு விரோதமானது என்று கருதுவதற்கு இல்லாமலும் இருக்கிறது. ஆதலால் நமது கொள்கையைப் பரப்ப புரட்சியையே ஆதாரமாகவும், சேதியை தெரிவிக்க தமிழ்நாடுவின் சகாயத்தையே அனுகூலமாகவும் கொள்ளலாம் என்று நினைக்கிறோம்.

தமிழ்நாடு பத்திரிக்கை 8 பக்கம், 10 பக்கம், 12 பக்கம் நல்ல வியாசங்களுடனும் தக்க சேதிகளுடனும் தாராளமாய் எங்கும் ½ அணாவுக்கு கிடைக்கும் படியாக நடைபெறும் போது நாம் ¼ அணாவுக்கு தினசரி அதில் 4-ல் ஒரு பாக அளவு பத்திரிக்கை சேதிகள் அதிகமில்லாமல் நடத்துவது என்றால் எப்படி நடத்தப்பட முடியும் என்கின்ற பயம் ஒருபுரம் இருந்தாலும், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையானது ½ அணாவுக்கு போடப்பட்டதால் 2 அணா பத்திரிக்கைகளாகிய ''மெயிலும்'' ''இந்துவும்'' ஒரு அணாவாக விலை குறைக்கப்பட்டுவிட்டது. அது போலவே காலணா அரையணாப் பத்திரிக்கைகளாலேயே ஒரு அணாப் பத்திரிக்கைகளும் விலை குறைக்கப்பட வேண்டியதாகிவிட்டது என்று கருத வேண்டி இருப்பதால் அவைகளோடு போட்டி போட்டுக் கொண்டு நமது ஊக்கத்தை வீணாக்குவது நமக்கு அவசியமில்லாத காரியம் என்று நினைத்து, நமக்கு எதிர்ப்பு இல்லாததும் கூடிய வரை அனுகூலமாயிருப்பதாகக் கருதுவதுமான அத்தமிழ்நாடு பத்திரிக்கையை நமது கொள்கைக்காக இல்லா விட்டாலும் சேதிக்காகவாவது அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கின்ற எண்ணத்தின் மீதே ''பகுத்தறிவு'' தினசரி பத்திரிக்கையை இன்று முதல் நிறுத்தி வைக்கலாம் என்று தீர்மானிக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

இதுவரை பகுத்தறிவை ஆதரித்தவர்களுக்கும் அதற்கு உதவி செய்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**புரட்சி - அறிவிப்புக் கட்டுரை - 27.05.1934**



RangaRakes tamilnavarasam.com

# சித்ரவதை
# 23 ஆண்டுகள் சித்ரவதை

''மனித சமூகத்திற்காக என்று சில ஒழுக்கங்களையும், சில நடவடிக்கைகளையும் ஏற்படுத்தி அவை கிரமமாய் நடந்தேறுவதற்காக பயத்தை உண்டு பண்ணும் படியான நிபந்தனைகளைக் கற்பித்து, அக்கற்பனைகளுக்கு மதக் கொள்கை என்று பெயரிட்டு, அம் மதக் கொள்கைக்கு காப்பளிப்பதற்காக கடவுளை உண்டாக்கி வைக்கப்பட்டிருக்கிறது'' என்பதும் மதத்திலும் கடவுளிலும் நம்பிக்கையுள்ள அறிவாளிகள் என்று தங்களை சொல்லிக் கொள்ளும் கடவுள் மதக்காப்பாளர்களின் வாதமாகும்.

மேல் குறிப்பிட்ட ஒழுக்கமும் நடவடிக்கைகளும் நியாயமானதா, பொதுவானதா, அவசியமானதா என்பதைப் பற்றிய விவகாரத்தில் இப்போது நாம் தலையிடவில்லை என்றாலும், கடவுளுக்கும், மதத்துக்கும் காப்பளிப்பதற்காக இந்த அறிவாளிகள் சொல்லும் சமாதானம் சரியானதா? விவகாரத்துக்கு நிற்கக் கூடியதா? என்பதைப் பற்றி நாம் இந்த வியாசத்தில் விவரிக்கிறோம்.

மனிதனுக்குள் புகுத்தப்பட்டிருக்கும் மதப்பித்தானது மதுவை உட்கொண்டவனுக்கு எப்படி அவன் சொந்த புத்தி மறைந்து அவசியமற்றதும், ஒழுங்கும் அறிவும் அற்றதுமான காரியங்களையே நினைக்கவும், பேசவும், செய்யவும் ஆளாகிறானோ அதே போல் மத வெறியானது குறிப்பிட்ட அதாவது மனிதனுக்கு இருக்க வேண்டிய ''ஒழுக்கம் நடவடிக்கை'' என்பவைகள் லக்ஷியமற்றதாகி வெறும் மத பக்தியே லட்சியமுடையதாகி அதற்காக வாழ வேண்டியதையும், அதற்காக உயிர்விட வேண்டியதையும் மனிதனின் முக்கிய கடமையாக ஆக்கப்பட்டிருக்கிறது. இதை மதவாதிகள் உணர வேண்டுமானால் ஒவ்வொரு மதவாதியும் தன் தன் மதத்தைப் பற்றி நினைக்காமல் தனக்குத் தெரிந்த வரையில் பிற மதக் கொள்கைப்படி உள்ள ஒழுக்கங்களையும் நடவடிக்கைகளையும் பிற மதக்காரன் பின்பற்றி நடக்கின்றானா என்பதையும் கவனித்துப் பார்த்தால் ஒவ்வொரு மதக்காரர்களின் யோக்கியதையும், மற்ற மதக்காரர்களுக்குத் தெரியும். மற்றபடி அவரவர் மதக் குற்றம் அவரவர்களுக்குப் புலப்படாது.



ஒழுக்கம் நடவடிக்கைகள் என்பவை ஒரு மனிதன் உலக வாழ்க்கையில் ஜன சமூகத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? மற்ற மனிதனிடத்தில் தான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? மற்ற மனிதன் தன்னிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? என்று எதிர்பார்க்கிறான் என்பவைகளைப் பொருத்ததே ஒழிய வெறும் வேஷம் சடங்கு ஆகியவைகளைப் பொறுத்ததல்ல என்பதாக முடிவு செய்து கொண்டு, பிறகு மேற்சொன்னபடி கவனித்துப் பார்க்க விரும்புகிறோம்.

இந்தப்படி பார்த்தால் எந்த மூடனுக்கும் மதம் பயனற்றது என்பதும், கடவுளை உண்டாக்கினது வெரும் பைத்தியக்காரத்தன மென்பதும் மிக சுலபத்தில் வெட்ட வெளிச்சம் போல் விளங்கி விடும்.

உதாரணமாக, திருடுவதிலும் பொய் பேசுவதிலும், அன்னியனை வஞ்சிப்பதிலும், ஒரு பெண்ணை பலாத்காரமாய்த் தூக்கிச் சென்று துராக்கிருதப் புணர்ச்சி செய்வதிலும் தாராள நோக்கமுடைய ஒரு முஸ்லீம் என்பவன் ஒரு வேளை தொழுகை தவறிவிடுவதையும், மந்திரம் சொல்லி அறுக்காத (ஜீவ வதை செய்யாத) ஜெந்துவின் மாம்சத்தை சாப்பிடுவதையும் பெரிய பாவமாகவும் மத விருத்த (விரோத)மாகவும் கருதுகிறான். சமூகமும் அப்படிப்பட்டவனை முன்னையதைவிட பின்னையதற்கே அதிகமாக வெறுக்கின்றது.

அதுபோலவே பொய்யிக்கும் அக்கிரமங்களுக்கும் அனுகூலித்து வாதாடி வயிறு வளர்க்கும் வக்கீல் தொழில் செய்வதையும், லஞ்சம் வாங்கி அநீதி செய்து பொருள் சேர்த்து ஜீவிப்பதையும், பொய், புரட்டு, போர்ஜரி, திருட்டு முதலிய காரியங்கள் செய்வதையும், மது மாம்சம் அருந்தல் முதலிய ''இழிவான'' காரியங்களைச் செய்வதையும் பற்றி வெட்கப்படாமல் இவற்றில் தீரனென்று தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளும் ஒரு பிராமணன் என்பவன் தான் சிறிது நேரம் பூணூல் இல்லாமல் இருப்பதையும், நெற்றியில் சாம்பலோ மண்ணோ பூசிக் கொள்ளாமல் இருப்பதையும் இறந்து போய் மோட்சலோகத்தில் இருப்பதாய் கருதிக் கொண்டு இருக்கும் தன் தாய் தகப்பன் என்பவர்களுக்கு திதி கொடுக்காததையும் பெரியதொரு பாதகமாகவும் மத விருத்தமாகவும் கருதுகிறான். சமூகமும் அவனை முன்னைய ''இழி'' தொழிலை விட பின்னைய ''தவறு''தல்களுக்கே அதிகமாக வெறுக்கவும் பகிஷ்கரிக்கவும் செய்கின்றது.

அதுபோலவே லஞ்சம் வாங்குவதையும், மக்களை வேட்டையாடு வதையும், நிரபராதியான மக்களை ஆயிரக்கணக்காய் எறும்புகளையும், ஈசல்களையும் விடக் கேவலமாய் மதித்து ஒரு வெடியில் 1000, 2000 பேர்களை கொல்வதையும் தன் மதத்திலேயே மனிதனுக்கு மனிதன் கீழானவன், தீண்டத்தகாதவன் என்று எண்ணுவதையும் நடத்துவதைப் பற்றி வெட்கப்படாமல் இருக்கும் ஒரு கிறிஸ்தவன், ஒரு குறிப்பிட்ட வேளை



RangaRakes tamilnavarasam.com

கோவிலுக்குப் போகாததையும், இரண்டு பெண்டாட்டியை கல்யாணம் செய்து கொள்வதையும், கோவிலுக்கு போய் குருக்கள் முன்னிலையில் கல்யாணம் செய்து கொள்ளாததையும் பெரிய மதக் குற்றமாகவும், கடவுள் விரோதமாகவும் கருதுகிறான். சமூகமும் இப்படிப் பட்டவனை வெறுப்பதில்லை என்பதோடு, சில சமயங்களில் மதிக்கவும் செய்கின்றது. ஆகவே மதங்களின் மூலம் சடங்குகள் மதிக்கப்படுகின்றனவா? ஒழுக்கங்கள் மதிக்கப்படுகின்றனவா? என்பதை உணரலாம்.

ஆரிய மதமானது ஜீவகாருண்யத்தையும் அஹிம்சையையும் சர்வம் பிரமமயம் என்னும் தத்துவத்தையும் உண்மை அருத்தத்தில் அஸ்திவாரமாகக் கொண்டது என்று ஆரியர்களும் அவர்களது அடிமைகளும் சொல்லுகிறார்கள். ஆனால் அனுபவத்தில் வார்த்தை அளவில்கூட ஜீவகாருண்யமோ, அஹிம்சையோ காண்பது கஷ்டமாய் இருக்கிறது. மனிதர்களை மனிதர்கள் மதிக்கும் தன்மையிலும் நடக்கும் இக்குணங்கள் காணப்படுகின்றனவா என்பதை கவனித்தால், ஆரிய மதத்தின் யோக்கியதை யெவருக்கும் விளங்காமல் போகாது. இவ்வாரியர்களின் மற்ற காரியங்கள் எப்படி இருந்தாலும், மதத்திற்காக மதக் கொள்கைப்படி செய்வதாய் சொல்லப்படும் சில காரியங்களில் எவ்வளவு கொடுமையும் வன்னெஞ்சமும் இருக்கிறது என்பதைக் காட்ட சமீபத்தில் கும்பகோணத்தில் நடந்த யாகம் என்று சொல்லப்படும் காரியத்தை பற்றி பொதுஜனங்களுக்கு அறிவிக்கவே இதை எழுதுகிறோம்.

இம்மாதம் 22-ந் தேதி கும்பகோணத்தில் ஆரியர்கள் ஒரு யாகம் செய்தார்களாம். அந்த யாகத்தில் 23 ஆடுகள் ''மோட்ச'' லோகத்திற்கு அனுப்பப்பட்டனவாம். எப்படி அனுப்பப்பட்டன என்றால், உயிருடன் அவ்வாடுகளின் வெதர்களைப் பிடித்து நசுக்கி அவற்றைக் கொன்று அனுப்பப்பட்டனவாம். என்ன அக்கிரமமான காரியம் என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டுகின்றோம். ஜந்துக்களுக்கு பீஜம் அல்லது வெதர் என்பது மிகவும் மெல்லியதும் சிறிது அடிபட்டாலும் அதிக நோயை உண்டாக்குவதென்பதும், ஆரியர்கள் உள்பட யாவரும் உணர்ந்த காரியம். அப்படி இருக்க 23 ஆடுகளை பீஜத்தைப் பிடித்து நசுக்கி அவைகளை சாகடிப்பதென்றால் அந்த 23 ஆடுகளும் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கும் என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டுமா?

இப்படி சித்திரவதை செய்து கொன்ற இக் கொலை பாதகத்துக்கு மதம் ஆதாரம் என்றால், மதங்களின் கொடுமைக்கு வேறு என்ன உதாரணம் வேண்டியிருக்கிறது என்று கேட்கின்றோம்.

ஜீவன்களை வதைக்கும் விஷயத்திலும் கொல்லும் விஷயத்திலும் எல்லா மதங்களும் ஒரே தன்மையை உடையதாகக் காணப்படுகின்றனவே ஒழிய, ஒன்றுக்கொன்று வித்தியாசம் கண்டுபிடிப்பது என்பது கஷ்டமான காரியமாகவே தோன்றுகிறது.



இந்த விஷயங்களில் அரசியல் ஆட்சி நிர்வாகமாவது சரியாய் நடந்து கொள்ளுகின்றது என்றுகூட நம்மால் சொல்ல முடியவில்லை. இப்படிச் சொல்வதால் அரசாங்கத்திற்குக் கோபம் வந்தாலும் வரலாம். ஆனால் அப்படிப்பட்ட கோபத்தை, நாம் பொருட்படுத்த வேண்டுமானால் இப்படிப்பட்ட கொலை பாதகங்களை சகித்தாக வேண்டியதாய் இருப்பதால், சர்க்காரின் நிர்வாகத்தை எடுத்துக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

சாதாரணமாக அரசாங்கம் ஜீவகாருண்ய தத்துவத்தை ஒப்புக் கொள்ளுகின்றது என்றுதான் நாம் கருதி இருக்கிறோம். உதாரணமாக ஒரு கோழியை தலைகீழாக காலைப் பிடித்து தூக்கிக் கொண்டு போவதும், ஒரு பன்றியைத் தலைகீழாக கால்களை கட்டித் தூக்கிச் செல்வதும், ஒரு ஆட்டை கழுத்தில் கயிறு கட்டி தரத்தரவென்று இழுத்துச் செல்வதும், கழுத்துப் புண்ணுடன் ஒரு மாட்டை வண்டியில் கட்டுவதும், வண்டி ஓட்டும் சாட்டைக் குச்சியில் முள்ளைக் குத்தி வைப்பதும், குறிப்பிட்ட பாரத்துக்கு மேல் ஒரு மணுவு இடை அதிகமிருப்பதும் ஆகிய காரியங்கள் எல்லாம் குற்றமாகப் பாவிக்கப்பட்டு அவற்றிற்கு சட்டங்கள் மூலம் தண்டனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவை மாத்திரமல்லாமல் ஒரு மனிதன் தன்னைத் தானே வதை செய்து கொள்வதான, செடில் குத்திக்கொள்வது முதலியவைகளையும் குற்றமெனக் கருதி 144 மூலம் தடை செய்யப்பட்டும் வந்திருக்கின்றன. இப்படி எல்லாம் இருக்க, மேல் கண்டபடி யாகத்தின் பேரால் 23 ஆடுகளை வெதரைப் பிடித்து நசுக்கிக் கொன்று இருப்பது இந்த சட்டத்தின் கீழ் வராது என்று ஒரு சர்க்கார் நினைத்திருக்குமானால் தங்களை ஜீவகாருண்ய சர்க்கார் என்று சொல்லிக் கொள்ள அவர்களுக்கு பூரண உரிமை உண்டா என்று கேழ்க்கின்றோம்.

இதை மத உரிமை என்று சொல்லப்படுமானால், நரபலியும் நரமேத யாகமும் அதாவது மனிதர்களின் விதரைப் பிடித்து நசுக்கிக் கொன்று சுட்டுச் சாப்பிடுவதும் குற்றமில்லை என்றுதானே கொள்ள வேண்டும்.

இம்மாதிரி கொலைபாதகங்களைப் பற்றி 1926 முதல் நாம் கூப்பாடு போட்டு வந்தும், அதை அரசாங்கம் சிறிதும் காதில் போட்டுக் கொள்ளாமல் இருந்து வருவதானது அரசாங்கத்தில் உள்ள பார்ப்பன ஆதிக்கத்துக்கு ஒரு பெரிய எடுத்துக்காட்டாகும்.

இந்தப்படியான கொலை பாதகங்களை லக்ஷியம் செய்யாத ஆரியர்கள், மற்றவர்கள் மாம்சம் சாப்பிடுவதாலும், கொலை செய்வதாலும் அவர்களை தாழ்ந்த ஜாதியார் என்று சொல்ல வேண்டி இருக்கின்றது என்று சொல்லுகிறார்கள். ஜீவன்களுக்கு, சித்திரவதை இல்லாமல் ஒரே வெட்டில் க்ஷண நேரத்தில் அந்த ஜீவனுக்குக் கூட தெரிவதற்கில்லாமல் கொன்று சாப்பிடுகின்றவர்கள் தாழ்ந்த ஜாதியார்களானால், ஜீவன்களைப் பிடித்து அதன் விதரை (பீஜத்தை) பதரப் பதர துடிக்கத் துடிக்க



RangaRakes tamilnavarasam.com

மணிக்கணக்காய் நசுக்கிச் சித்திரவதை செய்து கொண்டு சாப்பிடுகின்றவர்களை எவ்வளவு கீழ் ஜாதி எவ்வளவு வன்னெஞ்ச ஜாதி என்று சொல்லுவது என்று கேட்கின்றோம். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து கொண்டு ஊராரும் உலகத்தாரும் சிறிக்கவும், இகழவும் நடந்து கொண்டு தாங்கள் உயர்ந்தவர்கள் மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் இவனைத் தொடக்கூடாது, அவனைக் கிட்ட அணுகவிடக் கூடாது, மற்றவனை கோவிலுக்குள், சத்திரத்திற்குள் நிழலுக்கு ஒண்டக்கூட விடக் கூடாது என்பன போன்ற ஆணவமான கொடுமையான வார்த்தைகளால் இழிவுபடுத்தினால் எப்படி சகிக்க முடியும் என்றும் இப்படிப்பட்டவர்களை எப்படி சராசரி மனித சமூகத்திலாவது சேர்க்க முடியும் என்றும் கேட்கின்றோம்.

இந்த அக்கிரமங்களும் அநியாயங்களும் எப்படியோ போய்த் தொலையட்டும் என்று விட்டு விடலாம் என்றாலும், நாட்டு மக்கள் எல்லோருமே தங்களை இந்தப்படியான ஆரிய மதத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொள்ளும் அறியாமையையும் அநியாயத்தையும் எடுத்துக் காட்டுவதற்காக இவற்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

''ஜீவகாருண்யச்'' சைவர்கள் இப்போது என்ன செய்கிறார்கள்?

**புரட்சி - தலையங்கம் - 27.05.1934**



# இந்திய சட்டசபைத் தேர்தலும் R.K.S.ம்

இப்போது அரசியல் உலகில் இந்திய சட்டசபைத் தேர்தல் பேச்சே எங்கு பார்த்தாலும் பிரமாதமாகப் பேசிக் கொள்ளப்படுகின்றது. கூடிய சீக்கிரத்தில் இந்திய சட்டசபை கலைக்கப்பட்டு இவ்வருஷத்திலேயே புதிய தேர்தல் நடைபெறப் போகின்றது யாவரும் அறிந்ததே.

இந்திய சட்டசபை ஏற்பட்டு சமீபகாலம் வரை அதாவது சுய மரியாதை இயக்கம் தோன்றும் வரை, நமது மாகாணத்தில் அது (இந்திய சட்டசபை) பார்ப்பனர்களுக்கே ஏகபோக மான்யமாயிருந்தது. இதன் காரணமாகவே தமிழ்நாட்டில் பார்ப்பனரல்லாதார் என்கின்ற சமூகம் மனிதத் தன்மையுடன் இல்லையென்றும், அறிவிலும் ஆற்றலிலும் மிக பிற்பட்டவர்கள் என்றும் இந்தியா முழுவதும் விஷமப்பிரசாரம் செய்வதற்கு பார்ப்பனர்களுக்கு மிக அனுகூலமுமிருந்து வந்தது. அதற்கேற்றாற் போல் இந்திய பத்திரிகை உலகமும் எங்கு பார்த்தாலும் ஏதாவது ஒரு வகையில் பார்ப்பன ஆதிக்கத்தில் இருப்பதால் பத்திரிகைகள் மூலமும் அவ்விஷமப் பிரசாரம் வெற்றி பெற அனுகூலமேற்பட்டது.

இப்போது தோழர்கள் சர்.ஆர்.கே. ஷண்முகம், ஏ. ராமசாமி முதலியார் முதலியவர்கள் இந்திய சட்டசபைக்குப் போக ஏற்பட்டதால் தென்னிந்தியப் பார்ப்பனரல்லாத மக்களின் தன்மை இன்னதென விளங்க இடமேற்பட்டதுடன் பார்ப்பன மக்களின் நம்மை நடத்தும் யோக்கியதையும் ஒருவாறு வெளியாக இடமேற்பட்டது.

இவர்களது (R.K.S & A.R.) கொள்கை என்ன? இவர்களால் மனித சமூகத்திற்கு ஏற்பட்ட நன்மை என்ன? என்ற விவகாரத்தில் இப்போது நாம் பிரவேசிக்கவில்லை என்றாலும், தென்னிந்திய பார்ப்பனர்கள் - தேசபக்தர்கள் - தேசாபிமானிகள் - அரசியல் நிபுணர்கள் என்று சொல்லக்கூடிய அவர்களுடைய யோக்கியதைக்கும் நாணயத்திற்கும் திறமைக்கும் இவர்கள் இளைத்தவர்கள் அல்ல என்பதை கோபுரத்தின் மீது இருந்து கூறுவோம். இத்துடன் மற்றபடி இதுவரை இந்திய சட்டசபைக்கு பார்ப்பனர்கள் நமது பிரதிநிதிகளாய் போய் உட்கார்ந்து சாதித்ததை விட இவர்கள் ஒன்றும் குறைவாய் சாதித்துவிடவில்லை என்றும் பார்ப்பனர்களால் நமது மக்களுக்கு ஏற்பட்ட கெடுதியைவிட இவர்களால் ஒன்றும் அதிகமாய் ஏற்பட்டுவிடவில்லை என்றும் உறுதியாய் புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டுவோம்.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் சமீபகாலமாக இந்திய சட்டசபையில் சர். ஷண்முகம் அவர்களின் அறிவு, ராஜதந்திரம், பொருளாதார நிபுணத்துவம் ஆகிய காரியங்கள் இந்தியா முற்றும் உணர்ந்து உலகம் அறிய ஆரம்பித்ததும், தோழர் ராமசாமி முதலியாரின் பேச்சும் விவகார ஞானமும் இந்தியா முழுவதும் தெரிய ஆரம்பித்ததும் தமிழ்நாட்டு பார்ப்பனர்களுடைய வயிறு பெட்ரோலில் நெருப்பு பிடித்ததுபோல் எறியத் துடங்கி விட்டதால் எப்படியாவது வரப்போகும் தேர்தலில் இவர்களை தோற்கடிக்க செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் நமது பார்ப்பனர்களுக்கு இப்போது ஏற்பட்டு எங்கு பார்த்தாலும் அதே பேச்சாய் இருந்து வருகிறது. கோமணம் கட்டத் தெரியாத பார்ப்பனக் குழந்தை முதல், அய்யர்வாள், சாஸ்திரியார், ஆச்சாரியார் என்று சொல்லப்பட்ட பிரமுகர்கள் வரை ''எப்படி ஷண்முகத்தை தோற்கடிப்பது? எப்படி அவருக்கு இந்திய சட்டசபைத் தலைமைப் பதவி இல்லாமல் செய்வது'' என்பதுதான் இப்பொழுது பெரிய கவலையாய் இருப்பதுடன் அதற்காக யாகம், ஜபம், தபம், மந்திரம் முதலியவை ஒவ்வொரு வீட்டிலும், திண்ணையிலும், பள்ளியரையிலும், கோர்ட்டுகளிலும், கிளப்புகளிலும் நடந்த வண்ணமாகவே இருக்கின்றன.

தோழர் ராமசாமி முதலியாரிடம் கூட பார்ப்பனர்களுக்கு அவ்வளவு அதிகமான ஆத்திரம் இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஏனெனில் அவரை சமயத்தில் சரிப்படுத்திக் கொள்ளலாம் அல்லது பயப்படுத்திவிடலாம் என்கின்ற நம்பிக்கை அவர்களுக்குண்டு. ஏனெனில் அவரும் சில சமயங்களில், தீண்டாமை, கோயில் பிரவேசம், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் முதலிய பல விஷயங்களில் சமயம் போல் நடந்து கொண்ட வரானதால் அவரைப் பற்றி கூட அவர்களுக்கு அதிக கவலையில்லை. ஆனால், தோழர் ஷண்முகம் விஷயத்தில் அதுவும் அவர் இந்திய சட்டசபைத் தலைவர் ஆன பிறகு, அவரைப் பற்றி இமயமலைக்கும் கன்னியாகுமரிக்குமாக ஒரே தொடர்பாய் விஷமப் பிரசாரம் நடந்து வருகின்றது.

இப்போது பாட்னாவில் ஏற்படுத்தப்பட்ட சட்டசபை விவகார போர்டின் முக்கியமான வேலையே எப்படியாவது சர்.ஆர்.கே. ஷண்முகத்தை தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என்பதும், எப்படியாவது அவர் அதற்குத் தலைவராகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதுமேயாகும். அதற்காகவே இப்பொழுது காங்கிரசும் காங்கிரஸ் பக்தர்களும் காங்கிரசுக்காக சிறை சென்று ''தேச பக்தர்களான தியாகிகளும்'' வேலை செய்யப்போகிறார்கள் என்பதும் உறுதியான காரியம். சில பார்ப்பனரல்லாதாரும் புத்தி இல்லாமலோ அல்லது பார்ப்பனர்களுக்கு பயந்தோ, பொறாமையாலோ கூடவே கோவிந்தா போடுகிறார்கள்.

இப்படிப்பட்ட சமயத்தில் தோழர் சண்முகம் இன்னமும் தான் என்ன செய்யப்போகிறார், எந்த தொகுதிக்கு நிற்கப் போகின்றார் என்கின்ற விஷயத்தை ''சிதம்பர இரகசியம்'' போல் வைத்திருப்பது நல்லதல்ல என்பதே நமதபிப்பிராயம்.



இரண்டு தொகுதிகள் அவருக்கு முழு ஆதரவையும் அளிக்கத் தயாராய் இருக்கின்றன என்றே கருதுகின்றோம். அதாவது ஒன்று கோவை, சேலம், வடஆற்காடு ஆகிய ஜில்லாத் தொகுதி, மற்றொன்று இந்திய வியாபாரிகள் சங்கத் தொகுதி. இந்த இரண்டிலும் பூரண வெற்றியை இப்பொழுதே நிச்சயித்துவிடலாம். ஆனாலும் தோழர் ஷண்முகம் தனக்குள்ள பொருளாதார நிபுணத்துவம் வியாபார நிபுணத்துவம் ஆகிய இரண்டையும் உத்தேசித்து இந்திய வியாபாரிகள் பிரதிநிதியாக அங்கம் பெறுவதே சிலாக்கியமானதென்று நாம் கருதுகின்றோம்.

ஏனென்றால் தோழர் ஷண்முகம் அவர்கள் விஷயத்திலும் ரிசர்வு பாங்கி வியாபார விஷயத்திலும் தனது அபிப்பிராயங்களைச் சொல்லவும் அத்துறைகளில் பாடுபடவும் தனக்குள்ள உரிமையை வலியுறுத்த பயன்படும் என்பதோடு தென்இந்திய வியாபாரிகளும் தோழர் ஷண்முகத்தைத் தங்கள் பிரதிநிதியாய் அடையும் கௌரவத்தை பெற இரண்டு கையையும் நீட்டி வரவேற்கக் காத்திருக்கிறார்கள்.

ஆதலால் இவ்வாரத்திலேயே அவரது அபேக்ஷகத்துவத்தையும் இன்ன தொகுதிக்கு என்பதையும் வெளிப்படுத்திவிட வேண்டுமாய் விரும்புகிறோம்.

இதே சமயத்தில் தோழர் ஷண்முகம் அவர்கள் நமது சுயமரியாதை இயக்க சமதர்மத் திட்டத்திற்கு ஆதரவு கூறி இருக்கிறார் என்பதையும் இவ்விஷயத்தில் அரசியல் விஷயத்தை விட சமூகஇயல் அதாவது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் விஷயத்தை முக்கியமாய் கருதி தோழர் ஷண்முகம் அவர்களை நாம் விரும்புகிறோம் என்பதையும், பார்ப்பனரல்லாத மக்கள் யாவரும் இதை உணர்ந்து அவருக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**புரட்சி - துணைத் தலையங்கம் - 27.05.1934**



RangaRakes tamilnavarasam.com

# மத நம்பிக்கையின் விளைவு

வங்காளத்தில் ஒரு பெண் தனது கணவன் நோய்வாய்ப்பட்டு சாகுந் தருவாயிலிருப்பதைக் கண்டு கணவனுக்கு முன் தான் மாங்கல்ய ஸ்திரீயாக இருந்து கணவனுடன் உடன்கட்டை ஏற வேண்டுமென்று கருதி மண்ணெண்ணையை மேலே ஊற்றி நெருப்பு வைத்துக் கொண்டு இறந்து போனதாக அ.பி. செய்தி கூறுகின்றது.

இது எவ்வளவு பரிதாபகரமான விஷயம்? மத நம்பிக்கையினால் எவ்வளவு கொடுமைகளும், கேடுகளும் விளைகின்றன என்பதற்கு இதைவிட வேறு என்ன சாக்ஷியம் வேண்டும்.

''இந் நிகழ்ச்சிக்கு மத நம்பிக்கை காரணமல்ல. காதலே காரணம், கற்பே காரணம்'' என்று சிலர் தத்துவார்த்தம் சொல்லி மதத்தைக் காப்பாற்ற இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அப்படிப்பட்டவர்களை ஒன்று கேட்கின்றோம்.

காதல் என்றும் கற்பு என்றும் ஒன்று இருப்பதாகவே வைத்துக் கொண்டு பார்ப்போமானாலும் இன்று உலகில் புருஷனை சாகக் கொடுத்துவிட்டு விதவையாகவோ அல்லது வேறு ஒருவரை மணந்தோ, இரகசியமாகவோ இயற்கையை அனுபவித்துக் கொண்டிருக்கும் பெண்கள் எல்லோரும் அவரவர்கள் புருஷனிடத்தில் காதலில்லாமல் கற்பு இல்லாமல் இருந்தவர்களா என்று கேட்கின்றோம். மற்றும் இன்று புருஷன் இறந்த உடனோ இறக்கப் போகும் தருவாயிலோ மண்ணெண்ணையை மேலே ஊற்றி நெருப்பு வைத்துக் கொண்டு சாவதற்கு தயாராயில்லாத பெண்கள் எல்லோரும் காதலும் கற்பும் அற்றவர்களா? என்றும் கேட்கின்றோம். ஆகவே மதத்தின் பெயரால் கல்வி அறிவற்ற ஆண்களும் பெண்களும் எவ்வளவு கொடுமைக்கு ஆளாகின்றார்கள் என்பதை அறிந்தும் மதத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பது அறியாமையா, மூர்க்கத்தனமா அல்லது தெரிந்தே செய்யும் அயோக்கியத்தனமா என்பது நமக்கு விளங்கவில்லை.

**புரட்சி - துணைத் தலையங்கம் - 27.05.1934**



# மரணம்

## அநுதாபம்

நமது இயக்க அபிமானியான கோட்டையூர் தோழர் ராம. அள. சிதம்பரம் அவர்களின் புதல்வன் திடீரென்று இறந்த செய்திகேட்டு திடுக்கிட்டோம். இச்செய்தி கேட்ட சில நாட்களுக்குள் அவரது துணைவியாரும் உயிர் துறந்தார் என்ற செய்தி கேட்க பெரிதும் வருந்துகிறோம். ''உலகில் தோன்றி மறைவது இயற்கை'' என்றாலும், இத்தகைய கஷ்ட நஷ்டத்தைக் கேட்க மனம் வருந்தாமலிருக்க முடியவில்லை. உலக இயற்கையை யுணர்ந்த தோழர் ராம.அள. சிதம்பரம் அவர்கட்கு நாம் ஒன்றும் அதிகம் கூறத் தேவையில்லை. நமது அனுதாபம் மட்டும் அவருக்கு உரித்தாகுக!

**புரட்சி - இரங்கல் செய்தி - 27.05.1934**



RangaRakes

tamilnavarasam.com

# ஸ்தல ஸ்தாபனங்கள்

ஸ்தல ஸ்தாபன சுயாட்சி என்று சொல்லப்படும் ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, தாலூகாபோர்டு, கிராமப் பஞ்சாயத்து முதலியவைகள் அரசாங்கத்தின் நேர் பார்வையிலிருந்து ''ஜனநாயகத்துவத்'' திற்கு மாற்றப்பட்டதின் பயனாக, சுமார் இந்த 30 வருஷ காலத்தில் பொது ஜனங்களுக்கு ஏதாவது பயனேற்பட்டதா அல்லது அரசாங்க மேற்பார்வையின் கீழ் இருந்தை விட மோசமான நிலையில் இருக்கின்றனவா என்பது யோசிக்க வேண்டியதும், அதன் உண்மையைப் பாமர மக்கள் அறியும்படி செய்ய வேண்டியதும் அவசியமான காரியமாகும்.

நம்மைப் பொருத்தவரை ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் கலந்திருந்ததைக் கொண்டும், சில ஸ்தல ஸ்தாபன நிர்வாகங்களுக்குத் தலைமை வகித்து நிர்வாகப் பொருப்பை ஏற்றிருந்ததைக் கொண்டும் ஏற்பட்டுள்ள அனுபவத்தையும் மற்றும் அனேக ஸ்தல ஸ்தாபன நிர்வாக விஷயங்களைப் பார்த்தும், கேட்டும் உள்ள அனுபவத்தைக் கொண்டும், ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், ஸ்தல ஸ்தாபன ஆட்சி என்பது பொதுஜனங்கள் ளகையில் இருப்பதைவிட, அரசாங்கத்தின் நேர்ப் பார்வையிலிருந்து வந்ததும், இனியும் அப்படியே இருந்து வருவதும் மேலானது எனக் கூறுவோம்.

அரசாங்க நேர்ப்பார்வையினால் முதலாவது அனுகூலம் என்னவென்றால் ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் இன்று ''ஜனநாயகத்தின்'' கீழ்நடைபெறும் செலவுத் தன்மையில் பகுதி செலவிலேயே நடைபெறக் கூடும் என்பதும், நாணைய விஷயமும் நீதிநிர்வாகப் பாரபக்ஷமற்ற விஷயமும் இன்றுள்ள ஜனநாயக ஆட்சி, நீதி, நிர்வாகம், நாணையம் ஆகியவைகளைவிட பலபங்கு மேலான யோக்கிய முறையில் நடைபெறக் கூடும் என்றும் சொல்லுவோம்.

ஏனெனில் ஸ்தல ஸ்தாபன நிர்வாகப் பொறுப்பிலிருப்பவர்களில் 100-க்கு 90 பேர் அந்நிர்வாகத்தை துஷ்ப்பிரயோகம் செய்தும் மனப்பூர்வமாய் - மனதாரத் தெரிந்து பொருளாதாரத் துறையில் தாருமாறாகவும், கவலையற்றும் கையாடுதல்கள் உள்பட நாணையக் குறைவாக நடந்தும் வருகின்றார்கள் என்று நாம் எழுதினால் அதை கண்டு நமது தோழர்கள் வெட்கப்பட வேண்டுமே ஒழிய, நம்மை குற்றம் காணமாட்டார்கள் என்றே கருதுகின்றோம். உதாரணமாக ஸ்தல ஸ்தாபன கன்ட்ராக்டுகள் பெரிதும் அதன் கௌரவ நிர்வாகிகளான அதன் தலைவர்கள், அங்கத்தினர்கள் ஆகியவர்களின் சொந்தப் பொருப்பிலும், சுயநல வேட்கையிலுமே நடைபெறுகின்றன என்பது சிறிதுகூட ரகசியமான காரியமல்ல.

ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகள் விஷயத்திலோ சகிக்க முடியாத அக்கிரமங்கள் நடைபெறுவதை நாம் எடுத்துக்காட்ட வேண்டுமென்று எவரும் விரும்பமாட்டார்கள் என்றே கருதுகின்றோம்.

ஏனெனில் அரசாங்க மேற்பார்வை ஸ்தாபன சிப்பந்தி களுக்காவது, வேஷத்திற்காகிலும் ஒருவித யோக்யதாம்சமும், அனுபோகமும் ஒழுங்கு முறையும் கவனிக்கப்படுகின்றது. ஸ்தலஸ்தாபன சிப்பந்திகளுக்கு இவற்றில் எதுவும் சரியாக கவனிக்கப்படுவதில்லை. பி.ஏ.க்கள் மாதம் 20 ரூபாய்க்கு திண்டாடும்போது எஸ்.எஸ்.எல்.சி. ஆள்கள், சில சமயங்களில் பாஸ் பண்ணாத ஆள்கள் இந்தக் காலத்தில் நியமிக்கப்பட்டு மாதம் 100 ரூ. 150 ரூ. சம்பளங்களுக்கு எவ்வித ஒழுங்கு முறையும் கவனிக்கப்படாமல் இஷ்டம் போல் சம்பளங்கள் உயர்த்தப்படுவதையும் பார்த்தால் பொதுஜனங்களின் வரிப்பணம் ஸ்தல ஸ்தாபனங்களின் பேரால் ஜனநாயகத்தில் எவ்வளவு தூரம் பாழாக்கப்படுகின்றது என்பது சுலபமாய் விளங்கும்.

மற்றும் சிப்பந்திகள் தேர்தல் (எலக்ஷன்)களில் சம்மந்தப்பட்டதற் காகவும், அங்கத்தினர்கள் தயவிற்காகவும் மற்றும் தலைவர்கள் பலர் தாட்சண்யங்களுக்காகவும் உத்தியோகங்களை உற்பத்தி செய்வதும், அவர்களுக்கு தங்கள் இஷ்டப்படி சம்பளங்கள் அள்ளிக் கொடுப்பதுமாகிய காரியங்களைப் பார்த்தால் அரசாங்க நேர்முக நிர்வாகம் 10 மடங்கு மேலானதென்றே ஏன் சொல்லக் கூடாது.

ஸ்தல ஸ்தாபனங்களில் உத்தியோகங்கள் உற்பத்தி செய்யும் போதும், உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் நிர்ணயிக்கும் போதும், கிரேடுகள் ஏற்படுத்தி உயர்த்தப்படும் போதும், பெரிதும் வரி செலுத்துவோரின் பண விஷயத்தில் தங்களுக்கு கடுகளவாவது பொருப்பு- நாணையம்- கவலை ஆகியவை இருக்க வேண்டாமா என்று கவனிக்கும் அங்கத்தினர்கள், ஸ்தல ஸ்தாபனங்களில் 100-க்கு 5 பேராவது உண்டா என்று கண்டுபிடிப்பது மிக கடினமான காரியமே யாகும். இப்போது உள்ள ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் சிப்பந்திகளை ஏற்படுத்தப்பட்டிருந்தால் இன்றைய செலவில் 3-ல் 1 பாக செலவில் சிப்பந்திகள் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதோடு இன்றைய ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகளின் யோக்கியதையையும், நாணையத்தையும் விட பல மடங்கு அதிகமுள்ளவர்களாகவும் இருக்கக்கூடும் என்பதிலும், நமக்கு சந்தேகமில்லை.

இப்படி யெல்லாம் நாம் எழுதுவதால் அரசாங்க நேர்ப்பார்வையில் உள்ள ஸ்தாபன நிர்வாகங்களும், சிப்பந்திகளும் அவர்களது



RangaRakes tamilnavarasam.com

யோக்கியதைகளும் மேன்மையானதென்றோ, நாணையமானதென்றோ, நீதியானதென்றோ சொல்லுவதாக யாரும் நினைத்துவிடக் கூடாது. அரசாங்க நிர்வாக ஊழல்களும், சிப்பந்திகள் யோக்கியதையும், நாணயக் குறைவும் நமக்கு நன்றாய்த் தெரியும். இவ்விஷயத்தில் நமக்கு 30, 40 வருஷ அனுபவமுண்டு என்றாலும் குறிப்பிட்ட இரண்டொரு விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்களில் அட்டெண்டர் முதல் ஹைக்கோர்ட் ஜட்ஜி வரையிலும் இந்தியர்களைவிட ஆங்கிலேயர்கள் நாணையமும், யோக்கியப் பொருப்பும், நடுநிலையுமுள்ளவர்கள் என்பதை நாம் மறைக்க முயலவில்லை. எப்படி யிருந்த போதிலும் அரசாங்க நேர்முக நிர்வாகம் பொது ஜனங்களுக்கு பொருப்புடையதாக இல்லை என்கின்ற ஆதாரத்தைக்காட்டி கிளர்ச்சி செய்து அடைந்த ஜனநாயக ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் அரசாங்க நேர்ப் பார்வை நிர்வாகத்தைவிட கேவலமாக நடைபெறுகின்றது என்பதைக் காட்டுவதற்காகவே இவற்றை எழுதுகிறோம்.

மற்றும் தேர்தல்களில் நடக்கும் நீதிக் கொடுமையும், நாணையக் குறைவும் ஒருபுறமிருக்க, ஸ்தல ஸ்தாபனங்களில் அதன் அங்கத்தினர்களுக்குள் ஏற்படும் கட்சிப் பிரதிகட்சி உபத்திரவங்களால் நிர்வாகம் கெடுதல், நஷ்டமடைதல் முதலாகிய காரியங்கள் அரசாங்க நேர்முக ஆட்சியில் இருக்க முடியாது. சமீபகாலமாக அதாவது சுமார் 20 வருஷ காலமாக அரசாங்க ஸ்தல ஸ்தாபன இலாக்கா ‘‘ஜனநாயக’’ மந்திரிகள் கைக்கு வந்த பின்பு ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இருந்த - இருக்க வேண்டிய யோக்கியதைகள் அனேகம் அடியோடு குறைந்து போய்விட்டன. சாதாரணமான மீன் கடைகள், கள்ளுக்கடைகள் என்று சொல்லும்படியான இடங்களில் நடக்கும் நடவடிக்கைகள், வார்த்தைப் பிரயோகங்கள் ஆகியவைகள் பெரிதும் பெருகி வருகின்றன. எங்காவது ஒன்று இரண்டு ஸ்தல ஸ்தாபனங்கள் சற்று கௌரவமாய் நடைபெறுகின்றது என்று சொல்லப்படுமானால் அவை பெரிதும் தலைவர் என்று சொல்லும்படியானவரின் ஏதேச்சாதிகாரத்திலும், அத்தலைவருடைய சுயநல லாபத்திற்கும் அனுகூலமாய் நடந்து வருவதாய் இருக்கலாம் அல்லது ஒன்று இரண்டு தனி விசேஷத்துவமாய் இருக்கலாம். நாம் 100-க்கு 90 எண்களைப் பொருத்தே எழுதுகிறோம்.

ஸ்தல ஸ்தாபனங்கள் மந்திரிகள் ஆட்சிக்கு வந்தபின் அதிக மோசமானதற்குக் காரணம் சொல்ல வேண்டுமானால் உண்மையான ஜனநாயகத்துக்கு மக்களை தகுதியாக்காமல் பாமர மக்கள் பெயரால் ஒரு சிலர் அதிகாரமும், பதவியும் பணமும் அனுபவிக்கத்தக்க மாதிரியான ‘‘ஜனநாயகம்’’ பெற்றதாலும், அப்படிப் பெற்றவர்கள் ‘‘ஜனநாயக ஆட்சியை’’ தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளும் கருத்தில் கட்சிபேரால் நிர்வாகம் செலுத்த வேண்டியதாக ஏற்பட்டதினாலும், அதற்கு கௌரவமும், பிடிப்பும் இல்லாமல் போக நேரிட்டுவிட்டது.





நமக்குத் தெரிய ஸ்தல ஸ்தாபனங்களில் மனதார பணத்தைக் கையாடினவர்களையும் பொய் கணக்கு எழுதி பணத்தை எடுத்துக் கொண்டவர்களையும் கட்சி காரணமாக என்று கேள்வியும் கேட்பாடும் இல்லாமல் விட்டுவிடப்பட்டிருக்கிறது.

நிற்க, பொது முறையில் சமீபத்தில் நடந்த கல்கத்தா முனிசிபல் மேயர் தேர்தல் முதலிய பல தேர்தல்களைப் பார்த்தாலும் ஜனநாயகம் எப்படி இருக்கின்றது என்பதும் ஒருவாறு அறியலாம். ஜனநாயகம் என்பதும், ஜனநாயகத்துவத்திற்கு உட்பட்ட அரசர்கள் ஆட்சி என்பதும், குடியாட்சி என்பதும் ஆகிய ஆட்சிகளெல்லாம் இன்றைய உலகில் கஷ்டப்பட்டு உழைத்து சாப்பிடும் மக்களுக்கு ஒரே பலனைத் தான் கொடுத்து வருகின்றன. ஆனால் அளவில் சிறிது வித்தியாசங்கள் இருக்கலாம். பயன் எல்லாம் ஒரே மாதிரியாகத்தான் இருந்து வருகின்றது. இக்கஷ்டங்கள் ஒழிக்கப்பட வேண்டுமானால் இந்த 10 வருஷ காலமாக எப்படி ஸ்தல ஸ்தாபன அதிகாரங்கள் ‘‘பொது ஜனங்’’களிடம் இருந்து சிறிது சிறிதாக பிடுங்கப்பட்டு விட்டதோ, அது போலவே இப்பொழுது இருக்கும் மற்றும் சில அதிகாரங்களும் கூடிய சீக்கிரத்தில் பிடுங்கப்பட்டு கடைசியாக மற்ற இலாக்காக்களைப் போலவே சகலமும் அரசாங்க நேரடியான ஆதிக்கத்திற்குப் போய் இப்போது இருப்பதுபோன்ற பொது ஜனங்களின் சம்மந்தத்தில் இருப்பதை மாற்றிவிட வேண்டியதே அவசியமாகும்.

ஏனெனில் பொது ஜனங்களுக்கு மிகவும் முக்கியமான விஷயங்களை ஸ்தல ஸ்தாபனம், ஜனநாயகம் என்னும் பேரால் ஜனநாயகத்துவம் அறியாத - அதற்கு லாயக்கில்லாத மக்களிடம் போய்ச் சேரும்படியான மாதிரியில் ஏற்பாடுகள் செய்து அவர்கள் வசம்விட்டுப் பாமர மக்களை (ஏற்கனவே அரசாங்கம் உருஞ்சுவது ஒரு புறமிருக்க) இவர்கள் ஒருபுறம் உருஞ்சும்படி செய்வது மிகப் பரிதாபகரமான காரியமாகும்.

சமீப காலத்தில் சில முனிசிபாலிட்டிகளிலும், ஜில்லா போர்டுகளிலும் ஏற்பட்ட சம்பவங்களையும், அது விஷயமாய் ஸ்தல ஸ்தாபன இலாக்கா நடந்து கொண்ட மாதிரியையும், அதனால் பொதுஜனங்கள், பாமர மக்கள் எப்படி எப்படி பாதிக்கப்படுகிறார்கள், அவமானப்படுத்தப்படுகிறார்கள் என்பதையும் உணர்ந்தே நாம் இப்படி எழுதுகின்றோம்.

முடிவாக ஒரு விஷயத்தைக் குறித்துவிட்டு இதை முடிக்கின்றோம். அதாவது திருச்சி முனிசிபல் சேர்மனை அரசாங்கம் விரும்பாமல் அவரைப் பதவியில் இருந்து நீக்கியாய்விட்டது. பொது ஜனங்கள் இப்போது அவரையே விரும்பி மீண்டும் தேர்ந்தெடுத்து அரசாங்கத்தை அவமானப் படுத்திவிட்டார்கள். இது அரசாங்க முடிவுக்கு விரோதமாக ஜனங்கள் நடந்து கொண்ட காரியம் என்று அரசாங்கம் சொல்லி விடலாம். ஆனால் பொதுஜனங்கள் விரும்பாமல் மதுரை ஜில்லா

RangaRakes tamilnavarasam.com

போர்டு தலைவரை நீக்கிவிட பெரும்பான்மையோர் சம்மதித்து அபிப்பிராயத்தை முறைப்படி தெரிவித்தார்கள். இதை அரசாங்கம் லட்சியம் செய்யாமல் பொது ஜனங்களை அவமானப்படுத்தி விட்டதுடன் அவருக்கு (அப்படிப்பட்ட மதுரை ஜில்லா போர்டு தலைவருக்கு) ஒரு உத்தியோகத்தை சிருஷ்டித்து பொது ஜனங்களுடைய வரிப்பணத்திலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பளமாகக் கொடுக்கப்பட்டும் வருகின்றது. போறாக் குறைக்கு திருநெல்வேலி, நீலகிரி (ஒத்தை) ஆகிய சேர்மென்களுக்கும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி சேர்மனையே மறுபடியும் பொதுஜனங்கள் தெரிந்தெடுப்பார்கள் என்பதில் நமக்கு சந்தேகமில்லை. இதனாலும் அரசாங்க ஸ்தல ஸ்தாபன இலாக்கா மற்றொரு தடவை பொது ஜனங்களால் அவமதிக்கப்பட்ட அவமானத்திற்கு ஆளாகலாம். இந்தக் காரியங்கள் நியாயத்தையும் நிர்வாக ஒழுங்கையும் ஆதாரமாகக் கொண்டு நடைபெற்றவைகளா அல்லது கக்ஷி - ஜாதி அபிமானம்- சுயநலம் ஆகியவைகளை லக்ஷியமாக கொண்டு நடை பெற்றவைகளா என்று பார்த்தால் நியாயத்தைவிட கக்ஷியும் ஜாதி அபிமானமே அதிகமாய் தாண்டவமாடி இருக்கிறது என்பது நமது அபிப்பராயம். ஆனால் நிர்வாகிகளிடம் (ஸ்தல ஸ்தாபன தலைவர்களிடம்) பல ஒழுங்குத் தவருதல்கள் இருந்திருக்கலாம் என்றாலும் அவ்வித ஒழுங்குத் தவருதல்களை விட பலமடங்கு அதிகமான ஒழுங்குத் தவருதல்கள் (நாணையத் தவரான குற்றங்கள்) செய்தவர்களையெல்லாம் சும்மா விட்டு விட்டு ஒருவர் இருவர் ஒழுங்குத் தவறுதல்கள் (அதுவும் சட்டத் தவருதல்கள்) செய்ததை மாத்திரம் கவனித்தால் அது வாதத்திற்கு சமாதானமாகுமே ஒழிய நியாயத்திற்குச் சமாதானமாகாது. ஆதலால்தான் ஸ்தல ஸ்தாபன இலாக்காவில் மேற்பார்வை கூட அரசாங்கத்தின் நேரடியான பார்வைக்குள் போய்விட வேண்டுமென்று விரும்புகின்றோம். ஏனெனில் ஸ்தல ஸ்தாபனங்கள் எப்படி சிலருடைய (செல்வவான்கள் படித்தவர்கள் ஆகியவர்களுடைய) நன்மைக்கு பயன்படுகின்றனவோ அதுபோலவேதான் ஸ்தல ஸ்தாபன நிர்வாக இலாக்காவும் பிரபுக்கள், ஜமீன்தாரர்கள், செல்வவான்கள், படித்தவர் ஆகியவர்களுடைய நன்மைக்காக இருந்து வருகின்றது. இதுவரையில் இந்த இரண்டு துறையும் அரசாங்க நேரடி மேற்பார்வை, நேரடி நிர்வாகம் என்று சொல்லப்படுவதை விட ஏழை மக்களுக்கு, உழைப்பாளிகளுக்கு எவ்வித நன்மையும் அதிகமாய்ச் செய்துவிடவில்லை என்பதுடன் பல தீமைகளும் செய்யாமல் இருக்கவில்லை என்று விசனத்துடன் கூறி முடிக்கிறோம்.

**புரட்சி - தலையங்கம் - 03.06.1934**



# ஜஸ்டிஸ் கட்சி

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் தோழர் பொப்லி ராஜா அவர்களும், தென்னிந்திய நல உரிமைச் சங்க அக்கிராசனர் தோழர் செட்டி நாட்டுக் குமாரராஜா அவர்களும் கக்ஷி சம்மந்தமான சில விஷயங்களைப் பற்றி யோசிப்பதற்காகவென்று இம்மாதம் 7, 8 தேதிகளில் மீட்டிங்குகள் கூட்ட ஏற்பாடு செய்திருப்பதாய் கட்சி அங்கத்தினர்களுக்குத் தனித்தனி அழைப்பு அனுப்பி இருக்கிறார்கள்.

அக்கட்சியானது அதாவது தென்னிந்திய பார்ப்பனரல்லாதார் கட்சியானது அரசியலிலும், சமூக இயலிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், வாழ்க்கைப் போட்டியில் சம சந்தர்ப்பம் இல்லாத மக்களுக்கும் விடுதலையும், சமத்துவமும் அளிப்பதற்காக என்று தோற்றுவிக்கப்பட்டது என்கின்ற உண்மை யாவருமறிந்ததாகும். அப்படிப்பட்ட ஜஸ்டிஸ் கட்சியானது இப்போது நாளடைவில் செல்வந்தர்களான முதலாளிமார்கள், ஜமீன்தார்கள் ஆகியவர்கள் ஆதிக்கத்திற்குள்ளாகி அவர்களது நன்மைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும், பெருக்கிக் கொள்ளவுமான வழிகளுக்கே பயன்படக்கூடிய மார்க்கத்தில் திருப்பப்பட்டு வருகின்றது என்கின்ற விஷயம் பார்ப்பனரல்லாத மக்களில் பெரும்பான்மையோர் அறிந்ததாகும்.

ஆனாலும் அதை பழயபடி தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்கள் விடுதலைக்கும், சமத்துவத்துக்கும் திருப்ப முடியாது என்று சொல்லிவிடுவதற்கில்லை என்பது இன்னமும் நமது அபிப்பிராயம். பார்ப்பனரல்லாத சாதாரண மக்கள், அதாவது ஜமீன்தார், பிரபுக்கள், முதலாளிகள் அல்லாத மக்கள் ஒரு கட்டுப்பாடாய் இருந்து நெருக்குவார்களானால் அவர்கள் வழிக்கு வந்து கட்சியின் உண்மை நோக்கத்திற்கு உழைக்க முன்வந்தாலும் வரலாம். ஆகையால் கட்சியின் உண்மைத் தத்துவத்தில் அக்கரையுள்ள தோழர்கள் அந்தத் தேதிகளில் சென்னைக்கு வந்து தங்கள் அபிப்பிராயங்களை அதன் தலைவர்கள் என்போர்கள் அறியும்படி செய்ய வேணுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

இப்போது கூட்டம் கூடுவதன் நோக்கம் பார்ப்பனர்களைக் கட்சியில் சேர்க்கலாமா வேண்டாமா என்பதற்காகவும், வரப்போகும்



RangaRakes tamilnavarasam.com

M.L.A. எலெக்ஷன் விஷயத்தைப் பற்றி யோசிப்பதற்காகவுமே முக்கியமாய் கூட்டப்படுவதாய் இருந்தாலும் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொண்டு செய்யப் போகும் வேலை என்ன? இந்திய சட்டசபையில் நமது கொள்கை என்ன? இதுவரை நாம் என்ன செய்து வந்திருக்கிறோம்? என்பவைகளையும் தெளிவு படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆதலால் அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் தவறாமல் சென்று தைரியமாய் தங்கள் அபிப்பிராயம் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்.

**புரட்சி - துணைத் தலையங்கம் - 03.06.1934**



# யாகப் புரட்டு

## ஜீவகாருண்யம்

தலைவரவர்களே! தோழர்களே!

ஜீவகாருண்யத்தைப் பற்றி நான் பேச வந்திருப்பது உங்களில் பலருக்கு வேடிக்கையாகக் காணப்படலாம். ஏனெனில், நான் நீங்கள் பெரும்பாலும் கருதி இருக்கிற ஜீவகாருண்யத்தைச் சேர்ந்தவனல்ல என்று நீங்கள் கருதி இருப்பதேயாகும். ஜீவ காருண்யம் என்கின்ற வார்த்தைக்கு ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமான அர்த்தம் கொண்டிருக்கிறார்கள். சிலர் மாம்சம் சாப்பிடாமல் இருந்தால் அதுவே பெரிய ஜீவகாருண்யமென்றும், மற்றப்படி ஜீவர்களுக்கு எவ்வித மன வருத்தத்தையும், உடல் வருத்தத்தையும் செய்தால் குற்றமில்லை என்றும் கருதி இருக்கிறார்கள். சிலர் ஜீவர்களை ஹிம்சைப்படுத்தாமல் இருந்தால் போதும் என்றும், மாம்சம் சாப்பிடுவதைப் பற்றிக் குற்றமில்லை என்றும் கருதி இருக்கிறார்கள்.

சிலர், சில ஜந்துக்களை மாத்திரம் இம்சைப்படுத்தக் கூடாதென்றும், மற்ற ஜந்துக்களைப் பற்றிக் கவலை இல்லை என்றும் கருதி இருக்கிறார்கள். ஜீவகாருண்யத்திற்கு இந்தப்படி எத்தனையோ விதமான கருத்துக்களும், தத்துவங்களும் இருக்கின்றன.

விவரமாய்ச் சொல்ல வேண்டுமானால் ஜீவகாருண்யம் என்பது ஒவ்வொரு தேசத்துக்கும், ஒவ்வொரு மதத்துக்கும், ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு விதமாய்க் கருதப்படுகின்றது.

இந்துக்கள் என்பவர்கள் பசுவை வணங்குவார்கள். அதனிடத்தில் அளவுக்கு மீறிய மரியாதையும், ஜீவகாருண்யமும் காட்டுவார்கள். யாராவது பசுவைக் கொன்றால் - சாப்பிட்டால் அவர்களிடம் குரோதமும், வெறுப்பும் கொள்ளுவார்கள். இந்தக் காரணத்தினாலேயே இந்துக்களுக்கு மகமதியர்கள் மீது வெறுப்பும் அசூசையும் இருந்து வருகின்றன. இதனாலேயே பல இடங்களில் இந்து முஸ்லீம் கலகங்களும் கக்ஷிகளும் உண்டாகின்றன. இந்துக்களிலேயே பறையர், சக்கிலியர் என்று அழைக்கப்படும் வகுப்பார், மாட்டு மாம்சம் உண்பதினாலேயே அவர்களைக் கீழ் ஜாதிக்காரார்கள் என்று கருதுவதாகவும் அதனாலேயே அவர்களைத் தொடுவதற்கு அஞ்சுவதாகவும் சொல்லப்படுகின்றன. இதை அனுசரித்து பல சாஸ்திரங்களும் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் இப்படிப்பட்ட இந்துக்கள் பசுமாடுகள் விஷயத்தில் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்று பார்த்தால் வண்டியிலும் உழவிலும், ஏத்தத்திலும், செக்கிலும் கட்டி அதை சாகும் வரை உபத்திரவிக்கிறார்கள். அதை நல்ல காளைப் பருவத்தில் கட்டிப் போட்டு விதர்களை நசுக்கி கொட்டாப்பிடியால் தட்டிக் கரைத்துக் கொடுமைப்படுத்துகிறார்கள். அதன் பாலை அதன் கன்றுக்குக் கொடுக்காமல் அதற்கு வெறும் புல்லைப் போட்டுவிட்டுத் தாங்கள் சாப்பிடுகிறார்கள். இப்படி அர்த்தமற்ற ஜீவகாருண்யம் பலப்பல ஜீவர்கள் பெயரால் எத்தனையோ விதத்தில் உலகத்தில் வழங்குகின்றன. பக்ஷி, மிருகம், ஊர்வன ஆகிய விஷயங்களில் காட்டப்படும் ஜீவகாருண்யத்தில் ஒரு சிறு பாகம்கூட மனித ஜீவனிடத்தில் மக்கள் காட்டுவது அருமை என்றே சொல்லலாம்.

மக்கள் சமூக வாழ்க்கைத் திட்டத்தின் பயனாய் ஒருவரை ஒருவர் எவ்வளவு கொடுமைப்படுத்துகிறார்கள்? எவ்வளவு கொடுமைக்கும் துக்கத்துக்கும் ஆளாக்குகிறார்கள்? என்று பார்த்தால் நடைமுறையில் உள்ள ஜீவகாருண்யங்கள் முட்டாள் தனமானதென்றே சொல்லலாம்.

## நான் ஏன் வந்தேன்?

நான் ஏன் இங்கு இந்த ஜீவகாருண்யக் கூட்டத்திற்கு வந்தேன் என்று சிலர் கேட்கலாம். உண்மையிலேயே இங்கு கடலாடியில் நடக்கும் யாகத்தில் ஏதோ சில ஐந்தோ - பத்தோ ஆடுகள் கொல்லப்படுவதை நான் பிரமாதமாகக் கருதி இங்கு வரவில்லை. லக்ஷக்கணக்கான ஆடுகள் மாடுகள் மற்றும் சில ஜீவர்கள் தினமும் கொல்லப்படுவது எனக்குத் தெரியும். அப்படிப்பட்ட கொலைகளை என் போன்றவர்களால் நிறுத்துவிட முடியாது என்பதும் எனக்குத் தெரியும். அப்படி இருக்க, பின் ஏன் நான் இங்கு வந்தேனென்றால் யாகத்தின் புரட்டையும், அது செய்யப்படுவதின் உள் எண்ணத்தையும் அதனால் ஏற்படும் பலன்களையும் ''உயர்ந்த ஜாதியார் அஹிம்சா தர்மமுள்ள அந்தணர்'' என்று கர்வமுடன் தங்களைச் சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களின் யோக்கியதையையும் பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டவும் கொல்லப்படும் பிராணிகள் யாகத்தின் பேரால் எப்படிக் கொல்லப்படுகின்றன என்பதையும் ஜனங்களுக்கு அறிவித்து இப்படிப்பட்ட கொடுமையான சித்திரவதை இனி நிகழாமல் இருக்கும்படி செய்ய சர்க்காரைத் தூண்டுவதற்காகவுமே இங்கு வந்திருக்கிறேன்.

இவற்றில் என் அபிப்பிராயம் தவறுதலாய் இருந்தாலும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் நான் உண்மையானதென்று அறிந்ததை எவ்வித விருப்பு வெறுப்பு இல்லாமல் பொது நன்மையை உத்தேசித்து சொல்லுகின்றேன். உங்களுக்கு சரியென்று பட்டதை எடுத்துக்கொண்டு அதற்கும் உங்களாலான உதவி செய்யுங்கள். மற்றதைத் தள்ளிவிடுங்கள்.



## கொலைக் கொடுமை

முதலில் கொலைக் கொடுமைகளைப் பற்றிச் சொல்லுகிறேன். யாகத்தில் கொல்லப்படும் ஆடுகள் எப்படிக் கொல்லப்படுகின்றன என்பது தங்களில் சிலருக்காவது தெரிந்திருக்குமென்றே நினைக்கிறேன். நான் அறிந்த மட்டில் ஆட்டை கால்களைக் கட்டிக் கீழே தள்ளி கொம்பைப் பிடித்து ஒருவர் அமிழ்த்துக் கொண்டு வாய்க்குள் மாவைத் திணித்துக் கொண்டிருக்க ஒருவர் நன்றாக மூச்சுவிடாமல் கட்டி சத்தம் போடாமல் செய்து ஒருவர் விதர்களை கிட்டி போட்டு நசுக்க, மற்றவர் வயிற்றில் ஆயுதங்களால் இடித்து கிழித்து அதன் சிற்சில உறுப்புகளை தனித் தனியாய் அறுத்து எடுப்பதன் மூலம் கொல்லப்படுகிறதாம். இது சகிக்கக் கூடியதா? உயிர்களிடத்தில் அன்பு காட்டக்கூடிய ஜாதியார் செய்யக்கூடியதா? அஹிம்சைக்காரருக்கு ஏற்றதா? இப்படிப்பட்டவர்கள் மேல் ஜாதிக்காரர்களா? இவர்களுக்குப் பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்ள உரிமையுண்டா? மற்றவர்களைப் பார்த்து கீழ் ஜாதியார் என்றும், ஜீவகாருண்யமில்லாதவர்கள் என்றும், சண்டாளர்கள் என்றும் பாபிகள் என்றும், பாதகர்களென்றும் அழைக்க இவர்களுக்கு உரிமை உண்டா? யோசித்துப் பாருங்கள். ஆடு கோழியை தலைகீழாகப் பிடிப்பதையும், தர தரவென்று இழுப்பதையும் ஜீவஹிம்சை என்று சட்டஞ்செய்து அம்மனிதர்களைத் தண்டிக்கும் சர்க்கார் இவர்களை என்ன செய்ய வேண்டும்? ஆலையிலிட்டு நசுக்கும்படி சட்டம் செய்தால் அதை தப்பு என்று சொல்ல முடியுமா? யோசித்துப் பாருங்கள். இந்த யாகம் ஆட்டுக்கு மாத்திரமில்லையாம். மாடு, மனிதர், குதிரை முதலியவைகளுக்கும் உண்டாம். இப்படியே விட்டு விட்டால் நாளைக்கு இந்த ஆடுகளின் கதிதானே மனிதர்களுக்கும் ஏற்படும். மத சம்மந்தத்தில் அரசாங்கம் நுழைவதில்லை என்று சொல்லி அரசாங்கம் சுலபமாய் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் நாளைக்கு நரமேதயாகம் செய்து 10, 20 மனிதர்களை இந்தப்படி சித்திரவதையான கொலைபாதகம் செய்தால் மதத்தில் பிரவேசிக்காமல் அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்குமா? அதுபோலவே இப்போது கருதி இப்படிப்பட்ட மூர்க்கத்தனமான சித்திரவதைக் கொலைகளையும், ஹிம்சைகளையும் அரசாங்கம் ஏன் நிறுத்தக்கூடாது? பார்ப்பனர்களுக்குப் பயந்தோ, மதத்திற்குப் பயந்தோ தாங்கள் சும்மா இருப்பதாக சொல்லுவார்களானால் இப்படிப்பட்ட கொலையும், சித்திரவதையும் தங்கள் மதத்திற்கு விரோதம் என்று கருதி அதற்காக வேதனைப்படும் ஜயின மதத்தினுடையவும், ஜயினர்களுடையவும் கொள்கையும், மரியாதையும், உணர்ச்சியும் காப்பாற்றப்பட வேண்டாமா என்று கேள்க்கின்றேன்.

## இராமாயணம்

தோழர்களே! இந்தக் கொடுமைகளை உருவகப்படுத்திப் பார்க்கும்போது இராமாயணக் கதையின் தத்துவம் இதில் தாண்டவமாடுகின்றது.



RangaRakes tamilnavarasam.com

இராவணனையும் அவர் குடும்பத்தையும் ஆரியர்கள் இழித்துப் பழித்துக் கூறி அவன் அரசை நாசமாக்கியதாகக் காணப்படுங் கதையை இப்போது நினைத்துப் பாருங்கள். இராமாயணக் கதைக்கு அஸ்திவாரமே இந்த சித்திரவதைக் கொலைபாதகச் செயல்களான யாகமே யாகும். தாடகை என்கின்ற ஒரு பெண் யாகத்தைக் கெடுத்ததற்காகத்தானே கொல்லப்பட்டிருக் கிறார். இந்த மாதிரி கொலை பாதக யாகத்தைக் கெடுக்க யார்தான் துணியமாட்டார்கள்? யாகத்தைக் கண்டு மனம் வருந்தி பரிதாபப்பட்டு அதை நிறுத்த முயர்ச்சித்ததல்லாமல் அந்த அம்மாள் செய்த கெடுதி என்ன?

நமக்குச் சக்தியில்லாததாலும், நம் உணர்ச்சிக்கு அனுகூலமான ஆக்ஷி இல்லாததாலும் நாம் எல்லோரும் இங்கு வந்து கத்துகிறோம். சக்தியும் ஆக்ஷி உரிமையும் இருக்குமானால் நாம் தாடகையைப் போல் தானே நடந்து கொண்டு தீருவோம். யாகத்தை வெறுத்ததற்காக அந்த அம்மாளைக் கொன்றுவிட்டது மல்லாமல் அந்தம்மாளை இழித்துக் கூறும் முறையில் அந்த அம்மாள் மூத்திரம் பெய்து யாக நெருப்பை அணைத்துவிட்டார் என்றும் மிருகங்களையும், பக்ஷிகளையும் பச்சையாய் சாப்பிட்டார் என்றும், பொருத்தமற்றதும் போக்கிரித்தனமானதுமான ஆபாசக் கதைகளையும் கட்டி விட்டார்கள். இதிலிருந்தே ராமாயணக் கதை ஜீவகாருண்யம் காரணமாய் ஏற்பட்ட ஆரியர் திராவிடர் கலகம் என்றும், ஆரியர் தங்களை உயர்த்தியும் திராவிடர்களைத் தாழ்த்தியும் திராவிடர்களுக்கு என்றும் பழி இருப்பதற்காக எழுதி வைத்துக் கொள்ளப்பட்டது என்றும் ராம லக்ஷ்மணர்கள் ஆரியக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ராவணனாதியோர் திராவிட - அதாவது ஜீவகாருண்யக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் விளங்கவில்லையா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

அக்கதையில் மிருகங்களையும் ஜீவர்களையும் கொல்லும் விஷயங்களிலும், மது மாம்சம் சாப்பிடும் விஷயங்களிலும், சூதுவாது செய்த விஷயங்களிலும் பெண்களை இழிவாய் நடத்திக் கொடுமைப் படுத்தின விஷயங்களிலும் சிறிதும் தயங்காத ராம லக்ஷ்மணக் கூட்டங்களை இவ்வளவு தூரம் புகழ்ந்திருப்பதுமல்லாமல் அவர்களைக் கடவுளாகக் கருதச் செய்து திராவிட மக்களைக் கொண்டே பூஜிக்கவும் வணங்கவும் புகழவும் செய்து விட்டார்கள். அது போலவே ராவணாதியர்கள் இந்த யாகத்தை வெறுத்ததல்லாமல் வேறொரு கெடுதியும் ராம லக்ஷ்மணாள் செய்த அளவுகூட செய்யாதவர்களை திராவிட மக்களைக் கொண்டே இகழச் செய்துவிட்டார்கள். திராவிட மக்களில் சிலரையே இவ்விதப் புகழ்ச்சியும், இகழ்ச்சியும் செய்து கொண்டு பிழைக்கவும் செய்துவிட்டார்கள். ஒரு வயிற்றில் பிறந்த இருவரில் ஒருவன் (ராவணன்) ராக்ஷதனாம்; ஒருவன் (விபூஷணன்) தேவகணத்தைச் சேர்ந்த(ஆழ்)வனாம். என்ன புரட்டு! யோசித்துப் பாருங்கள். ஒரு பெண்ணின் மூக்கையும் முலையையும் அறுத்த பாவிகள் கடவுளின் அவதாரங்களாம். ஆயிரக்கணக்கான ஆடு, குதிரை, மாடு முதலியவைகளை மேற்கண்டபடி சித்திரவதை செய்து கொன்று தின்றவர்கள் தேவர்களாம். இதிலிருந்து கடவுள்கள், தேவர்கள், பிராமணர்கள் ஆகியவர்களின் யோக்கியதைகளை சற்று நினைத்துப் பாருங்கள். திராவிட மக்களின் யோக்கியதைகளையும் ஏமாளித்தனத்தையும் எண்ணிப் பாருங்கள்.





## புண்ணியம், சொர்க்கம்

இது நிற்க, இந்த யாகங்கள் புண்ணிய காரியங்களாம். சுவர்க்கத்திற்குக் காரணமானவைகளாம். புண்ணியம், சொர்க்கம் என்கின்ற புரட்டைப் பாருங்கள். ஜீவர்களை சித்திரவதை செய்தல் புண்ணியமாகவும் சொர்க்க லபிதமாகவும் இருந்தால் இனி பாபத்துக்கும் நரகத்துக்கும் காரணமான காரியம் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. நமக்குப் புண்ணியம் சொர்க்கம் வேண்டுமானால் நமக்கு இஷ்டமானவர்களைப் பிடித்து கால் கைகளைக் கட்டிப் போட்டு வாயில் மண்ணை அடைத்து விதரைப் பிடித்து நசுக்கிக் கொன்று போட்டால் புண்ணியமும் சொர்க்கமும் கிடைத்துவிடும்போல் இருக்கிறது. வேண்டுமானால் சில மந்திரங்களையும் சொல்லிவிடலாம். இதில் நமக்கு இரண்டு வித லாபம் போலும். சொர்க்கம் நரகம் என்பவைகள் சோம்பேறிகளின் வயிற்றுப் பிழைப்பு சாதனங்கள் என்று பல தடவை நான் சொல்லி வந்திருக்கிறேன். பாடுபட்டு உழைத்தவன் பொருளைக் கையைத் திருகிப் பிடுங்கிக் கொள்வதற்குப் பதிலாக சொர்க்க நரகங்கள் என்னும் பூச்சாண்டிகளைக் காட்டி பயப்படுத்திப் பிடுங்கிக் கொள்ளப்படுகின்றன. இப்படிப்பட்ட சொர்க்க நரகத்துக்கு உண்மையான அர்த்தம் நல்ல விதத்தில் செய்ய வேண்டுமானால் மனிதனின் மூர்க்க சுவாபமும் பழிவாங்குந் தன்மையும் சொர்க்க நரகம் என்னும் வார்த்தைகளால் கற்பனைகளால் பிரதிபலிக்கின்றது என்பதேயாகும்.

## யாகத்தின் கருத்து

இப்படிப்பட்ட சொர்க்க நரகத்தைப் பிரசாரம் செய்யவே யாகங்கள் முதலியன செய்யப்படுகின்றன. யாகத்தில் பிராமணர்களுக்கு நம்பிக்கை இல்லையென்பதே எனது அபிப்பிராயம். மற்றவர்களை மிரட்டவும் ஏமாற்றவும் சிலர் செல்வம் சேர்த்து வயிறு பிளைக்கவுமே இப்போது யாகங்கள் செய்யப்படுகின்றன.

யாக சம்பந்தமான வேத சாஸ்திர ஆதாரங்கள் நமக்குப் பொருத்தமானவைகளாகுமா? நாம் அவற்றை ஏற்றுக் கொள்ள முடியுமா? இப்படிப்பட்ட கொடுமைக்கும், கொலை பாதகத்துக்கும், சித்திரவதைக்கும் ஒரு கடவுள் சொர்க்கத்தைக் கொடுப்பதாய் இருந்தால் கடவுளின் தன்மையாகக் கூறப்படும் அன்பு, கருணை என்று சொல்லுவது

RangaRakes tamilnavarasam.com

உண்மையாய் இருக்க முடியுமா? கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஜீவனை மற்றொரு ஜீவன் சித்திரவதை செய்து ஆகுதி கொடுப்பதைக் கடவுள் விரும்புகின்றார் என்றால் ஜீவர்களையெல்லாம் கடவுள் உற்பத்தி செய்தார் என்பது உண்மையாயிருக்க முடியுமா? கடவுள் பேராலேயே இப்பேர்ப்பட்ட காரியங்கள் நடப்பதை ஒரு கடவுளோ, அரைக் கடவுளோ, அணுவளவு கடவுளோ இருந்தால் பார்த்துக்கொண்டு இருக்க முடியுமா? அல்லது கடவுளுக்கு இது தெரியாது என்று சொல்லி விட முடியுமா? இவைகளெல்லாம் பாமர மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சிப் பிரசாரமேயொழிய வேறில்லை. இப்படிப்பட்ட யாகங்களுக்கு சங்கராச்சாரி சுவாமியார் என்பவரும் அனுமதியளிக்கிறாராம்; பணம் கொடுக்கிறாராம். இதிலிருந்து சங்கராச்சாரிகள் என்பவர்கள் யோக்கியதைகளையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

### யாகம் ஏன் செய்யப்படுகிறது?

இந்த யாகங்கள் இப்பொழுது ஏன் செய்யப்படுகின்றன? என்பது உங்களுக்குத் தெரியுமா? சனாதன தர்மங்கள் கெட்டுப் போய்விட்டனவாம். எதனால் என்று கேட்பீர்களானால் சாரதா சட்டம் செய்யப்பட்டுவிட்டதாம். தீண்டாமை ஒழிப்புச் சட்டமும், கோவில் பிரவேசச் சட்டமும் இப்போது இந்திய சட்டசபையில் இருக்கிறதாம். அவை நிறைவேறிவிடும் பக்ஷத்தில் சனாதன தர்மத்துக்குப் பெரிய ஆபத்து வந்து விடுமாம். ஆதலால் யாகங்கள் செய்வதன் மூலம் அவற்றைத் தடுத்து சனாதன தர்மத்தை நிலை நாட்ட வேண்டுமாம். ஆகவே சனாதன தர்மங்கள் என்பவைகள் பார்ப்பனரல்லாத மக்களுக்குப் பார்ப்பனர் ஒழிந்த மற்ற மனித சமூகத்துக்கு எவ்வளவு மோசமானதும் கெடுதியானதும் சுயமரியாதைக்கு விரோதமானதுமான காரியம் என்பதை நான் உங்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

இதிலிருந்து பார்ப்பனப் புரட்டுகளை நீங்கள் தெரிந்து கொள்ளக் கூடும் என்று நினைக்கிறேன். சில பார்ப்பனர்கள் தீண்டாமை ஒழிய வேண்டும் என்பதும் சில பார்ப்பனர்கள் கோயில் பிரவேசம் எல்லோருக்கும் இருக்க வேண்டும் என்பதும், மற்ற பார்ப்பன குருமார்கள், மடாதிபதிகள், ஜாதித் தலைவர்கள் ஆகிய எல்லோரும் சேர்ந்து சட்டம் ஒழியவும், பிரயத்தனப்படுபவர்கள் ஒழியவும் யாகம் செய்வதும் யாகத்தை ஆதரிப்பதுமாயிருந்தால் இதற்கு என்ன அர்த்தம் சொல்வது என்று உங்களையே கேட்கின்றேன். நான் இங்கு வரப்போவதாய்ப் பத்திரிகையில் தெரிந்தவுடன், இரண்டொரு பார்ப்பன நண்பர்கள் என்னைப் பரிகாசம் செய்தார்கள். அது என்னவென்றால், ‘‘நீங்கள் இப்பொழுது உலக மக்கள் பொது விஷயங்களில் சம்மந்தம் வைத்துக் கொண்டிருக்கும் போது எங்கோ இரண்டொரு பார்ப்பனர்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக ஏதோ ஒரு வியாபாரமாய் யாகம் செய்து பிழைக்கிற காரியத்தைப் பிரமாதமாய்க் கருதி அதற்காக நீங்கள் போகலாமா?’’ என்று கேட்டார்கள். இந்த யாகங்களை யாரோ இரண்டொரு பார்ப்பனர்களின் வயிற்றுப் பிழைப்பு வியாபாரம் என்று எண்ணிவிட முடியுமா? இதற்கு எல்லாப் பார்ப்பனரும் பணம் கொடுத்திருக்கிறார்கள். சங்கராச்சாரி முதலியவர்கள் ஆதரவளிக்கிறார்கள். அய்யங்கார் பார்ப்பனர்களுக்கு யாகம் விரோதமானது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்போதைய யாகத்தில் அய்யங்கார் பார்ப்பனர்களும் சில மாத்வப் பார்ப்பனர்களும்கூட சேர்ந்து ஆதரவளித்தும் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அப்படி இருக்க இரண்டொரு பார்ப்பனர் என்று எப்படி சொல்லிவிட முடியும்?

அப்படியானால் இவ்வளவு கூச்சல் ஏற்பட்ட பிறகாவது சில முக்கியமான பார்ப்பனர்கள் ஏன் ஒன்று கூடி ஒரு அறிக்கையை வெளிப்படுத்தக் கூடாது. ‘‘இந்த யாகம் பார்ப்பன சமூகத்தின் சார்பாகவோ மதத்தின் தத்துவப் பிரகாரமோ நடப்பதல்ல. நாங்கள் அதை ஆதரிப்பதில்லை என்பதோடு வெறுக்கவும் செய்கிறோம்’’ என்று தோழர்கள் மகாகனம் சாஸ்திரியாரும், சர். சிவசாமி அய்யரும், சர்.சி.பி. ராமசாமி அய்யரும், டி.ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியாரும், சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் ஒரு அறிக்கை வெளியிடட்டுமே? இவர்களெல்லாம் தங்களைப் பெரிய சீர்திருத்தவாதிகள் என்றும், தாங்களே இந்திய மக்களின் பிரதிநிதிகள் என்றும், எல்லா விஷயங்களுக்கும் தாங்களே அபிப்பிராயம் கொடுப்பவர்கள் என்றும் தாராளமாக விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்ததுடன் போதிய விளம்பரமும் பெற்றிருக்கிறார்கள். ஏன் ? இவர்கள் வாய்திறக்கக் கூடாது என்று கேட்கிறேன். காங்கிரஸ் பார்ப்பனர்களாவது ஏன் அறிக்கை வெளியிடக்கூடாது. தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரியார் முந்திரிக் கொட்டை போல் உலக விஷயங்களுக்கெல்லாம் முன்னால் வந்து அபிப்பிராயங் கொடுப்பவர் இதற்கு ஏன் வாய் மூடிக் கொண்டிருக்கிறார் என்று கேட்கின்றேன்.

தீண்டாமை விலக்கு மசோதாவையும், கோவில் பிரவேச மசோதாவையும் காங்கிரசின் சார்புடையவையல்லவா என்றும், தோழர் காந்தியார் இம்மசோதாக்கள் நிறைவேற வேண்டி கவலை எடுத்துக் கொண்டு இந்திய சட்டசபை அங்கத்தினர்களிடம் பிரசாரம் செய்து ஆதரவு தேடி வருகிறார்களா இல்லையா என்றும் கேட்கின்றேன். இப்படிப்பட்ட காங்கிரஸ் அனுமதி பெற்ற காங்கிரஸ் சார்பான மசோதாக்களை ஒழிப்பதற்கு யாகம் செய்தால், காங்கிரஸ்வாதியான தோழர் சத்தியமூர்த்தியின் கடமை என்ன என்று கேட்கின்றோம்?

தோழர் சத்தியமூர்த்தி இந்திய சட்ட சபைத் தேர்தலுக்கு தஞ்சை, திருச்சி ஜில்லா சார்பாக நிற்கப்போவதாய் பிரஸ்தாபம். தஞ்சை ஜில்லா பார்ப்பனர்கள் வருணாச்சிரமக்காரர்கள். அவர்கள் தீண்டாமை விலக்கு


RangaRakes tamilnavarasam.com

மசோதாவுக்கும் கோவில் பிரவேச மசோதாவுக்கும் எதிராகவும், சாரதா சட்டத்தை ஒழிப்பதற்கும் தகுதி உடையவர்களையும், அந்தப்படி செய்வதாக வாக்களிப்பவர்களையுந்தான் தேர்ந்தெடுப்பவர்கள். அப்படி இருக்க தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் அந்தத் தொகுதியில் நிற்பதென்றால் அவர் எப்படிப்பட்டவராய் இருக்கக் கூடும் என்று யோசித்துப் பாருங்கள். தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் இந்த இரண்டு மூன்று மசோதாக்களையும் ஆதரிப்பதாக இதுவரை எங்கும் பிரஸ்தாபிக்கவே இல்லை. அன்றியும் தீண்டாமை விலக்கு, கோவில் பிரவேசம் ஆகிய காரியங்களுக்கு சட்டம் செய்யக்கூடாது என்று தஞ்சை, திருச்சி ஜில்லாவில் பேசியிருக்கிறார். இப்படிப்பட்ட பார்ப்பனர்கள் தான் காங்கிரஸ் தலைவர்கள் மாத்திரமல்லாமல் தோழர் காந்தியால் பாராட்டப்பட்டவர்களுமாய் இருக்கிறார்கள். இவர்களைப் போன்ற சில பார்ப்பனரல்லாதார்களும் இருக்கிறார்கள். தோழர் முத்துரங்க முதலியார் கூட்டமும் இப்படிப்பட்டதே யாகும். இவர் இந்திய சட்டசபை போக வேண்டுமாம். இதுமாத்திரமா? தோழர் சீர்காழி சிதம்பரநாத முதலியார், கோவை வெள்ளியங்கிரிக் கவுண்டர் ஆகியவர்கள் சனாதன தர்மத்தை ஆதரித்ததுடன் வைசிராய் பிரபுவைக் காண சனாதன தர்ம பார்ப்பனர்களுடன் டெபுடேஷன் சென்றார்கள் என்று நான் சமீபத்தில் அறிந்தேன். ஆகவே காங்கிரஸ் யோக்கியதையைப்பற்றி நீங்களே அறிந்து கொள்ளுங்கள்.

## தேர்தல் தந்திரம்

இந்த யாகத்தை நான் ஒரு தேர்தல் தந்திரமாகவே நினைக்கின்றேன். சனாதன தர்மம் நிலை நிறுத்தப்பட யாகம் செய்தால் அந்த சனாதன தர்மத்துக்கு விரோதமானவர்களுக்குப் பாவமும் கெடுதியும் ஏற்படக்கூடும் என்று பாமர மக்கள் பயப்படக்கூடும். அப்போது பெரும்பாலும் பகுத்தறிவற்ற பாமர ஜனங்களும், தோழர்கள் சிதம்பரநாத முதலியார், வெள்ளியங்கிரிக் கவுண்டர், முத்துரங்க முதலியார் போன்ற செல்வவான்கள் என்பவர்களும், சனாதன தர்மத்தைக் காப்பாற்றுவேன் என்பவர்களுக்கே ஓட்டுக் கொடுக்கக் கூடும் என்கின்ற எண்ணத்தின் மீது பாமர மக்களைப் பயப்படுத்தவே இந்த யாகப் பூச்சாண்டி காட்டப்படுகின்றது. யாகத்திற்காக யாரும் பயப்பட வேண்டியதில்லை. நான் வைக்கம் சத்தியாக்கிரகத்தில் இருக்கும் போது எனக்கும் என் மனைவிக்கும் மற்றும் எனது கூட்டு வேலைத் தோழர்களுக்கும் விரோதமாக யாகம் செய்யப்பட்ட இந்த யாகங்களுக்கு மேல் ஜாதிக்காரர்கள், பணக்காரர்கள் மற்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அரசாங்க தேவஸ்தான இலாக்கா ஆகியவர்கள் பலவித உதவி செய்தார்கள். அது எங்களைக் கொல்ல முடியவில்லை . அது மாத்திரமல்லாமல் அந்த சமஸ்தான ராஜாவை சாகாமல் காப்பாற்றவும் முடியவில்லை. அந்த யாகத்தின் போது நான் 6 மாதம் தண்டனை



பெற்று திருவனந்தபுரம் சென்டிரல் ஜெயிலில் இருந்தேன். அதே சமயத்தில் அத்தேச அரசர் இறந்து போனார். அதனால் நான் தண்டனை காலம் பூராவும் முடியும் முன்பே விடுதலை செய்யப்பட்டுவிட்டேன். யாகம் முடிந்தும் கூட வைக்கம் சத்தியாக்கிரக விஷயம் வைக்கத்தைப் பொருத்தவரை வெற்றி பெற்றுவிட்டது. ஆகையால் யாகத்துக்கு ஏதோ சக்தி இருப்பதாகவோ அது நம்மை ஏதாவது செய்து விடுமென்றோ யாரும் பயப்பட்டு விடாதீர்கள். இந்த தந்திரம் எல்லாம் உழைப்பாளிகளின் உழைப்பை சோம்பேறிகள் சாப்பிடுவதற்காகவே ஒழிய வேறில்லை.

உழைத்தவன் உழைப்பின் பயனை அடைய வேண்டுமானால் இப்படி யாகம், சாஸ்திரம், வேதம், மோக்ஷம், கர்மம், முன் ஜன்மம், கடவுள் செயல் என்கின்ற பித்தலாட்டங்களுக்கு அடிமைப்படக் கூடாது.

எத்தனையோ வருஷ காலமாய் யாகம் செய்யப்பட்டு வருவதாய் அறிகிறோம். உலகத்தில் என்ன அக்கிரமம் மாறி இருக்கிறது? என்ன கொடுமை நீங்கியிருக்கின்றது? யாகம் எக்கியம் கிரமமாய் செய்யப்பட்டு வந்த தெய்வீக அரசர்களான ராமன், அரிச்சந்திரன் ஆகியவர்கள் காலத்தில் உள்ள அக்கிரமம், அயோக்கியத்தனம், கொலை பாதகம் எல்லாம் இன்னும் இருந்துதான் வருகின்றன. எவ்வித மாறுதலும் ஏற்பட்டு விடவில்லை. ஆகையால் நீங்கள் இப்படிப்பட்ட மிரட்டுதல்களைக் கண்டு பயந்துவிடாதீர்கள்! ஏமாந்து விடாதீர்கள்!!

*குறிப்பு: ஆரணிக்குப் பக்கத்தில் கடலாடி என்னும் கிராமத்தில் சென்னை ஜீவரக்ஷா பிரசார சபையாரால் 03-06-1934இல் பார்ப்பனர்கள் நடத்திய யாகத்தைக் கண்டித்து நடத்தப் பெற்ற யாகக் கண்டன கூட்டத்தில் திரு.வி.கலியாண சுந்தரமுதலியார் தலைமையில் ஆற்றிய சொற்பொழிவு.*

**புரட்சி - சொற்பொழிவு - 10.06.1934**



RangaRakes tamilnavarasam.com

# சென்னையில் ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டம்

தலைவரவர்களே! தோழர்களே!!

தலைவரவர்கள் தெரிவித்த விஷயங்கள் இயக்க நலனைக் கருதி அவசியம் கவனிக்கத்தக்கதாகும். எல்லா விஷயத்தையும்விட நமது கொள்கை என்ன? திட்டம் என்ன? என்பதைப் பொது ஜனங்கள் அறியும்படி செய்ய வேண்டும். ஜஸ்டிஸ் கட்சி என்றால் மீ 4000 ரூபாய் சம்பளத்துக்கும் மந்திரி பதவிக்கும் ஊர் சிரிக்கச் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் கூட்டம் என்று இனியும் பாமர ஜனங்கள் சொல்லும்படி நாம் விட்டுக் கொண்டிருக்கக் கூடாது. காங்கிரசுக்காரர்கள் என்பவர்களின் உள் எண்ணமும், நாணையமும் எப்படி இருந்தாலும் அவர்கள் ஏதோ இரண்டொரு கொள்கைகளைச் சொல்லி, அதைப் பெரிதாக்கிக் காட்டி அதற்காக அடியும் உதையும், நஷ்டமும் கஷ்டமும் சிறைவாசமும் பெற்றவர்கள் என்கின்ற பெயரைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களோடு இப்பொழுது திடீரென்று போட்டி போடுவதென்றால் அதுவும் ஒரு விளக்கமான, யாவருக்கும் தெரியும்படியான ஒரு கொள்கையும், திட்டமும் இல்லாமல் போட்டி போடுவதென்றால் சுலபமான காரியமல்ல என்பதே எனது அபிப்பிராயம். ''கட்சிக்குக் கொள்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும் பணமும், அதிகாரமும், செல்வாக்கும் இருந்தால், எப்படியும் தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம்'' என்கின்ற தைரியம் சிலருக்கு உண்டு என்பதையும், அதுவும் ஒரு அளவுக்கு உண்மையென்பதையும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் அந்த தைரியம் தனிப்பட்ட வர்களின் நன்மைக்குப் பயன்படுமே தவிர ஒரு இயக்கத்துக்கு - பொதுஜன நன்மைக்குப் பயன்படாது. சமீபகாலமாக ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் அதிகாரத்திலும், பதவியிலும் இருக்கிறவர்கள் கட்சி கொள்கை விஷயத்தில் போதிய லக்ஷியம் எடுத்துக் கொள்ளவில்லை யென்றும், தங்கள் சுயநலத்தைவிட மற்றொன்றையும் சிறிதும் கவனிக்கவில்லை என்றும், கட்சிக் கொள்கைக்கு விரோதமாகக்கூட பல காரியங்கள் செய்யப்பட்டு விட்டன என்றும், கட்சி ஜனங்களுக்குள்ளாகவே சொல்லிக் கொள்ளப்படுகிறதுடன் மற்றும் பலவிதமான புகார்களும் சொல்லிக் கொள்ளப்படுகின்றன.



ஆனால் இப்படிச் சொல்லிக்கொள்ளப்படுவதற்கும் புகார்களுக்கும் ஆதாரமில்லை என்று கூறலாம். ஆதாரமில்லை என்பதைப் பொது ஜனங்களுக்கு மெய்ப்பிக்க வேண்டாமா? மற்றும் நமது எதிரிகள் இப்படிப்பட்ட விஷயங்களைத் தங்களுக்கு அனுகூலமாய் உபயோகித்துக் கொள்ளாமல் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டாமா? நமது சொந்த செல்வத்தையும், செல்வாக்கையுமே எல்லாவற்றிற்குமே சமாதானமாக ஆக்கிக் கொள்ளலாம் என்று சிலர் நினைத்தால் கட்சியில் உள்ள செல்வமும், செல்வாக்கும் இல்லாத மக்களின் கதி என்ன ஆகும் என்பதை யோசித்துப் பாருங்கள். இவர்களுக்கு ஒரு கொள்கையோ, இவர்கள் மீது கூறப்படும் புகார்களுக்கும், குற்றங்களுக்கும் பதில் கூறுவதற்கு தகுந்த உண்மையான ஆதாரங்களோ இல்லாவிட்டால் இவர்களுக்கெல்லாம் கட்சியில் இடமோ கட்சியின் பேரால் வெற்றியோ எப்படி கிடைக்கும்?

ஜஸ்டிஸ் கட்சி என்றால் ஜமீன்தார்கள், முதலாளிமார்கள் கட்சியே தவிர பொது மக்கள் கட்சி அல்ல என்று சொல்லப்படுவது இப்போது மிக மிக சகஜமாகிவிட்டது. இதை நாம் பொய்யாக்கிக் காட்டாவிட்டால் கட்சியில் உள்ள உண்மை உழைப்பாளிகளுக்கு இதைவிட வேறு அவமானம் வேண்டியதில்லை. ஆதலால் தகுந்த வேலைத் திட்டமுறைகளை ஏற்படுத்திப் பாமர ஜனங்களுக்கு நன்றாய் பிரசாரம் செய்து, நமது எதிரிகளின் விஷமப் பிரசாரத்தை தகர்ப்பதுடன் ஏழைப் பொது மக்களுக்கு பயன்படத்தக்க முறையில் உழைத்தாக வேண்டும். வெறும் ஸ்தாபனங்கள் அமைப்பதால் ஒரு பயனும் ஏற்பட்டு விடாது. ஸ்தாபனங்கள் பெரிதும் சுயநலக்காரர்களின் விளம்பரத்துக்கு ஒரு சாதனமாகும். உழைப்பும் வேலை செய்து காட்டுவதுமேதான் நமது எதிரிகளைத் தோற்கடித்து நமக்கு நல்ல வெற்றியைக் கொடுக்கும்.

## இந்திய சட்டசபைத் தேர்தல்

அடுத்தபடியாக இந்திய சட்டசபைத் தேர்தலைப் பற்றி பேசப்பட்டது. இந்த சமயத்தில் இது ஒரு முக்கியமான விஷயம் என்பதை நானும் ஒப்புக் கொள்ளுகிறேன். நமது கட்சிக்கு ஒரு கெட்ட பெயருண்டு. அதைப் பொய்யென்று மறுக்கவும் என்னிடம் போதிய ஆதாரமில்லை. என்னவென்றால் ''ஜஸ்டிஸ் கக்ஷிக்காரருடைய நாட்டமெல்லாம் மாகாண சட்டசபையிலேயே ஒழிய, இந்திய சட்டசபையைப் பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை'' என்று சொல்லப்படுவதாகும். இதற்கு என்னவிதமான உள் எண்ணம் கற்பிக்கப்படுகின்றதென்றால் ''மாகாண கவுன்சிலில் இருந்தால் மந்திரி வேலை பெறலாம் அல்லது மந்திரிகளுக்குத் துணை புரிந்து நமது வாழ்க்கை நலத்துக்கு ஏதாவது பயன்



RangaRakes tamilnavarasam.com

அடையலாம்'' என்று கருதி இப்படி அலட்சியமாய் இருப்பதாக உள் எண்ணம் கற்பிக்கப்படுகிறது. இந்தப்படி சொல்லுபவர்களுக்கு அநுகூலமாகவே சம்பவங்களும் இருந்து வருகின்றன.

இதன் பயனாகவே தென்னிந்தியாவைப் பற்றியும், தென்னிந்திய மக்களைப் பற்றியும் வடஇந்தியர்கள் கேவலமாய் மதிக்கும்படியும், தென்னிந்தியப் பார்ப்பனர்கள்தான் தென்னிந்திய பொதுநல ஊழியர்கள் என்றும் அவர்களே தேசபக்தர்கள் என்றும் கருதும்படி செய்யப்பட்டதுடன், பார்ப்பனரல்லாதார் என்றால் தேசத் துரோகிகள் என்றும், அன்னிய ஆட்சிக்கும் அதன் கொடுங்கோன் தன்மை என்பதற்கும் துணைபுரிந்து சுய தன்னலம் தேடுகிறவர்கள் என்றும் கருதும்படியாக நமது நாட்டுப் பார்ப்பனர்கள் பலரால் விஷமப் பிரசாரம் செய்யப்பட்டுவந்தது. பல காரணங்களால் சிலர் உழைத்து வந்ததின் பயனாக நம்மவர்களில் சிலர் சிறப்பாகவும், குறிப்பாகவும் தோழர்கள் ஆர்.கே. ஷண்முகம், ஏ. இராமசாமி ஆகியவர்கள் இந்திய சட்டசபைக்குப் போக நேர்ந்ததில் அவர்களுக்கும் மற்றும் தென்னிந்திய பார்ப்பனரல்லாத சமூகத்துக்கும் எவ்வளவு அந்தஸ்தும், பெருமையும் ஏற்பட்டது என்று யோசித்துப் பாருங்கள். தோற்றுப் போனவர்கள் கூப்பாடு போடுவதைப் பற்றியும், அப்படிப்பட்டவர்கள் அழுவதைப் பற்றியும் நாம் லட்சியம் செய்ய வேண்டியதில்லை. அது போலவே இன்னும் சிலர் இந்திய சட்டசபைக்கு நம்மவர்கள் போக நேர்ந்தால் தேசத்துரோகிகள் யார்? தேசீய வியாபாரத்தில் வயிறு வளர்ப்பவர்கள் யார் என்பதை உலகம் அறியச் செய்துவிடலாம். தோழர் ஷண்முகத்தைப் போலவே எல்லாத் தொகுதிக்கும் ஆள் கிடைக்குமா என்று கேட்பீர்கள். அதைப்பற்றி எனக்கு லக்ஷியமில்லை. நமது நன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் பிறவி எதிரிகளாய் இருப்பவர்களை நமது பிரதிநிதிகளாய் தெரிந்தெடுத்து வருகிறோம் என்கின்ற இழிவும், முட்டாள்தனமுமாவது நமக்கு இல்லாமல் போகுமல்லவா? அதோடு மாத்திரமல்லாமல், நமது எதிரிகள் இந்திய சட்டசபைக்குப் போய் நமக்குக் கெடுதி செய்யும் காரியமாவது நிறுத்தப்பட்டதாக ஆகுமா? இல்லையா? தீண்டாமை விலக்குக்கு விரோதமாக இன்று இந்திய சட்டசபையில் இருப்பவர்கள் யார் என்று யோசித்துப் பாருங்கள். பார்ப்பனரல்லாத கட்சிக்கு நாங்கள்தான் தூண்கள் என்று பெருமைபேசி பயன்பெற்று வரும் தஞ்சை-திருச்சி ஜில்லா தொகுதியில் வெற்றி பெற்றுச் சென்ற பச்சை வர்ணாச்சிரம வாதியா? அல்லவா? என்று கேட்கின்றேன். இப்படிப்பட்ட நிலையில் இனியும் நமக்கு அப்படிப்பட்ட இழிவும், சங்கடமும் வந்து சேராமல் இருப்பதற்கு நாம் அந்த தேர்தலில் தகுந்த கவனம் செலுத்த வேண்டும். அத்தொகுதிக்கு கட்சியின் பேரால் பணம் வசூலித்துக் கொடுத்தாவது



தக்க அபேக்ஷகர்களை நாம் தெரிந்தெடுக்கச் செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் முன் போல் இனி அலட்சியமாய் இருக்கக் கூடாது என்பதை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

**பார்ப்பனர் சேர்க்கை**

அடுத்தபடியாக இக்கூட்டத்தில் பேசவேண்டியது, பார்ப்பனர்களை தென்இந்திய நலஉரிமைச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளலாமா என்னும் பிரச்சினையாகும். இதுவே இக்கூட்டத்திற்கு முக்கிய பிரச்சினையாக கருதப்படுகின்றது என்று நினைக்கிறேன். இவ்விஷயம் நமது கட்சியில் சுமார் 8,10 வருஷங்களாய் பேசப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வருவது யாவரும் அறிந்ததே. ஆனால் என்னைப் பொருத்தவரை இந்த 7,8 வருஷகாலமாகவே நான் இதை ஆக்ஷேபித்து வந்திருக்கிறேன். எந்த முறையில் என்றால், பொதுவாழ்வில் பார்ப்பனர்களுடன் கலந்து உழைத்துப் பார்த்து அனுபோகம் பெற்று வந்தவன் என்கின்ற முறையில் ஆக்ஷேபித்து வந்திருக்கிறேன். என்ன என்ன காரணங்களைக் கொண்டு என்ன என்ன ஆதாரங்களைக் கூறி ஆக்ஷேபித்து வந்தேனோ அவற்றில் ஒரு சிறிதும் இன்று மாற்றமடையவில்லை. அப்போதைய அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ள இப்போது பார்ப்பனர்களிடமிருந்து ஒரு மாறுதலையும் நான் காணமுடியவில்லை. ஆதலால் அந்த அபிப்பிராயம் இன்னமும் எனக்கு பலமாகவே இருக்கிறது. ஆனால் ஒரு மாறுதல் மாத்திரம் ஏற்பட்டுவிட்டதை நான் என் சொந்த ஹோதாவில் தெரிவித்துக் கொள்கிறேன். அது என் தோழர்களையோ, எனது கூட்டு வேலைக்காரர்களையோ யாரையும் கட்டுப்படுத்தாது என்றும் சொல்லுகிறேன். அஃதென்னவென்றால், தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் முன்னணியில் இருந்து அக்கட்சிக்காக வேலை செய்யும் சௌகரியம் இப்போது எனக்கு இல்லை. கட்சிக்காக அல்லது கட்சியின் பேரால் கவலை கொண்டு இன்று முன்னணியில் இருந்து வேலைசெய்யும் தலைவர்கள் அல்லது பிரமுகர்கள் கட்சி நன்மையை உத்தேசித்து என்று சொல்லி ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவார்களானால் நான் போய் குறுக்கிட்டு அதை ஆக்ஷேபித்துக் கொண்டிருக்க வேண்டாம் என்கின்ற நிலையில் இருக்கிறேன். ஏனெனில் ஒவ்வொரு தடவையும் என்னாலேயே ஆக்ஷேபிக்கப்பட்டு அவ்வெண்ணம் நிறைவேற்றப்பட முடியாமல் போய்விட்டது என்று சொல்லப்பட்டு வந்தது. ஆனால் ஒரு அளவுக்கு அதன் பலாபலன்களுக்கு நானும் பொறுப்பாளியாகவும் அனுபவிக் கிறவனாகவும் இருந்தேன் எனக் கருதினேன். இப்போதைய எனது நிலைமை அப்பயனுக்கும் அனுபவத்திற்கும் முழு பொருப்பாளியாக இருக்க முடியாததாய் இருப்பதால் பொறுப்பாளியாய் இருக்கிறவர்களுக்கு முட்டுக்கட்டையாய் இருக்க வேண்டாம் என்று எனக்கு தோன்றிவிட்டது.



RangaRakes tamilnavarasam.com

இது தவறுதலாய் இருக்கலாம். ஆனபோதிலும் இதன் அனுபவமானது பின்னால் நமக்கு ஒரு பெரிய நன்மையையும் படிப்பினையையும் உண்டாக்கினாலும் உண்டாக்கலாம். சமூக விஷயங்களை விட அரசியல் காரியங்களையே பெரியதாகக் கருதி, இந்த பார்ப்பனர்களைச் சேர்க்க வேண்டுமென்ற யோசனைகள் செய்யப்படுவதாகத் தெரிகின்றது. எப்படியானாலும் நாம் அதை ஆக்ஷேபிக்க வரவில்லை என்று மாத்திரமே சொல்லுகின்றேன்.

*குறிப்பு: சென்னையில் 07.06.1934-இல் பொப்பிலி ராசா அவர் பங்களாவில் கூட்டிய ஜஸ்டிஸ் கட்சி தலைவர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை.*

**புரட்சி - சொற்பொழிவு - 10.06.1934**



# இந்திய சட்டசபைத் தேர்தல்

## தோழர் சத்தியமூர்த்தி யாரை ஏமாற்றப்போகிறார்?

தோழர் S. சத்தியமூர்த்தி சாஸ்திரிக்கு இப்போது சிறிது நெருக்கடியான சமயம் என்று சொல்லலாம். ஏனெனில் அவர் எப்படியாவது சமீபத்தில் நடைபெறப் போகும் இந்திய சட்டசபை அங்கத்தினர் பதவிக்கு ஒரு அபேக்ஷகராக நிற்க வேண்டுமென்று கருதி இருக்கிறார். சென்னையில் நிற்பதற்கு அவருக்குத் தைரியமில்லை, இருக்கவும் நியாயமில்லை. ஏனென்றால் சென்னை ஜனங்கள் தோழர் சத்தியமூர்த்தியை நேரில் அறிவார்கள். இந்திய சட்டசபையின் சென்னைத் தொகுதியானது சென்னை சட்டசபையின் யுனிவர்சிட்டித் தொகுதி மாதிரி 100-க்கு 95 பேர்கள் பார்ப்பன ஓட்டர்களாய் இருக்கும் தொகுதியல்ல. பார்ப்பனரல்லாதார் பெரும்பான்மையோருடைய ஓட்டுகளைப் பெற்றாக வேண்டும். ஆதலால் அங்கு சென்னையில் நின்றால் கட்டின பணம் வாபீஸ் பெறுவது கூட சில சமயங்களில் கஷ்டமாகிவிடும்.

நமது மாகாணத்தில் பொதுவாக பார்ப்பனர்களுக்கு சிறப்பாக வர்ணாச்சிரமப் பார்ப்பனர்களுக்கு தகுதியாய் இருக்கும் தொகுதி தஞ்சை, திருச்சி ஜில்லாக்களின் தொகுதியாகும். இந்த ஜில்லாக்களின் பார்ப்பனரல்லாதாரே உத்தியோகம் பெறவும் மந்திரியாகவும் ஸ்தல ஸ்தாபனங்களில் தலைமைப் பதவி அங்கத்தினர் பதவி பெறவும் அதுவும் பெறும் வரையில் மாத்திரமே பார்ப்பனரல்லாதார் என்கின்ற பேச்சுப் பேசுபவர்களேயொழிய மற்றப்படி பார்ப்பனரல்லாதாரின் பொது விஷயங்களில் கவலை செலுத்துவதென்பது அருமையிலும் அருமையான காரியமாகும்.

இந்திய சட்டசபைக்கு தஞ்சை திருச்சி ஜில்லா சேர்ந்து ஒரு தொகுதியாக ஆன கால முதல் நாளது பரியந்தம் நமக்குத் தெரிந்த வரையில் அத் தொகுதிக்கு பார்ப்பனர்களே வந்திருக்கிறார்கள். அதுவும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை நசுக்கக் கங்கணம் கட்டிக் கொண்ட பார்ப்பனர்களும் வர்ணாச்சிரமப் பார்ப்பனர்களும் பார்ப்பன சமூகத் தலைவர்களுமே வந்திருக்கிறார்கள். அதிலும் சென்னை முதலிய வெளியிடங்களில் இருந்தவர்களும் இருப்பவர்களுமான பார்ப்பனர்களே இங்கு வந்து வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். இதிலிருந்து திருச்சி,



RangaRakes tamilnavarasam.com

தஞ்சை பார்ப்பனரல்லாதாரின் வீரமும் சுயமரியாதையும் பார்ப்பனரல்லாதார் வகுப்பு அபிமானமும் எவ்வளவு என்று யாரும் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம். இப்படிப்பட்ட ஒரு தொகுதி இப்போது தோழர் சத்தியமூர்த்தி அவர்களுக்கு கேள்வி கேப்பாடு இல்லாமல் தாராளமாய் வழி திறக்கப்பட்டு இருந்தும் அவருக்கு எதிர்பாராத ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

என்னவென்றால்? தஞ்சை, திருச்சி ஜில்லா பார்ப்பனர்கள் தங்கள் தொகுதிக்கு ஏதாவது ஒரு அபேக்ஷகரை ஆதரிக்க வேண்டுமானால் அவ்வபேக்ஷகர் பார்ப்பனராய் மாத்திரம் இருந்தால் போதாது. அபேக்ஷகர் சொந்த ஹோதாவில் எவ்வளவு மோசமானவராய் இருந்தாலும் சனாதன தர்மத்தை எவ்விதத்திலும் குலைக்காதவராகவும் அதைக் காப்பவராகவும் இருக்க வேண்டும். இப்போது இந்திய சட்டசபையில் சனாதன தர்மம் என்பதற்கு விரோதமான இரண்டு மசோதாக்கள் இருக்கின்றன. ஒன்று, தீண்டாமை விலக்கு மசோதா. மற்றொன்று கோவில் பிரவேசத் தடை நீக்கும் மசோதா. இவை இரண்டு தவிர மற்றும் விவாகரத்து, பெண்கள் சொத்துரிமை முதலிய மசோதாக்கள் ஆலோசனைக்கு வந்தாலும் வரலாம். சாரதா சட்டத்தை ஒழிக்க மறுபடியும் ஏதாவது சூழ்ச்சிகள் செய்யப்பட்டாலும் படலாம். இதனால்தான் தோழர் சத்தியமூர்த்தியின் நிலை சற்று நெருக்கடி என்று சொன்னோம். ஏனென்றால் **தோழர் சத்தியமூர்த்தி இரகசியத்தில் உண்மையில் சனாதன தர்மிகளின் பிரதிநிதியாயும் வெளிப்படையில், வேஷத்தில் சனாதனிகளின் "விரோதியான" காங்கிரஸ் பிரதிநிதியாயும் இருக்க வேண்டி இருக்கிறது.**

தீண்டாமை விலக்கு மசோதாவும் கோவில் பிரவேசத் தடை விலக்கு மசோதாவும் காங்கிரசால் ஆதரிக்கப்பட்டுவிட்டது. இந்திய சட்டசபையில் சென்ற மூன்று நான்கு கூட்டங்களிலேயே இம்மசோதாக்களை நிறைவேற்றச் செய்வதற்காக தோழர் காந்தியவர்கள் தோழர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்களை டெல்லிக்கு அனுப்பி ஒவ்வொரு மெம்பரையும் பார்க்கச் செய்து எவ்வளவோ பிரயாசைப் பட்டிருக்கிறார் என்பது யாவரும் அறிந்ததே. அன்றியும், காங்கிரஸ் கொள்கையும் தீண்டாமை விலக்கு என்றும், அதன் தற்கால நிர்மாணத் திட்டம் தீண்டாமை விலக்கும் தீண்டாதவர்களுக்கு சகல கோயில்களும் திறக்கப்படச் செய்ய வேண்டியதென்றும் பொதுஜனங்கள் நம்பும்படி எவ்வளவோ காரியங்கள் செய்தாகிவிட்டது. அதற்காகப் பொது ஜனங்களிடம் ரூ.10 லக்ஷக் கணக்காக பணமும் வசூலித்தாய் விட்டது. ஆதலால் காங்கிரசுக்காரர் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்கள் ஒவ்வொருவரும் இந்த மசோதாக்களை வேஷத்துக்காகிலும் ஆதரிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். காங்கிரசின் நல்ல காலமோ, கெட்டகாலமோ, தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் இது சமயம் தென் இந்திய காங்கிரசிற்கு பிரதான புருஷ பதவியை சம்பாதித்து விட்டார். அதுமாத்திரமல்ல தேர்தலுக்கு அபேக்ஷகர்களை நிறுத்தி தேர்தல் பிரசாரம் செய்து தேர்தலையே நடத்த வேண்டிய தலைவர் பதவியையும் பெற்றுவிட்டார். ஒரு வண்டியின் முன் பின் பாரங்கள் எதற்காவது ஆட்களோ சாமான்களோ கிடைக்காவிட்டால் சில சமயங்களில் கல்லுகளை எடுத்து வைத்து பாரத்தைச் சரிப்படுத்திக் கொள்ளுவது வழக்கம். அதுபோல் எந்தக் கமிட்டியிலும் பார்ப்பனரல்லாதார் ஒருவர் இருவரை அதில் போட வேண்டுமே என்கின்ற அவசியத்துக்காக, தக்க ஆட்கள் இல்லாததால் தோழர் முத்துரங்க முதலியார் அவர்கள் போன்றவர்கள் ஒருவர் இருவர் தேர்தல் நியமன அதிகாரக் கமிட்டியில் போடப்பட்டிருந்தாலும் தோழர் சத்தியமூர்த்தியவர்களே பிரதான புருஷரும் தகுதி உடையவரும் சர்வாதிகாரியும் ஆகிய பதவியில் இடம் பெற்றிருக்கிறார். அப்படிப்பட்டவர் தானாகவே ஒரு தொகுதிக்கு அதுவும் தஞ்சை, திருச்சி ஆகிய வருணாச்சிரம தொகுதிக்கு நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதில் அவர் என்னதான் தந்திரமும், புரட்டும் பொறுப்பற்ற அறிக்கையும் விடக் கூடிய யோக்கியதையும் சுதந்திரமும் உடையவராய் இருந்தாலும், இப்போது வெளிப்படையாய் இரண்டில் ஒன்று சொல்லித் தீரவேண்டி இருக்கிறது. அவர் சொந்த ஹோதாவில் அவருக்கு ஏதாவது ஒரு கொள்கை உண்டு என்று சொல்ல நமக்குத் தைரியம் வரவில்லை. ஆனாலும் பார்ப்பனத் தன்மைக்கும், அதன் உயர்வுக்கும், ஆதிக்கத்துக்கும் சிறிதாவது கெடுதிவர அவர் ஒரு நாளும் சம்மதிக்கமாட்டார். எப்போதும் சம்மதித்ததுமில்லை. அவரைவிட மேலான யோக்கியதையும், அந்தஸ்தும் உடையவர்கள் பார்ப்பனரல்லாதாரில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள் என்றாலும் அவர்களில் பெரும்பாலோர் தங்கள் சுயநலத்துக்காக வகுப்பு நலனை மிகக் குறைந்த விலைக்கு விற்கக் கூடியவர்கள் என்று சொல்லலாம் என்பது நமது கருத்து. ஆனால் நமது சத்தியமூர்த்தி சாஸ்திரிகளோ, எந்தக் காலத்திலாவது எவ்வளவு நெருக்கடியான சொந்த அசௌகரியத்திலாவது பார்ப்பனீயத்தையோ, பார்ப்பன ஆதிக்கத்தையோ ஒரு கடுகளவுகூட விட்டுக் கொடுத்தார் என்று சொல்ல முடியாது. இந்த வழக்கமும், யோக்கியதையும் தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரி இடம் மாத்திரம் அல்ல. 100-க்கு 99 15/16 பார்ப்பனர்களிடத்திலும் காணலாம். இதுவேதான் இந்நாட்டில் பார்ப்பனீயம் நிலைத்திருப்பதற்குக் காரணம் என்பதோடு, இந்தக் குணம் பார்ப்பனரல்லாதாரிடம் இல்லாததாலேயே அவர்களது முயற்சிகள் அடிக்கடி கவிழ்க்கப்பட்டு விடுவதற்கும் காரணம் என்று சொல்லலாம்.

ஆகவே தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் ஏதாவது ஒன்றைச் சொல்லி யாராவது ஒருவரை - அதாவது காங்கிரஸ் பார்ப்பனரல்லாதாரையோ


RangaRakes tamilnavarasam.com

அல்லது வருணாச்சிரமிகளையோ ஏமாற்றியே ஆக வேண்டும். எப்படி இருந்தாலும் என்ன சொன்னாலும் அது வர்ணாச்சிரமப் பார்ப்பனர்களை ஏமாற்றினதாய் முடிவு பெறாது பார்ப்பனரல்லாதாரைத் தான் ஏமாற்றப்போகிறார் என்பது உறுதி . சமீபத்தில் தஞ்சை ஜில்லாவில் சில பார்ப்பனர்கள் மேற்கண்ட மசோதாக்கள் விஷயமாய்த் தோழர் சத்தியமூர்த்தியின் அபிப்பிராயம் என்ன என்று அவரைக் கேட்டபோது ''தீண்டாமை ஒழிய வேண்டியது தான். ஆனால் அதற்கு சட்டம் செய்வது என்பது கூடாத காரியம்'' என்று சொன்னாராம்.

தீண்டாமை ஒழிப்புக்குச் சட்டம் செய்வதே கூடாத காரியம் என்று சொன்ன இவர், தீண்டாதாருக்குக் கோவில் பிரவேசம் ஏற்படச் சட்டம் செய்வதை எப்படி ஆதரிப்பார் என்பதை வாசகர்கள்தான் முடிவு செய்து கொள்ள வேண்டும். அது எப்படியோ போகட்டும். இப்போது நம்முடைய கேள்வி எல்லாம் தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் காங்கிரசுக்காரர் என்று தன்னை சொல்லிக் கொண்டு ''தீண்டாமை விலக்குக்கு சட்டம் செய்வது கூடாது'' என்று சொல்லலாமா? என்பதேயாகும். அது மாத்திரமல்ல, தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று இந்திய சட்டசபைக்குப் போனால் தீண்டாமை விலக்கு மசோதாவை எதிர்ப்பாரா? ஆதரிப்பாரா என்றும் கேட்கின்றோம்.

காங்கிரசைப் பற்றி ஏதாவது குற்றம் சொல்லவோ, குறைகூறவோ யாராவது ஆரம்பித்தால் அவர்களைப் பற்றி தாறுமாறாகப் பேசவும் எழுதவும் நமது நாட்டில் அனேக தேசபக்தர்கள் இருக்கிறார்களே யொழிய, தேசியப் பத்திரிகைகள் இருக்கின்றனவே ஒழிய காங்கிரசின் இப்படிப்பட்ட யோக்கியதைகளைக் கவனித்து தக்கது செய்வது என்பதைக் கவனிக்க எவருமே யில்லை. நமது நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டமும் சோம்பேறி வாழ்க்கைப் பிரியமும் சேர்ந்து இப்படிப்பட்ட தேசபக்தர்களையும், தேசியப் பத்திரிகைகளையும் ஏராளமாக உற்பத்தி செய்துவிட்டது என்று சொல்ல வேண்டுமே யொழிய தேச பக்தர்கள் மீது குறைகூறவும் நமக்கு மனம் வரவில்லை.

இந்திய சட்டசபைத் தேர்தல்களைப் பற்றி காங்கிரஸ் எடுத்துக் கொண்ட கவலைக்கும், இந்திய சட்டசபைக்கு நமது மாகாண காங்கிரஸ்காரர்கள் போகவேண்டும் என்று ஆத்திரப்படுவதற்கும் உள்ள உண்மையான இரகசியம் இதிலிருந்து சுலபமாக விளங்கக் கூடும் என்று கருதுகின்றோம்.

ஆகையால், பார்ப்பனரல்லாத மக்கள் இந்திய சட்டசபை தேர்தல்களை இத்தனை நாள் அலக்ஷியமாய் விட்டிருந்தது போல் இல்லாமல் தக்கபடி கவலை செலுத்தி சமூக சமத்துவத்திற்கு பிறவி எதிரிகளான பார்ப்பனர்கள் அப்படிப்பட்ட ஸ்தானங்களுக்குப் போய் நமக்கு தொல்லை விளைவிக்காமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள





வேண்டும் என்பதற்காகவே இவ்வளவு தூரம் எழுதுகிறோம். குறிப்பாக தஞ்சை, திருச்சி ஜில்லாக்களின் தொகுதிக்கு எப்படியாவது ஒரு பார்ப்பனரல்லாதார் நின்று வெற்றி பெறும்படியாக செய்துவிட்டோமேயானால் தென்னிந்திய சமுதாயத் துறையில் ஒரு பெரிய புதிய சகாப்தத்தை உண்டு பண்ணியவர்களாக ஆகிவிடுவோம் என்பதோடு அந்தப்படி இல்லாமல் தோழர் சத்தியமூர்த்தி போன்றவர்கள் இந்திய சட்டசபைக்கு போக நேர்ந்தால் பார்ப்பனரல்லாதார் நலனுக்கு பெரிய முட்டுக்கட்டை போட்டது போலாகுமென்பதையும் தெரிவித்துக் கொண்டு இதை முடிக்கின்றோம்.

**புரட்சி - தலையங்கம் - 10.06.1934**

RangaRakes tamilnavarasam.com

# திருப்பூர் செங்குந்த மகாஜன சங்க மகாநாட்டில் தோழர் ஈ.வெ.ரா.

**சமதர்மம்**

தோழர்களே! இன்று இக்கூட்டத்தில் ''சமதர்மம்'' என்னும் பொருள் பற்றிப் பேசும்படியான ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது பற்றி நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். சமதர்மம் என்பதற்குப் பலவேறு தேசங்களிலும், சமூகங்களிலும் பலவேறு அர்த்தத்தில் வழங்கி வருகிறது. சமதர்மம் என்பது சிற்சில இடங்களில் மதத்துக்கும், சில இடங்களில் கடவுளுக்கும், பிறிதும் சில இடங்களில் பணக்காரனுக்கும், புரோகிதனுக்கும் விரோதம் என்றும் கூறப்படுகிறது. ஆனால் பொதுவாக இன்று சமதர்மம் என்னும் சொல் நாட்டிலுள்ள ஏழை மக்களின் உள்ளத்திலே கிளர்ச்சியூட்டி ஆவலோடு சமதர்மமொன்றே தங்களின் வாழ்வை இன்பமயமாக்கும் என்கின்ற மனப்பான்மையை உண்டாக்கி யிருக்கிறது. ஆகவே இன்று சமதர்மத்தை உச்சரிப்பது மிக சகஜமாகப் போய்விட்டது. சமீபத்தில் ராஞ்சியிலும் பாட்னாவிலும் கூடிய சமதர்மவாதிகளால் சமதர்ம திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. காந்தியாரும் கூட சமதர்மம் ஆக்ஷேபகரமானதல்ல என்கிறார். தோழர் ஜவஹர்லால் தான் சமதர்மவாதி என்றும், மக்கள் சமூக நலனுக்கேற்றது சமதர்மம் ஒன்றே என்றும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். மனித சமூகத்தில் 100-க்கு 90-க்கு மேற்பட்ட பாமர மக்கள், தொழிலாளிகள், பாட்டாளிகள் பூராவும் இன்று இக்கொள்கை வளம் பெறும் நாளை எதிர்நோக்கி நாவூர ஏங்கிக் கோறி நிற்கின்றனர் என்பது வெளிப்படையான உண்மை.

சமதர்மம் என்றால் சாதாரணமாக பாரபக்ஷமற்ற நீதி, சமத்துவம், பேதமற்ற அதாவது உயர்வு, தாழ்வு இல்லாத நிலை என்பதாகும். ஆனால் இன்றைய வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் அதாவது ஜாதியில், கல்வியில், செல்வத்தில், வாழ்க்கை அந்தஸ்து நிலையில் மேல்கீழ்நிலை இருந்து வருகிறது. இவற்றை ஒழித்து, யாவற்றிலும் சமத்துவத்தை நிறுவுவதற்கு சமதர்மக் கொள்கை ஆட்சி அவசியம் என்றால் மதக்காரர்களுக்கும் கடவுள் நம்பிக்கை கொண்ட ஆஸ்திகர்களுக்கும் கஷ்டமாயிருக்கிறது. உழைப்பாளி மக்கள் உடல் வருந்தியுழைத்த பின்னும் குடிக்கக் கூழின்றியும் கட்டக் கந்தையின்றியும், குடி இருப்பதற்கு ஓட்டைக் குடிசைகூட இல்லாமல் பரிதவிக்கும் பொழுது எந்தவிதமான வேலையும் செய்யாது பணக்காரனாக இருக்கின்ற சந்தர்ப்பத்தால் அக்கிரமமாக அநீதியாக தொழிலாளர்களைக் கொடுமைப்படுத்திக் கொண்டு, தான் மட்டும் படாடோபமாக டம்பாச்சாரித்தனமாக வீண் விரையமாக்குவது சரியல்ல. எல்லோரும் கஷ்டப்பட்டு வேலைசெய்து பலனை எல்லோரும் சமமாக அநுபவிக்கலாம் என்று சொன்னால் அது முதலாளிகளுக்கும், பணக்காரர்களுக்கும், ஜமீன்தார், மிட்டாதார் முதலியவர்களுக்கும் விரோதம் என்று வீண் கூக்குரலிடப்படுகிறது. சாதாரணமாக இன்று ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஆளுக்கொரு வேலை செய்து சமமாக உண்டு, உடுத்திக் களிப்புடன் வாழ்க்கை நடத்துவதில்லையா? அது போலவே ஒரு கிராமம், ஒரு ஜில்லா, ஒரு மாகாணம் அல்லது தேசத்திலுள்ள சகல மக்களும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலவும், உள்ள பூமியும் பொருளும் எல்லாம் குடும்ப பொதுச்சொத்து போல் எல்லா மக்களுக்கும் பொதுவாகிய அக்குடும்பத்துக்குச் சொந்தமே அன்றி தனித்தனியாக அவனவன் இஷ்டம்போல் அனுபவிக்கும் தனி உரிமை யாருக்கும் இல்லை. எல்லோரும் ஒன்றுபட்டு ஆளுக்கொரு வேலை செய்து உண்டு, உடுத்தி, இன்பவாழ்வு வாழ வேண்டுமென்பதுதான் சமதர்மம். மற்றபடி இதில் பயப்படத்தக்க காரியமும் புரியாத காரியமும் இல்லை.

இந்த சமத்துவமான வாழ்க்கை வேண்டுமென்று கூறும் பொழுது சமதர்ம விரோதிகளான மதவாதிகளும், ஆஸ்திகர்களும் துள்ளிக் குதித்து அது கடவுளுக்காகாது: அவனவன் முன் ஜென்மத்தில் செய்த பாவ, புண்ணியங்களுக்கேற்றாற் போல் சுகமான வாழ்க்கையோ, கஷ்டமான வாழ்க்கையோ நடத்துகிறான். பணக்காரனாகவோ, ஏழையாகவோ இருப்பது கடவுள் சித்தம், அவர் கடாட்சத்தால் அவனுக்கே தனிவுரிமை கொடுக்கப்பட்ட பொருள்களைப் பொதுவுடமை ஆக்கப்படல் அநீதம், கடவுள் கட்டளைக்கு விரோதம் என்று கூப்பாடு போடுகிறார்கள். இன்றைக்கு முனிசிபல் கட்டடத்தையோ, பொது ரஸ்தாவையோ ரயில்வேயையோ எடுத்துக் கொள்ளுங்கள். இதில் யாருக்கு உரிமையில்லையெனக் கூறமுடியும்? மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அவற்றை அநுபவிக்கிறார்களா? இல்லையா? இதனால் எந்தக் கடவுளுக்கு, மதத்துக்கு, அல்லது பணக்காரனுக்கு ஆபத்து வந்துவிட்டதாகக் கூற முடியுமா? ''மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாததான பல வசதிகளையும், சாதனங்களும் வேறொருவரும் அனுபவிக்கக் கூடாது; அந்த சாதனங்களினின்றி மற்றவர்கள் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. எனக்கு தேவைக்கு மேலிருந்தாலும் நான் அநுபவிப்பதற்கு வேண்டிய அளவுக்கு மேலிருந்தாலும் அது சும்மா இருந்து வீணாக அழிந்து போவதானாலும் பிறர் அநுபவிக்க நான் பார்க்கக் கூடாது'' என்னும் குறுகிய புத்தியும், கீழான எண்ணமும், சுயநல உணர்ச்சியும் கொண்டவர்களுக்கும்,


RangaRakes
tamilnavarasam.com

தான் உழைக்கக் கூடாது, உடல் வளையக் கூடாது, ஆனால் பிறமக்கள் உழைப்பதினால் விளையும் பயனைத் தட்டிப் பறித்து அனுபவிக்க வேண்டும் என்னும் சூழ்ச்சிமிக்க சோம்பேறிகளுக்கும்தான் சமதர்மம் கசப்பாகவோ வெறுப்பாகவோ விரோத மாகவோ இருக்குமே தவிர அவர்கள் இதைப்பற்றி மறுப்பார்களே தவிர மற்றபடி உடலைச் சாராகக் கசக்கிப் பிழிந்து வேலை செய்யும் பாட்டாளி மக்களுக்கு இந்த கொள்கை ஒரு நாளும் விரோதமானதல்ல. பெரிதும் சாதகம் செய்யவல்ல வாழ்க்கை நிலையை உயர்த்தவல்ல ஜீவதாது இது என்று தான் கூற வேண்டும். உலக ஜனத்தொகையில் 100க்கு 90 பேருக்கு மேற்பட்ட தொழிலாளிகள் பாமர மக்கள் ஆகியவர்களுக்கு அனுகூலமாயிருக்கிற இந்தத் தத்துவத்தை ஞான புத்தியும் நேர்மையான நோக்கமும் பரந்த மனப்பான்மையும் கொண்ட அனைவரும் ஆதரித்துத் தான் தீருவார்கள்.

ஏற்றத் தாழ்வுகள் மலிந்த இன்றைய சமூக அமைப்பால், ஏற்பாட்டால் யாருக்காவது வாழ்க்கையில் பூரண இன்பமோ, சாந்தியோ சமாதானமோ உண்டு என்று கூற முடியுமா? இல்லாத ஏழைக்கு கஞ்சியில்லை, கட்டத் துணியில்லை, இருக்க வீடில்லை, ஓய்வில்லை, பிள்ளைக்குக் கல்வி வசதியில்லை என்பன போன்ற பல ஓயாக் கவலையே கவலையால் சதா வறுமைக் கடலிலே கிடந்துழல்கிறான். பணம் படைத்த, பூஸ்திதி படைத்த பணக்காரர்களுக்கோ இருப்பதைக் காக்க வேண்டும், மேலும் பெருக்க வேண்டும், பிறர் கவராமல் காப்பாற்ற வேண்டும் என்னும் கவலையோடு பேராசை மிகுதியால் மேலும் மேலும் செல்வத்தைப் பெருக்கவே ஆசைப்படுகின்றார்கள். சாதாரணமாக ஒரு தோட்டி வேலை செய்யும் கீழ்தர நிலையில் உள்ளவன் ஆடு, கோழி வளர்த்துக் கொஞ்சம் பணக்காரனாக வேண்டும். பின்னர் கிராம மணியகாரனாக ஆக வேண்டும் என்றெண்ணுகிறான். மணிய வேலை கிடைத்தாலும் தாசில்தாராக வேண்டுமென்று ஆசிக்கிறான். அப்படியானாலும், கலெக்டர் ஆக வேண்டும், கவர்னர் ஆக வேண்டும், வைஸ்ராயாக வேண்டும், ஏக சக்கிராதிபதியாய் உலகாள வேண்டும்; இன்னும் இதற்கு மேல் வேறு உலகங்கள் இருந்தாலும் அவற்றையும் தான் ஒருவனே கட்டி ஆள வேண்டும் என்று கருதுகின்றான். இந்த மனப்பான்மைக்குக் காரணம் என்ன வென்றால் கஷ்டப்பட்டு உழைக்காது சுகவாழ்வு நடத்துவதும், தேவைக்கு மேற்பட்ட சொத்துக்களுக்கு சொந்தக்காரனாக இருப்பதும் ஒரு கௌரவம் என்றும், தனிமதிப்புக்குப் பாத்திரமானது என்றும், கண்ணியமானது என்றும் கருதுகின்ற ஒரு ''மூட நம்பிக்கையே'' தவிர வேறில்லை.

இந்த மூடநம்பிக்கையின் பயனாய்த்தான், மனிதன் தேவைக்கு மேற்பட்ட பொருள் போகங்களைத் தானும் அனுபவியாது பிறரையும் அநுபவிக்க விடாது, வைக்கோல் போரைக் காக்கும் நாய் போல் வாழ்கின்றான். இந்தத் தனிவுடமை வாழ்க்கையில் பல ஆயிரக்கணக்கான, கோடிக்கணக்கான மக்களுக்குப் பயன் படக்கூடிய பல பொருள்கள் சாதனங்கள் வீண் விரையம் செய்யப்படுகின்றன.

உதாரணமாக மோட்டார் காரை எடுத்துக் கொள்வோம். ஒரு செல்வந்தர் குடும்பத்துக்கு தனியாக ஒன்று அல்லது மேற்பட்ட கார்கள் வைத்துக் கொண்டிருப்பது இன்றைய அநுபவம். ஒரு நாளில் சாதாரணமாக ஒரு மனிதனுக்கு 3 அல்லது 4 மணி நேரமே மோட்டார் வேண்டியிருக்கும். இந்த 3 அல்லது 4 மணி நேரத் தேவைக்காக உபயோகப்படும் மோட்டார் ஒரு நாளில் 20 மணி நேரம் வீணாக யாதொரு பயனுமின்றி இருக்கிறது. இதில் வீணாக பணம் முடங்கிக் கிடக்கிறது. இந்த நிலை மாறி பஞ்சாயத்து போர்டு அல்லது முனிசிபாலிட்டிகளில் ஜனத்தொகைக்குத் தக்கவாறு 10, 15, 20 கார்கள் வைத்துக்கொண்டால், பொதுவில் தேவைப்பட்டவர்கள், தேவைப்பட்ட நேரங்களில் உபயோகித்துக் கொண்டால், வீணாக பணம் முடங்கிக் கிடக்க வேண்டிய தேவையில்லை. இம் மாதிரியான முறைகளை அநுசரிப்பதால் வீண் விரையங்கள் தடுக்கப்பட்டு, மக்கள் எல்லோரும் மனித வாழ்வை இன்பமயமாக்கும் பல சாதனங்களையும் அநுபவித்துப் பயன்படுத்திக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும். இதற்கு பாடுபடாது பிறருழைப்பில் படாடோப வாழ்க்கை நடத்துவதும், அதிகப்படியான பொருள்களுக்கு அதிபதியாய் இருப்பதும், கண்ணியமான, பெருமையான வாழ்க்கை என்று கருதப்படுகின்ற மூடநம்பிக்கை ஒழிய வேண்டும். இதில் எத்தகைய ஒரு கவுரவமும் மரியாதையும் இல்லை என்பது தெளிவாக்கப்பட வேண்டும்.

*குறிப்பு: திருப்பூரில் செங்குந்தர் 12ஆவது மாநாடும் செங்குந்தர் 2ஆவது வாலிபர் மாநாடும் 20, 21.05.1934 தேதிகளில் நடந்தபோது இரண்டாம் நாள் மாநாட்டில் 'சமதர்மம்' என்ற தலைப்பில் ஆற்றிய உரை.*

**புரட்சி - சொற்பொழிவு - 10.06.1934**





RangaRakes tamilnavarasam.com

# சம்பளக் கொள்ளைக் கொடுமை

இந்தியாவுக்கு பிரிட்டிஷ் அரசியல் முறை ஏற்பட்ட பின் உண்டான கொடுமைகளில் எல்லாம் தலை சிறந்த கொடுமை **சம்பளக் கொள்ளைக் கொடுமை**யேயாகும். இக்கொடுமைக்குப் பொறுப்பாளிகள் பிரிட்டிஷாரே என்று சொல்லிவிட முடியாது. இந்தியர்களும் சிறப்பாக இந்திய அரசியல் கிளர்ச்சிகளும் மற்றும் இந்திய தேசியமுமேயாகும்.

பிரிட்டிஷார் தாங்கள் அன்னியர் என்னும் பிரிவிலிருந்து தப்பித்துக்கொள்ளவும், தேசியக் கிளர்ச்சியின் உள் தத்துவம் இன்னதென்று தெரிந்து அதற்கு இணங்கவும் தேசீயவாதிகள் என்பவர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும் முற்பட்டதே பிரிட்டிஷ் அரசியல் தந்திரத்தால் இந்தியாவுக்கு ஏற்பட்ட கெடுதிகளுக்கெல்லாம் காரணம் என்று சொல்லலாம்.

இன்றையத்தினம் உலகத்தில் எந்த தேசத்திலும் - எவ்வளவு செல்வம் பொருந்திய தேசத்திலும் உள்ள அரசாங்க உத்தியோகங்களில் இந்தியாவில் இருந்துவரும் சம்பளக்கொள்ளைக் கொடுமை இல்லை என்றே சொல்லுவோம்.

இந்திய மக்களில் ஒரு மனிதனுடைய ஒரு நாளைய சராசரி வரும்படி 0-1-6 பை. என்று பொருளாதார நிபுணர்களால் கணக்கிடப் பட்டிருக்கிறது. இது இந்தியப் பொருளாதார நிபுணர்களும் இந்திய தேசீயவாதிகளும் அவர்களது தலைவர்களும் ஆகிய எல்லோராலும் இது ஒப்புக்கொண்ட விஷயமாகும்.

ஆகவே ஒரு மனிதனுடைய சராசரி வரும்படி மாதம் 1க்கு 2-13-0 அல்லது 3 ரூபாய்க்கு உட்பட்டதேயாகும். மேலும் கூறவேண்டுமானால் இவ்வளவிற்கும் கூட மார்க்கமில்லாமல் இதைவிடக் குறைவான வரும்படி சம்பாதிக்கின்றவர்களும் உண்டு.

இந்தியப் பொருளாதார நிபுணர்கள் என்பவர்களாலும், இந்திய தேசீயத் தலைவர்கள் என்பவர்களாலும் ஆதரிக்கப்படும் தேசீயக் கைத்தொழில் என்பதின் மூலம் இந்திய மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் வரும்படி தினம் 0-1-6 பை. சில சமயங்களில் 0-1-0 அணா, சில சமயங்களில் இதைவிடக் குறைவும் ஆகும்.



எப்படியெனில் சுயராஜ்யத்துக்கு மார்க்கம் என்று சொல்லப்படும் கதர் நூல் நூற்பதின் மூலம் நபர் ஒன்றுக்கு தினம் ஒரு அணா, ஒண்ணரை அணாத்தான் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்குக் காரணம் என்னவென்றால் ''இந்த வரும்படிகூட கிடைப்பதற்கு மார்க்கமில்லாமல் கஷ்டப்படும் - பட்டினி கிடக்கும் மக்கள் கோடிக்கணக்காயிருக்கிறார்களாதலால் இதுவே கிடைத்தால் போதும்'' என்று சொல்லப்படுகின்றது.

இந்தப்படியான தினம் 0-1-6 பை. வரும்படி என்பதுகூட மாதம் 1000, 10000 ரூபாய்கள் வரும்படி உள்ளவர்களின் சம்பாதனைத் தொகையையும் தினம் கால் அணா, அரை அணா வரும்படி உள்ளவர்களது சம்பாதனைத் தொகையையும் கூட்டி சராசரி வகுத்துவந்த தொகையே மேற்சொன்ன (0-1-6 பை) வரும்படியாகும். இதை அனுசரித்தே ஒரு மனிதனின் நித்திய வாழ்க்கைக்கு இன்றைய நிலைமையில் சராசரி தேவை எவ்வளவு ஆகுமென்று கணக்குப் பார்த்தால் மேற்கண்ட 0-1-6 பையே போதும் என்று சொல்லக்கூடிய அனுபவத்தில்தான் அதிகமான மக்கள் இருந்துவருகிறார்கள். இதைவிடக் குறைந்த அளவிலும் ஜீவித்து வருகின்றவர்கள் கோடிக்கணக்கில் இருந்து வருகிறார்கள் என்பது மிகைபடுத்திச் சொல்வதாக ஆகாது. இதற்குக் காலநிலையும் அனுகூலமாய்த்தான் இருக்கிறது.

இன்று அரிசி ரூபாய் 1க்கு பட்டணம் படியில் 8 படி கிடைக்கின்றது. இந்தியாவுக்குள் எந்த ஊரிலும் ரூபாய் 1க்கு 7 படிக்குக் குறைவில்லாமல் கிடைக்கலாம். ஒரு படி அரிசி போட்டுச் சமைத்தால் சராசரி மக்கள் 8 பேர் சாப்பிடலாம். இதில் அபிப்பிராய பேதமே இருக்கக் காரணமில்லை. அப்படியானால் ஒவ்வொரு மனிதனின் மூன்று வேளை சாப்பாட்டுக்கும் சேர்த்து அரிசியும் மற்ற ஆகாரச் சாமான்களும் சேர்த்து கணக்குப் பார்த்தால் மேல் குறிப்பிட்டதான தினம் ஒண்ணரையணா வரும்படி சராசரி மக்களுக்கு போதுமானதென்றே சொல்லலாம். மற்றபடி துணி, வீடு, வைத்தியம், படிப்பு ஆகியவைகளுக்கு இதில் பணம் மீதியில்லை. ஆனதினால் தான் இந்தியாவில் தரித்திரர்கள், ஏழைகள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுவதாகும்.

இப்படிப்பட்ட நிலை உள்ள இந்த தேசத்தில் அரசியல் உத்தியோகங்களில் சேர்ந்துள்ள ஜனங்களுக்கு மீ 1-க்கு 100, 500, 1000, 2000, 5000, 10000, 20000 ரூபாய்கள் என்கின்ற கணக்கில் சம்பளங்கள் கொடுக்கப்படுகின்றன. இந்தப்படி கொடுக்கப்படும் பணங்கள் மேல் கண்டபடி தினம் 1க்கு சராசரி ஒண்ணரையணா வரும்படி உள்ள மக்களிடம் வரியாக வசூலித்தே கொடுக்கப்படுகிறது. இவ்வளவு அதிகப்படியான சம்பளங்கள் ஏன் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்குச் சரியான காரணங்கள் எதும் சொல்லப்படவில்லை.



RangaRakes tamilnavarasam.com

சொல்லப்படவில்லை என்பது மாத்திரம் அல்லாமல் இந்தப்படி ஏன் கொடுக்கப்படுகின்றது என்று கூட சமீபகாலம் வரை எந்த தேசீய வாதிகளும் - தேசீய கிளர்ச்சிக்காரர்களும் - தேசீயத் தலைவர்களும் - ஜனப்பிரதிநிதிகள் என்பவர்களும் கவலை கொண்டு கவனித்தவர்களும், கேட்டவர்களும் அல்ல. மேலும் இவர்கள் அதிகச் சம்பளங்களைப்பற்றி கண்டிக்காமல் கவலைப்படாமல் இருந்தார்கள் என்று மாத்திரம் சொல்லுவதற்கில்லாமல் இருக்கிற சம்பளம் போதாதென்றும் இன்னும் அதிகச் சம்பளம் வேண்டுமென்றும் கேட்டு வந்திருக்கிறார்கள் என்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருக்கின்றன.

சம்பளக் கொடுமை ஒருபுறமிருக்க மற்றொரு புறம் இப்படிப்பட்ட சம்பளங்கள் உள்ள உத்தியோகங்களும் நாளுக்கு நாள் பெருக்கப்பட்டு வந்து சுமார் 30, 40 வருஷங்களுக்கு முன் இருந்த சம்பளங்கள் 100-க்கு 100 ரூ. வீதம் உயர்த்தியும், சில உத்தியோகங்களுக்கு 100-க்கு 300 வீதம் உயர்த்தியும் வந்திருப்பதுடன் இப்படிப்பட்ட உத்தியோகங்களின் எண்ணிக்கையும் 100க்கு 100வீதமும், சில விஷயங்களில் 100க்கு 300, 400 வீதமும் உயர்த்தப்பட்டு விட்டது.

உதாரணமாக மேல் நிலையில் ஹைகோர்ட் ஜட்ஜிகள் 5 பேர் இருந்து வந்ததற்கு பதிலாக இன்று 15, 16 ஹைகோர்ட் ஜட்ஜிகளும், மந்திரிகள் 2 பேர் இருந்து வந்ததற்குப் பதிலாக 7 மந்திரிகளும் இதுபோலவே கீழ் நிலைகளிலும் ஜில்லாவுக்கு 2 முன்சீப்புகளுக்குப் பதிலாக 6, 7 முன்சீப்புகளும், ஜில்லாவுக்கு 2 டிப்டி கலெக்டர்களுக்குப் பதிலாக 4, 5 டிப்டி கலெக்டர்களும் இப்படியாக ஒவ்வொரு இலாக்காவிலும் சம்பளத் துகையும், உத்தியோக எண்ணிக்கையும் பெருகி ஜனங்களுக்காக அரசாங்க நிர்வாகமும், உத்தியோகமும் சம்பளமும் என்று சொல்லுவதற்கே இல்லாமல் அரசாங்கத்துக்காகவும், உத்தியோகஸ்தர்களுக்காகவும் அவர்களது சம்பளத்துக்காகவும் ஜனங்கள் இருக்க வேண்டியவர்களாக ஆகிவிட்டார்கள்.

இப்படியெல்லாம் அரசாங்க உத்தியோக சம்பளக் கொடுமை ஏற்பட்டும் மக்களுடைய கல்வி, அறிவு, நாணையம், ஒழுக்கம், ஒற்றுமை, கூட்டுறவு முதலிய அவசியமானவைகளில் ஏதாவது விருத்திகள் ஏற்பட்டிருக்கின்றதா என்று பார்த்தால் ஒரு துறையிலாவது உண்மையான விருத்திக்கு அறிகுறி கூட இல்லை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. அது மாத்திரமல்லாமல் முன்பு இருந்ததைவிட அனேக துறைகளில் கீழ்நோக்கி இருக்கின்றது என்று சொல்வதற்குக் கூட பல காரணங்கள் இருந்துவருகின்றன.

இந்தப்படியான உத்தியோகப் பெருக்கமும், சம்பள உயர்வும், சேர்ந்து இன்று நம்நாட்டில் உள்ள எல்லா மக்களையும் தங்கள் வாழ்க்கைக்கு உத்தியோகத்தையே எதிர்பார்க்கும்படிக்கும், செல்வம்



சேர்ப்பதற்கு சம்பளத்தையே ஆதாரமாகக் கொள்ளும்படிக்கும் அதற்கே ஒவ்வொருவரும் தங்களை தயார் செய்துகொள்ளும்படியும் தூண்டி வருகின்றதே ஒழிய பாடுபட்டு வாழ எந்த மனிதனையும் தூண்டச் செய்யவில்லை. இந்திய மக்கள் ஒவ்வொருவரும் இன்று சோம்பேரி வாழ்க்கையில் வாழ ஆசைப்படுவதும் மொத்த ஜனத்தொகையில் சரீரத்தில் பாடுபட்டு வேலை செய்பவர்களைவிட சோம்பேரிகளே கணக்கில் மிகுந்திருக்க நேரிட்டதும் இதனாலலேயேதான் என்பது நமது உருதியான அபிப்பிராயமாகும்.

கல்வி இல்லாதவர்கள் எல்லாம் சரீரத்தால் பாடுபடவேண்டியவர்கள் என்றும் ஏதோ இரண்டு எழுத்துக்கூட்டிப் படிக்கத்தெரிந்தவர்கள் எல்லாம் அறிவினால் வேலை செய்ய வேண்டுமே ஒழிய, சரீரத்தால் பாடுபட முடியாதவர்கள் என்றும் நினைக்கத்தக்க மனப்பான்மை ஏற்பட்டிருக்கின்றது. எழுதப்படிக்கத் தெரியாதவர்களே பாடுபட வேண்டியவர்கள் என்பதாக ஆகிவிட்டதால் தொழில்முறை மேன்மையடையாமல் போக ஒரு காரணமாகிவிட்டது. படித்தவர்கள் உத்தியோகத்தையே பிரதானமாகக் கருதி அதிலேயே பிரவேசித்து விட்டதால் போட்டி அதிகம் ஏற்பட்டு உத்தியோகத்தின் யோக்கியதை குறைந்ததுடன் அதற்கு வேண்டிய ஒழுக்கம், நாணையம், நீதி முதலியவைகளும் குறைய நேரிட்டு விட்டன. இதன் பயனாய் ஜனங்களுக்கு இரண்டுவிதக் கெடுதிகள் ஏற்பட்டு விட்டன. ஒன்று அதிகவரிக் கஷ்டம், அதாவது ஏழைகள் பாடுபடுபவர்கள் சம்பாதிக்கும் செல்வம் எல்லாம் இச்சோம்பேரிக் கூட்டங்களுக்கு சம்பளத்திற்காக அழ நேரிட்டு வரிகளாகக் கொடுத்துவருவதும், இரண்டு, அரசாங்க நிர்வாக ஒழுக்கக் குறைவு ஏற்பட்டு ஜனங்களுக்கு நீதி, சமாதானம், பத்திரம் ஆகியவைகள் இல்லாமல் போனதும் ஆகும். ஆக இந்த இரண்டு காரியங்களே இன்று இந்திய மக்களின் வாழ்க்கைக்கு பெருத்த கஷ்டமாக இருந்து வருகின்றன.

இவை இரண்டும் சரிப்பட்டு விடுமேயானால் அரசியலில் இந்தியாவுக்கு எவ்வித குறைவும் இல்லை என்று ஒருவாரு சொல்லலாம். ஆனால் இந்திய அரசியல் கிளர்ச்சியில் இந்த இரு குறைகள் நீங்குவதற்காக இதுவரை எவ்வித கிளர்ச்சியும் செய்ததும் இல்லை, இன்றும் செய்யப்படுவதாகவும் தெரியவில்லை. அது மாத்திரமல்லாமல் இதுவரை நடந்து வந்த அரசியல் கிளர்ச்சியானது பெரிதும் இவ்வித அதிக சம்பளம் பெறவும் யோக்கியமும், நாணையமுமாய் நடந்து கொள்ள முடியாத உத்தியோகங்களைப் பெருக்கி அவற்றைப் பெறவுமே செய்யப்பட்டு வந்திருக்கிறதே ஒழிய வேறில்லை என்பது யாவரும் அறிந்ததாகும்.

இந்தியாவில் இன்று பல அரசியல் கக்ஷிகள் இருக்கின்றன என்றாலும் அவற்றினுடைய முக்கியமானதும் முதன்மையானதும் ஒன்றே



RangaRakes tamilnavarasam.com

ஆனதுமான உத்தேசமெல்லாம் இப்படிப்பட்ட சம்பளமும் உத்தியோகமும் பெருவதல்லாமல் வேறொன்றும் இல்லை என்பது உண்மையான அபிப்பிராயமாகும்.

நிற்க உலகத்தில் இந்தியாவைப்போல் மற்றும் எத்தனையோ தேசங்கள் இருக்கின்றன. அவற்றில் அரசியல் கிளர்ச்சிகள் நடந்த வண்ணமாகவே இருக்கின்றன. அரசாங்கத்தைக் கைப்பற்றி பூரண சுயேச்சை என்னும் பேரால் பொதுஜனங்களால் பல நாடுகளில் அரசாங்கம் நடைபெற்றும் வருகின்றன. அப்படிப்பட்ட தேசங்களின் செல்வ நிலைமைகள் இந்தியாவைவிடப் பல மடங்கு உயர்ந்ததாகவும் இருக்கின்றன. உதாரணமாக இந்தியாவில் ஒரு மனிதனின் சராசரி வரும்படி தினம் ஒன்றுக்கு 0-1-6. ஆனால் இங்கிலாந்து அமெரிக்கா முதலிய நாட்டு மக்களின் சராசரி வருமானம் 1-8-0, 2-0-0 ரூபாய்களாகும். இந்த தேசத்தின் வரி வருமானம் வருஷம் 200 கோடி ரூ. ஆனால் இங்கிலாந்து தேசத்தின் வருமானம் வருஷம் ஒன்றுக்கு 1200 கோடி ரூபாய்களாகும். அப்படிப்பட்ட தேசங்களில் அரசாங்க உத்தியோகங்களின் சம்பளங்களைப் பார்த்தோமேயானால் நமது நாட்டு சம்பளத்தின் கொள்ளை போகும் முறையும், கொடுமையும் பாடுபடும் ஏழை ஜனங்களை பாடுபடாத சோம்பேரிகள் எப்படி வஞ்சிக்கிறார்கள் என்கின்ற உண்மையும் ஆகியவைகள் எளிதில் புலப்படும். இந்தியா வைசிறாய் என்கின்ற உத்தியோகத்துக்கு மாதம் 20 ஆயிரம் ரூபாயானால் இந்தியா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்ட்ரேலிய முதலிய பல தேசங்களின் ஆக்ஷிக்கு மேலதிகாரியாய் இருந்து இந்திய வைசிறாயையும், இன்னும் பல வைசிராய்களையும் நியமிக்கவும் நீக்கவும் அதிகாரமுள்ள பிரிட்டிஷ் தலைமை அதிகாரிக்கு மாதம் 5000 ரூ. சம்பளமேயாகும்.

பிரஞ்சு தேசத்து குடி அரசுத் தலைவருக்கு அதாவது அரசர் இல்லாமல் அரசருக்கு பதிலாய் இருந்து அந்த தேசத்துக்கும் மற்றும் அதன் ஆக்ஷிக்குக் கீழ்ப்பட்ட ஏனைய தேசங்களுக்கும் தலைவராக இருப்பவர்களுக்கு மாதம் 1க்கு 1500 ரூபாய் சம்பளமே கொடுக்கப்பட்டு வருகின்றது. நம் நாட்டு நிர்வாக சபை அங்கத்தினர்கள் மந்திரிகள் ஆகியவர்கள் சம்பளங்கள் அமெரிக்கா கவர்னர்கள் சம்பளங்களை விட அதிகமாகவும், பிரிட்டிஷ் தலைமை அதிகாரி நிர்வாக சபை அங்கத்தினர்கள் மந்திரிகள் ஆகியவர்கள் சம்பளங்களை விட 100க்கு 100பங்கு 150 பங்கு அதிகமாகவும் இருந்து வருகின்றன. மேல்நாட்டு அரசாங்கங்களின் வரி வரும்படி நம் நாட்டு வரி வரும்படியைவிட 5, 6 மடங்கு அதிகமாகவும், அந்நாட்டு மக்களின் வரும்படி நம் நாட்டு மக்களின் வரும்படியைவிட 20 பங்கு 30 பங்கு அதிகமாகவும் இருக்க



உத்தியோக சம்பளங்கள் மாத்திரம் அந்நாட்டு சம்பளங்களைவிட இந்தியாவில் பலமடங்கு அதிகமாய் இருந்தால் இந்த அரசாங்க நிர்வாகமும் உத்தியோக சம்பளமும் தேசத்தின் நிலைமையும் ஜனங்களுடைய க்ஷேம லாபங்களையும் அனுசரித்து நடத்தப்படுகின்றது என்று எப்படி சொல்லக்கூடும். ஆகவே இன்றைய தினம் நமது நாட்டில் உள்ள எல்லாவித அரசியல் கிளர்ச்சிகளையும் தகர்த்து ஒழித்து எறிந்து விட்டு இந்தக் கொள்ளை போன்ற சம்பளக் கொடுமையை ஒழிப்பதற்கு முயற்சித்தல் அதுவே இந்திய நாட்டு ஏழை மக்களுக்குச் செய்த அளவிட முடியாத நன்மையாகும்.

மந்திரிகளுக்கு மீ 5000 ரூ சம்பளம் என்கின்ற திட்டம் இல்லாதிருக்குமானால் நமது நாட்டு காங்கிரஸ், மிதவாதி சங்கம், ஜஸ்டிஸ் கக்ஷி ஆகியவைகளின் ஒழுக்கமும் நாணையமும் இவ்வளவு கேவலமாகவும் இழிவாகவும் போயிருக்காது என்பதுடன் நிர்வாகங்களும் இவ்வளவு பொறுப்பற்ற முறையில் ஏற்பட்டிருக்காது. கக்ஷிகளின் மற்றக் கொள்கைகள் எப்படி இருந்தாலும் அரசியல் ஆதிக்கம் கைக்கு வந்தால் தங்கள் அதிகாரத்துக்குள் இருக்கப்பட்ட உத்தியோகங்களின் சம்பளங்களை நாட்டின் தகுதிக்கு ஏற்ற இன்ன அளவுக்கு குறைத்து விடுகின்றோம் என்றும் தங்கள் அதிகாரத்துக்குள் கட்டுப்படாத சம்பளங்களைக் குறைக்க அதிகாரம் பெருவதற்கு கிளர்ச்சி செய்கின்றோம் என்றும் சொல்லி அந் நிபந்தனையின் மேல் எந்தக் கட்சி புறப்பட்டாலும் அத்துடன் நமக்கு எந்தவிதப் பிணக்கும் இருப்பதற்கில்லை. அன்றியும் அக்கொள்கைகள் ஈடேற அவற்றுடன் ஒத்துழைக்கவும் ஆக்ஷேபணை இல்லை.

ஜஸ்டிஸ் கட்சி கூட தாங்கள் மறுபடியும் மந்திரிகளாய் வர நேரிட்டால் மந்திரிகள் சம்பளம் எந்தக் காரணத்தை முன்னிட்டும் மீ 1000 ரூபாய்க்கு மேற் போகாமல் அதற்குள்ளாகவே குறைத்துக்கொள்ளுகிறோம் என்றும் இந்த விகிதமே மற்ற உயர்ந்த சம்பளங்களையும் குறைத்து விடுகிறோம் என்றும் சொல்லி அந்தப்படி நடக்க முன்வருவார்களானால் அதற்காகவே அதை இன்றைய நிலைக்கு தீவிரக்கட்சி என்று கூட சொல்லிவிடலாம். அன்றியும் அது வெற்றி பெரும் என்பதிலும் யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. அப்படிக்கில்லாமல் அதாவது சம்பளத்தில் குறைத்துக் கொள்ளாமலும் மற்ற உயர்ந்த சம்பளங்களைக் குறைக்காமலும் இருந்து கொண்டு இவர்கள் ஜனங்களுக்கு எவ்வித நன்மை செய்கிறோம் என்ற சொல்வதாய் இருந்தாலும் இவர்களுக்கு ஜன சமூக ஆதரவு கிடைப்பது கஷ்டமான காரியமேயாகும்.

காங்கிரஸ் கட்சிக்கு ஏதாவது நாட்டைப்பற்றி பொருப்பிருந்து உண்மையாய் அது தேசத்து மக்களுக்கு உழைப்பதாயிருக்குமானால் தீண்டாமையை விலக்குவேன் என்பதாலும் தீண்டாத ஜாதியார்களை



RangaRakes tamilnavarasam.com

கோவிலுக்குள் அழைத்துச் செல்கிறேன் என்பதாலும் இந்தியா பூராவும் கதர்மயம் ஆக்கிவிடுவேன் என்பதாலும் ஜனங்களை ஏமாற்றிவிடலாம் என்கின்ற எண்ணத்தை விட்டுவிட்டு இந்தக் கொள்ளையாம் சம்பளக் கொடுமையை அடியோடு ஒழித்துவிடுவோம், நாங்களும் மந்திரிகளாக நேர்ந்தால் மீ 1000 ரூபாய்க்கு கீழாகவே சம்பளம் பெருவோம் என்று உறுதி கூறிவிட்டு வரப்போகும் தேர்தலில் தலைகாட்டட்டும். அப்படிக் கில்லையானால் அது எவ்விதத்திலும் பயனுள்ளதென்றோ நாணையமானது என்றோ சொல்லிக்கொள்ள சிறிதும் யோக்யத்தை அற்றதாகிவிடும்.

ஆதலால் அரசியலின் பேரால் வாழ்க்கை நடத்த எண்ணி இருக்கிறவர்கள் தேர்தலில் நின்று பயனடையக் கருதி இருக்கின்றவர்கள் இதைக் கவனித்து நடந்து கொள்ளுவார்களாக.

**புரட்சி - தலையங்கம் - 17.06.1934**



# சுயமரியாதை திருமணம் என்றால் என்ன?

தோழர்களே! இன்று இங்கு நடைபெறப் போகும் திருமணம் சுயமரியாதைத் திருமணம் என்று சொல்லப்படுகின்றது. மற்ற திருமணங்களுக்கும் சுயமரியாதைத் திருமணங்களுக்கும் அடிப்படையாக என்ன மாறுதல் இருக்கின்றது என்று பாருங்கள்.

அனாவசியமாக சிலர் ''சுயமரியாதைத் திருமணமா?'' என்றாலே அதிசயப்படுவதும், ஏதோ முழுகி விட்டது போல் வெறுப்படைவதுமா யிருக்கின்றதே தவிர, வேறு என்ன மாறுதல் இருக்கின்றது என்பது எனக்கு விளங்கவில்லை.

விவாகம் அல்லது திருமணம் என்று சொல்லப்படுவதெல்லாம் ஒரு பெண்ணும், ஆணும் சேர்ந்து ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு அவர்களது வாழ்க்கையை கூட்டுப் பொருப்பில் நடத்துவதற்குப் பலர் அறிய செய்துகொள்ளும் அல்லது செய்யப்படும் காரியமே ஆகும். இதைச் சிலர் அதாவது பழைய முறைக்காரர் சடங்கு என்கிறார்கள். சிலர் அதாவது புதிய முறைக்காரர்கள் ஒப்பந்தம் என்கிறார்கள். சடங்கு என்று சொல்லுகின்றவர்கள் உண்மையிலேயே சடங்காகவே கருதி காரியங்களில் லக்ஷியமில்லாமல் நடத்துகிறார்கள். அதாவது கல்யாணத்தில் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் எவ்வித உரிமையும் இல்லை. அதுபோலவே சடங்கிலும் கல்யாணக்காரருக்கும் சடங்குக்கும் யாதொரு உரிமையுமில்லை. எப்படியென்றால் தம்பதிகளின் பெற்றோர்களோ அல்லது பெற்றோர்களைப் பெற்றோர்களோ அல்லது இந்தப் பெற்றோர்களுக்கு வேண்டியவர்களோ பார்த்து இன்ன பெண்ணுக்கு இன்ன மாப்பிள்ளை அல்லது இன்ன மாப்பிள்ளைக்கு இன்ன பெண் என்று தீர்மானித்து விட்டால் அதைத் தம்பதிகள் மணமக்கள் ஆக்ஷேபிக்க முடியாது. அது மாத்திரமல்ல இன்னொரு அநியாயம் என்னவென்றால், திருமணம் என்பது நடக்கும் நிமிஷம் வரையில் மாப்பிள்ளை பெண்ணைப் பார்த்திருக்க மாட்டார். பெண் மாப்பிள்ளையைப் பார்த்திருக்க மாட்டார். 100-க்கு 99 திருமணத்தில் பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசி இருக்கவே மாட்டார்கள்.



RangaRakes tamilnavarasam.com

அங்க லக்ஷணம், அறிவு லக்ஷணம், யோக்கியதை லக்ஷணம் ஆகிய எதையும் பார்க்காமலும் தெரியாமலும் தான் திருமணம் தீர்மானிக்கப்படுகிறது. இவர்கள் இருவர்கள் விஷயத்தில் ஏதாவது ஒன்று கவனிக்கப்படுகின்றதா என்றால் இருவர் பிறந்த நேரம் என்று சொல்லப்படும் 'அது சரியான நேரமோ, தப்பான நேரமோ என்பதைப் பற்றி கவலை இல்லாமல்' ஒரு காலத்தைக் குறிப்பில் வைத்து அதன் மூலமாகவே ஒரு பொறுப்பற்ற நபரால் இருவருக்கும் பொருத்தம் உண்டா இல்லையா என்பது முடிவு செய்யப்பட்டு விடும். சில சமயங்களில் பிறந்த காலம், நேரங்கள் கூட கவனிக்கப்படாமல் பெண்ணின் பெயரின் முதலெழுத்தையும் மாப்பிள்ளையின் முதல் எழுத்தையும் ஆதாரமாக வைத்து பொருத்தம் முடிவு செய்யப்பட்டு விடும். மற்றும் சில சமயங்களில் அதுகூட இல்லாமல் கோவிலில் பூ வைத்து கேட்பது மூலமோ, கருடன் பறப்பது மூலமோ, பல்லி கத்துவது மூலமோ, இருவர் பெயர் எழுதப்பட்ட சீட்டுகளின் மீது ஈ(பறவை) உட்காருவதன் மூலமோ, அல்லது கோவில்களில் ஏதாவது ஒருவன் சாமியாடி வாக்கு சொல்லுவதன் மூலமோ கல்யாணம் தீர்மானிக்கப் பட்டுவிடும். எவ்வளவு காட்டுமிராண்டித்தன வாழ்வில் நமது மக்கள் இருந்து வருகிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும் என்பது எனக்குத் தெரியவில்லை.

இது போலவே சடங்குகள் விஷயத்திலும் இந்தச் சடங்குகள் எதற்காக என்றாவது இந்த சடங்கின் அர்த்தம் என்ன என்றாவது இச்சடங்குகளுக்கு அவசியமோ, ஆதாரமோ, ஆரம்ப காலமோ, பொருத்தமோ என்னவென்றாவது மணமக்களுக்கோ பெற்றோர்களுக்கோ மற்றும் பந்து மித்திரர்களுக்கோ யாருக்குமே தெரியாது.

ஆனால் சுயமரியாதைக் கல்யாணம் என்பது இந்தப்படிக்கல்ல. மணமக்கள் ஒருவரை ஒருவர் அறிந்து தங்களுக்குள்ளாகவே ஒருவரை ஒருவர் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் அர்த்தமும், பொருத்தமும், அவசியமும் இல்லாமல் வெறும் சடங்கு பழக்க வழக்கம் என்பதற்காக மாத்திரமே ஒன்றையும் செய்யக்கூடாது என்பதுமேயாகும்.

இவை மாத்திரமல்லாமல் திருமணம் சம்மந்தமாக செலவு மெனக்கேடு வீண் கஷ்ட நஷ்டம் ஆகியவைகளைப்பற்றி பழைய முறைக் கல்யாணங்களில் லக்ஷியமே செய்யப்படுவதில்லை. ஆடம்பரத்துக்காகவே வீண் செலவுகளை தகுதிக்கு அதிகமாக கடன் வாங்கியாவது செய்யப்பட்டு வருகிறது. திருமணத்திற்காக 3 நாள் 4 நாள் 5 நாள் சிலர் 7 நாள் கூட மெனக்கெட்டு அயலூர் பந்து மித்திரர்களையும் தருவித்து மெனக்கெடச்செய்து 5 விருந்து 10 விருந்து என்பதாகச் சாப்பாட்டுச் செலவும், பந்தல் மேளம் சங்கீதம் ஊர்வலம் வாணம் என்பதாக வீண் காரியங்களும் குடிகாரர்கள் குடித்த போதையில் தாருமாராய் நடப்பது போல் கல்யாண போதையில் சிக்கி பணங்கள், நேரங்கள், கஷ்டங்கள் ஆகியவைகள் தாருமாராக செலவாக்கப்பட்டு வருகின்றன. 2, 3 நாளைக்கு ஆக சிலர் பார்த்து புகழ்வதற்காக என்று செய்யப்படும் இப்படிப்பட்ட தாருமாரான ஆடம்பர சிலவுகள் கல்யாணத் தம்பதிகள் தலையிலோ அல்லது குடும்பத்தார்கள் தலையிலோ விழுந்து கல்யாணக் கடன் பார்வைகளால் வெகு நாளைக்கு அவதிப்பட வேண்டியிருப்பதால் சில குடும்பங்கள் கல்யாணச் செலவாலேயே பாப்பராகி மீளாக் கடன்காரர்களாகக் கூட ஆகவேண்டியதாகி விடுகின்றன. இப்படிப்பட்ட கொடுமைகளும் முட்டாள்தனமான காரியங்களும் கூடாது என்பதுதான் சுயமரியாதைக் கல்யாணம் என்பதின் முக்கியாம்சங்களாகும்.

மற்றும் கல்யாணம் செய்து கொள்ளும் விஷயத்தில் தம்பதிகளை விட மூன்றாவதவர்களுக்கே சகல சுதந்திரமுமிருந்து வருகிறது. செய்து வைப்பதற்கு ஒரு புரோகிதன் வேண்டும். இன்ன இன்ன மாதிரி செய் என்பதற்குப் பெற்றோர்கள், பந்து மித்திரர்கள் வேண்டும். இவர்கள் சொன்னபடியெல்லாம் தம்பதிகள் நடக்கவேண்டும்.

சுயமரியாதைக் கல்யாணம் என்பதில் இந்த முறையில்லை. மணமக்கள் தங்கள் ஒப்பந்தங்களை ஒருவருக்கொருவர் சொல்லி சம்மதித்ததற்கு அறிகுறியாக மாலையிட்டுக் கொள்வது என்பதுடன் முடிவுபெற்று விடுகின்றது.

மற்றும் இவற்றையெல்லாம் விட ஒரு முக்கிய விஷயம் என்வென்றால் கல்யாண விஷயத்தில் மணமக்களின் வாழ்க்கைச் சம்மந்தம் முக்கியமானது லக்ஷியமானது அல்லவென்றும் அதில் ஏதோ ஒரு தெய்வீக சம்மந்தம் இருக்கிறதென்றும் அதுவேதான் திருமணத்தின் லக்ஷியமென்றும் ஆதலால் அப்பெண்ணும், மாப்பிள்ளையும் அத்தெய்வீக சம்மந்தத்துக்காக ஒருவர் குற்றங்களையும் அநீதிகளையும் மற்றவர்கள் பொருத்துக்கொள்ளவேண்டும் என்றும் அதிலும் சிறப்பாக மாப்பிள்ளை செய்யும் கொடுமையையும் அநீதியையும் பெண் பொருத்துக்கொண்டு வாழ்நாள் முழுமையும் மாப்பிள்ளைக்கு பெண் அடிமையாய் பக்தியாய் இருக்க வேண்டுமென்றும் கூறப்படுகிறது.

ஆனால் சுயமரியாதைக் கல்யாணம் என்பதில் அப்படி இல்லை. திருமணம் என்பது பெண்ணும் ஆணும் சேர்ந்து வாழ்க்கையை நடத்த ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தமென்றும் அவ்வொப்பந்த விஷயம் பெண்ணையும், ஆணையும் மாத்திரமே பொருத்ததே ஒழிய வேறு எவ்வித தெய்வீகத்துக்கோ அல்லது எவ்வித கட்டுப்பாட்டுக்கோ சம்மந்தபட்டதல்ல என்றே சுயமரியாதைக் கல்யாணத்தின் தத்துவமாகும்.

மேலும் பழயமுறை கல்யாணமானது ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்யாணமேற்பட்ட பிறகு தான் ஒருவர் மீது ஒருவர் ஆசைகொள்ளுவதோ


RangaRakes tamilnavarasam.com

காதல் கொள்ளுவதோ ஏற்பட வேண்டுமே ஒழிய அதற்கு (கல்யாணத்துக்கு) முன்னால் ஒருவர் மீது ஒருவருக்கு ஆசையும், ''காதலும்'' ஏற்படுவது கூடாதென்றும் குற்றமென்றும் அது விபசாரத்துக்கு சமானமானதென்றும் கூறப்படுகின்றது.

சுயமரியாதைக் கல்யாணத்திலோ, கல்யாணத்துக்கு முன்பாகவே ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒருவருக்கொருவர் ஆசையும் ''காதலும்'' ஏற்பட்டு அதன் பின்னரே கல்யாணம் நடக்க வேண்டும் என்றும், மற்றபடி கல்யாணம் ஆன பிறகு கல்யாணம் ஆய்விட்டதே என்கின்ற காரணத்திற்காக அங்க ஈனராய் இருந்தாலும் வியாதிக்காரராய் இருந்தாலும், கொடியவறாய் இருந்தாலும் ஒருவருக்கொருவர் ஆசையும் காதலும் கொண்டுதான் ஆக வேண்டுமென்றும் சொல்வதை கண்டிப்பாய் ஒப்புக்கொள்ளுவதில்லை.

மற்றும் பழைய முறைக் கல்யாணங்கள் ஒருதடவை கல்யாணமாகி விட்டால் எந்தக் காரணத்தைக் கொண்டும் மறுபடியும் பிரியக்கூடாதென்றும் இப்படிக் கூறாவிட்டாலும் ஆணுக்கு பிரித்துவிடவோ பிரிந்துகொள்ளவோ உரிமை உண்டு, பெண்ணுக்குத்தான் உரிமையில்லை என்றும் பெண்ஜாதி செத்துப்போனால் புருஷன் மறுவிவாகம் செய்துகொள்ளலாம் என்றும் பெண்ஜாதி உயிருடன் இருக்கும்போதே புருஷன் மாத்திரம் பல பெண்களை கல்யாணம் செய்துகொள்ளலாம் என்றும் பெண்கள் மாத்திரம் எந்தக் காரணம் கொண்டும் புருஷன் எவ்வளவு கொடியவனாகவும் மனுஷத்தன்மை அற்றவனாகவும் எவ் விஷயத்துக்கும் பொருத்தமில்லாமல் கொடுமையும் சித்திரவதையும் போன்ற கஷ்டத்தையும் கொடுப்பவனானாலும் புருஷனை விட்டுப் பிரியக் கூடாதென்றும் வேறு கல்யாணம் செய்து கொள்ள கூடாதென்றும் புருஷன் தான் பக்குவமாவதற்கு முன் தனது 5 வது 10வது வயதிலேயே இறந்துபோனாலும் வேறு புருஷனைக் கல்யாணம் செய்துகொள்ளாமல் விதவை என்னும் பெயருடன் உலக சுகபோகங்கள் எல்லாவற்றையும் வெறுத்து மக்கள் கண்ணுக்கும், மனதுக்கும் வெறுப்புத்தோன்றும் தன்மையில் வாழவேண்டும் என்றும் சொல்லுகின்றது.

சுயமரியாதைக் கல்யாணத்தில் இவ்வித அக்கிரமும், அயோக்கியத்தனமும் அறியாமையும் கொடுமையும் மூர்க்கத்தனமும் காட்டுமிராண்டித்தனமும் இல்லை. வாழ்க்கைக்கும் மனதுக்கும் ஏற்ற தம்பதிகளானால் கூடி வாழலாம். அவைகளுக்கு ஒவ்வாத வாழ்க்கையே ''நரகம்'' போன்றதான தம்பதிகளானால் பிரிந்து மனதிற்கு ஏற்றவர்களை மணந்து இன்பசுக வாழ்வு வாழ உரிமை உண்டு என்பதோடு புருஷனோ மனைவியோ யார் இறந்துபோனாலும் மறுவிவாகம் செய்துகொள்ளலாம் என்று கூறுகிறது.

பழைய முறை கல்யாணப்படி பெண்களுக்கு சொத்து உரிமை இல்லை. வாழ்க்கையில் சரிபங்கு ஆதிக்க உரிமை இல்லை என்று கூறப்படுகிறது. சுயமரியாதை கல்யாணத்தில் சொத்திலும் வாழ்க்கை ஆதிக்கத்திலும் பெண்ணுக்கு ஆணைப்போலவே சரிபங்கு உரிமை இருக்கின்றது என்பதுடன் இவைகளே கல்யாண ஒப்பந்தத்தின் ஷரத்துக்களாகும். அநேகமாய் கல்யாண தத்துவம் பழயதும் புதியதும் ஒரு மாதிரிதான். எப்படி எனில் இங்கு ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் கல்யாணம் செய்துகொண்டார்களே ஒழிய ஆணும் ஆணும் சேர்ந்தோ, பெண்ணும் பெண்ணும் சேர்ந்தோ கல்யாணம் செய்துகொள்ளவில்லை.

ஆதலால் இவ்வித திருமணத்தைப் பற்றி யாரும் கவலையோ ஆத்திரமோ படவேண்டியதில்லை. பெண் மக்களில் பலருக்கு இவ்விஷயத்தில் ஏதாவது மன சஞ்சலம் இருந்தாலும் இருக்கலாம். ஆண்களில் படித்தவர்கள் வித்வான்கள் என்று சொல்லப்படுபவர்களிலேயே சில அழுக்குமூட்டைகள் இருந்துகொண்டு விஷம பிரசாரம் செய்துவரும்பொழுது பெண்களில் இது விஷயமாய் அதிருப்தி உள்ளவர்கள் இருப்பது அதிசயமல்ல. ஏனெனில் பெண்களை நாம் எப்படி வைத்திருக்கின்றோம். அவர்களில் 100-க்கு 99-பேருக்கு அடுப்பங்கரையையும், படுக்கைவீட்டையும் மாத்திரமே காட்டி நகை மாட்டுகின்ற (Stand) ஸ்டேண்டுபோல் நகைகளை மாட்டி இது என் பெண்ஜாதி (அடிமை) இது உன் பெண்ஜாதி என்று கண்காக்ஷி காட்டு கின்றோமே ஒழிய வேறு அவர்களுக்கு என்ன கற்றுக்கொடுத்திருக்கிறோம் என்பதை யோசித்துப்பாருங்கள். வேண்டுமானால் கண்ணைமூடிக்கொண்டு பல்லைக் கடித்துக்கொண்டு கணக்கு வழக்குப் பார்க்காமல் பிள்ளைகளைப் பெறுவார்கள். இதற்கு ஒரு உபாத்தியாயரோ, அறிவோ வேண்டியதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு மடமை உண்டோ அவ்வளவுக்கு அவ்வளவு பிள்ளைகள் பிறந்து விடும். எவ்வளவுக்கெவ்வளவு அடிமைத்தன்மையில் மோகம் உண்டோ அவ்வளவுக்கவ்வளவு நகைகளை மாட்டிக்கொள்ளுவார்கள். தங்களை விகாரமாய் சிங்காரித்துக் கொள்ளுவார்கள். இவைகளையும், இவை போன்றவைகளையும்தான் நாம் அவர்களுக்குத் தாய் தந்தையர்கள் என்கின்ற முறையில் கற்றுக்கொடுத்திருக்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட பெண்களிடம் நாம் வேறு எதை எதிர்பார்க்க முடியும். இன்றைய பெண் எவ்வளவோ கல்வியும், செல்வமும், நாகரீக ஞானமும், கௌரவமும் உள்ள சுற்றத்தார்களுக்குள்ளும் சகவாசத்துக்குள்ளும் இருந்து வந்தும் நிரம்பவும் கர்நாடக முறையில் பட்டிக்காட்டு கிராமவாசப் பெண்களைவிட இளப்பமாய் நடந்து கொள்வதைப் பார்த்தால் நமக்கு எவ்வளவு சங்கடமாயிருந்தது என்பது அவரவர்களுக்கே தெரிந்திருக்கலாம். இப்படிப்பட்ட பெண்கள் வயிற்றில் பிள்ளைகள் பிறந்து இவர்களால் வளர்க்கப்பட்டால் அவற்றிற்கு மனிதத்தன்மை எப்படி ஏற்படும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். நமது மக்களுக்கு ஏன்


RangaRakes tamilnavarasam.com

மனிதத்தன்மை இல்லை, சுயமரியாதை இல்லை என்றால் அவற்றிற்கெல்லாம் முக்கியத்திலும் முக்கியமான காரணம் இப்படிப்பட்ட தாய்மார்களால் பெறப்பட்டு வளர்க்கப்பட்டதேயாகும்.

கடைசியாக தோழர்களே ஒன்று சொல்லி முடித்துவிடுகிறேன். கல்யாணமானவுடன் பெற்றோர்கள் பிள்ளைகளை எதிர்பார்ப்பார்கள். சுற்றத்தார் எத்தனை ஆயிற்றென்று கணக்குக்கூட்டி வருவார்கள். தம்பதிகள் பிள்ளை பெறுவதினால் படும் கஷ்டம் காயலா அசௌகரியம் வாலிபம் பாழாவது அதிக பிள்ளைகள் பெறுவதினால் தரித்திரம், துன்பம், வியாகூலம், விசாரம், மானங்கெட நேருவது, சுயமரியாதை இழந்தாவது வாழ ஆசைப்படுவது ஆகிய காரியங்களைப் பற்றி யெவரும் சிந்திக்க மாட்டார்கள். யாதொரு பொறுப்பும் அறிவும் அற்று இன்று மணமக்களைப் பார்த்து ''16 பிள்ளைகள் பெற்று பெருவாழ்வு வாழவேண்டும்'' என்று சொல்லுகிறவர்கள் நாளைக்கு ஒரு குழந்தைக்கு அரைச்சங்கு பால் வார்க்கக்கூட சம்மதிக்கமாட்டார்கள். ஏதாவது கஷ்டம் வந்தால்கூட பக்கத்து வீட்டில் குடியிருந்துகொண்டு கணக்குக்கூட்டிப் பார்த்து அசூசையும் வெறுப்பும் அடைவார்களே தவிர சிறிது பரிதாபம்கூட காட்டமாட்டார்கள். ஆதலால் மணமக்கள் குழந்தைகளைப் பெறும் விஷயத்தில் சிறிது ஜாக்கிரதையாகவும் அறிவுடமையாகவும் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*குறிப்பு: 08.06.1934 இல் சென்னை தோழர்கள், கற்பகம் அம்மாள் - கே.கல்யாணசுந்திரம் ஆகியோருக்கு சென்னை சவுகார் பேட்டையில் நடந்த சுயமரியாதைத் திருமணத்தில் ஆற்றிய உரை.*

**புரட்சி - சொற்பொழிவு - 17.06.1934**

# அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அந்தர்முகம் | - | உள்நோக்குகை |
| அந்தராத்மா | - | உள்மனம் |
| அநீதம் | - | நியாயமின்மை |
| ஆகுதி | - | தீ வேள்வி |
| ஆத்மார்த்தம் | - | மிக்க நட்பு |
| இச்சித்து | - | விரும்பி |
| உத்தரிக்க | - | மேற்பார்வையிட |
| உத்தரித்தல் | - | ஈடுசெய்தல், கடன் செலுத்துதல், பொறுத்தல் |
| உன்மத்தம் | - | மயக்கம், வெறி, பைத்தியம் |
| எக்கியம் | - | வேள்வி |
| எத்தனம் | - | முயற்சி, ஆயத்தம் |
| ஏஷ்யம் | - | காரணம், கருதுகோள், சான்று |
| கண்டசரம் | - | கழுத்தணிவகை |
| காற்க | - | காக்க |
| காஸ்டிங் ஓட்டு | - | ஒரு கூட்ட நடவடிக்கையில் ஆதரவும் எதிர்ப்பும் சமமாக இருக்கும் பொழுது தலைவரின் தீர்மானமான வாக்கு |
| கிருஷிகள் | - | விவசாயிகள் |
| சக்கிமுக்கி கற்கள் | - | நெருப்புண்டாக்கப் பயன்படும் கற்கள் |
| சந்தியா வந்தனம் | - | காலை, மாலைகளில் வேத மந்திரங்களால் செய்யும் வழிபாடு |
| சந்துஷ்டி | - | மன நிறைவு |
| சம்ரட்சனை, சம்ரட்சணை | - | காப்பாற்றுகை |

# குடி அரசு

## [பகுத்தறிவு]

## 1934 –2

### பெரியாரின் எழுத்தும் பேச்சும்

### தொகுதி 19


**பெரியார் திராவிடர் கழகம்**

29 இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் – திருவான்மியூர்
சென்னை – 600 041


## ''பகுத்தறிவு''

''பகுத்தறிவு'' வாரப் பத்திரிகையின் முதல் மாலை முதல் மலர் 26.8.34 உ ஞாயிறு வெளியாகின்றது என்றாலும், அதன் கொள்கைகளைப் பற்றி **''குடி அரசு'' ''ரிவோல்ட்'' ''புரட்சி'' ''பகுத்தறிவு''** (தினசரி) ஆகிய பத்திரிகைகளின் அபிமானிகளுக்கும் வாசகர்களுக்கும் எடுத்துக் கூற வேண்டியதில்லை.

சுருக்கமாக ஒரு வாக்கியத்தில் சொல்லித் தீர வேண்டுமானால் ''பகுத்தறிவு'' தோன்றலானது, இன்றைய உலக வழக்கில் இருந்து வரும் காரியங்களில் பெரும்பான்மை மக்களால் முதன்மையானதாகவும் இன்றியமையாதனவாகவும் கருதப்படும்.

**''எங்கும் நிறைந்த**
**இறைவனை'' வழுத்தவோ,**

**''எல்லாம் வல்ல மன்னனை''**
**வாழ்த்தவோ,**

**''யாதினும் மேம்பட்ட வேதியனை''**
**வணங்கவோ,**

**''ஏதும் செய்ய வல்ல செல்வவானை''**
**வாழிய செப்பவோ கருதி அல்ல வென்பதே யாகும்.**

மேலும் மனித சமூகத்தில் மௌட்டீயத்தால் ஏற்பட்ட துரபிமானங்களாகிய கடவுள், ஜாதி, மதம், தேசம், நான், எனது என்பன போன்ற அபிமானங்களை அறவே ஒழித்து மனித சமூக ஜீவாபிமானத்தையும் ஒற்றுமையையும் பிரதானமாய்க் கருதி உழைத்து வரும் என்றும் சொல்லுவோம்.

இத்தொண்டாற்றுவதில் ''பகுத்தறிவு'' வேதத்திற்கோ, விமலத்திற்கோ, சரித்திரத்திற்கோ, சாத்திரத்திற்கோ, பழக்கத்திற்கோ, வழக்கத்திற்கோ, பழமைக்கோ, புதுமைக்கோ அடிமையாகாமல் கொள்வன கொண்டு தள்வன தள்ளி தானே சுதந்தரமாய் தன்னையே நம்பி தனது அறிவையும், ஆற்றலையுமே துணைக் கொண்டு தன்னாலான தொண்டாற்றி வரும்.

முடிவாய்க் கூறுமிடத்து ''பகுத்தறிவு'' மனித ஜீவாபிமானத்துக்கு மக்களை நடத்திச் செல்லுமேயொழிய எக்காரணம் கொண்டும் மக்கள் பின் நடந்து செல்லும்படியான அடிமை வாழ்வில் உயிர் வாழாது என்பதேயாகும்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 26.08.1934**


RangaRakes

tamilnavarasam.com

# இனியாவது புத்தி வருமா?

தீண்டப்படாத மக்கள் என்பவர்களுக்கு ஆலயப் பிரவேசம், என்னும் பேரில் காங்கிரஸ் செய்து வந்த கிளர்ச்சியை அப்போதே நாம் கண்டித்து எழுதி வந்ததுடன், உலகில் கோவில்களே இருக்கக் கூடாதென்றும், அதற்கு எவருரையும் சொல்லிவிடக்கூடாதென்றும், சொல்லியும் எழுதியும் வந்தது யாவரும் அறிந்ததாகும்.

மற்றும் கோவில்களை கள்ளர் குகையென்று கிறிஸ்துவும், கோவில்கள் இடித்து நொறுக்கித் தள்ளப்பட வேண்டியது என்று முகம்மதுவும், கோவில்கள் விபசாரிகள் விடுதி என்று காந்தியும் சொல்லியிருப்பதும் யாவரும் அறிந்ததாகும்.

தோழர் காந்தியார் கோவில்களை விபசார விடுதி என்று ஒரு சமயத்தில் சொல்லியிருந்தாலும், இப்போது இரண்டொரு வருஷ காலமாய் அவ்விபசார விடுதிக்கு ஆள் பிடித்து விடும் வேலையை விவரமாய் செய்து வந்ததுடன் அதற்காகப் பத்து லக்ஷக்கணக்கான ரூபாய்களையும் திரட்டி வந்ததும் யாவரும் அறிந்ததாகும்.

தீண்டப்படாதாருக்கு அரசாங்கத்தார் அரசியலிலும், உத்தியோகத் திலும் தனித்தொகுதி பிரதிநிதித்துவம் கொடுத்த பிறகு அதை ஒழிக்கக் கருதிய காந்தியார், தீண்டாதாருக்கு நல்ல பிள்ளையாகக் கருதி அவர்களுக்கு கோவில் பிரவேசம் ஏற்பாடு செய்து கொடுப்பதாய் வாக்குக் கொடுத்து அதற்காக ஒரு சட்டம் செய்ய வேண்டும் என்ற சட்டசபை அங்கத்தினர்களுக்கு உபதேசம் செய்து ஒரு மசோதாவும் கொண்டு வரக் கருதிச் செய்து அதை மற்ற மெம்பர்கள் ஆதரிக்க வேண்டுமென்றும் செய்வதாகவும் சொல்லி, அந்தப்படி ஒரு மசோதா கொண்டு வரப்பட்டதும் யாவரும் அறிந்ததாகும்!

அம்மசோதா பொதுஜன அபிப்பிராயத்துக்கு சர்க்காரால் அனுப்பப்பட்ட சமயத்தில் காங்கிரஸ் தலைவர்கள் பண்டித மாளவியா முதற்கொண்டு Dr.ராஜன், சத்தியமூர்த்தி இருதியாக உள்ளவர்கள் ''அம்மசோதா இந்து மதத்துக்கு விரோதம்'' என்று சிலரும், ''அதன் கருத்து ஒப்புக்கொள்ளப்படுவதாய் இருந்தாலும் சட்டம் செய்வது கூடாது'' என்று சிலரும் அபிப்பிராயங்கள் கொடுத்து பிரசாரமும் செய்து வந்ததல்லாமல்



கடைசியாக தோழர் ராஜகோபாலாச்சாரியார் ஒரு அறிக்கை வெளியிட்டு அதை காந்தியாரையும் ஒப்பச் செய்து அம்மசோதாவின் தலையில் ஒரு அடி அடித்து அதை கச கசவென்று நசுக்கி தள்ளிவிட்டார்கள். அவ்வறிக்கை சாரம் என்னவென்றால்:-

''தீண்டாமை விலக்கு விஷயத்தில் காங்கிரஸ் எவ்வித அபிப்பிராயங் கொண்டிருந்த போதிலும் ஆலயப்பிரவேச விஷயத்தில் மூன்று விஷயங்களை கவனிக்க வேண்டும்.

1. இந்துக்களல்லாதார் கலந்து ஓட்டு பெற்று மசோதா நிறைவேறுவதை காந்திஜீயும் காங்கிரஸ்காரரும் விரும்பவில்லை.
2. மேல் ஜாதி இந்துக்கள் சம்மதமில்லாமல் மத சம்மந்தமான பழக்க வழக்கங்களையோ சடங்குகளையோ தொடக் கூடாது.
3. காங்கிரசுக்காரர்கள் இம்மசோதாவுக்கு இப்போது எவ்வித அபிப்பிராயமும் கொடுக்கக் கூடாது. இதைப்பற்றி நன்றாய் தீர்க்காலோசனை செய்ய வேண்டியிருக்கிறது.''

என்பது ஆகும்.

இதைக் கண்ட பின்பும் மாளவியா எதிர் கக்ஷி ஆரம்பித்ததைப் பார்த்த பிறகும், தோழர்கள் சத்தியமூர்த்தி, Dr.ராஜன் முதலியோர்கள் சட்டம் செய்யக்கூடாது என்று பிரசாரம் செய்த பின்பும், சர்க்கார் இம் மசோதா விஷயத்தில் அலக்ஷியம் காட்ட ஆரம்பித்ததும், பொது ஜன அபிப்பிராயம் சாதகமாயில்லை என்று சொல்ல வேண்டி இருந்ததும், கடைசியாக இதை இந்து சமூகம் ஆதரிக்காததால், சர்க்கார் எதிர்க்க வேண்டியவர்களாகி விட்டார்கள் என்று சொன்னதும், ராஜபகதூர் கிருஷ்ணமாச்சாரியார் தீண்டப்படாதாருக்கு மத விஷயங்களில் சமத்துவம் கொடுக்கக் கூடாது என்று சொன்னதும் ஆன காரியங்கள் அதிசயமான விஷயமாகாது. காங்கிரசுத் தலைவர்கள் கருப்பு (திருட்டு) பாஷையில் பேசினார்கள். சர்க்காரும் ராஜபகதூரும் வெள்ளையான பாஷையில் பேசினார்கள் என்பதை விட இதில் பிரமாத வித்தியாசமெதுவும் இல்லை.

கடைசியாக தோழர் ராஜகோபாலாச்சாரியாரின் சமாதானமானது ''குதிரை கீழே தள்ளினதுமல்லாமல் புதைக்கக் குழியும் பறித்தது'' என்பது போல் ''இந்த அறிக்கை காந்தியாரின் சம்மதம் பெற்றதாகும்'' என்றும் சொல்லிவிட்டார். இதிலிருந்து காந்தியார் முதல் சத்தியமூர்த்தி வரை தீண்டாதார் விஷயத்தில், சமூக சீர்திருத்த விஷயத்தில், ஜாதி வித்தியாச உயர்வு தாழ்வு விஷயத்தில் கொண்டுள்ள அபிப்பிராயம் என்னதென்பதை ஜனங்கள் அறிந்து கொள்ள நல்லதொரு சமயம் ஏற்பட்டது என்றுதான் கருத வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

எனவே இனியாவது தீண்டப்படாதவர்களாகவும், தீண்டப் படாதவர்களாய்க் கருதப்படுபவர்களாகவும், தீண்டப்படாதார் என்று ஆதாரங்களிலும் சர்க்கார் தீர்ப்புகளிலும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறவர் களாகவும், இருந்து வரும் மக்களுக்கு புத்தி வருமா? அல்லது இன்னமும் ''காங்கிரசு'' ''காங்கிரசு'' ''காந்தி'' ''காந்தி'' என்று கட்டி அழுது ஈன ஜாதிக்காரர்கள் என்று உலகோர் கருதவும் கல் மேலெழுதவும் அனுகூலமாய் நடந்து கொள்ளுவதையே கருமமாய் கருதுவார்களா? என்பதே நமது கேள்வி.

**பகுத்தறிவு - கட்டுரை - 26.08.1934**



# மாளவியா

பழங் காங்கிரஸ்வாதி என்று சொல்லப்படும் பண்டித மாளவியா அவர்கள் காங்கிரசின் ஜாதிமத வகுப்பு சம்மதமாய், சம சந்தர்ப்பம் வழங்கும் கொள்கையில் அதிருப்தி கொண்டு அதன் நிறுவாகத்தில் இருந்து விலகி தேர்தலில் காங்கிரசுடன் போட்டி போடவும், ஒவ்வொரு தொகுதியிலும் காங்கிரஸ் அபேக்ஷகருக்கு எதிர் ஆளை நிறுத்தி எதிர்ப்பிரசாரம் செய்யவும் தீர்மானித்து எதிர்கக்ஷி அமைத்துவிட்டார். இதற்கு காங்கிரஸ் சர்வாதிகாரியாய் இருந்து தோழர் ஆனேயும் சம்மதித்தப் பண்டிதருடன் சேர்ந்து காங்கிரசை எதிர்த்து வருகிறார்.

இதைப் பார்த்த எந்த பார்ப்பனரும், பார்ப்பனரல்லாத கூலி பக்தரும், மாளவியாவை தேசத் துரோகி யென்றும், காங்கிரஸ் துரோகி என்று கூறவும் இல்லை. இனியும் தேசபக்தர் என்றேதான் அவர்கள் அழைக்கப் படுகிறார்கள். ஆகவே தேசபக்தர் என்றால் யார் என்பதும் தேசத் துரோகி என்றால் யார் என்பதும் இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

பார்ப்பன அடிமைகளுக்கும், பார்ப்பனரல்லாத கூலி பிரசாரகர்களுக்கும், பத்திராதிபர்களுக்கும், எலும்புத்துண்டு போடுகின்றவர்களுக்குந்தான் தேசபக்தர்கள், காங்கிரஸ்வாதிகள், தேசாபிமானிகள் ஆகிவிடுவார்கள்.

மற்றவர்கள் தேசத் துரோகி, காங்கிரஸ் எதிரி ஆகிவிடுவார்கள் என்பதுதான் அரசியல் அகராதி அருத்தம் போலும்.

**பகுத்தறிவு - கட்டுரை - 26.08.1934**



RangaRakes tamilnavarasam.com

# தேர்தல் பிரசாரம் என்னும் ஏமாற்றுப் பிரசாரமும் வயிற்றுப்பிழைப்பு வசவுகளும்

**- சித்திரபுத்திரன்**

சித்திரபுத்திரனுக்குப் பழய பாடம் படிக்க நேர்ந்துவிட்டது. இது இஷ்டமில்லாத காரியமானாலும் அது இன்றியமையாததாய் போய் விட்டது! கர்மபலன் யாரை விட்டது?

இந்திய சட்ட சபைத் தேர்தல் ஆரம்பமாகி விட்டது. இது வேலையில்லா வாலிபர்களின் கஷ்டத்தை ஒருவாறு குறைக்க அனுகூலமாயிருக்கிறது என்று சொல்லலாம். அது போலவே கொள்கையோ, விஷயமோ இல்லாத பத்திரிக்கைகாரர்களுக்கும் ஒரு அளவு கஷ்டம் நீங்கிற்று என்றும் சொல்லலாம். நாட்டுக்கோ, நகரத்துக்கோ, ஏழைப் பாட்டாளி மக்களுக்கோ இதனால் ஏதாவது பயன் உண்டா என்று பார்ப்போமானால் தேர்தல்களுடையவும், தேர்தல் முடிவுகளுடையவும் பயன் கடைசியாக ''பிச்சை போடாவிட்டாலும் பரவாயில்லை நாயைப் பிடித்துக் கட்டுங்கள்'' என்கின்ற மாதிரிக்குத் தான் அதாவது நன்மை ஏற்படா விட்டாலும் கெடுதியாவது இல்லாமல் இருந்தால் போதும் என்று பிறார்த்திக்க வேண்டிய அளவில்தான் வந்து முடியப் போகின்றதே ஒழிய வேறில்லை என்பது உறுதி.

காங்கிரசும், சுயராஜ்ஜியக் கிளர்ச்சியும், சீர்திருத்த முயற்சியும் ஆதியில் நம் நாட்டில் எப்படி ஏற்பட்டது என்பதை வாசகர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வக்கீல்கள் தங்களது தொழில்களை விருத்தி செய்து கொள்ளு வதற்காகத் தங்களைப்பற்றி விளம்பரம் செய்து கொள்ளும் நோக்கத்துடன் பொதுமக்களுக்குத் தங்களைத் தெரியும்படியான மாதிரியில் ஏதாவது கூட்டங்கள் கூட்டுவது, அல்லது கூட்டப்பட்ட கூட்டங்களில் கலந்து கொள்ளுவது அல்லது சற்று பொது ஜன உணர்ச்சியுள்ள வழக்குகளில் தங்கள் பெயர்கள் வரப் பார்ப்பது அல்லது பத்திரிகைகளில் ஏதாவது விஷயங்களைப்பற்றி எழுதுவது அல்லது பத்திராதிபர்கள் தயவை விலைக்கு வாங்கி தங்கள் பெயரை அடிக்கடி அவற்றில் வரும்படியாக





செய்வது முதலாகிய காரியங்கள் வக்கீல் தொழில் விருத்திக்கு இன்றியமையாதனவாக இருந்து வந்ததுடன் இன்றும் இருந்து வருவதையும் காணலாம்.

தானாகவே நல்ல வரும்படி வரக்கூடியவர்கள் சிலர் இப்படிப்பட்ட காரியங்களில் கலந்துகொள்ளாமல் இருப்பதையும் பார்க்கின்றோம் என்றாலும், பெரும்பான்மையான வக்கீல்கள் இந்த முறையை அனுசரிக்கின்றார்கள் என்று சொல்வது மிகையாகாது. நமக்குத் தெரிய பல பெற்றோர்கள் தங்கள் குமாரர்களான வக்கீல்களுக்கு இதை உபதேசம் செய்வதையும் பார்த்திருக்கிறோம்.

இந்த உண்மையில் இருந்து இன்றைய எப்படிப்பட்ட வக்கீல், பொது நல ஊழியர், தேசியவாதி ஆகியவர்களும் தப்பித்துக் கொள்ள முடியாது. இந்த முயற்சியில் இருந்துதான் பெரிதும் அரசியல் விஷயங்களும், சீர்திருத்த விஷயங்களும் புறப்பட்டனவே ஒழிய வேறில்லை.

இதன் பயனாக அரசியல் காரியங்களில் அரசாங்கத்தோடு கலந்து கொள்வதற்கு வக்கீல்களுக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்து வந்திருக் கின்றன. அவற்றுள் சிலதான் ஸ்தல ஸ்தாபனங்கள், சட்டசபைகள், அரசாங்க உத்தியோகங்கள், மந்திரி பதவிகள் முதலியனவாகும். அரசியல் முயற்சிகளுக்கு இன்று ஏதாவது நாட்டில் உணர்ச்சி இருந்து வருகின்றது என்று சொல்லப்படுமானால், அது மேல் கண்டவைகளான தேர்தல்கள், உத்தியோகங்கள், பதவிகள், பெரும் பண வருவாய்கள் ஆகியவைகள் காரணமாகத்தானே ஒழிய பரோபகாரத்திற்காகவே மனிதன் வாழ வேண்டும் என்கின்ற எண்ணம் காரணத்தால் அல்லவென்று உறுதியாய்ச் சொல்லலாம். இப்படிப்பட்ட பதவிகளில் ஒன்றுதான் இப்போது நடைபெறும் இந்திய சட்டசபைத் தேர்தல் கோஷமாகும்.

இந்தத் தேர்தல் இப்போது வந்தவுடன் உலகத்தை வெறுத்த ''துறவிகள்'', ''சந்யாசிகள்'' எல்லாம் வெளியில் வந்து விட்டார்கள்.

''சட்டசபை மாய்கை'' என்றும் ''அது ஒன்றுக்கும் உதவாதது'' என்றும் ''போதிய அதிகாரமும் பொருப்பாக்ஷியும் ஏற்பட்டா லொழிய அதனால் யாதொரு பயனும் இல்லை'' என்றும் இன்னும் பலவாராகச் சொல்லிக் கொண்டிருந்தவர்கள் இப்போது ''காங்கிரசின் கௌரவமும், தேசத்தின் சுயமரியாதையும் காந்தியாரின் பெருமையும்'' அதில்தான் (அதாவது இந்திய சட்டசபைத் தேர்தலில்தான்) இருக்கின்றது என்று சொல்லும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது.

ஜஸ்டிஸ் கக்ஷி என்னும் ஜனநாயகக் கக்ஷியார் தங்களுடையதுதான் என்று சொல்லிக் கொள்ளும் கக்ஷியும், தங்களுடைய கௌரவமும் தாங்கள் தான் இந்த நாட்டு மக்களின் பிரதிநிதிகள் என்பதும் இதில்தான் அடங்கி இருக்கின்றது என்று சொல்ல வேண்டியவர்கள் ஆகிவிட்டார்கள்.

RangaRakes tamilnavarasam.com

இந்த நிலையில் இந்த இரண்டு கக்ஷியும் ஜனப்பிரதிநிதி கக்ஷி அல்ல வென்று உண்மையிலேயே கருதும் சிலர் தனிப்பட்ட முறையிலோ, அல்லது ஏதோ ஒரு பெயரைக் கொண்ட கக்ஷி முறையிலோ இந்திய சட்ட சபையின் மூலம் தொண்டாற்றலாம் என்று கருத வேண்டியவர்களாகவும் ஆகிவிட்டார்கள்.

இவற்றையெல்லாம் குற்றம் சொல்லுவதற்காக சித்திரபுத்திரன் இந்த வியாசம் எழுதவில்லை.

மனிதன் இன்றைய உலக வாழ்வில் மேலும் மேலும் மேன்மையும், பதவியும், பணமும், புகழும் அடையவேண்டும் என்று ஆசைப்படுவது சகஜமேயாகும்.

விவசாயம், வியாபாரம், லேவாதேவி, வக்கீல், வைத்தியம், சம்பள உத்தியோகம் முதலிய தொழில்களில் இருக்கும் நாணையக் குறைவை விட - அவற்றால் மற்ற மக்களுக்கு இருக்கும் கஷ்ட நஷ்டங்கள் ஏமாற்றங்கள் ஆகியவைகளை விட, அவற்றில் நடைபெறும் போட்டிகளின் யோக்கியதைகள், ஒழுக்கக் குறைவுகள், நாணயக் குறைவுகள் ஆகிய எல்லாவற்றையும் விட, அரசியல் பட்டம், பதவி, உத்தியோகம் முதலியன சம்பாதிப்பதிலும் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக முயற்சிப்பதிலும் காங்கிரஸ் பக்தனாவதிலும் தேசீயம் பேசுவதிலும், அதிகமான நாணையக் குறைவோ, குற்றமோ இருப்பதாகவோ இவற்றில் ஏற்படும் போட்டிகளில் நடக்கும் ஒழுக்க ஈனம் முதலிய காரியங்கள் அதிகமென்றோ மிகவும் தப்பிதமென்றோ நாம் சொல்ல வரவில்லை. வியாபாரிக்கு உள்ள புரோக்கர்களும், வக்கீல்களுக்கு உள்ள டவுட்டுகள் (புரோக்கர்களும்), மற்றவர்களுக்கு உள்ள கூட்டிவிடுகின்றவர்களும் எவ்வளவு உண்மையானவர்கள் - நாணையமுள்ளவர்கள் சுயநலமில்லாதவர்கள் என்று சொல்லக் கூடுமோ அதைவிட தேர்தல் புரோக்கர்கள் எவ்விதத்திலும் மோசமானவர்கள் அல்ல என்றே சொல்லுவோம். ஆனால் முன்னயதைவிட பின்னயதில் மக்கள் சுலபத்தில் ஏமாந்து விடக்கூடும் என்று மாத்திரம் சொல்லலாம் என்றாலும், சக்தி இல்லாதவர்கள் தோற்றுப்போவது எவ்வளவு ஞாயமோ அதுபோல் தான் அறிவில்லாதவர்கள் ஏமாந்து போவதும் நியாயமேயாகும். ஆதலால் அதையும் நாம் குற்றம் சொல்லுவதற்கு இல்லை.

மக்கள் ஏமாந்து போகின்றார்களே என்கின்ற பரிதாபம் யாருக்காவது இருக்குமானால் அப்படிப்பட்டவர்கள் மக்கள் ஏமாறுவதற்கு ஆதாரமாய் இருக்கும் காரியங்களை, முயற்சிகளை தைரியமாய் வெளியாக்க முயற்சிக்கலாம். இதைத் தவிர யாரையும் சொந்தத்தில் தனிப்பட்ட முறையில் குற்றம் சொல்லுவது நியாயமல்ல என்பதே நமது அபிப்பிராயம்.

அந்த முறையில்தான் தேர்தல் தந்திரங்களைப் பற்றி சில எழுத ஆசைப்படுகின்றோம்.



தேர்தல் முறை இந்நாட்டில் ஏற்படுவதற்கு முன் பட்டம் பதவி உத்தியோகம் முதலியவற்றில் ஆசை உள்ளவர்களுக்கு மக்களைப் பற்றிக் கவலை இல்லாமல் அரசாங்கத்திற்கு நல்ல பிள்ளையாக நடந்து கொள்ளுவதை மாத்திரமே அனுசரிக்க வேண்டிய - போதுமான யோக்கியதாம்சமாய் இருந்து வந்தது. அதற்கு சௌகரியமில்லாதவர்கள் மக்களுக்கு நல்ல பிள்ளையாக நடந்து காட்டி மக்களிடம் அரசாங்க நிர்வாக முறையில் உள்ள தவறுதல்கள் பலவற்றைத் திரித்தும் பெருக்கியும் தங்கள் இஷ்டத்துக்கு அனுகுணமாய் கற்பித்தும் காட்டி மக்களை ஏமாற்றி அவர்களது நம்பிக்கையைப் பெற்று ஜனப்பிரதிநிதித் துவத்திற்கும் பட்டம், பதவி, அதிகாரம், உத்தியோகம், பெருமை முதலியவற்றில் ஒரு பங்கு கிடைக்கும்படி செய்துகொள்ள வேண்டியிருந்தது. இதனால் பிந்திய கூட்டத்தாருக்கு எப்படியாவது மக்களை ஏமாற்றுவதற்கு சாதனம் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது என்பதில் அதிசயமில்லை.

நம் நாட்டு நிலைமையானது ஒட்டு மொத்த மக்களின் 100க்கு 7 அல்லது 8 பேரே படித்தவர்கள் என்று சொல்லக் கூடியவர்களாய் இருப்ப தாலும், அதிலும் 100க்கு ஒருவர் இருவரே நன்றாய்ப் படிக்கவும், எழுதவும், யோசிக்கவும் உண்மையைக் கண்டுபிடிக்க சௌகரியமும் உள்ளவர் களாய் இருப்பதாலும் இம்மக்களை ஏமாற்ற அதிக கஷ்டமான மார்க்கம் ஏதுமே தேடவேண்டிய அவசியமில்லாமலும் போய்விட்டது. இதானது இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு பெரிய அனுகூலமாய் ஏற்பட்டு விட்டது.

இந்தக் காரணத்தால் தேர்தல்களில் பிரவேசிக்கின்றவர்கள் தங்கள் சொல்லும், எழுத்தும், கொள்கைகளும் உண்மையும் நாணையமும், யோக்கியப் பொருப்பும், நன்மையும் சிறிது கலந்ததாகவாவது இருக்கின்றதா என்கின்ற கவலையும், பயமும் இல்லாமல் என்ன வேண்டுமானாலும்,எப்படி வேண்டுமானாலும் பேசவும் எழுதவும் நடக்கவும் ஆன காரியங்கள் செய்ய துணிவுள்ளவர்களாகி விட்டார்கள்.

இதோடு மாத்திரமல்லாமல் இந்நாட்டின் பொருளாதாரத் திட்டமும், வாழ்க்கைத் திட்டமும் மக்களுக்கு எவ்வித பொருப்பும் ஜவாப்தாரித்தனமும் ஒழுக்கமும் அற்றதாகி, எப்படியாவது வயிறு வளர்க்க வேண்டியதே மனித ஜீவனின் கடமை என்று இருந்து வருகின்றபடியால் மேற்கூறப் பட்ட கூட்டத்தாருக்கு வெகு எளிதில் கூலிகள் கிடைத்துவிடுகிறார்கள். அவர்கள் மூலமும் மக்களை ஏமாற்றக் கருதி தங்கள் தங்களுக்கு அனுகூலமாக எப்படி வேண்டுமானாலும் உண்மைகளைத் திருத்தியும், அபாண்டங்களைக் கற்பித்தும் அகாரணமாய் வைதும், பேசவும், எழுதவும் கூடிய கூலிகளை நியமிக்க வேண்டியவர்களாவதுடன் இப்படிப்பட்ட பலர் கூலிக்கு அமர வேண்டியவர்களாகவும் ஆகிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இந்த இரு கூட்டத்தாரும் மக்களின் அறியாமையும், பாமரத் தன்மையையும் நன்றாய் அறிந்து கொண்டதால் தாங்கள் பேசுவதும், எழுதுவதும் 100க்கு 100 பொய்யாகவும் அயோக்கியத்தனமாகவும் ஏமாற்றலாகவும் இருக்கின்றது என்பதை உணர்ந்தும் இப்பவோ பின்னையோ இன்னும் அரை வினாடியிலோ உண்மை வெளியாகிவிடக் கூடியதாய் இருந்தாலும், இதற்கு முன் தாங்கள் பேசியதும், எழுதியதும் அடியோடு பொய்த்துப் போய் பலதரம் மக்களை ஏமாற்றி இருக்கின்றோமே என்பதை உணர்ந்திருந்தாலும், சிறிதும் பயமில்லாமல் தங்கள் காரியங்களை நடத்திச் செல்லுகின்றார்கள்.

இவைகள் எல்லாம் இப்போதைய வாழ்க்கைத் திட்டத்தின்படி குற்றம் என்று சொல்ல நம்மால் முடியவில்லை. ஏனெனில் இந்தப்படி எல்லாம் நடந்தால் தான் இன்று மனிதன் மகாத்மாவாகலாம், பிரபலஸ்தராகலாம், கீர்த்தியும் புகழும் பெறலாம், பட்டம் பதவியும் அடையலாம், அதிகாரம் செய்யலாம், பணம் சம்பாதிக்கலாம், பாடுபடாமல் சோம்பேறியாய் இருந்து ஊரார் உழைப்பில் வயிறு கழுவலாம் மற்றும் அவற்றிற்கேற்ற தேசாபிமானி, தேசீய வீரர், தேசியப் பத்திராதிபர் ஆகியோர்கள் ஆகலாம் என்கின்ற நிலையில் வாழ்க்கைத் திட்டம் இருந்து வரு கின்றது. இது இன்று நேற்று அல்லாமல் வெகு காலமாகவே இருந்தும் வந்திருக்கின்றது.

ஆதலால் இப்படிப்பட்ட செய்கைகளைக் கண்டு யாவரும் வருந்தக் கூடாது என்றும், யாவரையும் குற்றம் கூறக்கூடாது என்றும் சொல்வதோடு முன் சொல்லியபடி அவைகளையெல்லாம் அப்புரட்டுகளை யெல்லாம் தைரியமாய் வெளிப்படுத்த வேண்டியது ஒவ்வொரு யோக்கியமானவனுடையவும், பட்டம் அதிகாரம் பெருமை புகழ் ஆகியவற்றில் ஆசையில்லாத பொது நல ஊழியத்திற்கு உயிர் வாழ்பவர்களுடையவும் கடமை என்று சொல்லிவிட்டு அடுத்த அத்தியாயத்தில் பிரவேசிப்போம். (தொடரலாம்)

பகுத்தறிவு - கட்டுரை - 26.08.1934



# எதிர் பாருங்கள்! எதிர் பாருங்கள்!! எதிர் பாருங்கள்!!!

**காங்கிரஸ் சுயராஜ்ஜியக் கக்ஷிக்காரர்கள் முன் ஒரு காலத்தில் இந்திய சட்டசபையில் செல்வாக்காய் இருந்தபோது அங்கு நடந்து கொண்ட மாதிரியும், அவர்கள் சட்டசபை அங்கத்தினர் பதவியை உபயோகித்து பணம் சம்பாதித்த மாதிரியும், தலைவர்கள் என்பவர்கள் சிலர் அந்தப் பணத்தில் பெரும்பாகம் தங்கள் சொந்தத்திற்கு ஸ்வஹா செய்து கொண்ட கதைகளும் பகுத்தறிவில் வரும் நாளை எதிர் பாருங்கள்.**

**மற்றும் இன்றைய காங்கிரஸ் அபேக்ஷகர்களில் சிலரின் யோக்கியதையையும் அவர்களின் வாழ்க்கையையும் யாருடைய செலவில் அவர்கள் அபேக்ஷகராய் இருக்கிறார்கள் என்பதும் வெளியாகலாம்.**

**ஏனெனில் காங்கிரஸ் கக்ஷி தவிர மற்றக் கக்ஷி கழுதைக்கு சமானம் என்றும் காங்கிரசின் பேரால் கழுதை நின்றாலும் அதற்குத்தான் ஓட்டுச் செய்ய வேண்டுமென்றும், சுயமரியாதைக் கக்ஷி சர்க்கார் அடிமைக் கக்ஷி என்றும், தேசத் துரோகக் கக்ஷி என்றும் சொல்லுவதற்குப் பதில் சொல்லுமுகத்தான் அவை வெளியாகும்.**

பகுத்தறிவு - அறிவிப்பு - 26.08.1934



RangaRakes tamilnavarasam.com

# சர்.ஆர்.கே. ஷண்முகம்

தோழர் ஷண்முகம் அவர்கள் சமீபத்தில் வரப்போகும் இந்திய சட்டசபைத் தேர்தலுக்கு ஒரு அபேக்ஷகராக நிற்கின்றார். அவர் சென்னை மாகாண வர்த்தக தொகுதிக்கு அபேக்ஷகராய் நிற்க உத்தேசித்திருப்பதாய் தெரிகின்றது. அவர் இப்போது பொது (கோவை, சேலம், வட ஆற்காடு ஜில்லாக்கள்) தொகுதியின் பிரதிநிதியாய் இந்திய சட்டசபைக்குச் சென்று அங்கு அவரது மேன்மையாலும் தகுதியாலும் இந்திய சட்டசபைக்கே தலைவராய், அதாவது கௌரதையில் வைஸ்றாய் பிரபுவுக்கு அடுத்தபடியாய் விளங்குகிறார்.

அவர் காங்கிரசில் பலகாலம் இருந்தவர். சமீப காலத்தில் அதாவது 1925, 26-ம் வருடங்களில் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் தமிழ்நாட்டில் காங்கிரசின் பேரால் தனித்து நின்று மேடையேறுவதற்கு தகுதி இல்லாமல் முறியடிக்கப்பட்ட காலத்தில் (தோழர்கள் S. சீனிவாசய்யங்கார், சி.ராஜகோபாலாச்சாரியார், சத்தியமூர்த்தி முதலியவர்கள்) தோழர் சண்முகம் அவர்களை முன்னிலையில் நிறுத்தி அவரது நிழலில் மறைந்து கொண்டு மேடைகளில் ஆள் அடையாளம் தெரியாமல் உட்கார்ந்திருந்ததை இதற்குள் அவர்களும் மறந்திருக்க மாட்டார்கள். பொது ஜனங்களும் மறந்திருக்க மாட்டார்கள். தோழர் ஷண்முகமும் மறந்திருக்க மாட்டார் என்றே நம்புகின்றோம்.

மற்றும் இந்திய சட்டசபையில் தோழர் நேரு, பட்டேல் முதலிய ''மாபெருந் தலைவர்கள்'' இருந்து வந்த காலத்திலேயே தோழர் ஷண்முகம் அவர்கள் இந்திய சட்டசபை காங்கிரஸ் கட்சி கொறடாவாக அதாவது கக்ஷியின் கௌரவத்தைக் காப்பாற்றும் பொருப்பாளியாக இருந்து வந்ததும் அது இன்றைய காங்கிரஸ் சரித்திரத்தில் ''சுந்திர காண்டமாக'' இருந்து வருவதும், யாவருக்கும் தெரிந்ததும் ஒருவராலும் மறுக்க முடியாததுமாகும்.

அதே தகுதியும், பெருமையும், சாமர்த்தியமும் அவரை இன்று இந்திய சட்டசபைத் தலைவராக ஆக்கிவிட்டதுடன் இன்னமும் மேலான பெரும்பதவியும் அவரை மணந்து மணம் பெற காத்திருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையில் தோழர் ஷண்முகத்தின் கௌரவமும் சாமர்த்தியமும் கீர்த்திப் பிரதாபமும் இந்தியாவெங்கும் பரவி



இருப்பதுடன் வெளி தேசங்களில் தானாக பரவத் தலைப்பட்டதில் அதிசயமொன்றுமில்லை. இதை ஒடுக்கவும், மறைக்கவும் தென்னாட்டுப் பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிக்கைகளும் மற்றும் வெளி மாகாணங்களில் உள்ள பார்ப்பனர்களும் செய்து வந்த விஷமப் பிரசாரங்களும் திண்ணைப் பிரசாரங்களும் கணக்கு வழக்குக்கு மீறியதாய் இருந்து வந்ததும் தோழர் ஷண்முகத்துக்கும் தோழர் ஸ்ரீனிவாசய்யங்காருக்கும் நடந்து வந்த வாதப் பிரதிவாதங்களும் 1926, 27 வருஷத்திய குடி அரசைப் பார்ப்பவர்களுக்கு கண்ணாடி போல் விளங்கும்.

அக்காலங்களில் காங்கிரசின் பேரால் பார்ப்பனர்கள் பிரசாரங்களுக்கு வெளியில் சென்று மேடையேறினால் இவர்களது யோக்கியதைகளை உணர்ந்தவர்களான ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாதார்கள் இவர்களை கேள்விகள் கேட்டு திணற வைத்து விடுவார்கள். இப்படி இரண்டு மூன்று இடத்தில் நடந்தும் பிறகு தோழர் ஷண்முகத்தை முன்னால் நிருத்தி சரமாறியான கேள்வி அம்புகளுக்கெல்லாம் பதில் சொல்லும்படி செய்வார்கள். அப் பதில்கள் எவ்வளவு மழுப்பலானதாக இருந்தாலும் கூட தோழர் ஷண்முகம் பார்ப்பனரல்லாதார் என்பதற்காக கவனியாமல் விட்டு விடுவார்கள். இப்படியே சுற்றுப் பிரயாணம் நடக்கும். உண்மைகள் இப்படி இருந்த போதிலும் பார்ப்பனரல்லாத பத்திரிகைகளில் மாத்திரம் ''சரமாரியான கேள்விகளுக்கு ஆணித்தரமான பதில்களை தோழர் சத்தியமூர்த்தி அய்யர் கொடுத்து வாயடக்கி விட்டார்'' என்று சிறிது கூட மானம் வெட்கம் உண்மை இல்லாத சேதிகள் வெளிவரும்.

மற்றும் தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் மேடையேறியதும் பலவித மரியாதைகள் நடந்த உடனே இறங்கி விடுவார். பிறகு தோழர் சண்முகம் 1 மணி 1.30 மணி நேரம் பேசுவார். ஆனால் பத்திரிகைகளில் தோழர் சத்தியமூர்த்தி பேசியதாக 3½ கலமும் தோழர் ஷண்முகத்துக்கு 2½ வரியும்தான் சேதிகள் வரும். இவைகள் யெல்லாம் அப்போதே எப்போதே? தோழர் ஷண்முகம் தேசபக்தராய், காங்கிரஸ் வாதியாய் தேசீய கட்சி கொறடாவாய், பண்டிட் மோதிலால் நேரு அவர்களின் வலக்கையாய், தென்னாட்டு அரசியல் பிரசாரப் பார்ப்பனர்களின் காப்பாளராய் இருந்த காலத்தில் நடந்த சங்கதிகள் என்றால் இப்போது! எப்போது? தென்னாட்டுப் பார்ப்பனர்கள் கண்ணுக்கும் மனத்திற்கும் வயிற்றிற்கும் பெரு நெருப்பாய் இருக்கின்ற காலத்தில் இந்தப் பார்ப்பனர்களும், அவர்களது கூலிகளும், மற்றும் பச்சகானாக்களும், அரை டிக்கட்டுகளும், பார்ப்பனர்களுக்கு கவிபாடி வயிர் வளர்க்கும் வயிற்றுப் பிழைப்புப் பத்திரிக்கைகளும் என்னதான் பேசாது எதைத்தான் எழுதாது என்பதைப் பற்றி நாம் அறிவாளிகளுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.



RangaRakes tamilnavarasam.com

கொஞ்ச காலத்திற்கு முன் ஒரு பார்ப்பன போட்டிப் பரிசுப் பத்திரிகை விகட வேஷம் போட்டுக் கொண்டு ஷண்முகம் அவர்களின் ஜாதியைக் குறிப்பிட்டுப் போக்கிரித்தனமாகவும், விஷமத்தனமாகவும் படம் போட்டுக் கேவலப்படுத்தி இருந்ததும், அதை சில பார்ப்பனரல்லாத பத்திரிகைகள் கண்டித்துப் பல கேள்விகள் கேட்டதும், கேட்ட கேள்விகளுக்கு நாளது வரை பதில் சொல்லாமல் சுய பாஷியம் கூற வந்ததும் யாவருக்கும் தெரியும். மற்றும் பல பார்ப்பனர்களும் அதே முறையில் அதை ஒட்டியே தங்கள் விஷத்தை கக்கிக் கொண்டிருப்பதும் யாவரும் அறிந்ததாகும்.

இவை ஒருபுரமிருக்க இன்று தோழர் ஷண்முகம் இந்திய சட்ட சபைக்கு அங்கத்தினராய் மறுபடியும் நிற்பதைப் பற்றி பார்ப்பனர்களும், அவர்களது பத்திரிக்கைகளும் எறிகின்ற நெருப்பில் எண்ணை விட்டது போல் வயற்றெரிச்சல் படுவது சகஜமேயாகும். ஏனெனில் தமிழ்நாட்டுப் பார்ப்பனர் அல்லாதார் ஒருவர் பார்ப்பனர் எவரும் அடையாத பெருமையை அடைந்து விட்டார்; இனியும் அடையப் போகிறார் என்பதை கண்டவர்களும், கேட்டவர்களும் பார்ப்பனராயிருந்தால் ஆத்திரப்படாமல் - ஏன்? - தற்கொலை கூடச் செய்து கொள்ள முயற்சியாமல் இருக்க முடியுமா? ஆனால் பார்ப்பனரல்லாதார்களுள் தங்களைப் பார்ப்பன கூலிகள் என்று சொல்லிக் கொள்ளவோ பிறர் சொல்லுவதைப் பொருத்துக் கொள்ளவோ சகிக்காதார்களும் ஏன் ஆத்திரப்படவேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

### அவரது குற்றம் என்ன?

தோழர் சண்முகம் பேரில் இன்று பார்ப்பனர்களும், அவர்களது கூலிகளும் சொல்லும் குற்றங்கள் இரண்டே இரண்டு. அவைகளில் ஒன்று 'ஒட்டாவா' காரியத்தில் கலந்திருந்தது. இரண்டு ஷண்முகம் தனது தொகுதியாகிய கோவை, சேலம், வட ஆற்காடு ஜில்லாக்களின் தொகுதிகளில் நிற்காதது.

இவற்றில் 'ஒட்டாவா' விஷயமோ அது ஒரு பாட்டி கதை. அது முடிவு பெற்று அமுலுக்கு வந்து அவற்றின் பலனை ஜனப்பிரதிநிதித்துவ இந்திய சட்டசபை சரி என்று ஒப்புக் கொண்டுவிட்டது. மற்றும் தோழர் ஷண்முகம் அவர்கள் அந்த காலங்களிலேயே அது சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தக்க பதிலும் அளித்து இருக்கிறார்.

இன்றும் அந்தக் கொள்கை அதாவது ஒட்டாவா விஷயத்தில் தான் நடந்து கொண்டதானது சரியா, தப்பா என்பதைப் பந்தயம் போட்டு நிரூபிப்பதற்காகவே விவசாயக்காரர்களைப் பெரும் பகுதியாய் கொண்ட தொகுதியை விட்டுவிட்டு பொருளாதார வர்த்தகத் தொகுதியில் தைரியமாய் அபேட்சகராக நிற்கிறார். அந்தக் கதைகளைப் பற்றி இனியும் பேசுவோமானால் பழய குப்பையைக் கிளருவதாகும்.



'ஒட்டாவா' ஒப்பந்தம் என்பது இந்தியாவின் பணக்காரர்கள் வியாபாரிகள் ஆகியவர்களாகிய நூற்றுக்குப் பத்து பேர்கள் கூட அல்லாதாரைப் பொறுத்த விஷயமே தவிர மனித சமூகத்தில் 100க்கு 90 பேர்களாகிய ஏழைகள் அதாவது வயற்றுக்கு பற்றாத கூலிக்கு உழைக்கும் பாட்டாளிகள், தீண்டப்படாதவர்கள், கீழ் ஜாதிக்காரர்கள் என்பவர்கள் முதலாகிய கூட்டத்தார்களைப் பொறுத்ததல்ல. 'ஒட்டாவா' ஒப்பந்தத்தால் இந்திய வியாபாரம் பாதிக்கப்படுவதாக வைத்துக் கொள்ளலாம். அதில் பணக்காரர்களின் பணம்தான் கொள்ளை போகலாமே தவிர - பணக்காரர்களுக்கு அவர்களுடைய ஆடம்பர அட்டூழியங்களுக்கேற்ற லாபம் தான் கொள்ளை போகலாமே தவிர ஏழைகள் பணம் கொள்ளை போவதில்லை. அப்படித்தான் மீறி இன்றைய நிலையில் ஏழைகள் பணம் கொள்ளை போவதாய் இருந்து, இன்னமும் அவர்கள் பட்டினி கிடந்து சாகும்படியான நிலைமை வருமானால் கூட நாம் அதற்காக கலங்க மாட்டோம். ஏன்? சீக்கிரத்தில் ஏழைகளுக்குப் புத்தி வந்து அவர்கள் கஷ்டங்களுக்கு விமோசனம் ஏற்படக் கூடிய நிலைமை வருமென்று கருதி வரவேற்போம். அந்தப்படி ஏற்பட்ட நாடுகளில் தான் ஏழை மக்களுக்கு சீக்கிரம் விமோசனம் ஏற்பட்டு பொருளாதார விஷயத்தில் உள்நாட்டான் அடிக்கும் கொள்ளையும் வெளிநாட்டான் அடிக்கும் கொள்ளையும் நின்று இருக்கின்றது என்பதை அறிவோம். இன்நிலையில், இன்று இந்நாட்டு மக்களை வெளி நாட்டார் பட்டினி போடுவதும் ஒன்றுதான், உள் நாட்டான் பட்டினி போடுவதும் ஒன்றுதான்.

மற்றபடி தேசாபிமானத்தைப் பற்றி பேசுவதென்றாலோ, அது இதை விட மோசமான காரியம். அதன் வண்டவாளங்களைப் பற்றி, பின்னால் மற்றொரு சமயம் பேசுவோம்.

நிற்க, தீண்டாமை விஷயங்களிலும் ஜாதி உயர்வு தாழ்வு விஷயங்களிலும் இன்றைய மற்ற அபேக்ஷகர்கள் - காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்கள் நடந்து கொண்ட யோக்கியதையை விட தோழர் ஷண்முகம் நடந்து கொண்டது மேலா கீழா என்பதை யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டுகிறோம்.

கோடிக்கணக்கான மக்கள், அதுவும் பாடுபட்டு உழைக்கும் மக்கள் இந்நாட்டில் தீண்டாதாரைக் கீழ் ஜாதியாராய் பட்டம் பெற்றிருப்பது கொடுமையா அல்லது பணக்கார முதலாளிக்கு லாபம் குறைந்து போவது கொடுமையா என்பதை யோசித்தால் 'ஒட்டாவா' கூப்பாட்டின் யோக்கியதை விளங்காமல் போகாது.

குருகுலப் போராட்டத்தில் - மக்கள், அதுவும் குழந்தைகள் யாவரும் சமமாய் பாவிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியதும் காங்கிரஸ் கமிட்டியில் ராஜினாமா கொடுத்துவிட்டு ஓடின வீரர்கள் இன்று தலைவர்களாகவும், அபேக்ஷகர்களாகவும்



RangaRakes tamilnavarasam.com

இல்லையா? பொட்டுக் கட்டுவதை - பார்ப்பனரல்லாத பெண்களில் ஒரு சாரார் மீது சுமத்தப்பட்ட விபசாரத்தன்மையை ஒழிக்கக் கூடாது என்ற வீரர் ஒருவர் இன்று அபேக்ஷகராக இல்லையா? ஜாதி மதங்களை ஒழிக்கக் கூடாது என்று வாதம் புரியும் வீரர் ஒருவர் இன்று அபேக்ஷகராக இல்லையா? இப்படிப்பட்ட இவர்கள் மனித சமூகத்திற்கே வேண்டாதவர்களாயிருக்க, மனிதர்களின் பிரதிநிதிகளாய் தலைவர்களாய் இருக்க யோக்கியதை உடையவர்களானால் தோழர் ஷண்முகம் பிரதிநிதியாய் இருப்பதில் யாருக்கு என்ன முழுகிப் போகும்? எந்த விதத்தில் இந் நாட்டு மக்களுக்கு கேடோ, அவமானமோ ஏற்பட்டு விடும்? என்று கேட்கிறோம்.

இரண்டாவது தோழர் ஷண்முகம் தனது தொகுதியில் நிற்கவில்லை என்பது.

தோழர் ஷண்முகத்தை அவரது தொகுதி என்பது இன்றும் கைகாட்டி அழைத்துக்கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் தோழர் ஷண்முகம் இதுவரை அதற்கு இணங்காததானது இந்தப் பார்ப் பனர்களும் அவர்களது கூலிகளும் தன்னைப் பொருளாதார விஷயத்தில் இந்திய வர்த்தகத்துக்கு கெடுதி செய்து விட்டதாகச் செய்து வரும் விஷமப் பிரசாரத்தைப் பொய்ப்பித்து, அவர்களது முகத்தில் கரியைத் தடவி அவர்களின் யோக்கியதையைத் தமிழ் மக்களுக்கு விளக்கிக் காட்டுவதற்காகவே வியாபாரிகள் பொருளாதார நிபுணர்கள் ஆகியவர்களுடைய தொகுதியிலேயே நிற்க வேண்டும் என்கின்ற ஆசையாலேயே ஒழிய வேறில்லை என்றே நினைக்கிறோம்.

இன்னும் நாம் தோழர் ஷண்முகத்திற்கு ஒரு யோசனை சொல்லுவோம். அதாவது சேலம், கோயமுத்தூர், வட ஆர்க்காடு தொகுதியில் நிற்க வேண்டுமென்றே சொல்லுவோம். இது கிராம வாசிகள் விவசாயிகள் ஆகியவர்களையே பெரிதும் கொண்ட தொகுதியானாலும் அவர்களைக் கூட இந்தப் பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் ஏமாற்றி விடமுடியாது என்று நாம் கோபுரத்தின் மீதிருந்து கூவுவோம்.

மேலும் கோவை, சேலம், வட ஆர்க்காடு ஜில்லாக்கள் சேர்ந்த இந்திய சட்டசபைத் தொகுதியில் இன்னொரு இன்று இருபதாயிரம் ஓட்டர்கள் இருப்பார்களானால் அதில் பகுதி முனிசிபல் டவுன் ஓட்டர்கள் ஆவார்கள். அவர்கள் கிராமவாசிகளை விட விஷயங்கள் தெரிந்தவர் களாயிருப்பார்களே தவிர மோசமானவர்களாக இருக்க மாட்டார்கள். இந்தத் தொகுதியில் உள்ள எல்லா முனிசிபாலிடிகளும் தோழர் ஷண்முகத்துக்கு வரவேற்பு கூறி பாராட்டி இருப்பது இரண்டு கண்ணும் அற்ற குருடன் கூட அறிவான். கோவை ஜில்லா போர்டு தவிர மற்ற எல்லா ஜில்லா போர்டுகளும் தோழர் ஷண்முகத்தை வரவேற்றுப் பாராட்டி இருப்பதும் யாவரும் அறிந்ததாகும். கோவை ஜில்லா போர்டிலும் கூட குறுகிய நோக்கம் கொண்ட சிலரின் பொறாமை



காரணமாகவும், பார்ப்பனர்களுக்கு உள்பட்டிருந்தாலொழிய தாங்கள் மேன்மை பெற முடியாது என்று சந்தேகப்பட்டவர்கள் காரணமாகவும் அது பாக்கி இருக்கின்றது என்று கொள்ளலாமே தவிர வேறு காரணம் இல்லை. அப்படி இருந்தாலும் கோவை ஜில்லாவில் உள்ள நாயக்கர்மார்கள் 100க்கு 90 பேர்களும் ஒக்கிலிய கவுண்டர்கள் 100க்கு 99 பேர்களும் பட்டக்காரர் போன்ற தக்க செல்வாக்குள்ள பிரமுகர்களும், மற்றும் ஏழைக் குடியான சகோதரர்களும் 100க்கு 99 வியாபாரிகளும் தோழர் ஷண்முகத்தை தங்கள் பிரதிநிதியாகக் கொள்ளும் கௌரவத்தை அடைய ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தைரியமாயும் வலிமையாயும் சொல்லுவோம்.

இவை ஒரு புரமிருந்தாலும், சேலம் கோயமுத்தூர் வட ஆற்காடு தொகுதியில் இந்திய சட்டசபைக்கு தோழர் ஷண்முகம் அவர்களிடம் ஆதரவைப் பெற்றவர்கள்தான் இப்போதும் வெற்றி பெற முடியுமே தவிர அவரை வைது விஷமப் பிரசாரம் செய்து கொண்டிருக்கும் பார்ப்பனத் திருக்கூட்டத்தின் ஆதரவு பெற்றவர்கள் வெற்றி பெறுகின்றார்களா என்பதை சற்று பொருமையாய் இருந்து வேடிக்கை பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

நிற்க, தேர்தல் பிரசார நாடகம் இங்கனமிருக்க ''காங்கிரசில் சேராதவன், பாவி, தேசத் துரோகி'' என்றும் ''காங்கிரசு குதிரைக்கு சமானம் மற்ற கக்ஷி கழுதைக்குச் சமானம்'' என்றும் பேசுவதும் எழுதுவதும் ''காங்கிரசின் பேரால் ஒரு கழுதை நின்றாலும் அதற்குத்தான் ஓட்டு செய்ய வேண்டுமே ஒழிய மற்றபடி யார் எவ்வளவு பெரிய யோக்கியனாகவும், சாமார்த்தியசாலியாயும் இருந்தாலும் அவர்களுக்கு ஓட்டுச் செய்யக் கூடாது'' என்று சொல்லுவதும், வெளி நாட்டிலிருந்து சுய அறிவும், முன் பின் யோசனையும் அற்ற ஆட்களைக் கூட்டி வந்து அவர்களை உசுப்படுத்தி ''ஜஸ்டிஸ் கக்ஷியும் சுயமரியாதைக் கக்ஷியும் தேசத்துரோகக் கக்ஷி'' சர்க்காருக்கு அடிமைக் கக்ஷி என்றெல்லாம் பேசும்படி செய்வதுமான இழிவான காரியங்களைப் பற்றி மறு முறை எழுதுவோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 26.08.1934**



RangaRakes tamilnavarasam.com

# தோழர் திரு.வி.க. முதலியார்

தோழர் திரு.வி. கல்யாணசுந்திர முதலியார் அவர்கள் திருச்சிக்கும், ராசீபுரத்துக்கும் வருவதாக பத்திரிகையிலும், துண்டுப் பிரசுரங்களிலும் வெளியானபடி அவர் வரவில்லை. ஆதலால் பார்ப்பனக் கூலிப் பத்திரிகைகள் கல்யாணசுந்திர முதலியார் வரமாட்டார். அவர் பெயரை வேண்டுமென்றே தப்பிதமாய் உபயோகித்துக்கொள்ளுகிறார்கள் என்று எழுதிய வாசகம் உண்மையாய் இருக்கலாம் என்று சிலர் கருதக்கூடும். ஆதலால் நடந்த விபரங்களை எழுதுகின்றோம். ஒரு சுற்றுப்பிரயாணம் ஏற்படுத்த வேண்டுமென்றும், தானும் அதில் கலந்து கொள்ளுவதாகவும் தோழர் முதலியார் அவர்களே பிரஸ்தாபித்ததை ஒட்டித்தான் சுற்றுப்பிரயாணம் பிரஸ்தாபிக்கப்பட்டதென்றும், அவருடைய சம்மதத்தின் பேரிலேயேதான் பத்திரிக்கைகளிலும், துண்டு பிரசுரங்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டதென்றும் நாம் நமது தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன், அதை நம்பியே தோழர் ஈ.வெ.ரா. ஒவ்வொரு ஊருக்கும் சென்றார் என்றும் தெரிவித்துக் கொள்வதோடு தோழர் முதலியார் அவர்கள் இரண்டு இடத்திற்கும் விஜயம் செய்யாத காரணம் திருச்சிக்கு மூலவியாதி தொந்திரவால் வரவில்லை என்றும், ராசீபுரத்துக்கு வறாதது அவரது நெருங்கிய பந்து ஒருவரின் மரணம் காரணம் என்றும் சேதி வந்திருப்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தோழர் முதலியார் அவர்கள் 2-9-34ந்தேதி ஈரோட்டிற்கு அழைக்கப் பட்டிருக்கிறார். அநேகமாய் வரக்கூடும் என்றும் கருதுகிறோம்.

**பகுத்தறிவு - செய்திக் குறிப்பு - 26.08.1934**



# ஆலயப்பிரவேச மசோதா கருவிலேயே கருகிவிட்டது

இந்திய சட்டசபையில் இருந்த ஆலயப்பிரவேச மசோதா 23ந்தேதி இந்திய சட்டசபை கூட்டத்துக்கு வந்து பொதுஜன அபிப்பிராயம் விரோதமாய் இருக்கின்றது என்கின்ற காரணத்தால் சர்க்காரரால் வாப்பீசு வாங்கிக்கொள்ளும்படி கேழ்க்கப்பட்டு அது வாப்பீசு வாங்கிக் கொள்ளப்பட்டதால் அது கருவிலேயே கருகி விட்டது.

**பகுத்தறிவு - செய்திக் குறிப்பு - 26.08.1934**



RangaRakes tamilnavarasam.com



குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# ‘‘கர்ம பலன்’’

தோழர் வரதராஜுலு நாயுடு அவர்கள் அவர்களுக்கு விபரம் தெரிந்த காலம் முதல் இன்று வரை இன்னமும் தேசீய பல்லவி பாடிக் கொண்டிருந்தது யாவருக்கும் தெரிந்ததாகும். அதோடு கூடவே, இந்த சர்க்காரை, அதன் அன்னிய ஆக்ஷியை ஒழித்து சுயராஜ்ஜியம் ஏற்படுத்த வேண்டும் என்ற அனுபல்லவியையும் பாடி வந்ததும், வருவதும் யாவருக்கும் தெரியும்.

தேசீயம் என்பது வயிற்று பிழைப்பு நாடகம் என்றும், அன்னிய ஆக்ஷி, சுய ஆக்ஷி, சுயராஜ்ஜியம் என்பவைகள் எல்லாம் பார்ப்பனர்களுக்கும், பணக்காரர்களுக்கும் பாடுபாடும் சோம்பேறி நாடகம் என்று நாம் சொல்லி வருகிறோம். இதை Dr.நாயுடு அவர்கள் எதிர்த்துப் பழித்து தூஷித்தும் வந்திருக்கிறார் என்றாலும் இந்தப் பிரசாரத்தின் பலனை இவர் என்றைக்காவது ஒரு நாளைக்கு அதாவது அனுபவிப்பார் என்றே கருதி அதை லக்ஷியம் செய்யாமல் இருந்து வந்தோம். எனினும் ‘‘கர்மத்தின் பலனை’’ இன்று அவர் அடைய நேர்ந்ததை அவரே மறுக்க மாட்டார் என்று கருதுகிறோம். அதாவது இந்த நாட்டுக்கு, இந்திய தேசீயத்துக்கு, சுயராஜ்ஜியத்துக்கு, அன்னிய ஆக்ஷியை ஒழிப்பதற்கு தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் தகுதியுடையவர் என்றும் Dr. நாயுடு தேசத்துரோகியாகவும், சுயராஜ்ஜிய எதிரியாகவும் ஆகிவிட்டார் என்றும் பார்ப்பனர்கள் இப்போது சொல்லுகிறார்கள். இது நாயுடு செய்து வந்த காரியத்துக்கு தக்க பயன் என்றே சொல்லுவோம்.

தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் யார் என்பதை நாம் யாவருக்கும் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. அவரது ஒழுக்கம், சமுதாய விஷயத்தில் உள்ள கொள்கை, பொருளாதாரத்தில் உள்ள நாணயம், அனுபவம் முதலியவைகளும் அரசியல் பொது ஜனப் பிரதிநிதித்துவ முறையில் முன்பின் அவர் நடந்து கொண்ட மாதிரியும் அறிந்த இந்த நாட்டு மக்களுக்கு நாம் அதிகம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. காங்கிரசுக்கும் தோழர் ராஜகோபாலாச்சாரியாருக்கும் இவைகள் தெரியாது என்று எந்த மூடனாலும் சொல்ல முடியாது. இந்த உண்மைகளையெல்லாம் அறிந்தே தான் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தனது தேர்தல் பிரசாரத்தில் எங்கு பேசினாலும் ‘‘காங்கிரசு சார்பாய் நிற்கின்றவர்கள் யோக்கியர்களா அயோக்கியர்களா என்று



RangaRakes tamilnavarasam.com

பார்க்காதீர்கள். எவ்வளவு அயோக்கியர்களானாலும் காங்கிரசில் அங்கத்தினரானால் யோக்கியர்களாகி விடுவார்கள். ஆதலால் காங்கிரசின் பேரால் எவ்வளவு அயோக்கியர்கள், நாணையமற்றவர்கள், ஒழுக்கங் கெட்டவர்கள் நின்றாலும் அவர்களுக்கே ஓட்டுக் கொடுங்கள் என்று சொல்லி வருகிறார் என்றே கருதுகின்றோம். இதிலிருந்து காங்கிரசின் பேரால் நிறுத்தப்பட்ட சரக்குகளை ஒருவாறு மதிப்பிடலாம்.

நிற்க, இந்த நாட்டில் காங்கிரஸ் ஏற்பட்டு காங்கிரசு கணக்குப்படியே 50 வருஷங்கள் ஆகின்றன. அநேகப் பேர்கள் காங்கிரசில் பல வருஷங்களாய் இருந்து வந்திருக்கின்றார்கள், இன்றும் இருக்கின்றார்கள். ஆதலால் இவர்கள் எல்லோரும் யோக்கியர்களும், நாணையஸ்தர்களும் தானா என்று கேள்க்கிறோம். அன்றியும் பலகாலம் அதாவது 10 ௵ 20 ௵ காங்கிரசில் இருந்துவிட்டு ஏதோ ஒரு காரணத்தால் இன்று மாத்திரம், இவ்வருஷம் மாத்திரம் காங்கிரசில் இல்லாதிருந்தால் அவர்கள் யோக்கியர்களாகி இருக்க மாட்டார்களா என்று கேள்க்கின்றோம். மேலும் நேற்றுவரை அயோக்கியர்களாக இருந்துவிட்டு இன்று நாலணா கொடுத்து காங்கிரஸில் கையெழுத்து போட்டவுடன் யோக்கியர்களாகி விடுவார்களா என்று கேள்க்கின்றோம்.

அன்றியும் தேர்தல் ஆன பிறகோ, அல்லது மறுநாளோ நான் காங்கிரஸ்வாதி அல்லவென்று சொல்லிவிட்டால் உடனே அவர்கள் பழைய அயோக்கியர்களாகி விடுவார்களா என்று கேள்க்கின்றோம்.

கேவலம் எப்படியாவது தேர்தலில் பார்ப்பனர் ஆதிக்கம் ஏற்பட்டால் போதுமென்ற கருத்தினால், கிடைத்த ஆட்களை யெல்லாம் சேர்த்துக் கொண்டு, பொது ஜனங்களுக்கு சமாதானம் சொல்லுவதற்காக இப்படி யெல்லாம் பேசினால் இது புத்திசாலித்தனத்தைக் காட்டுமா அவி விவேகத்தைக் காட்டுமா? என்பதோடு இம் மாதிரி நடவடிக்கைகள் வெற்றியளிக்குமா என்றும் வினவுகின்றோம்.

கடைசியாக தோழர் சி.ராஜகோபாலாச்சாரியாருக்கு இப்படிப்பட்ட ஒரு கஷ்டமான நிலை ஏற்பட்டதே என்பதற்காக நாம் பரிதாபப்படுவதோடு ‘‘கர்ம பலன்’’ அவரையும் விடவில்லை என்றே கருதுகின்றோம்.

**பகுத்தறிவு - கட்டுரை - 02.09.1934**



# மண் குதிரையை நம்பின பலன்

## கருப்புக் கொடியும், தடி அடியும் வெடிகுண்டும்

தோழர் காந்தியாருக்கும், காங்கிரசுக்கும் அரசியல் வாய்ப்பூட்டு ஏற்பட்டு விட்டதின் பிறகு ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டிருக்கா விட்டால் தங்களை உலகம் மறந்து விடுமோ என்று பயந்து சமுதாயத் துறையில் வேலை செய்ய எண்ணங்கொண்டு ஹரிஜன சேவை, ஆலயப் பிரவேசம் என்னும் பெயர்களால் சுற்றுப்பிரயாணம் செய்ததும், பணம் தண்டினதும் யாவரும் அறிந்ததாகும். இதை மெய்யென்று நம்பின சில அரசியல் பிழைப்புக்காரர்கள் ஆலயப் பிரவசே மசோதா, தீண்டாமை விலக்கு மசோதா முதலியவைகள் கொண்டு வந்து விளம்பரம் செய்து கொண்டதும் இந்தியர்கள் அறிவார்கள்.

பிறகு என்ன ஏற்பட்டது? மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கின பலன்தான் ஏற்பட்டது. ஏன் ஏற்பட்டது என்றால் தோழர் காந்தியார் தமது பரிவாரங்களுடனும் சுற்றுப் பிரயாணம் செல்லுகையில் அவருக்கு ஏற்பட்ட கருப்புக் கொடி, தடியடி, வெடிகுண்டு ஆகியவைகள் பிரயோகமும், காந்தி கூட்டத்தார் மற்றவர்கள் மீது பிரயோகித்த தடியடி பிரசாரமும் சேர்ந்து காந்தியாரைப் பயப்படுத்தி விட்டது. இதன் பயனாக தோழர் ராஜகோபாலாச்சாரியார் மூலம் ஓர் அறிக்கை வெளியிட வேண்டியதாய் விட்டது. அந்த அறிக்கையானது காங்கிரசும் காந்தியாரும் சமூகத் துறையில் கொண்டுள்ள உள் எண்ணத்தை நிர்வாணப் படுத்திக் காட்டிவிட்டது என்றுதான் சொல்லுவோம். ‘‘சும்மா கிடக்கும் சங்கை ஊதி கெடுத்தான் ஆண்டி’’ என்கின்ற பழமொழி போல் ஆலயப் பிரவேசம் எங்களுக்கு வேண்டவே வேண்டாம் என்றும், அரசியல் உரிமைகளும், பொருளாதார முன்னேற்றமும் கிடைத்தால் போதும் என்றும் கருதி, அதற்காக அரசாங்கத்தினிடம் கெஞ்சி கூத்தாடிக் கொண்டிருந்த தீண்டப்படாதார் என்னும் மக்களைச் சாதிப்பதாக வேஷம் போட்டு ‘‘அங்கேண்டி மகளே ஆலாப் பரக்கின்றாய், இங்கு வா காற்றாய்ப் பறக்கலாம்’’ என்ற மாதிரியில் அழைத்து அவர்களை (தீண்டாதவர்கள்) ஏமாற்றியாகிவிட்டது. ‘‘ஹரிஜன வேலை செய்யாமல் ஹரிஜனங்களுக்காக பாடுபடாமல் உயிர் வைத்து இருக்க முடியாது. அதற்காகப் பட்டினி கிடந்து சாகப்போகிறேன்’’ என்று சொல்லி விடுதலை பெற்று வந்ததின் பயன் இன்று விளங்கி விட்டது.



RangaRakes tamilnavarasam.com

இந்திய தேசீய சபையின் சர்வாதிகாரியும் ஏகப் பிரதிநிதியும் என்று சொல்லப்பட்ட தோழர் காந்தியாரின் முயற்சியும் ஹரிஜன சேவையும் தீண்டப்படாதவர்களுக்கு இந்தப் பயனைக் கெடுத்திருக்குமானால், இனி அவர்களுக்கு தேசாபிமானத்தால், இந்திய மக்களை நம்புவதால் என்ன பயன் கிடைக்கக் கூடும் என்பதைப் பற்றி நாம் ஜோசியம் கூற வேண்டியதில்லை.

இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் தீண்டப்படாதாருக்கு சம சுதந்திரம் கொடுக்க இஷ்டப்படவில்லை என்று முடிவு ஏற்பட்டு விட்டால் அதுவும் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாய் மனித உரிமை, சுதந்திரம் கூட கொடுக்க இஷ்டமில்லை என்று ஏற்பட்டு விட்டால் அவர்களை இனியும் இந்த தேச மக்களையும், சுதந்திரம் கொடுக்க சம்மதியாத மதத்தையும், சாஸ்திரத்தையும் நம்பிக் கொண்டு அவர்களுடன் கூட இருக்க வேண்டுமா என்று கேட்கின்றோம்.

ஆலயப் பிரவேச பேச்சும், வார்த்தையும் எல்லாம் தீண்டப்படாத மக்கள் என்பவர்களுக்கு அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்ட அரசியலில் தனித் தொகுதி தேர்தல் உரிமையையும், உத்தியோகத்தில் தனி பிரதிநிதித்துவத்தையும் பாழாக்குவதற்காக ஏற்பட்ட சூக்ஷி தவிர வேறில்லை என்பது இப்போதாவது தீண்டப்படாத மக்களுக்கும், கீழ் ஜாதியராய் கருதப்படும் மக்களுக்கும் நன்றாய் விளங்கிற்றா இல்லையா என்று கேட்கின்றோம்.

இன்று தேர்தலுக்காக என்று வெளியிட்டிருக்கும் காங்கிரஸ் கொள்கை திட்டங்களிலும் நன்றாய் வெளிச்சமாய் மதக் கொள்கைகளில் நடு நிலைமை வகிப்பதாகவும், மத சம்பந்தமான பழக்க வழக்கங்களில் பிரவேசிப்பதில்லை என்றும், அவற்றை காப்பாற்றுவதாக வாக்குறுதி கொடுப்பதாகவும் கண்டிருப்பதை யாரும் காணலாம். இந்த நிலையில் மதத்தால், சாஸ்திரங்களால், பழக்க வழக்கங்களால், கீழ்ப்பட்டு இழிவு படுத்தப்பட்டு தீண்டாதாராய், கிட்ட வரக்கூடாதவராய், பாவிகளாய் கருதப்பட்டு அந்தப்படி நடத்தப்பட்டு வரும் மக்கள் இனியும் காங்கிரசையும், காந்தியாரையும் நம்புவது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவது போல் ஆகாதா என்று கேள்ப்பதோடு, எப்பாடு பட்டாவது, என்ன தியாகம் செய்தாவது தனித் தொகுதி முறையையே அரசாங்கத்தினிடம் வற்புறுத்தி அடைவதற்கு முயற்சிக்க வேண்டியது தாழ்த்தப்பட்ட மக்களின் கடமை என்று தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பகுத்தறிவு - கட்டுரை - 02.09.1934



# லார்ட் வில்லிங்டனின் வீர முழக்கம்

## ஜோசியம் பலித்ததாம்

லார்டு வில்லிங்டன் பிரபு இந்திய சட்டசபையில் பேசும்போது சட்ட மறுப்பு இயக்கத் தலைவர்கள் தங்களுடைய பயனற்ற தடை வேலைகளை சீக்கிரத்தில் கைவிட்டு விடுவார்கள் என்று முன்னமே ஜோசியம் சொன்னதாகவும் கொஞ்ச நாளைக்கு முன் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த சட்டமறுப்பு இயக்கம் செத்துப்போய் விட்டதென்றும் இதை பல காங்கிரஸ் தலைவர்கள் கூட அப்போதே சொன்னார்கள் என்றும், இனி அது எந்தக் காலத்திலும் தலை எடுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், இப்போது காங்கிரஸ் ஸ்தாபனங்களின் மீதுள்ள தடையை நீக்கிவிட்டோம் என்றும் சட்டமறுப்பு இயக்கம் அடியோடு செத்துப் போய்விட்டதென்று தான் நம்புவதாகவும், இது விஷயமாய் தான் கையாண்ட முறைகள் எல்லாம் வெற்றி அளித்து விட்டதென்றும், அவை வெற்றியளித்ததற்கு காரணம் பொது ஜனங்களுக்கு நல்ல புத்தி வந்து சட்ட மறுப்பைக் கைவிட்டதே காரணமென்றும் சொல்லி கடைசியாக இந்த அளவுக்கு வில்லிங்டன் பிரபு ஜோசியம் பலித்துவிட்டது என்பதோடு இந்த ஜோசியம் வில்லிங்டன் பிரபு மாத்திரம் கூறவில்லை என்பதோடு, சுய அறிவுள்ள மக்கள் 100-க்கு 99 - பேர் வில்லிங்டன் பிரபுவின் பெயர் இந்திய வைசிராய் பதவிக்கு அடிபடுவதற்கு முன்பே சொன்ன ஜோசியமே தவிர வேறில்லை என்றும் சொல்லுகிறோம்.

ஆனால் ஒரு காலத்தில் அவர் ஜோசியம் பலித்து விட்டதாக சொல்ல முடியாது. என்னவென்றால் மறுபடியும் சட்ட மறுப்பு தலையெடுக்காது என்பது. தேர்தல்கள் முடிந்து காங்கிரஸ்காரர்களும் பார்ப்பனர்களும் அதிகாரத்துக்கும் பதவிக்கும் வராமல் போக நேருமானால் அடுத்த தேர்தலுக்குள்ளாக மறுபடியும் செல்வாக்கு உண்டாக்கிக் கொள்ள ஏதாவது ஒரு வழி கண்டுபிடித்துத்தான் தீருவார்கள். அப்போது அவர்கள் கைவசம் வசூலித்த பணமும் வேலையில்லாத திண்டாட்டத்தினால் கஷ்டப்படும் வாலிபர்களும் மிகுந்திருப்பார்களானால் மறுபடியும் ஒரு மூச்சு கிளம்பி ஊசிப்பட்டாசு கட்டுடன் வெடிப்பது போல் சடபுடவென்று வெடித்து அடங்கி அதன் பயனாய் சிலருக்கு ஓட்டு வாங்கிக் கொடுத்துவிட்டு அப்புறம் தான் அடங்குவார்கள். இது பொது ஜனங்களிடத்தில் உண்மையான செல்வாக்குப் பெற யோக்கியதை இல்லாத கூட்டத்தார்களுக்கு ஏற்பட்ட



RangaRakes tamilnavarasam.com

தர்மமேயாகும். ஆதலால் அதை வில்லிங்டன் பிரபு அடக்கிவிட்டதாக நினைப்பது போலி கௌரவமேயாகும். வில்லிங்டன் பிரபுவின் வைசிராய் ஆயுள் எவ்வளவு என்பது யாவருக்கும் தெரியும். ஆதலால் அவர் எப்போதும் தலையெடுக்க வொட்டாமல் அழுத்திவிட்டேன் என்று சொல்வது ஆயுளை கழித்துப் பார்க்காமல் பேசிய பேச்சென்றே கருதுகின்றோம். ஏனெனில் இதற்குமுன் இருந்த வைசிராய் பிரபுக்கள் ஒவ்வொருவரும் இப்படித்தான் பேசிப் போய் இருக்கிறார்கள். சட்டமறுப்பு இந்த 14 வருஷமாய் இருந்து கொண்டுதான் வருகிறது.

ஆதலால் வைசிராய் பிரபுக்கு சட்டமறுப்பு அடியோடு இந்தியாவை விட்டு மறைந்து போகவேண்டும் என்கின்ற எண்ணம் உண்மையில் இருக்குமானால், மக்களின் வேலை இல்லாக் கஷ்டத்தையும் தரித்திரத்தையும் நீக்க வழி கண்டுபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் வாரத்துக்கொரு முறை ஞாயிற்றுக் கிழமை வருவது போலும், வருஷத்துக்கொரு முறை ஜனவரி மாதம் வருவது போலும், எலக்ஷன்கள் தோறும் சீர்திருத்தங்கள் தோறும் சட்ட மறுப்பு வந்து கொண்டுதான் இருக்கும். சட்ட மறுப்பு மறைந்து போனதாகச் சொல்லுவதும் திங்கட்கிழமை விடிந்த உடன் ஞாயிற்றுக் கிழமை மறைந்தது போலவும் பிப்ரவரி பிறந்தவுடன் ஜனவரி மறைந்ததாகவும் நினைப்பது போல்தான் முடியும்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 02.09.1934**



# வடநாட்டுத் ‘‘தலைவர்கள்’’

## பூலாபாய் தேசாய் & சர்தார் சாதூல் சிங்

தோழர் பூலாபாய் தேசாய் அவர்கள் சென்ற மாதம் சென்னை மாகாணத்திற்குத் தருவிக்கப்பட்டு, பல இடங்களில் சொற் பொழி வாற்றும்படி செய்யப்பட்டதில் அவர் சொற்பொழிவிலிருந்து மிக மோசமான வாக்கியங்கள் காணப்பட்டதை வாசகர்கள் பல பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம்.

அவற்றில் கவனிக்கத்தக்க ஒரு வாக்கியம் என்னவென்றால் ‘‘சென்னை மாகாணத்தில் சர்க்காரை ஆதரிக்க சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒன்று இருந்து வருகின்றது’’ என்பது.

அதே மாதிரி தமிழ்நாட்டுக்கு வந்த மற்றொரு தோழர் சர்தார் சாதூல்சிங் என்பவர் ‘‘காங்கிரஸ் குதிரை போன்றது, மற்ற ஜஸ்டிஸ் கக்ஷி முதலியவைகள் கழுதை போன்றது’’ என்றும் பேசிவிட்டு போயிருக்கிறார். இவர்களைப் பற்றி நாம் பரிதாபப்படுகின்றோம். ஏனெனில் இவர்கள் தமிழ்நாட்டைப் பற்றியோ, ஜஸ்டிஸ் கக்ஷியைப் பற்றியோ, சுயமரியாதை இயக்கத்தைப் பற்றியோ ஒன்றும் அறியாதவர்கள்.

தென்னாட்டுப் பார்ப்பனர்கள் சர்க்கிஸ் மாஸ்டர்கள் மாதிரி வடநாட்டு ஆசாமிகளை சர்க்கிஸ் வளையத்துக்குள் ஆட்டுவிக்கும் மிருகங்களைப் போலப் பிடித்துக் கொண்டு வந்து ஆட்டுவிப்பதன் பயனாய் இம்மாதிரி அவர்கள் சரியாய் ஜீரணமாகாத ஆகாரங்கள் வாந்தி எடுக்கப்படுவது போல் கக்கிவிட்டுப் போக நேரிட்டதே ஒழிய, மற்றபடி வடநாட்டுத் ‘‘தலைவர்கள்’’ தங்கள் சுயபுத்தியுடனும் சுய அனுபவத்துடனும் சுயமரியாதையில் லக்ஷியம் வைத்தும் பேசின பேச்சுக்கள் என்று சொல்ல முடியாது.

இது போலவே முன் ஒரு தடவை தோழர் சர்தார் பட்டேல் என்று சொல்லப்படும் வல்லபாய் பட்டேலும், மற்றும் தோழர்கள் C.R.தாஸ், மாளவியா, லஜபதிராய் முதலியோர்களும் நமது நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட காலத்தில் ஞானமில்லாமல் உளரிக்கொட்டிவிட்டுப் போயிருக்கிறார்கள் என்பதை நாம் வாசகர்களுக்கு மறுபடியும் ஞாபகமூட்ட வேண்டியதில்லை என்றே நினைக்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

தென்னாட்டுப் பார்ப்பனர்களுக்குத் தங்கள் சொந்த போர்வை யுடனானாலும் சரி, காங்கிரஸ் போர்வையுடனானாலும் சரி பொது ஜனங்களிடத்தில் செல்வாக்கில்லாமல் முறியடிக்கப்பட்டும், தங்களது நயவஞ்சக தன்மைகளையும் சுயநலப் பித்தலாட்டங்களையும் பாமர மக்கள் அறிந்து அவர்கள் மீது வெறுப்புக் கொண்டிருக்கும் காலங் களிலும் மற்றும் வேறு இயக்கம் தோன்றி பார்ப்பனர்களின் சோம்பேறி வாழ்வுக்கு ஆபத்து வரும்படியான நிலை ஏற்படும் போதும் இப்படிப்பட்ட வடநாட்டு சோனகிரிகளைக் கூலிக்கு பிடித்துக் கொண்டு வந்து ஆட்டுவிப்பது அவர்களது பரம்பரை வழக்கமேயாகும்.

இவர்களில் சிலர் தென்னாட்டுக்கு வந்துபோன பின்பு பூர்வஞானம் ஏற்பட்டு தங்களது தப்பிதத்தை உணர்ந்து வருந்தி மன்னிப்பு கேட்டுக் கொண்டிருப்பதோடு தென்னாட்டு பார்ப்பனர்களையும் அளவுக்கு மீறிக் கண்டித்தும் இருக்கிறார்கள்.

தென்னாட்டுப் பார்ப்பனர்களைப் பற்றி வடநாட்டுத் தலைவர்கள் இங்கு வந்து போனபிறகு கொண்ட அபிப்பிராயங்களை நாம் முன் பல தடவை எடுத்துக்காட்டி இருக்கின்றோம். ஆனாலும் இப்போதும் ஒரு தடவை எடுத்துக் காட்டுவது குற்றமல்ல என்றே நினைத்து சில குறிப்பிடுகின்றோம்.

விவேகானந்தர் கூறியதின் சுருக்கம் ''பார்ப்பனர்கள் விஷப் பாம்பு போன்றவர்கள். அவர்கள் விஷத்தினால் பார்ப்பனரல்லாதார் அழிந்து போகுந் தருவாயிலிருக்கிறார்கள். இவர்கள் காப்பாற்றப்பட வேண்டுமானால் பார்ப்பனர்கள் கக்கிய விஷத்தை தாங்களாகவே உருஞ்சிக் கொள்ள வேண்டும்'' என்பதாக சொல்லி இருக்கிறார்.

தோழர் சர்.பி.சி. ரேய் அவர்கள் ''பார்ப்பனர்களை வங்காளக் குடாக் கடலில் போடவேண்டும்'' என்றும் சொன்னார்.

தோழர் C.R.தாஸ் அவர்கள் ''எனக்கு சுயராஜ்ஜியம் கிடைத்து விட்டால் முதலில் இந்தப் பார்ப்பனர்களையும், பரிகாரிகளையும் ஒன்று படுத்திவிடுவேன்'' என்றும் சொன்னதோடு, தான் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தையும், தலைவரையும் பற்றி பேசின சில வார்த்தைகளுக்காக மன்னிப்பும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

லாலா லஜிபதிராய் அவர்கள் தென்னாட்டுக்கு வந்து போன உடன் தனது தவரை உணர்ந்து ''சமூகத்தில் உள்ள ஆபாசங்களுக் கெல்லாம் மதமே காரணம்'' என்றும் ''கோவில்களுக்குள் மனிதத் தன்மை என்பதே கிடையாது'' என்றும், ''தமிழ்நாட்டைப் பொருத்த வரை தைரியமும், மன உறுதியும் கொண்ட எதற்கும் அஞ்சாத ஒரு சீர்திருத்தவாதி அவசரமாய் தேவை'' என்றும் சொல்லியிருக்கிறார்.



தென்னாட்டைப் பற்றி அ, ஆ கூட தெரியாத தோழர் காந்தியும் கூட பார்ப்பனரல்லாதாரைப் பற்றி கண்டபடி உளரிவிட்டு கடைசியாகத் தன்னை கன்னியாகுமரி கோவிலுக்குள் விட மறுத்த பிறகே ''கோவில்கள் குச்சுக்காரிகள் குடிசை'' என்று சொன்னதுடன் ''பிராமணர்கள் செய்த அக்கிரமங்களுக்கு அதன் பயனை அனுபவிக்க வேண்டியது அவசியம் தான்'' என்று சொன்னார்.

பண்டித மாளவியாவும் தமிழ்நாட்டுக்கு வந்தவுடன் கோவிலுக்குள் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் ஆகியவர்களுக்குத் தனி தனி இடம், அதாவது கோவிலுக்குள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படி இடம் ஒதுக்கப்பட்டு இருக்க வேண்டும் என்றும், தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குத் தனிக் கோவிலே, அதாவது கோவில் விஷயத்தில் தனித் தொகுதியே இருக்க வேண்டும் என்றும், இதனால் எல்லாம் தேசியம் கெட்டுப் போகாதென்றும் சொன்னதோடு, ஜாதி உயர்வு தாழ்வு இருந்தாக வேண்டும் என்றும் அதை அழிக்க இதற்கு முன் எத்தனையோ பேர் எவ்வளவோ பாடுபட்டும் ஜாதி இன்னமும் உயிருடனிருந்து வருகின்றதென்றும், அது யாராலும் அசைக்க முடியாதென்றும் சொல்லிவிட்டுக் கடைசியாக தென்னிந்தியாவில் ஜாதியை ஒழிப்பதற்கு மாத்திரமல்லாமல் கடவுளைக் கூட அழிக்க ஒரு இயக்கம் தோன்றி இருக்கின்றதென்றும் பரிகாசமாய் பேசிவிட்டுப் போனார்.

போகும்போது இங்கு அவருக்கு நடந்த மரியாதைகளைப் பார்த்த பின்னர், அங்கு போன பிறகு தாழ்ந்த ஜாதிக்காரர் என்பவர்களைப் பற்றி நீலிக் கண்ணீர் வடித்துப் பேசவும் அவர்களுக்குக் கோவில் பிரவேச உரிமை விஷயத்தில் வழவழ என்று பேசவும் வேண்டிய தவசியம் ஏற்பட்டு விட்டது.

அது போலவே தோழர்கள் பூலாபாய் தேசாயும், சர்தார் சிங்கும் சீக்கிரத்தில் தங்கள் தப்பிதத்தை அறிந்து திருத்திக் கொள்வார்கள் என்கின்ற நம்பிக்கை இருக்கின்றது. ஆனால் அவர்கள் இங்கு வந்த சமயம் உண்மைகளை எடுத்துக்காட்ட சந்தர்ப்பமில்லாமல் போனது விசனிக்கத்தக்கதே யாகும். என்றாலும் பொருப்பும், சுயமரியாதையும் உள்ள மக்களாய் இருந்தால் இந்தப்படி தங்களுக்கு பரீக்ஷை இல்லாத ஒரு இடத்திற்கு வந்து பார்ப்பனர்களின் கையாளாகவும், ஆயுதங்களாகவும் இருந்து கிளிப்பிள்ளைகள் போல் சொல்லிக் கொடுத்ததைக் கக்கிவிட்டும் போயிருக்க மாட்டார்கள். இதிலிருந்தே காங்கிரசில் இருக்கும் தலைவர்கள் என்று சொல்லக் கூடியவர்களுடைய யோக்கியதையும், நாணையப் பொருப்பும், சுயமரியாதையும் எவ்வளவு - எப்படிப்பட்டது என்பதை உணரலாம்.



RangaRakes tamilnavarasam.com

உண்மையிலேயே சுயமரியாதை இயக்கம் சர்க்கார் ஆதரவு பெற்ற இயக்கமா என்பதை அறிவும், நாணையமும், நடுநிலைமையும் உள்ள ஒவ்வொருவரையும் சிந்தித்துப் பார்க்கும்படி விரும்புகின்றோம்.

ஏதாவது ஒரு இயக்கமோ, ஒரு கொள்கையோ பார்ப்பனர்களுக்கு விறோதமாகவோ அவர்களுடைய சோம்பேறிப் பிழைப்புக்குக் கெடுதியாகவோ இருந்தால் அதை யோக்கியமான முறையில் சமாளிக்க அவர்களுக்கு யோக்கிய சக்தி இல்லாமலிருந்தால் அவைகளை ஒழிக்க அவர்களுக்கு ஒரே ஆயுதம்தான் உண்டு. அதாவது ''தேசத் துரோகம், தேசியத்துக்கு விரோதம், மதத் துரோகம், சர்க்காருக்கு அடிமை'' என்பன போன்ற பெயர்களைச் சொல்லி அழிக்கப் பார்ப்பதுதான்.

இன்றைய சர்க்காரில் இந்தியாவில் சிறப்பாக சென்னை மாகாணத்தில் தேசத்துரோகமாய், தேசீயத்துக்கு விரோதமாய், சர்காருக்கு அடிமையாய், அதுவும் பரம்பரை அடிமையாய் இருந்து மக்களையும், நாட்டையும், நாட்டு செல்வங்களையும் பாழாக்கி வாழ்ந்து வருவது 100-க்கு 90 பேர் பார்ப்பனர்களேயாகும்.

இன்றைய எந்த காங்கிரஸ்வாதி, தேசியவாதி, தேசத் தலைவர் ஆகியவர்களை எடுத்துக்கொண்டாலும் அவர்களின் சந்ததியார், -பெண்டு, பிள்ளை, பெற்றோர் 100-க்கு 95 பேர் சர்க்கார் அடிமையாய் இருந்து மக்களைக் காட்டிக்கொடுத்து, தேசியத்தைக் காட்டிக் கொடுத்து தேச செல்வத்தை கொள்ளை கொண்டு வயிறு வளர்த்து வாழ்ந்து வருவதை யாரும் பார்க்கலாம்.

வயிற்றுப் பிழைப்புக்காக ஒரு கூட்டம் தேசாபிமானமும், மற்றொரு கூட்டம் சர்க்கார் அபிமானமுமான தொழில்களில் ஈடுபட்டு வாழ்ந்து வருவதை உணரவேண்டுமானால் ஒவ்வொரு பார்ப்பனரும் அவரவர்கள் முன்பின் சந்ததிகளை கவனித்து அவர்கள் வாழ்க்கையைக் கவனித்தால் அவர்களே அறிந்து கொள்வார்கள். சர்க்கார் அடிமைக்கு விண்ணப்பம் போட்டு முயற்சித்து ஆகாயத்திற்கும், பூமிக்குமாகப் பாடுபட்டுப் பார்த்துக் கிடைக்காததாலும், திருப்தியடைய வழியில்லாததாலும்தான் பார்ப்பனர்கள் ''தேசியவாதிகள்'' ''தேசிய பத்திராதிபர்கள்'' ''தேசாபிமானிகள்'' ஆனார்களே ஒழிய, வேறு எப்படி தேசாபிமானிகள் ஆனார்கள் என்று அவர்கள் ஒவ்வொருவருடைய சரித்திரத்தையும் பார்த்தால் கண்ணாடியில் விளங்குவது போல் யாரும் எளிதில் அறிந்த கொள்ளலாம்.

இப்படிப்பட்ட யோக்கியர்கள் சுயமரியாதை இயக்கம், சர்க்கார் அடிமை இயக்கம், சர்க்கார் ஆதரவு பெற்ற இயக்கம் என்று சொல்லுவதற்கு சரியான பதில் சொல்ல அகராதியில் வார்த்தை இல்லையே என்றுதான் நாம் வருந்துகிறோம்.

பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரை வையவும், தூற்றவும் பழிக்கவும், இழிவுபடுத்தவும் வேண்டுமானால் தாங்கள் யோக்கியர்கள் போல் மிதமான வார்த்தைகளால் விஷமத்தனமான விஷயங்களை எழுதிவிட்டு, பார்ப்பனரல்லாத கூலிகளைப் படித்து அவர்களுக்குக் கூலி கொடுத்து இழிவான முறையில் வையவும், எழுதவும் செய்து வருவதும் அவர்களது பரம்பரை வழக்கம் என்று இதற்கு முன் பல தடவை சொல்லி வந்திருக்கிறோம். இராமாயணம் முதலிய கதைகளையும் ஆதாரமாக எடுத்துக் காட்டி வந்திருக்கிறோம்.

உதாரணமாக சுயமரியாதை இயக்கத்தை எதிர்க்கவும், தோழர் ராமசாமியை வைது அவரைப் பற்றி விஷமப் பிரசாரம் செய்யவும், காங்கிரசில் இருந்து பார்ப்பனரல்லாதாருக்கு 2000ரூ. கொடுத்து ''தேசபந்து'' என்னும் பத்திரிகையையும் ஆதரித்து வந்ததை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

அது போலவே இப்போதும் தென்னாட்டில் பார்ப்பனரல்லாதாருடைய சில பத்திரிகைகளைப் பிடித்து 1000, 500 கூலியாகவும், லஞ்சமாகவும் கொடுத்து விஷமப் பிரசாரம் செய்யச் செய்து வருவது யாரும் அறியாததல்ல.

சுயமரியாதை இயக்கமானது இவைகளையெல்லாம் ஆரம்பத்திலேயே எதிர்பார்த்துதான் இரண்டில் ஒன்றுக்கு துணிந்து நிற்கின்றதே ஒழிய பயந்து நிற்கவில்லை என்றும், அது சுயமரியாதைக்காக - மனித சமூக சுதந்திரத்துக்காக - சர்க்காருக்கு மாத்திரமல்ல - இன்னமும் இக்காலத்தில் ஒழுக்க விறோதம், நியாய விறோதம், தேசத் துரோகம் முதலிய பல காரியங்களுக்கும் அடிமை யாகத் தயாறாய் இருக்கிறது என்றும், இப்படிப்பட்ட சோம்பேறிகளும், சுயநலமிகளும், கூலிகளும், எதைச் சொன்னாலும் எப்படித் தூற்றினாலும் கவலையில்லை என்கின்ற நிலைமையில் தான் இருக்கின்றது என்றும் வினயத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 02.09.1934**



RangaRakes tamilnavarasam.com

# நமது மாகாணத்தில் பெண் வக்கீல்கள்

நமது நாட்டில் பெண்கள் சமயலுக்கும், படுக்கைக்கும் மாத்திரம் பயன்படக்கூடியவர்கள் என்கின்ற எண்ணம் வைதீகர்களுக்குள்ளும், வயோதிகர்களுக்குள்ளும் இருந்து வருவதோடு பல பெண்களும் அப்படியே நினைத்துக்கொண்டுமிருக்கிறார்கள்.

சில பெண்கள் இந்த இரண்டு வேலைகளுக்கும் இடையூறு இல்லாமல் ஏதாவது வேலை கிடைத்தால் மாத்திரம் செய்யலாமே தவிர மற்றபடி பெண்கள் ஆண்களைப் போல் வேலை பார்ப்பது பாவமென்றும் கருதி இருக்கிறார்கள். சில பெண்கள் சட்டசபையில் இருந்தவர்களும், இருக்க பாக்கியம் பெற்றவர்களும் கூட பெண்களுக்கு கும்மி, கோலாட்டம், கோலம், தையலில் பூப்போடுதல் ஆகிய வேலைகள் சம்மந்தமான கல்வி கற்றால் போதும் என்றும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

நம்முடைய தேசத்து தேசியத்தலைவர்களும், மகாத்மாக்கள் என்போர்களுக்கும் பெண்கள் சந்திரமதி போலும், சீதை போலும், நளாயினிபோலும் இருக்க வேண்டும் என்று சொல்லி அதற்குத் தகுந்த பிரசாரமும் செய்து வருகின்றார்கள். இப்படிப்பட்ட கஷ்டமான நிலையில் நம் தென் இந்தியாவில் சென்னையில் பெண்கள் பி.ஏ., பி.எல்., படித்து வக்கீல்களாகி, அட்வகேட்டுகளும் ஆகி இருக்கின்றார்கள் என்றால் பெண்களை எல்லாத் துறையிலும் ஆண்களைப் போலவே பார்க்கவேண்டும் என்கிற ஆசை உள்ளவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி இருக்கும் என்பதை நாம் எழுதிக் காட்டவேண்டியதில்லை. அப்பெண் வக்கீல்களில் இருவர்கள் தோழர் எம்.எ. கிருஷ்ணம்மாள், எம்.எ. ஏதுகிரியம்மாள் ஆகியவர்களாவார்கள். இவர்களது மூத்த சகோதரியாரும் கொஞ்சகாலத்துக்கு முன்தான் பரிக்ஷையில் தேரி அட்வகேட்டாகி இருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன் மதராஸ் ஹைகோர்ட் ஜட்ஜி தோழர் தேவதாஸ் அவர்கள் குமார்த்தியும் வக்கீல் பரிக்ஷையில் தேறி அட்வகேட்டாகி கோயமுத்தூரில் தொழில் நடத்தி வருகிறார்கள்.

தங்களைப் பெண்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு வெட்கமில்லாமல் கும்மியும், கோலாட்டமும், கோலமும், தையலும் தான் பெண்கள் கற்க வேண்டுமென்று சொல்லுகின்றார்களே அப்படிப்பட்ட பெண்களுக்கு இனியாவது புத்தி வருமா? என்று நினைக்கின்றோம்.

பகுத்தறிவு - செய்தி விளக்கம் - 02.09.1934



# வைசிராய் பேச்சு

## சட்டமறுப்பு இயக்கம் செத்தது

**சட்ட மறுப்பு**

காலகிரமத்தில் சட்ட மறுப்பு இயக்கத் தலைவர்கள் பயனற்ற தடை வேலை, நாசவேலை ஆகியவைகளைக் கைவிட்டு விடுவார்கள் என்று ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். நான் முன் ஒரு தடவை அதைப் பற்றிப் பேசியபோது சட்ட மறுப்பு உயிருக்கு ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. மகா ஜனங்கள் அதை வேண்டவில்லை யென்பது தெளிவுபட ஆரம்பித்துவிட்டது. சென்ற 12 மாத காலத்திய சம்பவங்களிலிருந்து, அவ்வுணர்ச்சி இன்னும் வலுத்து, கடைசியாக சென்ற ஏப்ரல் மாதம் அப்புரட்சி இயக்கத்தின் மூல புருஷரே சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைக்கும்படி எல்லா காங்கிரஸ்காரர் களுக்கும் யோசனை சொல்லப் புறப்பட்டார். ஸ்வராஜ்யத்திற்காக சட்டமறுப்புச் செய்வதை நிறுத்தும்படி அவர் சொன்னார். இப்பால் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி, அதை ஊர்ஜிதம் செய்ததுடன், சட்ட சபைப் பிரவேசம் செய்யவேண்டுமென்றும் முடிவு செய்தது. ஒரு காலத்தில் அது பயனற்ற முறையென்று பல காங்கிரஸ் தலைவர்கள் கூறி வந்தது ஞாபகமிருக்கும். இவ் விஷயங்களைப்பற்றி சமீப காலத்தில் விவாதங்கள் நடந்து முடிவு செய்யப்பட்டபோது நான் இந்தியாவில் இல்லை. ஆனால் 1934 ஜுன் 6ந் தேதி இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுடைய முறை இன்னதென்று வெளியிட்ட அறிக்கை எனது பூரணமான சம்மதத்தைப் பெற்றிருந்தது. அரை மனதாகவும், பெருந்தன்மை யில்லாமலும் அவ்வறிக்கை வெளியிடப்பட்டதாக சிலர் கண்டித்திருக்கிறார்கள். ஆனால் 1932ல் நான் சொல்லியது போல் சட்ட மறுப்பை ஒருவிதமாக முடிவுக்குக் கொண்டுவர நம்மாலானதைச் செய்யாவிடில் நமது கடமையில் தவறியவர்களாவோம். அவ் வியக்கம் திரும்பவும் தலையெடுக்க விடக்கூடாது. இப்போது காங்கிரஸ் ஸ்தாபனங்கள் மீதுள்ள தடையை நீக்கி விட்டோம்.

சட்டமறுப்பு இயக்கம் முடிவாக நின்றுவிட்டதாகவே நான் நம்புகிறேன். 1932-ல் நான் கையாளப் போவதாக வெளியிட்ட முறை பயனளித்து விட்டது. கவர்ன்மெண்டு மாத்திரம் இந்த சந்தோஷமான முடிவுக்குக் காரணமல்ல; நீங்கள் யாருடைய அபிப்பிராயங்களை இங்கு



RangaRakes tamilnavarasam.com

வந்து தெரிவிக்கிறீர்களோ! அம் மகாஜனங்களின் நல்ல புத்தியும், உறுதியுமே அதற்கு வெகுதூரம் காரணமாகும். புரட்சித் தனமாகவும், அர்த்தமில்லாத பயனற்ற வழியிலும் அதிகாரிகளுடன் போராடுவதால் அபிவிருத்தியுண்டாக்கி விடாதென்று ஜனங்கள் உணர்ந்துவிட்டார்கள். பலவந்தம், அல்லது பெருவாரியான மகாஜன இயக்கம் சரியான முறையல்ல வென்ற உண்மை நாடெங்கும் ஜனங்களுக்குப் புலப்பட்டுவிட்டது. இது பற்றியே நான் சட்ட மறுப்பு இயக்கம் இனிப் பிளைக்காது, தலையெடுக்க முடியாது என்று நம்புகிறேன். நாம் கவனிக்க வேண்டியிருக்கிற சமூக ராஜீயப் பொருளாதாரப் பிரச்சினைகள் பலவிருப்பதால், எல்லா வகையான ராஜீய வாதிகளும் நேசபாவத்துடன் ஒத்துழைத்தால் தான் அக் கஷ்டமான பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

**பகுத்தறிவு - கட்டுரை - 02.09.1934**



# இதற்கு என்ன சமாதானம்? ஹிட்லரே

ஜர்மனியின் மொத்த ஜனத்தொகை 66000000 ஆறுகோடியே அருபது லக்ஷம். இதில் 3 கோடியே 21 லக்ஷம் ஆண்கள். பெண்கள் 3 கோடியே 39 லக்ஷம். ஆகவே பெண்கள் ஆண்களை விட 18 லட்சம் பேர்கள் அதிகமாய் இருக்கிறார்கள். பெண்கள் அடுப்பங்கரைக்கும், படுக்கை அரைக்குத்தான் லாயக்கென்று சொல்லி இந்தியப் பெண்களைக் கூட அந்தப்படி நினைக்கும்படி செய்துவிட்ட ஹிட்லரே இந்த 18 லக்ஷம் பெண்களைப் பாதிரியாகச் சொல்லுகின்றீர்களா? அல்லது சங்கறாச்சாரி களாகவும், மடாதிபதி, தம்பிரான்களாகவும் ஆகச் சொல்லுகிறீர்களா? அல்லது ஆளுக்கு 60,000 பெண்களை கலியாணம் செய்துகொண்ட தசரத மகாராஜாவைப்போல் ஒரு ஐம்பது தசரத மகாராஜாவை சிருஸ்டிக்கிறீரா? என்ன செய்யப்போகிறீர். மற்றும் இந்தப் பெண்கள் சராசரி 4 வருஷத்திற்கு ஒரு குழந்தை வீதம் பெற்றாலும் வருஷம் 4½ லக்ஷம் பிரஜைகள் அதிகமாகுமே. ஆதலால் அதை தடுக்க என்று கர்ப்பத்தடைப் பிரசாரம் செய்வதற்காக இவர்களை கன்னியா மாடத்துக்காவது அனுப்ப உத்தேசித்து இருக்கிறீரா?

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 02.09.1934**




RangaRakes tamilnavarasam.com

# ''மனித உற்பவம்''

இந்நூல் செப்டம்பர் முதலில் வெளிவரும். தமிழ் பாஷையிலும், மற்றும் எந்த இந்திய பாஷையிலும், இதுகாரும் எழுதிராத நூல் இதுவொன்றே. இந் நூல் நாட்டில் 30-35 கோடி மக்களுக்கு, மனிதன் உலகில் எவ்விதம் உற்பத்தியானான் என்ற விஷயம் தெரியாமலே இருந்து வருகிறது. இந்தியாவில், தற்போது வாழ்ந்து வரும் முதியோருக்கும் இளைஞருக்கும் மனிதன் எவ்விதமாக உலகில் தோன்றி இருக்கக்கூடுமென்று சிந்திக்கக் கூடாமலே இருக்கின்றது. ஏனெனில் மதங்களாலும், ஜாதிகளாலும் கட்டுண்ட நமது இந்திய மக்களுக்கு, எங்கே மனித உற்பவ உண்மையைத் தெரிந்துகொண்டால், மதங்கள் பேரிலும், ஜாதிகள் பேரிலும் பற்று ஒழிந்து போகுமோ என்ற மோச எண்ணத்தால், மனித உற்பவத்தியைப் பற்றி விஞ்ஞானம் கூறும் உண்மையை, நமது பாமர மக்களுக்கு எடுத்துறைக்காமலே இதுகாரும் நமது அறிஞர்களும் இருந்து வந்திருக்கின்றனர். இந்த மோசடியைப் போக்கவும், மதங்களிலுள்ள பற்று ஒழியவும் ஏற்பட்டதாகும் இந்நூல். இதனை வாசித்து, நமது பாமர மக்களுக்கு மனிதனுடைய உண்மை வரலாற்றைத் தெரிவிக்க, ஒவ்வொரு சமதர்மியும், சுயமரியாதையாரும் கடமைப்பட்டுள்ளார்கள். இதில் மனித உற்பவம், பிரபஞ்ச உற்பவம், மனித பரம்பரை முதலிய அறிய விஷயங்களை படங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதன் விலையை சாமான்ய மக்கள் வாங்கிப் படிக்குமாறு குறைக்கப்பட்டுள்ளது. மனிதன் உலகில் தோன்றி சுமார் 5 லட்ச வருஷமாயினும் இவனது பரம்பரை, உலக ஆரம்ப முதல் புல்லாய், பூண்டாய், புழுவாய், மீனாய், மிருகமாய் மாறி வந்து, கடந்த 5 லட்ச வருஷத்திற்கு முன்பே தனது மனித உருவத்தைப் பெற்றுள்ளார் என்ற அறிய மெஞ்ஞானத்தை எடுத்துக்காட்டும் இந்நூலொன்றே தமிழ் நாட்டில் வரைந்துள்ளது.

பகுத்தறிவு - நூல் மதிப்புரை - 02.09.1934


R. No. M. 3066 "PAHUTHARIVU"

பகுத்தறிவு

இனாம்! இனாம்!

அருமையான புத்தகங்கள் இனாம்!

0-8-0

0-8-0

0-8-0

0-8-0

0-8-0

0-8-0

மானேஜர், "பகுத்தறிவு", ஈரோடு.



RangaRakes tamilnavarasam.com

# ஏழைகள் துயரம் நீங்க வழி

தோழர்களே!

இந்த தேசத்தில் ஏற்பட்டிருக்கும் ஜன சமூக அமைப்பின் அஸ்திவாரமே சரியாய் இல்லாமல் இருக்கிறது. இந்த அஸ்திவாரத்தின் மீது கட்டக் கூடிய எந்த அமைப்பும், ஜன சமூகத்திற்கு நன்மையளிக்கக் கூடியதல்ல. ஒரு தகப்பன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுக்கு எப்படிச் சம அந்தஸ்தும், சம உரிமையும் உண்டோ அப்படியே ஒரு தேசத்தில் பிறந்தவர்களுக்கும் இருக்க வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் மக்கள் சுகமாக வாழ முடியும். ஏதோ தான் பிறந்த வேளையின் பலன் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியதுதான்; மற்றொருவன் சுகத்தை அனுபவிக்க பாத்தியதை யுடையவன் தான் என்னும் சோம்பேறி எண்ணமே மக்களை அழித்து வருவதற்கு முக்கிய கருவியாய் இருக்கிறது. இந்த எண்ணம் மாறுபட வேண்டியது அவசியமாகும். இதற்காக எவ்வளவு தியாகம் செய்தாலும் அது வீணாகாது. ஜனங்களின் மனோபாவமும், வாழ்க்கையை நடத்தும் முறையும் மாறினாலொழிய வேறொரு முறையாலும் நன்மை உண்டாகாது என்பது திண்ணம். தற்போதிருக்கும் நிலைமையில் சுயராஜ்ஜியம் வந்தால் குருட்டு நம்பிக்கையும், வைதீகமும் தான் வலுக்கும். தற்போது சுயராஜ்யம் அனுபவிக்கும் தேசங்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஏழைகள் நிலைமை அங்கே எப்படி இருக்கிறது? அமெரிக்கா ஜனநாயக ஆட்சியுடையதாகத்தான் இருக்கிறது. அங்கே லட்சக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றார்கள். அமெரிக்கா உலகில் செல்வத்திற்கே இருப்பிடமா யிருந்தும் அங்கே ஏழைகள் நிற்க நிழலின்றி, உறங்க இடமின்றித் தவிக்கிறார்கள். ஜர்மனியின் நிலைமை இன்று எவ்விதமாக இருக்கிற தென்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமே. சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தையுடையதென்று சொல்லும் இங்கிலாந்தும் சுயராஜ்ய தேசமேயாகும். உலகத்தில் பல நாடுகள் இங்கிலாந்தின் ஆளுகைக் குட்பட்டிருக்கின்றன. ஆனால் அங்கு ஏழைகள் படும் துயரம் கொஞ்ச நஞ்சமல்ல. சுயராஜ்யமுள்ள ஒவ்வொரு தேசமும், இப்படித்தான் இருக்கிறது. சுயராஜ்யமோ அன்னிய ராஜ்யமோ, குடிஅரசோ, முடி அரசோ எந்தவிதமான முறையிலும் மக்கள் சுகம் பெற முடியாத நிலைமையில் உலகம் இன்று இருந்து வருகிறது.



ஆகையால் ஏழைகள் துயரத்தைப் போக்க இந்திய சுயராஜ்யம் இப்போது சிலரால் கருதப்படும் முறையில் யாதொரு நன்மையும் கொடுக்கப் போவதில்லை என்பது நிச்சயம். சமதர்மத்தையும், பொதுவுடமையையும் அஸ்திவாரமாகக் கொண்ட ராஜாங்க அமைப்பொன்றே மக்கள் சுகவாழ்க்கைக்குரிய வழியாகும். இதற்காக ஏன் நாம் தியாகம் செய்யத் தயாராயிருக்கக் கூடாதென்று கேட்கிறேன். உலகத்தில் பலவகையில் ஜீவராசிகள் மரணமடைகின்றன. பல நோய்களால் இறக்கிறவர்களின் தொகை சாதாரணமல்ல. மதத்தின் பெயரால் யாதொரு விவேகமுமில்லாமல் ஒருவருக்கொருவர் சண்டை இட்டுக் கொண்டு உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். இன்னும் பல வழிகளில் மரண மடையும்போது மக்களின் உன்னத வாழ்க்கை அமைப்பை உத்தேசித்துச் சிலரோ, பலரோ உயிரைத் தியாகம் செய்வது கூட பெரிய காரியமாகுமோவென்று கேட்கிறேன். மனிதனுக்கு மனிதன் எதற்காக வித்தியாசங்கள் காண்பிக்கப்பட வேண்டும்? அறிவுள்ள எவரும் இனி இந்நிலைமையைச் சகித்துக் கொண்டு ஒரு க்ஷணமாவது வாழ முடியாது. பலாத்காரம் கூடாது. இம் முறைகளை மாற்ற பலாத்காரம் ஒரு பொழுதும் வெற்றியடைய முடியாது. பலாத்காரம் பலாத்காரத்தையே பெருக்கும். உண்மை மறைந்துவிடும். ஆகையால் ஜனங்களுடைய மனதை மாற்றப் பாடுபடவேண்டியது தான் முறையேயொழிய, பலாத்காரத்தினால் சாதித்து விடலாமென்று எண்ணுவது மனித இயற்கைக்கு விரோதமான தத்துவமாகும். இந்த தேசத்தில் முன்னேற்றமுள்ளவர்களொன்று, பிற்போக்கானவர்கள் மற்றொன்றாக இரண்டு கட்சிகளே இருக்க முடியும். இப்படி பிரிக்கப்பட்டாலொழிய மக்கள் அபிவிருத்தியடைய மார்க்கமில்லை. நமது மக்களுக்கு விஷயத்தை அறியக்கூடிய பகுத்தறிவு விருத்தியடைந்தாலொழிய மற்றெந்த ராஜீய முறையாலும் ஒரு நன்மையும் விளைந்து விடப் போவதில்லை.

*குறிப்பு: 08.07.1934 இல் கும்பகோணத்தில் ஆற்றிய சொற்பொழிவு.*

**பகுத்தறிவு - சொற்பொழிவு - 09.09.1934**



RangaRakes tamilnavarasam.com

# ஈரோடு முனிசிபல் எலக்ஷன்

ஈரோடு முனிசிபாலிட்டிக்கு எலக்ஷன்கள் நடக்க தேதிகள் குறிப்பிட்டாய் விட்டன. செப்டம்பர் மாதம் 15ந் தேதி நியமனச் சீட்டுகள் (நாமினேஷன் ஸ்லிப்பு) தாக்கல் செய்ய வேண்டுமென்றும், 17ந் தேதி அவை பரிசீலனை செய்யப்படும் என்றும், 27ந் தேதி எலக்ஷன் நடைபெறுமென்றும், 28ந் தேதி முடிவு தெரிவிக்கப்படுமென்றும் குறிப்பிடப்பட்டு வெளிப்படுத்தியாய் விட்டது. இதன் பிறகு ஈரோட்டில் தேர்தல் பேச்சுகளும் பிரசாரங்களும் வெகு தடபுடலாய் நடக்கின்றன.

யார் வருவதைப் பற்றியும், யார் போவதைப் பற்றியும் நாம் கவலைப்படவோ யாருக்கும் யோசனை சொல்லவோ வரவில்லை. ஆனால் கக்ஷிகள் - இயக்கங்கள், பெயர்களைச் சொல்லிக் கொண்டு, தனிப்பட்ட மக்களின் யோக்கியதாம்சங்களைப் பற்றி கவனிக்காமல் நடத்தும் சூழ்ச்சிப் பிரசாரம் மாத்திரம் வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். எல்லா வகுப்பாருக்கும் சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும் என்பதும், கை பலமும் பண பலமுமே ஒரு மனிதனுடைய தேர்தலுக்கு யோக்கியதாபக்ஷமாய் இருந்து வரக்கூடாது என்பதும் நமது விருப்பமாகும். எப்படி இருந்தாலும் இதுவரை கிடைத்த செய்திகளில் இருந்து ஒன்று அல்லது இரண்டு வார்டுகளில் பணம் புளியங் கொட்டைகள் போல் நடமாடக் கூடும் என்பதாகத் தெரிகின்றது. இருவர் போட்டி போட்டு எவ்வளவு பணம் செலவழித்தாலும் ஒருவர் தான் தேர்ந்தெடுக்கக் கூடுமே ஒழிய, ஒரு ஸ்தானத்துக்கு இருவர் தேர்ந்தெடுக்க முடியாது. ஆகையால் பணச்செருக்கு கொண்டவர்கள் பணச் செலவில் ஒருவருக்கொருவர் இளைத்தவர்கள் அல்ல என்பதைக் காட்டி சூதாடுவது போல் ''வந்தால் வரட்டும், போனால் போகட்டும்'' என்று கருதி வீணாக்காமல் 4 ''பெரிய மனிதர்கள்'' என்பவர்களை வைத்துக் கொண்டு கவுன்சில் ஸ்தானத்தை ஏலம் போட்டு அதிக தொகை செலவில் யார் எந்த பொதுக் காரியத்தைச் செய்து முடிக்க ஒத்துக்கொள்கிறார்களோ, அவர்களுக்கு விட்டு விடுவதாய் ஏற்பாடு செய்தால் அதனால் பொது நன்மை உண்டு. அப்படிக்கில்லாமல் வீணாக வாரி இறைப்பதில் பயனில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். முனிசிபாலிடிகளுக்குக் கமிஷனர்கள் நியமிக்கப்பட்டு விட்டபடியாலும், ஈரோட்டிற்கும் சீக்கிரம் ஒரு மாதத்திற்குள் வந்துவிடக் கூடுமாதலாலும் வரும்படியையும், அதிகாரத்தையும் உத்தேசித்து கவுன்சிலர்களாக நிற்கின்றவர்கள் ஏமாற்றமடைய நேரிடும் என்பதையும், சுதந்திர எண்ணமும், சொந்த செல்வாக்கும் இல்லாதவர்கள் கவுன்சிலர்களாக நினைத்து வீண் செலவிடுவதும் பயனற்றதுடன் கவுன்சிலர்களாக ஆனாலும் அவர்கள் கவுன்சில் கூட்டங்களில் ஒதுக்கித்தள்ளப்பட்டு விடுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சிலர் முன் ஜாக்கிரதையுடன் ஓட்டுகள் சேர்த்து வைத்திருப்பதால் எப்படியும் தங்களுக்கு ஆகிவிடுமென்று தைரியம் பேசலாம். ஆனால் அடுத்த தேர்தல் வருவதற்குள் அந்த அக்கிரமங்களும் ஒழிந்து போகும் என்று நினைக்கின்றோம். எப்படியெனில் அடுத்த தேர்தலுக்குள் 21 வயது வந்த ஆண் பெண் அத்தனை பேர்களுக்கும், ஓட்டு இருக்கும்படி செய்வதன் மூலம் இந்த காரியங்களை ஒழிக்கக் கூடும். அப்பொழுதுதான் ஏழைகள் பிரதிநிதி வரக்கூடும். இப்போது பெரிதும் வீடுவாசல், சொத்து, குறிப்பிட்ட வரும்படி உள்ளவர்களுக்கே இன்றைய தினம் அருகதையும் ஓட்டு உரிமையும் இருந்து வருகின்றது. ஆதலால் சொத்தில்லாதவர்களும் குறைந்த, அதாவது தினம் ஒரு ரூபாய் வரும்படிக்கு குறைந்த வரும்படி உள்ளவர்களும் இன்று மனிதர்களாய் பாவிக்கப்படுவதில்லை என்று சொல்வதோடு, பணக்காரர்கள் முனிசிபாலிட்டி, பணக்காரர்கள் ஜில்லா போர்டு, பணக்காரர்கள் சட்டசபை, பணக்கார மந்திரி, பணக்கார சர்க்கார் என்று சொல்லும் நிலையை மாற்றி ஏழைகள் முனிசிபாலிட்டி, ஏழைகள் சர்க்கார் என்பதாகச் சொல்லக் கூடிய நிலைமை ஏற்படத்தக்க மாதிரியில் அதற்குத் தக்க அபேக்ஷகர்களுக்கு ஓட்டுச் செய்யுங்கள் என்றும் பணம் வாங்கக் கூடாது என்றும் ஓட்டர்களையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**பகுத்தறிவு - கட்டுரை - 09.09.1934**



RangaRakes tamilnavarasam.com

# ஈரோடு முனிசிபாலிட்டிக்குப் பாராட்டு

ஈரோடு முனிசிபாலிட்டியானது ஒரு பத்து வருஷ காலம் பொருப்பும், நாணையமும் இல்லாமல் லஞ்சம், திருட்டு, புரட்டு, பொய், போர்ஜரி முதலிய குணங்களை அணிகலமாகக் கொண்டு நடந்து வந்ததும், அதன் பயனாக நிர்வாகமும், செல்வ நிலையும் மிகக் கேவலமாய் இருந்து வந்ததும், அவ்வப்போது, வெளியான விஷயங்களில் இருந்தும், சர்க்கார் கணக்குப் பரிசோதகர்கள் அறிக்கைகளில் இருந்தும், அரசாங்கத்தார் நிர்வாக அறிக்கைக் குறிப்புகளிலிருந்தும், பொது ஜனங்களும் சிறப்பாக ஈரோடு வாசிகளும் உணர்ந்திருக்கலாம்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்த 10, 15 வருஷ காலமாய் அரசாங்கத்தார் முனிசிபாலிட்டிக்குள்ள அதிகாரங்களையும், கவுன்சிலர்களுக்கும், சேர்மென்களுக்கும் உள்ள அதிகாரங்களையும் நாளுக்கு நாள் குறைத்து வந்ததோடு, சில அதிகாரங்களை அடியோடு பறித்துக் கொண்டதற்கும் முக்கியமாக ஈரோடு முனிசிபாலிட்டியின் நடத்தையே காரணமென்று சொல்லலாம்.

அவை மாத்திரல்லாமல் முனிசிபல் ஆபிஸ் நிர்வாகங்கள் சேர்மென்கள் கையிலிருந்தவைகளையும் பிடுங்கிக் கொண்டு அவற்றை நிர்வகிப்பதற்கு மாதம் 60, 70, 100, 150 ரூபாய் சம்பளமுள்ள சாதாரண சிப்பந்திகளை நிர்வாக உத்தியோகஸ்தர்களாக நியமித்து, அவர்கள் வசம் நிர்வாகங்களை ஒப்படைக்க நேர்ந்ததற்கும் ஈரோடு முனிசிபாலிட்டியின் நடத்தையே முதல் காரணம் என்றும் சொல்லலாம்.

இவை மாத்திரமல்லாமல் ஈரோடு டவுனுக்கு மின்சார விசை-விளக்கு சப்ளை திட்டத்தை ஈரோடு முனிசிபாலிட்டிக்கு கொடுக்காமல் சர்க்காரார் ஒரு பிரைவேட் வியாபாரக் கம்பெனிக்கு லைசென்சு கொடுக்க நேர்ந்ததும் ''ஈரோடு முனிசிபாலிட்டியாரின் நடத்தையே காரணம்'' என்று சுமார் 3 வருஷங்களுக்கு முன் முதல் மந்திரி ஈரோட்டிற்கு வந்திருந்தபோது சொன்னதும் யாவரும் அறிந்திருக்கலாம்.

இவ்வளவு கேவல நிலையிலும் இழிவான நிலையிலும் இருந்து வந்த முனிசிபாலிட்டியானது கொஞ்சகாலமாய், சிறப்பாய் தோழர் K.A. ஷேக் தாவுத் சாயபு அவர்களை சேர்மெனாக அமைத்த காலம் முதல் கொண்டு அதன் மோசமான நிலைகள் எல்லாம் மாறி நாளுக்கு நாள் கௌன்சிலில் ஒற்றுமையும், கூட்டுறவும் ஏற்பட்டு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து இன்றைய தினம் சென்னை மாகாணத்திலேயே சிறப்பாகவும், முதன்மையாகவும், திறமையாகவும் இருந்து வரும் வெகுசில அதாவது ஒரு நாலைந்து முனிசிபாலிட்டிகளில் ஒன்றாக இருந்து வருவது அரசாங்க நிர்வாக அறிக்கையிலிருந்து அறியலாம்.

இந்த 3, 4 வருஷங்களாகவே அரசாங்கத்தார் ஈரோடு முனிசிபல் நிர்வாக அறிக்கையின் மீது தங்கள் அபிப்பிராயங்களை எழுதி வருவதில் ஒவ்வொரு வருஷமும் ''முன்னேற்றம் அடைந்து வருகின்றது'' என்றும் ''வெகு திருப்தியாய் இருக்கின்றது'' என்றும் ''மகிழ்ச்சி அடையத்தக்க நல்ல நிர்வாகம்'' என்றும் எழுதி வந்திருப்பதுடன் கடைசியாக சென்ற வருஷத்ய மாகாண எல்லா முனிசிபாலிட்டிகளின் நிர்வாகங்களைப் பற்றியும், அரசாங்கத்தார் எழுதிய பொது நிர்வாக அறிக்கை மீதும் ஒவ்வொரு முனிசிபாலிட்டியைப் பற்றியும் குறிப்பிடுகையில் கோயமுத்தூர், கொடைக்கானல், குன்னூர், ஒட்டகமண்ட் ஆகிய 4 முனிசிபாலிட்டிகள்தான் இந்த மாகாணத்தில் பாராட்டுதற்குரிய விதமாய் எல்லாத் துறையிலும் முன்னணியில் இருந்து வந்திருக்கிறது. ஆனால் இந்த வருஷத்தில் மேற்கூறிய நான்கு முனிசிபாலிட்டிகளுடன் ஈரோடும் சேர்ந்திருப்ப தானது, அதாவது எல்லாத் துறைகளிலும், மேன்மையாயும், திறமையாயும் ஈரோடு முனிசிபல் நிர்வாகம் நடந்து அவைகளோடு சேர்க்கத் தகுதி பெற்றிருப்பதானது அரசாங்கத்தாருக்கு மிகுதியும் மகிழ்ச்சியளிக்கின்றது என்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எவ்வளவோ மோசமாகவும், கெட்ட பெயருடனும் இருந்து வந்த முனிசிபாலிட்டியானது இவ்வளவு மேன்மையும், நல்ல பெயரும் அடைந்திருப்பதற்குக் காரணம், அதற்குக் கிடைக்கப் பெற்ற தலைவர் தோழர் K.A. ஷேக் தாவுத் சாயபு அவர்களின் ராஜதந்திர புத்தியும், நிர்வாகத் திறமையும் காரணம் என்று சொல்வதோடு, இவர் காலத்தில் முனிசிபாலிட்டிக்குக் கிடைத்த கவுன்சிலர்களுடைய மதிக்கத் தகுந்த கூட்டுறவும், ஆலோசனையும், ஒத்துழைப்பும் காரணம் என்பதையும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

இந்த முனிசிபாலிட்டியில் தாழ்த்தப்பட்ட வகுப்பார் விஷயத்தில் கூடுமானவரை சலுகை காட்டிவரப்பட்டிருப்பதுடன், பெண்கள் விஷயத்திலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

தாழ்த்தப்பட்ட சமூகம் என்று சொல்லப்படும் வகுப்பைச் சேர்ந்திருந்த ஒரு பெண்ணுக்கு வாக்ஸ் நேட்டர் (அம்மை குத்தும்) வேலை கொடுக்கப்பட்டிருக்கின்ற காரியமானது இம்மாகாண முனிசிபாலிட்டிகள் எதிலும் செய்யாத காரியம் என்றே சொல்லலாம்.



RangaRakes tamilnavarasam.com

முடிவாக இவற்றோடு ஒரு நல்ல முனிசிபாலிட்டி செய்ய வேண்டிய எல்லா வேலைகளும் செய்யப்பட்டுவிட்டதாக நாம் சொல்லிவிட முடியாது. இன்னமும் செய்ய வேண்டிய வேலைகள் எவ்வளவோ இருந்து வருகின்றன. முக்கியமாய் சுகாதார விஷயமும், தாழ்த்தப்பட்ட மக்களாகிய தீண்டப்படாதார், பெண்கள், குழந்தைகள் ஆகியவர்களின் வைத்தியம், மருத்துவம், பிள்ளை வளர்ப்பு முதலாகிய துறைகளில் செலுத்தப்படவேண்டிய கவனம் இன்னும் அதிகம் பாக்கி இருக்கின்றது என்பதை குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

கவுன்சிலர்களுடைய கூட்டுறவும், உறுதியான எண்ணமுமிருந்தால் இன்னும் அநேக காரியங்கள் செய்து இந்த மாகாண முனிசிபாலிட்டி களுக்கும், ஜில்லா போர்டுகளுக்கும் வழிகாட்டியாக நமது ஈரோடு முனிசிபாலிட்டி இருந்து வரக்கூடும் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை.

**பகுத்தறிவு - கட்டுரை - 09.09.1934**



# மதம் ஏன் ஒழிய வேண்டும்?

மதம் என்பதைப் பற்றி இதற்கு முன் ''குடி அரசு'' , ''புரட்சி'' முதலிய பத்திரிகைகளில் அநேக வியாசங்கள் பல தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டிருப்பது யாவருக்கும் தெரியும்.

மதமானது இன்று உலகில் மனித சமூகத்தின் வாழ்வைத் துக்கமயமாக்கி, ஜீவராசிகளில் மனிதனுக்கென்று உள்ள பகுத்தறிவை அடிமைப்படுத்தி, ஒற்றுமையைக் குலைத்து, மனிதனுக்கு மனிதன் வெவ்வேறு இனம் என்று எண்ணும்படி செய்து வருகின்றது என்பதற்கு உதாரணம் தேவையில்லை என்றே கருதுகின்றோம்.

''தேசிய சிங்கங்''களான அலி சகோதரர்கள் ஒரு காலத்தில் ''நாங்கள் முதலில் மகம்மதியர்கள், பிறகுதான் இந்தியர்கள்'' அதாவது முதலாவது மதம், பிறகு தான் தேசம் என்றும், ''உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா'' காந்தி ''நானே இந்து மதத்தின் உருவம்! நான் மூச்சுவிடுவதும், வாங்குவதும் இந்து மதத்திற்காகவே!! நான் உண்பதும் உயிர் வாழ்வதும் இந்து மதத்திற்காகவே!!! மதத்தைக் காக்கவே நான் சுயராஜ்யம் கேட்கின்றேன்!!!! அதாவது இந்து மதம் தான் எனக்கு முதலும் கடைசியும்'' என்றும், ''பழைய காங்கிரஸ்வாதி, மாசற்ற தேசாபிமானி, ஒப்பற்ற தியாகி'' என்று சொல்லப்பட்ட பண்டித மதன் மோகன மாளவியா ''எனது மதத்தையும், எனது ஜாதியையும் காப்பதே எனது முதல் வேலை'' என்றும், அதாவது வருணாச்சிரமத்தைக் காக்கத்தான் நான் தேசியவாதி என்றும் சொல்லும்படி செய்துவிட்டது என்றால் மதத்தின் ஆதிக்கத்திற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும் என்று கேட்கின்றோம்.

பெருத்த தேசாபிமானிகள், தேசத்துக்காகச் சகலத்தையும் தியாகம் செய்தவர்கள் என்று சொல்லும்படியான இவர்களே அவரவர்களின் மதத் தத்துவத்தை உள் எண்ணமாக வைத்து, அவற்றின் கொள்கைகளைக் காப்பதற்காகவே அவர்களது தேசாபிமானமும், உயிர் வாழ்வும் இருந்து வருகின்றது என்றால் மற்ற சாதாரணமான அதாவது மதத்தைத் தவிர மற்றொன்றும் அறியாத பாமர மக்களின் யோக்கியதையைப் பற்றி நாம் விளக்க வேண்டுமா என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

வட்ட மேஜை மகாநாடு உடைந்துபோனதும் அரசியல் சீர்திருத்தத்தில் இந்திய மக்கள் ஒன்றுபடாமல் போனதும், இந்து முஸ்லீம்கள் ஒருவரை ஒருவர் நம்பாமல் அரசியலில் தனித் தொகுதி வேண்டுவதற்கும், காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருப்பதற்கும், தீண்டப்படாத மக்கள் தனித்தொகுதி கேள்ப்பதற்கும், கூட்டுத் தொகுதியில் தனிப் பிரதிநிதித்துவம் ஒதுக்கப்படவேண்டும் என்று கேள்ப்பதற்கும், மக்களை மக்கள் தீண்டப்படாதாராய் கீழ் மேல் ஜாதியாராய் கருதப்பட்டு வருவதற்கும் மதமே காரணமாய் இருந்து வருகின்றது என்பதையும் எவராவது மறுக்க முடியுமா என்று கேழ்க்கின்றோம்.

மற்றும் மனித சமூக வாழ்வுக்கு ஏற்ற சீர்திருத்தங்கள், முன்னேற்றங்கள் என்பவைகளில் பெரும்பான்மையான மக்களால் அவசியம் என்றும், அறிவுக்கு ஏற்றது என்றும் கருதப்படும் அனேக விஷயங்களைப் பற்றி சட்டங்கள் செய்யவோ, சட்டங்கள் செய்தாலும் அமுலுக்குக் கொண்டுவரவோ தடையாய் இருந்து வருவதற்கு மதங்களே காரணமாக சொல்லப்படுகின்றதா இல்லையா என்று கேள்க்கின்றோம். ஆகவே மனித வாழ்க்கைக்கு மதங்கள் இதைவிட வேறு என்ன கொடுமைகள் செய்ய வேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

இப்படிப்பட்ட இந்த மதம் ஒன்று இரண்டு என்று இல்லாமல் நூற்றுக்கணக்காய் இருந்துகொண்டு பலவித கடவுள்களை சிருஷ்டித்து, பலவித மேல் உலகங்களையும் மோக்ஷ நரகங்களையும் கற்பித்து அவரவர்கள் கடவுள்களுக்குத் தனிப்பட்ட குணங்களும், அவரவர்கள் மேல் உலகங்களுக்கு தனிப்பட்ட பூகோளங்களும், அவரவர்கள் மோக்ஷ நரகங்களுக்குத் தனிப்பட்ட வருணனைகளும் கற்பித்து மக்களை மயக்கி வருவதோடு வாழ்க்கை, ஒழுக்கம், நடத்தை என்பவைகளும் அவரவர் மதத்துக்கு ஒவ்வொரு விதமாய் கற்பிக்கப்பட்டு நடந்து வருவதும் அறிஞர்கள் அறியாததா?

இப்படிப்பட்ட மதத்தை மக்களுக்குள் பிரசாரம் செய்வதற்காக ஒரு சில நபர்கள் பாதிரி என்றும், முல்லா என்றும், தம்பிரான் என்றும், சங்கராச்சாரி என்றும், ஜீயர் என்றும், சாமியார் என்றும் பெயர்கள் வைத்துக்கொண்டு, உலக செல்வத்தில் தனிப்பெரும் பாகத்தை வீணாக்கி மக்களுக்கு போதை ஊட்டிவருவதானது எவ்வளவு அவிவிவேகமான காரியம் என்பது சுய அறிவோடு பரிசுத்த தன்மையில் இருந்து யோசிப்பவர்களுக்கு விளங்காமல் போகாது.

இவைகளைப் பற்றி இன்னமும் விவரிக்குமுன் மதம் என்றால் என்ன என்று நாம் கருதிக் கொண்டு அதைப்பற்றி இவ்வளவு எழுதுகின்றோம் என்பதை வாசகர்களுக்கு விளக்க ஆசைப்படுகின்றோம்.



1. மதம் என்பது இவ்வுலக மானிட வாழ்வுக்கு ஏற்ற சட்ட திட்டங்கள் என்று சொல்லப்படுமானாலும்,
2. அல்லது மதம் என்பது இவ்வுலகில் மக்கள் கூடி வாழ்வதற்கு ஏற்ற ''ஒழுங்கு முறைகளை''க் கொண்டது என்று சொல்லப்படுமானாலும்,
3. அல்லது (ஒருவர் கூறியபடி) மதம் என்பது மனிதனுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் உள்ள வித்தியாசங்களைக் காட்டுவது என்று சொல்லப்படுமானாலும் அவைகளைப் பற்றியெல்லாம் நாம் அதிகக் கவலை கொண்டு மதங்களை எதிர்க்க ஆசைப்படுவதில்லை.

அப்படிக்கெல்லாம் அல்லாமல்,

1. மதமானது மனிதனுடைய ஜட சம்பந்தத்தை விட்டு விட்டு ஜடம் நீங்கின ''ஆத்மா''வைப் பொறுத்ததென்றும்,
2. மதமானது இவ்வுலக வாழ்வை இன்ப துன்பத்தை துச்சமாக மதித்துவிட்டு மேலுலக வாழ்வை முக்கியமாகப் பொருத்ததென்றும்,
3. மதமானது ''கடவுளு''க்கும் மனிதனுக்குமுள்ள சம்பந்தத்தை விளக்குவதைப் பொருத்ததென்றும்,
4. மதமானது பஞ்சேந்திரியங்களுக்கு விளங்கக்கூடிய வஸ்து என்ற தத்துவத்தைவிட்டு பஞ்சேந்திரியங்களாலும் உணர முடியாத ''ஆத்மார்த்தம்'' ஆவித் தத்துவத்தை, அசரீரியை அடிப்படையாகக் கொண்டது என்றும்,
5. மதமானது உலக போக போக்கியம் இன்ப துன்பம் ஆகியவைகளை அலக்ஷியம் செய்து ''கடவுளின்'' பாதார விந்தத்தை அடையவும், ''மோக்ஷ'' சாம்ராஜ்யத்தைப் பெறவும் ஏற்ற மார்க்கம் என்றும் சொல்லப்படும் மதங்களையும், மத தத்துவங்களையும் பற்றியே நாம் பேசுகின்றோம் என்றாலும் முதலில் கூறப்பட்ட அதாவது,

மதம் மானிட வாழ்க்கைக்கு ஏற்ற சட்டதிட்டங்களுக்கோ மக்களின் கூட்டுறவு வாழ்க்கைக்கு ஏற்ற ஒழுங்குமுறைக்கோ ஏற்பட்டது என்கின்ற விஷயங்களிலும் கூட நமது ஆட்சேபனையை சொல்லாமல் இருக்க முடியவில்லை. அதாவது இன்று நாம் மதங்கள் என்று சொல்லிக் கொள்ளப்படுபவைகளில் மேற்கண்ட குணங்கள் இருக்கின்றதா இல்லையா என்பது ஒருபுறமிருந்தாலும், இந்தக் காரியங்களுக்காக மக்கள் செலவில் நடைபெறும் அரசாங்க நிருவாகமும், சிவில் கிரிமினல் சட்டதிட்டங்களும், அவைகளை நிறைவேற்ற நியாயஸ்தலம், தண்டனை, சன்மானம் ஆகிய முறைகளும் இருந்து வரும்போது இவைகள் அல்லாத ஒரு சாதனம் அதாவது மதம் என்கின்ற விஷயம் எதற்காக இருக்க வேண்டும்?

அரசாங்கம், சட்டதிட்டம், நீதி நிர்வாகம், தண்டனை கண்டனை இல்லாமல் மனித சமூகம் எப்படிப்பட்ட மதத்தினாலாவது கூடி ஒழுங்கு



RangaRakes tamilnavarasam.com

முறையுடன் வாழ முடியுமா? என்பதை யோசித்தால் மதம் மேல்கண்ட காரியங்களுக்கு உண்மையாய் பயன்படுகிறதா என்பது விளங்கும். இன்று எந்த தேசத்திலும், எந்த மதத்திலும், எந்த சமூகத்திலும் உள்ள மக்களின் சொத்தும், சரீரமும் காப்பாற்றப்படுவது மதத்தினாலா, அரசாங்க சட்டதிட்டங்களினாலா என்பதை யோசித்துப் பார்த்தாலே மதத்தின் காப்பும், நடப்பும் எப்படிப்பட்டது என்பது சுலபத்தில் விளங்கிவிடும்.

மதம் ''எல்லா ஜீவராசிகளிடமும் அன்பாய் காருண்யத்துடன் இருக்க வேண்டும் என்று கற்பிக்கின்றது'' என்று மதக்காரர்கள் சொல்லக் கூடும். ஆனால் மனிதனைத் தவிர மற்ற எல்லா ஜீவராசிகளையும் பற்றிக் கவலைப்படாமல் மற்ற ஜீவராசிகளைக் கொல்லவும், தின்னவும், இம்சிக்கவும் தனக்கு இடையூறு என்று கருதினால் அழிக்கவும் செய்கிறான். ஆனால் மனிதனை மாத்திரம் அந்தப்படி செய்வதில்லை. இதற்குக் காரணம் மதமா? அல்லது அரசாங்க சட்டதிட்டமா? என்று கேட்கின்றோம். மனிதனை அந்தப்படி எங்கோ ஒன்று இரண்டு சமயம் செய்வதாக வைத்துக்கொண்டாலும் அதற்காகத் தண்டனையை அடைகின்றான்.

ஆதலால் மதம் எங்கே பொதுவான ஒழுங்கு முறையை, ஒழுக்கத்தைக் காப்பாற்றுகின்றது என்று கேட்கின்றோம்.

மதம் மனிதனுக்கும், மற்ற ஜீவராசிகளுக்கும் உள்ள வித்தியாசங் களைக் காட்டுவது என்று சொல்லப்படுவதும் மிகுதியும் பொருத்தமற்றது என்றே கருதுகின்றோம்.

மனிதனுக்கும், மற்ற ஜீவ வர்க்கத்துக்கும் உள்ள வித்தியாசம் எந்தத் துறையிலானாலும் அறிய வேண்டுமானால் பிராணிவர்க்கத் தத்துவம் கொண்ட நூல்களைப் பார்த்தால் தாராளமாக மத சம்மந்தம் இல்லாமலே அவைகளைத் தெரிந்து கொள்ளலாம். அப்படிக்கில்லாமல் மதத்தின் மூலம் அறிந்த ஜீவத் தத்துவங்கள் இன்று சிரிப்புக்கிடமாகத்தான் இருந்து வருகின்றன.

மதம் மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் கற்பிக்கின்றது. மிருகங்களை, பக்ஷிகளை, பூச்சிகளை, புல் பூண்டுகளை மனிதனை விட உயர்வாய் மதிக்கின்றது. ஒரு மிருகத்தை உயர்வாய், ஒரு மிருகத்தைத் தாழ்வாய் கற்பிக்கின்றது. இந்த விஷயங்களுக்குப் பிராணி சாஸ்திரமே முக்கியமானதும் சரியானதுமே தவிர, மதத்தின் மூலம் அறியக்கூடியதாய் இருக்கும் தன்மை மிகவும் மோசமானதும், மூர்க்கத் தனமானதும், முட்டாள் தனமானதுமென்றே சொல்லுவோம்.

மேற்கண்ட 1,2,3 விஷயங்களைப் பற்றிய வரையிலாவது மதத்தை ஒப்புக் கொள்ள செய்யலாமென்று பார்த்தாலும் கூட அதுவும் அறிவுக்குப் பொருத்தமற்றதும், மூர்க்கத்தனம் கொண்டதுமான கருத்துக்களால் பாதகமடைகின்றது. அதாவது எந்த மதக்காரனும் தன் தன் மதத்தைப் பற்றிய ஆதாரங்களும், கொள்கைகளுமே எந்த தேசத்துக்கும் எந்தக் காலத்திற்கும் பொருத்தமானது என்றும், அவைகளில் ஒரு முற்றுப்புள்ளிக் குறிப்புக்கோடு கூட மாறக்கூடாது என்றும், தன் தன் மதத்துக்கு தலைவன் என்பவன் எவனோ அவனே உலக மதத்தலைவனாக இருக்க வேண்டும் என்றும் செய்யப்படும் பிடிவாதங்களும், முரட்டுத் தனங்களும் எந்த மதத்தையும் மனித சமூக வாழ்வுக்கு வழிகாட்டி என்று ஒப்புக் கொள்ள முடியாமல் செய்கின்றது.

ஆகவே மனித சமூக கூட்டு வாழ்வுக்கும், ஒழுக்க முறைக்கும் மதங்களை விட அரசாங்க சட்டதிட்டங்களையே ஆதாரமாகக் கொள்வதுதான் அறிவுடமை என்று கூறுவோம். அதுதான் இன்று உலகமெங்கும் அனுபவத்தில் இருக்கின்றது என்றும் சொல்லுவோம். ஏனெனில் அவைகளில் காலத்துக்கும், தேசத்துக்கும் ஒத்தபடி, அனுபவத்துக்கும் அறிவுக்கும் ஏற்றபடி மாற்றிக் கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் உரிமை இருக்கின்றது. மதங்களில் அவை காணவே முடியாது. அப்படி ஏதாவது முயற்சித்தாலும் கலகம், கொள்ளை, கொலை முதலியவைகளை உண்டாக்கிவிடுகின்றது.

எனவே இந்த விஷயங்களே அதாவது இந்த உலக பிரத்தியக்ஷ மனித வாழ்வு சம்மந்தப்பட்ட இந்த விஷயங்களே மதத்தின் பயனாக இப்படி இருந்தால் இனி ''மேலுலக'' மனிதனுடைய கண்ணுக்கும், மனதுக்கும், பஞ்சேந்திரியங்களுக்கும் எட்டாத விஷயங்களைப் பற்றிய மத போதனைகள் என்ன பயனைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்? எப்படிப்பட்டதாக இருக்கும்? என்பதைப் பற்றி நாம் விளக்க வேண்டுமா என்று கேள்க்கின்றோம்.

மற்றபடி ''மதம் சட்ட சம்மந்தத்தை விட்டு விட்டு ஆத்மாவைப் பொருத்தது'' என்று சொல்லப்படுவதைப் பற்றியோதென்றால் இந்தக் காரணத்துக்காகவே மதங்களை எல்லாம் அடியோடு ஒழிக்க வேண்டும் என்று சொல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

ஆத்மா என்பதை இதுவரை ஒரு மனிதனும் அருத்தத்தோடு உருதிப்படுத்தவேயில்லை.

''4 + 3 = 10'' என்று சொல்லிவிட்டு அந்த பத்தைப் பற்றியே விவகரித்துக்கொண்டிருக்கிறது போலவே, அதாவது 10ஐ யார் யாருக்கு எப்படி எப்படி பங்கிடுவது, எங்கு எங்கு வைப்பது என்று வேண்டுமானால் பேசு, அதற்குமேல் 4+3 எப்படி 10 என்று மாத்திரம் கேட்கக் கூடாது என்கின்ற நிலையில்தான் இன்று ஆத்ம தத்துவம் இருந்து வருகின்றது.

அதாவது ஆத்மா என்றால் என்ன? அது எப்படி சரீரம் பெற்றது? அதற்கு எப்படி கருமம் ஒட்டிற்று? அதன் நடத்தைக்குக் காரணம் என்ன? அது எப்படி, ''மோக்ஷம்'' போகின்றது? அது எப்படி மறுபடியும் சரீரம்


RangaRakes tamilnavarasam.com

பெற்று எழுகின்றது? மனித ஆத்மா, மிருக ஆத்மா, பக்ஷி ஆத்மா, புழு பூச்சி ஆத்மா ஆகியவைகளில் உள்ள வித்தியாசம் என்ன? என்பன ஆகியவைகளைப் பற்றி எல்லாம் பேசலாம், விவரிக்கலாம், வால்யம் வால்யமாக புஸ்தகம் எழுதலாம். ஆனால் ஆத்மா என்றால் என்ன? அது எப்படிப் பட்டது? அப்படி ஒன்று இருக்க விஞ்ஞான சாஸ்திரம் (சையன்ஸ்) அல்லது ஜீவ தத்துவ சாஸ்திரம் இடம் கொடுக்கின்றதா? என்பதைப் பற்றி யாரும் எவ்விதக் கேள்வியும் கேட்கக்கூடாது. ஆத்மா இருப்பதாக அவர் சொன்னார், இவர் சொன்னார், மகமது சொன்னார், கிறிஸ்து சொன்னார், கிருஷ்ணன் சொன்னார், புத்தர் சொன்னார்... என்று சொல்லி விடுவதும், ''ஆத்மாவை நம்பாதவன் கடவுளை நம்பாத நாஸ்திகனை விட, கேடானவன், மடையன், மட்டி'' என்றும் ''கடவுளை நம்பாவிட்டாலும் ஆத்மாவை நம்பித்தான் ஆக வேண்டும்'' என்று சொல்லிவிடுகிறார்களே ஒழிய காரண காரியங்களுடன் அறிவு அனுபவங்களுடன் பேசுகின்றவர்களே காணக் கிடைப்பதில்லை.

இது ஒரு புறமிருந்தாலும், ரூபம் இல்லாத, வஸ்து தத்துவமில்லாத - மனதுக்கு புரியாத விஷயத்துக்காக இவ்வுலக பிரத்தியக்ஷ வாழ்க்கையையும், அடையும் இன்ப துன்பங்களையும் பற்றிய கவலை கூடாது என்றோ அல்லது இக் கவலையை விட ''ஆத்மா'' கவலையே பிரதானமென்றோ, பெரிதென்றோ சொல்லப்படுமானால் அப்படிப்பட்ட மதத்துக்கு உலகில் மனித ஜீவன்கள் இடம் கொடுக்கலாமா என்றுதான் கேட்கின்றோம்.

நிற்க ''மதமானது மேல் உலக வாழ்வுக்கு ஆதாரமானது'' என்று சொல்லப்படுமானால் முதலாவதாக மேல் உலகம் என்பது என்ன என்பதைப் பற்றி இதுவரை யாராவது, எங்காவது விளக்கி இருக்கிறார்களா என்று கேட்கின்றோம்.

பூகோள சாஸ்திர நிபுணர்கள், பூமியின் கீழ் மனதிற்கு எட்டக்கூடிய அளவு வரையும், பூமியின் மேல் ஆகாய மார்க்கமாக மனதிற்கு எட்டக் கூடிய அளவு வரையிலும் ஆராய்ந்து பார்த்து லக்ஷக் கணக்கான மைல் - (ஏன்)? கோடிக்கணக்கான மைல் தூரம் வரையில் ஆராய்ச்சி செய்து மேல் கீழ் நிலைமையை விளக்கி இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் ஒரு நிபுணத்துவர்கள் என்கின்ற நிலைமையிலும் அனேக வருஷ காலம் அதற்காகப் பாடுபட்டு உழைத்து அனேக கருவிகளின் உதவியைக் கொண்டு கண்டுபிடித்துச் சொன்ன பிரத்தியக்ஷ அனுபவ - ருஜுப்பிக்கக் கூடிய உண்மைகளே ஒழிய ''ஞான திருஷ்டி'' அதாவது ஒரு மனிதனுடைய புத்திக்குத் திடீரென்று தோன்றிய விஷயம் என்று சொல்லப்படுவது போல் சொல்லப்பட்டதல்ல. அன்றியும் பள்ளிக்கூடங்களில் அல்லது பூகோள புஸ்தகங்களில் முறையே கற்பிக்கப்படாததும், காணப்படாததுமான விஷயங்களுமல்ல.



அப்படியிருக்கும் போது இந்த பிரத்தியக்ஷ உலக விஷயத்தை விட்டு விட்டு மேல் உலக விஷயத்தைப் பற்றி பேசுவது என்றால் அதில் அடங்கியிருக்கும் மௌடீகத் தன்மைக்கு எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

இதுவரையில் மனிதன் மேல் உலகத்தை எப்படிக் கண்டு பிடித்தான்? அதன் விஸ்தீரணம், தன்மை என்ன? என்பவைகளைப் பற்றிய உண்மை எதுவும் சொல்லப்படாமல் ''முதலில் மேல் உலகத்தை நம்பு, பிறகு எப்படி வேண்டுமானாலும், அதாவது மோக்ஷம் எப்படிப்பட்டது? நரகம் எப்படிப்பட்டது? தண்டனை எப்படிப்பட்டது? அது யாருக்குச் சொந்தம்? பரம பிதாவா, அல்லாவா, வைகுண்டநாதரா? கைலாச வாசரா? யார் அதற்கு எஜமான்? என்பதைப் பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் வாதம் செய்'' என்று கற்பிப்பதாய் இருப்பதைத் தவிர வேறு என்ன உண்மை அல்லது அறிவுடைமை மேல் உலக விஷயத்தில் இருக்கிறது என்று கேட்கின்றோம்.

அதுபோலவே மதம் ''கடவுளுக்கும், மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்குவது'' என்று சொல்லப்படும் வார்த்தையும் அர்த்தமற்றதாகவே இருக்கிறது.

கடவுளைப் பற்றி அதாவது, கடவுள் என்றால் என்ன என்பதைப் பற்றி இதுவரை ஒரு ஆஸ்தீகனாவது, அல்லது கடவுள் தன்மைகள் பெற்ற பெரியார்களாவது விளக்கினவர்களே அல்ல.

கடவுள் என்றால் ''கண்ணுக்கும் மனதுக்கும் எட்டாதது, ரூபமும் குணமும் இல்லாதது, சர்வ சக்தி, சர்வ வல்லமை, சர்வ வியாபகம் உள்ளது'' என்று சொல்லிவிடுவதும், அதைச் சொல்லுகின்றவர்களே அந்தக் கருத்தை நம்பாமல் இருப்பதும் பிறகு அதற்கு முரணாகப் பேசுவதுமான காரியங்களுக்கே இதுவரை கடவுளைப் பற்றிய வாதங்களின் முடிவாய் இருந்து வந்திருக்கின்றன.

மனதுக்குட்படாத கடவுளைப் பற்றி மனிதன் எப்படி எந்த இந்திரியத்தினால் உணர்ந்தான் என்று கேட்டால் அதற்குப் பதிலே இல்லை. குணமும் ரூபமும் இல்லாத வஸ்துக்கு செய்கை எது என்று கேட்டால் அதற்கும் பதிலே இல்லை. சர்வசக்தி, சர்வ வியாபகம் உள்ள கடவுள் செயலில் நன்மை - தீமை, துன்பம் - இன்பம், மேல் - கீழ், சுகம் - துக்கம், மோக்ஷம் - நரகம் எப்படி உண்டாயிற்று? ஏன் உண்டாயிற்று என்று கேட்டால் அதற்கும் பதில் இல்லை. ''அதைப்பற்றியெல்லாம் யாரும் கேட்கக் கூடாது கடவுளை நம்பித்தான் ஆகவேண்டும். நம்பாதவன் நாஸ்திகன், நம்பாவிட்டால் நரகம், அரச தண்டனை - ஆஸ்தீகர்கள் கண்டனை கிடைக்கும்'' என்று மிறட்டுவதும், உருட்டுவதும் தவிர கடவுளைப் பற்றி வேறு விளக்கமே இல்லை.



RangaRakes tamilnavarasam.com

சர்வ சக்தியுள்ள சர்வ வியாபகமுள்ள கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட நான் ஏன் கடவுளை அறியமுடியவில்லை? ஏன் கடவுளை இல்லை? என்று சொல்லுகிறேன் என்று ஒருவன் கேட்டால், அது உன்னுடைய அகம்பாவம்; உன்னுடைய மடமை; உன்னுடைய பாவச் செய்கை என்று சொல்லி கடவுளை விட அவனைப் பெரியவனாக மதித்து இகழ்வதா யிருக்கின்றதே தவிர வேறு சமாதானமில்லை.

இப்படிப்பட்ட தத்துவங்கள் கொண்ட மதங்களைப் பற்றி, மக்கள் வேற்றுமை உணர்ச்சி கொண்டு ஒருவரை ஒருவர் வெறுத்து பலாத்காரச் செய்கைகள் செய்து மக்களைத் துன்புறுத்துவதென்றால் மதத்தை ஒழிக்காமல் இருக்க யாருக்குத்தான் மனம் வரும் என்று கேள்கின்றோம்.

மதத்தின் பயனாக நமது வாழ்வில் எவ்வளவு துன்பங்கள், தொல்லைகள் அடைய நேரிடுகிறது என்பதை உணர்ந்தால், மேலும் மேலும் மதங்களிடம் வெறுப்புத் தோன்ற இடமேற்படுகின்றதே ஒழிய சிறிதாவது அதைச் சகிக்க இடமே இல்லாமல் இருக்கின்றது.

கிறிஸ்துவ மதத்தைப் பற்றி எழுதினோம் என்பதற்கு குடி அரசு பத்திரிகை நிறுத்தப்பட்டுப் போயிற்று. மகம்மதிய மதத்தைப் பற்றி எழுதினதற்காக புரட்சிப் பத்திரிகை நிறுத்தப்பட்டுப் போயிற்று.

இந்து மதத்தைப் பற்றி எழுதுகிறோம் என்பதற்காக தினம்தோறும், நிமிஷம் தோறும் அடைந்துவரும் தொல்லையும், நசுங்குச் சேஷ்டை உபத்திரவங்களும் கணக்கு வழக்கில் அடங்காது. பார்ப்பனர்களை உத்தியோகஸ்தர்களாக கொண்ட போலீஸ் இலாக்கா, போஸ்டல் இலாக்கா, ரயில்வே இலாக்கா, நீதி இலாக்கா, நிர்வாகம் மற்றும் அநேக துறைகளில் கீழே இருந்து ஹைகோர்ட்டு நிர்வாக சபை வரையில் ஆங்காங்குள்ள மதக் காப்பாளர்களான பார்ப்பனர்களால் நாம் அடைந்து வரும் கஷ்டம் சித்திரவதைக்கொப்பாக இருந்து வருகின்றது.

நாம் மாத்திரமல்லாமல் நம்மைப் போல் கஷ்டப்படும் மக்கள் கோடிக்கணக்காக எல்லா மதங்களிலும் இருந்து வருகின்றார்கள் என்பதும் நமக்குத் தெரியும்.

மதமானது பணக்காரத் தன்மையை பிரதிபலித்துக் கொண்டும், அதை ஆதரித்துக்கொண்டும் இருந்து வருகின்ற சாதனமாய் இருப்பதால் அதற்கு இவ்வளவு ஆதிக்கம் இருந்து வருவதில் அதிசயமில்லை.

ஆதலாலேயேதான் மதங்கள் ஒழிக்கப்படுவதாலேயே மனித சமூகத்துக்கு ஒற்றுமையும், சாந்தியும் ஏற்படும் என்று கருதுவதோடு, பணக்காரத் தன்மையின் கொடுமையும் ஒழியுமென்று கருதுகின்றோம்.



சென்ற வாரத்தில் சென்னை கடற்கரையில் நடந்த மத சம்பந்தமான ஒரு முஸ்லீம் கூட்டத்தில் கலகம் ஏற்பட்டு ஒரு முஸ்லீமை ஒரு இந்து குத்திவிட்டானாம். முஸ்லீமும் அதனால் செத்துவிட்டான். நாளைய தினம் "ஒரு கிறிஸ்தவன் அதை விசாரித்து உண்மைக் கண்டு இந்துவை தண்டிக்கப் போகிறான்" என்றாலோ அதில் அதிசயமில்லை. ஒரு கிறிஸ்தவன் முகமது நபியைப் பற்றி ஏதோ எழுதிவிட்டால் முகமதியர்களுக்கு ஆத்திரம் வருகின்றதும், ஒரு முகமதியன் கிறிஸ்துவைப் பற்றி எழுதி விட்டால் கிறிஸ்தவனுக்கு ஆத்திரம் வருவதும், இது போலவே இந்துக்களுக்கும், கிறிஸ்து முகமதியர்களுக்கும் நேருவதும் அதற்காக கொலை, கொள்ளை, கொடுமைகள் நடப்பதுமான காரியங்கள், அதுவும் இன்று நேற்று அல்லாமல் ஆயிரக்கணக்கான வருஷங்களாக, அதுவும் இந்தியாவில் மாத்திரம் அல்லாமல் ஐரோப்பா, அரேபியா, ஆப்பிரிக்கா முதலிய எல்லா தேசங்களிலும் நடந்து வருகின்றது என்றால் மதம் மக்களுக்கு கூட்டு வாழ்க்கையையும், ஒற்றுமையையும் சகிப்புத் தன்மையையும், வாழ்க்கை ஒழுங்குகளையும், ஒழுக்கங்களையும் போதித்து வருகின்றதா? என்று கேழ்க்கின்றோம்.

## மதங்களில் உள்ள ஒழுக்கங்கள்

இந்து மதமும், இஸ்லாம் மதமும் ஒழுக்கத்தைப் பற்றி போதிப்பதில் ஒன்றுக்கொன்று தானே சிறந்த ஒழுக்கத்தை யுடையது என்று போட்டி போடுகின்றன. ஒழுக்கயீனங்களில் எல்லாம் மிகக் கேடானதாக, குற்றங்களில் எல்லாம் மிக இழிவான குற்றமாகவும் கருதப்படும் குற்றமாகிய பெண்களைப் பலாத்காரம் செய்து கற்பழித்தல், மானபங்கம் செய்தல் என்னும் குற்ற விஷயத்தில் இரு மதஸ்தர்களும் வங்காள மாகாணத்தில் எப்படி நடந்து இருக்கின்றார்கள் என்பதைக் காட்ட "மாடர்ன் ரிவியூ" பத்திரிகையில் வெளியாகி உள்ள ஒரு புள்ளி விபரத்தை இங்கு குறிப்பிட்டு விட்டு இதை முடிக்கின்றோம்.

### இஸ்லாம் மூற்கர்களால் செய்யப்பட்ட பலாத்கார விபரம்

| வருஷம் | இந்து பெண்கள் | முஸ்லீம் பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1926 | 113 | 481 | 594 |
| 1927 | 122 | 576 | 698 |
| 1928 | 104 | 460 | 564 |
| 1929 | 114 | 676 | 790 |
| 1930 | 104 | 531 | 635 |
| 1931 | 125 | 573 | 698 |



RangaRakes tamilnavarasam.com

**இந்து மூற்கர்களால் செய்யப்பட்ட பலாத்கார விபரம்**

| வருஷம் | இந்து பெண்கள் | முஸ்லீம் பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1926 | 194 | 9 | 203 |
| 1927 | 201 | 3 | 204 |
| 1928 | 198 | 10 | 208 |
| 1929 | 236 | 8 | 244 |
| 1930 | 234 | 6 | 240 |
| 1931 | 197 | 3 | 200 |

மதம் ஒழுக்கத்தை, கூட்டு வாழ்க்கை ஒழுங்கு முறையை, மனிதர்களிடத்தில் மனிதன் நடந்துகொள்ள வேண்டிய தன்மையை எங்கே எப்படி கற்பித்து இருக்கின்றது என்று மத பக்தர்களைக் கேட்கிறோம்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 09.09.1934**

# காங்கிரஸ்காரர்களின் தேர்தல் பிரசார யோக்கியதை

தோழர் வரதராஜுலு நாயுடு M.L.A. க்கு நிற்பதில்லை என்றும் தோழர் ஸர்.ஆர்.கே.ஷண்முகம் வர்த்தகத் தொகுதிக்கு நிற்பதில்லை என்றும் தெரிய வருவதாகக் காங்கிரஸ் - தேசியப் பத்திரிகைகள் எழுதுகின்றன. தோழர் வரதராஜுலு இதை மறுக்கிறார். எனவே இதை விடக் கேவலமான முறை கொண்ட ஒரு பிரசாரம் வேறு யாரும் எப்படிப்பட்ட மோசமான வாழ்க்கைக்காரரும் செய்ய முடியாதென்றே சொல்லுவோம்.

சத்தியம், தர்மம், நீதி, ஒழுங்கு, நாணையம் ஆகியவைகளின் பெயரைச் சொல்லிக் கொண்டு இருக்கும் ஸ்தாபனங்கள், கொள்கைகள் ஆகியவைகளைச் சேர்ந்தவர்களாலேயே இவ்வித பிரசாரங்கள் நடக்குமானால், சாதாரண வாழ்வில் இருப்பவர்களால் இனியும் என்ன என்ன காரியம் நடக்காது என்று கேழ்க்கின்றோம். தேர்தல் முறை என்ன என்பது பற்றியும் தேர்தலில் ஒருவருக் கொருவர் பேசிக் கொள்வதிலும், எழுதிக் கொள்வதிலும் எவ்வளவு நாணையமும், உண்மையும் இருக்கக் கூடும் என்பதைப் பற்றியும் பொது மக்கள் தெரிந்து கொள்ள இந்த ஒரு உதாரணம் போதாதா என்று மாத்திரம் கேட்டுவிட்டு இதை முடிக்கிறோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 09.09.1934**


RangaRakes tamilnavarasam.com

# வேலையில்லாத் திண்டாட்டம்

செல்வம் பொழியும் அமரிக்கர் தேசத்தில் இன்று கோடிக்கணக்கான மக்கள் வேலை இல்லாமல் கஷ்டப்படுவதுடன், 10 லக்ஷக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து பெருத்த கலவரம் ஏற்பட்டு இருக்கிறது.

இந்நிலையில் அமரிக்க குடி அரசு தலைவர் வேலையில்லாதவர் களுக்கு வேலை கொடுப்பதற்காக ஒரு காரியம் செய்து வருகிறார். அதாவது தொழிலாளிகளின் வேலை நேரத்தைக் குறைத்து அதிக தொழிலாளிகளுக்கு வேலை ஏற்படும்படி செய்து வருகிறார். எப்படியெனில் ஒரு தொழில்சாலையில் ஒரு தொழிலாளி வாரத்துக்கு 40 மணி நேரம் வேலை செய்து வந்ததை இப்போது மாற்றி வாரம் ஒன்றுக்கு ஒரு தொழிலாளி 36 மணி நேரம் வேலை செய்தால் போதும் என்றும், பழய கூலியே கொடுக்கப்பட வேண்டும் என்றும் உத்திர விட்டுவிட்டார்.

அதன் பயனாக ஒரு மாகாணத்தில் பருத்தி இயந்திரத் தொழில் இலாக்காவில் மாத்திரம் 10000 பதிறாயிரம் பேருக்கு புதிதாக வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இது போல் இன்னும் அநேக இலாக்காவில் ஏற்பாடு செய்வதன் மூலம் பல லக்ஷக்கணக்கான பேர்களுக்கு வேலை ஏற்பட்டு விடுமாம்.

ஆனால் நமது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க கதர் திட்டம் போடப்பட்டு பொது ஜனங்கள் பணத்தைக் கோடிக்கணக்காக வசூலித்து பாழாக்கப்படுகிறது. இதுவரை வசூலித்த சுமார் 2 கோடி ரூபாய்களைக் கொண்டு குறைந்த அளவு சுமார் 50 மில்லுகளாவது கட்டப்பட்டிருக்குமானால் அதைக் கொண்டு ஒரு லக்ஷம் பேருக்கு நிரந்தர வேலை கொடுத்து இருக்கலாம் என்பதோடு அவற்றின் லாபத்தால் வருஷம் 2மில்கள் கட்டப்பட்டு அதிலும், வருஷ வருஷா வருஷம் 2000, 3000 பேருக்கு வேலை கொடுத்துக் கொண்டே வந்திருக்கலாம். இதனால் வேலை இல்லாப் பஞ்சம் நீங்குவதோடு 12 மணி நேரம் நூல் நூற்றால் 12 தம்பிடி வரும்படி வரக்கூடிய கேவலத்தன்மை நீக்கிக் குறைந்த அளவு மாதம் 1-க்கு 10 ரூபாய்க்கு குறையாத வரும்படியையும், தொழிலாளிகள் அடைந்து வரலாம்.



இந்தப்படி செய்தால் பணக்கார முதலாளிகளினுடையவும், பார்ப்பனர்களுடையவும் ஆதரவு தோழர் காந்தியாருக்கோ காங்கிரசுக்கோ இல்லாமல் போய் விடும். ஆதலால் ''காந்தியும் காங்கிரசும்'' உள்ளவரை வேலை இல்லாத் திண்டாட்டம் நீங்கி விடும் என்று எண்ணுவது கொள்ளிக்கட்டையை எடுத்து தலையை சொரிந்து கொள்ளுவது போலவே முடியும்.

**பகுத்தறிவு - கட்டுரை - 09.09.1934**



RangaRakes tamilnavarasam.com

# இது தானா தேசியம்?

மத விஷயங்களிலுள்ள குற்றங்களும், கொடுமைகளும், ஒழுக்கக் குறைவுகளும் தேசிய விஷயத்தில் இல்லையென்று யாராலும் சொல்ல முடியாது.

பொதுவாகவே தேசியம் என்னும் வார்த்தையை அர்த்தமற்றது என்றும், மோசக் கருத்துக் கொண்டது என்றும், அதில் பணக்காரத் தன்மை பிரதிபலிப்பதோடு, அது பணக்காரத் தன்மையை ஆதரிப்பதற்கென்று கற்பிக்கப்பட்டதென்றும் பல தடவை கூறி வந்திருக்கிறோம்.

நாம் மாத்திரமல்லாமல் பல மேல்நாட்டு அறிஞர்களும் தேசியத்தின் தன்மையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஜான்சன் என்கின்ற ஒரு மேதாவி ''தேசியம் (தேசாபிமானம்) என்பது வடிகட்டின அயோக்கியத்தனம்'' என்று அதாவது ''பிழைப்புக்கு வழியில்லாதவர்களின் கடைசியான இழி பிழைப்புக்கு மார்க்கமானது'' என்று கூறி இருக்கிறார்.

இந்த அபிப்பிராயம் முதல் முதல் தேசியம், தேசாபிமானம் என்கின்ற வார்த்தைகள் எங்கு உண்டானதோ, அங்கு ஏற்பட்ட அபிப்ராயமே தவிர இந்தியாவில் ''தேசிய விரோதிகள்'' ''தேசத் துரோகிகள்'' ''சர்க்கார் குலாம்கள்'' என்று ''தேசாபிமானி''களால் கருதப்படுகின்றவர்களால் சொல்லப்பட்டதல்ல. இது எப்படியோ இருக்கட்டும் என்று வைத்துக் கொள்ளுவோம்.

இன்று இந்திய தேசியவாதிகள், தேசாபிமானிகள் தேசியத்துக்கும், தேசாபிமானத்துக்கும் பத்திரிகை நடத்தும் பத்திராதிபர்கள், தேசாபிமானத்தில் வயிறு வளர்க்கும் பிறவி - வாழ்க்கை தேச பக்தர்கள் என்பவர்களைப் பற்றிச் சற்று கவனிப்போம். இன்று இந்தியாவில் இந்திய சட்டசபைக்குத் தேர்தல்கள் நடக்கின்றன. இது ஒரு அரசியல் விஷயம்.

இந்திய சட்டசபை அரசியல் மூலம் ஜாதீய சம்மந்தமான - மனித சமூக வாழ்வு சீர்திருத்த சம்பந்தமான அதாவது ஜாதி, மத, பழக்க வழக்க சம்பந்தமாக ஒரு காரியமும் செய்ய முடியாது. முடியும் என்றாலும் தேசியவாதிகள், தேசாபிமானிகள் என்று தங்களைச் சொல்லிக் கொள்கிறவர்கள் இது விஷயங் களை சட்ட சபைகளில் பேசவோ, சட்டம் செய்யவோ ஒப்புக் கொள்ளுவதில்லை. ஒப்புக் கொள்வதானாலும் தேசமெல்லாம் ஒரே அபிப்பிராயமாய் அந்தந்த மத ஜாதிக்காரர்கள் எல்லோரும் ஒப்புக் கொள்ளத்தக்கதாய் இருக்க வேண்டும் என்கின்றதான ஆகாத நிபந்தனைகளையெல்லாம் சொல்லுகின்றவர்கள்.



இந்திய தேசாபிமானம் என்பதே இன்று இந்த தேசப் பணக்காரர்களுடைய சௌகரியங்களைக் குறிப்பாய்க் கொண்டதும், பணக்காரர்கள் பண வருவாய் முறையை சிறிதும் மாற்ற முடியாததும், பணக்காரர்களுக்குப் பணம் பெருகிக் கொண்டு, வளர்ந்து கொண்டு போவதைத் தடுக்க முடியாததும், தேச செல்வம் எல்லாம் ஒருவன் கைக்கே போவதானாலும் ஆட்சேபிக்க முடியாததுமான கொள்கைதான் (தேசாபிமானத்தில்) இருந்து வருகிறதே தவிர, தேசம் தேச மக்களுக்குப் பொது - தேசத்தின் செல்வம், விளைபொருள், வர்த்தகம், போக்குவரத்து தொழிற்சாலை ஆகியவைகளின் பலன்கள் இந்த தேசத்து எல்லா மக்களுக்கும் பொது என்று சொல்லக்கூடிய காரியங்கள் தேசாபிமானத்தில் இல்லவும் இல்லை. அதை அதில் சேர்த்துக் கொள்ள மகாத்மாக்கள் என்பவர்கள் முதல் எந்த தேச பக்தர்களும் சம்மதிப்பதும் இல்லை. இப்படிப்பட்ட யோக்கியதையுள்ள நபர்கள் தாங்கள் சேர்ந்துள்ள ஸ்தாபனத்தையும், தாங்கள் சொல்லும் கொள்கைகளையும், தேசாபிமானம் என்று சொல்லிக்கொண்டு இருப்பதாலேயே தங்களை தேசாபிமானிகள் என்றும், தங்களோடு சேராதவர்கள் எல்லாம் தேசாபிமானிகள் அல்ல என்றும், தேசத் துரோகிகள் என்றும், தங்கள் ஸ்தாபனம்தான் குதிரைக்கு சமானமானது என்றும், மற்றவை கழுதைக்குச் சமானமானது என்றும் சொல்லுகிறார்கள். இதனாலேயே **தேசாபிமானம் என்பது வடிகட்டிய அயோக்கியதனம் என்றும் அதில் வாழ்கின்றவர்கள் உலகிலுள்ள பிழைப்புகளில் எல்லாம் மிக இழிவான பிழைப்பில் பிழைக்கின்றவர் களாவார்கள்** என்றும் சொன்ன சொல்லைப் பொன்னே போல் போற்றி பொன் எழுத்தில் எழுதி சொன்னவரை பொன்னே போல் வாழ்த்த வேண்டாமா என்று கேள்க்கின்றோம்.

இன்று சிறப்பாக இந்த நாட்டில் தன்னை ஒருவன் தேசாபிமானி என்று சொல்லிக் கொண்டாலோ, அல்லது அந்த ஸ்தாபனத்தில் சேர்ந்து கொண்டாலோ, அல்லது வேறு வழியில்லாமல் அதன் பயனாய் வாழ்வை நடத்த ஆரம்பித்து விட்டாலோ, அவன் எவ்வளவு அயோக்கியனாய், இழி பிறப்பாய், ஒழுக்கங் கெட்டவனாய் இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் மேடை ஏறவும், வாயில் வந்ததைப் பேசவும், மனதில் நினைத்ததை எழுதவும், பொய் பித்தலாட்டம் போக்கிரித்தனங்கள் செய்யவும் யோக்கியதைகள் ஏற்பட்டு விடுவது என்றால் இப்படிப்பட்ட தேசாபிமானத்தையும், தேசியத்தையும், தேச பக்தியையும் வெட்டிப் புதைக்க வேண்டாமா என்று கேட்கின்றோம்.

அதற்காக உயிர் போகுமளவும் பாடுபட்டு அதற்காக உயிர் விட நேரிடுவதைப் பெரியதொரு கிடைத்தற்கரியதொரு காரியம் என்று கருத வேண்டாமா? என்று கேட்கின்றோம்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் நமது பாராட்டுதலுக்குரியவர் என்றே கருதுகிறோம். (நமது பாராட்டுதலை அவர் லக்ஷியம் செய்யா



RangaRakes tamilnavarasam.com

திருந்தாலும் இருக்கலாம்) அவரை உண்மைத் தியாகிகளில் ஒருவராகவே கொள்ளலாம். அவரது நிலைமையைப் பார்த்தும் அவர் தேசாபிமானத்தால் பிழைக்க வேண்டிய அவசியமில்லாதவர் என்றே கூறுவோம்.

அதோடு கூடவே ஒவ்வொருவருக்கும் அவரவர் கருதும் வழியில் தொண்டாற்ற, தியாகம் செய்ய, உயிர்விட அவரவருக்கு உரிமை உண்டு என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளுகிறோம்.

என்றாலும் ''காங்கிரஸ் ஒன்றுதான் தேசாபிமான ஸ்தாபனம். காங்கிரஸ்காரர்கள்தான் தேசாபிமானிகள்'' என்று சொல்லுவதும் ''எவ்வளவுதான் ஒரு மனிதன் தனிப்பட்ட முறையில் சொந்த வாழ்வில், எவ்வளவு அயோக்கியனாய், ஈனனாய் இருந்தாலும் அவன் காங்கிரசில் சேர்ந்து விட்டால் அவன் யோக்கியனாய் விடுவான்'' என்றும், ''அவனை யோக்கியனாகக் கருத வேண்டும்'' என்றும் சொல்ல முன் வந்துவிட்டாரானால் பிறகு இவரைப் பற்றி என்ன சொல்லுவது என்பது நமக்குப் புரியவில்லை.

ஒரு சிட்டிகைச் சாம்பலை எடுத்து நெற்றியில் வைத்துக் கொண்டால் பெற்ற தாயாரைப் புணர்ந்த பாபம் நாசமாகி சிவனுடைய பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளலாம் என்றும், ''ஒரு தடவை ராமா என்றால் பல 'ஜன்ம' பாபங்கள் தீர்ந்து வைகுண்டம் சேரலாம்'' என்றும் சொல்லும் வாக்கியங்களுக்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்று கேழ்க்கின்றோம். இதனால்தான் இத்தேசத்தில் உள்ள அயோக்கியர்கள், இழி தொழிலாளிகள் ஆகிய எல்லோரும் தாங்கள் யோக்கியர்களாகக் கருதப்படலாம் என்று காங்கிரசில் வந்து சேருகிறார்கள் போலும்.

நாலணா கொடுத்துக் காங்கிரசில் சேர்ந்து விடுவதினால் ஒரு மனிதன் யோக்கியனாகி விடலாம் என்று ராஜகோபாலாச்சாரியார் போன்றவர்கள் வாயினால் சொல்லப்பட்டு விடுமானால், மனிதன் அயோக்கியனாக, ஒழுக்க ஈனனாக, நாணையமற்றவனாக, இழி வாழ்க்கைக்காரனாக வாழப் பயப்படுவானா? என்று தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களை வணக்கமாக கேள்க்கின்றோம். தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தொண்டும், நமது தொண்டும் பார்ப்பனர் நன்மை, பார்ப்பனரல்லாதார் நன்மை என்கின்ற தத்துவங்களின் போட்டித் தொண்டு என்று மாத்திரம் நாம் கண்ணியமாய் எண்ணி இருந்த எண்ணம், இப்போது அயோக்கியர் - யோக்கியர் என்கின்ற விஷயத்திலும், போட்டித் தொண்டு என்று சொல்ல வேண்டியதாகின்றது என்றால் இதற்கு நாம் விசனப்பட வேண்டியதுதான்.

உலகம் எவ்வளவுதான் தந்திரங்களுக்கு அடிமைப்பட்டு விட்டது என்றாலும், இன்றைய நிலையில் நாணையத்திற்கும், ஒழுக்கத்திற்கும் அதாவது நானையம் ஒழுக்கம் என்கின்ற வார்த்தைகளுக்கு மதிப்பு



இருக்கின்றது என்றே கருதுகின்றோம். ஆதலால் நாணையம் இல்லாதவனும், ஒழுக்கம் இல்லாதவனும் காங்கிரசில் சேர்ந்தால் ஒழுக்கமும், நாணையமும் ஏற்பட்டு விடும் என்கின்ற வார்த்தையின் பயனாய் (அறிவுள்ள சமூகத்தில்) பிரதிகூலம் தான் ஏற்படுமே தவிர அனுகூலம் ஏற்படாதென்றே சொல்லுகின்றோம். அன்றியும் மனிதனின் முன் பின் நிலை, தியாகம், ஒழுக்கம், நாணையம் முதலியவை ஒன்றும் கவனிக்கப்படாமல் வெரும் தேசாபிமானத்தையும், தேசாபி அந்த மானத்துக்கும் தாங்கள் சொல்லுவதையே அர்த்தமாக வைத்துக்கொண்டு ''காங்கிரஸ் காந்தி ஆதலால் ஓட்டுச் செய்யுங்கள்'' என்று சொல்லுவ தென்றால் அதன் தைரியத்தைப் பார்க்கும்போது தங்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் முழுமூடர்கள், கபோதிகள், களிமண் உருண்டைத் தலைகள் என்று கருதி இருப்பதாகத்தான் நினைக்க வேண்டி இருக்கிறது.

இன்றையத் தினம் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களை நாம் ஒரு கேழ்வி கேள்கின்றோம்.

அதாவது தோழர்கள் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களுக்கும், ராமசாமி முதலியாருக்கும் எந்த விஷயத்தில் என்ன வித்தியாசம்?

தோழர் அவினாசிலிங்கம் செட்டியார் என்பவருக்கும், டாக்டர் வரதராஜுலுவுக்கும் எந்த விதத்தில் என்ன வித்தியாசம்?

தோழர் குமாரசாமி ராஜா என்பவருக்கும் விருதுநகர் வி.வி. ராமசாமி அவர்களுக்கும் எந்த விஷயத்தில் என்ன வித்தியாசம்?

தோழர் சாமி வெங்கிடாசலம் செட்டியார் அவர்களுக்கும், சர்.ஆர்.கே. ஷண்முகம் அவர்களுக்கும் எந்த விதத்தில் என்ன வித்தியாசம்?

தோழர் முத்துரங்க முதலியார் அவர்களுக்கும், தோழர் நடராஜ முதலியார் அவர்களுக்கும் எந்த விதத்தில் என்ன வித்தியாசம் சொல்லக் கூடும் என்று கேழ்க்கின்றோம்.

5 ஸ்தானங்களுக்கு காங்கிரசின் பேரால் 5 பேரை நிறுத்தி போட்டி போட்டுக்கொண்டு, காங்கிரசின் பேரால் என்று போடப்பட்ட ஆட்களைப் பற்றியோ, அவர்களின் யோக்கியதைகளைப் பற்றியோ ஒரு வார்த்தைகளைகூட எடுத்துப் பேச யோக்கியதை இல்லாத நிலையில் இருந்து கொண்டு ''காங்கிரசு, காந்தி, காங்கிரசில் சேராதவன் தேசத்துரோகி, ஆதலால் ஓட்டுச் செய்யுங்கள்'' என்றும் ''காங்கிரசுக்கும், காந்திக்கும் போர் நடக்கின்றது ஆதலால் ஓட்டுச் செய்யுங்கள்'' என்றும் சொல்லுகின்றதினாலேயே இவர்களை எப்படி ஜெயித்து விடுவார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

காங்கிரசின் பேரால் நிறுத்தப்பட்ட கனவான்கள் என்பவர்கள் ஜாதி மதங்களைக் காப்பாற்றும் வருணாச்சிரமவாதிகளா? அல்லவா? என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

ஒருவர் இருவர் ஒரு சமயம் அரை வருணாச்சிரமவாதிகளாய் இருக்கலாம். அல்லது வெளியில் சொல்லப் பயப்படுபவர்களாய் இருக்கலாம். வேறு விதத்தில் மற்றவர்களை விடக் காங்கிரஸ்காரர்கள் எப்படி உயர்ந்தவர்கள் என்று கேட்கின்றோம்.

தமிழ் நாட்டுக் காங்கிரசில் பார்ப்பன ஆதிக்கம் என்பதைத் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களும், சில பார்ப்பனரல்லாத காங்கிரஸ்வாதிகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். (ஆனால் ஏன் பார்ப்பனரல்லாதாரில் தகுந்த ஆட்கள் வரக்கூடாது என்று கேட்கின்றார்கள். அது வேறு விஷயம்)

இந்தப் பார்ப்பனர்களின் கருத்து தமிழ் நாட்டில் எந்தப் பார்ப்பனரல்லாதாரும் தலை எடுக்கக் கூடாது என்பதைத் தவிர வேறு இல்லை என்பது காந்தியார், ஜவகர்லால் வரையில் எட்டிய உண்மையாகும்.

இந்தத் தேர்தலில் இவர்களுடைய நோக்கம் எல்லாம் பார்ப்பனரல்லாத சுயபுத்தி உள்ளவர்கள் இந்திய சட்டசபைக்குப் போகக் கூடாது என்பதைத் தவிர சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் தோழர்கள் ஆர்.கே.ஷண்முகம், பி.வரதராஜலு, ஏ.ராமசாமி முதலியார் போன்றவர்கள் கண்டிப்பாகப் போகக் கூடாது என்பதைத் தவிர வேறு இல்லை என்று உறுதியாகச் சொல்லுவோம்.

இம்மூவரும் சென்றால், தமிழ்நாட்டில் பார்ப்பனர்களை விட ஒவ்வொரு விதத்தில் திறமைசாலிகள் பார்ப்பனரல்லாதாரிலும் இருக்கிறார்கள் என்பது உலகத்துக்கு விளங்கிவிடும். இதனால் தாங்கள் (பார்ப்பனர்கள்) இதுகால வரையில் பார்ப்பனரல்லாதாரைத் தமிழ்நாட்டை விட்டு வெளிமாகாணங்களுக்குத் தெரியாதபடி பத்திரிகை மூலமும் விஷமப் பிரசாரம் மூலமும் அடக்கி வைத்திருந்ததின் பயன் வீணாகப் போவதுடன் தங்கள் யோக்கியதைகளும் வெளியாகி விடுமே என்கின்ற நடுக்கமே அல்லாமல் வேறு ஒரு காரணமும் அல்ல.

எனவே இந்தக் கருத்தை முக்கியமாய் வைத்துக் கொண்டுதான் ஞானமற்ற - சுயநலக்கார - வேலையில்லாக் கஷ்டத்தால் துன்பப்படுகிற - பொறாமைப் பேய்க்கு அடிமைப்பட்ட பூதக் கண்ணாடியை வைத்துக் கண்டுபிடிக்கத்தக்க யோக்கியதையுள்ள பார்ப்பனரல்லாதார்களை சுவாதீனம் செய்து கொண்டு காந்தி, காங்கிரஸ், தேசாபிமானம் என்று சொல்லிக் கொண்டு இப்படிப்பட்ட சூக்ஷியையும், பித்தலாட்டங்களையும் ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை பார்ப்பனரல்லாத சுயமரியாதையுள்ள மக்கள் உணரவேண்டும் என்று ஆசைபடுகின்றோம்.

**பகுத்தறிவு - கட்டுரை - 09.09.1934**



# காங்கிரசின் வீரம் வெட்கம்! வெட்கம்!! வெட்கம்!!!

காங்கிரசுக்காரர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் ஒரு கூட்டம் சிற்சில ஊர்களில் இருந்து கொண்டு காலித்தனம் செய்து வருவதைப் பற்றி இதற்கு முன் பல தடவை ''குடி அரசு'', ''புரட்சி'' பத்திரிக்கைகளில் எழுதப்பட்டிருந்தது வாசகர்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறோம்.

இந்தக் கூட்டங்களுக்கு ஏற்பட்ட வேலையெல்லாம் காங்கிரஸ் பேரால் வயிறு வளர்ப்பதும், அதற்குக் கூலியாகக் காங்கிரஸ் காரர்களல்லாதார் என்பவர்கள் போடும் கூட்டங்களில் போய் காலித்தனம் செய்வதும், சரிசமமான காலித்தனத்தையோ, போலீசாரையோ கண்டால் ஓட்டமெடுப்பதும் வழக்கமாயிருந்து வருகிறது.

தேசியப் பத்திரிக்கை என்று சொல்லிக் கொள்ளும் சில, அதாவது காலித்தனத்தில் பிரியமும், ஆசையும் உள்ள சில பத்திரிக்கைகள் ''போலீசார் பந்தோபஸ்தில் கூட்டம் நடந்தது'' என்றும் ''கூட்டத்தில் கலவரம், குழப்பம்'' என்றும் எழுதி அவற்றை ஆதரிப்பதுமாய் இருந்து வருவதும், காங்கிரசுக்கும், தேசியத்துக்கும் வெட்கக் கேடு என்பதுடன் தங்களுடைய யோக்கியதையானது வெளியாகக் கூடாத அவ்வளவு இழிவானது என்று அவர்களே கருதி காலித்தனத்தின் மூலம் எதிரிகளின் கூட்டத்தைக் கலைக்க நினைக்கிறார்கள் என்றும் கருதக் கூடியதாகவே இருக்கிறது.

தோழர் வரதராஜுலு நாயுடு வேலூரில் ஒரு கூட்டத்தில் பேசும்போது அக் கூட்டத்தில் அக்கூட்ட நடவடிக்கைகளுக்குச் சம்மந்தமில்லாத கூச்சல்களை சிலர் கிளப்பினார்களாம். அதாவது காந்திக்கு ஜே! அவனாசிலிங்கம் செட்டியாருக்கு ஜே! என்று கூப்பாடு போட்டார்களாம். போலீசார் வந்த பிறகு ஓட்டம் பிடித்தார்களாம். (இந்த விஷயம் ''இந்தியா'' ''தமிழ்நாடு' ''சமதர்மம்'' முதலிய பத்திரிக்கைகளில் காணப்படுகின்றது.)

பிறகு தோழர் வரதராஜுலு அவர்கள் சொல்ல வேண்டியது முழுவதையும் சொல்லி முடித்த பின்பே கூட்டம் முடிந்ததாம். இம் மாதிரி காலித்தனமும், இதைவிட மோசமான காலித்தனமும் வேலூரில் இதற்கு முன் இரண்டொரு தடவையும் நடந்திருக்கின்றது. இதன்



RangaRakes tamilnavarasam.com

பயனாய் ஏற்பட்ட பலன் என்ன? அதாவது வேலூருக்கு போகின்றவர்கள் அங்குள்ள சில காலிகளுக்குப் புத்தி கற்பிக்கத்தக்க அளவு அதிகமான காலித்தனத்துடன் செல்ல வேண்டும். அல்லது போலீசுக்காரர்களை அவர்கள் கடமையைச் செய்ய எதிர்பார்க்க வேண்டும் என்ற பலன் தானே ஏற்படுகின்றது. காலித்தனங்களின் பயனாய் கூடிய சீக்கிரத்தில் பேச்சு சுதந்திரம் கூட நிறுத்தப்பட வேண்டியதாய் ஏற்பட்டுவிடும் என்றே பயப்படுகின்றோம்.

வேறு சில அரசாங்கங்களில் பொதுக்கூட்டங்கள் போட வேண்டுமானால் 24 மணி நேரத்துக்கு முன்பாகவே அதிகாரிகளுக்கு எழுதி உத்திரவும், பந்தோபஸ்துக்கு உதவியும் பெற வேண்டும் என்கின்ற ஒரு முறை இருந்து வருகின்றது. ஆனால் நமது பிரிட்டிஷ் அரசாங்கத்தில் அந்த தொல்லை இல்லை. இனிமேல் அது போலவே தான் இங்கும் ஏற்பட வேண்டிவரும் என்றே நினைக்கிறோம்.

காங்கிரசு ஏற்பட்ட பிறகு அனேக சுதந்தரங்கள் பறிக்கப்பட்டுப் போய்விட்டன. அதற்கு காங்கிரசின் இப்படிப்பட்ட நடத்தையே ஒரு அளவுக்கு ஜவாப்தாரி என்று தயங்காமல் கூறுவோம்.

கூப்பாடு போட்டவர்கள் - கலகமும், காலித்தனமும் செய்தவர்கள் - அவை அவசியமென்றும், தங்களின் யோக்கியதையான கடமை என்றும் கருதி இருப்பார்களே ஆனால் போலீசார் வந்த பிறகும் ''காந்திக்கு ஜே'' சொல்லிக் கொண்டு அங்கு நின்று இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் உண்மையான வீரர்கள் ஆவார்கள். அப்படிக்கில்லாமல் சிகப்புக் குல்லாயைக் கண்டவுடன் ஓட்டமெடுக்கும் காங்கிரசு எவ்வளவு வீரமும் மானமும் உடையது என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை.

இதைப் பற்றி சில பத்திரிக்கைகள் பெருக்கி எழுதி மகிழ்கின்றன. இப்பத்திரிக்கைகளுக்கு பொறுப்போ, ''தேசிய'' மானமோ இருக்குமானால் கண்டிப்பாய் இவ்வித நடவடிக்கைகளுக்கு வெட்கப்பட்டு அப்படிப்பட்ட காலிகளுக்கும் புத்தி சொல்லி அவர்களை நல்வழிப்படுத்த முயற்சித்து இருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் இவர்களை உசுப்படுத்துகிற மாதிரி எழுதுவதால், குட்டி குலைத்து நாய்க்கு ஆபத்து ஏற்பட்டது என்பது போல் இப்படிப்பட்ட பத்திரிக்கைக்காரர்களுடையவும், காலிகளுடையவும் செய்கைகளால், ''போலீஸ் நிர்வாகம் இந்தியர்கள் கையில் கொடுப்பதற்கு இந்தியாவுக்கு யோக்கியதை இல்லை. வெள்ளைக்காரனிடம் தான் இருக்க வேண்டும்'' என்று சொல்லும்படியாய் ஏற்பட்டு வருகின்றது. இப்படிப்பட்ட ஆட்களையும், பத்திரிகைக்காரர்களையும் தன்னைப் பின்பற்று கின்றவர்களாய்க் கொண்ட தோழர் காந்தி ''இந்தியாவுக்கு சுயராஜ்ஜியம் வந்தால் பட்டாளம், ராணுவம் இல்லாமல் ராஜ்ஜிய பாரம் நடைபெறும்'' என்று சொன்னார் என்றால் இதில் சிறிதாவது உண்மையோ, அறிவுடமையோ இருந்திருக்க முடியுமா என்றும், இவர்கள் உண்மையில் நாணையத்தில் அஹிம்சைவாதிகள் என்று சொல்லிக் கொள்ளத் தகுந்தவர்களா என்றும் கேட்கின்றோம்.

சுயமரியாதைக்காரர்களால் இப்படிப்பட்ட காலித்தனம் எங்காவது நடந்ததாகத் தெரிய வந்த சமயத்தில் நாம் வெட்கப்பட்டும், கண்டித்தும் இருக்கிறோமே ஒழிய எதிரி போலீசு பந்தோபஸ்தில் இருந்து பேச வேண்டியிருந்ததற்கு வெட்கப்படாமலோ அதைப் பற்றிப் பெருமையாய் பேசிக்கொண்டோ இருந்ததில்லை.

கேள்விகள் கேட்டால் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியதுதான். இஷ்டமில்லையானால் இப்போது சொல்ல சௌகரியமில்லை என்று சொன்னால், கேள்வி கேட்பவர்கள் திருப்தி அடைய வேண்டியது தான். அல்லது சொன்ன பதிலை வைத்துக் கொண்டு தான் வேறு ஒரு கூட்டம் கூட்டி அதில் உள்ள தவறுதல்களை வெளிப்படுத்த வேண்டியதுதான். அப்படிக்கெல்லாம் இல்லாமல் கலகம், காலித்தனம் செய்வதும் பிறர் பேசுவது காது கேட்காமல் இருப்பதற்காக ''காந்திக்கு ஜே'' என்பது போல் கூவுவதுமான இழிவான செயல்களை ஒழிக்க வேண்டியது தான் என்பதை பலமுறை வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

இது எழுதினது காங்கிரசுக்காரருக்கு மட்டும் என்று நாம் எழுதவில்லை. சுயமரியாதைக்காரர் என்பவர்கள் எங்காவது இப்படிப்பட்ட காலித்தனம் செய்திருந்த போதிலும் அவர்களுக்கும் சேர்த்துத்தான் எழுதுகின்றோம். 40000, 50000 பேர் உள்ள கூட்டங்களில் அவ்வளவு பேருக்கும் மாறுதலான - எவ்வளவோ எதிரிடையான அபிப்பிராயங்களைப் பற்றிப் பேசின போதிலும் ஜனங்கள் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த பிறகு தங்களுக்கு இஷ்டமான கேள்விகளை அதுவும் பேசிய விஷயத்தைப் பொருத்த கேள்விகளையே கேட்பதும் உபன்யாசகர் பதில் உரைப்பதும், உரைத்த பதிலை மரியாதையுடன் கேட்பதுமான காரியங்களை மேல் நாடுகளில் பார்த்திருக்கிறோம்.

அப்படிக்கெல்லாம் இல்லாமல் இம்மாதிரி கோழைத்தனமாக காலித்தனம் செய்வதைக் காங்கிரஸ் - தேசிய பக்தர்கள் பெரிதும் தங்களுக்கு உரிமையாக்கிக் கொண்டிருப்பதும், அதை காங்கிரசு - தேசியப் பத்திரிகைகள் ஆதரிப்பதும் வெட்கம்! வெட்கம்!! வெட்கம்!!! என்று மும்முறை கூறி இனியாவது புத்தி வரட்டும் என்று ஆசைப்படுகிறோம்.

**பகுத்தறிவு - கட்டுரை - 16.09.1934**


RangaRakes
tamilnavarasam.com

# நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்

வரப்போகும் இந்திய சட்டசபைத் தேர்தலில் சுயமரியாதைக் காரர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும், மேலால் நடக்க வேண்டிய பிரசாரங்களைப் பற்றியும் எனக்குப் பல கடிதங்களும், கேள்விகளும் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றுள் தோழர் C.D.நாயகம் அவர்களுடைய கடிதம் முக்கியமானது. சுயமரியாதைக்காரர்களுக்குத் தேர்தல் விஷயத்தில் இன்ன கட்சியைத் தான் ஆதரிப்பது என்கின்ற எவ்வித நிபந்தனையும் இது வரை ஏற்படவில்லை என்பது யாவரும் அறிந்ததே. தேர்தல்களில் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்கின்ற தன்மையை மாத்திரம் தான் இதுவரை சு.ம.காரர்கள் கவனித்து வருகிறார்கள். சுயமரியாதைக்காரர்கள் ஏதாவது ஒரு கட்சியை ஆதரிப்பது என்கின்ற நிலை ஏற்பட வேண்டுமானால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்கின்ற கொள்கைக்குப் பாதகமில்லாமல் நமது குறைந்த பட்சக் கொள்கையை ஒப்புக் கொள்ளக் கூடிய கட்சியைத்தான் ஆதரிக்க வேண்டி வரும்.

ஜஸ்டிஸ் கட்சியோ! பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளப் போகின்றது. அதற்கேற்றாப் போல் சுயமரியாதைக்காரர் பலருக்கும் காங்கிரசில் சேரலாமா என்கின்ற எண்ணம் இருந்து வருகின்றது. சுயமரியாதைக்காரர்களுக்கு ஜஸ்டிஸ் கக்ஷியானது பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொண்டு, வகுப்புவாரிப் பிரதிநிதித் திட்ட கொள்கையையும் அது வழவழா செய்துவிட்டு, பார்ப்பனரல்லாத தொழிலாளிகள் தாழ்த்தப்பட்டவர்கள் ஆகிய ஏழை மக்கள் விஷயத்தில் தக்க மாறுதலுக்கு ஏற்பாடு செய்து அவர்களை முன்னுக்குக் கொண்டு வரத்தக்க கொள்கையும், திட்டமும் கொண்டதாக இல்லையானால் சுயமரியாதைக்காரர்களில் பலர் காங்கிரசில் சேருவதை நாம் ஆக்ஷேபிக்க முடியாது.

காங்கிரஸ் பார்ப்பனர் ஆதிக்க ஸ்தாபனம் என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் ஜஸ்டிஸ் கக்ஷி இன்று பணக்காரர்கள் ஆதிக்க ஸ்தாபனம் என்று சொல்லத்தக்க நிலையில் இருப்பதை யாராவது மறுக்க முடியுமா? என்று கேட்கிறோம். ''புழுத்ததின் மீது நாய் விட்டை இட்டது'' என்பது போல், ஜஸ்டிஸ் கக்ஷி இந்நிலைமையில் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்வது என்கின்ற முடிவுக்கு வந்து விட்டால் பிறகு காங்கிரசுக்கும், இதற்கும் என்ன வித்தியாசம் என்பது நமக்கு விளங்கவில்லை?



ஜஸ்டிஸ் கட்சி, பார்ப்பனர்களை வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளட்டும் என்றாலும் அதன் பிறகு செய்யப்போகும் காரியம் என்ன என்பதை மக்களுக்கு விளக்க வேண்டாமா? என்று தான் கேட்கின்றோம்.

சமுதாய விஷயத்தில் காங்கிரஸ் பெரிதும் பிற்போக்கான புத்தியுடையது என்பதையும், வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு முட்டுக் கட்டை போடுகின்றது என்பதையும், பார்ப்பன ஆதிக்கத்தைத்தான் சுயராஜ்யம் என்று சொல்லப்படுகின்றது என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளுகிறோம்.

அது போலவே ஜஸ்டிஸ் கட்சியும் உண்மையான வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்துக்கு இடையூறாக ஆகிக் கொண்டு வருவதுடன் சமுதாய விஷயத்திலும், பொருளாதாரத் துறையிலும் மிகவும் பிற்போக்கான தன்மையில் போய்க் கொண்டிருக்கின்றது என்று தான் சொல்ல வேண்டி இருக்கின்றது.

காங்கிரஸ் ஸ்தாபனங்களில் பார்ப்பனர் எண்ணிக்கை அதிகமாய் இருப்பது போலவே, ஜஸ்டிஸ் ஸ்தாபனங்களில் பணக்காரர்களுடைய எண்ணிக்கையே அதிகமாய் இருக்கின்றது.

காங்கிரசில் எப்படி பார்ப்பனக் கூலிகளே பெரிதும் ''பார்ப்பனரல்லாதாராய்'' விளங்குகின்றார்களோ, அது போலவே பணக்காரர்களின் கூலிகளே பெரிதும் ''ஏழை மக்களாகவும், தாழ்த்தப் பட்ட மக்களாகவும்'' விளங்குகின்றார்களே ஒழிய, உண்மையான ஏழைகள், தொழிலாளிகள், தாழ்த்தப்பட்டவர்கள் என்பவர்களுக்கு அதில் இடமில்லாமல் செய்யப்பட்டு வருகிறது.

சுயமரியாதை இயக்கம் உண்மையான சமத்துவ நோக்கம் கொண்டது என்று ஒரு நடு நிலைமை நியாயாதிபதியின் தீர்ப்பைப் பெற வேண்டுமானால், இன்றைய ஜஸ்டிஸ் கட்சியையும் காங்கிரசையும் ஒன்று போல இல்லாவிட்டாலும், ஒன்றுக்கொன்று பிரமாத வித்தியாசம் கொண்டதல்ல என்றுதான் கருதியாக வேண்டும் என்கின்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

சுயமரியாதை இயக்கமானது காங்கிரசினால் அதன் முழு பலத்தோடு எதிர்க்கப்பட்டு வந்தது உண்மை என்றாலும், அதனால் யாதொரு கெடுதியும் சு.ம. இயக்கத்திற்கு ஏற்பட்டுவிடவில்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அதோடு சுயமரியாதை இயக்கம் காங்கிரசையும் அதன் தலைவர்களையும் சிறிதும் தயவு தாட்சண்யமின்றி சமய சந்தர்ப்பமின்றியும் நண்பர் நண்பரல்லாதவர்கள் என்பதையும் கவனியாமல் வெளியாக்கியும் எதிர்த்தும் வந்திருக்கின்றது.

ஆனால் சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கட்சியை சமய சந்தர்ப்பம் இல்லாமல் ஆதரித்தும், நல்லவர் யார், கெட்டவர் யார்?



RangaRakes tamilnavarasam.com

பொது நலத் தலைவர் யார், சுயநலத் தலைவர் யார்? என்பதைக் கவனிக்காமலும் எல்லாச் சமயத்திலும் அவர்களது எல்லாக் காரியத்தையும் ஆதரித்து வந்திருக்கிறது.

இவற்றின் பயன் என்னவாய் முடிந்தது என்றால் காங்கிரசினால் சுயமரியாதை இயக்கத்துக்கு எவ்வித கெடுதலும் செய்ய முடியவில்லை என்பதோடு காங்கிரஸ்காரருக்கு சுயமரியாதை இயக்கத்தை தழுவ வேண்டும் என்கின்ற எண்ணம் சில காங்கிரஸ்காரர்களிடமாவது வந்து இருக்கிறது.

ஜஸ்டிஸ் கட்சிக்கோ பல நன்மைகள் செய்யக் கூடிய சந்தர்ப்பமிருந்தும் அது சுயமரியாதை இயக்கத்துக்கு யாதொரு நன்மையும் செய்யவில்லை என்பதோடு, சுயமரியாதை இயக்கத்தை ஒடுக்க ஜஸ்டிஸ் கட்சியார் முயற்சிக்கிறார்கள் என்று பொது ஜனங்கள் நினைக்க வேண்டிய அளவுக்கும் தைரியமாய் நடந்து கொண்டதான பலன் தான் ஏற்பட்டது என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டி இருக்கிறது.

எப்படி இருந்தபோதிலும் சுயமரியாதைக்காரர்கள் சமூக வாழ்வு விஷயத்திலும், பொருளாதார விஷயத்திலும் தாழ்த்தப்பட்டு ஜீவனத்துக்குக் கஷ்டப்படும் - இழி மக்களாய்க் கருதப்படும் பார்ப்பனரல்லாதார் முன்னேற்ற விஷயத்தைத் தங்களது முக்கிய நோக்கங்களில் ஒன்றாய்க் கொண்டிருப்பதை மாற்றிக் கொள்ள முடியாது.

சுயமரியாதைக்காரர்கள் பொருளாதார விஷயத்தையே முக்கியமாய் கருதுவதா? அல்லது ஜாதி, மத மூடநம்பிக்கை ஆகியவைகளின் கொடுமையிலிருந்து மக்களை விடுவிக்கும் வேலையையே முக்கியமாய் கருதுவதா என்பதை இப்போது ஒரு முக்கிய பிரச்சினையாக சில சு.ம. தோழர்கள் கிளப்பி விட்டிருக்கிறார்கள். இதை சீக்கிரத்தில் முடிவு கட்டித்தான் தீர வேண்டும்.

சமுதாய விஷயத்திலேயே உழைப்பதென்றாலும் ஜாதி, மத மூட நம்பிக்கை விஷயத்தில் உழைப்பதானாலும் பொருளாதாரப் பிரச்சினை அதிலிருந்து விலகியதாகாது. எவ்விதப் பிரசாரமும், சட்டத்திற்கும், சமாதான தன்மைக்கும் கட்டுப்பட்டு செய்வதென்பதுதான் சுயமரியாதைக் காரர்கள் கொள்கை என்பதை நாம் மறுபடியும் ஒருதரம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

ஆனால் சட்டத்திற்கு உட்பட்டு செய்யப்படும் பிரசாரம் என்பதில் ஜாதி மத பொருளாதார மூடநம்பிக்கைகளை ஒழித்தலும், உயர்வு தாழ்வை அகற்றலுமான கொள்கை சேர்ந்ததல்ல என்று அரசாங்கத்தார் கருதுவார்களானால் அது விஷயத்திலும் நாம்- சுயமரியாதைக்காரர் சீக்கிரத்தில் ஒரு முடிவு செய்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம்.



எனவே இந்த விஷயங்கள் எல்லாம் சமீபத்தில் நடைபெறப் போகும் ஜஸ்டிஸ் கட்சி மகாநாடும், காங்கிரஸ் மகாநாடும், மாகாண மகாநாடும் நடந்தவுடன் சுயமரியாதை மகாநாடோ, அல்லது சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் மகாநாடோ ஒன்று கூட்டி அதில் முடிவு செய்து கொள்ள வேண்டியவர்களாயிருப்பதால் அது வரையில் எல்லாத் துறையிலும் நம் தோழர்கள் பொருத்து இருக்க வேண்டும் என்றும், அதை எதிர்பார்த்தே நானும் பொருத்து இருக்கிறேன் என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சுயமரியாதைச் சங்கத் தலைவர் என்கின்ற முறையில் தோழர் R.K.ஷண்முகம் அவர்களது அபிப்பிராயமும் இதில் கலந்து இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**- ஈ.வெ.ராமசாமி**

**பகுத்தறிவு - தலையங்கம் - 16.09.1934**



RangaRakes tamilnavarasam.com

# இந்திய சட்டசபைத் தேர்தல்

இந்திய சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் போட்டி போட முடிவு செய்து ஆங்காங்கு மாகாணம் தோறும் காங்கிரசின் சார்பாய் அபேட்சகர்களை நிறுத்திப் போட்டி போடுகிறார்கள்.

காங்கிரஸ்காரர்களுக்குள்ளாகவே இவ்விஷயத்தில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டுத் தேர்தலில் பிரவேசிக்கக் கூடாது என்று சொல்லி ஒரு கூட்டத்தார் விலகிக் கொண்டார்கள்.

மற்றொரு கூட்டத்தார் தாங்கள் நேரே தேர்தலில் நிற்காமல் மற்றவர்களுக்கு உதவி செய்து ''காங்கிரசின் கௌரவத்தைக் காப்பாற்று கின்றோம்'' என்று அபேட்சகர்களாக நிற்பதில் இருந்து விலகி இருக்கிறார்கள்.

மற்றொரு கூட்டத்தாரோ! காங்கிரஸ் அபிமானிகள் என்று தங்களைச் சொல்லிக்கொண்ட போதிலும் கூட காங்கிரஸ் கொள்கைகள் சில தங்களுக்குப் பிடிக்கவில்லை என்றும், அக்கொள்கைகளுக்கு மாறாகத் தாங்கள் நடக்க வேண்டி இருக்கிறதென்றும் சொல்லி கட்டுப்பாட்டிலிருந்து விலகி காங்கிரஸ் கட்டளைக்கு விரோதமாய் நடக்கத் தீர்மானித்து எதிர்ப்பு முறையில் ஒரு கட்சி ஏற்படுத்தி அதன் பெயரால் காங்கிரசோடு போட்டி போட முடிவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

மற்றொரு கூட்டமோ! காங்கிரசுவாதியாய் இருந்து காங்கிரசை ஆதரித்து வந்து தீவிர தேசியவாதி என்று சொல்லிக் கொண்டிருந்து காங்கிரசின் சில கொள்கைகள் பிடிக்காததினால் காங்கிரஸ்வாதி என்று சொல்லிக் கொள்ள இஷ்டமில்லாமல் தேசியவாதி என்னும் பெயரால் தனித்த ஹோதாவில் காங்கிரஸ் அபேட்சகர்களோடு போட்டி போட தேர்தலில் நிற்கிறார்கள்.

இவர்கள் தவிர ஆங்காங்கு காங்கிரஸ் கூட்டங்களில் அடிதடி கலகம், குழப்பம் ஆகியவை காங்கிரஸ்காரர்களுக்குள்ளாக நடந்தும் வருகிறது.

இந்த நிலையில் தோழர் காந்தியார் காங்கிரசுக்காரர்கள் சிலரின் நடத்தை நாணையமானதாக இல்லையென்றும், அதற்காகப் பிராயச்சித்தம் செய்து கொள்வதாய் ஒரு தடவைக்கு மேல் பட்டினி இருந்தும், தனக்கு திருப்தி ஏற்படாமல் **இப்போது தானே காங்கிரசிலிருந்தே விலகி** தனிப்பட்ட முறையில் வேறு வழியில் தொண்டாற்றப் போவதாய் யோசனை செய்து கொண்டிருப்பதாகவும், எப்படியாவது அவரை இந்திய சட்டசபைத் தேர்தல் வரை இருக்கும்படி பலர் கேட்டுக் கொள்வதாகவும் குறைந்த அளவு பம்பாய் காங்கிரஸ் வரையிலாவது இருக்க வேண்டும் என்று சிலர் கேட்டுக் கொள்வதாகவும், அதற்கும் கூட காந்தியார் சம்மதம் கொடுக்கவில்லை என்றும் பத்திரிகைகளில் உண்மையான செய்திகள் பறக்கின்றன.

இவைகள் எல்லாம் ஒரு பக்கம் இருந்த போதிலும் காங்கிரசுக்காரர்கள் இப்போது எதற்காக இந்திய சட்ட சபைக்குச் செல்லுகிறார்கள் என்பது மாத்திரம் இன்னமும் சரியான முறையில் வெளியாகவே இல்லை.

காங்கிரஸ்காரர்கள் தோழர் தாஸ், நேரு உள்பட முன்பு ஒரு முறை இந்திய சட்டசபைக்குச் சென்று அங்கு தக்க ஆதரவுகள் இருந்தும் ஒரு காரியமும் செய்யமுடியவில்லை என்று சொல்லிக் கொண்டு எழுந்து வந்து விட்டது யாவருக்கும் தெரியும்.

அன்று முதல் இன்று வரை சட்டசபை சம்மந்தமாக சர்க்காரில் எவ்வித மாறுதலும் ஏற்பட்டு விடவில்லை என்பதோடு காங்கிரஸ்காரர்களும் சட்டசபையில் போய் செய்ய வேண்டிய விஷயங்களைப் பற்றிய கொள்கைகளில் எவ்வித மாற்றமும் செய்து கொள்ளவும் இல்லை.

தேசத்தின் நிலைமையும் அன்று இருந்த நிலைமையை விட தேச மக்களின் உணர்ச்சியும் சுதந்திரமும் பிற்போக்கடைந்து ஒத்துழையாமை இயக்கம் இந்தியாவில் ஏற்படுவதற்கு முன் என்ன நிலையில் இருந்ததோ அதைவிட பிற்போக்காகவும் இருப்பதோடு அரசாங்கமும் ஒத்துழையாமை இயக்கம் தோன்றுவதற்கு முன் எந்த நிலையில் இருந்ததோ அதைவிட ஆதிக்கத்தில் முற்போக்காகவும், எதேச்சாதிகாரமாகவும் தான் இருந்து வருகின்றது என்றுதான் சொல்லியாக வேண்டும்.

உதாரணமாக இந்திய ஸ்தல ஸ்தாபன சுயாட்சியின் பெருமையும், சுயமரியாதையும், சுதந்திரமும் பெரும்பாகம் பிடுங்கப்பட்டுப் போய் விட்டது. மனித சுதந்திரத்துக்கும், சுயமரியாதைக்கும் பொருந்தாத சட்டங்கள் அடக்குமுறைகள் நாளுக்கு நாள் துடர் வட்டியுடன் பெருகிக் கொண்டு வருகின்றன.

ஒத்துழையாமைக்குப் பின் அநேக விஷயங்களில் ஏழைகளுக்கு 100க்கு 25,30 பங்கு வரிகளும், சில விஷயங்களில் 100க்கு 100 பங்கு வீதம் வரிகளும் உயர்ந்திருக்கிறது.

சுருக்கமாகவும், பொதுவாகவும் சொல்ல வேண்டுமானால் இந்த 15 வருஷத்திய வேலையின் பயனால் தேசம் 30 வருஷத்துக்கு முன் இருந்த நிலைமைக்கு தள்ளப்பட்டு விட்டதே ஒழிய கடுகளவும் முற்போக்கடையவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த நிலையில் காங்கிரஸ் இந்திய சட்டசபைக்குப் போய் செய்யக் கூடிய காரியமென்ன? என்பதை திரும்பவும் கேட்கின்றோம்.





RangaRakes

tamilnavarasam.com

இந்திய மக்களிடம் காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கும் கவலையும், ஜீவகாருண்யமும் நமக்கு இல்லையென்று யாரும் சொல்லும்படியாக நாம் ஒரு போதும் நடந்து கொண்டதில்லை என்கின்ற தைரியத்தின் மீதுதான் காங்கிரஸ் சட்டசபைக்குப் போய் மற்றவர்கள் செய்யக் கூடாத காரியம் என்ன செய்யக் கூடும் என்று கேட்கின்றோம்.

காங்கிரசுக்கு ஏதோ அபார சக்தி இருக்கின்றது என்பதாக (மூட நம்பிக்கை முறையில்- நம்பித்தான் ஆக வேண்டும் என்கின்ற தத்துவத்தில்) நம்பிக் கொண்டே சில விஷயங்களைக் கவனிக்க வேண்டுகிறோம்.

இதை வாசகர்கள் முக்கியமாய் கவனிக்க வேண்டுமாயும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அதாவது முதலாவதாக காங்கிரசுக்காரர்கள் சட்டசபையில் மெஜாரட்டியாக இருக்க முடியுமா என்று பார்ப்போம்.

**சட்டசபை ஸ்தானங்கள் விபரம்**

இந்திய சட்டசபைக்கு மொத்த ஸ்தானங்கள் 144.

இவற்றுள் நாமினேஷன் (சர்க்காரால் நியமிக்கப்படுவது) 40 ஸ்தானங்கள்.

மிகுதியுள்ள 104 ஸ்தானங்களில் மகமதியர்களுக்கு 30 ஸ்தானங்கள், ஐரோப்பியர்களுக்கு 8, வியாபாரிகளுக்கு 4, நிலச்சுவான் ஜமீன்தாரர்களுக்கு 7, சீக்கியர்களுக்கு 2 ஆக 51 ஸ்தானங்கள் போக மீதி உள்ளது 53 ஸ்தானங்கள்தான்.

இந்த 53 ஸ்தானங்கள்தான் பொது தேர்தலுக்கு விடப்பட்டிருக்கின்றன. இந்த 53 ஸ்தானங்களும்

| | |
|---|---|
| மதராசுக்கு | 10 |
| பம்பாய்க்கு | 7 |
| வங்காளத்துக்கு | 6 |
| ஐக்கிய மாகாணத்துக்கு | 8 |
| பஞ்சாபுக்கு | 3 |
| பீஹார் ஒரிசாவுக்கு | 8 |
| மத்திய மாகாணத்துக்கு | 4 |
| அஸ்ஸாமுக்கு | 2 |
| டில்லிக்கு | 1 |
| பர்மாவுக்கு | 3 |
| அஜ்மீருக்கு | 1 |

என்று மாகாண வாரியாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.



இந்த நிலையில் காங்கிரஸ்காரர்கள் இந்த 53-ல் பகுதியாவது கைப்பற்ற முடியுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம். ஏனெனில் மிதவாதிகள், ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்கள், சுதந்திரவாதிகள், தேசியவாதிகள், வருணாச்சிரமவாதிகள், மாளவியா கக்ஷிக்காரர்கள் முதலாகிய கக்ஷிக்காரர்கள் எத்தனையோ பேர்கள் காங்கிரசுடன் போட்டி போடுகிறார்கள். மற்றும் ஒதுக்கி வைத்த ஸ்தானங்களில் காங்கிரசுக்கு ஒன்று இரண்டு கிடைக்கும் என்று கூட நம்ப முடியாது என்பதோடு நாமினேஷன் ஸ்தானங்களில் ஒன்று கூட எதிர்பார்ப்பது கவர்ன்மெண்டை நாம் சுத்த முட்டாள் என்று கருதுவதற்கே ஒப்பாகும்.

இந்த நிலையில் காங்கிரஸ்காரர்கள் ஒரு முப்பது அல்லது முப்பத்தைந்து ஸ்தானமாவது பெறுவார்களேயானால் அதுவும் ''அமாவாசை அன்றைய தினம் பூரண சந்திரனைப் பார்த்தேன்'' என்று சொல்லக் கூடிய நிலையில் தான் இருக்கும்.

இப்படிப்பட்ட இந்த நிலை காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாது என்று எந்த மூடனும் நம்ப முடியாது. அப்படி இருக்கும் போது காங்கிரஸ் இந்திய சட்டசபையைக் கைப்பற்றி சர்க்காருக்கு புத்தி கற்பிக்கப் போகிறது என்பதும், சர்க்கார் பெரிதா, காந்தீயம் பெரிதா என்பதை உலகத்துக்கு மெய்பிக்கப் போகின்றது என்பதும், சர்க்காருக்கும், காங்கிரசுக்கும் போர் நடக்கின்றது என்பதும், சட்டசபை மூலம் சர்க்காரை அடக்கி விடலாம் என்பதும், வெள்ளை அறிக்கையை விரட்டி அடிக்கப் போகிறோம் என்பதுமான விஷயங்கள் தமிழில் சொன்னால் பிள்ளைத் தமிழ் என்றும், இங்கிலீஷில் சொன்னால் பிள்ளை இங்கிலீஷ் என்றுந்தான் சொல்ல வேண்டியதேயல்லாமல் இவற்றில் ஏதாவது அனுபவம் வாய்ந்த அல்லது உண்மை பேசுகின்ற மக்களின் உரை என்று சொல்லத்தக்க வார்த்தை ஒன்றாவது இருக்கின்றதா என்று கேட்கிறோம்.

லார்ட் வில்லிங்டன் துரையின் ஆட்சி ஆயுள் ''அனுமாருக்கு வால் வளர்ந்தது'' என்பது போல் வளர்ந்து கொண்டே போகின்றது. அவருடைய தந்திரமும் மனப்பான்மையும் காங்கிரசுக்காரருடைய தந்திரத்துக்கும் மனப்பான்மைக்கும் சற்றும் குறைந்தது என்று சொல்லிவிட முடியாது.

காந்தியாரைக் காங்கிரசிலிருந்து மாத்திரமல்ல, பொது வாழ்விலிருந்தே விலக்கி இமயமலைக்கு தபசுக்கு அனுப்புகின்ற வரை வில்லிங்டனார் தூங்கப் போவதில்லை என்பது அவருடைய வீர முழக்கங்களிலிருந்து குருடனும், செவிடனும் கூட உணரலாம்.

விஷயங்கள் இப்படி இருக்க, சென்னை மாகாணத்தில் தோழர்கள் ஷண்முகம் மீதும், வரதராஜுலு மீதும் இரண்டொரு பார்ப்பனர்களுக்கும்,



RangaRakes tamilnavarasam.com

அவர்களது பக்தர்களுக்கும் உள்ள ஆத்திரத்தை யும் பொறாமையையும் காட்ட இந்த மாதிரியான வேஷமெல்லாம் போட்டால் காரியம் கைகூடுமா என்று கேட்கின்றோம்.

நம்நாட்டுப் பார்ப்பனர்களின் சூழ்ச்சியையும் அதன் பயனையும் யாராவது இந்த 15 வருஷ காலமாகக் கவனித்து வந்திருப்பார்களானால் பார்ப்பனர்கள் ஒவ்வொரு துறையிலும் தோல்வி அடைந்து வந்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

பார்ப்பனர்கள் தற்கால சாந்திக்கு ஏதோ தந்திரம் செய்து தப்பித்துக் கொள்ளலாம் என்று பார்க்கின்றார்களே தவிர, நிரந்தர நன்மை ஏற்படும்படி புத்திசாலித்தனமாய் நடந்துகொள்ளத் தெரியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்னமும் சொல்லுகின்றோம், தோழர் ராஜகோபாலாச்சாரியார் போன்ற உண்மையான தியாகிகளும், பாமர மக்களை ஏமாற்றிக் காரியம் கொண்டு போகத்தக்க மாதிரியில் எழுதுவதும் பேசுவதுமாய்த் தான் இருக்கிறார்களே தவிர அறிவாளிகளை ஏமாற்றும் நிலையில் ஒரு காரியமும் செய்யத் தெரியவில்லையென்றுதான் சொல்லுவோம்.

பாமர மக்களை ஏமாற்றும் தந்திரம் எப்போதுமே பயனளிக்காது என்பதை நாம் நன்றாய் அனுபவத்தில் அறிந்து விட்டோம். அது வட்டியுடன் கெடுதியைத் தான் கொடுத்துத் தீரும்.

உதாரணமாக, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்கின்ற உணர்ச்சி நம் போன்றவர்களுக்கு ஏற்பட்ட காலத்தில் அதற்கு ஏதாவது ஒரு வழி செய்திருப்பார்களானால் இன்று இந்தியாவில் காங்கிரசு தவிர வேறு ஒரு ஸ்தாபனமும் ஏற்பட்டிருக்காது என்பதுடன் இந்திய மக்கள் எல்லோரும் காங்கிரசில் சேராமல் இருப்பதற்கு வெட்கப்பட்டுக் கொண்டிருப்பார்கள் என்றும் நாம் கருதுகிறோம். மகமதியர், கிறிஸ்தவர்கள், பறையர், பள்ளர், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் முதலிய பிரிவினைகள் பூதக் கண்ணாடி வைத்துப் பார்த்தாலும் காணமுடியாததாய் இருக்கும் என்று கூடச் சொல்லுவோம்.

ஜாதி உள்ளவரை மதம் உள்ளவரை வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அழித்து விடலாம் என்று சொல்லுவது காந்தியாரை மகாத்மா என்று சொல்வது போல்தான் முடியும். ஜாதி மத பேதங்களை அழித்து மக்களை ஒன்றுபடுத்துவதுதான் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அழிப்பதாகும்.

அப்படிக்கில்லாமல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்று சொன்னவுடன் அது தேசத்துரோகம், சர்க்கார் குலாம்... என்றெல்லாம் பேசி அடக்கப் பார்த்ததின் பயன் இன்று **''சர்வம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ மயம் ஜெகத்''** என்று சொல்லும்படியாக ஏற்பட்டுவிட்டது.



இந்த நிலைக்கு தோழர் காந்தியாரே காரணம் என்பதோடு அந்த விளக்குக்கு எண்ணையாய் இருந்தவர் தோழர் ராஜகோபாலாச்சாரியார் என்றே சொல்லுவோம்.

இன்றும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் காங்கிரசுக்காரர் அதாவது ராஜகோபாலாச்சாரியார் ஒப்புக் கொள்ளுவாரானால் ஜஸ்டிஸ் கக்ஷியோ, முஸ்லீம் லீக்கோ, மாளவியா கக்ஷியோ ஆகிய ஏதாவது ஒரு கக்ஷிக்கு இந்தியாவில் பாம்புக்கு பயந்தாவது ஒண்ட இடம் கிடைக்குமா என்று கேட்கின்றோம்.

தோழர்கள் ஷண்முகம், வரதராஜுலு போன்றவர்கள் கூட காங்கிரசை விட்டு வெளியில் இருக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

ஆகவே தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சமீபத்தில் நடக்கப் போகும் பம்பாய் காங்கிரசிலும், கோவை கான்பரன்சிலும் இதற்கு ஒரு வழி செய்து விடுவார்களேயானால் இந்தியர்களுக்குள் பிரிவினையோ அரசியல் சமுதாய விஷயங்களில் அபிப்பிராய பேதமோ காணுவதற்கில்லாமல் ஒரு கொடியின் கீழ் இந்திய மக்கள் எல்லோரையும் காணலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அப்படிக்கு இல்லாமல் இப்பொழுது நடக்கின்ற விஷயமே நடக்கட்டும் பார்ப்போம் என்று சொல்லப்படுமானால் செக்குமாடு சுற்றுவது போல் 10 வருடத்துக்கு ஒரு முறை பழய இடத்துக்கே அதாவது எங்கு தவறு செய்தோமோ அந்த இடத்திற்கே தான் திரும்பவும் திரும்பவும் வந்துகொண்டே இருக்கவேண்டுமே ஒழிய வேறு எவ்வித பலனையும் காணமுடியாது என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 16.09.1934**



RangaRakes tamilnavarasam.com

# இரணியன் நாடகத்தில் தோழர் ஈ.வெ.ரா.

தோழர்களே!

சென்னை சீர்திருத்த நாடக சங்கத்தாரால் நடிக்கப்பட்ட இந்த முதல் நாடகத்துக்குத் தலைமை வகிக்கும் பெருமை எனக்களித்ததற்கு நன்றி செலுத்துகிறேன்.

நாடகம் என்பது ஒரு விஷயத்தை தத்ரூபமாய் நடித்துக் காட்டுவது என்பதோடு, அதைப் பெரிதும் மக்களின் நடத்தைக்கு வழி காட்டியாகவும், ஒழுக்கங்கள் கற்பிக்கப்படுவதற்கும் பயன் படுத்தப்படுகின்றது என்றும் சொல்லப்படுகின்றது.

ஆனால் அது அந்தப்படி தத்ரூபமாய் நடத்திக் காட்டப்படுவதும் இல்லை. மக்கள் ஒழுக்கத்துக்கும், நடப்புக்கும் வழிகாட்டியாய் நடப்பிப்பதும் இல்லை என்று சொல்லுவதற்கு நாடக அபிமானிகள் மன்னிக்க வேண்டுகிறேன்.

தத்ரூபம் என்பதில் விஷயங்களின் ரசபாவங்களும், உண்மை யாய் நடந்திருக்கும் என்று நினைக்கும்படியான எண்ணமும் ஜனங்களுக்கு விளங்க வேண்டும்.

அந்தப்படி இல்லாமல் நமது நாடகங்கள் பெரிதும் சங்கீதக் கச்சேரி போலவும், காலக்ஷேப சபை போலவும், விகட சபை போலவும், நகைகள் உடுப்புகள் காக்ஷி சாலைகள் போலவும், விஷயங்களுக்குப் பொருத்தமில்லாத பேச்சுக்களை அடுக்கி பேசும் பேச்சுவாத சபை போலவும் விளங்குகின்றது என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. நாடகங்களுக்கு நடிப்புகளில் மிக விஷேச சமயங்களில் அல்லது அசல் விஷயத்திலேயே பாட்டு வரும் சந்தர்ப்பங்களில் தவிர மற்ற சமயங்களில் பாட்டுகள் பொருத்தமற்றது என்பது நமது அபிப்பிராயம்.

உதாரணமாக நெருப்பு பிடித்துவிட்ட சமயத்தைக் காட்ட நடிக்க வேண்டியவர் தடபுடலாய் ஆத்திரப்பட்டு குளருபடியாய் இருப்பது போல் நடிக்க வேண்டுமா? அல்லது தாளம், சுதி, ராகம் முதலியவை களைக் கவனித்து சங்கீத லட்சியத்தில் திரும்பி ஜனங்களுடைய கவனத்தையும் சங்கீதத்தில் திரும்ப விட்டு விட்டால் நடிப்பு சரியானதாக இருக்க முடியுமா என்று கேட்கின்றேன். அதுபோலவே நடிப்புக்குப் பொருத்தமற்ற உடை, நடை, நகை முதலியவைகளுடன் விளங்கினால் விஷயம் நடந்ததாகத் தத்ரூபமாய் கருதப்பட முடியுமா?

மேல்நாடுகளில் ரசபாவங்களுக்காகவும் தத்ரூபமாய் நடந்ததாகக் காட்டப்படும் நடப்புக்காகவும் நடத்தப்படும் ட்றாமாக்களில் பாட்டு என்பதே மிக மிக அருமையாய்த்தான் இருக்கும். சங்கீதத்துக்காக நடக்கும் விஷயத்தை அங்கு ஆப்ரா என்று சொல்லப்படுமே தவிர, ட்றாமா என்று சொல்லமாட்டார்கள். இங்கு சங்கீத வித்வான்களே நாடக மேடையைக் கைப்பற்றிக் கொண்டதானது நாடகக் கலையைச் சங்கீதம் அழித்துவிட்டது என்றும், மக்களது நாடகாபிமானமும் சங்கீதத்தில் திருப்பப்பட்டு விட்டது என்றும் தான் கருத வேண்டும்.

நாடகம் நடிக்கப்படும் கதைகள் விஷயமும் தற்கால உணர்ச்சிக்கும், தேவைக்கும், சீர்திருத்த முறைக்கும் ஏற்றதாயில்லாமல் பழமையைப் பிரசாரம் செய்யவும், மூடநம்பிக்கை, வர்ணாச்சிரமம், ஜாதி வித்தியாச உயர்வு தாழ்வு, பெண் அடிமை, பணக்காரத் தன்மை முதலிய விஷயங்களைப் பலப்படுத்தவும், அவைகளைப் பாதுகாக்கவும் தான் நடிக்கப்படுகின்றதே ஒழிய வேறில்லை. அரிச்சந்திரன் கதை, நந்தனார் கதை முதலாகியவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். அரிச்சந்திரன் கதையில் சத்தியம் பிரதானம் என்று சொல்லப்பட்டாலும் சத்திய அசத்திய விஷயம் நடக்காமல் கதையில் அலட்சியமாய் இருக்கிறது. ஜாதி வித்தியாசம், தீண்டாமை, பெண் அடிமை, பார்ப்பன ஆதிக்கம், பணக்காரத் தன்மை, எஜமானத் தன்மை ஆகியவைகள் தான் தலைதூக்கி இருக்கிறது. அது போலவே நந்தன் கதையிலும், ஆள் நெருப்பில் விழுந்து வெந்து போனதுதான் மிளிர்கின்றதே தவிர, உயிருடன் தீண்டாமை ஒழிக்கப்பட்டதாக இல்லவே இல்லை. ராமாயணமும் சீதையை படுத்தின பாடு பெண் ஒரு சொத்து போல் பாவிக்கப்படுகிறதும் விளங்கும்.

இப்படிப்பட்ட கதைகள் ஒழிக்கப்பட வேண்டும். சுயமரியா தையும், சீர்திருத்த வேட்கையுமுள்ளவர்கள் அதை நடிக்கக் கூடாது.

இரணியன் கதையில் வீர ரசம், சூட்சித்திரம், சுயமரியாதை ஆகியவைகள் விளங்கினதோடு பகுத்தறிவுக்கு நல்ல உணவாகவும் இருந்தது. ஆனால் சில விஷயங்களில் தலைகீழ் மாறுதலாகவும், கடின வார்த்தையாகவும் காணலாம். சீர்திருத்த நாடகம் என்றாலே மாறுதல் இருந்துதான் தீரும். மாறுதலுக்கு அவசியமானதும் பதிலுக்கு பதிலானதுமான வார்த்தைகள் இருந்தால்தான் பழமை மாற சந்தர்ப்பம் ஏற்படும். அப்படிக்கில்லாமல் இருந்தால் தகுந்த மாறுதல் ஏற்பட இடமிருக்காது. ஆரியப் புராணங்களில் ஆரியர்களல்லாதவர்களை, குரங்கு, அசுரன், ராக்ஷதன், சண்டாளன், பறையன் என்பன போன்ற வார்த்தைகளையும் அது உபயோகிக்கும் முறையையும் பழக்கத்தில்



RangaRakes tamilnavarasam.com

இருந்து வரும் மாதிரியையும் பார்த்தால் இந்த சரித்திரம் படிப்பதில் அவசியமான மாறுதல் ஏற்பட உதவி செய்யுமா என்பது சந்தேகம் தான்.

நிற்க இச்சரித்திரம் உண்டாக்கிய தோழர் புதுவை பாரதிதாசனை நாம் போற்றிப் பாராட்ட வேண்டும். அவர் உணர்ச்சியுடன் உண்டாக்கி இருக்கிறார். இன்னமும் இதுபோல் பல நாடகங்கள் உற்பத்தி செய்ய வேண்டும். பாத்திரர்களுக்கு கற்பித்த தஞ்சை தோழர் டி.என். நடராஜன் அவர்களின் ஆசிரியத் தன்மை மிகவும் போற்றத்தக்கது. அவர் 20 வருஷமாய் பொதுநலச் சேவையில் இருந்து வருகிறவர். ஜெயிலுக்கும் சென்றவர். அவர்கள் இருவருக்கும் இந்த இரண்டு பதக்கங்களைச் சீர்திருத்த நாடக சங்கத்தார் சார்பாய் சூட்டுகிறேன்.

நாடகத்துக்கு உதவி செய்த தோழர்கள் சி.டி.நாயகம், எஸ்.எஸ்.ஆனந்தம், அழகப்பா முதலியவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். சிறப்பாக தோழர் மாசிலாமணி முதலியவர்கள் இந்நாடகத்துக்கு விளம்பரம், அச்சுவேலை, காகிதம் முதலிய விஷயங்களில் திரேகப் பிரயாசை, பொருள் செலவு முதலியவைகள் செய்ததுடன் இவ்வளவு சிறப்புக்குக் காரணமாய் இருந்ததாகவும் கேட்டு மிகவும் மகிழ்வதோடும் அவரையும் பாராட்டி நன்றி செலுத்துகிறேன்.

இந்த புதிய நாடகத்துக்கு இவ்வளவு தோழர்கள் விஜயம் செய்து கௌரவித்ததற்கும், நாடக பாத்திரர்களுக்கும் சபையாருக்கும் ஊக்கமளித்ததற்கும் நான் நன்றி செலுத்துகிறேன்.

குறிப்பு: *சென்னை சீர்திருத்த நாடக சபையார் 09.09.1934 மாலை விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடித்துக் காட்டிய நாடகத்தின் இடையில் சீர்திருத்த நாடகத்தின் தேவை குறித்து பேசியது.*

**பகுத்தறிவு - சொற்பொழிவு - 16.09.1934**



# சுயமரியாதைத் திருமணங்கள்

## பௌனாம்பாள் – அழகப்பா திருமணம்

தோழர்களே! இன்று மணமகனாக வீற்றிருக்கும் எம்.கே. அழகப்பா ‘‘நாட்டுக்கோட்டை செட்டிமார்’’ வம்சத்தைச் சேர்ந்தவர். மணமகள் பௌனாம்பாள் ‘‘வேளாள’’ வம்சத்தைச் சார்ந்தவர். இந்த மணம் புரோகிதச்சடங்கு முதலிய அனாச்சார வழக்கங்களின்றி நடைபெறுகிறது. மணமக்கள் இருவரும் தாங்களே மனமொத்து மண ஒப்பந்தம் செய்து கொள்ள முன் வந்தது பாராட்டத்தக்கது. வைதீகர்கள் பழைய சாஸ்திரத்தை அனுசரித்து அறிவுக்கும், ஞாயத்திற்கும் பொருந்தாத முறையில் நூற்றுக்கு 90 கல்யாணங்களைச் செய்து விடுகின்றனர். அது கடைசியில் யாதொரு பிரயோஜனத்தையும் அளிக்காமல் கஷ்டத்தையே விளைவிக்கின்றது. யெப்படியாவது கல்யாணம் ஆனால் போதுமென்று முயர்ச்சிக்கின்றனர். தாங்களே தங்களுக்கு இஷ்டமானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள மணமக்களுக்கு சுதந்தரம் கிடையாது. பெண் கொள்வதை சந்தையில் மாடுவாங்குவதாக நினைத்து செய்து விடுகின்றனர். பொருத்தம் பார்ப்பதில் மணமக்களுக்கு இருக்க வேண்டிய மனப் பொருத்தம் பார்க்கப் படுவதில்லை.

வழியே போகும் ஒரு பார்ப்பானையோ, வள்ளுவனையோ கூப்பிட்டுப் பொருத்தம் பார்க்கச் சொல்லி மணத்தை நடத்தி விடுகின்றனர். மாப்பிள்ளை 7½ அடியும் பெண் 2½ அடியுமாக இருந்தாலும் பரவாயில்லை பார்ப்பான் சொல்லிவிட்டால் போதும். போன உடனேயே அறுத்துவிட்டு வந்து விட்டால் தலைவிதியென்று சொல்லிவிடுவார்கள். பெண்களும் அவ்வாறே நினைத்துக் கொண்டு முக்கி முணகி மூலையில் கிடக்க வேண்டியது தான். இந்த அனியாயத்தை பொருத்துக் கொண்டிருக்கக் கூடாது. கூடிய சீக்கிரம் பகுத்தறிவு பெற்று விவாக தம்பதிகளான அழகப்பா பௌனாம்பாளைப் பின்பற்றி நடப்பீர்களாக.

குறிப்பு: *16.09.1934 திருச்சி தமிழ்நாடு புரோகித மறுப்புச் சங்கத்தின் ஆதரவில் பௌனாம்பாள் - அழகப்பா திருமணத்திற்கு தலைமையேற்று ஆற்றிய சொற்பொழிவு.*

**பகுத்தறிவு - சொற்பொழிவு - 23.09.1934**



RangaRakes tamilnavarasam.com

# விஷமத்துக்கு விஷமமா? அல்லது உண்மையா?

திருச்சி ''நகர தூதன்'' பத்திரிக்கையில் தோழர் அவனாசிலிங்கம் நிற்கவில்லை என்கின்ற தலைப்பின் கீழ் ''கோயமுத்தூர், சேலம், வடாற்காடு ஜில்லாக்களின் இந்திய சட்டசபைத் தொகுதிக்கு காங்கிரஸ் சார்பாக அபேட்சகராய் நிறுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் தோழர் அவனாசிலிங்கம் செட்டியார் கடைசிவரை அபேக்ஷகராய் நிற்க மாட்டாராம். காங்கிரசின் பெயரால் தோழர் அவனாசிலிங்கம் செட்டியாரை முன் நிறுத்தி அத்தொகுதியைப் பண்படுத்தி முடிந்ததும் கடைசியில் இருக்கக் கூடிய நிலைமையை அனுசரித்து இறுதியாகத் தோழர் இராஜகோபாலாச்சாரியாரே அதில் அபேட்சகராக நின்றுவிட ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு விட்டதாக நம்பத்தகுந்த இடத்திலிருந்து தெரியவருகிறது" என்று ஒரு சிறு குறிப்புக் காணப்படுகிறது.

''பொய்க்கு பொய், கோளுக்குக் கோள், விஷமத்துக்கு விஷமம் செய்யத் தகுதி உள்ளவனுக்குத்தான் உலகில் இடமுண்டு'' என்கின்ற ஒரு ஆப்த வாக்கியம் உண்டு.

நகர தூதனில் காணப்படும் இந்தக் குறிப்பானது நகர தூதனுக்கு நம்பத் தகுந்த இடத்திலிருந்து வந்திருந்தாலும் இருக்கலாம் என்றாலும் அந்த நம்பத் தகுந்த இடத்துக்கு, நம்பத்தகுந்த இடத்திலிருந்து வந்தது உண்மையாயிருக்குமா அல்லது மேல்கண்ட ஆப்த வாக்கியத்தை ஒட்டியதாக இருக்குமா என்பதை உறுதி கூற நம்மால் முடியவில்லை.

ஆகவே தோழர் அவனாசிலிங்கம் அவர்கள் நிற்கப் போவதில்லை என்பது உண்மையாயிருந்தாலும் இருக்கலாம். அல்லது ''பொய்க்குப் பொய், கோளுக்குக் கோள், விஷமத்துக்கு விஷமம்'' என்கின்ற மனுதர்ம சாஸ்திரத்தை அனுசரித்து இருந்தாலும் இருக்கலாம் என்று எண்ணுகிறோம்.

பகுத்தறிவு - செய்தி விளக்கக் குறிப்பு - 23.09.1934



# சென்னை (S.I.L.F) பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுக்கு தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் அனுப்பியிருக்கும் தீர்மானங்கள்

இம்மாதக் கடைசியில் சென்னையில் நடக்கும் தென்னிந்திய நலவுரிமைச்சங்க மகாநாட்டிற்கு தோழர் ஈ.வெ. ராமாசாமி அவர்கள் குறைந்தபட்ச வேலைத்திட்டம் எனக் கருதிக் கொண்டு ஒரு வேலைத்திட்டத்தை அம்மகாநாட்டு வரவேற்புக் கமிட்டிக்கு ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பியிருக்கிறார்.

அது முதலாவது விஷயாலோசனைக் கமிட்டிக்கு வைக்கப்படுமா என்னும் விஷயத்திலேயே தைரியம் கொள்ளுவதற்கில்லை என்றால், இந்நிலையில் அது அக்கூட்டத்தாரால் ஒப்புக் கொள்ளப்படுமா என்னும் விஷயத்தில் என்ன அபிப்பிராயம் கொள்ள வேண்டியிருக்கும் என்பதைப் பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை.

அக்கட்சிக்குத் தலைவரான பொப்பிலி ராஜா அவர்கள் ஒரு பெரிய ஜமீன்தார், ராஜகுமாரர், மிக்க செல்வவந்தர் என்றாலும் கூட, அவரைப் பொருத்தவரையில் அவ்வேலைத்திட்ட விஷயத்தில் பெருத்த ஆக்ஷேபனை இருப்பதாகச் சொல்ல முடியாது. அவரது மனப்பான்மை சமதர்மத்தைத் தழுவினதேயாகும். ஆனால் அவரது பழக்க வழக்கம், பிரபுத் தன்மையில் ஈடுபட்டு வந்திருப்பதால் திடீரென்று பெருத்த மாறுதலை எதிர்பார்க்க முடியாது என்றாலும், அவரது வாழ்வு சமதர்மத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அவர் இக்கட்சியால் எவ்வித லாபமும் அடைய ஆசைப்படவில்லை. கட்சிக்காக இதுவரையில் பெருத்த நஷ்டத்தையும் பல அசௌகரியங்களையும் அடைந்திருக்கிறார்.

ஆற்றில் அடித்துக் கொண்டு போகிறவனுக்கு மரக்கிளை அகப்பட்டது போல் அக்கட்சி ஒழிந்து போகும் சமயத்தில் பொப்பிலி ராஜா அவர்கள் அக்கட்சிக்குக் கிடைத்தார் என்று தான் சொல்ல வேண்டும். அக்கட்சியின் மற்ற பிரமுகர்கள் இத் தீர்மானங்களைக் கேட்டதும், பார்த்ததும் காதையும், கண்ணையும் பொத்திக் கொள்ளுவார்களோ



RangaRakes tamilnavarasam.com

என்று பயப்படுகின்றோம். ஆனாலும் நமது கடமையைச் செய்து பார்த்துவிட வேண்டும் என்கின்ற தன்மையில் அனுப்பியிருக்கிறோம்.

ஆனால் மற்றபடி பார்ப்பனரல்லாதாருக்காக என்று உழைத்து வந்து பல கஷ்டங்களையும், நஷ்டங்களையும் அடைந்து வந்திருக்கும் அக்கட்சியில் உள்ள தியாகிகள் பலர் இத் தீர்மானத்துக்கு ஆதரவளிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. பொது மக்களில் பெரும்பான்மையோர் இத் தீர்மானத்துக்கு ஆதரவாயிருந்தாலும் கட்சிப் பிரமுகர்களின் ''ஆத்ம'' பலத்தின் முன் இந்த ஆதரவு எந்நிலை அடையுமோ தெரியாது. ஆகையால் பொறுத்திருந்து பார்ப்போம்.

## வேலைத் திட்டமாவது

1. அரசாங்க உத்தியோக சம்பளங்கள் மக்களின் பரிசுத்த தன்மையைக் கெடுக்கக் கூடியதாகவும், பேராசையை உண்டாக்கக் கூடியதாகவும், இந்தியப் பொருளாதார நிலைமைக்கு மிகமிக தாங்க முடியாததாகவும் இருப்பதால் அவைகளைக் குறைத்து உத்தியோகஸ்தர்களுடைய வாழ்க்கையின் அவசிய அளவுக்கு ஏற்றதாகவும், மீத்துப் பெருக்கி வைப்பதற்கு லாயக்கில்லாததாகவும் இருக்கும்படி செய்ய வேண்டும்.
2. பொதுஜன தேவைக்கும் சௌகரியத்துக்கும் நன்மைக்கும் அவசிய மென்று உற்பத்தி செய்யப்படும் சாமான்களின் தொழிற் சாலைகள், இயந்திர சாலைகள், போக்குவரவு சாதனங்கள் முதலியவை அரசாங்கத்தாராலேயே நடைபெறும்படி செய்ய வேண்டும்.
3. ஆகார சாமான்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும், அவற்றை வாங்கி உபயோகிக்கும் பொது ஜனங்களுக்கும் மத்தியில் தரகர்கள், லேவாதேவிக்காரர்கள் இல்லாதபடி கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி அதன் மூலம் விவசாயிகளின் கஷ்டத்தையும், சாமான் வாங்குபவர்களின் நஷ்டத்தையும் ஒழிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
4. விவசாயிகளுக்கு இன்று உள்ள கடன்களை ஏதாவது ஒரு வழியில் தீர்ப்பதுடன் இனிமேல் அவர்களுக்குக் கடன் தொல்லைகள் ஏற்படாமல் இருக்கும்படியும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.
5. குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் குறிப்பிட்ட ஒரு அளவு கல்வியாவது எல்லா மக்களுக்கும் ஏற்படும்படியாகவும், ஒரு அளவுக்காவது மதுபானத்தின் கெடுதி ஒழியும்படியாகவும், ஒரு அளவுக்கு உத்தியோகங்கள் எல்லா ஜாதி மதக்காரர்களுக்கும் சரிசமமாய் இருக்கும்படிக்கும் உடனே ஏற்பாடுகள் செய்வதுடன் இவை நடந்து வருகின்றதா என்பதையும் அடிக்கடி கவனித்து, தக்கது செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.



6. மதங்கள் என்பவைகள் எல்லாம் அவரவர்களுடைய தனி எண்ணமாகவும், தனி ஸ்தாபனங்களாகவுமே இருக்கும்படி செய்வதுடன், அரசியலில் - அரசியல் நிர்வாகத்தில் அவை எவ்வித சம்மந்தமும், குறிப்பும் பெறாமல் இருக்க வேண்டும். ஜாதிக்கென்றோ மதத்திற்கென்றோ எவ்வித சலுகையோ உயர்வு தாழ்வு அந்தஸ்தோ அவற்றிற்காக அரசாங்கத்திலிருந்து தனிப்பட்ட முறைகளைக் கையாடுவதோ ஏதாவது பொருள் செலவிடுவதோ ஆகியவை கண்டிப்பாய் இருக்கக் கூடாது.
7. கூடியவரை ஒரு குறிப்பிட்ட ரொக்க வரும்படிக்காரருக்கோ, அல்லது தானே விவசாயம் செய்யும் விவசாயிக்கோ, வரிப்பளுவே இல்லாமலும் மனித வாழ்க்கைக்கு சராசரி தேவையான அளவுக்கு மேல் வரும்படி உள்ளவர்களுக்கும், அன்னியரால் விவசாயம் செய்யப்படுவதன் மூலம் பயனடைபவர்களுக்கும் வருமானவரி முறைபோல் நிலவரி விகிதங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.
8. லோக்கல் போர்டு, முனிசிபாலிட்டி, கோவாபிரேட்டிவ் இலாகா ஆகியவைகளுக்கு இன்னமும் அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு இவற்றின் மூலம் மேலே குறிப்பிட்ட பல காரியங்கள் நிர்வாகம் செய்ய வசதிகள் செய்து தக்க பொருப்பும், நாணையமும் உள்ள சம்பள அதிகாரிகளைக் கொண்டு அவைகளை நிர்வாகம் செய்யச் செய்ய வேண்டும்.
9. விவகாரங்களையும் சட்ட சிக்கல்களையும் குறைப்பதுடன் சாவு வரி விதிக்கப்படவேண்டும்.
10. மேலே கண்ட இந்தக் காரியங்கள் நடைபெறச் செய்வதில் நாமே சட்டங்கள் செய்து அச்சட்டங்களினால் அமுலில் கொண்டு வரக்கூடியவைகளை சட்ட சபைகள் மூலமும், அந்தப்படி சட்டங்கள் செய்து கொள்ள அதிகாரங்கள் இல்லாதவைகளை கிளர்ச்சி செய்து அதிகாரங்கள் பெறவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

**பகுத்தறிவு - அறிக்கை - 23.09.1934**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரசை விட்டு காந்தியார் விலகுகிறாராம்

### வழ வழா அறிக்கை

தோழர் காந்தி அவர்கள் ''காங்கிரசை விட்டு நான் விலகப் போவதாக ஏற்பட்ட செய்தி உண்மைதான்'' என்ற தலைப்பில் ஒரு நீண்ட அறிக்கை விடுத்திருக்கிறார்.

அதில் அவர் ''என் இஷ்டப்படி காங்கிரசுக்காரர்கள் நடக்க வில்லை.

காங்கிரஸ்காரர்கள் பலரிடத்தில் நாணையமில்லை.

என் கொள்கையில் நம்பிக்கை யில்லாமலே பல முக்கிய காங்கிரஸ்வாதிகள் என்னைப் பின்பற்றுவதாய் நடித்திருக்கிறார்கள்.

மற்றும் பலர் அஹிம்சையிலும் சத்தியத்திலும் நம்பிக்கை இல்லாமல் அது இருப்பது போல வேஷம் போடுகிறார்கள்.

அஹிம்சையையும், சத்தியத்தையும் தற்சமயத்துக்கு ஒரு வேலைத் திட்டமாய்க் கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்களுக்கு அவை ஒரு வாழ்க்கைச் சாதனமாக இல்லை.

கதரில் நம்பிக்கை இல்லாதவர்கள் கதரைக் கட்டிக்கொண்டு ஏமாற்றுகிறார்கள். சிலர் சமயத்துக்குக் கட்டிக் கொள்ளுகிறார்களே தவிர உண்மையில் கட்டுவதில்லை.

என்னை உபயோகித்துக் கொள்ளுகிறதற்காகவே என்னிடம் பக்தி விசுவாம் காட்டுகிறார்கள்.''

என்றெல்லாம் குறிப்புக் காட்டிவிட்டு ''நான் சில தீர்மானங்களை வரப்போகும் காங்கிரசில் பிரேரேபித்துவிட்டு அவை ஒப்புக் கொள்ளப்படவில்லையானால் காட்டுக்குப் போய்விடுவேன்'' என்று சொல்லி அவ்வறிக்கையை முடித்திருக்கிறார்.

அத்தீர்மானங்களோ பழைய தீர்மானங்களே அல்லாமல் புதியது ஒன்றும் இல்லை.

அதாவது:-



1. ''சுயராஜ்யம்'' பெற சட்டரீதியானதும் சமாதானமானதுமான வழியில் உழைக்க வேண்டும்'' என்கின்ற வார்த்தைகளை மாற்றி ''சத்தியமும், அஹிம்சையுமான'' வழியில் உழைக்க வேண்டும்'' என்கின்ற வார்த்தையைப் புகுத்த வேண்டும்.
2. காங்கிரசுக்குச் சந்தாவாக ஒவ்வொருவரும் 4 அணாவுக்குப் பதிலாக தாமே நூற்ற 8,000 அடி நூல் செலுத்த வேண்டும்.
3. 6 மாத காலம் காங்கிரஸ் அங்கத்தினராய் இருந்தவருக்கே ஓட்டுரிமை உண்டு.
4. ''காங்கிரசுக்கு பிரதிநிதிகள் 1000 பேர்கள் தான் இருக்க வேண்டும்'' என்பவைகளாகும்.

இவைகளில் புதிய கொள்கைகளோ, புதிய நோக்கமோ ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அஹிம்சை, சத்தியம் என்பது மோக்ஷ நரகம் என்பது போன்ற ஒரு கற்பனைச் சொல்லே தவிர விளக்கமான அர்த்தம் உள்ள மூலச்சொல் அல்லவென்பதே நமது அபிப்பிராயம்.

உலகில் மனிதன் நிலைமைக்குத் தக்கபடி தன்னைச் சரிப்படுத்திக் கொள்வதுதான் இயற்கையே தவிர, இஷ்டத்துக்கும், சௌகரியத்துக்கும் விரோதமாக நிர்ப்பந்தத்தில் வாழ்வது இயற்கையல்ல.

இவ்வார்த்தைகள் கற்பு, ஒழுக்கம் என்னும் வார்த்தைகளால், வலுத்தவன், இளைத்தவனை ஏமாற்றி அடிமைப்படுத்தி அடக்கி ஆள்வதுபோல் அஹிம்சை, சத்தியம் என்னும் பூச்சாண்டிகளைக் காட்டி, பாமர மக்களை ஏமாற்றி அடக்கி ஆளும் சூட்சியேயாகும்.

சத்தியத்தைப் பேசவேண்டுமானால் அஹிம்சையோடு வாழ வேண்டுமானால் மார்க்ஸால், லெனினால் சிருஷ்டிக்கப்பட்ட உலக மக்களுக்கு ஒரு சமயம் சாத்தியமாய் இருக்கலாம். மற்றபடி ''கடவுளாலோ'' காந்தீயத்தாலோ உண்டாக்கப்பட்ட உலகுக்கு சத்தியம், அஹிம்சை என்பது ஹம்பக்கே தவிர அந்த வார்த்தைகளிலும் பிரயோகத்திலும் கூட சத்தியம், அஹிம்சை என்பனவற்றின் வாடையே இல்லையென்று தூக்குமேடையில் இருந்து கூடச் சொல்ல முடியும்.

கோவில் பிரவேசம் என்று கூப்பாடு போடுவது ஒரு எட்டில், மறு எட்டில் இப்போது தேசம் தயாராயில்லை, பெரும்பான்மை ஜனங்கள் அதற்கு அனுகூலமாயில்லை, ஆதலால் அதை நழுவ விட்டுவிட வேண்டுமென்பது, மறு எட்டில் என்றால் சத்தியம் எங்கே இருக்கிறது? மகாராஜாக்கள் அப்படியே இருக்க வேண்டும், ஏழைகள் செருப்புத் தைக்க வேண்டும், மாடு மேய்க்க வேண்டும், கல்லுடைக்க வேண்டும், கதர் நூற்க வேண்டும் என்றால் சத்தியம் அஹிம்சை எங்கே இருக்கிறது? எப்படி இருந்தாலும் இந்த பிரேரேபணை காங்கிரசில்



RangaRakes tamilnavarasam.com

நிறைவேறித்தான் தீரும். ஏனென்றால் எவ்வளவு அயோக்கியனும் ''சத்தியம் கூடாது அஹிம்சை கூடாது'' என்று சொல்ல ஒருபோதும் முன்வரமாட்டான்.

இத்தீர்மானம் நிறைவேறிவிட்டால் சட்ட ரீதியும், அமைதியும் என்கின்ற வார்த்தைகள் என்ன கதியாவது என்பது நமக்கு விளங்கவில்லை.

சட்டரீதி அல்லாத - அமைதி அல்லாத காரியங்கள் சத்தியமான தாகவும் அஹிம்சையானதாகவும் இருந்தால் எதையும் செய்யலாமா என்று கேட்கின்றோம்.

இத்தீர்மானம் நிறைவேறி விட்டதாகவே வைத்துக் கொள்ளு வோம். அப்போது அதற்கு அனுகூலமாய் ஓட்டுக் கொடுத்தவர்கள் எல்லாம் தோழர் சத்தியமூர்த்தி உட்பட சத்தியமாகவும், அஹிம்சை யாகவும் நடப்பார்கள் என்று தோழர் காந்தியார் நம்பிக் கொண்டு தான் மறுபடியும் காங்கிரசில் இருக்கப் போகிறாரா? என்று கேட்கின்றோம்.

இதுவரை நிறைவேறின அனேக தீர்மானங்கள் விஷயத்தில் முக்கிய காங்கிரஸ்வாதிகளும், மேன்மையான காங்கிரஸ்வாதிகளுமே கட்டுப்பட்டு உண்மையாய், நாணையமாய் நடக்கவில்லை என்று காந்தியாரே ஒப்புக்கொள்ளும்போது, இந்த தீர்மானங்கள் விஷயத்தில் மாத்திரம் இனிமேல் அவரது சிஷ்யர்களும், ஆதரவாளர்களும் மற்றும் '10 லக்ஷம்' காங்கிரஸ் மெம்பர்களும் உண்மையாய் நடந்து கொள்வார்கள் என்பதற்கு என்ன ஆதாரம் என்று கேட்கிறோம்.

இனிமேல் பொய்ச் சத்தியம் செய்வதில்லை என்று ஒருவன் புதுச் சத்தியம் செய்தால், அது பழய சத்தியத்தில் சேர்ந்தது அல்ல என்பதற்கு என்ன பரீக்ஷை என்றும் கேட்கின்றோம்.

நாட்டில் காங்கிரசுக்கு மரியாதை போய், காங்கிரசின் நாணையத்தில் ஜனங்களுக்கு சிறிதும் நம்பிக்கையற்று, காங்கிரசுக் காரர்களுக்கு மதிப்பே இல்லாமல் அதன் கொள்கைகளும், போக்கும் சிரிப்பாய்ச் சிரிக்கும் நிலை ஏற்பட்டு இருப்பதை அறிந்து ஒரு புதிய கரணம் போட்டு அவற்றை மறுபடியும் நிலைநிறுத்தச் செய்யப்படும் தந்திரமே ஒழிய இதில் புதிய தத்துவமோ, அனுகூலமோ ஏதும் இருப்பதாகவோ, ஏற்படப்போவதாகவோ நம்மால் நம்ப முடியவில்லை.

கதர் தீர்மானத்தை எடுத்துக் கொண்ட போதிலும் இதுவும் பழைய கருப்பனே அல்லாமல் புதுச் சங்கதி என்ன இருக்கிறது என்று கேட்கின்றோம்.

15ம் நெம்பர் நூல் 8000 அடி நீளம் தன் கையால் நூற்று மாதந்தோறும் கதர் டிப்போவுக்கு அனுப்ப வேண்டும் என்று 1924ம் வருஷத்திலேயே தீர்மானித்து இருக்கிறது. ஆதலால் இப்போதும் பம்பாய் காங்கிரசில் அது நிறைவேறி விடுவதில் அதிசயமில்லை. ஆனால் கைதூக்கினவர்கள் நூற்பார்களா? இது சாத்தியமா? இதனால் நாட்டுக்கு ஏதாவது பயன் உண்டா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம். கோடிக்கணக்கான ரூபாய்கள் நூல் நூற்பதற்கும், கதருக்கும் பிரசாரத்தில் மாத்திரம் செலவாகிவிட்டது. அப்படி இருந்தும் ராட்டினம் கண்காட்சி சாலையில் மாத்திரம் பார்க்கலாம். அல்லது காட்டுமிராண்டிப் பருவமுள்ள மக்களிடத்தில் மாத்திரம் பார்க்கலாம். என்கின்ற நிலை வந்து கொண்டிருக்கின்றது. மாதம் 100, 150 ரூபாய் வீதம் கதர் இலாக்காவில் பணம் அடைகிறவர்கள் ''பண்டாரச் சந்நிதியும், சங்கராச்சாரியும், விபூதி உருத்திராக்ஷம் தரித்திருப்பது போல்தான் ராட்டினம் சுற்ற வேண்டியதாய் இருக்கிறது'' என்று சொல்லக்கூடிய நிலைக்கு நூல் நூற்கும் தன்மை வந்துவிட்டதென்றால், இந்தத் தீர்மானம் பாசாகித்தான் என்ன காரியம் சாதித்துவிட முடியும் என்பது நமக்கு விளங்கவில்லை. அப்படியே எல்லோரும் நூற்பதாய் இருந்தாலும் 34 கோடி பேருக்கும் கதர் துணி வேண்டுமானால் வேலைக்கு லாயக்குள்ள இந்திய மக்கள் எல்லோரும் எப்போதுமே நூற்றாலும் முடியாது என்றுதான் சொல்லுவோம்.

மற்றும் காங்கிரசில் உள்ள ஊழல்கள், காங்கிரஸ்காரர்களிடத்தில் உள்ள நாணையக் குறைவுகள், அவர்களது சுயநலங்கள், சூழ்ச்சிகள், வஞ்சகங்கள் ஆகிய காரியங்களைக் காந்தியும் இன்றுதான் அறிந்தவர் போல் குறிப்பிடுவது நமக்கு எல்லாவற்றையும் விட ஆச்சரியமாய் இருக்கிறது. இதைப்பற்றி விவரிக்காமல் விட்டுவிடுவதே நலம் என்று கருதுகிறோம். கடைசியாக ஒன்று கேட்கின்றோம்.

அதாவது சத்தியம், அஹிம்சை, நூல்சந்தா, கதர், பிரதிநிதிகள் குறைப்பு ஆகியவைகள் பாசாகி அந்தப்படியே ஜனங்கள் நடக்கின்றார்கள் என்றே வைத்துக்கொண்டாலும், அதற்கு மேல் செய்கின்ற வேலை என்ன? என்பது நமக்கு விளங்கவில்லை.

தனது சுயராஜ்யத்துக்கு தனக்கே அர்த்தம் தெரியவில்லை என்று காந்தியார் சொல்லியாகிவிட்டது. மேலும் சத்தியாக்கிரகத்துக்காகவே உயிர் வாழ்வதாகவும், சத்திய சோதனைக்காகவே அரசியலில் நுழைந்ததாகவும் சொல்கிறார். இந்து மதமே உருவாரமாக வந்ததாகவும் அதற்காகவே மூச்சு விடுவதாகவும் சொல்லுகிறார். ஆனால் சத்தியம் எது? அசத்தியம் எது? சத்திய சோதனை என்றால் என்ன? என்பனவற்றை எங்கும் விளக்கி இருப்பதாகத் தெரியவில்லை.

சுயராஜ்யத்துக்கு எப்படி விளக்கம் கூற முடியவில்லையோ, அதுபோல்தான் இவைகளுக்கும் விளக்கம் கூறமுடியாதவைகளாய் போய்விட்டன. இதற்காக மக்கள் தியாகம் செய்யவேண்டும்; அடிபட வேண்டும், சிறை செல்ல வேண்டும், சட்டமறுப்பு செய்ய வேண்டும் என்றெல்லாம் பேசினால், இவை மக்களுக்கு புரிகின்றதா என்று


RangaRakes tamilnavarasam.com

கேட்கின்றோம். ஆகையால் காந்தியாரின் அறிக்கையானது வழ வழா கொழ கொழா என்று யாருக்கும் அருத்தமாகாத முறையில் எவ்வித பிடியும் இல்லாத மாதிரியில் இருக்கின்றது என்பதோடு, காங்கிரசில் இருக்கும் பழைய ஆசாமிகளுக்கும் படித்த கூட்டத்தாருக்கும், பார்ப்பனர்களுக்கும் மாத்திரம் பயனளிக்கக் கூடியதாக இருக்கின்றதே ஒழிய வேறில்லை என்பதே நமது முடிவு.

**பகுத்தறிவு - தலையங்கம் - 23.09.1934**



# ஷண்முகமும் ஒட்டவாவும்

தோழர் ஷண்முகம் அவர்களைப் பற்றிப் பார்ப்பனர்கள் பொறாமைப்பட்டு இந்த சுமார் இரண்டு வருஷ காலமாகச் செய்து வரும் விஷமப் பிரசாரத்திற்கு முக்கிய ஆஸ்பதமாய் கொண்டது ஒட்டவா ஒப்பந்தத்தில் தோழர் ஷண்முகம் கலந்திருந்தார் என்பதே.

இந்த ஒட்டவா ஒப்பந்தம் என்கின்ற ஓலமே ''கீழ்'' முதல் ''மேல்'' வரையில் தங்களது விஷமத்தனத்துக்கும், இழி பிரசாரத்துக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்றாலும், அந்த ஒட்டவா ஓலம்தான் என்ன என்று பார்ப்போம்.

இழவு வீடுகளில் துக்கத்துக்குச் சிறிதும் சம்பந்தப்படாத பெண்கள் கூலிக்கு மார்பு வீங்கும்படி மாரடித்துக் கொண்டு புரளுவது போல் ''ஒட்டவா விஷயம் என்றால் என்ன? அதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?'' என்கின்ற விஷயங்களே தெரியாமல் ஒரே கூப்பாடாக கத்திக் கொண்டு ''ஒட்டவா வீரர்'' ''ஒட்டவா வீரர்'' என்று எழுதி வருகின்றனர்.

ஒருவன் ''எல்லா வகுப்பு மக்களுக்கும் சம சுதந்திரம் வேண்டுமென்று'' கேட்டால் அவனை வகுப்புவாதி என்பதும், ''உங்கள் சுயராஜ்யத்துக்கு அர்த்தமென்ன'' என்று கேட்டால் அவனை தேசத்துரோகி என்பதும், ஜாதித் திமிர்களைப் பற்றி பேசினால் பிராமணத் துவேஷி என்பதும், தீண்டாமைக் கொடுமையைப் பற்றிப் பேசினால் மதத்துரோகி என்பதும் - எப்படி பார்ப்பனர்களுக்கும் அவர்களது கூலிகளுக்கும் உரிமையோ, அது போல் ஒருவன் இந்தப் பார்ப்பனர்களுக்கும் அவர்களது கூலிகளுக்கும் புரியாத காரியத்தையோ, அல்லது இவர்களது நன்மைக்கு விரோதமான காரியத்தையோ செய்துவிட்டால், அவனை ஒரே அடியாக சர்க்கார்தாசன் என்று கூப்பாடு போடுவதும் வழக்கமாக இருந்து வருகின்றது.

தோழர் ஷண்முகம் அவர்களைச் சுமார் ஒன்றரை வருஷத்துக்கு முன்பு அதாவது அவர் சட்டசபை பிரசிடெண்ட் ஆவதற்கு முன்பு ஒட்டவா விஷயமாய் தங்களை நிபுணர்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களே பலர் கேட்டபோது, ''நீங்கள் தயவு செய்து பொருளாதார விஷயமாய் A B C D கற்றுக் கொண்டு வந்து என்னிடம் பேசுங்கள்'' என்று சொன்னது யாவருக்கும் ஞாபகமிருக்கும். அவர்கள் அதற்குப் பொருளாதார பிரச்சினைப்படி யாதொரு பதிலும் சொல்லாமல்



RangaRakes tamilnavarasam.com

இருந்துவிட்டு, தட்டிப் பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன் என்பது போல் இப்போது மறுபடியும் ஒட்டவா ஒட்டவா என்று கூப்பாடு போடுகிறார்கள்.

பொருளாதார விஷயத்தில் ஒட்டவாவைப் பற்றி மிக பரிதாபப்படும் காங்கிரஸ் பிரசாரகர்கள், எலக்ஷன் கூலிகள், பார்ப்பன சிஷ்யர்கள், தேசீயத் தலைவர்கள் என்பவர்களை யெல்லாம் விட ஒருபடி அதிகமாகத் தெரிந்தவரும், அதே தொழிலில் இருந்தவரும், இப்போதும் அதே வேலையில் இருப்பவருமான தோழர் வித்தியாசாகர பாண்டியா அவர்கள் தான் இந்திய சட்டசபையில் இருப்பதைவிட தோழர் ஷண்முகம் 'ஒட்டவா வீரர்' இருப்பது மேல் என்றும் அதிக நன்மை பயக்கும் என்றும் கருதி, தான் விலகிக் கொண்டு அவருக்கு இடம் கொடுத்துவிட்டார்.

வியாபார அரசர் என்று சொல்லப்படும் வியாபார நிபுணரும், கோடீஸ்வர வியாபாரியுமாகிய தோழர் ஜமால் மகம்மது சாயபு அவர்கள், தான் அந்த ஸ்தானத்தில் இருந்தும், மறுபடியும் தனக்கு அந்த ஸ்தானம் காலடியில் இருக்கக் கூடிய நிலைமை இருந்தும், தான் இருப்பதைவிட தோழர் ஷண்முகம் இருப்பதே வியாபாரத்தின் நன்மைக்கும், நாட்டின் நன்மைக்கும் பயன்படும் என்று கருதி தோழர் ஷண்முகம் அவர்களுக்கு விட்டுக் கொடுத்ததுடன் அவருக்கு ஆதரவும் கொடுத்து வருகிறார்.

நாணையமாற்று, பேங்கிங், ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் ஆகிய துறைகளில் நிபுணர்களும் அதே தொழில்காரர்களும் ஆகியவர்களே தோழர் ஷண்முகத்துக்காக விட்டுக் கொடுத்துவிட்டு ஆதரவும் அளித்து வருகிறார்கள் என்றால், இந்தக் கூப்பாடு போடும் தற்குறி ஆசாமிகளுக்கு என்ன யோக்கியதை, என்ன அவசியம், என்ன ஞானம் என்பது நமக்கு விளங்கவில்லை.

இவைகள் எப்படியோ இருந்தாலும் தோழர் ஷண்முகம் அவர்கள் விருதுநகரில் இந்த ஒட்டவா கூப்பாடு வீரர்களுக்கு அளித்த பதிலை (மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருப்பதை) படித்துப் பார்க்கும்படி எல்லோரையும் கேட்டுக் கொள்ளுகிறோம். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது.

''நான் வேறு தொகுதிக்கு போனதை ஒரு காரணமாக வைத்து, விஷமப் பிரசாரம் செய்கிறார்கள். ஆனாலும் நான் இந்த விஷமப் பிரசாரக்காரர்களுடன் பந்தயம் போடவே - அதாவது நான் செய்தது சரியா? தப்பா? என்பதை பாமர மக்களுக்கு மெய்ப்பித்துக் காட்டுவதற்காகவே - குடியானவர்கள் தொகுதியையும், இரண்டொரு ஜில்லா மாத்திரம் சம்மந்தப்பட்ட தொகுதியையும் விட்டு விட்டு, ஒட்டவா ஒப்பந்தத்தின் பயனை அனுபவிக்கும் வியாபாரிகள் தொகுதிக்கும் அதாவது 26 ஜில்லாக்காரரும் தெரிந்தெடுக்க வேண்டிய மாகாணத் தொகுதிக்கும் நின்று இருக்கிறேன். ஒட்டவா கூப்பாடு வீரர்கள் உண்மையானவர்களும் சக்தி உடையவர்களுமானால் ஒரு கை பார்க்கட்டும்'' என்று அறைகூவி அழைக்கிறார்.

இதற்கு இந்த வீரர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்று கேட்கின்றோம். ''கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரிந்து போகும்'' என்பது போலும் ''பேச்சுப் பேச்சென்னும் பெரும் பூனை வந்தக்கால் கீச்சுக் கீச்சென்னும் கிளி'' என்பது போலும் ஒட்டவா கூப்பாடு வீரர்களுக்கு சப்த நாடியும் ஒடுங்கி விட்டதைக் காணலாம். தோழர் ஷண்முகம் அவர்கள் கோவை, சேலம், வட ஆற்காடு ஜில்லாக்களிலும் கூட உள்ள வர்த்தகத் தொகுதி மெம்பர்களிடம் 100க்கு 75 ஓட்டுகளுக்கு மேலாகவே வாங்கப் போகிறேன். இதற்கும் யார் வேண்டுமானாலும், ராஜகோபாலாச்சாரியார் உள்பட பந்தயங்கட்டி பார்க்கட்டும் என்றும் கர்ஜிக்கிறார். நிற்க,

## மற்றொரு பந்தயம்

''நான் இந்த மேடையில் ஒரு பந்தயம் கூறுகிறேன். ஒட்டவா ஒப்பந்தம் எந்த வகையில் இந்தியாவுக்கு கெடுதி என்று தோழர் ராஜகோபாலாச்சாரியாராவது தோழர் சாமி வெங்கடாசலம் செட்டியாராவது புள்ளி விபரங்களுடன் (ஆதாரங்களுடன்) கூற முடியுமா என்று கேட்கின்றேன்'' என்று கூறுகிறார். அதோடு மாத்திரமல்லாமல் ஒட்டவா ஒப்பந்தத்தால் இந்தியாவுக்கு ஏற்பட்ட நன்மைகளையும், லாபத்தையும் புள்ளி விபரத்தோடு எடுத்துக் கூறியும் இருக்கிறார்.

மற்றும் ''நான் மாத்திரமல்லாமல் இந்திய சட்டசபை பிரதிநிதிகளில் வியாபார அனுபவமுள்ளவர்கள் அடங்கிய கமிட்டியும் ஒட்டவா ஒப்பந்தத்தை பரிசீலனை செய்து அதை அங்கீரித்து இருக்கிறது'' என்கின்றார். தோழர் இராஜகோபாலாச்சாரியாரும், அவர்களது சிஷ்யர்களும், கூலிகளும் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்று கேட்கின்றோம்.

இந்த ''நிபுணர்கள்'' தோழர்கள் ஷண்முகத்தை விட, ஜமால் மகம்மதை விட, வித்தியாசாகர பாண்டியாவை விட, இந்திய சட்ட சபையில் இதற்கென்று நிலையாக உள்ள பிரதிநிதி கமிட்டியாரை விட எவ்வளவு தூரம் வியாபார அனுபவம், பொருளாதார சாஸ்திர விற்பத்தி, லாப நஷ்டம் அடைந்த சொந்த அனுபவத் திறமை கொண்டவர்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. காங்கிரஸ் தேசாபிமானம் என்னும் பெயரால் எதையும் சாதித்துவிடலாம் என்கின்ற அகம்பாவத்தையும், ஆணவத்தையும் ஒரு கை பார்த்துவிட வேண்டும் என்கின்ற ஆவலே நம்மை இவற்றை யெல்லாம் பற்றி கவனிக்கச் சொல்லுகின்றதே ஒழிய


RangaRakes tamilnavarasam.com

வேறில்லை. அன்றியும் இவ்விஷயத்தில் பார்ப்பனர்கள் ஊளை இடுவதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. பார்ப்பனரல்லாதார் கூடவே கோவிந்தா போடுவதுதான் நம்மை மார்பில் குத்துவது போல் உறுத்துகின்றது.

நிற்க, பொருளாதார புரொபசர் தோழர் பேசினாக் என்பவர் பொருளாதார விஷயத்தில் பட்டம் பெற்ற நிபுணர் - உலகப் பொருளாதார நிபுணர்களில் ஒருவராய் மதிக்கப்படுபவர் பிரிட்டிஷார் அல்லாதார் மாத்திரமல்லாமல் பிரிட்டிஷார் மீது விரோத பாவம் கொண்டுள்ள ஜர்மனி தேசத்தைச் சேர்ந்தவர். இப்படிப்பட்ட இவர் ''ஒட்டவா ஒப்பந்தத்தால் இந்தியாவுக்கு நன்மை என்பது மாத்திரமல்லாமல் இந்திய வியாபார விருத்திக்கு ஒட்டவா ஒப்பந்தம் அவசியமானது'' என்று தக்க ஆதாரங்களுடன் ''இந்து'' பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். இவர் வார்த்தையை நம்புகிறீர்களா அல்லது ''எவ்வளவு அயோக்கியனானாலும் நாலணா கொடுத்து காங்கிரசில் சேர்ந்தவுடன் யோக்கியனாய் விடுவான்'' என்று சொல்லும் வியாபார வாசனை அற்ற தோழர் ராஜகோபாலாச்சாரி யாருடையவும் அவரது கோஷ்டியாரினுடையவும் வார்த்தையை ஒப்புக் கொள்ளுகிறீர்களா? என்று கேட்கிறார்.

மற்றும் அனேக புள்ளி விபரங்களைக் காட்டி ஒட்டாவா ஒப்பந்தத்தின் நன்மையை விளக்கியிருக்கிறார்.

ஆகவே வாசகர்கள் பார்ப்பனரல்லாத மக்களின் முன்னேற்ற விஷயத்தில் பார்ப்பனர்கள் எவ்வளவு சூழ்ச்சி செய்கிறார்கள் - எவ்வளவு அபாண்டங்களைக் கற்பிக்கிறார்கள் - தங்கள் மனசாட்சிக்கு விரோதமாகவும், தங்களுக்கு சிறிதும் புலப்படாத விஷயமாகவும் மனதாரப் பொய் என்று தெரியக் கூடிய விஷயங்களையும் ஆயுதமாகக் கொண்டு எவ்வளவு மனந்துணிந்த கொலை பாதகத்துக்கு ஒப்பான கெடுதியைச் செய்கிறார்கள் என்பதையும், மற்றவர்களைக் கொண்டு செய்விக்கத் துணிகிறார்கள் என்பதையும், வாசகர்கள் உணர வேணுமாய் விரும்புகிறோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 23.09.1934**



# இந்திய சட்டசபை

மாஜி முதல் மந்திரியான டாக்டர் P.சுப்பராயன் அவர்கள் லண்டனுக்குச் சென்றிருந்தவர் வந்து விட்டார். அவரது மனைவியார் தோழர் ராதாபாய் அம்மாள் அவர்கள் இந்திய சட்டசபைத் தேர்தலுக்கு ஒரு அபேக்ஷகராய் நிற்கப் போகும் செய்தி மறுபடியும் கிளம்பி இருக்கிறது. இதன் பயனாய்த் தமிழ்நாட்டில் இந்திய சட்டசபைத் தேர்தல் விஷயத்தில் ஒரு மாற்றம் ஏற்படலாம்.

அதாவது கோவை ஜில்லாவிலும், சேலம் ஜில்லாவிலும் கொங்கு வேளாள சமூகம் அதிகமாக உண்டு. இந்த இரண்டு ஜில்லாவில் உள்ள வேளாள சமூகம் ஒரு வேளாள சமூக அபேக்ஷகரைத்தான் ஆதரிப்பார்கள். வேளாள சமூகத்தில் ஒரு அபேக்ஷகர் இல்லை என்கின்ற காரணத்தினாலேயே கோவை ஜில்லா போர்டு பிரசிடெண்டு தோழர் வெள்ளியங்கிரிக் கவுண்டர் தனது ஜில்லா போர்டு ஸ்தாபனத்தின் பயனாய் உள்ள செல்வாக்கைத் தோழர் அவனாசிலிங்கத்துக்காகப் பயன்படுத்துவதாகவும், கோவை ஜில்லா போர்டு வைஸ் பிரசிடெண்டும், கொங்கு வேளாள குலத் தலைவரும், மடாதிபதியுமான பழய கோட்டைப் பட்டக்காரர் அவர்கள் தனது செல்வாக்கை டாக்டர் வரதராஜுலு அவர்களுக்குப் பயன்படுத்துவ தாகவும் வாக்களித்து இருந்தார்கள். இதன் பயனாக கோவை, சேலம் ஜில்லா வேளாள சமூக ஓட்டுகள் இவ்விருவருக்குமே சற்றேறக்குறைய சரிசமமாகப் பிரிந்து போகக் கூடிய நிலையில் இருந்து வந்தது.

இப்போது டாக்டர் சுப்பராயன் அவர்கள் சீமையிலிருந்து வந்து தோழர் ராதாபாய் அம்மாளின் அபேக்ஷக ஸ்தானத்தை உறுதிப்படுத்தி மேல்கண்ட இரண்டு கனவான்களையும் சென்று பார்த்ததில் தோழர் வெள்ளியங்கிரிக் கவுண்டரும், பட்டக்காரர் அவர்களும் தோழர் ராதாபாய் அவர்களை ஆதரிப்பதைப் பற்றி டாக்டர் சுப்பராயனுக்குத் தைரியம் சொல்லிவிட்டதாகத் தெரிகின்றது.

இது மாத்திரமல்லாமல் தோழர் வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்கள், தோழர்கள் அவனாசிலிங்கம் செட்டியாருக்கும், ராஜகோபாலாச்சாரியாருக்கும் இது விஷயத்தைத் தெரிவிக்கப் போவதாகவும், பட்டக்காரரவர்களும் டாக்டர் நாயுடு அவர்களுக்கு எழுதி



RangaRakes tamilnavarasam.com

விடுவதாகவும் டாக்டர் சுப்பராயன் அவர்களிடம் ஒப்புக்கொண்டதாகவும் தெரிகிறது. இதன் பயனாய் தேர்தல் நிலைமை மாற்றமடைந்தே தீரும். இதன் பயனாகத் தோழர்கள் அவனாசிலிங்கமும், நாயுடுவும் தங்கள் அபேக்ஷகர் ஸ்தானத்திலிருந்து விலகிக் கொள்ளுவார்களோ அல்லது நடந்தது நடக்கட்டும் என்று துணிந்து நிற்பார்களோ தெரியாது.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் இந்தத் தொகுதியை ஒரு பெண் அபேக்ஷகருக்காக எல்லா கட்சியார்களும் போட்டி இல்லாமல் விட்டுவிட வேண்டும் என்றும் இந்தியா முழுமைக்கும் ஒரே ஒரு பெண்தான் இந்திய சட்டசபைக்கு நிற்க சகல விதத்திலும் தகுதியோடு முன் வந்திருப்பதாகவும், இதன் பயனாய் காங்கிரஸ் பெண்கள் விஷயத்தில் கொண்டுள்ள கொள்கையைக் காட்ட ஒரு சந்தர்ப்ப மேற்பட்டிருக்கிறதென்றும், தோழர் ராஜகோபாலாச் சாரியாருக்கும், டாக்டர் வரதராஜுலுவுக்கும் தெரிவித்து இருப்பதாகவும் தெரிகிறது. இதனாலெல்லாம் தான் அபேக்ஷகர்கள் தன்மையே மாறுபட்டாலும் மாறுபடக்கூடும் என்று எதிர்பார்க்க இடமேற்படுகின்றது.

மற்றும் ஒரு விஷயம், அதென்னவெனில் டாக்டர் நாயுடுவை திருச்சி பொதுக்கூட்டத்தில் ''டாக்டர் சுப்பராயன் மனைவியார் கோவைத் தொகுதிக்கு ஒரு அபேக்ஷகராய் நின்றால் அப்போது உங்கள் நிலை என்ன?'' என்று ஒருவர் கேட்டார்.

அதற்கு பதிலளிக்கையில் ''தோழர் ராதாபாய் அம்மாள் அவர்கள் நிற்பதாய் இருந்தால் எனக்கும், அந்தம்மாளுக்கும் போட்டி இல்லாமல் இருக்கும்படியாக நடந்து கொள்ள முயற்சிப்பேன். எங்களுக்குள் போட்டிப் பிரசாரம் நடக்க இடம் வைத்துக்கொள்ள இஷ்டமில்லை'' என்று சொல்லி இருப்பதாகத் தெரிகிறது.

ஒரு சமயம் தோழர் ராதாபாயம்மாள் விஷயத்தில் நாயுடு ஒப்புக் கொண்டு காங்கிரஸ் விட்டுக் கொடுக்கவில்லையானால், ராதாபாயம்மாள் வேறு தொகுதியில் நின்று கொண்டு கோவை, சேலம் ஜில்லா வேளாள சமூக ஓட்டுகளை டாக்டர் நாயுடுவுக்கு அனுகூலமாய்த் திருப்ப முயர்ச்சி செய்யப் போவதாயும் தெரிய வருகின்றது.

தோழர் ராதாபாயம்மாளுடன் போட்டி போட விரும்பவில்லை என்று எப்படி டாக்டர் நினைக்கிறாரோ, அது போலவே செங்கல்பட்டு தென்னாற்காடு ஜில்லா தொகுதியில் அபேட்சகராய் இருக்கும் திவான்பகதூர் எம்.கே. ரெட்டியாரும் ராதாபாயம்மாள் நிற்பதாயிருந்தால் போட்டி போட விரும்பவில்லை என்பதாய் தெரிகிறது. அப்படியானால் ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகரும் அம்மாள் விஷயத்தில் போட்டி போட மாட்டார்கள். இவர்கள் இருவரும் போட்டி போட முன் வரவில்லையானால் மிஞ்சுவது தோழர் முத்துரங்க முதலியாரே ஆவார்கள். அவர் நிற்பதும் ஒன்றுதான் உட்காருவதும் ஒன்றுதான். ஆதலால் அந்த தொகுதியிலும் ராதாபாயம்மாளுக்கு சுலபமாக ஆகக் கூடும்.

இப்படியும் ஒரு உத்தேசம் இருப்பதாகவும் தெரிகிறது. எனவே ஏதோ ஒரு விதத்தில் அசம்பளி தேர்தலில் ஒரு மாற்றம் ஏற்படக் கூடும் என்று தெரிகிறது.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 23.09.1934**


RangaRakes tamilnavarasam.com

# ஜஸ்டிஸ் பத்திரிகையின் நிர்வாகம்

ஜஸ்டிஸ் பத்திரிகைக்காக இதுவரை சுமார் 4, 5 லக்ஷ ரூபாய் வரையில் பொதுமக்களிடமிருந்து உதவித் தொகையாகவும் மந்திரிகள் சம்பளத்திலிருந்து பார்ட்டி (கக்ஷி) உதவித் தொகையாகவும் பெற்றிருக்கலாம். இது தவிர இன்றும் பொப்பிலி ராஜா அவர்களால் மீ 2000, 3000 கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்வளவு இருந்தும் அப்பத்திரிகை ஒரு தடவை ''இன்சால்வெண்டு'' கொடுத்தாய் விட்டது. பலரது கடனுக்கு நாமம் சாத்தியுமாய்விட்டது. மறுபடியும் பொப்பிலி ராஜா சுமார் 50 ஆயிரம் ரூபாய் போல் செலவழித்துமாய்விட்டது. இந்த நிலையில் பத்திரிகை எவ்வளவு போகின்றது என்று சொல்ல நமக்கே வெட்கமாய் இருக்கிறது. இவ்வளவு யோக்கியதையில் அது பிரசுரிக்கிற முறையும் சிரிப்புக்கிடமானது என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

தோழர் சர். ஷண்முகம் அவர்களுடைய பிரசங்கங்களையும், நடவடிக்கைகளையும் கூட சரிவரப் பிரசுரிப்பதில்லை. சுயமரியாதைக்காரரின் சமூக சம்மந்தமான வேலைகளைக் கூட சரிவர பிரசுரிப்பதும் இல்லை. இன்னும் அதன் யோக்கியதை சொல்வதென்றால் நமது பல்லைக் குத்தி நாமே முகர்ந்து பார்ப்பது போல் இருக்குமாதலால் விட்டு விடுகிறோம்.

மாதம் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஜஸ்டிஸ் பத்திரிகையின் பேரால் பாழாக்கும் பொப்பிலி ராஜா அவர்களுக்கு இந்த விஷயம் தெரியுமோ? தெரியாதோ? என்று சந்தேகிக்கின்றோம். இதைப் பற்றி பல தடவை ஞாபகப்படுத்தப்பட்டிருக்கிறது என்றாலும் இதுவே முதல் தடவையாகவும் கடைசித் தடவையாகவும் இருக்க வேண்டும் என்கின்ற ஆசையின் பேரில் இதை எழுதுகிறோம்.

**பகுத்தறிவு - செய்தி விளக்கக் குறிப்பு - 23.09.1934**



# மார்க்கட்டு நிலவரம்

**- சித்திரபுத்திரன்**

தமிழ்நாட்டில் மார்க்கட்டு நிலவரம் தெரியப்படுத்தி வெகுநாள் ஆகிவிட்டதால் இதுசமயம் இரண்டொரு சரக்குகளுக்கு மாத்திரம் நிலவரம் எழுதுகிறோம்.

### பெண்கள்

செட்டிநாட்டில் ஒரு பெண்ணுக்கு (முன் விலை) 35000 முதல், 45000 ரூபாய் வரை இருந்து வந்ததானது இப்போது சவுத்துப்போய் ஒரு சைபருக்கே மோசமேற்பட்டு 4000, 5000 ம் விலையில் அசல் செட்டி நாட்டுப் பெண்கள் தாராளமாய் கிடைக்கும் நிலைமைக்கு வந்துவிட்டது. காரணம் சுயமரியாதை தேசத்திலிருந்து ஏராளமான சரக்குகள் (பெண்கள்) வந்து இறங்கத் தலைப்பட்டு விட்டன. ஆதலால் வெளிநாட்டுச் சரக்குகளை (சுயமரியாதைப் பெண்களை) செட்டி நாட்டுக்குள் வராதபடி வெளிநாட்டுச் சரக்குகளுக்கு வரி போட வேண்டுமாய் செட்டிமார்களுள் சர்க்காருக்கு (சமூகத்தாருக்கு) விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள். அப்படி அரசாங்கத்தார் (சமூகத்தார்) வரி போடுவார்களானால் பெண்கள் இருக்கிற நாட்டுக்கே, குடிபோய்விடுவதாக பெண் வாங்குவோர்கள் கூடிப் பேசி முடிவு செய்து தீர்மானத்தை அரசாங்கத்துக்கு (தங்கள் சமூகத்தாருக்கு) தெரிவித்து இருப்பதாகத் தெரிகிறது.

### ஓட்டுகள்

முனிசிபல் ஓட்டர்களுக்கு இது சமயம் கிராக்கி அதிகம். பொப்பிலி ராஜாவின் ஒரு அறிக்கையின் பயனாய் முனிசிபல் ஓட்டுகளுக்குக் கிராக்கியற்று சில இடங்களில் அவ்வளவையும் சமுத்திரத்தில் கொட்ட வேண்டி வருமோ என்று விவசாயிகள் (ஓட்டர்கள்) கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். நல்ல வேளையாய் அந்த உத்திரவு வரவில்லை. எல்லா முனிசிபாலிட்டிகளுக்கும் தேர்தல் இந்த வருஷத்திலேயே அதுவும் இந்த மாதத்திலேயே நடக்க வேண்டுமென்று கட்டளையிட்டு விட்டதால் ஓட்டர்கள் நிலவரம் வெகு கிராக்கியாகிவிட்டது.



RangaRakes

tamilnavarasam.com

குறிப்பாக ஈரோட்டில் சில வார்டுகளில் ஓட்டுச் சிலவே இல்லாமல் போய்விட்டது. சில வார்டுகளில் மொத்தத்தில் எதிர் அபேக்ஷகருக்கு 250 முதல் 500 ரூபாய் வரை ஆகிவிட்டது.

சில வார்டுகளில் அதாவது குடியானவர்களே சம்பந்தப்பட்ட வார்டுகளில் ஓட்டு ஒன்று 2 ரூபாய் முதல் 3 ரூபாய் வரை. சில வார்டுகளில் அதாவது வியாபாரிகள் சம்பந்தப்பட்ட வார்டில் ஓட்டு ஒன்றுக்கு 10 ரூபாய் முதல் 15 ரூபாய், 20 ரூபாய் கூட ஆகிவிட்டது என தெரிகிறது.

சில வார்டில் அதாவது காங்கிரசு சம்பந்தப்பட்ட வார்டு என்று சொல்லப்படுவதில் ஓட்டு ஒன்றுக்கு 15 ரூபாய் முதல் 30 ரூபாய் வரையிலும், சில ஓட்டுகள் விஷயத்தில் 40, 50 ரூபாய் வரையில் கூட விலை ஏறிவிட்டது.

சுமார் 300 ஓட்டர்கள் உள்ள ஒரு வார்டுக்கு ஒரு அபேக்ஷகர் 3000ரூ எடுத்து வைத்திருப்பதாகத் தெரிகின்றது. மற்றொரு அபேக்ஷகர் 5000 ரூ எடுத்து வைத்து எலக்ஷன் இன்னும் 10 நாள் இருக்கும் போதே 2000 ரூபாய்க்கு மேல் செலவழித்து விட்டதாகவும் தெரிகின்றது. அதிகப் பணம் செலவு செய்பவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பது பார்வதிக்கு பரமசிவன் சொன்ன உறுதி மொழியாகும்.

ஆகவே இந்த எலக்ஷன் முறை, ஏழை ஓட்டர்கள் பிழைக்க அரசாங்கத்தார் செய்த தர்மமாகும். ஆதலால் ஓட்டர்கள் பணம் கொடுப்பவர்களை வாழ்த்துவதை விட, இப்படிப்பட்ட தேர்தல் முறையைக் கற்பித்த அரசாங்கத்தார் நீடூழி காலம் சிரஞ்சீவியாய் - எப்படிப்பட்ட சிரஞ்சீவியாய்? மார்க்கண்டன், அனுமார், விபூஷணன் போன்ற சிரஞ்சீவியாய் அல்ல - சூரியன், சந்திரன் போன்ற சிரஞ்சீவியாயும் அல்ல. அவைகள் கூட ஒரு காலத்தில் இல்லாமல் போய்விடும். மற்றெப்படிப்பட்ட சிரஞ்சீவியாய் என்றால் - கல்லும், காவேரியைப் போல் சிரஞ்சீவியாய் இருக்க வேண்டுமென்று வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சில கடவுள்களும் இந்த அரசாங்கத்துக்கு சிரஞ்சீவிப் பட்டம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

ஏனெனில் ஓட்டுக்கு விலையாக ஓட்டர்களுக்குப் பணம் கொடுப்பது மாத்திரமல்லாமல் கோவில் கட்ட, மசூதி கட்ட, சர்ச் கட்ட என்று 100, 500, 1000 கணக்காய் ரூபாய் கொடுக்க வேண்டியிருப்பதால், அந்த அந்த மதக் கடவுள்கள் இப்படிப்பட்ட எலக்ஷனை உண்டாக்கிய அரசாங்கத்தை ஆசிர்வதிக்க கடமைப் பட்டிருக்கின்றன.

நல்ல வேளையாக ஈரோட்டைப் பொறுத்தவரை ஓட்டுகளுக்கு ஜாதி சண்டைகளை விலையாகக் கொடுக்க வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. அதன் பெருமை சேர்மெனுக்கே சேர வேண்டியது.

**பகுத்தறிவு - கட்டுரை - 23.09.1934**



# நான்

நான் காங்கிரசில் சேர்ந்து விடப் போகிறேன் என்பதாக பலர் எனக்குப் பரிகாசக் கடிதங்களும், சில துர் எண்ணங்கள் கற்பிக்கிற கடிதங்களும் எழுதி வருகிறார்கள். நான் காங்கிரசில் சேருவதாக வைத்துக் கொண்டு பார்த்தாலும், காங்கிரசுக்கு மகத்தான செல்வாக்கும், பெருமையும் இருக்கின்ற காலத்தில் நான் அதில் சேருவதானால் எனக்கு உள் எண்ணம் ஏதாவது கற்பித்தால் அதற்கு அர்த்தமுண்டு.

இன்று அப்படி ஒன்றும் இல்லை. அது எப்படி இருக்கின்றது என்றால் ஜஸ்டிஸ் கட்சியானது 1926ம் ஆண்டு முடிவில் எப்படி கடைசி மூச்சு வாங்கும் நிலையில் ஜீவநாடிகள் எல்லாம் விழுந்து போய் எடுத்துப் புதைப்பதற்கும் ஆளில்லாத ஸ்திதியில் இருந்ததோ, அந்த நிலையில் அதைவிட மோசமான நிலையில் கொள்கையற்று, தலைவர்களற்று, மானமற்று, நாணையமற்று, அழுவாரற்று சாகும் தருவாயில் இருக்கும் காங்கிரசில் நான் போய் சேருவதாய் இருந்தால் அதில் எனக்கு என்ன லாபம் அல்லது உள் எண்ணம் இருக்க முடியும் என்று எனது தோழர்களைக் கேட்கின்றேன்.

ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கும் போது கூட எனக்குப் பலவித துர் எண்ணம் கற்பித்தார்கள். ஜஸ்டிஸ் கக்ஷி உச்சஸ்தானத்தில் சுயமரியாதையோடு உயர் நிலையில் வாழ்ந்த காலத்திலும் அதன் தலைவர்களும் அரசாங்க (கேப்நிட்) மெம்பர்கள் முதல் மந்திரிகள் வரை என்னிடத்தில் ''மரியாதையும், பக்தியும்'' இருப்பதாய் காட்டிக் கொண்டிருந்த காலத்திலும் கூட அக்கக்ஷியால் ஒரு காதொடிந்த ஊசி கூட நான் எனது சொந்தத்திற்கு எதிர் பார்க்கவில்லை. பெறவும் இல்லை. அதனால் நான் எவ்வித பெருமையும் அடைந்து விடவுமில்லை என்பது எனது எதிரிகளுக்கும் தெரியும் என்று நினைத்திருக்கிறேன். (டாக்டர் சுப்பராயன் அவர்கள் காலத்திலாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விஷயமாயும் தீண்டாமை விஷயமாயும் சில காரியங்கள் சாதித்துக் கொள்ள முடிந்தது என்னலாம்) மேலும் நான் என் சொந்த முறையில் அவர்களுக்காக பட்ட கஷ்டமும், நஷ்டமும் எனது நண்பர்களுக்குத் தெரியும் என்றும் நினைக்கிறேன்.



RangaRakes
tamilnavarasam.com

அப்படி இருக்க காங்கிரசில், அதுவும் உயிருக்கு மாத்திரமல்லாமல் அது செத்தால் சுடுவதற்கும் இடமில்லாமல் மயானத்துக்கும் ஊசலாடும் இக்காலத்தில் காங்கிரசினிடமிருந்து நான் என்ன எதிர்பார்த்துக் கொண்டு அதனிடம் நேசம் கொள்ள முடியும் என்பது எனக்கே விளங்கவில்லை. மனித சமூக நன்மையை அதிலும் தாழ்த்தப்பட்ட, ஏழ்மைப்பட்ட பாமரமக்களின் நன்மைக்காக காங்கிரசு மாத்திரமல்ல, இன்னும் எக்கட்சியின் நேசம் கொண்டாலும் கொள்வேனே ஒழிய மற்றபடி எனது ஜீவனோபாயத்துக்கோ வாழ்க்கை உபாயத்துக்கோ எக்கட்சியிலும் சேரமாட்டேன் என்றும், சேரவேண்டிய அவசியமில்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- ஈ.வெ.ரா.**

**பகுத்தறிவு - அறிக்கை** - 23.09.1934



# பார்ப்பன பத்திரிகைகளும் சர். ஷண்முகமும்

தோழர் ஆர்.கே. ஷண்முகம் இந்தியா முழுவதுக்கும் தெரிந்த ஒரு முக்கியஸ்தர். அவருடைய நடவடிக்கைகளும், பேச்சுக்களும் மக்கள் கவனிக்கப்படத்தக்கது என்பதில் யாருக்கும் ஆக்ஷேபனை இருக்காது. பலர் எதிர்பார்க்கவும் கூடும். இந்நிலையில் தேசியப் பத்திரிகைகள் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனப் பத்திரிகைகள் அவரது நடவடிக்கைகளை யோக்கியமாய் பிரசுரிக்காமலும், பிரசங்கங்களையும் கேள்விகளையும், பதில்களையும் சிறிது கூட பிரசுரிக்காமலும் இருந்து வருகின்றன. சர். ஷண்முகம் அவர்கள் இந்திய சட்ட சபையில் ராணுவ சம்மந்தமான பிரச்சினையில் கொடுத்த ஒரு தீர்ப்பு விஷயமாய் பார்ப்பனப் பத்திரிகைகள் பாராட்டாவிட்டாலும், விஷமத்தனமான பரிகாசங்களைச் செய்தன.

தோழர்கள் ராஜகோபாலாச்சாரியார், சத்தியமூர்த்தி அய்யர், ஜம்பை வைத்தியனாத பாகவதர், ரமண ரிஷி போன்றவர்கள் விஷயங்களைப் பெருக்கி கண்ணு, மூக்கு வைத்து கலம் கலமாய் அலங்கரிக்கின்றன.

இந்த மாதிரியான காரியங்களால் பார்ப்பனர்களுக்குக் கீர்த்தியும், மேன்மையும் ஏற்பட்டு விட்டதாகவோ, பார்ப்பனரல்லாதாருக்கு அபகீர்த்தியும், தாழ்மையும் ஏற்பட்டு விட்டதாகவோ நாம் சொல்ல வரவில்லை. இந்த மாதிரியான நிலையில் பார்ப்பனர் இருக்கின்ற வரையில் சித்திரத்தில் மாதிரி பார்த்து எழுதக் கூட ஒரு பார்ப்பனர் கிடைக்காமல் பூண்டற்று போகக் கூடிய காலம் வரும் என்கின்ற தைரியம் நமக்கு உண்டு. அந்த தைரியம் இல்லாவிட்டால் இத்தொண்டை நாம் மேற்கொண்டிருக்க மாட்டோம்.

ஆனால் எதற்காக இதை எழுதுகின்றோம் என்றால், பார்ப்பனப் பத்திரிகைகள் தேசியப் பத்திரிகைகள் என்றும், பல பார்ப்பனர்கள் பார்ப்பனத் தன்மை இல்லாமல் நடு நிலைமை வாய்ந்தவர்கள் என்றும் கருதிக் கொண்டு பார்ப்பன சிஷ்யர்களாகவும், பார்ப்பன கூலிகளாகவும், பார்ப்பனர்களுக்கும், பார்ப்பன பத்திரிகைகளுக்கும் ஆதரவளிப்பவர் களாகவும் இருக்கும் முட்டாள் தனத்தையும், சுயமரியாதை அற்ற தன்மையையும் வெளிப்படுத்தவே இதை எழுதுகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

விகடப் பத்திரிகை என்று வேஷம் போட்டுக் கொண்டு சில பத்திரிகைகள் பார்ப்பனீயத்தைப் பிரசாரம் செய்துகொண்டு பார்ப்பனரல்லாத பிரமுகர்களை இழிவுபடுத்திக் கொண்டு வருகின்றன. அவைகளுக்கும் சுத்த ரத்த ஓட்டமில்லாத - சுயமரியாதை அற்ற - பணமே பிரதானமே தவிர வேறொன்றும் இல்லை என்று கருதுகின்ற சில பார்ப்பனரல்லாதார் ஆதரவளிக்கின்றதையும் பார்த்து வெட்கப்படுகின்றோம் என்பதோடு "10 பணத்துக்கு மிஞ்சிய பதிவிரதை இல்லை" என்று கற்பின் பித்தலாட்டத்துக்கு ஒரு பழமொழி சொல்வது போல் பணத்தைவிட தங்கள் சுயநல வாழ்க்கையை விட, மானம் பெரிதல்ல என்று எண்ணி வாழ்க்கை நடத்தும் பார்ப்பனரல்லாதாரைக் கண்டு இரங்குகின்றோம்.

பார்ப்பனரைப் பார்த்து பாரதியார் "நாயும் பிழைக்கு மிந்தப் பிழைப்பு" என்று சொன்னது போல், ஒரு மனிதனின் பிழைப்பிற்காக மானத்தை - தனது சமூகத்தை விற்று ஜீவிக்க வேண்டியதில்லை என்றுதான் பரிதாபத்துடன் கண்ணீர் விட்டுக் கொண்டு இதை எழுதுகிறோம்.

**பகுத்தறிவு - கட்டுரை - 30.09.1934**



# ஜன நாயகமா? பண நாயகமா?

உலகில் ஜனநாயகம் என்னும் வார்த்தை மிகவும் செல்வாக்குப் பெற்றது என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்காது.

செல்வாக்குப் பெற்ற வார்த்தைகள் எல்லாம் உண்மையானதும், நேர்மையானதும் என்று சொல்லிவிட முடியாது.

செல்வாக்குப் பெற்ற வார்த்தைகள் பெரும்பான்மையும் சில சுயநலங்கொண்ட மக்களால் உள் எண்ணத்தோடு கற்பிக்கப்பட்டு பாமர மக்களுக்குள் பிரசாரம் செய்யப்பட்டதின் பயனாகவே செல்வாக்கடைய முடிந்ததாக இருக்குமே தவிர உண்மையில் அதன் யோக்கியதையால் - ஏற்படும் பயன்களால் செல்வாக்கு ஏற்பட்டதென்று சொல்லிவிடவும் முடியாது.

புண்ணியம், சத்தியம், அஹிம்சை, ஜீவகாருண்யம், ஒழுக்கம், கற்பு என்பன போன்ற வார்த்தைகளுக்கு நாட்டில் மதிப்பும் செல்வாக்கும் இருந்து வருகின்றது என்றாலும் அவைகள் உபயோகப்படும் மாதிரியும் காரியத்தில் அனுஷ்டிக்கப்படும் தன்மையும் எப்படி இருந்து வருகின்றது என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. இவை பெரும்பாலும் வலுத்தவன் இளைத்தவனை அடக்கியாளும் காரியத்திற்கும் தன் தன் சுயநலத்துக்குமே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன என்பது கண்கூடு.

இம்மாதிரியிலேயே தான் ஜனநாயகம் என்கின்ற வார்த்தையும், பணநாயகத்துக்கு அடிமை அதாவது பாமர மக்களையும், ஏழை மக்களையும் அடக்கியாள, படித்த - பணக்கார மக்களால் கற்பிக்கப்பட்டதும், பயன்படுத்தத் தக்கதுமான வார்த்தை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது.

உலகிலே எந்தெந்த நாட்டில் ஏழை மக்கள் கண் விழித்தார்களோ அங்கெல்லாம் ஜனநாயகத்தின் புரட்டு வெளியாகிக் கொண்டுதான் வருகின்றது. ஜனநாயக அரசாங்கம் - ஜனநாயக ஸ்தாபனங்கள் - ஜனநாயக முயற்சிகள் என்பவைகளைப் பற்றிய அனுபவம் இந்திய மக்களுக்குச் சுமார் 50, 60 வருஷ காலமாக இருந்து வருகின்றது என்று எண்ணுகின்றோம். இந்த ஐம்பது, அறுபது வருஷகால அனுபவத்தில் ஜனநாயகத்தின் பலன் என்ன என்பதைப் பார்த்தால் பிறகு ஜனநாயகம் என்பதில் அதன் வார்த்தைக்கேற்ற தத்துவம் இருக்கின்றதா? அல்லது ஜனநாயகம் என்பது பணநாயகத்தின் அடிமையா என்பது விளக்கும்.



RangaRakes tamilnavarasam.com

இந்தியாவில் ஜனநாயக ஸ்தாபனம் என்னும் காங்கிரசு ஏற்பட்டு சுமார் 50 வருஷங்களுக்கு மேலாகின்றது. ஜனநாயக தத்துவம் என்னும் முனிசிபாலிட்டிகள், ஜில்லா தாலூகா போர்டுகள் முதலியவை ஏற்பட்டும் 50, 60 வருஷங்களாகின்றன.

சட்டசபைகள், நிர்வாக சபைகளில் பெரும்பாகம் முதலியவைகளும் ஜனநாயகத்துக்கு வந்து 20 வருஷங்கள் முதல் 40 வருஷங்கள்வரை ஆகின்றன. இவைகளால் பொது மக்களுக்கு ஜனநாயக தத்துவ நன்மை என்ன ஏற்பட்டது? அல்லது ஜனநாயக உரிமை என்ன ஒழுங்காய் பயன்படுத்தப்பட்டது? என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம். ஜனநாயக சட்டசபையையும், நிர்வாக சபையையும் எடுத்துக் கொள்ளுவோம். ஜனநாயக ஸ்தாபனங்களின் பேரால் நடக்கும் புரட்டுகள் எவ்வளவு? என்பதில் காங்கிரசைப் பற்றி நாம் அதிகம் சொல்ல வேண்டியதில்லை என்றே எண்ணுகின்றோம். பொதுவாகப் பேசுவோமானால் இன்று ஜனநாயகம் பணநாயகத்தின் அடிமையா அல்லவா என்பதை முதலில் யோசிப்போம். நமது சென்னை மாகாணத்தை எடுத்துக் கொண்டால் ஒரு இரண்டு மூன்று ஜமீன்தார்களோ, பணக்கார லேவாதேவிக்காரரோ முதலாளிகளோ ஒன்று சேர்ந்து 3 அல்லது 4 லக்ஷ ரூபாய் முதல் வைத்து ஜனநாயகத்தை விலைக்கு வாங்கும் கூட்டாளிகளாகி ஒரு கூட்டு வியாபாரம் ஆரம்பித்தால் 26 ஜில்லாக்களிலும் குறைந்த அளவாக மெஜாரிட்டி சட்டசபை மெம்பர்களையாவது தங்கள் இஷ்டப்படி ஆடக் கூடியவர்களாக சம்பாதித்து விட முடியுமா முடியாதா என்று யோசித்துப் பாருங்கள். இன்னமும் கொஞ்சம் பணம் செலவு செய்தால் அரசாங்க நியமன மெம்பர்களையும் சுவாதீனம் செய்து கொள்ள முடியுமா இல்லையா என்பதை யோசித்துப் பாருங்கள். அன்றியும் எந்த தேர்தலை எடுத்தாலும் ஸ்தல ஸ்தாபன தேர்தலுக்கு 2000ரூ செலவு, 5000ரூ செலவு, 10000ரூ செலவு என்று சொல்லப்படுவதும் சட்டசபை முதலிய தேர்தல்களுக்கு பத்து ஆயிர ரூபாய் செலவு, இருபது ஆயிர ரூபாய் செலவு, ஐம்பது ஆயிர ரூபாய் செலவு என்று சொல்லப்படுகின்றதும் உண்மையா அல்லவா என்று கேட்கின்றோம்.

100க்கு 90 மக்களை ஏழை விவசாயிகளாகவும், ஏழைத் தொழிலாளிகளாகவும் எழுத்து வாசனை அற்ற பாமர மக்களாகவும் சராசரி வாழ்க்கைக்கு போதுமான சௌகரியமில்லாத மக்களாகவும் கொண்ட இந்த நாட்டில் மேல் கண்டபடி ஆயிரம், பதினாயிரம் லக்ஷம் கணக்காக ரூபாய்களைச் செலவு செய்தால் தான் ஜனநாயகப் பிரதிநிதித் தத்துவத்தை அடையலாம் என்கின்றதான ஜனநாயகம் அல்லது கலப்பற்ற உண்மையான ஜனநாயகமா? பணநாயகமா? என்று கேட்பதல்லாமல் இத்தேர்தல்களின் பயனாய் ஏற்படும் கலகம், காலித்தனம், மனஸ்தாபம், கக்ஷி, பிரதிக்கக்ஷி மனப்பான்மை ஆகியவைகள் ஒரு கூட்ட மக்களை முடிநாயகத்துக்கு நிபந்தனை அற்ற அடிமைகளாகச் செய்து வருகின்றதா இல்லையா என்றும் கேட்கின்றோம்.

அரசாங்கம் தன்னை ஜனங்களுக்காக ஜனங்கள் அபிப்பிராயப்படி நடக்கும் ஜனநாயக அரசாங்கம் என்று சொல்லிக் கொள்ளுவதை நாம் புரட்டு என்று சொல்லுவதை விட அவர்களால் கொடுக்கப்பட்ட ஜனநாயகத் தத்துவத்தை கையாளும் ஜனங்கள் உண்மையாய் யோக்கியமாய் அனுபவிக்கத் தகுதி உடையவர்களாய் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுவதானது இன்னும் ஆயிரம் பங்கு முழுப் புரட்டு என்றுதான் சொல்லப்பட வேண்டியதாகும்.

ஜனநாயகம் கொடுக்கப்பட்ட எல்லாத் துறைகளிலும் பணம் உள்ளவன், பூமி உள்ளவன், வீடு வாசல் உள்ளவன், இந்திய மக்களின் சராசரி வரும்படிக்கு மேல் 10 பங்கு 100 பங்கு அதிக வரும்படி உள்ளவன் ஆகியவர்களுக்குத்தான் ஓட்டுரிமை இருகின்றதே தவிர, கைகால் உறமாய் இருந்து அவனவன் கைப்பட உழைத்து உண்ணும் பாட்டாளி மக்களுக்கு ஓட்டுச் சுதந்திரம் கிடையவே கிடையாது. மற்றும் தன் உழைப்பின் பயனாய் வருஷம் ஒன்றுக்கு 350 ரூபாய் வரையில் கூலியோ, சம்பளமோ, பெறுகின்றவனாய் இருந்தாலும் அவனுக்கும் ஓட்டுரிமை கிடையாது என்கின்ற முறையில்தான் ஜனநாயக ஓட்டுரிமை இருக்கின்றது என்றால் இப்படிப்பட்ட ஏழைப்பாட்டாளி மக்களுக்கு ஜனநாயகப் பிரதிநிதித்துவம் எப்படி கிடைக்குமென்று கேட்கின்றோம். ஓட்டு அருகதை, பிரதிநிதி அருகதை இப்படியாக இருந்தாலும் பிரதிநிதித்துவத்தைப் பெறும் முறை முன் குறிப்பிட்டபடி ஆயிரம் பதினாயிரம் லக்ஷம் ரூபாய் செலவிட வேண்டியதாய் இருக்கின்ற தென்றால் ஏதோ ஒரு சில பணக்காரர்கள் மாத்திரம் அல்லாமல் பொதுமக்கள் இதை நினைக்கத்தான் யோக்கியதை யுடையவர்களாவார்களா என்றும் தேர்தல் கூச்சல் போடுகிறவர்களைக் கேட்கின்றோம். இந்த மாதம் பூராவும் ஜனநாயகத் தேர்தல் கூச்சலாகவே இருக்கிறது. இந்திய சட்டசபைத் தேர்தல், டவுன் முனிசிபல் கவுன்சிலர்கள் தேர்தல்கள் ஆகியவைகளின் பேச்சுக்களாகவே இருக்கின்றன. இந்திய சட்டசபைத் தேர்தல் சம்மந்தமாய் லக்ஷக்கணக்கான செல்வம் உள்ளவர்களும், லக்ஷக்கணக்கான செல்வந்தர்களை தங்கள் கைக்குள் அடக்கிக் கொண்டிருக்கின்றவர்களும் தவிர, மற்றவர்களுக்கு அங்கு வேலை இல்லை என்பது வெளிப்படை. பணச்செலவு இல்லாமல் ஏமாற்றலாம் என்று கருதுகின்றவர்கள் ஜனநாயக ஸ்தாபனங்களின் புரட்டுகளையும் அயோக்கியத்தனங்களையும் ஆதாரமாய்க் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இந்தக் காரணத்தாலேயே இரண்டுக்கும் யோக்கியதையற்ற வெகுபேர் ''சீ அந்தப் பழம் புளிக்கும்'' என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இது நிற்க, முனிசிபல் டவுன் தேர்தல்களை எடுத்துக் கொள்ளுவோம். ஒரு ஓட்டுக்கு 10 ரூபாயில் இருந்து 15 ஆகி 20 ஆகி, 25 ஆகி, 35 ஆகி, 50 ரூபாய் ஆகி விட்டதுடன் சில ஓட்டுகளுக்கு அதாவது சிறிது சாமார்த்தியவாளியாய் இருந்து வாங்கின பணத்தைத் திரும்பக் கொடுப்பதாய் பாசாங்கு செய்தவர்களுடைய ஓட்டுகளுக்கு 100 ரூபாய் விலையும் ஆகிவிட்டது. இதில் எதுவும் இரகசியமிருப்பதாய் சொல்ல முடியாது. சர்க்கார் சேவகர்கள், குமாஸ்தாக்கள் ஓட்டுகளும் கூட இந்த விலைக்குத்தான் வாங்கப்பட்டிருக்கின்றன என்று நினைக்க வேண்டியிருக் கின்றது. சிலர் பணம் வாங்காமல் ஓட்டுப் போட்டிருக்கலாம் என்றாலும், அதற்குத் தகுந்த பிரதிப் பிரயோஜனமாவது அடையக் கருதியே ஓட்டுச் செய்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

இவற்றோடு மாத்திரமல்லாமல் ஜனநாயகத்தைப் பணநாயகம் என்று மாத்திரம் சொல்வதோடல்லாமல் காலித்தன நாயகம் என்று கூட சொல்ல வேண்டிய நிலைமையில் சில ஊர்களில் தேர்தல்கள் நடைபெற்றதாகச் செய்திகள் எட்டுகின்றன.

இன்றைய தினம் இருக்கும் பண நெருக்கடியில் 20ரூ, 30ரூ, 100ரூ. போல ஒரு காக்காப்புள்ளி X போடுவதற்குப் பணம் கிடைப்ப தாயிருந்தால் அதை வேண்டாமென்று சொன்னவர்களை முட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் ‘‘பொது ஜனங்கள்’’ கேட்ட ஜனநாயகத் தத்துவத்தில் புரட்டு இல்லை என்று சொல்ல எவராலும் முடியாது. அரசாங்கத்தார் வழங்கிய ஜனநாயகத் தத்துவத்தில் ஏமாற்றமும், புரட்டும் இல்லையென்று யாராலும் சொல்ல முடியாது. இதை ஏற்றுக்கொண்டு ஜனநாயகப் பிரதிநிதிகளாய் நிற்கும் அபேட்சகர்களிடத்தில் புரட்டும், ஏமாற்றமும், பித்தலாட்டமும் மாத்திரம் அல்லாமல் நாணையக் குறைவும், யோக்கியப் பொறுப்பற்ற தன்மையும் அடியோடு இல்லை என்று சிறிது கூட சொல்லிவிட முடியாது. இப்படிப்பட்ட நிலையில் ஒரு ஓட்டர் இப்படிப்பட்ட காரியத்திற்கு இப்படிப்பட்ட ஆட்களிடம் பத்தோ, இருபதோ, ஐம்பதோ, நூறோ வாங்கிக்கொண்டு ஓட்டுச் செய்தால் அது எப்படி குற்றமாகும் என்பது நமக்கு விளங்கவில்லை.

எப்படி ஒரு பெண் கற்பு இழந்தால் அந்த பெண்ணுக்கும், அதற்குச் சரிபங்கு பொறுப்பாளியாய் இருந்த ஆணுக்கும் சரிசமமான பாவம் என்று சொல்லுகின்றோமோ, அது போலவேதான் ஒரு ஓட்டர் பணம் வாங்கினால் அந்த ஓட்டருக்கும், அவருக்குப் பணம் கொடுத்த அபேட்சகருக்கும் அதற்கு இவ்வளவு தாராளமாய் இடமளித்த அரசாங்கத்துக்கும் சமமான பாவம், குற்றப் பொருப்பு இருக்கின்றது என்று தான் சொல்லுவோம். இன்றைய சட்டத்தில் இதற்கு வேறு



மாதிரியான அபிப்பிராயம் இருக்கலாம். ஆனால் தீர்ப்பு நாள் சட்டமிருக்கின்றதாகச் சொல்லுகின்றார்களே, அந்தச் சட்டத்தில் அதாவது ஒவ்வொருவருடைய பகுத்தறிவையும் உபயோகித்து நடுநிலையில் இருந்து பார்க்கும் தன்மையில் மூன்று பேரும் அதாவது ஓட்டரும், அபேட்சகரும், தேர்தல் முறைகளும் மூன்றும் குற்றவாளிகள் என்றுதான் சொல்ல வேண்டும். அரசாங்கத் தத்துவம் பணக்காரத் தன்மையது என்பது யாரும் மறுக்கக் கூடியதல்ல. ஏனெனில் பணக்காரனுக்குத்தான் ஓட்டு என்பதோடு அதிகப் பணம் செலவு செய்யத் தகுந்தவன் தான் வெற்றி பெறக்கூடிய நிலையில் இன்று பெரும்பான்மையான எல்லா தேர்தலும் இருந்து வருவதையும் அந்தப்படியே நடந்து வருவதையும் அரசாங்கம் தனக்குத் தெரியாது என்று சொல்லிவிட முடியாது.

போட்டி போடும் இரண்டு அபேட்சகர்களும் இந்த மாதிரி நடந்து கொள்வதால் அரசாங்கத்தாரிடம் பிராது கொடுக்க எவனும் வருவதில்லையே ஒழிய அதாவது சூதாடிகள் சூதுக் குற்றத்துக்காக எப்படி அவர்களே பிராதுக்கு வராமல் இருக்கிறார்களோ அதுபோல் இருவரும் வருவதில்லை.

ஆனால் அரசாங்கம் இந்தக் குற்றத்துக்கு ஜவாப்தாரியல்ல என்று சொல்லிக் கொள்ள வேண்டுமானால் மற்றக் காரியங்களுக்கு எப்படிப் புலன் விசாரித்து நடவடிக்கை நடத்துகிறார்களோ அதுபோல் நடத்தி இக்காரியங்களை ஒழித்து இருக்கலாம். ஆதலால் அரசாங்கம் இதில் பங்கு பெறாமல் தப்பித்துக் கொள்ள முடியாது.

இந்தக் காரணங்களால் தான் ஜனநாயகம் என்று சொல்லப்படுவது ஏமாற்றம் என்றும், அது பணநாயகத்தின் லைசென்ஸ் பெற்ற கூலி என்றும், அதைப் பொது மக்கள் இந்த மாதிரி பணம் வாங்கிக் கொண்டு ஓட்டுச் செய்யலாம் என்கின்ற காரியத்திற்கு அல்லாமல் வேறு காரியத்திற்கு உதவும் என்று எண்ண இடமில்லை என்றும் சொல்லுகிறோம்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 30.09.1934**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனீய ஒழிப்புத் திருநாள்

சுயமரியாதை இயக்கத்தின் சுமார் 10 வருஷகால வேலையின் பயனாய் பார்ப்பனீயம் ஒரு அளவுக்காவது ஆட்டம் கொடுத்துவிட்ட விஷயம் நாம் எடுத்துக் காட்ட வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறோம்.

ஆன போதிலும், சமுதாய விஷயங்களில் பார்ப்பனீயம் எவ்வளவு பகிஷ்கரிக்கப்பட்டிருக்கின்றதோ, அதில் 8ல் ஒரு பங்கு கூட அரசியல் விஷயத்தில் பகிஷ்கரிக்கப்பட்டிருப்பதாகச் சொல்ல முடியாது.

அரசியலில் ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனர்களுக்கு விரோதமாய் வேலை செய்வது என்று பெயர் வைத்துக் கொண்டிருந்தாலும் அதன் தலைவர்கள் என்பவர்கள் பலர், தனிப்பட்ட முறையில் தங்கள் சுயநலத்திற்காக எதையும் விற்றுக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

தோழர் முத்தையா முதலியார் அவர்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவத் திட்டம் அரசாங்க உத்திரவு மூலம் போட்ட காரணத்திற்காகவே பார்ப்பனர்கள் அவரை ஒழிக்கச் செய்த சதியில் சில ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களும் உள் உளவாய் இருந்ததோடு, பார்ப்பனரல்லாதார் கட்சியின் பயனாய் முதல் மந்திரி ஸ்தானம் பெற்ற தோழர் முனிசாமி நாயுடு அவர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு விரோதமாய் இருந்து வந்ததுடன் தனது ஸ்தானத்தைக் காப்பாற்ற பார்ப்பனர்களுக்கு அடிமையாக வேண்டிய நிலையையும் அடைந்தார். அதன் பயனையும் அடைந்தார் என்றாலும், இப்போது ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளவும் ஏற்பாடாகி வருகிறது.

இது எப்படியோ இருக்கட்டும். தோழர் முத்தையா முதலியார் அவர்கள் ஏற்படுத்திய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உத்திரவை ஜஸ்டிஸ் கக்ஷி அரசாங்கம் இப்போது மறுபடியும் பிரசுரித்திருப்பது போற்றத்தக்கதேயாகும்.

இன்றைய தினம் எந்த ஊரில், டவுனில் எடுத்துக் கொண்டாலும் வாசல் கூட்டி, பியூன் ஆகியவர்கள் போன்ற உத்தியோகம் போக பாக்கி உத்தியோகங்களில் பார்ப்பனர்கள்தான் 100க்கு 80 பேர், 90 பேர்கள் இருந்து வருகிறார்கள். அதிலும் நீதி இலாக்காவாகிய முனிசீப்பு, சப் ஜட்ஜ், ஜில்லா ஜட்ஜ் முதலியவைகளும், நிர்வாக இலாக்காவாகிய போலீஸ் டிப்டி சூப்பிரண்டெண்ட், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் ஆகியவைகளிலும் பார்ப்பன ஆதிக்கமே தலைசிறந்து நிற்பதுடன் பார்ப்பனரல்லாதார் முயற்சியையும், முன்னேற்றத்தையும் ஒழிக்கவும், தடுக்கவும் அவைகளின் மூலம் எவ்வளவு காரியம் செய்ய வேண்டுமோ அவ்வளவு காரியங்கள் நெஞ்சில் ஈரமில்லாமல் வன்னெஞ்சத்துடன் ஆங்காங்கு செய்யப்பட்டு வருகின்றதானது எவரும் அறியாததல்ல.

அரசாங்கத்தார் ஒவ்வொரு இடத்திலும் உத்தியோகங்களில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் நிலைமை சரிவரக் காக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். அதிகாரிகளைக் குறைந்த அளவாவது பார்ப்பனரல்லாதார் பிரதிநிதித்துவம் கவனிக்கப்பட இடமிருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக ஒரு ஊரில் டிப்டி கலெக்டர் பார்ப்பனராயிருந்தால் தாசில்தார் பார்ப்பனரல்லாதாராய் இருக்கும்படியும், சப்இன்ஸ்பெக்டர் பார்ப்பனராயிருந்தால் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பார்ப்பனரல்லாதாராயும், ஜில்லா ஜட்ஜ் பார்ப்பனராயிருந்தால் சப் ஜட்ஜ் பார்ப்பனரல்லாதாராயும் மற்றும் இதுபோல் அதிகாரங்கள் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

அப்படி யில்லாதவரை, அரசியலிலானாலும், தேசியத்திலானாலும், வகுப்பு உணர்ச்சி தாண்டவமாடும் இக்காலத்தில் பல வகுப்பு மக்களுக்கு பந்தோபஸ்து இருக்குமென்று கருதமுடியாது.

அரசாங்கம் சம்மந்தமில்லாத வேறு பல விஷயங்களில் கூடியவரை பார்ப்பனரல்லாதார்கள் விழித்துக் கொண்டார்கள் என்றே சொல்லலாம்.

உதாரணமாக இப்போது நடைபெற்று வரும் முனிசிபல் எலக்ஷன்களில் பார்ப்பனக் கோட்டைகளாயிருந்த சேலம், திருப்பூர் முதலிய இடங்களில் ஒரு பார்ப்பனர் கூட வரமுடியாமல் போனதைப் பார்த்தால் அங்குள்ள காங்கிரஸ் ஆதிக்கமும், பார்ப்பன ஆதிக்கமும் எவ்வளவு என்பது விளங்கும்.

பெண்களும், ஆதிதிராவிடர்களும் ஒவ்வொரு முனிசிபாலிட்டியிலும் ஸ்தானம் பெற்றார்கள் என்றால், அது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் பெருமையாலேயே அல்லாமல் ஜனங்களுக்கு சமரச உணர்ச்சி ஏற்பட்டல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஈரோடு அர்பன் பாங்கி சமீபகாலம் வரை பார்ப்பன ஆதிக்கத்தில் இருந்தது என்றாலும் இந்த வருஷம் டை பாங்கு தேர்தலில் ஒரு பார்ப்பனருக்குக் கூட இடம் இல்லாமல் போய் விட்டது என்பதோடு ஒரு பெண் டைரக்டரும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறதானது மகிழ்ச்சிக்குரியதாகும். இவ்வளவு இருந்தாலும் சில இடங்களில் ஸ்தானங்கள் பெறப் பார்ப்பனர்கள் கையில் ஆகவில்லை என்றாலும் சிலர் சில பார்ப்பனரல்லாதாரைப் பல வழிகளில் தங்கள் வழிப்படுத்திக் கொண்டு கட்சிகள் தகரார்கள் உற்பத்தி செய்து தாங்கள் ஸ்தானத்தில் இருந்தால் என்ன நடக்குமோ அதுபோல் செய்து வருவது இன்னும் குறைந்தபாடில்லை.



RangaRakes tamilnavarasam.com

நாட்டில் வகுப்பு உணர்ச்சி ஏற்பட்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. அதிலும் தங்களைப் பிறவியிலேயே உயர்ந்த ஜாதி என்று கருதிக் கொண்டு மற்றவர்களைத் தாழ்ந்த ஜாதியாக கருதிக் கொண்டிருக்கிறவர்களிடத்தில், தாழ்ந்த ஜாதிக்காரார்களாய் கருதப்படுகிறவர்கள் துவேஷமும் வெறுப்பும் இல்லாமல் இருக்கக் கூடும் என்று எதிர்பார்ப்பது மனித இயற்கைக்கு விரோதமானது.

உதாரணமாக ஒரு பிராமணன் என்பவனிடம் ஒரு சூத்திரன் என்பவன் துவேஷமாயிருக்கிறான் என்பது ஒரு நாளும் ஆச்சரியமான காரியம் ஆகாது. மற்றெது ஆச்சரியமான காரியம் ஆகுமென்றால் ஒரு பிராமணன் என்பவனிடம் கூட ஒரு சூத்திரன் என்று அழைக்கப்படுகின்றவன், தீண்டப்படாதவன் என்று அழைக்கப்படுகிறவன் துவேஷமில்லாமல், வெறுப்பு இல்லாமல் இருந்து வருவதுதான் ஆச்சரியப்படத்தக்கதாகும்.

ஆதலால் ஜாதிப்பிரிவு சம்பந்தமான உயர்வு, தாழ்வு இருக்கும் வரை நாட்டில் துவேஷம், வெறுப்பு, வகுப்பு உணர்ச்சி ஆகிய காரியங்களும் ஒரு வகுப்பாரால் ஒரு வகுப்பு கஷ்டமடையும் காரியங்களும் எதிர்பார்த்துத்தான் இருக்க வேண்டும்.

**உதாரணம்**

இதற்கும் ஒரு உதாரணம் கூறிவிட்டு இதை முடிக்கின்றோம்.

தோழர் எஸ். குஞ்சிதம் குருசாமி அம்மாளை யாவருக்கும் தெரியும். அந்தம்மாள் பி.ஏ., எல்.டி., பாஸ் செய்தவர்கள். அதிலும் யோக்கியதாபக்ஷத்தோடு உயர்ந்த வகுப்பில் பாஸ் செய்தவர்கள். அவர்களின் கல்வித் திறமை, போதிக்கும் திறமை, பிள்ளைகளிடம் அன்பாயிருக்கும் திறமை, சரீராப்பியாச விளையாட்டுகளில் உள்ள திறமை முதலியவைகள் அந்தம்மாள் வேலை செய்த பள்ளிக்கூட தலைமை உபாத்தியாயரின் நற்சாக்ஷிப் பத்திரத்தில் காணலாம். இப்படிப்பட்ட அம்மாள் மைலாப்பூரில் ஒரு பார்ப்பன ஆதிக்கமுள்ள பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக மாதம் 70 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு வந்தார்.

அந்தம்மாள் யாதொரு தப்பிதமும் செய்துவிடவில்லை. இரண்டொரு இடங்களில் பகுத்தறிவு பிரசங்கங்கள் செய்தது தவிர யாதொரு பாவத்தையும் அறியார். அப்படிப்பட்டவர்களைத் தோழர்கள் பி.எஸ். சிவசாமி அய்யர், டி.ஆர்.வெங்கிட்ட ராமசாஸ்திரி, சி.பி.ராமசாமி அய்யர், அல்லாடிக் கிருஷ்ணசாமி அய்யர் ஆகியவர்கள் போன்றவர்கள் நிர்வாக கமிட்டியாய் இருக்கும் பள்ளிக்கூடத்தில், அந்தம்மாளுக்கு இனி வேலை இல்லை என்று நோட்டீஸ் கொடுத்து வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள் என்றால், வகுப்பு உணர்ச்சியில் மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க முடியுமா என்று யோசித்துப் பாருங்கள்.



இந்தப்படி ஒரு பார்ப்பனரல்லாதார் ஆதிக்கமுள்ள ஸ்தாபனங்களில் இருந்து, தகுந்த ஒழுக்கக் குறைவுள்பட ஒரு குற்றத்துக்காக ஒரு பார்ப்பனரை நீக்கிவிட்டால் அக்கிரகாரம் முதல் கொண்டு சர்க்கார் அதிகாரிகள் - ஹைகோர்ட்டு வரை அந்த ஸ்தாபனத்தின் மீது பழி வாங்க நினைக்கிறார்கள். ''பிராமணத் துவேஷம்'' பிராமணத் துவேஷமென்று கூப்பாடு போடுகிறார்கள்.

பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தில் இருக்கிற எந்த ஸ்தாபனங் களிலாவது 100க்கு 10 வீதமாவது பார்ப்பனரல்லா தார்களுக்கு வேலை கொடுக்கிறார்களா? எனப் பார்த்தால் வகுப்பு துவேஷம் யாரிடத்தில் இருக்கிறது என்பது விளங்கும்.

ஆதலால் பார்ப்பனரல்லாத மக்கள் இனியாகிலும் இவ்விஷயங்களை உணர்ந்து அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ள முயற்சிப்பதுடன் காந்தி ஜெயந்தி, கிருஷ்ண ஜெயந்தி, ஹரிஜன நாள், ஏகாதிபத்திய ஒழிப்பு நாள், மே டே என்பது போன்ற நாள்களை வருஷத்துக்கு ஒரு நாள் கொண்டாடுவது போல் ''பார்ப்பன ஆதிக்கம் ஒழிப்பு நாள்'' என்பதாக வருஷத்தில் ஒரு நாள் கொண்டாட ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், அதை அடுத்து வரும் தீபாவளிக்கு அடுத்த நாளோ, அல்லது முந்திய நாளோ வைத்துக் கொள்வது நல்லது என்றும் அபிப்பிராயப்படுகின்றோம்.

இத்தினங்களில் ஆங்காங்கு கூட்டம் போட்டு பார்ப்பன ஆதிக்கக் கொடுமை, சமுதாயத்திலும், அரசியலிலும் இருப்பதை மக்களுக்கு எடுத்துக்காட்டி தீர்மானங்களை நிறைவேற்றி, அரசாங்கத்துக்கும் பத்திரிக்கைகளுக்கும் அனுப்ப வேண்டிய வேலையை அத்திருநாள் கொண்டாட்ட வேலையாக வைத்துக் கொள்ளலாம் என்றும் அபிப்பிராயப்படு கின்றோம். இன்ன நாள் என்பதைப் பின்னால் உறுதிப்படுத்துகிறோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 30.09.1934**



RangaRakes tamilnavarasam.com

# சர்க்கார் காங்கிரசைவிட மோசமானதா?

## பட்டேலின் ''ஸ்ரீ முகம்''

தோழர் வல்லபாய் பட்டேல் அவர்கள் சென்னை மாகாண காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் முனைந்து நிற்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைவதாகவும், சென்னை மாகாணக்காரர்கள் காங்கிரஸ்காரருக்கே ஓட்டு செய்ய வேண்டும் என்றும் அதற்கு காரணம் அடக்கு முறையைக் கண்டிக்க வேண்டியும், வெள்ளை அறிக்கையை நிராகரிக்க வேண்டியும் காங்கிரஸ்காரர்களே தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் சொல்லுகிறார். மற்றும் காங்கிரஸ்வாதி அல்லாத மற்றவருக்குக் கொடுக்கும் ஓட்டு சர்க்காருக்கு கொடுத்தது போல் ஆகுமென்றும் சொல்லுகிறார். முதல் விஷயத்தை ஒப்புக்கொண்டாலும் இரண்டாவது விஷயம் ஒப்புக் கொள்ளப்படாதது என்பதுடன், அதில் நாணையமும் நியாயமும் இல்லை என்றும் சொல்ல வேண்டியிருப்பதற்கு வருந்துகிறோம்.

ஏனெனில் இந்த நாட்டிலுள்ள சுமார் 35 கோடி மக்களில் காங்கிரசில் அங்கத்தினர்களாய் இருக்கிற சுமார் ஒரு பத்தாயிரம் அல்லது இருபதாயிரம் மக்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் சர்க்காரைச் சேர்ந்தவர்கள், தேசத்துரோகிகள் என்பது தோழர் பட்டேல் அவர்களின் ஸ்ரீமுகத்தின் கருத்தாகிறது.

தோழர் ஷண்முகம் அவர்கள் விருதுநகரில் தெரிவித்தது போல் தேசபக்தி என்பது தோழர்கள் பட்டேல், ஆச்சாரியார் ஆகியவர்களின் பிதுரார்ஜ்ஜித சொத்துப் போலவும் அந்தக் கூட்டத்தில் இவர்களுடைய சிஷ்யர்களும், அடிமைகளும் தவிர மற்றவர்களுக்கு இடம் கிடையாது போலவும் இவர்களுடைய ஆதிக்கம் இருந்து வருகிறது.

அந்த சிஷ்யர்களும், அடிமைகளும் கூட தங்கள் தேசபக்தியைக் காட்டவேண்டுமானால் ஒரு முறைக்கு நாலுமுறை சிறை சென்று இருந்தாலும் போராது. பத்து ஆயிரக்கணக்கான ரூபாய்கள் கொண்ட தங்கள் வரும்படிகளையும் துறந்து கை முதல்களையும் இழந்து ராஜபோகத்தையும் விடுத்து, சன்னியாசியாய் கடன்காரனாய் தெருவில் நின்று தவிப்பவனாய் இருந்தாலும் போராது. மற்றபடி எவ்வளவு அயோக்கியனாய், குடிகாரனாய், ஜாதி ஆணவம் பிடித்தவனாய், தாசி லோலனாய், ஊரை ஏமாற்றி கொள்ளையடிப்பவனாய், சர்க்காருக்கு சி.ஐ.டீ.யாய் ஒரு மணி நேர வேலைக்கு 100 ரூபாய், 500 ரூபாய், 1000ரூபாய் வீதம் மக்களிடம் இருந்து கறந்து போகபோக்கியங்கள் அனுபவிப்பவனாய் இருந்து கொண்டு, கதர் துணியை கட்டுபவனாகவும், ராட்டினத்தில் நூற்பவனாகவும் காந்திக்கும், பட்டேலுக்கும், ஆச்சாரிக்கும் ஜே போட்டு மகாத்மா என்று கூப்பிடுபவனாகவும் இருந்தால், பெரிதும் அவன்தான் தேசபக்தன், சர்க்கார் மனிதன் அல்லாதவன், பாமர மக்கள் ஓட்டைப் பெறத் தகுதி உடையவன் என்றால் இது யோக்கியமா என்று கேட்கின்றோம்.

மத விஷயத்தில் ''பழி தொழிலும் இழிகுலமும் படைத்தாரேனும் அரவணையாய் என்பாராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும் அடிகள் (கடவுள்) ஆவார்'' என்றும் ''சாதியால் ஒழுக்கத்தால் தக்கோரேனும் - பொன்னரங்கம் போற்றாதார் புலையர் ஆவார்'' என்றும் சொல்லப்படுவது போலவே, ஆச்சாரியாரையும் பட்டேலையும் போற்றாதார் எவ்வளவு ஒழுக்கம் உள்ளவராய் இருந்தாலும் தேசத்துக்காக எவ்வளவு தியாகம் செய்தவர்களானாலும் தேசத்துரோகிகள் ஆவார்கள் என்று சொல்லப்படுகிறது.

இதற்குக் காரணம் காங்கிரஸ் தேசபக்தி என்பவைகளின் பேரால் ஏராளமான பணங்களைப் பாமர மக்களிடமிருந்து கொள்ளை கொண்டு அதன் பயனாய் உடல் உழைக்க சோம்பேறித்தனம் கொண்ட மக்களை கூலிகளாய் அமர்த்தி அவர்களை விட்டு கூலிப் பிரசாரம் செய்து வருவதால் இவ்வளவு தைரியமாகப் பேச இவர்களுக்கு இடமேற்பட்டுவிட்டது.

1917 முதல் 1922 வரையில் தோழர் வரதராஜுலு அவர்கள் இந்தப் பார்ப்பனர்களுக்கு சங்கராச்சாரி போலவும், ஜீயர் போலவும் விளங்கியதை யாராவது மறுக்கமுடியுமா என்று கேட்கின்றோம். அதற்குப் பிறகு எவ்வளவோ தரம் சிறை சென்றும் 10 ஆயிரக் கணக்காக காசு பணம் செலவு செய்தும் தேசியம் தேசாபிமானம் என்று கோடிக்கணக்கான தடவை உருச்செபித்து குடும்பசகிதம் கதரையே உடுத்தி வந்தும், இன்று அவர் தேச பக்தர்கள் கூட்டத்தில் சேர்க்கப்படாமல் தேசத் துரோகிகள் கூட்டத்தில் சேர்க்கப்பட்டதின் காரணம் என்ன என்பதை யோசித்தால் தோழர் ஆச்சாரியார் பேரிலும், பட்டேல் பேரிலும் ஸ்தோத்திரம் தாண்டகம் முதலிய பிரபந்தம் பாடாதது தான் காரணம் என்பதைத் தவிர வேறு என்ன சொல்லக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை.

தவிரவும் ''காங்கிரஸ்காரருக்குக் கொடுக்காத ஓட்டு சர்க்காருக்குக் கொடுத்ததாகப் பாவிக்கப்படும்'' என்று அடிக்கடி பல்லவி பாடுவதின் யோக்கியதையைச் சற்று விளக்கிப் பார்ப்போம்.

இன்றைய தினம் காங்கிரசைவிட சர்க்கார் எந்த விதத்தில் யோக்கியதைக் குறைவானது என்பது நமக்கு விளங்கவில்லை.

சர்க்காரில் அண்ணன் இருந்தால், காங்கிரசில் தம்பி இருக்கிறான். காங்கிரசில் மகன் இருந்தால், சர்க்காரில் தகப்பன் இருக்கிறான்.



RangaRakes tamilnavarasam.com

காங்கிரசில் மாமனார் இருந்தால், சர்க்காரில் மருமகன் இருக்கிறான். காங்கிரசில் அண்ணன் மகன் இருந்தால், சர்க்காரில் சிற்றப்பன் இருக்கிறான். காங்கிரசையும் சர்க்காரையும் ஒரு ஜீவனோபாயமாய்க் கொண்டவர்களே இந்த இரண்டு ஸ்தாபனங்களிலும் மிகுந்து இருக்கிறார்கள். இரண்டு கூட்டமும் பெரிதும் பொது ஜனங்கள் பணத்திலேயே வாழுகின்றார்கள். சர்க்கார் அடக்குமுறைச் சட்டங்கள் போலவே காங்கிரசிலும் அடக்குமுறைச் சட்டங்கள் இருந்து கொண்டுதான் வருகின்றன. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், அதிகாரிகள் ஆகியவர்களிடத்தில் இருக்கும் நாணையக் குறைவு, புரட்டு, பித்தலாட்டம், சமயத்துக்கு ஏற்ற வேஷம், வாக்குத்தத்தம் தவறுதல் ஆகியவைகள் காங்கிரசிலும் இருந்துதான் வருகின்றன. சர்க்கார் எதேச்சாதிகாரத்தைப் போலவே காங்கிரசிலும் எதேச்சாதிகாரம் இருந்துதான் வருகிறது.

சர்க்காரில் இருக்கும் பொய் ஜனநாயகத் தத்துவமே ஏன்? அதைவிட மோசமான ஜனநாயகத் தத்துவமே காங்கிரசிலும் இருந்து வருகின்றது. சர்க்கார் தங்களுக்கு இஷ்டமில்லாதவர்களை தங்கள் அடிமை அல்லாதவர்களை ராஜத் துரோகியென்று கூப்பிட்டால், காங்கிரஸ் தங்களுக்கு அடிமைகள் அல்லாதவர்களை தேசத் துரோகி என்று விஷமப் பிரசாரம் செய்கிறார்கள். எந்த விதத்தில் காங்கிரஸ், சர்க்காரை விட யோக்கியதை உடையது என்று கேட்கின்றோம்.

ஆகவே பாமர மக்கள் இனியாவது இந்தப் பொய் மிரட்டலை உணர்ந்து, தங்களுடைய பகுத்தறிவுக்கு சரியென்று தோன்றிய மார்க்கத்தில் நடந்து கொள்ள வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 30.09.1934**



# ஈரோடு அர்பன் பாங்கி தேர்தல்

ஈரோடு அர்பன் பாங்கியைப் பற்றியும், அதன் நிர்வாகத்தைப் பற்றியும் ‘‘குடி அரசு’’ பத்திரிகையில் ஒரு குறிப்பு வந்திருந்ததை வாசகர்கள் கவனித்திருக்கலாம்.

ஈரோடு அர்பன் பாங்கி வெகு காலம் பார்ப்பனர் ஆதிக்கத்திலிருந்து வந்ததும், அது பார்ப்பனர் பாங்காகவே இருந்து வந்ததும், பார்ப்பனர்களுக்கும், பார்ப்பன சிஷ்யர்களுக்கும், அடிமைகளுக்கும் மாத்திரமல்லாமல் மற்றவர்களுக்கு அதில் இடம் கிடைப்பதே கஷ்டமாய் இருந்ததைப்பற்றி அவ்வப்போது பல குறிப்புகள் குடி அரசில் வந்து கொண்டிருந்ததும் யாவருக்கும் தெரியும்.

இப்போது சுமார் 4,5 வருஷ காலமாக சுயமரியாதை இயக்கத்தின் பயனாய் பார்ப்பனரல்லாத மக்கள் விழிப்பெய்தி பலதுறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வருவது போலவே இந்த அர்பன் பாங்கி விஷயத்திலும் கண் விழித்தும் முன்னேற்றமடைந்து பாங்கியின் பயனை பார்ப்பனரல்லாத மக்களும் பங்கு வீதம் இல்லாவிட்டாலும் ஒரு குறிப்பிடத்தகுந்த அளவுக்காவது அடைந்து வருகிறார்கள் என்பதைக் கேட்க பார்ப்பனரல்லாதார் எல்லோருமே மகிழ்ச்சி அடையக்கூடும். நிற்க

சமீபகாலமாய் அதாவது 2,3 வருஷ காலமாய் ஈரோடு அர்பன் பாங்கி டைரக்டறேடானது ஒரு பார்ப்பனரல்லாதாரை பிரசிடெண்டாகக் கொண்டு நிர்வாகம் நடைபெற்று வந்ததைப் பற்றி அதன் எதிரிகள் பலவிதமாகக் குற்றங்களைக் கூறி விஷமப் பிரசாரங்கள் செய்து வந்ததோடு சிவில் கிரிமினல் விவகாரங்களும், தொல்லைகளும் நடந்து வந்ததோடு அந்த டைரக்ட்டர் சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் முதலியவைகள் கூட கொண்டு வர முயற்சிகள் நடந்து வந்ததும் யாவருக்கும் தெரிந்ததாகும்.

இதன் பயனாய் கடைசியில் ஏற்பட்ட பலன் என்னவென்றால் டைரக்ட்டர்களின் உத்தியோக ஆயுள் காலம் மறுபடியும் ஒரு வருஷம் வளர்ந்து வந்தது என்பதுடன் இம்மாதம் 22-ந்தேதி நடந்த அர்பன் பாங்கி தேர்தலில் பழைய டைரக்ட்டர்களே அபரிமிதமான ஓட்டுகளுடன் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதுதான்.



RangaRakes tamilnavarasam.com

22.9.34ந் தேதி காலை முதல் மாலை வரை 400-பேர்கள் வரை ஓட்டர்கள் விஜயம் செய்து தங்கள் ஓட்டுகளைப் பதிவு செய்தார்கள். 5-இடங்களில் போலிங் நடந்தது. 11 பேர் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய 11ஸ்தானங்களுக்கு 24பேர்களுக்கு ஓட்டர்கள் ஓட்டுப் போட்டார்கள். கடைசியாக அடியில் கண்ட தோழர்களுக்கு அதிகமாக ஓட்டுகள் விழுந்ததால் அவர்களே தெரிந்தெடுக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | M. சிக்கையா | 376 |
| 2. | E.S. கோவிந்தசாமி நாயுடு | 373 |
| 3. | S.R. கண்ணம்மாள் | 370 |
| 4. | நா.மு. ஷண்முகசுந்தர முதலியார் | 367 |
| 5. | S. ராமசாமி நாயக்கர் | 364 |
| 6. | V.V.C.V. பெரியசாமி முதலியார் | 363 |
| 7. | E.Y. உமார் நவாஸ்கான் சாயபு | 363 |
| 8. | K.M. சீனிவாசம் பிள்ளை | 360 |
| 9. | K. காதர் சாயபு | 359 |
| 10. | V.V.C.R.முருகேச முதலியார் | 358 |
| 11. | V.வெங்கிடசாமி ரவுத்து | 356 |

இதில் பத்து தோழர்கள் முன்னமேயே டைரக்ட்டராய் இருந்தவர்கள். தோழர் கண்ணம்மாள் மாத்திரம் புதிதாக தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்.

அடுத்த நாள் 23ந்தேதி காலையில் டைரக்ட்டர்கள் கூட்டம் கூடி தோழர் M. சிக்கையா அவர்களையே மறுபடியும் பிரசிடெண்டாகவும் தோழர் V.V.C. பெரியசாமி முதலியார் அவர்களை மறுபடியும் வைஸ் பிரசிடெண்டாகவும் தெரிந்தெடுத்தார்கள். தோழர் உப்புமண்டி காதர்சாயபு அவர்கள் தனது மகன் தோழர் அப்துல் ரஜாக்சாயபுக்காக ராஜினாமா செய்ததால் அந்த ஸ்தானத்துக்கு தோழர் அப்துல் ரஜாக் சாயபு அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்.

வரப்போகும் 3-வருஷ காலமும் டைரக்ட்டர்களும், பிரசிடெண்டும் ஒத்துழைத்து பாங்கியின் முற்போக்குக்கு உழைப்பதோடு மகாஜனங் களுக்கு நன்மை உண்டாகும் முறையில் தொண்டாற்றுவார்கள் என்று நம்புகிறோம். கடைசியாக அர்பன் பாங்கி டைரக்ட்ரேட்டுக்கு பெண் டைரக்ட்டரை தெரிந்தெடுத்த ஓட்டர்களை பாராட்டுவதுடன் அடுத்த எலக்ஷனிலாவது ஒரு தாழ்த்தப்பட்ட தோழரை தெரிந்தெடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

பகுத்தறிவு - கட்டுரை - 30.09.1934



# நமது தலைவர் ஈ.வெ.ராவும் சென்னை பார்ப்பனரல்லாதார் மகாநாடும்

*‘‘புரட்சி’’ நின்று போவதற்கு சற்று முன், நமது தலைவர் ஈ.வெ.ரா. அவர்கள், ஜஸ்டிஸ் (Justice) கட்சியோடு சரச சல்லாபம் காட்டுவதாக பாவித்து, அது, சமதர்மிகளுக்குப் பொருந்தாது என்று, ஒரு சிறு கட்டுரை எழுதி இருந்தேன். அதைப் பிரசுரிப்பதற்கு முன் ‘‘புரட்சி’’ நின்று விட்டது. அதனை பிறகு வந்த ‘‘பகுத்தறிவில்’’ அதை அச்சிட்டார்களோ, அது எனக்குத் தெரியவில்லை. அந்தக் கட்டுரையில், நமது நாட்டிலுள்ள பலவித அரசியல் கட்சிகள் சம்பந்தமாக, நாமாகிய சமதர்மிகள் நடந்து கொள்ளும் முறையைப் பற்றியும் எழுதியதாகவும் ஞாபகமிருக்கிறது. இது நிற்க, சுயமரியாதை சமதர்மியர், தற்காலம் நடந்து வரும் தேர்தல்களில் நடந்து கொள்ள வேண்டிய முறையையும், ஜோலார்ப்பேட்டை ‘‘சமதர்மம்’’ என்ற பத்திரிகையிலும் குறிப்பாக எடுத்துக் காட்டியுள்ளேன். இதனை அச்சஞ்சிகையில் பிரசுரித்தார்களோ அதுவும் தெரியவில்லை.*

*எந்தக் கட்சியினர்களாயினும் அவர்களுக்கு ஓர் திட்டம் இருக்க வேண்டும். அந்தத் திட்டத்திற்குள்தான் அவரவர்கள் நடந்து தீரவேண்டும். வேண்டுமானால் ஒரு திட்டத்திலிருந்து மற்றொரு திட்டத்திற்கு மாறலாம். அதுதான் பகுத்தறிவின் முதல் லட்சணம். தங்கள் பகுத்தறிவுக்கு குறிப்பிட்ட திட்டந்தான் பொருத்தமுளதென்று தோன்றுங்காலை அந்தத் திட்டத்திற்குள்ளிருந்தே நடந்து கொள்வதே ஞாயம்.*

*சமதர்மிகளாகிய நமக்கு ஈரோட்டில் ஒரு திட்டம் 1932ல் வகுக்கப்பட்டுளது. அதனை அமுலுக்குக் கொண்டு வர வேண்டியது நமது கடமை. சுயமரியாதை இயக்கத்தில் தனியாக அரசியல் கட்சி ஒன்றை ஏற்படுத்தியது அந்த ஈரோட்டுத் திட்ட மூலமாகவே. ஈரோட்டில் நமது தென்னாடு சுயமரியாதையோரில் பிரபல அங்கத்தினர்கள், சுமார் 300 பேர்களுக்கு மேலாக ஏகமனதாக ஒத்துக் கொண்ட சமதர்ம திட்டமதுவே. அந்தத் திட்டத்திற்கு முன்னால் எந்த ஏனைய கட்சிகளும் நில்லா என்பது உலகம் தெரிந்த விஷயம். அதாவது உலகிலுள்ள எந்தக்கட்சியாயினும்; சுத்த அரசியல்*



RangaRakes tamilnavarasam.com

கட்சியாயினும், குடி அரசு கட்சியாயினும்; முதலாளி கட்சியாயினும், தொழிலாழி கட்சியாயினும்; எந்தக் கட்சிக்கும், உலகை அல்லது நாட்டைச் சீர்திருத்த ஒரே மார்க்கந்தான் உளது. **அதுதான் சமதர்ம மார்க்கம் (Socialism)**

இதனைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், தற்கால உலக நிலையைச் சற்று நோக்கிப் பாருங்கள். சமதர்ம நாடு ஒன்றைத் தவிர, மற்ற நாடுகள் எல்லாவற்றிலும், வேலை இல்லாமை கோடான கோடி மக்களை வதைத்து வருவதே போதுமானது. எந்த அரசும் அதனதன் மக்களுக்கு உணவு, ஆடை, குடி இருப்பு வசதி சரிசமத்துவமாக உதவவேண்டுமாயின், சமதர்ம மூலமாகத்தான் முடியும். இதற்குத் திருஷ்டாந்தம் வேண்டுமாயின் உலக முழுமையும் சமதர்மக் கொள்கைகளைக் கையாள முயற்சி செய்வதே அறிகுறியாகும். ஆனால் அந்தந்த அரசுகள் சமதர்மக் கொள்கைகளைக் கையாண்டு பார்க்க எத்தனித்தும், ஏன் தோல்வியுறுகின்றார்களென்றால் அவர்கள் பெரும்பான்மையும் கொண்டுள்ள திட்டத்திற்கும், சமதர்மத் திட்டத்திற்கும் பொருத்தமில்லாமையே முதற்காரணமாகும்.

நமது நாட்டில் உள்ள கட்சிகள் யாவும் (ஒன்றைத்தவிர) முதலாளி திட்டத்தில் மூழ்கி கிடக்கின்றவைகளே. முதலாளித் திட்டத்தை வைத்துக் கொண்டு, எந்த நல்லெண்ணத்தோடு சமதர்மக் கொள்கைகளை அனுஷ்டிக்க முயன்றாலும் அது கைகூடி வரமுடியாது. காங்கிரஸ் சமதர்மக் கட்சியாயினும், ஜஸ்டிஸ் சமதர்மக் கட்சியாயினும், அல்லது மாளவியா, கெல்கார், மூஞ்சே, முஸ்லிம் சமதர்மக் கட்சியாயினும், அல்லது இந்து மத சனாதன சமதர்மக்கட்சியாயினும், எந்தக் கட்சியாயினும், ராமராஜ்ய முதல் நிகழ்ந்து வரும் முதலாளித் திட்டத்தை ஆதரித்துக் கொண்டு, ''சமதர்மம்'' பேசுவார்களாயின், அது பல்லாண்டு கோடி பாமர மக்களை ஏமாற்றுவதாகுமென அறிக. அவ்விதம் பேசும் கட்சியினரை நம்புவதும், நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதெனவும் அறிக. எதுவும் செய்யமுடியாத கட்சியினரை, அதைச் செய்யுங்கள், இதைச் செய்யுங்கள் என்று அவர்களுக்கு உபதேசிப்பதும், வீணான வீண் வேலையென உணர்க.

நமது தலைவர் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுக்கு (பார்ப்பனரல்லாதார் என்ற சொல்லை கொட்டை எழுத்தில் போடாததற்கு மன்னிக்க வேண்டும்) விடுத்துள்ள பத்துக் கட்டளை வேலைத் திட்டத்தைப் பரிசோதிப்போம். இந்த வேலைத்திட்டங்களை, ஜஸ்டிஸ் கட்சியிலுள்ள தியாகிகள் (என்ன தியாகம் பிராமணரல்லா தாருக்குச் செய்தனரோ(?) அது நமக்கு விளங்காததைக் குறித்து



விசனிக்கின்றோம்!) ஆதரவு அளிப்பதாகவே எண்ணிக் கொள்வோம். கனம். பொப்லிராஜாவும், சர்.ஆர்.கே.ஷண்முகமும், நமது தலைவர் விடுத்துள்ள வேலைத்திட்டத்தை மனமாற இராஜாங்க சபையில் ஆதரிப்பதாகவும் வைத்துக் கொள்ளுவோம். இந்த வேலைத் திட்டங்களை, ஒன்றையாகிலும் சட்டசபையில் கொண்டு வர முடியுமா என்று பார்ப்போம்.

1. அரசியல் உத்தியோக சம்பளங்களைக் குறைக்க வேண்டுமாம்! இதைப் போன்ற (Platitudes) சாமான்ய திட்டங்களை, நமது சத்தியமூர்த்தியும் அடிக்கடி மேடையினின்று வழங்குவது முண்டு! பெருத்த உத்தியோகஸ்தர்களின் சம்பளங்கள், முதலாளி அரசியல் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளது. அதனை எள்ளளவேனும் குறைக்க நமது **இந்திய சட்டசபைகளுக்கு அதிகாரம் கிடையா.** அவை, ஆங்கில பார்லிமெண்டரி சட்டங்களால் சிருஷ்டிக்கப் பட்டவை நமது இந்திய கவர்ன்மெண்டாராலேயே குறைக்க முடியாதென்றால்! சத்தியமூர்த்திகளும், ஷண்முகங்களும், பொப்லிகளும் என்ன செய்ய முடியும்? அரசியல் திட்ட மொன்றாக இருக்க அதனை மாற்றாமல், அந்த திட்டத்திற்கு உட்பட்டிருக்கும் விபரங்களை எப்படி மாற்ற முடியும். ஆதலின் இவ்வித சீர்திருத்தங்களைச் செய்யவேண்டு மென்பதும் வியர்த்தம். செய்யலாமென்று எண்ணுவதும் மோசடி. செய்கின்றேனென்று சொல்வதும் Cant அதாவது பாசாங்கே!

2. பழைய சமதர்மக் கொள்கைகளில் ஒன்று, கவர்ன்மெண்டே தொழிற்சாலை நடத்த வேண்டுமென்பது இந்த திட்டத்தை கையாள வேண்டுமென்று எந்த முதலாளிக்கட்சிக்காரன் முன் வருவான்? இதனைச் சொன்ன மாத்திரத்தில் ஒரு வோட் கிடைக்குமா? கடந்த 20-வருஷமாக எந்த ஜஸ்டிஸ் பெரியோராவது, இதனை சொல்மாத்திர அளவுக்காயிலும் திட்டம் வகுத்தனரா? நமது ஜஸ்டிஸ் கட்சியினரை இந்த திட்டத்தை ஆதரிக்கக் கேட்டுக் கொள்வது செவிடன் காதில் சங்கூதியதேயாகும்!!

3. உண்பண்டம், தின்பண்டங்களைக் கூட்டுறவு மூலமாகவே வினியோகிக்க அரசாங்கத்தாராலேயே முடியுமா என்று கேட்கின்றோம். அவர்கள் திட்டம், தனி உடைமைத் திட்டம். தனி உடைமை இருந்தால் தான் முதலாளி அரசு நடைபெறும். எந்த அரசாவது தன் தலையில், தானே மண்ணைப் போட்டுக் கொள்ளுமா? Co-operative (Common wealth) ஐ நிலச்சுவான்களுமா? தொழிற்சாலை சொந்தக்காரர்களுமா? மாபெரும் வர்த்தகர்களுமா?



RangaRakes tamilnavarasam.com

அவர்களால் சிருஷ்டிக்கப்பட்ட அஸ்ஸம்பிலி மெம்பர்களுமா? அங்கீகரிக்கப் போகின்றனர்? தங்கள் கனவிலும் சிந்திக்க மாட்டார்களே!

4. விவசாயிகளின் கடன் நிவர்த்தி, யார் செய்யத் துணிவார்கள்? இந்த கடன் சுமார் 1000 கோடி என்று ஒரு கணக்குண்டு. சிலர் 500 கோடி என்பார்கள். இந்த மாபெரும் கடனால் பிழைக்கும் முதலாளிகளால், நமது ஏ. ராமசாமிகளும், சத்தியமூர்த்திகளும் சண்முகங்களும் தேர்ந் தெடுக்கப்படப் போகின்றனர். அவர்களுக்குள்ள முதலாளி செல்வாக்கை, வெறுஞ்சொல்லால் தொலைக்கப் பார்ப்பார்களா? இது வீண் பேச்சு.

5. சர்வ கல்வி, சர்வ குடியாமைகளுக்கு, திட்டங்கள் வகுக்கக் கூடும். சத்தியமூர்த்தியும் சர்வ கல்விக்கு 10 வருஷ திட்டம் வேண்டுமென்கின்றார்! ஆனால், சர்வ கல்விக்கு வேண்டிய பண உதவி, சர்வ குடியாமையால் நேரிடும் நஷ்டம், எந்த முதலாளி அரசாங்கம் தாங்க முடியும்? பெரிய மந்திரிகள் தங்கள் சம்பளத்தை அறைப் பங்கு குறைத்துக் கொள்வார்களா? அவர்கள் மேல் வகுக்கப்பட்டிருக்கும் வருமான வரியை இரட்டித்துக் கொள்வார்களா? இவர்கள் நிழலில் நிற்கின்றவர்களா, சர்வ கல்வியை சட்டசபைகளில் ஆதரிக்கப் போகின்றனர். எத்தனை ஆயிரம் பிராமணரல்லாத மாணவருக்கு சம்பள மில்லாமையும், Scholarships களும், எந்த ராஜ விஸ்வாசி செய்து வைத்தார் என்று கேட்கின்றோம்?

லார்டு ஓபார்ட் கவர்ன்மெண்டிலாகிலும் அகில மகமதிய மாணவர்களுக்கு அரைச் சம்பளம் விதிக்கப்பட்டது! ஆனால் உண்மையை உரைக்கவேண்டுமானால், பிராமணரல்லாத கட்சியால், சிற்சில முதலாளி பிள்ளைகளுக்கே சிற்சில உத்தியோகங்களும், செல்வாக்கும் கிடைத்தனவே ஒழிய, மற்றபடி ''பள்ளு பறை பதினெட்டென்று'' கூறும் கோடான கோடி பிராமணரல்லாத பாமர மக்களுக்கு ஒரு திரணமேனும் உதவி உண்டாகவில்லை. பாபம், ஜஸ்டிஸ் கட்சி தான் என்ன செய்யும்! இவர்களும் முதலாளிகள் இவர்களை ஆதரிக்கின்றவர் களும் முதலாளிகள்! இவ்விருவருடைய செல்வாக்கையா போக்கிக் கொள்வார்கள்?

6. அவரவர் மதங்களை, ஆதரிக்கப்படுமென்று மத பாதுகாப்புகள் உண்டாயிருக்க, மதங்களை அரசியல் ஆதரவிலிருந்து, யாரால் எடுக்க முடியும். புதிய திட்டத்தை மாற்றினாலன்றோ மதங்களின் செல்வாக்கு விலக்கப்படும்? கோயில்கள் பாதுகாப்பென்று, மத ஸ்தாபன திட்டத்தை உண்டாக்கிய கட்சியா, அல்லது கூட்டமா, மதங்களை அரசாங்க ஆதரவிலிருந்து நீக்குவார்கள்?

முதலாளி திட்டம் எதுவாயினும் அதனை ஆதரிக்கும் கட்சிகளால் பாமர ஜனங்களுக்கு உண்ணவும், உடுக்கவும், இருக்கவும் சலுகைகள் கிடைக்கப் போவதில்லை. அதே திட்டத்தில் இன்று செய்து வரும் அமெரிக்கா, என்.ஆர்.எ.பிரசண்ட சீர்திருத்தத்தால் பத்துக்கோடி மக்களுடைய வேலை இல்லாமையை போக்க முடியாமற் போயிற்றென்றால், நிலச் சுவான்களும், பெரும் வர்த்தகர்களும், தொழிற்சாலை சொந்தக்காரர்களும், மகாத்மாக்களும், மௌலானாக்களும், அதே திட்டத்திலிருந்து கொண்டு அதன் ஊழல்களை எப்படி எடுத்தெரிய முடியும். தற்கால சட்டசபைகளில் முழுப்பங்கு முதலாளி அங்கத்தினர்களாயிருக்க, அவர்கள் முன் காங்கிரசாயினும் - ஜஸ்டிஸ் கட்சியாயினும் மற்று வேறு எந்த கட்சியாயினும் - என்ன செய்ய முடியும்? இந்த விஷயங்களை விளையாடும் பிள்ளைகளும் அறிந்தது தான்!

நாம் செய்ய வேண்டிய வேலை என்னவென்று கேட்கலாம்? பல கட்டுரைகளில் நமது கடமையைப் பற்றியும், நாம் செய்து வரவேண்டிய வேலையைப் பற்றியும் எழுதியுள்ளோம். ஈரோட்டில் 2 வருஷங்களுக்கு முன் வகுக்கப்பட்ட திட்டங்களும் இருக்கின்றன. அந்த திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வராமல் அந்த திட்டங்களை கனவிலும் நினையாத கட்சிக்காரரோடு சரச சல்லாப வார்த்தைகளைப் பேசுவதால் யாது பயனென்று கேட்கின்றோம்? நாம் நல்ல பிள்ளையென்று பெயரெடுக்க வேண்டுமானால் அது வெகு சுளுவில் அடையலாம்!

மகாத்மாக்களையும், மௌலானாக்களையும் நல்ல பிள்ளைகளென்று யார் தான் சொல்லமாட்டார்கள்!

எல்லா இயக்கங்களும் ஆரம்பிக்கும் போது உயர்வான நோக்கங்களைத் தான் வெளியிடுகிறார்கள். அனுஷ்டானத்தில் யாதொன்றும் பயன்படுவதாகக் காணோம்! ஒவ்வொரு கட்சிகளிலும் சுயநலம் அதிகரித்து அந்தந்தக் கட்சிகளின் கோரிக்கைகளை (Ideals) நிறைவேறச் செய்ய முடியாமற்போகின்றது. பிராமணரல்லாதாரை காக்க வேண்டி வந்த இரண்டொரு காட்சிகள் அரசியல் துறையில் நுழைந்தவுடன்! தங்கள் இனத்தாரில் இரண்டொருவருக்குப் பட்டம் பதவியுடன் நின்றுவிட்டன. இத்யாதி முடிவு உலக முழுமையும் நிறைந்துள. சுருங்கக் கூறுமிடத்து, முதலாளிக் கூட்டத்தில் அடங்கிய கட்சிகள் யாவும் ஒன்றுக்கொன்று தாறுமாறாக நடக்கும்.



RangaRakes

tamilnavarasam.com

அதனதன் இயற்கை லக்ஷணங்களைப் பாமர ஜனங்கள் அறியும்படி உழைப்பதும், உழைத்து வருவதும் தான் உண்மையான சமதர்மிகளின் கடமை என்று எண்ணுகிறோம்.

**- தோழர் ம. சிங்காரவேலு பி.ஏ., பி.எல்.,**

குறிப்பு:- *சரியாகவோ தப்பாகவோ ஜஸ்டிஸ் கட்சி சம்மந்தம் 6,7 வருஷ காலமாக இருந்து வருகிறது. அதோடு ஜஸ்டிஸ் கட்சி காங்கிரசை விட மோசமானது என்று எனக்கு எந்தத் துறையிலும் தோன்றவில்லை. காங்கிரஸ் ஜாதி ஆதிக்கம் வேண்டுமென்கிறது. ஜஸ்டிஸ் பண ஆதிக்கம் வேண்டுமென்கிறது. காங்கிரஸ் தலைவர்களுக்கு எப்படித் தங்கள் பூணூலைக் கழட்டி எறிய முடியவில்லையோ அப்படித்தான் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்குப் பணத்தை வீசி எறியவோ பணம் சம்பாதிப்பதை தியாகம் செய்யவோ முடியவில்லை. நான் என்னைப் பொருத்த வரை பணக்கொடுமையை விட, பூணூல் கொடுமையே பலமானதும், மோசமானதுமென எண்ணுகிறேன்.*

*மற்ற பல விஷயங்களில் தோழர் சிங்காரவேலு அவர்கள் அபிப்பிராயந்தான் அநேகமாக நானும் கொள்ளுகிறேன். தீர்மானங்களின் மூலம் ஜஸ்டிஸ் கட்சியாரின் மனப்பான்மை வெளியாகட்டும் என்பதும் ஒரு ஆசையாகும்.*

*பொப்பிலி ராஜா பெரிய பணக்காரர். தோழர் ஷண்முகம் பெரிய பதவிக்காரர். இருவரும் இன்னமும் பணமும், பதவியும் பெற ஆசைப்படலாம் என்றே முடிவு செய்து கொள்ளுவோம். ஏனெனில் அவர்கள் இருவரும் துறவிகள் அல்ல. பணமும், பதவியும் ஆசைப்படுவது இன்றைய உலக வாழ்க்கை முறையில் பாதகமான காரியமும் அல்ல. ஆனால் இவர்கள் காங்கிரஸ் தலைவர்கள் சத்தியவாதிகள், சத்தியாக்கிரகிகள், அஹிம்சைவாதிகள் என்பவர்களைவிட மோசக்காரர்களா? சூட்சிக்காரர்களா? ஏமாற்றுக்காரர்களா? என்பதை யோசித்துப் பார்க்கும்படி பிரார்த்திக்கிறோம்.*

*எனது பிரேரேபணைகள் ஜஸ்டிஸ் கட்சி வேலைத்திட்டத்திற்கே ஒழிய சுயமரியாதைக்கட்சி வேலைத் திட்டத்திற்கல்ல. இக்கொள்கைகளை ஜஸ்டிஸ் கட்சி ஒப்புக்கொள்ளா விட்டால் நமக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை.*

*இதை அவர்கள் ஒப்புக் கொண்டால் மேலால் நடக்கவேண்டிய விஷயங்களைப் பற்றி நாம் எல்லோரும் யோசிப்போம். இதனால் சுயமரியாதை இயக்கத்திற்கு வகுத்த திட்டங்கள் பாதிக்கப்பட்டுவிடாது.*

*சுயமரியாதை இயக்கத் திட்டத்தில் கண்டபடியே தான் இத்திட்டத்திலும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு என்று எழுதி இருப்பதுடன் நமக்கு அதிகாரம் இல்லாத விஷயங்களில் கிளர்ச்சி செய்து அதிகாரம் பெறுவது என்றும் குறிப்பிட்டிருக்கிறதே ஒழிய வேறில்லை. எந்த இயக்கத்தின் மூலம் எந்தத் திட்டம் வகுக்கப்பட்டாலும் இன்று இந்த முறையில் தான் வகுக்கக் கூடும்.*

**- ஈ.வெ.ரா.**

பகுத்தறிவு - ஆசிரியர் குறிப்பு - 30.09.1934



# கோவையில் சுயமரியாதைத் திருமணம்

**சு.ம. திருமணமும் – பு.ம. திருமணமும்**

தோழர்களே!

இன்று இங்கு நடக்கும் இத்திருமணத்திற்கு சுயமரியாதைத் திருமணமென்றும் சீர்திருத்தத் திருமணம் என்றும் சொல்லப்படுகிறது. சுயமரியாதைத் திருமணம் என்றால் சிலருக்குப் பிடித்தமில்லாமல் இருக்கலாம் என்று சீர்திருத்தத் திருமணம் எனச் சொல்லப்படுகிறது.

## சீர்திருத்தம்?

எப்படி இருந்தாலும் ஒன்றுதான். சீர்திருத்தம் என்றால் என்ன? இருக்கின்ற நிலைமையில் இருந்து மாற்றம் செய்வதையே சீர்திருத்தம் என்றும், நாகரீகமென்றும் சொல்லுகிறோம் என்றாலும், இந்த சீர்திருத்தமும், நாகரீகமும் வெறும் மாறுதலுக்காகவே ஏற்படுவதும் உண்டு. மற்றும் பல விஷயங்களில் சௌகரியத்தையும், நன்மையையும், அவசியத்தையும், பகுத்தறிவையும் உத்தேசித்து மாற்றப்படுவதும் உண்டு. மாறுதலும் சீர்திருத்தமும் மக்களுக்கும் உலகத்துக்கும் புதிதல்ல. உலகம் தோன்றிய நாள் முதல் ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு மாறுதல் அடைந்து வந்திருக்கிறது என்பதை சரித்திரங்களையும், பழைய சின்னங்களையும் பார்த்து வந்தால் நன்றாய் விளங்கும். அது போலவே மனித சமூகமும் சகலத் துறைகளிலும் எவ்வளவு மாறுதல் அடைந்து வந்திருக்கின்றது என்பதும் வாழ்க்கையில் எவ்வளவு மாறுதல்கள் அடைந்து வந்திருக்கின்றது என்பதும் நம் குறைந்த கால ஆயுளின் அனுபவத்தைப் பார்த்தாலே தெரியவரும்.

## மாறுதல்

மாறுதல் என்பது இயற்கையேயாகும். மாறுதல் இல்லாமல் எந்த நாடும், எந்த சமூகமும், எந்த வஸ்துவும் இருக்க முடியாது.

இந்தக் கல்யாணம் சுயமரியாதைக் கலியாணம் என்றும், இதில் பழக்க வழக்கங்கள், சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள் ஒன்றும் கவனிக்கப்படுவதில்லை என்றும், இதை புராண மரியாதைக்காரர்களும், வைதீகர்கள் என்பவர்களும் குற்றம் சொல்லலாம்.



RangaRakes tamilnavarasam.com

## வைதீகம்

சாதாரணமாக இந்நாட்டில் நடைபெறும் வைதீகக் கல்யாணம் புராண முறைப்படி நடக்கும் கல்யாணம் ஆகியவைகளைப் பற்றியே சிந்தித்துப் பாருங்கள். வைதீகப் பிரசாரத்துக்கும், வைதீகத்துக்குமாகவே உயிர் வாழ்வதாய் சொல்லிக்கொள்ளும் பார்ப்பன சமூகத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களுடைய கல்யாணங்களில் இப்போது எவ்வளவு சீர்திருத்தம், எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் கவனித்துப்பாருங்கள். காலை 7-மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டு தூரத்தில் உள்ள கோவில்களுக்குப் போய் அங்கு கலியாணம் செய்து கொண்டு பகல் சாப்பாடு சாப்பிட்டு விட்டு மாலை 6 மணிக்கு புறப்பட்டு வீடுவந்து சேர்ந்து விடுகிறார்கள். 3-நாள், 5-நாள், 7-நாள் அவ்பாசனங்கள், சடங்குகள் என்பவைகள் எல்லாம் எங்கே போய்விட்டன? பெரும் செலவுகள் ஆடம்பரங்கள், பலவகைப்பட்ட விருந்துகள் எல்லாம் எங்கே போய்விட்டன?

## சென்னை

மற்றும் குருட்டு நம்பிக்கையும், மூட பக்தியும் பிறந்த ஊராகிய சென்னை முதலிய இடங்களில் நாயுடு, முதலியார், செட்டியார் என்று சொல்லப்படும் ஜாதிகளும், வைதீக சிகாமணிகளும் சடங்குகளினாலும், வேஷங்களினாலும் தங்களைப் பெரிய ஜாதியார் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களுமான மக்கள் இன்று தங்கள் தங்கள் வீட்டிலேயே, ஒரே நாளில், ஒரு பகலில், ஒரு விருந்தில் கல்யாணங்களை முடித்து விடுகின்றார்கள். இவைகள் எல்லாம் மாறுதல் அல்லவா? சீர்திருத்தம் அல்லவா என்று யோசித்துப் பாருங்கள். மனிதனில் எவனும் மாறுதலுக்கு ஆளாகாமல் இருக்க முடியாது.

காசிக்கும் ராமேஸ்வரத்துக்கும் நடந்து போனால்தான் புண்ணியம் என்று நம்பின மனிதன் இன்று காளை வண்டியில் போய், குதிரை வண்டியில் போய், ரயிலில் போய், மோட்டாரில் போய், ஆகாயக்கப்பலில் மணிக்கு 300 மைல் வேகம் போகக்கூடிய நிலைமையை அடைந்து விட்டான். இவனிடம் புராணத்தையும், வைதீகத்தையும் பேசினால் செல்லுமா என்றும் யோசித்துப் பாருங்கள். அது போலவே சக்கி முக்கிக் கல்லின் மூலம் விளக்கு வெளிச்சத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த மனிதன் விளக்காகி, பந்தமாகி, பவர் லைட்டாகி, கியாஸ் லைட்டாகி, இன்று எலக்டிரிக் லைட் அதாவது ஒரு பொத்தானை அமுக்கினால் லக்ஷம் விளக்கின் வெளிச்சம் போன்ற பிரகாசத்தைக் கண்டுபிடித்து அனுபவித்து வருகிறான். இந்தக் காரியங்களையெல்லாம் புராணமும், வைதீகமும் தடுத்துவிடக் கூடுமா என்று பாருங்கள்.



## திருமணம்

அதுபோலவே இந்தத் திருமணம் என்னும் விஷயத்திலும் முற்போக்கு ஏற்பட்டுத்தான் தீரும். அதை நீங்கள் தடுத்துவிட முடியாது. திருமணத்துக்கு 1000 சாஸ்திரமும், புராணமும் இருந்தாலும் அதை இனி மக்கள் நம்பிக் கொண்டும், ஏற்றுக் கொண்டும் இருப்பார்கள் என்று எதிர் பார்க்க முடியாது. காலதேச வர்த்தமானத்துக்குத் தகுந்தபடி மாறிக்கொண்டுதான் வரும். அநேக தேசங்களில் கல்யாணம் என்கின்ற பேச்சே இப்போது அமுலில் இல்லை. ஆணும் பெண்ணும் ஒன்றாகக் கூடித்தான் வாழ வேண்டும் அல்லது வாழ்க்கை நடத்தவேண்டும் என்கின்ற முறையும் இல்லை. இஷ்டப்பட்டால் இரண்டு பேர் கூட்டு வியாபாரம் செய்வது போல் சேர்ந்து ஒரு குடும்பத்தை நடத்துகிறார்கள். இஷ்டம் இல்லாவிட்டால் தனித்தனியாக குடும்பத்தை நடத்துகிறார்கள்.

மேலும் குடும்பம் என்கின்ற தொல்லையே இல்லாமல் சுதந்திர மக்களாகவே இருக்கிறார்கள்.

ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து அனுபவிக்கும் இன்பத்தையும், உணர்ச்சி பரிகாரத்தையும், இரு சினேகிதர்கள் அனுபவிக்கும் சிநேக இன்பத்தைப் போலவும் இயற்கைக் கூட்டுப் போலவும் கருதி வாழுகின்றார்கள். இவைகள் எல்லாம் மனிதன் அனுபவத்தினாலும், நாளுக்கு நாள் மனிதனுடைய கஷ்டமும், கவலையும், தொல்லையும் குறைக்கப்பட்டு வர வேண்டும் என்கின்ற முயற்சியினாலும் தத்துவ விசாரத்தினாலும் ஏற்படும் காரியங்களேயாகும்.

## சுயமரியாதை

ஆதலால் சுயமரியாதை என்கின்ற வார்த்தையைக் கண்டு யாரும் பயப்பட வேண்டியதில்லை.

மனிதனுடைய பகுத்தறிவுக்கு மரியாதை கொடுப்பது தான் சுயமரியாதையின் முக்கிய தத்துவம் என்பதை ஞாபகத்தில் வையுங்கள். உங்கள் பகுத்தறிவினாலும் உங்கள் அனுபவ உண்மையாலும் உங்களுக்கு ஒன்று தோன்ற உலக பழக்க வழக்கத்துக்கு - சாஸ்திரத்துக்கு - மதக்கட்டுப்பாட்டுக்கு என்கின்ற நிர்ப்பந்தத்தின் மீது அதற்கு மாறாய் நீங்கள் நடக்க வேண்டிய அடிமைத் தன்மை ஏற்பட்டால் அதைத்தான் சுயமரியாதைக்கு விரோதம் என்று சொல்லுகிறோம். அதைத்தான் அடிமைத்தனம், சுதந்திரமற்றதனம் என்று சொல்லுகின்றோம்.

ஆதலால் எந்தக் காரியத்தையும் உங்கள் பகுத்தறிவையும் அனுபவ பலனையும் அனுசரித்துப் பார்த்து நடக்க வேண்டும் என்கின்ற முறையிலேதான் இந்த சுயமரியாதைக் கல்யாணம் என்பதும் ஆங்காங்கு செய்யப்பட்டும், பிரசாரம் செய்யப்பட்டும் வருகின்றதே ஒழிய வெறும் மாறுதலுக்காக என்று செய்யப்படவில்லை.



RangaRakes tamilnavarasam.com

### புராண மரியாதை

உங்களுடைய புராண மரியாதைக் கல்யாணத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். பு.ம. கல்யாணத்தின் முதல் தத்துவமே பெண்கள் ஆண்களுக்கு அடிமைகள் - சுதந்திரமற்றவர்கள் - மனிதத் தன்மைக்கு அருகதையற்றவர்கள் என்பவைகளை நிலைநிறுத்துவதற்காகச் செய்யப்படும் சடங்கு, அல்லது காரியம் என்பது எனது அபிப்பிராயம். உதாரணமாக கன்னிகாதானம், பெண் கொடுத்தல், பெண் வாங்குதல், தாலி கட்டுதல் முதலிய வார்த்தைகளாலும் புருஷனுக்கு கொண்டவன், கொண்டான் என்று சொல்லப்படுகின்ற வார்த்தைகளாலும் பெண் அடிமையாகப் பாவிக்கப்படுகிறது என்பதை உணரலாம்.

இந்தச் சுயமரியாதைக் கல்யாணம் என்பதின் முக்கிய தத்துவம் கூட்டு வாழ்க்கையில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமோ, உயர்வோ, தாழ்வோ இல்லையென்பதும் சகல துறைகளிலும் சம சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்பதுமேயாகும்.

மற்றும் வைதீகப் புராண முறைக் கல்யாணத்தில் மதம், ஜாதி, வகுப்பு, குலம், கோத்திரம் முதலியவைகளைக் கவனிப்பதே முக்கியமாய் இருப்பதால் ஆண், பெண் பொருத்தம் சரியாய் ஏற்படுவதில்லை. ''குலத்தில் ஒரு குரங்கைக் கொள்ளு'', "பாத்திரமறிந்து பிச்சை கொடு'', ''கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு'' என்னும் பழமொழிகளைப் பார்த்தாலே குலம், கோத்திரம், ஜாதி, வகுப்பு முதலியவைகளுக்குள்ள நிர்ப்பந்தங்கள் நன்றாய்த் தெரியும். இதன் பயனாய் அனேக கல்யாணங்களில் பெண்ணுக்கு ஏற்ற மாப்பிள்ளை இல்லாமலும், மாப்பிள்ளைக்கு ஏற்ற பெண் இல்லாமலும், நாயும், பூனையும் போல் ஜோடிகள் சேர்ந்து விடுகின்றன.

சுயமரியாதைக் கல்யாணத்தில் ஜாதி, வகுப்பு, குலம், கோத்திரம் என்பனவைகள் கவனிக்கப்படாமல் மணமக்களுடைய யோக்கிய தாம்சங்களையே கவனித்துப் பார்க்கப்படுகின்றது.

வைதீகக் கல்யாணத்தில் வயதுக்கிரமங்களை தக்க பருவங்களை முக்கியமாய் கவனிப்பதில்லை. தக்க பருவம் வருவதற்கு முன்பு பெண்களுக்குக் கல்யாணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்து வருகின்றது. உதாரணமாக ''10 வயது வந்தால் ஒரு பறையனுக்குப் பிடித்துக் கொடு'' என்று சொல்லும் பழமொழியைப் பார்த்தால் விளங்கும். 50, 60 வயதான ஆண் கிழத்துக்கு 10, 12 வயது பெண் குழந்தையைப் பிடித்து தாலிகட்டி விடுகிறார்கள். கல்யாண விஷயத்தில் ஆண்களுக்கு கிழம் என்பதே இல்லையாம்.

இந்த விஷயத்திலும் சுயமரியாதைக் கல்யாணம் தக்க சரிசமமான வயதுப் பொருத்தம் பார்த்தே செய்யப்படும்.



மற்றபடி புராணக் கல்யாணங்களில் நாள் பார்ப்பது, கோள் பார்ப்பது, சடங்குகள் செய்வது, அதிகச் செலவுகள் செய்வது முதலிய காரியங்களால் கல்யாணக்காரர்களுக்கு தாங்க முடியாததும், விலக்க முடியாததுமான பல அசௌகரியங்கள், செலவுகள் ஏற்படுகின்றன.

உதாரணமாகப் புரோகிதன் அதிகாலையில் 4½ மணி, 5 மணி, 6 மணிக்கு ''முகூர்த்தம்'' வைத்துக் கொடுத்து விடுகிறான். இதனால் இரவெல்லாம் தூக்கமில்லாமல் கல்யாணத்துக்கு வந்த ஜனங்கள் அவஸ்தைப்படுகிறார்கள். பல்லு விளக்காமல், கால், கை கழுவாமல், வெளிக்கும் போகாமல், நித்தியக் கடன்களை காலா காலத்தில் கழிக்க முடியாமல் மக்கள் அவஸ்தைப்படுவதும் மற்றும் பழக்கவழக்கமென்னும், சடங்கு, ஆடம்பரம் முதலியவைகளால் கல்யாணக்காரர்களுக்கு சகிக்க முடியாத தொல்லைகளும், தாங்க முடியாத கடன்களும் ஏற்பட்டு அக்குடும்பங்கள் ஒன்று, இரண்டு வருஷங்களுக்கும் சில சமயங்களில் வாழ்நாள் முழுவதும் கடனில் மூழ்கி வேதனைப்படுவதுமாக இருந்து வருகின்றது.

சுயமரியாதைக் கல்யாணத்தில் எல்லோருக்கும் சௌகரியமான நேரமும், மிகவும் சுருக்கமான செலவும் கொண்டு நடத்தப்படுவதோடு அனாவசியமான - அர்த்தமற்ற சடங்குகளையும் ஒழித்து நடத்தப்பட வேண்டுமென்று கற்பிக்கப்பட்டு வருகிறது. இதனால் எல்லாம் கல்யாணத்திற்கு ஏதாவது பலக்குறைவோ, கெடுதலோ ஏற்பட்டுவிடும் என்று யாரும் பயப்பட வேண்டியதில்லை. கல்யாணத்துக்கும், ஜாதி, மதம், சடங்கு, நேரம், காலம், குலம், கோத்திரம் ஆகியவைகளுக்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை.

### பு.ம. வால் என்ன பலன்

நம் நாட்டில் ஜாதி, மதம், குலம், கோத்திரம், காலம், நேரம் சடங்குக்கிரமம் முதலியவைகள் கவனித்தே 100க்கு 99 கல்யாணங்கள் செய்யப்படுகின்றன. இப்படியெல்லாம் செய்தும் இன்று அவற்றின் பலன்களைக் கவனித்துப் பார்ப்பீர்களானால் ஒட்டு மொத்தம் பெண் சமூகத்தில் 100க்கு 20 பெண்கள் விதவைகளாய் இருக்கிறார்கள். இந்த விதவைகளுள் 100க்கு 25 பேர்கள் 20 வயதுக்குக் கீழ்ப்பட்ட விதவைகள் என்றால் அவர்களின் கஷ்டத்தையும், அனுபவிக்கும் வேதனைகளையும் பற்றி நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. நாள், கோள் பார்த்து சாஸ்திரப்படி சடங்குகள் செய்யப்பெற்ற தெய்வீகக் கல்யாணங்களில் பெண்கள் 100க்கு 20 பேர் ஏன் விதவைகளாய் இருக்க வேண்டும். அவர்களில் 100க்கு 25 பெண்கள் 20 வயதுக்குட்பட்டவர்கள் விரக வேதனையில் ஏன் அழுந்திக் கொண்டிருக்க வேண்டும். இது ''தெய்வீக மணத்தின்'' பலனா? அல்லது ''அசுர'' மணத்தின் ''பிசாச'' மணத்தின் பலனா என்று யோசித்துப்



RangaRakes tamilnavarasam.com

பாருங்கள். தெய்வீகம், பழக்கம், வழக்கம், சாஸ்திரம் என்கின்ற வார்த்தைகள் முன்னேற்றத்துக்கும், பகுத்தறிவுக்கும், சுதந்திரத்துக்கும், ஜன்ம விரோதியான வார்த்தைகளாகும். ஆதலால் சுயமரியாதைக் கலியாணம் என்பதில் மேற்படி முன்னேற்ற விரோதிகளுக்கும், சுதந்திர விரோதிகளுக்கும் இட மில்லை. இந்தக் காரணங்களால்தான், பழமை விரும்பிகள், வைதீகர்கள், பகுத்தறிவற்ற கோழைகள், சுயமரியாதை இயக்கம் என்றாலும், சுயமரியாதைக் கல்யாணம் என்றாலும் முகத்தைச் சுளித்து கண்களை மூடி விழிப்பார்கள். இவர்களைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. இந்தக் கூட்டங்களுக்கு மரியாதைக் கொடுத்த எந்த தேசமோ, சமூகமோ விடுதலை பெற்றதாக யாரும் சொல்ல முடியாது.

ஆகையால் தான் இந்தப் பிரசாரம் செய்து வருகின்றோம். மற்றபடி இந்தக் கலியாணத்தில் என் போன்றாருக்கு யாதொரு வேலையும் இல்லை. புரோகிதத்துக்காக எவரும் இங்கு வரவும் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நீங்கள் எல்லோரும் இதனை, கவனித்து நன்றாய் சிந்தித்துப் பாருங்கள். நன்மையை கைக்கொண்டு பகுத்தறிவு வளர்ச்சிக்கும் விடுதலைக்கும் உதவி புரியுங்கள் என்று கேட்டுக் கொண்டு, உங்கள் சார்பாக மணமக்களை தங்கள் ஒப்பந்தங்களைக் கூறி ஒருவரை ஒருவர் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ள வேண்டிக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு: 22.09.1934 கோவை சுயமரியாதை சங்கத்தின் ஆதரவில் தோழர் என். கிருஷ்ணசாமிக்கும் வி. லட்சுமிக்கும் கோவை முனிசிபல் உயர்நிலைப்பள்ளி கட்டடத்தில் நடைபெற்ற சுயமரியாதைத் திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து ஆற்றிய உரை.*

**பகுத்தறிவு - சொற்பொழிவு - 07.10.1934**



# சென்னை கடற்கரையில் 5000 பேர் கூட்டம்

## வரப்போகும் தேர்தல்

தோழர்களே! இன்று இங்கு எலக்ஷன் சம்மந்தமாகப் பேசுவதற் கென்றே இந்தக் கூட்டம் கூட்டப்பட்டதாக எனக்குத் தெரிகின்றது.

### கட்சி கிடையாது

எனக்கு எலக்ஷனில் கக்ஷிப் பிரச்சனை கிடையாது. கட்சிகள் என்பது கொள்கைகளைப் பொருத்ததாக இருப்பது இயல்பு. ஆனால் நம் நாட்டில் எந்தக் கட்சியையும் கொள்கையை ஆதாரமாய்க் கொண்டதாக ஒப்புக்கொள்ள முடியவில்லை.

நமது மாகாணத்தில் வெகுகாலமாகவே கட்சிகள் உத்தியோக ஆசைக்கும், வகுப்பு ஆதிக்கத்துக்குமாகவே இருந்து வருகின்றனவே ஒழிய, பொது ஜன நலக் கொள்கைக்காக இருந்து வரவில்லை.

முதலில் உத்தியோக ஆசையை முன்னிட்டு ஏற்பட்ட கட்சியின் பயனாய் பல கொழுத்த சம்பளமுள்ள உத்தியோகங்களும், அதிகாரங்களும் நமது மக்களுக்குக் கிடைக்க சௌகரியமானவுடன் இப்போது இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர், தீண்டாதவர், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்கின்ற வகுப்பு நலத்தைப் பிரதானமாய்க் கொண்ட கக்ஷிகள் தலை விரித்தாடுகின்றன. ஒவ்வொரு வகுப்புக் கக்ஷியும் மற்ற வகுப்பை ஏமாற்றுவதற்கு அனுகூலமான விஷயங்களைத் தான் கக்ஷிக் கொள்கைகளாய்க் கொண்டிருக்கின்றனவே ஒழிய வேறில்லை.

### வகுப்பு வாதம் தான் கட்சி

இன்றைய அகில இந்திய கக்ஷியை எடுத்துக்கொள்ளுங்கள். முஸ்லீம்கள் காங்கிரசை ஒப்புக்கொள்ளாமல் தனியாக தங்கள் வகுப்புக்கு ஒரு கக்ஷி ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவோடு மாத்திரமல்லாமல் இந்திய தேசிய காங்கிரஸ் என்பதை வகுப்பு (இந்துக்கள்) கக்ஷி என்றும் சொல்லுகிறார்கள். அது போலவே கிறிஸ்தவரும் மற்றவர்களும் சொல்லுகிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் இந்துக்களோ, காங்கிரஸ்தான் பொதுக்கக்ஷி என்றும், மற்றவைகள் எல்லாம் வகுப்புக் கக்ஷிகள் என்றும் சொல்லுகிறார்கள்.

இந்தத் தத்துவமே தான் இன்று பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி ஏற்பட்டிருப்பதும், பார்ப்பனர் ஜஸ்டிஸ் கட்சியை வகுப்பு வாதக் கட்சி என்பதும், பார்ப்பனரல்லாதார் காங்கிரசை வகுப்பு வாதக் கட்சி என்று சொல்லுவதும் ஆகியவற்றிற்குக் காரணமாய் இருக்கின்றது. கட்சிகளின் போக்கும் இந்த உள்கருத்தை ஆதாரமாகக் கொண்டதாகவே இருந்து வருகின்றன.

இதுவரை இந்தப் பேராட்டம் அதாவது பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் போராட்டம் நமது மாகாணத்துக்குள்பட்ட விஷயங்களைப் பொருத்தவரையில் இருந்து வந்தது.

## பொறாமையால் வந்த வினை

பல காரணங்களால் தோழர்கள் ஆர்.கே. ஷண்முகம், ஏ. ராமசாமி முதலியார் ஆகியவர்கள் எப்படியோ இந்திய சட்டசபைக்குப் போக ஆரம்பித்ததிலிருந்து இப்போது இந்தியா பூராவுக்கும் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்கிற வகுப்பு உணர்ச்சி பரவ வேண்டியதாய் விட்டது. அவர்கள் இந்திய சட்டசபைக்குப் போனதின் பயனாய் அங்கிருந்து வந்த பார்ப்பன ஆதிக்கத்தக்குச் சாவு மணி அடித்து விட்டது. ஆர்.கே.எஸ்., எ.ஆர். ஆகிய இவர்களின் மேன்மையும், திறமையும் அங்கு தாண்டவமாடத் தலைப்பட்டுவிட்டது. இதிலிருந்து பார்ப்பனர்கள் தோழர்கள் ஷண்முகம், A. ராமசாமி ஆகியவர்கள் விஷயத்தில் அதிக கவலை எடுத்து அவர்களை அங்கு செல்லவொட்டாமல் தடுக்க வேண்டியவர்களாய் விட்டார்கள்.

அதோடு தோழர் ஷண்முகத்திற்கு இந்திய சட்டசபைத் தலைவர் பதவி கிடைத்தவுடன் சில பார்ப்பனர்களின் பொறாமையும், சதியும் ஒன்றுக்குப் பத்து, நூறு, ஆயிரமாய் வளர்ந்து விட்டது. எப்படியானாலும் கூடிய சீக்கிரத்தில் இவர்கள் இருவரும் இன்னும் பெரும் பதவிகளுக்கு வரப் போகின்றார்கள் என்பது பார்ப்பனருக்குத் தெரியும். ஆதலால் பார்ப்பனர் இதுவே கடைசி முயற்சி என்கின்ற வேகத்தில் எவ்வளவோ தடைகள் செய்து வருகிறார்கள்.

## தலைவராகவில்லை என்றால் போட்டியில்லை

உதாரணமாக தோழர் ஷண்முகம் அவர்கள், தான் மறுபடியும் தலைவர் பதவிக்கு நிற்பதில்லை என்று சொல்லிவிட்டால், தென் இந்தியாவில் இந்திய சட்டசபைத் தேர்தல்களில் எதற்கும் காங்கிரசு போட்டி போடாது என்பது உறுதி என்று நீங்கள் நம்பலாம்.



ஒரு சமயம் அவர் கண்டிப்பாய் நிற்பதானாலும் தோழர்கள் எ.ராமசாமி முதலியார் அவர்களும், டாக்டர் வரதராஜுலு அவர்களும் தாங்கள் இந்திய சட்ட சபைக்குச் சென்ற பிறகு பிரசிடெண்ட் எலக்ஷனில் தோழர் ஷண்முகத்துக்கு ஓட்டுப் போடுவதில்லை என்று வாக்குக் கொடுத்துவிட்டால் தோழர்கள் சத்தியமூர்த்தி, அவனாசிலிங்கம் செட்டியார், குமாரசாமி ராஜா, முத்துரங்க முதலியார் ஆகியவர்கள் உடனே 'வித்ட்றா' செய்து கொள்ளுவதில் ஆக்ஷேபனை இல்லை.

ஆகவே இன்று நடக்கும் இந்திய சட்டசபைத் தேர்தல் சொந்த புத்தியுள்ள பார்ப்பனரல்லாதாரும் பார்ப்பனர்களுக்கு அடிமையா யில்லாத பார்ப்பனரல்லாதாரும் இந்திய சட்டசபைக்குப் போகக் கூடாது என்பதைத் தவிர வேறு ஒரு காரணமும் இல்லை என்று தைரியமாய்ச் சொல்லுவேன்.

தோழர் ஷண்முகம் அவர்கள் இந்திய சட்டசபையில் தலைவரான பிறகு, அவரது பெருமை இந்தியாவில் எங்கும் பேசப்பட்டு வருவதானது நம்நாட்டு பார்ப்பனர்களுக்குப் பெருத்த ஆத்திரத்தை மூட்டிவிட்டது. எப்படியாவது அவரைத் தடுத்துவிட வேண்டும் என்பதே காங்கிரஸ்காரர்களுடைய எலக்ஷன் பிரச்சினையாகிவிட்டது.

## செய்த கெடுதி என்ன?

மற்றபடி காங்கிரசின் பேரால் பார்ப்பனர்கள் சொல்லும் காரணங்கள் ஒரு காசுக்கும் பயன்படாது என்று சொல்வேன்.

அரசியல் விஷயத்தில் தோழர் ஷண்முகம் என்ன கெடுதி செய்தார் என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றேன். அவர் வெகுகாலம் காங்கிரசிலிருந்தவர், அவருடைய திறமையையும், அறிவையும் கண்ட பார்ப்பனர் காங்கிரசில் அவரைத் தலையெடுக்க வொட்டாதபடி சூட்சி செய்ததால் காங்கிரசை விட்டார். தன் காலிலேயே நின்றார். தோழர் எ.ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்களைப் போலவே அவரும் பல விஷயங்களுக்கு அரசாங்கப் பிரதிநிதியாய் நியமிக்கப்பட்டார்; வெளி தேசத்துக்கும் சென்றார். அவர் திறமையால் ஜனப் பிரதிநிதிகள் கொண்ட சட்டசபைக்குத் தலைவரானார். அவர் அங்கு நடந்து கொண்ட திறமையால் மறுபடியும் அவர் தலைவராகப் போகிறார் என்பது உறுதி. அவர் மீது ஆத்திரப்படும் பார்ப்பனர்கள் அவர் தலைவராய் இருந்தபோது ஏதாவது தவறுதலாய் நடந்துகொண்டார் என்பதைக் காட்டி ஆக்ஷேபித்தால் அது ஆண்மையாகும்.

தோழர் ஷண்முகம் இந்திய சட்டசபைத் தலைவர் என்கின்ற ஹோதாவில் ஒரு சமயத்தில் சட்டசபைக்குள் வைசிராய்க்கு காவலாக இருந்த சுமார் 100 போலீஸ்காரர்களை வெளியில் போகும்படி சொன்னார். யார் சொல்லியும் கேட்கவில்லை. மற்றொரு சமயம் ராணுவ



RangaRakes tamilnavarasam.com

சம்பந்தமான விஷயத்தில் அரசாங்கத்துக்கு நேர் விரோதமாக தீர்ப்புக் கொடுத்தார். இந்த இரண்டையும் இந்தியா முழுவதுமே பாராட்டிற்று. ஆனால் பார்ப்பனப் பத்திரிக்கைகளும், அவர்களது கூலிப் பத்திரிக்கைகளும் மாத்திரம் சிறிது கூட மனிதத் தன்மை, நியாயம் ஆகியவையில்லாமல் அவற்றை மறைத்தும், திரித்தும் கூறின.

### வரதராஜுலுக்கு ஏன் போட்டி?

தோழர் வரதராஜுலுவுக்கு விரோதமாய் இந்தப் பார்ப்பனர்களும், அவர்கள் கூலிகளும் ஏன் இவ்வளவு விஷமப் பிரசாரம் செய்ய வேண்டும்? அவர் என்ன செய்தார்? அவர் கிராமம் கிராமமாக தன் கைப் பணத்தைச் செலவு செய்து கொண்டு பிரசாரம் செய்தவர். அவர் காங்கிரசில் மாகாணத் தலைவராகவும், எல்லா இந்திய காரியக் கமிட்டி அங்கத்தினராகவும் இருந்தவர்.

இந்தப் பார்ப்பனர்கள்தான், தோழர் வரதராஜுலுவை தென்னாட்டுத் திலகரெனவும், தோழர் ராஜகோபாலாச்சாரியாரைத் தென்னாட்டுக் காந்தி எனவும் பெயரிட்டார்கள். அதற்குப் பிறகு தேசத்துக்கு விரோதமாயாவது, சர்க்காருக்கு அனுகூலமாயாவது என்ன காரியம் செய்து விட்டார் என்று யாராவது சொல்லட்டும்.

''4 அணா கொடுத்து காங்கிரசில் சேரவில்லை. ஆதலால் அவர் தேசத்துரோகி'' என்று சொல்லுவதானால் இதை மற்றவர்கள் சகிக்க முடியுமா?

தோழர் ராமசாமி முதலியார் அவர்களுக்கு விரோதமாய் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் நிறுத்தப்பட்டிருக்கிறார்.

(தொடர்ச்சி 14.10.1934 குடி அரசு)

*குறிப்பு: 28.09.1934 இல் சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் 'வரப்போகும் தேர்தல்' என்பது பற்றி ஆற்றிய சொற்பொழிவு.*

**பகுத்தறிவு - சொற்பொழிவு - 07.10.1934**



# இரண்டு மகாநாடுகள்

சென்ற மாதம் கடைசி வாரத்தில் தமிழ் நாட்டில் இரண்டு மகாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. ஒன்று சென்னையில் நடந்த தென்னிந்திய நல உரிமைச் சங்க மகாநாடு. மற்றொன்று கோவையில் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் மகாநாடு. முன்னையதற்கு பொப்பிலி ராஜா தலைவர். பின்னையதற்கு தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் தலைவர். இருவர் களுடைய பேச்சுச் சுருக்கமும் வேறு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

ஜஸ்டிஸ் மகாநாட்டில் ஒரு பெரிய மாறுதல். அதாவது அது தன் அஸ்திவாரத்திலிருந்தே ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்திக்கொண்டது. இனி அதைப் பார்ப்பனரல்லாதார் மகாநாடு என்றோ, வகுப்புவாதிகள் மகாநாடு என்றோ, பார்ப்பனத் துவேஷிகள் மகாநாடு என்றோ ஒருவராலும் சொல்ல முடியாதபடி செய்து கொண்டதுடன் எவ்வித வகுப்பு நிபந்தனையும் இல்லாமல் எல்லா வகுப்புகளுக்கும் சம சுதந்திரமும், சம சந்தர்ப்பமும், சம நீதியும் வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இருக்கிறது.

இதற்குக் காரணம் ''வகுப்பு வாதம்'' என்று பார்ப்பனர்கள் போட்ட கூச்சலாயிருந்தாலும் இருக்கலாம். அல்லது பிரிட்டன் அதிகார வர்க்கத்துக்கோ, அல்லது அரசாங்க வர்க்கத்துக்கோ ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று இருந்த நிபந்தனையின் காரணம் இன்னது என்று விளங்காமல் இருந்தாலும் இருக்கலாம். எப்படியிருந்தாலும் ஜஸ்டிஸ் கட்சி இப்பொழுது ஒரு அரசியல் கட்சி என்கின்ற ''பெருமையை'' அடைந்துவிட்டது.

இந்த மாறுதலுக்கு அஸ்திவாரமாயிருந்தவர் தோழர் சர். ஷண்முகம் என்பது நமது அபிப்பிராயம். மற்ற ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் ஷண்முகம் ஆட்டத்துக்குத் தாளம் போட்டவர்களேயாவார்கள் என்பதும் நமது அபிப்பிராயம்.

சமூக வாழ்விலுள்ள உயர்வு தாழ்வை ஒழிக்கவும், தாழ்த்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களுக்கு சமத்துவமும், சமசந்தர்ப்பமும் அளிக்கவும் ஜஸ்டிஸ் கட்சியை ஒரு உப கருவியாக உபயோகித்துக் கொள்ளலாம் என்கின்ற எண்ணத்தின் மீது தான் சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கக்ஷியை அனுசரித்து அதில் சிறிது கலந்து வந்ததே ஒழிய அதுவே சர்வ வியாதிக்கும் சஞ்சீவி என்று கருதியல்ல.



RangaRakes tamilnavarasam.com

இதன் பயனாய் சில நன்மைகள் ஏற்பட்டன என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அக்கக்ஷியானது நாதனற்று சிலருடைய வாழ்வுக்கும், பெருமைக்கும், பணம், பதவி சம்பாதிப்பதற்கும் மாத்திரம் பயன்படத்தக்கது என்று உலகோர் இகழும்படியாகக் கூட 4,5 வருஷகாலம் கஷ்டப்பட்டுவிட்டது என்பதானது, நாம் மறைத்ததாலேயே மறைந்துவிடும் என்று நம்பமுடியாது.

இப்போது அக்கக்ஷி ஒரு முக்கிய கொள்கையையே தியாகம் செய்து விட்டது என்பதோடு மாத்திரமல்லாமல் ஒரு தகுதியான தலைவரையும் பெற்றுவிட்டது. ஆதலால் வரப்போகும் அரசியல் சரித்திரத்தில் (சமூக சரித்திரத்தில் அல்ல) ஒரு நல்ல ஸ்தானத்தைப் பெற்று சென்னை மாகாணத்தை இந்திய மாகாண வரிசையில் முதல் ஸ்தானத்தில் இருத்தி வைக்கும் என்பது நமது நம்பிக்கை.

அதன் இன்றைய தலைவர் செல்வந்தரேயானாலும், சிறு வயதினரேயானாலும், அக்கக்ஷியில் இருந்து வரும் வேலைத் திட்டத்துக்கு மிகப் பொருத்தமானவரும், மிக மிக அவசியமானவரும் இன்றியமையாதவரும் ஆவார் என்று சொல்லலாம்.

அவர் 1932-ல் ஜஸ்டிஸ் கக்ஷிக்குத் தலைவராவதற்குப் பலாத்கார உதவியும் தேவை இருந்தது என்று நாம் கேள்விப்பட்டோம். ஆனால் இப்போது ஜஸ்டிஸ் கக்ஷித் தலைமை ஸ்தானம் என்கின்ற கிரீடம் வேறு எவர் தலைக்கும் பிடித்தமும் பொருத்தமும் இல்லாததாகி, அதுவாகவே அவரைப் போய் அடைந்து விட்டது.

இதற்குக் காரணம் இந்த இரண்டு வருஷ காலத்திய அவருடைய நிர்வாகமானது அவருடைய சொந்த எதிரிகளும், ஜஸ்டிஸ் கக்ஷியின் பிறவி எதிரிகளும் கூட குறைகூற முடியாதவாறு நடந்திருக்கிறதே.

அவரது இந்த இரண்டு வருஷத்திய சம்பளம் சுமார் லக்ஷ ரூபாயையும் கக்ஷி நன்மைக்கே பயன்படுத்தியுள்ளார். அது மாத்திரம் அல்லாமல் தன் சொந்தப் பணத்தையும், லக்ஷக் கணக்கில் கட்சிக்காகவென்று செலவு செய்திருக்கிறார்.

இதிலிருந்து பணத்தாசையால் இவர் இந்தப் பதவிக்கு வந்ததாக யாரும் சொல்ல முடியாது. அன்றியும் பதவி ஆசை என்றும் சொல்ல முடியாது. ஏனெனில் இவர்களது பாட்டனார் காலத்திலேயே அதாவது மந்திரிப் பதவிக்குக் குண்டு போடும்படியான அவ்வளவு மதிப்பும், பெருமையும் இருந்த காலத்திலேயே வேண்டாம் என்று உறுதிப்படத் தள்ளிவிடப்பட்டிருக்கிறது.

தேசிங்கு ராஜன், நெப்போலியன் ஆகியவர்கள் சரித்திரம், கதைப் பிரசங்கங்கள் ஆகியவை போல் இன்று ஆந்திர தேசத்தில் கூத்து, பாட்டு முதலியவை மூலம் பொப்பிலி ராஜ்யத்தைப் பற்றி நடக்கின்றன.



ஆதலால் சரித்திர கால முதல், இன்றைய பண உலகம் வரை அவரது மேன்மைக் குணம் காரணமாகவே தலைமை பதவி அவரைப் போய் அடைந்திருக்கிறது.

செல்வம், செல்வாக்கு, பதவி, பெருமை ஆகியவைகள் உள்ள ஒருவன் செல்வத்தை, செல்வாக்கை, பெருமையைத் தியாகம் செய்வதுதான் உண்மையான தியாகமே ஒழிய, ஒன்றும் இல்லாதவன் தான் எல்லாவற்றையும் பிறக்கும்போதே தியாகம் செய்து விட்டேன் என்று சொல்வதில் எவ்வளவு தியாகம் இருக்கக் கூடும்?

சரீரத்தில் பலமும், தக்க ஆயுதமும் உள்ளவன் சகிப்புத்தான் அஹிம்சா தர்மத்தை அனுசரித்ததாகலாமே ஒழிய பலவீனர், பயங்காளி, ஆயுதமற்றவர்களின் சகிப்பு அஹிம்சாதர்ம சகிப்பு ஆகாது. அதுபோல்தான் பொப்பிலி ராஜாவின் தியாகம், தாராளம் முதலியவைகள் தலைமைக்கு ஏற்றது என்கிறோம். இவ்வளவும் இருப்பதுடன் அவர் தலைமை தாங்கும் கட்சிக்கு ஒரு கொள்கை, அல்லது ஒரு வேலைத்திட்டம் இல்லாவிட்டால் ஓட்டைக் குடத்தில் தண்ணீர் இறைத்தது போல்தான் முடியும்.

அக்கட்சியில் அவரைச் சுற்றியுள்ளவர்கள் பெரும்பாலும் கட்சிக்கொள்கைக்குச் சம்மந்தமில்லாமலும், வயிற்றுப் பிழைப்பையே பிரதானமாய்க் கொண்டவர்களும், வயிற்றுப் பிழைப்புக்கு எதையும் விற்கும் ''தியாகி'' களாகவுமே இருக்கிறார்கள். பலர் தங்களை ஜஸ்டிஸ் கட்சியார் என்று சொல்லிக் கொண்டு தியாகராய மண்டபத்தைச் சுற்றிக் கொண்டு திரியாவிட்டால் உப்புக்குக் கூட வகையில்லாமல் திண்டாடக் கூடியவர்களாகவுமிருக்கிறார்கள். நாமினேஷன்கள் வேண்டும். எலெக்ஷன்களுக்குப் பணம் வேண்டும். பிள்ளைகளுக்கு உத்தியோகம் வேண்டும். பட்டங்கள் வேண்டும். பதவிகள் வேண்டும். ஆனால் கட்சிக்காக இந்த 17 வருஷ காலமாக ஜஸ்டிஸ் பத்திரிக்கைக்கு ஒரு மீ சந்தா கூட கொடுத்தறியார்கள். இப்படிப்பட்டவர்கள் சென்னை மாத்திரமல்லாமல், மாகாணம் பூராவும் இருக்கிறார்கள் என்று சொல்லுவதால் சென்னை வாசிகளுக்கு ஒரு ஆறுதல் ஏற்படலாம்.

இன்றைய தினமும் சொல்லுகிறோம். சுருக்கமாகச் சொன்னால் நாயர் பெருமானுக்குப் பிறகு, தியாகராயருக்குப் பிறகு தோழர் பொப்பிலி ராஜாவே தகுந்த தலைவர் என்று கூறலாம். அவர், அவருடைய சுற்று வட்டக் கூட்டத்தாரால் ஏமாற்றப்படாமல் அவர்களுக்கு அடிமையாகாமல் கட்சிக்குத் தக்கதொரு வேலைத் திட்டத்தை ஏற்படுத்தி சர்வாதிகாரியாக நடந்து நாட்டுக்கு ஏதாவது பயன் உண்டாகும்படியான காரியம் செய்து புகழ் பெற்றால் பெறட்டும். இல்லாவிட்டால் எத்தனையோ கோடான கோடி ஜீவராசிகள் பிறந்து வயிற்றை நிரப்பி வாழ்ந்து நோய்வாய்ப்பட்டு மாண்டு மடிந்து மண்ணாகின்ற கூட்டத்தில் ஒருவராய் இருந்தால் இருக்கட்டும்.



RangaRakes tamilnavarasam.com

முடிவாகச் சொல்வதென்னவென்றால், தோழர் ஈ.வெ. ராமசாமியால் ஜஸ்டிஸ் மகாநாட்டுக்கு அக்கட்சி வேலைத் திட்டமாக சில தீர்மானங்கள் அனுப்பப்பட்டன. அவற்றை மகாநாட்டில் வைப்பதற்கே சில ''ஜஸ்டிஸ்வாதிகள்'' ஆக்ஷேபித்தார்கள் என்றாலும், இத் தீர்மானங்கள் பொப்பிலி ராஜாவின் சம்மதத்தின் பேரிலேயே அனுப்பப்பட்டதால் மகாநாட்டு மேஜைக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் கடைசியாக அத் தீர்மானங்கள் மகாநாட்டு யோசனைக்குக் கொண்டு வரப்படவில்லை. பல தோழர்களின் கிளர்ச்சியின் பயனாய் டிசம்பர் மாதத்தில் கூடும் நிர்வாகக் கமிட்டியில் பைசல் செய்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டது என்பதோடு பொப்பிலி ராஜா அவர்கள் அத் தீர்மானங்களைச் சில வார்த்தைத் திருத்தங்களோடு ஒப்புக் கொள்ளுவதில் தனக்கு ஆக்ஷேபனை இல்லை என்றும் சொல்லியிருக்கிற தைரியத்தால், டிசம்பர் கூட்டத்திற்கு இத் தீர்மானங்கள் கொண்டு வருவதைத் தோழர் ராமசாமியும் ஒப்புக் கொண்டார். அப்பொழுது என்ன செய்வார்கள் என்பது பற்றிப் பலருக்கு இப்போதே ஜோசியம் தெரிகிறது என்றாலும், டிசம்பர் வரை பொறுத்து இருப்பதால் ஒன்றும் முழுகிப் போய்விடாதென்றே கருதுகிறோம்.

## கோவை மகாநாடு

கோவை மகாநாட்டிற்கு தோழர் சி.ஆர். ஆச்சாரியார் தலைமை வகித்தார்.

ஜஸ்டிஸ் கக்ஷியில் பலரைச் சேர்த்துக் கொள்ள முயற்சி செய்ததற்கு நேர் விரோதமாய் கோவை மகாநாட்டில் காங்கிரசில் இருந்து பலரைத் தள்ளி விடவும், சிலரை வந்து சேராமல் இருக்கத் தடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ராட்டினம் சுற்றுவதும், நூல் சந்தா கொடுப்பதும், கதரையே கட்டுவதும் முதலாகிய காரியங்கள் அரசியல் சமூக இயல் ஆகியவற்றில் தீவிர எண்ணம் இருக்கின்றவர்களுக்கும், சொந்த புத்திக்கு மதிப்பு கொடுப்பவர்களுக்கும் காங்கிரசில் இடமில்லாமல் செய்து விட்டது. காங்கிரசின் மூலம் சுயநலம் அனுபவிக்கக் கூடியவர்களுக்கே காங்கிரசில் வழி கதவு திறக்கப்பட்டு விட்டது. எப்படியிருந்தாலும் தலைவர் ஆச்சாரியார் அவர்கள் நல்ல தியாகம் செய்தவர். காங்கிரசினால் பிழைக்க வேண்டிய அவசியமில்லாதவர். மற்ற காங்கிரஸ்காரர்களைப் போல் அவரும் இன்று தனது வக்கீல் வேலைக்குச் செல்வாரானால் மீ 4000, 5000 ரூபாய் மாத்திரமல்லாமல் தோழர்கள் அல்லாடி எத்திராஜ் முதலியவர்களைப் போல் மீ 10 ஆயிரம் 20 ஆயிரம் சம்பாதிக்கக் கூடிய நிலைமை கூட ஏற்படலாம். ஆதலால் அவருடைய தியாகத்தில் யாருக்கும் விவகாரம் இல்லை என்றே கருதுகின்றோம்.

ஆனால் பார்ப்பனர்கள் மண்வெட்டி எடுப்பதை அவர் விரும்புவதில்லை. இந்த ஒரு எண்ணம் அவரது தியாகத்தைப் பயனற்றதாக்கிவிட்டது. அவரது பார்ப்பன அபிமானத்தைக் கூட நாம் ஆட்சேபிப்பதில்லை. அதற்காக, பழமையை ஆதரிப்பதை நாம் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அவருக்கு அபார மூளை சக்தி உண்டு. அதற்கு யாவரையும் மயங்கச் செய்து விடும் வல்லமையும் உண்டு. ஆனால் அதைப் பழமையில் இறக்கிவிட்டதுதான் நமக்கு பயனற்றதாகக் காணப்படுகின்றது. கேவலம் ஒரு இந்திய சட்டசபைத் தேர்தலில் அவர் இரங்கியதின் பயனாய் அவர் சறுக்கிவிடப்பட்டுவிட்டார். அவர் வெற்றி பெற்றாலும் கூட, மேலால் அடையப் போகும் பலன் என்ன என்பது வெட்ட வெளிச்சமாய்த் தெரிந்ததேயாகும்.

இது நிற்க, ''சுயமரியாதைக்காரர்கள் காங்கிரசுக்கு வர ஆசைப்படுகிறார்கள். ஆனதால் அவர்களை வரவேற்க வேண்டும்'' என்று சொல்லி இருக்கிறார். ஆசைப்படுவதாகவே வைத்துக் கொண்டு, இதற்காக நன்றி செலுத்துகின்றோம். ஆனால் பேச்சளவில் வரவேற்பதாய்ச் சொல்லிவிட்டுக் காரிய அளவில் கதவைச் சாத்திவிட்டார். அதாவது ராட்டினம் சுற்றி நூல் நூற்று கதர் கட்டிக் கொண்டு வரட்டும் என்கிறார். மதக்காரர்கள் கூட இப்படித்தான் சொல்லுகின்றார்கள். எப்படி யிருந்தாலும் ஜஸ்டிஸ் கக்ஷியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று ஏற்பட்ட பிறகு, காங்கிரசில் சேருவதை எந்தப் பார்ப்பனரல்லாதாருடைய கொள்கையும் ஆட்சேபிக்காது என்றே கருதுகிறோம்.

ஒரு மனிதன் ஜஸ்டிஸ் கட்சியிலும் காங்கிரசிலும் அங்கத்தினராய் இருப்பதை எந்தக் கொள்கையும் இப்போது தடுத்து விடுவதில்லை.

இப்போது வகுப்புத் தீர்ப்பும் ஊமையாய் இருக்கிறது. எலக்ஷன் காலத்தில் மாத்திரம் சிறிது கஷ்டம் ஏற்படலாம். என்றாலும், தோழர் மாளவியாவைப் போல் நடந்து கொள்ளுவதின் மூலம் அக்கஷ்டத்தையும் நீக்கிக் கொள்ளலாம்.

ஆதலால் பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தில் இருக்கும் ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்கள் வரும்போது, பார்ப்பனர்கள் ஆதிக்கத்தில் இருக்கும் காங்கிரசில் பார்ப்பனரல்லாதார் போய்ச் சேருவது என்பதில் விசேஷ குற்றம் இருப்பதாகத் தெரியவில்லை. காந்தியார் காங்கிரசை விட்டு விலகுவது வெறும் மிரட்டலாய் இல்லாமல் உண்மையாய் இருக்குமானால், காங்கிரசில் பார்ப்பன ஆதிக்கம் குறைந்தாலும் குறையலாம்.

சமூகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் தீவிர மாறுதல் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆதலால் பம்பாய் காங்கிரசுக்குப் பிறகு காங்கிரசைப் பற்றிய நமது அபிப்பிராயத்தைத் தெரிவிப்போம்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 07.10.1934**


RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனரைச் சேர்த்தது ஏன்?

தோழர்களே! பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளலாமா? என்கின்ற பிரச்சினையானது ஜஸ்டிஸ் கட்சியில் 1926ம் வருஷம் முதல் பேசப்பட்டு வருகிறது.

உதாரணமாக மதுரை மகாநாட்டில் பனகால் அரசர் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டு, அதற்கு ஒரு கமிட்டியை நியமித்துப் பார்ப்பனர்கள் விண்ணப்பங்களை கமிட்டி பரிசோதிக்கலாமா என்றும், பூணூல் இல்லாதவர்களைச் சேர்த்துக் கொள்வது என்கின்ற நிபந்தனை வைக்கலாமா என்றும், மற்றும் பலவித நிபந்தனைகளின் மீதாவது சேர்க்கலாம் என்றும் சொன்னார். பிறகு கோயம்புத்தூர் மகாநாட்டிலும், கடைசியாக நெல்லூர் மகாநாட்டிலும் பேசப்பட்டது. என்னைப் பொறுத்தவரை நான் ஆக்ஷேபித்தே வந்திருக்கிறேன். பொது ஜனங்களுக்கும் பிரியமில்லை என்பது எனது அபிப்பிராயம்.

ஆனால் தலைவர்களுக்கு ஏதோ அவசியமிருப்பதாகத் தெரிகின்றது. அதை உத்தேசித்தே சென்ற மாதம் கூடின ஒரு சாதாரண தனிப்பட்ட கூட்டத்தில் நான் ஆக்ஷேபிக்கப் போவதில்லை என்று கூறி இருக்கின்றேன். ஏனெனில் தலைவர்கள் என்பவர்கள் அதன் பயனை அடைந்து பார்க்கட்டும் என்று கருதித்தான்.

இது போலவே முன்னமும் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அதாவது ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் காங்கிரசில் சேர வேண்டும் என்கின்ற ஒரு பிரச்சினை கோயம்புத்தூர் மகாநாட்டில் 1927 ல் எழுந்தது. நான் ஆக்ஷேபித்தேன். தோழர்கள் பனகால் அரசர், சர். பாத்ரோ முதலியவர்கள் மிகவும் கேட்டுக் கொண்டார்கள். பொது ஆக்ஷேபனை கூட பலமாய் இருந்தது. கடைசியாக நான் இவர்கள் அதன் பயனை அடைந்து பார்க்கட்டும் பின்பு விஷயம் தெரிந்து கொள்ளட்டும் என்கின்ற எண்ணத்தின் மீதுதான் தடுப்பதில்லை என்று சொல்லி விட்டேன். தீர்மானம் எவ்வித எதிர்ப்புமின்றி பாசாகிற்று என்றாலும் ஒரு அம்மன் காசு அளவு பயன்கூட ஏற்படவில்லை. இதன் பயனாய் முன்னையை விட அதிகமாய் காங்கிரசை ஜஸ்டிஸ் கக்ஷியார் எதிர்க்க நேர்ந்தது. அது போலவே இப்போதும் பொது ஜனங்களுக்கு இஷ்டமில்லாத காரியத்தை ஏதோ ஒரு உள் கருத்துக்கொண்டு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதன் பயனைக்



கண்டிப்பாய் அனுபவிக்கப் போகிறார்கள். அந்த தைரியத்தின் மீதே இப்போது நான் தடுக்கப் போவதில்லையென்று சொல்லுகிறேன். இப்படிச் சொன்னதால் சில தோழர்கள் நான் சம்மதம் கொடுத்ததாகச் சொல்லு கிறார்கள். அவர்களை எனக்கு நன்றாய்த் தெரியும். பார்ப்பனர்களிடம் நான் துவேஷமாய் இருந்தாலும் சினேகமாய் இருந்தாலும் அந்தப் பலன்களையெல்லாம் இவர்கள் தான் அடைவார்களே ஒழிய, எனக்கு ஒரு லாபமும் இல்லை. வேண்டுமானால் பார்ப்பனர்களால் ஏற்படும் விஷமமும், தொல்லையும் எனக்குச் சொந்தமாகும்.

நான் சென்ற வாரப் பத்திரிகையில் ''பார்ப்பனீய ஒழிப்புக் கொண்டாட்ட நாள்'' என்பதாக வருஷத்தில் ஒரு நாள் கொண்டாட வேண்டும் என்று எழுதி இருக்கின்றேன்.

இவை நிற்க, பொதுவாக விஷயத்தை உங்கள் ஞாபகத்துக்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

பார்ப்பனர்களைச் சேர்க்கக் கூடாதென்று ஏற்படுத்திக் கொண்டிருக்கும் விதியும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்கின்ற ஒரு விதியும் நமக்குள் இருந்து வருகின்றது என்றாலும் இது எப்போதும் இருக்க வேண்டியதா? அல்லது எவ்வளவு காலத்துக்கு இருக்க வேண்டியது? என்று யோசித்துப் பாருங்கள். எல்லா இந்திய மக்கள் மாத்திரம் அல்லாமல் உலக மக்கள் எல்லோருமே சகோதரர்களாக தோழமையுடன் வாழ வேண்டுமென்றும் வகுப்பு வித்தியாசங்கள் என்பது எங்கும், எந்த ரூபத்திலும் காணக் கூடாதென்றும் கூப்பாடு போடுகின்ற நாம் எப்போதும் பார்ப்பனர்களை சேர்க்கக் கூடாது என்று சொல்ல முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள். சர்வ ஜன சகோதரத்துவத்துக்கும் வகுப்புப் பிரிவு மறைவுக்கும் தான் பார்ப்பனர்களைச் சேர்க்கக் கூடாதென்றும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்றும் சொல்லுகின்றோம். இது சாதாரண அறிவுடையவர்களுக்கு விளங்காது. சிறிது கூர்மையான பகுத்தறிவைப் பயன்படுத்திப் பார்ப்பவர்களுக்கு விளங்கிவிடும்.

எப்படியெனில் ஒரு வியாதியை சௌக்கியப்படுத்த அந்த வியாதியின் சத்தை இன்ஜக்ஷன் செய்வது போல் உதாரணமாக பீனிச மூக்கு வியாதிக்காரனுக்கு அந்தப் பீனிச மூக்குச் சீயையும், கெட்ட நீரையும் எடுத்துச் சேர்த்து பக்குவம் செய்து இன்ஜக்ஷன் செய்தால் அந்த மூக்கு வியாதி சௌக்கியமாய் விடுகின்றது.

அதுபோல் பார்ப்பனர்களை விலக்கி வைப்பது என்பதில் பார்ப்பனீயம் ஒழிந்து விடுகின்றது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதில் வகுப்புகளின் உயர்வு தாழ்வு வித்தியாசம் ஒழிந்து



RangaRakes tamilnavarasam.com

சமநிலைக்கு வர நேருகின்றது. இவற்றின் பலனாய் ஒற்றுமையும், சமத்துவமும் வந்து பிரிவும் பேதமும் தானாய் மறைய நேரிடுகின்றது.

இந்த நிலை ஏற்படும் வரையில்தான் நாம் பார்ப்பனர்களைச் சேர்க்கக் கூடாதென்றும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்றும் சொல்லுகின்றோமே ஒழிய, உலகம் உள்ள வரையில், மனித சமூகம் உள்ள வரையில் கூடாது என்றும் வேண்டும் என்றும் நாம் கருதி ஏற்படுத்தவில்லை.

இப்போது உள்ள கேள்வியெல்லாம் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளவும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எடுத்து விடவும் தகுதி ஆனதும் அவசியமானதுமான காலம் வந்து விட்டதா என்பதேயாகும். என்னுடைய அபிப்பிராயத்தில் இல்லை என்றே கருதுகிறேன். சிலர் வந்து விட்டது என்கிறார்கள். சிலருக்கு இரண்டும் புரியாமல், சொல்லிக் கொடுத்ததைச் சொல்லும் கிளிப் பிள்ளைகள் மாதிரி ஒரே மாதிரி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் இன்றைய இந்த அபிப்பிராய பேதங்களுக்குக் காரணமே ஒழிய வேறில்லை.

''பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ள காலம் வந்து விட்டது'' என்று இன்று சொல்லுகின்றவர்கள் தலைவர்கள் என்கின்றவர்களே யாவார்கள். தோழர்கள் சர். ஷண்முகம், பொப்பிலி ராஜா, சர். உஸ்மான், ராஜன் போன்றவர்களே ஆசைப்படுகின்றார்கள் என்றால் அதன் பலாபலனை அடைந்து பார்க்க அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கும் வரையில் இந்தப் பிரச்சினை விஷயத்தில் ஒரு சாந்தியும் ஏற்படாது. ஆதலால் நான் குறுக்கே நிற்பதில்லை என்று சொல்லிவிட்டேன். எனது தோழர்கள் பலரும் இதை ஒப்புக்கொண்டது எனக்கு சந்தோஷமே.

இப்போது எனக்கும் மற்றும் பல எனது கூட்டு வேலைத் தோழர்களுக்கும் இருக்கும் முக்கிய பிரச்சினை இந்தப் பார்ப்பனர்களைப் பொருத்ததல்ல.

பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொண்டு பிறகு ஜஸ்டிஸ் கட்சி செய்யப்போகும் வேலை என்ன? அதற்கு வேலைத்திட்டம் என்ன? என்பது தான் முக்கிய பிரச்சினை. இந்தப் பிரச்சினையால் தான் நாங்கள் ஜஸ்டிஸ் கட்சியில் இருப்பதா அல்லது விலகுவதா என்கின்ற தத்துவம் இருந்து வருகின்றது.

அதைத்தான் நாங்கள் முக்கியமாய்க் கருதுகிறோம். அந்த விஷயத்துக்கு ஒரு வேலைத் திட்டம் அனுப்பியிருக்கிறேன். அது யோசனைக்கு வரும். அதைப் பொறுத்தே எங்கள் முடிவும் இருக்கும். பார்ப்பனர்களைச் சேர்க்கும் விஷயம் முடிவடைந்தால் ஏதோ ஒரு சில கூட்டத்துக்குத்தான் பயன் உண்டாகலாம்.



நமது வேலைத்திட்ட விஷயம் முடிவடைவதில்தான், இந்த தேசப் பொது மக்களின் ''தலையெழுத்து'' நிர்ணயிக்கப்படப் போகின்றது.

ஆதலால் பார்ப்பனர்களை ஜஸ்டிஸ் கட்சியில் சேர்க்கும் விஷயத்தில் எனது அபிப்பிராயத்தைச் சொல்லிவிட்டேன். பிறகு நீங்கள் எல்லோரும் யோசித்துத் தக்கது செய்யுங்கள்.

*குறிப்பு: 29, 30.09.1934 இரு நாள்கள் சென்னையில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்வது என்ற தீர்மானத்தை யொட்டி ஆற்றிய உரை.*

**பகுத்தறிவு - சொற்பொழிவு - 07.10.1934**



RangaRakes tamilnavarasam.com

# சென்னை கடற்கரையில் 5000 பேர் கூட்டம்

தோழர் எ. ராமசாமி முதலியார் அவர்களுக்கு விரோதமாய் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் நிறுத்தப்பட்டிருக்கிறார். முன்னவரை விட பின்னவர் எந்த விதத்தில் யோக்கியதை உடையவர் என்று நான் கேட்கின்றேன். தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் 4000 ஓட்டிலிருந்து எண்ணப் போகிறேன் என்று சொல்லுகிறாராம். ஏனென்றால் சென்னையில் 4000 பார்ப்பனர்கள் ஓட்டுகள் இருக்கின்றனவாம். அவர்கள் அத்தனை பேரும் பார்ப்பனர் சத்தியமூர்த்திக்கே ஓட்டு செய்யப் போகிறார்களாம். இதை ஒரு பெருமையாகப் பார்ப்பனர்களும், அவர்களது கூலிகளும் பேசிக் கொள்ளுகிறார்கள்.

அப்படியானால் தோழர் ராமசாமி முதலியார் அவருடைய ஓட்டுகள் 11000த்தில் இருந்து எண்ணக் கூடும் என்று ஏன் சொல்லக் கூடாது? 4000 பார்ப்பனர்கள் ஓட்டிருப்பதால் 4000த்தில் இருந்து எண்ணுவதானால் 11000 பார்ப்பனர் அல்லாதார் ஓட்டர்கள் இருப்பதால் ராமசாமி முதலியார் ஏன் 11000த்தில் இருந்து எண்ணக் கூடாது என்று நான் கேட்கின்றேன். மொத்தம் 15 ஆயிரம் ஓட்டல்லவா?

பார்ப்பனருக்கு இருக்கும் புத்தியும், ஜாதி அபிமானமும், சுயமரியாதை உணர்ச்சியும், பார்ப்பனரல்லாதாருக்கு இல்லை என்று கருதுகின்றவர்கள்தான் 4000 பார்ப்பன ஓட்டுகள் இருக்கின்றதே என்று பயப்பட வேண்டுமே ஒழிய பார்ப்பனரல்லாதாருக்கு அறிவும் சுயமரியாதை உணர்ச்சியும் இருக்கின்றது என்று எண்ணுகின்றவர்கள் பயப்பட வேண்டியதில்லை.

### தேசாபிமானம்

பார்ப்பனர்கள் தேசாபிமானம் என்கின்ற ஒரு ஆயுதத்தை வைத்துக்கொண்டே பார்ப்பனரல்லாத மக்களை ஏமாற்றி ஆதிக்கம் பெறப் பார்க்கிறார்கள். தேசாபிமானம் என்பது வயிற்றுப் பிழைப்பு மந்திரம் என்று நான் வெகு நாளாகச் சொல்லி வருகிறேன்.

ஒரு தேசத்தில் ஏழை, பணக்காரன், மேல்ஜாதிக்காரன், கீழ்ஜாதிக்காரன் இவர்கள் எல்லோரிடமும் அபிமானம் வைப்பது முட்டாள் தனமேயாகும்.



ஏழை மக்களிடமும், தாழ்த்தப்படட மக்களிடமும் அபிமானம் இருப்பதுதான் நியாயமானதும், பயனுள்ளதுமான காரியமாகும்.

இன்று தேசாபிமானத்தின் பேரால் ஆதிக்கம் பெற்ற நாடுகள் எல்லாம் கொடுங்கோன்மையால் வறுமையால் துன்பப்படுகின்றன.

அது குடி அரசு நாடானாலும் சரி, ஜனநாயக நாடானாலும் சரி, சுயராஜ்யம் பெற்ற நாடானாலும் சரி எல்லாம் இந்தியாவைப் போலும் இன்னம் மோசமாயுந்தான் இருந்து வருகின்றன.

### சட்ட சபையில் செய்வதென்ன?

இந்திய சட்டசபையில் காட்டப்போகும் தேசாபிமானம் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. வெள்ளை அறிக்கையைத் தள்ளிவிடப் போகிறார்களாம். காங்கிரசுக்காரர்களால் இது முடியக் கூடிய காரியமா? என்று யோசித்துப் பாருங்கள்.

### தோட்டத்தில் முக்கால் பாகம் கிணறு

இந்திய சட்டசபையில் 144 பேர்கள் அங்கத்தினர்கள் என்றால் 40 பேர் நியமிக்கப்பட்டவர்களும், 30 முஸ்லீம்களும், 8 ஐரோப்பியர் களும், 4 வியாபாரிகளும், 7 ஜமீன்தார்களும், 2 சீக்கியர்களும் இருக்கிறார்கள். இவை போக பொதுத் தேர்தல் 53 தான். இதில் காங்கிரசுக்காரர்கள் 35 அல்லது 40 பேர்கள் வரலாம் என்றே வைத்துக் கொள்ளுங்கள். ஒரு தோட்டத்தில் முக்கால் பாகம் விஸ்தீரணம் கிணறாக இருந்தால் அதில் என்ன வெள்ளாண்மை எடுக்கக் கூடும்? அது போல் இந்த 30, 40 பேர்கள் என்ன சாதித்து விட முடியும். தோழர்கள் தாஸ், நேரு போன்ற ''வீராதி வீரர்கள்'' இருந்த காலத்திலேயே முதுகைக் காட்டிக் கொண்டு ஓடி வந்து விட்டார்கள் என்றால் இந்த தோழர்கள் சத்தியமூர்த்தி, முத்துரங்கம், அவனாசிலிங்கம், வெங்கிடாசலம் ஆகியவர்கள் என்ன சாதித்து விட முடியும் என்று எண்ணுகிறீர்கள்.

### பல்ட்டி

இதற்கு முன் காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொண்டு போனவர்கள் எத்தனை பேர்கள் பல்ட்டி அடித்துவிட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் முட்டுக்கட்டை போடுவதாகச் சொல்லி அங்கு போய் டாக்டர் சுப்பராயனை மந்திரியாக்கி அவருக்கு பிரைவேட் செக்ரட்ரியாய் இருந்து வரவில்லையா?

தோழர் சாமி வெங்கிடாசலம் அவர்கள் காங்கிரசுக்காரர்களை போன மாதத்தில் கூடக் கண்டபடி வைது கொண்டிருக்கவில்லையா? மற்ற ஆட்களைப் பற்றி சொல்ல வேண்டுமா? வீணாகப் பத்திரிகைகளின்



RangaRakes tamilnavarasam.com

பொய்ப் பிரசாரத்தையும் கூலிகளின் விஷமப் பிரசாரங்களையும் நம்பி ஏமாந்து விடாதீர்கள். காங்கிரசுக்காரர்கள் பணத்தில் பல பத்திரிகைகள் நடக்கின்றன. காங்கிரசுக்கும், கதருக்கும், தீண்டாமை விலக்குக்கும் வசூல் செய்த பணங்கள் வசவுப் பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆதலால் நீங்கள் இவற்றை எதையும் கவனியாமல் உங்கள் பகுத்தறிவைப் பயன்படுத்தி உங்களுக்கு எது சரி என்று தோன்றுகின்றதோ அதன்படி நடவுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு: 28.09.1934 சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் ''வரப்போகும் தேர்தல்'' என்பதுபற்றி ஆற்றிய சொற்பொழிவின் தொடர்ச்சி.*

**பகுத்தறிவு - சொற்பொழிவு - 14.10.1934**



# புதுக்கோட்டையில் தோழர் ஈ.வெ.ரா.

## ஆஸ்திகம் – நாஸ்திகம்

தலைவரவர்களே, தோழர்களே!

இந்தப் புதுக்கோட்டையில் எங்களுக்காக நடத்தப்பட்ட ஆடம்பர வரவேற்புகளுக்கும், விருந்துகளுக்கும் இங்கு நடைபெறுகிற நடவடிக்கைகளுக்கும் நான் நன்றி செலுத்துவதுடன் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தோழர்கள் ரங்கம்மாள் - சிதம்பரம் தம்பதிகள் சீர்திருத்த முறையில் விவாகம் செய்து கொண்டவர்களாதலால், அவர்கள் பாராட்டுதலுக்கும், வரவேற்புக்கும் உரியவர்கள் ஆவார்கள். ஆனால் எனக்கு எதற்காக இந்த ஆடம்பர வரவேற்புகள் என்பது எனக்கே விளங்கவில்லை.

இந்த ராஜ்யம் ஒரு சுதேச சமஸ்தானமாதலால் இங்கு நமது இயக்கத்தைப் பிரசாரம் செய்வதற்கு சமஸ்தானத்திலோ, அல்லது வேறு வகையிலோ ஏதாவது இடையூறு ஏற்படுமோ எனக் கருதி, இந்த முறையில் ஏதாவது வகை செய்யக் கருதி தோழர் வல்லத்தரசும் அவர்களது தோழர்கள் முரு. தேனப்பன், அ.செ.சு. சாமிநாதன், லெ. சோமசுந்தரம், கா.ச. சடையணன், சி.பெ.க. பெரிய கருப்பன் முதலியவர்களும் இந்த ஏற்பாடு செய்தார்களோ என்று எண்ணுகிறேன். (சிரிப்பு)

இந்த இரகசிய ஏற்பாட்டிற்கு இவ்வளவு பேர்கள் வந்து கூடியிருப்பது எனக்கு மகிழ்ச்சியாய் இருப்பதோடு, இந்த வரவேற்புப் பத்திரத்தில் கண்ட வாக்கியங்களைக் கவனிக்கும் போது சுயமரியாதை இயக்க சீர்திருத்தத் துறையில் இந்த ராஜ்யம் உச்சஸ்தான விருப்பம் கொண்டதாகவே தெரிகின்றது. வரவேற்புப் பத்திரத்தில் என்னைப் பற்றி புகழ்ந்திருக்கும் விஷயங்களை நான் ஒப்புக் கொள்ள முடியாவிட்டாலும் அதில் கண்டுள்ள அதி தீவிர வாக்கியங்களைப் பார்க்கும்போது மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு அதற்காக நன்றி செலுத்த வேண்டியவனாயிருக்கிறேன்.

இந்த வரவேற்பு ஆடம்பரங்கள் புதுக்கோட்டை சமஸ்தான இளைஞர் சங்கத்தின் பேரால் இருப்பதால், இளைஞர்களைப் பற்றி இரண்டொரு வார்த்தை பேசிவிட்டுப் பிறகு பத்திரத்திற்குப் பதில் சொல்லுகிறேன்.

இளைஞர்கள் என்பவர்கள் தூய்மையான மனதையுடையவர்கள். அவர்கள் உலக வாழ்க்கை வியாபாரத்தில் நுழையாதவர்களாதலால் அவர்கள் எண்ணமும், காரியமும் ஒன்றாய் இருப்பதற்குச் சௌகரியம் உண்டு.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் அவர்களுக்குப் போதிய உலக அனுபவம் ஏற்படக் காலம் இல்லை. ஆதலால் இளைஞர்கள் திடீரென்று எந்தக் காரியத்திலும் பிரவேசித்துவிடக் கூடாது. விஷயங்களை ஆலோசித்துப் பார்க்க வேண்டும். தங்கள் எண்ணங்களுக்கும், செய்கைகளுக்கும் அனுபவ பலன் என்ன? அது எப்படிப்பட்டது? என்பதை நடுநிலைமையிலிருந்து யோசித்துப் பார்த்து சரித்திரங்களையும் சம்பவங்களையும் அறிந்தே ஒரு துறையில் இறங்க வேண்டும்.

இளைஞர்கள் முதலில் சமூக வாழ்விலுள்ள கஷ்டங்களை ஒழிக்கப் பாடுபட வேண்டும். திடீரென்று அரசியலில் குதிக்க வேண்டியதில்லை. ஏனெனில் அரசியல் என்பது சூதாட்டம் போன்ற காரியமானதால் இளைஞர்கள் சுலபத்தில் ஏமாந்து போகக் கூடும். அதைப் பெரியவர்களுக்கு விட்டு விட்டு மனித வாழ்க்கையைச் சுலபமாகவும், சௌக்கியமாகவும் இருக்கும்படி பார்க்க வேண்டும். இந்தப் பலனால்தான் ஒரு தேசத்தின் - சமூகத்தின் பெருமை இருக்கின்றதே ஒழிய அரசியலிலேயே இருப்பதாகச் சொல்ல முடியாது.

நிற்க, சீர்திருத்தத் துறையில் நான் பெரிய மாறுதல் செய்திருப்பதாகப் புகழுகிறீர்கள்.

சீர்திருத்தம் என்பது ஒரு பிரமாதமான காரியமல்ல. மக்கள் தாங்கள் இருக்கும் நிலையிலிருந்து முற்போக்கடைய எண்ணுவதும் மாறுதல் அடைய ஆசைப்படுவதும் இயற்கையேயாகும்.

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மனிதனும் அவனவன் வாழ்வில் முற்போக்கும், மாறுதலும் அடைந்துகொண்டே வருகிறான். இதற்காகத் தனி லட்சியம் தேவையில்லை. மரக்கட்டை போல் உணர்ச்சியற்றவனாய் இருந்தாலும் அவன் கூட காலப்போக்கில் தானாகவே மாறுதலும், முற்போக்கும் அடைந்துதான் தீருவான்.

ஆனால் அப்படிப்பட்ட விஷயங்களில் நம் போன்றவர்கள் செய்யும் விசேஷ காரியம் என்னவென்றால் எப்படிப்பட்ட மாறுதல், எப்படிப்பட்ட முற்போக்கு அவசியம் என்பதில் செலுத்தும் கவனமேயாகும்.

தானாகப் போய்க்கொண்டிருக்கும் முற்போக்குக்கும், மாறுதலுக்கும் தடையாயிருந்து அவற்றை வேறு வழியில் திருப்புவதினால் சில சமயங்களில் பெருத்த கிளர்ச்சி ஏற்பட்டு விடுகின்றது. அதற்கு எதிர்ப்பும், பழிப்பும் பலமாய் ஏற்பட்டு விடுகின்றது. இப்படிப்பட்ட சமயங்களில் சிலர் பழமையை- ஏதாஸ்திதியை குரங்குப் பிடியாய் பிடித்துக் கொண்டு உபத்திரவப்படுகிறார்கள். தொல்லைகளை விளைவிக்கிறார்கள். இத்தொல்லையும் உபத்திரவமும் தங்கள் அறியாமையால் செய்வதும் உண்டு. சிலர் தங்கள் சுயநலங்களுக்கு ஹானி ஏற்படுமே என்ற கெட்ட எண்ணத்தின் மீது செய்வதும் உண்டு.



எப்படியிருந்தாலும் அபாயமான வழியில் - கெடுதி உண்டாக்கும் வழியில் மாறுதலும், முற்போக்கும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மக்கள் கடமையாகும். மாறுதல் வரும் போது அதைக் கையாளுபவர்கள் துன்பத்துக்கும், பழிப்புக்கும் ஆளாவது என்பதில் புதிதல்ல. சரித்திரகால இயற்கையாகும். சாக்ரடீஸ், புத்தர், கிறிஸ்து, மகம்மது ஆகிய பெரியார்கள் இன்று எவ்வளவோ மக்களின் வணக்கத்துக்கும், மதிப்புக்கும் உரியவர்களானாலும் அவர்கள் காலத்தில் எவ்வளவோ தொல்லைக்கும், இழிவுக்கும், பழிப்புக்கும் ஆளானதாகச் சரித்திரங்கள் சொல்லுகின்றன.

அதுபோலவே சில மாறுதல்கள் தற்கால மக்களுக்குக் கசப்பாயிருந் தாலும் பிற்கால மக்களால் மதிப்பும், பெருமையும் பெறும் என்ற துணிவு எனக்குண்டு. அந்த நம்பிக்கையின் பேரில் தான் நாம் எந்த மாறுதலையும் திருத்தத்தையும் செய்யத் துணிய வேண்டுமே ஒழிய, நாம் இன்றே பாராட்டப்பட வேண்டும் என்று கருதிக் கொண்டு செய்வது பயன்படாது.

கல்யாணம், இழவு, வாழ்வு முதலிய துறைகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் சுயமரியாதை இயக்கம்தான் என்று இங்கு பேசியவர்கள் சொன்னார்கள். அதை முழுவதையும் நான் ஒப்புக் கொள்ள வில்லை. காலதேசவர்த்தமானம் மக்களை அப்படிச் செய்யச் செய்கின்றது. அதில் சிலவற்றிக்கு சு.ம. இயக்கம் துணைபுரிந்தது என்று சொல்லலாம்.

குறிப்பாக மனித சமூகத்தில் பெண்கள் விஷயத்தில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட வேண்டியது அவசியம். இது தீண்டாமையை ஒழிப்பதை விட அவசரமாய்ச் செய்ய வேண்டிய காரியம் என்பது எனது அபிப்பிராயம். அதிலும் விதவைக் கொடுமை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். அது மனித தர்மத்துக்கு மாத்திரமல்லாமல், ஜீவ தர்மத்துக்கே விரோதமானதாகும். விதவைகளைப் பற்றி நினைக்கும் போது எனக்கு ராஜாராம் மோகன்ராயைப் பற்றித்தான் ஞாபகம் வருகின்றது. இன்றைய விதவைகளின் கொடுமைக்கு அவர்தான் காரணம் என்று சொல்ல வேண்டியிருப்பதற்கு வருந்துகிறேன்.

ஏனெனில் இந்து சாஸ்திர முறைப்படி புருஷன் இறந்தவுடன் பெண்ஜாதியை கட்டையில் பலாத்காரமாயாவது வைத்து புருஷனுடன் கட்டி நெருப்பை வைத்து சுட்டுவிடும் முறை இன்று இருக்குமானால் இன்று உலகில் விதவைகளே இருக்க மாட்டார்கள். விதவைக் கொடுமையும் இருக்காது.

விதவைகளை சுடக்கூடாது என்று சொன்னவர் அவ்விதவைகளுக்கு ஏதாவது ஒரு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அதில்லாமல் இன்று இந்தியாவில் மாத்திரம் குழந்தைகள் உள்பட பெண்களில் 100க்கு 25 பேர் விதவைகளாய் இருக்கிறார்கள் என்றால் இது கொடுமை அல்லவா?



RangaRakes tamilnavarasam.com

இதை ஒழிப்பதைவிட வேறு ஜீவகாருண்ய வேலையோ, சீர்திருத்த வேலையோ இருக்கின்றதா என்று கேட்கின்றேன். அதுபோலவே பெண்கள் சுதந்திர விஷயமும் மோசமாகவே இருக்கின்றது. பெண்கள் விலைப் பொருளாக மதிக்கப்படுகின்றனர். மற்றும் அடிமைப் பொருளாகவும் மதிக்கப்படுகின்றனர். குழந்தைப் பருவம், இளமைப் பருவம், கல்யாணப் பருவம், வாழ்க்கைப் பருவம், முதுமைப் பருவம் ஆகிய எல்லாப் பருவங்களிலும் பெண்கள் அடிமைப்படுத்தப்படுகிறார்கள். இவைகளைப் பற்றி நான் சொல்லுவது பழமை விரும்பிகளுக்கு கஷ்டமாய்த் தோன்றலாம். ஆனால் அப்படிப் பட்டவர்கள் பெண்களாயிருந்து அனுபவித்துப் பார்த்தால் தெரியும்.

**ஆஸ்திக நாஸ்திகம்**

முடிவாக ஆஸ்திக நாஸ்திகத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது ஒரு பயனற்ற விஷயம். ஏனெனில் ஆஸ்திகமும், நாஸ்திகமும் 100க்கு 99 பேர்களின் அபிப்பிராயங்கள், பழக்கவழக்கங்கள், பிறர் சொல்லிக் கொடுப்பதால் சேர்க்கையால் ஏற்படுவதே ஒழிய ஒரு இயற்கை உணர்ச்சி அல்ல. அன்றி பசி, தூக்கம், பஞ்சேந்திரிய உணர்ச்சி ஆகியவைகளைப் போல் இயற்கையாய் ஏற்படும் எண்ணமும் அல்ல. அதைப்பற்றி மனிதன் கவலைப்பட வேண்டியதே இல்லை. அது இன்று ஒரு ஆராய்ச்சி விஷயமாகி, நாகரீக விஷயமாகவும் பேசப்பட்டு வருகின்றது. மனிதனுக்கு கட்டும், காவலும், சட்டமும், போலீசுமாய்த்தான் இருக்கின்றனவே ஒழிய கடவுளோ, நரகமோ, சாஸ்திரமோ, ஒழுக்கமோ கட்டிக் காப்பாற்றி விடவில்லை. அனுபவத்திலும் எவனும் அவற்றின் மீது எவ்வித பொறுப்பையும் சுமத்துவதும் இல்லை.

ஆதலால் ஆஸ்திகம் நாஸ்திகம் என்பது ஒரு பயனற்ற பிரச்சினையாகும். மற்றும் அது அவனவனுடைய சொந்த புத்தி, யோசனையைப் பொருத்ததாகும்.

ஆதலால் நமது வாழ்வில் ஏற்பட வேண்டிய இன்ப, துன்பங்களுக்கும், முற்போக்குக்கும், மாறுதலுக்கும் ஆஸ்திக நாஸ்திகத்தைக் கொண்டு வந்து குறுக்கே போட்டுக்கொண்டு யாரும் கஷ்டப்பட வேண்டியதில்லை.

நம்மைப் பொருத்தவரையில் எந்த அளவில் ஆஸ்திகத்தில் பிரவேசிக்கின்றோம் என்று நினைப்பீர்களானால் வாழ்க்கையின் நலங்களைக் கடவுளின் மீது பொறுப்பேற்றுவதும், கடவுளுக்காகச் செல்வங்களை - மக்கள் வாழ்க்கைக்குரிய பொருள்களைப் பாழாக்குவதையும் பொருத்த அளவில் தான் பிரவேசிக்கின்றோம். மற்றபடி எவன் எத்தனை கடவுளை எந்த விதமாக நினைத்துக் கொண்டாலும், வணங்கினாலும், அவற்றோடு பேசினாலும் அதுவே ஆய்விட்டாலும் நமக்கு அக்கரையில்லை (சிரிப்பு)



உலகத்தைப் பொது என்றும் உலகப் பொருள் போக போக்கியங்கள் யாவருக்கும் சமம் என்றும் எண்ண வேண்டும். இதற்குக் கடவுள் குறுக்கிடாமல் இருந்தால் கடவுளைப்பற்றிய வேலை நமக்கு இல்லை. அதைப் பற்றிய கவலையும் இல்லை. ஆகையால் அதை ஒரு பெரிய பிரச்சினையாக வைத்துக் கொண்டு எவரும் கஷ்டப்பட வேண்டியதில்லை.

மற்றொரு சமயம் இந்த ஊருக்கு வந்து இன்னும் பல விஷயங்களைப் பற்றிப் பேச ஆசைப்படுகிறேன். கடைசியாக உங்கள் வரவேற்புக்கும், புகழ்மொழிகளுக்கும், என்னிடம் காட்டிய அன்புக்கும் சிறப்பாக தோழர் முத்துசாமி வல்லத்தரசு அவர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*குறிப்பு: 07.10.1934இல் புதுக்கோட்டை டவுன்ஹாலில் நடைபெற்ற கோட்டையூர் தோழர் சிதம்பரம் - தோழர் ரங்கம்மாள் ஆகியோருக்குத் திருச்சியில் நடந்த விதவைக் கலப்பு மண பாராட்டுவிழாவில் ஆற்றிய உரை.*

**பகுத்தறிவு - சொற்பொழிவு - 14.10.1934**



RangaRakes tamilnavarasam.com

# ஸ்தல ஸ்தாபனச் சீர்கேடு

ஸ்தல ஸ்தாபனங்கள் என்று சொல்லப்படும் ஜில்லா, தாலூக்கா போர்டுகள், முனிசிபாலிட்டி, யூனியன், கிராம பஞ்சாயத்து ஆகிய ஸ்தாபனங் களைப் பற்றி நம்முடைய அபிப்பிராயம் யாவரும் அறிந்ததேயாகும்.

இவைகளைப் பற்றி சுமார் 20, 25 வருஷகாலமாகவே நமக்கு நேரிட்ட அனுபோகம் உண்டு என்பதையும், அதன் பயனாகவே ஸ்தல ஸ்தாபனங்களில் ஜனப் பிரதிநிதிகள் என்பவர்களுக்குள்ள அதிகாரங்களையும் அரசாங்கம் திரும்பப் பெற்றுக் கொண்டு பொறுப்புள்ள சம்பள ஆட்களிடம் அவைகளை ஒப்புவிக்க வேண்டுமென்றும் பேசியும், எழுதியும் வந்ததோடு இப்போதும் அது போலவே பல காரியங்கள் நடந்தும் வந்திருக்கின்றன.

தாலூகா போர்டுகள் ஏற்பட்டு விட்டன. முனிசிபாலிட்டிகளில் சேர்மென்களின் அதிகாரங்கள் பிடுங்கப்பட்டு அவர்களை நகரும் யந்திரங்களாக ஆக்கப்பட்டு விட்டனர். சட்டத்தில் சேர்மன் என்று இருந்த இடங்களிலெல்லாம் கமிஷனர் என்று போட்டாய் விட்டது. சில கமிஷனர்கள் யோக்கியப் பொறுப்பற்றவர்களா யிருக்கலாம். சில சமயங்களில் தவறுதல்கள் செய்து விடலாமென்று வைத்துக் கொண்டாலும் 10 கமிஷனர்களின் யோக்கியப் பொறுப்பற்ற தன்மையையும், 10 கமிஷனர்களின் ஒழுங்குத் தவறுதலான காரியங்களும் ஒன்று சேர்ந்தாலும் ஒரு சேர்மெனின் யோக்கியப் பொறுப்பற்ற தன்மைக்கும், ஒரு சேர்மெனின் ஒழுங்குத் தவறுதலான காரியங்களுக்கும், இணையாகாதென்பது இன்னமும், இன்றும் நமது அபிப்பிராயமாகும்.

ஒரு முனிசிபாலிட்டி சிப்பந்திகள் 32 கௌன்சிலர்களுக்கும், ஒரு சேர்மெனுக்கும் அடிமையாயிருந்து தவறுதல் செய்வதைவிட ஒரு ஸ்பெஷலாபீசருக்கு அடிமையாயிருந்து தவறுதல் செய்து விடுவதால், முனிசிபல் நிர்வாகம் அதிகமாய்க் கெட்டுவிடாது என்றுதான் சொல்லுவோம்.

அது போலவே ஒரு சேர்மெனும், 19 கவுன்சிலர்களும் சேர்ந்து கொள்ளையடிப்பதின் மூலம் ஒரு முனிசிபாலிட்டியின் சொத்து கொள்ளை போவதை விட, ஒரு ஸ்பெஷல் ஆபீசர் கொள்ளை அடிப்பதில் முனிசிபல் சொத்து அதிகம் கொள்ளை போய்விடாது என்றே சொல்லுவோம். கமிஷனர்கள் புதியவர்களானதாலும் சிலருக்கு அவர்களது தகுதிக்கு



மேற்பட்ட அதிகாரம் வகித்துப் பழக்கமில்லாத தாலும் சில தவறுதல்கள் தற்காலம் ஏற்படக்கூடும் என்றாலும் பொது நோக்குடைய கவுன்சிலர்களும், சேர்மென்களும் அவர்களைத் திருத்தி ஒழுங்கான முறையில் நடத்தி ஸ்பெஷல் ஆபீசர்களின் தன்மையை வெற்றிபெற உதவி செய்வது கடமையாகும். ''ஸ்பெஷல் ஆபீசர்களுடன் கலகங்கள் ஏற்படுமாகில் கவுன்சிலுக்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச அதிகாரமும் பறிக்கப்பட்டு விடுமேயொழிய ஸ்பெஷல் ஆபீசர்கள் பதவி குறைந்தது இன்னம் 10, 15 வருஷ காலங்களுக்கு மாற்றப்பட முடியாது'' என்று கூறுவோம்.

இது நிற்க, இன்றைய ஜில்லா போர்டுகளின் யோக்கியதைகளைப் பற்றி சிலது குறிப்பிடவேண்டியது அவசியமாய்ப் போய்விட்டதற்கு வருத்துகிறோம்.

முனிசிபாலிட்டிகளின் நிருவாகம், ஆயிரக்கணக்கில் ஒன்று, இரண்டு லக்ஷக்கணக்கில் ரூபாய்களை வரும்படியாகக் கொண்டது. ஜில்லா போர்டுகள் அப்படிக்கில்லாமல் 10 லக்ஷம் 20 லக்ஷம் கணக்கில் வரவு செலவுகளைக் கொண்டவைகளாகும்.

தாலூகா போர்டை எடுத்துவிட்டு முனிசிபாலிட்டிகளுக்குக் கமிஷனர்களை நியமித்த அரசாங்கம் புத்திச்சாலித்தனமுடையதாய் இருந்தால், முதல் முதல் ஜில்லா பேடுகளை எடுத்திருக்க வேண்டும். அல்லது அவைகளுக்கு கமிஷனர்களைப் போட்டிருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் ஜில்லா போர்டுகளில் லக்ஷக்கணக்கான ரூபாய்கள் பாழாக இடம் தாராளமாய் விட்டு விட்டு, நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ரூபாய்களுக்குப் பாதுகாப்பு அளித்திருப்பது எருமை போவது தெரியாமல் விட்டு விட்டு எறும்பு போவதைக் கண்டுபிடித்த வீரனுக்கே ஒப்பாகும்.

ஜில்லா போர்டு தேர்தல் காலங்களில் நாம் முரசடிப்பது போல் கூப்பாடு போட்டோம். ஜில்லா போர்டு மெம்பர் ஸ்தானங்களுக்கு 5000, 10000 செலவு செய்கிறார்கள் என்றும், பிரசிடெண்டு ஸ்தானங்களுக்கு 40 ஆயிரம், 50 ஆயிரம், 75 ஆயிரம் ரூபாய்கள் கூட செலவு செய்கிறார்கள் என்றும் கூப்பாடு போட்டோம். இதை அறிந்த அரசாங்கத்தார் இப்படிச் செலவு செய்கின்றவர்களைப் பயித்தியக்காரர்கள் என்று நினைத்து ''அவர்கள் செலவு செய்தால் நமக்கென்ன'' என்று இருந்து விட்டார்கள். இருந்தும் வருகிறார்கள்.

இப்படி நினைத்தது சுத்த வடிகட்டின முட்டாள்தனம் என்பதை சர்க்காருக்கு சில ஜில்லா போர்டுகள் நன்றாய் அறிவுறுத்திவிட்டதென்றாலும், சர்க்கார் தெரியாதது போல் கண்ணை மூடிக்கொண்டு பால் குடிக்கின்றது.

இன்று சென்னை மாகாணத்தில் 100க்கு 75 ஜில்லா போர்டு கண்ட்றாக்டுகள் ஜில்லா போர்டு பிரசிடெண்டுகளுக்கும், மெம்பர் களுக்கும், அவர்கள் சிப்பந்திகளுக்கும், சொந்தக்காரர்கள் பேராலும், சினேகிதர்கள் பேராலும் இருந்து வருவது உலகமறிந்த ரகசியமாகும்.



RangaRakes tamilnavarasam.com

பல கண்ட்ராக்டுகள் லக்ஷம், ஐம்பதினாயிரம் ரூபாய்கள் எஸ்டிமேட்டுகள் உள்ளது. 100க்கு 10 விகிதமும் 15 விகிதமும் குறைவாய் டெண்டர்கள் கொடுத்திருந்தும், அவர்கள் பெரிதும் பரம்பரை அனுபோகம் பெற்ற கண்ட்ராக்டர்களாய் இருந்தும், பணப் பொறுப்புள்ளவர்களாய் இருந்தும், அப்படிப்பட்டவர்களுக்குக் கண்ட்றாக்டு கொடுக்கப்படாமல் புதுக் கண்ட்ராக்ட் தாரர்களுக்கு ஜில்லா போர்டு பிரசிடெண்டு வேலைக்காரரின் சொந்தக்காரர்களுக்கு மெம்பர் வேலைக்காரர்களின் சொந்தக்காரர்களுக்கு பொருளாதார நிலைமையில் திருப்தி யில்லாதவர்களுக்கு எஸ்டிமேட் தொகைக்கு மேல் 100க்கு 10, 15 ரூபாய் வீதம் அதிகம் சேர்த்துக் கண்ட்றாக்ட் கொடுக்கப்படுகிறதென்றால் இதற்கு என்ன பேரிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்தப் பணங்களை யார் அடைந்தார்கள்? இதை மெம்பர்கள், பிரசிடெண்டுகள் அடைந்தார்களா? என்பது விவகாரத்துக்கு இடமாயிருந்தாலும், ஒரு சமயம் ருஜு விட முடியாததாய் இருந்தாலும், இந்தப் பணங்கள் ஜில்லா போர்டுக்கு நஷ்டமாகிவிட்டதென்று சொல்வதில் ஏதாவது விவகாரமோ, ருஜுச் செய்ய வேண்டிய பொறுப்போ இருக்கின்றதா என்று கேட்கின்றோம்.

மதுரை ஜில்லா போர்டைப் பற்றி மெம்பர்கள் பெரியதொரு மகஜர் அனுப்பினார்கள்; பல ஊழல்களை எடுத்துக்காட்டினார்கள். கடைசியாக ஒன்றும் செய்ய முடியவில்லை. கவர்ன்மெண்டும் இனிமேல் அப்படி வேறு பிரசிடெண்டுகள் நடக்கக் கூடாமல் இருக்கும்படி செய்யவு மில்லை. மற்றும் சில ஸ்தல ஸ்தாபன விஷயங்களில் கைப்பிடியாய்ப் பிடித்துக் கொடுத்தார்கள். அதற்கும் ஒன்றும் செய்யவில்லை.

திருச்சி முனிசிபாலிட்டியில் கவுன்சிலர்கள் கையாடினார்கள் என்றோ, சேர்மென் கையாடினாரென்றோ கண்டுபிடிக்கவும் இல்லை. முனிசிபல் பணம் இம்மாதிரி ஏதாவது சந்தேகத்துக்கு இடமாயாவது வீணாக்கப்பட்டதா என்றும் தீர்ப்புக் கூறவுமில்லை. ஏதோ சர்க்கார் மரியாதையைக் காப்பாற்ற வேண்டியென்று அடியோடு கலைக்கப்பட்டு விட்டது. அதைப்பற்றி நாம் பரிதாபங்கூடக் காட்ட வரவில்லை. இன்னும் கடினமுறை எடுத்துக் கொண்டாலும் சரி, எடுத்துக் கொள்ள வேண்டியதும் அவசியம்தான் என்று கூடச் சொல்லுவோம். ஆனால் அதை விட மோசமான ஸ்தல ஸ்தாபனங்களை ஏன் விட்டுக் கொண்டிருக்க வேண்டு மென்பதுதான் நமது கேள்வி.

ஆடிட்டர்கள் ரிபோர்டுகளின் மீது கடினமான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மேல் கண்ட மாதிரி 10, 15 பெர்சண்டு கம்மியாய் கேட்ட கண்ட்றாக்டுகளை 10, 15 பெர்செண்டு அதிகம் கூட்டி அதாவது 100க்கு 30 ரூபாய் பிரத்தியார் கேட்டதற்கு மேல் அதிகம் கூட்டிக் கொடுக்கும் கண்ட்றாக்டுகளைப் பற்றி இஞ்சீனியர்கள் ஏன் கவர்ன்மெண்டுக்குத் தெரியப்படுத்தாமலும் உள் உளவாயும் இருந்தார்கள் என்பதைப் பற்றி இஞ்சீனியர்கள் மீது நடவடிக்கை நடத்தவும் தக்க பொருப்புகள் இருக்கும்படி செய்யவும் வேண்டும்.

ஸ்தல ஸ்தாபன சுயாட்சியென்று பேர் வைத்துச் சில அதிகாரங்கள் கொடுத்து அதை இந்தப்படி கேவலமாகவும், பண நஷ்டமாகவும் கையாடுதல் செய்யவும் முதலிய காரியங்களுக்கும் தலைமறைவாய் இடம்கொடுத்து அதற்காக ஊரில் உள்ள பணக்காரர்களையெல்லாம் வியாபாரம் போல் போட்டி போடவிட்டுக் கக்ஷி பிரதிகக்ஷிகள் ஏற்பட்டு இதன் பயனாய் சர்க்கார் முறையைத் திருத்த எவரையும் நெருங்க லாயக்கில்லாமல் ஆக்குவதில் குடிகளுக்கு என்ன லாபமென்று கேட்கின்றோம்.

பொப்பிலி ராஜா சர்க்கார் நாணையமானது, கண்டிப்பானது என்பதில் நமக்கு இதுவரை சந்தேகம் கூட ஏற்பட்டதில்லை.

ஆகையால் ஸ்தல ஸ்தாபன விஷயத்தில் இது சமயம் நமது நாட்டிலிருந்து வரும் ஊழல்களை யொழிக்க ஜர்மன் ஹிட்லரைப் போல் சிறிது ஹிட்லரிசத்தைப் பயன்படுத்தினாலல்லது முடியா தென்றே தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எது எப்படியிருந்தாலும் இந்த வருஷக் கடைசிக்குள்ளாகவாவது ஜில்லா போர்டுகளுக்கும் கமிஷனர்களை நியமித்து விடுவது அனேக ஜில்லா போர்டுகளுக்கு லக்ஷக் கணக்கில் ரூபாய்கள் லாபமென்று நினைக்கின்றோம். தாலூக்கா போர்டுகளை எடுத்து விட்டதின் பயனாய் ஏதாவது நன்மையேற்படக் கூடுமென்றிருந்து வந்த எண்ணம் கனவாகி தாலூக்கா போர்டு தவறுதல்களும் சேர்ந்து ஜில்லா போர்டுகளில் நடந்து வருவதாயிருக்கிறது. ஆதலால், இப்போது நமக்குத் தோன்றுவதென்ன வென்றால் இந்திய மக்கள் இன்னம் கொஞ்சம் காலத்துக்காவது ‘‘சுயாட்சி’’க்கு லாயக்கில்லை யென்று முடிவு செய்துவிட்டு இப்போது இரண்டு தாலூக்காக்களை ஒரு ரிவினியூ டிவிஷனாக்கி அவற்றிற்கு ஒவ்வொரு ரிவின்யு டிவிஷனல் ஆபீசர் (டிப்டி கலைக்ட்டர்கள்) போட்டிருப்பதை மாற்றி ஒரு தாலூக்காவுக்கு ஒரு டிப்டி கலைக்டர் வீதம் போட்டு அவர்கள் வசமே இந்த முனிசிபாலிட்டி, பஞ்சாயத்து, தாலூக்கா ஜில்லா போர்டு இலாக்காக்களை விட்டு விடுவது மேலென்று தோன்றுகின்றது. இதனால் சர்க்காருக்கு லாபமிருக்காதென்றாலும் ஏழை மக்களுக்கும், வரிப் பணங்களுக்கும் இப்போது இருப்பதை விடப் பலமடங்கு நன்மையும், லாபமும் உண்டென்று சொல்லுவோம். குறைந்த அளவு ஒரு ஜில்லாவில் பரீக்ஷார்த்தமாய் ஒரு மூன்று வருஷ காலத்துக்காவது செய்து பார்த்தால் போதுமென்று கூடத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 14.10.1934**



RangaRakes tamilnavarasam.com

# ''ஷண்முகத்தின் அஹம்பாவம்''

தோழர் ஷண்முகம் அவர்கள் தனது தேர்தல் சம்மந்தமாய் ஆங்காங்கு பிரசங்கம் செய்து வருவது யாவரும் அறிந்ததாகும். அவருடைய எதிரிகளாகிய காங்கிரஸ்காரர்கள் - தேசிய பத்திரிகைக்காரர்கள் - பார்ப்பனர் ஆகியவர்கள் ஷண்முகத்தை வைவதற்கும் அவர்மீது பழி சுமத்தி விஷமப் பிரசாரம் செய்வதற்கும் ஆட்டவா ஒப்பந்தத்தையும், சட்டசபைத் தலைவர் பதவியில் ''அவர் வில்லிங்டன் பிரபுக்கு அடிமையாய் இருந்தார்'' என்றும், இனியும் அடிமையாய் இருக்கப் போகிறார் என்றும், காங்கிரசுக்கு துரோகியென்றும், வியாபாரிகளுக்கு துரோகியென்றும் சொல்லி அவற்றைப் பல்லவியாய் வைத்து எதிர்ப் பிரசாரம் செய்து வந்தார்கள். இவற்றிற்கெல்லாம் தக்க பதில் சொல்லப்பட்டவுடன் இப்போது அந்தப் பல்லவிகளை உபயோகிக்க முடியாமல் போய்விட்டதால் ஷண்முகம் பிரசங்கத்தில் ''அப்படிச் சொன்னார்'' ''இப்படிச் சொன்னார்'' ''இது அகம்பாவம்'' ''இது தலைவர்க் கழகல்ல'' ''இப்படிப்பட்டவர் தலைவராகக் கூடாது''. இவர் தெரிந்தெடுக்கப்பட்டால் எப்படியும் தலைவராகி விடுவார். ஆதலால் தெரிந்தெடுக்கக் கூடாது'' என்று புதிய முறையில் இப்போது விஷமப் பிரசாரம் செய்ய ஆரம்பித்து இருக்கிறார்கள். தென்னிந்தியாவில் உள்ள காங்கிரஸ்வாதிகள் அனேகர் தேசிய பத்திரிகைக்காரர்கள், காங்கிரஸ் பத்திரிகைக்காரர்கள், ஆகியவர்கள் பெரிதும் யோக்கியப் பொறுப்பு, நடுநிலைமை என்கின்ற விஷயங்களை சுயநலத்துக்கு தியாகம் செய்த வீரர்களாக இருப்பதாலும், அதோடு மானாபிமானத்தையும் வந்த விலைக்கு விற்கத் துணிந்திருப்பதாலும், அவர்களுக்கு உண்மை, ஒழுங்கு, மனிதத் தன்மை என்பவைகள் கண்களுக்கே தென்படாமல் போய் விடுகின்றன. அப்படிக்கில்லாமல் இருந்தால் தோழர் ஷண்முகம் என்ன பேசினார்? ஏன் பேசினார்? என்பவைகளையும் முழுவதும் எடுத்துச் சொல்லி மேல் கொண்டு தங்கள் காரியங்களை நடத்தி இருக்கலாம். அவற்றை விட்டு விட்டு எங்கோ இரண்டொரு வார்த்தைகளைப் பொருக்கிக் கொண்டு அதை ஆதியாய் வைத்து வெறிகொண்டவர்களைப் போல கண்டபடி உளரிக் கொட்டி வருகின்றனர். இதன் பயனாய் காங்கிரஸ்காரர்கள் யோக்கியதையும் தேசிய பத்திரிக்கைகளின் யோக்கியதையும் உலகமறிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டதே ஒழிய சர். ஷண்முகத்தை சிறிதாவது அசைக்க முடிந்தது என்று சொல்லிவிட முடியவில்லை.



ஷண்முகம் அசம்பளிக்கு பிரசிடெண்டாக இருந்ததால் அவரை பிரசிடெண்ட் என்று மதித்தவர்கள், அல்லது அவரை பிரசிடெண்டு முறையில் குறை கூறுகிறவர்கள் யோக்கியர்களாய் இருந்தால் அவருக்குப் போட்டி போட்டிருக்கக் கூடாது, அல்லது பிரசிடெண்டாய் இருந்தபோது அவர் செய்த குற்றம் ஏதாவது இருந்தால் அதை மரியாதையுடன் எடுத்துக் காட்டி இருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் ''ஷண்முகம் பிரசிடெண்டாய் இருந்தாலும் அவருக்கு போட்டி போடக் கூடாது என்கின்ற ஒழுங்கை அடிமை தேசத்திலுள்ள அடிமை மக்கள் பின்பற்ற முடியாது'' என்றும் ''காங்கிரஸ்காரர்கள் சட்டசபையில் இல்லாத காலத்தில் அவர் பிரசிடெண்ட் ஆனதினால் அவருக்கு காங்கிரஸ் காரர்கள் பிரசிடெண்ட் யோக்கியதையை கொடுக்க முடியாது'' என்றும் சொல்லி அவரை ஒரு சாதாரண மனிதனாகவே கருதி போட்டி போட்டுக் கண்டபடி மேடைகளில் ஏறி, காலிகள் முதல், சத்தியாக்கிரகிகள் என்கின்றவர்கள் வரை பூதக்கண்ணாடி வைத்துக் கண்டுபிடிப்பதற்குக் கூட உண்மையோ, யோக்கியதையோ இல்லாமல் பேசி, எழுதி விஷமப் பிரசாரம் செய்தால் தோழர் ஷண்முகம் தனது வாய்க்குப் பூட்டுப் போட்டுக் கொள்ள வேண்டுமென்று எந்தப் பயங்காளியாவது சொல்ல முன்வருவானா என்று கேட்கின்றோம்.

எதிர் பிரசாரத்தின் யோக்கியதையைப் பற்றிச் சொல்ல ஒன்று இரண்டு விஷயங்களே போதுமென்று நினைக்கின்றோம்.

முதலாவது அவரை செக்கு ஓட்டுகிற மாதிரியாகப் படம் போட்டு அதற்குச் சிறிது கூடப் பொருத்தமில்லாத விஷயத்தைச் சொல்லி அற்பத்தனமாய், போக்கிரித்தனப் பிரசாரம் செய்தார்கள்.

இரண்டாவது அதைவிட இழிவான முறையில் ''தோழர் ஷண்முகம் தனது தொகுதியை விட்டு பயந்து கொண்டு ஓடிவிட்டார்'' என்று கேவலப் பிரசாரம் செய்தார்கள்.

மூன்றாவது ''அவர் சட்டசபைக்குப் போனால் பிரசிடெண்டாகி விடுவார். பிரசிடெண்டானால் வைசிராய் பிரபுவுக்கு அடிமையாகி விடுவார். ஆதலால் அவருக்கு ஓட்டுக் கொடுக்கக்கூடாது'' என்று விஷமப் பிரசாரம் செய்தார்கள்.

இவைகள் தவிர ''அப்படிக் கெடுதி செய்து தேசத்தைக் காட்டிக் கொடுத்தார்'' ''இப்படிக் கெடுதி செய்து தேசத் துரோகியானார்'' என்றும் பிரசாரம் செய்தார்கள்.

இவ்வளவு காரியங்கள் நடந்த பிறகு தோழர் ஷண்முகம் மேடையேறாமல் இருக்க முடியுமா என்று பார்லிமெண்டு ஒழுங்கு தெரிந்த மேதாவிகளைக் கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

ஆண்மையோடு, வீரத்தோடு போர்புரிபவர்களே, யுத்த முறையைப் பற்றிப் பேச யோக்கியதை உடையவர்களாவர்கள். சண்டித்தனமான போர் முறையில் யுத்த முறையைப் பற்றிப் பேசுவது தோல்வியை ஒப்பு கொண்டதாகுமே ஒழிய வேறில்லை.

ஷண்முகத்தை இந்தப் பார்ப்பனர்கள் வம்புக்கிழுக்கிறார்களா? அல்லது அவரே வம்புக்கு வந்தாரா? என்பதைப் பொது ஜனங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

வேட்டைக்குப் போன ஒரு வேடன் ஒரு மிருகத்தைச் சுடக் குறி பார்க்கிறபோது, அந்த மிருகம் வேடனைப் பாய வந்தால் வேடன் ''ஐயோ மிருகம் பாய வருகிறதே'' என்று அதன் மீது பழி கூறுவது எவ்வளவு நியாயமும் வீரமும் ஆகுமோ, அதுபோல் சும்மா இருக்கும் ஷண்முகத்தை வம்புக்கிழுத்து விட்டு விட்டு ''ஐயோ ஷண்முகம் இப்படிப் பேசினாரே! அப்படி ஏசினாரே!! அவர் அகம்பாவம் எவ்வளவு'' என்று பேசுவதில் ஆண்மை எங்கே, வீரம் எங்கே, நீதி எங்கே, உண்மை எங்கே என்று கேட்கின்றோம்.

''ஷண்முகம் ஒரு பதவியில் இருப்பவர், அவர் பெரிய மனிதர், ஆதலால் இப்படிப் பேசக் கூடாது'' என்று தர்ம உபதேசம் செய்கிறார்கள் சிலர். சிறிதும் வெட்கமில்லாமல் ஷண்முகம் பெரிய மனிதர், இவர்கள் அது அல்லாதவர்கள், ஆதலால் இவர்கள் என்ன பேசினாலும் அவர் ஒன்றும் பேசக் கூடாது என்பதை இவர்களே ஒப்புக்கொள்வது போல்தான் ஆகின்றது.

''நாய் கடித்தால் நாயைத் திருப்பிக் கடிக்கக் கூடாது'' என்பது சரியான நீதிவாக்கியந்தான். ஆனால் அதை அடிக்காமல் இருக்க முடியுமா என்று தான் கேட்கின்றோம்.

காங்கிரஸ் துரோகி, தேசத் துரோகி என்று சொன்ன பிறகே அவர், தான் துரோகி அல்ல என்று பதில் சொல்ல வந்தால் எலக்ஷன் போட்டியில் அவர் அஹம்பாவமாய் பேசினார் என்று சொல்லுவது அர்த்தமற்ற வார்த்தையே ஆகும்.

இப்போதும் அவர் அதே வார்த்தையைத் தான் சொல்லுகிறார். ''காங்கிரஸ்காரர்கள் என்னை எவ்வளவு தேசத் துரோகி என்று சொல்லி விஷமப் பிரசாரம் செய்தாலும், நான் வெற்றி பெறத்தான் போகின்றேன். பொது ஜனங்களுக்குச் சொந்த புத்தி உண்டு. ஆதலால் அதோடு மாத்திரமல்ல நான் இந்திய சட்டசபைத் தலைவருமாகத்தான் போகின்றேன்'' என்று சொல்லுகின்றார். அதில் என்ன தப்பு? அதற்காக அவரை என்ன செய்யமுடியும்? என்றுதான் கேட்கின்றோம்.

இந்த வார்த்தைக்கு அகம்பாவம் காரணமா? அல்லது அவரைத் தெரிந்தெடுக்கப்போகும் ஓட்டர்களின் ஞானமும், வாக்குறுதியும், நாணயமும் காரணமா என்று கேட்கின்றோம்.



தோழர் பனகால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது என்று எப்படி எல்லாப் பார்ப்பனர்களும் டிங் - டங் - டாங் என்று சுதேசமித்திரன் முதல் கொண்டு தோழர்கள் சீனிவாச ஐயங்கார், அல்லாடி ஐயர், சி.பி. ராமசாமி ஐயர் முதல் கொண்டு ஆகாயத்துக்கும், பூமிக்குமாக குதித்தார்களோ, அது போலவே இப்போதும் சர். ஷண்முகம் வெற்றிபெறக் கூடாதென்று அந்த அண்ணாத்தைகள் உள்பட ''மகாத்மாக்களை'' உபயோகித்துக் கொள்வது உள்பட காரியங்கள் நடக்கின்றன. நடந்தால் நடக்கட்டும் என்றேதான் சொல்லுகின்றாரே ஒழிய இதற்குப் பயப்படவில்லை. ஷண்முகம் தோற்றுவிட்டாலும் முழுகிப்போவது ஒன்றும் இல்லை. மேலால் நடக்கப் போவது என்ன என்றுதான் கேட்கின்றோம்.

1926-ல் ஜஸ்டிஸ் கட்சி தோற்றுப் போனதுதான் மந்திரி சபையிலும், நிர்வாக சபையிலும் பார்ப்பனப் பூண்டுக்கு இடமில்லாமல் போனதற்குக் காரணமாய் ஏற்பட்டதே ஒழிய வேறில்லை.

பார்ப்பனரல்லாதாருக்கு அவர்கள் வீதாச்சாரத்துக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூட கொடுக்கக் கூடாது என்று சொல்லி மிரட்டியதின் மூலமாய் ஏமாற்றிய காரணம் தான் இன்று பார்ப்பனர்களைத் தங்கள் வகுப்புக்குத் தகுந்தபடி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கச் செய்ததும் சில இடங்களில் அடியோடு இல்லாமல் போக நேரிட்டதுமாகும்.

அது போலவே ஷண்முகத்தின் விஷயமும் (தோல்வி ஏற்படாது) ஏற்பட்டாலும் அது ஒரு சமயம் ஷண்முகத்தின் சுயநலத்துக்கு விரோதமாகலாமாயினும் பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு இரட்டை லாபம் என்பதோடு பார்ப்பனர் நிலைமை கடுகளவு கூட முற்போக்கு அடையக் கூடியதாய் இராது என்பதையும் தைரியமாய் சொல்லுவோம். ஆகையால் இன்றைய பார்ப்பனர்களால் பிறர் கண்டுபிடிக்க முடியாமலும், தோல்வி அடையாமலும் இருக்கும்படியாக எவ்வித பித்தலாட்டமும், விஷமப் பிரசாரமும் செய்ய முடியாது என்பதும், அந்தக்காலம் மலையேறி விட்டது என்பதும் நமது அபிப்பிராயமாகும்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 14.10.1934**



RangaRakes tamilnavarasam.com

# கோவையில் தோழர்கள் Dr. வரதராஜுலு ஈ.வெ. ராமசாமி

### 6000–7000 ஜனங்கள் பிரம்மாண்டமான கூட்டம்

தோழர்களே! இன்று இந்தியாவெங்கும் பல தரங்களில் கிளர்ச்சிகளும், முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. அவற்றில் இப்போது மிகவும் விளம்பரமாய்க் காணப்படுவது இந்திய சட்ட சபைத் தேர்தல்களாகும். அது விஷயமாய் பல கட்சிக்காரர்களும் பலவித அபிப்பிராயக்காரர்களும் சட்டசபைத் தேர்தலுக்கு நிற்பதால் அவரவர்கள் அபிப்பிராயங்களைப் பொது ஜனங்களுக்குச் சொல்லி ஓட்டுகள் கேட்கவோ அல்லது எந்தப்படி சொன்னால் பொது ஜனங்கள் ஓட்டுகள் தங்களுக்குக் கிடைக்குமென்று கருதி அதன்படி பேசி ஓட்டுக் கேட்கவோ ஆன காரியங்களை அபேக்ஷகர்கள் செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில் எப்படிப்பட்ட நியாயமான, யோக்கியமான கொள்கைகள் கொண்ட அபேக்ஷகரும் ஜனங்களிடையில் வந்து தங்கள் அபிப்பிராயங்களையும், நிலைமைகளையும் சொல்லித் தீர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

அதனாலேயே தோழர் வரதராஜுலு அவர்கள் இன்று இங்கு இந்திய சட்டசபைத் தேர்தலுக்குத் தான் நிற்பதைப் பற்றியும், உங்கள் எல்லோருடைய ஆதரவும் தனக்கு வேண்டும் என்பதைப் பற்றியும் தெரிவித்துக் கொள்வார். விஷயங்களைப் பொறுமையுடன் கேட்டு நடுநிலைமையிலிருந்து யோசித்துப் பார்த்து தங்களுக்குத் தோன்று கின்றபடி செய்யுங்கள்.

*குறிப்பு: கூட்டத்தின் காரணத்தையும் அவசியத்தையும் எடுத்துக்கூறி பேசியது.*

### அக்கிராசனர் முடிவுரையாக

தோழர்களே! நான் ஒரு தேசாபிமானியல்ல. அது மாத்திரமல்லாமல் தேசாபிமானத்தைப் புரட்டு என்றும், அது தனிப்பட்டவர்களின் வயிற்றுச் சோற்று வியாபாரம் என்றும் சொல்லியும், எழுதியும் வரும் ''தேசத் துரோகி''யாவேன். ஒரு காலத்தில் தேசாபிமானத்துக்காகச் சிறை செல்லும்படியான அவ்வளவு தேசாபிமானியாயிருந்து பல முறை சிறை



சென்றும் வந்து தான் அதன் அனுபவத்தைச் சொல்லுகிறேனே ஒழிய வெளியில் இருந்து வேடிக்கை மாத்திரம் பார்த்துவிட்டு நான் இப்படிச் சொல்ல வரவில்லை.

### தோட்டிக்குப் புல் சுமக்கும் வேலை போகாது

இதனால் பாமர மக்கள் தூஷணைக்கும், பழிப்புக்கும் கூட ஆளாகியிருக்கிறேன் என்றாலும் எனது உறுதியான எண்ணத்தை நான் மாற்றிக் கொள்ள முடியவில்லை.

''**நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப் புல்லுச் சுமக்கும் வேலை போகாது**'' என்பது தான் தேசாபிமானிகளின் - மகாத்மாக்களின் சுயராஜ்ய தர்மமாகும். இந்த சுயராஜ்யம் வருவதை விட இப்போது இருக்கும் பர ராஜ்யமே மேலானது என்பது எனது கருத்து.

இன்றைய பர ராஜ்யத்தில் தோட்டி புல்லுச் சுமக்கும் வேலையைவிட்டு மந்திரி வேலை செய்தாலும் செய்யக்கூடும்.

ஆனால் அவனவன் ஜாதித் தொழிலையும், பரம்பரைப் பெருமையையும், பழக்க வழக்கங்களையும் காப்பாற்றும் காங்கிரஸ் சுயராஜ்யத்தில், தோட்டிக்குப் புல்லுச் சுமப்பதை விட வேறு தொழில் ஏற்பட முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். இந்தக் காரணத்தினால் தான் நான் தேசத்துரோகியாக இருக்கிறேன், சுயராஜ்யத்துக்கும் விரோதியாக இருக்கிறேன். ஆனால் பார்ப்பார ஜாதியையும், பறை ஜாதியையும் அழித்து எல்லோரும் சரிசமமான மனிதர்கள் என்று ஆக்கும் தேசாபிமானத்துக்கும், சுயராஜ்யத்துக்கும் நான் விரோதியுமல்ல - துரோகியுமல்ல என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

நான் இந்திய சுயராஜ்யம், இந்திய தேசாபிமானம் என்பதைப் பற்றி மாத்திரம் பேசுவதாக நினைத்து விடாதீர்கள். உலகத்தில் உள்ள எல்லா தேசங்களின் தேசாபிமானங்களையும், சுயராஜ்யங்களையும் கண்டும், தெரிந்தும் தான் பேசுகிறேனே ஒழிய, கிணற்றுத் தவளையாய் இருந்தோ, வயிற்றுச் சோற்றுச் சுயநல தேசபக்தனாயிருந்தோ நான் பேச வரவில்லை.

எந்தத் தேசத்திலும் எப்படிப்பட்ட சுயராஜ்யத்திலும், குடியரசு நாட்டிலும் ஏழை - பணக்காரன், முதலாளி - தொழிலாளி வித்தியாசம் இருந்துதான் வருகின்றது. நம் நாட்டில் இவை மாத்திரமல்லாமல் பார்ப்பான் - பறையன், மேல்ஜாதி - கீழ்ஜாதி ஆகிய அர்த்தமற்ற அயோக்கியத்தனமான வித்தியாசங்களும் அதிகப்படியாய் இருந்து வருகின்றன.

இவைகளை ஒழிக்கவோ, அழிக்கவோ இன்றைய தேசாபிமானத்திலும், சுயராஜ்யத்திலும் கடுகளாவாவது யோக்கியமான திட்டங்கள் இருக்கின்றனவா என்று உங்களைக் கேட்கின்றேன்.

உலகத்திலேயே மேம்பட்ட செல்வச் செருக்குள்ள நாடான அமெரிக்க நாட்டிலேயே 2 கோடி பேர்களின் குடும்பங்கள் வேலையில்லாமல்



RangaRakes tamilnavarasam.com

திண்டாடுகின்றன வென்றால் - உலகத்தில் சூரிய அஸ்தனமில்லாத பிரிட்டிஷ் சுயராஜ்ய இங்கிலாந்தில் 20 லட்சம் பேர்களின் குடும்பங்கள் வேலையில்லாமல் பட்டினி கிடக்கின்றன வென்றால் சுயராஜ்ய ஜனநாயக ஆட்சிக்கு வேறு என்ன உதாரணம் வேண்டும். பிரான்சு குடியரசின் யோக்கியதைக்குப் புதுச்சேரியைப் பார்த்துக் கொள்ளுங்கள். இந்திய மக்களுக்குள்ள குறைகள் அங்கும் உண்டு.

சுயராஜ்யமுள்ள சுதேச சமஸ்தானங்களை எடுத்துக் கொள்ளுங்கள். பிரிட்டிஷ் இந்தியா சின்னக் கருப்பனானால் சுதேச சமஸ்தான இந்தியா பெரிய கருப்பனாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட தேசாபிமானம், சுயராஜ்ய அபிமானம் என்கின்ற சூட்சிகளையும், தந்திரங்களையும் விட்டு விட்டு மனித ஜீவ அபிமானமென்கின்ற தலைப்பின் கீழும், கொள்கையின் கீழும் எல்லோரும் ஒன்று சேருகின்ற வரையில் நான் ''தேசத் துரோகி''யாயிருந்து தேசாபிமானப் புரட்டையும், சுயராஜ்யப் புரட்டையும் வெளியாக்காமல் இருக்க முடியாது.

**காங்கிரஸ்**

காங்கிரசைப் பற்றிப் பிரமாதமாகப் பேசப்படுகின்றது.

காங்கிரசின் பயனாய் இந்த 50 வருஷகாலமாய் பாமர மக்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டதென்று விரல் விட்டுச் சொல்ல முடியுமா என்று கேட்கின்றேன்.

முதலாவது காங்கிரஸ் எல்லா ஜனங்களுக்கும் பிரதிநிதியாய் இருக்கின்றதாவென்றும் கேட்கின்றேன்.

வடநாட்டில் முஸ்லீம்கள் காங்கிரசுக்கு விரோதமாய் முஸ்லீம் லீக் வைத்து காங்கிரசைக் கண்டித்து வருகிறார்கள். பெரும்பான்மையான 100க்கு 90 முஸ்லீம்கள் காங்கிரசில் இல்லை.

தோழர் வரதராஜுலு காங்கிரசை முஸ்லீம் சமூகம் ஒப்புக்கொள்ளவில்லை என்றதற்கு ஒரு வாலிபர், தோழர்கள் டாக்டர் அன்சாரி, கிச்சுலு, அபூல்கலாம் ஆசாத் ஆகியவர்கள் இருக்கின்றார்கள் என்று சொன்னார். இவர்கள் பேச்சைக் கேட்கும் முஸ்லீம்கள் யார்?

அப்படியானால் காந்தியார் சென்ற வட்ட மேஜை மகாநாட்டின் யோக்கிதை இந்து முஸ்லீம் விஷயத்தில் சிரிப்பாய்ச் சிரிப்பானேன்? வகுப்புத் தீர்ப்பு விஷயமாய் இன்னமும் காங்கிரசுக்கும் முஸ்லீம்களுக்கும் ஒரு முடிவு ஏற்படாமல் காங்கிரசுக்குள்ளாகவே பிளவு ஏன்?

டாக்டர் அம்பேத்காரைத் தீண்டப்படாதவர்கள் பிரதிநிதியல்லவென்ற காந்தியார் அவரோடு ராஜி செய்து கொள்ளப் பட்டினி கிடந்து அவர் கையெழுத்தைப் பெறுவானேன்?



தென் நாட்டில் உள்ள பார்ப்பனரல்லாதார் 100க்கு 95 பேர்கள் காங்கிரசை விட்டு வெளியேறித் தனி ஸ்தாபனம் ஏற்படுத்தி சர்க்காரிடம் தங்கள் உரிமையைப் பெற முயற்சிப்பானேன்? சட்டசபையிலும், மந்திரி சபையிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் பார்ப்பனரல்லாதார் கட்சியாரே நிறைந்து இருப்பானேன்?

காங்கிரஸ் கொள்கையை ஒப்புக்கொள்ளாதவன் தேசத் துரோகியென்றால் பண்டித மாளவியா, மூஞ்சே, பாய் பரமானந்தா, ஆனே ஆகியவர்கள் காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாய் பிரசாரம் செய்து தேர்தல்களில் போட்டிபோடுவானேன்?

தேசீயவாதிகள் என்று சொல்லக்கூடிய முஸ்லீம்கள் கூட சர். அப்துல் ரஹீம் போன்றவர்கள் ஏன் காங்கிரசில் இல்லை? இவர்கள் எல்லாம் காங்கிரஸ் கொள்கைகளைப் பெரிதும் ஆதரிப்பதில்லை யென்பது உங்களுக்குத் தெரியவில்லையா?

**வகுப்புணர்ச்சி**

வகுப்புத் தீர்ப்பை மூடிவைத்துப் பேசுவது முஸ்லீம்களை ஏமாற்றவா அல்லவாவென்று கேட்கின்றேன்.

காங்கிரஸ்காரர்கள் உண்மையான தேசாபிமானிகளாய் எல்லா மக்களுக்கும் பிரதிநிதிகளாய் இருப்பார்களேயானால், எல்லா வகுப்பு மக்களையும் கூட்டி வைத்துப் பேசி ஒரு முடிவு செய்வதற்கு முயற்சிக்காமல் ஒவ்வொரு வகுப்பிலும் ஏதோ இரண்டொரு சோனகிரிகளைச் சேர்த்துக் கொண்டு மற்றவர்கள் எல்லோரையும், வகுப்புவாதி, தேசத்துரோகியென்று வையவிடுவதால் தாங்கள் வெற்றி பெற்று விடலாம் என்று நினைப்பது ஏமாற்றத்தைத் தான் தருமே யொழிய வேறில்லை.

**வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்**

20 வருஷங்களுக்கு முன்பே முஸ்லீம்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுத்ததுபோல் பார்ப்பனரல்லாதார் கேட்ட பிரதிநிதித்துவம் அப்போதே கொடுத்திருக்கும் பக்ஷத்தில் இந்நாட்டில் பார்ப்பனரல்லாதார் கக்ஷி தோன்ற இடமே இருந்திருக்காது. அல்லது நான் கேட்ட காலத்திலாவது பார்ப்பனர்கள் செவி சாய்த்திருப்பார்களானால் நானும் காங்கிரசை விட்டு ஓடி வந்திருக்கமாட்டேன்.

பார்ப்பனர்கள் தங்கள் சாமர்த்தியத்தால் இவைகளை யடக்கி விட்டதாகக் கனவு கண்டார்கள். இன்று வட்டியும் முதலுமாய் தலைதூக்கி நிற்கின்றது. தந்திரத்தினால் இவைகளையும் அடக்கி விடலாமென்பதாகக் கருதாதீர்கள். மூடி வைத்த சிலந்திப் புண் அழுகிப் புழுத்து நாறுவது போல் இன்னமும் அதிகமாய் நாறப்போகின்றது என்பது உறுதி.



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார், இந்து - முஸ்லீம், தாழ்த்தப்பட்டவர்கள்- மேல் ஜாதிக்காரர்கள் ஆகிய பிரச்னைகளைத் தீர்க்காமலும், அவரவர்கள் நன்மைக்குத் தனித்தனியே பிரிந்து அரசாங்கத்தை நத்தும்படியாகவும் செய்துவிட்டு வெறும் தேசாபிமானப் பேச்சைப் பேசிக் கொண்டு தேர்தலுக்கு நின்றால் உலகை ஏமாற்றி விட முடியுமா? என்று கேட்கின்றேன்.

சட்டசபைக்குப் போய் ''ஜாதி வித்தியாசங்களை யொழித்து தீண்டாமையையொழித்து எல்லோருக்கும் கோவில், குளங்கள், சத்திரம், பள்ளிகூடம் ஆகியவைகளில் பிரவேச உரிமை வாங்கித் தருகின்றோம்'' என்று பார்ப்பனரல்லாத மக்களிடத்திலும், தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலும் சொல்லி ஓட்டுக் கேட்பதும், சட்டசபைக்குப் போனால் ''சமூக சீர்திருத்தமோ கோவில் பிரவேசமோ, ஜாதி வித்தியாச ஒழிப்போ, கோவில் குளம், நுழைவோ ஆகிய இவைகள் சம்பந்தமான காரியம் ஒன்றும் நாங்கள் இந்திய சட்டசபையில் செய்யமாட்டோம். இதற்குச் சட்டமும் கொண்டு வரமாட்டோம்'' என்று பார்ப்பனர்களிடமும், சனாதனிகளிடமும் சொல்லி ஓட்டுக் கேட்பதுமாய் இன்று தேர்தல் தந்திரப் பிரசாரம் நடைபெற்று வருகிறதென்பது உங்களுக்குத் தெரியாதா?

இந்தப்படி தோழர்கள் C.ராஜகோபலாச்சாரியார், டாக்டர் ராஜன், S. சத்தியமூர்த்தி முதலிய தலைவர்களென்போர்கள் பேசி வருகிறார்களா இல்லையா? என்று கேட்கின்றேன்.

## பட்டினியின் யோக்கியதை

கோவில் பிரவேசம் வாங்கித் தருகிறேன் என்று டாக்டர் அம்பேத்காரிடம் சொல்லி ஏமாற்றிப் பட்டினி கிடந்து தனித் தொகுதியை குழி வெட்டிப் புதைத்து விட்டு இப்போது ''பொது ஜனங்கள் ஆதரவில்லாததால் ஆலயப் பிரவேச மசோதாவை வற்புறுத்தக்கூடாது'' என்று சொல்லுவதும், இனியும் சட்டசபையில் அப்படிப்பட்ட தீர்மானங்கள் கொண்டு வருவதில்லையென்று வாக்குக் கொடுப்பதும் எவ்வளவு நாணையமும், யோக்கியமும், சத்தியமுமான நடவடிக்கை என்று பாருங்கள். இவர்கள் தான் சத்தியாக்கிரகிகளாம். சத்திய சோதனை செய்கின்றவர்களாம், சத்தியத்திற்காகப் பட்டினி கிடப்பவர்களாம்.

இந்தத் தேர்தலை எதிர்பார்த்தே வருணாச்சிரமிகளுடைய ஆதரவு இல்லாமல் போய்விடுமென்று பயந்தே, ஆலயப்பிரவேச மசோதா கொலை செய்யப்பட்டு விட்டது என்பது எனது அபிப்பிராயம். சூட்சியும், தந்திரமும் எவ்வித நன்மையையும் செய்துவிட முடியாது.

## கேள்விகளும் பதில்களும்

**காங்கிரஸ்காரர்:-** நீங்கள் ஆதரிக்கும் ஷண்முகம் செட்டியார் மாதம் 4000 ரூபாய் சம்பளம் வாங்குகிறாரா இல்லையா?

**ஈ.வெ.ரா:-** ஆம் மேளதாளத்தோடு வாங்குகிறார்.

**காங்கிரஸ்காரர் :-** அதற்காகத்தானே அவர் சட்டசபைக்குப் போகப் பார்க்கிறார்.



**ஈ.வெ.ரா:-** ஆம், அதற்கும், அதற்கு மேற்பட்ட பதவிக்கும் போகத்தான் போகிறார். இதில் என்ன தப்பு இருக்கிறது? தோழர் பட்டேல் காங்கிரஸ்காரராய், ஒத்துழையாதாராய் இருந்து இந்திய சட்டசபைக்குப் போய் முட்டுக்கட்டைப் போட்டுச் சர்க்காரை உடைத்து விடுவதாக பொது ஜனங்களிடம் சொல்லி சத்தியம் செய்து கொடுத்துவிட்டு ஓட்டு வாங்கி அங்கு போன பிறகு மாதம் 4000 ரூபாய் சம்பளத்துக்கு அடிமையாகி சர்க்காரை முட்டுக்கட்டை போடுவதற்குப் பதிலாய் ஒழுங்காக நடத்திக் கொடுப்பதாகவும், ராஜ விஸ்வாசத்துடன் ராஜபக்தி உள்ளவராய் இருப்பதாகவும் சத்தியம் செய்து கொடுத்து மாதம் 4000 ரூ. சம்பளம் வாங்கினாரா இல்லையா? ஆனால் தோழர் ஷண்முகம் அப்படிச் செய்யவில்லை. ''நான் முட்டுகட்டை போடுகிறேன்'' என்று சொல்லி ஓட்டுக் கேட்கவில்லை. ''தேசபக்தர்'' ''தேசீயவீரர்'' ''தேசாபிமான சிங்கம்'' என்கின்ற தோழர் பட்டேல் வாங்கிய சம்பளத்திற்கு மேல் ஒரு காசும் அதிகம் வாங்கவுமில்லை. இப்பொழுதாவது காங்கிரஸ்காரர்கள் தங்கள் இந்திய சட்டசபைக்குப் போனால் பிரசிடெண்டு ஸ்தானம் (கிடைப்பதானால்) ஆசைப் படுவதில்லை யென்றோ தாங்கள் பிரசிடெண்டுக்கு யாருக்கும் ஓட்டுச் செய்வதில்லை யென்றோ சொல்ல முடியுமா வென்று கேட்கின்றேன். (சிரிப்பு, கைத்தட்டலுடன் சிரிப்பு)

**ஈ.வெ.ரா:-** தோழர்களே! சிரிக்காதீர்கள், இன்னமும் இவர்கள் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லப் போகிறேன். அவை உங்களுக்கு ஒரு அறிவு விருந்தாகும். அதைக் கேட்டால் உங்களுக்கு பசி கூட ஏற்படாது.

**காங்கிரஸ்காரர்:-** ஜஸ்டிஸ்கட்சி உத்தியோக வேட்டைக் கட்சியாயிற்றே அதை நீங்கள் ஆதரிக்கலாமா?

**ஈ.வெ.ரா:-** ஆம். ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டைக் கட்சிதான். ஆனால் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் காங்கிரஸ்காரர்கள் 30, 40 வருஷகாலமாய் ஆடி வந்த உத்தியோக வேட்டையைத்தான் வேட்டையாடிப் பிடிக்கிறார்களே தவிர வேறில்லை. ஆனால் காங்கிரஸ் காரியதரிசிகள், காங்கிரஸ் பிரமுகர்கள், தேசாபிமானிகள் ஆகிய சர்.சி.பி.ராமசாமி அய்யர், கே.சீனிவாசய்யங்கார், வி.கிருஷ்ணசாமி அய்யர், சர்.பி.எஸ். சிவசாமி அய்யர், மகாகனம் சீனிவாச சாஸ்திரிகள் முதலியவர்கள் ஆடிய வேட்டைகளைத்தான் ஆடுகிறார்களே ஒழிய - அவர்கள் வாங்கின சம்பளத்தைத் தான் வாங்குகிறார்களே ஒழிய புதிய வேட்டை யொன்றுமில்லை. அதிக சம்பளம் ஒன்றுமில்லை.

மற்றும் காங்கிரஸ் தேசாபிமானிகள் தங்கள் ஜாதிக்கு மாத்திரமே உத்தியோக வேட்டையாடினார்கள். ஜஸ்டிஸ் தேசாபிமானிகள் தங்களுக்கும் பார்ப்பனர்களுள்பட எல்லா மக்களுக்குமாக வேட்டையாடு கிறார்கள். வேட்டையை இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர், தாழ்த்தப்பட்டவர் எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். பழைய காங்கிரஸ்



RangaRakes tamilnavarasam.com

வேட்டைக்காரர்கள் இப்போது தங்களுக்கு வேட்டை கிடைக்கவில்லை யென்கின்ற காரணத்தால் வேட்டையைப் பரிகாசம் பண்ணுகிறார்கள். இப்போதும் பல காங்கிரஸ்காரர்களை எனக்குத் தெரியும். அவர்கள் தங்கள் அண்ணன் தம்பிகளையும், சிற்றப்பன் பெரியப்பனையும், மாமன் மச்சானையும் உத்தியோக வேட்டையாட விட்டு விட்டு தாங்களும் முயற்சி செய்து பார்த்த வேட்டைக்கு லாயக் கில்லாதவர்களே பெரிதும் ஜெயிலுக்குப் போய்விட்டு வந்து இங்கு தேசாபிமானிகளாயிருப்பது எனக்குத் தெரியும்.

**காங்கிரஸ்காரர்:-** ஜஸ்டிஸ் கக்ஷி என்ன சாதித்தது?

**ஈ.வே.ரா:-** ஜஸ்டிஸ் கட்சியானது தோழர் சி.பி. சுப்பையாவை மாகாண காங்கிரஸ் காரியதரிசி யாக்கிற்று. இதைவிட வேறு என்ன வேண்டும். தோழர் வரதராஜுலுவைத் தென்னாட்டுத் திலகராக்கிற்று. என்னை மாகாண காங்கிரஸ் காரியதரிசியாகவும், பிரசிடெண்டாகவும் ஆக்கிற்று. இவை தவிர இதுவரை காங்கிரஸ் சாதித்ததை யெல்லாம் ஜஸ்டிஸ் கக்ஷியும் சாதித்து வருகின்றது.

காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கே உத்தியோகம், படிப்பு முதலியவை இருக்கும்படி காங்கிரஸ் பார்த்து வந்தது. ஜஸ்டிஸ் கக்ஷி பார்ப்பனருக்கும், பார்ப்பனரல்லாதாருக்கும் இருக்கும்படி பார்த்து வருகிறது.

எல்லா உத்தியோகங்களுக்கும் எல்லாப் பதவிகளுக்கும் பார்ப்பனரல்லாதாரும் லாயக்கும், உரிமையும் உடையவர்களே என்று செய்து காட்டி மெய்ப்பித்து வருகின்றது.

உத்தியோக வேட்டையில் எல்லோருடைய சீட்டையும் ஒன்றாய் போட்டு குலுக்குகின்றது. இன்னம் என்ன வேண்டும்?

**காங்கிரஸ்காரர் கேள்வி:-** உத்தியோகம்தான் பெரிதா?

**ஈ.வெ.ரா.:-** ஆம், இது வரை தேசாபிமானிகள், காங்கிரஸ்காரர்கள், தேசீய வீரர்கள் என்பவர்கள் பெரிதும் உத்தியோகத்தை லக்ஷியமாகக் கொண்டுதான் உழைத்து வந்திருக்கிறார்கள். இப்போது பார்ப்பனரல்லாதார் அந்தக் கொள்கையைத் தேசாபிமானமாகக் கொண்டவுடன் பார்ப்பனர்கள் அதை தேசத் துரோகமென்று சொல்ல வந்து விட்டார்கள். பார்ப்பனர் அனுபவித்த காலம் எவ்வளவோ, அவ்வளவு காலமும் அந்த விகிதாச்சார எண்ணிக்கைக்குத் தக்கபடியும், அவ்வளவு பணமும் பார்ப்பனரல்லாதாரும் அனுபவிக்கும் காலம் வந்து விட்டால் பிறகு ஜஸ்டிஸ் கக்ஷியே நம் நாட்டிற்கு வேண்டா மென்று நானே சொல்லுவேன்.

தவிரவும், உத்தியோகங்களை வேண்டாமென்று சொல்லக் கூடாது. அதன் சம்பளங்களைக் குறைக்கும்படி சொல்ல வேண்டும்.



உத்தியோகத்தின் மூலம்தான் அரசாங்கம் நடைபெற வேண்டும். அதைப்பெற ஒவ்வொரு பிரஜைக்கும் எந்தக் கட்சியானாலும் - ஜாதியானாலும் உரிமையுண்டு.

எலக்ஷன்களிலும், உத்தியோகங்களிலும் ஒரு யோக்கியமான முறை இல்லாத காரணத்தால்தான் எலக்ஷன்கள் வரும்போதும், உத்தியோகங்கள் வரும்போதும், நாட்டில் கலவரம், கக்ஷி பிரதி கக்ஷிச் சண்டைகள் நடந்து கொண்டு வருகின்றன.

எப்படியானாலும் வகுப்புச் சமரசமில்லாமல் நடைபெறும் தேசாபிமான வேலைகள் காந்தியார் நடத்துவதானாலும், யார் நடத்துவதானாலும், நாணையமாயும், நியாயமாயும், உண்மையாயும் நடத்த முடியாது. அது ஏற்படுகின்ற வரையில் நான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்பட்ட மக்களுக்கும் உத்தியோகத்தில் குறைந்திருக்கும் மக்களுக்கும் அனுகூலமாய்த்தான் இருப்பேன். அதற்காக ஆயிரம் தேசத் துரோகி கூட ஆவேன். வகுப்பு நியாயம் தான் எனக்கு எல்லாவற்றையும் விடப் பெரியது.

ஒருவன் பாடுபட்டும் பட்டினியாய்க் கிடப்பதும், ஒருவன் பாடுபடாமல் வயிறு புடைக்கத் தின்று புரளுவதும், ஒருவன் பல வேலையைக் கைப்பற்றித் தனது தேவைக்கு மேல் பயனடைந்து பாழாக்க, ஒருவன் செய்வதற்குக் கூட வேலையில்லாமல் திண்டாடி தெருவில் தியங்க இவைகளுக்கு வகுப்பு ஆதிக்கமும், வகுப்பு வித்தியாசமும் காரணமாய் இருப்பதென்றால் இவற்றை எப்படிச் சகித்துக் கொண்டு வகுப்பைப் பற்றியே கவலையில்லாத தேசாபி மானத்தை ஒரு மனிதன் ஆதரிக்க முடியுமென்று கேட்கின்றேன்.

ஜஸ்டிஸ் கட்சியை நான் ஆதரிப்பதைக் கண்டு நீங்கள் வயிற்றெரிச்சல் படுவதில் பயனொன்றுமில்லை. அது தைரியமாய் வகுப்பு நியாயத்தையும், வகுப்பு வித்தியாசங்களையும் உயர்வு தாழ்வுகளையும் ஒழிக்கச் சட்டம் செய்வதையும், வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தை அமுல் நடத்துவதையும் கொள்கையாய்க் கொண்டு வேலை செய்து வருகின்றது.

அதன் பயனாய் இன்று இந்த நாட்டில் எல்லா ஜாதியாரும் உத்தியோகம் அனுபவிக்கிறார்கள்.

கடைசியாக உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். அக்கட்சி மீது பொறாமைப்பட்டு பிரயோஜனமொன்றுமில்லை. இன்றைய நிலையில் அதை உங்களால் அசைக்க முடியாது. அதற்குக் கெடுதி செய்ய எண்ண எண்ண அது தேசமெல்லாம் வேரூன்றப் போகின்றது. அதன் பலக் குறைவு குற்றம் எங்கிருக்கிற தென்பது எனக்குத் தெரியும். அதைச் சரிப்படுத்த நானும் முயற்சிக்கிறேனே யொழிய, சும்மா இருக்கவில்லை. ஆனால் அது காங்கிரசிலில்லையென்று கருதி விடாதீர்கள்.



RangaRakes tamilnavarasam.com

## எனது ஒரு கேள்வி

உங்களை ஒன்று கேட்கின்றேன். இந்த மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சி யிருந்து அது இந்த 20 வருஷகாலமாகச் செய்து வந்த அரசியல் - சமுதாய வேலையை விட ஜஸ்டிஸ் கட்சி யில்லாத வேறு மாகாணங்கள் அதிகமாகச் செய்த ஒரு காரியத்தைச் சொல்லுங்கள் பார்ப்போம். மற்ற மாகாணங்களிலில்லாத கெடுதி இங்கு ஏதாவது இருக்கின்றதா சொல்லுங்கள் பார்ப்போம். மற்ற மாகாண மந்திரிகள், இந்திய கவர்னர்கள் எல்லோரும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களா?

அங்கெல்லாம் ஜஸ்டிஸ் கட்சி யில்லாததால் கவர்ன்மெண்டு ஒழிந்து போய்விட்டதா? உத்தியோகங்கள், சட்டசபைகள், நிர்வாக சபைகள், காலியாகக் கிடக்கின்றனவா? தயவு செய்து யோசித்து பதில் கூறுங்கள்.

வீணாக இப்படி இந்தச் சூட்சிகளும், விஷமங்களும், துவேசமும், வலுக்க வலுக்க பார்ப்பனப் பூண்டுகள் உத்தியோகங்களில் குறைந்து போவதோடு மாத்திரமல்லாமல் மறைந்து போகவும் நேரிடும் என்று எச்சரிக்கை செய்கிறேன்.

## கம்பளி போட்டு உட்காருவோம்

காங்கிரசின் யோக்கியதையும்; ஜஸ்டிஸ் கட்சியின் யோக்கியதையும் நாணையமாய் வெளியாக வேண்டுமானால் கம்பளி போட்டு எல்லோரும் உட்கார்ந்து ஒரு பொது நியாயாதிபதியை வைத்து இருவரும் பேசுவோம். ஜஸ்டிஸ் கட்சியின் அக்கிரமங்களையும், நாணையத் தவறுதல்களை நீங்கள் சொல்லுங்கள். காங்கிரஸ் - பார்ப்பனர் அக்கிரமங்களை, மோசங்களை, நாணையத் தவறுதல்களை நானும் சொல்லுகிறேன். யார் சொல்லுவது சரி யென்று முடிவு செய்யட்டும். இந்த நாட்டுப் பார்ப்பனர்களுடையவும், பார்ப்பனீயத்தினுடையவும், காங்கிரசினுடையவும், அரசியலினுடையவும், தேசாபிமானத்தினுடையவும், 30, 40 வருஷத்திய வண்டவாளமும், **கொடி வழிப்பட்டியும்** என்னிடமிருக்கிறதேயொழிய நான் வெறும் ஆள் மாத்திரம் தானென்று கருதி கூப்பாடு போட்டு மிரட்டியோட்டி விடலாமென்று நினைத்து ஏமாந்து போகாதீர்கள்.

நான் மொட்டை மரம் என்னை மிரட்டுவதற்கு உங்களிடம் சரக்குக் கிடையாது. உத்தியோகமோ, பணமோ, வயிற்றுச் சோற்றுக்கு வழியோ, ஒரு பெருமையோ, கவுரவமோ எதிர்பார்த்துப் பொதுச் சேவையில் இறங்கவில்லை. 6,7 தடவை ஜயில் பார்த்தாய் விட்டது. சிவில், கிரிமினல் இரண்டும் பார்த்தாய்விட்டது. பார்ப்பனர்கள் தொல்லைகளையும் அவர்களால் கூடிய மட்டிலும் செய்து பார்த்தாய் விட்டதை அனுபவித்துமாய்விட்டது. காடு வா வா என்கிறது. வீடு போ போ என்கின்றது. நான் செத்தால் எனக்காக அழுபவர்கள் கூட யாருமில்லை. என்னால் காப்பாற்றப் பட வேண்டியவர்களும் யாருமில்லை. நான் ஒற்றையாள், ‘‘நின்ற நாளைக்கு நெடும் சுவர், விழுந்தால் குட்டிச் சுவர்’’ முழுகிப் போவது ஒன்றுமில்லை.

**எலக்ஷன் முடிந்த எட்டாம் நாள் நான் அரசாங்க விருந்தாளியாய் போகப் போகிறேன்.**

**காங்கிரஸ்காரர் கேள்வி:-** அப்படியானால் நீங்கள் ஏன் காங்கிரசில் சேரக்கூடாது?

**ஈ.வெ.ரா:** சேருவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டுதானிருக்கிறேன். இந்தப் பம்பாய் காங்கிரசில் தோழர் காந்தி அவர்கள் விலகி போய்விடுவதாகச் சொல்லுகிறாராம்.

அந்தப்படி அவர் விலகி விடுவாரானாலும் - எனது திட்டங்களை ஜஸ்டிஸ் கக்ஷி ஒப்புக்கொள்ளவில்லையானாலும் நான் காங்கிரசில் சேர்ந்து எனது திட்டத்தை நடத்த முயற்சிக்க உத்தேசித்திருக்கிறேன்.

## இனியும் கேட்கலாம்

இன்று 8 மணிக்குக் கூட்டத்தை முடித்துக்கொண்டு வருவதாக ஒரு பெரிய விருந்துக்கு ஒப்புக் கொண்டிருக்கிறேன. மணி 8 ½ ஆகிவிட்டது. இனியும் கேள்வியிருந்தால் கேட்கலாம். இன்னும் 15 நிமிஷம் இங்கு இருக்க ஆக்ஷேபணையில்லையென்று சொல்லிச் சிறிது நேரம் சும்மா நின்று கொண்டிருந்தார். யாரும் எவ்வித கேள்வியும் இல்லாததால் கூட்டத்தை முடித்து விடுகிறேன் என்று சொன்னார்.

மறுநாள் காங்கிரசில் ஒரு கூட்டம் கூட்டப்படுமென்று ஒருவர் சொன்னார். அதற்குத் தோழர் ஈ.வெ.ரா. யாவரும் அங்கு போகலாமென்றும் அங்கு ஒரு கலாட்டாவும், குழப்பமும், கேள்வி கேட்பதும் என்பது கூட சு.ம.காரர்கள் செய்யாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கூட்டத்தை முடித்ததாகச் சொல்லிவிட்டு விருந்துக்குப் புறப்பட்டார். காந்திக்கு ஜே என்று ஒருவர் கூப்பாடு போட்டார். ஈ.வெ.ராமசாமிக்கு ஜே என்று ஒரு கூட்டம் கூப்பாடு போட்டது. தோழர் ஈ.வெ.ரா. அவர்கள் ‘‘காந்திக்கு மாத்திரம் ஜே போட்டால் போதும். அவர் நிலை இன்று பயணம் சொல்லிக் கொள்வதில் இருப்பதால் அவருக்குத்தான் மரியாதை செய்ய வேண்டும். நான் இன்னம் கொஞ்ச நாளைக்கு இருக்கிறவன் ஆதலால் எனக்கு வேண்டியதில்லை’’ என்று சொல்லி வண்டியேறினார்.

*குறிப்பு: கோவை டவுன்ஹால் மைதானத்தில் 12.10.1934இல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தலைமையேற்று ‘சட்டசபைத் தேர்தல்’ என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு.*

பகுத்தறிவு - சொற்பொழிவு - 21.10.1934





RangaRakes tamilnavarasam.com

# தேர்தல் ஜனப்பிரதிநிதித்துவத்திற்கா? பித்தலாட்ட வியாபாரத்திற்கா?

நாட்டில் எங்கு பார்த்தாலும் இப்போது இந்திய சட்டசபை ஸ்தானங்களுக்குத் தேர்தல் பிரசாரம் தொடங்கி விட்டது. சட்டசபைகள் மாய்கையென்றும், அங்கு சென்று மக்களுக்கு எவ்வித நன்மையும் செய்ய முடியாதென்றும் சட்டசபைகள் அரசாங்கம் தங்களுடைய பாதுகாப்புக்காக ஏற்படுத்திக் கொண்டிருக்கிற அரண்களென்றும், சட்டசபையில் சர்க்காருடைய வலுவு பிரதிநிதிகள் வலுவைவிட எவ்வளவோ மடங்கு மேல்பட்டதென்றும் அரசாங்கத்தின் வலுவைச் சட்டசபை மூலம் சிறிதாவது அசைக்கக் கூட முடியாதென்றும் தோழர்கள் காந்தியார், தாஸ், நேரு, ராஜகோபாலாச்சாரியார் ஆகியவர்கள் மாத்திர மில்லாமல் இன்று சட்டசபைக்குக் காங்கிரஸ் மாறலாய் நிற்கும் அபேட்சர்களுள்பட எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த அபிப்பிராயமானது சட்டசபைக்கு வெளியிலிருந்து கொண்டு சொன்னதென்று எண்ணிவிட முடியாதபடி காங்கிரஸ் தலைவர்கள், தியாகிகள், மேதாவிகள் பலர் சட்டசபைக்குள் தக்க பலத்துடன் சென்று, ஒரு கை பார்த்துவிட்டு வெளியில் வரும்போதும், வந்த பின்பும் சொன்னது என்பதை நாம் வாசகர்களுக்கு நினைப்பூட்ட வேண்டியதில்லை.

அன்றியும் சட்டசபைகளும், அதற்குள் சென்று நாம் செய்யக்கூடிய காரியங்களும் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டு அனுமதிக்கப்பட்ட தென்பதும், அங்கு செல்பவர்கள் அதற்குள்ள அதிகார வரம்புக்கும், சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடந்து தீர வேண்டுமென்பதும், அப்படிக் கட்டுப்பட்டு அடங்கி நடப்பதின் மூலம் கூட அதனால் அடையக் கூடிய அளவு அதாவது அதிகாரம் இருக்கும் அளவு முழுவதையும் கூட அடைய முடியாதென்பதும், அவற்றிற்கு மேற்பட்டு ஒரு காரியம் கூடச் செய்யச் சட்டப்படி இடமில்லாமல் தடுக்கப் பட்டிருக்கிறதென்பதும் பகுத்தறிவுள்ள வாசகர்களுக்கு நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

இவையெல்லாம் பளிங்கு போல் ஏற்கனவே தெரிந்துதான் அதன் பலாபலன்களைப் பற்றி அனுபோகஸ்தர்கள் அப்போதே சொல்லி அதையணுகாமலிருந்தார்களென்று சொல்லலாம்.



இந்த நிலையில் அதாவது காங்கிரஸ்காரர்கள் பஹிஷ்கரித்த பிறகு, அதை விட்டு வந்த பிறகு, வெளியேறின பிறகு அந்தச் சட்டசபைகள் இப்போது ஏதாவது மாறுதலடைந்து விட்டதா? அல்லது ஏதாவது அங்கு போய்ச் சாதிப்பதற்குத் தகுந்த மாதிரி திருத்தியமைக்கப்பட்டுவிட்டதா என்பவைகளைக் கவனித்தாலும் அந்தப்படி ஒன்றும் நடந்து விடவில்லையென்பதும் நன்றாய் விளங்கும்.

அப்படியிருக்க இப்பொழுது திடீரென்று சட்டசபைகளுக்கு அந்தப்படியெல்லாம் பேசிய காங்கிரஸ்காரர்கள் செல்ல வேண்டுமென்று சொல்வதற்கும் அபேக்ஷகர்களாய் நிற்பதற்கும் என்ன காரணமென்பதைப் பொது ஜனங்களுக்கு விளக்கிக் காட்டக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

ஆகவே நாளது வரையும் காங்கிரஸ்காரர்கள் இந்தப் பிரச்சினைக்கு எந்தக் காரணங்களையும் சொன்னதாகத் தெரியவில்லை. ஆனால் தோழர் காந்தியவர்கள் இம்மாதம் 15ந் தேதி தான் காங்கிரசை விட்டு விலகி விடத் தீர்மானித்திருப்பது சம்மந்தமாய் வெளியிட்டுள்ள அறிக்கையில் சட்ட சபைக்குக் காங்கிரஸ்காரர்கள் போக வேண்டிய அவசியத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள வாக்கியத்தில் ''சட்டசபைப் பிரவேச விஷயமாக நான் இதற்கு முன் என்ன சொல்லியிருந்த போதிலும் சரி, காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்குப் போக வேண்டியது அவசியமென்று இப்போது கருதுகிறேன்'' என்று எழுதியிருக்கிறார்.

இதனால் நாம் தெரிந்து கொள்ளக் கூடியதென்னவென்று பார்ப்போமானால் ''அப்பொழுது எனக்கு இஷ்டமில்லை. இப்போது எனக்கு இஷ்டம்'' என்று சொல்லுகிறாரென்பதைத் தவிர வேறொன்றும் காணப்படவில்லை. ஆகவே தோழர் காந்தி அவர்கள் ஊரார் செலவில் ஊரார் கஷ்டத்தில் அரசியல் ABCD படித்து அனுபவம் பெற்று வருகிறாரென்றுதான் இதிலிருந்து கருத வேண்டியிருக்கிறது. இந்தப்படி காங்கிரஸ்காரர்கள் சட்ட சபைக்குப் போக வேண்டுமென்பதிலும் அங்கு போய்ச் செய்யக் கூடிய வேலைத்திட்டங்களை நிர்ணயிக்காமலும், சமூக சீர்திருத்தமான விஷயங்களில் பிரவேசிப்பதுமில்லை அவைகளுக்கு இடம் கொடுப்பதுமில்லை என்று முடிவு செய்து கொண்டும் போகும்படி செய்வதும் அந்தப்படி காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்குப் போன பின்பும் அவர்கள் சட்டசபையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும். எப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்பதைக் கூடத் தான் இருந்து நடத்தாமலும், கவனிக்காமலும், இப்போதே காங்கிரஸிலிருந்து காந்தியார் விலகிக் கொள்ளப் போவதுமாய்ச் சொல்லுவதுமாகிய காரியங்களில் ஏதாவது புத்திசாலித்தனமோ, பொறுப்போ இருக்கின்றதா என்பதையும், இப்படிப்பட்ட கூட்டத்தாரைச் சட்டசபைக்குப் போக விடுவது பொறுப்பான காரியமோ புத்திசாலித்தனமோ ஆகுமா வென்பதையும் யோசித்துப் பார்க்கும்படி பொறுப்புள்ள ஓட்டர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

இந்த லக்ஷணத்தில் மற்றொரு விஷயம் மிகவும் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியதாகுமென்பது நமது அபிப்பிராயம். அதாவது:-

''சட்டசபைத் தேர்தல்களில் அபேக்ஷகர்களாய் நிற்கும் ஆசாமிகளைப் பற்றி யாரும் கவனிக்காதீர்கள். அவர்கள் நிற்கும் கக்ஷிகளைப் பற்றிக் கவனியுங்கள்'' என்கின்ற பல்லவியின் மீது எலக்ஷன் பிரசாரம் நடத்துவதும், கக்ஷி சம்மந்தமான விஷயங்களில் விவகாரம் வரும் பொழுது ''கக்ஷிகளைக் கவனிக்காதீர்கள் மகாத்மா காந்தியைக் கவனியுங்கள். கக்ஷியைப் பற்றியோ, நபரைப் பற்றியோ கவனிக்காதீர்கள்'' என்பதும், காந்தியார் இன்ன இன்னபடி நடந்து கொண்டு இன்ன இன்னபடி சொன்னவராயிற்றே. ஆதலால் அவரைக் கவனித்து ஓட்டுக் கொடுக்க முடியுமா? என்ற பிரச்சினை வரும்போது சட்டசபைக்கு நாங்கள் போனால் இன்ன இன்ன விஷயங்கள் செய்ய மாட்டோமென்று தனிப்பட்ட முறையில் காந்தியார் கொள்கை என்பவைகளுக்கு விரோதமாக வாக்குக் கொடுப்பதுமாகிய காரியங்கள் இன்று காங்கிரஸ் எலக்ஷன் பிரசாரமாய்ச் செய்யப்பட்டு வருகின்றன. இவை தக்க பொறுப்புள்ள ஆட்களாலேயே நடைபெற்று வருகின்றன.

ஆகவே இந்த நிலையில் காங்கிரஸுக்கு எந்த ஆதாரத்தின் மீது எந்தக் கொள்கைகளை வைத்து எந்த வேலைத் திட்டத்தை எதிர்பார்த்து யாரிடம் நம்பிக்கை கொண்டு ஓட்டர்கள் ஓட்டுச் செய்வது என்பது நமக்கு விளங்கவில்லை.

இவை ஒருபுறமிருக்க மற்றும் ஒரு சில பிரசாரக்காரர் ''காங்கிரஸ்காரர் களாகிய நாங்கள் சட்டசபைக்குப் போய் வெள்ளையறிக்கையை நிராகரித்து விடுவோம். அடக்குமுறைச் சட்டங்களை ரத்து செய்துவிடுவோம்'' என்று சொல்லுவதாகத் தெரிகிறது. இதையாவது உண்மையா? சரியா? என்று யோசிப்போமேயானால் இதுவும் அர்த்தமற்ற பேச்சு என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

வெள்ளையறிக்கைக்கு இன்னமும் முழு ரூபமும் ஏற்பட்டு விடவில்லை. அது அமுலுக்கு வர அதற்கு இன்னமும் எத்தனையோ சடங்குகள் நடைபெற வேண்டியிருக்கின்றன. அப்படியிருந்தாலும் அதை நிராகரிக்கத் தகுந்த மெஜாரிட்டியைச் சட்டசபையில் பெற்று விட முடியுமா? முஸ்லீம்களின் 30 ஸ்தானங்களில் பத்திலொரு பாகமாவது காங்கிரஸ்காரர்களுக்கு அனுகூலமாக விருக்கும்படி காங்கிரஸ் நடந்துகொண்டிருக்கின்றதா? வகுப்புத் தீர்ப்பைப் பற்றிச் சுவர்மேல் பூனையாய் இந்துக்களுக்குத் தலையையும், முஸ்லீம்களுக்கு வாலையும் காட்டி வரும்வரையிலும் பண்டித மாளவியா போன்றவர்கள் அதைக் கூட எதிர்க்கக் கக்ஷி சேர்த்துக் கொண்டிருக்கும் வரையிலும் முஸ்லீம்கள் எல்லோரும் காங்கிரஸுக்கு சரணாகதி அடையக் கூடியவர்களென்று, நாம் அவர்களை அவ்வளவு பைத்தியக்காரர்களாக எண்ணி விட முடியுமா? ஒவ்வொரு முஸ்லீமும், ''நான் முதலில் முஸ்லீம் அப்புறம்தான் இந்தியன்'' என்று செய்த கர்ச்சனைகளை மறந்துவிட்டு அவர்கள் சமூகத்துக்கு துரோகமாகக் காங்கிஸுக்கு வந்து அடிமையாவார்களென்று நினைப்பது முட்டாள்தனமாகாதா? என்றும் கேட்கிறோம்.

இந்திய சட்டசபையில் நாமினேஷன்காரர்கள் 40 பேர், முஸ்லீம்கள் 30 பேர், வெள்ளைக்காரர்கள் 8 பேர், வியாபாரிகள் 4 பேர், மிராஸ்தாரர்கள் 7 பேர், வகுப்புத் தீர்ப்பை யொழிக்காதவரையில் பிரிட்டிஷ் அரசாங்கமே மேலென்று சொல்லுகின்ற சீக்கியர்கள் 2 பேர், ஆக 91 ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள் போய்விட்டால் மீதி 53 ஸ்தானங்களும் காங்கிரஸுக்கே கிடைக்குமா? இந்த 53ல் குறைவுபடும் ஸ்தானங்களாவது மேல்கண்ட ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களில் கிடைக்குமா என்பனவாகியவைகளைக் கவனித்தால், இந்திய சட்டசபையில் மெஜாரிட்டி கிடைக்குமென்று எண்ண இடமிருக்கிறதா என்று ஓட்டர்கள் கவனிக்க மாட்டார்களா என்று கேட்கின்றோம்.

இரண்டாவதாக, அடக்குமுறைச் சட்டங்களை யொழித்து விடுகின்றோமென்று சொல்வதும் அர்த்தமற்ற வார்த்தையென்று எப்படிச் சொல்லுகின்றோமென்றால், இன்று அடக்குமுறைச் சட்டங்களுக்கு நாட்டு மக்களிடத்தில் அதாவது காங்கிரஸ்காரர்களிடத்தில் வேலையேயில்லை. சிறப்பாக காங்கிரஸ்காரர்கள் பெரிதும் சத்தியாக்கிரகம் பயனளிக்க வில்லை. சட்ட மறுப்புத் தோற்றுவிட்டது என்கின்ற முடிவுக்கு வந்த பின்னும் காங்கிரஸும் காந்தியாரும் தேசம் இது சமயம் இந்த இரண்டுக்கும் தயாராயில்லை, ஆதலால் அவை ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டதென்று சொல்லிவிட்டதற்குப் பிறகும், இனி எதற்காகச் சர்க்கார் அடக்கு முறைகளை தேச மக்கள் மீது பிரயோகிக்கப் போகிறார்களென்று இந்தக் காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்களென்பது நமக்கு விளங்கவில்லை. சத்தியாக்கிரகமும், சட்டமறுப்பும் செத்தவுடன் (தற்காலீகமாகச் செத்திருந்தாலும் சரி) அடக்கு முறையும் செத்துவிட்டது என்பதில் சந்தேகம் ஏன்? அன்றியும் சர்க்கார், அதுவும் காங்கிரஸ்காரர் சட்டமறுப்பைச் சத்தியாக்கிரகத்தை விட்டு விட்டுச் சர்க்காருக்கு நல்ல பிள்ளையாக நடக்க ஆசைப்பட்டு முன்பு உதரித் தள்ளிவிட்ட சட்டசபைக்கு மீண்டும் போய் ராஜபக்தி - ராஜவிசுவாசம் - சட்டத்துக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காய் நடந்து கொள்ளுகின்ற ஒழுக்க விசுவாசம் ஆகிய சத்தியங்கள் செய்து கொடுத்துவிட்டு சர்க்கார் கட்டிடத்தைச் சுற்றிச் சுற்றி வணங்கி வரும் மக்கள் மீது அடக்குமுறைச் சட்டம் எதற்காகப் பிரயோகிக்கப் போகிறார்களென்பது நமக்கு விளங்கவில்லை.

ஆகையால் அடக்குமுறைச் சட்டங்களை ஒழிக்கப் போகின்றோ மென்பது செத்த பாம்பை அடிக்கப் போகின்றோ மென்று சொல்வது போலாகுமேயொழிய வேறில்லை.


RangaRakes tamilnavarasam.com

ஒரு சமயம் காங்கிரஸ்காரர்களல்லாத மற்றவர்கள் மீது அடக்கு முறைகளை உபயோகிக்கிறார்களே, அதைக் காங்கிரஸ்காரர்கள் நிறுத்தக் கூடுமென்று சிலர் நினைக்கக் கூடாதாவென்று கேட்கக் கூடும்.

அதுவும் அர்த்தமற்ற வார்த்தையேயாகும். ஏனெனில் காங்கிரஸ்காரர்கள் தவிர மற்றவர்களின் மீது பிரயோகிக்கப்படும் அடக்கு முறைகளுக்கும், கொடிய சட்டப் பிரயோகங்களுக்கும், சட்டங்களின் துஷ்பிரயோகங்களுக்கும் காங்கிரஸ்காரர்கள் அனுகூலிகளாகவே இதுவரை இருந்து வருகிறார்கள். உதாரணமாகத் தோழர் காந்தியார் அவர்கள் தான் சொல்லும் காரியங்கள் தவிர வேறு எந்தக் காரியத்தை யார் செய்தாலும், வேறு எந்தக் காரியத்துக்கு சத்தியாக்கிரகம் செய்தாலும், சட்டமறுப்பு செய்தாலும் அவற்றையெல்லாம் பெரும் பாலும், ஒரே அடியாக பலாத்காரம் என்று சொல்லி வந்திருக்கிறார். இந்த மாதிரி செய்கைகளின் மீது அடக்குமுறைகளை உபயோகிப்பதில் காந்தியாரின் ஆதரவையும், ஆமோதிப்பையும் வைத்துக் கொண்டே சர்க்காரார் உபயோகித்து வருகிறார்களென்பது தொக்கி இருக்க வில்லையா?

சமதர்ம இயக்கங்கள் சட்ட விரோதமான இயக்கங்களாகப் பாவிக்கப்படுமென்று ஒரு அடக்குமுறை உத்திரவைச் சமீபத்தில்தான் சர்க்கார் பிறப்பித்தார்கள். இதற்கு எந்த மகாத்மாவாவது, காங்கிரஸ் வாதியாவது தேசீய பத்திரிகையாவது மூச்சு கூடக் காட்டவில்லை.

சுயமரியாதை இயக்க ஸ்தாபனங்கள் சட்ட விரோதமான இயக்கமென்று சர்க்கார் தீர்மானிக்கப் போகிறார்களென்பது வெளிப்படையான ரகசியம். அதன் பிரமுகர்களை ஒடுக்கி வைக்க முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றனவென்பதும் யாவரும் அறிந்த விஷயம், இவைகளைப் பற்றியெல்லாம் காங்கிரஸுக்கு எவ்வளவு ஆசை. (அதாவது சீக்கிரம், சீக்கிரம் நடக்க வேண்டு மென்கின்ற ஆசை) இருக்கின்றதென்பதும் யாவரும் அறிந்ததேயாகும்.

காங்கிரஸுக்குள்ளிருக்கும் சமதர்மக் கொள்கையே பலாத்காரம் கொண்டதென்று சொல்லிவிட்ட பிறகு இனி அடக்குமுறையைக் காங்கிரஸ் எந்த முகத்தைக் கொண்டு ஆக்ஷேபிக்க முடியுமென்பது நமக்கு விளங்கவில்லை.

இவை ஒருபுறமிருக்க, இப்படிப்பட்ட யோக்கியதையில் சட்ட சபைக்குப் போகப் பிரயத்தனப்படும் காங்கிரஸ்காரர்கள் எதிர் அபேக்ஷகர்கள் மீது கற்பனையானதும், பொய்யானதும் திருத்தலானதுமான பழிகளைச் சுமத்திப் பிரசாரம் செய்வது தங்களை சத்தியாக்கிரகிகளென்றும், சத்தியசீலர்களென்றும் சொல்லிக் கொள்ளும் யோக்கியர்களுக்குத் தகுதியானதா என்பதையும் இந்தத் தந்திரத்தின் பலனாகவே ஒரு சமயம் இவர்கள் ஜெயித்துவிட்டாலும் இவர்கள் சரியான ஜனப்பிரதிநிதிகள் ஆகிவிடுவார்களாவென்றும் கேட்கின்றோம்.



வில்லிங்டன் துரை மகனார் ''காங்கிரசில் யோக்கியர்களும், நாணையவாதிகளும் பொறுப்புள்ளவர்களும் மலிந்தில்லை. காலிகளும், கூலிகளும், நாணையமும் மானமரியாதையும் இல்லாத ஆட்களும்தான் மிகுந்திருக்கிறார்கள். ஆனதால் அந்த ஸ்தாபனங்களையோ, அந்த நபர்களையோ அவர்கள் வார்த்தைகளையோ மதிக்கக் கூடாது என்றும் இந்த ஆட்களை ஜனப்பிரதிநிதிகளென்றோ, நாணையமாய் நடந்து சட்ட சபைக்கு வந்தவர்களென்றோ கருதக் கூடாது'' என்றும் சொன்னார் என்றால் சொல்லப்போகிறார் என்றால் சொல்லுவதானால் அதில் கடுகளவாவது தப்பு இருக்கக் கூடுமா என்று கேட்கின்றோம்.

இந்த யோக்கியதையில் இருக்கும் காங்கிரஸ்காரர் ''வில்லிங்டன் பிரபு காங்கிரஸ்காரர்களை மதிக்கவில்லை. காங்கிரஸ்காரர்கள் ராஜிக்கு இரண்டு கையையும் நீட்டிக் கொண்டு போயும் கூட அவர்களை லட்சியம் செய்யவில்லை. ஆகவே வில்லிங்டன் பிரபுவின் அகம்பாவம் எவ்வளவு'' என்று சொல்லி தேசீயப் பத்திரிகைகளெல்லாம் இந்தப்படி கூப்பாடு போட்டால் இதில் உண்மையோ நியாயமோ ஏதாவது இருக்கின்றதா - இருக்க முடியுமா? என்று கேட்கின்றோம்.

சென்னையில் ஒரு காங்கிரஸ்காரர் காந்தி பெயரைச் சொல்லிக் கொண்டு திரிபவர், மேலே துணிக் கூட போடாமல் காந்தி போலவே வேஷம் போட்டுக் கொண்டு நடப்பவர், பொது மக்கள் பணத்தைக் காங்கிரசின் பேரால் மாதம் நூற்றுக் கணக்காய்ப் பெற்று வாழ்பவர், தோழர் சத்தியமூர்த்திக்காக தேர்தல் பிரசாரம் செய்யும் போது ''கோவில்களை இடிக்க வேண்டுமென்று சொல்லுகின்ற ஜஸ்டிஸ் கட்சியாருக்கு ஓட்டுப் போடுகிறீர்களா?'' என்று கேட்டாராம். இதிலிருக்கும் அயோக்கியத்தனத்துக்கு அளவு எவ்வளவு என்று கேட்பதோடு இந்த ஆட்கள் யோக்கியதையே இப்படி இருந்தால் மற்றபடி எவ்வளவு சிறிய வுதவிக்கும் எந்தக் காரியத்தையும் செய்யத் தயாராய் இருக்கும் சாதாரண ஆட்களிடம் எந்தக் காரியத்தைத்தான் எதிர்பார்க்கக் கூடாது என்று கேட்கின்றோம்.

கோயில்களின் பேரால் பொறுக்கித் தின்று வயிறு வளர்க்கும் கூட்டங்கள் தங்களுடைய ஆதாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள, மூட ஜனங்களை ஆயுதமாகக் கொண்டிருப்பது மாத்திரமல்லாமல் எப்படிப்பட்ட முக்கியமான விஷயத்தில் கேவலமான காரியங்களைச் செய்யத் துணிகின்றார்கள் என்பதைக் காண இந்த ஒரு உதாரணம் போதாதாவென்று கேட்கின்றோம்.

தோழர் ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் பெரிய அழுக்கு மூட்டை (வைதீகர்) என்று சொல்லலாம். அவர் காலம், நேரம், சகுனம், சாமி யுத்திரவு, சாஸ்திரம் ஆகியவை பார்க்காமல் ஒரு வேலையும் செய்வதில்லை. ஒரு நொடிக்கு 100 தரம் கடவுளைக் கூப்பிடுகிறார்.



RangaRakes tamilnavarasam.com

அப்படிப்பட்டவர் விஷயத்தில் ''கோவிலை இடிக்கும் நபர்களுக்கு ஓட்டுப் போடுகின்றீர்களா?'' என்று கேட்ட ஆசாமிகள், வேறு எந்தவிதமான கொலை பாதகச் செயலைச் செய்ய அஞ்சுவார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

கோவிலை இடித்தால் இவர்கள் அப்பன் தேடிக் கட்டி வைத்த முதல் என்ன போய்விடுமென்பதும் நமக்கு விளங்கவில்லை. கோவில்களை இடித்த ரஷியா தேசம் - இந்த மாதிரிக் கோவில்களின் பேரால் வயிறு வளர்த்த கூட்டங்களின் கையில் மண் வெட்டியையும், கோடாலியையும் கொடுத்த ரஷியா தேசம் இன்று ''குபேர'' செல்வம் படைத்த நாடாக விளங்குகின்றதே யொழிய பூகம்பத்தால் அழிந்துபோய் பூகம்ப கஷ்ட நிவாரண வேலை செய்ய இந்த சோம்பேரிக் கூட்டங்களைக் கூப்பிட்டு அதன் பேரால் வயிறு வளர்க்க விடவில்லையென்று இடித்துக் காட்டுகிறோம். மற்றபடி இப்படிப்பட்ட கூட்டத்தின் பேரால் அதாவது காங்கிரசின் பேரால் தேர்தலுக்கு நிற்கும் ஆட்களின் யோக்கியதையை யாராவது அறிய வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு உதாரணம் காட்டுவோம்.

என்னவென்றால், இன்றைய தேர்தல் பிரசாரத்தில் ஒருவராவது ஒரு அபேட்சகரைப் பற்றியாவது வெளியில் எடுத்துச் சொல்லி ஓட்டுக் கேட்காமல் ''ஆசாமி எப்படியிருந்தாலும் அவர்களைப் பற்றிக் கவனிக்காமல் காந்தியாருக்காக ஓட்டுப் போடுங்கள். காங்கிரஸுக்காக ஓட்டுப் போடுங்கள்'' என்று கேட்பதே போதுமானதாகும். சோம்பேறிகள், கயாவளிகள், உடம்பில் பட்டை பட்டையாக நாமம் போட்டுக் கொண்டு கையில் மஞ்சள் துணி சுற்றின செம்பை வைத்துக்கொண்டு ''திருப்பதி வெங்கிடாசலபதிக்குத் தர்மம் செய்யுங்கள், ஏழுமலையானுக்குத் தர்மம் செய்யுங்கள்'' என்று கேட்பதற்கும், ''ஆட்களைக் கவனிக்காதீர்கள். காங்கிரஸுக்கு ஓட்டுச் செய்யுங்கள், காந்திக்கு ஓட்டுச் செய்யுங்கள்'' என்பதற்கும் என்ன வித்தியாசமென்று கேட்கின்றோம்.

ஆகவே ஓட்டர்களாகிய தோழர்களே! தேர்தல் புரட்டுகளையும் வெட்கமற்ற - மானமற்ற - யோக்கியமற்ற - நாணையமற்ற பிரசாரங்களையும் கண்டும் கேட்டும் ஏமாற்றமடைந்து விடாமல், மனிதர்கள், அவர்கள் முன்பின் நடவடிக்கைகள், அவர்கள் நடந்து கொள்ளப் போகும் முறைகள், அவர்களது கொள்கைகள், வேலைத் திட்டங்கள் ஆகியவைகளைக் கவனித்து ஓட்டுச் செய்யுங்கள் என்று வேண்டிக் கொள்ளுகிறோம்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 21.10.1934**



# தேர்தல் பிரசார போக்கு

## தோழர் சத்தியமூர்த்தி பொய்ப் புகார்களுக்குப் பதில்

தேர்தலில் போட்டி அபேட்சகர்கள் ஒருவரையொருவர் இகழ்வதும், எதிர் அபேட்சகர் மீது வாக்காளர்களுக்கு அவ நம்பிக்கை ஏற்படும்படி செய்வதும் உலகம் முழுதும் சகஜமாகி விட்டது. ஆனால் அவ்விதம் செய்வதற்கும் ஓர் எல்லையுண்டு. இப்போது சென்னை நகர் சம்பந்தப்பட்ட வரையில், காங்கிரஸ் பெயரைக் கூறிக்கொண்டு பிரசாரம் செய்து வருகிறார்கள். 'அபேட்சகராக நிற்கும் ஆளை கவனிக்காதீர்கள். மகாத்மா காந்திக்காக ஓட்டுப் போடுங்கள்' எனக் கூறுகிறார்கள். இது நாமம் போட்ட சோம்பேரிகள் திருப்பதி வெங்கிடாசலபதிக்கு உண்டியல் பிச்சை கேட்பது போலாகும். ஆனால் நான் அவ்விதம் எதுவும் கூற விரும்பவில்லை. சென்னை மாகாணம் சம்பந்தப்பட்ட வரையில் பார்ப்பனர் - அல்லாதார் ஜாதியை ஆதாரமாகக் கொண்டே தேர்தல் இயக்கம் நடந்து வருகிறது. நீங்களெல்லோரும் சென்னை நகரத்துக்கு அபேட்சகராக நிற்கும் தோழர் ராமசாமி முதலியாரின் அந்தஸ்தையும், யோக்கியதாம்சங்களையும் தோழர் சத்தியமூர்த்தி யோக்கியதாம்சத்தையுமே கவனிக்க வேண்டும். அபேட்சகர்களில் யார் செய்வது சரி, யார் செய்வது தப்பு என்பதைப் பகுத்தறிந்து, உங்களிஷ்டம் போல் ஒருவருக்கு ஓட்டுப் போடும் உரிமை உங்களுக்கு உண்டு. எனவே, வீண் புரட்டுகளைக் கேட்டு நீங்கள் ஏமாறமாட்டீர்களென்பது நிச்சயம். காங்கிரஸ் பெயரால் நடந்து வரும் பிரசாரத்தை நீங்கள் கவனிக்கக்கூடாது. காங்கிரஸ் அரசியலில் இன்னும் சிறிது காலத்தில் மிகுந்த மாறுதலேற்படலாம். ஏனெனில் காந்தியார் காங்கிரசிலிருந்து விலகிவிட உத்தேசித்துள்ளார். அப்படியிருந்தும் காங்கிரஸ்வாதிகள் தேர்தலுக்காக மகாத்மா பெயரை உபயோகித்து வருகிறார்கள். தோழர் சத்தியமூர்த்திக்கு 4000 பிராமணரின் ஓட்டுகள் நிச்சயமாக இருக்கிறதென்றும், அதற்கு மேல்தான் அவர் இப்போது கணக்கிட வேண்டுமென்றும் அவருடைய நண்பர்கள் கூறுகின்றனர். அப்படியாயின், தோழர் ராமசாமி முதலியாருக்கு 11,000 பிராமணரல்லாதாரின் ஓட்டுகள் நிச்சயமாக இருக்கின்றனவென்று நீங்கள் தைரியமாகக் கூற வேண்டும். இப்போது நடைபெற்று வரும் தேர்தல் பிரசாரத்தில் தோழர் சத்தியமூர்த்தி, தோழர் முதலியாருக்கு விரோதமாக



RangaRakes
tamilnavarasam.com

பல பொய்யான விஷயங்களைக் கூறியிருக்கிறார். அவைகளால் பொதுஜன அபிப்பிராயம் மாறக்கூடுமோவென்றே, இப்போது தோழர் முதலியார் அவைகளுக்கு பதில் கூற வேண்டியிருக்கிறது.

குறிப்பு: *20.10.1934 மாலை சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் தோழர் சத்தியமூர்த்தியைப் புகழ்ந்தும் திவான்பகதூர் ஏ. ராமசாமி முதலியாரை இகழ்ந்தும் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியாரும், ஆந்திர ஜில்லா காங்கிரஸ் கமிட்டியாரும் வெளியிட்டிருந்த துண்டு பிரசுரத்திற்கு பதில் கூறுவதற்காக கூட்டப்பட்ட கூட்டத்திற்கு தலைமைதாங்கி பேசியது.*

**பகுத்தறிவு - சொற்பொழிவு - 28.10.1934**



# ஏமாற்றுந் திருவிழா காங்கிரஸ் கூத்து

காங்கிரஸ் கூட்டங்களைப் பற்றியும், அதன் மகாநாடுகளைப் பற்றியும் அவையெல்லாம் ஏமாற்றுத் திருவிழா என்று நாம் அவ்வப்போது எழுதி வந்திருப்பதை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அது போலவே காங்கிரஸ் நேயர்கள் பலருக்கும் இவ்விஷயம் இப்போது வரவர உண்மையாகி வந்து காங்கிரசின் பேரால் தங்கள் பிழைப்பை நிர்த்தாரணம் செய்து கொண்டவர்கள் தவிர, மற்றபடி தாங்கள் சொந்தத்தில் பாடுபடவும், வேறுவழியில் அரை வயிற்றுக்காவது சம்பாதித்துக் கொள்ள மார்க்கமிருக்கிறதென்று தைரியம் கொள்ளவும் உறுதியும் ஊக்கமும் உடையவர்கள் பெரும்பாலும் காங்கிரசிலிருந்து விலகி வந்து விட்டதும், வந்து கொண்டிருப்பதும் எவரும் அறியாததல்ல. கடைசியாக பழம்பெரும் காங்கிரஸ்வாதி என்றும், காங்கிரசிற்கே தனது வாழ்நாள் முழுவதையும் ஒப்படைத்த தியாகி என்றும் காங்கிரஸ் காரர்களாலும், பார்ப்பனர்களாலும் சொல்லப்பட்டு வந்த தோழர் மாளவியா அவர்களும் கூட காங்கிரஸ் கொள்கைகள் தந்திரமானது என்னும் காரணத்தால் காங்கிரசோடு போட்டி போடத் துணிந்துவிட்டார்.

இது அவ்வளவு முக்கிய விஷயமல்லவென்று சொல்லி விடலாம்.

என்றாலும் தோழர் காந்தியவர்களே இன்று காங்கிரசை விட்டு விலகி விட்டார்.

விலகும்போது அவர் என்ன சொல்லிக் கொண்டு விலகுகிறார் என்பதுதான் இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயமாகும். ‘‘காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் - எனது சிஷ்யர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் - பொது ஜனங்களை ஏமாற்றுவதோடல்லாமல் என்னையும் ஏமாற்றுகிறார்கள். ஆதலால் நான் விலகிக் கொள்ள வேண்டியதாய் இருக்கின்றது’’ என்று வெள்ளையாக அருத்தமாகும்படியே சொல்லிக் கொண்டு விலகிவிட்டார்.

இதிலிருந்தாவது இதுவரை காங்கிரஸ்காரர்கள் நடத்தி வந்த நாடகங்களை நாம் ஏமாற்றும் திருவிழா என்று சொல்லி வந்தது உண்மையா அல்லவா என்பதை யோசித்துப் பார்க்கும்படி நடுநிலைமை வாதிகளையும், பகுத்தறிவுவாதிகளையும் வேண்டிக் கொள்ளுகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

தோழர் காந்தியார் தான் விலகிக் கொள்ளப் போகும் காரியத்துக்கு எவ்வளவு விளம்பரம் கொடுத்து அதை எவ்வளவு பிரமாதமாக்க வேண்டுமோ அவ்வளவு பிரமாதமாக்கினார் என்றாலும் 'காந்திக்கு ஜே' என்னும் பேரால் வயிறு வளர்க்கும் ஒரு கூட்டத்திற்கு, அவர் விலகி விட்டால் தங்களுக்கு ஆபத்து என்று தோன்றியதால் அவர்கள் அதை எவ்வளவு மறைக்க வேண்டுமோ அவ்வளவு மறைத்துப் பார்த்தார்கள்.

என்றாலும் காங்கிரசிலுள்ள சமதர்மவாதிகள் என்னும் கூட்டத்தார்கள் இதை லக்ஷியம் செய்யாமல், ''இன்று நாட்டுக்கு வேண்டியது காந்தியார் இருப்பதா, போவதா என்கின்ற பிரச்சினையல்ல. அவர் இருந்தாலும் சரி, போனாலும் சரி, அதைப் பற்றி சிறிதும் கவலைப்படவேண்டியதில்லை. கோடிக்கணக்கான ஏழை பாமர மக்களை ஒரு சில சுயநலக்கார மூடர்கள் தாங்கள் மேல் ஜாதியாரென்றும், பணக்காரர்கள் என்றும் சொல்லி இழிவுபடுத்திக் கொடுமை செய்கிறார்களே! அதை எப்படி ஒழிப்பது, எப்படி அழிப்பது என்பதுதான் எங்கள் பிரச்சினை'' என்று கூறிவிட்டார்கள்.

இதற்கு எவ்வித பதிலும் சொல்லாமல் அந்தப் பிரச்சினையை மறக்கடிப்பதற்கு ''காந்தியார் போய் விட்டாரே! காந்தியார் போய் விட்டாரே'' என்று வேஷ அழுகை அழுது நீலிக் கண்ணீர் வடித்து மக்களை மறுபடியும் ஏய்க்கப் பார்க்கிறார்கள்.

எனவே இது ஏமாற்றுந் திருவிழாவா அல்லவா என்று கேட்கின்றோம்.

தோழர் காந்தியார் தான் காங்கிரசிலிருந்து விலகிக் கொள்வதற்கு இதற்கு முன் சொன்ன காரணங்களைவிட காங்கிரஸ் கூட்டத்திலேயே ஒரு முக்கிய காரணத்தை அழுத்தம் திருத்தமாகச் சொல்லி இருக்கிறார்.

''நான் காங்கிரசிலிருப்பதை விட வெளியிலிருப்பதால் மக்களுக்கு நன்மையான காரியங்கள் அதிகமாகச் செய்யக் கூடும் என்றும் எண்ணுகிறேன்'' என்றும்

''காங்கிரசில் உள்ளவர்கள் வெளி வேஷங்களையும் ஊழல்களையும், அகம்பாவங்களையும் ஒழித்து, பரிசுத்தர்களாகாத வரையில் நான் காங்கிரசிலிருந்து விலக வேண்டி இருக்குமென்று வங்காளத்தில் கூறி இருக்கிறேன். அதற்கு முன் கூட பல சமயங்களில் குறிப்புக் காட்டி இருக்கிறேன். நான் காங்கிரசிலிருந்து விலகுவதன் இரகசியம் இதுதான்''

என்றும் சொல்லி இருக்கிறார் என்றால் காந்தியார் விலகுவதற்கு இந்தப் பார்ப்பனர்களும், பார்ப்பனப் பத்திரிக்கைகளும் தத்துவார்த்தம் செய்வது என்பது மற்றொரு ஏமாற்றுந் திருவிழாவா அல்லவா என்று மறுபடியும் கேட்கின்றோம்.

அன்றியும் தோழர் காந்தியார் ஜெயிலில் இருந்து வந்த பிறகும், ஜெயிலுக்குப் போவதற்கு முன்பு ஒன்று இரண்டு தடவையும் கூட, காங்கிரசில் இருப்பவர்களின் அயோக்கியத்தனத்திற்காகவும்,



பித்தலாட்டங்களுக்காகவும், அவரது சிஷ்யர்கள் என்பவர்களே செய்த சூட்சிகளுக்காகவும் என்று சொல்லியே பட்டினி இருந்து வந்திருப்பது எவரும் அறியாததா என்றும் கேட்கின்றோம்.

இவ்வளவும் ஒரு புறம் இருந்தாலும், உண்மையிலேயே தோழர் காந்தியவர்களே தமது நடவடிக்கையிலும் பேச்சிலும் முன்னுக்குப் பின் முரணாகவும் எவ்வளவு தடவை பேசியும், எழுதியும், நடந்தும் வந்திருக்கிறார் என்பதை நாம் ஞாபகமூட்ட வேண்டியதில்லை. காந்தியார் ஓரளவுக்காவது பரிசுத்தத் தன்மை அடைவதையும், அவரது முயற்சி ஒரு அளவுக்காவது வெற்றி பெறுவதையும் பாழாக்கி உலகத்தின் முன்பு அறிவாளிகள் என்போர்களால் அவரைப் பற்றி சிரிக்கும்படி செய்ததும், இந்தப் பரிகாசங்களையும் தோல்விகளையும் தாங்க முடியாமல் ஓடும்படி செய்ததும் நமது தென்னாட்டுப் பார்ப்பனர்கள்! பார்ப்பனர்கள்!! பார்ப்பனர்கள்!!! தான் என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம்.

காங்கிரசில் ஏற்பட்ட பலன்களையெல்லாம் பார்ப்பனர்களே அடையும்படியாகவும், தலைமைப் பதவிகளிளெல்லாம் பார்ப்பனர்களே இருக்கும்படியாகவும், தியாகத்தின் மூலமோ, வீரத்தின் மூலமோ ஏற்பட்ட பெருமைகள் எல்லாம் பார்ப்பனர்களுக்கே இருக்கும்படியாகவும் இங்குள்ள பார்ப்பனத் தலைவர்களும், பார்ப்பனப் பத்திரிகைகளும் செய்து வந்த சூட்சியே இன்று காங்சிரசையும், காந்தியாரையும் உலகத்தின் முன் சிரிப்புக்கிடமாக்கி வைத்து விட்டது என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லுவோம்.

நம் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் இந்தக் குணங்களை மாற்றிக்கொள்ளாத வரை இன்னமும் எவ்வளவு தந்திரம் செய்தாலும், காங்கிரசின் பேரால் யார் வெற்றி பெற்றாலும், காங்கிரஸ் கவர்ன்மெண்டையே கைப்பற்றினாலும் (ஒரு நாளும் ஆகப் போவதில்லை) பார்ப்பனர்களது நிலைமை இன்னமும் மோசம்தான் ஆகுமே தவிர கடுகளாவாவது முன்னேற்றமடைய முடியும் என்பதை கனவிலும் கருத வேண்டாமென்றே பார்ப்பனத் தலைவர்களுக்கும், பார்ப்பனப் பத்திரிக்கைகளுக்கும் எச்சரிக்கை செய்கின்றோம்.

தோழர் காந்தியார் காங்கிரசை விட்டு விலகி விட்டதினாலேயே அவர் தந்திரங்களையும், சூட்சிகளையும், பித்தலாட்டங்களையும், அயோக்கியத்தனங் களையும் வெறுக்கின்றார் என்று நாம் சொல்லிவிட முடியாது.

அவர், தான் அயோக்கியத்தனங்களையும், ஒழுக்க ஈனங்களையும், ஊழல்களையும் வெறுப்பதாக ஜனங்கள் நினைக்க வேண்டுமென்றும், இதுவரை நடந்து வந்த அப்படிப்பட்ட காரியங்களுக்கு, தான் சம்பந்தப்படவில்லை என்பதாக பொது ஜனங்கள் அறிய வேண்டு



RangaRakes tamilnavarasam.com

மென்றும், தான் இன்று காந்தியார் விலகும் நாடகம் நடிக்கப்படுகின்றதே தவிர வேறில்லை என்பதே நமது அபிப்பிராயம் என்பதை வாசகர்கள் அறிய விரும்புகிறோம்.

எப்படியானாலும் காந்தியார் விலகிவிட்டாரென்பது உறுதியாகிவிடு மானால் சுயமரியாதைக்காரர்கள் காங்கிரசில் சேருவதற்குக் காலம் வந்துவிட்டது என்பது கூட நமது அபிப்பிராயமாகும்.

காந்தியார் இல்லாத காங்கிரசைக் கைப்பற்றினால் பார்ப்பனீயத்தை ஒரு கை பார்த்து விடலாம் என்கின்ற எண்ணம் சரியாகவோ தப்பாகவோ சிறிது காலமாகச் சிலருக்கு இருந்து வருகின்றது என்றாலும், காங்கிரசில் வடநாட்டுக்காரர்களுக்குள் காங்கிரஸ் சமதர்மக்கட்சி என்று ஒன்று இருப்பதுபோல் தென்னாட்டில் காங்கிரஸுக்குள் பார்ப்பனரல்லாதார் கட்சி என்பது ஒன்று இருக்க வேண்டியதாகத்தான் இருக்கும்.

அந்தப்படி இல்லாமல் இருக்கும்படி பார்ப்பனர்கள் நடந்து கொள்ளுவார்களானால் எல்லோருக்கும் நன்மைதான்.

முடிவாக, காந்தியாருக்கும் பார்ப்பனர்களுக்கும் இருந்த சம்மந்தம் எவ்வளவு - காந்தியார் விலகிவிட்டதற்குப் பார்ப்பனர்கள் எதை உத்தேசித்துத் துக்கப்பட்டார்கள் என்பதை அறிய ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்தி இதை முடிக்கின்றோம். அதாவது, ''காந்தியார் விலகி விட்டாரே தென்னாட்டில் சட்டசபைத் தேர்தல்கள் தோல்வி ஆகிவிடுமே'' என்றுதான் இந்தப் பார்ப்பனர்கள் ஓலமிட்டார்களே தவிர வேறு ஒன்றுக்கும் ஓலமிடவில்லை. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளக்கூடியது என்னவென்றால் தேர்தல் முதலிய காரியங்களில் பொது ஜனங்களை ஏமாற்ற காந்தியார் ஒரு ஆயுதமாக இருந்தது, இப்போது இல்லாமல் போய்விட்டதே என்கின்ற விசனம் தவிர காந்தியாரிடத்தில் இப்போது இந்தப் பார்ப்பனர்களுக்கு எவ்வித உள் அன்பும் விசுவாசமும் பிடித்தமும் இல்லை என்பதுதான்.

ஆகவே, இதுவரையில் பார்ப்பனர்கள் நடத்தி வந்த ஏமாற்றுந் திருவிழாவுக்கு ஒரு அளவுக்கு சாவுமணி அடித்தாய்விட்டது.

**பகுத்தறிவு - தலையங்கம் - 28.10.1934**



# வெங்கிட்டரமணா

## ''கோவிந்தாஆ கோஓவிந்தா''

## ''வெங்கிடாசலபதிக்குத் தர்மம் செய்யுங்கள்''

## மானங்கெட்ட பிழைப்பு

காங்கிரசின் பேரால் எலக்ஷன் நடத்துகின்றவர்கள் தங்களுடைய (அதாவது அபேட்சகர்களாக நிற்கும் ஆசாமிகள் தனிப்பட்ட முறையில் தங்களுடைய) யோக்கியதைகள் தேசத்தார்கள் அறிந்திருப்பதால் தங்களுக்குச் சொந்தத்தில் ஓட்டு கிடைக்காது என்று தீர்மானம் செய்து கொண்டு ''காந்திக்கு ஓட்டுச் செய்யுங்கள்'' என்று கேட்டு மக்களை ஏமாற்றி வருவது ஒரு புறமிருக்க, இவ்வேமாற்றுதலை ஜஸ்டிஸ் கட்சியார் வெளியாக்கும் முறையில் காந்தியார் காங்கிரசை விட்டுப் போய் விடுகிறேனென்று சொல்லுவதையும் அந்தப்படி காங்கிரசை விட்டு அவர் வெளியேறுவதற்கு உண்டான காரணங்களை அவர் எடுத்துச் சொன்னபடியே வெளியிடுவதையும் பார்த்த காங்கிரஸ்காரர்களும், பார்ப்பனப் பத்திரிக்கைகளும் அடக்க முடியாத ஆத்திரம் கொண்டு வாயில் வந்தபடி எல்லாம் இழிதகமையில் வைகின்றனர். இதை நாம் ஒரு வெட்கம் கெட்ட ஆத்திரம் என்றும், மானங்கெட்ட பிரசாரம் என்றும் தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

காந்தியார் வெட்ட வெளிச்சமாக முழு முட்டாள்களுக்கும், புரியும் மாதிரியில் தான் விலகும் காரணங்களை விளக்கியிருக்கிறார்.

1. என்னைத் தலைவர் என்று சொல்லிக் கொள்ளுபவர்கள் என் இஷ்டப்படி நடப்பதில்லை. ஆனால் என்னை உபயோகித்துக் கொள்ளுகிறார்கள்.
2. காங்கிரஸ்காரர்கள் பலரிடத்தில் நாணையமில்லை.
3. என்னை உபயோகித்துப் பயன் பெறுவதற்காகவே என்னிடம் பக்தி விசுவாசம் உள்ளவர்கள் போல் நடிக்கிறார்கள்.
4. கதரில் நம்பிக்கை இல்லாதவர்கள் கதரைக் கட்டி ஏமாற்றுகிறார்கள்.
5. சத்தியத்திலும், அஹிம்சையிலும் நம்பிக்கையில்லாதவர்கள் சத்தியவான்கள் போல வேஷம் போட்டு ஏமாற்றுகிறார்கள் என்றும் சொன்னதோடு, இன்னமும் காங்கிரஸ்காரர் என்பவர்களின்



RangaRakes tamilnavarasam.com

வண்டவாளங்களையும் நாணையக்குறைவுகளையும் அவர் நன்றாய் எடுத்துக் காட்டிவிட்டு, எந்தக் காரணத்தை முன்னிட்டும் தான் இனிமேல் காங்கிரசில் இருக்க முடியாது என்று முடிவாய் சொல்லியும் விட்டார்.

இப்படி இருந்தும் எலக்ஷனில் நிற்பவர்கள் ''காந்தியாருக்காக ஓட்டுப் போடுங்கள் நிற்கும் ஆசாமிகளைக் கவனிக்காதீர்கள்'' என்று கேட்டால் இதில் கடுகளவாவது நாணையமோ, மானம் வெட்கமோ இருக்கின்றதா என்றுதான் கேட்கின்றோம்.

ஓட்டர்கள் எப்படி வேண்டுமானாலும் ஓட்டுச் செய்யட்டும். நமக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. இன்று நம்நாட்டு மக்கள் 100க்கு 92 பேர்கள் தற்குறிகள். அதிலும் விஷயம் தெரிய கவலையுள்ளவர்கள் நூற்றுக்கு ஒருவர் இருவர் கூட இருக்க மாட்டார்கள். இவர்களிலும் உண்மையான விஷயம் தெரிந்து கொள்ளக் கூடியவர்களும் தெரிந்து கொள்ள சௌகரியமுடையவர்களும் 1000ல் இரண்டொருவர் கூட இருக்க முடியுமா? என்பது சந்தேகம்.

மேலும் பார்ப்பனர் பிரசாரமும், பார்ப்பனக் கூலிகள் பிரசாரமுமேதான் நடைபெற சாத்தியமாகின்றது. அவர்கள் தங்கள் வாழ்வுக்கும், ஆதிக்கத்துக்கும் மற்றவர்களை அடக்கி ஆண்டு எல்லா உத்தியோகங்களையும் பதவிகளையும் தாங்களே அனுபவிக்கவும் அனுகூலமாகவே தங்கள் பிரசாரங்கள் நடக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதற்கு பார்ப்பனரல்லாதாரிடமே பெரிதும் பணம் பரித்து பார்ப்பனரல்லாதாரிலே கூலிகளைப் பிடித்து பிரசாரம் நடத்தி வருகிறார்கள். பத்திரிக்கைகளும் பெரிதும் பார்ப்பனர்களே நடத்துகிறார்கள் என்பதோடு பத்திரிகை நிருபர்களும் எல்லோரும் பார்ப்பனர்களாகவே இருந்து வருகிறார்கள்.

இந்த நிலையில் இவர்களுடைய ஏதாவது ஒரு புரட்டை பார்ப்பனரல்லாதார் வெளிப்படுத்தினால் அதற்கு இவ்வளவு ஆத்திரப்படுவ தென்றால் மனம் போனபடி வைவதென்றால், இதை ஏன் மானங்கெட்ட ஆத்திரம் என்று சொல்லக்கூடாது என்று மறுபடியும் கேட்கின்றோம்.

தெருவில் திரியும் சோம்பேரிகள், நாணையமாய் பிழைக்க மார்க்கமில்லாத அயோக்கியர்கள் ஆகியவர்கள் தங்கள் நிஜ வேஷத்தோடு போனால் பிச்சை போடாமல் உதைத்து அனுப்புவார்கள் எனப் பயந்து மேலெல்லாம் பட்டை நாமங்களையும், உருத்திராட்ச விபூதிகளையும் அணிந்து கொண்டு ''வெங்கடாசலபதிக்கு கோவிந்தா - வெங்கடாசலபதிக்கு தர்மம் போடுங்கள்'' ''பழனியாண்டவனுக்கு அரோகரா - முருகனுக்கு தர்மம் செய்யுங்கள்'' என்று கூப்பாடு போட்டு பிச்சை கேட்பதற்கும், இந்த தேர்தல் ஆட்கள் ''மகாத்மா காந்திக்கு ஜே - காந்தியாருக்கு ஓட்டுப் போடுங்கள்'' என்று கூப்பாடு போட்டு ஓட்டுக் கேட்பதற்கும் என்ன வித்தியாசம் என்றுதான் தெரிய ஆசைப்படுகிறோம்.

அதுவும் தோழர் காந்தியாரே இந்த விஷயம் தெரிந்து ''காங்கிரஸ்காரர்கள் என்னிடம் பக்தி விசுவாசம் இருப்பதாக வேஷம் போட்டுக் காட்டி பாமர மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆதலால் நான் காங்கிரசை விட்டு வெளியேறுகிறேன்'' என்று சொன்ன பிறகும் கூட மறுபடியும் இந்தப் பாடம் படித்து ஓட்டுப் பிச்சை கேட்கிறார்கள் என்றால் இந்தக் கூட்டத்திற்கு என்றுதான் மானம் வெட்கம் நாணையம் வரும் என்று கேட்கின்றோம்.

இந்த நிலையில் ''ஜஸ்டிஸ் கட்சியார் அயோக்கியத்தனம் செய்கிறார்கள்'' என்றும் ''தோழர் ராமசாமி முதலியார் அயோக்கியத்தனம் செய்கிறார்கள்'' என்றும் பார்ப்பனப் பத்திரிகைகளும், கூலிகளும் எழுதுவதின் யோக்கியதை நமக்கு விளங்கவில்லை. கடவுள் பெயரைச் சொல்லி பல சோம்பேரிகளும் அயோக்கியர்களும் பாமர மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பதற்காகவே உலகில் கடவுள் ஒழிப்புச் சங்கங்கள் தோன்றி வேலை செய்து ஒரு அளவு வெற்றி பெறுவது போலவே பார்ப்பனீய ஒழிப்புச் சங்கங்கள் தோன்றி வேலை செய்து ஒரு அளவுக்கு வெற்றி பெற்று வருகின்றன என்றாலும் இன்னமும் பலமான வேலைகள் செய்ய இம் மானங்கெட்ட செய்கைகள் தூண்டுகின்றன. நல்ல வேளையாக தோழர் காந்தியாரே இந்த விஷயம் தெரிந்துதானே காங்கிரசை விட்டு ஒழிந்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டதால், இனி காந்தி ஒழிப்புச் சங்கங்களுக்கு வேலை குறைந்ததென்றே மகிழ்ச்சி அடைகின்றோம்.

மற்றுமொரு போக்கிறித்தனம் என்னவென்றால், பம்பாய்க்குப் போன பார்ப்பனர்கள் அங்கிருந்து கொண்டு சர். ஷண்முகத்திற்கு ஓட்டு இல்லையென்று பத்திரிகைகளுக்குச் சேதி அனுப்புகிறார்களென்றால் இதை விட சூட்சிக்கு வேறு ஆதாரம் என்ன?

முடிவாக வரப்போகும் தேர்தல்களில் வாக்காளர்கள் இந்தப் புரட்டுகளுக்கு ஏமாந்து போகாமல் அபேட்சகர்களின் யோக்கியதையையும், செய்யப் போகும் வேலையையும் நன்றாய் அறிந்து தங்கள் இஷ்டப்படி நடக்க வேண்டும் என்றே வேண்டிக் கொள்ளுகிறோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 28.10.1934**


RangaRakes
tamilnavarasam.com

# முதல் மந்திரியார் சீக்கிரம் கவனிப்பாரா?

கோயம்புத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டு மீது சுமார் 30 மெம்பர்கள் சேர்ந்து ''நிர்வாக ஊழல்''களைப் பற்றியும், போர்டுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் பற்றியும் ஒரு பிராது தயாரித்து கையொப்பமிட்டு சர்க்காருக்கு அனுப்பிய விஷயமும், மற்றும் பிரசிடெண்ட் கனம் வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர பட்டக்கார கனவான்கள் முதலியவர்கள் முயற்சித்துக் கொண்டிருந்த விஷயமும் நேயர்கள் அறிந்ததாகும்.

பிறகு உடனே கனம் பட்டக்காரர்களுக்கும், சில மெம்பர்களுக்கும், கனம் கவுண்டர் அவர்களுக்கும் ஒரு வித சமாதானம் ஏற்பட்டு விட்டதாகவும், அதன் பயனாய் அப்பிராதில் கையெழுத்து செய்திருந்த கனவான்களில் ஒரு சிலர் தங்கள் கையெழுத்துக்களை வித்ட்றா செய்து கொண்டதாகவும் தெரிய வருகிறதோடு சமாதானத்தில் ஒரு நிபந்தனை, கனம் கவுண்டர் அவர்கள் பிரசிடெண்டு ஸ்தானத்தை ராஜீனாமா செய்து விடுவதாகப் பெரிய இடத்தில் ஒப்புக் கொண்டிருப்பதாயும் சொல்லிக் கொள்ளப்படுகிறது.

இதன் உண்மை எப்படி இருந்தாலும் அதைப்பற்றி பொது ஜனங்களுக்கு அக்கரை இருக்காது. ஸ்தல ஸ்தாபன நிர்வாகங்களில் கண்ட்றாக்ட்டு வேலைகளும், சிப்பந்திகள் நியமிக்கும் வேலைகளும் பிரசிடெண்டுகளுக்கும் சேர்மென்களுக்கும் இருப்பதினாலேயே போர்டுகளிலும், கவுன்சில்களிலும் தகரார்கள் ஏற்படுவதற்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வருவதற்கும் பெரிதும் அவசியம் ஏற்பட்டு விடுகின்றன. இதைப் பற்றி நாம் பல தடவைகளில் எழுதி வந்த பிரகாரம் போர்டுகளின் தலைவர்களிடமிருந்து அந்த அதிகாரங்களைப் பரித்துவிட்டால் பிறகு சேர்மென்களும், பிரசிடெண்டுகளும், கவுன்சிலர்களுக்கும் மெம்பர்களுக்கும் யோக்கியர்களாகவும், சினேகிதர்களாகவும் ஆகிவிடுவார்கள். தகராருக்கும் சிறிதும் இடம் இருக்காது.

ஒரு சமயம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருவதாய் இருந்தாலும் கமிஷனர்கள் மீதுதான் வரக்கூடுமே ஒழிய வேறில்லை. அதனால் கமிஷனர்களுக்கும் நஷ்டம் இருக்காது. அவர்கள் வேறு ஊருக்கு மாற்றப்பட்டுவிடலாம். மெம்பர்களுக்கும் அவசியமான காரியங்கள் கவனிக்க சௌகரியமேற்படும். ஆகவே முதல் மந்திரியார் சீக்கிரம் கவனிப்பாரா?

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 28.10.1934**



# இந்திய சட்டசபைத் தேர்தலில் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களுக்கு சென்னை ஓட்டர்களின் பகிரங்கக் கேள்விகள்

1. தாங்கள் சிறை சென்ற ''தியாகத்''தைப் பற்றி 'ஏ' வகுப்புக் கைதியாகப் போடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டதும், பிறகு அதிலும் பிறரைவிட அதிக வசதிகள் வேண்டுமென்று கேட்டு வாங்கிக் கொண்டதும், பிறகு ஜஸ்டிஸ் கட்சியாரைக் கொண்டு சிபார்சு செய்து ஆஸ்பத்திரிக்கு வந்ததும், பிறகு அதை விட்டு குறித்த காலத்திற்கு முந்தி விடுதலையாவதற்கு ஜஸ்டிஸ் கட்சியார் சிபார்சு செய்ததுமான விஷயங்கள் இருக்கும்போது, ஜஸ்டிஸ் கட்சியைத் தூற்றுவதும் 'தியாகம்' என்று சொல்லிக் கொள்வதும், யோக்யமான செயலாகுமா?
2. பெண்களில் ஒரு கூட்டத்தாராகிய தேவதாசிகளை கோவிலில் ஆடவிட்டால்தான் இந்து மதம் நிலைக்குமென்று சொல்லி பெண் சமூகத்தை இழிவுபடுத்திய தங்கட்கு பெண்களுடைய ஓட்டுகளைக் கேட்க வெட்கமில்லையா?
3. ஜஸ்டிஸ் கட்சியை 'வகுப்புவாதக்' கட்சியென்று கூறும் தாங்கள், உங்களுடைய இனத்தார்களாகிய பிராமணர்களின் வீடுகளில் 100க்கு 99ல் ''To let for Brahmins only'' (''பிராமணர்களுக்கு மட்டும் வாடகைக்கு விடப்படும்'') என்று போர்டுகள் போடப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் சொல்லுகிறீர்கள்?
4. ''வகுப்பு வாதக் கட்சி'' என்று நீங்கள் கூறும் ஜஸ்டிஸ் கட்சியின் பிரமுகர்களால் நடத்தப்படும் பச்சையப்பன் காலேஜ், தொண்டை மண்டலம் ஹைஸ்கூல் முதலிய பள்ளிக்கூடங்களிலுள்ள உபாத்தியாயர்களில் 100க்கு சுமார் 65 பேருக்கு மேல் பிராம்மணராயிருக்க, வகுப்புவாதமே கடுகளவும் இல்லாததாக வேஷம் போடும் தங்கள் இனத்தாரால் (பிராம்மணரால்) நடத்தப்படும் மயிலாப்பூர் P.S. ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் (Hindu High School) முதலிய பள்ளிகளில் 100க்கு 2 பேர் கூட பிராம்மணரல்லாத உபாத்தியாயர்கள் இல்லாதிருப்பதற்குக் காரணமென்ன?



RangaRakes tamilnavarasam.com

5. இந்திய சட்ட சபையில் மொத்த அங்கத்தினர்கள் 145, இதில் 40 பேர் சர்க்காரால் (நாமினேஷன்) நியமிக்கப்படும் சர்க்கார் ''தாஸர்கள்'', 9 பேர் ஐரோப்பியர்கள், 7 பேர் நிலச் சுவான்தார்கள், 30 பேர் முஸ்லீம்கள்; 4 பேர் வர்த்தகத் தொகுதியைச் சேர்ந்தவர்கள்; 2 பேர் சீக்கியர்கள் ஆக மொத்தம் 92 போக பாக்கி 53. இதில் காங்கிரஸ்காரர்கள் எத்தனை பேர் வர முடியும்? அப்படியே 53ம் வந்தாலும் 92 பேருக்கு எதிரிடையாக எதைச் சாதிக்க முடியும் என்பதை விளக்க முடியுமா?

6. அப்படியே ஒரு வேளை தங்களுடைய ''பேச்சு வன்மையால்'' இதர 144 பேரையும் தங்கள் கொள்கைக்குத் திருப்ப முடிந்தாலும், வைசிராயினுடைய (Certification) சர்டிபிகேஷன் அதிகாரம் இருக்கும் வரையில் தங்களால் என்ன செய்ய முடியும்.

7. பெண்கள் உரிமை, தீண்டாமை ஒழித்தல் முதலிய சகல சமுதாய சீர்திருத்தத் துறைகளிலும், விரோதமான கொள்கையைக் கொண்ட தங்களையும், தங்களுடைய கட்சிக்காரர்களையும் சட்டசபைக்கு அனுப்புவதால் ஜன சமூகத்திற்கு என்ன பிரயோஜனமிருக்கிறது?

8. சென்ற சட்ட மறுப்பு சமயத்தில் திரு. பக்தவத்சல முதலியார், திரு. முத்துரங்க முதலியார் போன்ற பல பிரமுகர்களும், இன்னும் பல்லாயிரக்கணக்கான தொண்டர்களும் போலீசாரால் எவ்வளவோ அடிபட்டிருக்க திரு. பாஷ்யமய்யங்கார் அவர்கள் அடிபட்டதற்கு மாத்திரம் சென்னை சட்ட சபையில் ஒத்திவைக்கும் தீர்மானம்; இந்திய சட்டசபையில் கேள்விகள்; பார்லிமெண்டில் கேள்வி; இவ்வளவும் போதாமல், திரு. காந்தியவர்கள் இர்வினுக்கு எழுதிய கடிதத்திலும் இதைப் பற்றிய குறிப்பு - இவ்வளவும் செய்ததிலிருந்து காங்கிரஸ் ஸ்தாபனமானது பார்ப்பனர்களுடைய கோட்டை என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

9. திரு. காந்தியவர்கள் வந்தபோது மாத்திரம் ஹரிஜன சேவை என்ற பெயரில் சேரியைக் கூட்டியதும், சேரிக் குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்து முழுக்காட்டினதுமான நாடகமெல்லாம் ''ஹரிஜனங்களின்'' பெயரால் பணம் திரட்டியதோடு சரியாய்ப் போய்விட்டதா? அந்தப் பணம் என்னவாயிற்று?

10. சோம்பேறிப் பிச்சைக்காரர்கள் தங்களுடைய வயிற்றுப் பிழைப்பிற்காக திருப்பதி ''வெங்கடாசலபதியையும்,'' ''பழனி முருகனையும்'' சொல்லி பணம் கேட்பது மாதிரி தங்களுக்கு சொந்த யோக்கியதை இருந்தால் ''மகாத்மா''வின் பெயரையும் ''காங்கிரஸ்'' பெயரையும் சொல்லி ஓட்டுக் கேட்பீர்களா?

11. சென்ற சட்டமறுப்பில் பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் அடிபட்டிருக்கும் போது, தாங்களும், திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் மாத்திரம் வாடகை மோட்டாரில் சொகுசாகப் போய் துண்டு நோட்டீஸ் கொடுத்து கைதியாகி விட்டு, இப்போது அடிபட்ட பார்ப்பனரல்லாத தொண்டர்கள் பெயரால் ஓட்டுக் கேட்டது யோக்கியமான செயலாகுமா?



12. காங்கிரஸ் பெயரினால் ஒரு பெண்ணைக்கூட தேர்தலுக்கு நிறுத்தாதது மன்றி சுயேச்சையாக நிற்கிறேன் என்று சொன்ன தேசீயவாதியான ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் அவர்களை போட்டியின்றி நிற்பதற்கு இடமும் கொடாமல் செய்த காங்கிரசின் பிரதிநிதியான தங்களுக்குப் பெண்மக்கள் ஓட்டுக் கொடுப்பார்கள் என்று நீங்கள் கனவிலும் கருத முடியுமா?

13. ஜஸ்டிஸ் கட்சியில் பிராமணர் உட்பட எல்லோரும் சேர உரிமையுண்டு என்று சமீபத்தில் நடந்த மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றி, அதன்படி விதிகளைத் திருத்தம் செய்த பிறகும் கூட வகுப்புவாதக் கட்சியான ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டுக் கொடுக்காதீர்கள் என்று தாங்களும், திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் பிற பிரசாரகர்களும் சொல்லி வருவதன் காரணம், உங்களுடைய அறியாமையா? அல்லது வேண்டுமென்றே செய்யும் சூழ்ச்சியா? அல்லது பார்ப்பனத் தந்திரமா?

14. காங்கிரஸ் தனது நிர்மாணத் திட்டங்களாகிய கீழ்க்கண்ட வேலைகளில் இது வரை எது எதில் வெற்றி பெற்றிருக்கிறது என்பது தயவு செய்து சொல்வீர்களா?

a) கள்ளுக்கடை மறியல்.
b) அன்னியத் துணிக்கடை மறியல்.
c) நீல் சிலை சத்தியாக்கிரகம்.
d) காலேஜ்களை அடைத்து விடுதல்.
e) வக்கீல்கள் கோர்ட்டுக்குப் போவதை நிறுத்துதல்.
f) உப்பு சத்தியாக்கிரகம்.
g) தக்ளியினாலேயே நூல் நூற்றுக் கொண்டிருத்தல்.
h) சட்டசபைகளில் சென்று ''சிங்கத்தை அதன் குகையில் எதிர்த்தல்''.
i) ''ஹரிஜனங்களுக்கு''க் கோவில்களைத் திறந்து விடுதல்.
j) வீட்டுக்கு வீடு ராட்டினத்தில் நூல் நூற்கும்படி செய்தல்.
k) சைமன் கமிஷனைப் பகிஷ்கரித்தல்.
l) 'Census' ஜன கணிதம் கொடுக்கக் கூடாது என்று 1931ல் பிரசாரம் செய்தது.

முதலியவைகளில் எதைச் சாதித்தது?.

இப்படிக்கு,

சென்னை அஸெம்ப்ளி ஓட்டர்கள்.

பகுத்தறிவு - கட்டுரை - 28.10.1934



RangaRakes tamilnavarasam.com

# சென்னை பெண்கள் சங்கத்தின் அறியாமை

சென்னையில் இந்திய பெண்கள் சங்கம் என்பதாக ஒரு சங்கம் இருக்கின்றது. அது சென்னை செல்வவான்கள் பெண்களும், அதிகாரிகள் மனைவிகளும், வக்கீல் மனைவிகளும் பெரும்பான்மையாகக் கொண்டதாக - ஒரு சில ஸ்திரீகளைக் கொண்டதாக இருந்து வருகின்றது.

இந்த நாட்டுப் பணக்காரர்கள் ஜமீன்தார்கள் ஆகியவர்களுக்கு எப்படி உண்மையான விடுதலை தேவை இல்லையோ அதேபோல் இந்த பெண்களுக்கும் உண்மையான விடுதலை தேவை இல்லை என்பதோடு தெரிவதற்குக் கூட முடியாத நிலைமையில் இருந்து வருகிறார்கள்.

இந்த லக்ஷணத்தில் இவர்கள் அரசியல் துறையில் பிரவேசித்து தோழர் சத்தியமூர்த்தியை ஆதரிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள் என்றால் பெண்கள் சமூகத்துக்கு அதைவிட வெட்கக் கேடு வேறு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் ஆண்களும் பெண்களும் சரிசமானமான சுதந்திரத்துக்கு அருகதையுடையவர்கள் என்பதையே ஒப்புக்கொள்ளுவதில்லை என்பதோடு சாஸ்திரங்களிலும், புராணங்களிலும் பெண்களுக்குள்ள இழிவையும், தாழ்வையும் அப்படியே நிலைநிறுத்தப் பாடுபடுகின்றவர் என்பது யாவரும் அறிந்ததேயாகும்.

உதாரணமாக தேவதாசித் தொழிலை ஒழிக்கக் கொண்டு வந்த சட்டத்தை எதிர்த்து தேவதாசித் தொழிலை ஆதரித்தார். தேவதாசிகள் இல்லாவிட்டால் தெய்வங்களுக்கு சக்தி குறைந்துவிடும் என்றும், ஆகமங்கள் கெட்டு விடும் என்றும் பேசினார்.

இரண்டாவதாக:- குழந்தைகளுக்குக் கல்யாணம் செய்யக்கூடாது என்றும், குழந்தைப் பருவத்திலேயே பிள்ளை பெற விடக்கூடாது என்றும் கொள்கையுள்ள சாரதா சட்டத்தை A. ராமசாமி முதலியார் ஆதரித்து இந்தியா முழுவதும் சுற்றி அபிப்பிராயம் தெரிந்து வரும் காலத்தில் தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் ‘‘குழந்தைக் கலியாணம் கூடாது’’ என்று சட்டம் செய்தால் நான் அந்த சட்டத்தை மீறி என் மகனுக்கு கல்யாணம் செய்து சிறைசெல்லுவேன் என்று தைரியம் சொல்லி மற்றவர்களையும் குழந்தைக் கலியாணம் செய்யத் தூண்டினார்.



இப்படிப்பட்டவருக்குப் பெண்கள் சங்கம் ஆதரவு கொடுப்பதென்றால் அச்சங்கம் பெண்கள் சமூகத்தின் உண்மையான பிரதிநிதித்துவம் பொருந்தியதா என்பதை கவனிக்கும்படி வாசகர்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

**பகுத்தறிவு - கட்டுரை - 04.11.1934**



RangaRakes tamilnavarasam.com

# விளம்பரப் பிரசாரம்

காங்கிரஸ் திருவிழா கூடிக் கலைந்துவிட்டது. அதன் கொள்கையினால் எவ்வித மாற்றமும் ஏற்பட்டு விடவில்லை. ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் அதன் நிர்வாக விதிகளில் பார்ப்பனர்களைச் சேர்க்கலாம் என்ற ஒரு மாற்றம் செய்யலாமா? வேண்டாமா? என்பதே ஒரு முக்கிய பிரச்சினையாய் இருந்து அதன் பேரிலேயே எல்லா விவாதமும் நடந்து எப்படி அம்மகாநாடு முடிந்ததோ அது போலவே காங்கிரசிலும் அதன் நிர்வாக வேலைத் திட்டத்தில் அஹிம்சை, சத்தியம், ராட்டினம், கதர் என்பன போன்ற பயனற்ற வார்த்தைகளைப் பேசுவதிலும், இயற்கைக்கு விரோதமான - அனுபவ சாத்தியமில்லாத தத்துவங்களை வலியுறுத்துவதிலுமே 5, 6 நாள்கள் செலவழிக்கப்பட்டு கடைசியாக பெரும்பான்மையான ஜனங்களுக்குப் புரியாத ஏதோ சில தீர்மானங்களுடன் முடிவு பெற்றது என்றுதான் சொல்ல வேண்டி யிருக்கிறது.

இதற்குப் பொது மக்களின் பணம் சுமார் 2, 3 லட்ச ரூபாய்க்கு மேலாகவே செலவாகி இருக்கலாம். பதினாயிரக்கணக்கான மக்களுக்கு 4, 5 நாளாவது வேலை கெட்டு இந்தத் திருவிழாவில் காலங் கடத்தப்பட்டு இருக்கலாம்.

இதன் பயனாய் ஒரு சிலருக்கு விளம்பரமும், சிலருக்கு தேர்தலில் ஓட்டுப் பெறுவதற்குச் சில தந்திரங்களும்தான் பெற ஏற்பட்டது என்பதல்லாமல் மற்றபடி தேசத்துக்கோ, மக்களுக்கோ ஒரு காதொடிந்த ஊசியளவு பயனும் ஏற்பட்டதில்லை என்பதே நமது அபிப்பிராயமாகும்.

சில பத்திரிக்கைகள் ''50000 ஜனங்கள் 80000 ஜனங்கள் வேடிக்கை பார்த்தவர்கள் உள்பட காங்கிரசுக்கு வந்தார்கள்'' என்பதைக் காட்டி காங்கிரஸ் ஒரு பெரிய ஸ்தாபனம் மதிப்புக்குரிய ஸ்தாபனம் என்று எழுதி மகிழ்கிறார்கள். ஜனக்கூட்டத்தை மதித்து மக்கள் ஏமாந்த காலம் மலையேறிப் போய்விட்டது.

வெறும் அழுக்கையும், சேற்றையும் அள்ளிப் பூசிக் கொள்ளும் திருவிழாவாகிய மாமாங்கத்துக்கு 3 லட்சம் 4 லட்சம் ஜனங்கள் வந்திருந்தார்கள் என்றால், ஆண்களும், பெண்களும் தங்கள் தங்கள் ''மர்ம ஸ்தானம்'' அரைவாசி, முக்கால்வாசி தெரியும்படியாக வேப்பிலையைக் கட்டிக் கொண்டு காட்டு மிராண்டிகள் போல் திரியும் பெரியபாளையத்து அம்மன் திருவிழாவுக்கு 50000 பேர் லட்சம் பேர் பெண்டு பிள்ளைகளுடன் ஆண்களும் பெண்களுமாய் கூடி நசுக்கப்படுகிறார்கள், உரசப்படுகிறார்கள் என்றால் அதுவும் நல்ல ''கல்வி அறிவு'' உள்ளவர்களும், பி.ஏ., எம்.ஏ., படித்தவர்களும், ராஜாக்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள், வியாபாரிகள் என்பவர்களும் இந்த ஆபாசங்களில் பெண்டுபிள்ளைகளுடன் பங்கு எடுத்துக் கொள்ளுகிறார்கள் என்றால் இந்த பம்பாய் பட்டணத்துக்கு இந்தியாவெங்கும் ஆயிரக்கணக்கான பத்திரிக்கைகளும், பதினாயிரக்கணக்கான கூலிப் பிரசாரகர்களும் சேர்ந்து 100க்கு 92 பேர்கள் தற்குறிகளாக உள்ள ஜனங்களிடத்தில் புராணப் புளுகுகள் போல் பொய்ப் பிரசாரம் செய்து ஒரு கூட்டம் கூடியதில் பதினாயிரக்கணக்கில் ஆட்கள் சேர்ந்ததாலேயே இதை ஒரு அதிசயமென்றோ, அந்தத் திருவிழாவுக்கு ஒரு தனிப்பட்ட மதிப்போ, உயர்வோ இருப்பதாகவோ அறிவாளிகள் மதித்துவிடுவார்களா என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

அங்கு நடந்த விஷேஷம் என்ன? அதனால் ஏற்பட்ட பலனென்ன? என்பதுதான் இங்கு முக்கிய கேள்வியாகும்.

அங்கு நடந்ததெல்லாம் காந்தியாரின் ''பெருமை''யையும், ''மகிமை''யையும் பற்றிய விளம்பரம் அல்லாமல் வேறு என்ன நடந்தது என்பதே நமது கேள்வி.

''காந்தியார் பொக்கவாய்ச் சிரிப்பு ஒரு மோகனாஸ்திரம் போல் எல்லோரையும் மயக்கிவிட்டது.''

''காந்தியார் தமாஷ் பேசி எல்லோரும் சிரித்தார்கள்'' ''மொட்டைத்தலைக் குல்லாயை எடுத்து வழுக்கைத் தலையில் வைத்தார்'' ''பெண்களை ஆண்களுக்கு இணங்க வேண்டாம் என்று சொன்னார். யாவரும் சிரித்தார்கள்.'' ''காந்தியாரின் ஆத்ம சக்தி எல்லோரையும் மயக்கிவிட்டது'' என்பது போன்ற அர்த்தமற்றதும், அநாகரீகமானதுமான வார்த்தை களாலும், கருத்துக்களாலுமே காந்திஜீ விளம்பரம் நடந்ததே தவிர கடுகளவாவது அறிவுக்கு ஏற்றதோ, அனுபவத்துக்கு ஒத்ததோ, மக்களுக்கு ஏற்றதோ, மனித சமூகத்துக்குப் பயன்தரத்தக்கதோ ஆகிய வழியில் ஒரு காரியமும் நடக்கவில்லை என்பதோடு அதற்காக எவ்வித முயற்சியும் செய்யப்படவுமில்லையென்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

மூடப் பக்தியும், குருட்டு நம்பிக்கையும், மக்களுக்குப் பிரபலமாக என்னனென்ன காரியங்கள் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து தலைவர்கள் எனப்படுவோர்களும், காந்தியாரும் ''வெற்றி'' பெற்றார்கள் என்பதை வெட்கமில்லாமல் பாராட்டிக் கொள்ளுவதைப் பார்க்கும்போது மனித சமூகத்தில் பொது வாழ்வில் இன்னமும் எவ்வளவு அறிவீனம் இருந்து வருகிறது என்று துக்கப்படாமல் இருக்க முடியவில்லை.


RangaRakes tamilnavarasam.com

இந்தக் காங்கிரசின் வெற்றியின் யோக்கியதையை விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் மக்களை ஏமாற்றி, காந்தியாரும், அவர்களது இரண்டொரு முக்கிய சிஷ்யர்களும் தங்களை விளம்பரம் செய்து கொள்ளப் பாடுபட்டு வெற்றியடைந்தார்கள் என்பதல்லாமல் வேறு ஒன்றும் சொல்ல நமக்குத் தோன்றவில்லை.

## காந்தி விலகிய இரகசியம்

காங்கிரஸ் பெருமை இவ்வாறாக இனி காந்தியார் விலகிய இரகசியத்தைப் பற்றி சிறிது ஆராய்வோம்.

காந்தியார், தான் முக்கியமாய்க் கருதிய இரண்டு விஷயங்களில் அதாவது சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு என்பவைகளில் காங்கிரசின் மூலம் தோல்வியடைந்து விட்டதையும் அவற்றில் பொது ஜனங்களுக்கும் தனது அத்தியந்த சிஷ்யர்களுக்கும் நம்பிக்கையில்லாமல் போய்விட்டது என்பதையும் உணர்ந்து கொண்டார்.

ஆனால் சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு ஆகிய இரண்டும் தன் மட்டில் தோல்வியடையவில்லை என்று இன்னமும் கருதிக்கொண்டிருப்பதாய் காட்டிக் கொள்ளுகிறார்.

இந்த நிலைமையில் காந்தியார் ஒன்றா சட்ட மறுப்பு, சத்தியாக்கிரகம் ஆகியவைகளை தான் கைவிட்டு விட்டதாகச் சொல்லி காங்கிரசில் இருக்க வேண்டும். அல்லது சட்டமறுப்பிலும், சத்தியாக்கிரகத்திலும் நம்பிக்கையில்லாத காங்கிரசிலிருந்து தான் விலகிவிட வேண்டும். இந்த இரண்டிலொரு நிர்பந்தத்தில் காங்கிரஸ்காரர்கள் காந்தியாரைக் கொண்டு வந்து வைத்து விட்டதால் அவர் விலகிவிட்டேன் என்று சொல்லித் தீர வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

அன்றியும் லார்ட் வில்லிங்டன் அவர்களும் ‘‘சட்ட மறுப்பை அடியோடு கைவிட்டுவிட்டோம். இனி சட்டத்திற்கு அடங்கி நடக்கின்றோம் என்று சொல்லாதவரை காங்கிரஸ்காரர்களுடன் எவ்வித சம்மந்தமும் வைத்துக்கொள்ள முடியாது என்றும், அடக்குமுறைச் சட்டங்களை நீக்க (கேன்சில் செய்ய) முடியாது’’ என்றும், கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டதால் காங்கிரஸ்காரர்கள் உத்தியோகம், பதவி, பட்டம் முதலியவைகள் பெறுவதற்கு முடியாமல் இருந்து வருகிறதாதலால் ‘‘சட்ட மறுப்பில் நம்பிக்கையுள்ள காந்தியார் காங்கிரசிலிருந்து விலகி விட்டார். இனி காங்கிரசு சட்டத்துக்கு உட்பட்ட சபை ஆகி விட்டது. நாங்களும் சட்டத்துக்கு கட்டுப்பட்டு நடக்கும் நல்ல பிள்ளைகள் ஆகிவிட்டோம். ஆதலால் நாங்கள் அதிகாரம், பதவி, பட்டம், உத்தியோகம் ஆகியவைகள் பெறுவதற்கும், அடைவதற்கும் தகுதி உடையவர்கள் ஆகிவிட்டோம்’’ என்று சொல்வதற்கு சவுகரியம் அளிப்பதற்கும் காந்தியார் விலகித் தீர வேண்டியதாய் இருந்தது.



இந்தக் காரணங்கள் அல்லாமல் காந்தியாரின் உள்துறைச் சிஷ்யர்களின் சிஷ்யர்கள் இரண்டொருவர் சொல்லும் காரணம் மற்றொன்று என்னவென்றால், தோழர் காந்தியார் காங்கிரசில் சர்வாதிகாரியாய் இருந்து வந்ததின் பயனாய் இந்தியாவுக்குள் சமதர்மக் கொள்கையும், பொதுவுடமைக் கொள்கையும் பரவாமல் காத்து வந்தாகவும், அதன் நன்றி விசுவாசத்தை இந்த அரசாங்கம் அறியாமல் காந்தியாரைச் சர்க்கார் அவமானப்படுத்திவிட்டதால் அவர் கோபித்துக் கொண்டு விலகிவிட்டதாகவும், இதனால் இனி இந்தியாவில் சமதர்மமும், பொதுவுடைமையும் பரவிவிடும் என்றும், அப்போது அரசாங்கத்தார் தமது தவறை உணர்ந்து மறுபடியும் காந்தியாரைத் தாம்பூலம் வைத்து அழைப்பார்கள் என்றும் சொல்லி திருப்தி அடைகிறார்கள்.

இவை எப்படி இருந்தாலும் சரி, காந்தியாரின் வாய் மொழியாகவே ‘‘காங்கிரசைப் பலப்படுத்த வேண்டும், பரிசுத்தப்படுத்த வேண்டுமென்று சொல்லி அதற்காகத்தான் அவர் விலகினார்’’ என்று காந்தியார் பண உதவியும், ஆதரவும் பெற்று நடக்கும் பத்திரிகைகளே கூப்பாடு போடுகின்றன.

ஆகவே இதிலிருந்து காங்கிரஸ் பலமுள்ளதாக இல்லை என்பதும் பரிசுத்தமுள்ளதாக இல்லை என்பதும் விவகாரத்துக்கு இடமில்லாத விஷயங்களாகும்.

கோடிக்கணக்கான ரூபாய்களை வசூலித்து செலவு செய்தும் ‘‘லக்ஷக்’’ கணக்கான மக்களை ஜெயிலுக்கு அனுப்பியும், ஆயிரக்கணக்கானவர்கள் ராஜபோகங்களைத் துறந்து சந்நியாசிகளாகியும், நூற்றுக்கணக்கானவர்கள் ஆவி விட்டும் ‘‘உலகம் போற்றும் மகாத்மா’’வினால் சர்வாதிகாரப் பதவி ஏற்கப்பட்டும் நடத்தப்பட்ட காங்கிரஸ் தோல்வியுற்றும், அதன் கொள்கைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுமிருப்பதை கௌரவமாய், கண்ணியமாய் ஒப்புக்கொண்டு அதன் முட்டாள்தனமான கொள்கைகளை மாற்றிக் கொள்ளாமல் ‘‘காங்கிரசில் உள்ளவர்களிடம் நாணயமில்லை. அவர்கள் வேஷக்காரர்கள், சுயநலக்காரர்கள்’’ என்றெல்லாம் பாடுபட்ட ஆட்கள் மீது பழி போட்டுவிட்டு ‘‘காங்கிரசைப் பலப்படுத்தவும், பரிசுத்தப்படுத்தவும் நான் காங்கிரசை விட்டுப் போகிறேன்’’ என்றால் இனி வேறு எந்த வழியில் தோழர் காந்தி பலப்படுத்தி பரிசுத்தப்படுத்தப் போகிறார் என்பது நமக்கு விளங்கவில்லை.

காங்கிரசை விட்டுப் போகும் காந்தியாரது சிஷ்யர்கள் ‘‘மச்சான் செத்தால் நல்லதாச்சு அவருடைய கம்பளி நமக்காச்சு’’ என்று சொல்வது போல் காந்தியார் போனால் போகட்டும் ஆசிர்வாதம் செய்து அனுப்பலாம். அவருடைய பெயரால் ஓட்டுப் பெற்றுப் பதவி பெறலாம் - அதிகாரத்துக்குப் போகலாம் என்கின்ற கருத்திலேயே ஒவ்வொருவரும் அறிக்கை வெளியிட்டு வருகிறார்களே தவிர, வேறு ஒரு வேலைத்திட்டமோ, வேலை மாற்றமோ ஏற்படுத்தும் விஷயத்தில் கவலைப்படவேயில்லை.



RangaRakes tamilnavarasam.com

இன்றைய தினம் பம்பாய் காங்கிரசுக்குச் சென்று வந்த ஒருவரை அணுகி காங்கிரசில் என்ன விசேஷம் நடந்தது? என்று கேட்டால் அவர் என்ன பதில் சொல்லக் கூடும்? ''பெரிய கூட்டம்'' ''காந்தியார் விலகிப் பயணம் சொல்லிக் கொண்ட காட்சி மிகப் பரிதாபமாய் இருந்தது'' ''காங்கிரஸ் பிரசிடெண்ட் ராஜேந்திர பிரசாதே காந்தியார் கால்தொட்டுக் கும்பிட்டார்'' ''இந்தச் சமயத்தில் எல்லோரும் கண்ணீர் விட்டார்கள்'' என்பன போன்ற பாட்டிமார்கள் வர்ணிக்கும் அணி இலக்கணப்படிதான் வர்ணிப்பார்களேதவிர வேறு என்ன சொல்லக் கூடும் என்று கேட்கின்றோம்.

ஒரு பெரிய தேசத்தின் இரண்டு நாளைக்கு ஒரு தடவை கூட சமையல் செய்து சாப்பிட வகையில்லாத கோடிக்கணக்கான மக்களையுடைய தேசத்தில் - முக்காலேயரைக்கால்வாசி ஜன சமூகம் ஆகிய சுமார் 30 கோடி மக்களை எழுத்து வாசனை இல்லாமல் பல்லாண்டுகளாக வைக்கப்பட்டிருக்கும் தேசத்தில் - தேசத்தின் செல்வமெல்லாம் கல்லுக்கும், கூத்திக்கும், கள்ளுக்கும், சாராயத்துக்கும், விவகாரங்களுக்கும், வில்லங்கங்களுக்கும் பாழாக்கிக் கொண்டு, பாடுபடும் மக்கள் பட்டினியாயும், தற்குறிகளாயும், நோயாளிகளாயும் வீடு வாசல் அற்ற லம்பாடிக் கூட்டம் போல் நிழலில் கிடப்பவர்களாயும் இருக்கும் தேசத்தில் - இப்படிப்பட்ட இந்த தேசத்துக்கும், இந்த ஜன சமூகத்துக்கும் தாங்கள்தான் பிரதிநிதிகள், தாங்கள்தான் தர்மகர்த்தாக்கள், தாங்கள்தான் தேசாபிமானிகள், தாங்கள்தான் தேச பக்தர்கள், தங்கள் ஸ்தாபனம் தான் பிரதிநிதி ஸ்தாபனம் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு கூட்டத்தார்களின் நடவடிக்கையும், முயற்சியும் இந்த யோக்கியத்தில் இருக்குமானால் இனி இந்த நாட்டுக்கும், மக்களுக்கும் என்றுதான் விமோசனம் ஏற்படப் போகிறது? என்று கேட்கின்றோம்.

## கிராம வேலையின் மூலம் சுயராஜ்யம்

நிற்க, 1921ல் ஒத்துழையாமை ஆரம்பித்த காலத்தில் நிர்மாணத் திட்டத்தின் மூலமேதான் சுயராஜ்யம் அடைய முடியுமென்று தோழர் காந்தியார் சொன்னதை நம்பி எவ்வளவு காரியம் செய்யப்பட்டது என்பது வாசகர்களுக்குத் தெரியாததல்ல. அதாவது கதர், மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு, இந்து முஸ்லீம் ஒற்றுமை ஆகிய நான்கு காரியங்களுக்கும் ஒரு கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டது. லக்ஷம் மெம்பர்கள் சேர்க்கப்பட்டது. 50, 60 ஆயிரம் பேர்கள் ஜெயிலுக்குச் சென்று மூத்திரம் பெய்யும் கலயத்தில் தண்ணீர் சாப்பிடும்படியான கஷ்டங்கள் அனுபவிக்கப்பட்டன.

இந்த சம்பவங்களில் ''ஒரு வருஷத்தில் சுயராஜ்யம், 6 மாதத்தில் சுயராஜ்யம், இதோ கண்ணுக்குத் தெரிகிறது சுயராஜ்யம், அதோ கண்ணுக்குத் தெரிகிறது சுயராஜ்யம்'' என்றெல்லாம் சொல்லப்பட்டு ஒரு பயனும் ஏற்படாமல் போய் கடைசியாக நிர்மாண திட்டத்துக்கு ஜெயிலுக்குப் போகும் வேலை நிறுத்தப்பட்டு பிரசாரம் ஒத்தி வைக்கப்பட்டது.

அதற்குப் பின் கதர் ஒன்றினாலேயே சுயராஜ்யம் வரும் என்று சொல்லப்பட்டு அதற்காகப் பல லக்ஷம் ரூபாய்கள் வசூல் செய்யப்பட்டு அப்போதும், இதோ சுயராஜ்யம், அதோ சுயராஜ்யம், லங்காஷயரில் பஞ்சம் வந்து விட்டது, மான்செஸ்டரில் பட்டினி ஏற்பட்டுவிட்டது, வெள்ளைக்காரர்கள் மண்டி போட்டு சுயராஜ்யங் கொண்டு வந்து கொடுக்கப் போகிறார்கள் என்று சொல்லப்பட்டது.

பிறகு அதுவும் நடக்காமல் போகவே, உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பித்து சுயராஜ்யம் பெறாமல் வீடு திரும்புவதில்லை என்று சபதம் செய்து அதற்காக ஒரு பெரிய சட்டமறுப்பும் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கும் 40 ஆயிரம் 50 ஆயிரம் பேர்கள் சிறை செல்லவும், அடிபடவும், கைகால் முறியவும், உயிர் துறக்கவுமான கஷ்டங்கள் ஏற்பட்டு கடைசியாக சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்தால் சட்ட மறுப்பை நிறுத்திவிடுவதாக வாக்குக் கொடுத்து விடுதலை பெற்று, பின்னும் எவ்வளவோ பட்டினி கிடந்தும் ராஜிக்குப் போயும் ஒன்றும் முடியாமல் இந்த காங்கிரஸ் கூட்டி இதிலிருந்து காந்தியார் விலகும் திருவிழா நடத்தப்பட்டது என்பதோடு அத்தியாயம் முடிந்தது என்றாலும் தோழர் காந்தியார் இப்போது ''கிராம சீர்திருத்த வேலை மூலம் சுயராஜ்யம் வாங்கப் போகிறேன்'' என்று புதியதொரு வாக்குத்தத்தம் அல்லது வழி சொல்லுகிறார்.

இனி இதற்கு ஒரு ஸ்தாபனம் ஏற்படலாம். இதன் பேராலும், பல லட்சம் ரூபாய்கள் வசூல் செய்யலாம். பல வேலையில்லாத ஆட்களுக்கும், சோம்பேறிகளுக்கும், பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்த இருக்கிறவர் களுக்கும் வேலையும் நல்ல ஊதியமும் கிடைக்கலாம். இதன் அனுபவம் ஜனங்களுக்குத் தெரிந்து இதுவும் பயன்படவில்லை என்பதை உணர்ந்து இந்த வேலைத்திட்டத்தை வெறுக்கவும், இந்த ஸ்தாபனத்தை அலக்ஷியமாய் கருதவும் சில வருஷங்கள் பிடிக்கலாம். அதன் பிறகு காந்தியார் யார் மீதாவது குற்றம் கூறிவிட்டு அதை விடுத்து வேறு ஸ்தாபனம் ஆரம்பிக்கலாம். அதிலும் இதே கதி அடையலாம். அப்புறம் யாராவது கேட்டால், அதாவது இந்தப்படி ஜனங்களை ஏமாற்றி மோசவார்த்தை கூறி பல லக்ஷம் வசூலித்து இப்போது இப்படி ஆகிவிட்டதே இது யோக்கியமா என்று கேட்கக் கூடிய நிலைமை ஏற்பட்டால் அதற்கும் ஒரே பதிலாக ''பணக்காரர்களிடம் உள்ள பணங்களை வசூல் செய்து ஏழைகளுக்குக் கொடுத்து உதவி செய்தேனே ஒழிய வேறில்லை'' என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லி விடலாம். இதுதான் முடியப் போகும் காரியமாகும் என்பதை இப்போதே சொல்லி விடுகின்றோம்.


RangaRakes tamilnavarasam.com

ஆனால் இந்த 14 வருஷ காலமாய் காந்தியாரின் இந்த திருவிளையாடல்களால் இந்தியா ஒரு கடுகளவாவது பொருளாதார இயல், சமுதாய இயல், அறிவியல், தொழிலியல் ஆகிய துறைகளில் முற்போக்கில்லாமல் தேங்கி இருந்து மற்ற நாடுகளைவிட எவ்வளவோ பின்னால் தள்ளப்பட்டுப் போய்விட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.

மேல் நாட்டார்கள் இந்தியாவை பரிகசிப்பதற்கு ஒரு வார்த்தை உபயோகித்து வருகிறார்கள். அது என்னவென்றால் உலகில் மற்ற தேசம் பொருளாதாரத்தை பிரதானமாகக் கருதி உலகாயுதத் துறையில் முன்னேறிக் கொண்டு போகின்றதேயொழிய இந்தியாவைப் போல ஆத்மீகத்துரையில் சிறிதும் முன்னேறவில்லை'' என்று சொல்லுகிறார்கள். இது இந்தியா இன்னமும் காட்டுமிராண்டித் தன்மையில் மிருகப்பிராயத்தில் இருந்து வருகின்றது என்று சொல்லுவதற்கு வேறு பாஷைப் பிரயோகமேயாகும்.

ஆதலால் தோழர் காந்தியார் இந்தத் தடவையாவது இந்தக் காரியத்திலாவது அதாவது தான் ''காங்கிரசை விட்டு விலகிவிட்டேன்'' என்று சொல்லும் காரியத்திலாவது உண்மையாயிருந்து நாணயத்தைக் காப்பாற்றினாரேயானால், இந்தியாவுக்கு சிறப்பாக ஏழை மக்களை சோம்பேரிக் கூட்டத்தார் ஏமாற்றி வஞ்சித்து வாழும் கொடுமையிலிருந்து விடுவிக்கும் பேற்றை அடையச் செய்யலாம். உலக பந்தயத்தில் மற்ற நாடுகளோடு இந்தியாவையும் சேர்த்து ஓட வைக்கலாம். அப்படிக் கில்லாமல் காங்கிரசுக்குத் தோல்வி என்றவுடன் ஓடிவிட்டு அதற்கு செல்வாக்கு ஏற்படும்போது (கண்டிப்பாக காங்கிரசு கொஞ்சகாலத்துக்குள் செல்வாக்குப் பெறத்தான் போகின்றது என்பதும் அப்போது இன்றைய தினம் காங்கிரசைப் புகழ்ந்து புராணம் பாடி இருக்கும் பார்ப்பனர்களே காங்கிரசை வசை புராணம் பாடப் போகிறார்கள் என்பதோடு) ''தேசத்தைக் காப்பதற்காக காங்கிரசுக்கு மறுபடியும் வந்து காப்பாற்ற வேண்டு'' மென்று காந்தியாரை அழைக்கப் போகிறார்கள் என்பதும் உறுதியான காரியமேயாகும். மறுபடியும் உள்ளே வந்து புகுந்து கொள்ளுவதுமான காரியங்கள் பொது நலத்துக்கு யாதொரு காரியத்தையும் செய்துவிடாது என்பதோடு கடைசியாக ஒரு நாளைக்கு இந்தத் தந்திரங்களும், சூதுகளும் காந்தியாருக்குத் தற்கொலை செய்து கொள்ளுவதற்குத்தான் காரணமாக இருக்குமே ஒழிய வேறொன்றுக்கும் சிறிதும் பயன்படாது என்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 04.11.1934**



# சர். ஷண்முகம் வெற்றி

தோழர் சர். ஆர்.கே. ஷண்முகம் தேர்தல் விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் என்பவர்களும், காங்கிரஸ் பத்திரிகைகள் என்பவைகளும் மனதறிந்த பொய்யை தைரியமாய் பேசியும், எழுதியும் வருவதானது காங்கிரசின் யோக்கியதையையும் அதிலுள்ளவர்களின் நாணையத்தையும் தெரிந்துகொள்ள ஒரு சாதனமாகும்.

பாக்கி இருக்கும் தேர்தல்களில் தங்களுக்கு தோல்வி ஏற்படாமல் இருப்பதற்காகச் சில பொய்கள் சொல்லலாம் என்பது ஒரு அளவுக்கு அனுமதிக்கப்பட்டதானாலும் சத்தியமும், நீதியும் அடிப்படையாகக் கொண்ட காங்கிரஸ் என்பதைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஜனங்கள் அந்த ஒரு அளவையும் தாண்டி மனதறிந்த பொய்யைப் பரப்ப முயற்சிப்பது என்பது மிகவும் வெறுக்கத் தகுந்த காரியமேயாகும்.

நிருபர்கள் என்கின்ற பெயரால் எதையும் எழுதிக் கொள்வதற்கு பத்திரிகை உலகில் பழக்கம் இருந்து வருகின்றது என்றாலும் ஒரு வாரத்தில் பொய்யாகப் போகும் விஷயங்களைக் கூட எழுதுவது என்பது சீக்கிரத்தில் பொது ஜனங்களிடம் மதிப்பை இழப்பதற்குத் தான் பயன்படுமே தவிர காரிய சித்திக்கு அனுகூலமாகாதென்றே சொல்லுவோம்.

கடசித் தடவை நடந்த சென்னை சட்டசபைத் தேர்தலில், பனக்கால் அரசர் தொகுதியில் இதே மாதிரியாகவே அரசருக்குப் போட்டியாய் நின்ற தோழர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யருக்கு ஜெயம் கிடைத்து விட்டது என்று பொய் ஆரவாரம் செய்து மக்களை ஏமாற்றினார்கள். ''ஜஸ்டிஸ் கட்சி மாண்டு விட்டது'' என்று பார்ப்பனர்கள் புகையிலை வழங்கினார்கள். டிங்-டாங்-டிங் என்று தலையங்கமிட்டு சாவோலை பாடினார்கள்.

இதற்கு எல்லாப் பார்ப்பனர்களும், பார்ப்பனப் பத்திரிக்கைகளும் அஸ்திவாரமாகவும், ஆதரவாகவும் இருந்தார்கள். பொய்பிரசாரத்தின் பயனாய் மற்ற தொகுதி தேர்தல்கள்கூட பாதிக்கப்பட்டுவிட்டன.

என்றாலும், இவற்றாலெல்லாம் பார்ப்பனர்கள் அடைந்த பலன் என்ன என்று பார்ப்போமானால், முன்னைய நிலைமையை விட மோச நிலைமையையே அடைந்தார்கள் என்பதோடு தாங்களாகவே தங்கள் தலையை மறைத்துக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு வந்தார்கள். பிறகு



RangaRakes tamilnavarasam.com

காந்தியார் உப்பு சத்தியாக்கிரக நாடகம் ஆரம்பித்த பின்னரே சிலருக்காவது வெளியில் தலை நீட்டக்கூடிய யோக்கியதை ஏற்பட்டது.

இப்போதும் இந்த சூட்சிகளினாலெல்லாம் அந்த நிலைதான் இன்னும் அதைவிட வலுவான அஸ்திவாரத்தின் மீது ஏற்படுமே அல்லாமல் பார்ப்பனரல்லாதாருக்கு ஏதும் மோசம் ஏற்பட்டு விடும் என்றோ சிறிதும் கருதவேண்டியதில்லை.

தோழர் ஷண்முகம் முன்னுக்கு வருகிறார், இன்னும் வரப்போகிறார் என்கின்ற பொறாமையே இன்று பார்ப்பனர்களை இவ்வளவு தூரம் அவருக்கு விரோதம் செய்யத் தூண்டுகிறதே ஒழிய மற்றபடி ஷண்முகம் செய்த குற்றம் இன்னது என்று சொல்ல எவரும் முன்வரவே இல்லை.

தோழர் ஷண்முகம் உறுதியாய் நம்பி இருந்த ஓட்டுகள் சிலது மாறிவிட்டது உண்மையாய் இருக்கலாம். அதற்குக் காரணம் சென்னை முதலிய இடங்களில் உள்ள வக்கீல் பார்ப்பனர்களுடைய ஆதிக்கத்திற்கு உட்பட்ட சிலர் வேறு மார்க்கமில்லாமல் - தங்களுடைய ஜீவாதாரங்கள் சில வக்கீல்கள் கையில் சிக்கி இருக்கிற காரணத்தால் பயந்து அவர்களுக்கு அடிமைப்பட வேண்டியதாயிற்று.

என்றாலும், அதனால் தோழர் ஷண்முகத்துக்கு எதிர்பார்த்ததிலிருந்து சில ஓட்டுகள் குறைந்து விட்டது என்று சொல்லுவதுதான் யோக்கியமாகுமே ஒழிய, ஷண்முகம் தோற்றுவிட்டார் தோழர் சாமி வெங்கிடாசலம் செட்டியார் 200 ஓட்டுகள் அதிகத்தில் வெற்றி பெற்று விட்டார் என்று சொல்லுவது மனதார துணிந்து கற்பனை செய்து சொல்லும் பொய்யே தவிர வேறு ஒன்றும் இல்லை.

செட்டி நாட்டில் சில ஓட்டுகள் தவறிவிட்டது என்றாலும் ஆந்திர நாட்டில் எதிர்பார்த்ததற்கு மேலாகவே கிடைத்து அந்தக் குறைவை பூர்த்தி செய்து தக்கதொரு வெற்றி ஏற்பட்டிருக்கிறது என்பதை தைரியமாய் சொல்லுவோம்.

இந்தப் பொய்ப் பிரசாரப் பத்திரிக்கைகளுக்கும் விஷமப் பிரசாரக் கூலிகளுக்கும் வெட்கம் வரத்தக்க நிலையில் - புத்தி கற்பிக்கத் தக்க நிலையில் ஷண்முகத்தின் வெற்றிச் சேதி வெளியாகப் போகின்றது என்கின்ற விஷயத்தில் நமக்கு சிறிதும் சந்தேகமில்லை.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 04.11.1934**



# சுயமரியாதை இயக்கமும் ஜஸ்டிஸ் கக்ஷியும்

சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்த கால முதல்கொண்டு பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதைக்காக உழைத்து வருவதும் ஜஸ்டிஸ் கக்ஷிக்கு உதவி புரிந்து வருவதும், ஜஸ்டிஸ் கக்ஷிப் பிரமுகர்களுடைய ஆதரவு பெற்று வந்ததுமான காரியம் எதுவும் சுயமரியாதை இயக்கத்திலுள்ள எவரும் அறியாததல்ல. ஜஸ்டிஸ் கக்ஷியானது சென்ற தேர்தலில் நின்ற காலத்தில் சுயமரியாதை இயக்கம் அதற்கு உதவி புரிந்து வந்திருக்கிறது.

செங்கல்பட்டில் கூடின சுயமரியாதை மாகாண கான்பரன்ஸ் என்பது முழுதும் ஜஸ்டிஸ் கக்ஷி பிரமுகர் ஆதரவிலும், பிரசன்னத்திலும் நடந்ததும், மற்றும் ஜஸ்டிஸ் கக்ஷியைச் சேர்ந்த இளைஞர், முதியோர் ஆகியவர்கள் பெரிதும் சுயமரியாதை இயக்கத்தில் இருந்து வந்ததும் சுயமரியாதை இயக்கத்திலுள்ள முதியோர், இளைஞர் ஆகியவர்கள் பெரிதும் இன்னும் ஜஸ்டிஸ் கக்ஷியில் இருந்து வருவதும் ஒருவரும் அறியாததல்ல.

மற்றும் சுயமரியாதை இயக்கம் அதனுடைய சமதர்மக் கொள்கையைக் கூட பார்ப்பனரல்லாத சமூகம் சமூகத்துறையில் சமதர்மம் அடைய வேண்டும் என்பதை முதன்மையாகக் கொண்டது என்பதை அநேக சுயமரியாதைக்காரர் ஒத்துக்கொண்டும், அதை அமுலில் நடத்த முயற்சித்துக் கொண்டும் வந்திருக்கிறார்கள். இன்னும் வருகிறார்கள் என்பது சிறிது கூட புதிதானது என்றோ, ரகசியமானது என்றோ யாரும் சொல்லிவிட முடியாது. எனவே பார்ப்பனரல்லாதார் சமூக முன்னேற்றம் என்பதைக் கருதி ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டிய சமயம் ஏற்பட்டால் அதைச் செய்ய ஆசைப்படுகின்றவர்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் வெட்கப்படவோ, வருத்தப்படவோ அவசியமில்லை என்பதை சுயமரியாதை இயக்க இளைஞர்களுக்கும், வாலிபர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 04.11.1934**



RangaRakes tamilnavarasam.com

# சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் ராமசாமியின் முழக்கம்

## A. ராமசாமி முதலியாருக்கு ஆதரவு

''இன்று தோழர் ஷண்முகம் இக்கூட்டத்திற்கு வந்து பேச வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால் அவருக்குத் தேக அசௌக்கியமேற்பட்டிருப்பதை முன்னிட்டு அவரால் வரமுடியவில்லை. நமது தேர்தல் விஷயமாக கவலைப்பட வேண்டாமென்று பலர் பலவிதமாக பத்திரிகைகளில் எழுதி வருவதை நம்ப வேண்டாமென்றும், தாம் வெற்றி பெறுவது நிச்சயமென்று அவர் உங்களுக்குத் தெரிவிக்கும்படி என்னிடம் சொன்னார். (பலத்த கரகோஷம்)

இன்று தொண்டர்களைக் கூட்டி அவர்கள் தேர்தலில் எப்படி நடந்து கொள்வதென்பது பற்றி அறிவுறுத்துவதே இக்கூட்டத்தின் நோக்கமாகும். ஆனால் இப் பெரிய கூட்டத்தில் அது சாத்தியமல்ல வாகையால் தொண்டர்களாகச் சேர விரும்புவோரெல்லாம் ஞாயிற்றுக் கிழமை மாலை தியாகராய மெமோரியல் ஹாலுக்கு வந்தால் அவர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறையையும் இதர விவரங்களையும் தெரிவிப்போம்.

### தேர்தல் பிரசாரப் போக்கு

தோழர் ராமசாமி முதலியார் தேர்தல் விஷயத்தில் மிக்க ஊக்கமுள்ள ஏராளமான வாலிபர்கள் இங்கே கூடியிருப்பது நல்ல அறிகுறியாகும். தேர்தல் பிரசாரத்தின் போக்கு உங்களுக்கு நன்றாகத் தெரியும். புதிதாக கூற வேண்டியது ஒன்றுமில்லை என்று நினைக்கின்றேன். போட்டி ஏற்பட்டு விட்டாலேயே அபேட்சகர்களும் அவர்களது கோஷ்டியினரும் ஒருவர் மீது மற்றவர் தூஷணையாகப் பேசி வெற்றிபெற தம்மால் இயன்றவரையில் முயற்சி செய்வதென்பது வழக்கமாகவிருக்கிறது. நமது எதிர்கட்சியினர் பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றனரென்பது பற்றியும் ஆபாசமான விஷயங்களைப் பறை சாற்றி வருகின்றனரென்பது பற்றியும் நீங்கள் வருந்தக் கூடாது. தேர்தல் பிரசார முறை அப்படியிருக்கிறது. உண்மையைத் தெரிந்து கொண்டு ஓட்டுப் போட வேண்டுமென்ற நோக்கம் நம் ஜனங்களில் பெரும்பான்மையோருக்கு இல்லை. பெரும்பான்மையோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்.



அவர்கள் ஏதாகிலும் விஷயம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் புரோகிதர்கள், வக்கீல்கள் முதலியோர் மூலமே தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. நமது தேச மக்கள் அறிவாளிகளென்று நாம் பெருமை பாராட்டிக் கொண்டபோதிலும் 100-க்கு 2 விழுக்காடு பேர்களே படித்தவர்களாக விருக்கின்றனர். உயர் ஜாதியினர், பணக்காரர்கள், உத்தியோகஸ்தர்கள் இவர்களது புதல்வர்களே படிக்கின்றனர். விவசாயிகள் முதலிய பெரும்பான்மையோருக்கு எழுத்து வாசனையே இல்லை. இந்நிலைமையில் ஜனங்கள் உண்மையைத் தெரிந்து கொள்வது எப்படி? யாருக்கு அதிகமாகப் புளுகத் தெரிகிறதோ, யாருக்கு தூஷணம் செய்யத் தைரியமிருக்கிறதோ அவரே தேர்தலில் வெற்றி பெறுவது சகஜமாக விருக்கிறது.

சென்னை மக்களது நிலைமை அப்படி அல்லவென்று நான் கருதுகின்றேன். இந்நகரிலுள்ளவர்கள் படித்தவர்கள்; விஷயம் தெரிந்தவர்கள். ஆனால் இவர்களிடம் பெரும் குறை ஒன்று உண்டு. கிராமவாசிகள் ஆபத்தென்றால் எல்லோரும் ஒன்று கூடி விடுவார்கள். படித்ததின் பலனாக நகர வாசிகள் அவ்விதம் ஒன்று சேருவதே கிடையாது. தங்களுக்கு அநுகூலமுண்டாவென்பதையே முக்கியமாகக் கவனித்து விட்டு, ஊர் வம்பில் தலையிடக் கூடாதென்று சும்மாயிருந்து விடுவார்கள். சிறுபான்மையோர் தங்கள் சமுதாய நன்மையைப் பொறுத்த விஷயத்தில் சிரத்தை கொண்டு ஒத்துழைக்கிறார்கள். பெரும்பான்மையோர் அவ்விதம் சிரத்தை கொள்வதேயில்லை. இதனால் முடிவில் சுயமரியாதையை இழக்கவும் நேரிடுகிறது. இதனை எதற்காக கூறுகிறேனென்றால் தோழர் சத்தியமூர்த்தி கோஷ்டியினர் பிராமண வாக்காளர்களது ஆதரவு நிச்சயமென்பதில் முழு நம்பிக்கை கொண்டிருக்கும்போது பெரும்பான்மையோரான பிராமணரல்லாதார் தங்களிடம் பதின்மடங்கு அதிக ஓட்டுகளிருந்தும், சிரத்தையும் தைரியமும் கொள்ளாமலிருக்கின்றனரென்பது பற்றியே தேர்தலில் கட்சி குண தோஷங்களைப் பிரசாரஞ் செய்த போதிலும் போட்டியானது சமூக விரோதத்தையும் ஜாதி வித்தியாசத்தையுமே அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகிறது. இதுவரையில் சமூக உயர்வு தாழ்வு, அனுகூலம் இவைகளையே குறியாகக் கொண்டே தேர்தல் நடந்து வந்துள்ளது. அவ்வப்போது பெயர்கள் மாறி வந்த போதிலும், அடிப்படைத் தத்துவம் சம்பந்தமாக வித்தியாசமே இல்லை. பிராமணர் பிராமணரல்லாதாரை நசுக்கிவிட்டு, உத்தியோகம் முதல் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் பெற தேர்தலைச் சாதனமாக உபயோகித்து வந்துள்ளனர். வெளிப்படையாக எதையும் சொல்லுவோர் காரியத்தில் கண்ணாக இருப்பதில்லை. பிராமணரோ அப்படியல்ல. அவர்கள் வாய் பேசாமல் காரிய சித்தியிலேயே கருத்துடையவர்களாக விருக்கின்றனர்.



RangaRakes tamilnavarasam.com

## காங்கிரஸ் பிரசாரப் போக்கு

இந்நகரில் தோழர் சத்தியமூர்த்தி காங்கிரசின் பெயரால் அபேட்சகராக நிற்கின்றார். தோழர் முதலியார் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் அபேட்சகராக நிற்கிறார். காங்கிரஸ் தேர்தல் பிரசாரம் எப்படி நடந்து வருகிறெதென்பதைக் கவனிப்போம். ஜஸ்டிஸ் கட்சி தேசத்துரோகக் கட்சியென்றும், தோழர் ராமசாமி முதலியார் தேசத் துரோகி என்றும், காங்கிரஸ் மகாசபையே ஜனப்பிரதிநிதித்துவம் வாய்ந்த சபை யென்றும், தேச மக்களுக்காகப் பாடுபடுகிறதென்றும், ஆகவே காங்கிரஸ் அபேட்சகருக்கு ஓட்டுப் போட வேண்டுமென்றும் பிரசாரம் செய்து வருகின்றனர். காங்கிரஸ்வாதிகள் மட்டுமே தேசபக்தியும், தேசாபிமானமும் உடையவர்களென்றும் கூறி ஓட்டுக் கேட்கின்றனர்.

## காங்கிரஸ் சாதித்ததென்ன?

காங்கிரஸ் பிரசாரகர்கள் கூறுவது எவ்வளவு தூரம் உண்மை யென்பதை நாம் ஆராய்ச்சி செய்வோம். சமீபத்தில் பம்பாயில் காங்கிரஸ் மகாநாடு நடந்ததென்றும், பலத்த விவாதம் நடந்ததென்றும், மகாநாடு வெற்றிகரமாக முடிந்ததென்றும், செய்திகளை நாம் பத்திரிகைகளில் படித்தோம். ஆனால் அம் மகாநாட்டில் என்ன நடந்ததென்பதைச் சுருக்கமாகக் கூற இயலுமாவென்று நான் கேட்கின்றேன். என்ன தீர்மானம் நிறைவேற்றினார்கள்? நாட்டுக்கு அம் மகாநாட்டில் என்ன நன்மை ஏற்பட்டது? ஒருவரையொருவர் பாராட்டிக் கொண்டார்களே தவிர வேறு நடந்ததென்ன? இரண்டொருவருக்குப் பெரும் புகழ் ஏற்படுமாறு ஏற்பாடு செய்தனர். மற்றவர்கள் காங்கிரஸ் பிரவேசிக்காதபடி பந்தோபஸ்து செய்து கொண்டார்கள். தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சாதனங்கள் சிலவற்றைத் தேடிக் கொண்டனர். அம்மகாநாட்டில் நடந்ததென்ன வென்றால் மகாத்மா காந்தி காங்கிரசிலிருந்து விலகியது தான். இதற்காக ஒரு பெரிய மகாநாடு. லட்சக்கணக்கில் செலவு. காங்கிரசின் யோக்கியதை என்னவென்று காட்டவே நான் இதைக் குறிப்பிடுகின்றேன். இந் நாட்டில் காங்கிரஸ்தான் பிரதானமான சபையென்ற சமாதானம் மட்டும் போதுமா? அதனால் என்ன நன்மை ஏற்பட்டது. அது சாதித்ததென்ன? இவைகளைக் கவனிக்க வேண்டுமல்லவா?

## ''எனது அனுபவம்''

நான் காங்கிரசில் சேர்ந்து கண்ட அனுபவங்களையே எடுத்துக் கூறுகின்றேன், காங்கிரசிலிருந்த போது அதன் விதிகளையெல்லாம் முற்றிலும் அனுசரித்தவன். அப்போதே நாலைந்து தடவை சிறைப் பட்டிருக்கின்றேன். அநுபவப்பட்டு அதன் (காங்கிரஸின்) குண தோஷங்களைச் சொல்ல வந்தவனே தவிர வேறல்ல. சிறைபடும் போது நான் வெறும் ஆளாக இருக்கவில்லை. அப்பொழுது வியாபாரத்தில் மாத்திரம் நான் ரூ.800 வருமான வரி செலுத்திக் கொண்டிருந்தவன். இதர வரிகள் பலவும் 3000 ரூபாய் செலுத்தினேன். காங்கிரஸ் வேலைத்திட்டத்தை அனுசரித்தால் தேசத்துக்கு நன்மை ஏற்படுமென நம்பித் தொழிலை விட்டேன். கோர்ட்டுகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று வாயினால் மட்டும் பேசிவிட்டு நான் சும்மாயிருக்கவில்லை. ஆயிரக்கணக்கில் நஷ்டம் ஏற்படுவதையும் லட்சியம் செய்யாமல் நான் கோர்ட்டுகளைப் பகிஷ்கரித்து வந்தேன். நான் ஒரு பத்திரத்தில் ரூபாய் 28000 வசூல் செய்யாமல் விட்ட விஷயம் பழந் தேசபக்தரான தோழர் விஜயராகவாச்சாரியாருக்குத் தெரியும். அவர்தாம் எனது சார்பில் வக்கீலாக ஆஜாராகி அப் பணத்தை வசூல் செய்வதாக எனது அனுமதி கேட்டார். அப்பணம் வீணாக விடாமல் வசூல் செய்து காங்கிரஸிற்காகவாவது உபயோகிக்கலாமென்றும் கேட்டார். மேற்கொண்ட கொள்கையைக் கடைசிவரையில் அநுசரித்தே தீரவேண்டுமென்ற உறுதியால் நான் அதற்கு உடன்படவில்லை. அது பற்றி தோழர் விஜயராகவாச்சாரியார் என்னை பைத்தியக்காரனென்று கூறினார். வெளி வேஷத்திற்காகவோ அதில் சம்பாதிக்கவோ நான் காங்கிரஸ்வாதியாக விருக்கவில்லை. இப்பொழுது என் மீது குறை கூறுவோர்களிடமிருந் தெல்லாம், நான் அப்பொழுது உயர்ந்த நற்சாட்சி பத்திரங்கள் வாங்கியிருக்கிறேன். நான் இந்த காங்கிரஸ்வாதிகளுக்கு அடிமை போலவும் அவர்களது சொல்லைத் தவராமலும் நடந்து, பலன் உண்டாவென்பதை பரீட்சித்துப் பார்த்தவன். காங்கிரஸ் நிர்வாகம் ஒரு சமூகத்தாரின் நன்மையைக் குறித்தே நடக்கிறதென்பதை உணர்ந்தே நான் அதிலிருந்து விலகினேன். எனக்கு அதில் மதிப்போ யோக்கியதையோ இல்லையென்று நான் விலகவில்லை. காங்கிரசுக்கு அதிகாரம் ஏற்படுமானால் பொது ஜனங்களுக்கு என்ன பங்கு ஏற்படுமென்பதைத் திட்டப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று காஞ்சீபுரத்தில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் நான் தீர்மானம் கொண்டு வரவே இடமில்லாதபடி செய்தனர். காங்கிரசில் நியாயத்திற்கு இடமில்லை என்றும் தந்திரத்திற்கே இடமுண்டென்றும் உணர்ந்து நான் ஆரியா முதலியவர்களுடன் மகாநாட்டிலிருந்து வெளியேறினேன் . அதன் பிறகுதான் காங்கிரசையே தொலைக்க வேண்டுமென்ற ஊக்கம் ஏற்பட்டது. ஆனால் தற்போது காந்தியார் காங்கிரசிலிருந்து விலகிவிட்டதனால் காங்கிரசைத் தொலைக்க வேண்டுமென்ற விருப்பமே எனக்கில்லை. ஏனென்றால் இனி பார்ப்பனருக்கு சிபார்சுக்கு அங்கு ஆளில்லை. காஞ்சிபுரம் மகாநாட்டிலிருந்து விலகிய பிறகு நான் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்தேன். இந்த கட்சி வகுப்பு வாரி பிரதிநிதித்துவத்தை ஆதரிக்கிறது. வகுப்புவாரி பிரதிநிதித்துவமே கூடாதென்று காங்கிரஸ் மகாசபை கங்கணம் கட்டிக் கொண்டதால்தான்


RangaRakes tamilnavarasam.com

அது தற்போது சீர்குலைந்து விட்டது. சிறுபான்மையோருக்கு அவநம்பிக்கை ஏற்பட்டு அவர்கள் விலக வேண்டியதாயிற்று. அதுவே காங்கிரசின் பலக் குறைவுக்குக் காரணம். எல்லா வகுப்பாருக்கும் சமநீதி வழங்க காங்கிரஸ் ஒருப்படுமானால் தனிப்பட்ட சமூக ஸ்தாபனங்களே தோன்றியிருக்காது. வண்டிக்கு முன்பாரம் அதிகமானால் பின்புறம் கற்களைத் தூக்கிவைப்பது போலவே பிராமணரல்லாதாரில் சிலரை உபயோகித்து வருகின்றனர். (கரகோஷம்) ஒரு ஸ்தாபனத்தின் பெயரைச் சொல்லி ஓட்டு கேட்கும் போது, அந்த ஸ்தாபனத்தால் தேச மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்ட நஷ்டங்கள் என்னவென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுவது அவசியமென்பது பற்றியே நான் இதைக் கூறுகிறேன்.

## பிரசாரம் செய்யாத குறை

ஜஸ்டிஸ் கட்சி தனது நோக்கங்களையும், வேலைத் திட்டத்தையும் சரியான பிரசாரத்தின் மூலம் ஜனங்களுக்கு அறிவிக்காததாலேயே இப்பொழுது ஜஸ்டிஸ் கட்சியைத் தேசத்துரோகக் கட்சியென்று பிராமணர்கள் குறை கூறுகின்றனர்.

## ஜஸ்டிஸ் கட்சி வேலை

ஜஸ்டிஸ் கட்சி செய்துள்ள வேலை போல அக்கட்சி இல்லாத இதர மாகாணங்களில் வேலை நடந்திருக்கிறதாவென்று கேட்கிறேன். ஜஸ்டிஸ் கட்சி இம்மாகாண மந்திரி சபையை ஏற்று அரசியல், சமுதாய அபிவிருத்திக்காகப் பாடுபட்டுள்ளது. புரோகித ஆதிக்கம் ஒழிந்து விவசாயிகள், பெண்கள் அரசியலில் கலந்து கொள்ள முடிந்தது. சென்னையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஸ்தல ஸ்தாபனங்கள் முதலியவற்றில் ஸ்தானமுண்டு. வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையும் அமுலிலிருக்கிறது. இதர மாகாணங்களில் இத்தகைய அபிவிருத்திகள் ஏற்படவே இல்லை. ஜஸ்டிஸ் கட்சி செய்த பிரதிகூலம் என்னவென்று நான் கேட்கின்றேன்.

## தொண்டர்களுக்கு தடியடி

ஜஸ்டிஸ் கட்சி மந்திரிசபை யிருந்ததாலேயே சட்ட மறுப்பு இயக்கம் நடந்த போது இம்மாகாணத்தில் காங்கிரஸ் தொண்டர்களுக்கு தடியடி, சிறைவாசம் ஏற்பட்டதென்று காங்கிரஸ் பிரசாரகர்கள் குறைகூறுகின்றனர். ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளில்லாத இதர மாகாணங்களில் தொண்டர்களுக்கு அதிகாரிகள் தேங்காய் பழம் கொடுத்தார்களா அல்லது கலியாணம் செய்து வைத்தார்களாவென்று நான் கேட்கின்றேன். (சிரிப்பு) கைதிகளுக்கு மோர் கொடுக்க வில்லையாதலால் ஜஸ்டிஸ் கட்சி நாசமாகப் போக வேண்டுமென்று கூறுகிறார்கள். வேறு எந்த மாகாணத்திலாகிலும் சட்ட மறுப்பு கைதிகளுக்கு ஆடைத்தயிராக கொடுத்தார்களாவென்று நான் கேட்கின்றேன். ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த திவான் பகதூர் முதலியாரால் நெருப்பு பெட்டிக்கு வரி ஏற்பட்டதென்று கூறுவது எவ்வளவு இழிவான தென்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். சில பெண்கள் அற்பத்தனமாக சச்சரவிடுவது போலல்லவா இருக்கிறது காங்கிரஸ் தேர்தல் பிரசாரம்.

காங்கிரசின் சார்பில் பெண்கள் உள்பட ஆயிரக்கணக்கானவர்கள் சிறைபட்டதால் கண்ட பலன் என்ன? அம் முறை தப்பான தென்று கண்டு பிடித்ததைத் தவிர வேறென்ன? இதற்காக ஆயிரக்கணக்கில் செலவு. காந்தியார் தமது முயற்சி பிரயோஜனமற்றதென்று உணர்ந்து புது முயற்சியில் ஈடுபட உத்தேசித்திருப்பதைப் பாராட்டி சுதேசமித்திரன் பத்திரிகை தலையங்கம் எழுதியுள்ளது. காந்தியார் தமது கொள்கைகளை நம்பாமலே காங்கிரஸ்வாதிகள் வாசா கைங்கரியமாக நடந்து வருகின்றனரென்றும் காங்கிரஸிற்குப் பலமும் பரிசுத்தமும் ஏற்படும் பொருட்டு அதிலிருந்து விலகியதாகவும் கூறுகின்றார். உள்ளேயிருந்து காரியத்தைச் சாதிக்காமல் வெளியே இருந்து எப்படி காரியத்தைச் சாதிக்கக் கூடுமென்று நான் கேட்கின்றேன்.

## தேசத்துரோகி பட்டம்

காங்கிரஸிலிருந்து விலகிய என்னை தேசத் துரோகி என்று கூறுகின்றனர். காந்தியார் காங்கிரஸிலிருந்து விலகி விட்டாரே, அவரை தேசத்துரோகி என்று கூறாமல் அவர் பேரால் ஓட்டுக் கேட்கிறார்கள். காங்கிரஸ் பரிசுத்தமாக வேண்டுமென்று நானுந்தான் விரும்புகின்றேன். காங்கிரஸைச் சேராதவர்களெல்லாம் தேசத் துரோகிகளென்பது அயோக்கியத்தனமான வார்த்தையேயாகும்.

காங்கிரஸ் வேலைத் திட்டத்தை ஜனங்கள் நம்பி அநுசரித்தனர். உப்பு சத்யாக்கிரகத்திலும் சேர்ந்து சிறைப்பட்டனர். இதனால் கண்ட பலன் என்ன? சிறைபட்டவர்களை விடுதலை செய்ய ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டதே தவிர வேறு இல்லை. இதற்காக ஜனங்கள் மீது குறை கூறிவிட்டு காந்தியார் வெளியேறியது நாணையமாகாது.

## கோயிலை இடிப்பவன்!

தோழர் ராமசாமி முதலியார், காங்கிரஸ் வாதிகள் கூறியதற்கெல்லாம் தக்க பதில் கூறிய பிறகு காங்கிரஸ்வாதிகள் நூதன பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். நான் கோயிலை இடிக்க வேண்டுமென்று பிரசாரம் செய்கிறவனென்றும், அத்தகையவன் உதவியை நாடும் தோழர் முதலியாருக்கு ஓட்டுபோட வேண்டாமென்றும் கூறுகின்றனர். கோயிலை இடிப்பதால் கடவுளுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும். அக்கோயில்களால் வயிறு வளர்க்கும் கூட்டத்தார் வாயில் மண் விழுமே தவிர வேறில்லை.


RangaRakes tamilnavarasam.com

(சிரிப்பு) ஆயிரக்கணக்கான கோயில்களுக்கு கோடிக்கணக்கில் ஆடம்பரச் செலவு செய்வதை மிக்க பிரயோஜனகரமான முறையில் உபயோகிக்கலா மென்பதே எனது கவலை.

### உணர்ச்சி வேண்டும்

உங்களுக்கு உணர்ச்சி வேண்டும். தோழர் முதலியார் பிராமணரல்லாதார். அவருக்கு ஏற்படும் பெருமை உங்களுக்கும் உரியதாகும். நமக்கு ஏதாகிலும் காரியம் நிறைவேற வேண்டுமானால், இத்தகையவர்களாலேதான் அது சாத்தியமாக வேண்டும்.

### சமூக சீர்திருத்தத்தின் அவசியம்

நமது சமுதாயத்தில் ஆபாசங்கள் நிறைந்திருக்கின்றன. சீர்திருத்தமே பிரதானமாகும். அதற்குச் சாதகமாக வேலை செய்வோரை ஆதரிக்க வேண்டுவது நமது கடமை. சமுதாயத்தில் உயர்வு தாழ்வு அகல வேண்டும். வெள்ளையர் ஆட்சி மட்டும் சீரழிந்தால் போதாது. சமத்துவம் ஏற்பட வேண்டும்.

### தாலி அறுத்ததாக பழி

காங்கிரஸ் பிரசாரகர்கள் நாணயமற்றவர்களாக விருக்கின்றனர். காங்கிரஸ் போர்வையை உடுத்திக் கொண்டவர்களுக்கு பொய் பித்தலாட்டம் செய்ய லைசென்ஸ் ஏற்பட்டுள்ளது. சத்யாக்கிரகம் செய்த ஒரு பெண்ணின் தாலியை தோழர் ராமசாமி முதலியார் அறுத்தாரென்றும் வீண்பழி கூறுகின்றனர். பாமர ஜனங்களை இவ்விதம் ஏமாற்றி ஓட்டு பெற விரும்புகின்றனர். காங்கிரஸ்வாதிகள் புரட்டுக்குப் பிராமணரல்லாதார் அஞ்சாமல் வேலை செய்து வெற்றி பெற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன். ( கரகோஷம்)

*குறிப்பு: 02.11.1934 இல் சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் சென்னை தொகுதியில் இந்திய சட்டசபைக்கு நிற்கும் ஏ.ராமசாமி முதலியாரை ஆதரிக்கும் கூட்டத்தில் பேசியது.*

பகுத்தறிவு - சொற்பொழிவு - 11.11.1934



# காந்தியின் புதிய திட்டம்

## மக்களைக் காட்டுமிராண்டி வாழ்க்கைக்குத் திருப்புதல்

தோழர் காந்தி காங்கிரசை விட்டு விலகியது பொது ஜனங்களுக்கும், தேசத்துக்கும் பெரியதொரு லாபகரமான காரியமானாலும், வேறு வழியில் அவர் செய்யப் புகுந்திருக்கும் காரியம் மனித சமூகத்துக்கே மிகவும் பிற்போக்கான காரியமே ஆகும்.

எப்படி எனில் தனது கொள்கையில் காங்கிரசில் இருப்பவர்களுக்கு நம்பிக்கையில்லை என்பது ஒரு புறமிருக்க, தான் (காந்தியார்) இனி செய்யப்போகும் காரியங்களை அவர்கள் தடை செய்யக்கூடும் என்கின்ற எண்ணத்தின் மீதே விலகினாரானாலும் இனி அவர் விலகிச் செய்யப் போகும் காரியம் என்பது பெயர் மாத்திரத்தில் காதுக்கு இனிமையானதாக இருக்கின்றதே ஒழிய, காரியத்தில் முழு மோசமானதென்றே சொல்ல வேண்டி இருக்கிறது.

அதாவது, கிராம புனருத்தாரணம் என்றும், கிராம கைத்தொழில் சங்கமென்றும் சொல்லிக் கொண்டு பணம் வசூல் செய்ய ஆரம்பித்து விட்டார். டில்லியில் ஏதோ ஒரு கோடீஸ்வரர் 20 லட்சம் ரூபாய் கொடுத்ததாக பத்திரிகைகளில் சேதி வெளியாய் இருக்கின்றது. ஆனால் காந்தியார் அதை மறுக்கிறார் என்றாலும். ஏதோ சில ஆயிரக்கணக்கில் தான் வசூலாயிருக்கிறதென்றும், பின்னால் வசூலாகுமென்ற நம்பிக்கை இருக்கிறதென்றும், தொண்டர்கள் தான் அதிகம் வேண்டுமென்றும், தொண்டர்கள் சேர்ந்தால் பணம் தாராளமாய் கிடைக்குமென்றும் சொல்லுகிறார்.

இந்தச் சேதியைப் பார்த்த சோம்பேரிக் கூட்டத்தாருக்கு நாக்கில் தண்ணீர் சொட்ட ஆரம்பித்துவிட்டது. வேலை இல்லாமல் திண்டாடி ஒரு வேளைச் சோற்றுக்கு எதையும் விற்கும் மனோ தைரியமுடைய ‘‘வீரர்’’களுக்கு அந்தப்படி செய்ய தைரியமும் உற்சாகமும் ஏற்பட்டுவிட்டது.

எலக்ஷன் சமயத்தில் இப்படி ஒரு சேதியைப் பரப்பிவிட்டால் வயிற்றுச் சோற்றுத் தொண்டர்கள் ஏராளமாய் வந்து சொன்னபடி கேட்பார்கள் என்கின்ற எண்ணத்தின் மீதே ‘‘20 லக்ஷ ரூபாய் வசூலாகி விட்டது. அதற்கு தொண்டர்கள் வேண்டும்’’ என்று ஒரு சேதியும் ‘‘ரூபாய்



RangaRakes tamilnavarasam.com

வேண்டிய அளவு கிடைத்துவிடும். ஆட்கள் தான் வேண்டும்'' என்று ஒரு சேதியும் கட்டி விடப்பட்டுவிட்டதால் தேர்தலுக்கு தொண்டர்கள் ஏராளமாய் கிடைத்து விட்டார்கள். என்றாலும் இதனால் சாதித்துக் கொள்ளக் கூடியது இன்னது என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்தத் தந்திரங்களால் தேர்தல் வெற்றி தோல்வி ஒரு புறமிருந்தாலும் பொது ஜனங்களுக்குள் இவ்வித தந்திரங்களையும் சூட்சிகளையும் வெளியாக்க நல்லதொரு சமயமும், தேவையும் அதற்கான சவுகரியமும், சரக்கும் ஏராளமாய் கிடைத்தது என்கின்ற அளவில் நாம் சந்தோஷப் படாமல் இருக்க முடியவில்லை.

அரசியல் கக்ஷியானாலும், வகுப்புக் கக்ஷியானாலும், பெயரளவில் வித்தியாசமே ஒழிய கொள்கையளவில் வித்தியாசமில்லை என்பதோடு தேசீயக் கக்ஷியானாலும் சரி, தேசத்துரோகக் கக்ஷியானாலும் சரி, அல்லது சத்தியம் நீதி இவைகளை அடிப்படையாகக் கொண்ட கட்சியானாலும் அவை இல்லாத கட்சியானாலும் சரி, எல்லாம் பெயர்கள் மாத்திரம் வித்தியாசமே ஒழிய கொள்கையில் வித்தியாசமே இல்லை என்றும் பல தடவை சொல்லி வந்ததை இந்தத் தந்திரங்களும் சூட்சிகளும் உறுதிப்படுத்துகின்றன என்றுதான் சொல்ல வேண்டும்.

மதத்தின் மூலமாகவும், ஜாதிகள் மூலமாகவும், உத்தியோகத்தின் மூலமாகவும் பார்ப்பனர்களுக்கு இந்திய நாட்டில் இருந்த செல்வாக்கானது ஜஸ்டிஸ் கட்சி சுயமரியாதைக் கட்சி என்பவை ஏற்பட்ட காலம் முதல் கொண்டு சிறிது சிறிதாய் குறைந்து வந்ததுடன் பார்ப்பனர்கள் என்றாலே அவர்கள்மீது ஒரு வித அசூயை தோன்றும்படியான அளவுக்கு அவர்களது விஷயம் வெளியாகிவிட்டதனால், உடனே அவர்கள் தேசியம், தேசபக்தி என்கின்ற ஒரு புது மதத்தைச் சிருஷ்டித்து அதற்கு காந்தி என்கின்ற ஒரு மனிதரைத் தெய்வத்தன்மை உடையவராக ஏன்? தெய்வ அவதாரமாகவே ஆக்கி அவருக்குப் பூஜை புனஸ்காரம் நைவேத்தியம் உற்சவம் பஜனை செய்வதன் மூலமாகவே பஜனை செய்து பிழைக்க முடியுமான நிலைமைக்கு வந்துவிட வேண்டியவர்களாகி விட்டார்கள்.

இன்று இந்தியாவில் குறிப்பாக தென்னாட்டில் சிறப்பாகத் தமிழ்நாட்டில் காந்தி, காங்கிரஸ் என்று சொல்லாமல் பார்ப்பனர்களால் பிழைக்க முடியவில்லை என்பதோடு பார்ப்பனர்கள் போல் நோகாமல் பாடுபடாமல் வயிறு வளர்க்கலாம் எனக் கருதிப் படித்துவிட்டுத் திண்டாடும் மற்ற ஆட்களுடைய நிலைமையும் அது போலவே வந்து சேர்ந்துவிட்டது.

இந்தக் கூட்டத்தார் இந்த நாட்டில் உள்ளவரை சோம்பேரி மடமான காங்கிரசுக்கும் அதன் மடாதிபதியான காந்தியாருக்கும் பெருமை இல்லாமல் போக முடியாது. காங்கிரசும் காந்தியாரும் இதுவரை எப்படி நடந்து வந்திருந்த போதிலும் எவ்வளவு தவறுதல் மாறுதல் புரட்டுகள்



தந்திரங்கள் முதலிய குணங்கள் நிறைந்தவர்களாய் இருந்தாலும் அவை வெளியாகவோ மக்களால் வெறுக்கப்படவோ கூடிய நிலைமை சுலபத்தில் ஏற்படுவதென்பது மிகவும் கஷ்டமாகவே இருக்கலாம்.

ஆனாலும் இன்று உலகில் பொதுவாக தோன்றியிருக்கும் ஒருவித புத்துணர்ச்சியானது சுலபத்தில் வெளியாக்கி வெறுக்கப்படச் செய்யச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

## சுயராஜ்யத்திற்கு புதிய வழி

நிற்க, காந்தியாரின் புதிய கொள்கையாகிய "கிராம சீர்த்திருத்தத்தின் மூலம் சுயராஜ்யம் சம்பாதிக்கப் போகிறேன்" என்னும் விஷயத்தைப் பற்றி சிறிது யோசிப்போம். இதைத்தான் சுயராஜ்யம் என்று காந்தியார் இதுவரை சொல்லி வந்த மார்க்கங்களை விட மோசமான மார்க்கமென்று நாம் சொன்னோம்.

ஏனென்றால் கிராம புனருத்தாரணத்துக்கு தோழர் காந்தியார் 4 திட்டங்கள் சொல்லுகிறார். அவற்றில்

ஒன்று:- ஆதரவற்று அழிந்து போகக் கூடிய நிலைமையில் இருக்கும் கைத்தொழில்களை ஆதரித்துப் புனருத்தாரணம் செய்வது.

இரண்டு:- அந்த கைத்தொழில்கள் மூலம் செய்யப்பட்ட சாமான்களை ஜனங்கள் வாங்கும்படி செய்வது என்பனவாகும்.

இந்த இரண்டு காரியங்களினுடையவும் முடிவு என்ன ஆகும் என்பதை ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் இந்த 20-வது நூற்றாண்டில் உள்ள மக்களைக் காட்டுமிராண்டிப் பருவத்துக்கு அழைத்துச் செல்வது என்பதாகத்தான் சொல்ல வேண்டும்.

ஏழைகள் ரக்ஷிப்பு என்கின்ற பெயரால் எப்படி ஒன்றுக்கு மூன்று பங்கு பஞ்சைப் பாழாக்கி பெலமற்றதும், பார்வையற்றதும் பிடித்த மில்லாததுமான துணியை உண்டாக்கி அதை ஒன்றுக்கு மூன்று பங்கு விலை கொடுத்து மக்களை வாங்கும்படிச் செய்து நூற்ற ஆட்களுக்கு மணிக்கு ஒரு காசு கொடுத்துவிட்டு பிரசாரத்துக்காக என்று பொதுமக்களிடம் பல லட்சக்கணக்கில் வசூலித்த பணத்தில் ஆள் ஒன்றுக்கு 50, 60, 100, 200 என்பது போன்ற மாதச் சம்பளமும் காங்கிரஸ் ஆட்களுக்கு கதர் இலாக்காவின் பேரால் கொடுத்தும் வருவது போலவே, இந்த கிராம புனருத்தாரணத்தில் சீமை ஊசிக்குப் பதிலாக கையினால் செய்த ஊசியும் அதுவும் காசுக்கு மூன்று ஊசி வாங்குவதற்குப் பதிலாக ஏழைகள் பிழைக்க என்ற பிரசாரத்தால் ஊசி ஒன்று காலணா வீதம் வாங்கும்படியாகவும் நேரிடலாம்.

மற்றும் இது போலவே காஸ் லைட்டுக்குப் பதிலாக குத்து விளக்கும், கடிதாசிக்குப் பதிலாக ஓலையும், பவுண்டன் பேனாவுக்குப்



RangaRakes tamilnavarasam.com

பதிலாக நாணல் தட்டுப் பேனாவும் ஆகியவை போன்ற காரியங்களைச் செய்யும்படி மக்களைத் தூண்டலாம். அதை வாங்கும்படி பிரசாரம் செய்யலாம். இதற்கும் அதாவது இந்த இலாக்கா நிர்வாகத்துக்கும் ஆயிரக்கணக்கான மக்களை 50, 60, 100, 200 ரூபாய் சம்பளங்களில் பார்ப்பனர்களையும் அவர்கள் அடிமைகளையும் நியமித்து அவர்களைக் கொண்டு பார்ப்பனப் பிரசாரமும் செய்யலாம்.

இதிலிருந்து தோழர் காந்தி இப்போதுள்ள மகாத்மா காந்தி என்னும் பட்டத்திற்கு மேல் அவதார புருஷர் காந்தி என்கின்ற பட்டத்தையும் அடையலாம். அறிவில்லாத ஜனங்களும் ஆலோசனை இல்லாத ஜனங்களும் காந்தியார் படத்தை வீட்டில் வைத்து பூஜை செய்வதோடல்லாமல் கோவில் கட்டி கல் விக்கிரகம் வைத்துப் பூஜையும் செய்யலாம்.

ஆனால் இவற்றால் எல்லாம் ஏற்படும் பயன், முன் சொன்னது போல் நாகரிக உலகம் என்பதில் இருந்து காட்டுமிராண்டி உலக வாழ்க்கைக்குப் போவது என்பதைத் தவிர வேறு ஒன்றும் ஏற்படப் போவதில்லை என்பது மாத்திரம் உறுதி.

இந்த யோக்கியதையில் தோழர் காந்தியார் கிராமப் புனருத்தாரண வேலைக்கு நிதி வசூலிக்கச் சுற்றுப்பிரயாணம் புறப்படப் போகிறாரென்றும், அதற்காக அந்தந்த மாகாணத்தில் சுற்றுப் பிரயாணத் திட்டம் போடப்படுகிறது என்றும் சொல்லிக் கொள்ளப்படுகிறது. இதுவும் ஒரு சமயம் ''இன்று'' ஆதாரமற்ற வதந்தியாக இருந்தாலும் கூடிய சீக்கிரத்தில் நடக்கப் போகின்றது என்பதில் நமக்குச் சிறிதும் சந்தேகமில்லை. இந்த நிலையில் உள்ள தலைவர்களையும், கொள்கைகளையும், அதைப்பின்பற்றும் மக்களையும் வைத்துக் கொண்டு இந்தியாவில் முற்போக்கும், மாறுதலும், விடுதலையும், சுதந்திரமும், கவலையற்ற தன்மையும், இன்பமும் ஏற்பட வேண்டுமென்று ஆசைப்பட்டால் அது எப்படி முடியுமென்று நமக்கு விளங்கவில்லை.

தோழர் காந்தியவர்கள் இந்தக் கிராமப்புனருத்தாரணத்துக்கு தற்காலீகமாக ஒரு வேலைத் திட்டம் ஏற்படுத்தியிருக்கிறார். அதாவது

'மில்லில் நெல் அரைக்காமல் கையால் அரிசி குத்தி உமி போக்குவது,

இயந்திரமின்றிக் கோதுமையை மாவாக்குவது,

நாட்டுச் சர்க்கரையை உபயோகிப்பது ஆகிய இந்த மூன்று காரியங்கள் இப்போது செய்வதற்குத் தொண்டர்கள் வேண்டுமென்றும் தெரிவித்து மறுபடியும் வார்தாவில் இருந்து நவம்பர் 8ம் தேதி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இது சாத்தியமாகுமா? அப்படிச் சாத்தியமானாலும் மக்களுக்குக் கஷ்டம் ஒழிவதோ அல்லது பொருளாதார நிலைமை சமரசமடைவதோ அல்லது மேம்பாடடைவதோ ஆகிய காரியங்கள் ஏற்படுமா என்று கேட்கின்றோம்.



அரிசி கையினால் குத்துவது என்பதைத் தோழர் காந்தியார் ஆரஞ்சிப் பழம் ரசமாகப் பிழிந்து 2 கிளாஸ் சாப்பிடுவது போலவும், நல்ல வெள்ளாட்டுப்பால் 1 படியை ½ படியாகக் காய்ச்சி பனங் கல்கண்டு போட்டுச் சாப்பிடுவது போலவும், இரட்டை மெத்தையில் துயிலுவது போலவும் அவ்வளவு சுலபமான காரியம் என்று கருதிக் கொண்டிருக்கிறாரா என்பது நமக்கு விளங்கவில்லை.

நெல்லுக் குத்துவது என்றால் ஒரு பெண் காலை 5 மணிக்கு உலக்கை எடுத்தால் பகல் 10 மணி வரை இயந்திரம் குத்துவது போல் நின்று உலக்கை பிடித்து உகூ., உகூ என்று குத்தினால் பட்டணம் படியில் காலே அரைக்கால்படி அல்லது அரைப்படி அரிசி அதுவும் குறு நொய்யும் பதரரிசியும் கொண்டதாகக் கிடைக்கும். அவ்வளவு மோசமான கூலி கொடுத்தாலும் கூட யந்திரத்தில் அரைக்கின்ற அரிசியுடன் போட்டி போட்டு விற்க முடியாது என்பதோடு பெருத்த நட்டம் ஏற்படும் என்றும் சொல்லித்தான் ஆக வேண்டும். இது ஒரு புறமிருந்தாலும் பெண்மக்களிடம் இப்படிப்பட்ட வேலை வாங்குவதும், அவர்களை இந்தப்படி இம்சிப்பதும் ஜீவகாருண்ய வேலையாகுமா என்று கேட்கின்றோம்.

நூல் நூற்கும் விஷயத்திலேயும் பெண்களை மணிக்கு ஒரு காசு கூலி பெறும் இயந்திரங்களாக ஆக்குவதோடு இப்போது நெல்லுக்குத்துகின்ற வேலைக்கு மறுபடியும் அவர்களை அனுப்புவது என்றால் இது எவ்வளவு தூரம் கைத்தொழில் அபிவிருத்தி என்பதை நாம் மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

அன்றியும் இன்று ஒவ்வொரு முக்கிய கிராமத்திலும் ஒவ்வொரு நெல் அரைக்கும் மிஷின் ஏற்பட்டிருப்பதும், ஒவ்வொரு முக்கிய டவுனிலும் 4,5 மிஷின்கள் ஏற்பட்டிருப்பதும் எவரும் அறியாததல்ல. இந்தியாவில் வெளிநாடுகளிலிருந்து கோடிக்கணக்கான மூட்டைகள் நெல்லாகவோ, அரிசியாகவோ வந்து குவிந்து இந்திய விவசாயிகளுக்குக் கட்டுபடி இல்லாமல் வரிகொடுக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் போதும், நெல் அழியாமல் இருக்கும் போதும் கையில் குத்த வேண்டும் என்று ஆரம்பித்தால், கட்டுபடி விஷயம் மாத்திரமல்லாமல் நமது பெண்கள் இனி பழைய படி நெல் குத்தும் வேலைக்குப் போகவும் கையில் உலக்கை எடுக்கவும் சம்மதிப்பார்களா என்றும் கேட்கின்றோம்.

பெண்கள் படிக்க வேண்டும்; குழந்தைகளைப் படிப்பிக்க வேண்டும்; சுகாதாரமாய் வாழத் தெரிந்து கொள்ள வேண்டும்; அவர்கள் ஆண்களைப் போலவே சகல துறைகளிலும் முன்னேற்றம் அடைய வேண்டும்; உத்தியோகங்கள் பார்க்க வேண்டும்; புருஷர்களிடம் தங்களை சரிசமத்துவமாக நடத்துதலை எதிர்பார்க்க வேண்டும்



RangaRakes tamilnavarasam.com

என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்ற இக்காலத்தில் மற்ற நாடுகளில் பெண்கள் மோட்டார் ஓட்டுவது, ஆகாய விமானம் ஓட்டுவது, ரயில் டிராம் ஓட்டுவது, ஜட்ஜி வேலை வக்கீல் வேலை பார்ப்பது முதலிய பல காரியங்களில் ஆண்களுடன் போட்டி போடுவதும் சில விஷயங்களில் ஆண்களுக்கு மேலாகவும் சக்தியும் அறிவும் உடையவர்களாக இருக்கும் விஷயமும் தெரிந்திருந்தும் இந்தியப் பெண்களை நெல்லுக்குத்தவும் மாவரைக்கவும் திட்டம் போட்டுக் கொண்டு அதிலிருந்து ''சுயராஜ்யம் சம்பாதித்துக் கொடுக்கிறேன் பணம் கொடுங்கள், தொண்டர்கள் வாருங்கள்'' என்றால் இது அறிவுடைமையான காரியமா அல்லது பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகத் தகுதியான காரியமா என்று கேட்கின்றோம்.

இவை ஒரு புறமிருக்க இன்று நெல்லுக் குத்துவதும் மாவு அரைப்பதும் போன்ற காரியங்களையெல்லாம் கையினால் செய்ய வேண்டும் என்றும், நூல்களையெல்லாம் கையினால் நூற்க வேண்டும் என்றும் தீர்மானம் செய்து, கையினால் குத்திய அரிசியையும் கையினால் அரைத்த மாவையும் தான் சாப்பிட வேண்டும் என்றும், கையினால் நெய்த துணியைத் தான் கட்ட வேண்டும் என்றும் உத்தரவு போட்டு விடுவோமேயானால் இந்திய மக்களுக்கு வேண்டிய அரிசியும் மாவும் துணியும் மாத்திரம் தயார் செய்ய இந்திய மக்கள் முழுவதும் அவர்கள் ஆயுள் காலம் முழுவதும் ஈடுபட்டிருக்க வேண்டியதோடு வெளிநாட்டிலிருந்தும் மக்கள் வந்து நெல்லுக்குத்தி மாவரைத்து நூல் நூற்றுக் கொடுத்து விட்டுப் போக வேண்டி வரும் என்பதைப் புள்ளி விவரங்களோடு நிரூபிக்கத் தயாராயிருக்கிறோம்.

பிறகு நெல்லு, பஞ்சுக்கான பருத்தி விவசாயம் செய்யவும், வீடுவாசல் கட்டவும், நிர்வாகம் செய்யவுமான பல காரியம் பார்க்க ஆட்களுக்கு எங்கு போவது என்று தோழர் காந்தியாரை வணக்கத்துடன் கேட்கின்றோம்.

குழந்தை குட்டி கிழடு கிண்டு ஆகியவர்களை நீக்கிவிட்டு வேலை செய்யத் தகுதியுள்ள மக்களை மாத்திரம் எடுத்துக் கொண்டால்மொத்த ஜனத் தொகையில் 3-ல் ஒரு பாகம் மக்கள் கூட வேலை செய்ய லாயக்குள்ளவர்கள் இருக்கமாட்டார்கள். இவர்களில் ''பாடுபடுவது பாவம்'' என்று இருக்கிற பார்ப்பனர்கள் அவர்களைப் போல் காப்பி அடிக்கும் ''இந்து சட்டைக்காரர்'' (வெள்ளையர் கலப்பால் பிறந்தவர்களை வெள்ளைச் சட்டைக்காரர்கள் என்பது போலப் பார்ப்பனர்களின் நடையுடை பாவனைகளைக் கொண்ட பார்ப்பன தாசர்கள்) என்கின்ற கூட்டத்தாரையும் நீக்கி விட்டால் மீதி இருப்பவர்களிடமிருந்து செய்யப்படும் கைக்குத்து அரிசியும் கை ராட்டினத் துணியும் கிடைக்காமல் வெகுபேர் பட்டினியாயும் நிர்வாணமாயும்தான் இருக்க நேரிடும் என்பது கல்லுப் போன்ற உறுதியாகும்.



ஆகவே தோழர் காந்தியார், தான் ஒருவர் உயிருடன் இருக்கிறார் என்பதை உலகம் அறியும்படியாக ஏதாவது ஒரு காரியமும், ஒருவித விளம்பரமும் இருக்க வேண்டும் என்பதைத் தவிர மற்றபடி இந்தத் திட்டங்களால் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்பட்டு விடப் போவதில்லை.

ஆகவே, ''தகுதியுள்ளவன்தான் அடைவான்'' என்கின்ற ஞான மொழிக்கு ஏற்ப இந்திய மக்களுக்கு என்றைய தினம் இம்மாதிரி சூட்சி களையும், அறியாமையையும் அறியும்படியான பகுத்தறிவு ஏற்படுகின்றதோ அன்றுதான் அவர்கள் மனிதத் தன்மையை அடைய முடியும் என்பதோடு அதுவரையில் தகுதி உள்ளவனுக்கு அடிமையாய் இருக்க வேண்டியது தான் இயற்கை விதி என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறாம்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 11.11.1934**



RangaRakes tamilnavarasam.com

# இனியாவது உணருவாரா?

காங்கிரஸ்காரர் என்பவர்கள் 100-க்கு 99 முக்காலே மூன்று வீசம் பேரும் பொய், புரட்டு, சூட்சி, தந்திரம், சமயத்துக்குத் தகுந்தபடி சரணம் போட்டுக் கொள்வது ஆகிய குணங்களையே கொள்கையாகவும், திட்டமாகவும் வைத்து அதற்கு நீதியும், சத்தியமும் என்று பெயர்கொடுத்து காங்கிரஸ் காரியத்தை அதாவது தங்களது வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள் என்கின்ற அபிப்பிராயமானது நமக்கு நாளுக்கு நாள் பலப்படுவதுடன் வளர்ந்து கொண்டே வருகிறது.

பாமர மக்களை ஏமாற்றுவதற்கென்று செய்யப்படும் சூட்சிகளை இன்றைய காங்கிரஸ் பிரசாரத்தின் பயனாய் மக்கள் அறிய முடியாமல் இருந்தாலும் கூட அதற்கும் ஒரு அளவோ, மானம் வெட்கமோ, மனிதத் தன்மையோ இல்லாமல்போய் விட்டதை வெளியாக்காமல் இருக்க முடியவில்லை.

இந்த 5, 6 மாத காலத்தில் தமிழ்நாட்டில் ஸ்தல ஸ்தாபனங் களுக்குப் பல தேர்தல்கள் நடந்திருக்கின்றன. அவற்றிற்காக ஒவ்வொரு ஊரிலும் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்றும், காங்கிரஸ்காரர் - காங்கிரசுக்காரரல்லாதார் என்றும் சொல்லப்பட்ட பிரிவுகளின் பேரால் தேர்தல்கள் நடந்தன. அவற்றுள் ஜெயித்தால் ''காங்கிரசுக்கு ஜெயம்'' என்ற கொட்டை எழுத்தில் போட்டுக் கொள்ளுவதும், ''தோற்றால் உப்புக் கண்டம் (காய்ந்த மாமிசத் துண்டு) பறி கொடுத்த பார்ப்பனத்தி'' போல் வாயடைத்துக் கொள்ளுவதுமான காரியங்களைச் செய்து வந்தது யாவரும் அறிந்ததாகும்.

உதாரணமாக சிறிது நாட்களுக்கு முன் சென்னையில் தோழர்கள் ஒரு கோயங்கா அவர்களுக்கும், ஒரு நாயுடு அவர்களுக்கும் நடந்த தேர்தலில் கோயங்காவை காங்கிரஸ்காரராக்கி நாயுடுவை ஜஸ்டிஸ் கட்சியாராக்கி காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் தோழர்கள் சத்தியமூர்த்தி அய்யர், ராஜகோபாலாச்சாரியார், பாஷியம் அய்யங்கார், கிருஷ்ணசாமி சாஸ்திரியார் என்பவர்கள் உள்பட, 'இந்து', 'சுதேசமித்திரன்' உள்பட எல்லா பார்ப்பனர்களும் தோழர் கோயங்கா காங்கிரஸ் அபேட்சகர் என்று ஜனங்களை நம்பும்படி செய்து பிரசாரம் செய்தார்கள்.

கடைசியில் கோயங்கா அவர்கள் பதினாயிரக்கணக்கான ரூபாய் நஷ்டப்பட்டும் தோல்வி அடைந்ததும் தோழர் கோயங்கா காங்கிரஸ்காரர்



அல்ல என்று சொல்லிவிட்டார்கள். இது போல் பல காரியங்கள் செய்து வந்தும் சமீபத்தில் - இந்த வாரத்தில் நவம்பர் 9ந் தேதி சேலத்தில் நடந்த முனிசிபல் எலக்ஷனில் தோழர் வெங்கிடப்ப செட்டியார் அபேட்சகர் ஸ்தானமானது காங்கிரசின் பேரால் நிறுத்தப்பட்டு தோழர் அய்யாசாமி செட்டியார் பார்ப்பனர் அல்லாதார் சார்பாய் (ஜஸ்டிஸ் கட்சி சார்பாய்) நிறுத்தப்பட்டு காங்கிரஸ்காரர்கள் தோழர் ராஜகோபாலாச்சாரியார் உள்பட அன்று சேலத்துக்கு வந்து வெங்கிடப்ப செட்டியாருக்காக எவ்வளவோ பாடுபட்டும் வெங்கிடப்ப செட்டியாருக்கு 8 ஓட்டும், அய்யாசாமி செட்டியாருக்கு 25 ஓட்டும் கிடைத்து பாதாள தோல்வி அடைந்து விட்டார் என்கின்ற சேதி தெரிந்ததும் ''வெங்கிடப்ப செட்டியார் காங்கிரஸ் அபேட்சகரல்ல'' என்று தோழர் ராஜகோபாலாச்சாரியார் முதல் கொண்டு எல்லா பார்ப்பனப் பத்திரிக்கைக்காரர்களும் சொல்லிவிட்டார்கள் என்றால் இவர்களது பல்ட்டிக்கும், சமயத்துக்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுவதற்கும் வேறு என்ன சாட்சி வேண்டும் என்று கேட்கின்றோம்.

தோழர்கள் வெங்கிடப்ப செட்டியார், சடகோப முதலியார் ஆகிய இரு அபேட்சகர்களை காங்கிரஸ் அபேட்சகர்களாக வைத்து காங்கிரஸ்காரர்கள் ''அது அல்லாத'' பார்ப்பனர்கள் என்பவர்களுள்பட பெரிய கூட்டம் கூடி ரகசிய ஓட்டெடுத்து காங்கிரசு சார்பாகவும், பார்ப்பனர்கள் சார்பாகவும் தோழர் வெங்கிடப்ப செட்டியாரை நிறுத்தி காங்கிரசின் பேரால், காந்தியின் பேரால், கவுன்சிலர்களிடம் முழங்கால் முறிய நடந்து கடைசியில் பாதாள தோல்வி ஏற்பட்டதும் வெங்கிடப்ப செட்டியார் காங்கிரசுக்காரர் அல்ல என்று சொல்லிவிட்டால் காங்கிரசுக்கு இருக்கும் நேர்மை, சத்தியம், நீதி ஆகிய குணங்களுக்கு வேறு எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை. தோழர் வெங்கிடப்ப செட்டியார் அவர்கள் காங்கிரசில் 15 வருஷ காலமாய் இருந்து வருபவர். அவர் கதர் உடுத்தி வருபவர். பார்ப்பனர்கள் பூதேவர்கள் என்பதை ஒப்புக் கொண்டு பார்ப்பனரல்லாதார்களையும் ஜஸ்டிஸ் கட்சியாரையும் இணையில்லாக் கேவலமாய் பேசி வந்தவர் - வருகிறவர். பார்ப்பன நாகரீகம், ஆச்சார அனுஷ்டானங்கள், கோயில், குளம், பக்தி பிராமண விஸ்வாசம் ஆகியவைகளில் இணையற்றவர். இப்படி இருந்தும் அவருக்குத் தோல்வி ஏற்பட்டவுடன் அடியோடு அவரை ஜனங்கள் கேவலமாய் நினைக்கும்படியும் அவர் தோல்விக்கு சிலராவது பரிதாபப்படாமல் இருக்கும்படிக்கும் ''காங்கிரசுக்காரர் அல்லாததால் அவர் தோல்வி அடைந்தது சரிதான்'' என்று நினைக்கும்படிக்கும் சொல்லும்படிக்கும் செய்து விட்டார்கள் என்றால் இந்தப் பார்ப்பனரை நம்புவோர்கள் சமயத்தில் கைவிடப்பட்டு விடுவார்கள் என்பதற்கு இதை விட வேறு என்ன அத்தாக்ஷி வேண்டும் என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

வெற்றி தோல்வி இயற்கை. பணச்செலவும் சூட்சியும் நேர்மையற்ற காரியங்களும் காலித்தனமும் செய்தவர்களுக்கே பெரிதும் வெற்றி ஏற்படுவது என்பது சகஜம்.

வெற்றி தோல்வியில் மனிதனுடையவோ, கட்சியுடையவோ, மேன்மையோ, நாணையமோ பாதிக்கப்பட்டு விடுவதில்லை.

இதுவரை பல கட்சி தோல்வியடைந்தும், பல கட்சி வெற்றியடைந்தும் வந்திருக்கின்றது என்றாலும் அதனாலேயே பெரிய மாறுதல்கள் ஏற்பட்டு விடவும் இல்லை. எந்தக் கட்சியும் முழுகிப் போய் விடவுமில்லை.

ஆனால் கண்ணியமாய் தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் இந்தப்படி உடனுக்குடன் அந்தர் அடிப்பதென்றால் இவர்களுள் நாணையமும் சுயமரியாதையும் உள்ள மக்கள் எப்படி நெருங்குகிறார்கள் என்பது தான் நமக்கு விளங்கவில்லை. இனியாவது தோழர் வெங்கிடப்ப செட்டியார் அவர்கள் பார்ப்பனர்களுடையவும், காங்கிரசுக்காரர்கள் என்பவர்களுடையவும் யோக்கியதையை உணர வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 11.11.1934**



# மற்றுமொரு தொல்லை

மதங்களின் பெயரால்- கடவுளின் பெயரால்- ஜாதிகளின் பெயரால் மனிதனை மனிதன் பிய்த்துப் பிடுங்கித் தின்னும் இந்நாட்டில்- ஒரு கவளம் சோற்றுக்கு வழியின்றி எச்சிக்கல்லை நாயோடு சண்டை போட்டுழலும் ஏழைமக்கள் பல்லாயிரக்கணக்காயுள்ள இந்நாட்டில் மத சம்மந்தமான - தெய்வ சம்மந்தமான ஆடம்பரத் தொல்லைகள் வாரம் தோறும் மாதம் தோறும் வந்து கொண்டுள்ளன. தீபாவளித் தொல்லை வந்து இன்னுந் தீர்ந்த பாடில்லை. முதலாளிகளின் கோடியாடைகளின்னும் மழுங்கவில்லை. பலகார பக்ஷணங்களின் மப்பு மந்தாரம் இன்னும் வெளியாகவில்லை.

மயிலாடுவதைக் கண்டு கோழியாடிய மாதிரி தாமும் அம்முதலாளிகளைப் பின்பற்றி இமிடேஷன் கொண்டாட்டம் நடத்திய ஏழைகள், கூலிகள், அடிமைகள், பாட்டாளி மக்கள் அதனால் பட்ட கடன் தொல்லைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை.

இந்த லக்ஷணத்தில் ''கார்த்திகை தீபம்'' என்று மற்றொரு தொல்லையும் சமீபத்தில் வந்துவிட்டது. தீபாவளித் தொல்லையாவது இருந்த இடத்திலேயே மக்களைப் பிடித்தாட்டி விட்டு போய்விட்டது.

இதுவோ ( அண்ணாமலை தீபமோ) கடவுளே ( சிவன்) ஜோதி மயமாகக் கிளம்புகிறாரென்பதாக அண்ணாமலை மண்திடலுச்சியில் பெரிய கொப்பரையில் குடம் குடமான நெய்யும், ஆயிரக்கணக்கான ஜவுளிகளும் போட்டு பயித்தியக்காரத்தனமாகத் தீயை வைத்துவிட்டு அந்த நெருப்பு கொழுந்து விட்டெரிவதைப் பார்த்து அரகரா, சிவசிவா என்று கன்னத்திலும், கண்ணிலும் அடித்துக் கொள்வதும், அதன் சாம்பலையும் குழம்பையும் எடுத்துப் பூசிக் கொள்வதும், போனவர்களெல்லாம் நெய்யையும் ஜவுளிகளையும் குடங்குடமாக மூட்டை மூட்டையாகக் கொப்பரையில் கொட்டி நெருப்புக்கிரையாக்கி திருப்தியடைவதுமான களியாட்டத்தைக் காண 20, 30, 50, 100 செலவழித்துக் கொண்டு போய் அண்ணாமலையென்னும் மண் திடலையும் அதன் உச்சியிலெரியும் நெருப்பையும் ஜோதிமயமான கடவுளென்று வணங்கி ஆகாய விமான சகாப்தமாகிய இந்த 20-ம் நூற்றாண்டிலும் நம்பிக் கொண்டும் திருவண்ணாமலை தீபம், கார்த்திகை தீபம், திருப்பரங்குன்றம் பெரிய



RangaRakes tamilnavarasam.com

கார்த்திகை தீபத்திருவிழா என்றெல்லாம் மக்கள் பாமரத்தன்மையாய் பிதற்றிக் கொண்டும் திரிவார்களானால் இவர்களுக்கு எக்காலந்தான் விமோசனமென்பது விளங்கவில்லை.

மனிதன் முதல் முதலாக நெருப்பைக் கண்டுபிடித்த காலத்தில், அக்காலக் காட்டுமிராண்டிகளுக்கு அது ஒரு தெய்வீகமாகத் தோன்றியிருக்கலாம்.

நெருப்பின் உதவியேயில்லாமல் ஒரு பொத்தானைத் தட்டினால் லக்ஷதீபம் போல் அதுவும் பட்டப்பகல் போலப் பிரகாசிக்கும் விளக்குகளைக் கண்டுபிடித்து அனுபவித்துவரும் விஞ்ஞான காலம் இதுவென்பதைச் சிந்தித்து அத்தகைய காட்டுமிராண்டித்தனமான காரியங்களில் மக்கள் வீணாக ஈடுபட்டு அறிவையும், பொருளையும், காலத்தையும் பாழாக்காமல் இக் காலத்திய விஞ்ஞான விஷயங்களில் மூளையைச் செலுத்துவதுடன் இத்தகைய பாமரத்தனமான கார்த்திகை தீபம், திருவண்ணாமலை தீபம், திருப்பரங்குன்ற தீபம், சொக்கப்பான் கொளுத்தல் முதலிய தொல்லைகளை அறிவுள்ள மக்கள் விட்டொழிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

**பகுத்தறிவு - கட்டுரை - 11.11.1934**



# தோல்வி ஆனால் நன்மைக்கே

சென்ற வாரம் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தலில் பார்ப்பனரல்லாதார் இயக்க சார்பாய் நிறுத்தப்பட்ட அபேக்ஷகர்களும் - பார்ப்பனரல்லாதார் இயக்கப் பிரமுகர்களால் ஆதரிக்கப்பட்ட அபேக்ஷகர்களும் அனேகமாக எல்லோரும் தோல்வி என்பதை அடைந்துவிட்டார்கள். தோல்வி என்றால் நல்ல பரிசுத்தமான - பாதாளத்துக்குக் கொண்டு போகும்படியான தோல்வி என்று சொல்லத்தக்க வண்ணம் தோல்வி அடைந்திருக்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

பார்ப்பனரல்லாதார் சார்பாய் வெற்றி , வெற்றி, வெற்றி என்று வீரம் பேசிய நமது வாயும் கையும் வெட்கப்படத் தக்க தோல்வி என்று சொன்னால் தலைகுனிந்து பொருத்துக் கொள்ள வேண்டியது தான். அதற்குக் காரணமும் சமாதானமும் பதினாயிரம் இருந்தாலும் தேர்தல் முடிவு தோல்வி தான் என்பதில் சிறிதும் ஆக்ஷேபனையோ, விவகாரத்துக்கு இடமோ இல்லை என்பதே நமதபிப்பிராயம். அதுவே நம் வீரத்துக்கு அறிகுறியாகும்.

எனவே நல்ல தோல்வி அடைந்துவிட்டோம் என்பதை ஒப்புக் கொள்ளத்தக்க தைரியம் நம் எல்லோருக்கும் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஆனால் இத் தோல்வியின் பயன் நாம் வெற்றி அடைந்தால் எவ்வளவு நன்மை ஏற்படுமோ அதை விடப் பல மடங்கு அதிகமான நன்மை ஏற்படப் போகின்றது என்பதில் நமக்குச் சிறிதும் சந்தேகமில்லை. இன்று ஒரு சமயம் நமக்கு வெற்றி கிடைத்திருந்தால் கூட பின்னால் பெரியதொரு தீமை ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

ஏனெனில் நம்முடைய மமதையும், அலக்ஷியபுத்தியும், அளவுக்கு மீறிய முரட்டுத் தைரியமும் வெகு காலத்துக்குத் தலைதூக்க முடியாத பாதாளத்தில் நம்மைக் கொண்டு போய் அமுத்தும்படி செய்தாலும் செய்யக் கூடும். ஆதலால் இந்தத் தோல்வியால் முழுகிப் போன காரியம் ஒன்றும் இல்லை. பின்னால் லாபமே இருக்கிறது.

தோழர் ஷண்முகத்திற்கு ஏற்படப்போகும் முற்போக்கும், அவரால் மக்களுக்கும் நாட்டிற்கும் ஏற்படக்கூடிய நன்மையும் பெருமையும் அவருக்கு இந்த இந்திய சட்டசபைத் தேர்தல் முடிவையே பொருத்திருக்கவில்லை.



RangaRakes tamilnavarasam.com

தேர்தல் என்பது சூதாட்டத்திற்கு ஒப்பானது. சூதில் ஏற்படும் வெற்றியும், தோல்வியும் மனிதனுடைய பெருமையையோ புத்திசாலித் தனத்தையோ, சக்தியையோ பொருத்ததல்ல. ''வெற்றியா'', ''தோல்வியா'' என்கின்ற வெறும் உச்சரிப்பை மாத்திரமே பொறுத்ததாகும்.

இந்தத் தேர்தல் சூதில் சூட்சியையும், வஞ்சகர் செயலின் சதிகளையும் தாண்டி ஒருவர் வெற்றி பெறாவிட்டால் அவருடைய யோக்கியதையே போய்விடுமென்றால் அப்படிப்பட்ட அவரால் மக்களுக்கும் நாட்டிற்கும் ஏற்படக் கூடிய நன்மையே போய்விடுமென்றால் அப்படிப்பட்டவர் இருப்பதும் ஒன்றுதான் இல்லாமல் இருப்பதும் ஒன்றுதான்.

ஆதலால் தோழர் ஷண்முகம் தோல்வியானது வெட்கப்படுவதற்குத் தகுதியானது (ஆனால் படிப்பினைக்கு இன்றியமையாதது) என்று சொல்லிக் கொள்ளலாமே ஒழிய விசனப்படத்தக்கதல்ல என்பதோடு பிற்கால வாழ்வுக்கு பெரிதும் நம்பிக்கை கொள்ளத்தக்க அளவு பயன்படக் கூடியது என்றும் சொல்லலாம்.

தோழர் எ.ராமசாமி முதலியாரின் தோல்வியும் அதுபோலவே தோழர் ராமசாமி முதலியார் மாத்திரமல்லாமல் பார்ப்பனரல்லாதார் சமூகமே வெட்கப்படத்தக்க மாதிரியான தோல்வியே ஒழிய எவரும் சிறிதும் விசனப் படத்தக்க தோல்வி அல்ல என்பதே நமது பளிங்கு போன்ற அபிப்பிராயம்.

1926-ம் வருஷத்திய சென்னை சட்டசபைத் தேர்தலில் பார்ப்பனரல்லாதார் நெஞ்சம் திகீர் திகீர் என்று திடுக்கிடும்படியான தோல்வி சப்தங்கள் காது செவிடுபடும்படியாகவும், வானமளாவி இடரும்படியாகவும் தோல்விகள் ஏற்பட்டன.

காங்கிரசுக்காரர்களை கவர்னர் பிரபு கூப்பிட்டு மந்திரி சபை அமைக்கும்படி கேட்கத் தகுந்த வெற்றிகள் காங்கிரசுக்கு ஏற்பட்டன.

இன்றைய நம் தோல்விக்கு பார்ப்பனர் நடந்து கொண்டது போலவே அன்றைய தோல்விக்கும் மக்களுக்கு புகையிலை வழங்கினார்கள். அதுவும் உண்மையிலேயே அதுசமயம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தாரும், மற்றும் வெளியிலுள்ள பார்ப்பனரல்லாதாரும் வெட்கப்படத்தக்க தோல்விதான். ஆனால் அதனால் - அப்படிப்பட்ட தோல்வியால் பார்ப்பனரல்லாத சமூக மக்களுக்கும் - அவர்கள் இயக்கத்துக்கும் ஏற்பட்ட கெடுதி என்ன? பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கும் இயக்கத்துக்கும் பிறவி எதிரிகளாய் பார்ப்பனர்களுக்கும் அவர்களது இயக்கத்துக்கும் ஏற்பட்ட நன்மை என்ன? என்பதைக் கொண்டு இன்றைய தோல்வியின் பயனை கணித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

அரசாங்கத்தாரின் சம்பள சேவகம், அடிமை உத்தியோகம், அவற்றில் மேல்பதவிகள் என்பவை போன்ற ''பெருமை''கள் அல்லாமல் ஜனப்பிரதிநிதித்துவம் (பொது ஜனங்களுக்காகப் பதவி வகித்தல்) என்பது போன்ற காரியங்களில் ஒரு பார்ப்பனராவது தலை காட்ட முடிந்ததா என்று பார்த்தால் அவர்கள் வெற்றி பெற்றதின் யோக்கியதை விளங்கிவிடும்.

1915, 16 வருஷத்திய டாக்டர் நாயர், தியாகராய செட்டியார் ஆகியவர்கள் தோல்வி பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை உண்டு பண்ணிற்று.

1926 - ம் வருஷத்திய தோல்வியால் தான் அரசாங்க உத்தியோகத்திலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் அரசியலிலும் மற்றும் காங்கிரஸ் உள்பட பொதுஜன ஸ்தாபனம் என்பவைகளிலும் பார்ப்பனரல்லாதார் - இந்து, முஸ்லீம், தீண்டப்படாதார் முதலிய சமூகம் உள்பட எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் கிடைத்தது.

1926 - ம் வருஷத்திய தோல்வி தான் சாரதா சட்டம், பெண்கள் பிரதிநிதித்துவம் முதலியவைகளைக் கொடுத்தது. சென்னை அரசாங்க நிர்வாக சபை பார்ப்பனரல்லாதார் வசமாயிற்று. ஜனப் பிரதிநிதித்துவம் என்னும் பேரால் பார்ப்பனர் கைப்பற்றி இருந்த அனேகம் பதவிகளிலிருந்து பார்ப்பனர்கள் விரட்டி அடிக்கப்பட்டார்கள். ஜனநாயகத்துவம் என்னும் ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்து அறவே 100-க்கு 90 பங்காய் பார்ப்பனர்கள் விரட்டி அடிக்கப்பட்டார்கள். அது மாத்திரமல்லாமல் பார்ப்பனக் கோட்டை, பார்ப்பன ஆதிக்க ஸ்தலம் என்கின்ற சென்னை, தஞ்சை ஆகிய இரண்டொரு இடங்கள் தவிர மற்ற எல்லா இடங்களிலும் இந்திய சட்டசபைக்குக் கூட இன்று ஒரு மொண்டியோ முடமோ கூனோ குருடோ பார்ப்பனரல்லாதாராகத்தான் பார்த்து நிறுத்த வேண்டிய நிலை பார்ப்பனர்களுக்கே ஏற்பட்டது.

இவைகள் எல்லாம் எதனால்? 1926-ம் வருஷத்திய ''மகத்தான தோல்வியால்'' அல்லவா என்று கேட்கின்றோம்.

ஆதலால் இந்தத் தோல்விக்காக ஏன் விசனப்பட வேண்டும்? ''ஓட்டத்தில் களைத்துப் போனவன் பந்தயத்தில் தோற்றவனாவானே ஒழிய வாழ்க்கைக்கு உதவாதவனாகிவிட மாட்டான்.''

இந்த 10, 15 வருஷ காலமாய் பார்ப்பனர்கள் அடைந்து வந்த தோல்வியும் அதிலிருந்து அவர்கள் பெற்று வந்த படிப்பினையும், வெற்றிக்காக அவர்கள் இந்த 10 வருஷ காலமாய் செய்து வந்த முயற்சிகளும், தந்திரங்களும், பிளான்களும் இந்த பிரச்சினையின் மீதே தங்கள் சமூகத்தை ஒற்றுமையாக்கிப் பலப்படுத்தி செய்து வந்த கட்டுப்பாடான பிரசாரங்களும் இந்த அளவு வெற்றியையாவது அவர்கள் இன்று கண்டு தீர வேண்டிய நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டது.

இது வரையிலும் பார்ப்பனரல்லாத சமூகத்துக்குள் கோள் ஏற்றிச் சண்டை மூட்டி விட்டு அந்தச் சண்டையைப் பார்த்தே திருப்தியாக மகிழ்ச்சி அடைந்து வந்த பார்ப்பனர்கள் இன்று கண்ட வெற்றிக்கு அதுவும் தோழர் ஷண்முகம் தோற்றுப் போனதைக் கண்ட பார்ப்பனர்கள்





RangaRakes tamilnavarasam.com

வெற்றிக் கொண்டாட்டம் கொண்டாடாமலிருக்க முடியுமா என்பதை யோசித்தால் அவர்களது கொண்டாட்டம் மிகவும் சரியானதேயாகும்.

ஆகவே அவர்கள் கொண்டாட்டத்திலிருந்து நமக்கு வேண்டிய படிப்பினையை மாத்திரம் மிக ஜாக்கிரதையாய் எடுத்துக் கொண்டு மற்றதை லட்சியம் செய்யாமல் விட்டுவிட்டு இனி ஆக வேண்டிய விஷயங்களைக் கவனிக்க வேண்டியதே பொறுப்புள்ளவர்களின் கடமையாகும்.

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் பற்றுக் கொண்டவர்களும் அம்மக்கள் முன்னேற்றத்தில் கவலை கொண்டவர்களும் இதுவரை எப்படி இருந்து வந்தாலும் இனிமேல்தான் அவர்கள் தங்களை இக்கட்சியின் பேரால் அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். அக்கட்சி நன்றாய், பெருமையாய், செல்வாக்காய் இருந்த காலத்தில் தன்னை அக்கட்சித் தூண் என்றும், பிரமுகர் என்றும் சொல்லிக் கொண்டிருந்து விட்டு இன்று அதற்குத் தோல்வி ஏற்பட்டவுடன்- ஏற்படும் என்று தோன்றியவுடன் ‘‘எனக்கும் அக்கட்சிக்கும் சம்மந்தமில்லை’’ என்று சொல்லிக் கொண்டு எதிரிகளோடு சேர்ந்து தானும் ஒரு கல்லெடுத்துப் போடுவது என்பது மகா இழிவானதும் பயங்காளித்தனமானதுமான காரியம் என்று வன்மையாய்ச் சொல்லுவோம்.

எதிரிகளிடம் கூலி வாங்கிக் கொண்டு வைபவர்களைப் பற்றியோ அல்லது பார்ப்பனரல்லாதார் கட்சியில் இருப்பதால் தனது வாழ்வுக்கோ பெருமைக்கோ பயனில்லை என்று கருதி எதிரிகளைத் தஞ்சமடைந்தவர்களைப் பற்றியோ நாம் இப்போது கவலைப்படவில்லை. நமது கட்சியை வைததின் பேரால், நமக்கு துரோகம் செய்ததின் பேரால் அவர்கள் பெற்ற கூலிக்காகவும், அவர்கள் அடைந்த பதவிக்காகவும் நாம் அவர்களை மனமாரப் பாராட்டுகிறோம்.

ஆனால் உண்மையில் பார்ப்பனரல்லாதார் சமூக நலத்தில் கவலையாய் இருந்தவர்கள், அல்லது இனிமேல் இருக்கிறவர்கள் வீரமுள்ளவர்களாய் இருந்தால் இப்பொழுது தான் அவர்கள் தாங்கள் பார்ப்பனரல்லாதார் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ள வேண்டும். அவர்களது வீரத்துக்கும் உண்மை அபிமானத்துக்கும் இதுதான் அறிகுறியாகும்.

வெற்றி ஏற்படும்போது தங்களைப் பார்ப்பனரல்லாதார் கட்சிக்காரர் என்று மார் தட்டுவதும், தோல்வி ஏற்படும்போது எதிரிகள் கூட்டத்திற்குள் புகுந்து கொண்டு கோவிந்தா போடுவதும், கட்சியைக் குறை கூறி வீம்பு பேசுவதும் கீழ்மக்கள் செய்கையே யாகும் என்று மறுமுறையும் சொல்லுகிறோம்.

அன்றியும் பார்ப்பனரல்லாதார் என்கின்ற முறையில் தன்னை மனித சமூகத்தில் ஒரு கூட்டத்தாருக்கு கீழானவனாய் மதிக்கப்படு கின்றவன் என்று நாணயமாய் நினைக்கின்ற ஒவ்வொருவரும் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு கடமைப்பட்டவன் என்பதோடு அக்கட்சியின் உயிர் வாழ்க்கைக்கும், மேன்மைக்கும் உயிரைக் கொடுக்க வேண்டியவனே ஆவான்.



## ஒன்று கேட்கின்றோம்

நிற்க, ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரையும்- காங்கிரசில் கூலி பெற்றோ, பெருமை பெற்றோ, பார்ப்பனர்களால் பூஜிக்கப் பெற்றோ இன்று உயிர் வாழும் ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரையும் - மற்றும் ஸ்தல ஸ்தாபனங்களில் சட்டசபைகளில் அங்கத்தவர், பிரசிடெண்ட், சேர்மென் முதலிய பதவிகளிலும், உத்தியோகத்திலும், வக்கீல் வேலையிலும் டாக்டர் வேலையிலும் இருந்து கௌரவமும், செல்வமும் அடைந்துவரும் பார்ப்பனரல்லாதார்களையும் - சர்க்கார் உத்தியோகத்தில் மந்திரி முதல் குமாஸ்தா வரையில் உள்ள பார்ப்பனரல்லாதார்களையும் - பத்திரிகை ஆபீசுகளில் பத்திராதிபர்கள் முதல் பத்திரிக்கை விற்பவர்கள் வரை உள்ள பார்ப்பனரல்லாதார்களையும் - மற்றும் தெருக்களில் திரிந்து கொண்டு இங்கத்திய சேதியை அங்கும், அங்கத்திய சேதியை இங்குமாய் சொல்லிக் கொண்டு உல்லாச உடை உடுத்தி சோம்பேரிகளாய்த் திரியும் அண்ணாத்தைகளையும் ஒன்று கேட்கின்றோம்.

பார்ப்பனரல்லாதார் ( ஜஸ்டிஸ்) கட்சி என்பதாக ஒரு கட்சி தென்னிந்தியாவில் சுமார் 15 வருஷ காலத்துக்கு முன் தோன்றி இருக்கா விட்டால் அதை ஆரம்பித்தவர்கள் கல்லடி, செருப்படி, மண்ணடி, பேச்சடி பட்டு தங்கள் குடும்பச் செல்வங்களையும், போக போக்கியங்களையும், தொழில்களையும் துறந்து பார்ப்பனர்களுடைய ‘‘சாபத்து’’க்கும் அவர்களது பத்திரிகைகளின் விஷமப் பிரசாரத்துக்கும் தலை கொடுத்து அவற்றின் கெடுதிகளை அடைந்து கஷ்டப்பட்டுக் கொண்டும் சிலராவது உழைத்திருக்காவிட்டால் மேல் கண்ட பார்ப்பனரல்லாத ஆட்கள் இன்று இந்த நிலைமையில் இருக்க முடியுமா? என்று கேட்கின்றோம்.

பார்ப்பனரல்லாதார் என்கின்ற முறையில் ஒருவன் ஜஸ்டிஸ் கட்சிக்குத் துரோகம் செய்வதும், அதை இகழ்வதும், பழிப்பதும் எதற்கு ஒப்பிடலாம் என்றால், தன்னைப் பெற்று சீராட்டிப் பாராட்டி பாலூட்டி வளர்த்த தன் தாயை - தன் வாழ்க்கையில் கவலை கொண்ட வாழ்க்கைத் துணைவியை - உயிர் அனைய காதலியை பிறர் பழிக்கப் பழி கூறுவதையும், தன் சுயநலத்துக்கு அவர்களைத் துர்வினியோகப் படுத்துவதையும் தான் ஒப்பிட முடியும்.

ஜஸ்டிஸ் கட்சியில் இன்று பெரும்பாலும் அயோக்கியர்களும் சுயநலக்காரர்களும் இருக்கலாம்.

நாணயமில்லாதவர்களும் யோக்கியப் பொறுப்பு இல்லாதவர்களும், சுயநலத்துக்குக் கட்சியைப் பயன்படுத்தி விற்று வாழ்கின்றவர்களும் இருக்கலாம்.

காரி உமிழ்வதற்குக் கூட லாயக்கில்லாத இழி மக்களும், ஈனர்களும் இருக்கலாம். காட்டிக் கொடுத்தவர்களும் துரோகிகளும் இருக்கலாம்.

ஒரு யோக்கியமான அரசாங்கத்தின் நியாய விசாரணையின் மூலம் நடுத் தெருவில் நிறுத்தி ஆளுக்கொரு கல்லால் அடித்துக் கொல்ல



RangaRakes tamilnavarasam.com

வேண்டும் என்று தீர்ப்புப் பெறுவதற்குத் தகுதியான துரோகிகளும், சதிகாரர்களும் இருக்கலாம். அவர்களுக்காக வெல்லாம் வாதாடி விடுதலை பெறச் செய்ய நாம் இங்கு (இக்கட்டுரையில்) ஆசைப்படவில்லை. ஏனெனில் எங்கும் அப்படிப்பட்டவர்கள் இருக்கக்கூடும். ஆனால் 3 கோடி மக்களின் சுயமரியாதைக்காகப் பாடுபட என்றே ஏற்படுத்திய ஒரு ஸ்தாபனத்தை அதிலுள்ள இப்படிப்பட்ட சிலர் நடந்து கொள்ளும் காரியத்துக்காக மற்ற யோக்கியமானவர்கள் நன்றி விசுவாசத்தை மறந்து எதிரிகளுடன் சேர்ந்து கொள்ளுவதா என்று தான் கேட்கின்றோம்.

இன்று தென்னிந்தியாவில் காங்கிரசில் ஏதோ சில கிறிஸ்தவர்கள் இருந்தாலும் சரி, சில முஸ்லிம்கள் இருந்தாலும் சரி, சில தாழ்த்தப்பட்ட மக்கள் இருந்தாலும் சரி, சில ஜாதி இந்துக்கள் முதலிய நாடார்கள், வாணியச் செட்டியார்கள், நாயக்கர்கள், முதலியார்கள் போன்ற கூட்டத்தார்கள் இருந்தாலும் சரி, அவர்களில் பெரும்பாலோருக்கு காங்கிரசில் என்ன சலுகையின் பேரில் இடமும் யோக்கியதையும் விளம்பரமும் வாழ்க்கை ஊதியமும் கிடைத்து வருகின்றது என்பதை ஒவ்வொருவரையும் பரிசுத்தமான மனதுடன் உணர்ந்து பார்க்கும்படி வேண்டுகிறோம்.

மதிப்பு இல்லாமல், சுயமரியாதை இல்லாமல், மனிதத் தன்மை இல்லாமல், கௌரவ வாழ்க்கை வேலையில்லாமல் செய்யப்பட்டு பல நூற்றாண்டாக வாழ்ந்து வந்த மக்களின் விடுதலைக்காக ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டு அதன்மூலம் கௌரவமும், பதவியும், மரியாதையும், வேலையும் வாழ்க்கை ஊதியமும் அடையக்கூடிய நிலை ஏற்பட்டால் அதற்கு அந்த சமூகத்திலேயே எவ்வளவு போட்டி இருக்கக் கூடும் என்பதை நாம் அளவிட்டுச் சொல்ல முடியுமா? இன்றைய நிலையில் இப்படிப்பட்ட போட்டியில் இழுக்கப்பட்ட ஜனங்களில் 100-க்கு ஒருவர் இருவரே வெற்றியடையக்கூடும் என்பதும், பாக்கி 98, 99 பேர்களுக்கு அந்த ஸ்தாபனத்தின் மீதும், அதன் நிர்வாகத்தில் உள்ள ஆட்கள் மீதும் அதிருப்தியும் விரோதமும் குறோதமும் பழிவாங்கும் சதிக்குணமும் இருந்து வருவதும் ஆச்சரியப்படத்தக்கதாகாது.

ஆதலால் அப்படிப்பட்டவர்களால் ஏற்படும் கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் தலை கொடுத்து அதன் பயனை அடையத் தயாராய் தைரியத்துடன் இருந்தால்தான் அக்கட்சி நிலைக்கவும் அது யாருக்காக எந்த மக்களுக்காக ஏற்பட்டதோ அச்சமூகத்துக்கு அம்மக்களுக்கு பயனளிக்கவும் முடியுமே ஒழிய மற்றபடி ''கட்சி தோற்று விட்டது'' இளைத்து விட்டது என்றவுடன் எதிர் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டு வையத் துடங்கினோமேயானால் யாதொரு பலனையும் அடைய முடியாது என்பதோடு, நம்மை நாமே இழிவு செய்து கொள்ளும் மூடவேலையில் - மானமற்ற வேலையில் இரங்கினோம் என்ற முடிவுதான் பெறக்கூடும்.



## ஆதலால் நாம் செய்ய வேண்டிய வேலை

தோழர் ராமசாமி முதலியார் தோற்றதற்குக் காரணமும், தோழர் ஷண்முகம் தோற்றதற்குக் காரணமும் கட்சியில் உள்ளவர்களின் கொலை பாதகச் செயலுக்கு ஒப்பான வஞ்சகமும், சதியுமே காரணம் என்று ஜஸ்டிஸ் பத்திரிகை கூறுகின்றது.

ஜஸ்டிஸ் பத்திரிகையானது இரு தோழர்களும் தோல்வியடைந்த பிறகு இதைக் கூறுகின்றது. ஆனால் இதைத் தேர்தலுக்கு அபேக்ஷகர்கள் நியமிக்கப்படும் முன்பே கட்சித் தலைவர்களுக்கும், கட்சிப் பிரமுகர்களுக்கும் சிலர் ஆதாரத்தோடு விளக்கிக் காட்டினார்கள். அதைக் கேட்டு பொப்பிலி ராஜா அவர்கள் சிரித்தாராம்.

அது மாத்திரமல்லாமல் தோழர் ஷண்முகம் அவர்களிடம் இச்சங்கதியைப் பலர் தெரிவித்து அவர் நம்பியிருந்த ஆட்களைப் பற்றிய நிலையை எடுத்துச் சொல்லி ''அவர்களை நம்பாதீர்கள்'' என்று சிலர் எடுத்துச் சொன்னார்களாம். அதைக்கேட்டு தோழர் ஷண்முகம் கோபித்து ''அப்படியெல்லாம் பார்த்தால் உலகத்தில் ஒரு காரியமும் நடக்காது'' என்று சொன்னாராம்.

அது மாத்திரமல்லாமல் தோழர் ஷண்முகத்துக்கு டெல்லிக்குத் தந்தி கொடுத்து அந்தத் தொகுதியை மாற்றிக்கொள்ளச் சொல்லிப் பல தோழர்கள் கேட்டுக் கொண்டார்களாம். அதற்கும் தோழர் ஷண்முகம் அவர்கள் சென்னைக்கு வந்து சமாதானம் சொல்லுவதாய்த் தெரிவித்து விட்டு அலட்சியமாய் இருந்துவிட்டாராம்.

இவ்வளவும் தவிர தோழர் ஷண்முகம் மீது தென்னாட்டுப் பார்ப்பனர்கள் மாத்திரமல்லாமல் வடநாட்டுப் பார்ப்பனர்கள் அத்தனை பேரும் பொறாமை கொண்டிருப்பதும், அவர் ஒரு பெரிய அந்தஸ்துக்கு வரப்போகிறார் என்று வயிறெரிந்து கொண்டு இருப்பதும் தோழர் ஷண்முகத்துக்குத் தெரியாததல்ல. இவ்வளவு இருக்கும் போது பாமர மக்களுக்குள் நெருங்கிப் பழகி அனுபோகமுள்ளவர்கள் வார்த்தைகளைத் தோழர் ஷண்முகம் அவர்கள் அலட்சியம் செய்துவிட்டு எதிரியை பஞ்சாங்கம் கேட்டுக் கொண்டிருந்ததே தோல்வியைப் பற்றி ஆச்சரியப்பட வேண்டியதில்லை என்பதற்குத் தக்க ஆதாரமாகும்.

தோழர் ஷண்முகம் அவர்கள் வியாபாரிகளிடத்தில் மெஜாரிட்டி ஓட்டு பெற்றிருந்தாலும் கூட லேவாதேவிக்காரர்களால் ஏமாற்றமடைந்து விட்டார் என்பது அவரது தேர்தலில் வேலை செய்த அத்தனை பேருக்கும் நன்றாய் தெரிந்த விஷயம்.

லேவாதேவிக்காரர்கள் சார்பாக தென்னிந்தியாவிலேயே லேவாதேவிக்காரர் தலைவராகிய செட்டி நாட்டு அரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களையே மலை போல் நம்பி இருந்தார்.



RangaRakes tamilnavarasam.com

ராஜா சர் அவர்களுக்கு இருந்த நெருக்கடியான நிலையை உணர்ந்த எவரும் ராஜா சர் மீது இவ்வளவு பொருப்பும் இவ்வளவு நம்பிக்கையும் வைக்கச் சம்மதிக்கமாட்டார்கள்.

ஏனென்றால் ராஜா சர் அவர்கள் ஒரு பெரிய கேசில் சிக்கிக் கொண்டு அவஸ்தைப்படுகிறார். அந்த கேசுக்கு ஜட்ஜி ஒரு பார்ப்பனர், வக்கீல்கள் பல பார்ப்பனர்கள், வீட்டு வேலை ஆள்கள் கேஸ்காரியம் பார்க்கும் நிர்வாக ஏஜண்டுகள் பார்ப்பனர்கள், அக்கேசுக்கு சாட்சியாக வரும் குட்டி செட்டிமார்களின் வக்கீல்கள் காரியஸ்தர்கள் பார்ப்பனர்கள் சௌகரியம் போல் சர்டிபிகேட் கொடுக்கும் டாக்டர்கள் பார்ப்பனர்கள். ராஜா சர் அவர்களின் மந்திரிமார்கள் பார்ப்பனர்கள், அவர் ராஜா சர் ஆவதற்கு விஷமம் செய்யாமல் விட்டு விட்டவர்கள் பார்ப்பனர்கள். இவையெல்லாம் தவிர செட்டி நாட்டில் ராஜா சர் மீது பொறாமை கொண்ட செட்டிமார்கள் பலர். ராஜா சர் மீது சில்லரைக் கேசுகள் பல. இவைகளோடு ராஜா சர் அவர்களுக்கு மோக்ஷத்துக்கு வழிகாட்டும் புரோகிதர்களும் எப்படி பார்ப்பனர்களோ, அதே போல் அவரது வாழ்க்கையில் கௌரதையைத் தேடிக்கொடுக்க அவருக்கு வழிகாட்டிகள், அல்லது ராஜா சர் அவர்களால் அக்காரியத்துக்கு நம்பி இருக்கப்பட்டவர்கள் பார்ப்பனர்கள். இந்த நிலையில் ராஜா சர் அவர்களால் ஷண்முகத்துக்கு ஒரு காதொடிந்த ஊசி அளவு உதவியாவது எதிர்பார்த்தால் எதிர்பார்த்தவர்கள் முட்டாள்களா அல்லது ராஜா சர் அவர்கள் சதி செய்தவர்களாவர்களா? என்பதை ஆலோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம்.

எனவே தோழர் ஷண்முகம் அவர்கள் செட்டி நாடு ராஜா சர் அண்ணாமலை அவர்களை நம்பியதால் மோசம் போய்விட்டார் என்று சொல்லப்படுவதில் இயற்கைக்கு முரண் ஒன்றும் காணோம்.

அதுபோலவே தோழர் ராமசாமி முதலியார் அவர்கள் தனது தேர்தலுக்கு ராஜா சர் அண்ணாமலையார் குமாரர் குமாரராஜா முத்தையா அவர்களை மலை போல் நம்பினார். ஆனால் குமாரராஜா முத்தையா அவர்களுக்கு சென்னை மேயர் பதவி மோகம் இருந்தது யாவரும் அறிந்ததேயாகும். அதற்கு தோழர் டாக்டர் நடேச முதலியாரும் ஆசைப்பட்டார். இந்தப் போட்டி பார்ப்பனர்களுக்கு ஒரு நல்ல வேட்டையாகி விட்டது. மேயர் பதவியை விலை பேசி தோழர் சத்தியமூர்த்தி அய்யர் தேர்தல் செலவு முழுவதையும் தோழர் குமாரராஜா தலையிலேயே போடப் பார்த்தார்களாம். இந்த நெருக்கடியில் அகப்பட்ட குமாரராஜா அவர்கள் பகுதி செலவுக்கு ஒப்புக் கொண்டு இரண்டொரு கார் வாங்கிக் கொடுத்து தன் செலவில் தன் தயவில் கார்ப்பரேஷனுக்கு கவுன்சிலர்களாக வந்த 4,5 கனவான்களை மாத்திரம் தங்கள் தங்கள் வார்டுகளில் தோழர் சத்தியமூர்த்திக்கு அந்தரங்கத்தில் உதவி செய்யச் செய்வதாக ஒப்புக் கொண்டார்களாம். இது உண்மையாய் இருந்தால் இதற்கு யாரை நோவது?



ராஜா சர். அவர்களுக்கு கேசு அனுகூலமாவதும் குமாரராஜாவுக்கு மேயர் பதவி கிடைப்பதும் முக்கியமான காரியமா? அல்லது சர். ஷண்முகத்துக்கும், திவான்பகதூர் ராமசாமி முதலியாருக்கும் இந்திய சட்ட சபை மெம்பர் பதவி கிடைப்பது முக்கியமா? என்பதை சர். அண்ணாமலை, குமாரராஜா இவர்கள் நிலையில் இருந்து யோசனை செய்து பார்க்க வேண்டுமாய் சர். ஷண்முகம், ராமசாமி முதலியார் ஆகியவர்களையும் அவர்களது ஆதரவாளர்களையும் யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

இந்த லட்சணத்தில் தோழர் ராமசாமி முதலியார் அவர்கள் ஜஸ்டிஸ் கட்சி மீட்டிங் தேர்தலில் குமாரராஜாவுக்கு எதிரிடையாக டாக்டர் நடேச முதலியாருக்கு ஓட்டுச் செய்து விட்டாராம். அதோடு பார்ப்பனர்கள் குமாரராஜாவுக்கு விரோதமாக மேயராய் நிறுத்துவதற்குத் தோழர் கிரிதாரிதாஸ் என்கின்ற ஒரு சேட்டை கையில் வைத்துக் கொண்டு மிரட்டிக் கொண்டே இருந்தார்களாம். அந்தச் சேட்டும் ஒரு பிரபுவானதால் அவர் 30, 40 ஆயிரம் ரூபாய் வரை மேயர் பதவிக்கு செலவு செய்யக் கூடும் என்று பார்ப்பனர்கள் கட்டி விட்டுவிட்டார்களாம். பட்டணத்து வக்கீல்கள் குமாரராஜாவுக்கு C.I.D. கள் போல் இருந்து தோழர் ராமசாமி முதலியாருடன் குமாரராஜாவை பேசுவதற்கு கூட நேரம் இல்லாமல் செய்துவிட்டார்களாம். இந்த நிலையில் அவர்கள் மீது இரண்டு எலக்ஷன் பொருப்புகளையும் போடுவது என்றால் இப்படிப்பட்ட தோல்வியைத் தவிர வேறு என்ன முடிவு எதிர்பார்க்கக்கூடும் என்று கேட்டுவிட்டு வேறு விஷயத்திற்குச் செல்லுவோம்.

## பார்ப்பனர்கள் யாரையாவது முன்னேறவிட்டிருக்கிறார்களா?

நமது பார்ப்பனோத்தமர்கள் தென்னிந்தியாவில் பொதுவாகச் சரித்திரம் தோன்றிய காலம் முதல் இதுவரை எந்தப் பார்ப்பனரல்லா தாரையாவது (காந்தியாரைத் தவிர) முன்னேற விட்டிருக்கிறார்களா என்பதை கவனித்துப் பார்த்தால், தோழர் ஷண்முகம் அவர்களின் காலைத் தட்டி விட்டது ஒரு ஆச்சரியமான காரியமாகாது. (காந்தியாரும் பார்ப்பனர் கைக்குரங்காயிருந்த காரணத்தினாலல்லாது சுதந்திர புத்தியோடு இருந்ததினாலல்ல என்பது எவருக்கும் தெரிந்ததாகும்) தோழர்கள் அனந்தாச்சாரியார், மாதவராவ், ராமய்யங்கார், ரங்கையங்கார், ரகுநாதராவ், கிருஷ்ணசாமி ஐயர், மணி ஐயர், சிவசாமி ஐயர், சீனிவாச சாஸ்திரி, சி.பி. ராமசாமி, அல்லாடி கிருஷ்ணசாமி, வெங்கிட்டராம சாஸ்திரி, விஜயராகவாச்சாரியார் என்பவர்கள் போன்ற பல பொதுவாழ்வு ஆட்களும் ராமச்சந்திரராவ், வி.டி. கிருஷ்ணமாச்சாரி, ராகவையர், டி. விஜயராகவாச்சாரி, கோபால்சாமி அய்யங்கார் போன்ற சர்க்கார் சம்பள உத்தியோக ஆட்களுமாய் சுமார் நூற்றுக்கணக்கானவர்கள் முன்னேறி பெருத்த பதவி, பெருத்த பட்டம், பெருத்த பணம் அவர்களது பிள்ளை



RangaRakes tamilnavarasam.com

குட்டிகள் சுற்றத்தார் ஆகியவர்களுக்கு நல்ல நிலையில் வாழ்க்கை ஆகியவை அடைந்து வந்திருக்கிறார்கள் - வருகிறார்கள் என்பது கண்கூடு.

ஆனால் இந்த நிலையில் நமக்குத் தெரிந்த இந்த ஐம்பது வருஷகாலமாய் எந்தப் பார்ப்பனரல்லாதாராவது இருந்திருக்கிறார்களா, இருக்கிறார்களா என்று கேட்கின்றோம். பார்ப்பனரல்லாதார்களில் சிறந்தவர்களாகிய சர். சங்கர நாயர், கேசவபிள்ளை, T.M. நாயர், தியாகராஜ செட்டியார் முதலியவர்கள் முடிவில் என்ன கதி அடைந்தார்கள்? தேசத் துரோகியானார்கள். தோழர் தியாகராய செட்டியார் குடும்பத்துக்கு இன்று சோற்றுக்கே திண்டாட்டம் என்று சொல்லப்படுகிறது. T.M. நாயர் அவர்கள், அழுவாரற்ற பிணமாய்ச் செத்தார், கேசவபிள்ளை அவர்கள் கடைசி காலத்தில் கெட்ட பேர் வாங்கினவர் என்று சொல்லப்பட்டார், சங்கரநாயர் அவர்கள் எவ்வளவு பெரிய ''தேசீயவாதி'' எவ்வளவு பெரிய 'சீர்திருத்தவாதி' எவ்வளவு பெரிய மூளை சக்தி உடையவர். கடைசியில் ஒரு சாதாரண மனிதராகவே செத்தார். V. கிருஷ்ணசாமி அய்யருக்கு ஞாபகச்சிலை இருக்கிறது. சங்கர நாயருக்கு அவரைப் பற்றி நினைக்க ஒரு காரியத்தையும் காணவில்லை.

பார்ப்பனரல்லாதாரில் சர்வ சக்தியும் உடையவர்கள் இருந்தாலும் அவர்கள் முன்னுக்கு வருவதோ பிரபலம் பெறுவதோ என்கின்ற காரியத்திற்கு இந்தப் பார்ப்பனர்கள் ஒருவரை கூட விட்டதே இல்லை, விடுவதும் இல்லை.

ஆதலால் அவர்கள் சர்.ஷண்முகத்தையும், ராமசாமி முதலியாரையும் காலை வாரிவிட்டதில் அதிசயம் இல்லை. இது முதலாவது காரியமுமல்ல என்று சொல்லுவோம்.

இன்றைய தினம் பார்ப்பனர்களுக்கு பின் தாளம் போடும் தோழர் C.R. ரெட்டி எவ்வளவு கெட்டிக்காரர். அவருடைய கதி இன்று பார்ப்பனர்களுக்கு விளக்கு பிடிக்கும்படியாக ஆகிவிட்டது. தோழர் சுப்பராயன் அவர்கள் பணம், புத்தி, தகுதி எல்லாம் இருந்தும் அவரும் இந்தப் பார்ப்பனர்களாலேயே கால் வாரிவிடப்பட்டு பார்ப்பனதாசராகி அவரும் சி.ஆர். ரெட்டியும் இருவரும் சேர்ந்து சர். ஷண்முகத்துக்கு தங்களாலான கெடுதியைச் செய்து தோற்கடிப்பதற்கு உதவி செய்ய வேண்டியவர்களானார்கள் என்றால் இன்னும் இதற்கு யாரை உதாரணம் சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்த தேர்தல்கள் விஷயத்தில் சென்னை ஓட்டர்களில் பார்ப்பன ஓட்டர்கள் 4000 பேர்கள் என்றால் அதில் சுமார் 2500 க்கு அதிகமாக பார்ப்பன ஓட்டர்கள். சர்க்கார் உத்தியோகத்தில் இருக்கும் இந்த 2500 உத்தியோகப் பார்ப்பனர்கள் ஓட்டில் ஒன்று இரண்டு ஓட்டுகளாவது சத்தியமூர்த்திக்கு விழுகாமல் இருந்திருக்கும் என்று யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம். அவ்வளவு உத்தியோகஸ்தர்களும் சர்க்கார் மனிதர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டு சர்க்கார் ஊதியம் பெற்றுக் கொண்டு



காங்கிரசுக்கு என்று சொல்லிக் கொண்டு சத்தியமூர்த்திக்கே தான் ஓட்டு செய்திருக்கிறார்களே தவிர அவருக்கு விரோதமாக யாரும் செய்துவிடவில்லை.

ஆகவே பார்ப்பனர்கள் வகுப்பு வாதத்தால் வெற்றி பெற்றார்கள். பார்ப்பனரல்லாதார் அது இல்லாததால் தோல்வி பெற்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இவைகள் எல்லாம் எப்படியோ போகட்டும். நம்மைப் பொறுத்த வரையில் நாம் இரண்டொரு விஷயம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

''ஜஸ்டிஸ் கட்சி தோற்றதற்கு காரணம் அதற்கு இந்தியா முழுவதையும் பொருத்த ஒரு வேலைத் திட்டமில்லை. ஆதலால் தோற்றுவிட்டது'' என்று மெயில் பத்திரிகை எழுதி இருக்கிறது. மற்றப் பார்ப்பனப் பத்திரிகைகள் ''ஜஸ்டிஸ் கட்சி வகுப்பு வாதக் கட்சி ஆதலால் தோற்றுவிட்டது'' என்றும் ''சர்க்கார் தாசர் கட்சி அதனால் தோற்றுவிட்டது'' என்றும் சொல்லுகின்றன. பாமர ஜனங்களிடையும் இப்படியே பிரசாரங்கள் நடந்திருக்கின்றன.

இதை எப்போதாவது ஜஸ்டிஸ் கட்சி மறுத்துப் பிரசாரம் செய்திருக்கின்றதா என்று கேட்கின்றோம்.

தோழர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் 7-6-34 ல் யில் சென்னையில் நடந்த ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் கூட்டத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாக மேற்கண்ட மாதிரியான பிரசாரம் பார்ப்பனர்களாலும், அவர்கள் பத்திரிகைகளாலும், அவர்களது கூலிகளாலும் பலமாய் நடந்து வருகின்றது என்றும் அதற்கு சமாதானம் சொல்லி ஆகாவிட்டால் ஜஸ்டிஸ் கட்சி அடுத்த தேர்தலில் கண்டிப்பாய் தோற்றுவிடும் என்றும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்.

(அதை இன்று 15-ம் பக்கத்தில் அப்படியே பிரசுரித்திருக்கிறோம்*) அதை யார் லக்ஷியம் செய்தார்கள். 4, 5 வருஷ காலமாய் தலைவர் ஸ்தானத்துக்கு போட்டி, ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதம் முதலியவைகளால் பிரசாரமே இல்லாமல் இருந்தால் நம் பாமரமக்கள் எதிரிகளின் புரட்டுகளை எப்படி அறியக் கூடும்?

ஜஸ்டிஸ் பத்திரிகை (ஒன்றே ஒன்று) ஆங்கிலத்தில் நடைபெறுகின்றது. எதிரிகள் பத்திரிகைகள் அனேகம் தமிழிலும் இங்கிலீசிலும் நடைபெருகின்றன.

பாமர மக்களுக்கோ தமிழ் கூடத் தெரியாது. இந்த நிலையில் எவ்வளவு சத்தியவானாய் இருந்தாலும், பலனளிக்கக் கூடியவனாய் இருந்தாலும் எப்படி வெற்றி பெற முடியும்? பூமிக்குள் இருக்கும் புதையலின் மீது யாராவது கடன் கொடுப்பார்களா? அது போல் நமது கொள்கைகள், நாம் செய்த வேலைகள், அதனால் ஏற்பட்ட பலன்கள் பாமர ஜனங்களுக்கு அறிவிக்கப்படாமல் அவர்களது ஓட்டுகளைப் பெற நாம் எப்படி அருகதை உடையவர்கள் ஆவோம் என்பது நமக்கு விளங்கவில்லை.



RangaRakes tamilnavarasam.com

தேர்தல் 2 மாதம் இருக்கும் போது கூட கட்சிக்கு தோழர் ஈ.வெ.ராமசாமியால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் ஒத்திப் போடப்பட்டு விட்டது என்றால், கட்சியின் பேரால் கௌரதை, உத்தியோகம், ஊதியம் பெற்று வாழுபவர்கள் பரிகாசம் செய்தார்கள் என்றால் ஓட்டுப் போட்டதற்காக பாமர மக்கள் மீது குற்றம் சொல்லுவதில் பயன் என்ன என்று கேட்கின்றோம். நம்மிடம் எதிரிகள் புரட்டை கண்டிக்கவோ, வெளியாக்கவோ ஆயுதம் இல்லாமல் நிராயுத பாணிகளாய் இருப்பதை எதிரிகள் பயன்படுத்திக் கொண்டால் அது அவர்கள் குற்றமாகுமா? என்று கேட்கின்றோம். சென்றதைப் பற்றி கவலை வேண்டாம்.

அடுத்த தேர்தல்களில் நாம் வெற்றி பெற வேண்டுமானால் ஜஸ்டிஸ் பேப்பரையும், ராஜா சர்.களையும், குமாரராஜாக்களையும், மந்திரிமார் களையும் நம்பினால் - அவர்களை எதிர்பார்த்தால் அதோ கதிதான்.

தோழர்கள் முனிசாமி நாயுடு அவர்களாகட்டும், மற்ற இரண்டாவது மூன்றாவது மந்திரிகளாகட்டும், பரம்பரை ராஜ பட்டம் பெற்ற ராஜா சர். ஆகட்டும், குமாரராஜா ஆகட்டும் இவர்களும் இவர் போன்றவர்களும் கட்சி பிரசாரத்துக்கு நாளது வரை என்ன செய்தார்கள் என்று யோசித்துப் பார்க்கட்டும்.

இவர்களது சம்பளங்களும் கட்சிச் செல்வாக்கால் - கட்சியைக் காட்டிக் கொடுத்ததால் வெற்றி பெற்ற கேசுகளின் வருமானங்களும் எவ்வளவு லட்ச ரூபாய்களாக இருக்கும் என்பதை யோசித்துப் பார்க்கட்டும். இதெல்லாம் பார்ப்பனரல்லாதார் பேர்களால் ஏற்பட்ட கவுரவம், பட்டம், பதவி, செல்வம் அல்லவா? அப்படிப்பட்ட பட்டம், பதவி, அதிகாரம், பணம் ஆகியவை அந்த சமூக பாமர மக்கள் உண்மை அறிவதற்காவது பயன்பட வேண்டாமா என்று எதிர்பார்க்க நமக்கு உரிமை இல்லையா என்று கேட்கின்றோம்.

போனது போகட்டும் இனியாவது ஜஸ்டிஸ் பத்திரிகையை வாரப் பத்திரிகையாகவாவது ஆக்கிவிட்டு தெலுங்கிலும், தமிழிலும், மலையாளத்திலும் மூன்று காலணா தினசரிப் பத்திரிகைகளும் 25 ஜில்லாவுக்கும் பிரசாரகர்களை ஏற்படுத்தி கட்சிக் கொள்கையை திட்டங்களையும் பார்ப்பனர்களின் சூட்சிகளையும் காங்கிரசின் புரட்டுகளையும் வெளியாக்கும் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்தால், இப்பொழுது பார்ப்பனர்கள் நிறுத்திய மாதிரிகூட அல்லாமல் நாம் இன்னமும் அதைவிட மோசமான ஆட்களை தேர்தலுக்கு நிருத்தினாலும் இன்று பார்ப்பனர்கள் அடைந்த வெற்றி போல் நாம் அடையலாம்.

இந்தக் காரியங்களுக்கு பத்திரிகைகளுக்கு மாத்திரம் குறைந்தது மாதம் 10 ஆயிரம் ரூபாய் வேண்டும். 5 மந்திரிமார்களுக்கு மாதம் ஆளுக்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் கொடுத்தால் போதும். ஜஸ்டிஸ் கட்சி தலைமை



காரியாலயத்தை சென்னையை விட்டு கிளப்பி விட வேண்டும். திருச்சியிலோ, கோவையிலோ அல்லது வேறு தகுதியான இடத்திலோ வைக்க வேண்டும்.

ஜில்லா பிரசார சங்கம் தஞ்சை ஜில்லாவில் வைத்து அதற்காக மாதம் 4000 ரூபாய் வீதம் ஒரு வருஷத்துக்கு 50000 ரூபாய் செட்டி நாட்டு ராஜாவும், குமாரராஜாவும் கொடுக்க வேண்டும். தோழர் ஈ.வெ. ராமசாமி சமர்ப்பித்த திட்டத்தை கட்சி திட்டமாக ஏற்றுக் கொண்டு இன்றைய அதிகாரத்தில் எவ்வளவு செய்யக் கூடுமோ அவ்வளவும் மக்களுக்கு செய்து காட்ட வேண்டும்.

இந்தக் காரியங்கள் செய்யாவிட்டால் இந்த தேர்தலில் புகையிலை வழங்கிய பார்ப்பனர்கள் சென்னை சட்டசபை தேர்தலுக்கு சுருட்டு வழங்கத் தகுதியுடையவர்களாகி விடுவார்கள் என்பது உறுதி. ஆகையால் இத் தேர்தல் முடிவைப் பற்றி யாரும் கலங்க வேண்டியதில்லை. வாலிபர்கள் மனம் தளர வேண்டியதில்லை. வகுப்பு வாதம் என்று எதிரி சொல்வதைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை.

வகுப்பு கஷ்டங்களை ஒழிப்பதுதான் நமது கொள்கை. வகுப்புகள் உள்ள வரை வகுப்புவாதம் பேசித்தான் எல்லா வகுப்புக்கும் நீதி வழங்க முடியும்.

எனவே பார்ப்பனரல்லாத வாலிபர்களே! உங்கள் வீரத்தையும் ஊக்கத்தையும் இந்த தோல்வி என்னும் உலையில் வைத்துக் காய்ச்சி தட்டி தீட்டிக் கூர்மையாக்குங்கள். வகுப்பு வாதத்தால்தான் சமதர்மம் அடைய முடியும் என்று நினையுங்கள். இத் தோல்வியால் ஒன்றும் முழுகிப் போவதில்லை. அதை வரவேற்றுக் கொண்டு பார்ப்பனர்கள் நம்மைத் தட்டி எழுப்பி விட்டதற்காக அவர்களுக்கு நன்றி கூறுங்கள். எல்லாம் நன்மைக்கே என்றெண்ணுங்கள். எல்லாவற்றையும் நன்மைக்கு பயன் படுத்திக் கொள்ளுங்கள். ஜெயம்! ஜெயம்!! ஜெயம்!!!

*குறிப்பு: பொப்பிலி அரசர் வீட்டில் கூடிய ஜஸ்டிஸ் பிரமுகர்கள் கூட்டத்தில் தோழர் ஈ.வெ.ரா. அவர்கள் செய்த எச்சரிக்கை உரை 10.6.1934 புரட்சி இதழில் வெளிவந்தது. மறு வெளியீடு செய்யப்பட்டுள்ளது.*

**பகுத்தறிவு - தலையங்கம் - 18.11.1934**

---

## ★ ஜஸ்டிஸ் கட்சிக்கு ஈ.வெ.ராமசாமி 6 மாதத்திற்கு முன் செய்த எச்சரிக்கை

*தலைவரவர்களே! தோழர்களே! !*

*தலைவரவர்கள் தெரிவித்த விஷயங்கள் இயக்கநலனைக் கருதி அவசியம் கவனிக்கத் தக்கதாகும். எல்லா விஷயத்தையும் விட நமது கொள்கை என்ன? திட்டம் என்ன? என்பதைப் பொது*



RangaRakes tamilnavarasam.com

ஜனங்கள் அறியும்படி செய்ய வேண்டும். ஜஸ்டிஸ் கட்சி என்றால் மாதம் 4000 ரூ. சம்பளத்துக்கும் மந்திரி பதவிக்கும் ஊர் சிரிக்கச் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் கூட்டம் என்று இனியும் பாமர ஜனங்கள் சொல்லும்படி நாம் விட்டுக் கொண்டிருக்கக் கூடாது. காங்கிரசுக்காரர்கள் என்பவர்களின் உள் எண்ணமும், நாணையமும் எப்படியிருந்தாலும் அவர்கள் ஏதோ இரண்டொரு கொள்கைகளைச் சொல்லி, அதைப் பெரிதாக்கிக் காட்டி அதற்காக அடியும், உதையும், நஷ்டமும், கஷ்டமும், சிறைவாசமும் பெற்றவர்கள் என்கின்ற பெயரைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களோடு இப்பொழுது திடீரென்று போட்டி போடுவதென்றால் அதுவும் ஒரு விளக்கமான - யாவருக்கும் தெரியும்படியான ஒரு கொள்கையும், திட்டமும் இல்லாமல் போட்டி போடுவதென்றால் சுலபமான காரியமல்ல என்பதே எனது அபிப்பிராயம். கட்சிக்கு கொள்கை இருந்தாலும் இல்லா விட்டாலும் பணமும், ''அதிகாரமும் செல்வாக்கும் இருந்தால் எப்படியும் தேர்தலில் வெற்றி பெற்று விடலாம்'' என்கின்ற தைரியம் சிலருக்கு உண்டு என்பதையும் நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அந்த தைரியம் தனிப்பட்டவர்களின் நன்மைக்குப் பயன்படுமே தவிர ஒரு இயக்கத்துக்கு - பொது ஜன நன்மைக்குப் பயன்படாது. சமீப காலமாக ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் அதிகாரத்திலும், பதவியிலும் இருக்கிறவர்கள் கட்சி கொள்கை விஷயத்தில் போதிய லக்ஷியம் எடுத்துக் கொள்ளவில்லை யென்றும் தங்கள் சுயநலத்தை விட மற்றொன்றையும் சிறிதும் கவனிக்க வில்லையென்றும் கட்சிக் கொள்கைக்கு விரோதமாகக் கூட பல காரியங்கள் செய்யப்பட்டுவிட்டன என்றும் கட்சி ஜனங்களுக்குள்ளாகவே சொல்லிக் கொள்ளப்படுகிறதுடன் மற்றும் பலவிதமான புகார்களும் சொல்லிக் கொள்ளப்படுகின்றன. ஆனால் இப்படிச் சொல்லிக் கொள்ளப்படுவதற்கும் புகார்களுக்கும் ஆதாரமில்லை என்று கூறலாம். ஆதாரமில்லை என்பதைப் பொது ஜனங்களுக்கு மெய்ப்பிக்க வேண்டாமா? மற்றும் நமது எதிரிகள் இப்படிப்பட்ட விஷயங்களைத்தங்களுக்கு அனுகூலமாய் உபயோகித்துக் கொள்ளாமல் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டாமா? நமது சொந்த செல்வத்தையும் செல்வாக்கையுமே எல்லாவற்றிற்குமே சமாதானமாக ஆக்கிக் கொள்ளலாம் என்று சிலர் நினைத்தால் கட்சியில் உள்ள செல்வமும், செல்வாக்கும் இல்லாத மக்களின் கதி என்ன ஆகும் என்பதை யோசித்துப் பாருங்கள். இவர்களுக்கு ஒரு கொள்கையோ, இவர்கள் மீது கூறப்படும் புகார்களுக்கும் குற்றங்களுக்கும் பதில் கூறுவதற்குத் தகுந்த உண்மையான ஆதாரங்களோ இல்லாவிட்டால் இவர்களுக்கெல்லாம் கட்சியில் இடமோ கட்சியின் பேரால் வெற்றியோ எப்படி கிடைக்கும்?



ஜஸ்டிஸ் கட்சி என்றால் ஜமீன்தார்கள், முதலாளிமார்கள் கட்சியே தவிர பொது மக்கள் கட்சியல்ல என்று சொல்லப்படுவது இப்போது மிகமிக சகஜமாகிவிட்டது. இதை நாம் பொய்யாக்கி காட்டாவிட்டால் கட்சியில் உள்ள உண்மை உழைப்பாளிகளுக்கு இதைவிட வேறு அவமானம் வேண்டியதில்லை.

ஆதலால் தகுந்த வேலைத் திட்டமுறைகள் ஏற்படுத்தி பாமர ஜனங்களுக்கு நன்றாய் பிரசாரம் செய்து நமது எதிரிகளின் விஷமப்பிரசாரத்தை தகர்ப்பதுடன் ஏழைப் பொதுமக்களுக்கு பயன்படத்தக்க முறையில் உழைத்தாக வேண்டும். வெறும் ஸ்தாபனங்கள் பெரிதும் சுயநலக்காரர்களின் விளம்பரத்துக்கு ஒரு சாதனமாகும். உழைப்பும் வேலை செய்து காட்டு வதுமேதான் நமது எதிரிகளைத் தோற்கடித்து நமக்கு வெற்றியைக் கொடுக்கும்.

## இந்திய சட்டசபைத் தேர்தல்

அடுத்தபடியாக இந்திய சட்டசபைத் தேர்தலைப்பற்றி பேசப் பட்டது. இந்த சமயத்தில் இது ஒரு முக்கியமான விஷயம் என்பதை நானும் ஒப்புக் கொள்ளுகிறேன். நமது கட்சிக்கு ஒரு கெட்ட பெயருண்டு. அதைப் பொய் என்று மறுக்கவும் என்னிடம் போதிய ஆதாரமில்லை. என்ன வென்றால் ''ஜஸ்டிஸ் கட்சிக்காரருடைய நாட்டமெல்லாம் மாகாண சட்ட சபையிலேயே ஒழிய, இந்திய சட்டசபையைப் பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை'' என்று சொல்லப்படுவதாகும். இதற்கு என்ன விதமான உள் எண்ணம் கற்பிக்கப்படுகிறது என்றால் ''மாகாண கவுன்சிலில் இருந்தால் மந்திரி வேலை பெறலாம் அல்லது மந்திரிகளுக்குத் துணைபுரிந்து நமது வாழ்க்கை நலத்துக்கு ஏதாவது பயன் அடையலா''ம் என்று கருதி இப்படி அலக்ஷியமாய் இருப்பதாக உள் எண்ணம் கற்பிக்கப்படுகிறது. இந்தப்படி சொல்லுபவர்களுக்கு அனு கூலமாகவே சம்பவங்களும் இருந்து வருகின்றன.

இதன் பயனாகவே தென்னிந்தியாவைப் பற்றியும், தென்னிந்திய மக்களைப் பற்றியும் வடஇந்தியர்கள் கேவலமாய் மதிக்கும்படியும், தென்னிந்திய பார்ப்பனர்கள்தான் தென்னிந்திய பொது நல ஊழியர்கள் என்றும், அவர்களே தேச பக்தர்கள் என்றும் கருதும்படி செய்யப்பட்டதுடன் பார்ப்பனரல்லாதார் என்றால் தேசத் துரோகிகள் என்றும் அன்னிய ஆட்சிக்கும் அதன் கொடுங்கோல் தன்மை என்பதற்கும் துணைபுரிந்து சுயநலம் தேடுகிறவர்கள் என்றும் கருதும்படியாக நமது நாட்டுப் பார்ப்பனர்கள் பலரால் விஷமப் பிரசாரம் செய்யப்பட்டு வந்தது. பல காரணங்களால் சிலர் உழைத்து வந்ததின் பயனாக நம்மவர்களில் சிலர் சிறப்பாகவும்



RangaRakes tamilnavarasam.com

குறிப்பாகவும் தோழர்கள் ஆர்.கே.ஷண்முகம், ஏ.இராமசாமி ஆகியவர்கள் இந்திய சட்டசபைக்கு போக நேர்ந்ததில் அவர்களுக்கும், மற்றும் தென்னிந்திய பார்ப்பனரல்லாத சமூகத்துக்கும் எவ்வளவு அந்தஸ்தும் பெருமையும் ஏற்பட்டது என்று யோசித்துப் பாருங்கள். தோற்றுப் போனவர்கள் கூப்பாடு போடுவதைப் பற்றியும் அப்படிப் பட்டவர்கள் அழுவதைப் பற்றியும், நாம் லட்சியம் செய்ய வேண்டியதில்லை. அது போலவே இன்னமும் சிலர் இந்திய சட்ட சபைக்கு நம்மவர்கள் போக நேர்ந்தால் தேசத்துரோகிகள் யார்? தேசீய வியாபாரத்தில் வயிறு வளர்ப்பவர்கள் யார்? என்பதை உலகம் அறியச் செய்துவிடலாம். தோழர் ஷண்முகத்தைப் போலவே எல்லாத் தொகுதிக்கும் ஆள் கிடைக்குமா என்று கேட்பீர்கள். அதைப் பற்றி எனக்கு லக்ஷியமில்லை. நமது நன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் பிறவி எதிரிகளாய் இருப்பவர்களை நமது பிரதிநிதிகளாய் தெரிந்தெடுத்து வருகிறோம் என்கின்ற இழிவும், முட்டாள்தனமுமாவது நமக்கு இல்லாமல் போகுமல்லவா? அதோடு மாத்திரமல்லாமல் நமது எதிரிகள் இந்திய சட்டசபைக்குப் போய் நமக்குக் கெடுதி செய்யும் காரியமாவது நிறுத்தப்பட்டதாக ஆகுமா? இல்லையா? தீண்டாமை விலக்குக்கு விரோதமாக இன்று இந்திய சட்டசபையில் இருப்பவர்கள் யார் என்று யோசித்துப் பாருங்கள். பார்ப்பனரல்லாத கட்சிக்கு நாங்கள்தான் தூண்கள் என்று பெருமை பேசி பயன் பெற்றுவரும் தஞ்சை - திருச்சி ஜில்லா தொகுதியில் வெற்றி பெற்றுச் சென்ற பச்சை வர்ணாச்சிரம வாதியா? அல்லவா? என்று கேட்கின்றேன். இப்படிப்பட்ட நிலையில் இனியும் நமக்கு அப்படிப்பட்ட இழிவும், சங்கடமும் வந்து சேராமல் இருப்பதற்கு நாம் அந்த தேர்தலில் தகுந்த கவனம் செலுத்த வேண்டும். அத்தொகுதிக்கு கட்சியின் பேரால் பணம் வசூலித்துக் கொடுத்தாவது தக்க அபேக்ஷகர்களை நாம் தெரிந்தெடுக்கச் செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் முன்போல் இனி அலக்ஷியமாய் இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்திக்கூற ஆசைப்படுகின்றேன்.



# சத்தியமூர்த்தியின் தற்கால ஞானோதயம்

**தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் தேர்தலில் வெற்றியடைந்த ஆனந்த லாகிரியில் மெய் மறந்து பேசிய பேச்சு.**

''எனக்குள் சில சமயங்களில் பிராமணர் - பிராமணரல்லாதார் என்கின்ற உணர்ச்சி வந்தது. ஆனால் இப்போது அது மறந்து போயிற்று.''

''பிராமணரல்லாதார் எனக்குச் செய்த இந்த நன்றியை நான் எப்போதும் மறக்கமாட்டேன்.''

''என் சரீரத் தோலை உரித்து பிராமணரல்லாதாருக்கு செருப்பாய் தைத்துப் போட்டாலும் கூட அது சரியான நன்றியாகாது'' என்று பேசி யிருக்கிறார். லாகிரி தீர்ந்தால் என்ன பேசுவார் என்று எழுத வேண்டுமா?

பகுத்தறிவு - செய்திக் குறிப்பு - 18.11.1934



RangaRakes

tamilnavarasam.com

# தோழர். ஜே.என்.இராமநாதன்

பார்ப்பனரல்லாத மக்களின் நலத்திற்காக உழைத்து வந்த தோழர் ஜே.என். இராமநாதன் அவர்கள் 15.11.34 - ல் சென்னையில் மரணமடைந்தாரென்பதையறிந்து வருந்துகிறோம். நமது அனுதாபத்தை அவர் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கிறேம்.

**பகுத்தறிவு - இரங்கல் செய்தி - 18.11.1934**



# குழந்தை வளர்ப்பும் சுகாதாரமும்

நமது நாட்டு மக்களில் 100-க்கு 95 பேர் சுகாதாரத்தின் பயனை யறியாதவர்களாயும் அதையறிந்து கொள்ள வேண்டுமென்னும் அக்கறையில்லாதவர்களாயுமிருக்கின்றார்கள். காரணம் படிப்பின்மையும், பழக்க வழக்கமுமேயாகும். இதையனுசரித்தே மேல் நாட்டார் நம்மை சுகாதாரமற்றவர்கள் என்றும், நாகரிகமற்றவர்கள் என்றும் நினைக்கிறார்கள். நம் நாட்டிலும் மேல் ஜாதிக்காரர்கள் என்போர் தங்களை நாகரிகஸ்தர் என்றும், சுகாதாரமுடையவர்கள் என்றும் நினைத்துக் கொண்டு, மற்றவர்களை சுகாதாரமற்றவர்கள் என்றும் நாகரிகமற்றவர்கள் என்றும் தாழ்ந்த ஜாதியார்கள் என்றும் குறிப்பிடுகிறார்கள். சுகாதாரமின்மையாலேயே ஒரு கூட்டத்தாரைத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று காரணமும் தத்துவார்த்தமும் கூறப்படுகிறது. அப்படிப்பட்ட சுகாதாரத்தைக் கைக் கொள்ளாத தாழ்த்தப்பட்ட மக்களை சுகாதாரத்தைக் கைக் கொள்ள முடியாமல் கிணறு, குளம், நல்ல வாழ்க்கை முதலியவைகளை கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் தடைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. நம்மில் அத்தகைய இழிவும் தடையும் கற்பிக்கும் மக்களின் கெட்ட எண்ணத்தையும், அதன் பயனாய் சுகாதார வசதியை அனுபவிக்க முடியாமல் தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஒதுக்கப்பட்டிருக்கும் மக்களின் பரிதாப நிலைமையையும் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். இந்த விஷயத்தில் ''சுகாதாரம்'' என்பதற்கு ஏற்பட்டுள்ள பெரும் தடையை ஒழிக்க சுகாதார இலாகா அதிகாரிகளும், அரசாங்கமும் தக்க சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மேல் நாட்டினர் தங்கள் வாழ்க்கையில் சுகாதாரத்தை அடிப் படையாகக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய வாழ்க்கையில் உடை, உணவு, வீடு, வாசல், பானம், நல்ல காற்று, சுத்தமான தேகம் ஆகியவைகளில் கண்ணுங்கருத்துமா யிருப்பார்கள். எனது ஐரோப்பா யாத்திரையில் லண்டனிலிருந்து 270 மைல் தூரத்திலிருக்கும் ஒரு கிராமத்தில் ஒரு தொழிலாளி வீட்டில் ஒரு நாள் தங்கினேன். நான் தங்கியிருந்த வீட்டில் ஒரு சிறுபையன் இருந்தான். அவனுடைய அம்மாளும் அக்காளும் ஆக மூவரும் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று பையன் வெளியில் ஓடினான். பிறகு



RangaRakes tamilnavarasam.com

வெகுநேரம் வரவில்லை. பிறகு பையன் எங்கே என்று நான் கேட்டேன். உடனே அவன் அக்காள் வெளியில் சென்று அவனைத் தேடி பிடித்து வந்தாள். பேசிக் கொண்டிருக்க இருக்கத் திடீரென்று வெளியில் போன காரணம் என்ன என்று கேட்டதற்கு ''நான் நல்ல காற்று உட்கொள்ள வெளியில் போய் உலாவி வந்தேன்'' என்று பதில் சொன்னான். இது அவன் ஒரு சாக்குக்காக சொல்லி இருக்கலாம் என்றாலும் 5 வயது பையன் நல்ல காற்று கெட்ட காற்று என்பதை உணர்ந்திருக்கிறான் என்பது கவனிக்கத்தக்கதாகும். எந்த வேலையிருந்தாலும், காலா காலங்களில் சுகாதாரத்தைக் கைகொள்ளுவதில் மேல் நாட்டில் சிறுவர்கள் முதல் கவலை கொண்டிருக்கிறார்கள் என்பது இதனால் தெரிகிறது. நம்நாட்டுப் படிப்பில் சுகாதார வாசமே இல்லை. நம்நாட்டிற்கு ஆண் பெண் அடங்கலும் அனேகர் சுகாதாரம் இன்னதென்பதையறியாமலும், கொஞ்ச நஞ்சம் கேள்விப் பட்டாலும் அதை பொருட்படுத்தாமலுமே தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். வீதிகளில் பெரும் அசுத்தம் செய்கின்றனர். கொஞ்சம் படித்த பெண்களும் கூட தங்கள் வீடு வாசல்களைச் சுகாதார முறைப்படி சுத்தமாய் வைத்துக் கொள்வதில்லை.

பொதுவாகவே மேல் நாட்டினர் தங்கள் வாழ்க்கையில் சுத்தத்தையும், சுகாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டு அதற்கேற்றபடி நடந்து வருவதனால் வியாதிகளின் தொல்லைக்காளாகாமலும், சுகஜீவிகளாகவும் உலகில் அதிக நாள் வாழ்கிறார்கள். நம் நாட்டு ஜனங்களோ, வியாதி ஏற்படுவதும், மரணம் சம்பவிப்பதும் தங்கள் தங்கள் தலை விதியென்றும், அவரவர் கேட்டு வந்த வரம் என்றும் நினைத்துக் கொண்டு, தங்கள் அஜாக்கிரதையினாலும் சுகாதாரமின்மையினாலும் ஏற்படும் வியாதிகட்குத் தகுந்த வைத்திய சிகிச்சையும் செய்யாமல் கடவுளுக்குக் காணிக்கை எடுத்து முடிந்து வைப்பதும், விபூதி மந்திரித்துப் போடுவதும் இன்னும் பல வேண்டுதலைச் செய்து கொள்ளுவதும் கடைசியில் மரணம் ஏற்பட்டால் அவ்வளவு தான் அவனுக்கு ஆயுசு என்று முடிவு கட்டியும் விடுகிறார்கள். அஜீரணத்தினால் ஏற்படும் காலரா வியாதியை மகாமாரி என்று கொண்டாடுகிறார்கள். அதோடு நம் நாட்டில் பண்டிகைகளும், உற்சவங்களும் அநேகம். அதைப் பார்க்கச் செல்லும் ஜனக் கூட்டமும் ஏராளம். உற்சவம் நடக்குமிடங்களில் தான் வியாதிகள் உற்பத்தியாகின்றன. பிறகு அவைகள் அங்கிருந்து பல ஜனங்களின் மூலம் பல ஊர்களுக்குப் பரவுகிறது. இவ்வித மூடநம்பிக்கையும் அறியாமையும் உடைய ஜனங்கள் வியாதி வராமல் தடுக்க சுகாதாரத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றால் அது இம்மாதிரி ஒரு நாள் இரண்டு நாளில் நடக்கும் கொண்டாட்டத்தினால் கொஞ்சமும் பலனளிக்காது. இந்தக் கொண்டாட்டத்தோடு சுகாதாரப் பிரசாரம் பூர்த்தியடைந்து விட்டதெனக் கருதக் கூடாது. நகர சபையார் ஜனங்களின் மனப்பான்மைக் கொத்தபடி முக்கியமாய் பெண்களுக்குப் பெண்டிர்களைக் கொண்டும், பெண் போதகர்களைக் கொண்டும் அடிக்கடி சுகாதார போதனை செய்து வரவேண்டும். சாதாரண ஜனங்கள் இதுவும் ஒரு சர்க்கார் பண்டிகை என்றே நினைப்பார்கள். இந்தக் கொண்டாட்டம் தீர்ந்தவுடன் நான் எதிர்பார்க்கும் புதிய முறைச் சுகாதாரப் பிரசாரம் நடத்தி வரவும், பொதுவாக தெருக்களிலும் பொது ஜாகாக்களிலும், குழாய் ஸ்தலங்களிலும் எந்தவித அசுத்தமும் நேராதபடி புதிய திட்டத்தில் முனிசிபல் கமிஷனர் சுகாதாரத்தை அமுலுக்குக் கொண்டு வருவார் என்று ஆசையுடன் எதிர்பார்க்கிறேன். அந்தப்படி செய்வதில் சில பணக்காரர் சுயநலக்காரரின் வருத்தம் ஏற்படலாம். அவற்றை லக்ஷியம் செய்யாமல் ஊர் பொது நன்மையே பெரிது எனப் பாவித்து நடுநிலைமையில் நல்ல ஏற்பாடு நடைபெறும் என்று நம்பி எதிர்பார்க்கிறேன்.

## குழந்தை வளர்ப்பு

குழந்தை வளர்ப்பு விஷயத்தில் நம் நாட்டு மக்களுக்குக் கொஞ்சமும் கவலையே கிடையாது. குழந்தை வளர்ப்பு விஷயத்தில் அந்தந்த தாய் தகப்பன்மார்களைவிட அரசாங்கம் அதிக அக்கரை யெடுத்துக்கொள்ள வேண்டும். மேல்நாட்டில் ஒவ்வொரு நகரத்திலும் குழந்தை வளர்ப்புக்கென பொதுவிடங்கள் அமைத்து அங்கு சில ஆயிமார்களை நியமித்து சுகாதார முறைப்படி குழந்தைகள் வளர்க்கப்படு கின்றன. மற்றும் சில குடும்பத்தார்கள் தங்கள் தங்கள் சொந்த பொறுப்பிலும் ஆய்மார்களை நியமித்து குழந்தைகளை மிகவும் தேகாரோக்கியமாக வளர்க்கின்றனர். சுருங்கக் கூறில் மேல்நாட்டில் ஏழை முதல் எல்லாப் பணக்காரர் வீட்டுக் குழந்தைகளும் ஆய்மார்கள் மூலமாகவே வளர்கின்றன. மேல்நாட்டில் நான் பார்த்த ஒரு சாதாரண குடும்பத்தில் ஒரு குழந்தையின் தாய் தன் குழந்தையை வேறு ஒரு ஆயா வசம் வளர்க்க ஒப்புவித்துவிட்டுத் தான் வேறு ஒரு வீட்டுக் குழந்தையை வளர்க்கும் வேலையில் அமர்ந்திருந்தாள். இதற்குக் காரணம் என்ன வென்று கேட்டதில் தன் குழந்தையை வளர்க்கத் தான் மாதம் 20 ரூபாய் சம்பளம் கொடுப்பதாகவும், தான் வளர்க்கும் குழந்தையின் பெற்றோர் தனக்கு மாதம் 60 ரூபாய் சம்பளம் கொடுப்பதாகவும் அந்த அம்மாள் சொன்னார். இந்தப்படி மேல் நாட்டார்கள் குழந்தைகளை ஆய்மார்கள் மூலம் வளர்ப்பதால் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் தனித்தனியே சுகாதாரமும் தேகாரோக்யமும் நல்ல வாழ்வும் ஏற்படுகின்றன. நம் நாட்டிலோ அந்த வழக்கமில்லை. நம் நாட்டுப் பெண்கள் குழந்தைகள் பெறும் விஷயத்திலும், வளர்க்கும் விஷயத்திலும் இன்னும் மிருகப் பிராயத்திலேயே இருந்து


RangaRakes tamilnavarasam.com

வருகிறார்கள். மற்ற விஷயங்களைவிட இந்தக் குழந்தை பிரசவ விஷயமும், பின் குழந்தைகள் வளர்ப்பு விஷயமும் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியதாகும். அதோடு பிரசவ பெண்கள் பிரசவத்துக்கு முன்னும் பின்னும், பிரசவ காலத்திலும் நடந்து கொள்ள வேண்டிய விஷயத்தை அவர்களுக்கு நாம் நன்கு எடுத்துரைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

*குறிப்பு: 20.11.1934-ல் ஈரோடு வள்ளுவர் புது வீதி முனிசிபல் சிசு பரிபாலன விடுதி முன் நடந்த ஈரோடு சுகாதார கல்வி வாரக் கொண்டாட்ட நிகழ்வில் ஆற்றிய உரை.*

பகுத்தறிவு - சொற்பொழிவு - 25.11.1934



# கமிஷனர் அவர்கள் கவனிக்க வேண்டுகிறோம்

ஈரோடு முனிசிபாலிட்டிக்கு கமிஷனர் ஏற்பட்டு சுமார் 2 மாத காலமே ஆன போதிலும் இதற்குள் பல துரைகளிலும் சீர்திருத்தங்கள் நடந்து வருகின்றதானது மகிழ்ச்சியடையக் கூடிய காரியமேயாகும்.

என்றாலும் சுகாதார விஷயத்திலும் தெருக்கள் ஆக்கிரமிப்பு விஷயத்திலும் இன்னும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

**தெருக்கள்**

தெருக்கள் அதாவது ஜனங்கள் குடி இருக்கும் பாக வீதிகள் பெரிதும் கக்கூசாகவே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

குழந்தைகளை பகல் காலங்களில் தாய்மார்கள் தாராளமாக தெருக்களில் மலஜலம் கழிக்க விடுகின்றார்கள்.

இரவு நேரங்களில் பெரியவர்களே தெருக்களை கக்கூசாக உபயோகிக்கிறார்கள்.

**குழாய்கள்**

தெருக்குழாய்களின் பக்கத்தில் பாத்திரம், மாடு கன்றுகள் கழுவுகின்றார்கள். தெருக்குழாய்களில் துணிகள் துவைக்கிறார்கள். தெருக்குழாய்களில் ஸ்நானம் செய்கின்றார்கள்.

இக்காரியங்கள் பெரிதும் மேல் ஜாதிக்காரர்கள் என்று தங்களை சொல்லிக் கொள்ளுபவர்கள் குடி இருக்கும் வீதிகளிலேயே அதிகமாய் நடக்கின்றன.

சில சந்து பொந்துகள், நடக்க யோக்கியதையற்றவைகளாகவே காணப்படுகின்றன.

தெருக்களில் குப்பைத் தொட்டிகள் அல்லாத இடங்களில் குப்பைகள், அசிங்கங்கள் போடப்பட்டு வருகின்றன.

**கடை வீதிகள்**

இவைகள் ஒரு புறமிருக்க கடை வீதிகளில் குறுகிய தெருக்களாக இருக்கும் இடங்களிலும் கூட வீதியில் கால்கள் நிறுத்தி தட்டி போட்டுக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டு தெருவின் அகலத்தைக் குறைத்துக் கொள்ளுவதும், தெருவில் டிச்சுகளின் மீதும், தெரு ஓரங்களிலும் பெட்டிகள் போட்டுக் கொள்ளுவதும், கால்கள் நட்டு பலகைகள் போட்டு உட்கார்ந்து கொள்ளுவது, வியாபார சாமான்களை வீதியில் அடுக்கி வைப்பது ஆகிய காரியங்களாலும் தெருக்கள் அதிக குறுகலாக்கப்படுகின்றன.

லார்டு நேபியர் வீதியில் கோர்ட் வீதி ஜங்ஷனிலிருந்து அக்ரார வீதி ஜங்ஷன் வரையில் நடக்கும் அக்கிரமம் சொல்லத்தரமல்ல. வாடகைக்கு இருப்பவர்கள் முனிசிபாலிட்டி இடத்தை உபயோகப்படுத்திக் கொண்டு ஜனங்களுக்கு இடைஞ்சல் செய்து விட்டு கடைக்காரர்களுக்கு வாடகை கொடுக்கின்றார்கள் என்றால் ஜனங்களுக்கு அனுகூலம் செய்வதற்காக இருக்கும் முனிசிபாலிட்டி இதைச் சகித்துக் கொண்டு இருக்க முடியாது.

படிக்கட்டுகள் கூட தெருவில் இருக்க இடமில்லாமல் செய்தால்தான் அந்த வீதி வண்டிப் போக்குவரத்துக்கு லாயக்காகுமே ஒழிய மற்றபடி அதை இந்த மாதிரி கடைக்காரர்களுக்கு கொள்ளை போக விட்டுவிட்டு வண்டிகளை அதில் விடுவது மகா கொடுமையான காரியமாகும்.

சமீபத்தில் ஒன்று இரண்டு வாரத்தில் 2, 3 ஆபத்துகள் ஏற்பட்டிருக் கின்றன. மோட்டார்கள் பலமாக தாக்கப்பட்டு காயமடைந்ததை நேரிலேயே பார்க்க நேர்ந்ததாலேயே இதை எழுதுகிறோம்.

இந்த குறைபாடுகள் ஈரோடு முனிசிபாலிட்டியில் வெகு நாளாய் இருந்து வருகிறது என்றாலும் அவைகள் பெரிதும் ஜனநாயக தத்துவத்தால் ஏற்படுகின்ற தவிர்க்க முடியாத கெடுதி என்று கருதித்தான் ஒவ்வொரு கௌன்சிலுக்கும் கமிஷனர்கள் வேண்டியது அவசியம் என்றும் அவர் தனது சுதந்திர எண்ணங்களை தாராளமாய் உபயோகிக்கத் தகுதி உடையவராய் இருக்க வேண்டும் என்றும் அறிஞர்கள் ஆசைப்பட்டதாகும். ஆதலால் கமிஷனர் அவர்கள் தயவு செய்து இக்காரியங்களில் சிறிது கவனம் செலுத்தி பொது ஜன சவுகரியத்துக்கு உதவிபுரிய வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

இந்தக் காரியங்கள் ஆரம்பத்தில் சிலருக்கு அசௌகரியமாகத் தோன்றலாம். பழக்கமாகிவிட்டால் பிறகு சரியாய்ப் போய்விடும் என்று கருதுகின்றோம். அன்றியும் சிலருக்கு அசௌகரியம் என்பதற்காக பொது ஜனங்கள் கஷ்டப்படுவது என்பது நாகரீகத்துக்கும் நீதிக்கும் ஒத்ததாகாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். மற்ற விஷயங்கள் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.

பகுத்தறிவு - செய்தி விளக்கக் குறிப்பு - 25.11.1934



# ஜஸ்டிஸ் கட்சிக்கு ஒரு வார்த்தை

இந்திய சட்டசபை தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி தோற்றுவிட்டது. தேர்தலில் அதிகாரத்திலிருக்கும் கட்சிக்கு எப்பொழுதும் பலம் குறைவு என்பதையும், எதிர்கட்சியில் இருப்பவர்களுக்கு பலம் அதிகம் என்பதையும், அதிகாரத்தில் இருப்பவர்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆதலால் தேர்தல் வந்தால் எதிரிகளை விட அதிகாரத்தில் இருப்பவர்கள் இரண்டு பங்கு பலமுடையவர்களாக இருக்கக் கணக்குப் போட்டுக் கொண்டால்தான் தேர்தலில் முகம் கொடுக்க முடியும்.

இன்றைய ஜஸ்டிஸ் கட்சியார் தங்கள் கட்சியில் யார் யார் இருக்கிறார்கள் என்று சொல்லுவதற்கே முடியாத நிலையில் இருக்கிறார்கள்.மந்திரிகள் வக்கிரமாகவே இருக்கிறார்கள். ஒரு சமயம் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்றாலும் அடுத்த மந்திரி பதவியும் தங்களுக்கே வரும் என்றால்தான் ஒற்றுமை என்று காட்டிக் கொள்வார்களே தவிர மற்றபடி ஒருவரை ஒருவர் கவிழ்க்கவே தபஞ் செய்து கொண்டிருப்பார்கள் என்று சொல்ல வேண்டி இருக்கிறதற்கு வருந்துகிறோம்.

வெளியில் ஒவ்வொரு ஜில்லா தாலூக்காக்களில் உள்ள ஜில்லா போர்டு பிரசிடெண்டு சேர்மன் முதலியவர்கள் அடுத்த தடவையும் பிரசிடெண்டு சேர்மன் ஆவதற்கு யாருடைய தயவு வேண்டுமோ அவருடைய கட்சிதானே தவிர மற்றபடி இன்று அவர்களுக்கு அதாவது பிரசிடெண்டுகள் சேர்மன்கள் என்பவர்களுக்கு எந்த கட்சியும் இல்லை எவ்வித அபிமானமும், கொள்கையும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

மற்றபடி சட்டசபை மெம்பர்கள் யோக்கியதையும் சொல்ல வேண்டியதில்லை. இந்த நிலையில் அடுத்த தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி எப்படி ஜெயிக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

தோழர் சுப்பராயன் அவர்களுக்கு ஒரு ''கட்சி'' இருக்கிறது. அவர்களுடைய கொள்கை எல்லாம் சுப்பராயன் அவர்களுக்குத் தானே எப்படியாவது மறுபடியும் மந்திரியாக வேண்டும் என்பதும், சுப்பராயன் அவர்களைப் பின்பற்றுவோர்களுக்கு அதனால் தாங்கள் ஏதாவது பயன் அடைய வேண்டும் என்பதுமேயாகும். அது போலவே தோழர் முனிசாமி நாயுடு அவர்களுக்கும் ஒரு ''கட்சி'' இருக்கிறது. அவர்களது



RangaRakes tamilnavarasam.com

கொள்கையும் மேல் குறிப்பிட்டது போலதான். இதை நாம் இன்று குற்றமாக சொல்லவில்லை. ஏனெனில் காங்கிரசின் யோக்கியதையும் அப்படியே, சுதந்திரக் கட்சியின் யோக்கியதையும் அப்படியே. ஜஸ்டிஸ் கட்சியின் யோக்கியதையும் அப்படித்தான் என்று சொல்ல வேண்டிய நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது.

ஆகவே மந்திரியாவதற்கும், ஒருவரை மந்திரியாக்கி வைத்து அதனால் ஏதாவது உதவி மற்றவர்கள் பெறுவதற்கும் என்பதாக இன்று அரசியல் உலகத்தில் கட்சிகள் இருப்பது இன்றைய முறையில் குற்றம் என்று நாம் சொல்ல வரவில்லை.

தோழர் சுப்பராயன் மந்திரி தன்மையை கவிழ்த்ததற்கு பார்ப்பனர்கள் அஸ்திவாரமாக இருந்தார்கள் என்றாலும் பார்ப்பன ரல்லாதார்கள் அதற்கு உதவியாய் இருந்து அவரை ஒழித்தது அக்கிரமமேயாகும். அவர் மந்திரி சபை செய்த காரியங்களில் 10ல் ஒரு பாகம் கூட இன்று வந்த மந்திரிகள் சாதித்து விட முடியவில்லை. அதை ஒழித்த தோழர் முனிசாமி நாயுடு மந்திரிசபை சிரிப்புக்கு இடமாய் இருந்தது. அதாவது அவர் காலத்தில்தான் மந்திரிகள் உத்தியோகத்துக்காக எதையும் செய்வார்கள் என்று சொல்லக்கூடியவர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டது. பிறகு ஏற்பட்ட மந்திரிசபையும் உள்ளுக்குள் கரையான் அரிக்கின்ற மாதிரியாகவே கக்ஷிக் கட்டுப்பாடு இருந்து வந்தாலும் தோழர் பொப்பிலி ராஜா அவர்கள் இல்லாதிருந்தால் என்ன கதி ஆகி இருக்குமென்று சொல்ல முடியாது என்றும் சொல்லுவோம்.

அடுத்த தேர்தலில் பொப்பிலி ஜெயிப்பார் என்று ½ அணா பந்தயம் கட்டச் சொன்னாலும் கட்டுபவர்கள் கிடைப்பது அறிதாகத்தான் காணப்படுகிறது. ஏனெனில் அவ்வளவு பயம் ஏற்பட்டுவிட்டது. அப்படியானால் மற்றவர்களைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

இந்த நிலையில் ஒரு கட்சியை வைத்திருப்பது என்பது அக்கட்சிக்கு மிகவும் அபாயகரமான காரியமாகும்.

ஆதலால் தோழர் பொப்பிலி ராஜா அவர்கள் இந்த சமயத்தில் துணிவாக ஒரு காரியம் செய்யவேண்டும் என்று ஆசைப் படுகிறோம். அதென்னவென்றால் முதலில் கட்சியை உருப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தோழர்கள் சுப்பராயனையும் முனிசாமிநாயுடு அவர்களையும் ஜஸ்டிஸ் கட்சிக்குள் ஆக்கிக் கொள்ளவேண்டும். இது விஷயத்தில் கவலை இல்லாமல் இருப்பது புத்திசாலித்தனமாகாது.

அடுத்த சீர்திருத்தத்தில் 7,8 மந்திரி ஸ்தானங்கள் வரப் போகின்றன. ஆளுக்கொரு மந்திரி எடுத்துக் கொண்டு தொலையட்டும் என்று தைரியமாய் இடம் கொடுக்க வேண்டும். சம்பளத்தில் பகுதியைக் கட்சிப் பண்டுக்கு உபயோகிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.



சீர்திருத்த மந்திரி சம்பளங்களையும் ஒரு அளவுக்காவது குறைக்க ஒப்புக்கொள்ள வேண்டும். இவைகளைச் செய்ய முன்வராமல் அதைவிட்டு விட்டுத் தனி அறைக்குள் இருந்து கொண்டு பொருப்பற்ற ஆட்களுடனும் எப்படியாவது தன் காரியம் ஆனால் போதும் என்று வாழ்கின்ற ஆட்களுடனும் கூடிப் பேசி முடிவு செய்து கொண்டு தைரியமாய் இருந்தால் அடியோடு நசுங்கிப் போக வேண்டிவரும் என்று இப்போதே எச்சரிக்கை செய்கின்றோம்.

பின்னால் வரப்போகும் சென்னை சட்டசபைத் தேர்தல் முடிவைப் பற்றி நாம் எழுத நேரிடும்போது இந்த வியாசத்தை எடுத்துப்போட்டு காட்ட வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதே நமது ஆசையே ஒழிய வேறில்லை.

எனவே அடுத்த மாத முதல் வாரத்தில் ஒரு மீட்டிங்கி போட்டு வேலைத் திட்டங்களைப் பற்றி ஒரு முடிவு செய்து கொண்டு தோழர்கள் சுப்பராயன், முனிசாமி நாயுடு ஆகியவர்களையும் கலந்து ஏதாவது ஒரு கட்டுப்பாடு உண்டாக்கிக் கொள்ள வேண்டியது மிக அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இந்திய சட்டசபைத் தேர்தல் தோற்றுப்போனது நமக்கு ஒரு பெரும் வெற்றி அளிக்கக் கூடியதாய் முடிய வேண்டுமானால் இதைச் செய்ய வேண்டியது அறிஞர் கடமையாகும்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 25.11.1934**



RangaRakes tamilnavarasam.com

# தோழர் வரதராஜுலு

தோழர் வரதராஜுலு அவர்கள் தோற்றுவிட்டார் என்பதில் நாம் சிறிதும் ஆக்ஷேபிக்காமலும் ஆக்ஷேபிப்பதும் முடியாத காரியம் என்றும் பலமான தோல்விதான் என்பதையும் ஒப்புக் கொள்ளுகிறோம். அவருக்கு ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் உள்பட அநேகர் ஆதரவளித்தார்கள் என்றாலும் தோல்வியே ஏற்பட்டது என்பது உண்மைதான்.

ஆனால் தோழர் ஷண்முகம் அவர்கள் தேர்தலுக்கும் தோழர் எ.ராமசாமி முதலியார் அவர்கள் தேர்தலுக்கும் நடந்த காரியங்கள் தோழர் வரதராஜுலு நாயுடு அவர்கள் தேர்தலுக்கும் நடந்ததா இல்லையா என்றால் நடந்தது என்றுதான் சொல்ல வேண்டும். அதுவும் நன்றாய் நடந்தது என்றுதான் சொல்ல வேண்டும். தோழர் வரதராஜுலு அவர்கள் தேர்தலுக்கு நிற்கும் விஷயத்தைப் பற்றி தானே முடிவு செய்து கொள்ளாமல் தன்னையொத்த இரண்டொரு பார்ப்பனரல்லாத காங்கிரஸ்வாதி, தேசபக்தர்கள் என்று சொல்லப்படுகின்றவர்களை கலந்து ஆலோசித்தார். அதில் சிலர் அவரை நிற்கச் சொல்லி கட்டாயப்படுத்தியதோடு தாங்கள் ஊர் ஊராய், கிராமம் கிராமமாய் தன் சொந்தத்தில் போய்க்கூட நாயுடுவுக்காக பிரசாரம் செய்வதாய் ஒப்புக் கொண்டு அவருக்கு உற்சாகமூட்டினார்கள். இதை நம்பியே தோழர் நாயுடு அரைகுறையாய் இருந்த மனதை கெட்டிப்படுத்திக் கொண்டார். அதோடு காங்கிரஸ் தலைவர்கள் என்னும் தென்னாட்டுப் பார்ப்பனர்களை தாராளமாக எதிர்ப்பதாகவும், அவர்களுடைய சூட்சிகளை வெளிப்படுத்துவதாகவும் ஒப்புக் கொண்டார்கள். கடைசியாக வெற்றி தோல்வியைப் பற்றிக் கூடத் தான் கவலைப்படுவதில்லை என்றும், பார்ப்பன சூட்சியை வெளிப்படுத்த தன்னுடன் கூட ஒத்துழைத்தால் போதும் என்றும் சொல்லிக் கொண்டார். அதற்கெல்லாம் சம்மதம் கொடுத்து அவரை உற்சாகமூட்டிவிட்ட தோழர்கள் இரண்டொருவர்கள் பார்ப்பனர்களின் அடக்கு முறைக்கு பயந்து கொண்டு டாக்டர் நாயுடுவை காலை வாரி விட்டு விட்டார்கள்.

வெளிப்படையாய் எதிரிகளாகவோ, பொறாமைக்காரர்களாகவோ இருந்தவர்கள் செய்யும் காரியங்களைப் பற்றியோ, வையும் வசவுகளைப் பற்றியோ குறை கூறுவது பயங்காளித்தனமாகும். அதற்கு மார்பைக் காட்ட வேண்டியதே ஆண்மையாகும். ஆனால் இந்த மாதிரி நம்பச் செய்து கழுத்தை அறுப்பது என்பது வெளிப்படுத்தித் தீரவேண்டிய



காரியம் என்பதோடு பின்னால் மற்ற மக்களுக்கும் ஒரு படிப்பினைக்கு இதை பயன்படுத்திக் கொள்ளச் செய்ய வேண்டியதும் அவசியமாகும்.

நிற்க தோழர் வரதராஜுலுவின் யோக்கியதையை - தகுதியை நிர்ணயிக்க இந்த தேர்தலே ஒரு அளவு கருவியாகி விடாது.

ஜர்மனியில் ஹிட்லர் ஜெயித்துவிட்டார். இன்றும் 100 தேர்தல் வைத்தாலும் அவரேதான் ஜெயிப்பார். அதனாலேயே அவர் ஜர்மனி ஜனப்பிரதிநிதியென்றோ, அதற்குத் தகுதியானவரோ யோக்கியரோ என்றோ சொல்லிவிட முடியுமா? ஹிட்லரிசம் மிரட்டி ஓட்டு வாங்கினால் காந்தீயம் (என்னும் பார்ப்பனீயம்) புரட்டு பித்தலாட்டங்கள் செய்து ஓட்டுப் பெறுகிறது. இதனால் (வெற்றி தோல்வியில்) மனிதர்களை அளந்து விட முடியாது.

இந்த நாட்டு மக்களின் இன்றைய அறிவின் அளவுக்கு சாமிகள் தாசி வீட்டுக்குப் போகும் உற்சவத்தை நிறுத்துவதற்கு என்று ஓட்டு கேட்டால் ஆயிரத்துக்கு ஒரு ஓட்டு கூட கிடைக்க மாட்டாது. அது போலவே கடவுள் பெண்களை நிர்வாணப்படுத்தி வேடிக்கை பார்க்கும் உற்சவத்தை நிறுத்த 10,000 க்கு ஒரு ஓட்டு வீதம் கூட கிடைக்காது. கட்டின பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் பிரேரேபித்தவர்களும் ஆமோதித்தவர் களுமாவது ஓட்டுப் போடுவார்களா என்பதும் சந்தேகம்தான்.

இந்த மாதிரி ஜனங்களிடம் ஓட்டுப் பெறாததினால் தோழர் வரதராஜுலுவின் யோக்கியதை போய்விட்டது என்று சொல்லப்படுமானால், வரதராஜுலு அவர்களைப் பற்றி எவரும் கவலைப்பட வேண்டியதில்லை.

அவரவர்களுக்கு உள்ள யோக்கியதை தேர்தலைப் பொருத்து அல்லவென்றும், தேர்தலில் வெற்றி பெற்றாலும் தோல்வியுற்றாலும் பொதுநலத் தொண்டாற்ற வேண்டிய அளவு தாராளமாய் இடம் இருக்கின்றது என்றும் இதனால் யாரும் மூலையில் உட்கார்ந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆனால் கட்சி நிலையைப் பொருத்துப் பார்ப்பதானால் அடுத்து வரும் தேர்தலில் பார்ப்பனரல்லாதார் கட்சி ஜெயித்து ஆக வேண்டும். காங்கிரஸ் ஜெயித்தால் கண்டிப்பாக பார்ப்பனீயம் வெற்றி பெற்றது என்றும் பார்ப்பனரல்லாத மக்கள் நிலை அதோ கதி ஆயிற்று என்றும் தான் முடிவு ஏற்படும்.

ஆதலால் தோழர் வரதராஜுலு நாயுடு அவர்கள் காங்கிரஸ் பார்ப்பனர்கள் ஆதிக்க ஸ்தாபனம் என்பதை உண்மையாய் உணருவார்களானால் தைரியமாய் அதை இன்னும் வெளிப்படுத்தியே ஆக வேண்டும் என்றும், பார்ப்பனீயத்தை வெளியாக்கி அதை ஒழிப்பதே தேச பக்தி என்றும் ஜீவகாருண்யம் என்றும் கருத வேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 25.11.1934**



RangaRakes tamilnavarasam.com

# கொள்கை இல்லாதவர்களுக்கு வெற்றி

இந்திய சட்டசபைத் தேர்தல் இந்தியா முழுவதிலும் அனேகமாக நடந்தாகிவிட்டது.

இவற்றுள் சென்னையே பார்ப்பனர்களுக்கு பெருமித வெற்றி அளித்து எங்கு பார்த்தாலும் பார்ப்பன வெற்றிக் கொண்டாட்டத் திருநாள்கள் நடைபெறச் செய்திருக்கிறது. இத்திருநாள்களை புராணத் திருநாள்கள் அதாவது ''நரகாசூரன் தோற்ற நாள்'' (அல்லது) ''நரகாசூரனைக் கொன்ற நாள்'' என்று தீபாவளி கொண்டாடுவது போல் ''பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோற்ற நாள் (அல்லது) ஜஸ்டிஸ் கட்சியை வெட்டிப் புதைத்த நாள்'' என்று இப்போது ஊர் ஊராய் கொண்டாடப் புறப்பட்டு விட்டார்கள் நம் பார்ப்பனர்கள். இத்திருநாள் இனி வருஷா வருஷம் (காந்தி ஜயந்தி முதலியவை போல்) கொண்டாடப்படலாம். இதில் பார்ப்பனரல்லாதாரும் பெருமிதமாய் கலந்து கொண்டு எண்ணெய் ஸ்நானம் செய்து புதுவேஷ்டி அணிந்து பலகாரம் செய்து சாப்பிடலாம். என்றாலும் இத்திருநாள் கொண்டாட்டத்தின் பயனாய் ஏற்பட்ட லாபம் என்ன என்று பார்ப்போமானால் தோழர்கள் சத்தியமூர்த்தி அய்யர், ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜ அய்யங்கார் இன்னும் ஏதோ இரண்டொரு சாஸ்திரியார்கள், ராவுஜீக்கள் ஆகியவர்கள் சேர்ந்து ஊர்ஊராய்ச் செல்வதும், இவர்களுக்கு எவ்வித ஆபத்தும் வராமல் இவர்களைக் காப்பாற்ற ஆங்காங்கு சில ரெட்டியார், முதலியார், கவுண்டர், செட்டியார், பிள்ளை, சாயபு ஆகிய கூட்டத்தைச் சேர்ந்த ஆசாமிகள் ''ராமர் பின்னால் அனுமார்கள் (குரங்குகள்) சென்றன'' என்பது போல் பயபக்தியுடன் சென்று காவல் காப்பதும், இந்த ஐயர், ஆச்சாரியார், அய்யங்கார், சாஸ்திரி, ராவுஜீ ஆகிய கூட்டங்கள் மேடைகளிலும், பத்திரிகைகளிலும், ''கொடுங்கோலரக்கன் ஷண்முகம் இமயமலை போல் வீழ்ந்தான், கொடிய ராட்சதன், பொப்பிலி ஒழிந்தான், அடிமைக் குலாம் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சி வெட்டிப் புதைக்கப்பட்டுவிட்டது'', ''வெற்றிக் கொண்டாட்டம் கொண்டாடுவோம் வாருங்கள் வாருங்கள்'' என்று கூவுவதற்கு தைரியம் ஏற்பட்டு விட்டதேயாகும்.

நமது மாகாணத்தில் எங்கெங்கு பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி இல்லையோ அங்கும், எங்கு பார்ப்பன ஆதிக்கம் அதிகமோ அங்கும், எங்கு முழு மூடர்களும், துரோகிகளும் மலிந்திருக்கிறார்களோ



அங்கும் பார்ப்பனர்களையே தேர்தல்களுக்கு நிறுத்துவதும், எங்கு பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி இருக்கின்றதோ அங்கெல்லாம் முதல்தர சோணகிரிகளாகவும், பிறவி அடிமைகள் என்று மதிக்கக் கூடியவர்களாகவும், தங்கள் சுயநலத்துக்கு எதையும் விற்கக் கூடியவர்களாகவும் பார்த்து பார்ப்பனரல்லாதார்களை நிறுத்துவதும், அவர்களை வெற்றி பெறச் செய்வதும், பிறகு அவர்களைப் பின்னால் இழுத்துக்கொண்டு ''ஜஸ்டிஸ் கட்சி வெட்டிப் புதைக்கப்பட்டது குலாம்கள் ஒழிந்தார்கள்'' என்று கூப்பாடு போடுவதும் ஆகிய காரியம்தான் இன்றைய காங்கிரஸ் வெற்றியாய் கொண்டாடப்படுகிறது என்றும் சொல்லலாம்.

பார்ப்பனரல்லாத மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியும், பகுத்தறிவும் இல்லை யென்றால், பார்ப்பனர்கள் இவ்வித வெற்றிக் கொண்டாட்டம் கொண்டாடுவதிலும், ''பார்ப்பனரல்லாதார் கட்சியை வெட்டிப் புதைத்து விட்டோம்'' என்று அவர்கள் பறை அடிப்பதிலும் யாதொரு குற்றமும் இல்லை.

மடையர்கள் சுமக்க வேண்டியதும், தந்திரக்காரர்கள் ஏறிச் சவாரி செய்ய வேண்டியதும் இயற்கையேயாகும். அந்த இயற்கை தத்துவத்தின்படிதான் இன்று இந்த நாட்டில் 100-க்கு 97 மக்களாய் இருக்கக் கூடிய ராஜாக்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள், முதலாளிமார்கள், பண்டிதர்கள் சகல காரியத்துக்கும் பாடுபடும் பாட்டாளி மக்கள் ஆகிய கூட்டத்தார்கள் தீண்டக் கூடாதாராய், பறையராய், சக்கிலியராய், சூத்திரராய், கீழ் ஜாதியராய், பார்ப்பனர்களின் வைப்பாட்டி மக்களாய், அடிமைகளாய், பார்ப்பனர்கள் காலைக் கழுவிக் குடிப்பவர்களாய், தாசிகளாய், தாசி மக்களாய் இருந்து வருவதும் 100க்கு மூன்றே பேராய் இருந்து வரும் மக்கள் பிச்சை எடுத்து வாழும் மக்கள், உலகிலுள்ள சகல இழிதொழிலுக்கும் முன்னின்று அச்சக்காரம் (அட்வான்ஸ்) வாங்கும் மக்களாயிருந்தாலும் அவர்கள் இன்று பூதேவர்களாயும், பிராமணர்களாயும், ஆச்சாரிமார்களாயும், சுவாமிகளாயும், அய்யர்களாயும், மண்வெட்டியும் கோடாலியும் கையில் தொடுவது தோஷம் என்று சொல்லிக் கொண்டு ஒரு சொட்டு வேர்வை கூட நிலத்தில் விழுகாமலும், ஒரு கடுகளவு கவலையோ விசாரமோ கைமுதலோ இல்லாமல் வாழ்வு நடத்தக் கூடியவர்களாயுமிருந்து ஆதிக்கங்கள் செலுத்தப்பட்டு வருகின்றன.

இதே இயற்கைத் தத்துவம் தான், இந்தியாவில் உள்ள 35 கோடி மக்களையும், இவ்வளவு விஸ்தீரணமுள்ள நாட்டையும் ஆயிரத்துக்கு ஒன்று வீதமுள்ள எண்ணிக்கைகூட இல்லாத அளவு வெள்ளைக்காரர்கள் இந்தியாவில் இருந்து கொண்டு சர்க்கஸ்காரன் மிருகங்களை நடத்துவது போல் நடத்தி ஆட்சி புரிந்து வர முடிகின்றது.

மற்றும் இந்த இயற்கை தத்துவம்தான் உழைக்கின்ற மக்கள் வயிற்றுக்கும், வயித்தியத்துக்கும் கூட போறாமல் பட்டினியினாலும்,



RangaRakes tamilnavarasam.com

நோயினாலும் அவஸ்தைப் பட்டுக் கொண்டு கஷ்டப்படுவதும், பாடுபடாத சோம்பேரிகள் அப்பாட்டின் பலனையெல்லாம் தாங்களே அனுபவிப்பதும், மீதியை தாருமாறாய் பாழ்படுத்தி வருவதுமான கேடுகள் நடந்து வருகின்றன.

இந்த இயற்கைத் தத்துவம் தான், இன்றும் 20-ம் நூற்றாண்டு மக்களைக் காட்டுமிராண்டி வாழ்க்கைக்குக் கொண்டுபோக முனைந்து நிற்கிறவரும், முதலாளிமார்களுடையவும், சோம்பேரி வாழ்க்கைக்காரர்களுடையவும், அடிமையுமான காந்தியாரை மகாத்துமாவாக்கியதுமாகும்.

இப்படிப்பட்ட மக்கள் வாழும் நாட்டில் உள்ள பார்ப்பனர்கள் ''பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தைக் குலைத்து அவர்களது ஸ்தாபனத்தை வெட்டிப் புதைத்து விட்டோம்'' என்று சொல்லுவதில் இயற்கைக்கு விறோதமோ, அதிசயமோ ஏதும் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை.

பார்ப்பனருக்கு ஆட்கள் கிடைக்கின்றன பணங்கள் கிடைக்கின்றன. ஏனென்றால் பார்ப்பனரல்லாத மடையர்களே ஏழைகளை வருத்தி சித்திரவதை செய்து கொள்ளை கொண்ட பணத்தை மானம், வெட்கம், அறிவு சிறிதும் இல்லாமல் மோட்சத்தின் பேரால், புண்ணியத்தின் பேரால், தேசத்தின் பேரால், தேசாபிமானத்தின் பேரால், கதரின் பேரால் தீண்டாமை விலக்கின் பேரால் கொட்டிக் கொட்டிக் கொடுத்து பார்ப்பனர்கள் பையை நிரப்பினால், பின்பு அவர்களுக்கு வேலை செய்ய - உழைக்க - மானத்தையும் மரியாதையையும் விற்க, சமூகத் துரோகத்தைச் செய்ய ஏன் ஆட்கள் கிடைக்காது என்று யோசிண்த்துப் பார்க்க வேண்டுகிறோம்.

வெறிகொண்ட மிருகங்கள் நீக்குப் போக்கு இல்லாமல் குலைப்பது போலும், கடிப்பது போலும் தோழர்கள் ஷண்முகம், வரதராஜுலு, ஏ. ராமசாமி ஆகியவர்கள் மீது பாய்ந்து அவர்களை ஒரு கூட்டம் வைகின்றது. இந்த வசவுகளையே பார்ப்பனர்களிடம் கூலி பெற்றுக் கொண்டு பார்ப்பனரல்லாதார்களே கூட சிலர் வைகிறார்கள், எழுதுகிறார்கள் என்றால் பார்ப்பனரல்லாத சமூகம் ஏன் அழியாது? அல்லது ஏன் இன்னமும் இழிவான நிலைக்குப் போகாது? அல்லது பார்ப்பனரல்லாதார் சூத்திரர் என்றும் பார்ப்பனர்களின் வைப்பாட்டி மக்கள் என்றும் எழுதிவைத்த சாஸ்திரங்களை மாற்றி இன்றைய தினம் ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும், அவனது பெண்டு பிள்ளைகளை கொண்டு வந்து பார்ப்பனர்களுக்கு தங்கள் செலவில் விட்டுப்போக வில்லையானால் அவன் நரகத்துக்குப் போவதோடு பெரியதொரு தேசத்துரோகியாகவும், சர்க்கார் குலாமாகவும் மதிக்கப்படுபவன் என்று கூட ஏன் எழுதி வைக்கமாட்டார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுகின்றோம்.

பார்ப்பனர்கள் முன்காலத்தில் நடந்து கொண்ட மாதிரிக்கும், இப்போது நடந்து கொள்கின்ற மாதிரிக்கும் கடுகளவாவது மானம், வெட்கம்



இருந்தால் அவர்கள் பின் வைப்பாட்டி மக்கள் போல் திரிய யாருக்காவது எந்தப் பார்ப்பனரல்லாதாருக்காவது மனம் வருமா என்று கேழ்க்கின்றோம்.

பார்ப்பனரல்லாதார்க்கு இனியாவது மானம், ரோஷம் வந்து தங்கள் சமூக நலனுக்குழைக்க வேண்டும் என்றுதான் நாம் இந்தப்படி எழுதுகின்றோமே ஒழிய துவேஷத்துக்காக அல்ல.

பார்ப்பனரல்லாதார் அல்லது தோழர்கள் ஷண்முகம், வரதராஜுலு, ஏ. ராமசாமி முதலியார் ஆகியவர்கள் தேசத்துக்கு அல்லது தனிப்பட்ட நபருக்குச் செய்த மோசம், துரோகம் அல்லது இழிவான காரியம் என்ன என்று எந்த பார்ப்பனரல்லாதாராவது சொல்ல முன் வரட்டும்.

தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களுடைய யோக்கியதையை விட தோழர்கள் ராஜன், ராஜகோபாலாச்சாரி ஆகியவர்களுடைய யோக்கியதையைவிட, ஷண்முகம், வரதராஜுலு, ராமசாமி முதலியார் ஆகியவர்கள் எந்தவிதத்தில் குறைந்தவர்கள் என்று பந்தயம் கட்டிக் கேட்கின்றோம்.

தோழர்கள் சத்தியமூர்த்தியும் ராஜகோபாலாச்சாரியாரும் என்றைக்காவது தங்கள் ஜாதி அபிமானத்தை விட்டுக்கொடுத்து நடந்திருக்கிறார்களா?

தோழர் சத்தியமூர்த்தியை தலையில் தூக்கிவைத்துக் கொண்டு ஆடும் பார்ப்பனரல்லாதார்கள் தங்கள் உடலில் பார்ப்பனரல்லாதார் ரத்தமோ அல்லது நாணையம், ஒழுக்கம் என்கின்ற தத்துவமோ கடுகளவு இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள அருகதை உடையவர்களாயிருந்தால் தோழர்கள் ஷண்முகம், வரதராஜுலு, ராமசாமி முதலியார் இவர்களை விட தோழர் சத்தியமூர்த்தி எந்தவிதத்தில் யோக்கியர் என்பதை மெய்ப்பிக்கட்டும் என்று கேழ்க்கின்றோம்.

எதற்கும் ஒரு அளவு உண்டு. அளவுக்கும் மீறுவது என்றால் அதை இரண்டில் ஒன்று பார்க்க வேண்டிய நிலை என்றுதான் சொல்லுவதோடு வைவதும், காலித்தனம் செய்வதும், பார்ப்பனருக்கும் காங்கிரசின் பெயரால் பிழைக்கின்றவர்களுக்கும் தான் ஏகபோக உரிமை என்பதை எப்படியாவது ஒழித்தாக வேண்டிய நிலை என்றுதான் சொல்லுவோம்.

காங்கிரசுக்கும், கதருக்கும் சம்மந்தமில்லை என்று கதரின் பேரால் வசூலித்த பணம், தேர்தல்களுக்கு செலவு செய்யப்பட்டது யாரும் அறியார்களா? கதரின் பெயரால் மாதம் 100, 200 பணம் வாங்கிப் பிழைக்கும் ஆட்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு இருக்கவில்லையா? தீண்டாமை விலக்கின் பேரால் வசூலித்த பணத்தில் மாதம் 40, 50, 100 சம்பளமாகவும் வேறு எடுபிடி செலவுக்காகவும் என்று வாங்கிப் பிழைக்கும் ஆட்கள் தேர்தலில் பிரசாரம் செய்யவில்லையா? இதெல்லாம் நாணையமான, யோக்கியமான காரியமா என்று கேழ்க்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

இந்திய சட்டசபையில் கோவில் பிரவேச மசோதா கொண்டுவரச் செய்து ஜனங்களைத் தீண்டாமை விலக்கின் பேரால் ஏமாற்றி பார்ப்பனரல்லாதாரிடம் ஏராளமாய் பணம் வசூல் செய்து கொண்டபிறகு அந்த மசோதாவை வாப்பீஸ் பெறும்படி செய்துவிட்டு இந்திய சட்டசபைத் தேர்தல்களின்போது இனிமேல் அந்த மாதிரியான மசோதா கொண்டு வருவதில்லை என்றும் வேறு யாராவது கொண்டுவருவதா யிருந்தாலும் ஓட்டுக் கொடுப்பதில்லை என்றும் சொல்லி பார்ப்பனர்களுக்கு வாக்குக் கொடுத்து தேர்தல் பிரசாரம் செய்து வெற்றி பெற்று விட்டு மானமில்லாமல் வெற்றிக் கொண்டாட்டம் கொண்டாடுவதென்றால் இதற்கு எதை சமானமாகச் சொல்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை.

வெற்றி கொண்டாட்டம் என்று சொல்லுவதெல்லாம் காங்கிரசின் நாணையக் குறைவும் பார்ப்பனர்களின் சூட்சியும் ஜெயித்துவிட்டது என்று சொல்லுவதை விட வேறு என்ன என்று கேட்கின்றோம்.

தோழர் சத்தியமூர்த்தி யோக்கியதை நமக்குத் தெரியாதென்று நினைத்துக் கொண்டு அவரைத் தோளின் மீது தூக்கி வைத்துக் கொண்டு திரிகின்றவர்கள் இந்தக் கும்மாளம் போடுகின்றார்களா? அல்லது தெரியும் என்று நினைத்துக் கொண்டே பசி வெட்கமறியாது என்பது போல் கூலிக்காசைப்பட்டு இம்மாதிரி அவரைப் புகழ்கின்றார்களா என்றும் கேழ்க்கின்றோம்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் இதுவரை நடந்து வந்ததும் அவரது உள் எண்ணமும் இந்தியா பூராவும் உள்ள அறிஞர்கள் அவரைப் பற்றி கொண்டுள்ள எண்ணமும் நமக்குத் தெரியாது என்று இவர்கள் கருதுகின்றார்களா என்று கேட்கின்றோம். தோழர் ராஜன் அவர்களின் யோக்கியதைதான் என்ன? இவர்கள் எல்லோரும் வருணாச்சிரம ராஜாபகதூரை விட எந்த விதத்தில் மேலானவர்கள் என்று பார்ப்பனக் கூலிகளையே கேழ்க்கின்றோம்.

குருகுலப் போராட்டம் வந்த காலத்தில் தோழர் வரதராஜுலு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்ததுடன் காங்கிரஸ் கமிட்டியில் இருந்து ராஜினாமா கொடுத்துவிட்டு ஓடிய ''சீர்திருத்தக் காரர்கள்'' தான் என்பதை உலகம் அறியாது என்று கருதிக் கொண்டிருக்கிறார்களா என்று கேழ்ப்பதோடு, இந்தச் சீர்திருத்தவாதிகள் இரவும் பகலும் புராணப் பிரசங்கம் செய்துகொண்டு எப்படி எப்படி பார்ப்பனரல்லாதார் குடியைக் கெடுப்பது என்று பிளான் போட்டுக் கொண்டு இருக்கிறதே அல்லாமல் இவர்கள் தேசத்துக்கும் சமூகத்துக்கும் நாளது வரை செய்த ஒரு காரியமோ, பயனோ இன்னது என்று எடுத்துக்காட்ட முடியுமா என்று கேழ்க்கின்றோம்.

தோழர் சாமி வெங்கிடாசலம் செட்டியார்தான் ஆகட்டும் எதைச் சாதித்தவராய் இருப்பார்? அல்லது ஷண்முகத்துக்கு மேலாக இவர் எத்தனை தடவை ஜெயிலுக்குப் போயிருப்பார்? கைப்பிசகாய் இவருடைய பெயர் ஓட்டர் லிஸ்டில் பதிக்கப்பட்டுவிட்டது என்பதைத் தவிர இவர் உண்மையிலேயே அந்த தொகுதி ஓட்டருக்கு லாயக்குள்ளவரா? என்றும் கேட்கின்றோம்.



செத்துப்போனவர்கள் எத்தனை பேர் எழுந்து வந்து தோழர் சாமி வெங்கிடாசலத்துக்கு ஓட்டுப் போட்டுவிட்டுப் போனார்கள் என்பதைக் கவனிக்கப்போனால் எலக்ஷன் நிலைக்குமா? என்று கேட்கின்றோம்.

மற்றும் சமீப காலம் வரை ஜஸ்டிஸ் கட்சியை தொங்கிக் கொண்டிருந்ததும் அபேட்சகராய் தெரிந்தெடுக்கப்படும் வரையில் காங்கிரசையே வைது கொண்டிருந்ததும் யாருக்கும் தெரியாதா என்று கேட்கின்றோம். இவை எப்படியோ போகட்டும் என்றாலும் இந்திய சட்டசபைத் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்ற வீரர்களுக்கும், அவர்களுக்கு உழைத்த வீரர்களுக்கும் வெற்றியின் பேரால் வெற்றிக் கொண்டாட்டம் கொண்டாடும் வீரர்களுக்கும் என்ன கொள்கை இருக்கின்றது? சட்டசபையில் போய் இவர்கள் செய்யப்போகும் காரியம்தான் என்ன? என்பதைப்பற்றி ஒரு வார்த்தையாவது சொல்லக் கூடுமா என்று கேட்கின்றோம். ''ஜஸ்டிஸ் கட்சிக்கு கொள்கையில்லை'' என்று சொல்லும் இவர்களை (காங்கிரசுக்காரர்களை) உங்கள் கொள்கை என்ன என்று கேட்டால் என்ன பதில் சொல்லக் கூடும்? எலக்ஷனில் யாதொரு கொள்கையும் சொல்லாமல் காந்தியாருக்கு ஓட்டுப் போடுங்கள், காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்பதும், காந்திக்கும் காங்கிரசுக்கும் எதற்காக ஓட்டுப் போடுவது என்று கேட்டால், ஜெயிலுக்குப் போனதற்காகவும், அடிபட்டதற்காகவும் ஓட்டுப் போடுங்கள் என்று சொல்வதும், ஜெயிலுக்கு போனதினாலும், அடிபட்டதினாலும் ஏற்பட்ட பலன் என்ன என்று கேட்டால், ஜெயிலுக்கு போனதும் அடிபட்டதும் முட்டாள்தனம் என்று கண்டுபிடிக்கப்பட்டு இப்போது சட்டசபைக்குப் போகவேண்டும் என்று தீர்மானித்து இருக்கிறோமே அதுதான் என்று சொன்னதும் அல்லாமல் - வேறு கொள்கை என்ன என்று இப்போதும் கேட்கின்றோம்.

வெள்ளை அறிக்கையை நிராகரிக்கப் போகின்றோம் என்று சொன்ன சிலர் வெள்ளை அறிக்கையை நிராகரிக்க முயற்சித்து தீர்மானம் தோல்வி அடைந்த பின்போ அல்லது வெற்றிபெற்ற பின்போ அப்புறம் என்ன செய்யப்போகின்றீர்கள் என்றும் நீங்கள் செய்த தீர்மானத்திற்கு எவ்வளவு யோக்கியதை உண்டு என்றும் கேட்ட கேள்விக்கு நாளது வரை என்ன பதில் சொல்லப்பட்டது என்று கேட்கின்றோம்.

யாதொரு கொள்கையும் இல்லாமல் மக்களின் முட்டாள்தனத்தையே முதலாக வைத்து செய்த ஏமாற்று வியாபாரத்தில் வெற்றி பெற்றுவிட்டதால் அதற்காக இம்மாதிரி குடிகாரன் வெறிகாரன் போல் எல்லோரையும் வாயில் வந்தபடி கீழ்மக்கள் போல் வைது கொண்டுதான் வெற்றிக் கொண்டாட்டம் கொண்டாடுவதா என்று கேட்கின்றோம். இது எதை நிரூபிக்கின்றது என்றால் பார்ப்பனர்களின் சூட்சியிலிருந்து இந்திய மக்களை விடுவிக்க வேண்டியது மிகவும் அவசியமும் அவசரமுமான



RangaRakes tamilnavarasam.com

காரியம் என்பதையும் பாமர மக்களுக்கு தனித் தொகுதியே அவசியமான தென்பதையும் நிரூபிக்கிறது என்றுதான் சொல்லுவோம்.

தகப்பன் வீட்டுப் பெருமையை தமையனிடம் சொல்லும் தங்கச்சிபோல் பஞ்சத்துக்காக வந்து காங்கிரசிற்குள் புகுந்து கொண்ட இந்த பச்சகானா கூட்டம் தோழர் வரதராஜுலு நாயுடுவுக்கும், சர். ஷண்முகத்துக்கும் காங்கிரஸ் பெருமையைப் பற்றி போதிப்பதென்றால் அதில் எவ்வளவு ஞானம் இருக்கின்றது என்றுதான் கேட்கின்றோம்.

ஏறக்குறைய இந்த 15 வருஷ அனுபோகத்தில் யார் யார் காங்கிரசை விட்டு வெளியில் போனால் தாங்கள் சொந்தத்தில் வாழ முடியுமோ பிழைக்க முடியுமோ அவர்கள் எல்லோருமே சற்றேறக் குறைய காங்கிரசை விட்டு வெளியேறித்தான் இருக்கிறார்கள். மற்றும் சிலரும் வெளியேறிப் பார்த்து அங்கும் வாழ்வுக்கு வழியில்லாமல் போனதினாலேயே திரும்பவும் போய் புகுந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இது யாருக்குத் தெரியாத இரகசியம் என்று கேட்கின்றோம்.

ஜீவனத்துக்கு வேறு எந்த வழியும் இல்லாத ஆட்கள் பலர் இந்தக் கூட்டத்தில் சேர்ந்து கொண்டு சமாதானத்துக்குப் பங்கம் ஏற்படும் படியாகவும், காதில் கேட்பதற்கே அசிங்கமாயிருக்கும் படியாகவும் பலர் கத்துவது நம் காதுக்கு வந்து கொண்டிருக்கின்றது. இந்த மாதிரியான ஆட்கள் சிலரைப் பிடித்து அவரது ஜீவிதம் எப்படி நடக்கின்றது என்று விசாரித்தால் நல்ல நடவடிக்கைக்கு ஜாமீன் வாங்க வேண்டியதைத் தவிர வேறு ஒன்றுமே செய்ய வழி இருக்காது. ஆனால் அப்படிப்பட்ட பலர் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய அதிகாரிகள் ஜாதி அபிமானம் காரணமாக விட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது. இந்த யோக்கியதையில் உள்ள காங்கிரசுதான் நீதியும், சத்தியமும், அகிம்சையும் கொண்ட முறையில் சுயராஜ்யம் பெருவது என்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்கின்றதாம். என்ன பித்தலாட்டம், எவ்வளவு நாணையக் குறைவு என்று பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

வெகு காலமாகவே நாம் காங்கிரசுக்காரர்கள் கூட்டத்தில் சென்று யாரும் கலகம் செய்யக் கூடாது என்றும் சொல்லி வந்ததானது காலித் தனத்தை காங்கிரசுக்கே சொந்தமாக்கிவிட்டது போல் காணுகின்றது.

காங்கிரசுக்காரர்கள் தடபுடலையும், அவர்களது வசவையும், காலித்தனத்தையும் கண்ட பலர் பயந்து கொண்டு மெல்ல மெல்ல காங்கிரஸ் கூட்டத்தோடு தங்களைக் கலக்கிக் கொள்ள பலர் ஆசைப்படுவதைப் பார்க்க நமக்குச் சிரிப்பாக இருக்கின்றது. இருந்தாலும் இப்படிப்பட்ட கூட்டத்தார் மறுபடியும் 8 நாளில் கண்டிப்பாய் திரும்பவும் ஓடிவந்துவிடப்போகிறார்கள் என்று இப்போதே ஜோசியம் கூறுவோம்.

பகுத்தறிவு - கட்டுரை - 25.11.1934



# கோவை முனிசிபாலிட்டி

கோயமுத்தூர் முனிசிபாலிட்டியில் திவான்பகதூர் C.S. ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் சுமார் 15 வருஷ காலமாக சேர்மனாக இருந்து வந்ததும், கோவை முனிசிபல் நிருவாகம் சென்னை மாகாண முனிசிபாலிட்டிகளில் எல்லாம் தலைசிறந்து விளங்கியதும், அந்த நிர்வாகத்தைப் பற்றி அரசாங்க யாதாஸ்தில் கோயமுத்தூர் முனிசிபல் நிர்வாகம் முதல்தர நிர்வாகத்தில் முதன்மையானதாக கருதப்படக் கூடியது என்று பல வருஷங்களாகக் குறித்து வந்ததும் யாவரும் அறிந்ததாகும்.

அப்படிப்பட்ட தோழர் C.S.R. அவர்கள் சென்ற மூன்று வருஷத்திய நிருவாகத்தின் கடைசி மீட்டிங்கில் கவுன்சிலர்கள் அவரைப் பாராட்டிப் பேசியதற்குப் பதிலளிக்கையில், தான் இதுவரை சேர்மன் அலுவல் பார்த்ததற்கும், அதற்காக தன்னை கவுன்சிலர்கள் பாராட்டியதற்கும் எல்லாம் கவுன்சிலர்களுடைய ஒத்துழைப்பே காரணம் என்று சொன்னதோடு தான் இனி சேர்மென் பதவியில் இருந்து விலகி விடுவதற்கு கவுன்சிலர்கள் அனுமதிக்க வேண்டும் என்றும், வேறு தக்கவரை தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் தானும் ஒத்துழைத்து தன்னால் கூடியதை கவுன்சிலர் என்கின்ற முறையிலேயே செய்து வருவதாயும் தெரிவித்துக் கொண்டார்.

கவுன்சிலில் இருந்த காங்கிரசுக்காரர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் இரண்டொருவர் இந்த சங்கதியை தங்களுக்கு ஒரு ஆதாரமாய் வைத்துக் கொண்டு கலகத்தை மற்ற கவுன்சிலர்களுக்குள் உண்டாக்க முயற்சித்தார்கள். என்னவென்றால் வேறு யார் வந்தாலும் வரட்டும், தோழர் றாவ்சாகிப் S.N. பொன்னைய கவுண்டர் மாத்திரம் சேர்மனாய் வரக்கூடாது என்றும் அதற்குக் காரணம் என்னவென்றால் தோழர் பொன்னைய கவுண்டர் அவர்கள் பேருக்கு பல சாராயக் கடைகள் கள்ளுக்கடைகள் இருக்கின்றதென்றும், அவர்கள் காங்கிரசை எப்போதும் தூஷித்து எதிர்பிரசாரம் செய்கின்றவர் என்றும், அவர் வைஸ் சேர்மெனாய் வருவது கூட தங்களுக்கு அவமானம் என்றும் வீரம் பேசி அதன் மூலமாய் ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள ஒவ்வொருவரையும் போய் நீங்கள் சேர்மெனாய் இருங்கள் நீங்கள் சேர்மனாய் இருங்கள் என்று கோள்களும் குண்டுணிகளும் செய்து பார்த்தார்கள். இதைக் கண்ட தோழர் C.S. ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் இவ்வளவு ஆன பிறகு



RangaRakes tamilnavarasam.com

தோழர் பொன்னையா அவர்களே சேர்மெனாய் வர வேண்டும் என்றும் காங்கிரஸ்காரர்கள் தங்களால் கூறியதை செய்து பார்த்துக்கொள்ளலாம் என்றும், அவர்களுடைய கோள்களுக்கும் குண்டுணித்தனத்துக்கும் அடிமைப்பட்ட சிலர் தமது கட்சியில் இருந்து விலகிவிட்டாலும் சரி என்றும் சொல்லி ஒரே பிடிவாதமாய் தோழர் பொன்னையா அவர்களையே சேர்மன் பதவிக்கு நிறுத்தினார்.

காங்கிரசுக்காரர்களுடைய விஷமம் பலிக்காமல் போகவே கடைசியாக தாங்கள் தோழர் பொன்னையா அவர்களைப் பற்றி பேசியது தவறு என்பதை உணர்ந்து, அவர்களாகவே பொன்னையா அவர்களை ஆதரிப்பதாகவும் அவரோடு ஒத்துழைப்பதாகவும் அதற்கு கூலியாக தங்களுக்கு வைஸ் சேர்மென் வேலை கொடுக்க வேண்டும் என்றும் கெஞ்ச ஆரம்பித்தார்கள். ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள சிலருக்கு இந்த மாதிரி நடவடிக்கை பிடிக்கவில்லை யானாலும் தோழர் பொன்னையா எப்படியானாலும் வரக்கூடாது என்றும், அவர் உள்ள கவுன்சிலில் தாங்கள் இருப்பது அவமானம் என்றும் பேசிய வீரர்கள் அவர் தலைமையின் கீழ் அவருக்கு உபமாக இருப்பதற்கு ஒப்புக் கொண்டால் அவர்களுடைய யோக்கியதையை வெளியார் அறிவதற்கு இது ஒரு சந்தர்ப்பமாய் இருக்கட்டும் என்று மற்ற கவுன்சிலர்களுக்கு சமாதானம் சொன்னார். அந்தப்படியே முன் வீரம் பேசிய காங்கிரஸ்காரர் என்பவர்கள் பேசாமல் மூச்சுவிடாமல் மரியாதையாக தாங்களாகவே தோழர் பொன்னையா அவர்களை ஆதரித்தார்கள். தங்களுக்கு ஒரு ஸ்தானம் எறியப்பட்டவுடன் கள்ளுக்கடை சாராயக்கடை வியாபாரம் எங்கேயோ பறந்து போய் விட்டது போலும்.

இதன் பயனாய் ஒரு பார்ப்பனர்தான் வைஸ் சேர்மனாய் வரக்கூடும் என்பதாகவும் தெரிகிறது. ஆகவே காங்கிரஸ்காரர்கள் என்பவர்களின் யோக்கியதையும் அவர்களுடைய திட்டங்களும் அவர்கள் அதை எதற்கு உபயோகிக்கிறார்கள் என்பதும் கடைசியாகக் காங்கிரஸ் வெற்றி என்பதெல்லாம் எப்படி பார்ப்பனர்களையே போய்ச் சேருகிறது என்பதும் இதிலிருந்தாவது கோவைவாசிகளும், மற்ற ஊர் வாசிகளும் உணர்வார்களென்று கருதுகிறோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 25.11.1934**



# அதுவும் சொல்லுவார்கள் இன்னமும் அனேகம் சொல்லுவார்கள்

இந்திய சட்டசபைத் தேர்தல் நடந்துவிட்டன.

இந்த மாகாணத்தின் பொது தொகுதியில் பத்து ஸ்தானங்களில் ஐந்து ஸ்தானங்கள் பார்ப்பனர்கள் கைப்பற்றி விட்டார்கள்.

அதாவது தோழர்கள் ஃ-

1. S. சத்தியமூர்த்தி அய்யர்
2. K.நாகேஸ்வரராவ் பந்துலு
3. டாக்டர் ராஜன் அய்யங்கார்
4. V.V.கிரி பந்துலு
5. T.N. அநந்தசயனம் அய்யங்கார்

ஆகிய 5 பேர் போக பாக்கி ஸ்தானங்களில் தோழர் N.G. ரங்கா அவர்கள் பார்ப்பனரா அல்லாதவரா என்பது நமக்குத் தகவலில்லை. மற்ற நான்கு ஸ்தானங்களில் ஒன்று கிருஸ்தவர் ஆனாலும் அந்த கிருஸ்தவர் சுவற்று மேல் பூனையாய் இருந்தாலும் அவரையும் தோழர் ரங்கா அவர்களையும் பார்ப்பனரல்லாதார் கூட்டத்திலேயே சேர்த்துக் கொண்டு கணக்குப் பார்த்தாலும் கூட 100-க்கு 3 பேர்களாய் உள்ள வகுப்பினர்கள் 100க்கு 50 ஸ்தானங்கள் கைப்பற்றி விட்டார்கள். ஆனால் அவர்கள் வாயில் பேசும்போது மாத்திரம், தாங்கள் வகுப்புவாதிகள் அல்லவென்றும் தகுதியானவர்கள் கிடைத்தால் எல்லா ஸ்தானங்களையும் பார்ப்பனரல்லாதார்களுக்கே கொடுத்து விடுகிறோம் என்றும் தோழர் ராஜகோபாலாச்சாரியார் காந்தியார் உள்பட எல்லாப் பார்ப்பனர்களும் பேசுகின்றார்கள்.

அப்படியாவது தகுதி உள்ள பார்ப்பனரல்லாதார்களுக்கு பகுதியோ அல்லது மூன்றில் ஒரு பங்கோ, நான்கில் ஒரு பங்கோ ஆவது கொடுக்கிறார்களா என்று பார்த்தால், பார்ப்பனர்கள் கண்களுக்கு



RangaRakes tamilnavarasam.com

தோழர்கள் முத்துரங்க முதலியார், அவனாசிலிங்கம் செட்டியார், குமாரசாமி ராஜா ஆகியவர்கள்தான் தகுதி உள்ளவர்கள் என்று தோன்றுவதாய் சொல்லுகின்றார்கள்.

தகுதி என்பதற்கு அருத்தம் என்ன என்றால் தங்களுக்கு தகுதி உள்ளவர்கள் என்றும் தங்கள் மூலமாய் தங்கள் தாசர்களாய் இல்லாத எவரும் எப்படிப்பட்டவரும் தகுதி இல்லாதவர்கள் என்றுமே ஹிட்லரிசம் பேசுகிறார்கள். இந்த லக்ஷணத்தில் தோழர் அன்சாரி அவர்கள் சென்னை தேர்தலில் வகுப்புவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது என்று மகிழ்ச்சி அடைகின்றார்.

தோழர் காந்தியார், சத்தியம் வெற்றி பெற்றுவிட்டது என்றும் பந்தயம் ஜெயித்து விட்டது என்றும் தந்தி அடிக்கிறார்.

வகுப்புவாதத்திற்கும், சத்தியத்திற்கும் இவ்விரு பெரியார்களின் பாஷ்யம் என்ன என்பதைப் பற்றி நாம் விவரிக்க வேண்டியதில்லை என்றே கருதுகின்றோம். சென்னைப் பார்ப்பனர்கள் தோழர் ராஜகோபாலாச்சாரியார் உள்பட தேர்தல் விஷயத்தில் செய்த பிரசாரத்தைக்கண்ட ஒருவர் அல்லது தெரிந்த ஒருவர் சத்தியம் வெற்றி பெற்றுவிட்டது என்று சொல்லப்படுவதை ஒப்புக் கொள்ள வேண்டுமானால் அவர் யோக்கியராய் இருந்தால் சத்தியம் என்கின்ற வார்த்தை எந்த பாஷையிலும் எந்த அகராதியிலும் எப்படிப்பட்ட மாறுபெயரிலும் உச்சரிப்பிலும் கூடவே கூடாது என்றுதான் சொல்லுவார்.

நிற்க நம் கையே நம் கண்ணைக் குத்த முனைந்திருக்குமானால் பிறகு எந்த அவயவத்தைக் கொண்டு அதைத் தடுப்பது என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்திய சட்டசபைத் தேர்தல்கள் என்றாலே நம் மாகாண பார்ப்பனரல்லாதார்களுக்கு மிக அலக்ஷியமான காரியமாகும். ஏனெனில் அதன் மூலம் யாரும் மந்திரியாக முடியாது என்பதுடன், ஜில்லா போர்ட் பிரசிடெண்ட், சேர்மென் முதலிய பதவிகளும் பெற முடியாது. வேறு வித உத்தியோக சிபார்சு முதலிய காரியங்களோ மந்திரிகள் தயவோ அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தயவோ பெறவும் முடியாது. ஆகையால் அதைப்பற்றி யாரும் லக்ஷியம் செய்வதில்லை என்பதோடு இப்படிப்பட்ட ''அனாவசியமான'' காரியத்துக்கு 10 ஆயிரம் 15 ஆயிரம் ரூபாய்கள் செலவு செய்யவும் எவரும் துணிவதில்லை.

இந்தத் தேர்தலில் தோழர் நாகேசுவரராவுக்கு 40 ஆயிர ரூ. செலவும் டாக்டர் ராஜனுக்கு 20 ஆயிரம் ரூ. செலவும் ஆயிருப்பதாக சொல்லுகிறார்கள்.

பார்ப்பனர்களுக்கு பல வழிகளிலும் ஊரார் பணங்கள் தாராளமாய் இருந்திருக்கின்றது. வட நாட்டு செல்வவான்களை ஏமாற்றி தருவித்த பணங்களும், கதர் மதுவிலக்கு தீண்டாமை விலக்கு ஆகியவைகளுக்கு சேகரித்த பணமும் அவற்றிற்காக அமைத்திருந்த ஆட்களும் தாராளமாய் வேலைக்கு உதவி இருக்கின்றன.

அதுவுமல்லாமல் இந்திய சட்டசபைக்கு ஒரு நபர் போனால் அது அவருடைய சொந்த நன்மைக்கு தான் பயன்படுமே தவிர அதனால் மற்றபடி அவரை ஆதரிக்கின்றவர்களுக்கு எவ்வித பயனும் அளிப்பதில்லை என்கின்ற ஒரு எண்ணமும் மக்கள் ஒன்று சேர்ந்து அபேட்சகரை ஆதரிக்கச் செய்யாமல் செய்து விடுகின்றது. ஆகவே பல ''சரியான காரணங்கள்'' இந்திய சட்டசபைக்கு பார்ப்பனர்களையும், அவர்கள் கண்களுக்குத் தக்க ஆட்கள் என்பவர்களையும் மாத்திரமே வெற்றி பெறச் செய்தது என்றால் இதில் அதிசயமெதுவும் இல்லை.

தோழர் ஷண்முகம் தோல்விக்கு இந்த சமாதானங்கள் போதாது என்று சொல்லப்படுமானாலும் போதுமான சமாதானங்கள் முன்னமேயே சொல்லப்பட்டுவிட்டது என்றே கருதுகின்றோம்.

சிங்கார ரசத்தில் ''கண்டிதா நாயகி'' மற்றொரு பரகிய நாயகியைப் பார்த்து ''அதுவும் சொல்லுவாள், இன்னமும் அனேகம் சொல்லுவாள், அவள் மீதிற் குற்றமென்னடி'' என்று சொன்ன பாட்டைப் போல் இந்த நிலையில் நம் பார்ப்பனர்களும் ஆச்சாரிகளும் காந்திகளும் சூதுப் பந்தயத்தில் தாங்கள் வெற்றி பெற்று விட்டதைப் பற்றி அவர்கள் அதுவும் சொல்லுவார்கள் இன்னமும் அனேகம் சொல்லுவார்கள் அவர்கள் மீது குற்றமென்னய்யா என்றுதான் கூறியாக வேண்டும்.

**பகுத்தறிவு - கட்டுரை - 02.12.1934**


RangaRakes tamilnavarasam.com

# I.C.S. செங்கோடையன் முடிவெய்தினார்

ஐ.சி.எஸ். செங்கோடையன் அவர்கள் ஒரு சிறு பருவில் காயம் பட்டதின் காரணமாக இரத்தம் விஷமாகி 29 ந் தேதி சென்னையில் காலமானதாகக் கேட்டு மிகவும் வருந்துகிறோம்.

அவர் ஈரோட்டிற்கு 6-வது மைலில் உள்ள நஞ்சை ஊத்துக்குளி என்னும் கிராமத்தில் உள்ள ஒரு கொங்குவேளாள குலத்தில் பிறந்து வளர்ந்து, ஈரோட்டிலும் கரூரிலும் கல்வி கற்று அவரது திறமையினால் நமது சர்க்காரால் லண்டனுக்கு ஐ.சி.எஸ். பரீட்க்ஷைக்கு அனுப்பப்பட்டு அதில் தேறி கலெக்ட்டராக ஆனவர். கோயமுத்தூரில் பிரபல குடும்பஸ்தராய் இருக்கும் தோழர் வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களது வீட்டில் அவரது சகோதரர் தோழர் பழனிச்சாமிக் கவுண்டர் அவர்களது குமாரத்தியை மணந்தவர். சமீபத்தில் அவர் அனந்தப்பூர் ஜில்லாவுக்கு கலெக்ட்டராக மாற்றப்பட்டதாகக் கேள்வி.

மிகவும் வருணாச்சிரமச் சார்பான வீட்டில் பெண் கொண்டிருந்தாலும் கூட தோழர் செங்கோடையன் அவர்கள் சீர்திருத்தத் துறையில் மிகுதியும் ஆர்வமுடையவர்.

அவர் முதல் முதல் 1919ல் ஐ.சி.எஸ். பாஸ் செய்துவிட்டு 1920ல் இங்கு வந்த சமயம் அவருக்காக சிலர் ஈரோடு முனிசிபல் ஆபிசில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தின சமயத்தில் ஒரு பெருங் கூட்டத்தில் அவர் பதிலளிக்கும் போது ''இந்தியாவில் என்றைய தினம் ஜாதி ஆணவம் மறைவு படுகின்றதோ அன்றுதான் இந்தியா விடுதலை பெற்று ஒரு சுதந்திர நாடாக உலகத்தில் விளங்க முடியும்'' என்று சொன்னவர்.

அப்படிப்பட்ட ஒரு சீர்திருத்த வாதியும், இன்னமும் எவ்வளவோ முன்னுக்கு வரக் கூடியவரும், தமிழ்நாடு - கொங்கு வேளாள சமூகத்துக்கு திலகமாய் இருந்தவரும். நமது தாலூக்காவாசியும், நமது அயலாரும் (பக்கத்து பூமிக்காரரும்) ஆகிய தோழர் செங்கோட்டையா முடிவெய்தியது கோவை ஜில்லாவுக்கே பெரியதொரு நஷ்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களது குடும்பத்தாருக்கும் தோழர் வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களது குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த துக்கத்தை தெரிவித்துக்கொள்ளுகின்றோம். அவருக்கு இப்போது வயது 39. ஒரு பெண் குழந்தையும், மனைவியும், 65 வயதுடைய தாயாரும், 45 வயதுடைய ஒரு தமயனும் இருக்கிறார்கள்.

**பகுத்தறிவு - இரங்கல் கட்டுரை - 02.12.1934**



# ''இன்னமும் பார்ப்பனர் – அல்லாதார் பிரச்சினை ஏன்?''

பார்ப்பனர்களை ஜஸ்டிஸ் கட்சியில் சேர்த்துக் கொள்வது என்று தீர்மானம் செய்து கொண்ட பிறகு பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரச்சினை ஏன் தேர்தலில் உபயோகப்படுத்தப்பட்டது?'' என்று சிலர் கேழ்வி கேட்கிறார்கள்.

இதற்கும் சமாதானம் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்வது என்கின்ற பிரச்சினை வந்த காலங்களில் அதாவது ஜஸ்டிஸ் கட்சியாரின் ஒரு சாதாரண கூட்டத்திலும், ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு கூட்டத்திலும் தோழர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் எதற்காக சேர்த்துக் கொள்ளப்படுகின்றது என்றும், எப்படிப்பட்டவர்களை சேர்த்துக் கொள்வது என்றும், இதுவரை ஏன் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதைப் பற்றியும், சேர்த்துக் கொண்ட பிறகும் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப்பற்றியும் விபரமாய் பேசியிருக்கின்றார்.

அதை ஒரு தரமாவது படித்துப் பார்ப்பவர்களுக்கு பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் பிரச்சினை அடியோடு போய்விட வேண்டியது தானா அல்லது இன்னமும் இருக்க வேண்டியது தானா என்பது நன்றாய் விளங்கும்.

ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்வது என்பதில் ஒரு முக்கியமான நிபந்தனை இருக்கின்றது என்பதை யாவரும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது மக்களுக்கு சமுதாயத்துறையில் சகல வகுப்புகளுக்கும் சம சுதந்திரமும், அரசியலில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் அளிக்க சம்மதப்படும் பார்ப்பனர்களைத்தான் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்த்துக் கொள்வது என்கின்ற நிபந்தனை இருக்கிறது. இதையே பார்ப்பனர்களுக்காக இப்போது சிபார்சு பேசும் தர்மவான்கள் மறந்து விட்டதாகத் தெரிகின்றது.

எல்லோரையும் காங்கிரசில் சேர்த்துக் கொள்வது என்று காங்கிரசுக்காரர்கள் தீர்மானம் செய்து கொண்ட பிறகு ஏன் இந்தப் பார்ப்பனர்கள் காங்கிரசின் பெயரால் ஜஸ்டிஸ் கட்சியை வெட்டிப் புதைக்க வேண்டும் என்றும், பார்ப்பனரல்லாதார் கட்சியை



RangaRakes tamilnavarasam.com

ஒழிக்கவேண்டும் என்றும் பேசுகிறார்கள் - கருதி இருக்கின்றார்கள்? என்று கேட்டால் இந்தப் பார்ப்பனர்களுக்காக சிபார்சு பேசும் மேதாவிகள் என்ன பதில் சொல்லுவார்களோ அதைத்தான் ''பார்ப்பனர்களை சேர்த்துக் கொண்ட பிறகு ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் பார்ப்பனர் - அல்லாதார் என்பதைப் பற்றி ஏன் பேசுகின்றார்கள்'' என்று கேட்கின்ற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டி இருக்கின்றது.

சகல வகுப்பாருக்கும் சமுதாயத் துறையில் சமசுதந்திரம் கொடுக்கவும் சகல வகுப்பாருக்கும் அரசியல் துரையில் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவம் கொடுக்கவும் சம்மதித்து ஒரு பார்ப்பனராவது இதுவரையில் ஜஸ்டிஸ் கட்சியில் வந்து சேர்ந்திருக்கின்றார்களா என்று கேட்கின்றோம்.

காங்கிரசை ஒப்புக் கொள்ளாத பார்ப்பனர்களோ அல்லது மிதவாதம் பேசும் பார்ப்பனர்களோ அல்லது சர்க்காரை ஆதரிக்கும் பார்ப்பனர்களோ யாராவது ஒரு பார்ப்பனராவது இதுவரை வந்து சேர்ந்து இருக்கின்றார்களா என்று பார்த்தால், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பிரச்சினை பார்ப்பனர்களிடத்திலேயே இருக்கின்றதா அல்லது போய் விட்டதா என்று கேட்கின்றோம்.

ஆகவே பார்ப்பனர்களை ஜஸ்டிஸ் கட்சியில் சேர்த்துக் கொள்ளுவது என்பது ஒரு நிபந்தனையின் பேரில் என்றும், அந்த நிபந்தனையை இதுவரை எந்தப் பார்ப்பனரும் ஒப்புக் கொள்ளவில்லை என்றும், நிபந்தனையில் பற்றுள்ளவர்கள் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பிரச்சினையை அடியோடு கைவிட்டுவிட முடியாதென்றும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பகுத்தறிவு - கட்டுரை - 02.12.1934**



# ''வகுப்பு வாதம் கூடாது ஆனால் 100–க்கு 50– நமக்கே வேண்டும்''

சென்னை மாகாண சார்பாய் இந்திய சட்டசபை பொதுத் தொகுதிக்கு 10 ஸ்தானங்களுக்கும் தேர்தல் நடந்துவிட்டது. அவற்றின் முடிவு.

**சென்னை நகரத்திற்கு**

தோழர் சத்தியமூர்த்தி அய்யர் (பார்ப்பனர்)

**தஞ்சை - திருச்சிக்கு**

தோழர் Dr.ராஜ அய்யங்கார் (பார்ப்பனர்)

**கிருஷ்ணா - கோதாவரி**

தோழர் நாகேஸ்வரராவ் பந்துலு (பார்ப்பனர்)

**சித்தூர்**

தோழர் யம்.அனந்தசயன அய்யங்கார் (பார்ப்பனர்)

**கஞ்சம் விசாகபட்டணம்**

தோழர் வி.வி.கிரி பந்துலு (பார்ப்பனர்)

**குண்டூர் - நெல்லூர்**

தோழர் யன்.ஜீ.ரங்கா (தெரியாது)

**மலையாளம்**

தோழர் சாமுவேல் ஆரன் (கிருஸ்தவர்)

**கோவை, சேலம், வடஆற்காடு**

தோழர் டி.எஸ்.அவனாசிலிங்கம் செட்டியார் (பார்ப்பனரல்லாதார்)

**செங்கல்பட்டு தென் ஆற்காடு**

தோழர் சி.என்.முத்துரங்க முதலியார் (பார்ப்பனரல்லாதார்)

**மதுரை - ராமநாதபுரம்**

தோழர் பி.எஸ்.குமாரசாமி ராஜா ( பார்ப்பனரல்லாதார்)



RangaRakes tamilnavarasam.com

ஆகவே மேற்படி பத்து ஸ்தானங்களில் 5 - பார்ப்பனர்களும், 1 கிருஸ்தவரும், 1 - நமக்கு விபரம் தெரியாதவரும், 3 - பார்ப்பனரல்லாதாரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். எனவே பார்ப்பனர்களே பார்ப்பனரல்லாதார் களைவிட மெஜாரிட்டியாய் வெற்றி பெற்றிருக்கிறார்கள். வகுப்பு வாதம் கூடாது. வகுப்பு பிரிதிநிதித்துவம் கூடாது என்று பார்ப்பனர்கள் கூப்பாடு போட்டு தங்கள் வகுப்பை உயர்த்திக் கொள்ளும் வகுப்பு வாதமும் தங்கள் வகுப்புக்கு அதிக ஸ்தானம் பெற்றுக் கொள்ளும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் அடைவதை இப்போதாவது வகுப்புவாதம் கூடாது என்று சொல்லும் பார்ப்பனரல்லாத ''வீரர்''கள் (துரோகிகள்) உணர்வார்களாக.

**பகுத்தறிவு - செய்திக் குறிப்பு - 02.12.1934**



# வருணாச்சிரமமும் சுயமரியாதையும்

இந்திய சட்டசபைத் தேர்தலில் வருணாச்சிரமக்காரர்களைச் சுயமரியாதைக்காரர்கள் ஆதரித்ததாகவும் அதனால் சுயமரியாதைக் காரர்களுக்கு யாதொரு கொள்கையும் இல்லை என்றும் சில பத்திரிக்கைகள் எழுதி வருகின்றன.

அது மாத்திரமல்லாமல் சில தோழர்களும் அந்தப்படியே பேசி வருகின்றார்கள்.

இதற்கு நம்மை சமாதானம் சொல்ல வேண்டுமென்று இரண்டொரு நண்பர்கள் எழுதியும் இருக்கிறார்கள்.

சுயமரியாதைக்காரர்கள் அந்தப்படி செய்தார்களா இல்லையா என்பது ஒரு புறமிருந்தாலும், எலக்ஷன் பிரச்சினை இன்னதென்றும் ஒவ்வொருவரும் என்ன பிரச்சினையின் மீது பிரசாரம் செய்தார்கள் என்றும் தெரிந்து கொண்டால் பிறகு யார் யார் யாருடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டியதென்பதையும் யார் யார் யாருக்கு உதவி செய்ய வேண்டியது நியாயம் என்பதையும் ஒருவாறு முடிவு செய்து கொள்ளலாம்.

காங்கிரசுக்காரருடைய பிரச்சினையெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும் என்பதும், அரசியலில் பார்ப்பனரல்லாதார் பெற்றிருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை அழித்துவிட வேண்டும் என்பதும், மற்றும் பல துறைகளில் பார்ப்பனரல்லாதார் அடைந்திருக்கும் சிறிது முன்னேற்றத்தையும் கெடுத்து சகல துறைகளிலும் பார்ப்பனர்களே ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பதுமேயாகும்.

இந்தக் கொள்கைகளை பிரச்சினையாக வைத்தே தென்னாட்டில் உள்ள சகல பார்ப்பனரும் அதாவது உத்தியோகப் பார்ப்பனர், ஹைக்கோர்ட் ஜட்ஜி முதல் பெஞ்சு கோர்ட் வரை உள்ள அதிகாரிப் பார்ப்பனர்கள், சகல வக்கீல் பார்ப்பனர்கள், டாக்டர் பார்ப்பனர்கள் உபாதானம், சவுண்டி, புரோகிதம், மாமா பார்ப்பனர்கள் எல்லோரும் மற்றும் காப்பிக்கடை, வக்கீல் குமாஸ்தா , ஓட்டல் பார்ப்பனர்கள் யாவரும், பள்ளிப் பார்ப்பனர் உள்பட ஒன்று சேர்ந்து ஒரே மூச்சாக காங்கிரசை ஆதரித்து இருக்கிறார்கள். அநேக பார்ப்பனர்கள் தங்கள் வருணாச்சிரமத்தை அனுசரிக்கின்றவர்களாயிருந்தும், காங்கிரசை -



RangaRakes tamilnavarasam.com

அனுசரிக்காதவர்களாயிருந்தும் எலக்ஷன் பிரச்சினையானது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற பிரச்சினையாகவே இருக்கின்றது என்று தெரிந்ததினாலேயே காங்கிரஸ் காங்கிரஸ் என்று சொல்லிக் கொண்டு காங்கிரசில் கலந்து வேலை செய்து இருக்கிறார்கள். தென்னாட்டு பார்ப்பனர்கள் காங்கிரஸ் போர்வைக்குள் இருந்திருந்தாலும் கூட அவர்களுடைய கவலை எல்லாம் எப்படியாவது சர். ஷண்முகம் சட்டசபை மெம்பர் ஆகக்கூடாது என்பதும், ஒரு சமயம் சர். ஷண்முகம் சட்டசபை மெம்பர் ஆகிவிட்டாலும் கூட இந்திய சட்டசபையில் அவர் பிரசிடெண்டாக ஆகக்கூடாது என்றும் கவலை வைத்தே ஒவ்வொரு தொகுதிக்கும் வேலை செய்திருக்கிறார்கள்.

வருணாச்சிரமக்காரர்களோ காங்கிரசை எதிர்த்து காங்கிரசுக்காரரை தோற்கடிக்க வேண்டும் என்பதையே இந்தத் தேர்தலைப் பொருத்தமட்டில் முக்கிய கருத்தாய்க் கொண்டவர்களே தவிர ஜஸ்டிஸ் கட்சியை வெட்டிப் புதைக்க வேண்டும் என்கின்ற பிரச்சினையையோ சர். ஷண்முகம் பிரசிடெண்டு ஆகக் கூடாது என்கின்ற பிரச்சினையையோ தேர்தல் பிரசாரமாகக் கொண்டவர்கள் அல்ல என்பது நமதபிப்பிராயம்.

அன்றியும், வருணாச்சிரமக்காரர் இந்திய சட்டசபையில் பார்ப்பனரல்லாதாருக்கோ அல்லது சீர்திருத்தக்காரருக்கோ, காங்கிரசுக்காரரை விட அதிகமான கெடுதி ஒன்றும் செய்து விடமுடியாது.

ஏனென்றால் காங்கிரசுக்காரர் சமூக சீர்திருத்த சம்மந்தமான எவ்வித மசோதாவையும் கொண்டு வருவதில்லை என்றும், வேறு யாராவது கொண்டு வந்தாலும் அதை ஆதரிப்பதில்லை என்றும் எதிர்ப்பதாகவும் வாக்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலையில் வருணாச்சிரமக்காரர்கள் இந்திய சட்ட சபையில் என்ன கெடுதி செய்துவிட முடியும் என்பது நமக்கு விளங்கவில்லை.

அன்றியும் கொல்லங்கோடு ராஜா, ராஜாபகதூர், கிருஷ்ணமாச்சாரி முதலியவர்கள் தோழர் ஷண்முகத்தை ஆதரிப்பதாகவும் ஜஸ்டிஸ் கட்சியிடம் தங்களுக்கு விரோதமோ துவேஷமோ இல்லையென்றும் வெளிப்படையாகச் சொல்லி இருப்பதுடன் சில சமயங்களில் சர்.ஷண்முகத்தை ஆதரித்தும் இருக்கிறார்கள்.

வருணாச்சிரமம், சீர்திருத்தம் என்பவை இரண்டும் ஒன்றுக் கொன்று முரணான அபிப்பிராயமானாலும் இதில் வஞ்சகம் , சூது, சதி, மோசம், பித்தலாட்டம், ஏமாற்றம், நாணையக் குறைவு ஏதும் இல்லை என்றே கருதுகிறோம்.

ஆனால் காங்கிரசின் போர்வை போர்த்த பார்ப்பனர்களே இவை சகலத்தையும் அஸ்திவாரமாக வைத்தே ஜஸ்டிஸ் கட்சியை வெட்டிப்





புதைப்பது, பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை ஒழிப்பது, சர் ஷண்முகத்தைக் கவிழ்ப்பது என்கின்ற பிரச்சினையை வைத்து வேலை செய்திருக்கிறார்கள். இந்த நிலையில் அறிவுள்ள ஒருவன் காங்கிரசை ஆதரிப்பதா எப்படியாவது காங்கிரசை எதிர்ப்பதா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுமாய் வாசகர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

காங்கிரசுக்காரர்கள் வெற்றி பெற்ற பிறகு அவர்கள் பேசிய பேச்சில் இருந்தே நாம் கூறுவது சரி என்று நன்றாய் விளங்கி இருக்கலாம். தோழர்கள் சத்தியமூர்த்தி அய்யர், ராஜகோபாலாச்சாரியார், டாக்டர். ராஜம் அய்யங்கார் ஆகியவர்கள் தாங்கள் வெற்றி பெற்றதன் மூலம் ஜஸ்டிஸ் கட்சி 500 கஜ ஆளத்தில் வெட்டிப் புதைக்கப்பட்டு விட்டதாகவும், வகுப்பு வாதம் என்னும் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்னும் விஷயம் அடியோடு ஒழிந்துவிட்டது என்றும் பேசி மகிழ்ந்து இருக்கிறார்கள்.

சுயமரியாதைக்காரர்கள் தாங்கள் ஜஸ்டிஸ் கட்சியில் எவ்வித சம்மந்தமும் வைத்துக் கொண்டிருக்கவில்லை என்றோ அல்லது தங்களுக்கு இப்போது பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்கின்ற விஷயமே இல்லை என்றோ சொல்லிக் கொள்ளுவதானால் அவர்கள் தங்களைப் பொருத்தவரை எலக்ஷனில் கலந்து கொள்ளாதிருந்தது ஞாயம் என்று கருதிக் கொள்ளலாம்.

மற்றபடி சுயமரியாதைக்காரர்கள் என்பவர்கள் காங்கிரசுக்கு எதிராக இருந்ததோ அல்லது காங்கிரசுக்கு எதிராக இருந்தவர்களை ஆதரித்ததோ ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்ததோ எவ்விதத்திலும் தப்பிதம் என்று சொல்லிவிட முடியாது.

ஆகவே சுயமரியாதைக்காரர்கள் எலக்ஷனில் நடந்து கொண்டது எலக்ஷனில் நின்ற ஒவ்வொரு கட்சிக்காரரும் அவரவர்கள் என்ன பிரச்சினையின் மீது எலக்ஷன் பிரசாரம் செய்தார்களோ அந்தப் பிரச்சினையைப் பொருத்ததே ஒழிய மற்றபடி வேறு விதமான காரியங்களைக் குறித்து அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பகுத்தறிவு - கட்டுரை - 02.12.1934

RangaRakes tamilnavarasam.com

# வகுப்புவாதிகளே வெற்றியடைந்தார்கள்

சென்னை மாகாணத்தில் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற வீரர்கள் ''வகுப்பு வாதம் தோற்றுவிட்டது'' என்றும் ''வகுப்பு வாதத்தை ஜனங்கள் விரும்பவில்லை'' என்றும் பேசி மக்களை மனதார ஏய்க்கின்றார்கள். ஆனால் உண்மையில் பார்க்கப் போனால் கடுகளவு அறிவுள்ள எவனும் வகுப்பு வாதம் வெற்றி பெற்றுவிட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

இன்று இந்த நாட்டில் உள்ள ஜஸ்டிஸ் கட்சி ஆகட்டும் அல்லது சுயமரியாதைக் கட்சி யாகட்டும் உண்மையில் வகுப்பு வித்தியாசங்கள், வகுப்பு உயர்வு தாழ்வுகள், வகுப்புப் பிரிவுகள் ஆகியவை ஒழிய வேண்டுமென்று பாடுபடுகின்றனவா அல்லது இருக்கவேண்டுமென்று பாடுபடுகின்றனவா என்று கேழ்க்கின்றோம். யாரைக் கேழ்க்கின்றோம் என்றால் ஜஸ்டிஸ் கட்சியும், சுயமரியாதைக் கட்சியும் வகுப்புவாதக் கட்சி என்று யார் யார் சொல்லுகின்றார்களோ அவர்கள் ஒவ்வொருவரையுமே கேழ்க்கின்றோம்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஆகட்டும், தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள்தானாகட்டும் உண்மையில் இந்தியாவில் மக்களிடையில் ஜாதியின் பேராலோ, சமையத்தின் பேராலோ, உள்வகுப்பின் பேராலோ எவ்வித பாகுபாடு - பிரிவினை - வித்தியாசம் ஆகியவை இருக்கக்கூடாது என்பதை ஒப்புக் கொள்ளுகிறார்களா என்று கேழ்க்கின்றோம். இவ்விருவர்களது பூணூல், உச்சிக்குடுமி, நாமம், விபூதி, நித்திய கர்மம், ஆகியவைகளின் பேதங்கள் மனிதத் தன்மையில் எவ்வளவு மாறுதல்களைக் காட்டுகிறது என்பதும், இதுபோலேவே மற்ற மக்களுக்கும் இவர்களுக்கும் எவ்வளவு வித்தியாசங்கள் - பேதங்கள் - மாறுதல்கள் இருந்து வருகின்றன என்பதையும் யோசித்துப் பார்க்கும்போது வகுப்பு வாதத்துக்கும் வகுப்புப் பிரிவினைக்கும் இவர்கள் உட்பட்டவர்களா இல்லையா என்று கேழ்க்கின்றோம்.

இவற்றை ஒரு சமயம் வெகு சாதாரணமாய் கருதிவிடலாம். இவற்றால் எல்லாம் ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை என்று சொல்லி விடலாம். ஆனால் ஒன்று கேழ்க்கின்றோம். அதென்ன வென்றால் நாம் மேலே குறிப்பிட்ட வகுப்புவாதமும், பேதமும், பிரிவினையும் இந்நாட்டு மக்களைச் சமூக வாழ்விலும் அரசியலிலும் கூட பேதப்படுத்தி பிரித்து உயர்வு தாழ்வாக்கி வைத்திருக்கின்றதா இல்லையா என்பதுதான்.

வகுப்பு காரணமாகவே சமூக வாழ்வில் வித்தியாசம் ஏற்படுவதும், சமூக வாழ்வில் உயர்வு தாழ்வு வித்தியாசம் ஏற்பட்டதின் காரணமாகவே அரசியலிலும், அரசியல் பிரதிநிதித்துவத்திலும், அரசியல் உத்தியோகத்திலும், பதவியிலும், பொருளாதாரத்திலும் கூட அது பிரதிபலித்து மக்களைப் பாதிக்கின்றதா இல்லையா என்றும் கேழ்க்கின்றோம்.

அவ்வித வித்தியாசங்களைப் போக்குவதற்கும், போக்குவதற்கு அனுகூலமாக வகுப்புகளின் நிலைமைகளை அனுசரித்து வகுப்புகளுக்கு தக்கபடி கவனிப்பதற்கும், வகுப்பு வாதம் என்று சொல்லுவதா அல்லது அந்தப்படி எதையும் செய்யவொட்டாமல் தடுத்து முட்டுக் கட்டை போட்டுக் கொண்டு ''இருக்கிறபடி இருக்கவேண்டும்'' என்பதற்கு வகுப்பு வாதம் என்று சொல்லுவதா என்றுதான் கேழ்க்கின்றோம்.

மற்றும் ஒரு வகுப்புக்கும், மற்றொரு வகுப்புக்கும் வித்தியாசமும் - உயர்வு தாழ்வு தன்மைகளும் நிலைத்து இருக்கும்படி செய்வதும், இப்போது இருப்பதை ஆதரிப்பதும் வகுப்புவாதமா அல்லது வகுப்புக்கு வகுப்பு எவ்வித வித்தியாசமும் கூடாது என்பதும், அது எந்த ரூபத்திலும் இருக்கக் கூடாது என்று சொல்லுவதும் வகுப்புவாதமா என்று கேழ்க்கின்றோம்.

பாமர மக்கள் பெரும்பாலும் மூடர்களாய் - மடையர்களாய் இருக்கும் காரணத்தைப் பயன்படுத்திக் கொண்டு நமது பார்ப்பனர்கள், வெகு தைரியமாக ஜஸ்டிஸ் கட்சியையும் சுயமரியாதைக் கட்சியையும், அவை வகுப்புப் பிரிவும், வகுப்பு வித்தியாசமும் கண்டிப்பாய் கூடவே கூடாது என்பதற்காக அவைகளை வகுப்பு வாதக்கட்சிகள் என்று சொல்லுவதும் தாங்கள் வகுப்பு வித்தியாசமும் பிரிவும் இருந்தே ஆகவேண்டும் என்றும் அவைகளை சிறிதுகூட அழிக்கக்கூடாது என்றும் சொல்லும் வகுப்பு வாதத்தை வகுப்புவாதமில்லாத கட்சி என்றும் சொல்லி மக்களை நம்பச் செய்வது என்றால் அதை நம்பும் மக்கள் மடையர்களா அல்லது அந்தப்படி நம்பச் செய்யும் ஆட்கள் அபார தந்திரக்காரர்களா என்று கேட்கின்றோம்.

**வகுப்பு பேதம் இருக்கக் கூடாது என்பவர்கள் தோற்றுப் போய் வகுப்பு பேதம் இருக்க வேண்டும் என்பவர்கள் வெற்றி பெற்றால் வகுப்பு வாதம் தோற்றதா அல்லது வகுப்பு வாதம் வெற்றி பெற்றதா என்றுதான் கேட்கின்றோம்.**

சுமார் இந்த 10 வருஷ காலமாகக் காங்கிரசின் பேராலும் பல மகாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. சுயமரியாதை இயக்கத்தின்





RangaRakes tamilnavarasam.com

பேராலும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் பேராலும் பல மகாநாடுகள் நடைபெற்று இருக்கின்றன. இருகட்சி மகாநாடுகளிலும் நூறுபேர்கள் முதல் கொண்டு பதினாயிரம் பேர்கள் வரை கூடி சாப்பிட்டும் இருக்கலாம்.

காங்கிரஸ் சம்மந்தமான கூட்டங்களில் எல்லாம் பார்ப்பனர்களே சமைத்து இருப்பார்கள் அல்லது பார்ப்பனருக்கு வேறு சமையல் மற்றவர்களுக்கு வேறு சமையல்கள்தான் நடந்திருக்கும். அது மாத்திரமல்லாமல் பார்ப்பனர்களுக்கு வேறு சாப்பாட்டு இடமும் பார்ப்பனரல்லாதாருக்கு வேறு சாப்பாட்டு இடமும் பார்ப்பனர்களே பரிமாறுகின்றது என்கின்ற முறையும்தான் நடந்திருக்கும்.

ஆனால் சுயமரியாதை மகாநாடோ, பார்ப்பனரல்லாதார் மகாநாடோ ஆகியவைகளில் பார்ப்பனர் தவிர மற்ற ஏனைய பல பிரிவுக்காரர்கள் சைவர்கள் முதல் எத்தனையோ பிரிவுக்காரர்கள் இருந்த போதிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் என்று யார் யாரைக் கருதுகின்றோமோ அவர்கள் முதல் பல வகுப்புக்காரர்களும் சேர்ந்தே ஒரே சமையல் செய்வதும், ஒரே பந்தியில் யாவரும் உட்கார்ந்து உண்பதும், சகல வகுப்பாரும் சகல சமையஸ்தர்களும் பரிமாறுவதுமான காரியங்கள்தான் இன்றும் நடந்து வருகின்றன.

இப்படியெல்லாம் இருந்தும் சுயமரியாதைக்காரர்களும், பார்ப்பனரல்லாத கட்சியார்களும் தான் வகுப்புவாதிகளாம். காங்கிரஸ்காரர்கள் வகுப்புவாதிகள் அல்லவாம்.

எனவே இது கேட்பவர்களின் முட்டாள்தனமா, அல்லது இந்தப்படி சொல்லுகின்றவர்களின் அயோக்கியத்தனமா என்று கேட்க வேண்டியிருப்பதற்கு வருந்துகின்றோம்.

இன்று ஓட்டல் தெருக்கள் வழி நடந்தால் பிராமணாள் ஓட்டல் என்றும், அதற்குள் பிராமணர்களுக்கு வேறு இடம் என்றும், பிராமணர்கள் அல்லாதாருக்கு வேறு இடம் என்றும், கிறிஸ்தவர், முகமதியர், பஞ்சமர் ஆகியவர்களுக்கு இடமில்லை என்றும் எழுதி வைத்திருக்கும் காப்பி ஓட்டல்காரப் பார்ப்பனர் தங்களை வகுப்பு வாதிகள் அல்லவென்றும், இந்தப்படி உள்ள முறையை ஒழிக்க வேண்டும் என்று சொல்லுபவர்களை வகுப்பு வாதிகள் என்றும் சொல்வது என்றால், இதைக்கேட்டுக் கொள்ளுகின்றவர்கள் முட்டாள்தனமா அல்லது சொல்லுகின்றவர்கள் அயோக்கியத்தனமா என்று கேட்கின்றோம்.

சாப்பாட்டு ஓட்டல்களில் ''பிராமணர்களுக்கு மாத்திரம் சாப்பாடு போடப்படும்'' என்று போர்டுகள் வெளிப்படையாய் எழுதிக் தொங்க விட்டுக் கொண்டு மற்றவர்களைத் தெருத் திண்ணை மீதுகூட இருக்க வொட்டாமல் விரட்டி அடித்துக் கொண்டிருக்கும் பார்ப்பனர்கள், தங்களை



வகுப்பு வாதிகள் அல்லவென்று சொல்லுவதும், இந்த முறை இருக்கக் கூடாது என்று பாடுபடுகின்றவர்களை வகுப்புவாதிகள் என்று சொல்லுவதுமாய் இருந்தால் இதைக் கேட்டுக் கொள்ளுகின்றவர்கள் முட்டாள்களா அல்லது சொல்லுகின்றவர்கள் அயோக்கியர்களா என்று மறுபடியும் கேட்கின்றோம்.

நடை, உடை, பாவனை, மற்றவர்களை நடத்துதல் ஆகிய சகல காரியங்களிலும் , கோவில், சத்திரம், சாவடி முதலிய சகல இடங்களிலும் பேதமும், பிரிவினையும் வைத்து அதன் மூலமே மக்களின் இழிவையும் சிறுமையையும் நிலைநிறுத்தி ஒருவனுக்கு ஒருவனை கீழ்மைப்படுத்தி வைத்திருக்கும் முறைகளை அடியோடு ஒழிக்க வேண்டும் என்றும், அதற்கு ஆதரவளிப்பவர்களை அடக்க வேண்டும் என்றும், சொன்னால் அதை வகுப்புவாதம் என்று சொல்லுவதும், அந்தப்படியான பேதத்தையும் இழிவையும் சிறுமைகளையும் நிலைநிறுத்த வேண்டுமென்று சொல்லுவதையும் வகுப்புவாதம் அல்ல என்றும் சொல்லப்படுமானால் சொல்லுகின்றவர்கள் அயோக்கியர்களா அல்லது கேட்டுக் கொண்டிருக்கிறவர்கள் முட்டாள்களா என்று கேட்கின்றோம்.

வகுப்புவாதம் என்பது வகுப்பு பேதத்தில் இருந்தும், வகுப்புப் பிரிவினையில் இருந்தும்தான் உண்டானதே தவிர மற்றபடி அது ஆகாயத்தில் இருந்து தொப்பென்று குதித்தது என்று யாரும் சொல்ல முடியாது. எப்படி இருந்த போதிலும் வகுப்பு வாதிகள் என்று சொல்லப்படுகிறவர்கள் வகுப்பு பேதமும் வகுப்பு பிரிவும் கூடாது என்று சொல்லுகின்றார்களா அல்லது வகுப்பு பிரிவும் பேதமும் இருக்கவேண்டும் என்று சொல்லுகின்றார்களா என்பதைத்தான் மக்கள் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றோமே ஒழிய வேறில்லை.

அதுபோலவே தங்களை வகுப்பு வாதிகள் அல்ல என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்கள், வகுப்பு உயர்வு தாழ்வு பேதமும் பிரிவும் இருக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீது இவ்வளவு பாடுபடுகின்றார்களா அல்லது அவைகள் ஒழிந்து போக சம்மதித்து இவ்வளவு பாடும் படுகின்றார்களா என்பதையும் நடுநிலையில் இருந்து சுய அறிவோடு யோசனை செய்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

இந்தப் படியான நடுநிலை ஆராய்ச்சியின் மீது உண்மை கண்டுபிடிக்கப்பட்டால் அவ்வுண்மையை வைத்துக்கொண்டு இன்றைய இந்திய சட்டசபைத் தேர்தலில் வகுப்புவாதிகள் வெற்றி பெற்றார்களா அது இல்லாதவர்கள் வெற்றி பெற்றார்களா என்றால் வகுப்புவாதிகள் வெற்றி பெற்றார்கள் என்கின்ற முடிவைத்தான் அடையக்கூடும்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 02.12.1934**



RangaRakes tamilnavarasam.com

# இதை நீங்கள் தயவு செய்து கவனியுங்கள்

**எதற்காக தெரியுமா?**

நீங்கள் ஒவ்வொருவரும் எப்படியாவது கஷ்டப்பட்டு இரண்டு அல்லது ஒரு சந்தாதாரரையாவது சேர்த்து 8 அணாவாவது அட்வான்ஸ் வாங்கி விலாசத்துடன் நமக்கு அனுப்பிக் கொடுங்கள்.

**ஏன்?**

பகுத்தறிவு ஒரு தனி மனிதனுடைய சுயநலத்துக்கோ ஒரு தனி வகுப்பாருடைய நன்மைக்கோ நடைபெறுவதல்ல.

ஆனால் இன்று ஆதிக்கத்திலிருக்கும் வகுப்பாருடைய விஷமமும் சூழ்ச்சியும் நிறைந்த எவ்வளவோ எதிர்ப்புகளையும் தொல்லைகளையும் சமாளித்துக் கொண்டு இழிவுபடுத்தப்பட்ட மக்களுக்காகவும், ஏழ்மைப்படுத்தப் பட்ட மக்களுக்காகவும் பின்தள்ளப்பட்ட மக்களுக்காகவும் நடைபெறுகின்றது.

இந்த வருஷத்தில் மாத்திரம் 3 தடவை பத்திரிகை நிறுத்தப்பட்டு விட்டதாலும் 2, 3 தடவை ஜாமீன் கட்டும்படி உத்திரவு செய்யப்பட்டதாலும், பத்திரிகை விஷயமாய் 3 கேசுகள் ஏற்பட்டு அபராதங்களும் தண்டனைகளும் விதிக்கப்பட்டதாலும், கேசுகளை எதிர்வழக்காடியதாலும் 5000 ரூபாய்க்கு மேற்பட்ட நஷ்டங்களேற் பட்டதோடு பத்திரிகை சந்தா எண்ணிக்கையும் குறையத் தலைப்பட்டு விட்டது. ஏஜண்டுகள் பெரும்பாலோர் அதாவது இயக்கத்தின் மேல் உள்ள ஆர்வத்தினால் - இயக்கத்தில் உள்ளவர்களால் - இயக்க நன்மைக்காகப் பாடுபட்டவர்கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்கள் எங்கெங்கு ஏஜண்டாயிருந்தார்களோ அவர்களது பாக்கிகள் 100க்கு 90 ரூபாய் வீதம் வசூலாகாமல் போய்விட்டதுடன் கண்டித்து கேட்கப் பட்டதினால் அவர்களது விரோதத்துக்கும் ஆளாக நேரிட்டுவிட்டது. மற்ற பொது ஏஜண்டுகளும் சிலர் ஒழுங்காய் நடந்து கொள்ளாததால் எலக்ஷனுக்குப் பிறகு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திக்கொள்ள வேண்டியதாகி விட்டது.

ஆதலால் ''பகுத்தறிவு''க்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கருதுகின்ற ஒவ்வொரு தோழர்களும் தயவு செய்து இரண்டு சந்தாதாரர்களையாவது சேர்த்துக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்பட வேண்டியவர்களாகி விட்டார்கள். இதைச் சிறிது முக்கியமானதாகக் கருத வேண்டுமாய் வேண்டுகிறோம்.

**பத்திராதிபர்.**

*குறிப்பு: உதவி செய்தவர்கள் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.*

.......................................................................................................

*''பகுத்தறிவு'' காரியாலயம் மானேஜர் அவர்களுக்கு.................... ஐயா அடியில் கண்ட விலாசப்படிக்கு ஒரு வருஷத்துக்கு பகுத்தறிவு பத்திரிகை அனுப்பி வைக்கக் கோறுகிறேன். சந்தா ரூபாய் 3 இத்துடன் அனுப்பி இருக்கிறேன்.*

*தேதி................ கையெழுத்து*

*விலாசம்..........................................................*

*பேர்..................................... குறிப்பு.................*

*ஊர்..................................................................*

*போஸ்டாபீஸ்..................................................*

பகுத்தறிவு - அறிவிப்பு - 02.12.1934



RangaRakes tamilnavarasam.com

# தரகர்கள் ஒழிப்பு

தரகர்கள் என்பது பெரும்பாலும் வியாபாரிகள் என்பதையே குறிக்கும்.

வியாபாரிகள் என்பவர்கள் அனேகமாக சரக்குகளை உற்பத்தி செய்யும் விவசாயக்காரர்கள், தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கும் அச் சரக்குகளை வாங்கி உபயோகிக்கும் பொது ஜனங்கள் என்பவர்களுக்கும் இடையில் இருந்து கொண்டு குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதிப்பவர்களே ஆவார்கள்.

பணம் சம்பாதித்து முதலாளிகளாக ஆவது என்பதற்கு அல்லாமல் வேறு எந்தக் காரியத்திற்கும் இந்தக்கூட்டத்தார்கள் உலகிற்கு தேவையே இல்லை.

இவர்களாலேயே தான் வெள்ளாமை செய்யும் விவசாயியும், சாமான்கள் செய்யும் தொழிலாளியும் என்றென்றைக்கும் ஏழைகளாயும் தரித்திரர்களாகவும் இருக்க வேண்டி இருக்கிறது. ஆனால் இந்த இரு தரத்தாருமே தான் உலகம் நடைபெறுவதற்கு ஆதாரமாய் இருந்து வருகின்றார்கள். அப்படி இருந்தும் இவர்களது குறைந்த அளவு தேவைகளையோ, நலனையோ கூட கவனிக்க உலகில் எந்த மதமும், எந்த அரசாங்கமும் நாளது வரை கவலை எடுத்துக் கொண்டதே இல்லை.

மனிதன் எப்பொழுது இயற்கைக்கு விரோதமாக வாழ்க்கை நடத்த நினைத்தானோ அல்லது இணங்கினானோ அன்று முதல் மனிதன் பாடுபட வேண்டியவனானான். ஆதலால் மனிதன் பாடுபடுவதைப் பற்றி நாம் பரிதாபப்படவில்லை. ஆனால் அந்தப் பாட்டின் - உழைப்பின் பயனை அந்த உழைப்பாளி அடையாமல் சும்மா இருக்கும் (உழைக்காத) சோம்பேரி அடைவதென்றால் இது எந்த முறையில் நியாயமாகும்?

இங்கு இந்த சாக்கில் பொதுஉடமையைப் பற்றிப் பேசவோ, சமதர்மத்தைப் பற்றிப் பேசவோ நாம் வரவில்லை. நீதி, நியாயம் என்பது வேண்டாமா என்று தான் கேழ்க்கின்றோம்.

உழைப்பாளிக்கும், விவசாயிக்கும், பண்டங்களைச் செய்யும் பாட்டாளிக்கும் வீடில்லை, கல்வி இல்லை, சரீர சௌக்கியமில்லை, உடலில் வலிவு இல்லை, அறிவும் இல்லை என்றால் அவர்கள் உலகத்தில் ஏன் இருக்கவேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

விளை பொருள்கள் 100க்கு 100 பங்கு விலை அதிகம் விற்று கொள்ளை லாபம் வந்தாலும் விவசாயக் கூலியானவன் பஞ்சகாலத்தில்



வாழ்வதைப் போல் வாழவேண்டி இருக்கின்றதைப் பார்க்கின்றோம். அது போலவே உற்பத்தி செய்த சாமான்கள் 100 க்கு 100 பங்கு லாபத்துக்கு விற்று லாபம் பெற்றாலும் தொழிலாளி கைக்கும் வாய்க்கும் கணக்கு சரியாகும்படி தான் வாழ்கிறான். இவை கவனிக்கப்பட வேண்டியதுதான் அரசியல்வாதிகள், சமுதாய இயல் வாதிகள் கடமை என்பதோடு ஒரு நல்ல அரசாங்கத்தினுடையவும், ஒரு உண்மையும் யோக்கியமும் பொருந்திய மதத்தினுடையவும் கடமையாகும் என்பது நமதபிப்பிராயம்.

அதை விட்டுவிட்டு இதெல்லாம் கடவுள் செயல் என்று சொல்லிவிட்டு இதற்காக யாதொரு காரியமும் செய்ய வேண்டியதில்லை என்றும் சொல்லப்படுமானால், தூக்கு மரங்களையும், சிறைக் கூடங்களையும் பெயர்த்து அழித்துவிட்டு கொலைகளையும், திருட்டுகளையும் பற்றி யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாமல் அவைகளையும் கடவுள் செயல் என்று ஏன் சொல்லிவிடக் கூடாது என்று கேட்கின்றோம்.

இந்த கஷ்டத்தை நிவர்த்திப்பதற்காக நாம் பிரமாதமான முறை எதையும் சொல்ல வரவில்லை. உண்மையிலேயே விவசாயிகள், பூமிக்கு சொந்தக்காரர்களாய் இருக்கின்றவர்கள் முதல் கொண்டு, வாரத்துக்கு குத்தகைக்கு உழுகிறவர்கள் உள்பட விவசாயக் கூலிகள் வரையில் கடன்காரர்களாகவே தரகர்களுக்கும், லேவாதேவிக்காரர்களுக்கும் உழைத்து உழைத்துப் போட்டு விட்டு பட்டினி கிடப்பவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் ஏன் இந்தப்படி இருக்க வேண்டும்? தொழிலாளிகளும் ஏன் இப்படியே இருக்க வேண்டும்? என்பதைச் சிறிது கவலையுடன் யோசித்து தக்கது செய்யுங்கள் என்று தான் சொல்ல வருகின்றோம்.

அதற்கு நாம் சொல்லும் மார்க்கம் மிகமிக சுருக்கமானதும், சுலபமானதுமாகும்தான். இதில் பலாத்காரமோ, சமாதான பங்கமோ இருக்கவோ ஏற்படவோ இடமும் இல்லை.

அதாவது விவசாயக்காரன் சர்க்காரிலேயோ, அல்லது கூட்டுறவு ஸ்தாபனங்களிலேயோ தவிர வேறு எங்கும் கடன் வாங்க மார்க்கமில்லாமலும் அவனுக்கு வேறு தனிப்பட்ட நபர் யாரும் கடன் கொடுக்காமலும் செய்ய வேண்டியது முதன்மையான காரியமாகும். அதோடு விவசாயத்தில் ஈடுபட்ட கூலி ஆட்களுக்குக் கூலி தவிர விவசாயத்தில் ஒரு பங்கு இருக்கும்படி செய்ய வேண்டும்.

பிறகு விளைபொருள்கள், அதாவது ஆகார சாமான்கள், கூட்டுறவு பண்ட சாலைகளே விலைக்கு வாங்கி, அதாவது விவசாயிக்கு கட்டும்படியான விலைக்கு வாங்கி அக்கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாகவே வாங்குபவர்களுக்குக் குறைந்த லாபத்தில் விற்பனை செய்ய வேண்டும். இதனால் யாருக்கும் கஷ்டம் ஏற்படாது. அதிக லாபம்



RangaRakes tamilnavarasam.com

வைத்து விற்பதானாலும் அந்த லாபம் சாமான் விற்ற விவசாயிகளுக்கும் வாங்குகின்ற ஜனங்களுக்கும் பிரயோஜனப்படும்படியே செய்ய வேண்டும்.

இந்தப்படி செய்வதாயிருந்தால் மிடில்மேன் அதாவது தரகன் அல்லது வியாபாரி என்கின்ற கூட்டத்திற்கு நாட்டில் தேவையே ஏற்படாமல் போய்விடும். அப்போது அனாவசியமாக ஏராளமான பணக்காரர்கள் உற்பத்தி ஆகமாட்டார்கள் என்பது மாத்திரமல்லாமல் உண்மையிலேயே விவசாயக்காரர்களுக்கு நஷ்டமும் கஷ்டமும் இல்லாமல் போவதுடன் மனிதத் தன்மைக்கு வேண்டிய சகல காரியங்களும் விகிதாச்சாரம் அவனும் அடைய சவுகரிய மேற்பட்டுவிடும்.

தொழிலாளிகள் விஷயத்திலும் மனித சமூகத்துக்கு வேண்டிய அனுபவ சாமான்கள் யாவும் இக்கூட்டுறவு முறையினாலேயே செய்யப்பட்டு அக்கூட்டுறவு முறையினாலேயே வினியோகிக்கப் படுமானால், மில் முதலாளிகள் என்கின்ற கூட்டம் எப்படி உற்பத்தியாகும்? அவர்களுக்கு வேலைதான் ஏது? ஒரு வஸ்த்துவின் லாபத்தை அந்த வஸ்துவை பாடுபட்டு செய்தவனாவது அல்லது பாடுபட்ட பணத்தைக் கொடுத்து வாங்குபவனாவது அனுபவிக்க வேண்டுமே அல்லாமல் சும்மாயிருக்கும் சோம்பேறி தரகன் ஏன் அனுபவிக்க வேண்டும் என்றுதான் கேட்கின்றோமே ஒழிய யாரையும் நாம் தூக்கில் போடும்படியோ, சிறையில் வைக்கும்படியோ சொல்ல வரவில்லை.

பிறகு தொழிலாளிகள் இருக்கும் இடங்களில் குறைந்தது 5 மைல் சுற்றளவு தூரத்துக்காவது கள்ளுக்கடைகளோ, மார்வாடிகளோ, நாட்டுக்கோட்டையார்களோ இல்லாமல் இருக்கும்படி செய்துவிட்டு அவர்களுக்கு தேவையான பணத்தைத் தொழிற்சாலை நிர்வாகிகளிடமே வாங்கிக்கொள்ளும்படி செய்து விட்டு லாபத்தில் ஒரு பகுதியோ அல்லது அத்தொழிலாளிக்குப் போதிய அளவு தாராளமான கூலியைக் கொடுத்து அக்கூலியை சாமான் மீது வைத்து விற்கும்படியாகவோ செய்து விட்டால் தொழிலாளிகளைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டிய அவசியமே இருக்காது.

இந்த இரண்டு காரியங்கள், அதாவது விவசாயி விஷயமும் சாமான்கள் உற்பத்தி செய்யும் தொழிலாளி விஷயமும் இந்த முறையில் முடிவு செய்யப்பட்டுவிட்டால் உலகில் வேறு எவ்விதமான நெருக்கடிகளும் இருக்காது என்பதோடு அரசியல் நிர்வாகத்துக்கும் இவ்வளவு கஷ்டமும் பளுவும் இருக்க நியாயமும் இல்லாமல் போய்விடும்.

இதற்காக இப்போது நமது அரசாங்கம் செய்ய வேண்டிய வேலையெல்லாம் சமீபத்தில் ஜர்மனி சர்க்கார் செய்திருப்பது போல் கூட்டுறவு ஸ்தாபனங்களை பலப்படுத்தி அவைகளை இன்னமும் சற்று அதிகமான சர்க்கார் மேல் பார்வை பார்த்து நிர்வகிப்பது என்ற ஒன்றே போதுமானது என்று சொல்லுவோம்.



இன்று இந்த நாட்டில் S.S.L.C., B.A.,M.A., படித்து விட்டு மக்கள் ஆயிரம், பதினாயிரம் கணக்காய் வேலை இல்லாமல் கஷ்டப்படுகின்றதை நேரில் பார்க்கின்றோம்.

இவர்களில் அனேகர் போலீஸ் கான்ஸ்டேபிள் வேலைக்குக் கூட வரத் தயாராய் இருக்கிறார்கள். மாதம் 15 ரூபாய் 20 ரூபாய்க்கு குமாஸ்தா - மேஸ்திரி வேலைக்குக் கூட வர கெஞ்சுகின்றார்கள்.

இவர்களுக்கு ஒரு ஏற்பாடு செய்யாமல் எத்தனை நாளைக்கு விட்டு வைத்துக் கொண்டு இருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை.

மேலும் இந்த நாட்டில் ஏதாவது அரசியல் கிளர்ச்சி உண்மையில் இருக்கின்றது என்று சொல்லப்படுமானால் இந்த மாதிரி வேலையில்லாத ஆட்களுடைய கஷ்டமே அப்படிப்பட்ட அரசியல் கிளர்ச்சிக்குக் காரணமாகும். ஆதலால் அப்படிப்பட்ட தொல்லைகளும், ஒருவாறு ஒழிந்து ஜனங்கள் சமாதானத்தோடு வாழுவதற்கும் அனுகூலமாயிருக்கும் என்பது நமதபிப்பிராயம்.

இன்று நடக்கும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் என்பவை இந்த மாகாணத்தில், தமிழ்நாட்டைப் பொருத்தவரை கிரிமினலுக்கு இடமில்லாமல் நடைபெறுகிறது என்பது ஒரு அளவுக்கு திருப்தி ஆனாலும் ஆந்திர தேசத்தில் பெரும்பாலும் மோசடியாகவே நடைபெற்ற அனேக கேசுகள் கிரிமினலுக்கு போவதாகக் கேள்விப்பட்டோம்.

ஆதலால் கூட்டுறவு ஸ்தாபனங்கள் இலாக்கா சற்று விரிவடைந்து இன்னமும் அநேக துறைகளில் பிரவேசித்து தக்க மேற்பார்வையுடனும் உண்மையான நல்ல எண்ணத்துடனும் ஏழை மக்களுக்கும், பாடுபடும் உழைப்பாளி மக்களுக்கும் உதவும் படியாகவும் நடைபெறச் செய்ய வேண்டும் என்கின்ற ஆசையினாலே இதை எழுதுகின்றோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 02.12.1934**



RangaRakes tamilnavarasam.com

# பொது தொகுதியின் யோக்கியதை

இந்திய சட்டசபைப் பொதுத் தொகுதியின் பொது ஓட்டர் தொகுதியில் ஒரு கிருஸ்தவர் வெற்றி பெற்றுவிட்டதற்காகப் பார்ப்பனர்கள் வகுப்புவாரி ஓட்டர் தொகுதி இனி வேண்டியதில்லை என்றும், பொதுத் தொகுதியே போதும் என்றும், அதிலும் கிருஸ்தவர்களுக்கு என்று ஸ்தானம் ஒதுக்கி வைக்கக்கூட வேண்டியதில்லை என்றும் இப்போது முன்னிலும் அதிகமாக கூப்பாடு போடுகிறார்கள்.

ஆனால் எப்படிப்பட்ட கிருஸ்தவர் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றால் அவர்கள் சமூக முடிவுக்கு விரோதமான கருத்துடைய கிருஸ்தவர்தான் பொதுத்தொகுதியில் வெற்றி பெற்றிருக்கிறாரே தவிர, கிருஸ்தவ சமூக நலனுக்கு ஏற்பட்ட கருத்தை நிலைநிறுத்தப் பாடுபடும் கிருஸ்தவர் வெற்றி பெறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாம் என்பதும், வெள்ளை அறிக்கையை பகிஷ்கரிக்க வேண்டும் என்பதும், காங்கிரசினுடன் கூட்டுறவு கொள்ளவேண்டும் என்பதும், காங்கிரசு கிருஸ்தவ சமூகத்துக்கும் பிரதிநிதித்துவம் உடையது என்பதும், பெரும்பான்மையான அல்லது 100 க்கு 99 பேர்களான கிருஸ்தவர் களுடைய எண்ணமா? அவர்களுடைய சமூக சங்கத்தினுடைய முடிவா? என்பதை உணர்ந்து பார்த்தால் தங்கள் சமூக மக்களில் 100 க்கு 99 பேர்களுக்கு விரோதமான அபிப்பிராயம் உடையவரும், சமூக சங்க முடிவுக்கு எதிரிடையான அபிப்பிராயம் உடையவருமான ஒருவர் எதிரிகளின் கையாளாகி அவர்களுடைய இஷ்டப்படி சம்மதித்த ஒருவர்தான் அல்லது தமது சமூக உரிமைகள் கோரிக்கைகள் என்பதற்கு துரோகம் செய்ய சக்தி வாய்ந்த ஒருவர்தான் பொதுத்தொகுதியில் தெரிந்தெடுக்கப்பட முடிகின்றது. ஆகவே இதுதான் இன்று பொதுத் தொகுதியாய் கருதப்படுகின்றது.

எனவே இந்த பொதுத் தொகுதியை கிருஸ்தவ சமூகம் ஒப்புக் கொள்ளுகின்றதா என்று கேட்கின்றோம்.

**பகுத்தறிவு - கட்டுரை - 02.12.1934**

# முடிந்து போன விஷயமாம்

கும்பகோணத்தில் தேர்தல் கொண்டாட்டம் கொண்டாட வந்த தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களை கூட்டத்தில் ஒரு கேள்வி கேட்டார்கள்.

அதாவது ‘‘இந்திய சட்டசபை மெம்பர் ஆகிவிட்டதற்காக இவ்வளவு பிரமாதமான வெற்றிக் கொண்டாட்டம் கொண்டாடு கின்றீர்களே! நீங்கள் எல்லோரும் அங்கு போய் என்ன செய்யப் போகிறீர்கள்?’’ என்று கேட்டார்கள். அதற்க ராஜகோபாலாச்சாரியார் ஒரே வார்த்தையில் பதில் சொல்லி விட்டார்.

அதாவது ‘‘இது முடிந்து போன விஷயம். எப்படியோ ஒரு விதத்தில் நாங்கள் ஜெயித்து விட்டோமாகையால் முடிந்து போன விஷயத்துக்கு இனி கேள்வி கேட்கவோ பதிலளிக்கவோ இடமில்லை’’ என்று சொல்லிவிட்டாராம். எந்த விதத்திலோ காரியம் கைகூடின பிறகு வெற்றி பெற்றவர்கள் சொல்ல வேண்டிய பதில் இதுதான். அவர்களது தைரியத்தைக் கண்டு நாம் அதிசயிக்காமல் இருக்க முடியவில்லை.

**பகுத்தறிவு - செய்தி விளக்கக் குறிப்பு - 02.12.1934**


RangaRakes
tamilnavarasam.com

# ஜஸ்டிஸ் கட்சியின் புனருத்தாரணம்

ஜஸ்டிஸ் கட்சியில் சட்டசபை நடவடிக்கைகளைப் பொருத்தவரை கவனிப்பதற்கு என்று கவுன்சில் பார்ட்டி என்பதாக ஒரு பிரிவு இருந்து வரும் விஷயம் யாவரும் அறிந்ததாகும். அந்தப் பிரிவுக்கு முக்கிய கொரடாவாக - அதாவது சட்டசபையைப் பொருத்தவரையில் மெம்பர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கட்சி சார்பாய் தெரிவிப்பதற்காக தெரிந்தெடுக்கப்பட்டவரை கொரடா என்று சொல்லுவது. அந்த ஸ்தானத்தில் தோழர் குமாரராஜா முத்தய்யா அவர்கள் இருந்து வருகிறார்.

சமீபத்தில் இந்திய சட்டசபைக்கு நடந்த தேர்தல்கள் விஷயமாய் தோழர் ஷண்முகம் அவர்களுக்கும் தோழர் ராமசாமி முதலியார் அவர்களுக்கும் ஏற்பட்ட தோல்விக்கு முக்கிய காரணம், தோழர் குமாரராஜா முத்தய்யா செட்டியார் அவர்கள் சரியானபடி நடந்து கொள்ளாததே என்ற ஒரு அபிப்பிராயம் கட்சிப் பிரமுகர்களுக்குள் ஏற்பட்டுவிட்டது.

மேற்படி தோல்விகளானது தமிழ் நாட்டில் ஜஸ்டிஸ் கட்சியின் நிலைமையை பாதிக்கக் கூடியதாய் போய்விட்டதால், அந்த வருத்தத்தை உத்தேசித்தும் மேலால் இந்தப்படி நேராமல் இருக்க வேண்டும் என்பதை உத்தேசித்தும் சில முன் ஜாக்கிரதையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாய்ப் போய்விட்டது.

ஆனபோதிலும், கட்சிப் பிரமுகர்களில் ஒருவரைப் பற்றியே இந்தப்படி நினைக்க வேண்டி ஏற்பட்டதானது சரியாய் இருந்தாலும், தப்பாய் இருந்தாலும் கட்சிக்கு மிகவும் நெருக்கடியான நிலைமை என்பதை குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்கள் நெல்லூர் மகாநாட்டில் நடந்து கொண்ட போக்கானது கட்சியை எவ்வளவு கேவல நிலைக்குக் கொண்டு வர வேண்டுமோ அவ்வளவு கேவல நிலைக்குக் கொண்டு போய்விட்டது.

அதன் பிறகு தஞ்சாவூர் மகாநாடானது உலகமே சிறிக்கும் படியான நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டது என்றாலும், பொப்பிலி ராஜா அவர்கள் கட்சித்தலைவர் ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டதின் பயனாய் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி நான்கு பேர் மதிக்கவோ அதைப் பற்றி நினைக்கவோ ஆகிய நிலைமையாவது இருந்து வந்தது.



ஆனால் இப்போது இந்திய சட்டசபைத் தேர்தல்களின் முடிவின் பயனாய் மறுபடியும் கேவல நிலைமைக்குப் போய்விடுமோ என்கின்ற பயமும் அதைரியமும் கட்சியில் அனுதாபமுடைய சுயநலமில்லாத ஒவ்வொருவருடைய மனதிலும் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையானது கட்சியின் பிரவி எதிரிகளாகிய பார்ப்பனர்களுக்கு மிகுந்த கொண்டாட்டத்தை ஏற்படுத்தி விட்டது.

ஆகவே இந்த சமயத்தில் கட்சிப் பிரமுகர்கள் ஒன்று கூடி ஏதாவது ஒரு பந்தோபஸ்தானதும் நிர்மாணமானதுமான காரியத்தைச் செய்ய வேண்டியது மிகவும் அவசியமே யாகும். அதைப் பற்றி நமக்கும் பல தீர்மானங்களும் வியாசங்களும் வந்திருக்கின்றன.

தோழர் குமாரராஜா முத்தய்யா அவர்களும் ராஜா சர் அண்ணாமலை அவர்களும் கட்சிக்காக தாராளமாக பணம் உதவியும், செலவு செய்தும் இருப்பார்கள் என்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அதற்கு தகுந்ததற்கும் மேலான பலன்களை அவர்களும் அடைந்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுவதையும் நாம் மறுக்கவில்லை.

யாதொரு சுயநலத்தையும் கருதாமல் கட்சிக்கு வேலை செய்தவர்கள் யார் என்று கண்டுபிடிப்பது கஷ்டமான காரியமாகும். கண்டுபிடிக்கப்பட்டாலும் கட்சி ''பிரமுகர்கள்'' அதை ஒப்புக் கொள்ளவுமாட்டார்கள். ஆதலால் அதைப் பற்றி பேசுவதில் பயனில்லை.

இப்போது 11-ந் தேதியில் நடக்கப்போகும் கவுன்சில் பார்ட்டி மீட்டிங்கினால் கக்ஷியில் பிளவு ஏற்படாமல் படிக்கும் இனியும் இந்த மாதிரியான காரியங்கள் நிகழாமல் படிக்கும் இருக்கும் படியான ஒரு முடிவுக்கு வரவேண்டியது மிகவும் அவசியமான காரியமாகும்.

அதுவே ராஜ தந்திரமுமாகும். தோழர் பனக்கால் அரசர் இப்போது இருப்பாரேயானால் இந்த மாதிரி ஒரு மீட்டிங்கு போடாமலே இரண்டாம் பேருக்கு தெரியாமல் என்ன என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்துவிடுவார். ஆனால் இப்போது வெளிப்படையாகவே எல்லாம் செய்ய வேண்டியதாகி விட்டது. கட்சிகள் ஏற்பட்ட இந்த நிலையானது இன்று பார்ப்பனருக்கு மாத்திரமல்லாமல் அவர்கள் மூதாதைகளான அரசாங்கத்துக்கும் கொண்டாட்டமாய் விடும். ஏனெனில் இப்பிளவால் அரசாங்கம் ஜஸ்டிஸ் கக்ஷியை தங்கள் கை ஆயுதமாக உபயோகித்துக் கொள்ள கருதிவிடுவார்கள். எப்படி என்றால் ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டமல்லவா?

ஆகையால் சம ஒழுங்கு விதி சம்பந்தமான முறையில் இல்லாமல் தலைவர் தன் சொந்த முறையில் ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அவர்கள் மூலம் உண்மையைக் கண்டுபிடித்து தகுதி அற்றவர்களிடம் ராஜீனாமா பெற்றுக் கொள்ளுவது நல்ல காரியமாகுமென்று நமக்குத் தோன்றுகின்றது.



RangaRakes tamilnavarasam.com

அப்படிக்கில்லையானால், ஜஸ்டிஸ் கக்ஷி கவுன்சில் பார்ட்டி மீட்டிங்கு மாத்திரமல்லாமல் தென் இந்திய நல உரிமைச் சங்க நிர்வாக சபை மீட்டிங்கும், ஜஸ்டிஸ் கக்ஷி கார்ப்பரேஷன் (முனிசிபல் ) பார்ட்டி மீட்டிங்கும் இப்படியே இன்னும் பலதுகள் போட வேண்டி வரும். பிறகு அவற்றில் இருந்து கக்ஷிகள் முளைக்கும். இந்த நிலையானது கொள்கை இல்லாமலும் கக்ஷிக்கு யாதொரு பயனும் இல்லாமலும், கட்சியின் பெயரைக் கொண்டும் பிழைத்து வருகின்ற கூட்டத்துக்கு ஒரு பெரிய வெள்ளாமையாக முடிந்து அவர்களது தொல்லைக்கும் விஷமத்துக்கும் கட்சி ஆளாக வேண்டி வரும் என்று பயப்படுகின்றோம்.

ஜஸ்டிஸ் கட்சியானது பணக்காரர் ஜமீன்தார்கள் ஆகியவர்கள் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற வேண்டும் என்பதில் இந்த மாகாணத்தில் உள்ள எந்த ஜஸ்டிஸ் கட்சியாரையும் விட நாம் முன்னணியிலேயே இருக்கிறோம்.

இன்றைய நிலைமையைக் கூட அதற்கு அனுகூலமாகத்தான் நாம் கொள்ளுகின்றோம்.

ஆனால் சொந்த குரோதங்களுக்கும், பிளவுகளுக்கும், வீண் தொல்லைகளுக்கும் இடமில்லாமல் எவ்வளவு செய்து கொள்ள வேண்டுமோ அவற்றை செய்து கொள்ள வேண்டியது புத்திசாலித் தனமாகும்.

எதற்கும் தென்னிந்திய நலவுரிமைச் சங்க நிர்வாக மீட்டிங் ஒன்று முதலில் கூட்டி அதிலிருந்து ஒரு முடிவை முதலில் செய்து கொள்வது மிக்க பலந் தருவதாகும் என்று அபிப்பிராயப் படுகின்றோம்.

இது சம்மந்தமாக வந்த பல பல தீர்மானங்களையும் சேதிகளையும் வெளியிடாமல் அவர்களுக்கெல்லாம் நமது அபிப்பிராயத்தை தெரிவித்து விடவே இதை எழுதினோம். ஆதலால் அவ்விஷயங்களை பிரசுரிக்காததற்காக நேயர்கள் மன்னிப்பார்களாக.

பகுத்தறிவு - கட்டுரை - 09.12.1934



# ஒரு தோழரின் கடிதத்திற்கு ஈ.வெ.ராமசாமி பதில்

**தோழரின் கடிதம் :**

*''அன்புடைய ஈ.வெ.ராமசாமி நாயக்கர் அவர்கட்கு க்ஷேமம். க்ஷேமத்துக்கு எழுதுங்கள். வெகு நாளாகக் கடிதப் போக்கு வரத்தில்லை. நானும் உங்களுக்குச் சில விஷயங்கள் பற்றிக் கடிதம் எழுத வேண்டும் என எண்ணியெண்ணி முடியாது போயிற்று.*

*நான் சொல்ல விரும்பும் விஷயம் சிலவுண்டு. உங்கள் இயக்கம் உயர்வானது. அவ்வியக்கம் பலப்பட்டு எல்லா வகுப்பாருடைய உதவியும் பெறவேண்டுமானால் நீங்கள் தற்காலம் அனுஷ்டித்து வரும் முறை சரியல்லவென்பது எனது உண்மையான எண்ணம். உங்கள் இயக்கத்தில் எனக்கு ஆர்வமுண்டு. 10, 15 வருஷ காலமாக இவ்வியக்கத்தின் கொள்கை காரணமாய் நான் இந்தியாவில் நடைபெறும் ஒரு இயக்கத்திலும் நேர்முகமாய்க் கலந்து கொள்ளாது இருந்து வந்திருக்கிறேன். ஏனெனில் ஒவ்வொரு இயக்கத்திலும், சிற்சில நல்ல அம்சங்களிருக்கின்றன; பல கெட்ட அம்சங்களும் உண்டு.*

*சமதர்மக் கொள்கையை ருஷ்யாவில் கொண்டாடும் முறையில் இந்தியாவில் புகுத்துவது முடியாது. அவர்களது பழைய கொள்கைகளையே மாற்றிக் கொண்டு வருகிறார்கள்.*

*நீங்கள் செய்துவரும் பிரசாரத்தில் தற்காலம் இந்தியாவில் இருக்கும் ஒரு இயக்கத்துடனும் சேர்ந்திருப்பது சரியல்ல. அப்பொழுது உங்கள் இயக்கம் நாளுக்கு நாள் பலஹீனப்படும்; விரோதிகளும், போலி சிநேகிதர்களும் ஏற்படுவார்கள்.*

*சமதர்மக் கொள்கைக்கு வேலை செய்ய முன்வருபவர்கள் யாதொரு விதமான வருமானத்தையும் எதிர்பார்த்தவர்களாயிருக்க முடியாது. ஏனெனில் இது ஏழைகளது இயக்கம்.*

*நமது நாட்டில் தோன்றியுள்ள காங்கிரஸ், ஜஸ்டிஸ், மற்றய இயக்கங்கள் எல்லாம் முதலாளிகளுடையவும் நிலச்சுவான்தார் களுடையவும் இயக்கமாகும். இவ்வியக்கத்தில் ஜஸ்டிஸ் இயக்கம் ஜாதி வித்தியாசம் பாராதது என்று எண்ணமுடியவில்லை. அதிலும்*



RangaRakes tamilnavarasam.com

*முதலியார், நாயக்கர் சண்டை இருக்கிறது. காங்கிரஸூம் அப்படித்தான். நீங்கள் ஜஸ்டிஸ் கட்சி இயக்கத்தில் சென்னையில் சேர்ந்து பிராமணர், பிராமணர் அல்லாதார் பிரச்னையைக் கிளப்பிப் பேசினீர்கள். உங்கள் கொள்கைக்கு அப்பிரச்சினையே ஏது? அப்பிரச்சினையொன்றிருப்பதாக எண்ணியும் இருக்கக்கூடாது. அதைப்பற்றிப் பேசியுமிருக்கக் கூடாது. அவ்வாறு பேசியதிலிருந்து உங்கள் சமதர்மக் கொள்கையில் உங்களுக்குப் பூரண நம்பிக்கை இன்னம் ஏற்படவில்லையென்றோ அல்லது அதனை நீங்கள் அறிய வில்லையென்றோ என்போலுள்ளவர்கள் நினைக்க வேண்டியேற்படுகிறது.*

*நான் இவ்விதம் எழுதுவதால் என் பேரில் வருத்தமடைய மாட்டீர்கள் என்பது எனது நம்பிக்கை. இப்பொழுது காங்கிரஸ் அசெம்பிளித் தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டது. இவர்கள் சாதிக்கப் போவதொன்றுமில்லை. யாருக்குச் சௌகரியம் ஏற்பட வேண்டுமோ அவர்கட்கு ஏற்படப் போவதில்லை யென்பது எனது முடிவு. ஏன்? அது முதலாளிகளால், கருப்பு முதலாளிகளால் வெள்ளை முதலாளிகளுக்கு விரோதமாய் ஏற்பட்ட இயக்கமாய் விட்டது. அதனைத் திருத்தியமைக்க மாட்டாமல் மகாத்மாவும் அவ்வியக்கத்தை விட்டு கிராம புனருத்தாரணத் திட்டத்திற்கு ஆயத்தம் செய்கிறார். இவ்வியக்கத்தைக் கவனிக்கையில் உள்நாட்டு முதலாளிகளின் சௌகரியத்திற்காக ஏழைகள் உழைக்கவேண்டிய காலமும் வரும் எனத் தெரிகிறது. இவர்களினின்றும் தப்பிக்க வேண்டி மறுபடியும் ஏழைகள் போராட வேண்டி வரும்.*

*ஆகவே சமதர்மக் கொள்கையென்று அறியக்கூடாத முறையில் எல்லா இயக்கத்தவர்களும் நமக்கு உதவி செய்யக்கூடிய நிலையில் ஓர் திட்டம் செய்து வேலை யாரம்பிக்க வேண்டும். அதற்கான வேலையைத் தமிழ் ஜில்லாக்களில் ஆரம்பிப்பது அவசியம். நீங்கள் செய்து கொண்டு வரும் முறையில் மாறுதல் செய்ய வேண்டியது அவசியம் என்பதையாவது உணர்கிறீர்களா? நான் சொல்வது தவறுதல் எனக் கண்டால் அதையாவது தெரிவியுங்கள்.*

*பிறபின்.....''* என்று எழுதியிருக்கிறார்.

இதை அனுசரித்து இன்னும் சிலரிடமிருந்து பல கடிதங்களும் வந்திருக்கின்றன. ஆனால் அவர்கள் எல்லோருமே பார்ப்பன நண்பர்கள் ஆதலால் அவற்றிற்கெல்லாம் இந்த பதில் பயன்படுமென்று எண்ணுகிறேன்.

### ஈ.வெ.ரா. பதில்

அன்புள்ள தோழர் அவர்களுக்கு வணக்கம்.

தங்கள் 24.11.34-ந் தேதி கடிதம் கிடைத்தது. அதைக் கவனித்துப் பார்த்தேன். அதில் ''எனது இயக்கத்தைப் பற்றி புகழ்ந்திருப்பது குறித்து



மகிழ்கிறேன். ஆனால் நான் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்ததும் பிராமணர் - அல்லாதார் என்கின்ற பிரச்சினையைக் கிளப்பினதும் தங்களுடைய சம்மதத்தைப் பெறவில்லை என்பது தெரிகின்றது. ஆனால் தாங்கள் சமதர்மத்தை மனப்பூர்வமாய் ஆதரிப்பவர்கள் என்றும் அதிலிருந்து தெரிகிறது.

நான் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரச்சினையை இன்று நேற்று அல்லாமல் இந்த 10 வருஷ காலமாகவே ''கிளப்பி விட்டு'' அதற்காக வேலை செய்து வருவது தாங்கள் அறிந்ததாகும்.

இந்த நாட்டில் பாமர மக்களுக்காகவோ ஏழை மக்களுக்காகவோ ஒருவன் வேலை செய்ய வேண்டுமானால் அவன் உண்மையான தொண்டனாய் இருப்பானானால், அவனுக்கு முதலில் பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற பிரச்னைதான் முன்நிற்கும். ஏனெனில் அப்பிரச்சினையை கிளப்பி விட்டு அதன் மீது மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி உண்டாகச் செய்து விட்டால்தான் அத்தொண்டினது வேலை சிறிதாவது பயன்படக் கூடியதாகும்.

மற்றும் நமது பாமர மக்களின் குறைவு என்ன? அவர்களது தேவை என்ன? என்பதை ஒருவன் ஜாதி மத செல்வ அபிமானம் இல்லாமல் பார்ப்பானேயானால் அவனுடைய நேர்மையான நாட்டம் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரச்சினையில் தான் கொண்டு போய்விடும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். ஒரு சமயம் நான் பார்ப்பனரல்லாதாராய் இருக்கிறேன் என்பதினால் எனக்கு இந்த அபிப்பிராயம் தோன்றிற்றோ என்பது சம்சயத்துக்கு இடமுண்டாகக் கூடியதாய் இருந்தாலும் இருக்கலாம்.

பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் பிரச்சினை இன்றைய தினம் பார்ப்பனர் என்று சொல்லிக் கொள்ளும் சில ஆட்களைப் பொருத்ததோ, அல்லது பார்ப்பனர் அல்லாதார் என்று சொல்லிக் கொள்ளும் சில ஆட்களையும் பொருத்ததோ அல்ல என்பதையும், ஆனால் அது இன்று ஒரு பார்ப்பனன் என்று தன்னைச் சொல்லிக் கொள்ளுகின்றவன் அவன் உணர்ச்சியில், ஒழுக்கத்தில் எப்படிப்பட்டனவாய் இருந்தாலும் அதற்காக கவலைப்படாமல் தனக்கு என்ன என்ன உரிமை எதிர்பார்க்கிறான்- என்ன என்ன உரிமை அனுபவிக்கிறான் என்பதையும், அதே மாதிரியாகவே தன்னை ஒரு பார்ப்பனரல்லாதான் என்று கருதிக் கொண்டிருப்பவனோ சொல்லப்படுகின்றவனோ ஆன ஒருவன், தனக்கு என்ன உரிமை உண்டு என்று எண்ணிக் கொண்டிருக்கிறான் என்பதோடு, வாழ்க்கையில் என்ன உரிமை அனுபவிக்கிறான் என்பதையும் மற்றும் பார்ப்பனன் என்று தன்னை சொல்லிக் கொள்ளுபவனால் அல்லாதவனுக்கு என்ன என்ன உரிமை - நிலைமை உண்டு என்று எழுதி வைத்த ஆதாரத்தையும், அமுலில்



RangaRakes tamilnavarasam.com

இருக்கும் அனுபவத்தையும் பொருத்ததே ஒழிய வேறில்லை என்பதை தங்கள் ஞாபகத்துக்குக் கொண்டுவர நான் பணிவாய் ஆசைப்படுகின்றேன்.

ஆதலால் நான் பார்ப்பனர் - அல்லாதார் பிரச்சினையில் எனது காலத்தைச் செலவழிப்பது குற்றம் என்று என்னால் கருத முடியவில்லை.

ஒரு மனிதன் சமதர்மக் கொள்கைக்காரனாய் இருப்பானானால் அவன் தனது உள்ளத்தில் மற்றொரு மனிதனை தனக்கு சமமாகவும், மற்றொரு மனிதனுக்கு தான் சமமானவனென்றும் கருதும்படியான ஒரு உணர்ச்சியைக் கொள்ளவில்லையானால் அல்லது கொள்ளும்படி செய்யவில்லையானால் சமதர்மத்தைப்பற்றி பேசும் பேச்சு எதற்கு என்பதும், அதற்காக பாடுபடுவது எதற்கு என்பதும் என் சிறிய புத்திக்கு விளங்கவில்லை.

ஜஸ்டிஸ் கட்சியிலிருப்பவர்கள் அயோக்கியர்களாக இருக்கலாம். காங்கிரசில் இருப்பவர்கள் யோக்கியர்களாக இருக்கலாம் என்றே வைத்துக் கொள்ளுங்கள்.

ஆனால் ஜஸ்டிஸ் கட்சி கொள்கைகள் மனித சமூகத்தின் சமுதாய வாழ்க்கையைப் பொருத்தவரையிலும் சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்டு பார்ப்பனரல்லாதார் உரிமை என்பதை ஆதரிக்கின்றது என்பதும், அந்தப்படி ஆதரிக்கவில்லை என்றாலும் எதிர்க்கவில்லை என்பதும் எனது அபிப்பிராயம்.

அது போலவே காங்கிரசைப் பற்றியும், அதன் கொள்கைகள் மனித சமூகத்தைப் பொருத்த வரையிலும் தாங்கள் குறிப்பிட்டிருப்பது போலவே முதலாளிகளுடையவும், நிலச்சுவான்களுடையவும் நன்மைக்கு ஏற்பட்டது என்பதோடு பார்ப்பனீயத்துக்கும் (அதாவது நான் எந்த பார்ப்பனீயம் என்று மேலே சொன்னேனோ அதற்கும்) முழு ஆதரவும் பலத்தையும் கொடுத்து வருகின்றது - அதற்கு ஆகவே பெரிதும் பாடுபடுகின்றது என்பதும் எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

மேலும் தாங்கள் குறிப்பிட்டது போல் நான் சமதர்மக் கொள்கையை அறியாதவனாக இருந்தாலும் இருக்கலாம் அல்லது அறிந்திருந்தும் அதில் நம்பிக்கை இல்லாதவனாக இருந்தாலும் இருக்கலாம்.

ஆனால் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற விஷயங்களில் உள்ள குறைகளும் ஏற்பட வேண்டிய மாறுதலும் என்ன என்று நான் கருதிக் கொண்டிருக்கின்றேனோ அவற்றில் எனக்கு சிறிதும் சந்தேகமில்லை என்பதோடு அவ்வெண்ணம் நாளுக்கு நாள் பலப்பட்டும் வருகின்றது.

நிற்க மற்றொரு விஷயம். ஏழை பணக்காரன் என்பதில் தாங்கள் கொண்டுள்ள கருத்துக்கும் நான் கொண்டுள்ள கருத்துக்கும் வித்தியாச



மிருக்கும் போல் தோன்றுகின்றது. இந்தியாவில் ஏழை பணக்காரத் தன்மை ஜாதியைப் பொருத்தே அனேகமாய் 100-க்கு 95 பங்காய் இருந்து வருகின்றது.

பணக்காரன் ஏழை என்பது இந்தியாவில் பெரிதும் பிறவியினால் ஏற்பட்ட ஜாதியினாலேயே ஏற்பட்டிருக்கிறது.

பணக்காரன் ஏழை என்பதற்கு நான் கொண்டிருக்கும் அருத்தம் பாடுபடாமல் சரீரத்தால் உழைக்காமல் வாழ்கின்றவன் பணக்காரன் என்றும் அதாவது சரீரத்தினால் உழைப்பது பாவம், அல்லது தோஷம் என்று எந்த எந்த ஜாதியானுக்கு உரிமை இருக்கின்றதோ அவனெல்லாம் செல்வவான் கூட்டத்தில் சேர்ந்தவன் என்றும், எவனெவன் உழைக்கக் கட்டுப்பட்டவன் என்றும் மற்றவனுக்கு உழைத்துப் போட வேண்டியவன் என்றும் உரிமையோடும் இருக்கிறானோ அவனையும், எவனெவன் உழைத்துக் கஷ்டப்பட்டும் போதிய சுகமில்லாமல் இருக்கிறானோ அவனையும் ஏழை என்றும் நான் கருதிக்கொண்டிருக்கின்றேன்.

இந்த விஷயத்தை வாக்கு சாமர்த்தியத்தாலும் அல்லது ''இதை விட முக்கியமானது வேறு ஒரு காரியம்'' என்று காட்டுவதாலும் எதிர்க்கலாம் என்றாலும் இதை மாற்ற வேண்டியதே பிரதானம் என்றும், சமதர்மத்தில் இதுவும் ஒரு கடுகளவாவது சேர்ந்ததாய் இருக்கலாம் என்றும் நான் கருதுகின்றேன்.

''அதோடு ருஷியாவில் இருக்கிற மாதிரியான சமதர்மக் கொள்கையை இங்கும் புகுத்த வேண்டும்'' என்பது எனது கருத்தல்ல என்பதோடு அது சரியா தப்பா என்பதைப் பற்றியும் நான் இப்போது வாதம் செய்யவும் விரும்பவில்லை.

ஆதலால் நமது பிரச்னைகளில் ருஷியாவை மறந்துவிட்டு நம் கண்ணெதிரில் நமது அனுபவத்தில் உள்ள விஷயங்களையும் நமது புத்திக்கு சரி என்று தோன்றும் விஷயங்களையும் பற்றியே பேசுவோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஜஸ்டிஸ் கக்ஷியில் உள்ள முதலியார், நாயக்கர் சண்டை ஜாதியைப் பொருத்ததல்ல. ஆனால் உத்தியோகங்களுக்குப் பெரிய சம்பளமும் கௌரவமும் இருப்பதால் அதை பெருவதற்கான முயற்சிகள் நாயக்கர் முதலியார் செட்டியாராக இருந்து வருகின்றதே ஒழிய வேறில்லை.

பார்ப்பனர்களைப் பார்த்து அவர்களைப் பின் பற்றுகின்றது என்கின்ற முறையில் ஏதாவது சிறிது உயர்வு தாழ்வு கொண்டாடும் உணர்ச்சி இருந்தாலும் இருக்கலாம் என்றாலும் அதை வெளிப்படையாய் கவனிக்க வேண்டிய அளவு நான் காண முடியவில்லை. ஆதலால்



RangaRakes tamilnavarasam.com

அதைப்பற்றி நான் கஷ்டப்படவில்லை. ஏனெனில் உத்தியோக சம்பளம் குறைந்து அதற்கு சரியான பொருப்பும் நிர்ணயமும் ஏற்படும்போது இந்த சண்டைகள் மறைந்துவிடும் என்பது உறுதி. மற்ற பெயர்களுடன் இருக்கும் அரசியல் கக்ஷிகளும் மறைந்து விடும். ஆனால் பிரவிப் பெருமைக்காகவும் உரிமைக்காகவும் இருந்து வரும் சண்டைகள் அப்பெருமையும் உரிமையும் ஒழிந்தாலல்லது ஒரு நாளும் மறைந்து விடாது என்றே கருதுகின்றேன்.

அசம்பளி தேர்தல் விஷயத்தைப்பற்றி தாங்கள் குறிப்பிட்டிருப்பது சரிதான் என்றாலும் இந்த வெற்றி காந்தியாருக்கு மிக மிக ஆனந்தமாய் விட்டது.

நிற்க காங்கிரசின் போக்கையோ, கொள்கையையோ திருத்தி அமைக்கமாட்டாமல் ''மகாத்மா''வும் அதை விட்டு விலகி விட்டார் என்றும் அவர் கிராமப்புனருத்தாரண வேலைக்குப் போயிருக்கிறார் என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அவர் காங்கிரசிலிருந்தாலும் சரி கிராமப்புனருத்தாரணத்தில் இருந்தாலும் சரி அவர் ஜீவன் உள்ளவரையில் பார்ப்பனர்களுக்கோ மற்றும் வெள்ளை அல்லது கருப்பு முதலாளிகளுக்கோ இரும்புக் கூடு போன்ற காவலாளியாய் இருப்பாரே ஒழிய மற்றபடி அவரால் ஒரு கடுகளவு மாறுதலும் ஏற்படப் போவதில்லை. அவரது கிராமப் புனருத்தாரணம் என்பது வருணாச்சிரமப் புனருத்தாரணம் தான் என்பதை தயவு செய்து ஞாபகத்தில் வைத்து பலனை கவனித்து வரும்படி கோருகிறேன்.

கிராமப் புனருத்தாரணத்தின் பேரால் அவர் செய்யப் போவதாய் வெளிப்படுத்தி இருக்கும் திட்டங்கள் ஏழை மக்களுக்கும் இழிவுபடுத்தப் பட்ட மக்களுக்கும் என்ன பலனைக் கொடுக்கக் கூடும் என்பது எனக்கு விளங்குவது போலவே தங்களுக்கும் விளங்கக் கூடும் என்று நினைக்கிறேன்.

முடிவாக தாங்கள் குறிப்பிட்டபடி நான் செய்துகொண்டு வரும் வேலை முறையில் மாறுதல் செய்ய வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். லக்ஷியத்தில் மாறுதலில்லாமல் வேலை முறையில் அடிக்கடி மாறுதல் செய்ய வேண்டியதும் செய்து வருவதும் குற்றமாகாது. லக்ஷியம்கூட சில சமயங்களில் திருத்தவேண்டிய அவசியத்துக்கு உட்பட்டு விடுகின்றதும் உண்டு. ஆனாலும் இப்போதைக்கு லக்ஷியத்தை மாற்ற வேண்டிய அவசியமிருப்பதாக தோன்றவில்லை. முறைகளில் தாங்கள் எழுதியபடியே கூடிய சீக்கிரம் மற்ற தோழர்கள் பலரையும் கலந்து ஏதாவது மாறுதல் செய்யலாமா என்று யோசித்துக்கொண்டு தான் இருக்கிறேன்.

எப்படி இருந்தாலும் காயம் அசைவில் இருக்கும்வரை ஏதோ ஒரு வேலை செய்தாக வேண்டுமல்லவா? அந்த வேலையானது மற்றொருவருக்கு அடிமைப்பட்டதாகவோ அல்லது மற்றொருவருடைய அபிப்பிராயத்துக்கு அடிமைப்பட்டதாகவோ இல்லாமல் கூடியவரை தன் தன் புத்திக்கு சரியென்று தோன்றிய லக்ஷியத்துடன் நடந்து செல்ல வேண்டியதைத்தான் நான் சுயமரியாதையோடு கூடிய வாழ்வு என்று கருதி இருக்கிறேன். ஆதலால் நான் எனது உண்மை அபிப்பிராயங்களை தங்களுக்கு தெரிவித்திருக்கின்றேன் என்ற அளவிலாவது தாங்கள் நம்பிக்கை வைப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

தங்கள் பக்ஷம் மறவாத தோழர்,

**ஈ.வெ. ராமசாமி**

**பகுத்தறிவு - கடிதம் - 09.12.1934.**





RangaRakes tamilnavarasam.com

# தோழர் சத்தியமூர்த்தி அய்யர்

‘‘யாருக்காவது பயித்தியம் பிடிக்கச் செய்ய வேண்டுமானால் அவருடைய யோக்கியதைக்கு மீறிய பவுசு வரும்படி செய்து விட்டால் போதும்’’ என்று ஒரு பழமொழி உண்டு.

அதுபோல் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களுக்கு அவர் யோக்கியதைக்கு மீறின (அதாவது 8-பங்கு 10-பங்கு அதிகமான) பவுசு ஏற்பட்டவுடன் இப்போது அவர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வைக்கப்பட வேண்டிய அளவுக்கு வந்து விட்டார். தலைகால் தெரியாமல் தாண்டவமாடுகிறார்.

இந்திய சட்டசபைக்கு சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் மெம்பராய் விட்டார் என்று சொல்லப்பட்டவுடன் அவர் பேச வாயைத் திறந்ததும் சென்னை கவர்னர் பிரபுவுக்கு ஒரு உத்திரவு போட்டார்.

அதாவது ‘‘இந்திய சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற்று விட்டதால் கவர்னர் மாகாண சட்டசபையை கலைத்து மந்திரிகளை வீட்டுக்கு ஓட்டி விடவேண்டும்’’ என்று சொல்லி விட்டார்.

இந்திய சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ்காரர் ஜெயித்ததற்கும், மாகாண சட்டசபைக்கும், என்ன சம்மந்தம் என்பது தோழர் சத்தியமூர்த்திக்கு சுய அறிவு இருந்தால் புரியாமல் இருக்குமா என்று கேட்கின்றோம்,

இந்திய சட்டசபைக்கு இதற்கு முன்பும்கூட வெகுகாலமாக பார்ப்பனர்களாகவே தான் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். அங்கு எல்லோரும் பார்ப்பனர்களாக இருந்த அந்தக் காலத்தில் தான் ஜஸ்டிஸ் மந்திரிகள் உச்சஸ்தானத்தில் இருந்தார்கள். அப்போதெல்லாம் சென்னை சட்டசபை கலைக்கப்பட ஏற்படாத அவசியம் இப்போது என்ன ஏற்பட்டு விட்டது என்பது நமக்குப் புரியவில்லை.

ஆவணியாவிட்டத்திற்கும் அப்துல் காதர் சாயபுக்கும் பொருத்தம் வைப்பது போல இந்திய சட்டசபைத் தேர்தலுக்கும் மாகாண சட்டசபை மந்திரிகளுக்கும் பொருத்தம் வைத்து அர்த்தராத்திரியில் குடை பிடிக்கிறார் நமது சத்தியமூர்த்தி அய்யர்.

அதோடு நிற்காமல் அதற்கு அடுத்த இரண்டொரு நாளைக்குள் சர்.கே.வி. ரெட்டி நாயுடு அவர்களை சட்ட மெம்பர் வேலையை ராஜினாமாச்



செய்து காலி செய்யும்படி கேழ்க்கச் சொல்லி கவர்னருக்கு மற்றொரு உத்திரவு போட்டிருக்கின்றார். இதிலிருந்து தோழர் சத்தியமூர்த்தி அய்யருக்கு தலைதிருகிப் போய்விட்டது என்பது நன்றாய் தெரிகின்றது. இனி 2,3 நாளையில் ஹோம் மெம்பரைப் பற்றியும் ஒரு உத்திரவு போட்டுவிடுவார்.

தோழர்கள் சி.பி.ராமசாமிஅய்யர், கே.சீனிவாசய்யங்கார் முதலிய பார்ப்பனர்கள் இந்த உத்தியோகங்களில் இருந்து போது சர்.கே.வி.ரெட்டி நாயுடு அவர்கள் பேசியதையும், செய்ததையும் போல் பல பங்கு அதிகமாய் பேசியும் செய்தும் இருக்கிறார். அப்பொழுது தோழர் சத்தியமூர்த்திக்காவது, வேறு பார்ப்பனர்களுக்காவது இந்த யோசனைகள் தோன்றவில்லை.

தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் கவர்னருக்கு உத்திரவு போட்ட விஷயங்களில் நியாயம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதில் அறிவுடைமை இருந்தாலும், முட்டாள்தனம் இருந்தாலும் அவற்றிலிருந்து ஒரு காரியம் மாத்திரம் நன்றாய் விளங்குகின்றது.

அதென்னவென்றால் சத்தியமூர்த்தி அய்யருடைய ஞாபகமும், அவர் ஜாதியாருடைய ஞாபகமும் சதாகாலம் பார்ப்பனரல்லாத மந்திரிகள் மீதும், பார்ப்பனரல்லாத நிர்வாகசபை மெம்பர்கள் மீதும் இருந்து கொண்டு இவர்களை எப்பொழுது ஒழிப்பது என்கின்ற கவலையிலேயே இருந்து வந்திருக்கின்றது என்பதேயாகும். இந்த ஒரு முக்கியமான எண்ணமும், கவலையும் தான் இந்திய சட்டசபை எலக்ஷனில் எல்லாப் பார்ப்பனர்களையும் ஒன்று சேர்த்து ஒரே மூச்சாய் பாடுபட்டு ஒரு கை பார்த்து விடும்படியாகச் செய்து விட்டது என்பது இப்போதாவது நமது மக்களுக்கு விளங்கி இருக்கும் என்று நினைக்கின்றோம்.

தோழர் சர்.சி.பி.ராமசாமி அய்யர், ஜி.ஏ.நடேசன் ஆகியவர்கள் மிதவாதிகள் என்று பெயர். கனம் சீனிவாச சாஸ்திரி என்பவர் சர்க்கார் தாசர் என்று பெயர். மற்றும் பல பார்ப்பனர்கள் ஐக்கோர்ட்டு ஜட்ஜி, ஐ.சி.எஸ்.ஆபீசர், போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலிய பார்ப்பனர்களுக்கும் சர்க்கார் ஊழியர்கள் என்று பெயர். இப்படி எல்லாம் இருந்தும் அவர்கள் எல்லோரும் உயிரைக் கொடுத்து சத்தியமூர்த்தி ஜெயிக்கும்படி பாடுபட்டு அவருக்கு வாழ்த்தும் கூறி இருக்கிறார்கள் என்றால் மந்திரி பதவியும் சட்டமெம்பர், போலீசு மெம்பர் பதவியும் பார்ப்பனர்களுக்கு எவ்வளவு கண் உருத்தலாய் இருந்திருக்கும் என்பது தானாகவே விளங்கவில்லையா?

தோழர் சத்தியமூர்த்திக்கோ அல்லது அவருடைய ஜாதியாருக்கோ ஒரு சமயம் இன்று சென்னை கவர்னர் வேலை கிடைத்திருக்குமேயானால் அவர் பதவிக்கு வந்தவுடன் சட்டசபையைக் கலைத்து மந்திரிகளை வீட்டுக்கு அனுப்பி சட்டமெம்பரையும், ஹோம் மெம்பரையும் டிஸ்மிஸ் செய்துவிட்டுத்தானே மலஜலம் கழிப்பார்கள் என்பதும் இதிலிருந்து விளங்குகின்றதா இல்லையா? என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் பேச்சு எவ்வளவு முட்டாள் தனமானதாயிருந்தாலும், குரோத எண்ணம் கொண்டதாயிருந்தாலும் இந்திய சட்டசபைத் தேர்தல் போலவே சென்னை மாகாண சட்டசபைத் தேர்தலும் முடியுமானால் இன்று உத்தியோகங்களில் உள்ள பார்ப்பனரல்லாத மக்களின் நிலைமை என்னஆவது என்பதையும் உணர்ந்து பார்க்கும்படி வேண்டுகிறோம்.

தோழர் சத்தியமூர்த்தி அய்யர் ஒரு வெறும் புரோகித சாஸ்திரி என்கின்ற முறையில் அவர் அப்படிப் பேசியதாக யாரும் நினைத்து விடக்கூடாது. இந்த நாட்டுப் பார்ப்பனர்களின் பிரதிநிதியாய் மாத்திரம் இருந்து பேசினார் என்றும் நினைத்துவிடக்கூடாது. இந்திய தேசியக் காங்கிரசின் தலைவர்களில் ஒரு முக்கிய தலைவராயும், சட்டசபை, பஞ்சாயத்து போர்டு காரியதரிசி என்கின்ற பதவியிலிருந்து கொண்டும், சென்னை மாகாண காங்கிரஸ் சர்வாதிகாரி என்கின்ற முறையிலும் காந்தியாரால் புகழ்ந்து கொண்டாடப்பட்ட தூய்மையான தேசபக்தர் என்கின்ற முறையிலும் தான் பேசியிருக்கிறார் என்பதை சுயமரியாதை உள்ள ஒவ்வொரு பார்ப்பனரல்லாத மக்களும் உணரவேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

இந்த நாட்டு மக்கள் சிறப்பாக சென்னை மாகாண மக்கள் இப்படிப்பட்ட தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களைத் தங்கள் மாகாண பிரதிநிதியாகவும், இந்திய மக்களின் தலைவர்களில் முக்கியமானவராகவும் கொள்ளத் தக்க நிலைமை இன்று இருக்குமானால் இந்திய மக்களின் யோக்கியதைக்கும் காங்கிரசின் தேசியத்துக்கும் பிரதிநிதித்துவத்தின் நாணையத்துக்கும், மேன்மைக்கும் எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

காங்கிரஸ் சார்பாய் பார்ப்பனர்களின் தேசியம் என்ன என்பது பற்றி நாம் இந்த பத்து வருஷகாலமாய் கூப்பாடு போட்டு வந்ததானது, தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் இந்திய சட்டசபை மெம்பரான எட்டு நாளையில் உண்மையாக ஆகிவிட்டதா? இல்லையா? என்று யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

இந்திய சட்டசபைத்தேர்தல்கள் முடிந்தவுடன் தோழர் சி.ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் கவர்னர் பிரபுவைப் போய் பார்த்து விட்டு வந்திருக்கிறார்.

அவரும் சட்டசபையைக் கலைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி கவர்னருக்கு சட்டம் எடுத்துக்காட்டி இருக்கலாம். அதுமாத்திரமல்லாமல் சென்னை மாகாண உத்தியோகத்தில் இருந்து வரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமைக்கு உலை வைக்க சூட்சி செய்துவிட்டு வந்திருக்கலாம்.



இவை எப்படியோ இருக்கட்டும். மற்றொரு முக்கியமான விஷயமென்ன வென்றால் இந்திய சட்டசபையின் பரிதாபகரமான நிலையைப் பற்றி சிறிது கவனிப்போம்.

தோழர்கள் சி.ஆர். தாஸ் என்ன, பண்டித மோதிலால் நேரு என்ன இப்படிப்பட்டவர்கள் காங்கிரசின் சார்பாய் இருந்து வந்த ஸ்தானத்தில் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் போய் கட்சிப் பிரமுகராக இருக்கப் போகிறார் என்றால் அது மாத்திரமல்லாமல் இன்றைய இந்திய மக்களின் பிரதிநிதியாகப் போய் உட்காரப் போகின்றார் என்றால் இந்திய சட்டசபையின் கஷ்டகாலத்துக்கும் இவரைப் பிரதிநிதியாகக் கொண்ட மக்களின் சுயமரியாதைக்கும் எதை உதாரணம் காட்டுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்த லக்ஷணத்தில் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் ஜாதியைச் சேர்ந்த பத்திரிக்கைகளும் ஆசாமிகளும் தோழர் ஷண்முகமவர்கள் சட்டசபையில் இருந்ததை குறை கூறி ''பட்டேல் என்கின்ற சிங்கம் இருந்த இடத்தில் ஷண்முகம் என்கின்ற.............. இருக்கிறது நியாயமா'' என்று எழுதியும், பேசியும் இருக்கிறார்கள்.

ஆனால் தாஸ், நேரு என்கின்ற மேதாவிகள் மாதம் 40-ஆயிரம் 50-ஆயிரம் வரும்படியைத் துறந்து விட்டுவந்த தியாகமூர்த்திகள் என்று சொல்லப்பட்ட சிங்கங்கள் இருந்து வந்த இடத்தில் சத்தியமூர்த்தி அய்யர் என்கின்ற................. இருப்பது நியாயமா? என்று எழுதினால் அந்தப் பார்ப்பனர்கள் இந்த காலி இடத்தில் என்ன எழுதி பூர்த்தி செய்து என்ன பதில் சொல்லுவார்கள் என்று கேட்கின்றோம்.

ஆகவே இப்படிப்பட்ட இவரைக் கொண்ட இந்திய சட்டசபை எப்படிப் பரிமளிக்கப் போகிறது என்பதும், எப்படி மதிக்கப்படப்போகிறது என்பதும், மானமுள்ள சுயமரியாதையுள்ள மக்கள் அவரது தலைமையில் எப்படி வீற்றிருக்கப் போகின்றார்கள் என்பதும் நமக்கே பெரிய பிரச்சினையாகத்தான் இருக்கின்றது.

இன்றைய இந்திய சட்டசபைக்குக் காங்கிரஸ் சார்பாகவே யாரைத் தலைவராகப் போடுவது என்பது காங்கிரஸ்காரர்களுக்கே ஒரு பெரிய பிரச்சினையாகி விட்டதாகத் தெரிகின்றது. ஏனெனில் தோழர் காந்தியாரே இந்தப் பிரச்சினையில் கவலை செலுத்திப் பார்த்து அவரது நண்பர்களுடன் கலந்த பிறகுதான் தோழர் பண்டிதர் மாளவியா அவர்களை எப்படியாவது இந்திய சட்டசபைக்குக் கொண்டுவர வேண்டும் என்கின்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இதிலிருந்தே இன்றைய காங்கிரசில் பொருப்பும் யோக்கியமுமான ஆட்கள் இல்லை என்றும் இருப்பவர்களுக்குள் சத்தியமூர்த்தியை மேலானவர் என்று மதிக்க வேண்டியதாகி விட்டதென்றும் விளங்கிவிட்டது.



RangaRakes tamilnavarasam.com

அதனாலேயே தோழர் மாளவியா காங்கிரசின் இன்றைய முக்கிய கொள்கையாகிய வகுப்புத் திட்டத்தில் எதிரான அபிப்பிராயமுடையவரா யிருந்தாலும் இந்திய சட்டசபையின் கௌரவத்தைக் காப்பாற்ற (யாருடைய கௌரவத்தை? பார்ப்பனர்களின் கௌரவத்தைக் காப்பாற்ற) வேண்டுமே என்கின்ற கவலை கொண்டு கொள்கையைகூட கவனியாமல் மாளவியாஜியைக் கூப்பிடுகிறார்கள். இதிலிருந்து காங்கிரசின் வகுப்புத் தீர்ப்பின் சம்மந்தமாக நாணையம் என்ன என்பதையும்கூட ஒருபுறம் அறிந்து கொள்ளலாம்.

இன்று இந்தியா முழுவதற்கும் இந்திய சட்டசபைக்குக் காங்கிரஸ்காரரே வெற்றி பெற்றுவிட்டார்களானாலும் இந்திய சட்டசபையில் அரசாங்கம் மதிக்கக் கூடிய நபரோ, பொதுஜனங்கள் மதிப்பு வைத்து கவனிக்கக்கூடிய நபரோ இல்லை என்று காந்தியாரும், ராஜகோபாலாச்சாரியாருமே உணரும்படி ஆகிவிட்டதென்றால் வெற்றியின் யோக்கியதை வெட்கப்படவேண்டியதாக ஆகி விட்டது என்பது விளங்கவில்லையா என்று கேட்கின்றோம்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 09.12.1934**



# வேஷம் விளங்கி விட்டது

''வெள்ளை அறிக்கையை பஹிஷ்காரம் செய்கின்றோம்.'' ''வைசிராய் வந்தவுடன் வெளியில் எழுந்து வந்து விடுகின்றோம்.'' என்றெல்லாம் கூறி ஓட்டு வாங்கி சட்டசபைக்குச் சென்று இருக்கும் நமது காங்கிரஸ் வீரர்கள் இப்போது மெள்ள மெள்ள தங்கள் திரையை நீக்கிக் கொண்டு வெளியில் வர ஆரம்பித்து விட்டார்கள்.

அதாவது வெள்ளை அறிக்கையின் பயனாய் கிடைக்கக் கூடிய பதவிகளையும், உத்தியோகங்களையும், சம்பளங்களையும் கைப்பற்ற வேண்டுமென்றும், அந்தப்படி செய்யாவிட்டால் பிற்போக்காளர்கள் (காங்கிரஸ்காரர்கள் அல்லாதார்கள்) அதை அனுபவித்து விடுவார்களென்றும் சொல்லி இப்போதே பழய பாடம் படிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

முன்பு ஒரு தடவையும் கூட இந்தப்படியே அதாவது காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்குச் சென்றால் மந்திரி வேலையை ஒப்புக்கொள்ளக்கூடாது என்றும், மந்திரிகளை ஆதரிக்கக் கூடாதென்றும் செய்திருந்த காங்கிரஸ் தீர்மானத்துக்கு விரோதமாய் மந்திரி உத்தியோகம் பெற ஆசைப்பட்டு அது சௌகரியப்படாமல் போகவே தங்கள் இஷ்டப்படி மந்திரிகளை ஆதரிக்கத் தொடங்கி மந்திரிகளின் கையாள்களாகவும் இருந்து வந்தார்கள்.

அதை மற்ற மாகாண காங்கிரஸ்வாதிகள் கண்டித்து சமாதானம் கேட்டபோது சென்னை காங்கிரஸ்வாதிகள் இதே பதில் தான் சொன்னார்கள். என்னவென்றால் ''மந்திரி பதவிகளை காங்கிரஸ் ஆதிக்கத்தில் வைத்திருக்கா விட்டால் பிற்போக்காளர்கள் (ஜஸ்டிஸ் கட்சியார்கள்) கைப்பற்றி விடுவார்கள். ஆதலால் காங்கிரஸ்காரர்கள் மந்திரிகளை ஆதரிக்க வேண்டியவர்களானார்கள்'' என்று சொன்னார்கள்.

ஆதலால் காங்கிரஸ்காரர்களுக்கு எவ்வெப்பொழுது சட்டசபைக்குள் செல்ல முடியாதோ அப்பொழுதெல்லாம் சட்டசபையை பஹிஷ்கரிப்பதும், எவ்வெப்பொழுது மந்திரி பதவி கிடைக்காதோ அப்பொழுதெல்லாம் மந்திரி பதவி ஒப்புக்கொள்ளக்கூடாது என்று தீர்மானிப்பதும், எவ்வெப்பொழுது சாத்தியப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம்



RangaRakes tamilnavarasam.com

தேசத்துரோகிகளும், பிற்போக்காளர்களும் பிரவேசியாமலும், மந்திரி ஆகாமலும் பார்த்துக் கொள்ளுவதற்காக'' என்று பிரவேசிப்பதும் வழக்கமாக இருந்து வருகின்றது.

அதை இந்த வருஷ தேர்தலிலும் பட்டவர்த்தனமாய் காட்டி தங்களது உள்வேஷத்தை விளக்கிவிட்டார்கள்.

இதை 5-12-34ந் தேதி பாட்னாவில் கூடிய காங்கிரஸ் காரியக்கமிட்டியும், சட்டசபைப் பஞ்சாயத்துபோர்டும் சேர்ந்து நிறைவேற்றி இருக்கும் தீர்மானத்தால் அறியலாம். அதாவது,

''கூட்டுக்கமிட்டி அறிக்கையை நிராகரித்து விட வேண்டும். நிராகரிப்பு என்றால் இப்போது இருந்து வரும் அரசியலின் கீழ் இருந்து கொண்டு கஷ்டப்படவேண்டும். இது சகிக்க முடியாததாய் இருந்தாலும் அரசியல் நிர்ணய சபையாரால் வகுக்கப்படும் ஒரு அரசியல் கிடைக்கும் வரை இப்பொழுதிருக்கும் அரசியலின் கீழ் இருக்க வேண்டும்.

ஆகவே ''சீர்திருத்தத்திட்டத்தை நிராகரிக்கும்படி அசம்பளி மெம்பர்களை கேட்டுக் கொள்ளுகிறது. காங்கிரஸ் செய்வதை பொதுஜனங்கள் ஆதரிக்க வேண்டும்'' என்று தீர்மானித்து இருக்கிறார்களாம்.

இதிலிருந்து விளங்குவது யாவருக்கும் தெரிந்ததே. சட்டசபை மெம்பர் பதவியையும் மந்திரி பதவியையும் அடைவது என்னும் ''கஷ்டத்தை'' சகித்துக் கொண்டும், சம்பளம் வாங்கி எண்ணி எண்ணி பெட்டியில் போடுவது என்னும் ''துன்பத்தை'' அனுபவித்துக் கொண்டும் சீர்திருத்தங்களை எதிர்க்கவோ நிராகரிக்கவோ ஆன காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதே அல்லாமல் வேறு இரகசியம் எதுவும் இத் தீர்மானத்தில் இல்லை.

ஒரு புருஷன் தனது மனைவியை விபசாரி என்று கருதி விலக்கி வைக்க வேண்டும் என்று தீர்மானித்து அத் தீர்மானத்தை எப்படி நிறைவேற்றினான் என்றால் அவளோடு வாழ்ந்து கொண்டும், பிள்ளைகளையும் பெற்றுக் கொண்டும் இருந்துகொண்டே அவளை விலக்கி விடுவது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியதோடு அதற்கு சமாதானமும் ''தான் அந்தப்படி செய்யாவிட்டால் தன் மனைவி வேறு ஒருவனுக்கு பிள்ளை பெற்றுவிடுவாள் என்று சொன்னானாம். அது போலவே அரசியலின் கீழ் இருந்து கொண்டே அந்த பதவியையும் சம்பளத்தையும் அனுபவித்துக் கொண்டு அந்த அரசியலை பகிஷ்கரிப்பது என்று முடிவு செய்து விட்டார்கள் நமது காங்கிரஸ்காரர்கள். அப்பாடா இது எவ்வளவு பெரிய தியாகம்! எவ்வளவு பெரிய வீரம்!! வேறு யாராவது இந்தப்படி செய்ய முடியுமா!!! என்று யோசித்தால் அதன் பெருமை விளங்கிவிடும்.



அறிவில்லாத பாமர மட ஜனங்கள் இவற்றை நம்பி ஏமாந்து போகின்றார்கள் என்பது ஒரு பக்கம் இருக்க அரசியலை நிராகரிப்பது என்றால் என்ன அருத்தம் அது எப்படி முடியும் என்பது பற்றி ஒரு அறிஞனும் யோசித்துப் பார்த்ததே கிடையாது. பார்ப்பனர்கள் என்ன வியாக்கியானம் சொல்லுகிறார்களோ அதையே நம்பி கங்காதரா மாண்டாயோ என்று அழுவதை தவிர நமது மக்களுக்கு சொந்தபுத்தி சிறிது கூட இல்லை. அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் ஒரு சிறிய ஸ்தானத்தைப் பெற்றுக் கொண்டாலும் அதற்குள்ள நிபந்தனைப்படி நடந்து ஆகவேண்டுமே ஒழிய வேறு வழியில்லை. ஒருவன் ஓட்டு செய்தபோதே அரசியலுக்கு அடிமை ஆகிவிட்டான் என்றால் சீர்திருத்த சட்ட சபைக்குள் நுழைந்து விட்ட பிறகு என்ன ஆவான் என்று சொல்லவேண்டுமா? அவன் சீர்திருத்தப்படி நடக்க வேண்டியதைத் தவிர வேறு ஒரு காரியமும் செய்ய முடியாது. அங்கு நிராகரிப்பது என்பதற்கு ஒரு காரியமும் கிடையாது என்றும், செய்யமுடியாது என்றும், அந்த வார்த்தைக்கு அருத்தமில்லை என்றும் சொல்லுவோம்.

யார் எழுந்து வந்தாலும் யார் ராஜீனாமா கொடுத்தாலும் அரசியல் சீர்திருத்தம் என்பது சிறிது கூட அசைவு பெற்று விடாது.

தோழர்கள் தாஸ், நேரு ஆகியவர்கள் பல தடவை வெளியேறினார்கள், ''ராஜீனாமா'' கொடுத்தார்கள், ரப்பர் பந்துமாதிரி எகிரி எகிரி பேசினார்கள் முடிவில் என்ன ஆச்சுது?

தோழர்கள் ஆரோக்கியசாமி முதலியார், ரங்கநாத முதலியார், முத்துலக்ஷிமி ரெட்டியார். ''ராஜீனாமா'' கொடுத்தார்கள் என்ன ஆச்சுது. மறுபடியும் அதே பதவிக்கு தொங்குகிறார்களே ஒழிய சீர்திருத்தத்தை கடுகளவு கூட அசைத்து விடவில்லை.

இந்த இரகசியம் தோழர்கள் ராஜகோபாலாச்சாரிக்கோ, காந்தியாருக்கோ, அல்லது சத்தியமூர்த்தி அய்யருக்கோ தெரியாது என்று நாம் இதை எடுத்துக்காட்ட வரவில்லை. இதை இவர்கள் தெரிந்தே மக்களை இந்தப்படி பேசி ஏமாற்றுகின்றார்கள் என்பதைக் காட்டவே இதை எழுதுகின்றோம்.

சீர்திருத்தம் யார் தடுத்தாலும் யார் நிராகரித்தாலும் யார் பஹிஷ்கரித்தாலும் வரத்தான் போகின்றது, வந்தும் ஆய் விட்டது. அதை ஆதரித்து பதவிகளை ஏற்று நடத்திக் கொடுத்து பணம் பெற பாட்னாவில் தீர்மானமும் 6 மாதத்துக்கு முன்பே செய்தும் ஆய்விட்டது.

''மத்திய அரசாங்கத்தில் சுயாட்சி இல்லாமல் மாகாண சுயாட்சி வேண்டியதில்லை'' என்று கூப்பாடு போட்ட வீரர்கள் தான் இன்று மத்திய அரசாங்கத்தை நடத்திக் கொடுக்கும் தேர்தலில் வெற்றி பெற்று விட்டார்கள். மாகாண சுயாட்சியை நடத்திக் கொடுப்பதற்கும்,



RangaRakes tamilnavarasam.com

மந்திரிகளை விரட்டி விட்டு அந்தப் பதவியை எங்களுக்குக் கொடுங்கள் என்று கவர்னரை கெஞ்சுகிறார்கள். அந்த தேர்தலிலும் வெற்றி பெற இப்போது இருந்தே முயற்சி செய்து வருவதும், சூட்சிகள் செய்வதும், கவர்னர்களை போய்ப் பார்ப்பதும் யாரும் அறியாததல்ல.

காங்கிரஸ் சட்டசபைகளையும் உத்தியோகங்களையும் பஹிஷ்கரித் திருந்த காலத்திலேயே சட்டசபைத் தலைவர் பதவியையும், கமிட்டி ஸ்தானங்களையும், அவற்றின் வருவாய்களையும் அனுபவித்து வந்த வீரர்கள் இப்போது காங்கிரசே சட்டசபை ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ள தீர்மானித்து விட்டு உத்தியோகங்களை யேற்றுக் கொள்ளலாம் என்று யோசித்துக் கொண்டும் இருக்கும்போது இனி பஹிஷ்காரம், நிராகரிப்பு என்பவைகள் எல்லாம் மக்களை ஏமாற்றச் செய்யும் பழய பாடங்களே ஒழிய இதில் புதியது ஒன்றுமே இல்லை என்பதே நமது அபிப்பிராயம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 09.12.1934**



# சென்னை சட்டசபை உப தேர்தல்

சென்னை சட்ட சபைக்கு சாமி வெங்கடாசலம் செட்டியார் அவர்களால் காலி செய்த ஸ்தானமானது பூர்த்தி செய்யப்படுவதற்கு காங்கிரசுக்காரர்கள் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் வெற்றியைப் பார்த்த பிறகு அதற்கும் பார்ப்பனர்களாகவே பார்த்து நிருத்த முயற்சித்து வருகிறார்கள். தோழர் லக்ஷிமிபதி அம்மாள் அவர்கள் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டது. பிறகு தோழர் டி. பிரகாசம் பந்துலு அவர்கள் பெயர் பிரஸ்தாபிக்கப்படுகிறது. அவர்கள் பெயர் ஓட்டர் லிஸ்டில் காணப்படவில்லை என்றும் சொல்லிக் கொள்ளப்படுகிறது என்றாலும் மறுபடியும் ஒரு அரைப்பார்ப்பனரையாவது அந்த ஸ்தானத்துக்கு போட பார்க்கின்றார்களே ஒழிய தோழர் கத்தே ரங்கய்ய நாயுடு அவர்கள் காங்கிரசுக்காக என்று எவ்வளவோ உழைத்து வந்தும் அவர் பார்ப்பனரல்லாதாராய் இருப்பதால் அவர் பெயரை பிரஸ்தாபிப்பாரையே காணோம். அவர் எந்தக் காரணத்தினால் பிடித்தமில்லை ஆனாலும் வேறு ஒரு பார்ப்பனரல்லாதாரையாவது போடலாம்.

ஆகவே இந்த சந்தர்ப்பத்திலேயே எவ்வளவு பார்ப்பனர்களை புகுத்திக் கொள்ள முடியுமோ அவ்வளவு பெயர்களையும் புகுத்திக் கொள்ள முடிவு செய்து தோழர் டாக்டர் மல்லப்பா அவர்களை நமது பார்ப்பனர்கள் காங்கிரசின் பேரால் சட்டசபைக்கு சென்னை நகரத் தொகுதியில் நிருத்த தீர்மானித்து இருக்கிறார்கள். இதற்கு பாட்னாவில் இருந்து உத்திரவு வந்தது போல் வேஷம் போட்டு மக்களை ஏமாற்ற பார்லிமெண்டரி போர்ட் தீர்மானம் செய்து விட்டது என்று தந்தி அடித்து விட்டார்கள்.

ஆகவே காங்கிரசின் வெற்றி பார்ப்பனர் வெற்றி என்பதும் காங்கிரஸ் தேர்தல் பார்ப்பனர் தேர்தல் என்பதும் காங்கிரஸ் கட்சி ஜஸ்டிஸ் கட்சி என்பதும் பார்ப்பனர் கட்சி அல்லாதார் கட்சி என்பது தான் என்பதும் இதிலிருந்தாவது பார்ப்பனரல்லாத புல்லுருவிகள் உணர்வார்களாக.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 09.12.1934**



RangaRakes tamilnavarasam.com

# ஆந்திரர் – தமிழர் என்று பிரிக்கப்பார்ப்பது

ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் காரணமாய் வெளியேறி விட்ட தோழர் குமாரராஜா அவர்களுக்காக குமாரராஜா அவர்களை ஆதரிக்க ஆசைப்பட்டவர்களோ அல்லது அவரிடம் கூலிபெற்றவர்களோ ஜஸ்டிஸ் கட்சியைத் தாக்க இதுசமயம் தங்களுக்கு வேறு எவ்வித கதியும் இல்லாமல் நிற்கதியாயிருப்பதை முன்னிட்டு மிக இழிவான மார்க்கத்தைக் கைக்கொள்ளத் துணிந்து விட்டார்கள். ''பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்'' என்கின்ற பழமொழிப்படி ஏதாவது ஒரு விஷயத்தில் பசி ஏற்பட்டு விட்டால் **மானம், குலம், கல்வி, அறிவு** ஆகியவைகளை அவர்களில் பலர் வந்த விலைக்கு விற்று விட்டு மிக இழிவான காரியங்களில் சிலர் இறங்கி விட்டதானது மிகவும் வெறுக்கத்தக்கதும், பரிதாபப்படத் தக்கதுமான விஷயமாக ஆகிவிட்டது.

தோழர் குமாரராஜா அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு ஆதாரமான பிரஸ்தாப விஷயம் தோழர் ஆர்.கே.ஷண்முகம் அவர்களுடைய இந்திய சட்டசபைத் தேர்தலில் செட்டிநாடு ராஜா சர்.அண்ணாமலையார் அவர்களும், அவர்களது குமாரரான முத்தையா அவர்களும் நம்பிக்கைக் குறைவாய் நடந்து கொண்டார்கள் என்பது காரணமாகும். இவ்விஷயம் ஒரு சாதாரணமான விஷயமா என்றால் பார்ப்பனர்களைத் தவிர அவர்களது கூலிகளைத் தவிர வேறு எந்தத் தமிழ் மக்களும் ஆம் என்று சொல்லத் துணிய மாட்டார்.

தோழர் ஷண்முகம் அவர்கள் வியாபாரிகளுடைய தொகுதியில் நிற்பதற்கு காரணம் செட்டிநாடு ராஜா சர், அவர்களுடைய வாக்குறுதியே தவிர வேறொன்றும் அவ்வளவு பிரதானமாய் இருக்கவில்லை. அந்த வாக்குறுதியானது செட்டிநாடு ராஜா - குமாரராஜா அவர்களால் தோழர் ஷண்முகத்துக்கு மாத்திரமல்லாமல் கட்சித் தலைவரான பொப்பிலி ராஜா அவர்களுக்கும், மற்றும் கட்சிப் பிரமுகர்கள் பலருக்கும் நிபந்தனை இல்லாமல் கொடுத்ததொரு வாக்குறுதியாகும். அது மாத்திரமல்லாமல் அவ்வாக்குறுதியானது தோழர் ஷண்முகம் அவர்களை உறுதியாக நம்பிக்கை கொள்ளச் செய்ததுடன் செட்டிமார் சமூகத்தைப் பொருத்தவரை



ஓட்டுக்கு வேறு எவ்வித பிரயத்தனமோ முயற்சியோ எடுத்துக் கொள்வதற்கு இல்லாமலும், சந்தேகமோ கவலையோ படுவதற்கு இல்லாமலும் செய்து விட்டது என்பதில் சிறிதும் விவகாரத்திற்கு இடமில்லை.

ஆனால் தோழர் சர். ஷண்மும் அவர்கள் தேர்தல் தோற்றுப் போய் விட்டது என்பதும் செட்டிநாட்டைப் பொருத்தவரை பகுதிக்கும் குறைவான ஓட்டுகளே சர். ஷண்முகத்துக்குக் கிடைத்திருக்கிறது என்பதும் செட்டிநாட்டு ராஜாவும், அவரது குமாரரவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

இது ஒருபுறமிருக்க தேர்தலின் முக்கிய சமயத்தில் குமாரராஜா அவர்கள் சென்னையிலேயே இருந்து விட்டதும் ராஜா சர் அவர்கள் தேவகோட்டையிலேயே யிருந்து விட்டதும் அவர்களே ஒப்புக்கொள்ளக்கூடிய காரியங்களாகும்.

இந்நிலையில் செட்டிநாடு ராஜா அவர்கள் தேர்தலுக்காக அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு அனுகூலமாய் ருஜுவிடும் விஷயம் இரண்டு அதாவது -

சர்.ஷண்முகம் தேர்தலுக்கு செட்டி நாட்டைப் பொருத்தவரை ஏற்பட்ட செலவை தான் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் தனது மறுமகனார் அவர்களை ஓட்டுச் சேகரிக்க அனுப்பினதாகவும் சொல்லப்படும் விஷயங்களேயாகும்.

மூன்றாவதோ தோழர் சர். ஷண்முகம் அவர்கள் செட்டி நாடு ராஜா சர் அவர்களுக்கும், அவரது மருமகனாருக்கும் எழுதிய நன்றியறிதல் கடிதங்களாகும்.

இவற்றைத் தவிர வேறு வழியில் தங்களது வாக்குறுதியை நிறைவேற்றியிருப்பதற்கு எவ்வித சாதகமான சமாதானத்தையும் சொல்லவேயில்லை. சொன்னதாக தெரியவும் இல்லை. ஆதலால் சர் ஷண்முகம் அவர்களும் கட்சித் தலைவர்களும் மற்ற பிரமுகர்களும் கொண்டுள்ள ''வாக்குறுதிப்படி நடந்து கொள்ளாததால் மேலால் நம்புவதற்கு முடியாமல் இருக்கின்றது'' என்ற எண்ணம் ஏற்பட்டிருப்பதை மாற்றிக்கொள்ள முடியவில்லை.

இதற்காக ஏதாவது ஒரு வழியில் பொது ஜனங்களை உத்தேசித்தாவது சமாதானம் சொல்ல முயர்ச்சிக்காமல் ஆந்திரர் தமிழர் என்கின்ற அடிப்படையின் மேல் கட்சி கட்ட ஆரம்பித்தால் அது யோக்கியமான காரியமாகுமா? என்பதையும், அது வெற்றி பெருமா என்பதையும் குமாரராஜா அவர்களும் ராஜா சர் அவர்களும் ஆழ்ந்த யோசனை செய்து அதை கைவிட்டு வேறு முயற்சியில் ஈடுபட வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

ராஜா சர் அவர்கள் கட்சிக்காக பணம் கொடுத்திருப்பதை அப்படியே ஒப்புக்கொள்ளுவோம் என்றாலும் தோழர் ராமசாமி



RangaRakes tamilnavarasam.com

முதலியார் அவர்கள் தேர்தலில் பொப்பிலி ராஜாவுக்கு தன் கையில் இருந்து 10000ரூபாயுக்கு மேற்பட்ட செலவு ஏற்பட்டிருக்க குமாரராஜா அவர்கள் 2500 ரூபாய் தான் கொடுத்திருக்கிறார்கள்.

இது அவரது அறிக்கையிலேயே விளங்குகின்றது. இந்த 2500ரூ ராஜா சர் அவர்களும் குமாரராஜா அவர்களும் இந்தக் கட்சிக்காக இந்த பெரிய முக்கிய பிரச்சினைக்கு உதவியது மாபெரும் காரியம் என்றே வைத்துக் கொண்டாலும் இந்த 2500 விட எத்தனையோ பங்கு அதிகமான தொகையை தோழர் ராமசாமி முதலியாரின் எதிர் அபேட்சகர் விஷயத்திலும் மனமுவந்து ராஜா சர் உதவி இருப்பதாக சொல்லப்படுவதும் அதனால் பொப்பிலி ராஜா அவர்கள் கொடுத்த 10000 ரூபாயும் வேறு சிலர் கொடுத்த ரூபாயும் அனேகர் உழைப்பும் வீணாய் போய் விட்டது என்று பஹிரங்கமாக சிறு குழந்தைகள் முதல் சென்னையில் சொல்லிக் கொள்ளப்பட்டு வரும் விஷயத்திற்கு என்ன சமாதானம் என்று தெரிய மக்கள் ஆசைப்படமாட்டார்களா என்று கேட்கின்றோம். மொத்தத்தில் ராஜா சர் அண்ணாமலையார் குடும்பம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்காகவோ அல்லது நன்மைக்காகவோ என்று இதுவரை எவ்வளவு ரூபாய் உதவி இருக்கிறார்கள் என்று அவர்கள் சொல்லுவதை அப்படியே ஒப்புக்கொண்டாலும் அதை விட. எத்தனே 10 மடங்கு அதிகமாய் கட்சிக்கு விறோதமானவர்கள் வஞ்சகமானவர்கள் என்னப்பட்ட எதிரிகளான பார்ப்பனர்களுக்கும் அவர்களது சமூகத்துக்கும் அவர்களது இயக்கங்களுக்கும் கொடுத்திருக் கிறார்கள் கொடுத்து வந்து இருக்கிறார்கள் கொடுத்தும் வருகிறார்கள் என்பதை யோசித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

பார்ப்பனர்கள் - பார்ப்பனர் அல்லாதார்கள் என்கின்ற பிரிவுகளையே மிக இழிவானது - வெறுக்கத் தக்கது என்று சொல்லி வந்த பார்ப்பனர்கள் இன்று ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்காக வெட்டி புதைப்பதற்கு ஆக தைரியமாய் ஆந்திரர்கள்-தமிழர்கள் என்கின்ற பிரிவினையை ஏற்படுத்தி விட்டு அந்த சாக்கில் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியும், முயற்சியும் அழிக்கப் பார்க்கின்றார்கள் என்றால் அது அச்சமூகத்துக்கு எவ்வளவு இழிவானதும் துணிச்சலானதுமான காரியம் என்று யோசிக்கும்படி வேண்டுகின்றோம்.

ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டபிறகு தமிழர்களை விட ஆந்திரர்கள் ஒன்றும் அதிகமாக சாதித்துக் கொண்டதாகச் சொல்லிவிட முடியாது.

உதாரணமாக ஆந்திரர் என்கின்ற முறையில் பனகால் ராஜாவுக்கு பரம்பரை ராஜா பட்டம் கிடைத்திருந்தால் தமிழர் என்கிற முறையில் செட்டிநாட்டு ராஜாவுக்கு பரம்பரை ராஜா பட்டம் கிடைத்திருக்கிறது. ஒரு ஆந்திர பனகால் முதல் மந்திரி ஆனால் ஒரு தமிழர் டாக்டர் சுப்பராயன் முதல் மந்திரி ஆனார்.



மந்திரிகளில் ஆந்திராவைச் சேர்ந்த 1. ஒரு பனகால், 2. ஒரு சர்.பாத்ரோ, 3. ஒரு சர்.கே.வி.ரெட்டி, 4. ஒரு முனிசாமி நாயுடு, 5. ஒரு பொப்பிலி ஆகிய ஐந்து பேர் மந்திரி ஆகியிருந்தால் தமிழர்களில் 1. ஒரு சுப்பராயலு ரெட்டியார், 2. ஒரு சர்.சிவஞானம் பிள்ளை, 3. ஒரு டாக்டர் சுப்பராயன், 4. ஒரு முத்தைய முதலியார், 5. ஒரு சேதுரத்தினம் ஐயர், 6. ஒரு பி.டி.ராஜன் 7. ஒரு குமாரசாமி ரெட்டியார் ஆகிய ஏழு பேர்கள் மந்திரிகளாகி இருக்கிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்ட பிறகு நிர்வாக சபை கவுன்சில் மெம்பர்களில் கூட ஆந்திரர் என்கின்ற முறையில் ஒரு சர்.கே.வி. ரெட்டியார் லா மெம்பராயிருந்தால் தமிழர்களில் 1. ஒரு கே. சீனிவாசய்யங்கார், 2. ஒரு சர். உஸ்மான், 3. ஒரு சர்.சி.பி.ராமசாமி ஐயர், 4. ஒரு கே.ஆர். வெங்கிட்டராம சாஸ்திரி, 5. ஒரு கிருஷ்ணநாயர், 6. ஒரு பன்னீர்செல்வம் ஆக 6 பேர்கள் தமிழர்கள் நிர்வாக சபை மெம்பராயிருக்கிறார்கள்.

ஹைக்கோர்ட் ஜட்ஜிகளை எடுத்துக் கொண்டாலும் சரி சர்விஸ் கமிஷனை எடுத்துக் கொண்டாலும் சரி மற்றும் சர்க்காரால் நியமிக்கப்பட்ட சகல பதவிகள் உத்தியோகங்கள் ஆகியவற்றில் தமிழர்களை எந்தத் துறையிலும் ஆந்திரக்காரர்கள் மிஞ்சிவிட வில்லை என்பதை எவ்வளவு மூடனும் சுலபமாய் உணர முடியும்.

அன்றியும் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாய் இதுவரை ஒரு ஆந்திரர் கூட கார்பரேஷன் பிரசிடெண்டாகவோ மேயராகவோ ஆனதில்லை.

மேலும் இன்று எந்த தமிழனாவது மனம் துணிந்து தைரியமாய் தோழர் பொப்பிலிராஜா அவர்கள் ஆந்திராக்காரர் என்றாலும் இந்த மந்திரி பதவியினால் பணம் சம்பாதிக்கவோ, அல்லது தனது குடும்பத்துக்கோ, எஸ்டேட்டுக்கோ, தனது சொந்தத்துக்கோ, ஏதாவது அனுகூலமோ நன்மையோ செய்து கொள்ளவோ வந்திருக்கிறார் என்று சொல்லக்கூடுமா என்று கேட்கின்றோம்.

சுயமரியாதைக் கொள்கையைப் பொருத்தவரையில் கூட டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஒன்று ராஜா பொப்பிலி இரண்டு ஆகிய இரண்டு மந்திரிகள் தான் அவ்வியக்கத்தில் கலந்து கொண்டதை தெரிவிக்கவோ அல்லது சில கொள்கைகளையாவது ஒப்புக் கொள்ளுகின்றோம் என்று சொல்லவோ தைரியமாய் முன்வந்தார்களே ஒழிய மற்ற எந்த மந்திரியாவது ராஜாவாவது வாயினால் உச்சரிக்கவாவது இணங்கினார்களா என்று கேட்கின்றோம்.

கடப்பாரையை விழுங்கி விட்டு அதை ஜீரணம் செய்ய சுக்குக் கஷாயம் சாப்பிடுவது போல் மகத்தான கெடுதியும், துரோகமும் ஏற்பட்டு விட்டது என்று குற்றம் சாட்ட வந்தால் அதற்கு சரியான சமாதானம் சொல்லுவதை விட்டுவிட்டு ஆந்திரர் தமிழர் என்கின்ற கலகத்தையுண்டாக்கி



RangaRakes tamilnavarasam.com

விட்டு அதை அடக்கி விடலாம் என்று பார்ப்பது காட்டு வெள்ளத்தைத் தடுப்பதற்கு முரத்தை ஏந்திக்கொண்டு எதிரே நின்றதுபோல ஆகுமே தவிர வேறு ஒன்றும் இல்லை.

இதற்கு முன் கூட ஒன்று இரண்டு தடவை இந்த முயற்சி பார்ப்பனர்களால் கிளப்பி விடப்பட்டு கடைசியாக பார்ப்பனர்கள் முழுத் தோல்வி அடைந்தார்கள்.

அதாவது குருகுல போராட்டம் என்பதில் சேரமாதேவி ஆச்சிரமத்தில் பார்ப்பனப் பிள்ளைகளுக்கு உள்ளே சாப்பாடும் பார்ப்பனரல்லாதார் பிள்ளைகளுக்கு வெளியே வைத்துச் சாப்பாடும் போட்டு பொதுப் பணத்தில் நடத்தி வந்த குரு குல ஆச்சிரமத்தைப் பற்றி தோழர்கள் வரதராஜுலுவும், ஈ.வெ.ராமசாமியும் கிளர்ச்சி செய்து வந்த காலத்தில் ''தமிழ் நாட்டு விஷயத்தைப் பற்றி ஆந்திர தேசத்தாரான ஒரு நாயுடுவும், கர்நாடக தேசத்தாரான ஒரு நாயக்கரும் கிளர்ச்சி செய்வது நமக்கு வெட்கமாக இல்லையா? ஆதலால் அவர்களது கிளர்ச்சியை ஆதரிக்கக் கூடாது'' என்று காலஞ்சென்ற தேச பக்தர் வி.வி.எஸ்.அய்யர் அவர்களே கிளப்பி விட்டார்கள்.

காங்கிரஸ் தொண்டர்கள் சிலர் இக்கிளர்ச்சிக்கு உதவியும் செய்தார்கள். இவ்விஷயம் தோழர் திரு.வி. கல்யாணசுந்திர முதலியார் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும் அப்படி இருந்தும் குருகுலம் அடியோடு அழிந்ததே தவிர ஆந்திரர் தமிழர் பிரச்னை சிறிது கூட பயன்படவில்லை. அது போலவே மற்றொரு சமயமும் காங்கிரஸ் கமிட்டியில் கிளப்பப்பட்டு தோழர் திரு.வி. கல்யாணசுந்திர முதலியார் அவர்களே அதைக் கண்டித்து வெற்றி பெற்றார்.

ஆகையால் தமிழ் மக்கள் என்று தங்களை சொல்லிக் கொள்கிறவர்கள் இம்மாதிரியான பயனற்றதும் விஷமத்தனமானதுமான ஆந்திரர் தமிழர் என்ற தேசாபிமானப் புரட்டின் மேல் தங்கள் வெற்றிக்கு வழி தேடி அவமானமடையாமல் பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற விஷயத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து அதில் வெற்றி பெற உழைக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்கின்றோம்.

**பகுத்தறிவு - கட்டுரை - 16.12.1934**



# பொப்பிலியும் – செட்டிநாடும்

செட்டிநாட்டு கோடீஸ்வரரும், பரம்பரை ராஜா பட்டம் பெற்றவரும், தர்மப்பிரபுவுமான ராஜா சர். அண்ணாமலை செட்டியாரின் குமாரர் சென்னை கார்ப்பரேஷன் மேயர் குமாரராஜா என்றழைக்கப்படும் முத்தையா செட்டியார் அவர்கள் மீது ஜஸ்டிஸ் கட்சியார் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றத் துணிந்து அவரிடம் அதாவது முத்தையா செட்டியார் அவர்களிடம் சென்னை சட்டசபைக் கொரடா பதவியையும், ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாக சபையின் தலைவர் பதவியையும் ராஜிநாமா பெற்றுவிட்டார்கள்.

இந்தக் காரியமானது இந்தியாவின் சரித்திரத்திலேயே - ஏன் உலக சரித்திரத்திலேயே புதுமையானதும், இதற்கு முன் எவரும் செய்யத் துணியாததும், பார்த்திராததும், கேட்டிராததுமான காரியமென்றே சொல்ல வேண்டும்.

செட்டிநாட்டுப் பிரபுவுக்கு அதிகாரம், பதவி, பட்டம், பணம், செல்வாக்கு ஆகியவை எல்லாம் நிறைந்து இருந்தும் கட்சி முறை, கொள்கை முறை, சிநேக முறை என்பவைகள் அல்லாமல் தனிப்பட்ட முறையிலும், செல்வ முறையிலும், பின்பற்றுவோர் முறையிலும் ஏராளமான பலமும், சாய்காலும் இருந்தும் ஒன்றும் பயன்படாமல் கோழிக்குஞ்சை ராஜாளி தூக்கிக் கொண்டு போவதுபோல் ஒரு நொடிக்குள் வேலை ஒப்பேறி விட்டது. அதாவது இரண்டு முக்கியமான பதவியும் காலி செய்யப்படவேண்டியதாய் விட்டது.

இனிமேல் ராஜா சர். அவர்களும் குமாரராஜா அவர்களும் அவர்களது ஆட்களும், அவர்களது பத்திரிகைகளும் பொப்பிலிராஜாவைத் தூக்கிலிடுவதானாலும் சரி இன்னமும் என்ன செய்து கொள்ளுவதானாலும் சரி ''நினைத்தார் காரியத்தை முடித்தார்'' என்பது போல் ஒரு காரியத்தை அதாவது செட்டிநாட்டு பிரபுக்கள் விஷயத்தை கொசுவை நசுக்குவது போன்ற சுலப முயற்சியில் பொப்பிலி ராஜா முடிவு செய்து விட்டார்.

இதற்காக அவர் ஒரு பிரயாசையும் படவில்லை என்பதோடு ஒருவர் தயவையும் எதிர்பாராமல் செட்டிநாட்டை ஆதரிக்கும் பத்திரிக்கைகளையும், ஆட்களையும் லட்சியம் செய்யாமல் ''ஒன்றா கட்சியை விட்டு செட்டிநாடு வெளியேற்றப்பட வேண்டும், இல்லாவிட்டால் பொப்பிலி வெளியேறி விடவேண்டும்'' என்கின்ற முடிவின் வலிவையே ஆயுதமாகக் கொண்டு செட்டிநாட்டுக்கு மங்களம் பாடிவிட்டார்.



RangaRakes tamilnavarasam.com

எவ்வளவு தந்திகள், எவ்வளவு கடிதங்கள், எவ்வளவு மிரட்டல்கள், எவ்வளவு சிபார்சுகள் ஒன்றையும் கவனிக்காமல் வைரக்குன்று போல் நின்று நினைத்த காரியத்தை முடித்தார்.

இவற்றிற்கெல்லாம் காரணமாய் இருந்தது பொப்பிலி அவர்கள் தன்னை அண்டிநிற்கும் கட்சியின் தலைமை (சர்வாதிகாரி) பதவியை சுண்டுவிரல் நுனியில் வைத்துக் கொண்டு எந்த நிமிஷத்தில் வேண்டுமானாலும் உதரி எறிவதற்கு தைரியத்துடன் தயாராய் இருந்ததும், கட்சித்தலைவர் பதவியால் தான் எவ்வித பெருமையோ, எவ்வித சுயநலமோ அடையாமல் கட்சிக்கு தன்னால் பெருமை அளிக்கப்பட்டதுடன் தனது செல்வத்தையும், செல்வாக்கையும் கட்சிக்கு உதவி வந்த தன்மையுமே இவ்வளவு பெரியதொரு மகத்தான காரியத்தை வெகு அலட்சியமாகவும், சுலபமாகவும் முடித்து விட முடிந்தது.

இந்த முயற்சியில் தோழர் பொப்பிலி ராஜா அவர்கள் தோற்று இருந்தாலும் கூட வீரராகவே விளங்கி இருப்பார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. முதல் மந்திரி பதவியையும் கூட அவர் அவ்வளவு அலக்ஷியமாகவே கருதி இருப்பதாலேயே உத்தியோக தோரணையிலும் பல காரியங்கள் உறுதியோடு செய்யப்படுகின்றதே யொழிய மந்திரி பதவியை கடுகளவாவது லக்ஷியம் செய்து கொண்டு இருந்திருப்பாரேயானால் நாட்களையும், பணங்களையும் எண்ணிக் கொண்டிருப்பதைத் தவிர அவரால் வேறு ஒரு காரியமும் செய்து இருக்க முடியாது.

நிற்க இந்தக் காரியத்தின் பயனாய் இப்போது பெரியதொரு யுத்த முஸ்தீப்புகள் தயாராகிக் கொண்டிருக்கிறதாக தெரிய வருகின்றது.

தோழர் ராஜா சர் அண்ணாமலையார் அவர்கள் மூன்று லக்ஷ ரூபாய் முதல், ஐந்து லக்ஷ ரூபாய் வரையிலும் செலவு செய்யத் துணிந்து துகையை எடுத்து வேறாக மஞ்சள் துணியில் முடிந்து வைத்துக் கொண்டு பொப்பிலி ராஜாவை ஒழிப்பதற்கு அல்லது ஒரு கை பார்ப்பதற்கு யுத்தம் தொடங்க பிளானும், எஸ்டிமேட்டும் போட ஆரம்பித்து அடையார் அரண்மனையில் யுத்த ஆபீசு திறந்தாய் விட்டது. மைலாப்பூர் ''இஞ்சினீர்'' (பார்ப்பன மேதாவி வக்கீல்)களும், சென்னைநகர் ''கண்ட்ராக்டர்'' (பத்திரிக்கைக்காரர்) களும் செட்டி நாட்டு அடையார் அரண்மனைக்குள் புகுந்து நிரம்பி விட்டார்கள். படைகளுக்கு ஆள்களாக காங்கிரசு தொண்டர்களும், சுயமரியாதைத் தொண்டர்களில் சிலரும், ''மூலபலம்'' போல் அரண்மனையைச் சுற்றி அணிவகுத்து நின்ற வண்ணமாய் இருக்கின்றார்கள். மகாயுத்தம் போல் ஒரு பெரிய யுத்தம் நடந்து தான் தீரும் என்பதில் நமக்கு சந்தேகமில்லை. ஆனால் இதில் யார் வெற்றி பெறுவார் யார் தோல்வி அடைவார் என்பதை இப்போது சுலபத்தில் சொல்லி விட முடியாது. ஏனெனில் ராஜா சர் அவர்கள்



பணத்தை வாரி இரைக்கின்றார். தேசீய - சத்தியாக்கிரக பத்திரிக்கைக்காரர்களை யெல்லாம் ஐந்து நிமிஷத்தில் சரிக்கட்டி அடிமை கொண்டு கால் பெருவிரல் அடியில் வைத்துக் கொண்டு விட்டார்.

அது மாத்திரமல்லாமல் பத்திரிக்கைக்காரர்கள் பெரிதும் பார்ப்பனர்களாய் இருப்பதால் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் சொன்னதுபோல் ''ஜஸ்டிஸ் கட்சியை 500 கஜ ஆழத்தில் புதைத்து விட வேண்டும் என்பதற்கு இணங்க பார்ப்பனர்களுக்குச் சொந்தத்திலேயே ஜஸ்டிஸ் கட்சியை ஒழித்து விட வேண்டும் என்கின்ற ஆசையிருப்பதோடு ''நல்ல வேட்டை'' ''கொழுத்த ஆடு'' என்பது போல் பெரியதொரு ஆசாமியான ராஜா சர் தங்களுக்குக் கிடைத்து இருப்பதுடன் அவரால் பணமும் கிடைக்கக் கூடியதாய் இருந்தால் அவர்கள் (பத்திரிக்கைக்காரர்கள்) எவ்வளவு ஆனந்தத்தோடு ''பழம் நழுவிப் பாலில் விழுந்தது அதுவும் நழுவி அவர்கள் வாயில் விழுந்தது'' போல் ஆனந்தங்கொண்டு இருப்பதில் ஆச்சரியப்பட வேண்டியது ஒன்றுமே இல்லை.

ஆகவே ராஜா சர் அவர்களுக்கு பணம், பத்திரிகை, ஏராளமான பார்ப்பனர்களின் சேவை, மேதாவிப் பார்ப்பனர்களது மூளை ஆகியவைகள் இருப்பதால் அவருடைய தாக்குதலை அவ்வளவு சாதாரணமாக மதித்து விட முடியாது.

இவை ஒரு புறமிருக்க ''இனம் இனத்துடன் சேரும்'' என்பது போல் தோழர் ராஜா சர் அவர்களைப் போல் இதற்கு முன் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து விலக்கப்பட்டோ, அல்லது அலட்சியமாய் கருதப்பட்டோ, அல்லது கட்சியால் தங்கள் இஷ்டப்பட்ட காரியம் கைகூடாமல் போய் மனச்சலிப்போடு கோபமாயோ இருக்கக்கூடிய மற்றும் பல தோழர்களும் இந்த சமயம் ராஜா சர். அண்ணாமலை அவர்களுக்கு சம்மன் இல்லாமலே உதவி செய்யவும், ராஜா சர். அவர்கள் பணத்திலும், முயற்சியிலும் தாங்கள் பழியைத் தீர்த்துக் கொள்ளவும் கருதி ராஜா சர். அவர்களுடன் Alliance ஆய் சேர வெகு பேர் காத்துக் கொண்டும் இருக்கிறார்கள். இது சம்பந்தமாய் நெகோசேஷன் தூதுகள் நடந்து கொண்டும் இருக்கின்றன.

மற்றும் இச்சந்தர்ப்பத்தை மாதம் மும்மாரி பெய்து விளைந்த நல்லதொரு வெள்ளாமை போல் கருதி தக்கபடி அறுப்பு அறுத்து பத்தாயத்தில் கொட்டிக் கொள்ளலாம் என்கின்ற கனவு கண்டு கொண்டிருக்கும் பல பைகாட் அண்ணாத்தை மக்களின் உதவிகளும் செட்டி நாட்டு ராஜாவுக்கு போட்டி மேல் போட்டியாக வலுவில் வந்து கொண்டிருக்கும்.

தோழர் பொப்பிலி ராஜா அவர்களுக்கோ ''பொப்பிலி ராஜா அவர்கள் தரிசனமே அமாவாசையையும், பௌர்ணமியையும் ஒரே நாளில் பார்க்க ஆசைப்பட்டவன் கதி போல் இருக்கின்றது'' என்பாரும்



RangaRakes tamilnavarasam.com

‘‘பார்க்கக் கிடைத்தாலும் ஒன்று இரண்டு பேச்சுக்கு மேல் பேச சந்தர்ப்பம் கிடைப்பது அதைவிட அரிதான காரியம்’’ என்பாரும், ‘‘பொப்பிலி எவரையும் மதிக்காத, லட்சியம் செய்யாத ஆணவம் படைத்தவர்’’ என்பாரும் ஆக பலவிதமாய்க் குறை கூறுவோர்களும், சுலபத்தில் பொப்பிலியை நெருங்கித் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியாது என்று கருதிக்கொண்டிருப்பாருமே அவருடன் மிகுதியாயிருக்கிறார்கள்.

பொப்பிலியின் மீது பொறாமை கொண்டவர்களும், துவேஷம் கொண்டவர்களும் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்களும் நல்லதொரு சமயம் கிடைக்கவில்லையே என்று பதுங்கிக் கொண்டு இருக்கின்றவர்களும், கூட இருந்தே குளிர் காய்ந்து விடுவோம் என்று அவரை ஒவ்வொரு நிமிஷமும் கிட்ட இருந்து கொண்டே மோசம் செய்யக் கருதிக் கொண்டு இருக்கிறவர்களும் மலிந்தும் இருக்கிறார்கள் என்றாலும் சில உண்மையாளர் உண்டு.

இப்படிப்பட்ட கூட்டத்தை துணையாகவும், சகாயமாகவும் கொண்டு தான் பொப்பிலி அவர்கள் ராஜா சர் அவர்களது தாக்குதலுக்கு மார்பைக் காட்ட வேண்டியவராய் இருக்கிறார் என்றாலும் பொப்பிலிக்கு இருக்கும் பெரியதொரு பின் பலம் என்னவென்றால் வெற்றி தோல்வியின் பயனானது வெற்றியானாலும், தோல்வியானாலும் பொப்பிலிக்கும் செட்டி நாட்டுக்கும் இரண்டு பேருக்கும் ஒன்று போல் பாவிக்க முடியாததும், இரண்டு பேரும் ஒன்று போல் பலன் அனுபவிக்கக் கூடாததுமான நிலையில் இருவர்களும் இருப்பதே பொப்பிலிக்கு பின்பலமாகும்.

அதாவது பொப்பிலி தோற்றுப் போனார் என்று வைத்துக் கொண்டாலும், நல்லதொரு தோல்வியே ஏற்பட்டு விட்டது என்று வைத்துக் கொண்டாலும் பொப்பிலிக்கு முழுகிப் போவதோ, கடுகளவு நஷ்டமோ, கவலையோ ஏற்படக் கூடியதோ ஆன காரியம் ஒன்றுமே இல்லை. பொது வாழ்வின் பேரால் பொப்பிலிக்கு இனி ஆக வேண்டிய காரியம் எதுவுமே இல்லை, அவருக்கு இன்று தன் சொந்தத்தில் சுயநலத்துக்கு என்று ஆசைப்படவேண்டிய காரியமோ, லட்சியமோ கூட எதுவும் இல்லை என்பதாகும்.

ஆதலால் அவரது தோல்வியானது அவருக்கு எவ்வித பாதகத்தையோ, சங்கடத்தையோ விளைவிக்க முடியாது.

ஆனால் தோழர் செட்டிநாடு ராஜா சர். அவர்கள் நிலைமை அப்படியில்லை. ராஜா சர். அவர்களது செல்வம், செல்வாக்கு, புகழ், மனநிம்மதி முதலிய மனித வாழ்வு சாதனங்கள் ஒவ்வொன்றும் அவர்களுக்கு பொது வாழ்வில் உள்ள வெற்றியையும், மதிப்பையும் பொருத்ததாகவே இருக்கின்றது. அவரைச் சுற்றித் திரிபவர்கள், உதவியாளர்கள், ஆப்த நண்பர்கள் ஒவ்வொருவரும் செட்டிநாட்டு ராஜாவால் பிழைப்பதற்கும், அவரை உபயோகப்படுத்திக் கொள்வதற்குமே உள்ளவர்களே பெரும்பான்மையானவர்களாய் இருக்கின்றார்களே ஒழிய ராஜா சர். இடம் அனுதாபமோ, உண்மையான பற்றுதலோ, சுகதுக்கங்களில் பங்குண்டென்று நினைப்பவர்களோ மிகமிக அறிது. ஆகவே பொப்பிலி ராஜா அவர்களது படை ‘‘சிறியது’’ ஆனாலும் அவை சொந்தப்படை. பொப்பிலிக்காக உயிர்விடத் துணிந்த உத்தமப்படை சுயநலம் கருதாமல் ஒத்துழைக்கக்கூடிய படை. செட்டிநாடு அவர்களின் படைகளோ ‘‘பெரும்’’ படையானாலும் அது 100 க்கு 99-கூலிப்படை தன் தன் சொந்தக் காரியத்துக்கு ஆக செட்டிநாட்டு ராஜாவை நத்திக் கொண்டு சூழ்ந்திருக்கும் சுய காரியப்படை நல்ல சமயத்தில் வீசம் கூலி அதிகமாய்க் கிடைப்பதாயிருந்தால் தலைவனையே கழுத்தறுக்கத் தகுந்த ‘‘உதாரகுணமுள்ள’’ துரோகப்படை.

செட்டிமார் நாட்டிலேயே செட்டிநாட்டு ராஜா சர் அவர்களுக்கு தாட்சண்ணியமும்-பயமும் வேறு கதியில்லாமலும் இருக்கின்ற செட்டிமார்கள் ‘‘உதவி’’ அல்லாமல் உண்மையானவர்கள், சுதந்திரமாயுள்ளவர்கள் நல்லெண்ணத்தின் மீதும் உதவிக்கு வரும் படை மிக மிக அறிதாகும்.

இவைகள் எல்லாவற்றையும் விட செட்டி நாட்டுக்கு உதவி **பார்ப்பன மூளை,** பொப்பிலி ராஜாவுக்கு உதவி **அரசாங்க மூளை.** பார்ப்பனர்களை நம்பிக் கெட்டவர்களும், பார்ப்பனர்களால் கெட்டவர்களும் ஆன குடிகளும் ராஜாங்கமும் இவ்வளவு என்று உலகத்துக்கு நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

ஆனால் அரசாங்கமோ இவ்விஷயத்தில் வெகு சுளுவில் யாரையும் கை விட்டு விடாமல் நடுநிலைமையாய் நடந்து கொள்வார்கள்.

மற்றொன்று என்னவென்றால் பொப்பிலி செய்த காரியம் சரியோ, தப்போ எப்படி இருந்தாலும் அது ஜஸ்டிஸ் கக்ஷிக்காக, பார்ப்பனரல்லாதார் மக்கள் நலத்துக்காக என்கின்ற கவசத்தை கொண்டிருக்கின்றது. செட்டிநாடு ராஜாவால் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் காரியம் சரியோ, தப்போ உண்மையோ, பொய்யோ எப்படி இருந்தாலும் அது கட்சிக்கு ஆபத்து ஏற்படத்தக்க-பார்ப்பனர் நன்மைக்காக, பார்ப்பனரல்லாதாரைக் காட்டிக் கொடுத்து செய்த இமயமலை போன்ற துரோகம் என்ற கவசத்தைக் கொண்டிருக்கிறது.

பார்ப்பனப் பத்திரிக்கைகள் இப்போது செட்டிநாட்டை ஆதரிப்பதற்காக இந்த ஒரு வாரத்துக்குள் போட்ட காரணங்களே பொப்பிலி ராஜாவின் கூற்றுக்களை மெய்ப்பிக்க தகுந்த கல்லுப்போன்ற ஆதாரங்களாக விளங்குகின்றன.


RangaRakes tamilnavarasam.com

இந்த நிலையில் பொப்பிலியை செட்டிநாடு வலுவில் தாக்க யுத்த முஸ்திபுகளைத் தயார் செய்து வருவது அவ்வளவு போற்றத்தக்கதும், புத்திசாலித்தனமானதுமான காரியம் என்று சொல்ல நம்மால் முடியவில்லை. பார்ப்பனர்களை நம்பிய - பார்ப்பனப் பத்திரிகைகளை நம்பிய - காங்கிரசுப் பார்ப்பனர்களையோ, மிதவாதப் பார்ப்பனர்களையோ நம்பிய பார்ப்பனரல்லாதார் எவரும் இந்த 50 வருஷ காலத்தில் முன்னுக்கு வந்ததாகச் சரித்திரமும் இல்லை சம்பவமும் இல்லை என்பதை செட்டி நாட்டுக்கு வணக்கத்துடன் எச்சரிக்கை செய்கின்றோம்.

ஆதலால் செட்டிநாட்டு ராஜா சர். அவர்களும், குமாரராஜா அவர்களும் நடந்து போன விஷயத்தையும், யுத்த ஆத்திரத்தையும் மறந்து சில முக்கியஸ்தர்களைக் கொண்ட ஒரு கூட்டத்தை கூட்டி இனி நடக்க வேண்டியது என்ன? எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை முடிவு செய்து ஒரே கட்சியில் உறுதியாய் நிற்க முடிவு செய்து கொள்வதே தக்க காரியம் என்பதை விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 16.12.1934**



# ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களுக்கு ஒரே வார்த்தை

ஜஸ்டிஸ் கட்சி இந்திய சட்டசபை தேர்தல் அடைந்த தோல்வியால் ''குதிரை கீழே தள்ளியது மல்லாமல் குளியும் பரித்தது'' என்று சொல்லும் பழமொழி போல் தோல்வி அடைந்ததோடு கட்சிக்கே ஆட்டம் வரும் நிலைமையையும் ஏற்படுத்திக் கொண்டது.

அதாவது கட்சிக்கு உள்ளுக்குள்ளாகவே மகத்தான எதிர்ப்பு ஏற்பட்டு விட்டது. தக்கதொரு பணக்காரரை கட்சியில் இருந்து விரட்டிவிட்டதால் பணக்காரர்களை நம்பி வாழும் தொண்டர்களையும் கட்சியில் இருந்து விரட்டிவிட்டதாகத்தான் அருத்தம்.

''கொள்கை'' ''கொள்கை'' என்று மாத்திரம் கூப்பாடு போடுவது பயனற்ற பேச்சாகும். பணமும், பிரசாரமும், தந்திரமும் உள்ளவர்கள் தான் வெற்றி பெருவார்களே தவிர வெறும் கொள்கைகளே வெற்றி யளித்து விடாது.

ஆகவே இனி நடக்கப்போகும் காரியத்துக்கு நல்லதொரு கொள்கையும், அதற்குத் தகுந்த பணமும், பிரசாரமும் இல்லாமல் ராஜா சர் அண்ணாமலையாரையும் குமாரராஜாவையும் விரட்டியடித்து விட்ட பெருமையை நினைத்து மகிழ்ந்து கொண்டே இருப்போமானால் அழிப்பாரில்லாமல் கட்சி அழிந்து போகும் என்பது உறுதி.

இன்று சென்னை சட்டசபைத் தேர்தலுக்கு காங்கிரஸ்காரர்களுடன் போட்டிபோட ஒரு ஆளை நிருத்த ஜஸ்டிஸ் கட்சிக்கு யோக்கியதை இல்லாமல் போய் விட்டது என்றால் கட்சியின் எதிர்கால நிலைமைக்கு யாரையாவது ஜோசியம் கேட்க வேண்டுமா என்று கட்சித்தலைவரை கேட்கின்றோம்.

தோழர் ஈ.வெ.ராமசாமியால் கட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் 4, 5 மாத காலமாக தள்ளி வைத்துக் கொண்டே வரப்படுகிறது. இன்னமும் தேதி போடாமலும் தள்ளி வைத்து விடலாம். இதனால் ஈ.வெ. ராமசாமியை ஏமாற்றலாம். ஆனால் உலகத்தை ஏமாற்றி விட முடியாது.

இன்றைய தினம் ஜஸ்டிஸ் கட்சியின் தேர்தலுக்கு பிரச்சினை இல்லை என்று சொல்லுவதை மறுக்க முடியவில்லை.



RangaRakes tamilnavarasam.com

இதுவரையில் ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனரல்லாதார் கட்சியாய் இருந்தது. இப்போது அந்தக் ''கெட்ட'' பெயரையும் நீக்கிக் கொண்டது. இனிமேல் ஓட்டர்களிடம் என்ன சொல்லி ஓட்டுக் கேட்பது என்பதை உணர வேண்டாமா? பணம் ஜஸ்டிஸ் காரரிடம் எவ்வளவு இருக்கின்றதோ அவ்வளவு எதிரிகளிடமும், காங்கிரசினிடமும் இருக்கிறது.

பிரசாரம் ஜஸ்டிஸ்காரரிடம் கிடையவே கிடையாது. காங்கிரசுக்காரரிடமும், எதிரிகளிடமும் ஏராளமாய் இருக்கிறது. தந்திரங்களுக்கு சொல்ல வேண்டியதில்லை.

டிசம்பர் மாதம் 30ந் தேதிக்குள் தோழர் ஈ.வெ.ராமசாமியின் திட்டங்களைப் பற்றி ஒரு முடிவு ஏற்படவில்லையானால் தோழர் ராமசாமி ஜஸ்டிஸ் கட்சியில் இருப்பது அவருக்கே வெட்கக்கேடான காரியமாகும். அவர்களது தோழர்களும் இவரை இனி மதிக்கவும் மாட்டார்கள் என்பதை ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் உணர்வார்களாக. ஆகவே ஜஸ்டிஸ் கட்சியின் வீரமும், வாழ்வும் செட்டிநாட்டை முறியடித்து விட்டோம் என்பது அல்லவே அல்ல. அது இனியும் மக்களுக்கு என்ன செய்யப் போகின்றது என்பதையே பொருத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 16.12.1934**



# நிர்வாக சபையை ஏன் கூட்டவில்லை

தோழர் குமாரராஜா அவர்கள் மீது ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் கவுன்சில் பார்ட்டி மீட்டிங்கில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மான விஷயமாய் ''முதலில் நிர்வாக சபைக் கூட்டம் கூட்டி அதில் ஒரு முடிவு செய்து கொண்டு பின்பு கவுன்சில் பார்ட்டி கூட்டம் கூட்டலாம்'' என்று அநேக தந்திகளும், கடிதங்களும் அனுப்பப்பட்டன. அவைகள் எதையும் கவனிக்காமல் கவுன்சில் பார்ட்டியில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு விட்டது'' என்பதாகச் சிலர் குறை கூறுகிறார்கள். இதற்கு சமாதானம் சொல்ல கட்சி கடமைப்பட்டிருக்கிறது.

அச்சமாதானம் என்னவென்றால் ஜஸ்டிஸ் கட்சி நிருவாக சபைக்கு அக்கிராசனர் குமாரராஜா முத்தய்ய செட்டியார் அவர்கள் அல்ல என்பதையும் கவுன்சில் பார்ட்டி (சட்டசபைக் கட்சி கொரடா) அறிவிப்புதான் சேர்மென் என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டுமாய் கோருகிறோம்.

ஏனெனில் தோழர் குமாரராஜா அவர்கள் கவுன்சில் பார்ட்டி கொரடா என்கின்ற முறையில் தான் நிர்வாக சபைக்கு தலைமை வகிக்கின்றார். ஆதலால் நிர்வாக சபையில் தோழர் முத்தைய செட்டியார் அவர்களுக்கு சொந்த முறையில் அக்கிராசனர் பதவி இல்லை.

அதனால் அவர் சொந்த முறையில் எந்த சபையில் பிராதனப்பட்டவரோ அந்த சபை மூலம் அவரது விஷயம் கவனிக்கப்பட வேண்டியதாயிற்றே ஒழிய அது தான் சட்ட ரீதியான ஒழுங்கு முறையான நியாயமே ஒழிய மற்றபடி நிர்வாக சபையில் இத்தீர்மானம் கொண்டு வரப்பட்டால் தோற்றுப் போகும் என்றோ சட்டசபைக் கமிட்டியில் சுலபமாய் பாசாகி விடலாம் என்றோ கருதி குறுகிய நோக்கத்துடன் கொண்டு வரப்பட்ட தீர்மானம் அல்ல என்பதே சமாதானமாகும்.

**பகுத்தறிவு - செய்தி விளக்கம் - 16.12.1934**



RangaRakes tamilnavarasam.com

# மோதிரம் மாற்றுவது மூடநம்பிக்கை

லண்டன் நகரத்தில் சமீபத்தில் நடந்த இரண்டொரு கல்யாணங்களில் மணமகன் மோதிரம் மாற்றிக் கொள்வது கூட மூடநம்பிக்கையில் சேர்ந்தது என்று கருதி மணவினையின் போது மணமகன் மோதிரம் மாற்றிக் கொள்ள சம்மதிக்க மாட்டேன் என்று சொல்லி விட்டாராம்.

''நாங்கள் ஒருவரை ஒருவர் வாழ்க்கைத் துணைவர்களாக ஏற்றுக் கொண்டோம் என்று சொல்லி இருவரும் கையொப்பமிட்டு பிறகு மோதிரம் மாற்றிக் கொள்வது எதற்காக'' என்று மணமக்கள் கல்யாணப் பதிவு ரிஜிஸ்டிராரை கேட்டார்கள். அதன் மேல் கல்யாணப்பதிவு ரிஜிஸ்டிராரும் பாதிரியும் ஒன்றும் பேசாமல் கல்யாணத்தை பதிந்து கொண்டார்களாம். இந்த விஷயம் சென்ற வாரத்திய கிராணிக்கல் வாரப்பத்திரிகையில் காணப்படுவதுடன் தம்பதிகளின் உருவப் படங்களும் அதில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. நமது நாட்டில் நடத்தும் சுயமரியாதைத் திருமணங்களில் தாலி கட்டவில்லையே என்று அழுவாரும், விளக்குப் பற்ற வைக்கவில்லையே என்று அழுவாரும், சாணி உருண்டை பிடித்து வைத்து தேங்காய் பழம் உடைக்கவில்லையே என்று அழுவாரும், பார்ப்பான் காலில் விழுந்து அம்மிக்கல்லில் முட்டிக் கொள்ளவில்லையே என்று அழுவாரும் இதற்கு என்ன பதில் சொல்வார்கள் என்று அறிய ஆசைப்படுகின்றோம்.

ஆகவே இனி கல்யாணம் என்றால் ஒவ்வொருவரும் ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டியதை தான் முக்கிய காரியமாய் கருத வேண்டும். இதை விட ஜாக்கிரதையான முறையில் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமானால் மணமக்கள் இருவருக்கும் டாக்டர் சர்டிகேட் பெற வேண்டும் ஆகிய இந்த இரண்டு காரியங்களைத் தவிர கல்யாணக் காரியத்தில் வேறு எந்தக் காரியமும் கலந்து கொள்ளாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுவது தான் தற்கால நிலைமைக்கு ஏற்ற சுயமரியாதைக் கல்யாணமாகும்.

அந்தப்படி சகிக்காமல் '' அதாவது வேண்டாமா? இதாவது வேண்டாமா?'' என்று சொல்லிக் கொண்டு செய்யப்படும் கல்யாணங்கள் எதுவும் அஞ்ஞானக் கல்யாணமும், புராண மரியாதைக் கலியாணமுமேயாகும் என்பது நமது அபிப்பிராயம்.



பந்துக்களையோ நண்பர்களையோ அழைப்பதும், அவர்களுக்கு மரியாதை செய்வதும் வீண் செலவு என்று சொல்லுகின்றோமே தவிர அவற்றை மூடநம்பிக்கை என்று சொல்ல வரவில்லை. ஆனாலும் அது ஆடம்பரங்களில் கொண்டு வந்து விட்டு கடைசியாக பணச்செலவு, திரேகப்பிரயாசை காலக்கேடு முதலியவைகளுக்கு அடிமையாக்கி வைத்து விடுகின்றதுடன் இந்த ஆடம்பரங்கள் மக்களை போட்டியில் கொண்டு வந்து விட்டு விடுகின்றது என்றே பயப்படுகின்றோம்.

**பகுத்தறிவு - கட்டுரை - 16.12.1934**



RangaRakes tamilnavarasam.com

# தற்கால அரசியல் நிலைமை

தொழிலாள சோதரர்களின் க்ஷேமத்திற்கு இவ்வூரில் மாதம் ஒரு முறை பூர்ண ஓய்வு ஏற்படுத்தி இருப்பது போற்றத்தக்கதாகும். இவ்விழாவைக் கண்டு நான் பெரிதும் சந்தோஷம் கொண்டேன். அவர்களுடைய நாளில் அவர்களைப் பற்றியே பேச நான் விரும்பி வந்தேன். ஆனால் இங்கு வந்த பின்னர் விருதுநகர் வாசிகள் 'தற்கால அரசியல் நிலைமை' ஜஸ்டிஸ் கட்சி ஆகியவைகளைப் பற்றியும் எடுத்துக் கூறும்படி கேட்பதால் அதைக்கூற வேண்டியவனாய் இருக்கிறேன். இந்த சமயத்தில் இவைகள் எவ்வளவு முக்கியமானவைகளாக இருக்கின்றதோ, அவ்வளவு குழப்பமான விஷயங்களாகவும் இருக்கின்றன.

## 'அரசியல் என்பது மக்களை ஏமாற்றும் இழிவான சூட்சி'

அரசியலின் பெயரால் இன்று உலகில் எங்கும் திருட்டு, புரட்டு, கொள்ளை, கொலை, பாமர மக்களை ஏமாற்றுதல் முதலாகிய இழிகாரியங்கள் எல்லாம் நடக்கின்றன. கலகங்கள் கூட சிலவிடங்களில் நடக்கின்றன. எப்படி என்றால் அரசியல் சம்பந்தமான பிரசார கூட்டங்களில் கலகம் ஏற்பட்டு விடுகின்றது. மதத்தின் பெயரால் ஷெ திருட்டு, புரட்டு சகலமும் நடந்த காலத்தில் மக்கள் குருட்டு நம்பிக்கையிலிருந்தார்கள். மக்களுக்கு பகுத்தறிவு ஏற்பட்டு சரி தப்பு என அறியும் யோக்கியதை வந்தபிறகு சோம்பேரி சுயநலக் கூட்டத்தார்களால் மக்களை ஏமாற்ற வேறுவித தந்திரம் பண்ணவேண்டுமென்ற நோக்கத்துடன் செய்யப்பட்டு அரசியலின் பெயரால் மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள். ஒருவன் மதபக்தியின் யோக்கியதையை விளக்கினால் எப்படி மதத்துரோகி என அழைக்கப்பட்டானோ அது போலவே இன்று தேசபக்தியின் யோக்கியதையை விளக்கினால் தேசத் துரோகி என நாமம் சூட்டப் பெறுகின்றான். ஜாதி, மதம் என்று முன்தெரியாத காலத்தில் ஏமாற்றிய கூட்டம் இன்று அதை விட்டு விட்டு தேசம், சுயராஜ்யம் என்று ஏமாற்றுகிறார்கள். இன்றைய அரசியலில் விளம்பரத்திற்கு அளவில்லை. அதைப்பற்றி ஜனங்களுக்குச் செய்யப்படும் மோசப் பிரசாரத்திற்கும் குறைவில்லை. இந்நாடு அரசியல் என்னும் வார்த்தையின் கீழ் சுயராஜ்ய வேலை என்பது செய்ய தகுதியுடையதா? என்பதைக் கவனிக்க வேண்டும். வெளிதேசக்காரர் எப்படி நடுநிலைமையா யிருந்து கவனிப்பாரோ அவ்வாறு கவனித்தால்தான் உண்மை விளங்கும்.



இங்குள்ள பிரிவுகளைப் பாருங்கள். இதை மறந்துவிட முடியாது. மதப்பிரிவின் தன்மை எப்படி இருக்கின்றது? காந்தியார்கூட 'நான் ஹிந்து மதத்திற்காகத்தான் உயிர் வாழ்கின்றேன்' எனக்கூறி உள்ளார். முஸ்லீம் வீரர்கள் அலி சகோதரர்கள் பேசுகையில் தாங்கள் முதலில் முஸ்லீம் என்றும் இரண்டாவது தான் இந்தியன் என்றும் பேசுகிறார்கள். கிறிஸ்தவன் தங்கள் தங்கள் வேத கட்டளை தான் பிரதானமென்றும், முதலில் கிறிஸ்துவன் என்றும், இரண்டாவதுதான் இந்தியன் என்றும் பட்டவர்த்தனமாகப் பேசுகிறார்கள்.

இது போலவே நமது தேசீயப் பார்ப்பனர்களும் தாங்கள் முதலில் வருணாச்சிரமப் பிராமணர்கள் பிறகுதான் இந்தியர் என்கிறார்கள் - இந்தியன் எனும் ஒரு தலைப்பின் கீழ் யாவரும் வருவதற்குள் தங்கள் தங்கள் மதத்திற்கு பந்தோபஸ்து செய்யப்பார்க்கின்றார்கள். காந்தியார் முதல் அதையே தான் சுயராஜ்யம் என்கின்றார்கள். நான் இவ்விடத்தில் மிகைப்படுத்தி கூறுவதாக எண்ணக்கூடாது. இந்தியர் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய லண்டன் மகாநாடுகளில் என்ன தாண்டவமாடிற்று? மத விஷயங்களேதான்.

ஒருக்கால் இந்தியர்கள் இப்படி சண்டை போடட்டுமென அப்படிப்பட்டவர்களை சர்க்கார் அழைத்ததாய்க் கூறலாம். ஆனால் மத சம்பந்தமுடையவர்களைக் கூப்பிடாவிட்டால் நாஸ்திகர்களையா கூப்பிடுவது? பிறகு அது புகார் செய்யப்படுமல்லவா? முஸ்லீம் லீக் ஏற்படுத்தப்பட்டு உழைத்துவருகின்றது. கிறிஸ்தவர்கள் தாங்கள் சொற்ப தொகையினர் என்று கூறி தங்கள் விகிதாச்சாரம் பற்றி பேசுகின்றார்கள். பார்ப்பனர்கள் வருணாச்சிரமம்; வருணாச்சிரம சுயராஜ்ய சங்கம், இந்து மகாசபை முதலியவை ஏற்படுத்தி வேலை செய்துவருகிறார்கள். வகுப்பு சம்பந்தமாய் வந்த தீர்ப்பு விஷயமாய் நடைபெறும் விஷயம் யாவரும் அறிந்ததே. மாளாவியாஜியும் அது காரணமாகவே விலகிக் கொண்டார்.

## பிராமணரல்லாதார் இயக்கம்

ஹிந்துக்களில் தென்னாட்டில் சென்ற 18 வருட காலமாய் பிராமணர் - பிராமணரல்லதார் விவகாரம் நடந்து வருகின்றது. அரசியல் கிளர்ச்சி சம்பந்தமாய் நம் மக்களுக்கு பெருத்த பதவிகள், பட்டங்கள், (ராஜா, பரம்பரை ராஜா பட்டங்கள்) கிடைக்கும் படியான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் ஏழை மக்கள் கஞ்சிக்குத் திண்டாடுகிறார்கள். தொடக் கூடாத -கிட்ட வரக்கூடாத பறையர்கள், சூத்திரர்கள் இன்னும் இருந்துதான் வருகிறார்கள். அவர்களின் பிரதிநிதியாய் சென்று இருப்பவருக்கு மாதம் 5000, 6000 சம்பளம் கிடைக்கின்றது. வருணாச்சிரமமும் ஜெயித்து விட்டது. 'நாட்டிற்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்கு புல் சுமக்கும் தொழில் போகாது' என்னும் பழைய காலப்



RangaRakes tamilnavarasam.com

பாட்டி மொழிபோல் தோட்டிக்கு இன்றும் இன்னும் வரப்போகும் (ராமராஜ்ய) சுயராஜீயத்தாலும் புல் சுமக்கும் வேலையும், கக்கூசு அள்ளும் வேலையும் தான் இருக்கப் போகின்றது. தோட்டிக்கும், பார்ப்பானுக்கும் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை, ஏற்படப் போவதுமில்லை. நம் பணத்தை வெளி நாட்டிற்குப் போகாமல் தடுத்து உள்நாட்டில் விட்டு வைத்தால், உள்நாட்டு முதலாளிகளும், வக்கீல்களும், டாக்டர்களும், வியாபாரிகளும், புரோகிதர்களும் சுகமடையலாம். பகல் முழுவதும் உழைத்தும், பலராலும், இழிவுபடுகின்ற - கஷ்டமடைகின்ற அவனுக்கு விடுதலை உண்டாகும்படியான திட்டம் அதில் என்ன என்று பாருங்கள்.

## சுயராஜ்யம் என்றால் என்ன?

சுயாட்சி என்பதற்கு அடிமைத் தனத்தை நீக்கி, நாட்டை நாமே ஆள்வது என பொருள் வைத்துக் கொள்வோம். அயல் நாட்டார் போய்விடுகின்றார்கள். பின்னர் யார் கையில் நாடு இருக்கும்? நம்நாட்டு முதலாளிகள், ஜமீன்தார்கள், டாக்டர்கள், வக்கீல்கள், புரோகிதர்கள் ஆகியவர்களிடமேதான் இருக்கும். அதனால் ஏழைகளுக்கு லாபமென்ன?

அவ்வாறு அயலானிடம் ராஜ்யமில்லாமல் தன்கையில் ராஜ்யத்தை வைத்திருக்கும் இங்கிலாந்து தேசத்தை எடுத்துக் கொள்வோம். அங்கு 4½ கோடி மக்கள் இருக்கின்றார்கள். ஒருவரும் அங்கு போய் சுரண்டவில்லை. அவர்கள்தான் வெளி இடங்களிலிருந்து சுரண்டி போய் கொட்டுகின்றார்கள். அவர்கள் பணம் வெளியே போவதில்லை. அந்த தேச ராஜாவே, பார்லிமெண்டு மெம்பர்களே ஆளுகிறார்கள். அப்படி இருந்தும் அங்கு கஷ்டமடைகின்றவனுக்கு சுபிட்சம் ஏற்படவில்லை. 70 லக்ஷ மக்கள் உடல் வலி இருந்தும் வேலையற்று உணவில்லாது திண்டாடுகின்றார்கள். அதை ராஜா ஆள்கின்றார் எனக் கூறலாம். முடி மன்னர்களை துரத்தியடித்து ''குடிகளே ஆளும் குடி அரசு'' நாடுகளைப் பாருங்கள். கெய்சர் சக்கரவர்த்தியை விரட்டி அடித்த ஜெர்மனியில் தெருக்களில் உணவு கிடைக்காமல் பலர் திரிகின்றார்கள். வேலைக்குத் தக்க கூலியும் கிடையாது. ஆனால் அது யுத்தத்தினால் கடன்பட்டு கஷ்டப்படுகின்றதென்று வாதிக்கலாம். உலகத்தில் குபேர நாடு என மதிக்கப்படும் அமெரிக்க குடியரசு நாட்டைப் பாருங்கள். அது அன்னிய நாட்டு ஆட்சியை ஒழித்து அந்நாட்டுக் குடிகளால் கோடிக்கணக்கில் ஓட்டுப் பெற்ற குடிஅரசு பிரசிடெண்டேதான் இருந்து ஆட்சி நடத்துகிறார். அந்நாட்டு வியாபாரிகள் மணிக்கு ஆயிரக்கணக்கில் டாலர்கள் சம்பாதிக்கின்றார்கள். அந்நாட்டு நிலச்சுவான்தாரர்கள் விளைவில் ஏக்கராவுக்கு 500 ரூ. 600 ரூ. வெள்ளாமை அனுபவிக்கிறார்கள். 50, 60 மாடி உள்ள வீடுகளில் முதலாளிகள் வசிக்கின்றனர். 10, 15 மாடி வீடுகளை ஒரு தெருவிலிருந்தும் மற்றொரு தெருவிற்கு ரதம் போல் நகர்த்திக் கொண்டு போகின்றார்கள். பெரிய ரசாயன நிபுணர்கள்



வாழ்கின்றார்கள். அங்கும் 2 கோடி மக்கள் வேலையில்லாது திண்டாடுகின்றார்கள். 1 ஜதை உடுப்புடன் 6, 7 பேர்களைக் கொண்ட குடும்பம் காலம் தள்ளுகின்றது. மக்கள் படுக்க இடமின்றித் தவிக்கின்றனர். அன்னார்களுக்காக என்ன நடக்கிறது? வேலை நேரத்தைக் குறைத்து அதன் மூலம் சிலருக்கு வேலை கொடுக்கின்றனர். தொழிலாளர்களுக்கு சர்க்காரே சம்பளம் நிர்ணயம் செய்கின்றது. எப்படி இருந்தும் அவர்கள் கஷ்டம் நீங்கினபாடில்லை. இங்கு சுயராஜ்யம் வந்தாலும், குடிஅரசு ஆனாலும் யார் வந்தாலும் கஷ்டப்படுகின்றவர்களுக்கு என்ன பயன் ஏற்படும்? ஒரு உதாரணம் பாருங்கள். படிப்பு இலாகா நம் கையிலிருந்து சென்ற 40 வருடத்தில் 100க்கு 6 என்பது 8 ஆக உயர்ந்துள்ளது. நம் மாகாணத்தில் தான் ஜஸ்டிஸ் கட்சி இருக்கின்றது. அது துரோகக்கட்சி. ஆதலால் ஒன்றும் செய்யவில்லை யென்று வைத்துக் கொள்வோம். பம்பாய் ஐக்கிய மாகாணம் கல்கத்தா ஆகிய மாகாணங்களின் நிலைமை என்ன? இங்கு கல்வி மந்திரியாய் ''ஜஸ்டிஸ் தேசத் துரோக'' தோழர் குமாரசாமி ரெட்டியார் இருந்தார். ஆனால் பம்பாயில் தேசபிரியர் தான் இருந்தார்களே என்ன ஆச்சுது? அரசியல் கஷ்டப்படுகிறவர்கள் ஏழைகள் தான், உயிர் விடுபவர்களும் ஏழைகள் தான்; அனுபவிப்பவர்கள் கோடீஸ்வரர்களும், புரோகிதர்களுந்தான்.

## என்ன சொல்லி ஜெயித்தார்கள்?

இந்திய சட்ட சபைத் தேர்தலில் காங்கிரஸ்வாதிகள் ஜெயித்தார்கள். என்ன சொல்லி வாக்கு கேட்டார்கள். ''சமூக சம்மந்தமாய் சபையில் ஏதாவது தீர்மானம் வந்தால் ஆதரிப்பதில்லை. அப்படி மசோதா கொண்டு வருவதுமில்லை'' என்றும் ''ஒடுக்கப்பட்டவர்கள், ஜாதி, தீண்டாமை, உயர்ஜாதி, யோக்கியம் ஆகியவைகள் நிரந்தரமாயிருக்க பந்தோபஸ்தும்'' கூறினர். தோற்ற ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி சொல்லுவதில் எனக்கு அனுதாபமுண்டு. சுயமரியாதை இயக்கத்துக்கு அவர்கள், சென்ற 8 வருடங்களாக ஆதரவு அளித்து வந்திருக்கின்றார்கள். முதலில் பெண்கள் ஓட்டுரிமை பற்றி கேட்டவர்கள் ஜஸ்டிஸ் கட்சியார்களே. ஏழைகளுக்குக் கட்டாயப் படிப்பு கொடுக்க ஏற்பாடு செய்தவர்கள் ஜஸ்டிஸ்காரர்களே. எல்லா ஜாதி மதத்திற்கும் அரசியல் சமசுதந்திரம் கொடுத்தது ஜஸ்டிஸ் கட்சி. அப்படியிருக்க ஜஸ்டிஸ் கட்சி துரோகக் கட்சி எனக் கூறி விஷமப்பிரசாரம் செய்து தேர்தலில் ஜெயித்தார்கள்.

*குறிப்பு: 09.12.1934 இல் விருதுநகர் வெயிலு காத்தம்மன் கோயிலுக்கு முன்புறம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**பகுத்தறிவு - சொற்பொழிவு - 23.12.1934**



RangaRakes tamilnavarasam.com

# ஜஸ்டிஸ் கட்சி

ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி பார்ப்பனர்கள் குறை கூறி வருவதையும், அதை ''வெட்டி 500 கஜ ஆழத்தில் புதைத்துவிட வேண்டு''மென்று தோழர்கள் சத்தியமூர்த்தி, ராஜகோபாலாச்சாரியார் முதலியவர்கள் சொல்லுவதையும் நமது பார்ப்பனரல்லாத மூடப் பாமர ஜனங்கள் நம்பிவிடுகிறார்கள் என்பது மாத்திரமல்லாமல் பார்ப்பனரல்லாதாரிலேயே படித்த பகுத்தறிவுள்ள மக்கள் என்பவர்களும் கூட அப்பார்ப்பனர்களுடன் கூடிக் கொண்டு குலத்துரோகிகளாய் நடித்து வருவதைப் பார்த்து வருகிறோம்.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஏற்பட்டு சுமார் 15 வருஷ காலமே ஆயிருந்தாலும் கூட அது ஏற்பட்ட பிறகு இந்த நாட்டுக்கு 100-க்கு 97 பேர்களாய் உள்ள பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கும், சிறப்பாக தாழ்த்தப்பட்ட சமூகத்துக்கும் எவ்வளவு பயன் அளித்து வந்திருக்கின்றது என்பதை உணர்ந்தால் பார்ப்பனர்களின் சூழ்ச்சியும், அவர்களுக்கு உதவி செய்யும் மூடர்களுடையவும் கூலிகளுடையவும், குலத்துரோகிகளுடையவும் யோக்கியதையும் சிறிதாவது விளங்காமல் போகாது.

இதற்குச் சமீபத்தில் நடந்த ஒரு விஷயத்தை சின்ன உதாரணமாகக் காட்ட ஆசைப்படுகின்றோம்.

அதாவது இவ்வருஷம் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் உத்தியோகத்துக்கு 87 பேர்கள் சர்க்காருக்கு தேவை இருந்ததால் அதை பூர்த்தி செய்ததில் பார்ப்பனர்களுக்கு 16 ஸ்தானங்கள் மாத்திரம் கொடுக்கப்பட்டு விட்டு பாக்கி 71 ஸ்தானங்கள் பார்ப்பனரல்லதார்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த 71 ஸ்தானங்களிலும் ஆங்கிலோ இந்தியருக்கு 1, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 11, கிறிஸ்தவர்களுக்கு 13, முகமதியர்களுக்கு 15 ஸ்தானம் வழங்கப்பட்டு மற்ற ''ஜாதி இந்துக்கள்'' என்போர்களுக்கு 31 ஸ்தானமும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஜனகணித விகிதாச்சாரப்படி பார்த்தால் பார்ப்பனர்களுக்கு அவ்வளவு (16) ஸ்தானங்கள் வழங்குவது மிகமிக அதிகமானாலும் ஜஸ்டிஸ் கட்சி என்பதாக ஒரு ''உத்தியோக வேட்டைக் கட்சி இல்லா திருக்குமானால் இந்த 87 ஸ்தானங்களும் அந்த திருக்கூட்டத்தாருக்கே போயிருக்குக் கூடும் என்பதில் ஏதாவது சந்தேகம் இருக்க முடியுமா'' என்று கேட்கின்றோம்.

சப் இன்ஸ்பெக்டர் வேலை என்பது விளையாட்டான உத்தியோகம் என்று யாரும் மதித்துவிட முடியாது.



தென்னிந்தியாவில் போலீஸ் இலாக்காவிலும், முனிசீப்பு இலாக்காவிலும் (நிர்வாகம், நீதி என்கின்ற இரண்டு இலாக்காவிலும்) பார்ப்பனர்கள் ஆதிக்கம் இல்லாதிருந்து இருக்குமானால் நேற்று நடந்த இந்திய சட்டசபைத் தேர்தல்களின் முடிவு இந்தப்படி ஆயிருக்காது என்பதற்கு அனேக ஆதாரங்கள் காட்ட நம்மால் முடியும். இது ஒரு புறமிருக்க இந்த நாட்டுக்குப் பழம்பெரும் குடிமக்களாகிய பார்ப்பனரல்லாதார் நிலை இந்த 20-ம் நூற்றாண்டிலும், சூத்திரர்களாயும், சண்டாளர்களாயும் மதிக்கப்படவே முடியாது. ஆகவே கப்பலுக்கு சுங்கான் எப்படி முக்கிய கருவியோ அதுபோல் மக்களை நடத்துவதற்கு போலீசும் முனிசீப்பும் சுங்கான் மாதிரியாய் இருந்து வருகின்ற அவ்வளவு முக்கியமானதாகும்.

அப்படிப்பட்ட பதவியாகிய போலீசில் இந்நாட்டில் ஜஸ்டிஸ் கட்சி ஏற்படுவதற்கு முன் எப்படி இருந்து வந்தது என்பதும், இன்று எல்லா மத - வகுப்புக்காரர்களுக்கும் இடம் கிடைக்கும்படி செய்தது ஜஸ்டிஸ் கட்சியா அல்லது காங்கிரசா என்பதும் யோசித்துப் பார்த்தால் உண்மை விளங்கிவிடும்.

ஆனால் ''உத்தியோகம் தான் பெரிதா தேசம் பெரிதா'' என்று பார்ப்பனர்கள் நம்மைப் பார்த்து கேள்விகள் கேட்பார்கள். பார்ப்பனர்களது கூலிகளும் அடிமைகளும் இதற்குப் பின்பாட்டும் பாடுவார்கள்.

உத்தியோகத்தை மனதில் வைத்தே தேசம், தேசாபிமானம் என்று பார்ப்பனர்கள் பேசிவரும் இரகசியம் பார்ப்பனரல்லாத ''தேசாபிமானிகள்'' பலருக்குத் தெரியாது என்பதோடு பலர் தெரிந்தும் தங்கள் பிழைப்புக்கு வேறுவிதி இல்லாமல் பின்பாட்டுப் பாடுகிறார்கள் என்றே நினைக்கிறோம்.

இன்று தமிழ்நாட்டில் உள்ள எல்லா தேசபக்த பார்ப்பனர்களையும் எடுத்துக் கொண்டால் அவர்களது பிள்ளை குட்டிகள் பேத்துபிதுர்கள் எல்லாம் எதை எதிர்பார்த்து இன்று - வாழுகின்றார்கள் - வளர்க்கப்படு கின்றார்கள். S.S.L.C., F.A., B.A., M.A., B.L., M.L. முதலிய படிப்புகள் படிப்பிக்கப்படுகின்றார்கள் என்பவைகளைக் கவனித்தால் பார்ப்பனர்கள் தேசாபிமானத்தைப் பிரதானமாகவா அல்லது உத்தியோகத்தைப் பிரதானமாகவா கருதியிருக்கிறார்கள் என்ற இந்த சூட்சி விளங்காமல் போகாது. பார்ப்பனர்கள் சர்க்கார் உத்தியோகத்தை எதிர்பார்க்காமலும், நம்பி இருக்காமலும் வெறும் புத்திக்காகவும், அறிவுக்காகவும், தேசபக்திக்காகவுமே படிக்கிறார்கள் என்று இந்த நாட்டில் இன்று எந்த முட்டாளாவது கருதி இருக்கிறாரா என்று கேட்கின்றோம்.

ஆகவே உத்தியோகத்தையே பூராவும் நம்பி உயிர் வாழும் ஒரு கூட்டம் - உத்தியோகத்திலேயே 100 -க்கு 70, 80, 90 கணக்கில் புகுந்து கொண்டும், நத்திக் கொண்டும் மற்றவர்களை உள்ளே விடவொட்டாமல் சூட்சி செய்து வயிறு பிழைக்கும் ஒரு கூட்டம் - அதற்காகவே தங்கள்



RangaRakes tamilnavarasam.com

பிள்ளைக்குட்டி பேத்து பிதுர்களை தர்பித்து செய்து கொண்டு அரசாங்க ஆதிக்கத்தைக் கைப்பற்ற எல்லாவித இழி தொழிலையும் கையாடும் ஒரு கூட்டம்.

''உத்தியோகம் பெரிசா தேசம் பெரிசா'' என்று உத்தியோகத்தில் 100- க்கு 25 வீதம் கூட இல்லாத நம்மைக் கேட்பதாயிருந்தால் இதில் யோக்கியப் பொறுப்போ, நாணயமோ கடுகளவாவது இருக்க முடியுமா என்று கேட்பதோடு இதை கடுகளவு அறிவாவது இருக்கும் மனிதன் நம்பமுடியுமா என்றும் கேட்கின்றோம்.

இந்த சூட்சிகளை வெகு காலமாக அனுபவத்தில் தெரிந்து அனுபவித்து வந்த சர். தியாகராயர், டாக்டர் நாயர் போன்ற மேதாவி - அறிஞர்கள் தான் உத்தியோகத்தில் விகிதாச்சாரம் கிடைக்க வேண்டும் என்கின்ற கொள்கையோடு இந்த ஜஸ்டிஸ் கட்சியை ஆரம்பித்தார்களே ஒழிய, மற்றபடி வெள்ளைக்காரர்களே எல்லா உத்தியோகத்திலும் இருக்க வேண்டும் என்றோ, இந்த நாட்டை என்றென்றைக்கும் வேறு நாட்டாரே ஆள வேண்டும் என்றோ கருதி அல்ல என்பது நமது அபிப்பிராயம்.

இந்த இயக்கத்தின் பயனாய் பார்ப்பனர்களின் ஏக போக, (உத்தியோக)அனுபவிப்பு குறைந்த பிறகு தான் பார்ப்பனர்கள் ''உத்தியோகம் வேறு, தேசாபிமானம் வேறு'' என்று சொல்ல ஆரம்பித்தார்களே தவிர, அதற்கு முன்பு வரை உத்தியோகங்களே தேசாபிமானமாய் இருந்து வந்தது யாரும் அறியாததல்ல. உதாரணமாக ஜஸ்டிஸ் கட்சி ஏற்படும் வரை காங்கிரஸ் பிரசிடெண்டுகளும், காரியதரிசிகளும், ஹைக்கோர்ட் ஜட்ஜு களாகவும், நிர்வாக சபை மெம்பர்களாகவும் இருந்து வந்ததே போதுமானதாகும்.

ஜஸ்டிஸ் கட்சி ஏற்படுவதற்கு முன்பு தீண்டப்படாதார் நிலை எப்படி இருந்தது என்பது இப்பொழுது கூலிக்கு மாரடிக்கும் சில பச்சகானா தேசபக்தர்களுக்கும், அரை டிக்கட் தேச பக்தர்களுக்கும் தெரியாவிட்டாலும், ஒரு 40 வயதுக்கு மேல்பட்ட பார்ப்பனர் - பார்ப்பனரல்லாத ''தேசபக்தர்'' எவரும் அறிந்ததேயாகும். அப்படிப்பட்ட கூட்டத்திற்கு இன்று போலீஸ் இலாகாவில் சப் இன்ஸ்பெக்டர் பதவியில் 87-க்கு 11 ஸ்தானங்கள் வழங்கப்பட்டிருக்கின்றது என்றால் அந்த சமூகத்துக்கு காங்கிரஸ் சமுதாயத் துறையிலோ, உத்தியோகத் துறையிலோ சாதித்தது என்ன என்பது நமக்கு விளங்கவில்லை.

சர்க்காருடையவும், ஜஸ்டிஸ் கட்சியாருடையவும் ஆதிக்கத்தில் உள்ள ஸ்தலங்களாகிய உத்தியோகம், சட்டசபை, ஸ்தல ஸ்தாபனம், ரயில் வண்டி, கச்சேரிகள், ரோட்டுகள் பள்ளிக்கூடங்கள் முதலாகிய இடங்களில் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமை வழங்கி அவர்களது சுயமரியாதை காப்பாற்றப்பட்டிருப்பதை எவறாவது இன்று மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.



ஆனால் பொது ஜனங்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளும் காங்கிரசினுடையவும், பார்ப்பனர்களினுடையவும் ஆதிக்கத்தில் இருந்து வரும் கோவில், குளம், சத்திரம், சாவடி முதலிய இடங்களில், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக என்ன செய்தார்கள் என்பதை ஒரு சிறு விரல் விட்டு சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

எந்தப் பார்ப்பனர் பள்ளிக்கூடத்திலாவது ஒரு ஆதிதிராவிடருக்கு வாத்தியார் வேலையாவது கொடுத்தார்களா, மாணாக்கனாகவாவது சேர்த்துக் கொண்டார்களா? ''சும்மா இருக்கும் சங்கை ஊதிக் கெடுத்தான் பண்டாரம்'' என்பது போல் கோவில்களைப் பற்றி லட்சியமே இல்லாத தாழ்த்தப்பட்ட சமூகத்தாரிடையில் புராணப் பிரசங்கம் செய்வதின் மூலம் அவர்களுக்கு கோவில் வெறியை உண்டாக்கி, அதன் பெயரைச் சொல்லி கோவில் பிரவேசத்துக்கு சத்தியாக்கிரகம் செய்வதாயும், பட்டினி கிடப்பதாயும் சொல்லி மக்களை ஏமாற்றி 10 லட்சக் கணக்கில் பொருள் பரித்து கடசியாக ''பொது ஜனங்கள் பக்குவமாக இல்லை ஆதலால் கோவில் பிரவேசம் கூடாது'' என்று சொல்லி விட்டதைத் தவிர, அந்தப் பணத்தில் சட்ட சபைக்குப் போக சௌகரியம் செய்து கொண்டது தவிர, வேறு என்ன செய்ய முடிந்தது என்று கேட்கின்றோம்.

காங்கிரஸ் பார்ப்பனர்கள் உத்தியோகத்துக்குத்தான், ''உத்தியோகம் பெரிதா தேசம் பெரிதா'' என்று கேட்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆனால் அதே பார்ப்பனர்களை ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் ''தேசம் பெரிதா கோவிலில் சென்று சாமி தரிசனம் செய்வது பெரிதா'' என்று கேட்டால் அப்போது என்ன சொல்லுவார்கள் என்பது விளங்கவில்லை.

ஆனால் அதற்கும் ஒரு தந்திரமான பதில் சொன்னாலும் சொல்லுவார்கள். அதென்னவென்றால் ''கோவிலுக்குள் செல்லவும், சுவாமி தரிசனம் செய்யவும் சுயராஜ்யம் வந்தால் தான் முடியும். இல்லாவிட்டால் முடியாது'' என்று சொல்லி ஏமாற்றி விடுவார்கள். அதையும் நம்ம சோணகிரிகள் நம்பி விடக்கூடும்.

இவை எப்படியோ போய்த் தொலைந்தாலும், இன்று தாழ்த்தப்பட்ட சமூகம் 100ல் 13 ஸ்தானங்கள் வீதம் போலீசில் இடம் பெற்றதும், முகமதிய சமூகம் 100இல் 17 ஸ்தானங்கள் பெற்றதும் ஜஸ்டிஸ் கட்சி இல்லாமல் இருந்தால் ஒரு நாளாவது முடிந்து இருக்குமா என்பதே நமது கேள்வி.

மற்ற ஜாதி இந்துக்கள் 100 -ல் 35 ஸ்தானங்களும் பெற்று இருக்கிறார்கள் என்றாலும் 100க்கு 3 வீதம் ஜனத் தொகை (13 லட்சம் ஜனத் தொகை) உள்ள பார்ப்பன சமூகம் 100ல் 18 ஸ்தானங்கள் (லட்சம் ஜனங்களுக்கு 1½ வீதம்) பெற்று இருப்பதும் (100க்கு 70 வீதம்) 325 இலட்சம் ஜனத்தை உள்ள பார்ப்பனரல்லாதார் சமூகம் (9 லட்சம்



RangaRakes tamilnavarasam.com

ஜனங்களுக்கு 1 வீதம்) 35 ஸ்தானங்களே பெற்று இருப்பதும் இப்படி இவ்வளவு வித்தியாசத்தில் இருந்தும் ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டைக் கட்சியென்று பார்ப்பனர்கள் கூப்பாடு போடுவதும், இதற்கு சில பார்ப்பனரல்லாத கூலிகள் பின்தாளம் போடுவதும் என்றால் இதற்கு என்ன பெயர் சொல்லுவது என்பது நமக்குப் புரியவில்லை.

ஆகவே நமது பார்ப்பனரல்லாதார் சமூகம் அவர்களது ஜனத்தொகைக்கு ஏற்ற விகிதாச்சாரம் உத்தியோகத்தில் பெறும் வரையிலும் அல்லது பார்ப்பனர்கள் தங்கள் விகிதாச்சாரத்துக்கு மேற்பட்ட விகித உத்தியோகம் தங்களுக்கு வேண்டாம் என்று சொல்லும் வரையிலும் ஜஸ்டிஸ் கட்சி இருந்து தீர வேண்டியதே நமது அபிப்ராயமாகும்.

அது ''தேசத் துரோகக்'' கட்சியினாலும் சரி, ''சர்க்கார் தாசர்கள் குலாம்கள்'' கட்சி ஆயினும் சரி அதனுடைய பிறப்புரிமையைப் பெற்ற பிறகுதான் அது வேறு வேலையில் இறங்க வேண்டுமே தவிர அதை விட்டு விட்டு பார்ப்பனர்களுக்குப் பயந்து கொண்டு ''எங்களுக்கு வகுப்புவாரித்திட்டம் வேண்டியதில்லை. யாரோ ஒருவர் இருவருக்கு மந்திரி பதவியோ, பெரிய சர்க்கார் உத்தியோக பதவியோ மாத்திரம் இருந்தால் போதும். நாங்களும் பெரிய தேசபக்தர்கள் கூட்டத்தில் சேர்ந்தவர்கள் தான்'' என்றால் அதைவிட ஈனத் துரோகமான கட்சி உலகில் வேறு இல்லை என்றுதான் சொல்லுவோம்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 23.12.1934**



# கான் அப்துல் கபூர்கான்

எல்லைப்புறக் காந்தி என்று பட்டம் சூட்டப்பட்ட தோழர் அப்துல்கபூர்கான் அவர்கள் ராஜத்துவேஷ குற்றத்துக்காக இரண்டு வருஷம் தண்டிக்கப்பட்டுவிட்டார்.

தான் செய்த காரியத்துக்காகவோ, பேசிய பேச்சுக்காகவோ வருத்தம் தெரிவிப்பதன் மூலம் மன்னிப்புக் கேட்டும் அரசாங்கம் மனமிரங்காமல் இரண்டு வருஷம் தண்டித்துவிட்டது.

வெள்ளை அறிக்கையையும், பார்லிமெண்டு கூட்டுக் கமிட்டி அறிக்கையையும் நிராகரிக்கிறது என்கின்ற காங்கிரஸ் திட்டத்தில் அரசாங்கத்தை மன்னிப்புக் கேட்டுக் கொள்வது என்பதும் ஒரு பிரிவு போல் காணப்படுகின்றது. ஐயோ பாவம் காங்கிரசே! நீ இன்னமும் என்ன கதிக்கு ஆளாகப் போகின்றனையோ!! உனது வீரமே வீரம்!!!

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 23.12.1934**



RangaRakes tamilnavarasam.com

# ராமராஜ்யம் திரும்பி வருகிறது

### பலாத்கார உடன்கட்டை

வடநாட்டில் தாமோ என்ற தாலூகாவைச் சேர்ந்த நோஹ்டோ என்ற கிராமத்தில் ஒரு புருஷன் காயலாவாக இருந்து இறந்து போனார். அவரது மனைவியை உடன்கட்டை ஏறும்படி அவரின் உறவினர்கள் கட்டாயப்படுத்தி நெறுப்புக்குள் பிடித்து தள்ளிவிட்டார்களாம். மனைவி தப்பி ஓட எவ்வளவோ முயற்சித்தும் பயன் இல்லாமல் சாம்பலாகிவிட்டதாக அசோசியேட் பிரஸ் கூறுகிறது.

இந்து மதத்தின் பெருமையும், ராமராஜியத்தின் அருமையும் சுயராஜியத்துக்கு எவ்வளவு தகுதி உடையது என்பதை இந்தியர்கள் உணர்வார்களாக.

**பகுத்தறிவு - செய்தி விமர்சனம் - 23.12.1934**



# ஆசிரியர்கள் மகாநாடு

### பிள்ளைகளைப்பற்றிய கவலை இல்லை

எங்கு பார்த்தாலும் ஆசிரியர்கள் மகாநாடுகள் கூட்டப்படுவதும், ஆசிரியர்களின் சம்பளங்கள் போதாது என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதும், மந்திரிகள் முதலிய பெரிய சம்பளக்காரர்களும், செல்வவான்களும் ஆசிரியர்களை வாழ்த்தி ஆசீர்வதிப்பதுமாகவே இருந்து வருகின்றதே ஒழிய, பிள்ளைகள் சம்பளம் கொடுக்கச் சக்தி இல்லாமல் பள்ளிக்குப் போக முடியாமல் கல்விப் பட்டினியாய் இருந்து தற்குறிகளாகி 100-க்கு 92 பேர் எழுத்து வாசனை அற்ற குருடர்களாக இருந்து இந்திய நாட்டை ''அலங்கரித்து''க் கொண்டிருக்கின்றார்களே என்ற கவலை ஒருவரிடத்திலாவது இருந்ததாகவோ, இதற்காக ஒரு மகாநாடாவது கூட்டப்பட்டதாகவோ, ஒரு மந்திரியாவது, ஒரு பிரபுவாவது, ஒரு ஆச்சாரிய ஸ்வாமிகளாவது கவலைப்பட்டதாகவோ தெரியவேயில்லை. இந்தக் காலம் செல்வவான்கள் காலமானதால் பணம் சம்பாதிப்பதைப் பற்றியே உலக நிகழ்ச்சிகள் நடைபெறுவதும், செலவிடவேண்டியவர்கள் கஷ்டத்தைப் பற்றி கவலைப்படாமல் இருக்கவும் ஆன காரியம் நடக்கின்றது. இதற்காக யார் என்ன செய்யக்கூடும்?

''எல்லாம் பகவான் செயல்'' அல்லவா?

**பகுத்தறிவு - செய்தி விளக்கம் - 23.12.1934**



RangaRakes tamilnavarasam.com

# திருச்சி நகரத்தின் பெருமை

திருச்சிக்காரர்கள் தாங்களே ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் என்று ஜம்பம் அடித்துக் கொள்வதோடு ஜஸ்டிஸ் கட்சிக்கு தாங்களே கோட்டை காவலர்கள் என்றும் பெருமை பேசிக் கொண்டு அடிக்கடி அக்கட்சியின் மீது அதிகாரம் செய்யும் விஷயத்திலும் சிறிதும் பின்வாங்குவதில்லை என்பதோடு எல்லோருக்கும் முன்னணியில் வந்தும் நின்று கொள்ளுவார்கள்.

ஆனால் காரியத்திலோ என்றால் லொட்டையையே தான் காண முடிகின்றது. நாம் இப்படிச் சொல்வதற்குக் கூட கோபித்துக் கொண்டு நமக்கும் புத்தி சொல்ல வந்துவிடுவார்கள். அதனால் உள்ள நிலைமையை மறைத்துவிடமுடியாது.

புதிய சீர்திருத்தம் ஏற்பட்ட காலம் முதல் ஒரு ஆசாமியையாவது திருச்சி தொகுதியானது இந்திய சட்டசபைக்கு நிறுத்தியதும் கிடையாது, அனுப்பியதும் கிடையாது என்ற பெருமை திருச்சிக்கு உண்டு என்று சொல்வதற்கு யாரும் கோபித்துக் கொள்ள மாட்டார்கள்.

அது மாத்திரமல்லாமல் இந்த 10 வருஷ காலமாய் சென்னை சட்டசபைக்கு கூட ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் ஒருவரையாவது அனுப்ப அவர்களுக்கு முடியவில்லை என்று சொல்வதற்கும் கோபித்துக் கொள்ளமாட்டார்கள் என்றே நினைக்கிறோம். அது மாத்திரமல்லாமல் திருச்சி நகர் தொகுதிக்குக் கூட ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக இல்லாவிட்டாலும் இந்த 10 வருஷ காலமாக ஒரு பார்ப்பனரல்லாதாரைக் கூட அனுப்ப முடியாமல் போய்விட்டதையும் கோபிக்காமல் ஒப்புக் கொள்ளுவார்கள் என்றே கருதுகின்றோம்.

திருச்சி ஜஸ்டிஸ் கட்சி வீரர்கள் ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் யாரையும் அனுப்ப முடியாமல் போய்விட்டதோடு மாத்திரமல்லாமல் இப்போது ஒரு படி பிரமோஷனாகி முன்னேறி இருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டது.

அதாவது திருச்சி ஜஸ்டிஸ் கட்சியே தான், தான் என்று கருதிக் கொண்டிருந்தவரும், தமது தோளின் பேரிலேயே அக்கட்சியின் தலை எழுத்து இருக்கின்றது என்று நினைத்துக் கொண்டு இருந்தவருமான தோழர் பி.ஆர். தேவர் அவர்கள் இன்று காங்கிரஸ் வாக்குறுதியில் கையொப்பமிட்டு காங்கிரஸ் கேண்டிடேட்டாய் நிற்கத் துணிந்துவிட்டார். ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிரிகளான பார்ப்பனர்களும் அவரை ஏற்றுக் கொண்டு ஞான ஸ்நானம் கொடுத்துவிட்டார்கள்.

ஆகவே இனி திருச்சிக்கும் திருச்சி ஜஸ்டிஸ் கட்சிக்காரர் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்களுக்கும் ஜஸ்டிஸ் சரித்திரத்தில் முதல் அத்தியாயத்தை ஒதுக்க வேண்டியதுதான் பாக்கி என நினைக்கிறோம்.

ஏதாவது கொள்கை வித்தியாசத்தால் கட்சியை குலைக்கவோ, அல்லது விட்டுப் போகவோ ஆசைப்படுகின்றவர்களைப் பற்றி நாம் ஒன்றும் குறை கூற வரவில்லை.

ஆனால் தங்கள் சொந்த சவுகரியங்களிலோ, அல்லது இஷ்டங்களிலோ ஏதோ இரண்டொரு விஷயம் ஒத்து வரவில்லையானால், தனிப்பட்டவருக்கு தன் இஷ்டப்படி நடக்க முடியவில்லையானால், எதிர்கட்சிக்கு போய்விடுவது என்பதானது எப்படி பொது நன்மைக் காரியமாகும் என்பது நமக்கு விளங்கவில்லை.

தோழர்கள் சி.நடேச முதலியார், திவான் பகதூர் பி.டி. குமாரசாமி செட்டியார் ஆகியவர்களும் கூட மற்றும் அவர்களைப் போல ஜஸ்டிஸ் கட்சியாரால் அலட்சியமாய் கருதப்பட்டும் கட்சியின் தொல்லைக்குள்பட்டும் உள்ள இன்னும் சிலரும் கூட அக்கட்சியை விட்டுப் போகாமல் இருக்கிறார்கள் என்றால், திருச்சி வீரர்கள் கட்சியை ஒழிப்பதற்கும், எதிரிகளுக்குத் துணையாய் இருப்பதற்கும் துணிந்தது அதிசயமேயாகும். இதைப் பற்றி திருச்சி ஜில்லா பல பாகங்களில் இருந்தும், திருச்சி நகரத்தில் இருந்தும் சில தீர்மானங்களும், வியாசங்களும் வந்ததை நாம் வெளியிட வில்லை. ஏனெனில் அவை சிறிது கடினமான பதங்கள் என்று நாம் கருதியதால் பிரசுரிக்கவில்லை. நேயர்கள் வருத்தப்படாமல் இருப்பார்களாக.

**பகுத்தறிவு - செய்தி விளக்கம் - 23.12.1934**



RangaRakes tamilnavarasam.com

# விருதுநகரில் காலித்தனம்

காங்கிரஸ் பிரமுகர்கள் விருதுநகர் சென்றிருந்த சமயம் ஊர்வலத்தில் செருப்பு வீசி எறியப்பட்டதாகவும், பொதுக் கூட்டத்தில் கற்கள் வீசி எறியப்பட்டதாகவும் தமிழ்நாடு, ஜஸ்டிஸ் முதலிய பத்திரிக்கைகளில் காணப்பட்டது. இது உண்மையாய் இருக்குமானால் அதை ஒரு பக்காகாலித்தனம் என்றும், இதற்கு ஆதரவாய் இருந்த விருதுநகர் தோழர்களுக்கு இது ஒரு பெரிய அவமானகரமான காரியமென்றும் வலிமையாய்க் கூறுகிறோம்.

நம் நாட்டு அரசியல் வாழ்க்கை என்பது எவ்வளவு கேவல மானதாக இருந்தாலும் அது பெரிதும் வகுப்பு போராட்டத்தன்மையை உட்கருத்தாய்க் கொண்டு வெளிப்படையான போட்டி முறையில் நடந்து வருகின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்நிலையில் இருபுறமும் போட்டியில் கலந்து கொள்ள எவருக்கும் உரிமை இருக்கின்றது என்பதை நாம் மறுக்க வரவில்லை.

அப்போட்டிகளில் பல சூட்சிகள், பொய், புரட்டுகள் உபகருவிகளாய் பயன்படுத்தப்பட்டு வருவதும் சகஜமான காரியமாய் இருந்து வருகிறது. கால நிலையில் இவைகள் எல்லாம் அனுமதிக்கத்தக்கதாக இருந்து வந்தாலும் காலித்தனங்கள் என்பவைகளைக் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. கூட்டத்தில் கல்லெறிவது, செருப்பு எறிவது, கூச்சல் போட்டுக் குழப்பங்கள் செய்வது ஆகிய காரியங்களை இழிதொழில் என்றே சொல்லுவோம். இதைப் பற்றி பல தடவைகளில் எழுதியும் வந்திருக்கிறோம். அப்படி இருக்க விருதுநகர் தோழர்கள் யாராயிருந்தாலும் இதைக் கைக்கொண்டது மிகவும் வருந்தத்தக்க காரியம் என்பதோடு, சுயமரியாதைக்காரர்கள் யாராவது இதில் கலந்திருப்பார்களானால் அதற்காக மிகுதியும் வெட்கப்படவேண்டிய நிலையில் இருக்கிறோம். காங்கிரஸ்காரர்கள் பல இடங்களில் இப்படி நடந்திருக்கிறார்கள் என்பதோடு மாத்திரம் அல்லாமல் கூட்டங்களில் குறிப்பிட்ட மக்களை மிக இழிவாகவும், கேவலமாகவும் பேசி வருகிறார்கள் என்பதையும் அறிவோம். அப்படிப்பட்ட காரியங்களைக் காங்கிரஸ் பத்திரிக்கைகள் பெருமையாய்க் கொண்டாடி அதிக விளம்பரம் செய்து மகிழ்வதையும் பார்த்து இருக்கிறோம்.



ஆனால் காங்கிரஸ்காரர்கள் அல்லாதவர்கள் யாராய் இருந்தாலும் அவர்களும் இம்மாதிரி காலித்தனத்தில் பங்கு கொள்வது என்றால் காலித்தனம் காங்கிரசுக்கே சொந்தமாயிருந்து வந்தது என்பது மாறி, இப்போது எல்லோருக்கும் சொந்தமாய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறதுடன் இம்மாதிரி காரியம் இழிவு, இழிவு, மிக இழிவு ஆனது என்பதை வலியுறுத்துகிறோம்.

நிற்க தோழர் சத்தியமூர்த்தி ஐயர் அவர்கள் ஒரு கொள்கையைத் தாக்கிப் பேசுவதைப் பற்றியோ, ஒரு சமூக அல்லது கட்சி நடப்பைக் கண்டிப்பதைப் பற்றியோ நாம் தடுக்க வரவில்லை. கூடுமானால் தக்க பதில் மரியாதையுடன் அளிக்கவே ஆசைப்படுவோம்.

ஆனால் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் மேடைகளில் நின்று பேசும்போது தனக்குப் பிடிக்காதவர்களை மரியாதைக் கிரமமின்றி பேசுவதோடு மாத்திரம் அல்லாமல், அவன் இவன் என்கின்ற மதுபானக்கடை பாஷையில் பேசுவது என்பது மிகவும் வெறுக்கத்தக்கதாகும்.

சமீபத்தில் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் ஈரோட்டிற்கு வந்திருந்தபோது ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் தோழர்கள் ஷண்முகம், பொப்பிலி ராஜா ஆகியவர்களை அவன் இவன் என்று ஒறுமையிலேயே பேசியே வைதார். உடனே சில தோழர்கள் வந்து அவருக்கு மரியாதை கற்பிக்க அனுமதி கேட்டார்கள். அப்பொழுது சில தோழர்கள் அதைத் தடுத்து கூட்டத்தில் எவ்வித சிறு கூச்சலும் இல்லாமல் இருக்க ஏற்பாடு செய்தார்களே ஒழிய வேறு ஒன்றும் செய்யவில்லை.

காலித்தனமோ கூச்சலோ குழப்பமோ செய்வது என்பது மிக எளிதான காரியம். அதனால் பலன் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. கருப்புக்கொடி பிடிப்பது கூட அவசியமில்லாத காரியம் என்றுதான் நமக்கு இப்போது தோன்றுகின்றது. அதையும் சுயமரியாதைக்காரர்கள் வெறுக்க வேண்டும் என்பதுதான் நமது ஆசை.

ஆகையால் இனி இப்படிப்பட்ட காரியம் எங்கும் எவராலும் நடக்காமல் இருக்கவேண்டும் என்பதாக நாம் ஆசைப்படுகின்றோம் என்பதோடு, பொருப்புள்ள தலைவர்களாகவோ, பத்திரிக்கைகாரர்களாகவோ இருக்கிறவர்கள் இதுகளுக்கு ஆதரவோ உர்சாகமே அளிக்காமல் தங்கள் வெறுப்புகளை காட்டுவதின் மூலம் எங்கும் நடைபெறாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்வார்களாக.

**பகுத்தறிவு - கட்டுரை - 30.12.1934**



RangaRakes tamilnavarasam.com

# ஜஸ்டிஸ் கட்சியும் பார்ப்பனப் பத்திரிகைகளும்

## விருதுநகரில் தலைவர்கள் மகாநாடு

ஜஸ்டிஸ் கட்சி இந்திய சட்ட சபைத் தேர்தலில் தோல்விஅடைந்து விட்டது.

அதற்குக் காரணம் இருவகைப்படும். ஒன்று ஜஸ்டிஸ் கட்சிக்கு எல்லா இந்திய அரசியல் கிளர்ச்சியில் விசேஷ கவனம் செலுத்த அவசியமில்லை. அது செலுத்தவும் முடியாது. ஏனெனில் ஜஸ்டிஸ் கட்சிக்கு எல்லா இந்திய ஸ்தாபனம் என்பதாக ஒரு ஸ்தாபனம் இல்லை என்பதோடு ஜஸ்டிஸ் கட்சி ஏற்படுத்தப் பட்டதற்குக் காரணமே தென் இந்திய பார்ப்பனர்களின் கொடுமையைத் தாங்க மாட்டாமல் அதிலிருந்து தப்பி ஒருவாறு விடுதலை பெற வேண்டிய அவசியமேயாகும்.

ஆனால் அதன் எதிரிகளாகிய பார்ப்பனர்கள் அக்கட்சியை ஒழிக்க அரசியல் போர்வையை போத்திக் கொண்டு அதற்குள் இருந்து எதிர்த்து வந்ததால், ஜஸ்டிஸ் கட்சியும் தனது லட்சியத்திற்கு அரசியல் சம்மந்தமும் வைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று என்றாலும் பார்ப்பனர்களுடைய அரசியல் வேஷம் எல்லா இந்தியாவைப் பொருத்ததாகவும், ஜஸ்டிஸ் கட்சியாருடைய அரசியல் சம்பந்தம் சென்னை மாகாணத்தை மாத்திரம் பொருத்ததாகவும் இருந்ததால் அரசியலில் பார்ப்பனர்களோடு சரியாய்ப் போட்டிபோட முடியாமலும், போட்டி போட வேண்டிய அவசியமில்லாமலும் போய்விட்டது. ஆயினும் எல்லா இந்திய அரசியல் என்னும் பேச்சின் பேரால் பார்ப்பனர்கள் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி விஷமப் பிரசாரம் செய்யாமல் இருப்பதற்காகவும் இந்திய சட்ட சபையில் பார்ப்பனர்களால் கெடுதி ஏற்படாமல் இருப்பதற்காகவும் ஒருவர் இருவர் அதிலும் கலந்திருந்தால் நலமாய் இருக்கும் என்று கருதி சிலர் அதில் கலந்திருந்தார்கள்.

ஆனால் அதில் பார்ப்பனர்களுக்கு இருந்த அளவு ஊக்கமும், முயற்சியும் ஜஸ்டிஸ் கட்சியாருக்கு இருந்தது என்று சொல்ல முடியாது.

இருந்தபோதிலும், கிடைத்த அளவு கிடைக்கட்டும் என்கின்ற அலட்சிய புத்தி மீதும் போதிய முஸ்தீபுகள் இருக்கின்றதா இல்லையா என்கின்ற கவலை இல்லாமலும் அதில் பிரவேசித்தார்கள்.



இரண்டொரு ஸ்தான விஷயத்தில் சிறிது கவலை கொண்டார்களானாலும், அந்தக் கவலைக்குத் தக்க அளவு நம்பிக்கை மோசத்துக்கு ஆளாகிவிட்டதால் இத்தோல்வி கட்சியின் எதிரிகளாகிய பார்ப்பனர்களுக்கு அதிகமாய்ப் பரிகசிக்க இடம் கொடுத்துவிட்டது.

### இரண்டாவது காரணம்

ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொண்டதால் பொது ஜனங்கள் அதைத் தப்பாக உணர்ந்து ஜஸ்டிஸ் கட்சிக்கும், மற்ற கட்சிக்கும் வித்தியாசமில்லை ஆதலால் முதலில் வந்து கேட்டவர்களுக்கும், வந்து கூப்பிட்டவர்களுக்கும் ஓட்டுப் போட்டால் போகிறது என்று நினைத்திருந்த காரணம். (பார்ப்பனரைச் சேர்த்துக் கொண்ட காரணத்தையும், என்ன நிபந்தனையின் மீது சேர்த்துக் கொள்வது என்பதையும் மக்களுக்குச் சரியாய் விளக்கிக் காட்டாததால் இது ஏற்பட்டது) இவற்றால் எல்லாம் ஏதும் முழுகிப் போய்விடவில்லை என்பது ஒருபுறமிருக்க, நம்பிக்கை மோசம் என்பதற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் கட்சிக்கு சிறிது தொல்லை ஏற்பட இடமுண்டாகிவிட்டது. பார்ப்பனர்கள் பரிகசிப்பதற்கு இதுவும் ஒரு அனுகூல சம்பவமாய் விட்டதால் மேடைகளிலும், பத்திரிகைகளிலும், திண்ணைகளிலும், அவர்களது ஆதிக்கத்திலிருக்கும் கோர்ட்டுகளிலும் இதே பேச்சாகவும் கட்சிக்கு பெரியதொரு சங்கடமான நிலைமை வந்துவிட்டதாகவும், கட்சியே ஒழிந்து போய்விடும் என்றும் பேசி பலவித கற்பனைகள் செய்து விஷமப் பிரசாரமும் செய்து வருகிறார்கள்.

நம்பிக்கை மோசம் என்ற காரணத்துக்காக வெளியேற வேண்டிய அவசியத்துக்குள்ளான செட்டிநாடு (குடும்பம் ஏராளமான செல்வமுடைய குடும்பமானதால்) கட்சிக்கு விரோதமாகப் பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டு செல்வத்தை வாரி இறைப்பதன் பயனாய் கட்சியானது மேலும் சிறிது தொல்லைக்கு ஆளாக வேண்டி ஏற்பட்டுவிட்டது.

இதனால் எல்லாம் கட்சியே ஒழிந்து போகும் என்றோ, கட்சியே ஒழிந்துபோனாலும் கட்சிக் கொள்கைகள் மறைந்து போகும் என்றோ நாம் பயப்படவில்லை.

பெருமாள் போய்விட்டால் பெரிய பெருமாளாய் வருவான் என்கின்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

ஏனெனில் அக்கட்சியின் அடிப்படையான கொள்கை அவ்வளவு முக்கியமானதும், அவசியமானதும் என்பதும் நமது அபிப்பிராயம். ஆதலால் அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை.

ஆனால் இந்திய சட்ட சபைத் தேர்தல் முடிவு தெரியப்பட்ட கால முதல், நாளது வரை சுமார் இரண்டு மாத காலமாக கட்சியின் எதிர்கால



RangaRakes tamilnavarasam.com

நிலைமையைப் பற்றி கவலை எடுத்துக் கொள்ளும்படியும், கொள்கைகள் வெற்றி பெறத்தக்க திட்டங்கள் ஏற்படுத்த வேண்டும் என்றும் பல தோழர்கள் கூப்பாடு போட்டு வந்தும் அதைப் பற்றி சிறிதும் கவனித்ததாகக் காணப்படாமல் இருப்பதை உத்தேசித்தே கட்சிப் பிரமுகர்களின் கவலையீனத்துக்கு வருந்த வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இதைப் பற்றியே விருதுநகர் சேர்மென் தோழர். வி.வி.ராமசாமி அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அது மற்றொரு இடத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

**அதன் சாரம்**

இந்திய சட்டசபைத் தேர்தல் முடிவடைந்த ஒரு மாத காலமாக கட்சியைச் சேர்ந்த அனேகர் கொதிப்பும், பரபரப்பும், உணர்ச்சியும் கொண்டு எவ்வளவு முயற்சி செய்தும் சென்னையில் உள்ள தலைவர்கள் முன்வராதது பொருப்பற்ற காரியமாகும் என்பதாக குறிப்பிட்டிருக்கிறார். மற்றும் நமது கட்சிக்கு ஒரு தாய்மொழி தினசரியும் மத்திய பிரசார சபையும் ஏற்படுத்த வேண்டும் என்றும், சீக்கிரத்தில் ஒரு விசேஷ மகாநாடு கூட்ட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

கடைசியாக இதைச் செய்யாவிட்டால் ஜனங்களுக்குக் கட்சியின் மீதுள்ள நம்பிக்கை சிதறுண்டு போய் கொள்கையையும் பரப்ப இடமே இல்லாமல் போய்விடும் என்றும் எச்சரிக்கை செய்கிறார்.

இந்த அபிப்பிராயமேதான் தமிழ்நாட்டு மக்களின் உண்மையானதும், சரியானதுமான அபிப்பிராயமாகும் என்பது நமது கருத்து.

இதற்குத் தக்க ஏற்பாடு செய்யப் படவேண்டியது தோழர்கள் பொப்பிலி ராஜா, சர். ஷண்முகம் ஆகியவர்களின் கடமையாகும்.

தோழர் பொப்பிலிக்கு மந்திரி பதவி போய்விட்டாலும் ராஜா பதவி போய்விடாது என்கின்ற தைரியம் அவருக்கு உண்டு என்பதும் தோழர் ஷண்முகத்துக்கு இந்திய சட்டசபை மெம்பர் பதவி போய்விட்டாலும் நிர்வாக சபை மெம்பர் பதவியோ கவர்னர் பதவியோ போய்விடாது என்கின்ற தைரியம் உண்டு என்பதும் நமக்குத் தெரியும்.

ஆனால் இந்த நிலையில் தக்கதொரு முயற்சி எடுத்துக் கொள்ளாவிட்டால், அதோடு கூடவே நல்ல கொள்கையுடைய கட்சியை குலைத்து மக்களுக்கு துரோகம் செய்துவிட்டு போய்விட்டார்கள் என்கின்ற பழமொழியும் இவர்களை விட்டுப்போகாது என்பதையும் உணர வேண்டுகிறோம்.

முடிவாக விருதுநகர் தோழர் ராமசாமி அவர்கள் மேற்கண்ட விஷயமாய் ஆராய்ந்து முடிவு செய்யவும், பல தலைவர்களையும் ஒன்று



சேர்க்கவும் விருதுநகரில் ஒரு தலைவர்கள் மகாநாடு கூட்டலாமா என்று யோசிப்பதற்காக விருதுநகர் தென்னிந்திய நல உரிமைச் சங்க சார்பாக ஒரு முன் ஏற்பாடு கூட்டம் கூட்டப் போவதாகவும் தெரிவித்து இருக்கிறார். அக்கூட்டம் வெற்றி பெற்று அதன் பயனாய் விருதுநகரில் பெரியதொரு கூட்டம் கூட்டி ஏதாவது ஒரு நன்முடிவுக்கு வர வேண்டுமென்றே நாம் ஆசைப்படுகின்றோம்.

**பகுத்தறிவு - கட்டுரை - 30.12.1934**



RangaRakes tamilnavarasam.com

# சுயமரியாதை மகாநாடுகள்

சுயமரியாதை மகாநாடுகள் தமிழ்நாட்டில் ஜில்லாக்கள், தாலுக்காகள் தோறும் வாரம் தவறாமல் அடுத்துஅடுத்து நடந்து வந்தது நேயர்கள் அறிந்ததாகும்.

தோழர் ஈ.வெ. ராமசாமி ராஜத் துவேஷக் குற்றத்திற்காக சிறைசென்ற பின் சுயமரியாதை சங்க நிர்வாகக் கமிட்டியார் கூடி மகாநாடுகள் கூட்டக்கூடாது என்று கண்டிப்பான உத்திரவு போட்டதான தீர்மானம் நிறைவேற்றியதையே காரணமாய் வைத்து, 5, 6 மாத காலமாக மகாநாடுகளே எங்கும் நடக்காமல் போய்விட்டது என்பது ஒரு காரணமாய் இருந்தாலும் அந்தத் தீர்மானம் திருச்சி நிர்வாக சபைக் கூட்டத்தில் ஓரளவு தளர்த்தப்பட்டு இருந்தும் வேறு பல காரணங்களால் தீர்மானம் தளர்த்தப்பட்டதை வெளியிடாமலும், பல இடங்களில் இருந்து மகாநாடு நடத்தவேண்டும் என்று முயற்சித்த முயற்சிகளையும் உற்சாகப் படுத்தாமல் இருந்து வந்திருக்கிறது. அதாவது சுமார் நான்கு மாதங்களுக்கு முன் பகுத்தறிவு 3-வது மலரின் தலையங்கமொன்றில் ''நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்'' என்கின்ற தலைப்பு கொண்ட தலையங்கத்தில் ''சமீபத்தில் நடைபெறப் போகும் ஜஸ்டிஸ் கட்சி மகாநாடும், காங்கிரஸ் மகாநாடும், காங்கிரஸ் மாகாண மகாநாடும் நடந்த உடன் சுயமரியாதை மகாநாடோ அல்லது சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் மகாநாடோ ஒன்று கூட்டி அதில் முடிவு செய்து கொள்ள வேண்டியவர்களாய் இருப்பதால் அது வரையில் நம் தோழர்கள் எல்லாத் துரையிலும் பொருத்து இருக்கவேண்டும் என்பதோடு அதை எதிர்பார்த்தே நானும் பொறுத்து இருக்கிறேன்'' என்று தோழர் ஈ.வெ.ரா. தனது சொந்த கையொப்பத்துடன் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்ததாகும்.

இப்போது மேற்குறிப்பிட்ட எல்லா மகாநாடுகளும் நடந்தாய் விட்டதால் மேல் குறிப்பிட்டபடி சுயமரியாதை மாகாண மகாநாடோ அல்லது சு.ம. இயக்கத் தொண்டர்கள் மகாநாடோ ஒன்று கூட்ட வேண்டியது அவசியமான காரியம் என்பது நமது அபிப்பிராயம்.

இதை அனுசரித்து சுமார் 10,20 இடங்களில் இருந்து மகாநாடு கூட்டவேண்டுமென்று தீர்மானங்களும், வேண்டுகோள்களும் வந்திருப்பதோடு சில இடங்களில் தாங்களாகவே ஜில்லா, தாலுக்கா



மகாநாடுகள் கூட்டுவதாகவும் தெரிவித்து இருக்கிறார்கள். குறிப்பாக தஞ்சை ஜில்லா மகாநாடு கூட்ட தஞ்சை சு.ம. சங்கக் காரியதரிசி தோழர் ஏகாம்பரம் அவர்கள் ஏற்பாடு செய்து காரியாதிகளும் நடந்து வருவதாகத் தெரிகின்றது.

இந்த நிலையில் ஜஸ்டிஸ் கட்சியில் சில எதிர்பாராத சம்பவங்கள் நடந்துவிட்டதால், எதற்காக ''ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு, காங்கிரஸ் மகாநாடு, மாகாண காங்கிரஸ் மகாநாடு ஆகியவைகள் நடந்தபிறகு'' என்று குறிப்பிடப்பட்டதோ அக்காரியம் முடிவு பெற்றதாகக் கருதமுடியாமல் போய்விட்டது என்றாலும் இனியும் கால தாமதம் செய்து கொண்டு போவதில் பயனில்லை. எப்படியாவது ஜனவரி மாதத்தில் நாம் சுயமரியாதை மாகாண மகாநாடு கூட்டவோ, அல்லது தொண்டர்கள் மகாநாடு கூட்டி மாகாண மகாநாட்டுக்கு வேண்டிய ஏற்பாடு செய்யவோ வேண்டியது மிக அவசியமான காரியம் என்றே கருதுகிறோம்.

தொண்டர் மகாநாடு என்று ஒன்று தனியாகக் கூட்டுவதைப் பார்க்கிலும் ஜனவரி மாதத்தில் நடக்க ஏற்பாடாகிவரும் தஞ்சை ஜில்லா மகாநாட்டுடனேயோ அல்லது அதற்குச் சகல தொண்டர்களும் வரும்படியான ஏற்பாடு செய்தோ அதில் முடிவு செய்வதும் பொருத்தமான காரியம் என்றே கருதுகிறோம். எப்படியாவது ஜனவரி மாதத்தில் சுயமரியாதை இயக்கம் தனது வேலைத்திட்டத்தைப் புதுப்பித்து காங்கிரசினுடையவோ, ஜஸ்டிஸ் கட்சியினுடையவோ, அல்லது இரண்டினுடைய கூட்டுறவுடனேயோ அல்லது இரண்டின் கூட்டுறவும் இல்லாமல் தனித்து நின்றோ தொண்டாற்ற முற்பட வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்துகின்றோம்.

காங்கிரசானது சட்டமறுப்பு தத்துவங்களை அடியோடு விட்டுவிட்டு சட்ட முறைகளுக்குக் கட்டுப்பட்டு சர்க்காருடன் ஒத்துழைத்துத் தொண்டாற்ற முன் வந்தபிறகு, அந்தப்படி இல்லாத வேறு எந்த இயக்கங்களையும் அரசாங்கம் அடியோடு நசுக்கப் பார்க்கும் என்பதில் யாதொரு ஆக்ஷேபணையும் இல்லை.

காங்கிரசானது தனது சட்டமறுப்பு எண்ணங்களைக் கைவிட்டுவிட வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்துவிட்டவுடன் சர்க்காருக்குக் காங்கிரசைத் தோற்கடிக்கச் செய்துவிட்டோம் என்கின்ற மகிழ்ச்சி ஏற்பட்டு விட்டதும் அம்மகிழ்ச்சியின் வேகம் சுயமரியாதை இயக்கத்தில் பாய்ந்து சுயமரியாதைச் சங்கங்களை ஒழிக்கப் பார்த்ததும் யாரும் அறியாததல்ல.

சுயமரியாதை இயக்கத்தில் எந்தக் காரியத்துக்கும் சட்ட மறுப்பு செய்வதோ, ''சத்தியாக்கிரகம்'' செய்வதோ, பலாத்காரம் ஏற்படும்படியான எந்தக் காரியங்களையாவது செய்வதோ ஆகிய திட்டங்களோ உணர்ச்சிகளோ இல்லை என்பது யாவரும் அறிந்ததாகும்.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் சமுதாயத் துறையில் பழமை என்னும் பேராலும், வழக்கம் என்னும் பேராலும் இருந்து வரும் அனேக முறைகளில் பெரியதொரு மாற்றம் ஏற்படவேண்டும் என்று கருதுகின்றது என்பதை நாம் மறைக்கவில்லை.

ஆதலால் சீக்கிரத்தில் அதன் வேலைத்திட்டங்களை விளக்கி திருத்தியோ, புதுப்பித்தோ, மகாநாடுகள் கூட்டுவதன் மூலம் பிரசாரம் செய்து அமுலுக்குக் கொண்டு வரச் செய்ய வேண்டியதே அவசர வேலையாய் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பகுத்தறிவு - தலையங்கம் - 30.12.1934**



# பார்ப்பன விஷமம்

## ஜஸ்டிஸ் கட்சி மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லையா?

இந்திய சட்டசபைத் தேர்தலில் பார்ப்பனர்கள் காங்கிரஸ், காந்தி என்கின்ற பேர்களால் செய்யப்பட்ட ஏமாற்றுப் பிரசாரத்தின் பயனாயும், இந்திய சட்டசபை ஸ்தானத்தைப் பற்றி ஜஸ்டிஸ் கக்ஷியார் தக்கபடி கவலைப்படாத காரணத்தாலும் பார்ப்பனர்கள் தாங்கள் வெற்றி பெற்று விட்டோம் என்கின்ற ஆணவத்தால் தலைகால் தெரியாமல் குதிக்கிறார்கள்.

தோழர் சத்தியமூர்த்தி ஐயர் அவர்கள் மேடையில் வாயைத் திறந்தால் யாரையும் அவன்,இவன், அயோக்கியன் என்று இழி தன்மையாய்ப் பேசுவதும், ஹோம் மெம்பரை ராஜீனாமா செய்ய செய்ய வேண்டு மென்றும், லாமெம்பரை ராஜீனாமாச் செய்யச் செய்ய வேண்டுமென்றும் கவர்னரை உத்திரவு போடச் சொல்லுவதும், சட்டசபைகளைக் கலைக்க வேண்டுமென்பதும் தோழர் ராஜகோபாலாச்சாரி கவர்னராகவும், தான் சீப் செகரட்டரியாகவும் (பிரதானக் காரியதரிசியாகவும்) வரப் போகிறோம் என்பதுமான தலை கிருகிருத்த பேச்சுகளாகவே பேசி வருகிறார்.

இதற்கும் சில பார்ப்பனக் கூலிகள் பின் பாட்டு பாடுவதும் கை தாளம் போடுவதுமான மானங்கெட்ட செய்கைகளுக்கு உட்பட்டு வயிறு வளர்க்கிறார்கள். பல கூலிப் பத்திரிகைகளும் இதை விளம்பரப்படுத்திக் கொண்டு வாழ்கின்றன.

எப்படி இருந்தாலும் கூடிய சீக்கிரத்தில் இந்த கிருகிருப்பும் ஆணவமும் அடங்கப் போகிறது என்பதில் நமக்குச் சந்தேகமில்லை.

### பலம் குறைந்து விட்டதா?

நிற்க, சமீபத்தில் சென்னையிலும், திருச்சியிலும் நடந்த சென்னை சட்டசபை உபதேர்தலில் ஜஸ்டிஸ் கக்ஷியார் அபேட்சகர்களை நிறுத்தாததால் ஜஸ்டிஸ் கக்ஷியின் பலம் குறைந்து விட்டதாகவும் அந்த இரண்டு தேர்தலிலும் காங்கிரஸ் ஜெயித்து விட்டதாகவும், ஆதலால் காங்கிரசுக்கே நாட்டில் செல்வாக்கு இருக்கிறதென்றும் ஆதலால்



RangaRakes tamilnavarasam.com

மந்திரிசபையை ஒழித்து காலி செய்து காங்கிரசின் வசம் ஒப்புவிக்க வேண்டுமென்றும் பார்ப்பனர்கள் பேசி பாமர மக்களை ஏமாற்றி ஆதிக்கம் செலுத்தப் பார்க்கிறார்கள்.

ஹிந்து, சுதேசமித்திரன் முதலிய எல்லா பத்திரிகைகளும் இதே கூப்பாடு போட்டு மக்களை ஏமாற்றப் பார்க்கின்றன.

ஆனால் உண்மையில் உபதேர்தல்களில் காங்கிரசு வெற்றி பெற்றதா? நாட்டில் மற்ற பாமர மக்கள் காங்கிரசையே எல்லாத் தேர்தல்களிலும் ஆதரித்து இருக்கிறார்களா? என்பவைகளைப் பற்றி சிறிது யோசிப்போம்.

ஜஸ்டிஸ் கக்ஷி மந்திரிசபை புதிதாய் ஏற்பட்ட இந்த 3, 4 வருஷத்துக்குள்ளும், சிறப்பாக சென்ற சில மாதங்களுக்குள்ளாகவும் ஏழு, எட்டு ஸ்தானங்கள் சென்னை சட்டசபையில் காலியாகி மறுதேர்தல்கள் நடந்திருக்கின்றன.

ஜஸ்டிஸ் கக்ஷிக்குப் போட்டியாக எத்தனையோ கக்ஷிகள் இருந்து வந்திருப்பதோடு காங்கிரசும் அவைகளுடன் போட்டி போடுவதும் ஜஸ்டிஸின் எதிர்க்கக்ஷிகளுக்கு ஆதரவு கொடுப்பதுமான காரியங்கள் செய்து கொண்டும் வந்திருக்கின்றன. அப்படியெல்லாம் இருந்தும் சகல தேர்தல்களிலும் ஜஸ்டிஸ் கக்ஷியே அனேகங்களில் போட்டியே இல்லாமலும் வெற்றி பெற்றிருக்கின்றன.

உதாரணமாக வடஆற்காட்டில் தோழர் குப்புராவ் ஸ்தானம் காலியானதும் தோழர் ரங்கசாமி ரெட்டியார் ஜஸ்டிஸ் கக்ஷி சார்பாகவே நின்று வெற்றி பெற்றார்.

சென்னை தோழர் ஆரோக்கியசாமி முதலியார் ஸ்தானம் காலியானதும் தோழர் அப்பாதுரை பிள்ளை ஜஸ்டிஸ் கக்ஷியின் பேராலேயே நின்று வெற்றி பெற்றார்.

தஞ்சையில் தோழர் பன்னீர் செல்வம் ஸ்தானம் காலியானதில் தோழர் சந்தனக் கவுண்டர் ஜஸ்டிஸ் கக்ஷியின் பேராலேயே நின்று வெற்றி பெற்றார்.

நெல்லூரில் தோழர் யாகியா ஆலி சாயபு ஸ்தானம் காலியானதில் தோழர் யாகியா ஆலி அவர்களே ஜஸ்டிஸ் கக்ஷியின் பேராலேயே நின்று வெற்றி பெற்றார்.

திருநெல்வேலியில் தோழர் எட்டியாபுரம் ராஜா ஸ்தானம் காலியானதும் தோழர் ஐ.சி.ஈஸ்வரம் பிள்ளை ஜஸ்டிஸ் கட்சியின் பேராலேயே நின்று வெற்றி பெற்றார்.

அநந்தபூர் தோழர் லட்சுமணரெட்டி ஸ்தானம் காலியானதும் தோழர் ரங்கைய்யா ஜஸ்டிஸ் கட்சியின் பேராலேயே நின்று வெற்றி பெற்றார்.



இந்த தேர்தல்கள் சற்றேரக் குறைய 16 ஜில்லாக்களை சம்மந்தப்பட்ட தேர்தல்களாகும் என்பதோடு எதிர்கட்சியார் ஸ்தானம் இரண்டு அதிகமாகவே கைப்பற்றப்பட்டிருக்கின்றது.

இவற்றில் ஒன்றிலாவது காங்கிரஸ்காரர்களோ, பார்ப்பனர்களோ , தலைகாட்டவோ, உச்சரிக்கவோ, நினைக்கவோ முடியவில்லை. வடஆற்காடு, திருச்சி ஆகிய இரண்டு ஜில்லாவில் இருந்த பார்ப்பனர் ஸ்தானங்கள் பார்ப்பனரல்லாதார் கைக்கு வந்துவிட்டன.

நிற்க சமீபத்தில் நடந்த இரண்டு தேர்தல் அதாவது சென்னை, திருச்சி இரண்டும் ஜஸ்டிஸ் கட்சி ஸ்தானங்கள் அல்ல என்பது யாவரும் அறிந்ததாகும்.

சென்னை ஸ்தானம் காங்கிரசின் ஸ்தானமாகும். அதற்கு காங்கிரஸ் ஆளே வந்ததாக வைத்துக் கொள்ளலாம்.

திருச்சி ஸ்தானமும் காங்கிரசின் சார்பாக ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிராக இருந்த கட்சியின் ஸ்தானமாகும். அதுவும் பார்ப்பனர் ஒருவர் இருந்த ஸ்தானமாகும். அந்த ஸ்தானத்துக்கு ஜஸ்டிஸ்காரர் வரவில்லையானாலும் தேர்தல் அபேக்ஷகராகும் வரை, ஜஸ்டிஸ் கட்சிக்காரராய் ஜனங்கள் மதித்தவரும் பார்ப்பனர்களுக்கு எதிரியாக இருப்பதாய் சொல்லிக் கொண்டிருந்தவரும், ஜஸ்டிஸ் கட்சி சார்பாய் நிறுத்த யோசித்துக் கொண்டிருந்தவரும், தேர்தலில் பார்ப்பனத் தொல்லை இல்லாமல் இருப்பதற்காக பயந்து கையெழுத்து போட்டவரும்தான் - கொள்கையோ, அரசியல் காரணங்களோ பிரச்சினையாக இல்லாமல் சொந்த காரணங்களை முன்னிட்டு ஏற்பட்ட மனத்தாங்கலின் பலனாய் சுவாதீனம் செய்து கொள்ளப்பட்ட ஒரு பார்ப்பனரல்லாதார் தான் வெற்றி பெற்றிருக்கிறாரே ஒழிய, ஒரு நிஜமான காங்கிரஸ்வாதியோ, அல்லது ஒரு பார்ப்பனரோ வந்து விட்டதாகச் சொல்ல முடியாது.

அன்றியும் இந்த மூன்று நான்கு மாதமாய் நடந்து வந்த மற்ற அதாவது ஜில்லா போர்ட், முனிசிபாலிட்டி, கிராமப் பஞ்சாயத்து, அர்பன் பாங்கு முதலிய பல தேர்தல்களில் கூட அனேகவற்றில் காங்கிரஸ்காரர்கள் 100 க்கு 100 வீதம் முறியடிக்கப்பட்டிருப்பதும் பார்ப்பனர்கள் வாசனையே இல்லாமல் செய்யப்பட்டிருப்பதுமான பெருவாரியான தேர்தல் முடிவுகள் யாரும் அறியாததா என்று கேழ்க்கின்றோம்.

ஏதோ உள்சண்டைகளினாலும் சிலரின் முக்கியமாக சுயநலத்துக்காக செய்யப்பட்ட துரோகங்களினாலும், வஞ்சனை சூட்சி ஆகியவைகளினாலும் ஒரு சமயத்தில் வெற்றி என்பது கிடைத்துவிட்டால் அதற்காக இவ்வளவு தலைக்கொழுப்பும், ஆணவமும் காட்டப்படுவது என்பது இவ்வித சிறு வெற்றிக்கும் கூட காங்கிரஸ்காரர்களோ, பார்ப்பனர்களோ சிறிதும் யோக்கியதை உடையவர்கள் அல்ல என்பதைக் காட்டுகிறதே ஒழிய வேறு ஒன்றும் இல்லை.



RangaRakes tamilnavarasam.com

இந்த வெற்றியினால் பார்ப்பனரல்லாத சமூகத்துக்குக் கடுகளவாவது கெடுதி ஏற்பட்டு விடுமென்றோ, ஜஸ்டிஸ் கொள்கைக்கு ஏதாவது மோசம் வந்து விடுமென்றோ யாரும் பயப்பட வேண்டியதில்லை என்பதோடு இனி மேலால் நடக்க வேண்டிய காரியங்களுக்கும் மெத்த அனுகூலம் ஏற்பட வழி ஏற்பட்டது என்றே கூறுவோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 30.12.1934**



# குடி அரசு

அடுத்த வாரம் அதாவது ஜனவரி மாதம் 6 ந் தேதி வெளியாகும் பத்திரிகை 'குடி அரசு' என்னும் பேரால் (அது நின்று போன 9-வது மாலை 22-வது மலரிலிருந்து 23-வது மலராக) வெளியிடலாம் என்று கருதி இருக்கிறோம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அவசரமாய் நடைபெறுகின்றன. தபால் அதிகாரிகள் அனுமதி அவசரமாய் எதிர்பார்க்கப்படுகிறது.

**பகுத்தறிவு - அறிவிப்பு - 30.12.1934**



RangaRakes tamilnavarasam.com

# தோழர் சிவலிங்கம் மரணம்

நமது நண்பரும், சுயமரியாதை இயக்க பிரமுகருமான ஜலகண்டாபுரம் தோழர் சி.கு.சிவலிங்கம் அவர்கள் 22-12-34ந் தேதி தமது 58 - வது வயதில் காலஞ் சென்றாரென்ற செய்தி கேட்டதும் திடுக்கிட்டுப் போனோம்.

தோழர் சிவலிங்கம் அவர்கள் வயது சென்றவராயிருந்தாலும் அங்குள்ள சுயமரியாதை தோழர்கட்கு ஊக்கமளித்து சுயமரியாதை பிரசாரம் செய்து வந்தார். இவர் ஜலகண்டாபுரம் யூனியன் போர்டிற்கு ஆறாண்டு தலைவராகவிருந்து பல அரிய வேலைகள் செய்து வந்தார். இப்படிப்பட்ட பெரியார் காலஞ் சென்றதற்கு வருந்துவதுடன் நமது அனுதாபத்தை அவரது குடும்பத்தாருக்கும் அவருடைய நண்பர்கட்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**பகுத்தறிவு - இரங்கல் செய்தி** - 30.12.1934



# எழுத்தில் சீர்திருத்தம்

தமிழ்பாஷை எழுத்துக்கள் வெகு காலமாகவே எவ்வித மாறுதலும் இல்லாமல் இருந்து வருகின்றன.

உலகில் உள்ள பாஷைகள் பெரிதும் சப்தம் , குறி, வடிவம், எழுத்துக்கள் குறைப்பு, அவசியமான எழுத்துக்கள் சேர்ப்பு ஆகிய காரியங்களால் மாறுதல் அடைந்து கொண்டே வருகின்றன.

கால வர்த்தமானங்களுக்கு ஏற்ப பாஷைகளும், சப்தங்களும், உச்சரிப்புகளும், வடிவங்களும் மாறுவது இயல்பே யாகும்.

வார்த்தைகள் கருத்தை வெளியிடுவதற்கு ஏற்பட்டவைகள் என்பது போலவே எழுத்துக்கள் சப்தத்தை உணர்த்த ஏற்பட்டவைகளேயாகும்.

ஆனால் நம் பண்டிதர்களுக்கு தாராளமாய் அறிவைச் செலுத்த இடமில்லாமல் மதம் பழக்க வழக்கம் ஆகியவைகள் குறுக்கிட்டு விட்டதால் எழுத்துக்களுக்கும், அதன் கோடுகளுக்கும், வடிவங்களுக்கும் தத்துவார்த்தம் கற்பிக்க வேண்டிய அவசிய மேற்பட்டு எழுத்துக்களையே தெய்வமாகவும் தெய்வ வடிவமாகவும் கருத வேண்டிய நிலை நம் நாட்டில் ஏற்பட்டு விட்டது.

தற்காலம் எத்தனையோ புதிய வார்த்தைகள் வந்து நமது தமிழ் பாஷையில் புகுந்து கொண்டன. அவைகளை இனி விலக்க முடியவே முடியாது. விலக்குவதும் புத்திசாலித்தனமாகாது. அப்பேர்ப்பட்ட வார்த்தைகளை சரியானபடி உச்சரிக்க நமக்குப் பழக்கத்தில் எழுத்துக்கள் இல்லாமல் பாஷையையும், உச்சரிப்பு அழகையும் கொலை செய்கின்றோம். விஷ்ணு என்பதை விட்டுணு என்றும், விண்டு என்றும் உச்சரிப்பதில் பெருமை அடைகின்றோம். பாஷாபிமானப் பட்டமும் பெறுகின்றோம். அதற்கு இலக்கணம் இருக்கிறது என்கின்றோம். அதோடு சப்தங்கள் மாறி விடுவதால் கருத்தும், அருத்தமும் மாறுவதில்லை என்றும் கருதுகிறோம். அது போலவே சில எழுத்துக்கள் பழைய பழக்கம் வழக்கம் என்பதற்காக மாற்றக் கூடாது என்று இல்லாமல் சௌகரியத்துக்காக மாற்ற வேண்டியது அவசியம் என்றால் அறிஞர்கள் அதற்கு இடம் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

சுமார் 70, 80 வருஷ காலத்துக்கு முந்திய பதிப்புகளிலும், எழுத்துக்களிலும் ஈ என்கின்ற எழுத்தானது இ எழுத்தையே மேலே சுழித்த வட்ட வடிவத்தில் இருந்து வந்திருக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

இன்னும் 400, 500 வருஷங்களுக்கு முந்தின கல் எழுத்துக்கள் அனேகம் வேறு வடிவத்தில் இருந்திருக்கிறது. இப்பொழுது அவைகளை மாற்றமடைந்ததற்கு காரணங்கள் கேட்ப்பாரும் இல்லை, சொல்லுவாரும் இல்லை. அதனால் சப்தமோ, அருத்தமோ, பாஷையின் அழகோ கெட்டுப் போனதாகக் குறை கூறுவாரும் காணப்படவில்லை.

அது போலவே இப்போதும் சில எழுத்துக்களின் வடிவங்களை மாற்ற வேண்டியதும், சில எழுத்துக்களை குறைக்க வேண்டியதும், சில குறிகளை மாற்ற வேண்டியதும் அவசியம் என்றும் அனுகூலம் என்றும் பட்டால் அதைச் செய்ய வேண்டியது தான் அறிவுடமையே ஒழிய அதன் தத்துவார்த்தத்துக்கு ஆபத்து வருகின்றதே என்பது அறிவுடமையாகாது என்பது நமது கருத்து.

ஆகவே இப்போது ணா, றா, னா, ஆகிய எழுத்துக்களும் ணை, லை, ளை, னை, ஆகிய எழுத்துக்களும் மற்ற கா, நா, ரா, முதலாகிய எழுத்துக்களைப் போலும் டை, நை, ழை, முதலிய எழுத்துக்களைப் போலும் ஆகாரத்துக்கு 'ா' குறியையும் ஐகாரத்துக்கு 'ை' குறியையும் பெறாமல் தனி வடிவத்தைக் கொண்டு இருப்பதை மாற்றி ணா, றா, னா, ணை, லை, ளை, னை போல உபயோகித்து பிரசுரிக்கலாம் என்று கருதியிருக்கின்றோம். இதன் பயனாய் அச்சு கோர்ப்பதற்கு எழுத்துக் கேசுகளில் (அறைகளில்) 7 கேசுகள் (அறைகள்) குறைகின்றன என்பதோடு பிள்ளைகளுக்கும் இந்த ஏழு எழுத்துக்களுக்கு தனிவடிவம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போகும் சவுகரியம் ஏற்படுகின்றது.

இன்னமும் தமிழ் பாஷை எழுத்துக்களில் அனேக மாறுதல்கள் செய்ய வேண்டி இருந்தாலும், இப்போதைக்கு இந்த சிறு மாறுதலை அனுபவத்திற்குக் கொண்டு வரலாம் என்று கருதி அந்தப்படியாகவே எழுத்துக்களை உபயோகித்து அடுத்தாப்போல் பிரசுரிக்கப் போகும் ''குடி அரசு'' பத்திரிகையைப் பிரசுரிக்கலாம் என்று இருக்கிறோம்.

இதை வாசகர்களும் மற்றும் தமிழ் பாஷை பத்திரிகைக்காரர்களும், தமிழ் பண்டிதர்களும் ஆதரிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

**பகுத்தறிவு - துணைத் தலையங்கம் - 30.12.1934**

# அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அசூயை | - | பொறாமை, அவதூறு |
| அத்தியந்தம் | - | மிகவும் |
| அந்தர் | - | தலைகீழாய் பாயும் செயல் |
| ஆத்மீகம் | - | தன்வினை பற்றி வரும் துன்பம் |
| ஆஸ்பதம் | - | இடம், பற்றுக்கோடு |
| இத்யாதி | - | இவை போன்ற |
| உதார குணம் | - | பெருங்கொடைத் தன்மை |
| உபமாக | - | இரண்டாவதாக |
| உற்பவித்தல் | - | தோன்றுதல், பிறப்பித்தல் |
| ஒரு அம்மன் | | |
| காசு அளவு | - | புதுக்கோட்டை அரசர்கால நாணய வகை 320 அம்மன் காசு = 1 ரூபாய் |
| கண்டனை | - | மறுப்பு |
| கல்லுக்கும் | - | இரத்தினத்துக்கும் |
| காயம் | - | உடல் |
| குண்டுணி | - | கலகமூட்டுகை |
| சம்சயம் | - | அய்யம், சந்தேகம் |
| சரீராப்பியாசம் | - | உடற்பயிற்சி |
| சவுத்தல் | - | விலைபடாமலிருத்தல் |
| சாய்கால் | - | செல்வாக்கு |
| சாவோலை | - | இழவோலை (சாவை அறிவிக்கும் மடல்) |
| சுங்கான் | - | கப்பல் திருப்பும் கருவி |
| தர்பித்தல் | - | நிலைபெறச் செய்தல், பிரதிட்டை செய்தல், பயிற்சி கொடுத்தல். |
| திருஷ்டாந்தம் | - | எடுத்துக்காட்டு |

# குடி அரசு
# 1935 –2

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 21


பெரியார் திராவிடர் கழகம்
29 இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் – திருவான்மியூர்
சென்னை – 600 041


## அருப்புக்கோட்டை மகாநாடுகள்

ராமனாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டையானது சுயமரியாதை இயக்கம் ஆரம்பிக்கப்படும் வரையில் தீவிர காங்கிரஸ் கோட்டையாய் இருந்து வந்தது என்பதோடு, தோழர் ஈ.வெ.ரா. தமிழ்நாடு மாகாணக் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாகவும், தலைவராகவும் இருந்த காலத்தில், அவருக்கு வலக்கை போல் இருந்து, அவரது நோக்கப்படி தொண்டாற்றி வந்திருப்பதை இன்றும் காங்கிரஸ் ரிகார்டுகளில் பார்க்கலாம். அப்படிப்பட்ட, அருப்புக்கோட்டை சு.ம. இயக்கம் ஆரம்பமானவுடன், ஒரே கூட்டமாக அதில் சேர்ந்து உழைத்து வருவது யாவரும் அறிந்ததே யாகும்.

இந்த நிலையில் ஜுன் மாதம் 29, 30, உ களில் அருப்புக்கோட்டையில் நான்கு மகாநாடுகள் நடந்திருக்கின்றன.

அதாவது தோழர்கள் S.S.பழனிச்சாமி அவர்கள் வரவேற்புத் தலைவராகவும், கே.முத்துச்சாமி வல்லத்தரசு, B.A., B.L., M.L.C., அவர்களை மகாநாட்டுத் தலைவராகவும் கொண்டு சுயமரியாதை மகாநாடும்,

தோழர்கள் சு.கு. குழந்தைவேல் முதலியார் வரவேற்பு அக்கிராசன ராகவும், விருதுநகர் முனிசிபல் சேர்மென் வி.வி.ராமசாமி அவர்களை மகாநாட்டுத் தலைவராகவும் கொண்டு ஜஸ்டிஸ் மகாநாடும்,

தோழர்கள் ராஜம்மாள் சாது கந்தசாமி அவர்கள் வரவேற்புத் தலைவராகவும், எஸ். நீலாவதி அம்மாளை மகாநாட்டுத் தலைவராகவும் கொண்டு பெண்கள் மகாநாடும்,

தோழர்கள் சு.வீ. சோமசுந்திரம் அவர்களை வரவேற்புத் தலைவராகவும், ப. ஜீவானந்தம் அவர்களை மகாநாட்டுத் தலைவராகவும் கொண்டு தொழிலாளர் மகாநாடும் வெகு சிறப்பாகவும், உற்சாகமாகவும் நடைபெற்றிருக்கின்றன.

''சுயமரியாதை இயக்கம் அதி தீவிரக் கொள்கை கொண்டு விட்டதாலும், சர்க்காரை விரோதித்துக் கொண்டதாலும் ஒழிந்துபோய் விட்டது'' என்று பேசிக் கொண்டிருக்கிறவர்களும் ''அது அரசியலில் நுழைந்ததால் மறைந்துவிட்டது'' என்று பேசிக் கொண்டிருக்கிறவர்களும், ''சு.ம. இயக்கம் ஜஸ்டிஸ் கட்சியை தழுவி இருப்பதால் அது வெறும்

RangaRakes
tamilnavarasam.com

பணக்காரர் இயக்கமாகி தேய்ந்து வருகிறது'' என்று பேசிக் கொண்டிருக்கிறவர்களும் ''அதன் தலைவர் மந்திரிகளோடு அளவளாவிக் கொண்டு மந்திரிகளுக்குள் அய்க்கியமாகி பார்ப்பனரல்லாதார்களுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுக்கும் வேலையில் இறங்கி உத்தியோக வேட்டை ஆடிக் கொண்டிருந்ததால் அதன் பெருமை குறைந்து போய்விட்டது'' என்று பேசிக் கொண்டு இருக்கிறவர்களும், ''சு.ம. இயக்கம் தீவிரக் கொள்கைகளை விட்டுக் கொடுத்து, சர்க்காருக்கு அடி பணிந்து சர்க்கார் தாசத்துவம் பெற்றுவிட்டதால் 10 கஜ ஆழத்தில் புதைக்கப்பட்டுவிட்டது'' என்று சொல்லிக் கொண்டு இருக்கிறவர்களும், சு.ம. இயக்கத்தின் பேரால் பிழைக்கக் கருதி இருந்த சிலரின் சுயநல புத்தியை அறிந்து வெளியாக்கப்பட்டவர் களில் பலர் ''சு.ம. இயக்கமாவது - வெங்காயமாவது, அதெல்லாம் ஒழிந்து வெகுகாலமாகி விட்டது'' என்று பேசிக் கொண்டு இயக்கத்திற்கு எதிர்ப்பும், விஷமப் பிரசாரமும் செய்து கொண்டு இருக்கிறவர்களும், ரயில்வே ஸ்டேஷனுக்கு வெகுதூரத்திற்கப்பால் நடந்த அருப்புக் கோட்டை மகாநாடுகளில், ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் தேர் திருவிழாப் போல் ஜனங்கள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், கிழவர்கள், கிறிஸ்தவர்கள், முகம்மதியர்கள் முதலிய கூட்டத்தார்கள் 1000க்கணக்காய் வந்து கூடினதும், இயக்கம் கொள்கை திட்டம் சம்பந்தமான விவாதங்களில் வெகு ஊக்கமாகவும், நுட்பமாகவும் கலந்து பங்கெடுத்துக் கொண்டதும், அவர்களது பாட்டுகளும், பேச்சுகளும், குதூகலங்களும் இயக்கத்தினிடத்தில் காட்டிய பகுத்தறிவோடு கூடியுள்ள பக்தியையும் கண்டிருப்பார்களேயானால், தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்ட முட்டாள்தனத்திற்கு வருந்தியே இருப்பார்கள். அன்றியும், இன்று இயக்கத்தைக் குறை சொல்லிப் பழித்துத் திரிகின்ற ஒவ்வொருவரும், இயக்கத்தின் பேரால் பெருமை பெற்றுப் பிழைத்துத் திரிந்த தங்கள் வாழ்வுதான் போய்விட்டதே தவிர இயக்கத்துக்கு எவ்வித குறையும் ஏற்படவில்லை என்பதையும் நன்றாய் உணருவார்கள். அதாவது, இம்மாதிரிக் கூட்டத்தாருக்கு உதாரணமாக ஒரு கதை சொல்லப்படுவதுண்டு.

அதாவது:-

ஒரு காட்டில் திரிந்த நரி, ஒரு நதியில் தண்ணீர் குடிக்க வந்ததில் வெள்ளம் வந்து தண்ணீரில் அந்த நரியை அடித்துக் கொண்டு போனது.

தண்ணீரில் போய்க் கொண்டிருந்த நரி மேலுக்கு வர முடியாமல் வேகமாய்ப் போய்க் கொண்டிருந்ததால் கரையில் இருந்த ஜனங்களைப் பார்த்து, ''ஐயோ உலகம் போச்சுதே! உலகம் போச்சுதே!!'' என்று கூப்பாடு போட்டது.

அதைக் கேட்ட வெளியில் கரையில் நின்று கொண்டிருந்த ஜனங்கள், இதன் பேச்சை நம்பி உலகத்துக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதாகக் கருதி வெகுபிரயாசைப்பட்டு நரியைக் காப்பாற்றி கரை சேர்த்து எல்லோரும் கூடி நரியைப் பார்த்து, ''உலகம் போச்சுது, உலகம் போச்சுது என்று கூப்பாடு



போட்டாயே உலகத்துக்கு என்ன ஆபத்து வந்து விட்டது'' என்று வெகு கவலையாய்க் கேட்டார்கள். அதற்கு அந்த நரியானது, தான் ஓட்டம் பிடிக்க சௌகரியமான வழியைப் பார்த்துக் கொண்டு ஜனங்களைப் பார்த்து, ''ஐயன்மீர்! நீங்கள் எல்லோரும் எவ்வளவோ பாடுபட்டு என்னைக் காப்பாற்றி இருக்கவில்லையானால் எனக்கு இந்த உலக வாழ்வு போய் விட்டிருக்குமல்லவா? நான் செத்துத் தானே இருப்பேன். பிறகு எனக்கு என்ன உண்டு? ஆகையால் எனக்கு உலகம் போச்சுது உலகம் போச்சுது என்று தானே சொன்னேனே ஒழிய உங்களுக்கு ஒன்றுமில்லை. இந்தப் பெரு வெள்ளத்தால் க்ஷேமம் உண்டு'' என்று சொல்லிவிட்டு ஓட்டமெடுத்ததாம்.

இந்தக் கதை போல் சிலர் தங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங் களுக்காகவும், சுயநலத்தில் ஏமாற்றமடைந்ததற்காகவும், இயக்கத்துக்கு ஆபத்து ஏற்பட்டு விட்டதாகப் பாசாங்கு செய்து போலி அழுகை அழுது, மக்களை ஏய்ப்பதன் மூலம் நலனடையப் பார்க்கிறார்கள் என்பதும், அம்மகாநாட்டைப் பார்த்தவர்களுக்கு நன்றாய் விளங்கி இருக்கும்.

சுயமரியாதை இயக்கம் (போய்விடாது, போகச் செய்ய எவராலும் முடியாது. தோழர் ராமசாமியே ஒழிந்து போனாலும் சரி, எப்படிப்பட்டவர் கரணம் போட்டு யாருடைய தாசனாய் விட்டாலும் சரி, இயக்கமானது ஒரு நாளும் அழியாது, மறையாது, களைத்தும் போகாது.) போய்விட்டது என்றே வைத்துக் கொள்ளுவோம். அதற்காக எவரும் தியாகம் செய்து விடவில்லை; பெருவாரியான நஷ்டமோ, கஷ்டமோ ஏற்பட்டுவிடவும் இல்லை; அதன் இயங்குதலில் - அதன் பரவுதலில், அது யாருடைய தயவையும் பெற்று இருக்கவுமில்லை.

அது யாருக்கும் எவ்வித வாக்குத் தத்தமும் செய்து எவரிடமும் எவ்வித அட்வான்சோ, சன்மானமோ, தயவோ, தியாகமோ, பெற்றோ எதிர் பார்த்தோ இருந்ததுமில்லை. ஆகையால் அதற்காக எவரும் கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லாத நிலையிலும் அது சில கொள்கையைக் கொண்டு, சில திட்டங்களை வகுத்துத் தன் இஷ்டப்படி சென்று கொண்டு இருக்கிறதாகவும், அதை ஏற்றுப் பின் வருபவர்களை உயிருக்குயிராய் மதிக்கிறதும், மற்றவர்களை உன்னால் முடிந்ததைப் பார் அதைப் பற்றி நமக்கு கவலை இல்லை என்கின்றதுமானதானாய் போய்க் கொண்டிருக்கிற நிலையில்தா னிருந்து வருகின்றதென்பதும் விளங்கும்.

ஆகவே அது ஒழிந்துவிடும் என்று கவலைப்படுவதும், ஒழிந்து விட்டதே என்று துக்கப்படுவதும் வடிகட்டின பயித்தியக்காரத்தனமேயாகும் என்பதையும் கூட்டம் நன்றாய் விளக்கிக் காட்டிற்று என்றும் சொல்லலாம்.

எனவே அருப்புக்கோட்டை மகாநாடுகள் ஒவ்வொரு முக்கிய பிரச்சினைக்கும் ஒவ்வொரு மகாநாடாகவும், பொதுப் பிரச்சினைக்காக சு.ம. மகாநாடாகவும் ஆக 4 மகாநாடுகள் நடந்தது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.



RangaRakes tamilnavarasam.com

வரவேற்புத் தலைவர்கள் உபன்யாசங்களும், மகாநாட்டுத் தலைவர்கள் உபன்யாசங்களும், தீர்மானங்களும், தீர்மானத்தின்மீது பேசிய பேச்சுகளும் கல்லும் விளங்கிக் கொள்ளும் மாதிரியில் மிகத் தெளிவாகவும், அரிய கருத்துகள் அடங்கியதாகவும் இருந்தன.

குறிப்பாக தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் தொழிலாளர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்து நிகழ்த்திய சொற்பெருக்கானது பொது ஜனங்களுக்கு புதிய ஒரு எழுச்சியை உண்டாக்கிற்று என்று சொல்லலாம்.

முடிவாக ஏதோ சில காரணங்களால், சரியாகவோ, தப்பாகவோ தோழர் ஈ.வெ.ராமசாமி சிறையில் இருக்கும்போது, நிர்வாக சபையார் பொது மகாநாடுகள் கூட்டக் கூடாது என்று உத்திரவு போட்டிருந்தாலும், மறுபடியும் அவர்களது ஆக்ஷேபனை இல்லாமலேயே இப்போது ஆங்காங்கு மகாநாடுகள் நடக்க ஏற்பாடாகி வருவதும், மக்கள் முன் போலவே உற்சாகமாய் மகாநாடுகளில் கலந்து கொள்வதும், அதன் மூலம் பெரும் பிரசாரங்கள் நடப்பதும், இயக்கத்தில் பற்றுக் கொண்டவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியையே உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அன்றியும் தோழர்கள் சௌந்திரபாண்டியன், V.V. ராமசாமி முதலியவர்கள் இயக்க விஷயத்தில் முன்போலவே ஊக்கமெடுத்து, முன்னிலும் அதிகமாய்ப் பிரசாரம் முதலியவைகள் செய்ய வேண்டுமென்று முன் வந்து, மக்களுக்கு ஊக்கத்தை உண்டாக்கி வரும் விஷயமும் மிகுதியும் மகிழ்ச்சிக்கு உரியது என்பதும் நாம் விளக்க வேண்டியதில்லை.

**குடி அரசு - தலையங்கம் - 07.07.1935**



# 144 நல்ல காரியம்

சேலத்திலும், வேலூரிலும் பொதுக் கூட்டங்களுக்கு 144 பிரிவுப்படி உத்திரவுகள் போட்டு சர்க்காரார் பொதுக் கூட்டங்களைத் தடுத்ததாகத் தெரிய வருகிறது.

இதே முறையை இனியும் ஆங்காங்கு கூட்டப்படும் பொதுக் கூட்டங்களுக்கும் கையாடப்படலாம். இதனால் கூட்டங்களில் ஏற்படும் காலித்தனங்கள் ஒருவாறு ஒழிந்து விடலாம் என்று சர்க்கார் கருதி இருக்கிறார்கள் என்று நினைக்கிறோம்.

இதைப் பற்றி சுமார் 6, 7 மாதங்களுக்கு முன் நாம் குடிஅரசில் எழுதியும் இருக்கிறோம். காங்கிரசின் பேரால் பொது ஜனங்களை ஏமாற்றி, தாராளமாய்ப் பணங்கள் வசூல் செய்து, அவற்றைக் காலித்தனம் செய்யப்படுவதற்காக, சில தோழர்களுக்குக் கொடுத்து, அவர்களைப் பெரிய தேசப் பக்தர்களாக்கி, உசுப்படுத்தி விடுவதால், கூட்டங்களில் இம்மாதிரியான தொல்லைகள் நடைபெற வசதிகள் ஏற்பட்டுவிடுகின்றன.

சர்க்காரார் ஒவ்வொரு ஆள்களுடையவும் ஜீவனத்துக்கு மார்க்கம் என்ன? என்பதைத் தெரிந்து சரியான மார்க்கமில்லாமல் இம்மாதிரி வாழ்க்கையிலிருந்து வருபவர்களிடம் ஜாமீன் நடவடிக்கை நடத்திப் பொது ஜனங்களுக்குச் சவுகரியத்தையும், அமைதியையும் உண்டாக்கித் தர வேண்டும் என்றும், பொதுக் கூட்டங்கள் விஷயத்திலும் குறைந்த அளவு 12 மணி நேரத்துக்கு முன்பாகிலும் மீட்டிங்கைப் பற்றி சர்க்காருக்குத் தெரிவித்து உத்திரவு பெற்று மீட்டிங்கை நடத்தும்படியான சட்டம் இருக்க வேண்டும் என்றும், அப்படிப்பட்ட ஒவ்வொரு கூட்டத்துக்கும் போலீசார் ஆஜராகிக் கூட்டத்தைக் காலித்தனமில்லாமல் அமைதியாய் நடத்திக் கொடுக்க வேண்டும் என்றும், நாகரீக தேசத்திலும் சுதந்திரமும், சகோதரத் துவமும், சமத்துவமுமுள்ள தேசங்களில் இந்தப்படியே நடக்கின்றது என்றும் தெரிவித்திருக்கிறோம். இந்தப்படி செய்யாமல் எல்லாக் கூட்டங் களுக்கும் சர்க்கார் 144 போட்டுவிட்டார்கள்.

காங்கிரசின் பேரால் பணம் வசூல் செய்த காலம் முதல் கொண்டுதான், கூட்டங்களில் காலித்தனம் ஏற்படுவது என்பது ஆரம்பமாயிற்று என்று ஆதாரங்களோடு சொல்லலாம்.



RangaRakes tamilnavarasam.com

இதற்கு உதாரணம் காங்கிரசுக்காரர்கள், தங்களைத் தவிர மற்றவர்களுக்குப் பொது மேடை (பப்ளிக் பிளாட்பாரம்) கிடையாது என்று ஆங்காங்கு சதா சர்வகாலம் பெருமை அடித்துக் கொள்ளுவதும் ஒன்றாகும்.

சுயமரியாதை இயக்கத்தைப் பொருத்தவரையில், எந்தக் குழப்பங்களிலாவது சுயமரியாதைக்காரர்கள் சம்மந்தப்பட்டிருந்தார்கள் என்று தெரிந்த போதெல்லாம் நாம் அவர்களை வன்மையாய்க் கண்டித்தே வந்திருக்கிறோம்.

நாளது வரை எந்தக் காங்கிரஸ் பத்திரிகையோ, காங்கிரஸ் தலைவர்களோ தோழர் சத்தியமூர்த்தி அய்யர் ஈறாக எவரும் தங்கள் ஆள்களாலும், கூலிகளாலும் ஏற்பட்ட காலித்தனங்களைப் பற்றி ஒரு சிறு வார்த்தையாவது சொல்லிக் கண்டித்து இருப்பதாக நாம் காணவே முடியவில்லை.

அது மாத்திரமல்லாமல், அப்படிப்பட்ட காலித்தனங்களைக் காங்கிரஸ் பத்திரிகைகள், தேசீயப் பத்திரிகைகள், பார்ப்பனப் பத்திரிகைகள் என்பவைகள் தேசப்பக்தி என்பதாகப் பாராட்டியும், மிகைப்படுத்தியும் எழுதி எதிரிகளை அதை ஆதாரமாய் வைத்துக் கொண்டு இழிவுபடுத்தியும், காலிகளையும், காலித்தனங்களையும், உற்சாகப்படுத்திக் கொண்டும் வந்திருக்கின்றன. இதற்குப் பல உதாரணங்களை எடுத்துக்காட்டலாம்.

இந்த மாதிரி நிலையில் பதிலுக்குப் பதில் காலித்தனம் செய்ய இஷ்டமில்லாதவர்களுக்கும், காலித்தனத்தை வெறுப்பவர்களுக்கும் சர்க்காரிடம் முறையிட்டு, புதிய சட்டங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை. இப்படிக் கேட்டுக் கொள்வதை காலித்தனத்தில் வெற்றி பெறக் கருதியிருப்பவர்கள் கோழைத்தனம் என்று சொன்னாலும் சொல்லுவார்கள்.

காங்கிரசுக்காரர்களால்தான் இவ்வித நிலைமை ஏற்பட்டதென்பதை எடுத்துக் காட்டினோமேயானால், அதற்கும் தோழர் அவனாசிலிங்கம் செட்டியார் அவர்களைப் போன்ற தலைவர்கள் ''காங்கிரசின் வீரத்தினாலும், ஆண்மையாலும், சர்க்காராரும் மற்றக் கட்சியாரும் பயந்து கொண்டு, புதுச் சட்டங்கள் மூலம் பாதுகாப்புச் செய்து கொண்டார்கள்'' என்று சொன்னாலும் சொல்லலாம். ஆனாலும் அது விஷயத்தில் நமக்குக் கவலை இல்லை. இந்தியாவுக்கு யோக்கியமான சுயராஜ்ஜியம் என்பது கிடைத்ததாக வைத்துக் கொண்டாலும், எப்படிப்பட்ட சுயராஜ்ஜிய ஆட்சியிலும் இப்படிப்பட்ட காலித்தனங்கள் நடவாமல் இருப்பதற்கு அவசியமான சட்டங்கள் செய்ய வேண்டியது அவசியமே ஆகும்.

இந்திய அரசாங்கம் இதற்கு முன்னையே இந்தக் காரியம் செய்து இருக்க வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட காலித்தனங்களால் அவர்களுக்கும் சில சமயத்தில் அனுகூலமிருக்கிறபடியால், இதைப் பற்றி கவனிக்காமல் அவ்வப்போது அதுவும் தங்களுக்கு இஷ்டப்பட்டபோது கவனித்து தக்கது செய்து வருகிறார்கள்.



இனி வரப்போகும் தேர்தல் சம்பந்தமான பிரசாரங்களில், காங்கிரசுக்காரர்கள் பேசும் சந்தர்ப்பங்களில் எதிரிகளை அவன், இவன், அயோக்கியன், திருடன், தேசத் துரோகி, சர்க்கார் கூலிகள், அடிமைக் கூட்டம், குலாம் என்று எல்லாம் இழி மொழிகளில் பேசி வருவது போல் பேச நேரிட்டால், அவர்களுக்குப் புத்தி கற்பிக்காமல் இருப்பது என்பது சுலபத்தில் சகிக்கக்கூடிய காரியமாய் இருக்காது. அன்றியும் மற்றவர்கள் கூட்டங்களில் போய் காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய யோக்கியதைகளை எங்கு வெளிப்படுத்தி விடுவார்களோ என்று பயந்து கூட்டங்களில் கலாட்டா செய்து கலைக்க முயற்சிக்கும்போதும், அவர்களுக்குப் புத்தி கற்பிக்கவோ, பதிலுக்குப் பதில் செய்யவோ ஆசை ஏற்படாது என்று சொல்லவும் முடியாது.

ஆகவே கூட்டங்கள் ஒழுங்காயும் கண்ணியமான முறையிலும் நடைபெற வேண்டும் என்று கருதுகிற எவரும் சர்க்கார், பந்தோபஸ்தைக் கோரியே ஆக வேண்டிய நிலைமையை காங்கிரஸ்காரர்கள் உண்டாக்கி விட்டதால், இனி கூட்டங்கள் கிரமமாய் நடைபெற சர்க்காருக்குத் தெரிவித்து விட்டே கூட்டம் நடத்தக் கூடியதான ஒரு சட்டம் இருக்க வேண்டியது அவசியம் என்று கருதுகின்றோம்.

சேலத்தில் 144 ஏற்படக் காரணமாய் இருந்த விஷயங்களைப் பற்றி, தோழர்கள் அவனாசிலிங்கம் செட்டியாரும், வெங்கிடாசல ரெட்டியாரும் சேலம் கூட்டத்தில் எடுத்துச் சொல்லி, அதற்கு ஆக தங்கள் வருத்தத்தை தெரிவித்து மன்னிப்பு கேட்டுக்கொண்டதாக தமிழ்நாடு முதலிய பத்திரிகைகளில் வந்திருக்கும் விஷயங்களைப் பார்த்தாலே எவருக்கும் சுலபமாய் விளங்கும்.

அதுபோலவே வேலூரிலும் யார் நடத்தையால் 144 போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதும் பத்திரிக்கைகளிலிருந்தே விளங்கும்.

அதாவது தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் சார்பாக 28.6.35-ந் தேதியில் கோட்டை மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும் என்றும், அதில் பல தோழர்கள் பேசுவார்கள் என்றும் பெயரைக் கண்டே 25.6.35 தேதியிலேயே, அதாவது 3 நாளைக்கு முன்பிருந்தே நோட்டீசுகள் வெளியிட்டு, தண்டோராவும் போட்டு வந்தும், இதையறிந்த காங்கிரஸ்காரர்கள் 28.6.35-ல் அதே இடத்தில் போட்டிக் கூட்டம் நடத்த ஏற்பாடுகள் செய்தார்கள். இதனால் கலெக்டர் 144 போட வேண்டி வந்து கூட்டம் நிறுத்தப்பட்டுப் போயிற்றாம். ஜஸ்டிஸ் கட்சி பிரசாரத்துக்கு ஆரம்பித்த உடன் காங்கிரஸ்காரர்கள் இம்மாதிரியான நடத்தையை மேற்கொண்டதானது மிகவும் இழிவானதும் பயங்காளித்தனமானதும் என்பதோடு, இதைக் காங்கிரஸ் பத்திரிகைகளும் தலைவர்கள் என்பவர்களும் கண்டிக்காமல் இருப்பது வெறுக்கத்தக்கது என்றும் சொல்லுவோம்.



RangaRakes tamilnavarasam.com

ஆகையால் இந்த விஷயத்தில் சர்க்காரார் தங்கள் கடமையை உணர்ந்து கூட்டங்கள் ஒழுங்காய் நடைபெற பொறுப்பு ஏற்றுக் கொண்டு பந்தோபஸ்து செய்யவில்லையானாலும் 144 உத்திரவாவது போட்டு, காலித்தனங்கள் நடக்காமல் தடுத்ததை ஒரு அளவுக்காவது நல்ல காரியம் என்று சொல்லி பாராட்டித் தீர வேண்டியிருக்கிறது.

**குடி அரசு - துணைத் தலையங்கம் -** 07.07.1935



# கானாடுகாத்தான் வைசு.ஷ. பார்வதி – நடராஜன் திருமணம்

தலைவர் அவர்களே! மணமக்களே!! பெற்றோர்களே!!! தோழர்களே!!!! இன்று நடந்த இத் திருமணத்திற்கு நமது மாகாண அபிவிர்த்தி மந்திரியும், பிரபல கனவானுமான நண்பர் பி.டி.ராஜன் அவர்கள் தலைமை வகித்தது மிகவும் பாராட்டத்தக்கதாகும். சீர்திருத்த துரையில் மிக்க ஆர்வமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவராவார்.

அவரும் இம்மாதிரியான சீர்திருத்தங்களில் எப்போதும் முன்னணியில் நிற்பவர் என்பது நீங்கள் அறிந்ததேயாகும்.

சுருக்கமாகவும், விளக்கமாகவும் சொல்ல வேண்டுமானால், இத்திருமண மானது நேற்றே அரசாங்க ஆதாரத்தில் பதிவாகிவிட்டது.

நமது சமூக முறையில் உள்ள வழக்கப்படி இன்று நடந்த இந்நிகழ்ச்சி மணமக்கள் இருவரும் சதிபதிகளாக குடும்ப வாழ்க்கையில் இறங்கி விட்டார்கள் என்பதை விளம்பரப்படுத்துவதற்காகச் செய்யப்படும் காரியமேயாகும்.

எனினும், இத் திருமண நிகழ்ச்சி இயக்கங்களில் நடக்கும் மற்ற திருமண நிகழ்ச்சியைப் போல் இல்லாமல் சிறிது மாறுபட்டிருக்கலாம். இத்திருமணங்கள் சுயமரியாதைத் திருமணம் என்றும், அப்படிச் சொல்ல வெட்கப்படுபவர்களோ இஷ்டமில்லாதவர்களோ சீர்திருத்த திருமணம் என்றும் சொல்லப்படுவதுண்டு.

எப்படியானாலும் திருமண தத்துவத்தில் எவ்வித மாறுதலும் இல்லை. ஒரு புருஷனும், ஒரு பெண்ணும் கூடி கூட்டு வாழ்க்கை நடத்துவது என்ற தத்துவத்திலேயே தான் இது நடைபெற்றிருக்கிறது.

ஆனால் அத்தத்துவத்துக்கு ஆக நடைபெறும் நிகழ்ச்சிகளில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கலாம். இவைகள் காலதேச வர்த்தமானத்தில் தானாகவே ஏற்பட்டு வருகின்றன.

மனிதன் சுபாவத்திலேயே மாறுபாட்டை விரும்புகிறவன், அதிலும் இந்த காலமானது அறிவு சுதந்திரத்தைக் கொடுக்கும்படியான காலமாகப்



RangaRakes tamilnavarasam.com

போய்க் கொண்டு இருக்கிறது. மாறுதலும், அறிவும் சேர்ந்துதான் சுயமரியாதை என்றோ சீர்திருத்தம் என்றோ சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பற்றிப் பேசுவதை, சுயமரியாதை என்று சொல்லப்பட்டாலும், புராண மரியாதையோ, வைதீக மரியாதையோ, வேத மரியாதையோ கொண்டவர்களும் இன்று தானாகவே பல மாறுதலிலும், சீர்திருத்தங்களிலும் விழுந்து நீந்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

வைதீகர்கள் என்று சொல்லப்படும் கூட்டங்களில் முதன்மை பெற்ற பார்ப்பனர்களே திருமணம் முதலிய வைதீகச் சடங்குகள் என்பவைகளில் பெரியதொரு மாறுதல்களை கையாடிக் கொண்டு வருகிறார்கள்.

அவர்களில் அநேகர் திருமணங்கள் ஒரு நாளில் முடிந்து விடுகின்றன. முன்பெல்லாம் ஒரு நாள் கல்யாணத்துக்காக என்றே கோவிலுக்குப் போய் முடித்துக் கொண்டு இருந்தவர்கள் இப்போது கோவிலுக்குக்கூட போகாமலே வீட்டிலேயே ஒரே நாளில் திருமணத்தை முடித்துக் கொள்ளுகிறார்கள்.

காரணம் கேட்டால் ''சுவாமி கோவிலில் மாத்திரம் தானா இருக்கிறார்? எங்கும் இருக்கிறார். அப்படிப்பட்டவரை கோவிலில் மாத்திரம் இருக்கிறார் என்று கருதி கோவிலுக்கு போவது அரை நாஸ்திகம்'' என்று சொல்லி விடுகிறார்கள்.

ஆகவே மாறுதலும், சீர்திருத்தமும் அதிசயமானதல்ல. அன்றியும் இம்மாறுதலால் ஏதாவது நஷ்டம் ஏற்பட்டதா என்று பாருங்கள். முதலாவது பணம் மிச்சம். அவற்றை நல்ல காரியங்களுக்கு செலவு செய்யலாம். நேரக் கேடு, அதிகமான தொந்திரவு, தொல்லை அலைச்சல் முதலியவை இல்லை. அர்த்தமற்றதும், மூடநம்பிக்கையானதும், காட்டுமிராண்டித் தனமானதுமான வேஷங்கள், காரியங்கள் ஆகியவைகள் இல்லை. வீணாக 5 நாள் விருந்து போடுவதிலும், பார்ப்பானைக் கொண்டு குப்பை செத்தை போட்டுப் புகைத்து நமக்கு விளங்காத விஷயத்தைப் பற்றி பேசுவதிலும் ஓதுவதிலும் என்ன பயன்? சீர்திருத்தம் என்பதினால் மனித சமூகத்துக்கு எவ்வளவு நன்மை இருக்கிறது என்பதை கவனித்துப் பாருங்கள்.

அன்றியும் இன்று நடந்த மற்றொரு சங்கதியையும் நீங்கள் கவனித்து இருப்பீர்கள். அதாவது மாப்பிள்ளைக்கு பெண் ஒரு சங்கலியைக் கழுத்தில் மாட்டிற்று. பெண்ணுக்கு மாப்பிள்ளையும் ஒரு சங்கலியை கழுத்தில் மாட்டினார்.

இது ஆணும் பெண்ணும் வாழ்க்கையில் சமமே ஒழிய ஒருவருக் கொருவர் எந்த விதத்திலும் தாழ்ந்தவர்கள் அல்ல என்பதற்கு அறிகுறியாகும். இதை ஒரு புரட்சியான காரியம் என்றே சொல்லலாம்.

மணமகள் பார்வதி தனக்கு தாலிகட்டிக் கொள்ள இஷ்டமில்லை என்றும், தாலி பெண் அடிமையைக் குறிக்கும் சாதனம் என்று சொல்லி தாலியை



மறுத்ததால் இருவர் கழுத்திலும் ஒருவருக்கொருவர் சங்கிலி போட்டுக் கொள்வது என்கின்ற ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டியதாயிற்று.

இன்று நடந்த சீர்திருத்தங்களுக்குப் பெரிதும் பெண்ணும் பொருப்பாளி என்பதை சொல்லாமல் இருக்க முடியவில்லை.

தோழர் வைசு.ஷண்முகம் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தை சேர்ந்தவர் என்பதையும், அவர் சுமார் 20 வருஷங்களுக்கு முன்பிருந்தே சீர்திருத்த தொண்டில் ஈடுபட்டு உழைத்து வருகிறவர் என்பதும் நீங்கள் அறிந்ததேயாகும். இத் திருமணம் இம்முறையில் நடக்க ஏற்பாடு ஆகி இருக்கவில்லை என்றால் பெண்ணுக்கு கலப்பு மணமாவது செய்து கொள்வதன் மூலம் சீர்திருத்த முறையில் திருமணம் செய்து செட்டிமார் சமூகத்துக்கே ஒரு முதல் வழிகாட்டி ஆக வேண்டும் என்பதே முக்கிய ஆசை. தோழர் வைசு. அவர்களும் இதற்காகவே எவ்வளவோ முயற்சி எடுத்து சீர்திருத்தத்தில் தக்க ஆர்வமுள்ள இந்த மணமகனை தேர்ந்தெடுத்தார்கள்.

இதை சீர்திருத்த மணம் என்பதோடு சுதந்திரக் காதல் மணம் என்றும் சொல்லலாம். மணமகன் வீட்டார்களும், இச்சீர்திருத்தத்தை ஏற்றுக் கொண்டது பாராட்டத்தக்கது. செட்டியார் சமூகத்தார்களும் இவ்வளவு பேர் தம்பதிகள் சகிதம் வந்திருப்பது சீர்திருத்த வெற்றியைக் குறிக்கின்றது.

இந்த வைபவங்கள் எல்லாம் பெரிதும் இச்சமூகம் கண்டு களித்து இதை பின்பற்ற வேண்டும் என்கின்ற நோக்கத்தை முன்னிட்டே நடத்தப்படுவதாகும்.

கடைசியாக கனம் மந்திரியார் அவர்கள் ஒருநாள் சாவகாசத்தில் அழைக்கப்பட்டும் அவருக்கு இன்று வேறு இடங்களில் முக்கியமான வேலைகள் அமைக்கப்பட்டிருந்தும், எவ்வித ஆக்ஷேபனையும் சொல்லாமல் மிக்க திருப்தியுடனும், மகிழ்ச்சியுடனும் இன்று சரியாய் குறிப்பிட்ட நேரத்துக்கு விஜயம் செய்து நமது திருமண நிகழ்ச்சியை அலங்கரித்து பெருமைப்படுத்திக் கொடுத்த உதவிக்கு நாம் என்றும் நன்றியுள்ளவர் களாவோம் என்பதைத் தெரிவித்து விட்டு முடித்துக் கொள்கிறேன்.

*குறிப்பு: 07.07.1935 ஆம் நாள் நடைபெற்ற செட்டிநாடு கானாடுகாத்தான் தோழர் வைசு. சண்முகம் மகள் பார்வதி - காரைக்குடி தோழர் ப.மெ.மெ.மெ. மெய்யப்ப செட்டியார் மகன் நடராஜன் திருமணத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 14.07.1935**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனத் தொல்லை

தென்னாட்டில், அரசியலிலாகட்டும், சமூக இயலிலாகட்டும், பொருளாதார இயலிலாகட்டும் நமது பார்ப்பனர்களுடைய சூட்சிகள் அளவிட முடியாத அளவு தொல்லை விளைவித்து வருவது யாவரும் அறிந்ததேயாகும்.

இந்த நாட்டில் பார்ப்பனர்களுக்கு மத விஷயமாக கிடைத்துவிட்ட உயர்வே அவர்கள் மற்ற சமூகங்களுக்கு இவ்வளவு தொல்லைகளை விளைவித்து வர ஏதுவாயிருப்பதினாலே அவர்களுக்கு மத விஷயமாய் உள்ள ஆதிக்கத்தை முதலில் ஒழித்தாக வேண்டுமென்று இந்த பத்து வருஷ காலமாகச் சுயமரியாதை இயக்கம் உழைத்து வருகிறது.

இதுவரையில் பார்ப்பனத் தொல்லையிலும், கட்டுப்பாட்டிலும் இருந்து விலக எத்தனையோ பேர் எத்தனையோ காலமாக முயன்று வந்தும் அதற்கு முக்கிய ஆதாரமாய் இருந்து வந்த மதச் சலுகையை அசைக்க எவரும் துணிவு கொள்ளாததாலேயே ''பார்ப்பன ஆதிக்கத்தை அசைக்க யாராலும் முடியாது'' என்கின்ற பெருமையைப் பார்ப்பனர்கள் பெற்று வந்திருக்கிறார்கள்.

ஆனால், சுயமரியாதை இயக்க பிரசாரத்தின் பயனாய் ஒரு அளவுக்கு மக்கள் தெளிவு பெற்று மத ஆதிக்கத்திலும் கை வைக்க ஆரம்பித்த பிறகே பார்ப்பனர்கள் பயந்து தங்கள் ஆதிக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள புதிய புதிய வழிகள் கண்டு பிடித்து பூமிக்கும் வானத்துக்குமாகத் தாவிக் குதிக்கும்படியான அளவு முயற்சியோடு பாடுபட வேண்டியவர்களாய் இருந்து வருகிறார்கள்.

பார்ப்பனர்க்குள்ளாகவே தங்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு ''அரசாங்கத்தை எதிர்க்கும்'' தேசீயம் என்னும் பேரால் ஒரு பிரிவும், ''சர்க்காரை ஆதரிக்கும் உத்தியோகம் பார்ப்பது'' என்னும் பேரால் ஒரு பிரிவும், ''மதங்களைக் காப்பாற்றும் வைதீகம்'' என்னும் பேரால் ஒரு பிரிவுமாகப் பிரிந்து மூன்று துறைகளையும் சுவாதீனப்படுத்திக் கொண்டு அவைகளுக்குத் தாங்களே கர்த்தாக்களாய் இருந்து கொண்டு மற்ற மக்களை எந்தத் துறையிலும் முன்னேறாதபடி தொல்லை விளைவித்து வருகிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டது பார்ப்பனரல்லாத மக்கள், பார்ப்பன ஆதிக்கத்தில் இருந்து விடுவிப்பதற்காகவே அதாவது பார்ப்பனர்களின் எதிர்ப்பிலும், தகர்ப்பிலும் சிக்கிக் கொண்டு வெகுபாடுபட வேண்டியதாய் இருந்து வருகிறது.



பார்ப்பனர்கள் ஆண் பெண் அடங்கலும் எல்லோரும் படித்தவர்கள் சூட்ச்சி தெரிந்திருக்கிறவர்கள், சகல துறைகளிலும் ஏற்கனவே ஆதிக்கம் பெற்று மக்களை அடக்கி மிரட்டி ஆண்டு வருகிறவர்கள்.

பார்ப்பனரல்லாதார்களோ 100க்கு 90 பேருக்கு மேல்பட்டு கல்வியறிவு இல்லாதவர்கள், அரசியலிலும், சமூக இயலிலும், மத இயலிலும் தலைமுறை தலைமுறையாயடிமைப்படுத்தப்பட்டுக் கிடந்ததின் பயனாய் உலக வாழ்க்கையே அடிமைத்தனமானது என்று கருதி நுகத்தடிக்குக் கழுத்தை நீட்டிக் கொண்டே இருந்து வந்தவர்கள். ஆதலினாலேயே பார்ப்பனர்கள் எல்லோரும் பார்ப்பனரல்லாதார் சுதந்திர முயற்சி எதிரிகளாகவும், விரோதிகளாகவும் இருக்கவும், பார்ப்பனரல்லாதாரில் மாத்திரம் பல பார்ப்பனரல்லாதார் பார்ப்பனர்களுக்கு அடிமையாகவும், ஒற்றர்களாகவும் இருந்துவரவுமான காரியம் நடைபெற இடமேற்பட்டு விடுகிறது.

இந்தக் காரணங்களாலேயும், பார்ப்பனரல்லாதார் முயற்சிக்கு வெற்றி பெற முடியாமல் இருந்து வருகிறது என்ற போதிலும், ஏதோ பல தோழர்கள் உண்மை முயற்சியால் ஒரு அளவுக்கு பார்ப்பனரல்லாதார் சமூகம் வெற்றி பெற்று அரசியலில் சிறிது ஆதிக்கம் பெற்று முழு விடுதலைக்குப் பாடுபட்டு வருகிறார்கள் என்றாலும் உத்தியோகம் முதலிய காரியங்களால் பார்ப்பனரல்லாதார்க்குள்ளும் ஒருவருக்கொருவர் கட்சிகளும், மனக்கசப்புகளும் ஏற்பட்டு கொஞ்ச நஞ்சம் ஏற்பட்ட வெற்றியும் மேல் நோக்காமல் கீழே நோக்கும்படியான நிலையிருக்கிறது.

பார்ப்பனரல்லாதார் கட்சி - இயக்கம் என்பதை பார்ப்பனரல்லாதார் மக்கள் எல்லோரும் சேர்ந்து ஒற்றுமையாய் ஆதரிக்க முன் வராமல் அலட்சியமாயிருந்து வந்ததால் இயக்கம் முன்னேற்றமடைய இடமில்லாமல் எப்படியாவது உயிருடன் இருந்தால் போதும் என்கின்ற நிலையில் உயிருக்குப் போராட வேண்டிய நிலைமையிலிருக்கிறது.

இதைப் பார்ப்பனர்கள் நன்றாய்ப் பயன்படுத்திக் கொண்டு இது சமயம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை யடியோடு நசுக்கப் பார்க்கிறார்கள்.

இன்று எல்லா பார்ப்பனர்களும் ஒன்று சேர்ந்து கொண்டதோடு, எல்லாப் பார்ப்பனப் பத்திரிகைகளும் ஒன்று சேர்ந்து கொண்டு ஜஸ்டிஸ் கட்சியையும், அதன் பிரமுகர்களையும் பழிப்பதும், இழிப்பதும், பொய்யும், புளுகும், புரட்டும், பித்தலாட்டமும் கொண்டு சதா நிந்திப்பதும், விஷமப் பிரசாரம் செய்வதுமே தொழிலாகக்கொண்டு வேலை செய்தும் வருகின்றன. புதிய சீர்திருத்தம் வரப் போகின்றது என்பதை உணர்ந்த உடனும் அதில் ஏராளமாக ஆதிக்கம் செலுத்த தாராளமாய் இடம் இருக்கிறது என்பதை அறிந்ததும் இப்போது முன்னிலும் அதிகமான ஆத்திரமும் வேகமும் கொண்டு வேலை செய்கிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே இப்போது ஜஸ்டிஸ் கக்ஷியைப் பற்றிப் பார்ப்பனர்கள் சொல்லி வரும் குற்றங்கள் குறைகள் என்ன என்பதை யாருமே அறிவார்கள். தோழர் காந்தியார் முதல் சத்தியமூர்த்தி வரை பார்ப்பனரல்லாதார் கட்சி நடவடிக்கைகளில் எதையாவது ஒன்றைக் குறித்தோ, கக்ஷிப் பிரமுகர்களின் நடத்தைகளில் எதையாவது ஒன்றைக் குறித்தோ விளக்கிச் சொல்லி யோக்கியமான முறையில் குறை கூறியவர்களுமல்ல.

பாமர மக்களின் முட்டாள்தனத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு,

ஜஸ்டிஸ் கட்சியார் பெண் பிள்ளையின் தாலியை அறுத்தார்கள் என்றும்;

தொண்டர்களை போலீசார் தடியாலடித்ததை ஆதரித்தார்கள் என்றும்;

கைதிகளுக்கு மோர் கொடுக்கவில்லை என்றும்;

சர்க்கார் கிஸ்து குறைக்கவில்லை என்றும்;

ஏராளமான சம்பளம் வாங்குகிறார்கள் என்றும்,

ராஜினாமா செய்யவில்லை என்றும்,

மற்றும் இதுபோன்ற அர்த்தமற்றதும், அறிவற்றதுமான வார்த்தைகளைச் சொல்லி மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். இவைகளை நமது மக்கள் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்ப்பதில்லை என்பதோடு, வயிற்றுப் பிழைப்பின் மூலமும், சுயநலத்தின் மூலமும், பார்ப்பனர்களுக்கு அடிமையாக வேண்டிய நிலையில் இருக்கும் சில பார்ப்பனரல்லாதார்களும் இப்படிப்பட்ட நாணயமும், பொருப்புமற்ற பிரசாரத்துக்கு உதவிகளாகவும், கூலிகளாகவும் இருந்து அதைப் பரவ இடம் கொடுத்து வருகிறார்கள்.

யாரோ ஒரு பெண்ணை ஏதோ ஒரு மேஜிஸ்ட்ரேட் தண்டித்துவிட்டு தாலியைப் பற்றி அலக்ஷியமாய் பேசினார் என்றால் அதற்கு ஜஸ்டிஸ் கட்சியார் எப்படி ஜவாப்தாரி என்பதை சிறிதும் யோசிக்காமல் அதை ஜஸ்டிஸ் கட்சி மீது பழி சுமத்தி விஷம பிரசாரம் செய்வது என்பது எவ்வளவு இழிவான காரியம் என்பதையும் அரசியல் துறையில் இருக்கிறவர்கள் எவ்வளவு அயோக்கியத்தனத்துக்கு துணிகிறார்கள் என்பதையும் பொது மக்கள் யோசிக்க வேண்டும்.

அதுபோலவே தொண்டர்களை போலீசார் அடித்தார்கள் என்பதும் இந்தியா பூராவும் நிகழ்ந்த விஷயமே தவிர இங்கு மாத்திரம் நடந்ததல்ல என்பதோடு சத்தியாக்கிரகத்தை அடக்க சர்க்கார் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் போலீசாரை விட்டு அடக்கச் சொன்னதும் ஒன்றாகும்.

இதற்கு ஜஸ்டிஸ் கட்சியார் என்ன செய்ய முடியும்? ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரஸ் சத்தியாக்கிரகத்தை ஒப்புக் கொண்டவர்கள் அல்ல என்பதோடு ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் கையில் போலீஸ் நிர்வாகம் இல்லை என்பது யாவரும் அறிந்ததாகும்.



கைதிகளுக்கு மோர் கொடுக்கவில்லை என்பதும், ஜெயில் ஆரம்பமான காலம் முதல் இருந்து வரும் முறையீடாகும். இதற்காகப் பல தடவை முயற்சி செய்தும் அரசாங்கத்தார் ஒப்புக் கொள்ளவில்லை என்பதோடு ஜெயில் நிர்வாகம் ஜஸ்டிஸ் மந்திரிகள் கையில் இல்லை என்பதும் யாவரும் அறிந்ததாகும்.

சர்க்கார் பூமி வரியைக் குறைக்கவில்லை என்பதிலும் கொஞ்சமும் அர்த்தமில்லை. பூமி வரி விதிக்கும் அதிகாரம் ஜஸ்டிஸ் மந்திரிகள் கையில் இல்லை. சர்க்கார் மந்திரிகளைச் சேர்ந்தது என்பதோடு வரவு சிலவு இலாக்கா மந்திரியின் கையில் இருப்பதாகும்.

செலவைக் குறைக்காமல் வரியைக் குறைப்பதால் அரசாங்கம் நடைபெறாது என்கின்ற வாதம் பொருளாதார மந்திரியுடையதாகும். செலவைக் குறைப்பதில் பெருஞ் சம்பள விஷயமும் சில இலாக்காக்கள் சென்னை அரசாங்கத்தின் கையில்கூட இல்லாமல் இந்திய அரசாங்கத் தினிடமும், இந்தியா மந்திரியிடமும் இருந்து வருவதாகும். காங்கிரஸ் பார்ப்பனர்களுடையதாதலாலும், பார்ப்பனர்களே பெரிய உத்தியோகங் களில் இருப்பதாலும், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், சம்பள விஷயத்தில் பார்ப்பனர்களோ, காங்கிரசோ வாயைத் திறப்பதே இல்லை.

இந்த நிலையில்கூட வரி குறைப்பு விஷயத்தில் ஜஸ்டிஸ் மந்திரிகள் ஒரு அளவுக்கு சிபார்சும் செய்திருக்கிறார்கள். அதில் வெற்றியையும் பெற்றிருக்கிறார்கள்.

ஏராளமான சம்பளம் வாங்குகிறார்கள் என்பதிலும் அறிவுடைமை இருப்பதாகக் காணவில்லை. மந்திரிகள் சம்பளம் 5000 ரூ. என்பது சட்டப்படி ஏற்பட்ட சம்பளமாகும் என்றாலும் ஜஸ்டிஸ் மந்திரிகள் அதிலிருந்தும் 1000 ரூ. குறைத்துக் கொண்டு 4000 ரூ. தான் வாங்குகிறார்கள்.

இந்த நாலாயிர ரூபாயில் பெரும்பாகம் கட்சிப் பிரசாரத்திற்கும், கட்சிப் பத்திரிகைகளுக்கும், கட்சி சம்பந்தமான மற்றச் செலவுகளுக்கும் செலவு செய்து வருகிறார்கள்.

கேவலம் படி விஷயங்களில் ஒரு சிறு பாகம்கூட கட்சி நன்மைக்குக் கொடுக்க சவுகரியமில்லையென்றும் தினம் 20 ரூபாய் ஒரு நபருக்குச் சாப்பாட்டுச் செலவுக்கு வேண்டியிருக்கிறதென்றும் காங்கிரஸ் இந்திய சட்டசபை பிரதிநிதிகள் சொல்லும்போது கிட்டத்தட்ட வாங்கும் சம்பளங்களில் சரி பகுதிக்கு மேலாகவே கட்சி நன்மைக்கு செலவு செய்யும் மந்திரிகளை அதிகச் சம்பளம் வாங்குகிறார்கள் என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும் என்பது நமக்குப் புரியவில்லை. மொத்தத்தில் சம்பளங்களைச் சட்டப்படி குறைத்துவிட்டால் அப்போது அதிகச் சம்பளமென்கின்ற பேச்சே இருக்காது. அதற்கு காங்கிரசுக்காரர் உண்மையாய் முயர்ச்சிப்பது கிடையாது.



RangaRakes tamilnavarasam.com

கடைசியாக, ''இந்த காரியங்கள் செய்ய முடியவில்லையானால் ஏன் ராஜினாமா செய்யவில்லை?'' என்று பார்ப்பனர்கள் கேட்கிறார்கள். ராஜினாமா செய்துவிட்டதினால் என்ன காரியம் ஆகிவிடும் என்பதை நன்றாய் யோசித்துப் பார்க்க வேண்டும். ராஜினாமா செய்த ஸ்தானம் அப்படியே யெப்போதும் காலியாக இருக்குமா? இதுவரை காங்கிரசுக்காரர்களோ மற்றவர்களோ ராஜினாமா செய்த ஸ்தானங்கள், உத்தியோகங்கள் என்பவை ஏதாவது இருக்குமானால் அது காலியாகவே இருக்கிறதா? அல்லது காங்கிரஸ்காரர்களாவது மறுபடியும் அதில் பிரவேசிக்காமல் இருந்திருக் கிறார்களா? அப்படியே ராஜினாமா செய்து அந்த ஸ்தானங்களும் காலியாக இருந்தால் மிதவாதிகள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், ஆதி திராவிடர்கள், வர்ணாச்சிரமக்காரர்கள் எந்தக் கட்சியும் சேராதவர்கள் ராஜ விசுவாசிகள் ஆகிய கூட்டத்தார்கள் அந்த ஸ்தானங்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்களா?

அவர்களும் ஏற்றுக்கொள்வதில்லையென்றே வைத்துக் கொண்டாலும் சர்க்காரார் தங்கள் உத்தியோகஸ்தர்களைக் கொண்டு அந்த ஸ்தானங்களைப் பூர்த்தி செய்து காரியங்கள் நடத்த மாட்டார்களா என்பவைகளையெல்லாம் யோசித்துப் பார்த்தால் ராஜினாமா செய்வது எவ்வளவு பயனற்றதும், முட்டாள்தனமானதுமான காரியம் என்பது விளங்காமல் போகாது.

மேல் குறிப்பிட்ட 4, 5 காரியங்களுக்காகவும், மற்றும் தொட்டதற் கெல்லாமும் ''ஏன் ராஜினாமா செய்யவில்லை'' ''ஏன் ராஜினாமா செய்யவில்லை'' என்று கேட்கும் காங்கிரஸ்காரர்கள் தாங்கள் ஏன் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்யவில்லை என்று கேட்டால் அதற்கு என்ன பதில் சொல்லுவார்கள்? கேட்ட உடனே திருடனைத் தேள் கொட்டியது போல் தலையைக் கவிழ்ந்து கொண்டு ஓடப் பார்க்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

உதாரணமாக சென்னை சட்டசபையில் காங்கிரஸ்காரர்களுக்கு நூற்றுக்கணக்கான தோல்விகள் ஏற்பட்டன. ஏன் ராஜினாமா செய்யவில்லை?

அதுபோல இந்திய சட்டசபையிலும் பல தோல்விகள் ஏற்பட்டன. இவர்கள் வெற்றி பெற்றதாகச் சொல்லி பெருமை பேசும் காரியங்கள் ஒவ்வொன்றையும் சர்க்காரார் நிராகரித்து அவமானப்படுத்தி இருக்கிறார்கள் என்று அவர்களே சொல்லிக் கொள்ளுகிறார்கள். அப்படி இருக்க ஏன் காங்கிரஸ்காரர்கள் ராஜினாமா செய்யவில்லை.

காங்கிரசுக்காரர்கள் இந்தச் சர்க்காராருடைய யோக்கியதைகள் பூராவும் தெரிந்தும் இந்தியாவில் அவர்களுடைய ஆட்சியை ஒழித்துப் பூரண சுதந்திரமுள்ள நாடாக இந்தியாவை ஆக்குகிறோம் என்று காங்கிரசில் தீர்மானித்துக் கொண்டும், சுயமரியாதையைப் பற்றி பிரமாதமாய்ப் பேசிக் கொண்டும் இருக்கும் காங்கிரஸ்காரர்கள், ''இந்திய அரசருக்கும், சட்டப்படி ஏற்பட்ட அவரது அரசாங்கத்துக்கும், மற்றும் அரசர் பெருமானின் சந்ததி யார்களுக்கும், பக்தி விசுவாசத்துடன் இருந்து நடந்து கொள்ளுகிறேன்'' என்று ''கடவுளை'' வேண்டி சத்தியம் செய்து கொடுத்து, ''ஒரு காரியமும் செய்ய முடியாத'' சட்டசபையிலும், கமிட்டியிலும் தொங்கிக் கொண்டும் நத்திக் கொண்டும் தினம் 20ரூ. படி வாங்கிக் கொண்டும் இருக்கும்போது அதைவிடப் பெரிய பதவியில் இருந்து கொண்டு ''பொது ஜனங்களுக்கு ஒரு அளவுக்காவது தாங்கள் எண்ணுகின்றபடி நன்மை செய்ய இடம் இருக்கிறது'' என்று கருதிக் கொண்டிருக்கும் கூட்டத்தார் எப்படி ராஜினாமா செய்வார்கள் என்றும், இப்படிப்பட்டவர்கள் அவர்களை ராஜினாமா செய்யும்படி கேட்பது யோக்கியப் பொருப்பும், நாணையமும் அறிவுடை யவுமான காரியமா என்றும் கேட்கின்றோம்.

ஆகவே இன்று தோழர் ராஜகோபாலாச்சாரி முதல் சத்தியமூர்த்தி ஈறாக, ''ஜஸ்டிஸ் மந்திரிகள் ராஜினாமா செய்ய வேண்டும், ஜஸ்டிஸ் மந்திரிகள் ராஜினாமா செய்ய வேண்டும்'' என்கின்ற ஒரே பல்லவியைப் பாடிக் கொண்டு திரிவதும், அவர்களது கூலிகளும், அடிமைகளுமான சில பார்ப்பனரல்லாதாரும் அதையே சொல்லிக் கொண்டு திரிவதும் எவ்வளவு விஷமத்தனமானதும், போக்கிரித்தனமான காரியம் என்பது இப்போதாவது விளங்குகின்றதா? என்றுதான் கேட்கின்றோம்.

சுமார் 15 வருஷ காலமாகவே பார்ப்பனர்கள் ஜஸ்டிஸ் கட்சி மந்திரி சபையை அழிக்க என்னென்னமோ முயற்சி செய்து பார்த்தார்கள். 1927-ல் காங்கிரஸ் ''கட்டளைக்கு'' விரோதமாய் மந்திரிகளை ஏற்படுத்தினார்கள்; ஆதரித்தார்கள். மந்திரிகளுக்குச் சிபார்சாய் இருந்தார்கள். மந்திரிகளிடம் பேச வக்காலத்துப் பெற்று பணமும் சம்பாதித்தார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன சொன்னார்கள் என்றால், ''நாங்கள் இந்த மாதிரி எல்லாம் செய்யாவிட்டால் தேசத் துரோகிகள், அந்த ஸ்தானங்களில் அமர்ந்து கொள்ளுவார்கள்'' என்று சமாதானங்கள் சொன்னார்கள்.

இதை வெளி மாகாண காங்கிரசுக்காரர்களே ஒப்புக் கொள்ளவில்லை.

அப்படி இருக்க இப்போதுள்ள இந்த மந்திரிகளும், மந்திரி கட்சியார்களும் மந்திரி ஸ்தானத்தை ''ராஜினாமா செய்து விட்டால் சமூகத் துரோகிகளும், ஜாதி அகம்பாவக்காரர்களும், பார்ப்பனக் கூலிகளும், அடிமைகளும், அந்த ஸ்தானத்தில் அமர்ந்து கொண்டு பொது ஜனங்களின் சுயமரியாதைக்கும் சுதந்திரத்துக்கும் கேடு செய்வார்கள் என்பதோடு பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கும் துரோகம் செய்து வருவார்கள்'' என்று கண்ணியமாய் கருதினால் அவர்கள் எப்படி ராஜினாமா செய்ய முடியும்?

தோழர் சத்தியமூர்த்தி தான் மந்திரி வேலைக்கு ஆசைப்படுவதில்லை என்று எப்போதாவது சொன்னாரா? அல்லது எந்த மந்திரியையும் ஆதரிப்ப தில்லை என்று எங்காவது பொய் சத்தியமாவது செய்து கொடுத்தாரா?





RangaRakes tamilnavarasam.com

ஒன்றும் இல்லாமல் ''நீ மந்திரியாய் இருப்பது தேச துரோகம்; நான் மந்திரியாய் இருப்பதே தேசபக்தி'' என்று சொன்னால் இதை எந்த முட்டாள் தான் கேட்க முடியும் என்று கேட்கின்றோம்.

டாக்டர் சுப்பராயன் மந்திரிசபையை ஏற்படுத்தினவர்கள், காங்கிரசுக் காரர்கள் என்பதும், அதை ஆதரித்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதும் கடைசியாக டாக்டர் சுப்பராயன் தீண்டப்படாதவர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் கொடுத்தவுடன் அவரையே ஒழிக்க முயற்சி செய்தும் எப்படியாவது டாக்டர் சுப்பராயன் வராமல் இருக்க வேண்டும் என்பதற்காக ஜஸ்டிஸ் மந்திரிசபையை ஏற்படுத்த 1930-ல் இவர்கள் பாடுபட்டதும் காங்கிரஸ் தேசீயப் பத்திரிகைகள் இந்து, சுதேசமித்திரன் உள்பட எல்லாம் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்து நிற்கின்றதும் யாரும் அறியாததா என்று கேட்கின்றோம்.

ஆகவே காங்கிரஸ்காரர்கள் (பார்ப்பனர்கள்) என்பவர்களுக்கு எப்படியாவது எந்தக் காரியம் செய்தாவது பதவி அடைய வேண்டும் என்பதைத் தவிர வேறு ஒரு லட்சியமும் இல்லை என்பதையும் இதற்காக எவ்வளவு பொய்யும், புழுகும், அக்கிரமமும், அயோக்கியத்தனமும் செய்யலாம் என்று அவர்கள் கருதி இருக்கிறார்கள் என்பதையும் அதையே அவர்களது லட்சியமாய்க் கொண்டு இருந்து வருகின்றார்கள் என்பதையும் தெரிவிக்கவே இதை எழுதுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 14.07.1935**



# சாயம் வெளுத்தது

## ஹரிஜன சேவைப் புரட்டு

''இந்து சமூகத்தில் உள்ள தீண்டாமை என்னும் கொடுமையை அடியோடு ஒழித்தாலல்லது இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைக்காது''

''தீண்டாமை ஒழிப்பதற்கு முன் சுயராஜ்ஜியம் கிடைத்தாலும் நிலைக்காது''

''தீண்டாமை ஒழிக்கப்படாததற்கு முன் சுயராஜ்ஜியம் கிடைப்பதாய் இருந்தாலும் அதை நான் ஏற்க மாட்டேன்''

என்பதான இந்த வாக்கியங்களும் மற்றும் இவை போன்ற அனேக வாக்கியங்களும் தோழர் காந்தியாரின் 1920-ம் வருஷத்திய ''அருள்'' மொழிகளாகும்.

இந்த மொழிகள் நாளுக்கு நாள் பலம் பெற்று இன்று தீண்டாமை ஒழிப்புக்குப் பொது மக்களிடம் 20, 30 லட்சக்கணக்கில் ரூபாய்கள் வசூல் செய்து அவற்றைக் கொண்டு ஹரிஜன சேவை என்னும் பேரால் ஒரு ''தனி இயக்கத்தையும்'' ஏற்படுத்தி வேலைகள் நடத்தப்பட்டு வருவதாக காங்கிரஸ்காரர்கள் சொல்லுகின்றார்கள்.

மற்றும் தோழர் காந்தியார் அரசியல் கைதியாய் சிறையில் இருக்கும் போதும் தனக்குத் தீண்டாமை விலக்கு வேலை செய்ய தாராளமாய் இடம் கொடுக்காவிட்டால் தான் பட்டினி கிடந்து சாகப் போவதாய் சர்க்காருக்குத் தெரிவித்து அதனால் பட்டினியும் கிடந்து அதற்காக விடுதலையும் பெற்று இருக்கிறார்.

ஆகவே காங்கிரசானது தீண்டப்படாதவர்கள் என்பவர்களுக்கு ஆக மிகவும் பாடுபடுவதாகவும், தீண்டாமை விலக்கை மிகவும் முக்கியமாய்க் கருதி இருப்பதாகவும் உலகம் முழுவதும் நம்பும்படியாகச் செய்து கொண்டது.

தோழர் காந்தியாரும் தீண்டாமை விலக்கில் மிகக் கவலையுடன் இருப்பதாகவும் காட்டிக் கொண்டு வந்திருக்கிறார்.



RangaRakes tamilnavarasam.com

இவைகள் எல்லாம் பேச்சிலும் எழுத்திலும் மாத்திரம் தான் இருந்து வருகின்றனவே ஒழிய காரியத்தில் இல்லை என்பதை பல உதாரணங்களால் சமீப காலமாக பொதுமக்கள் உணர்ந்து வருகிறார்கள் என்பது யாவரும் ஒப்புக் கொள்ளாததாகும்.

வட்டமேஜை மகாநாட்டில் தோழர் காந்தியார் ''எனது உயிர் போனாலும் தீண்டப்படாதார் என்பவர்களுக்குப் பிரதிநிதித்துவ ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கவோ பிரித்துக் கொடுக்கவோ சம்மதிக்க மாட்டேன்'' என்று சொன்னார். அதே சமயத்தில் ''முகமதியர்களுக்குத் தனித் தொகுதியால் தெரிந்தெடுக்கும் சுதந்திரம் கொண்ட பிரதிநிதித்துவமும் ஸ்தானமும் கொடுக்க சம்மதிக்கிறேன்'' என்றும் சொன்னார். இப்படிச் சொன்னதானது தோழர் காந்தியார் விஷயங்களை உணர்ந்து பார்க்காமலும், அனுபவங்களை அறியாமலும் சொன்னார் என்று யாரும் சொல்லிவிட முடியாது.

இந்தியாவில் இந்துக்கள் என்று சொல்லப்பட்ட சமூகம் சுமார் 22 கோடி மக்களைக் கொண்டதாய் இருக்குமானால் அதில் 3½ ல் ஒரு பங்கு மக்கள் தீண்டப்படாதவர்களாய் இருக்கிறார்கள் என்பதும், அவர்களின் ஜனத்தொகை 100-க்கு 30 வீதம் பிரதிநிதித்துவம் பெற அருகதை இருந்தாலும் மொத்த பிரதிநிதித்துவங்களில் 100க்கு இருவர், ஒருவர்கூட தனித் தொகுதி இல்லாமலும் ஒதுக்கி வைக்காமலும் சர்க்காராரே பார்த்து, தயவு வைத்து அவர்களுக்கென்றே ஒன்று இரண்டு ஸ்தானங்கள் நியமனம் மூலம் வழங்காமலும், அவர்கள் (தீண்டப்படாதவர்கள்) எந்தப் பிரதிநிதித் துவத்தையும், பொது ஜனங்களின் தயவாலோ, பொதுத் தேர்தல் மூலமாகவோ அடையவில்லை என்பதை நன்றாய்த் தெரிந்து இருந்தும் அவர்களுக்கு எந்த பிரதிநிதித்துவமும் தனித் தொகுதி மூலமோ, ஸ்தானங்கள் ஒதுக்குவது மூலமோ கூடவே கூடாது என்று சொன்னார் என்றால் இதைத் தெரியாமல் சொன்னார் என்று யாரும் சொல்லிவிட முடியாது.

ஆகவே காந்தியார் மேல்கண்டபடி சொன்ன பிறகு கடைசியாக அரசாங்கத்தார் ஏதோ சில பிரதிநிதித்துவங்கள் கொடுக்க சம்மதித்த பிறகு அதையும் ஒழிக்க தோழர் காந்தியார் பட்டினி கிடந்து அதை ஒழித்து பிறகு ஏதோ ஒரு வகையில் தக்க பயனற்ற முறையில் பிரதிநிதித்துவம் அடைய முடிந்தது என்றே வைத்துக் கொள்ளலாம்.

எனவே தீண்டாமை ஒழிக்கப்படாமல் சுயராஜ்யம் பெற முடியாது என்றும், மற்றும் என்ன என்னமோ சொன்னவர்கள் தீண்டாதவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படியாவது ஏதாவது செய்தார்களா என்பதை மேல் கண்ட சம்பவங்களைக் கொண்டு பார்த்தால் அதன் தன்மை விளங்காமல் போகாது.

அரசியலில்தான் அவர்கள் நிலை இந்த கதியானால், சமூக இயலில் அவர்களுக்கு காங்கிரஸ்காரர்கள் செய்த மரியாதை என்ன என்று பார்ப்போம்.



தீண்டாதவர்களுக்கு ஆக வழி நடைப்பாதை விஷயங்களில் இருந்துவரும் குறைகள் சர்க்கார் மூலமாய் ஏதாவது ஒன்று இரண்டு தீர்க்கப்பட்டிருக்கலாம். அல்லது ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் ஏதாவது செய்திருக்கலாம். அல்லது தீண்டப்படாத மக்கள் என்பவர்கள் தாங்களே முயற்சி செய்து சிறிது சிறிதளவாவது தீர்த்துக் கொள்ளப்பட்டிருக்கலாம் என்று சொல்லலாமே ஒழிய காந்தியாராலோ காங்கிரசுக்காரர்களாலோ ஒரு சிறு தடையையாவது நிவர்த்திக்கப்பட்டிருக்கலாம் என்று சொல்வதற்கு இன்று வரை தக்க ஆதாரம் ஏதும் இல்லை.

அன்னியத்துணி மறியல், கள்ளுக்கடை மறியல், சட்டமறுப்பு, உப்புக் காய்ச்சுவதற்கு முயற்சி என்கின்ற காரியங்கள் மாத்திரம் வெகு வேகமாகவும், வெகு தியாகமாகவும் நடந்ததே ஒழிய மற்றபடி தீண்டப்படா தவர்களுக்கு தெருவு, குளம், பள்ளிக்கூடம், சத்திரம், கோவில் முதலியவைகள் அனுமதிக்கப்படும் என்பதற்காக பொது மக்களிடம் பணம் வசூல் செய்து கொண்டதே தவிர மேல் கொண்டு ஒரு காரியமும் அவர்களுக்காக நடந்ததாகச் சொல்ல முடியவில்லை.

மற்றும் ஏதாவது நடந்ததாகச் சொல்லக் கூடும் என்றாலோ அது தீண்டப்படாதவர்களின் அசுத்தங்களையும், தீண்டாமை நிலை நிற்க வேண்டிய அவசியத்துக்கு காரணங்களையும் மக்கள் அறியும்படியாக செய்தார்கள் என்றுதான் சொல்லலாம். எப்படியெனில் தீண்டப்படாதவர் களுக்கு சோப்பு கொடுப்பது, எண்ணை சீயக்காய் கொடுப்பது முதலிய காரியங்கள் செய்வதன் மூலம், ''தீண்டப்படாதவர்கள் அசுத்தமானவர்கள், முதலில் அவ்வசுத்தங்களை நீக்க வேண்டியது அவசியம்'' என்று ஜனங்கள் நினைக்கும்படியாக அவர்கள் காட்டிக் கொடுத்துக் கொண்டு வந்தார்கள்.

அசுத்தமும், அழுக்கும் இன்று தீண்டப்படாதவர்களிடம் மாத்திரம் இருக்கின்றது என்று யாரும் சொல்லிவிட முடியாது. அன்றியும் தீண்டப் படாதவர்களுக்கு சோப்பும், எண்ணை சீயக்காயும் கொடுப்பது சுகாதார வேலையாகுமே ஒழிய, ஒரு நாளும் தீண்டாமை விலக்கு வேலை ஆகு மென்று சொல்ல முடியவே முடியாது.

நிற்க இந்த மாகாணத்தைப் பொருத்த வரையில் தீண்டப்படாத சமூகத்தாருக்கு ஜஸ்டிஸ் கட்சியாரும், சர்க்காரும் எவ்வளவு தூரம் நன்மை செய்ய முடியுமோ அவ்வளவும் செய்திருக்கிறார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் தீண்டப்படாதவர்கள் கல்வி விஷயத்தைப் பிரத்தியேகமாய் கவனிக்க ஏற்பாடு செய்தார்கள். அவர்களுக்கு குடியிருக்க நிர்ப்பந்தமான இடங்களில் இடவசதி செய்து கொடுத்தார்கள். அவர்களுக்கு சிற்சில இடங்களில் கூடிய வரையில் பூமி அடமானமும் செய்து கொடுத்தார்கள்.



RangaRakes tamilnavarasam.com

அவர்களுக்கு உத்தியோகங்களிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் பிரதிநிதித்துவத்துக்கு இடம் ஒதுக்கி வைத்து அமரச் செய்தார்கள்.

இவ்வளவும் செய்தது மாத்திரம் அல்லாமல் பொது ரஸ்த்தா, கிணறு, குளம், குட்டை, மார்கட்டு, கோர்ட்டு ஸ்தலங்கள் ஆகிய எல்லாவற்றிலும் மற்றப் பிரஜைகளுக்கு உள்ள சகல சுதந்திரங்களையும் சட்டபூர்வமாய் ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

''பொதுவாக குளம், கிணறு, ரஸ்தா, மார்க்கட்டு ஆகியவைகளில் தீண்டப்படாதவர்கள் என்பவர்கள் புழங்குவதை யாராவது தடுத்தால் அவர்களுக்கு 100 ரூ அபராதம் விதிக்கப்படும்'' என்று கூட சட்டம் செய்து, அதை இன்று லோகல் போர்ட் ஆக்டிலும், முனிசிபல் ஆக்டிலும், பொது மார்க்கட்டு ஆக்டிலும் விதியாக ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் மத சம்பந்தமான ஸ்தலங்கள் என்பவைகள் அதாவது கோவில்கள், மடங்கள் என்பவைகள் தவிர மற்றவைகளில் எல்லாம் தீண்டப்படாதவர்களுக்கும், மற்றவர்களைப் போலவே உரிமை உண்டு என்று செய்து விட்டார்கள்.

ஆகவே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரஜா உரிமையில் தீண்டப் படாதவர்கள் என்பவர்களுக்கு எவ்வித வித்தியாசமும், அசௌகரியமும் இல்லாமல் சட்டபூர்வமாய் செய்யப்பட்டுவிட்டது.

ஆனால், இந்துக்கள் என்பவர்களுக்கு மாத்திரம் உள்ள பிரஜா உரிமையில் தீண்டப்படாதவர்களுக்கு உள்ள குறை சிறிதும் நீக்கப்பட வில்லை என்பதோடு அரசாங்கத்தாரோ, மற்றவர்களோ முயற்சிப்பதற்கும் காங்கிரஸ்காரர்களும், காந்தியாரும் உதவி செய்யவில்லை'' என்பது மாத்திரமல்லாமல் தங்களால் கூடுமான அளவு தடையும் செய்து வந்திருக்கிறார்கள், வருகிறார்கள் என்று சொல்ல வேண்டி இருக்கிறது.

காங்கிரஸ்காரர்கள் கராச்சியில் செய்த பிரஜா உரிமைத் தீர்மானத்தில் அதுவரை சர்க்கார் தீண்டப்படாதவர்களுக்குச் சட்ட ரூபமாக, ஏற்கனவே செய்த காரியங்கள் எவையோ அவற்றை மாத்திரம் அனுமதித்து விட்டு கோயில், மடம், சத்திரம் முதலிய காரியங்களைப் பற்றி ஒன்றும் பேசாமல் விட்டுவிட்டு ''கோவில் இதில் சேர்ந்ததல்ல'' ''பழைய பழக்கத்துக்கு விரோதமாய் எதுவும் செய்யப்பட மாட்டாது'' என்றும் சொல்லி வாக்குறுதி கொடுத்து விட்டார்கள்.

அது மாத்திரமல்லாமல் கோயில் பிரவேச விஷயமாய் சட்டசபைக்கு வந்த தீர்மானங்களையும் ஒழித்து இப்பொழுது காங்கிரஸ்காரர்கள் மெஜாரிட்டியாய் இருக்கும்போது இனி யாரும் அப்படிப்பட்ட தீர்மானங்கள் கொண்டு வரக் கூடாதென்றும், மற்றவர்கள் கொண்டு வந்தாலும் ஆதரிக்கக் கூடாதென்றும் அத் தீர்மானங்களுக்கும் ஜனப் பிரதிநிதிகளுக்கும் இப்போது சம்பந்தமில்லை என்றும் சொல்லி விட்டார்கள்.



ஆகவே காங்கிரஸ்காரர்கள் தீண்டாமை ஒழிப்பு விஷயமாய் பொது ஜனங்களிடம் இருந்து பணங்களை வசூல் செய்து எலக்ஷன் பிரசாரத்துக்குச் செலவு செய்து விட்டு சில காங்கிரஸ் தொண்டர்களுக்குச் சம்பளம் கொடுக்கப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதல்லாமல் தீண்டாதவர்களுக்கு ஆக இன்ன காரியம் செய்தார்கள் என்று சுட்டிக் காட்டக் கூடிய யோக்கியதையில் அவர்கள் இல்லை என்று தைரியமாகக் கூறலாம்.

தவிர காங்கிரஸ்காரர்களுக்கு தீண்டப்படாதவர்கள் விஷயத்தில் வந்த ''அபிமானம்'' எல்லாம் ஜஸ்டிஸ் கக்ஷியார்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேழ்க்க ஆரம்பித்த பிறகும், ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்கள் தீண்டப்படாதவர்களுக்கு பல நன்மைகள் செய்யப்பட்ட பிரகும் முன் வந்த பிறகும் தானே ஒழிய அதற்கு முன் எந்தக் காங்கிரசாவது எந்தக் காங்கிரஸ் தலைவர்களாவது இவர்கள் விஷயமாய் ஏதாவது காரியம் செய்திருக் கிறதாகவாவது அல்லது செய்ய முயற்சித்ததாகவாவது ஆதாரம் இருக்கிறதா என்று கவனித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்காமல் போகாது.

ஜஸ்டிஸ்காரர்கள் கேட்ட சுதந்திரத்தில் அதை தீண்டப்படாதவர்கள் என்பவர்களுக்கும் வழங்கும் நிபந்தனையையும் காட்டித்தான் கேட்டார்களே ஒழிய அவர்களை விலக்கி வைத்துக் கேட்கவில்லை. அவர்கள் கேட்டதை கொடுக்க ஒப்புக் கொண்டார்கள் என்பதோடல்லாமல் கொடுக்கும்படி சர்க்காருக்கும் சிபார்சும் செய்தார்கள்.

ஆனால் காங்கிரஸ்காரர்கள் அவர்கள் கேட்டதை கொடுக்க ஒப்புக் கொள்ளவில்லை என்பதோடு சர்க்காராரும் கொடுக்கக் கூடாது என்பதற்கு தங்களாலான தடையையும் செய்தார்கள்.

**சமூக விஷயத்தில்**

மற்றும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் தாங்கள் எங்கு மகாநாடு கூட்டின காலங்களிலும் தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டப்படாதவர்கள் என்பவர்களை எல்லாம் சமமாக நடத்தி சமபந்தி சாப்பாடாகவே நடத்தி வந்திருக்கிறார்களே ஒழிய ஒரு இடத்திலாவது ஒரு மகாநாட்டிலாவது அவர்களை ஒதுக்கி வைத்தோ, வெளியில் வைத்தோ சாப்பாடு போட்டு இழிவாய் நடத்த வில்லை என்பது யாவரும் அறிந்ததாகும்.

தீண்டாதவர்கள் என்பவர்களை சரி சமமாக நடத்த வேண்டும் என்பதற்கு ஆகவே ஜஸ்டிஸ் கட்சி ஸ்தாபனங்கள் எங்கு எங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் அடிக்கடி சமபந்தி போஜனம் என்று ஏற்பாடு செய்தும் தீண்டப்படாதவர்கள் என்பவர்களைக் கொண்டே பக்குவம் செய்தும் பரிமாரச் செய்தும் விருந்து நடத்தி வருவதும் யாவரும் அறிந்ததாகும்.



RangaRakes tamilnavarasam.com

## காங்கிரஸ்

ஆனால் காங்கிரசுக்காரர்கள் எங்கு மகாநாடு நடத்தினாலும் நாளது வரை பார்ப்பனர்களுக்கு வேறு இடம், பார்ப்பனரல்லாதார்களுக்கு வேறு இடம், தீண்டப்படாதவர்களுக்கு வேறு இடம் என்பதாகப் பிரித்து பிரித்து ஒதுக்கி வைத்தும் வெளியில் வைத்துமே சாப்பாடு போட்டும் வந்திருக்கிறார்கள்.

காங்கிரசின் பண்டில் இருந்து ''அதி தீவிர தேச பக்தர்'' வி.வி.எஸ். அய்யரால் நடத்தப்பட்ட குருகுலம் என்பது ஒழிக்கப்பட்டதற்கு காரணம் என்ன என்று பார்த்தால் இதன் உண்மை விளங்கும். இது நடந்த பிறகும் நாட்டில் சமூக விஷயமாய் புது கிளர்ச்சிகள் எங்கும் நடந்து வருவதைப் பார்த்த பிறகும், தீண்டப்படாதவர்களது தனித் தொகுதிப் பிரதிநிதித்துவத்தை ஒழிப்பதில் இனி அவர்களை சமமாய் நடத்துகிறோம் என்று வாக்குக் கொடுத்து அதை ஒரு நிபந்தனையாகச் சொன்ன பிறகும், இப்போது 1935ம் வருஷத்தில் காங்கிரஸ்காரர்கள் தீண்டப்படாதவர்கள் விஷயத்தில் அரசியல் சம்பந்தமாக நடைபெறும் காரியங்களிலேயே எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பொதுஜன கவனத்துக்கு கொண்டுவர ஆசைப்படுகிறோம். அதற்காகவே இதை எடுத்துக் காட்டுகிறோம்.

## சன்னாசி

அதாவது சென்ற மாதம் திருச்சி ஜில்லா பெரம்பலூர் தாலூக்கா எசனை என்னும் ஊரில் நடந்த பிரம்பலூர் தாலூக்கா அரசியல் மகாநாட்டில் மகாநாடு நடத்தி வைப்பவர்களும், காங்கிரஸ் சமதர்மத் தொண்டர்களும் ஆனவர்கள் 'ஹரிஜன' சமூகத்தைச் சேர்ந்தவரும் 'ஹரிஜன' வேலைக்கு நியமிக்கப்பட்ட ஒரு மேல் பார்வை அதிகாரியுமான தோழர் சன்யாசி என்பவர் விஷயத்தில் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை பொது ஜனங்கள் கவனிக்க வேண்டுகிறோம்.

இது விஷயமாய் தோழர் சன்யாசி அவர்களால் பத்திரிக்கைகளுக்கு எழுதப்பட்ட ''ஒரு பகிரங்கக் கடிதம்'' என்பதைப் பார்த்தே அதை ஆதாரமாய் வைத்தே அதற்கு நாளது வரை சுமார் 20 நாளாக அந்த மகாநாட்டுக்காரரோ, ஹரிஜன சேவைக்கமிட்டித் தலைவர்களோ, காங்கிரஸ் தலைவர்களோ யாதொரு பதிலும் சொல்லாமல் ''மாம்சம் பறிகொடுத்த பார்ப்பனத்தி'' போல் மௌனமாய் இருப்பதை அறிந்தே இதைப் பற்றி எழுதுகிறோம்.

தோழர் சன்யாசி அவர்கள் இம்மகாநாட்டுக்கு அழைக்கப்பட்ட போதே மகாநாடு நடத்துவதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவரும், மகாநாட்டிற்காக தோழர் சன்னியாசியை அழைக்க வந்தவருமான தோழர் குரும்பலூர் நடேசய்யர் என்னும் பார்ப்பனர் ஒருவர் தோழர் சன்னியாசியை மகாநாட்டுக்கு அழைத்தபோது தோழர் சன்யாசி சாப்பாடு விஷயத்தில் மக்களை எப்படி நடத்துவீர்கள் என்று கேட்டதில் ''சமபந்தி முறையைத் தழுவி சாப்பாட்டு வசதி செய்யப்பட்டிருக்கிறது'' என்று சொன்னாராம்.

ஆனால் மகாநாட்டு காலை நிகழ்ச்சிகள் நடந்து பகல் சாப்பாட்டிற்கு எல்லோரும் புறப்படும்போது கதர் கடையில் உட்கார்ந்திருந்த தோழர் சன்யாசியை மகாநாட்டுக் காரியதரிசிகளில் ஒருவரான தோழர் நடராஜ பிள்ளை என்கின்ற பார்ப்பனரல்லாதார் வந்து ''சமபந்தி போஜனம் நடக்கப் போகின்றது உங்களையும் கூட உட்கார வைத்து சாப்பிடப் போகின்றோம் வாருங்கள்'' என்று அழைத்துப் போனாராம்.

அங்கு சாப்பாட்டு விடுதிக்குள் போய் பார்த்ததும் ஏற்கனவே இரண்டு பந்தி நடந்து விட்டதாகவும் சற்று பொருக்க வேண்டும்'' என்றும் சொல்லி முன் குறிப்பிடப்பட்ட தோழர் குரும்பலூர் நடேசய்யர் என்பவர் அவசரமாக ஓடி வந்து ''உமக்கு சாப்பிட இடம் வேறாக ஏற்படுத்தியிருக்கிறது'' என்று சொல்லி வெளியில் அழைத்துப் போய் நாலைந்து வீட்டுக்கு அப்புறம் ஒரு வீட்டு தாழ்வாரத்தில் உட்கார வைத்து விட்டுப் போய்ப் பின் ஒரு மணி நேரம் பொருத்து ஒரு தாம்பாளத்தில் இலை போட்டு அதில் சோறு குழம்பு எல்லாம் சேர்த்து வைத்து அந்த தாழ்வாரத்தை விட்டு வெளியில் அழைத்து திறந்த வெளியில் இலையை இழுத்து விட்டு உட்கார்ந்து சாப்பிடும்படி சொன்னாராம்.

முதல் நாள் இரவு சாப்பாடு சாப்பிட்டதோடு காலை ஆகாரமும் இல்லாது இருந்த தோழர் சன்யாசி அதிக பசியாய் இருந்தும் அவர் தன்னை இந்தப்படி அவமானமாகவும், இழிவாகவும் நடத்திய கொடுமையை எண்ணி தனக்கு பசியில்லையென்றும், சாப்பாடு வேண்டியதில்லை என்றும், சாப்பிட்டாய்விட்டதாகவும் சொல்லி விட்டு வந்து மகாநாட்டின் மற்ற நடவடிக்கைகளையும் கவனித்து விட்டு இரவு 12½ மணிக்கு திருச்சிக்கு வந்து சாப்பிட்டாராம்.

(இந்த சேதிகள் 7-ந் தேதி ''நகர தூதன்'' பத்திரிகையில் காணப் படுவதாகும்.)

ஆகவே பார்ப்பனர்களின் மனிதாபிமானமும், சமத்துவத் தன்மையும், காங்கிரசின் தீண்டாமை ஒழிக்கும் தத்துவமும், ஹரிஜன வேலையின் உண்மையும் எப்படி இருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

தோழர் சன்யாசி அவர்களின் பகிரங்கக் கடிதத்தில் **''நான் 1916-ம் வருஷ முதல் 1932-ம் வருஷ வரை ஒவ்வொரு ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டுக்கும் சென்று இருக்கின்றேன். அவைகளில் இந்த மாதிரி ஒரு இடத்திலும் நடந்ததில்லை. காங்கிரஸ் கட்சி மகாநாட்டுக்கு போனது இதுதான் முதல் தடவை''** என்று கூறுகின்றார்.


RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனர்கள் காங்கிரசைப் பற்றிக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வதும், காந்தியாரை மகாத்மாவாக்கி பாமர மக்களுக்கு விளம்பரப்படுத்துவதும், தங்கள் ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொள்ளவும் மற்ற மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தவுமேதான் என்று இந்த 10 வருஷ காலமாக நாம் கூப்பாடு போட்டுக் கொண்டு வருவதும் அது விஷயமாய் ஒவ்வொரு நாளும் பேசி வருவதும், எழுதி வருவதும் ஒரு வார்த்தையாவது, ஒரு எழுத்தாவது பிசகுபட்டிருக்கின்றதா என்பதைப் பிரத்தியேகமாய் அலசிப் பார்க்க வாசகர்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

கடைசியாக காங்கிரசுக்காரர் ஜஸ்டிஸ்கட்சியாரை ஒழித்துவிட்டு தாங்கள் தான் ஆதிக்கத்துக்கு வரவேண்டும் என்று சொல்லுவதின் கருத்து என்ன என்பது இப்போதாவது விளங்குகிறதா என்று கேட்க்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 21.07.1935**



# தஞ்சை ஜில்லா ஆதி திராவிட வாலிபர் மகாநாடு

தோழர்களே!

இன்று இம்மகாநாட்டைத் திறந்து வைப்பது என்னும் முறையில் இந்த மகாநாடு சம்பந்தமாய் நான் ஏதாவது சில வார்த்தைகள் பேச வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பீர்கள்.

தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயமாய் என்னுடைய அபிப்பிராயம் நீங்கள் தெரிந்ததேயாகும்.

தாழ்த்தப்பட்ட மக்களை, அவர்களுக்கு மற்றவர்கள் இழைத்து வரும் கொடுமையில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்பதை உண்மையான கருத்துடன் பார்த்தால் அது ஒரு புரட்சி வேலையே ஆகும். ஏனெனில் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை ஒரு பெரிய அஸ்திவாரத்தின் மீதே கட்டப்பட்டிருக்கின்றது.

எப்படி என்றால் தாழ்த்தப்பட்ட மக்கள், கீழ் ஜாதி மக்கள், தீண்டப் படாதவர்கள் என்பவர்கள் எல்லாம் பிறவியிலேயே கீழ்மைத் தன்மை அடைந்தவர்கள் என்றும், அவர்கள் கடவுள்களாலேயே அந்தப்படி பிறப்பிக்கப்பட்டவர்கள் என்றும், அதற்கு மதங்களும் மத சாஸ்திரங்களுமே ஆதாரங்கள் என்றும், கடவுள் செயலையோ மத விதிகளையோ யாரும் மாற்றக் கூடாதென்றும், அவை மாற்றுதலுக்கு கட்டுப்பட்டதல்லவென்றும் சொல்லப்படக் கூடிய ஒரு பலமான அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் சமத்துவம் பெறுவதும், தீண்டாமைத் தத்துவம் மனித சமூகத்தில் இருந்து விலக்கப்படுவதும் வெறும் வாய் வார்த்தையாலோ, பிரசாரத்தினாலோ, மேல் ஜாதிக்காரர்களைக் கேட்டுக் கொள்ளுவதினாலோ ஆகக்கூடிய காரியம் என்று யாராவது நினைத்தால் அவர்களது வாழ்வு வீண் வாழ்வு என்றுதான் சொல்வேன்.

தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டப்படாதவர்கள் என்பவர்களில் சிலர் தாங்கள் ஏதோ குளித்து முழுகிவிட்டு, விபூதிப் பூச்சோ, பட்டை நாமமோ விதிப்படி அணிந்து வைதீகர்கள் போல் வேஷம் போட்டுக் கொண்டு, மது,



RangaRakes
tamilnavarasam.com

மாம்சம் சாப்பிடுவதில்லை என்று சொல்லிக் கொண்டு சுவாமி என்று பெயர் வைத்துக் கொண்டு திரிந்தால், தங்கள் நிலை உயர்ந்து விடும் என்றும் தீண்டாமை ஒழிந்துவிடும் என்றும் கருதி இருக்கிறார்கள்.

இது மற்றவர்களை ஏமாற்ற நினைத்துத் தங்களையே ஏமாற்றிக் கொள்ளும் பைத்தியக்காரத்தனமேயாகும்.

இந்தப்படி வெகு பேர் தாழ்த்தப்பட்ட மக்களில் ஆதிதிராவிடர்களில் வெகுகாலமாகவே வேஷம் போட்டுப் பார்த்தாய்விட்டது. அதற்கு பல புராண சரித்திர ஆதாரங்கள் உண்டு.

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பு இருந்து நாளது வரை தீண்டாமை விலக்கு விஷயத்தில் ஒரு காரியமும் முடிந்ததில்லை என்று தைரியமாய்ச் சொல்லலாம். ஏதோ சில பாஷாண்டிகள் செய்த காரியங்களால் தங்கள் சுயநலத்துக்குப் பயன் ஏற்படுத்திக் கொள்ளத்தான் முடிந்திருக்குமே ஒழிய அப்படிப்பட்ட வேஷத்தாலும் பக்தியாலும் காரியத்தில் ஏதும் ஆகி இருக்காது. ஆவதற்கும் நியாயமில்லை.

ஏனெனில் அதின் அஸ்திவாரம் அப்பேர்ப்பட்டதாகும்.

தீண்டாமை விஷயம் ஒருபுறமிருக்கட்டும். எவ்வளவோ காலமாக போராடி வந்தும் எப்படிப்பட்டவர்கள் எல்லாம் பாடுபட்டும் சூத்திரப் பட்டம் அதுவும் 100க்கு 3 பேர்களால் 100க்கு 97 மக்கள் தலையில் சுமத்தப்பட்டிருக்கும் சூத்திரப் பட்டம் ஒழிக்கப்பட முடிந்ததா? ''சூத்திரர்'' களில் சிலர் மகாத்மா - ரிஷி - முனிவர் - ஆழ்வார்கள், நாயன்மார்கள், தெய்வத் தன்மை வாய்ந்தவர்கள் என்றெல்லாம்கூட ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்றாலும் மனித சமூகத்தில் ஒரு பெருங் கூட்டத்தைச் சூத்திரன் என்பதாகக் குறிக்க ஏற்படுத்தப்பட்ட கலம் இன்னும் அழிக்கப்படவே இல்லை. அது சுலபத்தில் அழிக்கப்படக் கூடியதாயும் இல்லை.

நேற்று இவ்விடம் உங்கள் ஆதி திராவிட மகாநாட்டைத் திறந்தவரும் அதற்குத் தலைமை வகித்தவரும் இருவரும் மேல் ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளப்படுபவர்கள் தான். அதாவது மந்திரியார் கனம் பி.டி.ராஜன் அவர்களும், உங்கள் ஜில்லா போர்ட் பிரசிடெண்டு தோழர் சாமியப்ப முதலியார் அவர்களும் சைவ வேளாளர் - அதுவும் தொண்ட மண்டல சைவ வேளாளர் ஆவார்கள்.

பார்ப்பனர்களுக்கு அடுத்த ஜாதியார் என்பதோடு, அவ் வகுப்பில் சிலர் பார்ப்பனர் வீட்டில்கூட சாப்பிட மாட்டோம் என்பார்கள். அப்படி இருந்தும் அப்படிப்பட்டவர்களைப் பார்த்து ''உயர உயரப் பரந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா'' என்றுதான் பார்ப்பனர்கள் கேட்பார்கள்.

அது மாத்திரமல்லாமல் அவர்கள் எல்லோரையுமே சூத்திரன் என்கின்ற கலத்தில்தான் பார்ப்பனர்கள் பதிவார்களே ஒழிய 4 வருணம்



என்பதில், தொண்ட மண்டலம் வேளாளர் என்பதற்கு வேறு கலம் இல்லவே இல்லை. எத்தனையோ தொண்ட மண்டல வேளாளர் தாங்கள் சூத்திரர்கள் அல்லவென்றும், தங்களுக்கும் வருணாச்சிரமத்திற்கும் சம்மந்தமில்லை என்றும் வெகு காலமாகவே கூப்பாடு போட்டிருக்கிறார்கள்.

மற்றும் பலர் தங்களை சாதாரண சூத்திரர்கள் அல்லவென்றும், சற் சூத்திரர்கள் என்றும் ''பட்டுக் குஞ்சம் கட்டிக் கொள்வது'' போல் சொல்லிப் பார்த்திருக்கிறார்கள். என்ன செய்தும் அதை மாற்ற முடியாமலே போய் விட்டது. அப்படி இருக்க ஐயோ பாவம் உலக வாழ்க்கையில் எவ்வளவோ கீழான நிலையில் வைக்கப்பட்டு எவ்வித ஆதரவும் சவுகரியமும் இல்லாத நீங்கள் பரத்தன்மையை ஒழித்துவிடுவதோ மறைத்து விடுவதோ என்றால் அதுவும் மத சம்மந்தமான வைதீக வேஷத்தைப் போட்டுக் கொண்டு ஒழித்து விடுவது என்றால் அது சமுத்திரத்தை சிட்டுக் குருவி வற்றடிக்க முயற்சித்தது போல்தான் ஆகுமே ஒழிய வேறில்லை.

வர்ணங்கள் என்பது 'கடவுளால்' சிருஷ்டிக்கப்பட்டதாகும். எப்படி எனில் ''கீதையில் பகவான்'' கிருஷ்ணன் ''நான்கு வர்ணத்தையும் நான்தான் சிருஷ்டித்தேன்'' என்று சொல்லி இருக்கிறார்.

ஜாதிகள் என்பது மதத்தினால் ஏற்பட்டதாகும். எப்படி எனில் மனுதர்ம சாஸ்திரத்தில் சண்டாள ஜாதி உற்பத்திக் கிரமம் மற்ற ஜாதிப் பிரிவு உற்பத்திக் கிரமம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகவே கடவுளும் மதமும் அதற்கு ஆதாரமான கீதையும் மனுதர்ம சாஸ்திரமும் காப்பாற்றப்படுவதாய் இருந்தால் சூத்திரப்பட்டமும் கீழ்ஜாதித் தன்மையும் எப்படி மாற்றப்பட முடியும் என்று யோசித்துப் பாருங்கள்.

தோழர் காந்தியார் தீண்டாமையை ஒழித்துவிட வேண்டும் என்று வரக் கத்து கத்திப்பார்த்துவிட்டார். பல லக்ஷ ரூபாயும் வசூலித்து மேல்ஜாதிக்காரர் மேல் வருணக்காரர் என்பவர் கையில் ஒப்படைத்து விட்டாரே தவிர, மற்றபடி தீண்டாமையின் ஒரு சிறு தூசைக்கூட அசைக்க முடியவில்லை.

ஏன் என்றால் அவர் மற்றொரு பக்கம் கீதையையும் மனுதர்ம சாஸ்திரத்தையும் வருணத்தையும் ஜாதிக் கிரமத்தையும் ஆதரித்து வருகிறார்.

இன்று தீண்டாமை விலக்கு வேலையிலும், ஜாதி வித்தியாசம் ஒழிப்பு வேலையிலும் ஈடுபட்டிருப்பவர்களில் 100க்கு 100 பேரும் கீதை மனுதர்ம சாஸ்திரம் ஆகியவற்றை நம்பும் - ஆதரிக்கும் சோணகிரிகளேயாவார்கள்.

இவர்கள் எவ்வளவு நாளைக்குப் பாடுபட்டாலும் அடியற்ற ஓட்டைக் குடத்தில் தண்ணீர் இறைக்கும் மூடர்களுக்கு ஒப்பானவர்களேயாவார்கள்.

ஆகவே தீண்டாமை ஒழிப்புக்கோ, ஜாதி ஒழிப்புக்கோ நீங்கள் முதலில் உங்கள் மதத்தை ஒழித்தாக வேண்டும். மதத்தை ஒழிக்க உங்களால்



RangaRakes tamilnavarasam.com

முடியவில்லையானால் மதத்தை விட்டு நீங்களாவது விலகி ஆக வேண்டும். உங்கள் மதம் போகாமல் ஒரு நாளும் உங்களது தீண்டாமைத் தன்மையோ, பரத் தன்மையோ ஒழியவே ஒழியாது என்பது கல்லுப் போன்ற உருதி.

உதாரணம் வேண்டுமானால் இதுவரையில் தீண்டப்படாதவர்களா யிருந்து மனித சமூகத்தில் தீண்டக் கூடியவர்களாக ஆன எவரும் தீண்டப் படாதவர்களாய் இருந்த போது அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த மதத்தை உதரித் தள்ளிவிட்ட பின்புதான் தீண்டத்தக்கவர்கள் ஆகி இருக்கிறார்கள். இதற்கு கோடிக்கணக்கான மக்களை ஊர் பெயருடன் புள்ளி விபரத்தோடு காட்டலாம்.

ஆதலால் மதத்தை காப்பாற்றிக் கொண்டு தீண்டாமையை விலக்கி விடலாம் என்று நினைத்து ஏமாற்றமடையாதீர்கள்.

தோழர் காந்தியார் ஒரு மத வாதியே ஒழிய மனித ஜீவ அபிமானவாதி அல்லவே அல்ல. அவர் தனது இந்து மதம் காப்பாற்றப்படுவதற்காகத்தான் தீண்டாமை ஒழிக்க வேண்டும் என்று சொல்லி வந்திருக்கிறாரே ஒழிய தீண்டப்படாத மக்களின் கொடுமைகள் தீர வேண்டுமென்பதை முக்கியமாய்க் கொள்ளவில்லை.

காங்கிரசுக்காரர்களுக்கும் தீண்டாமையைப் பற்றிய கவலை கிடையாது. ஏனெனில் அவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள். அனுபவத்தில் தீண்டாமை ஒழிப்பை அவர்கள் கையாடுவதானால் முடிவில் அவர்களே தீண்டத்தகாதவர்களாக ஆகிவிட நேரிடும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஏனெனில் தீண்டாமை ஒழியும் போது பார்ப்பனர்களின் மேல்ஜாதித் தன்மையும் ஒழிந்துவிடும். மேல் ஜாதித் தன்மை ஒழிந்துவிட்டால் பிறகு பார்ப்பனர்களை யார் சட்டை செய்வார்கள்.

ஆகவே தீண்டப்படாத மக்கள் என்பவர்களுக்கு ஏதாவது விடுதலை வேண்டுமானால் அரசாங்கத்தைக் கொண்டுதான் செய்து கொள்ள முடியும்.

அரசாங்கம் மனித சமூகத்தில் உள்ள கொடுமைகளையும், ஒருவரை ஒருவர் கொடுமையாய் நடத்தும் கொடுமையையும் ஒழிப்பதற்கு ஆகவே இருந்து வர வேண்டியதாகும். அதோடு மாத்திரமல்லாமல் இன்று இருந்து வரும் அரசாங்கம் தீண்டாமையை அனுசரிக்கும் அரசாங்கம் அல்ல. தீண்டப்படாதவரைப் பொருத்தவரை நல்ல காலத்தின் அறிகுறியாக இந்தியாவின் ஏக சக்ராதிபத்தியமானது இந்திய அரசர்கள் கையில் இல்லாமல் ஒரு அன்னிய கண்ட அரசரிடத்தில் இருக்கிறது. இதை இந்தியர்கள் ஆட்சிக்குக் கொண்டு வரத்தான் காங்கிரஸ் முயற்சிக்கிறதாம். முயற்சியும் நடக்கின்றது.

அப்படியானால் அதற்குள்ளாகவே உங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள நீங்கள் முயற்சி செய்யுங்கள். உங்களால் கூடுமானவரை இன்றைய ஆட்சியைப் பார்ப்பன ஆட்சி செய்யப்படுவதற்காக



செய்யப்படும் முயற்சியை எதிர்த்து நில்லுங்கள். சுயராஜியம் சுய ஆட்சி என்பது ராமராஜ்ஜிய ஆட்சி, கீதை ஆட்சி, மனுமுறை ஆட்சி என்றெல்லாம் சொல்லப்படுவது நீங்கள் அறிந்ததேயாகும். மனு ஆட்சிக்கோ, ராமராஜ்ஜிய ஆட்சிக்கோ இந்தியா போய் விடுவதானால் இந்தியா பூகம்பத்தினாலோ, சண்டமாருதத்தாலோ, காட்டு வெள்ளத்தாலோ அழிந்து போவதே மேலானதாகும். ஆதலால் நீங்கள் பிரிட்டிஷ் ஆட்சியிலேயே உங்கள் விடுதலைக்கு முயற்சி செய்யுங்கள்.

பழைய ஆட்சிகள் எதுவும் தீண்டாமையை ஒழிக்க முடியவே இல்லை.

இந்த ஆட்சியால் நீங்கள் கலெக்டர்களானீர்கள், ஜட்ஜுகளானீர்கள், வக்கீல்களானீர்கள், டாக்டர்களானீர்கள், உபாத்தியாயர்களானீர்கள், சட்ட சபை மெம்பர்களானீர்கள், ராவ் பகதூர், திவான் பகதூர்களானீர்கள், மந்திரி களுமாகப் போகிறீர்கள். ஆகவே உங்களுடைய குறைகள் கவனிக்கப்படவும் உங்கள் சமூகம் முற்போக்கடைந்து மற்ற மக்கள் போல் பாவிக்கப்படவும், பிரிட்டிஷ் ஆட்சியில்தான் இடம் உண்டே ஒழிய இந்து மதத்தில், இந்து ஆட்சியில், ராமராஜ்ஜியத்தில், மனு நீதி ஆட்சியில், கீதையில், சுதேச மன்னர்கள் ஆட்சியில் இடமில்லை என்பதை உங்களுக்கு வலியுறுத்துகிறேன்.

மற்ற வகுப்பாருடைய அரசியல் கிளர்ச்சிகளில் நீங்கள் பட்டுக் கொள்ளாதீர்கள். அதெல்லாம் பணக்காரனும், மேல் ஜாதிக்காரனும், படித்த கூட்டமும் இன்னமும் அதிகமாய் ஆதிக்கம் செலுத்தவே பாடுபடும் கிளர்ச்சியாகும். உங்களுக்கு அந்த மூன்றும் இல்லை. அவற்றைப் பெற நீங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தையே எதிர்பாருங்கள். மற்றவர்கள் எல்லாம், பிரிட்டிஷ் அரசாங்க பக்தராய் ராஜவிசுவாசிகளாய் இருந்துதான் இன்றைய மேல் பதவி அடைந்து இன்னும் மேல் பதவிக்கு கிளர்ச்சி செய்கிறார்கள். நீங்களும் அதுபோலவே இருந்து சம பதவியாவது அடைந்து பின்னால் வேண்டுமானால் கிளர்ச்சி செய்து மேல் பதவிக்கு வர முயலுங்கள்.

தோழர்களே! உங்கள் விஷயங்களைப் பொருத்த மட்டில் என்னுடைய அபிப்பிராயம் இதுவேயாகும். பிறகு நீங்கள் யோசித்துப் பார்த்து உங்களுக்குத் தோன்றியபடி நடவுங்கள்.

*குறிப்பு: 10.07.1935 இல் சீர்காழியில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட ஆதித் திராவிட வாலிபர் மகாநாட்டைத் திறந்து ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 28.07.1935**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரசின் அலங்கோலம்

காங்கிரசிலிருந்து தோழர்கள் காந்தி ''விலகினார்''

அன்சாரி ''விலகினார்''

ராஜகோபாலாச்சாரியார் ''விலகினார்''

இவர்கள் விலகிக் கொண்டதாக காட்டிக் கொண்டதில் ஆச்சரிய மொன்றுமில்லை.

ஏனெனில் இவர்கள் காங்கிரசிலிருந்து கொண்டு செய்வதற்கு வேலை ஒன்றும் இல்லை.

காங்கிரசினுடைய வேலை இப்போது ஓட்டுப் பிரசாரம் செய்வதைத் தவிர வேறு ஒன்றுக்கும் இடமில்லாமல் போய்விட்டது.

நிர்மாண திட்டங்கள் நிர்வாணத் திட்டங்களாக ஆகி விட்டது.

இந்து முஸ்லீம் ஒற்றுமை விஷயம் ''சுயராஜ்ஜியம் ஏற்பட்டால் ஒழிய, முடியாது'' என்று தோழர் காந்தியாரே வட்டமேஜை மகாநாட்டில் சொல்லி விட்டார்.

மதுவிலக்கு விஷயம் அதுபோலவே ''சுயராஜ்ஜியம் கிடைத்தால் தான் செய்ய முடியுமே ஒழிய மற்றபடி யார் பாடுபட்டாலும் முடியாது'' என்று சத்தியமூர்த்தியாராலேயே சொல்லப்பட்டாய்விட்டது.

**கதர்**

இனி கதர் விஷயமாக ''ஒரு காலத்தில் கதர் என்கின்ற ஒருவித துணி கையால் நூற்று, கையால் நெய்தது இருந்து வந்தது'' என்று சொல்லும் படியாக ஆகிவிட்டது.

காந்தி கதர் ஆலயத்தில் தோழர் இராஜகோபாலாச்சாரியாரின் மேல் பார்வையில் இருக்கும் காந்தி ஆஸ்ரமத்தில் சுமார் 50 ஆயிரம் ரூ. பொருமான கதர் துணி தூங்குகின்றது.

தமிழ்நாடு காதி வஸ்திராலயத்தில் லட்சக்கணக்கான ரூ. பொருமான கதர் துணி தூங்குவதோடு பூசனம் பிடித்து இத்து மடிகின்றது.

தமிழ்நாட்டில் பல ஜில்லாக்களிலும் உள்ள கதர் ஸ்தாபனங்கள் மூடப்படுகின்றன.



கதர் ஸ்தாபனத்தில் மீ. 100, 200 ரூ. சம்பளங்களில் இருந்து வந்த பார்ப்பன தேச பக்தர்கள் இப்போது அதை மெள்ள நழுவ விட்டு விட்டு காங்கிரஸ் செல்வாக்கில் வயிற்றுப் பிழைப்புக்கு வேறு வழி தேடிக் கொண்டார்கள்.

இன்றைய தினம் காங்கிரசில் கதருக்கு உள்ள யோக்கியதை யெல்லாம் மூடர்களும், பார்ப்பன அடிமைகளுமல்லாமல் வேறொருவரும் காங்கிரசுக்குள் நுழையாமல் இருப்பதற்கு ஆக காவலாய் கதர் வைக்கப்பட்டிருக்கிறது என்பதல்லாமல் வேறொன்றுமில்லை.

எப்படி என்றால் ''காங்கிரசு நிர்வாக ஸ்தாபனங்களின் தேர்தலுக்கு நிற்கின்றவர்கள் கதர் கட்டிக் கொண்டிருக்கிறவர்களாய் இருக்க வேண்டும்.''

''காங்கிரஸ் கமிட்டிகளுக்கு தேர்தலுக்கு ஓட்டுக் கொடுப்பவர்கள் கதர் கட்டிக் கொண்டிருக்க வேண்டும்''

என்கின்ற இரண்டு காரியத்துக்கும் கதர் நிபந்தனை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

ஆகவே ஒரு மனிதன் எவ்வளவு யோக்கியனாகவும் தேசாபிமானி யாகவும் அஹிம்சையில், சத்தியத்தில் உண்மையான நம்பிக்கை உடையவ னாகவும் இருந்தாலும் அவன் கதர் கட்டி இருந்தால்தான் காங்கிரசில் ஸ்தானம் வகிக்க முடியும் பங்கு எடுத்துக் கொள்ள முடியும் என்பதாகும்.

ஒரு சமயம் காங்கிரசின் மற்ற எல்லா திட்டங்களிலும் நம்பிக்கை இருந்து கதரில் மாத்திரம் நம்பிக்கை குறைவானவராய் இருந்து விட்டால் அவர் இந்திய தேசிய ஸ்தாபனம் என்று சொல்லப்படும் பொது ஸ்தாபனம் என்பதில் ஸ்தானம் வகிக்க அருகதை அற்றவராகி விடுகிறார்.

ஆகவே கதரானது இன்று ஒரு சுயநல காரியத்துக்கு அதாவது தங்கள் (பார்ப்பனர்கள்) அடிமைகள் அல்லாதவர்களை விலக்கி துரத்தி அடிப்பதற்கே ஒரு சாதனமாய் இருந்து வருவதல்லாமல் மற்றபடி அதில் எவ்வித தத்துவமும் இல்லை என்பது முடிவடைந்த விஷயமாகும்.

இன்று திருப்பூர் காதி வஸ்திராலய நிர்வாகமும் கதரின் பேரால் காங்கிரசுக்கு மக்களிடத்தில் ஏதாவது ஒரு பிடிமானம் இருக்க வேண்டும் என்பதும், அதனால் ஏதோ சிலருக்கு வயிற்றுப் பிழைப்புக்கு மார்க்கம் இருக்கும்படி செய்து அவர்களை தங்கள் சுயநலத்துக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் தவிர வேறு ஒரு காரியமும் இல்லாமல் போய்விட்டது.

**தீண்டாமை**

''இனி தீண்டாமை விலக்கு என்பது தீண்டப்படாதவர்கள் சமூகத் துறையில் இந்துக்களாகவே இருக்க வேண்டும்'' அவர்கள் வேறு மதங்களுக்கு போய் அம்மத எண்ணிக்கையை பெருக்கிக் காட்டக் கூடாது என்பதற்கும், அரசியல் துறையில் அவர்கள் இந்துக்களின் எண்ணிக்கையை



RangaRakes tamilnavarasam.com

பெருக்கிக் காட்டவும், இந்துக்கள் என்பவர்களுக்கு ஒரு பெருங் கூட்டம் பிறவி அடிமையாய் இருந்து தங்களுக்கு பயன்பட்டு வரவேண்டும் என்பதற்கும் மாத்திரமே தீண்டாமை விலக்குப் பிரசாரம் இருந்து வருகின்றதே ஒழிய மற்றபடி மனித சமூகத்தில் பிறவியில் வித்தியாசமில்லாமல் யாவரும் சமமாய் பாவிக்கப்பட வேண்டும் என்பதற்கு ஆக சிறிதும் இல்லவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

## இந்து முஸ்லீம்

ஆகவே நிர்மாணத் திட்டங்கள் என்பவைகள் இந்த நிலையை அடைந்துவிட்டது மாத்திரமல்லாமல் காங்கிரசு நிர்மாணத் திட்டம் என்பதை காங்கிரசால் ஏற்படுத்தப்பட்ட பிறகே காங்கிரசினிடத்தில் முஸ்லீம்களுக்கும் நம்பிக்கை அற்றுப் போனதோடு மாத்திரமல்லாமல் துவேஷமும் வெருப்பும்கூட ஏற்பட்டுவிட்டது என்று சொல்லலாம்.

எப்படியெனில் 1919, 1920 ம் வருஷங்களில் காங்கிரஸ் இந்து முஸ்லீம் ஒற்றுமை என்று சொன்னவுடன் முகமதிய தலைவர்களான அலி சகோதரர்களும் மகம்மதலி ஜின்னா அவர்களும் மற்றும் முஸ்லீம் மத சம்பந்தமான பெரியார்கள் என்பவர்களும் காந்தியாருக்கு ஒரு தீர்க்க தரிசிக்கு செய்யும் மரியாதை போல் செய்து வந்தார்கள்.

கடைசியாக அவர்கள் எல்லோருமே ஒருவருக்குப் பின் ஒருவராய் காந்தியார் மீதும், காங்கிரசின் மீதும் குறைக் கூறிக்கொண்டே நழுவி விட்டதோடு மாத்திரமல்லாமல் காங்கிரசுக்கு எதிர்ப்பாய் இருக்கிற தோடல்லாமல் ''காந்தியார் இந்தியாவில் இந்துக்கள் ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க முயற்சிக்கிறார். ஆதலால், முஸ்லீம்களே உஷாராய் இருங்கள்'' என்று சொல்ல வேண்டியவர்களாகி விட்டார்கள்.

### பார்ப்பனரல்லாதார்

பார்ப்பனரல்லாதாரிலும் காங்கிரசின் தயவால் பிழைப்பு நடத்த வேண்டிய நிலையில் இல்லாத பார்ப்பனரல்லாதார் எவ்வளவோ பேர் காங்கிரசுக்கு ஆக குடும்பத்துடன் உயிரைக் கொடுக்கத் தயாராய் இருந்து காந்தியாருக்கு சீஷர்கள் போல் இருந்தவர்கள் எல்லாம் கடசியாக காந்தியாரை ஒரு கபட சன்யாசி என்று சொல்லுவதோடல்லாமல் காங்கிரஸ் பார்ப்பன ஆட்சியை நிலைநாட்டப் பார்க்கிறது என்றும், காந்தியார் பார்ப்பனர்களின் அடிமை என்றும் சொல்லி காங்கிரசையே ஒழிக்க முயற்சிக்கிறார்கள்.

தீண்டாமை விலக்கு விஷயத்தில் ஏதோ மாத சம்பளமாகவோ கைக் கூலியாகவோ அல்லது அன்றாட வயிற்றுப் பிழைப்புக்கு ஆவது ஒரு அணா, இரண்டு அணா என்றோ ஏதாவது பணம் உதவாவிட்டால் காங்கிரசில், ஒரு தீண்டப்படாதவராவது இல்லை என்கின்ற நிலையில் தான் இன்று காங்கிரசுக்கும் தீண்டப்படாதவருக்கும் உள்ள சம்பந்தம் இருந்து வருகின்றது.



அது மாத்திரமல்லாமல் தங்கள் சுயமாய் காங்கிரஸ் தயவில்லாமல் வயிற்றுப் பிழைப்பை நடத்திக் கொண்டு போகலாம் என்று எண்ணக் கூடிய தன்னம்பிக்கை உடைய தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோருமே இன்று ''காங்கிரஸ் தீண்டப்படாத மக்கள் என்பவர்களுக்கு எதிரிடையான ஸ்தாபனம்'' என்றும் ''காங்கிரசினால் ஒரு நாளும் தீண்டப்படாத மக்களுக்கு விடுதலை ஏற்படாதென்றும்'' ஆதலால் ''காங்கிரசில் விழுந்து மாயவேண்டாம்'' என்றும் தங்கள் சமூகத்தாருக்கு எச்சரிக்கை செய்வதோடு நூற்றுக்கணக்கான கூட்டங்களிலும் தீர்மானமும் செய்து வருகிறார்கள்.

அதற்கேற்றாற்போல் காங்கிரஸ்காரர்கள் செய்து வரும் செய்கை களும் தீண்டப்படாதவர்கள் என்பவர்களின் கூற்றை ஆதரித்தே வந்து கொண்டிருக்கிறது.

## ஆலயப் பிரவேசம்

உதாரணமாக ஆலயப் பிரவேசம் என்கின்ற விஷயத்தில் பூனா ஒப்பந்தத்தின் போது தோழர்கள் மாளவியா, காந்தி, ராஜகோபாலாச்சாரியார் முதலிய தலைவர்கள், தீண்டப்படாத மக்களுக்கு உறுதி கொடுத்துவிட்டு இப்போது காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்கு மெஜார்ட்டியாக வந்து விட்டவுடன் ''பொதுஜன அபிப்பிராயத்தை சரி செய்து கொண்டாலல்லாமல் ஆலயப் பிரவேச விஷயம் மாத்திரமல்லாமல் வேறு எந்தவிதமான சமுதாய சீர்திருத்தங்களும் செய்யக் கூடாது'' என்று சொல்லிவிட்டார்கள்.

அப்படியாவது காங்கிரஸ்காரர்களோ அல்லது அதன் முக்கிய தலைவர்களோ என்று சொல்லப்பட்ட தோழர்கள் காந்தி, மாளவியா, ராஜகோபாலாச்சாரியார் ஆகிய பெரியார்கள் பூனா ஒப்பந்தத்துக்குப் பிறகு ஆலயப் பிரவேச விஷயமாகவோ, சமுதாய விஷயமாகவோ ஏதாவது பிரசாரம் செய்தார்களா? அல்லது சீர்திருத்த மகாநாடுகள் கூட்டி ஜனங்களுக்கு ஏதாவது எடுத்துச் சொன்னார்களா? அல்லது யாரையாவது கேட்டுக் கொண்டார்களா? அல்லது தீண்டாமை ஒழிப்புக்கு விரோதமாய் பார்ப்பனர் களும், சங்கராச்சாரியார்கள் என்பவர்களும், சனாதனிகள் என்பவர்களும் செய்து வரும் விஷமப் பிரசாரத்துக்காவது ஏதாவது சமாதானம் சொன்னார்களா? என்று பார்த்தால் அது விஷயத்தில் திருடனைத் தேள் கொட்டியதுபோல் வாயை வெகு பத்திரமாக மூடிக் கொண்டு அவ்விஷமப் பிரசாரத்துக்கு இடம் கொடுத்துக் கொண்டே வருகிறார்கள்.

தீண்டாமை விலக்கின் பேரால் பொது மக்களிடம் இருந்து ஏமாற்றிக் கொள்ளை அடித்த ரூபாய்களைப் பார்ப்பனர்களுக்கும் அவர்களது அடிமைகளுக்குமே கொடுத்து காப்பாற்றி வருகிறார்களே அல்லாமல், ஒரு பத்திரிகை மூலமாயாவது இப்படிப்பட்ட விஷமப் பிரசாரங்களுக்குப் பதில் கொடுக்கக்கூட இல்லை.



RangaRakes tamilnavarasam.com

### சங்கராச்சாரியார்

சங்கராச்சாரியார் என்னும் ஒரு பார்ப்பனர் ''பார்ப்பனனுக்கும் பறையனுக்கும் பிறவியிலேயே சரீரத்தில் ரத்தபேதம் இருக்கின்றது'' என்றும் ''பறையன் ரத்தத்தையும் பார்ப்பனன் ரத்தத்தையும் வேறு வேறாய்ப் பரீட்சித்துப் பார்த்தால் பற ரத்தம் இன்னது என்றும் பார்ப்பன ரத்தம் இன்னது என்றும் தெரிவித்து விடலாம்'' என்றும் அபிப்பிராயம் கொடுத்தார்.

இதைப் பற்றி எந்தக் காங்கிரஸ் பார்ப்பனராவது தீண்டாமை விலக்குக் கமிட்டிக்கு தலைவராய் இருந்து தீண்டாமைக் கமிட்டி பண்டை சுவஹா செய்கின்ற பார்ப்பனனாவது ஒரு வார்த்தைகூடப் பேசவே இல்லை. கழுதையோ குதிரையோ யாராய் இருந்தாலும், சங்கராச்சாரியார் வாயிலிருந்து வந்தது என்று சொன்னால் அது மதிக்கத்தக்க வார்த்தையாகத்தானே மக்கள் மதிக்கிறார்கள். அப்படிக்கு இருக்க இந்த மாதிரி விஷமத்தனமானதும் போக்கிரித்தனமானதுமான 'ஸ்ரீமுகத்துக்கு' யாரும் பதில் சொல்லவில்லை யானாலும் ''தீண்டாமையை அடியோடு ஒழிப்பதற்காகவே உயிர் வாழ் கின்றேன்'' என்று சொல்லி பொது மக்களிடம் இருந்து 10 லட்சக்கணக்கான ரூபா வசூல் செய்த தோழர் ஆகிய காந்தியாருக்காவது இப்படிப்பட்ட விஷமப் பிரசாரத்துக்கு பதில் சொல்ல வேண்டும் என்கின்ற அறிவு இருக்க வேண்டாமா என்று கேழ்க்கின்றோம்.

சங்கராச்சாரி இப்படி சொன்ன பிறகும் இதற்கு எந்த காங்கிரஸ்வாதியும், காந்தியாரும், எந்த சீர்திருத்தப் பார்ப்பனரும், தீண்டாமை விலக்கு கமிட்டித் தலைவர்களும் யாதொரு பதிலும் சொல்லாத காரணத்தால் இன்று அந்த சங்கராச்சாரி சொன்னபடியே எல்லா பார்ப்பனர்களும் காப்பிக்கடை, ஓட்டல், வக்கீல், வக்கீல் குமாஸ்தா, புரோகிதன், அர்ச்சகன், வைத்தியன், தூதுவன் ஆகிய எல்லாப் பார்ப்பனர்களும் அதையே சொல்லிக் கொண்டு தீண்டப்படாதவர்கள் என்பவர்களை முன்பைவிட மோசமாய் நடத்துகிறார்கள்.

### அனுபவத்தில் அடக்கு முறை

தவிரவும் காங்கிரசுக்காரர்கள் தீண்டாமை விலக்கு விஷயத்தில் காரியத்தில் அனுபவத்தில் எப்படி நடந்து வருகிறார்கள் என்பதைப் பற்றி சென்ற வார தலையங்கத்தில் குறிப்பிடுகையில் தோழர் சன்யாசி என்ற ஆதி திராவிடரை காங்கிரசார் எப்படி நடத்தினார்கள் என்பதைக் குறிப்பிட்டிருந்தோம்.

அதன் பயனாக இவ்வாரம் தீண்டாமை விலக்கு கமிட்டியில் இருந்து தோழர் சன்யாசியை நீக்கி விட்டார்கள் என்கின்ற செய்தி கிடைத்திருக்கிறது.

திருச்சி ''நகர தூதன்'' பத்திரிகையில் சென்ற வாரமே இச்செய்கையை தீர்க்கதரிசனமாக குறிப்பிட்டிருந்தது.

அதாவது, ''தோழர்கள் சன்யாசியை வேலையை விட்டு நீக்கி விடுவார்கள்'' என்று எழுதியிருந்தது. அதுபோலவே நடந்து விட்டது.



காங்கிரசில் இருக்கும் அடக்குமுறைக்கும், கொடுமை முறைக்கும் இதைவிட வேறு எதை ஆதாரம் காட்ட வேண்டும் என்பது நமக்கு விளங்க வில்லை. ''குதிரை கீழே தூக்கிப் போட்டதுமல்லாமல் புதைக்க குழியும் பறித்தது'' என்பது போல் தோழர் சன்யாசியை இழிவுபடுத்தி அவமானப் படுத்தியது மாத்திரமல்லாமல் அவரை உத்தியோகத்தில் இருந்தும் நீக்கிவிட்டார்கள் என்றால்,

அடக்கு முறையையும் தண்டனைகளையும் பிரிட்டிஷ் அரசாங்கம் மாத்திரமல்லாமல் உலகிலுள்ள ஏனைய அரசாங்கங்களும் இந்திய தேசீயக் காங்கிரசினிடமும் இந்தியப் பார்ப்பனர்களிடமும் தான் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் சிபார்சு செய்ய வேண்டிய அளவுக்கு வந்துவிட்டது என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை.

தோழர் காந்தியார் இதற்கு என்ன பதில் சொல்லுவார்?

**குடி அரசு - தலையங்கம் - 28.07.1935**



RangaRakes tamilnavarasam.com

# செட்டிநாட்டில் சீர்திருத்தப் புரட்சி

நாட்டுக்கோட்டை நகரத்தார் லேவாதேவியின் மூலம் நன்றாய் பணம் சம்பாதிக்கக்கூடிய சமூகத்தார்கள் என்பது யாவரும் அறிந்ததாகும்.

ஆனால் அப்பணத்தை ஒழுங்கான முறையில் செலவு செய்யவோ அல்லது தங்கள் சமூகத்தில் அல்லது பின் தங்கள் சந்ததிகள் அறிவுபெற்று விளங்கும்படி பயன்படுத்தவோ அச்சமூகத்தில் அனேகருக்குத் தெரியாது என்றே சொல்லவேண்டும்.

அவர்களுடைய பணம் எல்லாம் கோயில் கட்டுதல், வேத பாடசாலை வைத்தல், உற்சவங்களுக்கு வாகனம் செய்தல், சாமிக்கு பாலபிஷேகத்துக்கு பசுமடம் வைத்தல், யாத்திரை செல்லுதல் ஆகிய கடவுள் செலவுக்கும் மற்றும் கல்யாணம் செய்தல், புதுமை செய்தல், 10-ம், 60-ம் கல்யாணம் செய்தல், கருமாதி திதி செய்தல், உபதேசம் பெருதல், திருவாதிரை செய்தல் முதலாகிய வைதீக சடங்குகளுக்கும் பெரிதும் செலவு செய்து வீண் பெருமை பெறப் பயன்படுத்தப்படுகின்றனவே ஒழிய செல்வத்தினால் ஏற்படவேண்டிய பயனைக்கருதி செலவழிப்பது என்பது மிகவும் அருமையாகவே காணப்படும்.

இவை தவிர அவசியமில்லாமல் 1 லக்ஷம், 2 லக்ஷம், 5 லக்ஷம் போட்டு வீடு கட்டிக் கொள்வது ஆகிய காரியமும் செய்யப்படுகிறது. மற்றும் இன்னாட்டில் பல லக்ஷக்கணக்கான பிச்சைக்காரர்களும், பல கோடிக்கணக்கான தற்குறிகளும், 10 லக்ஷக்கணக்காக வேலையற்றுத் திண்டாடும் மக்களும் இருப்பதை இக்கூட்டத்தார்கள் அறியமாட்டார்கள் என்றும் சொல்ல முடியாது.

இந்நிலையில் நமது நாட்டு மக்கள் இருக்க, இப்போது சிறிது காலமாய் ஒரு புதிய கூட்ட வாலிபர்கள் தாசி வைப்பது, மதுபானம் அருந்துவது, சீட்டுகள் பந்தயங்கள் ஆடுவது, கார் வைப்பது முதலிய தர்பார் செலவில் இறங்கி இருக்கிறார்கள் என்றும் சொல்லலாம். இவற்றால் எல்லாம் அந்த சமூகத்துக்கோ, நாட்டு நலனுக்கோ ஏதாவது கடுகளவாவது பயன் இருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா?

அச்சமூகத்தில் கொஞ்ச காலமாய் சில வாலிபர்களுக்கு சீர்திருத்த ஆர்வம் ஏற்பட்டு ஏதோ இரண்டொரு சீர்திருத்தம் செய்ய ஏற்பட்டது என்றாலும் அவை சீர்திருத்தக்காரர்களாலேயே தாக்குப் பிடிக்க முடியாமல் அதிக பயன் கொடுப்பதற்கில்லாமல் போய்விட்டது.



இவ்வளவு காலம் பொருத்தேனும் அச்சமூகப் பிரமுகர் ஒருவரால் பெருந்தொகை ஒதுக்கி வைத்து ஒரு யூனிவர்சிட்டி ஏற்படுத்தப்பட்டது என்றாலும் அதுவும் பெரிதும் ஒரு வகுப்பாருடைய நன்மைக்கே பயன்படும் படியான மாதிரியில் அமைந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

இருந்தாலும் கோவில் கட்டுவதை விட்டு இதாவது செய்தார்களே என்று போற்ற வேண்டியது அவசியமாகும்.

மற்றும் பல செல்வவான்களுக்கு இப்போது இந்த எண்ணம் உதித்து இருப்பதாகவும் தெரிகிறது.

எனவே கடவுள் விஷயம் கொஞ்சம் கொஞ்சமாக மாறி அச்செல்வம் கல்வி விஷயத்துக்கு பயன்படும்படியாக மாறுவது போலவே வைதீகச் சடங்கு விஷயமும் மாறி அவைகள் பொது மக்கள் கல்விக்கு பயன்படா விட்டாலும் அந்தந்த குடும்ப மக்களின் கல்வி, நாகரீகம், நல்வாழ்க்கைப் பழக்கம் ஆகியவைகளுக்காகவது பயன்படும்படியான மார்க்கம் ஏற்பட்டால் அதிலிருந்து பிறகு அனேக முற்போக்குகள் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கலாம்.

ஆகவே வைதீகச் சடங்குகள் விஷயத்தில் இவ்வளவு காலம் பொருத்தாவது அச்சமூகத்தில் ஒரு பெரும் சீர்திருத்தம் ஏற்பட்டதையும் இனியும் பல ஏற்படப் போவதாகக் காணப்படுவதையும் பார்த்து நாம் மிகுதியும் பாராட்டுகிறோம்.

என்னவெனில் சுயமரியாதை சங்கத்தில் ஆரம்ப முதல் நிர்வாக சபை அங்கத்தினராய் இருந்துவரும் தோழர் வைசு. ஷண்முகம் அவர்கள் தனது மகள் தோழர் பார்வதிக்கு நடத்தின திருமணத்தை ஒரு பெரும் சீர்திருத்த திருமணமாகவே நடத்திக்காட்டி விட்டார்.

அதாவது புரோகிதம் இல்லை என்பதும், ஒரே நாளில் முடித்தது என்பதும் மற்றும் எவ்வித வைதீகச் சடங்கும் இல்லாமல் செய்தது என்பதும் மிக குறைந்த செலவில் நடத்தப்பட்டது என்பதும் பாராட்டக்கூடியதேயாகும்.

அதுபோலவே அதே திருமணத்தை ஒட்டி மற்றும் சில தோழர்கள் தம்பதி சகிதம் ஒன்று கூடி தங்கள் குழந்தைகளுக்கு புதுமை என்னும் சடங்கு செய்வதில்லை என்று முடிவு செய்து கொண்டு விட்டார்கள். புதுமை என்பது ஒரு தம்பதிக்கு முதல் முதல் பிறக்கும் குழந்தைக்கு செய்யும் ஒரு சடங்காகும்.

இச்சடங்குக்கு எவ்வளவு ஏழையாய் இருந்தாலும் குறைந்தது 2500 ரூ. முதல் 10000 ரூபாய் வரை செலவு ஏற்படும். இதை நிறுத்துவது என்பது அச்சமூகத்தில் முடியாத காரியமாகும்.

யாராவது நிருத்தினால் அவர்கள் அச்சமூகத்தில் மிகவும் இழிவாகவும், கேவலமாகவும் கருதப்பட வேண்டியவர்களாவார்கள்.

ஆகவே இப்படிப்பட்ட சடங்கையும் மற்றும் இது போன்ற சடங்கு களையும் செய்வதில்லை என்று ஒரு கூட்டத்தார் முடிவு செய்து விட்டார்கள்.



RangaRakes tamilnavarasam.com

அதாவது 8-7-35-ந் தேதி மாலை 5 மணிக்கு கானாடுகாத்தான் தோழர் வைசு ஷண்முகம் அவர்களது இன்பமாளிகையில் தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் ஒரு சிறு கூட்டத் தம்பதிகள் கூட்டம் கூட்டப்பட்டு இம்மாதிரி வைதீகச்சடங்கால் ஏற்படும் பணச் செலவையும் பயனற்ற தன்மையையும் எடுத்துச்சொல்லி மேல் கண்ட முடிவுக்கு வந்து பல தம்பதி களிடம் உறுதிமொழியும் கையொப்பமும் வாங்கப்பட்டுவிட்டது.

மற்றும் பல தம்பதிகள் தங்கள் பெயர்களையும் அதில் சேர்த்துக் கொள்ளும்படி சொன்னார்கள். ஆயினும் அவைகளை பின்னால் தெரிவிக்கப்படும்.

இந்தக் கூட்டம் கூட்டவும் இந்த முடிவுக்கு வரவும் முக்கியஸ்தராய் இருந்தவர் தோழர் மு. நடராஜனாவார். ஆனால் முதல் முதல் கையொப்பமிட முனைந்தவர்கள் தோழர்கள் வைசு. ஷ. சோலை தம்பதிகளாவார்கள். மற்ற தம்பதிகளும் வெகு அன்புடனும் ஆசையுடனும் ஒப்பிக் கையொப்பமிட்ட பிறகு தம்பதிகள் குதூகலத்துடன் கைகொடுத்து ஆனந்தித்த காட்சி மிக மிக அருமையாய் இருந்தது.

இக்கூட்ட நிகழ்ச்சியையும் கையொப்பங்களையும் படமாக்கி இதில் பிரசுரித்திருக்கிறோம்.* மற்றும் இந்த முடிவை ஒப்புக் கொள்ளு கிறவர்கள் தம்பதி சகிதமாய் ஒப்புக்கொண்டு கையொப்பங்களை அனுப்பினால் நன்றி அறிதலுடன் ஏற்று பிரசுரிக்கப்படும்.

குடி அரசு - கட்டுரை - 28.07.1935

★


8 குடி அரசு

செட்டிநாட்டில் சீர்திருத்தப்புரட்சி.



RangaRakes tamilnavarasam.com

# விதண்டா வாதம்

குசேலருக்கு 27 பிள்ளைகள் பிறந்தது. குடும்பம் பெருத்துவிட்டது. அதனால் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் திண்டாடினார் என்று புராணக்கதை சொல்லுகிறது. குசேலர் பெண்சாதி குறைந்தது வருஷத்திற்கு ஒரு பிள்ளை யாகப் பெற்று இருந்தாலும் கைக்குழந்தைக்கு ஒரு வருஷமாயிருக்கு மானால் மூத்த பிள்ளைக்கு 27 வருஷமாவது ஆகியிருக்க வேண்டும். ஆகவே 20 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் 7 பேராவது இருந்திருப்பார்கள்? இந்த 7 பிள்ளைகளும் ஒரு காசுகூட சம்பாதிக்காத சோம்பேறிப் பிள்ளைகளாகவா இருந்திருப்பார்கள்? 20 வருஷத்திற்கு மேம்பட்ட பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு பிச்சைக்குப்போக குசேலருக்கு வெட்கமிருந்திருக்காதா? அல்லது இந்தப் பிள்ளைகளுக்காகவது மான அவமானமிருந்திருக்காதா? அல்லது பிச்சைபோட்ட கிருஷ்ண பகவானுக்காவது "என்ன? பெரிய பெரிய வயது வந்த பிள்ளைகளைத் தடிப்பையல்களாட்டமாய் வைத்துக் கொண்டு பிச்சைக்கு வந்தாயே வெட்கமில்லையா?" என்று கேட்கக்கூடிய புத்தி இருந்திருக்காதா?

* * *

**கேள்வி:-** என்னடா உனக்கு கடவுள் இல்லையென்று சொல்லுகின்ற அளவு தைரியம் வந்துவிட்டதா?

**பதில்:-** அவர்தான் மனோவாக்குக் காயங்களுக்கு எட்டாதவரென்று சொன்னாயே! அவரை நான் உண்டு என்று சொன்னால் நீயே உனக்கு எப்படித் தெரியும்? என்று கேட்பாயே! அதனால்தான் என் புத்திக்கு எட்டாததையும் தெரியாததையும் நான் ஒப்புக்கொள்வதில்லை என்று சொல்லிவிட்டேன். இதில் என்ன தப்பு?

* * *

**கேள்வி:-** கடவுள் கருணாநிதி அல்லவா?

**பதில்:-** கடவுளே நமது மனதுக்கும், காயத்துக்கும் எட்டாதவரா யிருக்கும்போது அவர் கருணாநிதி என்பது உனக்கு எப்படித் தெரிந்தது?

* * *

ராமாயணம் நடந்தது திரேதாயுகத்தில். அதில் ராவணன் அரைக்கோடி வருஷம் (50-லக்ஷம் வருஷம்) அரசாண்டான் என்று காணப்படுகிறது.



அந்த யுகத்திற்கு மொத்த வருஷமே 12 லக்ஷத்து 96 ஆயிரம் வருஷங்களாகும். நாலு யுகமும் சேர்ந்தாலுமே 43 லக்ஷத்து 20 ஆயிரம் வருஷந்தான் ஆகிறது.

ஆகவே ராவணன் எப்படி அரைக்கோடி வருஷம் அரசாண்டு இருக்கமுடியும்?

**பகுத்தறிவு (மா.இ.) - வினா விடை - ஜூலை 1935**



RangaRakes tamilnavarasam.com

# பொது உடமை தேசத்தில் கலைகள்

பொது உடமை தத்துவம் பெருகி மக்கள் சமதர்மக் கொள்கைக்கு ஆளாகிவிட்டால், எல்லோரும் சோம்பேறிகளாக ஆகிவிடுவார்கள் என்றும், கலைகள் விருத்தியாகாதென்றும், அற்புதங்களும் அதிசயங்களும் கண்டு பிடிக்க முடியாமல் போய்விடுமென்றும், உற்சாகமற்ற வாழ்க்கையாக ஆகி விடுமென்றும், உலக முற்போக்கே தடைப்பட்டு விடுமென்றும், பொதுவாக மனித சமூகத்தின் அறிவே மங்கிவிடுமென்றும் சொல்லப்படுகின்றது.

இன்று உலகில் பொது உடமை தேசமாகவும் சமதர்மக் கொள்கை ஆட்சி புரியக்கூடியதாகவும் இருந்து வரும் நாடு ரஷ்ய தேசமாகும்.

அது 81 சதுர மயில் விஸ்தீர்ணமும் 17½ கோடி ஜனத்தொகை கொண்டதுமான தேசமாகும். அத்தேசம் தனி உடமைத் தத்துவத்தின் கீழ், சமதர்மம் என்கின்ற வாசனையே அற்று, உயர்வு தாழ்வு தத்துவத்தில் வெகு காலமாக இருந்து வந்திருக்கிறது.

அப்படி இருந்தும் அந்த தேசம் ஏறக்குறைய ஒரு காட்டுமிராண்டி தேசம் போலவே, இந்தியாவை விட மோசமான நிலைமையில் சமீப காலம் வரை இருந்து வந்திருக்கிறது. 1917-ஆம் ஸ்ரீ-க்கு முன் அந்நாட்டு மக்கள் 100-க்கு 8-பேர், பத்துப் பேர்களே படித்திருந்தார்கள்.

மூக்குக்கண்ணாடியைப்பார்த்து ஆச்சரியப்படும்படியான நிலையில் கோடிக்கணக்கான மக்கள் இருந்தார்கள். மகாயுத்தம் நடந்ததை உணர முடியாமலும், உலக நடப்பில் கொஞ்சம் கூட தெரிந்துகொள்ள முடியாமலும் கோடிக்கணக்கான மக்கள் இருந்திருக்கிறார்கள். பல ஜாதி, பல மதம் என்பதாகப் பிரித்து ஒற்றுமையே இல்லாமல் இருந்து வந்தார்கள்.

இன்று ரஷிய தேசம் பொது உடமைத் தத்துவத்துக்கு வந்த - சமதர்மக் கொள்கைப்படி ஆட்சி புரிய ஆரம்பித்த இந்த 18-வருட காலத்தில் உலகத்தில் கலைகளில் முதன்மை ஸ்தானம் பெறப் பார்க்கிறது. ரஷியக்கலை வளர்ச்சியும், அதன் முற்போக்கும் இன்று வேறு எந்த தேசத்திலும் அவ்வளவு வேகமாக நடைபெறவில்லை என்றே சொல்லவேண்டும். இலக்கியம், சித்திரம், நடனம், சங்கீதம், நாடகம், ஆகியவைகளில் ரஷியாவுடன் போட்டி போட மற்ற தேசங்களில் அனேகம் பயப்படுகின்றன. போர்த்திறத்தில் ரஷ்யாவைக் கண்டு மற்ற தேசங்கள் பயப்படுகின்றன என்று சொன்னால் அதை மறுக்க இன்று எத்தேசத்துக்கும் தைரியமில்லை.



வைத்திய விஷயத்தில் செத்தவனைப் பிழைக்க வைத்தல் முதலான அனேக காரியங்களில் உலகத்தில் முதன்மை பெற்று வருகிறார்கள். விஞ்ஞான ஆராய்ச்சிக்காக ரஷியா எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியே அது இன்று எல்லாத் துறைகளிலும் உலகத்தைப் பின்னடையச் செய்கிறது.

அதாவது ரஷிய சோவியத் அரசாங்கமானது ஆராய்ச்சித்துறையில் வேலை செய்து புதிய புதிய விஷயங்களை கண்டுபிடித்து வெளிப்படுத்து வதற்கு முதல் தர விஞ்ஞான நிபுணர்களாக (30000) முப்பது ஆயிரம் பேர்களைத் தெரிந்தெடுத்து அதற்கு ''இன்வெண்ட் கில்ட்'' என்று பெயர் வைத்துக் காரியங்கள் செய்யச்செய்து வருகிறார்கள். இந்நிபுணர்கள் இதுவரை அனேக அற்புதங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இன்னும் அனேக விஷயங்கள் கண்டு பிடிக்க உறுதி கொண்டு நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

கை விரல் நசுங்கித் துண்டுபட்டுவிட்ட ஒருவனுக்கு அவன் கால் விரல் ஒன்றை வெட்டி தைத்துப் பொருத்தி இயற்கையான கை விரலாகச் செய்யப்பட்டது.

குருடர்கள் கண்களுக்கு மின்சார சக்தி ஏற்றுவதன் மூலம் வெளிச்சம் வரும்படி செய்யப்பட்டிருக்கிறது. ஒரே கம்பியில் ரயில் வண்டியைத் தாங்கும்படி செய்து பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு மணிக்கு 185-மைல் வேகம் ஓடும்படி செய்யப்பட்டிருக்கிறது.

செத்த பிராணிகளை அதாவது பனியில் மூழ்கி உறைந்து உயிர் துறந்த பிராணிகளை 2, 3, 4 மாதகாலம் பொறுத்துக்கூட உயிர் வரும்படி செய்யப்பட்டிருக்கிறது, ரத்தத்தை வெளியிலெடுத்ததும் மறுபடியும் சரீரத்துக்குள் பாய்ச்சப்படுகிறது.

கம்பளங்களுக்கு, ஜெந்துக்களின் மயிர்களை வெட்டாமல் தானே உதிரும்படி செய்து மறுபடியும் சீக்கிரம் முளைக்கும்படி செய்யப்படுகிறது.

பூமி விவசாய ஆராய்ச்சியில் பெரியதொரு மாற்றமும் பயனும் ஏற்படும்படியாக பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றது.

இன்னும் பல காரியங்கள் நடக்கின்றன. எனவே கலைவளர்ச்சி, அதிசயம், அற்புதங்கள் கண்டு பிடித்தல், முயற்சி, விஞ்ஞான முன்னேற்றம் முதலியவைகள் எல்லாம் தனி உடமை நாட்டில் தான் ஏற்படும் என்று சொல்லுவதானது தனி உடமை பணமே சுயநலம், பணமே வேலைக்கு பிரதி பலன் என்றதான பழக்கத்தினால் ஏற்படும் மனப்பான்மையே ஒழிய, அவை இயற்கையாகத் தோன்றுவதல்ல. பணமில்லாத போட்டி விளையாட்டுகளில், பந்தயங்களில் மக்கள் இறங்கி வேலை செய்வதையும் பண வருவாயில்லாத காரியத்துக்கு மக்கள் பலர் உயிர் விடும்படியான அளவு முயற்சி செய்வதையும், உயிரையே இழப்பதையும் கூட பார்க்கின்றோம். இவர்களுடைய லக்ஷியம் என்ன என்று பார்த்தோமேயானால் சமதர்ம நாட்டில் போட்டியும், பந்தயமும், அதற்காக உற்சாகமும் ஊக்கமும் ஏன் இருக்காது என்பது விளங்கும்.



RangaRakes tamilnavarasam.com

நிற்க ஒரு மனிதன் இரண்டு மனிதர்களால் செய்யப்படுகின்ற காரியங்கள் போக, 1000-பேர் 10000-பேர், 100000-பேர்களால், ஒரு வருஷம், பத்து வருஷம் பாடுபட்டு, 10-கோடி ரூ, 20-கோடி ரூ, செலவிட்டுச் செய்ய வேண்டிய அதிசயமான காரியங்கள் எல்லாம் பெரிதும் சமதர்ம நாட்டில் தான் செய்ய முடியும்.

ஏனெனில், சமதர்ம நாட்டில் உள்ளதை விகிதாசாரம் சாப்பிட்டுவிட்டு, முடிந்ததைக் கூலி இல்லாமல் செய்வது என்பதால் எப்படிப்பட்ட வேலைக்கும் மூலதனக் கவலையோ வட்டிக்கணக்கு பார்க்க வேண்டிய அவசியமோ இல்லாமல் போய்விடுகிறது. ஆதலால் சமதர்ம மக்கள் வாழ்க்கை எழுச்சி உள்ளதும், ரசமுள்ளதுமாக இருக்காது என்று யாரும் எண்ணிவிட வேண்டியதில்லை.

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - ஜூலை 1935**



# ராம – ராவண ஆராய்ச்சி

**- சித்திரபுத்திரன்**

## ராமனின் ‘‘தெய்வீகத்தன்மையும்’’ ராவணனின் ‘‘ராக்ஷதத்தன்மையும்’’

### ராமனின் தெய்வீகத்தன்மையான காரியங்கள்

1. ராமன் தாடகையைக் கொன்று யாகம் நடத்திக்கொடுத்தான்.
2. சூர்ப்பநகையின் மூக்கையும், காதையும் அறுக்கும்படி தம்பிக்கு உத்தரவு கொடுத்தான்.
3. வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்குப் பட்டங் கட்டினான்.
4. ராவணனைக் கொன்று விபீஷணனுக்குப் பட்டங் கட்டினான்.
5. 5-மாத கர்ப்பத்தோடு தன் பெண்ஜாதியான சீதையை விபசாரப் பட்டம் கட்டி தனியே காட்டில் கொண்டுபோய் விட்டுவந்தான்.

இந்த ஐந்து அரும்பெருங் காரியங்களைச் செய்திருக்கிறான் ராமன். இந்தக் காரியங்களிலிருந்து ராமனிடத்தில் தெய்வத்தன்மையோ, நீதியோ, அறிவுடைமையோ, மனுஷ்யத் தன்மையோ ஏதாவது இருக்கிறதாகச் சொல்ல முடியுமா?

1. தாடகையைக் கொன்றதற்காக என்ன சமாதானம் சொல்லமுடியும்?

தாடகை செய்த குற்றமென்பதெல்லாம் அவள் தேவர் (ஆரியர்) களுடைய யாகத்தைத் தடுத்துக்கொண்டு வந்தாள் என்பதே. யாகம் என்றால் என்ன என்பதைப்பற்றி நாம் சொல்லவேண்டியதேயில்லை. குதிரை, மாடு, ஆடு, மனிதன் முதலிய ஜீவன்களை (சித்திரவதை செய்து) கொன்று பக்குவம் செய்யும் ஒரு காரியமாகும். அதுதான் இன்று முறையே அஸ்வமேத யாகம், பசுமேத யாகம், அஜமேத யாகம், நரமேத யாகம் என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

இன்றுகூடப் பார்ப்பனர்கள் எங்காவது யாகம் செய்வதாயிருந்தால், ஜீவகாருண்ய மதக்காரர்கள் என்று சொல்லப்படும் ஜைனர்களும், மற்றும் சைவர்களும், ஜீவகாருண்யமுடையவர்களும் ஆட்சேபிப்பதை நாம் பார்க்கின்றோம். யாகங்களைத் தடுக்கும்படியாக சட்டம் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தாரை வேண்டுகின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

யாகத்தைத் தடுத்ததற்காகவே ஜைனர்கள் கழுவேற்றப்பட்டிருக் கிறார்கள் என்றும் புராணங்களில் அறிகிறோம். திருவள்ளுவர், புத்தர் முதலிய பல பெரியோர்கள் யாகத்தைக் கண்டித்தும் இருக்கிறார்கள். சென்ற மாதத்தில் தேவகோட்டையில் நடந்த யாகத்தைக்கூட பலர் தடுத்தும், கடைசியாக யாகம் செய்த பார்ப்பனர்கள் சர்க்காரிடம் முறையிட்டு ரிசர்வ் போலீஸ்காரர்கள் பந்தோபஸ்தின்மீது யாகம் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்தக்காலத்திலேயே யாகத்துக்கு இப்படி ஆக்ஷேபனைகளும் எதிர்ப்புகளும் இருக்கும்போது அந்தக்காலத்தில் ஆரியர்கள் இந்நாட்டில் பிரவேசித்த ஆரம்ப காலத்தில் இம்மாதிரியான ஜீவ இம்சைக்கு எதிர்ப்பு இல்லாமல் இருக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

ராஜ குடும்பத்தைச் சேர்ந்த தாடகை என்கின்ற வயது சென்ற பெண் ஒருத்தி யாகத்தை ஆட்சேபித்ததற்காக அவள் கொல்லப்படுவது என்றால், அதுவும் தெய்வத்தன்மை உடையவன் என்று சொல்லப்படும் ஒரு ராஜகுமாரனால் கொல்லப்படுவது என்றால் இது எப்படி நீதியாகும்?

யாகம் செய்யவேண்டிய ஆரியர் மனிதத் தன்மையும் யோக்கியமும் உடையவர்களாய் இருந்திருந்தால் தாடகையைச் சிறைப்படுத்தி வைத்திருந்து யாகம் முடிந்தபின்பு விடுதலை செய்திருக்கலாம் அல்லவா? அப்படி இல்லாமல் அவளை வில்லால் அம்புவிட்டு ராமன் கொன்ற செய்கை எந்தச் சட்டப்படி நீதியாகும்? இன்று எந்த அரசாங்கத்திலாவது இப்படிப்பட்ட கொடுமையான அநீதியைப் பார்க்கிறோமா? அல்லது காதிலாவது கேட்கிறோமா?

2. சூர்ப்ப நகையை மூக்கும் காதும் அறுத்தது என்பது எப்படிப்பட்ட காட்டுமிராண்டித்தனமான செய்கை என்பதை அவரவர்களே தான் யோசித்துப் பார்க்கவேண்டும். சூர்ப்பநகை செய்த தப்பிதமெல்லாம் ''ராமனைப் புணர'' ஆசைப்பட்டாள் என்பதேயாகும். இது ஒரு பெரிய குற்றமாகுமா? முதலாவது ஒரு பெண், அதிலும் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவள் காட்டில் திரியும் இரு வாலிபர்களை வலிய அணைய ஆசைப்பட்டாள் என்பது சாதாரணமான இயற்கை நடப்புக்கு அதீதப்பட்ட காரியமேயாகும். அப்படித்தான் ராமன் மீது காதல் கொண்டுவிட்டதினாலேயே அது காதும் மூக்கும் அறுக்க வேண்டியதான அவ்வளவு பெரிய குற்றமாக ஆகிவிடுமா? இந்தக் காரியமானது இன்றைய உலக நடப்புத் தன்மைக்கு எவ்வளவு இழிவானதும், கீழ்மக்கள் செய்கை என்று சொல்லக்கூடியது மானதாகும் என்பதை யோசித்தால் ராமன் தெய்வத்தன்மை கொண்டவன் என்றோ, நல்ல குடிப்பிறப்பினன் என்றோ, நீதிக்கும் மனுஷ்யத்தன்மைக்கும் கட்டுப்பட்டவனாய் இருந்தான் என்றோ சொல்லமுடியுமா?

3. வாலியைக் கொன்றதைக் கவனிப்போம். வாலிக்கும் ராமனுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. வாலிக்கும் அவன் தம்பி சுக்ரீவனுக்கும் ஏதாவது தகறாறு இருந்திருக்கலாம். கிஷ்கிந்தா ராஜ்யம் வாலிக்குச் சொந்தமானது என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் வாலி ஜேஷ்ட குமாரன் ஆனதால் அவனுக்குப் பட்டம் வந்துவிட்டது.

வாலி அயல் நாடுகளுக்குச் சென்ற காலத்தில் சுக்கிரீவன் ராஜியபாரம் செய்து வந்தான். வாலி திரும்பி வந்து கேட்டவுடன் சுக்கிரீவன் ராஜியத்தை வாலியிடம் ஒப்புவித்து இருக்கவேண்டியது நேர்மையாகும். அப்படிக் கில்லாமல் சகோதரத் துரோகியும் நம்பிக்கைத் துரோகியுமான சுக்ரீவன், எஜமானத் துரோகியான அனுமானை வசப்படுத்திக்கொண்டு இருவரும் ராஜாவுக்கு விரோதமாகச் சதியாலோசனை செய்து ராஜ்யத்தை வாலிக்குக் கொடுக்க மறுத்ததால் வாலி சுக்கிரீவனுடன் போர் புரிந்து ஜெயித்து சுக்கிரீவனை வெளிப்படுத்த வேண்டியதாயிற்று.

அந்த முறையில் அவன் மனைவியைச் சுவாதீனப்படுத்திக் கொள்ள வாலி எண்ணியதாகவே வைத்துக்கொண்டாலும் இதற்காக ராமன் வாலியைக் கொல்லவேண்டிய அவசியம் என்ன? பழயகால யுத்த முறைகளில் பெண்களைக் கைப்பற்றும் விஷயங்களும் இருந்ததாகக் காணப்படுவதை வைத்துக் கொண்டு பார்க்கும்போது வாலியை ராமன் கொன்றது என்பது எவ்வளவு துர்க்கிருதமான காரியம் என்பதை நாம் எடுத்துக் காட்டவேண்டியதில்லை.

ராமன் வாலியைக் கொன்றதானது ஏதாவது ஒரு நீதியைக் கொண்ட தாக இருந்திருக்குமானால் வாலிக்குப் பிறகு அந்த ராஜ்யத்துக்கு வாலியின் குமாரனான அங்கதனுக்கல்லவா பட்டாபிஷேகம் செய்திருக்கவேண்டும்? அப்படியில்லாமல் சுக்கிரீவனுக்குப் பட்டங் கட்டப்பட்டதானது, சூழ்ச்சியின் காரணமாகவே ராமன் வாலியைக் கொன்றான் என்பதற்கு மற்றுமோர் ஆதாரமாகின்றதல்லவா? இந்தக் காரியத்தாலும் ராமனிடம் தெய்வத் தன்மையோ, மனிதத்தன்மையோ, நீதியோ, ஒழுக்கமோ இருந்ததாகக் காணப்படவில்லை.

4. ராமன் ராவணனைக் கொன்றது சம்பந்தமாக ராவணன் செய்த குற்றம் என்ன என்பதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். அதற்கு முன்பதாக ஒரு சங்கதியை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது:- ராமாயண நிகழ்ச்சி, ராவண ஆட்சி, ராம ராவண யுத்தம் எல்லாம் பூலோகம் என்கின்ற இந்த உலகத்தில் நடந்தவைகளே ஒழிய மேலுலகம் என்பதிலோ, கீழுலகம் என்பதிலோ நடந்தவையல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

### இராவணன் செய்த குற்றங்கள்

1. தேவர்களைக் கொடுமைப் படுத்தினது.
2. முனிவர்களுக்கும் ரிஷிகளுக்கும் அவரவர்கள் காரியங்களைச் செய்யவொட்டாமல் தடுத்துத் தொல்லை கொடுத்தது.
3. சீதையைத் திருடினது.



RangaRakes tamilnavarasam.com

இராவணன் எப்படிப்பட்டவனென்பதை அறிந்தால் இக்குற்றங்களை அவன் செய்திருப்பானா என்பது யாவருக்கும் விளங்கும்.

1. இராவணன் மகா கல்விமான். 2. வேதசாஸ்திரங்களில் விற்பனன். 3. குடிகளையும், சுற்றத்தார்களையும் இரக்கமுடன் ஆதரித்தவன். 4. தைரிய சாலி. 5. வீரன். 6. ஆச்சரியப்படத்தக்க அதி பலசாலி. 7. மிகவும் பக்திமான். 8. தவசிரேஷ்டன். 9. கடவுளுடைய பிரீதிக்குப் பாத்திரனானவன். 10. பல வரங்களைப் பெற்ற வரப்பிரசாதி. இராவணனுக்கு இந்தப் பத்து குணங் களையும் வால்மீகியே கற்பித்திருக்கிறார்.

இப்படிப்பட்டவன் தேவர்களைக் கொடுமைப்படுத்தினானென்றால் நம்பமுடியுமா? இக்குற்றத்தைச் சாட்டுவதற்கு முன் தேவர்கள் யார் என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும்.

மேல் லோகத்தில் இருப்பதாய் சொல்லப்படும் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு இந்த பூலோகமாகிய நர லோகத்தில் வேலை கிடையாது. அப்படிப்பட்ட தேவர்களை இப்படிப்பட்ட 10 குணங்களுள்ள ராவணன் கொடுமைப்படுத்துவான் என்று அறிவுள்ள யாரும் நம்பமுடியாது.

இன்றையதினம் இங்கு பூதேவர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டு எப்படி ஒரு கூட்டம் மக்கள், மற்ற சமூகத்தாருடைய சுதந்தரத்துக்கும், சுயமரியாதைக்கும் முட்டுக்கட்டை யாயிருந்து வாழ்ந்து வருகிறார்களோ, அதுபோலவேதான் அப்போதும் இந்தக் கூட்டம் தங்களைத் தேவர் என்று சொல்லிக்கொண்டு மக்களுக்குத் தொல்லை செய்துகொண்டே வந்திருப்பார்கள்.

அத்தொல்லையை ஒழிப்பதற்கு இன்றும் பலர் முயற்சிப்பது போல், அப்பொழுது ராவணன் முயற்சித்திருக்கலாம்.

இராமாயணக் கதையைப் பற்றி எழுதுகிற சரித்திரக்காரர்கள் ராமாயணத்தை ஆரியர், திராவிடர் போராட்டமென்று சொல்லுவதும், இன்று பார்ப்பனர்களாகிய பூதேவர்களுக்கு விரோதமாக ஏதாவது காரியங்கள் செய்யப்பட்டால் அந்த அரசாங்கத்தையும், ஆட்களையும் புராணக் கதைகளை ஒப்பிட்டு ராக்ஷதர்களாக ஆக்கிப் பழித்து இழித்துக் கூறி விஷமப் பிரசாரம் செய்வதையுமே அக்கூற்றுக்கு ஆதாரமாய்க் கொள்ளலாம்.

2. இராவணன் முனிவர்களுக்கும் ரிஷிகளுக்கும் இடையூறு செய்ததைப் பற்றி யோசிப்போம். முனிவர், ரிஷிகள் என்பவர்கள் ஆரியர்களுக் குள்ளாகவே ஒரு கூட்டத்தாராகும். அதாவது ஆரிய ஆச்சார அனுஷ்டானங் களை மிகவும் கடினமாக அனுஷ்டிப்பவர்களாகும். இக்கூட்டத்தார் ஆரியரல்லாதவர்களைக் காணுவதும் தீது, அவர்களோடு பேசுவதும் தீது, அவர்களோடு நெருங்குவதும் தீது, இணங்குவதும் தீது என்று கருதி ஆரியரல்லாத மக்களை மிகவும் இழிவாய்க் கருதி நடத்துகின்றார்கள்.

இன்றும் பார்ப்பனர்கள் திலகமகரிஷி ரமணரிஷி காந்தி ரிஷி என்றும், ராய் முனிவர், தாதாபாய் முனிவர், சுப்பரமணிய அய்யர் முனீந்திரர்



என்றெல்லாம் சாதாரண மக்களையே அழைத்து அந்தப் பெயரை பிரசாரம் செய்து நிலை நிறுத்துவதுபோல் சில ஆட்களுக்கு அந்தப் பட்டம் இருந்திருக்கலாம்.

ஆனால் அப்படிப்பட்ட முனிவர்களும் ரிஷிகளும் மற்ற மக்களை நடத்துகின்ற மாதிரியைப் பார்த்தால் எந்த வீரனுக்காவது ஜீவகாருண்ய வாதிக்காவது ஆத்திரமும் கோபமும் வராமல் இருக்க முடியுமா?

இந்த முனிவர்களும், ரிஷிகளும் உண்மையான ''முனிவர்'' களாக வும்''ரிஷி''களாகவும் இருந்திருந்தால் ராவணனுக்கு அவர்கள் கிட்ட நெருங்கியிருக்க முடிந்திருக்குமா?

ஒன்று, ராவணன் பக்தியும் தவமும் கொண்டவனாய் இருந்திருந்தால் இப்படிப்பட்ட காரியம் செய்திருக்க மாட்டான் என்றாவது எண்ண வேண்டும். அல்லது ரிஷிகளும் முனிகளும் உண்மையானவர்களாய் யோக்கியர்களாய் இருந்திருந்தால் இராவணனால் அவர்களுக்கு ஒரு கெடுதியும் செய்யமுடிந்திருக்காது என்றாவது எண்ணவேண்டும். அப்படிக்கில்லாமல் இரண்டும் கெட்ட தனமாய் கதையில் சொல்லப்பட்ட விஷயத்தைப் பொருந்தாத கற்பனை என்றுதான் சொல்ல வேண்டும்.

3. சீதையைத் திருடிக் கொண்டுபோய்விட்டதைக் கவனிப்போம்.

சீதை சட்டதிட்ட ஆதிக்கமில்லாத காட்டில் வசித்து வந்தவள். அவள் நடத்தையில் இருந்து அவள் ஒரு சாதாரணமான பெண் என்பது விளங்கும்.

அதாவது ராமன் மானை விரட்டிக்கொண்டு சென்ற பிறகு லட்சுமணனையும் போய் ராமனைப்பார்த்து வரும்படி சீதைசொன்ன சமயத்தில், லட்சுமணன் காட்டில் உன்னைத் தனியே விட்டுவிட்டு போகக்கூடாது என்றும் சொன்ன நல் வார்த்தையை ஏற்றுக் கொள்ளாமல், ''ராமன் எப்படியாவது தொலைந்தால் என்னை நீ கைப்பற்றி அனுபவிக்கலாம் என்று கருதி, ராமனைக் காப்பாற்றப் போக மறுக்கிறாயா?'' என்று சொன்னதில் இருந்தே சீதை கீழ் மக்களைச் சேர்ந்தவள் என்பதும், அந்தக் கூட்டத்தாருள் எப்படிப்பட்ட வழக்கம் இருந்து வந்தது என்பதும், லட்சுமணன் சீதையிடம் அதுவரையில் எப்படி நடந்து வந்திருக்கிறான் என்பதும் நன்றாய் விளங்குகின்றது.

மற்றும் ராமன் ராவணனுடைய பாட்டியைக் கொன்று இருக்கிறான். ராவணனுடைய தங்கையை மூக்கும் காதும் அறுக்கச் செய்திருக்கிறான். இப்படிப்பட்ட யோக்கியனுடைய பெண்சாதியைத் தூக்கிக் கொண்டு வந்தது என்பது, எந்தச்சட்டப்படி, நீதிநூல்படி, பழக்கவழக்கப்படி, இயற்கை தத்துவப்படி குற்றமென்பது விளங்கவில்லை.

அன்றியும், சீதையை ராவணன் என்ன செய்தான்? அவள்மீது இரக்கம் கொண்டு சீதைக்குப் புத்திமதி கூறி இருக்கிறான். ராம லட்சுமணர்களின் யோக்கியதையையும், இருப்பையும் எடுத்துச்சொல்லி அவர்கள் மீதுள்ள ஆசைகளை விட்டுவிட்டுத் தன்னிடமே இருந்து விடும்படி சொன்னான்.



RangaRakes tamilnavarasam.com

ராம லட்சுமணர்கள், தாடகை, சூர்ப்பனகை ஆகியவர்களிடம் நடந்து கொண்டது போல் அவ்வளவு இழிவாய் நடந்து கொள்ளாமல் ராவணன் சீதையை மிகவும் பத்திரமாகவும், நீதியாகவும் வைத்துக் காப்பாற்றி யிருக்கிறான்.

ஒரு பெண்ணை ஒருவன் இச்சிப்பதோ, ஒரு ஆணை ஒரு பெண் இச்சிப்பதோ, இணங்கும்படி கேட்பதோ, கெஞ்சுவதோ குற்றமாகும் என்று சொல்லுவது இயற்கையையும், மனிதசுபாவத்தையும் அறியாத முட்டாள் தனமேயாகும். பலாத்காரம் செய்வதையும் இணங்க வைக்கக் கொடுமை செய்வதையும் மாத்திரம் குற்றமென்று சொல்லலாம்.

பெண்கள் ஆண்களுடைய சொத்துக்கள், ஆண்களின் அடிமைகள் என்கிற சட்டப்படி வேண்டுமானால் ஒருவன் மனைவியை ஒருவன் இச்சிப்பது தப்பு என்று சொல்லலாமே யொழிய பெண்களும் ஆண்களைப் போன்ற ஜீவனாகும் என்றும், அவர்களுக்கும் காதல் சுதந்தரம் உண்டு என்றும் நினைத்தால் சீதையை ராவணன் தனக்கு இணங்கும்படி கேட்டுக் கொண்டதில் என்ன தப்பு இருக்கிறது என்பது விளங்கவில்லை.

மற்றபடி ராவணன் சீதையை பலாத்காரம் செய்ததாகவோ, சீதையைக் கொடுமைப்படுத்தியதாகவோ, குரூரமாய் நடத்தியதாகவோ, ராவணனை இழித்துக் கூறுவதையே கொள்கையாகக் கொண்ட ராமாயணத்திலேயே ஒரு வரிகூட காணக்கிடைக்கவில்லை. ஆதலால் அவ்விஷயத்தில் ராவணன் பெருங் குற்றவாளி என்று சொல்லிவிடமுடியாது. ராவணனுடைய மற்ற யோக்கியதைகள், வால்மீகி கூறியபடி உண்மையாய் இருக்குமானால், இந்தக் காரியத்தையாவது ராவணன் செய்திருப்பானா என்று சந்தேகிக்காமலிருக்க முடியாது. ஆகவே வாலி, ராவணன் சங்கதி இப்படி இருக்கட்டும்.

ராமன் தெய்வத்தன்மையுடையவனும், நேர்மைக்குணம் படைத்த வனுமாய் இருந்திருந்தால் சுக்கிரீவனையும், விபீஷணனையும் வசப்படுத்தி அவர்களது தமையன்மார்களுக்கு விரோதமாக, சகோதரத் துரோகம் செய்யத்தூண்டியிருப்பானா? பரதன் ராமனிடத்தில் எப்படி நடந்து கொண்டானோ அப்படி விபீஷணனையும் சுக்கிரீவனையும் முறையே ராவணனிடத்திலும், வாலியிடத்திலும் நடந்துகொள்ளும்படி செய்திருக்க வேண்டும் அல்லவா?

பரதன் ராமனிடத்தில் நடந்து கொண்டதுபோல் விபீஷணன் ராவணனிடம் நடந்து கொண்டிருப்பானேயானால் விபீஷணனை ஆழ்வாராக்கி யிருப்பார்களா? அவனுக்கு பட்டம் கட்டியிருப்பார்களா? என்று யோசித்துப் பார்த்தால் ராமனுடைய சூதும் சூழ்ச்சியும் விளங்காமல் போகாது. யாதொரு குற்றமற்ற கைகேசி, தன் மகனுக்குப் பட்டம் வேண்டும் என்று கேட்டதற்காக, அதுவும் கைகேசியிடமும், கைகேசியின் தகப்பனாரான கேகய மன்னனிடமும், கைகேசி வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே பட்டம் சூட்டுகிறேன் என்று



தசதரன் வாக்குக்கொடுத்தபடி மகனுக்குப்பட்டம் கேட்ட கைகேசியான தாயாரைக்கூட இகழ்ந்து இழிவு படுத்தியல்லவா பரதன் தமயனுக்கு தொண்டு செய்து பக்தி காட்டி இருக்கிறான்.

அப்படிப்பட்ட சகோதர பக்தியும், தொண்டும், அதன் பெருமையை உணரும் தன்மையும், விபீஷணனிடம் ஏன் இல்லாமல் போய்விட்டது? விபீஷணனுக்குச் சகோதரத் துரோகி பட்டம் இல்லாமல் ஆழ்வார் பட்டம் எங்கிருந்து வந்தது? விபீஷணனுடைய தொண்டையும், சகோதரத் துரோகத்தையும் தெய்வத்தன்மையுடைய ராமன் ஏற்றுக்கொள்ளலாமா?

இவைகள் ஒருபுறமிருக்க, ராமன் சீதையை எப்படி நடத்தி இருக்கிறான் என்பது ராமாயணக் கதையில் முக்கியமாய் கவனிக்க வேண்டிய பாகமாகும்.

ராமாயண சீதையானவள் உலகப்பெண்களுக்கு ஓர் உதாரணமாய் கற்பிக்கப்பட்டவள்; அவளுடைய பதிபக்தி மிக்க விசேஷமாய் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அவளது பிறப்பைப்பற்றி அறிய அறிவுக்கு ஒத்ததான ஆதாரம் ஒன்றும் இல்லை. மற்றபடி ராமனுக்கு மனைவியானாள் என்பதும், ராமனுடன் காட்டுக்கு வந்துவிட்டாள் என்பதும், ராவணன் தூக்கிக் கொண்டு போய் எவ்வளவு முயற்சித்தும் அவள் இணங்கவில்லை என்பதுமாகிய காரியங்கள் தான் சீதையின் பெருமைக்குக் காரணமாகும்.

அப்படிப்பட்ட சீதையின் கற்பு, கொண்ட கணவனால் – தெய்வத் தன்மை கொண்ட ராமனால் - சீதையுடன் சதாசர்வ காலமும் பழகி அவளது குணா குணங்களை நன்றாய் அறிந்த ராமனால் ஒரு தடவை அல்லாமல் பலதடவை சந்தேகிக்கும்படி ஏற்பட்டுவிட்டது. சீதை நெருப்பில் இறங்கி வந்துகூட ராமனுக்கு அவள் மீதில் உள்ள சந்தேகம் தீராமல் போய்விட்டது. கடைசியாக கதையின் முடிவானது சீதை 5-மாத கர்ப்பத்துடன் தனியே காட்டிற்குக் கொண்டுபோய் விடப்பட்டாள் என்று முடிந்தது.

இந்தக் காரியம் எப்படி மன்னிக்கப்படக் கூடியது என்பது விளங்க வில்லை. ''உலக மெப்புதலைக்காக செய்யப்பட்டது'' என்றாலும் இந்தச் சம்பவத்தால் மக்களுக்கு என்ன நீதி, படிப்பினை ஏற்பட்டது என்பது நமக்கு விளங்கவில்லை. இதைப்பார்க்கின்றபோது, அதாவது தனது மனைவியை 5-மாத கர்ப்பத்துடன் துஷ்ட ஜந்துக்கள் வாழும் கானகத்தில் கொண்டுபோய் தனியே விட்டுவரும்படி செய்தவன், தாடகையைக் கொன்றதும், சூர்ப்ப நகையின் மூக்கையும், காதையும் அறுக்கும்படி செய்ததும் ஒரு ஆச்சரியமென்று சொல்லமுடியாது. ஆகவே ராமன் ஆண்கள் விஷயத்தில் நடந்து கொண்ட மாதிரிக்கு வாலி, ராவணன் வதையும், சுக்கிரீவன் விபீஷண நேசமும், ராமன் பெண்கள் விஷயத்தில் நடந்துகொண்ட மாதிரிக்கு தாடகை வதம், சூர்ப்பனகை பங்கம், சீதை காட்டுக்கு அனுப்பப்பட்டதும் முதலியவை தக்கதொரு அத்தாட்சியாகும்.

பகுத்தறிவு (மா.இ.) – கட்டுரை – ஜூலை 1935



RangaRakes tamilnavarasam.com

# புராண மரியாதைக்காரனுக்கும் சுயமரியாதைக்காரனுக்கும் சம்பாஷணை

– சித்திரபுத்திரன்

**விஷயம்:–** மோக்ஷமடைய காசிக்குப் போவது.

**சுயமரியாதைக்காரன்:–** ஐயா தாங்கள் இவ்வளவு அவசரமாக எங்கு சென்றுவிட்டு வருகிறீர்கள்?

**புராண மரியாதைக்காரன்:–** எங்கும் இல்லை, ஒரு இடத்தில் கொஞ்சம் கடன் கேட்டிருந்தேன்; அதற்காகப் போய் விட்டு வருகிறேன்.

**சு.ம:–** தங்களுக்குக் கடன் வாங்க வேண்டிய அவசியமென்ன? தங்கள் பிள்ளைகள் எவ்வளவோ நல்ல நிலையில் இருக்கும்போது நீங்கள் கூடவா கடன் வாங்கவேண்டும்?

**பு.ம:–** நான் யாத்திரை போகப்போகிறேன்; அதற்காகப் பணம் வேண்டும். பிள்ளைகளைக்கேட்டால் கொடுக்க மாட்டான்கள்.

**சு.ம:–** இப்பொழுது என்ன யாத்திரை வந்தது தங்களுக்கு?

**பு.ம:–** கொஞ்ச காலமாகவே எனக்குக் காசிக்குப்போக வேண்டும் என்கின்ற அவா; கடவுள் செயலால் அது இப்போதுதான் முடிந்தது. ஆதலால் காசிக்குப்போகிறேன்.

**சு.ம:–** என்ன அய்யா இது அதிசயமாய் இருக்கிறது! இந்தப்பண நெருக்கடியான சமயத்தில் கடன் வாங்கிக்கொண்டு காசிக்குப்போகிறேன் என்று சொல்லுகிறீர்களே! அப்படி என்ன அவசரம் வந்துவிட்டது?

**பு.ம:–** ஒரு அவசரமும் புதிதாய் வந்து விடவில்லை; இந்தப் பாழாய்ப்போன சுயமரியாதை இயக்கம் வந்து நம்ம பிள்ளைகளையெல்லாம் கெடுத்து விட்டது. அதனால்தான் நான் இவ்வளவு கஷ்டத்துடன் காசி யாத்திரை வைத்துக்கொள்ள வேண்டியதாகி விட்டது.

**சு.ம:–** சுயமரியாதை இயக்கத்துக்கும் தாங்கள் காசிக்குப்போக வேண்டியதற்கும் என்ன சம்பந்தம்?



**பு.ம:–** சம்பந்தம் என்னவென்றா கேட்கிறீர்கள்? நானோ வயது முதிர்ந்த கிழவன்; எனது உடல் நிலை மிகவும் மோசமாய் இருக்கிறது; எந்தச் சமயத்தில் பகவான் தனது திருவடி நிழலுக்கு அழைத்துக் கொள்ளுவாரோ தெரியவில்லை. ஒருசமயம் அந்தப்படி ஏதாவது திடீர் என்று ஏற்பட்டு விட்டால், என்னுடைய பிள்ளைகள் எனக்குச்செய்ய வேண்டிய சரமக் கிரியைகளையெல்லாம் செய்வார்களா? திதி செய்வார்களா? எள்ளுந் தண்ணீரும் இறைப்பார்களா? பிண்டம் போடுவார்களா? நீங்களே சொல்லுங்கள் பார்ப்போம்! இந்த நாசமாய்ப்போன சுயமரியாதைக்காரர் களால் எவ்வளவு அநியாயங்கள் ஏற்பட்டுவிட்டன பாருங்கள்.

**சு.ம:–** அதைப்பற்றிச் சாவகாசமாய்ப் பேசிக்கொள்ளலாம்; இதற்காக காசிக்கு ஏன் போகவேண்டும் என்று கேட்டால் அதற்கு ஒன்றும் சொல்லாமல் சுயமரியாதைக்காரர்களையே சும்மா வைகின்றீர்களே!

**பு.ம:–** இதற்காகத்தான் காசிக்குப்போகிறேன். இன்னும் சொல்லுகிறேன் கேளுங்கள். ஒரு மனிதன் காசியில் போய் இறந்துவிட்டால் அவனுக்கு யாரும் திதி பண்ணினாலும், பண்ணாவிட்டாலும், பிண்டம் போட்டாலும், போடா விட்டாலும், அவன் கவலைப்பட வேண்டியதில்லை. காசியில் இறந்தாலே மோக்ஷம் கிடைத்துவிடும். இதில் ஏதாவது கொஞ்சம் நஞ்சம் சந்தேகம் இருப்பதானால் கயாவுக்குப் போய் நமக்கு நாமே பிண்டம் போட்டுக் கொண்டு சிரார்த்தம் செய்துகொள்ளலாம்; வேறு எவனும் போட வேண்டு மென்று எதிர்பார்க்க வேண்டியதில்லை. ஆதலால் நான் இங்கிருந்து நேரே கயாவுக்குப் போய், அங்கு எனக்கு நானே இங்கிருந்து செய்து கொண்டு பிறகு காசிக்குப்போய் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கப் போகிறேன்.

**சு.ம:–** அப்படியானால், தாங்கள் சொல்லுவதைப்பார்த்தால் மறுபடியும் இங்கு திரும்பி வரமாட்டீர்கள்போல் தோன்றுகிறதே!

**பு.ம:–** ஆம்! ஆம்!! இனி எனக்கு இங்கு என்ன வேலை? கடவுள் கிருபையால் நான் பாடுபட்டு எவ்வளவோ சம்பாதித்தேன். பகவான் எனக்கு யாதொரு குறைவும் வைக்கவில்லை. எல்லாவற்றையும் இந்தப் பிள்ளைகளுடைய படிப்புக்கும், கலியாணத்துக்கும், மற்ற சடங்குகளுக்கும் நன்றாய்ச் செலவு செய்தேன். அவர்கள் நல்ல நிலைமைக்கும் வந்தார்கள்; கடைசியாக இந்தச் சுயமரியாதைக்காரன்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு, அவனுடைய பெற்ற தாயாருக்கே திதி, திவசம் ஒன்றும் கொடுப்பதில்லை. வீட்டிலோ ஒரு நாள்-கிழமை-பண்டிகை என்பவை எதுவுமே இல்லை. இப்படிப்பட்டவன்கள் எனக்குத் திதி செய்வான்களா? எள்ளும் தண்ணீரும் கூட இறைக்கமாட்டான்களே! கொள்ளிகூட வைக்கமாட்டான்களே! ஆதலால் இங்கே இருந்து இறந்து கருமங்கள் செய்யப்படாமல் என் ஆத்மா நரகத்துக்குப்போய் அவஸ்தைப்பட்டு, நாய், கழுதையாய்ப் பிறப்பதைவிட, காசியில் போய் இறந்துவிட்டால் ஒரு பயலுடைய தயவுகூட இல்லாமல் மோக்ஷம் கிடைத்து விடும் என்பது உறுதி.



RangaRakes tamilnavarasam.com

அன்றியும் அவனவன் வந்த காரியத்தைப் பார்க்க வேண்டாமா? எவ்வளவு காலத்துக்குத்தான் இந்தப் பூலோகத்தில் இருந்தாலும் என்ன பயன்?

**சு.ம:-** ஓ ஹோ! அப்படியா சங்கதி? மனிதன் என்ன பாவம் செய்தாலும், எவ்வளவு அக்கிரமம் செய்தாலும் திதி செய்யப்படுவதாலோ, காசியில் போய்ச் செத்துப்போவதினாலோ மோட்சத்துக்குப் போய் விடுவானாக்கும்!

அன்றியும் மனிதன் எவ்வளவு யோக்கியமாய் நடந்திருந்தாலும், எவ்வளவு புண்ணியம் செய்தவனாய் இருந்தாலும் அவன் இறந்துபோன பிறகு, அவனது பிள்ளைகளோ, சந்ததியார்களோ செய்த குற்றத்துக்காக (திதி செய்யாததற்காக) நரகத்துக்குப் போவதுடன், நாய், கழுதையாய்ப் பிறப்பானாக்கும். இது என்ன நீதி?

என்ன சாஸ்திரம்? எந்தக் கடவுளுடைய உத்திரவோ தெரியவில்லை. அதிருக்கட்டும், தாங்கள் எதற்காக இந்தப் பூலோகத்துக்கு வந்தீர்கள்? அது ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே!

**பு.ம:-** மனிதன் எதற்காகப் பிறந்தான்? ஸ்ரீமந் நாராயணனைப் பக்தி பண்ணவும், பூஜிக்கவும்,அவன் பாதாரவிந்தம் அடையவும்தானே? இதுகூடவா மனிதனுக்குத் தெரியாது?

**சு.ம:-** அப்படியா? தாங்கள் நாராயணன் பாதாரவிந்தம் சேருவதற்கும், தங்கள் பிள்ளைகள் எள்ளும் தண்ணீரும் இறைப்பதற்கும், நீங்கள் கயாவுக்கும், காசிக்கும் போவதற்கும், காசியில் சாவதற்கும் எப்படி அய்யா சம்பந்தம் இருக்கமுடியும்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! சற்று விவரமாய்ச் சொல்லுங்கள்! நானும் தங்களுடனேயே புறப்பட்டு விடுகிறேன். எனக்கு மாத்திரம் மோட்சம் வேண்டாமா? நாராயணனுடைய பாதாரவிந்தம் வேண்டாமா?

**பு.ம:-** இதெல்லாம் எவ்வளவு சொன்னாலும் உங்களுக்குச் சுலபத்தில் புரியாது.

**சு.ம:-** பின்னை எப்படித்தான் புரியும்? அதன் இரகசியத்தைக் கொஞ்சம் சொல்லுங்களேன்! என் ஆத்மாவும் முக்தியடையட்டும்.

**பு.ம:-** உங்களுக்குப் புரியவேண்டுமானால் நல்ல குரு கடாட்சம் வேண்டும். பெரியோர்கள் சாவகாசம் வேண்டும். முன்னோர்கள் நூல்களைப் பார்க்கவேண்டும். சாஸ்திரங்களில் பரீக்ஷை இருக்கவேண்டும். புராணங்களை மரியாதை செய்ய வேண்டும். பக்தி சிரத்தையுடன் அவைகளைப் படிக்க வேண்டும். எதற்கும் பிராப்த கருமம் இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் அனுகூலமாக பகவான் கடாட்சம் இருக்கவேண்டும். இப்படிக்கெல்லாம் இல்லாமல் சும்மா ஒருவரைப் பார்த்து ஒருவர் ஆசைப்படுவதனாலேயே, முக்தி என்பது எல்லாருக்கும் கிடைத்துவிடக்கூடிய காரியமல்ல.



**சு.ம:-** இப்போது எனக்கு ஆசைவந்துவிட்டது. நான் கொஞ்சம் கூட சுமரியாதைக்காரர்களுடன் சாவகாசமே வைத்துக்கொள்வதில்லை. தாங்கள் சொன்னபடியே நடந்து, நானும் நாராயணன் திருவடியை அடைந்தாக வேண்டும். தாங்களே எனக்கு நல்ல குருவாகவும், நேசத்திற்கேற்ற பெரியோராகவும் இருந்து உபதேசம் செய்யவேண்டும். மற்றபடி முன்னோர்கள் நூல்கள் என்றீர்களே! அவர்கள் எவ்வளவு காலத்துக்கு முன்னோர்களா யிருக்கவேண்டும்! அவர்களில் சிலருடைய பெயர்களை யாவது சொல்லுங்கள்! அவர்களது நூல்களுடைய பெயர்களையும் சொல்லுங்கள்! அந்தப் படியே செய்யப்பார்க்கிறேன். பிறகு சாஸ்திரங் களின் பரீக்ஷை என்றால் என்னென்ன சாஸ்திரங்கள்? அவைகளை எப்படிப் பரீக்ஷிப்பது? தயவு செய்து அதையும் கடாட்சிக்கவேண்டும்.

புராணங்களை மரியாதை செய்வது என்றால் எப்படி மரியாதை செய்வது? விழுந்து கும்பிட்டால் போதுமா? அல்லது அவைகளில் உள்ள விஷயங்களை எல்லாம் அப்படியே நம்பி ஆகவேண்டுமா? மற்றும் பக்தி சிரத்தையோடு படிக்க வேண்டும் என்றால் பணம் கொடுத்து வாங்கி, குளித்து முழுகிவிட்டுப் புராணங்களுக்குத் தீபதூபம் வைத்து பூஜை செய்து நானே படித்தால் போதுமா? அல்லது வேறு யாருக்காவது பணம் கொடுத்துப் படிக்கவைக்க வேண்டுமா? என்பதையும் அருள வேண்டும்.

அன்றியும் எனக்குப் பிராப்த கர்மம் இருக்கிறதா இல்லையா என்பதை எப்படி அறிவது? இவ்வளவான பாடு பட்டும் பிராப்த கர்மம் இல்லாவிட்டால் எல்லாம் வீண் செலவாகவும், வீண் கஷ்டமாகவும் ஆகிவிடுமே! அது மாத்திரமல்லாமல், அதாவது பிராப்த கர்மம் இருக்கா-இல்லையா? என்று அறிவது மாத்திரமல்லாமல், பகவன் கடாக்ஷம் வேறு இருக்க வேண்டும் என்று முடிவாய்ச்சொல்லிவிட்டீர்களே! அதை எப்படித்தெரிந்து கொள்ளுவது? இதை அறியாமல் கடைசியாய்ச் செய்த காரியமெல்லாமல் வீணாய்ப் போகும் படி விட்டுவிடக்கூடாதே என்கின்ற கவலை அடியேனுக்கு அதிகமாய் இருக்கிறது. ஆதலால் குருசுவாமிகள் இவற்றையெல்லாம் கடாக்ஷித்தருளுவதுடன், தங்களுக்குப் பிராப்த கருமம் இருப்பதும், பகவான் கடாக்ஷம் இருப்பதும் எப்படித் தெரியவந்தது? என்பதையும் அருள வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

**பு.ம:-** சரி! சரி!! விளங்கிவிட்டது. நீரும் பக்காச் சுயமரியாதைக்காரன் என்பது நன்றாய் விளங்கி விட்டது! அவன்களுக்குத்தான் இந்த குயுக்தியான பேச்சுகளும், போக்கிரித்தனமான பேச்சுகளும் பேசத்தெரியும். உம்மிடத்தில் பேசுவதில் பயனில்லை போம்!

**சு.ம:-** என்ன சுவாமீ! இவ்வளவு சந்தேகப்பட்டு விட்டீர்கள்! நான் தங்களைக் குருவாக அடைந்து விட்டேன் என்று சொன்னேனே! தங்களிடத்தில் அல்லாமல் வேறு யாரிடத்தில் எனது முக்திக்கு வேண்டிய விஷயங்களையும், சந்தேகங்களையும் கேட்டுத் தெளிவடைவது?



RangaRakes tamilnavarasam.com

**பு.ம:-** வேண்டாமையா! நான் உமக்குக் குருவாகவும் இல்லை; என்னை எவ்வித கேள்வியும் கேட்க வேண்டாம்; என்னோடு கூட நீர் வரவும் வேண்டாம். நீர் சரியான சுயமரியாதைக்காரர் என்பதில் ஆக்ஷேபனை யில்லை. உம்மைப்போன்ற ஆள்களால் தான் என் பிள்ளைகள் கெட்டு இந்தப்படி நாசமாய் விட்டதுகள். சரி! போம்! போம்! இங்கே நில்லாதேயும்.

**சு.ம:-** சுவாமிகளே கோபிக்காதீர்கள்! தங்களுக்கு வருத்தம் வருவதானால் நான் பேசவேயில்லை, வாயை மூடிக்கொள்ளுகிறேன்.

ஒரு சமயம் நான் மோக்ஷமடைய பிராப்த கர்மம் இல்லையோ; என்னமோ தெரியவில்லை. தங்களைப்போன்ற பெரியார்களைக் குருவாக அடைந்தும் இப்படியாகிவிட்டது. என் சங்கதியைப் பின்னால் பார்த்துக் கொள்ளுகிறேன். தங்கள் விஷயத்தில் ஒரு சிறு சந்தேகம்! அதைக் கேட்கலாமா என்பதை எதிர் பார்க்கிறேன். அதை நிவர்த்தி செய்தால் திருப்தியாவேன்.

**பு.ம:-** என்ன ஐயா சந்தேகம்?

**சு.ம:-** இல்லை சுவாமிகள்! இவ்வளவு தீர்மானத்துடனும், உறுதியுடனும், பிடிவாதத்துடனும் இந்த முதிர்ந்த வயதில் முக்திக்காகப் போகின்றீர்களே, போகும் வழியில், காசி கயாவைப் போய் சேருவதற்குமுன் வழியில் ஏதாவது நேர்ந்து, தாங்கள் சாகவேண்டி ஏற்பட்டுவிட்டால் இந்த உத்தேசங்கள் எல்லாம் என்ன ஆகிறது? நீங்கள் தான் திரும்பி வரப்போவ தில்லையே பிறகு இன்று வாங்கும் கடனை யார் கட்டுவது?

**பு.ம:-** நான் செத்துப்போய்விட்டால் நல்ல காரியமாச்சுது! போம் வெளியே! இங்கே நில்லாதேயும்! பயணம் புறப்படும்போது சகுனத் தடைமாதிரி! வாயில் வரும் வார்த்தையைப் பாருங்கள்! மனிதனுக்கு ஏதாவது புத்தியிருக்கிறதா? கடனைப்பற்றி நீர் கவலைப்படவேண்டியதில்லை. அடுத்த ஜன்மத்தில் மாடாய் பிறந்தாவது அவன் கடன் கட்டிவிடுவேன்.

**சு.ம:-** சரி! சரி!! கோபித்துக்கொள்ளாதீர்கள்! நான் இதோ போகிறேன்! நீங்களும் உங்கள் சாஸ்திர புராணங்களும், அதற்கு நீங்கள் செய்யும் மரியாதைகளும் மிக நன்றாய் இருக்கிறது! இனி உங்களைப்போன்ற புராண மரியாதைக்காரர்களே மோக்ஷத்துக்குப் போகட்டும், அதற்காக கடன் கொடுத்தவன்கள் எல்லோரும் அடுத்த ஜன்மத்திலேயே வசூல் செய்யட்டும். ரொம்ப நாணயம் தான்.

பகுத்தறிவு (மா.இ.) - உரையாடல் - ஜூலை 1935



# கடவுள் ?

## என்ன சமாதானம்?

கடவுள் என்ற வார்த்தை ஒரு குறிப்பற்றதாய் இருந்து வருகிறது. கடவுள் என்ற வார்த்தை தோன்றி எவ்வளவு காலம் இருக்கும் என்று யாராலும் சொல்லமுடியாது.

அப்படியிருந்தும் கடவுள் என்றால் என்ன? என்று இன்று எப்படிப்பட்ட ஆஸ்திகராலும் சொல்லமுடிவதில்லை. ஆகவே ஒவ்வொரு ஆஸ்திகனும், தனக்குப் புரியாத ஒன்றையே- தன்னால் தெரிந்துகொள்ள முடியாததும், பிறருக்கு விளக்க முடியாததுமான ஒன்றையே, குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு கடவுள் கடவுள் என்று கட்டி அழுகிறான்.

கடவுளுக்கு லக்ஷணமோ, இலக்கியமோ, குறிப்போ ஏதாவதொன்று விளக்கமாய்ச் சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருந்தால், இவ்வளவு காலத்துக்குள்ளாக கடவுள் சங்கதியில் இரண்டிலொன்று, அதாவது உண்டு, இல்லை என்கின்ற ஏதாவது ஒரு முடிவுக்கு உலக மக்கள் வந்திருப்பார்கள்.

கம்பர்கூட சீதையின் இடையை வர்ணிக்கும்போது, ‘‘சீதையின் இடையானது கடவுள்போல் இருந்தது’’ என்று வர்ணிக்கிறார். அதாவது கடவுள் எப்படி ‘‘உண்டோ, இல்லையோ’’ என்பதாகச் சந்தேகப்படக் கூடியதாய் இருக்கின்றதோ, அதுபோல் சீதையின் இடையானது கண்டு பிடிக்க முடியாத அவ்வளவு நுண்ணியதாய் இருக்கிறது என்று கூறினார்.

கம்பரை நாஸ்திகர் என்று யாரும் சொல்லமாட்டார்கள். மக்களும் பெரும்பாலோரும் ஆஸ்திகர்கள் எல்லோரும், தங்கள் குற்றங்களுக்கும், தங்கள் துற்குணங்களுக்கும், தங்கள் தரித்திரத்திற்கும், துன்பத்துக்கும் தாங்களே காரணமென்று வருந்தி அவற்றைப்போக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறார்கள்.

இந்துக்கள், கடவுளை ஒரு மனிதனைப்போலவே கற்பித்துக்கொண்டு அதிலும் ஒரு செல்வம் பொருந்திய மனிதனாய்க் கற்பித்துக்கொண்டு, அதற்கு மனிதனைப் போலவே வீடு, வாசல், பெண்டு, பிள்ளை, பல பெண்டு, பல வைப்பாட்டி, உடை, ஆகாரம், வாகனம் ஆகியவைகளைக் கொடுத்து வருகிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

மற்ற கிறிஸ்து, முஸ்லீம் ஆகிய மதஸ்தர்களுக்கும் கடவுளை மனிதன் போலவே கற்பித்து, அக்கடவுளுக்கு நன்மை, தீமை, விருப்பு, வெறுப்பு, சந்தோஷம், கோபம் ஆகிய குணங்களைக் கற்பித்து தன்னை வணங்கினவனுக்கும், தன் இஷ்டப்படி நடந்தவனுக்கும் நன்மையளிப்பதும், தன்னை வணங்காதவனுக்கும், தன் இஷ்டப்படி நடக்காதவனுக்கும் தீமை அளிப்பதுமான குணத்தைக் கற்பித்திருக்கிறார்கள்.

சர்வ சக்தியுடைய பூரணத்தன்மை பெற்று, எங்கும் நிறைந்திருக்கிற ஒரு கடவுளுக்கு மோக்ஷம் நரகம் எதற்கு?

கடவுள் இஷ்டத்துக்கு விரோதமாய் நடக்கும்படியான சந்தர்ப்பம் மனிதனுக்கு எப்படி வரும்?

உலகத்தில் தீமை எப்படி உண்டாயிற்று? அதை யார் கற்பித்தார்கள்? தீய குணம் மனிதனை அடையக் காரணமென்ன?

தீயதைச் செய்துவிட்டுக் கடவுளை வணங்குவதாலோ, பிரார்த்திப்பதாலோ அதன் பயன் எப்படி அதிகரிக்கப்பட்டு விடும்? தீமையினால் துன்பம் அடைந்தவனுக்குப் பரிகாரம் எப்படி ஏற்படும்? தீமை செய்தவர்கள் கடவுளை வணங்கிப் பிரார்த்திப்பதின் மூலம், தீமைக்குண்டான பலனை அனுபவிக்கமுடியாமல் போய்விடுவார்கள் என்றால், தீமை எப்படி? எப்பொழுது? உலகைவிட்டு அகல்வது?

எத்தனையோ கோடிக்கணக்கான வருடங்களாகக் கோடிக்கணக்கான மக்கள் தீமைக்காக மன்னிக்கப்பட்டும், தீமைக்காகத் தண்டிக்கப்பட்டும், உலகில் இன்றும், நாளையும், இனியும் வெகு காலத்துக்கும், தீமை இருந்து கொண்டே வருகிறது என்றால் இதுவரையும், தண்டனையும் மன்னிப்பும் என்ன பலனைக் கொடுத்து வந்திருக்கின்றன?

தீமையின் கொடுமையை மக்கள் அனுபவிக்காமல் இருப்பதற்கு என்னதான் வழி? தீமையைச் செய்தவன் மன்னிப்பு பெற்றோ, தண்டனை அடைந்தோ, தன் செய்கைக்குப் பரிகாரம் பெற்றுக்கொள்ளுகிறான் என்றே வைத்துக் கொள்வோம். தீமையை அடைந்தவனுக்கு இந்தக் கடவுள் என்ன பரிகாரம் செய்கிறார் என்பது விளங்கவில்லை.

தீமையை அடைகின்ற மனிதன், கடவுள் சித்தத்தால் தான் தீமை அடைகிறான் என்று தானே சொல்லவேண்டும்? அப்படியில்லாவிட்டால், கடவுளின் காவலை மீறி, ஒரு மனிதனுக்கு ஒரு மனிதன் தீமை செய்துவிட முடியுமா?

ஆகவே கடவுள் சித்தத்தால் ஒரு மனிதன் தீமையை அடைகிறான் என்றால், பிறகு தீமை செய்தவனுக்குத் தண்டனை எப்படி வரும்? அவன் எதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும்? கடவுள் சித்தமில்லாமல், தனிப்பட்ட முறையில் தன் சொந்தத்தில ஒரு மனிதன் ஒரு காரியத்தை ஒருவருக்குச் செய்துவிடமுடியுமா?



கடவுள், மனிதன் மூலமாகவே தன்னுடைய ஆட்சியை நடத்துகிறார் என்பதே பெருமித ஆஸ்திகர்கள் முடிவு. அதனாலேயே பிச்சை பெற்றவனும், கடவுள் கொடுத்தார் என்று சொல்லுகிறான். உத்தியோகம் பெற்றவனும், கடவுள் கொடுத்தார் என்று சொல்லுகிறான். உதவி பெற்றவனும் கடவுள் கொடுத்தார் என்று சொல்லுகிறான். ஏதாவது ஒரு கூட்டத்தில் நெருக்கடியில் இருந்து தப்பித்துக் கொண்டவனும் கடவுள் தப்பித்துவிட்டார் என்று சொல்லுகிறான்.

ஆகவே எந்த நன்மைக்கும், தீமைக்கும் மனிதன் மீது பொருப்பைச் சுமத்துவது எப்படி முடியும்?

அன்றியும் கடவுள் சர்வ வியாபியாய் இருக்கும்போதும், மனிதனுடைய ஒவ்வொரு எண்ணங்களையும், காரியங்களையும் கவனித்து வருகின்றவராய் இருக்கும்போதும், மனிதனுக்குத் தனிப்பட்ட பிரார்த்தனை எதற்கு? அதற்காக இடம், பொருள், நேரம் எதற்காகச் செலவு செய்யவேண்டும்?

அவர் தெரிந்துகொள்ள முடியாத எந்தக் காரியத்தைப் பிரார்த்தனையினாலும், ஜபத்தினாலும், தொழுகையினாலும் அவருக்கு அறிவிக்க முடியும்? பிரார்த்தனைக்கும் – ஜபத்துக்கும் இரங்குகிறவர் என்றால், கடவுள் தற்பெருமைக்காரரா அல்லது பிரதிப் பிரயோஜனம் பெறும் வியாபார முறைக்காரரா?

இவ்வளவுகாலப் பிரார்த்தனையும், ஜபமும், தொகையும் மனிதனை ஏதாவது ஒரு வழியில் யோக்கியமாய் நடப்பதற்குப் பயன்பட்டிருக்கிறதா?

நன்மைக்கும், தீமைக்கும் கடவுளே கர்த்தராய் இருக்கும் போது, உலகில் நன்மை, தீமை இல்லாமல் இருக்கச் செய்ய முடியாதா? அதை எவராவது சில மக்கள் அடைந்துதான் தீரவேண்டுமா?

அன்றியும் நமது பிரார்த்தனையும், தொழுகையுமாவது நமக்குத் தீமை அணுகாமல் செய்யமுடியுமா? அப்படிச் செய்தாலும், அத்தீமை உலகில் உள்ளவரை ஏதாவது ஒரு மனிதனையாவது அணுகித்தானே தீரவேண்டும்?

ஆகவே மனித சமூகம், பொதுவில் தீமையில் இருந்து எப்படித் தப்ப முடியும்? தீமையினால் மக்கள் கஷ்டப்படுவார்கள், துன்பப்படுவார்கள் என்பதைக் கடவுள் அறிந்திருக்க மாட்டார் என்று யாராவது நம்ப முடியுமா?

அப்படி இருக்கும்போது, சர்வசக்தியும், சர்வ தயாபரத் தன்மையும் கொண்ட கடவுள், உலகத்துக்குத் தீமையை ஏன் சிருஷ்டித்தார்?

விஷப் பூச்சி, விஷக்கிருமி, விஷரோகம், தரித்திரம், துன்பம், கொலைத் தொழில், கொள்ளைத் தொழில், திருட்டு, பொய், வஞ்சகம், விவசாரம், கஷ்டமான வேலை, அடிமைத்தனம், கொடுங்கோல் ஆட்சி, ராஜத்துரோகப்



RangaRakes tamilnavarasam.com

பிரஜைகள், கடவுளை மறுப்பது, கடவுளை வைவது, முதலாகிய தீமை என்னும் விஷயங்களையெல்லாம் கடவுள் ஏன் சிருஷ்டித்தார்?

இவற்றால் யாராவது ஒருவர் கஷ்டடப்படுகிறாரா? இல்லையா? இவற்றால் கடவுளுக்கு என்ன லாபம்?

பூகம்பம், எரிமலை வெடிப்பு, புயல் காற்று, கடு மழை ஆகிய காரியங்களை ஏன் சிருஷ்டித்தார்?

கெட்ட மனிதர்கள் துன்பமனுபவிக்க என்று சொல்லப்படுமானால், கெட்ட மனிதர்களை ஏன் சிருஷ்டித்தார்?

நல்ல மனிதன், கெட்ட மனிதன் என்று சொல்லமுடியாத குழந்தைகள், மற்ற ஜீவன்கள் ஆகியவைகளுக்கும் துன்பம் அடையும்படி ஏன் செய்தார்?

இவைகளுக்கெல்லாம் சர்வ சக்தியும், சர்வ வியாபகமும், சர்வ தயாபரத் தத்துவமும் உடைய ஒரு கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்து நடத்தி வருகிறாரா? என்று சொல்லும் ஆஸ்திகன் என்ன பதில் சொல்லக்கூடும்?

இந்தக் கேள்விகள் வெகுகாலமாகவே இருந்து வருகின்றன என்று பதில் சொல்லிவிட்டால் போதுமா?

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - ஜூலை 1935**



# சூக்ஷியும் விஷமமும் பொறாமையும்

தோழர் சுந்திராம்பாள் இந்துமத தர்மப்படி கொடுமைப்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்.

இந்தியாவில் சிறப்பாகத் தென்னாட்டில் சமீபகாலம் வரை தேவதாசி வகுப்பு என்பதானது அவர்கள் எவ்வளவு ஒழுக்கத்துடனிருந்தாலும், எப்படி மதிக்கப்பட்டு வந்தது என்பதை ஐம்பது, அறுபது வயதுக்கு மேற்பட்ட மக்களைக் கேட்டுப் பார்த்தால் விளங்கும்.

மற்றும் அந்த வகுப்பார் எவ்வளவு வித்வானாயிருந்தாலும், எவ்வளவு மேதாவியாய், செல்வவானாய் இருந்தாலும் மற்றவர்கள் அவர்களைத் தாழ்த்தப்பட்ட மக்களை நடத்துவது போல் ஒருமையில் அதாவது அடி அடே என்று அழைக்க வேண்டியதும், மற்றவர்களை அவர்கள் பன்மையில், எஜமான்றே, சாமிகளே என்று அழைக்க வேண்டியது நட்டத்தில் நின்று கைகட்டி வாய் பொத்திக் கொண்டு பேச வேண்டிய ஜாதியாய் இருந்து வந்தது.

உதாரணமாக கோவை ஜில்லாவில் அந்த வகுப்பைச் சேர்ந்த பல லக்ஷத்திற்கு அதிபதியாய் இருந்த ஒரு பிரபுவை நல்ல தர்ம சிந்தை உள்ள பெரியாரை அந்த வகுப்பு என்கின்ற காரணத்துக்காக பார்ப்பனர்களும், மற்ற குடியானவர்களும் கூட ஒருமையிலேயே அழைத்து வந்தார்கள்.

இன்னமும்கூட தஞ்சை, திருச்சி, மதுரை முதலிய ஜில்லாக்களில் சங்கீத வித்தையில் மகா வித்வ சிரோமணிகளாயிருந்து மணிக்கு 100, 200 ரூபாய்கள் வீதம் வரும்படி சம்பாதிக்கத் தகுந்த செல்வமும், ஞானமும் உடையவர்களாய் இருந்து வந்த பெரியார்களையும் ஒருமையிலேயே அழைப்பதும் பேசுவதுமாயிருந்து வந்தது நமக்குத் தெரியும்.

அப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்னும் ஜஸ்டிஸ் இயக்கமும் சிறப்பாக சுயமரியாதை இயக்கமும் தோன்றி வேலை செய்து வந்ததின் காரணமாய் இருந்த இடம் தெரியாமல் மறைந்து வெகு தீவிரமாக மாறி சமத்துவமாக பாவிப்பது மாத்திரமல்லாமல் சிற்சில சமயங் களில் மேலாகவும் மதிக்கக்கூடிய தன்மை உண்டாகிக் கொண்டு வருகின்றது.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் அவ்வகுப்பில் உள்ள சிலர் அதை உணராமல் ஜஸ்டிஸ் கட்சியையும் பழித்தும், இழித்தும் கூறி அதை அழிக்கக் காத்திருக்கும் கூட்டத்தாருடன் சேர்ந்து கொண்டு கோவிந்தா போடுவதைப் பார்க்கிறோம்.

தோழர் சுந்திராம்பாள் அம்மாள் அவர்களும் சேர்ந்து அக்கூட்டத்தாருக்கு உதவி புரிந்து வந்ததையும் நாம் அறிவோம். நாம் அவர்களது நிலையை உத்தேசித்தும், தொழிலை உத்தேசித்தும் அதைப் பற்றி லட்சியம் செய்யாமல் இருந்து வந்ததோடு ஏதோ நமது இயக்கங்களை வைவதின் மூலமாவது சிலருக்குப் பார்ப்பனர்களிடம் பெருமையும், சமத்துவ பாவிப்பும், வாழ்க்கை சௌகரியங்களும் பெற மார்க்கமிருந்து வருகிறதல்லவா என்று கருதி ஒரு அளவு திருப்தியையும் அடைந்து வந்தோம்.

கடைசியாக அம்மாள் அவர்களுக்கு பெருமையும், கியாதியும் பெருகி செல்வமும் சேர்ந்து இனி எவ்வித குறைவும் இல்லை என்கின்ற தன்மை ஏற்பட்டவுடன் அம்மாளை பயன்படுத்தி, பலன் அனுபவித்து வந்த பார்ப்பனர்களே பொறாமை அடையும்படியாக ஏற்பட்டுவிட்டது.

அதே தொழிலில் ஈடுபட்ட இரண்டொரு பார்ப்பனர்களுடைய சுயநலத்துக்கு அம்மாள் முட்டுக்கட்டையாய் இருக்கிறார்களென்ற விஷயம் தெரிந்தவுடன் ஒரே அடியாய் அம்மாளை கவிழ்த்துவிட வேண்டுமென்று இப்போது எல்லாப் பார்ப்பனர்கள் கங்கணம் கட்டிக் கொண்டார்கள்.

இன்றைய நாடக உலகிலும், சினிமா உலகிலும் இனி எவராலும் அசைக்க முடியாத அளவுக்கு தோழர் சுந்திராம்பாள் அம்மாளுக்கு எப்படியோ கியாதியும் விளம்பரமும் ஏற்பட்டு விட்டதும், சினிமா தொழில் விருத்தியாக ஆக அம்மாளுக்கே கிராக்கி அதிகமாக ஏற்படும் என்பதும், அதனால் இன்னும் ஏதேஸ்டமாக பொருளும் கீர்த்தியும் சேரும் என்பதும் பார்ப்பனர்கள் நன்றாய் அறிந்து கொண்டார்கள்.

ஒரு பார்ப்பனரல்லாத பெண், அதிலும் தாழ்மையாய் கருதப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண் இந்தப்படி கியாதியும், செல்வமும் பெறுவதா என்கின்ற விஷயத்தில் பார்ப்பனர்களுக்கு பொறாமையில்லாமல் இருக்க முடியும் என்று யார் தான் எதிர்பார்க்க முடியும்?

தமிழ்நாட்டில் பார்ப்பனர்கள் இதுவரையில் எந்தப் பார்ப்பனரல்லா தாரையாவது பெருமை பெறவோ, கீர்த்தி அடையவோ, மேல் நிலைக்குப் போகவோ ஏதாவது ஒரு கலையின் மூலம் செல்வம் பெறவோ அனுமதித்து இருக்கிறார்கள் என்று எவராவது சொல்ல முடியுமா? என்று பார்த்தால் ''ஒரு நாளுமில்லை'' என்கின்ற பதில்தான் கிடைக்கும்.

அப்படிப்பட்டவர்கள் இன்று தோழர் சுந்தராம்பாள் அவர்களை எப்படி நாடகராணி ஆக அனுமதிப்பார்கள்? அதிலும் அந்தத் தொழிலிலேயே பல பார்ப்பனர்கள் பெண்ணும் ஆணுமாய் போட்டி போட்டுக் கொண்டு ஊராரை ஏமாற்ற நினைத்துக் கூட்டுக் கொள்ளை விளம்பரங்கள் செய்து கொண்டிருக்கும் போது அம்மாளை பார்ப்பனர்கள் மிஞ்ச விட்டு விடுவார்களா என்பதை யோசிக்க வேண்டுகிறோம்.

இந்த நிலையில் பார்ப்பன பத்திரிக்கைகள் எல்லாம் பெரிதும் இப்போது திடீரென்று ஒன்று சேர்ந்த கொண்டு தோழர் சுந்திராம்பாள் அவர்கள் ஞானத்தையும் நடிப்பையும் இகழ்ந்தும், பரிகாசம் செய்தும், விஷமப் பிரசாரமாய் எழுதுவதும், பேசுவதும் ஒரு புறத்தில் நடக்கவும் தோழர் சத்தியமூர்த்தி ஐயர் அவர்களும் சில காங்கிரஸ் பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாதார் கட்சியை வைவதற்காகவும் கூட்டம் கூட்டிக் கொள்வதற் காகவும் அம்மாளைப் பயன்படுத்திக் கொள்ள மற்றொரு புறத்தில் முயற்சி செய்வதுமான காரியங்களைப் பார்த்தால் எப்படி அவர்கள் ஆளுக்கு ஒரு தொண்டை ஏற்றுக் கொண்டு தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்ளத்தக்க சூழ்ச்சி புத்தியும், விஷமப் புத்தியும் உடையவர்களாய் இருக்கிறார்கள் என்பதும் சுலபத்தில் விளங்காமல் போகாது.

ஒரு சாதாரண நாடக நடிப்பு விஷயத்தில் அதில் ஈடுபட்டு பிரக்யாதி பெற்ற ஒரு பார்ப்பனரல்லாதார் பெண்ணுடைய பெயரைக் கெடுக்க இவ்வளவு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் நமது பார்ப்பனர்களுக்கு ஏன் வந்தது என்பது ஒருபுரமிருக்க சாதாரணமாய் நாடக விஷயம், பாட்டு விஷயம் மற்றும் ஏதாவது வித்வத்துவ விஷயம் ஆகியவைகளில் யாரையாவது அளவுக்கு மிஞ்சிக் கூட புகழ்ந்து பேசுவதும், எழுதுவதும் மரியாதையான காரியமாய் இருக்கலாம். இதை யாரும் செய்யலாம். இதனால் யாரும் குற்றம் சொல்லவுமாட்டார்கள்; கோபிக்கவும் மாட்டார்கள். ஆனால் இகழ்ந்தும், குற்றம் சொல்லியும் அதுவும் உண்மைக்கு விரோதமாகவும் எழுதுவதும், பேசுவதும் இதுவரை எங்காவது, அதிலும் தேசீயப்பத்திரிகைகள், காங்கிரஸ் பத்திரிகைகள், காந்தியைப் பின்பற்றுகின்றவர்கள் என்கின்றவர் களுக்கு வழக்கத்திலிருந்து வந்திருக்கிறதா? அல்லது அப்படிப்பட்ட காரியத்தை மனிதத் தன்மையாகவாவது மதிக்கப்பட்டிருக்கிறதா? அனாவசியமாக ஒரு பெண் விஷயத்தில் பார்ப்பனரல்லாத பெண் என்ற காரணத்துக்காக இந்தப் பார்ப்பனர்களுக்கு இவ்வளவு பொறாமையும், கெடுதல்புத்தியும் ஏன் வரவேண்டும்? என்று பார்த்தால் இவையெல்லாம் பார்ப்பனர்களுடையவும், அவர்களது தேசீயத்தினுடையவும், காங்கிரசினுடையவும் யோக்கியதையை விளக்கும் உரைகல் என்பது நன்றாய் விளங்கிவிடும்.

அம்மாள் விஷயத்தில் ''ஆனந்த விகடன்'' பத்திரிகையானது சிறிதாவது மனிதத் தன்மையோ, ஈர நெஞ்சம் என்பதோடல்லாமல் பார்ப்பனத் தன்மையை உள்ளது உள்ளபடியே நிர்வாணமாய் காட்டியிருக்கிறது. அதற்கு ஒரு அளவு ''சினிமா உலகம்'' என்கின்ற பத்திரிகை பதிலளித்திருக்கின்றது



RangaRakes tamilnavarasam.com

என்றாலும், அதற்கு தக்க பதில் கொடுக்க வேண்டும் என்கின்ற விஷயத்தில் நாம் சிறிதும் கவலை எடுத்துக் கொள்ளாமல் இந்த சம்பவமானது தென்னாட்டுப் பார்ப்பனர்களின் தன்மையை பச்சையாய் எடுத்துக்காட்டுவதற்கு ஒரு நல்ல அத்தாட்சியாய் ஏற்பட்டதே என்று மகிழ்ச்சியடைகின்றோம்.

அதோடு இது விஷயத்தில் கவலை எடுத்து தோழர் சுந்திராம்பாள் அம்மாள் அவர்களை ஆதரித்து எழுதியும், பார்ப்பனர்களுடைய விஷமக் கூற்றுக்கும், கெடுதல் புத்திகளுக்கும் புத்தி கற்பிக்கத்தக்க மறுப்புகள் எழுதியும், வெளியாக்கியும் வரும் பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகளாகிய ''தமிழ்நாடு'' ''ஊழியன்'' ''நகர தூதன்'' முதலிய பத்திரிகைகளைப் பாராட்டுவதோடு அவர்களுக்கு நன்றியும் செலுத்துகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் -** 04.08.1935



# காங்கிரசின் துரோகம்

தோழர் சத்தியமூர்த்தி ஐயர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரானது முதற் கொண்டு தென்னிந்தியாவில் காங்கிரஸ் பிரசாரம் வெகு உற்சாகமாகவும் நடைபெறுகின்றது.

காங்கிரஸ் பிரசாரம் என்றால் என்ன என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. அது கதரைப் பற்றியோ, தீண்டாமை விலக்கைப் பற்றியோ, இந்து முஸ்லீம் ஒற்றுமையைப் பற்றியோ, மது விலக்கைப் பற்றியோ, கல்வியைப் பற்றியோ அல்லது ஏழை எளிய மக்களின் துயரத்தைப் போக்குவதைப் பற்றியோ அல்ல. மற்றென்னவென்றால் ''ஜஸ்டிஸ் கட்சியார் தேசத் துரோகிகள்'' ''அவர்கள் மந்திரிகளாய் இருக்கிறார்கள்'' எப்படியாவது அவர்களை மந்திரி பதவியில் இருந்து இறக்கிவிட வேண்டும் என்பதேயாகும்.

இந்தப் பிரசாரம் இன்று தோழர்கள் ராஜகோபாலாச்சாரியார் முதற்கொண்டு எல்லாக் காங்கிரஸ்காரர்களும் செய்து வருகிறார்கள்.

இதுவே இன்று காங்கிரசின் கொள்கையாக ஆகிவிட்டது. இதற்கு ஆக மட்டில்லாத பொய்களைச் சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள்.

அவர்களது பொய்களை எடுத்துக் காட்டி எவ்வளவு அறிவுறுத்தினாலும் அவர்களுக்கு ஆசை வெட்கமறியாது என்கின்ற பழமொழிபோல் சிறிதும் வெட்கமின்றி மறுபடியும் மறுபடியும் அதையே சொல்லி வருகிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் மாகாண சட்டசபையில் கந்தாயம் குறைப்பு தீர்மானத்துக்கு காங்கிரஸ்காரரோடு சேர்ந்து ஓட்டுச் செய்யவில்லை என்பதாக பிரமாதப்படுத்தி விஷமப் பிரசாரம் செய்கிறார்கள்.

உண்மையில் கிஸ்து வஜாவில் 100க்கு 12½ வீதம் கிஸ்து தள்ளிக் கொடுக்கவும் மறு வருஷமும் குறைக்கபடவும் ஜஸ்டிஸ் கட்சியார் பொருப்பாளிகள் என்பதை யோக்கியர்கள் ஒவ்வொருவர்களும் ஒப்புக் கொண்டே தீருவார்கள்.

ஆனால் காங்கிரசுக்காரர்களின் துரோகத்தை அளவிட்டுச் சொல்ல வேண்டுமானால் புள்ளி விவரங்களோடு சொல்லலாம்.

குறிப்பாக தொழிலாளர் ஏழை மக்களுக்கு காங்கிரஸ்காரர்கள் செய்த மாபெருந் துரோகத்துக்கு ஒரு உதாரணம் சொல்லுகின்றோம். இதை எந்த காங்கிரஸ்வாதியாவது மறுக்கட்டும் பார்ப்போம்.



RangaRakes tamilnavarasam.com

அதாவது காங்கிரசுக்காரர்கள் சுயராஜ்ஜியக் கட்சியார் என்னும் பெயரால் இந்திய சட்டசபையில் இருக்கும்போது 1928-ல் இந்திய சட்டசபையில் தொழிலாளர்கள் வேலை நேர விஷயமாய் சுரங்கத் தொழிலாளர் தினம் 12 மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென்று கொண்டு வந்த தீர்மானத்துக்குத் திருத்தமாக 8 மணி நேரம் வேலை செய்தால் போதும் என்று தொழிலாளிகளின் சார்பாய் தோழர் ஜோஷி கொண்டு வந்த தீர்மானத்துக்கு காங்கிரஸ்காரர்கள் ஓட்டுக் கொடுக்காததால் அத் தீர்மானம் தோல்வியுற்று 12 மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்ற தீர்மானமே நிறைவேறி விட்டது.

இதற்கு காங்கிரஸ்காரர்கள் என்ன சமாதானம் சொல்லுகிறார்கள் என்று கேழ்க்கின்றோம். ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் செல்வவான்களுக்கு விரோதம் செய்து வரியைக் குறைக்கவில்லை என்றே வைத்துக் கொள்வோம். அதனால் நாம் கவலைப்படவில்லை. பூமி இருக்கிறவர்கள் வரி கொடுக்கட்டும். ஏதோ ஒரு இரண்டு வருஷம் விலை குறைவால் கட்டவில்லை என்றாலும் மறு வருஷங்களில் அது சரிப்பட்டுப் போகலாம்.

ஆனால் தொழிலாளி ஏழை மக்கள் 12 மணிநேரம் வேலை செய்ய வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட உதவியாய் இருந்தார்களே இவர்கள் ஏழைகள் பிரதிநிதிகளா அல்லது முதலாளிகள் கூலிகளா என்று யோசித்துப் பார்க்கும்படி வாக்காளர்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 04.08.1935**



# குற்றாலத்தில் பொதுக் கூட்டம்

தோழர்களே!

இன்று இங்கு பேசிய தோழர்களான பொன்னம்பலம், ஜீவானந்தம் ஆகியவர்கள் வெகு விளக்கமாகவும், எழுச்சியாகவும் பேசியதைக் கேட்டீர்கள். அவர்கள் பெரிதும் கடவுள், மதம், ஜாதி, செல்வவான்கள் ஆகிய தன்மைகள் ஒழிபட வேண்டும் என்று கருத்துப்படப் பேசினார்கள். இப்படிப் பேசியது உங்களில் அநேகருக்குப் பிடிக்காமலிருக்கலாம். சிலருக்கு மன வருத்தமும் ஏற்பட்டிருக்கலாம்.

ஆனால் அவர்கள் உங்களுக்கு வெறுப்போ, அதிருப்தியோ ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு பேசவில்லை. இன்றுள்ள இந்நாட்டு மக்கள் நிலையையும், உலக நிலையையும் உணர்ந்து பார்த்து இன்று நடைமுறையிலுள்ள மதம், ஜாதி, கடவுள் முதலியவைகள் ஒழியாமல் மனித சமூகத்துக்கு விமோச்சனமும், சாந்தியும் இல்லை என்பதை உணர்ந்து அதற்காகப் பேசினார்களே ஒழிய வேறில்லை.

என்னைப் பொருத்தவரை நானும் அவைகள் ஒழியப்பட வேண்டும் என்று சொல்வதோடு அவற்றையெல்லாம் ஆதரிக்கும் அரசியல் கிளர்ச்சிகளும், அரசியல்களும் ஒழிய வேண்டும் என்றும் சொல்லுபவன். ஏனெனில் அரசியலும், அரசியல் கிளர்ச்சிகளுமே மேற்கண்டதான கெடுதிகளை ஆதரித்துக் காப்பாற்றி வருகின்றன.

இந்தப்படி சொல்லுவதற்காக நீங்கள் வருத்தப்படக் கூடாது.

இந்த தேசத்து கடவுள்களின் யோக்கியதைகளை நீங்கள் சிறிது யோசித்துப் பாருங்கள். அவைகள் தானாகவே உண்டானவைகளாக இருந்தாலும் சரி, மனிதர்களாலேயே உண்டாக்கப்பட்டவைகளாகவே இருந்தாலும் சரி அவைகளால் நமது நாட்டுக்கும், மனித சமூகத்துக்கும் எவ்வளவு கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் கவனியுங்கள்.

இந்த நாட்டுப் பொருளாதாரக் கேட்டுக்கும் கல்வி அறிவற்ற தன்மைக்கும் யார் ஜவாப்தாரி? என்பதை யோசியுங்கள்.

**கடவுள்**

இந்தக் கடவுள்கள் நம் நாட்டுச் செல்வங்கள் எவ்வளவை பாழ்படுத்துகின்றன.



RangaRakes tamilnavarasam.com

தென்னாட்டு கோவில்களுக்கு வருஷம் 2½ கோடி ரூபாய் வருமானம். இது சர்க்கார் கணக்கு. அதற்காக மக்களுடைய பணம் செலவாவது மேற்கொண்டு 4, 5 கோடி ரூபாயாக இருக்கலாம்.

உங்கள் திருநெல்வேலி, மதுரை, ராமனாதபுரம், தஞ்சை ஆகிய ஜில்லாக் களை மாத்திரம் எடுத்துக் கொள்ளுங்கள் அதன் வரும்படிகளும் அதற்காக மக்கள் செய்யும் செலவுகளும் என்ன பயன் அடைகின்றன?

இவ்வளவு பணம் பாழாகியும் இந்த நாட்டில் 100-க்கு 8 பேர் தானே கையெழுத்து போடத் தெரிந்தவர்களாய் இருக்கிறார்கள்.

100-க்கு 75 பேருக்கு மெய் உழைப்பாளிகள் தரித்திரர்களாய் இருக்கிறார்கள். இத்தனை கோடி ரூபாய் பாழாகும்படியாக இருந்து கொண்டு, அனாவசியமான போக போக்கியத்தை அனுபவித்து வரும் கடவுள்கள் இந்த நாட்டு மக்களில் 100-க்கு 92 பேர்களை தற்குறிகளாக வைத்து இருக்கின்றன என்று சொல்லப்படுமானால் இக் கடவுள்கள் நன்றி கெட்டவைகள் அல்லவா என்று கேட்கின்றேன்.

கல்விக்கும், கடவுளுக்கும் சம்மந்தமில்லை என்று சொல்லப்படுமானால் இக் கடவுள்களுக்காக இவ்வளவு கோடி ரூபாய்கள் செலவாகும்படி ஏன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

வீணாக பகுத்தறிவும், யோசனையும் இல்லாமல் ''சுயமரியாதைக் காரர்கள் கடவுளை வைகிறார்கள்'' என்று சொல்லுவதில் பயன் என்ன?

இந்திய நாட்டையே இந்தக் கடவுள்கள் தானே இக்கதியாக்கி இருக்கின்றன.

கடவுள்களுக்கு பெண்டு பிள்ளை, வீடு வாசல், சொத்துக்கள், நகைகள், தாசி வேசிகள், வைப்பாட்டிகள் எல்லாம் எதற்கு?

இதைப் பார்த்துத் தானே ஒவ்வொரு மனிதனும் நடந்து கொள்ளுகிறான்.

நமது கடவுள்களுக்கு உர்ச்சவம் என்பதெல்லாம் பெரிதும் வருஷம் தோறும் கல்யாணம் செய்வது என்பதற்கு ஆகவே நடைபெறுகின்றன. கடவுளுக்கு கல்யாணம் எதற்கு? சென்ற வருஷம் செய்த கல்யாணம் என்ன ஆயிற்று.

ஏதாவது தவரி விட்டதா? அல்லது எந்தக் கோர்ட்டின் மூலமாவது கல்யாண ரத்து ஆகி விட்டதா? இது சிரிப்புக்கிடமான கல்யாணமல்லவா? இந்தக் கல்யாணங்கள் சுயமரியாதை முறைப்படி நடப்பதாயிருந்தால் நமக்கு கவலையில்லை. அப்படிக்கில்லாமல் எவ்வளவு செலவு எத்தனை கால மெனக்கேடு, எத்தனை பேர்களுக்கு கஷ்டம். பெரிய ராஜா வீட்டுக் கல்யாணத்துக்கு மேல் நடக்கின்றன. இவற்றையெல்லாம் பார்த்தால் இந்தக் கடவுள்கள் எல்லாம் ஒழியாமல் எப்படி மனிதன் சீர்பட முடியும்? எப்படி அறிவு பெற முடியும்? எப்படி இந்த நாட்டு செல்வமும், நேரமும் பயனுள்ள காரியத்துக்கு உபயோகப்படுத்தப்பட முடியும்?



கோபிப்பதில் பயன் என்ன? எங்களை நாஸ்திகர்கள் என்று சுலபமாக சொல்லிவிடலாம். மற்ற நாட்டார்கள், மற்ற மதக்காரர்கள் இந்துக்களையும், இந்து கடவுள்களையும் பார்த்து நாஸ்திகர்கள், அஞ்ஞானிகள் என்று சொல்லுவதோடு மாத்திரமல்லாமல், காட்டுமிராண்டிப் பிராயமுள்ளவர்கள் என்று சொல்லுகிறார்களே. யாருக்காவது மானமோ, வெட்கமோ இருக்கின்றதா? எந்தக் கடவுளாவது இதற்காக நாக்கைப் பிடுங்கிக் கொண்டு செத்துவிட்டதா? அல்லது அவர்களை இப்படிச் சொல்ல வேண்டாம் என்றாவது சொல்லி வைத்ததா?

ஒன்றும் இல்லையே. ஆஸ்திகம், நாஸ்திகம் என்றால் அதற்கு அர்த்தமே இல்லாமல் கையில் வலுத்தவன் கதையாகத்தானே இருக்கின்றது.

ஆஸ்திகன் என்றால் முழு மூடன், அயோக்கியன், பித்தலாட்டக்காரன், எண்ணத்துக்கும், பேச்சுக்கும், நடவடிக்கைக்கும் சம்மந்தமில்லாத திருட்டுப் பயல் என்றெல்லாம் சொல்லும்படியாகத்தானே மக்கள் நடந்து காட்டுகின்றார்கள்.

ஆதலால் தோழர்களே இந்தக் கடவுளையும், இந்த ஆஸ்திகத் தன்மையையும் ஒழிக்கப்படாமல் மனிதன் மனிதத்தன்மையை அடைய முடியாது என்பது எங்களது அபிப்பிராயமாகும்.

மற்றும் மனிதனுடைய இழிவும், தரித்திரமும், அதாவது ஒரு மனிதனை மற்றொரு மனிதன் இழிவாய் நடத்துவதும், ஒரு மனிதனது உழைப்பை மற்றொரு மனிதன் அனுபவித்துக் கொண்டு, உழைத்தவனை தரித்திரனாய், நோயாளியாய், அடிமையாய் வைத்திருப்பதும் கடவுள் செயல் என்று சொல்லப்படுமானால் அப்படிப்பட்ட கடவுளையாவது ஒழிக்க வேண்டாமா என்று உங்களைக் கேட்கின்றேன்.

ஆகவே நீங்கள், சுயமரியாதைக்காரர்கள் ஏன் கடவுளைப் பற்றிப் பேசுகின்றார்கள் என்பதை இப்போதாவது உணர்ந்து பாருங்கள் என்று வேண்டிக் கொள்கிறேன்.

அனாவசியமாய் உங்களுக்கே புரியாத வார்த்தையாகிய கடவுள் என்கின்ற வார்த்தையைக் கட்டி அழுது கொண்டு ''எல்லாம் இருக்கட்டும். கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா, இல்லையா?'' என்கின்ற அசட்டுத்தனமும், முட்டாள்தனமுமான கேள்வியை கேட்பதில் உங்கள் புத்தியை செலவழிக் காதீர்கள். அதனால் எங்களை மடக்கி விடலாம் என்றோ எங்களை பழிப்புக்கு உள்ளாக்கி விடலாம் என்றோ கருதி விடாதீர்கள்.

உலகம் எப்படி சிருஷ்டிக்கப்பட்டிருந்தாலும் அதைப்பற்றி உங்களுக்கு என்ன கவலை?

நீங்கள் எப்படிப் பிறந்திருந்தால்தான் அதைப்பற்றி உங்களுக்கு என்ன கவலை?



RangaRakes tamilnavarasam.com

உலகில் உள்ள வஸ்துக்கள், உலகில் நடக்கும் செய்கைகள் எல்லாம் எப்படி சிருஷ்டிக்கப்பட்டது, எப்படி நடைபெறுகின்றது என்பதை எந்த மனிதனாவது அறிந்திருக்கின்றான் என்று நீங்கள் சொல்லிவிட முடியுமா? அது யாரால் எப்படி நடந்தால்தான் என்ன?

உங்களுக்கும் எனக்கும் தெரியாத விஷயம் எவ்வளவோ இருக்கிறது. இன்று பாடுபட்டாலும் தெரிந்துகொள்ள முடியாத விஷயங்களும் எவ்வளவோ இருக்கின்றன.

அவற்றைப் பற்றியெல்லாம் கேட்டுக் கொண்டும் தெரிய வேண்டும் என்று ஆசைபட்டுக் கொண்டிருக்கின்றவர்கள் சமுத்திரத்து அலைகளையும், மணலையும், மழைத் துளிகளையும் எண்ண ஆசைப்படும் மூட சிகாமணி களுக்கே ஒப்பாவார்கள்.

மக்கள் படும் கஷ்டங்கள், நமது கண்களுக்குத் தெரிகின்றன.

மற்ற மக்களால் நாம் இழிவும், துன்பமும் அனுபவிப்பதை நாம் உணர்கின்றோம். இதுவே முதலில் ஒழிக்கப்பட வேண்டும். எந்தக் காரணத்தாலானாலும் சரி, இவற்றிற்கு ஆதாரமாய் இருக்கும் கடவுள் உள்பட எல்லாம் அழிக்கப்பட வேண்டும் என்று தான் நாங்கள் சொல்லுகின்றோம்.

இது சரியா? தப்பா என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள். ஆகுமா? ஆகாதா? என்பதைப் பற்றிப் பிறகு யோசிப்போம்.

**மதம்**

கடவுளைப் போலவே நமது மதங்களும் இருந்து வருகின்றன.

ஒரு மதத்துக்கு மேற்பட்ட மதங்கள் இருக்கின்றன என்றால், ''அவைகள் இருக்க வேண்டியதுதான்'' என்றால், அப்படிப்பட்டவர்கள் ஒரு கடவுளுக்கு மேற்பட்ட கடவுள்களையும் ஒப்புக் கொண்டோ, அனுமதித்தோ தான் ஆக வேண்டும்.

வேண்டுமென்றால் ஒரு மதத்தைப் பார்த்து மற்ற மதக்காரன், ''உன்னுடைய மதம் மதமல்ல. என்னுடைய மதம் தான் உண்மையான மதம். கடவுளால் அனுப்பப்பட்ட அல்லது சொல்லப்பட்ட மதம்'' என்று சொல்லிக் கொள்ளலாம்.

ஒரு மதக்காரனின் கடவுள் போலவேதான் மற்ற மதக்காரனின் கடவுளும் இருக்க வேண்டும் என்பதற்கு என்ன அவசியம் இருக்கிறது.

அவற்றிற்கு ஏதாவது பரீக்ஷைக் கருவி உண்டா?

ஒருவனுடைய கடவுளின் குணம் போலவே மற்றவனுடைய கடவுளும் இருக்க வேண்டும் என்பதற்கு என்ன அவசியம்? அதற்கு ஏதாவது நிபந்தனை உண்டா? ஒரு கடவுளை சிருஷ்டிக்க ஒருவனுக்கு உரிமை



இருந்தால் பல கடவுள்களை சிருஷ்டிக்க ஒருவனுக்கு உள்ள உரிமையை யார் தடுக்க முடியும்? யாருக்கு அதிகாரம் யார் கொடுத்திருக்கிறார்கள்?

ஆதலால் ஒரு கடவுள் மதக்காரனே மகா உத்தமமானவன் என்றும் பல கடவுள் மதக்காரன் மோசமானவன் என்றும் சுலபத்தில் சொல்லிவிட முடியாது.

நாம் இங்கு மதத்தைப் பற்றி கவனிக்க வேண்டியதெல்லாம் எந்த மதமாவது மக்கள் எல்லோரையும் இன்பமாய், செழுமையாய், சமத்துவமாய் வாழ வைத்திருக்கிறதா? வாழ வைக்க முடிந்ததா? என்பதுவே யாகும்.

உலகிலுள்ள எந்த மதத்தை அனுசரிக்கின்ற மக்களுக்குள்ளும், எந்த மதத்தை அனுசரிக்கிற தேசத்திற்குள்ளும், ஏழை பணக்காரன், எஜமான் அடிமை, உழைப்பாளி உழைப்பான் பயனை அனுபவிக்கிறவன், பிரபு பிச்சைக்காரன், வித்துவான் முட்டாள், படித்தவன் தற்குறி, மெத்தை வீட்டில் இருப்பவன் ஒட்டைக் குடிசைகூட இல்லாதவன், சுகாதார வசதி உள்ளவன் சுகாதார வசதியில்லாதவன், மேல்மகன் - கீழ்மகன், உழைக்காமல் சாப்பிடுபவன் - உழைத்தும் பட்டினி கிடப்பவன், அளவுக்கு மிஞ்சி வேலை செய்து சம்பாதித்து பணம் மீத்து வைப்பவன் - வேலையே இல்லாமல் திண்டாடுகின்றவன் என்பது போன்ற வித்தியாசங்கள் இல்லை என்று யாராவது சொல்லக் கூடுமா. இது முன் ஜன்ம கர்ம வினை என்றால் என்ன? அல்லது கடவுள் சித்தம் என்றால் என்ன? கஷ்டம் வித்தியாசம் எல்லாம் ஒன்று போல் தானே இருக்கிறது?

ஒரு மதத்தில் ''ஆண்டிக்கும் அரசனுக்கும் வித்தியாசமில்லை'' என்று சொல்லப்படுமானால், மற்றொரு மதத்தில் ''கழுதைக்கும், மகான்களுக்கும் வித்தியாசம் இல்லை. எல்லா உள்ளத்திலும் நானே ஆத்மாவாய் இருக்கிறேன்'' என்று கடவுளே சொன்னதாக அவர்கள் வேதங்கள் வேதாந்தங்கள் சொல்லுகின்றன.

இப்படிப்பட்ட சிங்காரப் பேச்சுகளால் பயனென்ன?

இவற்றால் எல்லாம் மக்களை மக்கள் ஏமாற்றத்தான் முடியுமே ஒழிய ஒரு வேளைக் கஞ்சிக்குப் போட வேண்டிய உப்பு மண்ணுக்குக்கூட உதவாது என்றுதான் சொல்லுவேன்.

நான் அனேக தேசம் பார்த்து இருக்கிறேன், பல மத மக்களையும் சந்தித்திருக்கின்றேன். எங்கும் பசிக் கொடுமை பிச்சைக்காரர் தொல்லை, பணக்காரர்கள் கொள்ளை, ஆண் பெண் பேதம், மனிதனுக்கு மனிதன் கொடுமை, வேலையில்லாத் திண்டாட்டம் முதலிய காரியங்கள் இருந்துதான் வருகின்றன.

இதற்கு எந்த மதமானாலென்ன? பட்டினி கிடப்பவனும், பட்டினி ஆக்குபவனும் இந்து மதத்தின் பேரால் இருந்தாலென்ன? கிருஸ்து மதத்தின்



RangaRakes tamilnavarasam.com

பேரால் இருந்தால் என்ன? இஸ்லாம் மதத்தின் பேரால் இருந்தால் என்ன? பார்சி மதத்தின் பேரால் இருந்தால் என்ன? சீக் மதத்தின் பெயரால் இருந்தால் என்ன? ஆரிய சமாஜ்யத்தின் பேரால் இருந்தால் என்ன? பிரமசமாஜ மதத்தின் பேரால் இருந்தால் என்ன? அல்லது சைவ, வைணவ, ஸ்மார்த்த முதலிய எந்தப் பிரிவு மதங்களின் பேரால் இருந்தால் என்ன? எல்லாம் மக்கள் வாழ்க்கை நிலையை ஒன்றுபோல் தானே நடத்துகின்றன.

இந்துமதமானது ஏழ்மைக்கும் கொடுமைக்கும் ''அவனவனின் முன் ஜன்ம கர்மத்தின் பயன்'' என்றால் மற்ற மதங்கள் ''கடவுள் சித்தத்தின் பயன்'' என்றுதான் சொல்லுகின்றனவே ஒழிய அதை நான் தீர்த்து விடுகின்றேன் என்னிடத்தில் ஏழை பணக்காரர் என்கின்ற பிரிவு இல்லை என்று எந்த மதமும் சொல்லுவதே கிடையாது. வேண்டுமானால் ஒவ்வொரு சிறு காரியங்களுக்கு ஒவ்வொரு மதம் அனுகூலமாக இருக்கலாம்.

ஒரு மதத்தில் தீண்டாமை இருந்தால் மற்றொரு மதத்தில் பாராமை இருக்கலாம். இப்படி ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொன்று அனுகூல மானதாக இருக்கலாம். ஆனால் இன்று உலகம் பூராவும் இருந்து வரும் பொருளாதார பேதம், சமூகக் கொடுமை முதலியவைகளுக்கு மதங்கள்தான் அனுகூலமாயும் ஆதரவாயும் இருந்து வருகின்றன என்பதை நான் உணர்கிறேன்.

மதத்தோடு சம்பந்தப்படாத ஏழ்மையும் தரித்திரமும் கொடுமையும் எங்கும் காணக் கிடைக்கவில்லை. எல்லா மதமும் சகல காரியத்தையும் ஆண்டவன் செயல் என்றுதான் சொல்லுகின்றன.

ஆனால் தனக்கு இஷ்டமில்லாத காரியங்களை மாத்திரம் அந்த குறிப்பிட்ட மனிதன் செயல் என்று சொல்லி ஆத்திரப்படுகின்றன.

இப்படிப்பட்ட குளறுபடியான மதங்கள் மக்களுக்கு என்ன பயனைத் தரும்? இது வரையாவது என்ன பயனைத் தந்து வந்தது? ஆதலால் தான் சமதர்மத்துக்கு மதம் விரோதம் என்று சொல்ல வேண்டி வருகிறது.

### செல்வவான்

மற்றும் தோழர் ஜீவானந்தம் அவர்கள் செல்வவான் என்கின்ற தன்மையும் ஒழிந்தால்தான் பொருளாதாரக் கஷ்டம் ஒழியும் என்றார்.

நான் அதுவும் சரி என்றே சொல்லுவேன்.

செல்வவான்களின் செல்வங்கள் எப்படி சேகரிக்கப்படுகின்றன என்பதையும் அது எப்படி செலவழிக்கப்படுகின்றது என்பதையும் யோசித்துப் பாருங்கள்.

எவ்வளவு ஏழை உழைப்பாளி மக்களின் உழைப்பின் பயனை கொள்ளைக் கொண்டால் ஒருவன் செல்வவானாக முடியும் என்பதை



யோசித்துப் பாருங்கள். அப்படிப்பட்ட பணம் அனாவசியமான கட்டடங் களுக்கும், கல்லுருவங்களுக்கும், கோட்டைகள் கட்டுவதற்கும், உலோக உருவங்களுக்கும், கல்யாண உர்ச்சவம் தேர் திருவிழா செய்வதற்கும், சோம்பேரிகளுக்கு சோறு போட்டு தடி ராமன்கள் ஆக்குவதற்கும், பால், நெய், எண்ணெய் குடம் குடமாகக் கல்லிலும், நெருப்பிலும் கொட்டுவதற்கும் வீணாக்கப்படுகின்றனவா இல்லையா?

மற்றொரு புறத்தில் கல்யாணம், கருமாதி, பிறந்த நாள், புதுமை, 60ம் கல்யாணம், திவசம், பண்டிகை முதலிய காரியங்களுக்கு பாழாக்கப் படுகின்றனவா இல்லையா?

மற்றொரு புறத்தில் தாசிகள், வேசிகள், சாராயன வகைகள், சூதாட்ட வகைகள், மோட்டார் கார்கள் என்பன போன்ற காரியங்களுக்கு பாழாக்கப் படுகின்றனவா இல்லையா?

செல்வங்களை இந்தப்படி பாழாக்கும் செல்வவான்கள் ஒழிக்கப்பட வேண்டுமா? வேண்டாமா?

இந்தக் குற்றாலத்தில் நான் பார்க்கின்றேன். இன்று சுமார் 100 தாசிகளுக்கு மேல் குடியேறி இருக்கிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் 4, 2 நாட்டுக்கோட்டை செல்வவான் உள்பட பல பிரபுக்கள் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். பலர் கூட்டிக் கொண்டும் வந்திருக்கிறார்கள்.

சூதாடியதற்காக போலீசார் இரண்டொரு தடவை பிடித்தும் அவர்களுக்கு கப்பம் கட்டி விட்டு மறுபடியும் அதே காலக்ஷேபமாக இருக்கிறார்கள்.

இன்னும் என்ன என்னமோ நடக்கின்றன. மற்றபடி பெரிய பெரிய ஜமீன்தார், மிட்டாதார், ராஜா பட்டக்காரர், சர் பட்டக்காரர் முதலியவர்களின் யோக்கியதையை சொல்ல வேண்டுமா?

மற்றும் சுதேச ராஜாக்கள் முதலியவர்கள் சங்கதி சொல்ல வேண்டுமா? இப்படிப்பட்ட செல்வவான்கள் ஒழிவதால் யாருக்கு என்ன நஷ்டம் என்று யோசித்துப் பாருங்கள்.

### மடாதிபதிகள்

கடவுளையும், மதத்தையும், செல்வவான்களையும் காப்பாற்றும் மடாதிபதிகள், குருமார்கள் யோக்கியதையை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

ஒவ்வொரு மடத்துக்கு ஆயிரக்கணக்கான வேலி நிலங்களும் வருஷம் பதினாயிரம் ரூபாய், லட்சம் ரூபாய் என்று சொல்லும்படியான வரும்படிகளும் இருந்து வருகின்றன.

இவை மக்களுக்கு என்ன பயனைத் தருகின்றன. அயோக்கியர்களுக்கும், சோம்பேரிகளுக்கும் குடி கேடர்களுக்குமே பயன் அளிக்கின்றன. இப்படிப் பட்ட மடங்கள் தன்மையும் குருமார் தன்மையும் அனுமதிக்கப்படலாமா?



RangaRakes tamilnavarasam.com

5 லட்ச ரூபாய் செலவிட்டு ஒரு தொழிற்சாலை வைத்தால் தினம் சராசரி 2500 பேர்களுக்கு தொழிலும் நல்ல ஜீவனமும் இருக்கும்படி தொழிற்சாலைகள் கட்டலாம்.

நமது நாட்டு கோவில் பணமும், கோவில் வரும்படிப் பணமும், மடங்கள் பணமும், மடாதிபதிகள் வரும்படிப் பணமும் எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து தொழிற்சாலைகள் கட்டினால் இந்தியாவில் பிச்சைக்காரனோ, தற்குறியோ, இழிவான மகனோ, ஒருவன் கூட இல்லாமல் எல்லோரும் சரி நிகர் சமானமான மனிதர்களாகவே காணப்படலாம்.

திருப்பதி தேவஸ்தானத்துக்கு மாத்திரம் வருஷம் 20 லட்ச ரூபாய் வரும்படி வருகின்றது. எனவே இந்த வரும்படியில் வருஷம் 4 தொழில்சாலை கட்டி 10000 பேர்கள் வீதம் நிரந்தரமாய் வேலைகள் கொடுத்துக் கொண்டே போகலாம்.

நமது தொழில்சாலை சாமான்கள் உலக சந்தைகளில் எல்லாம் கேட்ட விலைக்கு விற்கலாம்.

ஆகவே சுயமரியாதைக்காரர்கள் ஏழை மக்கள், பாமர மக்கள் இருக்கும் நிலைமையையும், படும் கஷ்டத்தையும் உணர்ந்து இதற்கு என்ன காரணம் என்பதை துருவிக் கண்டு பிடித்து, பிறகு தான் கடவுள், மதம், செல்வவான் மடாதிபதிகள் என்பவற்றைப் பற்றி குறை கூற முன் வந்தார்களே ஒழிய மற்றபடி அவர்களால் கடவுளாகவோ மத கர்த்தாக்களாகவோ, செல்வவான்களாகவோ ஆவதற்கு அல்ல என்பதை உங்களுக்குத் தெரியப் படுத்திக் கொள்ளுகிறேன்.

தோழர்களே, நாங்கள் எங்கள் அபிப்பிராயங்களைச் சொன்னோம். நீங்கள் உங்கள் அறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து உங்களுக்கு சரி என்று பட்டபடிக்கு நடந்து கொள்ள உங்களுக்கு உரிமை உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக இந்தக் கூட்டம் கூட்டி வைத்த தோழர் சிங்காரவேலு பாண்டியன் அவர்களுக்கும், இங்கு பேசிய தோழர்கள் ஜீவானந்தம், பொன்னம்பலம் அவர்களுக்கும், இவ்வளவு நேரம் மழைத் தூரலிலும், குளிரிலும் பொறுமையாக இருந்து கேட்டுக் கொண்டிருந்த உங்களுக்கும் எனது நன்றியறிதலையும் வந்தனத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு: 06.08.1935 ஆம் நாள் குற்றாலம் அய்ந்தருவி சாலை வடபுரம் தெப்பக்குள மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு தலைமையேற்று ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 11. 08.1935**



# போக்கிரித்தனமான புகார்

சென்ற வாரம் நமது ''குடிஅரசு'' பத்திரிகையின் தலையங்கத்தில் தோழர் சுந்தராம்பாள் அம்மாள் விஷயமாகப் பார்ப்பனர்கள் பொறாமை கொண்டு தம் பத்திரிகைகளில் செய்து வரும் விஷமத்தனமான பிரசாரத்தைப் பற்றி எழுதியிருந்தோம்.

இவ்வாரம் பார்ப்பனர்களுடையவும், பார்ப்பனப் பத்திரிகை களினுடையவும், போக்கிரித்தனமான புகார்களைப் பற்றி எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டதற்கு மிகுதியும் வருந்துகின்றோம்.

நம் நாட்டு பார்ப்பனர்களை நாம் பகைக்கவோ, வெறுக்கவோ, சிறிதுகூட ஆசைப்படுவது கிடையாது என்பதோடு, எப்படியாவது அவர்களுடன் கலந்து ஐக்கியப்பட்டு தொண்டாற்ற ஏதாவது ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்றே சிறப்பாக சிறிது காலமாய் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்நிலையில் பார்ப்பன விஷமம் எல்லைக்கடங்காது. மேலும் மேலும் பெருகிக் கொண்டே போவதுடன் இந்நாட்டில் இனி தமிழ் மக்கள் வாழ்வதா? அல்லது பார்ப்பனர் வாழ்வதா? என்கின்ற இரண்டிலொன்றைக் கரைகாண பார்ப்பனர் ஒருங்கே கூடி முனைந்து விட்டார்கள். அது பற்றி எதையுஞ் செய்யத் துணிந்து விட்டார்கள் என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

நாடகக் கலையில் ஒரு தமிழ் மாது பெரும் புகழ் பெறக் கூடாது என்று எப்படி விஷமப் பிரசாரம் செய்தார்களோ அதுபோலவே இந்த வாரத்தில் தமிழ் கலையில் ஒரு தமிழ் பெரியார் பேரும், புகழும் பெறுவதற்கு இடையூறாய் தங்கள் விஷத்தைக் கக்க ஆரம்பித்து விட்டார்கள்.

தென்னாட்டுக் கலா வல்லவருள் தலைசிறந்து விளங்கும் சுவாமி வேதாசலமென்னும் மறைமலை அடிகள் அவர்களை தமிழ் உலகமும், சிறப்பாக சைவ உலகமும் நன்கறிந்திருக்கும் என்பதில் யாருக்கும் ஐயமிருக்காது.

சுவாமிகள் ஒரு பெரும் ஆஸ்திகர் என்பதோடு தமிழ் பாஷையில் இணையில்லாத பண்டிதர் என்பதும் தமிழ் பாஷையுடையவும், தமிழ் பாஷையின் வளர்ச்சியின் எதிரிகளும் அறிந்ததேயாகும். அதோடு மாத்திரமல்லாமல் சுவாமிகள் சுயமரியாதைக் கொள்கைக்கு மாறானவர் என்பதோடு சுயமரியாதைக் கொள்கையானது, மக்களுக்குக் கேடு விளைவிக்கத் தக்கது என்கின்ற அபிப்பிராயமும் உடையவர்.



RangaRakes tamilnavarasam.com

அன்றியும் சுவாமிகளின் தோளானது ஒரு **முப்பிரி நூலைச் சுமந்து யிருக்குமானால்** இத் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் இன்று அவரை அகஸ்தியராக்கியிருப்பார்கள். ஏனெனில் அவரினின்று எத்தனையோ மடங்கு தாழ்ந்த ஞானமுடையவர்கள் **பருத்தி நூலைத் தாங்கிய பண்பினாலேயே** மகாமஹோபாத்தியாயரானதோடு மாத்திரமல்லாமல் தமிழ் ''கடவுளான சுப்பிரமணியனுக்கு'' ஒப்பாகப் பேசியும், எழுதியும் விளம்பரப்படுத்தி இருக்கிறார்கள்.

உதாரணமாக இன்று தமிழ் பாஷையின் பேரால் பெரு நிதி திரட்டிக் கொண்டவரும் பெரும் புகழ் அமைத்துக் கொண்டவரும் தமிழுக்குத் தாயகமெனவும் விளம்பரப்படுத்தப்பட்டு மகாமஹோபாத்தியாயர் எனப் பட்டம் சூட்டப் பெற்றவருமான தோழர் உ.வே.சாமிநாதையர் அவர்களை ஒரு தட்டில் வைத்து சுவாமி வேதாச்சலமவர்களை மற்றொரு தட்டில் வைத்து நிறுக்கப்படுமானால், எத்தனை சுவாமிநாதய்யர்களைப் போட்டால் சுவாமி வேதாச்சலம் வீற்றிருக்கும் தட்டை அசைக்க முடியும் என்பதை, ஒவ்வொரு நேர்மையான மகனும் தன் தன் நெஞ்சில் கையை வைத்து உண்மை உணர்வோடு பார்ப்பானானால் நன்றாய் விளங்கிவிடும்.

தோழர் சுவாமிநாதய்யர் அவர்கள் வெகுகாலமாக பல தமிழ்ப் பெரியாரும், தமிழ் அபிமானிகளும் சேர்த்து வைத்திருந்த தமிழ் இலக்கியச் சுவடிகளையும், அவற்றிற்கு அவ்வப்போது பல அறிஞர்களும், பண்டிதர்களும் குறித்து வைத்து இருந்த உரைகளையும், கருத்துகளையும் கைப்பற்றி அவற்றில் பார்ப்பனரல்லாதாருக்கு அனுகூலமாகவும், பார்ப்பனர்களுக்கு பிரதிகூலமாகவும் இருந்த கூற்றுகளை மாற்றியமைத்து ஆற்றிய நூல்கள் போலவே எல்லாவற்றையும் பார்ப்பனீயத்துக்கு அரணாக்கிப் பதிப்பித்துப் பயன் பெற்றார் என்பதல்லாமல் தன் சொந்த மனோதர்மத்தில் யாவருக்கும் பயன்படும்படி பார்ப்பன முறையில் ஏதாவது புத்தகமோ, வியாசமோ எழுதி இருக்கின்றாரா என்று பார்த்தால் நாம் கூறுவதில் உண்மை இருக்கின்றதா? இல்லையா? என்பது செவ்வன விளங்கும்.

சுவாமி வேதாச்சலமவர்கள் அவ்வாறின்றி எத்தனையோ நூல்கள் தாமாகவே இயற்றியதுடன் தமதாராய்ச்சித் திறத்தால் எவ்வளவோ அறிய விஷயங்கள் கண்டுபிடித்து சகல மக்களும் பயன்படத்தக்க பல அறிய கருத்துக்களையும் வெளியிட்டு வந்திருக்கிறார் என்பதை தமிழின் ''கூற்றுவர்''களும் உணருவார்கள்.

இப்படிப்பட்ட சுவாமி வேதாச்சலமவர்களைப் பற்றி நமது பார்ப்பனர்கள் விஷமப் பிரசாரம் செய்ய இப்போது ஏன் புறப்பட்டார்கள் என்பது சிலருக்கு அதிசயமாகத் தோன்றலாம்; ஆனால் நமக்கு அது அதிசயமாய்த் தோன்ற வில்லை. ஏனெனில் இதற்கு முன்னாலேயே செய்திருக்க வேண்டியவர்கள் இத்தனை நாள் எப்படி சுவாமி வேதாச்சலத்தைப் பற்றி விஷமப் பிரசாரம் செய்யாதிருந்தார்கள் என்பதுதான் ஒருவருக்கு ஆச்சரியமாகத் தோன்றலாம்.



இரண்டைப் பற்றியும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை என்பதே நமதபிப்பிராயம். ஏனெனில் மறைமலையடிகளைப் பற்றி நம் பார்ப்பனர்கள் முன்னும் விஷமப் பிரசாரம் செய்துதான் வந்திருக்கிறார்கள், இப்போதும் செய்துதான் வருகிறார்கள், இனியும் செய்யத்தான் போகிறார்கள்.

எப்பொழுது அவர் சுவாமி வேதாச்சலமானாரோ அப்போது முதலும், எப்பொழுது சுவாமி வேதாச்சலமவர்கள் சுவாமி வேதாச்சலமென்னும் மறைமலை அடிகள் என்பதாக ஆனாரோ அப்பொழுது அதைவிட அதிகமாகவும் அவரைப் பற்றி விஷமப் பிரசாரம் செய்து கொண்டேதான் இருக்கிறார்கள்.

நமது பார்ப்பனர்களுக்கு ஒருவன் விரோதியாக வேண்டுமானால் தமிழ் பாஷையில் இணையில்லாப் பற்றும், இணையில்லா ஞானமும் இருந்து வருவது ஒன்றே போதுமானதாகும்.

அப்படிக்கிருக்க நமது சுவாமி வேதாச்சாலமவர்களை பார்ப்பனர் எப்படி வெறுக்காமலும், பழித்துக் கூறாமலும் இருக்க முடியும்.

இப்பொழுது சுவாமி வேதாசலம் அவர்களைப் பற்றி பார்ப்பனக் குழாத்திலும் அவர்களது பத்திரிகைகளிலும் நடந்து வரும் பிரசாரத்தை நாம் விஷமப் பிரசாரம் என்று மாத்திரம் சொல்வதல்லாமல் அதை ஒரு போக்கிரித்தனமான புகார் பிரசாரம் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

ஏனெனில் சுவாமிகள் எழுதிய அறிவுரைக் கொத்து என்னும் ஒரு சிறிய நூலில், ''தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும்'' என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ள ஒரு கட்டுரையைக் குறிப்பாக கொண்டு அது தேச நலனுக்கும் மக்கள் நலனுக்கும் கேடானது என்பதாகச் சொல்லி அவரது பெயருக்கு இழுக்கு உண்டாகும்படியாக பிரசாரம் செய்கின்றார்கள்.

இரண்டு வாரகாலமாக இந்தப்பிரசாரம் பத்திரிகைகளில் அடிபடுவதோடு பல பார்ப்பனப் பத்திரிகைகள் இவ்விஷயத்திற்கு ஆக தலையங்கமும் உப தலையங்கமும் எழுதுவதோடு வழக்கம் போல் ஆங்காங்கு கூட்டம் போட்டு கண்டித்ததாக சூட்சிச் செய்திகளும் பிரசுரமாகின்றன. அவற்றுள் ஒரு பத்திரிகை ''விஷமத்தனமான புத்தகம்'' என்கின்ற தலைப்பிலும், மற்றொரு பத்திரிகை மறைமலை அடிகள் சுயமரியாதைக் கட்சியில் சேர்ந்து விட்டார் என்பது ஆகவும், மற்றும் பல தங்களுக்கு தோன்றிய விதமாகவும் எழுதி அப்புத்தகத்தை பள்ளிகளில் பாடமாக வைத்தது பிசகு என்றும் அதை எடுத்து விட வேண்டும் என்றும் எழுதி இருக்கின்றன.

இந்தக் கூற்றுகளை வேண்டுமென்றே செய்யப்படும் போக்கிரித் தனமான விஷமக் கூற்று என்று சொல்லி தீர வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

ஏனெனில் சுவாமி வேதாசலம் அவர்களால் எழுதப்பட்ட அறிவுரைக் கொத்து என்னும் புத்தகத்தில் தமிழ் மக்களை இழிவுபடுத்தியும் அடிமைப்புத்தி ஏற்படும்படியும் துவேஷம் ஏற்படும்படியும் கட்டுரை எழுதி தமிழ் மக்களை



RangaRakes tamilnavarasam.com

கேவலப்படுத்தி இருப்பதாக எழுதி ஓலமிடுகின்றன. அதில் என்ன எழுதப் பட்டிருக்கிறது, எதற்காக இப்படி ஓலமிட வேண்டியதாயிற்று என்பதற்கு உதாரணம் காட்டும் போது ஒரு பத்திரிகையானது,

1. ''தமிழருக்கு சுய அறிவு கிடையாது''
2. ''ஒற்றுமைக் குணம் கிடையாது''
3. ''கல்வியில் விருப்பம் கிடையாது''
4. ''மேல்நாட்டார் இங்கு வருமுன் உயர்ந்த பள்ளிக்கூடம் கிடையாது''
5. ''தமிழர்கள் கைக்கூலி (லஞ்சம்) கொடுக்கிறார்கள்''
6. ''உத்தியோகம் பெற எதையும் செய்கிறார்கள்''
   அப்படி என்றால் என்ன? என்றும் கேட்கின்றது.
7. ''பணம் சேர்ப்பதற்கே கல்வி கற்கிறார்கள்''

என்ற வாக்கியங்களை எடுத்துக் காட்டி இவை அடிமைப்புத்தியையும் துவேஷத்தையும் விளைவிக்கும் என்று சொல்லி இப்புத்தகத்தை பள்ளிப் பிள்ளைகள் படிக்கும்படியாக அனுமதிக்கக் கூடாது என்று எழுதியிருக்கின்றது.

இவற்றிற்கு சமாதானம் கூறியே இப்பத்திரிகைகளின் போக்கை போக்கிரித்தனமான புகார் கூறும் குணமுடையவை என்று எடுத்துக் கூற ஆசைப்படுகின்றோம்.

1. தமிழருக்கு சுய அறிவு கிடையாது என்பதில் ஏதாவது குற்றமிருக்கிறதா என்று கேட்கின்றோம்.

கோடிக்கணக்கான தமிழ்நாட்டுத் தமிழ் மக்களில் நூற்றுக்கு 10 அல்லது 5 வீதமான மக்களுக்கு ஆவது சுய புத்தி இருக்கின்றது என்று யாராவது கூற முடியுமா என்று பந்தயம் கட்டிக் கேட்கின்றோம். ஒருவர் இருவருக்கு சுய புத்தி இருப்பதாக வைத்துக் கொண்டாலும் அது அச்சமூகம் முழுமைக்கும் இருப்பதாகக் கொள்ளக் கூடியதாகிவிடுமா என்று கேட்கின்றோம்.

தமிழனுக்குப் புத்தியிருந்தால் அவன் ''மோக்ஷ''மடைய மலத்தையும் மூத்திரத்தையும் சாப்பிடுவானா?

தமிழனுக்குப் புத்தியிருந்தால் அவன் தன் மகளைச் சாமி பேரால் பொட்டுக் கட்டி பார்ப்பனனுக்கு மாத்திரம் குறைந்த விகிதத்துக்கு கலவிக்கு விடுவானா?

தமிழனுக்குப் புத்தியிருந்தால் பார்ப்பான் காலில் பவுன் பவுனாக நாணையம் கொட்டிக் கொடுத்து அவன் காலைக் கழுவின தண்ணீரைக் குடிப்பானா?

தமிழனுக்குப் புத்தியிருந்தால் காப்பிக் கடையில் எச்சைக் கிண்ணம் கழுவும் பார்ப்பானையும், கூட்டிக் கொடுக்கும் பார்ப்பானையும் சுவாமி என்று கூப்பிடுவானா?



தமிழனுக்குப் புத்தியிருந்தால் கடுகளவாவது சுயபுத்தியிருந்தால் அரிசி, பருப்பு, காய் கரியை பார்பானுக்குப் படைத்து விழுந்து கும்பிட்டு ''இவற்றை இறந்து போன என் பெற்றோர்களுக்குக் கொண்டு போய் சேர்த்து அவர்களை மோக்ஷத்திற்கு அனுப்புங்கள்'' என்று சொல்லுவானா?

தமிழனுக்குப் புத்தியிருந்தால் தன்னை சூத்திரன் என்றும், தீண்டப் படாதவன் என்றும் அழைக்கிற, கருதுகிற பார்ப்பானை, சகோதரன் என்றும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளை என்றும் ஒரு தேச மக்கள் என்றும் கருதி அவனோடு நட்புக் கொள்வானா?

தமிழனுக்குப் புத்தி இருந்தால் தன்னை தொட்டால் பாவம், தன் பாஷையைக் கேட்டால் தோஷம், தன்னை கோவிலுக்குள் கடவுள் இருக்கும் அறையில் அனுமதித்தால் தோஷம் என்று சொல்லும் பார்ப்பானுடன் கூடிக் கொண்டு தமிழ் மக்கள் கழகத்தைக் கெடுக்கவும் அவர்கள் முன்னேற்றத்தைத் தடுக்கவுமான தொண்டைச் செய்து ஒற்றுப் பார்ப்பானிடம் பிச்சை வாங்கிப் பிழைப்பானா?

தமிழ் மக்களுக்குப் புத்தியிருந்தால் கெஜம் 3 அணாவுக்கு விற்கும் அருமையான, நயமான துணியை வாங்கிக் கட்டுவதை விட்டு விட்டு கெஜம் 6, 7 அணாப் போட்டு ஆபாசத் துணியை தேசாபிமானம் என்னும் பேரால் வாங்கிக் கட்டிக் கொண்டுத் திரிவானா?

மோக்ஷத்திற்கு போக மலமூத்திரங்களை உண்பதற்கும் சுயராஜ்ஜியம் பெற கோணி ரட்டைக் கட்டுவதற்கும் என்ன வித்தியாசம் என்பதைக்கூட உணராமல் இருப்பானா என்று கேட்பதோடு தமிழ் மக்களுக்கு பெரும்பான்மை யானவர்களுக்குப் புத்தியும் இல்லை, சுயமரியாதையும் இல்லை என்பதற்கு இன்னும் இது போன்ற எத்தனை ஆயிரம் எடுத்துக் காட்டுகள் வேண்டுமானாலும் இருக்கின்றது என்று கூறத் தயாராய் இருக்கிறோம்.

2. தமிழ் மக்களுக்குள் ஒற்றுமைக் குணம் கிடையாது என்பது பொய்யா என்று கேட்கின்றோம்.

தமிழ் மக்கள் தங்களைப் பார்ப்பனரால் 1008 ஜாதியாராகப் பிரிக்கப் பட்டு அவர்கள் முன்னோர்களால் செய்த புராண சரித்திர ஆதாரத்தோடு ஒவ்வொருவருக்கும் கீழ் மேல் நிலை கற்பிக்கப்பட்டு ஒருவருக்கொருவர் உண்பனை, தின்பனை, கொடுப்பனை, கொள்வனை, கூடி உறவாடுவன முதலிய ஐக்கிய பாவமற்றவைகளைச் செய்து கொண்டு ஒருவன் உண்பதை ஒருவன் பார்க்கக்கூட கூடாது என்கின்ற நியதி ஏற்படுத்தி ஒவ்வொருவன் தொழிலையும் ஜாதியையும் இழிவாக்கி ஒருவனிடம் ஒருவனுக்கு சரித்திரப்பூர்வமாகவே துவேஷமும் வெறுப்பும் உண்டாகும்படி செய்து மக்களைப் பிரித்து வைத்து ஒரு சிறு சோம்பேறிக் கூட்டத்தார் நோகாமல் பாடுபடாமல் வயிர் வளர்க்க வேண்டி சதாகாலமும் எல்லாத் தமிழ் மக்களும்



RangaRakes tamilnavarasam.com

ஒருவரோடு ஒருவர் விருப்பற்று துவேஷத்துடன் இருக்கும்படி செய்து இருப்பது பொய்யென்று யாராவது சொல்ல முடியுமா என்று பந்தயம் கட்டிக் கேட்கின்றோம்.

3. தமிழ் மக்களுக்கு கல்வியில் விருப்பம் கிடையாது என்பது முழுதும் உண்மையற்றது என்று சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

இந்நாட்டுத் தமிழ் மக்களில் எத்தனைப் பேர் கல்வி கற்று இருக்கிறார்கள்? ஆரிய மக்களில் எத்தனை பேர் கல்வி கற்று இருக்கிறார்கள் என்கின்ற கணக்கைப் பார்த்தால் சுவாமிகளின் வாக்கு எத்தனை பரிசுத்தமானது என்பது விளங்கும். இன்று பள்ளி உபாத்தியாயர்கள் பெரிதும் பார்ப்பனர்களானதினாலும் பார்ப்பனர்களே தமிழ் மக்கள் பலருக்குக் குல குருவாய் இருப்பதாலும் இவ்விரு கூட்டத்தாரும் பார்ப்பனரல்லாத மக்களைப் பார்த்து ''உங்களுக்கு படிப்பு எதற்கு, நீங்கள் மாடு கன்று மேய்த்து ஏர் உழுபவர்கள் தானே, அன்றியும் உங்களுக்கு படிப்பு வருமா, உங்களுக்கு நாக்குத் திரும்புமா'' என்றெல்லாம் கேட்டு அவர்களது தன்னம்பிக்கையைக் கெடுத்து உச்சாஹத்தைத் தடுத்து மனச் சோர்வை உண்டாக்கி மாடு மேய்ப்பதில், வண்டி ஓட்டுவதில், மோகத்தை உண்டாக்கி தமிழ் மக்களுக்கு கல்வி ஆசையில்லாமலும் கல்வி கற்க முடியாமலும் செய்ததை எந்த ஒரு யோக்கியமான பார்ப்பனராவது மறுக்க முடியுமா என்று கேட்க்கின்றோம்.

மற்றும் பார்ப்பனரல்லாத மக்கள் சூத்திரராகவும், கீழ் ஜாதியாராகவும் கற்பிக்கப்பட்டு விட்டதாலும், பார்ப்பனரல்லாதாருக்கு கல்வி கற்பிக்கப்படாது என்றும், கல்வி கற்பதும் கூடாததென்றும், மனுதர்ம நூல் முதலியவைகளில் இருப்பதால் அதனாலும் பார்ப்பனரல்லாதார் கல்வி கற்கவும் ஆசைப்படவும் முடியாமல் போனதோடு மற்றும் பார்ப்பனரல்லாத மக்கள் பெரிதும் 5 வயது முதலே பாடுபட்டால்தான் அவர்களது குடும்பம் வாழ முடியும் என்கின்ற மாதிரியில் வாழ்க்கை ஏற்படுத்தப்பட்டு விட்டதாலும், தமிழ் மக்களுக்கு கல்வி ஏற்படவும் ஆசை உண்டாகவும் இடமில்லாமல் போய்விட்டது என்பது பொய்யா மெய்யா என்று கேள்க்கின்றோம்.

சமஸ்கிருத நீதி நூல் ஒன்றில் ''குளித்த குதிரை, மதம் பிடித்த யானை, படித்த சூத்திரன் இம் மூன்றையும் கிட்ட சேர்க்கலாகாது'' என்று ரிஷிகள் வாக்கே இருக்க, இந்நிலையில் எந்தப் பார்ப்பனரல்லாதாரையாவது படிக்க பார்ப்பனர்கள் வசதி செய்து கொடுத்திருப்பார்களா என்றும் கேட்கின்றோம்.

4. மேல் நாட்டார் இங்கு வருமுன் உயர்ந்த பள்ளிக்கூடம் இங்கு கிடையாது என்பது.

இப்படி எழுதின அப்பத்திரிகையாவது ஆங்கிலேயர் வருவதற்கு முன்னோ, அல்லது ஆரிய அரசர்கள் காலத்திலோ ஏதாவது பள்ளிக்கூடங்கள் இருந்ததாக இரண்டு ஒரு பள்ளிக்கூடத்தின் பெயர்களையாவது குறிப்பிட்டதா



அல்லது இனியாவது குறிப்பிட முடியுமா? என்று கேள்க்கின்றோம். இதைப் பற்றி மிஸ் மேயோ அம்மையாரே எழுதி இருக்கிறார்கள். பார்ப்பனரல்லாத மக்கள் படிக்கக் கூடாது என்றும், படித்தால் நாக்கை அறுக்கவும், கேட்டால்கூட காதில் ஈயத்தைக் காச்சி ஊற்றவும் ஏற்படுத்தி இருக்கும் சாஸ்திர தர்மம் யாரும் அறியார்கள் என்று நினைத்துக் கொண்டு இப்பத்திரிகை மனப்பால் குடிக்கின்றதா என்று கேட்கின்றோம்.

முதலாவது ஆங்கிலேயர்களுக்கு முன் புஸ்தகம், காகிதம், சிலேட்டு ஏதாவது இருந்தது என்று யாராவது சொல்ல முடியுமா? படிக்கும் விஷயம் தான் ஏதாவது இருந்ததா?

குறள், தொல்காப்பியம் என்பது போல் ஏதோ சில நூல்கள் இருக்கின்றதே அது எப்படி வந்தது என்று சொல்லுகின்றது அப்பத்திரிகை.

இது மனதறிந்த அக்கிரமமான சமாதானம். ஏனெனில் தொல்காப்பியம், குறள் படித்தவர்கள் லட்சத்தில் ஒருவர் இருப்பார்கள். அதுவும் பள்ளிக்கூடத்தில் படிக்காமல் யாரோ ஒருவர் மூலம் ஒருவர் பாட்டாகக் கேட்டு நெட்டுருப் பண்ணி வைத்திருந்தால் அவர்கள் பெரிய வித்வான்களாக ஆகி விடுவார்கள். அவ்வளவு தான் படிப்பே ஒழிய பள்ளிக்கூடம் வைத்து பிள்ளைகள் அங்கு போய் எழுதுவது, படிப்பது என்பவைகள் தாராளமாய் இருந்ததாக எந்த ஆதாரத்திலும் எவராலும் சொல்லப்படவே இல்லை. அதனாலேயே தான் பார்ப்பனர்கள் தவிர மற்றவர்கள் தாராளமாய் 10000-க்கு ஒருவர் இருவர் படித்ததாகவும் காணப்படவில்லை.

5. தமிழர்கள் கைக்கூலி கொடுக்கிறார்கள் என்பது?

பார்ப்பனர்கள் அதிகாரம் வகிக்க ஆரம்பித்தது முதல் கொண்டே இந்நாட்டில் லஞ்சம் எவ்வளவு தாராளமாகக் கடையில் கத்தரிக்காய், பீடி, சிகரெட் வாங்குவது போல் எவ்வளவு மலிவாக இருந்து வருகின்றது என்பதை நாம் எடுத்துச் சொல்லவும் வேண்டுமா?

பார்ப்பனர்களே அதிகாரிகளானதாலும், பார்ப்பனர்களே வக்கீல்கள், குமாஸ்தாக்கள் ஆனதினாலும், லஞ்சம் எவ்வளவானாலும் பெரிதும் எப்படியாவது பார்ப்பனர்களுக்கே போய்ச் சேரக்கூடியதாய் இருந்தாலும் லஞ்சத்தைத் தாராளப்படுத்தவும் அவசியமாய் செல்வாக்குப் படுத்தவும் ஏற்பட்டதோடு அது மக்களைக் கவர்ந்தும் விட்டது.

லஞ்ச விஷயத்தைப் பற்றி சுவாமிகள் மாத்திரமல்ல, நாம் மாத்திரமல்ல, அனேக பெரியார்கள், அதிகாரிகள், ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் என்பவர்களெல்லாம் வண்டி வண்டியாய் சொல்லி இருக்கிறார்கள்.

மற்றும் ஹைக்கோர்ட்டு முதல் அரசாங்க தலைமை ஸ்தாபனங்கள் முதல் ரயில்வே, காபீஸ்ட் இலாக்கா, பஞ்சாயத்து கோர்ட், கிராமக் கோர்ட்டு உள்பட அவற்றிற்குள் நுழைகின்றவர்கள் ஒவ்வொருவரும் 100க்கு 90க்கு



RangaRakes tamilnavarasam.com

மேம்பட்டவர்கள் லஞ்சம் கொடுத்து காரியத்தைச் சாதிக்கும் வக்கீல்களையே தேடிப் பிடிக்கிறார்கள் என்பதும் அதற்குண்டான சகல வழிகளையும் வக்கீல் களும், அவர்களது சிப்பந்திகளும் கற்றுக் கொடுத்து அவர்களை நடத்து கிறார்கள் என்பதும் ஒரு சிறிதாவது மறுக்கக் கூடியதா என்று கேட்கின்றோம்.

6. உத்தியோகம் பெற எதையும் செய்கிறார்கள் என்பதை உண்மை அல்ல வென்று சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

இந்த விஷயம் வெளிப்படையான இரகசியமாகும்.

கொஞ்சகாலத்துக்கு முன் திருச்சியில் ஒரு சின்ன அதிகாரி ஒரு பெரிய அதிகாரி ஒருவருக்கு தன் மனைவியை அனுப்பியதில் அப்பெரிய அதிகாரி அப்பெண்ணின் மார்பின் முனையைக் கடித்து விட்ட சேதி யாரும் அறியாததா.

மற்றும் கும்பகோணத்தில் ஒரு உயர்தர அதிகாரிக்கு ஒரு கீழ்த்தர அதிகாரி தன் சகோதரியை அனுப்பி அந்தம்மாள் அவரோடு கூடவே இருந்து கொண்டு வர மாட்டேன் என்று சொன்னது யாரும் அறியாததா. மற்றும் சில ஜில்லா பெரிய அதிகாரிகள் செல்லுமிடங்களுக்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட சின்ன அதிகாரியை தன்னுடைய சாமான்கள் போலவே கூட அழைத்துக் கொண்டு போவது என்பதும், அதனால் அந்த சின்ன அதிகாரி தனது யோக்கியதைக்கு மீறின பதவிகள் பெறுவதும் கோவை ஜில்லாவில் பல தடவை நடந்த சம்பவங்களாகும்.

மற்றும் வேறு எத்தனையோ விதங்களில் இம்மாதிரியான பிரஸ்தாபங்கள் சர்வ சாதாரணமாகவே பலவிடங்களிலும் வழங்கி வருவதானது யாரும் அறியாதது என்று சொல்லிவிட முடியுமா?

7. பணம் சேர்ப்பதற்கே கல்வி கற்கின்றார்கள் என்பது.

இதைக்கூட தப்பு என்று சொல்ல வந்ததானது வேண்டுமென்றே செய்யப்படும் போக்கிரித்தனமான புகார் என்பதற்கு வெளிப்படையான உதாரணமாகும்.

இன்றைய கல்வி, அறிவுக்குப் பயன்படாததென்றும் வயிற்றுப் பிழைப்பிற்கு அதுவும் அடிமை பிழைப்பு பிழைத்து வயிறு பிழைப்பதற்கு என்றும் சொல்லாதவர்கள் யாருமே இல்லை. அப்படிப்பட்டவர்களும், அவர்களது பிள்ளை குட்டிகளும் மறுபடியும் அக் கல்வியையே கற்கின்றார்கள் என்றால் வேறு எதற்காக அவர்கள் கற்கிறார்கள் என்பதை அப் பத்திரிகை யாவது கூறி இருக்க வேண்டாமா?

இன்று கல்வி கற்றவர்கள் என்கின்ற கூட்டத்தில் சேர்ந்த எவராவது அக்கல்வியை பணம் சம்பாதிப்பதைவிட வேறு காரியத்துக்கு உபயோகப் படுத்துகிறார்களா? அல்லது கற்ற B.A., M.A., டாக்டர்கள் என்பவர்களுக்காவது அறிவு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா? எத்தனை டாக்டர்கள் தூரமான தன் பெண்ணை தெருவில் தள்ளி கதவைச் சாத்துகிறதைப் பார்க்கிறோம்.



எத்தனை பூகோள சாஸ்திரிகள் கிரகணத்துக்கு சமுத்திரக்கரையில் மூக்கைப் பிடித்து உட்கார்ந்திருப்பதைப் பார்க்கிறோம்.

எத்தனை பிரபல நியாயவாதிகள், தர்க்கவாதிகள் தாங்கள் மோட்சம் போக கல்லைக் கும்பிடுவதைப் பார்க்கின்றோம். இவர்கள் எல்லாம் புத்திக்காக படித்தவர்களா பணம் சம்பாதிக்கப் படித்தவர்களா என்று கேட்கின்றோம்.

உரலை நினைத்து அவலை இடிப்பது போல் பார்ப்பனப் பத்திரிகைகள் வேறு ஏதோ காரணம் வைத்துக் கொண்டு இந்தப் போக்கிரித்தனமான வேலையில் பிரவேசித்து இருக்கின்றன.

அவர்களது சூட்சித் திரமும், விஷமத் திரமும் இப்புத்தகத்தைப் படிக்கக் கூடாது என்று செய்வதில் வெற்றி அளித்துவிடலாம்.

அல்லது சில வாக்கியங்களை எடுத்துவிட வேண்டுமென்று செய்தாலும் செய்து விடலாம்.

பிறகு பாட புத்தக விஷயத்தில் எப்படிப்பட்ட கொள்கை அனுசரிக்க வேண்டும் என்பதில் என்ன செய்ய வேண்டும் என்பது நமக்குத் தெரியும்.

தமிழ் மக்களும், தமிழ் பண்டிதர்களும் தமிழ் ரத்தமோடும் தமிழ் அபிமானிகளும் இத்தகைய சீர்கேட்டை நிவர்த்தித்து சரியான நடைமுறையில் நடத்த அமைக்கப்பட்ட அதிகார வர்க்கங்களும் அவைகளை நிர்வகிக்கும் மந்திரி வர்க்கங்களும் பின்னால் என்ன செய்வார்கள், அல்லது அவர்கள் என்ன கதி அடைவார்கள் என்பதைப் பார்க்கவே காத்திருக்கிறோம்.

இதற்கு ஆக ஆங்காங்குள்ள தமிழ் மக்கள் கிளர்ச்சி செய்து இதன் காரணமாகவாவது பாட புத்தக அமைப்புக்கு ஒரு நல்ல காலம் வரட்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

பார்ப்பனர்களில் ஒருவருக்கு ஒரு விஷயம் பட்டால் அது கம்பியில்லாத தந்தி போல் ஒவ்வொரு பார்ப்பனர் உள்ளத்திலும் படிகின்றது.

பார்ப்பனரல்லாதாரோ சிலர் இதன் மூலம் வயிறு கழுவ பார்ப்பனருக்கு அடிமையாகிறார்கள்.

வெட்கம்! வெட்கம்!!

எதற்கென்று அழுவது!!!

**குடி அரசு - தலையங்கம் - 11.08.1935**



RangaRakes tamilnavarasam.com

# வேண்டுகோள்

தோழர் சாமி வேதாசலம் அவர்கள் எழுதிய ''அறிவுக்கொத்து'' என்னும் நூலை சென்னை சர்வகலாசாலை இண்டர்மிடியேட் வகுப்பு மாணவர்களுக்குப் பாட புத்தகமாக வைத்திருப்பது கண்டு பார்ப்பனர்கள் அற்பத்தன கிளர்ச்சிகளும், விஷமப் பிரசாரங்களும் செய்து கொண்டு வருகிறார்கள். அதற்குக் காரணம் அந்நூலில் ''தமிழ்நாட்டவரும், மேல் நாட்டவரும்'' என்ற கட்டுரையில் பார்ப்பனர்களுடைய குற்றங் குறைகளைப் பற்றிக் கூறியிருப்பதாகும். ஆனால் அக்கட்டுரையில் பெரும்பான்மையான ஏழை மக்களின் வறுமையையும், அறியாமையையும் நீங்குவதற்கு வேண்டியன செய்யாமல் வாளாவிருப்பது கண்டு, கண்டித்து எழுதப்பட்டிருக்கிறது.

ஆதலால் ஒவ்வொரு ஊரிலுள்ள சுயமரியாதைச் சங்கங்களும் பார்ப்பனரல்லாத சங்கங்களும் பார்ப்பனர்களுடைய விஷமப் பிரசாரத்தைக் கண்டித்து சர்க்காருக்குத் தீர்மானங்கள் அனுப்பும்படி வேண்டுகிறோம்.

குடி அரசு - வேண்டுகோள் - 11.08.1935



R. No. M. 2041 "KUDI-ARASU"

குடி அரசு

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.



RangaRakes tamilnavarasam.com

# பதினோறாவது ஆண்டு

நமது குடி அரசுக்கு ஒன்பதாமாண்டு நிறைந்த பிறகு இப்போது இரண்டு வருஷம் கழித்து பதினோறாவது ஆண்டில், பதினோறாவது மாலையின் முதல் மலராக இவ்வார இதழ் ஆரம்பமாகின்றது.

இதுவும் இந்தப்படி மே மாத முதல் வாரத்திலேயே ஆரம்பமாகி இருக்க வேண்டியதானது பல காரணங்களால் தவறிவிட்டது. கூடிய சீக்கிரம் குடி அரசின் பத்தாமாண்டு விழா நடத்த உத்தேசித்துள்ளோம்.

பத்தாவது ஆண்டிற்கும் குடி அரசு மாலையாய் இல்லாமல் ''புரட்சி'' மாலையாகவும், ''பகுத்தறிவு'' மாலையாகவும் வெளியாக்க வேண்டி ஏற்பட்டுவிட்டதால் அவ்விரண்டின் பேரால் உள்ள மலர்களை 10 வது ஆண்டு மாலையாக வைத்துக் கொண்டு இப்போது குடி அரசு பதினோறாவது ஆண்டு மாலையாக இதைப் பிரசுரிக்கின்றோம்.

குடி அரசு தோன்றிய காலம் முதல் நாளது வரை அது எப்படிப்பட்ட கொள்கையுடன் நிலவி வந்திருக்கின்றது என்பதைப் பற்றியும், குடி அரசு இந்த பதினோறு வருஷ காலத்தில் எவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகி வந்திருக்கின்றது என்பதைப் பற்றியும் வாசகர்களுக்கு ஞாபக மூட்ட வேண்டியதில்லை யென்று கருதுகிறோம்.

அது 1925 வருஷம் மே மாதம் 2ந் தேதியில் திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீலஸ்ரீ சிவ ஷண்முக மெஞ்ஞான சிவாச்சாரியார் சுவாமிகள் என்பவர்களால் துவக்க விழா செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதன் முதல் மாலை முதல் மலரில்

''தேசம், தேசம் எனக் கூக்குரல் இடுவது நமது நோக்கமன்று''

''மக்களுக்குள் சுயமரியாதையும், சமத்துவமும் ஓங்கி வளரல் வேண்டும்''

என்கின்ற இரு வாக்கியங்களையும் முக்கிய நோக்கமாகக் குறிப்பிட்டு அந்நோக்கம் நிறைவேற்றப்பட குடி அரசு தன்னாலியன்ற அளவு தன் முழு பலத்தையும் உபயோகித்து பாடுபட்டு வந்து இருக்கின்றது.

குடி அரசின் ஆசிரியர் தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் ஒரு தீவிர பிரபல காங்கிரஸ் வாதியாயும் ஒத்துழையாமைவாதியாயும் இருந்தவர்.



RangaRakes tamilnavarasam.com

அதற்கு சாட்சியம் என்னவென்றால், அவர் மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கும், மாகாண காங்கிரஸ் வேலைக் கமிட்டிக்கும் பல வருஷங்கள் காரியதரிசியாகவும், தலைவராகவும் இருந்தார்.

காங்கிரசின் பேரால் பல முறை A.B.C. வகுப்புப் பிரிவுகள் இல்லாத காலத்தில் சிறை சென்றார்.

அதோடு மாத்திரமல்லாமல் அவர் பேரில் ஏற்பட்ட பல துவேஷ - வகுப்புத் துவேஷ கேஸ்களிலெல்லாம் எதிர் வியாஜ்ஜியமாடாமல் விட்டு விட்டதோடு சர்க்கார் நீதியில் நம்பிக்கை இல்லை என்றும் சொன்னவர்.

தமிழ்நாட்டில் பல சத்தியாக்கிரகத்தையும், சட்ட மறுப்பையும், மரியல்களையும் நடத்தி பல நூற்றுக்கணக்கான தொண்டர்களை சிறைக்கனுப்பினார்.

தமிழ்நாடு காங்கிரசின் சார்பாய் இந்தியா முழுவதற்குமே முதல் முதலாக கதர் ஸ்தாபனம் தமிழ்நாட்டில் ஏற்படுத்தி அதற்கு பல வருஷம் தலைவராய் இருந்து தமிழ்நாட்டிலும், மலையாளத்திலும் பல கிளை ஸ்தாபனங்களையும் தன் கையால் திறந்து வைத்தார்.

இரவும் பகலுமாய் வீட்டிலும் பிரயாணத்திலும் இராட்டினமும் கையுமாகவே இருந்து சுற்றிச் சுற்றி அதனால் கையில் வினை ஏற்பட்டு அதற்காக தோழர் காந்தியாரிடமிருந்து கொஞ்ச காலத்துக்கு ராட்டினம் சுற்ற வேண்டியதில்லை என்று தனி விதிவிலக்குப் பெற்றார்.

மாகாண காங்கிரஸ் மகாநாடுகளிலும், நூற்றுக்கணக்கான ஜில்லா, தாலூகா, கிராம காங்கிரஸ் மகாநாடுகளிலும் தலைமை வகித்திருக்கிறார்.

சர்க்காரால் சுமார் 40, 50-க்கு மேற்பட்ட 144 தடை உத்திரவுகள் பெற்றிருக்கிறார்.

காங்கிரஸ் ஸ்தாபனங்களாலும், ஸ்தல ஸ்தாபனங்களாகிய முனிசிபாலிட்டி, யூனியன், பஞ்சாயத்து ஆகியவைகளாலும் சுமார் 500க்கு மேற்பட்ட வரவேற்புகளும் பத்திரங்களும் பெற்றார்.

இம்மாதிரியான காங்கிரஸ் தொண்டில் தான் மாத்திரம் அல்லாமல், தனது மனைவியார், சகோதரியார், சகோதரர் முதலாகிய குடும்ப அங்கத்தினர்களும் காங்கிரசில் ஈடுபட்டு மறியல் முதலியவைகள் செய்து தோழர் காந்தியார் முதலியவர்களால் தனிப்பட்ட நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றிருக்கிறார்.

இவ்வளவு மாத்திரமல்லாமல் தோழர் ராமசாமி அவர்கள் இன்றுள்ள தேச பக்தர்களில் 100-க்கு 90 பேர்களைப் போல தங்கள் பிழைப்புக்கு வேறு மார்க்கம் இல்லாமல் தேச பக்தியை வயிற்றுப் பிழைப்பு வியாபாரமாகக் கொண்டோ அல்லது பல வக்கீல்கள் டாக்டர் ஆகியவர்களைப் போல் தங்கள் தொழில் செல்வாக்கு பெறுவதற்காக தேச பக்தியை ஒரு முதற்படியாய்க்





கொண்டோ அல்லது தங்கள் தொழில்களில் முன்னேற்றமடைய முடியாது என்று கருதி அதை விட்டுவிட்டு தேசபக்தியின் பேரால் விளம்பரமும் வாழ்வும் பெறலாம் என்றோ மற்றும் பலவித தனிப்பட்ட சுயநலத்தைக் கருதியோ காங்கிரசில் சேர்ந்தவர் அல்ல என்பதையும் பொது மக்கள் அறியத்தக்க இரண்டொரு உதாரணங்களையும் காட்டிவிட்டு மேல் செல்லுவோம்.

அதாவது தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் சேலம் முனிசிபல் சேர்மெனாய் இருக்கும்போது தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் ஈரோடு முனிசிபல் சேர்மெனாயும், கோவை ஜில்லா போர்ட் மெம்பராயும் தாலூக்கா போர்ட் மெம்பராயும் அரசாங்கத்திற்கு மிகமிக நல்ல பிள்ளையாய் பட்டம், நற்சாட்சிப் பத்திரம் ஆகியவைகளுக்கு சிபார்சு செய்யப்பட்டவராயும் இருந்தவர்.

தோழர் சி.ராஜகோபாலாச்சாரியார் சேலம் சேர்மென் பதவியை ராஜீனாமா செய்த உடன், தோழர் ஈ.வெ. ராமசாமி தனது முனிசிபல் சேர்மென் பதவி, ஜில்லா தாலூக்கா போர்ட் மெம்பர்கள் பதவி முதலாகியவைகளை ஒருங்கே ஒரே நாளில் ராஜினாமா கொடுத்து விட்டவர்.

அக்காலத்தில் வருஷம் 1000 ரூபாய் இன்கம்டாக்ஸ் (வருமான) வரியாக சர்க்காருக்கு செலுத்தக்கூடிய லாபமுள்ள வியாபாரம் நடத்தி வந்தவர் என்பது மாத்திரமல்லாமல் அவரது வர்த்தகப் புகழையும், திறமையையும் அரசாங்கத்தார் மதித்ததற்கு அறிகுறியாய் முன் கூறப்பட்ட சேர்மென் முதலிய பதவிகளை ராஜீனாமா செய்த பிறகும்கூட அவருக்கு இந்த மாகாண இன்கம்டாக்ஸ் (வருமான வரி) ஆபீஸ் உத்தியோகஸ்தரல்லாத விசாரணை கமிட்டியில் ஒருவராக இந்தியா கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டு அதற்கு தினம் 100 ரூ. படியும், இரட்டை முதல் வகுப்பு பிரயாணச் செலவும் பெற அனுமதிக்கப்பட்டவர்.

ஆகவே இப்படிப்பட்ட நிலையில் இருந்த குடி அரசு ஆசிரியர் இந்த 10 வருஷ காலமாய் காங்கிரசையும், தேசபக்த கூட்டத்தையும் விட்டு விலகி தேசாபிமானப் பட்டத்தையும், தியாகமூர்த்திப் பட்டத்தையும் வெறுத்து இன்று அவற்றைத் தாக்கிப் பாமர மக்களிடையிலும், அரசாங்கத்தாரிடையிலும், அதிருப்தி பெற்று எதிர் நீச்சம் போன்ற கஷ்டமான தொண்டில் ஏன் ஈடுபட்டு இருக்கிறார்? என்பதை முதலில் வாசகர்கள் உணர வேண்டுமாய் ஆசைப்படுகின்றோம்.

என்னவெனில் முதலாவதுஃ- இன்றும் நேற்றும் மாபெரும் தியாகியென்றும் பாரதமாதாவின் அருந்தவப் புதல்வரென்றும் மகா தீவிரவாதியென்றும் விளம்பரப்படுத்தப்பட்ட தோழர் வ.வே.சு. அய்யர் அவர்களால் காங்கிரஸ் நிதியைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட 'தேச பக்தி புகட்டும்' ஆச்சிரமமாகிய சேரமாதேவி குருகுலத்தில் கற்பிக்கப்பட்ட ஜாதி வித்தியாசப் பிரிவுகளை ஆச்சிரமத்தைப் பொருத்தவரை கூட ஒழிக்க சம்மதப்படாமலும், ஒழிக்கப்படவேண்டும் என்று காரியக் கமிட்டியில் பார்ப்பனரல்லாதார் ஓட்டு

RangaRakes tamilnavarasam.com

பலத்தைக்கொண்டு தீர்மானித்தவுடன் தோழர்கள் சி. ராஜகோபாலாச்சாரியார் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன், டாக்டர் டி.வி. சாஸ்திரியார், கே. சந்தானம், என்.எஸ். வரதாச்சாரியார் முதலிய 'சீர்திருத்தப்' பார்ப்பன 'தேச பக்தர்கள்' ராஜினாமா கொடுத்து கமிட்டியில் இருந்து விலகியதும், குருகுல ஆச்சிரமத்துக்கு ஆக தீவிர பிரசாரம் செய்த தோழர் வரதராஜுலு அவர்கள் மீது சில பார்ப்பனர்கள் நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டு வந்ததும் (அது நிறை வேறவில்லை) அதுபோலவே தோழர் ஈ.வெ. ராமசாமி பேரிலும் (அதற்கும் சிறிது நாள்களுக்கு முந்தியே தோழர் ஈ.வெ.ரா. மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைவரானவுடன்) தோழர் வ.வே.சு. அய்யர் அவர்களால் நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டு வரப்பட்டதுமான காரியங்கள் (அதுவும் நிறைவேறவில்லை) ஒருபுறம் காங்கிரசு பார்ப்பனரிடம் அதிருப்தி ஏற்படச் செய்ததோடு இரண்டாவதாக காஞ்சீபுரம் மாகாண (கான்பரன்ஸ்) மகாநாட்டில் தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்களால் கொண்டு வரப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தீர்மானத்தை விஷயாலோசனைக் கமிட்டியிலும் மகாநாட்டிலும் பிரேரேபிக்கவே அனுமதி தராமல் தலைவரின் தனி அதிகாரத்தின் கீழ் எதேச்சாதிகாரமாய் நிராகரிக்கப்பட்டதுமே முக்கிய காரணமாகி அப்பொழுதே தோழர் ஈ.வெ.ரா. அவர்கள் அந்த மகாநாடு கூட்டத்திலிருந்து எழுந்து,

''காங்கிரசினால் பொது மக்களுக்கு யாதொரு பயனும் ஏற்படப் போவதில்லை என்பதை உணர்ந்து விட்டேன்'' என்றும்,

''இன்று முதல் ஜாதி ஒழிப்புக்கும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் துக்கும் நான் தனியே நின்று உழைக்கும் வேலையைக் கைக் கொள்ளப் போகிறேன்'' என்றும்,

''காங்கிரசின் யோக்கியதையையும், அதைக் கைப்பற்றி தங்கள் சுயநலத்துக்கு பயன்படுத்திக் கொள்ளும் பார்ப்பனர்களுடையவும், அவர்களது அடிமைகளுடையவும், கூலிகளுடையவும் யோக்கியதையையும் பாமர மக்கள் உணரும்படி செய்வதையே எனது முக்கிய தொண்டாகக் கொள்ளப் போகிறேன்''

என்றும் சொல்லிவிட்டு சில தோழர்களுடனும் பெருத்த கரகோஷத் துடனும் மகாநாட்டை விட்டு வெளியேறினார்.

அன்று முதல் இன்று வரை அதுபோலவே ஜாதி ஒழிப்புக்கு ஆகவும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்காகவும், குடி அரசும் அதன் ஆசிரியரும் பாடுபட்டு வருவதோடு மற்றும் ஜாதிப் பாகுபாடுகளுக்கு ஆதாரமாய் பயன்படுத்தப்படும் ஜாதி, மதம், கடவுள் தன்மை, எளியோர் வலியோர் தன்மை ஆகியவைகளும் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும் என்றும் முனைந்து பாடுபட்டு வந்திருக்கின்றது.

இதை நமது வாசகர்கள் அதாவது ஆதியில் இருந்து கவனித்து வருகின்றவர்கள் நன்கு அறிவார்கள்.



இம் முயற்சியின் பயனாக பத்திரிகை பல தடவை சர்க்காரால் ஜாமீன் கேட்கப்பட்டதும், ஜாமீன் தொகையும் ஆயிரக்கணக்கில் கட்டப்பட்டதும், அதன் ஆசிரியர் தோழர் ஈ.வெ. ராமசாமியும், அவரது சகோதரி தோழர் கண்ணம்மாளும், அவரது சகோதரர் தோழர் கிருஷ்ணசாமியும் சிறை சென்றதும் பெருந்துகை அபராதமாகவும், செலவாகவும் நஷ்டப்பட்டதும், பத்திரிகையின் பெயர்களையும் புரட்சி என்றும், பகுத்தறிவு என்றும் அடிக்கடி பெயர் மாற்றப்பட்டதும் ஆன காரியங்கள் நடந்ததும் வாசகர்கள் அறிந்ததேயாகும்.

இவ்வளவும் தவிர இதன் ஆசிரியர் தோழர் ஈ.வெ.ரா. அவர்கள் ஐரோப்பா, ஆப்பிரிகா முதலிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு வந்த பிறகு ரஷ்ய அரசாங்கத்தின் சம்மந்தம் ஈ.வெ.ராவுக்கு இருந்து வருவதாக சந்தேகப்பட்டு அரசாங்க சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர்கள், கான்ஸ்டேபிள்கள் ஆகியவர்கள் இன்னமும் எப்போதும் பின் தொடரவும் அவரது நடவடிக்கைகளை எல்லாம் துப்பறிவோர்களைக் கொண்டு கவனிக்கவும், அவரது கடிதப் போக்குவரத்துக்களை எல்லாம் உடைத்துப் பார்க்கவும் அவ்வளவோடு மாத்திரம் அல்லாமல் அவரது நண்பர்களான சர். ஆர்.கே. ஷண்முகம் அவர்கள் போன்றார்களினது கடிதங்களும் கூட உடைத்துப் பார்க்கப்படவும் அவ்வளவோடு நிற்காமல் எப்படியாவது சுயமரியாதை இயக்கத்தை ஒழித்துவிட வேண்டும் என்று முயற்சித்து ஆட்டுக்குட்டி புலி கதை போல் பழய குப்பைகளைக் கிளறி குற்றம் கண்டுபிடிப்பதும் ஆன காரியங்கள் செய்யப்பட்டிருப்பதோடு சுயமரியாதை இயக்கமே சட்டவிரோதமான இயக்கம் என்று உத்திரவு பிறப்பிக்கவும் சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள்.

இவைகள் எல்லாம் சர்க்காரார் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றியும் தோழர் ஈ.வெ.ரா.வைப் பற்றியும் தப்பபிப்பிராயம் கொண்டும், சுயமரியாதை இயக்கம் மக்களை பலாத்காரத்தில் கொண்டு போய்விடும் என்றும், அது சட்ட விரோதமாய் நடக்க மக்களைத் தூண்டுகின்றது என்றும் கருதியதால் தான் இப்படிச் செய்கிறார்கள் என்று நாம் கருதி சுயமரியாதை இயக்கத்தில் பலாத்காரமோ சட்டவிரோதமாய் நடக்க மக்களைத் தூண்டுவதோ ஆகிய காரியம் இல்லை என்றும், அதன் கொள்கைகள் இன்னது இன்னதுதான் என்றும் விளக்கி ஒரு அறிக்கை வெளியிட்டும் சர்க்கார் அதையும் நம்பாமல் மறுபடியும் முன் போலவே தொந்திரவுகள் கொடுத்து வருகிறார்கள் என்பதை இச்சமயத்தில் வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டி இருக்கிறது.

சு.ம. இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இது வரையிலும் எந்த சமயத்திலும் சர்க்காருக்கு விரோதமாக சட்ட மறுப்போ அல்லது சட்ட விரோதமான காரியமோ செய்வது என்று ஒரு நாளும் தீர்மானித்ததில்லை, யெவரும் பேசியதுமில்லை என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

அதில் தீவிர உணர்ச்சி உள்ள வாலிபர்கள் பலர் இருக்கிறார்கள் என்றாலும் பொருப்புள்ளவர்கள் என்று சர்க்காரால் கருதக் கூடியவர்களாகவே



RangaRakes tamilnavarasam.com

பல பெரியோர்களும் இருக்கிறார்கள் என்பதோடு அப்படிப்பட்டவர்கள் இன்னமும் சு.ம. சங்க ஸ்தாபனத்துக்குத் தலைவர்களாகவும், நிர்வாகிகளாகவும் இருந்து வருகிறார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே.

நிற்க சு.ம. இயக்கமோ, குடி அரசோ சட்ட விரோதமான பொதுவுடமைப் பிரசாரம் செய்து வந்தன என்று சொல்லப்படுமானால் பொதுவுடமைப் பிரசாரம் சட்ட விரோதமானது என்று எப்பொழுது சர்க்கார் உத்திரவு பிறப்பித்தார்களோ அப்பொழுது முதலே அவ்வித பிரசாரமானது எங்கு இருந்தாலும் யார் செய்தாலும் நிறுத்தப்பட வேண்டும் என்பது ஆக அங்கத் தினர்களுக்கும் தெரிவிக்கும் முறையில் குடி அரசிலேயே அறிக்கைகள் வெளியிடப்பட்டாய் விட்டன.

ஏனெனில் பொதுவுடமைக் கொள்கை கூடாது என்பதாக அல்லா விட்டாலும் சர்க்கார் உத்திரவுக்கு விரோதமாக செய்யக் கூடாது என்கின்ற காரணத்தையே முக்கியமாய்க் கொண்டு இம்மாதிரி செய்யப்பட்டதாகும்.

ஏனெனில் சுயமரியாதை இயக்கம் பலவித அபிப்பிராயமுடையவர்களது கூட்டுறவையும் அனுதாபத்தையும் ஆதரவையும் கொண்டிருப்பதாலும் அது அனேக விஷயங்களில் பெரியதொரு மாறுதல் செய்ய வேண்டிய அவசியத்துக்கு உட்பட்டு இருப்பதாலும் அதை சர்க்காருக்கு விரோதமான இயக்கம் என்பதாக ஆக்கக் கூடாதென்று கருதியே சட்டவரம்பிற்கு உட்பட்டதாக ஆதி முதல் கொண்டே நடத்தப்பட்டு வருகின்றது.

பல தோழர்களுக்கு சட்ட வரம்பிற்கு உட்பட்டு நடப்பது என்பது அவமானமாகவோ, பயங்காளித்தனமாகவோ தோன்றலாம். என்றாலும் அப்படிப்பட்டவர்களுக்கு நாம் எவ்வித நிபந்தனையையோ, நிர்பந்தத்தையோ சுமத்த ஆசைப்படவில்லை.

ஆனால் அப்படிப்பட்டவர்களை ஒன்று மாத்திரம் கேட்டுக் கொண்டிருக் கின்றோம். அதாவது சுயமரியாதை இயக்கத்தின் பேரால் சட்டமீறுவதோ, சட்டத்தை மறுப்பதோ, சர்க்கார் உத்திரவை மீறுவதோ வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதேயாகும்.

காங்கிரசை விட - அதன் ஒரே தலைவரான காந்தியாரை விட சட்ட மீறுதலில் - சர்க்கார் உத்திரவுகளை அலட்சியம் செய்வதில் விளம்பரம் பெற்றவர்கள் யாருமில்லை.

அந்தப்படி யாராவது இருப்பதாகச் சொல்லப்படுமானால் அவர்களும் காங்கிரசையும், காந்தியாரையும் பின்பற்றினவர்களாகவே தான் இருக்கக் கூடும்.

அப்படிப்பட்ட 'வீர' ஸ்தாபனமும் 'வீரர்'களும் **"சட்ட மறுப்பை விட்டு விட்டோம் சட்டங்களை மீறாமல் சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடந்து எங்களது கிளர்ச்சிகளைச் செய்து கொள்ளுகிறோம்"** என்று உலகமறிய தீர்மானங்கள் செய்து சட்டசபைக்குள் புகுந்து ராஜ விஸ்வாசப் பிரமாணமும் செய்து சட்டம் செய்கின்ற வேலையிலும் முனைந்து இருக்கிறார்கள்.



அவ்வளவோடு மாத்திரமா? அதைவிட வீரதீரர்களான சமதர்மவாதிகள் என்பவர்கள் - மேல்நாடெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு வந்து ரஷியாவின் திக்கு நோக்கித் தெண்டனிட்டு கொண்டு லெனினை உள்ளக் கோவிலில் வைத்து மார்க்சின் உபதேசங்களை மந்திரமாய் ஜபித்துக் கொண்டிருப்பவர்கள் ராமராஜ்ஜியத்தை விரும்பும் - வருணாச்சிரமத்தை ஆதரிக்கும் - பழயதைக் காப்பாற்றும் காங்கிரசுக்கு பக்தர்களாய் - கதர் வேஷதாரிகளாய் இருந்து வருவது யாவரும் அறியாததல்ல.

மேலும் அவர்கள் சட்ட மறுப்பைக் கைவிட்டதாகவும், சட்டத்துக்கு அடங்கி நடப்பதாகவும், அரசாங்கத்துக்கு வாக்குறுதி கொடுத்தும் ராஜ விஸ்வாசப் பிரமாணம் செய்தும் இந்த சட்டசபையில் வீற்றிருப்பதையும் யாரும் அறியாததல்ல.

இதனால் எல்லாம் அந்த ரஷியவாதிகள் - சமதர்மவாதிகள் என்பவர்கள் இன்று அவமானமடைந்தவர்களாகவோ கோழைகளாக ஆகிவிட்டவர் களாகவோ யாராலாவது மதிக்கப்படுவதாய் நாம் காண முடியவில்லை.

ஆகவே சுயமரியாதை இயக்கம் சட்டத்திற்கு மீறியதல்லவென்றும், சட்டத்தை மறுப்பதல்லவென்றும் சொல்லிக் கொள்ளுவதால் எந்த சுயமரியாதைக்காரரும் அவமானப்பட வேண்டியதில்லை என்பதற்காகவே இதை எடுத்துக் காட்டுகின்றோம்.

இந்தியாவிற்கு சிறப்பாகத் தென் இந்தியாவிற்கு ஜாதி வித்தியாசங்கள் ஒழிக்கப்படுவதும் சட்டபூர்வமாக இது வெற்றி பெறும் வரை சமூக எதிர்ப்பையும் இழிவையும் சமாளிக்க அரசாங்கத்தின் மூலம் அரசியல் உரிமை ஸ்தாபனங்களில் பேதப்படுத்தப்பட்ட வகுப்புகள் விகிதாசார உரிமைகள் பெற பாடுபடுவதும் ஒரு பெரும் சமதர்மப் புரட்சியாகவே நாம் கருதுகின்றோம்.

இந்த கருத்தினாலேயே குடி அரசு ஆசிரியர் காங்கிரஸ் கூட்டத்தை விட்டு வெளி வந்தது முதல் நாளது வரை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் திற்காகவும் ஜாதி, மத வித்தியாசத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அசௌகரியங் களை போக்குவதற்கு ஆகவும் ஏற்படுத்தப்பட்ட தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்னும் ஜஸ்டிஸ் கட்சியாரின் ஒத்துழைப்பை ஏற்றும் அவர்களுக்கு அதன் கொள்கை விரோதிகளால் கஷ்டமும், தொல்லையும் ஏற்படுத்தப்பட்ட காலங்களில் எல்லாம் கூடுமான அளவு ஒத்துழைத்து உதவி புரிந்தும் வந்திருப்பதுடன் குடி அரசும் சுயமரியாதை இயக்கமும் அந்தப்படியே செய்து வந்திருக்கிறது - இன்றும் செய்து வருகின்றது என்பதையும் வாசகர் களுக்கு ஞாபகமூட்டுகிறோம்.

சமூக வாழ்க்கையில் சமதர்மம் முறை ஏற்படாமல் பொருளாதாரத் துரையிலும் அரசியல் ஆதிக்கத்திலும் சமதர்ம முறை ஏற்பட வேண்டும் என்று ஆசைப்படுவது முறையான காரியமென்றோ முடியக் கூடிய காரியம் என்றோ நம்மால் கருத முடியவில்லை.



RangaRakes tamilnavarasam.com

குறுகலான வழியில் விரிசலான வண்டியை நடத்துவது வண்டிக்குத் தான் பெரிய நாசத்தை விளைவிக்கும். ஆகவே சமுதாயமாகிய வழி விரிவடைந்து செப்பனிடப்பட்டாலல்லாமல் பொருளாதார சமத்துவமாகிய வண்டியை சிறிதும் நடத்த முடியாது என்பதை தெரிவித்துக் கொள்ள வேண்டி இருக்கின்றது.

அபிப்பிராய பேதம் என்பது இயற்கையேயாகும். ஆதலால் இதற்கு மாறுபட்ட அபிப்பிராயம் யாருக்கும் ஏற்படாது என்றோ, ஏற்படக்கூடாது என்றோ நாம் சொல்ல வரவில்லை.

ஆனால் நமது அபிப்பிராயம் இதுவென்றும் இந்த அபிப்பிராயத்தையே இதுவரை சுயமரியாதை இயக்கம் செயலில் கொண்டு வந்திருக்கின்றது என்றும் இந்த வரையரைக்குள்ளாக இருந்துதான் மற்றும் பல அபிப்பிராயங்களையும் தெரிவித்து வந்திருக்கின்றது என்றும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மற்றும் ஆஸ்திக நாஸ்திக விஷயங்களில் இரு அபிப்பிராயக்காரர் களுக்கும் இயக்கத்தில் இடமிருந்து வந்தாலும் இயக்கம் பெரிதும் ஆஸ்திகத்தை பிரசாரம் செய்யாமலும் செய்வதை ஆதரிக்காமலும் அனுமதிக்காமலும் இருந்து வந்திருக்கின்றது.

மற்றும் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த ஆஸ்திகர்கள் பலர் நடந்து கொண்டு வந்த காரியங்களும் பெரிதும் நாஸ்திகமாகவே அதன் எதிரிகளாலும், பல பாமர மக்களாலும் கருதப்பட்டு வந்திருக்கின்றன.

நாஸ்திகம் சட்ட விரோதமானது என்று சர்க்காரால் தீர்மானிக்கப்படும் வரை இந்த நிலையிலிருந்து இயக்கம் மாறுபடவேண்டிய அவசியமில்லை என்பதே நமது அபிப்பிராயம் என்பதோடு இயக்கத்தில் அங்கத்தினர் களாகவும், அனுதாபிகளாகவும், ஆதரவாளர்களாகவும் இருக்க ஆஸ்த்திகர் களுக்கும் உரிமை உண்டு என்பதும் நமதபிப்பிராயமாகும்.

எப்படி இருந்தாலும் மதவாதிகள், கடவுள்வாதிகள், செல்வவான்கள், மேல் ஜாதிக்காரர்கள் ஆகியவர்களுடைய புன்சிரிப்பையும், ஆதரவையும் நாம் எப்படி பெற முடியாதோ அதுபோலவேதான் அரசாங்கத்தாருடைய ஆதரவையும் பெற முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது என்றாலும் அதற்காக நாம் தாழ்ந்தோ நமது கொள்கைகளை விட்டுக் கொடுத்துவிட்டு பின் செல்லுவதோ ஆகிய காரியங்களில் ஈடுபட வேண்டிய அவசியம் எதுவும் நமக்கு ஏற்பட்டுவிடவில்லை என்பதே நமது உறுதியான அபிப்பிராயம். இந்த நோக்கத்துடனேயே குடி அரசு இப் பத்து வருஷ காலமாக வேலை செய்து வந்து பதினோறாவது ஆண்டில் புகுந்திருக்கிறது என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 18.08.1935**



# சபாஷ் திவான்பகதூர்

சென்னைக்குச் சமீபத்தில் காங்கிரஸ் பிரசாரத்துக்காக வரப்போகும் காங்கிரஸ் தலைவர் தோழர் ராஜேந்திர பிரசாத் அவர்களுக்கு சென்னை கார்ப்பரேஷன் சபையில் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்க வேண்டும் என்று கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானத்தை தோழர் திவான் பகதூர் ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் எதிர்த்துத் தோற்கடித்தார் என்கின்ற சேதியைக் கேட்டு மிகுதியும் மகிழ்ச்சியடைந்ததோடு திவான் பகதூர் அவர்களின் தீரத்துக்காக மெச்சி அவரை மிகுதியும் பாராட்டுகின்றோம்.

தோழர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் நாமறிந்த வரை ஒரு துணிந்த தியாகியேயாவார். தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களைப் போலவே காங்கிரசில் சேர்ந்ததின் பயனாய் உண்மையான கஷ்டமும் நஷ்டமும் அடைந்தவர்.

தோழர் ராஜகோபாலாச்சாரியாரிடம் அவர் அதிபுத்திசாலியாய் இருக்கும் காரணத்துக்காகவும், அதிக யுத்திசாலியாய் இருக்கும் காரணத்துக்காவும் காங்கிரஸ்காரர்கள் பலருக்கே அதிருப்தியும், வெறுப்பும் உண்டாகி யிருக்கலாம். ஆனால் ராஜேந்திரரிடம் அப்படி இருக்காது. எப்படியோ இவ்விருவர்களது வாழ்வானது அவர்களுக்கும் பிரயோஜனப்படாமல், பொது மக்களுக்கும் பிரயோஜனப்படாமல் பெரும் ஏமாற்றமாய் போய்விட்டதே ஒழிய மற்றப்படி பெரியார்களிலேயே சேர்க்கப்பட வேண்டியவராவார்கள் என்று சொல்லலாம்.

அப்படிப்பட்டவர்களில் ஒருவரான தோழர் ராஜேந்திரருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதில் பெருந்தவறு ஒன்றும் ஏற்பட்டு விடாது என்பது நமக்குத் தெரிந்தது போலவே திவான் பகதூர் ராமசாமி முதலியார் அவர்களுக்கும் தெரிந்திருக்கும் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை.

ஆனால், இந்நாட்டுப் பார்ப்பனரல்லாதார் சமூக ஸ்தாபனத்துக்கு விரோதமாகவும், அந்த ஸ்தாபனத்தின் மீதும், அந்த ஸ்தாபன பிரமுகர்களாய் இருப்பவர்கள் மீதும் பாமர மக்களுக்கு வெறுப்பும், துவேஷமும் உண்டாகும்படியான விஷத்தை இந்நாட்டுப் பார்ப்பனர் ராஜேந்திரருக்கு ஊட்டி அதை இங்கு வந்து கக்கி விட்டுப் போகும்படி செய்வதற்காகவுமே அவரை இங்கு கூட்டி வருகிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இது போலவே நமது பார்ப்பனர்கள் அனேக தடவைகளில் வெளிநாட்டுக்காரர் யாராவது ஒருவரைப் பிரமாதமாக விளம்பரப்படுத்தி இங்கு அழைத்து வந்து இந்நாட்டுப் பெரும்பான்மையான மக்களுக்குக் கேடுண்டாகும்படியான காரியத்தைச் செய்திருக்கிறார்கள்.

ஆனதினால் அதைக் கண்டிக்கும் முறையில் அல்லது வெறுக்கும் முறையிலேயே சென்னை மாகாண வாசிகள் பேராலோ சென்னை நகர எல்லா மக்களின் பேராலோ அவருக்கு வரவேற்பு அளித்து அவரது வரவின் காரணத்தை எல்லா மக்களும் ஒப்புக் கொண்டதாகச் செய்யப்படும் சூட்சியைத் தகர்க்கவே தோழர் ராமசாமி முதலியார் வரவேற்பை எதிர்த்திருக்கிறார் என்பதும் இது மிகவும் சரியான காரியம் என்பதும் நமதபிப்பிராயமாகும்.

தோழர் ராமசாமி முதலியாரைப் பற்றி விஷமப் பிரசாரம் செய்ய இதை ஒரு காரியமாக பார்ப்பனர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடும்.

ஆனால் தோழர் ராமசாமி முதலியார் எப்படி நடந்து கொண்டாலும் ஒரு நாளும் பார்ப்பனர்கள் அவரை நல்ல பிள்ளை என்று சொல்லப் போவதில்லை.

தென்னாட்டுப் பார்ப்பனர்களுக்கு தோழர் சர்.ஆர்.கே.ஷண்முகம் ஒன்று தோழர் திவான் பகதூர் இராமசாமி முதலியார் ஒன்று ஆகிய இருவர்களும் ''தேவர்''களுக்கு எப்படி ''இரணியன்'' ''ராவணன்'' ஆகியவர்கள் கடும் பகையாளிகளாகிய ''ராக்ஷதர்களோ'' அது போன்ற கடும் பகையாளர்களாகிய ராக்ஷதர்களாவர்கள்.

ஆனால் இவர்கள் இருவர்களும் பாஷாணத்தில் புழுத்த புழுக்கள் எப்படி சாகாமல் பாஷாணத்தையே தின்று ஜீரணித்துவிடுமோ அதுபோல் இந்த பார்ப்பனர்களின் விஷக் கடலில் இருந்து நீந்தித் தப்பித்துத்தான் வருகிறார்கள்.

ஆனால் தோழர் சர். ஷண்முகம் போல் திவான் பகதூர் ராமசாமிக்கு சில சமயங்களில் தைரியம் இருப்பதில்லை. என்னவெனில் மதங்கள் புராணங்கள் ஆகியவற்றிற்கு நல்ல பிள்ளையாக நடக்காவிட்டால் எதாவது ஆபத்து வருமோ எனப் பயப்பட்டு வருவதுண்டு. என்றாலும் துணிந்து காங்கிரஸ் தலைவருக்கு சென்னைக் கார்ப்பரேசனில் வரவேற்பு கொடுக்க முடியாது என்று சொன்னதை மிகுதியும் பாராட்டுவதோடு இதை மற்ற ஸ்தல ஸ்தாபனங்களும் பின்பற்ற தைரியமடைய வேண்டும் என்று விரும்புகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 18.08.1935**



### மறைமலையடிகளின்

## ''அறிவுரைக்கொத்து''

### ''விடுதலை''யின் அபிப்பிராயம்

சில நாட்களாக சுயநலக் கூட்டத்தாரிற் சிலர், மறைமலையடிகளின் ''அறிவுரைக்கொத்து'' என்ற நூல் சென்னை சர்வகலாசாலை 'இண்டர்மிடியேட்' வகுப்பு மாணவர்களுக்கு பாடப் புத்தகமாக வைத்திருப்பது கண்டு, அழுக்காறு கொண்டு, அற்பத்தனமான கிளர்ச்சி செய்து வருவதை நமது வாசகர்கள் அறிவார்கள். அவர்களுடைய முக்கியமான வாதம், அடிகள் தம்முடைய ''தமிழ்நாட்டவரும், மேல்நாட்டவரும்'' என்ற ஒரு கட்டுரையில் பிராமணர் களுடைய குற்றங் குறைகளைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள் என்பதாகும். பிராமணர், பிராமணரல்லாதார், சைவர், வைணவர், மாத்துவர் முதலிய சாதி, சமய வகுப்பினர்கள், பெரும்பாலான ஏழை மக்களின் வறுமையையும் அறியாமையையும் நீக்குவதற்கு வேண்டியன செய்யாமல் வாளா இருப்பது கண்டு, அடிகள் மனம் புழுங்கி, அவர்களைக் கண்டித்து எழுதியிருக்கிறார்கள். சில விஷயங்களில் பிராமணர்களைவிட பிராமணரல்லாதார் மிகக் கொடியரா யிருக்கிறார்கள் என்றும் அடிகள் அடித்துரைத்துக் கூறியிருக்கிறார்கள். இவ்வுண்மையை நமது வாசகர்கள் அறியும் பொருட்டும், சுயநலக் கூட்டத்தாரின் கிளர்ச்சியினால் ஏமாறாமலிருக்கும் பொருட்டும், கிளர்ச்சியின் காரணமான ''தமிழ்நாட்டவரும், மேல்நாட்டவரும்'' என்ற கட்டுரையை ''விடுதலை''யில் பிரசுரிக்கிறோம். (அது மற்றொரு பக்கம் பார்க்க) அதைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் நம் நாட்டினருடைய முற்போக்குக்குத் தடையான குற்றங்களிவை யென்பதும், மேல்நாட்டவரிடத்திலிருந்து நம்மனோர் அறியவேண்டிய படிப்பினைகளிவை யென்பதும் புலனாகும். இப்படிப்பட்ட உயரிய நோக்கத்துடன் எழுதப்பட்ட கட்டுரையைச் சிலர் கடிந்தெழுதுவது எவ்வளவு அற்பத்தனமான காரியம்! தங்களுடைய குற்றங்களைப் பிறர் சொல்லுதலும் கூடாது என்ற இறுமாப்புடைய கூட்டம் எக்காலத்தில்தான் திருந்தும்? சென்னை சர்வகலாசாலையைப் பொருத்தமட்டில், மறைமலையடிகளின் நூலைப் பாடப்புத்தகமாக வைத்தல் கூடாதென்ற கிளர்ச்சி எங்ஙனம் முடியப்போகிறது என்ற கேள்வி நிகழுகின்றது. ''சிண்டிகேட்'' என்ற சர்வகலாசாலை நிர்வாகக் கழகத்தார் அந்நூலைப்



RangaRakes tamilnavarasam.com

பற்றிய பிரச்சினையை பாடப்புத்தகமாக வைத்த கழகத்தின் யோசனைக்கு அனுப்பியுள்ளார்கள். சமூக சீர்திருத்தம், அறிவு வளர்ச்சி, மக்கள் முன்னேற்றம் முதலிய உன்னத எண்ணங்களைக் கொண்டு எழுதப்பட்ட ''அறிவுரைக் கொத்து'' என்ற நூலை, பாடப் புத்தகமாக வைத்த பிறகு, சுயநலக் கூட்டத்தாரிற் சிலரின் கிளர்ச்சிக்குப் பயந்து, அதை விலக்குவார்களானால், அக்கழகத் தின்மேல் தமிழ் நாட்டார் வைத்துள்ள மதிப்பு மிகவும் குறையும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

குடி அரசு - கட்டுரை - 18.08.1935



## சென்னை கலாசாலைகளில்
# பார்ப்பனராதிக்கம்

*சென்னையிலுள்ள உயர்தரக் கலா சாலைகளான தொண்டை மண்டலம் துலுவ வேளாளர் உயர்தரக் கலாசாலை, இந்து தியாலாஜிகல் ஹைஸ்கூல், பச்சையப்பன் கல்லூரி முதலியவிடங்களில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை வருமாறு;-*

### தொண்டமண்டலம் துலுவ வேளாளர் உயர்தர கலாசாலை

*தலைமை உபாத்தியாயர் பார்ப்பனர். பி.ஏ.எல்.டி. பாஸ் செய்த உபாத்தியாயர் 13ல் 12 பார்ப்பனர், 1 பார்ப்பனரல்லாதார், சக்கண்டரி கிரேட் பாஸ் செய்த உபாத்தியாயர் 27ல் 22 பார்ப்பனர், 5 பார்ப்பன ரல்லாதார்கள். பண்டிதர்கள் 7ல் 3 பார்ப்பனர், 4 பார்ப்பனரல்லாதார், டிரில், டிராயிங் உபாத்தியாயர்கள் 4ல் 2 பார்ப்பனர், 2 பார்ப்பனரல்லாதார். இங்கு மொத்தம் 52 உத்தியோகஸ்தர்களில் 40 பார்ப்பனர் 12 பார்ப்பனரல்லாதார்.*

### இந்து தியாலாஜிக்கல் ஹைஸ்கூல்

*தலைமை உபாத்தியாயர் பார்ப்பனர். பி.ஏ.எல்.டி. பாஸ் செய்த உதவி உபாத்தியாயர்கள் 14ல் 13 பார்ப்பனர், ஒரு பார்ப்பனரல்லாதார், சகண்டரிகிரேட் டிரெயினிங் பாஸ்செய்த உபாத்தியாயர்களில் 19ல் 15 பார்ப்பனர், 4 பார்ப்பனரல்லாதார், பண்டிதர்கள் 6ல் 5 பார்ப்பனர், ஒரு பார்ப்பனரல்லாதார், டிராயிங், டிரில், கமர்சியல் உபாத்தியாயர்கள் 3ல் 2 பார்ப்பனர், 1 பார்ப்பனரல்லாதார், கிளார்க்குகள் 3ல் 3ம் பார்ப்பனர்கள்; இங்கு ஆக மொத்தம் 46ல் 39 பார்ப்பனர், 17 பார்ப்பனரல்லாதார்.*

### பச்சையப்பன் கல்லூரி

*தலைமை உபாத்தியாயர் பார்ப்பனர். பி.ஏ.எல்.டி. பாஸ் செய்த உதவி உபாத்தியாயர்கள் 16ல் 10 பார்ப்பனர்கள், 6 பார்ப்பனரல்லாதார்கள், பண்டிதர்கள் 6ல் 3 பார்ப்பனர், 3 பார்ப்பனரல்லாதார், டிராயிங், டிரில், கமர்சியல் உபாத்தியாயர் 7ல் 3 பார்ப்பனர், 4 பார்ப்பனரல்லாதார். இங்கு மொத்தம் 30ல் 17 பார்ப்பனர்கள், 13 பார்ப்பனரல்லாதார்கள்.*



RangaRakes tamilnavarasam.com

**முத்தியாலுப்பேட்டை உயர்தரக் கலாசாலை**

*தலைமை ஆசிரியர் பார்ப்பனரல்லாதார். பி.ஏ.எல்.டி. பாஸ் செய்த உதவி ஆசிரியர்கள் 17ல் 12 பார்ப்பனர், 5 பார்ப்பனரல்லாதார், செக்கண்டரி கிரேட் பாஸ் செய்த உபாத்தியாயர்கள் 18ல் 15 பார்ப்பனர்கள், 3 பார்ப்பனரல்லாதார். பண்டிதர்கள் 11ல் 4 பார்ப்பனர், 7 பார்ப்பன ரல்லாதார். டிராயிங், டிரில், கமர்சியல் டிரில் உபாத்தியாயர்கள் 5ம் பார்ப்பனரல்லாதார்கள். கிளார்க்குகள் 5ல் 3 பார்ப்பனர்கள், 2 பார்ப்பனரல்லாதார்கள். இதில் மொத்தம் 57ல் 34 பார்ப்பனர்கள், 23 பார்ப்பனரல்லாதார்.*

**பத்திராதிபர் குறிப்பு :–**

இப்பள்ளிக்கூடங்கள் சர்க்காரால் அனுமதிக்கப்பட்டது என்பதுடன் சர்க்காருடைய உதவித் துகையும் பெறக்கூடியதாய் இருந்தால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படி உபாத்தியாயர்களை ஏற்படுத்த வேண்டுமென்று கட்டாயப் படுத்த சர்க்காருக்கு உரிமை உண்டு என்றும் அவற்றை இதுவரை கல்வி மந்திரி கையாளாமல் இருப்பது ஒரு பயங்காளிதனமென்றோ அல்லது கவலையற்ற தன்மை என்றோ சொல்லாமல் இருக்க முடியவில்லை. அன்றியும் பச்சியப்பா கலாசாலையின் மெம்பர்கள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதார் சமூகத்தையும் அதை ஆதரிக்கும் கட்சிப் பிரமுகர்களாயிருந்தும் பார்ப்பன உபாத்தியாயர்கள் 17ம் பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்கள் 13ம் என்று ஏற்படுத்தி இருக்குமானால், பார்ப்பனரல்லாதார் முன்னேற்ற விஷயத்தில் எவ்வளவு அக்கரை காட்டி வருகிறார்கள் என்பதை குறிப்பிட மிகவும் வருந்துகிறோம்.

குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 18.08.1935



# சம்பளக் கொள்ளை

இன்று நாடெங்கும் படித்த மக்களின் கஞ்சிக்கில்லாத் திண்டாட்டங்கள் நெஞ்சைப் பிளக்கின்றன. இக்காட்சி பாமர மக்கள் திண்டாட்டத்தைப் பார்க்கும் காட்சியைவிட மிக மிக பரிதாபகரமாகவே இருக்கிறது.

படித்த மக்களென்போரும், பாமர மக்களென்போரும் 100க்கு 90 பேர்கள் பார்ப்பனரல்லாதார்களாகவே இருக்கிறார்கள். பாமர மக்கள் என்பார்களிலாவது பலருக்கு பட்டினி கிடந்து பழக்கமுண்டு. பலர் இரண்டு நாள் மூன்று நாள்களுக்கு ஒருமுறை சமையல் செய்கின்றவர்களாகவும் ஒரு நாள் செய்த சமையலில் தண்ணீரை ஊற்றி வைத்து தினம் தினம் அந்தத் தண்ணீரை வடித்து அதில் உப்பைப் போட்டுக் குடித்துவிட்டு, மறுபடியும் தண்ணீரை ஊற்றிப் பாத்திரத்தை நிரப்பி வைத்து மறு நாளைக்கு அந்த மாதிரியே செய்பவர்களுமாவார்கள்.

ஆனால் படித்தவர்கள் நிலை என்பதோ அப்படி இல்லை. படிப்புக்கு செலவாக வேண்டிய நாள் S.S.L.C. ஆனாலும் குறைந்தது 11 வருஷம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

இதற்குப் பணமோ பட்டணவாசியானால் 1000 ரூ. முதல் 1500 ரூபாயுக்குக் குறையாமலும் கிராமவாசியானால் 2000 ரூ. முதல் 2500, 3000 ரூபாயுக்குக் குறையாமலும் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

பள்ளிப் பிள்ளையாய் இருக்கும்போது அவர்களது வாழ்க்கையோ அவர்களது வீட்டில் சாப்பாட்டுக்கும், உடைக்கும் எவ்வளவு கஷ்டமாய் இருந்தாலும் அதைக் கவனிக்காமல், பிள்ளைகளுக்கு வேளை வேளைக்குச் சாப்பாடு, நல்ல துணி, செலவுக்குக் காசு முதலியவைகள் தாராளமாய் உதவி, தரித்திரம் ஏழ்மை என்பது இன்னது என்றே தெரிய முடியாமல் செல்வவான் குழந்தைகளோடு ஒன்றாகப் பழக்கப்படுத்தப்படுகிறார்கள்.

இப்படிப்பட்ட பிள்ளைகள் பி.ஏ., எம்.ஏ., அல்லது வேறு காலேஜ் படிப்புகள் படிக்க ஆரம்பித்துவிட்டால், அவர்களது குடும்பம் திண்டாடித் தெருவில் நின்று சுயமரியாதை அற்று வாழ்வதாய் இருந்தாலும், இந்தப் பிள்ளைகளுக்கு மாதம் 35, 40, 50, 60 ரூபாய்கள் வீதம் முக்கிய பட்டணங்களுக்கு அனுப்பி அங்கு ஜமீன்தார் வீட்டுப் பிள்ளைகளுக்கும் குடியானவன் வீட்டுப் பிள்ளைகளுக்கும் வித்தியாசமில்லாதபடி வாழ்க்கை நடத்திப் பழக்கப்பட்டவர்களாவார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இந்த மாதிரி பிள்ளைகள் படித்து ஏதோ ஒரு வகையில் தேர்ச்சியோ பட்டமோ பெற்றுவிட்டால் பிடித்தது ''சனியன்''கள். கிழிந்த வேஷ்டிகளையும் கிழிந்த சொக்காய்களையும் உடுத்திக் கொண்டு கதவு வைத்த வீட்டு வாசல்களிலெல்லாம் காத்துக் காத்துச் சலித்து இவர்களுக்கு வேலை கொடுக்காதவர்களையும் சிபார்சுக் கடிதம் கொடுக்காதவர்களையும் வைதுவிட்டுப் போவதோடல்லாமல் ''ஜஸ்டிஸ் கட்சி ஒழிந்து பார்ப்பனர் கட்சி (காங்கிரஸ்) ஆட்சிக்கு வந்தாலாவது உத்தியோகம் கிடைக்கு''மென்றும், ''இந்த கவர்ன்மெண்டு ஒழிந்து சுயராஜ்ஜிய கவர்ன்மென்டானால் உத்தியோகம் வரும்'' என்றும், ''பணக்காரர்கள் ஒழிந்து விட்டால் யாதொரு குறையும் ஏற்படா''தென்றும், ''பிரிட்டிஷ் ஆதிக்கமே இருந்தால் கட்டாயம் வேலை கிடைத்திருக்கும்'' என்றும், இன்னும் எப்படி எப்படியோ உளரிக் கொண்டு திரிவதும், அவர்களது வீட்டார் ''இந்தப் பிள்ளை பாஸ் பண்ணிவிட்டு வந்தவுடன் பெரிய உத்தியோகத்துக்கு வந்து கலெக்டர்களாகி, ஜட்ஜுகளாகி, மந்திரிகளாகி 4000, 5000 சம்பள மேற்பட்டு ஆயிரக் கணக்காய் வளித்து கொட்டிக் கொள்ளலாம்'' என்று கருதி இருந்தவர்கள் ஏமாற்றமடைந்து சிபார்சு கடிதம் வாங்க சிபார்சு பிடிப்பதற்கு ஆளைத் தேடிக் கொண்டு தெருத் தெருவாய் திரிவது ஒரு புறமும்,

மற்றொரு புறம் உத்தியோகத்துக்கு ஆள்கள் தேவை என்கின்ற விளம்பரங்களைக் கண்டு பிடிக்க பூதக்கண்ணாடி வைத்து பத்திரிகைகளைத் தேடித் தேடி கண்களைப் போக்கிக் கொண்டு திரிவதும்,

இவற்றையெல்லாம் விட மிக மிகக் கொடுமை என்று சொல்லும்படியாக உத்தியோக வினியோகத்துக்காக, சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு விண்ணப்பம் போட விளம்பரங்கள் பார்த்து, விண்ணப்பம் தயார் செய்து 16 ரூ. கொடுத்து டாக்டர் சர்ட்டிபிக்கேட் பெற்று 5 ரூபாயோ, 10 ரூபாயோ விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புவதும், அவர்கள் நேரில் பார்க்க வேண்டுமென்று சொல்லிவிட்டால் மேல் கொண்டு 10 ரூ, 20ரூ சில ஊர்களிலிருந்து போக 30 ரூ வீதம் செலவழித்துக் கொண்டு போய் வெறுமையாய் திரும்பி வருவதுமான கோரக் காட்சிகள் நெஞ்சை உருக்குகின்றன.

வாழைக் குருத்து போன்ற இளம் வாலிபர்கள் - தங்களுடைய உள்ளத்தை வீரத்துடனும், சுயமரியாதையுடனும் வளர்க்கப்பட வேண்டியவர்கள் - ஒவ்வொருவரும் லெனின் போலவும், ஸ்ட்டாலின் போலவும், புரட்சி வீரர்களாகவும், சர்வாதிகார சூரர்களாகவும் ஆக வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட வேண்டியவர்கள். இந்த மாதிரியாக அலைந்து திரிந்து மனம் உடைந்து காங்கிரசில் சேர்ந்து எலக்ஷன் கூலிப் பிரசாரம் செய்வோமா, ஜஸ்டிசில் சேர்ந்து காங்கிரசின் யோக்கியதையை வெளியாக்கும் கூலிப் பிரசாரம் செய்வோமா, சுயமரியாதையில் சேர்ந்து சிபார்சு கடிதம் பெறும் கூலிப் பிரசாரம் செய்வோமா என்று எவ்விதக் குறிப்பும் இல்லாமல்,



வாரத்துக்கு ஒரு கட்சி சார்பாய்ப் பேசி 10 நாளைக்குக் கூட ஒரே கட்சியில் இருந்து பார்ப்போம் என்கிற பொறுமை கூட இல்லாமல், மாறி மாறி உளறிக் கொண்டு திரிவதுமான இழிவான நிலைமையில் அவதிப்பட்டுக் கொண்டிருப்ப தானால், இந்த நாட்டுக்கோ ஆட்சித் திறத்துக்கோ என்ன பெருமை இருக்கின்றது என்பது நமக்கு புலப்படவில்லை.

படித்த பிள்ளைகளின் பெற்றோர்கள் படும்பாட்டை இவ்வளவு அவ்வளவு என்று உள்ளபடி எடுத்துச் சொல்ல நமக்குச் சிறிதுகூட சக்தி இல்லை என்றுதான் சொல்ல வேண்டி இருக்கின்றது.

இன்று ஜஸ்டிஸ் கட்சி தூற்றப்படுவதும் அதை பல பார்ப்பனரல்லாத வாலிபர்கள் குறை கூறிக் கொண்டு திரிவதும் அரசாங்கத்தைப் பற்றி கண்டபடி உளறிக் கொட்டி வைத்து பாமர ஜனங்களுக்கு அதனிடத்தில் வெறுப்புண்டாகும்படி துஷ்டப் பிரசாரம் செய்யப்படுவதுமான காரியங் களுக்கு முக்கிய காரணம் என்ன என்று பார்த்தோமானால் உத்தியோகம் இல்லாமல் திண்டாடப்படுபவர்களால் ஏற்பட்ட கிளர்ச்சி என்று சொல்லுவதற் கில்லாமல் வேறு என்ன காரணம் சொல்ல முடியும்?

படித்துவிட்டு உத்தியோகமில்லாமல் திரியும் வாலிபர்களுடைய ஆத்திரமும், கஷ்டமும், கொடுமையான வாழ்வும் ஒருபுறமும் பாமர மக்களில் வேலை இல்லாமல் திண்டாடும் கஷ்டமும், தரித்திரமும், கொடுமையான வாழ்வும் மற்றொரு புறமும் சேர்ந்துவிட்டது.

பாமர மக்கள் படும் கஷ்டம் என்னும் நெருப்புக்குப் படித்தவர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் என்னும் நெய்யைப் பார்ப்பனர்கள் என்கின்ற யாக கர்த்தாக்கள் ஆகுதியாக்கிவிட்டு கிளர்ச்சி என்னும், ஓமம் வளர்த்தி நாட்டில் எங்கும் சமாதானம் இல்லாமை என்னும் பலனை உண்டாக்கி வருகிறார்கள். இக் கிளர்ச்சிக்கு பார்ப்பனர்களே முக்கிய ஆதாரக்காரர் என்றாலும் உத்தியோகமின்மையில் ஏமாற்றமடைந்த அறிஞர் சி.ஆர். ரெட்டி போன்ற சில பார்ப்பனரல்லாதார்களும் அவர்களை ஆதரிக் கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

இக் கிளர்ச்சிக்கு யார் காரணமாய் இருந்தாலும், அவர்கள் சுயநலத்தோடு செய்கிறார்களா, பொதுநல நோக்கத்தோடு செய்கிறார்களா என்பது ஒருபுறமிருந்தாலும், இக் கிளர்ச்சிக்கு இடம் கொடுக்கும் வேலை யில்லாத் திண்டாட்டத்தை எப்படியாவது ஒழிக்க வேண்டியதே இன்றைய அரசாட்சியுடையவும் அரசாங்கத்தின் ஆதிக்கம் பெற்றிருப்பவர்களுடையவும் கடமையாகும் என்பதை நாம் வலியுறுத்திச் சொல்லித்தான் தீருவோம்.

நமது மாகாண ஆட்சியின் ஒரு பாகத்திற்கு ஆதிக்கம் செலுத்துபவர் களாகச் சொல்லப்படும் ஜஸ்டிஸ் கட்சியார் பார்ப்பனர் தொல்லையால் போதிய பலமின்றி இருக்கிறார்கள் என்பதோடு அவர்களால் ஏதாவது செய்யக்



RangaRakes tamilnavarasam.com

கூடுமானாலும் செய்ய ஆசைப்பட்டாலும் அதையும் செய்யவொட்டாமல் பல சூட்சிகளைச் செய்து ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளைக் கட்டிப் போட்டு பாமரஜனங்களிடம் வசவு கேட்பதற்கு சவுகரியமாய் இருக்கும்படி செய்து வருவதால் அவர்கள் மீதே நாம் எவ்விதப் பழிகளையும் சுமத்த முடியவில்லை.

ஆனால் சர்க்காரார் இந்த மாதிரியான வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க எவ்வித நல்ல முறையையும் கையாடினார்கள் என்றோ கவலை எடுத்துக் கொண்டு செய்தார்கள் என்றோ சொல்ல முடியாமைக்கு வருந்துவதோடு அரசாங்கமும் இந் நிலைமைக்கு முழுவதும் பொறுப்பானது என்று சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை.

நமது வீட்டு வாசல் எப்பொழுது பார்த்தாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் கஷ்டப்படுவோர்களாலேயே நிரப்பப்பட்டிருப்பதுடன் நமது வேலையைக்கூட சரிவரச் செய்ய முடியாமல் இக்கூட்டத்தாராலேயே அசௌக்கியப்படுகின்றோம்.

நிஷ்காரணமாய் அநேகருடைய விரோதத்துக்கும் நிஷ்டூரத்துக்கும் எதிர்ப்புக்கும் ஆளாக வேண்டியும் ஏற்படுகின்றது. இந்த நிலைமையை எப்படி சமாளிப்பது? எப்படிப் போக்குவது? என்கின்ற கவலை எடுத்துக் கொள்ள வேண்டியது நமது அரசாங்கத்தின் முக்கியமான கடமையாகும் என்று வலியுறுத்திக் கூற ஜனநாயக ஆட்சி செலுத்துகின்றோம் என்று சொல்லிக் கொள்ளும் ஆட்சியில் உள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமை உண்டு.

இது விஷயமாய் நமது அரசாங்கத்தில் இப்போது நடந்து வரும் காரியம் எல்லாம் சரியானது என்று சொல்ல முடியவில்லை.

ஏனென்றால் அவசியமில்லாமல் தங்கள் உத்தியோகஸ்தர்களுடைய சம்பளங்களை உயர்த்தி உயர்த்தி மக்களுக்கு உத்தியோக ஆசையும், உத்தியோகப் போராட்டமும் ஏற்படும்படி செய்கிறார்கள். இது அவர்கள் வேண்டுமென்றே செய்யவில்லை என்று சொல்லப்படுமானாலும் அவர்களது நடத்தை இப்பயனை விளைவிப்பதற்கு அனுகூலமாகவே இருக்கிறது என்றாவது சொல்லித் தீர வேண்டும்.

உதாரணமாக இரண்டொரு காரியங்களைக் குறிப்பிடுகின்றோம். இக்காரியத்துக்கு ஜஸ்டிஸ் கட்சி மந்திரியும் ஆதரவாயிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டதற்கு வருந்தாமல் இருக்க முடியவில்லை.

அதாவது ஜில்லா போர்ட் ஆசிரியர்களுக்கு சம்பள கிரேடு ஏற்படுத்தி ஒரு உத்திரவு பிரப்புவித்திருக்கிறார்கள். அதில் B.A., L.T. உபாத்தியாயர்களுக்கு 65 முதல் 100 வரை சம்பளம் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இது மிகவும் அதிகமான சம்பளம் என்றும் 40 முதல் 60 ரூ. வரை இருந்தாலே படிக்க வேண்டிய மக்களால் தாங்க முடியாததும் வேண்டுமென்றே அதிகமாய் கொடுக்கப்படுவதாகவும் கருதி வந்திருக்கிறோம்.



முதலாவது, இவர்களால் சொல்லிக் கொடுக்கப்படும் படிப்பானது மக்களுக்குப் பயன்படாதது என்று தோழர்கள் டாக்கூர், ராய், போஸ் முதல் அனேக கல்விக் கடல்களும் கலா ஞானிகளும் சொன்ன உண்மையாகும்.

மற்றும் நமது நாட்டு அரசியல் கிளர்ச்சிக்காரர்களும் தோழர்கள் காந்தி முதல் சத்தியமூர்த்தியார் வரை உள்ள காங்கிரஸ்காரர்களும் ஒப்புக் கொண்டதாகும். இந்தப் படிப்பு படித்த மக்களும் 100க்கு 90 பேர்கள் சொந்தப் புத்தி இல்லாதவர்களாகவும், பிறத்தியார் புத்தியைக் கேள்ப்பதற்கு யோக்கியதை அற்றவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

இரண்டாவதுஃ- பி.ஏ., எல்.டி.கள் மாதம் 1-க்கு 30 ரூ, 35 ரூ சம்பளத்துக்கு வருவதற்கு அநேகப் பேர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்!

அது மாத்திரமல்லாமல் கவர்ன்மெண்டாரால் இவ்வளவு பேர்கள் தான் L.T. படிக்க முடியும் என்று நிர்ப்பந்தப்படுத்தி இருந்தும் இனி மேலும் சுலபத்தில் யாரும் L.T. படிக்க முடியாதபடி பல தடைகள் அதாவது **''உபாத்தியாயர்களாய் இருந்தவர்கள் தான் L.T. வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்'' ஆனால் ''L.T. பாஸ் செய்தவர்கள் தான் உபாத்தியாயர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்''** என்று திருவாழ்தான் குதிரைக்கு புல்லுப் போட்ட மாதிரியான உத்திரவு போட்டு சுலபத்தில் L.T. படிக்க முடியாதபடி தடுத்து இருந்தும், அவர்கள் 30 ரூ, 35 ரூ உத்தியோகத்துக்கு வர கெஞ்சுகிறார்கள் என்பதோடு இந்தச் சம்பளத்துக்கும் தள்ள முடியாததும் சுலபத்தில் சபலத்தை உண்டாக்கக் கூடியதுமான சிபார்சுகள் கொண்டு வரப்படுகின்றன.

தாராளமாய் மக்களை L.T. படிக்கவிட்டு வகுப்புக்கு பிள்ளைகள் 40, 45 என்று இருப்பதை 20, 22 என்று ஆக்கி சம்பளத்தையும் 35 முதல் 50 என்று ஆக்கினோமானால் கல்வியில் இப்போது இருப்பதைவிட இன்னமும் இரண்டு பங்கு அதிகம் பிள்ளைகள் பட்டம் பெறும்படியாகச் செய்யலாம்.

சாதாரணமாக ஒரு வக்கீல் தொழிலுக்கும், உபாத்தியாயர் தொழிலுக்கும் அனேக வித்தியாசமுண்டு. வக்கீல்கள் பெருத்தால் வழக்கு பெருக்கும், வக்கீல்கள் பலரிடம் ஒழுக்கம் இல்லை என்பதோடு அவர்கள் சமாதானத்துக்கு பங்கமானவர்களாகவும் இருக்கிறார்கள். வக்கீல் தொழிலில் ஒரு மனிதன் உண்மைக்கும் மனச்சாட்சிக்கும் விரோதமாக வியாபாரிகள் போலும் பொது மக்கள் போலும் நடக்க உரிமை உண்டு என்பார்கள். அப்படிப்பட்ட தொழில் கல்வியை கற்க எவ்வித நிபந்தனையும் இல்லை, பி.ஏ. படித்த எவரும் வக்கீல் ஆகலாம் என்பது சர்க்கார் விதியாகும்.

ஆனால் உபாத்தியாயர் தொழிலில் அப்படி இல்லை, அவர்களால் நாட்டுக்கு எவ்வித தீங்கும் இல்லை, அதிகம் பேர்கள் உபாத்தியாயர் களானால் அதிகம் பேருக்கு படிப்புச் சொல்லிக் கொடுக்கத்தான் வசதி ஏற்படலாமே ஒழிய வக்கீல்களைப் போல் தீமைகளை விளைவிக்க மாட்டார்கள். அப்படி இருக்க, வக்கீல் தொழிலுக்கு வரைமுறை இல்லாமல்



RangaRakes tamilnavarasam.com

யாரையும் படிக்கச் செய்துவிட்டு வாத்தியார் தொழிலுக்கு வரையரை நிர்ப்பந்தங்கள் தடைகள் ஏற்படுத்துவது என்றால் அதில் ஏதாவது இரகசியம் இருக்கத்தான் வேண்டும் என்று நினைக்க இடமேற்படுகின்றது.

தவிர, உபாத்தியாயர் படிப்புக்கு வேறுவிதமான கஷ்டமும் இருப்பது அர்த்தமற்றதாகும். அதாவது ஒரு பி.ஏ. படித்தவர் உபாத்தியாயர் படிப்புக்கு விண்ணப்பம் போட 3 ரூபாய் கட்ட வேண்டும். 180 கேண்டிடேட்டுகளே சேர்க்கப்படுவார்கள் என்றால் 1500 பேர் 2000 பேர் விண்ணப்பம் போடுகிறார்கள். ஒவ்வொருவரிடமும் 3 ரூ வீதம் 5000 அல்லது 6000 ரூ. வசூலிக்கப்படுகின்றது. தெரிந்தெடுத்து சேர்த்துக் கொண்ட கேண்டிடேட்டுகள் போக மீதி பேர்கள் அடுத்த வருஷத்துக்கு விண்ணப்பம் போட வேண்டு மானால் மறுபடியும் 3 ரூபாயுடன் போட வேண்டுமாம்.

இது எவ்வளவு கஷ்டமான காரியம் என்பதை அரசாங்கம் கவனிக்க வில்லை என்றால் அது மிகவும் பரிதபிக்க வேண்டிய காரியமல்லவா? இப்படியிருக்க உபாத்தியாயர்களுக்கு இவ்வளவு சம்பளம் கொடுத்தும் 100க்கு 30 பிள்ளைகள் 40 பிள்ளைகள்கூட பாஸ் செய்வதில்லை. இதுவும்கூட அந்த வகுப்பின் பள்ளியில் படிக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கையில் வடிகட்டி பகுதி பேர்கள் முக்கால்வாசி பேர்களை நிறுத்தி அனுப்பியும் இந்த கதி அடைகின்றன என்றால் இன்னும் சில பள்ளிகளில் 100க்கு 20 வீதம் 25 வீதமே பாசாக்கப்படுகிறார்கள் என்றால் இந்தக் கல்வி நிலைக்கும், பொருப்பற்ற நிலைக்கும் யார் பொறுப்பாளி என்பது ஒருபுறமிருக்க இதை ஏன் மாற்றியமைக்கக் கூடாதென்று கேட்கின்றோம்.

மற்றும் உலகில் மற்ற எல்லாத் தொழிலுக்கும் ஒரு நிபந்தனை உண்டு.

வக்கீலுக்கு எத்தனை கேசு ஜெயிக்கப்படுகிறது? என்பதும் போலீசுக்கு எத்தனை குற்றம் கண்டுபிடிக்கப்படுகிறது? என்பதும் ஜட்ஜிக்கு எத்தனை அபீல்களில் தீர்ப்பு மாறுதல் அடையவில்லை? என்பதும் இப்படியே பல வேலைகளுக்கும் யோக்கியதாம்ச பரீக்ஷை உண்டு.

உபாத்தியாயர்களுக்கு ஒரு பரீக்ஷையும் கிடையாது. ஒரு பொறுப்பும் கிடையாது. பையன் பாஸ் செய்தால் வாத்தியாயர் கெட்டிக்காரர். பெயில் ஆகிவிட்டால் பையன் முட்டாள் என்பதுடன் பொறுப்பு தீர்ந்து விடுகிறது.

நிற்க, இந்த செலவுகள் ஏழைப் பெற்றோர்களின் தலையிலேயே சுமரும்படி வைத்திருப்பதால், இதனால் படிக்க முடியாமல் ஏற்படும் கஷ்டம் எவ்வளவு என்பதைக் கவனிக்க வேண்டியதும் அரசாங்கத்தின் கடமை அல்லவா என்று கேட்கின்றோம்.

இப்படி ஏற்பட்டதற்குக் காரணம் எல்.டி. படித்த உபாத்தியாயர்கள் 100க்கு 90 பேர்கள் பார்ப்பனர்களாய் இருப்பதால் கல்வி இலாக்காவில் பார்ப்பனர்களின் ஆதிக்கம் இருந்து வந்ததால் என்பதல்லாமல் வேறு என்ன காரணம் என்பது விளங்கவில்லை.



உபாத்தியாயர்கள் சுகமாய் கவலையற்று சாப்பிடும்படியான சம்பளம் கொடுக்கப்பட வேண்டாமா? என்று கேட்கலாம். ஆனால் பிள்ளைகளின் தகப்பனாரின் நிலை, அவர்களின் வரவு, படிக்க வேண்டிய சௌகரியம் ஆகியவைகளைக் கவனிக்க வேண்டாமா என்று கேட்கின்றோம்.

ஒரு நல்ல குடும்பத்துக்கு மாதம் 40, 50 ரூபா போதாதா?

ஆடுகளின் பாதுகாப்புகளைக் கவனித்தால் நரிகளின் கதி என்ன ஆவது என்ற கேள்வி நியாயமானதாகுமா? என்று கேட்கின்றோம்.

கல்வியை அதிகப்படுத்த வேண்டுமென்கின்ற கூக்குரலுக்கு மத்தியில் 100க்கு 8 பிள்ளைகளே படித்திருக்கிறார்கள் என்கின்ற நாட்டில், இம்மாதிரியாக கல்விக்குத் தடை ஏற்படும்படியான காரியங்கள் சர்க்காரால் செய்யப்பட்டால் - ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நிர்ப்பந்தம் ஏற்படுத்தப் படுமானால் கல்வியைப் பற்றிய சர்க்கார் எண்ணத்தை எப்படிப் பாராட்ட முடியும் என்று கேட்கின்றோம்.

நிற்க, மற்ற இலாக்காக்களிலும் சம்பளங்கள் மனம் பதறும்படியாகவும் சுலபத்தில் சபலமடையக்கூடிய பலவீனத்தைக் கொடுக்கக்கூடியதாகவும் இருக்கின்றது. ஏன் இச் சம்பளங்களைக் குறைக்கக் கூடாது என்பதற்கு சர்க்கார் சரியான சமாதானம் சொல்லவே இல்லை.

வெளிநாட்டில் இருந்து வரும் வெள்ளைக்கார அதிகாரிகளின் சம்பளம் இந்தியர்கள் சம்பளத்தைவிடக் கொஞ்சம் அதிகமாய் இருக்க வேண்டும் என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் அவர்கள் அத்தனை பேரும் எப்பொழுதுமே வந்துதான் ஆக வேண்டுமா? என்ற கேள்விக்குச் சரியான விடை இல்லாமல் தான் இருந்து வருகின்றது.

இது ஒருபுறமிருக்க, சில உத்தியோகங்களுக்கு வெள்ளைக்காரர்கள் சம்பளமே இந்தியர்களுக்கும் ஏன் கொடுக்கப்பட வேண்டும்? என்பது விளங்கவில்லை. கோடிக்கணக்கான மக்கள் வேலை இல்லாமல் பட்டினி கிடந்து திண்டாடவும் பத்து லட்சக்கணக்கான படித்த நாகரீகம் பெற்ற மக்கள் என்பவர்கள் உத்தியோகம் இல்லாமல் திண்டாடவும் இவர்களால் நாட்டில் சமாதானம் இல்லாமல், பல தீங்குகளும், தொல்லைகளும் விளையும்படியான காரியங்கள் தொடர்ந்து நடைபெறவுமாய் இருக்கிறதுமான காரியம் ஒரு நாகரீக ஆட்சிக்கு அழகாகும் என்று எப்படிச் சொல்ல முடியும்.

மந்திரிகள் சம்பளம் மிக மிக அக்கிரமமானதோடு அது கிரிமினல் என்றுகூடச் சொல்லலாம். ஏனென்றால் அச்சம்பளமே இந்தியாவில் நல்ல அரசாட்சிக்கு இடமில்லாமல் செய்து வருகின்றது.

நாய்கள் எச்சில் இலைக்கு சண்டை போட்டுக் கொள்வதுபோல் ஏழை மக்கள் தினம் 2 அணா 3 அணா கூலி வேலைக்கு சண்டை போட்டுக் கொண்டு பட்டினி கிடக்கும் போது, ஜனத் தலைவர்கள், தேச பக்தியாளர்கள்



RangaRakes tamilnavarasam.com

மீ 4000, 5000 ரூ. உத்தியோகங்களுக்கு சண்டை போட்டுக் கொண்டு அரசாங்கமும் சரிவர நடத்தப்பட முடியாமல் - ஏழைகளின் உண்மையான நிலையும் இன்னதென்று அரசாங்கம் அறிய முடியாமல் செய்யப்பட்டால் இக் கொடுமைகளை எப்படி எடுத்துச் சொல்லாமல் வாய் மூடிக் கொண்டு இருக்க முடியும் என்று கேட்கின்றோம்.

சம்பளக் கொள்ளை ஆட்சியின் பயன் என்று சொல்ல இடமிருக்கக் கூடாது என்பதே நமது ஆசை. சம்பளம் குறைந்தால் ஏழைப் பணக்காரத் தன்மை ஏராளமாய் குறைந்து விடும்.

கொஞ்சம் கொஞ்சமாக தொழில் முறைகள் விர்த்தியாகி, விவசாய முறைகள் விர்த்தியாகி ஜனங்களுக்கு சௌக்கியமும் தாராளமாய் வேலையும் கிடைக்கக்கூடும்.

கேவலம் ஒரு மணிக்கு ஒரு காசுகூட கிடைக்க வழியில்லாததும், கைத்தொழில் முறையையும் ஏழைகள் முற்போக்கடைவதையும் கொலை செய்வதற்கு ஒப்பானதுமான ராட்டினப் பிரசாரத்தில் எவ்வளவு மக்கள் தங்கள் புத்தியை இழந்து மயங்கிக் கிடக்கிறார்கள் என்று பார்த்தால் உண்மையாக பயன்படுவதான காரியங்களான தொழில்முறைகளை சர்க்கார் செய்து வந்தால் எவ்வளவு நன்மையும், நல்ல எண்ணமும் புகழும் நமது சர்க்காருக்கு ஏற்படக் கூடும் என்பதை சிறிது யோசித்தாலும் விளங்காமல் போகாது.

ஆகவே, அரசாங்கத்தார் அரசாங்க சம்பளங்களைக் குறைத்தாலல்லாது இன்று இந்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க முடியாது என்பதோடு மாத்திரமல்லாமல், மனித சமூகத்தில் இருந்து வரும் அனேக கொடுமைகளை ஒழிக்கவும் முடியாது என்று சொல்லுவோம்.

சம்பளத்தைக் குறைத்தால் சம்பளம் குறைந்த பணம் மீதியாவதோடு அனேக நிர்வாக உத்தியோகங்களையும் குறைக்கலாம். எப்படி எனில், சம்பளத்தால் குறைக்கப்பட்ட பணங்களைக் கொண்டு ஆங்காங்கு தொழிற்சாலைகளை அரசாங்கத்தார் ஏற்படுத்தலாம். அதனால் அநேகருக்குத் தொழில் ஏற்பட்டுவிடும். இதனால் மக்கள் தொழில் இல்லாமலும் ஜீவனத்துக்கு மார்க்கமில்லாமலும் இருப்பதினால் செய்யப்படும் திருட்டு, கொள்ளை, சமாதானக் கேடான குற்றங்கள், கிளர்ச்சிகள் முதலியவைகள் தானாகவே அடங்கிவிடும். ஆதலால் நிர்வாகக் கோர்ட்டுகளோ சமாதானத் துக்கும் சமாதான பங்கத்தை அடக்கி வைப்பதற்குமாக செய்யப்படும் செலவுகளோ மாத்திரமல்லாமல் ஏழை மக்கள் கவனிக்கப்பட இடமே இல்லாமல் போனதற்கு காரணமான இச்சம்பளக் கொள்ளை சண்டையும் இல்லாமல் போய்விடும்.

ஆகவே படிப்புக்கு இடையூறாகவும், ஏழை மக்களுக்கு வேலை கிடைப்பதற்கும் அவர்கள் பட்டினி கஷ்டப்படாமல் இருப்பதற்கும் ஏற்ற



தொழில்களுக்கு இடையூறாகவும், மக்களின் சமாதானத்துக்கு இடையூறாகவும் இருந்துவரும் சம்பளக் கொள்ளை ஒழிக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமான காரியங்களில் ஒன்றாகும்.

இக் குற்றத்துக்கு யார் பொறுப்பாளி என்று பார்ப்போமேயானால் இச் சம்பளங்கள் பெரும்பாலும் காங்கிரசினாலும், காங்கிரஸ் கிளர்ச்சியினாலும் தேசாபிமானிகள் தேச பக்தர்கள் என்றவர்களாலும் நிர்ணயிக்கப் பட்டு கிளர்ச்சி செய்யப்பட்டு ஏற்பட்ட துன்பமான காரியம் என்றுதான் சொல்லவேண்டுமே ஒழிய, சர்க்காரையோ ஜஸ்டிஸ் கட்சியாரையோ முழுதும் பொறுப்பாளிகளாக்கிவிட முடியாது என்பது நமது அபிப்பிராயம். ஏனென்றால் காங்கிரஸ்காரர்கள் பெரும் பெரும் சம்பளத் திட்டங்கள் ஏற்படுத்திக் கிளர்ச்சி செய்யும் பொழுது இச் சம்பளங்கள் முழுவதும் தாங்களே அடைவோம் என்று கருதி இருந்தார்கள்.

மற்றபடி வேண்டுமானால் இப்படி சம்பளம் ஏற்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட விளைவை சர்க்காரும், ஜஸ்டிஸாரும் அனுபவிக்கிறார்கள் என்று சொல்லலாம். அதற்கு யார் என்ன செய்ய முடியும்?


சம்பள நிலை இப்படி உள்ள வரையில் அரசியல் கிளர்ச்சி என்னும் பேரால் பெரியதொரு தொல்லையும், சமாதானக் கேடும், வகுப்புத் துவேஷமும், வகுப்புத் துரோகமும், வகுப்புத் துவேஷங்களைக் கிளப்பி விடும் முயற்சிகளும், சுயநலங்களும் உத்தியோகத்துக்காக எந்தக் காரியத்தையும் செய்ய ஆசையும், துணிவும் என்பவைகள் எல்லாம் ஏற்பட்டுத்தான் தீரும் என்பதோடு அது வளர்ந்தும், நிலைத்தும் இருந்து கொண்டும்தான் வரும் என்றும் உறுதியாய்ச் சொல்லுவோம்.

இப்படிச் சொல்லுவதால் அதிக சம்பளம் வாங்கிப் பிழைக்கும் நபர் களுக்கு நாம் விரோதியாகக் காணப்படலாம். ஆனால் பாமர ஜனங்களுக்கு துரோகியாக ஆகி இக் கூட்டத்தார்களின் முகமனுக்கு ஆளாகி தேசபக்தராவதை விட ஈனமான காரியம் வேறு இல்லை என்று கருதுவதால் நாம் நமக்கு சரி என்று பட்டதையும் இன்று முக்கியமாய் செய்யப்பட வேண்டிய காரியம் இன்னது என்று உணர்வதையும் வெளிப்படுத்தி விடுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 25.08.1935**



RangaRakes tamilnavarasam.com



# பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்)

மலர் 1. } ஈரோடு 1935 ஆகஸ்ட்டு 1. { இதழ் 4.

ஒற்றுமை.

(சாமி, சிதம்பரனார்.)

கும்மி மெட்டு.

1. ஒற்றுமை என்றசொல் போதினிலே—ஒரு
உண்மை தோனிக்குது காதினிலே—இதை
வெற்றியுடனின்று கண்டிடவே—இந்த
மேதினி எங்கும் சென்றிடுவோம் (ஒற்றுமை)

2. வீர உணர்ச்சியைக் கொண்டிடுவோம்—கிலை
வேற்றுமை வேரைக் களைந்திடுவோம்—இந்தப்
பாருல கத்தினர் யாவரும் ஒன்றெனும்
பான்மையை வீக்குப் பரப்பிடுவோம் (ஒற்றுமை)

3. பிறப்பினுள் வேற்றுமை ஏதுமுண்டோ—என்று
பேதையர் தங்களைக்கேட்டிடுவோம்—அன்றி
இறப்பினுள் வேற்றுமை ஏதுமுண்டோ—என
ஏழையர் தம்மையும் கேட்டிடுவோம் (ஒற்றுமை)

# ஜோசியம்

ஜோசியம் என்பது ஒரு மனிதனுடைய பிறந்த நேரத்தைக்கொண்டு அந்தச்சமயம் கிரகங்கள் இருந்த நிலைமைக்கேற்ப மனிதனுடைய பலா பலன்களைக் குறிப்பதென்பதாகும்,

இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் மனிதனின் வாழ்க்கை, அவனது பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம், சுகம், அசௌக்கியம், செல்வம், தரித்திரம், தொழில், மேன்மை, கீழ்மை, புத்திர களத்திர தன்மை, எண்ணிக்கை, ஆயுள் முதலியவைகளைக் குறிப்பதாகும்.

இதைக் கூர்ந்து பார்ப்போமானால் மேல் கண்ட பலன்கள் ஜோசியத்தின் மூலம் உணரலாம் என்பது உண்மையாய் இருக்குமாயின் ஒரு மனிதனின் பிறந்த நேரத்தைக்கொண்டு அப்போதிருந்த கிரகங்களின் நிலையை அறிந்து பலன்களை கணிப்பது என்பதில் குறிப்பிட்ட ஜாதகனுடைய பலன் மாத்திர மல்லாமல் அவனது பலாபலனுக்குச் சம்பந்தப்பட்ட மற்ற அனேகருடைய பலன்களும் அதில் அத்துபடி ஆகிவிடவேண்டும் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏனென்றால் ஒரு ஜாதகனுக்கு செல்வம் வரவேண்டுமானால், வியாதி வரவேண்டுமானால், உத்தியோகம் வரவேண்டுமானால், சாவு வரவேண்டுமானால் அவை வருவதற்கு ஹேதுவான மாற்றங்களும் இந்த ஜோசியத்தின் மூலம் அறிந்தாகவேண்டும். இவனால் மற்றவர்களுக்கு ஏற்படும் லாப நஷ்டங்களும், இவனுக்கு மற்றவர்களால் ஏற்படும் லாப நஷ்டங்களும் கணிக்கப்படும்போது இவனது பலாபலன்களைப் போலவே மற்றவர்களது பலாபலன்களும் ஏற்கனவே அவனவன் ஜாதக பலனின் பயனாய் ஏற்பட்டதாகத் தான் இருக்க வேண்டும்.

உதாரணமாக ஒரு ஜாதகனுக்கு சொத்து திருட்டுப்போவதாய் வைத்துக் கொள்ளுவோம், அந்தச் சொத்தை திருடுகிறவனுடைய ஜாதகத்திலும் அவனுக்கு இன்னானுடைய சொத்து திருட்டுப்போகும் என்றும் அது இன்னவனுக்கு கிடைக்க வேண்டும் என்றும் ஏற்பட்டிருந் தாலொழிய – அதற்குத் தகுதியான மாதிரி கிரக அமைப்பும், அந்தப்படி கிரகம் அமைந்த நேரத்தில் அவரவர் பிறந்துமிருந்தாலொழிய இரண்டும் சாத்தியமான காரியமாக ஆகிவிடாது.

இதுபோலவே ஒரு ஜாதகன் மற்றொருவனை கொலை செய்வதாய் வைத்துக்கொள்ளுவோம். இதுவும் இந்த ஜாதகன் இன்னானைக் கொலை



RangaRakes tamilnavarasam.com

செய்து இன்ன பயன் அனுபவிப்பான் என்று பலன் இருப்பது போலவே இவனால் கொலை உண்ணப்பட்டவன் ஜாதகத்திலும் இன்னாறால் இவன் கொலை உண்ணப்பட்டு அதனால் இந்த ஜாதகனுக்கு இன்ன பலன் ஏற்படும் என்றும் இருந்துதானே ஆகவேண்டும்.

இதுபோலவே தான் எந்த ஒரு ஜாதகனுடைய பலனை கவனித்தாலும் அந்தப்பலனுக்கு சம்பந்தப்பட்ட எல்லா மனிதர்களுடையவும் ஜீவராசி களுடையவும் அந்தந்தப் பொருள்களுடையவும் ஜாதகமும் சம்மந்தப்படாமல் ஒரு காரியமும் நடக்காது. மனிதன் பிரக்கும்போது உள்ள நேரத்தைக் கொண்டு அந்த மனிதனின் வாழ்வின் பலாபலன் சொல்லப்படுவது போலவே வஸ்துக்கள், தாவரங்கள் முதலியவைகளுடைய பிரந்த நேரத்தைக்கொண்டும் பலாபலன்களைச் சொல்லலாம் அல்லவா?

உதாரணமாக ஒரு விக்கிரகம் செய்யப்பட்டால் அது செய்யத் தொடங்கிய நேரத்தையோ செய்து முடிந்த நேரத்தையோ கொண்டு அதன் வைபவத்தைக் குறிக்கலாம் என்று ஜோசியர்கள் கூறுகிறார்கள்.

அது உண்மையானால் இந்த பலன் என்பது விக்கிரங்களுக்கு மாத்திரமல்லாமல் உலகத்தில் செய்யப்படும் எல்லாப் பொருள்களுக்கும் பொருத்தமானது என்றுதானே சொல்லவேண்டும்.

ஒரு கடியாரம், ஒரு லாந்தர், ஒரு பாத்திரம், ஒரு நாற்காலி முதலியவைகளில் ஏதோ ஒன்றை வைத்துக்கொள்ளுவோம். அது செய்யத் துடங்கிய நேரமோ அல்லது செய்து முடிந்த நேரமோ, அல்லது வாங்கிய நேரமோ குறித்துக்கொண்டால் அந்த நேரத்தில் இருந்த கிரக நிலைக்கேற்ப மற்றும் அதனுடைய சலனத்துக்கு ஏற்ப பலாபலன்கள் குறிப்பிடக்கூடிய தாகவே இருக்கவேண்டும்.

ஏனெனில் மனிதனுக்கும், விக்கிரகத்துக்கும் வாழ்க்கை எப்படி இருக்கின்றதோ அப்படித்தான் மற்ற ஜீவன் புல் பூண்டு சாதாரண வஸ்துக்கள் ஆகியவைகளுக்கும் இருந்து வருகின்றது.

ஒரு குதிரை பட்டத்துக் குதிரையாய் இருந்து பெருத்த சுகபோகமும் பெருமையும் அடைகின்றது. அதோடு கூடப் பிரந்த மற்றொரு குதிரை ஜட்கா வண்டியில் தினமும் கட்டப்பட்டு முதுகுப்பட்டை வாங்கப்படுவதோடு றெய்ன்ஸ் கயிற்றால் விதரில் அடி வாங்கி விதர் வீங்கி கஷ்டப்படுகின்றது. இது அவற்றின் பிரந்த நேர கிரகாச்சாரப்பலன் என்றுதானே சொல்ல வேண்டும்.

இதுபோலவே ஒரே பாரையில் உடைத்த இரண்டு பாளக் கல்லுகளில் ஒன்று விக்கிரகமாகி பொன், வைர ஆபரணங்கள் அணிந்து தினம் 6 கால பூஜை, சதுர், பாட்டு, வைபவம், இரண்டு மூன்று பெண்ஜாதிகள், பல தாசிகள், வருஷா வருஷம் கல்யாணம், பெரிய ஆலயம், திருவிழா முதலிய வைபவங் களைப் பெருகின்றது. அதனோடு பிரந்த மற்றொரு கல் முனிசிபாலிட்டி



கக்கூசுக்கு பாவப்பட்டு தினம் நூற்றுக்கணக்கான பேர் செருப்புக்காலால் மிதித்து அதன்மீது ஏறி மலபாதை கழிக்கவும் சதா விளக்குமாறு போட்டு அடித்து கழுவவும், போகின்ற வருகின்ற பேர் காரி உமிழவுமான பலனை அடைகின்றது. இதுவும் அந்தக்கல் பிரந்த நேரத்தின் பயனும் அப்போதிருந்த கிரகநிலைக்கேற்ப ஏற்பட்ட பலன் என்றுதானே சொல்லவேண்டும்.

அதுபோலவே ஒரே தொழில்சாலையில் ஒரே நேரத்தில் செய்யப்பட்ட இரண்டு கடியாரங்களை எடுத்துக்கொண்டால் ஒன்று மகாராஜா கையில் கட்டப்பட்டு சிறிதும் ஆட்டம் அசைவு இல்லாமலும் சரியாய் மணி காட்டிக்கொண்டு மேன்மையாய் இருக்கின்றது.

மற்றொன்றோ ஒரு கூலிக்காரன் கையில் சிக்கி கண்டபடி அடிபட்டு சாமான்கள் முரிந்து கடியாரமே கெட்டு மூன்றாம் நாளே குப்பைத் தொட்டியில் எரியும்படியாக ஆகிவிடுகின்றது.

இதுவும் அந்த கடியாரம் பிரந்த நேரத்திலோ அல்லது வாங்கப்பட்ட நேரத்திலோ கிரகங்கள் அமைந்திருந்தமையைக் கொண்டும் அதன் சஞ்சாரங்களைக் கொண்டும் ஏற்பட்ட பலன் என்றுதானே சொல்லவேண்டும்.

இதுபோலவே யாவரும் வெருக்கும் மலம் முதல்கொண்டு ஒவ்வொரு வஸ்த்துக்கும் அதனதன் பிரந்த நேரத்தின் பயனாய் பலாபலன் இருந்து வந்தால் தான் ஜாதகம் என்பதாக ஒன்று இருக்க முடியுமே ஒழிய மனிதனுக்கு மாத்திரம்தான் ஜாதகம் சொல்ல முடியம் என்றால் அதை யார் ஒப்புக் கொள்வார்கள்.

சிலர் குதிரைக்கும், யானைக்கும் ஜாதகம் வைத்திருப்பதும் பார்ப்பதும் நாம் பார்த்திருக்கிறோம்.

மனிதனுக்கு ஜாதக பலன் சொல்ல முடிகின்றபோது குதிரைக்கும், யானைக்கும், நாயுக்கும், கழுதைக்கும் சொல்ல முடியாது என்று சொன்னால் அது நியாயமாகுமா?

அதுபோலவே குதிரைக்கும், யானைக்கும், நாயுக்கும் ஜாதகம் பலன் சொல்லுவதாய் இருந்தால் கோழிக்கும், குருவிக்கும், பாம்புக்கும், தேளுக்கும், ஓணானுக்கும், பல்லிக்கும், ஈயுக்கும், எறும்புக்கும், பூச்சிக்கும், புழுவுக்கும், கிருமிக்கும் ஜாதக பலன் சொல்ல முடியாது என்று யாராவது சொல்ல முடியுமா?

கோழிக்கும், குருவிக்கும், பூச்சிக்கும், புழுவுக்கும், அதன் பிரந்த நேரத்தைக்கொண்டு பலன் சொல்லலாம் என்றால் மரத்துக்கும், செடிக்கும், புல்லுக்கும், பூண்டுக்கும் அது முளைத்த நேரத்தைக்கொண்டு ஏன் பலன் சொல்ல முடியாது?

ஆகவே வஸ்து என்று ஒன்று ஏற்பட்டு அது பிரப்பதற்கோ தோன்று வதற்கோ ஒரு நேரமும் இருந்து அந்த நேரத்தைக்கொண்டு அப்போதிருந்த



RangaRakes tamilnavarasam.com

கிரக நிலையை அறியக்கூடிய எல்லாவற்றிற்கும் ஜோசியம் சொல்லலாம் என்பதுதான் ஜோசியத்தின் தன்மையாக இருக்கவேண்டும்.

இந்த முடிவு எப்படியோ ஆகட்டும். முதலாவதாக ஒரு மனிதனுடையவோ, ஜீவனுடையவோ பிறந்த நேரத்தை எப்படி கணிக்கமுடியும். பிரசவகாலத்தில் வயிற்றுவலி ஏற்பட்ட நேரம் முதல் சிசுவானது கொஞ்சம் கொஞ்சமாய் வெளியாகிறது. உருவம் வெளிப்பட்டு தலையோ காலோ தெரிந்து வெகு நேரம் சென்றும் சில சிசுக்கள் மணிக்கணக்கில் கீழே விழாமல் சிக்கிக்கொண்டும் இருக்கின்றன. கீழே விழுந்த நேரத்தையே எடுத்துக் கொள்வதாய் இருந்தாலும் பெரும்பான்மையான சிசுக்கள் விஷயத்தில் எப்படி சரியான நேரத்தைக் கண்டுபிடிக்க முடியும்.

ஒரு நாளைக்கு 16 முகூர்த்தங்கள் ஒரு முகூர்த்தத்திற்கு 3¾ நாளிகை தான் இருக்கின்றன. ஒவ்வொரு லக்கினத்துக்கும் 4¼ முதல் 5½ நாளிகையும் ஒவ்வொரு நக்ஷத்திரத்திற்கு சுமார் 60 நாளிகையும் உண்டு.

இதற்குள் பிரக்கும் குழந்தைகள் எல்லாவற்றிற்கும் கிரகம் நக்ஷத்திரம் என்பவை ஒன்றாகவேதான் இருக்க முடியும். உலகில் ஏற்படும் பிரப்பு இறப்புகள் எல்லாம் இந்த லக்கினத்துக்குள்ளும் இந்த நக்ஷத்திரங்களுக் குள்ளும் தான் வந்தாக வேண்டும்.

அந்தப்படியே வந்து அதைக்கொண்டே பலன் சொல்லக்கூடும் என்றே வைத்துக்கொண்டாலும் மனிதனுடைய நித்திய வாழ்க்கை அனுபவத்துக்கும், பிறந்தபோது கிரகங்கள் இருந்து வந்த நிலைக்கும் எப்படி சம்பந்தம் இருந்துவர முடியும்? எப்படி இருக்கக்கூடும் என்பதை எந்த வான சாஸ்திரியாவது நக்ஷத்திர சாஸ்திரியாவது, ஜீவ தத்துவ சாஸ்திரியாவது, உடல் தத்துவ சாஸ்திரியாவது, பொது விஞ்ஞான சாஸ்திரியாவது ஒத்துக்கொள்ளுகின்றார்களா?

ஜோசியம் என்பது பிறந்த காலத்தைக் கொண்டு, அப்போதிருந்த கிரக நிலையை அறிந்து சொல்வது என்பதோடு மாத்திரம் இல்லாமல் மற்றும் எதை எதையோ கொண்டு சொல்லக்கூடியதாய் இருந்து வருவனதாயும் பார்க்கிறோம்,

ஒரு ஜாதகனுக்கு பலன் சொல்ல அவன் ஜோசியம் கேழ்க்கும்படியான நேரத்தை குறித்து அப்போது இருக்கும் கிரக நிலையை அறிந்துகூட சொல்லப்படுகிறது. மற்றும் ஜாதகனின் பேர் நாமத்தைக் கொண்டும், அவன் சொல்லும் எண்ணைக் கொண்டும், அவர் சரீரத்தில் தொடும் அங்கத்தைக் கொண்டும் இன்னும் என்ன என்னமோ ஆதாரங்களைக் கொண்டும் சொல்லப்படுகின்றன.

இவைகளுக்கு எல்லாம் விஞ்ஞான சாஸ்திரம் இடம் கொடுக்கிறதா? விஞ்ஞானத்துக்கு அதாவது பஞ்சேந்திரியங்களால் அறியக்கூடிய தன்மைக்கு விரோதமாய் ஒரு காரியத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் சொல்லப்படுமானால் பிறகு உலகில் விஷயங்களை எப்படித்தான் நிர்தாரணம் செய்ய முடியும்.



ஒரு வஸ்து நிர்ணயத்துக்கோ ஒரு விஷய நிர்ணயத்துக்கோ ஏதாவது ஒரு முறை அல்லது விதி இல்லாவிட்டால் பிறகு எப்படித்தான் விஷயங்களை நிர்தாரணம் செய்ய முடியும்.

இந்த விஷயங்கள் ஒரு புறம் இருக்க; இந்த ஜாதக பலன்கள் மனிதனுக்கு இந்தப்படி யெல்லாம் அமைவதற்கு ஒரு காரணமும் வேண்டி இருக்கிறது. ஏனெனில் மனித வாழ்க்கையின் தன்மையும் பலன்களும் அனுபவமும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாய் இருப்பதை இயற்கை என்று ஒப்புக்கொள்ளாமல் இருப்பதால் அவற்றிற்கு காரணம் கண்டு பிடிக்கவேண்டி இருக்கிறது. அதற்கு ஜோசியர்களும் மற்றும் கிரக பலன்களில் நம்பிக்கை உள்ளவர்களும் ''கிரகங்கள் அந்தப்படியெல்லாம் அமைவதற்கே'' காரணம் சொல்லுகிறார்கள். அதாவது ஒவ்வொருவருடைய கிரகாச்சார பலனும் ஜாதகன் பிரப்பதற்கு முன்னமே அமைக்கப்பட்டதற்கு அந்தந்த ஜாதகர்களின் முன் ஜன்ம கர்மத்தின் பலன் என்றும் அல்லது அவனுடைய முன் ஜன்ம நடத்தைக்கு தக்கபடி கடவுளால் விதிக்கப்பட்ட விதி என்றும் சொல்லப்படுகிறது.

ஜோசியத்தை ஒப்புக்கொள்ளுகின்றவர்களோ நம்புகின்றவர்களோ முன் ஜன்மம், முன் ஜன்ம கர்மம், அதை அனுசரித்து கடவுளால் ஏற்படுத்தப் பட்ட விதி முதலியவைகளை ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். அப்படி இல்லாவிட்டால் யாதொரு பழிபாவமும் அறியாத ஒரு ஜீவன் தான் பிரக்கும் போது நிஷ்காரணமாய் யதேச்சையாயும் இயற்கையாயும் அமைந்திருந்த கிரகங்களின் பயனாய் பலன்களை அடைவதென்றால் அதையும் இயற்கை என்று சொல்லித்தானே ஆக வேண்டும்.

ஆகவே அந்தக்காரணம் தான் முன் ஜன்ம கர்மத்தின் பலனாகவும், தலைவிதியாகவும் சொல்லப்படுவதாகின்றது. இதை ஒப்புக்கொள்ளுவ தனால் இதில் மற்றொரு பெரிய பிரச்சனை வந்து புகுந்து கொள்கின்றது.

அதாவது இம்மாதிரி அமையப்பட்ட கிரகங்களின் பலனாகவோ அல்லது முன் ஜன்மத்தின் கர்மத்தின் பலனாகவோ தலைவிதியின் பயனாகவோ கடவுள் சித்தத்தின் பலனாகவோ ஏற்பட்ட அல்லது ஒரு ஜாதகனால் செய்யப்பட்ட காரியங்களுக்கு மறுபடியும் பலன்கள் உண்டா என்பதும் அதற்கு அந்த ஜாதகன் பொருப்பா என்பதும் அது அந்த ஜாதகனை எப்படி கட்டுப்படுத்தும் என்பதுமேயாகும்.

உதாரணமாக ஒரு ஜாதகன் ஒரு மனிதனைக் கொலைசெய்வதாக வைத்துக்கொள்ளுவோம், இந்தக் கொலையானது ''இந்த ஜாதகன் இன்ன வருஷம், இன்ன மாதம், இன்ன தேதி, இன்ன கிழமை, இன்ன மணிக்கு, இன்ன ஊர், இன்னானை, இவ்விதமாய், கொலை செய்வான்'' என்று கொலை செய்தவனுடைய ஜாதகத்திலும் ''இன்ன வருஷம், இன்ன மாதம், இன்ன தேதி, இன்ன கிழமை, இத்தனை மணிக்கு, இன்ன மனிதனால்



RangaRakes tamilnavarasam.com

கொலை செய்யப்படுவான் என்று கொலை உண்டவன் ஜாதகத்திலும் கர்மத்தின் பயனாலோ, அல்லது கடவுள் சித்தத்தாலோ ஏற்பட்டில்லாமல் இக்கொலை எப்படி ஏற்பட்டிருக்கமுடியுமா?

அந்தப்படி விதி ஏற்பட்டிருக்கும் போது கொலை செய்பவன் இந்தக்கொலையை செய்யக்கூடாது என்று எவ்வளவு தான் கருதினாலும் அவனால் கொலை செய்யாமல் இருக்கமுடியுமா? அதுபோலவே கொலை உண்டவனும் தான் எவ்வளவு தான் ஜாக்கிரதையாய் இருந்தாலும் ஒரு தண்டவாளப் பெட்டியில் வைத்து பூட்டப்பட்டிருந்தாலும் கொலையிலிருந்து தப்பித்து இருக்க முடியுமா?

''அன்றெழுதினவன் அழித்தெழுதுவானா''

''விதியை யாரால் வெல்லமுடியும்''

''அவனவனின் முன் ஜன்ம கர்மத்தின் பயனை அவனவன் அனுபவித்தே தீரவேண்டும்''

என்றபடி விதியில் உள்ளது போல் நடந்து தானே தீரும். இந்தப்படி விதியினாலோ முன் ஜன்மக் கருமத்தின் பலனாலோ ஜாதக ரீதியாய் செய்யப்பட்ட இந்தக் கொலைக்கும் கொலை உண்ணப்பட்டதற்கும் இந்த ஜாதகன் எப்படி ஜவாப்தாரியாக ஆகமுடியும்? ஜாதகனை எப்படி குற்றம் சொல்லமுடியும்? இதற்காக ஜாதகனுக்கு பாவமோ நரகமோ கர்மத்தின் பயனோ எப்படி ஏற்படும்? இந்த ஜாதகனுக்கு பாவமோ நரகமோ எப்படி ஏற்படும் என்பது மாத்திரமல்லாமல் மக்கள் விதியின்படியோ முன் ஜன்ம கர்மத்தின் விளைவின்படியோ செய்யப்பட்ட காரியங்களுக்கு பாவம் என்றோ புண்ணியம் என்றோ எப்படி சொல்லலாம் அதற்காக நரகமோ மோக்ஷமோ அடுத்த ஜன்மத்தில் அடையவேண்டிய பயனோ எப்படி சித்திக்கும்.

ஆகவே மனிதன் அவன் செய்யுங் காரியங்கள் எல்லாம் ஜாதகப் பலன்படியும், ஜாதகப்பலன்கள் எல்லாம் விதிப்படியும், விதி எல்லாம் முன்ஜன்ம கர்மத்தின் பலன்படியும் நடப்பதாய் இருக்கையில் பாவபுண்ணியம் என்ற பாகுபாடும், நற்செய்கை துர்செய்கை என்கின்ற பெயரும், எப்படி பொருந்தும்? மோக்ஷத்திற்கும், நரகத்திற்கும் அவசியம் தான் ஏது? அது எதற்காக இருக்கவேண்டும்?

கடவுள்தானாகட்டும் இந்த செய்கைகளுக்கு தீர்ப்புகளோ, விசாரனையோ, சன்மானமோ, தண்டனையோ எப்படி செய்ய முடியும்? என்பவைகளை யோசித்தால் ஜோசியம் என்பதாக ஒன்று இருக்க முடியுமா? அது பிறந்த நேரத்தைக்கொண்டு மனித வாழ்க்கையில் ஒவ்வொரு பயனும் சொல்லமுடியுமா?

அப்படி ஒரு சாஸ்திரம் இருக்க பகுத்தறிவின்படி சையன்ஸ்படி இடம் இருக்கிறதா? என்பவைகளை யோசித்து பார்க்கவேண்டும்.



ஜோசியம் என்பதைப்பற்றி இந்துக்கள், மகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள் முதல் எல்லா ஆஸ்திகக்காரர்களுக்கும், நம்பிக்கை இருந்து வருகின்றது.

சிற்சில மனிதர்கள் ஆஸ்திகர்களாய் இல்லாதவர்களும் ஜோசியத்தை நம்புகிறார்கள். ஏனெனில் அது ஒரு சாஸ்திரமென்றும் அதற்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லை யென்றும் ஜோசியம் விஞ்ஞான பரீக்ஷையால் நிர்ணயிக்கக் கூடியதென்றும், ஆதலால் அது பிறந்த நேரத்தையும், நக்ஷத்திரங்களையும், கிரகங்களையும் பொருத்ததென்றும், நக்ஷத்திரங்களும், கிரகங்களும் உண்மை ஆனதினாலும் பிரத்தியக்ஷ பிரமாணமானதினாலும் அதை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும், அனுபவத்திற்கு ஒத்து இருக்கிறதென்றும், இப்படி பலவாறாகப் பேசி அதை ஒப்புக்கொள்ளுகிறவர்களும், நம்புகிறவர்களும் சமாதானம் சொல்லுகின்றார்கள்.

இந்த சமாதானங்களைப்பற்றி பின் ஒரு சமயம் ஆலோசிப்போம். இப்போது இந்தப்படி ஒரு சாஸ்திரமோ பலனோ இருக்க நியாயம் உண்டா என்பதைப்பற்றி மாத்திரமே இவற்றைக்கொண்டு ஆராய்ந்தோம்.

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - ஆகஸ்ட்டு 1935**



RangaRakes tamilnavarasam.com

# ஜோசிய விதண்டா வாதம்

**- சித்திரபுத்திரன்**

வெள்ளைக்காரர்கள் ஜோசியத்தில் இந்தியர்களைப்போல் எத்தனை பெண்சாதி என்பதை அறிய இடம் இருக்குமா?

∴ ∴ ∴

திபேத்தில் இருக்கிற பெண்கள் ஜாதகத்தில் இத்தனை புருஷன் என்பதை அறிவதற்கு வசமிருக்கிறதுபோல் இந்தியாவில் விதவை மணமில்லாத பெண்களுக்கு இத்தனை புருஷர் இருக்கிறார்கள் என்று அறிய முடியுமா?

∴ ∴ ∴

இந்தியாவில் உள்ள மக்களுக்கு பூமி, கன்று காலி, வீடு வாசல், சொத்து இவ்வளவு என்று கண்டுபிடிக்க வசமிருப்பதுபோல் ரஷியர்களுக்கும் கண்டுபிடிக்க வசமிருக்குமா?

பகுத்தறிவு (மா.இ.) - துணுக்குகள் - ஆகஸ்ட்டு 1935



# மூடநம்பிக்கை

## வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரம்

**- சித்திரபுத்திரன்**

**நகை வியாபாரி:-** ஐயா, தாங்கள் என்னிடம் காலையில் காசுமாலை வாங்கிவந்தீர்களே அது தங்களுக்குத் தேவையா இல்லையா என்பதைத் தெரிவித்துவிட்டால் அதை வேறு ஒருவர் வேண்டுமென்று சொல்லி மத்தியானமிருந்து கடையில் காத்துக்கொண்டிருக்கிறார். அவருக்காவது கொடுத்துவிடலாம் என்று வந்திருக்கின்றேன். எனக்குப் பணத்துக்கு மிகவும் அவசரமாயிருப்பதால் தயவு செய்து உடனே தெரிவித்துவிடுங்கள்.

**வைதீகர்:-** செட்டியாரே, அந்த நகை தேவையில்லை. வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வரும்போது பூனை குருக்கே போச்சுது, அப்பொழுதே வேண்டியதில்லை என்று தீர்மானித்துவிட்டேன். வீட்டில் பெண்டுகள் பார்த்து மிகவும் ஆசைப்பட்டு மாலையிலுள்ளக் காசை எண்ணிப்பார்த் தார்கள். அதில் 68-காசுகளிருந்தது. எட்டு எண்ணிக்கைக் கொண்டது எதுவும் எங்கள் குடும்பத்திற்கு ஆயி வருவதில்லை. அதனால் அவர்களும் உடனே கீழே போட்டுவிட்டார்கள். ஆனதினால் அது எங்களுக்கு வேண்டியதில்லை.

**நகை வியாபாரி:-** அப்படியானால், தயவு செய்து கொடுத்துவிடுங்கள். வேறு ஒருவர் காத்துக் கொண்டிருக்கின்றார்.

**வைதீகர்:-** ஆஹா, கொடுத்துவிடுவதில் ஆக்ஷேபனையில்லை. காலமே நேரத்தில் வாருங்கள் கொடுத்துவிடுகின்றேன்.

**நகை வியாபாரி:-** அவர் இன்று இராத்திரிக்கு ஊருக்குப் போகின்றவர். ஆனதால் தயவு செய்து இப்பொழுதே கொடுத்துவிடுங்கள்.

**வைதீகர்:-** செட்டியாரே, தாங்களென்ன நாஸ்திகராய் இருக்கின்றீர்கள். வெள்ளிக்கிழமை அதுவும் விளக்கு வைத்த நேரம், இந்த சமயத்தில் நிறைந்த வீட்டிலிருந்து பொன் நகையை வெளியில் கொடுக்கலாமா? அது லக்ஷிமி அல்லவா?

**நகை வியாபாரி:-** என்ன ஐயா, வியாபாரத்திற்காக பெண்டுகளுக்கு காட்டிவிட்டு கொண்டுவருகிறேன் என்று எடுத்துக்கொண்டுவந்த நகையை வேறு ஒருவர் அவசரமாகக் கேட்கின்றார்கள் என்று வந்து கேட்டால், வெள்ளிக்



RangaRakes tamilnavarasam.com

கிழமை விளக்கு வைத்த நேரம் என்கின்றீர்களே இது என்ன ஒழுங்கு. ஊரார் நகைக்கு நாள் என்ன, நேரமென்ன என்பது எனக்கு விளங்கவில்லையே.

**வைதீகர்:-** (தனக்குள்ளாகவே 'இந்த இளவு நகையை நாம் ஏன் இந்த மனிதனிடம் வாங்கிவந்தோம்' என்று நினைத்துக்கொண்டு) என் புத்தியை விளக்குமாற்றால் புடைக்க வேண்டும். உம்ம கடைக்கு வந்ததே பிசகு, தவிரவும் உம்மிடம் நகையை எடுக்கும்போதே மணி பத்தரை இருக்கும். நல்ல ராகு காலத்தில் எடுத்துவந்தேன். அது எப்படியானாலும் கலகமாய்த் தான் தீரும், எனக்குப் புத்தி வந்தது. இனி இந்த மாதிரி செய்யமாட்டேன். தயவு செய்து நாளைக்கு வாருங்கள்.

**நகை வியாபாரி:-** இது என்ன ஐயா, தமாஷ் செய்கின்றீர்களா என்ன? உங்கள் நகையை யாராவது கேட்டால், நாள் கோள் எல்லாம் பார்த்துக் கொள்ளுங்கள். ஊரார் நகைக்கு இதையெல்லாம் பார்க்கச் சொல்லி உங்களுக்கெவன் புத்தி சொல்லிக்கொடுத்தான். அவனைக் கூட்டிக்கொண்டு வாருங்கள் அவனுக்கு நல்ல புத்தி கற்பிக்கின்றேன். மரியாதையாய் நகையைக் கொடுங்கள் நேரமாகுது.

**வைதீகர்:-** நீங்கள் 'குடி அரசு' பத்திரிகை கக்ஷியைச் சேர்ந்தவர்களா என்ன? நாளையும் கோளையும் சாஸ்திரத்தையும் கேலி செய்கின்றீர்களே, அந்தக் கூட்டத்திற்குத்தான் நல்லது இல்லை, கெட்டதில்லை, மேல் இல்லை, கீழ் இல்லை, கோவில் இல்லை, குளமில்லை, சாஸ்திரமில்லை, புராணமில்லை, பறையனும் பாப்பானும் ஒண்ணு என்று ஆணவம் பிடித்து நாஸ்திகம் பேசிக்கொண்டு திரிகிறார்கள். நீங்களும் அதுபோல் பேசுகின்றீர்களே.

**நகை வியாபாரி:-** நீரே ரொம்பவும் ஆஸ்திகராயிருந்து கொள்ளும், அதைப்பற்றி நமக்கு கவலையில்லை. மரியாதையாய் நகையைக் கொடுத்து விடும், பவுன் விலை இறங்கப்போகின்றது. இன்றைக்கு விற்காவிட்டால் எனக்கு நஷ்டம் வந்துவிடும். வேறொரு ஆசாமியும் மிகவும் ஆசையாய் காத்திருக்கின்றார். இனி தாமதம் செய்யாதீர் இருட்டாகப்போகிறது, சீக்கிரம் எடுத்துக்கொண்டுவாரும்.

**வைதீகர்:-** (வீட்டிற்குள் போய் சம்சாரத்துடன் யோசிக்கின்றார்) என்ன, ஏன் பேசவில்லை, செட்டியார் காசுமாலை கேட்கின்றார்.

**அம்மா:-** வெகுநேர்த்தி இன்றைக்கு வெள்ளிக்கிழமை, விளக்கு வைத்த நேரம், லக்ஷிமியை வீட்டை விட்டு வெளியில் கொடுக்கலாமா?

**புருஷன்:-** எல்லாம் நான் சொல்லிப்பார்த்தாய் விட்டது. செட்டியார் ஒரே பிடியாய் இப்போதே கொடுத்தாகவேண்டும் என்று கட்டாயப் படுத்திக் கொண்டு வெளியில் காத்துக்கொண்டிருக்கிறார்.

**அம்மா:-** (பலமாய் சத்தம்போட்டுக்கொண்டு வெளியில் வருகிற போது பேசிக்கொண்டு வருவதாவது) செட்டியாருக்குத்தான் புத்தியில்லை.



உங்களுக்குமா புத்தியில்லை. அவர் என்ன செட்டியா மட்டியா? வீடுவாசல் வைத்து பிழைத்த மனிதனா, நாடோடித் தடம்போக்கியா? நிறைந்த வீட்டில் விளக்கு வைத்த நேரத்தில் கலகம் பண்ண வந்திருக்கிறார். நான் போய் கேட்கிறேன், (என்று வெளியில் வந்து) என்ன செட்டியாரே உமக்கு புத்தியில்லையா? இப்பொழுதுதான் ஏதோ கொஞ்சம் ஓஹோ என்று எங்கள் குடும்பம் தலை எடுக்கின்றது. அதுக்குள் நீர் எமனாய் வந்து விட்டீர். நாளைக்கு காலமே வாருமே. அதற்குள் என்ன நீர் கொள்ளையில் போய் விடுவீரா, அல்லது ஏதோ ஒரு மனிதன் நகை வாங்க வந்தவன் காத்திருக்கிறான் என்கிறீரே அவன் தான் கொள்ளையில் போய்விடுவானா? உமக்குத்தான் புத்தியில்லாவிட்டாலும் அவனுக்காவது புத்தியிருக்க வேண்டாமா? வெள்ளிக்கிழமை நகையைப்போய் கேட்கச்சொல்லலாமா என்கிற அறிவில்லாமல் உம்மை இங்கே அனுப்பி ரகளை பண்ணச்சொல்லி இருக்கிறானே, அத்தனை அவசரம் என்ன அவனைக் கொண்டுபோகிறது?

இந்தச்சமயத்தில் மகன் வந்துவிட்டான்.

**மகன்:-** என்ன அம்மா கூச்சல் போடுகிறாய்? இவர் யார்?

**தாயார்:-** இவரா? இவர் ஒரு நகை வியாபாரியாம். இவர் தலையில் நெருப்பைக் கொட்ட! வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரத்தில் காசி மாலையைக் கொண்டுவந்து கொடுக்க வேண்டுமாம். ரகளைக்கி நிற்கிறார்.

**மகன்:-** அதெல்லாம் இருக்கட்டும் ஜாஸ்தி பேசாதே? நமக்கு காசிமாலை யேது? நம் வீட்டில் காசிமாலை இல்லையே, நேற்றுத்தானே அப்பா ஒரு காசிமாலை வாங்கவேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தார். அதற்குள்ளாகவா வாங்கி ஆய்விட்டது காசிமாலை?

**தாயார்:-** உங்கப்பா யார் முகத்தில் முழித்தாரோ, இன்று காலையில் கடைக்குப்போனார், இந்த செட்டியாரிடம் மாலை ஒன்று இருந்தது, அதை எனக்குக் காட்டுவதற்காக வாங்கி வந்தார். நேற்று நினைக்கும்போதே ராகு காலம், இன்று செட்டியார் கடையில் நகை வாங்கும்போதும் ராகு காலம், வழியில் வரும்போதும் பூனை குறுக்கே போச்சுதாம்; அப்பொழுதே உங்கப்பா வேண்டாமென்று தலைசுத்தி யெறிந்துவிட்டு வரவேண்டாமா? அப்படிச் செய்யாமல் என்னிடம் கொண்டுவந்து கொடுத்தார். அது கொஞ்சம் நன்றாய் இருந்தது. நானும் ஆசைப்பட்டு வாங்கலாம் என்று முடிவுகட்டி எண்ணிப்பார்த்தேன். காசு அறுபத்தி எட்டாயிருந்தது, உடனே தலையைச் சுற்றி எரிந்துவிட்டேன். உங்கப்பா பெட்டியில் வைத்துவிட்டார். இப்ப வந்து செட்டியார் அவசரப்படுகிறார்; யாரோ வேறே கிராக்கி காத்துக்கொண்டிருக்கின்றதாம்; வெள்ளிக்கிழமை, விளக்கு வைத்த நேரம், முதலாவது பெட்டியைத் திறக்கலாமா? நீயே சொல்லு பார்ப்போம்.

**மகன்:-** ஐயய்யோ! இதென்ன பெரிய அழுக்கு மூட்டையாயிருக்கிறது. குருட்டு நம்பிக்கைப் பிடுங்கலாயிருக்கின்றது; வெள்ளியாவது, சனியாவது,



RangaRakes tamilnavarasam.com

ராகாவது, கேதாவது! ஊரார் வீட்டு நகையை வாங்கிக் கொண்டுவந்து பெட்டியில் வைத்து பூட்டிக்கொண்டு வெள்ளியுஞ் சனியும் பேசுவது வெகு ஒழுங்காய் இருக்கின்றது. பேசாமல் எடுத்துக்கொண்டுவந்து கொடுத்து விடு; இல்லாவிட்டல் பெட்டியை உடைத்து விடுவேன் தெரியுமா?

அதற்குள் அப்பா வந்துவிட்டார்.

**அப்பா:-** என்னடா பயலே. பலே அதிகப்பிரசங்கியாய்ப்போய் விட்டே. நான் அப்போதே உன்னை ''குடி அரசு'' பத்திரிகையைப் படிக்க வேண்டாம். கெட்டுப்போவாய் என்று சொன்னேனா இல்லையா? அது போலவே படித்து கெட்டுக் குட்டிச்சுவராய் போய்விட்டாயல்லவா? கர்மம்! கர்மம்!! இந்த இழவு பத்திரிகை ஒன்று முளைத்து ஊரிலுள்ள சிறு பிள்ளைகளை யெல்லாம் நாஸ்திகமாக்கி விட்டது.

**மகன்:-** ''வெகு நன்றாயிருக்கிறது'' என்று சொல்லிக்கொண்டு உடனே அம்மாள் இடுப்பில் சொருகி இருந்த சாவியை பிடுங்கிக்கொண்டு போய் பெட்டியைத் திறந்து நகையை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்து செட்டியாரை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டான்.

பிறகு புருஷனும் பெண்ஜாதியும் ராகுகாலத்தில் அந்த செட்டி இடம் நகை வாங்கிவந்ததே பிசகான காரியம். இதுவும் வரும் இன்னமும் எவ்வளவோ கெடுதியும் வரும். என்னை அடிக்க வேண்டும்........லே என்று ஒருவருக் கொருவர் பேசிக்கொண்டார்கள்.

பகுத்தறிவு (மா.இ.) - உரையாடல் - ஆகஸ்ட்டு 1935



# மதப் போட்டி

## யாரைப்பார்த்து யார் காப்பியடித்தார்?

**- சித்திரபுத்திரன்**

மதங்கள் என்பவைகளுக்கெல்லாம் ஒரு கடவுள் இருந்தாக வேண்டும், மோக்ஷம், நரகம் இருந்தாக வேண்டும், கடவுள் தன்மை பொருந்திய அவதார புருஷர்கள், குருமார்கள் இருந்தாக வேண்டும்.

இவை இல்லாமல் உலகில் எந்த மதமும் இருக்க முடியாது. இந்து மதத்துக்கோ இவைகள் மாத்திரம் போதாது. அதாவது பல கடவுள்கள் வேண்டும். பலவிதமான மோக்ஷங்கள் பலவிதமான நரகங்கள் வேண்டும். மற்றும் பலவிதமான பிறப்புகள், முன்பின் ஜன்மங்கள் வேண்டும், பலவிதமான அவதாரங்கள், பலவிதமான குருமார்கள் வேண்டும். இவ்வளவும் போராமல் கடவுளை நேரில் கண்டு மோக்ஷத்திற்குப் போன பலவிதமான பக்தர்கள் வேண்டும்.

இந்தக்காரியங்கள் சிறப்பாக இந்துமதத்தின் உட்பிரிவு மதங்களான சைவ மதம், வைணவ மதம் என்று சொல்லப்படும் இரண்டு உட்பிரிவு மதங்களுக்கும் ஏறக்குறைய ஒன்றுபோலவே இருந்து வருகின்றன.

பெயர்களைப் பொருத்தவரையில் சில மாறுதல்கள் இருக்கலாமே ஒழிய காரியங்களைப் பொருத்தவரையில் ஏறக்குறைய ஒருவரைப்பார்த்து ஒருவர் காப்பியடித்தது போலவேதான் இருக்கிறது.

உதாரணமாக வைணவத்தில் ராமாயணம் ஏற்பட்டதற்குக் காரணம் விஷ்ணுவும் அவரது மனைவியாகிய லக்ஷிமியும் கலவி செய்ததில் இருந்தே ஏற்பட்டது என்றால் சைவத்துக்கு கந்தபுராணம் ஏற்பட்டதற்குக் காரணம் சிவனும் அவரது மனைவியாகிய பார்வதியும் கலவி செய்ததில் இருந்தே ஏற்பட்டது.

எப்படியெனில் விஷ்ணுவும் லக்ஷிமியும் பகல் நேரத்தில் கலவியில் இருந்தபோது சில ரிஷிகள் படுக்கை அறைக்குள் பிரவேசித்து விஷ்ணுவைக் காண ஆசைப்பட்டதாகவும் துவாரபாலகர்கள் தடுத்ததாகவும், அதற்கு அவர்களை ரிஷிகள் சபித்ததாகவும், அந்தச் சாபம் தீரவேண்டியதற்காகவே ராமாயணம் முதலியவை ஏற்பட வேண்டியதாயிற்றாம்.



RangaRakes tamilnavarasam.com

அதுபோலவே பரமசிவன் பார்வதியோடு பல நூறு வருஷங்கள் விடாமல் கலவி செய்து கொண்டு இருந்ததாகவும் அதனால் ஏற்படும் வீரியமும், கர்பமும் மிகக் கொடுமையான காரியத்தைச் செய்யக்கூடியதாகி விடும் என்று தேவர்கள் முறையிட கலவி முற்றுப்பெறுவதற்கு முன்பாகவே கலவியை நிறுத்திக்கொள்ள வேண்டியதாகி அதனால் இந்திரியம் நிலத்தில் விழுந்து பிறகு என்னென்னமோ ஆபாசமாகி கடைசியாக சுப்பிரமணியர் தோன்றி கந்தபுராணம் ஏற்படவேண்டிதாயிற்று என்றுமே கதைகள் இருக்கின்றன.

அன்றியும் பூபாரம் தீர்க்கவும் ராக்ஷதர்களை அழிக்கவும் விஷ்ணு ராமராய்த் தோன்றினார்.

அதுபோலவே பூபாரம் தீர்க்கவும் அசுரர்களை அழிக்கவும் சிவன் சுப்பிரமணியனாகத் தோன்றினார்.

ராமன் பிறப்பதற்காக தேவர்கள் விஷ்ணுவை வேண்டினார்கள். சுப்பிரமணியன் பிறப்பதற்காகவும் தேவர்கள் சிவனை வேண்டினார்கள். ராமன் ராக்ஷதர்கள் என்பவர்களைக் கொன்றான். சுப்பிரமணியன் அசுரர்கள் என்பவர்களைக் கொன்றான். ராமன் ராக்ஷதர்களைக் கொல்லும்போது (மூலபலம்) கொல்லக்கொல்ல உற்பத்தியாகிக் கொண்டே வந்தன. சுப்பிரமணியன் அசுரர்களைக் கொல்லும்போது கொல்லக்கொல்ல அசுரர்கள் தலைகள் முளைத்துக்கொண்டே வந்தன.

ராமன் பெண்ஜாதி சீதை ஒரு வளர்ப்புப்பெண். சமுத்திரத்தில் கண்டெடுக்கப்பட்டவள். சுப்பிரமணியன் பெண்ஜாதியும் ஒரு வளர்ப்புப் பெண். வள்ளிச்செடிக்கடியில் கண்டெடுக்கப்பட்டவள்.

சைவத்துக்கும் வைணவத்துக்கும் இனியும் அனேக விஷயங்களில் கடவுள்களைப்பற்றிய கதைப்பொருத்தங்கள் காணலாம்.

அதுபோல சைவ வைணவ ஆச்சாரியார்கள் விஷயங்களிலும், சைவத்துக்கு நாயன்மார்களாகவும் வைணவத்துக்கு ஆழ்வாராதிகளாகவும், ஏற்படுத்தப்பட்டிருப்பதோடல்லாமல் பல பக்தர்களையும் அவர்கள் செய்த காரியங்கள் அதன் பயனாய் அவர்கள் அடைந்த முக்திகள் ஆகிய விஷயங் களிலும் ஒன்றுபோலவே கதைகள் கற்பிக்கப்பட்டிருப்பதையும் காணலாம்.

வைணவ பக்தர்கள் விஷயத்துக்கு பக்த லீலாமிருதம் என்னும் புத்தகம் போலவே சைவபக்தர்கள் விஷயத்துக்கு பெரிய புராணம் என்னும் புத்தகமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வைணவ பக்தரில் ஒரு குயவர் இருந்தால் சைவ பக்தரிலும் ஒரு குயவர் இருக்கிறார். எப்படி எனில் வைணவக் குயவர் கோராகும்பராய் இருந்தால் சைவக்குயவர் திருநீலகண்டராய் இருக்கிறார்.

இரு குயவ பக்தர்களுடைய கதையும் ஒன்றுபோலவே அதாவது கோராகும்பாரும் தன் பெண்ஜாதியுடன் பேசாமல் இருந்து கடைசியாக மகாவிஷ்ணுவே இருவரையும் பேசும்படி செய்து சேர்த்து வைக்கிறார்.



திருநீலகண்ட குயவனாரும் தன் பெண்ஜாதியோடு பேசாமல் இருந்து கடைசியாக சிவபெருமான் வந்தே இருவரையும் பேசும்படி செய்து சேர்த்து வைக்கிறார்.

மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பு என்பதிலும் வைணவ மதத்துக்கு சோக்கமாலா என்கின்ற தீண்டாத ஜாதி பக்தர் ஒருவர் இருந்து அவரைக் கோவிலுக்குள் விடாமல் தடுக்கப்பட்டடு கனவுகண்டு கடைசியாக விஷ்ணு வந்து அழைத்துப்போகிறார்.

சைவத்திலும் தீண்டப்படாத வகுப்புக்கு நந்தன் என்பதாக ஒருவர் இருந்து பரமசிவன் வந்து கனவில் சொல்லி சாமி தரிசனம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இரண்டு மத புராணங்களிலும் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் ஒரே மாதியான உயர்வும் மற்றவர்களுக்கு இழிவும் ஏற்படுத்தப் பட்டிருப்பதோடு ஜாதி பாகுபாடுகளைப்பற்றி ஒரே மாதிரியாகவே குறிப்பிட்டு பலப்படுத்தி இருக்கிறது.

இவற்றுள் சைவத்தைப் பார்த்து வைணவர்கள் காப்பி அடித்தார்களா? அல்லது வைணவர்களைப் பார்த்து சைவர்கள் காப்பி அடித்தார்களா? என்பது ஒரு ஆராய்ச்சி வேலையாய் இருக்கலாம்.

அதில் பிரவேசிக்க நமக்கு இஷ்டமில்லை. ஏனெனில், தமிழ்நாட்டில் தான் சைவத்தைப்பற்றி பிரபலமாய் பேசப்படுகின்றதே ஒழிய மற்றபடி இந்தியாவின் வடபாகம் முழுவதும் ஆந்திர தேசம் உள்பட வைணவமே மேலோங்கி இருக்கிறது. வடநாட்டில் வைணவம் என்றால் தான் மாம்சம் சாப்பிடாதவர் என்று அருத்தமாகும்.

ஆகையால் இவை இரண்டிற்கும் மதக் கிரந்தங்கள், மதக்கதைகள், மதபக்தர்கள், மதக்கடவுள்கள் என்பவைகளில் ஒன்றை ஒன்று காப்பி அடித்தோ அல்லது இருவரும் ஒன்றாய் உட்கார்ந்து கூடிப்பேசியோ ஒரு முடிவுக்கு வந்துதான் இப்பெரும் புளுகு மூட்டைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது அறியக் கிடக்கின்றது.

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - ஆகஸ்ட்டு 1935**



RangaRakes tamilnavarasam.com

# கோர்ட்டில் பிரமாணம்

**– சித்திரபுத்திரன்**

**மேஜிஸ்ட்டேட்:** (சாக்ஷியைப் பார்த்து) உன் பேரன்ன?

**சாக்ஷி:** என் பேர் சின்னசாமிங்கோ.

**மே:** உன் தகப்பன் பேர் என்ன?

**சா:** என் தகப்பன் பேர் பெரியசாமிங்கோ.

**மே:** உன் வயது என்ன?

**சா:** என் வயசு 36ங்கோ.

**மே:** உன் மதம் என்ன?

**சா:** இந்து மதமுங்கோ.

**மே:** உன் ஜாதி என்ன?

**சா:** சாதியா?

**மே:** ஆமா.

**சா:** சாமி குடியான சாதிதாங்கோ.

**மே:** சரி, சத்தியமாய் சொல்கிறேன் என்று சொல்லு.

**சா:** சத்தியமாச் சொல்றனுங்கோ.

**மே:** நீ இப்ப சத்தியம் செய்திருக்கிறே, உண்மையைச் சொல்ல வேணும், எது உனக்கு நல்லா தெரியுமோ எதை நீ கண்ணில் பார்த்தாயோ அதைத்தான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் தண்டனை கிடைக்கும் தெரியுமா?

**சா:** சாமி அப்படியே ஆகட்டுங்கோ. நான் நேர்லெ பார்த்ததைத்தான் சொல்லணுமே? காதுலே கேட்டதைக்கூட பெரியவங்க சொன்னதைக்கூட சொல்லக் கூடாதா சாமி?

**மே:** நேரில் பார்த்ததை மாத்திரம் சொல்லு தெரிந்ததா?

**சா:** தெரிஞ்சிகிட்டேஞ் சாமி. அப்பளையே (அப்பொழுதே) நாஞ் சொன்னதெயெல்லாம் அடிச்சுப் போடுங்கோ.

**மே:** எதை அடிக்கிறதுடா.

**சா:** சாமி மின்னே நாஞ் சொல்லலல்லே, எம் பேரு எங்கப்பம் பேரு எம்பட வயசு அதெல்லாந்தா.

**மே:** அதையெல்லாம் நான் எதற்காக அடிப்பது?

**சா:** எசமாங்கதா ''நேர்லெ பார்த்ததுதாஞ் சொல்லணு, காதுலே கேட்டது சொல்லக் கூடாது, சத்தியம் பண்ணி இருக்கிறே, பாக்காதது சொன்னா தெண்டிச்சிப் போடுவே'' எண்ணு சொன்னீங்களே. நம்முளுக்கு எனத்துக்குங்கோ அந்த வம்பெல்லாம். எங்கப்பெ என்னைப் பெக்க பாடுபட்டதெ பாத்தனா? எங்கம்மாதா என்னைப் பெத்ததெ பாத்தனா? எம்பட வயசைத்தான் நானு எண்ணிகிட்டு வந்தெனா? நமக்கு நேர்லெ ஒணுந் தெரியாது சாமி. நானும் ஒரு எளவையும் பாக்கில்லை. அடீங்கோ! அடீங்கோ!! எளிதினதை எல்லாம் அடிங்கோ. அல்லாத்தையும் அடிங்கோ.

**மே:** அதைப் பற்றியெல்லாம் ஒன்றும் இல்லை. கேசைப் பற்றித்தான் கேட்கப் போகிறேன். அதைப் பற்றி நீ பார்த்ததைச் சொல்லு.

**சா:** அந்த எளவே நமக்கு வாண்டாம். நம்மொ பாக்காத சங்கதி நம்மாலெ ஒண்ணுஞ் சொல்ல முடியாது. அப்பறம் நாளைக்கு ஒருத்தெ கேப்பானுங்கோ, எதிரி வக்கீலு உனக்கெப்படி தெரியும் எம்பான். அப்பரம் கடசீலே எல்லாம் தகராரா வந்து சேரும். அடீங்கோ! அடீங்கோ!! நாஞ் சொன்னதையெல்லாம் அடீங்கோ!!! இல்லாவிட்டா நாம் போறெ வெளியிலே.

**மே:** டேய் என்ன? ரம்ப குறும்பு பண்ணுகிறாய். கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு, இல்லாவிட்டால் உன்னை தண்டித்து விடுவேன். நீ யென்ன பலே போக்கிரியாய் இருக்கிறயே.

**சா:** இல்லைங்க சாமி! நீங்கத்தானே பாத்ததெச் சொல்லூண்ணு சொன்னீங்கோ!

**மே:** உஸ். கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு.

**சா:** சரி கேளுங்க சாமி. நாம் பாத்ததையும் கேட்டதையும் சொல்லிப்புட்டு போறேன்.

**மே:** இந்தக் கேசில் உனக்கு என்ன தெரியும்?.

**சா:** நான் கடவீதிக்குப் போனே, போனனா? கருப்பன் சுப்பனெ அடிக்கப் போனான். அப்போ கருப்பந் தம்பி ''அடிடா சுப்பனை வந்தது வரட்டும். மேசத்திரட்டு சுப்பய்யனுக்கு 100 ரூ கொடுத்தா பேசாத உட்டுடுறான்'' எண்ணு சொன்னான். கருப்பந் தம்பி ரங்கன் ''அடிடா பார்க்கலாம் மேசத்திரட்டு பொண்டாட்டி பாகிரதிகிட்டே 200 ரூ கொடுத்து உன்னை ஆறு மாசம் தண்டிக்கச் சொல்லி மண்ணு செமக்க வைக்கிறேம் பாரு. மின்ன எத்தனையோ தடவை கொடுத்து இருக்கிறேன்'' எண்ணு சொன்னா. பெரிய காத்தடிச்சது கண்ணுலெ மண்ணை ரப்ராப்லெ இருந்ததுங்கோ.





RangaRakes tamilnavarasam.com

கண்ணெ இருக்கி மூடிக்கிட்டே. அப்பறம் என்ன நடந்ததுண்ணு தெரியாதுங்கோ. இப்ப இரண்டு பேரும் பணத்தை வச்சிகிட்டு எசமாங்க ஊட்டிலே காத்து கிடக்கிறாங்களாம்! அம்புட்டுத்தா எனக்குத் தெரியுஞ் சாமி. இதை எளுதிக்கிங்கோ அப்பறம் என்னமோ பண்ணிக்கிங்கோ.

**மே:** என்ன உளருகிறாய்?

**சா:** நானா உளர்ரே ஊர்லெ சாமி அல்லாரும் அப்படித்தா பேசிக்கிறாங்கோ. என்ன பண்ணுனாலும் மேசத்திரட்டுக்கு பணம் கொடுத்தா உட்டுடுவாங்கோண்ணு கொஞ்சம் பேறா பேசராங்கோ. மேசத்திரட்டு பொண்டாட்டிகிட்டே பணங் கொடுத்தா ஆரையும் தண்டிக்கப் பண்ணலாமுண்ணு பேசராங்க. அம்புட்டுத்தான் நம்முளுக்குத் தெரியும். நா ஒண்ணும் ஒளரலே.

கடசியாக மேஜிஸ்ரேட்டு ஒன்றையும் எழுதிக் கொள்ளாமல் சாக்ஷியை அதட்டினதற்கு ஆகவும் மரியாதை இல்லாமல் பேசினதற்கு ஆகவும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு கேசை ராஜி செய்துவிடும்படி கெஞ்சி சாக்ஷியை வீட்டிற்கு வரச் சொன்னார்.

**குடி அரசு - உரையாடல் - 01.09.1935**



# தர்மராஜ்ய விளம்பரம்

**- யார் எழுதினால் என்ன?**

‘‘சுயராஜ்யம்’’ ‘‘சுயராஜ்யம்’’ என்று இதுவரை சொல்லிக் கொண்டு வந்த காங்கிரஸ்காரர்கள், கொஞ்சகாலமாக, ‘ராமராஜ்யம்’ ‘தர்ம ராஜ்யம்’ என்று மாற்றி மாற்றிச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். கேட்கப் போனால், ‘‘வெறும் பெயரில் என்ன இருக்கிறது. சுயராஜ்யம் என்றும் சொல்லலாம், ராம ராஜ்யம் என்று நாங்கள் சொல்லுவதும் அதுதான். குடி அரசு என்று வேண்டுமானால் நீங்கள் சொல்லிக் கொள்ளுங்கள். பெயரைப் பற்றி நமக்குள் சண்டை வேண்டாம். பின்னால் பார்த்துக் கொள்வோம்’’ என்று எல்லாம் ஒன்றுதான் என்று பொருள்படும்படி பதில் சொல்லுகிறார்கள்.

பெயரில் என்ன இருக்கிறது என்பது நாணயமான பேச்சாகாது. சீவக் கட்டைக்கு விளக்குமாறு என்றும் சொல்லலாம். திருவலகு என்றும் சொல்லலாம்! கோவிலில் கூட்டுவதும் குப்பைதான் என்றாலும் திருவலகு என்று எளிதில் அர்த்தம் விளங்காத பெயரைச் சொல்லி, சீவக்கட்டையின் தகுதிக்கு அதிகப்படியான மதிப்பை அதன் தலையில் ஏற்றி ஏமாற்றுவது சுலபமாயிருந்து வருகிறது. இதைப் போலவே, பார்ப்பான் ஐயனாகிப், பூசுரனாகி, மனிதத் தன்மையில் இழி நிலையிலிருந்து கடவுட் தன்மையை எட்டிப் பூலோகக் கடவுள் என்று எல்லாராலும் போற்றி வணங்கப்படுவதற்கு உரியவனாகி விட்டதாகச் சொல்லப்படும்போது, அவன் அடையும் மரியாதை உயர்வு எல்லாம் பெரும்பாலும் பெயர் மாறாட்டத்தால் செய்யப்படும் பித்தலாட்டத்தால் ஏற்படுகிறதே தவிர, வேறு உண்மையுள்ள காரணம் ஒன்றினாலும் அன்று. ‘Give the dog a bad name and hang it’ என்பது இங்கிலிஷ் பழமொழி. நாயைக் கொல்ல நினைத்தால் அதற்கு பைத்தியம் பிடித்துவிட்டது. எல்லாரையும் கடிக்கிறது என்று பெயர் கொடுத்துச் சுட்டுக்கொல் என்பது இதன் பொருள். அவர்களுக்குப் பிடிக்காத ஒருவனை இழிவுபடுத்த வேண்டுமானால், அவனுக்கு நாஸ்திகன், தேசத் துரோகி, சர்க்கார் தாசன் என்ற பட்டங்களை சூட்டுகிறார்கள். சதா காலமும் இப்படியே தூற்றி, ஜனங்கள் நம்பும்படி செய்கிறார்கள். அதைப் போலவே தங்களுக்கு வேண்டிய ஒருவனைப் பெருமைப்படுத்த வேண்டுமானால், அவனுக்கு மகாத்மா, தேசப்பந்து, தீனபந்து, தேச உத்தாரகன், தேசோத்தாரணன் என்ற பெரிய பட்டங்களைக் கொடுத்து, எங்கும், எப்போதும், ஓயாது, கூசாது கூறி வருகிறார்கள். இந்தப் பதங்களில் கடுகளவு உண்மைகூட



RangaRakes tamilnavarasam.com

இல்லையென்று அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும், அவர்களுக்கு அந்தரங்க எண்ணத்தின்படி ஒருவனைத் தூற்றவோ, போற்றவோ, வசதியான காரணம் கற்பித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தினால், மனமறியப் பொய் சொல்லி நம்மை ஏமாற்றி விடுகிறார்கள். தற்காலம் தமிழ்நாட்டிலே, தேச பக்தர்கள் என்று புகழப்படும் ஒரு சில ஆசாமிகளையும் தேசத் துரோகிகள் என்று இகழப்படும் ஒரு சில ஆசாமிகளையும், தினந்தோறும் அவர்கள் தலைமையில் ஏற்படும் புகழ்ச்சிக்கும் அவர்கள் எவ்வளவு தூரம் தகுதியுடையவர்கள் என்பதையும், நாம் மேலேகூறிய மனோதத்துவ நியதிப்படி ஆராய்ந்தால் தான் உண்மை புலப்படும்.

### காங்கிரசின் இலட்சியம்

தர்ம ராஜ்யம் என்று சொல்லப்படுவதுடன், இப்போது ஒரு புதிய கட்சியும் ''தார்மீக தேசீயக் கட்சி'' என்ற திருப்பெயருடன் (Dharmic Nationalist Party) சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டு, பிரசாரம் செய்து வருகிறது. இந்தப் புதிய கட்சி, காங்கிரசுக்குட்பட்டதென்றும் இதன் அங்கத்தினர் எல்லோரும் காங்கிரஸ்காரர் என்றும் தேசத்தில் உள்ள சனாதனிகள் எல்லோரையும் காங்கிரசில் சேர்ப்பதே இதன் நோக்கமென்றும், இக்கட்சி ஸ்தாபகர்கள் சொல்லி வருகின்றனர். சனாதனிகளைக் காங்கிரசில் சேர்ப்பதன் உட்கருத்து, காங்கிரஸை முற்றிலும் சனாதன சபையாகச் செய்து, பார்ப்பன ஆதிக்கத்திற் குட்படுத்தவும், அதில் தற்போது கிளர்ச்சி செய்து வலுப்பெற்று வரும் சோஷலிஸ்ட் (அபேதவாதக்) கட்சியை அடக்கி ஒழிக்கவுமேயாகும். தீண்டாமை விலக்கு முதலிய போலிக் கிளர்ச்சியைக் கண்டு விலகிப் பயந்திருக்கும், சில வைதீகர்களுக்கு, ''நீங்கள் எங்கள் ஹரிஜனப் பிரசாரத்தைக் கண்டு மயங்க வேண்டாம். அது வெறும் வாய்ப் பேச்சு வேஷம். சன்னாசியின் விஷயத்தில் நாங்கள் நடந்து கொண்டதை இது சம்பந்தமாக காந்தியாரின் பேச்சை பாருங்கள். வர்ணாஸ்ரம தர்மத்தை எப்படியும் நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம். ஆகையால் நீங்கள் எல்லோரும் காங்கிரஸில் சேர்ந்து எங்களுக்குப் பக்கபலமாயிருக்க வேண்டும்'' என்று தைரியஞ் சொல்லி வைதீகர்களைச் சேர்த்துக் கொள்வதற்கென்றே இந்தப் புதிய கட்சி ஏற்பட்டிருக்கிறது.

சுயராஜ்யம், ராமராஜ்யம், தர்மராஜ்யம் ஆக மாறியதன் ரகசியத்தையும் இந்த மாறுதலால் விளையப் போகும் நன்மை தீமைகளையும் பற்றிச் சிறிது ஆராய்வது அவசியமாகும்.

### சுதந்தரப் போர்

1857 ஆம் வருஷத்தில் இந்த நாட்டின் விடுதலைக்காக ஒரு துணிகரமான முயற்சி செய்யப்பட்டது. சில சிற்றரசர்களும் சேனைத் தலைவர்களும் சேர்ந்து, இந்தியாவிலிருந்து இங்கிலீஷ்காரரை ஓட்டி விடுவதென்று தீர்மானித்து தைரியமாகச் சண்டை ஆரம்பித்தனர். சண்டை ஆரம்பத்திலேயே, இந்தியாவின் பழய தலைநகராகிய டெல்லி, கலகக்காரர்கள் கைவசமாயிற்று. ஆறு மாதம் வரை டெல்லி கலகக்காரர் ஆட்சியில் இருந்தது. முடிவில் முயற்சி வெற்றியடையவில்லை. கலகக்காரர் தோற்றனர். இங்கீலிஷ் ஆட்சி முன்னிலும் பலமாக ஸ்தாபிக்கப்பட்டுப் போய்விட்டது. தேச சரித்திரத்தில் இந்நிகழ்ச்சி **'இந்திய சிப்பாய் கலகம்'** என்று எழுதப்பட்டது தான் மிச்சம். அப்போது செய்யப்பட்ட சிப்பாய் கலகம் அல்லது சுதந்தரப் போர் எதற்காகச் செய்யப்பட்டது என்று ஆராய்ந்து பார்த்தால், சுயராஜ்யமோ, தர்மராஜ்யமோ ஸ்தாபிப்பதற்கல்ல என்பது விளங்கும். புதிதாய் வந்த இங்கிலீஷ் கம்பெனி ஆட்சிக்குப் பலம் பொருந்திய விரோதிகள் பலர் ஏற்பட்டனர். இவர்கள் எல்லோரும் சேர்ந்து எல்லோருக்கும் எதிரியான வெள்ளைக்காரரைத் துரத்திவிட முடிவு கட்டினர். வெள்ளைக்காரனைத் துரத்திய பின் என்ன செய்வது என்று தீர்மானிக்கவில்லை. ஆகையால் தான், டெல்லியைக் கைப்பற்றியவுடன் எந்த ராஜ்யத்தை ஸ்தாபிப்பது என்று தோன்றாமல், அங்கிருந்த மொகலாய வம்சத்தைச் சேர்ந்த ஒருவனைப் பாதுஷாவாக்கிப் பழய மொகலாய ராஜ்யம் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டதாக விளம்பரப்படுத்தினர். அதிலிருந்து ஆறுமாதம் வரை டெல்லிக் கோட்டையின் மேல் பறந்த கொடி சுயராஜ்ய, தர்மராஜ்ய, ராமராஜ்யக் கொடியல்ல; பழய மொகலாய சக்ரவர்த்திகளின் கொடி.

### காங்கிரசின் தோற்றம்

இதற்கப்புறம் 30 வருஷங் கழித்து ஒரு ஆங்கிலக் கனவானின் (A.O. Hume) பெரு முயற்சியால் ஏற்பட்ட காங்கிரஸின் நோக்கமும் சுயராஜ்யம் அல்ல. இங்கிலிஷ் ஆட்சியில் சில சீர்திருத்தங்கள் பெறுவது குடியேற்ற நாட்டு அந்தஸ்து பெறுவது என்று தான் இருந்து வந்தது. சுயராஜ்யம் என்ற பதம் 1906ல் தான் முதலில் உச்சரிக்கப்பட்டது. இந்த 30 வருஷங்களில் அதன் பொருள் இன்னதென்று தெளிவாக நாளது வரை சொல்லி விளக்கப்பட வில்லை. சுயராஜ்யம் பூரண சுயராஜ்யமென்று விரிந்ததே ஒழிய, சுயராஜ்யத்தின் அடிப்படையான தத்துவங்கள்கூட எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய வகையில், இன்னும் விளங்கப்படவில்லை. இவ்வாறு மூடு மந்திரமாக விருந்த சுயராஜ்யம் என்பது, இப்போது ராமராஜ்யம் தர்மராஜ்யம் என்று பேசப்பட்டு வருவதிலிருந்து, காங்கிரஸ்காரர் கோரும் சுயராஜ்யத்தின் யோக்கியதை கொஞ்சம் கொஞ்சமாக வெளியிடப்பட்டு வருகிறது.

**சுயராஜ்யம்** என்ற வார்த்தைக்குச் 'சொந்த அரசன் ஆளும் இடம் அல்லது நாடு' என்றுதான் அர்த்தம். அதாவது நமக்குள் ஒரு அரசனை (இந்துவோ, மஹம்மதியனோ, 1857-ல் மொகலாய வார்சு முன் நின்றது) ஏற்படுத்தி நம்முடைய நாட்டை, நம்முடைய அரசனைக் கொண்டு ஆள்வது என்றுதான் தாராளமாய் பொருள் கொள்ளலாம். எப்படியாயினும், சுயராஜ்யம் என்ற சொல்லில் கோலாட்சி தான் குறிக்கப்படுகிறதேயல்லாமல், குடியாட்சி குறிக்கப்படுவதாகக் கொள்வதற்கில்லை. சுயாட்சி என்று



RangaRakes tamilnavarasam.com

சொன்னால், நம்முடைய குடிகள் ஆட்சி, அரசர் ஆட்சி என்ற இரண்டிற்கும் பொருந்தும் ராஜ்யமும் ஆட்சியும் ஒன்று என்றே வழக்கத்தில் பேசப்பட்டு வருவதிலிருந்து சுயராஜ்யம் என்ற லக்ஷியத்தின் முழு விவரத்தையும் பெரும்பாலார் உணரவில்லை யென்று தான் சொல்ல வேண்டும்.

ஆயினும் இந்த 'சுயராஜ்யம்' என்று அர்த்தமில்லாத ஒரு வார்த்தையானது, காந்தியின் காங்கிரஸ் நிர்வாகத்தின்போது, பெரியதோர் மந்திர வார்த்தையாகிக் கேட்ட மாத்திரத்தில், சாமான்ய ஜனங்கள் என்னென்னவோ பகற்கனவுகள் காணும்படி செய்து வந்தது. ''சுயராஜ்யம் வந்ததும், நாட்டில் பொன்னும் பொருளும் மலிந்து விடப்போகிறது. பாலும் தேனும் பாய்ந்தோடப் போகிறது. அணாவிற்கு ஆறு படி அரிசி விற்கப் போகிறது; ஒருவரும் கஷ்டப்பட வேண்டியதில்லை, வரியில்லை, வழக்கில்லை, சட்டமில்லை, தண்டனையில்லை, கட்டுப்பாடில்லை'' யென்று தேசபக்தர்கள் கூறி வந்தார்கள். அதற்கு ஏற்றாப்போல் காந்தியும், ''ராட்டையை எடு, ரட்டைக் கட்டு; வீட்டை மெழுகு, விளக்கெண்ணை விளக்கையேற்று, லக்ஷிமி வரப் போகிறாள்'' என்று நம்பிக்கையோடு உபதேசம் செய்து வந்தார். இதையெல்லாம் கவனிக்கும்போது, சுயராஜ்யம் என்று உரு ஜபித்தவர்களில் ஒரு சிலராவது அதன் உண்மைத் தன்மையென்ன, அதனால் என்ன மாறுதல் எவ்வளவு தூரம் ஏற்படக்கூடும் என்பதை உணர்ந்து பேசினார்கள் என்று சொல்ல முடியுமா என்று கேட்கிறோம்.

## ராமராஜ்யம்

ஒத்துழையாமை இயக்கம் மும்முரமாய் நடத்தப்பட்ட போதெல்லாம் சுயராஜ்யமே குறிக்கோளாக இருந்து. இரண்டு முறை சட்ட மறுப்பு இயக்கம் தோல்வியுற்று, ஒத்துழையாமையே செத்தொழிந்த பிறகு, ராமராஜ்யம் தர்மராஜ்யம் என்று பகிரங்கமாக இப்போது சொல்லப்பட்டு வருவதைக் கவனிக்க வேண்டும். முதன்முதலில் காந்தியார் ஒத்துழையாமை ஆரம்பித்த போது மகம்மதியரும் பெரும்பாலும் அவ்வியக்கத்தை ஆதரித்து வந்தனர். (அப்போது அவர்களுக்குக் கிலாபத்துப் பித்தும் அதிகமாயிருந்தது. இந்து மகாசபையும் இப்போதிருப்பதைப்போல அவ்வளவு பிரபலமாயில்லை) ஆகையால், அப்போது ராமராஜ்யம் தர்மராஜ்யம் என்ற பேச்சு வெளியில் வரவில்லை. வந்திருந்தால் மகமதியர்கள் அதன் தலையில் அடித்திருப்பார்கள். பிற்பாடு மகமதியர் காங்கிரசிலிருந்து பிரிந்து நின்றனர். இரண்டாவது, மூன்றாவது சத்தியாக்கிரஹத்தில் மகமதியர் கலந்து கொள்ளவில்லை. காங்கிரஸ், பெரும்பாலும் இந்துக்கள் சபையாக மாறிய பிறகுதான், ராமராஜ்யம் என்ற பேச்சும் கிளம்பியது. இனிமேல் மகமதியரைப் பற்றிக் கவனிப்பதில் பயனில்லை. அவர்கள் (3ந் தரம், 4ந் தரம் ஆளுகளைத் தவிர மற்றவர்கள்) காங்கிரசில் சேர மாட்டார்கள் என்று தெரிந்துவிட்டதாலும், இனிமேல் ஏமாற்றப்பட வேண்டியவர்கள் இந்து சமுதாயத்தின் பாமர மக்களேயென்று தீர்மானமாகத் தெரிந்து விட்டதாலும் இந்து சமூகப் பாமரர்களை, அவர்களது கடவுள் பெயராலும், கடவுள் அவதாரங்களான இராமன், கிருஷ்ணன் பெயராலும் ஏமாற்றுவது எளிதெனக் கண்டதாலுமே, காந்தியும் அவரது சீடர்களும் பகிரங்கமாக ''நாம் கோருவது ராமராஜ்யம், தர்மராஜ்யம்'' என்று சொல்லத் துணிந்தார்கள்.

## ராமராஜ்யத்தின் யோக்கியதை

ராமாயணம் என்பதில் வெகு தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ராமனுடைய ராஜ்யத்தில் சூத்திரன் ஒருவன் தவம் செய்ததால் பிராமணச் சிறுவன் ஒருவன் அகால மரணமடைந்ததாகவும், தங்களுக்கு உரிய தொழிலைச் சூத்திரன் செய்ததால் தான் தங்கள் பிழைப்புக்கு ஆபத்து வந்தது (சிறுவன் இறந்தான்) என்று இராமராஜ்யத்தில் உள்ள பிராமணர்கள் அரசனாகிய இராமனிடம் பிராது செய்ததாகவும், பிராது விசாரித்து நீதி செலுத்துகிற முறையில் இராமன் அந்தச் சூத்திரனைத் தவம் செய்த தப்பிதத்திற்காகத் தலையைக் கொய்து தர்மம் நிலை நிறுத்தினான் என்றும் ராமாயணத்தில் விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ராமன் பெரிய வர்ணாச்சிரமக்காரன் என்றும், அவனது ஆட்சி முறை வர்ணாச்சிரம பாதுகாப்பு என்றும் பிராமண பக்தனென்றும் யாரும் சந்தேகமறத் தெரியக் கூடும். இவ்வாறு நீதி புரிந்து ஆட்சி செய்த இராமனுடைய ஆட்சியைப் போல் ஆட்சி முறை ஏற்படுத்துவதுதான் காங்கிரசின் நோக்கம். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம் என்று இப்போது பகிரங்கமாகவே சொல்லப்படுகிறது. காங்கிரஸ் கோரும் இந்த இராமராஜ்யத்தின் கீழ் நாட்டில் உள்ள மக்கள் எல்லோரும் சமத்துவமும், சமஉரிமையும், சுயமரியாதையும் பெற்று, ஜாதி வித்தியாசக் கொடுமைகளினின்றும் நீங்கிச் சமத்துவம் பெற்று சுகம் பெறக் கூடும் என்று இன்னும் நம்பிக்கை வைத்திருக்கும், பார்ப்பனரல்லாதாரின் நம்பிக்கை பெரிதா அல்லது அவர்களின் மூளை கெட்ட தன்மை பெரிதா என்பதை வாசகர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

## தர்மராஜ்யத்தின் யோக்கியதை

தர்ம சாஸ்திரங்கள் என்பனவற்றில் மிகத் தெளிவாகவே சொல்லப் பட்டிருக்கிறது. புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்திலே, அநாதி வேதங்களால் சொல்லப்பட்டதும், தர்மம் குலைந்து அதர்மம் தலையெடுத்த காலங்களிலெல்லாம் அவதாரஞ் செய்து துஷ்ட நிக்கிரகமும் சிஷ்ட பரிபாலனமும் செய்து தர்மத்தை நிலைநாட்டிய கடவுளாலேயே ஏற்படுத்தப் பட்டதுமாகிய வர்ணாச்சிரம தர்மம் என்றும் நிலை பெற்று அமுல் நடத்தவும், தர்ம தேவதை நான்கு பாதங்களிலும் நடமாடவும், மனுமுறைப்படி மன்னன் கோலோச்சவும், மக்கள் தங்கள் குலாசார சாதியாசாரப்படி தங்கள் கடமைகளைச் செய்யவும், சூத்திரன் மற்ற மூன்று வர்ணத்தாருக்கும் ஊழியஞ் செய்து மறு ஜன்மத்தில் வைசியனாகப் பிறக்கலாம் என்ற நம்பிக்கையில் களித்திருக்கவும், வைசியன் தனக்கு விதிக்கப்பட்ட தொழிலை நடத்தி அரசனுக்கு வேண்டும்



RangaRakes tamilnavarasam.com

போது தன தானியாதிகளைக் கொடுத்து உதவுவதும், பிராமணர்களுக்குத்தான தர்மங்களை விசேஷமாக செய்து அவர்களோடு சிற்சில சமயங்களில் 'மனவாள்லு' என்று சொந்தம் பாராட்டிக் கொள்ள உரிமை பெறுவதுமே தன் கடமை யென்று கருதி, அவ்வாறு நடப்பதன் மூலம் அடுத்த ஜன்மத்தில் க்ஷத்திரியனாகப் பிறக்கலாம் என்று நம்பிக்கை கொண்டு சந்தோஷப்படவும், க்ஷத்திரியன் பிராமணருக்கு வேண்டிய சௌகரியங்களைத் தேடிக் கொடுத்து, சிஷ்டபரிபாலனஞ் செய்வதும், வேத வித்தகர்க்கு ஏற்படும் விபத்துகளைத் தடுத்து அவர்களின் விரோதிகளான துஷ்டர்களை நிக்கிரஹஞ் செய்வதுமே தன் குலதர்மம் என்று எண்ணி நடக்கவும், அவ்வாறு நடப்பதின் நிமித்தம் மறு ஜன்மத்தில் புனிதமான பிராமண ஜன்மம் பெறலாமென்று எண்ணி மனங் களித்திருக்கவும், அரசன், தினம் லக்ஷம் பிராமண போஜனம் செய்விப்பதாலும், அநேக யாகங்கள் செய்து வைப்பதாலும் 100 அஸ்வமேத யாகம் செய்து முடிப்பதாலும், இந்திரப் பதவி பெற்று, மேனகை ஊர்வசி முதலிய தேவமாதர்களைக் கூடிச் சதாகாலம் இன்புற்றிருக்கலாமென ஆசை கொண்டு நடக்கவும், பிராமணனோ, அரசனுக்கு துணையாக அறிவுப் பொக்கிஷமென்று இருந்து கொண்டு, புதிது புதிதாகப் புராணங்களையும், ஸ்மிருதி சுருதிகளையும், தர்மசாஸ்திரங் களையும் ஏற்படுத்திக் கொண்டு, நாடு முழுவதும் தங்களது ஏகபோக மான்யமாக அனுபவிக்கவும், அரசனைப் பார்த்து நாட்டைக் கொடு என்றால் நாட்டைக் கொடுக்கவும், மகனை கொடு என்றால் மறுக்காமல் கொடுக்கவும், பெண்டாட்டியை கொடு என்றால் பேசாது கொடுக்கவும் அப்படி நடப்பதுதான் அரச தர்மம் என்றும், அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்று குடிகளும் அவ்வாறே நடக்க வேண்டுமென்றும் தர்ம சாஸ்திரங்களை நாடெங்கும் அனுசரிக்கும்படி பிரசாரம் செய்து தங்கள் இனவிருத்திக்கு உழைப்பது தங்கள் கடமை, குலாசாரம் என்று பிராமணன் நடந்து கொண்டு வரவும், இவ்வாறு நான்கு ஜாதியாரும் வர்ணாச்சிரமத்தைக் கடைப்பிடித்து நடப்பதற்குச் சாதகமான ஆட்சி முறையே தர்மராஜ்யம் ஆகும். அப்போது பசுவும் புலியும் ஒரு துறையில் நீர் குடிக்கும் என்பதில் என்ன சந்தேகம்? இவ்விதமான தர்மராஜ்யத்தை ஏற்படுத்துவதே காங்கிரஸின் குறிக்கோள் என்று இப்போது காங்கிரஸ்காரர் தெள்ளத் தெளியச் சொல்லுகிறார்கள்.

இங்கிலீஷ் அரசாங்கம் இன்று அசைக்க முடியாதபடி பலமாய் இருக்கிற இந்தக் காலத்திலேயே, வாய் கூசாமல் ராமராஜ்யம் தர்மராஜ்யம் ஏற்படுத்தப் போகிறோம் என்று ஒரு கூட்டத்தார் பகிரங்கமாகச் சொல்லத் துணிந்திருக்கிறார்கள் என்றால், இவர்களின் நெஞ்சுத் துணிவை மெச்சுவதா? அல்லது இதைக் கேட்டுக் கொண்டு, இவர்களுக்கு ஆதரவாயிருந்து கூடச் சேர்ந்து கோவிந்தா போடுகிற ''வானர சைன்யம்'' என்று பட்டம் பெற்று வருகிற பாமர மக்களின் முட்டாள்தனத்திற்கு வருந்துவதா என்று தெரியவில்லை.

குடி அரசு - கட்டுரை - 01.09.1935



# வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்றால் நம் பார்ப்பனர்களுக்கு இழவு சேதிகள் போல் காணப்படுகின்றது என்பது நமக்குத் தெரியும்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கோருவதே பார்ப்பனரல்லாத சமூகங்களின் (ஜஸ்டிஸ் கட்சி) அரசியல் கிளர்ச்சியாகவும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்ப்பதையே பார்ப்பன சமூக (காங்கிரஸ் கட்சி) அரசியல் கிளர்ச்சியாகவும் இருந்து வருகின்றது என்பதை அனேக ஆதாரத் துடன் எடுத்துச் சொல்லலாம்.

இன்று இந்நாட்டில் மதங்களின் பேரால் உள்ள ஸ்தாபனங்களான இந்து, முஸ்லீம், கிறிஸ்துவ, சீக்கிய ஸ்தாபனங்களும்,

வகுப்புகளின் பேரால் உள்ள மேல் ஜாதி, நடு ஜாதி, கீழ் ஜாதிகள் என்று சொல்லப்படும் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லப்பட்ட வகுப்பு ஸ்தாபனங்களும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையே கண்ணாகக் கொண்டு கிளர்ச்சிகள் செய்வதை யாரும் மறுக்க முடியாது.

அன்றியும், வெள்ளையாய்ச் சொல்ல வேண்டுமானால் காங்கிரஸ், ஜஸ்டிஸ், சுயமரியாதை, மிதவாதம் முதலாகிய கட்சிகள் என்பவைகளில் சிலது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்த்தும், சிலது ஆதரித்தும், கிளர்ச்சி செய்வதைத்தான் முக்கியமாகவும் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகவும் கருதி வந்திருக்கின்றன, கருதியும் வருகின்றன.

இவ்வளவோடு மாத்திரமல்லாமல் இவைகளில் பெரும்பான்மையான ஸ்தாபனங்கள்,

''வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை இருப்பதாய் இருந்தால் பிரிட்டிஷ் ஆட்சியே ஏகபோகமாய் இருக்கட்டும்'' சிலதுகள் ''வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை இல்லாமலிருப்பதினால் பிரிட்டிஷ் ஆட்சியே என்றென்றும் இருப்பது நலம்'' என்றும் கூப்பாடு போடுவதைப் பெரும் பெரும் தேசாபிமானிகள் முழுச் சுதந்திரவாதிகள், சமதர்மவாதிகள் என்பவர்கள் வாயாலேயே காது செவிடு பட கேட்டு வருகிறோம்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்காகவே ஏற்பட்ட கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியானது, அதை ஏற்படுத்தியவர்கள் எவ்வளவோ பெரிய தன்னல



RangaRakes tamilnavarasam.com

மறுப்புள்ளவர்களாகவும், தேசாபிமானமுள்ளவராகவும், சமூகாபிமான முள்ளவராகவுமாய் இருந்தும், பார்ப்பனர்களும் அவர்களது ஆதிக்கமுள்ள காங்கிரசும் அந்த (ஜஸ்டிஸ்) ஸ்தாபனத்தை எதிர்த்து, அதன் தலைவர்களைப் பற்றி விஷமப்பிரசாரம் செய்து அத்தலைவர்கள் மீது பாமர மூட ஜனங்களுக்கு ஆத்திரமும் துவேஷமும் ஏற்படும்படியாகச் செய்துவிட்டதோடு அத்தலைவர் களைக் கண்ட கண்ட இடத்தில் வையவும், அடிக்கவும் அவர்களது வீடுகளுக்குள் புகுந்து கலகங்கள், பலாத்காரமான காரியங்கள், கொள்ளைகள் முதலிய காரியங்கள்கூட செய்யும்படியாகவும் செய்து விட்டதால் அக்கட்சித் தலைவர்கள் மாத்திரம் அல்லாமல் மற்ற அபிமானிகளும், ஆதரவாளிகளும் சர்க்காருடைய தயவை எதிர்பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதோடு, சர்க்கார் சம்மதப்பட்டால்தான் பார்ப்பனர்கள் எதிர்ப்பை சமாளித்து தாங்கள் கோரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையைப் பெற்று சமதானத்தோடு வாழலாம் என்கின்ற நிலைமை பார்ப்பனரல்லாத தலைவர்களுக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் ஏற்பட்டுவிட்டதால், சர்க்கார் தயவாலேயே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை பெற்று சமாதானமாய் வாழ வேண்டியதாய்விட்டது.

இன்றும் நாளையும் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி குறையாகக் கூறப்படும் குற்றமெல்லாம் ''ஜஸ்டிஸ் கட்சியார் சர்க்கார் தயவு பெறப்பாடுபடு கிறார்கள்'' ''சர்க்காருக்கு அனுகூலமாக இருக்கிறார்கள்'' ''சர்க்கார் தாசர்களாக இருக்கிறார்கள்'' என்று சொல்லுவதைத் தவிற வேறு ஒன்றும் முக்கியமாய் காணப்படவில்லை.

இப்படிச் சொல்லப்படுவதால் ஜஸ்டிஸ் கட்சியாரோ, அல்லது அவர்களை ஆதரிக்கும் சுயமரியாதை இயக்கத்தார்கள் முதல் மற்ற எந்தக் கட்சியாரோ, வருத்தப்பட வேண்டியதில்லை என்பதோடு, அவமானமாகக் கருதவோ அல்லது அதை மறுக்கவோகூட யாரும் முயற்சிக்கவும் வேண்டியதில்லை என்பதே நமதபிப்பிராயம்.

ஏனெனில் இந்த நாட்டில் ஒரு மனிதன் அல்லது மனித உடல் பெற்ற எந்த ஜீவனும் பார்ப்பானுக்கோ, பார்ப்பன மதத்துக்கோ, பார்ப்பன சாஸ்திரத்துக்கோ, பார்ப்பனர்களால் கற்பிக்கப்பட்ட கடவுளுக்கோ அடிமையாய் - ஆதரவாளியாய் - அனுதாபியாய் இருந்து கொண்டு உயிர் வாழ்வதைவிட, சர்க்கார்க்கு அரசாங்கத்திற்கு அனுகூலியாகவோ, தாசராகவோ இருப்பது கீழானதோ, இழிவானதோ ஆன காரியம் அல்ல என்பதோடு பல பங்கு மேலானது என்று கூடச் சொல்லலாம்.

இன்றைய தேச பக்தர் - காங்கிரஸ் பக்தர் - பிராமண பக்தர் - மத பக்தர் ஆகியவர்கள் வாழ்வைவிட அரசாங்க பக்த வாழ்வு ஒரு விதத்திலும், நாணையமற்றதாகவோ சுயமரியாதை அற்றதாகவோ, யோக்கியமற்ற தாகவோ ஒரு இடத்திலும் நாம் ஒரு நாளும் காண முடியவில்லை.



இன்றைய உலக, சமுக வாழ்வு முறையில் ஒரு மனிதன் ஒரு அரசாட்சியின் கீழ் பிரஜையாய் இருப்பது எவ்வளவு அவமானகரமான வாழ்வு அல்லவோ அது போல்தான் ஒழுங்குக்கு கட்டுப்பட்ட எந்த அரசியல்வாதியும் ஒரு அரசாங்கத்துக்கு அனுகூலமாகவும் அதனுடைய சட்டதிட்டங்களுக்கு அடங்கினவனாகவும், அரசாங்க விஸ்வாசனாகவும், அரசாங்க பதவியாளனாகவும் இருப்பது குற்றமில்லை என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லுவோம்.

ஆனால் பார்ப்பனர்களுக்கு அடிமையாக, பார்ப்பன தாசராக, பார்ப்பனர்களையும், அவர்களது ஆதிக்கம் நிலைநிற்கத்தக்க கொள்கைகளையும் ஆதரிக்கும் குலாமாக, தாசராக இருப்பது என்பது மாத்திரம் ஒரு நாளும் நீதியோ, சுயமரியாதையோ, வீரமோ, பரிசுத்த ரத்த ஓட்டமுள்ள சரீரம் கொண்ட ஜீவத் தன்மையோ ஆன காரியமாக ஆகவே ஆகாது.

இன்று பார்ப்பனர்கள் பின்னால் அவர்கள் தயவால் பிழைப்பை ஏற்படுத்திக் கொண்ட காரணத்தால் அவர்களது வாய்களாய், உதடுகளாய், அடிமைகளாய், அவர்களைச் சுவாமி என்று கூப்பிட்டுக் கொண்டு, முன்னோடும் பிள்ளைகளாய் திரியும் மானங்கெட்ட மக்கள் எத்தனையோ பேர், சிறிதும் வெட்கமில்லாமல் தங்களைத் தேசபக்தர்கள் - தேசீயவாதிகள் தேசீய வீரர்கள் என்று சொல்லிக் கொண்டு வயிறு வளர்க்கும் அவமானத்தைவிட- இழிவைவிட அரசாங்கத்துக்கு தாசராய் இருந்து வயிறு வளர்ப்பதோ, பெருமை பெறுவதோ ஒரு நாளும் ஒரு கடுகளவும் இழிவான - அவமானமான காரியம் ஆகாது என்பதுடன் அதற்காக எந்தப் பார்ப்பனரல்லாதாரும் பின் வாங்கவோ மறுக்கவோ முயற்சிக்க வேண்டியதில்லை என்றும் சங்கநாதம் செய்வோம்.

பிழைக்க வேறு வழியில்லாமலும், மானம் ஏற்படக் கூடிய ரத்த ஓட்ட மில்லாமலும் திரிகின்ற அனேக காலிகள் தங்களுக்குப் பேச சக்தி இல்லாத காரணத்தாலும், நியாயமான காரணங்களைச் சொல்லி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் முதலிய பார்ப்பனரல்லாதார் கட்சிக் கொள்கைகளை மறுக்க யோக்கியதை இல்லாததாலும் ''ஜஸ்டிஸ் கட்சி சர்க்கார் தாசர் கட்சி, அரசாங்க குலாம் கட்சி, வெட்கங் கெட்ட கட்சி, மானம் கெட்ட கட்சி'' என்று மடத்தனமாகவும், அயோக்கியத்தனமாகவும் குறைக்கிறார்கள். இவர்களது குறைப்புகளை கிராமப்போனில் பிடித்து மெஷின்களில் வெளியிடுவது போல் பார்ப்பனப் பத்திரிகைகள் விளம்பரப்படுத்தி பார்ப்பனரல்லாத கட்சியார் மீது துவேஷத்தை உண்டாக்கி அதன் பயனை அனுபவிக்கின்றன.

இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் காரணமாக தோழர்கள் காந்தியார், டி. பிரகாசம், சி. ராஜகோபாலாச்சாரி முதலிய பார்ப்பன தாசரும், பார்ப்பனரும் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியைவிட, பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் ஆட்சியே மேலானது என்று சொல்லி ''அரசாங்கத்தாசராகவும், குலாம்''



RangaRakes tamilnavarasam.com

களாகவும் ஆவதே மேல் என்று கருதி காங்கிரஸ் பக்தர்களை ‘‘குலாம்’’ வேலைக்குப் போக இன்று உசுப்படுத்தி விட்டிருக்கவில்லையா?

இனிமேல் இக்கூட்டத்தார் எவ்வளவு விஷமம் செய்தாலும், எவ்வளவு சூழ்ச்சி செய்தாலும் அரசாங்கத்துக்கு எவ்வளவு அடி பணிந்தாலும் அவை ஒரு சிறிதும் பயன்படப் போவதில்லை என்பது நமது உறுதி. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை என்பது இனி நம் நாட்டில் இராமாயணக் கதையில் ‘‘வாலியை எதிர்ப்பவனுடைய பலம் எல்லாம் வாலிக்கே வந்து சேரும்’’ என்று சொல்லப்பட்டது போல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எவ்வளவுக்கு எவ்வளவு எதிர்க்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அக் கொள்கைக்கு பலமும் செல்வாக்கும் பலப்பட்டுக் கொண்டேதான் வருகிறது. வந்து கொண்டேதான் இருக்கப் போகிறது.

தங்களைத் தவிர சமதர்மத்துக்கு வேறு பாஷியக்காரர்கள் இல்லை என்று கருதிக் கொண்டிருக்கிற ஏட்டுச்சுரக்காய் வாதிகளுக்கு வேண்டுமானால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தப்பாக காணப்படலாம். ஆனால் அந்தக் கட்சி கூச்சலளவோடு சரி என்றும், பார்ப்பனர் கொடுக்கும் சபாஷ் பட்டத்தோடும் சரி என்றுதான் சொல்லலாமே தவிற மற்றபடி வகுப்புவாரி முறை சமதர்மத்தில் கல்லெழுத்துப் போல் இடம் பெறத்தான் போகிறது.

மேலும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையானது சென்னை மாகாணத்தில் தமிழ்நாட்டில் மாத்திரமல்லாமல், கர்நாடக நாடு என்னும் மைசூர் ராஜியத்தில் வெகு நாளைக்கு முன்பே ஏற்பட்டு விட்டது. சென்ற வாரத்துக்கு முந்தின வாரத்தில் திருவாங்கூர் ராஜ்ஜியத்திலும் வகுப்புவாரி முறை ஏற்படுத்தப்பட்டாய்விட்டது.

இனி கொச்சி சமஸ்தானத்திலும் அதற்கு வேண்டிய எல்லாக் காரியமும் செய்யப்பட்டாய் விட்டது. புதுக்கோட்டை சமஸ்தானத்திலும் விதை ஊன்றியாய்விட்டது.

இவை தவிர, இதர மாகாணங்களாகிய டெல்லி, பஞ்சாப் முதலிய மாகாணங்களிலும், விதை விதைக்கப்பட்டாய்விட்டது. அரசியல் சீர்திருத்தச் சட்டத்திலும் கிளர்ச்சியோடு பலமாக இடம் பெற்றுவிட்டது.

உலகில் அமெரிக்கா முதலிய குடியரசு நாடுகளிலும் மற்றும் மதம், ஜாதி, தொழில் ஆகியவைகளால் பிரிக்கப்பட்ட நாடுகளிலும் வகுப்புவாரி முறை செல்வாக்குப் பெற்றுவிட்டது.

இனி, இந்தப் பார்ப்பனர்கள் இதற்காக பாடுபடுவது என்பது தங்கள் யோக்கியதையைக் கெடுத்துக் கொள்வதற்காக செய்யப்படும் முட்டாள் தனமான காரியம் என்பதல்லாமல் வேறில்லை.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் குறை கூற நாளாவட்டத்தில் அது விரிவடைகிறதே தவிற இனி ஒரு நாளும் அடங்கப் போவதில்லை.



சென்ற மாதத்தில் நமது மாகாணத்தில் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், ஸ்தல ஸ்தாபன பள்ளிக்கூடங்களுக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறைப்படி சிப்பந்திகள் நியமிக்க உத்திரவு வந்துவிட்டது.

இனி சர்க்கார் சகாயம் பெறும் பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்கும், சிப்பந்திகளுக்கும்கூட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விகிதப்படி சிப்பந்திகள் நியமிக்கப்பட முயற்சிகள் நடக்கிறது. அது கிடைக்கும் வரை யாரும் சும்மா இருக்கப் போவதில்லை.

அவ்வளவு மாத்திரம் தானா என்று பார்த்தால், பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்படும் பிள்ளைகளும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விகித எண்ணிக்கைபடிதான் சேர்க்கப்பட வேண்டும் என்கின்ற நிலை ஏற்பட்டா லொழிய சாந்தி ஏற்படும் என்பதாக நாம் நினைக்கவில்லை.

ஏனென்று கேட்கப்படுமானால் கேவலம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கேட்பதற்காக இந்நாட்டுப் பூர்வீக மக்களும் 100க்கு 90 பாகம் அரசாங்கத்துக்கு வரி செலுத்தும் மக்களும், இந்நாட்டு பார்ப்பன மக்கள் முழுவதும் உயிர் வாழ்வதற்கும் அவர்களது பஞ்சாங்க தர்ப்பைப் புல் தொழிலும் பல்லைக் கெஞ்சிக் கெஞ்சி பிச்சை வாங்கிப் பிழைக்கும் தொழிலிலும் மற்றும் எவ்வளவோ ஈனத் தொழில்களும் ஒழிந்து, இன்று ராஜாக்கள், பிரபுக்கள், மடாதிபதிகள் போல் வாழ்க்கை நடத்துவதற்கு அனுகூலமாய் இருந்து உழைத்து உழைத்து அழுத பார்ப்பனரல்லாத ஏழைப் பாட்டாளி மக்களைக் கெடுக்கவும், இழிவு படுத்தவும், அவர் என்றும் தலை எடுக்காதபடி அழுத்தி வைக்கவும், அவர்களது ஸ்தாபனங்களுக்குத் தொல்லை கொடுக்கவும், அவர்களது தலைவர்களை ஒழிக்கவும், துணிந்து விட்டார்கள் என்றால், இந்த நன்றி விஸ்வாசமில்லாத கூட்டத்தை பழையபடி பஞ்சாங்கம் தர்ப்பைப்புல் பிழைப்புக்குக்கூட இடமில்லாமல் செய்வதில் என்ன குற்றம் என்று கேட்கின்றோம்.

தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களின் சொந்த யோக்கியதையும், பொது யோக்கியதையும் இந்த மாகாணத்தில் யாருக்குத் தெரியாது? அப்படிப்பட்ட அவர் இன்று இந்த மாகாணத்து மக்களுக்கு ஏன்? இந்திய 35 கோடி மக்களுக்கு அரசியல் தலைவராக்கப்பட்டு அவரால் நாக்கில் நரம்பில்லாமலும், ரத்தத்தில் சொரணை இல்லாமலும், நெஞ்சில் பயமில்லாமலும் பேசப்பட்டு, பார்ப்பனரல்லாத மக்கள் இழிவுபடுத்தப் படுவதென்றால் அப்படிப்பட்டவர்கள் விஷயத்தில் அப்படிப்பட்டவர்களுக்கு ஆதரவளித்து வாழ விரும்புகிறவர்கள் விஷயத்தில் ஏன் தாக்ஷண்யம் பார்க்க வேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

இன்றைய தினம் பார்ப்பனர்களை எதிர்க்கவும் அவர்களது யோக்கியதை வெளியாக்கவும் நமக்குத் தக்க சந்தர்ப்பமும், சௌகரியமும் ஏற்பட்டு வருவதற்கு ஆதாரமாய் இருப்பது பார்ப்பனர்கள் நமது



RangaRakes tamilnavarasam.com

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமையை எதிர்ப்பதும் அதன் காரணமாகவே நம் ஸ்தாபனங்களையும், தலைவர்களையும் இழிவுபடுத்துவதும், நம் ஆட்களையே கூலிக்கமர்த்தி நம் மீது ஏவி விடுவதுமேயாகும். ஆகையால் இந்த நிலை, அதாவது இப்பார்ப்பனர்கள் கிளர்ச்சியும் அவர்களது கூலிகளுடைய குலைப்பும் இனியும் நிலைத்திருக்க வேண்டும் என்றே விரும்புகின்றோமே ஒழிய இது அடங்கிவிட வேண்டுமென்று நாம் உண்மையாகவே ஆசைப்படவில்லை.

நிற்க, இன்று அமுலில் இருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விகிதம் ஏற்படுத்தப்பட்டு 5, 6 வருஷ காலமாகிவிட்டதால் இனியும் அந்த விகிதமே பார்ப்பனரல்லாத இந்துக்கள் என்பவர்களுக்கு போதுமா என்று கேட்கின்றோம். இது மிகுதியும் நியாயமற்றதும், போறாததுமானது என்பது நமது அபிப்பிராயம்.

ஏனெனில், 100க்கு மூன்று பேராய் உள்ள பார்ப்பனர்களுக்கு 100க்கு 16½ ஸ்தானங்கள் அளிக்கப்பட்டிருக்கிறது. மீதி உள்ள ஸ்தானங்களில் மகமதியர்களுக்கு 12, கிறிஸ்தவர்களுக்கு 6 ஸ்தானங்கள் போக மீதி 62 ஸ்தானங்களே 100க்கு 75 பேர்களுக்கு மேல் உள்ள சமுதாயமாகிய பார்ப்பனரல்லாத இந்துக்கள் ஆதி திராவிடர்கள் என்கின்ற இரு சமூகத்துக்கும் கொடுக்கப்பட்டிருப்பது என்றால் இது எப்படி நியாயமாகும்.

இந்த முறை ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் இதற்காக என்னதான் சமாதானம் சொல்லப் பட்டிருந்தாலும் 5, 6 வருஷம் பொருத்தும் இப்போதும் அந்த முறையே இருக்க வேண்டும் என்பதற்கு என்ன அவசியம் என்று கேட்கின்றோம். இந்த 5, 6 வருஷ காலமாய் இந்த முறைப்படி வினியோகிக் கப்பட்டு வந்தும், இன்று கணக்குப் பார்த்தால் அதற்கு முன் இருந்த நிலைமையைக் குறிப்பிட வேண்டிய ஒரு சிறு அளவுக்குக்கூட அசைத்ததாகத் தெரியவில்லை. மொத்தம் இந்து சமூகத்தில் கிட்டத்தட்ட 100க்கு 25 விகிதம் உள்ள ஆதி திராவிட சமூகத்துக்கு 100க்கு 6 ஸ்தானம் என்பது எவ்வளவு கொடுமையான விகிதம் என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

ஆகையால் பார்ப்பனர்களுக்குள்ள 16 ஸ்தானங்களை இனியும் கொஞ்ச காலம் வரை 10 ஸ்தானமாகவாவது ஆக்கிவிட்டு, அதை தாழ்த்தப் பட்ட மக்கள் என்பவர்களுக்கும், பார்ப்பனரல்லாத இந்துக்கள் என்பவர் களுக்குமாகப் பகிர்ந்து கொடுத்துவிட வேண்டும் என்றே சொல்லுகின்றோம்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் பார்ப்பனர்களுக்கு 100க்கு 16½ ஸ்தானம் வழங்குவதும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 100க்கு 6 ஸ்தானமே வழங்குவதும் இனி அரை நாழிகை கூட பொருத்துக் கொண்டிருக்கக்கூடிய காரியம் அல்ல என்றே கூறுவோம்.

நமது பார்ப்பனரல்லாத சட்டசபை அங்கத்தினர்களில் பெரும் பகுதிப் பேர் பார்ப்பனரல்லாத சமூகத்துக்குப் பிரதிநிதிகள் என்று சொல்லுவது



சுத்த முட்டாள்தனமே யாகும். அவர்களில் பெரும் பகுதி பேர் பார்ப்பனர்கள் பிரதிநிதிகள் என்றும், பார்ப்பனர்கள் அடிமைகள் என்றும் சொல்லக் கூடியவர்கள் என்றுதான் சொல்ல வேண்டி இருப்பதற்கு வருந்துகிறோம்.

நமது மந்திரிமார்களும் இவ்விஷயத்தில் போதிய உணர்ச்சி அற்றவர்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறதற்கு வருந்துகிறோம்.

ஆகையால், அடுத்து கூடப் போகும் சட்டசபைக் கூட்டத்தில், இந்த வகுப்புவாரி முறை விகிதத்தை மாற்றி பார்ப்பனரல்லாதாருக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பார்ப்பனர்களுக்குள்ள ஜனத் தொகை விகிதாச்சாரத்தில் 3-ல் ஒரு பங்கு வீதமாவது ஜனத் தொகைக்குத் தகுந்தபடி ஏற்படும்படியாக முயற்சி செய்யப்பட வேண்டும் என்பதோடு மற்றும் பல துறைகளுக்கும் இம்முயற்சியை விரிவாகச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 01.09.1935**



RangaRakes tamilnavarasam.com

# தோட்டத்தில் பகுதி கிணறா?

பிரஞ்சு தேசத்தில் கத்தோலிக்க குருமார்கள் மாத்திரம் 47015 பேர்கள் இருப்பதாக ஒரு பிரஞ்சு அறிக்கை கூறுகிறது. அன்னாட்டு ஜனத்தொகை 4 கோடி இதை வீகித்துப் பார்த்தால் குழந்தை, குஞ்சு, கிழடு, கிண்டு, மொண்டி, முடம் உள்பட 850 உருப்படிக்கு ஒரு கத்தோலிக்க குரு இருக்கிறார் என்று தெரிகின்றது.

கத்தோலிக்க பிரிவு போலவே பிரஞ்சு தேசத்தில் இன்னம் பல பிரிவுகளும் உண்டு. அந்தப் பிரிவுகளுக்கும் இது போன்ற அளவுள்ள குருமார்கள் இருப்பார்களேயானால் கிட்டத்தட்ட 2 கோடி குருமார்களுக்கு குறையாமல் ஆய்விடக்கூடும்.

அப்படியானால் ''தோட்டத்தில் பகுதி பாகம் கிணறு'' என்பது போல ஜனத்தொகையில் பகுதி குருமார்களாகத்தான் காணப்படும்.

பெண்களையும், குழந்தைகளையும் குறைத்துவிட்டால் ''ஒரு கூடை கல்லும் பிடாரி ஆனது'' போல எல்லா மக்களும் குருமாராய்த்தான் இருக்க வேண்டும்.

இந்து மதத்தில் 22 கோடி மக்களில் 33 கோடி தெய்வங்கள் உண்டு. இது ஆள் ஒன்றுக்கு 1½க் கடவுள் ஆகிறது. ஆனால் இந்த குருமார்கள் என்ன விகிதாச்சாரம் ஆகிறார்கள் என்று கணக்குக்கு தெரியவில்லை.

இவ்வளவு குருமார்களை காப்பாற்ற வேண்டிய பொருப்பு இவர்களுக்கு சாப்பாடு, துணிமணி, வீடு வாசல், போக்கு வரவு செலவு ஆகியவைகளுக்கு யார் பாடுபட்டுக் கொடுப்பது என்பது ஒரு பெரிய பிரச்சினை அல்லவா?

இப்படி தேசந்தோறும் மதங்கள்தோறும் குருமார்கள், ஆச்சாரிமார்கள், மடாதிபதிகள், உபதேசியார்கள், குருக்கள், அர்ச்சகர், தேவ அடியார்கள் முதலாகிய மக்கள் பல கோடிக் கணக்கில் ஏற்பட்டு தெய்வப் பிரார்த்தனை, பாவ மண்ணிப்பு, புத்திமதி கூறுதல் ஆகிய காரியங்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களாக பல கோடிக்கணக்கான ரூபாய் செலவில் நடத்தப்பட்டுவந்தும் உலகில் கொலை, களவு, விபசாரம், வஞ்சனை, சூது, பொறாமை, ஏமாற்றுதல் முதலாகிய காரியங்கள் என்பவைகள் விகிதாச்சாரம் எல்லா மதத்திலும் எல்லா தேசத்திலும் எல்லா ஜாதியிலும் நடைபெற்றுக்கொண்டே வருவதோடு,



நீதி நிர்வாக ஸ்தாபனங்கள் இல்லாமல் மனித சமூகத்தில் சட்டப்படிகான சமாதானம் ஒழுங்கு கூட நடைபெருவதற்கில்லாமல் இருந்து வருகின்றன.

இவ்வளவோடு மாத்திரமல்லாமல் பசி,பசி, நோய்,நோய் சம்சாரத் தொல்லை சகிக்க முடியவில்லை, பிள்ளை குட்டிகள் உபத்திரவம் பொருக்க முடியவில்லை, என்கின்ற கூப்பாடு இருந்துகொண்டே வருகின்றன.

எனவே, மதங்கள், கடவுள்கள் மாத்திரம் அல்லாமல், குருமார்கள் மதப் பிரசாரகர்கள் கடவுள் பக்தர்கள் கடவுள் பூஜைக்காரர்கள் கடவுள் பிரசாரக்காரர்கள் ஆகியவர்கள் ஏன்? எதற்கு ஆக? இருக்கிறார்கள் என்பது விளங்கவில்லை.

**குடி அரசு - கட்டுரை - 01.09.1935**



RangaRakes tamilnavarasam.com

# கேள்வியும் உத்தரமும்

**தம்பிக்கும் – அண்ணனுக்கும்**
**தம்பிக்கும் வாசக்காரிக்கும் சம்பாஷணை**

**- சித்திரபுத்திரன்**

**தம்பி:** அடே அண்ணா உன்னை சில கேள்விகள் கேட்க வேண்டும் என்று வெகுநாளாக ஆசை, தயவு செய்து பதில் சொல்லுகிறாயா? அப்புறம் மார்க்கு தருகிறேன்.

**அண்ணன்:** அய்யா தம்பி கேள் பார்ப்போம். ஒரு கை பார்க்கிறேன்.

**தம்பி:** அடேய் அண்ணா பார்ப்பனரல்லாதார்களில் அயோக்கியர்களைக் கண்டுபிடிப்பதற்கு ஏதாவது தர்மா மீட்டர் இருக்கிறதா?

**அண்ணன்:** இது தானா பெரிய கேள்வி இதற்கு பதில் நம்ம வீட்டு வாசக்காரி அம்மா சொல்லி விடுவார்களே.

**தம்பி:** எனக்குத் தெரியவில்லையே.

**அண்ணன்:** சொல்லச் சொல்லுகிறேன் கேள். அம்மா வாசக்காரி தம்பிக்கு சில கேள்விகளுக்குப் பதில் வேண்டுமாம் சொல்லுகிறாயா?

**வாசக்காரி:** தெரிஞ்ச வரையில் சொல்லுகிறேன்.

**அண்ணன்:** தம்பி பார்ப்பனரல்லாதார்களில் அயோக்கியர்களைக் கண்டுபிடிக்க ஏதாவது தர்மா மீட்டர் இருக்கிறதா என்று கேட்டார். அதற்கு பதில் சொல்லம்மா பார்ப்போம்.

**வாசக்காரி:** இதுதானா ஒரு பிரமாதமான கேள்வி? சொல்லுகிறேன் கேளுங்கோ தம்பி! எந்த எந்தப் பார்ப்பனரல்லாதாரைப் பற்றி பார்ப்பனப் பத்திரிகைகள், இந்து முதல் ஆனந்த விகடன் வரை புகழ்ந்து பேசுகின்றனவோ அந்தப் பார்ப்பனரல்லாதார்களும் சி. இராஜகோபாலாச்சாரியார் முதல் சத்தியமூர்த்தியார் வரை எந்த எந்தப் பார்ப்பனரல்லாதாரை புகழ்ந்து பேசுகிறார்களோ அந்த பார்ப்பனரல்லாதாரும் முதல் நெம்பர் வடிகட்டின விபூஷணாள்வார்கள் ஆஞ்சனேய ஆழ்வார்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள். இந்த இருவர்களும் சகோதரத் துரோகி, குலத் துரோகி,



காட்டிக் கொடுப்பவர், சுயநலத்துக்கு எவ்வளவு இழிவான காரியமும் செய்பவர்கள், என்றெல்லாம் ஆன பின்பு தானே ''ராம பிரானால்'' (ஆரியக் கதைகளில்) ஆழ்வார்களாக சீரஞ்சீவிகளாக கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் அந்த விபூஷணர், அனுமார் ஆகியவர்களைவிட 100 மடங்காவது அதிகமான..........வர்களாய் இல்லாவிட்டால் எந்தப் பார்ப்பனரல்லாதாரையாவது பார்ப்பனப் பத்திரிகைகளும் பார்ப்பனர்களுமான இந்தக் காலம் ராமாயணம் ராமபிரான் ஆகியவைகள் பார்ப்பனரல்லாதார்களைப் புகழ்ந்து கூறுமா? இது தெரியாமல் போயிற்றே உங்களுக்கு?

**தம்பி:** எல்லாரையும் அப்படி சொல்லிவிட முடியுமா?

**வாசக்காரி:** முடியாது என்று காணப்பட்டால் அப்படிப்பட்டவர்களை (பார்ப்பனர்களால் புகழ்ந்து கூறப்பட்டவர்களை) முட்டாள்கள், முழு மூடர்கள் என்கின்ற கலத்திலாவது போட்டுத்தான் ஆக வேண்டும். அயோக்கியர்கள் என்பதிலிருந்து (Exemption) எக்ஸ்செம்ஷன் செய்து விடலாம்.

**தம்பி:** இவ்வளவு பரந்த உலகில் எவ்வளவோ பெருமை பெற்றதாக சரித்திரத்தில் கூறிக் கொள்ளும் தமிழ் மக்களில் சிலராவது இவ்வளவு இழிவான நிலையை அடைவானேன்?

**வாசக்காரி:** சிலருக்கு பிழைப்புக்கு வேறு மார்க்கமில்லை; சிலருக்கு உத்தியோகத்துக்கு வேறு மார்க்கமில்லை; சிலருக்கு விளம்பரத்துக்கு வேறு மார்க்கமில்லை; சிலருக்கு 'இன்னது இன்னது கெட்டால் இன்ன இன்ன இடம் தான் போய்ச் சேர வேண்டும்' என்று ஒரு பழமொழி உண்டு. அந்த மாதிரி பார்ப்பனரல்லாத சமூகக் குழுவாகிய தங்கள் இனத்தில் இருந்து விலக்கப்பட்டவர்களுக்கு இந்நாட்டில் பார்ப்பனக் குழுவில்லாமல் வேறு புகல் இடம் இல்லாமல் போய்விட்டதல்லவா? ஆகையால் தான்.

**தம்பி:** உண்மையிலேயே நல்ல நிலைமையில் நல்ல எண்ணத்தோடு பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டிருக்கும் பார்ப்பனரல்லாதார் யாருமில்லையா?

**வாசக்காரி:** நீங்கள் தான் சொல்லுங்களேன் பார்க்கலாம். ஒரு பார்ப்பனரல்லாதார் பெயரையாவது. தோழர்கள் சி.ஆர். ரெட்டியார் முதல் அ.கு. முதலியார் வரை உள்ள கூட்டங்களை பார்ப்பனரல்லாதார் சமூக இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்குமானால், அவர்கள் தேவைகளை அரைகுறையாகவாவது கவனிக்கப்பட்டிருக்குமானால் அவைகள் பார்ப்பனர்கள் பின்னால் வால்களை ஆட்டிக் கொண்டு திரியுமா? நேரில் சென்று ரகசியமாய் கேட்டால் இந்தப் பிழைப்பு பிழைக்கிறதற்கு அவர்கள் அடையும் வெட்கம் இன்னது என்பது விளங்கும்.

**தம்பி:** அப்படியா! இந்த இழிவான நிலை எப்பொழுது மாறும்?

**வாசக்காரி:** அந்த ராமாயண காலத்திலேயே இருந்து ஆரம்பித்த காரியம் இந்த ராமாயணம் பொப்பிலி அயனம் ஆகிய காலத்தில்



RangaRakes tamilnavarasam.com

மாற்றப்பட்டுவிட முடியுமா? தமிழ் மக்களில் அனேகருடைய ரத்தத்தையே அடியோடு சிரிஞ்சு செய்து எடுத்துவிட்டு நல்ல சுத்த ரத்தத்தை இஞ்ஜக்ட் செய்ய வேண்டும். அப்படி சுத்தப்படுத்த இன்னும் குறைந்தது 2, 3 ராமாயணம், பொப்பிலி அயனமாவது ஆய்தான் தீர வேண்டும்.

**தம்பி:** சரி அப்புறம் இன்னொரு கேள்வி.

இந்தப் பார்ப்பனர்களும் அவர்களுடைய பத்திரிகைகளும் பார்ப்பன ரல்லாதார் தலைவர்களை ராக்ஷதர்கள் என்றும், அரக்கர்கள் என்றும், அசுரர்கள் என்றும் படம் போட்டு வைகின்றனவே. இதற்கெல்லாம் கேள்வி முறை இல்லையா? மற்றும் ஒரு தலைவரை, ''அவர் ஜாதிப் புத்தியைக் காட்டிவிட்டார்'' என்று ஜனங்களுக்கு சொல்லாமல் சொல்லிக் காட்ட செக்கு போட்டுக் காட்டி இழிவுபடுத்தினதன்றோ அதற்கும் ஒன்றும் கேள்வி முறை இல்லையா? மற்றும் பல பார்ப்பனப் பத்திரிகைகள் பார்ப்பனரல்லாத தலைவர்களை குலாம், தாசர், அடிமை, தேசத் துரோகி, பாவி என்றும் இன்னும் சில பார்ப்பனர்கள் பொப்பிலி ராஜா, ஷண்முகம் செட்டியார், ராமசாமி முதலியார் முதலியவர்களை அவன், இவன், அயோக்கியன் என்றெல்லாம் வெட்டவெளியாய்க் கூட்டங்களில் பேசுகிறார்களே, மற்றும் ஒரு பார்ப்பனப் பெண், கடலூர் ஜில்லாவில் பேசும் பொழுது அந்த ஜில்லா போர்டு மெம்பராய் இருக்கும் பெண்களைப் பற்றி இழிவாகச் சொல்லிற்றாம். இதற்கெல்லாம் கேள்வி முறை இல்லையா? நமது பொருமைக்கு எல்லை வேண்டாமா? அவ்வளவு அநாகரிக கேள்வி கேட்பாரற்ற ராஜ்ய பாரத்திலா நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

**வாசக்காரி:** அப்படி ஒன்றும் இல்லை. ''குட்டி நாய் குறைத்ததற்கு ஆக பட்டி நாய்களை உதைப்பது அழகா'' என்றபடி சிறிது நிதானித்தோம். நாம் நிதானித்ததைப் பார்த்து பட்டி நாய்கள் நம்மை பயங்காளிகள் என்று நினைத்துக் கொண்டு பரிகாசம் செய்தன. இப்போது பட்டி நாயுக்கும் குட்டி நாயுக்கும் சேர்ந்து புத்தி கற்பிப்பதுபோல வைதவர்களுக்கும், வையத் தூண்டி வைவதைப் பார்த்து சிரித்தவர்களுக்கும், புத்தி வரும்படியும் நல்ல பிள்ளைகளாகும்படியும் நம்மால் ஆனதைச் செய்யத் தொடங்கி இருக்கிறோம். சீக்கிரம் அடங்கிவிடக் கூடும். தோழர் சுந்திராம்பாள் நடிப்பையும், பாட்டையும் பற்றி தங்கள் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுக்கவில்லையே என்கின்ற ஆத்திரத்துக்கு ஆகவும், ஒரு பார்ப்பனரல்லாத பெண் பிரபல மாகிவிடுமே என்கின்ற துஷ்டப் புத்தியாலும் இழித்துப் பழித்துக் கூறின பத்திரிகைகளுக்கு புத்தி வரும்படி செய்யவில்லையா? (அவர்கள் தோல் மொத்தமானதால் அவ்வளவு சீக்கிரம் புத்தி வராது) அதுபோலவே சுவாமி வேதாசலம் அவர்கள் புத்தகத்தைப் பற்றி பொறாமையும், ஆத்திரமும் கொண்டு செய்த சூழ்ச்சிக்கு தமிழ் மக்கள் தக்க புத்தி கற்பிக்க ஆரம்பித்தவுடன்



''பிச்சை போடாவிட்டாலும் நாயைப் பிடித்துக் கட்டுங்கள்'' என்பது போலவும், ''உடும்பு வேண்டாம் கையை விட்டால் போதும்'' என்பது போலவும் இப்பொழுது பார்ப்பனர்கள் ''இன்னம் இரண்டு புஸ்தகத்தை வேண்டுமானாலும் பாடப் புத்தகமாக வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு ஆக இன்னமும் புத்தி கற்பிக்காதீர்கள்'' என்று கெஞ்சும்படியான நிலைக்கு வந்து விடவில்லையா? அதுபோல் நாம் முன்னமேயே கவனிக்க ஆரம்பித்து இருந்தால் பார்ப்பனர் களும், அவர்களது பத்திரிகைகளும், அவர்களது கூலிகளும் வெகு நாளிலேயே அடங்கி இருக்கும்.

**தம்பி:** ஏன் பார்ப்பனரல்லாதார் அவ்வப்பொழுது முயற்சி எடுத்து தானே வந்திருக்கிறார்கள்.

**வாசக்காரி:** எங்கு எடுத்து வந்திருக்கிறார்கள்? ''குடி அரசு'' பொது உடமையில் புகுதாமல் இருந்திருந்து, 'திராவிடன்' நாட்டுக் கொட்டை செட்டியார் கைக்குப் போய் பார்ப்பனர் தயவுக்கு அஞ்சி ஒழியாமல் இருந்திருக்குமானால் இந்த 3 வருஷத்தில் எவ்வளவோ காரியம் ஆயிருக்கும் என்பதோடு பார்ப்பனர்களுக்கு இவ்வளவு வாலும் வளர்ந்திருக்காது. அவர்களுடைய பத்திரிகைகளுக்கு இவ்வளவு திமிரும் ஏற்பட்டிருக்காது என்பது மாத்திரமல்லாமல் பார்ப்பனர்களுக்கு இவ்வளவு பார்ப்பனரல்லாத கூலிகளும், காலிகளும் கிடைத்து இவ்வளவு அயோக்கியத்தனமாக குறைக்கவும் முன் வந்திருக்க மாட்டார்கள்.

சாதாரணமாக தோழர் ஆர்.கே. ஷண்முகம் அவர்களைப் பற்றி ஆனந்த விகடன் செக்கு போட்டு ஓட்டுகிற மாதிரி படம் போட்ட காலத்தில் தக்கதொரு கிளர்ச்சி செய்திருந்தால் இத்தனை நாள் அது தேய்ந்து மாய்ந்து ஒழிந்து போய் இருக்கும். சர்க்காருக்கு எடுத்துக்காட்டி இருந்தாலும் அடங்கி இருக்கும். அப்பொழுது ''குடி அரசு'' சிறிது வீரம் பேசி விட்டு அடங்கி விட்டது. அதிலிருந்து அதற்கு (ஆனந்த விகடனுக்கு) தைரியம் அதிகமாய் விட்டது. இப்போது அது பார்ப்பனர்களுக்கு தலைசிறந்த ஆயுதமாக விளங்குகிறது.

அதாவது, பார்ப்பனரல்லாத வகுப்பு தாசிகள், பார்ப்பனரிடம் சினேகம் இருப்பதாய் சொல்லிக் கொள்ளுவதில் பெருமை அடையும் அற்ப புத்தி போல் நமது குழந்தைகளும் பெண்மணிகளும் ஆனந்தவிகடன் படிக்கவும் ஆசைபடவும் அனுமதிப்பது போன்ற அற்ப காரியங்கள் செய்து வருகிறோம். தமிழ் மக்களின் ரத்த பரிக்ஷைக்கு ஆனந்த விகடன் படிப்பது என்கின்ற மானமற்ற தன்மையே தர்மாமீட்டர் ஆகும் என்பதுதான் என் அபிப்பிராயம்.

''சூதாடுவதற்காக அதை வாங்கினோமே ஒழிய படிப்பதற்காக அதை யாரும் வாங்குவதில்லை'' என்று சில சிகாமணிகள் சமாதானம் சொல்லக்கூடும். அதுதான் எப்படி யோக்கியமான பதிலாகும்?

ஒரு மனிதன் சூதாட்டம் ஆட வேண்டும் என்றால் பார்ப்பான் இடம் போய்தானா ஆட வேண்டும். மோக்ஷத்திற்குப் பார்ப்பானிடம் திரவுகோல்



RangaRakes tamilnavarasam.com

இருப்பதுபோல் அந்தப் பார்ப்பானிடம் தானா சூதுக்கும் திரவுகோல் இருக்க வேண்டும்? அந்தப் பணங்களையும் பார்ப்பான் தானா திங்க வேண்டும்? அதிலும் நம்மை கீழ் ஜாதி என்றும், ராக்ஷதன் என்றும் சொல்லுபவனா திங்க வேண்டும்? பார்ப்பனரல்லாதாரிலும் அதுபோலவே சிலர் ஆயத்துரை (சூதாடு தொழில்) வைத்து நடத்துகிறார்களே அதில் போய்ச் சேருவதுதானே. அவர்கள் பார்ப்பனர்கள் போல் இவ்வளவு கேவலமாகவும், இவ்வளவு இழிவாகவும் வைய மாட்டார்களே, இதையாவது கவனிக்க வேண்டாமா? பார்ப்பான் நமது ஜனங்களை, போதை வேண்டுமானால் கள்ளுக் குடியுங்கள், சீமைச் சாராயம் குடிக்காதீர் என்கிறானே அதன் அர்த்தம் என்ன? அதுபோல் சூதாட பார்ப்பானிடம் போகாதீர்கள் என்று சொல்லுகிறேன்.

**வாசக்காரிஃ** தம்பியாரே இன்னும் கேளுங்கள். எந்தப் பார்ப்பானாவது பார்ப்பானைத் திட்டுகிறானா? பார்ப்பானை திட்டுகிற பத்திரிகையைப் படிக்கிறானா? இதைப் பார்த்தாவது நமக்குப் புத்தி வர வேண்டாமா?

சத்தியமூர்த்தியாரிடம் என்ன குணம் இல்லை என்று யாராவது சொல்ல முடியுமா? அவர் ''தமிழ்நாட்டுத் தலைவர்'' ஆனதினால் நான் ஒன்றும் சொல்லக் கூடாது என்றாலும், உதாரணத்துக்குத் தானே சொல்லுகிறேன். அவரைப் பற்றி அவர் முதல் முதல் சீமைக்கு போனது முதல் நாளது வரை நடந்ததை, எந்தப் பார்ப்பானாவது எந்தப் பத்திரிகையாவது ஏதாவது மூச்சு காட்டி எழுதுகின்றனவா? பேசுகின்றார்களா? ஒரே அடியாய் விளம்பரம் செய்து ஆகாயத்தில் தூக்கி வைத்து அவரை ''ஒரு நாளாவது மந்திரி ஆக்கிப் பார்க்காமல் இருப்பதில்லை'' என்று விரதம் எடுத்துக் கொண்டு இருப்பதோடு, அனேக பார்ப்பன அம்மாமார்களும் அதுவரை தலை முடிவதில்லை என்று சபதம் கூறி இருக்கிறார்கள். அது தான் கிடக்கட்டும் தோழர் சர்.ஆர்.கே. ஷண்முகத்தைப் பற்றி அனேக பார்ப்பனரல்லாத கூலிகளும், காலிகளும் குரைக்கின்றனவே அவரிடம் சொந்த நடவடிக்கைகளில் தனிப்பட்ட ஒழுக்கங்களில் - சமூக கௌரவங்களில் எவ்வித கெட்ட நடத்தையும் இல்லை என்பதை நம்மிடம் ஒப்புக் கொண்டு, பார்ப்பனர்களிடம் போய் கூலிகள் பெற்று பல பார்ப்பனரல்லாத காலிகள் குரைக்கின்றனவே. ஆனால் தோழர் சர்.சி.பி. ராமசாமி அய்யர்வாள் அவர்களைப் பற்றி எந்தப் பார்ப்பனனாவது எந்தப் பார்ப்பனப் பத்திரிகையாவது மூச்சு பேச்சு காட்டுகின்றனவா? எவ்வளவு கீழான மாமா பார்ப்பானாவது பேசுகிறானா? அவரும் ஒரு சமஸ்தானத்துக்கு ஒரு வேலை இல்லாத உத்யோகஸ்தர் ஆக மீ 4000, 5000 சம்பாதித்தார். அதுவும் போதாது என்று இன்னும் பெரிய உத்தியோகம் பெறப் பார்க்கிறார். ''லார்டு வில்லிங்டன் துரை மகனாருக்கு ரொம்ப வேண்டியவர்'' என்கின்ற சேதி அடிபடுகின்றது. லார்டு வில்லிங்டன் துரையிடம் ஆக வேண்டிய காரியங்களுக்கு இவரே பூசாரி என்கின்றார்கள். இன்னமும் சி.பி. அவர்களைப் பற்றி என்ன என்னமோ மார்க்கட்டு, நாடகக் கொட்டகை எல்லாம் கத்தரிக்காய் கடை முதல் தப்பட்டை அடிக்கப்படுகிறது.



அதைப் பற்றி படமா கேலியா.......... ஒன்றும் இல்லாமல் காப்பிக் கடையிலும், வக்கீல் குமாஸ்தா அரைகளிலும், ''பிறந்தால் சர். சி.பி. ராமசாமி அய்யர் அவர்களுக்கு கை, கால்களாகவாவது பிறந்த சுகம் அனுபவிக்க வேண்டும்'' என்று தானே புகழ்ந்து கூறி மகிழ்ச்சி அடைகின்றார்கள். இதிலிருந்து யார் கெட்டிக்காரர்கள்? யார் புத்திசாலிகள்? யார் மடையர்கள்? யார் சமூகத் துரோகிகள்? யார் வயிற்றுப் பிழைப்புக் கூலிகள்? என்பதையாவது உணர்ந்து பாருங்கள்.

சரி. பொப்பிலி ராஜாவை எதற்காக ராக்ஷதர் என்று சொல்ல வேண்டும்? ராவணனாவது ராமர் பெண்டாட்டியைத் தூக்கிக் கொண்டு போய் என்ன என்னமோ செய்தான் என்பதாக சொல்லி அதனால் ராக்ஷதன் என்று சொன்னார்கள். பொப்பிலி ராஜா யார் பெண்டாட்டியை அடித்துக் கொண்டு போனார்? என்ன செய்தார்? ஏன் அவரை ராக்ஷதர் என்று சொல்ல வேண்டும்? இனி மேலாவது, எந்தப் பார்ப்பானாவது பொப்பிலியை ராக்ஷதன் என்று சொன்னாலும் படம் போட்டாலும் சரி உடனே நம்ம ஆள் ஒருத்தர் அந்தப் பார்ப்பான் வீட்டுக்கு ஓடிப் போய் பார்த்து அவன் பெண்டாட்டி வீட்டில் இருக்கிறார்களா? இல்லையா என்று தெரிந்து விட்டு வந்து அந்தப் பார்ப்பானை ''அட மடையா உன் பெண்டாட்டி உன் வீட்டில் தான் இருக்கிறார்கள். இப்பொழுதுதான் நான் பார்த்துவிட்டு வந்தேன். எவனோ ஒரு ஏகாலி பேச்சைக் கேட்டுக் கொண்டு பொப்பிலி மீது சந்தேகப்பட்டு அவரை ராக்ஷதன் என்று சொல்லுகிறாயே உனக்கு புத்தியில்லையா'' என்று கேட்பதோடு அதுபோலவே எழுதுவதோ ஆகிய காரியம் வைத்துக் கொண்டால் இனி எவனும் அந்த மாதிரி காரியம் செய்யவே மாட்டான்.

**தம்பிஃ** அப்படியெல்லாம் கேட்பது நல்லதா? நாய் கடித்தால் நாமும் அதைக் கடிக்கலாமா?

**வாசக்காரிஃ** கடிக்க வேண்டாம். தடி எடுத்து விரட்டியாவது துறத்த வேண்டாமா? ''நாய்ச் சாமிக்கு மலைக் கொழுக்கட்டை ஆராதனை'' என்பதுபோல் அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ள வேண்டியது மனிதத் தன்மை மாத்திரமல்லாமல் அறிவாளியான வீரன் செயலுமாகும்.

நல்ல குதிரைக்கு சவுக்கு ஆட்டினால் போதும். தோல் மொத்தமாய் இருக்கிற மந்தி குதிரை அல்லது எருமைக் கிடாவை மொத்தமான தொண்ணைக் கம்பால் இருக்கினால் தான் நகரும்.

அதுபோல் நம்ம தற்காப்பைப் பொருத்த வரையாவது, ''பதிலுக்குப் பதில் செய்யத் தயாராய் இருக்கிறோம் - எங்களால் முடியும்'' என்றாவது காட்டிக் கொள்ளாமல்கூட இருப்பதென்றால் நம்மை நாம் மனிதர் என்று சொல்லிக் கொள்ள வேண்டிய அவசியம்கூட இல்லை.

அன்றியும், அப்படி இருந்ததாலேயேதான் எச்சைக்கலைப் பார்ப்பான்கூட நம்மை ராக்ஷதன் என்கிறான்.



RangaRakes tamilnavarasam.com

**தம்பி:** இந்தப்படியெல்லாம் நாம் நடந்தால் பாமர மூடஜனங்களுக்கு நம்மிடம் இன்னும் அதிக வெறுப்பு ஏற்படும்படியாக இந்தப் பார்ப்பனர்கள் செய்துவிட மாட்டார்களா?

**வாசக்காரி:** செய்து விட்டுப் போகட்டுமே அதனால் என்ன முழுகிப் போகும்?

**தம்பி:** நம்மவர்களுக்கு மந்திரி வேலை போய் விடாதா?

**வாசக்காரி:** போய்த்தான் தொலையட்டுமே பார்ப்பான் மந்திரியாய் வந்துவிட்டால் உலகமே முழுகிப் போய்விடுமா?

''ஒரு வண்டி செங்கல்லும் பிடாரி ஆனது'' என்பது போல், எல்லாப் பார்ப்பானுமே மந்திரிகளாய் விடட்டுமே நம்மை இனி என்ன அசைத்து விட முடியுமா?

மந்திரி அதிகாரம் நம்மை விட்டுத் துலைந்தால் நமது நிலை என்ன தான் ஆகிவிடும் என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படவாவது மந்திரி உத்தியோகம் நம்மை விட்டுத்தான் ஒரு தடவையாவது தொலையட்டுமே. பாமர ஜனங்களுக்குப் புத்தி வர ஒரு சந்தர்ப்பமாவது கொடுக்கலாமே?

இப்பொழுது ''பார்ப்பனர்கள் மந்திரிகளாய் விட்டால் பரிசம் இல்லாமல் பெண் கிடைக்கும். ஆளுக்கு 2, 3 கூடக் கிடைக்கும்'' என்று நினைத்துக் கொண்டிருக்கிற முட்டாள் பயல்களுக்கு அவனவன் வீட்டிலுள்ளதையாவது காப்பாற்ற முடிகின்றதா அல்லது மனுநீதிபோல் நடக்க வேண்டி வருமா என்பதையாவது தெரிந்து கொள்ளட்டுமே.

**தம்பி:** அப்படியானால் இப்போது ஏன், ''மந்திரி வேலை நம்ம கையை விட்டுப் போகக் கூடாது'' என்று கருதுகின்றவர்களுடன் கூடிக் கொண்டு என்னையும் பாடுபடச் சொல்லுகிறாய்.

**வாசக்காரி:** இது கூடவா தம்பி உங்களுக்கு தெரியவில்லை?

**தம்பி:** தெரியவில்லை.

**வாசக்காரி:** பார்ப்பான் சங்கதி வெளியாக்குவதற்கு ஏதாவது ஒரு சாக்கு வேண்டாமா? அதற்காக வேண்டி நானும் கூட்டத்தில் கோவிந்தாப் போடுகின்றேன்.

நான் கூப்பாடு போடாவிட்டாலும், நீ கூப்பாடு போடாவிட்டாலும் மந்திரி வேலை நம்ம ஆளுகள் கையை விட்டு ஒரு நாளும் போய்விடப் போவதில்லை.

ஆனாலும் நம்ம பிரசார சங்கதி நடத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் வேண்டாமா? அன்றியும் நம்ம ஆளுகளை இந்தப் பார்ப்பனர்கள் இவ்வளவு அயோக்கியத்தனமாய் தாக்குவதை வேடிக்கை பார்த்துக் கொண்டா இருப்பது? அதற்காகத்தான்.

**தம்பி:** சரி இன்னம் ஒரு நாளைக்கு சந்திக்கலாம். நான் போய் வருகிறேன்.

குடி அரசு - உரையாடல் - 08.09.1935



# காங்கிரஸ்காரர்கள் ஜாமீன் கொடுப்பார்களா?

## கிளர்ச்சியின் தத்துவம்

தோழர்களே! இப்போது நம்நாட்டில் பொது மக்களிடையில் அரசியலின் பேரால் வேகமான பிரசாரங்கள் நடைபெறுகின்றன. அவற்றின் மூலம் பெரியதொரு கிளர்ச்சியை உண்டு பண்ணி அதன் மூலம் பாமர மக்களை வசப்படுத்தி அரசியலில் ஆதிக்கம் பெற வேண்டும் என்பதையே, முக்கிய நோக்கமாகக் கொண்டு செய்யப்படுகின்றது. என்றாலும், அக்கிளர்ச்சி பெரிதும், வகுப்பு முறையில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்கின்ற வகுப்பு பிரிவை உண்டாக்கி அதன் மூலம் வகுப்பு ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்கின்ற உள் எண்ணத்தின் பேரிலும்தான் இன்று கிளர்ச்சிகள் நடக்கின்றன. அவ்வளவுடன் மாத்திரமே நடப்பதாகவும் எண்ணுவதற்கில்லை.

இந்துக்கள், முகமதியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் என்பது போன்ற மதப் பிரிவுகளின் பேரிலும், மத ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்கின்ற உள் லட்சியத்தின் பேரிலும் சில மதஸ்தர்கள், தாங்கள் எண்ணிக்கையில் குறைவாய் இருப்பதால் அதிக எண்ணிக்கை மக்களைக் கொண்ட மதக்காரர்களால் அடக்கி ஆளாமல் இருக்க வேண்டும் என்கின்ற லட்சியத்தின் பேரிலும் கிளர்ச்சிகள் செய்யப்படுகின்றன.

இந்த மாதிரி கிளர்ச்சி இன்று மாத்திரமல்லாமல், சரித்திரகாலம் தொட்டே மதப்போர் வகுப்பு போர்கள் என்பதாக நடந்து வந்திருக்கின்றன. ஆனால் இன்று அப்படி இல்லாமல் பெயரளவில் அரசியல் கிளர்ச்சி அரசியல் போர் என்று சொல்லப்படுகின்றது.

எப்படிப்பட்ட அரசியல் கிளர்ச்சியும், போரும் மதம், வகுப்பு, ஜாதி ஆகியவைகளில் எதையாவது ஒன்றின் ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான் நடந்திருக்கின்றன - நடைபெறுகின்றன என்றுதான் சொல்ல வேண்டுமே ஒழிய, மற்றபடி எல்லாப் பொது ஜனங்களின் நன்மையைப் பொருத்தும், விடுதலையைப் பொருத்தும் நடந்திருப்பதாகச் சொல்வதற்கில்லை.

சாதாரணமாக நம்நாட்டில் சிறப்பாக தென்னாட்டில் நடக்கும் கிளர்ச்சி அரசியல் கிளர்ச்சி என்பதாக முன் சொன்னேன். ஆனால் அது இன்று



RangaRakes tamilnavarasam.com

மாத்திரமல்லாமல் சரித்திர காலம் முதல் நடந்து வருகிறது என்றும் சொன்னேன். அதற்கு ஆதாரம் வேண்டுமென்றால் வேதம், ஸ்மிருதி, புராணம் முதலியவைகளைப் பாருங்கள். வேதம் வேதகாலம் பெரும்பாலும் வெள்ளையர், கருப்பர் சண்டையாகவே இருந்து வந்து இருக்கிறது என்பதை வேதம் அறிந்த யாரும் உணரலாம்.

### வேத காலம்

வேதத்தில் கடவுளையோ, அல்லது ஆரியர் தலைவரான இந்திரனையோ பிரார்த்திக்கும் பிரார்த்தனைகள் மந்திரங்கள் எல்லாம் கருப்பு நிறக்காரர்கள் தங்களுக்கு கொடுமைகள் செய்கின்றார்கள் என்றும், தங்கள் சுகபோகங் களுக்கு பங்காளிகளாய் இருக்கிறார்கள் என்றும், தங்கள் ஆதிக்கத்துக்கு முட்டுக்கட்டையாய் இருக்கிறார்கள் என்றும், ஆதலால் கருப்பர்களை அடியோடு அழிக்க வேண்டும் என்றும், ஒழிக்க வேண்டும் என்றும் பிரார்த்திப்பதாகவே காணலாம்.

மற்றும் ஸ்மிருதி என்பவைகளைப் பார்த்தாலும் பார்ப்பனர்கள் என்பவர்களுக்கு ஏற்படுத்திக் கொண்டு இருக்கும் உயர்வும், சௌகரியமும் அல்லாதவர்கள் பார்ப்பனர் அல்லது கருப்பு நிறக்காரர்கள் என்பவர்களுக்கு ஏற்படுத்தி இருக்கும் இழிவும் கொடுமையும், அதை ஆதரிக்கும் அரசர்களைத் தவிர மற்றவர்களை அவர்கள் அழித்து வந்திருக்கிறதும் காணலாம்.

### புராண காலம்

அதுபோலவே புராணங்களைப் பார்த்தாலும் எங்கும் பூசுரர்கள் அசுரர்கள் சண்டையும், தேவர்கள் ராக்ஷதர்கள் சண்டையும், பூ தேவர்கள் அரக்கர்கள் சண்டையுமாக மலிந்து கிடப்பதைப் பார்க்கலாம்.

அதே சண்டைகள் கிளர்ச்சிகள் ஆகியவைகள் தான் இன்று தேசபக்தர்கள், தேசத் துரோகிகள் என்னும் பேரால் நடைபெறுகின்றன.

அந்தக் காலத்தில் புராணங்களில் நடந்ததாகச் சொல்லப்படும் சூட்சிகள் எல்லாம் இந்தக் காலத்திலும் இக்கிளர்ச்சிக்கு நடைபெறுகின்றன.

இந்திர பட்டம் பெறவோ, வேறு மேன்மை பெறவோ (பார்ப்பனர்களைத் தவிர) வேறு யார் தவம் (பாடுபட்டாலும்) செய்தாலும் அவர்களை எவ்வளவு சூழ்ச்சிகள் இழிவான வஞ்சனையான காரியங்கள் செய்திருக் கிறார்கள் என்பதைப் பார்த்தால், இன்றைய காரியங்களைப் பார்த்து யாரும் ஆச்சரியப்பட முடியாது.

தபம் செய்பவர்கள் தவத்தைக் கெடுக்க அனேக தடவைகளில் பெண்டுகளை விட்டே மயக்கிக் கெடுத்திருக்கிறார்கள்.

ராவணனுடைய தவத்தின் மகிமையை எவ்வளவு சூட்சி செய்து கெடுத்திருக்கிறார்கள்.



இரணியன் தபசின் மகிமையை எவ்வளவு சூழ்ச்சி செய்து கெடுத்து இருக்கிறார்கள். பத்மாசூரன் தவத்தின் மகிமையை எப்படிப்பட்ட தந்திரத்தால் கெடுத்திருக்கிறார்கள். இது போலவே புராணங்கள் முழுவதும் ஏறக்குறைய மகா மேன்மையான தவம் செய்து பெற்ற வலிமையை தந்திரங்களாலும், சூழ்ச்சிகளாலும், வஞ்சகத்தாலும் கெடுத்து, அவர்களை ஒழித்ததாகவே தான் காணலாம்.

இவைகள் எல்லாம் உண்மை அல்ல என்றும், பொய்க் கதைகள் என்றும் மிகைப்படுத்தி மாற்றிக் கூறப்பட்டவை என்றும் சொல்லப்படுவது உண்மை ஆனாலும் கூட பார்ப்பனரல்லாதாரை எப்படி நடத்த வேண்டும், எப்படி வஞ்சிக்க வேண்டும், எப்படி அவர்களை தலை எடுக்கவொட்டாதபடி அமுத்தி வைக்க வேண்டும், தலை எடுத்தவர்களை எப்படி ஒழிக்க வேண்டும் என்பதற்கு வழிகாட்டியாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அந்த முறையில் தான் இன்று பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்கின்ற கிளர்ச்சி அரசியலின் பேரால் தேசபக்தி தேசாபிமானம் என்பதின் பேரால் நடைபெறுகிறது.

### தேசாபிமானம்

இந்திய சரித்திரங்களினாலும் சரி, புராணத்தினாலும் சரி முன் காலத்தில் தேசாபிமானம் என்கின்ற பேச்சோ, தேசபக்தி என்கின்ற பேச்சோ, கிளர்ச்சியோ இருந்து வந்ததாக காண்பதற்கில்லை. தேச பக்தி, தேசாபிமானம் என்கின்ற வார்த்தை மேல்நாட்டிலிருந்து வந்ததாகும்.

நம் நாட்டில் ராஜாக்களுக்கும் ராஜாக்களுக்குமாத்தான் சண்டைகள் நடந்திருக்கிறது. அது விஸ்தீரணத்தை அதிகப்படுத்திக் கொள்ளவும் ஒரு வகுப்பாரை ஒழிக்கவுமே அல்லாமல், தேச நன்மைக்கு என்று தேசபக்தி பூண்டு அரசர்களுடன், பொது ஜனங்கள் போர் புரிந்ததாக சரித்திரம் இல்லை.

மேல்நாட்டு தேசாபிமானத்துக்கும், தேசபக்திக்கும் நாம் இங்கு இன்று கற்பிக்கிற அருத்தம் இருந்ததில்லை. அங்குள்ள தேசாபிமானத்தாலும், தேச பக்தியாலும் எந்த தேச மக்களுக்கும் விடுதலை ஏற்பட்டதாக ஆதாரமோ அனுபவமோ இருந்ததும் இல்லை.

அனேக பெரியார்கள் தேசாபிமானம் என்பதை மிக இழிவாக குறை கூறி இருக்கிறார்கள். தேசாபிமானத்தின் யோக்கியதையும், பலனும் அப்படியேதான் மிக தந்திரமுடையதாகவும், சூழ்ச்சி உடையதாகவும் ஏமாற்றும் குணம் உடையதாகவுந்தான் இருந்து வருகின்றது.

### பாரத தேசம்

சாதாரணமாக இந்த நாட்டை பாரத தேசம் என்று சொல்லுவதுகூட யோக்கியமான பெயராகாது. பரதன் என்கின்றவன் ஆண்டதால் பாரத



RangaRakes tamilnavarasam.com

தேசம் என்று சொல்லப்படுமானால் அதற்கு முன் ஆண்டவர்கள் பெயர் ஏன் சொல்லக் கூடாது? அதற்கு பின் ஆண்டவர்கள் ஆளுகின்றவர்கள் பெயர்கள் என்ன கதியாவது? எந்த தேசத்துக்காவது எப்பவோ ஒரு காலத்தில் ஆண்டவன் பெயர் சொல்லப்படுகிறதா? இந்தப் பெயர் ஆரிய ஆதிக்கத்தைக் குறிப்பதே தவிர வேறில்லை. அக்காலத்திய அரசர்களை நாம் மதிப்பதாகவோ, பாராட்டுவதாகவோ சொல்லுவதும், பழங்கால அரசர்கள் ஆட்சி போன்ற அரசியல் முறை வேண்டுமென்று சொல்லுவதும் பெரிதும், சுயமரியாதை அற்றதும் முட்டாள்தனமானதுமான காரியமாகும்.

## பழைய ஆட்சி

பழங்கால அரசர்களின் ராஜா விசாரணை, ராஜ நீதி என்பவை என்ன என்பதற்கு அக்கால ஆதாரங்கள் சரித்திரங்கள் அல்லாமல், அவர்களைப் போல் நடிக்கும் நாடகங்களைப் பார்த்தாலும் நன்றாய் விளங்கும். உதாரணமாக, ஒரு அரசன் ராஜா சபைக்கு வந்த உடன் மந்திரியை என்ன கேட்கின்றான்.

''பிராமணர்களுக்கு மான்யம், அன்ன சத்திரம், வேதபாட சாலை, (இலவசப் படிப்பு) ஆகியவைகள் தாராளமாய் வழங்கி இருக்கிறாயா, அவர்கள் மனம் நோகாமல் சந்தோஷத்தோடு வாழ உதவி செய்து வருகிறாயா'' என்று கேட்டுவிட்டு, ''மற்ற வகுப்பார் பிராமணர்களுக்கு அடங்கி அவரவர்களுக்கு இட்ட கருமப்படி நடந்து வருகிறார்களா'' என்றுதான் கேள்க்கின்றானே ஒழிய, வேறு என்ன? அதாவது வர்ணாச்சிரம ராஜ்யபாரம் தானே இதுவரை நடந்து வந்திருக்கிறதே ஒழிய வேறு என்ன?

## ராமராஜ்ஜியம்

ஆகவே இன்று இந்நாட்டில் நடக்கும் கிளர்ச்சியை வெரும் அரசியல் கிளர்ச்சி என்பதாகவே வைத்துக் கொண்டாலும்கூட எவ்வித ஆட்சி முறையை விரும்பும் அரசியல் கிளர்ச்சி என்று பார்ப்போமானால், அது பார்ப்பன ஆதிக்கத்தை ஏற்படுத்தவும் பலப்படுத்தவும் நடக்கும் வருணாச்சிரம ஆட்சி அல்லது, ராமராஜ்ஜிய தர்ம ஆட்சி என்றுதான் சொல்ல வேண்டும். இதை இன்றைய அரசியல் கிளர்ச்சியின் சர்வாதிகாரத் தலைவராய் இருந்த காந்தியார் பல தடவை சொல்லி இருக்கிறார்கள். மற்றும், இன்றைய அரசியல் கிளர்ச்சிக்கு உதாரணங்கள் பார்ப்பனீய ஆதிக்கப் புராணங்களிலிருந்தே கையாளப்படுகின்றன. யாராவது அவ்வாட்சி முறையைப் பார்ப்பன ஆதிக்க முறையாய் இருக்குமோ என்று சந்தேகப்பட்டால் அவர்களை இன்று ராட்சதர்கள், அசுரர்கள், அரக்கர்கள் என்றுதான் கூறப்படுகின்றது.

இவைகளைக் கண்ட எவன்தான் இன்றைய அரசியல் கிளர்ச்சி பார்ப்பன ஆதிக்கத்துக்காக செய்யப்படும் சூழ்ச்சிக் கிளர்ச்சியல்ல வென்று சொல்ல முடியும்?



## முஸ்லீம்கள் கண் விழிப்பு

அன்றியும் இன்றையக் கிளர்ச்சி இந்துமத ஆதிக்கக் கிளர்ச்சியாய் இருக்கக்கூடும் என்று கருதி சுமார் 15, 20 வருஷங்களுக்கு முன்பாகவே, முஸ்லீம்கள் பயந்து தங்களுக்கு பாதுகாப்பு வேண்டுமென்றும், அதற்காக அரசியல் பதவிகளில் தங்கள் பிரதிநிதித்துவத்துக்கு வரையன ஏற்பட்டு விடவேண்டும் என்றும் கிளர்ச்சி செய்து ஒரு திட்டத்தையும் அளவையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். அதுபோலவே கிருஸ்தவர்களும், ஆங்கிலேயர்களும், ஆங்கிலோ இந்தியர்களும் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொண்டார்கள்.

## ஆட்சேபனை ஏன்?

அதைப் பின்பற்றியே, இந்தியர்களில் மற்றொரு சார்பார்களாகிய இந்துக்கள் என்பவர்களிலும் உள்ள மூன்று பிரிவார்களில் அதாவது மேல் ஜாதி, நடு ஜாதி, கீழ் ஜாதி என்று சொல்லப்படுபவர்களுக்குள்ளும், அரசியலிலும், சமூக இயலிலும் பிற்பட்டு தாழ்த்தப்பட்டு இழிவுபடுத்தப் பட்டு கல்வியிலும், செல்வத்திலும், அரசியல் பிரதிநிதித்துவத்திலும், குறைவான, கீழான நிலையில் இருப்பவர்கள் மேல் நிலையில் இருப்பவர்களிடம் சந்தேகமோ, பயமோ கொண்டு தங்கள் நிலையைப் பந்தோபஸ்த்து செய்து கொள்ள வேண்டுமானால், மேல் நிலையில் மேல் ஜாதிக்காரர்கள் என்னும் பேரால் அரசியல் உரிமை என்பவற்றை ஏகபோகமாய் அனுபவித்துக் கொண்டிருக்கிறவர்கள் ஏன் ஆட்சேபிக்க வேண்டும்? ஏன் மறுக்க வேண்டும்? கிறிஸ்தவர்கள், மகமதியர்கள், ஆங்கிலேயர்கள், ஆங்கிலேய இந்தியர்கள் என்கின்ற வகுப்பார்கள் விஷயத்தில் சர்க்கார் பிரவேசமில்லாமல் தாங்களாகவே ஒப்புக் கொண்ட பார்ப்பனர்கள் தங்களால் கீழ் ஜாதி, கடை ஜாதி என்று சொல்லப்பட்டு உண்மையாகவே தாழ்மையாய் இழிவாய் நடத்தப்படுகின்றவர்களுக்கு சமமாய் நடத்துகிறோம் என்று ஏன் பந்தோபஸ்த்து அளிக்கக் கூடாது.

''அந்தப்படி இவர்களுக்கு எல்லாம் பந்தோபஸ்த்து அளிப்பதானால், பிரிட்டிஷ் ராஜாங்கமே மேலானதென்றும் தங்களுக்கு சுயராஜ்ஜியம்கூட வேண்டாம்'' என்றும் ஏன் சொல்ல வேண்டும். பயப்படுகிறவனுக்கும் நம்பாதவனுக்கும் கஷ்டப்பட்டு இழிநிலையில் இருக்கிறவனுக்கும் சமாதானம் சொல்லவில்லையானால், எப்படி எல்லா மக்களுடையவும் கூட்டுறவைப் பெற முடியும். ஏதோ இரண்டொரு மோசிடி, போக்கற்றவன், வயிற்றுச் சோற்றுக் கூலிகளை புராண காலத்து சூழ்ச்சிகள் செய்து வசப்படுத்திக் கொண்டு அனுமார்களாக ஆக்கி, மற்றவர்கள் மீது ஏவி விடுவதாலும், தேசத்துரோகிகள், ராட்சதர்கள், அசுரர்கள், அடிமைகள், குலாம்கள் என்று வைவதினாலும், வைய்யச் செய்வதினாலும் சந்தேகமும், பயமும், துவேஷமும், வெறுப்பும் பலப்படுமா? குறையுமா? என்றும் கேட்கின்றேன்.



RangaRakes tamilnavarasam.com

## பார்ப்பன ஆட்சி இனி முடியாது

இன்னமும் ஒரு ஆயிரம் கூலிகளை வசப்படுத்தி, உசுப்படுத்தி விட்டாலும், பயமும், துவேஷமும் வளர்ந்து எதிர்ப்பு அதிகமாகி அதிகத் தொல்லையைத்தான் விளைவிக்குமே தவிர ஒரு நாளும் இக்கிளர்ச்சி அடங்கிவிடப் போவதில்லை என்பதோடு, பிரிட்டிஷ் ராஜாங்கத்தையே சுயராஜ்ஜியத்தைவிட 1000 பங்கு மேலான ராஜ்ஜியம் என்று சொல்லும் படியாக ஆக்கத்தான் முடியும் என்பதோடு, பார்ப்பனர்கள் கோரும் தங்கள் ஆதிக்க ஆட்சி கனவாக ஆகிவிடும்.

சமீபகாலத்தில் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தலின் வெற்றியானது பார்ப்பனர்களுக்கு பெருத்த ஆணவத்தைக் கொடுத்துவிட்டதோடு, துணிகரமாக காசைக் கொடுத்து காலிகளை ஏவிவிட்டு, ஈனத்தனமாக வையும்படி செய்து வருகிறார்கள். இதன் பின் விளைவு அவர்களுக்கு தற்கொலையாகத்தான் ஏற்படப் போகின்றது.

## அசம்பளி வெற்றி

இந்திய சட்டசபைத் தேர்தல் வெற்றியானது, பார்ப்பனர்களின் யோக்கியதையையும் அவர்களது ஆயுதமாகிய காங்கிரசின் யோக்கிய தையையும் பாமர மக்கள் அறிவதற்கு ஒரு கண்ணாடி போல் இன்று நமக்கு பயன்பட்டு வருகிறது. அதோடு நம் மக்களைத் தட்டி எழுப்பி ஊக்கத்தையும், உணர்ச்சியையும் உண்டாக்கப் பயன்பட்டிருக்கிறது.

இந்திய சட்டசபையில் பார்ப்பனரல்லாதார் கட்சியார் ஜெயித்து இருந்தால்கூட இந்த நன்மைகள் - இவ்வளவு நன்மைகள் நமக்கு ஏற்பட்டிருக்க முடியாது.

காங்கிரஸ்காரர்கள் என்பவர்கள் இந்திய சட்டசபைக்குப் போய் என்ன செய்து விட்டார்கள்? அவர்களின் வாக்குத் தத்தங்கள் என்ன ஆயிற்று? அவர்களுக்கு வெற்றி ஏற்பட வேண்டும் என்றும், அவர்களுக்கு வெற்றி ஏற்பட்டால் இன்ன இன்னது செய்வார்கள் என்றும் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லி வாக்குக் கொடுக்க ஓட்டு கேட்டு வாங்கிக் கொடுத்த தலைவர்கள், காந்தியார், ராஜகோபலாச்சாரியார்களான மகாத்மாக்களும், குட்டி மகாத்மாக்களும் இன்று ஏன் ஓடி ஒளிந்து கொண்டார்கள்? தங்களுக்கும் காங்கிரசுக்கும் சம்மந்தமில்லை என்று சொல்லி ஏன் ஓய்வெடுத்துக் கொண்டார்கள்?

இவர்கள் ஓடி ஒளிந்து கொண்டதாலேயே இவர்களது வாக்குத் தத்தங்கள் மறக்கப்பட்டு விடுமா? நாளை இந்த யோக்கியர்கள் பொது ஜனங்கள் முன்னால் வந்து ஓட்டுக் கேட்க யோக்கியதை உண்டா? இந்த நிலைமை எல்லாம் நாம் இந்திய சட்டசபைத் தேர்தலில் தோற்கடிக்கப் பட்டதாலேயே ஏற்பட்டதென்று மகிழ்ச்சியடைய வேண்டும்.



## மந்திரிகள் மீது குறை

நிற்க, இன்று பார்ப்பனக் கிளர்ச்சியில், நம் மந்திரிகளை குறை கூறி மக்களுக்கு அவர்களிடத்தில் வெறுப்பை உண்டாக்க முயற்சிக்கிறார்கள். மந்திரிகள் செய்த குற்றம் என்ன என்றாவது அவர்கள் நடந்து கொண்ட நாணயக் குறைவான காரியம் இன்னது என்றாவது இதுவரை எவரும் மெய்ப்பித்தது கிடையாது. பாமர மக்கள் ஏமாறும்படி விஷமமாய் பிரசாரம் செய்வது என்பதைத் தவிர காரியத்தில் நிரூபிக்க யோக்கியதை இல்லாமலே இருந்து வருகிறார்கள்.

இதுவரை மந்திரிகள் மீது சொல்லப்படும் குறைகள் எல்லாம் மந்திரி களுக்கு சம்மந்தமில்லாத காரியங்களைப் பற்றியே சொல்லி வருகிறார்கள்.

போலீசார் தொண்டர்களை அடித்தது பற்றியும், சர்க்காரார் பூமிகளுக்கு வரிகளைக் குறைக்கவில்லை என்றும், ஜெயில் கைதிகளுக்கு மோர் கொடுக்கவில்லை என்றும், உத்தியோகத்தில் நத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றும், ராஜீனாமா கொடுக்கவில்லை என்றும், முட்டாள்தனமாக உளறு கிறார்களே தவிர, நியாயமானதும் உண்மையானதுமான ஒரு குற்றத்தையும் எடுத்துச் சொல்ல யோக்கியதை இல்லாமலே இருந்து வருகிறார்கள்.

போலீசார் தொண்டர்களை அடித்ததும், வரி குறைத்ததும், கைதிகளுக்கு மோர் கொடுப்பதும் மந்திரிகள் இலாக்காவைச் சேர்ந்த காரியங்கள் அல்ல என்பது அரசியலில் ஏ.பி. கூட படிக்காத மூடனுக்கும் தெரிந்திருக்கும். அப்படி இருக்க இவ்விஷயங்களுக்காக மந்திரிகள் மீது பழி சுமத்துவது என்பது ''அரசியல் என்பதும், தேசாபிமானம், தேசபக்தி என்பதும், வடிகட்டின அயோக்கியத்தனம் என்று சொன்ன ஞானிகளின் மொழியை பரமார்த்த சத்தியம் என்பதாக ருஜூப்பிக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

## மந்திரிகள் ராஜினாமா செய்யவில்லை

நமது பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைப் பற்றியும், பார்ப்பனரல்லாதார் மந்திரிகளைப் பற்றியும் கூறி வரும் விஷமத்தனமான புகார்களுக்கும், பழிக்கும் அவ்வப்போது ஜஸ்டிஸ், விடுதலை, குடிஅரசு, நகர தூதன் முதலிய பத்திரிகைகள் மறுப்புகள் கூறி வந்திருப்பதுடன், இனியும் அந்தப்படி விஷமப் பிரசாரங்கள் செய்யாமல் இருக்கத்தக்க புத்தி வரும்படி எழுதியும், பேசியும் வந்திருக்கிறோம். அப்படி இருந்தும், பாமர மக்களின் முட்டாள்தனத்தை அனுகூலமாய்க் கொண்டு இனியும் முன்போலவே செய்து வருகிறார்கள்.

சமீபகாலத்தில் தோழர் சத்தியமூர்த்தி அவர்கள், ''ஜஸ்டிஸ் மந்திரிகள் சில காரியங்கள் செய்வதை அவை தங்கள் அதிகாரத்தில் அடங்கினதல்ல என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் ஏன் ராஜீனாமா செய்யவில்லை'' என்று கேட்டிருக்கிறார்.



RangaRakes tamilnavarasam.com

## காங்கிரஸ்காரர் ஜாமீன் கொடுப்பார்களா?

மந்திரிகள் ராஜினாமா செய்துவிட்டால் பிறகு அந்த மந்திரி பதவி காலியாக இருக்கும் என்பதற்கு சிலர் ஜாமீன் கொடுப்பார்களா? அல்லது தங்களைப் பொருத்த வரையிலாவது அந்த மந்திரி பதவிகளை ஏற்பதில்லை என்பதற்கு ஆவது தக்க ஜாமீன் கொடுப்பார்களா? இவர்களது அரசியல் சர்வாதிகாரியான காந்தியாராவது, இவர்களது ஜாதி தலைவரான சங்கராச்சாரியார்களாவது உத்திரவாதம் கொடுப்பார்களா? ஒன்று மில்லாமல் ''நீங்கள் ராஜினாமா கொடுங்கள், நாங்கள் போய் குந்திக்கொள்ளுகிறோம்'' என்றால் யார்தான் ராஜினாமா கொடுப்பார்கள்.

தோழர் சத்தியமூர்த்தி அவர்களும், அவரது வால்களாக மற்றும் சுமார் 10 தோழர்களும் தென்னாட்டில் இருந்து இந்திய சட்டசபைக்கு போய் பல தடவை தோல்வி அடைந்து, பல தடவை அவமானமடைந்தார்களே அதாவது 43 தடவை சர்க்காரை தோல்வி அடைய செய்து 43 தீர்மானங்களில் வெற்றி பெற்று அந்த 43 வெற்றியையும் வில்லிங்டன் துரைமகனார் குப்பைத் தொட்டியில் போட்டு காரி உமிழ்ந்து விட்டாரே அதற்கு ஆக எந்த தேசிய வீரராவது, தேச பக்தராவது அவமானமடைந்து ராஜினாமா செய்தார்களா? ''ஒரு காசுக்குப் பயனில்லாமல் ஒரு காரியமும் செய்ய முடியாமல் இருப்பதும், நாய், கழுதைகள் கூட போய் உட்காருவதற்கு தகுதி அற்றதுமான ஸ்தானம்'' என்று இவர்களாலேயே சொல்லப்பட்ட பதவியில் போய் உட்கார்ந்து கொண்டு எவ்வளவோ பாடுபட்டுச் செய்த 3½ டஜன் தீர்மானங்களை சர்க்கார் அலட்சியம் செய்த பிறகுகூட அந்த ஸ்தானத்தைவிட மானமோ ரோஷமோ ஏற்படவில்லையானால், தாங்கள் கருதுகிறபடி ஒரு அளவுக்காவது நன்மை செய்யக் கூடிய பதவியை தங்கள் அதிகாரத்தில் இல்லாத காரியங்கள் நடைபெறவில்லை என்பதற்காக யார் ராஜினாமா செய்யக் கூடும். லார்டு வில்லிங்டன் துரை அவர்களை பார்க்க வேண்டுமென்று தோழர் காந்தியார் பல தடவை கெஞ்சியும் ''வாசற்படியை மிதிக்க அனுமதி தரமாட்டேன் போ'' என்று சொன்னவரின் தலைமையில் உள்ள ஸ்தானத்துக்கு 10 ஆயிரம் 20 ஆயிரம் செலவு செய்து கொண்டு போய் ராஜ விஸ்வாசப் பிரமாணம் செய்து கொண்டு, உட்கார்ந்து கொண்டு மேலும் 43 அவமானங்கள் ஏற்பட்ட பிறகும் அதை விட்டுவிட்டு வர முடியவில்லையானால், யார் மானமில்லாமல் ஒட்டிக் கொண்டு இருக்கிறவர்கள். இவர்களுக்கு ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளைப் பற்றி பேச சிறிதளவாவது யோக்கியதை உண்டா என்று கேட்கிறேன்.

மந்திரிகள் அதிகச் சம்பளம் வாங்குவதாக வயிற்றெரிச்சல் படுவதோடு தாங்கள் அந்த வேலைகளை மீ 500 ரூ. சம்பளம் பெற்றுக் கொண்டு பார்ப்பதாகச் சொல்லுகிறார்கள். இவர்களின் முன் பின் யோக்கியதையை அறிந்த எவரும் இவர்களது வாய் வார்த்தையை எப்படி நம்ப முடியும்.



ஆதலால் இவர்கள் மந்திரி பதவி அடைந்தால் 500 ரூ. மாத்திரம் எடுத்துக் கொண்டு பாக்கியைச் சர்க்காருக்கே விட்டுவிடுகிறோம் என்பதாக கூறி அந்த மேல்கண்ட தொகையாகிய மீதி ரூ.4833-5-4 பையை ஐந்து வருஷத்துக்கு கணக்குப் போட்டு இம்பீரியல் பாங்கியிலோ, இந்தியன் பாங்கியிலோ டிப்பாசிட்டு கட்ட சம்மதிக்கிறார்களா என்று கேட்கின்றேன்.

முன்பு ஒரு தடவை இப்படித்தான் பிரயாணப்படி கூட வாங்குவதில்லை என்று சொன்ன காங்கிரஸ்காரர்கள் சிலர் பொய்ப் பிரயாணப்படி கொடுத்து சிக்கிக் கொண்டு விழித்தது பலருக்குத் தெரிந்த விஷயம்.

சமீபகாலத்தில் இந்தத் தடவைகூட பகுதி பிரயாணப்படியாவது காங்கிரஸ் நிதிக்கு காங்கிரஸ் தலைவர் கேட்டதற்கு முடியாது என்று சொன்னதும் பலருக்குத் தெரியும். இந்த நிலையில் உள்ள சத்திய கீர்த்திகள் தாராளப் பிரபுக்கள் தான் ஜஸ்டிஸ் கட்சியார் வாங்கும் சம்பளத்தில் பொறாமைப் படுகிறார்கள். காங்கிரசுக்காரர்கள் பொது ஜனங்களை ஏமாற்றி சுயராஜ்ஜியம், கதர், தீண்டாமை விலக்கு, கிராமப்புனருத்தாரணம், தலைவர்களுக்குப் பண முடிப்பு என்னும் பேரால் பொது மக்கள் பணம் கொள்ளை அடித்து நன்றாய் அனுபவிக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியார் அப்படி இல்லாமல் தங்களுக்குக் கிடைக்கும் சட்டப்படியான சம்பளம் பெற்று கட்சி நலனுக்கு ஒரு அளவைச் செலவு செய்கிறார்கள். இதைப் பற்றி ஏன் பேச வேண்டும்?

காங்கிரஸ்காரர்கள் தாங்கள் மந்திரியானால் அவ்வளவு பணம் வாங்குவதில்லை என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?

''சர்க்கார் சாப்பிடுவதை நாங்கள் கதருக்கு உபயோகப்படுத்தினால் என்ன, தீண்டாமை விலக்குக்கு உபயோகப்படுத்தினால் என்ன?'' என்று சொல்லி வாயில் போட்டுக் கொள்ள மாட்டார்கள் என்பதற்கு என்ன ஜவாப்தாரித்தனம் இருக்கிறது.

அவர்கள் மந்திரியானால் 500 ரூபாயுக்கு மேல் எடுத்துக் கொள்ளுவதில்லை என்பது உறுதியானால் இப்பொழுதே மீதி பணம் எவ்வளவு ஏற்படுமோ அதை பாங்கியில் போட்டு விடுவார்களா? அல்லது காந்தியாரோ, சங்கராச்சாரியாரோ இந்தப் பார்ப்பனர்களுக்காக ஜாமீன் கொடுப்பார்களா?

வீணாக வாய் இனிக்கப் பேசி மக்களை ஏமாற்றுவதைவிட வேறு என்ன இருக்கிறது.

ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டிகளைக் கைப்பற்றி பரிசுத்தப்படுத்த வேண்டுமாம். அதற்காக பழைய ஆட்களைத்தான் காங்கிரசின் பேரால் நிற்கும்படி கெஞ்சுகிறார்களே ஒழிய புதிய ஆள்கள் ஒருவரையும் பிடிப்பதாக காணவில்லை.



RangaRakes tamilnavarasam.com

இன்று பதவியில் இருக்கும் ஆட்கள் காங்கிரசில் கையெழுத்துப் போட்டு விட்டால் மாத்திரம் யோக்கியர்களாகி விடுவார்களா? ஆகவே பல துறையிலும், பார்ப்பன ஆதிக்கத்துக்கு தகுந்த அடிமைகள் வேண்டும் என்று தேடுவதைத் தவிர காரியத்தில் அவர்களுக்கு எவ்வித கொள்கையும் இல்லை.

காங்கிரஸ்காரர்கள் என்றாலும் சரி, பார்ப்பனர்கள் என்றாலும் சரி எப்படியாவது ஜஸ்டிஸ் கட்சியை மந்திரி பதவியில் இருந்து ஒழிக்க வேண்டும் என்பதே அவர்களது கொள்கை.

மந்திரி பதவி போகப் போவதில்லை என்றாலும், மந்திரி பதவி போய்விட்டது என்றே வைத்துக் கொள்ளுவோம். இதனால் என்ன முழுகிப் போகும். முன்பு ஒரு தடவை ஜஸ்டிஸ் கட்சிக்கு மந்திரி பதவி கிடைக்க வில்லை. அதனால் கட்சி இரட்டிப்பு பலம் பெற்றதுடன் காங்கிரசினால் - ராஜகோபாலாச்சாரியாரால் - விஜயராகாவாச்சாரியரால் பிடித்து வைத்த தேசீய மந்திரிகள் ஜஸ்டிஸ் கட்சிக்கு தாசானுதாசர்களாய் இருந்தார்களே ஒழிய பார்ப்பன கூலிகளாக ஒரு நாளும் இருக்கவில்லை.

பிறகு அவர்களை ஒழிக்க காங்கிரஸ்காரர்களும், காங்கிரஸ் பத்திரிகை களுமே பாடுபட வேண்டியதாயிற்று. சென்ற தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சிக்குத் தான் மந்திரி பதவி கொடுக்க வேண்டும் என்று ராஜகோபாலாச்சாரியார், இந்துப் பத்திரிகை எல்லாம் கூப்பாடு போட்டன.

அதுபோலவே ஜஸ்டிஸ் கட்சி தோற்றுவிட்டால், ஜஸ்டிஸ் கட்சி பலப்படுவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படும். சுயமரியாதைக்காரர்கள் சர்வாதிகாரிகளாக இடமும் ஏற்படும். ஆதலால் நமது கடமையைச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறேனே ஒழிய ஜஸ்டிஸ் கட்சி தோற்று விட்டால் உலகம் முழுகிப் போகும் என்றோ, பார்ப்பனரல்லாதார் அழிந்து விடுவார்கள் என்றோ நான் பயப்படவில்லை.

தோழர்கள் ராஜகோபாலாச்சாரியார், சத்தியமூர்த்தி ஆகியவர்கள் மீதும் நான் குற்றம் சொல்ல வரவில்லை. அவர்களைக் குற்றம் சொல்லுவதும் குற்றமாகும்.

ஏனெனில் அவர்கள் உண்மையான சமூக பக்தர்கள். தங்கள் சமூகத்தை எந்த சமயத்திலும் விட்டுக் கொடுத்ததில்லை. அதற்காக அவர்களிடம் எனக்கு மதிப்பு உண்டு.

தங்கள் சமூகத்துக்காக உழைக்கும் மற்ற பார்ப்பனர்களையும் பாராட்டுகிறேன்.

ஆனால் அவர்களுடன் கூடிக் கொண்டு தங்கள் வயிற்றுப் பிழைப்புக் காகவும் தங்கள் தனிப்பட்ட சுயநலத்துக்காகவும் குறைக்கும் பார்ப்பனரல்லாத கடைகெட்ட கூலிகளிடம் தான் எனக்கு ஆத்திரமும், வெட்கமும் ஏற்படு கின்றது. நமது சமூகம் இவ்வளவு கேவலமான இழிவான நிலைமைக்கு போகக்கூடிய மக்களை பெற்றுவிட்டதே என்று மனம் வருந்துகிறது.



எப்படி ஆனாலும் யோக்கியமான முறையில் நடக்கும் எதிர் பிரசாரத்தை நான் வரவேற்கிறேன். வீண் காலித்தனம், கூலித்தனமுமான பிரசாரம் பொதுவாகவே ஜனசமூக யோக்கியதையையே கெடுத்துவரும். யார் வந்து என்ன அபிப்பிராயம் சொன்னாலும் பொருமையாய் யோக்கியமாய் கேளுங்கள். கூட்டத்தில் குழப்பம், காலித்தனம் என்பவைகளை கையாடாதீர்கள். சொல்வதை பொருமையோடு கேட்க வேண்டும். விஷயங்கள் கேட்ட பின்பு ஆராய்ந்து பார்க்க வேண்டும். சரியானது என்று பட்டதை ஒப்புக் கொண்டு மற்றதை தள்ளிவிட வேண்டும்.

*குறிப்பு: 31.08.1935 இல் திருத்துரைப்பூண்டி, 01.09.1935 இல் திருச்சி (டவுன் ஹால்), 03.09.1935 இல் திண்டுக்கல் (டவுன் ஹால்) முதலிய இடங்களில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளின் சுருக்கம்.*

**குடி அரசு - சொற்பொழிவு - 08.09.1935**



RangaRakes tamilnavarasam.com

# மடச் சட்டமும் மதிப்பற்ற உத்தியோகமும்

நமது நாட்டு சுயராஜ்ஜிய முறையைப் பற்றி பல தடவை எழுதி வந்திருக்கிறோம். சிறப்பாக இன்று ஜனநாயக முறை என்று சொல்லப் படுவதைக் கொண்ட எந்த அரசியலும் பாமர மக்கள் நன்மைக்குப் பயன்படாது என்று எடுத்துக்காட்டி வந்திருப்பதோடு குறிப்பாக நம் நாட்டுக்கு அவை அடியோடு பொருந்தாது என்றும் சொல்லி வந்திருக்கிறோம்.

பல மத, சாதி பேதங் கொண்ட சமூகமும், பலவித வாழ்க்கை லட்சியம், தொழில் முறை லட்சியம் முதலியவை கொண்ட சமூகமுமாகிய நம் நாட்டுக்குக் கண்டிப்பாக அப்படிப்பட்ட எந்தவித ஜனநாயக முறையும் பொருந்தாது என்பதே நமது அபிப்பிராயம்.

ஜனநாயகம் என்பது பொது ஜனங்களுக்காக, பொது ஜனங்களால் பொது ஜனங்களுடைய ஆட்சியால் நடத்தத் தகுதி உள்ள நாட்டுக்குத்தான் பொருத்தமுடையது என்று சொல்லப்படும். அப்படிப்பட்ட ஆட்சி அதன் உண்மைத் தத்துவத்தில் நம் நாட்டில் நடைபெற முதலாவது இன்னமும் அரசாங்கத்தார் ஒப்புக் கொள்ளுவது என்பது சுலபத்தில் எதிர்பார்க்கக் கூடியதல்ல என்பதோடு, நம் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளக் கூடிய தலைவர்களோ, பிரதிநிதி ஸ்தாபனமோ ஒப்புக் கொள்ளக் கூடும் என்று ஒரு நாளும் எதிர்பார்க்க முடியாது.

பொது ஜனங்கள் என்பவர்களும், இந்நாட்டின் எல்லா மக்களுக்கும், எல்லாத் தொழில் முறைக்கும் ஒரே மாதிரியான சட்ட அமுல் இருப்பதை ஒப்புக் கொள்ளுவார்கள் என்றும் இன்று எதிர்பார்க்க முடியாது.

இவ்விஷயம் சரியா, தப்பா என்பதை தனித்தனியாக ஒவ்வொரு மதவாதியையும், ஒவ்வொரு ஜாதி வாதியையும், தொழில் முறையில் ஒவ்வொரு வகுப்புவாதியையும் கேட்டுப் பார்த்தால் நாம் சொல்லுவது மிகவும் சரியானது என்கின்ற அபிப்பிராயம் விளங்கும்.

ஆதலால், நாம் இன்று நம் நாட்டில் ஜனநாயகம் என்னும் பேரால் நடந்து வரும் அக்கிரமங்களையும், பாதகங்களையும் எடுத்துக் சொல்ல வேண்டியதும், ஜனநாயக ஆட்சி என்பதானது முடிநாயக ஆட்சியால் ஏற்படும் பயனைவிட



அனுபவத்தில் எவ்வளவு மோசமாகவும், பாதகமாகவும் நடைபெறுகின்றது என்பதையும் எடுத்துக்காட்ட வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

இந்தியாவில் ஜனநாயக ஆட்சி முயற்சி என்பது ஏற்பட்டு இன்றைக்கு 50 வருஷம் ஆகப் போகின்றது.

அம்முயற்சி, ஆரம்பத்தில் சில பதவிகளும், பல உத்தியோகங்களும், இந்தியர்களுக்கு கிடைக்க வேண்டும் என்கின்ற தேசீய லட்சியத்தில் இருந்து படிப்படியாக உயர்ந்து சுயராஜ்ஜியம் என்னும் தேசீய அரசியல் லட்சியத்துக்கு வந்து, அந்த முறையில் உள்நாட்டுத் தகறார்களுக்கு ஏற்ப ஏதேதோ புரியாததும், பொருத்தமற்றதும், முன்னுக்குப் பின் முரணானதுமான காரியத்தில் இறங்கி, பொதுநல ஆர்வத்தால் பொதுமக்களால் நடைபெறுகின்றது என்று சொல்வதற்கு இல்லாமல், மதம், ஜாதி, வகுப்பு என்கின்றதான தனிப்பட்ட சுயநல லட்சியத்தால், தனிப்பட்ட சுயநல மக்களால் நடைபெறுகின்றது என்று சொல்லும்படியான நிலைமை ஏற்பட்டு, அந்தந்த மதம், ஜாதி, வகுப்பு, தொழில் முறை ஆகியவற்றிற்கு பந்தோபஸ்த்தளித்து நம்பச் செய்யும் முயற்சியே முக்கியமானதாகவும், இவ்விஷயங்களில் தெளிவான அபிப்பிராயங்கள் மக்களுக்கு ஏற்படாமல் குழப்பமான நிலையில் இருக்கும்படி செய்து, தங்கள் தங்கள் மத ஜாதி வகுப்பு தொழில் முறை லட்சியம் ஈடேறும் படியாகவும், முயற்சிகளும், கிளர்ச்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாகவே இந்தியாவில் குறிப்பாக தென்னிந்தியாவில் தேசீய அரசியல் கிளர்ச்சி என்பது பெரிதும் மதப் பூசலாகவும், ஜாதிப் பூசலாகவும் இருந்து வருகிறது.

இதற்கு மார்க்கங்கள் என்பவை பாமர மக்களை ஏமாற்றுவது, விஷமப் பிரசாரம் செய்வது, காலித்தனத்தால் வெல்லப் பார்ப்பது முதலிய பல அற்ப காரியங்களாகவே இருந்து வருகின்றன.

இதற்கு மகாத்மாக்கள், தியாகிகள் என்கின்றவர்கள் எல்லோரும் மூளையாகவும், மோகனாஸ்திரங்களாகவும், இருந்து கொண்டு மேற்கண்ட அற்ப காரியங்கள் நடைபெற தளகர்த்தர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

இதன் பயனாகவே தேசீய, அரசியல், ஜனநாயகம் என்னும் போர்வை களைப் போர்த்துக் கொண்டு தனிப்பட்ட ஜாதி, மத, வகுப்பு நாயகங்களைப் பலப்படுத்தி, அவற்றின் ஆதிக்கத்துக்கு கொண்டு வர முயற்சிக்கும் காரியத்தை விட கஷ்டப்படுத்தப்பட்டு, இழிவுபடுத்தப்பட்டு, மனித சமூகத்தின் பின் தள்ளப்பட்டு, ஏமாற்றப்பட்டு, கீழ் நிலையில் இருந்து துன்பமும் கேவலமும் அவமானமும் அடைந்து வரும் மக்கள், முதலில் விடுதலை பெற வேண்டும் என்கின்ற லட்சியத்தில் ஜாதிவாதி, வகுப்புவாதி என்கின்ற நிலையிலேயே யாதொரு போர்வையும் இல்லாமல் வெளிப் படையாய் வெள்ளையாய் நின்று போராடி வருகின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

இப் போராட்டமானது, எந்த தனிப்பட்ட ஜாதி வகுப்பு என்றில்லாமல் பொதுவாக கீழ்மைப்படுத்தப்பட்ட, ஏழ்மைப்படுத்தப்பட்ட மக்கள் என்கின்றவர்களுக்காகவென்றே நடத்தி வருகின்றோம்.

ஆதலாலேயே அனேக விஷயங்களில் நாம் பச்சையாகவும், வெள்ளையாகவும் பேச வேண்டிய நிலையில் இருந்து வருகின்றோம். அதோடு மாத்திரமல்லாமல், போலித்தனமானதும் வஞ்சகத்தனமானதுமான தேசிய, அரசியல், ஜனநாயக முயற்சி, கிளர்ச்சி என்பவைகளை எல்லாவற்றையும் வெளியாக்கித் தீரவேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

இப்படிச் செய்வதில் இனி ஏற்படப்போகும் தேசிய அரசியல் ஜனநாயகம் என்பதைப் பற்றி இந்தத் தலையங்கத்தில் பேசாமல், இப்போது ஏதோ ஒரு அளவுக்காவது ஏற்பட்டு ஜனநாயகம் என்னும் பேரால் ஸ்தல சுயாட்சி என்னும் தலைப்பின் கீழ் நடந்துவரும் காரியங்களைப் பற்றியும் அவற்றின் பலன்களைப் பற்றியுமே குறிப்பிட விரும்புகின்றோம். அதாவது இன்றைய ஸ்தல ஸ்தாபன நிர்வாகமென்று சொல்லப்படும், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்ட்டு முதலியவைகளைப் பற்றியே குறிப்பிட ஆசைப்படுகிறோம்.

இதைப் பற்றி முன்னாலேயே பல தடவை குறிப்பிட்டிருந்தாலும், அக்குறிப்புகள் அத்துறைகளில் ஏதோ இரண்டொரு சீர்திருத்தங்கள் செய்வதற்கு தூண்டுகோலாய் இருந்தது என்றாலும் இன்று நாட்டில் உள்ள உள் கலகங்களும், மோசமான நடவடிக்கைகளும், பிரஜா உரிமை என்பதை உணர முடியாமல் செய்து, பாமர மக்களை பொது ஜனங்களை ஏமாற்றி வஞ்சித்து கொடுமைப்படுத்தி, பொது மக்கள் வரிப் பணத்தால் சிலர் பயன் பெறவும், பொது மக்கள் வரிப்பணம் பாழாகவும் அனுகூலமாய் - பலம் பொருந்திய ஆயுதமாய் இருப்பதாக நாம் அனுபவத்திலும், ஆராய்ச்சியிலும் உணர்வதாலும், இம் மாதிரியான காரியங்களை குறைப்பதற்காக என்று கருதிச் செய்த சில சீர்திருத்தங்கள் என்பவை, இன்னும் மோசமான காரியங்களைச் செய்ய இடமளித்து விட்டதாலும் இதைப் பற்றி எழுதித் தீர வேண்டிய நிலைமைக்கு இன்று வந்து விட்டோம்.

**கமிஷனர்கள்**

இன்று முனிசிபாலிட்டிகளுக்கு நிர்வாக அதிகாரியாக ஒவ்வொரு உத்தியோகஸ்தரை சர்க்கார் உத்தியோக வர்க்கத்தில் இருந்தும், சர்க்கார் உத்தியோகஸ்தராகவும் நியமனம் செய்ய சமீபத்தில் ஒரு சட்டம் செய்யப்பட்டு, அந்தப்படி சற்று ஏறக்குறைய எல்லா முனிசிபாலிட்டிகளுக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கமிஷனர் என்னும் பெயருடன் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதன் அனுபவத்தைப் பார்த்த அளவில், அதனால் ஏற்பட்ட பயனை அறிந்த அளவில் இம் மாதிரியான கமிஷனர்களை ஏற்படுத்துவதற்காக செய்யப்பட்ட சட்டம் பெரிதும் முட்டாள்தனமானதாக இருக்கின்றது என்பதையும், அந்தக் கமிஷனர் என்னும் உத்தியோகம் பெரிதும் மானக் கேடான உத்தியோகமாய் இருந்து வருகின்றது என்பதையும், அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் எடுத்துக்காட்ட ஆசைப்படுகின்றோம்.

ஏனெனில், கூடிய சீக்கிரத்தில் ஜில்லா போர்ட்டுகளுக்கும் இம்மாதிரி நிர்வாக உத்தியோகஸ்தர்களை நியமிக்கச் சட்டம் செய்ய காரியங்கள் நடந்து கொண்டிருப்பதாகத் தெரிய வருவதால், முனிசிபாலிட்டியின் கமிஷனர்கள் சம்மந்தமான சட்டம் போலவே மற்றொரு சட்டம் செய்து, முனிசிபல் கமிஷனர்களுக்குள்ள அதிகாரங்களைப் போன்ற போலி அதிகாரமுள்ள உத்தியோகஸ்தர்களையும் நியமிப்பதானால் அதை வேண்டாம் என்று சொல்லவே மிகுதியும் இதை எடுத்துக் காட்டுகிறோம்.

ஏனெனில், இன்று முனிசிபல் கமிஷனர் வேலைக்கு, எந்த சுயமரியாதை உள்ள அதிகாரியும் வர முடியாத நிலைமையில் அவ்வதிகாரத் தன்மை ஏற்பாடு செய்யப்பட்டு இருந்து வருகின்றது.

நாம் முனிசிபாலிட்டிக்கும் ஜில்லா போர்ட்டுக்கும் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அரசாங்க சார்பாகவே அந்த நிர்வாகங்கள் நடைபெற வேண்டும் என்று எழுதின காலத்தில் முனிசிபாலிட்டிகளுக்கு டிப்டி கலக்டர்கள் அதிகாரத்துக்கும், பதவிக்கும் குறையாதவர்களாகவும், ஜில்லா போர்ட்டு நிர்வாகத்துக்கு சப்-கலக்டர்கள் அதிகாரத்துக்கும், பதவிக்கும் குறைந்தில்லாதவர்களாகவும் இருந்து வரவேண்டும் என்று குறிப்பிட்டு இருந்தோம். அதோடு மாத்திரம் அல்லாமல், அவர்கள் அரசாங்கத்துக்கு கட்டுப்பட்டவர்களாகவே இருக்க வேண்டுமே ஒழிய மெம்பர்கள், கவுன்சிலர்கள் ஆகியவர்களுடைய தயவுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கக்கூடாது என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், அரசாங்கத்தார் அந்தப்படி செய்யாமல் சிறிய உத்தியோகஸ்தர்களை நியமித்ததோடு அவ்வுத்தியோகஸ்தர்கள் தலையெழுத்தை முனிசிபல் கவுன்சிலர்களின் உதட்டு முனையில் தொங்கிக் கொண்டு இருக்கும்படி செய்துவிட்டதால் அச்சட்டம் புத்திசாலித்தனமானது என்றோ, அப்பதவிக்கு வருகிறவர்கள் சுதந்திர உணர்வும், மானமும் உடையவர்களாக இருக்கக் கூடும் என்றோ, அவ்வதிகாரிகளின் அதிகாரம் யோக்கியமாயும், நடுநிலையாயும், பொது ஜனங்களுக்குப் பயன்படக் கூடியதாயும், இருக்க முடியும் என்றோ, யாராவது எதிர்பார்க்க முடியுமா என்று கேள்க்கின்றோம்.

சாதாரணமாக ஒரு ஜில்லா கோர்ட்டுக்கும் செஷன் கோர்ட்டுக்கும் ஒரு ஜட்ஜியை நியமித்து அந்த ஜட்ஜியின் மேல் ஜில்லா போர்ட்டு பிரசிடெண்டுக்கும் மெம்பர்களுக்கும் ஆதிக்கம் வைத்து அந்த ஜட்ஜியின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்ற அதிகாரம் கொடுத்து அக்கோர்ட்டு காரியங்கள் நடைபெற செய்தோமானால், அந்த கோர்ட் நடவடிக்கை எப்படி நடைபெறும்? அந்த ஜட்ஜின் நீதி எப்படி இருக்கும்?


RangaRakes tamilnavarasam.com

அதனால் பாமர மக்களுக்கு எப்படிப்பட்ட பலன் ஏற்படும்? ஆங்காங்குள்ள இன்றய ஜில்லா போர்டு மெம்பர்கள், பிரசிடெண்டுகள் அவர்களுக்கு வேண்டியவர்கள் ஆகியவர்களால் எப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறும்? என்பது போன்றவைகளையெல்லாம் மனதில் சித்திரித்துப் பார்ப்போமானால் இன்றைய கமிஷனர்களால் என்ன பயன் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை ஒருவாறு உணரலாம் என்றே கருதுகின்றோம்.

இன்றைய தேர்தல்களில், எவ்வளவு தான் சாதாரண கூலிக்கும், ஏழைக்கும் கூட ஓட்டு இருக்கின்றது என்று சொல்லப்பட்டாலும், பெருத்த பணக்காரனும், போக்கிரியும், ஜம்புலிங்கமும் தான் தேர்தலில் வெற்றி பெற முடிகின்றதே தவிர, மற்றபடி பொது ஜனப் பிரதிநிதி என்று சொல்லத் தகுதி உள்ளவர்கள் முனிசிபாலிட்டி, ஜில்லாப் போர்டு முதலியவைகளில் மெஜார்ட்டியாக இல்லாவிட்டாலும் கவனிக்கத் தகுந்த அளவாவது வர முடிவதில்லை.

இந்த நிலை சென்னை மாகாணம் மாத்திரமல்லாமல் இந்தியா முழுவதுமே இருந்து வருகிறது என்று சொல்லலாம்.

பொதுவாக ஒரு அரசியல் நிர்வாகம் இருக்க வேண்டும் என்றும், மக்களுடைய நலங்களை அந்நிருவாகம் ஏற்று நடத்த வேண்டும் என்றும் ஆசைப்படுவதின் காரணமெல்லாம், மேல் கண்ட மாதிரி எளியோரை செல்வவான்கள் கொடுமைப்படுத்தாமலும், நல்லவர்கள் என்னும் சாதுக்களை போக்கிரிகள் தொல்லைப்படுத்தாமலும், பாமர மக்களைக் காட்டுராஜாக்கள் கொள்ளை கொள்ளாமலும் இருக்க வேண்டும் என்கின்ற காரணங்களுக்காகவே அரசியல் நிர்வாகம் வேண்டும் என்பதாக இருந்து வருகிறது.

அப்படி இருக்க அப்படிப்பட்ட ஒரு நிர்வாகமே அதாவது, சிறு மீனை, பெருமீன் விழுங்கும்படியாகவும், இளைத்தவனை வலுத்தவன் விழுங்கும்படியாகவும் பொது மக்கள் வரிப்பணங்களை மனம் போனபடி அனுபவிக்கும்படியாகவும் சிலருக்கு அரசாங்க மூலம் லைசென்சு கொடுப்பதுபோல், ஸ்தல ஸ்தாபன நிருவாகங்கள் அமைந்துவிடுமானால் மக்களுக்கு இதைவிட கொடுமையான காரியம் என்ன? என்று கேட்கின்றோம்.

இன்றைய கமிஷனர்கள் நிலையானது, முன்பு ஸ்தல ஸ்தாபனங்களில் மெம்பர்களுக்கும், தலைவர்களுக்கும் இருந்து வந்த சிறிது பொறுப்புகளையும் பாழாக்கிவிட்டு, தங்கள் தங்கள் சுயநலத்துக்கு எதையும் செய்து கொள்வதற்கு தைரியத்தையும், சௌகரியத்தையும் கொடுத்து பொருப்பற்ற நிலைமையை அளித்து வருகிறது என்று சொல்லித் தீர வேண்டி இருக்கிறது.

கமிஷனர்கள் இல்லாமல் சேர்மென் ஆதிக்கம் உள்ள கவுன்சிலில், கவுன்சிலர்களுக்கு சிறிது பயமும் சேர்மென்களுக்கு சிறிது யோசித்துப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது.

இப்போது, கமிஷனர்களுக்கு முக்கியமான பொறுப்பெல்லாம் தங்கள் உத்தியோகத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டியதாகவே இருந்து வருகின்றது. அதற்கு கவுன்சிலர்களும், சேர்மென்களுமே யஜமானர்கள். இந்நிலையில் கமிஷனர்களிடம் நடுக்கண்ட நீதியும், பொறுப்புள்ளதும் முனிசிபாலிட்டியின் நன்மைக்கு ஏற்றதுமான நிர்வாகமும் எப்படி எதிர்பார்க்க முடியும் என்று யோசித்துப் பார்க்க விரும்புகிறோம்.

''ரஷ்யாவில்கூட நம்பிக்கையில்லாத் தீர்மான முறை இருக்கிறது'' என்று சொல்லப்படுமானாலும், அந்தப் பொருப்பு ஓட்டுச் செய்ய பிரதிநிதித்துவம் பெற்ற டிப்டிகளிடம் இருந்து வருகின்றன.

அவர்களுக்கு தனிப்பட்ட சொத்துரிமை இல்லாததால், சொத்து சம்பந்தமான சுயநல காரியங்கள் யாருக்கும் கிடையவே கிடையாது. ஆதலால், சுயநலத்துக்கு ஆக நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வருவதற்கு இடமே இல்லை.

அன்றியும் நிர்வாக பதவியால் அனுபவிக்கும் சம்பளமோ, அதிகாரமோ, வாழ்க்கையோ எதுவும் ஒரு சாதாரண குடிமக்களுக்கு உள்ளது போலவேதான் இருந்து வருகிறது. ஆதலால் நிர்வாக உத்யோகஸ்தன் யாராவது ஒருவரையாவது நியாய விரோதமாய் திருப்தி செய்து பதவி வகிக்க வேண்டுமே என்கின்ற அவசியம் ஏற்படுவதற்கே இடமில்லை.

இங்குள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானமானது லட்சம் பிரஜைகள் உள்ள ஸ்தாபனத்துக்கு 30 பேர்கள் வசம் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரும் அதிகாரமும், அதில் பகுதியோ, அரையே அரைக்கால் வாசிப்பேரோ சம்மதித்தால் போதும் என்கின்ற நிலையில் இருக்கிறது.

இந்த நிலையில் சுயமரியாதையும் நீதி வழங்குவதில் கண்டிப்பான உணர்ச்சியும் உள்ளவர்கள் எப்படி கிடைப்பார்கள்? அல்லது எப்படி முனிசிபாலிட்டிகளில் இருந்து நியாயம் செலுத்துவார்கள்? என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

கவுன்சிலர்களுடன் கமிஷனரும் ஒரு கவுன்சிலராகி அவர்கள் சுயநலங்களில் விகிதாச்சாரம் பங்குக்கு அருகாராகிவிட்டால் அம் முனிசிபாலிட்டியின் யோக்கியதை எப்படி இருக்கும் என்பது பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை.

கொஞ்ச நாளைக்கு முன்பு, கோயமுத்தூர் முனிசிபல் கவுன்சிலர்கள், கோயமுத்தூர் கவுன்சில் கமிஷனர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். இதை அரசாங்கத்தார் சிறிதுகூட யோசித்து நியாயம் கண்டுபிடிக்க முயற்சிக்காமல், உடனே அவரை மாற்றிவிட்டார்கள். சட்டத்தின் பேரால் சட்டத்தின் நிர்பந்தத்திற்கு என்று செய்யும் முட்டாள்தனமான காரியங்களில் இது தலைசிறந்த காரியம் என்று சொல்லித் தீர வேண்டி இருப்பதற்கு வருந்தினாலும், பொது நன்மையை உத்தேசித்து சொல்லித் தொலைக்க வேண்டியிருக்கிறது.


RangaRakes tamilnavarasam.com

''காளை மாடு கண்ணுப் போட்டு இருக்கிறது'' என்று சொன்னால் மாட்டுக்கு சொந்தக்காரன் ''பிடித்துக் கட்டி பால் கற'' என்று சொல்வது போன்ற காரியம் ஒரு அரசியலில் அதுவும் ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சி முறையில் இருந்தால் இது அரசாங்கத்தாரால் வழங்கப்பட்ட யோக்கியமான சுய ஆட்சி முறை ஆகுமா? என்று கேட்டுத்தீர வேண்டி இருக்கிறது.

கோயமுத்தூர் முனிசிபல் கவுன்சிலர்களுக்கு நம்பிக்கை அற்றுப் போகும்படி நடந்து கொண்ட ஒரு அதிகாரியை, திருச்சி கவுன்சிலுக்கு அனுப்புவதென்றால் ''கோயமுத்தூர் கவுன்சிலர்கள் யோக்கியமானவர்கள் அல்ல, திருச்சி கவுன்சிலர்கள் யோக்கியமானவர்கள் ஆதலால் அந்தக் கமிஷனரை திருச்சிக்கனுப்பினால், அவரது நம்பிக்கையில் ஆட்சேபம் இருக்காது'' என்று கருதித் தானே திருச்சிக்கு மாற்றி இருக்க வேண்டும். அல்லது ''அங்கு கவுன்சிலர்களே இல்லாததால் கோயமுத்தூர் கவுன்சிலர்கள் நம்பிக்கை பெறாத அதிகாரி திருச்சிக்குப் போய் எப்படியோ ஏதேச்சாதிகாரமாய் நடந்து கொள்ளட்டும். அதனால் ஜனங்கள் எக்கேடோ கெட்டுப் போகட்டும்'' என்று கருதித் தானே திருச்சிக்கு அனுப்பி இருக்க வேண்டும்?

அல்லது, அந்தக் கமிஷனரை கவர்மெண்டு உத்தியோகத்துக்கே எடுத்துக் கொள்ளுவதாய் இருந்தால் ஜனப்பிரதிநிதிகளால் நம்பிக்கை இல்லை என்று ஒரு தடவை கருதப்பட்ட ஒரு உத்தியோகஸ்தரை அதைவிடப் பெரிய நிர்வாகத்தைப் பார்ப்பதற்கு அதைவிடப் பெரிய பொறுப்பைக் கொடுத்து அனுப்புவதென்றால் இந்தக் கோவை ஜனப்பிரதிநிதிகளான கவுன்சிலர்களை எவ்வளவோ கேவலமாக மதித்ததாகவாவது ஆகவில்லையா என்று கேட்கின்றோம்?

நம்பிக்கை இல்லை என்கின்ற காரியமான ஒரு ஆயுதத்தை இவ்வளவு கேவலமான முறையில் பிரயோகிக்க மக்களுக்கு அதுவும் இந்திய மக்களுக்கு அதாவது, 100க்கு 8 பேரே கையெழுத்துப் போடத் தெரிந்த சமூக மக்களுக்கு கையாள இடங்கொடுக்கப்படுமானால், அரசாங்கத்தார் தங்கள் பொறுப்பை சரியாகப் பயன்படுத்துகிறோம் என்று எப்படிச் சொல்லிக் கொள்ள முடியும்?

ஒரு கமிஷனர் அதிகாரியை நல்லவர் என்று அரசாங்கம் கருதி இருக்குமானால், அந்த கவுன்சில் இனி அப்படிச் செய்யாதபடியான பாடம் கற்றுக் கொள்ளத்தக்க பொறுப்பை அரசாங்கம் ஏற்று அதற்கேற்ற காரியத்தைச் செய்திருக்க வேண்டும்.

இரண்டும் இல்லாமல் இம்மாதிரியான காரியங்கள் செய்வது ஸ்தல ஸ்தாபன நிர்வாகங்களை மேலும் மேலும் ஊழல்படுத்த, அரசாங்கத்தாரும், துணையாய் இருக்கிறார்கள் என்று சொல்லும்படியாக நடந்து கொண்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.



கோவை, பழனி முதலிய கவுன்சில்களில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு திருநெல்வேலி, தூத்துக்குடி, கும்பகோணம் முதலிய பல முனிசிபாலிட்டிகளில் கவுன்சிலர்களுக்கும் கமிஷனர்களுக்கும் தகராராகவும் இருப்பதோடு, சில முனிசிபாலிட்டிகளில் கமிஷனர்கள் சிறிதுகூட சுயமரியாதை இல்லாமல், சேர்மென்களையும், கவுன்சிலர்களையும் பேப்பர்கள் மீது உத்திரவு போடும்படி செய்து, உத்திரவை படித்துக்கூடப் பார்க்காமல் தங்கள் கையெழுத்தை போட்டுத் தீர வேண்டியதான அவ்வளவு மானமற்ற தன்மையில் இருந்து வருவதாகவும் உணருகிறோம்.

இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கும்படியான தன்மையில் முனிசிபல் நிர்வாகத்துக்குப் பாதுகாப்பளிக்கப் பட்டிருக்கிறது என்பது ஒரு வேஷமான பாதுகாப்பே அல்லாமல் உண்மையான யோக்கியமான பாதுகாப்பு அல்ல என்றுதான் சொல்லுவோம்.

கமிஷனர் மீது தவறுதல்கள் இருக்கும் பட்சம், முனிசிபல் கவுன்சிலர் களும், சேர்மெனும் சேர்ந்து குற்றப் பத்திரிகை தயாரித்து தங்கள் கவுன்சிலில் தீர்மானித்து, கமிஷனரின் சமாதானம் கேட்டு, அது திருப்தி இல்லாவிட்டால், அதை சர்க்காருக்கு சேர்மென் அனுப்பிவிட வேண்டும் என்பதாகவும், சர்க்காரார் ஒரு நியாய உத்தியோகஸ்தரை அனுப்பி விசாரிக்கச் செய்து உண்மையை கண்டுபிடித்து ரிப்போர்ட் செய்யும்படி செய்து பிறகு தங்களுடைய நீதியை வழங்க வேண்டும் என்றும், சட்டம் இருக்குமானால் கமிஷனர்களிடமும், கவுன்சிலர்களிடமும் நியாயத்தையும் யோக்கியமான நிர்வாகத்தையும் எதிர்பார்க்க முடியும். அப்படிக்கில்லாமல் இவ்விஷயத்தில் முனிசிபல் கவுன்சிலர்கள் முடிவையே ஆதாரமாய்க் கொண்டு காரியங்கள் நடப்பது என்பது நீதியான காரியமாகாது என்பதோடு சிறிதுகூட பொறுப்பை உணர்ந்த காரியமாகவும் ஆக மாட்டாது.

முனிசிபல் கவுன்சிலிடம் சர்க்காருக்கு உண்மையிலேயே அவ்வளவு நம்பிக்கை இருந்திருக்குமானால், கமிஷனரே தேவையில்லை என்பதோடு மற்றும் கவுன்சிலுக்கு இருந்த அனேக அதிகாரங்களைப் படிப்படியாகப் பிடுங்கி இந்தப்படி தங்கள் சுயநலத்துக்கு மாத்திரம் பயன்படுத்திக் கொள்வதன்றி பொதுநலத்தில் ஒரு பொறுப்புமில்லாமல் நிர்வாகம் நடக்கும்படியான காரியத்தைச் செய்திருக்க வேண்டியதில்லை.

ஆகையால், அரசாங்கத்தார் கவனித்து கமிஷனர் சம்பந்தமான சட்டத்தை அறிவுடைய சட்டமாகவும், கமிஷனர் உத்தியோகத்தை சுயமரியாதை உடைய உத்தியோகமாகவும் செய்யும் படியாக கோருகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 08.09.1935**



RangaRakes tamilnavarasam.com

# தர்மராஜ்ய ஸ்தாபனம்

## (ஒரு ஜோஸ்யம்)

**- எவர் எழுதினால் என்ன?**

1.9.35ந் தேதி குடி அரசில் தர்ம ராஜ்ஜிய விளம்பரம் என்று ஒரு கட்டுரை எழுதி இருந்தோம். இப்போது தர்மராஜ்ய ஸ்தாபனத்தைப் பற்றி ஒரு மானச ஜோசியம் எழுதுகிறோம்.

1936-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 8-ந் தேதி டெல்லியில் தர்மராஜ்ய ஸ்தாபனம் என்பதாக எங்கும் ஒரே முழக்கம். நாலு பேர் சேர்ந்த இடத்தில் எல்லாம் அதே பேச்சு. பத்திரிகைகளில் எல்லாம் அதே எழுத்து. தர்மராஜ்ய பூபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ராமராஜ கிருஷ்ண தேவ புஷ்ய மித்திர வர்மனுடைய வம்ச பரம்பரைப் பழமையைப் பற்றியும், அவருடைய குலப் பெருமையைப் பற்றியும், அவரது குணாதியசங்களைப் பற்றியும், பத்திரிக்கைகளில் எல்லாம் வானமளாவிய புகழ் மாலைகள். தர்மராஜ்யத்தின் அமைப்பு, அதன் சட்ட திட்டங்கள், அதன் புதிய அதிகாரிகள், அவர்களின் யோக்கியதாம்சங்கள், அன்று நடைபெறவிருக்கும் மகுடாபிஷேக வைபவத்தின் சிறப்பு, நிகழ்ச்சிக் குறிப்பு, நகரில் அதற்காகச் செய்யப்பட்டுள்ள அலங்காரங்கள் முதலானவற்றைப் பற்றிய செய்திகளும், வர்ணனைகளும், கட்டுரைகளுமே அன்றைய பத்திரிக்கைகளில் எல்லாம் நிறைந்திருந்தன. அன்றைய பத்திரிக்கைகளில் வெளிவந்த அபிப்பிராயங்களில் சிலவற்றின் சாராம்சத்தைக் கீழ்க் காண்க.

**ஆரிய தர்மம்** என்ற பத்திரிகையில் இந்தியாவை இனி மேற்கொண்டு, 'ஆரிய வர்த்தம்' ஒரு குடும்பத்தவர் போல் ஐக்கியமாயிருந்து தென்னாட்டிலுள்ள அசுரர், அரக்கர், ராக்ஷஸக் கூட்டங்களைத் தலையெடுக்கவொட்டாமல் அடக்கி வதைத்து, நாட்டை ஆரியர்களின் போக பூமியாக்கி இமயம் முதல் குமரி வரை எங்கும் ஆரிய மணம் கமழும்படி செய்ய வேண்டும், ஆரியர்களின் இம்முயற்சிக்கு அரசன் பூர்ண உதவி புரிய வேண்டும் என்று ஒரு தலையங்கம் எழுதியிருந்தது.

**மனுதர்மம்** என்ற பத்திரிகையில், இந்திய நாட்டின் தலைநகர் டெல்லியாகவே யிருக்கலாம். ஆனால் இது முதற்கொண்டு டெல்லி என்ற பெயரை மாற்றி, இந்திரப் பிரஸ்தம் என்றே வழங்க வேண்டும். இந்தப் புதுப்பெயரை ஒத்துக் கொள்ளாத ஒரு மகம்மதியப் பத்திரிகையின் அபிப்பிராயத்தை மறுத்தும் ஒரு தலையங்கம் இருந்தது.

**பிரசீன தர்மம்** என்ற பத்திரிகையில், அன்று நடக்க வேண்டிய மகுடாபிஷேக வைபவம் எவ்விதம் நடத்தப்பட வேண்டுமென்றும், அதற்குப் பூர்வாங்கமாகச் செய்யப்படவேண்டிய யாக மெக்ஞாதிகள் என்னென்னவென்றும் சாஸ்திரோத்தமாகப் பல மேற்கோள்களுடன் ஒரு சங்கராச்சாரியார் எழுதிய கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருந்தது.

**ராஜதர்மம்** என்ற பத்திரிகையில் பரத கண்டத்தின் ஏக சக்ராதிபதியாக, முனிபுங்கவர்களாலும், சற்ஜனர்களாலும் நிச்சயிக்கப்பட்டிருக்கும் கோசல நாட்டு க்ஷத்திரிய பரம்பரையின் பூர்வோத்தரம், குடிப் பெருமைகளை விளக்கியும், இப்போது பட்டத்துக்குத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள ராமராஜ பூபதியின் பிறப்பு, வளர்ப்பு, குணாதிசயங்களை விவரித்தும், அவருக்குச் சூட்டப்படும் பட்டப் பெயராகிய ''பாரத தேச, வீரகேசரி, பரசமய கோளரி, ஆர்யப் பிரிய பிராமணதாஸ, விப்பிரமித்திர, ராஜராஜ, ராமராஜா, கிருஷ்ண தேவ, புஷ்யமித்ர, மஹாவீர பூபதி'' என்பதன் அர்த்தத்தை விளக்கியும் ஓர் விரிவான தலையங்கம் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

**வைதீக தர்மம்** என்ற பத்திரிகையில், மன்னர்பிரானின் மகுடாபிஷேகத்தை யொட்டி தேசத்தில் உள்ள வைதீர்களுக்கெல்லாம் வழங்க வேண்டியதான தரும வகைகளைப் பற்றியும், வைதீகர்கள் செய்ய வேண்டிய தப, ஜப, யாக, யெக்ஞாதிகளைக் குறித்தும் விவரமான ஒரு கட்டுரை மிளிர்ந்தது.

**ஸ்திரீ தர்மம்** என்ற பத்திரிகையில், ராஜ தர்பாரில் நடனம் முதலிய பணி செய்வதற்குத் தேவலோகத்திலிருந்து அப்ரஸ்திரீகளை வரவழைக்கும் வழக்கத்தை ஒழிக்க வேண்டுமென்றும், ஆரியர்கள் காஷ்மீரம் முதலான வடநாட்டு மலைநாடுகளில் இருந்த பழைய காலத்திற்றான் அவ்வாறு செய்ய அவசியமிருந்ததென்றும், தற்காலத்திலோ, அப்ரஸ்திரீ வர்க்கம் தேசமெங்கும் குடியேறிப் பரவியிருப்பதால், நாலாபக்கங்களிலும் தூதர்களை அனுப்பித் தேவையான அப்ஸர்ஸ்களை அவ்வப்போது கொணர்ந்து அரசனுடைய அந்தப்புறத்திலும், அயோத்தியை அடுத்துள்ள பர்ன சாலைகளிலும் குடியேற்றி வைப்பதே தருமம் என்றும் ஒரு கட்டுரை வரையப்பட்டிருந்தது.

**வர்ண ஸ்ரம தர்மம்** என்ற பத்திரிக்கையில், நாட்டில் வர்ணாஸ்ரம தர்மம் சீர்குலைந்திருப்பதைப் பற்றியும், ஜாதி சங்கமங்களின் கெடுதலைக் குறித்தும், சண்டாளர், சூத்திரர் முதலான கீழ் வர்ணத்தார்கள், மேல் வர்ணத்தார்கள் செய்யக் கூடிய தொழில்களைச் செய்து வருவதால் ஏற்படும்





RangaRakes tamilnavarasam.com

கெடுதல்களைக் குறித்தும், வர்ணாஸ்ரம நெறியை மீண்டும் நிலைநிறுத்த வேண்டியதன் அவசியத்தைக் குறித்தும், அதற்காக அரசன் எடுத்துக் கொள்ள வேண்டிய முயற்சியைக் குறித்தும் பழைய காலத்தில் வர்ணாஸ்ரம தர்மத்தை நிலைநாட்டுவது இராமபிரான் எடுத்துக் கொண்ட நடவடிக்கையை உதாரணங் காட்டியும் ஒரு கட்டுரை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**பிராமண தர்மம்** என்ற பத்திரிக்கையில், பிராமணர்கள் பிற மதத்தினராலும், பிற வர்ணத்தாராலும் அடைந்து வரும் கஷ்டங்களைக் குறித்தும், வேத நெறி வீழ்ந்துபட்டதால் இதுவரை நாட்டிற்கேற்பட்ட துன்பங்களைப் பற்றியும், இனிமேல் தர்ம ராஜ்ஜியத்தில் பிராமணர் துன்பம் நீங்கி வாழ முடியும் என்று நம்புவதாகவும், பிராமண குல வைரிகளாகிய சமணர், பௌத்தர், பஞ்சமர், சங்கமர், விஸ்வகருமர் முதலிய சமூகங்களை பண்டைக்காலத்தில் எப்படி இழிவுபடுத்தி அடிமைப்படுத்திக் கொண்டார்களோ, அப்படியே அதுபோல, இக்காலத்தில் தென்னாட்டில் தோன்றியிருக்கும், ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதைக் கட்சி யென்ற அரக்கர் கூட்டத்தையும், அழிக்க வேண்டியதன் அவசியத்தைக் குறித்தும் அதற்காக ஒவ்வொரு பிராமணனும் எடுத்துக் கொள்ள வேண்டிய முயற்சிகளைக் குறித்தும் ஒரு விரிவான கட்டுரை எழுதப்பட்டிருந்தது.

பத்திரிக்கைகளைப் பார்த்தால் எங்கும் தர்ம மயமாகவேயிருந்தது. நாலு பாதங்களில் நடமாட வேண்டிய தர்ம தேவதை ஆயிரம் பாதங்களோடும், பதினாயிரம் வாய்களோடும் தவழ்ந்ததாகச் சொல்லலாம்.

## மகுடாபிசேக வைபவம்

தர்பார் மண்டபம் இந்திரசபை போலவே சித்திரித்து அலங்கரிக்கப் பட்டிருந்தது. சுமார் 50000 பெயர் உட்காரக்கூடிய விஸ்தீரணம் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. உயர்ந்த மேடையின் மீது சிங்காதனம் நாட்டப் பட்டிருந்தது. அதன் இருபுறமும் வரிசையாக ஆசனங்கள், அதற்கடுத்த கீழ்படியில் வேறு பல ஆசனங்கள், மண்டப மத்தியில் பெரிய ஓமகுண்டத்தி லிருந்து புகையெழுந்து சூழ்ந்து கொண்டிருந்தது. ஓம குண்டத்தின் அருகில் முனிபுங்கவர்கள் வேத மந்திரமோதிக் கொண்டிருந்தனர். மண்டப வாயிலில் இருந்த சாரணர்கள் சங்கநாதம் செய்தனர். மந்திரி பிரதானிகள் புடைசூழ தேவமாதர் முன் செல்ல, ஆடையாபரண அலங்கிருதனாய் அரசன் ராமராஜவர்மன் மண்டபத்துள் நுழைந்தான். உடனே மண்டபத்திலிருந்த அனைவரும் எழுந்து, ‘‘ஜயவிஜயீபவ! ஜயவிஜயீபவ!! ஜயவிஜயீபவ!!! என்று வாழ்த்தினர். அரசன் ஓமகுண்டத்திற்கருகில் சென்று வேள்வியாளரை வணங்கி, அவர்கள் சொற்படி அக்கினிபகவானுக்கும்; இந்திரனுக்கும் ஆகுதி கொடுத்து அங்கிருந்த அந்தணாளரின் அடிகளைப் பூஜித்து அவர்களால் ஆசீர்வதித்துப் பெற்ற பின் மேடைக்குச் சென்று அங்கு அமைந்திருந்த அலங்காரச் சிங்காதனத்தமர்ந்தனன். அமர்ந்ததும் மஹாத்மா காந்தி எழுந்து, சபையில் உள்ள வேத வித்தகர் பிராமண உத்தமர்க்கெல்லாம் தன் வணக்கத்தைத் தெரிவித்துவிட்டுச் செய்த பிரசங்கத்தின் சாராம்ஸமாவதுஃ-

பல நூற்றாண்டுகளாக அந்நிய ஆட்சியினால் நமது நாடு அடைந்துள்ள கஷ்ட நஷ்டங்களைக் கூறி, இந்நாள் தன் இஷ்டதேவனாகிய தோழர் இராமச்சந்திரனுடைய கருணையினாலும், பெரியோர்கள் செய்த தபோ மகிமையினாலும், நமது நாட்டிற்கு உகந்த அரசாட்சியை நாமே ஏற்படுத்திக் கொண்டு ஒரு மாத காலம் நம் இஷ்டம்போல் ஆட்சி செய்ய உரிமை பெற்றிருப்பதாகவும், இந்த ஒரு மாத காலத்தில் நாட்டில் யாதொரு குறையும் நேராமல் ஆட்சி புரிந்து காட்டுவோமானால், நம்முடைய தர்மராஜ்யத்தை சாஸ்வதமாக அங்கீகரித்துக் கொள்வதாக இங்கிலீஷ் அரசாங்கத்தார் வாக்களித்திருப்பதாகவும், இந்த ஏற்பாட்டுக்கு இணங்காத மகம்மதிய மாகாணங்களாகிய, பஞ்சாப், வங்காளம் இவ்விரண்டு மாகாணங்களைக் குறித்து வருந்துவதாகவும், நாளடைவில் தர்மராஜ்யத்தின் செங்கோன்மையைக் கண்டு அவர்களும் தங்கள் தப்பிதத்தை யுணர்ந்து, தர்மராஜ்யத்திற்குட்பட்டு விடுவார்கள் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாகவும், இன்று ஸ்தாபிக்கப்படும் தர்மராஜ்யத்தின் அமைப்பைப் பற்றி தானும், ராஜாஜீயும், ராஜேந்திரரும், சத்தியமூர்த்தியும் தீர்க்காலோசனை செய்து நமது நாட்டுக்குக் முடியரசுதான் ஏற்றதென்று தீர்மானித்ததாகவும், அதன்படி பழய ராஜவம்சத்தின் வழி வந்த பழமையான ஒரு ராஜ பரம்பரையைச் சேர்ந்த ராமராஜவர்மனைத் தர்மராஜ்ய பூபதியாகத் தெரிந்தெடுத்ததாகவும், ஜனங்கள் ஏகமனதாக ஒப்புக் கொண்டு விட்டதாகவும், இன்று ஏற்படுத்தும் தர்மராஜ்யம் சாஸ்வதமாக இருக்க வேண்டி தோழர் ராமச்சந்திர மூர்த்தியைப் பிரார்த்திருப்பதாகவும், தர்மராஜ்ய பூபதி, நமது நாட்டு வழக்கங்களுக்கிணங்கவும், வேத நெறி வழுவாமலும், மனு முறைப்படி ஆட்சி செய்து வர்ணாஸ்ரம தர்மத்தையும், சனாதன தர்மத்தையும், நிலைபெறச் செய்வார் என்று தான் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் கூறி, ரத்தினங்கள் இழைத்து ஒளி வீசும் கிரீடம் ஒன்றை எடுத்து மேடைக்குச் சென்று அங்கு வீற்றிருந்த லோககுரு சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பாதத்தில் வைத்து அன்னவர் திருக்கரங்களால் அரசனுக்கு முடி சூட்டும்படி கேட்டுக் கொண்டு மேடையினின்றும் இறங்கி வந்து தன் ஆசனத்தில் அமர்ந்தார்.லோக குருவும் தன் கமண்டலத்திலிருந்து கங்காஜலம் அதன் மீது புரோச்சித்து கிரீடத்தை எடுத்து வேதமந்திர உச்சாடனஞ் செய்து அரசன் தலையில் சூட்டி ஆசீர்வதித்தார். அப்போது விண்ணவர் பூமாரி பெய்தனர். மண்டபத்தில் உள்ளவர்கள் ‘‘ராமராஜவர்மனுக்கு ஜே! ஆர்யப் பிரியருக்கு ஜே! பிராமணதாசருக்கு ஜே! விப்பிரமித்திரருக்கு ஜே! பூசுரகாவலர்க்கு ஜே! திராவிட வைரிக்கு ஜே! அரக்கரை அழிக்க வந்தவனுக்கு ஜே!’’ என்று வாழ்த்தி ஆர்ப்பரித்தனர்.



RangaRakes
tamilnavarasam.com

அமளி அடங்க அரைமணி நேரமாயிற்று. அரசன் எழுந்து தனக்கும், தன் குடும்பத்தினருக்கும் செய்த பெரும் உபசாரத்திற்காகப் பாரத நாட்டு ஜனங்களைப் பாராட்டுவதாகவும், நன்றி செலுத்துவதாகவும், தன்னால் இயன்ற வரை முன்னோர் முறைப்படியும், வேத சாஸ்திர விதிப்படியும் ரிஷிகள், முனிவர்கள் யோசனைப்படிக்கும் தர்மராஜ்ய பரிபாலனம் செய்வதாக உறுதி கூறி அமர்ந்தார். மீண்டும் அரசனுக்குப் பல ஜே கூறப்பட்டது. அதன்பின் அரச சமூகத்தில் சில அப்ஸர ஸ்திரீகள் தோன்றி நடனம் செய்து அரசனைக் களிப்பித்தனர். பிறகு தர்பார் கலைந்தது.

*குறிப்பு: அடுத்த வெளியீட்டில் ஒரு கனவு வெளிவரும். ப-ர்.*

**குடி அரசு - கட்டுரை - 15.09.1935**



# சமதர்மம்

தலைவரவர்கள் சமதர்மம் பொதுவுடமை என்பதைப் பற்றி பேசுவது குற்றமல்ல என்றும், ஹைகோர்ட் ஜட்ஜ் ஒருவர் தீர்ப்புக் கூறிவிட்டதாகச் சொன்னார். அந்த மாதிரி பல தீர்ப்புகள் இருக்கின்றன. ஆனால் அவை காகிதத் தீர்ப்பேயொழிய நடைமுறைத் தீர்ப்பல்ல.

அந்தத் தீர்ப்புகளுக்கு எல்லா மேஜிஸ்ட்ரேட்களும் மதிப்புக் கொடுக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. அந்தந்த சந்தர்ப்பம் அந்தந்த இடத்து அவ்வப்போதைய நிலமை, சர்க்காரின் மனப்பான்மை, பேசிய ஆளின் தன்மை ஆகியவைகளைக் கவனித்துத்தான் அமுல் நடத்துவார்கள். - ஜட்ஜி தீர்ப்பை விட சட்டமே பிரதானமானது. பொது உடைமை சட்ட விரோதம் என்று சர்க்கார் ஒரு பக்கத்தில் சட்டம் செய்துவிட்டு மற்றொரு பக்கம் பொது உடைமைப் பிரசாரம் குற்றமல்ல என்று தீர்ப்புச் செய்தால் இதில் ஏதாவது இரகசியம் இருக்கத்தான் வேண்டும். சட்டம் பொது ஜனங்களுக்கு, தீர்ப்போ குறிப்பிட்ட நபருக்கு. தலைவர் போன்ற வக்கீல்கள் பொது உடைமை பிரசாரமல்ல, ரஷ்ய பிரசாரமே செய்தாலும் எந்த ஜட்ஜியும் குற்றமல்ல என்றுதான் சொல்லுவார்கள்.

மற்றபடி உண்மையான எண்ணத்தோடும், எவரொருவர் சொல்லுவதைப் பத்துப் பேராவது கேட்டு உணர்ச்சி கொண்டு விடுவார்கள் என்று கருதக்கூடியவர்கள் யாராவது பேசினால் சர்க்கார் இந்த ஹைகோர்ட்டு தீர்ப்புகளையெல்லாம் கவனிக்க மாட்டார்கள். அந்தவுணர்ச்சி பரவுவதை அடக்குவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்தாக வேண்டும் என்றுதான் சொல்லுவார்கள்.

என்னுடைய வழக்கில் ஹைகோர்ட்டு தீர்ப்புகளை எடுத்து சொன்னதில் ஜில்லா மேஜிஸ்ட்ரேட், ''ஹைகோர்ட் தீர்ப்புகளை பின்பற்ற எனக்கு சக்தி போராது அதெல்லாம் ஹைகோர்ட்டார் பார்த்துக் கொள்ளட்டும்'' என்றும் சொல்லி தண்டித்து விட்டார்.

ஹைகோர்ட்டில் எவ்வளவு தீர்ப்புகள் காட்டியும் கீழ்கோர்ட் தீர்ப்பே காயமாகி விட்டது. எந்தத் தீர்ப்பையும் ஜட்ஜி லட்சியம் செய்யவில்லை.

ஆதலால் ஜட்ஜ்கள் தீர்ப்புகளைவிட சட்டம்தான் முக்கியமானதாய் இருக்கிறது. சட்டமோ சர்க்கார் இஷ்டப்படி நடக்க இடம் கொடுக்கக் கூடியது.



RangaRakes tamilnavarasam.com

ஆனால், சட்டத்தில் சமதர்மம் என்பது சட்ட விரோதம் என்று இன்னமும் நமது அரசாங்கம் தீர்மானிக்கவில்லை. நான் சட்டம் மீறுவது என்ற திட்டத்தைக் கொண்டவனல்ல. ஆனாலும் இன்று சமதர்மத்தைப் பற்றிப் பேசுவதைப் பற்றி யாரும் பயப்பட வேண்டியதில்லை.

நிற்க, இன்று இன்ன விஷயம் பேசுவது என்பதைப் பற்றி முன்னதாக ஒன்றும் எனக்கு சொல்லாமல் இப்பொழுதுதான் சொல்லப்பட்டது. ஆனாலும் அதைப்பற்றி ஏதோ சில வார்த்தைகள் சொல்லுகிறேன்.

தோழர்களே! சமதர்மம் என்கின்ற வார்த்தை ஒரு பொது வார்த்தை. இது ஆங்கிலத்தில் உள்ள சோஷியலிசம் என்னும் ஒரு வார்த்தைக்கு தமிழ் மொழிபெயர்ப்பாக கையாளப்படுகிறதென்றாலும் சோஷியலிசம் என்ற வார்த்தையே தேசத்துக்கு ஒரு விதமான அர்த்தத்தில் பிரயோகிக்கப்படுகிறது. அனேகமாக அந்த வார்த்தை அந்தந்த தேச நிலைமைக்கும் தகுதிக்கும், சௌகரியத்துக்கும், அரசாங்கத்துக்கும் தகுந்தபடி தான் பிரயோகிக்கப் படுகின்றது. சில இடத்தில் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டும், சில இடங்களில் சட்ட திட்டங்களுக்கு மீறினதாயும் உள்ள பொருள்களுடன் சமதர்மம் என்கின்ற வார்த்தை பிரயோகிக்கப்படுகிறது.

ஆகவே சோஷயலிசத்துக்கு இதுதான் அர்த்தம் என்று வரையருக்க அவ்வார்த்தையில் எவ்வித குறிப்பும் இல்லை.

சில இடத்து சோஷியலிசத்துக்கும் பொது உடமை என்பதற்கும் பேதமே இல்லாமல் அர்த்தம் இருந்து வருகிறது. சில இடத்தில் வெகு சாதாரண விஷயத்திற்கும் அப்பெயர் இருந்து வருகிறது. சில இடத்தில் பொதுவுடமை வேறாகவும், சமதர்மம் வேறாகவும் இருந்து வருகின்றது.

இங்கு சமதர்மம் என்கின்ற வார்த்தைக்கு சமூகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் மக்கள் உயர்வு தாழ்வு இல்லாமல் சமத்துவமாய் (அபேதமாய்) வாழ வேண்டும் என்பதையே சமதர்மம் என்று நான் கருத்துக் கொண்டு சமதர்மம் என்கின்ற வார்த்தையை இன்று இங்கு பிரயோகிக்கின்றேன்.

ஏனெனில் மற்ற நாட்டில் சமூகத் துறையில் நமது நாட்டில் உள்ளது போன்ற உயர்வு, தாழ்வு, பேதாபேதம் இல்லை.

பொருளாதார சம்பந்தமே பெரிதும் மற்ற நாடுகளில் இருக்கின்றன. நமதுநாட்டு சமுதாய உயர்வு தாழ்வானது பிறவியிலேயே வகுக்கப்பட்டு அதை மதத்தோடு பொருத்தி அதற்கு அரசியல் பாதுகாப்பளிக்கப்பட்டு இருந்து வருகிறது. அரசியலில் உள்ள பாதுகாப்பை உடைப்பது என்று முதலில் ஆரம்பித்தால் அதற்கு நம் நாட்டு மக்கள் அதுவும் பொருளாதாரத்தால் மிகவும் நொந்து ஏழ்மை நிலையில் இருக்கும் மத நம்பிக்கை கொண்ட பாமர மக்கள் என்பவர்களே சிறிதுகூட ஒப்ப மாட்டார்கள் என்பதோடு மாத்திரமல்லாமல் அவர்களே நமக்கு எதிரிகளாயும் இருப்பார்கள்.



ஏனெனில் பிறவி காரணமாய் உள்ள உயர்வு தாழ்வு மதத்தில் சம்மந்தப்பட்டு அம்மதம் பாமர மக்கள் இரத்தத்தில் ஊறி இருக்கிறபடியாலும், அதுவே அரசியலுக்கு ஆதாரமாய் இருப்பதாலும் அதை மாற்றாமல் அதை மாற்றுவதற்கு தகுந்த முயற்சி எடுக்காமல் மேல்நாட்டு சமதர்மம் பேசுவது பாலைவனத்தில் இருந்து சத்தம் போடுவது போலவேயாகும்.

முதலில் சமுதாயத்தில் பிறவியின் பேரால் உள்ள பேதங்களை ஒழித்தாக வேண்டும். அதுவே இந்நாட்டு சமதர்மத்துக்கு முதல்படியாகும். அதனாலேயே பொருளாதார சமதர்மமே மனித சமூக சாந்திக்கு மருந்து என்று கருதி இருக்கும் நான் சமுதாயத்தில் வாழ்க்கையில் சமதர்மத்தை அபேதவாதத்தை முக்கியமாய் வலியுருத்தி வருகிறேன்.

நிற்க, பொதுவாகவே சமதர்மம் என்பது எந்த அருத்தத்தில் இருந்தாலும் சமுதாயம் முக்கியமானாலும், பொருளாதாரம் முக்கியமானாலும் அதற்குக் கடவுள் உணர்ச்சி, மத நம்பிக்கை என்பவைகள் எதிராகவே இருந்து வந்திருக்கின்றன. சர்வதேச சமதர்மவாதிகளும் பெரிதும் கடவுள் உணர்ச்சியும், மத நம்பிக்கையும் சமதர்மத்திற்கு விரோதமானது என்று தான் சொல்லி இருக்கிறார்கள். ஆதலால் எந்த சமதர்மவாதிக்கும் இதைப் பொருத்த வரையில் அபிப்பிராய பேதம் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. இந்த வேலை அபிப்பிராய பேதமில்லாமல் நடந்து தான் தீரும்.

நம் நாட்டிற்கு இன்று முதலில் ஜாதிபேதங்கள் ஒழிந்து மக்கள் யாவரும் பிறவியில் சமம் என்கின்றதான சமதர்ம முயற்சியே முதலில் செய்ய வேண்டியதாயிருக்கிறது. ஜாதி, பேதம், பிரிவு ஆகியவை ஒழிந்தால் தான் சமூக வாழ்க்கையில் சமதர்மமாய் மனிதன் வாழ முடியும்.

பொருளாதார பேதத்துக்கும் சமூக ஜாதி பேத முறைதான் பெரிதும் காரணமாய், காவலாய் இருந்து வந்திருக்கிறது. இன்றும் பெருவாரியான மக்களுக்கு ஜாதி பேதமே பொருளாதார சமதர்ம முறையை நினைக்கக்கூட இடம் தராமல் அடக்கி வருகின்றதுடன் பொருளாதார பேதத்துக்கு இடமளித்தும் வருகிறது.

எந்தக் காரணத்தைக் கொண்டாவது இன்று நாட்டிலுள்ள பொருள் களையெல்லாம் எல்லா மக்களுக்கும் சமமாக்கி வைத்து விட்டாலும் நமது ஜாதி முறைகள் மறுபடியும் வெகு சீக்கிரத்தில் பழைய நிலைமையைத் தான் உண்டு பண்ணிவிடும். மற்ற நாட்டு மக்களுக்கு பொருளாதார சமதர்ம உணர்ச்சி ஏற்பட்டதற்கு காரணமெல்லாம் அவர்களில் பிறவியில் கீழ் மேல் நிலை இருக்கும்படியான ஜாதி பேதம் இல்லாததேயாகும். நமது மக்களுக்கு வெறும் பொருளாதார சமதர்மம் சுலபத்தில் புரியவே புரியாது. ஜாதி பேதம் ஒழிப்பது என்ற சமதர்மத்தைச் சொல்லி பொருளாதார சமதர்மம் சொன்னால் தான் உண்மையாக கஷ்டப்படுகின்ற மக்களுக்கு உணர்ச்சி உண்டாக்க முடிகின்றது.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே சமூக சமதர்மம் ஏற்பட ஆசைப்படுகிற நாம், ஜாதி பேதத்தை ஒழிக்க வேண்டும் என்றும் கருதுகிற நாம், பொருளாதார சமதர்மத்துக்காகவே பிறவி ஜாதியை ஒழிக்க வேண்டியிருக்கின்றது என்றும் பிறவி ஜாதியை ஒழிப்பதற்கு அதற்கு ஆதாரமான மதத்தையும் ஒழிக்க வேண்டும் என்றும் சொல்லுகின்றோம். மதத்தைப் பற்றியோ மதத்தில் உள்ள ஏதாவது ஒரு கொள்கையைப் பற்றியோ பேசினாலும் அதை ஒழிக்க வேண்டும் என்று சொன்னாலும் அதை நாஸ்திகம் என்று சொல்லி விடுகிறார்கள். அதனால் தான் சமதர்மம் பேசுகின்ற யாரும் கண்டிப்பாய் நாஸ்திகர்களாகியே தீர வேண்டியிருக்கிறது.

நாஸ்திகனாவதற்கு கடவுள் இல்லை என்றுகூட சொல்ல வேண்டிய தில்லை. மதக் கொள்கையைப் பற்றி ஆராய்ச்சி செய்து பேசினாலே போதுமானதாக இருக்கிறது.

ஜாதிகள் கடவுளால் உண்டாக்கப்பட்டதாக - கடவுளால் கற்பிக்கப்பட்டதாக- கடவுளே சொன்னார் என்று மத சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த மத சாஸ்திரங்கள் வேதமாகவும், வேதம் போன்றதாகவும் கருதப் படுகின்றன. உதாரணமாக பகவத் கீதை என்பது இந்துக்கள் என்பவர்களுக்கு மிகப் புனிதமானதும் மேலானதுமான புஸ்தகம் என்று பெயர்.

முகம்மதியர்கள் கொரானை மதிப்பதைவிட, கிறிஸ்தவர்கள் பைபிளை மதிப்பதைவிட, கீதையை அதிக பக்தியாய் அநேக இந்துக்கள் மதித்திருக்கிறார்கள். ஆனால் அப் புஸ்தகத்தில் நான்கு ஜாதிகளும், நான்கு பிரிவான ஜாதிப் பெயர்களும் அதற்குத் தனித்தனி வேலைக் கிரமங்களும் சொல்லப்பட்டிருக்கிறது. கீதை என்றாலே பகவான் வாக்கு என்று அருத்தம்.

ஜாதி ஒழிய வேண்டும் என்று பேசுகிறவர்களில் கூட 100க்கு 99¾ பேர்கள் கீதையை பகவான் வாக்கு என்று நம்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஜாதி வித்தியாசம் உயர்வு தாழ்வு ஆகியவைகளைப் பற்றி கண்ணீர் விடும் தோழர் காந்தியார் கீதைக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டிருப்பதாய் சொல்லுகிறார்.

கீதையே தன்னை நடத்துவதாகவும் சொல்லுகிறார். இரவும் பகலும் ஒழிந்த நேரம் முழுவதும் கீதை பாராயணத்திலேயே இருக்கிறார்.

இந்நிலையில் இப்படிப்பட்ட மக்களால் ஜாதிப் பிரிவுகளுக்கு உள்ள மேல் கீழ் நிலைகள் எப்படி ஒழிக்க முடியும்? கீதை முறை தவரு என்றோ கீதை கடவுள் சொன்னது அல்ல என்றோ, அப்படித்தான் கடவுளே சொல்லி இருந்தாலும் அதைப் பற்றி கவலை இல்லை என்றோ சொல்ல துணியாவிட்டால் - சொல்ல தைரியமில்லாத மக்கள் யாவரையும் அந்தப்படி சொல்லத் தயார் செய்யாவிட்டால் ஜாதிப்பிரிவு, ஜாதி வித்தியாசம்



ஆகியவை எப்படி ஒழியும்? ஆகவே இந்தப்படி சொல்லும்படியான ஒருவன் கீதையையும் கிருஷ்ணனையும் நம்பும் மக்களால் நாஸ்திகன் என்று சொல்லப்படாமல் இருக்க முடியாது.

ஆதலால் நாஸ்திகனாகவோ நாஸ்திகனாவதற்கு தயாராகவோ நாஸ்திகன் என்று அழைக்கப்படுவதற்கு கலங்காதவனாகவோ இருந்தால் ஒழிய ஒருவன் சமதர்மம் பேச முடியவே முடியாது.

இது மாத்திரமல்லாமல் சர்வமும் கடவுள் செயல் என்றும், மனித சமூகத்தில் பிறவி மூலமாகவும் வாழ்வு மூலமாகவும் இன்று இருந்து வரும் பிரிவுக்கும், பேதத்துக்கும், உயர்வு தாழ்வுக்கும் கடவுளே பொருப்பாளி என்றும், கடவுள் சித்தத்தினால்தான் அவற்றில் ஒரு சிறு மாற்றமும் செய்ய முடியும் என்றும் சொல்லப்படுமானால் அதை நம்பாமல் இருப்பது நாஸ்திகமானால் கண்டிப்பாக ஒவ்வொரு மனிதனும் நாஸ்திகராகத்தான் வேண்டும்.

ஏனெனில் செல்வவான்களிடம் இருக்கும் செல்வமும் பார்ப்பான் பாராட்டிக் கொள்ளும் உயர்ந்த ஜாதித் தத்துவமும் கடவுள் கொடுத்தது என்றும், கடவுள் சித்தத்தால் ஏற்பட்டது என்றும் சொல்லப்படுமானால், அந்தக் கடவுளை யார்தான் ஏற்றுக் கொள்ள முடியும்?

அதை யார்தான் நிலைத்திருக்க விட்டுக் கொண்டிருக்க முடியும். எந்த மாதிரியான மூடக் கடவுளும், எந்த மாதிரியான அயோக்கியக் கடவுளும் மனிதரில் ஒருவனை மேல் ஜாதியாக்கி பாடுபடாமல் ஊரார் உழைப்பில் சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் படிக்கும் மற்றொருவனை கீழ் ஜாதியாக்கி பாடுபட்டு பாடுபட்டு சோம்பேரிகளுக்கு அழுதுவிட்டு பட்டினியாய் நோயாய், கட்டக் கந்தை அற்று, இருக்க இடமற்றுத் திரியும்படியும் சொல்லி இருக்கவே இருக்காது.

இந்தக் காரியங்களுக்கு கடவுளை பொருத்துகின்றவர்களை யோக்கியர்கள் என்றோ, அறிவாளிகள் என்றோ யாராலும் சொல்ல முடியாது.

ஊரார் உழைப்பை கொள்ளை கொள்ளாமல் எவனும் பணக்காரனாக முடியாது.

நாட்டுக் கோட்டையார்களில் 10 லட்சம், 20 லட்சம், கோடிக்கணக்கான ரூபாய் சொத்துள்ளவர்கள் இருக்கிறார்கள், இவர்களுக்கு இந்தப் பணம் ஏது? இவர்கள் படும் பாட்டுக்கும் இவர்கள் அனுசரிக்கும் முறைக்கும் இவர்கள் நடந்து கொள்ளும் மாதிரிக்கும் எந்தக் கடவுளாவது இவ்வளவு பணம் கொடுத்திருக்க முடியுமா?

ஏதோ இதெல்லாம் அவரவர் பிரயத்தனத்தினால், தொழில் முறையினால், மனவலிமையினால், சம்பவங்களால் ஏற்பட்டதென்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்?



RangaRakes tamilnavarasam.com

இவ்வளவு பணம் இவர்களுக்கு சேருவதற்கு ஆதாரமாய் இருந்த முறையை யார்தான் சரியான முறை என்று சொல்லிக் கொள்ள முடியும்? இவ்வளவு பணம் இவர்களுக்கு கொடுத்தவர்களில் பெரும்பான்மை மக்கள் இன்று இருக்கும் நிலையை யார்தான் நல்ல நிலை என்று சொல்ல முடியும்? இதையெல்லாம் மாற்ற வேண்டும் என்று சொல்லும்போது கடவுளையும், மதக் கொள்கைகளையும் கொண்டு வந்து குறுக்கே போட்டால் அக்கடவுளையும், மதத்தையும் ஒழிக்காமல் எப்படி இருக்க முடியும்.

மற்றும் கடன்பட்டு வட்டிக் கொடுத்த மக்களுடையவும் பாடுபட்டு பயனைக் கொடுத்த மக்களுடையவும் மனமும், வயிறும், வாயும் பற்றி எரிய எரிய அப்பணங்களை கோவில் கட்ட, வாகனம் செய்ய, சாமிக்கு கிரீடம் செய்ய, கல்யாணம் செய்ய, தாசி வீட்டுக்கு போக, தாசிகளை வைத்து உர்ச்சவம் வாண வேடிக்கை செய்ய பாழ்பண்ணப்படுமானால் யார்தான் சகித்துக் கொண்டு இருக்க முடியும்? இந்த அக்கிரமங்களை பார்த்துக் கொண்டு எந்தக் கடவுள் தான் இருக்க முடியும்?

அப்படியும் ஒரு கடவுள் இருக்கிறது என்று சொல்லப்படுமானால் அப்படிப்பட்ட கடவுளை அழித்து ஒழித்து விடுவதில் யாருக்கு என்ன நஷ்டம் வரும்?

அப்படிப்பட்டக் கடவுளை யாரும் ஒழிக்க முடியாது என்று சொல்லப்படுமானால் அது ஒழிந்து போகுமே என்று ஒருவராவது ஏன் வருத்தப்பட வேண்டும்?

தோழர்களே இதையெல்லாம் பார்க்கும்போது கடவுளை கற்பித்து நல்ல எண்ணம் கொண்டு என்பதாக நம்ப நம்மால் முடியவில்லை.

சோம்பேறிக் கொள்ளைக் கூட்டங்கள், கொடுங்கோன்மைக்காரன், பேராசைக்காரன் முதலிய கூட்டத்தாரின் சுயநலத்துக்கு தான் பயன்படுகின்றதே ஒழிய, வேறு காரியத்துக்கும் கடவுள் பயன்படுவதே இல்லை. மனித சமூக வாழ்க்கை ஒழுக்கத்திற்கு ஆக என்று கடவுள் சிருஷ்டிக்கப்பட்டிருக்குமானால், அப்படிப்பட்ட கடவுளைப் பற்றி அது இருந்தாலும் அது இல்லாவிட்டாலும் நமக்கு கவலையில்லை.

இதுவரை எந்தக் கடவுளால் யாருக்கு எப்படிப்பட்ட ஒழுக்கம் ஏற்பட்டது என்று யாராவது சொல்ல முடியுமா? என்று கேள்க்கிறேன்.

கடவுளை சதாகாலம் கட்டியழுது, அதனாலேயே ஜீவனம் நடத்தும் அர்ச்சகர்கள், குருக்கள் ஆகியவர்கள் முதலில் ஒழுக்கமாய் இருக்கிறார்களா? இவர்களுடைய ஒழுக்க காரியங்கள் நமக்குத் தெரியாதா?

கடவுளுக்கு ஆக லக்ஷம், 10 லக்ஷம் பணம் போட்டு கோவிலை கட்டிக் கும்பாபிஷேகம் செய்து ஐந்து வேளை 6 வேளை பூஜை செய்து மானியம் விட்ட கடவுள் பக்தர்களில் எவராவது ஒழுக்கமாய் யோக்கியமாய் நடக்கிறார்களா? கடவுளுக்காகவே சன்யாசியாய், குருவாய், சங்கராச்சாரியாய், தம்பிரானாய், முல்லாவாய், மவுலானாவாய், பாதிரியாய், பெரிய குருவாய் இருக்கிறவர்களிலாவது எல்லோரும் ஒழுக்கமானவர்கள் என்று சந்தேகமறச் சொல்லத்தக்கவர்களாய் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?





இவர்கள் நிலையே இப்படி இருக்க கடவுள் நம்பிக்கை உள்ள சாதாரண பாமர மக்களிடத்தில் எப்படி ஒழுக்கம் யோக்கியதை எதிர்பார்க்க முடியும்?

எப்படியானாலும் கடவுளைப் பற்றிய எண்ணமே யாருக்கும் இருக்கக் கூடாது என்பதற்காக நான் பேச வரவில்லை - மனித சமூக சமதர்ம வாழ்வுக்குத் தடையாய் எந்தக் கடவுளும் இருக்கக் கூடாது என்றும், அப்படிப்பட்ட கடவுளை இருக்க விடக் கூடாது என்றும் தான் சொல்லி வருகிறேன். மனித வாழ்க்கைக்கும் பேதா பேதங்களுக்கும் கடவுள் சம்மந்தமில்லை என்று சொல்லும் பக்ஷம் அக்கடவுளைப் பற்றி நமக்கு என்ன கவலை?

ஆகவே தோழர்களே! சமதர்மவாதிகள் ஏன் நாஸ்திகர்கள் என்று சொல்லப்படுகிறார்கள்? அவர்கள் ஏன் நாஸ்திகர்கள் என்று சொல்லப்பட வேண்டியவர்களாகிறார்கள்? என்பதை நீங்கள் உணர வேண்டும் என்பதற்காகவே இதை எடுத்துச் சொன்னேன். இனி மற்ற விஷயம் மற்றொரு சமயம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு: 08.09.1935 ஆம் நாள் தேவகோட்டையில் தோழர் லட்சுமிரதன் பாரதியார் வீட்டு மைதானத்தில் 'சமதர்மம்' என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு*

**குடி அரசு - சொற்பொழிவு - 15.09.1935**

RangaRakes tamilnavarasam.com

# எது பிற்போக்கான கட்சி?

7.9.35ந் தேதி தூத்துக்குடியில் கூடிய திருநெல்வேலி ஜில்லா அரசியல் மகாநாடு என்னும் பார்ப்பன ஆதிக்க மகாநாட்டில் தலைமை வகித்த தோழர் சி.ஆர்.ரெட்டி அவர்கள் காங்கிரசின் உண்மை சொரூபத்தையும், பார்ப்பன ஆதிக்கத்துக்கு உண்மையான மார்க்கத்தையும் வெட்டவெளிச்சமாய் கொட்டி விட்டார்.

இன்று காங்கிரஸ்காரர்கள் என்பவர்களின் முக்கிய நோக்கமெல்லாம் ஜஸ்டிஸ் மந்திரி சபையைக் கவிழ்க்க வேண்டும், அதைப் பார்ப்பன ஆதிக்க மந்திரிசபையாக ஆக்க வேண்டும் என்பதேயாகும்.

அதற்காக வேண்டியே ஜஸ்டிஸ் கட்சி மந்திரி பதவிக்கு வந்தவுடன் காங்கிரஸ்காரர்கள் தங்கள் வேலைத் திட்டமாக அதி தீவிர தத்துவங்களை எடுத்துச் சொல்லி பாமர மக்களை ஏமாற்ற வேண்டும் என்பதை முக்கிய கருத்தாய் கொண்டு 15 வருஷ காலம் வேலை செய்தும் அது சிறிதும் பயன்படாமல் போனதால் அடியோடு அவற்றைக் கைவிட்டு விட்டு இப்போது எப்படியாவது ஜஸ்டிஸ் கட்சியைக் கவிழ்த்து மந்திரி பதவிகளை அடைய வேண்டும் என்கின்ற கவலையில் இருக்கிறார்கள்.

காங்கிரசுக்காரர்கள் இந்த நிலைமைக்கு வந்தவுடன் தங்களுடைய பழைய பாடங்களை எல்லாம் மறக்கப்பட வேண்டியவர்களாகிவிட்டார்கள்.

அதாவது முதலில் சட்டசபை மூலம் ஒன்றும் செய்ய முடியாது என்று அதைப் பஹிஷ்கரித்தும்,

பிறகு, சட்டசபைக்குச் சென்று பார்த்து சட்டசபை அதிகார வர்க்கத்தின் ஆயுதம் என்றும், அதற்குள் நுழைந்தால் அதிகார வர்க்கத்தின் கை பலப்பட்டு விடும் என்றும்,

சட்டசபைக்குப் போவதும், அங்கு இருப்பதும் தேசீய நேரக்கேடு என்றும்,

தேசசேவைக்குப் பயன்படாத சட்டசபை அழிந்து போன நந்தவனத்துக்கு ஒப்பானதென்றும், அதில் ஆடு மேய்ந்தாலென்ன? கழுதை மேய்ந்தாலென்ன? என்பதுபோல் கெட்டுப் போன ஸ்தாபனத்தில் வேறு யார் இருந்தால் நமக்கு என்ன? அதைப் பற்றி சிந்திக்கவே கூடாது என்றும்,

சட்டசபை கள்ளுக்கடை, சாராயக் கடை ஆகியவைகளுக்கொப்பான தென்றும்,



சட்டசபைக்குப் போகிறவர்கள் நாய், கழுதைகளுக்குச் சமானமென்றும் கூறி, சட்டசபைத் தேர்தல்களின்போது கழுதைகளைப் பிடித்து அவற்றின் கழுத்துகளில் அட்டைகளைக் கட்டித் தொங்கவிட்டு,

''சட்டசபைக்குப் போகிறேன் எனக்கு ஓட்டுக் கொடு'' என்று கழுதைகள் மக்களை ஓட்டுக் கேட்பது போல எழுதியும்,

''சட்டசபைக்குப் போகிறவர்கள் தேசத் துரோகிகள்'' என்றும், ''தயவு செய்து ஓட்டுக் கொடுக்காதீர்கள்'' என்றும் காந்தியார் கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சுவது போல் படம் போட்டு சுவர்களில் ஒட்டியும்,

இரண்டொரு தடவை உள்ளே சென்று, பிறகு அது பயன்படக் கூடியதல்ல என்று சொல்லி வெளி வருவது போல் நடந்தும், மற்றும் ஏதேதோ தந்திரங்களும், கிளர்ச்சிகளும் எல்லாம் செய்து பார்த்துவிட்டு, இந்த 15 வருஷ காலமாக பல கோடி ரூபாய்களை அரசியல் செலவுக்கென்று பொது மக்களிடம் இருந்து வசூல் செய்து, பாழாக்கிவிட்டு இப்போது முன் சொன்னவைகளையெல்லாம் அடியோடு மாற்றி புதியதொரு பாடத்தைச் சொல்லிக் கொண்டு அதாவது,

''காங்கிரசுக்காரர்களாகிய நாம் எவ்வளவோ வேண்டாம் என்று சொல்லியும் நம்மை லட்சியம் செய்யாமல், இந்தியாவுக்கு சைமன் கமிஷனை அனுப்பி நமக்கு விரோதமாக, நம்மை லட்சியம் செய்யாமல் ஒரு தலைப்பக்ஷமாக நம்நாட்டில் விசாரித்துக்கொண்டு போன சேதிகளை நம் அபிப்பிராயம் என்று வைத்துக் கொண்டு ஒரு புதிய சீர்திருத்தம் தயாரித்திருப்பதானது காங்கிரசின் சுயமரியாதைக்கு ஈனம் ஆனதால் அப்படிப்பட்ட சீர்திருத்தத்தை உடைத்து நொருக்கி பாழாக்கி விடவேண்டும். அதற்காக சட்டசபைக்குப் போக வேண்டியிருப்பதால், பொது ஜனங்கள் ஓட்டுக் கொடுக்க வேண்டும்'' என்று காந்தியார் பேரால் பல ஸ்ரீ முகங்களைப் பிரசுரித்து, அனுமார் படம் போட்டு ஓட்டுக் கேட்டு சட்டசபைக்குப் போய் அங்கு தங்களுக்குப் பலமாக இடமும் ஏற்பட்ட உடன்,

இப்போது ''சீர்திருத்தத்தை உடைப்பது என்பது ஆகாத காரியம்'' என்றும், ''சீர்திருத்தத்தை உடைப்பது முட்டாள்தனமான காரியம்'' என்றும் சொல்ல முன் வந்து, மெல்ல மெல்ல ''மாகாண சட்டசபைகளையும் கைப்பற்றி ஆக வேண்டும்'' என்கின்ற உறுதியை அடைந்து விட்டார்கள்.

இந்த நிலையில் மாகாண சட்டசபையைக் கைப்பற்ற இன்று காங்கிரசுக்காரர்கள் சொல்லும் காரணங்களை பொது ஜனங்கள் உணர வேண்டும் என்பதற்கு ஆகவே இதை எழுதுகிறோம்.

தலைப்பில் குறிப்பிட்ட, அதாவது இம்மாதம் முதல் வாரத்தில் தூத்துக்குடியில் கூட்டிய திருநெல்வேலி ஜில்லா அரசியல் மகாநாட்டில் தலைமை வகித்த தோழர் சி.ஆர். ரெட்டி அவர்கள்,



RangaRakes tamilnavarasam.com

''**சீர்திருத்தத்தை உடைத்தெறிய வேண்டும் என்கின்ற உத்தேசத்துடன் நான் சட்டசபைப் பிரவேசத்தையும், உத்தியோகம் ஏற்பதையும் கைக்கொள்ள மாட்டேன்**'' என்று பேசி இருக்கிறார்.

ஆகவே சீர்திருத்தத்தை உடைத்து நொறுக்குவது என்னும் பேரால் ஓட்டு வாங்கின இவர்கள் தங்கள் அபிப்பிராயத்தை இப்போது மாற்றிக் கொண்டதால் உடனே ராஜீனாமா செய்துவிட்டு, ''நாங்கள் சட்டசபைக்குப் போய் உத்தியோகம் ஏற்போம்'' என்றும், ''சீர்திருத்தத்தை உடைத்து நொறுக்க மாட்டோம்'' என்றும், ஓட்டர்களுக்குச் சொல்லி அதன் பேரில் ஓட்டு பெறுவார்களானால் இவர்களை ஜனப் பிரதிநிதிகள் என்றோ, யோக்கியமான பிரதிநிதிகள் என்றோ சொல்லலாம். அப்படிக்கு இல்லாமல் ஒன்றைச் சொல்லி ஓட்டுப் பெற்று, இடம் கிடைத்தவுடன் முன் சொன்னதற்கு விரோதமாக மற்றொன்றைச் சொல்லுவதென்றால் இவர்களை எப்படி மக்கள் நம்ப முடியும் என்று கேட்கின்றோம்.

மற்றும் ''**உத்தியோகம் ஏற்கக் கூடாது என்றால் சட்டசபைக்கு போவது என்பது வீண் வேலை**'' என்று சொல்லுகிறார்.

ஆகவே இவ்விரண்டு வாசகங்களையும் ஒன்று சேர்த்து வைப்போமானால் இன்றைய காங்கிரஸ்காரருக்கும், மிதவாதிகளுக்கும், ஜஸ்டிஸ் கட்சியாருக்கும், சீர்திருத்தத்தைப் பற்றியோ, மந்திரி பதவிகளை பற்றியோ அல்லது மற்றும் ஏதாவது கொள்கையிலோ என்ன வித்தியாசம் இருக்கின்றது என்று கேட்கின்றோம்.

ஜஸ்டிஸ்காரர்கள் அரசியல் பிரதிநிதித்துவத்திலும், உத்தியோகங்களிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றார்கள்.

காங்கிரஸ்காரர்களோ, கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள், ஆதி திராவிடர்கள் ஆகியவர்களைப் பொறுத்த வரை மேல்கண்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை வேண்டியதுதான் என்று ஒப்புக் கொண்டு, காங்கிரஸ் தீர்மானங்கள் மூலமாகவும், பூனா பாக்ட் என்னும் ராஜீ மூலமாகவும் உறுதி செய்து கொண்டு விட்டார்கள். மிதவாதிகளுக்கும் இவ்விஷயத்தில் ஆக்ஷேபணை இல்லை. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதில் காங்கிரசுக்கு ஆக்ஷேபணை இருப்பதாக காணப்படும் விஷயம் எல்லாம் தென்னிந்தியாவில், சென்னை மாகாணத்தில் இந்துக்கள் என்பவர்களில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்கின்றதைப் பொருத்த அளவில்தான் பார்ப்பனர்களுக்கு ஆட்சேபணை இருப்பதாகச் சொல்லக்கூடும். அப்படி ஆனால் இவ்விஷயத்தில் நாம் ஒன்று கேட்கின்றோம்.

அதாவது இன்று காங்கிரசில் மிகமிகப் பிரதானப்பட்ட புருஷர்களாய் இருக்கும் பார்ப்பனரல்லாதார்களில் தோழர் சி.ஆர். ரெட்டி போன்றவர்கள் இந்தப் பார்ப்பனரல்லாதார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஆட்சேபிக்கிறார்களா என்பதேயாகும். மற்றும் இவர்கள் விரும்பும் தோழர் Dr. சுப்பராயன், டி.எ. ராமலிங்கம் செட்டியார் ஆகிய கூட்டத்தார்கள் ஆட்சேபிக்கிறார்களா என்று கேள்க்கின்றோம்.

மேலும் காங்கிரஸ் பார்ப்பனர்கள் இன்று ஜில்லாக்கள் தோறும், பட்டணங்கள் தோறும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், சட்டசபைக்கும் தேடிப் பிடிக்கும் பார்ப்பனரல்லாதார்களில் யாராவது வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஆட்சேபிக்கிறார்களா என்றும் கேள்க்கின்றோம்.

ஜஸ்டிஸ் கட்சியார் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளுவதாய் தீர்மானம் செய்தவுடன், அனேக பார்ப்பனரல்லாதார் ''இனி காங்கிரசுக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும் என்ன வித்தியாசம்? ஏன் ஜஸ்டிஸ் கட்சி, அல்லது பார்ப்பனரல்லாதார் கட்சி என்பதாக ஒன்று இருக்க வேண்டும்!'' என்றெல்லாம் கேட்டார்கள். இப்படிக் கேட்பது சுத்த முட்டாள்தனம் என்றும் பார்ப்பனரல்லாதார் கட்சி என்றாலும் சரி, ஜஸ்டிஸ் கட்சி என்றாலும் சரி, தென்னிந்திய நல உரிமைக் கட்சி என்றாலும் சரி எல்லாம் அரசியல் விஷயத்தில் சட்டத்திற்குக் கட்டுப்பட்டுக் கிளர்ச்சி செய்வதும், சமூக விஷயத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்பதும் ஆகியவைகளைக் கொள்கையாகக் கொண்டது என்றும், அதை ஒப்புக் கொள்ளுகிற பார்ப்பனர்களைத்தான், ஜஸ்டிஸ் கட்சியில் சேர்த்துக் கொள்வதே ஒழிய மற்றப்படி பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு விரோதமான எல்லாப் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்ளுவதாக எப்போதும் சொல்லவே இல்லை என்றும் பல தடவை பரம மூடர்களுக்கும் விளங்கும்படி எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம்.

ஆகவே இதுவரையில் அரசியல் விஷயத்தில் சட்டத்துக்கு மீறியும் சட்டங்களை மறுத்தும் கிளர்ச்சி செய்து வந்ததாகவும் சீர்திருத்தங்களை பஹிஷ்கரிப்பதோடு மாத்திரமல்லாமல், அதை உடைத்துத் தகர்த்து எறிவதாகவும், மந்திரி பதவிகள் உத்தியோகங்கள் ஆகியவைகளை ஏற்காமல், அவற்றை எதிர்த்து யாருக்கும் நிலைக்காமல் இருக்கும்படி செய்வதாகவும் சொல்லி வந்த காங்கிரசுக்காரர்கள், இன்று அரசியல் விஷயத்தில் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு சட்ட மறுப்பைக் கைவிட்டுவிட்டு சட்டசபைக்குச் சென்று உத்தியோகத்தையும் பதவியையும் ஏற்றுக் கொள்வதுடன் சீர்திருத்தத்தையும் உடைப்பதில்லை என்றும் சொல்லி வாக்குக் கொடுத்து ராஜவிஸ்வாசப் பிரமாணம் செய்துவிட்ட பிறகு, இனி ஜஸ்டிஸ் கட்சிக் காரருக்கும், காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கும் ஏனைய கட்சிக்காரருக்கும் அரசியலில் என்ன வித்தியாசம் இருக்கிறது என்று கேள்க்கின்றோம்.

மற்றும் ஆங்காங்கு எந்த எந்த தோழர்கள் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களாக நாளது வரை இருந்து வந்தார்களோ, வெளி ஜில்லாக்களிலும், தாலூக்காக் களிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும், சட்டசபைகளிலும் ஜஸ்டிஸ் கட்சியில்





RangaRakes tamilnavarasam.com

எந்த எந்த பார்ப்பனரல்லாத தோழர்கள் இருந்து வந்தார்களோ அவர்கள் எல்லாரையுமேதான் இன்று காங்கிரஸ்காரர்கள் என்பவர்கள் காங்கிரசின் பேரால் சட்டசபைக்கும், ஸ்தல ஸ்தாபனத்துக்கும் நிற்கும்படி கெஞ்சுகிறார்கள்.

மற்றும் எந்த எந்த இடங்களில் ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனரல்லாதார் சட்டசபையிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் இருப்பதால் அந்தந்த ஸ்தல ஸ்தாபனம் ஒழுங்கீனமாய், நாணயக் குறைவாய், சுயநலமாய் நடக்கின்றது என்று காங்கிரஸ்காரரும், அவர்களது காலிகளும், கூலிகளும் குறைத்து வந்தார்களோ அந்தப் பார்ப்பனரல்லாதார்களையேதான் இன்று காங்கிரஸ் பிரமுகர்கள் காங்கிரசுக்கு 4 அணா கொடுத்துவிட்டால் பழயபடியே நடக்க அனுமதி கொடுப்பதாய் கெஞ்சுகிறார்கள். அதுவும் அவரவர்கள் வீட்டு வாசலில் நின்று மண்டிப் போட்டுக் கெஞ்சுகிறார்கள்.

ஆகவே இதிலிருந்து காங்கிரசுக்கு ஆள் பிடிப்பதில் கொள்கை வித்தியாசமோ, திட்ட வித்தியாசமோ, ஒழுக்க வித்தியாசமோ, நாணய வித்தியாசமோ ஏதாவது இருப்பதாக யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

இன்றும் காங்கிரசில் கையெழுத்துப் போட்டு ஸ்தானங்கள் பெற்ற தோழர்கள் சி.ஆர். ரெட்டி, இரத்தினவேலு தேவர், பிச்சைமுத்துக் கோனார், அவனாசிலிங்கம் செட்டியார், சாமி வெங்கிடாசலம் செட்டியார் உள்பட இன்னும் பலர் பார்ப்பனரல்லாதார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஆட்சேபிக்கிறார்களா என்று கேட்பதோடு மற்றும் காங்கிரசுக்காரர்கள் தங்களோடு சேர்ந்து கொள்ளும்படி கெஞ்சும் தோழர்களான திருநெல்வேலி ரங்கநாத முதலியார், ஈஸ்வரம் பிள்ளை, சிதம்பரநாத முதலியார், ராமநாதபுரம் ராஜா, பாலுய்யா பிள்ளை, மதுரை சேத்தூர் ஜமீன்தார், போடி அழகண்ணன் செட்டியார், முத்து செட்டியார், திருச்சி டி.எம். நாராயணசாமி பிள்ளை, மீனாம்பள்ளி ஜமீன்தார், தஞ்சை நாடிமுத்து பிள்ளை, ராஜப்பா, வீரப்ப வாண்டையார், சாமியப்பா முதலியார், ஜம்புலிங்க முதலியார், வேணுகோபால் நாயுடு, ராமச்சந்திரப் படையாச்சி, சேலம் எல்லப்ப செட்டியார், ராஜமாணிக்க பண்டாரம், வி.எம்.ராமசாமி முதலியார் முதலிய இன்னும் எவ்வளவோ பேர்கள் இன்று வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வேண்டாம் என்று சொல்லுவார்களா என்றும் கேட்கின்றோம்.

வீணாக, கொள்கை வித்தியாசமோ, திட்ட வித்தியாசமோ, அர்த்த வித்தியாசமோ இல்லாமல் எப்படியாவது என்ன செய்தாவது இன்று பதவியில் இருப்பவர்களை ஒழித்து விட்டு அந்தப் பதவியை கைப்பற்றி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழிக்க அதுவும் ஜாதி அகம்பாவமும், சுயநல வெறியும் கொண்ட பார்ப்பன ஆதிக்கத்துக்கு அனுகூலமாய் இருக்கும்படி சூட்சிகள் செய்யப் பாடுபட்டால் அச்சூட்சிகளை அறியாமல் சில மக்கள் முட்டாள்தனமாக உளருவதென்றால், இவர்களது நிலைமைக்கு பரிதாபப்பட வேண்டியதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?



ஏதாவது ஒரு கட்சி அதிகாரத்திலும் பதவியிலும் இருந்தால் அதற்கு சினேகிதர்கள் ஏற்படுவதைவிட, அதிகமாக எதிரிகள் ஏற்படுவது சகஜமேயாகும். ஏனெனில் அந்த அதிகாரத்தைப் பற்றி பொறாமை கொண்ட மக்கள் ஒரு புறமும், தங்களுக்குக் கிடைக்க முயற்சித்து ஏமாற்றமடைந்தவர்கள் ஒரு புறமும், அதிகாரத்தில் உள்ளவர்களால் பயன்பெற உத்தேசித்து ஏமாற்றமடைந்தவர்கள் ஒரு புறமும், இந்த நான்கு கூட்டத்தாருடைய கூலிகள் ஒரு புறமும், வேறு வகையில் பிழைக்க வகையற்று இப்படிப்பட்ட நிலைமையைப் பயன்படுத்தியே வாழ நினைத்திருப்பவர்கள் ஒரு புறமும், இன்னும் பலவிதமானவர்கள் ஒரு புறமுமாக விரோத பாவத்தில் இருந்து பதவியிலிருப்பவர்கள் என்ன நன்மை செய்திருந்தாலும் அதைப்பற்றி கவலை இல்லாமல் அவர்களுக்கு தொல்லை விளைவிப்பது இயற்கையேயாகும்.

இன்று உள்ள ஜஸ்டிஸ் கட்சிக்கு நாட்டில் செல்வாக்கு இல்லை என்றோ, அவர்களது கொள்கைகளை மக்கள் ஆதரிப்பது இல்லை என்றோ, யாராவது சொல்லக்கூடுமானால் இந்த 15, 16 வருஷங்களாக ஸ்தல ஸ்தாபனம் கிராம பஞ்சாயத்து முதல் மந்திரி சபை வரையில் இவ்வளவு சூக்ஷிகளையும், தொல்லையையும் சமாளித்து ஜனங்கள் தேர்தல் பலத்தைக் கொண்டே ஜஸ்டிஸ் கட்சியார் ஆதிக்கத்தில் இருந்திருக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

மத்தியில் சிறிது நாள் காங்கிரஸ் ஆதிக்கத்தில் மந்திரி பதவி இருக்க நேர்ந்தும் ஏன் மாதக் கணக்குக்குள் கவிழ்ந்து போக நேரிட்டது? என்று கேட்கின்றோம்.

ஜஸ்டிஸ் கட்சியை வகுப்புவாதக் கட்சி என்று யாராவது சொன்னால் அதற்கு சமாதானம் சொல்ல வேண்டும் என்பதை ஒப்புக் கொள்வதோடு அதற்கும் பல தடவை சொல்லப்பட்டு வந்திருக்கிறது என்பதை ஞாபகமூட்டுகிறோம்.

ஆனால் ஜஸ்டிஸ் கட்சி பிற்போக்கான கட்சி என்றும், பணக்காரர் கட்சி என்றும் சொல்லி அதன் மீது குறை கூறி அதற்கு ஓட்டுக் கொடுக்கக் கூடாது என்று யாராவது பிரசாரம் செய்வார்களேயானால், அவர்களை பரம முட்டாள்கள் என்றோ அதை ஒப்புக் கொள்ள அவர்களுக்கு இஷ்டமில்லை யானால், வடிகட்டின அயோக்கியத்தனத்தால் சொல்லப்படுகிறது என்றோதான் சொல்லித் தீர வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இன்று நடுநிலையில் இருந்து யோக்கியமாய் இருந்து ஒருவன் பார்ப்பானானால் காங்கிரஸ்காரர்களைவிட ஜஸ்டிஸ்காரர்கள் பணக்காரர்கள் என்று சொல்லிவிட முடியுமா? ஜஸ்டிஸ்காரர்கள் பதவியில் இருக்கிறார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். சாதாரணமாக கணக்குப் பார்த்தால், தமிழ்நாட்டைப் பொருத்தவரைகூட காங்கிரசிலும், ஜஸ்டிஸ் கட்சிக்கு வெளியிலும் தாராளமாக பணக்காரர்கள் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். பார்ப்பனரல்லாதார்களை எடுத்துக் கொண்டால் காங்கிரசிலிருக்கும் ஏழை மக்கள், நடுத்தர மக்கள் என்பவர்களைவிட சிறிதாவது அதிகமாகவே தான் ஜஸ்டிஸ் கட்சியில் இருக்கிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

கொள்கை விஷயத்திலும் சட்டத்திற்கு அடங்கின கிளர்ச்சி என்பதிலும், சட்ட மறுப்பு செய்வதில்லை என்பதிலும், சீர்திருத்தத்தை உடைப்பதில்லை என்பதிலும், சட்டசபைக்கு போவதிலும், உத்தியோகம் மந்திரி பதவி ஏற்பதிலும், கிருஸ்தவர், முகமதியர், ஆதித் திராவிடர், ஆங்கிலேயர் ஆங்கிலோ இந்தியர் என்பவர்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்குவதை ஒப்புக் கொள்ளுவதிலும், மற்றும் எல்லாவற்றிலும் காங்கிரஸ்காரர்களைப் போலவேதான் ஜஸ்டிஸ்காரர்களும் கொள்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால் இவை தவிர, வருணாஸ்ரமத்தை ஒழிப்பதிலும், ஜாதி பேதத்தைத் தகர்ப்பதிலும், எல்லா ஜாதிக்கும் கோவில் முதலிய பிரவேசம் அளிப்பதிலும், சகல ஜாதியாருக்குச் சமசந்தர்ப்பமும், சம உரிமையும் ஏற்படும்படி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்குவதிலும் ஜஸ்டிஸ்காரர்கள் தயாராய் இருக்கிறார்கள். இக்கொள்கைகளை காங்கிரஸ்காரர்கள் ஒப்புக் கொள்கிறார்களா என்பதை வர்ணாச்சிரம தர்மத்தால் பின் தள்ளப்பட்டு கீழ்மைப்படுத்தி இழிவாக்கப்பட்ட மக்களாகிய பார்ப்பனரல்லாதார்களை கேள்க்கின்றோம்.

ஆகவே ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களைவிட எந்த விதத்தில் காங்கிரஸ் காரர்கள் மேலானவர்கள் என்பதோடு ஜஸ்டிஸ் கட்சி எந்த விதத்தில் பிற்போக்கான கட்சி என்றும் கேட்டு இதை முடிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 15.09.1935**



### சட்டியில் இருந்தால் தானே

## அகப்பையில் வரும்

**- அபேதவாதி எழுதுவது**

50 வருஷ காங்கிரசினால் இந்தியாவுக்கு என்ன பலன் ஏற்பட்டது என்று தோழர் திவான் பகதூர் ஏ. ராமசாமி முதலியார் காங்கிரஸ்காரர்களை ஒரு கேள்வி கேட்டார். அதற்கு எந்தக் காங்கிரஸ்வாதியும், எந்தக் காங்கிரஸ் பத்திரிகையும் யோக்கியமாய் பதில் சொல்ல முன்வரவில்லை.

''சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்.''

வெறுங்கையில் முழம் போட்டால் கணக்கு ஏற்படுமா?

என்பதுபோல் ஒன்றும் பதில் சொல்லுவதற்கு இடமில்லாமல் போய்விட்டது.

இருந்த போதிலும் இக்கேள்விக்குப் பதில் சொல்ல காங்கிரஸ்காரர் களுக்குத்தான் யோக்கியதை இல்லாமல் போய்விட்டதே ஒழிய மற்றப்படி நமக்கு யோக்கியதை இல்லாமல் போகவில்லை. என்னவென்றால்,

முதல்முதலாக சும்மா ''சுந்தரமூர்த்தி சுவாமிகள் வேலை'' செய்து கொண்டிருந்தவர்கள் எல்லாம் தேசபக்தர்களானார்கள். பச்சைப் பச்சையான வக்கீல்கள் எல்லாம் லோகமான்யர், மகாத்மா, தேசபந்து, தேசோத்தாரணர், ராஜாஜி ஆனார்கள்.

மற்றும் வேறு வழியில் ஜீவிக்க முடியாமல் தங்கள் வாழ்க்கை இன்னது என்று குதிர்பாடு இல்லாத காரணத்தால் சர்க்காருக்கு ஜாமீன் கொடுத்துவிட்டு வாழ வேண்டியவர்கள் எல்லாம் பெரியதொரு தேசாபிமானிகள் ஆனார்கள்.

தகரப் போகணி அம்மாமார்கள் எல்லாம் மேடை மீது ஏறி பெரிய பெரிய பொதுநல சேவைக்காரர்களையும் தற்கால சமூக முறையில் மதிக்கப்பட வேண்டியவர்களையும் குச்சிக்கார பாஷையில் வையும்படியான தைரியத்தை அடைந்தார்கள்.

இதுகளும் இதுகள் போன்ற மற்றும் பல காரியங்களும் தனிப்பட்ட நபர்கள் இந்த 50 வருஷ காங்கிரசினால் பயன் அடைந்தார்கள் என்பது ஒரு



RangaRakes tamilnavarasam.com

புறமிருக்க தேசப் பூசல், மதப் பூசல், வகுப்புப் பூசல் ஆகியவைகள் தலைநிமிர்ந்து தீயைப் போல் இனி யாராலும், எந்த வகையிலும் அணைக்க முடியாத மாதிரியில் எரிந்து கொண்டிருக்கின்றன.

மக்களுக்குள் ஒருவருக்கொருவர் ஏதாவது ஒரு காரணத்தைக் கொண்டு துவேஷம், வெறுப்பு, பொறாமை, ஒருவரை ஒருவர் கெடுக்க சூழ்ச்சி செய்தல் ஆகியவைகள் பாதாமி அல்வா சாப்பிடுவதுபோல் அவ்வளவு ஆவலுடனும், மகிழ்ச்சியுடனும் செய்யப்படுகின்றன.

''சும்மா கிடக்கும் சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி'' என்பதுபோல் தானாகவே சகலவித நன்மையையும் மக்களுக்குச் செய்து தீரவேண்டிய நிலையில் பொறுப்பை ஏற்று இருந்த அரசாங்கத்தை குறும்புத்தனமான கிளர்ச்சிகள் செய்து யாதொரு பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லாத நிலைமையில் கொண்டு வந்து விட்டது.

ஜனங்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்யும்படி அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்த வேண்டிய நிலையில் இருக்க வேண்டிய மக்களை அரசியல் கிளர்ச்சியின் பேரால் முட்டாள்களாக்கி வைத்து அரசாங்க நடவடிக்கையைக் கணிக்க முடியாமல் செய்து ஒருவரோடொருவர் ஒரு வகுப்பாரோடொரு வகுப்பார், ஒரு மதக்காரரோடொரு மதக்காரர்கள் சண்டை போட்டுக் கொண்டிருக்கும்படி செய்துவிட்டது.

இவ்வளவு தானா?

காலணாக் கார்டு முக்காலணா, அரையணா கவர் ஒன்னே காலணா, மயிலுக்கு 2 காசு இருந்த ரயில் சார்ஜ் இன்று 3 காசு, 4 காசு, 4½ காசு ஆயிற்று.

மாதம் 6 ரூ. வாங்கிக் கொண்டிருந்த சம்பளக்காரனுக்கு இன்று மாதம் 18 ரூ. கொடுக்க வேண்டியதாயிற்று.

ஜில்லாவுக்கு 2 முனிசீப் கோர்ட்டு இருந்த நீதி இன்று ஜில்லாவுக்கு 6, 7, 8 முனிசீப் கோர்ட்டுகள் ஆயிற்று. அரசாங்க வரி 56 கோடி ரூ. 60 கோடி ரூ. இருந்ததானது 200 கோடி ரூ. வரி ஆகிவிட்டது.

22 கோடி ரூ. செலவில் நிர்வகித்து வந்த ராணுவம் காங்கிரஸ் கிளர்ச்சி பிறகு 65 கோடி ரூபாய் செலவில் நிர்வகிக்க வேண்டி வந்துவிட்டது.

இந்தச் சம்பள உயர்வு உத்தியோகஸ்தர்கள் எண்ணிக்கை உயர்வு அரசாங்க நீதி நிர்வாக ஸ்தாபனங்களின் எண்ணிக்கை உயர்வு எல்லாம் ஏற்பட்டதற்குக் காங்கிரஸ் கிளர்ச்சியின் காரணமே ஒழிய வேறில்லை.

இவற்றை எல்லாம் ருஜுப்பிக்க காங்கிரஸ் தீர்மானங்களை எடுத்துக் காட்ட நம்மால் முடியும்.



இதை ருஜுப்பிக்க வேண்டும் என்று நம்மைக் கேட்க இஷ்டமில்லாதவர்கள் சுதேசமித்திரன் புத்தக சாலையில் விற்கும் காங்கிரஸ் சரித்திரம் என்னும் புத்தகத்தை வாங்கிப் படித்துப் பார்த்தால் காங்கிரசினால் விளைந்த தீமைகள் - கேடுகள் உள்ளங்கை பப்ளிமாஸ் பழம் போல் விளங்கும்.

சர்க்காரிடத்தில் ஜனங்களுக்குத் துவேஷமும், வெறுப்பும் உண்டாகும்படி செய்வதையே என்றைய தினம் காங்கிரசானது அரசியல் கிளர்ச்சி லட்சியமாய்க் கொண்டதோ அன்று முதலே சர்க்கார் தங்கள் ஆட்சியை கிரமமாகவும், பத்திரமாகவும் நடைபெறச் செய்ய அதிக உத்தியோகஸ்தர்களை நியமிக்கவும், என்ன செய்தாலும் விட்டுவிட்டு ஓடாமல் இருக்கும்படிக்கும் சுவாமி வேதாசலமவர்கள் அறிவுரைக் கொத்தில் சொல்லி இருப்பது போல் எது செய்தாவது உத்தியோகத்தில் வந்து சேரவுமான நிலையை சர்க்கார் உற்பத்தி செய்ய வேண்டியதாயிற்று.

தொழில் வரி, வருமான வரி, அன்னிய சாமான்கள் மீது அதிக வரி, கள்ளு சாராயங்களுக்கு 100க்கு 300 பங்கு வரி முதலிய கடுமையான வரிகள் எல்லாம் போட்டு பணம் வசூல் செய்து உத்தியோகஸ்தர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்தாக வேண்டிய அவசியமே காங்கிரஸ் முட்டாள்தனமாக - சர்க்காரைக் கண்விழித்து அதிக ஜாக்கிரதை செய்து கொள்ளும்படி - செய்த கிளர்ச்சி தானே ஒழிய வேறில்லை.

சர்க்கார் உத்தியோகத்தில் பார்ப்பனர்களே இருந்தாலும் பார்ப்பனர்களே படித்தவர்களாகவும் உத்தியோகத்துக்கு லாயக்கானவர்களாகவும், பார்ப்பனர்களுக்கே சகல உத்தியோகமும் கிடைக்கத்தக்க மாதிரியில் ஆதிக்கம் பார்ப்பனர்கள் கையில் இருந்தாலும் வரி கொடுக்கிற ஜனங்கள் பார்ப்பனரல்லாதவர்களாகவே 100க்கு 95 பேர்கள் இருந்தாலும் பார்ப்பன ஆதிக்கம் பெற்ற காங்கிரஸ் இந்த நிலையை உண்டாக்கி வளர்த்திக் காப்பாற்ற வேண்டி வந்தது.

காங்கிரசின் 50 வருஷ கிளர்ச்சியில் சர்க்காரிடம் இருந்து பெற்ற ஏதாவதொரு பெரிய உத்தியோகமோ ஏதாவது ஒரு சுதந்திரமோ யோக்கியமாய், நாணயமாய் நடத்த முடிந்தது என்று யாராவது சொல்ல முடியுமா?

கோர்ட்டு அதிகாரிகள், டிப்டி கலக்டர்கள், முனிசீப்புகள், ஜட்ஜிகள், போலீசு சூப்ரண்டுகள் ஆகியவர்கள் முதல் அவர்கள் சிப்பந்திகள் வரை பலர் செய்யும் அயோக்கியத்தனம், வாங்கும் லஞ்சம் அளிக்கும் அக்கிரமமான தீர்ப்புகள் ஆகியவைகளைப் பற்றி ஒரு காங்கிரசுக்காரனும் பேசுவதில்லை.

வெள்ளைக்கார கேப்நட் மெம்பர்கள், வெள்ளைக்கார பெரிய அதிகாரிகள் நடத்தையைப் பற்றி எந்தக் காங்கிரஸ்வாதியும் பேசுவதில்லை.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் பார்ப்பனரல்லாத ஸ்தல ஸ்தாபனத் தலைவர்கள் அரசாங்க மந்திரிமார்கள் ஆகியவர்களைப் பற்றி மாத்திரம் மகாத்மாக்கள் முதல் சத்தியமூர்த்தி வரை எல்லாக் காங்கிரஸ்காரர்களும் குறை கூறி விஷமம் செய்து கண்டபடி தூற்றிய வண்ணமாகவே இருக்கிறார்கள். இதெல்லாம் காங்கிரசினால் ஏற்பட்ட பயன் என்று சொன்னால் யாராவது மறுக்க முடியுமா?

காங்கிரசினால் ஏற்பட்ட யோக்கியதைகள் இன்னம் வேண்டுமானால் இதுபோல் ஆயிரக்கணக்காக சொல்லலாம். சிலது நியாய விரோத மில்லா விட்டாலும் சட்ட விரோதமாகுமே என்று பயப்பட வேண்டியிருக்கிறது.

**குடி அரசு - கட்டுரை - 22.09.1935**



# காங்கிரஸ் கொள்கை நாடகம்

**- பழைய காங்கிரஸ்காரன்**

காங்கிரஸ் உத்தியோகமேற்கும் விஷயத்தில் அபிப்பிராய பேத மேற்பட்டதற்காக சர்தார் சாதுல்சிங் அவர்கள் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து ராஜினாமாச் செய்து விட்டாராம்.

காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்குச் செல்வதை பற்றியோ காந்தியார் சம்மதித்து விட்டார்.

அந்தப்படி பலர் சட்டசபைக்குச் சென்றும் விட்டார்கள்.

சர்க்காரார் காக்காய் கருப்பு என்றால் காங்கிரஸ்காரர்கள் வெள்ளை என்று சொல்லிச் சர்க்காருக்குத் தொந்திரவு கொடுத்து அவர்களுடைய தீர்மானங்களையெல்லாம் எதிர்ப்பதே தங்கள் வேலை என்றால் இனி மாகாண சட்டசபைகளில் அந்த ஜபம் சாயாது.

இந்த மாதிரி முன் காங்கிரஸ்காரர்கள் நடந்து கொண்ட விஷமத்தனமான காரணத்தாலேயே அரசாங்கம் நல்ல அரசாட்சிப் புரிய வேண்டும் என்னும் காரணத்துக்காக அனேக பாதுகாப்புகளை ஏற்படுத்திக் கொண்டது.

எவ்வளவு தீர்மானங்களைத் தோற்கடித்தாலும் அவை குப்பைத் தொட்டிக்குத்தான் போகுமே ஒழிய தீர்மானத்தால் ஒன்றும் செய்துவிட முடியாது.

ஆகவே அரசாங்கத்தைப் பல தீர்மானங்களில் தோற்கடித்துவிட்டதாகக் காங்கிரஸ்காரர்கள் கணக்குப் போட்டுக் கொண்டு இருக்க வேண்டியதும், ''பொறுப்பில்லாத சட்டசபை மெம்பர்கள் செய்த காரியத்தைச் சர்க்கார் லட்சியம் செய்யாமல் தோற்கடித்த அத் தீர்மானங்களைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு நல்ல அரசாட்சிக்கு வேண்டியபடி பாதுகாப்பு அதிகாரங்களைக் கொண்டு திருத்திக் கொண்டோம்'' என்று சொல்லி அரசாங்கத்தார் சர்ட்டிபை செய்து காங்கிரஸ்காரர்கள் முகத்தில் கரியைப் பூசுவதும், காங்கிரசுக்காரர்கள் வெட்கமில்லாமல் பிரயாணப்படி கிடைத்தால் போதுமென்று மறுபடியும் மறுபடியும் அதே ஸ்தானத்தில் அமர்ந்து அதே வேலையைச் செய்து கொண்டு இந்திய சுயமரியாதையைப் பாழாக்குவதற்கு ஆளாகி இருப்பதும் தான் முடியும்.

இந்த உண்மை காங்கிரசுக்காரர்களுக்குத் தெரியாது என்று யாரும் நம்ப முடியாது.



RangaRakes tamilnavarasam.com

எப்படியாவது உளரிக் கொட்டிப் பாமர மக்களை ஏமாற்றிச் சட்டசபைக்குள் நுழைந்து விட்டால் அப்புறம் சவுகரியப்படி நடந்து கொள்ளலாம் என்கின்ற சூழ்ச்சி எண்ணத்தின் மீதே ஆளுக்கொரு அபிப்பிராயம் சொல்லி வருகிறார்களே ஒழிய வேறில்லை.

உதாரணமாகச் சட்டசபைக்குள் நுழைந்து விடுவதினாலும் உத்தியோகங்களைக் கைப்பற்றிக் கொள்ளுவதினாலும் அரசாங்கத்தைக் கடுகளவுகூட அசைக்க முடியாது என்பதும் இதுவரையும் யாரும் எந்த ஒரு துறையிலும் சிறிது பாகத்தையாவது அசைக்க முடியவில்லை என்பதும் அரசியல் ஞானமுள்ள யாவரும் அறிந்த காரியமாகும்.

சாதாரணமாய் மக்களை ஏமாற்றச் சட்டசபையில் அதிகப் பிரசங்கத்தனமாகவும், பலாபலனைப் பற்றி லட்சியமில்லாமலும், கூப்பாடு போடலாம். அப்படிப்பட்ட கூப்பாட்டிற்கு வட்டியும் முதலுமாகச் சேர்த்து அரசாங்கத்தார் திருப்பி நல்ல சூடும் கொடுக்கலாம். அது மாத்திரமல்லாமல் அதன் பயனாய் பொது ஜனங்களுக்கு பல நிர்ப்பந்தங்களையும், அதிக வரியையும் ஏற்படுத்திச் சட்டசபை மெம்பர்களின் தொல்லைகளைச் சமாளிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

இவற்றைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? அல்லது இதுவரை முடிந்தது என்ன? என்று பார்த்தால் விளங்கும்.

தென் இந்திய மக்கள் என்ன செய்தாவது பார்ப்பனர்கள் செல்வாக்கில் இருந்த அரசியல் ஆதிக்கத்தை ஒழிப்பது என்று கங்கணம் கட்டி எவ்வளவோ பழிப்புக்கும், எதிர்ப்புக்கும், தொல்லைக்கும் ஆளாகி ஒரு அளவுக்குப் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்கும் வழி திறக்கப் பட்டிருக்கிறது.

இனி, அதை எந்த விதத்திலும் 100 மகாத்மாக்கள் அல்ல, 500 ராஜாஜிகள் அல்ல, அவர்கள் பாட்டன் பூட்டன்களான ரிஷிகள் அல்ல, இனியும் எவராலும் அதைத் தடுக்க முடியாது. வேண்டுமானால் தென்னாட்டு மூட மக்களிடம் பணம் பறிக்கலாம். அதைக்கொண்டு பார்ப்பனரல்லாதாரர்களில் சில கூலிகளைப் பிடித்து காலித்தனம் செய்யச் செய்யலாம்.

இதன் பலனாக எல்லாம் பார்ப்பனர் என்னாளும் நிரந்தரமாகத் தலை எடுக்காமல் இருக்கும்படியான நிலையை கெட்டியாக ஏற்படுத்திக் கொள்ளத்தான் முடியுமே ஒழிய பழைய ஆதிக்கத்தைக் கனவிலும் நினைக்க முடியாது என்பது உறுதி. இந்தப் பார்ப்பனர்களுடைய யோக்கியதையும் அவர்களது கூலிகளின் காலித்தனத்தையும் கண்ட பிறகு, பிரிட்டிஷ் ஆட்சி அல்லது அன்னிய ஆட்சி என்பதால்தான் இந்தியாவுக்கு என்றாவது சமதர்ம ஆட்சி ஏற்படலாமே ஒழிய, மற்றபடி இந்தப் பார்ப்பனர்கள் கூறும் சுயராஜ்யம் என்னும் பார்ப்பன ஆதிக்க ஆட்சியினால் ஒரு நன்மையும் ஏற்படாததோடு,



இன்னும் காட்டுமிராண்டித்தனத்துக்கும், அடிமைத்தனத்துக்கும்தான் நம்நாடு போகக் கூடும் என்று முடிவு கட்ட வேண்டியிருக்கிறது.

காங்கிரசின் பொருளாதார ஞானம் கதருடன் நின்றுவிட்டது.

காங்கிரசின் கிராமப் புனருத்தாரண ஞானம் கருப்பட்டியுடனும், வெல்லக் கட்டியுடனும், கைகுத்து அரிசியுடனும் நின்றுவிட்டது.

காங்கிரசின் சமுதாய சீர்திருத்த ஞானம் மதத்தையும், பழைய கலைகளையும் காப்பாற்றுவது என்பதுடன் முடிவு பெற்றுவிட்டது.

ஆகவே இப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்ட சுயராஜ்ஜியத்தில் இந்திய மக்கள் வாழ வேண்டியிருந்தால் அவர்களது வாழ்க்கை நிலை, முற்போக்கு, சுதந்திரம், விடுதலை ஆகியவைகளைப் பற்றி நாம் ஒன்றும் யோசிக்க வேண்டியதே இல்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் என்பது இப்படிப்பட்ட பொருளாதாரம், கிராமப்புனருத்தாரணம், சமூக பாதுகாப்புத் திட்டம் ஆகியவைகளைக் கொண்டதல்ல என்பது மாத்திரம் உறுதி.

ஆனால், இந்நாட்டு மேல் ஜாதிக்காரரும், செல்வவான்களும் அனுபவிப்பதைத் தாங்கள் ஏன் அனுபவிக்கக் கூடாது என்று பிரிட்டிஷ் அரசாங்கம் கேட்கிறது.

இப்படிக் கேட்பதில் அருத்தம் இல்லாமல் இல்லை.

அதாவது இந்த நாட்டுப் பழனி ஆண்டவர் தலையில் கொட்டி வீணாக ஜலதாரைக்குப் போகும் பாலை நாங்கள் வாங்கிக் கொண்டு போய் அங்குள்ள இளங் குழந்தைகளுக்கு கொடுக்கிறோமே என்கின்றது.

அதுபோலவே இந்த நாட்டுச் சோம்பேறிக் கூட்டங்களான பார்ப்பனர் முதலியவர்கள் பாடுபடாமல் அனுபவிக்கும் செல்வத்தை எங்கள் நாட்டுக்குக் கொண்டு போய் அங்குள்ள ஏழை மக்கள், தொழிலாள மக்கள் ஆகியவர்களுக்குப் பயன்படும்படி செய்கிறோமே என்கின்றது. இதில் தப்பு என்ன என்று கேட்கின்றோம்.

நம்நாட்டு நாட்டுக் கோட்டையார் பணம், ஜமீன்தாரர்கள் பணம், மிராசுதாரர்கள் பணம், மில் முதலாளிகள் பணம், கப்பல் வியாபாரிகள் பணம் எல்லாம் மற்றும் அவர்கள் லட்ச லட்சமாய்ச் சம்பாதிக்கும் லாபம் எல்லாம் என்ன கதி அடைகிறது?

இதை மாற்ற அடக்க ஒடுக்க முடியாத சுயராஜ்ஜியத்துக்கும் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்துக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கின்றோம்.

எவ்வளவுதான் ஜீவகாருண்யத்துக்குச் சட்டமிருந்தாலும் நாய்களை அடித்துக் கொல்ல அனுமதி இருந்துதான் வருகிறது. கசாப்புக்கடைகளில் தினம் லட்சக்கணக்கான ஆடு, மாடு, கோழி, பன்றி முதலியவை கொல்லப்பட்டு, விற்கப்பட்டு, தின்னப்பட்டுத்தான் வருகிறது.



RangaRakes tamilnavarasam.com

எவ்வளவுதான் ஜீவகாருண்யமும் பசுவைத் தெய்வமென்று கொண்டாடும் தன்மையும் இருந்தாலும் காலை 3 மணி முதல் இரவு 8 மணி வரை மாடுகள் செக்கில் சுற்றுவதும் பாரம் இழுப்பதும் குதிரைகள் ஜட்கா வண்டிகளில் ஓடுவதும் மேல் தோல் எழும்படி பட்டை வாங்குவதும் அனுமதிக்கப்பட்டுத்தான் வருகிறது.

அது போலவே இந்திய ஏழை மக்களைப் பற்றி எவ்வளவுதான் கண்ணீர் வடித்துப் பரோபகாரம் பேசினாலும் அவர்களது சுயமரியாதையும் அறிவும் பாடுபட்ட கூலியும் பாழாகும்படியான காரியங்கள் சுயராஜ்யத் திட்டத்திலும், மதத் திட்டத்திலும் இருந்துதான் வருகிறது.

ஆகவே, ''சுயராஜ்யம்'' ஜஸ்டிஸ் ராஜ்யத்தை விட - ஏன்? பிரிட்டிஷ் ராஜ்யத்தைவிட எப்படி மேலானது என்பது மாத்திரமல்லாமல் எப்படித் தேவையானதாகும் என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 22.09.1935**



# ஸ்தல ஸ்தாபனங்களும் காங்கிரஸ்காரர்களும்

இந்திய தேசியக் காங்கிரஸ் என்பது பார்ப்பன ஆதிக்க ஸ்தாபனமென்றும், பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்க ஸ்தாபனமாய் வெகுகாலமாய் இருந்து வந்த மத ஸ்தாபனங்களுக்கு யோக்கியதையற்றுப் போனவுடன் அதற்குப் பதிலாய் காங்கிரஸ் ஸ்தாபனத்தைத் தங்கள் ஆதிக்கத்துக்குப் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும் நாம் 10, 12 வருஷ காலமாகவே சொல்லி வருகிறோம்.

அதற்கும் 7, 8 வருஷங்கள் முன்பு இருந்தே வெகுகாலமாகப் பிரபல காங்கிரஸ்வாதிகளாய் இருந்த டாக்டர் நாயர், சர்.பி.தியாகராய செட்டியார் போன்ற அறிஞர்களும் அந்தப் படியே சொல்லி காங்கிரசுக்கு எதிராகத் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்பதாக ஒரு ஸ்தாபனத்தைத் தென்னிந்தியா வெங்கும் ஏற்படுத்திப் பார்ப்பன ஆதிக்கத்துக்கும் சூழ்ச்சிக்கும் காங்கிரஸ் ஆயுதமாய் இருப்பதை வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

இது இம்மாகாண மாத்திரமல்லாமல் மற்ற சில மாகாணங்களிலும் பரவி இருக்கிறது.

மேற்கண்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் ஆரம்பித்த காலத்தில் காங்கிரசுக்குத் தென்னிந்தியாவில் அடியோடு செல்வாக்கற்றுப் போய், செல்வமும், பொறுப்பும் வரி செலுத்தும் தன்மையும் உள்ள பார்ப்பனரல்லாதார் 100க்கு 99 பேர்கள் காங்கிரசை விட்டு விலகி மேல் கண்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்னும் ஜஸ்டிஸ் இயக்கத்தில் சேர்ந்து இருந்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பார்ப்பனர்கள் ஒரு யுக்தி செய்து பார்ப்பனரல்லாதார் சங்கமென்றே சென்னை மாகாணச் சங்கமென்ற ஒன்றை ஆரம்பித்துச் சில புதுவேகமுள்ள வாலிபர்களையும் பொதுநல சேவையில் ஈடுபட்டு முன்னுக்கு வரவேண்டிய சில பார்ப்பனரல்லாதாரையும் அதில் பிணைத்து,

**''தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்பது சர்க்காருடைய கட்சி''யென்றும், ''பார்ப்பனரல்லாதார் நன்மைக்காக என்று தெ.இ.ந.உ. சங்கத்தார் என்னும் ஜஸ்டிஸ் கட்சியார் கேட்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பொறுத்தவரை காங்கிரஸ்காரர்களுக்கு ஆட்சேபணை இல்லை''** என்றும் சொல்லி மற்றும் சில பார்ப்பனரல்லாதாரையும் வேறுபல



RangaRakes tamilnavarasam.com

வழிகளில் ஆசைக்காட்டி கைவசப்படுத்தி ஜஸ்டிஸ் கட்சியை எதிர்க்கவும், அதன் தலைவர்களைத் தூற்றவும் செய்து வந்தார்கள்.

நாளாவட்டத்தில் காங்கிரஸ் பார்ப்பனர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை மெல்ல மெல்ல கை நழுவவிட்டதோடு மாத்திரமல்லாமல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேசத் துரோகமானதென்று சொல்லி அதற்கு விரோதமாயும் வேலை செய்ததோடு ஜஸ்டிஸ் கட்சியை அழிப்பதே காங்கிரசின் முக்கிய கொள்கை என்கின்ற அளவுக்கு வந்து விட்டார்கள். இன்றும் அதே பிரசாரம் செய்து வருகிறார்கள்.

இந்த மத்தியில் ஜஸ்டிஸ் கட்சி பொது ஜனங்களின் ஆதரவினால் சட்டசபையிலும், அரசாங்க நிர்வாக சபையிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும், பார்ப்பனர்களுக்குச் சமமாகவும், சிலவற்றில் மேலாகவும் ஆதிக்கம் பெற்றுவிட்டதால் தேர்தல் போட்டிகளில் தோல்வியுற்ற பார்ப்பனரல்லாதாரும், அதிகாரங்களிலும், பதவிகளிலும் ஏமாற்றமடைந்த பார்ப்பனரல்லாதாரும், ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிராக நின்றாவது ஸ்தானமும், பதவியும் பெற வேண்டியவர்களாகி ஆதியில் காங்கிரசை பார்ப்பன ஆதிக்க ஸ்தாபனம் என்று சொல்லிவிட்டு வெளியில் வந்து ஜஸ்டிஸ் கட்சியில் வாழ்ந்தவர்களிலேயே பலர் திரும்பவும் காங்கிரசினுடைய தயவு பெற வேண்டியவர்களாகி காங்கிரசோடு கலக்க வேண்டியவர்களானார்கள். இதெல்லாம் பழங்கதை என்றும் யாவரும் அறிந்ததென்றும் வைத்துக் கொள்வோம்.

எப்படி இருந்த போதிலும் இன்றைய தினம் காங்கிரசிலுள்ள பார்ப்பனரல்லாதார்களில் 100க்கு 99 பேர்கள் யோக்கியமாயும், நாணையமாயும் ஒரு விஷயத்தை மாத்திரம் வெளிப்படையாய் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

அதாவது காங்கிரஸ் பார்ப்பன ஆதிக்க ஸ்தாபனமாகத்தான் இருக்கிறது என்பதையும், பிரத்தியக்ஷத்திலும், அனுபவத்திலும் காங்கிரஸ் ஸ்தாபனங்களில் பார்ப்பனர்களே முக்கிய தலைவர்களாகவும், காசு பணம் உத்தியோக விஷயத்தில் ஆதிக்கக்காரர்களாகவும் இருக்கிறார்கள் என்பதையும், தங்களைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்களே தவிர சந்தர்ப்பம் வரும்போது தாங்களே (பார்ப்பனர்களே) புகுந்து கொள்ளு கிறார்கள் என்பதையும் ஒப்புக் கொள்வதோடு தோழர் ஈ.வெ. ராமசாமி போன்றவர்கள் காங்கிரசுக்கு வந்தால் தாங்கள் எல்லாரும் கூடுமான முயற்சி செய்து காங்கிரசில் உள்ள பார்ப்பன ஆதிக்கத்தை ஒழித்து அதை பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்துக்கு திருப்பித் தருவதாகவும் இப்போது தங்களுக்கு போதுமான பலமில்லாததால் தங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றும் தாராளமாய் சொல்லுகிறார்கள்.

இப்படிச் சொல்லும் காரணம் தங்களுக்குத் தேசபக்தி இருப்பதாயும் ஜஸ்டிஸ் கட்சிக்கு அதில்லை என்பதுமாம். எந்தக் காரணத்தாலேயோ இன்று



காங்கிரஸ் பார்ப்பன ஆதிக்கத்தில் இருக்கிறது என்பதில் காங்கிரஸ் பார்ப்பனரல்லாதார் முதல் எந்தக் கட்சியிலும் சேராத பார்ப்பனரல்லாதார் உள்பட யாருக்கும் எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையைப் பொறுத்த வரையிலும்கூட எல்லாப் பார்ப்பனர்களும் விரோதமாய் இருந்தாலும் ''கொஞ்ச காலத்துக்கு ஆவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டியதுதான்'' என்று காங்கிரசிலுள்ள எல்லா பார்ப்பனரல்லாதாருமே ஒரு மனதாய் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

இப்படிச் சொல்லும் பார்ப்பனரல்லாதார்களை ''ஜஸ்டிஸ் கட்சியார் எந்த விதத்தில் தேசாபிமானமில்லாதவர்கள்'' என்று கேட்டால் அதற்குத் தாங்களாகவே தங்கள் அபிப்பிராயப்படியே பதில் சொல்ல இன்று ஒருவருக்குக்கூட யோக்கியதை இல்லாமல் இருந்து வருகிறது.

ஏனெனில், நாம் முன் குறிப்பிட்டதுபோல் இன்று காங்கிரசிலுள்ள ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் ஒரு காலத்தில் ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைகளை ஒப்புக் கொண்டு அக்கட்சியில் இருந்து விட்டு வந்தவர்களாதலால் இப்போது அந்தக் கொள்கைகளைக் குற்றம் சொல்ல அவர்களது மனச்சாட்சி இடம் தரவில்லை. ஆனால் தனிப்பட்ட முறையில் ''பொப்பிலி ராஜாவுக்குக் கண்ணும் மூளையும் பெரிது'' என்றும் ''ராமசாமி முதலியாருக்கு யுக்தியும், தந்திரமும் அதிகம்'' என்றும் ''குமாரசாமி ரெட்டியார் சம்பளம் அதிகம் வாங்குகிறார்'' என்றும் ''ஷண்முகம் செட்டியார் சீக்கிரத்தில் முன்னுக்கு வந்து விட்டார்'' என்றும் இதுபோல் தனிப்பட்ட நபர்களிடத்தில் அசூயை கொண்டு பொறாமையில் அர்த்தமற்ற குற்றம் சொல்லுவதைத் தவிர மற்றபடி காங்கிரஸ் கொள்கைக்கும், திட்டத்திற்கும், நடவடிக்கைக்கும், ஜஸ்டிஸ் கொள்கைக்கும், திட்டத்துக்கும், நடவடிக்கைக்கும் இன்ன வித்தியாசம் என்று யாருமே சொல்ல வரவில்லை.

ஏதாவது ஒரு குற்றத்தை ஜஸ்டிஸ் கட்சி மீதோ, அதன் தலைவர்கள் மீதோ அவசியம் சொல்லித் தீர வேண்டியதுதான எலக்ஷன் சமயத்தில்கூட காங்கிரஸ்காரர்கள் காந்தியார் முதல் சத்தியமூர்த்தி வரை என்ன சொன்னார்கள் என்று பார்த்தால் ஜஸ்டிஸார் ''பெண்ணின் தாலியை அறுத்தார்கள்'' என்றும், ''நிலவரியைக் குறைக்கவில்லை'' என்றும் ''கைதிக்கு மோர் கொடுக்கவில்லை'' என்றும், ''போலீசார்களால் தொண்டர்கள் அடிக்கப் பட்டார்கள்'' என்றும் தான் சொன்னார்கள்.

இந்தக் காரியங்களுக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்பது அரசியல் A.B.C. தெரிந்த எவருக்கும் தெரிந்த காரியமானாலும் ''ஓட்டர்கள் முட்டாள்கள், பெரும்பாலோர் முழு மூடர்கள், மற்றும் சிலர் இனத்துரோகிகள், ஆதலால் நாம் சொல்லுவதை நம்புவார்கள் - ஒப்புக்



RangaRakes tamilnavarasam.com

கொள்ளுவார்கள்'' என்கின்ற தைரியத்தின் மீது அயோக்கியத்தனமாய் பொருத்தமில்லாததாய் உள்ளவைகளைத்தான் சொன்னார்களே தவிர மற்றபடி வேறு ஒன்றும் சொல்லவில்லை; சொல்ல முடியவும் இல்லை.

கூட்டங்களில் இந்த போக்கிரித்தனமான விஷமப் பிரசாரத்தைப் பற்றி மறுத்து கேள்விகள் கேட்க ஆரம்பித்த காலத்தில் தோழர் ராஜகோபாலாச்சாரி போன்றவர்களும், காந்தியாரும் என்ன சொன்னார்கள் என்பது யாரும் அறியாததல்ல.

அவர்கள் சொன்னதாவது,

''இன்று எலக்ஷனில் காங்கிரஸ்காரர்கள் போட்டி போடுவதானது எந்தக் கட்சியாரோடும், தகராறு செய்வதற்காகவோ எந்தக் கட்சியாரையாவது குற்றம் கூறித் தோற்கடிப்பதற்காகவோ அல்ல'' என்றும்,

''சர்க்காருக்கும், காங்கிரசுக்கும் உள்ள தகராறுக்காகவேதான் இன்று எலக்ஷனில் காங்கிரஸ்காரர்கள் பிரவேசிக்கிறார்களே ஒழிய வேறு காரணத்தால் அல்ல'' என்றும் சொன்னார்கள்.

இப்போது சட்டசபைக்குப் போன பிறகு சர்க்காருடன் சீர்திருத்த விஷயமாய்ச் செய்யப் போவதாகச் சொன்ன தகராரை - போரை அடியோடு கட்டி வைத்து விட்டு சர்க்கார் ஏணி என்றால் இவர்கள் கோணி என்று சொல்லிக் கொண்டு எம்.எல்.ஏ. என்ற பட்டத்துடன் இருந்து வருகிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில் தான் இங்கு ஸ்தல ஸ்தாபன சம்பந்தமான தேர்தல் விஷயத்தில் இன்று காங்கிரஸ்காரர்கள் பிரவேசித்து அவற்றைக் கைப்பற்ற வேண்டும் என்று முயற்சிப்பதோடு அதற்கு ஆக எவ்வளவோ சூட்சி செய்த போதிலும் தேர்தல்களில் பிரவேசிப்பதற்கு காங்கிரஸ்காரர்கள் சொல்லும் காரணம் மிகவும் விசித்திரமானது.

அதாவது ''ஸ்தல ஸ்தாபனங்கள் நேர் கேடாகவும், கண்ட்ராக்டர்கள் ராஜ்யமாகவும் நடைபெறுவதால் அவற்றைக் கைப்பற்றி நாங்கள் யோக்கியமாக நடத்தப் போகிறோம்'' என்பதாகும். இன்றைய ஸ்தல ஸ்தாபனங்களில் ஜஸ்டிஸ்காரர்களும் ஒரு கட்சியும் இல்லாதவர்களும் தான் அதிகமாய் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் பொது ஜனங்களின் ஓட்டுகளின் மீது வந்தவர்களே ஒழிய எல்லோர் கண்களிலும் மிளகாய்ப் பொடி தூவி விட்டோ ஜஸ்டிஸ் கட்சி நியமனத்தாலோ வந்தவர் அல்ல.

ஆகவே இவர்களால் ''நேர்கேடாய் கண்ட்ராக்டர்கள் ராஜ்யமாய் ஆட்சி புரியப்படுகிறது'' என்று சொல்லப்படுமானால் ஓட்டர்கள் பொறுப்பில்லாமல், நாணயமில்லாமல் நேர் இல்லாமல் ஓட்டுச் செய்திருந்தால் ஒழிய மற்றபடி வேறு காரணங்களால் இவர்கள் ஸ்தானங்கள் பெற்று இருக்க முடியாது அல்லவா?

அப்படிப்பட்ட ஓட்டர்கள் தான் இன்று காங்கிரஸ்காரர்களுக்கும் ஓட்டுச் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறார்களே ஒழிய வேறு புது ஓட்டர்கள் எந்தக் குயவன் சூளையில் இருந்தும் உற்பத்தி செய்யப்பட்டு வந்துவிடவில்லை.

ஓட்டர்கள் மாத்திரம் பழய ஓட்டர்கள் என்பதில்லாமல் ஸ்தல ஸ்தாபன பதவிக்கு காங்கிரசால் நிறுத்தப்படப் போகிறவர்களும் பெரும்பாலும் பழய ஆட்களாகத்தான் இருந்து வருகிறார்களே ஒழிய மற்றபடி புதிதாய் ''புடம் போட்டு சுத்தம் செய்யப்பட்டவர்கள் அல்ல.''

ஸ்தல ஸ்தாபன கட்டடங்கள், சிப்பந்திகள் ஆகியவர்களும் கக்கூஸ் எடுப்பவர்கள் முதல் கமிஷனர் வரை பழய ஆட்கள் தானே ஒழிய வேறில்லை.

ஸ்தல ஸ்தாபன சட்டமும், ஸ்தல ஸ்தாபன மந்திரியும், நிர்வாக அரசாங்கம் கவர்னர் முதலியனவர்களும் பழயவர்கள் தானே ஒழிய எதுவும் எந்த வண்ணானாலும் சலவை செய்யப்பட்டவைகள் அல்ல.

இந்த நிலையில் எந்த முறையில் எந்த ஆதாரத்தைக் கொண்டு காங்கிரஸ்காரர்கள் அதுவும் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து அடிபட்டு ஓடி வந்த தோழர்கள் சி.ஆர்.ரெட்டி, சக்கரை செட்டி போன்றவர்களாய் இருந்து வரும் காங்கிரஸ்காரர்கள் ஸ்தல ஸ்தாபனங்களைப் பரிசுத்தப்படுத்தப் போகிறார்கள் என்று கேட்கின்றோம். இவைகள் எல்லாம் ஒருபுறமிருக்கட்டும்.

இன்று இரண்டொரு இடங்களில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்களில் காங்கிரஸ்காரர்கள் என்னும் பெயரால் இரண்டொரு அங்கத்தினர்கள் இருந்து வருகிறார்கள் என்பது யாவரும் உணர்ந்ததாகும். ஆகவே அப்படிப்பட்ட அவர்களுடைய யோக்கியதைகள் இன்று எப்படி இருந்து வருகின்றது என்று பார்ப்போம்.

உதாரணமாக காங்கிரஸ்காரர் இருந்து வரும் சென்னை கோவை முதலிய நகரசபை ஸ்தாபனங்களை எடுத்துக் கொள்வோம்.

சென்னை நகரசபையிலுள்ள காங்கிரஸ்காரர்களில் மெஜாரிட்டி ஆட்கள் எப்படி ஜீவிக்கிறார்கள். அவர்கள் உள்ள கமிட்டிகளின் மூலம் அவர்களுக்கு வரும் வரும்படி எவ்வளவு? எந்தெந்த ஸ்டாண்டிங் கமிட்டியில் உள்ள காங்கிரஸ்காரர்களில் கண்ட்ராக்டர்கள் இடம் மாமூல் பெறாத கவுன்சிலர்களும், கண்ட்ராக்டில் பங்கு பெறாத கவுன்சிலர்களும் எத்தனை எத்தனை பேர்?

நகரசபைத் தலைவரிடத்தில் தினமானம், மாதமானம், வருஷமானம், சன்மானம் பெறாத அங்கத்தினர்கள் எவ்வளவு பேர்?

மற்றும் பொது ஜனங்களில் தனிப்பட்ட நபர்களின் சுயநலத்துக்காகக் கார்ப்பரேஷன் தீர்மானங்களை விற்று விலை பெறாதவர்கள் எத்தனை பேர்?



RangaRakes tamilnavarasam.com

மற்றும் கார்ப்பரேஷனில் உத்தியோகங்களுக்குத் தங்களுடைய பந்துக்கள், சினேகிதர்கள், பணம் கொடுத்தவர்கள் ஆகியவர்களை சிபார்சு செய்து அதற்காகத் தலைவருக்கும், கமிஷனருக்கும் அடிமையாகி பலனும் பதமும் பெறாதவர்கள் எத்தனை பேர்? என்பவைகளைப் பற்றி பாலன்ஸ் ஷீட் எடுத்தால் யார் மீதியாவார்கள் என்று கேட்கின்றோம்.

ஸ்தல ஸ்தாபனங்களில் உள்ள சில காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய ஜீவனோபாயத்துக்குச் சரியான கணக்கோ, யோக்கியமான மார்க்கமோ காட்ட முடியுமா என்று கேட்கின்றோம்.

இனி அடுத்தாப்போல், கோவை காங்கிரஸ் அங்கத்தினர்களில் சிலரை எடுத்துக் கொள்வோம். இவர்களில் கண்ட்ராக்டர்களிடம் பங்கு வாங்குவோர் எத்தனைபேர்? கண்ட்ராக்ட் வாங்கித் தருவதாய் சன்மானம் வாங்கியவர்கள் எத்தனை பேர்? உத்தியோகம் வாங்கித் தருவதாய் அட்வான்ஸ் வாங்கிக் கொண்டு உத்தியோகம் வாங்கித் தராமலும், அட்வான்சை திருப்பிக் கொடுக்காமலும் தெருவில் சிரிக்கப்படுபவர்கள் எத்தனை பேர்? உபாத்தியாயப் பெண்களிடத்தில் அயோக்கியத்தனமாய் நடந்து கொண்டு வெஞ்சாமரம் வீசப்பட்டவர்கள் எத்தனை பேர்? போக்குவரத்து இடத்தில் போக்கிரித்தனமாய் நடந்து மானங்கெட்டு மதிப்பிழந்து திரிபவர்கள் எத்தனை பேர்? தங்கள் இனத்தில் கமிஷனர்கள் வந்து விட்டார்கள் என்கின்ற சலுகையால் சிப்பந்திகளை மிரட்டி எச்சில் பொறுக்கினவர்கள் எத்தனை பேர்? தங்கள் இனக் கவுன்சிலர்களைத் தருவிக்க விஷமம் செய்தவர்கள் எத்தனை பேர்? இவற்றையெல்லாம் ஒரு தனிக் கமிட்டிப் போட்டு அதற்குக் காங்கிரஸ்காரர்களிலேயே மெஜாரிட்டி மெம்பர்கள் நியமித்து ஒரு வெளிப்படையான விசாரணை வைத்து அறிக்கை வெளியிட காங்கிரஸ்காரர்களுக்குத் தைரியமிருந்தால் இன்னும் அனேக விஷயம் வெளியாகுமென்றே உறுதியாய்ச் சொல்லுவோம்.

சென்னைக் கார்ப்பரேஷன் தலைவர் குமாரராஜா ஆவார். அவருடைய பிரதம சிஷ்யர்கள் அல்லாவிட்டாலும் நண்பராகவாவது மதிக்கப்பட வேண்டியவர்கள் தோழர்கள் தாமோதரம் நாயுடு, சக்கரை செட்டியார் போன்றவர்கள். தலைவர்களுட்பட இவர்கள் இதுவரை ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தவர்கள். ஆகவே சென்னைக் கார்ப்பரேஷனைப் புனிதப்படுத்த இந்த நபர்களையே காங்கிரசில் சேர்த்துக் கொண்டு அவர்களையே பழயபடியே தலைவராகவும், அங்கத்தினர்களாகவும் வைத்துக் கொண்டு நிர்வாகம் நடத்தினால் ''நாணயக் குறைவாய்'', ''நேர்மை அற்றதாய்'' இருந்து வந்த சென்னைக் கார்ப்பரேஷன் எப்படி புனிதத் தன்மை அடைந்துவிடும் என்று கேட்கின்றோம்.

ஆகவே இன்று காங்கிரஸ்காரர்கள் ஸ்தல ஸ்தாபனங்களைப் பரிசுத்தப்படுத்துகிறோம் என்று சொல்லுவது முதல் நெம்பர் வடிகட்டின அயோக்கியத்தனமானதும் இன்று ஆதிக்கத்திலிருப்பவர்களைத் தங்கள் அடிமைகளாக்கிப் பார்ப்பன ஆதிக்கத்துக்கு மார்க்கம் செய்து கொள்ளலாம் என்கின்ற சூட்சித்தனமானதுமான காரியமே ஒழிய வேறில்லை.

மற்றும் யார் நிற்பதானாலும் சரி, காங்கிரசின் பேரால் நிற்பதாய் ஒப்புக் கொண்டு காங்கிரசுக்கு 100 ரூபாயோ 200 ரூபாயோ கொடுத்துவிட்டால் அவர்களுக்குப் போட்டி போடாமல் விட்டுவிடுகிறோம் என்று சொல்லி மிரட்டி பணம் பறிப்பது ஒரு வழிப்பறிக் கொள்ளைக்கு ஒப்பான போக்கடாத்தனமே தவிர வேறில்லை.

ஆகவே காங்கிரசின் பேரால் எவ்வளவு கேவலமான காரியம் நடப்பதானாலும் தேர்தல்களின் பேரால் தேர்தலுக்கு நிற்பவர்கள் தங்களுக்கு எப்படியாவது ஸ்தானம் கிடைத்தால் போதும் என்று எவ்வளவு கீழ்மையாய் நடந்து கொள்வதானாலும் ஓட்டர்கள் தங்களுக்குச் சிறிதாவது புத்தி இருந்தால் காங்கிரஸ் பித்தலாட்டங்களுக்கும் இப்படிப்பட்ட வழிப்பறிக் கொள்ளைக்கும் இடம் கொடுக்காமல் தங்கள் சொந்தப் புத்திப்படி சுயமரியாதையுடன் நடந்து கொள்வார்களாக.

**குடி அரசு - தலையங்கம் - 22.09.1935**


RangaRakes
tamilnavarasam.com

# சிவில் ஜெயில்

கடன்காரர்கள் கடன் கட்ட முடியாமல் போவதற்கு ஆக அவர்களைச் சிறைப்படுத்துவது என்னும் வழக்கம் காட்டுமிராண்டித்தனமானது என்றும் அது ஒழிக்கப்பட்டு விடவேண்டும் என்றும் பல தடவை எழுதியும், பேசியும் வந்திருக்கிறோம்.

சிவில் ஜெயில் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்கு ஆகவே தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்களும் முக்கியமாய் தான் சிவில் ஜெயில் செல்வதாய்ச் சொல்லி வேலூர் சிவில் ஜெயிலுக்குச் சென்று சில காலம் ஜெயிலில் இருந்துவிட்டும் வந்தார். (அக்கடன் பிறகு தீர்க்கப்பட்டு விட்டது)

ஒரு மனிதன் கடன்காரனாகிவிட்டால் அதனால் அவனுக்கு ஏற்படும் கஷ்டங்கள் தவிர அவனைக் குற்றவாளிபோல் மதித்துச் சிறையில் அடைத்து வைப்பது என்பது முதலாளித்துவத்துக்கு அனுகூலமான காரியமே ஒழிய, சாதாரண ஜனங்கள், ஏழைகள் ஆகியவர்களுக்கு சிறிதும் அனுகூலமான காரியமாகாது.

ஒரு நாணையமான - யோக்கியமான - சத்தியவானான மனிதன் கடன்காரனாகிவிடலாம். கடன்காரனாவதற்கு துஷ்டத்தனமோ குற்றமானதனமோ எதுவும் வேண்டியதில்லை. மேலும் ஒருவன் கெட்டவனாகவோ, அயோக்கியனாகவோ இல்லாமலிருப்பதற்கு ஆகவே கடன்காரன் ஆனாலும் ஆகலாம். ஏனெனில் பணக்காரர்கள், பணம் சம்பாதிப்பவர்கள், பணம் சம்பாதித்து லேவாதேவி செய்பவர்கள் ஆகியவர்களது நடத்தையும் நாணயத்தையும், குணத்தையும் பார்த்தால் 100க்கு 99 கடன்காரர்கள் யோக்கியர்களாக இருந்ததால்தான் கடன்காரர்களாக வேண்டியவர்களானார்கள் என்று கருத வேண்டி இருக்கிறது.

ஆகவே அப்படிப்பட்டவர்களைச் சிறையில் வைத்து கஷ்டப்படுத்தி அவர்களுக்கு அவமானம் உண்டாக்குவதோடு அவர்களது பெண்டு பிள்ளைகளையும் பரிதபிக்கச் செய்வது என்றால் அதை எந்தக் காட்டுராஜா ஆட்சி மக்களும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

அதனாலேயே மேல்நாடுகளில் அனேக ராஜ்ஜியங்களில் இம்முறை எடுக்கப்பட்டு விட்டது. நம் நாட்டிலும் பல அறிஞர்கள் இந்த முறையை ஆக்ஷேபித்துக் கண்டித்து வந்திருக்கிறார்கள்.



அதோடு நமது அரசாங்க ஆட்சிக்கும் இது ஒரு பெரிய மாசாக இருந்து வந்ததாக அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

ஆகவே அப்படிப்பட்ட காரியமானது இப்போது அடியோடு ஒழிக்கப்பட நமது அரசாங்கத்தாரால் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு அது இன்று செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் இந்திய சட்டசபைக்கு வந்து நிறைவேற்றப்பட்டு சட்டமாகலாம் என்கின்ற நம்பிக்கை இருந்து வருகின்றது.

வெகுகாலத்துக்கு முன்பாகவே இச்சட்டம் வந்திருக்குமானாலும் பொதுஜன அபிப்பிராயம் மாகாண அரசாங்க அபிப்பிராயம் ஆகியவை தெரிய வேண்டும் என்கின்ற காரணத்துக்காக இரண்டு வருஷ காலமாய் தவக்கத்தில் இருந்து வந்து இப்போது சட்டசபைக்கு வருகிறது.

இதில் ஒரு விஷயம் நாம் இப்போது தெரிவித்து விடுகிறோம். அதாவது இன்று இந்திய சட்டசபையில் உள்ள சட்டசபை அங்கத்தினர்கள் பலர் பணக்காரர்களாகவும், பலர் பணக்காரர்கள் கூலிகளாகவும், ஏஜண்டுகளாகவும் இருக்கிறார்கள்.

ஏனென்றால் 20 ஆயிரம், 30 ஆயிரம் செலவு செய்தால்தான் இன்று எவரும் இந்திய சட்டசபைக்குப் போகலாம். பணம் இல்லாவிட்டால் வேறு எந்தப் பணக்காரனாவது பணமும் மோட்டார் காரும், பெட்றோல் எண்ணையும் கொடுத்துத் தன்னுடைய கூலிகளை விட்டு ஓட்டு வாங்கிக் கொடுத்தால் தான் சட்டசபைக்குப் போகலாம். இரண்டும் இல்லாத ஒரு சுதந்திரவாதி சட்டசபைக்குப் போவது என்பது மோக்ஷலோகத்துக்குப் போவது என்பது எப்படியோ அதுபோல்தான். ஆகவே அப்படிப்பட்ட பணக்காரர்களாயும், அவர்களுடைய கூலிகளாயும் உள்ளவர்கள் பலர் இருந்தால் சட்டசபையில் நல்ல முறையில் சூட்சி இல்லாமல் இச்சட்டம் நிறைவேறுமா என்று பயப்பட வேண்டியிருக்கிறது என்பதைச் சொல்லி விடுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 22.09.1935**



RangaRakes tamilnavarasam.com

### ஈரோடு

# வெங்கிட நாயக்கர்

## வைத்தியசாலைத் திறப்பு விழா

எங்களது தகப்பனார் பேரால் இந்த வைத்தியசாலை ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று இப்பொழுதுதான் நாங்கள் வெளிப்படையாய் காரியங்கள் செய்தபோதிலும், வெகு காலமாகவே எங்கள் வீட்டில் ஒரு அளவுக்கு பொதுஜனங்களுக்கு வைத்திய வசதி செய்து வரப்பட்டிருக்கிறது.

எனது தமையனார் அவர்களுக்கும் வைத்தியத்தில் 20, 30 வருஷ மாகவே அனுபவமுண்டு. அனேக நல்ல மருந்துகள் செய்யும் முறைகளும் பிரயோசிக்கும் முறைகளும் தெரியும். அனேக மருந்துகள் செய்யப்பட்டு இப்போதும் தயாராக இருக்கிறது.

இருந்தபோதிலும் இந்த வைத்தியசாலையானது எங்களுடைய முயற்சி யிலேயே நன்றாக நடைபெறுமென்று நாங்கள் கருதி இதைத் தொடங்கவில்லை.

இதற்குப் பொதுஜனங்கள் ஆதரவு பெரிதும் வேண்டும். அதற்காகவே தான் உங்களையெல்லாம் நாங்கள் வரவேண்டுமென்று கோரினதும், நிலம்பூர் ராஜா அவர்களை இந்த வைத்தியசாலையைத் திறந்து வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதே ஒழிய விளம்பரத்திற்காக அல்ல என்று வணக்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன்.

பெரியோர்கள் ஆசீர்வாதம் என்பதில் எனக்கு எப்பொழுதும் நம்பிக்கை கிடையாது. அவர்கள் ஆதரவு பெற வேண்டுமென்பதற்கு அவர்களுடைய ஆசி கூறப்பெறுவது என்பது ஒரு மார்க்கம் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

ஏனென்றால் பெரியோர்களால் வாழ்த்துப்பெற்றுவிட்டால் பிறகு அது நன்றாக நடைபெறவேண்டுமென்றும், அதற்கு ஏதாவது கஷ்டம் வந்த காலத்தில் உதவ வேண்டுமென்றும் கவலை கொண்டு முன் வருவது உண்மையான பெரியோர்களுடைய இயல்பாகும்.

ஏனெனில் தங்கள் வாக்கு வீணாகக்கூடாதென்பதும்; தாங்கள் வாழ்த்து பொய்த்துப் போகக்கூடாதென்றும் கவலைப்படுவார்கள்.

ஆகையினாலேயே உங்களுடைய வாழ்த்துப் பெற்ற இந்த தர்ம வைத்தியசாலையின் பிற்கால வாழ்வில் நம்பிக்கை இருக்கிறது.



ஸ்தாபனங்கள் ஏற்படுவதும், மறைந்து போவதும் இயற்கை. ஆகையால் நாம் நம்முடைய ஆசையை ஆதாரமாக வைத்தும் உண்மையான முயற்சியைக்கொண்டும் அவனவனுக்கு நல்லதென்றும், அவசியமென்றும் தோன்றியதைச் செய்து விடவேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீதே இதை ஆரம்பித்திருக்கிறோம்.

நாட்டு வைத்தியத்திற்கு நமது நாட்டில் செல்வாக்கில்லை.

நாட்டு வைத்தியத்திற்கு அறிவாளிகளென்ற மக்களிடம் நம்பிக்கையு மில்லை. ஆனால், இதுவரையில் இங்கு நடந்த உபன்யாசங்களில் நாட்டு வைத்தியத்தைப்பற்றி வெகு பிரமாதமாகப் பேசப்பட்டிருக்கிறது.

அப்பெருமைகள் சாஸ்திரங்களிலோ, புஸ்தகங்களிலோ இருக்கலாம். உண்மையாகவும் இருக்கலாம். ஆனால், அனுபவத்தையும், பலனையும் கொண்டு மதிக்கும்போது அப்படிச் சொல்லமுடியவில்லை.

நாட்டு வைத்தியத்திற்கு செல்வாக்கில்லாமல் போனது மேல்நாட்டு வைத்தியத்திற்கு அதிக செல்வாக்கு இருப்பதும் அரசாங்கத்தின் பயனாக இருக்கலாம். ஆனபோதிலும் அரசாங்கத்தார் சமீப காலமாக நாட்டு வைத்தியங் களுக்கு செல்வாக்கு ஏற்படவும் அதனால் மக்கள் பயனடையவும் முயற்சித்து வருகிறார்கள் என்றே சொல்லவேண்டும்.

என்னைப் பொறுத்த வரையில் எந்த வைத்தியமானாலும் ஜனங் களுடைய கஷ்டத்தையும், நோயையும் தீர்க்க வேண்டுமென்பதுதான் எனது ஆசை என்றாலும் எனக்கு மேல் நாட்டு வைத்தியத்தில்தான் அதிக நம்பிக்கை. ஆனால் அது பொது ஜனங்களுக்கு சரியானபடி பயன்படுவதில்லை.

பொது ஜனங்களுடைய வரிப்பணத்தினாலேயே மேல்நாட்டு வைத்தியம் இந்நாட்டில் நடந்து வருகிறதென்றாலும் சராசரி நூற்றுக்கு 10 நோயாளிக்குக்கூட மேல்நாட்டு வைத்தியம் கிடைப்பதில்லை என்பதோடு, அதிலும் செல்வவான்களுக்குத்தான் அது கிடைக்கக்கூடியதாக இருக்கிறதே ஒழிய பாமர மக்களுக்கு கஷ்ட சாத்தியமாக இருக்கிறது.

வைத்தியம் என்பது வைத்தியர்களாலேயேதான் செய்துகொள்ளப்பட வேண்டியது என்பதில்லாமலும் பணச் செலவில் தான் பரிகாரம்செய்து கொள்ளலாம் என்பதில்லாமலும் வைத்தியமே அவசியம் தேவை என்பது கூட இல்லாமலும் இருக்கும்படியான காரியங்களைச் செய்யவேண்டியதும், அதற்குத்தக்கபடி மக்களைப் படிப்பிக்க வேண்டியதும் அரசாங்கத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

ஆனால் பல காரணங்களால் அரசாங்கம் இதை முக்கியமாய் கொள்வதற்கு இல்லாமல் போய்விட்டதால், பொது ஜனங்களில் பொது ஜனங்கள் நன்மைக்கு உழைப்பவர்களாவது இதை ஒவ்வொருவரும் மேற்போட்டுக்கொண்டால் மிக நன்மை பயக்கும்.



RangaRakes tamilnavarasam.com

அதனாலேயே நமக்குச் சக்தியிருக்கிறதோ இல்லையோ என்பதைக் கவனிக்காமலும் நம்மால் கடைசி வரை கொண்டு செலுத்தமுடியுமோ, முடியாதோ என்று முடிவு கட்டாமலும் இவ்வளவு பெரிய காரியத்தை துவக்கி விட்டோம்.

நமது ஊர் முனிசிபல் சேர்மன், கமிஷனர் ஆகியவர்கள் அனேகமாக வைத்தியசாலைக்கே வேலையில்லாமல் செய்யக் கூடிய அளவுக்குப் பொது சுகாதாரத்தையும், அது சம்மந்தமாக ஜனங்களுடைய தேவைகளையும் கவனித்து வருகிறார்கள். ஆதலால் இது விஷயத்தில் வைத்தியசாலைக்கு அதிக பாரமேற்படுமே என்று நாங்கள் கவலைப்படவில்லை. ஆகவே நாங்கள் நிலம்பூர் மகாராஜா அவர்களை இந்த வைத்திய சாலையை துவக்கு விழா செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு: *14.09.1935 ஆம் நாள் நடைபெற்ற ஈரோடு வெங்கிட நாயக்கர் தர்ம வைத்தியசாலைத் திறப்பு விழாவில் (42, ஈரோடு கச்சேரி வீதி) நிலம்பூர் அரசர் (சீனியர்) அவர்களை வைத்தியச் சாலையை திறந்து வைக்க அழைத்த போது ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 22.09.1935**



# ஈரோடு பெற்றோர் சங்கம்

## கமிஷனருக்குப் பாராட்டு

தலைவர் அவர்களே! தோழர்களே!!

இன்று இங்கு கூடியிருக்கும் கூட்டம் நம் நகரை விட்டுப் போகும் கமிஷனரைப் பாராட்டுவதற்காகக் கூடியிருக்கும் கூட்டமாகும். இதுவரை பல கூட்டங்களில் அவரைப் பாராட்டிப் பேசப்பட்டுவிட்டது. இன்று கமிஷனர் நம் முன் அவர் செய்த வேலைகளையும், செய்யவிருந்த வேலைகளைப் பற்றியும் பேசினார்.

இங்கு பேசிய பலர் கமிஷனர் வந்து பல காரியங்கள் செய்துவிட்டார் என்று புகழ்ந்து பேசினார்கள்.

ஆனால் கமிஷனர் வந்தபின்தான் இந்த வேலைகள் செய்ய முடிந்தது என்றால் சேர்மனும், கௌன்சிலர்களும் இதுவரை தூங்கினார்களா என்று நீங்கள் நினைக்க வேண்டாம்.

இம்மாதிரி வேலைகள் கமிஷனர்களால்தான் முடியும். கடைவீதி கமிஷனர் வந்தவுடன்தான் அகலமாகவிருக்கிறது என்று ஒரு நண்பர் பேசினார்.

கடைவீதி அகலம் செய்யும் விஷயம் சேர்மனோ, கவுன்சிலர்களோ செய்தால், செய்ய முயற்சித்தால் அடிவிழுகும். ஏனெனில் கடைவீதியில் பாதிக் கடைகள் கௌன்சிலர்கள் கடைகள். கடைவீதியில் பழக்கடை வைத்திருந்ததை எடுப்பதற்கு கமிஷனர் பட்ட கஷ்டங்கள் சொல்ல முடியாது. அதற்காக அவரை இரவில் அடிப்பதற்குக்கூட முயற்சித்தார்கள். அவர் அதை லக்ஷியம் செய்யவில்லை. இம்மாதிரி ஆபீசர்களால்தான் இம்மாதிரி வேலைகள் செய்ய முடியும். ஏனெனில் கமிஷனர்களெல்லாம் ஊழியர்கள். சேர்மன், கௌன்சிலர்கள், பிரதிநிதிகள். ஊழியர்களால்தான் தைரியமாகவும், தாட்க்ஷண்யமில்லாமலும் செய்ய முடியும். பிரதிநிதிகள் அவ்விதம் செய்ய முடியாது. ஏனெனில் அவர்கள் நாளைக்கு ஓட்டுக்குப் போக வேண்டும்.

புருஷோத்தம் அவர்கள் ஒரு நல்ல ஊழியர். நான் ஏன் அவரை ஊழியர் என்று கூறுகிறேன் என்றால் அவர் தன்னை ஒரு ஊழியர் என்றே கூறிக் கொள்ளுவார்.

அவர் காரியம் சாதிப்பதற்குக் கெஞ்ச வேண்டிய இடத்தில் கெஞ்சி தம் காரியத்தைச் சாதிப்பார்.

இவர் பல குழந்தைகளை விட்டுச் செல்வதாகச் சொன்னார்கள்.



RangaRakes tamilnavarasam.com

லெஜிட்டிமேட் குழந்தைகள் அதுபோகத் தனக்கு சம்மந்தமில்லாத (இன்லெஜிட்டிமேட்) பல குழந்தைகளை விட்டுச் செல்லுகிறார் என்று நான் கூறுகிறேன்.

ஆனால் இவர் வந்தபின் ஒரு நல்ல காரியம் நடந்திருக்கிறது. அதாவது ஆப்பீசர்களும், பொது ஜனங்களும் ஒன்று சேர்ந்து விஷயங்களை உணர்ந்து கொள்ளும்படி செய்தார்.

அவர் இவ்வூரை விட்டுப் போவதால் அவர் செய்துவிட்டுப் பாக்கி விட்டிருக்கும் வேலைகள் நின்று விடாது. இவைகள் யாவும் இது சமயம் நமது ஊருக்கு வந்திருக்கும் புதுக் கமிஷனர் செய்வார் என்று நான் நம்புகிறேன்.

தோழர் புருஷோத்தம் அவர்கள் போகப் போகும் இடம், தகராறுகள் இருக்கும் இடம், முனிசிபாலிட்டியைக் கலைத்துவிட யோசித்துக் கொண்டிருக்கும் இடம். அம்மாதிரி இடத்திற்குப் போய்த்தான் அங்கு சமாதானம் செய்து இம்மாதிரி வேலைகள் செய்ய வேண்டும். ஆகையால் இவர் அங்கு அவசியம் போக வேண்டும். இவர் போனால் சமாதானம் செய்து நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

இவர் போவதால் நம் முனிசிபாலிட்டியைக் கலைத்து விடுவார்களென்று நீங்கள் நினைக்க வேண்டாம். நமது சேர்மன் இருக்கும்போது அம்மாதிரி ஒன்றும் நடைபெறாது.

நமது சேர்மனுக்கு வருகிற கலெக்டர்களை எல்லாம் சுவாதீனம் செய்து கொள்ளத் தெரியும். ஆகையால் நம் ஊருக்கு நன்மையான காரியத்தை செய்துவிட்டு மற்றொரு ஊருக்குப் போகும் கமிஷனரைப் பாராட்டி அனுப்ப வேண்டுகிறேன்.

[புதிதாக வந்திருக்கும் கமிஷனர் தோழர் ராமதாஸ் நாயுடு அவர்கள் எழுந்து தோழர் புருஷோத்தம் அவர்கள் செய்துவிட்டுப் போயிருக்கும் வேலைகளைத் தாம் செய்வதாகவும், அவர் செய்து வந்தது போலவே பொது ஜனங்களின் நன்மைக்கும் பாடுபடுவதாகவும் கூறினார்.]

*குறிப்பு: ஈரோடு முனிசிபல் பாடசாலையைச் சேர்ந்த பெற்றோர்கள் சங்க ஆதரவில் ஈரோடு கமிஷனர் திரு புருஷோத்தம் அவர்கள் திருநெல்வேலி கமிஷனராக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் கமிஷனரைப் பாராட்டி ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 29.09.1935**



# சீட்டாட்டத்தின் தீமைகள்

**- உண்மை விளம்பி**

முன்பு ஒரு தடவை சீட்டாட்டத்தின் ஒரு பகுதியைப் பற்றி ஆடி மீ 6-ந் தேதி 'குடி அரசில்' வெளியாயிருப்பது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்! ஆனால் இப்பொழுது மேற்படி விளையாட்டினால் ஏற்படும் மிக முக்கியமான கெடுதல்களைப் பற்றிக் கூறுவோம். அக்கெடுதல்கள் என்னவென்றால் ஃ-

1. பொருள் நஷ்டம் ஏற்படுகிறது.
2. தேக ஆரோக்கியத்திற்குக் கெடுதலாயிருக்கிறது.
3. தன் மரியாதையை இழக்க நேருகிறது.

ஆகையால் இம்மூன்று அதி முக்கியமான தீமைகளையும் தெளிவாய் உலகுக்கறிவிக்க வேண்டியது எனது கடமையாய் விட்டது.

சீட்டாடுவதால் பலவிதமான மார்க்கங்களில் பொருள் நஷ்டம் ஏற்படுகிறது. சீட்டாடும் செல்வச் சிகாமணிகள் பெட்டியில் பணமிருக்கிற வரையில் நோட்டு நோட்டாய் வெளியில் விடுவார்கள். பெட்டியிலுள்ள பணமும் எத்தனை நாட்களுக்குத்தான் வரும்! பணப் பெட்டியிலுள்ள கரன்ஸி நோட்டுகளும் ரொக்கம் சில்லரைகளும் சிறுகச் சிறுக வெளியே போய்க் கொண்டிருந்தால் - கொஞ்ச நாட்களுக்குள் பெட்டியும் காலியாய் விடுமென்பது திண்ணம். பிறகு பணத்திற்கு என்ன செய்வார்கள் என்றால் ஒன்று நான்காகப் பிராமிசரி நோட்டெழுதி ஸ்டாம்பில் கையொப்பமிட்டுக் கொடுத்துப் பணம் வாங்குவார்கள். ஒன்றுக்கு நான்காக எழுதிக் கொடுத்து வாங்குவது என்பது எப்படி என்றால், பணம் கொடுப்பவன் ரூபாய் 100 கொடுத்தால் 400 ரூபாய் பெற்றுக் கொண்டதாக எழுதிக் கொடுத்து பணம் வாங்கும் 'மடச் சாம்பிராணிகள்' இப்படி முட்டாள்தனமாய் எழுதிக் கொடுத்து பணம் வாங்குபவன் அதிக பணக்காரனாயிருந்தால்தான், இவ்வாறு எழுதி வாங்கிக் கொண்டு கொடுக்கும் 'ஊர் முதலடிக்கிற ஆசாமி'கள் பணம் கொடுப்பார்கள். இந்தப்படியாக எழுதிக் கொடுத்து வாங்கும் சமாச்சாரம் தகப்பனாருக்குத் தெரிந்தவுடன் தனக்கும், மகனுக்கும் சம்பந்தமில்லை என்றும், தன்னுடைய சொத்தில் பாத்தியதை இல்லை என்றும், தன்னுடைய மகன் தற்சமயம் கடன் வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட வேண்டியதில்லை என்றும் அப்படி யாராவது என்னுடைய மகனிடத்தில் நோட்டெழுதி வாங்கிக் கொண்டு கடன் கொடுத்திருந்தால் அவர்கள்



RangaRakes tamilnavarasam.com

என்னுடைய சொத்து முதலியவைகளின் மூலம் தொடரக் கூடாது என்றும் தினசரி, வாரப் பதிப்பு முதலிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்துவிட்டால் அநேகமாக யாரும் கடன் கொடுக்க மாட்டார்கள். ஆகையால் இப்பொழுது அதிகப் பந்தயங்கள் வைத்துச் சீட்டாடுவதற்கு வீட்டிலும் பணம் கிடைப்ப தில்லை. கடன் வாங்கவும் முடியாது என்றால் பணத்திற்கு என்ன செய்வார்கள் என்று வாசகர்கள் கேட்கலாம். அப்படிப்பட்டவர்கள் என்ன செய்வார்கள் என்றால், தான் போட்டிருக்கும் நகைகளையும், அல்லது மனைவியினுடைய தங்க வைர நகைகள் முதலியவற்றையும் ஈடு வைத்தாவது, அல்லது விற்றாவது பணத்தைச் சேகரித்துக் கொண்டு தினமும் சீட்டு விளையாடுவார்கள். இதை விடப் பொருள் நஷ்டமும், கேவலமும் என்ன வேண்டுமென்று கேட்கிறேன்?

தினசரியும் அதிக நேரம் உட்கார்ந்து கொண்டு சீட்டுப் போடுவதால் அனேக வியாதிகள் உண்டாகுமென்பது நிச்சயம். காரணம் என்னவென்றால் சீட்டாடும் பொழுது கூட்டமாயிருப்பதால் சுத்தமான காற்று முதலியவைகளைச் சுவாசிக்க முடியாது. விளையாடும் பொழுது சுருட்டு, சிகரெட் முதலியவைகளை அதிகமாய் உபயோகிப்பதால் ஹிருதயத்தில் கேட்டை விளைவிக்கிறது. வெகுநேரம் உட்கார்ந்து கொண்டே விளையாடுவதால் கை, கால், இடுப்பு முதலியவைகளில் மேல் வலி போன்ற வலிகள் நிச்சயமாய் ஏற்படுகின்றன. சரியான நேரங்களில் சாப்பிடாமல் சீட்டு விளையாடிக் கொண்டே இருந்துவிட்டு நேரங்கெட்டுச்சாப்பிடுவதாலும், விளையாடும் பொழுது கண்ட உணவுப் பொருள் களை எல்லாம் சாப்பிடுவதாலும் ஜீரணக் கருவி முதலியவைகளில் கோளாறுகள் ஏற்படுகிறது. ஜீரணமடையாமல் பல வியாதிகள் ஏற்பட ஏதுவாகிறது.

சீட்டாடும் மகான்கள் விளையாடும் பொழுது ஒருவருக்கொருவர் மரியாதை முதலியவைகள் இல்லாமலே பேசிக் கொள்வார்கள். சீட்டு விளையாடும் பொழுது தகரார் வந்துவிட்டால் ஒவ்வொருவரும் அவரவர்கள் இஷ்டப்படியே ஒரே சமயத்தில் பத்து வீடுகளுக்கு அப்பால் கேட்கும்படி இரைந்து பேசுவார்கள். இப்படிச் சீட்டாடும் சீமான்கள் போலீஸின் மூலம் கிரிமினல் குற்றத்திற்கு உட்பட்டு விட்டார்கள் ஆனால் தப்பித்துக் கொள்வதற்குப் பணத்தைப் பணமென்று பார்க்காமல் செலவழிப்பார்கள். மேலும் ஒவ்வொரு வாய்தாவிற்கும் தவறாமல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டிற்கு ஆஜராக வேண்டும். மாஜிஸ்டிரேட் எங்கெங்கு 'காம்'ப் போடுகிறாரோ அங்கங்கு ........ போல் அலைய வேண்டும். இப்படி அவமரியாதையுடனும், கஷ்டங்களுடன் ஏன் அப்படிச் சீட்டு விளையாட வேண்டுமென்று கேட்கிறேன்?

ஆகையால் இனிமேலாவது சீட்டாடாமலும் அப்படி விளையாடும் பொழுதைப் பத்திரிகைகள், புத்தகங்கள் படிப்பதின் மூலமாகவும், வீட்டுக் காரியங்களைக் கவனிப்பதின் மூலமாகவும், உலக முன்னேற்றத்திற்கும், மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பதற்கும் பாடுபடுமாறும் சீட்டாடும் இளைஞர்களையும் பெரியோர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

குடி அரசு - கட்டுரை - 29.09.1935



# காங்கிரஸ்காரனுக்கும் ஜஸ்டிஸ்காரனுக்கும் சம்பாஷணை

- சித்திரபுத்திரன்

**ஜஸ்டிஸ்காரன்:** காங்கிரஸ் தலைவர் ராஜேந்திரபிரசாத் அவர்கள் சென்னைக்கு வரும்போது அவருக்கு உபசாரப் பத்திரம் படிக்கக் கூடாது என்று சென்னைக் கார்ப்பரேஷன்காரர்கள் தீர்மானித்தார்கள் அல்லவா?

**காங்கிரஸ்காரர்கள்:** ஆம்;

**ஜ:** அப்படியானால் அத் தீர்மானத்திற்குச் சென்னைவாசிகள் காங்கிரசையும், காங்கிரஸ் தலைவரையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், மரியாதை செய்ய இஷ்டம் இல்லை என்றும் தானே அருத்தம்?

**கா:** அப்படி அருத்தமாகுமா? கார்ப்பரேஷன் மெஜாரிட்டி கவுன்சிலர்கள் ஜஸ்டிஸ் கட்சிக்காரராய் இருப்பதால் ஜஸ்டிஸ் கட்சிக்காரருக்கு காங்கிரஸ் தலைவருக்கு மரியாதை செய்ய இஷ்டமில்லை என்று தான் அருத்தம்.

**ஜ:** கார்ப்பரேஷனில் எந்தக் கட்சி மெஜாரிட்டியாய் இருந்தாலும் சரி, அவர்கள் செய்யும் தீர்மானம் கார்ப்பரேஷன் தீர்மானம் என்று தானே அருத்தம்?

**கா:** ஆம் அது சரிதான். இருந்தாலும் அது சென்னை வாசிகள் தீர்மானம் என்று சொல்ல முடியுமா? ஒரு நாளும் முடியாது.

**ஜ:** ஏன் அப்படிச் சொல்ல முடியாது. கார்ப்பரேஷனில் மெஜாரிட்டியாய் இருக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் சென்னை ஓட்டர்களால் தெரிந்தெடுக்கப் பட்டவர்கள் அல்லவா?

**கா:** ஆம்.

**ஜ:** அப்படியானால் அவர்களது அபிப்பிராயமும் அவர்களது முடிவும் பொதுஜன அபிப்பிராயம் என்றுதானே கொள்ள வேண்டும்?

**கா:** அப்படி ஒரு நாளும் சொல்ல முடியாது. எலக்ஷனில் ஒரு கட்சி ஜெயித்துவிட்டதாலேயே அது பொது ஜன அபிப்பிராயமாகிவிடுமா? அவர்கள் பொதுஜனப் பிரதிநிதிகள் ஆகிவிடுவார்களா?



RangaRakes tamilnavarasam.com

ஜ: பின்னை எலக்ஷன் என்றால் என்ன அருத்தம். மற்றப்படி யாரைத்தான் பொது ஜன பிரதிநிதி என்பது? பொதுஜன அபிப்பிராயம் தெரிவதற்கு என்னதான் வழி?

கா: எலக்ஷனில் ஜாதித் துவேஷம், வகுப்புத் துவேஷம் ஆகியவை களைக் கிளப்பி விட்டுப் பொய்யும் புளுகும் சொல்லி பணங்காசைக் கண்டபடி வாரி இரைத்து, ஓட்டு வாங்கி விட்டால் அது பொதுஜன அபிப்பிராயமாகிவிடுமா? கார்ப்பரேஷனில் காங்கிரஸ் தலைவருக்கு வரவேற்பு அளிக்காதது ஒரு நாளும் சென்னைவாசிகள் அபிப்பிராயமு மாகாது. கார்ப்பரேஷன் அபிப்பிராயமுமாகாது. அதை தேசத்துரோகிகள் அபிப்பிராயம் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஜ: அப்படியானால் பொதுஜனங்களின் ஓட்டையும், தேர்தலையும் பொது ஜனங்களின் சரியான அபிப்பிராயம் என்று ஒப்புக் கொள்ளுவதில்லை என்பதுதானே நீங்கள் பேசுவதின் அருத்தம்.

கா: மறுபடியும் உங்களுக்கு என்ன சந்தேகம்? காங்கிரஸ் தலைவருக்கு வரவேற்பு இல்லை என்று ஒரு கார்ப்பரேஷன் தீர்மானம் செய்து விட்டால் அதைப் பொதுஜன அபிப்பிராயம் என்று எப்படி ஐயா சொல்ல முடியும். இதுகூடவா உங்களுக்குத் தெரியாது?

ஜ: காங்கிரஸ் பிரசிடெண்டானாலும் சரி, வெஞ்சாமரம் பிரசிடெண்டா னாலும் சரி அதைப் பற்றி நான் உங்களைக் கேட்கவில்லை. சென்னைக் கார்ப்பரேஷன் என்று சொல்லும் சென்னை நகரப் பிரதிநிதிகளைக் கொண்ட சென்னை நகர பரிபாலன சபையார் அபிப்பிராயத்தை நீர் சென்னை மகாஜனங்களின் அபிப்பிராயம் என்று ஒப்புக் கொள்ளுகிறீரா இல்லையா?

கா: இதென்னையா கஷ்டமாய் இருக்கிறது. எலக்ஷன்களையே முதலாவது யோக்கியமானது என்று சொல்ல முடியவில்லை. அதிலும் ஜஸ்டிஸ் கட்சி மெஜாரிட்டி கொண்ட கார்ப்பரேஷனை எப்படி ஜனப் பிரதிநிதித்துவமானது என்று நான் ஒப்புக் கொள்ள முடியும்?

ஜ: மறுபடியும் வழ வழ என்று பேசாதேயும். ஜனங்களின் ஓட்டுப் பெற்ற நகர பரிபாலன சபை அங்கத்தினர்கள் தீர்மானத்தைப் பொதுஜன அபிப்பிராயம் என்று ஒப்புக் கொள்ளுகிறீரா இல்லையா? இரண்டிலொன்று சொல்லும். காந்தியார் போல் வழ வழ என்று திருகணி பீரங்கி மாதிரி பேசாதேயும்.

கா: சரி ஒரே வார்த்தையில் சொல்லி விடுகிறேன். அது பொது ஜன அபிப்பிராயமாகாது. ஒரு நாளும் ஆகாது. அவ்வளவுதான்.

ஜ: எது?

கா: கார்ப்பரேஷன் அபிப்பிராயம்.

ஜ: சரி அந்த கார்ப்பரேஷன் அங்கத்தினர்கள் பொது ஜனங்கள் பிரதிநிதிகளா அல்லவா?

கா: ஒரு நாளும் அவர்கள் பொதுஜனப் பிரதிநிதிகள் ஆக மாட்டார்கள்.



ஜ: நிரம்பச் சந்தோஷம். நீர் மிகவும் நல்ல பிள்ளை. இதை நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும். இப்பொழுது நீர் என்ன சொல்லி இருக்கிறீர்? கார்ப்பரேஷன் தீர்மானம் பொது ஜனத் தீர்மானம் அல்ல வென்றும், சென்னைப் பொதுஜன ஓட்டுப் பெற்ற கார்ப்பரேஷன் கவுன்சிலர்களைப் பொதுஜன பிரதிநிதிகள் அல்ல வென்றும் சொல்லி இருக்கிறீர்.

கா: ஆம், ஆம். காங்கிரஸ் தலைவருக்கு.......

ஜ: அதெல்லாம் ஒன்றும் பேசாதீர். நான் உம்மை இப்பொழுது ஒரு குறிப்பிட்ட ஆள்களைப் பற்றியோ குறிப்பிட்ட செய்கையைப் பற்றியோ கேட்கவில்லை தெரியுமா?

கா: சரி, சரி. கார்ப்பரேஷன் தீர்மானம் பொது ஜன அபிப்பிராயமாகாது தான். அந்த கவுன்சிலர்களும் பொதுஜன பிரதிநிதிகள் அல்லத்தான்.

ஜ: நிரம்ப சந்தோஷம். மற்றொரு கேள்வி கேட்கிறேன். தயவு செய்து பதில் சொல்லுகிறீர்களா?

கா: கேளுமே. பேஷாய்ச் சொல்லுகிறேன். எப்படிப்பட்ட சூஸ்திரக் கேள்வி என்று பார்ப்போம்.

ஜ: ஒன்றும் சூஸ்திரக் கேள்வி இல்லை. சாதாரணக் கேள்வி தான்.

கா: எப்படி இருந்தாலும் கேளும்.

ஜ: நேற்று தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் சென்னை நகர மகா ஜனங்களால் இந்திய சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டாரல்லவா? அவர், கார்ப்பரேஷனுக்கு ஜஸ்டிஸ் கக்ஷி அங்கத்தினர்களை யார் தெரிந்தெடுத் தார்களோ அந்த ஓட்டர்களைக் கொண்டு தானே தெரிந்தெடுக்கப்பட்டார்?

கா: இருக்கலாம்.

ஜ: இருக்கலாம் என்ன? வருக்கலாம் என்ன? அப்படித்தானா அல்லவா? இரண்டில் ஒன்று வேண்டும்; இந்தக் காந்தி பாஷை உதவாது என்று முன்னமே சொன்னேன்.

கா: சரி அப்படியேதான் வைத்துக் கொள்ளுமே?

ஜ: அதெல்லாம் முடியாது. தோழர் சத்தியமூர்த்தியார் கார்ப்பரேஷன் ஜஸ்டிஸ் கக்ஷி அங்கத்தினர்களைத் தெரிந்தெடுத்த ஓட்டர்களால் தானே இந்திய சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டார்? ஆமாம் இல்லை என்று இரண்டில் ஒரு பதில்.

கா: ஆமாம். அப்புறம் என்ன சொல்லும் பார்ப்போம்.

ஜ: அப்படியானால் தோழர் சத்தியமூர்த்தி பொதுஜனப் பிரதிநிதியா? அவரைத் தெரிந்தெடுத்த ஓட்டர்கள் பொதுஜனங்களா? என்பதுதான் எனது அடுத்த கேள்வி?



RangaRakes tamilnavarasam.com

**கா:** இதற்கு என்ன சந்தேகம்? ஓட்டர்கள் பொது ஜனங்கள் தான். அவர்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் பொதுஜனப் பிரதிநிதிகள் தான். அதனால் தான் 5000, 10000 ரூபாய்கள் செலவு செய்தாவது தேர்தலில் வெற்றி பெற்றுப் பொது ஜனப் பிரதிநிதியாக ஆக வேண்டும் என்று ஒவ்வொரு பொதுநல சேவைக்காரரும் முயற்சித்து சட்டசபைக்குப் போவது. இது கூடவா உமக்குத் தெரியாது.

**ஜ:** சரி தெரிந்து கொண்டேன். தோழர் சத்தியமூர்த்தியார் கார்ப்பரேஷனில் கவுன்சிலராய் இருக்கிறார் அல்லவா?

**கா:** ஆம்.

**ஜ:** அவர் பொதுஜனப் பிரதிநிதி தானே?

**கா:** ஆம்.

**ஜ:** அவரைத் தெரிந்தெடுத்தவர்கள் பொது ஜனங்கள் தானே?

**கா:** ஆம்.

**ஜ:** தோழர் சத்தியமூர்த்தி அய்யரும் தேர்தலுக்குப் பணம் செலவழித்தவர் தானே?

**கா:** ஏதோ கொஞ்சம் செலவழித்திருக்கலாம்.

**ஜ:** மறுபடியும் வழவழப் பேச்சு வேண்டாம். எலக்ஷனுக்குச் சத்தியமூர்த்தி அய்யரும் பணம் செலவழித்தவர் தானே?

**கா:** ஆம்.

**ஜ:** எலக்ஷனுக்காகச் சத்தியமூர்த்தி அய்யரும் பிரசாரம் செய்தவர் தானே?

**கா:** ஆம்.

**ஜ:** அப்பிரசாரத்தில் ஜஸ்டிஸ் கட்சி மீது குற்றம் குறைகள் சொல்லிப் பொது ஜனங்களுக்கு துவேஷம் வெறுப்புக் கிளம்பும்படியாகவும் பிரசாரம் செய்து தானே?

**கா:** துவேஷம் வெறுப்பு ஏற்படும்படியாக அல்ல, உண்மையைச் சொல்லித்தான் பிரசாரம் செய்தது.

**ஜ:** உண்மையோ பொய்யோ அதைப்பற்றி கவலையில்லை. அதை உண்மையென்றும் பொய்யென்றும் தீர்மானிக்க நீரும் சத்தியமூர்த்தியுமே ஜட்ஜிகள் அல்ல. சத்தியமூர்த்தி ஜஸ்டிஸ் கட்சியார் மீது குற்றம் சொல்லிப் பிரசாரம் செய்ததில் ஜஸ்டிஸ் கட்சி மீது ஜனங்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுத்தானே சத்தியமூர்த்திக்கு ஓட்டுக் கிடைத்தது.

**கா:** ஆம்.



**ஜ:** ஆகவே ஜஸ்டிஸ் கட்சியார் கார்ப்பரேஷனுக்கு கவுன்சிலர்கள் ஆவதற்கு எப்படி எப்படி நடந்து யார் யார் ஓட்டுப் பெற்று கவுன்சிலர்கள் ஆனார்களோ அதுபோல் தானே சத்தியமூர்த்தியும் மற்ற காங்கிரஸ்காரரும் நடந்து ஓட்டுப் பெற்றிருக்கிறார்கள்?

**கா:** சரி.

**ஜ:** ஆம், அல்ல என்று இரண்டில் ஒன்று சொல்லும்.

**கா:** ஆம்.

**ஜ:** அதே சென்னைக் கார்ப்பரேஷனானது, ''காங்கிரஸ் தலைவருக்கு வரவேற்புக் கொடுக்க வேண்டும்'' என்று காங்கிரஸ்காரர்கள் ஓட்டால் ஒரு தீர்மானம் நிறைவேறி இருந்தால் அதை பொதுஜனத் தீர்மானம் என்று சொல்லுவீரா அல்லது ''பொதுஜனங்களிடம் பொய்யும் புளுகும் ஜஸ்டிஸ் கட்சி மீது துவேஷம் உண்டாகும்படியும் விஷமப் பிரசாரம் செய்து ஏராளமான பணத்தைக் கொடுத்து ஓட்டு வாங்கின காங்கிரஸ்காரர் தீர்மானம்'' என்று சொல்லுவீரா? அல்லது ''சென்னை நகர வாசிகளான பொது ஜனங்களுடைய அபிப்பிராயம்'' என்று சொல்லுவீரா? இப்பொழுது இரண்டிலொரு பதில் சொல்லும் பார்ப்போம். உம்முடைய நடுநிலைமை - நேர்மை யோக்கியதையை.

**கா:** என்ன சார் இப்படிச் சொல்லுகிறீர். காங்கிரஸ் அபிப்பிராயம் தானே பொது ஜன அபிப்பிராயம்?

**ஜ:** நான் உம்மைக் கேட்கிறேன். என்ன சார் இப்படிச் சொல்லுகிறீர்கள். பொது ஜன அபிப்பிராயம் தானே ஜஸ்டிஸ் கட்சி அபிப்பிராயம்?

**கா:** சரி நமக்குள் தகராறு எதற்கு ஆக? எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும்.

**ஜ:** முடியவே முடியாது. காங்கிரஸ்காரருக்குச் சிறிதளவாவது மானம், வெட்கம், சுயமரியாதை இருக்குமானால் அழையா வீட்டுக்கு நுழையா விருந்தாளிபோல் யோக்கியமாய் நடந்து கொள்ள வேண்டும். காங்கிரஸ் தலைவரைச் சென்னை ஜனங்கள், சென்னைப் பொது ஜனங்கள் வர வேண்டாம், திரும்பிப் போ என்று சொல்லி விட்டார்கள். ஆகையால் அவரை நீங்கள் சென்னை நகருக்குள் அழைத்து வரக்கூடாது. காங்கிரசுக்கும், காங்கிரஸ் தலைவருக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும், சுயமரியாதை இருக்கிறதா இல்லையா என்பதை இதில் முடிவு கட்டிவிட வேண்டும்.

மானம் வெட்கம் இல்லாமல் பொது ஜனங்களுக்கு இஷ்டமில்லாத காங்கிரஸ் தலைவரை சென்னை நகருக்குள் அழைத்து வருவதால் நாங்கள் 1000 ஆயிரம் கருப்புக் கொடி பிடிப்போம்.



RangaRakes tamilnavarasam.com

நீங்கள் வெளியில் வைத்துச் சாப்பாடு போட்டீர்களே தோழர் சன்னியாசிக்கு அந்த சன்னியாசியின் சகோதரர்களே 1000 பேர் கருப்புக் கொடி பிடிப்பார்கள். உங்கள் சூழ்ச்சி ஒன்றும் அன்று பலிக்கப் போவதில்லை.

வேண்டுமானால் இன்னம் 1000 தடவை ஜஸ்டிஸ் கக்ஷி தேசத் துரோகக் கக்ஷியென்றும் பொப்பிலி ராஜா ராக்ஷதன் என்றும் எழுதி எழுதிக் கத்தை கட்டிக் கொள்ளுங்கள். எனக்கு அதைப் பற்றி அக்கரை இல்லை.

**கா:** ஏன் இப்படிக் கோபித்துக் கொள்ளுகிறீர்கள். அபிப்பிராய பேதம் மனிதர்களுக்கு இயற்கை தானே?

அதற்காகப் பெரியார்களை, தலைவர்களை அவமதிக்கலாமா?

உங்கள் தலைவரானால் என்ன எங்கள் தலைவரானால் என்ன? எல்லோரும் பகுமானிக்க வேண்டியவர்கள்தானே?

சுயமரியாதை இயக்கக்காரர்கள் எங்களை எவ்வளவோ கேவலமாக பேசுகிறார்கள். அப்படி ஆனாலும் அவர்கள் தலைவர் ராமசாமி நாயக்கரிடம் காங்கிரஸ்காரருக்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது? அவரைப் பற்றி நாங்கள் ஏதாவது பேசுகிறோமா?

**ஜ:** இந்த மதிப்பெல்லாம் எங்களுக்குத் தெரியும். ''உதைப்பானுக்கு வெளுப்பான் ஜாதி டோபி'' என்கின்றபடி சுயமரியாதைக்காரர்கள் வட்டி முதலுடன் சேர்த்துத் திருப்பிக் கொடுத்து விடுகிறார்கள். உங்கள் கொடி வழிப்பட்டி அவர்களிடம் இருக்கிறது. அதற்காக அவரைக் கண்டால் பயப்படுகிறீர்கள். மற்றும் அவர்கள் தங்களுக்கு என்று யாரிடமும் ஓட்டுக் கேட்க வருவதுமில்லை. வேறு ஒன்றும் கேட்பதுமில்லை. அதனால் அவரிடம் உங்கள் ஜபம் பலிப்பதுமில்லை.

**கா:** மற்ற யாரிடம் தான் நாங்கள் வம்புக்குப் போகிறோம்.

**ஜ:** ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களை நீங்கள் எவ்வளவு கேவலமாய் பேசுகிறீர்கள்? சுத்தக் காலிப் பசங்களுக்கெல்லாம் காசைக் கொடுத்து அவர்கள் மீது உசுப்படுத்தி விடுகிறீர்கள்.

உங்கள் கள்ளு, சாராயம், கஞ்சா, அபினி, புராணம், இதிகாசம் ஆகிய பத்திரிக்கைகள் எல்லாம் எங்கள் தலைவர்களை எவ்வளவு அயோக்கியத்தனமாய் அற்பத்தனமாய் எழுதுகின்றன?

நாய் கடித்தால் நாய்களைத் திருப்பிக் கடிக்கக் கூடாது என்று பார்ப்பதாலல்லவா அவை குளிர் விட்டு அற்பத்தனமாய் எழுதுகின்றன. இந்த தடவை உங்கள் காங்கிரஸ் தலைவர் வரவை காந்தி வரவை விட மிக மோசமாய் நடத்திக் காட்டிக் கருப்புக் கொடிகள் ஊர் ஊராகப் பிடித்துத் தென் இந்திய மக்கள் காங்கிரசை மதிப்பதில்லை என்றும், காங்கிரஸ் கொள்கைகள் நாணையமற்றதும், யோக்கியமற்றதும் என்றும் தென்னிந்திய பார்ப்பனரல்லாத மக்களை இழிவுபடுத்தவும், குறைவு படுத்தவும், அவர்களது முற்போக்கைத் தடுக்கவும் செய்யப்படும் பார்ப்பன சூட்சி நிரம்பியதென்றும் நிரூபித்துக் காட்டப் போகிறோம்.

**கா:** அப்படியெல்லாம் செய்வதில் நம் தேசத்துக்கு நாம் மரியாதை செய்தவர்களாகி விடுவோமா?

**ஜ:** தேசமாவது வெஞ்சாமரமாவது?

காந்தியார் வந்தபோது வசூலித்த ரூபாய்கள் தானே இந்திய சட்டசபை எலக்ஷனுக்குப் பிரசாரம் செய்யப் பயன்பட்டது. அந்தப் பணத்தினால் வயிறு கழுவும் கூலிகள் தானே செல்லுமிடங்களிலெல்லாம் குடிகாரன் வெறிகாரன் போல் ஜஸ்டிஸ் கட்சியையும் அக்கட்சித் தலைவர் களையும் சூரியனைப் பார்த்து நாய்கள் குலைப்பதுபோல் குலைக்கிறார்கள்.

இப்போதும் காங்கிரஸ் தலைவர் என்று ஒரு நபரைக் கூட்டி வந்து நாடகம் நடத்தி ஊர் ஊராய் பணமுடிப்பு என்று முட்டாள்களிடம் பணம் வசூல் செய்து அதைப் பழயபடியே கூலிகளுக்குக் கொடுத்துக் காலித்தனம் செய்யச் சொல்லப் போகிறீர்கள். இதற்கு எந்த மூடம் தான் சம்மதிக்கும். நீரே சொல்லும் பார்ப்போம்.

**கா:** என்ன இருந்தாலும் தலைவரல்லவா?

**ஜ:** சரி வைத்துக் கொள்ளும். எங்கள் தலைவர்களான சர்.பி. தியாகராய செட்டியார் வீட்டுக்குக் காலிப் பசங்களை அனுப்பிக் கண்ணாடி ஜன்னலை உடைக்கச் செய்து வீட்டிற்குள் கல்லுகள் எறியவில்லையா?

டாக்டர் நாயர் சீமையில் செத்துப் போனபோது அங்கிருந்த உங்கள் ஆளுகள் ஒருவர் கூடப் போகாமல் பிரேத அடக்கத்துக்கே விஷமம் செய்யவில்லையா? பனக்கால் அரசரைப் பற்றி இழிவாகப் பொய்ப் பிரசாரம் செய்து அவர் எலக்ஷன் போது அவர் செத்து விட்டார் என்று புகையிலை வழங்கவில்லையா?

டாக்டர் சுப்பராயன் போகும் இடங்களில் கருப்புக் கொடி பிடிக்கவில்லையா?

சர்.ஆர்.கே. ஷண்முகம் செட்டியாரைப் பற்றி கண்டபடி அயோக்கியத் தனமாக எழுதவும் பேசவும் இல்லையா?

இன்று பொப்பிலி ராஜாவைப் பற்றிக் கேவலமாகவும், இழிவாகவும் படங்கள் வியாசங்கள் எழுதி ராட்சதன் அசுரன் என்றெல்லாம் சொல்லுவதோடு அவர் கடன்காரர் என்றும் அவன் இவன் என்றும் மற்றும் பலவிதமாகக் குறை கூறியும் எழுதியும் பேசியும் வரவில்லையா?



RangaRakes tamilnavarasam.com

மற்றும் சிலரைப் பற்றி இழிவாய்ப் பேசுவதும் கூட்டங்களில் காலித்தனம் செய்வதுமான காரியங்கள் காங்கிரஸ்காரர்களால் நடைபெறவில்லையா? பிறகு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவில்லையா?

இதெல்லாம் யோக்கியமான காரியமா? தலைவர்களை மரியாதை செய்யும் காரியமா? என்று யோசித்துப் பாருங்கள்.

**கா:** இவர்களுக்கும் காங்கிரஸ் தலைவர்கள், ராஜேந்திரபாபு ஆகியவர்களுக்கும் வித்தியாசமில்லையா?

**ஜ:** என்ன வித்தியாசம் சொல்லுமே பார்ப்போம். ஒவ்வொரு நபரின் யோக்கியமும் எடுத்து விரிக்கட்டுமா?

**கா:** சாவகாசமாப் பேசிக் கொள்ளலாம்.

**குடி அரசு - உரையாடல் - 29.09.1935**



# தேசாபிமானம்

தேசாபிமானம், தேச பக்தி என்பவைகள் சுயநலச் சூட்சி என்றும், தனிப்பட்ட வகுப்பு மக்கள் தங்கள் வகுப்பு நலத்துக்கு ஆக பாமர மக்களுக்குள் புகுத்தப்படும், ஒரு (வெறி) போதையென்றும் பல தடவை நாம் சொல்லி வந்திருக்கிறோம்.

மற்றும் ''தேசாபிமானம் என்பது காலிகளுக்கு ஏற்பட்ட கடைசி ஜீவனமார்க்கம்'' என்று மேனாட்டு அறிஞர் ஒருவர் கூறிய ஆப்த மொழி என்றும் பல தடவை எடுத்துக்காட்டி இருக்கிறோம்.

இவற்றை எந்த ஒரு தேசபக்தனும், தேசாபிமானியும் இதுவரை மறுக்கவே இல்லை என்பதோடு இவ்வாப்த வாக்கியங்கள் நிறைந்த ஆங்கிலப் புத்தகங்கள் பாடப் புத்தகங்களாகவும் வைக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இனியும் யாருக்கு ஆவது இவற்றில் சந்தேகங்களிருக்குமானால் இன்றை அபிசீனியா, இத்தாலி யுத்த மேகங்களையும், இடியையும், மின்னலையும் பார்த்தால் கண்ணாடியில் முகம் தெரிவதுபோல் விளங்கும். மற்றும் தேசாபிமான விஷயமாயும், தேசங்களைக் காப்பாற்றும் விஷயமாயும் பல தேசக் காவலர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற சர்வதேச பாதுகாப்புச் சங்கத்தின் யோக்கியதையைப் பார்த்தாலும் தெரியும்.

இளைத்தவனை வலுத்தவன் கொடுமைப்படுத்துவதும்,

ஏமாந்தவனைத் தந்திரசாலி ஏமாற்றுவதும்தான் இன்று ஆஸ்திகர்களுடைய கடவுள்களின் இரண்டு கண்களாகவும், தேச பக்தர்கள், தேசாபிமானிகள் என்பவர்களின் ஜீவநாடியாகவும் இருந்து வருகின்றன.

இந்த இரண்டு காரியங்களுக்கு ஆகத்தான் அதாவது இம்சித்தல், ஏமாற்றுதல் ஆக இரண்டு காரியங்களுக்கு ஆகவும் அவை நிரந்தரமாகவும், ஒழுங்காகவும், பத்ததியாகவும் நடைபெறுவதற்கு ஆகவேதான் உலகில் கடவுள், மதம், மோட்சம், நரகம், சாஸ்திரம், புராணம், அரசு, பிரதிநிதித்துவம், சட்டசபை, சட்டம், போலீசு, நீதிபதி, சிறைக்கூடம், சத்தியம், நீதி, ஒழுக்கம், ஒழுங்குமுறை, யோக்கியம், பரிசுத்தம், பெரியவர் வாக்கு, மகாத்மாக்கள் சேவை, தெய்வத் தன்மை பொருந்தியவர்கள் அவதாரம் என்பன போன்ற சர்க்கரை பூசிய பாஷாணங்கள் இன்று உலகில் கற்பிக்கப்பட்டு இருந்து செல்வாக்குப் பெற்றோ பெறாமலோ காப்பாற்றப்பட்டு வருகின்றன.



RangaRakes tamilnavarasam.com

ஜப்பான் சைனாவோடு போர் தொடுத்தபோது ஜப்பானுக்கு அதன் வியாபாரப் பொருள் விற்பதற்கு நாடுகள் இல்லை. அதற்குப் போதிய துறைமுகமில்லை. மற்ற நாடுகளைப் போல் அதற்கு குடியேற்ற நாடு இல்லை என்பது போன்ற காரணங்கள்தான் வெளிப்படையாகவே சொல்லப்பட்டன.

இத்தாலி அபிசீனியா மீது போர் தொடுப்பதற்கும் இந்தக் காரணங்கள் தான் இன்று முக்கியமாகச் சொல்லப்படுகின்றன. பிறகு பிறத்தியாரை ஏமாற்ற ஏதோ மொண்டிச் சாக்குகள் பஞ்சாயத்தில் பேசப்படுகின்றன.

சர்வதேசப் பாதுகாப்புச் சங்கத்தில் யுத்தத்துக்கு சம்பந்தப்பட்ட நாடுகள் போக மற்ற நாட்டு அங்கத்தினர்களோவெனில் உலகத்துக்கோ தங்களுக்கோ சரியென்று பட்டதை வெளியில் சொல்லவே மயங்குகின்றார்கள்.

காரணம் என்னவென்றால் யுத்தத்தில் சம்பந்தப்பட்டு வலுவில் தாக்க முற்பட்ட நாடுகள் மற்ற பிரநிநிதிகளைப் பார்த்து, ''உங்களுக்கு மாத்திரம் வியாபாரத்துக்குப் பல நாடுகள் இருக்கின்றன. நீங்கள் மாத்திரம் உங்கள் தேசமல்லாமல் வேறு பல தேசங்களை குடியேற்ற நாடாகவும் அனுபவிக் கிறீர்களே அது மாதிரி எங்களுக்கும் வேண்டாமா?'' என்று கேட்க ஆரம்பித்தால் தலைகுனிய வேண்டியவர்களாய் இருக்க வேண்டி இருப்பதால் ''நான் நோகாமல் அடிக்கிறேன் நீ ஓயாமல் அழு'' என்று சொல்ல வேண்டியதாய் விட்டன. சர்வதேச சங்கம் என்பது கண்டித்து உண்மையான எண்ணத்தோடு இத்தாலியைப் பார்த்து ஒரு உறுமல் உறுமி இருக்குமானால், இன்று இத்தாலி வாலை ஒடுக்கிக் கொண்டு அடங்கி இருக்கும்.

ஜப்பான் சைனா சண்டையின் போதும், ஜப்பான் இஷ்டம் ஒரு அளவுக்கு பூர்த்தியான பின்பே சர்வதேச சங்கம் மிரட்ட ஆரம்பித்தது.

அதுபோலவே இத்தாலியின் உள் எண்ணம் பூர்த்தி ஆன பின்புதான் சர்வதேச சங்கம் மிரட்டும் போல் இருக்கிறது.

பொதுவாகவே சர்வதேச சங்கத்தை நாம் ஒரு உண்மையான உலகப் பாதுகாப்புச் சங்கம் என்று சொல்ல முடியவில்லை.

அதை வலுத்தவர்கள், தந்திரக்காரர்கள் பாதுகாப்புச் சங்கம் என்றுதான் சொல்ல வேண்டும்.

யோக்கியமான ஒரு சர்வதேச பாதுகாப்புச் சங்கம் இருக்க வேண்டு மானால் அது உலக, எல்லா தேசங்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதியைத் தெரிந்தெடுத்து, அந்தப் பிரதிநிதிகள் அடங்கிய சபைக்கு உலக அரசியல், ராணுவம் ஆகியவை முழுவதையும் ஒப்படைத்துவிட்டு, இன்று தனித் தனி ராஜாவாகவோ சர்வாதிகாரியாகவோ இருப்பவர்களுக்கு ஜீவானாம்சம் கொடுத்து உட்கார வைத்து அச்சபைக்கு தலைவர்களாகத் தேசம், ஜாதி, மதம், கடவுள் செயல் என்கின்ற குறுகிய நோக்கமற்று உலகம் எல்லாம் ஒரு தேசமாகவும், மக்கள் எல்லாம் ஒரே (மனித) ஜாதியாகவும் கருதுபவராகவும்,



உலக சொத்துக்கள் எல்லா மக்களுக்கும் சொந்தமானது என்கின்ற சகோதர உணர்ச்சி உள்ளவராகவும் உள்ளவரைத் தலைவராகப் போட்டு ஆட்சி நடத்தப்படுமானால் அது உண்மையான சர்வதேச பாதுகாப்புச் சங்கமாக இருக்கலாம்.

35 கோடி மக்கள் உள்ள இந்தியாவுக்கும், 45 கோடி மக்கள் உள்ள சைனாவுக்கும் (கிட்டத்தட்ட உலக ஜன சமூகத்தில் சரி பகுதி உள்ள தேசங்களுக்கு) இன்று சர்வதேச சங்கத்தில் இருக்கும் பிரதிநிதிகள் யார் என்பதும் அவர்கள் இந்த தேசங்களில் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு என்ன உதவி செய்தார்கள் என்பதும், சர்வதேச சங்கத்தின் நீதியான ஆக்ஷியில் இவ்விரு தேச மக்களும் திருப்தியாய் கவலை இல்லாமல் மானத்தோடு வாழுகின்றார்களா என்பதும் கவனித்துப்பார்த்தால் இன்றைய சர்வதேச பாதுகாப்புச் சங்கத்தின் யோக்கியதை தானாகவே விளங்கும்.

ஆகவே சர்வ தேசாபிமானச் சங்கத்தின் யோக்கியதையே இப்படி இருக்கும்போது, இனி தனித்தனி தேசாபிமான சங்கத்தின் யோக்கியதையும் அச்சங்கத்தால் ஏற்பட்ட தேசப் பாதுகாப்பு யோக்கியதையும் எப்படி இருக்கும் என்பதைப் பற்றி நாம் அதிகம் வர்ணிக்க வேண்டியதில்லை என்றே சொல்லுவோம்.

இந்திய தேசாபிமானம், தேசபக்தி என்பது இன்று ஒரு சாதாரண மனிதராகிய காந்தியாரிடம் அதாவது மகாத்மா என்பவரிடம் மக்கள் வைத்திருக்கும் - வைக்கும் பக்தி அபிமானம் ஆகியவற்றைப் பொருத்தே இருக்கிறது.

எவனாவது காந்தியாரை முட்டாள் என்று சொல்லிவிட்டாலோ அல்லது அவர் நம்மைப் போல சாதாரண மனிதர்தான் என்று சொல்லி விட்டாலோ அதுவே இன்று எந்த மனிதனையும் தேசத்துரோகி என்றும், தேசாபிமானமற்றவர்கள் என்று சொல்லி விடுவதற்கும் பரீக்ஷிப்பதற்கும் போதுமான கருவியாய் இருக்கிறது.

இன்று இந்தியாவில் உள்ள தேசாபிமானம் பணச்செலவினாலும், பார்ப்பனப் பிரசாரத்தாலும் ஏற்படுவதே ஒழிய மற்றபடி மக்கள் சமூகத்துக்கு பொதுவாக உள்ள ஏதாவது ஒரு குறையையோ தேவையையோ உத்தேசித்து ஏற்பட்டதல்ல.

பார்ப்பான் தன்னை மனித சமூகத்தில் இருந்து பிரித்துக் கொண்டு தான் மாத்திரமே மேல் ஜாதிக்காரன் என்றும், மற்றவர் தனக்கு தொண்டு செய்யவே கடவுளால் பிறப்பிக்கப்பட்டவர்கள் என்றும் சொல்லுகிறவன், பணக்காரர்களாய் முதலாளிகளாய் இருக்கிறவர்களோ அவர்களுக்கும் அதுபோலவே தாங்கள் மற்ற சாதாரண மக்களிடம் இருந்து விலக்கப் பட்டவர்கள் என்றும், மற்ற மக்களிடம் தமக்கிஷ்டமான வேலை வாங்கிக் கொண்டு தமக்கிஷ்டமான கூலி கொடுக்கவே கடவுள் தங்களை சிருஷ்டித்துத்



RangaRakes tamilnavarasam.com

தமக்கு செல்வத்தைக் கொடுத்து மற்ற மக்களைத் தொழில் செய்யச் சிருஷ்டித்து இருக்கிறார் என்றும் கருதிக் கொண்டிருக்கிறவர்கள்.

இவ்விரண்டு பேருக்கும் உள்ள வித்தியாசமெல்லாம் பார்ப்பான் கூலி கொடுக்காமல் வேலை வாங்கிக் கொள்ள உரிமையுள்ளவன் என்பதும், பணக்காரன் ஏதாவது கூலி கொடுத்து வேலை வாங்க வேண்டும் என்பதும், தவிர மற்றப்படி மற்ற ஜனங்களைவிட தாங்கள் மேலானவர்கள் என்பதிலும் இந்நிலை கடவுளால் அளிக்கப்பட்டது என்பதிலும் வித்தியாசமான அபிப்பிராயமில்லவே இல்லை.

இப்படிப்பட்ட இந்த இரண்டு கூட்டத்தாரும் சேர்ந்துதான் இந்தியாவின் தேசாபிமானத்துக்குக் கர்த்தாக்களாய் இருக்கிறார்கள்.

எப்படி என்றால் பணக்காரன் பணத்தை பல லட்சக்கணக்காய் கொடுக்கிறான், பார்ப்பான் தந்திரத்தை பிரயோகிக்கிறான். இருவரும் சேர்ந்து கூலிகளைப் பிடித்து தேசாபிமானப் பிரசாரம் நடத்தி அதற்கு செல்வாக்கை உண்டாக்கி விடுகிறார்கள்.

ஆகவே இந்த இரண்டு கூட்டத்தார்களாலும் இவர்களுடைய கூலிகளாலும் நடத்தப்படும் தேசாபிமானம் பாமர மக்களுக்குப் பயன்படுமா அல்லது இந்த மூன்று கூட்டத்தையும் வெளியாக்கி அவர்களை ஒழிக்க முயற்சிக்கும் ''தேசத் துரோகம்'' பாமர மக்களுக்கு பயன்படுமா என்பதை அறிஞர்கள் யோசிக்க வேண்டும்.

இன்று நம்முடைய பொது ஜனங்கள் அல்லது பாமர ஜனங்கள் என்பவர்களின் யோக்கியதை நாம் அறியாததல்ல. அவர்கள் ஆண்களில் 100க்கு 90 தற்குறிகள் பெண்களில் 100க்கு 98 தற்குறிகள்.

அதோடு மாத்திரமல்லாமல் 100க்கு 50 பேர்களுக்கு மேல் ஜீவனத்துக்கு வேறு எவ்வித மார்க்கமும் இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்தாவது ஜீவனம் நடத்த வேண்டும் என்கின்ற கவலையும் பசிப்பிணியும் உள்ளவர்கள். எனவே இந்த நாட்டில் நன்மை - தீமை, யோக்கியன்- அயோக்கியன், சுயநலக்காரன் - பொதுநலக்காரன், சூட்சிக்காரன் - உண்மையானவன் என்கின்ற தன்மைகளைக் கண்டுபிடிக்கச் சரியான அறிவும் யோக்கியதையும் பொதுமக்களுக்கு எப்படி உண்டாகும்?

ஆகவே, யாரோ ஒரு சில நபர்கள் தான் உண்மையாகவும் கவலையாகவும், உழைக்கக் கூடியவர்களாகவோ உண்மையை எடுத்துச் சொல்லக் கூடியவர்களாகவோ கிடைக்கலாம். ஆனால் அவர்கள் பொது ஜனங்களால் மகாத்மா என்றோ, தேசாபிமானி என்றோ தேச பக்தர் என்றோ தேசியவாதி என்றோ கருதப்படக் கூடியவர்களாய் இருக்க முடியாது என்பதோடு அவர்கள் ''தேசத் துரோகியாயும், மதத் துரோகியாயும், நாஸ்திகர்களாயும்'' தான் இருக்க முடியும்.



அதோடு மாத்திரமல்லாமல் பொதுஜனங்களால் வசவு கேட்கவும் துன்புறுத்தப்படவும் வேண்டியவர்களாகவும் கூட இருக்கக் கூடும்.

எப்படி இருந்தாலும் முடிவில் ''தேசத் துரோகிகள்'' எனப்படுபவர் களும் நாஸ்திகர்கள் என்னப்படுபவர்களும் தான் வெற்றி பெறுவார்களே தவிர - அவர்கள் தான் வெற்றி பெற்றாக வேண்டுமே தவிர மற்றபடி இந்த ஜால வித்தையான தேசபக்தி வெற்றியடையவோ மக்களுக்குப் பயன்படவோ போவதில்லை என்பது உறுதி.

**குடி அரசு - தலையங்கம் - 29.09.1935**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ்காரர்களின் தகுடுதத்தம்

கராச்சியில் காங்கிரஸ்காரர்கள் கூடிச் செய்த தீர்மானங்களில் ஒன்று சம்பளத் திட்டத்தைக் குறித்ததாகும். அதில் இந்தியாவிலே உயர்ந்த சம்பளம் எனப்படுவது ரூ.500க்கு மேற்படக் கூடாது என்றும், இப்பொழுது கொடுத்து வரும் சம்பளக் கொள்ளையைக் குறைக்க வேண்டுமென்றும் எந்தக் காங்கிரஸ் காரர்கள் பேசினார்களோ அதே காங்கிரஸ்காரர்கள் இன்று பம்பாய் நகரசபை (Corporation)யில் உதவிக் கமிஷனர் பதவியிலிருந்து வரும் தோழர் எ.பி.சிவதாஷனி என்பவர் வாங்கி வந்த ரூ.1750 ஐ ரூ.2000மாக மாற்று வதற்காக ஒரு தீர்மானத்தைக் காங்கிரஸ்காரர்களே ஆதரித்தவர்களுமாய்ப் பொறுப்பாளிகளுமாயிருக்கிறார்கள் என்று அறிவீர்களேயானால், அக்காங்கிரஸ் காரர்களின் தகுடுதத்தத்தை என்னென்று நினைக்கிறீர்கள்.

அகில இந்திய சட்டசபையில் காங்கிரஸ் தலைவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் சகலரும் கராச்சித் தீர்மானத்தின்படி சம்பளத் திட்டத்தை ரூ.500 றாகக் குறைக்க வேண்டும் என்று வாய் வீச்சு வீசுகிறார்கள். ஆனால் அவர்கள் ஆதிக்கம் செலுத்தி வரும் பம்பாயில் இன்று அவர்கள் அதிகாரவர்க்கத்தில் இருக்கிற தங்களது கட்சிக்காரர் என்ற ஒரு எண்ணத்திற் காகவே இம்மாதிரிக் காரியங்கள் செய்யப்பட்டு வருமேயானால் அவர்களது யோக்கியதை எவ்வளவு தூரம் நாணயமானது என்பதை வாசகர்களே யோசித்துப் பாருங்கள்.

இத் தீர்மானத்தை ஆதரிக்கிறவர்கள் சொல்லும் சமாதானமாவது ஐ.சி.எஸ். படித்து லாபகரமான உத்தியோகத்தை விடுத்து இம் முனிசிபல் உத்தியோகத்திற்கு என்று உழைக்க முன் வந்தவருக்கு இவ்வளவு ஆவது சம்பளம் அளிக்கப்பட வேண்டாமா என்பதாகும். ஆனால் இன்று கல்கத்தா நகர சபையில் அதே உத்தியோகம் பார்த்து வருபவரும் ஐ.சி.எஸ். படித்து வந்தவருமான தோழர் சுபாஷ் போஸ் என்பவருக்கு ரூ.1200 வழங்கப்படுவது எப்படி நியாயமானதாகும்.

''மக்களுக்காகவே உழைக்கிறோம் என்று சொல்லிவரும் ஐ.சி.எஸ். படித்துத் தனது லாபகரமான அல்லது ஆதாயகரமான உத்தியோகத்தை விட்டுவிட்டு வருபவர்களுக்கு ரூ.1750 என்பது ஒரு அற்பமான ஊதியமாக நினைக்கப்படுமானால் ஐ.சி.எஸ். படித்து விட்டு தங்கள் நாட்டை விட்டு 6000 மைல் கடந்து வந்து சேவை செய்யும் வெள்ளைக்கார ஐ.சி.எஸ். 5000 வாங்குவதில் தப்பென்ன?''

**குடி அரசு - செய்தி விமர்சனம் - 29.09.1935**



# காங்கிரஸ் கட்சியினரும்

## ஸ்தல ஸ்தாபன பரிசுத்தமும்

ஸ்தல ஸ்தாபனங்களில் பல ஊழல்களிருப்பதாகவும், காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் வெற்றிபெற்று நகர பரிபாலன சபைகளிலும், ஜில்லா 'போர்டு'களிலும் அங்கத்தினர்களானால், அவ்வூழல்கள் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்து விடும் என்று காங்கிரஸ் தலைவர்கள் சிலர் பிரசாரம் செய்துவருவதை நமது வாசகர்கள் அறிவார்கள். நேற்றை ''இந்து'' பத்திரிக்கையில் திருநெல்வேலி ஜில்லா 'போர்டு' தேர்தல்களைக் குறித்து தோழர் சத்தியமூர்த்தி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கையில் ஸ்தல ஸ்தாபனங்களைப் பரிசுத்தப்படுத்தும் வேலையை காங்கிரஸ்காரர்கள் கைக்கொண்டிருக் கிறார்கள் என்றும் ஆகையால் அவர்களுக்கு 'ஓட்'டுக் கொடுக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். காங்கிரஸ்காரர்கள் இவ்வேலையைச் செய்வதற்குச் சிறிதேனும் யோக்கியதையுடையவர்களல்லர் என்ற விஷயம் அவர்களுடைய பொது வாழ்க்கையைக் கவனித்து வருபவர்களுக்கு நன்கு தெரியும். டாக்டர் சுப்பராயனின் மந்திரி சபையை ஆதரித்த காலத்தில் சென்னைக் காங்கிரஸ் கட்சியினர் எவ்வளவு பரிசுத்தமாயிருந்தார்கள் என்பது நாடறிந்து, நாடு நகைத்த விஷயம். இன்றைக்கும் காங்கிரஸ்காரர் பலருடைய யோக்கியதையும், பரிசுத்தமும் எவ்வளவிலிருக்கிறதென்பது ஒரு சிலருக்கே தெரியும். சென்னை நகர பரிபாலன சபையில் நடந்த ஒரு உருசிகரமான விஷயம் இதற்கு உதாரணமாகும். சென்ற வாரம் நடந்த சபைக்கூட்டத்தில், தோழர். சி.பி. சுப்பிரமணியம், சபையின் அங்கத்தினரான ஒருவர் தன்னுடைய 'ஏஜண்ட்' மூலமாக, நகர பரிபாலன சபையின் சிமிட்டி 'கண்ட்ராக்ட்'டைப் பெற்றிருக்கிறார் என்றும் அதை ருஜுப்படுத்த முடியு மென்றும் கூறினார். இதன் சம்பந்தமாக, 'மெட்ராஸ் மெயில்' பத்திரிகையின் நிருபர், வெள்ளைக்காரர்களுடைய சிமிட்டி 'ஏஜண்ட்'டான பிரபல காங்கிரஸ் தலைவர், தோழர் சாமி வெங்கடாஜலம் செட்டியாரைப் பேட்டி கண்டார். அப்பேட்டியின் விவரம் நேற்றைய ''மெயில்'' பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. அதைக் குறிக்கு முன், வாசகர்கள் சில விஷயங்கள் அறிய வேண்டும். தோழர் சாமி வெங்கடாசலம் செட்டியார் சென்னை நகர பரிபாலன சபையின் அங்கத்தினர். நகர சபையின் அங்கத்தினர்கள் 'கண்ட்ராக்ட்' எடுத்தல் கூடாதென்பது சட்டமாகும். ஆனால், சபையால் ஒப்புக்கொள்ளப்பட்ட 'டெண்டர்' தோழர் கூரத்தாழ்வார் செட்டியாரால் கொடுக்கப்பட்டது. தோழர்



RangaRakes tamilnavarasam.com

கூரத்தாழ்வார் செட்டியார் தோழர் சாமி வெங்கடாசலம் செட்டியாரின் 'ஏஜண்ட்' என்பதை ருசுப்படுத்தக்கூடும் என்று தோழர் சுப்பிரமணியம் நகர சபையில் கூறியிருக்கிறார். இதைப்பற்றி, ''மெயில்'' நிருபரிடம் தோழர் சாமி வெங்கடாசலம் செட்டியார் கூறியதாவது:-

> ''எனக்கும் தோழர் கூரத்தாழ்வாருக்கும் ஒருவித சம்பந்தமுமில்லை. மற்றவர்களுக்கு சிமிட்டி விற்பதைப் போல் அவருக்கும் நான் விற்றிருக்கிறேன். நானும் தோழர் கூரத்தாழ்வாரும் தனித்தனியாக வர்த்தகம் செய்துகொண்டு வருகிறோம். நாங்கள் ஒரே கட்டிடத்தில் (அதாவது 61, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜார்ஜ்டௌன்) வெவ்வேறு பாகத்தில் இருக்கிறோம். தோழர் கூரத்தாழ்வார் நகர சபைக்கு சாதாரண வர்த்தக முறையில், சிமிட்டி வருவித்துக் கொடுப்பவராயிருக்கலாம். என்னுடைய 'டெலிபோனை' ஒவ்வொரு சமயத்தில் தோழர் கூரத்தாழ்வார் உபயோகித்திருக்கலாம்.''

இந்த விவரத்திலிருந்து தோழர் கூரத்தாழ்வார், தோழர் சாமி வெங்கடாஜலம் செட்டியாரின் 'ஏஜண்ட்' தான் என்று கூறமுடியாது. எனினும் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் 'கமிட்டி'யார் இவ்விஷயத்தை நன்றாக ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவசியம். மற்றும், இந்திய சட்டசபையில், நேற்றையதினம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு அங்கத்தினரைப் பற்றி, உள்நாட்டு மந்திரியான சர். ஹென்றிக்ரெயிக் சில விஷயங்களைச் சொன்னார். அக்காங்கிரஸ் அங்கத்தினர் ஒரு நியாய விசாரணை நடத்துவதற்கு அரை இலட்சம் ரூபாய் பெற்றாரென்றும், சில சாட்சிகள் சரியான சாட்சி சொல்லுவதைத் தடை செய்ய முயன்றாரென்றும், வக்கீல்களுடைய நாணயத்திற்கு மீறி ஒழுங்கற்ற காரியத்தைச் செய்தாரென்றும் சர். ஹென்றி கூறினார். இம்மாதிரியான குணங்களையுடைய காங்கிரஸ் கட்சியினரா ஸ்தல ஸ்தாபனங்களைப் பரிசுத்தப்படுத்தப் போகிறார்கள்? முதன் முதலில் பரிசுத்தப்பட வேண்டியவர்கள் காங்கிரஸ்காரர்களாவர் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

**''விடுதலை''**

**குடி அரசு - மறு பிரசுரம் - 29.09.1935**



# மதமின்றி மக்கள் வாழமுடியாதா?

## (ஜோசப் மெக்காப் எழுதியதை அனுசரித்து எழுதப்பட்டது)

மக்கள் வாழ்க்கை நாகரீகமாய் நடத்தப்பட மதம் வேண்டுமென்பது மதக்காரர்களுடைய வாதமாகும். இப்படிப்பட்ட வாதமும் தங்கள் தங்கள் மதம்தான் மனித சமூக நாகரீக வாழ்க்கைக்கு ஏற்றது என்பது ஒவ்வொரு மதக்காரர்களின் பிடிவாதமுமாகும்.

மதமில்லாமல் உலகில் எவ்வளவோ ஜீவகோடிகளும், பல மக்களும் வாழ்க்கை நடத்தவில்லையா என்று கேட்போமேயானால் அதற்கு பதில் சாதாரண அசேதன வாழ்க்கை வாழலாமே ஒழிய நாகரீகமான வாழ்க்கை நடத்தமுடியாது என்றும், அதற்காகத்தான் மதமில்லாவிட்டால் மக்கள் நாகரீக வாழ்க்கை நடத்தமுடியாதென்று சொல்லப்படுவதாகவும் சொல்லுவார்கள்.

அதற்காகவேண்டியே மதவாதிகள் மதத்தைப் பற்றி பிரசாரங்களும், விளம்பரங்களும் செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட விளம்பரங்களும், பிரசாரங்களும், புராணங்களாலும், படங்களாலும், கதைகளாலும், நடிப்புகளாலும், கோவில்களாலும் மற்றும் பல சாதனங்களாலும் செய்து வருகிறார்கள்.

இவ்வளோவோடு நிற்காமல், கடவுளற்ற, மதமற்ற உலகத்தில் மக்கள் பல கொடுமைகளையும், தீமைகளையும், ஹிம்சைகளையும் அடைவது போலவும், அசுர ஆட்சியே நடைபெருவதாகவும் கட்டுகள் கட்டி மக்களைப் பயமுறுத்துகிறார்கள்.

மேலும், கொள்ளை நோய்களும், விஷ நோய்களும் துஷ்ட தேவதைகளின் கோபத்தின் பலன் என்றும், வால் நட்சத்திரத்தின் வாயிலிருந்து கக்கப்படும் தீப்பொரியின் விளைவென்றும் பேசி மக்களை ஒருவித பயத்துக்குள்ளாக்குகிறார்கள்.

காந்தியாரும் இப்படித்தான். அதாவது, பூகம்பத்தால் விளையும் கேடுகளும், வெள்ளத்தாலும் நெருப்பாலும் ஏற்படும் கொடுமைகளும் கடவுள் கோபத்தால் ஏற்பட்ட விளைவின் பயனென்றும் சொல்லி மக்களை மிரட்டுகிறார்.

மனிதர்கள் நடந்துகொள்ளவேண்டிய ஒழுக்கச் சட்டம் என்பதெல்லாம் அந்தந்த சமூக நிலை அனுசரித்து ஏற்படுத்தப்பட வேண்டியதேயல்லாமல்,



RangaRakes tamilnavarasam.com

மனிதர்கள் மேல் உலகத்துக்குப் போவதற்குத் தகுந்தபடியும், அங்கு சென்றபின் நடக்கவேண்டிய காரியங்களுக்குத் தக்கபடியும் அமைக்கப்பட வேண்டியதேயில்லை.

மதமில்லாவிட்டால், மக்கள் கோவிலுக்குப் போகமாட்டார்களே என்றோ, மக்கள் கோவிலுக்குப் போகாவிட்டால் மக்கள் ஒழுக்கமாக நடந்துகொள்ளமாட்டார்களே என்றோ யாரும் பயப்படவேண்டியதில்லை.

உதாரணம் வேண்டுமானால், கோவிலுக்குப் போவதை நிருத்திவிட்டவர்களிடமிருந்தே அவர்களது விகிதாச்சாரத்துக்குக் குறைவில்லாத அளவு குற்றங்கள குறைந்துகொண்டு வந்திருப்பதற்கு அநேக ஆதாரங்கள் புள்ளி விபரத்தோடு காட்டலாம்.

மதங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்று நாம் சொல்ல ஆரம்பித்ததாலேயே ஏன் சொல்லுகின்றோம்? அதற்காக என்ன அவசியத்தைக் காட்டுகின்றோம் என்பதைச் சிந்திக்காமலேயே, சிந்திக்காவிட்டாலும் நமக்குக் காது கூட கொடுக்காமலேயே ஏதோ ஒரு பெரிய அபாயம் வந்து விட்டது போல் மிகக் கவலையாக சிந்தனைச் செய்யத் தொடங்கிவிடுகிறார்கள்.

இதற்குக் காரணமெல்லாம் அவர்கள் ஒழுக்கம் கெட்டுவிடுமே என்பது கூட அல்லாமல் நரகம் சித்தித்துவிடுமே என்பதும், மேல் லோக வாழ்க்கை பெருத்த மோசமானதாகிவிடுமே என்பதுமேயாகும். ஏனெனில், குருக்கள்மார் மதத்தை மக்களுக்குள் புகுத்துவதற்காகவும், மக்கள் மனதில் என்றென்றும் மதம் நிலைத்திருப்பதற்காகவும் நரகத்தைப்பற்றி அவ்வளவு அதிகமாக வருணித்து அவ்வளவு அதிகமான பயத்துக்கு ஆளாக்கி வைத்திருக்கிறார்கள்.

பொதுவாகவே, கடவுள் உதவி வேண்டுமானால், மதம் வேண்டும் என்பதும், மதம் வேண்டுமானால் குருக்கள் வேண்டுமென்பதுமே மதத்தின் அவசியத்துக்குக் காரணமாக்கி அதன் மூலம் குருக்கள்மார் ஆதிக்கத்தை நிலை நிறுத்தியிருக்கிறார்கள். சாதாரணமாகப்பார்த்தாலும், மனித சுபாவமானதும், மனித சக்தியானதும் மதத்தைக்கொண்டேதான் வெளிப்படக் கூடியதென்றோ, நிலை நிற்கக்கூடியதென்றோ சொல்லுவது சுத்தத் தப்பான அபிப்பிராயமாகும்.

கோவிலையும், மதத்தையும் மிகப்பிரமாதமாய் கருதாதவர்களும் அதில் கவலையில்லாதவர்களும் அவற்றில் அனுதாபமோ, நம்பிக்கையோ இல்லாதவர்களுமான மக்களுக்குள்ளாகவே எத்தனையோ பேர்கள் தங்கள் தங்கள் சுபாவங்களையும், சக்திகளையும் உணர்ந்துகொண்டு எவ்வளவோ மேலான நல்ல தன்மையுடனும், அதி மேதாவித் தனமான அறிவுடனும் உடல் பொருள் ஆவி யாகியவற்றை மக்கள் நல் வாழ்க்கைக்குப் பயன் படுத்தியவர்களாகவும் இருக்கிறார்கள்.



மதத்தினாலும், பக்தியினாலுந்தான் மக்கள் தங்கள் சக்தியை உணரலாம் என்பதும், நன்மையான காரியங்களைச் செய்யலாம் என்பதும், மேலான அறிவைப் பெறலாம் என்பதும் மெத்த பலமற்ற வாதமேயாகும். ஒழுக்கத்துக்காகவும், சமுதாய ஒழுக்கத்துக்காகவும் மனிதனுக்கு மதம் வேண்டுமென்பது மிக மிக பலமற்ற வாதமாகும். வரப்போகின்ற காலத்தில் மதக்கோட்பாடுகளைப்பற்றி பிரமாதப்படுத்துவதும், அதற்காக பல காரணங்களைக் கட்டுக்கட்டி மக்களுக்குள் புகுத்துவதும், அவற்றை யெல்லாம் நம்பும்படி செய்வதும் இனி முடியாது என்று தைரியமாய்ச் சொல்லுவேன்.

எப்படித்தான் பாடுபட்டு புகுத்தினாலும், உண்மையான நம்பிக்கை ஏற்படுவதற்கு இடமில்லாமல் போனால் அவை எப்படி மதிப்புப் பெறமுடியும்? ஜனங்களைக் கோவிலுக்குப் போகும்படி செய்தல் ஒரு விஷயம். அவர்களை நரகத்திலோ, அல்லது மற்ற புராதன கொள்கைகளிலோ நம்பிக்கை கொள்ளச் செய்வது வேறு விஷயம்.

சிறிது யோசித்தாலும் நரகத்தின் அடிப்படை முழுவதும் பொய்யாகி விடும். கோவிலுக்குப் போகாததாலேயே நாம் கெட்டுப்போய் விடமாட்டோம். நாம் கோவிலுக்குப்போவது குறைந்து போயிருந்தாலும் நாம் நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்தே வருகிறோம். நான் வாசாகைங்கரியம் செய்வதாக யாரும் நினைக்க வேண்டாம். நான் ஒருவருக்கு விரோதமாக வீண் வார்த்தைகளைச் சொல்லவில்லை. நமது காலத்தைப்பற்றி உரிய காலத்தில் சரித்திர சம்பந்தமாகவும் சமுதாய சம்பந்தமாகவும் ஆராய்ச்சி செய்வோமானால் ஏராளமான உண்மைகளும் புள்ளி விபரங்களுமே நாம் முன்னேற்றமடையவில்லையா என்ற சந்தேகங்களை அறவே ஒழித்துவிடும். தற்காலத்தைவிட முற்காலத்தில் குற்றங்களும், பலாத்காரங்களும் அக்கிரமங்களும் உலகத்தில் அதிகமாகவே இருந்தன. முற்காலத்தவர் நம்மைவிட அதிக சுகஜீவிகளாயிருந்ததில்லை. அவைகளைப்பற்றி நாம் நிச்சயமான புள்ளி விபரங்களை காட்டலாம்.

மதக்காரர்கள் நாம் மடுவில் மூழ்கி இறக்கிறோம் என்று கருதுகிறார்கள். அதாவது நாம் அநீதியை வளர்க்கிறோம் என்பதாகும். இதற்கு ஆதாரமான புள்ளி விபரங்கள் ஒன்றுமில்லை. ஆகவே இந்த அபிப்பிராயம் அர்த்தமற்றது. பத்திரிகைகளில் தோன்றும் விபசார விஷயங்களையும் குற்ற விபரங்களையும் பார்த்து அத்தகைய அபிப்பிராயம் கொள்ளுகிறார்கள். ஆதிகாலத்தில் இத்தகைய பத்திரிகை விளம்பர முறைகள் இருந்ததில்லை யென்பதை மக்கள் மறந்துவிடுகிறார்கள். ஆயினும் அக்காலத்திலும் விபசாரங்களும் குற்றங்களும் இருந்தே வந்திருக்கின்றன. ஆதிப்யூரிட்டன்ஸ் என்பவர்களிடம் விபசாரம் மிகுந்திருந்ததாக ருசுப்படுத்தும் சரித்திரம் சாட்சியங்களைப்பற்றி தோழர் ரூப்பர்ட்ஹக்ஸ், ‘‘ஹால்டிபன் ஜீலியஸ் மாதப் பத்திரிகை’’ யில்



RangaRakes tamilnavarasam.com

சமீபத்தில் எழுதியிருக்கிறார். பக்குள் என்னும் பேர்போன சரித்திர ஆசிரியர் ஸ்காத்லந்துப் யூரிட்டன்ஸ் என்பவர்களிடம் பயங்கரமான துர்கிருத்தியங்கள் இருந்தனவென்று எழுதியிருக்கிறார். அப்படியே மத்திய காலங்களிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற் பகுதியிலும் இருந்து வந்திருக்கிறது. இவ்விஷயங்களிலும் நாம் நமது முன்னோர்களைவிட அதிகமாகக் கெட்டுப்போகவில்லை.

இனி ஒழுக்க முறைகளின் பலன்களைப்பற்றிப் பேசுவோம். இது மகா முக்கியமான விஷயம். இதனால் உலகம் பாதிக்கப்படவில்லையென இலேசாய்க் கருதப்படுகிறது. பென் லிண்டுஸி என்னும் நீதிபதி ''நவீன வாலிபர்களின் புரட்சி'' என்னும் நூல் எழுதியிருக்கிறார். அவர் அமரிக்க வாலிபர்களின் எண்ணங்கள், நடத்தைகள் முதலியவைகளைப்பற்றி மிக நன்றாய் அறிந்தவர். அவரைப்போல இளைஞர்களை அறிந்தவர் வேறு யாரும் கிடையாது. அவர் வாலிபர்களுக்குள் காதல் சுதந்தரம் வெகு அதிகமாக இருக்கிறதென்று தமது நூலில் விளக்குகிறார். அது வழக்கத்திற்கு அதிகமாக இருக்கிறதாவென்பது அவருக்குத் தெரியாது. அவ்விஷயத்தில் புகுந்து சரியான ஆராய்ச்சி செய்தாலொழிய யாருக்கும் உண்மை விளங்காது.

கிழவர்களின் அபிப்பிராயங்கள் உபயோகமற்றவை. இங்கிலாந்திலே கிழவர்கள் வாலிபர்களாயிருந்தபோது பருவகாலம் வித்தியாசமுள்ளதாக இருந்ததென்று சாதாரணமாய் நம்புகிறார்கள். ஆனால் உண்மையில் அப்படியில்லை யென்பதை ருசுப்படுத்த சாக்ஷியங்கள் இருக்கின்றன. நீதிபதி லிண்டுஸி அறிந்து சொல்வது என்னவென்றால், கோவிலுக்குப்போய் உபதேசங்கள் கேட்கும் வாலிபர்களுக்குள்ளும் இளம் பெண்களுக்குள்ளும் தான் காதல் சுதந்தரம் ஏற்பட்டிருக்கிறது என்பதுதான்.

நவீன உலகம் தனக்கென்று சொந்தமாகச் சட்டங்கள் செய்துகொள்ள வேண்டும். குற்றத்தைப்பற்றியும் பலவந்தத்தைப் பற்றியும் பயப்பட வேண்டாம். ஜனங்கள் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் மணவாழ்க்கை விஷயமாக ஜனசமூகம் தன் சமுதாய நன்மைகளை பாதுகாத்துக்கொள்ளும் சமுதாயத்தைப பாதித்து யாருக்கும் தீங்கு செய்யாத தனிப்பட்ட நபர்களின் காரியங்களைக் கோவில்கள் அடக்கியாள முடியாது. இனி வருங்காலத்தில் அதைப் பற்றிய உண்மையை நாம் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். அது ஒரு பெரிய விஷயம். அதைப்பிறகு எடுத்துக்கொண்டு நன்றாக ஆராய வேண்டும்.

இனி மதத்தை எப்படித் திருத்தினாலும், அதை எப்படிக் கலைத் தமைத்தாலும், அதை ஒழிந்து போவதினின்றும் தடுக்க முடியாது. அதன் கொள்கைகளில் ஒன்றாவது கண்டனத்திற்குட்படாமல் இருக்க முடியாது. எல்லா மக்களையும் ஒப்புக்கொள்ளும்படி இனிச்செய்ய முடியாது.

சிலர் எல்லா மதக் கோட்பாடுகளையும் விட்டு ஒழிக்க அபிவிருத்தி சங்கங்களை மட்டும் வைத்துக் கொள்ளலாமென்கின்றார்கள். இது எப்படி



ஒரு பெரிய மதமாகிவிடும் என்பதைப் பற்றிச் சுலபமாய்ப் பரீக்ஷித்து விடலாம். சென்ற நூறு வருஷங்களாக உலகில் பல இடங்களில், சிறப்பாக அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் கூட மதாபிமான வைதீகச் சங்கங்களும் கோவில்களுமிருந்தன. அவைகளில் அநேகம் மதக்கோட்பாடுகள் இல்லாமலே இருந்து வருகின்றன. சமீப காலத்திலிருந்து ஒழுக்காபிவிருத்திச் சங்கங்களும் இருந்து வருகின்றன. அவைகள் நீதி விஷயங்களின் சம்பந்தம் மட்டும் பெற்றிருக்கின்றன. மேலே கூறப்பட்டவைகளில் ஒன்றும் பொது மனிதர்களால் போற்றப்படுவதில்லை. கோவிலுக்குப் போகாத ஆறுகோடி அமெரிக்கர்களும், மூன்று கோடி பிரிட்டிஷ்காரர்களும் அத்தகைய சபைகளின் கூட்டங்களுக்குப் போவதே கிடையாது. அப்படிப்பட்ட சபைகள் நூறுக்குக் குறைந்தேயிருக்கும். சபை ஒன்றில் சில நூறு அங்கத்தவர்கள் தான் இருப்பார்கள். அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகவும் கிடையாது.

நம்முடைய காலத்திற்கு ஞாயிற்றுக்கிழமைக் கூட்டம் தேவையில்லை. அதற்குத் தெய்வ வணக்கமோ அதற்குப்பதிலாக வேறு எதுவுமோ தேவையில்லை. மனிதன் இயற்கையிலேயே சாஸ்வதமான மதப்பற்றுள்ளவ னல்லவா? மனிதனிடத்தில் நீங்காத மதப்பிரியம் உண்டு என்று அறிஞர்களான அநேக ஆசிரியர்கள் கூறவில்லையா? அதனால்தான் ஒரு மதம் மறைந்ததும் வேறு ஒன்று அதற்குப் பதிலாகக் கிளம்பி விடுகிறது என்று அவ்வறிஞர்கள் கூறவில்லையா? இனி வருங்காலத்தில் எது மதமாயிருக்கக் கூடும்? இவ்விஷங்களைப்பற்றி வேறு கட்டுரைகளில் பேசுவோம்.

நவீன நாகரீகத்தில் முன்னேற்றமடைந்திருக்கும் இடங்களின் நிலைமையென்ன? அங்குள்ள மக்களில் மூன்றில் இரண்டு பாகத்தவர் கோவிலுக்குப் போவதில்லை. அவர்கள் வீட்டில் கடவுளை வணங்கு கின்றார்கள் என்றும் யாரும் சொல்ல முடியாது. இந்த தேசங்களில் லட்சக்கணக்கான குருக்கள் ஜனங்களைக் கோவிலுக்குப் போகும்படி நியாயம் சொல்லிக் கொண்டு தானிருக்கிறார்கள். மனைவிமார்களும் குமாரத்தி களும் தங்கள் தங்கள் ஆடவர்களை அதற்குக் கட்டாயப் படுத்தும்படி தூண்டப் படுகிறார்கள். கோவில் பூஜாமுறைகளைக் கூடியவரையில் கவர்ச்சியுள்ளதாக்கு கிறார்கள். குறிப்பிட்ட கிழமைகளின் நீண்ட பூஜா காலத்திற்குப் பதிலாக இனிமையான மாலைப் பூஜைகளை கிழமைதோறும் நடத்துகிறார்கள். சங்கீதம் அதிகமாகவும், பிரசங்கம் கொஞ்சமாகவும் உள்ள கூட்டங்களை நடத்துகிறார்கள். உற்சாகத்தை உண்டாக்கத்தக்க மத கற்பனைகளைப் பற்றிய தலையங்கங்களைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துகிறார்கள். சமுதாய ஊக்கம் உண்டாகிறது. கோவில் சம்பந்தத்தோடு சமுதாய வாழ்வு அபிவிருத்தி செய்யப்படுகிறது. ஆடல் பாடல் ஆடும் படக் காட்சிகள் நடத்தப் படுகின்றன. புதிய மதங்களான கிறிஸ்துவ விஞ்ஞானம், ஒழுக்க அபிவிருத்தி, தியாசபி முதலியவை பழையவைகளோடு போட்டி போடுகின்றன.



RangaRakes tamilnavarasam.com

முடிவு என்ன? உண்மை விஷயம் என்ன? நவீன நாகரீகத்தில் ஜனத்தொகையில் பாதி யல்லது முக்கால் பாகம் இவைகளையெல்லாம் அசட்டை செய்து கோவிலுக்குப் போக மறுக்கிறது. மதக்கோட்பாடுகள் குறைந்ததற்கேற்ப குறைந்த ஜனங்களே போகிறார்கள். கோவிலுக்குப் போகும்படி ஜனங்களை நிர்பந்தம் செய்யவில்லையென்று வைத்துக் கொள்ளுவோம். பத்து வருஷங்களுக்குக் குருக்கள்மார்கள் எல்லோரும் உலகத்தில் தங்கள் வேலையை நிறுத்திவிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். முடிவென்னவாகும்? நீங்களே யதார்த்தமான பதில் கூறுங்கள். நான் என் அபிப்பிராயத்தை அங்கு வற்புறுத்த விரும்பவில்லை. ஆனால் அப்போது இன்னும் எத்தனை பேர் கோவிலுக்குப் போவதை நிறுத்தி விடுவார்களோ என்பதை நினைக்க ஆச்சரியமாயிருக்கின்றது.

மனிதனுக்கு இயற்கையிலேயே மதப்பற்றுக் கிடையாதென்பது வெளிப்படை. நாகரீக மக்களின் தொகையில் பாதிக்கும் குறைந்தவர்களை மதப்பற்றுள்ளவர்களாக வைத்துக்கொள்ள பத்து லட்சம் பாதிரிகளின் மிகுந்த முயற்சி தேவையாக இருக்கிறது. இயற்கை மதப்பற்றைப் பற்றிப் பேசும் ஆசிரியர்கள் ஒரு தவறு செய்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பழைய காலத்தையே கவனிக்கிறார்கள், தற்காலத்தைப் பற்றி அறியாதிருக் கிறார்கள். முன் காலத்தில் ஒரு மதம் போனால் வேறு மதம் உண்டாயிற்று. ஆசியாவில் இருந்ததுபோல படித்தவர்கள் பல நூற்றாண்டுகளாக மதம் ஒன்றும் இல்லாமலே இருந்துவந்தார்கள். எப்படியிருந்தாலும் நமது காலம் ஒரு புதிய காலமேயாகும். உலக சந்தர்ப்பங்கள் முழுவதும் மாறிவிட்டன. இருபதாவது நூற்றாண்டில் என்ன நேரிடுமென்று யாறும் கூறமுடியாது. மதத்தைப் போற்ற நமது தலைமுறையில் அரசியல் நிர்பந்தத்தையும் உண்டாக்க முடியாது. சென்ற பதினைந்து நூற்றாண்டுகளாக அப்படித்தான் நடந்துவருகிறது. மதப் பற்று மனிதனுக்கு இயற்கையல்லவென்பதைக் கண்டுபிடித்தோம். அநேகர் மதத்தை விட்டு விட்டார்கள். மதப் புத்தகத்தை யாரும் படிப்பதில்லை. நமது மதப் புஸ்தகங்களிலும் பத்திரிகைகளிலும் மதக் குறிப்புகள் காணப்படுவதில்லை. மேடைகளில் மதங்கள் கேவலமாய்ப் பேசப்படுகின்றன. அதைக் கேட்டு வேடிக்கைப் பார்ப்பவர்கள் நகைக்கிறார்கள். ஆடும் படக் காட்சிகளில் மதத்தை ஒப்புக்குச் சேர்த்திருக்கிறார்கள். அது கண்டு ஜனங்கள் புன்சிரிப்புக் கொள்ளுகிறார்கள். மதம் மெதுவாக இறந்துகொண்டிருக்கிறது.

அதனால் வாழ்வும் மனமும் கெட்டுப்போகுமா? மதத்தை அலக்ஷியம் செய்த எண்பது லட்சம் லண்டன் வாசிகளுடைய மனமும் வாழ்வும் கெட்டுப்போகவில்லை. இவர்களைப்பற்றி நான் நன்கு அறிந்திருக்கிறேன். இவர்களுக்கு மதம் கிடையாது. இவர்கள் மதத்தைப் பற்றியும் நினைப்பதில்லை. கெட்டுப்போகுமென்பதும், அவநம்பிக்கையால் அபாய மென்பதும் சாதுர்யமான கட்டுக் கதைகளேயாகும். வாழ்வு நல்லது. அது ருசிகரமானது. லட்சாதி லட்சம் பேர் அனுபவித்தானந்திக்க முடியும். பக்தி மிகுந்த முற்காலத்தில் அவர்கள் அடைபட்டுக்கிடந்தார்கள். மக்களின் விருப்பத்திற்கேற்ப கலைகளிருக்கின்றன. அறிஞர்களுக்கு விஞ்ஞானம் இருக்கிறது; இலக்கியம் இருக்கிறது, பெருமை மிக்க தேசமும் கடலும் இருக்கின்றன. நகரத்தில் 1001-வேடிக்கை வினோதங்கள் இருக்கின்றன. மக்கள் வாழ்வு வேகமாய் மாறுதலடைந்து வருகிறது. சரித்திரத்தில் புதிய அத்தியாயம் ஆரம்பமாகிறது. ஆகவே மதமின்றி மக்கள் வாழமுடியாது என்று மதப்பிரசாரகர்கள் பயப்படவேண்டியதில்லை.

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - செப்டம்பர் 1935**



RangaRakes tamilnavarasam.com

# கடவுள் சக்தி

## விதண்டாவாதம்

நமது கடவுள்கள் சக்தி மிகவும் அதிசயமானதாகும். அதாவது நமது கடவுள்கள் உலகில் மக்களை அக்கிரமங்கள் செய்யவொட்டாமல் தடுக்க முடியாதாம்.

* * *

ஆனால், மக்கள் சந்து பொந்துகளிலும், மூலை முடுக்குகளிலும் யாருக்கும் தெரியாமல் செய்த குற்றங்களையும் மனதினால் நினைத்த அக்கிரமங்களையும் பார்த்தும் ஒன்று கூட விடாமல் பதியவைத்தும், அதற்குத் தகுந்தபடி தீர்ப்புகூறி, தண்டனை கண்டனை கொடுக்கவும், அதற்காக நரகத்தில் ஆழ்த்தி வைக்கவும், மற்றும் பல ஜன்மங்கள் கொடுத்து, அவைகளில் கஷ்டப்படுத்திவைக்கவும் முடியுமாம்.

* * *

நமது கடவுள்கள் சக்தி எவ்வளவு அதிசயமானது!

* * *

அதிலும் மகமதியர்களுடைய கடவுளும், கிறிஸ்தவர்களுடைய கடவுளும் மனிதன் செத்தபிறகு, எல்லார் குற்றம் குறைகளையும் ஒன்றாய் பதியவைத்திருந்து, ஏதோ அதற்கு இஷ்டப்பட்ட நாளில் அதாவது, ஒரு குறிப்பிட்ட நாளில் எல்லா மக்களையும் அவர்கள் புதைக்கப்பட்ட புதை குளியிலிருந்து எழுப்பிக் கணக்குப்பார்த்து ஒரே அடியாய் தீர்ப்புச் சொல்லி விடுமாம்.

* * *

இந்துக்களுடைய கடவுள்கள் அதாவது, சைவர்கள் கடவுள்களும், வைணவர்களுடைய கடவுள்களும் ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனி யாகவே அவ்வப்போது அவனைச் சுட்டு எரித்தபின் கண்களுக்குத் தெரியாத அவனுடைய ஆத்மாவை பிடித்து வைத்து, அதற்கு ஒரு சூட்சம சரீரமும் கொடுத்து அந்த சரீரத்திற்கு அதற்குத்தக்க தண்டனை கொடுக்குமாம். அது பெரிதும் அடுத்த ஜென்மத்தில் இன்னின்ன ஜந்துவாய் பிறந்து, இன்னின்ன பலன் அனுபவிக்கவேண்டும் என்று கட்டளையிடுமாம்.

* * *



கிறிஸ்துவ சமயத்தில் உள்ள கடவுள் சக்திப்படி எல்லா மனிதனும் பாவம் செய்தேதான் தீருவானாம்.

* * *

அந்தப் பாவம் ஏசுகிறிஸ்து மூலம்தான் மன்னிக்கப்படுமாம்.

* * *

மகம்மதிய மார்க்கப்படி மகம்மது நபிகள் மூலமாகத்தான் மன்னிக்கப்படுமாம்.

* * *

சைவ சமயப்படி சிவன் மூலமாகத்தான் மன்னிக்கப்படுமாம். அவருக்குத்தான் பரத்துவம் உண்டாம்.

* * *

வைணவ சமயப்படி விஷ்ணு மூலமாகத்தான் முடியுமாம். விஷ்ணுவுக்குத்தான் பரத்துவம் உண்டாம்.

* * *

ஆனால் சைவ வைணவ சமயங்கள்படி மக்கள் பாவமே செய்வது மாத்திரமல்லாமல் புண்ணியமும் செய்யக்கூடுமாம்.

* * *

அதற்காக சொர்க்கம், வைகுண்டம், கைலாசம் என்கின்ற பதவிகள் உண்டாம்.

* * *

அப்புறம் ஒவ்வொரு மனிதனுக்கும் ஜன்மங்களும் உண்டாம்.

* * *

இந்த அபிப்பிராயங்கள் எவ்வளவு குழப்பமானதாய் இருந்தாலும் பார்ப்பானுக்கு அழுதால் மேல் கண்ட மோக்ஷங்களோ அல்லது நல்ல ஜன்மமோ எதுவேண்டுமோ அது கிடைத்து விடுமாம்.

* * *

ஆகவே பொதுவாகக் கடவுள்களுடைய சக்திகள் அளவிட முடியாது என்பதோடு, அறிந்துகொள்ள முடியாது என்பது மாத்திரமல்லாமல் அதைப்பற்றியெல்லாம் நாம் சிந்திப்பதோ சிந்திக்க முயற்சிப்பதோ மகா மகா பெரிய பெரிய பாவமாம்.

* * *



RangaRakes tamilnavarasam.com

அதாவது, எந்தப் பாவத்தைச் செய்தாலும், எவ்வளவு பாவத்தைச் செய்தாலும், அவைகளுக்கெல்லாம் பிராயச்சித்தமும் மன்னிப்புமுண்டாம்.

* * *

ஆனால் கடவுளைப்பற்றியோ அவரது சக்தியைப்பற்றியோ ஏதாவது எவனாவது சந்தேகப்பட்டுவிட்டானோ பிடித்தது மீளாத சனியன்.

* * *

அவனுக்கு மன்னிப்பே கிடையாது. கிறிஸ்துநாதரைப் பிடித்தாலும் சரி, மகம்மது நபி பெருமானைப் பிடித்தாலும் சரி அல்லது இவன் விஷ்ணு, மகேசன் ஆகிய எவரைப் பிடித்தாலும் சரி, ஒரு நாளும் அந்தக் குற்றம் (எந்தக் குற்றம் கடவுளை சந்தேகிக்கப்பட்ட குற்றம்?) மன்னிக்கப்படவே மாட்டாது.

* * *

ஆனால், இந்த எல்லா கடவுள்களுக்கும் அவர்களால் அனுப்பப்பட்ட பெரியார்களுக்கும் அவர்களுடைய அவதாரங்களுக்கு கடவுளைப்பற்றியும், அவர்களுடைய சக்தியின் பெருமைகளைப்பற்றியும் மக்களை சந்தேகப் படாமல் இருக்கும் படிக்கோ, அல்லது அவநம்பிக்கைப்படாமல் இருக்கும் படிக்கோ செய்யவிக்க முடியாதாம்.

* * *

ஏனென்றால், அவ்வளவு நல்ல சாதுவான சாந்தமான கருணையுள்ள சர்வ சக்தி பொருந்திய சர்வ வியாபகமுள்ள கடவுள்களாம்.

* * *

பாவம் நாம் ஏன் அவற்றை தொந்திரவு செய்ய வேண்டும்.

* * *

எல்லாம் கடவுள் செயல் என்று சும்மா இருந்து விடுவோம்.

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - செப்டம்பர் 1935**



# திருவள்ளுவர் நாஸ்திகர்

## கடவுள் ஒழிய வேண்டும்

பிச்சை எடுத்து வாழும்படியாக மக்களை கடவுள் சிருஷ்டித்து இருந்தால் கடவுள் ஒழிய வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். அதாவது,

**''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்''**

என்று 1062 வது குறளாகச் சொல்லி இருக்கிறார்.

இன்று இவ்வுலகில் பிச்சை எடுத்து வாழும் மக்கள் எந்த மதத்தினராயினும் எந்தக் கடவுளை வணங்குபவராயினும் அவரவர்கள் அந்தக் கடவுளால் பிரப்பு விக்கப்பட்டவர்களாகத்தான் இருக்க வேண்டுமே ஒழிய அவனவன் தாய் தகப்பன் முயற்சியால் பிறந்து அவனவன் புத்திக் கேட்டால் சோம்பலால் குறும்புத்தனத்தால் பிச்சை எடுக்கிறார்கள் என்று எந்த ஆஸ்திகனும் சொல்லமாட்டான்.

அப்படிச் சொல்வாராயின் எந்த ஆஸ்திகனும் பிச்சைக்காரர்களுக்கு தருமம் செய்ய முன் வரவுமாட்டான். அது மட்டுமா, எந்த வேதமும் சாஸ்திரமும் பிச்சைக்காரர்களுக்கு தருமம் செய்யும்படி சொல்வும் முன்வராது. அவ்வளவோடு மாத்திரமா!

எந்தக் கடவுளும், பிச்சைக்காரர்களுக்கு தருமம் செய்தவர்களுக்கு, மோக்ஷமோ, சன்மானமோ கொடுக்கவும் முன்வராது.

ஆகவே, பிச்சைக்காரர்களும் அவர்களது தொழில்களும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது என்பதுதான் அவர்கள் முடிவு.

அதனால்தான், திருவள்ளுவர் பொய்யா மொழிப் புலவர் ''பரந்து கெடுக உலகம் இயற்றியான்'' என்று துணிவாய்ச் சொல்லிவிட்டார்.

தரித்திரத்தையும், ஏழ்மையையும், பிச்சை எடுக்கும் தன்மையையும் ஒழிக்க வேண்டுமானால் கண்டிப்பாகக் கடவுள் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்று சமதர்மவாதிகளும் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுவதால் திருவள்ளுவர் நாஸ்திகராகும் போது சமதர்மவாதிகள் நாஸ்திகர்களாவதில் எந்த உலகமும் முழுகிப் போய்விடாது.

ஆதலால்தான், ஏழ்மையையே ஒழிக்கப் பாடுபடுகின்ற தேசமெல்லாம் முதலில் கடவுளை ஒழிக்கப் பாடுபடும் வேலையையே மேற்போட்டுக் கொண்டு வருகின்றன போலும்.

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - செப்டம்பர் 1935**



RangaRakes
tamilnavarasam.com

# கீழ் மேல்

**என் கை கீழே: உன் கை மேலே**

**ஒரு பார்ப்பன யாசகக்காரன்:-** ஐயா பிரபுவே யேதாவது தர்மம் கொடுங்கள் உங்களுக்கு மகா புண்ணியமுண்டு.

**பிரபு:-** போம் வோய், போய் எங்காவது பாடுபடுமேன். மண்ணு வெட்டினாலும் தினம் 8-அணா சம்பாதிப்பீரே. கொட்டாப்புளியாட்டமாய் இருந்துகொண்டு வடக்கயிறாட்டமாக பூணூல் போட்டுக் கொண்டு பிச்சைக்கு வறீரே வெட்கமில்லையா?

**யாசகக்காரன்:-** என்னமோ பிரபுவே தங்கள் கை மேலாகி விட்டது, என் கை கீழாகிவிட்டது என்ன வேண்டுமானாலும் தாங்கள் சொல்லக்கூடும்.

**பிரபு:-** மேலென்ன, கீழென்ன. இதற்காக நீர் ஏன் பொறாமைப்படுகிறீர். கடையில் 10-அணா போட்டால் ஒரு ஜர்மன் (க்ஷவரக்) கத்தி கிடைக்கும். வாங்கிக் கொண்டுபோய் வாய்க்கால் கரையில் உட்காரும்; எத்தனை பேர் தலைக்கு மேல் உம்ம கை போகுது பாரும். உமக்கென்னத்துக்கு உம்ம கைக்கு மேல் நம்ம கை போகிறதே என்கின்ற பொறாமை.

**யாசகக்காரன்:-** சரி நான் போய் வருகிறேன். பகவான் இப்படி தங்களைச் சொல்லவைத்தான், நம்மளைக் கேள்க்க வைத்தான். தங்களை நொந்து என்ன பயன்.

**பிரபு:-** அப்படியானால் அடியுமே அந்த பகவானை. போம் போம் சோம்பேரியே.

பகுத்தறிவு (மா.இ.) - உரையாடல் - செப்டம்பர் 1935



# கிருஷ்ணன் – அர்ஜுனன் சம்வாதம்

**- சித்திரபுத்திரன்**

**அர்ஜுனன்:-** சகேசீனாம் நிகேசீனாம் காகதிபுருஷோத்தமா?

**கிருஷ்ணன்:-** அஹம் சந்யாசி ரூபேணாம் புரோஷ்டிதாம் தனஞ்செயா! இதன் பொருள்.

**அர்ஜுனன்:-** ஹே புருஷோத்மா! தலையில் மயிருடனும், மயிரில்லாமல் மொட்டத் தலையுடனும் இருக்கும் (படியாய் நீ செய்திருக்கின்ற) விதவைகளுக்கு என்ன கதி?

**கிருஷ்ணன்:-** ஹே அர்ஜுனா! நானே சந்நியாசியாக பூமியில் அவதரித்து அவர்களின் ஆசையைப் பூர்த்தி செய்வேன்.

**அர்ஜுனன்:-** ஹே கிருஷ்ணா! உன்னை ஒரு பெரிய கடவுளென்று சொல்லிவிட்டு பிறகு நீ இப்படிச் செய்தாய், அப்படிச் செய்தாய், கண்ட ஸ்திரீகளுடன் கலந்தாய், உதைபட்டாய், அடி பட்டாய், அழுவாரற்ற பிணமாய் செத்தாய் என்றெல்லாம் எழுதி வைத்திருக்கின்றார்களே இதைப்பற்றி உனக்கு சிறிதும் அவமானமில்லையா?

**கிருஷ்ணன்:-** ஹே அர்ஜுனா! அதைப்பற்றி நீ சிறிதும் கவலைப்பட வேண்டாம். இதெல்லாம் எனது திருவிளையாடலென்றும் இவற்றைப் படித்த கேட்ட ஒவ்வொருவரும் இதனைக் கொண்டாட வேண்டுமே ஒழிய குற்றம் சொல்லக்கூடாதென்றும், குற்றம் சொன்னால் பாவமென்றும், நரகமென்றும் அவற்றை எழுதின அவர்களே எழுதி இழிவை அடக்கி விட்டார்கள். ஆதலால் நமக்கு ஏன் கவலை?

**அர்ஜுனன்:-** கிருஷ்ணா அதுதான் போகட்டும். நம்பமுடியாத அநேக பொய்யையும், புழுகையும் சொல்லி நீ சின்னக்குழந்தையாயிருக்கும்போது பெரிய முலையை உருஞ்சி சூப்பையாக்கி விட்டாயென்றும், மலையை சுண்டு விரலால் குடையாய்ப் பிடித்தாய் என்றும் 10 ஆயிரம் பெண்களை ஏக காலத்தில் கலந்தாய் என்றும் இப்படியெல்லாம் எழுதி இருக்கின்றார்களே, இந்தப் புளுகுகளை எவன் நம்புவான்?

**கிருஷ்ணன்:-** ஓ! அர்ஜுனா அதைப்பற்றியும் நீ கவலைப்படாதே. ஏனென்றால் அந்தப்படியெல்லாம் எழுதினவர்கள் இவற்றையெல்லாம்



RangaRakes tamilnavarasam.com

எவன் நம்பவில்லையோ அவன் நாஸ்திகன் என்றும் அவனை அரசன் தண்டிக்க வேண்டுமென்றும் அரசன் தண்டிக்காவிட்டாலும் அவன் நரகத்துக்குப் போகவேண்டும் என்றும் எழுதி மக்களை மிரட்டிப் பயப்படுத்தி வைத்திருக்கின்றார்கள். ஆதலால் எவனும் தைரியமாய் தான் இவற்றை நம்புவதில்லை என்று வெளியில் சொல்ல வரமாட்டான்?

**அர்ஜுனன்:-** அதென்ன கிருஷ்ணா பாவம் என்றாலென்ன? நரகம் என்றால் என்ன? எனக்கு ஒன்றும் புரியவில்லையே.

**கிருஷ்ணன்:-** அந்தப்படி புரியாமலிருக்கின்றதாகவே பார்த்துதான் சொல்லி இருக்கின்றார்கள்.

**அர்ஜுனன்:-** அதென்ன புரியாததைச் சொன்னால் என்ன பயன்.

**கிருஷ்ணன்:-** ஒருவனுக்குத் தெரியாததையும், புரியாததையும் சொன்னால்தான் மனிதர்கள் பயப்படுவார்கள். புரியும்படியானதாக எதைச் சொன்னாலும் திருப்பிக் கேழ்க்க ஆரம்பித்து விடுவார்கள். ஆதலால்தான் அது செய்தால் பாபம், இது செய்தால் பாவம், நினைத்தால் பாவம் என்றெல்லாம் மிரட்டி வைத்திருக்கின்றார்கள்.

**அர்ஜுனன்:-** இந்த மாதிரி எத்தனை நாளைக்கு ஏமாற்ற முடியும்?

**கிருஷ்ணன்:-** முடிந்த வரையில் முடியட்டும்.

**அர்ஜுனன்:-** இந்தப் புரட்டு வெளியாய் விட்டால் அப்புரம் என்ன செய்வது?

**கிருஷ்ணன்:-** அப்புரம் வேறு புறட்டை யுண்டாக்கிக்கொள்ள அவர்களுக்குத் தெரியும்.

**அர்ஜுனன்:-** அதென்ன புரட்டு?

**கிருஷ்ணன்:-** அரசியல் புரட்டு.

**அர்ஜுனன்:-** அதுவும் வெளியாகி விட்டால்.

**கிருஷ்ணன்:-** அதற்குள் பார்த்துக் கொள்ளுவோம். இந்த இரண்டு புரட்டும் மண்டுகள் நிறைந்த இந்தியாவுக்கு சுலபத்தில் வெளியாய் விடவா போகின்றது?

**அர்ஜுனன்:-** சுயமரியாதைக்காரர்கள் இந்த இரண்டையுமே சேர்த்து வெட்ட வெளியாக்கிக் கொண்டு வருகின்றார்களே சீக்கிரத்தில் வெளியாய் விடாதா?

**கிருஷ்ணன்:-** அவர்களால் சுலபத்தில் முடியாது. ஏனென்றால் அந்த இரண்டு புரட்டின் மேல் தங்கள் வாழ்வையே ஏற்பாடு செய்து கொண்ட அநேகர் சுயமரியாதைக்காரர்களுக்குள்ளாகவே இருக்கிறார்கள். அந்தப்படி



மீறி அவர்கள் எல்லாம் தங்கள் வாழ்க்கைக்குக் கேடுவந்தாலும் வரட்டு மென்று துணிந்துக் கட்டுப்பாடாய் வேலை செய்தாலும் கூட அது தமிழ் நாட்டிலும் மலையாளத்திலும் தான் செல்லும். இந்தியாவில் மற்ற பாகங்கள் எவ்வளவோ இருக்கின்றன.

**அர்ஜுனன்:-** எப்படியானாலும் என்றைக்கிருந்தாலும் இந்த இரண்டு புரட்டுக்கும் ஆபத்து ஆபத்துதான்.

**கிருஷ்ணன்:-** அந்தக்காலத்தில் பார்த்துக்கொள்ளலாம். நடந்தவரை நடக்கட்டும்.

பகுத்தறிவு (மா.இ.) - உரையாடல் - செப்டம்பர் 1935



RangaRakes tamilnavarasam.com

# தர்மராஜ்ய தர்பார்

## ஒரு கனவு

**– யார் எழுதினால் என்ன?**

1.9.35ந்தேதி ''குடி அரசில்'' ''தர்மராஜ்ய விளம்பரம்'' என்று ஒரு கட்டுரையும், 15.9.35 ந் தேதி ''குடி அரசில்'' ''தர்மராஜ்ய ஸ்தாபனம்'' என்ற கட்டுரையும் எழுதி இருந்தேன். இப்போது ''தர்மராஜ்ய தர்பார்'' என்ற கனவைப் பற்றி எழுதுகிறேன்.

தர்மராஜ்ய பூபதி, ராமராஜ, கிருஷ்ண தேவ, மஹாவீர, புஷ்யமித்ரவர்மன், ஆடையாபரண அலங்கிருதனாய், அப்ஸர ஸ்தீரிகள் முன் செல்ல, நாற்படைகள் அணி வகுத்து நிற்க, வேதப்பிராமணர் ஆசி கூற, பல சிற்றரசர்கள் புடை சூழ, தர்பார் மண்டபத்தில் பிரவேசித்தார். சபையில் இருந்த எல்லோரும் எழுந்து நின்று நமஸ்கரித்து, ''ஜயவிஜயீபவ! ஜயவிஜயீபவ!! ஜயவிஜயீபவ!!!'' என்று ஜய கோஷஞ் செய்தனர். இரத்தினங்கள் ஒளி வீச ஒய்யார நடை நடந்து, அரசன் சிங்காதனத்தமர்ந்தனன்.

**மந்திரிகள்:** வந்தனந் தந்தோம் மஹாராஜ்!

**அரசன்:** கல்யாண்! கல்யாண் மந்திரிகளே!

**மந்:** ராஜபூபதி! நமது தர்மராஜ்யம் ஸ்தாபனமாகி இன்றைக்கு இரண்டு தினங்களாகின்றன. நேற்றைய தர்பாரில் அரசியல் விஷயங்களைக் கவனிக்கப் போதிய நேரமில்லாததால் பரத நாட்டிய விமர்சனத்தோடு தர்பார் கலைந்தது. இன்றைய தர்பாரில் தங்கள் முன்னிலையில் சங்கீதம், பரதநாட்டியம், இவ்விரண்டு கலைகளிலும் தேர்ச்சி பெற்ற பாரசீக நாட்டுப் பெண்மணி ஒருத்தியும், காஸ்மீகர நாட்டுக் கன்னியர் இருவரும் தங்கள் கலைத் திறமைகளைக் காட்ட ஆவலோடு தங்கள் உத்திரவை எதிர்பார்த்திருக் கிறார்கள். அரசாங்க விஷயங்கள் சில அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டியிருக்கின்றன. தங்கள் இஷ்டம் எதுவோ தெரிவிக்க வேண்டுகிறோம்.

**அர:** பிரதானீ! நமது குடிபடைகளின் கலைத் தேர்ச்சியைக் கவனித்துச் சன்மானிப்பதும் நமது கடமையல்லவா? அரச காரியங்களில் சேர்ந்ததல்லவா? ஆகையால் முதலில் சங்கீத, நாட்டிய விற்பன்னிகளின் பயிற்சி நடக்கட்டும்.

ஆஸ்தான ஆச்சார்ய ஸ்வாமிகள் குறுக்கிட்டு,



''அரசே! நான் சொல்வதைக் கவனியும்! நம்முடைய தர்மராஜ்யம் இன்னும் வலுப்பெறவில்லை. ஆரம்பத்திலேயே, அரசன் தேச காரியங்களைக் கவனியாமல் ஆடல் பாடல்களில் காலங்களிக்கிறான் என்று ஜனங்கள் சொல்ல இடந்தரலாகாது. மேலும் நம்முடைய தர்மராஜ்யத்திற்கு ஆரம்ப காலத்தில் பல விரோதிகள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் ஒழித்து ராஜ்யத்தைப் பலப்படுத்துவது முதல் கடமை. இது விஷயமாக உள்நாட்டு மந்திரியார் தேசத்தில் பல மாகாணங்களிலிருந்து விசேஷ வர்த்தமானங்களை அறிந்து சில திட்டங்களைச் சமூகத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறக் காத்திருக்கிறார். ஆகையால், முதலில் வழக்கம் போல் தேச விசாரணை செய்து நீதி செலுத்திப் பின் ஆடல் பாடல்களைக் கவனிக்கலாம்.''

**அர:** குருமகாராஜ்! தங்களிஷ்டம் போல் நடக்கின்றேன். பிரதான்! நமது தேசத்தில் மாதமும் மாரி பெய்து குடி ஜனங்களிட்ட பயிர்கள் தழைத்தோங்கி க்ஷேமமாயிருக்கின்றனரா?

**மந்:** அரசே! வருணபகவானது அனுக்கிரகத்தால் மாதமழை குறைவின்றிப் பெய்கின்றது. குடிகள் யாதொரு குறைவுமின்றி வாழ்கின்றனர்.

**அர:** தேவலாயங்களில் திரிகால பூஜைகள் தினந்தோறும் தவறாமல் நடக்கின்றனவா?

**மந்:** நாட்டிலுள்ள சர்வ தேவாலயங்களிலும் காலமுறை தவறாமல் பூஜைகள் நடந்து வருகின்றன.

**அர:** வேதப் பிராமணர் வேதாகமங்களை ஓதி வருகின்றனரா? அவர் செய்ய வேண்டிய, யாகயெக்ஞாதிகள் யாதொரு இடையூறின்றி நடத்தப் படுகின்றனவா?

**மந்:** அரசே! தங்களது ஆக்ஞா சக்கரத்தின் கீழ், அந்தணர்கள் யாதொரு குறையும் இன்றி யாகயெக்ஞங்களைச் செய்து கொண்டும், வேதமோதிக் கொண்டும் வருகின்றனர். இவ் விஷயத்தில் நாங்கள் சர்வ ஜாக்கிரதையாக நடந்து வருகிறோம்.

**அர:** சிற்றரசர்கள் தாங்கள் கட்ட வேண்டிய பகுதிப் பணங்களைச் சரிவரக் கட்டி வருகிறார்களா? பொக்கிஷம் நிறைந்துள்ளதா. பொக்கிஷக் கணக்குகளை அவ்வப்போது பரிசோதித்து வருகிறீர்களா?

**மந்:** பிரபோ! சிற்றரசர்களின் கப்பங்கள் தடையின்றி வந்து சேர்கின்றன. பொக்கிஷத்திற்கு போதிய திரவியம் இருக்கிறது. பொக்கிஷக் கணக்குகளும் சரியாய் இருக்கின்றன.

**அர:** நமது நாட்டில் உள்ள தர்மசத்திரங்களில் எல்லாம், விதிப்படி பிராமண போஜனம் நடந்து வருகிறதா?



RangaRakes tamilnavarasam.com

**மந்:** ஹிமோத்கிரி முதற்கொண்டு, கன்னியாகுமரி வரையுள்ள தங்கள் நாட்டில் ஆங்காங்கு ஏற்பட்டுள்ள சத்திரங்களில் எல்லாம் அரசிறைப் பணத்தில், அந்தணாளர்களுக்குத் தேவையான எல்லாம் குறைவின்றி அளிக்கப்பட்டு வருவதாக ஆங்காங்குள்ள மாகாணத் தலைவர்கள் தினந்தினம் அறிக்கை செய்து வருகின்றனர். இது விஷயத்தில் அசிரத்தைக் காட்டுபவர்களைக் குறித்து அவ்வப்போது கண்டிப்பான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஆகையால் பிராமணோத்தமர் களுக்கு யாதொரு குறைவும் நேர்வதில்லை மஹராஜ்!

**அர:** வைசியர்கள் தங்கள் குல நீதிப்படி தங்கள் கடமைகளைச் செய்து வருகின்றனரா?

**மந்:** வைசிய ஜாதியார் எல்லோரும் தங்கள் நீதிக்குட்பட்டுக் குல தருமங்களைக் கடைப்பிடித்து நடந்து வருகின்றனர்.

**அர:** நான்காம் வருணத்தோராகிய சூத்திரர்கள் தங்கள் ஜாதித் தர்மப்படி மற்ற மூன்று வருணத்தவர்களுக்கும் வேண்டிய ஊழியங்களைச் செய்து வருகின்றனரா?

**மந்:** அவ்வாறே நடந்து வருகின்றனர். ஆனால் சிற்சில இடங்களில் மட்டும் ஒரு சிலர் முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றனர். மிலேச்சர்கள் அரசாட்சியில் எல்லோரும் சமம் என்று செய்து வந்த வழக்கத்தினால் இம்மாதிரி சிலர் பேசி வருகின்றனர். நாளடைவில் நமது பிராசீன தர்மம் பிரகாசிக்கப் பிரகாசிக்க எல்லாம் சரிப்பட்டு விடும் மஹராஜ்!

**அர:** சந்தோஷம் மந்திரிகளே! வாழ்க வந்தணர் வாழ்க வந்தணர் வானவர் ஆனினம்.... அச்சமயம் உள்நாட்டு மந்திரி எழுந்து ''மஹராஜ்'' இப்பொழுதுதான் தென்னாட்டில் நமது சிற்றரசர் சத்தியமூர்த்தியாரிடமிருந்து ஒரு தூதன் மிக முக்கியமானதும் - அவசரமானதுமான தகவல்களைக் கொண்டு வந்து சேர்ந்திருக்கிறான். அவற்றைக் கேட்டருள வேண்டும்.

**அர:** நீரே விஷயத்தைச் சீக்கிரம் சொல்லும்.

**உ.நா.மந்.:** நமது தர்மராஜ்ய ஆதிபத்தியத்தைத் தேச மஹாஜனங்கள் எல்லோரும் சந்தோஷமாக வரவேற்கிறார்கள். ஆனால் தென்னாட்டில் மட்டும் சில இராக்ஷச வார்சுகள் தங்கள் அரசாட்சிக்கு உட்படுவதில்லை யென்றும், தர்மராஜ்யத்தை வெறுப்பதாகவும், நமது சட்டத்திட்டங்களுக்குப் பணிவதில்லையென்றும் பகிரங்கமாகச் சொல்லிக் கொண்டு தென்னாட்டு ஜனங்களிடம் ராஜத் துவேஷப் பிரசங்கங்களைச் செய்துகொண்டு வேதத்தையும், மதத்தையும், நீதி சாஸ்திரங்களையும் நிந்தித்து ஜனங்களை அராஜகத்திலும், நாஸ்திகத்திலும் செலுத்தி வருகின்றனர்.

**அர:** ஆ! அவ்வளவு தைர்யமா அவர்களுக்கு!



**உ.நா.மந்.:** ஆம் மஹராஜ்! அவ்வசுரப்படை நாளுக்கு நாள் பெருகி வருவதாகவும், அவர்களின் தலைவர்களாகிய பொப்பிலி அரக்கன், ஈரோட்டு ராம ராக்ஷதன், கோவை ஷண்முகாசுரன், சென்னை ராமாசுரன், மதுரை சௌந்திரபாண்டியாசுரன் முதலானவர்களும், தலைவிகளாகிய நீலி, காமி, குஞ்சி, பூரணி முதலானவர்களும், மிக்க நெஞ்சத் துணிவும், எதற்கும் அஞ்சாத வீரமும் உடையவர்களென்றும், அவர்கள் செய்கின்ற அட்டூழியங்களை ஆஸ்திக ஜனங்களாகிய சனாதனிகளும், முக்கியமாகத் தேவர்களும், பூசுரர்களும் சகிக்க முடியாமல் தர்மராஜ்ய பூபதியாகிய ராமராஜாவிடம் சரண் புகுவதாகத் தெரிவிக்கிறதாகவும், சிஷ்டர்களாகிய சற்ஜனர்களைக் காப்பாற்றி ரக்ஷிக்க முன் வரவேண்டுமென்று கோருவதாகவும் நமது சிற்றரசர் தெரிவிக்கின்றார்.

**அர:** அப்படியானால் நாம் செய்ய வேண்டியதென்ன? மந்திரி பிரதானிகளே, சபையோர்களே, இவ்விஷயத்தில் உங்கள் கருத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

**மந்:** மஹராஜ்! இந்த ராக்ஷசக் கூட்டத்தை வளரவிட்டால் நமது ராஜ்யத்திற்கே ஆபத்து வரும் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் இவ்வசுரர்களையும் அவர்கள் தலைவர்களையும் முதலில் அழித்து ஒழிக்க வேண்டியது நமது கடமை. துஷ்டர்களை சம்ஹாரம் செய்வது ராஜ தர்மமும் ஆகும். தென்னாட்டில் நமது சிற்றரசர் இடத்துள்ள சேனையால் இந்த ராக்ஷசப் படையுடன் போர் செய்து ஜயிக்க முடியாது. ஆகையால் இங்கிருந்து ஒரு சைன்யத்தை நமது வீரர் சேனாதிபதி சர்தார்சிங் தலைமையின் கீழ் உடனே அனுப்பி வைக்க வேண்டும் மஹராஜ்!

**அர:** ஆம், அது நல்ல யோசனைதான் அப்படியே செய்வோம். இன்னும் இரண்டு தினங்களில் தர்ம ரக்ஷண்யா சேனையுடன் சர்தார் இங்கிருந்து புறப்படவுள்ளார் என்றும், ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம் என்றும் நமது சிற்றரசருக்குத் தேறுதல் சொல்லித் தென்னாட்டுத் தூதனை இப்போதே அனுப்பி வைக்க வேண்டியது, குருதேவ்! இந்த ராக்ஷசர்களை யழிக்க இன்னும் என்ன முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டும். அதையும் தெரிவிக்கக் கோருகிறேன்.

**குருதேவ:** அரசே, சேனையை அனுப்பி நமது ராணுவப் பலத்தைக் கொண்டு துஷ்டர்களாகிய அவ்வசுர கூட்டத்தை அறவே ஒழித்துவிடுவது தான் சரியான முறை என்றாலும், உலக நிந்தனை ஏற்படாதபடி, சில முறைகளைக் கையாள வேண்டும். ராக்ஷசர் செய்யும் குற்றங்களை நமது தர்பாரில் விசாரித்து அவர்கள் பேரில் ஏற்படும் குற்றங்களையும், அக் குற்றங்களுக்குத் தர்மசாஸ்திரங்களில் விதிக்கப்படும் தண்டனைகளையும், நாடெங்கும் விளம்பரப்படுத்த வேண்டும். இவ்விஷயமாக நான் மந்திரிகளுடன் கலந்து யோசித்து ஒரு அறிக்கையைத் தயாரித்திருக்கிறேன்.



RangaRakes tamilnavarasam.com

அந்த அறிக்கையை உள்நாட்டு மந்திரி இப்போது சமூகத்தில் வாசித்துக் காட்டுவர். பின் இதைத் தேசத்திலுள்ள பத்திரிகைகளில் எல்லாம் பிரசுரிக்கப்படும்.

**உ.நா.மந்.:** அரசே! நமது குருதேவருடைய யோசனையின்படி தயாரித்திருக்கும் அறிக்கையாவது:- வேத சம்மதமாகவும், கடவுள் சம்மதமாகவும் ஸ்தாபிக்கப்பட்ட நமது தர்ம ராஜ்யத்திற்கும், நமது தேசப் பிராசீன தர்மத்திற்கும், வர்ணாஸ்ரம தர்மத்திற்கும் எதிரிடையாகப் பிரசாரஞ் செய்து, தேவர்களுக்கும், பூசுரர்களுக்கும், வேத வேள்விகளுக்கும் விரோதமாக ஜனங்களைக் கிளப்பிவிட்டு, நாட்டில் குழப்பஞ் செய்து கொண்டு நாள்தோறும் பிரம்மத் துரோகம், ராஜத் துரோகம், தேசத் துரோகம், தர்மத் துரோகம் முதலான குற்றங்களைச் செய்து கொண்டும், நமது சத்பிரஜைகளாகிய சனாதனிகளையும், வர்ணாஸ்ரமிகளையும் சதா இழிவுபடுத்தியும் இம்சித்தும் வருவதாகத் தென்னாட்டிலுள்ள நமது சிற்றரசர் அறிக்கை செய்வதாலும், மேற்படி குற்றங்கள் முற்றிலும் உண்மையென்று நமது குருதேவர்களும், ரிஷீஸ்வரர்களும், மந்திரி பிரதானிகளும், சமஸ்தான புரோகிதர்கள், ஜோஸ்யர்கள், நிமித்திகர்கள், ஒற்றர்கள் முதலானவர்களால் ருஜுப்படுத்தப்படுவதாலும், கீழ்க்கண்ட அரக்கர்களுக்குத் தர்ம சாஸ்திரங்களில் கூறியபடி கீழ்க்கண்ட தண்டனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் எல்லோரும் இன்று முதல் தர்மராஜ்ய பிரஸ்டர்கள் ஆவார்கள். இவ்வரக்கர்களுக்காவது, இவர்களைச் சேர்ந்தவர்களுக்காவது, நமது நாட்டிலுள்ள பிரஜைகள் ஒருவரும் யாதொரு சகாயமும் செய்யக்கூடாது. இது அரசன் ஆணை. தர்மராஜ்ய விரோதிகளான அரக்கர்களை அழிப்பதற்கு ஒத்தாசை புரியும் நமது பிரஜைகளுக்கு அவரவர் சேவைக்குத் தக்கபடி சன்மானஞ் செய்யப்படும். தேச விரோதிகளென்று பிரஸ்டம் செய்யப்பட்ட அரக்கர்களைப் பற்றிய விவரமும் அவர்கள் ஒவ்வொருவரையும் வீழ்த்துபவர்களுக்கு ஏற்படுத்தியுள்ள சன்மானங்களையும் கீழே குறிப்பிட்டிருக்கிறோம்.

1. ‘பொப்பிலி அரக்கன்’ அரக்கர்களுக்கெல்லாம் தலைவன். இவன் குபேரனுக்கு நிகரான சம்பத்துடையவன். பல மாய்கைகள் கற்றவன். வாலியைப் போல் எதிர்ப்பவர் பலத்தையிழுத்துக்கொள்பவன். இராவணனைப் போல் ஏழரைக் கோடி ஆயுள் பெற்றவன். மிகுந்த புஜபல பராக்கிரமம் பொருந்தியவன். எவ்வித ஆபத்துக்கும் சளைக்காதவன். இவனை ஜயிப்பது மிகவும் கஷ்டம். ஆகையால் இவனிடம் யுத்தத்திற்குப் போகிறவர்கள் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இவன் செய்து வரும் அக்கிரமங்களுக்கு ஆயிரம் முறை தூக்கிலிட்டுச் சித்திரவதை செய்வதும் போதிய தண்டனையாகாது. இவனிடத்தில் எள்ளளவும் தாட்சண்யமோ, இரக்கமோ கொள்ளக் கூடாது. யாரும் இவனைக் கண்டவிடத்தில் சுட்டுக் கொல்லலாம். இவனை வீழ்த்தி வருபவர்களுக்குப் பதினாயிரம் பொன் பரிசு கொடுப்பதுடன், இந்திர நாட்டுச் சுந்தரிகளில் இஷ்டமானவர்களை மணந்து கொண்டு, கோசல நாட்டில் 19 கிராமங்களை ஜாகீர் பெற்று அரசப் பிரியனாக வாழலாம்.

2. ஈரோட்டு ராம ராக்ஷசன்: இவனே இந்த அரக்கர்களுக்கெல்லாம் குருவும், தந்தையும் போன்றவன். எண்ண முடியாத மாயாஜாலங் கற்றவன். எவரையும் மயக்கக்கூடிய வாக்குச் சாதுர்யமுள்ளவன். எதற்கும் அஞ்சாத திடமான நெஞ்சம் படைத்தவன். தேவர்களையும், பூசுரர்களையும் எள்ளி நகையாடுபவன். தென்னாட்டில் ஏற்பட்டுள்ள கிளர்ச்சிக்கெல்லாம் காரணகர்த்தா இவனே. அனேக வாலிபர்களையும், பெண்களையும் மயக்கித் தன் படையில் சேர்த்து வருபவன். இவன் ஒருவன் ஒழிந்தால் மற்ற அரக்கர்களெல்லாம் எளிதில் அடங்கி விடுவார்கள். ஆகையால் இவனைத் தாட்சண்யமின்றி வதை செய்து வருபவனுக்கு பதினாயிரம் பொன்னும் 16 கிராம மான்யமும், இந்திரலோக மாதர் இருவர்களும் சன்மானஞ் செய்யப்படுவதுடன், வடநாட்டில் ஒன்றின் சிற்றரசப் பதவியும் வழங்கப்படும்.

3. கோவை ஷண்முகாசுரன் முன் சொன்ன இருவர்களைவிட ஒரு விதத்திலும் இளைத்தவனல்ல, இவன் அதிசூக்கும புத்தி நுட்பமும், அறிவும் படைத்தவன். அத்தோடு திரண்ட ஐஸ்வர்யமும் படைத்தவன். மிலேச்ச நாட்டு ஜனங்களால் பெரிதும் அபிமானிக்கப்படுபவன். இவன் செல்வாக்குப் பெற்றிருக்கும்வரை நமது ராஜ்யத்திற்கு ஆபத்தாகும். ஆகையால் இவனை யாரும் நிர்த்தாட்சண்யமாகக் கண்டவிடத்து வதை செய்யலாம். அவ்வாறு வீழ்த்தி வருபவர்களுக்கு முன் சொன்ன மாதிரியே சன்மானங்கள் வழங்கப்படும்.

4. சென்னை ராமாசுரன், (5) மதுரைப் பாண்டியாசுரன் இவர்களிருவர்களும் இராக்ஷதப் படையின் தீர்மான தலைவர்கள் எதற்கும் அஞ்சாத வீரர்கள். இந்த அரக்கர் சேனாதிபதிகளை அழித்துக் கொல்பவர்களுக்கு ஐயாயிரம் பொன்னும், பத்துக் கிராம ஜாகீரும், அப்ஸர நாட்டுக் கன்னியர்களில் ஒருத்தியும், தர்ம ராஜ்ய சேனையில் சேனாதிபத்யமும் வழங்கப்படும். மற்றுமுள்ள ராக்ஷதப் படைத் தலைவர்கள் தலைவிகளைப் பற்றிய விவரங்களையும் அவர்களை அடக்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட சன்மானங்களையும், எல்லாக் கொத்தவால் சாவடிகளிலும் கண்டு கொள்க.

மஹராஜ்! இந்த அறிக்கையை இன்றே நாடெங்கும் விளம்பரஞ் செய்ய வேண்டும். உத்தரவு கொடுப்பீராக.

**அர:** சபாஷ் மந்திரி! நீர் வாசித்த இவ்வறிக்கையை நாம் மனமுவந்து அங்கீகரிக்கின்றோம். நமது தர்மராஜ்ய பாதுகாப்புக்காக நமது குருமஹராஜ் செய்துள்ள யோசனைகள் எல்லாம் நமக்குச் சம்மதமேயாகும்.



RangaRakes tamilnavarasam.com

அரசன் தன் அங்கீகாரத்தைத் தெரிவித்ததும் சபையோர் எல்லோரும் ஜயகோஷம் செய்தனர். தேவர்கள் பூமாரி பெய்தனர். அந்தணர் ஆசி கூறினர்.

ஆனால் இந்த ஆரவாரத்தினிடையே மிலேச்ச ராஜ்ய இரு போலீஸ்களும், சர்ஜண்டுகளும், 4 போலீஸ் சிப்பாய்களும் எப்படியோ மண்டபத்தினுள் வந்து தர்ம ராஜ்ய பூபதியையும், மந்திரிகளையும் பார்த்து, ''உங்கள் நாடகத்தை முடியுங்கள். உடனே எங்களோடு எழுந்து வாருங்கள்'' என்று சொல்லவும், சபா மண்டபத்திலிருந்தவர்கள் எல்லாரும் ஒரு வினாடியில் எங்கோ மறைந்துவிட்டனர். மேடையில் இருந்த சிலர் நடுநடுங்கி எழுந்து போலீசார் பின் சென்றனர்.

**குடி அரசு - உரையாடல் - 06.10.1935**



# இராசீபுரம் தாலுகா தாழ்த்தப்பட்ட மக்கள் மகாநாடு

தோழர்களே! இந்நாட்டில் இன்று எங்கு பார்த்தாலும் தாழ்த்தப் பட்டவர்கள் மகாநாடு என்பதாகப் பல மகாநாடுகள் கூட்டித் தாழ்த்தப்பட்ட மக்கள் குறைகளைப் பற்றி பேசப்படுகின்றது. தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்கள் சுதந்திரம் பெற வேண்டும் என்றும், சுயமரியாதை பெற வேண்டும் என்றும், இந்த 10, 18 வருஷ காலமாகத்தான் வெளிப்படையாகவும், தைரியமாகவும் கிளர்ச்சி செய்யச் சந்தர்ப்பமும் சௌகரியமும் பெற்றிருக் கிறார்கள் என்பதோடு, உங்களுக்கே இந்த உணர்ச்சியும் இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நாட்டில், புராண காலங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் மேம்பாட்டிற்காகப் பொதுவாக உழைத்ததாகவோ, உழைக்க ஆசைப்பட்ட தாகவோ காண முடியவில்லை என்றாலும், ஏதோ இரண்டொருவர் நந்தன், பாணன், சொக்கன் என்பதாகச் சிலர் தங்கள் தங்கள் சொந்தத்தில் முக்தி அடையவோ, கடவுளைத் தரிசிக்கவோ என்று பாடுபட்டதாகப் புராணங்களில் காணலாம். அவை வெற்றி பெற்றதாகக் கதைகள் இருந்த போதிலும் அவை நம்ப முடியாததும், சாதிக்க முடியாத பெரிய நிபந்தனைகள் மீது அதாவது நெருப்பில் குளித்து விட்டு வந்தும், கடவுளுடைய சம்மதமும் உத்தரவும் பெற்ற பிறகும் ஏதோ முத்தியோ, மோக்ஷமோ அடைந்ததாகத்தான் காணப்படுகின்றனவே ஒழிய, இந்த உலகத்தில் மற்ற மனிதர்களைப் போல் மானத்துடன் வாழ முயற்சித்ததாகவோ வாழ முடிந்ததாகவோ பொய்க் கதைகள் கூட கிடையாது. அது மாத்திரமல்லாமல் இந்து (ஆரிய) அரசர்கள் காலத்திலும், நீங்கள் இன்றுள்ள நிலையைவிட மிக்க கேவலமான நிலையில் நடத்தப்பட்டதாகத்தான் காண முடிகின்றது.

அன்றியும் தமிழ் அரசர்கள் மூவேந்தர்கள் முதலியவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் நீங்கள் மிக்க கேவலமாகவே உயிர்வாழ்ந்ததாகத்தான் காணக் கிடக்கிறது.

அவற்றிற்கு உதாரணம் திருவாங்கூர், கொச்சி முதலிய இந்து அரசர்கள் வாழும் நாட்டில் நீங்கள் எப்படி நடத்தப்பட்டீர்கள்? நடத்தப் படுகிறீர்கள்? என்பதைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம்.



RangaRakes tamilnavarasam.com

இந்து அரசர்கள் அல்லாத மகமதியர் அரசர்கள், கிறிஸ்துவர் அரசர்கள் ஆகியவர்கள் ஆட்சிக் காலமே உங்களை ஒரு அளவுக்காவது மனிதர்களாக நடத்தப்பட்டதாகச் சரித்திரமும் பிரத்தியக்ஷ அனுபவமும் காணப்படுகின்றது.

உண்மையாகவே இந்நாட்டில் முகம்மதிய அரசர்கள் ஆட்சி 600, 700 வருஷகாலம் நடந்திருக்கவில்லையானால், தாழ்த்தப்பட்ட தீண்டாத மக்களின் எண்ணிக்கை இன்று ‘‘தோட்டத்தில் முக்கால் பாகம் கிணறு’’ என்பதுபோல் சுமார் 15, 20 கோடி மக்களுக்குக் குறையாமல் இருந்திருக்கும்.

தீண்டப்படாதவர்கள் எண்ணிக்கை இன்று இந்திய ஜனத்தொகையில் 5-ல் ஒரு பாகத்திற்கு உள்ளாக இருப்பதற்குக் காரணம் முகமதிய ஆட்சியே ஆகும். அது பெருகாமல் அந்த அளவுக்கு உள்ளாகவே இருந்து வருவதற்கும், கூடிய சீக்கிரத்தில் அடியோடு ஒழிந்து போவதற்கும் நம்பிக்கைக்கு இடம் ஏற்படக் காரணமாய் இருப்பது பிரிட்டிஷ் அரசாட்சியின் பயனே ஆகும்.

இந்த இரண்டு ஆட்சியும் எந்தக் காரணத்தாலோ இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்க வில்லையானால் இந்தியாவில் ராஜ குடும்பமும், பார்ப்பனர் குடும்பமும் தவிர மற்ற மக்கள் எல்லோரும் தீண்டத்தகாதவர்களாய், தாழ்த்தப்பட்ட மக்களாய்த்தான் இருந்திருக்க வேண்டும். இன்றுகூடப் பார்ப்பனரொழிந்த மற்ற மக்கள் கீழ் ஜாதிக்காரராய் மத சம்பிரதாயப் படியும், பழக்க வழக்கப்படியும் ஏன் அரசாங்க சட்டமுறைப்படியும் குறிப்பிடப்பட்டிருப்பதை யாரே மறுக்க முடியும்?

பழய கால அரசர்கள் யோக்கியதைகள் பார்க்க வேண்டுமானால், அவர்கள் மக்களை எப்படி நடத்தினார்கள் என்பதை உணர வேண்டுமானால், ராமன், அரிச்சந்திரன், சந்தனராஜன், பாண்டியன் முதலிய இந்து அரசர்கள் என்பவர்கள் நாடகத்தைப் பார்த்தாலே அறியலாம்.

முதல் முதலாக அரசன் கொலு மண்டபத்துக்கு வந்தவுடன் என்ன கேட்கிறான்.

‘‘மந்திரீ! நமது நாட்டில் பிராமணர்கள் ஜபதபம், ஓமம், எக்கியம், யாகம் முதலியவைகளைச் செய்து சுகமாக வாழ்கின்றார்களா?

அவர்களுக்கு மான்யங்கள் முதலியவைகள் தாராளமாக விடப் பட்டிருக்கின்றனவா?

சூத்திரர்கள், பிராமணர் முதலியவர்களுக்கு அடங்கி ஒடுங்கி ஒழுங்காகத் தொண்டு செய்து வருகிறார்களா?’’ என்று தானே நகர விசாரணை செய்கிறார்களே ஒழிய வேறு என்ன?

ஆனால் இன்று உள்ள பிரிட்டிஷ் ஆட்சியின் நகர விசாரணை எப்படி இருக்கிறது என்பதை யோசித்துப் பாருங்கள்.



சமீப காலத்தில் பாராளுமன்றம் என்னும் பார்லிமெண்டைத் துவக்கியபோது அரசர் பெருமான் என்ன சொன்னார்?

‘‘என்னுடைய பிரஜைகள் எல்லோரையும் அவர்கள் எந்த ஜாதியினராய் இருந்தாலும், எவ்வித வித்தியாசமும் இல்லாமல் எல்லாத் துறையிலும் சரி சமமாய் நடத்துவேன்’’ என்று சொல்லித் திறந்து வைத்தார்.

அந்தப்படி அவர் நடத்துவார் என்பதற்கு என்ன நம்பிக்கை என்று ராமராஜ்ய ஸ்தாபிதர்களாகிய காந்தியாரும், காந்தி பக்தர்களும் கேட்கலாம்.

மற்ற காரியங்களில் பிரிட்டிஷ் அரசாங்கம் எப்படி நடந்து கொண்டு வந்தது என்றாலும், தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்களாகிய உங்களைப் பொறுத்த மட்டில் யோக்கியமாகவும் கூடிய அளவுக்கு நீதியாகவும் ஆட்சி புரிந்திருக்கிறது என்று தைரியமாய்ச் சொல்லுவேன்.

இன்று தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டு, பஞ்சாயத்துச் சபை, சட்டசபை, இந்திய சட்டசபை ஆகியவைகளில் உங்களுக்கு ஸ்தானம் அளித்து பெரிய சாஸ்திரிகள், கனபாடிகள், சங்கராச்சாரிய சுவாமிகள், ராஜாக்கள், ஜமீன்தார்கள் என்பவர்களுக்குச் சமமாய் நடத்துகிறார்கள். ராமராஜ்யத்தில் இந்தச் சபைகளுக்கு கக்கூஸ் வாரவோ, பங்கா போடவோ கூட உங்களை அனுமதிக்க மாட்டார்கள்.

உதாரணமாக இன்றும் சில அக்கிரகாரங்களில் உங்களை எச்சிலை எடுக்கவோ, குப்பை கூட்டவோ, கக்கூஸ் வாரவோ கூட உங்களை அனுமதிப்பதில்லை. கும்பகோணம் முனிசிபாலிட்டியில் அக்கிராகாரத்துக்கு கக்கூஸ் எடுக்கச் சூத்திரர்கள் என்பவர்களை நியமிக்க வேண்டும் என்று பாடுபட்டது உங்களுக்குத் தெரியாதா?

இப்படி பிரிட்டிஷ் அரசாங்கம் உங்களைப் பொறுத்தவரை எவ்வளவோ நன்மை செய்து வந்திருப்பதோடு உங்களுக்கு ஒரு மந்திரி ஸ்தானமும் கிடைக்கும்படியான அளவுக்குச் சட்டசபைகளில் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி சீர்திருத்தம் வழங்கியிருக்கிறது.

ஆகவே நான் ஏதோ ராஜவிஸ்வாச உபன்யாசம் செய்வதாய் ‘‘தேசாபிமான வீரர்’’களுக்குத் தோன்றலாம்.

பிரிட்டிஷ் அரசாங்கம் மாத்திரமே அல்லாமல், உலகில் உள்ள அரசாங்கங்கள் எல்லாமே ஒழிந்து போக வேண்டும் என்கின்ற ஆசை யுள்ளவன் நான்.

ராஜாக்கள் என்பவர்களே இன்றைய உலகுக்கு அவசியமில்லா தவர்கள் என்றும் பொது ஜனங்களுடைய சுயமரியாதைக்குக் கேடானவர்கள் என்றும் கருதியும் சொல்லியும் எழுதியும் வருகின்றவன் நான்.



RangaRakes tamilnavarasam.com

ராஜாக்கள் மாத்திரமல்லாமல் பணக்காரர்கள், ஜமீன்தாரர்கள், வியாபாரிகள், முதலாளிகள் என்கின்றதான கூட்டங்கள் கூடப் பொது ஜனங்களை அரித்துத் தின்னும் புழுக்கள் ஆனதால் அவை அழிக்கப்பட வேண்டியவை என்றும் கூடச் சொல்லுகிறவன் நான்.

உங்களைப் பொறுத்த வரையிலும் நீங்கள் காந்தி ராஜ்ஜியத்துக்கோ, ராமராஜ்ஜியத்துக்கோ கராச்சி சமதர்ம ராஜ்ஜியத்துக்கோ போவதைவிட பிரிட்டிஷ் அரசாங்கம் ஆயிரம் மடங்கு மேலானது என்று பறை அடிப்பேன்.

ராமராஜ்ஜியத்தில் ஆகட்டும், காந்தி ராஜ்ஜியத்திலாகட்டும், கராச்சி திட்ட சமதர்ம ராஜ்ஜியத்திலாகட்டும், வருணாச்சிரம தர்மமோ, ஜாதிப் பாகுபாடோ இவைகள் சம்மந்தப்பட்ட பழய பழக்க வழக்கங்கள் அது சம்மந்தமான கலைகளோ சிறிதுகூட மாற்ற முடியாது என்றும் அவை பத்திரமாகக் காப்பாற்றப்படும் என்றும் மேல் ஜாதியாருக்கு வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த வாக்குறுதிகள் உங்களுக்கு எவ்வளவு ஆபத்து என்பது இப்போது ஒரு சமயம் உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்.

இந்த வாக்குறுதிகள் எவ்வித முற்போக்குக்கும் முட்டுக்கட்டையாக வந்து தடுத்துக் கொள்ளும்.

ஏதோ ஒரு காலத்தில் விக்டோரியா மகாராணியார் ''உங்கள் மத விஷயங்களில் பிரவேசிப்பதில்லை'' என்று வாக்குறுதி கொடுத்ததாகக் கூறிக் கொண்டு, இன்று அவ்வாக்குறுதியை, ஏதாவது ஒரு பொதுக் கிணற்றில் எல்லோரும் தண்ணீர் இறைத்துக் கொள்ளலாம் என்றாலும்,

ஏதாவது ஒரு பொது ரோட்டில் எல்லோரும் நடக்கலாம் என்றாலும்,

ஒரு பொதுச் சத்திரத்தில் எல்லோரும் இருக்கலாம் என்றாலும்,

விபசாரத்துக்குக் கடவுள் பேரால் பெண்களுக்கு (பொட்டுக்கட்டு) லைசென்சு கொடுக்கக் கூடாது என்றாலும்,

ஏதாவது ஒரு கடவுள் என்பதைக் கோயிலில் சென்று தரிசிக்கலாம் என்றாலும்,

பால் குடிக்கும் குழந்தைகளை சீலை கட்டத் தெரியாத குழந்தைகளைப் பெண் ஜாதியாக ஆக்கிப் படுக்கை வீட்டிற்குள் விடக் கூடாது என்றாலும், அவ்வாக்குறுதிகள் வந்து முட்டுக்கட்டையாக இருக்கும்படி பயன்படுத்தப் படுகின்றன. இப்படி இருக்கும் போது பழய பழக்க வழக்கங்கள், சாஸ்திரங்கள், கலைகள், தொழில் முறைகள் ஆகியவை காப்பாற்றப்படும் என்று வாக்குறுதி கொடுத்து ஒரு சமதர்ம ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்ப தென்றால் அந்த சமதர்ம ராஜ்யத்துக்குக் காந்தியாரால் ராமராஜ்ஜியம் என்றும் வருணாச்சிரம





ராஜ்ஜியம் என்றும் பாஷ்யம் சொல்லப்பட்டு இருக்கிறது என்றால், சர்வ வியாதிக்கும் ஒரே மாத்திரை என்பது போல் சகலவித சீர்திருத்தத்துக்கும் இந்த ஒரு வாக்குறுதியே எமனாய் வந்து கொன்றுவிடாதா என்று யோசித்துப் பாருங்கள். இந்த வாக்குறுதியின் கீழ் என்ன என்ன சீர்திருத்தமோ, ஏதாவது ஒரு மாறுதலோ செய்ய முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். இன்று உங்கள் மக்களுக்கு இருக்கும் தரித்திரமும் கொடுமையும் சேர்த்து இந்த ராமராஜ்ஜியத்தை ஆதரிக்கச் செய்கின்றது. ஏன் உங்களைவிட பெரிய ஜாதி என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனரல்லாத மேல் ஜாதி இந்துக்கள் என்பவர்களுடைய வயிற்றுப் பசியான தங்களுடைய சூத்திரப்பட்டம் இந்த ராமராஜ்ஜியத்தில் - வர்ணாச்சிரம ராஜ்ஜியத்தில் - கராச்சி சமதர்ம ராஜ்ஜியத்தில் ஒழியாது என்று தெரிந்திருந்தும் எத்தனை பேர் இன்று அதை ஆதரிக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, உங்களில் சிலர் ஆதரிப்பதைப் பார்த்து நான் ஆச்சரியப்படவில்லை.

இவ்வளவு தூரம் நான் இவற்றை விவரித்துச் சொல்லக் காரணம், இன்று உள்ள உங்கள் குறைகள், இழிவுகள் நீங்கி மனிதத் தன்மை பெறுவதற்கு நீங்கள் பிரிட்டிஷ் ஆட்சியைத் தான் நம்ப வேண்டுமென்றும், அது உள்ள காலத்திலேயே உங்கள் குறைகளை, இழிவுகளை நிவர்த்தித்துக் கொள்ள முயல வேண்டும் என்றும், அரசாங்கத்துக்கு விரோதமாகப் பேசவோ, மக்களுக்குள் விரோத உணர்ச்சி ஏற்படச் செய்கின்றதோ அரசாங்கத்தாரோடு போர் புரிவதாகவோ சொல்லிக் கொள்ளுகின்ற கட்சியிலோ கூட்டத்திலோ நீங்கள் கலந்து கொள்ளக்கூடாது என்றும் சொல்லுவதற்கு ஆகவே இவற்றைச் சொல்லுகிறேன்.

நீங்கள் எல்லாம் அப்படிச் செய்யவில்லையா என்றும் மற்றும் எத்தனையோ பேர் அந்தப்படி அரசாங்கத்துக்கு விரோதமாய் நடந்து கொண்டு வாழவில்லையா என்றும் கேட்பீர்கள்.

அவர்கள் நிலை வேறு, உங்கள் நிலை வேறு. அவர்களில் சிலர் இன்று மதத்தில் கீழாக மதிக்கப்பட்டாலும், பழக்க வழக்கத்தில் பலர் சமமாக மதிக்கப்படுகிறார்கள். கல்வியில் சிறிது முன்னணிக்கு வந்து விட்டார்கள். உத்தியோகம் தொழில்கள் ஆகியவைகளில் எதிலும் போட்டி போடத் தகுதி அடைந்து விட்டார்கள்.

பார்ப்பனர்கள் சங்கதியோ கேட்க வேண்டியதில்லை. எல்லா விதத்திலும் மதத்தாலும் பழக்க வழக்கத்தாலும் பிரத்தியக்ஷத்திலும் மேல் நிலையில் இருக்கிறார்கள்.

பாடுபடாமல் வாழ்க்கை நடத்தும் யோக்கியதை அடைந்து விட்டார்கள். 100க்கு 100 பேர் படித்து இருக்கிறார்கள். 100க்கு 90க்கு மேல் உத்தியோகங்கள் அவர்கள் கைவசம் இருக்கிறது.

RangaRakes tamilnavarasam.com

இனி அவர்களுக்கு வேண்டியதெல்லாம் அவர்களோ அவர்களது அடிமைகளோ நாட்டை ஆள வேண்டியது என்பதைத் தவிர வேறு இல்லை. ஆதலால் அவர்கள் அரசாங்கத்தாரோடு போராடவும், சட்டம் மீறும் அரசாங்கத்துக்குச் சதா தொல்லை விளைவிக்கவும் சௌகர்யமுடையவர் களாயிருக்கிறார்கள்.

இது மாத்திரமல்லாமல் அவர்கள் மதத்துக்கும், பழக்க வழக்கத்துக்கும் விரோதமாக அரசாங்கம் சில சீர்திருத்தங்களைச் செய்ய முற்படுவதாலும், அதனால் பார்ப்பன ஆதிக்கத்துக்குப் பங்கம் வரும்போல் இருப்பதாலும், அச் சீர்திருத்தங்களைச் செய்ய வொட்டாமலும் செய்து விட்டால் அது அமுலில் நடத்தப்படாமலும் இருப்பதற்கு ஆக வேண்டியாவது, அரசாங்கத்தை வழி மறிப்பதற்காக அரசாங்கத்துக்குத் தொல்லை விளைவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆதலால் அவர்களுடன் நீங்கள் சேரக் கூடாது என்று சொல்ல வேண்டியவனாய் இருக்கிறேன். (தொடர்ச்சி 13.10.1935 குடி அரசு)

*குறிப்பு: 29.09.1935 ஆம் நாள் இராசிபுரம் உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் நடைபெற்ற இராசீபுரம் தாலூக்கா தாழ்த்தப்பட்ட மக்கள் மாநாட்டில் ஆற்றிய தலைமையுரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 06.10.1935**



# மற்றொரு சூழ்ச்சி

**எச்சரிக்கை – எச்சரிக்கை**

தமிழ் மக்களிடத்தில் பார்ப்பனர்களுக்குச் செல்வாக்கற்றுப் போய்விட்டது என்பதும், பார்ப்பனர்கள் செய்து வந்த சூழ்ச்சியை மக்கள் உணர்ந்து கொண்டார்கள் என்பதையும், நமது பார்ப்பனர்கள் உணர்ந்து விட்டார்களே யானால் உடனே வேறு மாகாணத்தில் இருந்து யாரையாவது பிடித்து வந்து அவரை இந்திரன், சந்திரன், மகாத்மா என்றெல்லாம் ஆக்கி விளம்பரப் படுத்தி, அதன் மூலமாகத் தங்கள் சூழ்ச்சிக்கு ஆக்கம் தேடிக் கொள்ளுவது வழக்கம் என்பதை நாம் பல தடவை எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம்.

அதுபோலவே இப்போது சென்ற வருஷத்திய இந்திய சட்டசபைத் தேர்தல் நடந்ததில், அவர்கள் பெற்ற வெற்றியானது பார்ப்பனர்களின் சூழ்ச்சியையும், நாணயத்தையும் பளிங்கு போல் விளக்கிவிட்டதாலும், இப்படிப்பட்ட நிலைமை ஏற்படும் என்று கருதி, தோழர் ராஜகோபாலாச் சாரியார் போன்ற ஆசாமிகள் தாங்கள் காங்கிரஸ் நிர்வாகத்தில் இருந்து விலகிக் கொண்டதாக வேஷம் போட்டுத் தங்கள் ஜவாப்தாரித்தனத்தில் இருந்து நழுவிக் கொண்டாலும், தோழர் சத்தியமூர்த்தி போன்றவர்கள் மாகாணத் தலைவர்களாகிக் கண்டபடி உளறிக் கொட்டி, காங்கிரசின் யோக்கியதையையும், தலைமைத் தன்மையின் யோக்கியதையையும் சிரிப்பாய்ச் சிரிக்க வைத்துவிட்டதோடு, பார்ப்பன சூழ்ச்சி இன்னது என்பதை வெளிப்படையாய் அறியும்படியாகச் செய்து விட்டதனாலேயும், இப்போது அடுத்த வாரத்தில் வரப்போகும் ஜில்லா போர்டு தேர்தல்களுக்குப் பார்ப்பனர் போட்டி போடவோ, கட்சி சேர்க்கவோ யோக்கியதை இல்லாமல் போய்விட்டதை நன்றாய் உணர்ந்து கொண்டார்கள்.

இச் சூட்சிகளை மறைத்து மக்களை ஏமாற்ற அரை டஜன், ஒரு டஜன் என்கின்ற கணக்கில் இளம் பெண்களை அழைத்துக் கொண்டு நாடகக்காரர்கள் மாதிரி, 'வருகிறார்கள்! வருகிறார்கள்!! யார் தெரியுமா?' என்று துண்டு விளம்பரங்கள் போட்டு, அப்படிப்பட்ட அம்மாள், இப்படிப்பட்ட அம்மாள் என்றெல்லாம் யோக்கியதா பட்சம் குறிப்பிட்டுக் கிராமம் கிராமமாய் இழுத்துக் கொண்டு போய்க் காட்டி, ஏமாற்ற முயற்சித்து அதுவும் பயன்படாமல் போகவே, இப்போது தோழர் ராஜேந்திர பிரசாத் அவர்களை அழைத்து வந்து விளம்பரங்கள் செய்து ஊர் ஊராய் இழுத்துக் கொண்டு



RangaRakes tamilnavarasam.com

போய்க் காட்டியும், அவரைக் கொண்டு பார்ப்பனக் கட்சியைப் புகழும் படியாகவும், பார்ப்பனரல்லாதார் கட்சியை இகழும்படியாகவும் பேசச் செய்து ஓட்டர்களை ஏமாற்றத் தீர்மானித்து விட்டார்கள்.

இவ்வளவு மாத்திரமல்லாமல், அவர் பேரால் சிறிது பணமும் பொது மக்களிடம் இருந்து வசூல் செய்து, அதை சுயராஜ்ஜிய பண்டு, கதர் பண்டு, தீண்டப்படாதார் பண்டு என்ற பேர்களினால் தேர்தல் பிரசாரங்களுக்கு மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் பயன்படுத்திக் கொண்டது போலவும், சில காலிகளுக்குக் கொடுத்து, பார்ப்பனரல்லாத கட்சியையும், பல தலைவர்களையும் வைவதற்குப் பயன்படுத்திக் கொண்டது போலவும், இப்போதும் தோழர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் பேராலும் கொஞ்சம் பணம் வசூலித்து பார்ப்பனப் பிரசாரத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

பார்ப்பனர்களின் இப்படிப்பட்ட நடவடிக்கையானது இன்று நேற்று மாத்திரம் இல்லாமல் புராண காலம் தொட்டே இந்தப்படி நடந்து வந்திருப்பதாக அனேக ஆதாரங்கள் இருந்து வருகின்றன. அவைகள் அதாவது அப்புராணக்கதைகள் எல்லாம் உண்மையாக இல்லாவிட்டாலும், பார்ப்பனர்களுக்கும் அவர்களது ஆதிக்கத்துக்கும் குறைவு வரும்படியான சம்பவங்கள் ஏதாவது ஏற்படுமானால் அதிலிருந்து சமாளித்துக்கொள்ள இன்ன இன்ன மாதிரி நடக்க வேண்டும் என்பதற்கு வழிகாட்டி நூல் களாகவாவது அச்சரித்திரங்கள் இருந்து வருகின்றன.

அதாவது எவனாவது ஒருவன் இந்திரபட்டம் அடைய ஆசைப்பட்டு தபசோ, ஜபமோ செய்தால் அத் தபத்தையும், ஜபத்தையும் ரம்பை, ஊர்வசி, திலோத்தமை என்ற பெண்களை விட்டு மயக்கி, அத் தபசியின் தபத்தையும் பிரார்த்தனையையும் அழித்துவிட்டு வரும்படிச் செய்வது ஒரு மார்க்கமாகவும் அனுபவ அனுகூலமாகவும் இருந்து வந்திருக்கிறது.

இப்போது அது செய்து பார்த்துவிட்டார்கள். இனி, பிறகு யாரை அவர்கள் எதிரிகளாய்க் கருதுகிறார்களோ, அந்தக் கூட்டத்தில் இருந்தே சில ஆட்களுக்குப் பலவித ஆசைகாட்டிப் பட்டத்தையோ, அரசையோ அவர்களுக்குத் தருவதாகச் சொல்லி சுவாதீனப்படுத்தியும் ஆழ்வார்கள் ஆக்கியும் அவர்களைக் கொண்டு எதிரிகளுக்குத் தொல்லை விளைவித்துத் தோற்கடிக்கச் செய்வது என்பது இரண்டாவது சூட்சியாகும். அந்த முறையையும் கையாண்டு பார்த்துப் பயன்படாமல் போய்விட்டது.

இனி, அடுத்த மூன்றாவது முறை என்னவென்றால், தங்கள் அடிமைகளில் சிலரைப் பிடித்து, அவதாரங்கள் என்பதாக ஆக்கி, அவர்களைக் கொண்டு மக்களை ஏமாற்றி எதிரிகளுக்குக் கேடு சூழச் செய்து வருவது.

இந்தக் குணங்கள் எல்லாம் பார்ப்பனர்களுக்குப் பரம்பரைச் சொத்தென்றும், அவைதான் அவர்களது வெற்றிக்கு மார்க்கம் என்பதும் ராமாயணம் முதலிய இதிகாசங்களையும், புராணங்களையும் பார்த்தால் தெரியும்.



ஆகவே அதுபோலவே இப்போது பார்ப்பனரல்லாதார்களை ஜெயிக்கத் தோழர் ராஜேந்திரப் பிரசாத்தைக் கூட்டி வந்து அவதாரமாக விளம்பரப் படுத்திப் பணம் தண்டவும் தேர்தலில் வெற்றி பெறவும் சூழ்ச்சி செய்கிறார்கள்.

பொது ஜனங்கள் இப்படிப்பட்ட சூழ்ச்சிக்குக் கண்டிப்பாக இடம் கொடுக்கக் கூடாது என்பதாக நாம் எச்சரிக்கை செய்கிறோம்.

தோழர் ராஜேந்திரப் பிரசாத்தைப் பற்றித் தனிப்பட்ட முறையில் நமக்கு உள்ள அபிப்பிராயத்தை முன்பு ஒருமுறை வெளியிட்டிருக்கிறோம். அவர் எப்படிப்பட்டவராய் இருந்தாலும், அவர் வரவழைக்கப்பட்ட காரணமும், அதனால் விளையப்போகும் பயனும் எப்படிப்பட்டது என்று பார்த்தால், கண்டிப்பாக அவரைக் கொண்டு சூழ்ச்சி செய்விக்கப் பார்ப்பனருக்குச் சிறிதும் நாம் இடம் கொடுக்கக் கூடாது என்பதே நமது அபிப்பிராயமாகும்.

தோழர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் இந்திய மக்களுக்குத் தகுதி உடைய தலைவராய் இருந்திருப்பாரானால், தென் நாட்டிலிருந்து வரும் தகராருக்குக் காரணம் என்ன என்பதைக் கண்டு பிடித்து அதற்குத் தகுந்தபடி பார்ப்பனர்களுக்கு அறிவுறுத்தி ஏதாவது சமாதானம் செய்ய முயற்சித்திருப்பார்.

ஆனால் இவர் அப்படிக்கெல்லாம் இல்லாமல் ஒரு கட்சியின் சார்பாய் வந்து, பார்ப்பனரல்லாதார் கட்சியையும், மக்களையும் தேசபக்தி இல்லாதவர்கள்; தேசத் துரோகிகள் என்று வைதுவிட்டுப் போக வருகிறார்.

கிளிப்பிள்ளை போல் பார்ப்பனர்கள் சொல்லிக் கொடுத்ததை அப்படியே கொட்டி விட்டுப் போகப் போகிறார். இதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இந்தப் படியேதான் தோழர்கள் காந்தி, வல்லபாய்படேல், பாங்கர், பஜாஜ், மாளவியா முதலியவர்கள் இந்நாட்டுக்கு வரவழைக்கப்பட்டு வைதுவிட்டுப் போயிருக்கிறார்கள்.

இந்த உண்மைகளை நன்றாய் உணர்ந்துதான், சென்னை கார்ப்பரேஷன் காரர்கள் தைரியமாய் ராஜேந்திர பிரசாத் அவர்களுக்கு வரவேற்பு அளிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

இம்மாகாணத் தலைநகரச்சபை செய்த காரியம் இன்னது என்பதைச் சிறிதுகூட உணராமல் சில உள்நாட்டுப் பட்டணங்களில் வரவேற்பு அளிப்பதாகத் தீர்மானித்து இருக்கிறார்கள்.

இந்த நகரசபைக்காரர்கள் எல்லாம் பார்ப்பனர்களுக்குப் பயந்து இந்த மாதிரியான முட்டாள்தனமான காரியங்களில் ஈடுபட்டார்களே ஒழிய, மனப்பூர்த்தியாகக் காங்கிரசை மரியாதை செய்யவோ ராஜேந்திர பிரசாத் அவர்களை வரவேற்கவோ வேண்டும் என்று கருதிச் செய்தவர்கள் அல்ல. ஆகவே, வெளிப் பட்டணங்களில் உள்ளவர்கள் தாங்கள் அதிருப்தியைக் காட்டவும், ராஜேந்திர பிரசாத் அவர்களைத் தாங்கள் தலைவர்கள் என்று



RangaRakes tamilnavarasam.com

ஒப்புக்கொள்ளவில்லையென்றும் ராஜேந்திர பிரசாத் அவர்களுக்கும் மற்ற மாகாண ஜனங்களுக்கும் தெரியும்படியாகச் செய்ய வேண்டியது இவர்களது கடனாகும்.

தோழர் காந்தியார் வரவை பகிஷ்கரித்த மாதிரியானது, காந்தியாராலேயே புகழப்பட்டது மாத்திரமல்லாமல் இந்தியாவே தென்னிந்தியாவைப் புகழ்ந்தது.

''ராஜேந்திரரே திரும்பிப் போம். நீர் எங்கள் பிரதிநிதி அல்ல'' என்று நாம் கருதி இருப்பதை ராஜேந்திர பிரசாத் அவர்கள் அறியும்படி செய்ய வேண்டியது ஒவ்வொரு தமிழ் மக்களுடையவும் கடமையாகும்.

தமிழ் மக்களில் சிலர் சுக்ரீவ ஆழ்வார்களும், ஆஞ்சனேய ஆழ்வார்களும், விபூஷண ஆழ்வார்களும் உண்டு என்பதை நாம் மறைக்கவில்லை. அவர்களால் ராஜேந்திர பிரசாத் வரவேற்கவும் படலாம்.

மற்றும் பல கூலிகளும் காலிகளும் இதற்கு உதவியாகவும் இருக்கலாம்.

ஏனெனில் சிலருக்கு அவரால் ஓட்டுக் கிடைக்கலாம் என்பதோடு, அவர் பேரால் வசூல் செய்யப்பட்டும், பணம் இன்னும் ஆறு மாதத்துக்கு காலிகளுக்குப் பயன்படலாம் என்கின்ற எண்ணமும், ஆசையும் ஒவ்வொருவருக்கும் இல்லாமலில்லை. ஆதலால் இந்தக் கூட்டம் அவரை வரவேற்க வேண்டியது அவர்களுக்கு இன்றியமையாத காரணமாகலாம்.

ஆனால் உண்மைத் தமிழ் மக்கள் - தன்மானமும், பரிசுத்த குருதி ஓட்டமும் உள்ள தமிழ் மக்கள், ராஜேந்திரரை வரவேற்பது என்பது சுத்தமாகச் சுயமரியாதை அற்றதனமாகும் என்பதே நமதபிப்பிராயமாகும்.

ஆங்காங்குள்ள தென்னிந்திய நலஉரிமைச் சங்கங்களும், சுயமரியாதைச் சங்கங்களும் கூட்டங்கள் கூட்டி பகிஷ்காரக் கமிட்டியும் திட்டமும் ஏற்பாடு செய்து, அவரது வரவை பகிஷ்கரித்துக் காட்ட வேண்டியது அவசியமும், ஆண்மையுமான காரியம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆனால், பகிஷ்காரமானது காந்தியார் வந்தபோது பகிஷ்கரித்துக் காட்டியது போலவே சமாதானமாகவும், ஒழுக்கமாகவும், கவுரமாகவும், நடந்து பகிஷ்கரிக்க வேண்டுமே ஒழிய, காங்கிரஸ்காரர்கள் போல் காலித்தனமான முறையில் பகிஷ்கரிப்பது யோக்கியப் பொறுப்பற்ற காரியமேயாகும்.

பகிஷ்காரம் வெற்றி பெறாவிட்டாலும் யோக்கியமாகவும், சமாதானமாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்பதும், இவ்விஷயத்தில் காங்கிரஸ்காரர்களைப் பின்பற்றக் கூடாது என்பதுமே நமது முக்கியமான வேண்டுகோளாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 06.10.1935**



# பகிஷ்கரியுங்கள்! இராஜேந்திரப் பிரசாத்தைப் பகிஷ்கரியுங்கள்!!

தென்னாட்டில் பார்ப்பனச் செல்வாக்கு ஒழிந்ததும், பார்ப்பனச் சூட்சியைத் தென்னாட்டு மக்கள் அறிந்து கொண்டார்களென்றும், தெரிந்த தென்னாட்டுப் பார்ப்பனர்கள் வடநாட்டிலிருந்து தோழர் இராஜேந்திரப் பிரசாத் அவர்களைக் கொண்டு வந்து, தாங்கள் இழந்த செல்வாக்கையும், சூட்சியையும் மீண்டும் தென்னாட்டில் நிலைநிறுத்த, தோழர் இராஜேந்திரப் பிரசாத் அவர்களுக்குப் பார்ப்பனீய மந்திரோச்சாடனம் செய்வித்து, ஊர் ஊராக அழைத்து வந்து, பார்ப்பனரல்லாத கட்சியையும், இயக்கத்தையும், தலைவர்களையும் தூற்றித் தங்கள் சூழ்ச்சியை நிலைநிறுத்தவும் பணந் திரட்டவும் வருகிறார்கள்.

தென்னாட்டுப் பார்ப்பனரல்லாத தமிழ் மக்களே! சுயமரியாதைத் தோழர்களே! நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்களுக்கு உண்மையுள்ள பார்ப்பனரல்லாத இரத்தமும், சுயமரியாதை இரத்தமும் ஓடுமானால், தோழர் இராஜேந்திரப் பிரசாத் அவர்களைப் பகிஷ்கரித்து நமது வெறுப்பைத் தோழர் பிரசாத் அவர்கள் அறியும்படி செய்ய வேண்டும்.

சுயமரியாதைச் சங்கங்களும், பார்ப்பனரல்லாத சங்கங்களும் உடனே கூட்டங்கள் கூட்டி, பகிஷ்காரத் தீர்மானங்கள் நிறைவேற்றி வெளியிட்டுப் பகிஷ்காரஞ் செய்ய வேண்டுகிறோம்.

**குடி அரசு - வேண்டுகோள் - 06.10.1935**



RangaRakes tamilnavarasam.com

### இராசீபுரம் தாலூகா

## தாழ்த்தப்பட்ட மக்கள் மகாநாடு

எந்தக் கட்சியிலும் நீங்கள் சேரக் கூடாது என்று சொல்ல வேண்டியவனாய் இருக்கின்றேன்.

உங்களுக்குள் தேசாபிமானம் என்கின்ற யோக்கியமற்ற சூட்சிக்கு நீங்கள் ஆளாகக் கூடாது. அது சோம்பேறிகள், காலிகள் ஆகியவர்கள் பிழைப்புக்கு ஏற்படுத்தப்பட்ட மோக்ஷ நரகம் என்பது போன்ற மூடநம்பிக்கையாகும்.

உங்களுக்கு இன்று சுயமரியாதை அபிமானம் தான் உண்மையாய் வேண்டும். தேசாபிமானம் என்பதைப்போல் அர்த்தம் தெரியாததும் சூட்சி நிறைந்ததுமான வார்த்தை அல்ல நான் இப்போது உங்களுக்குச் சொல்லும் சுயமரியாதை என்கின்ற வார்த்தை. நீங்கள் மனித சமூகத்தில் கீழானவர்களாய் இழி மக்களாய் கருதப்படுகிறீர்கள். மிருகங்களில் மிக மிகக் கீழாகவும், இழிவாகவும், கருதப்படுகின்ற நாய், கழுதை, பன்றி ஆகியவைகளை மதிப்பது போலக்கூட நீங்கள் மதிக்கப்படுவதில்லை என்று உங்கள் வரவேற்புத் தலைவர் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். அதைத்தான் நானும் சொல்லி அந்தக் காரணத்தாலேயே உங்கள் சமூகத்துக்கு முதலில் சுயமரியாதையையும், மனிதத் தன்மையையும் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லுகிறேன். இதை நீங்கள் மனதில் கெட்டியாய்ப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்றைய தேசாபிமானம் என்பது உங்களுடைய சுயமரியாதையையும் முற்போக்கையும் தடுப்பதாகவே இருந்து வருகின்றது.

அதற்கு ஆகவே தேசாபிமானம் என்பது கற்பிக்கப்பட்டது என்றுகூட சொல்லலாம்.

காந்தியாருடைய தேசாபிமானத்தைப் பார்த்தாலே மற்றவர்கள் தேசாபிமானத்தின் யோக்கியதையைப்பற்றி நாம் யோசிக்க வேண்டியதில்லை.

வட்டமேஜை மகாநாட்டில் உங்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் ஒதுக்கப்படும் பட்சத்தில் அது தனது தேசாபிமானதுக்கு விரோதமானதென்றும், உயிரைவிட்டாவது உங்கள் தனிப் பிரதிநிதித்துவத்தை ஒழிப்பதுதான் தனது தேசாபிமானம் என்றும் காந்தியார் சொல்லவில்லையா?



அவரை உங்கள் தலைவர் என்றும், அவர் கொண்ட தேசாபிமானம் தான் உங்கள் தேசாபிமானம் என்றும் நீங்கள் ஒப்புக் கொள்ளுவீர்களானால் உங்கள் கட்சி என்ன ஆகி இருக்கும்.

மற்ற தேசாபிமானக்காரர்கள் தங்களுக்கு எந்தெந்த மாதிரி பிரதிநிதித்துவம் கேட்கிறார்களோ அது உங்களுக்கும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்து இருக்க வேண்டாமா?

கிறிஸ்தவர்கள், முகமதியர்கள், சீக்கியர்கள், நாட்டுக்கோட்டையார்கள் என்கின்ற பிரிவுக்காரர்களும், ஜாதிக்காரர்களும் தனிப்பிரதிநிதித்துவம் பெறும்போது நீங்கள் தீண்டப்படாதவர்களாய் இருக்கிறவர்கள் தனிப் பிரதிநிதித்துவம் பெறுவது தேசாபிமானத்துக்கு விரோதமென்றால் அப்படிப்பட்ட தேசாபிமானத்தின் யோக்கியதையை நான் சொல்ல வேண்டுமா என்று கேட்கின்றேன்.

ஆகவே தேசாபிமானம் என்பதும், சீர்திருத்தமென்பதும், கஷ்டப்பட்டு இழிவுபடுத்தப்பட்ட மக்கள் விடுதலை அடையக்கூடாது என்பதோடு பாமர மக்கள் சீர்திருத்தம் - முன்னேற்றம் அடையக் கூடாது என்பதுமேயாகும்.

அரசாங்கத்தார் வழங்கிய சீர்திருத்தத்தில் உங்களுக்கு சுயமரியாதை உள்ள சீர்திருத்தம் இருந்தது. அதை தேசாபிமான சீர்திருத்தம் என்னும் பூனா ஒப்பந்தம் பாழாக்கிவிட்டது.

பூனா ஒப்பந்தத்தை உங்களில் சிலர் ஆதரிப்பது எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் மிக மிக ஆச்சரியமாய் இருக்கிறது.

அதாவது நீங்கள் மேல்ஜாதிக்காரர்களைப் போய் வோட்டு கேட்க வேண்டுமாம். மேல் ஜாதிக்காரர்கள் உங்களை வந்து ஓட்டு கேட்க வேண்டுமாம். இதில் பரஸ்பர ஸ்நேகம் ஏற்படுமாம்.

இது ''மைனா பிடிக்கின்ற வித்தை''யே ஒழிய இதில் நாணயமோ அறிவுடமையோ இல்லை.

பார்ப்பார் அதிகாரியாய் இருக்கிற கச்சேரிக்குள் நீங்கள் போக வேண்டுமானாலே சர்க்கார் உத்திரவும், பொதுத் தெருவில் நீங்கள் நடக்க வேண்டுமானாலே பினல் கோட் சட்டமும் வேண்டி இருக்கிறபோது நீங்கள் பார்ப்பன அக்கிராரத்தில் நடந்து போய் அவர்கள் வீட்டு வாசல் நடை கடந்து உள் ஆசாரத்தில் படுத்து வயிற்றைத் தடவிக் கொண்டிருக்கும் பார்ப்பானிடம் போய் ஓட்டுக் கேட்க முடியுமா? மற்றும் அதுபோலவே தன்னை மேல்ஜாதிக்காரன் என்றும் உங்களைத் தீண்டத்தகாதவன் என்றும் கருதிக் கொண்டிருக்கும் மற்ற ஜாதியாரிடமாவது நீங்கள் போய் ஓட்டுக் கேட்க முடியுமா?



RangaRakes tamilnavarasam.com

அவர்களாவது உங்கள் சேரிக்கு எலும்பையும் தோலையும் குப்பையையும் மயிரையும் மிதித்துக் கொண்டு வந்து ஓட்டுக் கேட்டு விடுவார்களா? அவ்வளவு மனமாற்றம் ஏற்பட்டிருக்குமானால் உங்களை கோவிலுக்குள் விடுவதாக வாக்குறுதி கொடுத்து பூனா ஒப்பந்தம் செய்து கொண்ட காந்தியார் இன்று பொது ஜனங்கள் அதற்குத் தயாராய் இல்லை ஆதலால் அது சம்மந்தமாக ஒரு சட்டமும் கொண்டு வரக்கூடாது என்று சொல்ல முடியுமா?

இந்திய சட்டசபைக்குச் சென்ற காங்கிரஸ் தேச பக்தர்களாவது சமூக சீர்திருத்த சம்மந்தமாக எவ்வித சட்டமும் கொண்டுவர முடியாது என்று சொல்லுவார்களா?

ஒரு தோட்டியை விட்டு உங்கள் எல்லோரையும் இழுத்துவரச் செய்து தங்கள் இஷ்டப்படி ஓட்டு போடாவிட்டால் உதைப்பேன் என்று எச்சரிக்கை செய்து வெளிப்படையாய்ச் சொல்லிவிட்டுப் போகும்படி செய்வார்களே ஒழிய உங்களை வந்து ஓட்டுக் கேட்பார்களா?

அப்படியே நீங்கள் கேட்பதாகவே வைத்துக் கொண்டாலும் உங்களில் சுதந்திரபுத்தி உள்ளவர்களுக்கு ஓட்டுப் போட்டுவிடுவார்களா?

அப்படியே போடுகிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும் அதனால் இரண்டு ஜாதிக்கும் அதாவது பற ஜாதிக்கும் பார்ப்பார ஜாதிக்கும் பரஸ்பர நம்பிக்கை ஏற்பட்டு விடுமா?

இன்று பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்றவர்களுக்கு ஒரே தொகுதி இருந்தும் ஒருவருக்கொருவர் ஓட்டுக் கேட்டும் இன்று இரு ஜாதியும் பரஸ்பர சினேகமாய் இருக்கிறார்களா?

இதுவெல்லாம் உங்களை ஏமாற்றச் செய்யும் சூட்சியே அல்லாமல் உண்மையில் நாணயமான காரியமல்ல என்பதை மனதில் இருத்துங்கள்.

இன்று இந்நாட்டில் முகமதியர் இந்துக்கள் என்பவர்களை ஓட்டுக் கேட்காததினாலும் இந்துக்கள் என்பவர்கள் முகமதியர்களை ஓட்டுக் கேட்காததினாலும் ஒருவரை ஒருவர் தெருவில் விடாமல் உதைத்து விரட்டுகிறார்களா?

ஆகவே நீங்கள் தேசாபிமானம், மகாத்மா என்கின்ற வார்த்தைகளுக்கு உட்பட்டதின் பயனால் உங்கள் சுயமரியாதை வழியைத்தான் அடைத்துக் கொள்ளப் போகிறீர்கள்.

*குறிப்பு: 06.10.1935 குடி அரசு சொற்பொழிவு தொடர்ச்சி.*

**குடி அரசு - சொற்பொழிவு - 13.10.1935**



# தற்கால அரசியல் நிலை

தோழர்களே!

தற்கால அரசியல், ஜஸ்டிஸ் காங்கிரஸ் கட்சிகள், ஜில்லா போர்டு தேர்தலும் அரசியல் கட்சிகளும் என்கின்ற தலைப்புகளானது வெவ்வேறாகக் காணப்பட்டாலும் அவற்றைப் பற்றிய விஷயங்கள் இன்றைய நிலையில் பெரிதும் ஒரே தத்துவமும் ஒரே கருத்தும் கொண்டதாகத்தான் இருக்கிறது.

தற்கால அரசியலானது ஜஸ்டிஸ் காங்கிரஸ் கட்சி போராட்டங்களாகவும், அப்போராட்டங்கள் பெரிதும் தேர்தல்களையும், பதவிகளையும், உத்தியோகங்களையும் பற்றியதாகவும் இன்று அவை குறிப்பாக ஜில்லா போர்டு தேர்தல்களையும் பிரசிடெண்டு பதவிகளையும் பொருத்ததாகவுமே இருக்கின்றன.

அரசியலும் கட்சிப் போர்களும் ஸ்தல ஸ்தாபனங்களில் என்று பிரவேசித்ததோ அன்று முதலே ஸ்தல ஸ்தாபனங்களின் யோக்கியதைகளும் நாணயங்களும் அடியோடு ஒழிந்து யோக்கியப் பொறுப்பற்றவர்களுக்கும் சுயநலக்காரர்களுக்கும் தாயகமாகவும் பிழைப்புக்கிடமாகவும் ஏற்பட்டு விட்டது.

**ஸ்தல ஸ்தாபனம்**

ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் சம்மந்தப்பட்ட வரையில் அரசியல் கட்சியும் தேசாபிமான சூட்சியும் பிரவேசிக்கக் கூடாது என்பது எனது வெகுநாளைய அபிப்பிராயம். சுமார் 15 வருஷ காலமாகவே இதை நான் வலியுறுத்துகிறேன். ஸ்தல ஸ்தாபன நிர்வாகங்களைப் பொறுத்தவரை சகல பதவிகளில் இருந்தும் அனுபவம் பெற்றதை ஆதாரமாக வைத்தே சொல்லி வருகிறேன். ஸ்தல ஸ்தாபனம் என்பவற்றிற்கும் அரசியல் கொள்கை என்பதற்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது என்று ஏன் சொல்லுகிறேன் என்றால், ஸ்தல ஸ்தாபனம் என்பது ஒரு கிராமத்தையோ, நகரத்தையோ, ஜில்லாவையோ தான் பொறுத்ததாகும். அதுவும் அவற்றுள் இன்ன இன்ன காரியம் செய்ய வேண்டியது என்பதும், இன்ன விதமாய்ச் செய்ய வேண்டியது என்பதும், இன்ன நிர்வாகத்துக்கு அடங்கி இருக்க வேண்டியது என்பதும், இன்ன சட்டத்திற்கு அடங்கி நடக்க வேண்டுமென்பதும் வரையறுக்கப்பட்டதாகும்.



RangaRakes tamilnavarasam.com

அதை மீறியோ அல்லது அதை அலட்சியப்படுத்தியோ எந்தக் காரியமும் செய்ய முடியாது என்பதோடு இதற்கு அதிகமான அரசியல் ஞானம் ஒன்றும் தேவையுமில்லை.

ரோட்டுப் போடுவது, ரோட்டுகளை நன்றாய் வைத்திருப்பது, குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பது, பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்தி நிர்வகிப்பது, வைத்தியம், சுகாதாரம் ஆகிய வசதிகள் செய்வது முதலிய காரியங்களே ஸ்தல ஸ்தாபன நிர்வாகமாகும். இதற்கு அந்தப் பிரதேசத்தில் உள்ள அனுபவசாலிகளும், பரோபகார உணர்ச்சியுள்ளவர்களுமே தேவையாகும். இதற்கு ஆக தெரிந்தெடுக்கப்பட வேண்டிய ஒருவரை இவர் காங்கிரஸ்காரரா ஜஸ்டிஸ்காரரா என்று பார்க்க வேண்டியதில்லை.

மேற்கண்ட விஷயங்களைப் பொறுத்தவரை எந்தக் கட்சியிலும் கொள்கை வித்தியாசமில்லை. நிர்வாகத்தில் நாணயக் குறைவு இருப்பதோ அசிரத்தை இருப்பதோ ஓட்டர்களுக்குப் பணம் கொடுப்பதோ, மெம்பர்களுக்குக் கண்ட்ராக்ட்டுக் கொடுப்பதோ மெம்பர்களும், தலைவர்களும் இதில் பணம் சம்பாதிப்பதோ முதலாகிய கெட்ட காரியங்கள் இன்று எந்தக் கட்சியிலும் கொள்கையாக இல்லை.

## அபேக்ஷகர் யோக்கியதை

அந்தப்படி ஏதாவது நடக்குமானால் அது தனிப்பட்ட நபர்களின் காரியமே ஒழிய கட்சிக் கொள்கையின் திட்டம் என்று எந்த மடையனும் சொல்ல முடியாது. இந்தக் காரியங்கள் இன்று காங்கிரஸ் கட்சியின் பேராலும் காங்கிரஸ் அபிமானத்தாலும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வந்த அனேக பிரசிடெண்டுகளிடமும், மெம்பர்களிடமும் தாராளமாய் இருந்து வருகிறது. அதை நான் பல தடவை எடுத்துக் காட்டி வந்திருக்கிறேன்.

சென்னை, கோவை முதலிய ஸ்தல ஸ்தாபனங்களில் உள்ள காங்கிரஸ் அங்கத்தினர், தலைவர்கள் ஆகியவர்களுடைய யோக்கியதையே இதற்குத் தகுந்த உதாரணமாகும்.

தேசாபிமானிகள், தேசபக்தர்கள் என்று ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றிய சில தோழர்களுடைய யோக்கியதையை நன்றாய்க் கவனித்துப் பார்த்தால் ''தேசாபிமானம் என்பது காலிகளின் கடைசி வாழ்க்கை மார்க்கம்'' என்று சொன்ன அறிஞரின் ஞான மொழி எவ்வளவு சரியானது என்பது எவ்வளவு ஞானமற்றவனுக்கும் விளங்கும். இந்த ஜில்லா போர்டு தேர்தலுக்காகக் காங்கிரஸ்காரர்கள் தங்கள் கட்சி சார்பாய் சில ஆட்களை நிறுத்தி தங்கள் கட்சிக்கே ஓட்டுக்கொடுக்க வேண்டுமென்று பிரசாரம் செய்து வருகிறார்கள்.

இதுபோலவே மற்றும் பல இடங்களிலும் செய்து வருகிறார்கள். அப்படிச் செய்வதில் தங்கள் யோக்கியதைகளையும் ஸ்தல ஸ்தாபன



விஷயமாய் மற்ற கட்சிக்காரர்களிடம் இல்லாத தங்கள் கொள்கைகளையும் சொல்லியோ அல்லது அதற்குத் தகுதியாகத் தங்கள் நபர்கள் இருப்பதையோ சொல்லிப் பிரசாரம் செய்யாமல் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களை வைவதும் தாங்களே தேசாபிமானிகள் என்றும், அரசாங்கத்தோடு போர்புரிகிறவர்கள் என்றும், ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் தேசத்துரோகிகள் என்றும், அவர்கள் அரசாங்கத்துக்கு அடிமைகள் என்றும், மக்களை ஏமாற்றிவிட்டார்கள் என்றும், தாங்கள் யோக்கியமாய் நடந்து கொள்ளுகின்றவர்கள் என்றும் பாமர மக்களிடம் அயோக்கியத்தனமாய்ப் பேசி விஷமப் பிரசாரம் செய்கிறார்கள்.

## தேசாபிமானம்

தேசபக்தி, தேசாபிமானம் என்கின்ற பேச்சே இந்துக்கள் அகராதியில் கிடையவே கிடையாது. புராண காலங்களிலானாலும் மற்ற தமிழ் அரசர்கள் காலங்களிலானாலும் சாஸ்திரம், புராணம், தமிழ் இலக்கிய இலக்கணம் ஆகிய எதிலும் தேசாபிமானம் அரசர்களோடு உரிமைக்கு போராடுதல் ஆகிய வார்த்தைகளே காண முடியாது.

அரசர்களை, கடவுளாகவும், கடவுளவதாரமாகவும், கடவுள் தன்மை பெற்றவர்களாகவும் பாவிக்க வேண்டும் என்பது ஆரியர்களின் சித்தாந்தமாகும். அரசரோடு எதிர்த்தால் அந்நாடும் அந்த நபர்களும் அழிந்து போகும் என்றும் நரகம் கிடைக்குமென்றும் அனேக ஆதாரங்கள் இருக்கிறது.

வேண்டுமானால் ஆரியர்கள் அனாரியர்கள் சண்டைகளும், அபிமானம் துவேஷம் ஆகியவைகளும், ஆரியர்கள் கருப்பு நிறக்காரர்களை ஒழிக்கப் பிரார்த்தனைகளும் சூட்சிகளும் நடந்ததாகவும் அதற்கேற்ற அரசை ஸ்தாபிக்க முயற்சித்து வெற்றி பெற்றதாகவும், வேதம் புராணங்கள் ஆகியவைகளில் காணக் கிடக்கின்றன.

இந்த நாட்டில் ஜாதி மதப் பூச்சாண்டிகளுக்கு யோக்கியதை அற்றுப் போனதோடு அவற்றின் வண்டவாளங்கள் வெளிப்படுத்தப்பட்ட பின்பேதான் தேசாபிமானப் பூச்சாண்டி பார்ப்பனர்களால் கண்டுபிடிக்கப் பட்டதே ஒழிய வேறில்லை.

ஆகவே மக்களை ஏமாற்றப் பார்க்கும் ஒரு தந்திரம் தான் தேசாபிமானமே அல்லாமல் அதில் அருத்தம் கிடையாது.

## ஜஸ்டிஸ் கட்சி என்ன கெடுதி செய்தது யாரை ஏமாற்றிற்று

எப்படி இருந்த போதிலும் ஜஸ்டிஸ் கட்சியானது மக்களுக்கு என்ன கெடுதி செய்தது என்பதையும், மக்களை எதில் ஏமாற்றியது என்பதையும், எந்தக் காங்கிஸ்வாதியோ ஏதாவது ஒரு தேச பக்தனோ இன்று விரல் மடக்க முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

பொது ஜனங்களை ஏமாற்றிக் காசு பறித்து காலிகளுக்கும் கூலிகளுக்கும் கொடுத்து ஏவி விட்டு வையச் செய்வது தேசாபிமானமாக ஏற்பட்டு விடாது.

ஜஸ்டிஸ் கட்சி பொது ஜனங்களிடம் ஒரு வருஷத்தில் சுயராஜ்யம் வாங்கித் தருகின்றேன் என்று யாரை ஏமாற்றி எத்தனை கோடி ரூபாய்களை வசூல் செய்தது?

இதோ தெரிகிறது சுயராஜ்யம் அதோ தெரிகிறது சுயராஜ்யம்; இன்னமும் கொஞ்சம் பணம் கொடுங்கள் என்று எப்போதாவது சொல்லி யாரை ஏமாற்றிற்று?

கதர் கட்டினால், கைராட்டினம் சுற்றினால் சுயராஜ்யம் வருமென்று அதற்காக எத்தனை லக்ஷ லக்ஷ ரூபாய் வசூல் செய்தது?

ஜயிலுக்குப் போனால் தான் சுயராஜ்யம் வருமென்று எத்தனை பேரை ஜயிலுக்கு அனுப்பிற்று?

உதைபட்டால் அடிபட்டால் தான் சுயராஜ்ஜியம் வருமென்று எத்தனை பேரை அடி உதை படச் செய்தது?

சட்டம் மீறினால், சத்தியாக்கிரகம் செய்தால் சுயராஜ்யம் வருமென்று எத்தனை பேரை சண்டித்தனம் செய்யும்படி தூண்டிற்று.

சர்க்கார் பேரில் துவேஷம் ஏற்படும்படி செய்வதே நமது கடமை என்றும், சட்டசபைகளை பகிஷ்கரிப்பதே சுயமரியாதை என்றும் வீரப் பிரதாபம் பேசிவிட்டு ராஜபக்தி, ராஜ விசுவாச சத்தியம் செய்து கொண்டு எந்தெந்த சட்டசபையில் எங்கெங்கு மானம்கெட்டு உட்கார்ந்து படி வாங்கிப் பிழைத்துத் திரிந்தது?

எந்தெந்தத் தேர்தலில் சமயத்துக்குத் தக்க பொய்யான வாக்குறுதி கொடுத்து வெற்றி பெற்றவுடன் குட்டிக்கரணம் போட்டது?

எந்தெந்த தேர்தலில் கழுதைகளும் நாயுந்தான் சட்டசபைக்குப் போகும் என்று சொல்லி கழுதைக்கு அட்டை கட்டி ஓட்டுப் போடும்படி கேட்டுவிட்டு இப்போது கழுதைக்கும், நாயுக்கும் பதிலாகப் போய் மண்டி போட்டுச் சலாம் செய்கிறது?

எந்தெந்த சட்டசபைகளை கள்ளுக்கடை என்று சொல்லிவிட்டு இப்போது அந்தச் சட்டசபைகளுக்குக் காசி யாத்திரை போல் போய் தொங்கிக் கொண்டு இருக்கிறது?

இவை ஒன்றும் ஜஸ்டிஸ் கட்சி செய்யவில்லையே?

அது எந்த ராஜாங்கத்தையும் அழித்து விடுவதாகவோ கவிழ்த்து விடுவதாகவோ ஒருவரிடமும் ஒப்பந்தம் பேசி ஒரு காசுகூட அட்வான்சோ, உண்டியல் பிச்சையோ எடுக்கவே இல்லையே.



## ஜஸ்டிஸ் கொள்கை

அது ஏற்பட்டதற்குக் காரணமும் அதன் கொள்கையும் ஒரே ஒரு விஷயம் தானே.

அதாவது தேசாபிமானம், சுயராஜ்ஜியம் என்னும் பேரால் மக்களை 35 வருஷ காலம் ஏமாற்றி மோசம் செய்து சுயநலம், சுயவகுப்பு அபிமான நலம் அடைந்து வந்த பார்ப்பனர்களின் பித்தலாட்டத்தை வெளியாக்கி அரசியல் பிரதிநிதித்துவத்திலும், உத்தியோகத்திலும் சகல வகுப்பு மக்களுக்கும் சம உரிமையும், சம சந்தர்ப்பமும் ஏற்படும்படி செய்வது என்னும் கொள்கையையே பிரதானமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது என்பதாகும்.

இந்தக் கொள்கையுடன் ஜஸ்டிஸ் கட்சியை ஆரம்பித்த தலைவர்கள் யார் என்பது பார்த்தாலோ,

வெகுகாலமாகக் காங்கிரசில் இருந்து தேசபக்த பட்டம் பெற்று அரசாங்கக் கண்காணிப்புக்கு ஆளாகி சதா சர்வகாலம் C.I.D. உத்தியோகஸ்தர்களுக்கு மத்தியில் இருந்த தேசாபிமானி என்று கருதப்பட்ட தோழர் டாக்டர் நாயர் அவர்களாலும், சர். தியாகராயச் செட்டியாராலும் ஏற்படுத்தப்பட்டதே ஒழிய கவர்னராகவும், மந்திரியாகவும், பிரதம காரியதரிசியாகவும் வரவேண்டும் என்று ஆசை கொண்டு சதா நாக்கில் தண்ணீர் சொட்ட விட்டுக் கொண்டிருக்கும் "தேசீய வீரர்கள்" என்று தங்களுக்குத் தாங்களே தலைமை சூட்டிக் கொள்ளும் நபர்களால் ஏற்படுத்தப்பட்டதல்ல.

ஆகவே இப்படிப்பட்ட ஜஸ்டிஸ் கட்சி அதாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை நிர்த்தாரணம் செய்யத் தோன்றிய ஜஸ்டிஸ் கட்சியானது எந்த மக்களிடமாவது ஒன்றைச் சொல்லி மற்றொன்றைச் செய்து ஏமாற்றி இருக்கிறதா?

## ஜஸ்டிஸ் வாக்குறுதி

ஜஸ்டிஸ் கட்சி எந்த தேர்தலுக்கு நின்றாலும் ஜனங்களிடம் யோக்கியமாய் நாணயமாய் உண்மையைச் சொல்லி அதாவது,

நாங்கள் சர்க்காரிடம் ஒத்துழையாமை செய்ய மாட்டோம் என்றும்,

சட்டம் மீற மாட்டோம் என்றும்,

சட்டத்திற்கும் சமாதானத்துக்கும் களங்கம் ஏற்படும்படி சர்க்காராலும் பொது ஜனங்களாலும் கருதும்படி நடக்க மாட்டோம் என்றும், சீர்திருத்தத்தை உடைக்க மாட்டோம் என்றும்,

அதிக சீர்திருத்தம் பெறவும் மக்களுக்கு நன்மை செய்யவும் மந்திரி வேலையை ஏற்று வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ கொள்கைப்படி எங்களால் கூடியதைத்தான் செய்வோமென்றும்,



RangaRakes tamilnavarasam.com

பொது ஜனங்களிடம் வாக்குக் கொடுத்துத்தான் ஓட்டு வாங்கி இன்று அந்தப்படி நிர்வாகம் செய்து வருகிறார்களே ஒழிய, அதுவும் இன்று நேற்று அல்லாமல் இந்த 20 வருஷ காலமாய் அதே கொள்கையோடு பொது ஜன ஓட்டுப் பெற்று தொடர்ந்து நிர்வாகம் செய்து வருகிறார்களே ஒழிய வருஷத்துக்கு ஒரு கொள்கை மாற்றியோ மாதத்துக்கு ஒரு திட்டம் மாற்றியோ பொது ஜனங்களை ஏமாற்றியோ ஏதாவது காரியம் செய்து வருகிறார்களா என்று கேட்கிறேன்.

எதற்கு ஆக ஜஸ்டிஸ் கட்சியைத் தூற்றுவது?

அது செய்த தவறுதல் இன்னது என்றாவது அயோக்கியத்தனம் இன்னது என்றாவது இன்று எந்த மனிதனாவது விரல் விடமுடியுமா என்று கேட்கிறேன்.

பல பொறுப்பற்ற அயோக்கியர்களும் கூலிகளும் காலிகளும் ஜஸ்டிஸ் கட்சி பெண்கள் தாலி அறுத்ததென்றும், தேசாபிமானிகளையும் தேசபக்தர்களையும் அடித்து உதைத்து துன்பப்படுத்திற்றென்றும், வரி குறைக்கவில்லை என்றும், மழை பெய்விக்கச் செய்யவில்லை என்றும் குலைக்கின்றனர்.

இவைகள் எல்லாம் ஜஸ்டிஸ் கட்சிக்கு சம்பந்தப்பட்ட வேலை அல்ல என்பதும் இதற்கெல்லாம் ஜஸ்டிஸ் கட்சி பொறுப்பாளி அல்லவென்றும் அரசியல் அரிவரி படித்த மடையனுக்குக் கூடத் தெரியும்.

ஜாதிப் போரோ கட்சிப் போரோ நடத்துவதாய் இருந்தால் யோக்கியமாய், மானமாய், ஆண்மையாய் வீரர்களைக் கொண்டு போர் நடத்த வேண்டும். ஆனால் இன்று நம் பார்ப்பனர்கள் யோக்கியம், ஆண்மை, மானம், வீரம் ஆகியவைகளை அடியோடு துலைத்து விட்டு மானமற்ற காலிகளையும், எச்சிலை வாழ்வுக்காரர்களையும் பிடித்து இம்மாதிரி தப்பான பிரசாரத்தைக் கொண்டு அதுவும் கல்வி அறிவு என்பது 1000க்கு 50 பேருக்குகூட இல்லாத பாமர மக்களிடையிலும் 1000க்கு 10 பேருக்குக் கூட கல்வி அறிவில்லாத பெண் மக்களிடையிலும் விஷமப் பிரசாரம் செய்து ஏய்ப்பதென்றால் இது மானமுள்ள ஜாதிப் போராட்டமோ ஆண்மையுள்ள அரசியல் கிளர்ச்சியோ ஆகுமா என்று கேட்கிறேன்.

ஜஸ்டிஸ்காரர்கள் ஜெயிலுக்கு போகவில்லை என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள். ஜஸ்டிஸ்காரர்கள் ஜெயிலுக்கு போவதால் பயன் உண்டு என்று கருதினால் காங்கிரசுக்காரர்களைவிட 10 பங்கு பேர் ஜெயிலுக்கு போக முடியும். ஜெயில் என்பது தேள், பாம்பு நிறைந்த இடம் அல்ல.

நானும் 7, 8 தரம் போய்வந்துதான் இருக்கிறேன். அங்கு தேச பக்தர்களுக்கு தினமும் அல்வாவும், அக்காரவடிசலும், நெய்யும், தயிரும், பாலும், கட்டிலும், மெத்தையும், மேஜையும், நாற்காலியும் தாண்டவ மாடுவதை நேரிலேயே பார்த்துத்தான் இருக்கிறேன்.



உண்மை தெரிய வேண்டுமானால் என்னைப் பொறுத்தவரை சர்க்கார் கொடுத்த கட்டிலும், மெத்தையும், நாற்காலியும் மற்ற சில சவுகரியமும் வேண்டாம் என்று தூக்கி வீசி எறிந்துவிட்டு சும்மா இருந்துவிட்டு வந்தேன். வேண்டுமானால் ராஜமேந்திர ஜெயில் சூப்ரண்டுக்கு எழுதி கேட்டுக் கொள்ளலாம்.

தோழர்கள் சத்தியமூர்த்தி முதல் ராகவாச்சாரி வரையில் அவரவர்கள் வீட்டில் அனுபவிக்கும் யோக்கியதைக்கு மேல் 10 பங்கு அனுபவித்து வந்தார்கள்.

இன்றும் ஜெயிலில் போகிற ஆட்களுக்குத் தகுந்தபடி சிபார்சுக்குத் தகுந்தபடி பார்ப்பன சொந்தக்காரர்களுக்குத் தகுந்தபடி காசுக்குத் தகுந்தபடி நடக்கின்ற முறை இருக்கிறது என்பது கிரிமினல் கைதிக்குக் கூடத் தெரியும்.

ஆதலால் ஜஸ்டிஸ் கட்சியாருக்கு ஜெயில் ஒரு பூச்சாண்டி அல்ல என்றே சொல்லுவேன். மற்றபடி காங்கிரஸ்காரர்கள் கும்பல் கும்பலாக ஜெயிலுக்கு போனார்கள் என்று வைத்துக் கொண்டாலும் கடைசியாக தாங்கள் செய்தது தவறு என்று உணர்ந்தோ அல்லது சர்க்காரை ஏமாற்ற என்று கருதியோ ''இனிமேல் அப்படிச் செய்யவில்லை எங்களைத் திறந்து விடுங்கள்'' என்று எழுதி காந்தியார் கையொப்பமிட்ட பிறகு வெளியில் வந்தவர்களே ஒழிய காலாவதி கடந்து வந்தவர்களோ அல்லது சுயராஜ்ஜியம் ஏற்பட்டு ஜெயில்களை உடைத்துக் கொண்டு வெளி வந்தவர்கள் அல்ல அல்லது வந்தவுடன் மறுபடியும் ஜெயிலிலே வாசமாய் இருந்தவர்கள் என்றாவது யாரையாவது சொல்ல முடியுமா? என்று கேட்கிறேன்.

காந்தி இர்வின் ஒப்பந்தம் என்ன என்று கேட்கிறேன்.

**''காந்தியார் இனிமேல் சட்டம் மீறக் கூடாது''**

**''சர்க்கார் எல்லாரையும் திறந்துவிட்டு விட வேண்டியது''** என்பதல்லாமல் அதில் ஏற்பட்ட சுயராஜ்யம் என்ன என்று கேட்கிறேன். அது மாத்திரமா? இன்றைய காங்கிரஸ் தீர்மானம் தான் என்ன?

''காங்கிரஸ் சட்ட மறுப்பை சத்தியாக்கிரகத்தை நிறுத்தி வைத்து விட்டது (கைவிட்டு விட்டது)'' ஆதலால் (பொய்யாகவோ மெய்யாகவோ) ''சட்டமறுப்பில் நம்பிக்கைக் கொண்ட காந்தியார் காங்கிரசை விட்டு விலகிக் கொண்டார்'' என்பதல்லாமல் வேறு என்ன?

அன்றியும் சட்டமறுப்பைக் கைவிட்ட பிறகு காங்கிரஸ் சர்வாதிகாரி (காந்தியார்) வைசிராயை தாங்களாகவே வலுவில் பேட்டி காண ஆசைப்பட்டும் பல தடவை ஆசைப்பட்டும் ''பேட்டி கொடுக்க முடியாது'' என்று சொல்லியும் காங்கிரசின் சுயமரியாதையானது இந்திய சட்டசபைக்கும் போய் வைசிராயைப் பார்த்து எழுந்து நின்று தலை வணங்க வேண்டும் என்று ஆசைப்பட்டதே ஒழிய மானத்தோடு வாழ முடிந்ததா என்று யோசித்துப் பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

''ஜஸ்டிஸ் கட்சியாருக்கு அவமானம் ஏற்பட்டவுடன் அவர்கள் ஏன் ராஜீனாமா செய்யவில்லை'' என்று கூலிப் பிரசாரர்கள் கேட்கிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சியார் அவமானப்படும்படியாக அவர்கள் கொள்கை இவ்வளவு மோசமாக எங்கும் தோற்கடிக்கப்படவில்லை.

அன்றியும் தோற்கடிக்கப்பட்டால் வெளியில் வந்து விடுவதாக யாரிடமும் சொல்லவுமில்லை.

ஆனால் காங்கிரஸ்காரர்கள் தீர்மானம் 45 தடவை குப்பைத் தொட்டியில் போடப்பட்டது.

ஒருவருக்காவது சொரணையோ சூடுள்ள ரத்த ஓட்டமோ சிறிதுகூட இருப்பதாகக் காட்டிக்கொள்ள முடியவில்லை.

ஒவ்வொரு அவமரியாதைக்கும் புருஷனைச் சாகக் கொடுத்த பெண் போல் முக்காடு போட்டுக் கொண்டு பிரயாணப்படியை வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்வதும் மறுபடியும் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஓடுவதுமாய் இருக்கிறார்கள். இவ்வளவு அவமானம் பெற்றும் அந்தப் பதவியை பூணூல் உச்சிக் குடுமி போல் காப்பாற்றுகிறார்கள்.

ஆகவே இவர்கள் எந்த முகத்தைக் கொண்டு ஜஸ்டிஸ் கட்சியை குறை கூற முடியும். எனவே தோழர்களே, இப்படிப்பட்ட ஜில்லா போர்டு தேர்தலுக்கு உங்களில் பெரும்பாலோருக்குப் புரியாத கட்சி விஷயங்களால் குழப்பமடையாமல் உங்களுக்கு நேரில் தெரிந்த பொதுநல ஊக்கமுள்ளவர் களையும் பொதுநல வாழ்வில் சுத்தமுள்ளவர்களையும் தேர்ந்தெடுங்கள்.

குறிப்பு: *02.10.1935 ஆம் நாள் முதல் 06.10.1935 ஆம் நாள் முடிய திருநெல்வேலி மாவட்ட சுற்றுப் பயணத்தின்போது ஆற்றிய சொற்பொழிவுகளின் சுருக்கம்.*

**குடி அரசு - சொற்பொழிவு - 13.10.1935**



# காங்கிரசின் யோக்கியதை

இந்திய தேசிய காங்கிரஸ் ஏற்பட்டு சுமார் 50 வருஷமாகிறது. அது ஆரம்பமானது முதல் சுமார் 35 வருஷ காலம் வரையில்,

அரசாங்கத்தினிடமிருந்து பல உத்தியோகங்கள் பெறுவதும்,

உத்தியோகங்களுக்குச் சம்பளங்கள் உயர்த்தப்படுவதும்,

புதிய உத்தியோகங்கள் கற்பிக்கப்படுவதும்,

புதிய கோர்ட்டுகள், புதிய அரசாங்க ஆபீசுகள், புதிய இலாக்காக்கள், அவற்றிற்கு புதிய புதிய உத்தியோகஸ்தர்கள் முதலியவைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கோரி அந்தப்படி அதிகப்படுத்துவதும்,

இதற்கு வேண்டிய செலவிற்காக அரசாங்கத்தைக் கொண்டு பொது ஜனங்களின் மீது புதிய புதிய வரிகள் போடச் செய்து வசூலிப்பதும்,

இந்தப்படி புதிதாக போடப்படும் வரிகள் பணக்காரர்களையோ, பெரிய உத்தியோகம் பார்த்து அதிக சம்பளம் வாங்கும் பணக்கார உத்தியோகஸ்தர்களையோ பாதிக்காமல் பெரிதும் ஏழை மக்கள் சாதாரண மக்கள், தொழிலாளிகள், கூலிகள் ஆகியவர்களையே பாதிக்கும்படியான மாதிரியில் வரி விதிக்கப்படுவதுமான காரியங்களையே செய்து வந்திருக்கிறது.

இவ்வளவு மாத்திரமல்லாமல் காங்கிரஸ் ஏற்பட்டு 35 வருஷ காலம் வரை இந்திய தேசீய காங்கிரஸ் மகாநாடு என்பவைகள் கூட்டப்பட்டவுடன் முதல் தீர்மானமாக அரசாங்கத்தையும், சக்கரவர்த்தி பெருமானையும், புகழ்ந்து கூறி, ''அரசர், அல்லது சக்கரவர்த்தி, விஷ்ணுவின் அவதாரம்'' என்றும் பேசி ''அரசருக்கும், அரச சந்ததிகளுக்கும், அரசாங்க சட்டதிட்ட நீதி நிர்வாகங்களுக்கும், தாங்களும் தங்கள் சந்ததிகளும் பக்தி விஸ்வாசத்துடன் கட்டுப்பட்டு நடப்போமாகவும்'' என்று முதல் தீர்மானம்.

தோழர்கள் சுரேந்தரநாத் பானர்ஜி, தாதாபாய் நவ்ரோஜி, பாலகங்காதர திலக், கோகலே, பெசண்ட், கரம்சந்தர மோகன்தாஸ் காந்தி முதலாகியவர்கள் மற்றும் தேசியவாதிகள், தேசாபிமானிகள் என்பவர் களாலேயே பிரரேபித்தும், ஆமோதித்தும், ஆதரித்தும், ஓட்டுக் கொடுத்தும் நிறைவேற்றுவதும், இத் தீர்மானங்கள் பிரரேபிக்கப்படும்போது ஒழுங்காகவும் உண்மையான பக்தியுடனும் நடைபெறுகின்றதா என்பதை நேரிலிருந்து



RangaRakes tamilnavarasam.com

பார்த்துப் போகும்படி அந்தந்த மாகாண கவர்னர் முதலிய அதிகாரிகளையே அழைத்து வந்து நேரிலிருந்து பார்க்கும்படி செய்ய இத்தலைவர்கள் முயற்சிப்பதும் ஆகிய காரியங்களே பெரிதும் காங்கிரஸ் வேலையாகவும் அதையே செய்து வந்ததாகவும் இருந்து வந்தது.

இந்த யோக்கியதையில் உள்ள காங்கிரஸானது அக்காலத்தில் மற்ற மாகாணங்களில் பார்ப்பனர், படித்தவர்கள், பணக்காரர் ஆகியவர் ஆதிக்கத்தில் இருந்திருந்தாலும், சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை அடியோடு பார்ப்பனர்கள் கையிலேயே இருந்திருந்தாலும் அது பெரிதும் அவர்களிலுள்ள இரு பிரிவுகளில் ஒன்றாகிய விபூதி பூசும் பார்ப்பனர் ஆதிக்கத்தில் இருந்து கொண்டு அய்யங்கார் பார்ப்பனர்களைப் புறக்கணித்து விட்டதால் காங்கிரசின் பயனாய் ஏற்பட்ட - கிடைக்கப்பட்ட பெரும் உத்தியோகங்களும், சிறு உத்தியோகங்களும் விபூதி பூசும் அய்யர் பார்ப்பனர்களே அனுபவித்துக் கொண்டு அய்யங்கார் பார்ப்பனர்களை உத்தியோகப் பட்டினி போட்டு வந்தார்கள். அதாவது காங்கிரஸ் தலைவர், காரியதரிசி, ஹைக்கோர்ட் ஜட்ஜிகள், அட்வோகேட் ஜனரல், கவுன்சில் மெம்பர் ஆகியவர்கள் பெரிதும் முத்துசாமி அய்யர், மணி அய்யர், சதாசிவ அய்யர், பி.ஆர். சுந்திரமய்யர், வி. கிருஷ்ணசாமி அய்யர், சிவசாமி அய்யர், சி.பி. ராமசாமி அய்யர், எம். ராமச்சந்திரராவ், எல்.ஏ. கோவிந்தராகவய்யர், பி.என்.சர்மா, ஜி.ஏ.நடேசய்யர், சீனிவாச சாஸ்திரி முதலான அய்யர் சாஸ்திரி சர்மா பார்ப்பனர்களே இருந்து அனுபவித்து வந்தார்கள். இந்தப்படி இருந்ததால் அய்யங்கார் பார்ப்பனர்கள் காங்கிரசில் புகுந்து பங்கு பெற்று இவ்வுத்தியோகங்களைக் கைப்பற்ற முயற்சிக்க வேண்டியவர்களானார்கள்.

காங்கிரசில் இந்த அய்யர், அய்யங்கார் யுத்தம் பெசண்டம்மையார் காலத்து வலுத்து வெளிப்படையாய் நடக்க ஆரம்பித்தது.

இதற்கு மற்றுமொரு காரணம் சென்னை மாகாண அய்யர் பார்ப்பனர் களின் ஆதிக்கமானது, பிரபல - முக்கியமான அரசியல்வாதியென்று சொல்லும்படியான தோழர் சி.விஜயராகவாச்சாரியாரை அவர் அய்யங்கார் என்கிற காரணத்துக்காக வெகுகாலமாய் அவர் எந்தக் காங்கிரசுக்கும் தலைமை வகிப்பதற்கில்லாமலே செய்து அவர் பேர் வரும்போதெல்லாம் சென்னை மாகாணத்தில் அவருக்கு விரோதமாய் ஒரு அய்யங்கார் அல்லாதவரை போட்டு தோற்கடித்தே வந்திருக்கிறார்கள்.

உதாரணமாக சர். சங்கர நாயருக்கு கிடைத்த சான்சுகூட ஆச்சாரியாருக்கு கிடைக்கவில்லை.

ஆதலால் அய்யங்கார்கள் ஒன்று கூடி வெளிநாட்டுப் பிரபல அரசியல்வாதியான திலகரை சுவாதீனப்படுத்திக்கொண்டு இம்மாகாண அய்யர் பார்ப்பனர்களை எதிர்க்க இம்மாகாணத்தில் அக்காலத்தில் அரசியலில் கலந்திருந்த தோழர்கள் சிதம்பரம்பிள்ளை, சக்கரைச் செட்டியார் போன்றவர்களை அமர்த்திக் கொண்டு பெசண்டம்மையார், அய்யர் பார்ப்பனர் ஆகியவர்களை வையும்படி ஏவிவிட்டு ஒரு அளவுக்கு அய்யர்கள் ஆட்சியை ஆட்டத்திற்குக் கொண்டு வந்துவிட்டார்கள்.





இந்த நிலையில் அய்யர் அய்யங்கார் சண்டையையும் அதன் உள் எண்ணத்தையும் அறிந்த தென்னாட்டுப் பார்ப்பனரல்லாத பிரபல அரசியல்வாதிகளான தோழர்கள் டாக்டர் நாயர், தியாகராயர் மற்றும் 2ந்தர, 3ந்தர அரசியல்வாதிகள் சேர்ந்து தங்கள் சமூகம் அடியோடு கவனிப்பாரற்றுக் கிடப்பதை உணர்ந்து அவ்வுத்தியோகங்களில் தங்கள் வகுப்புகளுக்கும் கொஞ்சம் பங்கு கிடைக்க வேண்டுமென்று முயற்சிக்க வேண்டியவர்களானார்கள்.

இந்தச் சமயத்தில் பிரிவுபட்டிருந்த அய்யர், அய்யங்கார், பார்ப்பனர்கள் தங்கள் விரோதத்தை மறந்து பார்ப்பனரல்லாதாரின் இம்முயற்சியின் பயனாய் ஒன்று சேர்ந்து பார்ப்பனரல்லாதார் முயற்சியை எதிர்த்து அழிக்க வேண்டியவர்களானார்கள்.

இந்த நிலையில் பார்ப்பனர்களுக்கு ஒரு பார்ப்பனரல்லாத தலைவரும், பார்ப்பனரல்லாத தேசபக்தர்களும் வேண்டியிருந்தது என்பதோடு சற்று அதிக புத்திசாலித்தனமான சூக்ஷிகளும் தந்திரங்களும் வேண்டி இருந்தது. இப்படிப்பட்ட ஒரு அவசியமானதும் இன்றியமையாததுமான சந்தர்ப்பம் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்டுவிட்டதால்தான் காந்தியார் தலைவராகவும், தோழர்கள் ஈ.வெ.ராமசாமி, பி. வரதராஜுலு, திரு. வி. கல்யாணசுந்திரம், சிங்காரவேலு, ஆரியா, டி.வி. கோபாலசாமி முதலியார், முத்துரங்க முதலியார், சுப்பிரமணிய நயினார், ராமச்சந்திர செட்டியார் போன்றவர்கள் திடீரென்று தேசபக்தர்களாகவும், தேசாபிமானிகளாகவும், தேசீயவாதிகளாகவும் ஆக்கப்பட்டார்கள்.

அதன் பிறகுதான் அய்யர்கள் ராஜ்ஜியம் ஒரு அளவுக்கு ஒழிந்து அய்யங்கார் ராஜ்ஜியமாகி வெகுநாளாகத் தள்ளப்பட்டுக் கிடந்த விஜயராகவாச்சாரியார் கல்லறையில் ஒரு காலும் காங்கிரஸ் தலைமையில் ஒரு காலும் இருக்கும்படியாக கிழ வயதில் காங்கிரஸ் தலைவராக்கப் பட்டார். அதன் பின்பே தோழர் ராஜகோபாலாச்சாரியார் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும், டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் காரியதரிசியாகவும், சீனிவாச அய்யங்கார், பாஷியம் அய்யங்கார், சந்தானம் அய்யங்கார், வரதாச்சாரி ஆகியவர்கள் காங்கிரசில் பிரதானப்பட்டவர்களானார்கள். அதன் பிறகே இந்த அய்யங்கார் கூட்டத்திற்கு நிபந்தனை இல்லாத அடிமைகள் யாரோ அவர்களே அய்யர் பார்ப்பனர்களிலும் பார்ப்பனர் அல்லாதாரிலும், முகம்மதியர்களிலும், கிறிஸ்தவர்களிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்களிலும், தேசபக்தர்கள், தேசீயவாதிகள், தேசீய பிரசாரகர்கள் ஆகியவர்கள் ஏற்பட இடமேற்பட்டது.

RangaRakes tamilnavarasam.com

இதற்குச் சம்மதிக்காத தேசபக்தர்கள் திடீரென்று தேசத் துரோகிகள், சர்க்கார் குலாம்கள் என்று ஆக்கப்பட்டார்கள். இதுதான் இந்திய தேசீய காங்கிரசின் தென்னாட்டுச் சரித்திரமாகும்.

இந்த நிலையில் உள்ள காங்கிரஸானது சமீபகாலமாய் தென்னாட்டில் வெளிப்படையாக, பட்டாங்கமாக பார்ப்பனர்கள் ஒரு புறமும், பார்ப்பனரல்லாதார்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள், தீண்டப்படாதவர்கள் உள்பட எல்லோரும் மற்றொரு புறமாகவும் தங்கள் சமூக ஸ்தாபனங் களோடு இருந்து போர் புரிந்து வருகிறார்கள்.

இப்போரில் காங்கிரஸ் ஸ்தாபனம் தேசத்துக்காக போர் புரிகின்ற தெனவும் பார்ப்பனரல்லாதார் ஸ்தாபனம் வகுப்புவாதத்துக்கு ஆக அதாவது உத்தியோகத்துக்கு ஆகப் போர்புரிகின்றது என்றும் உத்தியோகம் என்றால் மந்திரி பதவிகள் என்றும் பார்ப்பனர்கள் பறையடித்து பிரசாரம் செய்கிறார்கள்.

பார்ப்பனர்களுக்குப் பத்திரிகை உலகம் அடிமைப்பட்டுவிட்டதாலும் பார்ப்பனர்களின் ஆதரவில்லாமல் தென்னாட்டில் எந்தப் பத்திரிகையும் வாழ முடியாத நிலைமையில் இருப்பதாலும் பார்ப்பனப் பத்திரிகையில் வெளியாக்கப்படும் அபிப்பிராயங்களே தேச மகாஜனங்களின் அபிப்பிராயங்கள் என்று எழுதி பின்பற்றாத பத்திரிகைகள் இந்நாட்டில் தலைகாட்ட முடியாத நிலையிலிருப்பதாலும் அரசியலின் பேராலோ, பொது வாழ்வின் பேராலோ தேசாபிமானம், தேசபக்தி, தேசியம் என்னும் பேராலோ வாழ வேண்டியவர்களோ பெருமையும், புகழும் பெற வேண்டியவர்களோ எப்படியாவது பார்ப்பனர்களுக்கும் அவர்களது பத்திரிகையின் ஸ்ரீ முகங்களுக்கும் கட்டுப்பட்டு தீர வேண்டியவர்களாகி விட்டார்கள்.

இதனால் பாமர மக்கள் உண்மையை உணர முடியாமல் போனதோடு சிறையில் அடைபட்ட மக்கள் போல் அரசியல் விஷயத்தில் சிறிதும் சுதந்திரமோ, சுயேச்சை புத்தியோ, அபிப்பிராயமோ அடைவதற்கு தகுதி யில்லாதவர்களாகவும், சவுகரியமில்லாதவர்களாகவும் ஆகிவிட்டார்கள்.

இம்மாதிரியான காரியங்களால் ஓரளவில் பார்ப்பன ஆட்சி தென்னாட்டில் நடைபெறுகின்றதென்பதாக வைத்துக் கொண்டாலும் பார்ப்பனர்கள் நிலையானது 1920 முதல் 1935 வரையில் பார்ப்போமானால் நாளுக்கு நாள் இறங்கு முகத்தில் வந்து கொண்டே இருக்கிறதே தவிர, சிறிதும் மேல் நோக்கினதாகவோ, கீழ் நோக்காமலாவது இருக்கிறதாகவோ சொல்ல முடியவில்லை.

அது மாத்திரமல்லாமல் இன்றைய நிலைமையானது பார்ப்பனர்களை இது காலம் வரை தாம் செய்து வந்த காரியம் தப்பு என்பதாக உணரும் படியாகவும், 1920-ம் வருஷத்துக்கு முன் இருந்த நிலைமைக்குப் போக



வேண்டியதே தங்கள் சமூகத்துக்கு நன்மை அளிக்கக் கூடியது என்பதாகவும், புத்தி கற்பித்துவிட்டதுடன், இப்பதினைந்து வருஷமாக இந்தப் போரை நடத்திக் கொண்டு வந்த தலைவரும், தளகர்த்தரும், அதாவது காந்தியாரும் ராஜகோபாலாச்சாரியாரும் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டிய நிலைமையை கொண்டு வந்து விட்டுவிட்டது. அந்த ஓய்வு தங்களுடைய நலனுக்கு என்று இல்லாமல் **காங்கிரசின் நன்மைக்காக ஓய்வெடுத்துக் கொள்கிறோம்** என்று சொல்லித் தீரவேண்டிய நிலைமைக்கு கொண்டு வந்துவிட்டது.

இதன் கருத்து என்னவென்றால் இவர்கள் காங்கிரசில் இருப்பதால் காங்கிரசை நடத்தும் பொறுப்பை இவர்கள் ஏற்றுக் கொள்வதால் காங்கிரசுக்கு நன்மையில்லாமல் தீமையே என்றும் தாங்கள் ஒதுங்கி இருப்பதாலேயே காங்கிரசுக்கு நன்மை என்றும் கருதினார்கள் என்பது வெளிப்படையாய் விளங்குகிறது.

அதோடு மாத்திரமல்லாமல் ''காந்தியார், ஒரு புறமும் வைசிராய் - ராஜப்பிரதிநிதி ஒரு புறமும் இருந்து ராஜி பேசி ஒரு பத்திரத்தில் இருவரும் கையொப்பமிடும்படியான நிலைமை பெற்றிருந்த ஒரு தலைவர்'' அதே அரசாங்க ராஜப் பிரதிநிதியை பார்க்க, தன்னுடைய குறைகளை தெரிவித்துக் கொள்ள - எவ்வித நிபந்தனையும் இல்லாமல் அதாவது பேட்டியில் தன்னை எப்படி வேண்டுமானாலும் நடத்திக் கொள்ளலாம் என்று ஒரு தடவைக்கு மூன்று தடவை விண்ணப்பித்துக் கொண்டும் அதை லட்சியம் செய்யாமல் பேட்டி மறுத்தும், அதே தலைவர் தானே சர்வாதிகாரி என்றும் தன்னை மனிதத் தன்மைக்கு மேம்பட்டவர் என்றும் கருதிக் கொண்டும், பிறத்தியாரை அம்மாதிரி கருதவும், அழைக்கவும் செய்து கொண்டும் இருந்தவர் இந்நிலை அடைந்து இவரது வேண்டுகோளெல்லாம் மறுக்கப்பட்டு அலட்சியப்படுத்தப்பட்ட காலத்தில் இன்றும் 1920-ம் வருஷத்துக்கு முந்திய காங்கிரசின் ராஜ விஸ்வாசப் பிரமாணமும், உத்தியோகம் ஏற்கும் முயற்சியும் செய்யப்படுகிறதென்றால் பேட்டி மறுத்து அலட்சியப்படுத்தப்பட்ட வைசிராய் சட்டசபையில் போய் தலைகுனிந்து அதற்கு மேற்பட்ட ராஜபக்தி விஸ்வாசப் பிரமாணம் செய்து அமரத்துவம் செய்வதென்றால் இதுவரை காங்கிரஸ் செய்து வந்த காரியம் முட்டாள்தனமா? அல்லது சூட்சியா? அல்லது ஏதாவது ஒரு உண்மைக் கொள்கைக்கோ மனிதத் தன்மையான சுயமரியாதைக்கோ செய்யப்பட்ட காரியமா? என்பதைப் பொது ஜனங்கள் உணர வேண்டும் என்பதற்கு ஆகவே இந்த ''பாட்டி கதை'' என்பதை எழுதினோம்.

இந்த நிலைமையிலுள்ள காங்கிரசானது இப்போது தேசம், தேசாபிமானம், சுயராஜ்யம், பூரண சுயேச்சை, அரசாங்கத்தைப் பணிய வைத்தல் ஆகிய பெயர்களை சொல்லிக் கொண்டு சத்தியமாகவும், நீதியாகவும், யோக்கியமாகவும் நடப்பதாகவும் கூறிக் கொண்டு கிறிஸ்தவர்



RangaRakes tamilnavarasam.com

களையும், மகமதியர்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும், பார்ப்பனரல்லாதார் களையும் இவர்களுடைய ஸ்தாபனங்களையும் வகுப்பு வாதம் என்றும், வகுப்புவாதிகள் என்றும், தேசத் துரோகமென்றும், சர்க்காரின் அடிமைகள் என்றும் சொல்லிப் பிரசாரம் செய்து வந்தவர்கள் இன்று சத்தியம், யோக்கியம் முதலிய குணங்களை அடியோடு ஒதுக்கி வைத்துவிட்டு சுயராஜ்யம், விடுதலை, பூரண சுயேச்சை என்ற வார்த்தைகளையெல்லாம் மறந்துவிட்டு எப்படி மெம்பராவது, எப்படி பிரசிடெண்டாவது என்பதற்கு ஏற்ற சூக்ஷி, தந்திரம், பொய், ஏமாற்று ஆகியவைகளையே முக்கிய திட்டமாக வைத்து பார்ப்பன வகுப்பு நலனையே கொள்கையாய்க் கொண்டு கிளர்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

சமீபத்தில் நடக்கப் போகும் ஜில்லா போர்டு தேர்தல்களில் காங்கிரஸ்காரர்கள் ஜெயம் பெற வேண்டுமென்று சொல்லிக் கொண்டு அந்த ஸ்தானங்களுக்கு காங்கிரஸ்காரர்களையே நிறுத்தப் போவதாய் சொல்லிக் கொண்டு ஜஸ்டிஸ் கட்சிக்குள் புகுந்து கலகத்தையும், மித்திர பேதத்தையும் உண்டாக்கி அந்த மெம்பர்களின் பலவீனத்துக்குத் தகுந்தபடி ஆசை காட்டி காரியங்கள் செய்து பொய்வாக்குகள் கொடுத்து அவர்களை ஏமாற்றி சுவாதீனம் செய்து அவர்களையே காங்கிரஸ் மெம்பர்கள் என்று பெயர் சொல்லி நிறுத்துகிறார்கள்.

சிதம்பரத்தில் காங்கிரஸ் மெம்பர்கள் ஜெயித்தார்கள் என்று சொல்லி பொது மக்களுக்குத் தப்பபிப்பிராயம் ஏற்படும்படி செய்து, அக்கவுன்சிலில் ஏற்பட்ட ஒரு செனட்டு மெம்பர் தேர்தலில் தோழர் வேணுகோபால் பிள்ளை (ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்) பெருவாரி ஓட்டுகளால் தெரிந்தெடுக்கப்பட்டார்.

மதுரை முனிசிபல் கவுன்சிலில் காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற்றார்கள் என்று பார்ப்பனப் பத்திரிகைகள் முழங்குகின்றன. ஆனால் பெரும்பாலும் ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்கள் பணச் செலவுக்கும், கூலிகள் வசவுக்கும் பயந்து கொண்டு புரட்டுக்குப் புரட்டாக கட்சிப் பெயர் மாற்றி பணம் மாத்திரம் கொடுத்து வெற்றி பெற்றிருக்கிறார்களே தவிர, அவர்களையெல்லாம் ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைகளை விட்டுக் கொடுத்த காங்கிரஸ் மெம்பர்கள் என்று சொல்லி விட முடியாது.

அதற்கு உதாரணம் சென்ற 10 ந் தேதி மதுரை முனிசிபல் கவுன்சில் மீட்டிங்கில் 24பேர் ஆஜரிருந்தும் காங்கிரஸ் தலைவர் ராஜேந்திர பிரசாத்துக்கு வரவேற்பு கொடுக்க வேண்டும் என்கிற தீர்மானத்துக்கு 6 பேர் தான் ஓட்டுக் கொடுத்தார்கள். 18 பேர் மறுத்து விட்டார்கள்.

அதுபோலவே திருநெல்வேலி, திருச்சி ஆகிய ஜில்லா போர்டு களுக்கும், காங்கிரஸ் மெம்பர் என்று பெரும்பாகம் ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்களையே நிறுத்துகிறார்கள்.



அவர்கள் அத்தனை பேரும் காங்கிரஸ்காரர்களை ஏய்க்கவே 4 அணா கொடுத்து காங்கிரஸ் பேரால் நிற்க சம்மதித்து இருக்கிறார்கள். இவர்களைத் தவிர காங்கிரஸ்காரர்களுக்கு தேர்தல்களுக்கு நிறுத்த ஆள்களும் கிடைப்பதில்லை.

காங்கிரஸ்காரர்களே சில ஜஸ்டிஸ் மெம்பர்களுக்கு அவரவர்கள் இஷ்டம் போல் நடக்க உரிமை கொடுத்து தேர்தலின் முடிவு வரை தங்களை காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் கிடைத்தால் போதும் என்று சொல்லுகிறார்கள்.

பாமர மக்களை ஏமாற்றவும், வெளி மாகாணக்காரர்களுக்கு எண்ணிக்கை அதிகமாகத் தெரியவும் பாடுபடுகிறார்களே ஒழிய மற்றபடி ஆள்களை தெரிந்தெடுப்பதில் எவ்வித நாணயமும் கவனிக்கப்படுவதில்லை.

மற்றும் காங்கிரஸ் கொள்கைப்படி ஒரு காங்கிரஸ் அங்கத்தினருக்கு இருக்க வேண்டிய யோக்கியதையும், அவர் நடந்து கொள்ள வேண்டிய முறையும் கொண்ட மெம்பர் இந்த கூட்டத்தால் யாராவது இருப்பதாய்ச் சொல்ல முடிவதுமில்லை.

கதர் ரூ.க்கு எத்தனை படி என்று இன்னமும் கேட்கும் ஆட்கள் திருநெல்வேலி, திருச்சி, மதுரை முதலியவிடங்களில் காங்கிரஸ் தெரிந்தெடுப்பில் 100க்கு 75 பேர் இருப்பார்கள் என்றால் மற்றதைப் பற்றி கேட்க வேண்டுமா?

ஆகவே காங்கிரஸ்காரர்கள் என்று ஒரு கூட்டம் ஏற்பட்ட பிறகு பொது வாழ்க்கையில் நாணயம், ஒழுக்கம், கற்பு என்று என்ன என்ன குணம் இன்று நல்லது என்னும் பேரால் இருந்து வந்ததோ அவைகளெல்லாம் அடியோடு மறைந்து போய்விட்டதுடன் பொது ஸ்தாபனங்களின் தன்மையும், நிர்வாகத்தின் யோக்கியதையும் பாழாகிக் கொண்டு வருகின்றது.

மனிதத் தன்மைக்கு ஜீவநாடி மானமேயாகும். காங்கிரசுக்கு அது சிறிது கூட இல்லாமல் போனதுடன் எவ்வளவுக்கு எவ்வளவு மானங்கெட வாழ முடிகின்றதோ அதுவே காங்கிரசின் மேலான வாழ்க்கையாக இருந்து வருகின்றது.

ஆகையால் இக்கொடிய நோயை அழிக்க வேண்டியது சுயமரியாதையும், சமதர்மமும் கோரும் மக்களின் இன்றியமையாக் கடமையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 13.10.1935**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ் வெற்றியின் வண்டவாளம்

காங்கிரஸ்காரர்கள் சிதம்பரம், மதுரை முதலிய முனிசிபல் தேர்தல்களில் தாங்களே வெற்றியடைந்ததாகத் தப்பட்டை அடித்து மக்களை ஏமாற்றி வந்தார்கள்.

இந்த ஏமாற்றம் ஒரு 15 நாட்களுக்குக்கூட நிலைக்க முடியாத தன்மையில் வெற்றியின் வண்டவாளம் வெட்டவெளிச்சமாகிவிட்டது.

சிதம்பரம் முனிசிபாலிட்டியில் ஒரு பார்ப்பனர் அக்கிராசனராய் வர முடிந்தது என்பது ஒருபுறமிருந்தாலும் மற்ற காரியங்களில் ஜஸ்டிஸ் கட்சியே வெற்றி பெற்று வருகிறது.

உதாரணமாக சிதம்பரம் முனிசிபாலிட்டியில் இருந்து செனட்டுக்குத் தெரிந்தெடுக்கப்படும் ஸ்தானத்துக்கு ஒரு ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் தோழர் வேணுகோபால் பிள்ளை அவர்களே ஒரு காங்கிரஸ் பார்ப்பனருக்கு விரோதமாய் நின்று பெருமித ஓட்டுகளால் வெற்றி பெற்று விட்டார்.

மற்றும் மதுரை முனிசிபல் கவுன்சிலில் ''காங்கிரஸ்காரர்களே வெற்றி பெற்று விட்டார்கள்'' என்றும், ''மதுரை காங்கிரஸ் கோட்டையாக ஆகிவிட்டது என்றும், மதுரையில் ஜஸ்டிஸ் கட்சி மாண்டுவிட்டதால் சென்னை மாகாணம் முழுவதிலும் ஜஸ்டிஸ் கட்சி புதைக்கப்பட்டு விட்டது'' என்றும் பார்ப்பனக் கூலிகளும் தோழர் சத்தியமூர்த்தி முதலிய பார்ப்பனர்களும், பார்ப்பனப் பத்திரிகைகளும் பறையடித்தன. அதன் யோக்கியதையும் 10.10.35-ல் நடந்த ராஜேந்திரபாபு வரவேற்புத் தீர்மானத்தில் தார் அபிஷேகம் செய்யப்பட்டு விட்டது.

அதாவது ''ராஜேந்திர பிரசாத் அவர்கள் காங்கிரஸ் பிரசாரம் செய்ய இந்த ஊருக்கு வருகிறார். ஆதலால் அவரை வரவேற்பது காங்கிரசை ஆதரிப்பதாகும். ஆகையால் மதுரை முனிசிபாலிட்டியின் பேரால் அவரை வரவேற்கக் கூடாது''

என்பதாகச் சொல்லி மதுரை கவுன்சிலர்கள் மறுத்து விட்டார்கள். 15 மெம்பர்கள் எதிர்த்தும் 3 பேர் நடுநிலை வகிப்பதன் மூலம் மறுத்தும் வரவேற்புத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டு விட்டது.

காங்கிரஸ் தலைவருக்கு வரவேற்பு அளிக்க வேண்டும் என்பதற்கு 6 பேர்கள் தான் அனுகூலமாய் இருந்திருக்கிறார்கள்.



ஆகவே ஆஜரான 24 மெம்பர்களில் 18 பேர்கள் காங்கிரஸ் மெம்பர்கள் அல்ல என்பதோடு, காங்கிரசுக் கொள்கையை எதிர்ப்பவர்கள் என்பதும் இதனால் விளங்குகிறதல்லவா?

எனவே காங்கிரஸ் வெற்றியின் வண்டவாளம் இதிலிருந்து அறிந்து கொள்ளலாம். திருநெல்வேலி, திருச்சி ஆகிய தேர்தல்களும் ''உருண்டைக்கு நீளம் புளிப்புக்கு அவளப்பன்'' (அதன் தகப்பன்) என்று ஆகப் போகிறது.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.10.1935**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ் வியாபாரம்

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரியார்கள் இதுகாறும் பல துறையில் வியாபார முறைகளைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். ''சுயராஜ்யம் கொடுக்கிறோம் பணம் கொடுங்கள்'' என்பார் ஒருவேளை, ''ஜெயிலுக்கும் போனோம், 'ஓட்'டுக்கொடுங்கள்'' என்பார் வேறொருவேளை, ''தடியடி பட்டோம், சட்டசபைக்கு எங்களை அனுப்புங்கள்'' என்பார் மற்றொரு வேளை. இப்படித் தாங்கள் செய்ததாகக் கூறப்பட்ட 'தியாகங்களை' வியாபாரப் பண்டங்களாக்கி அரசியலில் தொழில் புரியும் அறிவாளர்களைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. நாளாக ஆக, காங்கிரஸ் கட்சியினருடைய யோக்கியதை பொதுஜனங்களுக்கு நன்றாகப் புலப்பட்டுக்கொண்டு வருகிறது. எனினும், சுயநலக் கூட்டத்தைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள் செய்து கொண்டு வரும் செய்கைகள் பலவற்றைப் பொதுஜனங்கள் அறிவார்கள். உதாரணமாக, காங்கிரஸ் தலைவர் வரவேற்பிற்காக வசூலிக்கப்பட்ட பணத்திலிருந்து, காசியில் எம்.ஏ. பரீட்சைக்குப் படிக்கும் தோழர் துர்க்காபாய் அம்மாளுடைய செலவிற்காகப் பணம் அனுப்பப்பட்டிருக்கிறதென்று நம்பத்தக்க இடத்திலிருந்து தெரியவருகிறது. மற்றும் காங்கிரஸ் தலைவர்கள் சிலரால் பொதுஜனங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட நிதிகள் எக்கதியாகின்றன, எங்கு போகின்றன என்ற விஷயம் கீழ்க்கண்ட விவரங்களால் விளங்கும். அவர்கள் தம்முடைய சுற்றுப் பிரயாணங்களில் சிலவிடங்களில் காங்கிரஸ் 'கமிட்டி' காரியாலயத்தில் தங்கள் பொது வாழ்க்கையில் ஈடுபட்ட சில நண்பர்களில்லத்தில் உண்டு தம்முடைய பிரசாரத்தைச் செய்தபோதிலும், கணக்குப் புத்தகங்களில் தங்குமிடத்திற்கும், உணவிற்கும் செலவாயிற்று என்று தவறாகச் சில தொகைகளை எழுதி யிருக்கிறார்களென்றால், அவர்களைப்பற்றி என்னென்று சொல்வது? ஒரு காங்கிரஸ் பிரமுகர் தன்னுடைய 'கம்பெனி'யின் வேலையாகச் சென்றபோது காங்கரஸ் பிரசாரமும் செய்ததனால் தனக்கு நேர்ந்த செலவு விவரங்கள் முழுவதையும் 'கம்பெனி' கணக்கில் எழுதி, அதே சிலவு விவரங்களை காங்கிரஸ் கணக்கிலும் எழுதியிருக்கிறாரென்றாலும் அவருடைய தியாக புத்தியை எப்படி மெச்சிக் கொள்ளுவது? தாழ்த்தப்பட்ட மக்களுடைய



முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்டு ஒரு சங்கக் காரியாலயத்தின் வருகைக்காக மாதம் ஐம்பது ரூபாய் வசூலிக்கப்பட்ட நிதியிலிருந்து பதினொன்று மாதங்கள் வரைக்கும் கொடுக்கப்பட்டு வந்து, அது பதினொன்று மாதங்களுக்கும் குறிப்பிட்ட கட்டடத்தில் அச் சங்க காரியாலயம் இல்லை யென்றால் யாரை நோவது? இவற்றையெல்லாம் அறிந்து பொதுஜனங்கள் இனிமேலாவது ஜாக்கிரதையாயிருக்கும்படி எச்சரிக்கை செய்கிறோம்.

**'விடுதலை'**

**குடி அரசு - மறு பிரசுரம் - 13.10.1935**



RangaRakes tamilnavarasam.com

# ஜஸ்டிஸ் கட்சிக்கு நிதி வசூல்

குண்டூர் ஜஸ்டிஸ்கட்சி மகாநாட்டில் கட்சிப்பிரசாரத்துக்கு ஒரு லட்சத்துச் சொச்ச ரூபாய் வரை கையொப்பமிடப்பட்டிருக்கிறது. இதில் கட்சித் தலைவர் பொப்பிலி ராஜா அவர்கள் 25000 ரூபாய்க்குக் கையொப்பமிட்டிருக்கிறார். இது தவிர பொப்பிலிராஜா அவர்கள் தலைமை ஸ்தானம் பெற்றது முதல் மாதம் 1க்கு 5000 ரூபாய் முதல் 7500 ரூபாய் வரை மாதந்தோறும் கட்சிக்காக என்று செலவழித்து வந்திருக்கிறார். இவர் கட்சியின்பேரால் ஒரு சின்னக் காசு பயன் அடைந்தவர் அல்ல என்பதோடு அவருக்கு ஏற்கனவே ராஜா பட்டமும், அவர் தகப்பனாருக்கு மகாராஜா பட்டமும், பல லட்சக்கணக்கான சொத்துக்களும் வருவாய்களும் இருந்து வருகின்றன.

மற்றும் நான்கு ராஜாக்கள் தலைக்கு 15000 ரூபாய் வீதம் அதாவது செல்லப்பள்ளி, வெங்கிடகிரி, மீர்சாபூர், பர்வாக்கிமிடி ஆகியவர்கள் 6000 ரூபாய்க்கு கையொப்பமிட்டிருக்கிறார்கள். மற்றும் மந்திரிகளாகிய தோழர்கள் பி.டி. ராஜன் அவர்கள் 5000மும், திவான்பகதூர் குமாரசாமி செட்டியார் 5000மும் கையொப்பம் செய்திருக்கிறார்கள். ஆக நபர் 7க்கு ரூபாய் 95000 கையொப்பமாகி இருக்கின்றது.

காங்கிரசுக்காரர்கள் போல இந்தப் பணம் ஏழைகளை வஞ்சித்தும் பெண் மக்களை ஏமாற்றியும் வசூலிக்கப்படாமல், பணக்காரர்கள் என்கின்ற கூட்டத்தாரே முன் வந்து தாராளமாய் உதவி இருப்பதானது, அக்கட்சியானது ஏழைகள், பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகியவர்கள் நன்மைக்கு செல்வவான்கள் கலந்து உழைப்பது என்பதை ருஜுப்படுத்துகிறது.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.10.1935**

# தேசபக்தி

தேசபக்தி என்னும் பேரால் இத்தாலியும் அபிசீனியாவும் போர் தொடங்கி இத்தாலி மக்களும் அபிசீனிய மக்களும் குளுமாயி கோயிலில் ஆட்டுக்குட்டி பலியிடப்படுவதுபோல் பதினாயிரக்கணக்காய்ப் பலியிடப்பட்டு வருகிறார்கள். அதை (அந்த யுத்தத்தை) நீதியும் சமாதானமும் என்னும் வல்லரசுகள் பத்திரமாய் காப்பாற்றி வருகிறார்கள்.

இன்னும் தேசபக்தி வலுக்க வலுக்க 1000-ம் 10000 மாகி, 10000-ம் 1000000-ம் கணக்கான மக்கள் பலியிடப்படப்போகிறார்கள்.

நீதியும் சமாதானமும் வலுக்க ஆரம்பித்தால் 1000000 கணக்கான மக்கள் கோடிக்கணக்காக பலியிடப்படப் போகிறார்கள்.

ஆகவே தேசபக்தியின் பெருமைதான் என்ன! கடவுள் பெருமைதான் என்ன!

அபிசீனிய மன்னன் தனது பலி ஆடுகளைத் தேசபக்தி என்ற சங்கை ஊதித்தான் கூப்பிடுகிறான்.

இட்டாலி சர்வாதிகாரி தன்னுடைய பலி ஆடுகளையும் தேசபக்தி என்கின்ற சங்கை ஊதித்தான் அழைக்கிறான்.

ஆகவே தேசபக்தி என்பது மக்களை மக்கள் பலிகொடுப்பதும் மக்களை மக்கள் பலி வாங்குவதும் தவிர வேறு ஒன்றையும் காணோம். அப்படி வேறு ஏதாவது இருக்கக் கூடுமானால் அது ஜான்சன் என்னும் தத்துவஞானி சொன்னதுபோல் ''தேசபக்தி என்பது காலிகளின் கடசி ஜீவனோபாயம்'' என்பதாகத்தான் இருக்க வேண்டும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.10.1935**



RangaRakes

tamilnavarasam.com

# சபாஷ் அம்பத்கார்

## I

தோழர் டாக்டர் அம்பத்கார் நாசிக்கில் கூடிய **பம்பாய் மாகாண ஆதி இந்துக்கள்** மகாநாட்டில் தலைமை வகித்துச் செய்த தலைமைப் பிரசங்கத்தில்,

''மேல் ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர் களிடத்தில் நம் மீது கருணை ஏற்படும்படி நாம் செய்து வந்த முயற்சிகள் எல்லாம் வீணாய்ப் போய் விட்டன.

இனி அவர்களிடத்தில் சமத்துவமாயும், ஒற்றுமையாயும் வாழ முயற்சித்து நம் சக்தியையும், உழைப்பையும், பணத்தையும் செலவழிப்பது வீண் வேலையாகும். நமது குறைகளும், இழிவுகளும் மேல் ஜாதிக்கார இந்துக்களால் தீர்க்கப்படும் என்று எதிர்பார்ப்பது ஏமாற்றத்தைத் தான் அளிக்கும்.

இனி நாம் செய்ய வேண்டியது என்ன என்கின்ற விஷயத்தில் நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். அம் முடிவு என்னவென்றால்,

நாம் இந்து மதத்தை விட்டு அடியோடு விலகி விடுவது என்பதுதான்.

நமக்கு யார் சுதந்திரம் கொடுக்க மறுக்கிறார்களோ அவர்களை இனி நாம் கெஞ்சக் கூடாது. அவர்களது சம்மந்தத்தை இனி நாம் விலக்கிக் கொள்ள வேண்டும்.

நாம் நம்மை இந்துக்கள் என்று இனி கூறிக் கொள்வது கூடாது.

அதனால்தான் மேல்ஜாதிக்காரர்கள் நம்மை இழிவாகவும் கொடுமை யாகவும் நடத்துகிறார்கள். நாம் வேறு மதத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தால் நம்மை இம்மாதிரி கொடுமைப்படுத்த அவர்களுக்கு துணிவு இருந்திருக்காது.

எந்த மதத்தினர் உங்களுக்கு சம அந்தஸ்து கொடுத்து சமத்துவமாய் நடத்து கிறார்களோ அப்படிப்பட்ட மதம் எதுவாயினும் அதில் சேர்ந்து கொள்ளுங்கள்.

பிறக்கும்போதே நான் தீண்டப்படாதவனாய்ப் பிறந்தேன் என்றாலும், அது நான் செய்த குற்றமல்ல. ஆனால் இறக்கும்போது நான் தீண்டப்படாதவனாய் இறக்க மாட்டேன். அதற்கு மார்க்கம் என் கையிலேயே இருக்கிறது.

அதாவது நான் ஒரு இந்துவாய் இறக்கப் போவதில்லை'' என்று பேசி இருக்கிறார்.



இப்பேச்சுக்குப் பிறகு சுமார் 15000 பேர்கள் கூடி உள்ள அம்மகாநாட்டில் ஏகமனதாய் ஒரு தீர்மானம் நிறைவேறி இருக்கிறது.

அதாவது,

**''ஆதி இந்துக்கள் இந்துமதத்தை விட்டு அடியோடு விலகிவிட வேண்டும். சமத்துவ பாவிப்பு உள்ள வேறு எந்த மதத்திலாவது சேர்ந்து கொள்ள வேண்டும்''** என்பதாகும்.

இதற்கு இந்துக்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள், ''வருணாச்சிரமமும் கீதை உபதேசமும் எனது இரு சுவாசங்கள்'' என்றும்,

''இந்து மதமே நானாய் இருக்கிறேன்'' என்றும் சொல்லும் காந்தியாரும்,

மதத்தில் நாங்கள் பிரவேசிப்பதில்லை என்றும், பழய கலைகளையும் பழய பழக்க வழக்கம் தொழில் முறை ஆகியவைகளையும் வெகு பத்திரமாய் காப்பாற்றிக் கொடுப்போம் என்றும்,

இந்துக்களுக்கும் வருணாச்சிரம தர்மிகளுக்கும் வாக்குறுதியும் பாதுகாப்பும் அளித்திருக்கும் ''சமதர்ம'' காங்கிரஸ்காரர்களும் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்.

தோழர் அம்பத்கார் அவர்கள் பேசியிருக்கும் பேச்சும், பம்பாய் மாகாண ஆதி இந்துக்கள் மகாநாட்டில் தீர்மானித்து இருக்கும் தீர்மானமும் புதிதல்ல. அல்லது அவர்களே முதல் முதல் கண்டுபிடித்த சொந்தக் கருத்தல்ல.

ஏனெனில்,

இந்து மதத்தை பார்ப்பனரல்லாத மக்கள் விட்டுவிட வேண்டுமென்றும், யாரும் தங்களை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளக் கூடாது என்றும், சுயமரியாதை இயக்கமானது 1925 முதலே சங்குநாதம் செய்து வருகிறது.

சென்ற ஜன கணிதத்தில் அனேக ஜாதி இந்துக்கள் என்பவர்களே தங்களை இந்துக்கள் அல்ல என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் தீண்டப்படாத வகுப்பு என்பதைச் சேர்ந்தவர் அல்ல என்று சொல்லப்படுபவரானாலும், தான் சாகும்போது இந்துவாய்ச் சாகப் போவதில்லை என்று சுமார் 10 வருஷத்துக்கு முன்பே சொல்லி இருக்கிறார்.

அதுமாத்திரமல்லாமல் இந்துமதம் என்பதாக ஒரு மதமே இல்லை என்றும், அது ஜாதி பாகுபாட்டின் பயனாய் பயன் அனுபவிக்கும் சோம்பேறிக் கூட்டத்தின் கற்பனை என்றும் சொல்லி, அந்தப்படி பல மகாநாடுகளில் பல தீர்மானங்களும் செய்யச்செய்திருக்கிறார்.

இவ்வளவோடு மாத்திரமல்லாமல் **மனு நூலையும் இராமாயணத்தையும் சுட்டெரிக்க வேண்டும்** என்று, 1922-ல் திருப்பூரில் கூடிய சென்னை



RangaRakes tamilnavarasam.com

மாகாண தமிழ்நாடு காங்கிரஸ் மகாநாட்டில் மாகாண காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாய் இருக்கும்போதே கூறி இருக்கிறார்.

அந்தப்படியே சுயமரியாதை மகாநாட்டில் ராமாயணமும், மனுதர்ம சாஸ்திரங்களும் சுட்டெரிக்கப்பட்டுமிருக்கின்றன.

மற்றும் கேரள தேசத்து அதாவது மலையாளம், கொச்சி, திருவாங்கூர் தேசத்து தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்களாகிய தீயர், ஈழவர், நாடார், பில்லவா ஆகிய சுமார் 20 அல்லது 30 லட்சம் ஜனத் தொகை கொண்ட சமூகம் தங்களது மகாநாட்டிலும் தாங்கள் இந்து மதத்தை விட்டுவிட வேண்டும் என்றும், தங்களை இனி யாரும் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளக் கூடாது என்றும், தங்களுக்கு மதத்தில் நம்பிக்கையே இல்லை என்றும் பல தீர்மானங்கள் இந்த 6, 7 வருஷ காலமாகவே 10000-க்கணக்கான மக்கள் கூட்டத்தில் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன.

கடைசியாக 1933-ல் கூட்டப்பட்ட S.N.D.P. யோகம் என்னும் அவர்களது சமூக மகாநாட்டில் மிதவாதி பத்திராதிபரும் பெரிய செல்வவானும் சென்னை சட்டசபை அங்கத்தினருமான தோழர் சி.கிருஷ்ணன், B.A., B.L., அவர்களது தலைமையில் ''ஈழவ சமூக மக்களுக்கு மதத்தில் நம்பிக்கை இல்லை. ஆதலால் ஈழவ சமூக மக்கள் தங்களை இனிமேல் இந்துக்கள் என்று யாரும் சொல்லிக் கொள்ளக் கூடாது'' என்று தீர்மானித்து இருக்கிறார்கள்.

ஆகவே பம்பாய் மாகாண ஆதி இந்துக்கள் மகாநாட்டுத் தீர்மானமும் தலைவர் அம்பேத்கார் அவர்களது வீர கர்ஜனையும் எதுவும் புதிதல்ல.

இவற்றிற்கு இதுவரை காந்தியாரும், காங்கிரசுக்காரரும், வருணாச் சிரமிகளும், பார்ப்பனர்களும், இந்துமத பாதுகாப்பாளர்களும் என்ன பதில் சொல்லி வந்தார்களோ, எப்படி கருதினார்களோ அப்படியேதான் இதையும் கருதுவார்கள் - இதற்கும் பதில் சொல்லுவார்கள் என்பதில் சிறிதும் அய்யமில்லை.

தீண்டப்படாதவர்கள் விஷயமாகவோ, ஜாதி வித்தியாசம் விஷயமாகவோ, இந்து மத சீர்திருத்த விஷயமாகவோ இந்து மதம் என்றும் சாதி வித்தியாசம் என்றும் ஏற்பட்ட காலம் முதலே முயற்சிகள் செய்யப்பட்டுத்தான் வந்திருக்கின்றன.

கபிலர், திருவள்ளுவர், ராமானுஜர் முதலாகியவர்கள் ''தெய்வத் தன்மையில்'' இருந்து பாடுபட்டிருப்பதாய் சரித்திரம் கூறுகின்றன. புத்தர் முதலிய அரசர்கள் பாடுபட்டிருப்பதாய் ஆதாரங்கள் கூறுகின்றன.

ராம் மோகன்ராய் மற்றும் சுவாமி தயானந்த சரஸ்வதி, ராமலிங்க சுவாமிகள், விவேகானந்தர் முதலிய ஞானவான்கள் முயற்சித்திருப்பதாய்ப் பிரத்தியட்ச அனுபவங்கள் கூறுகின்றன.

இவர்கள் எல்லாம் இன்று பூஜிக்கப்படுகிறார்கள் என்றாலும் காரியத்தில் ஒரு பயனும் ஏற்பட்டதாகக் கூற முடியாது.



மேற்கண்ட பெரியார்களுக்கு சிஷ்யர்களாக 100 பேர்களோ பதினாயிரம் பேர்களோ ஒரு லட்சம் பேர்களோ இருக்கலாம்.

அவரவர்கள் ஸ்தாபனங்களில் ஒரு சில லக்ஷம் அங்கத்தினர்கள் இருக்கலாம். மற்றப்படி காரியத்தில் நடந்ததென்ன என்று பார்த்தால் பழய நிலைமையேதான். சட்டதிட்டங்கள் மூலம், வருணாச்சிரம கூட்டங்கள் மூலம் பத்திரப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

ஆகவே இவ்விஷயத்தில் ஏதாவது ஒரு காரியம் தகுந்த அளவுக்கு நடைபெற வேண்டுமானால் மேல்கண்டபடி சுவாமிகள் என்றும், அவதாரங்கள் என்றும், மகாத்மா என்றும், பூஜிக்கப்படத்தக்கவர்கள் என்றும் சொல்லி சொல்லிக் கொள்ளுபவர்களால் ஒரு காரியமும் நடைபெறாது. இவர்களை பண்டார சன்னதிகள், சங்கராச்சாரியார்கள் என்று சொல்லப் படுபவர்களுக்கு ஒரு படி மேலாகச் சொல்லலாம். ஆனால் பொது ஜனங்களால் வெறுக்கப்படுகிறவர்களாலும் தூற்றப்படுகின்றவர்களாலும் தான் அவசியமான ஏதாவது மாறுதல்கள் காரியத்தில் நடைபெறக்கூடும்.

எனவே தோழர் அம்பத்கார் அவர்களின் கர்ஜ்ஜனையும், வீரமும், ஞானமும் நிறைந்த தீர்மானமும் பொது ஜனங்களால் எவ்வளவுதான் வெறுக்கப்பட்ட போதிலும் அவர் எவ்வளவு தான் தூற்றப்பட்ட போதிலும் அதுதான் தாழ்த்தப்பட்ட மக்கள் மாத்திரமல்லாமல் இந்தியாவில் உள்ள இந்துக்களில் பார்ப்பனரல்லாத மக்களாகிய 100க்கு 97 விகிதாச்சாரமுள்ள 24 கோடி இந்து மக்களின் விடுதலைக்கு சர்வசமய சஞ்சீவி ஆகப் போகிறது.

இதைப் பாராட்டும்போது நாம் சொல்வதெல்லாம் அம்பேத்கார் அவர்கள் பார்ப்பன சூட்சிக்கு ஏமாந்து மறுபடியும் இத் தீர்மானத்தை மாற்றிக் கொள்ளக் கூடாது என்பதோடு வைதீகமும், மூடநம்பிக்கையும், குருட்டு பழக்க வழக்கமும் கொண்ட வேறு எந்த மதத்திலும் விழுந்து விடக்கூடாது என்றும் எச்சரிக்கை செய்கிறோம்.

அனேகமாய் மதங்கள் என்பவைகள் எதுவும் ஏதோ ஒருவிதமான குருட்டு நம்பிக்கை மீதும் முரட்டுப் பிடிவாதத்தின் மீதே தான் கட்டப் பட்டிருக்கின்றன. எல்லா மதங்களுக்கும் ஒரே அஸ்திவாரம் தான்.

ஆதலால் ''ஒரு தப்பிதத்தின் பாவ நிவர்த்திக்கு ஆக மற்றொரு தப்பிதம் செய்யக் கூடாது'' என்கின்ற பழமொழியை இந்தச் சமயத்தில் நன்றாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது நமது ஆசையாகும்.

நிற்க தோழர் அம்பேத்காரின் வாக்குமூலத்துக்கும் பம்பாய் ஆதி திராவிட மகாநாட்டு தீர்மானத்துக்கும் காந்தியாரும், பார்ப்பனர்களும் என்ன பதில் சொன்னார்கள் என்று பார்ப்போம். தோழர் காந்தியார் தனது வழக்கமான சூட்சித் திறத்தைக் காட்டும் முறையில் ''தோழர் அம்பேத்கார் இந்தப்படி பேசியதை நான் நம்பவில்லை'' என்பதாக பாசாங்கு காட்டிவிட்டு பிறகு அந்த தீர்மானமும் அவரது பேச்சும் துர்அதிர்ஷ்டவசமானது என்றும்,



RangaRakes tamilnavarasam.com

கோபத்தில் பேசியது என்றும், தீண்டாமை விஷயத்தில் ஏதோ அங்கொன்று இங்கொன்றுமாகத்தான் தவறுதல் நடக்கின்றனவென்றும், அதற்கு ஆக இப்படி செய்யக் கூடாதென்றும், அம்பேத்காருக்கு கடவுளிடம் நம்பிக்கை இருக்குமானால்தான் தன் அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் சொல்லிவிட்டு,

மதம் என்பது ஒருவருக்கு மாற்றிக் கொள்ளக்கூடியது அல்ல வென்றும், அது முடியாதது என்றும், மதம் மாறிவிட்டதினாலேயே தீண்டாமை ஒழிந்துவிடாது என்றும் சொல்லி அம்பேத்காரை நாஸ்திகர் என்று ஜனங்கள் பழிக்கும்படி விஷமம் செய்து இருக்கிறாரே ஒழிய, அக் கொடுமைகளுக்கு திருப்தியும் சாந்தியுமளிக்கத்தக்க வேறு எவ்வித சமாதானமும் சொல்லவில்லை. ஆகவே காந்தியாரின் கருத்துக்களை ஒரு வாக்கியத்தில் சொல்வதாய் இருந்தால் அம்பேத்காருடன் பந்தயம் கட்டுகிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

அதாவது உன்னால் முடியாது, உன் இஷ்டப்படி நடக்காது, உன்னால் ஆனதைப் பார், உன்னை துலைத்து விடுகிறேன் என்பதுதான் கருத்தாகும்.

மற்றபடி காங்கிரஸ்காரர்களுடையவும், பார்ப்பனர்களுடையவும் பதில் என்ன என்று பார்ப்போமானால்,

சுதேசமித்திரன் பத்திரிகையானது அம்பேத்காரை பரிகாசம் செய்கிறது.

அதாவது ‘‘ஏரியோடு கோபித்துக் கொண்டு கால் கழுவாமல் போகிறார் அம்பேத்கார். அதற்கேற்ற தீர்மானம் செய்திருக்கிறது ஆதி இந்து மகாநாடு'' என்று ஏளனம் செய்திருக்கிறது.

அதாவது ஜாதி இந்துக்கள் சமூகம் ஏரியைப் போல் இருக்கிறதென்றும், அம்பேத்காரும் 6 கோடி தீண்டப்படாத மக்களும் (வெளிக்குப் போய்) கால் கழுவாத மக்கள் என்றும், வெளிக்குப் போய் கால் கழுவாமல் அசுத்தமாய் இருக்கிறவன் ஏரியுடன் கோபித்துக் கொண்டால் ஏரிக்கு ஒரு குறைவும் ஏற்படாதென்றும், ஏரி சுத்தமாக இருக்கும் என்றும் கோபித்துக் கொண்டு கால் கழுவாமல் போகிறவன் தான் அசிங்கத்துடன் இருக்க வேண்டும் என்றும், ஆதலால் அம்பேத்காரும் தீண்டப்படாதவர்களும் வேறு மதத்துக்கு போய்விட்டால் ஜாதி இந்துக்களுக்கு லாபமே ஒழிய நஷ்டமில்லை என்றும் பொருள்பட அதற்கு ஏற்ற பழமொழியைச் சொல்லுகிறது.

அதோடு ‘‘நீண்டகாலப் பழக்கவழக்கங்களை திடீரென்று மாற்றி விடமுடியாது''

‘‘தீண்டாமை ஒழிய வேண்டுமானால் தாழ்ந்த வகுப்பினரின் மனோபாவத்திலும் விசேஷ மாறுதல் ஏற்பட வேண்டும்''

அம்பேத்காரின் பேச்சும் ஆதி இந்துக்களின் தீர்மானமும் ‘‘காரியத்தில் நடக்கக்கூடிய காரியம் அல்ல'' வெறும் வாய் பேச்சு மிரட்டல் என்கிறது.



டாக்டர் அம்பேத்காரே தான் வேறு மதத்துக்கு போகக் கூடுமே ஒழிய மற்ற தாழ்ந்த வகுப்பார் இவர் பேச்சை கேட்க மாட்டார்கள் என்றும் தைரியம் கொள்ளுகிறது.

அதோடு கூடவே அம்பேத்காரை நம்பாதீர்கள் நம்பி எந்த மதக்காரரும் அவரை சேர்த்துக் கொள்ளாதீர்கள் என்று மற்ற மதக்காரர்களுக்கும் எச்சரிக்கை செய்கிறது. கடசியாக இதனால் எல்லாம் ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை என்றும் வீரம் பேசுகிறது.

மற்றபடி அக்கிரகாரத் தெரு திண்ணைகளில் இருக்கும் மடிசஞ்சிகளும், அவர்களது வார்சுகளும், காபிக் கடைகளிலும், வக்கீல்கள் தாழ்வாரங்களிலும் சுதேசமித்திரனின் பழமொழி போலவே அதைவிட சற்று மேன்மையாக,

‘‘மூக்கு மயிர் பிடுங்கப்படுவதால் ஆள் பாரம் குறைந்து விடப் போகிறதா?'' என்று அலட்சியமாய் பேசப்படுகின்றன.

ஆகவே அம்பேத்கார் சொன்ன பேச்சும், தீர்மானமும் பல காலமாய் இருந்து வந்திருப்பதால் பழய பாட்டானதால் பார்ப்பனர்களுக்கும் இந்து மதப் பித்தர்களுக்கும் சிறிதும் உருத்தப் போவதில்லை என்பது உறுதி.

ஆனாலும், தோழர் அம்பேத்காருடைய பேச்சுக்கும், ஆதி இந்துக்கள் தீர்மானத்துக்கும் ஏதாவது மதிப்பு இருக்க வேண்டுமானால், அவர் உடனே இந்தக் காரியத்தை அதாவது ஆதி இந்துக்கள் ஆதி திராவிடர்கள் முதலிய தீண்டப்படாத வகுப்பு என்பவர்களிடையில் உடனே பிரசாரம் செய்து அவர்களை இந்து மதத்திலிருந்து வெளிக் கிளப்பிவிட வேண்டும். தோழர் அம்பேத்காரை பொறுத்தவரையில் சிறிது நாள் பொறுத்துத்தான் மதத்தை போக்கிக் கொள்ள வேண்டும்.

ஏனெனில் நமது பார்ப்பனர்களுக்கு இப்படிப்பட்ட ஆட்கள் இந்துமதத்தை விட்டுப் போய்விட்டால் இவர்களுடைய தொல்லை ஒழிந்தது என்று சந்தோஷமடைந்து விடுவார்கள். ஆகையால் மதம் மாறாமல் இருந்து கொண்டு எவ்வளவு பெயர்களை மதத்தில் இருந்து வெளியாக்கலாமோ அந்தக் காரியத்தை செய்ய வேண்டியது அம்பேத்காரின் முதல் கடமையாகும். பூனா ஒப்பந்தத்தால் ஏமாற்றப்பட்ட அம்பேத்காருக்கு இப்பொழுதாவது உண்மை கண்டு கொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டதற்கு ஆக நாம் அவரை மனமாரக் கையாரப் பாராட்டுகிறோம்.

மற்றவை மற்றொரு சமயம் எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 20.10.1935**



RangaRakes tamilnavarasam.com

# முடிவை மாற்ற வேண்டாம்

## டாக்டர் அம்பேத்காருக்கு ராமசாமி தந்தி

தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் அவர்களுக்கு பின்வரும் தந்தி அடித்துள்ளார்.

தாங்கள் புத்திசாலித்தனமான முடிவுக்கு வந்தது பற்றி வாழ்த்துக் கூறுகின்றேன்.

தங்களது முடிவை எக்காரணத்தாலும் மாற்ற வேண்டாம். அவசரப்பட வேண்டாம். முதலில் குறைந்தது 10 லக்ஷம் பேரையாவது மதமாற்ற வேண்டும். பிறகே தாங்கள் மதம் மாறுவது பிரயோஜனமாகவிருக்கும். மலையாளம் உட்பட தென்னிந்தியா தங்களது முடிவுக்கு பலத்த ஆதரவு அளிக்கும்.

**குடி அரசு - வேண்டுகோள் - 20.10.1935**



# ஈரோடு முனிசிபாலிட்டியும்

## மின்சார விளக்கும்

ஈரோடு முனிசிபாலிட்டியானது எவ்வளவோ மோசமான நிலைமையில் இருந்து, அதாவது எல்லாவிதமான அக்கிரமங்களுக்கும், அயோக்கியத் தனங்களுக்கும், திருட்டு புரட்டு போர்ஜரி முதலிய கிரிமினல் காரியங்களுக்கு தாயகமாய் இருந்து, பொது ஜனங்களும் கவுன்சிலர்களும் எவ்வளவோ கூப்பாடு போட்டும் அரசாங்கத்தில் சரியான கேள்வி கேப்பாடு இல்லாமல் இருந்து கடைசியாக மெஜார்ட்டி கவுன்சிலர்கள் 13 பேர்கள் ராஜினாமா கொடுத்தும் அரசாங்கத்தார் லக்ஷியம் பண்ணாமல் இருந்து, முனிசிபல் பணங்களுக்கும் மற்றும் கல்வி இலாக்காப் பணம் சுமார் 50 ஆயிரம் ரூபாய் வரையிலும் வேறு ஏதேதோ காரியங்களுக்கு என்று கொள்ளை போயும், சுமார் வருஷம் 3 லக்ஷ ரூபாய் வரும்படியுள்ள முனிசிபாலிட்டியானது ஆபீசு சம்பளத்துக்குகூட பணம் இல்லாமல் பாப்பராகியும் கடைசியாக தோழர் கான்சாயபு, க்ஷேக்தாவுத் சாயபு முதலிய சிலரது பெரு முயற்சியால் மறுபடியும் கொஞ்சம் கொஞ்சமாய் தலையெடுத்து சிறிது சிறிதாக யோக்கியமான நிலைமைக்கு வந்து, இப்போது பொது ஜனங்களுடையவும், அரசாங்கத்தாருடையவும் பாராட்டுதலுக்கு பாத்தியமானதாக ஆகி இருக்கிறது என்பது யாரும் அறிந்ததாகும். இன்னும் அநேக சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கிறது என்றாலும் பொது நிலைமை வரவர உயர்ந்து கொண்டே வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

கடைசி வருஷத்து நிர்வாகத்தைப்பற்றி கலைக்டர் துரையவர்கள் கூறி இருப்பதில் சிலவற்றை இங்கே தருகிறோம்.

''நான் ஈரோட்டில் சில தினங்கள் இருந்திருக்கிறேன். அது சமயம் ஈரோடு முனிசிபல் நிர்வாக விஷயங்களைப்பற்றி நன்றாய்க் கவனித்தேன். சேர்மனும், கமிஷனரும், கௌன்சில் மெம்பர்களும் சேர்ந்து அம்முனிசிபாலிட்டியில் செய்துள்ள காரியங்களும், முயற்சிகளும் என் மனதைக் கவர்ந்தன. ரோட்டுகள் எல்லாம் மிக்க மேலான நல்ல நிலைமையில் இருக்கின்றன. இன்னும் சில ரோட்டுகள் ரிப்பேர் செய்வதற்கான பொருட்கள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன.



RangaRakes tamilnavarasam.com

இந்த முனிசிபல் நிர்வாகத்தைப்பார்த்தால் கடந்த ஒரு வருஷமாக நடைபெற்ற முற்போக்கான பல வேலைகளையும், இன்னும் மேலான நிலைக்கு வரக்கூடும் என்ற அறிகுறியையும் தெளிவு படுத்துகிறது'' என்பதாக மிகவும் புகழ்ந்து பாராட்டி இருக்கிறார்.

ஆனால் ஒரு விஷயத்தில் அதாவது மின்சார விளக்கு விஷயத்தில் சிறிது அதிருப்தி அடைந்திருக்கிறதாகத் தெரியவருவதை நாம் மறைக்க ஆசைப்படாமல் அதற்கு சமாதானம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

### மின்சார விளக்கு சரித்திரம்

ஈரோடு மின்சாரத் திட்டமானது ஒரு சரித்திரத்துக்கு ஒப்பானதாகும் என்பதோடு ஸ்தல சுயாக்ஷி விஷயத்தில் அரசாங்கத்தின் தன்மையை எடுத்துக்காட்ட ஒரு கண்ணாடி போன்றதுமாகும்.

ஈரோடு மின்சார விளக்குத் திட்டம் 1926 முதல் ஆலோசனையால் இருந்து 1928ல் மின்சார விளக்குப் போடுவது என்ற முடிவுக்கு வந்து அரசாங்கத்தாரோடு கடித போக்குவரத்து செய்து வந்ததாகும்.

1928-ல் மைசூர் அரசாங்கத்தினிடமிருந்து மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருந்த மின்சாரத்தை ஈரோட்டுக்கும் அந்த வழியில் வரவழைத்துக் கொள்ளலாம் என்று முதலில் கவுன்சில் முடிவு செய்து கவர்மெண்டைக் கேட்க கவர்மெண்டும் அங்கீகரித்து விட்டது.

அதன்படி மைசூர் கவர்மெண்டினிடமிருந்து பெற்றுக் கொள்ளச் செய்திருந்த ஏற்பாடானது என்ன காரணத்திலோ சென்னை அரசாங்கத்தின் பிரவேசத்தினால் மைசூர் கவர்மெண்ட் மின்சாரம் கொடுக்க மறுத்து விட்டது.

பிறகு முனிசிபாலிட்டியார் தாங்களே யந்திரம் வைத்து மின்சாரம் உண்டாக்கி தங்கள் ஊருக்கு வினியோகித்துக் கொள்வதாய் முடிவு செய்து சர்வை செய்து பிளான் போட்டு எஸ்ட்டிமேட்டும் தயார் செய்து 2½ லக்ஷம் ரூபாய் கடன் வேண்டுமென்று கவர்மெண்டை கடன் கேட்டார்கள். கவர்மெண்டார் இடைகால வழியில் கொடுக்க முடியாதென்று சொல்லி வேறு எங்காவது வாங்கிக்கொள்ள அனுமதி கொடுத்தார்கள். (12-4-35 நெ 13594 எல்.எம்.)

அந்த உத்திரவுபடி கோயமுத்தூர் ஜில்லா போர்டில் 2½ லக்ஷம் ரூபாய் தயார் செய்து கொண்டு பிளான் எஸ்ட்டிமேட் ஆகியவைகளை சர்க்காருக்கு அனுப்பி வேலை துவக்க லைசென்சு கொடுக்கும்படி கேட்கப்பட்டது.

இதன் பேரில் கவர்மெண்டிடம் வேறு ஒரு திட்டம் யோசனையில் இருப்பதால் இதை நிறுத்தி வைக்க வேண்டும் என்று 9-9-29ல் ஒரு ஜீ.ஒ. உத்திரவு கிடைத்தது. இந்த நிலையில் கல்கத்தா ஆக்டேவியஸ் ஸ்டீல் கம்பனியாரிடமிருந்து ஈரோட்டுக்கும் சேலத்துக்கும் மின்சாரம் வினியோகிக்க தங்களுக்கு அனுமதி கொடுக்கும்படி சர்க்கார் லைசென்சு கேட்டு இருப்பதாகவும் ஈரோடு முனிசிபாலிட்டி அதை ஆதரிக்க வேண்டும் என்றும் ஒரு கடிதம் வந்தது.

இதன்மீது ஈரோடு முனிசிபல் கவுன்சிலானது வேறு கம்பனிக்கு லைசென்சு கொடுக்கக் கூடாதென்றும் தாங்கள் இவ்விஷயத்துக்காக அதிக பணம் செலவு செய்து திட்டம் போட்டு பிளான் எஸ்ட்டிமேட்டும் பணமும் தயார் செய்துகொண்டாய் விட்டது என்றும் தங்களுக்கே லைசென்சு கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

பிறகு 4-10-29ல் கவர்மெண்டார் தாங்களாகவே 3098 3-சி எல்.எம். நெ. மெமோராண்டத்தின் மூலம் ''கடன் விண்ணப்பம் கெஜட்டில் பிரசுரிக்கப்படும், லைசென்சுக்கு முறைப்படி விண்ணப்பம் போடுங்கள்'' என்று தெரிவித்தார்கள்.

அதன்பேரில் கவுன்சில் டிராப்ட் விண்ணப்பம் அச்சடிக்கப்பட்டது. காரியமும் ஒரு அளவுக்கு துவக்கப்பட்டது.

இந்த சமயத்தில் திடீரென்று ஒரு கவர்மெண்டு உத்திரவு வந்தது. அதில் ஈரோட்டுக்கு கவர்மெண்டார் தாங்களே மின்சாரம் சப்பிளை செய்யத் தயாராய் இருக்கிறார்கள். ஆதலால் முனிசிபாலிட்டி மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டியதில்லை என்று கண்டிருந்தது.

அதற்கும் கவுன்சிலர்கள் சம்மதித்து ''அப்படியானால் மின்சாரச் சக்தியை எங்களுக்கு மொத்தமாய் கொடுத்து விட்டால் நாங்கள் ஊருக்குள் வினியோகித்துக் கொள்ளுகிறோம்'' என்று ஈரோடு முனிசிபாலிட்டி சர்க்காரைக் கேட்டுக் கொண்டது.

இந்த மத்தியில் மறுபடியும் கல்கத்தா கம்பினியாரிடமிருந்து சர்க்காரிடம் மின்சார சக்தி மொத்தமாய் வாங்கி தாங்கள் சில்லரையில் ஈரோட்டுக்கு வினியோகிப்பதாகவும் அதை ஏற்றுக் கொள்ளும்படியும் ஒரு கடிதம் வந்தது.

ஈரோடு கவுன்சிலானது அதை ஒப்புக்கொள்ளமுடியாது என்றும் தங்கள் முனிசிபாலிட்டியே அந்த வினியோக லாப நஷ்டத்தை அடைய வேண்டுமே ஒழிய சர்க்காருக்கும் முனிசிபாலிட்டிக்கும், மத்தியில் வேறு ஒரு தனிப்பட்ட நபர் அடையக்கூடாது என்று சர்க்காருக்கும் கல்கத்தா ஆக்டேவியஸ் கம்பெனிக்கும் கவுன்சிலர்கள் தெரிவித்து விட்டு சர்க்கார், முன் தெரிவித்தபடி தங்களுக்கு மொத்தமாய் மின்சார சக்தி கொடுக்கும் படியாகவும் ஊருக்குள் வினியோகிக்க லைசென்சு வேண்டுமென்றும் கேட்டார்கள். அதோடு கூடவே தாமதம் ஆனால் ஏற்பாடு செய்த கடன் தொகைக்கு வீணாக அதிக வட்டி கொடுக்க வேண்டி வரும் என்றும் தெரிவித்தார்கள். இதற்குக் கவர்மெண்ட்டார் ''இவ்விஷயமாக ஆலோசனையில் இருக்கிறது'' என்று 15-12-30-ந் தேதியில் தெரிவித்தார்கள்.





RangaRakes tamilnavarasam.com

அதன் மீது சிறிது நாள் பொறுத்துக் கவுன்சிலர்கள் ''தயவு செய்து உடனே தங்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்றும் தாமதம் ஆனதால் கஷ்டமும் அசௌகரியமும் ஏற்படுவதாகவும்'' தெரிவித்துக் கொண்டார்கள்.

இவ்வளவும் கவனிக்கப்படாமல் கடைசியாக **கல்கத்தா ஆக்டேவியஸ் ஸ்டீல் கம்பனியாருக்கு** லைசென்சு கொடுத்து விட்டதாகக் கவர்மெண்டிட மிருந்து 11-12-30ந் தேதி 11034 ஈ. உத்திரவு வந்தது.

இதுதான் சர்க்காருக்கும், ஈரோடு முனிசிபாலிட்டிக்கும் மின்சார சக்தி விஷயமாய் நடந்த கதைச் சுருக்கம்.

### லைசென்ஸ் கண்டிஷன்

இனி அக்கம்பெனியாருக்கு லைசென்ஸ் கொடுத்ததில் சர்க்கார் அனுமதித்திருக்கும் கண்டிஷனை சற்று கவனிப்போம். அது ஒரே அடியாய் 20 வருஷத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் ஈரோட்டுக்கும் சேலத்துக்கும் ஒன்றாய் லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் தனியாக பிரித்துக் கொள்ள முடியாது. 20 வருஷம் பொறுத்தும் கம்பினிக்காக செலவு செய்ததாகச் சொல்லப்படும் செலவுத் தொகைகள் பூராவும் கொடுத்தால்தான் அதுவும் இரண்டு முனிசிபாலிட்டியும் சேர்ந்து தான் திரும்பிப் பெறமுடியும்.

மற்றும் கம்பினியார் ஊருக்குள் விளக்குப் போடுவதில் 30 மயில் தூரமுள்ள வீதிகளில் 7 மயில் தூரம் இப்போது போட்டிருப்பது போக பாக்கி 23 மயில்களுக்கு விளக்குப் போட்டால் அவ்விளக்குப் போடுவதற்கு உண்டான சார்ஜ் கொடுப்பதைத் தவிர அதற்கு ஏற்பட்ட எரக்ஷன் செலவு அதாவது கட்டடம், கம்பம் கம்பி முதலிய செலவு தொகைகளுக்கும் வருஷம் 1க்கு 100-க்கு 12½ வீதம் வட்டியும் கொடுத்து வரவேண்டும். இந்தப்படி இனிபோட வேண்டிய பாகத்துக்கும் லக்ஷக்கணக்கான ரூபாய்கள் செலவாகலாம்.

விளக்குக்கு உண்டான மின் சக்திக்கு சார்ஜ் கொடுத்து அதன் செலவு தொகைக்கு 100-க்கு 12½ வீதம் வருஷ வருஷம் வட்டி கொடுப்பதனால் வருஷம் எவ்வளவு ஆயிரம் ரூபாய் ஈரோடு முனிசிபாலிட்டி கொடுக்க வேண்டிவரும். முனிசிபாலிட்டிக்கு எவ்வளவு பதினாயிரக் கணக்கான தொகை வருஷ வருஷம் நஷ்டம் ஏற்படக் கூடும் என்பதையும் இந்தப்படி 20 வருஷ வாய்தா வரையில் கொடுத்துவர 20 வருஷம் பொறுத்தபின்பு சாமான்கள் பழையது ஆகி பழுதுபட்டு கெட்டுப்போய் மாற்ற வேண்டிய சமயத்தில் கம்பெனிக்காரர்களுடைய கொள்முதல், போக்குவரத்து செலவு, அவர்களுடைய கமிஷன் ''நஷ்டம்'' எல்லாம் சேர்ந்த தொகையை 10 லக்ஷக்கணக்காகக் கட்டிவிட்டு முனிசிபாலிட்டியார் திருப்பி வாங்கிக்கொள்ள வேண்டும். பிறகு மறுபடியும் அனேகமாய் எல்லாம் புதுப்பிக்கப்படவேண்டி வரும். அதற்கு பல லக்ஷக்கணக்காய் தொகை வேண்டும்.



இதற்கு சம்மதிக்காவிட்டால் மீண்டும் கம்பனியாரே சாஸ்வதமாய் நடத்தி இந்தக் கண்டிஷன்படியே அதன் லாபத்தை என்றென்றும் அடைந்து கொண்டிருக்க வேண்டும். இது அந்த நிபந்தனையின் கருத்து.

இந்தக் கொடுமையானதும் அடிமைத்தனமான நிபந்தனைகளுக்கு ஒரு முனிசிபல் கவுன்சில் ஒப்புக் கொள்ளுமானால் இதை விட வேறு என்ன கெடுதி முனிசிபாலிட்டிக்கு இக்கவுன்சில் செய்ய வேண்டும் என்பதை யோசித்து பார்க்க விரும்புகிறோம்.

ஆகையால் கவுன்சிலர்களும், சேர்மெனும், கமிஷனரும் சேர்ந்து எப்படியாவது இணங்கி வந்து கம்பெனிக்காரருடன் இருவருக்கும் நஷ்டமில்லாத மாதிரியில் ஒருவித சமாதானத்துக்கு வரவேண்டும் என்று எவ்வளவோ முயற்சித்தும் பயன் ஏற்படாததால் கடைசியில் தங்கள் மீது எவ்வித குற்றமும் இல்லை என்பதை சர்க்காருக்கு தெரிவித்துக் கொள்ள வேண்டி ஒரு வித முடிவுக்கு வந்து சில தீர்மானங்களை சர்க்காருக்கு அனுப்பி இருக்கிறார்கள்.

(அது மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.)

அது ஒப்புக்கொள்ளப்படுமானால் கம்பெனியாருக்கும் முனிசிபாலிட்டி யாருக்கும் கலைக்டர் துரையவர்களுக்கும் சர்க்காருக்கும் பொது ஜனங் களுக்கும் திருப்தி அளிக்கக்கூடும்.

இல்லாதவரையில் விஷயம் இப்படியே இருக்க வேண்டியதாகதான் ஏற்பட்டுவிடும்.

அதற்காக முனிசிபாலிட்டி மீது யாரும் குறை கூறுவது எவ்விதத்திலும் நியாயமாகாது என்பதே நமதபிப்பிராயம். ஏனெனில் முனிசிபாலிட்டியார் பொது ஜனங்களின் பிரதிநிதிகள் பொது ஜன நன்மைக்கு உழைக்க கட்டுப்பட்டவர்கள்.

ஆகையால் அவர்களுக்கு சரியென்று பட்டதைச் செய்யக் கடமைப்பட்டவர்கள்.

கடைசியாக இந்த ஊர் மகாஜனங்கள் பெரும்பாகம் பேர்கள் இந்த விஷயங்களை மிகவும் நன்றாக உணர்ந்தவர். ஆனதாலேயே யாவருடைய தூண்டுதலும் இல்லாமலும் கம்பனியார் எவ்வளவோ தந்திரங்களை உபயோகித்தும் மின்சார சக்தியை தங்களுடைய சொந்த வீட்டு விளக்கு முதலியவைகளுக்குக் கூட 4 வருஷ காலமாய் எடுத்துக் கொள்ளாமல் இருந்து வருகிறார்கள்.

இதைக் கண்டாவது கலைக்டர் துரையவர்களும் அரசாங்கமும் பொதுஜனங்களின் உணர்ச்சி எப்படி இருந்து வருகிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.



RangaRakes tamilnavarasam.com

பொது ஜனங்களுக்கு முனிசிபாலிட்டிமீது தப்பபிப்பிராயம் ஏற்படும்படி சில விஷமக்காரர்கள் தப்பான விஷயங்களை எடுத்துச் சொல்லிவந்தும் அவர்கள் ஏமாந்து போகாமல் இருந்து வருவது மிகவும் பாராட்டத்தக்கதாகும். ஆகையால் முனிசிபாலிட்டியார் பிடிவாதம் செய்கிறார்கள் என்று சொல்லப்படுமானால் அது உண்மையல்ல. முனிசிபாலிட்டியார் செய்வதெல்லாம் வரிசெலுத்தும் ஈரோடு வாசிகளின் நன்மைக்கு ஆகவே ஒழிய மற்றபடி யாருடைய சுய நலத்துக்காவோ, வீம்புக்காகவோ, தங்கள் கவுரவத்துக்காகவோ அல்ல என்பதை பொது ஜனங்களுக்கும் கலைக்டர் துரை அவர்களும் அரசாங்கமும் உணரவேண்டுமென்று விரும்புகிறோம்.

குடி அரசு - கட்டுரை - 20.10.1935



# திருச்சி மகாநாடு

## இயக்கம் ஆரம்பமானதேன்?

சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தபோது அதன் காரணஸ்தர்கள் என்ன நோக்கத்துடன் இதனை ஆரம்பித்து வைத்தார்கள் என்பதை முதலில் நீங்கள் அறிய வேண்டும்.

ஜஸ்டிஸ் கட்சியின் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை காங்கிரஸ் காரர்களிலேயே பலர் ஒப்புக் கொண்டு 1918-19-ல் முதலில் வேலை செய்து பின்னர் காங்கிரசில் சேர்ந்து மேற்படி வகுப்புவாரி தீர்மானத்தை காங்கிரசின் கூட்டத்தில் கொண்டுவந்த காலத்தில் இத்தீர்மானம் லிஸ்டிலிருந்து ரத்து செய்யப்பட்ட காரணத்தால் காஞ்சீபுர மகாநாட்டில் நானும் மற்றும் சிலரும் அதற்காகவும், பார்ப்பன சூட்சியை வெளியாக்கி அவர்களது ஆதிக்கத்தை ஒழிப்பதற்காகவும் வேறொரு கட்சியை ஏற்படுத்துவதாகச் சொல்லி சபதங்கூறி வெளிவந்தோம். வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையை அமுலுக்கு கொண்டுவர கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஜஸ்டிஸ் கட்சிக்கு நாம் ஆதரவு கொடுத்தோம் என்பதையும், பிராமணரல்லாதாருக்கு நன்மை செய்ய ஏற்பட்ட ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க முயற்சிக்கும் காங்கிரஸ் பார்ப்பனர்கள் ஆகியவர்கள் தொல்லையிலிருந்து மீட்க வேண்டும் என்பதற்காகவுமே நாம் இந்த இயக்கத்தைத் தோற்றுவித்தோம் என்பதையும் நீங்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

ஈரோட்டு வேலைத் திட்டக் கூட்ட சமதர்ம திட்டத்துக்கு நாம் ஒருபோதும் பின் வாங்கக் கூடாது. ஆனால் அத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டிய விஷயத்தில் நமது பொறுப்பைக் கொண்டு செலுத்த அவற்றை அமுலுக்குக் கொண்டுவர, தக்க அனுபவ சாத்தியமான திட்டத்தோடு வேலை செய்ய வேண்டும். இவற்றிற்கு ஜஸ்டிஸ் கட்சியாரின் உதவியை எவ்வளவு தூரம் உபயோகப்படுத்திக் கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் ஏற்றுக் கொள்ள வேண்டும். சுயமரியாதை கட்சியில் 100க்கு 90 பேர்கள் ஜஸ்டிஸ் கட்சியில் அனுதாபிகளாகவும், மெம்பர்களாகவும், நிர்வாகிகளாகவும் இருக்கின்றார்கள். நம் இயக்க நன்மையை உத்தேசித்து நாம் எவ்வளவு தூரம் அவர்களுக்கு உதவி செய்யக் கூடுமோ அவ்வளவு தூரம் நாம் செய்ய வேண்டும் என்கிற கருத்தில் தான் ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்களாய் இருக்கிறார்களே ஒழிய மந்திரிகளாவதற்கல்ல.



RangaRakes tamilnavarasam.com

## ஜஸ்டிஸ் கட்சிக்குக் கொள்கை உண்டு

ஜஸ்டிஸ் கட்சிக்குக் கொள்கை இருக்கிறது. அவர்கள் எந்தக் கொள்கைகளைக் கொண்டு ஆரம்பித்தார்களோ அக்கொள்கைகளை இப்போதும் காப்பாற்றி வருகிறார்கள். அவர்கள் போகும் வழியில் உத்தியோகம் சம்பளம் வந்தால் அதை விட்டுவிட வேண்டுமா? மேலும் அக் கட்சியார் தங்களது கொள்கையாகிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை விட்டு விட்டார்களா? அல்லது அவர்கள் எப்போதாவது அரசாங்கத்தை மிரட்டுவதாகச் சொல்லி உங்களிடம் ஓட்டுப் பெற்று பல்டி அடித்தார்களா?

நாம் அரசாங்கத்தை எதிர்க்க வேண்டுமென்று கருதினால் அதற்கு ஏற்ற திட்டம் போட்டு வெளிப்படையாய்ச் சொல்லிவிட வேண்டும். ஆனால் நம்மிடம் அப்படி ஒன்றும் தற்போது இல்லை. ஈரோடு திட்டத்தில் (அது மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ப-ர்.) தேர்தல்களில் ஸ்தானங்களை ஏற்று சட்டம் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. பொதுவுடமை சட்ட விரோதமானது என்று அரசாங்கத்தார் தீர்மானித்து விட்டார்கள். வீணாக ஏன் ஜெயிலுக்குப் போக வேண்டும்? நமக்கு முக்கியமான வேறு வேலை செய்ய இடமில்லையா? இனிமேலா நாம் ஜெயிலுக்குப் போய் வீரத்தன்மையைக் காட்ட வேண்டும்? நான்கு பேர்கள் மட்டும் கட்சியின் சார்பாக ஜெயிலுக்குப் போனால் பலன் கிட்டிவிடுமா? நான் ஜெயிலுக்குப் போகப் பயப்படவில்லை. நான் ஜெயிலுக்குப் போனால் எனக்கு என்ன கஷ்டம் இருக்கும்? ஒன்றுமில்லை சுகமாக இருப்பேன். அதிகாரிகளும் என்னைக் கண்டு கிழவனாய் விட்டானேயென்று மரியாதை செய்கிறார்கள்.

''இந்த அரசாங்கத்தை ஒன்று உருக்கி வாரு அல்லது உடைத்து விடு'' என்று கர்ஜித்துக் கொண்டு உழைத்து வந்த காந்தி இன்று எங்கே? ''10 லக்ஷம் பேர் ரத்தம் சிந்த உயிரைவிடக் காத்திருக்கிறார்கள்'' என்று சொன்ன காந்தி, இப்போது எல்லோரையும் சட்டசபைக்குப் போய் ராஜ விஸ்வாசப் பிரமாணம் செய்யும்படி சொல்லவில்லையா? 100000க்கணக்காக காங்கிரஸ்காரர்கள், தொண்டர்கள் ஜெயிலுக்குப் போன பலன் என்ன ஆயிற்று? அன்று வசூலித்த கோடி ரூபாய் எங்கே? அதற்கப்புறம் வசூலித்த 50 லக்ஷ ரூபாய் எங்கே? பட்டாஸ் வெடிகள் போல் எல்லாம் வெடித்து ஓய்ந்து போய்விடவில்லையா? இப்படியிருக்கும்போது அரசாங்கத்தோடு ஜஸ்டிஸ் கட்சியார் ஏன் ஒத்துழைக்கின்றார்கள் என்றால் அவர்கள் மனித சமூகத்துரோகக் கட்சியார்கள் சபைக்குள் நுழைந்து கொள்ளாது பார்த்துக் கொள்கிறார்கள். ஜாதி ஆணவக்காரர்கள் ஏகபோக உரிமைக்காரர்கள் உள் நுழையாமல் பார்த்துக் கொள்ள வேண்டாமா? இந்தக் காரணத்துக்காகத்தான் இப்படிச் செய்கின்றனர். இந்த முயற்சியில் நமக்குப் பங்கில்லையா? ஜாதி ஆணவமும், ஜாதி ஆதிக்கமும் சட்டசபையில் தாண்டவமாட நாம் சம்மதிக்கலாமா? நாம் அனுபவத்தில் பயன்படத் தக்கமாதிரியில் புத்திசாலித்தனமாய், தந்திரத்தில் நாம் வேலை செய்ய வேண்டும். எல்லா விஷயங்களையும் நாம் தீர யோசிக்க வேண்டும். சர்க்கார் காங்கிரசை அடக்கிவிட்டோமென்று இந்த எண்ணத்துடனேயே நமது இயக்கத்தையும் அடக்கிவிடப் பார்க்கிறார்கள். நாம் அதற்கு இடம் கொடுக்காமல் நமது பிரசாரத்தை பின்னும் பலப்படுத்தி வேலை செய்ய வேண்டும். வெறும் ஆவேசம் கொண்ட வாலிபர்களுக்காக நமது இயக்கம் இரையாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

''சட்டசபையில் ஜஸ்டிஸ் கட்சியார்தான் ஜாதி ஆணவம் பிடித்த பார்ப்பனர்களும் கொள்கை இல்லாத காங்கிரசுக்காரரும் உள் நுழைந்து விடாமல் காப்பாற்றி வருகிறார்கள். வீணாக ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி நாம் குறை பேசக் கூடாது. வீராவேசப் பேச்சால் ஒன்றும் முடியாது. பணக்காரர்களை நாம் தற்போதுள்ள நிலைமையில் எப்படி ஒழிக்க முடியும்? எந்த வகையில், அனுபவத்தில் இன்று அது முடியும்? பார்ப்பான் ஒழிவதற்கு முன் பணக்காரத் தன்மை ஒழிந்து விடுமா? அது சாத்தியமா என்று எண்ணிப் பாருங்கள். ஜஸ்டிஸ் கட்சியார் இல்லாவிட்டால் பொட்டுக் கட்டும் வழக்கம் ஒழிந்திருக்குமா? குழந்தை மணம் ஒழிக்க சட்டம் வந்திருக்குமா? தீண்டாமை விலக்குக்கு ஒரு அளவாவது சட்டம் ஏற்பட்டிருக்குமா? இவ்வளவு பார்ப்பனரல்லாதார் உத்தியோகம் பெற்றிருக்க முடியுமா? பார்ப்பனரல்லாதாருக்கு இவ்வளவு சுயமரியாதையாவது ஏற்பட்டிருக்குமா? மற்றும் பல நன்மைகள் நமக்கு ஏற்பட்டிருக்குமா என்பதை எண்ணிப் பாருங்கள். ''பாழாய்ப் போன எலெக்ஷன்'' என்று சொல்லி விடுவதில் பயனில்லை. பாழாய்ப் போன எலெக்ஷனில் வருகிறவன் எவனாயிருந்தாலும் அவனைத்தான் சர்க்காரும் மதிக்கிறார்கள். அவன் வசம் தான் நிர்வாகம் போய்ச் சேருகிறது; எதிரிகள் வசம் போனால் அதைக் கொண்டு நன்மை அதிகம் செய்யாவிட்டாலும் நமக்குத் தீமை அதிகம் விளைவிக்க முடியும். அங்கு சேர்ந்து செய்யும் சட்டம் தான் நமது வாழ்க்கைக்கு ஆதாரமாகிறது. அவன் செய்வதுதான் நமது தலைவிதியாகிறது. எலெக்ஷனில்தான் நம் பிரதிநிதியை அனுப்ப முடிகிறது.

சமதர்மம் என்பதைத் தமிழ்நாட்டு வாலிபருள்ளத்திற் புகுத்தித் தணல் விட்டெரியச் செய்தது, நான்தானென்று தோழர் ஜீவானந்தம் சொன்னார். ''சமதர்மம் ஒரு நாளில் ஏற்படக் கூடியதல்ல. ரஷியாவில்கூட ஒரு நாளில் சமதர்மம் ஏற்பட்டுவிடவில்லை. பல காலத்து வேலையால்தான் அதுவும் சந்தர்ப்பம் சரியாய் இருந்ததால்தான் முடிந்தது. முதலில் சமூகத் துறையில் சமதர்மம் ஓங்க வேண்டும். ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி குறை கூறுவதால் நாம் நன்மையைச் செய்வதாகாது. நமது கொள்கைக்கு பலம் ஏற்படுத்த தகுந்த நல்ல நிலைமை ஏற்படுத்தும் வரை தற்போது நடக்கும் வேலைத் திட்டத்துக்குத் தடை ஏற்படாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். நமது இயக்கத்துக்கு இன்று நிர்ப்பந்தம் ஏற்பட்ட காரணத்தாலேயே



RangaRakes tamilnavarasam.com

நாம் நம் நிலைமையை நன்கு பரிசீலனை செய்து திட்டமொன்றை வகுக்க வேண்டும். எந்த அளவுக்குத் தடையில்லையோ அந்த அளவுக்குப் பிரசாரம் செய்யலாம். தடை மீற வேண்டுமென்று நாம் முடிவு செய்த பின்பே அதைப் பற்றி யோசிக்க வேண்டும். சமதர்மத்தில் எனக்குள்ள ஆர்வம் அவசரம் நீங்கள் அறியாததல்ல. படிப்படியான திட்டத்துடன் அதை ஒழுங்கான வழிமுறைகளுடன் கொண்டு செலுத்த வேண்டும்.

சமதர்மமென்பது மதம் மாறுவது என்பது போல வெறும் உணர்ச்சியல்ல. காரியத்தில் அனேக மாறுதல்களும், புரட்சிகளும் ஏற்பட வேண்டும். அதற்குத் திட்டங்கள், பிரசாரம் செய்யச் சௌகரியங்கள் முதலியவை களெல்லாம் வேண்டும். அவைகளையும், காலதேச வர்த்தமானங்களுக்குத் தகுந்தபடி செலுத்தக்கூடிய ஆற்றலும், துணிவும் வேண்டும். கண்மூடித்தனமாக வெறும் பாமர மக்களின் திருப்தியையே எதிர்பார்க்கக்கூடாது. அவர்கள் பின் செல்லவுங் கூடாது. நாம் பாமர மக்களைத் திருப்பி நடத்துகிறவர்களாய் இருக்க வேண்டும். சமதர்மத்துக்கு நாம் திட்டம் வைத்திருக்கிறோம். அத் திட்டத்துக்கு இம்மி அளவு பின்போகும்படியோ மாற்றிக் கொள்ளும்படியோ நான் சொல்ல வரவில்லை.

*குறிப்பு: 19.10.1935 ஆம் நாள் திருச்சி டவுன்ஹாலில் பெரிய கொட்டகையில் நடைபெற்ற திருச்சி மாவட்ட சுயமரியாதை மாநாட்டில் ஆற்றிய தலைமையுரை.*

குடி அரசு - சொற்பொழிவு - 27.10.1935



# அம்பத்காரும் இந்து மதமும்

## II

இந்து மதத்தில் இருந்து அம்பத்காரும், தாழ்த்தப்பட்டவர்களும் மாத்திரமே அல்லாமல் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களில் தீண்டாதவர்கள் என்பவர்கள் நீங்கிய சுமார் 17 கோடி பேர்களும் கூட இந்து மதத்தை விட்டு விலக வேண்டியவர்களேயாவார்கள்.

இந்து மதம் என்று ஒன்று குறிப்பாக இல்லை என்று காந்தியாரே ஒப்புக் கொள்ளுகிறார்.

இந்தியாவுக்கு மகமதியர்கள் முதலிய அயல்நாட்டார்கள் வந்த காலத்தில் இந்தியாவில் உள்ள பல்வேறு தேச வகுப்பு மக்கள் நடந்து கொண்டு வந்த நடவடிக்கைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் பல்வேறு சமூகத்தாருடைய சடங்கு, பிரார்த்தனை, வழிபடு கடவுள்கள் முதலியவை களுக்கும் சேர்த்து எல்லாவற்றிற்கும் ஒரே பெயராக இந்துமதம், அதாவது இந்தியர்களின் மதம் என்பதாகப் பெயரிட்டு விட்டார்கள்.

அக்காலத்தில் இருந்த திராவிடர்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்துமதம் என்றும், ஆரியர் பழக்கவழக்கங்களுக்கும் இந்துமதம் என்றும், மலை நாட்டு மக்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்துமதம் என்றும், ஆரிய சமாஜமும் இந்துமதம் என்றும், பிரம்மசமாஜமும் இந்து மதம் என்றும், வேதாந்தமும் இந்து மதம் என்றும், கடவுளையும் மதத்தையும் சரீரத்தையும், உயிரையும் துறந்த துறவறமும் இந்துமதம் என்றும், பவுத்தர்கள் பழக்கவழக்கங்களுக்கும் இந்துமதம் என்றும், நாஸ்திகர்கள் கொள்கைகளுக்கும் இந்துமதம் என்றும் இப்படிப் பல விதமாய் அவர்கள் அதாவது கிறிஸ்தவர்கள், மகமதியர்கள் தவிர, மற்ற எவர்களது நடவடிக்கைக்கும் இந்துமதம் என்றே பேர் வைத்து விட்டார்கள். அதாவது இந்தியர்களின் மதம் எனச் சொல்லி விட்டார்கள்.

ஆகவே, இந்துமதம் என்றால் இந்தியர்கள் மதம் என்றுதான் அர்த்தமே ஒழிய, ஒரு தனிப்பட்ட குறிப்பான கொள்கைகளுக்கு இந்துமதம் என்று பெயரில்லை. என்றாலும் அக்காலத்தில் ஆரியர்கள் சிறிது செல்வாக்குப் பெற்று இருந்ததால் அவர்கள் தங்கள் பழக்க வழக்கம்,



RangaRakes tamilnavarasam.com

சடங்கு, தங்களின் வழிபடு கடவுள்கள் ஆகியவைகளையே பிற இந்தியர்கள் மீதும் சுமத்தி அதற்கு அதிகமான செல்வாக்கை உண்டாக்கி வைத்துக் கொண்டிருந்தபடியால் ஆரியர்கள் பழக்க வழக்கம், சடங்கு, வழிபடு கடவுள், அவர்களது இலக்கிய ஆதாரங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் என்பன முதலியவைகளே இந்துக்களின் மதமாகவும், மத ஆதாரங்களாகவும் ஆக்கப்பட்டுவிட்டன. ஆரியர்களுக்கு எதிர்ப்பானவைகளும், ஆரியர்கள் அல்லாதவர்களும் கூட விவகாரத்திற்கு இடம் இல்லாமல் போகட்டும் என்கின்ற காரியத்துக்காகவே எல்லாம் இந்துமதம் தான் எல்லோரும் இந்துக்கள் தான் என்றும், அதுவும் இந்துமதம் இதுவும் இந்துமதம் என்றும் இந்துமதத்தில் எல்லாக் கொள்கையும் உண்டு என்றும், ஒரு இந்து எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்றும், பல சமயங்கள் சேர்ந்தது இந்துமதம் என்றும், அவ்வப்போது தோன்றிய பல பெரியார்களின் அபிப்பிராயங்கள் எல்லாமுமே இந்துமதமாகவே இருக்கிறது என்றும், எந்த மதக்கருத்தும், இந்துமதத்தில் உண்டு என்றும், எப்படிப்பட்டவனும் இந்துவாய் இருக்கலாம் என்றும், புத்தர்கள் சமணர்கள் ஜெயினர்கள் எல்லாருடைய அபிப்பிராயமும் இந்துமதத்தில் இருந்து வந்ததுதான் என்றும், இந்துமதத்துக்கு பொருத்தமானதே என்றும் சொல்லி பொதுவாக இன்று முகமதியர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாத எவரும் இந்துக்கள் என்றே சொல்லக்கூடிய நிலையை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

இந்து மதம் என்பதாக இந்துக்களுடைய பழய ஆதாரங்கள் என்று சொல்லும்படியான எதிலும் ஒரு வார்த்தை கூட கிடையாது.

இந்தியாவின் பெயரைக் குறிப்பதற்கு இந்துஸ்தான் என்று ஒரு வார்த்தை காணப்படலாமோ என்னமோ அதுகூட தைரியமாய் சொல்வதற்கு இல்லை. இந்தியா என்கின்ற பெயர்கூட இந்துமத ஆதாரங்கள் என்பவைகளில் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்து மதம் என்பதற்கு என்னதான் அருத்தம் என்று பழய அதாவது சுமார் 100 வருஷம் 200 வருஷம் முந்திய ஐரோப்பிய அகராதிகளையும், ஐரோப்பிய கலைகளையும் பார்ப்போமானால் மகமதியர்கள் அல்லாதவர்கள் அனுஷ்டிக்கும் மதம் என்றும், ஆரியர்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுபவர்களுக்குச் சொல்லும் மதப் பெயர் என்றும், ஆரியர்கள் அனுஷ்டிக்கும் ஆச்சார அனுஷ்டானங்கள் என்றும் தான் காணப்படு கின்றனவே அன்றி வேறு ஒன்றும் சொல்லப்படுவதாகக் காண முடியவில்லை.

இந்து மதம் பிரத்தியக்ஷத்தில் என்னமாய் இருக்கிறது என்று பார்ப்போமானால் விக்கிரகங்களை வணங்குவது, ஜாதி வித்தியாசங்களை - உயர்வு தாழ்வுகளை பாராட்டுவது ஆகிய இந்த இரண்டு காரியம் தான் இந்த உலகத்தில் வேறு எந்த தேச மக்களிடத்திலும் வேறு எந்த மதஸ்தரிடத்திலும் இல்லாத குணங்கள் கொண்டு இருந்து வருகிறது.



இந்த இரண்டு காரியங்களைப் பற்றி அறிஞர்கள் என்பவர்கள் வெகு காலத்துக்கு முன்பே தவறுதலானது என்றும் அவசியமற்றது என்றும் முடிவுகட்டி விட்டார்கள். அதற்கும் பல ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் உள்ள பெரியார்கள் என்பவர்களுடைய வாக்கும் உபதேசமும் இருந்து வருகிறது. இவைகளையும் இந்து மத ஆதாரமாகவும், அப் பெரியார்களையும் இந்துமதத்தில் தெய்வீகாம்சம் பெற்றவர்கள் என்றும் சொல்லப்படுவதோடு விக்கிரக ஆராதனையில் நம்பிக்கை இல்லாதவனும் ஜாதி வித்தியாசம் உயர்வு தாழ்வு ஆகியவற்றை வெறுப்பவனும், இகழ்பவனும் கூட இந்து தான் என்றும், அதற்கும் ஆதாரம் இந்து மதத்தில் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது.

ஆகவே இப்போது எது இந்துமதம், எது இந்துமதம் அல்லாதது என்று சொல்ல முடியாத நிலையில் இருக்கிறோம்.

ஆனால், தேசீயத் தலைவர்கள் மதத் தலைவர்கள் என்று சொல்லப் பட்டவர்களான தோழர்கள் காந்தியார், மாளவியார் முதலாகியவர்கள் இந்து மதம் என்று எதைச் சொல்லுகிறார்கள் என்று பார்த்தால் வருணாச்சிரமத்தை பரிசுத்தமாக்கி நிலைநிறுத்துவது தான் இந்துமதம் என்கிறார் காந்தியார். களிமண்ணும் கங்கை ஜலமும் கூடவே இருக்க வேண்டியதுதான் இந்துமதம் என்று செய்து காட்டுகிறார் மாளவியார்.

மகம்மதிய ஆதிக்கம் தலையெடுக்காமல் செய்வதுதான் இந்துமதம் என்கிறார் மூஞ்செயாரும், பரமானந்தனாரும். மற்றபடி சங்கராச்சாரி களுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? இராமனுஜாச்சாரியாருடைய இந்து மதம் எப்படிப்பட்டது? பண்டார சன்னதிகளுடைய இந்துமதம் எப்படிப் பட்டது? மனுதர்மசாஸ்திர இந்து மதம் எப்படிப்பட்டது? இதிகாசமாகிய கீதையுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? புராணங்களுடைய இந்துமதம் எப்படிப்பட்டது? சைவர்களுடைய இந்துமதம் எப்படிப்பட்டது? மற்றும் பார்ப்பனரல்லாத சைவர்கள் இந்துமதம் எப்படிப்பட்டது? வைணவர் களுடைய இந்துமதம் எப்படிப்பட்டது? என்பவைகளைப் பற்றி நாம் விவரிக்க இதில் இடம் வைத்துக் கொள்ளவில்லை.

எப்படி இருந்தாலும் இஸ்லாமியர்களைப் போலவும் கிறிஸ்தவர்களைப் போலவும் மதம் என்பதற்கு இருந்து வரும் ஆதாரம், கொள்கை, குறிப்பிட்டவர்களுடைய உபதேசம் என்பதாக எதுவும் இல்லாமல் வார்த்தை அளவில் குருட்டு அபிமான அளவில் இந்துமதம் இருந்து வருகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்த லட்சணத்தில் உள்ள இந்துமதம் ஒரு மனிதனைத் தீண்டக்கூடாதவன் என்றும், ஒரு மனிதனை தாசிமகன், வைப்பாட்டி மகன், அடிமை மகன் என்றும் சொல்லிக் கொண்டு உரிமையும் பாராட்டி 100க்கு 97 மக்களை சுயமரியாதையற்றவர்களாக்கி 100க்கு 25 மக்களை



RangaRakes tamilnavarasam.com

தீண்டாதவர்கள், சண்டாளர்கள் என்று இழிவுபடுத்தி வருவதென்றால், இப்படிப்பட்ட இந்தமதம் உலகத்தில் எதற்காக இருக்க வேண்டும்? இது அடியோடு ஒழிக்கப்படுவதில் என்ன தப்பு? என்றுதான் கேட்கின்றோம்.

ஜாதி அகம்பாவம் பிடித்த சோம்பேறிப் பார்ப்பனீயக் கூட்டம் தங்களது சுயநலங்களை உத்தேசித்து இந்துமதம் ஒழியச் சம்மதப்பட மாட்டார்கள் என்பதோடு, ''இந்துமதத்தை ஒழிக்க உன்னாலும் முடியாது. உங்கள் பாட்டனாலும் முடியாது'' என்று சொல்லுவார்கள். ஆனால் அது வேறு விஷயம். தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த ஒரு ஆள் இந்து மதத்தை விட்டு விடுகிறேன் என்றும், ''சண்டாளர்கள்'', ''இழி மக்கள்'' என்று சொல்லக்கூடிய ஒரு கூட்ட மக்களின் மகாநாட்டில் ''இந்து மதத்தை விட்டு விடவேண்டும்'' என்று ஒரு தீர்மானம் செய்தவுடன் இமயமலை முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள தேசீயத் தலைவர்கள், தேசீய பத்திராதிபர்கள், மகாத்மாக்கள், மாளவியாக்கள், இந்துமதத் தலைவர்கள், ''வீரர்கள்'', ''தியாகிகள்'', ''சத்தியாக்கிரகிகள்'' எல்லோருக்குமே தலையில் இடி விழுந்தது போல் ஆகிவிட்டதுடன் இதற்காக எத்தனை பொய்புரட்டு, ஏமாற்று, தந்திரம் ஆகிய இழிகாரியங்கள் எல்லாம் செய்து, ''அம்பேத்கார் அவ்வளவு பெரிய மனுஷன் அல்ல'' என்றும் ''பம்பாய் மாகாண தீண்டப்படாதார் மகாநாடு தக்க பிரதிநிதித்துவம் பொருந்தியது அல்ல'' என்றும் தாங்கள் கூப்பாடு போடுவது போதாமல் அவ் வகுப்பிலேயே பல வயிற்றுச்சோற்றுக் கருப்பன்களைப் பிடித்து ஒரு திராம் இரண்டு திராம் சாராயம் வாங்கிக் கொடுத்து எழுதச் சொல்லியும், எழுதினதாக ஒப்புக் கொள்ளச் சொல்லியும் இவ்வளவு பாடுபடுவதைப் பார்க்கும்போதே முடியாது என்று சொல்லுபவர்கள் உண்மையாக நம்புகிறார்களா அல்லது பயந்து நடுங்கி அப்படி உளறுகிறார்களா என்பது விளங்கும்.

இந்துமதம் நாளுக்கு நாள் ஒழிகிறதா இல்லையா என்பதும் பிற மதம் நாளுக்கு நாள் ஓங்குகிறதா இல்லையா என்பதும் ஒரு 50 வருஷம் ஜன கணிதத்தைப் பார்த்தால் தானாகவே விளங்கும்.

ஆகையால் இந்து மதத்தை ஒழிக்க வேண்டுமென்று முயற்சி செய்தவர்கள் இப்பார்ப்பனர்களுடைய மிரட்டலுக்கு பயப்படாமல் சித்திரத்தில் படம் எழுதக்கூட ஒரு இந்துவின் பழய சின்னம் இல்லாத அளவுக்கு இந்துமதம் என்னும் புரட்டான ஒரு கட்டும், சூழ்ச்சியும் அழிய வேண்டியது அவசியம் என்றும் அது அழிந்து போகப் போவது உறுதி தான் என்றும் தைரியமாய்க் கூறுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 27.10.1935**



# திருச்சி சுயமரியாதை மகாநாடு

இம்மாதம் 19-ந் தேதி திருச்சியில் கூடிய திருச்சி ஜில்லா சுயமரியாதை மகாநாடானது, சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைப்பற்றி, கண்டபடி தெரிந்தோ தெரியாமலோ வேண்டுமென்றே விஷமத்தன மாகவே குறை கூறிக்கொண்டு திரிந்தவர்களுக்கு வாயடைக்கும்படியான அளவுக்கு காரியம் செய்திருக்கிறது.

சிறப்பாக மகாநாட்டுத் தலைவர் தோழர் சௌந்திரபாண்டியன் அவர்களது தலைமைப் பிரசாங்கமானது, ஜஸ்டிஸ் கட்சியை சுயமரியாதை இயக்கம் ஏன் ஆதரிக்க வேண்டும் என்பதற்கு தகுந்த காரணங்களை நன்றாய் விளக்கி இருக்கிறதோடு சுயமரியாதை இயக்கம் நாளுக்கு நாள் அதனுடைய கொள்கைகளில் விசால நோக்கத்துடனும் தீவிரமான மேல் நோக்கத்துடனும் முன்னேறி இருந்தாலும், அவற்றிலிருந்து ஒரு சிறிதும் பின் வாங்காமல் இருக்க வேண்டும் என்பது ஒருபுறமிருந்தாலும் அதன் ஆரம்ப நோக்கத்தையே அலட்சியப்படுத்துவது சுயமரியாதை ஆகாது என்பதை அறியும்படி செய்திருக்கிறது.

அன்றியும் திருச்சி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட விருதுநகர் மகாநாட்டுத் தீர்மானத்தையும், ஈரோடு வேலைத்திட்டக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சமதர்மத் திட்டத் தீர்மானத்தையும் படித்துப் பார்ப்பவர்களுக்கு எலக்ஷனில் சம்மந்தம் வைத்துக் கொள்ளலாமா வேண்டாமா என்பதையும் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்க வேண்டுமா வேண்டாமா என்கின்ற விஷயத்தைப் பற்றியும் ஒரு தெளிவான அபிப்பிராயம் ஏற்பட்டிருக்குமென்றே நினைக்கிறோம்.

மேலும் சுயமரியாதை இயக்கம் சட்டத்துக்கு முரண்பாடு இல்லாமல் சட்டத்துக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியது என்றும் விளங்கும்.

மற்றும் தலைவர் அவர்கள் இயக்கத்துக்கு கட்டுப்பாடும் ஒழுங்கு முறையும் ஸ்தாபன பலமும் இருக்க வேண்டும் என்று முடிவாகக் கூறி இருப்பதும் மிகவும் கவனிக்க வேண்டிய காரியமாகும்.

இதுவரை எப்படி இருந்து வந்திருந்தாலும் இனி இயக்கம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் சுயேச்சை இருக்கும்படியாக இருக்கக்கூடாது என்பதை நாமும் வலியுறுத்துகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

விருதுநகர் ஜஸ்டிஸ் தொண்டர் மகாநாட்டில் தோழர் ஈ.வெ. ரா. தெரிவித்தது போல் கட்டுப்பாடு என்பது விளம்பரப்படுத்திவிடக் கூடிய காரியமல்ல.

அநேகர்களின் நிஷ்டூரத்துக்கும், அநேகர் இயக்கத்தை விட்டு வெளியே போவதற்குச் சம்மதிக்கக்கூடிய நிலையிலும் தைரியமாகப் பலரை இழக்கத் துணிவதிலும் தான் கட்டுப்பாடு ஏற்படக்கூடுமே தவிர தாக்ஷண்ணியத்தாலும், பயத்தாலும், போலி ஒற்றுமையினாலும் கட்டுப்பாடு ஏற்படுவது சுலபமான காரியம் அல்ல.

அதோடு கூடவே பொருளாதார நிலையிலும் ஒரு அளவுக்கு சௌகரியம் இருக்க வேண்டும்.

இவ்வளவோடும்கூட சர்வாதிகாரத் தன்மைக்கும் சிறிதாவது இடமளித்தாக வேண்டும்.

இவ்வளவு காரியமும் இல்லாமல் வெறும் கட்டுப்பாடு கட்டுப்பாடு என்று பேசுவதால் மாத்திரம் கட்டுப்பாடு ஏற்பட்டுவிடாது. ஆகையால் அந்த விஷயத்தையும் தலைவர் போன்றவர்கள் கவனிக்க வேண்டுகிறோம்.

இனி வருங்காலத்தில் காங்கிரஸ் கூப்பாட்டுக்கு யோக்கியதையற்றுப் போகுமாகையால் சுயமரியாதை இயக்கம் காங்கிரசை எதிர்ப்பதற்காக செலவழித்து வந்த நேரத்தையும், பிரசாரத்தையும், ஊக்கத்தையும் இனி சுயமரியாதை இயக்க சமுதாயத் துறைப் பிரசாரத்துக்குத் தாராளமாகச் செலவிடலாம்.

ஆகையால் சீக்கிரத்தில் கட்டுப்பாடும், ஸ்தாபன பலமும் ஏற்பாடு செய்து கொண்டு தக்கதொரு வேலைக்கமிட்டி அமைத்துக் கொண்டு முன்னிலும் அதிகமான பிரசாரத்துக்கு சுயமரியாதை இயக்கத் தோழர்கள் தயாராய் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 27.10.1935**



# பட்டப் பகல் ஏமாற்றுந் திருவிழா A.I.C.C.

சென்னையில் அக்டோபர் மீ 17, 18ந் தேதிகளில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் கூடி ''பிரமாதமான'' வேலை செய்துவிட்டது.

அதாவது மந்திரி பதவிகளை ஏற்பதா இல்லையா என்கின்ற விஷயத்தில் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. அம்முடிவு என்னவென்றால் பதவி ஏற்பதா இல்லையா என்பதைப் பற்றி இப்போது ஒரு முடிவுக்கும் வர முடியாது என்பது.

ஆனாலிது விஷயத்தைப் பற்றி காங்கிரஸ்காரர்கள் தனிப்பட்ட முறையில் பிரசாரம் செய்வதில் எவ்வித ஆக்ஷேபணையுமில்லை என்றும் தீர்மானித்துக் கொண்டது.

இதன் கருத்தென்னவென்று பார்த்தால் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு எப்படி எப்படி பேசினால் மக்கள் ஏமாந்து ஓட்டுச் செய்வார்களோ அந்த முறைகளைக் கையாள காங்கிரசின் பேரால் பயனனுபவிக்கக் கருதி இருக்கும் பதவி வேட்டைக்காரருக்கு அனுமதி கொடுத்திருக்கிறது என்பதுதான்.

இது காங்கிரசின் சூழ்ச்சிக்கு சரியான உதாரணமா அல்லவா என்று பாருங்கள்.

மற்றும் இந்தத் தீர்மானம் ''பயித்தியம் தெளிந்து போய்விட்டது உலக்கை எடுத்துக் கொடு கோவணம் கட்டிக் கொள்ள வேண்டும்'' என்று ஒரு பைத்தியக்காரன் சொன்னது போலவே இருக்கிறது.

காரியக் கமிட்டித் தீர்மானம் செய்வதற்கு முன்னுமிந்த நிலைமை தான் இருந்து வந்ததென்பதோடு இதனாலேயே பல காங்கிரஸ் பிரமுகர்களும் தங்கள் வருத்தத்தை தெரிவித்ததோடு ராஜீனாமாவும் செய்திருப்பதாய் பத்திரிகைகளில் பார்த்து வருகிறோம்.

தென்னாட்டில் சிறப்பாக தமிழ்நாட்டில் பல காங்கிரஸ் மகாநாடுகளில் பதவி ஏற்க வேண்டும் என்றும், பதவி ஏற்காவிட்டால் சட்டசபைக்குப் போவது முட்டாள்தனமென்றும், பதவி ஏற்பதோடு மாத்திரமல்லாமல் சீர்திருத்தத்தை நடத்திக் கொடுக்க வேண்டும் என்றும், சட்டசபைக்குப் போன பின்பும் பதவி ஏற்ற பின்பும் சீர்திருத்தத்தை அழிப்பது என்பது



RangaRakes tamilnavarasam.com

முட்டாள்தனமானது என்றும் தோழர்கள் சத்தியமூர்த்தி, சி.ஆர். ரெட்டி முதலிய பல காங்கிரஸ்காரர்கள் பேசி அதை அனுசரித்து பல தீர்மானங்களும் செய்யப்பட்டிருக்கும்போது இப்போது திடீரென்று தோழர் சத்தியமூர்த்தி பல்ட்டி அடித்து இந்தப் பிரச்சினையை ஒத்தி வைக்க அனுகூலமாக இருந்திருப்பதில் ஏதாவது இரகசியம் இல்லாமல் இருப்பதற்கில்லை.

## இரகசியம்

அந்த இரகசியம் என்னவென்றால் தீர்மானத்தின் 2வது பிரிவாகிய ''பதவி ஏற்கலாமா கூடாதா என்னும் விஷயத்தைப் பற்றி காங்கிரஸ்காரர்கள் அவரவர்கள் இஷ்டப்படி (சமயத்துக்குத் தகுந்தபடி) பேசி பிரசாரம் செய்து கொள்ளலாம்'' என்கின்ற தந்திரம் நிறைந்த தீர்மானமேயாகும். இதை நாம் சூட்சி என்று சொன்னால் காங்கிரஸ்காரர்கள் ராஜ தந்திரம் என்று எழுதிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே பாமர மக்களை ஏமாற்றிப் பார்ப்பனர்கள் பதவி அனுபவிக்க வேண்டும் என்பதைத் தவிர காங்கிரசில் வேறு எவ்வித பயனும் இல்லை என்று நாம் சொல்லி வருவதற்கு இவை சரியான அத்தாக்ஷியாகும்.

மற்றும் சத்தியம், நேர்மை, பரிசுத்தம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டது என்று சொல்லப்படுவதும் மனிதத் தன்மைக்கு மீறின சக்தியும் ''தெய்வீகத் தன்மையும் கொண்ட ஒரு மகாத்மாவின்'' சர்வாதிகாரத்தின் கீழ் நடைபெற்று வருவதும் இந்தியா முழுமைக்குமே சர்வ பிரதிநிதித்துவமான சபை என்று சொல்லப்பட்டதுமான காங்கிரசுக்கு இன்று புரட்டு, பித்தலாட்டம், ஏமாற்றம், சூட்சி, மூடு மந்திரம் ஆகிய காரியங்கள் இல்லாமல் ஒரு காரியமும் செய்ய முடியவில்லை என்பதை நமது பார்ப்பனர்கள் நிரூபித்துக் காட்டி விட்டார்கள்.

இன்று காங்கிரசு மூன்று முக்கிய கொள்கைகளைக் கைக் கொண்டு இருக்கிறது. அந்த மூன்று கொள்கைகள் தான் மற்ற அரசியல் ஸ்தாபனங்களில் இருந்து காங்கிரஸ் பிரிந்திருக்கிறது என்பதைக் காட்டுவதாகும்.

1. அதாவது இந்திய சமுதாயத்தில் அரசியலில் வகுப்புவாதம் கூடாது என்பது.
2. இந்திய சீர்திருத்தத்தை ஏற்காமல் அதை நாசமாக்குவது என்பது.
3. அரசியலில் பதவி ஏற்கக் கூடாது என்பது.

இம்மூன்று காரியமும் காங்கிரசுக்கு முக்கியமான காரியம் என்று சொல்லி வந்திருப்பதுடன் அவை இல்லாததற்கு ஆகவே மற்ற அரசியல் கட்சிகளை (ஜஸ்டிஸ் கட்சியை) காங்கிரஸ் குறை கூறி விஷமப் பிரசாரமும் செய்து வந்திருக்கிறது.

இம் மூன்று விஷயங்களில் இன்றைய காங்கிரசின் யோக்கியதை என்ன என்று பார்ப்போம்.



## மூடுமந்திரம்

மூன்றையும் மூடு மந்திரமாகவே வைத்து அவரவர்களுக்கு தகுந்தபடி சமய சந்தர்ப்பத்துக்கு தகுந்தபடி பேசி மக்களை ஏமாற்றி வருகிறது.

1. வகுப்புவாதப் பிரச்சினையாகிய வகுப்பு தீர்ப்பைப் பற்றி அதாவது முஸ்லீம்களுக்கு அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்டிருக்கும் வகுப்புப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி ''காங்கிரஸ் இப்போது ஒன்றும் சொல்லுவதில்லை'' என்பது.

   (இதை முஸ்லீம்களைப் பொறுத்தவரை மூடுமந்திரமாக வைத்திருக்கிறது.)

2. சீர்திருத்தத்தை உடைப்பது என்பதைப் பற்றி ''இப்போது ஒன்றும் பேசக் கூடாது''

   (அதையும் சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரை மூடு மந்திரமாக வைத்திருக்கிறது.)

3. சீர்திருத்த அரசியலில் மந்திரி பதவி ஏற்கக் கூடாது என்பதும், இப்போது முடிவு கட்ட முடியாது ஆனால் அவரவர்கள் இஷ்டப்படி பேசிக் கொள்ளலாம்.

(இதுவும் இந்திய ஓட்டர்கள் எல்லோரையும் ஏமாற்ற மூடு மந்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது.)

ஆகவே காங்கிரசானது எந்த கொள்கையில் அல்லது எந்த திட்டத்தில் தெளிவாகவும், யோக்கியமாகவும் அபிப்பிராயம் கொண்டு இருக்கிறது என்று பார்த்தால் மக்களை ஏமாற்றுவது என்பது தவிர வேறு ஒன்றும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்திய தேசீய காங்கிரஸ் ஸ்தாபனமே ஏமாற்று ஸ்தாபனமென்றும், காங்கிரஸ் மகாநாடுகள் எல்லாம் ஏமாற்றுந் திருவிழா என்றும் 1927-லேயே நாம் எழுதியிருக்கிறோம்.

ஆகவே காங்கிரசானது காந்தியார் கைக்கு என்று வந்ததோ அன்று முதலே அது சூட்சி, தந்திரம், புரட்டு, பித்தலாட்டம் முதலாகிய ஏமாற்று காரியங்களில் பிரவேசித்து பாமர மக்களை ஏய்த்து வஞ்சித்து பொருள் கொள்ளை கொண்டு பார்ப்பனர்களும் காலிகளும் படித்தவர்களும், அதாவது ''பிராமணர்களும்'' ''க்ஷத்திரியர்களும்'' ''வைசியர்களும்'' பிழைக்கும்படியான நிலைமையும், பாடுபடுகிற மக்களும் ஏழை விவசாயிகளும் இந்தக் கூட்டங்களுக்கு உழைத்து உழைத்து அழுது ஓட்டாண்டியாகவுமான காரியம் தான் நடந்து வருகிறது.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 27.10.1935**



RangaRakes tamilnavarasam.com

# விதண்டாவாதம்

ஒரு கிருஸ்தவன் இந்துவாகிவிட்டால் உடனே அவனது பெற்றோர்களுக்குத் திதி – திவசம் - சிரார்த்தம் செய்யவேண்டும் என்று இந்து புரோகிதர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் அந்த மதம் மாறியவனுடைய பெற்றோர்கள் உடனே இந்து பிதிர்லோகத்துக்கு வந்துவிடுவார்களா? அல்லது கிறிஸ்துவ பிதிர்லோகத்திலேயே இருப்பார்களா? இந்துக்கடவுள்கள் அவனை இந்து லிஸ்டில் தாக்கல் செய்து கொண்டு, அந்தப்படியான பாவ புண்ணியத்துக்கு ஏற்ற நரக மோக்ஷங்களில் இடம் ஒதுக்கிவிடுவார்களா?

* * *

ஒரு பெண் கொஞ்ச காலம் குடும்பத்தில் இருந்து விதவை ஆகிச் சாப்பாட்டிற்கு வேறு மார்க்கமில்லாமலும், பராமரிப்புக்கு ஆளில்லாமலும் போனதால் கடவுள் பக்தி அதிகமாகி கடவுளுக்கு ஆக பொட்டுக்கட்டிக் கொண்டு நல்ல தேவதாசியாக ஆகிவிட்டால், அவர்களுக்கு விபசார தோஷமுண்டா?

* * *

குடும்ப ஸ்திரீ விபசாரம் செய்தால் பாவம் ஏற்படலாம். தேவதாசி ஆஸ்திகர்களான தேவ பக்தர்களிடம் மாத்திரம் சம்பந்தம் வைத்துக் கொண்டால் பாவம் எப்படி வரும்.

* * *

ஒரு பிறவி முஸ்லீம் இந்துவாகி விக்கிரகங்களை வணங்கினால் அவனைக் கடவுள் தண்டிப்பாரா? அல்லது கடவுள் தன்னுடைய லிஸ்டிலிருந்து அவன் பெயரை அடித்துவிடுவாரா.

* * *

ஒரு பிறவி இந்து முஸ்லீம் ஆகி இந்து விக்கிரகங்களை உடைத்தெரிந்தால், இந்துக் கடவுள் அவனை தண்டிப்பாரா அல்லது இந்து லிஸ்டிலிருந்து அவன் பெயரை அடித்து விடுவாரா?

* * *

ஒரு நாஸ்திகன் வீட்டில் ஒரு பிள்ளை பிறந்து அதற்கு கடவுள் என்கின்ற பெயரே தெரிவிக்கப்படாமல் இருந்து வளர்த்துவந்தால் அப்பிள்ளை பெரியவனாகி தொழுகாததற்காவும், பிரார்த்தனை செய்யாததற்காவும் எந்தமதக் கடவுளாவது தண்டிக்குமா அல்லது ''அவன் நம்ம லிஸ்டில் சேர்ந்தவனல்ல'' வென்று கவனிக்காமல் விட்டுவிடுமா?

* * *

அதுபோலவே ஒரு ஆஸ்திகன் சுயமரியாதைக்காரர் சாவகாசத்தால் நாஸ்திகனாகி உண்மையிலேயே அவன் மனதில் கடவுள் என்பதாக ஒன்று இல்லையென்றும், பாவ புண்ணிய மென்பதெல்லாம் பணக்காரர்கள், புரோகிதர்கள் சுயநலத்திற்கு ஏற்படுத்திக்கொண்ட பித்தலாட்டம் என்றும் உணர்ந்து கடவுளைப் பற்றிக் கவலையில்லாமல் நடந்துகொண்டால் எந்தக் கடவுளாவது அவனைத் தண்டிக்குமா? அல்லது ''அவன்தான் சுயமரியாதையில் சேர்ந்துவிட்டானே தொலைந்துபோகட்டும்'' என்று அசார்சமாய் விட்டுவிடுமா?

**பகுத்தறிவு (மா.இ.) - துணுக்குகள் - அக்டோபர் 1935**





RangaRakes tamilnavarasam.com

# மதங்களின் சக்தி

இந்து இந்தியாவானது 33 கோடி தேவர்களைக் (33-கோடி இந்துக்களைக்) கொண்டிருந்த காலத்திலும் இந்தியாவைக் காப்பாற்றிக் கொள்ள அதற்குச் சக்தி இல்லாமல் போனதோடு இந்து கோவில்கள், அதிலுள்ள இந்துக் கடவுள்கள் எல்லாம் அன்னிய மதக்காரர்களால் இடிக்கவும் உடைக்கவும் கொள்ளை இடவும் பட்டன.

**அவ்வளவு மாத்திரம் தானா?**

இந்து இந்தியா ஒழிந்த பிறகு இந்து முஸ்லீம் இந்தியாவாகி இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இந்தியா தாய்நாடாக ஆகி இந்துக்கள் கோவில்களும் முஸ்லீம்கள் கோவில்களும் பதினாயிரக்கணக்காக ஏற்பட்ட பிறகும் இந்தியாவைக் காப்பாற்ற இரண்டு மதத்திற்கும் சக்தியில்லாமல் போய், ஒரு சிறிய கிறிஸ்து மத சமூகத்தார் கைக்குப் போய்விட்டது. இரு மத மக்களும் ஒரு சிறு மக்களைக்கொண்ட தேச மத கூட்டத்துக்கு ‘‘அடிமைகளாய்’’ இருக்கிறார்கள்.

**இது மாத்திரம் தானா?**

மதத்தலைவர் போன்ற கிலாபத்துத் தலைவர் ஆட்சியில் இருந்த துருக்கி தேசமானது உயிருக்கு ஊஞ்சலாடி மதத்துக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை; மதம் அவரவர் இஷ்டத்தைப் பொறுத்தது என்ற பகுத்தறிவு வாதியின் ஆதிக்கத்தாலேயே காப்பாற்றப்பட்டது.

தோட்டத்தில் பகுதி கிணறு என்கின்றபடி, ஊரில் பகுதி கிறிஸ்தவர் கோவில்களாய் இருந்து ஜனங்களில் பகுதி பாதிரிகளாய் இருந்த ரஷியதேசம் இன்று நாஸ்திகர்கள் இடம் சிக்கிக் கொண்ட பிரகுதான் வெகு சுகப்பட்டுக்கொண்டு இருக்கிறது.

ஆகவே மதங்களின் வலிமைகளைப்பற்றி பரீக்ஷிப்பதற்கு வேறு ஏதோ பரீக்ஷை இருக்கின்றதுபோல் காணப்படுகிறது. அது எதுவாய் இருக்கலாமென்றால்,



எந்த மதக்காரரும் இந்த உலகத்தில் இந்தச் சரீரத்தோடு ஒரு பலனும் அடையமுடியாமல் இந்த உலகத்தையும் இந்தச் சடலத்தையும் விட்ட பிறகு மற்றொரு உலகத்துக்குப் போய் சுதந்திரத்தோடு மோட்சத்தில் இருக்கலாம் என்பதாகும்.

ஆனால் அறிவில்லாத மக்கள் மதங்களைப்பற்றி இந்த உலகத்தில் பயனை எதிர்பார்க்கிறார்கள்.

இந்த நிலையில் அதைவிட மூட மக்கள் இந்த உலகத்திலேயே மதத்துக்குப் பயன் உண்டு என்று சமாதானம் சொல்ல வருகிறார்களே அதுதான் அதிசயமாய் இருக்கிறது.

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - அக்டோபர் 1935**



RangaRakes tamilnavarasam.com

# திதி

இறந்தவர்களுக்குத் திதி கொடுக்க வேண்டுமென்றால் இறந்து போனவர்களின் ஆத்மாவைப்பற்றி 3 விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

1. இறந்துபோகும் ஜீவனின் ஆத்மா மற்றொரு சரீரத்தைப் பற்றிக் கொண்டுதான் இந்த சரீரத்தை விடுவதாக.
2. இறந்துபோன ஜீவனின் ஆத்மா இறந்த உடன் பிதிர்லோகத்தை அடைந்து அங்கு இருப்பதாக. (பிதிர்களாய் இல்லாத ஆத்மா எங்கிருக்குமோ)
3. இறந்துபோன ஜீவனின் ஆத்மா அதனதன் செய்கைக்குத் தகுந்தபடி மோக்ஷத்திலோ, நரகத்திலோ பலன் அனுபவித்துக்கொண்டிருப்பதாக.

ஆகவே இந்த மூன்று விஷயத்தில் எது நிஜம்? எதை உத்தேசித்துத் திதி கொடுப்பது?

இது தவிர ஆத்மா என்பது கண்ணுக்குத் தெரியாதது என்றும் சரீரம் உருவம் குணம் இல்லாதது என்றும் சொல்லப்பட்டிருக்கிறதே. சரீரம் உருவம் குணம் இல்லாததற்கு நாம் பார்ப்பானிடம் கொடுக்கும் அரிசி, பருப்பு, செருப்பு, விளக்கமாறு ஆகியவை எப்படிப் போய்ச்சேரும். அவற்றை ஆத்மா எப்படி அனுபவிக்க முடியும்?

பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - அக்டோபர் 1935



# பெண்களுக்கு உரிமை கொடுக்கலாமா?

தோழர்களே! இதுவரை பல தோழர்கள் பெண்ணுரிமையைப் பற்றி சாதகமாகவும் பாதகமாகவும் பேசியவைகளைக் கேட்டீர்கள். நான் தலைமை வகித்ததற்கு ஆக முடிவில் இதைப் பற்றி ஏதாவது இரண்டொரு வார்த்தை சொல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பீர்கள்.

நான் சொல்லுவது உங்கள் அபிப்பிராயங்களுக்கு மாறாய் இருந்தாலும் இருக்கலாம். அதனால் பாதகமில்லை. இந்தக் கூட்டம் வாக்குவாதக் கூட்டமானதால் பலவித அபிப்பிராயங்களையும் தெரிய வேண்டிப் பேசுவதே ஒழிய வேறில்லை. யார் எதைச் சொன்னாலும் பொறுமையோடு கேட்டு சுருதி, யுக்தி, அனுபவம் என்கின்ற மூன்று தன்மையிலும் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வாருங்கள்.

தோழர்களே இன்று பெண்ணுரிமையைப் பற்றிப் பேசும் நாம் எந்த நிலையில் இருந்து கொண்டு பேசுகிறோம்.

இதைப் பற்றி பேச நமக்கு யோக்கியதையோ, உரிமையோ உண்டா? நாம் ஆஸ்திகர்களா நாஸ்திகர்களா? இது விஷயத்தில் நம்முடைய ஆராய்ச்சியோ முடிவோ நமக்கு ஆதாரமா? அல்லது இது விஷயத்தில் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் முடிவே நமக்கு ஆதாரமா? என்பவற்றை முதலில் நாம் யோசித்துப் பார்த்த பிறகே விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டும்.

ஏனென்றால் பெண்கள் விஷயத்தில் இன்று உலகில் உள்ள மதங்கள் எல்லாம் ஏற்கனவே ஒரு முடிவு கட்டிவிட்டது. அம்முடிவுகள் வேத முடிவு, கடவுள் வேதத்தின் மூலமாய்ச் சொன்ன முடிவு என்று சொல்லப்படுகிறது.

கிறிஸ்தவர்களுடைய வேதத்திலும் முகமதியர்களுடைய வேதத்திலும் இந்துக்கள் வேதத்திலும் பெண்களுக்கு சம உரிமை இல்லை. சில உரிமைகள் இருந்தாலும் அவை வரையறுக்கப்பட்டு அதற்கு மேல் ஒன்றும் செய்யக் கூடாது என்ற தீர்ப்பில் இருக்கிறோம்.

ஆகவே இப்போது நமது ஆராய்ச்சியின் பயனாய் ஒரு முடிவுக்கு வருவோமானால் அம்முடிவு நமது மதவேத கட்டளைக்கு விரோதமாய் இருந்தால் நாம் அவ்வேத கட்டளையை மீறி நாஸ்திகமாவதா அல்லது



RangaRakes tamilnavarasam.com

ஆஸ்திகத்துக்கு பயந்து நமது முடிவுகளை கைவிட்டு விடுவதா என்பதை முதலில் தீர்மானித்துக் கொண்டு பிறகு இந்த வேலையில் இரங்க வேண்டும். இல்லாவிட்டால் நமது வேலைகள் எல்லாம் வீண் வேலையாகப் போய்விடாதா?

முன் பேசிய சிலர் பெண்கள் சுதந்திர விஷயம் முன்னமேயே முடிவு கட்டப்பட்டது என்று சொன்னார். மற்றொருவர் நம் பெரியோர்கள் நன்றாய் யோசித்துச் செய்திருக்கிறதாகச் சொன்னார்.

ஆகையால் இம்மாதிரியான பெரியதொரு சீர்திருத்தவாதிகள் உண்மை சீர்திருத்தவாதிகளானால் மேல்கண்ட பிரச்சினையை முதலில் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

நிற்க, ஆணும் பெண்ணும் மனிதர்கள் தான். உருவு பேதம் மனிதத் தன்மையைப் பாதிக்கக்கூடியதல்ல.

மனித வர்க்கத்தில் புத்திக் குறைவு, பலக் குறைவு என்பது இயற்கையில் ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பாலருக்கும் ஒன்றுபோலவேதான் இருக்கிறது. அப்பியாசத்தால் இருபாலரும் ஒன்று போலவேதான் அடைகின்றார்கள்.

ஆண்களில் எவ்வளவு முட்டாள்கள் இருக்கிறார்களோ? எவ்வளவு பலவீனமானவர்கள் இருக்கிறார்களோ? எவ்வளவு கெட்ட குணமுடையவர்கள் இருக்கிறார்களோ? அதுபோல்தான் பெண்களிலும் இருக்கலாம்.

மேல் கொண்டு ஏதாவது இருந்தால் அது செயர்க்கையால் அதாவது ஆண்களாகிய நாம் அவர்களை குழந்தைப் பிராய முதல் அடிமைப்படுத்தி கல்வியில்லாமல் உலக ஞானம் அறிய இடம் இல்லாமல் அடக்கி வைத்துவிட்டதால் ஏற்பட்டதே ஒழிய வேறில்லை. தாசிகளை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் வியாபாரத்தில் எவ்வளவு கெட்டிக்காரர்களாய் இருந்து எவ்வளவு ஆண்களை ஏமாற்றி எவ்வளவு பணம் சம்பாதித்து எப்படி நிர்வகித்து வருகிறார்கள் பாருங்கள்.

ஆண்களில் எழுத்து வாசனை அற்றவர்களுடையவும் சமத்துவ மில்லாமல் அடக்கி வைத்திருக்கும் மிருகங்களுக்கு ஒப்பான சில தாழ்த்தப்பட்ட மக்களுடையவும் அறிவு, வீரம், பராக்கிரமம் எல்லாம் எப்படி இருக்கிறது?

வியாபாரம் செய்யும் பெண்களும் உத்தியோகம் பார்க்கும் பெண்களும் இன்று அவரவர்கள் தொழில்களை சரியாய் செய்யவில்லையா? உபாத்தியாயர் பெண்கள் தங்கள் உத்தியோகத்தை சரியாய் செய்ய வில்லையா? எந்த விதத்தில் அவர்கள் தகுதி அற்றவர்கள் ஆவார்கள்?

ஜெயிலில் இருக்கும் கைதிகள் ஆண்களாக இருந்தும் ஜெயிலரையும் ஜெயில் சூப்ரண்டையும் கண்டால் நடுங்குகிறார்களே, அவர்களுக்கு ஆண்மை வீரம் பராக்கிரமம் சுயபுத்தி எல்லாம் எங்கு போய்விட்டது?



இந்தியாவில் கிறிஸ்தவப் பெண்கள் முக்காடிட்டு வைக்கப்பட்டிருக் கிறார்கள் - முஸ்லீம் பெண்கள் உறைபோட்டு மூடி வைத்திருக்கிறார்கள். இந்துப் பெண்கள் கல்வி இல்லாமல் சொத்து உரிமை இல்லாமல் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கு இன்று சுதந்திரம் கொடுத்தால் அதை வகிக்க அருகதை அற்றவர்கள் என்று தான் சொல்ல வேண்டி வரும். அதுபோலவே இன்று எல்லா ஆண்களுக்கும் நிர்வாக சபை மெம்பர் பதவி, மந்திரி பதவி கொடுத்தால் ஆண்கள் அருகதை அற்றவர்கள் என்றுதான் சொல்ல வேண்டி வரும் - எல்லோருக்கும் படிப்பு கொடுக்க வேண்டும். உலக விஷயங்களைக் கற்கத் தாராளமாய் வசதி அளிக்க வேண்டும் - 18 வயது 20 வயது ஆன பிறகே கல்யாணம் செய்து வாழ்க்கையில் ஈடுபடச் செய்ய வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் தான் சுகமாய் வாழத்தகுந்த ஒரு தொழில் அல்லது ஒரு மார்க்கத்துக்கு தயார் செய்யப்பட வேண்டும். தன் புருஷனை வயது வந்த பிறகு தானே தெரிந்தெடுத்துக் கொள்ளச் செய்ய வேண்டும்.

இவை செய்துவிட்டால் நீங்கள் எந்தப் பெண்ணையும் தேடிப் போய் சுதந்திரம் கொடுக்க அலைய வேண்டாம். பெண்களுக்கு சுதந்திரம் கொடுக்கலாமா வேண்டாமா என்று இம் மாதிரிகூட்டம் போட்டு வாக்குவாதம் செய்ய வேண்டாம். தானாகவே பெற்று விடுவார்கள்.

பெண்களுக்கு சுதந்திரம் கொடுத்தால் வீட்டு வேலை யார் பார்ப்பது என்று யாரும் கவலைப்படவேண்டியதில்லை.

இன்றைய வீட்டு வேலைகள் என்பது மக்களின் முட்டாள்தனத்தால் ஏற்பட்டதே ஒழிய அவை எல்லாம் இயற்கையாய் உள்ள வேலை அல்ல.

இன்றைய வீட்டு வேலை இனி 20 வருஷத்துக்குள் முக்கால்வாசி குறைந்து போகும் - உலக முற்போக்கு வீட்டு வேலைகளைக் குறைத்து வருகிறது.

நம்முடைய அருத்தமற்ற பேராசை சுயநலங்களே நமக்கு இவ்வளவு வீட்டு வேலைகளை ஏற்படுத்திக் கொண்டது.

கற்பு கெட்டுப் போகும் என்கின்ற கவலை எவரும் அடைய வேண்டியதில்லை. பெண்கள் கற்பு பெண்களுக்கே சேர்ந்ததே ஒழிய ஆண்களுக்கு அடமானம் வைக்கப்பட்டதல்ல - கற்பு என்பது எதுவானாலும் அது தனிப்பட்ட நபரைச் சேர்ந்ததாகும். கற்பு கெடுவதால் ஏற்பட்ட தெய்வத் தண்டனையை அவர்கள் அடைவார்கள். அதற்காக மற்றொருவர் அடையப் போவதில்லை. இது தானே மதவாதிகள் ஆஸ்திகர்கள் சித்தாந்தம் - ஆதலால் பெண் பாவத்துக்குப் போகிறாளே என்று ஆண் பரிதாபப்பட வேண்டாம். பெண் அடிமை அல்ல; அவளுக்கு நாம் எஜமானல்ல, கார்டியன் அல்ல என்று எண்ணிக் கொள்ள வேண்டும். பெண் தன்னைப்



RangaRakes tamilnavarasam.com

பற்றியும் தனது கற்பைப் பற்றியும் காத்துக் கொள்ள தகுதி பெற்றுக் கொள்ள விட்டுவிட வேண்டுமே ஒழிய ஆண் காவல் கூடாது. இது ஆண்களுக்கும் இழிவான காரியமாகும்.

கற்பு கெடுதலால் நோய் வரும் என்றால் இருவருக்குமே தான் வருமே ஒழிய ஒருவருக்கு மாத்திரம் வராது. ஆதலால் பெண்களைப் படிக்க வைத்து விட்டால் தங்கள் கற்பு மாத்திரம் அல்லாமல் ஆண்கள் கற்பையும் காப்பாற்றக்கூடிய தன்மை வந்துவிடும்.

ஆகவே தோழர்களான நீங்கள் நன்றாய் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்து அந்தப்படி உங்கள் தங்கை, குழந்தை ஆகியவர்கள் விஷயத்தில் நடவுங்கள்.

*குறிப்பு: 18.10.1935 ஆம் நாள் ஈரோடு லண்டன் மிஷின் கம்யூனிட்டி டிரெய்னிங் பள்ளிக்கூட மாணவர்கள் சங்கத்தின் சார்பாக பள்ளிக்கூட வகுப்பு மண்டபத்தில் நடைபெற்ற ''பெண் உரிமை அவசியமா?'' விவாதத்தில் தலைமையேற்று ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 03.11.1935**



# தேர்தல் தொல்லை

காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் பிரவேசிக்க ஆரம்பித்த பின்பு சட்டம் சமாதானம் எல்லாம் பறந்து போகும்படி செய்து விட்டார்கள். அஹிம்சை என்றும் யோக்கியம் என்றும் பேச்சுக்களை வாயில் சொல்லிக் கொண்டு காரியத்தில் செய்யும் காலித்தனங்களுக்கும் கலகத்துக்கும் குழப்பங்களுக்கும் அளவே இல்லாமல் இருந்து வருகிறது.

திருநெல்வேலி ஜில்லா போர்டு மெம்பர் தேர்தலில் தோழர் ஐ.ஈஸ்வரம்பிள்ளை வெற்றி பெற்றுவிட்டார் என்றாலும் இவருக்கு விரோதமாய் செய்த காலித்தனங்களுக்கு ஆதாரம் ஈஸ்வரம்பிள்ளை அவர்களுடைய மோட்டார் காரானது எரிக்கப்பட்டு சாம்பலாக்கப்பட்டு விட்டது என்பதைப் பார்த்தால் காங்கிரசின் பேரால் ஏற்பட்ட மற்ற தொல்லைகளுக்கும், விஷமங்களுக்கும் அளவு சொல்ல வேண்டுமா?

ஆகவே பார்ப்பனர்கள் செய்யும் இம்மாதிரியான கிருத்திரமங்களால் பார்ப்பனரல்லாதார் முன்னிலும் அதிகமான விழிப்படையவும் ஒற்றுமை அடையவும் பார்ப்பனரை அடியோடு வெறுக்கவும் தான் ஏற்படுமே ஒழிய, மற்றப்படி பார்ப்பனர்களுக்கு இவற்றால் எல்லாம் ஒன்றும் லாபம் ஏற்பட்டுவிடப் போவதில்லை என்பது உறுதியான விஷயமாகும்.

இந்த 10, 20 வருஷ காலமாகவே பார்ப்பனர்கள் தங்கள் சமூக நலனுக்காகச் செய்யப்பட்ட சூழ்ச்சிகளிலிருந்தெல்லாம் வரிசையாய் தோல்வி அடைந்தே வந்திருக்கிறார்களே அல்லாமல் எதிலும் வெற்றி முகம் கண்டார்கள் என்று சொல்ல முடியாது.

இவர்களுடைய ''சத்தியாக்கிரகம்'' ''தடி அடிபடுதல்'' ''சிறை செல்லுதல்'' முதலாகிய சண்டித்தனங்களால்கூட எதிலும் வெற்றி பெற்றார்கள் என்று சொல்லிவிட முடியாது.

இவை மாத்திரமல்லாமல் பெரிய பெரிய தியாகிகளைப் போலும் எதையும் விரும்பாத இந்திரிய நிக்கிரஹக்காரர்களைப் போலும் வேஷம் போட்டு செய்து வந்த சூழ்ச்சிகளான பகிஷ்காரமெல்லாம் அதாவது அதிகாரம், பதவி, உத்தியோகம் எதுவும் வேண்டியதில்லை என்று வீம்பு பேசியதெல்லாம் இன்று எச்சிலையில் ஒட்டிக் கொண்டிருப்பதை நக்கும்படியான மானங்கெட்டத் தன்மைக்குக் கொண்டு வந்துவிட்டதே



RangaRakes tamilnavarasam.com

ஒழிய, ஒன்றிலாவது வெற்றி பெற்றோம் என்றோ வீம்பைக் காப்பாற்றினோம் என்றோ சொல்லிக் கொள்ளுவதற்கே இல்லாமல் போய்விட்டது.

மற்றும் ஜன சமூக நன்மைக்குப் பாடுபடுகிறோமென்று சொல்லிக் கொண்டு அரசாங்கத்தை அலட்சியம் செய்து விட்டதாகப் பாசாங்கு செய்து ஏற்படுத்திய நிர்மாணத் திட்டங்கள் தான் என்ன ஆயிற்று? என்று பார்த்தால்,

**மது விலக்கு** என்பது இன்று அக்கிராரத்திலும் மது வாய்க்கால் ஓடும்படிச் செய்து விட்டது.

**இந்து முஸ்லீம் ஒற்றுமையானது** கட்சிக்கு 100 பேர் 200 பேர் கொல்லப்படும்படியான சேதியும், ஒருவரை ஒருவர் பஹிஷ்காரம் செய்யும் சேதியும் இந்து முஸ்லீம் வகுப்புக் கலவரம் என்னும் தலைப்பில் சதா காதுகளில் ''ரீங்காரம்'' செய்து கொண்டே இருக்கிறது.

**தீண்டாமை விலக்கு வேலையோ** தீண்டாதவர் வேறு எந்த மதம் புகுவது என்கின்ற யோசனையில் கொண்டுவந்து விட்டுவிட்டது. அதைத் தடுக்கவே சூழ்ச்சி செய்ய வேண்டி இருக்கிறது.

**சட்டசபைகளையும் ஸ்தல ஸ்தாபனங்களையும் பஹிஷ்காரம் செய்து காலி செய்யப்படும் வேலையோ** அவைகளைக் கைப்பற்ற இன்று பார்ப்பனர்கள் செய்யும் சூழ்ச்சியும், கலவரங்களும், அதனால் ஏற்படும் கொலைகளும், புதுச்சேரி எலக்ஷனைத் தோற்கடிக்கும் போல் செய்து வருகிறது.

மற்றபடி **ஸ்தல ஸ்தாபனங்களில் புகுந்து அவற்றைப் பரிசுத்தப் படுத்தும் யோக்கியதையும் கன்றாக்ட் ராஜ்யத்தை அழிக்கும் வேலையும்** சென்னைக் கார்ப்பரேஷனில் சாமி வெங்கடாசலம் செட்டியாராலும் கோவை ஸ்தல ஸ்தாபனங்களில் காங்கிரஸ் அங்கத்தினர்களாலும் செய்து காட்டியதானது இனி இவர்கள் மக்கள் முன் சிறிதும் தலைகாட்ட முடியாத நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டுவிட்டது.

மக்களிடம் வசூலித்த பணங்கள் பாழாக்கப்பட்ட விதமோ இன்னவிதத்தில்தான் என்று சொல்ல முடியவில்லை. ஜனங்களுக்குப் பார்ப்பனர்களிடத்திலும் இவர்கள் மகாத்மா, தியாகி என்றெல்லாம் வேஷம் போட்டு அழைத்து வரும் தலைவர்களிடத்திலும் இருக்கும் ஒற்றுமையும் பக்தியும் நம்பிக்கையும் காந்தியார் வந்தபோது கறுப்புக் கொடிகள் பறந்ததும், ராஜேந்திர பிரசாத் அவர்கள் முக்கிய ஊர்களுக்கு இரவில் வந்து இரவில் ஓட்டம் பிடிக்கும்படியான நிகழ்ச்சிக் குறிப்புகளும் ஊர் ஊருக்கு 11¾ ரூ., 41¾ ரூ., 53¼ ரூ. என்கின்ற முறையில் பணப்பை பிரசெண்ட்டு செய்யும்படியான நிலையிலும் வந்துவிட்டது.

சென்னை, மதுரை முதலிய பல முக்கிய பட்டணங்களில் ஜனப் பிரதிநிதி சபைகளின் வரவேற்பு இல்லை என்று ஒழுங்குமுறைப்படி தீர்மானிக்கப்பட்டாய் விட்டது.



காத்தானையும், தீர்த்தானையும் பிடித்து ஒரு இரவில் புதுச் சங்கம் கற்பனை செய்து மானங்கெட்ட உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்க வேண்டியதாய்விட்டது.

இனி என்ன ''பெருமை'' நம்நாட்டில் இப்பார்ப்பனர்களுக்கு இருக்கிறது என்றோ அல்லது இந்த 10, 15 வருஷ சூட்சியினால் என்ன பெருமை ஏற்பட்டது என்றோ சொல்லுவார்களோ தெரியவில்லை.

ஆனால் ஒரு விஷயத்தில் பார்ப்பனர்கள் வெற்றி பெற்று விட்டார்கள் என்று சொல்லலாம். அதென்னவென்றால் முன்காலப் பார்ப்பனர்கள் எப்படி பார்ப்பனரல்லாதார்களுக்குள் பல ஜாதி பல உள் வகுப்புகள் பிரித்து தாங்கள் மாத்திரம் சோம்பேறிகளாய் இருந்து ஊரார் உழைப்பில் வயிறு வளர்க்கத் தந்திரம் செய்து வந்தார்களோ அது போல் இப்போது அரசியல் தேசாபிமானம் என்னும் பேரால் பல கட்சிகள் உண்டாக்கிப் பார்ப்பன ரல்லாதாருக்குள் பிரிவை ஏற்படுத்தி பார்ப்பனரல்லாதார் கூட்டத்தில் வாலறுந்தவர்களையும், மூக்கறுந்தவர்களையும், கஞ்சிக்கும் பதவிக்கும் மார்க்கம் அறுந்தவர்களையும் தங்கள் வசம் சேர்த்துக் கொண்டு கலகம் செய்து, சூழ்ச்சி செய்து தொல்லை விளைவிப்பதில் வெற்றி பெற்று வருகிறார்கள் என்றாலும் அதிலும் சிறிது காலத்துக்கே தான் இந்தப்படி வெற்றி பெற முடியுமே ஒழிய வேறில்லை. ஆனாலும் அந்த மாதிரி ஆட்களுக்கும்கூட இப்போது வரவர யோக்கியதை குறைந்து கொண்டுதான் வருகிறதே தவிர - அப்படிப்பட்டவர்களுக்கு பார்ப்பனர்கள்தான் ஏதாவது அழுக வேண்டுமே தவிர, அவர்களால் பார்ப்பனர்களுக்கு ஒரு காரியமும் இனி ஆகப் போவதில்லை என்று உறுதியாய்ச் சொல்லலாம்.

உதாரணமாக இன்று பார்ப்பனர்களுடன் இருக்கும் சில பழய நபர்களை - முழு டிக்கட் என்பவர்களையே எடுத்துக் கொள்ளலாம். தோழர்கள் C.R. ரெட்டி, V. சக்கரை செட்டியார், V.O. சிதம்பரம் பிள்ளை போன்றவர் களையே எடுத்துக் கொண்டோமேயானால் இவர்கள் இதுவரை எத்தனை கரணம் போட்டவர்கள், எத்தனை தடவை காங்கிரஸ்காரர் களானார்கள் எத்தனை தடவை ஜஸ்டிஸ்காரர்களானார்கள், இவர்களுக்கு இன்று பொதுமக்களிடம் இருக்கும் செல்வாக்கு எவ்வளவு? இவர்கள் பேசுவதால் மனம் மாறி பார்ப்பனர்களை ஆதரிக்க எத்தனை நபர்கள் வந்துவிடக் கூடும்? அல்லது இவர்கள் இன்னும் எத்தனை நாளைக்கு இந்தப் பார்ப்பனர்களை ஆதரிக்கக்கூடும்? அல்லது இவர்களை இந்தப் பார்ப்பனர்கள் இன்னும் எத்தனை நாளைக்குத் தான் விளம்பரம் செய்து பயனனுபவிக்க முடியும்? எனவே முழு டிக்கட்டுகளுடைய நிலைமையே இப்படியிருந்தால் இனி காங்கிரஸ் காலித்தனத்துக்குப் பயந்து எலக்ஷன் செலவுக்குப் பயந்து வந்து சேரும் அரை டிக்கட்டுகளைப்பற்றி எடுத்துச் சொல்ல நாம் அதிக நேரம் செலவழிக்க ஆசைப்படவில்லை.



RangaRakes tamilnavarasam.com

எனவே பார்ப்பனர்கள் காங்கிரஸ் வேஷம் போட்டு இன்று பார்ப்பனரல்லாதார்களுக்கு விளைவிக்கும் இம்மாதிரி தொல்லை எல்லாம் சில்லரை விஷமம் என்று கருதக் கூடியதாய் தான் இருக்க முடியுமே தவிர மற்றபடி இதனால் எல்லாம் ஒரு காரியத்தையும் சாதித்துவிட முடியாது என்றும், தாங்கள் இதுவரை செய்ததெல்லாம் தப்பான காரியமென்றும் கூடிய சீக்கிரத்தில் நமது பார்ப்பனர்கள் உணரப் போகிறார்கள் என்பதும் நிச்சயமான காரியமாகும்.

**வரப்போகும் சட்டசபை தேர்தல்களிலாகட்டும்** பார்ப்பனர்கள் எந்த விதத்தில் வெற்றி அடைந்து விட முடியும்?

முதலாவது பார்ப்பனர்களுக்கு தேர்தலில் சொல்லிக் கொள்ள ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி விஷமப் பிரசாரம் செய்வதைத் தவிர, இன்று வேறு என்ன கொள்கை இருக்கிறது? அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றால் செய்யக்கூடிய காரியம் ஒன்றே ஒன்று தான். அதாவது **வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை அளிக்கலாம்.**

மற்றென்னவாவது செய்யக் கூடும் என்றால் சமூக சீர்திருத்த சம்மந்தமாக எதாவது சட்டம் வந்தால் அதை எதிர்க்கலாம். இந்த இரண்டு காரியத்தைத் தவிர இவர்கள் சட்டசபையில் என்ன செய்யக்கூடும்?

இந்தக் காரியங்களும் செய்யத்தக்க அளவுக்கு பார்ப்பனர்கள் சட்டசபைக்குள் நுழைந்து விடுவது என்பது லேசான காரியமல்ல.

ஆகவே அடுத்த சட்டசபை தேர்தலில் பார்ப்பனர்கள் கூச்சல் போட்டதுதான் லாபமாய் இருக்கலாம். அல்லது கலகம், அடிதடி, சில கொலைகள் ஆகியவை நடக்கச் செய்தது தான் லாபமாய் இருக்கலாம். மற்றபடி பார்ப்பன ஆதிக்கம் வந்துவிடும் என்று கருதுவது கனவாகக்கூட இருக்க முடியாது என்று இப்போதே ஒவ்வொருவரும் எழுதி வைத்துக் கொள்ளலாம். ஆதலால் பார்ப்பனர்களின் வெறும் கூப்பாட்டையும், விஷமப் பிரசாரத்தையும், காலித்தனத்தையும் கண்டு யாரும் ஏமாந்து போயோ எலெக்ஷன் செலவுக்கு பயந்தோ அவர்களிடம் போய் சரணாகதி அடைந்துவிட வேண்டாம் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் -** 03.11.1935



# ராமகிருஷ்ணா மடம்

சென்னையில் உள்ள ராமகிருஷ்ணா மடம் என்பது சுவாமி விவேகானந்தருக்கு ஏற்பட்ட செல்வாக்கை ஒட்டி பார்ப்பனர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளும் சூழ்ச்சி முறையில் ஏற்படுத்தப்பட்ட மடம். இதற்குப் பச்சை வர்ணாச்சிரம பார்ப்பனர்களே காரியத்தில் சர்வாதிகாரியாய் இருப்பது வழக்கம். இம் மடத்தில் இன்னும் பார்ப்பனருக்கு வேறு இடம், பார்ப்பனரல்லாதாருக்கு வேறு இடம் என்கின்ற பிரிவு பல காரியங்களில் இருந்து வருவதோடு பிள்ளைகளுடைய பிரார்த்தனை விஷயத்தில்கூட வ.வெ.சு. அய்யர் குருகுலத்தில் இருந்தது போலவே நடந்து வருகிறது. ஆனால் இதற்கு பணவருவாய் மாத்திரம் பெரிதும் ஏன் முக்கால் பாகத்துக்கு மேல் பார்ப்பனரல்லாதாரிடையே இருந்துதான் வருகிறது.

சர்க்காரில் மிக செல்வாக்குள்ள உத்தியோகத்தில் இருக்கும் பல பார்ப்பனர்கள் தாங்கள் உத்தியோக செல்வாக்கை உபயோகித்து பாமர மக்களுடைய பணம் தங்களுக்கு வந்து சேரும்படி பல வித தந்திரங்கள் செய்து பணம் சேர்க்கிறார்கள்.

இது தவிர அரசாங்கத்தாரிடம் இருந்தும் பண வருவாய் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு தடவை சட்டசபையில் இவ்விஷயத்தைப் பற்றி விவாதிக்க ஏற்பட்டதில் சர்க்காரில் செல்வாக்குள்ள உத்தியோகத்தில் உள்ள பார்ப்பனர் களின் வேண்டுகோளால் பின் வாங்கிக் கொள்ளப்பட்டது.

இப்போதும் அந்த மடத்தில் ஜாதி வித்தியாசமும் இடப் பிரிவும் இருப்பதோடு அதன் பேரால் உள்ள பத்திரிகையானது பார்ப்பனப் பிரசாரம் செய்வதோடு மாத்திரமல்லாமல், எந்தக் கூட்டத்தாரை ஏமாற்றிப் பணம் கொள்ளை கொள்ளுகின்றதோ அந்தக் கூட்டத்தாரையும் இழித்துரைத்து விஷமப் பிரசாரம் செய்கின்றது.

இதைப் பற்றி விடுதலைப் பத்திரிகை எடுத்துக் காட்டியதற்கு ஆக அம்மடத்திற்கு, வெறும் நிமித்திய மாத்திரமாய் பெயருக்கு இருக்கும் தலைவரான ஒரு அமிர்தேஸ்வரானந்த சுவாமி என்பவர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்கிறார். அதாவது ராமகிருஷ்ண மடத்தில் இருந்து



RangaRakes tamilnavarasam.com

வெளிவரும் பத்திரிகையானது ஜஸ்டிஸ் கக்ஷியை தாக்கி எழுதியிருப்பதற்கு ஆக நான் மிகுதியும் வருந்துகிறேன். இனிமேல் இம்மாதிரி நடப்பதில்லை என்பதாக எழுதிக் கொண்டிருக்கிறார்.

இந்த மன்னிப்பை விடுதலை ஒப்புக்கொண்டு இனிமேல் இப்படி நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று எச்சரிப்புடன் நின்று விட்டது.

ராமகிருஷ்ண மடத்தில் நடக்கும் பார்ப்பனீய விஷமம் இது ஒன்று மாத்திரமல்லாமல் இப்போது மாத்திரமல்ல இருந்து வருகிறது என்பதைப் பார்ப்பனரல்லாத மக்கள் உணர வேண்டுகிறோம்.

சுருங்கச் சொன்னால் காந்தியாரின் பெயரை வைத்துக் கொண்டு பார்ப்பனர்கள் எவ்வளவு தொல்லை விளைவிக்கிறார்களோ அதைவிடக் கொஞ்சமென்று சொல்லிவிட முடியாது.

அது ஒரு பார்ப்பன அக்கிரகாரம் மாத்திரமல்லாமல் பெரிதும் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் சோறு படி போடும் ஒரு தர்ம சத்திரம் போன்றதென்றே சொல்ல வேண்டும். ஆகையால் பார்ப்பனரல்லாத சட்டசபை மெம்பர்கள் இதில் பிரவேசித்து சர்க்காரிலிருந்து அதற்கு இனி பணம் போகாமல் இருக்கும்படிக்கும் பொது ஜனங்களிடம் டிராமா, கதை, காலட்க்ஷேபம், பஞ்ச நிவர்த்தி, வெள்ளக் கஷ்ட நிவர்த்தி, புயல் கஷ்ட நிவர்த்தி, பூகம்பக் கஷ்ட நிவர்த்தி என்னும் பேரால் பணம் அச்சங்கத்துக்குப் போகாமல் இருக்கும்படியாகவும் பார்த்துக்கொள்ள வேண்டியது முக்கிய கடமை ஆகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 03.11.1935**

# காங்கிரஸ் தியாகம்

**- ஒரு பழைய கைதி**

காங்கிரஸ் பிரசாரராகிய தோழர் தெய்வநாயகய்யா தண்டிக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார்.

அவர் சிறை சென்ற நிமிட முதல், இதுவரை ஒவ்வொரு நாளும் தெய்வநாயகய்யாவுக்கு B-கிளாஸ் படி கொடுக்கவேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் கூப்பாடு போட்ட வண்ணமாய் இருக்கிறார்கள்.

என்ன மானங்கெட்ட தனம் இது?

வீம்புக்கு ஜெயிலுக்குப்போக மக்களை காங்கிரஸ்காரர் தூண்டுவானேன்?

இப்போது B-கிளாஸ் B-கிளாஸ் என்று கெஞ்சுவானேன்.

ஜெயிலில் B-கிளாஸ் படி கொடுக்கப்படுமானால் இன்று தமிழ் நாட்டில் மாத்திரம் ஒரு கோடி பேர்கள் ஜெயிலுக்குப் போக தாங்களாகவே விண்ணப்பம் போடத் தயாராய் இருப்பார்கள். B-கிளாஸ் என்றால் சாதம், பருப்பு, நெய், மாம்சம், ரொட்டி, வெண்ணை, காப்பி, தயிர், பால் ஆகியவைகள் கிடைக்கும். இது கிடைப்பதாய் இருந்தால் யார் ஜெயிலுக்குப் போகப் பயப்படுவார்கள்.

இதில் என்ன பெரிய தியாகம் இருக்கிறது. இது கிடையாத ஜனங்கள் நமது நாட்டில் 100க்கு 50 பேர்களுக்கு மேலாகவே இருக்கிறார்கள் என்பது யாருக்கும் தெரியாதா?

இந்த நிலையில் ஜெயிலுக்குப் போன காங்கிரஸ்காரர்களுக்கு சட்டசபை ஸ்தானமும், ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஸ்தானமும் பிரதி பிரயோஜனமாகக் கிடைக்கவேண்டுமாம். இதற்கு பெயர்தான் தியாகமும் தேசபக்தியுமாம்.

**குடி அரசு - கட்டுரை - 03.11.1935**



RangaRakes tamilnavarasam.com

# ஸ்தல ஸ்தாபனம்

தலைவரவர்களே! தோழர்களே!!

சுமார் 10 நாட்களுக்கு முன்பாகவே இவ்வூர் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் அவர்கள் இந்த பஞ்சாயத்து ஆபீசு கட்டடம் திறப்பு விழா கொண்டாட்டத்தின்போது பெரியதொரு கூட்டம் வரும் என்றும், அந்தச் சமயத்தில் ஒரு மணி நேரமாவது அக்கூட்டத்தின் கவனத்துக்கு வேலை இருக்கும்படியாக ஏதாவது ஒரு உபன்யாசம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். நானும் அதற்கு இணங்கி இந்த சமயத்தில் ஸ்தல ஸ்தாபனம் என்பது பற்றி பேசுவதாகவும் ஒப்புக் கொண்டேன். அதற் கேற்றாப்போல் இன்று ஸ்தல ஸ்தாபனத்தில் சம்பந்தப்பட்டவர்களும் அதன் நிர்வாகஸ்தர்களுமாகவே ஏராளமாகக் கூடி இருக்கிறீர்கள்.

கனம் வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள் தலைமையில் பேசுவதற்கு மிகுதியும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஸ்தல ஸ்தாபன சம்மந்தமான அனுபவம் எனக்கும் சிறிது உண்டு. ஆனால் அவற்றை நான் ஒரு விதமாய் உணர்ந்திருக்கிறேன். நீங்கள் ஒரு விதமாய் உணர்ந்திருக்கக் கூடும். என்னவென்றால் ஸ்தல ஸ்தாபன சுயாட்சி என்பதையே நாணயமில்லாத காரியம் என்று தான் கருதுகிறேன். அதனால் பொது ஜனங்களது நன்மைக்கு கேடும், சர்க்காருக்கு ஒரு பெரும் பொறுப்பிலிருந்து விடுதலையும் ஏற்படுகிறது என்று நன்றாய்ச் சொல்லுவேன். ஒரு நல்ல அரசாங்கத்திற்கு இருக்க வேண்டிய பொறுப்புகளில் மக்களுடைய கல்வி, சுகாதாரம், வைத்தியம், போக்குவரத்து வசதி ஆகியவைகள் முக்கியமான பொறுப்பாகும்.

அந்த முக்கியமான பொறுப்புகளை அரசாங்கத்தார் பொது ஜனங்கள் தலையிலேயே தள்ளி விட்டார்கள். அதிலும் பொறுப்பற்ற ஜனங்கள் தலையிலேயே தள்ளிவிடப்பட்டது.

மற்றும் ஸ்தல ஸ்தாபன நிர்வாகப் பதவி ஒரு பொறுப்பான பதவி என்று கருதுவதற்கில்லாமல் அதை ஒரு போக போக்கியத்துக்கும் வியாபாரத்துக்கும், பெருமைக்கும் ஏற்ற பதவி என்று கருதும்படியாகச் செய்து விட்டார்கள்.

ஸ்தல ஸ்தாபனப் பொறுப்பு பொது ஜனங்கள் கையில் இருக்க வேண்டும் என்று கேட்டு அச்சுதந்திரத்தைப் பெற்றவர்கள் படித்த கூட்டத்தவர் களேயாவார்கள். அதை இன்று அனுபவிப்பவர்கள் வியாபாரிகளும், பெரிதும் மிராசுதாரர்களுமாவார்கள்.



வியாபாரிகளுக்கும், மிராசுதாரர்களுக்கும் வேறு எவ்வளவோ சொந்தக் காரியங்களும், நிர்வாகத்திலேயே அவை சம்மந்தமான தொடர்புகளும் உண்டு என்பதை நான் எடுத்துக் கூற வேண்டியதில்லை.

அவர்களுடைய வியாபார நேரமும், குடும்ப விவகார நேரமும் போன மீதி நேரத்தில் இளைப்பாறுவது போன்ற நேரமும் உணர்ச்சியும் தான் அவர்கள் இந்த ஸ்தல ஸ்தாபன நிர்வாக பதவியில் இருந்து செய்யக்கூடும்.

இந்த விளையாட்டு நேரமும், இளைப்பாறும் உணர்ச்சியும்கூட நேர்மையாயும், நீதியாயும் அப்பதவியை செலுத்த முடியாமல் அனேக தாக்ஷண்யங்களும், பிரதி உபகாரமும் நன்றி செலுத்தும் முறையும் சேர்த்து பாழாக்கி வருகின்றது.

இன்றைய ஸ்தல ஸ்தாபன நிர்வாகமானது சுமார் 10, 20 வருஷங்களுக்கு முன் ''பொறுப்பற்ற ஒரு அன்னிய அரசாங்கம்'' என்று சொல்லப்படுவதால் நடந்து வந்த நாணயப்படியும் நீதிப்படியும் திறமைப்படியும்கூட ''இன்று பொது ஜனங்களாலும் பொது ஜனப் பிரதிநிதிகளாலும்'' நடத்தப்பட முடியவில்லை.

பிரசிடெண்டுகள், மெம்பர்களைத் திருப்திப்படுத்தி அவர்கள் தயவிலேயே தொங்கிக் கொண்டு தன் காரியம் பார்த்துக்கொள்ள வேண்டியவர்கள் ஆகிறார்கள்.

மெம்பர்கள் தங்களுக்குத் தேர்தலில் உதவி செய்தவர்களைத் திருப்தி செய்து கொண்டு தன் காரியம் பார்க்க வேண்டியவர்களாகிறார்கள். தேர்தலுக்கு வருவதோ அதில் வெற்றி பெறுவதோ ஆயிரம் பதினாயிரக்கணக்காய் ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

ஒரு வியாபாரியும், ஒரு குடித்தனக்காரனும் இந்தப் பண நெருக்கடியான காலத்தில் ஆயிரம் பதினாயிரமாய் பணம் வட்டிக்கு வாங்கி செலவு செய்து பதவி பெற்றால் அப்பதவி மூலம் நீதியும், நேர்மையும், நாணையமும், யோக்கியப் பொறுப்பும் எப்படி எதிர்பார்க்க முடியும். அக் கடன்களை திருப்பிக் கொடுக்க வேண்டாமா?

இதற்கு மேல் அரசாங்கமோ ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்துக்கு பொறுப்பு இல்லாவிட்டாலும் அதிகாரம் செலுத்துவதில் ''நவாப்'' தர்பாரைப் பின்பற்றுகின்றது.

மெம்பர்களும், தலைவர்களும் தங்கள் காரியம் பார்த்துக் கொள்வதில் மாத்திரம் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறார்களே ஒழிய மற்ற நிர்வாகத்தில் சுதந்திரம் இல்லை. சர்க்கார் சட்டப்படிதான் நடக்க வேண்டும். சர்க்கார் நிபுணர்கள் சொல்லுவதைத்தான் வேத வாக்காகக் கொள்ள வேண்டும். மற்றபடி இடம் பொருள் ஏவல் ஆகியவைகளுக்கோ சமய சந்தர்ப்பங்களுக்கோ அனுபவ சாத்தியமான காரியங்களுக்கோ சிறிதும் இடமில்லை.



RangaRakes tamilnavarasam.com

சீமையில் என்ன நடக்கிறதோ அதுதான் ஒரு இந்திய குக்கிராமத்திலும் நடக்க வேண்டும். அதைத் திருத்தவோ ஊருக்குத் தகுந்தபடி நடத்தவோ பிரதிநிதிகளுக்கு அதிகாரமில்லை.

ஸ்தல ஸ்தாபன இலாக்கா மேலதிகாரிகளும் அவர்களது சிப்பந்திகளும் ஜனப் பிரதிநிதிகளைத் தங்கள் வாயில் காப்போன்களைப்போல் மதிக்கிறார்கள். அந்த யோக்கியதைக்குத் தகுந்தபடி தான் ஜன பிரதிநிதிகள் அதிகம் பேர் நடந்து கொள்ளுகிறார்கள் என்றாலும் மொத்தத்தில் அந்த இலாக்கா சிறிதும் பொறுப்பும் சுயமரியாதையும் அற்றது என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் எப்படி கண்ட்றாக்டர்கள் ராஜ்ஜியமென்று சொல்லப்படுகிறதோ அதுபோலவே தான் ஸ்தல ஸ்தாபன இலாக்கா சர்க்கார் சிப்பந்திகளும் கன்ட்றாக்ட் ராஜ்யம் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஈரோடு முனிசிபாலிட்டியாராகட்டும், கோவை ஜில்லா போர்டாரா கட்டும் இப்போது எவ்வளவு நேர்மையாக நிர்வாகம் நடத்தப்படுகிறது என்று சொல்லப்பட்டாலும், இவை ஒரு டிப்டி கலைக்டர் நிர்வாகத்திலும் ஒரு ஜில்லாக் கலைக்டர் நிர்வாகத்திலும் இருந்தால் இதைவிட குறைந்த செலவில் இன்றைய சௌகரியத்தைவிட பல மடங்கு மேன்மையானதும் நன்மையானதுமான நிர்வாகம் நடைபெறும்.

அவர்களுக்குப் பல சுதந்திரங்களும் அனேக சௌகரியங்களும் உண்டு. பொது ஜனப் பிரதிநிதிகள் கையில் ஒப்புவித்து சரியானபடி நிர்வாகம் நடைபெறவில்லையென்று சொல்லுவதற்கு அனுகூலமாகவே பல சௌகரியங்களை பிடுங்கிக் கொண்டார்கள். ஒரு முனிசிபாலிட்டியோ ஒரு ஜில்லா போர்டோ வெகுநாள் பாடுபட்டு வெகு கஷ்டத்துடன் தயாரித்த ஒரு திட்டத்தை ஒரு கிராமக் கணக்குப் பிள்ளை நினைத்தால் அடியோடு கவிழ்ந்துவிடும்படியான நிலையில்தான் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சர்க்காரின் ஆதரவு இருந்து வருகிறது.

சுயமரியாதையைப் பிரதானமாய் கருதுபவர்கள் இந்த ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் இருப்பது மிகக் கஷ்டமான காரியமாகும்.

தாலூக்கா போர்டுகளை எடுத்துவிட்டது பற்றி பலருக்கு அதிருப்தி இருந்து வருகிறது. ஆனால் அரசாங்கத்தார் அதற்குப் பதிலாக அந்தந்த சர்க்கிளிலிருந்து நேரடியாக ஜில்லா போர்டுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கொடுத்திருக்கிறார்கள். ஆதலால் அந்தந்த சர்க்கிள் தேவைகளையும் கவனித்துப் பொறுப்பேற்று நடத்த சௌகரியம் இல்லாமல் போகவில்லை. தாலூக்கா போர்டு நிர்வாகம் நாம் பார்த்தது தானே ஒழிய நமக்குத் தெரியாததல்ல. அதில் இருந்த ஊழல்கள் எவ்வளவு என்பதை நான் இப்போது சொல்ல வேண்டாம் என்று நினைக்கிறேன். வரிப் பணமும், சர்க்கார் கிராண்டும் எல்லாம் சம்பளங்களுக்குத்தான் சரியாகப் போயிற்றே ஒழிய காரியத்துக்கு ஆவதில்லை. 6 மாதம் 8 மாதம் சம்பளம் இல்லாமல் திண்டாடின தாலூக்கா போர்டுகள் பல உண்டு.

ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் நம்ம பக்கங்களில் எவ்வளவோ தேவலாம் என்று சொல்லுவேன். மற்ற தமிழ் ஜில்லாக்களிலேயே எவ்வளவோ மோசமாக நடைபெற்று வந்தன. கட்சிப் பிரிவுகளாலும், ஒரு கட்சியை மற்றொரு கட்சி தூற்றி கைப்பற்றி விடுவதினாலும் ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் நேர்மை அடைந்துவிடாது.

ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தைச் சர்க்கார் தலையில் போட்டு நாம் கண்டித்து வேலை வாங்க வேண்டும். அவர்களும் நன்றாய்ச் செய்வார்கள். நாமும் தாட்சண்ணியமில்லாமல் வேலை வாங்கலாம்.

இப்போது கட்சிகளும், சுயநலமும்தான் நிர்வாகம் செய்கிறது. ஆகையால் இன்றைய ஸ்தல ஸ்தாபனம் ஜனப் பிரதிநிதிகளுக்கு லாபத்தையும் கௌரவத்தையும் கொடுக்கக் கூடியதாய் இருந்தாலும் பொதுஜன நன்மைக்கு ஏற்றதாக இல்லை என்பதோடு அந்த ஸ்தல ஸ்தாபன யந்திரமானது அந்தப்படி பொதுஜன நன்மைக்கு ஏற்ற விதமாக நேர்மையுடனும் சுதந்திரத்துடனும் நிர்வாகம் செய்யக்கூடியதாய் இல்லை என்பதுதான் எனது அபிப்பிராயம்.

*குறிப்பு: 21.10.1935 ஆம் நாள் ஈரோடு அருகில் உள்ள பிராமண பெரிய அக்கிரகார யூனியன் பஞ்சாயத்து அலுவலகக் கட்டடமாகிய மகமத் இப்ராகிம் ஹால் திறப்பு விழாவில் ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 10.11.1935**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ் தலைவருக்கு தமிழ் நாடெங்கும் பகிஷ்காரம்

காங்கிரஸ் தலைவர் தோழர் ராஜேந்திர பிரசாத் நல்லவர், மனிதர்களின் சராசரி குணங்களுக்கு ராஜேந்திர பிரசாத் மேலானவர் என்றே நாம் கருதியிருக்கிறோம். ஆனால் அவர் தப்பான வழியில் செல்லும்படியான நிலைமையை எப்படியோ அடைந்துவிட்டார்.

பொதுவாக தென்னாட்டில் சுமார் 20 வருஷ காலமாக வெளிப்படையாகவே பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சியும் பிரிவும் அரசியலிலும் சமூக இயலிலும் இருந்து வருவதை எவரும் மறுக்க முடியாது.

இந்த விஷயம் குறிப்பாகத் தோழர்கள் காந்தியார், மாளவியா, வல்லபாய் பட்டேல், சரோஜினியம்மாள், ஜமன்லால் பஜாஜ், சங்கர்லால் பாங்கர், ராஜேந்திரபிரசாத், ஜவர்லால் நேரு முதலிய காந்தி கோஷ்டியார் - காங்கிரஸ் பிரமுகர்கள் என்பவர்கள் அறியாததல்ல.

மற்றும் சென்னை மாகாணத்தில் பார்ப்பனர்களுக்கு மதிப்பற்றுப் போன விஷயமும், சென்னை மாகாணப் பாமர மக்களை ஏமாற்றுவதற்காக அடிக்கடி வட நாட்டிலிருந்து யாரையாவது விளம்பரப்படுத்தி அவர்களைக் கூட்டி வந்து பிரசாரம் செய்வித்து பாமர மக்களை ஏமாற்றி வருவதும் பணம் சம்பாதிப்பதும் மேல்கண்ட காங்கிரஸ் பிரமுகர்கள் அறியாததல்ல.

காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்களில் எவராவது இதுவரை சென்னை மாகாணத்தில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் அபிப்பிராயபேதம் ஏன் இருக்கிறது என்றாவது, இதை ஒழிக்க என்ன செய்ய வேண்டும் என்றாவது ஒரு நாளாவது கடுகத்தனை கவலை எடுத்து இதில் பிரவேசித்து ஏதாவது ஒரு ஒழுங்கு செய்ய முயற்சித்தவர்களேயல்ல.

இதை அவர்கள் தங்களுக்குத் தெரியாது என்று சிறிதும் சொல்லிவிட முடியாது.

ஏனெனில் 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' 'குடி அரசு' முதலிய பத்திரிகைகள் உண்மை நிலையை எடுத்து இந்தப் பிரமுகர்களுக்கு விவரித்திருப்பது மாத்திரமல்லாமல், தோழர் காந்தி, சரோஜினியம்மாள் முதலியவர்களுக்கு நேரில் தூது போவதுபோல் சென்று விளக்கிக் காட்டி இருக்கிறார்கள்.



அன்றியும் காங்கிரசில் முக்கியமாகக் கலந்து உழைத்துப் பல கஷ்ட நஷ்டங்களையும் அனுபவித்துப் பல தடவை ஜெயிலுக்கும் சென்ற தோழர்கள் ஈ.வெ. ராமசாமி, பி. வரதராஜுலு, ஆரியா முதலியவர்கள் காந்தியார் இடம் நேரில் சொல்லியிருப்பதுடன், காங்கிரசை விட்டுப் பிரிந்தும், சிலர் காங்கிரசுக்கு எதிராய் பிரசாரம் செய்தும் வருகிறார்கள் என்பதும் இரகசியமான காரியமல்ல.

இவ்வளவையும் அலட்சியம் செய்துவிட்டு தங்களை அழைக்கிறார்கள், ஊர்வலம் செய்கிறார்கள், நூற்றுக்கணக்கான வரவேற்பு வாசிக்கிறார்கள், மகாத்மா என்றும், சர்தார் என்றும், ராஜா என்றும், முனிவர் என்றும், அவதாரம் என்றும் கூறி நன்றாய் விளம்பரம் செய்கிறார்கள் என்கின்ற முட்டாள்தனமான பேராசைக்கு அடிமைப்பட்டு தமிழ்நாட்டுக்கு வந்து மானங்கெட்டுத் திரும்ப ஏற்பட்டால் அதற்கு யார் ஜவாப்தாரியாவார்கள் என்று கேட்கின்றோம்.

பாவம் ராஜேந்திர பிரசாத் அவர்கள் ''என்னைத் திரும்பிப் போ என்று ஆரவாரம் செய்கிறீர்களே நான் எங்கே போவது'' என்று சொல்லி போவதற்கு வழி தெரியாமல் திகைத்தாராம்.

அவருக்கு இந்தக் கதி வந்திருக்கக் கூடாதுதான். என் செய்வது; பனை மரத்தடியில் இருந்து பாலைக் குடித்தாலும் கள்ளைக் குடித்ததாகத்தான் பார்க்கிறவர்கள் சொல்லுவார்கள்.

ஆனால் ராஜேந்திர பிரசாத் பார்ப்பனர்கள் கூடத் திரிந்து, அவர்கள் சொல்லிக் கொடுத்ததைச் சொல்லிக் கொண்டு அவர்கள் பின் திரிந்து கொண்டு அவர்களுக்கு கவி பாடிக் கொண்டு இருந்தால் யார்தான் மதிப்பார்கள்?

நான் எங்கே போவது என்று ராஜேந்திர பிரசாத் கேட்டவுடன் ஒரு சிறுவன் ''பார்ப்பன சூழ்ச்சிக்கு தொண்டு புரிவதை விட்டு நாணயமான காரியத்துக்குத் தொண்டு புரியப் போ'' என்று சொன்னானாம். ராஜேந்திரப் பிரசாத் சிரித்தாராம்.

பொதுநல வாழ்வில் அபிப்பிராய பேதம் இருந்தால் மக்களை வெறுப்பதும், பகிஷ்கரிப்பதும் கூடாது என்று சிலர் சோம்பேறி வேதாந்தம் பேசுவதுண்டு.

சிலர் தோல்வி ஏற்பட்ட பின் இந்த முடிவுக்கு வருவதும் உண்டு.

சிலரின் கோழைத்தனம் இந்த முடிவுக்குக் கொண்டு வந்து விடுவது உண்டு.

சிலர் உண்மையாகவும் நினைப்பதும் உண்டு.

எப்படி இருந்தாலும் பகிஷ்கரிப்பதுதான் அபிப்பிராய பேதத்தைக் காட்டுவதற்கு ஏற்ற சின்னம் என்பதை அரசியலில் தோழர் காந்தியார்தான்



RangaRakes tamilnavarasam.com

முதல்முதலாக எடுத்துச் சொன்னவர் என்று பார்ப்பனர்களே ஒப்புக் கொள்ளுகிறார்கள். அது மாத்திரமல்லாமல் பார்ப்பனர்களைப் பார்த்துத்தான் இப்போது மற்றவர்களும் காப்பி அடிக்கிறார்கள் என்று அவர்களே வெட்கமில்லாமல் பத்திரிக்கையில் எழுதி பெருமை அடைந்து கொள்கிறார்கள்.

இந்த நிலையில் பகிஷ்கரிப்பதானது எந்த முறைப்படி இப்பார்ப்பனர் களுக்கும், அவர்களது கூலிகளுக்கும் குற்றம் என்றோ, ஒழுங்கற்றது என்றோ படுகிறது என்பது நமக்கு விளங்கவில்லை.

இன்று பகிஷ்காரத்தைக் குறை கூறி கண்டபடி ஊளையிடும் பார்ப்பனப் பத்திரிக்கைகளுக்கு சென்ற வாரத்தில் ''பார்ப்பனரல்லாதார் இயக்கத் தலைவர் பொப்பிலி ராஜா போலீஸ் பந்தோபஸ்தில் 144 தடை உத்திரவில் பகிஷ்காரத்தைத் தடுத்துப் பிரசாரம் செய்து விட்டு வந்தார்'' என்று எழுதி மகிழ்ந்த காலத்தில் இந்தப் புத்தி எங்கு போயிற்று?

அதற்கு முந்திய வாரத்தில் மதுரையில் தோழர் குமாரசாமி ரெட்டியார் பிரசாரம் செய்யும்போது அவரது கூட்டத்தில் கலவரம் செய்து, கூட்டமே நடக்க முடியாமல் செய்த அயோக்கியத்தனங்களைப் பற்றி இந்த தர்ம நியாயம் பேசுகிறவர்கள் என்ன செய்தார்கள்.

அக்காலத்தில் இவர்களுடைய வாயும் கையும் வேறு என்ன வேலையில் ஈடுபட்டிருந்தது என்று கேட்டால் அதற்கு என்ன பதில் சொல்லுவார்கள்?

ராஜேந்திரப் பிரசாத்தைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று நாம் முதலில் சொன்ன காலத்தில் சென்னை ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் பயந்து தங்களுக்கும் எங்கு இக்கதி நேர்ந்துவிடுமோவென திகில்பட்டு பகிஷ்காரம் வேண்டாம் என்று நமக்குத் தெரிவித்ததோடு நமது பகிஷ்கார சேதியைக்கூடத் தங்கள் பத்திரிக்கையில் போட மறுத்து விட்டார்கள்.

நாமும் ஒரு அளவுக்கு தொலைந்து போகட்டும் என்று விட்டுவிட்டோம். பிறகு சில எச்சிலைப் பத்திரிகைகள் பகிஷ்காரம் எங்கே என்று பரிகாசம் செய்ய ஆரம்பித்தன.

(ஏன் எச்சிலைப் பத்திரிகைகள் என்று எழுதுகிறோம் என்றால் பணம் வாங்கிக் கொண்டு பணத்துக்குத் தகுந்தபடி கூலிக்குத் தகுந்தபடி கூப்பாடு போடும் கொள்கையை கொண்டிருப்பதாய் தெரிய வருவதால் அப்படி எழுதுகிறோம்.)

பகிஷ்காரம் செய்வது என்பது கஷ்டமான காரியம் அல்லவே அல்ல. யாரையும் பஹிஷ்கரிக்கக் கூடும்.

இந்த முறை ஒருவருக்கு மாத்திரம் சொந்தமானதுமல்ல.



காந்திக் குல்லாயைப் போட்டுக் கொண்டு, பாரதமாதாவுக்கு ஜே காந்திக்கு ஜே என்று கூப்பாடு போட்டுக் கொண்டு, கொடிகளைப் பிடித்துக் கொண்டு உண்டியல் பெட்டியுடன் தெருவில் திரியும் முட்டாள்தனத்தைவிட, இழிவைவிட ஒருவரைப்பார்த்து அதுவும் தங்களுடைய நன்மைக்கு விரோதமானவர் என்று சரியாகவோ தப்பாகவோ கருதிய ஒருவரைப் பார்த்து திரும்பிப் போ என்று சொல்லுவது எந்த வகையிலும் முட்டாள் தனமானதென்றோ, இழிவானதென்றோ சொல்லிவிட முடியாது.

அன்றியும் இதை இன்று அரசியல் உலகில் சர்வசாதாரணமாக ஆக்கப்பட்டுவிட்டது. இனி இப்படிப்பட்ட காரியங்கள் ஒரு கூட்டத்தாருக் குத்தான் சொந்தமென்றோ மற்றவர்கள் செய்யக் கூடாது என்றோ சொல்லிவிட முடியாது என்பது உறுதி.

நாம் இரண்டு வாரத்துக்கு முன் எழுதியபடி காங்கிரசின் பேரால் பார்ப்பனர்கள் தேர்தல் சூட்சி செய்ய ஆரம்பித்த காலம் முதல் இம்மாதிரியான காரியங்கள் மாத்திரமல்லாமல் அடிதடி, கொலை, சண்டித்தனம் முதலிய காரியங்கள் சர்வசாதாரணமாக ஆகிவிட்டது. திருச்செந்தூர் கூட்டத்திலும் தென்காசி கூட்டத்திலும் காங்கிரஸ் காலிகள் கல் எறிந்தார்கள். எப்படியானாலும் கொலையானாலும், அடிதடியானாலும் பார்ப்பனர்களுக்கு எந்த விதத்திலும் நஷ்டமும் இல்லை; கஷ்டமும் இல்லை.

ஏனெனில் இரண்டு கட்சியிலும் அடிக்கிறவனும் அடிபடுகிறவனும் பார்ப்பனர் அல்ல. பார்ப்பனரல்லாதவர்களே தான். ஆகையால், இச் செய்கையை நிறுத்தப் பார்ப்பனர்கள் ஒரு நாளும் உடன்பட மாட்டார்கள். ஏதாவது ஒரு வழியில் பதிலுக்கு பதில் செய்யாமல் இருக்கப் பார்ப்பனர்கள் ஒருநாளும் அடங்கவுமாட்டார்கள்.

அரசாங்கத்தார் இதில் பிரவேசித்து இம்மாதிரியான காரியத்தை நிறுத்தினால் தான் கலவரம், குழப்பம், பகிஷ்காரம் ஆகியவை நிற்க முடியுமேயல்லாமல் இனி ''நியாயத்தை'' உணர்ந்து பொது ஜனங்கள் நிறுத்திவிடப் போவதில்லை.

மதுரையில் தோழர் குமாரசாமி ரெட்டியார் பேசும்போது குழப்பஞ் செய்த காலிகளையும், கூலிகளையும் ஒரு பார்ப்பனப் பத்திரிகையும் கண்டிக்கவில்லை. போலீசாரும் ஜாடைமாடைமாய் இருந்தார்கள். ''பொது ஜனங்களுக்கு ஆத்திரம் வந்து அப்படிச் செய்தார்கள்'' என்று சிறிதுகூட வெட்கமில்லாமல் பார்ப்பனக் கூலிகளும், பார்ப்பனப் பத்திரிகைகளும் சொல்லின, எழுதின.

கடைசியாகத் தோழர் சௌந்திரபாண்டியன் இரண்டொரு பொது ஜனங்களைக் காங்கிரஸ் கூட்டத்துக்கு அனுப்ப காங்கிரஸ்காரர்களுக்குப் புத்தி வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இப்போதும் ராஜேந்திர பிரசாத் சுற்றுப் பிரயாணத்திலும் திருச்சியில் காங்கிரஸ் தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் வந்த வண்டியில் இருந்தே மணல் முடிச்சுகளும், கல்லுகளும் பறந்தன என்றால் - கருப்புக்கொடி பிடித்திருந்த வாலிபனுடைய கண்ணில் அடிபட்டதென்றால் - காந்திக் குல்லாவும், காங்கிரஸ் கொடியும் பிடித்துக் கொண்டிருந்த வாலிபர்கள் விறகு வண்டியில் இருந்த விறகுக் கட்டைகளைப் பிடுங்கி அடித்தார்கள் என்றால், காலித்தனம், பலாத்காரம் காந்தி தொண்டர்களுக்கும், காங்கிரஸ் காரர்களுக்கும் மாத்திரமே சொந்தமாக இனி எவ்வளவு நாளைக்கு இருந்துவிட முடியும்.

அதுவும் சதா சர்வகாலம் ''அஹிம்சா தர்மமூர்த்தி மகாத்மாகாந்தியாரின் அருமைச் சிஷ்யன்'' என்று தன்னை சொல்லிக் கொள்ளும் Dr. ராஜன் அவர்கள் கூட இருந்து நடத்தும் கூட்டத்தில் காங்கிரஸ்காரர் காலித்தனம் ஆரம்பிப்பதென்றால் சுயமரியாதைக்காரருக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்காரருக்கும் காங்கிரஸ் அல்லாதவர்களுக்கும் காலித்தனம் தெரியும் என்று காட்டிக் கொள்ள நேர்ந்தால் என்ன தப்பு என்றுதான் கேட்கின்றோம்.

நிற்க, முக்கிய இடங்களில் உணர்ச்சிகளைக் கிளப்பக் கூடியதான எலக்ஷன்கள் இருக்கிற காலத்தில் வடநாட்டிலிருந்து ஒரு ஆசாமியைப் பிடித்து வந்து ஊர்கோலம் செய்து பணம் வசூல் செய்ய வேண்டிய காரணமென்ன என்று கேட்கிறோம்.

தோழர் ராஜேந்திரப் பிரசாத் அவர்கள் இங்கு எலக்ஷன் நடப்பது தனக்குத் தெரியாது என்றும், எலக்ஷன் பிரசாரத்துக்காகத் தான் இங்கு வரவில்லை என்றும் சென்னையில் கூட்டத்தில் முதல் நாளே சொல்லிக் கொண்டார். பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் விஷயத்தையே தனது பிரசாரத்துக்கு பல்லவியாகவும் வைத்துக் கொண்டார்.

அப்படியானால் அது உண்மையானால், ராஜேந்திரப் பிரசாத் அவர்கள் சென்னை மாகாணத்தில் எலக்ஷன் நடப்பது தெரிந்தும் காங்கிரசின் பேரால் எலக்ஷனில் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் கட்சிகள் போட்டி போடுகிறார்கள் என்பது தெரிந்தும் இவர் நல்லவரானால் என்ன செய்திருக்க வேண்டும்?

மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களின் சூழ்ச்சியைக் கண்டித்து விட்டு ''மற்றொரு சமயம் நான் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு அடுத்த ரயிலில் மரியாதையாக வேறு மாகாணத்துக்குப் போய்விட்டு எலக்ஷன் முடிந்த பிறகு வந்திருக்க வேண்டும். அல்லது தகரார் என்ன என்பதை உணர ஆசைப்பட்டு அதற்குப் பரிகாரம் செய்திருக்க வேண்டும்.

அப்படிக்கில்லாமல், ''எங்கப்பன் குதிருக்குள் இல்லை'' என்கின்ற மாதிரியில் ஊர் ஊராய்ச் சென்று காங்கிரசை ஆதரியுங்கள், காங்கிரசை



ஆதரியுங்கள் என்று சொல்லிக் கொண்டே வந்தார். இதை ஒன்றுக்குப் பத்தாகப் பெரிதாக்கிப் பத்திரிகைகள் எலக்ஷன் பிரதேசங்களுக்கு சேதிகள் அனுப்பிக் கொண்டே வந்தன.

இதன் பயனாய் ஒரு பார்ப்பனர், 2 பார்ப்பனருக்குக்கூட இடமில்லாத ஸ்தாபனங்களில் 5, 10 ஸ்தானங்களை பார்ப்பனர்கள் பெண்டு பிள்ளை களுடன் அடித்துக் கொண்டார்கள். இவர்களை இராஜேந்திர பிரசாத் பாராட்டி ஆசீர்வதித்தும் விட்டார். இதற்கு பெயர் என்ன என்று கேட்கின்றோம்.

ஆகவே ராஜேந்திர பிரசாத் எலக்ஷன் பிரசாரம் செய்ய வரவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

ஆதலால் இம் மாதிரியான பார்ப்பன சூட்சிக்கு பதில் சூட்சி செய்வது பாவமானால் அதற்கு ஏற்பட்ட நரகத்தில் வாசம் செய்துதான் ஆக வேண்டுமே ஒழிய எப்படி அந்த சூழ்ச்சிகளை அனுமதிக்க முடியும்?

தோழர் ராஜேந்திர பிரசாத்தை எந்த ஊரில் பகிஷ்கரிக்கவில்லை? சென்னையில் முனிசிபல் சபை பகிஷ்கரித்தது. சென்னை ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் ஒரு விதத்தில் கறுப்புக்கொடி காட்டி பகிஷ்கரிக்க பயந்திருந் தாலும் மற்றொரு விதத்தில் இதுவரை சென்னை சரித்திரத்தில் இல்லாததும், என்றும் சரித்திரத்தில் முக்கிய இடம் பெற்று இருக்கும்படியாகவும் சென்னை கார்ப்பரேஷன் பகிஷ்கரித்து, சென்னை மாகாணத்துக்கு வழிகாட்டினார்கள். பயங்காளிகளான கவுன்சிலர்களும், செட்டியார் தன்மையுள்ள மெம்பர்களும் உள்ள முனிசிபாலிட்டியும், ஜில்லா போர்டும் சிலது வரவேற்புப் பத்திரம் கொடுத்திருந்தாலும் முக்கிய நகரங்கள் மறுத்துவிட்டிருக்கின்றன.

சில இடங்களில் தலைவர் இருந்து வரவேற்புப் படிக்காமல் இருப்பதன் மூலம் தங்கள் பகிஷ்காரத்தைக் காட்டிவிட்டார்கள்.

உதாரணமாகக் காரைக்குடியிலும் மாயவரத்திலும் வேறு இரண்டொரு இடத்திலும் முனிசிபல் வரவேற்பு இருந்தும் படித்துக் கொடுப்பதற்கு தலைவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. சில இடங்களில் உபதலைவரும் ஒப்புக்கொள்ளவில்லை. சில இடங்களுக்கு இரவில் போய் இரவில் புறப்பட்டு விட்டார்கள். சில இடங்களில் வெளியிட்டிருந்த வீதியை விட்டு வேறு வீதியில் போனார்கள். சில இடங்களில் ஊர்கோலமே நிறுத்திவிட்டார்கள். சில இடத்து நிகழ்ச்சி குறிப்புகளை வெளியிடாமலும் பொதுக் கூட்டத்தை நிறுத்தியும் வீட்டுக்குள் உபசாரப் பத்திரம் படிக்கப்பட்டு சவாரி விட்டார்கள்.

ஆகவே உபசாரப் பத்திர வரவேற்பின் யோக்கியதைகள் இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

தவிர பொதுஜன வரவேற்பு 'நடந்த' சகல ஊர்களிலும் பகிஷ்காரம் என்பதும் பல விதத்தில் நடந்திருக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

போலீசார் தலையிட்டு விரட்டிய ஊர்களில் பகிஷ்காரத் துண்டுப் பிரசுரங்கள் கையில் கொடுக்கப்பட்டும் சுவர்களில் ஒட்டப்பட்டும் நடந்திருக்கின்றன. போலீசார் அதிகமாய்த் தலைஇடாத ஊர்களில் நன்றாய் காந்தியார் பஹிஷ்காரத்தைவிட மேலாகவே நடந்திருக்கின்றன.

விருதுநகர், திருச்சி, தஞ்சை, மாயவரம், பட்டுக்கோட்டை, தேவகோட்டை, காரைக்குடி (இங்கு வரவேற்புப் பத்திரம் படிக்க சேர்மென் மறுத்துவிட்டார்) ஆண்டிப்பட்டி, திண்டுக்கல், திருத்துறைப்பூண்டி, லால்குடி, சீரங்கம், பொன்மலை, ஒரத்தநாடு, மன்னார்குடி, நாகப்பட்டினம், வாணியம்பாடி முதலிய இன்னும் அனேக ஊர்களில் கருப்புக்கொடியுடன் சில இடங்களில் 30 அடி உயரம் 10 × 10 அகலமுள்ள கருப்புக் கொடிகளும், சில இடங்களில் 100ம் சில இடங்களில் 500 மாக மக்கள் கையில் கருப்புக் கொடிகளை பிடித்துக் கொண்டு அணிவகுத்து பஹிஷ்கரித்து இருக்கிறார்கள்.

ஆனால் காங்கிரஸ்காரர்கள் பலாத்காரம் ஆரம்பித்த இடங்களில் சிறிது குழப்பம் ஏற்பட்டு இருந்தாலும் மற்ற ஊர்களில் குழப்பம் இல்லாமல், ஒழுங்கு தவறுதல் இல்லாமல் பஹிஷ்காரம் நடைபெற்றிருப்பதற்கு மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆகவே தோழர் ராஜேந்திர பிரசாத் அவர்களோ, காந்தியாரோ மற்றும் எந்த பிரமுகரோ ஆனாலும்கூட தமிழ்நாட்டில் உள்ள நிலையை உணராமலோ, உணர்ந்தும் தெரியாதவர்கள் போல் நடந்து கொண்டு விளம்பரத்துக்கு ஆசைப்பட்டோ இந்நாட்டுக்கு வந்து, பார்ப்பன சூட்சிக்குத் துணை புரிவார்களானால், அப்படிப்பட்டவர்களை தமிழ்நாட்டு மக்கள் சிறப்பாகத் தமிழ் மக்கள் பஹிஷ்கரிக்காமல் இருக்க மாட்டாரகள். அல்லது தங்களுடைய அதிருப்தியையாவது காட்டாமல் இருக்க மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

வேண்டுமானால் பார்ப்பனர்களும், அவர்களது கூலிகளும் ''இந்தக் காரியமானது யாரோ சில காலிகள் - சர்க்கார் குலாம்கள் செய்யும் காரியமே தவிர பொதுஜனங்கள் செய்யும் காரியம் அல்ல'' என்று சொல்லி அவர்களை ஏமாற்றலாம். அந்த ஏமாற்றலுக்கும் நாம் தலைகொடுத்து இது பொது ஜனங்கள் செய்யும் காரியம்தான் என்று அவர்கள் அறியும்படி செய்ய எவ்வளவு முயற்சி செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்யக் காத்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

முடிவாக இந்தப் பஹிஷ்காரத்தால் ஏற்பட்ட லாபம் என்ன என்று சில சோம்பேறிகள் கேட்கலாம். சிலர் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு வேதாந்தம் பேசிக் கொண்டிருக்கலாம். அப்படிப்பட்டவர்களுக்கு என்ன சமாதானம் சொன்னாலும் ஏற்காது. ஆனால் அந்த வார்த்தைக்குக் காது கொடுக்கும் சிலருக்கு விளங்குவதற்காக இந்த பகிஷ்காரத்தால் ஏற்பட்ட பலன் என்ன என்பதை சுருக்கமாகக் காட்டுகிறோம்.



தேசீயப் பத்திரிகை என்பவைகளுக்கும், தேசீயத்தின் பேரால் வயிறு வளர்ப்பவர்களுக்கும் கூலி கொடுத்து சுயமரியாதைக்காரர்களையும், ஜஸ்டிஸ்காரர்களையும் வையச் செய்வதற்கு பண வசூல் செய்த சூக்ஷியை தகுந்த அளவுக்கு வெற்றி பெறாமல் செய்த பலன் ஏற்பட்டது.

இரண்டாவதாக காங்கிரஸ் அபிப்பிராயமே பொதுஜன அபிப்பிராயம் என்றும், அது சொல்வது தான் வேதவாக்கென்றும், அதற்கே ஓட்டுக் கொடுக்க வேண்டும் என்றும், அப்படிச் செய்யாவிட்டால் அது பாவம் தேசத் துரோகம் என்றும் பாமர மக்களை ஏமாற்றும் புராணத் தன்மையும், தேசீயத் தன்மையும் வெற்றி பெறாமல் இருக்கச் செய்ததோடு வெட்ட வெளிச்சமாக்கப்பட்டது.

கடைசியாக பகிஷ்காரம் காங்கிரசுக்கே சொந்தமென்பது மாத்திர மல்லாமல் எல்லோருக்கும் சொந்தம் என்றும் ஆயிற்று. இனியாவது காங்கிரசுக்காரர்கள் இம்மாதிரியான சூழ்ச்சிகளும், கலவரங்களும், கூட்டங்களில் குழப்பங்களும் ஏற்படாமல் இருக்கும்படி நடந்து கொள்ள மாட்டார்களா என்று எச்சரிக்கை செய்யவும், சத்தியமூர்த்தியும் அவர் போன்ற சிலரும் கூட்டங்களில் மற்றவர்களை அவன், இவன், குடிகாரன், குலாம் என்றெல்லாம் இழிமொழிப் பிரயோகம் இல்லாமல் யோக்கியமாய் நடந்து கொள்ளத் தூண்டாதா என்றும் பரீட்சை பார்க்கவும் பயன்பட்டது. அந்தக் காரியங்கள் சிலருக்கு வேண்டாததாய் இருக்கலாம். ஆனால் நமக்கு வேண்டியதாய் இருந்தது.

**குடி அரசு - தலையங்கம் - 10.11.1935**



RangaRakes tamilnavarasam.com

# வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

## பார்ப்பனரல்லாதாருக்குத் தனித்தொகுதி வேண்டும்

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு ஆகவே ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டது.

ஜஸ்டிஸ் கட்சியானது இன்று எல்லோருடைய செல்வத்தையும், பலாத்காரத்தாலோ, சட்டபூர்வமாகவோ கைப்பற்றி எல்லா மக்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கத் துணியாவிட்டாலும், அதைவிட முக்கியகாரியமான எல்லா மக்களுக்கும் பிரதிநிதித்துவத்தைச் சமமாய் அடையலாம் என்றும், எவ்வித சமத்துவத்துக்கும் சட்டத்தின் மூலமாய் மாத்திரம் தகுதி இல்லாமல் பிறவியின் மூலமாகவே தகுதி அற்றவர்கள் என்று ஏற்படுத்தியிருந்த சமூகக் கட்டுகளை உடைத்து சகல பிரஜைகளுக்கும் சம உரிமை கொடுக்கும் காரியத்தில் முயற்சித்து வெற்றி பெற்று வருகிறது.

இன்று எல்லோரும் சமமாக மண், பெண், பொன் ஆகியவைகளை அனுபவிப்பவிக்கலாம் என்பதற்கும், கைப்பற்றலாம் என்பதற்கும் சில நிபந்தனைகள் இருந்தாலும் அனுபவிப்பது குற்றமல்ல என்கிறதும், அது நாஸ்திகமாகாது என்கிறதும் நம்நாட்டில் அனுபவத்தில் வந்து விட்டது. ஆதலால் முழு அமுலில் வர இன்னும் சில முறைகள் வகுக்கவும், திருத்தவும் தான் வேண்டியிருக்கிறது.

ஆனால் சகல மக்களும் சமூக வாழ்வில் ஒன்று என்பதும், சகல பிரஜா உரிமையும் பிரதிநிதித்துவமும் சகல மக்களும் சமமாய் அனுபவிக்கலாம் என்பதும் சட்டப்படிக் கூட அதிகமாய் இல்லாமல் பிறவி காரணமாய் மதப்படி, சாஸ்திரப்படி பலமாக தடுக்கப்பட்டிருப்பதுடன் இதை மீறுவது மதத்திற்கு விரோதம் - நாஸ்திகம் என்றெல்லாம் சொல்லப்படுவதுடன் அமுலிலும் இருந்து வருகிறது.

அரசியலானது மதக்கட்டளையையும், மததத்துவத்தையும், அடிப்படையாகக் கொண்டது என்பதிலும் சந்தேகமிருக்காது.

இப்படிப்பட்ட தடுப்புகளையும், மதக் கட்டளைகளையும், ஆஸ்திகத் தையும், அலட்சியம் செய்து இன்று ஜஸ்டிஸ் கட்சியின் முயற்சியானது மதம், சாஸ்திரம் இவை சம்மந்தமான ஆஸ்திகம் என்பனவற்றை யெல்லாம் தவிடு பொடி ஆகும்படிச் செய்து சண்டாளன், இழிமகன், அடிமை என்பவர்களுக்கு



எல்லாம் அரசியலில் சம உரிமை, பிரதிநிதித்துவத்தில் சம உரிமை சமூக வாழ்வில் சம உரிமை என்ற கொள்கையை நிலை நிறுத்தி விட்டார்கள்.

இன்று பார்ப்பனர்கள் பறையர்களிடம் படிக்கிறார்கள்.

இன்று பார்ப்பனர்களுடன் சேர்ந்து பறையர்கள், சக்கிலியர்கள் உட்கார்ந்து சட்டம் செய்கின்றார்கள்.

தொட்டால், பேசினால், நிழல்பட்டால், கண்ணில் தென்பட்டால் பாவம் என்கின்ற ஆஸ்திகம் ஒழிந்து, அது சம்பந்தமான சாஸ்திரம், மதக் கட்டளை ஆகியவை பொசுக்கப்பட்டு, அப்படிப்பட்டவர்களுடன் சாஸ்திரிகள், ஆச்சாரிகள் முதலியவர்கள் சரிசமமாக உட்காரும்படியாக செய்துவிட்டார்கள்.

அவ்வளவோடு மாத்திரமல்லாமல் கிரமப்படி பிரதிநிதித்துவ உரிமை அடையும்படி சட்டம் செய்து விட்டார்கள்.

முக்கியமாக இந்நாட்டில் இன்று அரசியலில் உள்ள கட்சி இரண்டுதான், அதாவது ஒன்று சாஸ்திரம், மதம் ஆகியதையே அடிப்படையாகக் கொண்ட காங்கிரசு, மற்றொன்று அதை லட்சியம் செய்யாமல் எல்லா மக்களுக்கும் எல்லா உரிமையும் சட்டப்படி, கணக்குப்படி இருக்க வேண்டும் என்கின்ற அளவில் நாஸ்திகம் கொண்ட ஜஸ்டிஸ் கட்சி. ஒரு சமயம் நாஸ்திக பாஷ்யக்காரர்களின் பத்துவாப்படி, அருள்வாக்குப்படி ஜஸ்டிஸ் கட்சியார் நாஸ்திகர் அல்லாதவர்களாகவும், மத நம்பிக்கைக்காரர்கள் ஆகவும் இருக்கலாம் என்றாலும் அனுபவ சாத்தியக் கொள்கைக்காரர்களுக்கு ஜஸ்டிஸ்காரர்களின் கொள்கையைப் பார்த்தால் அவர்கள் குருட்டு ஆத்திகர்கள் அல்ல, மூடநம்பிக்கை மதவெறியர்கள் அல்ல என்பது விளங்கும்.

ஜஸ்டிஸ் கட்சியார் எல்லா மக்களுக்கும் சமூகத்துறையில், அரசியல் பிரதிநிதித்துவத்தில் சமத்துவம் வழங்க வேண்டும் என்று ஆரம்பித்த காலத்தில் அவர்கள் அரசியல் உத்தியோகங்களிலும், அரசியல் பிரதிநிதித்துவத்திலும் சகல ஜாதியாருக்கும் சமத்துவம், சம சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்றே ஆரம்பித்தார்கள். அதை எதிர்த்த முறையில்தான் இந்நாட்டில் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்ற வகுப்புப் பிரிவும், காங்கிரஸ் - ஜஸ்டிஸ் என்கின்ற கட்சிப் பிரிவும் ஏற்பட்டது.

அதனாலேயே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் உரிமையும் வேண்டாம் என்பதுதான் தேசீயம், தேச பக்தி என்பதாகவும், அவை வேண்டும் என்பதே தேசத் துரோகம், குலாம்தனம் என்பதாகவும் சொல்லப்பட்டு ஜஸ்டிஸ் கட்சி இழிவுபடுத்தப்பட்டது. அவற்றையெல்லாம் சமாளித்துத் தங்களது கொள்கையில் ஜஸ்டிஸ் கட்சியார் வெற்றி பெற்று, இன்று அவர்கள் உச்ச ஸ்தானத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாரம் சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட சென்னை நகரசபை சட்டப்படி ஜஸ்டிஸ் கட்சி கொள்கை முழுவதும் வெற்றி பெற்று விட்டது என்று சொல்லலாம்.



RangaRakes tamilnavarasam.com

அதாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படி இந்நாட்டில் கிறிஸ்துவர்கள், மகமதியர்கள், இந்துக்கள் என்று மூன்று மதப்பிரிவும், இந்துக்களுக்குள் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் ஜாதி இந்துக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்று மூன்று பிரிவும் பிரிக்கப்பட்டு, அவர்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம், தனித் தொகுதி தேர்தல், தனி உத்தியோக எண்ணிக்கை ஆகியவைகள் இருக்க வேண்டுமென்று ஜஸ்டிஸ் கட்சியார் கேட்டார்கள். அதற்காக பாடுபட்டார்கள். ''இந்தியா பூராவும்'' அதை எதிர்த்தது.

கடசியாக உத்தியோகத்தில் பங்கு வீதக் கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டது.

பிரதிநிதித்துவத்திலும் ஸ்தானம் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இன்று தேர்தல்களிலும் ஆதி திராவிடர்களுக்குத் தனித் தொகுதிகள் ஒப்புக் கொள்ளப்பட்டாய்விட்டது. இதற்கு மாத்திரம் கடசியாக பார்ப்பனர்களும், காந்தியாரும் எவ்வளவோ சூட்சி செய்து காந்தியாரின் பட்டினிச் சண்டித்தனமும் பயன்படுத்தப்பட்டது. என்ன செய்தும் தனித் தொகுதி கிறிஸ்தவர், மகமதியர், ஐரோப்பியர், இந்துக்கள் ஆகியவர்களுக்கு இருப்பது போல இந்துக்களுக்குள் தீண்டப்படாதவர்கள் என்பவர்களுக்கும் ஏற்பட்டு விட்டது. சென்னை முனிசிபாலிட்டிகளுக்கு கவுன்சிலராய் நிற்கும் தீண்டப்படாதவர் ஒருவருக்கு இனி தீண்டப்படாதவர்கள் தான் ஓட்டுக் கொடுக்க முடியும். பார்ப்பனர் ஓட்டை எதிர்பார்த்து எச்சைத் தொட்டி ஓரம் இனி தீண்டப்படாதவர் நிற்க வேண்டியதில்லை.

இந்த சட்டத்தின் மூலம் பொப்பிலி ''அரக்கன்'' செய்த வேலை இப்போது சுப்பராய ஆழ்வாராக (விபூஷணனாக) இருக்கும் 6 வருஷத்துக்கு முன் சுப்பராய ராக்ஷசனாக இருந்தவர் செய்த வேலையைவிட முத்தையா முதலியார் (அசுரன்) செய்த வேலையைவிட மேலான வேலை என்றே சொல்லுவோம்.

அதாவது தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பிரதிநிதித்துவம் ஒதுக்க முதலில் சட்டம் செய்தவர் டாக்டர் சுப்பராயன் அவர்களாவர்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு உத்தியோகம் வழங்க சட்டம் செய்தவர் தோழர் எஸ்.முத்தையா முதலியார் என்றே சொல்லலாம்.

தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதி வழங்கினவர் பொப்பிலி அரசர் என்றே சொல்ல வேண்டும்.

இம் மூவர் எப்படிப்பட்டவராயிருந்தாலும், நாளைக்கு இவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராயிருந்தாலும், இந்தக் காரியங்களுக்கு இவர்களுக்கு சிலை வைத்து கௌரவிக்க வேண்டியது நன்றி உடைமையாகும் என்பதில் நமக்குச் சிறிதும் ஆக்ஷேபணையில்லை.



இதற்காகத் தோழர் சுயமரியாதை வீரர் சிவராஜ் அவர்களின் உறுதியையும், பிடிவாதத்தையும் போற்றாமலிருக்க முடியவில்லை.

ஆனால் இன்னும் ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கிறது. அதாவது எல்லாத் தேர்தல்களும் பார்ப்பனத் தொகுதி, பார்ப்பனரல்லாதார் தொகுதி என்று பிரிக்கப்பட வேண்டும் என்பதே தான்.

அதைப் பலர் ஒப்புக் கொள்ளுவதில்லை. அதற்கு அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் ''இப்பொழுதே பார்ப்பனர்கள் செல்வாக்கு ஒழிந்துவிட்டது. இனி அவர்கள் விகிதாச்சாரம் கூட பெற முடியாது. ஆதலால் அவர்களுக்குத் தனித் தொகுதி கொடுத்தால் அவர்களுக்கு அதிக ஸ்தானம் ஏற்பட்டுவிடும்'' என்கிறார்கள்.

இதை நாம் ஒப்புக் கொள்ள முடியாது. பார்ப்பனர்கள் கூட்டுத் தொகுதியில் இருந்தால் சதா தொல்லை விளைவித்துக் கொண்டிருப்பார்கள்.

உதாரணமாக திருச்சி, திருநெல்வேலி ஜில்லா போர்டுகளைக் காங்கிரஸ் கைப்பற்ற வேண்டும் என்பதில் என்ன கருத்து இருந்தது.

பொதுத் தொகுதி இருப்பதினால் காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொண்டு பல அய்யர்களும், அம்மாள்களும், பல சாஸ்திரிகளும், பல சாஸ்திரிச்சி அம்மாள் அவர்களும் புகுந்து கொண்டார்கள். இப்பொழுது எந்தப் பிரசிடெண்டு வந்தாலும் எப்படியாவது சரிப்படுத்தி தங்கள் கைக்குள் போட்டுக் கொள்ளுவார்கள்.

ஆதலால் அதையும் முடித்துவிட்டால் பிறகு பார்ப்பனத் தொல்லை பெரிய அளவுக்குக் குறைந்து போகும். அவர்களோடு கூடஇருந்தால் நம்மவர்களுக்குச் சதா தொல்லைதான். அவர்கள் பச்சோந்தி மாதிரி சமயத்துக்குத் தகுந்த நிறம், தேவேந்திரன் மாதிரி யாரையும் இந்திரப் பட்டம் அடையவொட்டாமலும் எப்படியாவது தபசைக் கலைத்த கதைகள் போல் தொல்லை விளைவித்துக் கொண்டே இருப்பார்கள். கண்களை அரித்துத் தின்னும் பூச்சிகள் போல் மனித சமூகத்தின் உழைப்பையும், சுயமரியாதை யையும், சாந்தியையும், ஒற்றுமையையும் அரித்துத் தின்னும் மனித உருக் கிருமிகளே யாவார்கள்.

ஆதலால் இனி நாம் செய்ய வேண்டிய வேலை சட்டம், சமாதானம், மனித சமூகத் திருப்தி, ஒற்றுமை ஆகியவைகளை உத்தேசித்தாவது பார்ப்பனத் தொகுதி பார்ப்பனரல்லாதார் தொகுதி என்று பிரித்துவிடும் படியான தொண்டில் இறங்கித் தீவிரமாய் வேலை செய்ய வேண்டும் என்று கருதுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 10.11.1935**



RangaRakes tamilnavarasam.com

# ஜஸ்டிஸ் கட்சி நிர்வாகக் கமிட்டி

## ஈ.வெ.ராமசாமி திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டது

*14.11.35 தேதி மாலை 3 மணிக்கு சென்னை தியாகராயர் மண்டபத்தில் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் (ஜஸ்டிஸ் கட்சியின்) நிர்வாக சபைக் கூட்டம் கூடிற்று.*

இக்கூட்டத்திற்குத் தோழர்கள் பொப்பிலி ராஜா, சர். மகமது உஸ்மான், பி.டி. ராஜன், திவான் பகதூர் குமாரசாமி ரெட்டியார், பி.டி. குமாரசாமி செட்டியார், சர். எ.பி.பாத்ரோ, வெங்கிட்ட கிரி ராஜா, மீர்சாபூர் ராஜா, கள்ளிக்கோட்டா ராஜா, டாக்டர் சி. நடேச முதலியார், ஈ.வெ. ராமசாமி, சி.வி. ராமன், திவான்பகதூர் அப்பாதுரை பிள்ளை, சி. ஜயராம் நாயுடு, சி.டி. நாயகம், வி.வி. ராமசாமி, ஜம்புலிங்க முதலியார், பொன்னம்பலனார், கே.வி. அழகர்சாமி, ஏ.எஸ். அருணாசலம், கே.எம். பாலசுப்பிரமணியம், டி.எ.வி. நாதன், கி.ஆ.பெ. விஸ்வநாதம், டி.வி. சுப்பிரமணியம், வாசுதேவ், ஆரணி சுகந்த முதலியார், என்.ஆர். சாமியப்பா, சி.எல். நரசிம்ம ரெட்டி, சுந்தரராவ் நாயுடு, ஆர். மதனகோபால் நாயுடு, ரங்கராமானுஜன், டப்பள்யூ.எஸ். கிருஷ்ணசாமி நாயுடு, முத்துக்குமாரசாமி முதலியார், கிருஷ்ணா ரெட்டியார், அப்துல்ரஜாக் சாயபு, தளவாய் ரங்கநாத முதலியார் முதலிய சுமார் 35 அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

கூட்டத்திற்குத் தோழர் திவான் பகதூர் அப்பாதுரை பிள்ளை அவர்கள் தலைமை வகித்து கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துச் சொன்னார்.

பிறகு தோழர் பொப்பிலி ராஜா எழுந்து தோழர் ஈ.வெ.ராமசாமி அவர்களால் ஜஸ்டிஸ் கட்சிக்கு அனுப்பி இருக்கும் வேலைத் திட்டத்தைப் பிரரேபிக்கும்படி தோழர் ராமசாமியைக் கேட்டுக் கொண்டார்.

தோழர் ராமசாமி எழுந்து தான் அனுப்பிய தீர்மானம்* ஒரு வருஷத்துக்கு முன் கூடிய மாகாண மகாநாட்டிலேயே ஒப்புக் கொள்ளப்பட்டதென்றும், அது இரண்டு மூன்று தடவை பரிசீலனை செய்து திருத்தப்பட்டதென்றும், விருதுநகர் மகாநாட்டில் எல்லாப் பிரமுகர்களும் இருந்து நன்றாய் விவகரித்து ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறதென்றும், கட்சியின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் ஒப்புக் கொண்டு இதை வேலைத் திட்டத்தில் சேர்த்து அவைகளை அமுலுக்கு கொண்டு வரவேண்டு மென்றும், பொது ஜனங்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டுமென்றும் முக்கியமாய் நம் எதிரிகளும் நம் இயக்கத்திலேயே உள்ள சில வம்பர்களும் இதை ஒரு காரணமாய் வைத்து இன்னும் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்று சொல்லி விஷமப் பிரசாரம் செய்கிறார்கள் என்றும், ஆதலால் அதை ஒப்புக் கொண்டு அமுலுக்கு வரக் கூடுமான காரியங்களைச் செய்ய வேண்டும் என்றும் சொல்லி தீர்மானங்களைப் பிரரேபித்தார். தோழர் பாசுதேவ் எம்.எல்.சி. அவர்கள் ஆதரித்தார்.

உடனே சர்.எ.பி.பாத்ரோ அவர்கள் எழுந்து தீர்மானங்கள் மிகவும் யோசித்து ஒப்புக் கொள்ளக்கூடியதாயிருக்கின்றன. அவசரப் படக் கூடாது என்று சொல்லி அதற்கு ஒரு சப் கமிட்டி நியமிக்க வேண்டும் என்று சொன்னார். இதை சர். மகமது உஸ்மான் அவர்களும் வெங்கிட்ட கிரி ராஜா அவர்களும் கனம் பி.டி.ராஜன் அவர்களும் ஆதரித்து சப் கமிட்டி நியமிக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

தோழர்கள் மதனகோபால் நாயுடு, கள்ளிக்கோட்டா ராஜா, நரசிம்மரெட்டி, அழகர்சாமி, டாக்டர் சி. நடேச முதலியார், பாலகிருஷ்ணநாயுடு, பாலசுப்பிரமணியம் முதலியவர்கள் தீர்மானத்தை ஒப்புக் கொள்ளலாம் என்றும், இது மிகவும் சரியான திட்டம் என்றும், இவற்றில் பல ஏற்கனவே ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கையாய் இருந்து வருகின்றனவென்றும் பாக்கியும் முன்னமேயே இருந்திருக்க வேண்டியவை என்றும் சொன்னார்கள்.

சர். பாத்ரோ அவர்கள் மறுபடியும் எழுந்து இவற்றில் பல தீர்மானங்கள் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த வேலைகள் என்றும் இந்த அரசாங்கத்தின் மூலம் செய்ய முடியாதவைகள் என்றும் பொதுவாக கான்பரன்ஸ்தான் இதைப்பற்றி யோசிக்க வேண்டும் என்று சொல்லி மறுபடியும் எதிர்த்தார்.

ஏதோ ஒரு விதமாய் தலைவர் தீர்மானம் எழுதப் போகும் சமயத்தில் ''இதை ஓட்டுக்கு விடு முன் தோழர் ராமசாமி அபிப்பிராயம் என்ன என்பது தெரிய வேண்டு''மென்று தோழர் டி.வி.சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார். தோழர் இராமசாமி தனக்கு கடைசியில் பதில் சொல்ல சந்தர்ப்பம் அளிக்கப்படுமென்றும் அப்போது சொல்வதாகவும் சொன்னார்.

பிறகு பொப்பிலி ராஜா அவர்கள் எழுந்து இத் தீர்மானம் ஒரு வருஷத்துக்கு முன் மகாநாட்டின்போதே கொள்கைகளில் ஒப்புக் கொள்ளப்பட்டது என்றும், வாசக திருத்தங்களுக்காக 2, 3 கூட்டங்கள்



RangaRakes tamilnavarasam.com

கூடி சர். ஷண்முகம், சர். பாத்ரோ, வெங்கிட்ட கிரி ராஜா, சர். உஸ்மான் உள்பட பல பிரமுகர்கள் இருந்து பரிசீலனை செய்யப்பட்டிருக் கிறதென்றும், நமது இயக்கம் எல்லா இந்திய இயக்கமானதால் இங்கு செய்யக்கூடியதை இங்கும் மத்திய அரசாங்கத்தில் செய்யக் கூடியதை அங்கும் செய்யலாம் என்றும், இத்தீர்மானங்களில் பலவற்றை நாம் அமுலில் கொண்டுவர ஏற்கனவே முயன்று வேலை செய்து வருகிறோம் என்றும், இனி இதை ஒத்தி வைக்கக் கூடாதென்றும் இப்போதே முடிவு செய்ய வேண்டும் என்றும் சொன்னார். உடனே தோழர் சர். மகமத் உஸ்மான் எழுந்து,

''தோழர் ஈ.வெ.ராமசாமி அவர்களின் வேலைத் திட்டத்தை இக்கமிட்டி ஒப்புக் கொள்ளுகிறது. அதை ஜஸ்டிஸ் கட்சி வேலைத் திட்டமாக ஏற்று தங்கள் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டியது'' என்று தீர்மான ரூபமாக பிரேரேபித்தார், அதை பொப்பிலி ராஜா ஆமோதித்துவிட்டு ஓட்டுக்குவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தலைவர் தீர்மானத்தை வாசித்துவிட்டு ஓட்டுக் கேட்டார். எல்லோருமே ஓட்டுக் கொடுத்தார்கள். எதிராக சர்.ஏ.பி.பாத்ரோ அவர்கள் மாத்திரம் கை தூக்கினார். தீர்மானம் நிறைவேறியதாக தலைவர் சொன்னார்.

பிறகு பிரசார விஷயமாய் யோசிக்கப்பட்டது.

தோழர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் எழுந்து, ''வேறு ஜனங்கள் நம்மிடம் வந்து புதிதாக சேராவிட்டாலும் நம் கட்சியில் இருக்கிறவர்கள் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகிறார்கள்'' என்றும், இதற்கு காரணம் பிரசாரமின்மைதான் என்றும், கிராம ஜனங்களுக்கு காங்கிரஸ் விளம்பரம் தான் போய் எட்டுகிறதே தவிர நம் கட்சி பிரசாரம் தெரிவதில்லை என்றும், நாம் பொது மக்களுக்குச் செய்த நன்மைகளை காங்கிரஸ்காரர்கள் செய்ததாக கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்றும், காங்கிரசினால் ஏற்பட்ட கெடுதிகள் நம்மால் ஏற்பட்டதாக கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் இதற்கு காரணம் காங்கிரசின் விஷமப் பிரசாரத்துக்கும் பார்ப்பனப் பத்திரிகைகளின் அயோக்கியத்தனத்துக்கும் எல்லை கடந்து போய்விட்டது தான் என்றும் சொல்லி தன் பாக்கெட்டிலிருந்த ஒரு பத்திரிகையை எடுத்துக் காட்டி அதில் பொப்பிலி ராஜாவைப் பற்றி எழுதி இருக்கும் சில பொய்யும், போக்கிரித்தனமானதுமான வாசகங்களை படித்துக் காட்டி இதற்குத் தகுந்தபடி ஏற்பாடு செய்யவில்லையானால் காலிகளுக்கும் பார்ப்பன விஷமப் பிரசாரத்துக்கும் பயந்து பொப்பிலி ராஜாகூட காங்கிரசில் சேர வேண்டி வந்தாலும் வரும் என்றும் (பெரிய சிரிப்பு) ஏனென்றால் காங்கிரஸ் பத்திரிகைகளும் அவர்கள் கூலிகளும் எவ்வளவு காலித்தனமாக எழுதவும், பேசவும் செய்கின்றன என்றும், அதைக் கண்டு இப்போது பல பிரமுகர்கள்



பயந்து போய் காங்கிரசில் சேர்ந்தால் வசவு இருக்காது செலவு இருக்காது என்று கருதுகிறார்கள் என்றும், இதை இப்படியே வளரவிடுவது மிகவும் கோழைத்தனம் என்றும், இன்று மீனாம்பள்ளி ஜமீன்தார் ஒரு சாதாரண மனுஷரின் போட்டியில் வெகு கஷ்டப்படுகிறார் என்றும், பல ஜமீன்தாரர் களுக்கு தங்கள் எல்லையிலேயே சாயம் போய்க் கொண்டிருக்கிறது என்றும், அது எப்படிப் போனாலும் முதலில் பார்ப்பனீயத்தை ஒழிக்க ஒரு ஏற்பாடு செய்து தகுந்த கொள்கைகளுடன் தகுந்த பிரசாரம் செய்து எதிரிகளின் தொல்லையை சமாளிக்க வேண்டும் என்றும் விடுதலை தினசரி ஆக வேண்டும் என்றும் சொன்னார்.

தோழர் கனம் பி.டி.ராஜன் அவர்கள் எழுந்து தோழர் ராமசாமி சொன்னது அவ்வளவும் சரி என்றும், தோழர் ராமசாமி அவர்கள் தனது தோழர்களுடன் தன்னுடைய சொந்த செலவிலேயே பிரசாரம் செய்து கொண்டு வருகிறார் என்றும், அதை பாராட்டுவதோடு நின்று விடாமல் பலமான பிரசாரத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் விடுதலை தினசரி ஆவதற்கு தக்க ஏற்பாடுகள் நடக்கின்றன என்றும் சொன்னார்.

பொப்பிலி ராஜா அவர்கள் எழுந்து அந்த அந்த ஜில்லாகாரர்கள் அந்த அந்த எல்லையைக் கவனித்துக் கொண்டால் நலமாய் இருக்கும் என்றும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் சொன்னார்.

பிரசாரகஷ்டத்தைப் பற்றி தோழர்கள் கே.எம். பாலசுப்பிரமணியம், கே.வி.அழகிரிசாமி, மதுரை அருணாசலம் ஆகியவர்கள் பேசுகையில் பிரசாரத்தின்போது பார்ப்பன போலீஸ் அதிகாரிகள் செய்யும் அக்கிரமங்களையும், பார்ப்பன நிர்வாக அதிகாரிகள் செய்யும் அக்கிரமங்களையும், லால்குடி முதலிய சம்பவங்களையும் எடுத்துச் சொல்லி அரசாங்கத்தார் கவனிக்காமல் இருப்பதை தாக்கிப் பேசினார்கள்.

தோழர் அருணாசலம் பேசுகையில் காங்கிரஸ் சட்டசபை மெம்பர்கள் தங்கள் கட்சி சம்மந்தமாயும், தங்கள் கட்சி நபர்கள் சம்மந்தமாகவும் சட்டசபையில் அனேக கேள்விகள் கேட்கின்றார்கள் என்றும், ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர்களை பிரசாரகர்களை போலீசார் செய்யும் கொடுமையைப் பற்றியும் ஜெயிலில் நடத்தும் கொடுமையைப் பற்றியும் உபாத்தியாயர்கள் செய்யும் அயோக்கியத்தனங்களைப் பற்றியும் சிறிதும் கவனிப்பதில்லை என்றும், ஒரு கேள்விகூட கேட்பதில்லை என்றும் சொல்லி சட்டசபை மெம்பர்களையும் இலாக்கா மந்திரிகளையும் தாக்கி பேசினார். பிறகு கட்சி திட்ட விஷயமாய் மற்றும் என்ன என்ன திட்டங்களை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி யோசிக்க கீழ்க்கண்டவர்கள் அடங்கிய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.



RangaRakes tamilnavarasam.com

***தோழர்கள் பொப்பிலி ராஜா, சர். மகமது உஸ்மான், கனம் பி.டி. ராஜன், கனம் எஸ். குமாரசாமி ரெட்டியார், ஈ.வெ. ராமசாமி, டாக்டர் நடேச முதலியார், கே.எம். பாலசுப்பிரமணியம், வெங்கிடகிரி ராஜா** மற்றும் 3 பேர்களை சேர்த்துக் கொள்ள அதிகாரம் கொடுக்கப் பட்டது. பிறகு ஒரு டீ பார்ட்டி நடந்தது.*

குடி அரசு - சொற்பொழிவு -17.11.1935

---

# *தோழர் ஈ.வெ.ராமசாமி தீர்மானங்கள்

## ஜஸ்டிஸ் கட்சி ஒப்புக் கொண்டது

1. விவசாயிகளை கடன் தொல்லையிலிருந்து விடுவிக்கவும் அவர்கள் மறுபடியும் கடன்காரராகி கஷ்டப்படாமல் இருக்கவும் வேண்டிய காரியங்களை கடனுக்காக கடன்காரர்களை பூமியைக் கைப்பற்ற முடியாமல் செய்வது முதலிய மார்க்கங்களைக் கொண்டு சட்ட மூலமாகவும் வேறு முறைகள் மூலமாகவும் கூடுமானதை எல்லாம் செய்ய வேண்டும்.

2. அனியாய வட்டி, லேவாதேவிக்காரர்களால் விவசாயிகள் அழிந்து போகாமல் இருக்கும்படி கூட்டுறவு நாணைய ஸ்தாபனங்களையும், நில அடமான பாங்குகளையும் தாராளமாகப் பெருக்க வேண்டும். நில அடமான பாங்கை மாகாணம் பூராவும் நல்ல அமைப்பில் ஏற்படுத்தி அதை ராஜாங்கத்தாரே நடத்த வேண்டும்.

3. சொத்து உரிமை சம்பந்தமாக விவகாரங்களை குறைப்பதற்காக சொத்து பாத்தியங்களை குறிப்பிடத்தகுந்த தெளிவான ஆதாரங்களை சர்க்கார் வைத்திருக்க வேண்டும். அன்றியும் நிமித்த மாத்திரமாகவும், மலரணையாகவும் எழுதி வைக்கப்பட்டது என்று எதிர் வழக்கு வாதாடும் (Benami) முறையை இல்லாமல் செய்ய வேண்டியதோடு, அப்படிப்பட்ட வாதங்களை கோர்ட்டுகளில் ஒப்புக் கொள்ளாமல் இருக்கும்படியும் ஏற்பாடுகள் செய்துவிடவேண்டும்.

4. விவசாயக்காரர்கள் விளைவின் பயனை அனுபவிக்காமல் தடுக்கும் தரகர் - மத்திய வியாபாரிகள் ஆகியவர்களை விலக்குதல் செய்து விளை பொருள் சாமான்களை வாங்குபவர்களுடன் நேரில் கலந்து கொள்ளத்தக்க ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி நல்ல விலையை விவசாயிகளே பெறும்படியாகச் செய்ய வேண்டும்.

5. பொது ஜனங்களுடைய உபயோகத்துக்காக இருந்து வரும் ரயில்வே, தந்தி, தபால், தண்ணீர் சப்ளை, எலக்ட்ரிசிட்டி முதலியவைகளை சர்க்கார் எப்படி நிர்வகித்து வருகிறார்களோ, அந்த முறையே இனியும் மற்ற காரியங்களுக்கும் உபயோகப்படுத்தி எப்போதும் சர்க்காராலேயே நடந்து வரும்படி செய்ய வேண்டும்.

6. இன்ஷூரன்ஸ் விஷயத்தில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு சர்க்கார் செய்து கொடுத்திருக்கும் சவுகரியத்தை அதாவது போஸ்ட் ஆபீசைப் போல் மற்ற ஜனங்களும் அடையும்படியாகச் செய்ய வேண்டும்.

7. தேசப் பொதுமக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும், அதற்கேற்ற வரும்படி கிடைக்கும்படி வரும்படி விகிதத்தை நிர்ணயிக்கவும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

8. குறிப்பிட்ட காலத்திற்குள் சகல மக்களுக்கும் ஆரம்பப் படிப்பு ஏற்படும்படி செய்துவிடவேண்டும்.

9. மதுபானம் ஒழியும்படியாக கூடிய முயற்சிகளையும் சட்டங்களையும் செய்துவிட வேண்டும்.

10. மனித சமூகத்தில் இருந்து வரும் தீண்டாமையையும் பிறவிக் காரணமாக உள்ள வித்தியாசக் கொடுமைகளையும் அடியோடு ஒழித்துவிட வேண்டும்.

11. அரசியல் உத்தியோகங்கள் இந்த மாகாணத்தில் உள்ள எல்லா வகுப்பார்களுக்கும் அவரவர்கள் ஜனத்தொகை பெருக்கத்துக்குத் தக்கபடியும் அரசியல் லக்ஷியத்துக்குத் தக்கபடியும் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும்.

12. பூமி வரி விதிக்கும் முறையானது எல்லா மக்களுக்கும் சமமான வரிப் பளுவாய் இருக்கும்படியாகவும் அவசியமான இடங்களில் விலக்கு செய்யும்படியானதாகவும் மாற்றி அமைக்க வேண்டும். (அதாவது ஏழைக் குடியானவர்களுக்கு கொஞ்ச விகிதமும் இருக்க வேண்டும்.)

13. முனிசிபாலிட்டிகளுக்கும், கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், ஜனங்களுக்கும் இன்னும் அதிகமான காரியங்கள் செய்யும்படியான சுதந்திரங்கள் கொடுத்து, அவைகளை சர்க்கார் அதிகாரிகளின் மேல் பார்வையில் நடைபெறச் செய்ய வேண்டும்.

14. தற்கால நிர்வாக முறையானது மக்களுக்கு மிகவும் பாரமாக இருப்பதால், நியாயமான செலவில் திறமையான நிர்வாகத்தை அமைக்க முயலவேண்டியதோடு சம்பளங்களை இந்தியர் சராசரி வாழ்க்கையையும் இந்திய பொருளாதார நிலைமையும் கவனித்து ஏற்படுத்த வேண்டும்.

15. இந்தக் காரியங்கள் நடைபெறும் பொருட்டு அவசியமான இடத்தில் சட்டம் செய்வதோடு இக்கொள்கைகளை பொது ஜனங்களுக்கு விளங்கும்படி பிரசாரம் செய்ய வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

# மதம் மாறுதல்

தோழர் அம்பத்கார் அவர்கள் இந்து மதத்திலிருந்து மாறிவிடுவதாகச் செய்து கொண்ட முடிவையும் நாசிக் மகாநாட்டில் அவரது தலைமையின் கீழ் செய்யப்பட்ட தீர்மானமான ஆதி இந்துக்கள் மதம் மாற வேண்டுமாய்த் தீர்மானித்ததையும், தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் ஆதரித்ததையும், குடி அரசில் ஆதரித்தெழுதியதையும் பற்றி சிலர் குறைகூறித் திரிவதாய் தெரிகிறதுடன், ஒரு தோழர் அதை விளக்க வேண்டுமென்று கேட்கும் முறையில் கண்டித்து ஒரு கடிதம் எழுதி ஒரு அணா ஸ்டாம்பும் அனுப்பி இருக்கிறார்.

இதை மதித்து இதற்கு சமாதானம் எழுத வேண்டியது அவ்வளவு அவசியமில்லை என்று தோன்றினாலும், அதன் பேரில் விஷமப் பிரசாரம் செய்ய சில விஷமிகளுக்கு இடம் இல்லாமல் போகட்டும் என்பதாகக் கருதி நமது அபிப்பிராயத்தை எழுதுகிறோம்.

முதலாவது சுயமரியாதை இயக்கத்தில் எப்படிப்பட்ட தீர்மானங்கள் இருந்தாலும் அவைகள் சிபார்சு செய்யக் கூடியதை தவிர எல்லாத் தீர்மானங்களும் நிர்ப்பந்தமானதும் ''அவைகளை அனுசரிக்காதவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்ல. அதில் மெம்பர்களாகவே இருக்கத் தகுதியுடையவர்கள் அல்ல'' என்கின்ற அதிகாரமானதுமான தீர்மானமல்ல.

இரண்டாவது சுயமரியாதை இயக்கத்தில் ஆஸ்திகர்களும், நாஸ்திகர் களும் மெம்பர்களாய் இருக்கலாம் என்கின்ற முறை அனுபவத்தில் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

மூன்றாவது, ஒருவன் இந்து மதத்தை விட்டால் மதமில்லாதவனாகவும், நாஸ்திகனாகவும் தான் இருக்க வேண்டுமே ஒழிய வேறு சிறிதாவது அதைவிட மேலானதும், சீர்திருத்தமானதும் மூடநம்பிக்கைகள் குறைவானதுமான மதத்தை அனுசரிக்கக் கூடாது என்றோ, நாஸ்திகனாக ஆகாவிட்டால் இந்துமதம் தான் மேலானது என்றோ சொல்லக்கூடிய நிபந்தனையுமில்லை.

நான்காவது இந்துமதத்தில் இருந்து வேறு மதத்துக்குப் போவது அல்லது மதம் மாறுவது என்றால் இந்துமதத்தைப் போல ஒரு மூட நம்பிக்கையுள்ள மதத்துக்குப் போவதுதான் என்பது அர்த்தமுமல்ல.

இன்று மதம் என்கின்ற தலைப்பின் கீழ் இந்து, கிறிஸ்து, முஸ்லீம், பௌத்தம், பாரசீகம், சீக்கியம், ஆரியசமாஜம், பிரம்மசமாஜம் ஆகியவைகள்



வருவது போல், சார்வாக மதம், லோகாயுத மதம், மாயாவாத மதம், சூன்யவாத மதம், பஞ்ச பூத மதம், சங்கர மதம், வேதாந்த மதம், நாஸ்திக மதம் என்கின்ற வார்த்தைகளும், தனது முடிவில் மதத்தைச் சேர்த்துக் கொண்டு தான் வழங்கப்படுகின்றன.

ஒருவன் லோகாயுத மதத்துக்கோ, சார்வாக மதத்துக்கோ, நாஸ்திக மதத்துக்கோ போகிறேன் என்று கருதி இந்துமதத்தை விட்டு மாறுகிறேன் என்றால், அதை ஆதரிப்பதுகூட குற்றமானாலும் ஆகலாம் போல் இருக் கிறது இந்த மதமொழிப்பு வீரர்களுடைய கருத்துப்படி என்று எண்ண வேண்டியிருக்கிறது.

நிற்க நாம் செய்யும் சீர்திருத்தமானது - நமது மதமொழிப்பு உணர்ச்சியானது, சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்த தினத்திலேயே பிரசாரம் செய்யப்பட்டுவிடவில்லை. செங்கல்பட்டு மகாநாட்டில் கடவுளுக்கென காசைத் தொலைக்க வேண்டாம் என்றோம். பூஜை அபிஷேகம், ஆராதனை, உற்சவம் ஆகியவைகள் கூடாது என்றோம். ஈரோடு மகாநாட்டில் கடவுளைப் பற்றிக் கவலைப்படாதே என்றோம். பிறகு மூன்றாவது விருதுநகர் மகாநாட்டில் மதங்கள்கூட கூடாது என்றோம்.

இப்பொழுது இன்னும் தீவிரமாகப் போக ஆசைப்படுகிறோம். இவைகள் எல்லாம் சுயமரியாதைக்காரர்களுக்குச் சரியாயிருக்கலாம்; சுயமரியாதைக்காரர்களுக்கு உபதேசமும் செய்யலாம்.

ஆனால் அம்பத்காரைப் போன்ற ஒரு ஆஸ்திகர் அல்லது ஏதாவது மதத்தின் பேரால் மனிதன் வாழ்ந்தாக வேண்டும் என்றும் கருதி இருக்கிறவர் களை சுயமரியாதைக்காரர்கள் என்ன செய்வது என்று கேட்கின்றோம்.

அப்படிப்பட்டவர்களைத் தூக்கில் போடுவதா? அல்லது எக்கெதியோ அடைந்து எக்கேடோ கெட்டுப்போ என்று அலக்ஷியமாக விட்டுவிடுவதா என்று கேட்கின்றோம்.

சுயமரியாதைக்காரர்கள் கல்யாண பந்தத்தை - கல்யாண முறையை - கொள்கையை சரி என்று ஒப்புக் கொள்ளுவதில்லை. அவ்வளவோடு மாத்திரமல்ல, இன்னமும் எவ்வளவோ தூரம் போகிறார்கள். பலர் எப்படி எப்படியோ நடக்கிறார்கள்.

அப்படி எல்லாம் இருந்தாலும்கூட அக்கொள்கைகளை லட்சியம் செய்யாமல் இன்று புரோகிதம் மாத்திரமில்லாத அளவில் அதுவும் பார்ப்பனப் புரோகிதம் மாத்திரம் இல்லாத அளவில் சுயமரியாதைக்காரர்கள் எவ்வளவு கல்யாணங்கள் நடத்துகிறார்கள்? தாலி கட்டும் கல்யாணங் களைக்கூட தலைமை வகித்து நடத்திக் கொடுக்கிறார்களே இதன் அருத்தம் என்ன? என்று கேட்கின்றோம். இப்படி இன்னமும் எவ்வளவு நடக்கின்றன?



RangaRakes tamilnavarasam.com

இவை ஒருபுறமிருக்கட்டும். தீவிர சுயமரியாதைக்காரர் ஒருவரை ஒரு ''பறையன்'' கண்டு வணங்கி ''அய்யா எனக்கு சாமியை விட்டுவிட போதிய அறிவோ, தைரியமோ, தியாக புத்தியோ வரவில்லை. ஆனால் எனக்கு இந்த தீண்டத்தகாதவனாய் இருக்க இனி ஒரு நிமிஷம் கூட சகிக்க முடியவில்லை. இதற்கு ஏதாவது ஒரு வழி சொல்லுங்கள் பார்ப்போம்'' என்று கெஞ்சினால் அவனுக்கு இந்த தீவிர சுயமரியாதைக்காரர் அல்லது சுயமரியாதை சமதர்மக்காரர்கள் என்ன பதில் சொல்லுவார்கள் என்று கேட்கின்றோம்.

''நீ சாமியைவிட தைரியமில்லாதவன் உனக்கு நான் யோசனை சொல்ல மாட்டேன். ஆதலால் நீ தீண்டாதவனாகவே இருந்து செத்துப் போ'' என்று சொல்லுவார்களா அல்லது ''அதைப் பற்றி நமக்கு கவலையில்லை. நீ எக்கேடோ கெட்டுப்போ'' என்று சொல்லுவார்களா என்று கேட்கின்றோம்.

எந்த விஷயத்துக்கும் கொள்கைகளுடன் அனுபவ ஞானமும் இருந்தால் தான் அதை மனிதத் தன்மை என்று சொல்லலாமே ஒழிய, மற்றபடி அனுபவ சாத்தியத்துக்கு இணங்காத கொள்கைகள் எதுவானாலும் அதை புஸ்தகப் பூச்சி என்றுதான் சொல்ல வேண்டும் அல்லது வெறும் அபிப்பிராயத்துக்கு மாத்திரம் பொருமானவர்களே ஒழிய காரியத்துக்கு பொருமானவர்கள் அல்ல என்று சொல்ல வேண்டும்.

வெளிப்படையாய் நாம் பேசுவதானால் அம்பத்காரும், அவரைப் பின்பற்றுவோரும், நாஸ்திகர்களாவதற்கும், மதமில்லாதவர்கள் ஆவதற்கும் இஷ்டமில்லாமல், அவர்கள் மீது இருக்கும் தீண்டாமை மாத்திரம் ஒழிய வேண்டும் என்று ஆசைப்பட்டு அதற்காக முகமதியராகி விடலாம் என்று அவர்கள் கருதினால் அதில் நமக்கு இருக்கும் ஆட்சேபணை என்ன என்று கேட்கின்றோம்.

முகம்மதிய மதத்தில் பல கெடுதிகள் இருக்கலாம். கோஷா இருக்கலாம், கடவுள் இருக்கலாம், மூடநம்பிக்கை இருக்கலாம், மதச் சின்னம், மதச் சடங்கு இருக்கலாம், சமதர்மமில்லாமலுமிருக்கலாம். இதெல்லாம் யாருக்கு கூடாது? சுயமரியாதைக்காரருக்கு கூடாததாய் இருக்கலாம். மற்றும் பெண்ணுரிமை மாத்திரம் பேணுவோருக்கு மகமதிய மதம் வேண்டாததாய் இருக்கலாம். மூடநம்பிக்கை அனுஷ்டிக்காதவர்களுக்கும் முகம்மதிய மதம் வேண்டாததாய் இருக்கலாம். மதவேஷமும் பயனற்ற சடங்கும் வேண்டாதவருக்கு முகமதிய மதம் வேண்டாததாய் இருக்கலாம். நாஸ்திகருக்கும், பகுத்தறிவுவாதிகளுக்கும் முகமதிய மதம் வேண்டாததாய் இருக்கலாம். சமதர்மவாதிகளுக்கும், பொதுஉடமைக்காரர்களுக்கும் மகமதிய மதம் வேண்டாததாய் இருக்கலாம்.

ஆனால் தீயர்கள், பறையர்கள், புலையர்கள், நாயாடிகள் என்று அழைக்கப்படுகின்ற - ஒதுக்கப்பட்டிருக்கின்ற - தாழ்த்தப்பட்டு, கொடுமைப் படுத்தப்பட்டு, நாயிலும், மலத்திலும் புழுத்த விஷக் கிருமிகளிலும் கேவலமாக மதிக்கப்பட்டு வருகிற மக்களிடம் - தங்கள் மீது இருக்கும் தீண்டாமை மாத்திரம் ஒழிந்தால் போதும் என்று கருதிக் கொண்டு இருக்கும் மக்களிடம் நமக்கு வேலை உண்டா? இல்லையா என்று கேட்கின்றோம்.

உண்மையாகவே சுயமரியாதைக்காரருக்கு இந்தச் சமயத்திலும் வேலை இருக்கிறது என்றுதான் நாம் கருதுகிறோம்.

ஏனெனில் அவன் கிறிஸ்தவனாகி, கிறிஸ்தவப் பறையன், கிறிஸ்தவச் சக்கிலி, கிறிஸ்தவப் பிள்ளை, கிறிஸ்தவ நாயக்கன் என்று தீண்டாதவனாகவே இருப்பதைவிட, பறத்துலுக்கன் என்றோ, சக்கிலிய முகமதியன் என்றோ, தீய முஸ்லீம் என்றோ அழைக்க இடமில்லாமலும், அழைக்கப்படாமலும் இருக்கும்படியான நிலையிலும் மற்ற சமூகக்காரர்களோ மதக்காரர்களோ அவ்வளவு சுலபமாக இழிவுபடுத்தவோ, கொடுமையாய் நடத்தவோ முடியாத சுயமரியாதை அனுபவமும் உள்ள நிலையிலும் இருக்கும் ஒரு மதத்திற்கு ''எப்படியாவது தீண்டாமையை ஒழித்துக் கொள்ள வேண்டும்'' என்கின்றவன் போனால் இதில் சுயமரியாதைக்காரனுக்கு என்ன நஷ்டம் என்று கேட்கின்றோம். அன்றியும் ''சரி எப்படியாவது சீக்கிரத்தில் தீண்டாமையை ஒழித்துக் கொள்'' என்று சொல்வதிலும் என்ன தப்பு என்றும் கேட்கின்றோம்.

நமக்குக் கடிதம் எழுதின நண்பர் ''இந்து மதத்தில் தீண்டாமை இருக்கிறது. இஸ்லாம் மதத்தில் பார்க்காமை இருக்கிறது. பெண்களுக்கு உறை போட்டு மூடி வைத்து இருக்கிறார்கள்'' என்று எழுதி இருக்கிறார். அது (உறை போட்டு வைத்திருப்பது) உண்மை என்றும் தவறானது என்றுமே வைத்துக் கொள்ளுவோம். இது பெண்ணுரிமை பேணுவோர்கள் கவனிக்க வேண்டிய காரியமே ஒழிய தீண்டாமை விலக்கு மாத்திரம் வேண்டும் என்று கருதுகின்றவர்கள் யோசிக்க வேண்டிய காரியம் அல்ல என்பது நமது அபிப்பிராயம்.

இஸ்லாம் மார்க்கம் தாண்டவமாடும் துருக்கி, ஈஜீப்ட், பர்ஷியா முதலிய இடங்களில் மூடி கிடையாது என்பதோடு, அம்பத்கார் தமது மனைவிக்கு மூடி போடா விட்டால் எந்த முஸ்லீமும் அவரை கோவிலுக்கு வரவேண்டாம் என்று சொல்லிவிட முடியாது. எப்படி இருந்தாலும் நாம் அதைப் பற்றி இப்போது விவகரிக்க அவசியமில்லை என்று கருதுகிறோம்.

ஆகவே தோழர் அம்பத்கார் மதம் மாறுவதில் எந்த மதம் மாறப் போகிறார் என்பது நமக்குத் தெரியாது. உலகாயுத மதத்தையோ, நாஸ்திக மதத்தையோ தழுவவோ அல்லது முஸ்லீம் மதத்தைத் தழுவவோ போகிறாரோ என்பதும் நமக்குத் தெரியாது. எப்படியிருந்தாலும் வெறும் ஏமாற்றமும் சூழ்ச்சியும் கொண்டதும், சண்டாளன், பாவி, இழி குலத்தவன், தீண்டத்தகாதவன் என்று மனிதனை வெறுத்துத் தள்ளுவதும், ஒருவர் உழைப்பை ஒருவர் கொள்ளை கொள்ளுவதுமான காரியங்களை மதக்கட்டளையாகக் கொண்டதுமான இந்து மதத்தை விட்டுவிடுகிறேன்


RangaRakes tamilnavarasam.com

என்றால், அதைப் பொருத்தவரையில் முதலில் அதற்கு உதவி செய்ய வேண்டியது ஒவ்வொரு சுயமரியாதைக்காரனுடையவும் கடமை அல்லவா என்று கேட்கின்றோம்.

இந்து மதம் சீர்திருத்தமடைந்து வருகிறது என்றும், தீண்டாமை ஒழிக்கப்பட்டு வருகிறது என்றும் சில மூடர்களும், சூழ்ச்சிக்காரர்களும் சொல்லுகிறார்கள். அதை நாம் சிறிதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். இந்துமதம் சீர்திருத்தமடைந்து வரவில்லை. இந்துமதம் ஒழிந்து வருகின்றது என்றுதான் சொல்லுவோம்.

இந்துமதத்தில் சீர்திருத்தத்திற்கு இடமில்லை. அதை சீர்திருத்தம் செய்ய யாருக்கும் அதிகாரமும் இல்லை. இந்துமத ஆதாரங்கள் என்பவை அம்மத வேதம், சாஸ்திரம், புராணம் என்று சொல்லப்படுபவைகளைப் பொருத்ததே ஒழிய, சாமிகள் என்றும், மகாத்மாக்கள் என்றும் தங்களுக்குத் தாங்களே பட்டம் சூட்டிக் கொள்ளும் சில விளம்பரப் பிரியர்களைப் பொருத்தது அல்ல.

எந்த மகாத்மாவானாலும், சீர்திருத்தக்காரனானாலும், சுவாமி பட்டம் பெற்றவனானாலும், தன்னுடைய சீர்திருத்தத்தை மதம், சாஸ்திரம் அனுமதிக்கிறது என்று வேஷம் போட்டுத்தான் சீர்திருத்தம் செய்ய ஆசைப்படுகிறாரே ஒழிய வேறில்லை.

எந்த வேதமும், எந்த மதமும், சாஸ்திரமும் இந்த மகாத்மாவுக்கும், சுவாமிக்கும் சீர்திருத்தம் செய்ய எங்கும் அதிகாரம் கொடுக்கவில்லை. அது வேதத்தின் சாரமான - பகவான் வாக்கான என்று சொல்லப்படும் கீதையிலும், மனு தர்ம சாஸ்திரத்திலும், பராசர் ஸ்மிருதியிலும் பச்சையாய் சொல்லி இருக்கிறது. இவற்றை விவகாரத்துக்கு இடமானது என்று சொல்லிவிட முடியாது. இன்று பொதுஜனங்களை ஏமாற்ற, தற்கால சாந்தியாக சொல்லிக் கொண்டாலும் அந்த முறைக்கும், சாஸ்திரத்துக்கும் மாத்திரமல்லாமல் பழக்க வழக்கங்களுக்கும் அரசியல் காப்பளித்துவிட்ட பிறகு இந்த விவகாரத்துக்கு இடமேது என்று கேட்கின்றோம்.

இன்று ஏமாற்றி ஓட்டு வாங்கிக் கொண்டு நாளைக்கு எந்த ஊர் என்று கேட்டால் அதற்கு யார் என்ன செய்ய முடியும்?

ஆகவே தீண்டாமை விஷயத்தில் இவ்வித குழப்பம், இருவித அருத்தம், சமயம் போல் திருப்பிக் கொள்ளும் சௌகரியம் ஆகியவைகள் இல்லாத மதமே தீண்டாமையை விலக்கிக் கொள்ள வேண்டும் என்பவர்களுக்கு ஏற்றதாகும் என்பது நமது அபிப்பிராயம்.

வெகு நெருக்கடியான சமயத்தில் அம்பத்கார் இடமும், சிவராஜு இடமும் கையெழுத்து வாங்கிக் கொண்டு பொது ஜனங்களிடம் லக்ஷக் கணக்கான பணமும் வசூல் செய்து கொண்டு அதைச் செலவழித்து எலக்ஷனில் வெற்றியும் அடைந்து கொண்டு கடைசியில் தீண்டாமை விலக்கு சம்மந்தமாக சட்டம் செய்ய முடியாது என்று சொன்னவர்கள் தானே இன்று அம்பத்கார் வேறு மதத்துக்குப் போகிறாரே என்று வயிற்றில் அடித்துக் கொள்ளுகிறார்கள்?

இப்படிப்பட்ட கூட்டங்களுக்கு அனுகூலம் செய்ய சில தீவிர சுயமரியாதைக்காரர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுகின்றவர்கள் அம்பத்கார் வேறு மதத்துக்கு போவதை அனுமதிக்கக்கூடாது என்றால் அது நியாயமாகுமா? அல்லது ஒன்றும் பேசாமல் சும்மா இரு என்பதுதான் நியாயமாகுமா?

இதையெல்லாம் கவனித்தால் ஒரு காரியமும் செய்ய முடியாது. ஆதலால் அம்பத்காருடைய முடிவை நாம் மனமார ஆதரிப்பதுடன் அம் முடிவுப்படி சரியான செயலுக்கு நம்மாலான உதவியளிக்க வேண்டியதும் ஒவ்வொரு சுயமரியாதைக்காரருடையவும் கடமையாகும் என்பது நமதபிப்பிராயம்.

**குடி அரசு - தலையங்கம் - 17.11.1935**



RangaRakes tamilnavarasam.com

# திருவாங்கூர் திவான்

### சர். ஷண்முகம் ஒப்புக்கொள்ள மாட்டார்

திருவாங்கூர் திவான் பதவி சமீப காலத்தில் காலி ஆகலாம் என்றும், அதற்கு சர். ஷண்முகம் அவர்கள் நியமிக்கப்படலாம் என்றும் பிரஸ்தாபம் இருந்து வந்தது.

இப்போது அந்த ஸ்தானத்தை சர். ஷண்முகம் அவர்கள் விரும்பவில்லை என்றும், திருவாங்கூர் சமஸ்தானத்தில் தோழர் சர்.சி.பி. ராமசாமி அய்யரின் ஆதிக்கம் இருந்து வரக்கூடும் என்றும், அதனால் அங்குதான் மீ 4000 ரூ. சம்பளத்தை வாங்கிக் கொண்டு வெறும் கையெழுத்தைப் போட்டுக் கொண்டு இருப்பதைத் தவிர வேறு உருப்படியான காரியம் எதுவும் செய்வது கஷ்டமாக இருக்கும் என்றும் கருதி அதை மறுத்துவிட்டதாகத் தகுந்த நம்பக் கூடிய இடத்தில் இருந்து செய்தி கிடைத்திருக்கின்றது.

இதை ஆதரிக்கத் தகுந்த மாதிரியாக மற்றொரு செய்தியும் வெளியாகி இருக்கிறது. அதாவது திருவாங்கூருக்கு சர்.சி.பி. ராமசாமி அய்யர் அவர்கள் சம்மந்தம் ஒழிந்துவிட்டது என்று நன்றாய் தெரியும் வரை ஒரு செல்வாக்குள்ள வெள்ளைக்கார ஐ.சி.எஸ். கலக்டரை திவானாகப் போடுவது என்று கருதி இருப்பதாகத் தெரிய வருகிறது.

ஆகவே தோழர் சர்.ஷண்முகம் கொச்சி திவானாக இப்பொழுது மீ 3000 ரூ. சம்பளம் மாத்திரமும், சில சௌகரியங்கள் மாத்திரமும் அடையும்படியாக இருந்த போதிலும்கூட அது திருவாங்கூர் திவான் பதவி ஏற்று மீ 4000 ரூ. சம்பளமும் பல சௌகரியமும் கிடைப்பதைவிட (கொச்சியே) மேலென்று கருதும் முக்கிய காரணம் கொச்சி ராஜாவின் மேலான குணமும் சம்பளத்தை லக்ஷியம் செய்யாமல் பிரயோஜனகரமான காரியங்கள் செய்ய வேண்டும் என்கின்ற (சர். ஷண்முகம் அவர்களது) ஆசையுமேயாகும்.

குடி அரசு - துணைத் தலையங்கம் - 17.11.1935



# விஜயராகவாச்சாரியார்

சேலம் தோழர் விஜயராகவாச்சாரியார் அவர்களின் காங்கிரஸ் சேவையைப் பாராட்டி அவருக்குப் பகுமானம் அளிக்க சில பார்ப்பனர்கள் முயற்சித்துப் பலரிடம் கையெழுத்து வாங்கி வருகிறார்கள்.

அதில் பார்ப்பனர்கள் செய்யும் சூழ்ச்சி என்னவென்றால், காங்கிரசைக் கண்டிக்கும் ஜஸ்டிஸ் கட்சியாரிடமும் கையெழுத்து வாங்கி காங்கிரசை எல்லோரும் ஒப்புக் கொண்டது போல் உலகத்துக்குக் காட்டச் சூழ்ச்சி செய்து வருகிறார்கள் என்பதாகும்.

தோழர் விஜயராகவாச்சாரியார் பெரியவர். நல்ல கிரிமினல் வக்கீல். அரசியல் விஷயங்களைப் பற்றி விவகரிக்கத் தகுந்த நல்ல ஞானமுடையவர். அவரது பெயர் காங்கிரசிலும், பழய கால அரசியல் பிரதிநிதித்துவத்திலும் பல நாளாய் அடிபட்டு வருகிறது.

சுமார் 50 வருஷத்துக்கு முன் சேலம் கலகத்தில் அவர் கைதியாக்கப் பட்டார்.இவைகள் அவருடைய யோக்கியதாம்சங்களாகும் என்பதில் யாருக்கும் எவ்வித ஆக்ஷேபணையும் இருக்காது. இவைகளைப் பொருத்தவரை பற்றுள்ளவர்கள் பாராட்டிக் கொள்ளலாம்.

ஆனால் இவைகளைப்பற்றி மாறுபாடான அபிப்பிராயமுள்ளவர்கள் இதை எப்படிப் பாராட்ட முடியும் என்பது நமக்கு விளங்கவில்லை.

இன்றைய தினம் அவர் காங்கிரசுக்கு உழைத்ததைப் பற்றி காங்கிரஸ் பொன் விழாவின் போது பகுமானமளிக்க சிலரிடம் பார்ப்பனர்கள் கையெழுத்து வாங்குவதில் ஜஸ்டிஸ் கட்சியார் சிலரிடம் சென்று எதற்கு ஆக கையெழுத்து கேட்க வேண்டும்? அவர்களும் புத்தி இல்லாமல் எப்படி ஏமாந்து கையெழுத்துப் போடுகிறார்கள் என்பது நமக்கு ஆச்சரியமாய் இருக்கிறது.

இந்த முட்டாள்தனத்துக்கு எங்கு போய் முட்டிக் கொள்வது என்பது நமக்கு விளங்கவில்லை. சுயமரியாதை இயக்கத் தலைவர்கள் இரண்டொருவர்களைக் கேட்க அவர்கள் நாங்கள் காங்கிரசை ஒப்புக் கொள்ளாதவர்கள் ஆனதால் இதில் கையெழுத்துப் போட முடியாது என்று சொல்லிவிட்டார்களாம்.



RangaRakes tamilnavarasam.com

தங்களால் வெறுக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்துக்கோ கொள்கைக்கோ உழைத்தவர்களைப் பாராட்டுவது என்றால், இதில் அறியாமை அல்லது கோழைத்தனம் அல்லது கவலை ஈனம் என்பவை அல்லாமல் வேறு எவ்வித புத்திசாலித்தனமோ யோக்கியமோ இருக்க நியாயமில்லை.

உதாரணமாக தோழர் காந்தியாரை ஏன் பஹிஷ்கரித்தோம்? ஸ்தல ஸ்தாபனங்களில் ஏன் வரவேற்புக் கூடாது என்றோம்? ஏன் கருப்புக்கொடி பிடித்தோம்? காந்தியாரின் தந்திர புத்தியைப் பாராட்டுவதை நாம் ஆக்ஷேபிக்க மாட்டோம்.

ஆனால் அவர் ''சத்தியாக்கிரக''த்துக்கும் ''சுயராஜ்ஜிய''த்துக்கும் உழைத்ததை நாம் பாராட்டி வரவேற்க முடியுமா அல்லது அதற்காக அளிக்கப்படும் நற்சாட்சிப் பத்திரத்தில் கையொப்பமிட முடியுமா என்று கேட்கின்றோம்.

அதுபோலவே தோழர் விஜயராகவாச்சாரியார் இவ்வளவு காலம் பிழைத்திருப்பதையும் அவர் கிரிமினல் வக்கீலாக 80 வருஷம் வரையில் உழைத்ததையும் பாராட்டலாம்.

ஆனால், காங்கிரசுக்கு உழைத்ததைப் பாராட்ட பார்ப்பனர்களுக்கு விட்டுவிட வேண்டுமே ஒழிய நம்மவர்கள் அதில் கலந்து கொள்வது திருடர்களைப் பாராட்டத் திருட்டுக் கொடுத்தவர்களும் சேர்ந்து கொள்வது போலவே ஆகும்.

பார்ப்பனர்கள் தாங்கள் எந்த ஒரு கூட்டத்தை - தனிப்பட்ட நபரை வைகிறார்களோ குறை கூறுகிறார்களோ அவர்களிடமே வெட்கமில்லாமல் போய் அவர்கள் பாராட்டுதலைப் பெற்று விளம்பரம் செய்து கொள்வதில் கை தேர்ந்தவர்கள் என்பதோடு அவர்களது சூழ்ச்சிக்கு ஏமாந்து போவதில் பார்ப்பனரல்லாதவர்கள் கை தேர்ந்தவர்கள் என்பதையும் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

ஆகவே பார்ப்பனரல்லாத தலைவர்கள் என்பவர்கள் இனியாவது தங்கள் புத்தியையும், வீரத்தையும் பறி கொடுத்து முட்டாள்தனத்தைத் தேடிக் கொள்ளாமல் இருக்க வேண்டுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 17.11.1935**



# காங்கிரசைப் புதையுங்கள்

காங்கிரசுக்காரர்கள் பொதுமக்களிடம் ஓட்டுப் பெறுவதற்காகப் பிரசாரம் செய்த காலையில் பல மேடைகளில் தோழர்கள் ராஜகோபாலாச்சாரியார், சத்தியமூர்த்தி உள்பட எல்லாக் காங்கிரஸ்காரர்களும் இப்போது எங்களுக்கும், சர்க்காருக்கும் தான் யுத்தம் என்றும், ஜஸ்டிஸ் காங்கிரஸ் பிரிவு இதில் காட்டக் கூடாது என்றும் சொல்லி ஓட்டுப் பெற்றபின், இப்போது மந்திரி பதவி பெறுவதும், சர்க்காரை நடத்திக் கொடுப்பது மூலம் சர்க்காரோடு யுத்தம் செய்கிறோம் என்று சொல்லிக் கொள்வதோடு ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதுதான் எங்கள் வேலை ஆதலால் சர்க்காரிடம் எங்களுக்குப் போர் இல்லை என்பதாக அதாவது நேற்று கும்பகோணத்தில் தோழர் சத்தியமூர்த்தி கோர்ட்டில் காங்கிரசார் செய்ததாக ஏற்பட்ட காலித்தனக் கேசில் சாட்சி சொல்லும் போது ''ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பது தான் எங்கள் வேலை'' என்று சாட்சிப் பெட்டி மேல் இருந்து கொண்டு தைரியமாய் சொன்னது, காங்கிரஸ்காரர்களின் மனப்பான்மையை நன்றே விளக்கிக் காட்டக்கூடியதாகும்.

ஆனால் இவர்கள் இப்படி வாயினால் சொல்லிக் கொண்டிருக்கலாம். காரியத்தில் இந்தியா முழுவதிலுமே எல்லாப் பாகங்களிலிருந்தும், ''காங்கிரஸ் கட்சியை ஆழக் குழிதோண்டி புதைக்க வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டும் அதற்கு ஆவன செய்து கொண்டும் வருகிறார்கள். அதற்கு உதாரணம் வேண்டுமானால் கீழே காண்கஃ-

ஹைதராபாத்திலிருந்து வெளிவரும் ''இந்திய சமஸ்தானங்களும், ஜமீன்தார்களும்'' மாதப் பத்திரிகை 'காங்கிரசைப் புதையுங்கள்' என்ற மகுடமிட்டு ஒரு வியாசத்தை வரைந்திருக்கிறது. அவ்வியாசத்தில் பின் வரும் விஷயம் காணக் கிடக்கிறது.

''ஜஸ்டிஸ் கட்சியின் விடா முயற்சியின் பயனாகவும் அவர்கள் தளராத ஊக்கத்தோடு காங்கிரசை எதிர்த்து பிரசாரஞ் செய்து வந்ததின் பயனாகவும் பொது மக்கள் விழிப்படைந்து காங்கிரசின் ஒழுக்கக் கேடுகளையும், அதன் நிலையையும் கண்டு கொள்ள முடிந்தது. அதனால் இந்த பெரும் புகழ் ஜஸ்டிஸ் கட்சிக்கே உரித்தானது. பொது மக்களும் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நாட்டிற்காக தன்



RangaRakes tamilnavarasam.com

நலத்தை பேணாது, பிற நலத்திற்கு உழைத்து வரும் ஆனரபில் ராஜா பொப்பிலி, சர்.எ. பாத்ரோ, திவான்பகதூர் எ. ராமசாமி முதலியார் போன்ற அரும்பெரும் தேசீயத் தலைவர்களைக் கொண்டு அக்கட்சி நிற்கிறது. உண்மையாகவே அவர்கள் தேசீயத் தலைவர்களாகக் கொள்ளல் வேண்டும். இக்கட்சி ஒரு நோக்கத்தோடே காங்கிரசோடு எதிர்த்து போராடுகிறது. இன்று தென்னாட்டில் காங்கிரஸ்காரர்கள் எங்கேயாவது தோற்றார்கள் என்றால், அத் தோல்வி ஜஸ்டிஸ் கட்சியாரால் தான் ஏற்பட்டதென்று சொல்லவேண்டும்.

**குடி அரசு - கட்டுரை - 24.11.1935**



# திருடியது காங்கிரஸ்காரர்கள்தான்

சென்ற திங்கட்கிழமை (18.11.35) இதழில் ''தினமணி'' என்ற சுயநலக் கூட்டத்தாரின் பத்திரிகை, திலகர் சுயராஜ்ய நிதியைத் திருடிய காங்கிரஸ்காரரின் படலத்தைப் பாராயணம் செய்ததற்காக, கடுங்கோபங் கொண்டு கண்டபடி எழுதியிருக்கிறது. கோபத்தால் அறிவு அந்தர்த்தானமாகிறது என்ற விஷயத்தை அப்பத்திரிகை தன் தலையங்கத்தில் நன்றாகத் தெரியப்படுத்தியிருக்கிறது. ''திருடியது யார்?'' என்ற தலைப்பிட்டு எழுதியதற்குப் பதில் ''திருடியது காங்கிரஸ்காரர்கள்தான்'' என்று எடுத்துக்காட்ட விரும்புகிறோம். திலகருடைய பெயரையும், இந்தியத் தாயினுடைய பெயரையும் கூறி, வழிபறிக் கொள்ளைக்காரர்களைப் போல, பெண் மக்கள் அணிந்திருந்த நகைகளையும்கூடத் திலகர் நிதிக்காகக் கொண்டு, மலை போலிருந்த ஒரு கோடி ரூபாய்களைக் கரைத்து, பெரும்பாலும் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக் கொண்டவர்களைத் ''திருடர்கள்'' என்று கூறாமல் ''தேசபக்தர்கள்'' என்று கூறுவதெங்ஙனம்? ஆனால், ''காங்கிரசைத் திட்டுவதையே தொழிலாய்க் கொண்டிருக்கும்'' பூனா ''மராட்டா'' பத்திரிகையில் விஷயங்கள் வெளி வந்த காரணத்தால், அவைகளை நம்பக் கூடாதென்று ''தினமணி'' கூறுகிறது. சென்ற ஞாயிற்றுக்கிழமை (17.11.35-ல்) வெளிவந்த ''மராட்டா''வில், பிராமணரல்லாதார் காங்கிரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்ற கருத்துக் கொண்டுள்ள தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. இதனால், காங்கிரஸ் கொள்கையிடத்தபிமானமுள்ள ''மராட்டா'' காங்கிரசைச் சுத்தப்படுத்த வேண்டுமென்ற உயரிய நோக்கங் கொண்டுதான் திலகர் நிதியைத் திருடியவர்களுடைய மோசமான காரியங்களை வெளிப்படுத்தியுள்ள தென்பது நன்றாகத் தெரிகிறது. ''திருடியவர்கள் யார்?'' என்ற கேள்விக்குத் ''தினமணி''யே பதிலளித்திருக்கிறது. அப்பத்திரிகை கூறுவதாவதுஃ-

''ஒரு கோடி ரூபாய் வசூல் செய்து செலவிட்டதில் ஏதோ சில தொகைகளை திரும்பக் கொடுக்க முடியாமல் சில காங்கிரஸ்காரர்கள் கஷ்டப்படலாம். ஆனால், மோசம் செய்ய வேண்டுமென்று எடுத்துக் கொள்ளவில்லை. தேசத்திற்காக சகலத்தையும் தியாகம் செய்த சில தேசபக்தர்கள் கையில் சில ஆயிரம் ரூபாய்கள் செலவாய் விட்டதால், அதனால் மூழ்கிப் போவது எதுவுமில்லை. ஏனெனில், தியாகிகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு காங்கிரசைச் சார்ந்தது.'' இதனால்,



RangaRakes tamilnavarasam.com

திருடர்கள் காங்கிரஸ் ''தியாகிகள்'' தான் என்பது விளக்கமாகத் தெரிகிறது. ''மோசம் செய்ய வேண்டும்'' என்ற எண்ணத்தைக் கொண்டாலும், கொள்ளாவிட்டாலும், மோசம் செய்த விஷயத்தை மாத்திரம் 'தினமணி' மறுக்கவில்லை. ''தேசத்திற்காக சகலத்தையும் தியாகம் செய்த தேச பக்தர்கள் சில ஆயிரம் ரூபாய்களைத் திருடினால் தோஷமில்லை என்று ''தினமணி'' கூறுகிறது. அதனால் ''மூழ்கிப் போவது எதுவுமில்லை'' என்கிறது. ஆனால், சுயநலக்கடலில் முழுகி மறைந்தது ஒரு கோடி ரூபாய் என்ற விஷயம் மகாராஷ்டிர காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியாய் அனேக ஆண்டுகள் இருந்த தோழர் பி.வி.மகாஜன் விளக்கிக் காட்டியிருக்கிறார். 'தினமணி' கூறும் ஒரு விஷயத்தை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான் - அதாவது ''தியாகிகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு காங்கிரசைச் சேர்ந்தது'' என்பதாகும். ஆனால், ''தேசத்திற்காக சகலத்தையும் தியாகம் செய்த'' தேசபக்தர்கள் திலகர் ஞாபகார்த்தத்திற்காக ஏற்படுத்தப்பட்ட நிதியைத் தம் சுயநலத்திற்காகத் ''தியாகம்'' செய்ததற்கும் காங்கிரசினுடைய பொறுப்பிற்கும் என்ன சம்பந்தம்? தியாகிகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு காங்கிரசைச் சேர்ந்திருக்க, திலகர் நிதியிலிருந்து, தியாகிகள் பெருந்தொகைகளைக் கையாண்டு தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொண்டதைப் பற்றித் தான் கேள்வி எழுந்திருக்கிறது.

''சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் இரண்டு குற்றங்கள் கூறுகிறார்'' தோழர் மகாஜன் என்று ''தினமணி'' எழுதுகிறது. இரண்டு குற்றங்களல்ல, ஏழு குற்றங்கள், சென்னை சுயநலக் கூட்டக் காங்கிரஸ் காரர்களின் மேல் சுமத்தப்பட்டிருக்கிறது. அவை பின் வருமாறு:-

1. தோழர் சி. இராஜகோபாலாச்சாரியாரிடம் மூன்று ஆண்டுகளாக ரூ.19,000 ''அட்வான்ஸ்'' ஆக நின்றிருந்தது.
2. தோழர் டி. பிரகாசம் பந்துலுவிற்கு ரூ.10,000 கடனாகக் கொடுக்கப்பட்டு, பின்பு அக்கடன் தொகை ரத்து செய்யப்பட்டது.
3. ரூ.44,500-க்குக் கொடுக்கப்பட்ட 'செக்'குகள் மாற்றப் படவில்லை என்று கணக்கில் எழுதி வைக்கப்பட்டது.
4. ரூ.20,000 நிரந்தர 'டிபாசிட்'டில் வைக்கப்பட்டதைப் பற்றி பாங்கி விவகாரங்கள் 'காஷ்புக்'கிலும் 'டே புக்'கிலும் பதிவு செய்யப்படவில்லை.
5. ரூ.20,225 மேற்குறித்தபடி 'டிபாசிட் விவகாரங்கள் கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யவில்லை.
6. அங்கத்தினர்கள் ஜாபிதாவின்படி, அவர்களிடம் வசூல் செய்த பணத்திற்கும், கணக்குப் புத்தகங்களில் வரவு வைக்கப்பட்டிருக்கிற தொகைக்கும் காரணம் காட்ட முடியாத வித்தியாசம் இருக்கின்றது.
7. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களுக்கு பிரயாணச் செலவு ரூ.1,400 கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஏழு குற்றங்களில், இரண்டு குற்றங்களுக்கு 'ஜவாபு' சொல்ல 'தினமணி' முயற்சித்திருக்கிறது. ''தென்னாட்டுக் காந்தியடிகள்'' என்று கருதப்படும் தோழர் ராஜகோபாலாச்சாரியாரிடம் கொடுக்கப்பட்ட ரூ.19,000 ''அட்வான்ஸ்'' - ஆகக் கொடுக்கப்பட்டது என்ற விஷயத்தை நாம் நன்றாக அறிவோம். ''அட்வான்ஸ்'' கொடுத்தால் அதற்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்பது முக்கியமான விஷயம். ''ஸ்ரீ ஆச்சாரியார் தம்மிடம் கொடுக்கப்பட்டுள்ள பணத்திற்குக் கணக்கு விவரங்களையும் மீதப் பணத்தையும் திரும்பக் கொடுத்துவிட்டதை பின் ரிப்போர்ட்டுகளில் பார்க்கலாம்'' என்று ''தினமணி'' கூறுகிறது. ''பின் ரிப்போர்ட்டுகள்'' எழுதப்படவில்லை என்பதுதான் மாஜி காங்கிரஸ் காரியதரிசி தோழர் மகாஜன் அவர்களுடைய குற்றச்சாட்டு. அப் ''பின் ரிப்போர்ட்டுகளை''த் ''தினமணி''யில் பிரசுரிக்கும்படி அப்பத்திரிகைக்குச் 'சவால்' கூறுகிறோம்.

பொது மக்களிடமிருந்து பகற்கொள்ளையடித்த கோடி ரூபாயைப் பற்றிக் கணக்குக் கேட்பதற்கு நமக்கு அதிகாரமில்லை என்று ''தினமணி'' கூறுகிறது.

> ''தேசீய வேலைக்காக வசூலித்தது காங்கிரஸ், அதை நிர்வகித்து, அதை எப்படிச் செலவு செய்ய வேண்டுமென்று முடிவு செய்யும் பொறுப்பும் காங்கிரசையே சேர்ந்தது. அந்த காங்கிரஸ் பார்த்து ஒன்றைச் செய்யும்போது அதில் குற்றங்குறை காண விரோதிகளுக்கு என்ன வாய் இருக்கிறதென்று கேட்கிறோம்''

என்று அப்பத்திரிகை வாய் கூசாமல் கேட்கிறது. திலகர் நிதி மோசடியை வெளிப்படுத்தினவர்கள் நம் போன்ற காங்கிரஸ்காரரின் விரோதிகளல்ல; காங்கிரசிற்குப் பிராமணரல்லாதார் ஆதரவளிக்க வேண்டுமென்று கூறும் திலகரால் ஏற்படுத்தப்பட்ட ''மராட்டா'' பத்திரிகையும், மகாராஷ்டிர மாகாணக் காங்கிரசின் காரியதரிசியாய் வெகுகாலம் இருந்த தோழர் மகாஜனும் தான் அந் நிதி காங்கிரஸ்காரரால் கையாண்ட விஷயங்களைக் கூறியவர்கள். மேலும், ''காங்கிரஸ் ஒரு கட்சியல்ல, அது தேசமேயாகும்'' என்று கூறியவர்கள், இப்போது, ''காங்கிரஸ் ஒரு கட்சி தான்; அதன் விஷயங்களில் வேறு கட்சியினர் பிரவேசித்தல் கூடாது'' என்று வாதாடுவதற்கு நியாயமிருக்கிறதா என்று கேட்கிறோம். ''தேசீய வேலைக்காக வசூலித்த'' பணம் சுயநலக் காங்கிரஸ்காரர்களுடைய வயிறு வளர்ச்சிக்கு உபயோகப்பட்ட காரணத்தைக் கேட்டால், ''காங்கிரஸ் பார்த்து





RangaRakes tamilnavarasam.com

ஒன்றைச் செய்யும்போது, அதில் குற்றங் குறை காண விரோதிகளுக்கு'' உரிமை இல்லை என்று ''தினமணி'' கூறுகிறது. திலகர் சுயராஜ்ய நிதி காங்கிரஸ் கட்சியினரால் தமக்குள் வசூலிக்கப்பட்ட நிதியல்ல, பொது மக்களிடமும் ஏழை மக்களிடமும் தேசத்தின் பெயரைச் சொல்லி வசூலித்தது; பெண் மக்கள் அணிந்திருந்த ஆபரணங்களை இந்தியத் தாயின் பெயரைச் சொல்லி அபகரித்துச் சேர்த்த நிதி; அதைச் சுயநலக் கூட்டத்தார் சுயராஜ்யத்திற்கு உபயோகிக்காமல் பெரும்பான்மையான தொகைகளைத் தமது வயிற்று ராஜ்யத்திற்கு உபயோகித்ததை அதட்டி கேட்க இந்தியர் ஒவ்வொருவருக்கும் சர்வ உரிமையும் உண்டு, என்று சுயநல மணிக்கு நாம் இடித்துரைக்க விரும்புகிறோம்.

தோழர் பிரகாசம் பந்துலுவுக்குப் பத்தாயிரம் ரூபாய் கடன் கொடுத்து ரத்து செய்த விஷயத்தைப் பற்றி எழுதும்போது, ''தமது சொத்துக்கள் அனைத்தையும் பத்திரிகைகளுக்காக''த் தோழர் பிரகாசம் செலவிட்டா ரென்றும், அதைப் பார்த்த பிறகு அக்கடன் தொகை ரத்து செய்யப்பட்ட தென்றும், ''தினமணி'' கூறுகிறது. இதனால் சில விஷயங்கள் புலனாகின்றன. தோழர் பிரகாசத்தின் சொத்துக்கள் அதிகமாயிருந்தால், ரூ.10,000 கடன் கொடுத்திருக்க வேண்டியதில்லை. சொத்துக்கள் கொஞ்சமாயிருந்தால் அதை ''மகத்தான தியாகம்'' என்று கூறுவது உண்மையன்று. தன்னுடைய சொத்துக்களையெல்லாம் பத்திரிகைகள் நடத்துவதில் இழந்து, தோழர் பிரகாசம் நஷ்டமடைந்தார் என்றால் அவர் பத்திரிகைகளை ஒழுங்காகவும், நிர்வாகத் திறமையுடனும் நடத்த யோக்கியதையற்றவர் என்று தெரிகிறது. பத்திரிகைகளுக்காகத் தன் சொந்த சொத்தையும் இழந்து கடன் வாங்கின தொகையையும் செலவு செய்தார் என்ற விஷயம் உண்மையாயிருந்தால், அவரால் நடத்தப்பட்ட பத்திரிகைகள் இன்னும் நல்ல நிலையில் இருக்க வேண்டும். ஆனால் அப்பத்திரிகைகள் திலகர் நிதி மறைந்த மாதிரி மறைந்து போய்விட்டன.

''தினமணி'' கூறுகிறது:-

''காங்கிரஸ் மகாசபை தியாகிகள் கூட்டம், அங்கே அகப்பட்டதைச் சுருட்டுவது, மேல் பதவிக்கு தாவுவது, பதவிகளுக்காக லஞ்சம் வாங்குவது, கொடுப்பது இவைகளுக்கு இடமே கிடையாது''.

ஆனால், ''அகப்பட்டதைச் சுருட்டிய'' பலருக்குக் காங்கிரசில் தாராளமான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்ற விஷயம், தோழர் மகாஜன் கட்டுரைகளில் நன்றாகப் புலப்படுகின்றது. ஒரு கோடி ரூபாய்களை 'சுவாஹா' செய்யும் காங்கிரஸ்காரர்களுக்கு ''மேல் பதவிக்கு தாவுவது, பதவிகளுக்காக லஞ்சம் வாங்குவது, கொடுப்பது'' முதலிய சிறிய வருமானங்கள் வேண்டியதில்லை; ஆனால் அப்படிப்பட்ட காங்கிரஸ்காரர்கள் சென்னையில் பலர் இருக்கின்றார்கள் என்பதை நாம் அறிவோம்.



கடைசியாக தியாகராயர் நிதிக்குக் கணக்குக் காட்டும்படி ''தினமணி'' சவால் கூறுகிறது. அச்சவாலுக்கு நாம் ஆணித்தரமான பதில் கூறுகிறோம். தியாகராயர் நிதிக்கு, திலகர் நிதியைப் போலல்லாமல், சரியான கணக்குகள் இருக்கின்றன. அந்நிதியைக் கொண்டுதான் ''தியாகராய மெமோரியல் பில்டிங்ஸ்'' என்று தற்போது பெயர் கொண்டுள்ள கட்டிடங்கள் வாங்கப் பட்டன. கட்டிட கிரயத் தொகை நிதியின் தொகையைவிட அதிகமானதால், மிகுதி தொகைக்குக் குதவைப் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அக்கடன் இன்னும் தீராமல், வட்டி அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கடனைத் தீர்ப்பதற்காக ஜஸ்டிஸ் கட்சியினர் பண உதவி செய்ய வேண்டு மென்று, 1924-ம் ஆண்டில், வி.பி. ஹாலில் நடந்த ஜஸ்டிஸ் மகாநாட்டில், தியாகராயரின் குடும்பத் தலைவரும், தியாகராய நிதியின் 'டிரஸ்டி'யும் ஆன திவான் பகதூர் பி.டி. குமாரசாமிச் செட்டியார், தமது வரவேற்புக் கழகத் தலைமையுரையில் வேண்டியிருக்கிறார். தியாகராயர் நிதிக்குக் கணக்குக் கேட்கும் பெரியார்களை கண் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்று பிறகு சென்னை மலைச்சாலை 14ம் நம்பர் கட்டடங்களைப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். திலகர் நிதி, திலகருக்கு ஞாபகார்த்தம் ஒன்றுமில்லாமல் மறைந்தது. ஆனால், தியாகராயர் நிதி தியாகராயருடைய ஞாபகார்த்த கட்டிடங்களை வாங்குவதற்காக உபயோகப்படுத்தப்பட்டது. திலகர் நிதியைக் காங்கிரஸ்காரர்கள் கையாண்டார்கள் என்று திலகர் பத்திரிகை கூறுகிறது. ஆனால், தியாகராயர் நிதி செலவிடப்பட்டு மேல் ஏற்பட்ட ஞாபகார்த்த கட்டிட கடன் தொகைக்கு உதவி செய்ய வேண்டுமென்று தியாகராயர் சகோதரரின் புதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இவ்விஷயங்களைச் சாவதானமாகவும், சாவகாசமாகவும் யோசனை செய்யும்படி, திலகர் நிதியைத் திருடியவர்களின் தரப்பில் வாதிக்கும் ''தினமணி''யை வேண்டுகிறோம்.

**'விடுதலை'**

குடி அரசு - மறுபிரசுரம் - 24.11.1935



RangaRakes tamilnavarasam.com

# காந்தியும் ஜாதிப்பாகுபாடும்

தோழர் அம்பத்கார் அவர்கள் இந்து மதத்தை விட்டுவிட வேண்டும் என்று சொன்னவுடன், காந்தியார் உள்பட பல இந்துமத பிரசாரகர்களுக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது. ஆனால், ஜாதி வித்தியாசம் தீண்டாமை ஆகிய விஷயங்களில் காந்தியார் அபிப்பிராயத்தைப்பற்றி பிரபல சீர்திருத்தவாதியும், தேசீயவாதியும், காங்கிரஸ் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த காங்கிரஸ் தலைவருமான சர்.சி. சங்கரநாயர் சொல்லி இருப்பதைக் கவனித்துப் பாருங்கள். (அவர் சுயமரியாதைக்காரர் அல்ல)

''தோழர் காந்தியார் எல்லாப் பொது மக்களுக்கும் கல்வி புகட்டப் படவேண்டியதில்லையென்றும், அதிலும் ஆங்கிலக்கல்வி அறவே ஒழிக்கப்படவேண்டும் என்றும் விரும்புகிறார். ஏன் அவர் அவ்வாறு கருதுகிறார் என்று பார்த்தால், கல்வி கற்றுவிடுவதினால் பொது மக்கள் தாங்கள் இருந்துவரும் வாழ்வில் அதிருப்தியடைந்து விடுவார்கள் என்பது ஒன்றேயாகும். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், அந்தந்த வகுப்பார் தங்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தற்கால நிலைமையோடு திருப்தி யடைந்திருக்க வேண்டும் - அதாவது அடிமை எப்பொழுதும் அடிமையாகவே இருக்க வேண்டும் என்பதாகும். அவர் அந்த முடிவிற்கு வந்ததற்குக் காரணம், தாம் வருணமுறைப்படி ஜாதி பாகுபாட்டை ஒப்புக்கொண்டதேயாகும்.''

மேலும் ''காந்தியார் வருணாச்சிரமம் - ஜாதிபாகுபாடு – மனித இயற்கைக்கே இயல்பானது என்றும், இந்துமதம் அவ்வியல்பான ஒரு குணத்தை சாஸ்திரீக முறைப்படி வகுத்திருக்கிறது என்றும், இவ்வெண்ணம் மனிதனுக்குப் பிறப்பிலிருந்தே தோன்றக் கூடியதாகும் என்றும், எவனும் தான் நினைத்த மாத்திரத்தில் தனது வருணத்தை (ஜாதியை) மாற்றிக் கொள்ளவோ அல்லது நிர்ணயத்துக் கொள்ளவோ முடியாது என்றும், ஆத்மா வளர்ச்சியைக் கருதும் ஒவ்வொருவனும் சமபந்தி போஜனத்தையும் கலப்பு மணத்தையும் தடுக்க வேண்டும்'' என்றும் கூறியிருக்கிறார்.

''பஞ்சமர்கள் என்றோ அல்லது மற்றும் அதுபோன்ற பலபேர்கள் என்றோ அல்லது வேறு எந்த நாமத்தால் அழைக்கப்பட்ட மக்களானாலும் சரியே, அவர்கள் யாவரும் தனியாகப் பிரிக்கப்பட்டு, உயர்ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற மக்களுக்கு ஊழியஞ்செய்து உழல்வதே அவர்களின் கடமை என்பதாக அவர் நினைக்கிறார் போலும்!''



''அவர் எழுதினதிலிருந்து நாம் அறியக்கிடப்பதாவது, இந்திய சரிதத்தைப்பற்றிய அறிவு அவருக்கு மிகக் குறைவு என்றோ அல்லது அவரது ஜீவியத்தின் முக்கிய பாகம் பிற நாடுகளில் வாழ்க்கையை நடத்தினவர் என்றோ அல்லது ஒரு வேளை இந்நாட்டில் ஜாதிப்பாகு பாட்டால் ஏற்பட்டு வரும் தீமைகளை தாம் அறியாமல் இருந்திருக்க வேண்டும் என்பதாகவோ அது காட்டுகிறது. அப்படி இல்லையானால் கீழே காணப்படுகிற விஷயங்களை அறிந்திருப்பார்.

1. ''இந்தியாவை அந்நியர் - அதாவது மகமதியர், ஆங்கிலேயர் முதலானவர்கள் ஜயித்து ஆளுவதற்கு இந்நாட்டில் உள்ள ஜாதிப் பாகுபாடே காரணமாகும். மேலும் அவர்கள் தங்களது ஆட்சியை செலுத்தி வருவதற்கும் தாழ்த்தப்பட்ட மக்களே காரணமாகும். அவர்களது உதவி தான் மிகவும் ஆதரவை அளித்துவரக் கூடியதாகும்.''
2. ''இந்தியாவில் அதிகமான பேர் கிறிஸ்தவ மதத்திலும் மகமதிய மதத்திலும் மாறினதற்கு இந்தியாவிலுள்ள ஜாதிப் பிரிவினையேயாகும்.''
3. ''மனித வர்க்கத்தின் இழிவிற்கே இதுதான் பொறுப்பாகும். பழய காலத்திலிருந்த அடிமையின் இழிவோ அல்லது தற்காலத்தில் உள்ள அடிமையின் இழிவோ அல்லது வேறு எதுவானாலும் இத்தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எள்ளளவும் சமமாகாது.''
4. ''இந்தியாவின்கண் உள்ள இந்துக்கள் – மகமதியர்கள் பிராமணர்கள் - பிராமணரல்லாதார்கள் என்று சொல்லக்கூடிய கட்சி பிரதிகட்சிகள் இருப்பதற்கும் இந்த ஜாதிப்பிரிவே காரணமாகும்.''
5. ''சமூக முன்னேற்றத்திற்கோ அல்லது பொருளாதார முன்னேற்றத்திற்கோ அல்லது தேசீய முன்னேற்றத்திற்கோ ஆனாலும் சரியே இந்த ஜாதிப் பிரச்சனைதான் பெரும் தடையாய் இருக்கிறது.''

''ஆகவே ஏதோ அங்குமிங்குமுள்ள சில அற்பமான குறைகளைத் துடைத்து விட்டு, முக்கியமான, ஜாதிப்பிரிவினைக்கே அஸ்திவாரமான கோட்பாடுகளையெல்லாம் தோழர் காந்தியார் அவ்வாறே ஆதரித்து வருகிறார்.''

''மெக்காலே பள்ளிக் கூடத்தில் 4-வது பாரம் படிக்கிற ஒரு பள்ளிப் பையன் கூட நம்பமுடியாத ஒரு பெரிய விசாரணையில் இறங்கியிருக்கிறார். அதாவது ஜாதிப்பாகுபாடுகளின் அவசியமும் அதனால் மக்களுக்கு ஏற்படும் நன்மையும் என்பதைக் குறித்தும் ஜாதிப்பாகுபாடு இருந்துவர வேண்டும் என்பது பற்றியும் அதனால் லாபம் இருக்கிறது என்பதையும் கண்டுபிடிக்க பெரியதொரு ஆராய்ச்சியில் இறங்கி இருக்கிறார்.

''இந்த ஜாதிப்பாகுபாடு சம்மந்தமான விஷயங்களால் ஏற்படக்கூடிய தீமைகளையும் குறைவுகளையும் பற்றிய ஞானம் அவருக்கு இல்லை என்று தான் சொல்லவேண்டும். அது சம்மந்தமான ஆதாரங்களையும் அவர் பார்த்திருக்கவில்லை என்று தான் தெரிகிறது.''



RangaRakes tamilnavarasam.com

''அன்றியும் அவர் ஜாதி பாகுபாட்டை ஆதரிப்பதானது உயர் ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களுடைய ஆதரவை தேடிக் கொள்வதற்காகவேயாகும். ஏன் அவர்களுடைய ஆதரவைத் தேடுகிறார் என்றால் அவர்கள் தான் அவருடைய வேலைக்கு பணவுதவியளிக்கிறார்கள். அவர்கள் உதவாவிடில் அவருடைய திட்டமெல்லாம் பாழாய் போய்விடும்.''

''அவருடைய கோஷ்டியார்களிலே ஒருவர் இந்நாட்டில் இருந்த கலைகளையும் சாஸ்திரங்களையும் இந்த ஜாதிப்பிரிவே அழிந்து விட்டது என்று கூறியிருக்கிறார். 'இந்தியாவானது ஒரு காலத்தில் எல்லா கலைகளுக்கும், (விஞ்ஞான) சயன்சு முதலிய சாஸ்திரங்களுக்கும் பிறப்பிடமாயிருந்து புகழப்பெற்றும் வந்தது. அத்தகைய ஒரு நாடு இப்பொழுது தாழ்த்தப்பட்டு, சுதந்திரமற்று, அடிமையாக்கப்பட்டு இருப்பதற்கும், மக்கள் சுதந்திரமற்று வாழ்வதற்கும் காரணமாய் இருந்து வருவது இந்த ஜாதிப் பாகுபாடு ஒழிந்துபோகும் என்ற பயமேயாகும்' என ஹிந்து ரசாயன சாஸ்திரத்தைப் பற்றிய சரித்திரம் எழுதிய ஸர்.பி.சி.ரே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.''

''இந்நாட்டில் உயர்ந்த சர்க்கார் உத்தியோகத்திற்கு இன்றியமையாத கல்வி வேண்டாம் என்பதும், இந்தியர் கைத்தொழில் உற்பத்திக்கும் உலோக அபிவிருத்திக்கும் அவசியமான கல்வி தேவையில்லை என்பதும் தோழர் காந்தியாரின் அபிப்பிராயம்.''

''இவ்வெண்ணத்திற்கேற்பவே காந்தியார் காசியில் உள்ள நேஷனல் ஹிந்து சர்வகாலாசாலையையும் அலிகாரிலிருக்கும் மகமதிய சர்வகலா சாலையையும் ஒழிப்பதற்காக அரும்பாடுபட்டார். மேல்நாட்டுக் கல்வியையும் கீழ்நாட்டுக் கல்வியையும் அக்கலாசாலைகளில் போதிக்கப்பட்டு வந்திருந்தது. காந்தியாருடைய பெரு முயற்சி யாவும் இவ்விஷயத்தில் நல்லதிர்ஷ்ட வசமாக சித்தியளிக்காமல் போய்விட்டது.''

''தோழர் காந்தியார் அவ்வாறு ஜாதிபாகுபாட்டை ஆதரித்ததால் உயர்ந்த ஜாதியார்களின் ஆதரவும், ஹிந்து மதத்தின் முன்னுக்குப் பின் முரணான கொள்கைகளும் அவருக்குப் பக்கபலமாயிருக்கின்றன. அவரும் அவருடைய சகாக்களும், மகமதியர்களும், மகமதியரல்லாதார்கள் என்ற பிரச்சனையை பலப்படுத்தி அவ்விரு வகுப்பாருக்குள்ளும் பெரிய பிளவுகளை உண்டு பண்ணியும் வருகிறார்கள். இதைவிட மேலாக இந்தியர்கள், ஆங்கிலேயர்கள் என்ற பிரச்சனையை உண்டாக்கி இவர்களுக்குள்ளும் தீராப் பகையையும், வெறுப்பையும், பயத்தையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.''

''ஆகவே சீர்திருத்தவாதிகள் எனப்படுபவர்கள் யாவரும் சிறப்பாக இந்துப்பெண்கள் மகமதியப் பெண்கள் முதலானவர்களிடம் உள்ள குறைகளை நீக்கி அவர்களின் நிலையை உயர்த்தப் பாடுபட வேண்டும். அவர்களின் ஒத்துழைப்பும் முன்னேற்றமுமில்லாமல் இந்திய நாடானது ஒருநாளும் நாகரீக தேசங்களோடு சமமாகப் பாவிக்க முடியாது என்பதாகும்.''

''தோழர் காந்தியார் மற்றொருபுறம், மகமதியர்கள் நினைத்துக் கொண்டிருக்கும் வீண் எண்ணம் எல்லாம் ஆசைகளுக்கு இடங்கொடுக்கக் கூடியதென்றும், இந்து மதத்தில் உள்ள குலாச்சாரம் நியாயமானதென்றும் நினைக்கிறார். தற்காலத்தில் உள்ள பெண்களின் நிலைக்குக் காரணமான ஜாதி அனுஷ்டானத்தையே நாம் ஆதரிக்கவேண்டும் என்றும் அதையே பின்பற்ற வேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறுகிறார். ஒடுக்கக் கூடிய அல்லது அடக்கி ஆளக்கூடிய சட்டங்களை ஆதரித்தும் வருகிறார். இச்சட்டங்கள் தான் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேறவிடாமல் அடிமைப்படுத்தி, அறிவற்று, சுயமரியாதையற்று இருக்கச் செய்திருக்கிறது. நம்முடைய எதிரிகள் நமக்கு சுய ஆட்சி நடத்தும் சக்தியில்லை என்று சந்தேகிக்கச் செய்வதோடு மட்டும் நின்றுவிடாமல். நமக்குச் சுய ஆட்சி (Home Rule) இந்தியாவிற்கு அளிப்பதை தாமதிக்கும்படியாகவும், அதற்கான நியாயங்களை அவர்கள் கூறுவதற்கான வசதிகளையும் தோழர் காந்தியார் ஏற்படுத்தி விட்டார். நான் முன்கூறியபடி அவர் எல்லாத்துறைகளிலும் அதாவது சீர்திருத்தவாதிகள் முயல்கிற சகல மார்க்கங்களிலும், குல வித்தியாசத்தையும் வகுப்பு வித்தியாசத்தையும் கிளர்ச்சி செய்து கொண்டும் தேசம் பிற்போக்கடையும்படியான காரியங்களைச் செய்து கொண்டும் வந்திருக்கிறார்.''

பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - நவம்பர் 1935





RangaRakes tamilnavarasam.com

# விதண்டாவாதம்

**- குறும்புச் சந்தேகி**

மதத்துக்கு அரசாங்கம் பாதுகாப்பாயிருக்கிறதா? அல்லது அரசாங்கத்துக்கு மதம் பாதுகாப்பாயிருக்கிறதா?

* * *

கடவுளுக்கு பணக்காரன் பாதுகாப்பா? அல்லது பணக்காரனுக்கு கடவுள் பாதுகாப்பாயிருக்கிறதா?

* * *

மதத்தைப் பணக்காரன் காக்கின்றானா அல்லது பணக்காரனை மதம் காக்கின்றதா?

* * *

கடவுள் இல்லாமல் பணக்காரன் வாழமுடியுமா? அல்லது பணக்காரன் இல்லாமல் கடவுள் வாழ முடியுமா?

* * *

பார்ப்பானை கடவுள் உண்டாக்கினாரா? அல்லது கடவுளை பார்ப்பான் உண்டாக்கினானா?

* * *

கடவுள் இல்லாமல் மனிதன் வாழ முடியாதா? அல்லது மனிதன் இல்லாமல் கடவுள் வாழமுடியாதா?

* * *

மனிதனுக்காக மதம் இருக்கிறதா? அல்லது மதத்துக்காக மனிதன் இருக்கிறானா?

* * *

மதம் மக்களை மாற்றிக்கொள்ளுகிறதா? அல்லது மக்கள் மதத்தை மாற்றிக்கொள்ளுகிறார்களா?

* * *

மனிதனுக்கு மதம் ''ஜாதியைப் போல்'' பிரவியில் ஏற்பட்டதா? அல்லது மனிதன் பிறந்தபின் மதம் வந்து புகுந்து கொள்ளுகிறதா?

* * *



இப்பொழுது, காந்தியார் மனிதனுக்கு மதம் பிறப்போடு வருகிறது என்கிறார். அன்றியும் அது சட்டையைக் கழட்டுவதுபோல் கழட்டக்கூடியது அல்ல என்கிறார்.

* * *

அப்படியானால், மதமற்ற நாஸ்திகனுக்குப் பிறக்கிற குழந்தை எந்த மதத்தைச் சேர்ந்தது?

* * *

தகப்பன் கிறிஸ்தவனாகவும், தாய் இந்துவாகவும் இருந்தால் இவர்களது குழந்தை எந்த மதத்தோடு பிறக்கிறது?

* * *

எல்லா மதக்காரர்களுடனும் சம்பந்தம் வைத்துக்கொள்ளும் தேவதாசிகளின் குழந்தைகளுக்கு எந்தமதம் பிறவி மதம்?

* * *

இந்து பிரசிடெண்ட்டுகளுக்கும் கிறிஸ்துவ உபாத்தினிகளுக்கும் பிறக்கும் குழந்தைகளுக்கு எந்த மதம் பிறவி மதம்.

* * *

முஸ்லீம் சேர்மென்களுக்கும் இந்து உபாத்தினிகளுக்கும் பிறக்கும் குழந்தை எந்த மதத்தைச் சேர்ந்தது?

* * *

ஐரோப்பிய ஆபீசர்களுக்கும், இந்திய உத்தியோகஸ்தர் பெண்களுக்கும் பிறக்கும் குழந்தை எந்த மதத்தைச் சேர்ந்தது?

* * *

முதலில் ஒரு இந்துவையும், பிறகு ஒரு முஸ்லீமையும் மணந்து கொண்ட கிறிஸ்துவ பெண்ணுக்கு பிறந்த குழந்தைகள் எந்த மதத்தோடு பிறக்கின்றன?

* * *

ஆரிய சமாஜிகளால் முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் முதலியவர் களிலிருந்து மதம் மாற்றம் செய்யப்பட்டவர்களும், கிறிஸ்தவர்களால் இந்துக்களில் இருந்து மதம் மாற்றம் செய்யப்பட்டவர்களும், முஸ்லீம்களால் இந்துக்களிலும், கிறிஸ்தவர்களிலும் இருந்து மத மாற்றம் செய்யப்பட்டவர்களும் எந்த மதத்தோடு பிறந்தவர்களாகிறார்கள்.

* * *

அது எப்படி கண்டுபிடிக்கமுடியும்?

* * *



RangaRakes tamilnavarasam.com

இந்தப்படி மதம் மாறியவர்களும், மதம் மாற்றப்பட்டவர்களும் செத்தால் மதம் மாறியதற்காக நரக மோக்ஷமடைவார்களா?

* * *

எந்த மத சம்பந்தமான மோக்ஷ நரகங்களை அடைவார்கள்?

* * *

இன்று இந்தியாவில் உள்ள 8-கோடி முஸ்லீம்களும் ஒரு கோடி கிறிஸ்தவர்களும் ஆதாம் ஏவாள் காலம் தொட்டே முஸ்லீமாகவும், கிறிஸ்தவர்களாகவும் இருக்கிறார்களா? அல்லது சட்டையைக் கழட்டுவது போல், பழய மதங்களைக் கழட்டிவிட்டு, வேறு மதத்தை மாட்டிக் கொண்டவர்களா?

* * *

மதங்களுக்கு இருக்கும் சட்டம்தான் ஜாதிப்பிரிவுகளுக்கும், வருணாச்சிரம தர்மங்களுக்கும் இருந்து வருகிறதா அல்லது இவைகளுக்கு வேறு சட்டமா?

* * *

ராமானுஜர் காலத்தில் வைணவர்களாக ஆக்கப்பட்ட, ஆசாரிகள், மண் உடையார்கள், நாடார்கள், தேவாங்கர்கள், பல ''தாழ்ந்த'' வகுப்பார்கள் எல்லோரையும் அவர்கள் சந்ததியார்களையும் இன்று எப்படி மதிக்கிறது?

* * *

கீதைப்படியும், மனுதர்ம சாஸ்திரப்படியும் சூத்திர ஆணுக்கும் பிராமணப் பெண்ணுக்கும் பிறந்த குழந்தை எந்த வருணத்தைச் சேர்ந்தது?

**பகுத்தறிவு (மா.இ.) - துணுக்குகள் - நவம்பர் 1935**



# குச்சிக்காரி புத்தி

## ''நீ மாத்திரம் வாழ்ரயோ?''

## I

காங்கிரசின் அயோக்கியத்தனமும், அதில் வயிறு வளர்த்த பார்ப்பனர்களின் இழி தன்மையும், அவர்களுடைய கூலிகளின் கூட்டிக் கொடுக்கும் தனமும் இன்று அசல் குச்சிக்காரியின் தன்மைக்கே வந்துவிட்டது.

காங்கிரஸ்காரர்கள் பொது மக்களை ஏமாற்றி வசூலித்த கோடிக் கணக்கான ரூபாய்களின் மோசத்தைக் குறித்து வெகுநாளாகவே பொது ஜனங்கள் பேசி வருகிறார்கள். காந்தியார் முதல் ஒவ்வொருவரையும் அனேகர் நேரில் கண்டு கேட்டும் வந்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் காங்கிரஸ்காரர் அவ்வப்போது மழுப்பிக் கொண்டே வந்திருக்கிறார்களே ஒழிய கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நாளதுவரை சரியான சமாதானம் சொல்லப்படவில்லை.

### ஒரு கோடி ரூபாய் பித்தலாட்டம்

அதாவது ஒரு கோடி ரூபாய் இன்ன காலத்துக்குள் சேர்ந்துவிட்டால் ஒரு வருஷத்தில் சுயராஜ்ஜியம் வாங்கிக் கொடுக்கிறேன் என்று காந்தியார் முதல் காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் பொது ஜனங்களை ஏமாற்றி ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமாகவே வசூலித்தார்கள்.

ஒரு வருஷத்தில் சுயராஜ்ஜியம் வந்ததா? இதோ சுயராஜ்யம் வந்துவிட்டது. அதோ சுயராஜ்யம் வந்து விட்டது என்று சொன்னதோடு சுயராஜ்யத்தின் நிழல் தெரிகின்றது என்றுகூட சொல்லி மறுபடியும் வசூல் செய்தார்கள். இது இல்லை என்று யாராவது சொல்ல முடியுமா?

சுயராஜ்யம் வராத விஷயம் ஒரு பெரும் ஏமாற்றமாக இருக்கட்டும், ஏனெனில் அந்த வார்த்தையே ''கீக்கிரி மூக்கிரி'' என்பதுபோல் அர்த்த மற்றதாகிவிட்டது. ஆதலால் ஏமாற்றிப் பணம் பறிப்பதற்காகவே அப்படிச் சொன்னதாக இருக்கட்டும். ஆனால் அந்த ஒரு கோடி ரூபாய் என்ன ஆயிற்று என்பதற்கு சரியான பதில் சொல்ல வேண்டியது யோக்கியர்களின் கடமையல்லவா?



RangaRakes tamilnavarasam.com

அதற்கப்புறமும் 3, 4 தடவைகளில் பணம் லட்சக்கணக்கில் வசூலிக்கப்பட்டன. அவற்றின் கதி என்ன ஆயிற்று என்பதற்குப் பதில் சொல்ல வேண்டியது யோக்கியர்களின் கடமை அல்லவா?

முட்டாள்களின் பணத்தை மோசக்காரர்கள் வஞ்சகக்காரர்கள் வசூலித்து வயிறு வளர்ப்பது இயற்கை என்றாலும் அந்தப் பணமானது மற்ற சாதுக்களுக்கும் உண்மையான தொண்டு புரிபவர்களுக்கும் இடையூறாக இருக்குமானால் இனியும் மக்களை ஏமாற்றி வசூலிக்காமல் இருப்பதற்கும், முட்டாள்கள் மோசம் போகாமல் இருப்பதற்கும் வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியது உண்மையான ஊழியர்களின் கடமை அல்லவா என்று கேட்கின்றோம்.

ஆகவே இந்த 3, 4 தடவை வசூலித்த பொதுப் பணம் சுமார் 20000000 இரண்டு கோடி ரூபாய்க்கு காங்கிரஸ்காரர்கள் இப்போது என்ன விபரம் சொல்லுகிறார்கள் என்பதைக் கவனிப்போம்.

முதலாவது விபரம் என்னவென்றால் அதைப்பற்றிக் கணக்குக் கேட்பவன் தேசத் துரோகி என்று சொல்லி இழிகுணமாய் வைவதாகும்.

இரண்டாவது விபரம் என்னவென்றால் கேட்பவனை நீ மாத்திரம் யோக்கியனா என்று குச்சிக்காரித்தனமாய்ப் பேசுவதாகும்.

மூன்றாவது விபரம் ஏதோ அங்கும் இங்கும் சில தவறுதல்கள் இருப்பது சகஜம்தான். அதை எல்லாம் ஒரு பெரிய காரியத்தில் கவனிக்கலாமா? தேசபக்தர்கள் தியாகிகள் என்பவர்கள் தானே கையாண்டு இருக்கிறார்கள். போனால் போகட்டுமே என்று பல்லைக் கெஞ்சுவதாகும்.

2 கோடி ரூபாய் நாசமானதைப் பற்றி இங்கு நாம் அதிகக் கவலைப்படவில்லை. ஏனெனில் இந்தியா பூராவுக்கும் சிறிது காலத்தில் (2 கோடி ரூ.) பொது மக்களிடம் இருந்து சுயராஜ்ஜியத்தின் பேரால் வசூலிக்கப்பட்டது 2 கோடியாகுமானால், இதே கூட்டத்தார் தென்னாட்டில் மாத்திரம் கோயில்கள் மடங்கள் என்னும் பேரால் வசூலிக்கப்படும் ரூபாய்கள் வருஷம் ஒன்றுக்கு 2½ கோடி ரூபாய் 3 கோடி ரூபாய் ஆகின்றது.

இந்தப் பணங்கள் 2½ கோடி அல்லாமல் கணக்குக்கு வராமல் சுவாமி, கோவில், மடம் என்னும் பெயரால் கொள்ளையடிக்கும் பணம் அதைப் போல் பல மடங்கு இருக்கலாம். இவையெல்லாம் என்ன கதி ஆகின்றது என்று பார்த்தால் காங்கிரஸ் சுயராஜ்ஜியம் என்னும் பெயரால் போகும் கொள்ளை, அதில் நடக்கும் அயோக்கியத்தனம், திருட்டு புரட்டு ஆகியவை பிரமாதமல்ல என்று தோன்றும். ஆனால் இரண்டுக்கும் தான் ''கணக்கு'' வெளியிடப்படுகிறது என்று சொல்லலாம்.



இதற்குக் கணக்குக் கேட்டாலும் கேட்டவனை இதுபோலவேதான் நாஸ்திகன் என்றும், மதத்துரோகி என்றும், ஜாதித் துவேஷி என்றும், பச்சையாய் பார்ப்பன துவேஷி என்றும் தான் சமாதானம் சொல்லப்படுகிறது.

காட்டப்படும் கணக்குகளினுடைய மோசம் எப்படி இருக்கும் என்று பார்த்தால் ஒரு யோக்கியமான கோர்ட்டு மூலம் இன்று உள்ள குருக்கள் அர்ச்சகர், தர்மகர்த்தாக்கள், டிரஸ்டிகள், கமிட்டி மெம்பர்கள் என்பவர்களில் 100க்கு 99 பேர் ''போர்ஜரி, பொய்க்கணக்கு, பொதுச் சொத்தை கையாளுதல் என்கின்ற குற்றங்களுக்கு வருஷக்கணக்காய் ஜெயிலுக்கு போக வேண்டியவர் களாவார்கள், பலர் நாடு கடத்தப்பட வேண்டியவர்களுமாவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் வேண்டியதில்லை. கோவில் கள்ளர் குகை என்றும், விவசாரிகள் இல்லம் என்றும் சொன்னவர்கள் வாய்க்குச் சர்க்கரை போட வேண்டும் என்று சொல்லும்படியான நிலையில்தான் இருந்து வருகிறது.

மற்றும் அக் கணக்குகளைப் பார்க்க யாருக்கு அக்கரை? யார் மூலம் பரிசோதகர்கள் வைத்து பார்க்கப்படுகின்றது? பரிசோதகர்களின் யோக்கியதை என்ன? அர்ச்சகர் குருக்கள் ஆகியவர்களிடம் உள்ள மோகனாஸ்திரம் என்ன? டிரஸ்டிகளின் செல்வாக்கு எப்படிப்பட்டது? என்பவைகளையெல்லாம் பார்த்தால் எந்தக் கணக்காவது உண்மையாய் யோக்கியமாய் பார்க்கப்பட்டு எந்தக் கணக்காவது உள்ளதை வெளியில் சொல்லிவிட முடியுமா என்பதும் மற்றும் அக்கணக்கின் யோக்கியதையும் நன்றாய் விளங்கும்.

அதுபோலவே காங்கிரசையும் சுயராஜ்ஜியப் பேச்சையும் அதன் டிரஸ்டிகள், கமிட்டி மெம்பர்கள் பிரசாரகர்கள் ஆகியவர்களின் யோக்கியதையும் பார்த்தால் தேசாபிமானம் என்பது வடிகட்டின அயோக்கியர்களின் வயிற்றுப் பிழைப்புக்கு மார்க்கம் என்று சொன்னவர்கள் வாய்க்கு சர்க்கரை போட வேண்டிய அளவுக்கு மெய்ப்பிக்கப்பட்டுவிடும்.

நமது தேசாபிமானிகள் யார்? அதன் டிரஸ்டிகள் யார்? கமிட்டியார்கள் யார்? இவர்களின் கூலிகள் யார்? இவர்களை ஆதரிக்கும் பத்திரிகைக் காரர்கள் யார் என்பவைகளைக் கவனித்து இவர்களின் நடவடிக்கை இது வரை எப்படி இருந்து வந்தது என்பதையும், அவர்களது தனிப்பட்ட யோக்கியதையும், கொடிவழிப்பட்டியையும் பார்த்தால் தேசாபிமானத்தின் பேரால் வசூலிக்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபாய்கள் கொள்ளை போயிற்று என்று சொல்லுவதில் அதிசயமிருக்காது. ஏனெனில் அதைத் தவிர வேறு ஒன்றுக்கும் வசூலிக்கப்படவில்லை என்றும், அதிலுள்ள ஆட்களின் யோக்கியதை இதற்கு மேல் எதிர்பார்க்க முடியாது என்றும், தெரிந்த விஷயத்தைப் பற்றி குறை கூறுவது முட்டாள்தனத்தைத் தவிர வேறு பயன் அளிக்கக்கூடியதாகுமா என்பதும் விளங்கும்.



RangaRakes tamilnavarasam.com

இந்த நிலையில் சுயராஜ்ஜிய நிதிப் பணங்கள் யார் பேரால் வசூல் செய்யப்பட்டதோ அவரது சந்ததியார்களே இப்பண சம்மந்தமான கணக்குகளில் உள்ள புரட்டுகளைக் கண்டு பிடித்து வெளியிட்டிருப்பதைச் சில பத்திரிகைகள் எடுத்துக்காட்டி, பொது ஜனங்களுக்கு இனியும் இப்படி முட்டாள்தனமாக ஏமாந்து போகக்கூடாது என்று எச்சரிக்கை செய்தால் அதைக் கண்ட யோக்கியர்கள் ஆத்திரப்படுவதின் காரணம் என்ன என்பதை விளக்க வேண்டுமா?

தமிழ்நாட்டு கமிட்டியைப் பொருத்தவரை பணம் கொள்ளை போன விஷயம், கணக்குச் சொல்லாமல் வரவு வைத்து சரி செய்து கொண்ட விஷயம் எல்லாம் கூட்டிப் பார்த்தால் நமக்குத் தெரிந்த வரை 3, 4 வருஷங்களில் வருஷம் பல பல ஆயிரக்கணக்கில் இருக்கும் என்று இப்போதும் பந்தயம் கட்டி உறுதி கூறுவோம்.

மொத்தத்தில் இப்பவும் ஒரு ஸ்டேட்மெண்ட் வெளியிடுகின்றோம். அதை மறுக்க காங்கிரசாருக்கு அல்லது அவர்கள் கூலிகளுக்கு சரக்கு இருக்குமானால் வெளியில் வரட்டும் என்று அறைகூவி அழைக்கின்றோம்.

அதாவது 1922, 23, 24, 25-ல் காங்கிரசில் இருந்த பார்ப்பனர்கள் தோழர்கள் டாக்டர் ராஜன் சாஸ்திரியார், எம்.கே. ஆச்சாரியார், சந்தானமய்யங்கார், சுப்பிரமணியம் முதலியவர்களும் மற்றும் சேலம் பார்ப்பனர்கள், திருநெல்வேலி பார்ப்பனர்கள், சென்னைக்காரர்கள் முதலிய சகல பார்ப்பனர்களும், தாங்கள் வாங்கிய பணங்களுக்கு வாங்கியபடி சரியான கணக்குக் கொடுத்தார்களா? எவ்வளவோ ஆயிரம் ரூபாய் இவர்கள் பேரிலிருந்து சரியான வகையும் பொறுப்பும் தெரியாமல் வசூலிக்க முடியாமல் வெளியில் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு (ஆயிரம் ஆயிரமாய்) வரவு வைத்து செலவெழுதப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் சேராமல் இன்று எந்தக் காங்கிரஸ் பார்ப்பனராவது மீதியாய் இருக்கிறார்களா என்பதாகும்.

மற்றும் எத்தனையோ பார்ப்பனர்கள் கதர்கடையில் இருந்து பணம் பச்சையாகத் திருடிக் கொண்டு போய் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் நடத்தாமல் விடப்பட்டிருக்கிறது என்பது பொய்யா என்று கேட்கின்றோம்.

மற்றும் திருச்சியில் மாத்திரம் நேற்று மீனாம்பள்ளி ஜமீன்தாருக்குப் போட்டியாய் காங்கிரஸ் கேண்டிடேட்டாய் நின்றவர்கள் அவர்களுக்கு வேலைசெய்தவர்கள் முதல் கதர் போர்டில் கதர் சம்மந்தத்தில் இருந்த ஒரு டஜன் பார்ப்பனர்களில் (பெயர் வேண்டுமென்று காங்கிரஸ் பத்திரிகைகள் கேட்டால் எழுதத் தயாராயிருக்கிறோம்) ஒருவராவது யோக்கியமாய் நடந்து கொண்டார்கள் என்று சொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம்.



காங்கிரஸ் ஆபீசில் சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை பார்த்தவர்களில் பண விஷயத்தில் நாணயமாய் நடந்து கொண்டவர்கள் 100க்கு 10 பேராவது உண்டா என்று கேட்கின்றோம்.

காங்கிரஸ் ஆடிட் ரிப்போர்ட்டு என்பதாக 1922 வருஷ முதல் நாளது வரை அச்சிட்டு வைத்திருப்பதும், அக்கணக்குகளில் யார் யார் பேரால் வர வேண்டிய ரூபாய்கள் விவரமில்லாமல் ஒரு வரியில் வரவு வைத்துச் செலவெழுதப்பட்டதும், இன்றும் ஒரு நடுநிலைமைக்காரர் தணிக்கை செய்து பார்த்தால் ஷெ ஒரு கோடி ரூபாய்போன வழியைப் பற்றி 'மராட்டா' 'விடுதலை' ஆகிய பத்திரிகைகள் சொல்வது எவ்வளவு கொஞ்சமானது என்பது விளங்கும்.

## ராமசாமி மீது குறை

தோழர் ஈ.வெ. ராமசாமி வைக்கம் சத்தியாக்கிரகத்துக்கு வாங்கிய நிதிக்கு கணக்குக் கொடுக்கவில்லை என்பதை ஒரு காங்கிரஸ் பத்திரிகை மராட்டாவில் வந்த சேதியை எடுத்து எழுதிய விடுதலையின் பிரசாரத்துக்கு சமாதானமாகச் சொல்லுகிறது.

இந்தச் சமாதானமானது விடுதலை சொன்ன குறைகளை காங்கிரஸ் பத்திரிகை ஆதரிக்கிறது என்று தான் அர்த்தமே ஒழிய, காங்கிரஸ் பண விஷயத்தில் அதன் நிர்வாகிகள் யோக்கியமாய் பொறுப்பாய் நடந்து கொண்டார்கள் என்பதாக ஆகவில்லை. தோழர் ராமசாமி இடம் கொடுத்த பணத்துக்கு ராமசாமி கணக்குச் சொல்லவில்லை என்பது வாஸ்தவமாய் இருந்து அவரிடம் கணக்குக் கேட்டு வாங்காமலும் வாங்கியிருந்தால் கொடுத்த பணத்தை வரவு செலவு செய்து கொண்டு பாக்கி உள்ளதற்கு கணக்கு வாங்காமலோ, வசூல் செய்யாமாலோ விட்டிருப்பார்களானால், காங்கிரஸ்காரர்கள் பணவிஷயத்தில் எவ்வளவு பொறுப்பற்றவர்களாய் நடந்திருக்கிறார்கள் என்பதற்கு வேறென்ன அத்தாட்சி வேண்டும்.

அன்றியும் நூறோ, இருநூறோ, ஐநூறோ, ஆயிரமோ ஈ.வெ.ரா. மீது பாக்கி இருந்தால் அதை வசூலிக்க அவரிடம் இன்று வரை மார்க்க மில்லாமல் போய்விட்டதா? என்றும் கேட்கின்றோம்.

இனி கதர் நிதி, திலகர் நிதி விஷயத்திலும் ஈ.வெ.ராமசாமியிடம் கணக்கு சொல்லப்படாமல் பாக்கி இருக்குமானால் எதற்காக அவருக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் காங்கிரசுக்கு ஏற்பட்டது என்பது நமக்கு விளங்கவில்லை.

தோழர் ஈ.வெ.ரா. 1924 ம் வருஷம் முதல் காங்கிரசையும், காங்கிரஸ் வேலையாட்களையும், காங்கிரஸ் தலைவர்களையும் தயவுதாட்சண்ணிய மின்றி வெளியாக்கிய வண்ணமாகவே இருந்து வருகிறாரே ஒழிய யாருக்கும் அடிமையாய் இருந்து வரவில்லை.



RangaRakes tamilnavarasam.com

அப்படி இருக்க ஈ.வெ.ரா.விடம் கதர் நிதிக்கு என்றோ, திலகர் நிதிக்கு என்றோ, வைக்கம் நிதிக்கு என்றோ கொடுத்த பணம் ஏதாவது மீதி இருக்குமானால், இந்த 10, 13 வருஷமாய் வசூல் செய்ய எது தடையாய் இருந்தது என்பதும், அதையேன் வெளிப்படுத்தாமல் இதுவரை மூடி வைக்கப்பட்டிருந்தது என்பதும் விளங்கவில்லை.

தோழர் ஆதிநாராயண செட்டியார் எழுதிய கணக்கு அறிக்கையைப் பார்த்தால் ஈ.வெ.ரா. யோக்கியதை வெளியாகும் என்று அப்பத்திரிகை எழுதி இருக்கிறது.

தோழர் ஆதிநாராயண செட்டியார் யோக்கியதை பெற்ற ஒரு கணக்கு பரிசோதகரல்ல என்றாலும், அவர் எழுதியதாகச் சொல்லப்படும் அறிக்கைக்குப் பிறகுதான் தோழர் ஈ.வெ. ராமசாமி மாகாணக் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாகவும், மாகாணக் காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும், மாகாண கான்பரன்ஸ், ஜில்லா கான்பரன்சுகளில் சுமார் 100க்கு மேற்பட்ட கான்பரன்சுக்குத் தலைவராகவும் கதர் போர்டுக்கு 5 வருஷ தலைவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்.

ஆகவே வாங்கிய பணத்துக்குக் கணக்குக் கொடுக்காதவர் எப்படி மாகாண காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு பல தடவை தலைவராக தெரிந்தெடுக்கப்பட்டார் என்பதை கவனித்தால் அவரை தெரிந்தெடுத்து அவரை பின்பற்றிய அத்தனை பேரும் திருட்டில் பங்கு வாங்கியவர்களா? அல்லது மடையர்களா? அல்லது அயோக்கியர்களா? என்று கேட்கின்றோம்.

காரியதரிசி பதவிக்கு அறிக்கை எழுதிய தோழர் ஆதி நாராயண செட்டியார், பல தடவை ஈ.வெ.ராவுடன் போட்டி போட்டு ஈ.வெ.ரா. வாங்கிய ஓட்டுக்கு 100க்கு 15 போலவே ஒவ்வொரு தடவையும் ஓட்டுப் பெற்று தோல்வி அடைந்திருக்கிறார். மற்றும் ஆதிநாராயண செட்டியாரைப் பற்றிய பாக்கி விஷயம் இதில் வர வேண்டியதில்லை. ஆகையால் அதை விட்டுவிட்டோம். ஆனால் ஒரு விஷயம் என்னவென்றால் கணக்கு தணிக்கை விஷயத்தில் ஆதிநாராயண செட்டியார் போன்ற ஆட்களை காங்கிரஸ் பார்ப்பனர்கள் நன்றாய் உபயோகித்துக் கொண்டார்கள். பிறகு அவரின் திருப்தி அற்ற நடத்தையாலேயே வேறு தகுதியுள்ள பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

### விவரம் ☛ ''வைக்கம் சத்தியாக்கிரகம்''

இவை ஒருபுறம் இருக்கட்டும். தோழர் ஈ.வெ.ரா. வைக்கம் சத்தியாக்கிரக நிதி விஷயமாய் வாங்கிய பணத்துக்கு கணக்கு கொடுக்கவில்லை என்பதற்கு சமாதானம் சொல்லி ஆக வேண்டுமல்லவா? குச்சிக்காரி மாதிரி ''நீ மாத்திரம் யோக்கியனா'' என்று சொன்னால் போருமா? அல்லது ''பெரிய காரியத்தில் இதெல்லாம் கவனிக்கக் கூடாது'' என்று சொல்லி தப்பித்துக் கொள்ளலாமா? அல்லது ''சகலத்தையுந் துறந்த தேச பக்த தியாகிகள் தானே கையாடினார்கள்'' என்று சொல்லலாமா? கணக்கு சொல்லித் தானே ஆக வேண்டும். எனவே வைக்கம் சத்தியாக்கிரகத்துக்கு அட்வான்சாக ரூபாய் ஆயிரம் (19000 அல்ல) ஈ.வெ.ரா. பேருக்கு வைக்கத்துக்கு அனுப்பியது உண்மை. அப்பணத்துக்கு ஈ.வெ.ரா.வால் 2 தடவை கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரம் கூறுகிறோம்.

முதலில் 2 தடவை ஏன் கணக்கு கொடுக்கப்பட்டது என்பது ஒரு கிளைக் கேள்வி ஆகலாம். ரசீதுகளுடன் முதல் தடவை கொடுத்தக் கணக்கு காங்கிரஸ் ஆபீசில் கை தவறி விட்டது. இரண்டாம் தடவை கணக்கு கேட்டதற்கு ஈ.வெ.ரா. முதலிலேயே வவுச்சருடன் கணக்கு அனுப்பி ஆய்விட்டது என்று பதிலெழுதினார். பிறகு தோழர் முத்துரங்க முதலியார் ஆபீசுக்கு அதிகாரியாக வந்தார். அந்த சமயம் ஈ.வெ.ரா. காங்கிரசை பலமாக தாக்கிக் கொண்டிருந்த சமயம். ஆதலால் முத்துரங்கத்தைப் பிடித்து அவர் மூலமாக ஈ.வெ.ரா. மீது ஏதாவது ஒரு குற்றச்சாட்டு தயாரிக்க சூக்ஷி செய்து அதற்கு ஆக எவ்வளவோ தூரம் பழங்கணக்குகளை எல்லாம் பூதக்கண்ணாடி வைத்து ஆபீசில் பரிசீலிக்கப்பட்டு, இந்த ஒரு விஷயம் அதாவது, ''1000க்கு கணக்கு அனுப்பாமல் இருக்கும்'' விஷயத்தைக் கண்டுபிடித்து கணக்கு அனுப்பும்படி ஈ.வெ.ராவுக்கு ரிஜிஸ்டர் நோட்டீசு அனுப்பி, கணக்கு கேட்கப்பட்டது. கணக்கு அனுப்பாவிட்டால் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் என்று அதில் எழுதி இருந்தது. அதற்குப் பதிலாக மறுபடியும் ஒரு தடவை கணக்குகளை ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பப்பட்டது.

இந்தக் கணக்கின் பேரில் அக்கணக்கில் கண்ட நபர் ஒவ்வொருவருக்கும் எழுதி அதில் கண்ட பணம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டதா என்று காங்கிரஸ் ஆபீசிலிருந்து எழுதிக் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கு அவர்கள் பெற்றுக் கொண்டதாக ஆபீசுக்குத் தகவல் எழுதியும் இருக்கிறார்கள்.

அதாவது 1000 ரூபாயில் 700 ரூபாய் வைக்கம் சத்தியாக்கிரக காரியதரிசிக்கு கொடுக்கப்பட்டதும் பாக்கி 300ல் பாலக்காடு சவுரி ஆச்சிரமத்துக்கு கதருக்குப் பஞ்சு வாங்கி அனுப்பியதும், மீதி நூத்திச் சில்லரை ரூபாய் கோட்டார் சத்தியாக்கிரகத்துக்கு கொடுக்கப்பட்டதும் ஆகிய கணக்குகள் மேல்கண்டபடி இரண்டு தடவை அனுப்பப்பட்டிருக்கிறது.

### கதர் நிதி

மற்றபடி கதர் நிதி பண்டு 500 ரூ. விஷயமாய் ஈரோடு பொறுத்தவரை எந்த நபரிடம் பாக்கி இருந்ததோ அந்த நபரைத் தோழர் சந்தானமய்யங்காரே பல தடவை நடந்து கேட்டு பகுதி வசூல் செய்யப்பட்டு, பகுதி வசூல் செய்யாமல் அலட்சியமாய் விட்டு விட்டார்கள். இது அவருக்கும் நன்றாய் தெரியும்.


RangaRakes tamilnavarasam.com

மற்றபடி திலகர் நிதி விஷயம் ஒன்றும் கிடையாது. ஜில்லா ஆபீசு கணக்கு விஷயமாய் ஈரோடு ஜில்லா கமிட்டி காரியதரிசியிடமிருந்து கோயமுத்தூர் ஜில்லா கமிட்டி காரியதரிசி கணக்குப் பார்த்து நேர் செய்து வரவேண்டிய ரூபாய்கள் பூராவும் பெற்றுக் கொண்டு கணக்கில் கையொப்பம் செய்து விட்டு போயிருக்கிறார். **இவைகளில் எதற்கும் ஈ.வெ.ராமசாமிக்கு நேரில் சம்பந்தமில்லை.**

இந்த உண்மைகள் இன்றும் யார் வேண்டுமானாலும் ஆதாரங்களோடு அறிய தக்க சவுகரியம் இருக்கிறது. இவை எப்படியோ இருந்தாலும் காங்கிரஸ் பணம் பாழாயும் கொள்ளை போயும் இருப்பதை ஈ.வெ.ராமசாமி கணக்கு கொடுக்கவில்லை என்று எழுதும் குற்றச்சாட்டு எப்படி சமாதானப்படுத்தும் என்பது விளங்கவில்லை.

**பிரகாசம் 10000**

பிரகாசத்துக்கு கொடுத்த 10000 பத்து ஆயிரம் ரூபாய் மோசம் செய்யப்பட்டது என்பதற்கு சொன்ன சமாதானம் மிகவும் மோசமானதாகும். என்னவென்றால் பிரகாசம் 10000 ரூ. கடன் வாங்கினார். கொடுப்பதாகச் சொன்னபடி கொடுக்கவில்லை. பிறகு அவர் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள கமிட்டி தீர்மானித்தது. தோழர் சீனிவாசய்யங்கார் தலைவராய் வந்ததும் அதை மெள்ள நழுவ விட்டார். பிறகு இவ்விஷயம் காந்தியார் தகவலுக்கு எட்டச் செய்யப்பட்டது.

பிறகு ஏதோ தவணையின் மீது கொடுப்பதாக பிரகாசத்தால் ஒப்புக் கொள்ளப்பட்டது. கடைசியில் 'ஸ்வஹா' செய்து கொள்ளப்பட்டது. ஆகவே பிரகாசம் பத்திரிகை நடத்தி நஷ்டப்பட்டதற்கும், காங்கிரசிடம் கடன் வாங்கி பஞ்சாயத்து செய்து கடைசியாக காந்தியார் முன்னிலையில் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு ஏமாற்றினதற்கும் என்ன சம்மந்தம் என்பதை பொது ஜனங்களே யூகித்துக் கொள்ள வேண்டும்.

**ராஜகோபாலாச்சாரியார் 19000**

தவிர ராஜகோபாலாச்சாரியார் அவர்களிடம் அட்வான்சாக கொடுத்த 19000க்கு கணக்கு இல்லை என்று சொன்னால் அதற்கு சமாதானம் செலவு விபரம் வரும் வரை காத்திருக்க வேண்டும் என்று அப்பத்திரிகை எழுதுகிறது.

எத்தனை வருஷமாக காத்திருப்பது? அந்தப் பணம் எந்த மாதிரி செலவு செய்யப்பட்டது? (ஆச்சாரியார் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால்)

சத்தியமூர்த்தி தேர்தலுக்காக செலவு செய்யப்பட்டதா அல்லது வேறு என்ன காரியத்துக்கு செய்யப்பட்டது என்பதைப் பல வருஷங்களாகியும் காங்கிரஸ்காரரே தெரியும்படியான நிலைமை ஏற்படவில்லையானால், அப்பணம் யோக்கியமாய் செலவழிக்கப்பட்டது என்று எப்படிச் சொல்லிவிட முடியும்?

அல்லது பண விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் கவலையுடனும் ஒழுக்கத்துடனும் நடந்து கொண்டார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்?

கடைசியாக இந்த தவறுதல்களுக்கு அப்பத்திரிகை சொல்லும் சமாதானம் ''தேச பக்தர்கள் கையில் சில ஆயிரம் ரூபாய்கள் செலவாகி விட்டால் மூழ்கிப் போவது ஒன்றும் இல்லை'' என்று எழுதிவிட்டு, ஜஸ்டிஸ் கட்சியில் சிலர் பதவிகளுக்காக உத்தியோகத்துக்காக லஞ்சம் வாங்கினதாக எழுதி இருக்கிறது. இதைப்பற்றி அடுத்த வாரம் விவரிப்போம்.

**குடி அரசு - தலையங்கம் - 24.11.1935**



RangaRakes tamilnavarasam.com

# குச்சிக்காரி புத்தி II

சென்ற வார குடி அரசில் திலகர் நிதியை காங்கிரஸ் கையாண்ட யோக்கியதையைப் பற்றி நாம் எழுதி இருந்தோம்.

அதற்கு காங்கிரஸ் பத்திரிகைகள் எதுவும் திருப்திகரமான சமாதானம் எழுதவில்லை. வாலை ஒடுக்கிக் கொண்டன.

ஆனால், தோழர் ராஜகோபாலாச்சாரியார் பூசி மெழுகும் சமாதானம் எழுதியிருந்தார். அது சரியான சமாதானமா என்று பார்த்தால் எந்தத் தவறுதலை ஆதாரமாக வைத்து மராட்டா பத்திரிகை காங்கிரஸ்காரர்கள் திலகர் நிதியைக் கையாண்டதைப் பற்றி எழுதிற்றோ அத்தவறுதல்களைப் பெரிதும் ஒப்புக் கொள்ளப்பட்டு, பிறகு பூசி மெழுகப்பட்டிருக்கிறது.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் சொல்லும் சமாதானங்கள் சில அய்ட்டங்களுக்கு கணக்கிலேயே இருந்திருக்க வேண்டியவைகளே ஒழிய, இப்பொழுது சமாதானம் சொல்லி மெய்ப்பிப்பதற்குத் தகுதியானவை அல்ல. அப்படிச் சொல்வதாய் இருந்தாலும் அது சந்தேகத்திற்கு இடமில்லாதது என்று சொல்லிவிட முடியவில்லை. ஏனெனில் பணப் புழக்கத்தில் குற்றமோ குறையோ, ஒழுங்கு தவறுதல்களையோ கண்டு பிடித்தவர்களை திருப்பிக் கண்டிக்கும் யோக்கியதையில் இருப்பவர்கள் தாங்கள் சிறிதும் சந்தேகத்துக்கு இடமில்லாத நிலையில் இருக்க வேண்டும்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் சமாதானம் அப்படிக்கில்லை என்பதை கோபப்படுகிறவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஏனெனில் தீண்டாமை விலக்குக்காக மாகாண கிராண்டாக 20000 ரூ. கொடுக்கப்பட்டு அந்த இலாக்காவை ராஜகோபாலாச்சாரியாருக்கு ஒப்படைக்கப்பட்டு அவர் ஒரு வருஷத்திலேயே அந்த இலாக்காவை தோழர் ஈ.வெ. ராமசாமி பேருக்கு மாற்றப்பட்டிருந்து அது ஒரு வருஷத்திலேயே மாகாண கமிட்டிக்கோ, பொக்கிஷத்துக்கோ, போயிருக்கு மானால் ''3 வருஷ காலம் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் மீதே அட்வான்சாக இருக்க'' காரணமில்லை.

ஆகவே அந்த ரூ.19000 என்கின்ற துகை இந்த தீண்டாமை விலக்கு கிராண்டான 20000 ரூபாயைப் பொருத்ததுதானா வேறு துகையா என்பதுவும் விளங்கவில்லை.



இது விஷயத்தில் நாம் தோழர் ராஜகோபாலாச்சாரியார் மீது குறை கூறுவதாக அல்ல. அவர் எடுத்துக் கொண்டதாகவும் அல்ல. ஆனாலும் திலகர் நிதி பணம் கையாண்ட முறை யோக்கியமான முறை அல்ல என்றும் பார்ப்பன சுயவகுப்பு நலத்துக்கு பயன்படுத்தப்பட்டது என்பதற்கு ஆகவே சொல்லுகிறோம். பல பார்ப்பனர்கள் சுயநலத்துக்கு ஒழுங்கு தவறாக கையாடினார்கள் என்பதையும் எப்பொழுதும் எங்கும் ருஜுவிட தயாராய் இருக்கிறோம். ஏனெனில் தங்களை அளவுக்கு மீறின பரிசுத்தர்களாகக் காட்டிக் கொள்வதோடு குற்றம் கண்டுபிடித்தவர்களை யோக்கியப் பொறுப்பின்றி தாக்குவதால் உண்மையான யோக்கியதையை வெளிப்படுத்த வேண்டி இருக்கிறது.

திலகர் சுயராஜ்ஜிய நிதி, கதர் அட்வான்ஸ் என்னும் பேரால் எத்தனையோ பேர்களுக்கு பல ஆயிரக்கணக்கில் 1000, 2000, 3000, 4000, 5000 என்பதாகக்கூட கடனாக பாண்டு எழுதிக் கொண்டு கொடுக்கப்பட்டது நமக்குத் தெரியும். இவற்றுள் பல அதாவது முக்கால் பாகம் அதாவது பார்ப்பனர்கள் வாங்கிய கடன் பாக்கிகள் ஒரு வரியால் வஜா செய்யப் பட்டிருப்பது இன்றும் கணக்குகளில் பார்க்கலாம்.

ஆனால் பார்ப்பனரல்லாதார் வாங்கியவைகளில் பெரும்பாகம் அவரவர்களது வீடு வாசல்கள் விற்றுக் கொடுக்கும்படி வசூல் செய்யப் பட்டிருக்கிறது.

உதாரணமாக சேலத்தில் மாத்திரம் வக்கீல் பார்ப்பனர்கள் 4, 5 பேர்களுடைய பாக்கியை பணம் வாங்காமலே வரவு வைத்து பாண்டைக் கிழித்துக் கொடுக்கப்பட்டது.

ஆனால் சாத்தூர் தோழர் சுப்பிரமணிய நாயனார், தஞ்சாவூர் டாக்டர் ராமசந்திரம் செட்டியார் இவர்கள் போன்றவர்கள் பாக்கிகள் அவர்களது வீடுகள் விற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தோழர் சுப்பிரமணிய நாயனார் ஏராளமான பிள்ளை குட்டிக்காரர் எல்லோரும் உயர்ந்த படிப்புப் படித்துக் கொண்டிருந்தவர்கள் அதுசமயம் அவரும் சாத்தூர் சேர்மனாய் இருந்து வக்கீல் உத்தியோகத்திலும் மீ 400, 500 சம்பாதித்துக் கொண்டு உயர்ந்த வாழ்க்கை நடத்தியவர். அப்படிப்பட்டவர் குடும்பத்துடன் ஒத்துழையாமையில் ஈடுபட்டு பிள்ளைகள் படிப்பை நிறுத்தி சேர்மென் வேலையும், வக்கீல் வேலையும் விட்டு காங்கிரசில் உழைத்தவர். அவரிடம் கொடுக்கப்பட்ட பணத்துக்கு மற்றவர்களுக்கு காட்டிய சலுகை காட்டாமல் வசூலித்ததால் இவர் குடும்பமே இப்போது கஷ்டப்படுகிறது. பிள்ளைகுட்டிகள் திண்டாடுகின்றன. அதுபோலவே டாக்டர் ராமச்சந்திர செட்டியாரிடமும் நிர்தாட்சண்யம் காட்டப்பட்டது. ஆனால் இந்தப்படி எந்தப் பார்ப்பனரிடமும் காட்டப்படவில்லை என்று நெய்யில் கையை விடுவோம்.



RangaRakes tamilnavarasam.com

மாகாண காங்கிரஸ் ஆபீசு திருச்சியில் டாக்டர் ராஜன் குடியிருந்த வீட்டு மேல்மாடி அறையில்இருந்த காலத்தில் மீ 15, 20 ரூ. வீதம் வாடகை வசூல் செய்து கொண்டார். ஆனால் அதே மாகாண காங்கிரஸ் ஆபிசு ஈரோடு ஈ.வெ.ராமசாமி அவர்கள் வீட்டில் வருஷக்கணக்காய் இருந்தது. ஆபீசு குமாஸ்தா, மேனேஜர், கூட்டுக் காரியதரிசி ஆகியவர்களுக்கு வீட்டிலேயே சாப்பாடு வருஷக்கணக்காய் இலவசமாய்ப் போட்டு வந்ததோடு ஆபீசு வாடகைக்கு என்று ஒரு தம்பிடி வாடகையும் கொடுக்கப்படவில்லை.

தோழர் ராமசாமி தன் தொழிலை, குடும்ப எஸ்டேட் நிர்வாகத்தை விட்டுவிட்டு அலைந்ததும் மற்றவர்கள் 2 வது வகுப்பில் பிரயாணம் செய்தால் தான் 3வது வகுப்பில் பிரயாணம் செய்வதுமாக அலைந்து திரிந்ததும் குடும்பத்திலும் தொழிலிலும் ரூ. 40000, 50000 நஷ்டப்பட்டதும் 20000, 30000 பொரும்படியான தஸ்தாவேஜுகளை எல்லாம் கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்கின்ற காரணத்துக்காக வசூல் செய்ய முடியாமல் விட்டுவிட்டதும் காங்கிரசில் வாசக்கூட்டியாய் இருந்தவர்களுக்கும் தெரியும். அப்படியிருக்க இதற்கு பதில் உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கும் தன்மையிலும் கொஞ்சமும் நன்றி விஸ்வாசமில்லாமலும் "ஈ.வெ.ராமசாமி வாங்கிய பணத்துக்கு கணக்கு கொடுக்கவில்லை" என்று சொல்லுவதும், எழுதுவதும் எவ்வளவு கீழ் ஜாதிப் புத்தி என்று யோசித்துப் பார்க்க விரும்புகிறோம்.

தெரியாமல் எழுதி இருந்தால் அதைப் பற்றி குற்றம் சொல்ல முடியாது. விஷயம் தெரிந்து அவரை எழுதிக் கேட்டு அவரும் கணக்குடன் பதில் எழுதி அனுப்பி இருக்க அக்கணக்கு சரியா தப்பா என்பதாக இதில் சம்மந்தப்பட்ட நாயர்களுக்கு மற்ற யார் விஷயத்திலும் நடந்து கொள்ளாத மாதிரி எழுதிக் கேட்டுத் தெரிந்து கொண்டு மிருக்க இப்போது வைக்கம் சத்தியாக்கிரகத்துக்கு ஈ.வெ.ராமசாமி கணக்கு கொடுக்கவில்லை என்றால் இந்தக் கூட்டத்தார் தூங்குகிறபோது பக்கத்தில் படுத்திருந்தால் கழுத்தறுக்கப் பயப்படுவார்களா என்று கேட்கின்றோம்.

பொது நிதிக்கு திரட்டிய பணம் என்றாலும் அது செலவழிக்கப்பட்ட மாதிரியை பொது ஜனங்கள் அறியவும் அவர்கள் மேலும் ஏமாந்து போகாமலிருக்கும்படி செய்யவும் யாருக்கும் உரிமை உண்டு என்று சொல்லுவோம்.

தோழர் பிரகாசம் அவர்கள் சொந்தத்தில் பாண்டு எழுதிக் கொடுத்து 10000 ரூ. பணம் கடனாக வாங்கி இருக்கிறார்.

அவர் பத்திரிக்கை நடத்துவதற்கும் தோழர்கள் கஸ்தூரி ரங்கயங்கார், ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்கள் பத்திரிகை நடத்துவதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கின்றோம்.

காங்கிரசின் எந்த தீர்மானப்படி தோழர் பிரகாசத்தின் பத்திரிக்கையை காங்கிரஸ் பத்திரிக்கை என்று சொல்லப்படுகிறது என்று கேட்கின்றோம்.



அப்பத்திரிகை தோழர்கள் சத்தியமூர்த்தியை வைது எழுதி யிருக்கிறது. ராஜகோபாலாச்சாரியாரை வைது எழுதி இருக்கிறது, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியையும் வைது எழுதி இருக்கிறது. சில சமயங்களில் காங்கிரஸ் கொள்கைகளையும் வைது எழுதியிருக்கிறது. போதாக் குறைச்சலுக்கு பார்ப்பனரல்லாதார் கட்சியை வர்ஜா வர்ஜமில்லாமல் வைது எழுதியிருக்கிறது.

பிரகாசத்துக்கு பணம் கொடுத்துவிட்டு பிறகு சுயராஜ்ஜிய பத்திரிகைக்கு கொடுத்தது என்று சொல்லி கடசியாக தள்ளிக் கொடுக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் இதனால் எப்படி பொதுப் பணத்தை யோக்கியமாய் கையாடி இருக்கிறது என்றும் சொல்ல முடியும் என்று கேட்கின்றோம்.

விடுதலை, குடிஅரசு, ஜஸ்டிஸ் ஆகிய பத்திரிகை எழுதினால் பார்ப்பனத் துவேசத்தின் மீது எழுதிற்று என்று சொல்லலாம்.

தோழர் எம்.ஆர். ஜயக்கர் பார்ப்பனத் துவேஷியுமல்ல, காங்கிரஸ் துரோகியுமல்ல, கட்காரும் மராட்ட பத்திரிகையும் பார்ப்பனத் துவேஷியுமல்ல, காங்கிரஸ் துரோகியுமல்ல.

மாஜி மாகாண காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியும் மராட்ட பத்திரிகை ஆசிரியருமான மகாஜன் பார்ப்பனத் துவேஷியுமல்ல, காங்கிரஸ் துவேஷியுமல்ல. மேல்கண்ட இவர்கள் எடுத்துக்காட்டின குறைபாடுகளையும் ஒழுங்கீனங்களையும் இப்பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிகைகளும் மறைத்துவிட்டு பொதுஜனங்கள் கண்களில் மண்ணைப் போடுவதற்கு ஆக காங்கிரஸ் விரோதிகள் அயோக்கியர்கள் திருடர்கள் எழுதுகிறார்கள் என்று எழுதுவதும், இந்த மறைவில் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பதும் பார்ப்பனர்களின் அயோக்கியத்தனத்தையும் இழி தன்மையையும் புரட்டுகளையும் காட்டுவதற்கு போதுமான ஆதாரம் அல்லவா? என்று கேட்கின்றோம்.

பார்ப்பன அயோக்கியத்தனத்தையும், மோசத்தையும் எடுத்துக் காட்டுவதற்கு யார் முயற்சித்தாலும் அவர்களை இம்மாதிரி இழித்தன்மையாகப் பேசுவதும் அவர்கள் மீது அயோக்கியத்தனமாய் குறை கூறுவதும் சிறிதும் மானம் வெட்கம் ஈனம் கவனிக்காமல் பழி சுமத்துவதுமான காரியம் செய்வதென்றால் யார் தான் சம்மதிப்பார்கள். யார் தான் இவர்களுக்கு புத்தி கற்பிக்காமல் இருப்பார்கள் என்று கேட்கிறோம்.

இன்னமும் நாம் தைரியமாயும் ஆதாரத்துடனும் சொல்லுகிறோம். பொது ஜனங்களிடம் வசூலிக்கப்பட்ட பணங்கள் பார்ப்பன நலத்துக்காகவே செலவழிக்கப்பட்டு வருகின்றது என்பது மாத்திரமல்லாமல் 100க்கு 80 பாகம் பார்ப்பனர் வயிற்றிலேயே அருத்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதோடு, பித்தலாட்டமாகவே செலவழிக்கப்பட்டு வருகின்றது என்றும் சொல்லுகிறோம்.

இப்படிப்பட்ட நிலைமையில் உள்ள யோக்கியர்கள் ராமசாமியை கணக்குக் கொடுக்கவில்லை என்றும் ஜஸ்டிஸ் கட்சியாரை பணம் மோசம்



RangaRakes tamilnavarasam.com

செய்தார்கள் என்றும், லஞ்சம் வாங்கினார்கள் என்றும் கூறி மற்றொரு குற்றச்சாட்டை வம்பில் கொண்டுவந்து புகுத்தி தப்பித்துக் கொள்ளப் பார்த்தால் இதற்கும் சமாதானம் சொல்லாமல் எப்படி வாயை மூடிக் கொண்டிருக்க முடியும்.

ஜஸ்டிஸ் கட்சியார் யாரிடம் எந்த உத்தியோகத்துக்கு லஞ்சம் வாங்கினார்கள்? தலைவர்கள் வாங்கினார்களா? மந்திரிகள் வாங்கினார்களா? மற்ற எடுபிடி ஆள் வாங்குகிறார்களா? அது இந்த 15 வருஷ ஆட்சியில் இப்போதுதான் தெரிந்ததா? என்பவைகளுக்கு மராட்டப் பத்திரிகை மாதிரி, மகாஜன் மாதிரி விபரம் எடுத்துக் காட்டினால் அது ஆண்மையாகும். அப்படி இல்லாமல் ''சூரியனைப் பார்த்து சுவானம் கரைவது போல்'' கரைவதில் பயனென்ன? இதனால் என்ன வெற்றி அடைந்துவிட முடியும்? என்று கேட்கின்றோம்.

காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்கள் எவ்வளவு கேவலமாய் நடந்து கொண்டார்கள் என்பது யாருக்காவது தெரியவேண்டுமானால் அடியில் கண்ட விடுகதையை விடுவித்துப் பாருங்கள்.

சட்டசபையில் தனிப்பட்ட நபர்களைப் பொருத்த விஷயங்களில் கேள்விகள் கேட்பதற்காக கேள்வி ஒன்றுக்கு 5 ரூ. வாங்கும் தலைவர் 25 ரூ. வாங்கும் தலைவர் 50 ரூபாய் வாங்கும் தலைவர் என்பதாக மூன்றுவித தலைவர்கள் - இருக்கிறார்களா இல்லையா?

Dr. சுப்பராயன் மந்திரியாக இருக்கும் வரை அவரிடம் போய் சிபார்சு செய்ய சிபார்சு ஒன்றுக்கு 250 முதல் 1000 ரூபாய் வரையில் வாங்கி வந்தவர் காங்கிரசில் தலைவராக இருக்கிறாரா இல்லையா?

டாக்டர் சுப்பராயன் மந்திரியாய் இருக்கும் வரை அவரைத் தொந்திரவு கொடுக்காமல் இருப்பதற்காக மாதம் 250 ரூ. வீதம் மாதமானம் வாங்கியவர்கள் காங்கிரசில் தலைவராக இருக்கிறாரா இல்லையா?

அண்ணாமலை யூனிவர்சிட்டியில் பாசாக்கி வைப்பதற்கு குறுக்கே கலகம் விளைவிக்காமல் இருப்பதற்கும் சீக்கிரம் முடியும்படி செய்வதற்கும் 5 கலம் கொண்ட தொகை வாங்கியவர்கள் காங்கிரசில் தலைவராக இருக்கிறாரா இல்லையா?

குமாரராஜா மேயர் காலம் முழுவதும் அவருக்குத் தொல்லை விளைவிக்காமல் இருப்பதற்கு மாதமானம் மோட்டார் கார் முதலியவைகள் வாங்கிக் கொண்டவர் காங்கிரசில் தலைவராக இருக்கிறாரா இல்லையா?

மற்றும் இன்னமும் சில பெரிய ஆட்கள் என்பவர்களிடம் அவர்கள் ஊழல்களை வெளிப்படுத்தாமல் இருப்பதற்காக தினமானம், வருஷமானம் நிவேதனத் தொகை வாங்கி வருபவர்கள் காங்கிரஸ் தலைவர்களாக இல்லையா?



இவர்கள் எல்லோரும் காங்கிரசில் தலைவர்களாக இருக்கிறார்களா இல்லையா? என்கின்ற விடுகதைகளை விடுவித்துப் பார்த்தால் உண்மையாகவே பதவிக்கு ஆசைப்பட்டும் பதவியை துர்வினியோகம் செய்தும் பணம் சம்பாதிப்பவர்கள் காங்கிரஸ் தலைவர்களா? ஜஸ்டிஸ் தலைவர்களா? என்பது விளங்காமல் போகாது.

கண்ணாடி வீட்டில் குடி இருந்து கொண்டு மச்சு வீட்டின் மீது கல் எறிவது முட்டாள் தனமாக முடியும் என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டுமா?

அன்றியும் ஸ்தல ஸ்தாபனங்களில் தங்கள் பதவி பெறுவதன் மூலம் கண்றாக்ட் பெற்று லாபம் பெறுவது காங்கிரஸ்காரர்களா, ஜஸ்டிஸ்காரர்களா என்பதற்கும் தோழர் கூரத்தாழ்வார் ரசீது பார்த்தாலே விளங்கி விடும்.

மற்றும் ஸ்தல ஸ்தாபனங்களில் உள்ள ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டிருக்கிறார் என்று காங்கிரஸ்காரர்கள் குறைத்து வந்ததின் யோக்கியதைகளை பார்க்க வேண்டுமானால் ஸ்தல ஸ்தாபனங்களில் ஜஸ்டிஸ் கக்ஷியின் பேரால் இருந்து வந்த தலைவர்கள் காலில் விழுந்து அவர்களது கால் தூசி மூக்கில் ஒட்டும்படி கும்பிட்டு தங்கள் கக்ஷிக்கு வரும்படி கெஞ்சினதையும், கெஞ்சி சேர்த்துக் கொண்டிருப்பதையும் பார்த்தாலே வாஸ்தவத்திலே ஜஸ்டிஸ் கக்ஷித் தலைவர்கள் அயோக்கியர்களா அல்லது இனிமேல் அயோக்கியத்தனம் செய்வதற்கு ஆக கூப்பிடப்படு கிறார்களா என்பது விளங்கும்.

### போர்

முடிவாக நாம் ஒன்று கூறுகிறோம். இன்று தென் இந்தியாவில் பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் போர் நடக்கின்றது. அது அரசியல் போர் அல்ல, உத்தியோக போர் அல்ல - எலக்ஷன் போரும் அல்ல. மற்றென்னவென்றால் பல்லாயிர வருடமாக இருந்து வந்த பார்ப்பன ஆதிக்கத்துக்கும் திடீரென்று விழித்தெழுந்த பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கும் நடக்கும் போராட்டமாகும். இதில் ஆதிக்கத்தில் இருந்து வந்த பார்ப்பனருக்கு சகல பலமும், சகல சவுகரியமும், சகலவித தந்திரம், யுக்த்தி, ஜாலவித்தை ஆகியவைகள் யாவும் இருந்து வருகின்றன.

பார்ப்பனரல்லாதாரிலே சுயமரியாதை என்றால் என்ன என்றுகூட தெரியாத மக்கள் பல்லாயிரக்கணக்காய் இன்னும் இருக்கிறார்கள். ஒருவேளை சோற்றுக்கு மானத்தை விற்றுப் பழகிவந்த மக்கள் தாராளமாய் இருக்கிறார்கள்.

உதாரணம் வேண்டுமானால் குறிப்பிடுகின்றோம். பார்ப்பனரல்லாத சுயமரியாதைப் போர் தொடங்கிய சிறிது காலத்துக்குள் அதாவது இந்த 15, 20 வருஷத்துக்குள் ஒரு பார்ப்பனராவது நமதுபோருக்கு உதவி செய்யவோ அல்லது தங்கள் சமூகத்தை காட்டிக் கொடுக்கவோ தங்கள் சமூக



RangaRakes tamilnavarasam.com

ஆதிக்கத்தையும் அயோக்கியத்தனத்தையும் விட்டுக் கொடுக்கவோ நம்முடன் கலந்து கொள்ளவோ இதுவரை ஒரு உருப்படியாவது வந்து சேர்ந்திருக்கிறதா, ஒரு பார்ப்பன குச்சிக்காரியாவது வந்து சேர்ந்திருக்கிறதா என்பதையும் பார்ப்பனரல்லாதார் சமூகத்தில் இருந்து ஆரம்ப முதல் இதுவரை எத்தனை பேர் 100க்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் வயிற்றுப் பிழைப்புக்கும் கூலிக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு விபூஷணன் போல் அவர்களிடம் சரணாகதி அடைகின்றார்கள் என்பதும் ஆராய்ந்து பார்த்தால் விளங்கும்.

நேற்று வரை பார்ப்பனர்களை மாத்திரம் அல்லாமல் காங்கிரசையும் குறை கூறிக் கொண்டு இருந்து, அதற்காக ஜஸ்டிஸ் கட்சியில் பல யோக்கியதைகள் பெற்று விட்டு இன்று அதுவும் காங்கிரசின் யோக்கியதை விவகாரத்துக்கு இடமில்லாமல் வெட்ட வெளிச்சமான பின்பு அதனோடு அளவளாவுவதென்றால் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை பெற இன்னமும் எவ்வளவு தூரம் இருக்கிறது என்பது பயப்படத்தகுந்த மாதிரியில் விளங்குகிறது.

இது ஒருபுறமிருக்க இந்தப் போரில் தைரியமாய் நெஞ்சுத் துணிவாய் எந்தவிதமான அயோக்கியத்தனத்தையும் செய்வதென்றும், எப்படிப்பட்ட மானத்தையும் விட்டுக் கொடுப்பதென்றும், எதையும் தியாகம் செய்வதென்றும் துணிந்து பார்ப்பனர்கள் எதிர்த்து நிற்கிறார்கள். இதை சமாளிக்க முடியாமல் அனேக பார்ப்பனரல்லாதார் புறமுதுகு காட்டி ஓடுவதென்றும், எதிரிகளிடம் சரணாகதி அடைவதென்றும் துணிந்து விட்டார்களானாலும் சுயமரியாதையில் லக்ஷியமுள்ள சிலராவது துணிந்து நிற்போமானால் அவசியம் வெற்றி ஏற்படும் என்பதே நமது துணிவு.

இப்பொழுது பார்ப்பனரல்லாதாருக்கு வேண்டியதெல்லாம் தைரியத்தோடு கூடிய சுயமரியாதை உணர்ச்சிதான். மற்றப்படி மற்ற பல சவுகரியங்கள் நமக்கும் அனுகூலமாய் இருக்கின்றன.

இது சமயம் தேர்தல் வெற்றியே நமது லக்ஷியமல்ல. அதில் ஏற்படும் பலன் எதுவானாலும் நமக்கு அனுகூலமானதேயாகும்.

ஆதலால் போரை நடத்தி சீக்கிரத்தில் பலனை கண்டுவிட வேண்டியதுதான். ஏனெனில் புராணக்காரர்கள் ஜெயித்தால் வெற்றி, போரில் மாண்டால் வீர சொர்க்கம் என்பதுபோல் நாம் தேர்தல் போரில் ஜெயித்தால் பதவி, தோற்றால் சுயமரியாதை உணர்ச்சி பன்மடங்கு வீறு கொண்டு எழும். ஆதலால் துணிவோடு எழுங்கள்.

**குடி அரசு - தலையங்கம் - 01.12.1935**



# யார் திட்டத்தை யார் திருடியது?

ஜஸ்டிஸ் கட்சியார் தோழர் ஈ.வெ.ராமசாமியின் திட்டங்களைத் தங்களது வேலைத் திட்டங்களுடன் சேர்த்துக் கொண்ட நிமிடம் முதல் சென்னைப் பார்ப்பனர்கள் ஆண்-பெண் அடங்கலுக்கும் பேதியும், வயிற்றுக் கடுப்பும் எடுத்து ஜன்னி கண்டவர்கள் போல் வாய்க்கு வந்தபடி உளரிக் கொட்டிய வண்ணமாய் இருந்து வருகிறார்கள். உதாரணமாய் அத் திட்டங்கள் கொஞ்ச நாளைக்கு முன் விருதுநகர் மகாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட வுடனேயே தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அதைப் பற்றி ஒரு ஸ்ரீமுகம் விடுத்தார். அதில் அவர் அத் தீர்மானங்களைப் பற்றி,

''ஜஸ்டிஸ் கட்சியாரால் ஜீரணிக்க முடியாத மருந்தை சாப்பிட்டு விட்டார்கள்'' என்றும் ''அது அபேதவாத திட்டம்'' என்றும்,

''பொதுவுடமைத் திட்டம்'' என்றும், ''ராமசாமியை சுவாதீனப்படுத்திக் கொள்வதற்கு ஆக விலை கொடுக்க ஏற்றுக் கொள்ளப்பட்டது'' என்றும்,

''அது ராஜபக்தி பொதுவுடமைத் தீர்மானம்'' என்றும் இப்படியாகப் பலவிதமாய் ஒன்றுக்கொன்று முரணாய் உளரிக் கொட்டினார்.

காங்கிரஸ் பத்திரிகைகள் என்பவைகளும், மற்ற காங்கிரஸ்காரர்களும் ஈ.வெ.ரா. தீர்மானங்கள் கராச்சி தீர்மானங்களில் இருந்து திருடியவை என்றும், சாரமற்றவைகள் என்றும், வெறும் ஏட்டுத் தீர்மானங்கள் என்றும், தண்ணீரின் மேல் எழுதி வைக்க வேண்டியதுதான் பாக்கி என்றும், இன்னும் பலவிதமாக எத்தனை விதங்களில் அத் தீர்மானங்களைப் பற்றிப் பொது ஜனங்களை ஏமாற்றவும் சர்க்காரை உசுப்படுத்தி விடவும் கூடுமோ அத்தனை வகைகளில் எழுதியும் பேசியும் வந்தார்கள் வருகிறார்கள்.

ஆனால் இத் திட்டங்களை ஜஸ்டிஸ் கட்சியார் மகாநாட்டிலும் நிர்வாக சபைக் கூட்டத்திலும் ஒப்புக் கொள்ளும் வரையிலும், ''அவர்களாவது இத் திட்டங்களை ஒப்புக் கொள்ளுவதாவது தோழர் ஈ.வெ.ரா. கனாக் காண்கிறார்'' என்றும், ஜஸ்டிஸ் கட்சியார் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்றும், ஒப்புக் கொண்டால் அவர்களது மந்திரி வேலை போய்விடும் என்றும் கூறினார்கள் - அதோடு பந்தயமும் கட்டினார்கள். இப்போது ஒப்புகொண்ட பிறகு சர்க்காருக்கு ஜஸ்டிஸ் கட்சியார் மீது ஆத்திரம் வரும்படியாக மேல்காட்டியபடி அத்தீர்மானங்கள் பொது



RangaRakes tamilnavarasam.com

உடமைத் தீர்மானங்களாகும் என்று சொல்லிவிட்டு பிறகு எங்கு ஜனங்கள் இதை நம்பி இவர்களை ஆதரித்து விடுவார்களோ என்று பயந்து ''அது ராஜபக்தி பொது உடமைத் தீர்மானம்'' என்றும் சொன்னார்கள்.

ஒரு கட்சியார் தங்கள் வேலைத் திட்டமாக ஏதோ ஒரு தீர்மானத்தை செய்து கொண்டால் அதற்கு ஆக இந்தப் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனப் பத்திரிகைகளுக்கும் இவ்வளவு ஆத்திரம் வருவானேன் என்பதை முதலில் யோசிக்க வேண்டும்.

அத்தீர்மானங்களில் பலாத்காரம் உண்டாக்கும்படியான பொதுஉடமைத் தத்துவம் எதில் இருக்கின்றது? அல்லது ராஜ பக்தியை காட்டக்கூடிய ராஜவிஸ்வாசப் பிரமாணத் தன்மை எந்தத் தீர்மானத்தில் இருக்கிறது என்பவைகளை எடுத்துக்காட்டியிருந்தால் இவர்களை யோக்கியர்கள் என்றோ நாணயஸ்தர்கள் என்றோ சொல்லிக் கொள்ளலாம். அப்படிக்கு இல்லாமல் பொது உடமை என்றும், ராஜபக்தி என்றும் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாமல் எழுதுவதால் பொது ஜனங்களும் சர்க்காரும் இவர்களது யோக்கியதையையும் அரசியல் ஞானத்தையும் அறிந்து கொள்ள மாட்டார்களா என்று கேட்கின்றோம்.

தவிர அத் தீர்மானங்கள் என்ன காரணத்தால் ஜஸ்டிஸ் கட்சியாருக்கு ஜீரணமாகாத ஆகாரம் என்பதையாவது விளக்கினார்களா என்று கேட்கின்றோம். அதில் எவ்வளவு செய்யக் கூடுமோ எவ்வளவுக்கு பொது ஜனங்களும் அரசாங்கமும் தயாராக இருக்கக் கூடுமோ அவ்வளவு அளவுக்கு வெகு ஜாக்கிரதையாகவே பொறுப்புடன் தான் தயாரிக்கப் பட்டதே தவிர பார்ப்பனர்களைப் போல் பொது ஜனங்களை ஏமாற்றவோ, அவர்களிடம் பணம் பறிக்கவோ ஓட்டு வாங்கவோ மோசக் கருத்துடன் ஒரே மூச்சில் சமுத்திரத்தை உறிஞ்சி விடுகிறேன் என்று ஞான சூனியமாய் பேச்சுக்கு மாத்திரம் தயாரிக்கப்பட்டதல்ல.

தவிர, ஈ.வெ.ரா. தீர்மானங்கள் காங்கிரஸ் தீர்மானங்களில் இருந்து திருடியது என்று சொல்லுவது மனதறிந்து, வேண்டுமென்றே சொல்லும், போக்கிரித்தனமான விஷமக் கூற்றாகும். எப்படி எனில் ஈ.வெ.ராமசாமி தீர்மானங்களில் உள்ள முக்கியத் தீர்மானங்கள் கராச்சி தீர்மானத்தில் இல்லவே இல்லை. கராச்சி தீர்மானத்தில் உள்ள முக்கிய தீர்மானங்கள் ஈ.வெ.ரா. தீர்மானத்தில் இல்லவே இல்லை. இது இரண்டு கண்ணும் அற்ற குருடனுக்கும் விளங்கும்.

அதாவது **சகல வகுப்பாருக்கும் அவர்களது எண்ணிக்கைக்கு தகுந்தபடி பிரதிநிதித்துவம் உத்தியோகம் அரசியலில் அளிக்க வேண்டும்** என்கின்ற தீர்மானம் கராச்சித் தீர்மானத்தில் எங்கு இருக்கிறது? என்று கேட்கின்றோம்.

அதுபோலவே கராச்சித் தீர்மானத்தில் உள்ள **''ஜாதி மதங்களையும் பழக்க வழக்கங்களையும் அவரவர் வருணாச்சிரம தொழில்களையும் காப்பாற்றிக் கொடுக்க உத்திரவாதம் கூறுகிறது''** என்ற பார்ப்பன பாதுகாப்புத் தீர்மானம் ஈ.வெ.ரா. திட்டத்தில் எங்கு இருக்கின்றது? என்று கேட்பதுடன் பார்ப்பனக் காங்கிரசுக்கும் பார்ப்பனரல்லாத ஜஸ்டிஸ் கட்சிக்கும் இதைத் தவிர வேறு என்ன வித்தியாசம் இன்று கொள்கையிலும் திட்டத்திலும் இருக்கிறது என்றும் கேட்கின்றோம்.

ராஜ விஸ்வாசம் என்பது ஜஸ்டிஸ் கட்சியாரிடம் இருக்கும் அளவுக்கு எத்தனை டிக்ரி காங்கிரஸ்காரரிடம் குறைவாய் இருக்கிறது?

காங்கிரஸ் கட்சி ஆனாலும் அவங்கப்பன் காந்தி கட்சியானாலும், மற்றும் பொது உடமைக் கட்சியானாலும், அல்லது பலாத்காரப் புரக்ஷிப் பொது உடமைக் கட்சியானாலும், சட்டசபைக்கோ மற்றும் எந்த கிராம சபைக்கோ போனாலும் ராஜவிஸ்வாசம் என்று சும்மா சொன்னால் மாத்திரம் போதாமல் அவர்கள் குல தெய்வத்தை வேண்டி சத்தியம் செய்து ஆக வேண்டும் என்பதை யார் மறுக்க முடியும்?

மந்திரி வேலை பார்ப்பதும், சம்பளம் வாங்குவதும் எழுந்து தலைவணங்கி நிற்பதும் ஆகியவைகள் கூட எந்தக் கட்சி சட்டசபைக்குப் போனாலும் அடைந்தும் செய்தும்தான் தீர வேண்டும்.

வேண்டுமானால் பொதுஜனங்களை ஏமாற்ற அயோக்கியத்தனமான எண்ணத்துடனும் வஞ்சகப் புத்தியுடனும் **''இப்பொழுது அதைப் பற்றி பேச வேண்டியதில்லை''** என்று காங்கிரஸ்காரர்கள் என்னும் காந்தி சிஷ்யர்கள் சொல்லலாம். ஆனால் காரியத்தில் இப்பொழுதிருந்தே நாக்கில் தண்ணீர் சொட்டவிட்டுக் கொண்டுதான் இருக்க வேண்டும். இதை யார் மறுக்கிறவர்கள்?

கிராமாந்திரங்களில் ஒரு பழமொழி சொல்லுவார்கள்.

**''இழவு வீட்டில் சிறிய தாயாரைப் பெண்டாளக் கையைப் பிடித்து இழுத்தவன், கல்யாண வீட்டில் அத்தை மகளை சும்மா விடுவானா?''** என்று சொல்லுவார்கள். அது போல் ஒத்துழையாமை, சட்டமறுப்பு, உத்தியோக மறுப்பு, முட்டுக்கட்டை, பட்டம் துறப்பு, மந்திரிகள் அழிப்பு ஆகிய தீர்மானங்கள் வண்டிவண்டியாய் அமுலிலேயே இருந்த காலத்தில் சட்டசபைக்குப் போய் ராஜவிஸ்வாசப் பிரமாணம் செய்து தலைவர், கமிட்டி அங்கத்தினர் முதலிய பதவிகள் அடைந்து ரூ. 3000, 4000 மாதச் சம்பளம் வாங்கிக் கொண்டு மந்திரிகளை ஏற்படுத்தி அவர்களை ஆதரித்து அரசாங்கத்தை நடத்திக் கொடுத்தவர்கள் - அவர்களிடம் தனிப்பட்ட முறையில் மாத வருமானம் வாங்கிக் கொண்டு வந்தவர்கள் இப்போது சகல கட்டுகளும் அறுத்துவிட்டு ''நான் கண்ணை மூடிக் கொள்ளுகிறேன்.


RangaRakes tamilnavarasam.com

அவரவர்கள் இஷ்டம் போல் ஜமாய்க்கலாம்'' என்று அவர்களது குல தெய்வமே (காந்தியே) உத்திரவு கொடுத்துவிட்ட பிறகு இனி எவ்விஷயத்துக்கு ஆனாலும் எதற்காக ஏன் பயப்படுவார்கள்? எந்தக் காரியத்தை செய்யப் பயப்படுவார்கள்? என்று கேட்கின்றோம்.

ஆகவே இப்படிப்பட்ட இவர்கள் இன்று ஜஸ்டிஸ் கட்சியாரைவிட எந்த விதத்தில் உயர்ந்த கொள்கைகளை உடையவர்கள் என்று யோசித்துப் பார்க்க விரும்புகிறோம்.

ஆகவே பார்ப்பனர்கள் தங்கள் ஜாதி ஆதிக்கத்தை காப்பாற்றிக் கொள்ளத்தக்க மாதிரி செய்யப்பட்ட கராச்சித் தீர்மானத்தில் இருந்து ஈ.வெ.ரா. எதைத் திருடி யிருக்கிறார் என்பதும், பார்ப்பனரல்லாதார் தங்கள் குறைகளையும் இழிவுகளையும் போக்கிக் கொள்ளு மார்க்கமாக செய்யப் பட்ட தீர்மானங்கள் பார்ப்பனர்கள் ஒப்புக் கொள்ளக் கூடியதா என்றும், அது கராச்சித் திட்டத்தில் இருக்கிறதா என்றும் மறுபடியும் அழுத்தமாய்க் கேட்கின்றோம்.

கராச்சி தீர்மானங்கள் செய்யப்பட்ட ரகசியத்தின் வண்டவாளம் கராச்சி தீர்மானம் ஆன உடனேயே நாம் எழுதி யிருக்கிறோம்.

கராச்சி தீர்மானங்கள் சில சுயமரியாதைக்காரர்கள் தீர்மானத்திலிருந்து திருடியதாகும். மற்றும் அவை பார்ப்பன ஆதிக்கத்திற்கு உத்திரவாதம் கொடுத்த தீர்மானங்களின் புரட்டுகளைப் பார்ப்பனரல்லாதார் தெரிந்து கொள்ளாமல் இருக்கும்படி சில தீர்மானங்கள் வேஷத்துக்கு ஆகவே காப்பி அடித்ததாகும்.

அதாவது காங்கிரஸ் காரியதரிசி ஜவகர்லால் அவர்கள் கராச்சி காங்கிரசில் அறிக்கை வாசிக்கும்போது ''தமிழ்நாட்டில் ஒரு வேலையும் நடக்கவில்லை'' என்றும், ''காங்கிரஸ் பத்திரிகைகள் என்று சொல்லிக் கொள்பவைகள் யோக்கியமாக நடந்து கொள்ளவில்லை'' என்றும் குறிப்பிட்டு வாசித்துவிட்டார். அதற்கு ஆக ஆத்திரப்பட்டு சமாதானம் சொல்லப்புகுந்த சென்னைப் பார்ப்பனர்கள் தங்கள் நாட்டில் ''சுயமரியாதை இயக்கம் ஒன்று அலாசுகிறது'' என்றும், ''அவர்கள் தீர்மானங்கள் காங்கிரசை ஒன்றும் செய்யவொட்டாமல் அடக்கிவிட்டன'' என்றும் சொல்லி தங்களுக்கு வேண்டிய பந்தோபஸ்தை மேலே கூறியபடி ஜாதி மத தொழில் பழக்கவழக்கம், சமஸ்கிருத பாஷை, சாஸ்திரம் ஆகிய வருணாச்சிரம தர்மங்களைக் காப்பாற்றும் ஒரு உத்திரவாத தீர்மானத்தை செய்து கொண்டு மற்றபடி பொது மக்களை ஏமாற்றும் பொருட்டு சுயமரியாதைக் காரர்களைவிட மிக்க தீவிரவாதிகள் போல் அரசியலில் சில தீர்மானங்கள் செய்து கொண்டார்கள். அவை அன்றே மறைந்துபோய் இன்றுதான் அதாவது ஈ.வெ.ரா. திட்டம் போட்ட பிறகுதான் அதுவும் உண்மையான



கராச்சித் தீர்மானங்களை மாற்றி ஈ.வெ.ரா. தீர்மானத்தைப் போல் புதிதாக உருக்கி வார்த்து காட்டப்படுகின்றது. இது 1931 ஆம் ஷ பத்திரிகைகளில் பார்த்தால் விளங்கும்.

இதைப் பற்றி அன்றே 1931லேயே திராவிடனிலும் குடிஅரசிலும் எழுதியதே ஒழிய இன்று புதிதாய் எழுதுவதல்ல என்பதையும் ஞாபக மூட்டுகிறோம்.

தவிர ஜஸ்டிஸ் கட்சியார் இதை ஒப்புக் கொண்டது வேஷத்துக்கு நாம் என்றும், பொது ஜனங்களை ஏமாற்ற என்றும் இவற்றைத் தண்ணீரில் தான் எழுதவேண்டும் என்றும் சொல்லி வருவதைப் பற்றி ஆராய்வோம்.

ஜஸ்டிஸ் கக்ஷி தீர்மானங்களில் எவை இதுவரை ஏமாற்றப்பட்டது என்பது முதலில் விளக்கப்பட வேண்டும்.

மதுபான ஒழிப்பு விஷயத்தில் ஜஸ்டிஸ் கக்ஷியார் சட்டசபையில் ஒரு கேள்விக்கு பதில் சொன்னபடி நடந்து கொள்ளவில்லை என்று குறை கூறப்படுகிறது. அதுவும் ஓட்டர்களுக்கு கொடுத்த வாக்குறுதி அல்ல. இதற்கும் ஜஸ்டிஸ் கக்ஷியார் சொன்ன வாய்தா இன்னமும் முடிந்து விடவில்லை. அதாவது 20 வருஷ காலத்தில் மதுபானத்தை ஒழித்துவிடக் கூடும் என்று 1925, 26 இல் சொன்னார்களாம். அந்த கணக்குப்படி இன்னும் பகுதி வருஷம்கூட ஆகவில்லை. இன்னமும் 10க்கு மேல் பாக்கி இருக்கிறது. அவர்கள் அது விஷயமாய் முயற்சி எடுத்துத்தான் வருகிறார்கள். காங்கிரஸ்காரர்கள் பொது ஜனங்களை ஏமாற்றவும் சர்க்காருக்கு தொந்திரவு கொடுக்கவும், ஏமாற்று மது விலக்குப் பிரசார நாடகமாகிய மறியல், சட்டமறுப்பு ஆகிய காரியங்களை மது விஷயத்தில் பயன்படுத்தி குழப்பம், சமாதான பங்கம், பலாத்காரம் முதலியவைகள் ஏற்படும்படி செய்து கொண்டே வந்ததால் சர்க்காரார் மந்திரிகளின் முயற்சிக்கு இடம் கொடுக்கவில்லை. இப்போது காங்கிரசுக்காரர்களுக்கு சர்க்கார் புத்தி கற்பித்தது பயன்பட்டு அவர்கள் இந்த விஷமம் இனி செய்யமுடியாமல் செய்யப்பட்டு விட்டதால், இனி சுலபத்தில் மதுவிலக்கு முயற்சி பலிக்கக் கூடிய காலம் வந்துவிட்டது. இனியும் 10 வருஷ காலம் வாய்தாவும் இருக்கிறது. ஆதலால் அதைப்பற்றி குறை கூறுவது ஒப்புக் கொள்ளத்தக்கதாகாது.

மதுபானம் பெரிதும் இந்தியர்களுக்கு சிறப்பாக இந்துக்களுக்கு மதத்தோடு, மதக் கடவுள்களோடு கீழ்த்தர ஜாதியார் என்பவர்களுக்கும், கீழ்த்தர கடவுள்கள் என்பவர்களுக்கும் குல தெய்வ வழிபாடாக அமைக்கப்பட்டிருக்கிறது.

மத விஷயத்தில் பிரவேசிக்கக் கூடாது என்பது ராணியாரிடம் பார்ப்பனர் வாங்கி இருக்கும் ஒரு மோசடி ஒப்பந்தமாகும்.



RangaRakes tamilnavarasam.com

அன்றியும் ''மதுபானத்தை நிறுத்திவிடுகிறோம் அதற்கு ஆக பணம் கொடுங்கள்'' என்று சொல்லி ஜஸ்டிஸ் கக்ஷியார் யாரிடம் எவ்வளவு லக்ஷ ரூபாய்கள் வசூலித்து 'சுவாஹா' செய்து கொண்டார்கள் என்றாவது யாராவது சொல்ல முடியுமா? அல்லது அந்த பிரச்சினையின் மீது ஓட்டு பெற்றார்களா? எனவே இந்த நிலையில் ஜஸ்டிஸ் கக்ஷியார் சொன்ன வாய்தாவைக்கூட பொறுக்காமல் அவர்கள் மீது குற்றம் சாட்டுவதை நல்ல எண்ணம் என்று யாரால் சொல்ல முடியும்? காங்கிரஸ் கலால் மந்திரி மதுபானம் நல்லதா கெட்டதா என்று பரிசோதித்துப் பார்ப்பதாகச் சொல்லி ஏமாற்றினார் - ஜஸ்டிஸ் மந்திரி அப்படி செய்யவில்லை. மது கெட்டது என்பதில் அவர்களுக்கு சந்தேகமில்லை. மற்றபடி ஜஸ்டிஸ் கக்ஷியாருடைய தீர்மானங்கள் இதுவரையில் எது ஏமாற்றப்பட்டுவிட்டது என்று யாராவது சொல்ல முடியுமா என்றும் கேட்கின்றோம்.

காங்கிரஸ்காரர் தீர்மானங்களின் வண்டவாளங்களை சற்று கவனிப்போம்.

காங்கிரஸ்காரர்களின் ஒரு வருஷத்தில் சுயராஜ்ஜியம் சம்பாதித்துக் கொடுக்கும் திட்டமும் அதற்கு ஆக வாங்கிய ஒரு கோடி ரூபாயும் என்ன ஆயிற்று?

தீண்டாமை விலக்கப்படாமல் சுயராஜ்ஜிய முயற்சி செய்வது முட்டாள்தனம் என்றும், சுயராஜ்ஜியம் வராது என்றும், வந்தாலும் நிலைக்காது என்றும் சொன்ன திட்டங்களும் அதற்கு ஆக வசூலித்த கோடிக்கணக்கான ரூபாயும் என்ன ஆயிற்று?

இந்து முஸ்லீம் ஒற்றுமைத் திட்டம் என்ன ஆயிற்று?

காங்கிரசின் மதுவிலக்குத் திட்டம், மறியல் திட்டம், இவற்றிற்காகச் சட்டம் மீறும் திட்டம் ஆகியவைகள் என்ன ஆயிற்று?

இந்தியா பூராவும் வீடுகள் தோறும் ராட்டினம் சுற்றுவதும், எல்லோரும் கதர் கட்டுவதும், அதற்காக வசூலித்த ரூபாயும் என்ன ஆயிற்று?

''நாய், கழுதை, பன்றிகள் தான் சட்டசபைக்குப் போகுமே ஒழிய மனிதன் போக மாட்டான் என்றும் சட்டசபை கள்ளுக்கடை'' என்றும் சொன்ன திட்டம் என்ன ஆயிற்று?

இவர்கள் கல்லில் எழுதி வைக்கப்பட்டனவா தண்ணீரில் எழுதி வைக்கப்பட்டாய் விட்டனவா?

**இவைகளுக்காக வசூல் செய்த கோடிக்கணக்கான ரூபாய் என்ன ஆயிற்று?** இந்தப் பணம் எந்த பாங்கியில் போட்டு வைக்கப்பட்டிருக்கிறது?

ரிசர்வ் பாங்கியிலா பார்ப்பனர் வயிற்றுப் பாங்கியிலா?



இந்த சர்க்காரோடு ஒத்துழைப்பது பாவம், மத விரோதம் என்ற திட்டம் கல்லில் எழுதப்பட்டிருக்கிறதா? தண்ணீரில் எழுதப்பட்டிருக்கிறதா?

இன்று ராஜ விஸ்வாசம் அரசாங்க விஸ்வாசம் செய்ய யார் மூலம் கடவுள் வாக்கு இறக்கி இருக்கிறார்?

இந்த அரசாங்கத்தை திருத்துவது அல்லது உடைப்பது என்ற திட்டம் தண்ணீரில் எழுதி வைக்கப்பட்டதா கல்லில் எழுதி வைக்கப் பட்டிருக்கிறதா?

குடியேற்ற நாட்டந்தஸ்து திட்டமும், பூரண சுயேச்சைத் திட்டமும் இன்று கல்லில் எழுதி வைக்கப்பட்டதா தண்ணீரில் எழுதி வைக்கப்பட்டதா?

வட்டமேஜை மகாநாட்டுக்குப் போய் சுயராஜ்ஜியத்தின் நிழல் தெரிந்தால் போதும் என்று சொல்லும்படி எந்தக் கடவுள் மந்திரம் இறக்கினார்?

வட்டமேஜை பகிஷ்காரத் தீர்மானம் கல்லில் எழுதி வைக்கப்பட்டதா தண்ணீரில் எழுதி வைக்கப்பட்டதா? அங்கு போய் கெடுதி செய்துவிட்டு திரும்பி வரும்படி எந்தக் கடவுள் கனவில் சொன்னார்?

அரசாங்க சீர்திருத்தத்தை உடைக்கும் தீர்மானம் இன்று இந்திய சட்டசபையில் கல்லில் எழுதி வைக்கப்பட்டதா தண்ணீரில் எழுதி வைக்கப்பட்டதா? இன்று அங்கு ராஜ விஸ்வாசம் பிரமாணம் செய்யும்படி எந்த அசரீரி சொல்லிற்று?

தீண்டாமை விலக்கு வேலை செய்யாவிட்டால் பட்டினி கிடந்து சாவேன் என்று சொல்லி சர்க்காரை ஏமாற்றி ஜெயிலில் இருந்து வெளியில் வந்த ''மகாத்மா'' சித்தம் இன்று கல்லில் எழுதி வைக்கப்பட்டதா தண்ணீரில் எழுதி வைக்கப்பட்டதா?

இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு ஆகப் பட்டினி கிடந்து சாவேன் என்ற தீர்மானம் தண்ணீரில் எழுதி வைக்கப்பட்டதா? கல்லில் எழுதி வைக்கப்பட்டதா?

அப்பொழுது வட்டமேஜையில் சுயராஜ்ஜியம் கொடுத்துவிட்டால் பிறகு முஸ்லீம்களை ஒரு கை பார்க்கிறேன் என்று சொன்னது எந்த வேத வாக்கு?

இன்று காந்தியாருடைய அல்லது காங்கிரஸ்காரருடைய எந்தத் தீர்மானம் - எந்தத் திட்டம் - ஓட்டர்களுக்கு கொடுத்த எந்த வாக்குறுதி தண்ணீரில் எழுதி வைக்காமல் கல்லில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது என்று பந்தயம் கட்டி கேட்கின்றோம்.

சென்ற வருஷத்தில் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தலின்போது ''காங்கிரசுக்கும் சர்க்காருக்கும் சண்டையே ஒழிய ஜஸ்டிசுக்கும்,



RangaRakes tamilnavarasam.com

காங்கிரசுக்கும் யாதொரு சண்டையும்'' இல்லை என்று சொல்லி வாக்குக் கொடுத்து ஓட்டு வாங்கிய வாக்குறுதிகள் தண்ணீரில் எழுதி வைக்கப் பட்டதா கல்லில் எழுதி வைக்கப்பட்டதா? என்று கேட்பதோடு மற்றும் இதுவரை காங்கிரசுக்காரர்களால் நாட்டுக்கு ஏற்பட்ட ஏதாவது ஒரு நன்மையையாவது எடுத்துக்காட்ட முடியுமா என்று காங்கிரஸ்காரர்களை அறைகூவி அழைக்கின்றோம்.

மற்றும் சமூக சீர்திருத்தத்தில் தேவஸ்தான பில்லை காங்கிரஸ் ஆதரித்ததா? சாரதா பில்லை காங்கிரஸ் ஆதரித்ததா?

விவசாரிகள் ஒழிப்பு பில்லை காங்கிரஸ் ஆதரித்ததா?

பொட்டுக்கட்டுவதை ஒழிக்கும் பில்லை காங்கிரஸ் ஆதரித்ததா?

இனாம்தார் பில்லை காங்கிரஸ் ஆதரித்ததா?

காங்கிரஸ் கமிட்டி தலைவரான தோழர் சத்தியமூர்த்தியாவது ஆதரித்தாரா? சாரதா பில்லை ஒழிக்க அவர் தன் மகளுக்கு சிறு வயதில் கல்யாணம் செய்து ஜெயிலுக்கு போகிறேன் என்று சொல்ல வில்லையா?

பொட்டுக் கட்டுவதை ஒழித்தால் கடவுள்கள் சக்தி ஒழிந்து போகும் என்று விவசாரித்தனத்துக்கு வக்காலத்து பேசவில்லையா?

**பாதுகாப்பு விஷயத்தில்**

மற்றும் ''இந்திய சீர்திருத்த சட்டத்தில் பாதுகாப்புகள் வண்டி வண்டியாய் ஏற்பட்டதற்கு நாங்கள் தான் காரணம் எங்கள் நடவடிக்கையைப் பார்த்து பயந்து தான் சர்க்கார் இவ்வளவு பாதுகாப்புகள் ஏற்படுத்திக் கொண்டார்கள்'' என்று காங்கிரஸ் தலைவர்களே ஒப்புக் கொள்ள வில்லையா? இவைகளைத் தவிர காங்கிரஸ்காரர்கள் ஏதாவது ஒரு நன்மையான காரியம் செய்தார்கள் என்று யாராவது சொல்ல முடியுமா என்று மறுபடியும் கேட்கின்றோம்.

''பொது ஜனங்களுக்கு ஒரு உணர்ச்சியை ஊட்டினோம்'' என்று சொல்லுவதில் ஏதாவது யோக்கியப் பொறுப்போ அர்த்தமோ இருக்கிறதா என்று யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம்.

மக்களுக்கு என்ன உணர்ச்சி ஏற்பட்டது என்று சொல்ல வேண்டாமா? அந்த உணர்ச்சியால் என்ன ஏற்பட்டது? நன்மை ஏற்பட்டதா? தீமை ஏற்பட்டதா? இரண்டு கோடி ரூபாய்க்கும் இத்தனை பேரை ஏமாற்றி சிறைக்கு அனுப்பினதற்கும், அடிபடச் செய்ததற்கும் இந்த உணர்ச்சியும் மன்னிப்பு கேட்டுக் கொண்டதும் பழய திட்டங்கள் பூராவும் தப்பு என்று உணர்ந்து சட்டசபைக்குள் புக மக்களை ஏமாற்றுவதும் தான் பிரதி பிரயோஜனமா? என்பவைகளை யோசித்தால் காங்கிரஸ்காரர்களுக்கு இதில் புத்திசாலித்தனமோ பொறுப்போ நாணயமோ இருக்கிறதா என்று கேட்கின்றோம்.

ஜஸ்டிஸ் கக்ஷி ஏற்பட்ட பிறகு உண்மையில் தீண்டாமை ஒழிந்து வருகிறது.

தீண்டாமை விலக்குக்கு ஒரு அளவு சட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

பள்ளிக்கூடங்கள் பெருகி வருகின்றன - ரோட்டுகள் ஆஸ்பத்திரிகள் அதிகமாகி வருகின்றன.

ஜஸ்டிஸ் கக்ஷி அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னிட்ட 15 வருஷ காலங்களில் இவ்விஷயங்களில் எவ்வளவு முற்போக்கு ஏற்பட்டிருக்கிறதோ அதைப் போன்று இரட்டிப்பாகவும் சில விஷயங்களில் மூன்று பங்காகவும் இந்த 15 வருஷ காலங்களில் விருத்தி அடைந்து இருக்கிறது. இவை வெறும் உணர்ச்சி அல்ல, காரியத்தில் பெருகி இருக்கிறது என்பதற்கு புள்ளி விபரங்கள் இருக்கின்றன.

இப்படியெல்லாம் இருக்க ஜஸ்டிஸ் கக்ஷியார் தீர்மானம் அம்பக் என்றும், வேஷம் என்றும், தண்ணீரில் எழுத வேண்டும் என்றும் ஜீரணமாகாத தீர்மானமென்றும், எலக்ஷன் தீர்மானமென்றும், சொல்லுவதானது அவர்கள் சொல்லுவதைக் கேட்பவர்களும் எழுதுவதை படிப்பவர்களும் நன்றாக கடைந்தெடுத்த முட்டாள்கள், மடையர்கள், களிமண்ணுத் தலையர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் அயோக்கியத்தனம் தவிர வேறு என்ன என்று சொல்ல முடியும்?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 01.12.1935**





RangaRakes tamilnavarasam.com

# வகுப்புப் போர்

சுயமரியாதை இயக்கமும் ஜஸ்டிஸ் கட்சியும் வகுப்புப்போரை கிளப்புவதாக அரசியல் பிழைப்புக்காரர்கள் கூப்பாடு போடுகிறார்கள். அதனாலேயே ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க வேண்டும் என்கிறார்கள்.

**''அரசியல் காரணங்களுக்கு ஆக இன்று கவர்மெண்டாருடன் காங்கிரஸ்காரர்கள் போர் புரியப் போகிறார்கள். ஆதலால் ஜஸ்டிஸ்காரர்கள் தயவுசெய்து இதில் குறுக்கிடக் கூடாது''** என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லி அசம்பிளி தேர்தலில் ஓட்டு கேட்டார்கள்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் ஒவ்வொரு தனி நபரிடத்திலும் இதைச் சொல்லியே கெஞ்சி ஓட்டுப் பெற்றார்.

ஆனால் வெற்றி பெற்ற உடன் ஜஸ்டிஸ் கட்சியை வெட்டிப் புதைப்பதே இவ்வெற்றியின் பயனாய் செய்ய வேண்டிய வேலை என்றும்,

இவ்வெற்றியினாலேயே ஜஸ்டிஸ் கட்சி மாண்டுவிட்டது என்பது ருஜுவாகிறது. ஆதலால் ஜஸ்டிஸ் மந்திரிகளைத் தள்ளிவிட்டு எங்களுக்கு அந்த மந்திரி ஸ்தானங்கள் அளிக்க வேண்டும் என்றும்,

அதே ராஜகோபாலாச்சாரியார் கவர்னரிடம் போய் மண்டி போட்டு கெஞ்சினார். எச்சிலைப் பத்திரிக்கைகளும் அதுபோலவே எழுதின.

ஆகவே அசெம்பிளி தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் பிரவேசித்தது சர்க்காரோடு போர் புரிவதற்கு அல்லவென்றும்,

ஜஸ்டிஸ் மந்திரிசபையைக் கவிழ்த்துவிட்டு மந்திரி பதவியை அடைந்து பிரிட்டிஷ் ஆட்சி சர்க்காரை நடத்திக் கொடுத்து பெரும் பெரும் சம்பளம் வாங்கவும், உத்தியோகத்துறையைப் பார்ப்பன அக்கிரகார மாக்கவும்தான் என்றும் சுயமரியாதைக்காரர்களும், ஜஸ்டிஸ்காரர்களும் சொல்லி வந்ததை மெய்ப்படுத்திவிட்டார்கள்.

இப்போது காங்கிரஸ்காரர்கள் ஓடி ஓடி ஜஸ்டிஸ் கட்சியார் வகுப்புத் துவேஷங்களை கிளப்பிவிடுகிறார்கள் என்று அழுகிறார்கள்.

வகுப்புத் துவேஷத்தை ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களும் சுயமரியாதைக் காரர்களும், புதிதாக உண்டாக்குகிறார்களா ஏற்கனவே நீடித்த காலமாய்



இருந்து வருவதைக் காட்டி அதை அடியோடு ஒழிக்கப் பார்க்கிறார்களா என்று யோசித்துப் பார்க்கும்படி பொது மக்களை கேட்கின்றோம்.

வகுப்பு என்பது யாரால் ஏற்பட்டது? வகுப்புக்கு வகுப்பு பேதமும் மேல் கீழ் தன்மையும் யாரால் ஏற்பட்டது?

கீழ் வகுப்பார் என்பவர்களைக் கொடுமை செய்து வருகிறவர்கள் யார்?

பெருங்குடி மக்களை சூத்திரன் என்றும், 4வது வகுப்பான் என்றும் சொல்லுகிறவர்கள் யார்?

பிராமணனுக்கு வேறு இடம் சூத்திரனுக்கு வேறு இடம் என்று சொல்லி எழுதிக் காட்டி யிருப்பவர்கள் யார்?

பஞ்சமருக்கு இடமில்லை என்று எழுதி வைத்திருப்பவர்கள் யார்?

பார்ப்பனர்களுக்கு மாத்திரம் என்று விளம்பரம் செய்தவர்கள் யார்?

மக்களைப் ''பிறப்பித்த கடவுளை'' ஆராதிக்க வேண்டுமானால் எங்கள் மூலம் தான் ஆராதிக்க முடியும் என்றும், ஐந்தாவது வகுப்பானுக்கு அந்த உரிமையும் இல்லை என்றும், அவன் கோவிலுக்குள், குளத்துக்குள் வரக்கூடாது என்றும் தடுக்கிறவர்கள் யார்? அதுவும் சட்டபூர்வமாகவும் சாஸ்திர மூலமாகவும் தடுத்து விடுகிறவர்கள் யார்?

இவர்கள் எல்லாம் வகுப்புவாதிகள் அல்லாதவர்களா? வகுப்புத் துவேஷக்காரர்கள் அல்லாதவர்களா?

வகுப்பு அபிமானிகளா? வகுப்பு அன்பர்களா? என்று கேட்கின்றோம்.

பார்ப்பனரல்லாத மக்கள் ஜஸ்டிஸ் கட்சியாராகட்டும் சுயமரியாதைக் காரர்கள் ஆகட்டும் மனித உரிமைக்கு போராடுகிறார்களே அல்லாமல், மனித ஜீவ அபிமானத்துக்கு போராடுகிறார்களே அல்லாமல், மற்றபடி பணத்துக்கு போராடுகிறார்களா? அரசியல் ஏகபோக உரிமைக்கு போராடுகிறார்களா? ஜாதி அகம்பாவத்துக்கோ ஜாதி ஆணவத்துக்கோ ஜாதி ஆதிக்கத்துக்கோ போராடுகிறார்களா?

இவைகளையெல்லாம் விட்டுவிட்டு ''ஜஸ்டிஸ் கட்சியார் வரி குறைக்கவில்லை, மழை தருவிக்கவில்லை, லட்டு பாயாசம் பரிமாறவில்லை'' என்றெல்லாம் விஷமத்தனமாயும், போக்கிரித்தனமாயும் பேசுவதில் என்ன லாபம்? என்று கேட்கின்றோம்.

இன்று ஜஸ்டிஸ் கட்சியார் பணக்காரர்களுக்கும், சொத்து உள்ளவனுக்கும் வரி குறைக்கப்படவில்லை என்று காங்கிரஸ்காரர் சொல்லுவது உண்மையாய் இருக்குமானால், சொத்து இல்லாத ஏழைகளாய் கூலிகளாய் இருக்கும் பாமர மக்களுக்கு அவர்கள் வாங்கிச் **சாப்பிடும் தவிட்டுக் குருணைக்கு** காங்கிரஸ்காரர்கள் அசம்பளியில் வரி போட்டார்களே அது மிகவும் ஏழை அபிமானமான காரியமா என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

பூமிக்கு வரி போடுவதோ குறைப்பதோ ஆன வேலை ஜஸ்டிஸ் கட்சியார் ஆதிக்கத்தில் இல்லை, மந்திரிகள் ஆதிக்கத்தில் இல்லை.

ஜஸ்டிஸ் கட்சியார் அரசாங்கத்தை வரி குறைக்க வேண்டாம் என்று சொல்லவும் இல்லை என்பது எந்த ஜீவனுக்கும் தெரிந்த விஷயம்.

ஆனால், காங்கிரஸ்காரர்கள் அசம்பளி சட்டசபையில் குருணைக்கு வரிபோடுங்கள் என்று சொன்னார்களே, அதற்கு அனுகூலமாக ஓட்டும் கொடுத்தார்களே இந்த யோக்கியர்களுக்கு ஜஸ்டிஸ் கட்சியார் வரி குறைக்கவில்லை என்று சொல்ல வாய் இருக்கிறதா என்று கேட்கின்றோம்.

காங்கிரஸ்காரர்கள் வீரத்துடன் ஆண்மையுடன் மானத்துடன் சண்டை செய்வதாய் இருந்தால் அவர்களுடன் சரிசமமாய் சண்டைக்கு நின்று போர் புரியலாம், அப்போரில் உயிரையும் விட்டு பிணத்தை ஊர்கோலம் செய்து புதைக்கும்படியும் செய்து கொள்ளலாம்.

அப்படிக்கில்லாமல் பேதிப்பு, வஞ்சம், பொய், களவு, சூது ஆகிய காரியங்களையே ஆயுதமாக வைத்துக் கொண்டு அனுமானைப் போல் தன் இனத்தைக் காட்டிக் கொடுத்து எதிரியின் காலைக் கழுவி சாப்பிட்டு உயிர் வாழ்ந்த ஜீவனைப் போல் உள்ள சில ஆட்களைக் கைவசப்படுத்தி அவரவர்களை தங்கள் கொடி சின்னமாக வைத்துக் கொண்டு போர் புரிவது என்றால் இந்தப் போரை எப்படி வளர விட்டுக் கொண்டிருக்க முடியும்?

மானம் சுயமரியாதை என்பது சோத்துக்கு முந்தினதா சோத்துக்கு பிந்தினதா என்று கேட்கின்றோம்? சோத்துக்கு பிந்தினதுதான் மானம் என்றால் அந்த சோற்றைவிட மலம் மேலானது என்றுதான் மக்களுக்கு விளங்க வைக்க கற்றூணடித்து நிலை நிறுத்துவோம்.

ஆகவே இன்று பார்ப்பனப் போரானது சண்டிப் போராகப் போய்விட்டது - மனிதத் தன்மைப் போராக இல்லை.

ஆதலால் பார்ப்பனக் கூச்சலுக்கும், அவர்களது காலிகள் கூலிகள், கூச்சலுக்கும், எச்சிலை பத்திரிகைகளின் விஷமங்களுக்கும் பயந்து போகாமல் நமது போரை எதிரிகள் வகுப்புப்போர் என்றாலும், உத்தியோகப் போர் என்றாலும், பணக்காரப் போர் என்றாலும், மந்திரி பதவிப்போர் என்றாலும் ஒன்றையும் லக்ஷியம் செய்யாமல் இப்படிச் சொல்லுகின்றவர்களையெல்லாம் பார்ப்பனர்களின் - பணக்காரர்களின் வகுப்பு ஆதிக்கக்காரர்களின் லைசன்சு பெற்ற கூலிகள் என்று சந்தேகமற தீர்மானித்து விட்டு இன்றையப் போரை தைரியத்துடன் எதிரியின் யோக்கியதைக்குத் தகுந்தபடி தொடர்ந்து நடத்த வேண்டும் என்றே ஆசைப்படுகின்றோம்.

குடி அரசு - கட்டுரை - 08.12.1935



# தேவகோட்டையில் பார்ப்பனீய தாண்டவம்

தேவகோட்டை நியாயஸ்தலத்தில் வக்கீல் சங்கத்தில் தாகத்துக்குத் தண்ணீர் சாப்பிடுவதற்காக வைத்திருக்கும் பாத்திரத்தையும், சிற்றுண்டி சாப்பிடுவதற்காக ஒதுக்கி வைத்திருக்கும் இடத்தையும் பார்ப்பனரல்லாத வக்கீல்கள் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று வக்கீல் சங்கத்தில் பார்ப்பனர்கள் தங்கள் மெஜாரிட்டியைக் கொண்டு தீர்மானித்துக் கொண்டார்கள். பார்ப்பனரல்லாத வக்கீல்கள் மைனாரிட்டியார் மூன்றே பேர் ஆனதால் அதை ஆட்சேபித்து பலன்படாமல் தங்களுக்குள்ளாக செய்து கொண்ட ஒரு கண்டனத் தீர்மானத்தை நிர்வாக கமிட்டிக்கு அனுப்பி இருக்கிறார்களாம். இதை பார்ப்பன வக்கீல்கள் குப்பைத் தொட்டியில் போட்டுவிடுவார்கள் என்பதில் நமக்கு சந்தேகமில்லை.

தேவகோட்டையிலுள்ள பார்ப்பனரல்லாத வக்கீல்களில் ஒருவர் தோழர் எஸ்.லட்சுமிரதன் பாரதியார், எம்.ஏ., பி.எல்., நமது நண்பர் ஆவார். இவர் காங்கிரஸ் தீண்டாமை விலக்கு கமிட்டி பிரசிடெண்டும் சுயமரியாதை இயக்கத்துக்கும் உற்ற நண்பரும் ஆவார். தேவகோட்டை வக்கீல் பார்ப்பனர்கள் பெரிதும் காங்கிரசுக்காரர்கள். இந்த நிலையில் இவருடைய கதியே இப்படி இருக்குமானால் காங்கிரசின் தீண்டாமை விலக்கு விஷயத்தின் யோக்கியதையைப் பற்றி நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

ஆகவே இதனால் தான் ‘‘நம் மீதுள்ள தீண்டாமையை விலக்கிக் கொள்ள நாம் முதலில் முயற்சிக்க வேண்டும்’’ என்று சுயமரியாதை இயக்கம் சொல்லுகிறது.

தீண்டாமை விலக்குக்கு பத்து லட்சக்கணக்காக பணம் வசூலித்தார்கள். அந்த பணச் செல்வாக்கை பயன்படுத்தி அசம்பளி எலக்ஷனில் வெற்றி பெற்றார்கள்.

அந்தப் பணச் செலவில் கூலிகளையும் காலிகளையும் நியமனம் செய்து ஜஸ்டிஸ் கட்சியை வையச் செய்தார்கள்.

அந்தப் பணத்தை துஷ்பிரயோகம் செய்து எச்சிலைப் பத்திரிகை களையும் எச்சிலை நக்கும் பத்திரிகைகளையும் வசப்படுத்தி ஈனத்தனமாய்



RangaRakes tamilnavarasam.com

இழி தன்மையாய் பார்ப்பனரல்லாதார்களையும், உண்மையாய் பாடுபடுகின்றவர்களையும் பார்த்து குரைக்கச் செய்தார்கள்.

இவைகள் ஒருபுறமிருந்தாலும் இன்று பச்சையாய் வெள்ளையாய் பொது இடத்தில் பார்ப்பானுக்குத்தான் உரிமை, பார்ப்பனரல்லாதாருக்கு அவ்விடத்தில் உரிமை இல்லை. பார்ப்பான் சாப்பிடுகிற பாத்திரத்தில் பார்ப்பனரல்லாதார் தண்ணீர் சாப்பிடக்கூடாது என்று தங்கள் மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு தீர்மானம் செய்து ஒதுக்கித் தள்ளி விட்டார்கள்.

இனி வெள்ளைக்கார ஆக்ஷி போய் சத்தியமூர்த்தி ஆக்ஷியோ ராமராஜ்ஜிய ஆக்ஷியோ ஏற்பட்டால் என்ன ஆகும் என்பதைப் பற்றி நாம் எடுத்துக்காட்ட வேண்டுமா என்று கேட்கின்றோம்.

பார்ப்பனர்கள் இப்படி நம்மைக் கொடுமை செய்கிறார்களே இழிவு படுத்துகிறார்களே என்பது வரவர நமக்கு அவ்வளவு வேதனையாகவோ ஆச்சரியமாகவோ காணப்படுவதில்லை. ஏனெனில் அவை அவர்களது பரம்பரை வழக்கம். இன்றும் அவர்களது ஜீவன் போன்ற லக்ஷியம் ஆதலால் அதில் அதிசயமில்லை.

ஆனால் பார்ப்பனரல்லாதார் அப்படிப்பட்ட பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டும், அவர்களை ஆதரித்துக் கொண்டும், அவர்களது பூட்சுகளை நாக்கினால் சுத்தப்படுத்திக் கொண்டும் வாழுகின்றார்களே என்பதைப் பற்றி யோசிக்கும்போது, பார்ப்பனரல்லாதாரில் சிலராவது உண்மையிலேயே பிறவியிலேயே இழி மக்களாய் மானமற்றவர்களாய் இருக்கிறார்கள் என்று காந்தியார் சொல்லும் வருணாச்சிரம தர்மம் இவர்களைப் பற்றி தானா என்ற பிரச்சினையைக் கிளப்பி விடுகின்றது.

ஆகவே தோழர் பாரதியாரை பார்ப்பனர் பாத்திரத்தை தொடக் கூடாது என்று சொன்ன கொடுமையைவிட, பாரதியாருக்கு ராணுவத்தில் சுதந்திரமோ கஜானாவில் சுதந்திரமோ கொடுக்க மாட்டேன் என்று வெள்ளைக்காரன் சொல்லுவதை அதிகக் கொடுமையானதென்றோ சமமான கொடுமையானதென்றோ ஆயிரத்தில் ஒரு பங்கான கொடுமை யானதென்றோ நமக்கு தோன்றவில்லை.

ஆகவே காங்கிரஸ் பார்ப்பனரல்லாதார் - சத்தியமூர்த்தியை தலைவராகக் கொண்ட காங்கிரஸ் தேசபக்தர்கள் இதற்கு என்ன பதில் சொல்லுவார்கள்?

இந்தக் கொடுமை தேவகோட்டைப் பார்ப்பனர் கொடுமை மாத்திரமல்லவென்றும், சக்கெண்ட் லைன் பீச்சில் உள்ள ஒண்ணறை அணா (பாப்பன) அம்மங்கார் முதல் டம்பாச்சாரி நாடகத்தில் வரும் கும்பகோண அய்யர் சந்ததியார் வரையில் உள்ள ''பிராமணீய'' சமூகத்தின் ஜீவாதாரத் திட்டம் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு பதில் இறுப்பார்களாக.

குடி அரசு - கட்டுரை - 08.12.1935



# சத்தியமூர்த்தியும் கோவைப் பிரசங்கமும்

இன்று தமிழ்நாட்டில் அரசியல் துறையில் தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரிகளுடைய பெயர் அமிர்தாஞ்ஜனம் டப்பி போல் விளம்பரம் செய்யப்படுகின்றது. விளம்பரத்தின் பயனாய் அவரது பெயரும் ஒரு அளவுக்கு தினமும் தவறாமல் பத்திரிகைகளில் அடிபடுகிறது. அதோடு மாத்திரமல்லாமல் அவரும் தமிழ்நாட்டில் பல இடங்களில் அடிக்கடி உண்மையிலேயே அடிபடுகிறார். அவ்வளவோடு நிற்பதில்லை. ''ஊரார் வீட்டு நெய்யே - என் பெண்டாட்டி கையே'' என்று ஆனந்தமடைந்த ஒரு நெய் வெறியர் போல் ''ஊரார் வீட்டுப் பணமே எனது சுற்றுப் பிரயாணமே'' என்கின்ற மாதிரி இப்போது தினம் ஒரு ஊராகவும், ஏன்? தினம் 2, 3 ஊர்களாகவும், தான் மாத்திரமல்லாமல் தமது தர்ம பத்தினி சமேதராய் சஞ்சாரம் செய்த வண்ணமாய் இருக்கிறார்.

காங்கிரஸ் பணம் இருக்கிறது, எலும்பில்லாத கை இருக்கிறது, சரியாய் எழுதிக்கொள்ள வேண்டிய அவசியமில்லாத கணக்கு இருக்கிறது, யாராவது எந்த ஆடிட்டராவது கணக்கு தப்புக் கணக்காகவோ ஒழுங்கீனமான கணக்காகவோ இருக்கிறது என்று ஆதாரத்தோடு எடுத்துக் காட்டினால் அதை எடுத்துச் சொல்லுகிறவர்களை ''நீ தான் திருடன், அயோக்கியன், நாயே, கழுதையே'' என்று கேட்க எச்சில் இலை - காலிப் பத்திரிகைகள் இருக்கின்றன. இவ்வளவும் போதாமல் ரகசியத்தில் குமாரராஜா சாஹேப் அவர்கள் வாங்கிக் கொடுத்த மோட்டார் காரும் அவரது பண ஆதரவும் இருக்கிறது.

ஆகவே இனி நமது சத்தியமூர்த்தி சாஸ்திரியாருக்கு வேண்டியது என்ன? ஆகாயத்தில் மனைவி மக்களுடன் பறப்பதற்கு ஒரு ஏரோபிளானும், அங்கு ஆகாய சஞ்சாரம் செய்ய சில மண்டலங்களும் அங்கு வசவு கேட்பதற்குச் சில மானங்கெட்ட ஆட்களும், அதை விளம்பரம் செய்யவும் காட்டிக் கொடுப்பதற்கும் சில எச்சில் நக்கிப் பத்திரிக்கைகளும் சில கூலிகளும் தேவை.

## கிடைத்தற்கு அரிய பொக்கிஷம்

எப்படி இருந்தாலும் உண்மையிலேயே சத்தியமூர்த்தியாரைப் பார்த்து நாம் பொறாமைப்படவில்லை. பாராட்டுகிறோம். ஒரு விஷயத்தில்



RangaRakes tamilnavarasam.com

அவருடைய சில குணங்கள் நம்மவருக்கும் வரவேண்டுமென்றும், அவரைப் போல் வகுப்பு அபிமானத்தில் மாறாத, சலியாத குணம் நம்மவர்களுக்கும் இருக்க வேண்டும் என்றும் ஆசைப்படுகிறோம்.

அவர், அதாவது தோழர் சத்தியமூர்த்தி, சாஸ்திரியார் நமது நண்பர் சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரைவிட மேலானவர் என்று கூடச் சொல்லுவோம்.

அதென்னவென்றால் இன்று தோழர் ஆச்சாரியாரவர்களுக்கு உள்ள பார்ப்பன அபிமானம், பார்ப்பனீய ஆதிக்கத்தில் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் காப்பாற்றப்பட வேண்டும் என்கின்ற பிடிவாதமான காரியங்களில் அவரைவிட பல மடங்கு மேலான ஆசை தோழர் சாஸ்திரியாருக்கு உண்டு.

எந்த சமயத்திலும் எந்த விலைக்கும் பார்ப்பன அபிமானத்தையும், பார்ப்பன ஆதிக்கத்தையும், பார்ப்பனக் கலை, பாஷை, தொழில், பழக்க வழக்கம், வருணாச்சிரமம் ஆகியவைகளையும் சிறிதுகூட விட்டுக் கொடுக்காதவர்.

சத்தியமூர்த்தியாருக்குப் பயந்துதான் காந்தியார் வர்ணாச்சிரம தர்மத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறார் என்றுகூட சொல்லலாம். மற்றும் சத்தியமூர்த்தியாரால் தான் கராச்சி காங்கிரசில் மதம், ஜாதி, வருணாச்சிரமம், பழக்கம், வழக்கம், தொழில், சாஸ்திரம், புராணம் ஆகியவை காப்பாற்றப்படுவதாகப் பார்ப்பனருக்கு உறுதி கொடுக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றும் சொல்லலாம்.

அவ்வளவுதானா இன்னமும் பொது ரோட்டு, பொது பள்ளிக்கூடம் எல்லா ஜாதியாருக்கும் உரிமை உண்டு என்ற தீர்மானத்தில் வெகு ஜாக்கிரதையாக, வெகு பிடிவாதமாக கோவில்கள் விலக்கப்பட்டது என்றும் சொல்லலாம். இவ்விஷயங்களில் இவ்வளவு தைரியமாய்ப் பேச ஆச்சாரியாருக்கு சக்தி போதாது; தந்திரமாய் ஏதாவது செய்யக்கூடும். ஆனாலும் இப்படிப்பட்ட காரியங்களுக்கு இவருக்கு நிகரான தலைவர் நம் பார்ப்பனர்களுக்கு வேறு யாரும் கிடைக்க மாட்டார்கள். ஆதலால் இவர் பார்ப்பனர்களுக்குக் கிடைத்தற்கரிய பொக்கிஷம் என்றுதான் சொல்ல வேண்டும்.

## அழகான உச்சிக்குடுமி

இவர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக ஆவதற்கு முன் தலையில் கிராப்பு வைத்திருந்தார். இப்போது தலைவராக ஆன உடன் கிராப்பை எடுத்து விட்டு அழகான உச்சிக்குடுமி வைத்துக் கொண்டார் - உத்தம பிராமணனாக - பச்சைப் பிராமணனாக ஆக்கிக் கொண்டார். இன்று சாஸ்திரியாரை எல்லாப் பார்ப்பனர்களும் அபிப்பிராய பேதமில்லாமல் எப்படி மத விஷயத்தில் சங்கராச்சாரிய ''சுவாமிகளை'' மதித்து மரியாதை செய்கிறார்களோ அது போல சத்தியமூர்த்தி சாஸ்திரிகளை அரசியல் விஷயத்தில் சங்கராச்சாரி போல் மரியாதை செய்கிறார்கள். எந்தப் பார்ப்பானாவது சத்தியமூர்த்தியாரை அலட்சியமாகப் பேசினால் அவர் நபியை குற்றம் சொன்ன மகம்மதியனை விட அதிக கேவலமாகக் கண்டிக்கப்படத்தக்கவனாகிக் கண்டிக்கப்படுகிறான்.

இந்தச் சமயத்தில் ரஷ்யாவைச் சேர்ந்த லெனின்கிராடில் நடித்துக் காட்டப்பட்ட ஒரு நாடகம் ஞாபகத்துக்கு வருகிறது.

## ஒரு ரஷியக் கதை

அதாவது, ஒரு கொள்ளையும் கொலையும் கலந்த குற்றத்துக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி ஒருவனின் தண்டனை நிறைவேற்றப் படும் நாளில், அதிகாலையில் ஒரு பாதிரியார் சென்று அவனுக்கு இறுதிக்கால உபதேசம் செய்து, அவனது பாவங்களுக்கு மன்னிப்பு கொடுப்பதற்காக சூரிய உதயத்துக்கு முன் நல்ல குமரி இருட்டுச் சமயத்தில் சிறைச்சாலையில் உள்ள அவனது அறைக்குச் சென்று குற்றவாளிக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார். அப்போது அக்குற்றவாளி பாதிரியாரின் கழுத்தை நெறித்துக் கொன்று தள்ளி விட்டு தன் உடுப்பை பாதிரியாருக்குப் போட்டு விட்டு அவரது உடுப்பைக் கழற்றி தான் அணிந்து கொண்டு பாதிரி போல் வெளியில் வந்து விட்டான்.

ஜெயில் அதிகாரிகள் குற்றவாளியை கொலைக்களத்துக்கு கூட்டிக் கொண்டு போக வந்ததில் இருட்டு ஆனதினால் கைதி மூர்ச்சையாய் கிடக்கிறான் என்று கருதி, தூக்கும்போது சந்தேகப்பட்டுப் பார்த்துத் தாங்கள் தப்பித்துக் கொள்ள அவசரமாய்க் கொண்டு போய் கொலை செய்ததாக பாசாங்கு செய்து புதைத்து விட்டார்கள்.

வெளியில் வந்த குற்றவாளி அந்த உடுப்புடனேயே ஒரு தனிப் பாதிரியாகி, பல பெண்களைச் சேர்த்துக் கொண்டு ஒரு மடத்தை உண்டாக்கி அம்மடத்துக்கு அப் பெண்கள் மூலமாக பணம் சம்பாதித்து, பிரபல பாதிரியாகி போப் எலக்ஷனுக்கு நின்று பெண்கள் உதவியாலும், பல தந்திரங்களாலும் எலக்ஷனில் வெற்றி பெற்று விட்டான்.

போப் எலக்ஷனில் வெற்றி பெற்ற உடனே அரசனும் நியாயாதிபதியும் வந்து போப்புக்கு மரியாதை செய்து கை கால்களுக்கு முத்தமிட்டு வணங்க வேண்டியது அப்போதைய முறை. அந்தப்படி அரசன் மரியாதை முடிந்த உடன் நியாயாதிபதி மரியாதை செய்ய வந்தபோது இந்த போப்புதான் முன் கொலை, கொள்ளை ஆகிய குற்றத்துக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டவன் என்பதாக கண்டு கொண்டு பொது ஜனங்களைப் பார்த்து நியாயாதிபதி ஏதோ பேசத் தொடங்கினார்.

போப்பின் உள் ஆட்களும், அங்கிருந்தவர்களும், அந்த நியாயாதிபதி மீது கோபித்தார்கள். அதற்கு அந்த நியாயாதிபதி இந்த போப்பைப் பற்றி சில வார்த்தை பேச வேண்டுமென்றார். உடனே மற்றவர்கள் கோபம்



RangaRakes tamilnavarasam.com

கொண்டு நியாயாதிபதியை தாக்க ஆரம்பித்து நியாயாதிபதியை கைது செய்ய முயன்றார்கள். இதற்கு அரசர் முதல் மற்ற பாதிரிகள் எல்லோரும் போப்புக்கு அனுகூலமாகவே இருந்தார்கள். இந்தப் போப்புடன் கூடவே கூட்டுக் கொள்ளையில் பங்காளிகளாய் இருந்து கண்டுபிடிக்க முடியாமல் மறைவாய்த் திரிந்தவர்களும், மற்றும் பலரும் குட்டிப் பாதிரிகளாகி இந்த போப்பு எலக்ஷனுக்கு வேலை செய்து அவரது பட்டாபிஷேகத்துக்கும் உதவியாய் இருந்தார்கள்.இவர்களே முன்னணியில் இருந்தார்கள். இதை பார்த்து நியாயாதிபதி பயந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தானாகவே காலைத் தொட்டு முத்தமிட்டு விட்டுப் போனார்.

இது ஒரு டிராமா. அதுபோல் நமது சத்தியமூர்த்தியார் அவரைப் பற்றி இப்போது எந்த நியாயாதிபதியும் ஏதும் பேசாமல் காலைத் தொட்டு முத்தமிட வேண்டிய நிலைமையை அடைந்திருக்கிறார்.

## மூர்த்தியின் இரண்டு ஆசை

இப்படிப்பட்ட இவருக்கு இன்று இரண்டு கொள்கைகள் (ஆசை) தான் உண்டு.

அதாவது, ஒன்று - ஜஸ்டிஸ் கட்சியை (பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை) குழி தோண்டி 500 கஜ ஆழத்தில் புதைக்க வேண்டும் என்பது.

மற்றொன்று - ஒரு நாளைக்கு ஆவது தான் சென்னை அரசாங்க முதல் மந்திரியாகி சலூன் வண்டியில் மனைவி மக்களுடன் பிரயாணம் செய்ய வேண்டும் என்பது.

இந்த இரண்டு காரியத்தில் முன்னையது ஜாதி அபிமானம், பின்னையது அந்த ஜாதி அபிமானத்துக்கு கூலியும் சாதனமும் ஆகும். ஆகவே இந்த இரண்டு காரியங்களுக்கும் இன்று தென்னாட்டுப் பார்ப்பனர், ஆந்திர நாட்டுப் பார்ப்பனர், கேரள நாட்டுப் பார்ப்பனர், கர்நாடக நாட்டுப் பார்ப்பனர் ஆகியவர்களும் இவர்கள் சட்டப்படிக்கான மனைவிகள் குழந்தைகள் ஆகியவர்களும், சட்டத்திற்குள் வரக்கூடாதவர்களான மனைவிகளும் மக்களும் உதவியாய் பாடுபடுகிறார்கள்.

இந்த தைரியத்தில் தான் தோழர் சத்தியமூர்த்தியும், அவர்கள் கூட்ட பத்திரிகைகளும் காரியம் கைகூடிவிட்டதாகவே கருதிக்கொண்டும் சில விஷயங்களில் கனவு கண்டு கொண்டும் ''ஜெயினக் கடவுள்'' மாதிரி ஆகி தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கின்றன.

## ஒரு நாளும் ஆசை நிறைவேறாது

என்றாலும் இப்பவும் ஒன்று கூறுகிறோம். ஜஸ்டிஸ் கட்சியை 500 கஜம் அல்லது 5000 கஜம் ஆழத்தில் புதைக்க (முடியாது) முடிந்ததாகவே



வைத்துக் கொள்ளுவோம். காங்கிரஸ் கொள்கைகள் இருந்த இடங்களில் புல்லு முளைத்ததுபோல் ஜஸ்டிஸ் கட்சி இருந்த இடத்தில் புல்லு முளைத்து, பொப்பிலிக்கும் மந்திரி வேலை போய் ராஜா ஆய்விட்டதாகவே வைத்துக் கொள்ளுவோம். அப்போதும் சத்தியமூர்த்தியோ அவர்கள் சிஷ்ய கோடிகளோ முதல் மந்திரியாகவோ ஜில்லா போர்டு தலைவராகவோ ஆகிவிட முடியும் என்பது மாத்திரம் கனவிற்கூடப் பார்க்க முடியாது என்பதை உறுதியாய்ச் சொல்லுவோம். ஜஸ்டிஸ் கட்சியை 500 கஜ ஆழத்துக்கு கீழ் புதைத்துவிட வேண்டுமென்று சத்தியமூர்த்தியார் ஆசைப்பட்டாலும் காரியத்தில் அவர் ஜஸ்டிஸ் கட்சியானது என்றும் நிலைக்கும்படியான அசோக ஸ்தம்பம் போல் விளங்கும்படி உபகாரம் செய்துதான் வருகிறார்.

எப்படி என்றால், முதலாவதாக ஜஸ்டிஸ் கட்சியைப் பரிசுத்தம் செய்து வருகிறார். வெறும் பட்டம் பதவிக்கு ஆக மாத்திரம் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து வந்த ''பெரியார்களை'' எல்லாம் தான் அழைத்துக் கொள்ளுவதன் மூலம் அக்கட்சிக்குப் பல விதத்திலும் தொல்லையைக் குறைத்துக் கொண்டும், பதவிப் போட்டியைக் குறைத்துக் கொண்டும் வருகிறார். அன்றியும் அந்தப்படி அழைத்துக் கொள்ளும் ஆட்கள் அத்தனை பேரும் சத்தியமூர்த்தியாருக்கு உலை வைக்கவும், அவருடன் போட்டி போடவும், அவரது காலைவாரி விட்டு மேலே உட்காரவும் ஆசையும், ஆற்றலும் கொண்டவர்கள் என்பதோடு சத்தியமூர்த்தியாரை தலைவர் என்று வாயில் கூட சொல்லுவதைவிட பிராணனை விட்டு விடுவது மேல் என்றே கருதத்தக்க சுயமரியாதை உள்ளவர்கள்.

## வெற்றியின் யோக்கியதை திருநெல்வேலி

உதாரணமாக, திருநெல்வேலி ஜில்லா போர்டு பார்ப்பன மயமாக ஆய்விட்டது என்றும், காங்கிரசுக்கே வெற்றி மேல் வெற்றி என்றும், 52 ஸ்தானங்களில் 31 ஸ்தானங்களுக்கு காங்கிரஸ் ஆட்கள் வந்துவிட்டார்கள் என்றும் சொல்லி, சத்தியமூர்த்தியார் பறையடித்தார். பார்ப்பன எச்சிலைப் பத்திரிக்கைகள், பார்ப்பனர்கள் எச்சிலையை நக்கும் பத்திரிக்கைகள் ஜஸ்டிஸ் கட்சிக்கு சாவோலை படித்தன.

முடிவு என்ன ஆயிற்று? அன்றைக்கு என்று ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து ஒருவரை அழைத்துப் போய் அதுவும் கொஞ்சம்கூட சந்தேகப்படுவதற்கு இடமில்லாத அசல் பார்ப்பனரல்லாதாரை, அதுவும் எந்த சமயத்தில் பார்ப்பனக் கும்பலுக்கு பெட்ரோல் ஊற்றி நெருப்பு வைக்கலாம் என்று சதா கிளிச்ச குச்சியை கையில் வைத்திருக்கும் பார்ப்பனரல்லாதாரைத் தான் அழைத்துப் போய் ஜில்லா போர்டு தலைவர் ஸ்தானம் கொடுப்பதாக காங்கிரஸ் தலைவரே தீர்மானித்துவிட்டார்.



RangaRakes tamilnavarasam.com

## திருச்சி

திருச்சியிலும் ஜில்லா போர்டில் காங்கிரசுக்கு வெற்றி மேல் வெற்றி என்று எச்சிலைப் பத்திரிக்கைகளும் எச்சை நக்கிப் பத்திரிக்கைகளும் தப்பட்டை அடித்தன. கடசியாக அந்த தலைமை ஸ்தானமும் பச்சைப் பார்ப்பனரல்லாதாருக்கு அதுவும் நேற்று வரை பார்ப்பனர்களை மாத்திரமல்லாமல் அவர்கள் பழந்தலைமுறை முதல் உள்ள மக்களை பெண்டு பிள்ளைகளுடன் அமிர்தக் கடையிலும் ''விஷ்ணுவின் முதல் அவதார''க் கடையிலும் நடக்கும் சம்பாஷணை போல் வைது கொண்டிருந்த ''பெரியாரே'' - தோழர் தேவரே இன்று திருச்சி ஜில்லா போர்டுக்கு காங்கிரசினால் சத்தியமூர்த்தியார் வாயினால் ''வசிஷ்டன் ராமனுக்கு'' பட்டங்கட்டிய மாதிரி பட்டங்கட்டி விட்டார். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், வெகுநாளாக காங்கிரசில் இருந்து கொண்டு பெண்டு பிள்ளைகளுடன் ஜெயிலுக்குப் போய், தமிழ்நாடு காங்கிரசுக்கு சர்வாதிகாரியாய் இருந்த டாக்டர் டி.வி.எஸ். சாஸ்திரியாருடைய பெயரை தோழர் சத்தியமூர்த்தியார் ஜில்லா போர்டு தலைவர் பதவிக்கு வாயில் கூட உச்சரிக்கவில்லை என்று சொல்லி பத்திரிக்கைகளை விட்டு எழுதச் சொல்லுவதோடு, டாக்டர் சுப்பராயனிடமிருந்து அத்தாட்சி வாங்கி விளம்பரம்படுத்த வேண்டிய அளவு பயம் ஏற்பட்டுவிட்டது. டாக்டர் சுப்பராயன் அவர்களும் வெகு ஜாக்கிரதையாகவே அத்தாட்சி கொடுத்திருக்கிறார். அதாவது 'அந்தப்படி பட்டுக்கோட்டையில் பேசவில்லை' என்பதாகும். மற்ற ஊரில் பேசி இருக்கலாமோ என்னமோ அது வேறு விஷயம்.

அப்படியாவது சத்தியமூர்த்தியார் பட்டாபிஷேகம் செய்த ஆட்களுக்காவது தலைவர் ஸ்தானம் கிடைக்கிறதோ அல்லது காங்கிரஸ் மெம்பர்களே நாமம் சாத்தப் போகிறார்களோ பின்னால் பார்க்கலாம்.

இனி தென்னாற்காடு இருக்கிறது. அதில் பார்ப்பனப் பூண்டு உள்ள வரை ஞாபகம் இருக்கும்படியாக தோழர் ஜம்புலிங்க முதலியார் காங்கிரஸ்காரர்களுக்கு புத்தி கற்பித்துவிடப் போகிறார்.

## ஜெயிலுக்கு போனால்தான் தலைவராகலாமாம்

இந்த நிலையில் தோழர் சத்தியமூர்த்தியார் ''ஜெயிலுக்குப் போகாதவர்களுக்குத் தலைவர் ஸ்தானம் கிடையாது'' என்று கோவையில் உத்திரவு போட்டிருக்கிறார்.

அவருடைய வாக்கு எவ்வளவு சத்தியமானது என்பதற்கு தளவாய் முதலியார், திருச்சி தேவர் இவர்கள் எந்த ஜெயிலுக்குப் போய் வந்தார்கள் என்பதைப் பார்த்தாலே விளங்கி விடும்.



மற்றும் ஜெயிலுக்குப் போய் வருவது என்பதற்கு மூர்த்தியார் அகராதியில் என்ன வியாக்கியானம் இருக்கிறது என்பதும் நமக்கு விளங்கவில்லை.

மோட்டாரில் துண்டு நோட்டீஸ் வினியோகிக்க வேண்டியது, போலீசார் மோட்டாரில் அழைத்துப் போகவேண்டியது, மேஜிஸ்ட்ரேட் தண்டிக்க வேண்டியது A கிளாஸ் வகுப்பில் போடும்படி கெஞ்ச வேண்டியது, ஜெயில் சூப்ரண்டு சிபார்சு பிடித்து ஆஸ்பத்திரி ஸ்பெஷல் வார்டுக்கு போய் விட வேண்டியது, அங்கிருந்து ஜஸ்டிஸ் கட்சியாரைக் கெஞ்சி விடுதலை ஆகி விட வேண்டியது, ஜெயில் ரூலுக்கு விரோதமாய் நடந்த குற்றங்களையெல்லாம் மன்னித்து விட வேண்டியது. இன்னும் சில ரகம் உண்டு. அவற்றைச் சொன்னால் ஜெயில் அதிகாரிகள் பாடு திண்டாட்டமாகிவிடும்.

ஆகவே இந்தப்படி போவதைத் தான் நமது மூர்த்தியார் ஜெயில் பிரவேசம் என்று கருதினாரோ என்னமோ?

## ஜெயிலுக்கு போகாத தலைவர்கள்

இதுகூட இல்லாத தோழர் கே.பாஷ்யம் தலைவரானாரே அது எந்த ஸ்பெஷல் கிளாஸ்படி என்பது நமக்கு விளங்கவில்லை. மற்றும் சுதேசமித்திரன் பத்திராபதிபர் எந்த ஜெயிலுக்குப் போனார்?

தோழர் எஸ். சீனிவாசயங்காரை எல்லா இந்திய காங்கிரஸ் தலைவரே வீட்டுக்கு போய் தமிழ்நாடு காங்கிரசை தலைமை வகித்து நடத்தக் கூப்பிட்டாரே அவர் எந்த ஜெயிலுக்கு போனார் தோழர் சி.ஆர். ரெட்டி அவர்கள் பல மகாநாட்டுக்கு தலைமை வகித்தாய்விட்டதே அவர் எந்த ஜெயிலுக்கு போனார்? சாமி வெங்கிடாசலம் செட்டியார் அவர்கள் எந்த ஜெயிலுக்கு போனார். இவ்வளவு சங்கதி இருக்க, கோயமுத்தூருக்கு போன உடன் மாத்திரம் மூர்த்தியாருக்கு ஏன், எதற்கு ஆக இந்த ஞானம் உதயமாய் விட்டது என்பது நமக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் கோயமுத்தூரில் தலைவர் போட்டி வரலாமென்று பயந்து இப்போதே பழைய ஆட்களுக்கு உறுதி கூறினாரோ என்று கருத வேண்டி இருக்கிறது.

## அசம்பளி எலக்ஷன்

நிற்க அசெம்பளி எலக்ஷனில் ஜஸ்டிஸ் கட்சிக்கு ''தோல்வி'' ஏற்பட்டது முதல் ஜஸ்டிஸ் கட்சியை புதைத்து விட்டோம்; அது செத்தது; உயிருக்குத் திண்டாடுகிறது; ஒழியப் போகிறது என்று இருக்க இருக்க சுரம் கம்மியாகவே பேசிக் கொண்டு வருவது யாரும் அறிந்ததாகும். எச்சிலை பத்திரிக்கைகளும் எச்சை நக்கும் பத்திரிக்கைகளும் அதுபோலவே மானமற்று ஈனத்தை லக்ஷியம் செய்யாமல் பின் மேளமடிப்பதும் யாவரும் அறிந்ததாகும்.



RangaRakes tamilnavarasam.com

### எது செத்தது?

அன்று முதல் இன்று வரை இந்த ஒரு வருஷ காலமாக ஜஸ்டிஸ் கட்சி எதில் செத்து வருகிறது? எ. ராமசாமி முதலியார் தோற்றார், சத்தியமூர்த்தி வெற்றி பெற்றார். இதில் ராமசாமி முதலியார் புதைக்கப்பட்டுவிட்டாரா? அவர் பெருமை மங்கிவிட்டதா? அல்லது சத்தியமூர்த்திக்கு இறக்கை முளைத்ததா?

இந்த ஒரு காரணமே காங்கிரசு அடங்கிற்று என்பதற்கு அத்தாக்ஷி ஆகிவிட்டது. ராமசாமி முதலியார் தோற்றார். சத்தியமூர்த்தி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரானார். அன்று முதலே காங்கிரஸ் பெருமையில் இடி விழுந்தது, காங்கிரஸ் பார்ப்பன ஸ்தாபனம் என்பதை வெட்ட வெளிச்ச மாக்கிற்று, பார்ப்பனரல்லாதாரில் செல்லாக் காசுக்கும் ஈய ரூபாய்களுக்கும் தான் காங்கிரஸ் இருப்பிடமாயிற்று.

சர். ஆர்.கே. ஷண்முகம் தோற்றார்; சாமி வெங்கிடாசலம் ஜெயித்தார்; என்ன ஆயிற்று? ஷண்முகம் புதைக்கப்பட்டு விட்டாரா? சாமி வெங்கிடாசலத்துக்கு இறக்கை முளைத்ததா? ஷண்முகம் இன்று இந்தியாவில் குன்றின் மேலிட்ட 5000 கேண்டல் பவர் மின்சார விளக்கு மாதிரி விளங்குகிறார். சாமி வெங்கிடாசலம் முக்காடிட்டு மூலையில் உட்கார்ந்தார்.

ஜஸ்டிஸ் கட்சிக்கு லட்ச ரூபாய் பண்டு ஏற்பட்டது. அருமையான திட்டங்கள் அதுவும் காங்கிரசுக்காரர்களும், அவர்களது எச்சிலைப் பத்திரிகைகளும் எச்சை நக்கும் பத்திரிகைகளும் பொறாமைப்பட்டு வயிற்றெரிச்சல்பட்டு இடித்துக் கொள்ளும்படியான திட்டங்களும் ஏற்பட்டது. ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள தொல்லைகள் எல்லாம் விலகி பரிசுத்தத்தன்மை அடையும்படியான தெளிவுகளும் ஏற்பட்டன.

### எலக்ஷன் தான் சோதனையா?

ஒரு கட்சியின் தன்மைக்கு அதனின் முக்கிய யோக்கியதைக்கு எலக்ஷனில் வெற்றி பெறுவதையே முக்கியமாய்க் கருதுவதாய் இருந்தால், இந்த 15 வருஷ காலமாய் காங்கிரசுக்காரர்களாகட்டும் பார்ப்பனர் களாகட்டும் பஞ்சாய்ப் பறக்கும்படி ஜஸ்டிஸ் கட்சி அடித்து துரத்தி வந்ததே அப்போது அது உயர்ந்த யோக்கியதை உடையதாகிவிடவில்லையா? காங்கிரசாகட்டும், அல்லது பார்ப்பனர்களாகட்டும் தங்கள் கொள்கையிலாவது தங்களுடைய நாணயத்தாலாவது இந்த நாட்டில் இன்று வாழ்கிறார்கள் என்று யாராவது சொல்லிவிட முடியுமா? என்று சபதம் கூறிக் கேட்கின்றோம்.

இந்த 15 வருஷத்தில் 2 கோடி ரூபாய் பொது மக்களிடம் இருந்து வசூல் செய்து கண்டபடி ஒழுங்கும் நாணயமும் தவறுதலாகச் செலவு செய்து மானத்தோடு பிழைக்க வகை அற்ற கூலிகளைப் பிடித்தும், வயிற்றுப் பிழைப்புக்கே நடத்தும் பத்திரிக்கைகளைப் பிடித்தும் கூலி கொடுத்து



பிரசாரம் செய்த பயனாய் அது மக்களுக்கு விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறதே ஒழிய, காங்கிரசினுடையவோ பார்ப்பனர்களுடைய யோக்கியதையாலோ பரோபகார தர்மத்தினாலா என்று பாருங்கள்.

இன்றைய தினமும் இந்த நாட்டில் இன்றும் வேறு யாராவது இவ்வளவு பணம் செலவு செய்து ஏன் இதில் பகுதிப் பணம் செலவு செய்து பிரசாரம் செய்தால் நம் நாட்டில் கொஞ்ச காலத்துக்கு கழுதை மூத்திரமும் நாய் விட்டையும் ரூபாய் எடை ரூபாய் விலைக்கு விற்கும்படி செய்து விடலாம். பணத்துக்கு இருக்கிற சக்தி, பெரும்பான்மையான மக்களுக்கு இருக்கிற தரித்திர புத்தி, பார்ப்பனர்களுக்கு இருக்கிற சூட்சி எல்லாம் சேர்ந்தால் கல்லுக் கடவுளானது மாத்திரமல்லாமல் இன்னமும் எது வேண்டுமானாலும் எதுவாகவும் ஆகிவிடும்.

### மூர்த்தியாரின் கோவை பிரசங்கம்

தோழர் சத்தியமூர்த்தி கோவையில் 2.12.35-ல் பேசும்போது, ஈ.வெ.ரா. திட்டம் கராச்சி திட்டத்தை தழுவிய திட்டம் என்றும்,

ஆனால் ஜஸ்டிஸ் கட்சி இப்போது ஒப்புக் கொண்டிருப்பது வேறு என்றும், ஜாதி மத பேதங்களையும் ஏழை, பணக்காரத் தன்மைகளையும் கிளப்பிவிட்டு ஜஸ்டிஸ் கட்சி ஓட்டு கேட்கிறது என்றும்,

காங்கிரஸ் ஜாதி மதப் பூசல்களையும் கிளப்பி விட்டு ஓட்டு சம்பாதிக்கவில்லை என்றும்,

ஜஸ்டிஸ் கட்சி 15 வருஷமாய் ஒன்றும் செய்யவில்லை என்றும்,

மந்திரிகள் ஏன் தங்கள் சம்பளங்களை குறைத்துக் கொள்ளவில்லை என்றும்,

இந்திய வருமானத்தில் $\frac{2}{3}$ பாகம் ராணுவச் செலவுக்குப் போய் விடுகிறதென்றும்,

விவசாயிகளுக்கு ஒன்றும் செய்யவில்லை என்றும்,

வரியை குறைக்கவில்லை என்றும், இனிமேல் ஏதோ செய்வதாகச் சொல்லுவது நம்ப முடியாது என்றும் பேசி இருக்கிறார்.

### திட்டத்தின் இரகசியம்

ஈ.வெ.ரா. திட்டத்தின் இரகசியத்தைப் பற்றி நாம் இதுவரை வெளியிட விரும்பவில்லை. இப்போதும் வெளியிட காலம் வரவில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் சொல்லுவோம், அத்திட்டங்கள் காங்கிரசுக்கு ஜீரணமாகாது என்று தக்க காங்கிரஸ் தலைவர்களால் தெரிந்த பிறகு தான் ஜஸ்டிஸ் கட்சிக்குக் கொடுத்து கட்டாயப்படுத்தப்பட்டது.



RangaRakes tamilnavarasam.com

அதாவது, ஜாதி மதப் பாதுகாப்பையும், பழக்க வழக்க பாதுகாப்பையும் பற்றிய கராய்ச்சி தீர்மானத்தை எடுத்துவிடவும், சகல வகுப்புகளுக்கும் பிரதிநிதித்துவம் விகிதாச்சாரம் வழங்கவும், காங்கிரஸ் தலைவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. இன்றாவது ஒப்புக் கொள்கிறார்களா என்று கேட்கின்றோம்.

ஆனால் ஜஸ்டிஸ் கட்சியார் ஜாதி மத பழக்க வழக்க பாதுகாப்புக்கு வாதாடவில்லை. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஜனசங்கையின் எண்ணிக்கைக்கு தகுந்தபடி இருக்க வேண்டுமென்பதை ஒப்புக் கொண்டார்கள்.

1934 ஞ நவம்பர் மாதம் வரையில் அத்திட்டங்கள் காங்கிரசையும் ஜஸ்டிசையும் ஆகிய இரண்டு கட்சியையும் ஏலம் கூறிற்று. கோவை மாகாண காங்கிரஸ் கான்பரன்சில் விஷயாலோசனைக் கமிட்டியில் அத்திட்டங்கள் தள்ளப்பட்டுவிட்டன.

சென்னை மாகாண ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் அத்திட்டங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டன. ஆகவே இனியும் சத்தியமூர்த்தியாரோ காங்கிரஸ்காரரோ ஈ.வெ.ரா. திட்டம் கராச்சி திட்டம் என்றும் திருடப்பட்ட திட்டம் என்றும் மறுபடியும் சொல்லுவார்களா என்று கேட்கின்றோம்.

### ஈ.வெ.ரா. திட்டத்தை மூர்த்தி ஒப்புக் கொள்ளுகிறாரா?

இன்றானாலும் சரி சத்தியமூர்த்தியார் ஜஸ்டிஸ் கட்சியார் ஒப்புக் கொண்டபடி தங்களது கராச்சி திட்டத்தில் உள்ள ஜாதி, மதம், பழக்கம், வழக்கம், பரம்பரைத் தொழில் ஆகியவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப் படும் என்று வாக்குறுதி கூறி இருக்கும் ஒப்பந்த தீர்மானத்தை எடுத்து விடவும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஜனத்தொகைக்குத் தகுந்தபடி அரசியலிலும் பிரதிநிதித்துவத்திலும் கொடுப்பதாகவும் உள்ள திட்டத்தை ஒப்புக் கொள்ளவும் சம்மதிக்கிறார்களா? என்று கேட்கின்றோம்.

அந்தப்படிக்கு இல்லாத ''தலைவர்'' ஒரு கூட்டம் முட்டாள்களையும், கூலிகளையும், காலிகளையும் பேராசைப் பிணங்களையும் தங்கள் கூட சேர்த்துக் கொண்டு சதா சர்வகாலம் நாட்டில் கலவரம் செய்து கொண்டு வருவதில் லாபம் என்ன? என்றும், இந்த முறையை அனுசரித்து வந்ததின் பயனாய் இதுவரை காங்கிரசாகட்டும், பார்ப்பனர்களாகட்டும் அடைந்த பயன் என்ன வென்றும் கேட்கின்றோம்.

### காந்தி – ஆச்சாரியார் அஞ்ஞாதவாசம்

இன்றைய காங்கிரசின் நிலைமைக்கும், காங்கிரஸ்காரர்கள் நிலைமைக்கும், அதன் கொள்கையின் நிலைமைக்கும் தோழர்கள் காந்தியாரும், ராஜகோபாலாச்சாரியாரும் அஞ்ஞாத வாசம் செய்ய நேரிட்டதே உண்மையாய் நேரிடவில்லை என்று சொல்லுவதானாலும் அந்தப்படி



விலகிக் கொண்டதாக வேஷம் போட்டாக வேண்டிய நிலைமையாவது ஏற்பட்டு விட்டதே அது ஒன்றே போதாதா? என்று கேட்கிறோம்.

தோழர் காந்தியார் காங்கிரசிலிருந்து விலகிவிட்டேன் என்று சொல்லியும், காங்கிரசில் தான் 4 அணா மெம்பராகக் கூட இருக்கவில்லை என்று சொல்லியும், விட்டு விலகிக்கொண்ட பின்பும் காந்தியார் பெயரைச் சொல்லி ஓட்டுக் கேட்கவும், அவர் 'பெருமையை' காலக்ஷேமம் செய்து ஆள் சேர்க்கவுமான காரியம் செய்து காங்கிரஸ் பிழைக்க வேண்டியிருக்கும் நிலைமையே அதனுடைய சாவு குறித்த அறிகுறி போதாதா என்றும் கேட்கின்றோம்.

ஜஸ்டிஸ் கட்சியார் ஜாதி மத பேதத்தையும், ஏழை பணக்காரத் தன்மையையும், எடுத்துக் காட்டி ஓட்டுப் பெறுவதில் என்ன தப்பு? என்று கேட்கின்றோம்.

இல்லாத ஜாதி மத பேதத்தையும், இல்லாத ஏழை பணக்கார பேதத்தையும் அவர்கள் சொல்லிக் காட்டுகிறார்களா?

அல்லது இன்றுள்ள ஜாதி மத பேதமும், ஏழை பணக்காரத் தன்மையும் இப்படியே எஞ்ஞான்றும் இருக்க வேண்டுமா? இவை ஒழிக்கப்பட வேண்டாமா? என்று கேட்கின்றோம்.

காங்கிரசுக்காரர்கள் அவைகளைப் பற்றி பேசக்கூடாது என்பதி னாலேயே அவைகளை திருட்டுத்தனமாய் நிலைநிறுத்தப் பார்க்கிறார்கள் என்பது தானே அருத்தம்.

### செருப்பு ஆண்டால் என்ன? பூட்ஸ் ஆண்டால் என்ன?

இந்த தேசத்தை யார் ஆண்டால் என்ன? ஒரு காலத்தில் ஒரு ஜோடி செருப்பு சிம்மாசனத்தில் இருந்து கொண்டு ஆண்ட ராஜ்ஜியம் என்றுதானே இந்நாட்டுக்குப் பெயர் இருந்து கொண்டு வருகிறது. அதற்கு ஆதாரமும் காட்டப்படுகிறதே.

செருப்பு ஆட்சியின் கீழ் குடிகளாய் இருந்தவர்களின் பரம்பரையர்கள் தானே இந்தியர்களாகிய நாம்? அப்படி இருக்கும்போது யார் ஆண்டால் என்ன? எந்த பூட்ஸ் ஆண்டால் என்ன?

ஜாதி பேதமும் ஏழை பணக்கார பேதமும் ஒழிந்துவிட்டால் தர்ம ராஜ்ஜியம் என்பதற்கு அப்புறம் வேறு என்ன வேண்டும் என்று தோழர் சத்தியமூர்த்தியாரைக் கேட்கின்றோம்.

அவை ஒழிந்தால் தங்கள் ஜாதிக்கு மதிப்புப் போய்விடும் என்பதோடு தங்கள் ஜாதிக்குப் பணம் கொடுக்கும் முட்டாள் பணக்காரன் போய்விடுவான் என்கின்ற பயமா? என்று கேட்கின்றோம்.

வரியும் சம்பளமும் குறைய வேண்டுமானால் ஜாதி பேதமும் ஏழை பணக்காரத் தன்மையும் ஒழிந்தால் ஒழிய கண்டிப்பாய் முடியவே முடியாது



RangaRakes tamilnavarasam.com

என்பது நமது அபிப்பிராயம். ஆதலால் தான் சுயமரியாதைக்காரர் திட்டத்திலும், ஜஸ்டிஸ்காரர் திட்டத்திலும் ஜாதி பேதமும் ஏழை பணக்காரத் தன்மையும் ஒழிய வேண்டும் என்பது தலை சிறந்து விளங்குகிறது.

ஜஸ்டிஸ் கட்சி இதுவரை என்ன செய்தது? என்று கேட்கின்றார்.

மனித சமூகத்தில் ஜாதி முறையில் ஒரு பெரிய புரட்சியை உண்டாக்கி விடவில்லையா?

இந்தியா தோன்றிய இவ்வளவு காலத்துக்கு காங்கிரஸ் தோன்றிய இவ்வளவு காலத்திற்கு வேறு யார் இந்த மாதிரியாக ஒரு புரட்சியைச் செய்தார்கள் என்று கேட்கின்றோம்.

காந்தியாரும் பறையன் தப்புக் கொட்டி ஆக வேண்டும் சக்கிலி செருப்பு தைத்துத்தான் ஆக வேண்டும், அதற்காகத்தான் நான் சுயராஜ்ஜியம் கேட்கின்றேன் என்று தானே சொன்னார்.

### ஜஸ்டிஸார் செய்த வேலை

ஆனால் ஜஸ்டிஸ் கட்சிக்காரர் பறையனும் சக்கிலியும் குரு (உபாத்தியாயர்) ஆகலாம், கலக்டர் (க்ஷத்திரியன்) ஆகலாம், பணக்காரன் (வைசியன்) ஆகலாம், மந்திரி ஆகலாம் எதுவும் ஆகலாம் என்றும்,

பிராமணன் மாடு மேய்க்கலாம், பிணம் அறுக்கலாம், தாசி, வேசி, மாமா ஆகலாம் என்றும் செய்தார்களே.

இவைகள் எல்லாம் பார்ப்பனர்களுக்கும் அவர்கள் மக்களுக்கும் வெறுப்பாய் அலட்சியமாய் காணலாம். ஆனால் சூத்திரன் என்ற தலைப்பின் கீழும் பறையன் என்ற தலைப்பின் கீழும் சட்டப்படி மதப்படி வருபவர்களுக்கு இதைவிட வேறு என்ன நன்மை ஜஸ்டிஸ் கட்சி செய்ய வேண்டும்?

இதைவிட அசாத்தியமான காரியம் இதுவரை இந்திய நாட்டில் யார் செய்து அனுபவத்தில் கொண்டு வந்தார்கள் என்று கேட்கின்றோம்.

### அதிக சம்பளம் ஏற்படுத்தினது யார்?

ஜஸ்டிஸ் கட்சியார் இல்லாதிருந்தால் இன்று காங்கிரசில் இத்தனை பார்ப்பனரல்லாதாராவது இருக்க முடியுமா என்கின்ற கேள்வி கேட்பதோடு, பார்ப்பனரல்லாதார்களில் 3-ம் தரம், 4-ம் தரம் ஆட்களும் கழிக்கப்பட்ட ஆட்களும் காங்கிரசில் முதல் தர ஆளுக்கு சரி சமமாகவும் முடியுமா? என்றும் கேட்கின்றோம்.

ஜஸ்டிஸ் கக்ஷி சம்பளம் அதிகம் வாங்குகிறார்கள் என்று பொறாமைப் படுகிறார் நமது சத்தியமூர்த்தியார்.

இது காங்கிரசுக்காரர்கள் செய்த அக்கிரமமே ஒழிய ஜஸ்டிஸ் செய்த அக்கிரமமல்ல.

காங்கிரஸ்காரர்கள் சமர்ப்பித்த 19 (னைன்டீன் மிமோராண்டம்) பேர் கோரிக்கைப்படி மிண்டோ மார்லி சீர்திருத்தத் திட்டப்படி வாங்கப்படும் சம்பளமே ஒழிய காங்கிரஸ்காரர்களின் தீர்மானப்படி வாங்குகிற சம்பளமே ஒழிய, இதுவரை காங்கிரஸ் தலைவரும், காரியதரிசிகளும் வாங்கி வந்த சம்பளம் தானே ஒழிய ஜஸ்டிஸ் கட்சியார் ஏற்படுத்திக் கொண்டதல்ல என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

காங்கிரசுக்காரர்கள் ஒரு கதர் காரியதரிசிக்கு மீ 200-300 ரூ. வீதம் சம்பளம் கொடுக்கவில்லையா? ஏழைகளுக்கு நாள் ஒன்றுக்கு 8 காசு வரும்படி உள்ள காரியத்துக்கு மீ 200, 300 ரூ. மேற்பார்வை ஆட்கள் வாங்கினால் மந்திரிகள் 3000, 4000 வாங்குவது அதிகமா? என்று கேட்கின்றோம்.

### ராணுவச் செலவுக்கு யார் பொறுப்பு?

$\frac{2}{3}$ பாகம் ராணுவச் செலவுக்கு போகிறது என்று பிரலாபிக்கிறார். இந்த நிலைமை காங்கிரஸ் ஏற்பட்டு அது பொருப்பில்லாமல் பாமர மக்களையும் கூலிகளையும் தூண்டிவிட்டு தொல்லை விளைவித்ததின் பயனாய் பாதுகாப்புக்காக ஏற்படுத்த வேண்டியதாய் விட்டது என்று சர்க்கார் சொல்லுகிறார்களே இதை சத்தியமூர்த்தியார் ஆக்ஷேபிக்கிறாரா என்று கேட்கின்றோம்.

இவர் ஆட்சேபித்தால் மற்றொரு காங்கிரஸ் தலைவர் தோழர் அவனாசிலிங்கம் **செட்டியார்** அவர்கள் ''எங்களுக்கு பயந்து தான் அரசாங்கம் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொண்டது. காங்கிரசானது அரசாங்கத்தை நடுங்கச் செய்துவிட்டது'' என்று சொல்லுகிறாரே இவர்கள் இருவரில் யார் புத்திசாலி என்று கண்டுபிடிக்க முடிகிறதா? என்று கேட்கின்றோம்.

ஆகவே எப்படியாவது ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதும், 500 கெஜ ஆழத்தில் புதைப்பதும் தங்கள் கொள்கையாய் கொண்ட சத்தியமூர்த்தி கூட்டத்தாரிடத்திலும், அவர்களது கூலிகளிடத்திலும் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்.

**குடி அரசு - தலையங்கம் - 08.12.1935**



RangaRakes tamilnavarasam.com

# தென்னாற்காடு ஜில்லா படையாட்சிகள்

சமீபத்தில் நடக்கப்போகும் தென்னாற்காடு ஜில்லா போர்டு தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரியார்கள், மற்ற இடங்களில் உண்மையை மறைத்தும், உள்ளதைக் குறைத்தும் கூறிப் பொய்ப்பிரசாரம் செய்த மாதிரி, தங்களுடைய ஒழுங்கீனமான சுயநலப் பிரசாரம் செய்ய முற்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவர்கள் செய்த சூழ்ச்சிகளைக் குறித்து நமது நிருபர் எழுதிய விவரங்களை வேறொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். அவற்றால், சுயநலக் கூட்டத்தார் ஜஸ்டிஸ் கட்சியினரைத் தோற்கடிக்க எவ்வளவு தூரம் முயற்சி செய்கிறார்களென்பது விளங்கும். தம்முடைய பிரசாரத்திற்காக, எவ்வளவு கேவலமான முறைகளையும் அனுசரிப்பார்களென்பது, அவர்களுடைய முழுப் பொய்ப்பிரசாரத்தினால் புலப்படுகின்றது. சில வாரங்களுக்கு முன், படையாட்சி வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் குற்ற பரம்பரைச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட அரசாங்க உத்தரவு ரத்து செய்யப்பட்டது. க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்த பழங்குடி மக்களான படையாட்சிகள் ஏன் குற்றஞ் செய்யும் வகுப்பினரோடு சேர்க்கப்பட்டார்கள்? அதற்குக் காரணமென்ன? காரணம் சில பார்ப்பன போலீஸ் உத்தியோகஸ்தர்கள். அவர்களுடைய 'ரிப்போர்ட்டு'களில் அவ்வகுப்பினரை குற்ற வகுப்பினர் சட்டத்தின் கீழ் கொண்டு வருதல் மிக அவசியம் என்று எழுதியதனால், அரசாங்கத்தார், தவறாக அப்படிப்பட்ட உத்தரவை வெளியிட்டார்கள். அந்த உத்தரவு படையாட்சி வகுப்பினரிடையே பெருத்த பரபரப்பை உண்டுபண்ணியது. அவர்களுடைய சுயமரியாதைக்கும், கௌரவத்திற்கும், அரசாங்க உத்தரவு இடையூறு செய்ததைக் கூட்டங்களிலும், பத்திரிகைகளிலும் கண்டிக்கப்பட்டது. அந்த அவமரியாதையான உத்தரவை ரத்து செய்வதற்குத் தென்னாற்காடு ஜில்லா போர்டு தலைவர், ராவ்பகதூர் ஜம்புலிங்க முதலியார் அவர்கள் பிரயாசைப்பட்டு வெற்றிபெற்ற விஷயம் அந்த ஜில்லாவாசிகளான படையாட்சிகளுக்குத் தெரிந்திருக்குமென்று நம்புகின்றோம். சென்னை சட்டசபையில் ஜஸ்டிஸ் கட்சியினர் ஒருவரால் அவசரத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அவ்வுத்தரவை ரத்து செய்யும் விஷயமாக அரசாங்கத்தார் கவனிப்பதாக வாக்குறுதியளித்ததின் பேரில், தீர்மானம் 'வாப்பீஸ்' வாங்கிக்கொள்ளப்பட்டது. பின்னர், ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்களின் முயற்சியால், அரசாங்கத்தார் பார்ப்பன போலீஸ் உத்தியோகஸ்தர்களுடைய 'ரிப்போர்ட்'டுகளின் மேல் தாங்கள் அம்மாதிரி உத்தரவிட்டது தவறென்று உணர்ந்து, படையாட்சிகளின் கிளர்ச்சியின் உண்மையை அறிந்து, உத்தரவை ரத்து செய்தார்கள். இவ்வுத்தரவு ஜஸ்டிஸ் கட்சியாரால் ஏற்படுத்தப்பட்டது; காங்கிரஸ் காரர்கள்தான் சட்டசபையில் இதை விவாதித்து ரத்து செய்வதற்கு உதவி செய்தார்கள் என்று சுயநலக்கூட்டப் பத்திரிகைகள் சில கூறுவது எவ்வளவு பொய்யான விஷயம் என்பதை படையாட்சிகள் அறிவார்கள் என்று நம்புகிறோம். படையாட்சிகள் பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களில் மிகப் பழங்குடி மக்கள். அவர்களைப் பற்றிப் பார்ப்பனர்கள் பரிந்து பேசுவதும், அவர்களுடைய நன்மைக்காகப் பாடுபடுவது போலப் பாசாங்கு செய்வதும், மக்களை ஏமாற்றி 'ஓட்'டுப் பறிப்பதற்கேயாகும். காங்கிரஸ் என்ற போர்வையை மேல் போர்த்திக்கொண்டால், படையாட்சிகளை ஏமாற்றி விடலாம் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் போலும். சதாகாலமும் பொய், ஏமாற்றுதல், மானக்கேடான செயல்களைச் செய்து வேலை சம்பாதித்தல், புல்லிய செய்கைகளின் மூலம் வயிறு வளர்த்தல் முதலிய குற்றங்களை இரவு பகலாகச் செய்து வரும் பார்ப்பனர்களை, குற்ற வகுப்பினர் சட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டியிருக்க, தமிழ் நாட்டின் விவசாய விருத்திக்குத் கற்றூண் போல் விளங்கி, பழமையும் பெருமையும் பொருந்திய க்ஷத்திரிய வீரத்தையும், தேக பலத்தையும் நாட்டின் செழுமைக்கு உபயோகிக்கும் படையாட்சிகளைக் குற்ற பரம்பரை வகுப்பினராகச் சேர்த்தது எவ்வளவு தவறான விஷயம்! இத்தவறுதலுக்குக் காரணம் பார்ப்பனர்கள் என்பதை யுணர்ந்து, அவ்வுத்தரவு ரத்து செய்ததற்குக் காரணம் ஜஸ்டிஸ் கட்சி என்பதறிந்து, சமீபத்தில் நடைபெறப்போகும் தேர்தலில் சுயநலக் காங்கிரஸ் கூட்டத்தை முறியடிப்பார்கள் என்று நம்புகிறோம்.

**'விடுதலை'**

**குடி அரசு - மறு பிரசுரம் - 08.12.1935**



RangaRakes tamilnavarasam.com

# பொன் விழாப் புரட்டு

1. காங்கிரஸ் லக்ஷயம் என்ன? கலப்பற்ற பூரண சுயராஜ்யம்.
2. அது வந்துவிட்டதா? இல்லை. நிழல்கூடக் காணப்படவில்லை. சுயராஜ்ய நிதிதான் கரைந்தது.
3. ஆயின், பொன்விழாக் கொண்டாடுவதின் மர்மம் என்ன? தேச மக்களை மயக்கவே. காங்கிரஸ் மதிப்புக் குறைகிறது. பார்ப்பனச் சூழ்ச்சி வெட்டவெளிச்சமாகிறது. பார்ப்பன ஆதிக்கத்தை வளர்க்க வேண்டாமா?
4. ஆகவே பொன்விழாக் கொண்டாடப் பார்ப்பனர் சூழ்ச்சி செய்கிறார்கள்.

தென்னாட்டுப் பெருங்குடி மக்களே! ஏமாந்து போக வேண்டாம்.

உஷார்! உஷார்!! உஷார்!!!

**குடி அரசு - பெட்டிச் செய்தி** - 15.12.1935



# சத்தியமூர்த்திக்கு

**சனியன் பிடித்தது**

# சேச்சே இல்லை

**- சித்திரபுத்திரன்**

தோழர் சத்தியமூர்த்தியார் காங்கிரஸ் தலைவரானது முதல் தமிழ்நாட்டில் காங்கிரசின் யோக்கியதை மணல் வீடு சரிவதுபோல் சரிந்து வருவது ஒருபுறமிருக்க, சில புது மதமாற்றக்காரர்கள் அதாவது புதிதாய் காங்கிரசில் இருந்து வருபவர்கள் சத்தியமூர்த்தியாரைத் தலைவராய்க் கொள்ளவும், அவரைத் தலைவர் என்று வாயில் சொல்லவும் இஷ்டப் படாமல் தயங்குவதாலும், அய்யர், அய்யங்கார் ஜாதி உணர்ச்சியால், பல அய்யங்கார்கள் சத்தியமூர்த்தி அய்யர் தலைமை ஸ்தானத்தைப் பற்றி பொறாமைப்பட்டு முணுமுணுப்பதாலும், காங்கிரசில் ஏற்கனவே இருந்து வரும் தோழர்கள் சாமி வெங்கிடாசலம் செட்டியார், முத்துரங்க முதலியார், திரு.வி. கல்யாணசுந்திர முதலியார் போன்றவர்கள் சத்தியமூர்த்தியாரின் பெயரைச் சொல்லிக் கொண்டு வெளியில் தலைநீட்ட வெட்கப்படுவதாலும், தோழர் சத்தியமூர்த்தி அவர்களும் சிறிதும் அடக்கம் ஒடுக்கம் இல்லாமல் காங்கிரசின் உத்தியோக ஆசையையும், பதவி ஆசையையும் வெட்ட வெளிச்சமாய் வெளியில் காட்டி காங்கிரசின் கொள்கையை சந்தி சிரிக்க வைத்து விட்டதாலும், தான் மந்திரி பதவி வகிக்க வேண்டும் என்பதாலும் தானேதான் முதல் மந்திரி பதவி வகித்துத் தீர வேண்டும் என்று சொல்லுவ தாலும், தோழர்கள் சி.ஆர். ரெட்டி, டாக்டர் சுப்பராயன், டி.எ. ராமலிங்கம் செட்டியார் முதலியவர்களும் முதல் மந்திரி வேலை தங்களுக்கே வேண்டும் என்றும் தனித்தனியாய் இப்போதே வாக்குறுதி கேட்பதாலும், இவ்வளவு சனியனும் ஒன்றாய் சேர்ந்ததோடு ''புழுத்ததின் மீது நாய் விட்டை இட்டது'' என்பதுபோல் நமது தொட்டது தொலங்காப் பிரபு தோழர் ஸ்ரீனிவாசய்யங்காருக்கு இந்த தடவை காங்கிரசுக்கு மந்திரி வேலை கிடைத்துவிடக் கூடும் என்கின்ற நம்பிக்கை உண்டாகி, தான் ஏன் அப்பதவிக்கு வரக் கூடாது என்கின்ற எண்ணம் தோன்றிவிட்டதாலும், அவர் தனது சொந்தத்தில் இருந்து நன்றாய்ப் பணம் செலவு செய்வார் என்கின்ற எண்ணத்தினால் பழய அவரது கூலிகள் ஸ்ரீனிவாசய்யங்கார் தலைவராய் வந்தால் முன் அரித்துத் தின்னது போல் இப்பவும் அரித்துத்



RangaRakes tamilnavarasam.com

தின்ன ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்படும் என்று கருதுவதாலும், தோழர் ஸ்ரீனிவாசய்யங்காருக்கு ஒரு யோகம் ''சுக்கிர திசை'' அடிக்கப் போகிறபடியால் நமது தோழர் சத்தியமூர்த்தியாருக்கு ''சனிதிசை'' எட்டிப்பார்க்கிறது.

இந்த சமயம் காங்கிரசுக்கு தமிழ்நாட்டில் அய்யர்கள் பலம் இல்லை. எல்லாம் அய்யங்கார்கள் பலமாகவே போய்விட்டது. பத்திரிக்கைகளும் அய்யங்கார் பலமாகவே ஆகிவிட்டது.

அதாவது தோழர்கள் கே. சீனிவாசய்யங்கார், சி.ஆர். சீனிவாசய்யங்கார், கே. சந்தானமய்யங்கார் ஆகியவர்களே பத்திராதிபர்களாக இருக்கிறார்கள். வேறு ஆட்கள் பத்திராதிபர்களாக இருக்கும் பத்திரிக்கைகள் இருந்தாலும் அவற்றின் நஷ்ட ஈடுகளுக்கும், நடப்பு ஈடுகளுக்கும் அய்யங்கார் உதவியும், அய்யங்கார்கள் கிராண்டும் தான் தேவையாயிருக்கிறது.

ஆகவே இந்த தடவை சீனிவாசய்யங்கார் உறைத்து உறுதியாய் நின்றுவிட்டால் மூர்த்தியார் நிலைமை அதோ கதிதான்.

ஐயோ பாவம். மூர்த்தியாரின் நிலைமைக்கு நாம் மிகவும் இரங்குகிறோம்.

''நல்ல சமயத்தில்'' இம்மாதிரி ஆனது மிகவும் பரிதபிக்கத்தக்க விஷயமாகும்.

எப்பொழுதும் இந்த அய்யங்கார் பார்ப்பனர்கள் ஆழம் பார்ப்பதற்கு மாத்திரம் சத்தியமூர்த்தியாரை விட்டுப் பார்க்கச் செய்வதும், ஒன்றும் அபாயமில்லை என்று தெரிந்தால் பிறகு அவரை ஒதுக்கித் தள்ளிவிட்டு தாங்கள் அனுபவிப்பதுமாகவே செய்து வந்திருக்கிறார்கள். இவர்கள் என்னதான் செய்தாலும் மூர்த்தியார், மிக நல்லவர். இதற்கெல்லாம் கோபித்துக் கொள்ள மாட்டார்.

ஏன் என்றால் கோபித்துக் கொண்டால் அப்புறம் எங்காவது போய் ஒண்டுவதற்கு ஆவது இடம் வேண்டுமே. ஆதலால் ''பூமாதேவி'' பொறுமையைவிட மூர்த்தியார் பொறுமை மிகவும் ஆத்ம சக்தி கொண்ட பொறுமை ஆகும்.

நமது மூர்த்தியார் ஒரு எக்கிறிமெண்டு செய்து கொண்டு அதாவது சீனிவாசய்யங்கார் முதல் மந்திரியாக வந்தால் அவரிடம் ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் இருக்குமானால், தனக்கு முதல் மந்திரி காரியதரிசி பதவி கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து மற்றதையெல்லாம் உடனே மறந்துவிட்டு இன்று சத்தியமூர்த்தியார் தலைமையில் இருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியை சீனிவாசய்யங்காருக்கு தன் கையாலேயே கழட்டி சாத்திவிடுவார்.

இந்த உத்தியோகத்தினால் குறைந்தது மந்திரி சம்பளத்துக்கு கம்மியில்லாத படியாவது சரிப்படுத்திக் கொள்ளக்கூடிய சக்தியும்



தைரியமும் அவருக்கு உண்டு. அவர் மூலமாகவே தான், முதல் மந்திரி யாரிடம் எந்த விஷயத்தைப் பற்றியும் பேச வேண்டும் என்று ஒரு ஜி.ஒ. பிறப்பித்து விடுவதாய் இருந்தால் பிறகு நம் சத்தியமூர்த்தியாருக்கு எவ்வித அதிருப்தியும் இருக்காது. அவர் வீட்டிலும் மனக்கோணல் இருக்காது.

ஆனால் மற்றொரு விஷயம். நமது அய்யங்கார் இவ்வளவோடு நிற்பாரா என்பது ஒரு பெரிய பிரச்சினையாகும்.

சென்னை மாகாணத்துக்கு மாத்திரம் காங்கிரஸ் தலைவராய் இருப்பது அவருடைய கவுரதைக்கு பொருத்தமானதல்லவே.

ஏனெனில் அவர் ஒரு காலத்தில் சோகத்தில் நடந்த அகில இந்திய காங்கிரசுக்கு தலைமை வகித்த அகில இந்தியத் தலைவராயிற்றே! ராஜேந்திர பிரசாத்துக்குக் கீழாக இருக்க மனம் வருமா? என்பது நியாயமாகவே யோசிக்கத் தகுந்த விஷயமாகும். ஆதலால் தற்கால சாந்தியாகவாவது அகில இந்திய காங்கிரசில் ஏதாவது ஒரு பெரிய ஸ்தானம் வேண்டியிருக்கிறது.

இது சமயம் ஒரு தகுந்த வேலையும் காலி இருக்கிறது. அதற்குத் தகுந்த ஆள் இல்லாமல் காங்கிரஸ் தலைவர்களும் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அதென்னவென்றால் அதுதான் லக்னோ காங்கிரசுக்கு தலைவர் கிடைக்காமல் திண்டாடும் காரியம். அதற்குத் தோழர் சீனிவாசய்யங்காரை நியமித்து எல்லா இந்திய காங்கிரசுக்கு தலைவராக்குவதாய் இருந்தால், தமிழ்நாட்டில் - ஏன் சென்னை மாகாணத்தில் சட்டசபை தேர்தல்களுக்கு ஏற்படும் செலவுகளையும் ஒப்புக் கொள்ளக்கூடும். ஏனெனில் 5 வருஷம் மந்திரி வேலை பார்த்தால் வருஷம் 50 ஆயிரம் வீதம் ரூ. 250000 கிடைக்கும். இதில் வட்டிக்கு 50000 தள்ளிவிட்டாலும், 2 லக்ஷ ரூபாய் காங்கிரசுக்கு கொடுத்துவிடுவார். வக்கீல் வேலைக்கு மகன் இருக்கிறார். தனியாகவும் யோசனை சொல்ல சவுகரியமிருக்கிறது. ஹைக்கோர்ட் ஜட்ஜிகளில் பார்ப்பன ஜட்ஜிகளாவது சலுகை காட்ட நியாயமிருக்கிறது. ஆதலால் அந்த வரும்படியும் பிரமாதமாய் எதுவும் குறைந்துவிடாது.

எனவே இப்போது தோழர்கள் பாஷ்யம், சி.ஆர். சீனிவாசய்யங்கார் விருந்து வைத்து அய்யங்காரை அழைத்ததிலும் தோழர்கள் கல்யாணசுந்திர முதலியார், முத்துரங்க முதலியார், சாமி வெங்கிடாசலம், அப்துல் அமீத்கான் முதலிய பக்தர்கள் காங்கிரசுக்கு வரும்படி அழைத்ததிலும், தோழர் ஸ்ரீமான் அய்யங்கார் **தேசம் விரும்பினால் வருகிறேன்** என்று சொன்னதிலும் எவ்வித தவறுதலும் இல்லை. ஸ்ரீமானை தேசம் விரும்புவதிலும் எவ்வித ஆக்ஷேபணையும் இல்லை. அதைப் பற்றியும் இப்போதே ''ஜோசியம்'' கூறுவோம்.

ஏனெனில் தேசம் என்றால் தெரியாதா?



RangaRakes tamilnavarasam.com

சக்கரைச் செட்டியார், குப்புசாமி முதலியார், அண்ணாமலை பிள்ளை, எம்.எஸ். சுப்பிரமணிய அய்யர், என்.எஸ். வரதாச்சாரியார், உபயதுல்லா சாயபு, அமீத்கான் சாயபு, செல்வபதி செட்டியார் முதலாகிய பல தடவை சிறைச் சென்றுவிட்ட தேச பக்தர்கள் தானே. ஆகவே இவர்கள் அழைப்பு வெறும் அழைப்பு மாத்திரம் இருக்காது. மேளதாளத்துடனும், சதிர்ப் பாட்டுக் கச்சேரியுடனும் தான் இருக்கும்.

எனவே இதன் பயனாய் இனி தமிழ்நாட்டில் புதியதோர் சகாப்தம், புதியதோர் உணர்ச்சி, புதியதோர் எழுச்சி (யாருக்கு? என்று கேட்காதீர்கள்) உண்டாக்கப்படுவதோடு தேசபக்தி விண்ணப்பங்கள் சர்வீஸ் கமிஷனுக்கு எஸ்.எஸ்.எல்.சி. விண்ணப்பங்கள் போல் பறப்பதுடன் காங்கிரசில் வந்து ஞானஸ்நானம் பெற புதிய புதிய ஆட்களும் வந்து சேரக் கூடும்.

கடைசியாய் நாம் ஒன்று சொல்லுகின்றோம். அதாவது அய்யங்கார் ஜாதகம் ஒன்று இருக்கிறது. இவற்றிற்கெல்லாம் மேலே அது ஜோசிய ஜாதகமல்ல. அனுபவ ஜாதகம் என்பது தான்.

**குடி அரசு - கட்டுரை - 15.12.1935**



# காங்கிரஸ் பொது ஸ்தாபனமா?

தங்களுடைய சொந்த யோக்கியதையினால் பாமர மக்களிடம் செல்வாக்குப் பெற யோக்கியதை இல்லாதவர்களும், மக்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாவதற்கு தங்கள் சொந்தப் பொறுப்பில் எவ்விதத் தகுதியும் இல்லாதவர்களும் பாமர மக்களை ஏமாற்றுவதற்கு ஆக காங்கிரஸ் என்றும், காந்தியென்றும் சொல்லுவதோடு அவர்களுக்குப் புரியாத விஷயங் களையும், கொள்கைகளையும் சொல்லி மோசம் செய்கிறார்கள். காங்கிரசின் யோக்கியதை என்ன காந்தியாரின் நிலைமைதான் என்ன என்பவைகளை பாமர மக்களுக்கு எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறோம்.

காங்கிரசு என்பது இந்திய 35 கோடி மக்களுக்கும், இந்து முஸ்லீம் கிறிஸ்தவ புத்த முதலிய எல்லா மதக்காரர்களுக்கும், பார்ப்பனர் முதல் பறையன் என்பவர் வரை சகல ஜாதியாருக்கும் பொதுவானதென்றும், பிரதிநிதித்துவம் பொருந்தியதென்றும் சொல்லுகிறார்கள்.

எடுத்ததற்கெல்லாம் காங்கிரஸ்தான் பெரிய ஸ்தாபனம் என்றும், காங்கிரஸ்தான் அகில இந்திய ஸ்தாபனம் என்றும், அதற்குத்தான் பிரதிநிதித்துவத் தன்மை உண்டென்றும், மற்றவர்கள் எல்லாம் பொறுப்பற்றவர்கள் என்றும் சொல்லுகிறார்கள். அப்படியானால் இந்திய நாட்டில் உள்ள பல்வேறு மதக்காரர்களிலும் பல்வேறு ஜாதி வகுப்புக் காரர்களிலும் காங்கிரசை யார் ஒப்புக்கொள்ளுகிறார்கள்? யார் மதிக்கிறார்கள்? என்று யாராவது எந்த காங்கிரஸ் வாதியாவது எடுத்துச்சொல்லக் கூடுமா என்று கேட்கின்றோம்.

இந்தியாவில் உள்ள 8 கோடி முஸ்லீம்களுக்கு ஆக ஏற்பட்டிருக்கும் அதுவும் 1907 முதல் ஏற்பட்டிருக்கும் முஸ்லீம் லீக் காங்கிரஸை ஒப்புக் கொள்கிறதா? என்று கேட்கின்றோம்.

6 கோடி தீண்டப்படாதார் என்பவர்களுக்கு ஆக ஏற்பட்ட தீண்டாதார் சபை ஒத்துக்கொள்ளுகிறதா? என்று கேட்கின்றோம்.

22 கோடி இந்துக்களுக்கு ஆக ஏற்பட்ட இந்து மகாசபை ஒப்புக் கொள்ளுகிறதா?

இந்து மதத்தையும், வேதத்தையும், சாஸ்திரத்தையும் ஆதாரமாய் வைத்து ஆரம்பிக்கப்பட்ட சனாதன தர்ம சபையாராவது வருணாச்சிரம தர்ம சபையாராவது ஒப்புக் கொள்ளுகிறார்களா?



RangaRakes tamilnavarasam.com

ஒரு கோடி கிறிஸ்தவர்களுக்கு ஆக ஏற்பட்ட அகில இந்திய கிறிஸ்தவ சங்கத்தார் ஒப்புக் கொள்ளுகிறார்களா?

சென்னை மாகாணம், பம்பாய் மாகாணம் முதலிய மாகாணங்களில் பார்ப்பனரல்லாதார்களுக்கு ஆக ஏற்பட்ட பார்ப்பனரல்லாதார் சங்கத்தார் ஏற்றுக் கொள்ளுகிறார்களா?

பார்ப்பனர்களுக்கு ஆக என்று தனியாக ஏற்படுத்திக் கொண்டு இருக்கும் ஆரிய மகாஜன சபையார் ஒப்புக் கொள்ளுகிறார்களா? என்றும் கேட்கின்றோம்.

இனி, தனித்தனியாய்ப் பார்த்தால் படையாச்சி மகாஜன சபை, நாடார் மகாஜன சபை, வேளாளர் மகாஜன சபை, தேவேந்திர வேளாளர் சபை, அருந்ததியர் சபை, குறவர் சபை, மறவர் சபை, நாயுடு சபை, ரெட்டி மகாஜன சபை, யாதவர் மகாஜன சபை, செங்குந்தர் மகாஜன சபை, விஸ்வப் பிராமண மகாஜன சபை, சௌராஷ்டிர பிராமண மகாஜன சபை, தேவாங்கப் பிராமண மகாஜன சபை, சாலியப் பிராமண மகாஜன சபை, குலாலப் பிராமண மகா சபையார் ஒப்புக் கொள்ளுகிறார்களா?

ஆகவே காங்கிரஸ் இந்திய மக்களுக்கு பொது என்றால் இந்தியாவில் காங்கிரசை ஒப்புக் கொள்ளுகின்றவர்களோ ஆதரிக்கின்றவர்களோ யார் இருக்கிறார்கள்?

பணக்காரர்கள் விளம்பரத்துக்கும், பதவி ஆசைக்கும் ஆசைப்படும் காலிகளின் வசவுக்கு பயந்தும் காங்கிரசுக்குப் பணம் கொடுக்கிறார்கள். சிலர் நாலணாவும் கொடுத்து விடுகிறார்கள். பசிக்கு பயந்த ஆட்கள் அந்த பணத்துக்கு ஆசைப்பட்டு காலித்தனமாய் கூப்பாடு போடுகிறார்கள். எந்த விதத்திலும் பொறுப்பும், கவலையும் இல்லாதவன் தன்னை எப்படி வேண்டுமானாலும் உபயோகித்துக் கொள்ள இடம் கொடுத்து விடுகிறது. இதனால் காங்கிரசு, காங்கிரசு என்று சொல்லிக் கொண்டு ஒரு கூட்டம் கூப்பாடு போடவும், மற்றொரு கூட்டம் அதை ஆதரிக்கவும் இடம் ஏற்பட்டதே அல்லாமல், உண்மையாய் காங்கிரசுக்கு இருக்கும் மதிப்பு என்ன? கொள்கை என்ன? என்பதை அறிவாளிகள் சிந்திப்பார்களாக.

சர். ஆர்.கே. ஷண்முகம் செட்டியாரைப் பற்றி பார்ப்பனர்கள் செய்த விஷமங்களுக்கு ஏதாவது எல்லை இருந்ததா? முதலாவது அவரது ஜாதித் தொழிலைப் பற்றி படம் போட்டு பரிகாசம் செய்வது முதல் கொண்டு எந்த துறையில் பார்ப்பனர்கள் அவரை சும்மா விட்டார்கள்.

பனக்கால் ராஜா உயிரோடு இருந்த வரையில் அவரைப் பற்றி செய்த அயோக்கியப் பிரசாரத்துக்கு அளவே இல்லை.

அதற்கப்புறம் இப்போது பொப்பிலி ராஜாவைப் பற்றி இன்ன மாதிரிதான் என்பதாக இல்லாமல் பத்திரிகைகளில் ஆரிய பாஷையில் உள்ள வார்த்தைகள் எல்லாம் கொட்டிக் கலந்தாய்விட்டது. மேடைகளில் ‘‘ஹரிஜன’’ பாஷையில் உள்ள வார்த்தைகள் எல்லாம் கொட்டிக் கலந்தாய் விட்டது. மற்றும் தோழர் ராமசாமியைத்தான் விட்டார்களா? தோழர் வரதராஜுலுவைத்தான் விட்டார்களா?

இவ்வளவு கேவலமான காரியங்கள் செய்வதோடல்லாமல் நாட்டின் அரசியல் நலத்துக்கும், மக்களின் சமூக நலத்துக்கும், எவ்வளவு தடையாகவும், முட்டுக்கட்டையாகவும் இருக்க வேண்டுமோ அவ்வளவு முட்டுக் கட்டையாய் இருந்து மனித சமூகத்தை முன்னேற வொட்டாமல் தடுத்து பாழ்படுத்தி வருகின்றார்கள்.

இவைகளை காங்கிரஸ்காரர்கள் என்னும் பார்ப்பனர்களும், அவர்களது அடிமைகளும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். ஆனால் ஒன்று கேட்கின்றோம்.

காங்கிரஸ்காரர்கள் சிறப்பாக தென் இந்திய பார்ப்பனர்கள் பொறுப்பற்று மேடைகளில் பேசிக் கத்தி கூப்பாடு போட்டது தவிர இந்த 20, 30 வருஷ காலமாக ஏதாவது ஒரு சட்டசபையில் சமூக சம்மந்தமான ஏதாவது ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார்களா? என்று கேட்பதோடு சமூக சம்பந்தமாக கொண்டு வரப்பட்ட மசோதா எதையாவது ஆக்ஷேபிக் காமல் விட்டிருக்கிறார்களா என்றும் கேட்கின்றோம்.

மிக மிகச் சாதாரணமான மசோதா அதாவது விபசாரித்தனத்துக்கு ஆகப் பெண்களை கடவுள் பேரால் லைசென்சு கொடுப்பதாகிய முத்திரை போடுவது அல்லது பாஸ் (பொட்டுக்) கட்டுவது என்கின்ற இழிவான காரியத்தை நிறுத்துவதற்கு ஆக கொண்டு வரப்பட்ட ஒரு மசோதாவை காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரே இன்று தலைவராய் இருப்பவரே எதிர்த்தார் என்றால், காங்கிரசின் யோக்கியதைக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? என்று கேட்கின்றோம்.

காங்கிரசின் கவலை எல்லாம் மந்திரி பதவியைக் கைப்பற்றி, சம்பளம் வாங்க வேண்டும். அரசியலை அக்கிரகாரமாக்க வேண்டும் என்பதேயல்லாமல் வேறு அரசியலிலோ சமுதாய இயலிலோ அவர்களுக்கு உள்ள கொள்கை என்ன என்று கேட்கின்றோம்.

காங்கிரஸ்காரர்கள் டாக்டர் சுப்பராயனை மந்திரியாக்கினார்கள்; அவர் சமுதாயத் துறையில் சற்றுத் தீவிர கொள்கையைக் காட்டினார்; அவரை ஒழிக்கச் சூழ்ச்சி செய்தார்கள். பிறகு முனிசாமி நாயுடுவை மந்திரியாக்கப் பிரயத்தனப்பட்டார்கள். அவர் மந்திரி ஆகி பார்ப்பனர் களுக்கு உள் ஆளாயிருந்தார். ஜஸ்டிஸ் கட்சியாரால் ஒழிக்கப்பட வேண்டியவரானார். எப்படி இருந்தாலும் இரு மந்திரிக்கும் காங்கரஸ் காலாடிகளுக்கு பயந்து கப்பம் கட்டாமல் மாத்திரம் இருக்க முடியவில்லை.


RangaRakes tamilnavarasam.com

இப்போது பொப்பிலி ராஜா மந்திரியானார்; அவர் காங்கிரஸ் வாயாடிகளுக்கு கப்பம் கட்டுவதில்லை. பார்ப்பனர்களுக்கு உள் ஆளாகவும் இருப்பதில்லை. அவரை பார்ப்பனர்கள் ஒழிக்க வேண்டும் என்பதில் முனைந்து இருக்கிறார்கள்.

ஆகவே அரசியல் விஷயமாய் காங்கிரஸ்காரர்களுக்கு இதைத் தவிர வேறு என்ன கொள்கையோ, வேலையோ இருந்து வருகிறது என்று யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம். வேறு வேலை இருக்குமானால் அதை சென்னை சட்டசபையில் காட்ட முடியாவிட்டாலும், இந்திய சட்டசபையில் காட்டுவதற்கு எவ்வளவோ சந்தர்ப்பமும் பலமும் இருந்து வருகிறதே, அதைக்கொண்டு என்ன செய்தார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள்.

அரசியல் சீர்திருத்தத்தை நிராகரிப்பதற்கு பதிலாக அதை ஆதரித்தார்கள். பண்டிட் மாளவியாவையும், பங்காளிகளையும் பலி கொடுத்து முஸ்லீம்கள் தனித்தொகுதி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒப்புக் கொண்டு முஸ்லீம் தயவை சம்பாதித்தார்கள்?

அப்படியாவது முஸ்லீம் தயவை சம்பாதித்தவர்கள் அசம்பளியில் என்ன செய்ய சக்தி உடையவர்களானார்கள்.

அடக்கு முறைச் சட்டங்கள் அவசரச் சட்டங்கள் ஆகிய மனிதத் தன்மைக்கு மாறான சட்டங்கள் எல்லாம் புனருத்தாரணம் செய்து புதுப்பிக்கத்தானே முடிந்தது.

அடக்குமுறைச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள் ஆகியவை ஒழிப்பதும் சீர்திருத்த சட்டத்தை ஒழிப்பதும் ஆன காரியத்துக்கு ஆகவே இந்திய சட்டசபைக்குப் போனவர்கள் கதி இதுவானால் - இவ்வளவு அவமானமும், கெடுதியும் காங்கிரஸ்காரர்கள் மெஜாரிடியாய் இருக்கும்போதே ஏற்பட்டும், இவைகளைத் தவிர வேறு ஒரு காரியத்தையும் செய்ய முடியாத நிலையில் இருக்கும்படியான அப்பாவப்பட்ட அசம்பளியை விட்டுவிட்டு வரவோ, ராஜினாமா கொடுக்கவோ முடியவில்லையானால், சில காரியங்கள் நம்மிஷ்டப்படி செய்ய முடியாவிட்டாலும், பல காரியங்கள் செய்ய சவுகரியமுள்ளதும், எதிரிகள் உட்கார்ந்து விஷமத்தனம் செய்ய முடியாமல் இருப்பதற்கு சவுகரியம் உள்ளதுமான ஸ்தாபனங்களான மந்திரி பதவிகளை ஏன் ராஜினாமா செய்யவில்லை என்று இவர்கள் கேட்பதில் ஏதாவது புத்திசாலித்தனமிருக்கிறதா? என்று கேட்கின்றோம்.

சொந்த முறையில் 3 - வது வகுப்பில் பிரயாணம் செய்த அனுபவமும் தகுதியும் உள்ளவர்களே தேசாபிமானத்தின் பேரால் முதல் வகுப்பில், தன் பெண் ஜாதி பிள்ளையுடன் போக ஆசைப்படும் போது, சதா சர்வகாலம் முதல் 2-ம் வகுப்பிலேயே பாரம்பரியமாக போய் வந்தவர்கள் முதல் வகுப்பில் பிரயாணம் செய்வதைப் பார்த்து ஏன் பொறாமைப்பட வேண்டும் என்று கேட்கின்றோம்.

காங்கிரசின் பேரால் தேசாபிமானத்தின் பேரால் அசம்பளிக்குப் போய் காங்கிரஸ் தீர்மானத்துக்கு விரோதமாய் உத்தியோகம் பெற்ற ஒரு வக்கீல் பட்டேல் அவர்கள் வருஷத்தில் 3, 4 மாத வேலைக்கு மீ 4000 ரூ. வீதம் 12 மாதமும் சம்பளம் வாங்கியிருக்கும் போது, 12 மீ நாள் முழுவதும் வேலை பார்ப்பவர்கள் ராஜாக்கள் பிரபுக்கள் என்பவர்கள் 4000 ரூ. சம்பளம் வாங்கினால் எப்படி அதைவிட மோசமான தேசத் துரோகமாகும் என்று கேட்கின்றோம்.

இப்படியாக பல விதத்திலும் காங்கிரஸ்காரர்களின் நடத்தை இருக்கும்போது காங்கிரசின் யோக்கியதை இருக்கும்போது மற்றவர்களைக் குற்றம் சொல்லுவது எப்படி யோக்கியமான காரியமோ நாணயமான காரியமோ ஆகும் என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 15.12.1935**



RangaRakes tamilnavarasam.com

# வேண்டுகோள்

காங்கிரசுக்கு பல பத்திரிகைகள் இருக்கின்றன. அவைகள் பெரிதும் பார்ப்பனர்களாலும் அவர்களது நிபந்தனை அற்ற அடிமைகளாலும் நடத்தப்படுகின்றன. பார்ப்பனர்கள் பணமும் காங்கிரஸ் பணமும் அவைகளுக்கு தாராளமாய் உதவப்பட்டு வருகிறது.

ஆதலால் பார்ப்பனரின் வஞ்சம், சூழ்ச்சி, பொய் விஷமம் ஆகியவைகளை மனதார மறைத்து அவர்கள் திருப்திக்கும், கூலிக்கும் பார்ப்பனரல்லாதார் கட்சியையும், சமூகத்தையும், அவர்களுக்காக வேலை செய்யும் பத்திரிக்கைகளையும் வைதும், பழி கூறியும் விஷமப் பிரசாரம் செய்து வருகின்றன.

ஜஸ்டிஸ் கட்சித் திட்டத்தைப் பற்றிப் பழி கூறுவதும், அவர்களால் ஏற்பட்ட நன்மைகளை திரித்துக்கூறுவதும், அவர்களுக்கு சம்மந்தமில்லாத காரியத்தைப் பற்றி பழி கூறுவதுமே தொழிலாய்க் கொண்டிருக்கின்றன. பாமர மக்கள் இதையெல்லாம் சுலபமாக நம்பி ஏமாந்து போகிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சிக்கும், பார்ப்பனரல்லாதார் சமூக நலனுக்கும் இன்று தினசரிப் பத்திரிகை இல்லை. வாரப் பத்திரிக்கைகளும் வெகு சிலவே.

ஆதலால் ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாதார் ''குடி அரசு'' ''விடுதலை'' ''நகர தூதன்'' முதலிய பத்திரிக்கைகளை ஜில்லாக்கள் தோறும் தாராளமாய்ப் பரவும்படி செய்ய ஏற்பாடு செய்யுங்கள்.

எலக்ஷன் போது பணம் செலவு செய்து வெற்றி பெற்றுவிடலாம் என்று தைரியம் கொள்ளுவது 100க்கு 90 ஏமாற்றமாகவே முடியும்.

பிரசாரத்தின் மூலம் நகத்தில் கிள்ளி எறிய வேண்டிய அற்ப விஷயம் பணத்தின் மூலம் கோடாலி போட்டு வெட்ட வேண்டிய அளவு கஷ்டத்தை உண்டாக்கி விடும். ஆங்காங்குள்ள ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களுக்கு பத்திரிக்கை விஷயங்கள் கொயினா மருந்து போல் தோன்றும். எலக்ஷனுக்கு 10 ஆயிரம் 20 ஆயிரம் செலவு செய்வது என்பது 110 டிகிரி உஷ்ண காலத்தில் ஐஸ்கிரீம் சாப்பிடுவது போல் இருக்கும், தலைவர்களுக்கு இது பிறவிக் குணம்.

ஆதலால் மற்ற பார்ப்பனரல்லாத அபிமானிகளாகிய ஆங்காங் குள்ளவர்கள் தான் இவ்விஷயத்தில் கவலை எடுத்து உழைக்க வேண்டும்.



சந்தா சேர்க்கும் விஷயத்தில் வெட்கமோ தாக்ஷண்யமோ பாராமல் அறிமுகமுள்ள ஒவ்வொருவரையும் சந்தா சேர்க்க முயற்சிக்க வேண்டும்.

பார்ப்பனர்கள் பண முடிப்பு என்று பெயர் வைத்துக் கொண்டு 10 ஆயிரம் 20ஆயிரம் ஒரு லக்ஷம் ரூ. கூட சேர்த்து விடுகிறார்கள்.

நாம் அவர்களை பரிகாசம் செய்வதிலும், பழி கூறுவதிலும், கொடுத்தவனை முட்டாள் என்பதிலும் திருப்தி அடைகிறோம்.

நாமும் அதுபோல் பணம் வசூலிக்க இன்று முடியாவிட்டாலும், நமது பத்திரிக்கைகளை படிக்கும்படி கூட செய்யவில்லையானால் நமது சமூகம் விடுதலைக்கும் சுயமரியாதைக்கும் எப்படி தகுதி உடையதாகும்.

ஆதலால் இந்த டிசம்பர் மாதத்தில் ஒரு 1000 சந்தாதாரர்களாவது உயரும்படி செய்ய வேண்டியது அபிமானிகளின் கடமையாகும்.

**குடி அரசு - வேண்டுகோள் - 15.12.1935**



RangaRakes tamilnavarasam.com

# செட்டிநாடும் ஜஸ்டிஸ் கட்சியும்

## பார்ப்பனப் பத்திரிகைகளின் விஷமமும் ஆத்திரமும்

செட்டிநாடு குமாரராஜா அவர்கள் மறுபடியும் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டதைப்பற்றி பார்ப்பனப் பத்திரிகைகள் விஷமப் பிரசாரம் செய்து மறுபடியும் ஜஸ்டிஸ் கட்சிக்குள் கலகம் ஏற்படாதா என்று ஆசைப்படுகின்றன. சில பத்திரிகைகள் பொப்பிலியின் சரணாகதி என்று எழுதின. சில பத்திரிகைகள் பொப்பிலி மன்னிப்பு கேட்டுக் கொண்டார் என்று எழுதின.

கடைசியாக சேர்த்துக் கெள்ளப்பட்ட சம்பவத்தை ஒரு பத்திரிகை பொப்பிலியின் தோல்வி என்றும் எழுதியிருக்கிறது. ஏதாவது ஒரு பொதுநலத்தை உத்தேசித்து ஒற்றுமை ஏற்படுங்காலையில் யார் தோற்றார் யார் ஜெயித்தார் என்கின்ற பிரச்சினையைப் பற்றிய விஷமங்கள் அவ்வொற்றுமையின் விரோதிகளாலேயே தான் அதிகமாய் ஏற்படும்.

இந்த ஒற்றுமைப் பிரச்சினையானது மாஜி கவர்னர் சர். மகம்மது உஸ்மான் அவர்கள் முயற்சியால் ஏற்பட்டதாகும். அவரது முயற்சிக்கு உள்ள முக்கிய காரணம் இப்போது வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

சர். உஸ்மான் அவர்கள், குமாரராஜாவை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், பழமை விஷயங்கள் சரியோ, தப்போ என்பதைப் பற்றி யாரும் கவனிக்காமல் மறந்துவிடவேண்டும் என்றும் சொல்லி ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களையெல்லாம் கேட்டுக் கொண்டார்.

அந்தப்படியே அதற்காக ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. குமாரராஜா அவர்களும் அக்கூட்டத்துக்கு வந்தார்.

சர். உஸ்மான் அவர்கள் ‘‘தேசத்தின் நன்மைக்கு ஆக ஒற்றுமையுடன் சேர்ந்து வேலை செய்யுங்கள்’’ என்றும் சொன்னார்.

அதுபோலவே பொப்பிலி ராஜா அவர்கள் சர். உஸ்மான் அவர்கள் வேண்டுகோளை மதித்து, பழைய சங்கதிகளை மறந்து செட்டிநாடு குமாரராஜா அவர்களை வரவேற்பதோடு அவரது கூட்டுறவை பாராட்டுகிறேன் என்றும் சொன்னார்.



குமாரராஜா அவர்களும் பழைய சங்கதிகளை மறந்து பொப்பிலி ராஜாவின் சினேக உணர்ச்சியை பாராட்டி ஒத்துழைக்க விரும்புகிறேன் என்று சொன்னார். இதுதான் ராஜி சடங்கில் காணப்படுகிறது. இதில் யாருக்கு தோல்வி? யாருக்கு வெற்றி? என்று கேட்கின்றோம்.

குமாரராஜா ஜஸ்டிஸ் கட்சி கூட்டத்துக்கு வந்த பெருந்தன்மையை உத்தேசித்து அவரைப் பற்றிய ஜஸ்டிஸ் சட்டசபை கக்ஷி 11.12.34-ந் தேதி நடவடிக்கைகளை புஸ்தகத்தில் அடித்து விடுவது என்று பெருந்தன்மையாய் தீர்மானித்துக் கொண்டார்கள்.

அதுபோலவே ஜஸ்டிஸ் ஆசிரியரும் ஜஸ்டிஸ் பத்திரிகையில் ஏதாவது எழுதி இருந்தால் பின் வாங்கிக் கொள்வதாகவும் வருத்தப்படுவ தாகவும் தெரிவித்திருக்கிறார்.

இவை எல்லாம் செட்டிநாட்டு குமாரராஜா அவர்கள் துணிந்து வந்துவிட்டதால் பிறகு அவரிடம் மனிதத் தன்மையை காட்டிக் கொள்ளவும், அவரை கௌரவப்படுத்தவும் ஏற்பட்டவைகளாகும். எப்படி இருந்தாலும் குமாரராஜா அவர்கள் சேர்த்துக் கெள்ளப்பட்டதும் கௌரவிக்கப்பட்டதும் எல்லாம் ஒரு பொதுநலத்தை உத்தேசித்தே ஒழிய மற்றபடி யாருடைய சுயநலத்தையும் உத்தேசித்தல்ல என்பது மாத்திரம் உறுதி என்பதை நாம் அழுத்தமாகக் கூறுவோம். இதற்கு ஆக பார்ப்பனப் பத்திரிகைகள் இம்மாதிரி விஷமத்தனமும், ஆத்திரமும் காட்டுவது அவைகளின் அற்ப புத்தியை தெள்ளென விளக்குகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம - 15.12.1935**



RangaRakes tamilnavarasam.com

# தோழர்களே! உஷார்!

பாமர ஜனங்களை மயக்குவதில் மதத்தின் பெயரால், கடவுள் பெயரால், சுவர்க்கத்தின் பெயரால் பட்டப்பகலில் கொள்ளையடிப்பதில் - புதுப்புது மோசடி முறைகளை சிருஷ்டிப்பதில் பார்ப்பனர்களுக்கு இணையானவர்கள் இல்லவே இல்லை. அனாதிகாலமாக ஏமாற்று வித்தையினாலேயே அவர்கள் வயிறு வளர்த்து வருகிறார்கள். வேதங்கள், வேதாகமங்கள், கலைகள் முதலிய யாவும் பார்ப்பனப் புரட்டுப் பிழைப்புக்கு அழியா ஞாபகச் சின்னங்களாகும். மேனாட்டுக் கல்வி மூலம் மக்களின் பொது ஞானம் விருத்தியாகி, சீர்திருத்தக்காரர் முயற்சியினால் பகுத்தறிவு உணர்ச்சி வளர்ந்து அனாசாரங்களும் குருட்டு நம்பிக்கைகளும் ஒழியத் தொடங்கிவிட்டன. புராணக் குப்பைகளையும் தர்ப்பைப் புல்லையும் காட்டி மக்களை ஏமாற்ற முடியாதென்ற நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. பன்னூற்றாண்டு காலமாய் குறுக்கு வளைந்து வேலை செய்யாமல் மோசடி வித்தையினால் வயிறு வளர்த்து வந்த பார்ப்பனர்களுக்கு பிழைப்புக்கு வேறு வழி வேண்டாமா? ஆகவே காங்கிரசைப் பற்றுக் கோடாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸே பார்ப்பனர்களின் உடலும் பொருளும் ஆவியும்; காங்கிரஸே பார்ப்பனர்; பார்ப்பனரே காங்கிரஸ். காங்கிரஸ் இன்றேல் பார்ப்பனர் இல்லை. பார்ப்பனர் இன்றேல் காங்கிரஸ் இல்லை. எனவே பார்ப்பனர் உயிர் வாழ வேண்டுமானால் - செல்வாக்குப் பெற வேண்டுமானால் - தலைநிமிர்ந்து நடக்க வேண்டுமனால் காங்கிரஸ் வலுப் பெற்று விளங்க வேண்டியதுதான் - முன்னம் ஆத்ம விடுதலைக்காக - மோட்சத்துக்காக, கடவுளை வணங்க தட்சணை கொடு என்று மக்களை ஏமாற்றிப் பணம் பறித்தார்கள். இப்பொழுதோ தேச விடுதலைக்காக, காங்கிரசைப் போற்று, காணிக்கை போடு என்று ஏமாற்றி வருகிறார்கள்.

வெளிநாடுகளில் நடைபெறும் சுதந்திரப் போர்களையறிந்த நம்மவர்கள் காங்கிரஸ்காரரும், சுதந்திரப் போர் தொடுப்பதாகவே தப்பர்த்தம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

தேச விடுதலைக்காக காங்கிரஸ்காரர் செய்த முயற்சிகள் எல்லாம் பாழாகி, எந்த சர்க்காரோடு போராடினார்களோ அந்த சர்க்காரே தமக்கு சரணாகதியென்று பட்டவர்த்தனமாகக் கூறி சாத்தான் சர்க்காரின் கீழ் மந்திரி பதவி பெறப் பெரு முயற்சி செய்யப்படுவது கண்டும் நம்மவர்களில்



ஒருசாராருக்கு காங்கிரஸ் மயக்கம் தெளியவில்லை. காங்கிரஸ் மீது ஒரு குருட்டுப் பற்று - மாயப் பாசம் - ஆதாரமற்ற அபிமானம் - ஒரு சாராருக்கு இருந்தே வருகிறது. அந்தக் குருட்டு பக்தியை புதுப்புரட்டுக்களால் வளர்த்து காங்கிரசுக்கு பலம் தேட பார்ப்பன அரசியல்வாதிகள் அல்லும் பகலும் உழைத்து வருகிறார்கள். பொன் விழாக் கொண்டாடும் புதிய முறைகளையும் பார்ப்பனத் தலைவர்கள் வகுக்கிறார்கள். அவர்கள் கையாளப் போகும் முறைகள் எல்லாம் பாமர மக்களின் கண்ணில் மண்ணைப் போட்டு ஏமாற்றும் முறைகளாகவே இருக்கின்றன. கார்த்திகைக்குப் போட்ட தீபங்களையெல்லாம் அப்படியே எடுத்து வைத்திருந்து டிசம்பர் 28-ந் தேதி மீண்டும் தீபம் போட்டு பொன்விழாவைக் கொண்டாடுங்கள் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் சத்தியமூர்த்தித் தென்னாட்டு மக்களுக்கு ஆர்டர் கொடுக்கிறார். கார்த்திகை தீபத்துக்கும் தேச விடுதலைக்கும் சம்பந்தமென்ன? கார்த்திகை தீபம் மதத்தின் பெயரால் நடைபெறும் ஒரு ஏமாற்று வித்தை. காங்கிரஸ் பொன் விழாவும் அரசியலின் பெயரால் நடைபெறப் போகும் ஒரு ஏமாற்று வித்தை தானோ! காங்கிரஸ் லக்ஷியம் கைகூடாதிருக்கையில் பொன் விழாக் கொண்டாடுவது மூடத்தனமல்லவா? என்று ஒரு வங்க காங்கிரஸ் தலைவர் ராஜேந்திர பாபுவிடம் கடித மூலம் கேட்டார். ராஜேந்திர பாபு அதற்கு என்ன பதிலளித்தார் தெரியுமா? ''பொன் விழாக் கொண்டாடவில்லை; 50 வருஷம் பூர்த்தி அடையும் இந்த சந்தர்ப்பத்தில் பிரசாரம் செய்து காங்கிரஸ் பலத்தை விருத்தி செய்யவே முயல்கிறோம்'' என்று பதிலளித்திருக்கிறார். பொன் விழாக் கொண்டாட்டத்தைப் பற்றி தலைவர்களுக்குள்ளேயே அபிப்பிராய பேதம் இருந்து வருகையில் குட்டித் தலைவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதின் மர்மம் என்ன? பொன் விழாவின் பெயரால் பொது மக்கள் பணத்தைப் பாழக்க அநேக ஸ்தல ஸ்தாபனங்கள் தீர்மானித் திருப்பது நியாயமாகுமா? நகரசபை, ஜில்லா போர்டு மண்டபங்களிலும் மற்றும் பொது ஸ்தலங்களிலும் ஒரு நாளைக்கு தேசீயக் கொடியைப் பறக்க விட்டுவிட்டால் பூரண சுயராஜ்யம் வந்து விடுமா? ஒன்றரை அணாவாக இருக்கும் இந்தியர்களின் தின வருமானம் உயர்ந்து விடுமா? இந்திய மரணம் விகிதம் குறைந்துவிடுமா? 100க்கு 94 பேர் நிரக்ஷர குக்ஷிகளாக விருக்கும் அநியாயம் அழிந்து விடுமா? காங்கிரஸ்காரர் புத்தியில்லாமல் காளை கன்று போடப் போகிறதென்றால், கயிற்றை எடு, கன்றைக் கட்டு, பாலைக் கற என நாமும் கூறுவதா? ''காளையாவது ஏது? கன்று போடுவது ஏது? பக்கா முட்டாள் தனம்'' என்று கூற அறிவுள்ள இந்தியன் ஒருவனாவது இந்தியாவில் இல்லையா? இந்தியாவின் சுயமரியாதையைக் காப்பாற்ற ஒருவனாவது இருக்க வேண்டாமா? தோழர்களே அன்புகூர்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

பொன்விழாக் கொண்டாட்டம் எவ்வளவு மோசடியானது, முட்டாள்தனமானது, கேலிக் கூத்து என்பதை உணருங்கள். விவேகிகள்



RangaRakes tamilnavarasam.com

என்ன சொன்னாலும், டிசம்பர் 28ந் தேதி சுயநலக்காரர்கள் பொன்விழாக் கொண்டாடத்தான் போகிறார்கள். அர்த்தமற்ற மதச்சடங்குகள் நடைபெறும் இந்தியாவிலே காங்கிரஸ் பொன் விழா நடைபெறுவது ஒரு அதிசயமல்ல. சுயநலக் கூட்டத்தார் கொண்டாடப் போகும் போலிக் கூத்தினால் காங்கிரசின் மதிப்பும் உயர்ந்து விடாது. ஆனால் முட்டாள்தனமென நாம் உணரும் விஷயத்தை நாம் பகிரங்கமாகக் கூறிவிட வேண்டியது நமது கடமையல்லவா? ஆகவே பொன் விழாவை நீங்கள் பகிஷ்கரிப்பதாக உங்களுக்குப் பிரியமான முறைகளால் உலக மக்களுக்கு விளக்கி காட்டி விடுங்கள். தமிழ்நாட்டுத் தோழர்களே! உஷார்! உஷார்!!

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 15.12.1935**



## ஜாதிப்புத்தி போகாதையா ராஜகோபால மாலே

காரைக்குடியில் நடக்கும் காங்கிரஸ் மாகாண மகாநாட்டுக்கு தலைவராக தமிழ் நாட்டில் உள்ள பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியை உத்தேசித்து பல ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகளும் தோழர் அவனாசிலிங்கம் செட்டியாரையே சிபார்சு செய்ய முடிவு செய்து கொண்டிருப்பதை உணர்ந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரியார் தங்கள் ஜாதியைச் சேர்ந்த தோழர் ருக்மணி அம்மாளை தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஜில்லாக் கமிட்டிக்கு ரகசியமாகக் கடிதம் எழுதியிருக்கிறார். இதை அறிந்த ஊழியன் என்னும் பார்ப்பனரல்லாத பத்திரிக்கை மூர்த்தியாரின் நடத்தையைக் கண்டித்து எழுதி இருக்கிறது. இதற்குப் பதில் எழுதும் முறையில் ஜெயபாரதி என்னும் ஒரு பார்ப்பன பத்திரிக்கை டிசம்பர் 9-ந் தேதி பத்திரிக்கையில் சத்தியமூர்த்தியாரை ஆதரித்து,

‘‘தியாகமே உருவாய் விளங்கும் ஸ்ரீமதி ருக்குமணி லட்சுமிபதியை சிபார்சு செய்து கடிதம் எழுதுவதில் என்ன தப்பு’’ என்று கேட்கின்றது.

தோழர் ருக்குமணியம்மாள் தியாகமே உருக்கொண்டவர் என்றால், தோழர் அவனாசிலிங்கம் செட்டியார் என்ன உருக்கொண்டவர் என்று அப்பத்திரிக்கை கருதியதோ தெரியவில்லை. தியாகமும் தியாக உருவும் பார்ப்பனர்களுக்கும், பார்ப்பன அம்மாமார்களுக்கும்தான் உண்டு என்பதை அஸ்திவாரமாகக்கொண்டு தான் காங்கிரஸ் இருந்து வருகின்றது என்று சுமார் 20 வருஷத்துக்கு முன்பே டாக்டர் நாயர் அவர்கள் கருதித்தான் தியாகமே உருவாய்க் கொள்ளத்தக்க ஜீவன் பார்ப்பனரல்லாதாரிலும் உண்டு என்பதைக் காட்டுவதற்காக ஜஸ்டிஸ் கட்சியை ஸ்தாபித்தார்கள்.

அவர் வார்த்தை மெய்யாக்க அடிக்கடி இது போன்ற சம்பவங்கள் நடந்து வருகின்றன.

இதுபோலவே 1925ல் காஞ்சீபுரம் மாகாண மகாநாட்டுக்கு தோழர் கல்யாணசுந்திர முதலியாரை தலைவராகப் போடுவதற்கு தமிழ்நாட்டு ஜில்லாக்கள் முடிவு செய்திருக்கும் போது, அதுசமையம் மித்திரன் ஆசிரியராய் இருந்தவர் முதலியாருக்குக் கிடைக்காமல் இருக்கும்படி செய்வதற்கு எவ்வளவோ பாடுபட்டதும், இதைப் பற்றி குடி அரசு அப்போதே கண்டித்ததும் பத்திரிகை பார்த்தால் தெரியவரும்.



RangaRakes tamilnavarasam.com

அதுபோலவே தோழர் வரதராஜுலு நாயுடு திருப்பூர் மாகாண மகாநாட்டுக்கு தலைமை வகிக்காமல் செய்ய வேண்டும் என்று மித்திரன் கூட்டத்தார் செய்த சூக்ஷியும், அப்போது நடந்த தகறாறுகளும் காங்கிரசி லிருந்தவர்கள் மாத்திரம் அல்லாமல் இந்தியா பூராவுமே சிரித்தது யாவரும் அறிவார்கள்.

ஆகவே எத்தனை தடவை சலவை செய்தாலும் ஜாதிபுத்தி போகாதையா ராஜகோபாலமாலே என்ற வாக்குத் தவறாது.

பார்ப்பனர் போட்டிக்கு வரும்போது எவ்வளவு உயர்ந்த தரமுள்ள பார்ப்பனரல்லாதாராய் இருந்தாலும் அழுத்தி விடுவார்கள். பார்ப்பன ரல்லாதாரில் யாராவது தகுந்த ஆசாமி எதிரியாய் வருவதாய் இருந்தால் ஒரு பச்சகானாவை கொண்டு வந்து போட்டு அதற்கு பெரிய தியாகமூர்த்தி உருவம் உண்டாக்கிவிடுவார்கள். எனவே பாரசர் ஸ்மிருதிப்படி எப்படிப்பட்ட விவகார தோஷமும் நெய் பூசிக்கொள்ளுவதாலும், பட்டினி கிடப்பதாலும் தீர்ந்து விடுகிறதோ அதுபோல், எப்படிப்பட்ட அயோக்கியத்தனங்களும் தேசபக்தி தேசாபிமானம் என்கின்ற மந்திரத்தால் பரிகாரமாகிவிடுகிறது.

எனவே நமது பார்ப்பனர் சக்தியை யாரே அளவெடுக்க முடியும்?

**குடி அரசு - கட்டுரை - 15.12.1935**

# ஒரு விசேஷம்

**- வம்பளப்போன்**

சென்னையில் நடந்த தலைவர் தெரிந்தெடுப்பு விருந்துக்கு தோழர் சத்தியமூர்த்தியை அழைக்கவே இல்லையாம். லக்ஷ்மிபதி அம்மாளை கூப்பிடவே இல்லையாம். காங்கிரசின் நன்றி விசுவாசத்திற்கு வேறு என்ன ருஜுவு வேண்டும்.

சத்தியமூர்த்தியார் லக்ஷிமிபதி அம்மாளை காரைக்குடி மகாநாட்டுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஜில்லா சபைகளுக்கு ரகசியக் கடிதம் எழுதினதினால் இருவரையும் குற்றவாளியாக்கி தலைமைப் பதவியில் இருந்து தள்ளப்போகிறார்கள் போலும்!

**குடி அரசு - செய்தி விமர்சனம் - 15.12.1935**



RangaRakes
tamilnavarasam.com



R. No. M. 2041

"KUDI-ARASU"

குடி அரசு

ராமாயண ஆராய்ச்சி

ஆரண்யகாண்டம்.

பாரத ஆராய்ச்சி.

[ஆதிபருவம்]

விலாசம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# எச்சரிக்கை

சுயமரியாதை இயக்கத்தின் பேரைச் சொல்லிக் கொண்டு குப்புசாமி என்ற வாலிபர் ஒருவர் விழுப்புரம் நாகப்பட்டினம் முதலிய ஊர்களில் பண விஷயத்தில் மோசம் செய்துவிட்டுப் போய்விட்டதாக நமக்கு தகவல் வந்திருக்கிறது. அதுபோல் இன்னும் சிலர் இவ்வாறு செய்து வருவதாகவும் தகவல் வந்திருக்கிறது. ஆகையால் இம்மாதிரி இயக்கப் பெயர் கூறுபவர்களுக்கு சௌகரியம் செய்வதில் நமக்கு ஆட்சேபணை இல்லை. பண விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கும்படி நமது இயக்கத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

(ப.ர்.)

குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 22.12.1935



RangaRakes tamilnavarasam.com

# ‘‘ஜஸ்டிஸ்’’ கொள்கை வெற்றி

தேர்தல்களில் ஏற்படும் வெற்றி தோல்விகளினால் ஒரு தனி மனிதனுடையவோ கட்சியினுடையவோ யோக்கியதையை நிர்ணயம் செய்து விடுவது முழு முட்டாள்தனம் என்று நாம் பலமுறை வற்புறுத்தி யிருப்பதைத் தோழர்கள் மறந்திருக்க மாட்டார்கள். குதிரைப் பந்தயம், லாட்டரி, சீட்டாட்டம் மாதிரி தேர்தலும் ஒரு வகைச் சூதாட்டமே. யோக்கியதையுடையவர்கள் தோல்வியடைவதும், அநாமதேயப் பேர்வழிகள் வெற்றியடைவதும் சர்வ சாதாரணமாக இருந்து வருகிறது. தேச மக்களில் 100-க்கு 94 பேர் எழுத்து வாஸனையில்லாத பாமர மக்களாய் இருக்கும் வரை தேர்தலில் மோசடிகளும், சூழ்ச்சிகளும், அயோக்கியத்தனங்களும் தாராளமாக நடைபெற்றுக் கொண்டே இருக்கும். தேர்தல்களுக்கு முன் வந்திருப்பவர்களின் யோக்கியதை, அவர்களோ, அவர்களது கட்சியோ இதுகாறும் நாட்டுக்குச் செய்துள்ள நன்மைகள், தேச மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பதற்குள்ள ஆற்றல் தேர்தலுக்கு முன் வந்திருப்பவருக்கோ, அவரது கட்சிக்கோ உண்டா என்ற சிந்தனை அபேட்சகர்களின் அல்லது அவர்களது கட்சியின் பூர்வச் சரித்திரம் ஆகிய காரியங்களைப் பற்றிச் சிந்தனை செய்யாமல் காந்திக்காகவும், கதருக்காகவும் ஓட்டுக் கொடுக்கும் அறிவற்ற மக்கள் இருக்கும் வரை தற்காலத் தேர்தல்களை, ஜனநாயக முறைப்படி நடக்கும் தேர்தல்கள் என்று சொல்ல முடியுமா? அனேக இடங்களில் நடைபெற்ற நகர சபை, ஜில்லா போர்டு தேர்தல்களில், மதுவிலக்குத் திட்டத்தை தமது லக்ஷியமாகக் கொண்டிருக்கும் காங்கிரஸ் காரர்கள் தாராளமாகக் கள் வழங்கினதாகப் பல பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இதை எந்தப் பொறுப்புடைய காங்கிரஸ்வாதியும் இந்நிமிஷம் வரை மறுக்க முன் வரவில்லை. மற்றும் கைக் கூலிப் பேய் தாண்டவமாடியதாயும் பலர் புகார் செய்திருக்கிறார்கள்.

திருநெல்வேலியில் ஜில்லா போர்டு காங்கிரஸ் கட்சித் தலைவர் தோழர் குப்புசாமி அய்யர் தலைமையில் நடைபெற்ற ஒரு காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில், காங்கிரஸ்வாதியான தோழர் ஷண்முகம் பிள்ளை என்பார் ஜில்லா போர்டு தேர்தலில் பல காங்கிரஸ் அபேட்சகர்கள் கைக்கூலி வழங்கியதாகத் தாம் கேள்விப்பட்டதாயும், காங்கிரசின் கௌரவத்துக்கு அது அடாத செயல் என்றும் பகிரங்கமாகக் கண்டித்துப் பேசினார். தலைவரோ ஏனைய காங்கிரஸ்வாதிகளோ அதை மறுக்கவில்லை. எனவே தேர்தல் காலங்களில் காங்கிரஸ்காரர் லஞ்சம் வழங்குகிறார்கள் என்பது உறுதியாகிறது.

இந்நிலையில் காங்கிரஸ்காரர் பெறும் வெற்றிக்கு மதிப்போ, யோக்கியதையோ, நாணயமோ உண்டு என்று கூற முடியுமா?

சென்ற வருஷ நவம்பரில் நடைபெற்ற அசம்பிளித் தேர்தலின் போது (1) வரப்போகும் சீர்திருத்த அரசியலைக் கவிழ்ப்போம் (2) பிரதிநிதித்துவ சபை கூட்டுவோம் (3) எதிர்கால அரசியலை அமைப்போம் என்று காங்கிரஸ்காரர்கள் வாக்காளர்களுக்கு உறுதி கூறினார்கள். அந்த மூன்று காரியங்களில் ஒன்றையாவது காங்கிரஸ்காரர்கள் நிறைவேற்றி வைக்கவில்லை. நிறைவேற்ற முயலவுமில்லை. மாறாக எதிர்கால அரசியலைக் கைப்பற்றி மந்திரிகளாகவும் காங்கிரஸ்காரர் பகிரங்கமாக முயற்சி செய்கிறார்கள். தேச மக்களுக்கு எள்ளளவேனும் அரசியல் உணர்ச்சியோ, ஞானமோ இருந்திருந்தால் தேர்தல் வாக்குறுதிகளைக் காற்று வாக்கில் பறக்கவிட்ட அயோக்கியப் பேர்வழிகளுக்கு மீண்டும் ஓட்டுக் கொடுப்பார்களா? தேச மக்கள் எல்லாம் அப்பாவிகள் என்ற நம்பிக்கையினாற்றானே காங்கிரஸ்காரர் மீண்டும் அவர்களிடம் ஓட்டுக் கேட்க முன் வருகிறார்கள். தேர்தல் வாக்குறுதிகளை மீறுகிறவர்களுக்கு மீண்டும் ஓட்டுக் கொடுக்கும் முட்டாள்தனத்தை இந்தியாவிலன்றி உண்மையான ஜனநாயக அரசியல் அமுலில் இருக்கும் எந்த நாட்டிலாவது பார்க்க முடியுமா? சுயராஜ்யம் நடத்த இந்தியர்களுக்கு லாயக்கில்லை யென்று கன்சர்வெட்டிவ் கட்சியார் கூறும்போது நாம் அவர்கள் மீது சீறி விழுகிறோம்; திட்டுகிறோம்; துரோகப்பட்டம் சூட்டுகிறோம். ஓட்டுரிமையைப் புத்திசாலித்தனமாக வழங்கத் தெரியாத மக்களுக்கு ஓட்டுரிமை வழங்குவது குரங்கு கையில் கூரிய கத்தியையோ, ரிவால்வாரையோ கொடுப்பதற்கே ஒப்பாகும். 75 லட்சம் பேர் வாக்குரிமை பெற்றிருக்கும் இக்காலத்திலேயே தேர்தல்களில் மானக்கேடான அலங்கோலங்கள் நடைபெறுகின்றன. வரப்போகும் சீர்திருத்தப்படி ஏழரைக் கோடிப்பேர் ஓட்டுரிமை பெறப் போகிறார்கள். ஜனநாயகக் கொள்கைப்படி பிராய பூர்த்தி வந்தவர்கள் எல்லாம் ஓட்டுரிமை பெற வேண்டியது அவசியமானாலும் இந்தியாவின் தற்கால நிலையில் ஏழரைக்கோடிப் பேர் ஓட்டுரிமை பெறுவது ஆபத்தான பலனையே கொடுக்கப் போகிறது. ஏழரைக் கோடிபேர் வாக்குரிமை பெறப் போவதை தோழர் சத்தியமூர்த்தி இரு கையாலும் வரவேற்பதே நமது அபிப்பிராயத்துக்கு மறுக்க முடியாத அத்தாட்சி. காந்தி, கதர், பாரத மாதா, அடிமைச் சங்கிலி, விடுதலை என்பன போன்ற பகட்டு வார்த்தைகளைச் சொல்லி பாமர மக்களை மயக்கச் சௌகரியம் இருப்பதினாலேயே தோழர் சத்தியமூர்த்தி ஆனந்தக் கூத்தாடுகிறார். தேச மக்களின் தற்கால மோசமான நிலைமையைப் பற்றி எண்ணும் போதெல்லாம் நாம் மனச் சோர்வடைந்து ஜனநாயக ஆட்சியைவிட ஹிட்லர் ஆட்சியினாலும், முசோலினியாட்சியி





RangaRakes tamilnavarasam.com

னாலும் இந்தியாவுக்கு அதிக நன்மை ஏற்படாதா என்று நாம் நம்மையே கேட்டுக் கொண்டதுண்டு. மனச் சோர்வினால் இத்தகைய மனத் தடுமாற்றம் அனேகருக்கு ஏற்படுவது சகஜமே. நாம் விரும்பினாலும், வெறுத்தாலும் புதிய அரசியல் சீர்திருத்தம் வரப்போவது உறுதி.

அதன்படி ஏழரைக்கோடி பேர் ஓட்டுரிமை பெறப் போவதும் நிச்சயம். காலம் ஏமாற்றக்காரருக்கு அநுகூலமாயிருந்தாலும், நாம் மனந்தளர்ந்து கை கால்களைப் பரக்கப் போட்டு அல்லற்படாமல் நாம் நமது கடமையைச் செவ்வனே செய்வதைத் தவிர வேறு கதியில்லை.

திருநெல்வேலி, திருச்சி, கர்நூல், அனந்தப்பூர், சித்தூர் முதலிய இடங்களில் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ்காரரே வெற்றிக்கொடி நாட்டிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. தென்னாற்காடு ஜில்லா தேர்தல் முடிவு நாளை அல்லது மறுநாள் வெளிவரவும் கூடும். தென்னாற்காட்டில் நமக்குத் தோல்வியே ஏற்பட்டாலும் நாம் அதைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை.

ஏன்? தேர்தல் வெற்றி தோல்விகளினால், தற்கால நிலையில் அபேட்சகர்களில் யோக்கியதா, யோக்கியதைகளை நிர்ணயிக்க முடியாத நிலைமையே நமது அபிப்பிராயத்துக்கு காரணம். நமது கூற்றை விளக்குவதற்கு ஆந்திர வீரர் தோழர் டி. பிரகாசம் டிசம்பர் 20-ந் தேதி வெள்ளிக் கிழமை ஹிந்துப் பத்திரிகையில் எழுதியுள்ள ஒரு கடிதத்தை எடுத்துக் கொண்டால் போதுமானது. ஆந்திர தேசத்தில், ஜில்லா போர்டு தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ்காரருக்கு வாழ்த்துக் கூறுகையில் தோழர் பிரகாசம் அறிந்தோ அறியாமலோ அக்கடிதத்தில் சில மானக்கேடான உண்மைகளையும் வெளியிடுகிறார். அவர் எழுதுவதாவது,

> ''கர்நூலிலும், அனந்தப்பூரிலும் காங்கிரஸ் பேரால் தேர்ந் தெடுக்கப்படாத ஜில்லா போர்டு மெம்பர்கள் காங்கிரஸ் அபேட்சகர்களையே ஆதரித்தார்கள். சிலர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தமது அபிப்பிராயத்தையே மாற்றிக் கொண்டு காங்கிரசில் சேர்ந்து கொண்டார்கள். தேர்தலில் காங்கிரஸ்காரரோடு போட்டி போட்டு வெற்றிப் பெற்றவர்களும் தலைவர் தேர்தல்களில் காங்கிரஸ் அபேட்சகர்களையே ஆதரித்தார்கள்.''

ஜில்லா போர்டு தேர்தலுக்கு முன் வருபவர்கள் எல்லாம் பொதுவாக படிப்பும், அந்தஸ்தும், சமூக வாழ்வில் மதிப்புக்குரிய ஸ்தானமும் பெற்றிருப்பவர்களே. அவர்களே தோழர் பிரகாசம் கூறுகிறபடி நடந்திருக்கையில் வெற்றி தோல்விகளை எண்ணி மாரடித்துக் கொள்வதில் பயனுண்டா? கட்சிப் பற்றோ, கொள்கையோ, மனவுறுதியோ இல்லாத இத்தகைய ஆசாமிகளை நம்பினால் எந்தக் கட்சிக்குத்தான் மானக்கேடு ஏற்படாது? அரசியலில் கூடு விட்டுக் கூடு பாய்வது ஒரு மாதிரி அரசியல் விபசாரமேயாகும். விபசாரிகளையாவது மன்னித்து விடலாம். ஏன்? படிப்போ, நற்பழக்கமோ இல்லாதவர்கள்; வயிற்றுப்பாட்டுக்கு வழியில்லா தவர்கள். மேலும் மதத்தின் பேரால் விபசாரம் ஆதரிக்கப்படுவதினால் சாமானிய விபசாரிகளைக் குறை கூற வழியில்லை.

அரசியல் விபசாரிகள் நிலைமையோ அப்படியல்ல. படிப்பும், பணமும், அந்தஸ்தும் உடையவர்கள். அவர்கள் கட்சித் துரோகம் செய்து விபசாரியாவதைவிட கொடுமை, மானக்கேடு, துரோகம் வேறுண்டா? திருநெல்வேலியிலும் திருச்சியிலும் கூடுவிட்டுக் கூடு பாய்ந்த அரசியல் சிங்கங்களைப் பற்றிய வரலாறுகளை தென்னாட்டு பத்திரிகைகளில் காங்கிரஸ்காரரே வெளியிட்டிருக்கிறார்களாகையால், அவைகளை மீண்டும் எடுத்துக் கூறி நமது பத்திரிகையை அசுத்தப்படுத்த நாம் விரும்பவில்லை.

ஆகவே காங்கிரஸ்காரர்களுக்கு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படும் வெற்றிக்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கலாம் என்பதை தேச மக்களே நிர்ணயம் செய்து கொள்ளட்டும். ஜில்லா போர்டு தேர்தல்களிலும், தலைவர் தேர்தல்களிலும், வெற்றி பெற்றவர்கள் எந்தப் போர்வையைப் போர்த்திக் கொண்டாலும், இது வரை தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களில் பெரும்பாலாரும், தலைவர்கள் அனைவரும் பார்ப்பனரல்லாதாரா யிருப்பதை நம்மவர்கள் பார்வைக்குக் கொண்டுவர விரும்புகிறோம். அவர்களில் பெரும்பாலார் அரசியல் விபசாரக் குற்றத்துக்கு ஆளாகி யிருந்தாலும் அரசியல் விபசாரம் மன்னிக்க தக்கதென்ற உணர்ச்சி நம்மவர்களில் பெரும்பாலார் உள்ளத்துக்குக் குடி கொண்டிருக்கையில் அவர்களது வெற்றியை நமது வெற்றியாகப் பாராட்டுவதில் அவ்வளவு குற்றமில்லையென்றே நினைக்கிறோம்.

இதுவரை வெளிவந்துள்ள தேர்தல் முடிவுகளினால் ஜஸ்டிஸ் கட்சியின் மூலம் கொள்கை வெற்றி பெற்றிருக்கும் சந்தோஷச் செய்தியை எந்த மலையுச்சியிலிருந்தும் கூற நாம் தயாராயிருக்கிறோம்.

இதுவரை நடைபெற்றுள்ள தேர்தல்களினால் பல உண்மைகள் வெளி வந்துள்ளதையும் நம்மவர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டும்.

தேர்தல்களில் வெற்றி பெற வேண்டுமானால் பார்ப்பனரல்லாத பிரமுகர்களின் காலில் விழுவதைத் தவிர காங்கிரஸ்காரருக்கு வேறு வழியில்லை யென்பது புலனாகிவிட்டது.

சிறை புகுந்த - தடியடிபட்ட காங்கிரஸ்காரர்களைவிட சட்ட வரம்புக் குட்பட்டு ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கையைப் பின்பற்றி வந்தவர்களுக்கே நாட்டில் மதிப்புண்டென்பதும் சந்தேகத்துக்கு இடமின்றி வெளியாகிவிட்டது.

இத்தியாதி காரணங்களால், பார்ப்பனரல்லாதார் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் பெற வேண்டும் என்ற ஜஸ்டிஸ் கட்சியின் மூலக்



RangaRakes
tamilnavarasam.com

கொள்கை வெற்றி பெற்று வருவதைக் கண்ணுள்ளோர் பார்த்துக் கொள்ளட்டும். இதுவரை வெளிவந்துள்ள தேர்தல் முடிவுகளால் ஜஸ்டிஸ் கட்சிக்குத் தோல்வியேற்பட்டது போல் தோன்றினாலும் உண்மையில் அஞ்சக் கூடிய தோல்வியல்லவென்பதை நம்மவர்கள் நம்புவார்களாக!

தென்னாற்காடு தேர்தல் முடிவுகள் வெளிவந்த பிறகு அடுத்த வாரம் மீண்டும் இதைப் பற்றி எழுதுவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 22.12.1935**



# கல்கத்தா கலாட்டா

சென்குப்தா கட்சியாருக்கும், சுபாஷ் போஸ் கட்சியாருக்கும் ஏற்பட்டிருந்த பிணக்கு மூலம் கல்கத்தா நகரசபை வெகுகாலம் சீரழிந்து கிடந்ததை அன்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள். கடைசியாக மாஜி மந்திரி தோழர் ஏ.கே. பஸ்லுல் ஹக் நகரசபை மேயர் ஆனது முதல் நகரசபைக் காரியங்கள் ஒருவாறு நடந்து கொண்டிருந்தன. நகரசபை கூடும்போ தெல்லாம் பெரும்பாலும் வாய்ச்சண்டை நடப்பது சகஜமாயிருந்து வந்தும் தமது சாதுரிய புத்தியினால் மேயர் ஒருவாறு சமாளித்துக் கொண்டிருந்தார். இப்பொழுதோ இந்திய ஸ்தல ஸ்தாபனங்களுக்கே மானக்கேட்டை யுண்டுபண்ணக்கூடிய நிலைமை கல்கத்தா நகர சபையில் ஏற்பட்டிருக்கிறது. கார்ப்பொரேஷன் உத்தியோகங்களில் 100க்கு 25 விகிதம் முஸ்லீம்களை நியமிக்க வேண்டுமென்ற தீர்மானத்தைப் பற்றி ஆலோசிப்பதற்காக ஒரு விசேஷக் கூட்டம் கூட்ட வேண்டுமென்று 16 முஸ்லீம் அங்கத்தினர்கள் செய்துகொண்ட விண்ணப்பத்தின்படி சென்ற 13ந் தேதி ஒரு விசேஷக் கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் கல்கத்தாவில் வசிக்கும் முஸ்லீம் களுக்கும், இதர சமூகத்தினருக்கும் கார்ப்பொரேஷன் உத்தியோகங்களில் பிரதிநிதித்துவம் அளிப்பது பற்றிக் கார்பொரேஷன் கைக்கொண்டிருக்கும் கொள்கையை மேலும் அமலுக்குக் கொண்டுவரும் விஷயத்தை விசேஷ கமிட்டி பரிசீலனை செய்ய வேண்டுமென்று முடிவாயிற்றாம். ஆனால் விசேஷக் கமிட்டிக்கு அங்கத்தினர் தேர்ந்தெடுக்க முயன்றபோது தொல்லை ஆரம்பமாயிற்றாம். விசேஷக் கமிட்டிக்கு பிரேரணை செய்யப்பட்ட பல பெயர்கள் முஸ்லீம் அங்கத்தினர்களுக்குப் பிடிக்கவில்லையாம்.

கடைசியில் 5 ஹிந்துக்களும் 2 முஸ்லீம்களும் அடங்கிய விசேஷக் கமிட்டி ஒன்று நியமனமாயிற்றாம். இது முஸ்லீம் மெம்பர்களுக்குப் பிடிக்காததினால் அவர்கள் வெளியேறி தம் பதவிகளை ராஜிநாமாச் செய்துவிட வேண்டுமென்று முடிவு செய்தார்களாம். பிரஸ்தாபக் கூட்டத்தில் அங்கத்தினர்கள் நடந்து கொண்ட மாதிரியைப் பார்த்து மேயர் தோழர் பஸ்லுல் ஹக் மிகவும் மனம் புண்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அங்கத்தினர்கள் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதை சகிக்கப் பொறாத மேயர் ‘‘இங்கு நீங்கள் ஒழுங்கீனமாக நடந்து கொள்ளுவதின் மூலம் உங்கள் எதிரிகளுக்குத்தான் ஆதரவு கொடுத்து வருகிறீர்கள். அவர்கள் உங்கள் எல்லோரையுமே கேவலப்படுத்தப் போகிறார்கள். இந்த



RangaRakes tamilnavarasam.com

ஆபாச விஷயங்கள் எல்லாம் அன்னிய நாடுகளுக்குத் தந்தியில் பறக்கும் என்பதை மறந்து விடாதீர்கள். இந்தியாவுக்கு சுயராஜ்யம் வழங்கக் கூடாது என்பதற்கு இதையெல்லாம் ஆதாரமாக உபயோகித்து இந்திய விரோதிகள் வாதிப்பார்கள்'' என்று கூறினாராம். எனினும் அங்கத்தினர்கள் அடங்கவில்லை. தான் தோன்றித்தனமாகவே நடந்து கொண்டார்கள். கடைசியாக மனம் சலித்து ''ஒழுங்கான முறையில் தனது அலுவல்களைக் கவனிக்காத ஒரு சபையுடன் சம்பந்தப்பட்டிருக்க எனக்கு விருப்பமில்லை; ராஜிநாமாச் செய்துவிடுவதே நல்லது என்ற அபிப்பிராயம் நாளுக்கு நாள் பலப்பட்டு வருகிறது'' என்று கூறி கூட்டத்தைக் கலைத்தாராம். அப்பால் மேயர் அறையில் ஒரு அந்தரங்கக் கூட்டம் நடந்தது. நகர சபையை விட்டு வெளியேறிய முஸ்லீம் மெம்பர்கள் தங்கள் ஸ்தானங்களை ராஜிநாமாச் செய்துவிடுவதாகச் சொன்னார்கள். ஆத்திரப்படக் கூடாதென்று சிலர் அபிப்பிராயப்பட்டதின் பேரில் ஒரு முடிவுக்கும் வராமல் பிரிந்தார்கள். சமரசம் ஏற்படுத்த மேயரும் எவ்வளவோ முயன்றார், பலன் ஏற்படவில்லை. 16-ந் தேதி மத்தியானம் 15 முஸ்லீம் அங்கத்தினர் சேர்ந்தாற்போல் ராஜிநாமாச் செய்துவிட்டனர். வேறு கதியில்லாமல் மேயரும் தமது ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்துவிட்டார். அங்கத்தினர் பதவியை மட்டும் அவர் ராஜிநாமாச் செய்யவில்லை. தமது சகோதர அங்கத்தினர் அனைவரும் ராஜிநாமாச் செய்துவிட்டதினால் தாமும் ராஜிநாமாச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்றும், எனினும் சமரஸம் ஏற்படுமா? என்று பார்ப்பதற்காகவே தாம் அங்கத்தினர் பதவியை வகித்துக் கொண்டிருப்பதாயும் மேயர் தெரிவித்துவிட்டாராம்.

கடைசியில் கல்கத்தா நகரசபை குடை சாய்ந்து கிடக்கிறது, இதற்குக் காரணம் என்ன? காரணத்தை ராஜிநாமாச் செய்த முஸ்லீம் அங்கத்தினர் வெகு தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அரசியல் காரணங்களை முன்னிறுத்தி நகரசபை ஹிந்து மெம்பர்கள் காரியங்களை நடத்தி வருவதினால் எல்லா சமூகங்களுக்கும் நீதி வழங்கப்படவில்லையென்றும், அத்தகைய ஒரு ஸ்தாபனத்தில் இருக்க தாம் விரும்பவில்லையென்றும் முஸ்லீம் அங்கத்தினர்கள் பட்டவர்த்தனமாகக் கூறியிருக்கிறார்கள்.

ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்ற வேண்டுமென்று சுயநலக் கூட்டத்தார் தென்னாட்டில் ஆர்ப்பாட்டம் செய்து வருவதினால் அவர்கள் ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றினால் என்ன நிலைமை ஏற்படும் என்பதை தென்னாட்டு மக்களுக்கு விளக்கிக் கூறும் பொருட்டே கல்கத்தா சம்பவத்தைப் பற்றி இன்று விரிவாக எழுத எண்ணினோம்.

பிரிட்டிஷ் முதன் மந்திரியின் வகுப்புத் தீர்ப்பு வங்காள ஹிந்துக்களுக்கு ஒரு சிறிதும் பிடிக்கவே இல்லை. பொதுவாக வடநாட்டு இந்துக்கள் எல்லாம் வகுப்புத் தீர்ப்பை எதிர்த்தாலும் தேச க்ஷேமத்தை முன்னிட்டு



சிறிது விட்டுக் கொடுத்து இந்தியர்களாகவே ஒரு சமரசம் செய்து, வகுப்புத் தீர்ப்பின் வன்மையைக் குறைக்க ஒருவாறு இணங்கினர். பண்டித மாளவியா கூட்டிய சர்வகட்சி மகாநாட்டு முடிவுகளை ஏனைய மாகாணங்கள் எல்லாம் ஒப்புக் கொண்டன. சமரசம் ஏற்பட்டு விடும் போலவும் தோன்றிற்று. வங்காள ஹிந்துக்களின் பிடிவாதத்தினால் மாளவியாவின் சமரச முயற்சி முறிந்தது. வங்காளத்திலே முஸ்லீம்களே மெஜாரட்டி சமூகத்தார். எனவே அவர்களுக்கு ஹிந்துக்களைவிட அதிகப்படியான ஸ்தானங்கள் வகுப்புத் தீர்ப்புப்படி அளிக்கப்பட்டிருக்கின்றன. அதை வங்க ஹிந்துக்கள் எதிர்க்கிறார்கள். அந்த எதிர்ப்பை மறைக்க காங்கிரஸ்காரர் சூழ்ச்சி செய்தாலும் வங்க ஹிந்துக்களின் அதிருப்தி இருந்து கொண்டே இருக்கிறது. தேசீய முஸ்லீம்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டு வகுப்புத் தீர்ப்பை ஆதரிக்கவோ எதிர்க்கவோ செய்வதில்லை யென்று காங்கிரஸ் முடிவு செய்திருந்தாலும் ஹிந்து மகாசபையாரும் வங்க ஹிந்துக்களும் காங்கிரசின் இந்தப் பேடி நிலைமையை ஆட்சேபித்துக் கொண்டே இருக்கிறார்கள். வகுப்புத் தீர்ப்பு விஷயம் அவ்வளவு சுளுவாக மழுப்பக் கூடியதல்ல வென்றும், காங்கிரஸ்காரரின் நடுநிலைமைப் போக்கு கண்டிக்கத்தக்க தென்றும், வகுப்புத் தீர்ப்புக்குச் சரியான முடிவு கண்டாலொழிய பொதுவாக ஹிந்து இந்தியாவும், விசேஷமாக வங்காள ஹிந்துக்களும் காங்கிரசை ஆதரிக்கப்போவதில்லை யென்றும் சமீபத்தில் பாபு சுபாஷ் சந்திரபோஸ் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

கல்கத்தா நகரசபை ஹிந்து மெம்பர்கள் எல்லாம் காங்கிரஸ் வாலாக்களே. முஸ்லீம்கள் அரசியல் சுதந்திரங்களுக்கு முட்டுக்கட்டை போடும் தோரணையிலேயே அவர்கள் காரியங்கள் நடத்தி வருகிறார்கள். தற்காலம் கல்கத்தா நகரசபை முன் முஸ்லீம்கள் கொண்டு வந்திருக்கும் கோரிக்கை அவ்வளவு அமிதமானதல்ல. கார்ப்பொரேஷன் உத்தியோகங்களில் 100-க்கு 25 விகிதம் முஸ்லீம்களுக்கு அளிக்க வேண்டுமென்பதே அவர்களது கோரிக்கை. ஒரு மெஜாரட்டி சமூகத்தாருக்கு இதைவிட அதிகப்படியான ஒரு விகிதத்தைக் கோர சட்டப்படி உரிமை இருந்தும் 100-க்கு 25 விகிதம் கோரும் ஒரு தீர்மானத்தை கல்கத்தா நகர சபை ஹிந்து மெம்பர்கள் ஆதரிக்கவில்லை என்றால் இதைவிடப் பெரிய கொடுமை வேறுண்டா?

காங்கிரஸ்காரர் ஸ்தல ஸ்தாபனங்களில் நுழையத் தொடங்கியதும் ஸ்தல ஸ்தாபன நிருவாகம் ஊழலாகத் தொடங்கிவிட்டது. அரசியல் காரணங்களை மனதில் வைத்துக் கொண்டு சாமானிய விஷயங்களிலும் கலாட்டா செய்வதே அவர்கள் வாடிக்கையாகி விட்டது.

கல்கத்தா நகர சபையில் ஏற்பட்டிருக்கும் மானங்கெட்ட நிலைமை தென்னாட்டு ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் ஏற்பட்டுவிடுமோ என்று பலர் அஞ்சுகின்றனர். காங்கிரஸ்காரர்களுக்கு சுதந்திரத்துக்கும், கலாட்டாவுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. நிதான புத்தியும் கிடையாது. கூச்சலும்



RangaRakes tamilnavarasam.com

குழப்பமுமே சுதந்தரத்துக்கு அழகென்று அவர்கள் தப்பாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். தேசீயக் கொடி ஏற்றுவது, தலைவர்களுக்கு உபசாரப் பத்திரமளிப்பது, கதர் வாங்குவது முதலிய திருவிளையாடல்களே காங்கிரஸ் பார்வையில் பெரிய தேச சேவையாகத் தோன்றுகின்றன. மக்களது போக்குவரத்து சாதனங்கள், சுகாதார வசதிகள், கல்வி முறை முதலியவற்றை விருத்தி செய்ய வேண்டிய ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் தேசீயக் கொடியாகிய திருக்கூத்துகளுக்கும் என்ன சம்பந்தம் என்பதை குறுகிய நோக்குடைய காங்கிரஸ் வாலாக்கள் அறிவதில்லை. எனவே காங்கிரஸ்காரர் ஆதிக்கம் பெற்றால் தென்னாட்டு ஸ்தல ஸ்தாபனங்களும் குட்டிச் சுவராவது உறுதி.

ஆனால் இதுவரையுள்ள ஸ்தல ஸ்தாபன தேர்தல்களின் முடிவுகளை உற்று நோக்கினால் நம்மவர்கள் அவ்வளவாக அஞ்சத் தேவையில்லை என்றே தோற்றுகிறது. ஏனெனில் காங்கிரஸ் பேரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பலர் அசல் காங்கிரஸ்வாலாக்கள் அல்ல. சட்டமறுப்பு தர்பாரில் ஈடுபட்ட அசல் காங்கிரஸ்வாதிகளே கலாட்டாக்காரர்கள். தென்னாட்டு ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் வெற்றி பெற்றவர்களில் பலர் தேர்தலுக்காக காங்கிரஸ்காரர் ஆனவர்களே. அவர்களில் மிக்காரும் நிதானஸ்தர்களாகையினால் மதிமயங்கி எதுவும் செய்துவிட மாட்டார்கள்.

மேற்கொண்டு நடக்கவிருக்கும் தேர்தல்களிலும் நிதானஸ்தர்களைப் பொறுக்கி எடுத்து ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அனுப்பினால் கல்கத்தா நகர சபைக்கு ஏற்பட்டிருக்கும் அபகீர்த்தி நமது ஸ்தாபனங்களுக்கும் ஏற்படாமல் காப்பாற்றிக் கொள்ளலாம். தென்னாட்டார் இதனை கவனிப்பார்களாக!

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 22.12.1935**



# சபாஷ் பம்பாய்!

பம்பாய் மாகாணம், காங்கிரஸ் உணர்ச்சி மிக்க பிரதேசம். பம்பாய் நகரமும் அப்படியே. உப்புப் போர் பம்பாய் மாகாணத்திலேயே ஆரம்பமாயிற்று. உலகப் பிரசித்திபெற்ற காந்தியாரின் தண்டியாத்திரை தமாஷ் மூலம், பகுத்தறிவற்ற பாமர ஜனங்களுக்கும், கிராம வாசிகளுக்கும் காங்கிரஸ் மீது ஒரு குருட்டு பக்தி ஏற்பட்டது. பாமர மக்களின் குருட்டு பக்தியை காங்கிரஸ் சார்பாக திருப்ப வேண்டுமென்ற அந்தரங்க நோக்கத்துடனேயே காந்தியார் சபர்மதியிலிருந்து தமது சத்தியாக்கிரக கோஷ்டியுடன் தண்டிக்குக் கால்நடையாகப் பிரயாணமானார். பத்திரிகை நிருபர்களும் அவரைப் பின் தொடர்ந்தார்கள். காந்தி கோஷ்டியாருக்கு வழிநெடுகக் கிடைத்த ராஜோபசாரங்களை ஒன்றுக்குப் பத்தாக வர்ணித்து அவர்கள் பத்தி பத்தியாய் பத்திரிகைகளில் எழுதினார்கள். ஒரு குக்கிராமத்திலே ஒரு நாவித மாது காந்தியாருக்கு க்ஷௌரம் செய்த அதிசயத்தைக்கூட பத்திரிகை நிருபர்கள் விட்டுவிடவில்லை. க்ஷௌரக் கூலி கொடுக்க வேண்டிய காந்தியார் அந்த சாதுப் பெண்ணின் காதணியைக் காணிக்கையாகப் பெற்றதையுங்கூட பத்திரிகை நிருபர்கள் மறவாமல் பத்திரிகைகளுக்கு எழுதியனுப்பினார்கள். இத்தகைய விளம்பரங்களினால் பம்பாய் மாகாணத்துக்கு காந்தி பைத்தியமும், காங்கிரஸ் பித்தும் பிடித்தது.

கடைசியாக உப்புப்போர் ஆரம்பமான போது ஆயிரக்கணக் கானவர்கள் தடியடிப் பட்டார்கள்; சிறை புகுந்தார்கள். அக்காலத்திலே பம்பாய் நகரம் பட்ட பாட்டைச் சொல்லி முடியாது. உப்புப் போருடன் விதம் விதமான மறியல்களும் பம்பாயில் நடைபெறத் தொடங்கின. தேச சேவிகைகளும் மறியலில் கலந்துகொண்டதினால் மறியல்களுக்கு ஒரு தனிப் பகட்டும் ஏற்பட்டது. தொண்டர்களும் சேவிகைகளும் சிறைபுகச் சிறைபுக அவர்களது ஸ்தாபனங்களுக்கு மேற்கொண்டும் பலர் முன் வந்து கொண்டிருந்தனர். உப்புப் போரிலும், மறியலிலும் பம்பாய் நகரமே சாம்பியன் மெடல் பெறத்தகுந்ததென்றும் கூறப்பட்டது. அத்தகைய காங்கிரஸ் பக்தி - காந்திப் பித்து மிக்க பம்பாய் நகரத்தின் இன்றைய நிலைமை என்ன? அந்தோ! சொன்னால் வெட்கக்கேடு. டிசம்பர் 28-ந் தேதி நடக்கப் போகும் காங்கிரஸ் ஜுப்பிலியைப் பாராட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று காங்கிரஸ் சமதர்மிகளான தோழர்கள் எம்.ஆர்.மாசானியும், மேஹர் அலியும் கொண்டுவந்த தீர்மானம்



RangaRakes tamilnavarasam.com

பெரும்பான்மையான வோட்டுகளினால் பம்பாய் நகர சபையில் தோற்கடிக்கப்பட்டுவிட்டன. அவர்கள் கொண்டு வந்த தீர்மானங்களோ மிக மிக மிதமானவை.காசு பணம் செலவில்லாதவை. தேசீயக் கொடி ஏற்ற வேண்டுமென்றோ, தீபாலங்காரங்கள் செய்ய வேண்டுமென்றோ, அன்னதானம் செய்ய வேண்டுமென்றோ, ஊர்வலம் நடத்த வேண்டுமென்றோ அவர்கள் வற்புறுத்தவில்லை. காங்கிரஸ் ஆரம்பமாகி 50 ஆண்டு பூர்த்தியானதற்குத் தமது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும், தேச மகாஜனங்களுக்கு தேசீய உணர்ச்சியையும், தியாக உணர்ச்சியையும் எழுப்பிய காங்கிரசைப் பாராட்டுவதாகவும் மட்டுமே அத் தீர்மானங்கள் கூறின. இந்த சாரமற்ற தீர்மானங்களையும்கூட, காங்கிரசுக்காகப் பலமுறை சிறைச் சென்ற தோழர் நாரிமனை மேயராகக் கொண்ட பம்பாய் நகரசபை கவிழ்த்துவிட்டதென்றால் பம்பாய் நகரத்தில் காங்கிரஸ் பித்து தெளிந்து வருகிறதென்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமா! காந்தீயம் தாண்டவ மாடும் ஆமதாபாத் ஜில்லா போர்டும் ஜுபிலி விழாக் கொண்டாடத் தேவையில்லையென முடிவு செய்திருக்கிறது. இந்நிலையில், 500 ரூபாய் செலவு செய்து காங்கிரஸ் பொன் விழாக் கொண்டாட வேண்டுமென்று சென்னை நகரசபை தீர்மானித்திருப்பது வெகு வேடிக்கையாகவே இருக்கிறது. முதலில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது நகரசபை அதற்கு அனுமதியளிக்கவே இல்லை. இரண்டாம் முறை, மிதித்த காலுக்கு முத்தம் கொடுக்கும் ஐரோப்பிய மெம்பர்கள் நடுநிலைமை வகித்ததினாலும், ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்கள் பலர் அக் கூட்டத்துக்கு விஜயம் செய்யா திருந்ததினாலும் பொன் விழாக் கொண்டாட்டத் தீர்மானம் நிறைவேறிற்று. மற்றும் வெளி ஜில்லாக்களிலுள்ள பல நகரசபைகளும், ஜில்லா போர்டுகளும் பொன்விழாக் கொண்டாடத் தீர்மானித்திருக்கின்றன. பொன்விழாக் கொண்டாடத் தீர்மானத்தை தூத்துக்குடி நகரசபைத் தலைவர் நிராகரித்து விட்டாலும், மீண்டும் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்ற முயற்சி நடைபெற்று வருகிறதாம். முடிவு என்னாகுமோ தெரியவில்லை. சென்னை நகரசபைத் தீர்மானம் சர்க்காருக்குச் சென்றிருப்பதாயும், அது விஷயமாக என்ன செய்வதென்று சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாயும் சொல்லப்படுகிறது. நாட்டிலுள்ள எத்தனையோ அரசியல் கட்சிகளுள் காங்கிரஸ் கட்சியும் ஒன்று. அது பழமையான கட்சியாக இருக்கலாம்; வலிமை பொருந்திய கட்சியாக இருக்கலாம். இருந்தாலும் இந்தியாவிலுள்ள எத்தனையோ கட்சிகளுள் அதுவும் ஒன்றென்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே அத்தகைய ஒரு அரசியல் கட்சியின் பொன்விழா கொண்டாட்டத்துக்காக ஸ்தல ஸ்தாபனங்கள் பொதுப் பணத்தைச் செலவு செய்யலாமா என்னும் விஷயம் முக்கியமாய்ச் சிந்திக்கத் தக்கது. மேலும் ''இந்தியாவைப் போன்ற வறுமை மிகுந்த நாட்டில், இவ்வளவு பொருளாதார மந்தம் தாண்டவமாடும் சமயத்தில் ஜனங்கள் தீபாலங்காரம் என்ற வெளிப் பகட்டுக் காரியத்தில் பணத்தை விரயம் செய்யக் கூடாது''



என்று பலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, பொன் விழாவின்போது தீபாலங்காரம் வேண்டாமென்று காங்கிரஸ் தலைவர் தோழர் ராஜேந்திரபிரசாதும் கட்டளையிட்டிருக்கிறார். அம்மட்டோ! அபிப்பிராய பேதத்துக்கு இடமில்லாத முறையில் விழாக் கொண்டாட வேண்டுமென்றும் காங்கிரஸ் தலைவர் வற்புறுத்தியிருக்கிறார். காங்கிரஸ் பக்தர்களோ, ஸ்தல ஸ்தாபனக் கட்டிடங்களில் தேசீயக் கொடியைப் பறக்கவிட வேண்டுமென்கிறார்கள். காங்கிரஸ்காரரின் மூவர்ணக் கொடி எவ்வாறு தேசீயக் கொடியாகும். எல்லா அரசியல் கட்சியாரும் ஒப்புக் கொண்ட கொடியைத்தான் ''தேசீயக்கொடி'' என்று கூறலாம். காங்கிரஸ்காரரின் ராட்டைக்கொடி தேசீயக் கொடியாகா தென்றும், தேசீயக் கொடியை நிர்ணயம் செய்யும் உரிமை வட்டமேஜை மகாநாடு போன்ற சர்வகட்சி மகாநாட்டுக்கே உண்டென்றும் தேசீய தினசரியான ''தமிழ்நாடு'' வெகு காலத்துக்கு முன்னேயே கூறியிருக்கிறது. விவாதத்துக்கு இடமாகவிருக்கும்போது தேசீயக் கொடியை ஸ்தல ஸ்தாபனக் கட்டிடங்களில் பறக்கவிடுவது காங்கிரஸ் தலைவர் கட்டளைக்கு முரணாகாதா? ''இந்தியாவைப் போன்ற வறுமை நாட்டில் இவ்வளவு பொருளாதார மந்தம் தாண்டவமாடும் இக்காலத்து'' சென்னை நகரசபை, பொன்விழாவுக்காக 500 ரூபா செலவு செய்வது நீதியாகுமா? இதர ஸ்தல ஸ்தாபனங்கள் பணச்செலவு செய்யலாமா? சொந்தப் பணத்திலிருந்தோ, காங்கிரஸ் நிதியிலிருந்தோ, விழுங்கி யேப்பமிட்டது போக மீதமா யிருக்கும் திலகர் சுயராஜ்ய நிதியிலிருந்தோ, பொன் விழாக் கொண்டாட காங்கிரஸ்காரர் செலவு செய்வதை நாம் ஆட்சேபிக்கவில்லை. அது அவர்கள் சொந்த விஷயம். பொதுப் பணத்திலிருந்துசெலவு செய்வதையே நாம் ஆட்சேபிக்கிறோம்.

கொடியேற்று விஷயமாக சர்க்கார் பிறப்பித்திருக்கும் உத்தரவை அரசியல் ஞானமும், நேர்மையும் உடையவர்கள் எல்லாம் ஆதரிப்பார்கள் என்பது நிச்சயம். 1932-ம் வருஷத்தில் தேசீயக் கொடி சம்பந்தமாக சர்க்கார் பிறப்பித்துள்ள தடை யுத்தரவை காங்கிரஸ் பொன்விழா சமயத்து ஞாபகத்தில் வைக்கும்படியும், அமல் நடத்தும்படியும் சென்னை சர்க்கார் ஸ்தல ஸ்தாபனங்களுக்கெல்லாம் தெரிவித்திருப்பதாக அறிகின்றோம். எனவே தேசீயக் கொடித் தொல்லை ஒழிந்துவிடுமென்று நம்பலாம். பொன் விழாவுக்கு ஸ்தல ஸ்தாபன பணத்தைச் செலவு செய்வது சம்பந்தமாக சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை தேசமக்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

குடி அரசு - கட்டுரை - 22.12.1935



RangaRakes tamilnavarasam.com

# தேவகோட்டை வக்கீல் சங்கம்

## பார்ப்பனீயத் தாண்டவம்

## ஒரு விளக்கம்

தேவகோட்டை 12-12-35

தோழர் எஸ். லக்ஷ்மீரதன் பாரதி அவர்கள் எழுதுவதாவது:-

சென்ற வாரத்தில் ''குடி அரசு'' பத்திரிகையில் ''தேவகோட்டையில் பார்ப்பனீயத் தாண்டவம்'' என்ற தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட விவரங்களைப் படித்தேன். அதில் கண்ட விவரங்கள் சில சரியானதாயில்லாத படியால் பின்வரும் குறிப்பை அனுப்புகிறேன். அதைப் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிராமண வக்கீல் அங்கத்தினர் பலர் பிராமண அங்கத்தினர்களுக்கு மட்டும் தனியாக இரண்டு தண்ணீர்ப் பானைகள் வக்கீல் சங்கத்தில் வைக்கவேண்டுமென்று சங்கத்திற்கு எழுதினார்கள். அதன் பேரில் சங்கத்தின் நிர்வாகக் கமிட்டியானது, இதைப் பொதுக் கூட்டத்திலோ நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்திலோ ஆலோசனை செய்யாமல் சுற்றறிக்கை மூலமாகப் பின் வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது. ''சிற்றுண்டி சாப்பிடும் இடமும் அதில் வைத்திருக்கும் தண்ணீர் பானைகளும் பிராமண அங்கத்தினர்களுக்குமட்டும் தனியான உபயோகத்திற்கு அமைத்திருக்கிறது.''

இத்தீர்மானத்தை சங்கத்தின் விளம்பரப் பலகையிலும் பிரசுரித்தார்கள். அத்தீர்மானத்தின்கீழ் காரியதரிசி, இதரஅங்கத்தினருடைய உபயோகத்திற்காக டிபன் ஷெட்டிற்கு வெளியே தண்ணீர்ப்பானை வைத்திருப்பதாக எழுதியிருந்தார். இந்த முறையைக் கமிட்டியின் அங்கத்தினரில் ஒருவரான அட்வகேட் தோழர் எ. ரெங்கசாமி ஐயங்காரவர்கள் ஆட்சேபணை செய்தார்.

இந்த விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டதைப் பார்த்த மூன்று பிராமணரல்லாத வக்கீல்களும் இத்தீர்மானம் நியாயமற்றதென்றும், அறிவுக்குப் பொருத்தமற்றதென்றும், சட்டத்திற்கும் அதிகார வரம்பிற்கும் மீறியதென்றும் அதனால் தாங்கள் அதை மதிக்கப் போவதில்லையென்றும் காரியதரிசிக்கு அறிக்கை யிட்டார்கள்.



அதன்பின்னால் அட்வகேட் தோழர் எ. ரங்கசாமி ஐயங்காரவர்கள் தன்னுடைய கமிட்டி மெம்பர் ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்து விட்டார்கள்.

இந்த நிலைமையில் இருக்கிறது இந்தப் பிரச்சினை. இன்னும் வக்கீல் சங்கக் கூட்டத்திலும் ஒரு முடிவு செய்யப்படவில்லை. ஆனால் 83 அங்கத்தினர்களில் 80 பேர் பிராமணர்களாக இருப்பதினாலும் இவர்களிற் பலர் ஏற்கனவே தங்கள் உபயோகத்திற்காக தனிப் பானைகள் வைக்க வேண்டுமென்று எழுத்து மூலமாகக் கேட்டிருப்பதினாலும் இந்த விஷயம் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் வந்தாலும் நிச்சயமாக இதே விதமாகத்தான் தீர்மானிக்கப்படுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தாலும் எல்லோரும் படித்தவர்களானதாலும் அறிவாளிகள் ஆனபடியாலும் பொதுச்சங்கத்தில் இவ்வித அறிவற்றதும் வகுப்புத் துவேஷத் தன்மையுடையதுமான தீர்மானத்தை நிறைவேற்றாமல் இருப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படலாம்.

இச்சங்கத்தின் அங்கத்தினர் பெரிதும் காங்கிரஸ்காரர் எனக் கண்டிருப்பது சரியல்ல. காங்கிரஸ்காரர் வெகு சிலரே ஆவர். சிலர் பெரும் சனாதன கட்சியினர். பெரும்பாலோர் ஒரு கட்சியினையும் சேராதவர்கள். சென்ற இந்தியச் சட்டசபைத் தேர்தலுக்கு முன் தோழர் ராஜகோபாலாச்சாரியார் இச்சங்கத்துக்கு வந்து அங்கத்தினர்களைக் கண்டு பேச முயன்றபோது எதிர்ப்பேர்ப் பட்டதினால் அவருக்கு வர முடியாமல் போய்விட்டதென்றால் அதிலிருந்து இவர்கள் எவ்வளவு தூரம் காங்கிரஸ்காரர்கள் என்பதை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

பாரதியார் காங்கிரஸ் தீண்டாமை விலக்குக் கமிட்டியின் தலைவர் என்ற கண்டிருப்பதும் சரியில்லை. ஹரிஜன சேவா சங்கம் காங்கிரஸ்காரர்களுக்கு எவ்விதத்திலும் சொந்தமானதல்ல. பாரதியார் அதற்கு காரியதரிசியாக இருந்தாரேயொழிய தலைவராக இருந்தது கிடையாது. மற்ற விவரங்கள் எழுதியவருடைய அபிப்பிராயங்களாகும்.

குடி அரசுப் பத்திரிகையில் எப்பொழுதும் சரியான விவரங்களே வரவேண்டுமென்பது என்னுடைய அவா. அதனால் இதனை அவசியம் பிரசுரிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

**பத்திராதிபர் குறிப்பு:–**

தோழர் பாரதியாரின் விளக்கக் கடிதத்துக்கு வந்தனம். ''ஹரிஜன'' சேவா சங்க காரியதரிசியான பாரதியாரைத் தலைவர் எனக் குறிப்பிட்ட தவறை ஒப்புக்கொள்கிறோம்.

இந்தத் தவறினால் நமதபிப்பிராயத்துக்கு எள்ளளவேனும் பாதகமேற்படவில்லை யென்பதை தோழர் உணரவேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

உத்தியோகத் தோரணையில் ''ஹரிஜன'' சேவா சங்கத்துக்கும் காங்கிரசுக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லாதிருக்கலாம்.

ஆனால் கிரியாம்சையில் ''ஹரிஜன'' சேவா சங்கம் காங்கிரஸ்காரரின் குடும்பச் சொத்து என்று தானே மதிக்கப்பட்டு வருகிறது.

வக்கீல் சங்க பார்ப்பன அங்கத்தினரில் பெரும்பாலார் காங்கிரஸ் அங்கத்தினர் அல்லாதவராயிருப்பதினால் நமது அபிப்பிராயத்துக்கு எத்தகைய குந்தகமும் ஏற்பட்டுவிடாது.

பார்ப்பனர்களாய் பிறந்தவர்கள் எல்லாம் ஜாதித் திமிர் கொண்டவர்கள் என்பதே நமது திடமான அபிப்பிராயம். பிரஸ்தாப தகரார் மூலம் தேவகோட்டை வக்கீல் சங்க நிர்வாக கமிட்டி மெம்பர் பதவியை ராஜினாமாச் செய்த தோழர் எ. ரெங்கசாமி அய்யங்கார் போன்றவர்களைப் புறநடை என்று தான் தள்ளவேண்டும். எனினும் இவ்விஷயத்தில் கண்ணியமாக நடந்துகொண்ட தோழர் ரங்கசாமி அய்யங்காரைப் பாராட்டுகிறோம். வக்கீல் சங்கப் பொதுக் கூட்டத்தில் பிரஸ்தாப விஷயம் ஆலோசனைக்கு வந்து நிர்வாகக் கமிட்டித் தீர்மானம் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டால் தோழர் எ. ரங்கசாமி அய்யங்கார் வக்கீல் சங்கத்திலிருந்தும் விலகிவிடுவார் என்றும் நம்புகிறோம்.

வக்கீல் சங்க நிர்வாக கமிட்டியின் தீர்மானம் ''நியாயமற்றதென்றும் அறிவிற்குப் பொருத்தமற்றதென்றும் சட்டதிற்கும் அதிகார வரம்பிற்கும் மீறியதென்றும் அதனால் அதைத் தாங்கள் மதிக்கப்போகிறதில்லை யென்றும் காரியதரிசிக்கு அறிக்கையிட்ட மூன்று பிராமணரல்லாத வக்கீல்களும் அத் தீர்மானத்தை இதுவரை மீறவில்லையானால் இனியேனும் மீறித் தம் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள முன் வருவார்களாக!

தேவகோட்டை வக்கீல் சங்க அங்கத்தினர் 83 பேரில் 80 பேர் பிராமணர்கள் என்றும் அவர்களில் பலர் தங்கள் உபயோகத்திற்காக தனிப் பானைகள் வைக்க வேண்டுமென்று எழுத்து மூலம் ஏற்கனவே கேட்டிருப்பதாயும் இந்த விஷயம் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் வந்தாலும் நிச்சயமாக இதே விதமாகத்தான் தீர்மானிக்கப்படும் என்று எதிர்பார்க்கும் தோழர் பாரதியார் அதே மூச்சில் எல்லோரும் படித்தவர்களானதினாலும் அறிவாளிகள் ஆனபடியாலும் பொதுச்சங்கத்தில் இவ்வித அறிவற்றதும் வகுப்புத் துவேஷத் தன்மை யுடையதுமான தீர்மானத்தை நிறைவேற்றாமல் இருப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படலாம் என்று கூறுவது தான் நமக்கும் பெரிய வியப்பாக விருக்கிறது.

தோழர் பாரதியார் எதிர்பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்படவேண்டா மென்பது நமது நோக்கமல்ல. பொதுக்கூட்டத்தில் பிரஸ்தாபத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு உறுதி செய்யப்பட்ட பிறகாவது தோழர் பாரதியாரின் மயக்கம் தெளியுமானால் அதுவே நமக்குப் போதுமானது.

குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 22.12.1935



# காங்கிரசுக்கு எதிர்ப்பு

## அகில இந்திய முயற்சி

## பிரபலஸ்தர்கள் ஆதரவு

வரப்போகும் சீர்திருத்தத்தைக் கவிழ்ப்போம்; பிரதிநிதி சபை அமைப்போம்; எதிர்கால அரசியலை வகுப்போம் என்று அசம்பிளித் தேர்தலுக்கு முன் கூச்சல் போட்டு பொதுஜனங்களை ஏமாற்றி ஓட்டுப்பறித்த காங்கிரஸ் வாலாக்கள் மந்திரி பதவிகளைக் கைப்பற்ற முயர்ச்சி செய்து வருகிறார்கள். இதிலும் காங்கிரஸ்காரர்களுக்குள் ஒற்றுமையான அபிப்பிராயம் இல்லை. சில மாகாணங்கள் ஆதரிக்கின்றன. காங்கிரஸ் நிர்வாகிகளோ திட்டமாக எதுவும் கூறவில்லை. பதவி ஏற்கும் பிரச்சினையை லக்ஷ்மணபுரி காங்கிரசில் முடிவுசெய்து கொள்ளலாமென்று ஒத்திப்போட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் முடிவை எதிர்பாராமலே தேச நலத்துக்கான முயற்சிகள் செய்ய பொறுப்புடைய தேசத் தலைவர்களுக்கு உரிமையுண்டு.

''காங்கிரஸே இந்தியா, இந்தியாவே காங்கிரஸ்'' என்று காங்கிரஸ் வாலாக்கள் கூறிக்கொண்டாலும் பொதுஜனங்கள் அதை ஆதரிக்கவில்லை. வரப்போகும் சீர்திருத்தம் எவ்வளவு குறைபாடுகள் உடையதாயிருந்தாலும் அதை ஒப்புக்கொண்டு அதனால் கிடைக்கக்கூடிய சாத்தியமான நன்மைகள் எல்லாம் தேச மக்களுக்குக் கிடைக்கும்படி கடனாற்றுவதே விவேகிகள் கடமை. அகில இந்திய மதிப்புப் பெற்ற பொறுப்புடைய தலைவர்கள் எல்லாம் இவ்வாறே அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். வரப்போகும் சீர்திருத்தத்தை ஏற்று நடத்தும் நோக்கத்துடன் ஸ்வராஜ்யக் கட்சியாரும், தேசீயக் கட்சியாரும் ஆந்திரம், வங்காளம், பீகார், பம்பாய் மத்திய மாகாணம், மகாராஷ்டிரம் முதலிய பிரதேசங்களில் தனித்தனி ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி தத்தம் கட்சிகளுக்கு ஆதரவு தேடப் பெரும் முயற்சி செய்து வருகிறார்கள். அரசியல் அநுபவம் வாய்ந்த பல பிரபலஸ்தர்கள் இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

எல்லா மாகாணங்களிலுமுள்ள ஸ்வராஜ்யக் கட்சியாரையும், தேசீயக் கட்சியாரையும் வரவழைத்து புனாவில் ஒரு மகாநாடு கூட்டி ஒரு அகில இந்தியக்கட்சி ஏற்படுத்த ஆந்திர மாகாண ஸ்வராஜ்யக் கட்சிக் காரியதரிசி தோழர் ஜி.வி. சுப்பராவ் முயற்சி செய்வதாயும் தெரிகிறது. இந்தியா முழுதும் செல்வாக்கும், அரசியல் அநுபவமும் உடையவர்கள்



RangaRakes tamilnavarasam.com

எல்லாம் இம் முயற்சியில் கலந்துகொள்வார்களாகையால் வரப்போகும் சீர்திருத்தச் சட்டசபைகளில் காங்கிரஸ்காரர் ஆதிக்கம் பெறவே முடியாது. ஸ்தாபனமாகப் போகும் இந்த அகில இந்தியக் கட்சிக் கொள்கை களுக்கும், ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைகளுக்கும் பாராட்டத்தக்க வேற்றுமை யில்லை. எல்லாக் கட்சிகளும் சட்ட வரம்புக்குட்பட்டவைகளே. தற்கால ஜஸ்டிஸ் கட்சி வேலைத் திட்டம் ஏனைய தேசீயக் கட்சி வேலைத் திட்டங் களுக்குக் குறைந்ததல்ல.

சட்ட வரம்புக்குட்பட்ட கட்சிகள் எல்லாம் ஊக்கமாக உழைத்தால் காங்கிரஸ் தலை தூக்கவே முடியாது. எனவே காங்கிரஸ்காரர் மிரட்டல்கள் வீண் மிரட்டல்கள் என்பதை தேச மகாஜனங்கள் உணர்வார்களாக!

குடி அரசு - கட்டுரை - 22.12.1935



# கொள்ளைக்காரப் பார்ப்பனர்

## ஏழை ஏழையென்று ஏமாற்றும் வித்தை

## நம்மவர்கள் கண்மூடி தர்மம்

**- உண்மை விளம்பி**

ஒருவன் செய்த தப்பிதத்திற்குத் தக்கபடி தண்டனை கொடுப்பது உலக தர்மம். ஆனால் தப்பிதம் செய்தவன் பிறந்த ஜாதிக்குத் தக்கபடி தண்டனை விதிப்பது இந்து தர்மம். மரியாதையும், தனிப்பட்ட நபரின் யோக்கியதையைப் பொறுத்து வருவதில்லை. அவனுடைய ஜாதியைப் பொறுத்தே நமது நாட்டில் மனிதர்களின் உயர்வும், மரியாதையும் கவனிக்கப்படுகின்றன. ஒரு குலத்துக்கொரு நீதி வழங்கிய மனுநீதி இன்று இல்லை. இங்கிலீஷ்கார ராஜ்யத்தில் கிரிமினல் குற்றங்களைப் பொறுத்த வரையில் சட்டம் எல்லா ஜாதிகளையும் சமமாகப் பாவித்து அமுல் செய்கிறது. ஆயினும் சமூக வாழ்வில் ஜாதி பற்றிய சலுகைகளும், கொடுமை களும் கொஞ்சமும் குறைந்தபாடில்லை.

சட்ட மூலம் அரசாங்கத்தினிடம் பெற முடியாமற் போன விசேஷ உரிமைகளை, பொது ஜனங்களின் அனுதாப மூலமாகப் பெற்று அனுபவித்து வருகின்றனர் பார்ப்பனர். பாமர ஜனங்களை ஏமாற்றுவதற்கு அவர்கள் கையாளும் முறைகள் பல. அவற்றுள் ஒன்று ''பிராமணனும், பசுவும் ஒன்று. அவர்களால் நன்மையேயன்றித் தீமையில்லை. பிராமணன் ஏழை! அவனை ஆதரிப்பது மற்றவர் கடமை'' என்று சொல்லிக் கொண்டு, தங்கள் சமூகத்தின் ஏழ்மையைப் பற்றியும், ஆதரவற்ற நிலைமையைப் பற்றியும் சதா விளம்பரப்படுத்தி மற்றவர்களை நம்பும்படி செய்கின்றனர். ''பாவம்! ஏழை பிராமணன்! பிழைச்சிட்டுப் போறான்'' என்று நம்முடைய ஜமீன்தார்களும், பிரபுக்களும், முதலாளிகளும், அதிகாரிகளும் பிராமணருக்கு அனுதாபங் காட்டுவதில் போட்டி போட்டு வருகின்றனர். இந்த அனுதாபமும், ஆதரவும் எவ்வளவு நியாயமற்றவை என்று ஒரு நிமிஷம் யோசித்துப் பார்த்தால்கூட விளங்காமல் போகாது.

முதலாவது பிராமணன், ஏழை என்பது ஒரு முட்டாள்தனமான நம்பிக்கை. இரண்டாவது பிராமணன் என்கின்ற காரணத்திற்காக ஒருவன் பிழைச்சுட்டுப் போறான் என்பது அர்த்தமற்ற இரக்கம்.



RangaRakes tamilnavarasam.com

## பிராமணன் ஏழையா?

பிராமணர் மற்ற சமூகத்தினரைவிட மிகவும் எளிய நிலையில் இருப்பவர்கள் என்று சாதாரணமாய் எல்லோரும் நம்பி வருகின்றனர். ஆனால் உண்மையில் அவ்வாறில்லை. இந்தியாவின் தற்காலப் பொருளாதார நிலையில் மற்ற எல்லாச் சமூகங்களையும்விட உயர்ந்த அந்தஸ்தில் வாழ்ந்து வரும் சமூகம் பார்ப்பன சமூகம் என்பது மறுக்க முடியாத உண்மை.

எங்கேயோ ஒரு நாயக்கர் ஒரு ஜமீன்தாராகவோ, சிற்றரசனாகவோ இருந்தால் அவர் சமூகத்தவர்களில் 100க்கு 99 பெயர் உண்ணவும், உடுக்கவும் வகையின்றி மிகவும் தாழ்ந்த நிலையில் தான் இருக்கிறார்கள். எங்கேயோ ஒரு கவுண்டர் பெரிய பண்ணையக்காரராக இருந்தால் அவரைச் சேர்ந்த லட்சக்கணக்கான ஜனங்கள் பண்ணை யடிமைகளாகவும், கூலிகளாகவும் தான் இருக்கின்றனர். எங்கேயோ ஒரு செட்டியார் லக்ஷப் பிரபுவாக இருந்தால் அவர் சமூகத்தவர்களில் முக்காலே மூணு வீசம் பேர் நித்திய தரித்திரத்தில் நீந்திக் கொண்டிருப்பவர்கள் தான். எங்கேயோ ஒரு முதலியார் மில் முதலாளியாக இருந்தால் அவர் சமூகத்தவர்களில் பெரும்பாலானவர்கள் கந்தையைக் கட்டிக் காய்ச்சிக் குடிப்பவர்களாகத்தான் இருக்கிறார்கள். இப்படியே மற்ற பார்ப்பனரல்லாத சமூகங்களின் நிலைமையும் இருந்து வருகிறது. மகம்மதியர் நிலை இன்னும் மோசம். எப்பவோ ஒரு காலத்தில் அவர்கள் நவாப்புகளாக இருந்தார்கள் என்ற சரித்திர நினைவைத் தவிர தற்காலம் சுக வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய சௌகரியங்கள் அவர்களில் பெரும்பாலார்க்கு இல்லை. ஆதி திராவிடர் நிலைமையோ சொல்ல வேண்டியதில்லை. ''யாக்கை அகத்ததோ புறத்ததோ'' என்ற ஆராய்ச்சியைத் தினந் தினம் செய்து வருகின்றது அச்சமூகம்.

இந்தச் சமூகங்களின் மத்தியில், இந்திய சமுதாயத்தின் துக்ககரமான, பயங்கரமான தரித்திர நிலையில், கூடுமானவரை தங்களுக்கு வேண்டிய எல்லா சௌகரியங்களையும் கஷ்டமில்லாமல் பெற்றுக் கவலையற்றுச் **சுகஜீவனம் செய்து வருகிற சமூகம் ஒன்று இருக்கிறதென்றால் அது பார்ப்பன சமூகமேயாகும்.** இந்த உண்மையை ஒப்புக் கொள்ளாதவர் பலர் இருக்கலாம். அவர்கள் தான் ''பாவம்! ஏழைப் பிராமணன்! போறான் போ'' என்பவர்கள். தினசரி வாழ்க்கையில் பார்ப்பனர் நிலைமையையும், மற்றவர் நிலைமையையும் விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து பார்த்தால் நாம் கூறும் முடிவை மறுக்க எவரும் துணியார்.

## தற்கால சமூக வாழ்க்கை

ஒரு சமூகத்தின் சிறப்பும், செல்வமும், அச்சமூகத்தவரின் கல்வி நிலையைப் பொறுத்திருக்கின்றன. பிராமணரில் 100க்கு 95 பெயர் எழுதப் படிக்கத் தெரிந்திருக்கிறார்கள். மற்றவர்களில் 100க்கு 5 அல்லது 6 பெயர்



கூடப் படித்தவர் என்று சொல்லுவதற்கில்லை. இந்த ஒரு விஷயத்திலிருந்தே பிராமணர் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கின்றனர் என்பது விளங்கும். வேறு உதாரணங்கள் தேவையில்லையென்றாலும், சாதாரண ஜனங்களும் நன்றாக உணரும் பொருட்டு, எல்லோர்க்கும் கட்புலனாகக் கூடிய வேறு சில உதாரணங்களையும், நம்மவர் தினசரி வாழ்க்கையிலிருந்து எடுத்துக் காட்ட விரும்புகின்றோம்.

(1) பெரிய பட்டணங்களில் சிங்காரச் சோலைகளுக்கிடையில் அலங்கார மாளிகைகள் கட்டிக் கொண்டும், மோட்டார் முதலிய வாகனாதிகள் வைத்துக் கொண்டும், ஆடம்பர வாழ்க்கை நடத்துபவர்களில் பார்ப்பனர் எத்தனை பேர் என்றும், மற்றவர் எத்தனை பேர் என்றும் கவனித்திருந்தால் பாதிக்கு மேல் பார்ப்பனர்தான் என்று தெரியும். மொத்த ஜனத் தொகையில் பார்ப்பனர் எண்ணிக்கையையும், பங்களா வாழ்க்கை நடத்துபவர்களில் இவர்கள் எண்ணிக்கையையும் கவனிக்கும்போது பணக்காரர்கள் யார்? என்பது விளங்காமல் போகாது. மிகவும் ஏழையென்று சொல்லிக் கொள்ளுகிற பார்ப்பான்கூட மாதம் 3 அல்லது 4 ரூபாய் குடிக்கூலி கொடுத்தாவது, வெயில், மழை, பனி முதலியவற்றின் கொடுமைகளுக்கு உட்படாமல் ஏதோ வீடு என்பதில் குடியிருக்கிறான். ஆனால் பிராமணரல்லாதாரில், வேலியொதுக்கிலும், மரத்தடியிலும், கீற்றுச் சாலைகளிலும் தங்கி, வெய்யிலில் காய்ந்து, மழையில் நனைந்து பனியில் உலர்ந்து பரிதவிக்கும் குடும்பங்கள் எத்தனை ஆயிரம்?

(2) பார்ப்பனரில் பெண்கள் எவரும் வீட்டைவிட்டு வெளியில் போக வேண்டிய அவசியம் இல்லை. குடும்பங்களைத் தவிர கூலி வேலைக்குப் போகிறவர் கிடையாது. கிராமத்தில் வசிப்பவர்கூட விறகு பொறுக்கவோ, கீரை பறிக்கவோ வெய்யிலில் வெளியே போகிற வழக்கமில்லை. ஆனால் பிராமணரல்லாதாரில், குடும்ப காரியங்களையும் பார்த்துக் கொண்டு தினமும் கூலிக்குப் போய் கால் பணம், அரைப் பணம் சம்பாதிக்கவும், வேலி வேலியாய் விறகு பொறுக்கி வரவும், காடுகாடாய்ப் போய்க் கீரை பறித்து வரவும் வேண்டிய நிர்ப்பந்தத்தில் வாழ்க்கை நடத்த வேண்டிய பெண்கள் எத்தனை லக்ஷம்?

(3) காப்பி ஓட்டலில் சம்பளத்துக்கு இருக்கும் பார்ப்பான் வீட்டுப் பெண்கள் கூட சாதாரணமாய்க் கட்டுவது பட்டுப் புடவை. போடுவது நாகரீகப் பாடியுடன் ஜாக்கட்டு. ஒவ்வொருத்தி உடம்பின் மேலும் குறைந்தது 500 ரூபாய் பொறுமான நகைகள். ஆனால் பார்ப்பனரல்லாதவர்களில் (தங்களை அழகுபடுத்தி உடம்பை விற்று வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ள விலை மாதர் தவிர) பட்டுப்புடவை கட்டிப் பாடியும் ஜாக்கட்டும் போடும் பெண்கள் எத்தனை பேர்? தங்கள்



RangaRakes tamilnavarasam.com

மானத்தைக் காப்பாற்றி உடலை மறைக்கவும் போதிய துணியின்றிக் கிழிசலையும் பொத்தலையும் மறைத்து மறைத்துக் கட்டி வெளியில் போகும் துயரப்படுபவர் எத்தனை லக்ஷம்? இடுப்பில் இருப்பதைத் தவிர்த்து வேறு துணியில்லாததால் அழுக்கையே கட்டி அவஸ்தைப் படுபவர் எத்தனை லக்ஷம்? பெண்களுக்கியல்பாகவுள்ள நகைப் பைத்தியத்தைத் திருப்தி செய்து கொள்கிறதற்காகச் செம்பு பித்தளை மோதிரங்களையும், காப்பு கொலுசுகளை மண் வளையல்களையும், கண்ணாடி மணி மாலைகளையும் (எல்லாம் சேர்ந்து ஒரு வெள்ளி ரூபாய் பொறாது) அணிந்து திருப்திபடுகிறவர்கள் எத்தனை கோடி?

(4) யாசகஞ் செய்து ஜீவிக்கிற பார்ப்பான் வீட்டிலும் தினம் இரண்டு வேளை சமைத்துக் காய்கறி பதார்த்தங்களுடன் சாப்பிடுவதும், ஒரு வேளையாவது காப்பி குடிப்பதும் சாதாரணமாய் நடக்கிற காரியங்கள். மற்றவர்கள் 100க்கு எத்தனை பேருக்குத் தினம் காப்பி சாப்பிட முடிகிறது? ஒருவேளை சமைத்து இரண்டு வேளை யுண்டு மிஞ்சியதைத் தண்ணீரில் போட்டு வைத்திருந்து மறுநாள் காலையில் சாப்பிட வேண்டிய நிலையில் எத்தனை பேர் இருக்கின்றனர்? பகலெல்லாம் பட்டினி கிடந்து பொழுது விடிந்த பின் காய்ச்சிக் குடிக்கிற குடும்பங்கள் எத்தனை?

(5) பரம ஏழை என்கிற பார்ப்பான் வீட்டிலும் தங்களுக்குத் தேவையுள்ள வெண்கலப் பாத்திரங்களும், செம்புப் பித்தளைப் பாத்திரங்களும் இருப்பதோடு குறைந்தது இரண்டு வெள்ளி டம்ளரும், ஒரு வெள்ளித் தட்டும் சாதாரணமாய் இருக்கும். மற்றவர்களின் வீடுகளில் வெள்ளிப் பாத்திரங்களைக் காண முடியுமா? தண்ணீர் எடுக்கத் தகரப் பாத்திரங் களுக்கும் விதியற்று மண் பானைகளையும் சொப்புக்களையும் உபயோகிக்கிற குடும்பங்கள் எத்தனை லக்ஷம்? இரண்டு குடம் தண்ணீர் ஊற்றி வைத்துக் கொள்ள பானை யில்லாமல் அவ்வப்போது வாய்க்காலுக்கோ கிணற்றுக்கோ போய்க் கொண்டு வரவேண்டிய நிலையில் உள்ளவர்கள் எவ்வளவு பேர்?

(6) மிகவும் தரித்திரம் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பான் கூடத் தன் வீட்டில் நடக்கும் நலம் தீமை முதலிய காரியங்களில் ஆயிரக்கணக்கில் செலவு செய்ய முடிகிறது. மற்றவர்களில் இவ்வாறு செய்பவர்கள், செய்யக் கூடியவர்கள் எத்தனை பேர்? வளைகாப்பும், சீமந்தமும், ஆண்டு நிறைவும், ஆயுள் ஓமமும், அறுபதாங் கல்யாணமும் (சஷ்டியாப்த பூர்த்தி) பிராமணரல்லாதாரில் எத்தனைக் குடும்பங்களில் நடைபெற்று வருகின்றன?

இவ்வாறே பல உதாரணங்களைச் சொல்லிக் கொண்டு போகலாம். இவற்றிலிருந்து விளங்கும் உண்மை என்னவென்றால், தமிழ்நாட்டிலுள்ள மற்ற எல்லாச் சமூகங்களையும்விட பிராமண சமூகத்தின் பொருளாதார நிலை மேலானது என்பதே. பார்ப்பனருடைய உயர்ந்த நிலைக்குக் காரணம் என்னவென்று விவரிக்க இது சமயமல்ல. பொருளாதார நிலையில் உள்ள ஏற்றத் தாழ்வைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். இரு சமூகங்களின் நிலைமை இப்படியிருக்க, ''பாவம்! பிராமணன் ஏழை பிழைச்சுட்டுப் போறான்'' என்று பிராமணரல்லாத பிரபுக்களில் சிலர் தங்களைச் சுற்றியுள்ள தரித்திரத்தையும், துக்கத்தையும் கவனிக்காது, பிராமணருக்குச் சலுகை காட்ட முன் வருவது எவ்வளவு மடத்தனம்? ஏழை பிராமணன் என்று தங்களைச் சொல்லிக் கொள்வதன் மூலம், பார்ப்பான் என்ன அக்கிரமம் செய்தாலும், தப்பிக் கொள்ளவும் கஷ்டப்பட்டு சுகஜீவனம் நடத்தவும் முடிகிறதல்லவா? மனு தர்மம் பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் வெளிப்படையாய் அமுல் செலுத்துவதில்லை யென்றாலும், சமூக வாழ்வில் மறைமுகமாகப் பாமர ஜனங்களின் அனுதாபத்தைக் கவர்ந்து அமுல் செலுத்தி வருகிறது என்பதில் என்ன சந்தேகம்?

## பிச்சை போடுவதிலும் ஜாதியா?

''பிராமணாளுக்குத் தர்மம் செய்தால் ரொம்பப் புண்யமுண்டு. வீடு தேடி வந்த பிராமணாளுக்கு இல்லை யென்று சொல்லாதே'' என்கிறான். செம்பை எடுத்துக் கொண்டு நேராக வீட்டினுள் வந்து ஒரு பிராமணன் இவன் கேட்பது பசியைத் தணித்துக் கொள்ளச் சாப்பாடு அல்ல. பச்சரிசி அரைப்படி தினம் 6 மணியிலிருந்து 8 மணிக்குள்ளாக ஊரை ஒரு தரம் சுற்றிவிட்டு இரண்டு மணி நேரத்தில் சுமார் 8, 9 படி அரிசி சம்பாதித்து விடுகிறான். ஒரு ரூபாய் ஆயிற்று.

''சாமீ ஈ இ! குலையெல்லாம் எரியுது. ஏதாவது பழயது இத்தனை இருந்தா ஊத்துங்கோ'' என்று ஈனஸ்வரத்தில் தெருவில் நின்று கொண்டு கேட்கிறான் ஒரு கிழவன். ''சக்கிலி பறையருக்குப் போடறதில்லை போ'' என்று வீட்டுக்காரர் உள்ளேயிருந்து சொல்லுகிறார். கிழவன் வீதிக் கடைசி வரை கேட்டும் ஒருவரும் ஒன்றும் போடவில்லை. முனிசிபாலிடி குப்பைத் தொட்டியில் உள்ள எச்சிலையைப் பார்க்கிறது பசி.

குடி அரசு - கட்டுரை - 29.12.1935



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸின் பிரசார வெற்றி

## 'தினசரி' அவசியம்

இன்றைய அரசியல் கொள்கைகளின் மேன்மையும், கீழ்மையும், கட்சிகளின் பெருமையும் சிறுமையும் அவற்றின் வெற்றியும் தோல்வியும் எல்லாம் பிரசாரத்தின் பலத்தைப் பொறுத்திருக்கிறதே அல்லாமல் அதனதன் உண்மைத் தன்மையைப் பொறுத்ததாக இல்லை. இதைப் பற்றி இதற்கு முன் பல தடவை எடுத்துக் காட்டி வந்திருக்கிறோம்.

இன்று நம் தென்னாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் எனப்பட்ட காங்கிரஸ் கட்சியும், ஜஸ்டிஸ் கட்சியும் பெயரளவில்தான் அரசியல் கொள்கைகளை குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன என்று சொல்லக் கூடியனவாயிருக்கின்றனவே தவிர காரியத்தில் அவை பெரிதும் சமூக முன்னேற்றமான கொள்கைகளையே குறிக்கோளாகக் கொண்டு இருந்து வருகின்றன. இதற்கு ஆதாரம் வேண்டுமென்போர் அதிக தூரம் கஷ்டப்பட்டுத் தேடிப் பார்க்க வேண்டியதில்லை. சுலபத்திலேயே உணர்ந்து கொள்ளலாம். எப்படியெனில் இரண்டு கட்சிக்கும், அதாவது காங்கிரஸ் - ஜஸ்டிஸ் என்கின்ற இரண்டு கட்சிக்கும் அரசியல் கொள்கைகளில் உள்ள வித்தியாசம் என்ன என்பதைக் கவனித்தாலே தெரிய வரும்.

இன்று காங்கிரஸ்காரர்கள் கேட்கும் ''சுயராஜ்ய''த்திற்கும் ஜஸ்டிஸ்காரர் கேட்கும் ''சுயராஜ்ய''த்திற்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கின்றது என்ற யாராலாவது சொல்ல முடியுமா?

அன்னிய ஆட்சியையோ வெள்ளையர் ஆட்சியையோ விரட்டி அடிப்பதுதான் தங்கள் கொள்கை என்று இன்று யாரும் சொல்லுவதே கிடையாது. அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதில்லை என்றோ, அரசியல் பதவிகளை ஏற்றுக் கொள்வதில்லை என்றோ, அரசாங்கத்தினிடமும் அரசரிடமும் பக்தியாயும் விஸ்வாசமாயும் இருப்பதில்லை என்றோ, சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதில்லை என்றோ இரு கட்சியாரும் இன்று சொல்லுவதில்லை.

காங்கிரஸ் பொன்விழாவில் பீஷ்மப் பட்டம் சூட்டப்பட்ட சி. விஜயராகவாச்சாரியாரே அது சமயம் பிரிட்டிஷ் சம்மந்தமுள்ள சுயராஜ்யம் தான் வேண்டுமென்றும் சட்டமறுப்புக் கிளர்ச்சி அராஜகத்தில் கொண்டு வந்து விட்டுவிட்டது என்றும் சொல்லிவிட்டார்.



1936 ம் வருடக் கடைசி அல்லது 1937-ம் வருட ஆரம்பத்தில் வரப்போகும் அரசியல் சீர்திருத்தங்களை ஏற்று அரசியலை நடத்துவதில்லை என்றோ அதன் பதவிகளை ஒப்புக் கொள்ளுவதில்லை என்றோ, சீர்திருத்தத்தை உடைத்துச் சின்னாபின்னப்படுத்துவதாகவோ யாரும் சொல்லுவதில்லை.

சட்டசபைக்குப் போவதும் ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றுவதும் ராஜபக்தி பிரமாணம் செய்வதும் மந்திரி பதவி ஏற்பதுவுமான காரியங்களில் இரு கட்சிகளினுடைய ஆசையிலும் முயற்சிகளிலும் எதுவும் ஒரு சிறிதும் குறைந்ததாக இல்லவே இல்லை.

ஆனால் ஜஸ்டிஸ் கட்சி ஆதிக்கத்திற்கு வந்தால் உத்தியோகங் களிலும், பதவிகளிலும், பிரதிநிதித்துவத்திலும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கைப்படி வினியோகம் ஏற்பட முயற்சிக்கும் என்கின்றதான ஒன்றில் தான் காங்கிரஸ் கொள்கையிலிருந்து மாறுபட்டிருக்கிறது.

அதுபோலவே காங்கிரஸ் கட்சியும் ஆதிக்கத்துக்கு வந்தால் ஜாதிப் பிரிவும், வருணாச்சிரம முறையும் காக்கப்படும் என்கின்றதான ஒன்றில்தான் ஜஸ்டிஸ் கொள்கையில் இருந்து மாறுபட்டிருக்கிறது.

எனவே இவ்விரண்டு கட்சிகளும் மேற்படி இரண்டு கொள்கைகளான சமுதாய சம்மந்தமான கொள்கைகளில்தான் வேறுபட்டு வித்தியாசப் பட்டிருக்கின்றனவே ஒழிய மற்றபடி அரசியலில் எவ்வித சிறிய மாறுதலும் கொண்டிருக்கவில்லை.

ஆனால் பாமர மக்களின் உள்ளத்தில் ஜஸ்டிஸ் கட்சி பெரியதொரு பிற்போக்கான கட்சியென்றும், தேசாபிமானமற்ற கட்சி என்றும், அரசாங்கத்தோடு ஒத்துழைக்கும் கட்சி என்றும் பதியச் செய்யப்பட்டிருக்கிறது.

அதுபோலவே காங்கிரஸ் கட்சியானது முற்போக்கான கட்சியென்றும், தேசாபிமான கட்சியென்றும், அரசாங்கத்தை ஒழிப்பதற்கு ஏற்பட்ட கட்சி யென்றும் பதியச் செய்யப்பட்டிருக்கிறது.

நம் நாட்டுப் பாமர மக்களுக்கு முற்போக்கு எது பிற்போக்கு எது என்பதும், தேசாபிமானம் எது, தேசத் துரோகம் எது என்பதும், அரசாங்கத்தோடு ஒத்துழைப்பது என்பது எது, அரசாங்கத்தை ஒழிப்பது என்பது எது என்பதுமாகிய காரியங்கள் இன்னது என்றே தெரியாது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஏனெனில் அவர்களுக்கு கல்வி அறிவும் பகுத்தறிவும் எவ்வளவு தூரம் ஏற்படும்படி நாம் செய்து வந்திருக்கிறோம் என்பதை உணர்ந்தாலே உண்மை விளங்கிவிடும்.

மத சம்பந்தத்திலும், சமுதாய சம்பந்தமான பழக்க வழக்கங்களிலும் அவர்கள் எவ்வளவு மூட நம்பிக்கையில் ஆழ்த்தப்பட்டிருக்கிறார்களோ



RangaRakes tamilnavarasam.com

அவ்வளவே தான் அல்லது அந்த அறிவே தான் அவர்களுக்கு அரசியல் தத்துவங்களிலும் இருக்க முடிகிறதே தவிர அதிலிருந்து மாறுபடத் தகுந்த சுயேச்சை அறிவு ஏதும் அவர்களிடத்து இல்லை.

அன்றியும் இது விஷயமாக நடந்து வரும் பிரசாரமும், மற்ற பிரசார சவுகரியமும் காங்கிரசுக்காரர்களுக்கே அதிகமாய் இருப்பதால் காங்கிரசு காரர்களின் இஷ்டம் நிறைவேறுவதற்கு வசதி ஏற்பட்டு விடுகின்றது.

காங்கிரசுகாரருக்கு உள்ள சவுகரியங்களில் முக்கியமானது பத்திரிகை சவுகரியமாகும். இரண்டாவது பண சவுகரியமாகும். மூன்றாவது மக்களுக்குள் இருந்து வரும் வேலை இல்லாத் திண்டாட்டத்தை உபயோகித்துக் கொள்ளுவதற்கு ஏற்ற வசதிகளாகும்.

நான்காவது அவர்கள் (காங்கிரஸ்காரர்கள்) இந்த 15 வருஷ காலமாக எவ்வித பொறுப்புள்ள பதவியும் வகிக்க முடியாமல் போனதின் பயனால் பொது ஜனங்கள் இவர்களுடைய ஆட்சி முறை யோக்கியதையை உணர மார்க்கமில்லாமல் போனதும் ஜனங்களுக்கு இவர்கள் எவ்வித ஜவாப்புதாரித் தனத்துக்கும் அருகர்களாயில்லாமலிருந்தது முதலியவையாகும்.

ஆனால் ஜஸ்டிஸ் கட்சிக்கு பொறுப்பு இருக்கிறது. காங்கிரசைப் போல் பத்திரிகைகள் இல்லை. காங்கிரசுக்கு 100 பத்திரிகை இருந்தால் ஜஸ்டிஸ் கட்சிக்கு 5 பத்திரிகைகூட இல்லை.

காங்கிரசுக்கு ஆங்கிலத்தில் மெயில் உள்பட 3 தினசரி பத்திரிகைகளும் தமிழில் ஐந்து தினசரி பத்திரிகைகளும், தெலுங்கிலும், மலையாளத்திலும், கன்னடத்திலும் 10 தினசரிகளும் 5000, 10000, 15000 என்கின்ற கணக்கில் பிரதிகளையுடையனவாகவும் இருக்கின்றன.

வாரப் பத்திரிகைகள், மாதப் பத்திரிகைகள் முதலியனவும், அதுபோலவே ஆங்கிலத்திலும், தமிழிலும் 40, 50 என்கின்ற கணக்கில் 5000, 10000 கணக்கில் பிரதிகள் வெளியாகும்படியாக இருந்து வருகின்றன.

அதோடு மதங்களைக் காப்பாற்ற குறிகள், உற்சவங்கள், விரதங்கள், சடங்குகள், ஸ்மார்த்தங்கள் முதலியவை இருப்பது போன்று காங்கிரசின் விளம்பரத்துக்குக் காங்கிரசு கான்பரன்சு, தேசீய வாரம், தேசீய சுகாதார வாரம், தேசீய கண்காட்சி, கதர் காட்சி, சுதேசியம், தேசீயக் கொடி, பொன்விழா, தலைவர் வருகை, தலைவருக்குப் பண முடிப்பு, கொடியேற்றம், தேசீய பஜனை, ஊர்வலம் முதலியவையும், அவை போன்ற பல காரியங்களும் பாமர மக்களுக்கு சதா இடையறாத காங்கிரஸ் பக்தியும், அபிமானமும் ஏற்படும்படி செய்து வருகிறதுடன் பொருளாதாரமும் எப்படி எப்படியோ போதிய அளவுக்கும் காங்கிரசின் பேரால் 1000க்கணக்கான பேர் வாழ்வதற்கும் போதுமானபடி அவ்வப்போது எப்படி எப்படியோ சம்பாதிக்கப்பட்டு வருகிறது. பார்ப்பனரல்லாதாரில் போதிய பதவி இல்லாத



காரணத்தால் பதவி இழந்தவர்களும், பதவி போட்டியில் தோற்றவர்களும், எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தவர்களும் இயற்கையாகவே பார்ப்பனர் களோடு ஒன்று சேருவதன் மூலம் ஆள் பலமும் எப்படி எப்படியோ சேர்ந்துவிடுகிறது.

இத்தியாதி காரணங்களால் காங்கிரஸ் உள்ளுக்குள்ளாக எவ்வளவு தான் வகுப்புவாதக் கொள்கையை உடையதாய் இருந்தாலும், எவ்வளவுதான் அரசியலில் பிற்போக்கானதாக இருந்தாலும் உண்மையிலும், ஒழுக்கத்திலும், நாணயத்திலும் சிறிதும் பற்றில்லாததாய் இருந்தாலும் எல்லாம் மறைபட்டுப் பாமர மக்களை ஏமாற்றி வெற்றி அடையத்தக்கதாக ஆகி வருகிறது.

உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டுமானால் காங்கிரசானது சமூக சம்பந்தமாக முற்போக்குள்ள ஒவ்வொரு பிரச்சினையிலும் முட்டுக் கட்டையாகவே இருந்து வந்திருக்கிறது.

உதாரணமாக சாரதா சட்டம், தீண்டாமை விலக்கு சட்டம், தேவஸ்தான சட்டம், பொட்டுக் கட்டுதல் ஒழிப்பு சட்டம், விபசாரிகள் ஒழிப்புச் சட்டம், இனாம்தார் ஒழிப்பு சட்டம் முதலாகிய சட்டங்கள் ஏற்படுத்துவதிலெல்லாம் காங்கிசுக்காரர்கள் முட்டுக்கட்டையாகவே இருந்து வந்திருக்கிறார்கள்.

அப்படியெல்லாம் இருந்தும் காங்கிரஸ்காரர்கள் தங்களது பத்திரிகைகளின் பிரசார பலத்தால் தேசாபிமானிகள், முற்போக்காளர்கள், தேசீயவாதிகள் என்கின்ற பெயரை பாமர மக்களிடமிருந்து அடைந்து வருகிறார்கள்.

ஆதலால் ஜஸ்டிஸ் கட்சி இனி காங்கிரஸ் பிரசாரத்திற்கு ஈடு கொடுக்கும்படியாக தங்களது பிரசாரத்தையும் தகுந்த அளவுக்கு தொடங்காவிட்டால் காங்கிரசுடன் போட்டி போட்டு சமாளிக்க முடியாமல் போய்விடும் என்பதில் யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை.

காங்கிரஸ் பிரசாரத்தைக் கண்டு பயந்து நடுங்கி அனேக ஜஸ்டிஸ் காரர்கள் ஜஸ்டிஸ் கட்சிக்கு புற முதுகைக் காட்டிவிட்டு காங்கிரசிற்கு ஓடோடிப் போய் அதில் சேர்ந்து வருகிறார்கள்.

விளம்பரமில்லாத சரக்கு எவ்வளவு நல்லதாயிருந்தாலும் விற்பனை இல்லாமல் போவது அதிசயமல்ல.

இவ்விஷயங்களை நாம் பல தடவை எடுத்துக் காட்டியும் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் தகுந்தபடி செவி கொடுத்ததாகத் தெரியவில்லை. ஆகையால் பார்ப்பனரல்லாத சமூக நலத்தில் கவலையுள்ளவர்கள் சிலராவது சேர்ந்து இதற்கு ஏதாவது ஒரு வழி செய்து தீர வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டதென்றே கருதுகின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

என்னவென்றால் காங்கிரஸ் பத்திரிகைகளின் விஷமப் பிரசாரங்களுக்கு பதில் சொல்ல நம்மிடம் இருக்கும் வாரப் பத்திரிகைகளுக்குப் போதிய சவுகரியமில்லை.

எப்படி எனில் 4, 5 காங்கிரஸ் தமிழ் தினசரிகளும் ஆளுக்கொரு குற்றத்தை தினமும் சுமத்தி வந்தால் நமது வாரப் பத்திரிகைகள் வாரத்திற்கொரு முறை ஏதோ ஒன்று இரண்டிற்குத்தான் பதில் சொல்ல முடிகின்றது. அதற்குள் மற்ற குற்றச்சாட்டும் விஷமப் பிரசாரமும் ஜீரணமாகிறதுடன் ரத்தத்தில் கலந்து விடுகின்றன.

5 பத்திரிகைகள் 6 நாள்களுக்கு 6 × 5 = 30 குற்றச்சாட்டுகளுக்கும் விஷமப் பிரசாரத்துக்கும் ஒரு நாளில் எவ்வளவு மறுப்பும் சமாதானமும் சொல்ல முடியும் என்பதை யோசித்தால் அதனால் ஏற்படும் கெடுதி எவ்வளவு என்பது யாருக்கும் விளங்காமல் போகாது.

இவற்றிற்கெல்லாம் ஈடுகொடுக்கும்படியான முயற்சியும் பிரசாரமும் இல்லாமல் நம் கொள்கைகளின் மேன்மையையும், அதனால் ஏற்பட வேண்டிய நல்ல பயனையும் மாத்திரம் கருதிக் கொண்டு சும்மா இருந்தால் நாம் எப்படிவெற்றி பெறக் கூடும் என்பதை யாவரும் யோசித்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

காங்கிரசில் எவ்வளவுதான் புரட்டும், பித்தலாட்டமும், கூடாத காரியங்களும் இருந்து வந்த போதிலும் எவ்வளவுதான் அது வெறுக்கப்பட வேண்டியதும், அழிக்கப்பட வேண்டியதுமானாலும் முயற்சி பலனை அளிக்கும் என்பதற்கு காங்கிரசை ஒரு உதாரணமாகக் கொள்ளாமல் இருக்க முடியாது.

எவ்வளவு இருந்த போதிலும் இன்று நம் கொள்கையிலும் நமது வெகு சிறு முயற்சியிலும் நமக்குள்ள தைரியமெல்லாம் காங்கிரசு வெற்றி பெறாது என்பதேயல்ல. மற்றென்ன வென்றால் காங்கிரஸ் எவ்வளவுதான் வெற்றி பெற்றாலும் அதன் மூலம் பழயபடி பார்ப்பனர்கள் ஆதிக்கத்துக்கு வர முடியாது என்பதும்,

அவர்களது வெற்றியெல்லாம் நமக்கு பல வழிகளில் தொல்லை கொடுக்கக்கூடியதாகுமே தவிர அவர்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) யாதொரு பயனையும் கொடுக்க முடியாது என்கின்ற தைரியமுமேயாகும்.

இதுவரை இந்த 10 வருஷ காலமாய் பார்ப்பனர்கள் முயற்சி பாமர மக்களின் மனதில் விஷத்தை செலுத்தி இருக்கிறது என்பதொன்று மாத்திரமல்லாமல், பார்ப்பன ஆதிக்கத்துக்கு அது ஒரு சிறு நன்மையும் அளிக்கவில்லை என்பதை புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டுவோம்.

உதாரணம் வேண்டுமானால் திருநெல்வேலி ஜில்லா போர்டில் ''31 காங்கிரஸ்காரர்கள் ஜெயித்து'' வந்தும் 32வதாக ஒரு ஜஸ்டிஸ்காரரைப் பிடித்துத் தலைவராக்கி, 32 ஐ 26 ஆகச் செய்து கொண்டதுடன், போர்டு நிர்வாகம் ஊழலாகி கட்சி சண்டை வலுத்து பழயபடி ஜஸ்டிஸ் போர்டாக ஆகப் போகின்றது என்பது ஒன்றே போதுமானதாகும்.

பழய உதாரணம் வேண்டுமானாலும் ஒன்று கூறுகிறோம். 1926-ல் சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றும், காங்கிரசினால் மந்திரிசபை அமைக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டும், அந்தப்படியே காங்கிரஸ் மந்திரி சபை அமைத்து ஆதரித்து வந்தும் ஒரே வருஷத்தில அது ஜஸ்டிஸ் மந்திரி சபையாகி ''10 வருஷ காலமாக அசல் ஜஸ்டிஸ் மந்திரிகள் செய்து முடிக்க முடியாத காரியத்தை இந்த மந்திரி சபை செய்துவிட்டது'' என்று சுதேசமித்திரன் ஒப்பாரி வைத்து அழுகும்படியான காரியத்தை (வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை) செய்து விட்டது.

ஆகையால் சுயமரியாதை இயக்கம் உள்ள வரை காங்கிரசுக்கு வெற்றி ஏற்படாது என்பதோடு பெயரளவில் காங்கிரஸ் வெற்றி பெற்றுவிட்டது என்கின்ற கூப்பாட்டைக் கண்டு யாரும் பயப்பட வேண்டியதில்லை என்றும் தைரியமாய்க் கூறுவோம்.

ஆனாலும் நமக்கு வெற்றி ஏற்பட வேண்டுமானால் இன்னும் அதிகமான பத்திரிகைப் பிரசாரம் இருந்தே ஆக வேண்டும்.

எனவே பல தோழர்களின் அறிவுறுத்தலுக்கும் சில நிர்பந்தங்களுக்கும் ஆளாகி சமீபத்தில் ஒரு தினசரி காலணாப் பத்திரிகை ஒன்று ஏற்படுத்தித் தீர வேண்டியது அவசியமாகி விட்டது.

இதற்கு முன் பல தடவை இதைப் பற்றி ஆலோசித்து நடத்துவது என்கின்ற முடிவுக்கு வந்து வந்து அதிலுள்ள கஷ்டங்களை நினைத்து பயந்து பயந்து அம்முடிவைக் கைவிட வேண்டியதாயிற்று. கடைசியாக 4, 5 மாதங்களுக்கு முன் கூட தினசரிக்காக எல்லா ஏற்பாடுகளும் செய்த பிறகு விடுதலை என்கின்ற பத்திரிகையை வாரம் இருமுறையாக துவக்கப் போவதாகவும் சமீபத்தில் தினசரியாக ஆக்கப் போவதாகவும் தெரிய வந்ததால் அவ்வெண்ணம் கைவிடப்பட்டது.

இப்போது சமீபத்தில் விடுதலை தினசரி ஆகும் என்கின்ற நம்பிக்கைக்கு இடமில்லாமல் இருப்பதால், ஒரு காலணா தினசரியை ஆரம்பிக்க உத்தேசித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதன் பயனாய் இன்னும் அதிகமான கஷ்டத்துக்கும் நஷ்டத்துக்கும் நாம் ஆள் ஆக வேண்டி வரும் என்பது தெரிந்திருந்தாலும் வேறு வழி இல்லாததால் அதில் ஈடுபட வேண்டி இருக்கிறது.

அதற்கு வேண்டிய ஆதரவு தமிழ் மக்களிடையே இருக்குமென்று நம்பியே அவ்வேலையில் ஈடுபடுகின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 29.12.1935**



RangaRakes tamilnavarasam.com

# பொப்பிலி ராஜா அறிக்கை

1930-ல் உருப்பெற்ற, தற்காலச் சென்னைச் சட்டசபை, சட்டப்படி 1932-ல் கலைக்கப்பட்டு 1933-ல் புதுச் சட்டசபை ஏற்பட்டிருக்க வேண்டும். எனினும் மூன்று முறை சட்டசபையின் ஆயுள் கவர்னரின் விசேஷ அதிகாரத்தினால் நீட்டப்பட்டதனால் 1930-ல் தோன்றிய சட்டசபை இப்பொழுதும் இயங்கிக் கொண்டே இருக்கிறது. இது சென்னை மாகாணத்தில் மட்டும் காணப்படும் புதுமையுமன்று. இந்தியாவிலுள்ள மாகாண சட்டசபைகள் எல்லாம் ஆயுள் நீடிக்கப்பட்டே இருக்கின்றன. இதற்கு மாகாண மந்திரிகளோ அவர்களை ஆதரிக்கும் கட்சியாரோ மாகாண கவர்னர்களோ, வைஸ்ராயோ ஜவாப்தாரிகளல்ல. புதுச் சீர்திருத்தம் அமலுக்கு வரும்வரை ''மன்னர் பெருமான்'' சர்க்கார் எப்படியாவது இயங்கிக் கொண்டு இருந்து ஆக வேண்டும். பொதுத் தேர்தல் நடத்த அரசியல் சம்பந்தமான தடைகள் ஏற்பட்டால், சட்டசபைகளின் ஆயுளை நீட்ட சீர்திருத்த சட்டம், மாகாண கவர்னர்களுக்கு அதிகாரமளிக்கிறது. அந்த அதிகாரத்தை உபயோகித்தே மாகாண சட்டசபைகளின் ஆயுளை அதிகாரிகள் நீட்டியிருக்கிறார்கள்.

### ஆயுள் நீட்டக் காரணம்

மந்திரிகள் மீதுள்ள கருணையினாலோ, மாகாணங்களில் மந்திரிமாரை ஆதரிக்கும் கட்சியார் மீதுள்ள பரிவினாலோ மாகாண கவர்னர்கள் சட்டசபைகளின் ஆயுளை நிட்டவில்லை. ஆயுளை நீட்டிய பாபத்துக்காக மந்திரிமாரையும், மந்திரி கட்சியாரையும் சென்னை மாகாணத்தைத் தவிர வேறு எந்த மாகாணத்திலும் காங்கிரஸ்காரரோ இதர அரசியல் கட்சியாரோ தூற்றவுமில்லை. கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றவுமில்லை. சென்னையிற்றான் காங்கிரஸ் பார்ப்பனர்கள் - அவர்கள் பாட்டனார் வீட்டு முதல் கொள்ளை போவதுபோல் அட்டகாசம் செய்கிறார்கள்; அலறுகிறார்கள்; மாரடிக்கிறார்கள்.

### பித்தலாட்டப் பேச்சு

பொப்பிலி மந்திரி சபை ராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் பார்ப்பனர்கள் ஒப்பாரி வைக்கத் தொடங்கி வருஷங்கள் இரண்டு மூன்று ஆகிவிட்டன. ''காலாவதியான சட்டசபைக்குப் பொதுஜன ஆதரவு கிடையாது; தற்கால சட்டசபை பிரதிநிதித்துவம் வாய்ந்த சபை அல்ல'' எனக் கூச்சல் போடும் காங்கிரஸ்காரர் உபதேர்தல்கள் வரும்போது



போட்டி போடத் தயங்குவதும் இல்லை. காங்கிரஸ்காரர் எவ்வளவேனும் யோக்கியப் பொறுப்பும், நாணயமும் அந்தரங்க சுத்தியும் உடையவர் களானால் உபதேர்தல்களில் போட்டி போடலாமா? வெற்றி பெற்று சட்டசபையில் குந்தியிருக்கலாமா?

உபதேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ்காரர்கள் தாமும் சட்டசபை மெம்பர்கள் என்று கூறும் ஏக காரணத்தினாலேயே, தற்காலச் சட்டசபை பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்லவென்று கூறுவது சுத்தப் பித்தலாட்டமென்பது தெளிவாகிவிட்டது.

மேலும், புதுச் சீர்திருத்தச் சட்டம் பார்லிமெண்டில் நிறைவேறி விட்டதினால் மாண்டு - போர்டு சீர்திருத்தச் சட்டம் ரத்ததாகிவிட்டது. புதுச் சட்டப்படிதான் தேர்தல் நடத்த முடியும். அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை பூர்த்தியாகும்போது தற்காலச் சட்டசபை கலைக்கப்படும். பொதுத் தேர்தலும் வரும். காங்கிரஸ்காரர் உட்பட எல்லாக் கட்சியாரும் தாராளமாகப் போட்டி போடலாம். பொப்பிலி ராஜாவோ ஜஸ்டிஸ் கட்சியாரோ குறுக்கே நிற்கப்போவதில்லை. காங்கிரஸ்காரர் மெஜாரட்டி பலம் பெற்றால் மந்திரிமாரும் ஆகலாம். ஒருவரும் அவர்களைத் தடுக்க மாட்டார்கள்; தடுக்கவும் முடியாது.

### பொப்பிலி விளக்கம்

எனவே ''சட்டசபையைக் கலைக்க வேண்டும்; பொப்பிலி ராஜா ராஜிநாமாச் செய்ய வேண்டும்'' என்று கூச்சல் போடுவதற்குப் பொருளே இல்லை. மந்திரி பதவியில் ஒட்டிக் கொண்டு இருக்க வேண்டும் என்று பொப்பிலி ராஜா ஆசைப்படவுமில்லை.

தோழர் சத்தியமூர்த்தி பிதற்றலுக்கு பதிலாக பொப்பிலிராஜா மிகவும் கண்ணியமாக வெளியிட்டிருக்கும் அறிக்கையில் ''சட்டசபையின் ஆயுளை நீட்ட வேண்டுமென்று லார்டு எர்ஸ்கையினையோ அவருக்கு முன்னிருந்தவர்களையோ நாங்கள் கேட்டுக் கொண்டதுமில்லை. எங்களுடன் கலந்து சட்டசபைகளின் ஆயுள் நீட்டப்படவுமில்லை. சட்ட சபையைக் கலைத்து மாற்றப்பட்ட இலாக்காக்களின் நிருவாகத்தைக் கவர்னர் ஏற்றுக் கொண்டாலும் நான் தடுக்கப் போவதில்லை'' என பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். இந்நிலையில் சட்டசபை ஆயுள் நீட்டப்பட்டதற்கு மந்திரிமாரைக் குறை கூறுவது அக்கிரமமல்லவா?

பிரிட்டிஷ் ஆட்சி முறை, சில சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டது. தடுக்க முடியாத நெருக்கடி ஏற்பட்டாலன்றி சட்டதிட்டங்களை மீறி பிரிட்டிஷ் அதிகாரிகள் காரியங்கள் நடத்த மாட்டார்கள். காங்கிரஸ் பார்ப்பனக் கூட்டம் என்ன கூச்சல் போட்டாலும் சரி, சட்டசபையைக் கலைக்கும் வண்ணம் நெருக்கடி ஏற்படவில்லையென்று மாகாண கவர்னர் கருதுகிறார்.



RangaRakes tamilnavarasam.com

எனவே காங்கிரஸ்காரர் மந்திரி பதவி மோகத்தினால் மாதாமாதம் 4000 ரூபாய் பார்ப்பனரல்லாத மந்திரிகள் பைக்குள் விழுகிறதே என்ற வயிற்றெரிச்சலினால் - லபோ, லபோ என்று வயிற்றில் அடித்துக் கொள்வது மானக்கேடேயாகும்.

## காங்கிரசும் காந்தியுமே காரணம்

உண்மையில் சட்டசபைகளின் ஆயுள் நீட்டப்பட்டதற்கும் - புதிய அரசியல் அமலில் வரத் தயக்கம் ஏற்பட்டிருப்பதற்கும், அரசியல் ஞானம் என்பது துளிகூட இல்லாத காங்கிரஸ் வாலாக்களே காரணமாகும். முதல் லண்டன் மகாநாட்டில், ஏனைய அரசியல்வாதிகளுடன் கலந்து, ஒத்துழைத்திருந்தால் இரண்டு வருஷங்களுக்கு முன்னமேயே புதிய சீர்திருத்தச் சட்டம் பார்லிமெண்டில் நிறைவேறி அமலிலும் வந்திருக்கக் கூடும். ''என் சேவல் கூவாவிட்டால் பொழுது விடியாதென்று எண்ணிக் கொண்டிருந்த கிழவியைப் போல்'' நாம் செல்லாவிட்டால் வட்டமேஜை மகாநாடே நடைபெறாதென்று காங்கிரஸ்காரர் மனப்பால் குடித்துக் கொண்டு இருந்தார்கள். ஆனால் அவர்கள் நினைத்ததுபோல் மகாநாட்டு வேலை ஒன்றும் தடைபடவில்லை.

முதல் மகாநாடு செவ்வையாகவே நடைபெற்றது. காங்கிரஸ்காரரின் ஒத்துழைப்பில்லாமலே வட்டமேஜை மகாநாடு வெற்றிகரமாக முடிவு பெற்றுவிடும் என்ற நிலைமை ஏற்பட்டவுடன் இரண்டாவது மகாநாட்டுக்கு காந்தியார் காங்கிரசின் ஏகப் பிரதிநிதியாகச் சென்றார். அனுபவ சாத்திய மல்லாத பல காரியங்களை வற்புறுத்தினார். சமரசமாக முடியவிருந்த வகுப்புப் பிரச்சினைக்கு ஹிமாலய முட்டுக்கட்டையையும் போட்டார். முஸ்லீம்களுக்குச் சலுகை காட்டி ஒடுக்கப்பட்டவர்கள் கழுத்தில் கத்தி வைக்கவும் சூழ்ச்சி செய்தார். அதையுணர்ந்த ஒடுக்கப்பட்டவர்கள் பிரதிநிதிகளான ராவ்பகதூர் ஸ்ரீநிவாசனும், டாக்டர் அம்பேத்காரும் காந்தியார் சூழ்ச்சிகளை லண்டன் பத்திரிகைகளில் பகிரங்கப்படுத்தவே இரண்டாவது மகாநாட்டு வேலை தடைபட்டது. இரண்டாவது மகாநாட்டில் காந்தியார் முட்டுக்கட்டை போடாது இருந்திருந்தால் மூன்றாவது மகாநாடு கூட்டாமலே ஒரு கால் காரியங்கள் முடிந்திருக்கவும் கூடும். எனவே புதுச் சீர்திருத்தம் அமலில் வரத் தவக்கம் ஏற்பட்டதற்கும், சட்டசபைகளின் ஆயுள் நீட்டப்பட்டதற்கும், காங்கிரஸ்காரர்களே காரணம். ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளையோ, ஜஸ்டிஸ் கட்சியாரையோ குறைகூறுவதில் பயனில்லை.

## கீரை விற்கும் கிழவியும் ஒப்ப மாட்டாள்

சட்டசபையைக் கலைக்க வேண்டும், மந்திரிகள் ராஜிநாமாச் செய்ய வேண்டும் என்பதற்குத் தோழர் சத்தியமூர்த்தி கூறும் காரணங்களைத் தெருவில் கீரை விற்கும் கிழவிகளும்கூட ஒப்புக்கொள்ள மாட்டார்கள். கோக்கலே மண்டபத்தில் கூடிய பார்ப்பன கும்பல்களுக்கு தோழர் சத்தியமூர்த்தி கூறிய காரணங்கள் உடன்பாடாக இருக்கலாம். ஆனால் விவேகிகள் ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். தோழர் சத்தியமூர்த்தியின் குற்றச்சாட்டுக்கு பொப்பிலி ராஜா தமது அறிக்கையில் தக்க ஆதாரங் களுடன் பதிலளித்திருக்கிறார். அவ்வறிக்கை மற்றோரிடத்து வெளிவருகிறது. அவ்வறிக்கையைப் பாரபட்சம் இன்றி படிப்பவர்களுக்குத் தோழர் மூர்த்தியின் பிதற்றல்களுக்கு ஆதாரமே இல்லை என்பது நன்கு புலனாகும். கட்சி நலத்துக்காக ஜில்லா போர்டுகளைப் பிரிப்பதாக தோழர் மூர்த்தி கூறுகிறார். ஸ்தல ஸ்தாபனத் திருத்தச் சட்டப்படி தாலுகா போர்டுகள் கலைக்கப்பட்டபோது, பெரிய ஜில்லா போர்டுகளை பிரிக்கத் தேவை யுண்டாயிற்று. சட்டமும் அதற்கு இடமளிக்கிறது. சட்டப்படியே பொப்பிலி ராஜா நடந்தும் இருக்கிறார். அவரது அறிக்கையைப் படிக்கும் பள்ளிப் பையன்களும்கூட இதை ஒப்புக் கொள்வர். ஜில்லா போர்டுகளைக் கலைத்துவிட்டு தாலூக்கா போர்டுகளை ஏற்படுத்த வேண்டுமென்று தோழர் மூர்த்தி கூறுவது அனுபவ சாத்தியமில்லை யென்றும் பொப்பிலி ராஜா தக்க ஆதாரங்களுடன் விளக்கிக் காட்டி இருக்கிறார். 1933-ல் நிருவாகச் செலவுக்கும் பணமில்லாமல் 90 தாலூக்கா போர்டுகள் ஸ்தம்பித்தன. சிப்பந்திகளுக்குப் பல மாதச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. 203 தாலூகா போர்டுகளில் 129 போர்டுகள் வரவு செலவுகளைச் சரிக்கட்ட சக்தியற்றிருந்தன. அதனாலேயே அவைகள் மூடப்பட்டன. தோழர் சத்தியமூர்த்தி உபதேசப்படி ஜில்லா போர்டுகளைக் கலைத்து மீண்டும் தாலூகா போர்டுகள் ஏற்படுத்தப்பட்டால் 1933வது வருஷத்திய நிலைமை தானே மீண்டும் ஏற்படும்.

## குறும்புத்தனமான கூச்சல்

கவர்னரைக் கலவாமலே பொப்பிலி ராஜா ஜில்லா போர்டுகளைப் பிரிவினை செய்யத் தொடங்கி யிருப்பதாக எத்தகைய ஆதாரமுமின்றி தோழர் மூர்த்தி ஒரு குற்றம் சாட்டுகிறார். அவரை ஆதரிக்கப் புறப்பட்ட சென்னை மெயிலும் பொப்பிலி ராஜா அறிக்கையைக் கருத்தூன்றிப் படிக்காமல் தோழர் மூர்த்தி குற்றச்சாட்டை ஆமோதிக்கிறது. வேறொரு அரையணா காங்கிரஸ் தினசரியும் அவ்வாறே புலம்புகிறது. ஆனால் உண்மை நிலை என்ன? பொப்பிலி ராஜா தான்றோன்றித்தனமாக எதுவும் செய்துவிட வில்லை. ஜில்லா போர்டு பிரிவினை விஷயம் லோக்கல் போர்டு இன்ஸ்பெக்டரால் பரிசீலனை செய்யப்பட்டு, பொக்கிஷ மந்திரி, கவர்னர் முதலியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிறகே பொப்பிலி ராஜா அவர்களால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தை பொப்பிலி ராஜா தமது அறிக்கையில் தெளிவாகக் கூறியிருக்கிறார். எனவே தோழர் மூர்த்தியும் அவரை ஆதரிக்கும் தேசீய, ஆங்கலோ இந்தியப் பத்திரிகைகளும் வீண் கூச்சல் போடுவது குறும்புத்தனமாகும். பொது ஜனங்கள் மனத்தில் தப்பெண்ண முண்டாகும்படி செய்யப்படும் இந்த சூழ்ச்சியைப் பார்த்து எவரும் ஏமாந்து போக மாட்டார்கள் என்பது நிச்சயம்.





RangaRakes tamilnavarasam.com

**காங்கிரஸ் வெற்றி மர்மம்**

ஜில்லா போர்டு தேர்தல்களில் காங்கிரஸ்காரர்களுக்கு ஏற்பட்டிருப்ப தாகக் கூறப்படும் வெற்றியின் இரகசியத்தையும் பொப்பிலி ராஜா தமது அறிக்கையில் பகிரங்கப்படுத்தியிருக்கிறார். மேற்கு கோதாவரி தென்னாற்காடு ஜில்லாக்களில் காங்கிரஸ்காரருக்கு மெஜாரட்டி கிடைத்திருப்பதாகத் தோன்றினாலும் மற்ற ஜில்லாக்களில் மெஜாரட்டி இல்லவே இல்லை. திருச்சி, திருநெல்வேலி, சிற்றூர் ஜில்லாக்களில் காங்கிரசும் ஜஸ்டிசும் சமநிலையிலேயே இருக்கின்றன. கடப்பை ஜில்லாவின் ஜஸ்டிஸ் கட்சிக்கே மெஜாரட்டி கிடைக்குமென்று தோன்றுகிறது. ஜஸ்டிஸ் கட்சியார் ஆதிக்கம் பெற்ற ஜில்லாக்களில் காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்கு சொந்தப் பகையை முன்னிட்டு ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்கள் காங்கிரசை ஆதரித்ததே காரணம். மேலும் அவ்வாறு தலைவர்களாக வந்தவர்களும் நேற்று வரை ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித் தவர்களே. எனவே காங்கிரஸ்காரர் மெஜாரட்டி பெற்றுவிட்டதாக ஆர்ப்பாட்டம் செய்வது வெறும் பகட்டேயாகும்.

**பொறாமையும் வகுப்புத் துவேஷமும் தவிர வேறில்லை**

தோழர் சத்தியமூர்த்தி பேச்சையும், பொப்பிலிராஜா அறிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தோழர் மூர்த்தி பேச்சில் பொறாமை, பகை, வகுப்புத் துவேஷம் முதலியனவும் பொப்பிலி ராஜா அறிக்கையில் நேர்மை சாந்தம் மரியாதை முதலியனவும் அடங்கி யிருப்பதைக் காணலாம். தோழர் மூர்த்தி நினைத்துக் கொண்டிருப்பது போல் தேச மக்கள் முச்சூடும் மூடர்களல்ல. அறிவாளிகள் கொஞ்சப் பேராவது இருக்கக் கூடும். அவர்கள் தோழர் மூர்த்தி பேச்சை ஆதரிக்கவே மாட்டார்கள். மேலும் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் நிறைவேற்றும் நலந்தரும் சட்டங்களை எல்லாம் - பொதுஜன க்ஷேமத்துக்காகவே அவர்கள் செய்யும் காரியங்களையெல்லாம் தென்னாட்டுப் பார்ப்பனர்களும், அவர்களது வால்களும், அவர்களை ஆதரிக்கும் பத்திரிகை களும் கட்டுப்பாடாக எதிர்த்து வருவது ஒரு வாடிக்கையாக இருந்து வருகிறது. அறநிலையப் பாதுகாப்பு மசோதாவைக் கவிழ்க்கத் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சிகளை யாரே அறியார்கள். கடைசியில் தோழர் சித்தரஞ்சன் தாஸே அதை ஆதரித்தார். அதைப் போன்ற ஒரு மசோதா வங்காளத்துக்குத் தேவை யென்று பகிரங்கமாகக் கூறினார்.

**இனாம் பில்**

பொப்பிலி ராஜா நிறைவேற்றி இருக்கும் இனாம் குடிகள் மசோதாவை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆசிரியர் ரெங்காவும், இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் தோழர் சந்தானமும் மற்றும் காங்கிரஸ் சமதர்மிகளும் ஆதரிக் கிறார்கள். சத்தியமூர்த்தி போன்ற காங்கிரஸ் பார்ப்பனர்களும், வெங்கட்டராம சாஸ்திரியார் போன்ற மிதவாத பார்ப்பனர்களும் அந்த மசோதாவைக் கவிழ்க்க இப்பொழுதும் சூழ்ச்சி செய்து கொண்டே இருக்கின்றனர். அம்மட்டோ! தேசீயப் பத்திரிகைகள் என்று கூறிக் கொள்ளும் ஹிந்து, சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளும் அவர்களுக்கு பக்கபல மாகவே இருக்கின்றன. பழைய ஏற்பாட்டை மாற்றி புதிய ஏற்பாடு ஒன்றை அமலுக்குக் கொண்டு வரும்போது அதை அமலுக்குக் கொண்டு வருபவர்களிடம் ஒரு சாராருக்கு துவேஷம் ஏற்படுவது சகஜமே. ஆனால் அந்த துவேஷத்துக்கு அஞ்சி நியாயமாக செய்ய வேண்டியவைகளைச் செய்ய அஞ்சுகிறவர்கள் உண்மையான தேச நிர்வாகிகள் ஆகவே மாட்டார்கள். பொப்பிலி ராஜா காலத்து நிறைவேற்றப்பட்ட பல சட்டங்களை ஒரு சாரார் கட்டுப்பாடாக எதிர்த்து வந்தும், தேச நலத்தை முன்நிறுத்தி, தமது செயலால் தமக்கோ தமது கட்சிக்கோ ஏற்படக் கூடிய பலாபலன் களையும் மதியாமல் தம் கடமையைச் செய்து வரும் பொப்பிலி ராஜாவை நேர்மையும் யோக்கியப் பொறுப்பும் உடையவர்கள் போற்றுவார்கள் என்பது திண்ணம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 29.12.1935**



RangaRakes tamilnavarasam.com

## விஜயராகவ ஆச்சாரியார்க்கு
# பீஷ்மப் பட்டம்

தோழர் விஜயராகவ ஆச்சாரி அய்யங்காருக்கு பீஷ்ம பட்டம் அளிப்பதற்கு அய்யங்கார்கள் ஒரு பெரும் கூட்டம் கூட்டி ஆடம்பரம் செய்து பீஷ்ம பட்டாபிஷேகம் செய்து விட்டார்கள்.

இக்கூட்டத்திற்கு வரவேற்புத் தலைவர் சி.ஆர். சீனிவாச அய்யங்கார். அதற்கு தலைமை வகித்தவர் எஸ். சீனிவாச அய்யங்கார். கூட்டத்தில் பிரசங்கம் செய்தவர் சி. ராஜகோபாலாச்சாரி அய்யங்கார். வந்தனோபசாரம் சொன்னவர் வி.வி. சீனிவாச அய்யங்கார். ஆகவே ஆரம்பம் முதல் கடசிவரை 5 அய்யங்கார்கள் முக்கியஸ்தராய் கூடி ஒரு அய்யங்காருக்கு பீஷ்மப் பட்டம் அளித்தார்கள் என்றாலும், யாருக்கு என்பதை உணர்ந்தால் அவர்களது தேசாபிமான சூட்சி விளங்காமல் போகாது.

விஜயராகவாச்சாரியார் ஒரு வக்கீல். வேண்டுமானால் கெட்டிக்கார வக்கீல் என்று சொல்லலாம். 70 வயதுக்கு மேல் கூட வக்கீல் வேலை பார்க்கிறவர். வக்கீல்கள் தங்கள் தொழில் விருத்திக்கு தேசாபிமானத் பேச்சு பேசுவதும், தேசாபிமானச் சடங்குகளில் கலந்து கொள்வதும் போல கலந்து கொண்டு தேசாபிமானி ஆனவரே தவிர தோழர் ராஜகோபாலாச்சாரியார் போல் ஒரு பொது லட்சியத்துக்காக ''தேசாபிமானி'' ஆனவரல்ல. அப்படிப்பட்ட தேசாபிமானத்துக்காக ஒரு காசு நஷ்டமோ ஒரு எறும்புக்கடி கஷ்டமோ அடைந்தவருமல்ல. அவருடைய காங்கிரஸ் பக்திக்கும் உதாரணம் சொல்ல வேண்டுமானால் சுதேசமித்திரன் 27 தேதி தலையங்கம் 2ம் பத்தியில்,

**''இப்பால் காங்கிரஸ் கொள்கையில் ஏற்பட்ட மாறுதலால் விஜயராகவாச்சாரியார் முன்போல் காங்கிரஸ் வேலைகளில் ஈடுபட முடியா விட்டாலும்''** என்று குறிப்பிடப்பட்டிருப்பதும், பட்டாபிஷேக கூட்டத்துக்கு வந்தனோபசாரம் கூறிய தோழர் வி.வி. சீனிவாசய்யங்கார் வரையில்,

**''இன்று ஜனங்கள் விஜயராகவாச்சாரியாருக்கு அளித்த வரவேற்பிலிருந்து அவருக்குள்ள சொற்ப சந்தேகமும் நீங்கி அவர் கடமையை உணர்ந்து பொது வாழ்வில் அவர் மீண்டும் வேலை செய்வாரென்று நம்புகிறேன்''** என்று கூறியிருக்கிறார்.



ஆகவே அவருக்கு இன்றைய காங்கிரசின் கொள்கைகளில் நம்பிக்கை இல்லை என்பதும், அவர் இப்போது விலகி இருக்கிறார் என்பதும் தெற்றென விளங்குகிறது. இவரைப்போல் ஏன் இவரை விட அதிகம் காங்கிரசுக்கு தொண்டு செய்து பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து கொள்கை பிடிக்காமல் வெளியில் இருந்துகொண்டு காங்கிரசை ஆதரித்துக்கொண்டு காங்கிரஸ் அபிமானிகளாக தோழர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுவைப் போன்றவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள் என்றாலும், அவர்கள் பார்ப்பனரல்லாதாராயும், சீர்திருத்தக்காரராயும் இருப்பதும், தோழர் விஜயராகவாச்சாரியார் பார்ப்பனராயும் அதிலும் அய்யங்காராயும் அதிலும் வருணாச்சிரமக்காரராயும் இருப்பது தவிர மற்றபடி இப்பட்டாபிஷேக வைபவத்துக்கு யாதொரு தனிக் காரணமும் காணப்படவில்லை.

தோழர் விஜயராகவாச்சாரியாரின் தேசபக்திக்கும், தேசீய வாதத்துக்கும், சுயராஜ்ஜியத்துக்கும் மற்றொரு உதாரணமும் கூறுவோம்.

விஜயராகவாச்சாரியார் இப்பட்டாபிஷேகத்துக்கு பதிலளிக்கும் மறுமொழியில் என்ன கூறுகிறார் என்றால்,

''பிரிட்டிஷார் சம்மந்தத்தின் கீழ் சுயராஜ்ஜியம் பெறவேண்டும் என்பதுதான் எனது கொள்கை'' என்று சொல்லியதோடு,

''லார்ட் இர்வினிடம் காந்தியார் பேசும்போதும் பிரிட்டிஷ் சம்மந்தத்தின் கீழ் சுயராஜ்ஜியம் அடைவதுதான் தனது கொள்கை என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்'' என்றும்,

''சுயேச்சையின் சாராம்சம் கிடைத்தால் போதும்'' என்று காந்தியார் சொன்னார் என்றும் பேசியிருக்கிறார்.

இந்நிலையில் இந்த கூட்டத்தில் இருந்த மற்ற ஐயங்கார்களின் யோக்கியதைக்கும் உதாரணம் வேண்டுமானால் கூறுவோம்.

எஸ். சீனிவாசய்யங்கார் ''பூரண சுயேச்சை'' என்கின்ற அஹம்பிரம்மவாதி.

வி.வி. சீனிவாசய்யங்கார் பச்சை வருணாச்சிரம தர்மவாதி.

சி. ராஜகோபாலாச்சாரியார் மக்களையும், சர்க்காரையும் ஏமாற்றி பார்ப்பன ஆதிக்கம் பெறவேண்டிய உண்மைத் தியாகிவாதி.

சி.ஆர். சீனிவாசய்யங்கார் பணவாதி, பார்ப்பன மித்திரவாதி.

இவைகள் சங்கராச்சாரி கொள்கை போல் ஒன்றுக்கொன்று முரணா யிருந்தாலும் பொதுவாக பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதையை அழித்து பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்த தங்கள் அபிப்பிராய பேதங்களை மறந்து ஒன்று கூடி ஒரு திருவிழாக் கொண்டாடி இருக்கிறார்கள். நம்மவர்களோ சிலர் அக் கூட்டத்திற்கு சென்று தீவட்டித் தடிப்பிடித்திருக்கிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இது அய்யங்கார் ஆதிக்கக் கூட்டம் என்பதற்கு உதாரணம் வேண்டுமானால் காங்கிரஸ் தலைவர் தோழர் சத்தியமூர்த்தியாரைக் காணவே காணோம். அவரது சகா லட்சிமிபதி அம்மாள் போன்றவர்களையும் அக் கூட்டத்தில் காணோம்.

காங்கிரசு பொன்விழாவில் காங்கிரசுக்கு உழைத்தவருக்கு பட்டம் கட்டுகிற காலத்தில் காங்கிரஸ் தலைவர் குழாம் அக் கூட்டத்தில் இல்லை என்றால், அது எப்படிப்பட்ட கூட்டமாய் இருக்கவேண்டும் என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டுமா?

முடிவாக வெள்ளைக்காரர்கள் ஆட்சி சம்மந்தத்துடன் சுயராஜ்யம் கோருபவரும், சத்தியாக்கிரகம் சட்ட மீறுதல் முதலிய காரியங்களால் அராஜகம் ஏற்பட்டுவிட்டது என்பவரும் ஒருகாலத்தில் காந்தியாருக்கும் மொராலிட்டி (ஒழுக்கம்) இல்லை என்று சொன்னவருமான ஒரு பெரியாருக்கு இவ்வளவு ஆடம்பரங்கள் நடத்தப்பட்டிருக்கிறது என்றால், பார்ப்பனக் கொள்கைக்கும் அவர்களது சூழ்ச்சிக்கும் வேறு என்ன உதாரணம் காட்ட வேண்டுமென்பதோடு, இதிலிருந்தாவது பார்ப்பனரல்லாத மக்கள் ஏதாவது படிப்பினை கற்றுக்கொள்ளமாட்டார்களா என்கின்ற ஆசையோடு இதை முடிக்கிறோம்.

குடி அரசு - கட்டுரை - 29.12.1935



# காங்கிரஸ் பிளவு

## மூன்று இடங்களில் அலங்கோலம்

## வீரவாகு பிள்ளையும் பிரிந்தாராம்

எங்கும் காங்கிரசுக்கே வெற்றியென்று கூறப்பட்டாலும் காங்கிரஸ் வெற்றியின் யோக்கியதை இப்பொழுதுதான் வெளிவரத் தொடங்குகிறது. திருநெல்வேலியில் தோழர்கள் கன்னியப்ப நாடார், ஷண்முக திரவிய நாடார், என். சங்கரலிங்க ரெட்டியார், என். சின்னக்கண்ணுப் பிள்ளை முதலியோர் காங்கிரசிலிருந்து விலகி விட்டதைப்பற்றி ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வேறொரு காங்கிரஸ் மெம்பரான தோழர் ஸ்ரீநிவாச ரெட்டியார் ராஜிநாமாச் செய்யாமலே ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து விட்டதாகத் தெரிகிறது.

ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தூத்துக்குடித் தோழர் எம்.ஸி.வீரவாகு பிள்ளையும் தமது பதவியை ராஜிநாமாச் செய்து விட்டாராம்.

மதுரை நகரசபை காங்கிரஸ் கட்சிக் காரியதரிசி தோழர் எஸ். ஜெகன்னாத ஐயங்காரும் தமது பதவியை உதறித் தள்ளிவிட்டாராம்.

ஒழுங்கும், கட்டுப்பாடும், தேசபக்தியும் தாண்டவமாடும் காங்கிரஸ் ஸ்தாபனங்களின் அலங்கோலத்தைப் பாருங்கள்! ஜில்லாபோர்டு நகரசபைகள் வேலை ஆரம்பமாகும் முன்னமேயே. இந்தக் குழப்பத்தினால் காங்கிரஸ்காரரின் ஸ்தல ஸ்தாபன நிருவாகம் எவ்வளவு அழகாக இருக்குமென்று கூறவும் வேண்டுமா?

குடி அரசு - கட்டுரை - 29.12.1935



RangaRakes tamilnavarasam.com

# அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அந்தணாளன் | - | பார்ப்பான் |
| அசார்சமாய் | - | அசட்டையாய் |
| அரசிறை | - | அரசாங்க வரி |
| அயனம் | - | வரலாறு |
| ஆகுதி | - | பலி (வேள்வித் தீயில் இடுதல்) |
| அந்தர்த்தானம் | - | மறைவு, மறைகை |
| உச்சாஹம் | - | உற்சாகம் |
| ஏதேஸ்டமாக | - | விருப்பமாக |
| ஏகாலி | - | வண்ணான் |
| கடாக்ஷம் | - | கடைக்கண் பார்வை |
| கண்டனை | - | கண்டனம் |
| காலாடிகள் | - | தொழிலற்றுத் திரிவோர்கள் |
| கியாதி | - | புகழ் |
| கிஸ்து | - | நிலவரி |
| குதவைப்பத்திரம் | - | அடமானப் பத்திரம் |
| குமரி இருட்டு | - | விடியற்கு முன் உள்ள இருள் |
| கொடிவழிப்பட்டி | - | வம்ச பரம்பரை விவரம் |
| சதிபதி | - | கணவன் மனைவியர் |
| சமேதரன் | - | கூடியிருப்பவன் |
| சரமக்கிரியை | - | இறப்புச் சடங்கு |
| சலூன் வண்டி | - | உயர்நிலையில் உள்ளவர்கள் பயணம் செய்வதற்கான தனி பெட்டி (தொடர்வண்டியில்) |
| சிங்காதனம் | - | அரியணை |
| சிஷ்ட பரிபாலனம் | - | நல்லவற்றைக் காப்பாற்றுதல் |
| சீஷர்கள் | - | மாணவர்கள் |
| சுமரும்படி | - | சுமக்கும்படி |
| சுவானம் | - | நாய் |
| தவக்கம் | - | தாமதம் |
| தனதானியாதி | - | பணம் தானியம் போன்றவை |
| துஷ்ட நிக்கிரகம் | - | தீயவற்றை அழித்தல் |
| தொண்ணை | - | பாதுகாப்புக்கென வைத்திருக்கும் கனமான தடி; பெரிய தடி |
| நட்டத்தில் | - | கோவணம் மட்டும் கட்டிக்கொண்டு ஆடையின்றி இருத்தல் |
| நாயாடி | - | திருவிதாங்கூரில் உள்ள காட்டுச் சாதியார் |
| நிக்கிரம் | - | அடக்குதல், தண்டனை |
| நிமித்திகர் | - | கணியர், குறிசொல்லுபவர் |
| நிர்த்தாரணம் | - | நிலையிடுகை |
| நிர்த்தாட்சண்யம் | - | இரக்கமின்மை |
| நிவேதனத் தொகை | - | கடவுளுக்குப் படைக்கும் அமுது |
| நிஷ்காரணம் | - | காரணம் இன்றி |
| நிஷ்டூரம் | - | வெறுப்பு, கொடுமை |
| பங்கா | - | பட விசிறி (தலைக்கு மேலாக தொங்கும் நீண்ட துணியை ஒருவர் இருபுறமும் அசையுமாறு இழுத்து காற்றமைப்பை ஏற்படுத்தும் பொறியமைப்பு |
| பகுமானம் | - | பாராட்டிப் போற்றல், கவுரவித்தல் |
| பச்சகானா | - | சிறுபிள்ளைத்தனமானவர் |
| பத்ததி | - | சொற்பொருள், வழிகாட்டும் நூல் |
| பரத்துவம் | - | கடவுள் தன்மை |
| பத்துவாப்படி | - | தீர்ப்புப்படி |
| பாதார விந்தம் | - | திருவடித் தாமரை |
| புத்திர களத்திர | - | மனைவி மக்கள் |
| புனருத்தாரணம் | - | மறு சீரமைப்பு |
| பேதிப்பு | - | பகை |
| பிண்டம் | - | தந்தையார் பொருட்டு போடும் சோற்றுருண்டை |
| பிரக்யாதி | - | புகழ் |

# குடி அரசு

# 1936 – 1

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 22

**பெரியார் திராவிடர் கழகம்**
29 இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் – திருவான்மியூர்
சென்னை – 600 041

## சுயமரியாதைத் தோழர்களும் காங்கிரசும்

சுயமரியாதைத் தோழர்கள் சிலர், ஜஸ்டிஸ் கட்சியானது இரண்டொரு சட்டசபைத் தேர்தலிலும், சில ஸ்தல ஸ்தாபன தேர்தலிலும் தோல்வி அடைந்து விட்டது என்றும் பாமர மக்களிடம் ஆதரவை இழந்துவிட்டது என்றும் பார்ப்பனப் பத்திரிகைகளில் காணும் சேதிகளை நம்பி காங்கிரசினிடத்தில் மோகம் ஏற்பட்டு காங்கிரசைத் தழுவ மேல் விழுந்து போகிறார்கள். ஆனால் அதற்காகத் தாங்களாகவே நேரே போய்ச் சேருவதற்குப் போதிய தைரியமில்லாமல் ''சுயமரியாதை இயக்கம் இப்படிக் கெட்டுப் போய் விட்டது'' ''அப்படிக் கெட்டுப் போய்விட்டது'', ''மந்திரிகள் பின்னால் வால் பிடித்துத் திரிகிறது'' ''பணக்காரர்களை ஆதரிக்கிறது'' என்கின்றது போன்ற பாட்டிப் பேச்சுக்களைச் சொல்லிக் கொண்டு போவதன் மூலம், தங்களை வீரர்கள் என்று கருதுவார்கள் என்று நினைத்துக் கொண்டு செல்லுகிறார்கள்.

சுயமரியாதை இயக்கம் மந்திரிகளைக் கவிழ்த்துப் பார்ப்பனர்கள் வசம் ஒப்படைக்கவோ, பணத்தை ''வெறுத்து'' கண்டவர்களிடம் பல்லைக் கெஞ்சி வாழவோ ஒரு நாளும் ஒப்புக் கொள்ளவில்லை, ஒரு நாளும் ஒப்புக் கொள்ளப் போவதுமில்லை.

ஆதலால் பணக்காரர்கள் ''அல்லாதவர்களும்'', மந்திரிகள் ''ஆகாதவர் களுமாய்'' இருக்கிற காங்கிரசுக்கே இத் தோழர்கள் போய்ச் சேருவதில் நமக்கு ஆக்ஷேபணையில்லை.

இக்கூட்டத்தாரால் ஜஸ்டிஸ் கட்சி ஒரு நாளும் வெற்றி பெற்றுவிட வில்லை. அவைகள் வெற்றிபெற்று நல்ல உச்சஸ்தானத்தில் இருக்கும்போது அதன் நிழலில் வாழ்ந்தவர்கள்தான் இன்று சுயமரியாதை இயக்கம் கெட்டுப் போய்விட்டது என்றும், அதற்கு மந்திரி மயக்கமும், பணக்காரர் பழக்கமும் இருக்கிறது என்றும் சொல்லுகிறவர்களாய் இருக்கிறார்களே ஒழிய வேறில்லை.

ஆதலால் இதே தோழர்கள் காங்கிரசில் இவர்களுக்கு ஏற்படும் மரியாதையை உணர்ந்தும், ஜஸ்டிஸ் கட்சி வெற்றி பெற்ற உடனும், அதற்கு செல்வாக்கும் சாய்காலும் ஏற்பட்ட உடனும் பலர் தாங்களாகவே மறுபடியும் வந்து சேர்ந்து மேலும் மேலும் உதவிபுரிவார்கள் என்கின்ற நம்பிக்கை நமக்கு உண்டு. ஆதலால் மனப்பூர்வமாகவே வழியனுப்பி உபசாரம் சொல்லுகிறோம்.

இந்த தோழர்கள் மாத்திரமல்லாமல் இவர்கள் போல் இனியும் பதினாயிரக்கணக்கான பேர்கள் காங்கிரசில் போய்ச் சேர்ந்த போதிலும் காங்கிரசில்

RangaRakes
tamilnavarasam.com

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொள்ளச் செய்யவோ, வருணாச்சிரம தர்மத்தை கைவிடச் செய்யவோ ஒரு நாளும் முடியாது என்பதை மாத்திரம் கல்லில் எழுதி வைப்போம்.

எப்போதாவது அந்தப்படி முடியும்படியான ஒருகாலம் ஏற்பட்டு, காங்கிரஸ் வர்ணாச்சிரமத்தை கைவிடவும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஒப்புக் கொள்ளவும் ஏற்பட்டு விடுமானால் நாமும் காங்கிரஸ் நிழலில் நின்று சத்தியமூர்த்திக்கு ஜே என்று கூட சொல்லிக்கொண்டு கொடி பிடித்து திரிய சிறிதும் வெட்கப்படமாட்டோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வேறு சில தோழர்கள் அதாவது சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி குற்றம் சொல்லாமலும், ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றி விஷமப் பிரசாரம் செய்யாமலும் இருக்கிறவர்கள் சிலர் ''தாங்கள் பெரும் எண்ணிக்கையாக காங்கிரசுக்குப் போய் காங்கிரசை பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்திற்கு கொண்டு வந்து விடலாம்'' என்பதாக சொல்லிக் கொண்டுபோக உத்தேசித்து இருக்கிறார்கள். இவர்கள் உண்மையானவர்களாக இருக்கலாம். ஆனால் ஏற்கனவே இதை பலதடவை பரீக்ஷித்துப் பார்த்து ஆய்விட்டது. இந்த எண்ணங்கள் எல்லாம் ''நாம் தோல்வி அடைந்துவிட்டோம்'' என்று உண்மையில் கருதுவதாலும் நமக்கு செல்வாக்கு போய்விடுமே என்று பயப்படுவதினாலும் ஏற்படும் அறிகுறிகளே என்பதுதான் நமதபிப்பிராயம்.

எலக்ஷன்களில் தோற்றுவிடுவோம் என்றே வைத்துக் கொள்ளலாம், மந்திரிகள் பதவிகளும் ஜஸ்டிஸ் கட்சியாரிடம் இருந்தே போய்விட்டதாகவே வைத்துக் கொள்ளலாம், இதனாலேயே இந்நாட்டில் பார்ப்பனரல்லாதார் செல்வாக்குடன் வாழமுடியாமல் போய்விடும் என்று யாராவது பயப்படக் கூடுமானால் அப்படிப்பட்ட அவர்களுக்கு காங்கிரசே நல்ல பாதுகாப்பான ஸ்தாபனம் என்பதை நாமும் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் நாம் மாத்திரம் காங்கிரசுக்கு சினேகிதர்களாகவோ கொடி தூக்கிக்கொண்டு சத்தியமூர்த்தியார் பின் திரியும் விபீஷணர்களாகவோ இல்லாமல் காங்கிரசின் ஜன்மத் துவேஷியாயும், சத்தியமூர்த்திகளின் வீரமுள்ள பிறவி எதிரிகளாகவும் இருக்கிறவர்களாய் இருந்தால் நாம் ''காங்கிரஸ் மந்திரிகளைக்கூட குரங்குபோல் ஆட்டி வைக்கலாம்'' என்கின்ற தைரியம் நமக்கு உண்டு. அந்தப்படி ஆட்டிவைக்காவிட்டாலும் அம்மந்திரிகளால் எவ்வித தொல்லையும் ஏற்படாமலாவது காத்துக் கொள்ளலாம் என்கின்ற தைரியம் உண்டு. ஆனால் நாமும் காங்கிரசுக்காரர்களாகவோ, காங்கிரஸ் நண்பர்களாகவோ ஆகிவிட்டால் அடியோடு நமது சுயமரியாதையை இழக்க நேரிடும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

ஒரு காலத்தில் தோழர்கள் ஈ.வெ.ராமசாமி, டாக்டர் பி. வரதராஜுலு, திரு. வி. கல்யாணசுந்திர முதலியார் முதலியவர்கள் காங்கிரசில் ஆதிக்கம் வைத்து இருந்தவர்கள் என்பதையும், மற்றொரு காலத்தில் காங்கிரசைக் கைப்பற்ற பார்ப்பனரல்லாதார் காங்கிரசில் ஏராளமாய்ப் போய்ச் சேர



வேண்டு மென்று இம்மூவரும் இருந்தே பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தோழர்கள் எ. ராமசாமி முதலியார், சர். ஷண்முகம் போன்றவர்கள் எல்லாம் காங்கிரஸ் மெம்பர்களானார்கள் என்பதையும், இவர்களாலும், இந்தத் தீர்மானங்களாலும் ஒன்றும் செய்ய முடியாமல் போனதோடு எவ்வளவோ பேர் முயன்றும் தோழர் எ. ராமசாமி முதலியாரை ஒரு காங்கிரஸ் கமிட்டி மெம்பராகக்கூட ஆக்க முடியாமல் போய்விட்டதோடு தோழர் வரதராஜுலு நாயுடு 1000 ரூபாய் செலவு செய்து சேலம் காங்கிரஸ் கமிட்டியைக் கைப்பற்றியும்கூட அது செல்லுபடி அற்றதாக ஆக்கப்பட்டு விட்டதென்பதையும் ஞாபகப்படுத்துகிறோம்.

ஆகவே இன்று உண்மையான பார்ப்பனரல்லாதார்கள் என்பவர்களுக்கு நாம் சொல்லுவதெல்லாம் ஒருவன் ''வெற்றி பெற்ற'' காங்கிரஸ் என்பதில் இருக்கும் அவமானத்தைவிட ''தோற்றுப்போன'' ஜஸ்டிஸ் கட்சி என்பதில் இருப்பது அவமானமாகாது என்பதேயாகும்.

எப்படி இருந்த போதிலும் காங்கிரசை பார்ப்பனரல்லாத ஆதிக்கத்துக்குக் கொண்டு வருவதற்காக என்று கருதிக்கொண்டு காங்கிரசில் போய்ச் சேர ஆசைப்படுகிற தோழர்களையும் இனியும் ஒரு தடவை பரீட்சித்துப் பார்க்கட்டும் என்கிற ஆசை மீதே மனப்பூர்வமாக ஆசி கூறி வழியனுப்பு உபகாரத்தோடு அனுப்பிக் கொடுக்கிறோம்.

மற்றொரு கூட்டத்தார் காங்கிரஸ் தேசீய சபை என்றும் அதில் அங்கம் வகிக்காமல் இருப்பது தேசத் துரோகமென்றும் கருதுகிறார்கள். அந்தக் கூட்டத்தில் தோழர் ஈ.வெ.ரா. போன்றவர்கள் எல்லாம் ஒரு காலத்தில் இருந்து தேசபக்த சிகாமணிகளாயும், தேசாபிமானச் சிங்கங்களாயும், தேசீய வீரர்களாகவும் இருந்து தேசத்துக்கோ சமூகத்துக்கோ ஒன்றும் செய்ய முடியாது என்பதைப் பார்த்துவிட்டு வெளி வந்தவர்கள்தான்.

இதெல்லாம் பாட்டி கதை ஆதலால் அதற்குச் சமாதானம் சொல்லும் முறையிலும் நாம் காலத்தை கழிக்க விரும்பவில்லை.

மற்றொரு கூட்டத்தார் அதாவது இன்று காங்கிரசில் தாங்கள் செல்வாக்கோடு இருப்பதாய் கருதிக்கொண்டிருக்கும் பார்ப்பனரல்லாத கூட்டத்தார் உண்மையிலேயே நம்மீது அபிமானம் வைத்து கூப்பிடுகிறார்கள். என்ன சொல்லி என்றால் இன்று காங்கிரசில் பார்ப்பனரல்லாதார் தொண்டர்களின் ஆதிக்கம் இருக்கிறது என்றும் இந்தச் சமயம் எப்படிப்பட்ட தீர்மானமும் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றும் இந்த தொண்டர்களின் நம்பிக்கைக்கும் மதிப்புக்கும் பாத்திரமான ஒரு பார்ப்பனரல்லாதார் தலைவர் இன்று அதில் இல்லை என்றும் ஆதலால் யாராவது வந்தால் அவருக்கு பட்டாபிஷேகம் சூட்டக் கூடும் என்றும் மனப்பூர்த்தியான ஆசையுடனும் அபிமானத்துடனும் அழைக்கிறார்கள். இவர்களுக்கு நமது ஹிருதய பூர்வமான நன்றி உரியதாகுக.



RangaRakes tamilnavarasam.com

அவ்வளவுதான் சொல்லக்கூடுமே ஒழிய மற்றப்படி அவர்களின் நினைவு கனவாகக்கூட இருக்க முடியாது என்பதோடு அவ்விஷயத்தை முடித்து விடுகிறோம். ஏனெனில் அந்தப்படி யாராவது சுதந்திர எண்ணமும் சுயமரியாதை உணர்ச்சியும் உள்ள ஒரு பார்ப்பனரல்லாதார் காங்கிரசுக்கு வருவார்களேயானால் சென்னை மாகாண காங்கிரசானது உடனே இந்திய காங்கிரஸ் வேலைக் கமிட்டியாரால் நிர்வகிக்கும்படியான நிலைமை அடைந்துவிடும், இந்தபடி பலதடவை ஆகியும் இருக்கிறது.

பார்ப்பனரல்லாதார்களில் பார்ப்பனரல்லாதார் தலைவர்களில் சுயநலக்காரர்கள், வஞ்சகர்கள், மோசக்காரர்கள், ஒழுக்கமில்லாதவர்கள் இருக்கலாம்.

ஆனால் அவர்கள் எல்லோரும் தோழர்கள் சத்தியமூர்த்தி சாஸ்திரியார் முதல் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் வரையில் போன்ற உலகமறிந்த காங்கிரஸ் தலைவர்கள் பொதுநல சேவைக்காரர்கள் என்பவர்களைவிட மோசமானவர்களும் நமது சமூகத்துக்கு கேட்டை விளைவிக்கக் கூடியவர்களுமல்ல என்றும் மலை உச்சியில் இருந்து கூறுவோம்.

மனித சுபாவத்தையும், தனி உடைமை தத்துவத்தையும் உணர்ந்தால் இவை நமக்கு ஒரு பெருங் குற்றமாகத் தோன்றாது.

முடிவாக நாம் சொல்லுவதென்ன வென்றால் சென்னை மாகாணத்தைப் பொருத்தவரையிலாவது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற இரண்டு பிரச்சினையை விட வேறு ஒன்றுமே இன்று இருக்க முடியாது. என்ன விலை கொடுத்தானாலும் பார்ப்பன ஆதிக்கத்தை எந்த துரையிலும் எந்த தலைப்பிலும் ஒழிப்பதே நமது பொது உடமை - நமது சமதர்மம் - நமது தேசீயம் - நமது முக்தி என்பதுதான் நமது அபிப்பிராயம்.

இதை ஏற்றுக்கொள்ளுபவர்கள் நம்முடன் ஒத்துழைக்கவும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் தங்கள் இஷ்டப்படி நடக்கவும் பூரண உரிமை உடையவர்கள்.

இதுவே நமது புது வருஷ செய்தி.

**குடி அரசு - தலையங்கம் - 05.01.1936**



# ஆரியர்களின் யோக்கியதை

ஜர்மனியர்கள் தங்களை ஆரியர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். நம் நாட்டுப் பார்ப்பனர்களும் தங்களை ஆரியர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

இந்து மத ஆதாரங்களும் ஆரிய மதம், ஆரிய வேதம், ஆரியக் கடவுள்கள், ஆரிய மன்னர்களின் கதைகள் என்பதாகத்தான் இருந்து வருகின்றன.

புராண ஆராய்ச்சிக்காரர்களும், பண்டிதர்களும், சரித்திர ஆராய்ச்சிக் காரர்களும், பாரதம், ராமாயணம் மற்ற புராதனக் கதைகள் ஆகியவைகளில் வரும் சுரர், அசுரர் என்கின்ற பெயர்களையும், ராக்ஷதர்கள் தேவர்கள் என்கின்ற பெயர்களையும், ராமன் அனுமான் என்கின்ற பெயர்களையும், ஆரியர் திராவிடர் என்கின்ற பிரிவையே பிரதானமாய்க் கொண்டவை என்பதாகவும் தீர்மானித்து புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். மேல்நாட்டுச் சரித்திரக்காரர்களும், சிறப்பாக அரசாங்கத்தார்களும் மேல்கண்ட ஆரியர் திராவிடர் என்கின்ற பிரிவை ஒப்புக்கொண்டு அந்தப்படியே ஆதாரங்கள் ஏற்படுத்தி பள்ளிப் பாடமாகவும் வைத்து வந்திருக்கிறார்கள்.

அரசியல்காரர்களில் தீவிர கொள்கை கொண்ட தேசீயவாதிகள், சமதர்மக்காரர்கள், பொதுவுடமைக்காரர்கள் என்று சொல்லப்படுகின்ற தோழர் ஜவகர்லால் நேரு போன்றவர்களும் தங்களது ஆராய்ச்சிகளில் ஆரியர் திராவிடர் என்கின்ற பிரிவுகளை ஒப்புக்கொண்டும் சரித்திரங்களில் இருந்துவரும் ஆரியர் திராவிடர் பிரிவுகளை ஒப்புக்கொண்டும் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஆரியர்களின் தத்துவம் எப்படி இருக்கிறதென்றால் இந்தியா அவர்களுடைய பூர்வீக நாடு என்று சொல்லுவதற்கில்லாமல் இருப்பதோடு இந்தியாவில் ஆரியர்களுக்கு உள்ள சம்மந்தம் கேவலம் ஐரோப்பாவிலும், ஆப்கானிஸ்தானத்திலும், அரேபியாவிலும், பர்சியாவிலும் இருந்து வந்து குடியேறின ஐரோப்பியர், முகமதியர்கள், பார்சியர்கள் ஆகியவர்களுக்கு இருந்து வரும் பொறுப்பும், உரிமையும், மனிதாபிமானமும் கூட இல்லாதவர்கள் என்று சொல்லும்படியான நிலையில்தான் இருந்து வருகிறார்கள்.

உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் ஜர்மனியர்கள் தங்களை ஆரியர்கள் என்று சொல்லிக்கொண்டு ஜர்மனி தேசத்திலுள்ள யூதர்களுக்கு



RangaRakes tamilnavarasam.com

ஜர்மனியில் இருக்க உரிமையில்லை என்று சொல்லி விரட்டியடிக்கும் தன்மை போலத்தான் இந்தியாவில் உள்ள மக்கள் ஆரியர்களை விரட்டி யடிக்கப்படவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.

ஜர்மனியர்கள் யூதர்களை விரட்டியடிப்பதற்குச் சொல்லும் காரணங்கள் இந்தியர் ஆரியர்களை விரட்டியடிக்கலாம் என்பதற்கு பொருத்தமானதாகவே இருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கதாகும்.

அதாவது ஜர்மனியர்கள் யூதர்களை விரட்டியடிப்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் சொல்லுகிறார்கள்.

அவைகளில் ஒன்று, யூதர்கள் தங்களுக்கு என்று தேசமில்லாதவர்கள் என்றும், தேசமில்லாத (அதாவது ஜிப்ஸி-மலை சாதியார்-லம்பாடிகள்-கூடாரத்தோடு திரிகிறவர்கள் போன்றவர்கள்) என்றும் அப்படிப்பட்டவர்களை ஒரு நாட்டில் வாழவிட்டால் அவர்கள் அந்த நாட்டின் வளப்பத்தையும் முற்போக்கையும் காட்டிக்கொடுத்து ஜீவிக்கிறவர்களாகிவிடுவார்கள் என்பது.

இரண்டாவது, யூதர்கள் சரீரத்தில் பாடுபடமாட்டாதவர்கள்.

சரீரத்தினால் பாடுபடாதவர்கள் ஊரார் உழைப்பைக் கொள்ளை கொண்டு வாழுபவர்களாவார்கள் என்றும், ஊரார் உழைப்பால் வாழுகின்றவர்கள் மனித சமூகத்துக்கு க்ஷயரோகம் போன்ற வியாதிக்கு சமமானவர்கள் என்பதோடு தங்கள் சோம்பேறி வாழ்க்கைக்கு ஆக நாட்டையும் மனித சமூகத்தையும் பிரிவினையிலும் கலகத்திலும் தொல்லையிலும் இழுத்து விட்டுக்கொண்டு சமாதான பங்கத்தை விளைவித்து மிக்க குறைந்த விலைக்கும் எதையும் காட்டிக்கொடுப்பார்கள் என்பதாகும்.

இந்த இரண்டு காரணங்களும் இன்று நம்நாட்டில் ஆரியர் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்களாதியோரிடம் இருந்துவருகின்றன.

முதலாவது ஆரியர்களுக்கு இன்னதேசம் என்பதாகவே ஒன்று இல்லை என்பதோடு, ஆரியர்கள் என்பவர்கள் சரீரத்தினால்பாடுபடாமல் மதம், புரோகிதம் ஜாதி உயர்வு, அரசியல் உத்தியோகம், தேசியத் தலைமை என்கின்றதான சூக்ஷித் தொழில்களால் சிறிதும் சரீரப்பாடுபடாமல் மற்ற ஆரியரல்லாத மக்கள் உழைப்பினாலேயே வஞ்சக ஜீவியம் நடத்துகிறவர்களாய் இருக்கிறார்கள். இவர்களுக்கு தங்கள் வாழ்க்கை தங்கள் ஆதிக்கம் என்பதல்லாமல் மற்றபடி எந்த தேசத்தைப்பற்றியோ எவ்வித ஒழுக்கத்தைப் பற்றியோ எந்த சமூகத்தைப்பற்றியோ சிறிதும் கவலை இல்லாதவர்களாய் இருக்கிறார்கள்.

இந்தக் காரணத்தாலேயே நமது பழைய ஆதாரங்கள், அகராதிகள் ஆகியவற்றில் ஆரியர்கள் என்றால் மிலேச்சர்கள் என்றும், ஒருவிதக் களைக்கூத்தர்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இதற்கேற்பவே ஆரியர்கள் இந்த நாட்டில் என்று காலடி வைத்தார்களோ அன்று முதல் இன்று வரை பலவித வஞ்சகங்களாலும், சூழ்ச்சிகளாலும்



ஏமாற்றி அவர்களை சின்னாபின்னமாகப் பிரித்து ஆபாசக் கற்பனைகளையும் நடத்தைகளையும் வேதமாகவும் மோக்ஷ சாதனமாகவும் ஆக்கி இந்நாட்டு மக்களுக்கு அவர்களே ஆதிக்கக்காரர்களாகவும் ''இகம்'' ''பரம்'' இரண்டிற்கும் தர்மகர்த்தாக்களாகவும், சமுதாயம் அரசியல் இரண்டிற்கும் தலைவர்களாகவும், வழிகாட்டிகளாகவும், **எஜமானர்களாகவும்கூட** தங்களை ஆக்கிக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் இவர்களது தர்மகர்த்தாத் தன்மையிலும், எஜமானத் தன்மையிலும், வழிகாட்டித் தன்மையிலும் இந்நாட்டுக்கு எந்தத் துறையிலாவது ஏதாவது கடுகளவு முற்போக்கோ, நன்மையோ ஏற்பட்டிருக்கின்றனவென்று யாராவது சொல்லமுடியுமா என்றுபார்த்தால் ஒன்றும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தியாவுக்கோ, இந்திய நாட்டு பழம் பெரும் குடி மக்களுக்கோ ஏதாவது ஒரு நன்மை சிறிதளவாவது ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப் படுமானால், அவற்றில் சிறிது முஸ்லீம் அரசர்களாலும், பெரும்பாலும் ஐரோப்பிய ஆக்ஷியிலும் ஏற்பட்டதென்றே சொல்லலாம்.

அதுவும் ஆரியர்களின் முட்டுக்கட்டையையும், தொல்லையையும் சமாளித்து ஏற்பட்டவைகள் என்றுதான் சொல்லவேண்டுமே ஒழிய மற்றப்படி ஆரியர்கள் முயற்சியோ, உதவியோ ஒரு சிறிதாவது கொண்டு ஏற்பட்ட தென்று எதையும் சொல்லமுடியாது.

மேலும் இன்று அரசியல், சமூக இயல், பொருளியல், அறிவியல் ஆகிய நான்கு துறைகளிலும் இந்நாட்டு மக்கள் அடைந்திருக்கும் ஈன நிலைக்கு இந்த ஆரியர்களே காரணமென்று சொன்னால் அதுவும் மிகையாகாது.

ஆகையால் தேசமில்லாதவர்களும், தேக உழைப்பு இல்லாதவர்களுமான சமூகம் எந்த நாட்டிற்கும் கேடு விளைவிக்கக்கூடியது என்பதோடு முக்கியமாக இந்தியாவுக்கு அது ஒரு பெருங்கேட்டையே விளைவித்துக் கொண்டிருப்பதாகவே இருந்து வருகிறது.

இதை நமது பாமர மக்கள் உணராமல் ஏமாந்து போய் தங்களுக்குத் தாங்களே கேட்டை விளைவித்துக் கொள்ளுகிறார்கள் என்பது ஒரு புறமிருக்க, இந்நாட்டு ஆரியரல்லாத மக்களில் படித்தவர்களாயும், விஷயமறிந்தவர்களாயுமுள்ள ஒரு கூட்ட மக்கள் இவ்வாரியர்களுக்கு உள் ஆளாயிருந்து சமூகத்தையே அடியோடு காட்டிக்கொடுத்தும் - கெடுத்தும் தாங்கள் வாழ முயற்சிக்கும் இழிநிலையை உணரும்போது ஆரிய சுபாவம் இவர்களது ரத்தத்தில் எப்படி ஊறியது என்று ஆச்சரியப்படவேண்டி இருப்பதை வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 05.01.1936**



RangaRakes tamilnavarasam.com

# புகையிலை வரி

அரசாங்கத்தார் இவ்வருஷத்தில் புகையிலைக்கு வரி போட வேண்டு மென்பதாக உத்தேசித்து அதற்காக ஒரு மசோதா தயாரித்து இருக்கிறார்கள்.

இவ்வரியானது புகையிலைக்காக வரி போடவேண்டுமென்பதாக இல்லாமல் 1936 வருஷத்து அரசியல் வரவு செலவு திட்டத்தைச் சரி செய்வதற்காகப் போட்டுத் தீரவேண்டியதாய் ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

காரணம் என்னவெனில் நிலவரியில் 100க்கு 12½ விகிதம் குறைக்கப்பட்டதில் சர்க்காருக்குக் குறைந்து போன வரி வருவாய்க்கு வேறு ஏதாவது ஒரு வழி கண்டுபிடிக்கவேண்டியதாக ஏற்பட்டு விட்டதாம்.

நில வரி குறைத்ததில் நிலம் உடையவர்களுக்கு லாபம். அதற்கு பதிலாக என்று புகையிலை வரி போடுவதில் விவசாயிகளுக்கும், சிறிய வியாபாரிகளுக்கும் புகையிலை உபயோகிக்கும் ஏழைமக்களுக்கும் நஷ்டம்.

ஆகையால் நிலவரியை பழையபடி உயர்த்தியாவது புகையிலைவரி போடாமல் விட்டுவிடுவதே நியாயம் என்றால் அது தவறாகாது. அரசாங்கத்தார் ஏதாவது ஒரு வரியைக் குறைத்தால் குறைத்தவுடன் அந்தக் கணக்குச் சரிக்கட்டும்படி செலவையும் குறைத்துக்கொண்டிருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் ஆழம் தெரியாமல் காலை விட்டுக்கொண்டால் இரண்டு கிளர்ச்சிக்கு இடம் கொடுத்தவர்களாகிவிடுகிறார்கள்.

காங்கிரசுக்காரர்கள் செய்கின்ற சூட்சிகளாலும், அரசாங்க உத்தியோகத்தில் பெரிதும் பார்ப்பனர்களே இருப்பதாலும் பார்ப்பன உத்தியோகஸ்தர்கள் அரசாங்கத்துக்குத் துரோகம் செய்யாமல் இருக்கவேண்டுமே என்கின்ற பய பக்தியினால் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் கொள்ளை சம்பளத்தில் கையை வைக்க பயப்படுகிறார்கள்.

முனிசிப்புகளுக்கும், ஜட்ஜிகளுக்கும் மற்றும் சர்க்கார் காரியாலயத்தில் உள்ள அதிகாரிகளுக்கும் கொடுக்கப்படும் சம்பளங்கள் ரூபாய்களை புளியங்கொட்டை மாதிரியே கருதி அள்ளிக் கொடுக்கப்படுகின்றன.

பார்ப்பனர்களுக்கு அரசாங்கத்தில் கொடுக்கப்படும் சம்பளத்துக்கு ஒரு உதாரணமும் யோக்கியதாம்சமும் வேண்டுமானால் ஒருசிறு உதாரணம் காட்டுகிறோம்.



ஒரு காலத்தில் இரண்டு பார்ப்பன வாலிபர்கள் மைசூர் சிவில் சர்வீஸ் பரீக்ஷைக்குப் போனார்கள். அதில் ஒருவர் பாசானார். ஒருவர் பெயிலானார். பாசானவர் மைசூர் அரசாங்கத்தில் ஆயிரத்துச் சில்லறை ரூபாய் வாங்குகிறார். (fail) பெயிலானவர் மதராஸ் அரசாங்கத்தில் இன்று 3000த்துச் சில்வானம் ரூபாய் வாங்குகிறார்.

இதுபோலவே தான் பார்ப்பனர்களின் உத்தியோக வேட்டையும், பார்ப்பன ஆதிக்கமும் காங்கிரஸ் தொல்லையும் நம்நாட்டு மக்களின் வரிப்பணங்களை உறிஞ்சிவிடுகிறதோடு எப்படியாவது வருஷம் ஒரு புது வரி போட்டுத் தீரவேண்டிய நிலையிலேயே சர்க்காரைக் கொண்டு வந்து விட்டு விடுகிறது.

நம் நாட்டுக்கும் மக்களுக்கும் இவ்வளவு தொல்லையைக்கொடுத்த பார்ப்பனீயத்துக்கு காங்கிரசுக்கு பொன்விழாக் கொண்டாடப்படுகிறது.

நமது விபீஷணர்களும், மடையர்களும், மூடர்களும், அசடுகளும் அதற்குப் பணம் கொடுத்து பாரதமாதாவுக்கு ஜே போடுகிறார்கள்.

இப்படிப்பட்ட ஜனங்களுக்கு புகையிலை வரி மாத்திரமல்லாமல் முட்டாள்வரி என்பதாக ஒரு வரி கூட புதிதாய் திமிர் வரி போல் போட்டாலும் ஆக்ஷேபிக்க ஆள் இல்லை என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது.

யாராவது ஆக்ஷேபிக்க தொடங்கினாலும் இவ்வளவு தொல்லைகளையும் விளைவித்த பார்ப்பனர்கள், பாமர மக்களுக்கு ஜஸ்டிஸ் கட்சியைக் காட்டிவிட்டு உசுப்படுத்திவிடவும் அவர்கள் உசுப்புக்கு மயங்கி வாலை ஆட்டிக்கொண்டு ஜஸ்டிஸ் கட்சியாரைப்பார்த்து குரைப்பதில் தான் முடிகிறது. மற்றப்படி உண்மையை கண்டுபிடிக்க மிராசுதாரர்களுக்கும் சக்தி இல்லை, விவசாயிகளுக்கும் சக்தி இல்லை, தொழிலாளிகளுக்கும், நடுத்தர மக்களுக்கும் சக்தி இல்லை என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

இதை அறிந்த சர்க்கார் இப்போது புகையிலை வரி விஷயத்தில் எப்படி மக்களை ஏமாற்றலாம் என்று பல வழிகள் தேடிக்கொண்டு இருக்கிறதாகத் தெரிகிறது.

அவற்றுள் ஒன்று புகையிலை வரிக்குப் பதிலாக பழயபடி டோல் கேட்டு சுங்கத்தை ஏற்படுத்தலாமா என்று பார்க்கிறார்களாம்.

அல்லது ஜனங்கள் கண்டுபிடிக்க முடியாதபடி ஏதாவது வரிகள் கண்டுபிடிக்கலாமா என்றும் பார்க்கிறார்களாம்.

இதற்கு ஆக வேண்டி காங்கிரசுக்காரரை கைவசப்படுத்திக் கொண்டால் தான் எந்த வரி போட்டாலும் கிளர்ச்சி ஏற்படாது என்று உத்தியோகப் பார்ப்பனர்கள் சர்க்காருக்கு யோசனை சொல்லுகிறார்களாம்.

ஆதியில் தஞ்சை மிராசுதாரர்கள் நிலவரி குறைக்கவேண்டும் என்று கூப்பாடு போட்டபோதே நாம் ‘‘எதற்கு ஆக குறைக்கவேண்டும்? யார்



RangaRakes tamilnavarasam.com

தலையில் கையை வைக்க குறைக்கவேண்டும்'' என்று கேட்டோம். அப்போது அனேக பார்ப்பனரல்லாத முண்டங்கள் நம்மை தேசத்துரோக லிஸ்டில் சேர்த்தன.

இப்போது புகையிலை வரி போடப்போகிறோம் என்று சர்க்கார் சொல்லும்போது இந்த மிராசுதாரர்கள் கூட்டம் எங்கே என்று பாருங்கள். ஏதாவது பேச்சு மூச்சு காட்டுகின்றனவா?

''வேறு யார் தலையிலாகிலும் கையை வைத்து எங்கள் (மிராசுதாரர்கள்) வரியைக் குறைத்தால் போதும்'' என்றுதானே சொல்லுகின்றார்கள்.

வரி குறைக்கவேண்டும் என்று கேட்பவர்கள் சர்க்கார் நிர்வாக வரவு செலவை சரிக்கட்ட வகை இல்லாமலும் வரவு செலவு சரியாய் போகும்படி சர்க்காரை நிர்ப்பந்தப்படுத்தாமலும் வெறும் கூப்பாடு போடுவதன் மூலம் வரியை மாத்திரம் குறைத்துக்கொண்டால் அந்த குறைந்த வரி ''ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி'' என்பதுபோல் ஏழை விவசாயிகள் தலையிலும் கூலிக்கார தொழிலாளிகள் தலையிலும் தான் எப்படியாவது விடிந்து தீரும்.

நமது ''பொருளாதார நிபுணர்கள்'' ''தேசாபிமானச் சிங்கங்கள்'' இந்த உண்மைகளை மறைத்து, ஏழைகளை ஏமாற்றி பணக்கார மிராசுதாரர்களுக்கு உதவி செய்துவிட்டு வரவு செலவை சரிக்கட்ட சர்க்காரார் புது வரி போட்டால் முட்டாள்களிடமும், கூலிகளிடமும் கொடியைக் கொடுத்து காந்திக்கு ஜே சொல்லச் சொல்லி ஜஸ்டிஸ் கட்சியை வையச் சொல்லுவதோடு பரிகாரம் செய்து விடுகிறார்கள்.

இந்தத் தந்திரம் பார்ப்பனர்களுக்கிருப்பதாலேயே வெள்ளைக்காரர் களும் சர்க்காரும் பயந்து பார்ப்பனர்களுக்கு சில சமயங்களில் உள் உளவாய் இருந்து வெளியில் மாத்திரம் காங்கிரசுக்கு விரோதிகள் போல் காட்டிக் கொண்டு நம் துடையில் கயிறு திரித்து விடுகிறார்கள்.

சமீப காலமாகப் பார்ப்பன அதிகாரிகள் ஜட்ஜி முனிசிப்பு முதல் டிப்டி கலைக்டர் தாசில் முதல் போலீசு சூபரண்டு எட் கான்ஸ்டேபில் வரை பலர் காங்கிரசை ஆதரித்தும் காங்கிரஸ் சடங்குகளுக்கு உதவி செய்தும்கூட புது வருஷப் பட்டங்களில் 100க்கு 90 பார்ப்பனர்களுக்கும் பிரமோஷன்களில் 100க்கு 95 பார்ப்பனர்களுக்கும் கொடுப்பதோடு மெயில் பத்திரிகை உள்பட பார்ப்பனரல்லாதாரின் இயக்கத்தையும் ஜஸ்டிஸ் கட்சி வேலை களையும் குறைகூறி பார்ப்பனர்களை தட்டிக்கொடுத்த வண்ணமாகவே இருந்து வருகின்றன.

சாதாரணமாக வரவு செலவுகளை சரிக்கட்ட வேண்டுமானால் ஆட்டுக்கு கழுத்தில் தொங்குகின்ற இரண்டு மாம்சத் துண்டு போல ஒரு பயனும் இல்லாமல் இருக்கும்படியான டிப்டி கலைக்டர், டிப்டி சூபரண்ட் போன்ற சில தபாலாபீஸ் மாதிரி காகிதங்களுக்கு முத்திரை போட்டு



சுருக்குக் கையெழுத்திட்டு கட்டி அனுப்பும் வேலையைத் தவிர வேறு ஒரு பொறுப்புமில்லாத சில டிப்டி உத்தியோகங்களையும் ரிவினியூ போர்ட் முதலியவைகளையும் எடுத்துவிட்டால் அரசாங்கத்துக்கு எவ்வளவோ 10 லட்சக்கணக்கான ரூபாய் மிச்சப்பட்டு விடும்.

மற்றும் முனிசீப்பு முதலியவர்களுக்கு முன் போலவே 200ரூபாயில் இருந்து ஆரம்பிப்பதும் போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலியவர்களுக்கு முன் போலவே 70 ரூபாயில் இருந்தும் சப் இன்ஸ்பெக்டர் முதலியவர்களுக்கு 35 ரூபாயிலிருந்தும் ஆரம்பிப்பதுமான காரியங்கள் செய்யப்படுமானால் நீதி நிர்வாகம் ஆகிய இந்த இரண்டு இலாக்காக்களில் மாத்திரம் மேலும் சர்க்காருக்கு எத்தனை 10லட்சம் ரூ. மீதியாக்கி மற்றும் எவ்வளவோ வரியை குறைக்கவும் கூடும் என்பதும் யோசித்தால் விளங்காமல் போகாது. இவ்வுத்தியோகங்களுக்கு தகுதி உள்ளவர்கள் கிடைக்கமாட்டார்கள் என்று சொல்லமுடியுமா என்று பார்த்தால், பி.ஏ., பி.எல். பாஸ் செய்தவர்கள் மீ 40 ரூ. சம்பளத்துக்கு திண்டாடுகிறார்கள். பி.ஏ., எம்.ஏ பாஸ் செய்தவர்கள் மீ 20, 25ரூ. சம்பளத்துக்கு திண்டாடுகிறார்கள். இவர்களை எல்லாம் அயோக்கியர்களுக்கு பிறந்தவர்கள் என்றும், 400, 500, 1000, 2000 ரூ. சம்பளம் வாங்குகிறவர்கள்தான் யோக்கியர்களுக்கு பிறந்தவர்கள் என்றும் சொல்லிவிட முடியுமா?

தேசத்தில் வேலை இல்லாத சாதாரண ஜனங்கள் எவ்வளவு மதிப்புள்ள மானத்தையும் எவ்வளவு சின்ன விலைக்கும் விற்றுவிட்டு கொடியைப் பிடித்துக்கொண்டு காந்திக்கு ஜே, சத்தியமூர்த்திக்கு ஜே, ருக்மணி அம்மாளுக்கு ஜே, கோதை நாயகி அம்மாளுக்கு ஜே என்று தெருவில் மான ஈனமில்லாமல் திரிகிறார்கள் என்பதை நேரில் பார்த்தால் இந்த நாட்டின் ஈன நிலை நன்றாய் விளங்கும்.

எனவே பொது மக்கள் கோடிக்கணக்காய் இப்படி பரதவிக்க ஒரு சிலருக்கு 400, 500, 1000, 2000, 4000, 5000 என்று அள்ளிக்கொடுப்பது என்றால் இப்படிப்பட்ட காரியங்கள் பொது ஜன நன்மைக்கு என்று செய்வதா அல்லது வேறு காரியத்துக்கு ஆகச் செய்வதா என்பது பெரிய விடுகதையாக நிற்கிறது.

ஆகையால் சர்க்கார் பார்ப்பனத் தொல்லைக்கும் பாமர மக்கள் முட்டாள் தனத்துக்கும் பயப்படாமல் தங்களுக்கு உண்டான உறுதியுடன் நின்று பெரும் சம்பளங்களைக் குறைத்து வரவு செலவுகளை சரிக்கட்டுவதன் மூலம் புதிய வரி போடாமல் இருக்க வேண்டும் என்பதை சர்க்கார் நன்மைக்காகவே தெரிவித்துக் கொள்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 05.01.1936**



RangaRakes tamilnavarasam.com

# அரசாங்கமும் மந்திரியும் கவனிப்பார்களா?

### முனிசிபல் நிர்வாகம்

முனிசிபல் நிர்வாகங்களில் இருந்துவந்த சகிக்க முடியாத ஊழல்களையும், மோசடிகளையும் நன்றாய் அறிந்த பிறகே முனிசிபாலிட்டிக்கு கமிஷனர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள். கமிஷனர்கள் ஏற்பட்டும் அனேக முனிசிபாலிட்டிகளின் பணங்கள் கொள்ளை போகின்றன பாழாகின்றன. பல முனிசிபாலிட்டிகளின் கமிஷனர்கள் சேர்மென் எச்சை துப்புவதற்கு எச்சைக் கிண்ணம் ஏந்தி நிற்பதை நேரில் பார்க்கிறோம்.

இன்னும் மற்ற விஷயங்கள் வெளியிட பரிதாபகரமாய் இருக்கிறது. இதைப் போல ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் ஒரு மோச நாடகம் வேறு இல்லை. ஆதலால் முனிசிபல் நிர்வாகத்தை உத்தேசித்தும் முனிசிபல் வரி கொடுப்போர் பணம் நல்ல வழியில் பயன்பட உத்தேசித்தும் கமிஷனர்கள் சுயமரியாதையோடு இருக்கவேண்டும் என்பதைக் கருதியும் முனிசிபல் சட்டத்தில் தக்கதொரு சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 05.01.1936**



# தீண்டப்படாதாருக்கு தனித்தொகுதி

காங்கிரசுக்காரர்கள் தீண்டப்படாத மக்களை ஏமாற்றவும், அவர்களுக்குள் பிரிவினைகளை ஏற்படுத்தவுமான காரியங்களில் லஞ்சம் கொடுப்பது போன்ற முறைகளால் வெற்றிபெற்று வருவதால் அரசாங்கத்தார் எப்படியாவது தீண்டப்படாத மக்கள் என்பவர்களுக்கு ஸ்தல ஸ்தாபனங்களில் தனித் தொகுதி முறையை ஏற்படுத்த வேண்டும் என்றும் முதல் மந்திரியார் இதை கவனித்து ஸ்தல ஸ்தாபன சட்டங்களில் இம்முறைகளை புகுத்த புதிய திருத்த மசோதா கொண்டுவர வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**குடி அரசு - பெட்டிச் செய்தி - 05.01.1936**



RangaRakes tamilnavarasam.com

# தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்

## இலங்கை மந்திரிக்கு உபசாரம்

## மந்திரி பதில்

தலைவர் அவர்களே! கொழும்பு மந்திரியார் கனம் தோழர் பெரி சுந்திரம் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கும் கூட்டத்தில் கலந்து கொள்வதில் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இலங்கை நமக்கு ஒரு நல்ல படிப்பினையான நாடாகும்.

நாம் இன்று எதற்கு ஆகப் பாடுபடுகின்றோமோ அதே காரியத்துக்கு ஆக பழங் காலத்திலிருந்தே பெரியதொரு முயற்சி நடத்திருப்பதாக இலங்கை சம்மந்தமான புராணம் (ராமாயணம்) கூறுகிறது.

அப் புராணம் எவ்வளவுதான் கற்பனையாக இருந்தாலும் பார்ப்பனர் தொல்லையையும் அதோடு தமிழ் மக்கள் போர் செய்ததையும், அதில் பார்ப்பனர்கள் கையாண்ட சூக்ஷியையும் நன்றாய் விளக்குகிறது.

இலங்கை '' சரித்திரம்'' தமிழ் மக்களின் பெருமைக்கும் சிறுமைக்கும் உதாரணமாகத் திகழும் கதையென்றே சொல்லவேண்டும்.

தமிழ் மக்களில் இராவணன் போன்ற சுத்த சுயமரியாதை வீரர்கள் இருந்தார்கள் என்பதையும், விபீஷணன் போன்ற துரோகிகள் இருந்து சகோதரத் துரோகம் செய்து பயனடைந்து வந்திருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

இக்கதையை நாம் வெறுத்துவிட முடியாது. ஏனெனில் நம் தமிழ் மக்கள் இன்றும் அதுபோலவேதான் பல வீரர்களையும், சில விபூஷணர் களையும் கொண்ட சமூகமாய் இருக்கிறது.

மற்றும் ராமாயணத்தில் தமிழ் மக்களை வானரங்களாகக் கற்பிக்கப் பட்டியிருக்கிறது ஒருபுறமிருந்தாலும் இன்றும் தமிழ் மக்களில் அனேகர் புராண வானரங்கள் போலவே எதிரிக்கு மூட்டை சுமக்கும் ஈன தன்மையிலும் இழி தன்மையிலும் ஈடுபட்டிருக்கிறதை பார்க்கிறோம்.

அதில் ஆரியர் வெற்றிக்கு அவர்கள் செய்த சூக்ஷிகளும், விஷமங் களும், அக்கிரமங்களும் இன்றும் ஆரியர்கள் என்னும் பார்ப்பனர்களுக்கு





ஒரு வழிகாட்டியாகவே இருந்து வருகிறது. அம்முறையையேதான் பார்ப்பனர்கள் இன்றும் கையாளுகிறார்கள். தமிழ் மக்களின் நிலையும் ராமாயணக் கதைபோல் தான் இருந்து வருகின்றது.

இன்றும் நம் தமிழ் மக்களில் பார்ப்பனர்களின் சூஷிகளையும், தொல்லைகளையும் அறிந்து அதிலிருந்து விடுபட பாடுபடும் மக்களிலேயே அனேகம்பேர் ராமாயணக் கதையை புண்ணிய காலக்ஷேபமாகவும், மோக்ஷ சாம்ராஜ்யத்துக்கு வழிகாட்டியாகவும் கருதி மதிக்கிறவர்களும், பூஜிக்கிறவர்களும் உண்டு.

நம் தமிழ்மக்கள் உத்தியோகம் பெறுவதற்கு ஆக மாத்திரம் பார்ப்பனர்களை வெறுப்பார்கள்; இழிவாய் கருதி வைவார்கள்.

ஆனால் மோக்ஷம் பெறுவதற்கு என்றாலோ பார்ப்பனர்களை குல குருவாய், பூதேவர்களாய் மதித்து அவர்கள் காலலம்பின தண்ணீரை புண்ணியத் தீர்த்தமாய் அருந்துவார்கள். இப்படிப்பட்ட சமூகத்தை பார்ப்பனர்கள் வஞ்சிப்பதிலோ ஆதிக்கம் செலுத்துவதிலோ அதிசயம் இருக்க முடியுமா?

ஆகவே நமக்கும் நம்மெதிரிகளுக்கும் பயன்படதக்க நல்ல ஒரு படிப்பினைக்கு இலங்கை நகரம் மிகவும் பயன்படத்தக்கது என்பதே எனதபிப்பிராயம்.

மற்றபடி தோழர் பெரி சுந்திரம் அவர்களை சுமார் 15, 16 வருஷமாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். 1919-ம் வருஷத்தில் சென்னை மாகாண சங்க மகாநாட்டில் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களும், தோழர் விஜயராகவ ஆச்சாரியார் அவர்களும், நானும் இந்திய தொழிலாளர் நிலைமையை அறிந்து அவர்களுக்கு வேண்டியது செய்வதற்கு ஆக என்று நியமிக்கப் பட்டபோதும் கனம் பெரி சுந்திரம் அவர்களுடன் கடிதப் போக்குவரத்து நடத்தினதும், அவர் லங்கைக்கு வந்தால் வேண்டிய உதவி செய்வதாக தெரிவித்திருந்ததும் எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆனால் அவருக்கு ஞாபக மிருக்குமோ என்பது சந்தேகம். (பெரி சுந்திரம் நன்றாய் ஞாபகமிருக்கிறது என்றார்) மற்றும் நான் ரஷியாவில் இருந்து திரும்புகையில் கொளும்பில் வந்தவுடன் கொழும்பு பிரமுகர்கள் நடத்திய பாராட்டு விருந்தொன்றுக்கு மந்திரி பெரி சுந்திரம் அவர்கள் தலைமை வகித்து நமது கொள்கைகள் முழுவதையும் ஆதரித்துப் பேசி கவுரவித்திருக்கிறார். மற்றும் இந்தியாவில் இருந்து கொளும்புக்குச் செல்லும் பிரமுகர்களுக்கு அங்கு வேண்டிய உதவி செய்து வருவதோடு சிறப்பாக இந்திய தொழிலாளிகள் விஷயத்தில் வெகுகாலமாகவே பாடுபட்டு வருகிறார்.

தொழிலாளர் சார்பாகவே லங்கை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிலோன் அரசாங்கத்தில் தொழிலாளர்கள் மந்திரியாக வீற்றிருக்கிறார்.

RangaRakes tamilnavarasam.com

தோழர் பெரி சுந்திரம் அவர்கள் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டு மந்திரியாகி தொழிலாளர்களுக்கும், ஏழை மக்களுக்கும் உழைக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்பட வேண்டும் என்றும், அவர் முழு ஆயுளும் சுகஜீவியாய் மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருக்க வேண்டும் என்றும் ஆசைப்படுகிறேன்.

குறிப்பு: *26.12.1935 ஆம் நாள் கொழும்பு அமைச்சர் தோழர் பெரி சுந்திரம் அவர்களுக்கு சென்னை தென் இந்திய நலஉரிமைச் சங்கத்தாரால் நடத்தப்பெற்ற வரவேற்பு கூட்டத்தில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 05.01.1936**


20 குடி அரசு

# பகுத்தறிவு

இரண்டாம் ஆண்டு பிறந்து விட்டது.

வருட சந்தா ரூ. 1—0—0

உடனே சந்தாதாரராகச் சேருங்கள்.

பின்னால் சேர்ந்தால் முந்திய இதழ்கள் கிடைப்பது கஷ்டமாகிவிடும்.

"குடி அரசு" ஏஜண்டுகளிடமும், ஹெக்கின்பாதம் புக்ஸ்டால்களிலும் கிடைக்கும்.

குடி அரசும், பகுத்தறிவும் சேர்த்து ரூ. 3—8—0

மானேஜர், "பகுத்தறிவு" ஆபீஸ், ஈரோடு.

இராமாயண ஆராய்ச்சி 4-காண்டங்கள் சேர்த்து ஒன்றாய் தருவிப்பவர்களுக்கு விலை ரூ. 1—0—0

"கர்ப்ப ஆட்சி" என்னும் புத்தகம் வெளிவந்து விட்டது!!!

விலை அணா 0-6-0 தபாற் செலவு அணா 0-2-0.

புராணங்கள்.

இதன் விலை அணா 8. 10 அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக்போஸ்டில் அனுப்பப்படும்

புது ருஷ்யா.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கதை.

இதன் விலை அணா 8. 10 அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு புக்போஸ்டில் அனுப்பப்படும்

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.



RangaRakes tamilnavarasam.com

# முஸ்லீம்கள் தேசத் துரோகிகளா?

தனித்தொகுதி வேண்டும், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கூறுபவர்களுக்கு தேசத்துரோகப் பட்டம் சூட்டுவது ஒரு கூட்டத்தாரின் வாடிக்கையாக இருந்து வருகிறது. அந்தக்கூட்டத்தார் யார்? பார்ப்பனர்களும் பார்ப்பன சோதியில் கலந்த ஒரு சில பார்ப்பனரல்லாதாருமே. ஜனநாயகக் கொள்கைக்கு தனித்தொகுதியும் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமும் முரண்பட்ட தென்று சொல்லப்பட்டாலும் இந்தியாவின் விசேஷ நிலைமைக்கு அவை இன்றியமையாதனவாகும். இந்திய நிலைமைக்கு சமதர்மக் கொள்கை பொருந்தாதென்று கூறும் காந்தியாரும் காங்கிரஸ் வாலாக்களும் அந்தந்த தேச நிலைமைக்குத் தக்கபடி கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டுமென்பதை மறைமுகமாக ஒப்புக்கொள்ளத்தான் செய்கிறார்கள்.

நூற்றுக்கணக்கான ஜாதிகளும் பாஷைகளும் உடைய இந்தியாவிலே தேசீய உணர்ச்சி என்பது குதிரைக்கொம்பாகவே இருக்கிறது; அப்படித்தான் இருக்கவும் முடியும். ஊன்றிப்பார்த்தால் இந்திய நிலைமைக்கு ஜனநாயக ஆட்சி பொருத்தமானதே அல்ல. ஜனநாயக ஆட்சியை விட ஹிட்லர் ஆட்சியே இந்தியாவுக்குப் பொருத்தமானதென்றும்கூடச் சொல்லி விடலாம். இருந்தாலும் ''ஜனநாயகமுறையில்'' உருவாக்கப்பட்ட ஒரு அரசியல்திட்டம் இந்தியர்களுக்கு வரப்போவதால் அந்தத் திட்டத்தினால் எந்த வகுப்பாருக்கும் பாதகம் ஏற்படாத முறையில் தேவையான பாதுகாப்புகள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியமாகும். பிரிட்டிஷ் முதல் மந்திரியின் வகுப்புத் தீர்ப்பு எந்த சமூகத்துக்கும் பூரண திருப்தி யளிக்கவே இல்லையாம். ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒடுக்கப்பட்டவர் களும் அதைக் கண்டித்தே வருகிறார்களாம். அப்படியானால் வகுப்புத் தொல்லை உள்ள நாட்டில் எல்லா வகுப்பாருக்கும் திருப்தியளிக்கக் கூடிய ஒரு சமரசத்திட்டம் காண்பது எப்போதுமே யாராலுமே முடியாத காரியமே. எனவே வரப்போகும் சீர்திருத்தம் வெற்றிகரமாக நடந்து தீரவேண்டுமானால் தனித் தொகுதியையும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். அந்தப்படி ஒப்புக்கொள்ளாவிட்டால் எவ்வளவு சீர்திருத்தம் வந்தாலும் உள்க்கலகம் ஒருநாளும் ஒழியாது.

இதற்கு கல்கத்தாவில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டையே போதிய அத்தாட்சியாகும். வங்காளத்தில் முஸ்லீம்கள் இந்துக்களைப்போலவே சரிசமமான ஜனத்தொகை கொண்டவர்கள். அப்படி இருந்தும் கல்கத்தா



கார்ப்பரேஷனில் சகல உத்தியோகங்களிலும் முஸ்லீம்களுக்கு நூற்றுக்கு 20 ஸ்தானங்கள் வழங்கவேண்டும் என்று கல்கத்தா கார்ப்பரேஷன் முஸ்லீம் அங்கத்தினர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்கள். ஹிந்து கௌன்சிலர்கள் அதை ஒப்புக்கொள்ளாமல் முட்டுக்கட்டை போட்டார்கள். அதன் பயனாய் கல்கத்தா கார்ப்பரேஷன் முஸ்லீம் அங்கத்தினர்களில் ஒருவர் நீங்கலாக மற்ற யாவரும் ராஜிநாமாச் செய்துவிட்டார்கள். தமது சகாக்களைப் பின்பற்றி முஸ்லீம் மேயரும் ராஜிநாமாச் செய்துவிட்டார். முஸ்லீம் மெம்பர்கள் தீர்மானத்தை கல்கத்தா கார்ப்பரேஷன் அங்கீகரிக்கும் வரையில் கல்கத்தா முஸ்லீம்கள் திருப்தியடையமாட்டார்கள் என்றும், கல்கத்தா கார்ப்பொரேஷனின் தற்போதைய தொகுதி முறையை எடுத்துவிட்டு முஸ்லீம்களுக்குத் தனித்தொகுதி ஏற்படுத்தி ஸ்தானங்களை ஒதுக்க வேண்டும் என்றும் கல்கத்தா கிலாபத் மகாநாட்டில் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இதனால் முஸ்லீம்கள் எல்லாம் தேசத்துரோகிகள் என்று சொல்லி விடமுடியுமா? வகுப்புவாதிகள் என்று சொல்லி அவர்கள் கக்ஷியை ஒழித்து விட முடியுமா? தத்தமக்கு இருக்கவேண்டிய நியாயமான உரிமைகளைக் காப்பாற்ற முயல்வது எங்ஙனம் தேசத்துரோகமாகும்? மேலும் தேசமே பிரதானம் என்று கூச்சல்போடும் காங்கிரஸ் தியாகிகள் சட்டசபை ஸ்தானங் களிலும் உத்தியோகங்களிலும் ஏன் கவலை செலுத்த வேண்டும்.

முஸ்லீம்களோ, ஒடுக்கப்பட்டவர்களோ சில சட்டசபை ஸ்தானங் களையோ, சில உத்தியோகங்களையோ அதிகப்படியாகப் பெற்றுவிட்டால் என்ன குடிகேடு வந்துவிடப்போகிறது? முஸ்லீம்களுக்கோ ஒடுக்கப்பட்ட வர்களுக்கோ தேச நிருவாகம் நடத்த ஆற்றலில்லை யென்று எந்த ஆண் மகனாவது கூற முன் வருவானா? தேச பக்தர்கள் என்று கூறிக்கொள்வோரின் உண்மையான லட்சியம் தேச க்ஷேமமானால், தேச நிர்வாகம் நடத்துவோரின் ஜாதியையோ, மதத்தையோ, வகுப்பையோ ஆராய வேண்டிய அவசியமே இல்லை. எனவே ''வகுப்புவாதம் ஒழிய வேண்டும், பொதுத் தொகுதிதான் வேண்டும், தனித்தொகுதி கூடவே கூடாது'' என்று கூறுவது பக்கா மோசடியா யல்லவா என்று கேட்கின்றோம்.

வங்காளத்திலே முஸ்லீம்கள் மெஜாரிட்டி சமூகத்தார். அப்படியிருந்தும் நகரசபை உத்தியோகங்களில் 100-க்கு 20வீகிதமே வேண்டுமென்கிறார்கள். இந்தவிதமான கோரிக்கையையும் இந்துக்கள் ஒப்புக்கொள்ளத் தயாரில்லை யானால் முஸ்லீம்கள் தனித் தொகுதி வேண்டுவது எங்ஙனம் தப்பாகும்.

மேலும் இந்தியா ஹிந்துக்களுக்கே என்று கர்ஜிக்கிறார் ஹிந்து மகா சபை வீரர் பாய்பரமாநந்தர். பண்டித மாளவியாவும் அதை ஆதரிக்கிறார்.

பண்டித மாளவியா காங்கிரசைத் தாங்கும் பெரிய கர்றூண்களில் ஒருவர். எந்த காங்கிரஸ்வாதியும் பாய்பரமாநந்தர் அபிப்பிராயத்தை மறுக்க இந் நிமிஷம் வரை முன்வரவில்லை.



RangaRakes tamilnavarasam.com

மௌனம் உடன்பாட்டுக்கு அறிகுறி என்பது மெய்யானால், ஏனைய காங்கிரஸ் வீரர்களும் பாய் பரமாநந்தரை ஆதரிப்பதாகவே நம்ப வேண்டியதாக இருக்கிறது.

பரமாநந்தர் அபிப்பிராயப்படி இந்தியா ஹிந்துக்களுக்கே சொந்த மானால், முஸ்லீம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், பார்ஸிகளுக்கும், சீக்கியர்களுக்கும், கூர்க்கர்களுக்கும், ஆங்கிலோ இந்தியர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் இடமெங்கே? அவர்கள் வங்காளகுடாக் கடலில் வீழ்ந்து தற்கொலை செய்து கொள்ள வேண்டுமா? அல்லது யூதர்களைப்போல் தேசாந்திரிகளாய் அலையவேண்டுமா? ஹிந்து மகாசபையார் ஆணவமும், காங்கிரஸ்காரர் பித்தலாட்டமும் அழியாதிருக்கும் வரை சிறுபான்மை சமூகங்களுக்கும் அரசியல் உணர்ச்சி பெறாத வேறு சில மெஜாரட்டி சமூகங்களுக்கும் தனித்தொகுதியும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் இன்றியமையாததே.

எனவே பார்ப்பனப் பூச்சாண்டிக்கு அஞ்சாமல் அவ் விரண்டையும் பெற அவ்விரண்டினாலும் நலம் பெறவேண்டிய சமூகங்கள் கிளர்ச்சி செய்து கொண்டுதான் இருக்கவேண்டும்.

**குடி அரசு - கட்டுரை - 12.01.1936**



# திருவிதாங்கூர் ஹைக்கோர்ட்டு

### முதல் ஈழவ நீதிபதி

### வைக்கம் சத்தியாக்கிரக பலன்

திருவனந்தபுரம் ஜனவரி 9

வைக்கம் சத்தியாக்கிரகத்தின் பயனாக திருவாங்கூரில் ஒடுக்கப் பட்டவர்கள் நிலை முன்னேற்றமடைந்து வருகிறது. இப்பொழுது ஈழவ சமூகத்தைச் சேர்ந்த தோழர் என். குமாரன் திருவிதாங்கூர் ஹைக்கோர்ட்டு நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**குடி அரசு - பெட்டிச் செய்தி - 12.01.1936**



RangaRakes tamilnavarasam.com

# பொப்பிலி பெருந்தன்மை

பொதுப்பணத்தை பொன்விழாக் கொண்டாட்டத்துக்குச் செலவு செய்யக்கூடாதென்றும் ஸ்தல ஸ்தாபனக் கட்டிடங்களில் காங்கிரஸ் கொடி ஏற்றக்கூடாதென்றும் சர்க்கார் உத்தரவு பிறப்பித்ததினால் ஜஸ்டிஸ் கட்சியாரெல்லாம் துரோகிகள் என்று காங்கிரஸ் பார்ப்பனர்கள் கூறுகிறார்கள். இதற்காக, அடுத்த தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியாருக்கு தேச மக்கள் ஒரு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என்றும் ஒரு பார்ப்பன வக்கீல் ''ஹிந்து'' பத்திரிகையில் எழுதியிருக்கிறார். ஆனால் இதர மாகாண நிலைமையை கவனித்தால் சென்னை சர்க்கார் மிக்க கௌரவமாக நடந்திருப்பதாகவே தோற்றுகிறது; பொதுப் பணச்செலவில் பொன்விழாக் கொண்டாடக்கூடாதென்று சென்னை சர்க்கார் தடுத்தார்களேயன்றி கொண்டாடியவர்களை தண்டிக்க எண்ணவில்லை. பாஞ்சாலத்தைச் சேர்ந்த ஷெக்புராவிலோ, பொன்விழாக் கொண்டாடிய நகரசபை மெம்பர்களைத் தண்டிக்கப் போவதாக டெபுடி கமிஷனர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

டிசம்பர் 23-ந்தேதியன்று கமிட்டிக் கூட்டத்தில் காங்கிரஸ் பொன்விழாவையொட்டி முனிசிபல் கட்டிடத்தில் தேசீயக் கொடியை உயர்த்துவதென்றும் தீபாலங்காரம் செய்வதென்றும் அதற்காக 100 ரூபாய் செலவிடுவதென்றும் தீர்மானம் செய்து தலைவர் உட்பட எட்டுப் பேர் முடிவு செய்து பொன்விழாக் கொண்டாடினார்களாம். இது முனிசிபல் சட்டத்துக்கும், ராஜவிசுவாசப் பிரமாணத்துக்கும் விரோதமானதென்றும் அவர்களை முனிசிபல் சட்டத்தின்படி மெம்பர் பதவியிலிருந்து நீக்காதிருக்க ஏதாவது காரணங்களுண்டானால் காட்ட வேண்டுமென்றும் டெபுடி கமிஷனர் அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறாராம். காங்கிரஸ் சர்க்காருக்குப் போட்டி ஸ்தாபனம் என்பது உலகப்பிரசித்தம். ராஜவிசுவாசப் பிரமாணம் செய்து நகர சபைகளிலும் சட்டசபைகளிலும் அங்கத்தினர்களா யிருப்பவர்கள் சர்க்கார் விதிகளுக்கும், உத்தரவுகளுக்கும் கட்டுப்பட்டுத்தான் நடக்கவேண்டும். ராஜவிசுவாசப் பிரமாணம் செய்கிறவர்கள் சட்டசபைகளில் சர்க்காருக்கு விரோதமாக எதுவும் செய்யக்கூடாதென்று சட்ட மறுப்பு பிரம்மாவான காந்தியாரே கட்டளையிட்டிருக்கிறார். இந்நிலையில் ஷெக்புரா டெபுடி கமிஷனரையோ சென்னை சர்க்காரையோ குறைகூற



முடியாது. வாஸ்தவத்தில், கண்ணியமாக நடந்து கொண்ட சென்னை சர்க்காருக்கு காங்கிரஸ்காரர் நன்றி காட்டவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சர்க்காரோடு போட்டி போடும் காங்கிரசின் பொன் விழாக் கொண்டாட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றிய ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர்களை தண்டிக்க சென்னை சர்க்கார் எண்ணாதது பெரிய காரியமென்றுதானே சொல்ல வேண்டும். ஆகவே ஜஸ்டிஸ் கட்சியையும், மந்திரிகளையும் காங்கிரஸ்காரர் தூற்றுவது அயோக்கியத்தனமாகும்.

**குடி அரசு - கட்டுரை - 12.01.1936**



RangaRakes tamilnavarasam.com

# உலகில் முஸ்லீம்கள் ஜனத்தொகை விபரம்

**- ஒரு உண்மை சுதந்திர வாதி**

| | கோடி |
|---|---|
| ஆப்பிரிக்காவில் | 41 |
| ஜாவா போர்னியோ, | |
| மலேயா ஆகிய நாடுகளில் | 10 |
| இந்தியாவில் | 9 |
| சைனாவில் | 3 |
| ரஷ்யா கிழக்கு ஐரோப்பாவில் | 2 |
| மத்திய கிழக்கு ஆசியாவில் | 3 |
| ஆக | 68 |

இந்திய ஆதிதிராவிடர்களும் முஸ்லீம்கள் ஆகிவிட்டால் 75 கோடி ஆகிவிடும்.

இந்துக்கள் வகுப்புக்குள் வகுப்பு உற்பத்தி செய்து ''அவன் பார்ப்பானுக்கும் சூத்திரச்சிக்கும் பிறந்தவன்'' இவன் சூத்திரனுக்கும் பார்ப்பாத்திக்கும் பிறந்தவன்.

இவன் நாடாராய் இருந்து அய்யங்கார் ஆனவன்.

அவன் அம்பட்டனாய் இருந்து அய்யங்கார் ஆனவன்.

இவன் வைசியச்சிக்கும் சூத்திரனுக்கும் பிறந்தவன்.

அவன் சூத்திரனுக்கும் க்ஷத்திரியச்சிக்கும் பிறந்தவன்.

அவனோடு போனால் இவ்வளவு பாவம். இவனோடு போனால் அவ்வளவு பாவம். பார்ப்பனத்தியுடன் சூத்திரன் போனால் அவன் ஆண் குறியை அறுத்து வாயில் வைக்கவேண்டும்.

சூத்திரச்சியுடன் பார்ப்பான் போனால் அவன் ஆண் குறிக்கு தங்கத்தில் உறைபோட வேண்டும்.

என்றெல்லாம் சாஸ்திரம் எழுதி கூடுமானவரை அமுலில் கொண்டு வருவதும் அதற்காகவே காந்தி வாழ்வதும்,



அதற்காகவே காந்தி மூச்சுவிடவும் வேண்டும்.

அதற்காகவே சுயராஜ்ஜியம் பெறவேண்டு மென்பதும்.

ஆகியவையை எல்லாம் இந்து மகாத்மாக்களும் தேசபக்தர்களும் தேசியத் தலைவர்களும் பேசிக்கொண்டு இருக்கவேண்டியதுதான்.

காரியத்தில் என்னமோ முஸ்லீம்களே இரட்டைப்பங்கு அனுபவிக்க வேண்டியது தான். ஒரு சில பார்ப்பனர்கள் அனுபவிக்கும் கொள்ளை போக போக்கியத்தோடு இந்திய தேசியம் வெற்றி பெறவேண்டியதுதான். ஆகவே தீண்டப்படாத மக்களே! தாழ்த்தப்பட்ட மக்களே! நீங்கள் உங்கள் தீண்டாமை ஒழிவதற்கு என்று இல்லாவிட்டாலும், இந்திய மக்கள் அரசியல் சமூக சுயமரியாதைக்கு என்றாவது உடனே எல்லோரும் முஸ்லீம் ஆகுங்கள். இந்தியாவின் 16 கோடி முஸ்லீம்கள் இந்தியாவின் 48 கோடி இந்துக்களுக்குச் சமமானவர்கள், 16 கோடி முஸ்லீம்கள் ஆகிவிட்டால் இந்தியாவில் 8 நாளில் சமதர்ம ஆட்சியை ஏற்படுத்தி விடக்கூடும்.

**குடி அரசு - கட்டுரை - 12.01.1936**



RangaRakes tamilnavarasam.com

# பொன்விழாப் புரட்டு

இந்திய தேசீயக் காங்கிரஸ் என்கின்ற ஸ்தாபனத்துக்கு 50 வருஷம் ஆயுள் ஆய்விட்டதற்காக என்று பொன்விழா என்பதாக ஒரு கொண்டாட்டம் பாமர மக்கள் இடையில் நடத்தப்பட்டது.

இது மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களில் பட்டதென்றாலும் நம்நாட்டிலும் 50 வருஷத்துக்கு பதிலாக 60 வருஷம் வாய்தா வைத்து மனித வாழ்க்கைக்கு 60 ம் கல்யாணம் என்பதாக ஒரு சடங்கு செய்வதுண்டு.

இது பெரிதும் 60 வருஷகாலம் தாங்கள் பிழைத்து இருந்ததைப் பற்றி மகிழ்ச்சி எய்தி இச்சடங்கு ஆரம்பிக்கப்பட்டாலும் அச்சடங்கின் செலவு முழுவதும் 60 வருஷம் வாழ்ந்தவனைப் பொறுத்தும் அதை அடைவது முழுதும் இந்த 60 வருஷம் வாழ்ந்த வாழ்வுக்கு ஒரு சிறுபயனும் உதவியும் அளிக்காமல் பல காரியங்களின் பேரால் சதா ஏமாற்றிப் பிடுங்கி வயிறு வளர்த்தி வந்தவனுக்கே போய்ச் சேரும்படியாகத்தான் முடியும்.

அன்றியும் இந்த 60 ம் கல்யாண விழாக் கொண்டாடுவதற்குத் தகுந்த அளவாக இந்த 60 வருஷம் வாழ்ந்தவனால் பொது ஜனங்களுக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டதா என்பதைப்பற்றியும் யாரும் கவனிக்கமாட்டார்கள்.

அதுபோலவே காங்கிரஸ் இந்தியாவில் ஏற்பட்டு 50 வருஷமாயிற்று என்றால்,

அது எதற்காக ஏற்படுத்தப்பட்டது?

அதனால் யாருக்கு என்ன லாபம்?

அதனால் பொது ஜனங்கள் அடைந்த பயன் என்ன?

என்பனவாகியவைகளை யோசித்துப்பார்த்தால் இந்தக் காங்கிரசின் 50 வருஷ பொன்விழாவுக்கும், தனிப்பட்ட மனிதனின் 60 வருஷ அறுபதாங் கல்யாணத்திற்கும் ஒரு வித்தியாசமும் இருக்காது.

### காங்கிரஸ் ஏற்பட்ட நோக்கம்

காங்கிரஸ் ஏற்பட்டதானது இந்தியாவின் ஆட்சியில் இந்தியர்களுக்குப் பெரிய உத்தியோகங்கள் கொடுக்கப்படவேண்டும் என்பதற்கும், அவ்வுத்தியோகங்களுக்கு வெள்ளைக்காரர்களுக்கு உள்ள சலுகை அவ்வளவும் இந்தியர்களுக்கும் காட்டவேண்டும் என்பதற்குமாகவே



ஒழிய, மற்றபடி பொதுஜனங்களுக்கு இன்னது செய்ய வேண்டுமென்பதற்கோ, அரசாங்க முறைகளில் பொது ஜனங்களுக்கு இன்ன மாதிரியான சௌகரியம் இருக்க வேண்டும் என்பதற்காகவோ ஏற்பட்டதல்ல.

இதன் பயனாய் இந்திய தேசீயக் காங்கிரசானது இந்திய மக்களின் உழைப்பையும், அவர்களுடைய அறிவையும், சுயமரியாதையையும் சாப்பிட்டே காலம் கழித்துக்கொண்டு இந்த 50 வருஷமாய் வாழ்ந்து வந்திருக்கிறது.

இது ஆரம்பக் காலத்திலிருந்து காங்கிரசில் கலந்து வந்தவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

### காங்கிரஸ் இல்லாதிருந்தால்

இந்த காங்கிரசானது இந்தியாவில் இந்தக் கருத்தோடு ஆரம்பிக்கப் பட்டு இப்படிப்பட்ட வஞ்சகமும் மோசமுமான காரியம் செய்து கொண்டு வந்திருக்காமல் இருந்திருந்தால் இந்திய மக்களின் நிலை இன்று வேறு விதமாய் இருந்திருக்கும். அதாவது உலகத்தில் உள்ள மற்ற எல்லா நாட்டு மக்களுக்கும் சரி சமமான முறையில் கல்வி, செல்வம், மானம், அறிவு, முற்போக்கு ஆகியவைகளில் முன்னணியில் நிற்கக்கூடியதாய் இருந்திருக்கும். அப்படிக்கில்லாமல் இவ்வளவு கேவல நிலையில் இருப்பதற்கும், இனி என்றும் முன்னேற்றத்துக்கு மார்க்கமில்லை என்று அவநம்பிக்கை கொள்ளு வதற்கும் இந்த காங்கிரசே முக்கிய சாதனமாய் இருந்து வருகிறது.

உதாரணம் வேண்டுமானால் உலகத்தில் எப்படிப் பட்டவர்களால் ஆளப்பட்ட எவ்வளவு மோசமான நாடும் இந்தியாவைப் போல் இவ்வளவு கேவலமாக பிற்போக்கடைந்திருக்கவே இல்லை.

### கல்வி

காங்கிரசால் விளைந்த தீமையை விவரித்து சொல்லுவோமேயானால் கல்வியை எடுத்துக்கொள்ளுவோம்.

50 வருஷத்துக்கு முன் இந்திய மக்கள் கல்வியில் என்ன நிலையில் இருந்தார்களோ அதே நிலையில்தான் இன்றும் இந்திய மக்கள் இருக்கிறார்களே ஒழிய மற்ற நாடுகள் போல் முன்னேறவில்லை. அதாவது 100-க்கு 10 பேர்களுக் குள்ளாகத்தான் இன்றும் கையெழுத்துப்போடத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்.

### செல்வம்

செல்வத்தில் பார்த்தாலோ இந்த ஐம்பது வருஷத்துக்கு முன் சராசரி ஒரு இந்திய மனிதனுக்கு என்ன வரும்படி இருந்ததோ அதே வரும்படிதான் இன்றும் இருந்து வருகிறதே ஒழிய மற்ற ஆளப்படும் தேசங்கள் மாதிரி சிறிதும் மேன்மையடையவில்லை.

அதாவது சராசரி ஆள் ஒன்றுக்கு தினம் ஒன்றுக்கு 2 அணாவுக்கு உட்பட்ட வரும்படிதான் வந்துகொண்டு இருக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் காங்கிரசின் பேரால் முன்னணியில் இருந்து மக்களை ஏமாற்றி வந்த பார்ப்பனர்கள் மாத்திரம் 100 க்கு 100 பேர் படித்து சராசரி ஆள் ஒன்றுக்கு தினம் 1க்கு 3 ரூபாய் வரும்படிக்கு குறையில்லாமல் இருக்கிறார்கள்.

**மானம்**

இந்தியர்களின் மானம், பகுத்தறிவு, சுயமரியாதை ஆகிய விஷயங்களிலும் இந்த ஐம்பது வருஷத்துக்கு முன் இந்திய மக்கள் நிலை எப்படி இருந்ததோ அதேபோல்தான் அதைவிட மோசமாகவுந்தான் இன்றும் இருந்து வருகின்றது.

உதாரணமாக இந்தியாவில் 7 கோடி பேர்கள் பறையர், சக்கிலியர், புலையர், நாயாடிகள் என்று சொல்லும்படியான மக்கள் படிப்பின்றி சுகாதாரமின்றி, நல்வாழ்க்கை இன்றி மனித சமூகத்தை விட தாழ்ந்த மிருக சமூக உரிமையுமின்றி நாய், கழுதை, பன்றிகள் போல் மலத்திலும் கேடாக மதிக்கப்படுகிறார்கள். மற்றும், அடிமையிலும் கேவலமாய் அதாவது அடிமைக்கு ஒரு பாதுகாப்பு உண்டு. என்னவென்றால் அடிமையின் உண்டி, உடை, படுக்கை, இடம் ஆகியவைகளுக்கு அவனது எஜமான் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறான். இந்த தீண்டப்படாத மக்களைப்பற்றியோ அந்த பொறுப்பும் யாருக்கும் கிடையாது. ஆனால் அவர்களிடம் வேலை வாங்க மாத்திரம் எவருக்கும் பாத்தியமுண்டு என்கின்ற முறையில் இருக்கிறார்கள். மற்ற 30 கோடிக்கு மேற்பட்ட பார்ப்பனரல்லாத மக்களும் இழிகுலமாய் சூத்திரர்களாய்த்தான் இருக்கிறார்கள். ஆனால் காங்கிரசின் பயனாய் பார்ப்பனர்களோ மேல் ஜாதியாய் சுவாமி என்று அழைக்கும்படியானவர்களாய் இன்னமும் இருந்து வருகிறார்கள்.

**சுயமரியாதை**

இந்திய மக்கள் சுயமரியாதை விஷயத்திலோ கடுகளவும் அவர்கள் முற்போக்கு அடையவில்லை என்றே சொல்லலாம். உதாரணமாக பார்ப்பான் என்பவன் பிச்சை எடுப்பவன், மானம், ஈனம், முறை என்பவை இன்றி எவ்வித இழிதொழிலும் செய்துவருபவன், மனித சமூகத்தின் சித்திரவதைக் கொப்பான கொடுமைகளுக்கும் மனமிரங்காமல் தன் நலத்துக்கே உதவி அளித்துக் கொள்ளுபவனாய் இருக்கிறான் என்று ஒருவனை மக்கள் உணர்ந்திருந்தாலும் அப்படிப்பட்டவனை இன்றும் இந்திய மக்கள் பிறவி காரணமாகவே ராஜாதி ராஜன் முதல் சகலரும் சுவாமி என்றும், மகராஜ் என்றும் பஹுவசனத்தில் மரியாதை வைத்து அழைத்து மேல்நிலையில் இருத்தி பூஜிக்கிறார்கள்.

**பகுத்தறிவு**

இவர்களது பகுத்தறிவுக்கு மத சம்பந்தமான மற்ற விஷயங்களைப் பார்த்தாலேபோதும். ஆகவே, இந்தியா காங்கிரசினால் இந்த ஐம்பது வருஷ



காலமாக எந்த துறையில் பொது ஜனங்களுக்கு எப்படிப்பட்ட நன்மை ஏற்பட்டு இருக்கிறது என்று பார்த்தால் காங்கிரசின் போலித்தனமும், மோசமும் விளங்காமல் போகாது.

**அரசியலில்**

பொதுவாக அரசியல் தன்மையிலாவது ஏதாவது மக்களுக்கு பயன் உண்டாயிருக்கிறதா என்று பார்த்தால் அதிலும் எவ்வளவு கொடுமைகள் ஏற்பட்டு பொதுமக்கள் திண்டாடி மானங்கெட்டு தெருவில் நிற்கவும் சில சோம்பேறிகளும், அயோக்கியர்களும், வஞ்சகர்களும் கொள்ளை கொள்ளவுமான நிலையையே அரசியல் கிளர்ச்சி உற்பத்தி செய்திருக்கிறது.

**வரி**

முதல் காரியத்தை எடுத்துக் கொண்டால்,

அரசியல் நிர்வாக வரியின் அளவு மக்களுக்கு ஒன்று பத்தாய் பெருகி இருக்கிறது. அதாவது காங்கிரசுக்கு முன் இந்தியாவானது சுமார் 30, 40 கோடி ரூ.வரி வருமானத்தில் நிர்வகிக்கப்பட்டு வந்திருக்குமானால் இன்று 300, 400 கோடி ரூபாய் வரி வசூலால் நிர்வாகம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. சர்க்கார் ரிவினியூவரி, ஸ்தலஸ்தாபனவரி, கோர்ட்டு, பதிவு இலாக்காவரி முதலியவைகளைச் சேர்த்துப் பார்த்தோமேயானால் வருஷம் ஒன்றுக்கு இந்தியர்கள் செலுத்துவது 300, 400 கோடி ரூபாய் வரி என்பது குறைவாகவே தோன்றும்.

**நிர்வாக செலவு**

உதாரணமாக சென்னை மாகாண நிர்வாகமானது ஒரு கவர்னர் இரண்டு மந்திரிகள் ஆக மூன்று பேர்களால் ஆட்சி நடத்தப்பட்டு வந்ததானது காங்கிரசின் பயனாய் இன்று ஒரு கவர்னர் ஏழு மந்திரிகள் ஆகியவர்களால் இந்த அதிக எண்ணிக்கை விகிதாசாரத்துக்கு ஏற்ற அதிகச் செலவுடன் நிர்வாகம் நடந்து வருகின்றது. இதர உத்தியோகங்களும் 100க்கு 300, 400 வீதம் பெருகியிருப்பதோடு அவர்களது சம்பள விகிதங்களும் 100க்கு 1000 வீதம் மொத்தத்தில் அதிகரித்திருக்கிறது.

**நீதி இலாக்கா செலவு**

நிர்வாக இலாக்காதான் இப்படி என்றால் நீதி இலாக்காவும் அப்படியே பெருகி அதாவது 5 ஹைக்கோர்டு ஜட்ஜிகள் உள்ள உயர்தர நீதிமன்றம் இன்று 14 ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகளையும், அதுபோலவே கீழ்தர நீதிமன்றங்களுக்கும் 100க்கு 300, 400 வீதம் முன்சீபு ஜட்ஜிகள் குமாஸ்தாக்கள் ஆகிய உத்தியோகங்கள் பெருகி சம்பளங்களும் 100க்கு 100 வீதம் வரையிலும் கூடப் பெருகி அந்த இலாக்காவும் மொத்தத்தில் 100க்கு 500, 1000 வீதம் செலவு அதிகரித்திருக்கின்றது.



RangaRakes tamilnavarasam.com

### ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சி

ஸ்தல ஸ்தாபன சுயாட்சித் தன்மைகள் சிரிப்பாய் சிரிக்கும்படியாக மக்கள் வரிப்பணங்கள் பாழாவதோடு உலகிலுள்ள இழி குணங்களுக்கும், மோசடிகளுக்கும் தாயகமாக விளங்கி வருகின்றது.

சுதந்திரம் என்பதிலோ அரசாங்கத்தாரால் பரீக்ஷார்த்தமாய்க் கொடுத்துப் பார்க்கப்பட்ட சுதந்திரங்கள்கூட திரும்பப்பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்துக்குக் காங்கிரஸ்கொண்டு வந்துவிட்டுவிட்டது.

### மக்கள் ஒற்றுமை

மற்றபடி மக்களின் ஒற்றுமை, நேசம், அன்பு ஆகிவைகளில் எங்கும் ஜாதித் தொல்லை, வகுப்புத் தொல்லை, மதத்தொல்லை என்பவைகளே பெருகி தலைசிறந்து தாண்டவமாடுகின்றதை எவரும் மறுக்க முடியாது என்பதோடு எவரும் வெட்கப்படாமல் இருக்க முடியாது என்கின்ற நிலையில் இருக்கின்றது.

### பாம்புக்கு பால் வார்ப்பது போல்

இந்த விதமாக இந்த 50 வருஷத்தில் ''முன்னேற்றம்'' அடைய உதவியாயிருந்த காங்கிரசுக்குப் பொன்விழா கொண்டாடுவது இந்தியர்கள் மதத்தில் நாகப்பாம்பை வணங்கி அதற்கு பால் வார்த்து ஆடு, கோழி வெட்டிப் பொங்கலிட்டுப் பூசை போடும் முட்டாள் தனத்துக்கு சிறிதும் இளைத்ததல்ல என்றே சொல்லலாம்.

### காங்கிரசால் பார்ப்பனர் நிலைமை

ஆனால் இந்த 50 வருஷ காங்கிரசின் பயனாய் மனித சமூகத்துக்கே பிறவி எதிரிகளானவர்களும் நல்வாழ்க்கைக் கொள்கைகளுக்கும் நற்குணம் நற்செய்கைகளுக்கும் நாசகாலர்களானவர்களுமானப் பார்ப்பனர்களுடைய நிலை எப்படி மாற்றமடைந்தது? எவ்வளவு முற்போக்கடைந்தது? என்று பார்ப்போமானால் பார்ப்பனர்கள் ஏன் காங்கிரசை விளம்பரம் செய்கிறார்கள்? ஏன் காங்கிரசுக்காகப் பாடுபடுகிறார்கள் என்பவைகள் விளங்கும்.

50 வருஷத்துக்கு முன்பு பார்ப்பனர்களுக்குப் புரோகிதம், கூட்டிக் கொடுத்தல், பிச்சையேற்றல், கோவில், பூசை ஆகிய காரியங்களே அவர்களது வருணத் தொழிலாகவும், பிரத்தியட்ச அனுபவத் தொழிலாகவும் இருந்து வந்ததோடு இத்தொழில்களின் பயனாய் ஏதோ ஆயிரத்தொருவர் உயர்நிலையில் இருக்கக்கூடியவர்களாய் இருந்தார்கள்.

ஆனால் இந்த 50 வருஷ காங்கிரசின் பயனாய் பார்ப்பனர்கள் அடையாத உயர் ஸ்தானமில்லை, அனுபவியாத போக போக்கியமில்லை.



### காங்கிரசால் மக்கள் உழைப்பெல்லாம் பார்ப்பனர்களுக்கே

மக்களின் உழைப்பெல்லாம் பார்ப்பன கும்பலுக்கே போய்ச் சேரும் படியான வாய்க்கால் வெட்டப்பட்டு அது நேராய் நிரந்தரமாய் தங்கு தடையின்றி பார்ப்பனர் குண்டிக்கே ஓடிக்கொண்டிருக்கிறது.

எப்படியெனில் முதலாவது பார்ப்பனர்கள் 100-க்கு நூறு பேர்களுக்கு படிப்பு ஏற்படும்படி காங்கிரஸ் செய்து கொண்டது.

அரசியல் பெரு உத்தியோகங்களில் 100-க்கு 90 அவர்களுக்கே கிடைக்கும்படி செய்துகொண்டது. அவர்களது ஜாதிமத ஆதிக்கம் நிலையாய் இருக்கும்படி சட்டங்கள் செய்து கொண்டது. இனியும் அவர்களே படிக்கும் படியும் அவர்களுக்கே உத்தியோகங்கள் கிடைக்கும்படிக்கும் மார்க்கங்கள் செய்து கொண்டிருக்கிறது. அதாவது, நாட்டில் செல்வாக்கும், மக்கள் செல்வாக்கைப் பெறும்படியானதுமானதும் ஏராள வருவாய் உள்ளதுமான தொழில்கள் உத்தியோகம் வக்கீல், வைத்தியம், நாடகம், சங்கீதம், குலகுருத்தனம் முதலிய காரியங்கள் 100-க்கு 90-க்கு மேலாகவே பார்ப்பனர்கள் கையில் எப்போதும் இருக்கும்படி காங்கிரஸ் செய்துவிட்டது.

### குடியானவர்கள் நிலை

ஆனால் குடியானவர்களுக்கோ விடிந்தெழுந்தால் எழவு சங்கதி கேட்பதுபோல் புதுப்புதுவரி சங்கதிகள் கேள்விப்படவும், தேடிவைத்த பொருள் ஏதாவது மீதி இருந்தால் அரசியல் காரணமாகவோ, மத இயல் காரணமாகவோ, மோட்ச இயல் காரணமாகவோ, விவகார வில்லங்க இயல் காரணமாகவோ எல்லாம் பார்ப்பானுக்கே போய் சேரும்படியாகவும் தான் ஏற்பட்டதே தவிர, அவனவன் வாழ்க்கை நலத்தையோ, பிள்ளை குட்டிகளின் கல்வி அறிவு, சுயமரியாதை நலத்தையோ கவனிக்க முடியாத - நேரமில்லாத நிலையை காங்கிரஸ் உண்டாக்கி இருக்கிறது.

இவைகளைத் தவிரவும் மற்றும் இவை போன்றவைகளைத் தவிரவும் காங்கிரஸ் இந்த ஐம்பது வருஷத்தில் மக்களுக்கு ஏதாவது ஒரு உண்மையான நன்மை செய்திருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

### பெரும் உத்தியோகம் கிடைத்தால் பயன்?

பெரும் பெரும் உத்தியோகங்கள் இந்தியர்களுக்குக் கிடைத்தது என்று சொல்லலாம்.

லார்ட் சின்னா, சர். மகமது உஸ்மான் கவர்னர் வேலை பார்த்தார்கள்.

சர். சங்கர் நாயர், சி.பி. ராமசாமி அய்யர் வைசிராய் பிரபு நிர்வாகசபை மெம்பர் வேலை பார்த்தார்கள்.



RangaRakes
tamilnavarasam.com

வி.கிருஷ்ணசாமி அய்யர், சர். சிவசாமி அய்யர், கே. சீனிவாசய்யங்கார், கிருஷ்ணன் நாயர், சர். கே.வி. ரெட்டி, பன்னீர் செல்வம் ஆகியவர்கள் கவர்னர் நிர்வாக சபை மெம்பர்கள் வேலை பார்த்தார்கள் பார்க்கிறார்கள்.

இவர்கள் எல்லாம் ஆட்டுக் கழுத்தில் தொங்கும் தோல் துண்டுகள் போல் இருந்து கொண்டு பொது ஜனங்கள் வரிப்பணத்தை கொள்ளைபோல் அனுபவித்தார்கள் என்பதல்லாமல், இந்த உத்தியோகங்களின் மூலம் இந்திய மக்களுக்கு என்ன நன்மை செய்யக்கூடிய சக்தி, சவுகரியம், புத்தி ஆகியவைகள் இந்த அதிக எண்ணிக்கை இல்லாத காலத்தில் வெள்ளைக் காரர்கள் பார்த்த காலத்தில் இல்லாததை விட அதிகமாய் இருந்தது என்றோ வெள்ளைக்காரர்கள் செய்ததைவிட நன்மையில் அதிகமாகவோ, தீமையில் குறைவாகவோ செய்தார்கள் என்றோ சொல்லமுடியுமா என்று கேட்கின்றோம்.

## பெரிய உத்தியோகம் கேட்டதின் பயன்

வெள்ளைக்காரர்கள் பார்க்கும் உத்தியோகங்களைப் பார்ப்பனர்கள் பார்க்கவேண்டுமென்று கூச்சல்போட்டது காங்கிரஸ். ஆனால் வெள்ளைக்காரர்கள் தந்திரமாய் தங்கள் உத்தியோகங்களையும் சம்பளங்களையும் குறைக்காமல் இவர்களுக்கு ஆக பல புது உத்தியோகங்களை அதிகப்படுத்தி அதிகச் சம்பளங்களையும் கொடுத்தார்கள்.

பிறகு இவர்களைப் பார்த்துப் பார்ப்பனர் அல்லாதார்கள் கூப்பாடு போட்டார்கள். அவர்களுக்கு ஆகவும் வெள்ளைக்காரர்கள் தந்திரமாய் தங்கள் உத்தியோகங்களும் பார்ப்பன உத்தியோகங்களும் குறையாமல் மேலும் உத்தியோகங்களை அதிகப்படுத்தி பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு கொடுத்தார்கள்.

பிறகு முஸ்லீம்கள் கூப்பாடு போட்டார்கள், அவர்களுக்கும் அப்படியே செய்தார்கள்.

பிறகு தீண்டப்படாதவர்கள் என்பவர்கள் சத்தம் போட்டார்கள், இவர்களுக்கும் அப்படியே செய்யப்போகிறார்கள்.

## கூப்பாடுகளின் பயன்

ஒவ்வொரு கூப்பாடுகளும் உத்தியோகங்களையும் சம்பளங்களையும் பெருக்கிக்கொண்டுபோய் அதற்கு ஏற்ற அளவு வரிகளும் உயர்த்திக் கொண்டு போய் இவை எல்லாம் ஏழைக் குடியானவன், தொழிலாளி, சின்ன ஜாதி மக்கள் என்பவர்கள் தலையில் கையை வைத்து அவர்களது நிலைமை நாளுக்கு நாள் கேவலமாகிக்கொண்டு வருவதல்லாமல் மற்றபடி காங்கிரஸ் செய்த நன்மை என்ன என்று யாராவது சொல்லமுடியுமா?



## காங்கிரசால்

காங்கிரசினால் காந்தி மகாத்மா ஆனார்.

ராஜகோபாலாச்சாரி ராஜாஜி ஆனார், வல்லபபாய் சர்தார் ஆனார், திலகர் லோகமானியரானார், பெசன்ட் லோகமாதா ஆனார், சத்தியமூர்த்தி பாரதமாதாவின் அருமைப் புதல்வரானார், லக்ஷிமிபதி அம்மாள் தியாக சொரூபி ஆனார்.

இந்தப்படி ஒரு சில ஆட்கள் சர்., கே.சி. ஐ., திவான் பகதூர்கள் ஆவது போல் ஆனார்கள்.

புரட்டிலும், பித்தலாட்டத்திலும் தேர்ச்சி உள்ள வக்கீல்கள் அட்வோகேட் ஜனரல் ஐகோர்ட் ஜட்ஜிகள் ஆவதுபோல் அயோக்கியத் தனங்களிலும், ஈனத்தனங்களிலும் தேர்ச்சி உள்ள பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் காங்கிரஸ் தலைவர்கள், தேசாபிமானிகளாகின்றார்கள். முன் சொன்னவர்களும் வக்கீல் கோஷ்டியில் இருந்து சர்க்காரால் பொறுக்கப்படுகிறார்கள், இவர்களும் வக்கீல் கோஷ்டியிலிருந்தே முட்டாள் மக்களால் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

இந்தமாதிரியான காரியங்கள் அல்லாமல் காங்கிரசினால் இந்த 50 வருஷ காலமாய் இந்தியாவுக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டதாகவோ, ஏழை விவசாயிகள் கூலிகள் ஆகியவர்களுக்கு அனுகூலம் செய்ததாகவோ சொல்ல முடியுமா?

## காங்கிரசே காரணம்

அல்லது இந்திய வரிக்கொடுமைகள் எதற்காவது காங்கிரஸ் காரணமில்லை என்பதாகவோ இந்திய மக்களின் கல்வி, செல்வம், அறிவு, சுயமரியாதை, சுதந்திரம் ஆகியவைகளுக்குக் காங்கிரஸ் முட்டுக்கட்டையா யில்லை என்பதாகவோ, சர்க்கார் அடக்குமுறை, சீர்திருத்தப் பாதுகாப்பு ஆகியவைகளுக்கு காங்கிரஸ் காரணமாக இருக்கவில்லை என்பதாகவோ யாராவது எந்த அறிவாளியாவது சொல்லக்கூடுமா என்றும் கேட்கின்றோம்.

## இப்படிப்பட்ட பொன்விழா

இப்படிப்பட்ட ஒரு கொடுமையையும் கஷ்டத்தையும் முன்னேற்றத் தடையையும் அடிமைத்தளையையும் விளைவித்த காங்கிரசுக்கு பொன்விழாக் கொண்டாடியதானது, ஒரு சூத்திரன் தவம் செய்தான் என்பதற்காக அவனது தலையை வெட்டிய கொடியோனும் அயோக்கியனுமாகிய ராமனுக்கு சூத்திரர்கள் என்கின்ற கலத்தின் கீழ்வரும் மக்களே ஸ்ரீராம நவமி கொண்டாடுவது எவ்வளவு யோக்கியப் பொறுப்பும் பகுத்தறிவும் சுயமரியாதை உணர்ச்சியும் உடையதோ அதே போன்றது தான் இன்றைய காங்கிரசின் பொன்விழாப் புரட்டு கொண்டாட்டம் என்பது நமது அபிப்பிராயம்.

**குடி அரசு - தலையங்கம் - 12.01.1936**



RangaRakes tamilnavarasam.com

# இந்தியாவில் வகுப்புத் தொல்லை ஒழிய வேண்டும்

### உண்மைச் சுதந்திரத்துக்கு மார்க்கம் முஸ்லீம் சமூகம் 16 கோடி ஆவதே

இன்று இந்தியாவில் வகுப்புத் தொல்லையானது அளவிட்டுக் கூறும்படியான நிலையில் இல்லை. இவற்றுள் இந்து முஸ்லீம் வகுப்புத் தொல்லையானது எல்லாவற்றையும்விட தலை சிறந்து விளங்குவதாகும், இது இந்தியா முழுமையையும் பொறுத்ததாக இருக்கிறது.

அடுத்தாற்போல் தீண்டப்படாதவர்கள் மேல்ஜாதிக்காரர்கள் என்கின்ற தொல்லையாகும். இதுவும் ஏறக்குறைய இந்தியா பூராவையும் பொறுத்ததானாலும் தீண்டப்படாத மக்கள் கல்வியிலும், செல்வத்திலும் சுயமரியாதை உணர்ச்சியிலும் மிகவும் பிற்பட்டவர்களாய் இருப்பதாலும் அவர்களுக்குள் ஒற்றுமை இல்லாததாலும் தனித்தனியே மக்கள் சுயநலம் கோருவதாலும் அத்தொல்லை சம்பந்தமான கிளர்ச்சிக்கு எவ்வித ஜீவ உணர்ச்சியும் இல்லாமல் போனதோடு அதை பலர் உபயோகித்துப் பயன் பெறும்படியாக இருந்து வருகிறது.

அடுத்தாப்போல் சொல்ல வேண்டியது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் வகுப்புத்தொல்லை என்று சொல்லலாம். இது தென்னிந்தியாவில் மாத்திரமே விசேஷ கிளர்ச்சியில் இருந்தாலும் பார்ப்பனரல்லாதார் மத விஷயத்தில் சுயமரியாதை அற்று பார்ப்பனர்களுக்கு அடிமையாய் இருப்பதாலும் பார்ப்பனரல்லாதாருக்கு உள்ள மதப்படிப்பினையானது தங்கள் சமூகத்தையும் சகோதரர்களையும் காட்டிக்கொடுத்தாவது முத்தி பெறலாம் என்பதாக கற்பிக்கப்பட்டிருப்பதாலும் அதையே பல வைதீக மக்களும் கீழ்ப்படியிலுள்ள மக்களும் பின்பற்றுவதில் சிறிதும் மான அவமானத்தை கவனிப்பதற்கு இல்லாமல் போய்விட்டதாலும் அக்கிளர்ச்சிக்கும் தகுந்த பலனில்லாமல் போய்விட்டது. என்றாலும் அக்கிளர்ச்சித் தொல்லையில் உண்மையான பொது நன்மைகள் பெரிதும் பாதிக்காமல் இருப்பதில்லை.

அடுத்தாப்போல் பல தொல்லைகள் வடக்கிலும் கிழக்கிலும் நடந்து வருகின்றது என்றாலும் அவை மற்றவைகளைக் கவனிக்கும்போது மிகச் சிறியவை என்றே சொல்லலாம்.



எப்படி இருந்தாலும் இந்தியாவானது உலகத்தின் கண்முன் ஒரு காட்டு மிராண்டி தேசமாகவும், இந்திய மக்கள் ஒரு இழிகுல மக்களாகவும் காணப்படுவதற்கு இந்த வகுப்புப் பிரிவுகளும், வகுப்புத் தொல்லைகளும் காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது. அதுமாத்திரமல்லாமல் பெரும்பான்மையான மக்கள் இந்துக்கள் என்பவர்களிலேயே 100-க்கு 90-பேர்களாய் உள்ளவர்கள் கல்வியிலும் சுயமரியாதையிலும் கீழ் நிலையில் இருப்பதற்கும் பொருளாதாரத்தில் மிக மிக கேவல நிலையில் இருப்பதற்கும் இந்த பிரிவினைகளும் அதனால் ஏற்பட்ட தொல்லைகளும்தான் காரணம் என்பதையும் எவரும் மறுக்கமுடியாது.

ஆனால் அரசியல் கிளர்ச்சிக்காரர்கள் இந்த வகுப்புத்தொல்லைகளை மறைத்தும் அதை அலக்ஷியப்படுத்திக் கூறியும் விட்டு அதனால் ஏற்பட்ட கெடுதிகளுக்கெல்லாம் அரசாங்கத்தார் மீது பழிபோட்டுப் பேசலாம்.

அரசாங்கத்தைப்பற்றி பேசுவதானால் இன்றைய அரசாங்கம் இதற்கு முன் இருந்த எந்த அரசாங்கத்தையும் விட மோசமானதாய் இருந்ததாக சரித்திரங்கள் காணப்படவில்லை. சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு, மக்களைச் சமமாய்க் காணல் என்கின்ற துறைகளில் இதற்கு முன் இருந்த ஆட்சிகளில் இது ஒரு துறையிலும் குறைந்ததாகவும் காணப்படவில்லை.

இந்த உண்மைகள் பழய சரித்திரங்களில் காணப்படுவது மாத்திர மல்லாமல் 1920ம் வருஷம்வரை இந்திய அரசியல்வாதிகளும் தேசியவாதி களும் இன்றைய அரசாங்கத்தைப் புகழ்ந்து பாராட்டி "தெய்வீக" ஆட்சியாகவும் தர்மராஜ்ஜிய ஆட்சியாகவும் வர்ணித்து எழுதிய சாசனங்களும் பேசிய பேச்சுக்களும் இன்றும் கல் எழுத்துப்போல் இருந்து வருகின்றன.

இவைகளையெல்லாம் பற்றி இரண்டுவித அபிப்பிராயம் இருக்கலா மானாலும், தர்க்கத்திற்கு இடமிருக்கிறது என்றாலும் உலகமே விழிப்படைந்த இந்த சுயமரியாதை வேகமுள்ள இக்காலத்தில் மற்ற நாடுகள் எல்லாம் பொருளாதாரத்திலும் விஞ்ஞானத்திலும் சுதந்திரத்திலும் முற்போக்கடைந்து கொண்டிருக்கும்போது இந்தியா மாத்திரம் ஏன் இன்னும் சராசரி கல்வியில் 100-க்கு 92 பேர்கள் தற்குறிகளாகவும், பொருளாதாரத்தில் சராசரி ஒரு மனிதனுக்குரிய தின வரும்படி 2 - அணாவை விட குறைவாகவும் இருக்கும் படியான நிலை, குறிப்பு கண்டுபிடிக்க முடியாத காலத்திலிருந்து இன்றுவரை ஏன் நிலைத்துவருகிறது? இப்படிப்பட்ட ஒரு ஆட்சி ஏன் திருத்தமடையாமல் இருக்கிறது? என்பதற்கு இந்திய அரசியல்வாதிகளும், தேசியவாதிகளும் என்ன பதில் சொல்லக்கூடும்?

இந்திய ஜனத்தொகை லக்ஷம் இரண்டு லக்ஷமல்ல, ஒரு கோடி இரண்டு கோடி மாத்திரம் அல்ல. ஜன கணிதப்படி முப்பத்திஐந்து கோடியாகும். ஆளும் சமூகத்தை பிரித்து பார்ப்போமானால் மிக மிக சொல்பமேயாகும்.



RangaRakes tamilnavarasam.com

ஆளுகின்றவர்கள் ''தெய்வ பல'' மில்லாமலோ, மந்திர தந்திர சக்தியினாலோ ஆளுகிறார்கள் என்று யாரும் சொல்லிவிட முடியாது. எல்லோருக்கும் தெரிந்த பலத்தைக்கொண்டும் எல்லோரும் அறிந்து கொள்ளக்கூடிய மார்க்கங்களை கொண்டும் தான் ஆளுகிறார்கள். ஆளும் ஜாதியாரைப் பிரித்துப்பார்த்தால் அவர்கள் இந்தியாவில் சில லக்ஷ கணக்கில் தான் இருக்கும். அப்படி இருக்க அவர்களுடைய ஆட்சி ஒழுங்காயில்லையானால் இந்த முப்பத்தி ஐந்து கோடி மக்களும் ஏன் அவர்களைத் திருத்தி நல்ல ஆட்சியாக அரசு புரியும்படி செய்து இருக்கக்கூடாது? ஜனங்களுக்கு புத்தி இல்லை என்று சொல்லிவிட முடியுமா? அல்லது இந்திய மக்கள் பயங்காளிகள் என்று சொல்லிவிட முடியுமா? அல்லது ஆட்சிபுரிகின்றவர்களாவது மனிததன்மை அற்ற - மிருக சுபாவ - அநாகரீக ஜாதியார் என்று சொல்லிவிட முடியுமா? அப்படியிருந்தால் உலகில் தலை சிறந்த மக்களாகவும் உலகத்துக்கு ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் போதிக்கும் மக்களாகவும் அவர்கள் இன்றுஇருக்க முடியுமா என்பவைகளையெல்லாம் யோசித்துப் பார்த்தால் நமக்குள் ஏதோ ஒரு தவறுதல் இருப்பதாகத்தான் உணரமுடியும்.

அது எது என்று பார்த்தால் இந்த வகுப்புத்தொல்லைகள் என்பவைதான்.

இந்தியா இன்று உள்ள நிலையில் எந்தக் காரணத்தைமுன்னிட்டும் வகுப்புத்தொல்லைகளை ஒழித்துக் கொள்ளக் கூடியதாய் இல்லை. ஏதாவது ஒரு வகுப்பு ஆதிக்கம் பெற்று மற்ற வகுப்புகளை அடக்கி ஆளும் நிலைமை பெற்றால் தான் வகுப்புத் தொல்லைகள் நீங்க முடியுமே ஒழிய வேறு வழியில் ஒருநாளும் ஒழியக்கூடியதாய் இல்லை.

நம் தேசிய வாதிகளும் அரசியல் வாதிகளும் ஜெயிலிலும் தங்கள் வகுப்பு உரிமை இருந்தாகவேண்டும் என்று தான் பாடுபடுகிறார்களே ஒழிய நாம் எல்லோரும் ஒரே வகுப்பு என்று வேஷத்தில் கூட இருக்க சம்மதிப்பதில்லை.

### இதற்கு மார்க்கம்

இப்படிப்பட்ட இந்த இந்திய நாடு இன்று வகுப்புத் தொல்லை ஒழிந்து ஒரு குறிப்பிட்ட லட்சியத்துக்கு எல்லா மக்களுக்கும் ஒருவரை ஒருவர் நம்பி ஒற்றுமையுடன் பாடுபடவேண்டுமானால் எல்லோரும் ஒரு வகுப்பு ஆவதற்கு முயற்சிப்பதைத் தவிர வேறு வழி கிடையாது என்பதுதான் நமது முடிவு.

அப்படிப் பார்ப்போமேயானால் அதிகமான ஜனத்தொகை கொண்ட வகுப்பு எதோ அதில் மற்ற வகுப்புக்காரர்கள் கலந்துகொள்வதுதான் புத்திசாலித்தனமாகும்.

உதாரணமாக நமது காங்கிரஸ்காரர்கள் (பார்ப்பனர்கள்) இந்தியா பூராவும் ஒரு பாஷை ஆவதற்கு இந்தி பாஷை தான் தகுந்தது என்று



சொல்லி அதையே இந்தியர்கள் எல்லோரும் கற்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். இந்தியாவின் மெஜாரட்டி ஜனங்கள் இந்தி பேசுகிறார்களா என்பது ஒரு புறம் விவகாரத்துக்கு இடமாய் இருந்தாலும் இருக்கின்ற பாஷைகளில் அதிகமான ஜனங்கள் பேசும் பாஷை இந்தி என்று சொல்லி அதைக் கற்க அரசாங்கத்தின் மூலமும் முயற்சி செய்கிறார்கள் அல்லவா?

அதுபோல் இன்று இந்தியாவில் உள்ள வகுப்புகளில் அதிகமான ஜனங்களைக் கொண்ட எந்த வகுப்பார் ஒற்றுமையோடு ஒரேவிதமான வகுப்புணர்ச்சியோடு இருக்கிறார்களோ அந்த வகுப்பைக் கைப்பற்றி விடுவதுதான் இந்தியா ஒரு வகுப்பு என்று சொல்லுவதற்கு தகுதி உடையதாகும்.

அப்படி பார்த்தால் இன்று இந்தியாவில் முஸ்லீம் வகுப்புதான் ஒற்றுமையுடன் தங்கள் மக்களுடன் பிறவிக் காரணங்களை லக்ஷியம் செய்யாமல் உண்ணல், பொருந்துதல், சமுதாய வாழ்வில் சமமாக பாவித்தல் முதலிய காரியங்களில் எல்லா வகுப்புகளையும் விட முன்னணியில் இருக்கிறார்கள். அவர்களது எண்ணிக்கை இன்று இந்தியாவில் மாத்திரம் 9 கோடிக்கு மேல்பட்ட ஜனசங்கையாகும்.

அவ்வளவு ஜனசங்கை உள்ளவர்கள் இந்தியாவில் வேறு எந்த வகுப்பிலும் இல்லை.

இந்துக்கள் என்பவர்கள் சுமார் 24 கோடி இருக்கிறார்கள் என்று சொல்லக்கூடுமானால் இவர்களில் சீக்கியர், பாரசீகர், ஜெயினர், பௌத்தர், கிருஸ்தவர் முதலிய இந்துக்கள் அல்லாத வகுப்புகளைப் பிரித்துவிட்டால் 20 கோடிக்குத்தான் வரும். அதிலிருந்தும் தொடுவதற்கும் கிட்ட நெருங்கு வதற்கும் ''தகுதி இல்லாத'' 7 கோடி தீண்டப்படாத மக்களைப் பிரித்து விட்டால் 13 கோடியே யாகும். இதிலிருந்தும் ஒருவருக்கொருவர் தொட்டுக் கொள்ள முடியாத, ஒருவர் வீட்டில் ஒருவர் சாப்பிட முடியாத, சம்மந்தம் செய்ய முடியாத, பார்ப்பனர், கோமுட்டிகள், ஆசாரிகள், செட்டிகள், சைவர்கள் போன்ற பல உள் வகுப்புக்காரர்களையும் பிரித்து விடுவோமேயானால் இன்னும் எவ்வளவு சிறிய தொகைக் கொண்ட வகுப்பாகும் என்று பார்த்தால், சமத்துவமாய் ஒற்றுமையாய் புழங்கிக்கொள்ளும் மக்களுள் முஸ்லீம்களே அதிக எண்ணிக்கை கொண்டவர்கள் என்பதில் யாரும் ஆக்ஷேபிக்க முடியாது. அப்படி யாராவது ஆக்ஷேபப்படுவதாயிருந்தாலும், ஒற்றுமையிலும் சமத்துவ பாவத்திலும் பலம் பொருந்திய வகுப்பார் முஸ்லீம்கள் தான் என்பதை எவரும் சுலபத்தில் ஆக்ஷேபிக்க முடியாது.

அவர்களோடு அதாவது இந்த முஸ்லீம்களோடு டாக்டர் அம்பத்கார் அவர்கள் யோசனைப்படி 7 கோடி தீண்டப்படாத மக்களும் சேர்ந்து முஸ்லீம்கள் எண்ணிக்கையை 9+7 = 16 கோடியாக ஆக்கிக் கொள்வார் களேயானால் பிறகு அவர்களை அவர்களது இஷ்டத்திற்கு விரோதமாய் அடக்கி ஆளும் மக்கள் உலகத்தில் இல்லை என்றும், இருக்கவும் முடியாது என்றும் வலியுறுத்திக் கூறலாம்.



RangaRakes tamilnavarasam.com

இந்தியாவுக்கு உண்மையாகவே ஒரு சுதந்திர ஆட்சி வேண்டுமானால், ஐரோப்பியா ஆட்சியானது இன்று இந்தியர்களுடைய இஷ்டத்துக்கு விரோதமாக ஆளப்பட்டு வருகின்றது என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுவது அவர்கள் மனப்பூர்வமாய் சொல்லப்படுவதனால் இவைகளுக்கு பரிகாரம் முஸ்லீம் சமூகத்தை 16 கோடியாக ஆக்கிவிடுவதேயாகும்.

அப்படிக்கு இல்லாமல் இந்துக்கள் ஆட்சி வேண்டும், கிறிஸ்தவர்கள் ஆட்சி வேண்டும், முஸ்லீம்கள் ஆட்சி வேண்டும், பார்ப்பனர்கள் ஆட்சி வேண்டும், பார்ப்பனரல்லாதார் ஆட்சி வேண்டும், தீண்டப்படாதார் ஆட்சி வேண்டும் என்பன போன்ற முயற்சிகளும் சூழ்ச்சிகளும் ஒவ்வொரு வகுப்பாரும் செய்வது என்பது, பொதுக் கிணற்றில் மலம் விழுந்ததற்கு ஒப்பான பலனைத்தான் கொடுக்குமே அல்லாமல் வேறு எவ்வித பயனையும் கொடுக்க முடியாது.

மற்றும் இன்று இந்தியா ஒரு தேசம் என்றோ, ஒரு சமூகம் என்றோ சொல்லிக்கொள்ளுவது ஒரு நாளும் புத்திசாலித்தனமான பேச்சாகவோ, யோக்கியமான பேச்சாகவோ இருக்க முடியாது என்பதும் நமது வெகு நாளைய அபிப்பிராயமாகும்.

ஆதலால் இந்தியாவின் சுயமரியாதையும், விடுதலையும் நெருங்கி இருக்கிறது என்பதோடு இந்தியா ஒரு சமூகம் என்று சொல்லக்கூடிய நிலை எய்துவதற்கும் அறிகுறியேதான் இன்று டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ''தீண்டப்படாதவர்கள் இந்துமதத்தை விட்டு சமுதாய வாழ்வில் சமத்துவம் அளிக்கக்கூடிய வேறுமதத்துக்கு போய்விட வேண்டும்'' என்று கண்டு பிடித்த அபிப்பிராயமாகும். முஸ்லீம் சமூகத்தில் உள்ள செல்வவான்கள், சுதந்திரவாதிகள், சுயமரியாதைக்காரர்கள் ஆகியவர்கள் இது சமயம் பல கோடி ரூபாய்களைப் பண்டாக சேர்த்து ஏழை மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பண உதவி புரிந்தாவது வேறு பல சவுகரியங்கள் செய்து கொடுத்தாவது முஸ்லீம்களாக ஆக்குவார்களானால் அவர்கள் முஸ்லீம் மதத்தை பெருக்குகிறார்கள் என்பதாக கருதுவதை விட இந்தியாவின் விடுதலைக்கு, சுயமரியாதைக்கு அருகதை உடையவர்களாக்குகிறவர்களாவார்கள் என்பதை எவராலும் மறுக்க முடியாததாக ஆக்கினவர்களாவார்கள்.

முஸ்லீம் சீர்திருத்தக்காரர்கள் என்பவர்களில் பலரை வயிற்றுப் பசி பிராணனை வாங்குவதால் அவர்களிடம் உள்ள 10-ம் பறந்து போகா விட்டாலும் 10-ல் 6-க்கு குறையாமலாவது பறந்து போய் விடுகின்றன.

அதுபோலவே தேசீய முஸ்லீம் என்பவர்களிலும் பலர் பசி கொடுமையால் 10ல் 8ஐ விற்றுப் பிழைக்கிறார்கள்.

ஆகையால் சீர்திருத்த முஸ்லீம்கள் தேசாபிமான முஸ்லீம் என்பவர்களை விட்டுவிட்டு அவர்களை இவ்விஷயத்தில் லக்ஷியம் செய்யாமல் சுயமரியாதை முஸ்லீம் வாலிபர்கள் ஒன்றுகூடி ஆங்காங்குள்ள



செல்வவான்களைப் பிடித்து முதலில் நிதியைத் திரட்டிவிட்டால் நிதியின் தொகை இவ்வளவு என்று வெளிப்படுத்தி விட்டால் பஞ்சாமிர்தத்திற்கு ஈக்கள் வந்து விழுவதுபோல் ஏராளமான மக்கள் முஸ்லீம்களாவதாகச் சொல்லிக் கொள்ள முன் வருவார்கள். ஏனெனில் இன்றைய மத தத்துவமும், மதம் மாறும் தத்துவமும் 100-க்கு 75 பாகத்துக்கு மேல் பொருளாதாரத்தையும், அரசியல் ஆதிக்கத்தையுமே பொறுத்திருக்கிறது.

அன்றியும் உண்மையிலேயே ஒரு மனிதன் தனக்கு ஏதாவது ஒரு மதம் வேண்டும் என்று சொல்லுவானேயானால் அவனுக்கும் ''இந்து மதத்தை விட, கிறிஸ்தவ மதத்தை விட, முஸ்லீம் மதமே சிறந்தது'' என்று இதற்குமுன் பலதடவை நாம் சொல்லி வந்திருக்கிறோம்.

அம்மதமே இன்று உலகில் மற்ற பாகங்களில் எவ்வித வேகமான சீர்திருத்தத்தையும் வரவேற்று வருகின்றதைப் பார்க்கின்றோம்.

துருக்கியையும், ரஷ்யாவையும், ஈஜிப்டையும், தார்த்தார் ரிப்பப்ளிக்கையும் நேரில் பார்த்தவர்களுக்கு பெண்கள் விஷயத்திலோ, தொழுகை விஷயத்திலோ, மற்ற வைதீக விஷயத்திலோ, வேஷம் விஷயத்திலோ, மற்ற சமூகத்தாருடன் கலந்து வாழும் விஷயத்திலோ முஸ்லீம்கள் எவ்வளவு துணிந்து மாறுதலடைந்து இருக்கிறார்கள் என்பது நன்றாய் விளங்கும்.

இந்தியாவில் உள்ள முஸ்லீம் மத சம்பிரதாயங்கள் எல்லாம் முஸ்லீம் மார்க்கத்தின் அரிவரி ஏ,பி,சி,டி யேயாகும். தண்டவாளத்தின் மீது போகும் ரயில்வண்டி போன்றதேயாகும்.

உலக முஸ்லீம்களின் மொத்த ஜனத்தொகை இன்று 682870000 அறுபத்தி எட்டேகால் கோடி ஆகும். இன்று இந்தியாவில் உள்ள முஸ்லீம் மார்க்க சம்பிரதாயம் அரிவரி என்று மேலே சொன்னோம். ஆனாலும் அது பெரிதும் இந்துக்களில் தொல்லைகளை சமாளிக்கவோ இந்துக்களோடு தொல்லை கொடுக்கவோ நடத்தப்பட்டு வருவதாகும். இதை சாதாரண முஸ்லீம்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஆனால் ராஜதந்திர முஸ்லீம்கள் இதை ஒப்புக்கொள்ளுவார்கள். உதாரணமாக சாதாரண முஸ்லீம்கள் காந்தியாரை மகாத்மா என்று கூட சொல்லமாட்டார்கள்; ஏனென்றால் மகமது நபி ஒருவரைத் தவிர மற்றவர்களை மகாத்மா என்று அழைப்பது முஸ்லீம் மார்க்கத்துக்கு ஏற்றதல்ல என்கிறார்கள். என்றாலும் பல காரணங்களால் முஸ்லீம்கள் காந்தியாரையும் அறிந்தும் அறியாமலும் மகாத்மா என்று பிறரையும் சொல்லுவது சகஜமாக இருக்கிறது.

அது போல இன்னும் அனேக விஷயங்கள் மார்க்க விஷயமாக நடைபெற்று வருகின்றது என்றாலும் முஸ்லீம் சமூகம் பலப்படுமானால் அவை இந்துக்களைப்போல் தனித் தனி பிரிவார் சுயநலம் என்று இல்லாமலும் தனிப்பட்ட மனிதன் சுய நலம் என்று இல்லாமலும் அது உயர்ந்த முன்னேற்ற மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளும்.



RangaRakes tamilnavarasam.com

ஆதலால் வகுப்புத் தொல்லை ஒழியவும், இந்தியா விடுதலையும் சுயமரியாதையும் அடையவும், தீண்டாமை என்பதே இந்தியாவை விட்டு மறையவும், இதைத்தவிர வேறுமார்க்கமில்லை என்பது தான் இவ் வியாசத்தின் கருத்து.

கிருஸ்தவ மார்க்கத்தைப்பற்றியோ என்றால் அவர்களில் ஒரு பெரும் பகுதியாரை நினைத்தால் நமது வருணாச்சிரமப் பார்ப்பனர்கள் 1000 பங்கு மேலானவர்கள் என்று சொல்லலாம்.

பொதுவுடைமை வாதிகள், நாஸ்திகர்கள் ஆகியவர்களில் சிலர் இந்த அபிப்பிராயத்தில் மாறுபடலாம். இப்போது நாம் இந்த அபிப்பிராயம் கூறுவது நாஸ்திகர்களுக்கும் பொதுவுடமை வாதிகளுக்கும் வைதீக முஸ்லீம்களுக்கும் அல்ல.

ஆஸ்திகர்களாய் ஏதாவது ஒரு மதக்காரர்களாய் தீண்டிக்கொள்ளப் படக்கூடியவர்களாய் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்களுக்கும், இந்தியாவை ஒரு வகுப்பாக்கி (நேஷனாக்கி) அதன் மூலம் விடுதலை அடைய வேண்டும் என்று கருதுபவர்களுக்கும் சொல்லும் யோசனையாகும். ஆகவே முஸ்லீம் சுயமரியாதை வாலிபர்கள் இதை சிந்தித்துப் பார்ப்பார்களாக.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 12.01.1936**



# முனிசிபல் நிர்வாகம்

நம் வீட்டுக் காரியங்களை நாமே நமது இஷ்டப்படி நடத்த உரிமை இருக்கவேண்டும். வீட்டுக் காரியங்களில் பிறர் தலையிடுவதை ஒருவரும் ஆதரிக்கமாட்டார்கள். இது பொதுவிதி. ஆனால் வீட்டுக் காரியங்களை நடத்த நமக்கு சக்தியில்லாமல் குடும்பம் பாழானால் அதற்குப் பரிகாரம் தேட வேண்டியது அறிவாளிகள் கடமையல்லவா? வீட்டையோ, குடும்பத்தையோ பாழாக்க, வீட்டு முதலாளிக்கோ குடும்பத் தலைவருக்கோ உரிமையு மில்லை; அதிகாரமுமில்லை. குடும்ப நிர்வாகம் நடத்த ஆற்றலில்லாத தலைவர்களைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கி ஏனைய குடும்பத்தினர் குடும்ப நிர்வாகம் நடத்துவதையும் நாம் கண் கூடாகக் காண்கிறோம்.

இந்தியர்களை சுய ஆட்சியில் பழக்கும் நல்ல நோக்கத்துடன் 1856-ல் இந்தியாவில் முனிசிபல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1930-ல் அது திருத்தப்பட்டது. ஜனங்களுக்கு வேண்டிய அத்தியாவசியமான விஷயங்களை ஜனப் பிரதிநிதிகளே கவனித்து நடத்தினால் பொதுஜன க்ஷேமம் விருத்தியடையும் என்பது முனிசிபல் சட்டம் நிறைவேற்றி யவர்களின் கருத்து. ஆனால் தற்காலம் ஸ்தல ஸ்தாபனங்களின் நிலைமை என்ன? கட்சிப் பிணக்கும் சூழ்ச்சிகளும் இல்லாத ஸ்தல ஸ்தாபனங்கள் தென்னாட்டில் உண்டா?

சேர்மன் கட்சி, வைஸ் சேர்மன் கட்சி, மாஜி சேர்மன் கட்சி, மாஜி வைஸ் சேர்மன் கட்சி எனப் பல கட்சிகள் தோன்றி கட்சிச் சண்டை தாண்டவமாடாத ஸ்தல ஸ்தாபனங்கள் தென்னாட்டில் எத்தனை? தலைவர் தேர்தல் காலங்களில் கட்சி பலம் தேடும் பொருட்டு கையாளப்படும் அயோக்கியத்தனமான சூழ்ச்சிகளை யார்தான் அறியார்கள்.

மேலும் இதுகாறும் ஸ்தல ஸ்தாபனங்களில் எந்த அரசியல் கட்சியாரும் தலையிடவில்லை. இப்பொழுது புது நாணயமாக காங்கிரஸ்காரர் ஸ்தல ஸ்தாபனங்களில் பிரவேசித்திருக்கிறார்கள். ஜலம், ரஸ்தா, பள்ளிக் கூடம், ஆஸ்பத்திரி, வெளிச்சம், காற்று இவற்றை கவனித்து பொதுஜன க்ஷேமத்தை விருத்தி செய்யவேண்டிய ஸ்தல ஸ்தாபனங்களில் அரசியல் கட்சிகளுக்கு வேலையில்லையானாலும் ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்ற காங்கிரஸ் ''பெரியார்கள்'' முடிவு செய்து விட்டார்கள். சில



RangaRakes tamilnavarasam.com

ஜில்லாபோர்டு சபைகளிலும் அவர்கள் ஆதிக்கம் பெற்றும் இருக்கிறார்கள். ஸ்தல ஸ்தாபனங்களில் காங்கிரஸ்காரர் பிரவேசிப்பது சரியல்ல வென்று காங்கிரஸ் பக்தர் வலங்கைமான் சாஸ்திரியாரும் கூறுகிறார். யார் என்ன கூறினால் என்ன? காங்கிரஸ் கும்பல் செவி சாய்க்குமா? அரசியல் காரணங்களை முன்னிட்டு ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றவில்லையென காங்கிரஸ் வாலாக்கள் கூறிக் கொண்டாலும் அவர்களது அந்தரங்க நோக்கம் அரசியல் காரணமே என்பதை அவர்களுடைய பேச்சுகளே உறுதிப்படுத்துகின்றன. ஸ்தல ஸ்தாபனக் கட்டிடங்களில் தேசீயக் கொடியைப் பறக்க விடுதல், தேசீயத் தலைவர்களுக்கு உபசாரப் பத்திரமளித்தல், கதருக்கு ஆதரவு தேடுதல், ஹிந்திப் பிரசாரம் செய்தல், பாரதியார் பாடலைப் பள்ளிப் பையன்கள் பயிலும்படி செய்தல் முதலியனவே காங்கிரஸ்காரர் ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றுவதின் நோக்கம் என காங்கிரஸ்காரரே பகிரங்கமாகக் கூறுகிறார்கள். சமீபத்தில் கூடிய திருநெல்வேலி ஜில்லா போர்டு கூட்டத்தில் இந்நோக்கங்களை பூர்த்தி செய்யக்கூடிய தீர்மானங்கள் சில கொண்டுவரப்பெற்று நிறை வேற்றப்பட்டும் இருக்கின்றன.

ஆகவே ஸ்தல ஸ்தாபன நிருவாகம் குட்டிச்சுவராகும் காலம் உதயமாகிவிட்டது. அதற்குப் பரிகாரம் தேட முயலாவிட்டால் பொதுஜன க்ஷேமம் பெரிதும் பாதிக்கப்படும் என்பது நிச்சயம்.

எனவே ஆபத்தான இந்தச் சந்தர்ப்பத்தில், திருப்பதியில் கூடிய முனிசிபல் ஊழியர் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களுள் ஒரு தீர்மானம் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அதாவது முனிசிபல் நிர்வாகம் மாகாண சர்க்கார் நிருவாகத்துக்கு மாற்றப்பட வேண்டு மென்று ஒரு முக்கியமான தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. மகாநாட்டுக்குத் தலைமை வகித்த வெங்கடகிரி குமாரராஜா இதை ஆதரித்துப் பேசியிருக்கிறார். மகா நாட்டைத் திறந்து வைத்த காங்கிரஸ் பக்தர் தோழர் ஸி. ஆர். ரெட்டியாரும் அதை எதிர்க்கவில்லை. எனவே அவருக்கும் அந்தத் தீர்மானம் உடன்பாடென்றே தோன்றுகிறது.

நாமும் ஏறக்குறைய 10-ஆண்டுகளாகவே விடாமல் அடிக்கடி இதையே கூறிவந்திருக்கிறோம். என்றாலும் இத்தனை நாள் பொறுத்தாவது அது ஒரு மகாநாட்டில் காங்கிரஸ் கக்ஷி பிரதான புருஷர் தலைமையிலும் ஜஸ்டிஸ் கக்ஷி பிரதான புருஷர் தலைமையிலும் வரவேற்புத் தலைவரால் பிரஸ்தாபிக்கப்பட்டதும் இவர்கள் ஆதரித்ததும் பெரிதும் மகிழ்ச்சியேயாகும்.

தென்னாட்டு ஸ்தல ஸ்தாபனங்களின் தற்கால நிலைமையை உணர்ந்தவர்கள் எல்லாம் அதை ஆதரிக்கத்தான் செய்வார்கள். ஏனெனில் ஸ்தல ஸ்தாபன நிருவாகம் அவ்வளவுக்கு ஊழலாகி விட்டது. வரிப்பணத்தில் பகுதிப்பணம் கொள்ளை போகவும் பாழாகவும் பயன்படுகின்றது.



மேலும் பலவித பொதுநிதிகள் திரட்டி, சரியாக நிர்வாகம் செய்யாமலும், துஷ்பிரயோகம் செய்தும் அவப்பேர் சம்பாதித்திருக்கும் ஒரு கூட்டம், மெம்பர்களாயிருந்தே கண்ட்ராக்ட் எடுத்து அனுபவிக்கும் ஒரு கூட்டம் ஸ்தல ஸ்தாபனங்களில் புகுந்திருக்கும்போது நாம் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது அவசியமல்லவா? ஆகவே திருப்பதி மகாநாட்டுத் தீர்மானத்தை சர்க்கார் அநுதாபத்துடன் கவனித்து முனிசிபாலிட்டி களின் நிருவாகத்தை ஏற்று மக்களுக்கு வேண்டுவன செய்ய சீக்கிரம் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 12.01.1936**



RangaRakes tamilnavarasam.com

# சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் மூன்றாவது ஆண்டுவிழா

### வாலிபர்களும் பொதுசேவையும்

### ஜஸ்டிஸ் கட்சியை ஏன் ஆதரிக்கிறோம்

### ஆதி திராவிடர்கள் இஸ்லாம் மதத்தில் ஏன் சேரவேண்டும்?

தோழர்களே! இந்த சுயமரியாதை வாலிப சங்க ஆண்டு விழாவுக்கு நானே தலைமை வகிக்க வேண்டுமென்று விரும்பியழைத்த எனது வாலிப தோழருக்கு முதல் நன்றி செலுத்துகிறேன்.

இப்போது என்னை இங்கு தலைமை வகிக்க பிரேரேபித்த தோழர் C.D. நாயகம் அவர்கள் என்னைப்பற்றி புகழ்ந்து பேசினார்கள்.

அப்புகழ்ச்சி சகிக்கமுடியாததும் எனக்கு வெட்கத்தை உண்டாக்கக் கூடியதாகவுமே இருந்தது.

நான் செய்திருப்பதாகச் சொல்லப்படும் காரியங்களில் எதிலும் தோழர் நாயகம் பின்னடைந்தவரல்ல. அவர்களது ஆசை, ஊக்கம், உணர்ச்சி ஆகியவை எதுவும் எவ்வகையாலும் குறைந்ததல்ல. ஆதலால் அப்படிப்பட்ட பெரியார் என்னைப் புகழ்வது என்றால் அது அதிகம் என்று சொல்லாமலிருக்க முடியவில்லை. அன்றியும் நாங்கள் இருவரும் ஒருவரை யொருவர் புகழ்வது என்பதும் பரிகாசத்துக்கு இடமானதேயாகும். ஆனாலும் அவர்களுடைய அன்புக்கு நான் பாத்திரனாக ஆக்கிக் கொள்ளப்பட்டேனே என்கின்ற முறையில் நன்றி செலுத்துகிறேன்.

## வாலிபர்கள் பெருமை

தோழர்களே இன்று இங்கு கூடியுள்ள சுயமரியாதை வாலிபசங்க ஆண்டுவிழா சம்பந்தமாய் தலைவர் என்கின்ற முறையில் நான் முன்னுரையாகவோ, முடிவுரையாகவோ ஏதாவது பேசியாக வேண்டு



மென்பதும் அப்படிப் பேசுவதாய் இருந்தால், முதலில் வாலிபர்களைப் பற்றி பொதுவாக சில வார்த்தைகள் பேசவேண்டுமென்பது அவசியமாகும் என்று கருதுகிறேன்.

வாலிபர்களாகிய இளைஞர்களிடத்தில் எனக்கு எப்பவும் நம்பிக்கையுண்டு.

இளைஞர்களுடைய சாகவாசமே எனக்கு எப்போதும் மகிழ்ச்சியை அளிக்கத்தக்கது. ஆதலால் நான் அதையே அதிகம் விரும்புகிறேன். எனக்கு 60 வயது போல் ஆகியும் இளைஞர் சாகவாசத்தாலேயே எனது உணர்ச்சி முதுமையை அடையவில்லை. ஏதாவது ஒரு காரியம் செய்யாமலிருக்க எப்பொழுதும் மனம் வருவதில்லை. ஓய்வு சலிப்பு என்பவற்றை தற்கொலை என்றே கருதுகிறேன்.

இளைஞர் கூட்டுறவும், அவர்களிடம் எனக்குள்ள நம்பிக்கையும் எனது தொண்டிற்கோ கொள்கைக்கோ எப்படிப்பட்ட எதிர்ப்பு ஏற்பட்டாலும், எப்படிப்பட்டவர்கள் எதிர்த்தாலும் யார் பிரிந்துபோனாலும் சிறிதும் மனமுறிவோ சலிப்போ இல்லாமல் எவ்வித எதிர்ப்புகளும் அடிக்கும் பந்து உயர்வதுபோல் எனது வுணர்ச்சிகளையும் ஊக்கத்தையும் தட்டி எழுப்பக் கூடியதாகவே முடிகிறது.

ஆதலால் இளைஞர்களைப் போற்றுகிறேன். விசுவாசிக்கிறேன் அவர்களுடன் இடையறாப் பற்றுதல் இருக்கவேண்டுமென்றே ஆசிக்கிறேன்.

மற்றும் உலகசரித்திரத்திலும் இளைஞர்களுக்கு நல்ல இடம் இருந்து வருகிறது. இளைஞர்கள் வீரமுள்ளவர்கள் காரியத்தை சாதிப்பதில் பிடிவாதக் குணம் காட்டக்கூடியவர்கள். காரிய சாதிப்புக்காக எத்தகைய தியாகத்தையும் செய்ய தயங்காத துணிவுள்ளவர்கள். இளைஞர்களுக்கு இளைஞர்களாக இருப்பதாலேயே அதாவது அவர்களுக்கு எவ்வித கவலைக்கும் இடமில்லாமல் அவர்களது பருவம் இருப்பதினாலேயே அப்பேர்ப்பட்ட அருங் குணங்களுக்குத் தகுதியுமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். தியாகத்துக்கு ஆதாரமே பற்றற்ற தன்மையும் ஒரு குறிப்பிட்ட காரியத்தைத்தவிர வேறு ஒன்றிலும் லட்சியமற்ற தன்மையுமே யாகும். இதே இளைஞர்கள் பெரியவர்களென்பவர்களாகிவிட்டால் அவர்களால் ஆகக்கூடிய காரியம் மிகமிகச் சுருக்கமேயாகும்.

பெரியவர் என்றால் என்ன அருத்தம்? பெண்டு, பிள்ளை, வீடு, வாசல் சொத்து, சுகம் இவைகள் சம்மந்தமான தொடர்பும் கவலையும் உள்ளவர்கள்தான் பெரியவர்களே ஒழிய வெறும் வயதே பிரதானமல்ல.

## வாலிபத்தன்மையின் அபாயம்

வாலிபர்கள் என்பதற்கும் மேற்கண்டவைகள் என்பவற்றைப் பற்றிய கவலை அற்ற தன்மையே ஒழிய சிறு வயது மாத்திரமே காரணமல்ல.



RangaRakes tamilnavarasam.com

ஆதலால் தான் வாலிபர்கள் ஒவ்வொரு தேச சரித்திரத்திலும் நல்லிடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட இளைஞர்கள் சுலபத்தில் பற்றிக் கொள்ளக் கூடிய ஒரு அபாயகரமான வஸ்து என்பதற்கு உவமையாகச் சொல்லக்கூடியவர்கள் என்பதையும் நான் சொல்லாமல் இருக்க முடியாது. ஏன் என்றால், இளைஞர்கள் குழந்தைகளுக்குச் சமானமானவர்கள். சமீபத்தில் உள்ளதைப் பற்றுகிறவர்கள். பின் விளைவை அனுபவித்து அறியாதவர்கள். கண்ணோட்டம் விழுந்தால் பற்றிவிடுபவர்கள். எழுச்சி என்பது எங்கெங்கு காணப்படுகின்றதோ, கூட்டம் குதூகலம் என்பவை எங்கெங்கு காணப்படுகின்றனவோ அவற்றை யெல்லாம் பற்றுவதும், அவை மறைந்தால் கைவிட்டு விடுவதுமான குணமுடையவர்கள்.

உதாரணமாக குழந்தைகளை நீங்கள் பார்த்திருக்கலாம். அல்லா சாமிப் பண்டிகை வந்து அக்கொண்டாட்டம் முடிந்த பிறகு சுமார் 5 நாள் அல்லது ஒரு மாதம் வரை குழந்தைகள் புலி வேஷம் ஆடிக் கொண்டு விளையாடுவதைப் பார்க்கலாம்.

அதுபோலவே மாரியம்மன் பண்டிகைக் கொண்டாட்டம் வந்தால் அது முடிந்த 15 நாள் 1 மாதம்வரை கரகம் எடுத்தாடுவதும், கம்பம் எடுத்தாடுவதும், நெருப்பு சட்டி எடுத்தாடுவதுமாய் விளையாடுவதைப் பார்க்கலாம்.

அதுபோலவே, புரட்டாசி, மார்கழி மாதம் பஜனை கொண்டாட்டங்கள் வந்து போனால் 5 நாள் வரையிலாவது ராம் ராம் ஜெய சீதாராம் என்றும், கோவிந்தம் பஜரே கோபாலம் பஜரே என்றும் கைதட்டி ஆடும் கூத்துக் களையும் குழந்தைகளிடம் பார்க்கலாம். இவைகளுக்கெல்லாம் காரணம் கொண்டாட்டங்களையும், குதூகலங்களையும் கண்டு அவைகளால் இவர்கள் மயங்கி இழுக்கப்பட்டு விடுவதேயாகும்.

## சுலபத்தில் வழுக்கி விழக்கூடும்

அது போல் தான் வாலிபர்கள் ஒரு செல்வாக்கையோ ஒரு பிரசாரத்தையோ காதலையோ கண்டு விட்டால் சுலபத்தில் வழுக்கி விழக்கூடும். செல்வாக்கற்ற காரியத்தில் பற்றாய் இருப்பது மிகச் சங்கடமாகத் தோன்றும். பொது ஜன ஆதரவு, புகழ், உற்சாகம் ஆன காரியங்களில் இருக்கும் அவா, ஒரு தேக்கமான காரியத்தில் உற்சாகம் காட்ட இடம் தராது.

ஆதலால் வெறும்செல்வாக்கும் புகழுமான காரியங்களில் காட்டக் கூடிய உற்சாகம், ஊக்கம், துணிவு, தியாகம் ஆகியவை சிற்சில சமயங்களில் நன்மையை விட தீமையை அதிகமாக உண்டாக்கி விடுகின்றது. ஆதலால் வாலிபர்களுக்கு வெறும் உற்சாகமும், துணிவும், தியாகபுத்தியும் மாத்திரம் இருந்தால் போதாது. நன்மை தீமையை அறியும் குணமும், சாத்தியம் அசாத்தியம் அறியும் குணமும், காலதேச வர்த்தமானத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் குணமும், ஆய்ந்து ஓய்ந்து பார்க்கும் தன்மையும் ஆகியவைகள் இருந்தால் தான் வாலிபர்கள் பொதுவில் பயன்படக் கூடியவர்கள்



ஆவார்கள். இல்லாவிட்டால் அவர்கள் ஒரு குறிப்பிட்ட சுயநல சூழ்ச்சிக்கு இரையாகிவிடுவார்கள். இதை நான் அனுபவத்தில் பார்த்திருக்கின்றேன். எனது வாலிப பருவமும் எனக்கு இன்று இந்த புத்தி கற்பிக்கக் கூடியதாய்த் தான் இருந்து வந்தது.

## புகழுக்கு அடிமைப்படக் கூடாது

ஆதலால் அவர்களை நான் வேண்டிக் கொள்வது உற்சாகத்துக்கும், புகழுக்கும் அடிமை ஆகாதீர்கள் என்பதேயாகும். இதை ஏன் இவ்வளவு அழுத்திச் சொல்லுகிறேனென்றால், பாமர மக்களிடம் இன்று இருந்து வரும் தேசீயம், தேசபக்தி என்பவைகள் சம்பந்தமான செல்வாக்குக்கு நமது எண்ணரிய வாலிபர்கள் அடிமையாகி மனித சமூகத்துக்குச் செய்யவேண்டிய உண்மைத் தொண்டை மறந்து அவர்களது துணிவையும், ஊக்கத்தையும், தன்நல மறுப்பையும் பாழாக்கி வருவதைப் பார்த்தே சகிக்காமல் இவ்வாறு கூறுகிறேன்.

எப்படி இருந்தபோதிலும் நான் ஆற்றிவரும் இச்சுயமரியாதைத் தொண்டிற்கு இளைஞர்களின் ஆதரவே இன்று வரை உள்ள இவ்வளவு வெற்றியையும் அளித்திருக்கிறது.

இதிலும் எவ்வளவோ விஷமங்களும், சூழ்ச்சிகளும் இயக்கத்திலீடு பட்டவர்கள் என்பவர்களாலேயே நடந்தும், பல வாலிபர்கள் தங்கள் உறுதிகளை கெடுத்துக்கொள்ளாமல் துணிந்து இருந்ததானது எனது ஊக்கத்தை தட்டி எழுப்பி வருகிறது.

## நமது நிலை

இன்று முதலில் பேசிய தோழர் முருகப்பா அவர்கள் நமக்குள்ள கஷ்ட நிலைமையையும், எதிர்ப்புகளையும் நன்றாய் விளக்கிக் காட்டினார்.

நாம் பொருளாதாரத்தில் மிக்க கஷ்ட நிலையில் இருக்கிறோம். நாம் யாருக்காகப் பாடுபடுகின்றோமோ அவர்களை நம் எதிரிகளுக்கு பொருளைக் கொடுத்து நம்மை எதிர்க்கச் செய்தவர்களாகிறார்கள். நம் மக்களில் செல்வமும் செல்வாக்கும் உடையவர்கள் பலருக்கு அறிவும் இல்லை; சுயமரியாதையும் இல்லை. நாம் ஜாதிவித்தியாசத்தை ஒழிக்க வேண்டு மென்றால் ஜாதி முறையில் நான்காம் ஜாதியாய் கீழ்ஜாதியாய் இழிவான ஜாதியாய் இருப்பவனே ஜாதிவித்தியாசம் வளர்க்கப் பொருள்கொடுத்து உதவுகிறான். நம் இயக்கத்துக்கு உதவ அஞ்சுகிறான்; ஏன்? மறுக்கவும் செய்கிறான். சுயமரியாதை இயக்கத்தின் தத்துவம் உணர்ந்தவர்கள் யார்?

## பொருளாதாரம்

இந்த சென்னையில் உள்ள இந்த இளைஞர் மன்றம் இந்த வருஷ மெல்லாம் 40 ரூபாயில் வேலை செய்து இன்று இவ்வளவு விமரிசையாக ஆண்டுவிழா கொண்டாடுகிறது.



RangaRakes tamilnavarasam.com

மற்ற பிற்போக்கான இயக்கங்களுக்கு லக்ஷக்கணக்கான ரூபாய்கள் வசூலாகின்றன. அவற்றால் ஜாதி வித்தியாசங்கள் காப்பாற்றப்படுகின்றன. உதாரணமாக இந்நாட்டில் உள்ள ராமகிருஷ்ண சங்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். சென்ற விடங்களில் எல்லாம் 1000, 10000 கணக்காக பொருள் பறித்துவிடுகிறது.

ராஜாக்கள், ஜமீன்தாரர்கள், லேவாதேவிக்காரர்கள் கண்ணை மூடிக் கொண்டு அள்ளிக்கொடுத்து முட்டாள்களாகி தங்கள் ஜாதி இழிவைக் காப்பாற்றிக்கொள்ளுகிறார்கள்.

அச்சங்கத்தின் கொள்கை என்ன? அங்கு நடப்பதென்ன? என்பன வாதிகள் யாவருக்காவது தெரியுமா? அங்கு போய் பாருங்கள். ஜாதி வித்தியாசமும் ஜாதிபாகுபாடும் எவ்வளவு தாண்டவமாடுகின்றன? எப்படி பாதுகாக்கப்படுகின்றன? என்பதை பாருங்கள்.

தமிழ் மக்களுக்கு ஞானமோ சுயமரியாதை உணர்ச்சியோ இருந்தால் நமது பிறவி எதிரிகள் நன்மைக்கு ஆகவும், நமது இழிவை காப்பாற்றுவதற்கு ஆகவும் நடக்கும் ஸ்தாபனங்களுக்கு அள்ளி அள்ளிக்கொடுப்பார்களா?

சேரமாதேவி குருகுலத்தை தோழர் வரதராஜுலு போர்தொடுத்து அழித்த மாதிரியல்லவா அழித்திருப்பார்கள். விவேகானந்தரின் பெயரைப் பயன்படுத்தி வாழுகிறார்கள். விவேகானந்தரின் உபதேசமோ கொள்கையோ அங்கு காணப்படுகிறதா?

ஆகவே நமக்கு பொருளாதாரத்துக்கு எப்பொழுதும் வசதி ஏற்படாது. நாமாக நம் பொருளைச் செலவு செய்துதான் இப்படிப்பட்ட காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறது.

### நாம் வெற்றி அடைந்தவர்கள்

நாம் பொதுஜனங்களுக்கு ஒரு விஷயத்தில் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். அதென்னவென்றால் பொதுஜனங்கள் நம்மை இதுவரை கொல்லாமல் உயிருடன் இருக்கவிட்டு வைத்திருப்பதேயாகும்.

ஏனெனில், நமது கொள்கைகள் அப்படிப்பட்டவைகள்.

இன்று இந்நாட்டில் மாத்திரமல்லாமல் உலகில் செல்வாக்குடனும் பக்தியுடனும் போற்றுதலுடனும் இருந்துவரும் கொள்கைகளையும், அமைப்புகளையும், ஸ்தாபனங்களையும் எல்லாம் எதிர்க்கின்றோம்; பழிக்கின்றோம்; பலவற்றை தலைகீழாக மாற்ற வேண்டும் என்கிறோம்; பலவற்றை அழித்து ஒழிக்க வேண்டும் என்கிறோம். இப்படிப்பட்ட நாம் இன்று இங்கு இந்த பிரிட்டிஷ் ஆட்சி இல்லாதிருந்தால் என்ன கதி அடைந் திருப்போம் என்பதை இந்த பிரிட்டிஷ் ஆட்சி இல்லாத காலத்தில் நம்



போன்றவர்கள் பட்ட பாட்டையும், அவர்களுக்கு ஆக எழுதி வைத்திருக்கும் தண்டனை கண்டன முறைகளையும் சரித்திரங்களில், புராணங்களில், சாஸ்திரங்களில் வாசித்துப் பாருங்கள்.

ஆகவே நாம் பொருளையோ செல்வாக்கையோ எதிர்பார்த்தால் நசிந்தே போய்விடுவோம். என்றாலும் நாம் வெற்றியே அடைந்துள்ளோம்.

### மனிதன் சுயேச்சைக்கு உரியவன்

மனிதன் சுயேச்சைக்கு உரிமையுள்ளவன். காரணம் அவனுக்கு சௌகரியம் இருக்கிறது என்பது மாத்திரமல்லாமல் மனிதனுக்கு அதற்கு ஏற்ற அறிவு சக்தி இருக்கிறது. ஆனால் மனிதன் அப்படிப்பட்ட சௌகரியத்தையும், அறிவு சக்தியையும் அடிமைத்தன்மைக்கும் இழிவுக்குமே பயன்படுத்திக் கொள்ளுகிறான். அதனாலேயே மனித வர்க்க வாழ்வில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்க ஆசைப்படுகிறோம். இது நமது விளையாட்டுக்கு ஆக அல்ல; நேரம் போக்குக்காக அல்ல; கண்டு கண்டு சகிக்க முடியாத பரிதாபத்தினாலேயே இக்காரியத்தைச் செய்யத் துணிகின்றோம். பகுத்தறிவு காரணமாகவே மனிதன் மிருகத்திலும் இழிவான ஜீவனிலும் கேடாக வாழ்கிறான். இது தானா நாம் பகுத்தறிவுக்குச் செய்யும் மரியாதை?

### ஜாதி வித்தியாசம்

ஜாதி வித்தியாசத்துக்கும் பகுத்தறிவுக்கும் ஏதாவது சம்மந்தமுண்டா?

பொருள் வித்தியாசத்துக்கும் பகுத்தறிவுக்கும் ஏதாவது சம்மந்தமுண்டா?

இவ் வித்தியாசங்கள் பகுத்தறிவினாலா? அல்லது மிருக சுபாவத்தாலா? அயோக்கியத்தனத்தாலா? என்று யோசித்துப் பாருங்கள். இவைகள் கடவுள்கள் முதல் தீர்க்கதரிசிகள், மகாத்மாக்கள், கடவுள் அவதாரங்கள் முதல் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றனவே. ஆகவே இவர்கள் இத்தனை பேர்களும் (இருந்திருந்தால்) பகுத்தறிவாளர்கள் என்றோ மனிதத்தன்மை உடையவர்கள் என்றோ சொல்ல முடியுமா? எந்த தர்ம ராஜ்ஜியமும் நீதிராஜ்ஜியமும் மக்களுக்குள் இப்படிப்பட்ட பிறவி இழிவையும் தொல்லையையும் ஏற்படுத்துவதை - இருந்து வருவதை ஒழிக்க முடியவில்லையே. எப்படிப்பட்ட மதமும் மத தர்மமும் இவைகளை ஒழிக்கவில்லையே. ஆகவே நாம் இவைகளை எதிர்ப்பதால் என்ன கெடுதி என்று கேட்கின்றேன்.

சுயமரியாதை இயக்கம் ஜாதியிலும், மதத்திலும், கடவுளிலும் பிரவேசித்த தாலேயே அதன் யோக்கியதையை கெடுத்துக்கொண்டது என்கிறார்கள்.

### ஒன்றுக்கொன்று சம்பந்தம்

மனிதனுக்கு இழிவு ஜாதியால்தானே உண்டாகி வருகிறது. ஜாதியோ மதத்தினால்தானே உண்டாகி வருகின்றது. மதமோ கடவுளால் தானே



RangaRakes tamilnavarasam.com

உண்டாகி வருகின்றது. இவற்றுள் ஒன்றை வைத்துக்கொண்டு ஒன்றை அழிக்க முடியுமா? ஒன்றுக்கொன்று எவ்வளவு கட்டுப்பாடும் பந்தமும் உடையதாக இருக்கின்றன என்று யோசித்துப் பாருங்கள்.

ஜாதியை அழித்துவிட்டால் இந்துமதம் நிலைக்குமா? அல்லது இந்துமதத்தை வைத்துக்கொண்டு ஜாதியை அழிக்க முடியுமா?

ஜாதியையும் மதத்தையும் அழித்துவிட்டுக் கடவுளை வைத்துக் கொண்டிருக்க முடியுமா?

ஜாதியும் மதமும் அழிந்தால் கடவுள் இருக்க முடியுமா?

**உதாரணம்**

ஒரு உதாரணம் சொல்லுகிறேன். தயவு செய்து கேளுங்கள்.

நான்கு ஜாதியை இந்து மத தர்ம சாஸ்திரமாகிய மனுதர்ம சாஸ்திரங்கள் முதலியவை ஒப்புக் கொள்ளுகின்றன. நான்கு ஜாதிமுறை களை கீதை முதலிய கடவுள் வாக்குகள் ஒப்புக்கொள்கின்றன.

''நான்கு ஜாதிகளையும் நானே சிருஷ்டி செய்தேன். அந்தந்த ஜாதிகளுக்கு ஏற்ற தர்மங்களை (தொழில்களை)யும் நானே சிருஷ்டி செய்தேன், அத்தருமங்கள் தவறி எவனாவது நடந்தால் அவனை மீளா நரகத்தில் அழுத்தி இம்சிப்பேன்'' என்று இந்துக்களின் ஒப்பற்ற உயர் தத்துவமுள்ள கடவுளான கிருஷ்ண பகவான் என்பவர் கூறி இருக்கிறார்.

இதிலிருந்து ஜாதிக் கொடுமை, ஜாதி இழிவு, ஜாதி பேதம், ஜாதிப்பிரிவு ஆகியவைகளையோ, இவற்றில் ஏதாவது ஒன்றையோ ஒழிக்க வேண்டுமானால் மதங்களையும் கடவுள்களையும் சாஸ்திரங்களையும் ஒழிக்காமல் முடியுமா? அல்லது இவைகளுக்கு பதில் ஏற்படுத்தாமலாவது முடியுமா? என்று யோசித்துப்பாருங்கள். வீணாய் சுயமரியாதைக்காரர்கள் ஜாதியை மதத்தை கடவுளை எதிர்க்கிறார்கள், ஒழிக்க வேண்டுமென்கிறார்கள் என்பதில் ஏதாவது அர்த்தமோ அறிவோ இருக்கிறதா என்று பாருங்கள்.

**நாம் மாத்திரமா எதிர்க்கிறோம்?**

கடவுளை, மதத்தை, சாஸ்திரங்களை நாங்கள் தானா எதிர்க்கிறோம். மற்றவர்கள் வாழ்த்துகிறார்களா? என்று பாருங்கள். எந்த இந்து ஒருவன் ஜாதிபேதமும், ஜாதிப்பிரிவும், ஜாதி தர்மமும் ஒழிய வேண்டும் என்று சொல்லுகிறானோ, யார் யார் தீண்டாமை ஒழிய வேண்டும் என்று கூட சொல்லுகிறார்களோ, அவர்கள் எல்லோரும் மதத்தையும், கடவுளையும் ஒழித்தவர்கள் அல்லவா? அல்லது மதத்தையும் கடவுளையும் எதிர்த்தவர்கள் அல்லவா? மீறினவர்கள் அல்லவா? என்று யோசித்துப் பாருங்கள்.

கிருஷ்ணன் கடவுளென்றும், கீதை அவன் உபதேசமென்றும் கருதுபவர்கள் ஜாதியையும் ஜாதி தர்மத்தை (தொழிலையும்) ஒழிக்க



முடியுமா ஒழிய வேண்டுமென்று சொல்லவாவது முடியுமா? என்று கேட்கின்றேன். இந்த காரணத்தால் தானே காந்தியார் வெகு ஜாக்கிரதையாக நான்கு ஜாதிகளையும் அவைகளினது தர்மங்களையும் (வர்ணாசிரம தர்மத்தை) காக்கவே நான் உயிர் வைத்திருக்கிறேன். அதற்காகவே சுயராஜ்யம் கேட்கிறேன். அதற்காகவே தீண்டாதவர்களுக்கு தனிப்பிரதிநிதித்துவம் செத்தாலும் கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறேன் என்கிறார்.

**காந்தி அவதார புருஷரானதேன்**

அதனால் தானே அவர் பழய தர்மங்களைக் கெடாமல் காப்பாற்ற அவதாரமெடுத்த அவதார புருஷர் என்றும், மகாத்மா என்றும் பார்ப்பனர்கள் கொண்டாடுகிறார்கள். ஆகவே அவர் ஒழிந்த மற்றவர்கள் அதாவது ஜாதி வித்தியாசமும், ஜாதி தர்மமும் ஒழிக்க வேண்டுமென்கின்றவர்கள் எல்லோரும் ஒரு அளவுக்காவது சுயமரியாதைக்காரர் அல்லவா என்று பாருங்கள். கராச்சி தீர்மானத்தின் முக்கிய தத்துவமே பழைய சாஸ்திரங்கள் பழக்க வழக்கங்கள் தொழில் முறை முதலியவைகள் கூட காப்பாற்றப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டதும், அந்தப்படி தீர்மானங்கள் இன்றும் வைத்துக் கொண்டிருப்பதும், ஆஸ்திகத்தைக் காப்பாற்றவும் கிருஷ்ணனையும் கீதையையும் மனுதர்ம சாஸ்திரத்தையும் வருணாசிரம தர்மத்தையும் காப்பாற்றவுமே ஒழிய வேறு என்ன?

**நாஸ்திகர்களாகாமல் முடியாது**

ஆகவே நாம் உண்மையில் ஜாதி பேதத்தையும், ஜாதி இழிவையும் வருணாச்சிரம தர்மத்தையும் சூத்திரத் தன்மையும் ஒழிக்க வேண்டுமானால் எப்படியாவது ஒரு வழியில் நாஸ்திகர்களாகாமல் முடியாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நாம் மாத்திரமல்லாமல் மற்றபடி வேறு யார் ஜாதியை ஒழிப்பதானாலும் நாஸ்திகர்களாகித்தான் தீரவேண்டும்.

நாம் மாத்திரம் துணிவுடன் முன் வைத்த காலைப் பின் வைக்காமல் இந்த விஷயங்களில் உறுதியாய் இருப்போமானால் ஜாதி பேதத்தால் ஜாதிக் கிரமத்தால் கஷ்டப்படும் மக்கள் எல்லோரும் நம்முடன் சேர்ந்துதான் தீருவார்கள்.

பார்ப்பனர்கள் மாத்திரம் எந்தக்காலத்திலும் நம்முடன் சேரமாட்டார்கள். ஏனெனில் இந்த நமது இந்துமதமும், சாஸ்திரமும், கடவுள்களும் அவர்களுக்காக பயன்படும்படியான முறையிலேயே கற்பிக்கப்பட்டு அவர்களே அவற்றால் பயனடைந்து உலகில் உள்ள மனித சமூகத்திலேயே உயர்நிலையை அடைந்து வாழ்ந்து வருவதால் இன்று பார்ப்பனர் ஒழிவதா ஜாதி ஒழிவதா என்கின்ற நிலையில் நம்முயற்சி இருந்து வருகிறது.

பார்ப்பனர் ஒழிந்தால் ஜாதியும் மதமும் கடவுளும் ஒழிந்ததென்றே சொல்லலாம்; ஜாதியும் மதமும் கடவுளும் ஒழிந்தால் பார்ப்பனர்கள்



RangaRakes tamilnavarasam.com

ஒழிந்தார்கள் என்றே சொல்லலாம்; இவ்வளவு ஏன்? ஜாதி ஒழிந்தாலே பார்ப்பனர்கள் ஒழிந்தார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதனால் தான் சு.ம. இயக்கமும் ஜஸ்டிஸ் கட்சியும் பார்ப்பனர்களுக்கே இவ்வளவு பயங்கரமான எதிரிகளாய் காணப்படுகின்றன.

## ஜாதி ஒழிப்புக்குக் காங்கிரஸ் எதிரி

ஜாதி ஒழிப்புக்கு விரோதமாய் பார்ப்பனர்களின் சூழ்ச்சி எப்படிப் பட்டது என்பதை நமது மக்கள் உணரவில்லை.

தீண்டாமை ஒழிப்புக்கு காந்தியார் பாடுபடுகிறார். ஆனால் தாழ்த்தப் பட்ட மக்கள் செருப்பு தைக்கவேண்டும். தோல் பதனிடவேண்டும் என்பதை மாத்திரம் அவர் மாற்றிக்கொள்ள மாட்டார்.

நமது காங்கிரஸ் அபிமானிகள் தீண்டாமை வேலை மேற்கொண்டார்கள். பணம் வசூலித்தார்கள். அதைப் பயன்படுத்தி தோழர் சகஜானந்தத்தைப் பிடித்து இந்துமதமும் இந்து மத தர்மமும் காப்பாற்ற வேண்டும் என்று பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்து பத்திரிகை நடத்தவும் உதவி செய்தார்கள்.

தோழர் M.C. ராஜாவைப் பிடித்து இந்து மதத்தின் புனிதத்தன்மையை பிரசாரம் செய்தார்கள். இப்படிப்பட்ட ஆட்கள் இருந்தன்மையில் இருப்பதை கண்டே டாக்டர் அம்பேத்கார் இந்துமதத்தை அழிக்க தன்னால் முடியாதென்று கருதியும், இந்துமதத்தில் இருந்துகொண்டு தீண்டாமையை ஒழித்துக்கொள்ள முடியாதென்று கருதியும் இந்துமதத்தை விட்டுத் தாம் விலகிக் கொள்வதாக முடிவு செய்துகொண்டார்.

தீண்டாமை விலக்குப் பண்டிலிருந்து கொடுக்கப்படும் சம்பளம் பார்ப்பனருக்குத்தான் பயன்படுகின்றன.

தீண்டாமை விலக்குப் பண்டு போன யோக்கியதையை இன்று யாராவது தெரியவேண்டுமானால் திலகர்நிதி மோசடியே மேலென்று கருதலாம். நடத்தையைப் பார்த்தாலும் காங்கிரஸ்காரர் தோழர்கள் ராமசாமி வரதராஜுலு முதலியவர்களை நடத்திய மாதிரியே மேலென்று தோன்றலாம். தோழர் சன்யாசியை நடத்திய மாதிரியை யோசித்துப்பாருங்கள்.

## காங்கிரசிலும் ஜாதியுணர்ச்சி

எந்தக் காங்கிரஸ் கூட்டத்திலாவது பிராமணர்கள் வேறு மற்றவர்கள் வேறு என்கின்ற பிரிவு இல்லாமல் உட்கார்ந்து சாப்பிட்டிருக்கிறார்களா? சமீபத்தில் நடந்த காங்கிரஸ் கூட்டங்களில் கூட பார்ப்பனரல்லாதவர்களை வெளியில் வைத்து சாப்பாடு போடவில்லையா?

காங்கிரஸ் கான்பரன்ஸ் முதலிய எந்தக் கூட்டங்களிலும் பார்ப்பனர் களைக் கொண்டுதான் சமையல் செய்திருக்கிறார்களே ஒழிய மற்ற ஜாதிக்காரர்களை சமையல் வீட்டில் நுழையவிட்டிருக்கிறார்களா?



சுயமரியாதை மகாநாடுகளையோ, கூட்டங்களையோ எடுத்துக் கொள்ளுங்கள். நாடார், நாயுடு, முஸ்லீம், தீண்டப்படாதார் என்கின்றவர்கள் எல்லோரும் கலந்து சமையல் செய்கிறார்கள். இவர்கள் எல்லோருமே கலந்து பரிமாறுகிறார்கள். சைவர் முதல் எல்லாப் ''பெரிய'' ஜாதிக்காரர்கள் என்பவர்களும் ஒன்றாய் உட்கார்ந்து தான் சாப்பிடுகிறார்கள்.

ஆகவே காங்கிரஸ்காரர்களின் தீண்டாமை ஒழிப்புச் சூட்சியை நீங்கள் இதிலிருந்தாவது தெரிந்து கொள்ளுங்கள்.

சுயமரியாதைக்காரர்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் தீண்டாமை இல்லை என்கின்ற காரணத்துக்காகவே சில மதங்களைப் பாராட்டுகிறார்கள். தீண்டாதவர்களுக்கும் சம உரிமை கொடுக்கிறார்கள் என்பதற்காகவே சில அரசியல் இயக்கங்களையும் ஆதரிக்கிறார்கள். மனித உரிமையை அளிக்க மறுக்கும் எதையும் ஒழித்துத் தீரவேண்டியது மனிதத் தன்மையின் குணம் என்பதை சுயமரியாதை இயக்கம் பறையடிக்கிறது.

## ஜஸ்டிஸ் கட்சியும் சுயமரியாதை இயக்கமும்

நிற்க, தோழர்களே,

சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த மக்களிடையே சில அபிப்பிராய பேதமிருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

அவ்வபிப்பிராயபேதங்களுள் ஒன்று, நாம் ஜஸ்டிஸ் கக்ஷியாருடன் சம்மந்தப்பட்டு அதை ஆதரிப்பதாக கூறப்படுகிறது.

இதைப்பற்றி நான் சிறிதும் கவலைகொள்ளவில்லை. அது அவரவர்கள் அபிப்பிராயம். சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கக்ஷியை விட்டு பிரிந்து ஒருநாளும் இருக்கவில்லை. ஜஸ்டிஸ் கக்ஷி சுயமரியாதை இயக்கத்தை விட்டுப்பிரிந்து இருக்கலாம். அது மாத்திரமல்லாமல் ஜஸ்டிஸ் கக்ஷியார் சுயமரியாதை இயக்கத்துக்கு பல தொல்லைகள் விளைவித்து இருக்கலாம் என்றும் வைத்துக்கொள்ளுங்கள்.

ஆனால் அவற்றிற்கு ஜஸ்டிஸ் கக்ஷி காரணமல்ல. அவ்வியக்கத்தில் ஈடுபட்டு அவ்வியக்கத்தை கைப்பற்றிய சுயநலக்காரர்களின் செய்கை என்றுதான் கருதவேண்டும். ஜஸ்டிஸ் இயக்கத்தின் கொள்கை நம்மை ஒரு கெடுதியும் செய்துவிடவில்லை.

ஜஸ்டிஸ்கக்ஷியானது ஒவ்வொரு தனிப்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகத்தின் நன்மையையும் உண்மையாய் கவனித்து அவற்றிற்கு உரிய உரிமைகளையும், சந்தர்ப்பங்களையும் கொடுப்பது, ஏற்படுத்துவதே முக்கியக் கொள்கை என்பதை அக்கக்ஷி தங்கள் கொள்கையாக வைத்திருக்கும் வரை அதன் தலைவர்களால் அதைக் கைப்பற்றி இருப்பவர்களால் நமக்கு எவ்வித கெடுதி ஏற்படுவதாயினும் அதை வெறுக்க நம்மால் முடியாது.



RangaRakes tamilnavarasam.com

## கடமையை மறக்கலாமா?

அதற்கு பார்ப்பனர்களால் கஷ்டம் உண்டாக்கப்பட்ட காலங்களில் எல்லாம் சுயமரியாதை இயக்கம் இந்தப் பத்து வருஷகாலமாய் ஆதரவளித்து வந்திருக்கிறது. அதை அக்கட்சி உணராமல் இருக்கலாம். காரணம் அதில் சில பதவிகளும் பெரும்பணம் வருவாய்களும் இருப்பதால் சிலர் நாணயமாய் யோக்கியமாய் நடந்துகொள்ள முடியாமல் போகிறது. இது மனித இயற்கை என்பதோடு இதற்காகவே நாம் நமது கடமையில் இருந்து தவறிவிட முடியாது. நமக்கு வேண்டிய கொள்கைகளில் சிலதாவது அங்கு இருக்கிறது.

ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றி பார்ப்பனர்களும், அதனால் பயன் எதிர்பார்த்து ஏமாந்தவர்களும் செய்து வந்த விஷமப் பிரசாரத்தினால் அக் கட்சி பாமர மக்களிடை போதிய செல்வாக்கற்றுப் போனதால் நமது இளைஞர்கள் பலருக்கு எழுச்சி குன்றிவிட்டதென்பது தவிர, மற்றபடி ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க வேண்டும் என்று பிரசாரம் செய்கின்ற தோழர்களிடம் வேறு தக்க காரணங்களை நான் காணமுடியவில்லை. ஆதலால் நான் அப்படிப்பட்ட அபிப்பிராயங்களுக்கு செவிசாய்க்க முடியாதவனாயிருக்கின்றேன். ஆனபோதிலும் இவற்றால் எல்லாம் எதிரிகளுக்கேற்பட்ட செல்வாக்கினாலும் இனியும் ஏற்படப்போகிற செல்வாக்கினாலும் அவர்கள் என்ன செய்யப் போகிறார்களென்பதைப் பார்க்கவே நான் காத்திருக்கிறேன்.

ஆதலால் ஜஸ்டிஸ் கட்சி என்ன செய்தது என்கின்ற கேள்விக்கு ஆக யாரும் பதில் சொல்ல கவலை எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

## ஜஸ்டிஸ் கட்சி செய்த வேலை

ஜஸ்டிஸ் கட்சி மனித சமூக உரிமையை சூதுவாதில்லாமல் பாரபக்ஷ மில்லாமல் ஒப்புக்கொண்டிருக்கிறது. அதன் அதிகாரத்தில் அது அதற்கானவற்றை செய்திருக்கிறது. அது எந்த நிலையிலும் மக்களை ஏமாற்றி வஞ்சிக்க வில்லை. அதன் தொண்டாகிய ஜனப் பிரதிநிதித்துவத்தை சகல வகுப்புக்கும் அது அளித்திருக்கிறது. மற்ற மாகாணங்கள் பின்பற்றும்படியாக அனேக உயர்ந்த காரியங்களைச் செய்திருக்கிறது. இந்தியாவுக்கு வந்த எந்த அரசாங்கமும் செய்துமுடிக்காத காரியங்களை செய்திருக்கிறது. மனிதனை பொதுவாழ்வில் சமமாக பாவிக்காவிட்டால் தண்டனையென்று பினல் கோர்ட்டில் சட்டமியற்றியிருக்கிறது.

பாமர மக்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பிற்பட்ட வகுப்பாருக்கு நன்மைகள் செய்த காரணத்தாலேயே ஏக போக உரிமைக்காரர்கள், பார்ப்பனர்கள் ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க வேண்டுமென்கிறார்கள். நாமும் அதற்கு ஆதரவாளிகளாயிருப்பதா?



## காங்கிரஸ் என்ன செய்தது?

இவ்வளவு குறைகூறும் காங்கிரஸ்காரர்கள் இந்த 50 வருடமாய் இந்திய மக்களுக்குச் செய்த நன்மையென்னவென்று கேட்கின்றேன்.

சென்றவாரத்தில், காங்கிரசுக்காக 50 வருஷ பொன் விழா கொண்டாடினார்கள். இது மக்களை ஏய்க்கவல்லாமல் இதனால் ஏற்பட்ட பலன் என்ன? காங்கிரசினிடம் ஒரு பற்றுதலும் மாய்கையும் ஏற்பட்டு காங்கிரஸ் பூசாரிகளுக்கு மதிப்பும் வயிறு வளர்ப்பும் ஏற்படவேண்டும் என்பதல்லால் வேறு ஏதாவதுண்டா?

வெள்ளி விழா கொண்டாடினார்களா? காங்கிரசுக்கு 25 வயதானதுக்கு வெள்ளிவிழா கொண்டாடியிருந்தால் இப்போது 50 வயதுக்கு பொன்விழா கொண்டாடுவது முறையாகும் என்று சொல்லலாம். அதில்லாமல் இப்போது திடீரென்று 50 ஆவது பொன்விழா கொண்டாடினார்கள். காங்கிரசு செய்த ஒரு நன்மையாவது அவ்விழாவில் எடுத்து சொல்லப்பட்டதா? சொல்ல முடிந்ததா? சொல்ல ஏதாவது இருக்கிறதா?

எவ்வளவு புரட்டு பாருங்கள்! சாமிகள் என்பவற்றிற்கு செய்யும் உற்சவங்கள் போல் காந்திப்படம் காந்தி உருவம் ஆகியவைகளுக்கு ஊர் கோலம் முதலியவைகள், மேளவாத்தியங்கள் தேங்காய் பழ நைவேத்தியம், கற்பூர ஆலத்தி முதலிய காரியங்கள் நடந்தன. இவையெல்லாம் இந்தியரின் காட்டுமிராண்டித் தனத்தை, மிருகப் பிராயத்தை, மடமையைக் குறிக் கின்றனவே அல்லாமல் வேறு ஏதாவது அறிவுடமையை விளக்குகிறதா நாணையத்தை விளக்குகிறதா? இதற்குத் துணை புரிந்த பாதகர்கள் இந்திய மக்களை என்ன செய்யத்தான் பயப்படுவார்கள்? இந்தக் கூட்டத்தார்கள் தானே இன்று தேசபக்தர்கள் தேசாபிமானச் சிங்கங்கள், மகாத்மாக்கள், மகா மகாத்மாக்களாக மூட மக்கள் முன் விளங்குகிறார்கள். இதைப் பற்றி எந்த சர்க்காராவது, எந்த அறிவாளியாவது கவனித்தார்களா?

## 10 நிமிஷம் கொடுக்கிறேன்

இங்கு இப்போது 10 நிமிஷ நேரம் சாவகாசம் கொடுக்கிறேன். ஒருவராவது காங்கிரஸ் இந்திய மக்களுக்கு இன்ன நன்மை செய்தது என்று ஒரு விரலை விடட்டும் பார்க்கிறேன்.

சமுதாயத் துறையில் நடந்ததையும் கெடுத்து, நடப்பதையும் கெடுத்தது என்பதை யார் மறுக்கிறீர்கள்? அதுவிஷமாய் ஏதாவது ஒரு சட்டம் கொண்டுவந்தார்களா? அல்லது கொண்டு வந்த எந்த சட்டத்தை யாவது எதிர்க்காமல் ஆதரித்தார்களா?

பொருளாதார விஷயத்தில் ஏழை மக்களுக்குப் பயன்படும்படி என்ன செய்தார்கள்? பெரும் பெரும் சம்பளங்களை அரசாங்கத்தில் ஏற்படுத்தி நாட்டில் யோக்கியர்களே ஒருவர் கூட இருக்க முடியாமற்படி செய்தார்கள்.



RangaRakes tamilnavarasam.com

விவசாயத் துறையில் என்ன செய்தார்கள்? பல உத்தியோகங்கள் ஏற்படுத்தி அவைகளை மனித சமூகத்துக்கு துரோகம் செய்தாவது கைப் பற்றும்படி செய்தார்கள்.

**அரசியலில் என்ன சீர்திருத்தம் ஏற்படுத்தினார்கள்?**

ஜஸ்டிஸ்காரர்கள் 10, 15, வருஷமாய்த் தான் மந்திரி ஆனார்கள். அதற்கு முன் 35, 40 வருஷம் காங்கிரஸ் ஸ்தாபனம் அரசாங்கத்தார் ஆதரவு பெற்றதாகவே இருந்து வந்ததல்லவா? ராஜபக்தி ராஜவிஸ்வாசத்தோடே நடைபெற்று வந்ததல்லவா? தோழர் டி. ரங்காச்சாரியாரும் டி. விஜய ரங்காச்சாரியாரும் அரசர்கள் விஷ்ணு அம்சம் என்று ஐரோப்பாவில் போய் சொல்லிவிட்டு வந்தார்கள் அல்லவா? காங்கிரஸ் தலைவர்கள் எழுந்து நின்று ராஜ விஸ்வாசம் கூறிவந்தார்களல்லவா? அந்தக்காலம் முதல் ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரியாய் வந்தவரை என்ன நன்மை செய்ய முடிந்தது?

சொல்லட்டுமே ஒரு ஆண்மையுள்ள காங்கிரஸ் பக்தன் என்றுதான் கேட்கிறேன்.

**காங்கிரசின் நாணயம்**

காங்கிரசுக்காரர்கள் நாணயத்துக்கு உங்களுக்கு உதாரணம் வேண்டுமானால் காங்கிரஸ் சரித்திரத்தையும், அதில் தோன்றின தலைவர்களின் யோக்கியதைகளையும், அவர்கள் உபதேசங்களையும், காங்கிரஸ் கொள்கைகளையும், அவற்றின் திட்டங்களையும் அவற்றைப் பின் பற்றின யோக்கியதைகளையும் அவற்றிற்கு ஆக கோடிக்கணக்கான பணங்கள் செலவு செய்து வினியோகித்த நாணையங்களையும் அப்பணம் வசூலிக்கவும் எலக்ஷனில் வெற்றிபெறவும் மக்களுக்கு அவர்கள் கொடுத்த வாக்குறுதி களையும் கவனித்துப் பாருங்கள். சுயமரியாதைக்காரர்கள் ராமாயணத்தை ஆராய்ச்சி செய்கிறமாதிரி கூட ஆராய்ச்சி செய்யாதீர்கள். ஒரு காங்கிரஸ் பக்தனாய் இருந்தே யோக்கியமாய் பகுத்தறிவோடு ஆராய்ச்சி செய்து பாருங்கள். நீங்கள் வெட்கப்படாமலிருக்கமாட்டீர்கள் என்று உறுதி கூறுகிறேன்.

ஆதலால் காங்கிரஸ் பயித்தியம் என்பது மனிதனின் பலவீனம், அறிவற்ற தன்மை அல்லது சுயநலம் என்பதல்லாமல் வேறு இல்லை.

ஆகவே தோழர்களே போகிறவர்கள் போகட்டும். இருக்கிறவர்கள் இருக்கட்டும். சுயமரியாதை இளைஞர்கள் தாங்கள் சரி என்று பட்டதற்கு ஆக தைரியமாய் உழையுங்கள். இச்சென்னையில் 16-சுயமரியாதைச் சங்கங்கள் இருப்பதாய் அறிகிறேன். அவைகளில் இரண்டொன்று உள்ளுக்குள் இருந்தே தொல்லை விளைவிக்கும் முறையைக்கொண்டிருப்பதாய் சேதி எட்டுகிறது. அதைப்பற்றி கவலை இல்லை. அவர்களே நம்மை ஏமாற்றி விட்ட பெருமை அடையட்டும். ஆனால் நீங்கள் மாத்திரம் தைரியத்தை விடாமல் உழையுங்கள்.



## கேள்விகள்

### திலகர் நிதி

**முதல் கேள்வி :**

திலகர் சுயராஜ்ஜிய நிதியைப்பற்றி தோழர் ஈ.வெ.ரா. மீது தினமணி எழுதியிருந்த குறையைப் பற்றியதாகும். அதாவது வைக்கம் சத்தியாக்கிரக சம்மந்தமாய் 1000 ரூபாய்க்கு கணக்கு கொடுக்கவில்லை என்பது தொக்கி இருந்தது.

இந்தப் புகாரானது திலகர் நிதியைப் பற்றி காங்கிரஸ்காரர்கள் மீது ஏற்பட்ட புகார்களுக்கு ஒரு பத்திரிகை ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களில் ஒருவரான ஈ.வெ.ராமசாமியே கணக்கு கொடுக்கவில்லை என்று சமாதானங் கூறிற்று. இது மிகவும் வேடிக்கையான சமாதானம். ஏனெனில் ஈ.வெ.ராமசாமி ஆயிரம் ரூபாய்க்கு கணக்கு கொடுக்கவில்லையானால் அதற்கு ஆகவே இந்தியன் பினல் கோட்டில் திருட்டு செக்ஷனையே எடுத்து விடவேண்டுமா என்று கேட்கின்றேன். நான் இந்த ஆயிரம் ரூபாய்க்கு கணக்கு கொடுத்ததையும் மற்றும் விவரத்தையும் எடுத்துக் கூறிய பின்பே கருவாடு திருட்டுக் கொடுத்த பார்ப்பனர் போல் அது சம்மந்தமாக மறுபடியும் பேச முடியாமல் இந்த மாகாணத்து பார்ப்பனர்கள் வாயும் அவர்களது பத்திரிக்கைகளின் விஷமங்களும் அடங்கின. ஆயிர ரூபாய் விஷயமாய் நான் கணக்கு அப்போதே கொடுத்து இருக்கிறேன் என்பதோடு அதைத்தெரிய வேண்டியவர்கள் ஈரோட்டுக்கு வந்தால் இன்னும் விவரமாக காட்டத்தயாராய் இருக்கிறேன். அன்றியும் திலகர் நிதியைப்பற்றி ஜஸ்டிஸ் கக்ஷி மாத்திரம் குறை கூறினதாய் எழுதி தப்பித்துக் கொள்ளப் பார்த்தார்கள்.

இந்தியாவில் எல்லா மாகாணத்தில் உள்ள பத்திரிகைகளும், ஜெயகர் போன்ற பெரியார்களும், பல காங்கிரஸ்காரர்களும் குறை கூறினார்கள். இன்றும் பந்தயம் கூறுகிறார்கள். நடுநிலைமை கொண்ட ஒரு கமிட்டியாரின் பரிசீலனைக்கு காங்கிரஸ்காரர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களா என்று கேட்கிறார்கள். ஆகவே திலகர்நிதி ஒழுங்காகவும் நேர்மையாகவும் நாணயமாகவும் பயன்படுத்தப்படவில்லை என்பதை நான் கூறுவதோடு என்னால் கணக்குக் கொடுபடாத தொகை பாக்கி இருந்தால் எப்பவும் கொடுக்கத் தயாராய் இருக்கிறேன்.

### மறுஜன்மம்

மதுராவில் ஒருபெண் போன ஜன்மத்தைப்பற்றி பேசுவதாகவும் ஆகவே மறுஜன்மத்தைப்பற்றி அபிப்பிராயம் என்ன என்பது ஒரு சீட்டு.

மறுஜன்மம் என்பது மதசம்மந்தமான ஒரு விவகாரத்திற்கு உரிய விஷயமே தவிர விஞ்ஞான சம்மந்தமானதல்ல. இதைப்பற்றி பல



RangaRakes tamilnavarasam.com

இடங்களில் பேசி யிருக்கிறேன். நான் ஆத்மாவை ஒப்புக்கொள்வதில்லை. அப்படி இருக்க ஆத்மாவுக்கு மறுஜன்மம் உண்டா என்பது பற்றி என் அபிப்பிராயம் தெரிய வேண்டுமா?

அது எப்படியோ போகட்டும். மதுராவில் பெண் போன ஜன்ம சங்கதி பேசுகிறார் என்பது கற்பனையேயாகும். பத்திரிகைகளில் வருவதெல்லாம் நிஜம் என்றால் எதையும் விசாரிக்க வேண்டிய அவசியமே இருக்கா தல்லவா? இந்தப்படியான கற்பனைகள் அறியாமையால் கற்பித்துக் கொள்பவைகள் வெகுகாலமாகவே இருந்து வருகின்றன.

இன்றும் பழனிக்கு காவடி கொண்டு போனால் கொன்ற பாம்பு, அறுத்துச் சமைத்த கோழி, மீன், ஆகியவை உயிர் பெற்று விடுகின்றன என்று இன்னும் அனேகர்கள் நம்புகிறார்கள். அனேகர்கள் காவடி கொண்டும் போகிறார்கள்.

ஒரு சமயத்தில் நானும் முன் ஒருதடவை முதன் மந்திரியாய் இருந்த முனிசாமி நாயுடு அவர்களும் எனது நண்பர் சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களும் பழனிக்குப் போனோம். அப்போது நான் அடிவாரத்தில் இருந்து கொண்டேன். அவர்கள் மலை ஏறிவிட்டு இறங்கி வந்தார்கள்.

இந்த சமயத்தில் அடிவாரத்தில் ஒரு விபூதிக்கடைக்காரன் 2 சாவல்களை தன் கடைமுன் கட்டி அதன் மீது மஞ்சள் குங்குமம் தெளித்து வெத்திலை பாக்கை முன்னால் வைத்து ஒரு உண்டியல் பெட்டியும் வைத்து இருந்தான். இங்கு ஜனங்கள் கூட்டமாக நின்று சாவல்களைக் கும்பிட்டு உண்டியல் கலயத்தில் காசு போட்டுக் கொண்டிருந்தார்கள்.

நான் இதை என்ன என்று கேட்டேன். அதற்கு அந்த கடைக்காரன் என்னையும் ஒரு பக்தன் என்றும் மந்திரி என்றும் நினைத்துக் கொண்டு பயபக்தியுடன் எழுந்து நின்று ‘‘இந்த சாவல்கள் நேற்று வந்த சோதனைக் காவடியின் அருள்’’ என்று சொன்னான். அதாவது அறுத்து சமைத்து காவடி கட்டி கொண்டுவந்த சாவல்கள் கடவுள் சன்னதியில் உயிர்பெற்று விட்டது என்று விளக்கினான்.

இதை நான் இரு நண்பர்களுக்கும் காட்டி விளக்கினேன். அவர்கள் சிரித்துவிட்டு ‘‘இப்படிப்பட்ட ஆள்கள் தான் உங்கள் பிரசாரத்துக்கு அனு கூலம் செய்துவிடுகிறார்கள்’’ என்றும், நாங்கள் இதையெல்லாம் நம்பமாட்டோம் என்றும் சொல்லிச் சிரித்தார்கள்.

ஆகவே இப்படிப் பலபேர் மக்களின் முட்டாள் தனத்தால் பிழைக்க வேண்டியவர்கள் கற்பனை செய்வதுண்டு.

நம் நாட்டில் கூட அனேக பத்திராதிபர்கள் வேண்டுமென்றே தங்களுக்கு பொய் என்று பட்டவிஷயத்தைக் கூட ஜனங்கள் ஏமாறத்தக்க விஷயமாய் பிரசுரிக்கிறார்கள். மதமும் தேசீயமும் வெற்றி பெற வேண்டுமானால் மக்களை மூடர்களாக ஆக்கிவைப்பதினால் தான் முடியும்.

ஆதலால் இப்படிப்பட்ட கேள்விகள் அநேகவற்றிற்கு நான் எத்தனையோ தடவை பதில் சொல்லி இருக்கிறேன்.



இம்மாதிரி கேள்விகளுக்கு ஒருவர் இருவருக்குச் சமாதானம் சொல்லி விடுவதாலும் அடங்கிவிடாது ஒன்று கூறுகிறேன். நல்ல நீதிபதிகள் போல் நான்கு பேரை நியமிக்கலாம். அதற்கு ஆகும் செலவை நான் பொதுக்கட்டி விடுகிறேன். அதில் நம்பிக்கை உள்ளவர்களும் பொதுக் கட்டட்டும். விசாரித்து அறிந்த பிறகு அது உண்மையானால் நான் கட்டிய தொகையை செலவுக்கு எடுத்துக் கொள்ளட்டும். அது பொய்யானால் அவர்கள் கட்டிய தொகையை எடுத்துக்கொள்ளட்டும். அப்படிக்கில்லாமல் எவ்விதப் பொறுப்பும் இல்லாதவர்கள் இப்படி கண்டபடி கண்டவர்கள் சொல்லுவதை நம்பி உளறிக் கொண்டே இருந்தால் இதற்கு எத்தனை சமாதானம் சொல்ல முடியும்? இவை சில சமயங்களில் வேண்டுமென்றே கற்பிக்கப்படுவது எனக்குத் தெரியும்.

## ஜோசியம்

ஜோசியம் பொய்யா மெய்யா என்று அடுத்த கேள்விச் சீட்டில் இருந்தது.

சோதிட ஆராய்ச்சி என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறேன். அது பற்றி அநேக வியாசங்கள் குடி அரசிலும் பகுத்தறிவிலும் எழுதி இருக்கிறேன். அப்புத்தக விளம்பரத்துக்கு இம்மாதிரி சொல்லவில்லை. அதன் விலை 4 அணாத்தான்.

இப்பிரச்சினைக்கு முழு சமாதானம் சொல்ல காலம் போதாது. இப்பொழுதே நான் பேச ஆரம்பித்து இரண்டுமணி ஆகிவிட்டது.

பொதுவாக, ஜோசியம் பெரிதும் மனிதன் பிறந்த நேரத்தைப் பொறுத்ததாயிருக்கிறது. அந்த நேரத்துக்கும், அப்பொழுது இருந்த நட்சத்திர நிலைக்கும் மனிதனுடைய வாழ்க்கை நடத்தைகளுக்கும் சம்பவங்களுக்கும் சம்பந்தமில்லை. ஒரே குறிப்பிட்ட நேரங்களில் 100க் கணக்கான குழந்தைகளுக்குக் குறையாமல் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பிறக்கின்றன. பலன் எல்லாம் ஒன்றாய் இருக்க முடியாது. அப்படி இருக்குமானால் அபிசீனியா - இதாலி சண்டை நடக்க இடமே இருக்காது. இந்தியாவில் உள்ள காந்தி ஜோசியர்களை ஏன் விலை கொடுத்தாவது கொண்டுபோய் விஷயம் தெரிந்து ஒருவரிடம் ஒருவர் ராஜ்யத்தை ஒப்புவித்து சுகமே இருப்பார்கள். நம்மைவிட எந்தக் காரியத்திலும் (முட்டாள் தனத்தைத் தவிர) ஐரோப்பியர்கள் இளைத்தவர்கள் அல்ல. ஆதலால் ஜோசியம் என்பது சொல்லுகிறவர்கள் தந்திரமும் கேட்கிறவர்கள் முட்டாள்தனமும் அல்லாமல் வேறில்லை.

## அம்பேத்கார்

அடுத்தது எந்த மதத்திலும் நம்பிக்கை இல்லாத நீர் அம்பேத்கார் வேறு மதத்துக்குப் போவதை ஏன் ஆதரிக்கிறீர். இஸ்லாம் மதத்தைத்



RangaRakes tamilnavarasam.com

தழுவும்படி ஏன் கூறுகிறீர்? என்பதாக எழுதப்பட்ட ஒரு சீட்டு கொடுக்கப் பட்டது. தீண்டாதவர்கள் முஸ்லீம் மதத்தில் சேர்ந்து விட்டால் தீண்டாமை ஒழிந்து விடும் என்று 1926ல் வெளிப்படையாகக் கூறியிருக்கிறேன். 28, 29 முதல் குடிஅரசுப் பத்திரிகையில் எழுதி வந்திருக்கிறேன். இதை முதல் முதல் சொன்னவன் நான் தான். அந்தக்காலத்தில் பல சுயமரியாதைத் தோழர்கள் துருக்கி தொப்பி வாங்கிப் போட்டு அழகு பார்த்ததும், லுங்கி கட்டி அழகு பார்த்ததும் எனக்குத் தெரியும். நான் இஸ்லாம் மதத்தில் தீண்டப்படாதவர்கள் சேர்ந்து கொள்ளுவதை ஆதரிப்பது முஸ்லீம் கடவுள் இந்துக் கடவுள்களை விட மேலான கடவுள் என்றோ, முஸ்லீம் மோட்சம் இந்து மோட்சத்தைவிட மேலானதென்றோ கருதி அல்ல. அவற்றைப் பற்றி எனக்கு நம்பிக்கையுமில்லை கவலையுமில்லை.

முஸ்லீம் மார்க்கத்தில் தீண்டாமைக்கு இடமில்லை; முஸ்லீம் களுக்குள் தீண்டாமை அனுபவத்திலும் இல்லை. ஆதலால் தீண்டாமையை ஒழித்துக் கொள்ள வேண்டியவர்கள் முஸ்லீம்களாகிவிடுவதில் ஆட்சேபணை இல்லை என்றும் ஆலோசனை சொல்லுகின்றேன் என்றும் சொல்லுகிறேன். எனக்கு மாறுபாடாகப் பேசுகிறவர்கள் முஸ்லீம் மார்க்கத்திலும் தீண்டாமை இருக்கிறது என்று மெய்ப்பித்தால் அந்த அபிப்பிராயத்தை விட்டு விடத் தயாராய் இருக்கிறேன். தீண்டாமை இல்லாத சமயங்கள் பல இருப்பதாக சொல்லிக் கொள்ளலாம். பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தால் தீண்டாமை ஒழிக்கப்பட்டு விடவில்லை. பவுத்த மதத்திலும் ஜெயின மதத்திலும் சேர்ந்தால் தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிடவில்லை.

ஆரிய சமாஜத்தில் சேர்ந்தாலும் தீண்டாமை ஒழிக்கப்பட்டு விடவில்லை. கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்தாலும் தீண்டாமை ஒழிக்கப் பட்டுவிடவில்லை.

இந்து மதத்திலும் தீண்டாமைக்கு இடமில்லை என்று தான் சிலரால் சொல்லப்படுகிறது. ஆனால் பலனில் பிரத்தியட்சத்தில் அவரவர்களுக் குள்ளாகவே தீண்டாமை அனுஷ்டிக்கப்படுகிறது.

அது மாத்திரமில்லாமல் நாஸ்திகர்களுக்குள்ளாகவும், பகுத்தறிவுவாதி களுக்குள்ளாகவும் தீண்டாமை அனுஷ்டிக்கப்படுகிறது.

## இஸ்லாம் மதத்தில் தீண்டாமை இல்லை

ஆனால் முஸ்லீம்களுக்குள் மனிதப் பிறவியின் காரணமாய் தீண்டாமை அனுஷ்டிப்பதில்லை.

நான் ஆஸ்திக தீண்டாமைக்காரர்களையே முஸ்லீம்களாகி விடுங்கள் என்று சொல்லுவதோடு நாஸ்திக தீண்டாதவர்களுக்கும் கூட தீண்டாமை ஒழிய வேண்டுமானால் வேறு மார்க்கத்தைக் காணோம் என்றும் கூறுகிறேன்.



தவிர இப்போது வர வர இந்திய மனித சமூக ஒற்றுமைக்கும் சுதந்திர சித்திக்கும் கூட இந்திய மக்கள் முஸ்லீம்களாக ஆகிவிட்டால் பயன்படும் என்றும் நினைக்கிறேன்.

இந்தியர்களில் இந்துக்களுக்கு சமூக அபிமானம் கிடையாது. ஒற்றுமையும் கிடையாது. இரண்டுமில்லாத மக்களுக்கு சுயமரியாதை வெற்றி ஏற்படுவது கடினம். இந்துக்கள் 20 கோடிபேர் இருந்தும் சமுதாய துறையில் முஸ்லீம்கள் பெற்ற வெற்றி இந்துக்கள் பெறமுடியவில்லை.

ஒரு பொது வீதியில் சிறு மஜீது கட்டிக்கொண்டு இங்கு மேளவாத்தியம் கூடாது என்று உத்திரவு போட்டால் பொப்பிலி ராஜா ஊர் கோலமோ காந்தியார் ஊர்கோலமோ கூட செல்ல முடியாது. ஏன்? இந்துக்கள் கடவுள்கள் ஊர்வலம் கூட செல்லமுடியாது. இரண்டு நாளைக்கு சத்தம் போட்டு விட்டு பிறகு நமக்கு ஏனிந்தத் தொல்லை என்று சொல்லிவிடுவான். சுதந்திரப்போர் என்பதிலும் முஸ்லீம்களுக்கு உள்ள வீரமும் பிடிவாத குணமும் உறுதியும் இந்துக்களுக்கு இல்லை.

## முஸ்லீம்கள் வலிமை

அவர்கள் பிடித்ததை எல்லாம் சாதித்தவர்கள். இந்துக்கள் இதுவரை ஒன்றிலும் வெற்றிபெறவில்லை.

34 கோடி பேர்களுக்கு ''பொது ஸ்தாபனமாகிய'' காங்கிரசுக்கு உள்ள மதிப்பையும் முஸ்லீம்லீக்குக்குள்ள மதிப்பையும் நீங்களே யோசித்துப் பாருங்கள்.

இன்றய 9 கோடி முஸ்லீம் மக்களுடன் 7 கோடி தாழ்த்தப்பட்டவர்கள் சேர்ந்தால் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியல்ல வேறு எந்த ஆட்சியும் முஸ்லீம்களின் சர்வாதிகாரத்தன்மையின் கீழ்தான் நடந்தாக வேண்டும்.

இந்தியாவின் செல்வம் ஒரு காசு வெளியில் போய்விட முடியாது.

ஜயிலில் கூட நான் பார்த்தேன். இந்தியக் கைதிக்கு தொடைக்குமேல் ஒரு துணி கொடுக்கிறார்கள். முஸ்லீம் கைதிக்கு வீதி கூட்டும்படி கால் அளவு கால் செராய் கொடுக்கிறார்கள்.

முஸ்லீம்களை வேறு சமூகத்தார் எந்தக்காரணம் கொண்டும் அடக்கி விட முடியாது.

## தேச விடுதலைக்கும் இஸ்லாமே சிறந்தது

ஆதலால் தீண்டாமை ஒழிவது மாத்திரமல்லாமல் தேச விடுதலைக்கும் கூட தாழ்த்தப்பட்ட மக்கள் முஸ்லீம்களாகிவிடுவது ஆட்சேபிக்க முடியாததாகும்.

நான் சாவதானமாய் நடுநிலையில் இருந்து யோசித்துப் பார்த்தே பேசுகின்றேன்.



RangaRakes tamilnavarasam.com

நம்மவர்களுக்கு மதப்பிடிவாதம் எதற்காக இருக்க வேண்டும்? இந்து மதத்தால் ஏற்பட்ட நன்மையைச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

முஸ்லீம் ஆட்சி நம் நாட்டில் இதுவரை இருந்து இருக்குமானால் அன்னிய ஆட்சி என்கிறீர்களே அது இந்த நாட்டில் இருந்திருக்க முடியுமா?

நம் தெய்வங்களும் சடங்குகளும் நம்பிறவி எதிரிகளான பார்ப்பனர்களும் இவ்வளவு பணம் கொள்ளைகொண்டு நம் மக்களை இவ்வளவு மூடர்களாகவும் சுயமரியாதை அற்றவர்களாகவும் வைத்திருக்குமா என்பதை சரித்திரங்கள் கொண்டுபாருங்கள். அன்றியும் உலக சமாதானத்துக்கும் ஓய்வுக்கும் மக்கள் முதலில் ஒரு சமூகமாக ஆகித் தீர வேண்டும். அந்த முறையிலும் இந்து சமூகம் ஒழிவதும், முஸ்லீம் சமூகம் பெருகுவதும் அனுகூலமேயாகும். கடைசியில் உலகில் இரண்டு சமூகம்தான் நிலைக்கும். அவை கிறிஸ்து முஸ்லீம் சமூகமே ஆகும்.

உலகம் நாஸ்திக அதாவது பகுத்தறிவான சமூகம் ஆக வேண்டுமானால் கிறிஸ்தவ சமூகத்தைவிட முஸ்லீம் சமூகம் தாராளமாய் இடம் கொடுக்கக் கூடியதாகும்.

இந்துக்கள் இதுவரை சமூக ஒற்றுமைக்கு யாதொரு முயற்சியும் செய்யவில்லை. அதைப்பற்றி லட்சியமும் இல்லை.

அம்பத்கார் முஸ்லீம் ஆவதாகச் சொன்னதற்கு யார் என்ன சமாதானம் சொன்னார்கள். வேண்டாம் வேண்டாம் என்கிறார்களே தவிர, வேண்டாம் உனக்கு சுதந்திரம் கொடுக்கிறோம் என்று யார் சொன்னார்கள்.

### இந்துக்கள் ஏமாற்றுவித்தை

இந்துக்களுக்கோ இந்துத் தலைவர்களுக்கோ இவ்விஷயத்தில் ஆக்ஷேபணை இருக்குமானால் இதற்குள் தீண்டாதவர்களுக்கு சமூகக் கொடுமையும் இழிவையும் நீக்க ஏதாவது ஒரு சட்டம் கொண்டு வந்திருக்க மாட்டார்களா? ஒரு சில வருணாச்சிரமக்காரர்களை மதிக்கிறார்களே ஒழிய, 7-கோடி தீண்டாதவர்களை காங்கிரஸ்காரர் மதிக்கிறார்களா? இந்துக்களாவது கவலைப்படுகிறார்களா? வீண் வேஷத்துக்கும், தாழ்த்தப்பட்ட மக்கள் அரசியல் பங்கை அபகரிப்பதற்கும் தான் இந்துக்கள் தீண்டாதவர்களை பயன்படுத்திக் கொள்ளுகிறார்களே ஒழிய வேறில்லை. ஆகையால் அதைப்பற்றி யாரும் கவலைப்படாதீர்கள்.

முஸ்லீம் சமூகத்தைப் பெருக்கித் தீண்டாமையை ஒழிப்பதோடு இந்தியாவை விடுதலையடையும்படி செய்யுங்கள்.

*குறிப்பு: 12.01.1936 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை சென்னை பச்சையப்பன் கல்லூரி பெரிய மண்டபத்தில் சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் 3-வது ஆண்டுவிழாவில் ஆற்றிய தலைமையுரை.*

குடி அரசு - சொற்பொழிவு - 19.01.1936



# தோல்விக்குப் பயந்து எதிரியைத் தஞ்சமடைவதா?

ஜஸ்டிஸ் கட்சிக்கு இந்திய சட்டசபைத் தேர்தலில் தோல்வி ஏற்பட்டது என்பதினாலேயே அக்கட்சிக்குத் தலைவர்களாக இருந்து பெருமை பெற்றவர்களும், அனுதாபிகளாக இருந்து பயன் அடைந்தவர்களும் ஒரே அடியாக மனதை விட்டு விட்டார்கள்.

அதோடு மாத்திரமல்லாமல் எதிரிகளைத் தஞ்சமடைய தந்திரம் செய்கிறார்கள்.

ஆனால் கட்சியின் பேரால் யாதொரு பயனும் அடையாமல் ஏதோ தங்களாலான அளவுக்கு உழைத்து வந்தவர்கள் பலர் மெய்மறந்து பொறுப்பற்று உறங்கிக் கொண்டிருந்த தலைவர்களுக்கு உணர்ச்சியும் ஊக்கமும் ஊட்ட ''இத்தோல்விகள்'' தக்கதொரு சாதனமாகுமென்று கருதி சிறிதும் உறுதியையும் தைரியத்தையும் விடாமல் நம்பிக்கையுடனேதான் இருந்து வருகிறார்கள்.

தோல்வி ஏற்பட ஏற்பட தலைவர்களாக இருந்து வருபவர்களுக்கு தோல்விக்குப் பரிகாரம் காங்கிரசில் சேருவதுதான் என்கின்ற எண்ணம் ஒவ்வொருவர் மனதிலும் தோன்றி இப்போது காங்கிரசில் சேர ஆளுக்காள் முந்துகிறார்கள்.

ஜஸ்டிஸ்காரர்கள் காங்கிரசில் சேருவதை ஜஸ்டிஸ் கொள்கையோ வேலைத்திட்டமோ எதுவும் குறுக்கே நிற்கவில்லை.

கோயமுத்தூரில் 1927ம் வருஷம் திவான் பகதூர் குமாரசாமி ரெட்டியார் தலைமையில் நடந்த ஜஸ்டிஸ் கட்சி ஸ்பெஷல் மகாநாட்டில் ஜஸ்டிஸ்காரர்கள் காங்கிரசில் சேரலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அத்தீர்மானம் அதற்குப்பின் நடந்த எந்த மகாநாட்டிலும் மாற்றப்படவில்லை.

அப்பொழுது அத்தீர்மானம் செய்யக் காரணம் என்னவென்பது பொது ஜனங்கள் அறிந்ததே.

அத்தீர்மானமாவதுः-

**''பலவித அபிப்பிராய பேதமுள்ள பிராமணரல்லாதார் எல்லாருள்ளும் ஒற்றுமையை அதிகப்படுத்த வேண்டுவது மிக்க அவசியமாதலாலும்,**



RangaRakes tamilnavarasam.com

**துரிதத்தில் சுயராஜ்யமடைவதற்காக இந்தியாவிலுள்ள பலவித ராஜீயக் கட்சிகளுக்கும் ஒற்றுமையை அதிகப்படுத்துவதற்கான முறைகளைக் கையாள வேண்டியிருப்பதாலும், காங்கிரஸை ஒரு தனி வகுப்பார் ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்துவிட்ட சில சுயநலப்பிரியர்கள் பிராமணரல்லாதாரியக்கத்தின் நோக்கங்களையும் கொள்கைகளையும் திரித்து மாற்றிப் பொய்பிரசாரம் செய்து வருவதினாலும், அப்படிப்பட்ட பொய்ப்புரட்டுகளையும் விஷமப் பிரசாரத்தையும் மறுக்க வேண்டியது அவசியமாயிருப்பதினாலும், அதுவுமன்றி பிராமணரல்லாதார் இயக்கத்தின் நோக்கங்களையும் கொள்கைகளையும் சரியாய் விவரித்துக்கூறி ஜனங்களுக்குள் பிரசாரம் செய்ய வேண்டியிருப்பதினாலும், இந்த மகாநாடு பிராமணரல்லாதார் எல்லாரும் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில் சேரவேண்டுமென்று வற்புறுத்தி வேண்டிக் கொள்வதுடன், காங்கிரசிலும் அது போன்ற சங்கங்களிலும் சேரப் பிரியமுள்ள தென்இந்திய நல உரிமைச்சங்கத்தின் அங்கத்தினர் அந்தப்படிச் சேரலாமென்றும் அனுமதிக் கொடுக்கிறது.**

**தென் இந்திய நலவுரிமைச் சங்கம் தனிச்சங்கமாய் நின்று தன்னுருக்குலையாமல் வேலை செய்யவேண்டுமென்றும் இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.''**

**(10-7-27 தேதி குடி அரசு)**

ஆனால் அத் தீர்மானத்தின்படி ஜஸ்டிஸ்காரர் பலர் காங்கிரசில் சேர்ந்தும் அவர்களது உத்தேசம் சிறிதும் நிறைவேறவில்லை. இந்த முடிவை நாம் கோயமுத்தூர் கான்பரன்சில் எடுத்துக் கூறினோம்.

தோழர்கள் பனகால் அரசர், பி. வரதராஜுலு நாயுடு, திரு. வி. கல்யாண சுந்திர முதலியார் ஆகியவர்களுடைய ஆசைக்கு நாம் அடிமையாகி அதை எதிர்க்காமல் இருந்துவிட்டோம்.

இன்று அதுபோல ஒரு உணர்ச்சி ஜஸ்டிஸ்காரர்கள் அனேகருக்குத் தோன்றிவிட்டது.

காங்கிரசில் சேரவும் போகிறார்கள். பயனைப் பொறுத்தவரையில் முன் போலவேதான் முடிவு ஏற்படப் போகின்றது என்பது நமது அபிப்பிராயம்.

காங்கிரசுக்கு உள்ளே போய்ச் சேர்ந்து காங்கிரசுக்காரர்களின் யோக்கியதையை வெளியாக்கவோ, அல்லது நமது கொள்கைகளை அதிலிருந்து பிரசாரம் செய்யவோ முடியும் என்று நினைப்பது வீண் கனவேயாகும்.

பார்ப்பனர்கள் காங்கிரசை தேசாபிமானத்துக்கு ஆவது, தேச மக்களின் பொது பிரதிநிதித்துவத்துக்கு ஆவது வைத்திருந்தால் இந்த கொக்கு பிடிக்கிற வித்தையெல்லாம் வெற்றிபெறலாம்.



ஆனால் பார்ப்பனர்கள் காங்கிரசை தங்கள் சமூக நன்மைக்காகவே வைத்திருக்கிறார்கள். அதற்கு ஏற்றபடியே அவர்கள் அதை பந்தோபஸ்த்து செய்து மற்றவர்கள் உள்ளே நுழையாதபடிக்கு வேட்டை நாய்களை வாசல்படியில் கட்டி வைத்திருக்கிறார்கள். அதாவது பல அசாத்தியமானதும் மனச்சாட்சியும், பகுத்தறிவும் உள்ளவர்கள் ஒப்புக்கொள்ள முடியாததுமான திட்டங்கள் இருக்கின்றன.

இவ்வளவையும் கடந்து உள்ளே சென்றாலும் காரைக்குடி மகாநாட்டுத் தலைமை விஷயத்தில் தோழர் அவினாசிலிங்கத்துக்கும், தோழர் ருக்குமணி லட்சுமிபதிக்கும் நடந்த கதைகள் நடக்காமல் போகாது.

அவினாசிலிங்கத்துக்கும் அவர் போன்றாருக்கும் பார்ப்பனர்கள் கொடுக்கும் விளம்பரமும் பெருமையும் மற்றவர்களுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது அறிவீனமேயாகும்.

காங்கிரசு பார்ப்பன ஸ்தாபனம் என்பதற்கு மற்றும் வேறு ஏதாவது உதாரணம் வேண்டுமானால் மிதவாதிகள் என்னும் பார்ப்பனர்களுக்கும் பூரண சுயேச்சைக்காரர்கள் என்னும் பார்ப்பனருக்கும் கொள்கையில் எவ்வளவு எவ்வளவு வித்தியாசமிருந்தாலும் அவர்கள் ஒருவருக்கொருவர் காங்கிரசில் உள்ள சலுகையும் அபிமானமும் எப்படிப்பட்டது என்று பாருங்கள்.

தோழர் மகாகனம் சீனிவாச சாஸ்திரி என்பவர் காந்தியாரை அராஜகர் என்று சொல்லி சர்க்காரிடம் கூலி பெற்றவர்.

காந்திக்கு அரசியல் ஞானம் இல்லை என்று சொல்லி வெள்ளையர் களிடம் நற்சாட்சிப்பத்திரம் பெற்றவர். இன்று காந்தியாரை மகா வலிமை பெற்ற ஆத்ம சக்தியுடையவர் என்று அவர் சொல்லுவதோடு ''காங்கிரசை தோல்வியுற விட்டுவிடலாமா?'' ''ஜஸ்டிஸ் கட்சி வெற்றிபெறுவதை பார்த்துக் கொண்டு உயிருடன் இருக்கலாமா'' என்பதோடு காங்கிரசில் தாங்களுக்கு இடம்கொடுக்க வேண்டும் என்று கெஞ்சுகிறார். தோழர்கள் சர். சிவசாமி அய்யர் என்கிறவரும் டி.ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியார் என்பவரும் காங்கிரசின் ''மகிமையையும் பெருமையையும்'' வானமளாவப் புகழ்ந்து பேசி மிதவாதிகள் காங்கிரசை ஆதரிக்க வேண்டும் என்கிறார்கள்.

தோழர் சீனிவாசய்யங்கார் அவர்களைப்பற்றி பேசவேண்டியதே இல்லை. அவர் காந்தியாரை முட்டாள் என்று சொன்னதோடு ''காந்தி கோஷ்டியார் எவரும் என் வாசல்படியை மிதிக்கக் கூடாது'' என்று கட்டளை போட்டவர். தோழர் ஜம்னாலால் பஜாஜ் அவர்கள் சீனிவாசய்யங்கார் அவர்கள் வீட்டுக்கு வந்து பார்க்கிறேன் என்று சொன்னதற்குக் கூட பார்க்க முடியாது என்று சொன்னவர். மற்றும் அவர் தோழர் ராஜகோபாலாச்சாரியாரைக் காணுவதே பாவம் என்று கருதுபவர். இப்படிப்பட்டவர் இன்று காங்கிரஸ் தலைவர்களில் முதல் ஸ்தானம் பெற வருகிறார். காங்கிரஸ் பார்ப்பனர்கள் தலைமை ஸ்தானம் அளிப்பதாக உறுதி கூறி அழைக்கிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இன்று இந் நாட்டில் எந்தப் பார்ப்பனர்களுடைய முகத்திலும் ‘‘லக்ஷிமி களை’’ தாண்டவமாடுகிறது.

காங்கிரசில் இல்லாத பார்ப்பனர்கள் இன்னார் என்று பூதக்கண்ணாடி வைத்துக்கூட காண முடியாது.

சர்க்கார் உத்தியோகத்திலுள்ள பார்ப்பனர்களும் காங்கிரஸ் வெற்றியை காலக்ஷேமமாகச் செய்கிறார்கள்.

அவர்கள் ஆண் பெண் குழந்தை குட்டிகள், கிழடு கிண்டுகள் சகிதம் காங்கிரஸ் தாங்கள் சொந்தப் பெரியவர்கள் தேடிவைத்த முதல் போல் கருதி ஆனந்தக் கூத்தாடுகிறார்கள்.

காந்தியார் ஒரு கோடி ரூபாய் தண்டுகிற காலத்தில் ஜனங்களுக்கு அதோ தெரிகிறது சுயராஜ்ஜியம், இதோ தெரிகிறது சுயராஜ்ஜியம் என்று சொன்னதை மக்கள் எப்படி நம்பி பணம் காசு கொடுத்து ஜெயிலுக்கும் போனார்களோ அதுபோன்ற நம்பிக்கையே இப்போது பார்ப்பனர்கள் எல்லோருக்கும் இருந்து வருகிறது.

அதாவது அதோ வந்துவிட்டது பார்ப்பன ராஜ்ஜியம், இதோ வந்துவிட்டது பார்ப்பன ராஜ்ஜியம் என்கின்ற உண்மையான நம்பிக்கையே எல்லோருடைய முன்னிலையிலும் தாண்டவமாடுகின்றது. ஜஸ்டிஸ் ஆட்சியின் பயனாய் தங்கள் பிள்ளைகுட்டிகளுக்கு உத்தியோகம் கிடைக்காது என்று கருதி வேறு தொழிலுக்கு தயார் செய்த குழந்தைகளைக்கூட அவற்றை விட்டுவிடச் செய்து இப்போது பள்ளியில் படிக்க வைக்க நெருப்புப்பிடித்த வீட்டுக்காரர் தன் சாமான்களை எடுக்க ஆத்திரப்பட்டு அலைவதுபோல் தோசை மாவு ஆட்டும் கிழவி முதல் அலைகிறார்கள்.

இப்படிப்பட்ட பார்ப்பனக் குடும்பச் சொத்தில் பங்கு கிடைக்கும் என்று கருதி ஒரு பார்ப்பனரல்லாதார் அதில் போய்ச் சேருவதென்றால் அது எப்படிப்பட்ட புத்திசாலித்தனமாய் இருக்கும் என்று நம்மால் விளக்கக்கூடவில்லை.

இவ்வளவும் ஒருபுறம் இருக்க, புழுத்ததின் மேல் சாணியைப் போட்டதுபோல் நமது நன்றி விசுவாசமுள்ள சர்க்காரின் காற்றும் பார்ப்பனர்களின் யாகத்துக்கு அனுகூலமாகவே அடித்து வருகின்றது.

வெள்ளைக்காரர்களுடைய ‘‘கடாக்ஷ’’மும் பார்ப்பனர்கள் மீதே இறங்கி வருகிறது. வில்லிங்டன் துரை மகனார் கூட, சாகும் போது சிவ என்று சொல்லிவிட்டால் சகல பாபமும் தீர்ந்துபோகும் என்று நம்மவர்கள் கருதுவது போல், ‘‘காங்கிரஸ் குஷாலாக வந்து சர்க்காரை ஏற்று நடத்தட்டும் யாரும் அதற்குத் தடைசெய்யாதீர்கள்’’ என்று தனது கணங்களுக்கு அசரீரி அருளிவிட்டு வந்த இடத்துக்கு பயணமாகிறார்.

மாகாண கவர்னர்களும் அந்த அசரீரியை வெகு பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்கிறார்கள்.



இவற்றிற்கெல்லாம் காரணம் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்கள், வைசியர் அண்டாவில் பால் ஊற்றினது போல் ஆளுக்காள் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் காங்கிரசுக்கு பயந்ததும், காங்கிரஸ்காரர்களிடம் திருட்டு நேசம் வைத்ததும், கோபம் வந்த போதெல்லாம் அதிருப்தி ஏற்பட்ட போதெல்லாம் காங்கிரசில் சேர்ந்திடுவேன் காங்கிரசில் சேர்ந்திடுவேன் என்று பிகுவு காட்டினதுமான காரியங்களே காங்கிரசை இவ்வளவு பூச்சாண்டி ஆக்கிவிட்டது.

இவற்றை யெல்லாம்விட ஒரு பெரிய அனுகூலம் காங்கிரசுக்கு எதனால் ஏற்பட்டது என்றால் ஜஸ்டிஸ் கட்சியார் பிரசாரம் செய்ய பத்திரிகை மூலமானாலும் சரி, பிரசங்கத்தின் மூலமானாலும் சரி சிறிதும் லட்சிய மில்லாமல் தங்கள் மார்பைப் பார்த்துப் பார்த்து உடல் பூரிக்கச் செய்து கொண்டதேயாகும்.

‘‘மற்றும் காங்கிரஸ் என்பது கழுதையோ குதிரையோ அதை அடையாளம் பார்க்காதீர்கள். பார்க்கவும் விடமாட்டோம். சொல்வதை நம்புங்கள். நம்ப மாட்டேன் என்று சொல்லவும் உங்களால் முடியாது’’ என்று சொல்லி சண்டப்பிரசண்டமாய் காங்கிரஸ்காரர்கள் செய்துவந்த பிரசாரமுமேயாகும்.

இவைகள் எல்லாம் எதைக் காட்டுகின்றதென்றால் தலைவர்கள், பிரதானப்பட்ட புருஷர்கள் என்பவர்கள் பயந்து போயும் வேறுசில காரணத் தாலும் பாமர மக்களை சிறிதும் மதியாமல் கை விட்டு விட்டதேயாகும்.

ஆன போதிலும்கூட நாம் சிறிதும் அஞ்சவில்லை; அதைரியப்படவு மில்லை. நமது தோழர்கள் யாரும் மனமுடைந்து போகவேண்டியது மில்லை. நமது கொள்கையில், திட்டத்தில் ஏதாவது குறைகள் சூதுகள் இருந்தால் மாத்திரம்தான் நாம் பயப்படவேண்டும்.

நம் கொள்கை மந்திரி பதவியே அல்ல, நம் கொள்கை அதிகாரமும் சம்பளமுமேயல்ல, நமது திட்டம் நம் சமூகத்தைப் பொறுத்தது மாத்திரமுமல்ல, அரசாங்கத்தை நெருக்கி மனித சமூகம் ஒட்டுக்கும் சம உரிமை வழங்கச் செய்ய வேண்டியதாகும்.

ஆதலால் மந்திரி பதவி நம் கையை விட்டுப் போகுமானால் சகல சீர்திருத்தமும் உடைந்து எல்லா இலாக்காவும் அரசாங்கமே ஏற்று ஒழுங்காய் நடத்திக் கொடுக்கும்படியான நிர்பந்தத்தை உண்டாக்க நமக்குத் தெரியும். நம்மால் முடியும். நாம் கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்தால் பார்ப்பனர் கிளர்ச்சிபோல ‘‘நான் ஓயாமல் அழுகிறேன் நீ நோகாமல் அடி’’ என்கின்ற ஒப்பந்தக் கிளர்ச்சியாக இருக்க முடியாது என்பதோடு ‘‘தவளை கடிக்குமா பார்ப்பனப் படை வெல்லுமா’’ என்கின்ற பழமொழிப்படியல்ல என்பது உலகமறிந்து விடும். ஆதலால் இம்மாதிரி தோல்வியைப்பற்றி ஏன் மானமும் துணிவு முள்ளவன் கவலைப்பட வேண்டும்?



RangaRakes tamilnavarasam.com

நம்மை பார்ப்பனர்கள் உத்தியோக வேட்டைக்காரர்கள் என்று சொன்னதையும், நாம் (பார்ப்பனரல்லாத கட்சியார்) ஜெயிலுக்குப் போக பயந்தவர்கள் என்று சொன்னதையும் எப்பொழுது தான் பொய்ப்பித்துக் காட்டுவது? அதற்கு ஒரு சந்தர்ப்பம் வேண்டாமா? என்று ஒவ்வொரு பார்ப்பனரல்லாத மக்களும் சந்தர்ப்பம் தேடிக் கொண்டு திரியும் இக் காலத்தில் ஒரு சில ஜஸ்டிஸ் தலைவர்களும் பதவியாளர்களும் எதிரியின் காலுக்குள் நுழைவது ஒருநாளும் இத்தோல்விக்கு மருந்து என்று எண்ணக்கூடா தென்பது தான் நமது அபிப்பிராயம்.

நமக்கு தோல்வி இதுவரையிலும் இன்று இந்நிமிஷ வரையிலும் ஏற்படவில்லை என்பது நமது உறுதி. இனியுமாவது ஏற்பட்டு விடுமா என்றும் நாம் கருதவில்லை. சர்க்காரும் பார்ப்பனர்களும் அவமானப்படும் படியான தோல்விதான் நமக்கு ஒரு சமயம் ஏற்பட்டாலும் ஏற்படலாமே ஒழிய, நாம் கவலைப்பட தக்க தோல்வி ஏற்படாது என்பது சரியான தீர்க்க தரிசனம் என்று சொல்லுவோம்.

ஆதலால் காங்கிரசுக்கு போகின்றவர்கள் போகட்டும், அதனால் சட்ட விரோதமோ கொள்கை விரோதமோ திட்ட விரோதமோ ஏற்பட்டு விடாது. நியாய விரோதம் இருக்கலாம். நியாயத்துக்கும் சட்டத்துக்கும் கொள்கைக்கும் சம்பந்தமில்லை. ஆதலால் மூன்று மந்திரிகளும், அவர்களது மூன்று காரிய தரிசிகளும், அவர்களது எடுபிடி ஆள்களும்கூட குஷாலாக காங்கிரசுக்குப் போகட்டும். நமக்கு அது விஷயத்தில் சிறிதும் கவலையில்லை. பார்ப்பனரல்லாதார் கட்சிக்கும் அதனால் சிறிதும் கெடுதி ஏற்பட்டு விடாது. ஆதலால் அந்த பிரச்சினையை விட்டு விட்டு மற்றதைக் கவனிப்போம்.

அதாவது என்னவென்றால் நம்மில் ஒரு கூட்டத்தார் பயந்து விட்டார்கள். இனி எந்தக் காரணம் கொண்டும் அவர்களது பயத்தை இப்போது தெளிவிப்பது லேசான காரியமல்ல.

மற்றொரு கூட்டத்தார் சுவரின் மேல் பூனை போல் இருக்கிறார்கள்; அவர்களை இனி சிறிது கூட நம்புவது புத்திசாலித்தனமாகாது.

மற்றொரு கூட்டத்தார் தோல்வி ஏற்பட்டால் வெட்கமே என்று ஒதுங்கி நிற்பவர்களாக காட்டிக் கொள்ளுகிறார்கள். இவர்களை சிறிது காலத்துக்கு மறந்து இருப்பதே நல்லது.

மற்றொரு கூட்டத்தார் ஜஸ்டிஸ் கட்சியார் ஒரு வேலையும் செய்வ தில்லை, இவர்களோடு இருந்து கொண்டு என்னதான் செய்கின்றது என்கிறார்கள். இவர்களை அணாமத்தில் வைத்திருப்போம்.

ஆகவே இவர்கள் நீங்கிய ஒரு கூட்டம் ''நாங்கள் எந்த தேர்தலுக்கும் எந்த பதவிக்கும் நிற்பதுமில்லை ஆசைப்படுவது மில்லை'' என்கின்ற உறுதி உள்ளவர்கள் ஒன்று சேரவேண்டும்.

அவர்கள் இப்போதே எந்தப்பதவியில் இருந்தாலும் ராஜினாமா செய்ய வேண்டும்.

அப்படி ராஜினாமா செய்தவர்களே தலைமைவகித்து நடத்தத்தக்க வண்ணம் ஒரு சாரணர் படை திரட்ட வேண்டும்.

அதற்கு அதிகநிதி ஒன்றும் தேவையில்லாத மாதிரி பிரசாரம் வகுக்க வேண்டும்.

இவ்வளவுதான் நாம் இப்போது செய்ய வேண்டிய வேலையாகும்.

''உலகம் உயர்ந்தோர் மாட்டு'' என்று சொல்லுவது பொருளற்ற பழஞ்சொல் - உலகம் பிரசாரத்திற்கடிமை என்பதுதான் உண்மையான சொல்.

இதற்கு ஆவன செய்யவும் இதைப்பற்றி பல தோழர்களது அபிப்பிராயம் அறியவும் சமீபத்தில் ஒரு கூட்டம் கூட்டவோ அல்லது சிலர் சுற்றுப் பிரயாணம் செய்யவோ அவசியமென்று கருதுகிறோம். பல வழிகளிலும் தலைவர்கள் என்பவர்களால் தக்கபடியான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்றுகருதி ஏமாற்ற மடையும்படியான நிலைமை ஏற்பட்டு வருவதால் இம்மாதிரியான ஒருகாரியம் அவசியம் என்று படுகின்றது.

**குடி அரசு - தலையங்கம் - 19.01.1936**



RangaRakes tamilnavarasam.com

# ஜில்லா போர்டும் பொப்பிலியும் சென்னை அரசாங்கமும்

சில ஜில்லா போர்டுகளை ஸ்தல ஸ்தாபன மந்திரி இரண்டாகப் பிரித்ததாலும், மற்றும் சிலவற்றை இரண்டாகப் பிரிக்க ஏற்பாடு செய்து வருவதாலும் காங்கிரஸ்காரர்கள் 2, 3 ஜில்லா போர்டு தேர்தல்களில் தங்களுக்கு வெற்றி ஏற்பட்டது என்கின்ற பெருமை எங்கு வீணாய்ப் போய் விடுமோ என்கின்ற பயத்தால் பார்ப்பனர்கள் எல்லோரும் பார்ப்பனப் பத்திரிகைகள் எல்லாமுமே பொப்பிலி ராஜா மீது வீண் பழி கூறி பெரியதொரு கூப்பாடுகள் போட்டு மாய அழுகை அழுதன.

ஜஸ்டிஸ் மந்திரிகள் மீது எவ்விதக்குற்றம் கண்டு பிடிக்கலாம் என்று காத்திருந்த வெள்ளைக்காரர்களும் அவர்களது மெயில் பத்திரிகையுங்கூட இக்கூப்பாடுகளுக்கும் அழுகைக்கும் ஒத்து ஊதினார்கள்.

பொது ஜனங்களும் இந்த விஷமப் பிரசாரத்தைக் கண்டு உண்மை உணரமுடியாமல் திண்டாட வேண்டியவர்களாகி விட்டார்கள்.

தாலூகா போர்டுகள் கலைக்கப்பட்ட காலத்திலேயே ஜில்லா போர்டுகள் பிரிக்கப்படும் என்று கூறப்பட்டிருப்பதும், சென்ற வருஷத்திலேயே இரண்டொரு ஜில்லா போர்டுகள் பிரிக்கப்பட்டதும் யாரும் அறியாததல்ல. அந்த அவசியத்தையும், முறையையும் கருதியே இனியும் சில ஜில்லா போர்டுகளை பிரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இதில் பொப்பிலிராஜா மீது என்ன குற்றம் என்பது விளங்கவில்லை.

பார்ப்பனர்கள் சொல்லும் குற்றம் என்னவென்றால் தன் கட்சிக்கு அனுகூலமாக ஜில்லா போர்டுகளை மந்திரி பிரிக்கிறார் என்பதேயாகும். அப்படியே இருந்தாலும் தன் கட்சி என்பது என்ன? பொப்பிலி ராஜாவின் ஜமீனின் நன்மையைக் கொண்ட கட்சியா? அல்லது பொப்பிலியின் தனது சுயநலத்தைக் கொண்ட கட்சியா? என்பதை முதலில் அறிஞர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பொப்பிலி ராஜா ஒரு பொது ஜனக் கட்சித்தலைவர். அக்கட்சிக்கு பொதுஜன நன்மைக்கு அனுகூலமானவை என்று அக்கட்சியாரால் கருதப்பட்ட கொள்கைகள் சில உண்டு. அக்கொள்கைகளை நிறைவேற்றவும், பாதுகாக்கவும் வாக்குக் கொடுத்து ஓட்டுப்பெற்று அந்த இலாக்கா



நிர்வாகத்தைக் கைப்பற்றி நிர்வாகம் செலுத்துகிறார். இந்நிலையில் அவர் அக்கட்சியின் நன்மையைக் கருதாமல் இருக்கவேண்டும் என்று எந்த மூடன்தான் மதிக்க முடியும்.

சர். சி.பி. ராமசாமி அய்யர் போலீஸ் மெம்பரானார், லா மெம்பரானார். அவர் கட்சிக்கொள்கை இல்லாத அதிகாரத்தில் இருந்தவர். போலீசில் 100-க்கு 90-க்கு மேல் பார்ப்பன ஆதிக்கமாக்கினார். சட்ட இலாக்காவில் 100-க்கு 99-க்கு மேல் அக்கிரகாரமாகவே ஆக்கினார். அதைப்பற்றி யாரும் பேசுவாரில்லை. கடைசியாக அவரது ஆதிக்கத்தை ஒழிக்கா விட்டால் ராஜீனாமா கொடுத்து விடுவேன் என்று பனகால் ராஜா சென்னை சர்க்காருக்கும், இந்திய சர்க்காருக்கும் இறுதிக் கடிதம் கொடுத்தார்.

சென்னை கவர்மெண்டு தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார். பிறகு சென்னை அரசாங்கம் ஒரு அளவு வழிக்கு வந்தது. பார்ப்பனர்கள் கூப்பாடுகளை கொஞ்ச நாள் குப்பைத் தொட்டியில் போட்டு வந்தது.

இப்போதும் பொப்பிலி ராஜா அதுபோலவே துணிவாரானால் பார்ப்பனர் கூப்பாடுகளின் பயன்கள் குப்பைத்தொட்டிக்குப் போகும்படி செய்யலாம். அப்படிப்பட்ட தைரியம் நமக்கு இல்லை என்று தெரிந்தால் பார்ப்பனர் மாத்திரமல்ல சர்க்கார் மாத்திரமல்ல, தெருவில் பிச்சை யெடுக்கும் கண்ணற்ற கிழவி கூட நம்மை மிரட்டத்தான் செய்வாள்.

இந்தச் சிறிய கூப்பாட்டை சட்டை செய்து சென்னை அரசாங்கம் ஒரு அறிக்கை வெளியிட்டதானது ஜஸ்டிஸ் கட்சிக்கு அவமானகரமான காரியம் என்றே சொல்லுவோம். அதில் எவ்வளவு தான் நியாயமிருக்கிறதாகச் சொன்னாலும் பார்ப்பனர் கூப்பாட்டை மதித்து சர்க்கார் பதில் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதாகவாவது அவ்வறிக்கையால் ஏற்பட்டுவிட்டது.

அரசாங்கத்தார் எதற்கு ஆக இவ் வறிக்கையை வெளியிட்டார்கள் என்பது ஒரு சூத்திரமாகத்தான் இருக்கிறது.

இதிலிருந்து ஜஸ்டிஸ் மந்திரிகள் ராஜினாமா செய்து காட்டவேண்டிய ஒரு நல்ல சந்தர்ப்பம் இழந்துவிடப்பட்டது என்றுதான் கருதுகிறோம்.

அரசாங்கத்தாரின் காற்று காங்கிரஸ் பக்கம் அடிக்க ஆரம்பித்துவிட்டது என்று தெரிந்தால் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் உடனே ராஜினாமா செய்துவிட வேண்டியதுதான் சுயமரியாதையாகும். ஏனெனில் அபிப்பிராய பேதங்களை நாம் மதிக்கத் தயாராய் இருக்கிறோம். எதிரிகளுக்கு இடம் கொடுக்கத்தக்க அவசியம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுவிட்டதென்றால் நமக்கு அங்கு என்ன வேலை? இதனால் மற்றவர்கள் நிலை எப்படி ஆனாலும் பொப்பிலி ராஜாவைப் பொருத்தவரை மீக்கு 5000 அல்லது 6000 ரூ மீதியாகும் என்பது நமது அபிப்பிராயம். ஜஸ்டிஸ் கட்சியானது எதிரிகளின் எவ்வளவு விஷமப் பிரசாரத்தைப் பொறுத்துக் கொண்டு பாமர மக்களின் முட்டாள்



RangaRakes tamilnavarasam.com

தனத்தால் ஏற்பட்ட எவ்வளவு தொல்லைகளை சகித்துக் கொண்டு இந்த சென்னை அரசாங்கத்துக்கு உதவி செய்து வந்திருக்கிறது என்பதை ஒருவன் யோசித்துப் பார்த்தால் அதற்கு ஆக என்றென்றும் மறவாத நன்றி காட்டித்தான் தீரவேண்டும் என்று யாரும் சொல்லுவார்கள்.

அப்படிக்கில்லாமல் குதிரை கீழே தள்ளினதோடு நில்லாமல் குழியையும் பறித்ததாம் என்று சொல்லும்படி நடந்து கொள்வது மிகவும் கஷ்டமான காரியம் என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை.

இதற்கு முன்னும் ஒருதடவை அதாவது தோழர்கள் சுப்பராயன், முத்தையா முதலியார் ஆகியவர்கள் மந்திரிகளாய் இருந்த காலத்திலும் கடைசி காலத்தில் அரசாங்கம் அவர்களுக்கு அனுகூலமாயில்லாமல் இதுபோலவே காரியங்கள் செய்து பொது ஜனங்கள் அரசாங்கத்தில் மந்திரிகளுக்கு செல்வாக்கில்லை என்று நினைக்கும்படி செய்தது யாருக்கும் ஞாபகமிருக்கும். கடைசியாக டாக்டர் சுப்பராயன் அவர்களும் முத்தைய முதலியார் அவர்களும் அரசாங்கத்தை சிறிது மிரட்டியவுடன் அப்படி ஒன்றுமில்லை என்று ஒரு அறிக்கை விடா விட்டாலும் அரசாங்கத் தலைவர் கடித மூலமாக எழுதிக் கொடுத்து இதை யாருக்கு வேண்டுமானாலும் காட்டிக் கொள்ளலாம் என்று அனுமதித்தார். அதுபோலவே இப்போது எங்கு பார்த்தாலும் அரசாங்கம் காங்கிரசை ஆதரிக்கிறது ஜஸ்டிஸ் கட்சியை அலக்ஷியப் படுத்துகிறது என்ற பேச்சே பெரும் பேச்சாய் இருக்கிறது.

ஆதலால் மந்திரிகள் இதை கவனித்து இதற்கு தக்கது செய்து கொண்டு மறுவேலை பார்க்க வேண்டியது அவசியமாகும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 19.01.1936**



# தமிழ்த் திருநாள்

## கடவுள் வணக்கம் இல்லை

### மதத்தில் இருந்து தமிழ் விலகினாலொழிய தமிழுக்கும் தமிழருக்கும் சுயமரியாதை உண்டாகாது

### புராணங்களில் இருந்து தமிழுக்கு இலக்கியம் எடுப்பது மலத்திலிருந்து அரிசி பொறுக்கும் மாதிரி

### திரு.வி.கல்யாணசுந்தர முதலியாரும் கா.நமச்சிவாய முதலியாரும் தென்னாட்டின் இன்றைய தமிழ்ப் பெருமைக்குக் காரணஸ்தராவார்கள்

அன்புள்ள தலைவர் அவர்களே! தோழர்களே! நீங்கள் இவ்வளவு பெரிய கரகோஷமும் ஆரவாரமும் செய்து என்னை இப்பொழுது வரவேற்ற மாதிரி எனது உபன்யாச முடிவில் எனக்கு மகிழ்ச்சியான வழியனுப்பு செய்ய மாட்டீர்கள் என்றே நினைக்கிறேன். ஏனெனில் தமிழ் பாஷைக்கு வாழ்த்துக்கூறும் வேலை இலேசானதல்ல. அதிலும் என்போன்ற அதாவது தமிழ் பாஷைக்கு வல்லின இடையின எழுத்து பேதமும், பிரயோகமும் பாஷையின் இலக்கண இலக்கியமும் அறியாதவனும், தமிழ் பாஷையையே கெடுத்து கொலை செய்து வருபவன் என்கின்ற பழியைப் பெற்றவனுமான நான் தமிழ் வாழ்த்துக்கு தகுதி உடையவனாவேனா என்று பாருங்கள்.

அன்றியும் தமிழைப்பற்றி அபிப்பிராயங்களிலும் பண்டிதர்களுக்கும் எனக்கும் எவ்வளவோ துறையில் நேர்மாறான கருத்துக்கள் இருந்து வருவதும் எவரும் அறியாததல்ல.

இவைகள் எல்லாம் ஒருபுறம் இருந்தாலும் வாழ்த்துதல் என்பதையும் நான் இவ்வளவு சாதாரணமாய்க் கருதுபவனுமல்ல. வாழ்த்துதல் என்றால் பார்ப்பனர்கள் ஏதோ மஞ்சளையும் அரிசியையும் கலந்து பொறுப்பும் பொருளும் இல்லாத ஒன்றின் பெயரைச் சொல்லி வாழ்த்தி (ஆசீர்வாதம் செய்து) விட்டு ஏதோ பெற்று வயிறு வளர்ப்பது மாதிரி வாழ்த்தை அவ்வளவு ஏமாற்றமாக நினைப்பவன் அல்ல. ஆனால் வாழ்த்துதலின் அவசியத்தையும், அதன் பெருமையையும் நான் உணர்ந்தவனேயாவேன். தகுதியும் பொறுப்பும் உடையவர்களே வாழ்த்த வேண்டும். வாழ்த்துபவர்கள் தங்களுக்கு பொருப்பு இருப்பதை உணர்ந்தவர்களாயிருக்க வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

தமிழை வாழ்த்தி விட்டு தமிழுக்கு இடுக்கண் ஏற்படும்போது கவலை அற்றவரும் எவ்வித உதவியும், ஆதரவும் அளிக்கத் தகுதி அற்றவர்களும் வாழ்த்திப் பயன் என்ன? ஆகையால் இங்கு வாழ்த்துதலுக்கு தகுதியைக் கருதாமல் மூப்பையும் நரையையும் கருதியே கட்டளை இடப்பட்டு விட்டேன் என்பதாகக் கருதுகிறேன்.

தமிழில் எந்த அளவும் பள்ளியில் பயின்றவனல்ல. தமிழைப்பற்றி தமிழ் மக்கள் நலம், தமிழ் மக்கள் தன் மதிப்பு என்பதல்லாமல் வெறும் பாஷையைப் பற்றியே நான் எவ்வித பிடிவாதம் கொண்டவனுமல்ல. தமிழுக்கு ஆக என்று எவ்வித தொண்டு புரிந்தவனுமல்ல.

தமிழுக்கு வாழ்த்துக்கூற தலைவரும், எனது நண்பருமான தோழர் திரு.வி.கல்யாணசுந்திர முதலியார் அவர்களும், தமிழ்ச்சங்க அமைச்சர் தோழர் கா. நமச்சிவாய முதலியாரும் மற்றும் அவர்கள் போன்ற பெரியார்களே உண்மையில் தகுதி உள்ளவர்கள்.

தலைவர் கல்யாணசுந்திர முதலியார் அவர்களின் தமிழ்த் தொண்டை நானே நன்றாய் அறிந்தவன். அவரது தமிழ்த்தொண்டுக்கு எடுத்துக்காட்டு வேண்டுமானால் நானேயாவேன். நான் தமிழ் பேசுவதும் எழுதுவதும் தமிழைக்கொலை புரியும் மாதிரியானாலும் நான் பல பத்திரிகைகள் நடத்துவதும், சுமார் 50, 60 புத்தகங்கள் வெளியிட்டதும் தலைவர் கல்யாணசுந்திர முதலியார் அவர்கள் தமிழ் பாஷையில் தேசபக்தன், நவசக்தி முதலிய பத்திரிகைகளின் தொண்டேயாகும். திரு.வி.க. முதலியார் அவர்களது தேசபக்தன் பத்திரிகைக்குப் பிறகே தமிழ் அரசியல் மேடைகளைக் கைப்பற்றிற்று என்று சொல்லுவேன். அரசியல் தலைவர்களையும் தமிழ் அடிமை கொண்டதற்குக் காரணமும் அவர்களது பத்திரிக்கைகளேயாகும்.

அப்பத்திரிகைகள் என்னைவிட மோசமானவர்களையும், தமிழ் பாஷையில் அரசியலை உணரவும், தமிழ்பேசவும் செய்துவிட்டதால் தமிழ் பாஷையைக் காதில் கேட்டால் தோஷம் எனக்கருதும் ஜாதியாரும் தமிழில் கலந்து கொள்ளவும், தமிழை வேஷத்துக்காவது மதிக்கவும் செய்துவிட்டது.

பெரியார் நமச்சிவாய முதலியார் அவர்களது உழைப்பும் தமிழுக்கு மிகப்பெரியதொன்றும் தமிழர் மறக்க முடியாததுமான தொண்டாகும். பெரியார் நமச்சிவாய முதலியார் அவர்களின் துணிந்த முயற்சி இல்லா திருக்குமானால் இன்று தமிழ்ப்பாட புத்தகங்கள் பெரிதும் ஆரியமத உபாக்கியானங்களாகவும், ஆரியமும் தமிழும் விபசாரித்தனம் செய்து பெற்ற பிள்ளைகள் போலவும் காணப்படும். ஆதலால் தான் தமிழுக்கு வாழ்த்துக்கூற, அப் பெரியார்களும் அவர்கள் போன்றார்களுமே தக்கார் என்று உரைத்தேன்.

தோழர்களே! எனக்கிட்ட கட்டளையில் ஏதேனும் ஒரு சிறு பாகமாவது நிறைவேற்றப்பட வேண்டுமானால் தமிழைப்பற்றிய எனது உள்ளக்





கிடக்கையை உண்மையாய் எடுத்துரைத்தாக வேண்டும். ஆதலால் ஏதோ நான் சொல்வது பற்றி நீங்கள் தவறாகக் கருதாமல் என் கபடமற்ற தன்மையை அங்கீகரித்து உங்களுக்கு சரி என்று பட்டதை மாத்திரம் ஏற்று மற்றதை தள்ளி விடுங்கள். அதற்கு ஆக என் மீது கோபமுறாதீர்கள்.

### தமிழும் மதமும்

முதலாவதாக தமிழ் முன்னேற்றமடைந்து உலக பாஷை வரிசையில் அதுவும் ஒரு பாஷையாக இருக்கவேண்டுமானால் தமிழையும், மதத்தையும் பிரித்துவிடவேண்டும். தமிழுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்மந்தத்தையும் கொஞ்சமாவது தள்ளிவைக்கவேண்டும்.

மதசம்மந்தமற்ற ஒருவனுக்கு தமிழில் இலக்கியம் காண்பது மிகமிக அரிதாகவே இருக்கிறது. தமிழ் இலக்கணம்கூட மதத்தோடு பொருத்தப் பட்டே இருக்கிறது.

### மதமும் இலக்கணமும்

உதாரணமாக **''மக்கள் தேவர் நரகர் உயர்திணை''** என்றால் என்ன? நரகர்கள் யார்? தேவர்கள் யார்? இலக்கணத்திலேயே மதத்தைப் போதிக்கும் சூழ்ச்சிதானே இது?

இனி பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குத் தமிழ் இலக்கியத்துக்குப் புத்தகங்கள் எவை? கம்ப ராமாயணம், பாரதம், பாகவதம், பெரிய புராணம், தேவாரம், திருவாய் மொழி போன்ற மத தத்துவங்களையும், ஆரிய மத தத்துவம் என்னும் ஒரு தனிப்பட்ட வகுப்பின் உயர்வைப் போதித்து மக்களை மானமற்றவர்களாக்கும் ஆபாசக் களஞ்சியங்களும் அல்லாமல் வேறு இலக்கியங்கள் மிதந்து காணப்படுகின்றனவா? இன்றையப் பண்டிதர்களுக்கு உலக ஞானத்தைவிடப் புராண ஞானங்கள் தானே அதிகமாயிருக்கின்றன?

### மேல்நாட்டு இலக்கியம்

மேல்நாட்டுப் புலவர்கள் மேல்நாட்டு இலக்கியங்கள் ஆகியவைகளுக்கு இருக்கும் பெருமையும், அறிவும் நம் தமிழ்ப் புலவர்களுக்கு இருக்கின்றது என்று சொல்ல முடியுமா? ஷேக்ஸ்பியர் வேண்டுமா? இங்கிலாந்து வேண்டுமா? என்றால் இங்கிலீஷ் மகனே ஷேக்ஸ்பியர் வேண்டும் என்பானாம். நாம் எதைக் கேட்பது?

இந்தியா வேண்டுமா? கம்ப ராமாயணம் வேண்டுமா என்றால் உண்மைத்தமிழ் மகன் என்ன சொல்லுவான்? இரண்டு சனியனும் வேண்டாம் என்று தானே சொல்லுவான்.

மேல் நாட்டில்தான் அறிவாளிகள் உண்டு என்றும், கீழ்நாட்டில் அறிவாளிகள் இல்லை என்றும் நான் சொல்ல வரவில்லை.

RangaRakes tamilnavarasam.com

மேல்நாட்டு அறிவாளிகள் தாங்கள் செய்த இலக்கியங்களை மத சம்மந்தமன்னியில் கடவுள் சம்மந்தமன்னியில் பெரிதும் செய்து வைத்தார்கள். அதனால் நூற்றுக்கணக்காக மேல்நாட்டு இலக்கியங்களும் பண்டிதர்களும் போற்றப்படுகிறார்கள்.

கீழ் நாட்டில் குறிப்பாக இந்தியாவில் எத்தனை இலக்கியம் உலகத்தால் மதிக்கப்படுகின்றன? எத்தனை பண்டிதர்கள் உலகத்தால் போற்றப்படுகிறார்கள்? டாக்கூர் அவர்கள் கவிக்கு ஆக போற்றப்படலாம். ஆகவே மதம் கடவுள் சம்பந்தமற்ற இலக்கியம், யாவருக்கும் பொதுவான இயற்கை ஞானத்தைப் பற்றிய இலக்கியம், யாவரும் மறுக்க முடியாத விஞ்ஞானத்தைப்பற்றிய இலக்கியம் ஆகியவைகள் மூலம் தான் ஒரு பாஷையும் அதன் இலக்கியங்களும் மேன்மையும் முடியும் என்பது மாத்திரமல்லாமல் அதைக் கையாளும் மக்களும் ஞானமுடையவர்களாவார்கள்.

## மலத்தில் அரிசி பொறுக்கலாமா?

கம்ப ராமாயணம் அரிய இலக்கியமாய் இருக்கிறதாகச் சொல்லு கிறார்கள். இருந்து என்ன பயன். ஒருவன் எவ்வளவுதான் பட்டினி கிடந்தாலும் மலத்தில் இருந்து அரிசி பொறுக்குவானா? அதுபோல் தானே கம்பராமாயண இலக்கியம் இருக்கிறது. அது தமிழ் மக்களை எவ்வளவு இழிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழரின் சரித்திர கால எதிரிகளை எவ்வளவு மேன்மையாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. சுயமரியாதையை விரும்புகிறவன் எப்படி கம்ப ராமாயண இலக்கியத்தை படிப்பான். இன்று கம்ப ராமாயணத்தால் தமிழ் மக்களுக்கு இலக்கியம் பரவிற்றா இழிவு பரவிற்றா என்று நடு நிலையில் இருந்து யோசித்துப் பாருங்கள்.

## கடவுளால் பாஷை உயராது

தமிழ் பாஷையின் பெருமை பரமசிவனுடைய டமாரத்தில் இருந்து வந்ததென்றோ, பரமசிவன் பார்வதியிடம் பேசிய பாஷை என்றோ, சொல்லி விடுவதாலும் தொண்டர் நாதனை தூதிடை விடுத்ததாலும், முதலை உண்ட பாலனை அழைத்ததாலும், எலும்பை பெண்ணாக்கினதாலும், மறைக் கதவைத் திறந்ததாலும் தமிழ் மேன்மையுற்றதாகி விடாது. இந்த ஆபாசக் கதைகள் தமிழ் வளர்ச்சியையும் மேன்மையையும் குறைக்கத்தான் பயன்படும்.

பரமசிவனுக்குகந்த பாஷை தமிழ் என்றால் வைணவனும் துருக்கனும் தமிழைப் படிப்பதே பாவமல்லவா? அன்றியும் அந்தப்படியிருந்தால் பார்ப்பான் தமிழ் மொழியை சூத்திர பாஷை என்றும், அதைக் காதில் கேட்பதே பாவம் என்றும் சொல்லுவானா? என்று யோசித்துப் பாருங்கள்.

## இந்திப் புரட்டு

இன்று, தமிழ்நாட்டில் வந்து தமிழ் கற்று வயிறு வளர்ப்பவர்களாகிய பார்ப்பனர்களே இந்தி பாஷை இந்திய பாஷை ஆக வேண்டு மென்று முயற்சித்து வெற்றி பெற்று வருகிறார்கள். கோர்ட் பாஷை, அரசாங்க பாஷை ஆகியவை எல்லாம் இந்தி மயமாக வேண்டும் என்கிறார்கள். காரணம் கேட்டால் இந்தி பாஷையில் துளசிதாஸ் ராமாயணம் நன்றாய் விளங்குமென்கிறார்கள்.

தமிழ்ப் பண்டிதர்களுக்கு இதைப்பற்றிச் சிறிதும் கவலை இருந்தது என்று சொல்ல முடியவில்லை; தமிழ்ப்பண்டிதர்கள் இந்த அரசியல்வாதி களின் கூச்சலுக்கும் பார்ப்பனர்கள் ஆதிக்கத்துக்கும் பயந்து கொண்டு வாயை மூடிக்கொண்டு இருக்கிறார்கள்.

## செத்த பாம்பு

பார்ப்பனர்கள் செத்த பாம்பான சமஸ்கிருதத்தை எடுத்து வைத்துக் கொண்டு எவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். பொதுப்பணம் சமஸ்கிருதத்தின் பேரால் எவ்வளவு செலவாகின்றது? பொது ஜனங்களின் வரிப்பணம் சமஸ்கிருதத்துக்கு ஆக ஏன் ஒரு பைசாவாவது செலவாக வேண்டும். தமிழ் மக்கள் யாரும் இதைப் பற்றி கவனிப்பதில்லை. தமிழ் தமிழ் என்று எங்கோ ஒரு மூலையில் இரண்டு பண்டிதர்கள் தான் சத்தம் போடுகிறார்கள். ஆனால் சமஸ்கிருதத்துக்கும் இந்திக்கும் கேப்னெட் மெம்பர்கள் ஐகோர்ட் ஜட்ஜிகள் முதல் எல்லா பார்ப்பன அதிகாரிகளும் பாடுபடுகிறார்கள். நம்ம பெரிய அதிகாரிகளுக்கோ, பெரிய செல்வாக்கும் செல்வமும் உள்ளவர்களுக்கோ தமிழைப் பற்றி கவலையும் இல்லை; தமிழைப் பற்றி அதிகம் பேருக்கு ஒன்றும் தெரியவும் தெரியாது.

## தமிழபிமானம் தேசத்துரோகம்

தமிழினிடத்தில் ஒருவன் அபிமானியாக இருந்தாலே அவன் தேசத் துரோகி, வகுப்புவாதி, பிராமணத்துவேஷி என்றெல்லாம் ஆய்விடுகிறான். ஆதலால் மீட்டிங்கிக்கு வரக்கூட நமது மந்திரிகள் பயப்படுகிறார்கள்.

தமிழின் பரிதாப நிலைக்கு இதைவிட வேறு என்ன வேண்டும். தமிழ்பாஷையில், எழுத்தில் ஒரு சிறு மாற்றமோ முற்போக்கோ செய்யக்கூட ஒரு தமிழ் அபிமானியும் முயற்சிப்பதில்லை. யாராவது முயற்சித்தாலும் ஆதரவளிப்பதுமில்லை. தற்கால நிலைக்கு தமிழ் போதியதாகவும், சௌகரியமுள்ளதாகவும் ஆக்க யார் முயற்சித்தார்கள்.

## மாறுதல் அவசியம்

மேல்நாட்டு பாஷைகள் எவ்வளவு மாற்றமடைந்து வருகின்றன. எழுத்துக்களில் எவ்வளவு மாறுதல் செய்து வருகிறார்கள். ரஷ்யாவில் சில பழைய எழுத்துக்களை எடுத்து விட்டார்கள். புதிய எழுத்துக்கள் சேர்த்தார்கள். அமெரிக்காவில் எழுத்து கூட்டுவதாகிய இஸ்பெல்லிங் (Spelling) முறையை மாற்றி விட்டார்கள். துருக்கியில் துருக்கி பாஷைக்கு உண்டான எழுத்துக்களையே அடியோடு எடுத்துவிட்டு ஆங்கில எழுத்துக்களை





RangaRakes tamilnavarasam.com

யேற்படுத்திக் கொண்டார்கள். தமிழர்கள் தமிழுக்கு ஆக நமக்கு விவரம் தெரிந்த காலமாய் என்ன காரியம் செய்தார்கள். காலத்துக்கு ஏற்ற மாறுதலுக்கு ஒத்துவராதவன் வெற்றிகரமாய் வாழமுடியாது; மாறுதலுக்கு மனிதன் ஆயத்தமாய் இருக்கவேண்டும். முன்னேற்றம் என்பதே மாறுதல் என்பதை உணர்ந்த மனிதனே உலகப்போட்டிக்கு தகுதியுடையவனாவான்.

தமிழ் எழுத்துக்களில் ஒரு சில மாற்றம் செய்தேன். அநேக பண்டிதர்கள் எனக்கு நன்றி செலுத்தி என்னைப் பாராட்டினார்களேயல்லாமல் ஒருவராவது அம்முயற்சிக்கு ஆதரவளித்தவர்கள் அல்ல.

இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்ய நான் தகுதியற்றவன் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஆனால் தகுதி உள்ளவர்கள் எவரும் வெளிவராவிட்டால் நான் என் செய்வது? என்னைக் குறைகூறவோ திருத்தவோ முயற்சிப்பதின் மூலமாகவாவது இதற்கு ஒரு வழி பிறக்காதா என்றுதான் துணிந்தேன். இதுவரை யாரும் அதை லக்ஷியம் செய்யவில்லை.

ஆனாலும் நான் அம்முறையிலேயே இரண்டு மூன்று பத்திரிக்கைகள் நடத்துகிறேன். அம்முறையிலேயே 10, 20 புத்தகங்களும் வெளியிட்டிருக் கிறேன். இன்னம் எவ்வளவோ செய்ய வேண்டி இருக்கிறது.

### பார்ப்பன ஆதிக்கம்

இவைகளையெல்லாம் பார்ப்பனர்களே செய்வதாகப் பாசாங்கு செய்து பார்ப்பனர்கள் தமிழின் மீது ஆதிக்கம் செலுத்தப் பார்த்தார்கள். அநேக பண்டிதர்கள் அவர்களுக்கு ஆதரவும் அளித்தார்கள். கடைசியில் டாக்டர் மாசிலாமணி முதலியார் போன்றவர்களே அம்முயற்சியைப் பாழாக்கி அதைக் காப்பாற்றினார்கள்.

தலைவர் திரு.வி.க. அவர்களும் சிறிது நமக்கு உதவி செய்தார்கள் என்றாலும் வெளியில் வந்து செய்திருந்தால் அதில் நாம் ஆதிக்கம்பெற்று இருக்கலாம்.

### எங்கும் திருநாள்

எப்படி ஆனாலும் தமிழ் பாஷை உணர்ச்சி தமிழ் மக்களுக்கு இன்றியமையாதது. அதன் மூலம் தமிழ் மக்கள் ஒன்று சேர வசதி உண்டு. தலைவர் திரு.வி.க. அவர்களும் அமைச்சர் கா. நமச்சிவாய முதலியார் அவர்களும், இத்திருநாளை இம்மாதிரி ஒழிந்த நேரத் திருநாளாக இல்லாமல் தமிழ் மக்களுக்கு ஒரு புது எழுச்சியையும், ஊக்கத்தையும், உண்டாக்கும் திருநாளாகச் செய்ய வேண்டும். வருஷம் ஒவ்வொரு ஊரில் தலைமைத் திருநாள் நடைபெறச் செய்ய வேண்டும். தீபாவளி போன்ற மூடநம்பிக்கையும், சுயமரியாதை அற்றதும், ஆபாசமானதுமான பண்டிகைகள்



கொண்டாடுவதைவிட இப்படி தமிழ்த் திருநாள் என்று தமிழ் மக்கள் கூட்டுறவுக்கும், மகிழ்ச்சிக்கும், கொண்டாட்டத்துக்கும் அனுகூலமாகத் திருநாள்களை பரப்பவேண்டும். நமது பெண்களுக்குப் பகுத்தறிவும், சுயமரியாதையும் இருந்தாலும் ஒரு திருநாள் வேண்டி இருக்கிறதால் தீபாவளியையும், மாரி பண்டிகையையும் கொண்டாட ஆசைப்படுகிறார்கள். ஆதலால் தக்கது செய்ய வேண்டுகிறேன்.

கடைசியாக தோழர்களே தமிழ் முன்னேறும் என்பது பற்றி எனக்கு அறிகுறிகள் தென்பட்டுவிட்டன அதென்ன வென்றால் என்னை இங்கு உள்ளே விட உங்களுக்கு தைரியம் ஏற்பட்டுவிட்டது ஒன்றே போதுமான ஆதாரமாகும்.

அன்றியும் இந்தப்பெருமை என்னையும் ஒருபடி உயர்த்திவிட்டது. என்னவென்றால் தமிழ்ப் பண்டிதர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளும் படியான பெருமை ஏற்பட்டுவிட்டதல்லவா? நான் எவ்வளவு தமிழ் அறியாதவனாய் இருந்தாலும் தமிழில் எனக்கு உள்ள ஆசை உங்கள் யாரையும்விட குறைந்ததல்ல என்பதை தெரிவித்துக் கொண்டு, அந்த ஆசையின் மயக்கத்தால் நான் பேசியவற்றுள் ஏதும் குற்றம் குறைகள் இருப்பின் அவற்றை மன்னித்துக் களைந்துவிட்டு சரி என்று பட்டவையை மாத்திரம் ஏற்று அதற்காவன செய்ய வேண்டிக்கொண்டு விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு: 13-01-1936 ஆம் நாள் சென்னை பச்சையப்பன் கல்லூரி பெரிய மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்த்திருநாள் விழாவில் ஆற்றிய சொற்பொழிவு*

**குடி அரசு - சொற்பொழிவு - 26.01.1936**



RangaRakes tamilnavarasam.com

# மன்னர் முடிவெய்தினார்

இந்திய சக்கரவர்த்தி ஜார்ஜ் மன்னர் தமது 71 வது வயதில் முடிவெய்தினார். எட்வர்ட் மன்னர் முடி புனைந்தார்.

''முடி சார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு, பிடி சாம்பலாவது'' என்பது இயற்கையே யாகும். இதில் எவ்வித அதிசயமோ தனி விஷயமோ என்பது சிறிதும் கிடையாது.

மனிதனாகப் பிறந்தால் மாத்திரம் அல்ல, கல்லாகவோ வைரக் குன்றமாகவோ பிறந்தாலும்கூட கால பேதத்தில் இந்த முடிவையேதான் அடைந்து தீர வேண்டும். தோன்றின அழியும், அழிந்தன தோன்றும் என்பதே உலக இயற்கை. ஆதலால் விசனப்படுவது பயன்தரக் கூடியதன்று.

நமது சக்கரவர்த்தியார் என்னப்பட்ட ஜார்ஜ் அரசர் இந்தியாவின் நல்ல ஆட்சிக்கோ தீமை ஆட்சிக்கோ சம்மந்தப்பட்டவரன்று.

பிரிட்டிஷ் ஆட்சி அரசருக்கு கொடுத்துள்ள ஏதோ இரண்டொரு பாதுகாப்பு அதிகாரம் போக, பாக்கி அதிகாரங்கள் அவ்வளவும் ஜனப்பிரதிநிதி சபை என்று சொல்லப்படும் பார்லிமெண்டு சபையின் ஆட்சிக்கு உட்பட்டதாகும்.

ஆதலால் ஆட்சி சம்பந்தமான குற்றங்குறைகளை அரசருக்குப் பொருத்தி அவரது குணா குணங்களைப்பற்றி நாம் பேச நமக்கு நியாயம் இல்லை.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்பது இன்று உலகில் ஒரு பெரிய சாம்ராஜ்ஜியமாகும். அதில் அரசர் பதவியும், சக்கிரவர்த்தி பதவியும் வகிப்பது என்பது ஒரு பெறுதற்கரிய பேறு என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்காது. அரசர் தனது சொந்த வாழ்வில் எவ்வித குறைக்கும், குற்றத்துக்கும் இடமில்லாமல் வாழ்ந்தது மனிதத்தன்மைக்கு பெருமை தரத்தக்கதேயாகும். மற்றும் ஜார்ஜ் அரசர் சராசரி இங்கிலாந்து மனித ஆயுளுக்கு ஒன்றுக்கு ஒன்றரையாகவும் வாழ்ந்திருப்பதும், அவ்வாழ்வில் இன்றைய முறையில் பெரிதும் மகிழ்ச்சியுடனும், சுகத்துடனும், போக போக்கியத்துடனும் இருந்ததும் குறிப்பிடத்தக்கதேயாகும்.

அவர் 1865 ம் வருஷம் ஜுன் மீ 3 ந் தேதி பிறந்தார்.



1910ம் வருஷம் மே மாதம் 6ந் தேதி பட்டம் ஏற்றார். 1936ம் வருஷம் ஜனவரி மீ 21 ந் தேதி முடிவெய்தினார். இவர் பிறப்பு, வாழ்வு, சாவு ஆகிய முறையும் பெருமையாகவே அனுபவித்த பெரியார் என்றுதான் சொல்லிப் பாராட்ட வேண்டும்.

**குடி அரசு - தலையங்கம் - 26.01.1936**



RangaRakes tamilnavarasam.com

# சக்லத்வாலா சாய்ந்தார்

சக்லத்வாலா சாய்ந்தார் என்பதைக் கேட்ட ஏழைமக்கள் பரிதவிக்காமலிருக்க மாட்டார்கள். அவர் எப்படியும் ஒரு நாளைக்காவது செத்துச் சாய்ந்து தான் தீரவேண்டும். அதை தடுக்க யாராலும் முடியாது. அன்றியும் சக்லத்வாலா இந்திய மக்கள் சராசரி வாழ்வுக்கு ஒன்றுக்கு இரண்டு பங்கு காலம் வாழ்ந்து விட்டார் என்றாலும், அவரது தொண்டு ஏழை மக்களுக்கென்றே பாடுபட்டு உழைத்துப் பட்டினியால் வாடும் மக்களுக்கென்றே இருந்து வந்த படியால் அம்மக்களின் பரிதாபகரமான வாழ்வுக்கு முடிவு ஏற்படும் வரை சக்லத்வாலாவின் வாழ்க்கையை தங்கள் தங்கள் ஜீவவாழ்க்கையைவிடப் பெரிதாக மதித்திருப்பார்கள் என்பதைப்பற்றி நாம் குறிப்பிட வேண்டியதில்லை.

சக்லத்வாலா ஒரு சிம்மம் போன்றவர். அவர் பேச்சு எதிரிலிருக்கும் எவரையும் லட்சியம் செய்து பேசக்கூடியதாய் இருக்காது. அவர் கொண்ட கொள்கையொன்றையே லக்ஷியம் செய்ததாக இருக்கும்.

அவர் பேசும் கூட்டத்தில் அவரது கொள்கைக்கு எதிரிகள் வீற்றிருக்கிறார்கள் என்று கண்ட மாத்திரத்தில் அவருடைய உபன்யாசங்கள் கொள்கைகளின் உருவங்களாகவே நிற்கும். அப்பொழுது தான் சக்லத்வாலாவின் உண்மையான சக்தி வெளியாகும். அவரது கூட்டங்களில் எப்படிப்பட்டவனாலும் விஷமங்கள் செய்ய முடியாது. விஷமங்கள் செய்யப்பட்ட கூட்டங்களே மிகவும் வெற்றிகரமாக முடிக்கப்பட்ட கூட்டங்களாக முடியும்.

60 வதுக்கு மேற்பட்ட வயதானாலும் சாதாரணமாக 2 மணி 3 மணி நேரம் பேசுவார்.

கேள்விகளுக்கு பதில் சொல்லுவதில் தான் அவரது தெளிவும், உறுதியும், உற்சாகமும் விளங்கும்.

அவருடைய உறுதியான கொள்கைகள் பொது உடமைக் கொள்கைகளே.

இந்தியர்கள் சிலரால் மகாத்மா என்று கூறப்படும் காந்தியாரிடத்தில் அவருக்கு மகா வெறுப்பு உண்டு. லண்டனில் அவர் பேசும் எந்தப் பொதுக் கூட்டங்களிலும் காந்தியாரை சின்னா பின்னமாகக் கிழித்துத் தள்ளிவிடுவார். காந்தியார் மனித சமூக விரோதி என்றும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு ஒற்றர் என்றும், பாடுபட்டு உழைக்கும் மக்களை மேல்ஜாதிக்காரருக்கும், பணக்காரர்களுக்கும் இரை ஆக்கிக் கொடுப்பவரென்றும் சிறிதும் கூசாது ஆதாரங்களோடு புள்ளி விவரங்களோடு எடுத்துக் கூறுவார்.



பாதிரிமார்களைக் கண்டால் அவருக்கு உடல் சிலுத்துக் கொள்ளும். தலை மயிர் உடல் மயிர் எல்லாம் நிமிர்ந்து கொள்ளும்.

இங்கிலாந்து தொழிற் கட்சியும், இந்திய காங்கிரசும் ஏழை மக்களை ஏமாற்றும் சாதனம் என்று அடிக்கடி ஒப்பிடுவார்.

இங்கிலாந்திலுள்ள சகல பிற்போக்கான கட்சிகளையும் விட தொழிற்கட்சி மோசமானதும் வேஷமானதுமான கட்சி என்பார்.

அவருடைய அபிப்பிராயங்களை எப்பேர்ப்பட்டவர்களாலும் மாற்றமுடியாது.

சக்லத்வாலா தானே தனித்த முறையில் ஒரு கட்சியாயிருப்பவர்.

அவர் அபிப்பிராயத்துக்கு இணங்கினவர்கள்தான் அக்கட்சியைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் யாராயிருந்தாலும் வேறு கட்சி என்றுதான் சொல்லி விடுவாரே ஒழிய அபிப்பிராய பேதத்தோடு அவர் கட்சியில் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளவே முடியாது. அவ்வளவு பிடிவாத முள்ளவர். அவரது குரல் 20000 ஆயிரம் ஜனங்களுக்கும் கேட்கும். தினம் 3 கூட்டங்களில் பேசினாலும் குரலில் மாறுபாடு உண்டாகாது.

இவர் 3 வது வகுப்பில் பிரயாணம் செய்வார். வெகு சாதாரண உணவையே உண்பார். தனக்கென்று ஒரு சௌகரியமும் செய்து கொள்ள மாட்டார். வெகு சாதாரண வாழ்க்கையே வாழ்வார்.

பிரசாரம் ஒன்றே தமது வாழ்வின் லட்சியமாய் இருக்கவேண்டுமென்ற ஆசையுள்ளவர்.

தன்னைப்பற்றி பிறர் என்ன சொல்லுவார்கள், என்ன நினைப்பார்கள் என்கின்ற இரண்டு விஷயங்களையும் சிறிதும் லட்சியம் செய்யமாட்டார்.

சிற்சில சமயங்களில் முதலாளிகளும் பாதிரிகளும்கூட அவரை அழைத்து அவர்களது கூட்டங்களில் பேச விரும்புவார்கள்.

இப்படிப்பட்ட குணங்கள் மிதந்துள்ள தோழர் சக்லத்வாலா அவர்கள் 1874 மார்ச்சு மாதம் 28ம் தேதி பிறந்தார்.

1936 ஜனவரி மாதம் 16ம் தேதி மாலை சாய்ந்தார். அவருக்குப் பதிலாகவோ, அவரைப் போலவோ சொல்லுவதற்கு மற்றொருவர் இனித்தான் பிறக்க வேண்டும்.

லண்டனில் ஏழை மக்கள், பாட்டாளிகள், தீவிர உணர்ச்சி வாலிபர்கள் ஆகியவர்கள் உள்ளத்தை அலங்கரித்துக்கொண்டிருந்த அப்பேர்ப்பட்ட பொதுவுடமைப் பெரியார் வாழ்வு முற்றுப் பெற்றதானது பரிகரிக்க முடியாத ஒரு பெரும் நட்டமேயாகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 26.01.1936**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனரல்லாத சமூக அபிமானிகளுக்கு விண்ணப்பம்

அன்புள்ள தோழர்களே!

பார்ப்பனரல்லாதார் கக்ஷிக்கும் அதன் கொள்கைக்கும் நாட்டில் நல்ல ஆதரவும் செல்வாக்கும் இருப்பது தாங்கள் அறியாததல்ல.

ஆனால் அதற்கு கவலையும், நாணயமும், திறமையும் கொண்ட தலைவர்கள் இல்லை என்று சொன்னால் அதை அடியோடு நீங்கள் ஆக்ஷேபிக்க மாட்டீர்கள். இன்று அக்கக்ஷிக்கு தலைவர்களும், பாதுகாப் பாளர்களும் மந்திரிமார்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்றே கருதும்படி ஆகி விட்டது.

அக்கக்ஷியின் பேரில் இன்று சொல்லப்படும் தவறுதல்களுக்கும், பழிகளுக்கும் காரணம் போதிய பிரசாரமின்மையும் அதன் தலைவர்கள் என்போர்களுக்குள் இருந்து வரும் அசிரத்தையின் பயனுமேயாகும்.

மற்றும் அக்கக்ஷிக்குத் தேர்தல்களில் தோல்வி ஏற்பட்டு வருவதாய் கருதவேண்டி இருப்பதும், சொல்லப்பட்டு வருவதும், தலைவர்களாய் இருப்பவர்கள் என்பவர்களுள் இருக்கும் கட்டுப்பாடற்ற தன்மையும், ஒற்றுமை இன்மையும், அவநம்பிக்கையும், கவலையற்ற தன்மையும், சுயநல உணர்ச்சியும் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறதே தவிர மற்றபடி பொது ஜன ஆதரவில்லாததால் தோல்வி ஏற்பட்டது என்று சொல்லிவிடும்படியாக இல்லை.

என்றாலும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் உண்மையான பற்றுதலும் கவலையும் கொண்டு உழைத்துவந்த முக்கியஸ்தர்கள் பலர் ஒவ்வொருவராய் இக்கட்சியில் இருந்து விலகி நிற்பதும், எதிர்க்கட்சியாகிய காங்கிரசில் சேர்ந்து கொள்ளுவதுமாய் இருந்து வருகிறார்கள்.

இன்னும் பலர் ஒவ்வொருவராய் காங்கிரசில் சேர ஏற்பாடுகள் செய்துகொண்டு சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.



இவ்வியக்கத்துக்காக உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்தும் செய்யத் துணிந்தும் உழைத்து வந்த ஆங்காங்குள்ள வாலிப தோழர்களின் மனம் உடைந்து சலிப்பும் வெறுப்பும் ஏற்பட்டு அவர்களது ஆதரவுகளும் குறைந்து வருகின்றன.

இந்தநிலை இப்படியே இருந்துவரும்படி அனுமதிப்பது அறிவுடமை ஆகாது.

ஆதலால் இதுவிஷயத்தில் பார்ப்பனரல்லாத மக்கள் அதாவது அக்கக்ஷியில் உண்மையான பற்றுதலும், அபிமானமும், தீவிர கவலையும் உள்ளவர்கள் ஒன்றுகூடி இதற்கு ஏதாவது ஒருவகை செய்து தக்கமுறையில் திருத்தி அமைத்துக் கட்டுப்பாடுடன் தீவிரமான பிரசாரம் செய்யவேண்டியது அவசியம் என்று கருதுகின்றோம்.

எனவே இவ்விஷயங்களைப்பற்றி அக்கரையுள்ள எல்லா தோழர்களும் திருச்சியிலோ அல்லது வேறு இடத்திலோ ஒரு கூட்டம் கூடி யோசித்து ஏதாவது ஒரு முடிவுக்கு வந்து பயன்தரத்தக்க மார்க்கம் கண்டு வேண்டுவன செய்ய வேண்டும் என்று கருதி இவ்வேண்டுகோளை தங்களுக்கு அனுப்பியிருக்கிறோம்.

அதாவதுஃ- கக்ஷியையே பிரதானமாய் கருதிய மக்களில் ''நாங்கள் எந்த தேர்தலுக்கும் எந்த பதவிக்கும் நிற்பதுமில்லை'' ஆசைப்படுவது மில்லை என்கின்ற உறுதியுள்ளவர்கள் ஒன்று சேர வேண்டும்.

அவர்கள் இப்போதே எந்தப் பதவியில் இருந்தாலும் ராஜினாமா செய்ய வேண்டும்.

அப்படி ராஜினாமா செய்தவர்களும் வேறு பதவி எதுவும் வகிக்க இஷ்டப்படாதவர்களுமானவர்களே தலைமை வகித்து நடத்தத்தக்க வண்ணம் ஒரு சாரணர் படை திரட்டவேண்டும்.

ஓரளவு நிதி திரட்டி பிரசாரம் வகுக்க வேண்டும்.

இவ்வளவுதான் நாம் இப்போது செய்ய வேண்டிய வேலையாகும்.

''உலகம் உயர்ந்தோர் மாட்டு'' என்று சொல்லுவது பொருளற்ற பழஞ்சொல். உலகம் பிரசாரத்திற்கடிமை என்பதுதான் உண்மையான சொல்.

இதற்கு ஆவன செய்யவும் இதைப்பற்றி பல தோழர்களது அபிப்பிராயம் அறியவும் சமீபத்தில் ஒரு கூட்டம் கூட்டவோ அல்லது சிலர் சுற்றுப் பிரயாணம் செய்யவோ அவசியமென்று கருதுகிறோம்.

ஏனெனில் பல வழிகளிலும் தலைவர்கள் என்பவர்களால் தக்கபடியான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று கருதி ஏமாற்றமடையும் படியான நிலைமையே ஏற்பட்டு வருவதால் இம்மாதிரியான ஒரு காரியம் அவசியம் என்று படுகின்றது.



RangaRakes tamilnavarasam.com

**தங்கள் ஆதரவான பதில் கிடைத்த பின் இடம் காலம் முதலியவைகளை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.**

தயவு செய்து உடனே 30-ந் தேதிக்குள்ளாகவே தங்கள் பதிலை அனுப்பக் கோருகிறோம்.

தங்களன்புள்ள:-
**W.P.A. சௌந்திரபாண்டியன்,**
**ஈ.வெ. ராமசாமி.**

ஈரோடு
25.1.36

குடி அரசு - அறிக்கை - 26.01.1936



# சத்தியமூர்த்தியாரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும்

பார்ப்பனரல்லாதார் கட்சியாரின் முக்கிய கொள்கையானது, இந்தியாவில் மக்கள் பல்வேறு மதக்காரர்களாய் மாத்திரமல்லாமல், பல்வேறு ஜாதிகளாய் பிரிக்கப்பட்டு அவர்களுக்கு சமூக வாழ்வில் பிறவியின் காரணமாகவே உயர்வு தாழ்வு கற்பித்து அந்தப்படியே வெகு காலமாய் நடத்தப்பட்டு வந்ததால் மேல் நிலையில் இருப்பவன் எப்போதும் மேல் நிலையிலேயே இருக்கவும், கீழ்நிலையில் இருப்பவன் எப்போதும் கீழ் நிலையிலே இருக்கவுமான சமூக வாழ்க்கை அவர்களைப் பற்றிக் கொண்டு விட்டது என்பதை அறிந்து, அவற்றை அடியோடு ஒழித்து சமூக வாழ்விலும் மற்றும் கல்வி, அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றிலும் சகல மக்களுக்கும் சமசந்தர்ப்பம் ஏற்படும்படியாகச் செய்ய வேண்டுமென்பதேயாகும்.

இக்கட்சியை இந்த முக்கிய கொள்கையோடு 1916ல் ஆரம்பித்து இன்று 1936ம் வருஷம்வரை சிறிதும் பின்னடையாமல் எவ்வளவோ எதிர்ப்புக்கும் தொல்லைக்கும் இடையில் கஷ்டப்பட்டு வேலை செய்து வந்ததின் பயனாய் கொள்கை ஒரு அளவு வெற்றி பெற்று இருக்கிறது என்றாலும் இன்னும் வெற்றி பெற வேண்டிய அளவு எவ்வளவோ இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் சமூக வாழ்வில் பிற்பட்டு கல்வியிலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும் கீழ் நிலையில் வெகுகாலமாய் இருந்துவந்த மக்கள் போதிய பகுத்தறிவும், ஞானமும் பெற்றிருக்க முடியாது ஆதலால் அப்படிப் பட்டவர்களில் சிலர் தங்கள் தனிப்பட்ட அற்ப சுயநலத்தையே பிரதானமாய்க் கருதி தங்களது வகுப்பு சுயமரியாதை முயற்சியைப் பறிகொடுத்து விட்டு, இம்முயற்சிக்கு எதிரிகளாயிருந்து தொல்லை கொடுத்துவரும் பார்ப்பனர்களுக்கு தாசர்களாக இருந்துகொண்டு முட்டுக்கட்டை போட்டு வருவதில் அதிசயம் ஒன்றும் இருக்க முடியாது.

ஏனெனில் இந்நாட்டில் ‘‘மிகவும் முக்கியமானதும், சாஸ்வதமானதும் மனிதன் அடைந்து தீரவேண்டியதுமானது’’ என்று சொல்லப்பட்ட மோக்ஷ சாம்ராஜ்யமென்னும் ‘‘பரலோக சித்திக்கே’’ பார்ப்பனர்களைக் குருவாய்க்



RangaRakes tamilnavarasam.com

கொண்டு அவர்களுக்குத் தாசர்களாகி அவர்களது கால்களைக் கழுவிய தண்ணீரை தீர்த்தமாய் அருந்துவதை கொள்கையாய்க் கொண்டு பின்பற்றி வரும் மக்கள் ''மாய்கையானதும், நிலையற்றதும், அற்பவாழ்வானதும், இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லாததும் ஆனது'' என்று சொல்லும் படியான இந்த உலக வாழ்க்கைக்கு பார்ப்பனர்களை குருவாய்க் கொள்ளுவதோ, அவர்களுக்கு தாசர்களாய் இருப்பதோ எப்படி ஆச்சரியமானதாக இருக்க முடியும்?

ஆதலால் பார்ப்பனர்களோடு சேர்ந்து கொண்டு பார்ப்பனரல்லாதார் சிலர் தாங்கள் உள்பட சகலவகுப்புக்கும் சம சந்தர்ப்பம் கிடைப்பதை எதிர்ப்பதில் ஆச்சரியமில்லை.

அப்படியெல்லாம் இருந்தும் பார்ப்பனரல்லாதார் இயக்கம், சுயமரியாதை இயக்கம் ஆகியவை இந்த 10, 20 வருஷகாலமாய் செய்துவந்த வேலையின் பயனாய் அதன் முயற்சி சிறிது கைகூடி அமுலில் வந்திருக்கிறது என்பதோடு மட்டுமில்லாமல், பார்ப்பனர்களே இன்று வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இந்தியாவுக்கு அவசியம்தான் என்று சொல்லும்படியாகவும் செய்து விட்டதுடன், சில வகுப்புகளுக்கு இருந்து வரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஆட்சேபிப்பதில்லை என்றும் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

அதாவது எந்தெந்த வகுப்பில் பலமான கட்டுப்பாடு இருந்து ஒரே பிடிவாதமாக தங்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்கப்பட்டதோ அந்த வகுப்புகள் விஷயத்தில் பார்ப்பனர்கள் திருடனைத் தேள் கொட்டியதுபோல் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் ஒப்புக்கொண்டு விட்டார்கள். எந்தெந்த வகுப்பில் கட்டுப்பாடுகள் இல்லாமல் எதிரிக்கு அடிமைகளாகத்தக்க மக்கள் இருந்தார்களோ அந்த வகுப்புப் பிரதிநிதித் துவத்தைப் பற்றி மாத்திரம் தொல்லை கொடுத்து வந்தார்கள்; வருகிறார்கள்.

அப்படி இருந்தும்கூட பார்ப்பனத் தலைவர் - காங்கிரஸ் தலைவர் - சட்டப்படி இவ்விஷயங்களைப் பற்றிப் பேச உரிமை உள்ளவர் என்று சொல்லும்படியான தோழர் சத்தியமூர்த்தி அவர்களே இன்று வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அவசியம்தான் என்று சொல்லித்தீர வேண்டியதாய்விட்டது.

அதாவது அரசியல் உத்தியோகங்கள் முதலியவைகளை எல்லா வகுப்பாரும் அடையவேண்டியதுதான் என்றும், எல்லா வகுப்பாருக்கும் கிடைக்கும்படியாக செய்ய வேண்டியதுதான் என்றும் ஒப்புக்கொண்டு விட்டார். தோழர் ராஜகோபாலாச்சாரியாரும் சம்மதித்து இருக்கிறார்.

ஆனால் அதற்கு சட்டம் மாத்திரம் கூடாது என்கிறார்கள்.

அதாவது எதுபோலென்றால் ''தீண்டாமை ஒழிய வேண்டியது தான், தீண்டாதார் கோவில், குளம், தெருவு, பள்ளிக்கூடம் ஆகியவைகளில்



அனுமதிக்கப்பட வேண்டியதுதான். ஆனால் அதற்கு சட்டம் செய்யக் கூடாது'' என்று எப்படி சத்தியமூர்த்தி, சீனிவாச சாஸ்திரி, ராஜகோபாலாச்சாரி, டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் உள்பட வர்ணாச்சிரம பார்ப்பனர்களும், சீர்திருத்த பார்ப்பனர்களும் சொல்லுகிறார்களோ அதுபோலவே ''எல்லா வகுப்பாரும் உத்தியோகம் பிரதிநிதித்துவம் ஆகியவை பெறவேண்டியது தான், ஆனால் அதற்கு எவ்வித விதியும் இருக்கக் கூடாது'' என்கிறார்கள். அதோடு மாத்திரமல்லாமல் கீழ் உத்தியோகத்தில் மாத்திரம் தான் எல்லா வகுப்பாருக்கும் உத்தியோகம் கொடுக்கலாமே ஒழிய, மேல் உத்தியோகங்கள் கொடுக்கப்படும் போதும் எல்லா வகுப்பாரையும் மனதில் நினையாமல் திறமையை மாத்திரமே நினைக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்.

நாமும் திறமையும், யோக்கியதையும் இல்லாதவருக்கு எந்த உத்தியோகமும் கேட்கவில்லை.

ஆனால் தோழர் சத்தியமூர்த்தியார் திறமையை ஒரு வகுப்பாருக்கே சொந்தமென்று கருதுவாரானால் மாத்திரம் அவர் இந்தப்படி பேச அருகதையுடையவர்தான். அப்படிக்கில்லாமல் எல்லா வகுப்பாரிடையும் யோக்கியதை பெற்ற எல்லா உத்தியோகஸ்தர்களிடையும் மேல் வேலைக்குப் போகத்தகுந்த திறமையுடையவர்கள் விகிதாச்சாரம் இல்லாவிட்டாலும் அவசியமான அளவுக்குக்கூட கிடைக்கமாட்டார்கள் என்று சத்தியமூர்த்தியாரோ அவரது கோஷ்டியார்களோ கருதுவார்களேயானால் அதற்காக வேண்டியே அக் கோஷ்டியாரை அடியோடு அழித்தாக வேண்டியது அவசியம் என்போம்.

சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை பொது ஜனங்களில் மொத்த ஜனத்தொகை 45000000, 4½ கோடி என்றால் அதில் இருந்து பார்ப்பனர் மொத்த ஜனத்தொகை 15 லக்ஷம் பேர் போய் விட்டால் மீதியில் பதினாயிரத்துக்கு ஒருவராவது சர்க்கார் வேலை பார்க்கத் திறமை யுடையவர்கள் இருந்தாலும் 4500 பேர்கள் திறமையுடையவர்கள் கிடைப்பார்களல்லவா?

அல்லது திறமைக்கு ஒரு அளவு கருவியாவது வைத்துத் திறமையாளர்களைப் பரிசோதித்து இன்னார் திறமையுள்ளவர்கள், இன்னார் திறமை இல்லாதவர்கள் என்றாவது, அல்லது இன்ன வகுப்பில் இத்தனை வீதாச்சாரம் திறமையுள்ளவர்கள், இன்ன வகுப்பில் இத்தனை வீதாச்சாரம் திறமையுள்ளவர்கள் என்று கண்டு பிடித்தாவது உத்தியோகத்துக்கு வேண்டிய வீதாச்சாரம் இன்னார் கிடைக்காவிட்டால் அதற்கடுத்த இன்னாரில் எடுத்துக் கொள்வது, அல்லது இன்ன இன்ன வகுப்பில் இருந்து விகிதாச்சாரம் எடுத்துக் கொள்வது என்று பார்த்தால் அப்போதாவது கிடைக்கிறதா இல்லையா என்று பார்த்து ஒரு திட்டம் ஏற்படுத்திக் கொள்ள சம்மதிக்கிறாரா என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

இந்தியாவில் ஆட்சிபுரியாத மதமோ, வகுப்போ இன்று ஒன்றும் இல்லை. எல்லா வகுப்பாரும் இந்தியாவில் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு காலத்தில் அரசர்களாய் இருந்து நாடு ஆண்டு இருக்கிறார்கள்.

ஆதலால் அப்படிப்பட்ட இந்தியாவில் கேவலம் சர்க்கார் உத்தியோகம் பார்க்கத்தகுந்த திறமையுடையவர்கள் அப்படிப்பட்ட வகுப்புகளில் கிடைக்கமாட்டார்கள் என்றால் இப்படிப்பட்ட ஜன சமூகம் உள்ள நாட்டுக்கு ''சுயராஜ்ஜியம் கொடுங்கள் பூரண சுயேச்சை கொடுங்கள்'' என்று கேட்பது ''திறமையுள்ளவர்''களான சத்தியமூர்த்தியார் வகுப்பு மாத்திரம் ஆட்சி புரியவா என்று கருதவேண்டியிருக்கிறது. அப்படி ஆனால் சத்தியமூர்த்தி வகுப்பார்களைவிட பிரிட்டிஷ்காரர் எத்தனையோ விதத்தில் மேலானவர்கள், ஜாதி ஆணவமும் கெடுதல் புத்தியும் இல்லாதவர்கள் என்பதை யார் ஆக்ஷேபிக்க முடியும்?

ராஜகோபாலாச்சாரியாரும், பிரகாசமும் ''ஜஸ்டிஸ் கட்சியார் - பார்ப்பனரல்லாதார் ஆட்சியைவிட பிரிட்டிஷ் ஆட்சியே மேல்'' என்று பேசினார்கள்.

ஆனால் பார்ப்பனரல்லாதார் ஆட்சியில் அந்தப்படி மக்களை இழிவு படுத்தும்படியான கொள்கை எதுவும் இல்லை. சத்தியமூர்த்தியார், ராஜ கோபாலாச்சாரியார், பிரகாசம் ஆகியவர்கள் ஆட்சியில் மற்றவர்களுக்கு இழிவுள்ள கொள்கை இல்லையென்று யார் சொல்லிவிட முடியும்?

அப்படி இல்லையானால் வகுப்பு பிரதிநிதித்துவம் மேல் உத்தியோகங் களுக்கு கூடாது என்று சொல்ல அவருக்கு தைரியம் வந்திருக்குமா என்று கேட்கின்றோம்.

இவை ஒருபுறம் நிற்க, தோழர் சத்தியமூர்த்தியார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு விதி வேண்டாம் என்று சொன்னவர் அது யோக்கியமாய் நடைபெற வேறு ஏதாவது ஒரு மார்க்கம் சொன்னாரா என்று பார்த்தால் அதுவும் இல்லை. தீண்டாமை விலக்குக்கு 16 வருஷமாய் பல லக்ஷ ரூபாய் செலவுடன் வேலை செய்கிறார்கள். என்ன ஆயிற்று? பால்ய விவாகம் கூடாது என்று சட்டம் செய்திருக்கும்போதே ''என் மகளுக்கு குழந்தையில் விவாகம் செய்து ஜெயிலுக்குப் போவேன்'' என்று சத்தியமூர்த்தியாரே சொன்னார் என்றால் சட்டம் இல்லாமல் செய்வார் என்று இக்கூட்டத்தாரை யார் நம்புவார்கள்?

ஆகவே ஏதோ சமயம் போல் பேசி மக்களை ஏய்ப்பது என்பதில்லாமல் மற்றபடி நாணயமான காரியம் எதுவும் அக்கூட்டத்தாரிடம் இருப்பதாக நாம் கூற முடியாது.



ஆதலால் பார்ப்பனரல்லாத மக்கள் முதலில் எப்படியாவது பாடுபட்டு பிரதிநிதித்துவமும், உத்தியோக விகிதாச்சாரமும் பார்ப்பன பார்ப்பனரல்லாத இந்துக்கள், பார்ப்பனரல்லாதார் தாழ்த்தப்பட்ட மக்கள், கிறிஸ்தவர், மகமதியர் என்பவர்களுக்கு ஆகவாவது ஏதாவது விகிதாச்சாரம் கொடுப்பதாய் ஒப்புக் கொள்ளும்படி பார்ப்பனர்களை செய்துவிட்டால் பிறகு இந்தியாவை எவ்வித சுயராஜ்ஜிய ஆட்சியோ, சுதந்திர ஆட்சியோ, சமதர்ம ஆட்சியோ நடை பெறும்படி செய்வது இப்போதைய நிலையைவிட எவ்வளவோ பங்கு சுளுவான நிலையான காரியமாகிவிடும் என்று கூறுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 26.01.1936**



RangaRakes tamilnavarasam.com

# சத்தியமூர்த்தியின் திருடுதத்தம்

தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் கர்ப்பத்தடையைப்பற்றி ஆட்சேபித்துப் பேசுகையில் விளைபொருள்கள் எல்லா மக்களுக்கும் சரி சமமாகப் பங்கிட்டுப் பிரித்துக் கொடுப்பதானால் ஜனங்களுக்கு உணவுப்பஞ்சம் இருக்காதென்றும், ஆதலால் கர்ப்பத்தடையோ, கர்ப்ப ஆட்சியோ கூடாதென்றும் எடுத்துச்சொன்னார்.

அடுத்த ஓர் இடத்தில் பேசும்போது செல்வங்களை மக்களுக்கு சரிசமமாகப் பங்கிட்டுக் கொடுப்பது என்பதை தாம் ஒரு நாளும் ஒப்புக் கொள்ளமுடியாது என்று சொன்னார்.

ஆகவே இப்படிப்பட்ட நிலையில் கர்ப்பத்தடையோ, கர்ப்ப ஆட்சியோ அவசியமா இல்லையா? என்று தான் நாம் கேட்கின்றோம்.

**குடி அரசு - செய்திக் குறிப்பு - 26.01.1936**



# சோதிடத்தின் வண்டவாளம்

தோழர் லெய்லா என்னும் பெயருடையவரும், மேனாட்டுப் பிரபல சோதிட பண்டிதையுமான ஓர் அம்மையார் அவர்கள் சென்னைக்கு வந்து ''தமிழ்நாடு'' நிருபரிடம் பலவகையான எதிர்கால நிகழ்ச்சிகளைப்பற்றி தீர்க்கதரிசனம் கூறியிருக்கிறாரென்றும், அவர் சில நாளைக்குமுன் கூறிய எதிர்கால நிகழ்ச்சிகள் யாவும் தவறாது நடந்திருக்கின்றனவென்றும் தமிழ்நாடு முதலிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருக்கிறது.

அச்சோதிட பண்டிதை இப்பொழுது சென்னையிற் கூறிய எதிர்கால நிகழ்ச்சிகளில் ஜார்ஜ் மன்னர்பிரான் உடல் நிலையைப்பற்றியது ஒரு செய்தியாகும். அவர், ஜார்ஜ் மன்னர் நோய் நீங்கி உடல் நலம் பெறுவாரென்றும், இன்னும் சில வருடங்கள் உயிர்வாழ்வாரென்றும் கூறியிருக்கிறார். இவ்வாறு அவர் கூறி இரண்டு தினங்கள் ஆவதற்குள் மன்னர்பிரான் மரணமடைந்துவிட்டார். இதிலிருந்து சோதிடத்தின் உண்மையை நாம் நன்றாக அறிந்து கொள்ளலாம். 'காக்கையேறப் பனம்பழம் விழுந்தது' என்னும் (காகதாளி) நியாயம்போல் ஒருவர் கூறினபடியே தற்செயலாய் ஏதோ சில சமயங்களில் வாய்ந்து விடுவதுண்டு. இதனைக்கொண்டே அவ்வாறு கூறியவர்களை தீர்க்கதரிசிகளெனவும், சோதிடவல்லவரெனவும் கூறிப் பெருமைப்படுத்துகின்ற நம்மக்களின் பேதமைத் தன்மையை என்னென்பது? இந்தச் சோதிட விஷயத்தை சில பத்திரிகைகள் மிகப் பிரமாதமாக விளம்பரப்படுத்தியதுடன், அம்மையாரின் படத்தையும் போட்டு விளம்பரப் படுத்தினார்கள். சோதிட எதிர்கால நிகழ்ச்சியின் தத்துவத்தை இவ்வரலாறு எல்லாருக்கும் மிக நன்றாக விளக்கிக் காட்டியிருக்கிறது. எனவே இனியாவது மக்களுக்குச் சோதிடப் பைத்தியம் விலகும் என்று நம்புகிறேன்.

**குடி அரசு - செய்தி விமர்சனம் - 26.01.1936**



RangaRakes tamilnavarasam.com

# பிரார்த்தனை

பிரார்த்தனை என்பது இன்று உலகில் மக்கள் சமூகம் எல்லோரிடத்திலும் அதாவது கடவுளால் மக்கள் நடத்தப்படுகிறார்கள் என்று நம்பும் எல்லோரிடத்திலும் இருந்து வருகிறது. இது எல்லா நாட்டிலும் எல்லா மதக்காரர்களிடத்திலும் இருந்து வருகிறது.

பிரார்த்தனை என்பதற்கு ஜபம், தபம், வணக்கம், பூசனை, தொழுகை, முதலிய காரியங்களும் பெயர்களும் சொல்லுவதுண்டு.

இவையெல்லாம் கடவுளை வணங்கி தங்களுக்கு நன்மை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவதேயாகும்.

தனக்கு வேண்டியவற்றை எல்லாம் அதாவது இம்மையில் இவ்வுலகில் யுக்தி, செல்வம், சுகம், இன்பம், ஆயுள், கீர்த்தி முதலியவை களும், மறுமையில் மேல்லோகத்தில் பாவமன்னிப்பு, மோக்ஷம், நல்ல ஜன்மம் முதலியவைகளும் கிடைக்க வேண்டும் என்கின்ற ஆசையே பிரார்த்தனையின் முக்கிய நோக்கமாக இருந்து வருகிறது.

இந்த பிரார்த்தனையின் அஸ்திவாரம் உலகத்தைப் படைத்துக் காத்துவரும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதும், அவர் சர்வ வல்லமையும் சர்வ வியாபகமும் சர்வமும் அறியும் ஞானமும் உடையவர் என்பதும், அப்படிப்பட்ட அக்கடவுளை வணங்குவதால் ஒருவனுக்கு வேண்டிய சகல காரியத்திலும் சித்தி பெறலாம் என்பதுமானவைகள் தான் பிரார்த்தனைக் காரர்களின் கருத்தாயிருக்கிறது. இப்படிப்பட்ட பிரார்த்தனைக்கு அக்கடவுளை வணங்குவது, தோத்திரம் செய்வது, புகழ்வது, பஜனை செய்வது முதலிய காரியங்கள் ஒருபுறமிருக்க பொருள்களைக் கொண்டும் கடவுளைத் திருப்தி செய்து அவற்றால் பயன்பெறலாம் என்பதும் இந்த பிரார்த்தனையில் சேர்ந்ததாகும்.

அதாவது கடவுளுக்கு இன்ன இன்னது செய்வதாக நேர்ந்து கொள்ளுவது, ஜீவ பலிகொடுப்பது, கோயில் கட்டுவது, உற்சவம் செய்வது முதலிய காரியங்கள் செய்யப்படுவனவாகும்.

ஆகவே இப்படிப்பட்ட பிரார்த்தனை என்பதற்கு வேறு வார்த்தையில் ஒரு மாறுபெயர் சொல்லவேண்டுமானால் பேராசை என்றுதான் சொல்ல வேண்டும். பேராசை என்றால் தகுதிக்கு மேல் விரும்புவது, வேலை செய்யாமல் கூலி பெறுவது.



படித்துப் பாஸ் செய்யவேண்டியவன் பிரார்த்தனையில் பாஸ் செய்வது என்றால், பணம் வேண்டியவன் பிரார்த்தனையில் பணம் சம்பாதிக்க வேண்டு மென்றால், ''மோக்ஷத்துக்கு'' போகவேண்டும் என்கின்றவன் பிரார்த்தனையில் மோக்ஷத்துக்கு போக வேண்டும் என்றால், இவைகளுக்கெல்லாம் பேராசை என்று சொல்லுவதோடு வேலை செய்யாமல் கூலிகேட்கும் பெரும் சோம்பேறித் தனமும் மோசடியும் என்றும் சொல்வதுதான் மிகப் பொருத்தமாகும்.

பேராசையும் சோம்பேறித்தனமும் ஏமாற்றும் தன்மையும் இல்லா விட்டால், பிரார்த்தனைக்கு இடமே இல்லை.

மற்றும் முன் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஆக பிரார்த்தனை செய்வதும் பிரார்த்தனையில் அவைகளை அடையப் பார்ப்பதும் முன் குறிப்பிட்ட சர்வ வல்லமை சர்வ வியாபகம் உள்ள கடவுளை சுத்த முட்டாள் என்று கருதி அதை ஏமாற்றச் செய்யும் சூக்ஷி என்று கூட சொல்லி ஆகவேண்டி இருக்கிறது.

எந்த மனிதனும் தகுதியானால் எதையும் அடையலாம்.

அதற்கு வேண்டிய காரியங்கள் செய்து தகுதியாக்கிக்கொண்டு பலனையடைய எதிர் பாராமல் காரியத்தை செய்யாது பிரார்த்தனையில் பலன் அனுபவிக்கவேண்டும் என்று கருதினால் கடவுள் வேலை செய்யாமல் கூலி கொடுக்கும் ஒரு 'அறிவாளி' என்றும் தன்னைப் புகழ்வதாலேயே வேண்டியதைக் கொடுக்கும் ஒரு தற்புகழ்ச்சிக் காரனென்றும் தானே சொல்லவேண்டும்.

தவிர இந்த பிரார்த்தனையின் தத்துவமானது மனிதனை சோம்பேறி யாக்குவதோடு சகலவித அயோக்கியத்தனமான காரியங்களுக்கும் லைசென்சு, அனுமதிச் சீட்டுக் கொடுப்பது போலாகிறது. விதை நட்டு தண்ணீர் பாய்ச்சாமல் அறுப்பு அறுக்க கத்தி எடுத்துக்கொண்டு போகிறவனுக்கும் யோக்கியமான காரியங்களைச் செய்யாமல் கடவுள் கருணையை எதிர்பார்ப்பவனுக்கும் என்ன வித்தியாசம் என்பது விளங்கவில்லை.

கடவுள் சகலத்தையுமுணர்ந்து அதற்கு தகுந்தபடி பலன் கொடுக்கக் கூடிய சர்வஞ்ஞத்துவம் உள்ளவர் என்று ஒருவன் கருதி இருப்பானேயானால் அவன் கடவுளைப் பிரார்த்தனை செய்யும் வேலையில் ஈடுபடவோ அதற்காக நேரத்தை செலவு செய்யவோ ஒரு பொழுதும் துணியமாட்டான்.

ஏனென்றால் சகல காரியமும் கடவுளால் தான் ஆகும் என்று நினைத்துக்கொண்டு கடவுள் யாருடைய முயற்சியும் கோரிக்கையும் இல்லாமல் அவனவன் செய்கைக்கும் எண்ணத்துக்கும் தகுதிக்கும் தகுந்தபடி பலன் கொடுப்பதற்குத் தகுந்த ஏற்பாடும் செய்து விட்டார் என்றும் (அதாவது விதியின்படி தான் முடியும் என்றும்) தெரிந்து இருந்த ஒருவன் அந்த தெளிவில் நம்பிக்கை இருந்தால் பிரார்த்தனை செய்வானா என்று யோசித்துப்பார்க்க வேண்டுகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

சாதாரணமாக மக்களில் 100க்கு 90 பேர்களிடம் பிரார்த்தனை வெகு கேவலமான - அறிவற்ற வியாபாரத் தனமான முறையில் இருந்து வருகிறது.

அதாவது எனக்கு இன்ன பலன் ஏற்பட்டால் உனக்கு இன்ன காரியம் செய்கிறேன். அல்லது உனக்கு நான் இன்ன காரியம் செய்கிறேன். அதற்கு பதிலாக நீ இன்ன காரியம் எனக்குச் செய் என்கின்ற முறையிலேயே பிரார்த்தனை இருந்து வருகின்றது.

இவர்கள் எல்லோரும் அதாவது இந்தப் பிரார்த்தனைக்காரர்கள் எல்லோரும் கடவுளை புத்திசாலி என்றோ சர்வ சக்தி உள்ளவன் என்றோ பெரிய மனிதத்தன்மை உடையவன் என்றோ கருதவில்லை என்றுதான் சொல்லி ஆகவேண்டும்.

சிலர் சொல்லுகிறார்கள். மனிதன் பாபி, அவன் பாப கர்மத்தைச் செய்துதான் தீருவான். ஆதலால் மன்னிப்பு கேட்டுதான் தீரவேண்டும் என்கிறார்கள்.

நான் பாபம் செய்துதான் தீருவேன். நீ மன்னித்துதான் ஆகவேண்டும் என்று பிரார்த்திப்பதை கடவுள் ஏற்றுக்கொள்வதானால் மனிதன் எந்தப் பாவத்தை செய்வதற்கும் ஏன் பயப்படவேண்டும் என்பது நமக்கு புலப்பட வில்லை. பாபத்துக்கு எல்லாம் மன்னிப்பு இருக்குமானால் புண்ணியம் என்பதற்கு அருத்தம் தான் என்ன?

ஆகவே கடவுள் கற்பனையை விட இந்த பிரார்த்தனை கற்பனையானது மிக மிக மோசமானது என்றுதான் சொல்ல வேண்டும். பிரார்த்தனைக் கற்பனை இல்லாவிட்டால் கடவுள் கற்பனை ஒரு பிரயோஜனத்தையும் கொடுக்காமல் போய்விடும்.

மனிதன் பூஜையும் பிரார்த்தனையும் செய்வதற்கு தான் கடவுள் ஏற்படுத்தப்பட்டதே ஒழிய கடவுளுக்கு ஆக பூஜையும் பிரார்த்தனையும் ஏற்படுத்தப்படவில்லை.

குரு - (பாதிரி) புரோகிதன் (பார்ப்பனர்) ஆகியவர்கள் பிழைப்புக்கு ஆகவே பிரார்த்தனையும் கடவுள் மன்னிப்பும் ஏற்படுத்தப்பட வேண்டியதாய் விட்டது.

இந்த இரண்டு காரியமும் இல்லாவிட்டால் பாதிரிக்கோ முல்லாவுக்கோ, புரோகிதனுக்கோ ஏதாவது வேலை உண்டா என்பதை யோசித்துப்பாருங்கள். ஆஸ்திகர்கள் கொள்கைப்படி மனிதனுடைய செய்கையும் எண்ணமும் ''சித்திரபுத்திரனுக்கோ கடவுளுக்கோ தெரியாமல் இருக்கவே முடியாது'' இதற்கு ஆக பலன் கொடுக்க தீர்ப்பு நாளும் எமதர்ம ராஜாவும் இருந்தே இருக்கிறான்.

மத்தியில் பிரார்த்தனை பூசனை என்பது மேல்கண்ட இரண்டையும் ஏமாற்றவா அல்லது குருவும் புரோகிதனும், பிழைக்கவா என்பது யோசித்தால் விளங்காமல் போகாது.



பிரார்த்தனையில் செலவாகும் நேரத்தைப்போல் மனிதன் வீணாய்க்கழிக்கும் நேரம் வேறு இல்லை என்றே சொல்லுவோம். சில சோம்பேறிகள் பிழைப்பதற்காக மக்கள் புத்தி எவ்வளவு கெடுகிறது? மக்களுக்கு அயோக்கியத்தனம் செய்ய எவ்வளவு தைரியம் ஏற்பட்டு விடுகிறது? பொருள்கள் எவ்வளவு நாசமாகிறது? என்பவைகளை யெல்லாம் யோசித்துப் பார்த்தால் பிரார்த்தனை என்பது ஒரு புரட்டான காரியம் என்றோ பயனற்ற காரியம் என்றோ அறிவீனமான காரியம் என்றோ விளங்காமல் போகாது.

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - ஜனவரி 1936**



RangaRakes tamilnavarasam.com

# அப்போதே வாக்குக் கொடுத்திட்டேன்

**- சித்திரபுத்திரன்**

**தாய்:-** ஏண்டி சேஷு குட்டி அவன் சாயபு ஆச்சுதேடி அவன்கிட்டே என்னடி ரகசியம் பேசுறே.

**மகள்:-** இல்லே அம்மா நான் சின்னக் குழந்தையா இருக்கச்சே வீதியிலே விளையாண்டிருந்தப்போ மணலிலே ஒரு வீடு கட்டினேன். அதை வந்து இந்த அடுத்த ஆத்து சுக்கூர் இடிக்க வந்தான். நான் இடிக்காதடா என்று சொன்னேன், அப்படியானால் என்னைக் கட்டிக்கிறாயா என்று கேட்டான், நானு வீடு இடிந்துபோமேன்னு ஆகட்டுமென்று சொல்லிட்டேன். அதை இத்தனை நாள் மனசிலே வெச்சிண்டிருந்து இப்ப வந்து கேக்கராண்டி.

**தாய்:-** நீ என்னடி சொன்னாய்.

**மகள்:-** நான் என்னம்மா சொல்லட்டும், ஆகட்டுமென்னுதான் சொல்லித் தொலைச்சேன்.

**தாய்:-** அடிஅடி நாசமாப்போன முண்டே! துலுக்கனையா கட்டிக்கிரேண்ணு சொன்னே, நீ பேதியிலே போக, நீ பிளேக்கிலே போக, உனக்கு ஒரு உளமாந்தை வர.

**மகள்:-** கோவிச்சுக்காதே அம்மா! அப்ப நான் ஆகட்டும் என்னு சொல்லியிருந்தேன் அல்லவா, அதை வச்சிண்டு வந்து கேட்டான். பின்னே நான் என்ன சொல்றது.

அப்ப நான் அப்படி சொல்லாதெ இருந்தா வீட்டை இடிச்சிருப்பானம்மா?

**தாய்:-** உன் தலையிலே நெருப்பைக் கொட்ட, நான் 2, 3 வருஷத்திற்கு முன்னையே உன்னைக் கல்யாணம் பண்ணனும் என்னு உங்கப்பாஓடே சொன்னபோது, உங்கப்பா சாரதா சட்டமோ லக்ஷிமி சட்டமோ என்னமோ பேரெழவு சட்டம் குறுக்கிடறதடி என்று சொன்னார் அந்தப் பிராமணன். இப்போ நீ மண்ணுக் கொளிச்சிண்டு விளையாடற போதே அவனுக்கு வாக்குக்கொடுத்துட்டேன் என்கின்றாயே, இன்னம் கொஞ்ச நாள் போனா பறையனுக்கும் சக்கிலிக்கும் பால் குடிக்கிறபோதே வாக்குக்கொடுத்துட்டே னென்றல்லவாடி சொல்லுவாய். என் வயிறு பத்தி எறியரதேடி, நீ அந்த சுக்கூரோடு கொஞ்சினதைப் பார்த்து.



**மகள்:-** இல்லே அம்மா உன்னெதிரிலே நான் கொஞ்சுவேனா அம்மா? 2, 3, வருஷத்திற்கு முன்னே கல்யாணம் ஆயிருந்தால் கூட அப்பவும் நான் வாக்குத் தவறமாட்டேனம்மா. இதுக்கு நீதான் ஒரு வழி சொல்லேன். இப்ப அவன் வந்து நீ சொன்ன வார்த்தை என்னடி சேஷு குட்டி என்றானே, அப்பவும் இப்படித்தானே கேட்பான்.

**தாய்:-** அடி சண்டாளி சொன்ன வார்த்தையாவது மண்ணாங்கட்டியாவது அவன் இனிமே இங்கே வந்தா உன் மயிரை அறுத்துடுவேன் தெரியுமா?

சின்னக் குழந்தையாய் இருக்கும்போது என்னமோ சொன்னாளாம் அவன் வந்து இப்போ கேக்கறானாம் என்னடி அனியாயம் இது?

**மகள்:-** நீ மயிரை அறுக்கவாண்டாம் அம்மா சுக்கூரே என் மயிரைக் கத்தரிச்சூடறேன் என்று சொல்லி இருக்கான். யாரோ சரோஜனி குட்டிகளாம் அதுகள் மயிரைக் கத்திரிச்சிண்டிருக்காம். அதுமாதிரி என்னையும் கத்தரிச்சு விட்றேன்னு சொன்னான்.

**தாய்:-** அய்யய்யோ கெட்டுப்போச்சடி காரியம். நம்ம குடும்பத்தையே ஜாதியையே பாழாக்கீட்டாயே நான் காவேரியில் போய் வீழ்ந்துடறேண்டி உன்னாலே.

**மகள்:-** அம்மாம்மா, வேண்டாம்மா பின்னெ நான் என்னாம்மா சொல்லட்டும் சுக்கூருக்கு?

**தாய்:-** என்னடி சொல்லறது. நான் அப்போ கொழந்தையா இருக்கச்சே வேடிக்கையா சொன்னா இப்ப என்னமாடா வந்து இத்தனை தைரியமாக் கேக்கறாய் என்று அதட்டிச் சொல்லடி.

**மகள்:-** இப்பவும் நான் கொழந்தை தாம்மா.

இப்ப யாரையாவது கட்டிண்டா கட்டின ஆம்படையானை இன்னும் 10 நாள் பொறுத்து நான் கொழந்தையா இருக்கும்போது கல்யாணம் செய்தூண்டேன் நீ வாண்டாம் போண்ணு சொன்னா போய்டுவானா? அப்படிதாம்மா சுக்கூரும் கேட்பான். ஒரு தடவை வாக்குத் தவறினால் என்ன? இரண்டு தடவை வாக்குத் தவறினால் என்ன? அப்புறம் தினம் தினம் வாக்குத் தவறினால் தான் என்னம்மா?

நான் சுக்கூர் கிட்ட சொல்லீட்டேன். கட்டினா அவனைக் கட்டிக்கிறேன். இல்லாவிட்டால் கன்னியா மடத்தில் சேர்ந்துக்கிறேன். எனக்குப் புருஷனே வாண்டாம், சுக்கூர் முகத்தில் மறுபடியும் நான் எப்படி விழிப்பேன்.

**தாய்:-** உங்கப்பா வரட்டுமடி, நாளை காலையில் வரப்போறார். இதெல்லாம் அவரிடம் சொல்லி உன்னை இந்த வாரத்துக்குள்ளாகவே எவன் தலையிலாவது கட்டித்தொலைத்து விட்றேன்.

**மகள்:-** அப்படியா என்னமோ செய்துக்கோ நான் என்னமோ சுக்கூருக்கு வார்த்தை கொடுத்திட்டேன்.



RangaRakes tamilnavarasam.com

**தாய்:-** உம், உம் கொடுப்பேடி ஆள் எளப்பாளியாய் இருந்தால் (என்று சொல்லி விட்டு பேச்சை முடித்து விட்டாள்.)

(இரவு 1 மணிக்கு சுக்கூரும் சேஷுக் குட்டியும் டப்பிள். தகப்பனார் வந்தார்.)

**தாய்:-** ஏம் பேசலே கேட்டீளா சேஷு குட்டி அடுத்தாத்து சுக்கூருடன் ராத்திரி ஓடிட்டா.

**தகப்பன்:-** அவனோடு தான் போனாள் என்று உனக்கு எப்படிடீ தெரியும்.

**தாய்:-** நேற்று அவனோடு சிரிச்சிண்டு பேசிகிண்டிருந்தா. நான் கண்டிச்சேன். அவள் ஒரு தைரியம் சின்ன கொழந்தையாய் மண்ணுக் கொளிச்சிண்டு விளையாடும்போது அவனைக் கட்டிக்கிறேண்ணு வாக்குக் கொடுத்துட்டாளாம். அதுக்காக அவனை கட்டிக்கணுமாம். அப்படின்னு என்னிடம் சொல்றா, வஸ்சேன் அப்பா வந்த சொல்ரேண்ணே. பயந்துண்டு ஓடிட்டா முண்டை.

**தகப்பன்:-** சனியன் தொலைந்தது போ. அவன் மேலே அவளுக்கு ஆசை வந்துட்டுது என்னமோ சொல்லிண்டு ஓடிட்டா. நல்லகாரியம் இந்த நம்ம அயோக்கிய ஜாதியிலேயே அவளுக்கு தகுந்த மாப்பிள்ளை வேணுமுண்ணா 5000 ரூ வரதக்ஷணை - கல்யாணச் செலவு 2000 ரூ ஆக 7000 - ரூபாயிக்கு எங்கே போரது யாரை விக்கிறது.

போகட்டும் போ அவனும் S.S.L.C. பாசுபண்ணி இருக்கான். நல்ல அசல் சாயபு. பிராமணனாட்டமா செக்கச்செவேரெண்ணு இருக்கான். பிராமணன் M.A. படிக்கிறதும் சரி சாயபு S.S.L.C. படிக்கிறதும் சரி, சீக்கிரத்திலெ ஏதோ வேலைக்கு வந்துடுவன், நம்மை விட்டது சனியன்.

**தாய்:-** ஐயய்யோ அசட்டு பிராமணா அப்படிதான் இருந்தாலும் ஒரு முதலி நாயக்கன் இல்லையா சாயப்போடவா ஓடரது.

**தகப்பன்:-** என்னமோ அவ கண்ணுக்கு பிடிச்சவனோடு போய்ட்டா. நம்ம ஜாதியில் இல்லாவிட்டால் வேறு யாரோடு போனால்தான் என்ன? முதலிக்கும் சாயபுக்கும் என்னடி வித்தியாசம் மொட்டை ஒன்றுதானே, உனக்கு என்னத்துக்கடி இத்தனை ஆத்திரம்.

**தாய்:-** சுக்கூர் அவாத்திலே பொண்ணை மூடி போட்டல்லவா வெச்சூடுவா. இனி அவளைப் பார்க்க முடியுமா.

**தகப்பன்:-** நீ வேணுமன்னா அவாத்துக்கு போய் தினம் பாத்துட்டு வாடி யாரு வாண்டாமென்றா.

**தாய்:-** சரி சரி அவாத்துக்கு போனா நாலுபேரு என்ன சொல்லுவா.



**தகப்பன்:-** என்னமோ சொல்லுவா நான் சம்மதிச்சா அப்பரம் யார்டீ கேக்ரெவா - இனி அப்படித்தாண்டி எல்லாம். ராஜகோபாலாச்சாரியார் சேட்டுக்கு பெண் கொடுக்கலையா?

சூரியராவ் நாயுடு ஒரு சாயபுக்கு பெண் கொடுக்கலையா? நீலகண்ட சாஸ்திரி வெள்ளைக்காரனுக்கு பெண் கொடுக்கலையா? சடோபாத்தியாயா நாயுடுக்கு பெண் கொடுக்கவில்லையா? நாம்தானா கெட்டுப்போயிட்டோம். அதுவும் நாமா கல்யாணம் செய்து கொடுத்தமா அவளே ஓடிட்டா.

நமக்கு என்னடி பயம் ரூ 7000 மிச்ச மாச்சுடி சுக்கூர் அவப்பா சிபார்சிலே நம்ம மணிக்கி கூட ஒரு உத்தியோகம் வந்துடும். நீ ஒண்ணும் சத்தம் போடாதே. யாராவது கேட்டால் காங்கிரஸ்காரர் கேட்டா இந்து முஸ்லீம் ஒற்றுமை என்று சொல்லடி. ஜஸ்டிஸ்காரர் கேட்டா சுயமரியாதையில் சேர்ந்துட்டோம் என்று சொல்லடி, அப்பரம் யார் நம்மண்டை வருவா பார்ப்போம்.

**தாய்:-** சரி பகவானே காலம் இப்படியா கெட்டுப்போகணும்?

**தகப்பன்:-** என்னடி கெட்டுப்போச்சி? நாளவருஷத்துக்குப் பார்டீ சேஷுகுட்டி தங்க விக்கிரகமாட்டமா பிள்ளை பெத்துடப்போரா எங்கயோ அவா சௌக்கியமாய் இருந்தால் சரி, போய் வேலையைப் பார்.

**பகுத்தறிவு (மா.இ.) - உரையாடல் - ஜனவரி 1936**



RangaRakes tamilnavarasam.com

# பாண்டியன், இராமசாமி அறிக்கை

சென்ற வாரம் குடி அரசில் வெளியிடப்பட்ட ‘‘பாண்டியன், ராமசாமி’’ அறிக்கையைப்பற்றி இதுவரை சுமார் 100 தோழர்களிடம் இருந்து ஆதரவுக் கடிதங்கள் வந்திருக்கின்றன.

இன்னமும் பல இடங்களில் இருந்து ஆமோதித்து ஆதரவளிப்பதாகக் கடிதங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆகவே பிப்ரவரி மத்தியில் அல்லது பிற்பகுதி வாரங்களில் ஒரு நாள் குறிப்பிட்டு திருச்சியிலேயே கூட்டம் ஏற்பாடு செய்யவேண்டியது அவசியம் என்று கருதுகிறோம்.

பார்ப்பனரல்லாதார் இயக்கத் தலைவர்களில் மிகுந்த தியாக புத்தியுடன் உழைத்து வரும் தோழர் பொப்பிலி ராஜா அவர்கள் இவ்வியக்கத்துக்கு ஆக தனது சம்பளம் 4500 ரூ. தவிர மேல்கொண்டு மீ 1-க்கு 4000, 5000 ரூபாய் வீதம் செலவு செய்கிறார் என்பதையும், சிற்சில சமயங்களில் அவர் சென்னையில் இருந்துகொண்டே இரண்டு நாள் மூன்று நாள் கூட தனது மனைவியாரையும், குழந்தைகளையும் பார்க்கக்கூட சௌகரியமில்லாமல் இயக்கத்துக்கு ஆக வேலை செய்கிறார்கள் என்பதையும் நேரிலேயே அறிவோம்.

இவை இயக்கத்தில் அவருக்குள்ள ஊக்கத்தைக் காட்டுகின்றன என்று மாத்திரம் சொல்லலாமே தவிர இவற்றால் இயக்கத்துக்கு தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலும் ஏதாவது ஒரு பயனாவது ஏற்பட்டதாகச் சொல்ல முடியாமைக்கு வருந்துகிறோம். இதற்கு மற்ற யார் காரணஸ்தர் களாக இருந்தாலும் தமிழ் நாட்டில் பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்கு வரவர மதிப்பு குறைகின்றது என்பதை நம்மால் மறுக்க முடியவில்லை.

நாம் இதற்கு முன் பல தடவை எழுதி இருப்பது போல் நம் எதிரிகளாகிய பார்ப்பனர்கள் தங்கள் சமூக நலன் என்பது ஒன்றில் மாத்திரம் எந்தக் காலத்திலும் அலட்சியமில்லாமலும் நாணையக் குறைவில்லாமலும், இருந்தாலும் மற்ற எல்லாக் காரியங்களிலும் சிறிதுகூட நாணைய மில்லாமலும் எவ்வித கொள்கை இல்லாமலும் சூழ்ச்சிமேல் சூழ்ச்சி செய்த வண்ணமாய் நடந்துகொண்டு இருந்தும் அவர்களது முயற்சியானது சுமார் 7,8 தினசரி பத்திரிகைகளும் 20, 30 வார பத்திரிகைகளிலும் தங்கள்



ஆதீனத்தில் வைத்துக்கொண்டு ஜில்லாக்கள் தோறும் வெறும் காலித்தன முள்ளவர்களாகப் பார்த்து 20 பேர் 30 பேர் வீதம் பிரசாரகர்களாகவும், தொண்டர்களாகவும் வைத்துக் கொண்டிருப்பதோடு ஷ 1-க்கு எப்படியாவது லட்ச ரூபாய்க்கு குறையாமல் பாமர ஜனங்களிடமிருந்து பல வழிகளிலும் பொருள் பறித்து வேலையில்லாத தங்கள் இன வாலிபர்களுக்கும், இந்த பத்திரிகைக்காரர்களுக்கும், தொண்டர்களுக்கும் உதவி வருவதுடன் பொதுஜனங்களின் அபிப்பிராயம் என்பதை ஒரு ஆளே உற்பத்தி செய்து அதைத் தன் இஷ்டப்படி நடத்தத் தகுந்த செல்வாக்கையும் பெற்று வருகிறார்கள்.

நமது தலைவர்களுக்கோ, மக்களுக்கோ இவ்வித கவலையோ, சக்தியோ ஏதாவது இருக்கின்றதா என்று பார்த்தால் ஒன்றும் இல்லை என்பதைத் தவிர வேறு என்ன பதில் கிடைக்கும் என்று கேட்கின்றோம்.

ஜஸ்டிஸ், திராவிடன் என்ற பேப்பர்கள் அவை ஆரம்பமான காலம் முதல் கொண்டு இதுவரை சுமார் 5, 6 லட்ச ரூபாய் சாப்பிட்டிருக்கும் என்று சொன்னால் எவரும் தைரியமாய் மறுக்க முடியாது. மற்றும்

எழவுக்கு போனவள் தாலி அறுத்தாள் என்கின்ற பழமொழிப்படி திராவிடனை ஆதரிக்கப் போன பாவத்துக்கு ஆக கையிலிருந்து 10000, 20000 என்பதாக ரூபாய்கள் இழந்து மானங்கெட்டு வெளியில் வந்தவர்களும் உண்டு. இப்படியெல்லாம் இருந்தும் இன்று கட்சிக்கு என்று சொல்லும் படியான அளவிலாவது வெளியாகும் தமிழ் தினசரி பத்திரிக்கை இல்லை என்பது மாத்திரமல்லாமல் தலைவர்கள் பேரில் வெறுப்பில்லாமல் பிரசாரம் செய்யும் ஒரு தொண்டராவது பிரசாரகராவது தமிழ் நாடெங்கிலும் கிடையாது என்றும் சொல்லவேண்டி இருக்கிறதற்கு வருந்துகிறோம்.

ஆனால் அக்கட்சியின்பேரால் 3 மந்திரிகள் மீ 13500 ரூபாயும் 3 செக்கரட்டரிகள் மீ 1500 ரூபாயும் பிரசிடெண்ட் டிப்டி பிரசிடெண்டுகள் மீ 3000 ரூபாயும் பெறுகின்றார்கள். பொப்பிலி ராஜா ஒருவர் தவிர மற்றவர்கள் வாங்கும் பணத்துக்கு கணக்கு கேட்க எவருக்கும் உரிமை இல்லை. அவர்கள் கட்சிக்காக செய்யும் காரியம் என்ன என்பதையும் தெரிவதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை என்பதோடு அல்லாமல் தெரியும்படியாகவும் இல்லை.

இதைத்தவிர கட்சி செல்வாக்கால் கவர்னர் வேலை சட்டமெம்பர் வேலை ஹோம் மெம்பர் வேலை ஆகிய மீ 10000 ரூ. 5000 ரூ. சம்பளமுள்ள வேலைகள் பெற்றவர்கள் தாங்கள் ஆகாயத்தில் பறக்கிறோமா பூமியில் நடக்கிறோமா என்பது கூட உணரமுடியாத உச்ச நிலையில் இருக்கிறார்கள். மற்றபடி கட்சியின் பேரால் பதவி, பட்டம், பெரு உத்தியோகம் பெற்றவர் களிலும் 100-க்கு 90 பேர்கள் ஜஸ்டிஸ், விடுதலை ஆகிய பத்திரிகைகளுக்கு 1 மீ சந்தாவாவது செலுத்தி இருப்பார்களா? அல்லது படித்தாவது வருகிறார்களா? என்பதும் தைரியமாய்ச் சொல்ல முடியாததாய் இருக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே இப்படிப்பட்ட நிலைகள்தான் நமது கட்சியை இந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டது என்று சொல்லலாமே தவிர எதிரிகள் பலத்தாலோ, நமது கொள்கைகளின் மேன்மை இல்லை என்றோ, இன்று நாம் பழி கூறப்படுகின்றோம் என்றோ, தேர்தல்களில் வெற்றி பெறாமல் போகின்றோம் என்றோ சிறிதும் கூறமுடியாது.

இப்படிப்பட்ட தலைவர்களையும், கட்சி பிரமுகர்களையும், பிரதிநிதிகளையும் கொண்ட ஜனங்களும், சமூகமோ ஒரு வகுப்போ கஷ்டப்பட வேண்டியதுதான் என்பதில் எவருக்கும் ஆட்சேபணைபட செய்ய இட மில்லை என்பதோடு இப்படிப்பட்ட கட்சி ஒரு தடவை அழிந்து புனருத்தாரணம் ஆகவேண்டும் என்றுதான் சொல்லவேண்டுமே ஒழிய இதை ரிப்பேர் செய்ய முடியும் என்பது மிக கஷ்டமான காரியமாய் இருக்கிறது.

ஏனெனில் அசெம்பிளி எலக்ஷனில் எதிரிகளின் சூழ்ச்சிகளையும், அவர்கள் பணம் சம்பாதித்த முறைகளையும் பிரசாரத் தன்மைகளையும், நமக்குள்ளாகவே நடந்த மோசங்களையும் பத்திரிக்கைகளின் வேகங்களையும் விஷமங்களையும் நேரில் பார்த்தும் அதன் பயனாய் நமது பிரமுகர்கள் தோழர்கள் சர். ஷண்முகம், ஏ. ராமசாமி முதலியார், பி. வரத ராஜுலு நாயுடு முதலியவர்களே வெற்றிபெற முடியாமல் போனதையும் பார்த்த பிறகும் கூட நமக்கு சிறிதும் சொரணை ஏற்படாமலும், புதிதாக எவ்வித முயற்சியும் செய்யாமலும் இருந்தால் நம் தலைவர்களுக்கோ பிரமுகர்களுக்கோ, கட்சியின் பேரால் பலன்கள் அனுபவித்த, அனுபவித்துக் கொண்டிருக்கிற மக்களுக்கோ, கவலையோ உண்மையான முயற்சியோ இருப்பதாக எப்படி சொல்லக்கூடும்?

மீ 5000, 6000 செலவு செய்து நடத்தும் பத்திரிகையாகிய ஜஸ்டிஸ்க்கு சென்னை மாகாண 4½ கோடி மக்களில் ஒரு 1000 பேர்கள் கூட கவலையுடன் படிப்பவர்கள் இல்லை என்றால், எதிரிகள் கையில் 5, 6 தமிழ் தினசரி இருக்கும்போது நமக்கு ஒரு தமிழ் தினசரி கூட இல்லை என்றால், அதுவும் தமிழ்நாட்டு மக்கள் கெஞ்சி கெஞ்சி தீர்மானங்கள் ரூபமாகக் கேட்டும் மதிக்கப்படவில்லை என்றால், எப்படித்தான் இந்தத் தலைவர்கள் நிர்வாகத் திறமை உடையவர்கள் என்றோ உண்மையான கவலை உடையவர்கள் என்றோ சொல்லிக் கொள்ள முடியும் என்று கேட்கின்றோம்.

இவை எல்லாம் மிக சாதாரண காரணங்களாகும். இனி முக்கியமான காரணங்கள் எவ்வளவு உண்டு என்பது சென்னை தலைவர்களோ, மந்திரிமார்களோ, அவர்களது காரியதரிசிகளோ தங்களுக்குத் தாங்களே அறியாததல்ல.

பிரசாரத்தில் லட்சியமில்லாத தலைவர்களின் ஊக்கத்தின் நாணையத்தைப் பற்றி சந்தேகிக்காமல் இருக்க முடியுமா என்று கேட்கின்றோம்.



நாம் எந்தத் தனிப்பட்ட மனிதனுடைய பெருமையைப் பிரசாரம் செய்ய ஆசைப்படவில்லை. நம் கட்சிக்கொள்கை இன்னது, அது செய்தது இன்னது, செய்ய வேண்டியது இன்னது, நமது எதிரிகளின் யோக்கியதை சூழ்ச்சிகள் இன்னது, அவர்கள் செய்தது இன்னது, அவர்கள் செய்யப் போவது இன்னது என்பனவாகிய இந்தக் காரியங்களைப் பிரசாரம் செய்ய நமக்கு இஷ்டமில்லையானால், அல்லது நம்மால் செய்ய முடியவில்லை யானால் நமது கட்சி வேறு எதற்காக தான் உயிர் வாழவேண்டும்? அல்லது வேறு என்னதான் சாதித்துவிட முடியும்? என்பவைகளைப்பற்றி நம் போன்றவர்களுக்கு அதுவும் பார்ப்பனரல்லாதார் மக்களுக்காகவே உழைத்து பல கஷ்டம் நஷ்டம் ஆகியவைகளையே அடைந்து கொண்டும் இக் கட்சியின் பயனாய் சொந்தத்துக்கு ஒரு காதொடிந்த ஊசி பெறும்படியான பயனும் அடையாமல் தங்களது சொந்த செல்வாக்கையும் இழந்து வருபவர்களுக்கு உரிமை இல்லையா? என்று கேட்கின்றோம்.

ஆகையால் எதிரிகளின் சூழ்ச்சிகளிலிருந்தும், தொல்லைகளிலிருந்தும், நம் பாமர மக்களை விடுவித்து அவர்களை சுதந்திரமுடையவர்களாகவும், சுயமரியாதையுடையவர்களாகவும் ஆக்க வேண்டுமானால் இந்த மந்திரி களையும், ஆங்காங்கு உள்ள இப்போதிய தலைவர்களையும் நம்பிக்கொண்டு இருந்தால் வெற்றிபெற முடியுமா என்கின்ற சந்தேகம் நமக்கு நாளுக்கு நாள் பலப்பட்டு வருகிறது. இப்படித் தோன்றுவது ஒரு சமயம் நம்முடைய பலக்குறைவாய் இருந்தாலும் இருக்கலாம். என்றாலும் நமக்குத் தோன்றுகிற உண்மையை கூறுகிறோம் என்ற விஷயத்தில் யாரும் சிறிதும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கட்சியின் தலைவர் என்கிற முறையில் முதல் மந்திரி பொப்பிலி ராஜா அவர்கள் மீது குற்றமோ, குறையோ கூறுவதாக யாரும் கருதிவிட வேண்டியதில்லை.

ஏனெனில் அவரைப் பொறுத்தவரையிலும் தாராளமாக பணம் செலவு செய்கிறார்.

கட்சிக்குத் தலைவர் என்கின்ற முறையில் கட்சி நன்மைக்கு சட்டப்படி ஒருவர் எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்து வருகிறார் என்றும் சொல்லலாம்.

ஆனால் தமிழ் நாடு, கேரள நாடு, கர்நாடக நாடு ஆகியவற்றின் உண்மை நிலையை தெரிந்து கொள்ளவோ ஆங்காங்குள்ள யோக்கியர் யார், அயோக்கியர் யார் என்பதையும், கட்சிக்கொள்கைக்கு பாடுபடுபவர்கள் யார் தங்கள் சுயநலத்துக்காகப் பாடுபடுபவர்கள் யார் என்பதையும் அவரால் தெரிந்து கொள்ள முடியவில்லை என்பதோடு தெரிந்து கொள்ளத்தகுந்த சரியான சாதனமும் அவரிடம் ஏதும் இல்லை என்பதோடு, தமிழ் நாட்டில் ஆங்காங்குள்ள உண்மையான பிரமுகர்களை சரியானபடி அனுசரிக்க வில்லை என்பதும் நமது தாழ்மையான அபிப்பிராயமாகும்.



RangaRakes tamilnavarasam.com

தவிரவும், சர்க்கார் நம் கட்சி விஷயமாய் நடந்துகொண்ட சில சந்தர்ப்பங்களையும் சம்பவங்களையும் உத்தேசித்து கொஞ்சநாளைக்கு முன்பு பொப்பிலி ராஜா அவர்கள் ராஜிநாமா கொடுத்து இருக்கவேண்டும் என்பதும் நமது தாழ்மையான அபிப்பிராயம்.

இதைப்பற்றி ஏன் இவ்வளவு சொல்லுகிறோம் என்றால் இன்றைய நிலையில் பார்ப்பனரல்லாத சமூக மக்களுக்கு இப்படிப்பட்ட தாராள மனப்பாண்மையுடையவரும் தன்நலத்தையே பிரதானமாய்க் கருதாத வருமான தலைவர் கிடைப்பது அருமை என்கின்ற காரணத்தாலேயே அல்லாமல் மற்றொன்றும் அல்ல.

ஆதலால் இப்போதைய நிலைமையில் தோழர்கள் பாண்டியன், ராமசாமி ஆகியவர்களால் அனுப்பப்பட்ட சுற்று அறிக்கை விண்ணப்பமும் அதை ஆதரித்து சுமார் 100 தோழர்கள் எழுதிய கடிதங்களும், அவற்றில் காணும் பெரும்பான்மை யோசனைகளும் தமிழ் நாட்டின் சார்பாய் மனப்பூர்வமாக வரவேற்கிறோம் என்பதோடு அவற்றில் கண்டபடி இம் மாதத்திலேயே ஒரு கூட்டம் கூடி நிர்தாக்ஷண்யமாய் அவரவர்கள் அபிப்பி ராயங்களைக் கூசாது மனம் விட்டுப் பேசி ஏதாவதொரு முடிவுக்கு வந்து தக்கது செய்ய வேண்டியது மிகவும் அவசரமும், அவசியமுமான காரியமாகும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 02.02.1936**



# ரயில் பிரயாணமும் மோட்டார் பிரயாணமும்

மோட்டார் பஸ்கள் எங்கும் தாராளமாய் ஏற்பட்டுவிட்டதின் பயனாக ரயிலில் பிரயாணம் செய்யும் மக்களுடைய எண்ணிக்கை குறைந்து வருகிறது. இதனால் தென்னிந்திய ரயில்வேக் கம்பெனியாருக்கு வரும்படி நாளுக்கு நாள் குறைந்தும் போகிறது.

இதற்காக வேண்டி மோட்டார் பஸ் நடத்துகிறவர்களுக்கு எவ்வளவு தொல்லையும், நஷ்டமும் ஏற்படுத்தலாமோ, அவ்வளவு தொல்லையும், நஷ்டமும் பலவித தந்திரங்களினாலும் யார் யாரோ செய்து பார்த்தும் மோட்டார் பஸ் பெருக்கத்தை தடைப்படுத்த முடியவில்லை.

பஸ்காரர் போலீஸ் இலாக்காவினால் அடையும் தொல்லைகளை அளவிடவே முடியாது. ஜில்லா போர்டார் தொல்லையோ சொல்ல வேண்டியதில்லை. சர்க்கார் சட்டப்படி ஜில்லா போர்டுக்கும், கவர்ன்மெண்டுக்கும் செலுத்தும் வரிக்கு சமமான அளவு போலீஸ் அதிகாரிகளுக்கும், பிரசிடெண்டுகளுக்கும், கான்ஸ்டேபிள்களுக்கும் பலவழிகளிலும் செலுத்த வேண்டியிருக்கிறது.

இது தவிர போலீஸ் அதிகாரிகளையும், கான்ஸ்டேபிள்களையும் இவர்களது சொந்தக்காரர்களையும் வாடகை இல்லாமல் பிரயாணம் செய்ய அனுமதிக்க வேண்டியிருக்கிறது. இவ்வளவு கஷ்ட நஷ்டம் அனுபவித்தாலும் கூட சில சமயங்களில் அடிக்கடி போலீசாரால் சார்ஜ் செய்யப்பட்டு அபராதம் வகையரா தண்டனை அடையவேண்டி இருக்கிறது.

இந்தமாதிரி தொல்லைகள் எதுவும் ரயில்வே கம்பெனியாருக்குக் கிடையாது. இப்படி எல்லாம் இருந்தும் மோட்டார் பஸ்சில் பிரயாணம் செய்கின்ற ஜனங்கள் அதிகமாகிக்கொண்டும் ரயிலில் பிரயாணம் செய்கின்ற பிரயாணிகள் குறைந்துகொண்டும் வருவது மிகுதியும் கவனிக்கத்தக்கதாகும்.

ரயில் பிரயாணத்தில் மக்களுக்கு இருக்கும் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய முயற்சிக்காமல் கம்பெனியார் வெறும் பிரசாரகர்களை நியமித்து விடுவதாலேயே பிரயாணிகள் அதிகப்பட்டு விடுவார்கள் என்று எதிர்பார்ப்பது வீண் கனவாகத்தான் முடியும்.



RangaRakes tamilnavarasam.com

ரயிலில் ஒரு கம்பார்ட்மெண்டில் ஏற்றும் பிரயாணிகளுக்குக் கணக்குக் கிடையாது. ரயில்வே சட்ட புத்தகத்தில் ஒரு அறைக்கு 8 பேருக்கு மேல் ஏற்றக்கூடாது என்று கணக்கு இருந்தாலும், இத்தனை பிரயாணிகள் ஏறலாம் என்று பலகையில் எழுதி இருந்தாலும், 16 பேர் ஏற்றப்படுவதையோ, ஏறுவதையோ தடுப்பதற்கு எவ்வித சாதனமும் கிடையாது. எந்த ரயில்வே அதிகாரியும் அதைக் கவனிப்பதும் கிடையாது.

ரயிலில் பிரயாணிகள் ஒருவருக்கொருவர் செய்யும் இடைஞ்சலைப் பற்றிக் கேட்பதற்கும் திக்கில்லை. போக்கிரியாகவோ, சுயநலக்காரனாகவோ இருக்கும் ஒருவன் எவ்வளவு இடம் அபகரித்துக் கொண்டாலும், மற்றவர்களுக்கு எவ்வளவு அசௌகரியம் செய்தாலும் பரிகாரத்துக்கு மார்க்கமே கிடைப்பதில்லை.

வண்டியில் சுருட்டுக் குடிப்பது, வண்டிகளை அசிங்கம் செய்வது, கலகம் செய்துகொண்டு அடிதடி நிகழ்வது, துர்ப்பாஷைப் பிரயோகம் செய்வது முதலிய காரியங்கள் வெகு சகஜமாக நடைபெற்று வருகின்றன.

பிரயாணிகள் பாலங்களின் மேல் ஏறி இறங்கவேண்டி இருக்கிறது.

போர்ட்டர்களுடைய தொல்லைகளோ சகிக்க முடியாததாகும். வண்டிகளில் பிச்சைக்காரர்களுடைய தொல்லையும், சாமான் விற்பவர்கள் தொல்லையும் சகிக்கக்கூடியதென்று சொல்லிவிட முடியாது.

இந்த லக்ஷணத்தில் கொஞ்சம் ஏமாந்தால் மூட்டைகள் திருட்டுப் போய் விடுகின்றன.

ரயில்வே சிப்பந்திகள், டிராவலிங் டிக்கெட் கலக்டர்கள் மக்களை வெகு இழிவாய்க் கருதி ஆடு மாடுகள் போல் நடத்துவதைச் சிறிது சுயமரியாதை உள்ளவர்களும் சகிக்கக்கூடியதல்ல.

**சார்ஜ் சத்தம்**

இந்தப் பிரகாரமாக மக்கள் நடத்தப்படுவது ஒருபுறமிருக்க, இனி ரயில் பிரயாணத்தால் மக்களுக்கு ஏற்படும் நஷ்டத்தைக் கவனிப்போம்.

ரயில் பிரயாணத்தில் சார்ஜ்ஜு சத்தம் பஸ் சத்தத்திற்கு ஒன்றுக்கு ஒன்றரையாக இருக்கிறது. உதாரணமாக ஈரோட்டிற்கும் கோயமுத்தூருக்கும் 60 மைல் இருக்கின்றன. ஒருவன் மெயில் வண்டியில் பிரயாணம் செய்ய வேண்டுமானால் ரூ.1-5-6 அணா சார்ஜ் கொடுத்து டிக்கட்டு வாங்க வேண்டும். ஈரோட்டிலிருந்து ரயில்வே ஸ்டேஷனுக்குப்போக இரண்டணாவாவது கொடுக்க வேண்டும். இறங்கும் ஊராகிய கோயமுத்தூர் ஸ்டேஷனிலிருந்து வீட்டுக்குப் போக 3 அணா அல்லது 2 அணாவாவது கொடுக்க வேண்டும். இரண்டிடத்திலும் பாசஞ்சர் வண்டிகளானால் போத்தனூர் உள்பட மூன்று இடத்திலும் போட்டருக்குப் பணம் கொடுக்க வேண்டும். மூட்டைகளைத் தொட்டு பார்த்து எக்சஸ் செய்வதாக மிரட்டும் சிப்பந்திகளுக்கு ஏதாவது தொலைக்க வேண்டும். ஊருக்கும் ரயில்வே ஸ்டேஷன்களுக்கும் 1 மைல் சில இடங்களில் 2 மைலுக்கு மேலும் உண்டு.

இந்தத் தொல்லைகள் மோட்டார் பஸ்ஸில் செல்லும் பிரயாணிகளுக்கு இருக்க நியாயமில்லை.

ஈரோட்டிலிருந்து கோயமுத்தூருக்குப் பஸ் சார்ஜ் 12 அணாத்தான். போட்டர் தொல்லை அடியோடு இல்லை. வீட்டுக்குப் போக வண்டித் தொல்லையும் இல்லை. இருந்தாலும் பகுதிச் செலவுடன் முடிந்து விடுகின்றது. சிப்பந்திகள் தொல்லையும், புக்கிங் ஆபீசில் நெருக்கமடையும் தொல்லையும், அவசரத்தில் சில்லறை நழுவும் தொல்லையும், புக்கிங் ஆபீசர் சில்லறை கொடுக்க நேரம் செய்தால் வண்டி போய் விடுமே என்று பயந்து பாக்கிக் காசுகளை விட்டுவிட்டு ஓடும் தொல்லையும் அடியோடு கிடையவே கிடையாது.

ஆகவே செலவில் சரிபகுதி மீதி ஆகின்றதா இல்லையா? என்பதோடு எவ்வளவு கஷ்டங்கள் மீதியாகின்றன என்பதை யோசித்துப் பாருங்கள்.

**பிரிவினைகள்**

இவை தவிர மற்றும் ரயிலில் பிரயாணம் செய்வதால் ஏற்படும் அதிகச் செலவைக் கவனித்துப் பாருங்கள்.

ஊருக்குள் நல்ல காப்பி ஒரு டம்ளர் ஒரு அணா என்றால், ரயில்வே பிளாட்பாரத்தில் கழிநீர் தண்ணீர் போன்ற காப்பி 0-1-3 அணா. அதுவும் முக்கால் டம்ளர். இட்லி பெரிய இட்லி ஊருக்குள் 0-0-3 பை என்றால் ரயிலில் சின்ன இட்லி அதில் பகுதியில் பாதி 0-0-3 பை. இன்னும் வெற்றிலை பாக்கு புகையிலை முதலியவை ஊர் விலைக்கு மூன்று பங்கு அதிகமாகிறது. பழ வர்க்கங்கள், பதார்த்தங்கள் ஊருக்குள் விற்காத மோசமானவைகளை ஒன்றுக்கு இரண்டாக மூன்றாக விலை சொல்லி விற்கிறார்கள்.

குழந்தைகள் வண்டியில் இருப்பதைப் பார்த்தால் விளையாட்டு சாமான் விற்கிறவன் அங்கேயே இருந்து கூப்பாடுபோட்டு வாங்கச் செய்துவிடுகிறான். விலையோ பி.ஆர். அன் சன்ஸ் கம்பனி விலையை மிக மிக சரசமாக்கி விடுகின்றது. இவற்றையெல்லாம் விற்கிறவர்கள் இந்த லாபங்களை அடைகிறார்களா என்று பார்த்தால் இல்லவே இல்லை. எல்லா லாபமும் ரயில்வே கம்பனிக்கே போய் சேர்ந்து விடுகின்றது. மீதி இருந்தால் ரயில்வே சிப்பந்திகளுக்கே போய் சேர்ந்து விடுகின்றது.

எப்படி என்றால் ஒவ்வொன்றையும் கண்றாக்டில் விட்டுவிடுகிறார்கள். மீ 300 ரூ. 400 ரூ. வாடகை வாங்கிவிடுகிறார்கள். மீக்கு தட்டத்துக்கு



RangaRakes tamilnavarasam.com

இவ்வளவு ரூபாய் என்று வாங்கிவிடுகிறார்கள். சிப்பந்திகளும் இந்த கண்ட்றாக்டர்களை பிய்த்து பிடுங்கி சாப்பிட்டு விடுகிறார்கள். இவை யெல்லாம் பிரயாணிகள் தலையில் டிக்கட் பணம் தவிர அதிகச் செலவாக ஏற்பட்டு விடுகின்றது.

இந்த லக்ஷணத்தில் மக்களை நடத்துவதும் வெகு இழிவாகவே நடத்துகிறார்கள்.

அதென்னவென்றால் ரயில்வேக்களில் உள்ள ஓட்டல்களில் பிராமணர்களுக்கு வேறு ஒரு தனி இடம், பஞ்சமர்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், இந்து பார்ப்பனரல்லாதார்கள் என்பவர்கள் எல்லோருக்கும் ஒரே ஒரு தனி இடமுமாக இரண்டு பிரிவாக பிரித்திருக்கிறார்கள். ரயில்வே ஸ்டேஷன்களில் பார்ப்பனர்கள் இறங்கினால், அவர்கள் எவ்வளவு கேவலமானவர்களாக இருந்தாலும் எல்லோரும் சமையலறைக்குள் சென்று நன்றாக புதிதாகச் சூடுடன் உடனே சாப்பிட்டு விட்டு சீக்கிரம் வண்டிக்கு வந்துவிடுகிறார்கள்.

பார்ப்பனரல்லாதார் நிலைமையோ எவ்வளவு மேன்மையாக இருந்தாலும் அவன் வெளி மண்டபத்தில் பலகாரத் தட்டத்துக்கு எதிரில் கூட்டமாக நின்றுகொண்டு சாமி! சாமி!! என்று காட்டுமிராண்டி ஜனங்கள் திருவிழாக் காலங்களில் கோவிலில் விபூதிக்கு அலைவதுபோல், ஆளுக்காள் நெருக்கிக்கொண்டு அவதிப்பட்டு ஆறிப்போன கழிபட்ட பதார்த்தங்களை அரைகுறையாய் வாங்கி அவசர அவசரமாய்த் தின்றது பாதி தின்னாதது பாதியுமாய் விட்டுவிட்டு ஓட வேண்டியதாய் இருக்கிறது. ரயில்வே ஓட்டல்களில் சாப்பாடு போடுவதும் நீட்டிக்கொண்டே இருந்து விட்டு வண்டி புறப்படும் சமயம் இலை போடுவதும் சாப்பிட வரும் ஆட்கள் அவதி அவதியாய் அரை வயிறு கூட நிறைய சாப்பிட முடியாமல் பணம் கொடுத்து விட்டு ஓடுவதுமாய் இருக்கிறது. ஊருக்குள் 3 அணா ஆனால் ரயிலில் 4 அணா வீதம் கொடுக்கவேண்டி இருக்கிறது.

இதைப்பற்றி ரயில்வே அதிகாரிகளுக்கு எவ்வளவு எடுத்துச் சொல்லியும் சிறிதும் செவி சாய்க்கவே இல்லை.

ரயில்வே கம்பனியாருக்கு ஒரு அகம்பாவம் இருந்துவருகிறது.

அதென்னவெனில் நம்மைத் தவிர இவர்களுக்கு (பிரயாணிகளுக்கு) வேறு கதி என்ன? என்கின்ற ஆணவம் ஒன்று.

பத்திரிக்கைக்காரர்களுக்கு விளம்பரம் கொடுப்பது என்கின்ற எலும்புகளைப் போட்டுவிட்டால், அதன் பேரால் அவர்களுக்கு கப்பம் கட்டிவிட்டால் நாம் எப்படி நடந்தாலும் வெளிக்கு வராது என்கின்ற தைரியம் இரண்டு.



மற்றும் அரசாங்கம் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது. இரண்டும் ஒரே ஜாதி என்பது மாத்திரமல்லாமல் பார்லிமெண்டு மெம்பர்கள் முதல் ரயில்வே கம்பெனிக்கு பங்குக்காரர்கள் தானே என்கின்ற சலுகை முதலிய காரியங்களோடு ஒரு தனிப்பட்ட பிரயாணி தனது கஷ்டத்துக்கு எப்படி சமாதானம் தேடிக் கொள்ள முடியும் என்கின்ற கவலையற்ற தன்மை, ஆகியவைகள் சேர்ந்து ரயில்வே கம்பெனியாரை இக்கஷ்டங்களைக் கவனிக்கச் செய்யாமல் செய்து வருகிறது.

மற்றொரு நாடகம் என்னவென்றால் ரயில்வே பிரயாணிகள் சங்கம் என்று ஒரு போலிச் சங்கம்; அதற்கொரு தலைவர்; அவருக்கொரு கவுரவ உத்தியோகம்; அவர்கள் சொந்தக்காரர்களுக்கு ரயிலில் சம்பள உத்தியோகம்; வேறுபல சலுகை. இவை எல்லாம் சேர்ந்து கம்பெனியாருக்கு ஒரு நற்சாட்சிப் பத்திரம்.

இவ்வளவையும் சகித்துக்கொண்டு ரயில் பிரயாணம் செய்து ரயிலுக்கு பணம் கொடுப்பவர்கள் பார்ப்பனரல்லாதார். ஆனால் ரயிலில் 50, 100, 200 ரூ. சம்பளமுள்ள பெரிய உத்தியோகங்கள் கொடுப்பது 100க்கு 99 பார்ப்பனர்களுக்கே. 20ரூ. 30ரூ. உத்தியோகங்கள் கூட எல்லோரையும் விட 100-க்கு 90 பார்ப்பனர்களுக்குத்தான் கொடுக்கப்படுகின்றன.

எனவே இப்படி எல்லாம் ஆகிவிட்டால் ரயில்வே பிரயாணத்தில் மக்களுக்கு எவ்வளவு ஆசையும் சவுக்கியமும் இருக்க முடியும்? என்று யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. மற்றும் வெளியில் எடுத்துச் சொல்லுவதற்கு சட்டம் இடம் கொடுக்க முடியாத அனேக விஷயங்கள் உண்டு என்பதோடு அப்படிப்பட்ட அனேக காரியங்கள் இன்று பிரத்தியட்ச அனுபவத்தில் நடந்தும் வருவதை ரயில்வேகாரர்களே மறுக்க முடியாது.

ஆதலால் பொதுமக்களின் நல்ல காலமாக பஸ் ஒன்று ஏற்பட்டு மக்களுக்கு ரயில் பிரயாணத்தில் இருந்துவரும் கஷ்டமும், நஷ்டமும், தொல்லையும், இழிவும் ஒரு அளவுக்காவது ஒழியத்தக்க சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும் காலத்தில் மறுபடியும் பொது மக்களை ஏமாற்றவும், தொல்லைப்படுத்தவும், ரயில்வே பிரயாண பிரசாரம் என்பதாக சில உத்தியோகங்களை ஏற்படுத்தி அவ்வுத்தியோகங்களை பார்ப்பனர்களுக்கே கொடுத்து ரயிலுக்கு ஆள்பிடிப்பது ஒரு வேடிக்கை என்றே சொல்லுவோம்.

ரயில் வண்டியில் மக்கள் பிரயாணம் செய்யவேண்டுமானால் மேல்கண்ட நஷ்டமும், தொல்லையும், இழிவும் மக்களுக்கு இல்லாமல் இருக்கும்படி செய்தால்தான் முடியுமே ஒழிய, மற்றபடி இந்த மந்திரத்தில் மாங்காய் விழாது என்று ரயில்வே கம்பெனியாருக்கு யோசனை கூறுகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

மற்றும் ரயில்வே கம்பெனியார்கள் தாங்கள் லாபம் சம்பாதிக்க வேண்டி புராண ஆபாசக் கதைகளை விளம்பரம் செய்து உற்சவம் முதலியவைகளைப்பற்றியும், மூர்த்தி, தலம், தீர்த்தம், மோக்ஷம், புண்ணியம், சிரார்த்தம், தர்ப்பணம் முதலியவைகளைப் பற்றியும் விளம்பரம் செய்து மக்களை மூட நம்பிக்கை உடையவர்களாகவும், முட்டாள்களாகவும் செய்து, அவர்களது பணத்தையும், நேரத்தையும் பாழாக்கும் விஷயங்களைப் பற்றி புள்ளி விவரங்களோடு மற்றொரு சமயம் எழுதுவோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 02.02.1936**



# காரைக்குடி பிரதிநிதிகளை ராஜகோபாலாச்சாரியார் ஏமாற்றினாராம்

காரைக்குடி மகாநாட்டுக்கு வழக்கத்துக்கு மாறாக சில பிரதிநிதிகள் அதிகமாகவே வந்தார்களாம். காரணம் என்னவென்றால் சத்தியமூர்த்தியார் சகாப்தத்தை ஒருவிதத்தில் ஒழித்துவிட வேண்டும் என்கின்ற உணர்ச்சி, காங்கிரசிலுள்ள சில சுயமரியாதை உணர்ச்சி உள்ள வாலிபர்களுக்கும், பார்ப்பனரல்லாதார் சூடு ரத்த ஓட்டமுள்ள சில வாலிபர்களுக்கும் இருந்த ஆசையேயாகும். அதனாலேயே அவர்கள் தோழர்கள் முத்துரங்கமவர் களையாவது அவினாசிலிங்கமவர்களையாவது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவராக ஆக்கிவிடலாம் என்கின்ற ஆசைமீது வந்தார்கள்.

இந்த ஜபம் ராஜகோபாலாச்சாரி அல்லது ராஜாஜி என்பவரிடம் நடக்குமா? முத்துரங்க முதலியார் தலைவராய் வந்துவிட்டால் அந்த தலைமை ஸ்தானம் (His Master Voice) ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ் மாதிரி, சீனிவாசய்யங்கார் வாய்ஸாக மாறிவிடும். அப்புறம் அது ராஜகோபாலாச் சாரியாரைப் பூதக் கண்ணாடி வைத்துத் தேட வேண்டிய நிலைக்குக் கொண்டு வந்து விட்டு விடும்.

அவினாசிலிங்கனார் தலைவரானால் அவர் தோழர் டி.ஏ. ராமலிங்கம் செட்டியாருக்குத் தம்பியானதால் ஏதாவது பல்டி அடிக்க வேண்டி வந்தாலும் வந்து விடும். அதனாலே தான் உட்காரு என்றால் படுக்கிறமாதிரியான ஆட்களைப் பிடித்து தலைவர் ஸ்தானத்துக்கு வைத்து மந்திரி நியமனம் செய்யும் யோக்கியதை (வரப்போவதில்லை) வரும்போது, தான் முந்திரிக் கொட்டையாக இருந்து வேலை செய்யலாம் என்கின்ற யோசனை வந்து காரைக்குடிக்கு வந்து ஓட்டர்களை ஏமாற்றினார். என்ன சொல்லி ஏமாற்றினார் என்றால் ஓட்டர்களை **காந்தி வேண்டுமா? முத்துரங்க முதலியார் வேண்டுமா?** என்று கேட்டு ஏமாற்றினார். சத்தியமூர்த்தியையே தலைவராக்கும்படி காந்தியார் எழுதியிருப்பதாயும், சத்தியமூர்த்தியைத் தலைவராக்கா விட்டால் காந்தியார் விலகி விடுவார் என்றும், அப்புறம் காங்கிரசுக்கு மந்திரி பதவி வருவது குதிரைக் கொம்பு என்றும் சொன்னாராம்.

இந்த டோஸானது அனேக வாலிபர்கள் - அதாவது மந்திரிகளுக்கு வாலாக இருக்கக்கூடிய பாக்கியம் கிடைக்க வேண்டும் என்று காத்திருந் தவர்களுக்கு மயக்க மருந்தாய்ப் போய் விட்டதாம். ஆகவே ஆச்சாரியார் வெற்றி பெற்றார்.



RangaRakes tamilnavarasam.com

ஆச்சாரியார் கைவசம் இருக்கும் காந்தி டோஸானது இன்று சர்வரோக நிவாரணமாகிய மின்சார ரசம், அமிர்தாஞ்சனம் ஆகிய சஞ்சீவிகள் போல் விளங்குகிறது.

உண்மையிலேயே ''சர்வ வல்லமை'' உள்ள சக்கரவர்த்திகளே ஒழிந்து வருகிறார்கள் என்றால், கேவலம் இந்த பொக்கி டோசுக்குத்தானா ஒரு காலம் வருவது கஷ்டமாகிவிடும்? ஜனங்களுக்குப் புத்தி வந்தால் இவையெல்லாம் மாயமாய்ப் பறந்து விடும்.

**குடி அரசு - தலையங்கம் - 09.02.1936**



# அரசாங்கத்தை காங்கிரசுக்காரர்கள் ஏமாற்றி விட்டார்களாம்

அரசாங்கத்தார் காங்கிரசுக்காரர்கள் திலகர் நிதி விஷயமாகவும், பீகார் பூகம்ப நிதி விஷயமாகவும் நடந்து கொண்ட நாணயத்தைப்பற்றி ரகசிய விசாரணை செய்து சம்பாதித்து வைத்து இருக்கும் புள்ளி விவரங்களை அசம்பிளி கூட்டத்தில் ஏதாவது சந்தர்ப்பம் பார்த்து காங்கிரஸ்காரர்கள் பேச்சுக்கு பதில் சொல்லு முறையில் வெளியாக்கி விடுவதாக ஏற்பாடு செய்து வைத்து இருந்தார்கள். இதைக்கண்டு நடுங்கிப்போய் ''காங்கிரஸ் காரர்களாகிய நாங்கள் உங்களுக்கு அந்த மாதிரி சந்தர்ப்பம் கொடுத்தால் தானே அரசாங்கத்தாராகிய நீங்கள் எங்கள் வண்டவாளங்களை வெளியிடுவீர்கள்'' என்று சொல்லி அரசாங்கம் கோபித்து பதில் சொல்லும் படியான சந்தர்ப்பமே இல்லாமல் செய்துவிட்டால் என்ன செய்வீர்கள் என்று சொல்லி அந்தப்படி தாங்கள் கொண்டுவர இருந்த தீர்மானங்களையும், பேச இருந்த பேச்சுக்களையும் நிறுத்திக்கொண்டு அரசாங்கத்தை ஏமாற்றி விட்டார்கள்.

இதற்குப் பெயர் தான், நிலைமையை சமாளித்துக் கொள்ளப்பட்டதாம். காங்கிரசின் நாணயமும் அரசாங்கத்தின் நாணயமும் எப்படி இருந்த போதிலும் திலகர் சுயராஜ்ஜிய நிதி மோசடியும், பீகார் பூகம்ப நிதி வண்டவாளமும் மறைபட்டுப் போய்விட்டதாக யாரும் கருதிவிட முடியாது.

காங்கிரஸ்காரர்கள் நாணயத்தையும், அவர்களது யோக்கியதையையும், பொறுப்பற்ற தன்மையும் 10, 15 வருஷ காலமாக சர்க்கார் அறிந்திருந்தும் பொது ஜனங்களிடமிருந்து காங்கிரஸ்காரர்கள் பணம் வசூலிக்க அனுமதித்து வந்ததானது அரசாங்கத்தாரின் மீது சுமத்தித் தீர வேண்டிய குற்றமாகும்.

திலகர் நிதி மோசத்துக்கு காங்கிரஸ்காரர்கள் தண்டிக்கப்படும்படியான ஒரு நீதியான ஆட்சி இருக்குமானால், அந்த ஆட்சியில் முதலில் இதை அனுமதித்துக் கொண்டு இருந்த அரசியல் நிர்வாகஸ்தர்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்களாவார்கள்.

கடவுள், மோட்சம் என்பவற்றின் பேரால் பார்ப்பனர்களும், தாசர்களும், ஆண்டிகளும் மூடமக்களை மோசம் செய்து கொள்ளை அடித்து எப்படி



RangaRakes
tamilnavarasam.com

ஒழுக்க ஈனமாக வாழ்ந்து வருகிறார்களோ அது போலவே காங்கிரஸ், தேசம், சுயராஜ்ஜியம் என்பவற்றின் பேரால் தேசாபிமானி, தேச பக்தர்கள், தேசீயவாதி என்ற பெயர்களை வைத்துக்கொண்டு பார்ப்பனர்களும், சூழ்ச்சிக்காரர்களும், காலிகளும் பொதுஜனங்களை ஏமாற்றி பணம் வசூலித்து நாட்டைப் பாழாக்குகிறார்கள்.

குடி அரசு - **துணைத் தலையங்கம்** - 09.02.1936



# தியாகராய நகரில் சு.ம. பொதுக் கூட்டம்

# ஜஸ்டிஸ் கட்சியும் சு.ம. இயக்கமும்

**அடிப்படையான கொள்கையில் இரண்டும் ஒன்று**

**எனவே சுயமரியாதைக்காரர் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கவேண்டும்**

**சுயநலக்காரர்களுக்கு இனி ஜஸ்டிஸ் கட்சியில் இடமில்லை**

தலைவரவர்களே! தோழர்களே!!

எங்கள் அறிக்கையைப்பற்றிப் பார்ப்பனப் பத்திரிகைகள் தங்களுக்கு அனுகூலமாக விஷமப் பிரசாரம் செய்து வருகிறபடியால் அதைப்பற்றி சில வார்த்தைகள் பேச வேண்டுமென்று தலைவர் கட்டளையிட்டதால் எனது காயலாவையும் கவனிக்காமல் ஆஸ்பத்திரியில் இருந்து அனுமதி பெற்று வந்து நான் பேசவேண்டியதாயிற்று.

எங்கள் அறிக்கையில் ஜஸ்டிஸ் கட்சியை குறைகூறியோ அல்லது வேறு கட்சி ஆரம்பிக்க வேண்டுமென்றோ ஒரு வார்த்தையாவது இருக்கிறதா?

### அறிக்கையின் கருத்து

அவ்வறிக்கையின் உத்தேசமெல்லாம் கட்சியின் பெயரைச் சொல்லிக் கொண்டு முன்னுக்கு வந்தவர்களும், கட்சியின் பிரதான புருஷர்களாய் இருக்கின்றவர்களும் கட்சியினால் மீ 1000, 10000 வீதம் சம்பளமுள்ள பதவி பெற்றவர்களும், பெற்றுக் கொண்டிருக்கிறவர்களும் தங்கள் சுயநலத்தையே பிரதானமாகக் கருதிக்கொண்டு கட்சியை மோசம் செய்துவிட்டார்கள் என்றும், சிலர் கவலையில்லாமல் இருந்து வருகிறார்கள் என்றும் நாங்கள் கருதி அக்கட்சியை மெத்த செல்வாக்கும், மேன்மையும் உள்ளதாக ஆக்கி, அதனால் பார்ப்பனரல்லாத மக்களுக்கு இன்னும் அதிகமான நன்மை ஏற்படும்படி செய்யவேண்டும் என்பதேயாகும்.

### சுயமரியாதையும் ஜஸ்டிஸூம்

சுயமரியாதைக்காரர்கள் என்கின்ற முறையில் எங்களுக்கு ஜஸ்டிஸ் கட்சியினிடம் இருக்கும் கவலையும், பற்றுதலும், தாழ்த்தப்பட்ட மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் என்பவர்கள் விஷயத்தில் கவலையுள்ளதும்



RangaRakes tamilnavarasam.com

முற்போக்கேற்படுத்தக்கூடியதுமான கொள்கைகளைக் கொண்டு இருப்பதி னாலும் அதற்கு ஆக அக்கட்சி வேலை செய்து இருப்பதும் செய்து வருவதுமாய் இருப்பதால் தானே ஒழிய மற்றபடி எங்கள் சுயநலத்தை உத்தேசித்தல்ல.

ஜஸ்டிஸ் கட்சியில் எங்களுக்கு (சுயமரியாதைக்காரருக்கு) ஏற்ற கொள்கை இல்லை என்று இருந்தால் நாங்கள் அதைக் கட்டிக் கொண்டு அழ வேண்டிய அவசியமில்லை. அக்கட்சியால் நாங்கள் சொந்தத்திலோ சுயமரியாதைக்கட்சி மொத்தத்திலோ ஒன்றும் வழித்துக் கொட்டிக்கொள்ளவில்லை.

## ஜஸ்டிஸ் கட்சியில் பட்ட துன்பம்

ஜஸ்டிஸ் கட்சியில் பட்ட துன்பம் கொஞ்சமல்ல; இந்த மாகாணத்திலேயே எனக்கு மாத்திரம் தான் சி.ஐ.டி. தொல்லை, கடிதங்கள் உடைத்துப் பார்ப்பது, பத்திரிகையை ஒழிக்க நினைத்து அடிக்கடி ஜாமீன் கேட்பது முதலிய காரியங்கள் நடக்கின்றன. ஆனால் இவைகள் அக்கட்சியைக் குறை கூறக் கூடிய காரணங்களாகாது. அக்கட்சித் தலைவர்கள் பிரமுகர்கள் ஆகியவர் களின் கையாலாகாததனமாகும். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை.

## ஜஸ்டிஸ் கொள்கை

எதுவரையில் அக்கட்சி ஜாதிபேதங்களை ஒழிப்பதும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்குவதும் ஆகிய இரண்டு கொள்கையையும் முக்கியமாய்க் கொண்டிருக்கிறதோ அதுவரை அக்கட்சியை நாம் ஆதரித்துத்தான் தீர வேண்டும். அவர்கள் நம்மை எவ்வளவு கேவலமாகவோ அலட்சியமாகவோ கருதினாலும் நமக்கு கவலை இல்லை.

## நாஸ்திகம் பொது உடமை

அக்கட்சியில் சிலர், ஏன்? சில முக்கியஸ்தர்களே, சுயமரியாதைக் கட்சி நாஸ்திகக் கட்சி என்றும், பொது உடமைக் கட்சி என்றும் சொல்லு கிறார்களாம். அதனாலேயே நம்முடன்கூட சாவகாசம் வைத்துக்கொள்ளக் கூடாது என்கிறார்களாம். அதைப்பற்றியும் நமக்கு கவலை இல்லை. அப்படிப்பட்டவர்கள் வீட்டில் நாங்களும் பெண் கட்டவோ கொடுக்கவோ செய்து சம்மந்தம் வைத்துக்கொள்ள ஆசைப்படவில்லை.

அன்றியும் சுயமரியாதை இயக்கம் நாஸ்திக இயக்கமா பொது உடமை இயக்கமா என்பதுபற்றியும் விவகாரம் செய்ய முன்வரவில்லை. அது எப்படியோ போகட்டும் அதன் பலாபலனை நாங்கள் அடைந்து கொள்ளு கிறோம். அதற்கு ஆக ஜஸ்டிஸ் தலைவர்களின் சிபார்சு கோரவில்லை.

## ஆனால்

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களை நான் ஒன்று கேட்கின்றேன். அதாவது ஜஸ்டிஸ் கட்சி நாஸ்திகமும், பொதுஉடமையும் கொண்ட கொள்கை உடையது தானா அல்லவா என்பதேயாகும். எப்படி எனில் ஜாதிகளை ஒழிப்பது நாஸ்திகமா அல்லவா?



ஜாதிகள் ''கடவுளா''ல் உண்டாக்கப்படாமல் எப்படி உண்டாயிற்று என்று எந்த ஆஸ்திகர்களாவது ஆதாரத்துடன் பதில் சொல்லட்டும். கீதை, ராமாயணம், மனுதர்ம சாஸ்திரம், பராசரஸ்மிருதி, வேதம் ஆகியவைகளை நெருப்பில் பொசுக்கத் துணிவது தான் ஜாதியை ஒழிப்புநெருப்பில் பொசுக்கா விட்டாலும் குப்பைத்தொட்டியிலாவது போடத் துணிந்தவன் தான் ஜாதியை ஒழிக்க முன் வர முடியும். ஆகவே ஜாதியை ஒழிப்பவர்கள் தங்களை அறியாமலே நாஸ்திகர்களாக இருக்கிறார்கள். கடவுள் பக்தி விஷயத்திலும் ஜஸ்டிஸ் தலைவர்கள் யோக்கியதை எனக்கு நன்றாய் தெரியும். ஆதலால் அவர்களை இல்லாவிட்டாலும் அவர்களது கொள்கைகளை நாஸ்திகக் கொள்கை என்று தான் கருதி இருக்கிறேன்.

பொதுஉடமை விஷயத்திலும் ஜஸ்டிஸ்காரர்கள் பொதுஉடமைக் கொள்கைக்காரர்களே. எப்படி எனில் அரசியல் விஷயமான சகல பிரதிநிதித் துவமும் பணம் வரும்படியுள்ள சகல உத்தியோகமும் சகல வகுப்புக்கும் சரிசமமாகப் பங்கிட்டுக்கொடுக்க வேண்டுமென்கிறார்கள்.

பணத்தைப் பங்கிட்டுக் கொடுத்தால் என்ன? பண வரும்படியுள்ள உத்தியோகங்களை பங்கிட்டுக் கொடுத்தால் என்ன? தனித் தனி மனிதனுக்குக் கொடுக்கும் பிரிவினையின் தன்மையும், தனித் தனி வகுப்புக்கு கொடுக்கும் பிரிவினையின் தன்மையும் கொள்கையில் ஒன்றுதான்.

ஆதலால் சுயமரியாதைக்காரர்களிடம் இருப்பதாய்ச் சொல்லும் குணங்கள் ஜஸ்டிஸ்காரரிடமும் இருந்து வருகிறது என்றுதான் கருதுகிறேன்.

சுயமரியாதைக்காரர்களும் சர்க்காரை எதிர்க்கவோ, சட்டம் மீறவோ, பலாத்காரம் செய்யவோ இன்றுவரை அவர்கள் தீர்மானித்திருக்கவில்லை. அதுபோல் தான் ஜஸ்டிஸ்காரர்களும்.

ஆதலால் சு.ம. காரர்கள் ஜஸ்டிஸ்காரருடன் அனுதாபம் காட்டுவதோ ஜஸ்டிஸ்காரர் சு.ம. காரரின் ஒத்துழைப்பைப் பெறுவதோ எவ்விதத்திலும் தப்பில்லை.

## சு.ம. கொள்கை

ஆதலால் சு.ம. காரர்களுடைய லட்சியமும் கொள்கையும் எவ்வளவு உன்னதமாய் இருந்தாலும் சரி, இந்தியாவைப் பொறுத்தவரை சிறப்பாகத் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை ஜாதி பேதத்தை ஒழித்து பார்ப்பனீயத்தை அடியோடு அழிக்காவிடில் உண்மையான சுயமரியாதைக்கு சிறிதுகூட இடமில்லை.

இந்தியாவில் அனேக சீர்திருத்தங்கள் செய்தாய்விட்டது. அநேக தீவிரவாதிகள் பிறந்து பிறந்து இறந்தாய் விட்டது. ஒன்றும் ஏற்படவில்லை.

உலகமெல்லாம் எவ்வளவோ மாறுபாடடைந்து விட்டது. இந்தியா மாத்திரம் இன்னமும் காட்டுமிராண்டி நிலையில் இருக்கிறது. இதற்கு ஜாதி தான் காரணம்.



RangaRakes tamilnavarasam.com

**ஜாதியும் பொது உடமையும்**

ஜாதிப் பிரிவு இருக்குமிடத்தில் எந்த அரசியலும் பொருளியலும் எப்படி பங்கிட்டுக்கொடுத்தாலும் ஒரே வருஷத்தில் பழையபடி ஆகிவிடும். ஜாதியை கவனிக்காமல் ஜாதியை ஒழிக்காமல் பொதுவுடமை பேசுவது அரிவரி படிக்காமல் B.A. வகுப்பைப்பற்றி பேசுவதாகும். ஆதலால் இன்று முதல் வேலை ஜாதி ஒழிபட வேண்டும்.

**ஜஸ்டிஸ் பார்ட்டியும் ஜாதியும்**

ஆகவே ஜஸ்டிஸ் பார்ட்டியானது ஜாதி ஒழிப்புக்காக இன்டியன் பின்னல் கோட்டில் செக்ஷன் போட்டிருக்கிறது.

**ஜஸ்டிஸ் பார்ட்டி**

மற்றும் ஜஸ்டிஸ் பார்ட்டி ஆட்களைப் பொறுத்தவரை எவ்வளவோ பல்டி அடித்தார்கள் என்றாலும் கொள்கையைப் பொறுத்தவரை எவ்வித பல்டியும் அடிக்கவில்லை என்பதைப் பொதுஜனங்கள் மனதில் வைக்க வேண்டும்.

ஆகையால் அது தோற்றுப்போனாலும் கூட நாம் பயப்பட வேண்டிய தில்லை. அப்படித் தோற்றுப்போவதானது அக்கட்சியில் உள்ள அழுக்கு மூட்டைகளையும், சுயநலப் பிண்டங்களையும், நன்றி கெட்ட மக்களையும் ஒழித்து அக்கட்சியைப் பரிசுத்தமாக்க அத்தோல்வி பயன்படும். பொப்பிலி ராஜாவுக்கு மந்திரி பதவி போய்விட்டதாகவே வைத்துக்கொண்டாலும் உடனே ராஜா வேலை வந்து விடும். அதுபோலவே மற்றவர்களும் மந்திரி இல்லாததால் வாழ முடியாதவர்களாகிவிட மாட்டார்கள்.

ஆனால் காங்கிரஸ் மந்திரிசபை மாத்திரம் வாழ்ந்து விடும் என்று கருதாதீர்கள். அதை வாழவும் விடாமல் செய்ய நமக்குத் தெரியும்.

**சி.ரா. – பிரகாசம்**

ஒரு காலத்தில் தோழர்கள் சி. ராஜகோபாலாச்சாரியாரும், பிரகாசமும் சொன்னதுபோல் அதாவது - ‘‘ஜஸ்டிஸ் கட்சி அரசாளுவதைவிட பிரிட்டிஷ் ஆட்சியே மேல்’’ என்று சொன்னது போல் நாமும் பார்ப்பனர் கட்சி அரசாளுவதை விட பிரிட்டிஷ் ஆட்சியே மேல் என்கின்ற தத்துவத்தில் முனைந்து பார்ப்பனக்கட்சி ஆட்சியை அரைநொடியில் அழித்துவிட முடியும். அதற்காகவேதான் பார்ப்பனரல்லாதார் கட்சியை பலப்படுத்த வேண்டும் என்கிறோம்.

**நான் மந்திரியா?**

இல்லாவிட்டால் நான் மந்திரியாக ஆசைப்படுகிறேனா? எனக்கு யோக்கியதை உண்டா? அல்லது மந்திரிகள் தயவு ஏதாவது எனக்குத் தேவையா? எனக்கு ஏதாவது பிள்ளைகுட்டி சுற்றத்தார் என்கின்ற தொல்லை யாவது இருக்கிறதா? அல்லது மந்திரிகள் தயவால் வாழவேண்டிய அவசியமாவது உண்டா? தலைவர் பாண்டியன் அவர்களுக்காவது மந்திரிகள் தயவோ மந்திரிகளை லட்சியம் செய்ய வேண்டிய அவசியமோ ஏதாவது இருக்கிறதா? பாருங்கள்.

**மற்றும்**

எனக்கு ஏதாவது சொந்தத்தில் பெருமை வேண்டுமென்றால் நான் காங்கிரசில் இருந்தால் எனக்குக் கிடைக்காதா?

இன்று கூட 4 அணா கொடுத்து காங்கிரசில் நான் சேர்ந்துவிட்டால் தோழர் ராஜாஜீ என் குற்றங்களை எல்லாம் மன்னித்து சத்தியமூர்த்திக்குச் சூட்டிய முடியை எடுத்து எனக்குச் சூட்டி விடுவார்.

அப்படியிருக்க நான் ஏன் இந்தப்படி அவஸ்தைப்படுகிறேன். கெட்டபேர் அடைகிறேன்.

ஜஸ்டிஸ் கட்சி சாய்ந்தால் பார்ப்பனரல்லாதார் நிலை மோசமாகிவிடும். பார்ப்பனரல்லாதார் மாத்திரம் தங்கள் சுயமரியாதையை யுணர்ந்து நடந்து கொண்டார்களானால் தேர்தலில் யார் ஜெயித்தாலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

**1926 தேர்தல்**

1926ல் ஜஸ்டிஸ் கட்சி தோல்வியுற்றது. என்ன முழுகிப் போய்விட்டது? தலைவர்கள் யோக்கியமாய் நடந்து கொண்டதால் மற்றும் பலமடைந்தார்கள்.

**காங்கிரஸ் மந்திரி**

காங்கிரஸ் பிடித்து வைத்த மந்திரிகள் ஒரு வருஷத்தில் ஜஸ்டிஸ் மந்திரிகள் மாத்திரமல்ல - சுயமரியாதை மந்திரிகளானார்கள். முதல் மந்திரியாய் இருந்த டாக்டர் சுப்பராயன் அவர்கள் ‘‘நான் சுயமரியாதைக்காரன் தான்’’ என்று சொல்லவில்லையா?

காங்கிரஸ் மந்திரிகள் யாராயிருந்தாலும் தமிழ் நாட்டிற்குள் தலையை நீட்டிவிட முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள்.

**ஒரு கேள்வி**

இச்சமயத்தில் ஒரு பார்ப்பன வாலிபர் ஒரு கேள்வி கேட்டார். அதாவது காங்கிரஸ் தலைவர் ராஜேந்திரபிரசாத் அவர்களுக்கு சென்னை கார்ப்பரேஷனில் 15 மெம்பர்கள் வரவேற்பளிக்கவில்லை என்று சொல்லி தடுத்து விட்டார்கள். ஆனால் ரயிலில் லட்சம் பேர்கள் வந்து வரவேற்றார்கள். டிராம், பஸ் எல்லாம் 2 நிமிஷம் நின்றுவிட்டன. ஆதலால் நீங்கள் வரவேற்காவிட்டால் கூட்டம் வராதா? என்று கேட்டார்.



RangaRakes tamilnavarasam.com

**இதற்கு ஈ.வெ.ரா. பதில்**

ரயிலுக்கு வந்த கூட்டத்தைப் பார்த்து மதிப்பதாய் இருந்தால் வருஷா வருஷம் பெரியபாளையத்து மாரியம்மன் திருவிழாவுக்கு பத்து லட்சக் கணக்கான ஜனங்கள் போகிறார்கள், மிதிபட்டுச் சாகிறார்கள். எதற்காக? அங்கு ஆணும் பெண்ணும் அரை நிர்வாணமாய் ஆடும் காட்சியைப் பார்க்கத்தானே? இதனால் அக்கூட்டம் அந்நிர்வாணக் காட்சிக்கு வரவேற்பாக கூடியது என்று பொருளா?

ஒரு டொம்பன் வீதியில் டமாரமடித்தால் உடனே போக்குவரத்து தடைபடும்படி கூட்டம் கூடிவிடுகிறது. நாடகக்காரர்கள் போல் ஒரு மாதமாய் விளம்பரம் செய்து தெருவெல்லாம் நோட்டீஸ் ஒட்டி டாம் டாம் போட்டு யாரைக்கூட்டிவந்தாலும் கூட்டம் கூடித்தான் தீரும். இதனால் யோக்கியதை அதிகம் என்று அறிவாளிகள் கருதிவிட மாட்டார்கள் என்று சொன்னார்.

பிறகு தொடர்ந்து பேசியதாவது:- ஜஸ்டிஸ் கட்சி கொள்கை ஒரு நாளும் தோற்றுவிடாது. தோற்கவும் விடமாட்டோம். ஆனால் இனி ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் சில சோணகிரிகளும் ஏமாற்றுகாரர்களும் மீ 5000, 10000 வாங்கிக்கொண்டு குஷாலாக குலாவவும், கூத்தாடவும் இவர்களைக் காப்பாற்ற சில சுயநலக்காரர்களும், போக்கிரிகளும் கைதூக்கிக் கொண்டு கொள்ளை அடிக்கும் படியும் இருக்கும்படியான நிலைமையை இனி வளர விடமாட்டோம். அப்படிப்பட்டவர்களாலேயே இயக்கம் பாழாயிற்று. யோக்கியர்கள் எல்லாம் கட்சியை விட்டு போய்க் கொண்டு இருக்கிறார்கள் ஆகையால் உண்மையும் தியாக புத்தி கொண்டவர்களுமே அக்கட்சியை இனிமேல் நடத்த வேண்டும் என்பது எங்கள் ஆசை. அதற்காகத்தான் நாங்கள் அறிக்கை விட்டோமே ஒழிய அக்கட்சியை ஒழிக்கவல்ல என்பதை தெரிவித்துக் கொண்டு என்வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன். நான் ஆஸ்பத்திரியில் இருந்து வரும்போது பொதுக் கூட்டத்தில் பேசுவது இல்லை என்று டாக்டர் குருசாமி முதலியாரிடம் சொல்லி விடை பெற்றுக் கொண்டு வந்தேன். ஆனால் வந்த பிறகு பேசும்படி ஆகிவிட்டது என்றாலும் அதனாலேயே கடைசிவரை பேச முடியாமல் சுருக்கமாகப் பேச வேண்டியதாயிற்று.

குறிப்பு: *சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் ஆதரவில் 09.02.1936 இல் தியாகராய நகர் பனகல் பார்க் முன்பாக உள்ள திடலில் தோழர் ஊ.பு.அ. சவுந்திரபாண்டியன், எம்.எல்.சி. தலைமையில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 16.02.1936**



# காங்கிரசும் வாலிபர்களும்

இன்று, காங்கிரசு ஸ்தாபனம் தேசாபிமானச் சங்கமென்றும், ஜஸ்டிஸ் ஸ்தாபனம் வகுப்புவாத ஸ்தாபனமென்றும் பொதுமக்களுக்கு கற்பிக்கப் பட்டு வருகிறது.

அது மாத்திரமல்லாமல் காங்கிரசில் உள்ளவர்கள் எல்லாம் விரிந்த நோக்கமுடைய தியாகிகள் என்றும், ஜஸ்டிசில் உள்ளவர்கள் எல்லாம் குறுகிய நோக்கமுள்ள சுயநலக்காரர்கள் என்றும் பிரசாரம் செய்யப்படுவதுடன் பொது நோக்குடைய அனேக வாலிபர்கள் உள்ளத்திலும் அம்மாதிரியான ஒரு அபிப்பிராயம் உண்டாக்கப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டுவித அபிப்பிராயங்களின் மீதுதான் இன்று சென்னை மாகாணத்தில், சிறப்பாக தமிழ்நாட்டில் அரசியல், சமூக இயல் போர் நடந்து வருகிறது.

**நமது நிலை**

ஆனால் நம்மைப் பொறுத்தவரை நாம் இந்த 10, 12 வருஷகாலமாகவே காங்கிரசானது பார்ப்பனர்களுடைய நன்மைக்கு ஆக பயன்படுத்தப் படுகின்ற ஸ்தாபனம் என்றும், ஜஸ்டிசானது பார்ப்பனரல்லாதாருடைய நன்மைக்கு ஆக ஏற்படுத்தப்பட்டு பயன்பட்டு வருகிற ஸ்தாபனம் என்றும் சொல்லி வருவதை யாவரும் உணர்ந்திருக்கலாம். இப்படிச் சொல்லி வருவதாலேயே காங்கிரசில் அனுபோகமில்லாமலோ, காங்கிரசினிடம் ஏதாவது எதிர்பார்த்து ஏமாந்து போய்விட்டதினாலோ சொல்லி வருவதாக யாரும் கருதிவிடக்கூடாது. ஏனெனில் காங்கிரசில் சகல அனுபவமும் பெற்றே இதைச் சொல்லுகிறோம். காங்கிரசு ஆரம்பித்த காலம் முதல் கொண்டு நாளிது பரியந்தம் அதன் ஆதிக்கம் எப்படி இருந்து வந்திருக்கின்றது என்பதை கவனித்தவர்களுக்கு நமது அபிப்பிராயம் சரியா தப்பா என்பது ஒரு விதத்தில் புரியலாமானாலும், இப்போதுள்ள வாலிபர்களுக்கு புரிவதற்காக 1919 ௵ முதல் அதிக விளம்பரம் ஆகி வரும் காங்கிரசைப் பற்றியே கவனிப்போம்.

**பழைய கதை**

1919-ம் வருஷத்தில் தோழர் ஈ.வெ.ராமசாமி தனது முனிசிபல் சேர்மென், ஜில்லா போர்ட் மெம்பர், தாலூக்கா போர்ட் மெம்பர் முதலிய



RangaRakes tamilnavarasam.com

பதவிகளை ஒரே காகிதத்தில் ராஜீநாமா கொடுத்துவிட்டு தோழர்கள் வரதராஜுலு நாயுடு, ராஜகோபாலாச்சாரியார் ஆகியவர்களைப் பின்பற்றி காங்கிரசில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர். அது சமயம் அவர் முதலில் சென்ற மகாநாடு திருச்சி மாகாண மகாநாடாகும். அதற்கு சுமார் 100 பிரதிநிதிகளுடன் ஈரோட்டிலிருந்து திருச்சிக்கு சென்ற போது அங்கு தோழர்கள் வரதராஜுலு, ஜோசப், சோமசுந்திர பாரதியார், கல்யாணசுந்திர முதலியார், சிதம்பரம் பிள்ளை (இருவரும் இருந்ததாக ஞாபகம்) முதலியவர்கள் முக்கிய பங்கெடுத்துக் கொண்டதையும், ஜஸ்டிஸ் கட்சியை வைவதையும், ராமநாதபுரம் ராஜா தலைமை வகித்ததையும் இவர்களை யெல்லாம் ராஜகோபாலாச்சாரியார், விஜயராகவாச்சாரியார் ஆகியவர்கள் நடத்தினதையும் பார்த்து தோழர் ஈ.வெ.ரா. அதில் இரண்டறக் கலந்துவிட வேண்டும் என்கின்ற ஆசையின் பேரில் ஒரே ஒரு சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள ஆசைப்பட்டார்.

## முதல் சந்தேகம்

அதாவது ஜஸ்டிஸ் கட்சியாரைப்பற்றிக் குறை கூறுவது எல்லாம் சரி, ஆனால் அவர்கள் கேட்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நியாயமானது தானே என்று கேட்டார். அதற்கு தோழர் வரதராஜுலு நாயுடு உள்பட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப்பற்றி யாருக்கும் ஆக்ஷேபணை இல்லை என்றும், அதற்காகவே சென்னை மாகாணச் சங்கம் என்பதாக ஒரு சங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்றும், அதற்கு தோழர் பி. கேசவபிள்ளை தலைவர் என்றும், தோழர் பி. வரதராஜுலு காரியதரிசி என்றும் சொல்லப்பட்டது.

## ஈரோட்டு மகாநாடு

அந்த சமயம் தோழர் ஈ.வெ.ரா. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் காங்கிரஸ் ஒப்புக் கொண்டதானால் ஜஸ்டிஸ் கட்சி அவசியமில்லை என்று சொன்னதின் பேரில் உடனே அங்கேயே பார்ப்பனரல்லாத பல பிரமுகர்கள் ஒன்று கூடி சென்னை மாகாணச் சங்கம் என்பதின் 2 வது மகாநாட்டை ஈரோட்டிலேயே வேண்டுமானாலும் கூட்டி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தலாம் என்றும், அதைக் கூட்ட சம்மதிக்கிறீர்களா என்றும், தோழர் ஈ.வெ.ராமசாமியை தோழர்கள் வரதராஜுலு, கல்யாணசுந்திரம் முதலியவர்கள் கேட்க, ஒரே மாதத்தில் ஈரோட்டில் சென்னை மாகாண மகாநாடு கூட்டப்பட்டது. தோழர் கோவிந்ததாஸ் தலைமை வகித்தார். ஈ.வெ.ரா. வரவேற்பு தலைவராய் இருந்தார்.

தோழர்கள் கல்யாணசுந்தர முதலியார், வரதராஜுலு நாயுடு, விஜயராகவாச்சாரியார் முதலியவர்கள் வந்து நடத்திக் கொடுத்து வகுப்புவாரி பிரதிநிதித்துவ தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு போனார்கள். இதன்பிறகு பார்ப்பனரல்லாதார்களில் ஏதோ பணக்காரர்களாய் இருந்தவர்கள் போக, மற்றபடி உற்சாகமுள்ள வாலிபர் எல்லோரும் இவர்களைப் பார்த்து காங்கிரசில் சேர்ந்தார்கள். அது மாத்திரமல்லாமல் காங்கிரசில் தேசீயவாதிகள் (நேஷனலிஸ்ட் அசோசியேஷன்) சங்கம் என்பதாக ஒரு சங்கத்தையும் புதிதாக உண்டாக்கினார்கள். அதிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒப்புக் கொண்டு அச் சங்கத்துக்கு தோழர் சி. விஜயராகவாச்சாரியார் தலைவராகவும் தோழர் ஸி. ராஜகோபாலாச்சாரியார் பொதுக் காரியதரிசியாகவும், தோழர் பிரகாசம் ஆந்திர நிர்மாண காரியதரிசியாகவும், தோழர் ஈ.வெ.ரா. தமிழ்நாட்டு நிர்மாணக் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

## ராஜாஜி சூழ்ச்சி

ஆனால் அதற்கு உபதலைவராயிருக்க தோழர் வி.ஓ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பெயரை பிரேரேபித்ததில், அது தோழர் ராஜகோபாலாச் சாரியாருக்கு பிடிக்காததால் அதற்கு பதிலாக வேறு ஒரு பார்ப்பனர் எஸ். கஸ்தூரி ரங்கய்யங்கார் பெயர் பிரேரேபிக்கப்பட்டது. அது சமயம் தோழர் ஈ.வெ.ரா., ராஜகோபாலாச்சாரியாருக்கு கடமைப்பட்டவராக இருந்தும், தோழர் வரதராஜுலு முதலியவர்கள் வி.ஓ. சிதம்பரம் பிள்ளைதான் உபதலைவராய் இருக்க வேண்டும் என்று சொன்னதால், ஈ.வெ. ராவும் அதை ஆதரிக்க, அந்த விஷயம் உடனே பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற உணர்ச்சியைக் கிளப்பி விட்டது.

பிறகு, உடனே இந்த விஷயம் ஒத்திப்போடப்பட்டு விட்டு பிற்பகல் மகாநாட்டில் பார்த்துக் கொள்ளலாம் என்று தலைவர் சொல்லிவிட்டார்.

ஆனால் கூட்டம் முழுவதும் பார்ப்பன மயமாய் இருந்ததால் பிற்பகல் மகாநாட்டுக்கு தொழிலாளிகளில் 50 பேருக்குமேல் ஆளுக்கு ஒரு ரூபாய் வீதம் டெலிகேட்டு பணம் கொடுத்து 50 தொழிலாளி பிரதிநிதிகளை டாக்டர் வரதராஜுலுவும், ஈ.வெ.ராவும், திரு.வி. கல்யாணசுந்தரமும் கூட்டி வந்து உட்காரவைத்தவுடன் தோழர் ராஜகோபாலாச்சாரியார் ஒரு சூழ்ச்சி செய்தார். அது என்னவென்றால் உபதலைவர் ஒருவர் என்று இருந்ததை 5, உப தலைவர்களாக்கி அதில் வி.ஓ. சிதம்பரம் பிள்ளை அவர்களையும் ஒருவராகச் சேர்த்து அதற்கு மதிப்பில்லாமல் ஆக்கினார். இதையும் தோழர் ஈ.வெ.ரா., வரதராஜுலு, கல்யாணசுந்தரம் ஆகியவர்கள் ஒப்புக்கொள்ளாததால் வி.ஓ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் உபதலைவராகத் தெரிந்தெடுக்க வேண்டியதாயிற்று. நிர்வாகக்கமிட்டி மெம்பர்களிலும் பகுதிக்கு மேல் பார்ப்பனரல்லாதார்களை போட வேண்டுமென்று ஈ.வெ.ரா. வாதாடியதால் அந்தப்படியே போட வேண்டியதாயிற்று. இதைப் பார்த்த தோழர் ராஜகோபாலாச்சாரியார் அன்றையதினமே தனது வாயால் **''உங்களை விட ஜஸ்டிஸ் கட்சியாரே 100 மடங்கு தேவலாம்''** என்று சொல்லி மனம் புழுங்கி விட்டார். இதைப்பற்றி உண்மை அறிய வேண்டியவர்கள் இன்றும் தோழர்கள் முதலியாரையும் நாயுடுகாரையும் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.



RangaRakes tamilnavarasam.com

## செத்தது

இந்தக் காரணங்களால் அடுத்த நாளே சென்னை மாகாணச் சங்கமும், தேசீயவாதிகள் சங்கமும் உடனே **செத்துப் போய்விட்டன.**

பிறகு அதைப்பற்றிய பேச்சே கிடையாது. அது முதல் தோழர் ராஜகோபாலாச்சாரியாருக்கு முதலியாரிடமும், நாயுடுகாரிடமும், அந்தரங்கத்தில் நம்பிக்கை அற்றுப்போய் விட்டது. பின்னரும் அவர்களிடம் எப்போதுமே நம்பிக்கை இல்லாமலும் போய் விட்டது. ஆனால் ஈ.வெ.ரா.விடம் ஆச்சாரியாருக்கு நம்பிக்கை இருந்து வந்தது என்னலாம். ஈ.வெ.ராவும் ஆச்சாரியாரிடம் நம்பிக்கைத் தவறுதலாக நடக்க இஷ்டப்படவே இல்லை. ஆனால் ஒவ்வொன்றையும் நேரில் சொல்லிவிட்டு செய்து வந்ததால் நம்பிக்கை இருந்தது.

அடுத்தாப்போல் திருநெல்வேலியில் மாகாண மகாநாடு கூட்டப் பட்டது. தோழர் சீனிவாசய்யங்கார் தலைமை வகித்தார். அங்கும் தோழர் ஈ.வெ.ராவும் தோழர் சிதம்பரம் பிள்ளையும் வகுப்புவாரித் தீர்மானம் கொண்டுவந்து விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேற்றினார்கள். பொது மகாநாட்டில் தலைவர் தனக்குள்ள விசேஷ அதிகாரத்தைக் கொண்டு அதை நிராகரித்துவிட்டார்.

## தஞ்சை மகாநாடு

பிறகு தஞ்சையில் மாகாணக் கான்பரன்சு கூடிற்று. அங்கும் தோழர் ஈ.வெ.ரா. தனது (கோயமுத்தூர் பிரதிநிதிகள்) ஜாகையில் ஒரு பார்ப்பனரல்லாத பிரதிநிதிகள் கூட்டம் கூட்டி, வகுப்புவாரித் தீர்மானம் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அதை சென்னை பார்ப்பனரல்லாத பிரதிநிதிகள் தடுத்தும், காங்கிரஸ் ஸ்தாபனங்களில் 100க்கு 50 ஸ்தானங்களுக்குக் குறையாமல் பார்ப்பனரல்லாதார் இருக்கும்படி பார்த்துக் கொள்வதாகச் சொல்லி ஈ.வெ.ராவுக்கே அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டது.

பிறகு திருப்பூர் மாகாண மகாநாட்டுக்கு டாக்டர் வரதராஜுலு தலைமை வகிக்க மாகாணமெங்கும் ஆதரவு இருந்தும் மித்திரன் கூட்டம் முதலிய பார்ப்பனர்கள் அவரைப் போடக்கூடாது என்று சூழ்ச்சி செய்து, கடைசியாக வாசுதேவராவ் என்கின்ற ஒரு அநாமதேயப் பார்ப்பனரைத் தலைவராகப் போட்டுக் கொண்டார்கள்.

அங்கும் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் விஷயம் பொது மகா நாட்டிலேயே வந்து, ஒருவருக்கொருவர் கை கலக்கும்படியான நிலை ஏற்பட்டு விட்டது. அதில் ஜாதி வித்தியாசத்தை ஒழிப்பது, கோயில் பிரவேசம் ஆகிய தீர்மானங்கள் பார்ப்பனர்களால் பலமாக எதிர்க்கப்பட்டு கை நழுவ விடப்பட்டன. அங்குதான் தோழர் ஈ.வெ.ரா. ராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்று சொன்னது.



## திருச்சி மகாநாடு

பிறகு திருச்சியில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி நிர்வாகக் கூட்டத்தில் தோழர் சீனிவாசய்யங்காருக்கும், தோழர் ராஜகோபாலாச்சாரிக்கும் இருந்த போட்டியால், தோழர் ஈ.வெ.ராமசாமி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்க நேர்ந்தது என்றாலும் தலைவர் தேர்தல் நடந்து ஓட்டுகள் எண்ணிப்பார்த்து ஈ.வெ.ராமசாமி தலைவரானார் என்று சொன்னவுடனே, சென்னை பார்ப்பனர்கள் அவர்மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வந்து, அதை அப்போது பார்ப்பனரல்லா தாரிடம் மிக மிக செல்வாக்குப் பெற்றிருந்த வ.வெ.சு. அய்யரைக் கொண்டு பிரேரேபிக்கச் செய்து அவரையே ஓட்டுச் சேகரிக்கச் செய்தார்கள்.

அது சமயம் தோழர் திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் எழுந்து இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானமானது பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்கின்ற வகுப்புத் துவேஷத்தின் மீது கொண்டு வரப்பட்டிருக்கிறதென்றும் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் பார்ப்பனரல்லாதார் காங்கிரஸ் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் பிரேரேபிக்க வேண்டிவரும் என்றும் சொன்னதின் மீது, வ.வெ.சு. அய்யர் எவ்வளவு பாடுபட்டும் அத்தீர்மானம் தோல்வி அடைந்து விட்டது. அவருடைய குருகுலத்தின் வண்டவாளம் வெளியாகவும் அத்தீர்மானமே ஒரு காரணமாய் இருந்தது.

## திருவண்ணாமலை மகாநாடு

திருவண்ணாமலை மாகாண மகாநாட்டில் தோழர் ஈ.வெ.ராவே தலைமை வகித்து அங்கு பார்ப்பனர், அல்லாதார் விஷயம் தலைமை உரையில் பலமாகப் பேசி விவாதிக்கப்பட்டு குறிப்பாகவே ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டது சரி என்றும், மற்ற கட்சிகளைக் காங்கிரசுடன் சேர்த்துக்கொள்ள முயற்சிக்கும் போது ஜஸ்டிஸ் கட்சியை மாத்திரம் ஏன் தேசத்துரோகக் கட்சி என்று சொல்ல வேண்டுமென்று கேட்டு தலைவர் பிரசங்கிக்கையில், தலைவருடனேயே சில பார்ப்பனர்கள் வாதாடுகையில், அதை ஒரு பார்ப்பனரல்லாத பிரதிநிதி கடினமாகத் தாக்கிப் பேசியபின், பார்ப்பனர்கள் மேலால் பிரசிங்கிக்க விட்டார்கள்.

## சு.ம. இயக்கத் தோற்றம்

அடுத்த, காஞ்சிபுரம் மகாநாட்டிலும் தோழர் கல்யாணசுந்தர முதலியாரை தலைவராக தமிழ்நாடு பூராவும் ஆதரித்தும் சுதேசமித்திரன் கூட்டம் அவர் கூடாது என்று எவ்வளவோ சூழ்ச்சி செய்து கடைசியாக ஈ.வெ.ரா. முயற்சியால் ஓட்டு அதிகத்தில் முதலியார் தலைமைப் பதவிக்கு வந்து காஞ்சீபுரத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ தீர்மானத்தை விஷயாலோசனைக் கமிட்டியில் நிராகரித்து, பொது மகாநாட்டிலும்



RangaRakes tamilnavarasam.com

எதேச்சாதிகாரமாய் நிராகரிக்கப்பட்டு, அதற்கு பின்பே தோழர் ஈ.வெ.ரா. சுயமரியாதை இயக்கம் ஏற்படவும், ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கவும் வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

எனவே பார்ப்பனர்கள் எந்த சமயத்திலாவது ஒரு பார்ப்பனரல்லாதார் காங்கிரசில் முன்னுக்கு வரவோ, தலைமைப்பதவி பெறவோ விட்டு இருக்கிறார்களா என்று பார்த்தால் காங்கிரஸ் பார்ப்பனர் இயக்கமா அல்லவா என்பது நன்றாய் விளங்கும்.

### பார்ப்பனர் தந்திரம்

இவையெல்லாம் பழங்கதையானாலும் இன்றும் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை கவனித்தால் உண்மை விளங்காமல் போகாது.

அவர்களுக்கு நிலைமை கஷ்டமாக இருக்கும் போது குப்புசாமி போன்றவர்களை தலைவர்களாகவும், காரியதரிசி ஆகவும், சர்வாதிகாரி யாகவும் ஆக்கி விடுகிறார்கள். நிலைமை சற்று சவுகரியமாய் இருக்கிறது என்று தெரிந்தால் சத்தியமூர்த்தி போன்றவர்களை தலைவராக்கிக் கொண்டு முத்துரங்க முதலியார் போன்றவர்களையே அமுத்தி விடுகிறார்கள்.

உண்மையாகப் பேசப் போனால் இன்றும் தோழர் சத்திய மூர்த்தியாருக்கு சாப்பாட்டுக்கு யோக்கியமான வழி என்ன என்று தோழர் ராஜகோபாலாச்சாரியார் சொல்லுவாரா?

### சத்தியமூர்த்தி ஜாதகம்

தோழர் ராஜகோபாலாச்சாரியார் அறிய, தோழர் மூர்த்தியார் வாடகை வீட்டில் இருந்து கொண்டு டிராம் காரிலும் கால்நடையிலும் சீனிவாசய்யங்காரிடம் சென்று மான்யம் வாங்கிக் கொண்டிருந்தது யாரும் அறிந்ததுதானே?

இப்போது அவருக்கு இரண்டு இரட்டை மாடிவீடு எப்படி ஏற்பட்டது? மோட்டார் கார் ஏது? சாப்பாட்டுக்கு எப்படி வருகிறது? எந்தத் தொழிலில் சம்பாதித்தார்? இன்கம்டாக்ஸ் எவ்வளவு? தொழில் வரி உண்டா?

மற்றும் அவர் சிவிக் போர்ட் நாமினேஷன்களில் பணத்துக்காக அல்லாமல் எதில் நாணயக் குறைவில்லாமல் நடந்து கொண்டார் என்று சொல்லக்கூடும்?

மெயில் பேப்பர், மூர்த்தியாரை ஆதரிக்கும் இரகசியம், பாஷ்யம் அவர்கள் பட்டப்பகலில் தப்பட்டை அடிப்பதுபோல் எடுத்துச் சொன்னது ஆச்சாரியாருக்குத் தெரியாதா? மூர்த்திக்கும் அரசாங்கத்துக்கும் உள்ள சம்மந்தம் ஆச்சாரியாருக்குத் தெரியாதா?



மற்றும் அவருடைய சொந்தப் பழக்க வழக்கம், ஒழுக்கம் ஆகியவை களைப்பற்றி ஆச்சாரியாரே பலமுறை மற்ற ஜனங்களிடம் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டது யாருக்கும் தெரியாதா?

இன்னும் எவ்வளவோ மற்றவர்களுக்குத் தெரியாத இரகசியங்கள் அவரைப்பற்றி ஆச்சாரியாருக்குத் தெரிந்திருந்தும் இவ்வளவையும் லக்ஷ்யம் செய்யாமல் அதுவும் முத்துரங்க முதலியாருக்கு விரோதமாக மூர்த்தியாருக்கு தமிழ்நாட்டுத் தலைமைப் பட்டாபிஷேகம் செய்தார் என்றால் மூர்த்தியாரின் குணங்கள் எல்லாம் ஆச்சாரியார் மீது பிரகாசிப்ப தாகத்தானே அர்த்தம்.

### ஜாதிப் பற்று

அல்லது ஆச்சாரியாரின் மூக்குக்கு நல்ல வாசனை கெட்ட வாசனை அறிய சக்தி இல்லை என்றாவது சொல்லித் தானே ஆகவேண்டும். எவ்வளவு அயோக்கியரானாலும் சத்தியமூர்த்தியார் பார்ப்பனர், எவ்வளவு யோக்கியரானாலும் முத்துரங்க முதலியார் பார்ப்பனரல்லாதார் என்பதில்லாமல் இதில் வேறு என்ன காரணம் இருக்கிறது என்பதை யோசித்துப் பாருங்கள்.

காங்கிரஸ் பார்ப்பனர் ஸ்தாபனம், அல்லது பார்ப்பனர் நன்மைக்கு பயன்படுத்திக் கொள்ளும் ஸ்தாபனம் என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி நமது வாலிபர்களுக்கு வேண்டும் என்று கேட்கின்றோம்.

### ஒரு கேள்வி

பார்ப்பனர்கள் தின்று எச்சிலையில் மீதி விழுவதை பொறுக்கவும், நக்கவும் ஆசைப்பட்டு காங்கிரசிலிருப்பவர்கள் இருந்து தொலையட்டும், அவர்கள் கால்கழுவிய ''தீர்த்தம்'' சாப்பிடுவதின் மூலம் மந்திரிகளாகட்டும், ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர்கள் தலைவர்கள் ஆகட்டும், அதைப்பற்றிப் பின்னால் பேசிக்கொள்ளுவோம். அப்படிப்பட்ட எண்ணமில்லாமல் ஜஸ்டிஸ் கட்சி தேசத்துரோகக் கட்சி என்றும், காங்கிரஸ் தேசாபிமானக் கட்சி என்றும், ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் சுயநலக்காரர்கள் நாணயமற்றவர்கள் என்றும், காங்கிரஸ் தலைவர்கள் சுயநலமற்றவர்கள் நாணயமுள்ளவர்கள் என்றும் கருதிக் கொண்டிருக்கிற, தன்காலில் நிற்கக்கூடிய வாலிபர்களாய் இருக்கிறவர்கள் இப்படிப்பட்ட இயக்கத்துக்கும், இப்படிப்பட்ட தலைவர் களுக்கும் வால் பிடித்துத் திரிவது ஆண்மையும், சுயமரியாதையும் கொண்ட காரியமா என்று கேட்கிறோம்.

எவ்வளவு காலத்துக்குத்தான் தேசாபிமானம் என்னும் பெயரால் இம்மாதிரி முட்டாள்தனமானதும் சுயமரியாதை அற்றதுமான காரியத்தைச் செய்து கொண்டு உயிர்வாழ்வது என்கின்ற உணர்ச்சி உண்மையான, சுத்த ரத்த ஓட்டமுள்ள வாலிபர்களுக்கு வரவேண்டாமா? என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

## அரசியல் விபசாரத்துக்கு முடிவில்லையா?

'கடவுள்' பேரால் நடந்த விபசாரத்துக்குக்கூட முடிவுகாலம் வந்து, பெண்களுக்கும் சுயமரியாதை உணர்ச்சி வந்து விட்டபோது இந்த தேசாபிமானத்தின் பேரால் நடக்கும், விபசாரித்தனத்தைவிட மோசமான, அயோக்கியத்தனத்துக்கும் இழிவுக்கும் முடிவுகாலம் வந்து நமது வாலிபர்களுக்கு எப்போதுதான் பகுத்தறிவும், சுயமரியாதையும் ஏற்படப்போகின்றதோ தெரியவில்லை. சுயமரியாதையில் அபிமானமற்றவர்கள் தேசத்தின் மீது அபிமானங்கொண்டு இருக்கிறார்கள் என்றால் இதை யார்தான் நம்புவார்கள்? ஆகவே மனித வாழ்க்கையில் எந்த தத்துவத்தில் தோழர் மூர்த்தியாரிடம் சுயமரியாதை அல்லது ஒழுக்கம் காணக்கிடக்கின்றது என்று பார்ப்பனரல்லாத காங்கிரஸ் வாலிபர்களை வணக்கமாய் கேட்கின்றோம்.

(சோற்றுக்கு வேறு வழியில்லையே என்பவர்களிடத்தில் நாம் கேட்க வில்லை. அவர்கள் அப்படியே இருக்கட்டும்)

எவ்வளவுதான் பார்ப்பனர்களை நாம் வெறுத்தாலும் பார்ப்பனர் களிடமிருந்து நமது வாலிபர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய சில காரியங் களும் உண்டு. ஆனால் அவற்றை கற்றுக் கொள்ளாமல் அவர்களிடம் இருக்கும் குணங்களில் வெறுத்துத் தள்ளவேண்டியவைகள் எவையோ அவைகளை பல பரிசுத்தமுள்ள வாலிபர்கள் கற்றுக்கொண்டது மிகவும் கஷ்டமான காரியமாகும்.

## தேசாபிமானமா சுயநலமா?

கடைசியாக, இன்று காங்கிரசுக்கு வந்து சேரும் பார்ப்பனரல்லாத பெரிய ஆட்கள் என்பவர்களைப் பாருங்கள். அவர்கள் எல்லோரும் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து பயன் அடைந்து விட்டு இன்று அங்கு தங்கள் சுயநலத்துக்கு நம்பிக்கை இல்லை என்று கருதி வந்து சேருகிறார்களா? அல்லது தேசாபிமானத்தாலா என்று பாருங்கள். ஆகவே சுயநலக்காரர்களுக்கு - நாணயமில்லாதவர்களுக்குப் புகல் இடமாய் இருப்பதும் பயன்படுத்திக் கொள்ள ஆதாரமாய் இருப்பதும் காங்கிரசா அல்லவா என்பதையும், செல்வாக்கில்லாத சமயத்தில் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து அதன் கொள்கைக்காகப் பாடுபடுவதும் அதற்காக அதில் வந்து சேர்வதும் சுயநலமற்றதும், நாணயமுடையதுமான காரியமா அல்லவா என்பதையும் பொதுஜனங்கள் உணர ஆசைப்படுகிறோம்.

## ஈ.வெ.ரா. சமய சஞ்சீவியா?

தவிர, தோழர் ஈ.வெ.ரா. தனது சொந்த வாழ்வைவிட்டு பொதுநல வாழ்வு என்பதற்கு வந்த நாள் முதல் இதுவரை தனது லக்ஷயத்தில் - கொள்கையில் ஏதாவது மாற்றங்கள் கொண்டு தன்னலத்துக்கு சமயத்துக்கு தகுந்தபடி நடந்து வருகிறாரா? அல்லது ஒரு குறிப்பிட்ட லக்ஷியத்துக்கு கொள்கைக்கு ஆகவே ஆதி முதல் உழைத்து வருகிறாரா என்பதையும் பொது மக்கள் உணர ஆசைப்படுகிறோம்.

ஏனெனில் சில வாலறுந்த வாலிகள் ஈ.வெ.ரா. கடைசி காலத்தில் மந்திரிகளின் பின் திரிகிறாரே என்று விஷமப் பிரசாரம் செய்ததாகவும், தேசாபிமானத்தை விட்டு குறுகலான வழியில் நடக்கிறார் என்று சொல்லிப் பழித்ததாகவும், இதை சில வாலிபர்கள் நம்பி மோசம் போனதாகவும் தெரிந்ததால் இவற்றை எழுதுகிறோம். அன்றியும் பார்ப்பனரல்லாத வாலிபர்களுக்கு ஏதாவது உணர்ச்சி தோன்றாதா என்ற ஆசையாலேயே இதை லக்ஷியம் செய்து எழுதப் புகுந்தோம்.

**குடி அரசு - தலையங்கம் - 16.02.1936**





RangaRakes tamilnavarasam.com

# சீர்திருத்தமும் கட்சிகளும்

புதிய சீர்திருத்தம் என்றால் பதவிகளும், உத்தியோகங்களுமல்லாமல் மற்றப்படி அதனால் ஏழைப் பொது மக்களுக்கு இன்றைய நிலைமையை விட கடுகளவு நன்மைகூட கிடையாது என்பது அறிவுள்ள மக்கள் எல்லாம் அறிந்ததும், நாணயமுள்ள மக்கள் எல்லாம் ஒப்புக் கொள்ளக்கூடியதுமாகும்.

புதிய பதவிகளுக்கும், உத்தியோகங்களுக்கும் தகுந்தபடி புதிய புதிய செலவுகளும் உண்டு என்பதையும் அறிஞர்கள் அறியாமலிருக்க மாட்டார்கள். இந்தச் செலவுகள் ஏழைமக்கள் தலையில்தான் விடியப் போகின்றனவே ஒழிய புதிய செலவுக்கு ஈடுகொடுக்க பழைய செலவைக் குறைத்துக் கொள்ள புதிய சீர்திருத்தத்தினால் ஒரு நாளும் முடியப் போவதில்லை.

ஆகவே ஏழைப் பாமர மக்களுக்கு அதாவது விவசாயிகளுக்கும், தொழிலாளி மக்களுக்கும் மேலும் மேலும் தொல்லைகளும், ஏழ்மைத் தன்மைகளும் பெருகுவது தான் சீர்திருத்தம் என்றாலும் அதைப்பற்றி படித்த மக்களும் பிரபுக்களும் சிறிதும் லக்ஷியம் செய்யாமல் இன்னும் அதிகச் செலவில் புதிய புதிய ''சீர்திருத்தங்களை'' வரவேற்ற வண்ணமாயிருந்து வருகிறார்கள். இந்தப்படி வரவேற்பதில் புதிய சீர்திருத்தத்தினால் ஏற்படும் பதவிகளையும், உத்தியோகங்களையும் முழுவதையுமே காங்கிரஸ்காரர்கள் (பார்ப்பனர்களே) அடையவேண்டும் என்கின்ற ஆசையால் மற்றொருபுறம் ஆகாயத்துக்கும் பூமிக்குமாகப் பாடுபடுகிறார்கள்.

பார்ப்பனரல்லாத மக்களோ முன்போல் ''சுவாமிகள் சொன்னால் சரி'' ''அய்யர்வாள் சொன்னால் சரி'' என்கின்ற மாதிரியாக இல்லாமல் கிட்டத்தட்ட பார்ப்பனர்களுக்குச் சமமாகவே எல்லாத் துறையிலும் இப்போது சரிபோட்டி போடுகிறார்கள். ஆகவே இனிமேல் பார்ப்பனரல்லாதார் போட்டியை அவ்வளவு லேசான போட்டி என்று சொல்லிவிட முடியாது.

உதாரணமாக இன்றைய நிலையில் சீர்திருத்தப் பதவிகளையும் உத்தியோகங்களையும் பெற பார்ப்பனரல்லாதார் ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் சிலரும், ஜஸ்டிஸ் கட்சியில் இடமும் நம்பிக்கையும் இல்லாதார் காங்கிரஸ் கட்சியின் பேரால் சிலரும் இரண்டிலும் நம்பிக்கையும், இடமும் இல்லாதவர்கள் வௌவால் கட்சியாக இருந்து கொண்டு சமயம் போல் நடந்து கொள்வதில் சிலருமாக இருந்து வருகிறார்கள் என்பது மாத்திரமல்லாமல் வேறு பேரால் ஏதாவது புதிய கட்சிகளை ஆரம்பிக்கலாமா என்று சிலரும் யோசனை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

இவ்வளவு பேர்களையும் ஏமாற்றிவிட்டு எல்லாப் பதவிகளையும், உத்தியோகங்களையும் பார்ப்பனர்களே அடித்துக் கொண்டு போய்விடுவது என்பது இனி சுலபத்தில் நடந்து விடக்கூடிய காரியமல்ல. பார்ப்பனர்களின் தொல்லைகளாலும், வீணான கலாட்டாவினாலும் ''காங்கிரஸ்காரர்களும் வெற்றி பெற்றார்கள்'' என்று சொல்லும்படியான நிலைமை ஒரு சமயம் ஏற்பட்டாலும் பழையபடி பார்ப்பனர்களின் ஏகபோக ஆதிக்கம் என்பது மாத்திரம் இனி கனவு கூட காணமுடியாது என்றே சொல்லுவோம்.

புதிய சீர்திருத்தத்தில் பார்ப்பனர்களுக்கு ஏதாவது ஆதிக்கம் வருவது என்பது சர்க்காரார் ஏதாவது உள்ளுக்குள் அவர்களுக்கு அனுகூலமாயிருந்து உதவி செய்தால் மாத்திரமே தான் அதுவும் சிறிது சாத்தியப்படலாமே ஒழிய மற்றபடி சர்க்கார் நடு நிலைமை வகித்தால் பார்ப்பன ஆதிக்கம் சிறிதுகூட ஏற்பட்டு விடாது என்று தைரியமாய்ச் சொல்லிவிடலாம்.

ஆனால் தோழர்கள் ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் சத்திய மூர்த்தியாரும் அடிக்கடி கவர்னரை பார்த்து ''நாங்கள் இனிமேல் நல்ல பிள்ளைகளாய் நடந்து கொள்ளுகிறோம்'' என்று வாக்குறுதி கொடுத்து கெஞ்சுவதாலும் சர்க்காருக்கும் காங்கிரசுக்காரர்கள் அரசியலை நடத்திக் கொடுப்பதானால் தங்களுக்கு சிறிதுகூட தொல்லை ஏற்படுவதற்கு இடமில்லாமல் போவதோடு பாமர மக்களிடையிலும் தங்களுக்கு நல்ல பேர் இருக்கும்படி அவர்கள் (பார்ப்பனர்கள்) பிரசாரம் செய்வார்கள் என்கின்ற நம்பிக்கையும் ஏற்படக் கூடுமாதலாலும் சர்க்காரார் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாக இருந்தாலும் இருக்கலாம்.

யார் எப்படிப் பாடுபட்டாலும் சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை அரசியலில் காங்கிரஸ் (பார்ப்பன) ஆதிக்கம் ஏற்படுவது முடியாத காரியமே என்று மறுபடியும் கூறுவோம். காரணம் என்னவென்றால் முதலாவது - பார்ப்பனர்களில் இன்று யோக்கியமான தலைவர் கிடையாது. தோழர் ராஜகோபாலாச்சாரியார் சாமர்த்தியமுள்ள தலைவர் என்றாலும் இன்றைய நிலைமையில் மற்ற மக்களுடைய அதாவது காங்கிரசிலுள்ள பார்ப்பனரல்லாத மக்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்று சொல்லி விடுவதற்கில்லை.

காங்கிரசில் வந்து சேரும் பார்ப்பனரல்லாதார் எவரும் சத்தியமூர்த்தி என்றால் அவரை எப்படியோ சரிப்படுத்திக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். ஆச்சாரியார் என்றால் பயப்படுகிறார்கள். பச்சையாய்ச் சொல்ல வேண்டுமானால் வெறுக்கவும் செய்கிறார்கள். அதோடு மாத்திரமல்லாமல் காங்கிரசில் ஆச்சாரியார் காரணமாகவே பார்ப்பனரல்லாதார் பார்ப்பனர் என்கின்ற உணர்ச்சி இப்போது வலுத்து வருகிறது.



RangaRakes

tamilnavarasam.com

இரண்டாவது - ஆங்காங்குள்ள பெரிய மிராசுதாரர்கள், செல்வந்தர்கள், பெரிய செல்வாக்குள்ளவர்கள் ஆகியவர்கள் எல்லாம் அரசாங்கத்தார் காங்கிரசை ஆதரிக்கவில்லை என்று தெரிந்தால் உடனே காங்கிரசை விட்டு விலகி விடுவார்கள் என்பது ஒருபுறமிருந்தாலும் - அவர்கள் பார்ப்பன ரல்லாதார் என்கின்ற உணர்ச்சியை மறந்து விடுவார்கள் என்று சுலபத்தில் நம்பிவிட முடியாது. ஆகவே எண்ணெய்ச் செலவே ஒழிய பிள்ளை பிழைக்கப் போவதில்லை என்பதை ஆச்சாரியாருக்கு இப்போதே ஜோசியம் சொல்லி விடுகிறோம்.

வீணாக இந்த நாட்டு மக்களில் பெரும்பாலோர் நன்மைக்கும் உணர்ச்சிக்கும் விரோதமாக தேசீயத்தின் பேரால் இப்படி ஒரு போராட்டம் செய்து கொண்டிருப்பதில் பலன் என்ன என்பதை எடுத்து காட்டவே இவற்றை எழுதுகிறோமே ஒழிய மற்றபடி ஜோசியத்தில் பெயர் வாங்க அல்ல என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆச்சாரியாருக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் கொள்கையில் வெளிப்படையாய் என்ன வித்தியாசம் இருக்கிறது என்று கேட்கிறோம். யோக்கியமாய் பேசினால் இருவரும் புதிய சீர்திருத்தத்தை ஏற்று அரசாங்கத்தை நடத்திக் கொடுக்கின்றவர்களேயாவார்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மாத்திரமே குறுக்கே இருக்கிறது. அதை ஆச்சாரியாரல்ல இனியும் வேறு யார் தடுத்தாலும், தடுக்கத் தடுக்க அடிக்கும் பந்து எழும்புவது போல் வளர்ந்து கொண்டும் பலப்பட்டுக் கொண்டும்தான் போகுமே ஒழிய இனி அந்த உணர்ச்சி அடங்கிவிடப் போவதில்லை. அன்றியும் முஸ்லீம்கள், கிறிஸ்தவர், தீண்டப்படாதவர் என்பவர்கள் ஆகியவர்களுக்கெல்லாம் பிரதிநிதித்துவம் இவ்வளவு என்று காங்கிரசே ஒப்புக்கொண்டாய் விட்டது. அந்தப்படியே தொகுதி பிரித்து வெகுகாலமாய் நடந்தும் வருகிறது. பார்ப்பனரல்லாதார்களுக்கு மாத்திரம் தடைப்படுத்துவதால் அது எப்படி நின்று விடும்? அல்லது அப்படித் தடை செய்வது எந்த விதத்தில் நியாயமானதாகிவிடும்?

ஆகவே இனியும் அதைத் தடைப்படுத்திக் கொண்டிருப்பதில் தனித் தொகுதி தேர்தல் முறைக்கு வழி காட்டுவதாகத்தான் முடியுமே ஒழிய அதை அடக்கிவிட முயற்சித்ததாக ஆகப்போவதில்லை.

ஆதலால் ''வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை நாங்கள் ஒப்புக் கொள்ளுகிறோம்'' என்று அதுவும் ''சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை'' என்று காங்கிரஸ் ஒப்புக் கொள்ளுமானால் பெரியதொரு அளவுக்கு நாட்டில் அரசியலில் ஒருவருக்கொருவர் எதிர்ப்பும், சமூகத் துறையில் ஒருவருக்கொருவர் துவேஷமும் வளர்வதானது குறைவதோடு உண்மையாக மக்கள் நலத்துக்கு பாடுபடும் தியாக குணமுள்ளவர்கள் அரசியலைக் கைப்பற்றி மக்களுக்கு சிறிதாவது நன்மை செய்ய முடியும்.



அப்படிக்கில்லாமல் வீண் வம்பில் வாழ்நாளெல்லாம் காலம் கழித்து விட்டு துவேஷத்துக்கும் வெறுப்புக்கும் ஆசி கூறி விட்டு மாள்வதில் யாருக்குத்தான் என்ன பலன் ஏற்படும் என்பது விளங்கவில்லை.

இதை ஏன் இவ்வளவு தூரம் எழுதுகிறோம் என்றால் இவ்வளவும் போதாமல் இனியும் வெறும் செல்வவான்களாகவே வெற்றி பெறும்படியான மாதிரியில் தேர்தல் தொகுதி இனியும் திருத்தப்படப்போகின்றதென்று தெரிய வருவதாலேயே இதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

தோழர்களான டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி.கல்யாணசுந்திர முதலியார், ஜார்ஜ் ஜோசப், வி.ஓ. சிதம்பரம் பிள்ளை முதலியவர்களை காங்கிரசைவிட்டு விரட்டி அடித்த பார்ப்பனர்கள் இப்போது பார்ப்பனரல்லாதார் என்கின்ற முறையில் கெஞ்சிக் கெஞ்சி யெப்படிப்பட்டவர்களை காங்கிரசில் சேர்க்கப் பிரயத்தனப்படுகிறார்கள் என்று பார்த்தால் காங்கிரசின் நிலைமையும் காங்கிரஸ்காரர்கள் (பார்ப்பனர்கள்) நடந்து கொண்டதின் அறியாமையும் நன்றாய் விளங்கும். ஆகவே காங்கிரசானது தனது தந்திரங்களின் பயனாய் ''விலங்கைத் தறித்துவிட்டு குட்டையில் மாட்டிக் கொண்டது'' போல் ஆகப்போகிறது என்பது நிச்சயம்.

**குடி அரசு - தலையங்கம் - 23.02.1936**



RangaRakes tamilnavarasam.com

# தொழிலாளருக்கு காங்கிரஸ்காரர் துரோகம்

இந்திய சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தொழிலாளர் சம்பளப் பட்டுவாடா மசோதாவில், முதலாளிகள் பிரதிநிதி தோழர் மோடி கொண்டு வந்த திருத்த விஷயமாகக் காங்கிரஸ் அங்கத்தினர் நடந்து கொண்ட தோரணையினால் இந்தியத் தொழிலாளர் பிறப்புரிமை பறிமுதலாகியிருக்கும் உண்மையைத் தொழிலாளர் உணர்ந்து கொண்டு விட்டது பாராட்டத்தக்கதே. சென்னையிலும், கோவையிலும் நடைபெற்ற கண்டனக் கூட்டங்களினால் இவ்விஷயத்தில் தொழிலாளர் கொண்டிருக்கும் மனக்கொதிப்பு நன்கு வெளியாகிறது. தோழர்கள் சாமி வெங்கடாசலம் செட்டியாரும், தாசும் நடு நிலைமை வகித்ததினாலேயே, தோழர் மோடி திருத்தம் நிறைவேறிய தென்றும், மற்ற காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் எல்லாம் தோழர் மோடி திருத்தத்துக்கு விரோதமாகவே வோட்டுக் கொடுத்தார்கள் என்றும், சாமி வெங்கடாசலம் செட்டியாரும், தாசும் வியாபாரத் தொகுதியின் பிரதிநிதி களாதலால் அத்தொகுதி வாக்காளர்கள் விருப்பத்தின்படி நடக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்றும், கோவை டவுன் ஹால் மைதானக் கூட்டத்தில், ஒரு காங்கிரஸ் பார்ப்பனர் ஒரு நொண்டிச் சமாதானம் கூறி, காங்கிரஸ்காரர் செய்த துரோகத்தின் கொடுமையை மறைக்க முயன்றிருப்பதாகத் தெரிகிறது. தோழர் மோடி திருத்தத்துக்குச் சாதக பாதகமாக வோட்டுக் கொடுத்தவர்களின் பெயர் விபரம் பத்திரிகைகளில் வெளிவராதிருக்கையில் அப்பார்ப்பனர் கூற்றுக்கு ஆதாரம் என்ன என்பதுதான் நமக்கு விளங்க வில்லை. காங்கிரஸ்காரர்கள் மோடி திருத்தத்துக்கு எதிரிடையாக வோட்டுக் கொடுத்திருந்தால், தங்கள் பெயர்கள் பத்திரிகைகளில் வெளிவரும்படி செய்து பெரிய ஆர்ப்பாட்டம் செய்திருக்க மாட்டார்களா? காங்கிரஸ் மெம்பர்களின் புரட்டை மறைப்பதற்கு ஆகவே சாதக பாதகமாக வோட்டுக் கொடுத்தவர்கள் பெயர்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படவில்லை.

மற்றும் ஒரு விஷயம் முக்கியமாக கவனிக்கத்தக்கது என்னவென்றால் வர்த்தகத் தொகுதி வாக்காளர் விருப்பப்படி நடக்க தோழர்கள் சாமி வெங்கடாசலமும் தாசும் கடமைப்பட்டிருப்பதாகவே வைத்துக் கொள்வோம். அப்படியானால் தொழிலாளர் விருப்பப்படி நடக்கத் தொழிலாளர் பிரதிநிதிகளான தோழர்கள் ஜோஷியும், கிரியும் கடமைப்பட்டே இருக்கிறார்கள்.



அக்கடமையைச் செய்ய அவர்கள் முயன்றும் இருக்கிறார்கள். ஆயினும் சொந்தக் கட்சி பலமில்லாததினால் அவர்களது முயற்சி பயன்பெறவில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில் இதர கட்சிகளின் உதவியினாலேயே அவர்களது கோரிக்கை நிறைவேற வேண்டியதாக இருக்கிறது. காங்கிரஸ் கட்சியே இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மெஜாரட்டி கட்சியாக இருப்பதினால், தொழிலாளர் பிரதிநிதிகள் கோரிக்கைகளை ஆதரிக்க வேண்டியது அவர்கள் கடமையல்லவா? தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு ஆதரவளிக்க காங்கிரஸ் சமதர்மவாதியான தோழர் ரெங்கா ஒருவரே முன்வந்திருக்கிறார். ஏனைய காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் அவர்களை ஆதரிக்கவில்லை. இந்த ஒரு உதாரணத்தினால் முதலாளி தொழிலாளி தகராறுகள் ஏற்பட்டால் காங்கிரஸ்காரர் தொழிலாளர்களை ஆதரிக்க மாட்டார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகவில்லையா? தொழிலாளர்களின் உண்மைப் பிரதிநிதிகள் நாங்களே என்று காங்கிரஸ்காரர் சொல்லிக் கொள்வதற்குப் பொருளே இல்லையென்பது தெளிவாக வில்லையா? இனி, தொழிலாளர் பிரதிநிதி என்று பெருமையடித்துக் கொள்ள காங்கிரஸ் காரருக்கு உரிமை யுண்டா?

மேலும், தோழர் மோடி திருத்தத்தை காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் மறைமுகமாக ஆதரித்தார்கள் என்பதற்கு மறுக்க முடியாத அத்தாட்சிகள் இருக்கின்றன. தோழர் மோடி கொண்டு வந்த திருத்த பிரேரணையை சரியான முறையில் தவறில்லாமல் எழுதிக் கொடுக்கும்படி சட்ட மந்திரி சர். என்.என். சர்க்காரை, காங்கிரஸ் கட்சித் தலைவர் தோழர் புலாபாய் தேசாய் கேட்டதாகவும், அதன்படி தாம் எழுதிக் கொடுத்ததாகவும் சட்ட மந்திரி சர். என்.என். சர்க்காரே இந்திய சட்ட சபையில் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். இதனால் தோழர் மோடி திருத்தத்துக்கு தோழர் புலாபாய் தேசாய் ஆரம்பத்திலேயே ரகசியத்தில் ஆதரவு அளித்துவிட்டார் என்பது விளங்க வில்லையா? தோழர் தேசாய், பம்பாய்வாசி யானதினாலும், முதலாளிகள் நண்பன் ஆகையினாலும் தோழர் தேசாயும் முதலாளிகள் பிரதிநிதி மோடியும் கலந்தே இந்தத் திருத்தப் பிரேரணை கொண்டு வரப்பட்டது என்று யூகிப்பது தவறாகாது. காங்கிரஸ் கட்சித் தலைவர் திருத்தத்தை ஆதரித்ததனாலேயே காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் திருத்தத்தை எதிர்த்துப் பேசவே இல்லை. தோழர்கள் ரெங்காவும் கிரியும் திருத்தத்தை எதிர்த்துப் பேசியிருக்கையில் வாயாடி மெம்பர்களான தேசாய், சத்தியமூர்த்தி போன்றவர்கள் மௌனமாக இருக்கக் காரணம் என்ன?

ராஜன், அவினாசிலிங்கம், முத்துரங்கம், ராஜா, ஆரான் போன்ற தென்னாட்டு ''வீரர்கள்'' ஏன் வாய் திறக்கவில்லை? காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் கட்டுப்பாடாக எதிர்த்திருந்தால் தோழர் மோடி திருத்தம் நிறைவேறியிருக்குமா?

''ஒரு சூழ்ச்சி முறையால் சர்க்கார், புலாபாய் தேசாய் போன்ற காங்கிரஸ் தலைவர்கள் ஆதரவைப் பெற்றுவிட்டது'' என்று தோழர் ரெங்கா



RangaRakes tamilnavarasam.com

பகிரங்கமாக இந்தியச் சட்ட சபையில் கூறியிருக்கிறாரே! இதனால் மோடி திருத்தத்தை தேசாய் கம்பெனியார் பரிபூரணமாக ஆதரித்தார்கள் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி விளங்கவில்லையா?

அன்றியும் தொழிலாளர் சம்பளத்தை 15 நாட்களுக்கு ஒரு முறை கொடுக்க வேண்டுமென்று தோழர் ஜோஷி கொண்டு வந்த திருத்தத்தை தோழர்கள் கிரியும், ரெங்காவும் ஆதரித்துப் பேசியிருக்க ஏனைய காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் மௌனமாக இருந்ததேன்? மேற்கூறிய விஷயங்களினால் காங்கிரஸ்காரர்கள் தொழிலாளர் நண்பர்கள் அல்லவென்பது விளங்க வில்லையா? ''தொழிலாளருடன் எல்லா விஷயங்களிலும் காங்கிரஸ் ஒன்றுபட்டுழைக்க முடியாது'' என்று காங்கிரஸ் தலைவர் ராஜேந்திர பிரசாத் முன்னொரு சந்தர்ப்பத்தில் கூறியதின் உட்பொருளை இப்பொழுதாவது தொழிலாளர்கள் உணர்ந்துகொள்வார்களா? காங்கிரஸ் முதலாளிகள் நண்பனாக இருந்து வருவதினால் ''இன்றைய காங்கிரஸின் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை'' என்று தோழர் சுபாஷ் சந்திரபோஸ் கூறியிருப்பதைத் தொழிலாளர்கள் கவனிப்பார்களா? தேர்தல்களில் வெற்றிபெற தொழிலாளர்கள் வோட்டு காங்கிரஸ்காரர்களுக்கு அவசியந்தான். ஆனால் வோட்டைவிட அதிக முக்கியமானது பணம். காங்கிரஸ் வேலைகளுக்கும் காங்கிரஸ் வாலாக்கள் பிரயாணச் செலவுக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் முதலாளிகளே பொருளுதவி செய்து வருகிறார்கள். ஆகவே காங்கிரஸ்காரர்கள் முதலாளிகளுக்கு ஆதரவாக இருப்பது ஆச்சரியமல்ல.

கோவைத் தொழிலாளர் யூனியன் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டிருக்கும் மூன்று தீர்மானங்களையும் சர்க்கார் ஒப்புக்கொண்டு சம்பளப் பட்டுவாடா மசோதா திருத்தப்பட்டால்தான் தொழிலாளர்கள் குறைகள் நீங்கும். அதற்காக தொழிலாளர்கள் தீவிரமாகக் கிளர்ச்சி செய்ய வேண்டு மென்று விரும்புகிறோம்.

கடைசியாக, கோவை டவுன்ஹால் மைதானக் கூட்டத்தில் கூறிய ஒரு பார்ப்பனரின் அபிப்பிராயத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற வேண்டியது நமது கடமையென எண்ணுகிறோம்.

''சர்க்கார் தங்கள் விசேஷ அதிகாரத்தைக் கொண்டு எதையும் சட்டமாக்கும் சக்தி பெற்றிருக்கும் வரையில் தீர்மானங்கள் தோற்றாலும் வெற்றியுற்றாலும் ஒன்றேதான்'' என்று கூறினாராம்.

ஆம். வாஸ்தவமே. இந்திய சட்டசபை பொதுஜனப் பிரதிநிதிகளுக்குக் கட்டுப்பட்டதல்ல. அதனாலேயே சர்க்காரை எதிர்த்துத் தற்காலம் எதையும் சாதிக்க முடியாதென்றும் ஏனைய கட்சியாரைவிட காங்கிரஸ்காரருக்கு எதையும் அதிகமாகச் செய்துவிட முடியாதென்றும் நாம் அடிக்கடி சொல்லி வருகிறோம்.



அதை இப்போது ஒப்புக்கொள்ளும் இந்தக் கூட்டத்தாருக்கு அப்பொழுது இந்தப் புத்தி எங்கு போயிற்று? ''காங்கிரஸுக்கு வெற்றி, வெற்றி மேல் வெற்றி'' என்று காங்கிரஸ் வாலாக்களும் பத்திரிகைகளும் கூச்சல் போட்டனவே. அவைகளுக்கு என்ன அருத்தம்?

''நாங்கள் சட்டசபைக்குப் போனால் சர்க்காரை ஆட்டி விடுவோம்'' என்று சொன்னதின் கருத்து என்ன?

காங்கிரஸ்காரர் சட்டசபைக்கு போனபிறகு சர்க்காருக்கு எத்தனையோ தோல்விகள் ஏற்பட்டிருந்தும் சர்க்கார் அதன் போக்கில் இயங்கிக் கொண்டுதானிருக்கிறது.

எனினும் தாம் ஏதோதோ சாதிக்கப் போகிறதாக காங்கிரஸ்காரர் மேலும் மேலும் தீர்மானங்களும் ஒத்திவைப்பு அவசர பிரேரணைகளும், மசோதாக்களும் கொண்டுவந்து கொண்டே இருக்கிறார்கள். அவைகளால் பயன் விளையாது என்று தெரிந்திருந்தும் பொது மக்களை ஏய்ப்பதற்காக வீண் ஆர்ப்பாட்டங்கள் செய்து கொண்டு இருக்கும் காங்கிரஸ் மெம்பர்கள் பின்னால் விளையக்கூடிய பலாபலன்களை லக்ஷயம் செய்யாமல் மற்ற தீர்மானங்களின் மேல் நடந்து கொண்ட மாதிரியாகவே மோடி திருத்தத்தையும் எதிர்த்து ஏன் தோற்கடித்திருக்கக்கூடாது. தோற்கடித்த திருத்தத்துக்கு தன் விசேஷ அதிகாரத்தினால் சர்க்கார் ஆதரவளித்தால் அந்தப் பழியை சர்க்கார் மீது போட்டு விடலாமல்லவா?

கண்ணைத் திறந்து கொண்டு பட்டப் பகலிலே வெட்ட வெளிச்சத்திலே இந்தியச் சட்டசபையில் கண்ணாம் பூச்சி விளையாடும் காங்கிரஸ் வாலாக்கள், தோழர் மோடி திருத்த விஷயத்தில் மட்டும் பெரிய காரியக் காரனைப்போல் மீன மேஷம் பார்த்தார்கள் என்றால் கிழவிகளும் கூட சிரிக்க மாட்டார்களா! சிரித்தால்தான் என்ன? காங்கிரஸ் வாலாக்களுக்கு வேண்டியது பணம் தானே! பணம் முதலாளிகளிடம் தானே இருக்கிறது! அப்படி இருக்க காங்கிரஸ்காரர் ஏழைத் தொழிலாளிகளை எப்படி கவனிக்க முடியும்? தேர்தல்களின் போது தொழிலாளர் ''தலைவர்களுக்கு'' பணம் கொடுத்தால் தொழிலாளர்கள் இடையில் காங்கிரஸ் பிரசாரம் நடந்துவிடும் என்கின்ற தைரியம் காங்கிரஸ்காரர்களுக்கு உண்டு.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 23.02.1936**



RangaRakes tamilnavarasam.com

# ஈரோட்டில் சுயமரியாதை திருமணம்

தோழர்களே!

இன்று இங்கு நடந்த சுயமரியாதைத் திருமணம் பற்றி எனது தோழர்கள் ஈஸ்வரன், ரத்தினசபாபதி, அன்னபூரணியம்மாள் ஆகியவர்கள் பேசினார்கள். சுயமரியாதைத் திருமணம் என்பது ஒரு சீர்திருத்த முறை கொண்ட திருமணமேயாகும். சீர்திருத்தம் என்பது இன்று உலகில் திருமணம் என்கின்ற துறைமாத்திரம் அல்லாமல் மற்றும் உலகில் உள்ள எல்லாத் துறையிலும் யாருடைய முயற்சியுமில்லாமல் தானாகவே ஏற்பட்டுக் கொண்டுதான் வருகிறது.

தொழில் முறையில் கையினால் செய்யப்பட்ட வேலைகள் யந்திரத்தினால் செய்வது என்பது எப்படி தானாகவே ஒவ்வொருவருக்குள்ளும் புகுந்து அது நாளுக்கு நாள் செல்வாக்குப் பெருகிறதோ அதுபோலவேதான் இத்திருமண விஷயமும் நாளுக்கு நாள் மாறுதலடைந்து அந்த முறை ஒரு யந்திரம் போல் ஆகி வருகிறது.

யந்திரத்தின் தன்மை என்ன? என்று பார்த்தால் சுருக்கமான நேரத்தில் சுருக்கமான செலவில் குறிப்பிட்ட காரியங்கள் நடைபெறுவதற்கு தான் யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு கையாளப்பட்டு வருகிறது. அது போலவே இந்த சு.ம. திருமணமும் குறைந்த நேரத்தில் குறைந்த செலவில் குறிப்பிட்ட காரியமான திருமணம் நடத்தப்படுகிற முறை கைக்கொள்ளப் படுகிறது. இதற்குமுன் இத்திருமணங்கள் 3 நாள் 5 நாள் 1000, 2000 ரூ செலவுகளில் நடந்து வந்ததானது 50, 60க்குள் சில திருமணம் 5 ரூ. 6 ரூ க்குள் 2 மணி, 4 மணிக்குள் நடந்து விடுகிறது.

இப்படி நடப்பது என்பது சுயமரியாதை இயக்கத்தாலே என்று தோழர்கள் சொன்னார்கள். நான் இது மனிதன் அறிவு பெற்றுவருவதால்தானே ஒழிய வெறும் இயக்கமே எதுவும் செய்துவிட முடியாது என்று சொல்லுகிறேன். திருமணம் விஷயத்தில் திருத்தத்தை இப்போது இந்த 10 வருஷ காலத்திற்குள் யாரும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். இத் திருமண முறை ஏழைமக்களுக்கே மேன்மையானது என்றாலும் பணத்திமிரும் ஜாதித்திமிரும் கொண்ட முதலாளித்தன்மைக் கூட்டத்தார்களும் பின்பற்றி வருகிறார்கள்.

ஆதலால் இனி திருமண முறையைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.



ஆனால் அத் திருமணத்திற்கு முக்கியமாய் தம்பதிகள் ஜோடி சேர்த்தல், தம்பதிகள் உரிமை முதலிய விஷயங்களில் அனேக சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கின்றன.

அதாவது இப்போது இங்கு பெண்ணுக்கு தாலி கட்டப்பட்டது. இதற்கு என்னதான் தத்துவார்த்தம் சொல்லப்பட்டாலும் இந்த தாலி கட்டுவதானது ''இந்தப் பெண் இந்த மாப்பிள்ளையினுடைய சொத்து'' என்கின்ற அறிகுறிக்கு ஆகத்தான். இந்த தத்துவம் சுலபத்தில் மாறிவிடும் என்று நான் கருத முடியவில்லை. தாலிகட்டாத கல்யாணம் நடந்த போதிலும் மணப்பெண் மணமகனுடைய சொத்து என்பது மாறிவிடும் என்று நான் நினைக்க முடியவில்லை.

ஏனெனில் இத் திருமணத்துக்கு சம்மந்தப்படாத கற்பு என்பது ஒன்று பெண்கள் மீது மாத்திரம் சுமத்தப்பட்டிருக்கிறது. கற்பு என்பதை சுகாதாரத்தையும், சரீரத் தத்துவத்தையும், பொது ஒழுக்கத்தையும் பொறுத்து நான் ஆதரிக்கிறேன் என்றாலும் இன்று அந்த முறையில் கற்பு கையாளப்படுவதில்லை. உதாரணம் என்னவென்றால் கற்பு ஆண்களுக்கு வலியுறுத்தப்படுவதில்லை என்பதிலிருந்தே உணர்ந்து கொள்ளலாம். அதற்கு உதாரணம் என்ன வென்றால் இந்து கடவுள்கள் என்பவற்றிற்கும் கூட ஆண் கடவுள்களுக்கு கற்பு வலியுறுத்தப்படுவதில்லை. ஆதலால் அந்த அதாவது ஒரு பிறவிக்கு ஒரு நீதி என்கின்ற கற்பு முறை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்.

இந்த தனி உடமை தேசத்தில் இது ஒழிக்கப்படுவது என்பது சுலபத்தில் ஏற்படக்கூடிய காரியமா என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் பெண்களுக்குத்தான் கற்பு. ஆண்களுக்கு வலியுறுத்தக்கூடாது என்கின்ற தத்துவமே தனி உடமைத் தத்துவத்தைப் பொறுத்தது.

ஏன் என்றால் பெண் ஆணுடைய சொத்து என்பதுதான் இன்றைய மனைவி என்பவர்களின் நிலைமை.

எப்படி எனில் ''புருஷன் சம்பாதிக்கிறவன், சம்பாதித்த பொருளுக்கு அவனே சொந்தக்காரன், மனைவிக்குச் சோறு போட்டு சேலை கொடுத்துக் காப்பாற்றுகிறவன், மனைவி பெற்ற குழந்தைக்குத் தன் சொத்துக்களைக் கொடுக்கிறவன். குடும்பபாரமும், குடும்ப பொறுப்பும் ஏற்றுக் கொள்ளு கிறவன், ஆகவே அவனுக்கு - அவனால் - காப்பாற்றப்படுகிற - அவன் மீது பொறுப்பு விழுந்த மனைவியை அடக்கி ஆள அவனுக்கு உரிமை உண்டு'' என்பது இன்றைய சமுதாய முறைச் சட்டமாய் இருக்கிறது. இதை எப்படி ஒருவன் மறுக்க முடியும்.

சம்பாதனை, குடும்பப் பொறுப்பு, குழந்தைகள் பெற்றால் அதைக் காப்பாற்றும் திறமை ஆகியவைகள் ஒரு பெண்ணுக்கு ஏற்பட்டு இத்திறமைகள் இல்லாத ஒரு புருஷனைக் கட்டிக்கொள்வதாய் இருந்தால் மாத்திரம் ஆண்களை பெண்கள் அடக்கியாள முடியும். முடியா விட்டாலும்



RangaRakes tamilnavarasam.com

சம சுதந்திரமாகவாவது இருக்க முடியும். இதில்லாமல் எவ்வளவு சுயமரியாதையும், சம சுதந்திரமும் போதித்தாலும் பெண்களுக்கு சம சுதந்திரமும் சம கற்பு என்பதும் ஒரு நாளும் முடியக்கூடிய காரியமல்ல என்பதே எனது அபிப்பிராயம். அன்றியும் அப்படிப்பட்ட திறமை அற்றவர்களுக்கு சம சுதந்திரம் அளிப்பதும் ஆபத்தான காரியம்தான்.

ஆதலால் பெண்கள் சுதந்திரம் இந்த மாதிரி கல்யாண காலங்களில் பேசி விடுவதாலோ, ''சுத்த'' சுயமரியாதை முறையில் திருமணம் செய்து விடுவதாலோ ஏற்பட்டு விடாது.

தனி உரிமை உலகில் பெண்கள் சுதந்திரம் வேண்டு மென்பவர்கள் பெண்களை நன்றாய் படிக்கவைக்க வேண்டும். தங்கள் ஆண் பிள்ளைகளை லக்ஷியம் செய்யாமல் பெண்களுக்கே செலவு செய்து படிக்க வைக்க வேண்டும். ஜீவனத்துக்கு ஏதாவது ஒரு தொழில் கற்றுக் கொடுக்க வேண்டும்.

தாய் தகப்பன்மார் பார்த்து ஒருவனுக்கு பிடித்துக் கொடுப்பது என்று இல்லாமல் அதுவாக (பெண்ணாகவே பார்த்து) தகுந்த வயதும், தொழிலும் ஏற்பட்ட பிறகு ஒருவனை தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் கன்னிகாதானம், கல்யாணம், தாரா முகூர்த்தம் என்கின்ற வார்த்தைகளே மறைந்து அகராதியில்கூட இல்லாமல் ஒழிய வேண்டும். அன்றுதான் பெண்கள் சுதந்திரம் அனுபவிக்க லாயக்குள்ளவர்களாவார்கள்.

1, 2, 3 கூட எண்ணத் தெரியாத நிலையில் உள்ள பெண்களைக் கட்டிக்கொண்டு அவர்களுக்கு சுதந்திரம் கொடுப்பது என்றால் எப்படி முடியும் என்று யோசித்துப்பாருங்கள்.

கையில் கொடுக்கும் பணத்தை எண்ணத்தெரிய வேண்டாமா? 5 அணா கொடுப்பவனுக்கு 8 அணா எண்ணிக் கொடுத்துவிட்டால் இப்படிப்பட்ட சுதந்திரம் அக்குடும்பத்தை என்ன கதிக்கு ஆளாக்கும் என்று யோசித்துப்பாருங்கள்.

இதை நான் இங்குள்ள தாய்மார்களுக்காகவே சொல்லுகிறேன். உங்கள் பெண்களை நன்றாய் படிக்க வையுங்கள்; தொழில் சொல்லிக் கொடுங்கள்; 20 வயது வரை கல்யாணம் செய்யாதீர்கள். அப்பொழுது தான் பெண்களுக்கு சுதந்திர உணர்ச்சி உண்டாகும்.

வெறும் நகையும், அலங்காரத் துணியும், சிங்காரிப்பும் அடிமைத் தனத்துக்கு வித்து என்பதை உணருங்கள்.

ஆண்கள் தங்களை சிங்காரித்துக் கொள்ளாமலும், நகை போட்டுக் கொள்ளாமலும் இருக்கும் போது பெண்கள் மாத்திரம் ஏன் தங்களை அலங்கரித்துக் காட்ட வேண்டும். இது ஒன்றே பெண்கள் மட்டமானவர்கள் என்பதற்கும், பெண்களுக்குச் சுயமரியாதை இல்லை என்பதற்கும் ஆதாரமல்லவா என்று கேட்கின்றேன்.



அன்றியும் பெண்களுக்கு உண்மையான சுதந்திரம் கொடுக்க வயதான மாமியார் பருவப் பெண்கள் சம்மதிக்க மாட்டார்கள். ஏனெனில் தங்கள் இளம் பிராயங்களில் மாமியாரிடம் பட்ட அடிக்கும், இடிக்கும் வட்டி வாங்க தங்கள் மருமகள்மாரை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். அவர்களுக்கு பெண்கள் சுதந்திரம் என்பது ஒரு பெரிய ''குச்சுக்காரத்தனத்துக்கு'' ஒப்பாக காணப்படும். ஆனால் அப்படிப்பட்டவர்கள் தங்கள் பெண் குழந்தைகள் அவர்கள் மாமி வீட்டுக்குச் சென்று சுதந்திரமாய் இருக்கும் என்பதை நினைத்து திருப்தியடைய வேண்டும்.

ஆகையால் நான் கடைசியாக கேட்டுக்கொள்வது பெண்களை சுதந்திரத்துக்கு அருகதை உடையவர்களாக ஆக்குங்கள் என்பதுதான். அதைவிட்டு விட்டு பெண்கள் வீட்டு வேலை செய்வது, கோலம் போடுவது, சாணி தட்டுவது, பாத்திரம் கழுவுவது, கும்மியடிப்பது, கோலாட்டமடிப்பது என்பது போன்ற அடிமை வேலைக்குத் தயார் செய்யாதீர்கள். பெண்களை வெறும் பிள்ளை பெறும் யந்திரமாக்காதீர்கள். அதுவும் அந்தப் பெண்ணுக்கு இஷ்டமில்லாவிட்டாலும் பெற்றுத் தீரவேண்டிய அடிமை யந்திரமாக ஆக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக இந்த அளவுக்காவது தோழர் காத்தான் அவர்கள் இத் திருமணத்தை நடத்த முன் வந்ததற்கு அவரையும், மணமக்களையும், சுற்றத்தாரையும் பாராட்டுகிறேன்.

*குறிப்பு: ஈரோட்டில் 28.02.1936 ஆம் நாள் ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்கள் கட்டடத்தில் நடைபெற்ற சுயமரியாதைத் திருமணத்தில் ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 01.03.1936**



RangaRakes tamilnavarasam.com

# இப்போதாவது பாமர மக்களுக்குப் புத்தி வருமா?

பார்ப்பனர்கள் ஏழை மக்களுக்கு அதாவது ஏழை விவசாயிகளுக்கும், ஏழைத் தொழிலாளிகளுக்கும் ஜன்ம விரோதிகள் என்பதற்கு இன்னம் ஏதாவது ருஜுவேண்டுமா? என்று கேட்கின்றோம்.

ஏழைக் குடியானவர்கள் மசோதாவாகிய இனாம்தார் மசோதா என்பதை கொலை செய்தவர்கள் யார் - தொழிலாளிகள் மசோதாவில் சம்பளப் பிடித்தத் திருத்தத்தை ஆதரித்து தொழிலாளர் உரிமையைக் கொலை செய்தவர்கள் யார் என்பதை ஆலோசித்துப் பார்த்து காங்கிரசும் பார்ப்பனீயமும் ஏழை மக்களுக்கு அனுகூலமானதா துரோகமானதா என்பதை உணர வேண்டுகிறோம்.

இனாம்தார் மசோதா என்பதின் தத்துவம் எவன் பூமியை நேரில் கஷ்டப்பட்டு உழுது பயிர் செய்கிறானோ அவனுக்கே பூமி சொந்தமாய் இருக்க வேண்டும் என்கின்ற தத்துவத்தைக் கொண்டது. இந்த மசோதா ஒரு வழியில் சமதர்ம ஆட்சிக்கு அடிப்படையென்று கூட சொல்லலாம். ஜஸ்டிஸ் கட்சியானது உண்மையிலேயே ஒரு சமதர்ம தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே ஏற்படுத்தப் பட்டது என்று நாம் பலதடவை சொல்லி வந்திருக்கிறோம்.

அது முக்கியமாய் முதலாவதாக பிறவியிலேயே ஏழையாகவும் அடிமையாகவும் கற்பிக்கப்பட்ட மக்களின் விடுதலைக் கென்றே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அது பார்ப்பனர்களின் கொடுமைக்கும், சூழ்ச்சிக்கும் தலை கொடுக்க வேண்டியிருந்தபடியால் அதற்குத் தகுந்த நபர்களைக் கொண்டு அக்கட்சி நடைபெற வேண்டியிருந்ததினிமித்தம் பார்ப்பனரல்லாத பணக்காரர்கள், ஜமீன்தாரர்கள் ஆகியவர்கள் உதவியை நாட வேண்டியதாயிற்று. இன்றும் நிலைமை அதுபோலவே இருப்பதால் பணக்காரர்கள், ஜமீன்தாரர்கள் உதவி இல்லாமல் அக்கட்சி நடைபெற முடியாததாய் இருக்கிறது.

என்றாலும், அக்கட்சியானது அது ஆரம்பத்தில் ஏற்படுத்திக் கொண்ட கொள்கைக்கு விரோதமில்லாமல் இன்றும் நடந்து வருகிறது என்பதை அதன் எதிரிகளும் இன்றும் மறுக்க முடியாது. அக்கட்சி கொள்கைப்படி பொது மக்களுள் இருந்து வரும் ஜாதி இழிவு, ஜாதி வித்தியாசம் ஆகியவைகளை ஒழிப்பதற்கும் அரசியல் சமூக இயல் ஆகிய நிர்வாகங்களில் எல்லா மக்களுக்கும் அதாவது ''பார்ப்பான் முதல் பறையன் வரை'' சம பிரதிநிதித்துவமும், சம சந்தர்ப்பமும் இருக்கவும் பாடுபட்டு அதை ஒரு அளவுக்கு அமுலில் கொண்டு வந்து விட்டது. அதன் பிறகே மற்ற சமதர்மக் கொள்கைகளையும் அமுலுக்குக் கொண்டு வர முயற்சித்திருக்கிறது. இந்த முறையில் தான் சமூகச் சீர்திருத்தத் துறையிலும் தீண்டாமை ஒழிப்பு முதல் தேவதாசிகள் ஒழிப்பு மசோதா, விபசாரிகள் ஒழிப்பு மசோதா, தேவஸ்தானப் பணம் பொது நலமான காரியங்களுக்கு பயன்படுத்தும் மசோதா, லேவாதேவிக்காரர்கள் மசோதா, இனாம் குடிகள் மசோதா என்பவைகளான பலவற்றை அடுக்கடுக்காகக் கொண்டு வந்து சட்டங்களாக ஆக்கிக்கொண்டு வரப்படுகிறது.

இந்த மசோதாக்களில் எதையாவது ஒன்றை காங்கிரசோ, பார்ப்பனர்களோ ஆதரித்தார்கள் என்றாவது எதிர்க்காமலாவது இருந்தார்கள் என்றாவது இன்று யாராவது சொல்ல முடியுமா என்பதோடு அவைகள் எவ்வளவோ நிர்ப்பந்தங்களுக்கும் தொல்லைகளுக்கும் இடையில் நிறைவேற்றி சட்டமாக்கிய பிறகாவது அதை உண்டாக்கியவர்களின் உத்தேசப்படி அமுல் நடத்தவாவது விட்டார்களா என்பதை யோசித்தால் பார்ப்பனர்கள் யோக்கியதையும், காங்கிரசின் யோக்கியதையும் மூடனுக்கும் நன்றாய் விளங்கிவிடும். ஜஸ்டிஸ் கட்சி ஆதிக்கத்தினாலேயே டாக்டர் சுப்பராயன் மந்திரி சபையானது ஸ்தல ஸ்தாபனங்களில் சர்க்கார் நாமினேஷன் என்பதை அடியோடு ஒழித்தது. அந்தப்படியான ஒரு ஜனநாயகத்திற்கு இந்தியா பூராவுக்குமே வழிகாட்டிய அவ்வளவு முற்போக்கான வேலையைச் செய்த மந்திரிகளை ஒழிக்க பார்ப்பனர்களும் காங்கிரசும் பட்டபாடு எவ்வளவு என்பது ஒரு புறமிருக்க அந்தத் தன்மையை காங்கிரசுக்காரர்கள் எவ்வளவு தூரம் துஷ்பிரயோகப்படுத்திக் கொண்டார்கள் என்பதை நோக்கும் போது இவர்கள் அரசியல் முற்போக்குக்கு சிறிதாவது அருகர்களா என்பதும் விளங்காமல் போகாது.

ஆகவே காங்கிரசும், பார்ப்பனீயமும் இந்திய மக்களின் உண்மையான சுக வாழ்வுக்கானாலும், உண்மையான சமதர்ம வாழ்வுக்கானாலும் பிறவி எதிரிகளாய் இருக்கின்றனவே ஒழிய சிறிதும் அனுகூலமானவர்கள் அல்ல என்பதோடு இவைகளின் காலத்தில் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்பட முடியாது என்றும் சொல்லிவிடலாம்.

இனாம்தார் மசோதா என்றால் என்ன? முற்கூறியதுபோல பூமியை எவன் கஷ்டப்பட்டு உழுகிறானோ அவனே அந்த விளைவின் பயனை அனுபவிக்க வேண்டும் என்கிற, அதாவது எல்லா மக்களும் உண்மையாக பாடுபட்டு எல்லோரும் பலனை விகிதாச்சாரம் அடைய வேண்டும் என்னும் தத்துவம் அதில் இருக்கிறது. இப்போதைய முறையானது பூமிக்கு





RangaRakes tamilnavarasam.com

சொந்தக்காரன் ஒருவனாகவும் பூமியை கஷ்டப்பட்டு உழுது பயிர் செய்கிறவன் ஒருவனாகவும், பாடுபட்டு உழுது பயிர் செய்பவன் அரைப் பட்டினியாய் கிடக்கவேண்டியது, பாடுபடாமல் நிமித்திய மாத்திரமாய் சொந்தக்காரராய் இருக்கும் சோம்பேறிகள் வெள்ளாமைகளையெல்லாம் கொண்டுபோய் தன் குதிருக்குள் கொட்டிக்கொண்டு தினம் 3-வேளை குளித்து நாலு வேளை சாப்பிட்டு விட்டு தொப்பையைத் தடவிக்கொண்டு திண்ணையில் தூங்க வேண்டியது என்கின்ற முறையே இருந்து வருகிறது.

ஜஸ்டிஸ் கட்சியார்கள் இதை மாற்ற வேண்டும் என்கின்ற ஆசையின் மீதே முதல்படியாக எவன் எந்தக் குடியானவன் காலாகாலமாய் உழுது கொண்டு வருகிறானோ அவனே ஒரு குறிப்பிட்ட உரிமையுள்ள பூமிக்கு அதாவது ஏதாவது ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்வதற்கு என்று பொது மக்களால் குறிப்பிட்ட நபருக்கு மான்யம் விட்டு அந்த மான்யதாரன் அந்த பூமியை உழுது பயிர் செய்யாமல் வேறு குடியானவனுக்கு விட்டுவிட்டு அவனிடம் இருந்து பயன்பெற்று வருவதாய் இருந்தால் அந்தப் பயனைப் பற்றிய அளவுக்கு செய்யப்பட்ட ஒரு ஏற்பாடாகும்.

இந்தக்காரியத்தால் யாருக்கு என்ன நஷ்டம்? இப்படிப்பட்ட மான்ய பூமி அனேகம் ஏற்கனவே விற்றாய்விட்டது. அடமானம் போக்கியம் முதலியவை செய்தும் ஆகிவிட்டது. அனேகம் வேறு பல வழிகளில் கைமாறியும் விட்டது. இப்படிப்பட்ட நிலையில் யாருக்கும் உண்மையில் பெருவாரியான நஷ்டம் எதுவும் ஏற்பட்டுப் போய்விடுவதற்கு இடமில்லை. அப்படி இருந்தும் பார்ப்பனர்கள் கட்டுப்பாடாக காங்கிரஸ், தேசீயம், வருணாச்சிரமம் எல்லாமுமே கூப்பாடு போட்டு அச்சட்டத்தை கொலை செய்து விட்டார்கள்.

இதிலிருந்து ஏழை மக்களுக்கு ஏழைக்குடியானவர்களுக்கு நன்மை செய்கிறவர்கள் ஜஸ்டிஸ் கட்சியார்களா காங்கிரஸ் கட்சி பார்ப்பனர்களா என்பதை உணர வேண்டுகிறோம்.

இன்றுள்ள விவசாய குடியானவர்கள் நிலைமை உண்மையிலேயே சகிக்கக் கூடியதாயில்லை.

அனேக குடியானவர்கள் குத்தகைக்கும் கூலிக்கும் உழுகிறவர்களாகவே இருக்கிறார்கள்.

அவர்கள் அத்தனை பேரும் ஏறக்குறைய ஒருவேளைப் பட்டினிக் காரர்களாகவே இருப்பதுடன் அவர்களது பெண்டு பிள்ளைகளும் சேர்ந்து பாடுபட வேண்டி இருக்கிறதே ஒழிய அவர்களுக்கு படிப்போ, சுகாதாரமோ, வைத்தியமோ எல்லாம் பூஜ்ஜியமாகவே இருந்து வருகின்றன.

இதுவும் ஒரு வருணாச்சிரம தர்மம் போலவே மிராசுதார்கள் மக்கள் மிராசுதாரர்களாகவும், கூலி விவசாயி மகன் கூலி விவசாயியாகவும்



பாரம்பரியமாய் இருந்து வரும்படியாக இருந்து வருகிறது. மிராசுதாரர்களின் கல் நெஞ்சமானது குடியானவனை அடுத்த தலைமுறைக்குக்கூட அவன் பிள்ளை குட்டிகள் இருக்க முடியாமல் பட்டினியினாலேயே சாகும்படி செய்து விடுவதில் சிறிதுகூட தயங்காது. ஆனாலும் மறுபடியும் அடுத்த வருஷத்துக்கு தங்கள் பூமியை உழ ஆள் வேண்டுமே என்கின்ற சுயநலத்துக் காகவே அரை கஞ்சிக்காவது கொடுத்து அவனை உயிருடன் வைத்திருக்க வேண்டிய அவசியத்துக்கு ஆளாகிவிட்டது.

இந்தக் காரியங்களுக்கு ஏதாவது யந்திரங்கள் வந்து அது தானாகவே உழுது பயிர்செய்து வெள்ளாமையை வீட்டிற்கு கொண்டுவந்து குதிரில் கொட்டிவிடுமேயானால் கண்டிப்பாய் இந்தக் குடியான ஜனங்கள் கோடிக் கணக்காய் பிளேக்கிலும் பேதியிலும் பூகம்பத்திலும் ஒரே நாளில் போய் விடுகிற மாதிரி ஒழிந்து போய்விட வேண்டியதுதான்.

இதை, இன்று எந்த மகாத்மாவும் கவனிப்பதில்லை. எந்த தேசாபி மானியும் கவனிப்பதில்லை. மகாத்மாக்களின் யோக்கியதை ஆட்டுப்பாலும், ஆரஞ்சிப்பழ ரசமும், பஞ்சணை மெத்தையும், உபசாரத்துக்கு பற்பல தாதிகளுடன் முடிந்து விடுகின்றது.

தேசப்பக்தர்கள் கடமையோ முனிசிபாலிட்டி, ஜில்லா போர்ட், சட்ட சபை ஆகியவைகளின் ஸ்தானங்களும் ஆதிக்கங்களும் மந்திரி பதவிகளும் பார்ப்பனீய ஆட்சிகளும் என்பவையோடு முடிந்து விடுகின்றன.

கொஞ்ச நஞ்சம் ஏதாவது நன்மை செய்யக்கூடிய ஜஸ்டிஸ் கட்சி போன்ற ஸ்தாபனங்களும், நபர்களும் பார்ப்பனக் கூலிகளால் தேசத் துரோகிகள் என்று கற்பிக்கப்பட்டு விடுகின்றன.

குடியானவர்கள் சம்பந்தமான யோக்கியதைகள் இந்த லக்ஷணம் என்றால் தொழிலாளர்கள் விஷயத்திலும் காங்கிரஸ்காரர்கள் இது போலவே துரோகம் செய்து வருகிறார்கள். அதுவும் வெகு துணிவாகவே இவ்விதத் துரோகங்கள் செய்து முதலாளிமார்களிடம் பரிசு பெற்று மெத்தை மேடை வீடுகள் கட்டிக் கொள்ளுகிறார்கள். இவற்றை கொஞ்சமும் பயமில்லாமலும் வெட்ட வெளிச்சமாகவே செய்கிறார்கள்.

என்றாலும் இதை நமது மூட மக்கள் உணருவதற்கில்லாமல் தேசியமும் தேசபத்தியும் செய்து வருகின்றன.

சாமிக்காக என்று சுவாமியின் பொண்டாட்டி ஆய்விட்டதாக பொட்டுக் கட்டிக்கொண்டு குச்சுக்காரத்தனம் செய்வதில் எப்படி வெட்கத்திற்கும் இழிவுக்கும் இடமில்லாமல் போய்விட்டதோ, அதுபோலவே தேசத்துக்காக என்று தேசபக்தன் என்கின்ற பெயரை வைத்துக்கொண்டு குச்சுக்காரத் தனத்தைவிட இழிவானதான சமூகத்துரோகம் செய்து வயிறு வளர்த்தாலும் அது இன்றைய சமூக முறையில் வெட்கத்திற்கும் இழிவுக்கும் இடமில்லாமல் போய்விட்டது.



RangaRakes tamilnavarasam.com

சமுதாயம் இன்று உள்ள முறையில் இம்மாதிரி ஈன வயிறுவளர்க்கும் ஜனங்கள் இருப்பதும், இப்படி ஏழை மக்களைத் தொழிலாளி மக்களை ஒரு கூட்டம் ஏமாற்றி சுயநலமடைந்து சோம்பேறியாய் வாழ்வதும், இவற்றை யெல்லாம் அனுமதித்துக்கொண்டு ஒரு அரசாங்கம் இருப்பதும் சிறிதும் அதிசயமில்லை என்று சொல்ல வேண்டி இருக்கிறது. எது எப்படி இருந்தாலும் இப்போதாவது பாமர மக்களுக்கு அதாவது காங்கிரஸ் காங்கிரஸ் என்று கூலிகளின் பேச்சைக் கேட்டு பார்ப்பனர்களுக்கு ஓட்டு போட்டு விட்டு தலையில் ஓட்டைக் கவிழ்த்துக்கொள்ளும் பாமர மக்களுக்கு புத்தி வந்து உண்மையாக மக்கள் கூட்டத்துக்கு பாடுபடுகிறவர்கள் யார் என்பதை உணர்ந்து தங்கள் ஓட்டுகளை யோக்கியமான வழியில் பயன்படுத்தப்பட மாட்டார்களா என்றுதான் எதிர்பார்க்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 01.03.1936**



# உரிமை பெரிதா? காசு பெரிதா?

திடீரென்று தொழிலாளர் செய்யும் வேலை நிறுத்தங்களுக்கு தண்டனையாக 13 நாள் சம்பளத்தைப் பிடிக்க வேண்டுமென்று தோழர் மோடி இந்தியச் சட்டசபையில் கொண்டுவந்து நிறைவேற்றிய திருத்தம், இப்பொழுது 8 நாள் சம்பளத்தைப் பிடிக்க வேண்டுமென்று ராஜாங்க சபையில் திருத்தப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்த தோழர் பி.என். சாப்ரூவின் யோசனையை சர்.பிராங்கு நாய்ஸ் ஒப்புக் கொண்டதுடன் இவ்விஷயத்தில் அக்கரைகொண்ட அங்கத்தினர்கள் எல்லாம் அதை ஆதரிப்பதாயும் சொன்னாராம். தொழிலாளர் பிரதிநிதிகளான தோழர்கள் ஜோஷியும், கிரியும் தீராப் பொறியாக இந்தத் திருத்தத்தை ஒப்புக்கொண்டிருந்தாலும், தொழிலாளர் உரிமை பறிபோவதை நம்மால் ஆதரிக்க முடியாது. 13 நாள் சம்பளத்துக்கு பதிலாக 8 நாள் சம்பளம் பிடிப்பதினால் தொழிலாளருக்கு 5 நாள் சம்பளம் இலாபம் ஏற்படலாம். ஆனால் காசை விட உரிமையே முக்கியம். தமது உரிமைகளையும், மானத்தையும் காப்பாற்றும் பொருட்டு திடீர் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள் தொழிலாளருக்கு உண்டாகக் கூடும். ஆகவே திடீர் வேலை நிறுத்தம் செய்யும் உரிமை தொழிலாளருக்கு இருந்துதான் தீரவேண்டும். தோழர் சாப்ரு திருத்தத்தினால் தொழிலாளர் திருப்தியடையவே கூடாது. கட்டுப்பாடாகக் கிளர்ச்சி செய்தால் இந்தத் திருத்தத்தையும் ரத்து செய்ய முடியும். சென்னைத் தொழிலாளர் சங்கத்தார் விழிப்படைந்து இவ்விஷயமாகச் சிறிது சுறுசுறுப்புடன் வேலை செய்வது பாராட்டத்தக்கதே. அவர்கள் வெளியிட்டிருக்கும் வெளியீடுகள் தொழிலாளர் நிலைமையை பொதுஜனங்களுக்கு விளக்கிக் காட்ட மிக்க உதவி புரியக்கூடும். எனினும் சென்னைத் தொழிலாளர் சங்கத் தலைவர்கள் பலர் இப்பொழுதும் காங்கிரசில் நம்பிக்கை வைத்திருப்பது பெரிய அதிசயமாகவே இருக்கிறது. அசம்பிளி காங்கிரஸ் மெம்பர்கள் முதலாளிகளுடன் சேர்ந்து கொண்டு தொழிலாளர்களுக்குத் துரோகம் செய்திருப்பது பகிரங்கமான பிறகும் அவர்கள் காங்கிரசை நம்புவது பைத்தியகாரத் தனமல்லவா?

(1) ‘‘ தொழிலாளர்களுடைய நியாயமான உரிமைகளைப் பாதுகாப்பதை காங்கிரஸ் தனது வேலைத்திட்டத்தில் ஒரு முக்கிய அமிசமாகச்



RangaRakes tamilnavarasam.com

சேர்த்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் காங்கிரஸ் கட்சியினர், பொறுக்குக் கமிட்டியிலிருந்து வெளியான மசோதாவைத் தீரப் பரிசீலனை செய்து திருத்தப் பிரேரணைகள் விஷயத்தில் எவ்விதம் நடந்து கொள்வ தென்று ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். எனினும் அவர்கள் அந்தக் கடமையை அலக்ஷியம் செய்து விட்டனர். (2) தோழர் ஜோஷீயின் திருத்தப் பிரேரணைகள் பலவற்றின் மீது ஓட்டெடுத்தபோது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களில் ஒரு சாரார் பிரேரணைகளுக்குச் சாதகமாக ஓட்டுச் செய்வதும் மற்றொரு சாரார் நடுநிலைமை வகித்திருப்பதுமான துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது. (3) தோழர் மோடி ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்த பிறகேனும் காங்கிரஸ் அங்கத்தினர்கள் எச்சரிக்கை அடைந்திருக்க வேண்டும். (4) முக்கியமாக காங்கிரஸ் கட்சியினர் இந்தத் திருத்தத்தைத் தோற்கடிப்பதற்கு கட்டுப்பாடான வழியில் முயற்சி செய்யாமலிருந்தது மிகவும் வருந்தத்தக்கதாகும்''

என்றெல்லாம் காங்கிரசை எப்பொழுதும் ஆதரிக்கும் சுதேசமித்திரன் குற்றம் சாட்டுமானால் காங்கிரஸ்காரர் செய்த துரோகம் எவ்வளவு பயங்கரமான தென்று நாம் கூறவும் வேண்டுமா? ஆகவே தொழிலாளர்களும் தொழிலாளர் தலைவர்களும் காங்கிரசை நம்புவதினால் பலனேற்படாதென்பதே நமது கண்டிப்பான அபிப்பிராயம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 01.03.1936**



# திரு. வி.க. முதலியார் புறப்பட்டு விட்டார்

காங்கிரசுக்காரர்களின் அயோக்கியத்தனங்களைக் கண்டு சகிக்காமல் தோழர் திரு. வி. கல்யாணசுந்திர முதலியார் முதலியவர்கள் துணிந்து காங்கிரஸ் சிவிக் போர்டார் என்பவர்களால் நிறுத்தப்பட்ட நபர்களுக்கு விரோதமாயும், உண்மையில் தகுதி உடையவர்களுக்கு அநுகூலமாயும் பிரசாரம் செய்யப் புறப்பட்டு விட்டார்கள்.

காங்கிரஸ் சிவிக் போர்டாரால் தெரிந்தெடுக்கப்படும் மெம்பர்கள் என்பவர்களில் பலர், தெரிந்தெடுப்பு அதிகாரம் பெற்றவர்கள் என்பவர் களுக்குச் சொந்தத்தில் பணம் கொடுத்துத் தெரிந்தெடுத்துக் கொள்ளப்படு கிறார்கள் என்கின்ற புகார் திருநெல்வேலி, திருச்சி, திருவண்ணாமலை முதலிய இடங்களில் ஏற்பட்டது யாரும் அறியாததல்ல. இம்மாதிரி சூழ்ச்சியும், அயோக்கியத்தனமும் ஒழிய வேண்டும் என்பதே தோழர் முதலியார் போன்றவர்களின் முக்கிய கவலையாக இருந்திருக்குமென்று நம்புகிறோம்.

எப்படி இருந்தாலும் இப்போதாவது இவர்கள் உண்மையை உணர்ந்து கொண்டதற்கு மகிழ்ச்சி அடைகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 01.03.1936**



RangaRakes tamilnavarasam.com

# சீதை கற்பாயிருந்திருக்க முடியுமா?

## ஒரு நெருக்கடியான ஆராய்ச்சி

**- சித்திரபுத்திரன்**

சுயமரியாதைக்காரர்கள் கற்பை ஒரு மோக்ஷ சாம்ராஜ்ஜியமான சங்கதி என்று எண்ணுவதில்லையானாலும் புருஷனும் மனைவியும் ஒருவருக்கொருவர் எந்த விஷயத்திலும் நம்பிக்கை துரோகம் செய்யக் கூடாது என்பதிலும், இருவர்கள் உரிமையிலும் ஒருவருக்கொருவர் அதிகம் கூடுதல் குறைவு பாராட்டக்கூடாது என்பதிலும் மிகவும் கண்டிப்பானவர்கள்.

இந்நிலையில் இன்று ஆரியர்கள் கற்பு, தமிழர் கற்பு என்கின்ற விஷயத்தில் நடக்கும் விவகார விஷயத்தில் சுயமரியாதைக்காரர்களுக்கு வெட்கமாகத்தான் இருக்கும். என்றாலும் இன்றைய முறையில் கற்புக்கு ஒருவித மரியாதை கற்பிக்கப்பட்டு அது இல்லாததற்கு ஒருவித இழிவு கற்பிக்கப்பட்டு அவை அமுலில் இருக்கும் காலத்தில் அதைப்பற்றி பேசித் தமிழர்களுக்கு கற்பு ஆரியர்கள் வந்துதான் கற்றுக் கொடுத்தார்கள், அதற்கு முன்பு இருந்ததில்லை என்று சொன்னால் அது வகுப்பு உணர்ச்சியின் பயனாக எந்தத் தமிழனுக்கும் அவன் சுயமரியாதைக்காரனாய் இருந்தால் இன்னும் அதிகமாகக் கூட வருத்தம் வரத்தான் செய்யும். ஏனெனில் ஒரு வகுப்பை இழிவுபடுத்தி மற்றொரு வகுப்பை உயர்வுபடுத்த வேண்டும் என்கின்ற முறையில் அப்படிச் சொன்னதாகக் கருதும்போது இதற்குப் பயன் படுத்தப்படாத சுயமரியாதை உணர்ச்சியானது வேறு எதற்குத்தான் பயன்படும் என்பதனால்தான்.

ஆகவே அந்த கற்பைப் பற்றிய விவகாரத்தை விட்டு விட்டு இந்துக்கள் அல்லது ஆரியர்கள் சம்மந்தமான புராண ஆசிரியர்கள் தங்கள் தங்கள் வகுப்பு நலத்துக்கு என்று எழுதி வைத்திருக்கும் புண்ணிய சரித்திரங்கள், தெய்வீக சம்மந்தமான காவியங்கள் என்பவைகளில் கற்பிக்கப்பட்டிருக்கும் முக்கிய பாத்திரங்களுக்கு உயர்வுகளைக் கற்பிப்பதில் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டிருக்கிறார்களா? முட்டாள்தனமாக நடந்து கொண்டிருக்கிறார்களா? என்று பார்த்தால் சுத்த முட்டாள்தன மாகத்தான் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்றே கருத வேண்டியிருக்கிறது.





ஏனெனில் உதாரணமாக ராமாயணம் என்னும் காவியத்தைப் பற்றி அதில் வரும் முக்கிய பெண்பாத்திரமாகிய சீதையைப் பற்றியே யோசித்துப் பார்த்தால் இது விளங்காமல் போகாது.

முதலாவது சீதை எப்படிப் பிறந்தாள் என்பதற்கு ஆதாரமே காணோம்.

ஆனாலும் சீதையைப்பற்றிய முன் ஜன்மக் கதை ஒன்று கூர்ம புராணத்தில் உள்ளது.

அது என்னவென்றால் சீதையானவள் குசத்துவசன் என்பவனுடைய வாயில் தோன்றினாளாம். தம்பன் என்னும் அரக்கன் சீதையை இச்சித்து கேட்க குசத்துவசன் மறுக்க குசத்துவசனை அந்த அரக்கன் கொன்று விட்டானாம். பிறகு சீதை விஷ்ணுவை மணக்க ஆசைப்பட்டுத் தவம் செய்கையில் அவ்வழி வந்த ராவணன் சீதையைக் கண்டு **பலாத்காரம் செய்து விட்டானாம்.** பிறகு சீதை ராவணன் தொட்டுவிட்டதால் அந்த தோஷம் நீங்க நெருப்பில் இறங்கிவிட்டாளாம். நெருப்பில் இறங்கும் போது அடுத்த ஜன்மத்தில் லங்கையில் பிறந்து ராவணனை அழித்து விடுவதாகச் சபதம் கூறி இறந்தாளாம்.

அந்தப்படியே சீதை லங்கையில் ஒரு தாமரைப் பொய்கையில் கிடந்தாளாம். (எப்படி வந்து கிடந்தாளோ தெரியாது) அப்போது ராவணன் கண்டு எடுத்துப் போய் தன் வீட்டில் மகள் போல் வளர்த்தானாம். ஜோசியர்கள் இச்சீதை லங்கையில் இருந்தால் லங்கைக்கு ஆபத்து என்றார்களாம். அதை நம்பி ராவணன் சீதையை ஒரு பெட்டியில் இட்டுக் கடலில் விட்டு விட்டானாம். அது கரைக்கு வந்து பூமியில் புதைபட்டு விட்டதாம். பிறகு அது ஜனகன் கைக்குக் கிடைத்து அவன் எடுத்து வளர்த்து ராமனுக்குக் கட்டிக் கொடுத்தானாம்.

(சீதை போல இந்தக்காலத்தில் ஒரு குழந்தை கிடைத்தால் அதைப் பற்றிப் பொது ஜனங்கள் என்ன சொல்லுவார்கள்? என்பது ஒரு பக்க மிருக்கட்டும்.)

எல்லாவற்றையும் சைன்சுக்கு (விஞ்ஞானத்துக்கு) விரோதமாகவே ''தெய்வீக''மாக வைத்துப்பார்ப்போம்.

ராமாயணக் காவியப்படியே வால்மீகி வாக்குப்படி சீதை ராமனுடைய மனைவி, ராமன் மகாவிஷ்ணு என்னும் ஒரு வைணவக் கடவுளின் அவதாரம். சீதை மஹாலக்ஷ்மி; அதாவது மேற்படி வைணவக் கடவுளாகிய மகாவிஷ்ணுவின் மனைவியான மஹாலக்ஷ்மியின் அவதாரம். இங்கு வேறு சங்கையும் ஏற்படலாம். அதாவது விஷ்ணுவுக்கு இரண்டு பெண்ஜாதிகள் உண்டு. அவர்களுக்கு சீதேவி, பூதேவி என்றுகூடச் சொல்லுவார்கள். மற்றும் வேறுபல பெயர்களும் சொல்லுவார்கள். அப்படியிருக்க விஷ்ணு ராமாவதாரத்தில்



RangaRakes tamilnavarasam.com

ஒரு பெண்ஜாதியை மாத்திரம் அழைத்துக்கொண்டு மற்ற பெண்ஜாதியை ஏன் விட்டுவிட்டு வந்துவிட்டானோ விளங்கவில்லை. அல்லது ராமனுக்கு வேறு பல பெண்ஜாதிகளும் உண்டு என்பதாக வால்மீகி கூறுகிறபடி மற்ற பெண்ஜாதியையும் அழைத்து வந்தானோ என்பதும் தெரியவில்லை.

எப்படி இருந்தாலும் பூதேவியும் ராமாயணக்கதையில் வருகின்றாள். ஆனால் பூதேவி ராமனுக்குப் பெண்ஜாதியாய் வரவில்லை. மற்றெப்படி வருகின்றாள் என்றால் மாமியாராய் வருகிறாள். அதாவது ராமன் சீதையை விபசாரி என்று சந்தேகப்பட்டு நெருப்பில் இறங்கிவரும்படி சொன்னபோது முதல் தடவை நெருப்பில் குதித்து வந்தது போதாமல் மறுபடியும் சந்தேகப்பட்டு குதித்துவரும்படி சொன்னதில் பூமாதேவி வந்து கோபித்து தன் மகளை (சீதையை) கூட்டிக் கொண்டு போய்விடுகிறாள்.

ஆகவே விஷ்ணுவாய் இருக்கும்போது சீதேவி பூதேவி என்பவர்கள் பெண்ஜாதிகளாகவும் ராமனாய் வரும்போது பூதேவி, சீதேவி என்பவர்கள் முறையே மாமியாராயும், மனைவியாயும் வருகிறார்கள். இதுவும் இப்போதும் சில இடங்களில் நடப்பதுண்டு. அதாவது கன்றும் தாயுமாகப் பார்த்து மாடு வாங்குவது போல் தாயும் மகளும் பயன்படும்படி சிலர் கல்யாணம் செய்து கொள்வதுண்டு. சில இடங்களில் முதலில் தாயார் பயன்பட்டு பிறகு மகளும் பயன்படுவதுண்டு.

இந்தக் கதையில் ராமனுக்கு என்றாலும் சரி, விஷ்ணுவுக்கு என்றாலும் சரி, தாயும் மகளும் பயன்படுத்தப்பட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

ஏனெனில் சீதை ராமாயணக் கதையில் தான் வருகிறாளே ஒழிய அதற்கு முன்பு வந்ததாக நமக்குத் தெரியவில்லை. ஆகவே ராமாயணக் கதைக்கு பின்புதான் விஷ்ணு பெண்ஜாதி சீதை என்று ஏற்பட்டிருக்க வேண்டுமே ஒழிய அதற்குமுன் ஏற்பட்டிருக்க நியாயம் தென்படவில்லை. ஆதலால் விஷ்ணுவின் மனைவிமார் தாயாரும் மகளும் என்று சொன்னால் எப்படி மறுக்க முடியும்?

(இந்த முறைகள் ஒரு புறமிருக்கட்டும். இதனால் ஒன்றும் முழுகிப் போகவில்லை.) எப்படியிருந்தாலும் விஷ்ணு என்றாலும் சரி, ராமன் என்றாலும் சரி, அவன் ஆண் ஆனதால் அவர்களைப் பற்றிக் கேட்க யாருக்கும் அதிகாரமில்லை. எடுத்துக் கொண்ட விஷயத்தைக் கவனிப்போம்.

அதாவது சீதை கற்புடையவளாயிருந்திருக்க முடியுமா என்பதேயாகும்.

ராமாயணக் கதைக்கு ஒரு ஆதாரக்கதை - அவசியக்கதை - அதன் பூர்வோத்திரக்கதை என்பது ஒன்று வால்மீகியாலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

அது என்னவென்றால் விஷ்ணு ராமனாய் பிறக்க வேண்டிய காரணம் என்ன? லக்ஷ்மி சீதையாய் பிறக்க வேண்டிய காரணம் என்ன? சீதை என்னும் லக்ஷ்மியை மற்றொருவன் தூக்கிக் கொண்டுபோகவேண்டிய காரணம் என்ன? என்பவைகளுக்கு எல்லாம் அதில் நியாயம் சொல்லப்பட்டிருக்கிறது.

அதென்னவென்றால் விஷ்ணுவானவன் ஜலந்தராசூரன் என்கின்ற ஒரு ராக்கதனுடைய மனைவி பிருந்தையைத் திருட்டுத் தனமாக மாறு வேஷம் பூண்டு புணர்ந்துவிட்டான்.

எப்படியென்றால் ஜலந்தராசுரன் மனைவி மகா பதிவிரதையாம். அவள் புருஷனை சிவன் கொன்று விட்டானாம். (மகாபதிவிரதையின் புருஷனை சிவன் எப்படி கொன்றானோ கொலை பாதகன் அதிருக்கட்டும்) இந்த சங்கதி அவளுக்குத் தெரியாதாம். (ஏனென்றால் அவள் பதி விரதையல்லவா? எப்படித் தெரியும் பாவம்) அப்படி இறந்துவிட்ட சமயத்தில் விஷ்ணுவானவன் அந்த ஜலந்தராசுரன் போல் உருமாறி அந்தம்மாளைப் புணர்ந்து கொண்டிருந்ததாகவும் விஷ்ணுவின் புணர்ச்சி வேறுபட்டிருந்ததிலிருந்து அந்தம்மாள் இந்த உருமாறின விஷ்ணு தன் புருஷனல்ல என்பதாகத் தெரிந்து விஷ்ணுவுக்குச் சாபம் கொடுத்ததாகவும், அந்தச் சாபத்தில் “நீ என்னை கற்பை அழித்தது போல் உன் பெண்ஜாதியினுடைய கற்பை ஒரு அசுரன் அழிக்கவேண்டும்” என்றும் சபித்ததாகவும் அந்தச் சாபம் நிறைவேறவே மகாவிஷ்ணுவும் அவன் மனைவி மகாலக்ஷ்மியும் முறையே ராமனாகவும், சீதையாகவும் வந்ததாகவும் அந்த சாபம் நிறைவேறவே ராவணன் என்கின்ற அசுரன் தோன்றிச் சீதையைத் தூக்கிக்கொண்டு போனதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகவே, பதிவிரதையான பிருந்தையின் சாபம் நிறைவேறுவதற்கு ஆகவே இவ்வளவு காரியமும் ஏற்பட்டிருக்கும் போது அந்த கற்பு கெடுவது என்கின்ற பாகம் மாத்திரம் நிறைவேறப்படாமல் எப்படி பாக்கியிருக்க முடியும்? என்பது ஒரு சாதாரண கேள்வியாக ஆகிவிடமுடியுமா என்பது யோசிக்கத்தக்கதாகும்.

விஷ்ணுவானவன் ஜலந்தராசுரன் மனைவியின் கற்பைக் கெடுக்காமல் இருந்திருந்தால்தான் சீதையின் கற்பு கெடாமல் இருந்திருக்க முடியுமே ஒழிய, ஜலந்தராசுரன் மனைவியின் கற்பு கெடப்பட்ட பிறகு சீதையின் கற்பு மாத்திரம் கெடாமல் இருந்திருக்கும் என்றால் ராமாயணக் கதையாவது பொய்யாயிருந்திருக்க வேண்டும் அல்லது அதற்கு ஆதாரமான முன் கதையாவது பொய்யாயிருந்திருக்க வேண்டும்.

ஆகவே விஷ்ணு ஜலந்தராசுரன் மனைவியை என்ன என்ன செய்தானோ அதையெல்லாம் ராவணேசுரன் என்பவன் சீதையை செய்துதான் இருக்கவேண்டும் என்பது மாத்திரமல்லாமல் கதைப்படி பார்த்தால் செய்து தான் தீரவேண்டும் என்றே சொல்லுவேன்.

ஏனெனில் ஒரு அசுரன் என்பவன் மனைவியை ஒரு ஆரியன் என்பவன் இப்படி அனுபவித்தான் அப்படி அனுபவித்தான் என்று



RangaRakes tamilnavarasam.com

ஆனந்தமாகப் பச்சையாக எழுதிவிட்டு ஆரியன் என்பவன் மனைவியை அசுரன் என்பவன் அனுபவித்தான் என்கின்ற விஷயத்தில் மாத்திரம் ஜாதி அபிமானம் காரணமாக ஜாடை மாடையாய் எழுதியிருந்தாலும் விவகாரத்துக்கு வரும்போது - தாக்ஷண்யமில்லாமல் பார்க்கும் போது உண்மை வெளியாகித்தானே தீரவேண்டும்.

அன்றியும் சீதையை ராவணனிடமிருந்து மீட்கப்பட்ட பின்பு ராமன் அந்த மீட்பை அரசியல் காரியத்தை உத்தேசித்து சீதையை மீட்டதாகவும் ராவணன் அனுபவித்ததை தான் அனுபவிக்க முடியாதென்றும் சொல்லி அவளை தனது மனைவியாக ஏற்க மறுத்த சமயத்தில் சீதை தைரியமாக விளக்கமாக தன்னை ராவணன் அனுபவிக்கவில்லை என்று சொல்லவே இல்லை.

மற்றபடி என்ன சொன்னாள் என்றால் ''நான் ஒரு பெண், அபலை, ராவணன் மகா பலசாலி அவனிடம் எனது சரீரம் சுவாதீனமாய் விட்டது. நான் என்ன செய்ய முடியும்? சரீரம் அவனுக்கு சுவாதீனமாய் இருந்தாலும் என் மனம் உன்னிடத்திலேயே தான் இருந்தது'' என்று தான் சொன்னாளே ஒழிய மற்றபடி சந்தேகப்பட வேண்டாம் என்று சொல்லவே இல்லை. (இது வால்மீகி ராமாயணத்தில் உள்ளது.)

ஆகவே அந்த முறையில் பார்த்தால் சீதை கற்புடையவளாய் இருந்திருக்க முடியுமா என்பது தான் இந்த வியாசத்தின் கேள்வியாகும்.

சில தமிழர்கள் ராவணனுக்கு ஜாதி அபிமானம் காரணமாய் மேன்மையை கற்பிப்பதற்கு ஆக ராவணன் சீதையை அசோகவனத்தில் வைத்து ராஜகுடும்பத்தைச் சேர்ந்த (தன் தம்பி மகளை) பெண்ணை தோழியாக நியமித்து பத்திரமாக வைத்திருந்தான் என்று பெருமை பேசிக் கொள்ளுகிறார்கள்.

இந்தப் பெருமையைப் பற்றியும் கதையில் வால்மீகி ஜாடை மாடையாய் காட்டி இருப்பதுபற்றியும் நமக்கு இப்போது தகறார் இல்லை. ஆனால் கதையின் தத்துவப்படி - மூலகாரணப்படி சீதை கற்புடையவளாக இருந்திருக்க முடியுமா என்பதுதான் கேள்வியாகும்.

ஆரியர்கள் தேவர்கள் அசுரர்கள் என்கின்ற விஷயத்தில் யோக்கியமாய் நடந்து கொண்டார்கள் என்றால் ஏன் துரோபதை சீதை அகலியை தாரை என்கின்ற முதலிய பஞ்சகன்னிகைகள், மகாபதிவிரதைகள் கோஷ்டியில் இந்த ஜலந்தராசுரன் மனைவியின் பெயரையும் சேர்த்து இருக்கக்கூடாது? என்று கேட்கின்றேன். இந்த நான்கு ''உத்தம பத்தினிகளின்'' யோக்கியதைகளை விட பிருந்தையின் யோக்கியதை என்ன கெட்டுவிட்டது? அந்தம்மாள் பதிவிரதா தன்மைக்கு ஆதாரம் மகா விஷ்ணுவுக்கே (கடவுளுக்கே) சாபம் கொடுத்தது. அந்த சாபம் நிறைவேறிற்று என்றால் இதற்குமேல் உரைகல் வேறு என்ன என்று கேட்கின்றேன். ஆகவே ஆரியர்கள் சகல வழிகளிலும் சகல துறைகளிலும் தங்களை மேன்மைப்படுத்திக் கொள்வதும் ஆரியர்கள்



அல்லாதவர்களை இழிவு - கீழ்மைப்படுத்துவதுமான காரியத்திலேயே இருந்து வந்திருக்கிறார்கள், இருந்து வருகிறார்கள் என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை. இந்த மாதிரியான காரியத்துக்காக அவர்கள் எந்தக் காரியத்தை வேண்டுமானாலும் செய்வார்கள், செய்கிறார்கள் என்பதிலும் நாம் சந்தேகப்பட வேண்டியதில்லை. உதாரணமாக சென்னையில் அசம்பளி தேர்தலின் போது ராமசாமி முதலியாரை தோற்கடிப்பதற்காக எந்த வகையிலும் யாதொரு சம்பந்தமில்லாத ஒரு பெரும் பழியை அதாவது ராமசாமி முதலியார் ஒரு பெண்ணின் தாலியை அறுத்துவிட்டார் என்று பிரசாரம் செய்து அவரை தோற்கடித்தார்கள் என்றால் இவர்கள் இனி என்னதான் செய்யமாட்டார்கள்? இதற்குமுன் என்னதான் செய்திருக்க மாட்டார்கள் என்பது விளங்கும். ஆதலால் கண்மூடித்தனமாக எல்லா புராணங்களையும் நம்பாமலும், மேம்புல்லை மேயாமலும் நன்றாய் ஊன்றிப் பார்த்தால் அவைகளின் யோக்கியதை அத்தனையும் ஆபாசமாகத்தான் இருக்கும் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு ஆகவே இதை எழுதுகிறேன்.

**குடி அரசு - கட்டுரை - 08.03.1936**



RangaRakes tamilnavarasam.com

# பணக்காரத்தன்மை ஒரு மூடநம்பிக்கையே

மனிதனைப் பிடித்து வாட்டும் மூடநம்பிக்கைகளில் பணக்காரத் தன்மையும் ஒரு மூடநம்பிக்கையேயாகும். இந்தப் பணக்காரத் தன்மை மூடநம்பிக்கையானது மத சம்பந்தமான மூடநம்பிக்கைகளைவிட மிக முக்கியமானதும் மோசமானதுமாகும்.

பணம் இல்லாவிட்டால் கடவுளுக்குக் கூட வேலை இல்லை என்று முடிவு கட்டிவிடலாம். பணமே கடவுளுணர்ச்சிக்கும் முக்கியமாய் மத உணர்ச்சிக்கும் மற்றும் பல மூடநம்பிக்கை உணர்ச்சிக்கும் மூல காரணமாய் இருக்கிறது. பணம் என்று சொல்லுவது செல்வம் என்பதின் கீழ் வரும் எல்லாவற்றையும் பொறுத்தது. அச்செல்வத்தன்மைக்கு அடிப்படையானது புகழ் ஆசை என்று தான் சொல்ல வேண்டும். அப்புகழ் ஆசை என்பதும் வெறும் சுயநலத்தையே அடிப்படையாகக் கொண்டதே தவிர மற்றப்படி செல்வ சம்பந்தமான புகழில் ஆசையில் வேறு எவ்வித பகுத்தறிவும் காண முடியவில்லை.

சமூகத்தில் தான் பெரியவனாய் இருக்க வேண்டும் என்கின்ற உணர்ச்சி எல்லா மக்களுக்கும் உள்ளது என்று ஒரு சாரார் வாதிக்கக் கூடுமானாலும் அப்புகழுக்கும், தான் பெரியவனாய் இருக்க வேண்டும் என்கின்ற தன்மைக்கும் பணம் சேர்ப்பது என்பதை சாதனமாகக் கொண்டதானது மூடநம்பிக்கையில் பட்டதேயாகும்.

மனிதனுக்கு சுயநலமும் புகழ் ஆசையும் இல்லாமல் இருக்காது என்பது ஒரு அளவுக்கு உண்மைதான். ஆனால் அதற்கு சாதனம் செல்வம் சேர்ப்பது என்பது இயற்கையாய் ஏற்பட்டதல்ல என்போம். ஒரு மனிதன் மேல் லோகத்தில் போய் சுகமாய் (மோட்சத்தில்) இருக்க இந்த லோகத்தில் கடவுள் தயவும் புண்ணியமும் சம்பாதிக்கலாம் என்று சில காரியங்கள் செய்ய எப்படி கற்பிக்கப்பட்டிருக்கிறானோ, அது போலவே தான் சுயநலத்துக்கும், புகழுக்கும் பணம் சம்பாதிப்பதை சாதனமாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறான். இவனுக்கு முன் பிறந்த மற்ற எல்லோரும் செய்வதைப் பார்த்து இவனும் செய்கிறான். அதனால் அச்செல்வம் தேடி செலவழிப்பதால் ஏதோ சில சௌகரியங்கள் ஏற்படுவதாக கருதிக் கொள்ளுகிறான். மற்றவனும் இவனை பெரியவனாக மதிக்கிறான் என்றாலும் இச்செல்வத்தால் உண்மையில் எவ்வித பலனும் அடைவதில்லை. தன்னைப் பார்த்து பிறர் செல்வவான் என்று



சொல்லுவதை ஒரு புகழாகவும் தனக்கு இவ்வளவு செல்வம் இருக்கிறது என்று நினைத்துக் கொள்வதை தான் ஏதோ ஒரு பெரிய பலன் அனுபவிப்ப தாகவும் கருதிக்கொள்ளுகிறான்.

மேலும் ஒருவன் செல்வவானாய் இருப்பதற்காக அவனுக்கு சில கடமைகள் இருக்கிறது. அக்கடமைகளை நிறைவேற்றுவதையும், தான் ஏதோ ஒரு பெரும் பயன் அனுபவிப்பதாகக் கருதிக் கொள்கிறான். ஒருவன் போலீசு அதிகாரியாய் இருப்பதற்காக அவனுக்குள்ள கடமைகளைச் செய்யும் போது அவன் எப்படி தன்னை ஒரு பெரிய தலைவனாக நினைத்து எப்படி மகிழ்கிறானோ அவனைப் பார்த்து பிறர் அவனை அதிகாரி என்று எப்படி நினைக்கிறார்களோ அவ்வளவுதான் செல்வவான் தான் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்தும் போது தன்னை நினைத்து மகிழ்வதும் இவனைப் பார்த்து மற்றவர்கள் நினைப்பதும் என்றுதான் சொல்ல வேண்டும்.

செல்வவான் என்று நினைத்துக் கொள்வதும் பிறர் இவனை செல்வவான் என்று சொல்லுவதும் தவிர செல்வவானுக்கு வேறு என்ன நலம் இருக்கிறது என்று பார்த்தால் அதிலுள்ள மூடநம்பிக்கை நன்றாய் விளங்கும். செல்வவான் அல்லாத சாதாரண மனிதன் அதாவது வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்டும்படியான ஒரு சம நிலையுள்ள மனிதன் இன்னமும் தெளிவாய்ச் சொல்ல வேண்டுமானால், தன்னுடைய தேவைகளுக்காக தன் வருமானமல்லாமல் மற்றொருவனைப் போய் கெஞ்ச வேண்டிய அவசிய மில்லாத மனிதனின் நிலைமையை விட செல்வவான் என்கின்றவன் நிலைமை எந்த விதத்தில் மேலானது - நன்மையானது என்பதை யோசிப்போம்.

செல்வம் (பணம்) தேடவேண்டும் என்று கருதி அதில் இறங்கியவ னுடைய வேலை அவனது வாழ்நாள் முழுவதையும் கொள்ளை கொண்டு விடுகின்றது. பணம் சம்பாதிப்பதில் போட்டி, பணக்காரன் என்று காட்டிக் கொள்வதில் போட்டி, அதற்கேற்ற புகழ் சம்பாதிப்பதில் போட்டிகள் இத்யாதி போட்டிகள் இவனது ஊக்கத்தையெல்லாம் கொள்ளை கொண்டு விடுகிறது.

இவ்வளவோடல்லாமல் சம்பாதித்த பணத்தை காப்பாற்றுவதில் உள்ள சிரமம், இவற்றால் ஏற்படும் எதிரிகள், பொறாமைக்காரர்கள் ஆகியவர்களின் தொல்லைக்கு ஈடுகொடுப்பது ஆகியவை பெருங்கவலைக்கு இடமாய் விடுகிறது. பிறகு செல்வவானாய் இருப்பதற்கு ஆக செய்ய வேண்டிய கடமைகள் இடையறாமல் அதாவது அறுபது நாழிகையும் ஓடும் யந்திரம்போல் செய்து கொண்டே இருக்க வேண்டியதாய் இருக்கிறது.

இவ்வளவோடு இந்தக் காரியம் முடிந்துவிட்டது என்று சொல்லுவதற்கு இல்லை. செல்வம் படைத்ததின் பலன் தனக்குப் பிறகு இந்தச் செல்வம் என்ன கதி ஆவது என்கின்ற கவலையானது மற்றொரு பெரும் பாகமான கவலைக்கு இடமானது. எதிர்பாராத வார்சுகள் ஆண் பிள்ளையோ பெண்பிள்ளையோ அல்லது இரண்டு மில்லாமல் எவனுக்கோ பிறந்த



RangaRakes tamilnavarasam.com

தத்துப்பிள்ளையோ என்பதொருபக்கமிருக்க ஆண் பிள்ளையானால் எத்தனை பேர்கள்? பெண் பிள்ளையானால் எத்தனை பேர்கள்? அவர்களுக்கு வரும் பெண்ஜாதி புருஷன்மார் யார்? அவர்கள் இச் செல்வத்தை எப்படி அனுபவிப்பார்கள்? எத்தனை நாளைக்கு வைத்து இருப்பார்கள்? தான் எத்தனை நாள் எவ்வளவு கஷ்டப்பட்டு எந்தஎந்த வழியில் தேடிய செல்வத்தை எத்தனை நாளில் எந்த எந்த வழியில் பாழாக்கி விடுவார்கள்? என்கின்ற கவலை லேசானதல்ல என்பது மாத்திரமல்லாமல் அந்தச் செல்வங்கள் 100-க்கு 75 விகிதம் ஒரு செல்வவான் முன்பாகவே மற்ற செல்வவான் செல்வம் அவன் பிள்ளைகளால் பாழாக்கப்படுவதையும் பார்க்கக்கூடியதாகவே இருக்கிறது.

அன்றியும் கஷ்டப்பட்டு தேடிய செல்வவான், தேடிவைப்பதிலேயே கவலையாய் இருந்து சாக அவன் பின் வார்சு ஒருபாடும் படாமல் அதை அல்லது அதன் அனுபவத்தை தான் ஒரு செல்வவான் என்கின்ற உணர்ச்சியிலேயே அனுபவித்துக் கொண்டிருப்பதையும் பார்த்து வருகிறான். தத்துக்கு வருகிறவன் புதையல் எடுத்தது போல் அனுபவிக்கிறான்.

ஆகவே செல்வமானது செல்வவானுக்குப் பின்னால் இந்தப்படி யெல்லாம் ஆவதில் செல்வவானுக்கு ஏற்படும் பயன் என்ன? எவ்வளவோ கஷ்டம் - கவலை - தொல்லை ஆகியவைகள் அனுபவித்துப் பொருள் தேடியதற்கு இதுதான் பயன் என்றால் சொத்து சேர்ப்பது என்பது ஒரு மூடநம்பிக்கை அல்லது குருட்டு பழக்க வழக்கத்தில் பட்டது என்பதில் என்ன ஆட்சேபணை இருக்கின்றது என்று கேட்கின்றோம்.

ஒரு தாசி ஓடி ஓடி ஒரு இரவுக்கு 10 புருஷர்கள் வீதம் கூடி 10 ஆயிர ரூபாய் நகையும், 2 வீடும், 5, 6 ஏக்கர் நஞ்சை பூமியும் எல்லாம் 30, 40 ஆயிரம் ரூபாய் சம்பதிக்கிறாள். கிழப்பருவம் வந்த உடன் மகளைத் தயார் செய்கிறாள். மகள் தயாரானதும் மகளிடம் செல்வத்தை ஒப்புவித்து விட்டு செத்துப் போகிறாள். தாய் செத்த பிறகு மகள் தனக்கு இச்சையான ஒரு நாயகனை ஆசை நாயகனாக வைத்துக் கொண்டு அவன் இஷ்டப்படி சல்லாபமாய் விளையாடி 2, 3 வருஷத்தில் சொத்துக்களை எல்லாம் தொலைத்துவிட்டு ஓட்டாண்டியாகி இருவரும் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்ட எத்தனையோ கேசுகள் நாம் பார்க்கின்றோம். இதுபோலவே வியாபாரியோ, வக்கீலோ, மிராசுதாரனோ, லேவாதேவிக்காரனோ, உத்தியோகஸ்தனோ எவனாய் இருந்தாலும் பணம் சம்பாதிப்பதில் அவனவன் படும் கஷ்டமும் அவன் பிள்ளை வந்து அதைத் தொலைப்பதில் நடந்து கொள்ளும் மாதிரியும் நாம் அறியாததல்ல.

ஏதோ ஜாதியானது பிறவியால் வருவதுபோல் செல்வமும் பிறவியினால் வரும்படியாக ஜமீன் - அரசு - முதலிய முறைகளில் சட்டத்தின் மூலம் காப்பாற்றப்பட்டு வருணாச்சிரமதர்மம் போல் சொத்துக்கள் அழிக்க வசதி இல்லாமல் இஷ்டப்படி அனுபவிக்க வசதி இருக்கிற பதினாயிரத்துக்கு ஒரு



குடும்பம் அதுவும் மூத்த பிள்ளை மாத்திரம் என்பது தவிர மற்ற குடும்பங்கள் எவ்வளவு செல்வமுள்ளதானாலும் 2, 3 தலைமுறைகளில் ஏதாவது ஒரு மாற்றத்தை அடைந்து செல்வவான் என்கின்ற தன்மைபோய் மாஜி செல்வவான் குடும்பம் என்று சொல்லத்தக்க நிலையில் எத்தனை குடும்பங்களை நேரில் பார்க்கிறோம்.

புதிய செல்வவான்கள் என்கின்ற முறையில் கவர்ன்மெண்ட் ஷாப்புக்கள் போலவும், பாங்கி காஷியர்கள் போலவும் வரவு செலவு செய்து சம்பாதித்து சம்பாதித்து பின் வார்சுக்கு கணக்கு ஒப்புவித்து விட்டுப் போகிறவர் எத்தனை பேரைப் பார்க்கிறோம்.

ஆகவே செல்வவான் என்பதில் இருக்கும் புகழும் சுயநல அனுபவமும் எவ்வளவு இருக்கிறது என்று பார்த்தால் முன் குறிப்பிட்டதுபோல் பணக்காரத் தன்மை என்பது மூடநம்பிக்கையும், குருட்டு பழக்க வழக்கமுமாய் இருப்பதும் அதற்கு அனுகூலமாக அரசாங்கமும் சமூக கட்டுப்பாடும் இருப்பதும் நன்றாய் விளங்கும்.

நிற்க ''சுயநலம் பேணுவதும் புகழ் விரும்புவதும் மனித இயற்கை என்பதை மேலே ஒப்புக்கொண்ட பிறகு அதற்கு சாதனமான காரியங்களை செய்வது என்பதில் மனிதன் பணம் சேர்க்காமலும் பணக்காரன் என்கின்ற புகழ் விரும்பாமலும் இருக்க எப்படி முடியும்? ஆகவே இது இயற்கையே ஒழிய மூடநம்பிக்கையோ குருட்டு பழக்க வழக்கமோ அல்ல'' என்று சொல்ல வரலாம்.

இதற்கு மேலேயே சமாதானம் சொல்லப்பட்டது. அதாவது மோக்ஷத்தை விரும்புவது எப்படி மூடநம்பிக்கையோ அதுபோல் தான் செல்வத்தையும் அதனால் ஏற்படும் புகழையும் விரும்புவதாகும் என்று சொன்னோம். ஆனால் அது நடைபெறுவதற்கு காரணம் அரசாங்கமும் சமூகக் கட்டுபாடும் என்றும் காட்டினோம். அரசாங்கமும் சமூகக் கட்டுப்பாடும் தனி உடமை தத்துவமான முறையில் இருக்கிறபடியால் அவை நடக்க முடிகின்றது.

வேதாந்த முறை என்பது போன்ற பொதுஉடைமை தத்துவ முறையுள்ள அரசாங்க ஆட்சியும் சமூக கட்டுப்பாடும் உள்ள இடத்தில் சுயநலத்துக்கும் புகழுக்கும் செல்வம் சேர்த்து பணக்காரன் ஆகிறது என்கின்ற தத்துவம் சாதனமாய் இருக்க முடியவே முடியாது. அங்கு எப்படி மதவாதிகள் நாஸ்திகர்களை வெறுத்து குற்றவாளியாக ஆக்குகிறார்களோ அதுபோல் பணக்காரத் தன்மையை வெறுத்து குற்றவாளியாக்கி தண்டிக்கச் செய்கிறார்கள்.

அப்படி இருப்பதாலேயே அங்குள்ள மக்களுக்கு சுயநலம் இல்லை என்றாவது புகழில் விருப்பமில்லை யென்றாவது சொல்விட முடியுமா? என்று பார்த்தால் ஒரு நாளும் முடியாது.



RangaRakes tamilnavarasam.com

இங்குள்ள பணக்காரனுக்கு இருக்கும் சுயநலம் என்பது அவன் பணந்தேடி மீதி வைத்து, தான் எதிர்பாராத பின் வார்சுக்கு தன்னால் அடக்கி ஆள முடியாதபடி அனுபவிக்க விட்டுவிட்டுப் போவதும் தன்னை மாத்திரமோ தன் குடும்பத்தை மாத்திரமோ பணக்கார பிரபுக் குடும்பம் என்று சொல்லும் படியானதையும் சாதனமாய் கருதுகிறான்.

அங்குள்ளவன் சுயநலமும் புகழாசையும் தானும் தனது தோழனும் கூடுமான அளவு பாடுபட்டு தேடி தேவையான அளவு விகிதாச்சாரம் வரும்படி அனுபவித்து மீதி உள்ளதை தானும் தன் தோழர்களும் இன்னமும் கொஞ்சம் முற்போக்கான முறையில் பெருக்கி தேவையான அளவு சரிசமமாய் அனுபவித்து பொதுவில் பொறுப்பு ஏற்றுக்கொள்வதை சாதனமாய் கருதுகிறார்கள்.

இதிலிருந்து அடிப்படையான இயற்கை என்னும் சுயநலமும் புகழாசையும் மாறாமலேயே சாதனங்கள் மாத்திரம் மாறி இருக்கிறதை உணரலாம்.

ஆகவே பணக்காரத் தன்மை மூட நம்பிக்கையிலும் குருட்டுப் பழக்க வழக்கத்திலும் பட்டது என்பதும், பணக்காரன் என்று இல்லாமல் எல்லோரும் சரிசமம் என்னும் தன்மை பகுத்தறிவில் பட்டது என்பதும் விளங்கும்.

**குடி அரசு - தலையங்கம் - 08.03.1936**



# திருச்செங்காடு தாலுகா ஆதிதிராவிடர் 5 – வது மகாநாடு

தோழர்களே!

இந்த உங்கள் மகாநாட்டில் உங்களுக்கு உள்ள உற்சாகத்தைப் பார்த்து மிகுதியும் மகிழ்ச்சி அடைகிறேன். எனது உடல் அசௌக்கியத்தால் நான் வருவதற்குப் பயந்தேன். நான் புறப்படுமுன் பல தோழர்கள் இந்நிலையில் போகக்கூடாது என்று சொன்னார்கள். நீங்கள் ஏமாற்றமடைந்து விடுவீர்கள் என்று சமாதானம் சொல்லிவிட்டு புறப்பட்டு விட்டேன்.

இப்போது இங்கு வந்தபின் உங்கள் உற்சாகத்தைப் பார்த்ததில் இங்கு நான் வராதிருந்தால் நான்தான் ஏமாற்றமடைய வேண்டியவனாவேன்.

இவ்வளவு தூரம் இந்த கிராமங்களில் போதிய தண்ணீர் வசதியும் வழி நடைபாதை வசதியும் இல்லாத நடுக்காடுகளில் இப்படிப்பட்ட மகாநாடு கூட்டுவதும், உற்சவம் போல ஆண் பெண்கள் கூடுவதுமான காரியம் உங்கள் விடுதலை விஷயத்தில் உங்களுக்கு உள்ள ஆர்வமே காரணம் என்பதும், உங்கள் பூரண விடுதலைக்கு நீங்கள் உரியவர்களாகி விட்டீர்கள் என்பதும் எனது அபிப்பிராயம்.

இப்படிப்பட்ட உணர்ச்சியும் முயற்சியும் உங்களுக்கு ஏற்படும் படியாகச் செய்தது இந்த பிரிட்டிஷ் அரசாங்கமும் பார்ப்பனரல்லாதார் கிளர்ச்சியுமே என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள்.

உங்களில் சில பார்ப்பனக் கூலிகள் பிரிட்டிஷ் அரசாங்கம் உங்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்றும், பார்ப்பனரல்லாதார் கிளர்ச்சி உங்களுக்கு ஒரு நன்மையும் செய்யவில்லை என்றும் கூறி, பார்ப்பனர் களிடம் கூலி பெற்று வாழுவார்கள். அந்தக் கூட்டம் உங்களில் மாத்திரமல்ல எங்களிலும் இருக்கிறார்கள். ஆதலால் ஒரு அளவுக்கு அப்படிப் பட்டவர்கள் வாழ்க்கைக்கு இடம் கொடுத்துத் தான் ஆகவேண்டும்.

பிரிட்டிஷ் ஆட்சி இந்த நாட்டிற்கு வந்து 200 வருஷங்கள் ஆகியும் இந்த 15, 20 வருஷத்தில் உங்கள் சமூகத்துக்கு ஏற்பட்ட முற்போக்கானது முந்தின 50 - 100 வருஷ காலத்தில் கூட ஏற்படவில்லை என்று சொல்லலாம். ஏனெனில் இந்த 15, 20 வருஷகாலம் வரை பார்ப்பனரும் அரசாங்கமும் கூட்டு வியாபாரம் போல் ஆக்ஷி நடத்தினார்கள். பிரிட்டிஷ் ஆட்சியே



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனரிடம் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தத்தின் மீதே இந்த நாட்டில் பலம் பெற ஆரம்பித்தது என்று சொல்லலாம். எப்படியெனில் இந்தியாவில் பார்ப்பனர்கள் மதத்தின் பேரால் செய்துவரும் அட்டூழியங்களும் ஆபாசங்களும் இழிவான காரியங்களும் அனேகருடைய ஆராய்ச்சி மூலமும், சரித்திர மூலமும் பிரிட்டிஷாருக்குத் தெரிந்திருந்தும் அவர்கள் மத விஷயத்தில் பிரவேசிப்பதில்லை என்று பார்ப்பனர்களுடன் ஒப்பந்தம் செய்தும், அதற்கு பதிலாக பார்ப்பனர்கள் நாங்கள் எந்தக் காலத்துக்கு ராஜ விஸ்வாசமற்றவர்களாக இருப்பதில்லை என்று வாக்குக் கொடுத்தும் ஆகிய இரண்டு காரியங்களே இந்த நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் யாதொரு நல்ல பயனும் ஏற்படுவதற்கில்லாமல் பார்ப்பனர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் பயன் முழுதுமே அடையும்படியாகவும் ஏற்பட்டு வந்தது.

உங்களுடைய நற்காலத்துக்கே இந்த நாட்டில் பார்ப்பனர் பார்ப்பன ரல்லாதார் என்கின்ற உணர்ச்சி ஏற்படவும், அதில் சர்க்கார் பார்ப்பனர்களுக்கு முன்போல அனுகூலமாயில்லாமல் அவர்கள் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஆகிய இரு சமூகத்தையும் ஆதரிக்க ஆரம்பித்ததும், அதன் பயனாக பார்ப்பனர்கள் தங்கள் பழைய முறைப்படி அரசாங்கத்தின் மீது விஷமப் பிரசாரம் செய்யத்தொடங்கினதும் இதற்குத் தாக்குப்பிடிப்பதற்காக அரசாங்கத்தாரும் பார்ப்பனரல்லாதாரும் உங்கள் உங்கள் உதவியை நாடவும் இதில் பார்ப்பனர்களும் போட்டி போடவும் இத்தியாதி காரணங்களால் உங்களுடைய நிலை உங்களது முயற்சி இல்லாமலே உயர்ந்து வருகிறது. ஆகவே இன்றைய பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் சண்டையும், சர்க்கார் பார்ப்பனர் சண்டையும் உங்களுக்கு நல்ல பலனைக் கொடுத்து வருகிறது.

இந்தச் சண்டை இல்லாவிட்டால் உங்கள் நிலை மிகவும் மோசமாகவே இருந்திருக்கும். பார்ப்பனர்களின் பேராசையினுடையவும் சூழ்ச்சியினுடையவும் பலன் தான் இன்று இந்த நாட்டுக்கு பல நன்மைகள் ஏற்பட்டு வருகிறது.

என்றையதினம் பார்ப்பனர்களின் யோக்கியதை பொதுமக்கள் உணரும்படியாக ஆயிற்றோ அன்றே அவர்களது மத சம்மந்தமான சூழ்ச்சியும், கடவுள் பேரால் அவர்கள் மக்களை ஏமாற்றி வந்த பித்தலாட்டமும் மக்களுக்கு தாராளமாய் விளங்கும்படியாக ஆகி விட்டது.

இந்த இரண்டு சூழ்ச்சிகளும் இனிப் பலிக்காது என்று அவர்கள் உணர்ந்து கொண்ட பின்பேதான் இப்போது சுயராஜ்ஜியம் என்றும் அரசியல் புரட்டுகளை ஆரம்பித்து அதன் மூலம் அவர்களது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக்கொள்ள முயற்சித்து தங்களுடைய முழு பலத்தையும் காட்டி வருகிறார்கள். இது தான் அவர்களுக்கு கடைசி ஆயுதம். இந்த ஆயுதமும் சீக்கிரத்தில் பயனற்றுப் போகும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

ஆனால் அவர்களது இப்படிப்பட்ட புரட்டுகளுக்கு நீங்கள் சம்மந்தப் படக் கூடாது என்பதுதான் எனது ஆசை.



உங்களுக்கு ஏற்பட்ட ஒரு நல்ல சந்தர்ப்பத்தைப் பார்ப்பனர்கள் பாழாக்கிவிட்டார்கள். உங்கள் நலத்துக்கு வேண்டிய காரியங்களை அரசியல் ஸ்தாபனத்தின் மூலம் நீங்களே செய்துகொள்ளும்படியான ஒரு அருமையான சந்தர்ப்பம் உங்களுக்கு அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டது. அது என்னவென்றால் சட்டசபைகளிலும் மற்ற சபைகளிலும் உங்களுக்கு உங்கள் சமூகத்தாராலேயே தெரிந்தெடுத்துக்கொள்ளும்படியான பிரதிநிதித்துவ உரிமையாகும்.

இந்த உரிமை கிடைத்ததற்குக் காரணம் சுயமரியாதை இயக்கத்தின் கிளர்ச்சியேயாகும். எப்படி எனில் உங்களுடைய குறைகள் இங்கிலாந்து பார்லிமெண்டுக்குத் தெரியக்கூடாது என்பதற்காகவே பார்ப்பனர்கள் சைமன் கமிஷனை பஹிஷ்கரிக்க சூழ்ச்சி செய்தார்கள். அது சுயமரியாதைக் காரர்கள் இடம் பலிக்கவில்லை. அவர்கள் உங்கள் சமூகத்தை கிளப்பிவிட்டு உங்கள் குறைகளை தெரியும்படி செய்ததுடன் உங்களுக்கு தனித்தொகுதி கொடுத்தால் போதும் மற்ற சுயராஜ்ஜியத்தை பற்றிக் கவலை இல்லை என்று சொன்னார்கள்.

ஏனென்றால் சுயராஜ்யம் என்று பார்ப்பனர்கள் கூச்சல் போடுவது தாழ்த்தப்பட்ட சமூகத்தார் தலையிலும் பார்ப்பனர் அல்லாதார் தலையிலும் கையை வைத்து அவர்களை அடக்கி ஒடுக்கி தாங்கள் ஆளவேண்டும் என்பது தான். இனி அதற்கு இடமில்லாமல் போகும் காலம் வந்துவிட்டது. நீங்கள் மாத்திரம் எந்தக் காரணம் கொண்டும் அரசாங்கத்தாரோடு பிணக்குதல் வைத்துக்கொள்ளாதீர்கள். அரசாங்க தயவு இருந்தால் ஒழிய உங்களுக்கு ஒரு காரியமும் நடக்காது. காங்கிரஸ்காரர்கள் உங்கள் பெயர்களைச் சொல்லி ஊர் ஜனங்களிடம் கொள்ளையடித்து ஏதோ ஒரு நாளைக்கு கருமாதிக்கு எண்ணெய் சீயக்காய் கொடுப்பதுபோல் ஒரு ஸ்பூன் எண்ணெயும், ஒரு சிட்டிகை சீயக்காய் தூளும் கொடுத்துவிட்டு பாக்கியெல்லாம் ஹரிஜன சேவை என்னும் பேரால் பார்ப்பனர்கள் வயிற்றில் கொட்டிக் கொள்ளுகிறார்கள்.

இதனால் உங்களுக்கு என்ன பலன் ஏற்பட்டது? உங்களை ஏமாற்றுவ தல்லாமல் இதில் வேறு எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை.

முன்னமேயே பெருத்த ஏமாற்றம் ஒன்று நடந்தாய் விட்டது. அதுதான் முன் சொன்ன உங்களுக்கு கிடைத்த தனித்தொகுதியை ஏமாற்றின காரியமாகும். காந்தியார் நீலித்தனம் செய்து பட்டினிப் புரட்டால் தலையில் கல்லைப் போட்டுவிட்டார். எவ்வளவோ தைரியமும் உறுதியும் உள்ள உங்கள் தலைவர் அம்பத்கார் அது விஷயத்தில் ஏமாந்துவிட்டார். அரசாங்கத்தின் மீது பழி சொல்ல இனி உங்களுக்கு யோக்கியதை கிடையாது. உங்கள் கஷ்டத்துக்கு ஆக யார் மீதாவது குற்றம் கூறவேண்டுமானால் அது காந்தியார் புரட்டின் மீதும், அம்பத்காரின் ஏமாந்ததனத்தின் மீதும்தான் குறை கூறவேண்டும். ஆனபோதிலும் ஒன்றும் முழுகிப்போய் விடவில்லை என்று தைரியம் செய்துகொண்டு இனியாவது விழித்திருந்தால் நலமடையலாம்.



RangaRakes tamilnavarasam.com

ஜஸ்டிஸ் கக்ஷி தலைவர் பொப்பிலி ராஜா அவர்கள் உங்களுக்கு தனித் தொகுதிக்கு வழிகாட்டி விட்டார். அதாவது சென்னை நகர முனிசிபல் சட்டத்தில் உங்களுக்கு தனித் தொகுதி ஏற்படுத்தி விட்டார். இது ஒரு பெரிய காரியம் என்றுதான் சொல்லவேண்டும். டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் உங்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்தார். தோழர் முத்தய்ய முதலியார் அவர்கள் உங்களுக்கு சர்க்கார் உத்தியோகத்தில் ஸ்தானம் ஒதுக்கி வைத்தார். பொப்பிலி ராஜா அவர்கள் உங்களுக்கு தனித் தொகுதி உண்டாக்கி வைத்தார். ஆனால் மற்ற ஸ்தாபனங்களிலும் தனித் தொகுதி ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். இவற்றின் பயனாக உங்கள் சமூகம் அடைந்து வரும் நன்மையை எந்த மூடனும் ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது. இவையெல்லாம் ஏற்பட சுயமரியாதைக்காரர்கள் எவ்வளவு தூரம் உழைத்தார்கள் என்பதும், அவர்களது ஆதரவு இல்லாமலிருந்தால் காங்கிரசுக்காரர்கள் எவ்வளவு சூழ்ச்சிகளும் முட்டுக்கட்டையும் போட்டு வெற்றிபெற்று இருப்பார்கள் என்பதும் நீங்களே யோசித்துப் பார்த்தால் விளங்கிவிடும்.

இப்போதும் உங்களை ஏமாற்ற பார்ப்பனர்கள் மறுபடியும் சூழ்ச்சி செய்து தான் வருகிறார்கள். அதாவது உங்கள் தலைவர்கள் என்று வியாபாரம் செய்து கொண்டிருக்கும் சில சுயநலமிகளைப் பிடித்து அவர்களுக்கு 1000, 2000 கொடுத்து உங்கள் நலத்துக்கு விரோதமாய் அதாவது தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனித்தொகுதி வேண்டாம் என்று சொல்லும்படி செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட தலைவர்கள், பக்கத்தில் படுத்திருப்பவனை கழுத்தறுக்க பயப்படமாட்டார்கள். தனித்தொகுதியோ, தனியே ஸ்தானம் ஒதுக்குவதோ இல்லாமல் இருந்தால் இந்தமாதிரியான சமூகத் துரோகிகளுக்கு இன்று எந்த ஸ்தாபனத்திலாவது இடம் கிடைத்து இருக்குமா என்று யோசித்துப் பாருங்கள். சர்க்காரிடமும் ஜஸ்டிஸ் கட்சியாரிடமும் பணம் பெற்று நாமினேஷன் பெற்று பிச்சை வாங்கிக் கொண்டு இவ்வளவும் அனுபவித்தவர்கள் அதை மறந்து பார்ப்பனர்களிடம் கூலிவாங்கிக்கொண்டு குலைப்பதென்றால் இப்படிப்பட்டவர்களை தலைவர்களாகக் கொண்ட சமூகம் முன்னேறுமா என்பதை யோசித்துப்பாருங்கள்.

உங்களுடைய கடமையெல்லாம் போலிகளையும் கூலிகளையும் சுயநலக்காரர்களையும் கண்டுபிடித்து அவர்கள் வண்டவாளங்களை வெளியாக்குங்கள். அது செய்தாலே போதுமான காரியம் என்று கருதுகிறேன்.

உங்களுக்கு ஆக நாங்கள் செய்யும் காரியங்களை பார்ப்பனர்களைவிட உங்கள் சமூக துரோகிகளே அதிகமாய் கெடுத்து வருகிறார்கள்.

நீங்கள் மற்றொரு விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். உங்களை நீங்கள் இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளும் வரையில் உங்கள் ஜாதி இழிவு என்பதும் பறப்பட்டமும் தீண்டக்கூடாது என்கின்ற தன்மையும் நீங்கவே நீங்காது. ஏனெனில் நீங்கள் இந்துக்களாய் இருப்பதினால் தான் தீண்டாதவர்களாகவும் பறையர் சக்கிலிகளாகவும் இருக்கிறீர்களே ஒழிய மற்றபடி உங்களைத் தொட்டால் நாற்றமடிக்குமென்றோ நெருப்புப் பிடிக்கு மென்றோ விஷமேறும் என்றோ நீங்கள் தீண்டாதவர்களாக ஆக்கப்படவில்லை.

உங்களை ஏய்ப்பதற்கு ஆக ஏற்பாடு செய்த பொய்க்கதையாகிய நந்தனும் எவ்வளவு விபூதி பூசியும், எவ்வளவு உத்திராட்சக் கொட்டை கட்டியும் எவ்வளவு ''தெய்வீக'' காரியம் அதாவது கழனி எல்லாம் ஒரு இரவில் உழுது விதைத்து நாற்று நட்டும் பறையன் பறையனாகவே இருந்து நெருப்பில் பொசுக்கப்பட்டான் என்று தான் முடித்தார்களே ஒழிய வேறு என்ன?

இன்று உங்களில் யார்தான் மனிதனாகக் கருதப்படுகிறார்கள்? எந்த கோவிலில் விடப்பட்டார்கள்? சர்க்கார் உத்திரவும் சட்டமும் இல்லாமல் எந்த குளத்தில் தண்ணீர் எடுக்க அனுமதிக்கப்பட்டார்கள்?

ஆதலால் நீங்கள் இந்துக்களாக இருப்பதைவிட உங்களுக்கு சுயமரியாதை அற்ற தன்மை வேறு ஒன்று இல்லை என்றே சொல்லுவேன். 2000-3000 வருஷக் கிளர்ச்சியில் ஆகாத காரியங்கள் இந்து மதத்தை விட்டு விலகிவிட்டால் நொடிப்பொழுதில் ஆகிவிடுகின்றதை நான் பிரத்தியக்ஷத்தில் பார்க்கிறேன். ஆனால் கிறிஸ்தவர்களாக ஆகி விடுவதில் தீண்டாமை ஒழிவதில்லை. ஏனெனில் கிறிஸ்தவ மதம் அரசியல் லக்ஷியத்தில் நமது நாட்டில் இருக்கிறது. அதற்கு சுயமரியாதையில் லக்ஷியமில்லை. இந்த நாட்டுக் கிறிஸ்தவர்களில் 100-க்கு 50 பேருக்கு மேலாகவே கிறிஸ்தவப் பறையர்களாகவே இருக்கிறார்கள். இதை விட வேறு இழிவும் கெட்டபேரும் அந்த மதத்துக்கு வேண்டியதில்லை.

பார்ப்பன மதம் எப்படி ஜனங்களை ஏமாற்றுவதற்கு ஆகவே இருக்கிறதோ, அதே போல் நமது நாட்டில் கிறிஸ்தவ மதம் ஜனங்களை ஏமாற்றவே இருக்கிறது. இந்தக் கூட்டத்தில் அநேகம் பேர் ஆண் பெண் கிறிஸ்தவ ஆதி திராவிடர்களாக இருப்பதாக தெரிகிறது.

நீங்கள் மதம் மாறி என்ன பயன்? இந்த இரண்டு மூன்று மாதமாய் ஈரோட்டில் கிறிஸ்தவ ஆதிதிராவிடர்களை அவர்கள் கிறிஸ்தவ மேல்ஜாதிக் காரர்கள் தொழும் இடத்தில் வந்து தொழுததற்காக மேல் ஜாதிக்காரர் செருப்பாலடித்து விட்டதாகவும், கிறிஸ்தவ ஆதிதிராவிடர் மேல்ஜாதிக்காரர் களை செருப்பாலடித்து விட்டதாகவும் கோர்ட்டில் பிராது நடக்கின்றது. இது எவ்வளவு மானக்கேடு பாருங்கள். சாமியார்கள் மேல்ஜாதிக்காரர்களுக்கு சலுகைகாட்டுகின்றார்கள் என்றும், அவர்களே மேல் ஜாதிக்காரர்கள் பிராது செலவுக்கு பணம் கொடுத்தார்கள் என்றும் கோர்ட்டிலேயே புகார் சொல்லப் பட்டது. இந்த மாதிரி மதத்துக்கு போவதால் என்ன பயன்? ஏதாவது ஒரு மதம் வேண்டுமென்றால் எந்த மதக்காரர்களுடைய சலுகையாவது பெற்று இந்துக்களின் கொடுமையில் இருந்து தப்ப வேண்டுமானால் உங்களுக்கு இஸ்லாம் மதமே மேல் என்று சொல்லுவேன். கிறிஸ்தவமதம் என்பது



RangaRakes tamilnavarasam.com

ஆள்சேர்த்து கணக்கு காட்டி கிறிஸ்தவ ஆட்சிக்கு பலம் தேடுவதற்குத்தான் பயன்படுகிறதாய் இருக்கிறது. இஸ்லாம் மதமானது ஒரு இஸ்லாமியனை மற்றொருவன் ''இவன் தீண்டாதவன்'' ''இஸ்லாம் பறையன்'' என்று சொல்லுவதை ஒரு வினாடிகூட பொறுத்துக்கொண்டு இருக்காது. ஒரு இஸ்லாமியனைப் பார்த்து ஒரு இந்து இவன் பற முஸ்லீம் என்று சொல்லிவிட்டால் உடனே அவன் சொல்லி வாய் மூடுமுன் பல்லைக் கழட்டி கையில் கொடுத்து விடுவான்.

ஆனால் கிறிஸ்தவனோ தானே தன்னை கிறிஸ்தவப் பறையன் என்றும் கிறிஸ்தவ ஆதிதிராவிடன் என்றும் சொல்லிக் கொள்ளுகிறான். இதைவிட வேறு சுயமரியாதை அற்ற தன்மை இருக்கிறதா என்று கேட்கின்றேன்.

இந்துமதத்துக்கும் சுயமரியாதை இல்லை என்று சொல்வேன். ஒவ்வொரு இந்துவும் ஜாதி முறை கொண்டாடுகிறான். பார்ப்பானை மேல் ஜாதி என்று ஒப்புக்கொள்கிறான். மற்றவனுக்கு தான் மேல் ஜாதிக்காரர் என்று கருதிக் கொள்கிறான். ஆகையால் சமூக சமத்துவத்தில் மக்களை இஸ்லாம் மதம் சமமாக பாவிக்கிறது.

ஆதலால் நீங்கள் அம்பத்கார் கூறுகிறபடி இந்துமதத்தை விட்டு விடவேண்டியது நியாயமே ஆகும். உங்கள் பொட்டும் பூச்சும் வேஷத்துக்கு பயன்படுகிறதே தவிர சுயமரியாதைக்குப் பயன்படுகிறதா? நீங்கள் எவ்வளவு பக்தியுடையவராக வேஷம் போட்டாலும் உங்களை பறைச்சாமியார் என்றுதான் சொல்லுகிறார்கள். வெட்கமில்லாமல் உங்களுக்கு என்று வேறு கோயில் கட்டிக்கொள்கிறீர்கள். இதனால் நீங்கள் கீழ்ஜாதி என்பதை ஒப்புக் கொண்டவர்களா இல்லையா? அந்த சாமி உள்ளவரை அதாவது அந்த ''பறையர் கோவில்'' உள்ளவரை உங்கள் பறைத் தன்மையை நிலை நிறுத்தினவர்களாகிறீர்களா இல்லையா? இதற்கு ஆகவே மேல்ஜாதிகாரர்கள் உங்களுக்கு பணம் கொடுத்து உங்கள் பறைத்தன்மையை நிலை நிறுத்த கோவில் கட்டச் செய்கிறார்கள்.

உங்களில் பலர் முட்டாள் தனத்தாலும், அதிலிருந்து சிறிது பொருள் கொள்ளை கொள்ளலாம் என்றும் அந்த வேலையை ஜீவனோபாயமாகக் கொள்கிறார்கள்.

இதற்கெல்லாம் நீங்கள் ஏமாறக்கூடாது என்று எச்சரிக்கை செய்கிறேன்.

பார்ப்பனரல்லாதார் ஆட்சியில் இன்னமும் உங்களுக்கு அநேக நன்மை ஏற்படப்போகின்றது. உங்கள் சமூகத்துக்கு கட்டாயக் கல்வியும் பிள்ளைகளுக்குச் சாப்பாடும் ஏற்பாடு செய்யப் போகிறார்கள். கூடிய சீக்கிரம் அமுலுக்கு வரலாம். உங்கள் விஷயமாய் சுயமரியாதைக்காரர்கள் போட்ட தீர்மானங்கள் எல்லாம் அமுலுக்கு வரும் காலம் வந்து விட்டது. ஆனால் நீங்கள் மாத்திரம் பார்ப்பனர்களுடன் சேர்ந்து விடாதீர்கள். உங்களில் பார்ப்பனக் கூலிகளை நம்பி ஆதரித்து விடாதீர்கள்.



சர்க்காருக்கு விரோதமான கக்ஷிகளிலோ கொள்கைகளிலோ கலந்து கொள்ளாதீர்கள். மற்றவர்களைப் போல் நீங்கள் முன்னுக்கு வருகிற வரை சர்க்கார் ஆதரவு உங்களுக்கு அவசியமானது. ஏனெனில் இன்று உங்களை ஒவ்வொருவரும் அரசியல் காரியங்களுக்கு உபயோகித்துக் கொள்ளத் தான் உங்களை நாடுகிறார்களே ஒழிய உண்மையான உங்கள் குறைகளை நீக்க அல்ல. முக்கியமாக பார்ப்பனர்கள் உங்களை மோசம் செய்யவே - உங்களை ஏய்க்கவே உங்களை நாடுவார்கள். அவர்களை நம்பாதீர்கள். அரசாங்கத்துக்கும் எனக்கும் எவ்வளவு மாறுபாடான அபிப்பிராயம் இருந்தாலும், அதனிடம் எவ்வளவு எதிர்ப்பு இருந்தாலும் நீங்கள் அரசாங்கத்துடன் பிணக்குச் செய்யாமல் அதை எதிர்க்காமல் இருந்து உங்கள் சமூக நன்மையை பெறவேண்டும் என்று கூறுவேன்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தை ஒழித்து பூரண சுயராஜ்யம் பெறுகிறதாகச் சொல்லி மக்களை ஏமாற்றி கோடிகோடியாக வசூலித்து மோசம் செய்த காங்கிரஸ் பார்ப்பனர்களும், ஜெயில்களை இடித்து நிரவி விடுவதாக சொன்ன பார்ப்பனர்களும், காந்தியாரும் இன்று புத்திவந்துவிட்டது என்று சொல்லி அரசாங்கப் பதவிக்கும் உத்தியோகத்துக்கும் மண்டி போட்டு சலாம் செய்வதற்கும் முந்தும்போது உங்களுக்கு இதனால் ஒன்றும் முழுகிப் போகாது என்று சொல்லுவேன்.

கடைசியாக உங்கள் மகாநாட்டுக்கு வந்ததற்கு ஆகவும் இங்கு தலைமை வகித்ததற்கு ஆகவும் நான் மகிழ்ச்சியடைவதோடு உங்களுக்கு மனமார நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்,

*குறிப்பு: 07.03.1936 ஆம் நாள் திருச்செங்கோடு தாலூகா சமுத்திரத்தில் நடைபெற்ற திருச்செங்கோடு தாலூக்கா 5-வது ஆதிதிராவிடர் மாநாட்டில் தலைமை வகித்து ஆற்றிய முகவுரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 15.03.1936**



RangaRakes tamilnavarasam.com

# ஸ்தல ஸ்தாபனங்கள்
# ஓட்டுரிமையும் கட்சிகளும்

இந்திய நாட்டிற்கு பிரிட்டிஷார் அளித்துள்ள ஓட்டுரிமையானது இயற்கைக்கு விரோதமானதும், இந்தியாவின் தகுதிக்கு எத்தனையோ பங்கு அதிகமானதுமான ஓட்டுரிமையாகும்.

ஆனால் இதை அவர்கள் நல்லெண்ணத்தோடு அளித்தார்களா அல்லது மற்ற எண்ணத்தோடு அளித்தார்களா என்பது வேறு விஷயம் என்றாலும் இந்த மாதிரியான ஓட்டுரிமையினால் நாட்டுக்கோ ஏழை மக்களுக்கோ ஏதாவது பயன் ஏற்பட்டதா என்று சொல்ல முடியாது. ஏனெனில் நமது நாட்டு மக்களில் 100-க்கு 8 பேர்களே படித்தவர்கள் என்பதும், அந்த 8 பேர்களிலும் பார்ப்பன சமூகம் 100-க்கு 100 பேராய் படித்திருப்பதும், மற்ற ஏழை மக்களில் 100-க்கு 2 பேர் 3 பேர்களே படித்திருப்பதும், பெண்களில் முக்கியமாக பார்ப்பனரல்லாத பெண்களில் 100-க்கு ½ பேர்களும் தாழ்த்தப்பட்ட மக்களில் 100-க்கு ¼ பேர்களுமே படித்திருப்பதுமான நிலையில் இந்தக் கூட்டத்தார்களைக் கொண்ட இந்திய சமூகம் தங்களுக்கு அளிக்கப்பட்ட ஓட்டுரிமைகளை சரியான முறையில் பயன்படுத்துவார்கள் என்று யார்தான் சொல்ல முடியும்.

ஆகவே மக்கள் சாதாரண அறிவு விஷயத்திலேயே இப்படி இருக்கும்போது இந்த ஜனங்களிடம் அரசியல் சூழ்ச்சிகளையும் அயோக்கியத் தனங்களையும் உபயோகித்து போதாக்குறைக்கு கள்ளையும், சாராயத்தையும், காசையும் உபயோகிக்கத் துணிந்து விட்டால் இப்படிப்பட்ட பிரதிநிதித்துவம் கழுத்தறுப்பாய் வந்து சேருமே அல்லாமல் கடுகளவாவது யோக்கியமான முறையில் பயன்படுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

உதாரணம் சொல்ல வேண்டுமானால் சென்னை மாகாணத்தில் தலைசிறந்து விளங்கும் சென்னை நகரமானது இந்தியாவிற்கே அறிவிற் சிறந்த நகரம் என்பதோடு மிகுதியும் நாகரீகம் பெற்ற நகரம் என்றும் சொல்லக் கூடியதாகும்.

அப்படிப்பட்ட நகரத்தில் ஒரு சாதாரண பார்ப்பனர், ஒழுக்கத்தில் எந்தத் துறையிலும் திருப்திகரமாய் இல்லாதவர், ஜீவனத்துக்கும் யோக்கியமான மார்க்கமில்லாதவர், நாணயத்திலும் அது போலவே கூறக்கூடியவர் தேர்தலுக்கு நின்றகாலத்தில் எதிர் அபேக்ஷகரின் சுயநடத்தை நாணயத்தைப் பற்றியோ கொள்கை நாணயத்தைப்பற்றியோ ஒரு குறையும் கூறக்கூடாத நிலையில் உள்ள ஒருவர் விஷயத்தில் எதிரிகள் சில காலிகளையும் சில கூலிப்பெண்களையும் விட்டு யாரோ ஒரு பெண்ணின் தாலி அறுத்து விட்டார் என்று வெங்காய ரசத்தை கண்ணில் தடவிக்கொண்டு அழச்செய்ததற்கு ஏமாந்து பின்னவருக்கு வோட்டுச் செய்யாமல் முன்னவருக்கு வோட்டுச்செய்துவிட்டார்கள் என்றால் மற்ற பட்டிக்காட்டுப் பாமரஜனங்கள் என்பவர்கள் ஏமாற்றப்படுவதில் ஏதாவது அதிசயமிருக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

இதுதான் ஒரு சமயம் சாதாரண பாமரமக்கள் ஓட்டு உடையவரா யிருந்ததால் ஏற்பட்ட பிசகு என்று சொல்லப்படுமானாலும் வருஷத்தில் 10000 ரூ. முதல் லட்ச ரூபாய்க்கும் மேலாகக் கூட வருமானமுடைய மக்கள், வியாபாரிகள், பாங்கர்கள் ஆகிய கூட்டத்தார்களே ஓட்டர்களாய் உள்ள வியாபாரத் தொகுதியில் ஓட்டராயிருப்பதற்கே லாயக்கில்லாதவரும், தவறுதலாய் ஓட்டர் லிஸ்டில் தாக்கல் செய்யப்பட்டவரும், அரசியலிலும், பொருளியலிலும் கூட போதிய நாணயமில்லாதவருமான ஒருவர் அபேட்சகராய் இருந்த காலத்தில் எதிர் அபேட்சகர் விஷயத்தில் அந்த வியாபாரத் தொகுதிக்காரர்களால் எவ்வித குறைபாடும் குற்றமும் சொல்லக் கூடாதவராய் இருந்தும், பெரிய வியாபாரியும், வியாபார நிபுணராயும், உண்மையான செல்வந்தராயும், தகுந்த கீர்த்தியும் செல்வாக்கும் உடையவராயு மிருந்தவரைப் பற்றி ஜனங்களுக்கு அதாவது ஒரு ஓட்டருக்காவது புரியாத குறைகளைச் சொல்லி வேறு சிலரின் சுயநலங்களுக்காக துரோகம் செய்ய வசதியும் அவசியமும் அளித்து ஏமாற்றினார்கள் என்றால் பாமர மக்களுக்கு புத்தி இல்லை, ஓட்டுகளை தக்கபடி உபயோகிக்கத் தகுந்த அறிவில்லை என்பதோடு பெரிய பணக்கார வியாபாரிகளுக்கும்கூட பெரிதும் புத்தியில்லை, ஓட்டுகளைத் தகுந்தபடி உபயோகிக்கப் புத்தியில்லை என்று சொல்லுவதற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும் என்று கேட்கின்றோம்.

அன்றியும் இந்த மேற்படி எலக்ஷன்கள் நடந்து ஒரு வருஷம் முடிவதற்குள்ளாக வெற்றிபெற்ற கனவான்கள் என்று சொல்லப்பட்டவர்கள் யோக்கியதை உலகம் அறியும்படி வெளியாகியும் அதாவது பாமரமக்களை ஏய்த்தவர் தான் ஓட்டர்களுக்கு வாக்குத்தத்தம் செய்தது போல் நடக்கவில்லை என்பதை உணர்ந்தும், மற்றொருவர் அதாவது பெரிய வியாபாரிகளையும் பாங்கர்களையும் பிரபுக்களையும் ஏய்த்தவர் உத்தியோகத் தோரணையில் கண்டிறாக்டு பெற்று ஸ்தல ஸ்தாபனத்தின் பணத்தை அனுபவிக்கிறார்கள் என்றும், ஏழைத் தொழிலாளி மக்களுக்கு மோசமும் துரோகமும் செய்து தான் சுயநலத்தை தேடிக்கொண்டார் என்றும், பட்டாங்கமாய் தெரிந்த பின்பும் பாமர மக்களுக்கோ, பணக்காரர்களுக்கோ புத்தி வரவில்லை என்றால் இந்த ஓட்டு உரிமைகள் சர்க்காரால் நமக்கு கொடுக்கப்பட்டது அறிவுடைமையா என்று கேட்கின்றோம்.





RangaRakes tamilnavarasam.com

ஜில்லா போர்டு தேர்தல்களிலும் சாதாரணமாக 3 வருஷத்துக்கு முன்னால் ஒன்பது ஓட்டு பத்து ஓட்டுகளில் தெரிந்தெடுக்கும்படியாய் இருந்த ஒரு ஜில்லா போர்டு மெம்பர் ஸ்தானத்துக்கு இன்று ஒன்பது ஆயிரம் பத்து ஆயிரம் ஓட்டுகளால் தெரிந்தெடுக்கும்படியான ஓட்டுரிமை நமக்கு வந்ததில் பொய்யும் புளுகும் மாத்திரமல்லாமல் கள்ளும், சாராயமும் செலவழித்து ஓட்டுப் பெற வேண்டியதாயிற்றே ஒழிய மற்றப்படி பிரதிநிதித்துவத்துக்கு எவ்வித யோக்கியதையும் இல்லாமல் அசம்பளி வர்த்தகத் தொகுதிக்கு வெற்றி பெற்றவர் ஏழை மக்களை துரோகம் செய்துவிட்டு கண்றாக்டினால் பிழைக்கும்படியான சௌகரியம் பெற்றது போல் இந்த கள்ளு, சாராயம், பொய், பித்தலாட்டம் ஆகிய இழி காரியங்களால் வெற்றி பெற்றவரும் ஏழை மக்களை துரோகம் செய்துவிட்டு கண்டிறாக்டில் பிழைக்க வேண்டியவர்களாகிறார்கள்.

இதையும் நேரில் பார்த்துக் கொண்டிருந்தும்கூட மறுபடி மறுபடி அதேமாதிரி நடந்துவருகிறார்கள் என்றால், அரசாங்கத்தார் அளித்த ஓட்டுரிமை மக்களுக்கு எவ்வளவு ஆபத்தை உண்டாக்கக்கூடியதாய் இருக்கிறது என்பது வாசகர்கள் உணர ஆசைப்படுகிறோம்.

குறிப்பாக வட ஆற்காடு ஜில்லாவில் இது சமயம் ஜில்லா போர்டு தேர்தல்கள் நடைபெறுகின்றதை ஒரு நடுநிலைக்காரன் பார்த்தால் நமது ஜனங்கள் அடிமைகளாக கூலிகளாக இருக்கத்தான் யோக்கியதை உடையவர்களே தவிர சுதந்திரத்துக்கோ விடுதலைக்கோ சிறிதும் அருகதை இல்லை என்றே சொல்லுவான்.

அபேக்ஷகர்களைப் பற்றி சொல்லாமலும், அபேக்ஷகரை வெளியில் காட்டாமலும் கிராமங்களுக்குப் போய் காந்திக்கு ஓட்டு போடுங்கள் என்று கேட்பதோடு எதிர் அபேக்ஷகர்களைப்பற்றி மிக்க இழிவான முறையில் பச்சையாக குறை கூறி ஏமாற்றப்படுகிறது.

இவைகள் எல்லாம் கையில் வலுத்தவன் காரியம்தான் என்று சொல்லுவதானாலும் கையில் வலுத்தவன் காரியமாவதற்கு அனுகூலமான சௌகரியங்களைச் செய்து கொடுத்துக் கொண்டு வருவது அக்கிரமம் என்றும், தலைப்பில் காட்டிய ஓட்டுரிமை என்பதும் இம்மாதிரி கையில் வலுத்தவன் காரியத்துக்கு அனுகூலமாயிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டவே இதை எழுதுகிறோம்.

அன்றியும் இன்றைய ஸ்தல ஸ்தாபனங்களினுடைய யோக்கியதை களும் ஏதாவது ஒரு ஸ்தலஸ்தாபனத்தில் அங்கத்தினராகவோ தலைவராகவோ வெற்றி பெற்று விட்டால் அந்த வெற்றியானது வெற்றி பெற்றவர்களுக்கு ஒரு வியாபாரம் போலவும், சிலருக்கு புதையல் போலவும் லாபமடையத் தக்க மாதிரி பயனளிக்கக் கூடியதாய் இருப்பதால் வியாபாரத்தில் வக்கீல் தொழிலில் திருட்டுத் தொழில் செய்யப்படவேண்டிய புரட்டு, வஞ்சகம்,



துரோகம், கொலை பாதகத் தொழில் ஆகிய காரியங்களை சிறிதும் தங்குதடையில்லாமல் செய்யக் கூடியதாகவும் செய்யவேண்டியதாகவும் ஏற்பட்டுவிடுகிறது.

சாதாரணமாக எவ்வளவு சின்ன ஜில்லாபோர்டாக இருந்தாலும் இன்றைய நிலையில் ஜில்லாபோர்டு சட்டம் இருக்கிற நிலைக்கும், மந்திரி சபை இருக்கும் யோக்கியதைக்கும், அரசாங்கத்தின் தன்மைக்கும் பொருந்திப் பார்த்தால் ஒருவன் எப்படியாவது ஒரு ஜில்லாபோர்டு தலைவனாக ஆகி விட்டால் அவன் எவ்வளவு முட்டாளாகவும் யோக்கியனாகவும் இருந்தாலும் 3-வருஷ காலாவதிக்குள் ஒரு லக்ஷ ரூபாய்க்கு குறையாமலும் சில ஜில்லாபோர்டுகளில் 3-லக்ஷ ரூபாய் போலவும் சம்பாதித்துக்கொள்ளக்கூடிய சௌகரியம் இருப்பதை நேரிலும் அனுபவத்திலும் பார்த்து வருகின்றோம்.

அதுபோலவே முனிசிபாலிட்டியிலும் ஒரு காலாவதியில் 20000-ரூ முதல் 100000-ரூபாய் வரை சம்பாதித்துக் கொள்ளக் கூடியதாய் இருப்பதுடன் அங்கத்தினர்களுக்கு இதற்குத் தகுந்த விகிதாசாரம் அடையும்படியாகவே இருந்து வருகிறது என்பது மாத்திரமல்லாமல் இம்மாதிரியான காரியத்திற்கு சமூகத்தில் எவ்வித இழிவும் இல்லாமல் மிக்க செல்வாக்கும் பெற்று சர்வசாதாரணமாய் பழக்கத்தில் அனுபவத்தில் நடக்கும்படியாகவும் அப்படிப்பட்டவர்களுக்கே பட்டம், பரிவட்டம், கவுரவம் முதலியவை முதலில் கிடைக்கும்படியாகவும் ஆகிவிடுகிறது.

சில உத்தமர்கள் இருக்கலாம் இருக்கிறார்கள் என்றாலும் அப்படிப் பட்டவர்களுக்கு தனிமரியாதை இல்லாமலும் போய்விடுகின்றன.

இவற்றிற்கெல்லாம் காரணம் நமது நாட்டில் அரசியல் கிளர்ச்சிகள் ஏற்பட்டதும் சிறப்பாக காங்கிரசு என்றும் தேசாபிமானம் என்றும் சொல்லிக் கொண்டு பார்ப்பனர்கள் இதில் பிரவேசித்து இதன் மூலம் தங்கள் வாழ்வையும் ஆதிக்கத்தையும் நிலைநிறுத்திக் கொள்ள முயற்சித்து அதற்கு ஏற்ற சூழ்ச்சிகள் செய்து கட்சி, பிரதி கட்சி, உள் கலகம் முதலியவைகள் செய்ததே ஒழிய மற்றபடி தமிழ் மக்களிடத்தில் இவ்வித குணம் அருமையாகவே இருந்தது.

இப்பொழுதும் பொதுமக்களிடம் நாணயம் யோக்கியம் ஆகிய காரியங்கள் ஏற்பட வேண்டுமானால் அரசியல் பிரதிநிதித்துவம் என்பது இன்றைய நிலையில் இருக்கும் மாதிரி அடியோடு ஒழியவேண்டும். விளக்கமாக சொல்லவேண்டுமானால் காந்தி சகாப்தம் என்பது அழிந்து ஒழிந்து ஆயிரம் கஜ ஆழத்தில் புதைக்கப்பட்ட அன்றே மக்கள் யோக்கியதை காதாலாவது கேட்க முடியும் என்பதே நமது கருத்து. முனிசிபாலிட்டிகளும் ஜில்லாபோர்டுகளும் யோக்கியமாக நடைபெற வேண்டுமானால் மற்றொரு காரியம் நடைபெற்றாக வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

அதாவது இவைகளுக்கு போடும் கமிஷனர்கள் கூடுமானவரை சுயமரியாதையுடன் நடந்து கொள்ளக்கூடிய சௌகரியம் இருக்கும்படி சட்டங்களை திருத்தி தக்க கவுரவமுள்ள அதிகாரிகளைப் போடவேண்டும்.

இரண்டாவது ஸ்தல ஸ்தாபனங்களில் தலைமை வகிப்பவர்கள் சட்டசபையில் இருக்கவோ எட்டிப் பார்க்கவோ இடம் கொடுக்கக் கூடாது.

ஜில்லாப் போர்டிலும் முனிசிபாலிட்டியிலும் பகல் கொள்ளை அடிக்கிறவன் சட்டசபையில் ஸ்தல ஸ்தாபன மந்திரி கூட சரி சமமாய் உட்கார இடம் கொடுத்தால் எவனுக்கு தான் திருட மனம் வராது என்று கேட்கின்றோம்.

ஸ்தல ஸ்தாபனங்கள் கொள்ளைக்காரர்கள் கூட்டத்தாருக்கு சரணாகதிபோல் கை வசப்பட்டதற்குக் காரணமும், ஸ்தல ஸ்தாபனங்களுக்குச் சென்ற யோக்கியர்கள் எல்லாம் அயோக்கியர்கள் ஆனதற்குக் காரணமும் ஸ்தல ஸ்தாபன தலைவர்கள் சட்டசபை மெம்பர்களானதுதான் என்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

இன்று அரசாங்கம் இந்தியாவுக்குச் செய்த ஒரு பெருங்கேடு என்று ஏதாவது ஒன்றைச் சொல்லவேண்டுமனால் ஸ்தல ஸ்தாபனங்களை காலிகளும், கன்னெஞ்சக் கூட்டத்தார்களும் கொள்ளையடிக்கும்படி திறந்துவிட்டார்களே என்பதைத்தான் சொல்ல வேண்டி இருக்கிறது.

அதுவும் இந்தியர்களுக்குக் கொடுத்த சுய ஆட்சி என்கின்ற பெயரால் கொடுக்கப்பட்டது? என்பதை நினைக்கும்போது இதில் அவர்களுடைய எண்ணத்தைக்கூட சந்தேகிக்காமல் இருக்க முடியவில்லை.

ஆகவே எப்படியாவது அரசாங்கத்தார் பொதுஜனங்களுக்கும், ஏழை மக்களுக்கும் நேரடியான சம்மந்தமும் அவசியமும் இருக்கிற இந்த முனிசிபாலிட்டி ஜில்லா போர்டு ஆகியவைகளை தங்கள் முழு சுவாதீனம் செய்துகொண்டு தங்களது நேரடியான ஆதிக்கத்தில் இருந்து நிர்வாகம் நடக்கும்படி செய்யவேண்டும் என்றுதான் நாம் ஆசைப்படுகிறோம்.

காந்தீயம் ஒழிந்த பிறகு வேண்டுமானால் மறுபடியும் பொதுஜனங்கள் வசம் ஒப்புவிக்கலாமா என்பதுபற்றி யோசிக்கலாம்.

இப்போது ஸ்தல ஸ்தாபனங்களின் பணம் நாசமாவதையும் கொள்ளை போவதையும் பார்த்தும் உலகிலுள்ள அயோக்கியத்தனங் களுக்கெல்லாம் ஸ்தல ஸ்தாபனங்கள் தாயகமாய் இருப்பதைப் பார்த்தும் வயிறு எரிந்துதான் இதை எழுதுகிறோமே ஒழிய அவற்றில் உள்ள எந்த தலைவர்களையோ அங்கத்தினர்களையோ மனதில் வைத்து நாம் எழுதவில்லை என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

குடி அரசு - தலையங்கம் - 15.03.1936



## ஏமாந்தது யார்? சர்க்காரா? தேசாயா?

காங்கிரஸ்காரர்களுக்கு ஸ்திர புத்தியோ, சுய புத்தியோ, உறுதியான வேலைத் திட்டமோ கிடையாதென்பதற்கு புதுப்புது ருசுக்கள் பிரதி தினமும் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

1933-34 - வது வருஷத்திய "இந்தியா" என்ற சர்க்கார் அறிக்கையில், "திடீர் திடீர் என்று ஹரிஜன இயக்கத்துக்குப் பணம் கேட்கப்பட்டதினால் பொதுஜனங்களிடையே வெறுப்புத் தோன்றியதென்றும், இவ்வியக்கம் கேவலம் சமூகக் குறைபாடுகளைப் போக்குவதான சீரிய நோக்கம் மாத்திரம் கொண்ட இயக்கம் என்ற விஷயத்தில் சிலர் சந்தேகித்தது நியாயமாகும் என்றும், பீகார் பூகம்ப நிவாரண நிதிக்குச் சரியான கணக்கு வெளியிடப் படவில்லை யென்றும், நிவாரண விஷயத்தில் காங்கிரஸ்காரர் சர்க்காரோடு ஒத்துழைக்கவில்லையென்றும், அரசியல் நோக்கத்துடனேயே நிவாரண வேலைகள் நடத்தப்பட்டன என்றும் கூறப்பட்டிருப்பது காந்தியாரையும் அவரது இயக்கத்தையும் காங்கிரஸ் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாதையும் அவமதிக்கக் கூடியதாயிருக்கிறதென்று காங்கிரஸ் பத்திரிகைகளும் காங்கிரஸ் தலைவர்களும் பெருங்கூச்சல் போட்டதைத் தோழர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

எனவே, சர்க்கார் அறிக்கையைக் கண்டித்து காங்கிரஸ்காரர்களின் மானத்தைக் காப்பாற்றும் பொருட்டு இந்திய சட்ட சபையில் ஒரு ஒத்திவைப்பு அவசரப் பிரேரணை கொண்டுவரப் போவதாக "அவசரப் பிரேரணை நிபுணரான" தோழர் சத்தியமூர்த்தி சர்க்காருக்கு நோட்டீசும் கொடுத்தார். ஆனால் அந்த நோட்டீசைப் பார்த்து சர்க்கார் கலங்கவில்லை. சர்க்கார் அறிக்கையில் கூறியுள்ள அபிப்பிராயங்கள் சரியென ருசுப்படுத்த சர்க்காரிடம் போதுமான தஸ்தாவேஜுகள் இருந்ததினால் அவசரப் பிரேரணை கொண்டுவரும் போது ஒரு கை பார்த்துவிடலாமென்று சர்க்காரும் வரிந்து கட்டிக்கொண்டு தயாராயிருந்தார்கள். கடைசியில் அவசரப் பிரேரணை கொண்டு வரும் சமயம் வந்தபோது, தோழர் சத்தியமூர்த்தி காரணம் கூறாமலே பிரேரணையை வாபீஸ் வாங்கிக்கொண்டார். அதைப் பார்த்து அசம்பிளி மெம்பர்கள் திகைப்படைந்தார்களாம். அசம்பிளி காங்கிரஸ் மெம்பர்கள்கூட ஆச்சரியப்பட்டார்களாம். நியாய புத்தியுடைய பத்திரிகைகளும் தோழர் சத்தியமூர்த்தியைக் கண்டித்தன. உடனே நமது வீரர் சத்தியமூர்த்தி



RangaRakes tamilnavarasam.com

ஒரு நொண்டிச் சமாதானம் வெளியிட்டார். ''இரண்டொரு காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் கூட்டத்துக்கு வரவில்லை. இப்பொழுது நிலைமை தீர்மானத்துக்கு சாதகமாக இல்லை. வரவு செலவு திட்ட மானிய விவாத காலத்தில், சாதகமான நிலைமையை உண்டுபண்ணிக் கொண்டு, ஒரு வெட்டுப் பிரேரணை மூலம் இந்தப் பிரச்சினையை மீண்டும் கிளப்புவோம். '' நான் என் அவசரப் பிரேரணையை வாப்பீஸ் வாங்கிக் கொண்டதினால் குடி முழுகிப் போக வில்லை'' என்று சமாதானம் கூறி தோழர் சத்தியமூர்த்தி மழுப்பினார். அந்த மழுப்பல் சமாதானத்தைப் பலர் நம்பவில்லையாயினும் வரவு செலவு மான்ய விவாதத்தில் வெட்டுப் பிரேரணை மூலம் காங்கிரஸ்காரர் சாதிக்கப் போவதைப் பார்த்துவிடலாமென்று பொறுமையோடு காத்திருந்தனர். இம்மாதம் 9-ம் தேதி அசம்பிளி காங்கிரஸ் கட்சித் தலைவர் தோழர் புலாபாய் தேசாய் 1933-34-வது வருஷ ''இந்தியா'' என்ற சர்க்கார் அறிக்கையைக் கண்டிக்கு முகத்தான ஒரு வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்து, அவ்வறிக்கையில் அவருக்கு ஆட்சேபகரமாகத் தோன்றிய விஷயங்களையும் விளக்கிக் கூறினார். தீர்மானத்துக்குச் சாதகபாதகமாகவும் பலர் பேசினார்கள்.

கடைசியாக உள்நாட்டு மந்திரி ஸர் ஹென்ரி கிரேய்க்கு விவாதத்துக்கு பதிலளிக்கையில் கூறியதாவது:-

''சர்க்கார் அறிக்கையிலுள்ள விஷயங்களுக்கு தற்போதைய விளம்பர டைரக்டரோ அவருக்கு முந்திய டைரக்டர்களோ பொறுப்பாளிகளல்ல. நானே அதற்குப் பொறுப்பாளி. தங்கள் அபிப்பிராயத்தைத் தவிர வேறு அபிப்பிராயமே இருக்கக் கூடாதென்று காங்கிரஸ் கட்சியார் கருதுவது விசித்திரமாக இருக்கிறது. ஒரே விஷயத்தைப் பற்றிப் பல பேர் பல விதமாய்த்தான் அபிப்பிராயப்படுவார்கள். சர்க்கார் அறிக்கையில் எவ்வித வர்ணனையும் கிடையாது; சப்பென்றிருக்கும்படியே எழுதப்பட்டிருக்கிறது. காங்கிரசை ஆதரிக்கும் அநேகம் பத்திரிகைகள் இவ்வறிக்கையைப் பாராட்டி யிருக்கின்றன. ஜனவரி 24-ந் தேதி வெளியான ''டிரிப்யூன்'' பத்திரிகையைப் படித்தபோது எனக்கே வெட்கம் உண்டாயிற்று. காங்கிரஸ்காரர் எவர் எழுதியிருந்தாலும் இவ்வளவு பூர்த்தியாகவும், வன்மையுடனும் எழுதியிருக்க முடியாதென்று அப்பத்திரிகை இவ்வறிக்கையைப் பற்றிக் கூறியிருக்கிறது. முன்போலவன்றி, இவ்வருஷ அறிக்கையில் இந்தியப் பத்திரிகைகளின் அபிப்பிராயங்களை நிறைய மேற்கோள் காட்டியிருப்ப தாகவும் அப்பத்திரிகை பாராட்டியிருக்கிறது.

பல அங்கத்தினர்கள் டில்லிக்கு வந்த பிறகு சர்க்காரைக் கண்டிக்க என்ன விஷயங்கள் இருக்கின்றன என்று தேடியிருக்கிறார்கள். அதன்மேல் இந்த அறிக்கை அகப்பட்டுக் கொண்டது. அதுவரை காங்கிரஸ்காரர்களுக்கு இந்த யோசனை தோன்றவில்லை. ஆதி இந்து இயக்கம் சம்பந்தப்பட்டமட்டில், அறிக்கையிலுள்ள வாசகத்தைத் தவறாக மேற்கோள் காட்டி சில பத்திரிகைகள் ஜனங்களுக்கு ஆத்திரமுண்டாக்கியிருக்கின்றன.



ஆதி இந்து இயக்கம் ஜீவகாருண்ய நோக்கங்களை யன்றி இதர நோக்கங்களையும் கொண்டதாகச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள் என்றே சர்க்கார் அறிக்கை கூறியிருக்கிறது. சர்க்கார் சம்பந்தபட்ட மட்டில் காந்தியின் இயக்கத்தில் சர்க்காருக்குத் துளிகூட சந்தேகம் கிடையாது. ஆனால் அறிக்கையில் சிலர் அபிப்பிராயமென்று குறிப்பிட்டதற்கு, போதிய ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. பத்துப் பன்னிரண்டு பத்திரிகை களிலிருந்து நறுக்கி எடுத்த அபிப்பிராயங்கள் என்னிடமிருக்கின்றன. பிறர் இப்படி அபிப்பிராயம் கூறுகிறார்கள் என்று சர்க்கார் கூறியதற்காக சர்க்காரைக் கண்டிக்கலாகாது.

பீகார் பூகம்ப கஷ்ட நிவாரண நிதி சம்பந்தப்பட்ட மட்டில் ஸ்தல உத்தியோகஸ்தர்களைப் பண்டித ஜவஹர்லால் குறை கூறினார். அதை மேற்படி மாகாணத்தைச் சேர்ந்த சர். சுல்த்தான் அகமது, தோழர் சச்சிதாநந்த சின்ஹா முதலிய பிரமுகர்கள் மறுத்து, ஸ்தல அதிகாரிகளை பாராட்டி ஒரு பகிரங்க அறிக்கை வெளியிட்டார்கள். பூகம்பம் ஏற்பட்டவுடனே ஆரம்ப காலத்தில் சர்க்காரும் காங்கிரஸ்காரரும் ஒத்துழைத்தார்கள். பின்னர் வீடு கட்டுவது, மண்ணை அகற்றுவது ஆகிய முக்கிய இனங்களுக்குக் காங்கிரஸ் நிதியைச் செலவழிக்க முடியாதென்று காங்கிரஸ்காரர்கள் சொல்லி விட்டார்கள். ஆயினும் சர்க்காரின் வீடு கட்டும் திட்டத்துக்கு தங்கள் நிதியிலிருந்து 10 லக்ஷம் ரூபாய் அளிக்கலாமென்று பாபு ராஜேந்திர பிரசாத் கூறினார். ஆனால் காங்கிரஸ் பூகம்பக் கமிட்டி அவரது யோசனையை நிராகரித்து விட்டது.

எனவே காங்கிரசும், சர்க்காரும் ஒத்துழைக்கவில்லை, அவ்வருஷத்தில் செலவழியாமலே காங்கிரஸ் நிதியில் பாதி மீதியிருந்தது பத்திரிகைகள், முக்கியமான பீகார் பத்திரிகைகள், காங்கிரஸ் நிதியைப்பற்றித் தகவல் கிடைக்காததைப் பற்றிக் கண்டித்து எழுதி யிருக்கின்றன. சர்க்கார் அறிக்கையைத் தயார் செய்தவர் கூறியது நியாயம் என்பதற்கு மேற்படி பத்திரிகைகளின் அபிப்பிராயங்களை நான் மேற்கோள்களாகக் காட்ட முடியும். காங்கிரஸ் அறிக்கை மிகத் தாமதித்தே வெளிவந்தது. எனவே சர்க்கார் அறிக்கையில் எவ்வித கெட்ட எண்ணத்தோடும் காங்கிரஸ் பீகார் பூகம்ப நிதியைப்பற்றி அபிப்பிராயம் எழுதவில்லை. நடந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு தமக்குத் தோன்றிய அபிப்பிராயங்களையே சர்க்கார் அறிக்கையைத் தயாரித்தவர் எழுதியிருக்கிறார்''.

தோழர் புலாபாய் தேசாய்க்கு மேற்கூறியவாறு பதிலளித்த உள்நாட்டு மந்திரி ஹென்றி கிரேய்க்கு தயக்கமின்றியும் அச்சமின்றியும் பேசியிருப்பதைத் தோழர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். சர்க்கார் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் தவறு என்று கூறவே யில்லை. அவை சரியென்று ருசுப்படுத்தத் தம்மிடம் ஆதாரங்கள் இருப்பதாயும், மார்தட்டிக் கூறியிருக்கிறார். அதே மூச்சில் காந்தியார்



RangaRakes tamilnavarasam.com

இயக்கத்தால் சர்க்காருக்கு துளிகூட சந்தேகமில்லை யென்று அவர் சொல்லியிருக்கிறார். காங்கிரஸ்காரருக்குச் சாதகமாகவுள்ளது அந்த ஒரு வாக்கியமே. அது மரியாதைக் குறியான ஒரு சம்பிரதாயப் பேச்சேயன்றி வேறல்ல. காந்தியாரை மிகக் கடுமையாகக் கண்டிப்பவர்களுங்கூட அவரது அந்தரங்க சுத்தியைப்பற்றி சந்தேகப்படுவதில்லை. எனவே காந்தியியக்கத்தைப் பற்றி சர்க்காருக்கு சந்தேகமில்லை யென்று கூறியதினால் சர். ஹென்றி கிரேய்க்கு பணிந்து விட்டாரென்று கூறமுடியாது. சர்க்கார் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தப்பு என்று அவர் ஒப்புக்கொண்டாரா என்பதே முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம். தப்பு என்று ஒப்புக் கொள்வதற்கு பதிலாக அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தம்மிடம் தக்க ஆதாரங்கள் இருப்பதாகவும் அவர் சவால் விடுத்தமாதிரி கூறியிருக்கிறார்.

ஸர். ஹென்றி கிரேய்க்கின் இந்த ஆண்மையான பேச்சுக்குத் தோழர் தேசாய் பதிலளித்திருப்பதையும் தமது கண்டனத் தீர்மானத்தை வற்புறுத்தாததையும் கடைசியில் அது தோற்கடிக்கப்பட்டதையும் பார்க்கும் போது காங்கிரஸ்காரரின் பேடித்தன்மையே நன்கு விளங்குகிறது.

''தாங்கள் அறியாமலே சர்க்கார் அநீதி புரிந்திருக்கலாமென்றும் யாரோ சிலர் அபிப்பிராயம் வேறு விதமாயிருந்ததென்று குறிப்பிடுவதே அறிக்கையைத் தயாரித்தவர் நோக்கமென்றும் உள்நாட்டு மந்திரி உணர்ந்திருப்பதை அவர் பேச்சின் தொனியால் காண்கிறேன். காந்தியாரைப் பற்றி உள்நாட்டு மந்திரி நல்ல அபிப்பிராயம் தெரிவித்து விட்டதால் எனது கண்டனப் பிரேரணையை வற்புறுத்துவது அவ்வளவு அவசியமில்லையென நான் கருதுகிறேன்'' என்று தேசாய் பல்டியடித்துவிட்டது மிகவும் நாணயமற்ற செயல் என்றும் கூறவும் வேண்டுமா? தோழர் தேசாய் என்ன மழுப்பினாலும் சரி, அவரது பேச்சு அவருடைய பலவீனத்தையே காட்டுகிறது. அவருடைய சமாதானம் ஒரு காங்கிரஸ் அரையணா தினசரிக்குக்கூடப் பிடிக்கவில்லை. உண்மையில் தோழர் தேசாய் பல்டியடிக்க தக்க காரணம் இல்லாமலுமில்லை. சர்க்கார் அறிக்கையிலுள்ள ஒவ்வொரு குற்றச்சாட்டும் உண்மை என ருசுப்படுத்தும் தஸ்தாவேஜிகளை அசம்பிளியில் படித்துக்காட்டி காங்கிரஸ்காரர்களின் வாயை அடைக்கத் தேவையான முஸ்தீபுகளுடன் உள்நாட்டு மந்திரி ஸர். ஹென்றி கிரேய்க்கு அசம்பிளிக்கு வந்தார். காங்கிரஸ்காரர் மானங்கெடப் போவது அந்தப் புண்ணியவான் ஜின்னாவுக்குப் பிடிக்கவில்லை. கொஞ்சம் சாந்தமாக, காந்தியைப்பற்றி சர்க்காருக்கு சந்தேகம் இல்லையென்று கூறி சமாளித்துவிட வேண்டுமென்று தோழர் ஜின்னா உள்நாட்டு மந்திரியைக் கேட்டுக் கொண்டாராம். தோழர் ஜின்னா சுயேச்சைக்கட்சித் தலைவர். அசம்பிளி வெற்றியும் தோல்வியும் அவரது கட்சி ஆதரவையே பொறுத்திருக்கிறது. அவரது உதவியை நாட வேண்டிய சந்தர்ப்பங்களும் சர்க்காருக்கு அடிக்கடி உண்டாகும். அரசியல்



ஒரு மாதிரி சொக்கட்டானாட்டந்தானே. எனவே உள்நாட்டு மந்திரியும், மசியவேண்டியதாயிற்று. தோழர் தேசாய்க்கு பதிலளிக்கையில் முக்கியமான விஷயங்களை மறைக்கவில்லையாயினும் பேச்சின் காரத்தைச் சொற்பம் குறைத்துக்கொண்டார். தமது பேச்சுக்கு ஆதாரமான தஸ்தாவேஜிகளையும் அசம்பிளியில் பகிரங்கமாகப் படித்துக்காட்டவில்லை. எனவே சாது தேசாய் மூக்கறுபடாமல் தப்பித்துக்கொண்டார். தமது கண்டனத் தீர்மானத்தைத் தோழர் தேசாய் வற்புறுத்தாததற்கு இதுவே காரணம். தம் கட்சி நியாயமானதாயிருந்தால் தோழர் தேசாய் சும்மா இருந்திருப்பாரா? கையால் ஆகாததனாலேயே வெகு யோக்கியர் போல் நடந்து கொண்டார். கடைசியில் சர்க்காரை ஆட்டிவைக்கப் புறப்பட்ட தேசாய் தலையைத் தொங்கப்போட வேண்டியதாயிற்று. ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் தோழர் சத்தியமூர்த்தி வாய்திறக்காமல் இருந்தது முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. இவ்விஷயத்தில் தோழர் தேசாய் நடந்து கொண்ட முறை காங்கிரஸ் பத்திரிகைகளுக்கே பிடிக்கவில்லை யென்றால் காங்கிரசுக்கு ஏற்பட்டிருக்கும் அவமானத்தை நாம் விளக்கிக் கூறவேண்டுமா?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 15.03.1936**



RangaRakes tamilnavarasam.com

# குதிரை திருட்டுப் போன பின்பு லாயம் பூட்டப்பட்டது

குதிரை திருட்டுப் போன பின்பு லாயம் பூட்டப்பட்டது என்று ஒரு பழமொழி உண்டு. அதாவது குதிரை லாயத்தை, குதிரை உள்ளே இருக்கும்போது சரியானபடி பூட்டாமலும், கவனிக்காமலும் விட்டுவிட்டு, குதிரை திருட்டுப்போன பின்பு கவனித்து லாயத்தை பூட்டி வைப்பது பைத்தியகாரத்தனம் என்று சொல்லுவார்கள்.

அதுபோலவே நமது ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் என்பவர்கள் காலா காலத்தில் செய்யவேண்டிய காரியங்கள் எதையும் கவனிக்காமல் விட்டு விட்டு, அக்கட்சிக்கு ஏற்படவேண்டிய கெடுதியும், குறைவும் எவ்வளவு ஏற்படவேண்டுமோ, அவ்வளவும் ஏற்பட்டபிறகு இப்போது கவலை கொண்டவர்கள் போல் காட்டிக்கொண்டு தாங்கள் யோக்கியமாய் நடந்து கொண்டதாக அன்னியருக்கு மெய்ப்பிப்பதற்கு முயற்சிப்பதில் என்ன நன்மை ஏற்படும் என்பது நமக்கு விளங்கவில்லை.

கட்சித் தலைவர் பொப்பிலிராஜா அவர்கள் தன்னால் கூடியதைத் துணிந்து செய்தார் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் அவருக்கு எவ்வித ஒத்துழைப்பும் இல்லாமல் போனதாலும், மற்ற உபதலைவர்களுக்குள் பரஸ்பர நம்பிக்கையில்லாமல் போனதாலும் பல சந்தர்ப்பங்களில் அவரது நிலை அவருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்து விட்டதாலும் அவரது முயற்சி பலனற்றதாகப் போய் விடும்படி ஆகிவிட்டதுடன் அவரது மனமும் தளர்ந்துவிட்டது.

மற்ற பல தலைவர்கள் என்பவர்களில் இன்னார் தான் இன்ன வேலை எடுத்துக்கொண்டார்கள் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லாமல் போய்விட்டது.

அசம்பளி எலக்ஷன் நடந்து ஒரு வருஷகாலத்துக்கு மேலாகின்றது. அவற்றில் இரண்டொரு தேர்தல்கள் ஏமாற்றப்பட்டு விட்டது என்று சொல்லப்பட்டாலும் மற்ற தேர்தல் முடிவுகள் அநேகமாய் பாமர மக்களிடம் பிரசாரமில்லாமையாலும், ஆங்காங்குள்ள பிரபலஸ்தர்கள் - தலைவர்கள் என்பவர்களின் கவலை ஈனத்தாலும் அபிப்பிராய பேதத்தாலும் ஏற்பட்டவை என்பது நன்றாய் விளங்கக்கூடிய காரியங்களாகும்.



இந்தக் காரியங்களால் அசம்பளி தேர்தல் மாத்திரமல்லாமல் மற்றும் அடுத்து வந்த இரண்டொரு தேர்தல்களும் நமக்கு விரோதமாகவே முடிந்தன. இந்த முடிவின் பயனாய் ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களுக்கும் பிரமுகர்களுக்கும் கடுகளவு படிப்பினை கூட ஏற்பட முடியாமல் போனதோடு பயமும் அவநம்பிக்கையும் ஏற்பட்டுபோய் எப்படியாவது தன் தன் காரியமே பிரதானம் என்று கருதி அதையே முக்கியமாய் கவனித்துக்கொள்ள வேண்டியதான உணர்ச்சியைக் கொடுத்ததே அல்லாமல் கட்சியின் பொது நன்மையைப் பற்றியோ, லட்சியத்தைப் பற்றியோ எல்லோரும் மறந்துவிட வேண்டியதாய் விட்டது.

காலாகாலத்தில் செய்யப்படாத சிகிச்சையினால் வியாதி எப்படி முற்றிவிடக்கூடுமோ அதுபோல் அலட்சியத்திற்குத் தகுந்த அளவு பரிகாரம் சிரமமாய் போய்விட்டதுடன் அடியோடு நம்பிக்கை இழக்கவேண்டிய அளவுக்கு கொண்டு வந்து விட்டுவிடும் போல் இருக்கிறது.

அசம்பளி தேர்தல் முடிவைக் கண்டவுடன் ஜஸ்டிஸ் தலைவர்கள் ஊர் ஜனங்களை திருப்திப்படுத்த ஒரு கூட்டத்தைக் கூட்டி ஜில்லாக்கள் தோறும் மகாநாடு நடத்துவதாகவும், கிராமங்கள் தோறும் பிரசாரம் செய்வதாகவும் திட்டங்கள் போட்டார்கள்.

ஆனால் ஜில்லாத் தலைவர்கள் சிலர் காங்கிரசுக்காரர்களுக்கு பயந்தும், சிலர் மகாநாடு கூட்டினால் வேறு யாருக்காவது செல்வாக்கு ஏற்பட்டுவிடுமோ என்றும், தங்களது வண்டவாளங்கள் வெளிப்பட்டுவிடுமோ என்றும் பயந்து தாங்களாக எவ்வித முயற்சியும் செய்யாமல் இருந்ததோடு செய்ய முயற்சித்த மற்றவர்களுடைய முயற்சிகளையும் அடக்கி ஒடுக்கி பாழ்படுத்தி விட்டார்கள். சிலர் காங்கிரஸ் தலைவர்களுக்கும், தொண்டர் களுக்கும் கைக்கூலி கொடுத்து காரியம் சாதித்துக்கொள்ள பார்க்கிறார்கள்.

பிரசாரம் என்றாலே ஜஸ்டிஸ் கக்ஷி தலைவர்களுக்கு வேப்பங்காயாக இருக்கின்றதே ஒழிய ஒருவருக்காவது அதில் நம்பிக்கை இருப்பதாகத் தெரியவே இல்லை. இதன் காரணம் பிரசாரத்தின் மூலம் வேறு யாராவது பெரிய மனிதர்களாகிவிட்டால் நம்ம கதி என்னாவது என்கின்ற குறுகிய நோக்கம் சிலருக்கு இருப்பதே ஒழிய வேறில்லை.

அன்றியும் ஜஸ்டிஸ் கக்ஷித் தலைவர்கள் என்பவர்களில் சென்னைத் தலைவர்கள் சிலருக்கும், வெளி ஜில்லாத் தலைவர்கள் பலருக்கும் எவ்வித பதவியும், எந்த தேர்தல் போட்டியும் தனக்கு ஆவதாய் இருந்தால் ஆகட்டும் இல்லாவிட்டால் வேறு யாருக்காவதானாலும் தனக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை என்கின்ற மனப்பான்மையே பெரிதும் இருந்து வருகிறது என்பதோடு தனக்கு ஆவதில்லை என்பது உறுதி. ஆனால் எதிரிகளுக்கு உதவி செய்யும் இழி தொழிலையும் கடைப்பிடித்து விடுகிறார்கள். இந்தத் தலைவர்களுடைய ரத்தத்தை எல்லாம் எடுத்து விட்டு புதிய சுத்த ரத்தத்தை



RangaRakes tamilnavarasam.com

இவர்கள் சரீரத்தில் பாய்ச்சினால் ஒழிய இப்போதைய பிரமுகர்களாலும், தலைவர்களாலும் கக்ஷிக்கு பயன் உண்டாகும் என்று சொல்லுவதற்கு மிகவும் பயப்பட வேண்டியதாகவே இருக்கிறது. இவற்றை நாம் நமது அனுபவத்தில் இருந்து எழுதுகிறோமே ஒழிய மற்றபடி கோபத்தினாலோ, ஆத்திரத்தினாலோ எழுதவில்லை.

நிற்க, 15-3-36-ந் தேதி ஜஸ்டிஸ் சட்டசபை கட்சி பிரமுகர்கள் ஒன்றுகூடி ஒரு புதிய பஞ்சாயத்துக் கமிட்டியும், பிரசாரக் கமிட்டியும், பிரசார ஆபீசும் ஏற்பாடு செய்திருப்பதாய்ப் பத்திரிகைகளில் பார்த்தோம். இந்தக் கமிட்டிகளுக்கு இனி வேலை இருக்கிறதா என்பதும், வேலை இருந்தாலும் இக்கமிட்டி ஏதாவது வேலை செய்யுமா என்பதும் மிக மிக சந்தேகப்படக் கூடியதாகவே இருக்கிறது.

ஏனெனில் இதற்கு முன் இந்த மாதிரி ஏற்பாடு செய்த கமிட்டிகள் எதுவும் சரியானபடி வேலை செய்ததாகத் தெரியவில்லை என்பதோடு இவ்விஷயங்களில் எந்த தலைவருக்கு அல்லது எந்த மெம்பருக்கு உண்மையான அக்கரை இருக்கிறது என்பதும் விளங்கவில்லை.

இக்கமிட்டிகள் போட்டதாக விளம்பரம் செய்வதெல்லாம் பொது ஜனங்களுக்கு ‘‘நாங்களும் எங்களால் கூடியதைச் செய்தோம்’’ என்று சமாதானம் சொல்ல ஒரு சாக்குக்காக செய்யப்பட்டதாக இருக்கிறதே ஒழிய உண்மையில் இந்தக் கமிட்டிகளால் காரியம் என்ன நடைபெறக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை.

நாம் ஒன்று கேட்கின்றோம். ஆனால் நல்ல எண்ணத்தின் மீதும், ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள எந்த அங்கத்தினர்களையும் விட அக்கட்சியின் நன்மையிலும், அச்சமூகத்தின் முற்போக்கிலும் சிறிதுகூட குறைந்தவரல்லாத நிலையிலும் இருந்துகொண்டே கேட்கின்றோம்.

1930-ம் ஷு முதல் 1936-ம் ஷு வரை இந்த ஆறு வருஷ காலமாய் ஜஸ்டிஸ் கட்சியின் பொருட்டு பாமரமக்களிடம் ஏதாவது பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறதா என்றும், இந்த மாகாணத்தில் ஆங்கிலம் தெரியாத 4 கோடி மக்களுக்கு அரசியல் விஷயமும், கட்சி விஷயமும் புரியும்படி ஏதாவது மகாநாடோ, பத்திரிக்கைகளோ நடத்தப்பட்டிருக்கின்றனவா என்றும் கேட்கின்றோம்.

அசம்பளி தேர்தலில் கட்சியின் பேரால் ஒரு ஸ்தானம் கூட வெற்றி பெற முடியாமல் போனபிறகும் கூட தேச பாஷை தினசரி பத்திரிகை ஆரம்பிக்காமலும், மகாநாடுகள் கூட்டப்படாமலும் ஒழுங்கான பிரசாரங்களுக்கு ஏற்பாடு செய்யாமலும் இருந்தால் அக்கட்சி உயிர் வாழமுடியும் என்று யார் தான் எதிர்பார்க்க முடியும்.

சென்ற வருஷத்திலேயே ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றி சர்க்கார் தங்களுடைய வருஷாந்திர ரிபோர்ட்டில் ஜஸ்டிஸ்கட்சி ஒரு கட்டுப்பாடில்லாத - சீர்குலைந்து போன கட்சி என்று எழுதினது யாவரும் அறிந்ததேயாகும். அதற்கு பதில் சொல்லும் முறையிலாவது யாரும் எந்தவித முயற்சியும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

இப்பொழுது இந்த 3,4 மாத காலங்களில் திருநெல்வேலி, திருச்சினாப்பள்ளி, திருப்பாப்புலியூர் (கடலூர்) ஆகிய ஜில்லாபோர்டுகளில் பார்ப்பன ஆட்சியே வெற்றி பெற்று வருவதைப் பார்க்கிறோம்.

இனி திருவண்ணாமலை, வேலூர் ஆகிய ஜில்லாக்களின் கதி எவ்வாறாகும் என்பதுபற்றி சந்தேகப்பட வேண்டிய அவசியமிருப்பதாய் தெரியவில்லை.

இதுபோலவே இனியும் பிரிக்கப்படப் போகின்ற ஜில்லா போர்டு தேர்தல்கள் விஷயமும் எப்படி ஆகும் என்று யோசிக்கவேண்டிய அவசியமிருக்காது என்றே கருதுகிறோம்.

இதன் காரணங்கள் கக்ஷித் தலைவர்கள் சரியானபடி கவலை எடுத்து வேலை செய்யவில்லை என்பதல்லாமல் கக்ஷிக் கொள்கையினை குறையென்றோ, அவர்கள் தலைமை வைத்து நடத்தின நிர்வாகத்தில் ஏற்பட்ட குற்றத்தாலென்றோ யாராவது சொல்ல முடியுமா? ஒருக்காலும் முடியாது என்பதோடு சென்னை ஜஸ்டிஸ் கக்ஷி மந்திரிகளின் நிர்வாகமும், சென்னை ஜஸ்டிஸ் கக்ஷி சட்டசபை நிர்வாகமும் இந்தியாவிலேயே வேறெந்த மாகாணத்திலும் நடந்திராத, நடத்த முடியாத அளவு அவ்வளவு திறமையாயும், முற்போக்காயும் நடத்தப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் இந்த நிலை ஏற்பட்டதானது பாமர மக்கள் ஆதரவில்லை என்றால் பிரசாரக் குறைவும், பாமர மக்களை லக்ஷியம் செய்யாக் குறைவும் அல்லாமல் வேறு என்ன இருக்க முடியும்.

இப்பொழுது 15-3-36-ந் தேதியில் போட்ட பஞ்சாயத்துக் கமிட்டியும், பிரசாரக் கமிட்டியும் 15-3-35-ம் வருஷத்தில் போட்டு அதற்கு ஒரு 10 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி வைத்து மீ 500 ரூ செலவில் ஒரு தமிழ் தினசரி ஆரம்பித்திருந்தால் இன்றைய நிலைமை நேர்மாறாக இருந்திருக்கும். அப்படிக்கு இல்லாமல் இப்போது கமிட்டி போட்டதில் தக்க பயன் இருக்குமென்று நம்புவதற்கில்லை.

பஞ்சாயத்து கமிட்டிக்கு இனிமேல் எந்த ஜில்லாவில் போய் என்ன பஞ்சாயத்தோ சமாதானமோ செய்ய வேலை இருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை.

திருநெல்வேலி ஜில்லா போட்டில் ‘‘காங்கிரஸ் சார்பாய்’’ தலைவர் வந்ததானது காங்கிரசின் கொள்கையாலா அல்லது ஜஸ்டிஸ் கக்ஷி தலைவர்கள் என்பவர்களுக்குள் இருந்த சண்டையாலா என்பது யோசித்தால் விளங்காமல் போகாது.



RangaRakes tamilnavarasam.com

தோழர் தளவாய் முதலியார் அவர்கள் ராஜிக்குக் கட்டுப்பட்டார். அதாவது ''எனக்கும் பிரசிடெண்ட் பதவி வேண்டாம். தோழர் ஈஸ்வரன் பிள்ளைக்கும் பிரசிடெண்ட் பதவி வேண்டாம். யாராவது மூன்றாதவர் ஒருவர் இருக்கட்டும்'' என்றார்.

மற்ற கட்சியார் இதை ஒப்புக் கொள்ளவில்லை. ''கிடைத்தால் ஈஸ்வரன் பிள்ளைக்கு கிடைக்கட்டும், இல்லாவிட்டால் எப்படியேனும் போகட்டும்'' என்று சொல்லி பைசல் நடைபெறாமல் பாழக்கினார்கள். இதில் மந்திரிகள் ஆளுக்கொரு கட்சியை சார்ந்தவர்களாக ஆகிவிட்டார்கள்.

இதுபோலவே திருச்சி விஷயமும். தோழர் தேவர் அவர்களுக்கும், தோழர் நாராயணசாமி பிள்ளை அவர்களுக்கும் இருந்த அபிப்பிராய பேதமும் இதில் மந்திரிகள் ஆளுக்கொரு கட்சியை ஆதரித்த காரணமும் ஜஸ்டிஸ் கட்சி சார்பாய் தலைவர் வரமுடியாமல் போய்விட்டது. இது போலவே திருவண்ணாமலை, திருப்பாப்புலியூர் முதலிய இடங்களிலும் ஏற்பட்டன. இந்நிலையில் இனி பஞ்சாயத்து போர்டாருக்கு என்ன வேலை இருக்கிறது என்பது விளங்கவில்லை.

பிரசார விஷயத்திலும் காங்கிரசுக்காரர்கள் ½ அணா வீதம் 3 தினசரியும், ¼ அணா வீதம் 2 தினசரியும் போட்டு வெளுக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சிக்கு பத்திரிகை எங்கே இருக்கிறது? பத்திரிகை இல்லாத வெறும் பிரசாரம் என்ன பலனை அளிக்கும் என்று யோசித்துப் பார்த்தால் நாம் வெற்றி பெறாததற்கு உள்ள காரணம் வெளியாகிவிடும்.

வட ஆற்காடு ஜில்லாவில் ஜஸ்டிஸ் கட்சி பிரசாரத்தைப் பற்றி எழுதிய செய்திகளை ஒரு தினசரி பத்திரிகை கூட பிரசுரிக்க வில்லையாம். அதற்கு மாறாக தப்பு செய்திகளை பிரசுரித்தனவாம். இதைப்பற்றி யார் கவனிக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் அறிந்தே ஒரு கால் அணா தினசரி பிரசுரிக்க நாம் எல்லா ஏற்பாடுகளும் செய்து கொண்டு அரசாங்கத்தை டிக்ளரேஷன் கேட்ட காலத்தில் **பெருவாரியான ஜாமீன் தொகை கட்ட வேண்டுமென்று** உத்திரவு செய்துவிட்டார்கள்.

இதை கவனித்து ஒரு ஏற்பாடு செய்ய கட்சியில் நாதி இல்லாமல் போய்விட்டது. **குடி அரசுக்கும் 2000 ரூ ஜாமீன் வாங்கி வைத்திருக் கிறார்கள். அதையும் திருப்பிக் கொடுக்க அரசாங்கத்தார் மறுத்து விட்டார்கள்.** இதைப்பற்றி கேட்பதற்கும் நாதி இல்லாமல் போய் விட்டது.

மாகாணத்தலைவர்கள் நிலை இப்படி என்றால் ஜில்லாத் தலைவர்கள் நிலை சொல்லவே வேண்டியதில்லாத நிலையில் இருக்கிறது.

எந்த ஜில்லா தலைவர்களும் தனக்கு ஏதாவது சொந்தத்தில் கிடைக்குமா என்று பார்க்கிறார்களே ஒழிய கட்சியின் பேரால் வெற்றி என்பதை வேப்பங்காய் போலவே கருதுகிறார்கள். ''தனக்கில்லாவிட்டால் அது எப்படியேனும் போகட்டும் என்கிறார்கள்''. இம்மாதிரி கவலையுள்ள தலைவர்களைக் கொண்ட கட்சி வெற்றி பெறாதது அதிசயமாகுமா என்று கேட்கின்றோம்.

இந்த 3 வருஷகாலமாக நாம் சொந்த கைப்பொறுப்பு செலவுடனும் சிறைவாசம், அபராதம், பறிமுதல், ஜாமீன் கட்டுதல் முதலிய சர்க்கார் தொல்லைகளுடனும் செய்து வந்த பிரசாரத்தின் பலன்களும் கூட தலைவர்களின் இம்மாதிரி நடவடிக்கைகளால் சிறிது கூட பயன்படாமல் போய் விட்டதை நினைக்கும் போது ஆத்திரம் வராமல் இருக்க முடியவில்லை.

என்றாலும் இனியாவது எந்தத் தீர்மானமும் காகிதத் தீர்மானங்களாய் இல்லாமல் காரிய தீர்மானமாக இருக்கும்படி ஆங்காங்குள்ள முக்கியஸ்தர்களின் பிணக்குகளை சமாதானம் செய்தல், பிரசாரம் செய்தல், பத்திரிகைகள் நடத்துதல் ஆகிய மூன்றுக்கும் ஏதாவது ஒரு ஏற்பாடு செய்யவேண்டு மென்று கட்சித் தலைவர்களுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 22.03.1936**



RangaRakes
tamilnavarasam.com

# மந்திரத்தினால் மாங்காய் விழுமா?

வைதீகப்பழமான பண்டித மதன்மோகன மாளவியாவும் ஒரு சீர்திருத்தக்காரராம். அவருடைய சீர்திருத்தப்போக்கு மகா விநோதமானது. தீண்டாதார் தீக்ஷை பெற்றுவிட்டால் ஏனைய இந்துக்களைப் போல அவர்களும் ஆலயங்களுக்குள் போகலாம்; சுவாமி தரிசனம் செய்யலாம் என்பது அவருடைய கருத்து. ஆனால் தீண்டாமையைப்பற்றி ஸநாதனிகளுக்குள்ளேயே அபிப்பிராய பேதமிருந்து வருகிறது. பண்டித மாளவியா கோஷ்டியார் வேத சாஸ்திரங்களில் தீண்டாமைக்கு ஆதரவில்லை யென்கிறார்கள். ஏனைய மாறுதல் வேண்டாத ஸநாதனிகள் உண்டு என்கிறார்கள். மாறுதல் வேண்டாத ஸநாதனிகளும் அவர்களை ஆதரிப்பவர்களுமே அதிகமாயிருக்கிறார்கள். எனவே தீண்டாதார் துயரம் அவ்வளவு சுளுவாக நீங்குமென்று நம்புவதற் கில்லை. தீண்டாமையை ஒழிக்க எத்தனையோ பேர் இதற்குமுன் முயன்று பார்த்தும் பயன் ஏற்படாததினாலேயே மத மாறியாவது சுயமதிப்பைப் பெறுங்கள் என்று டாக்டர் அம்பேத்கார் தம் இனத்தாருக்கு யோசனை கூறுகிறார். அவர் யோசனைப்படி பலவிடங்களில் பலர் மத மாறியும் வருகிறார்கள். எனவே ஹிந்து அரசியல்வாதிகளுக்கு கிலி பிடித்திருக்கிறது. தீண்டாதார் மதம் மாறி விட்டால் ஹிந்துக்களின் அரசியல் பலம் குறைந்துவிடும். எனவே தீண்டாதாரை மேலும் ஹிந்து மதத்துக்குள்ளேயே வைத்திருக்க பண்டித மாளவியா போன்ற அரசியல் ஸநாதனிகள் பெருமுயற்சி செய்து வருகிறார்கள். சென்ற மஹா சிவராத்திரி காலத்து கங்கைக்கரையிலே அநேக தீண்டாதாருக்கு பண்டித மாளவியா தீக்ஷா மந்திரம் உபதேசம் செய்து ''சுத்தி''ப்படுத்தியதை நண்பர்கள் அறிந்திருக்கலாம். சென்ற 17ந் தேதியும் நாசிக்கில் அநேக தீண்டாதாருக்கு பண்டித மாளவியா தீக்ஷா மந்திரம் உபதேசம் செய்தாராம்.

நாசிக் ராமசாமி ஆலயத்தில் தரிசனம் செய்ய நாசிக் தீண்டாதார் வெகுகாலமாக முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள். சத்தியாக்கிரகமும் செய்து பார்த்தார்கள். பலிக்கவில்லை. எனவே தீக்ஷா மந்திரம் மூலம் அவர்களை சுத்திப்படுத்தி ஆலயத்துக்கு அழைத்துச் செல்ல பண்டித மாளவியா முயன்று பார்க்கிறதாகத் தெரிகிறது. நாசிக் ஸநாதனிகளும் மாளவியா கோஷ்டியாரும் தீண்டாமை விஷயமாக விவாதம் நடத்திப் பார்த்தார்கள். பலம் பூச்சியம்தான். ''ஐயோ அந்த வம்பர்களிடம் வாதம் செய்து ஜெயிக்க முடியாது'' என்று சாது மாளவியாவே வாய்விட்டுக்



கூறிவிட்டாராம். ''என்னாலான மட்டும் முயன்று பார்த்தேன். திருப்தியான பலன் கிடைக்கவில்லை'' என்றும் ஒப்புக்கொண்டாராம். தீண்டாமையை ஒழித்து, ஒடுக்கப்பட்டவர்களை முன்னேற்ற பண்டித மாளவியா உண்மை யாகவே ஆசைப்படலாம். அவரது அந்தரங்க சுத்தியைப்பற்றி நமக்குச் சந்தேகமே இல்லை. ஆனால் தீண்டாமையை ஒழிக்க அவர் கையாளும் முறை பலனளிக்கக் கூடியதுதானா என்பதே கேள்வி. முதலில் ஒடுக்கப் பட்டவர்களுக்கு தீக்ஷா மந்திரம் உபதேசம் செய்யத் தேவையென்ன? ஹிந்துக்கள் அல்லாதவர்களை ஹிந்து மதத்தில் சேர்க்க தீக்ஷா மந்திரம் உபதேசம் செய்தால் அதற்குப் பொருளுண்டு. ஒடுக்கப்பட்டவர்களும் ஹிந்துக்களே என்று பண்டித மாளவியா ஒப்புக்கொண்டிருக்கையில் அவர்களுக்கு தீக்ஷா மந்திரம் உபதேசம் செய்வது அவர்களை அவமதிப்பதே யாகும். சுயமரியாதையுடைய ஆதி இந்துக்கள் அதைப் பொறுத்துக் கொண்டு இருக்க மாட்டார்கள். தீக்ஷா மந்திரம் உபதேசம் செய்வதினால் ஆதி இந்துக்களிடம் பிறவியிலேயே ஏதோ குறை இருப்பதாகக் கருதப்படு கிறது. உண்மையில் அத்தகைய குறைகள் எதுவுமில்லை. ஆதி இந்துக்களும் இந்துக்களானால் அவர்களும் ஏனைய இந்துக்களுக்கு ஒப்பானவர்களே. எனவே பண்டித மாளவியாவின் சீர்திருத்த முயற்சிக்கு அர்த்தமே இல்லை. இம்மட்டோ? அவருடைய முயற்சி ஆதி இந்துக்களை அவமதிக்கக் கூடியதாக இருக்கிறது.

பண்டித மாளவியாவின் மந்திரோபதேசத்தினால் தீண்டாமை யொழியவும் செய்யாது. பண்டிதரிடம் தீக்ஷா மந்திரோபதேசம் பெற்றவர்கள், தீக்ஷை பெற்ற தீண்டாதவரா யிருப்பார்களேயன்றி இந்துக்கள் ஆகிவிட மாட்டார்கள். தீண்டாமைக்கு அடிப்படையாயுள்ளது ஜாதி. ஜாதி ஒழியாமல் தீண்டாமை ஒழியவே செய்யாது. ஆகவே பண்டித மாளவியாவின் முயற்சி வீண் முயற்சியாகும்.

குடி அரசு - கட்டுரை - 22.03.1936



RangaRakes tamilnavarasam.com

# தமிழ்ப் பெரியார் மறைந்தார்

பண்டிதர் தோழர் கா. நமச்சிவாய முதலியார் பிரிவினால் தமிழகத்தாருக்கு ஏற்பட்டிருக்கும் துக்கத்தில் நாமும் மனமாரப் பங்கு கொள்ளுகிறோம். பிறந்தாரெல்லாம் இறப்பது இயற்கையாயினும் நாட்டுக்கும், மக்களுக்கும் நலம் செய்வோர் பிரிவு நாட்டு மக்கள் உள்ளத்தைப் பெரிதும் துக்கத்தில் ஆழ்த்தச் செய்யும். தற்காலத்துத் தமிழர் முன்னேற்றத்துக்காக உழைப்பவர் மிகச் சிலரே. எனவே, கண்மூடும் வரை தமிழர் நலத்துக்காக அல்லும் பகலும் உழைத்துள்ள ஒரு பெரியார் பிரிவை யார்தான் தாங்கவல்லார்? தமிழ் மொழிக்கு தோழர் முதலியார் செய்த தொண்டு மலையினும் பெரியது; கடலினும் அகன்றது. தமிழ் உரைநடைக்கு முதன் முதல் அடிகோலிய ஆறுமுக நாவலருக்குப் பிறகு நூற்றுக்கணக்கான வசன நூல்கள் இயற்றி தமிழ் செம்மையுறச் செய்த பெருமை காலஞ்சென்ற முதலியாருக்கே சொந்தம். வட மொழிச் சொற்களை அறவே வெறுக்கும் தமிழபிமானியல்ல அவர். இன்றியமையாவிடத்து வடமொழிகளை ஆளுவதே அவரது போக்காயிருந்தது. அவரது நடை எளிதாயும், இனிதாயும், தெளிவாயும் விளங்குகிறது. அவர் எழுதிய நூல்கள் தமிழிலக்கியத்துக்கு அழகு செய்யும் அணிகலன் என்பதற்கும் சந்தேகமே இல்லை. தமிழ் மொழிக்கு இவ்வண்ணம் அரிய சேவை செய்த தோழர் முதலியார் பெயர் அழியாதிருக்கும்படி ஏதேனும் ஒரு ஞாபகச் சின்னம் நிறுவ தமிழகத்தார் முன்வரவேண்டுவது தமிழ் வளர்ச்சிக்கு ஞாபகக் குறிப்பிடுவதாகும். முதலியார் பிரிவால் வாடும் மக்களுக்கும், சுற்றத்தாருக்கும் நமது ஆழ்ந்த அநுதாபம் உரியதாகுக!

குடி அரசு - இரங்கற் செய்தி - 22.03.1936



# ஜவஹர்லால்

ஜவஹர்லால் ஒரு பெரிய வீரர் என்பதும், சமதர்மவாதி என்பதும் பலருடைய அபிப்பிராயம்.

ஜவஹர்லால் எந்த முறையில் வீரர் என்பதும் எந்த முறையில் சமதர்மவாதி என்பதும் தெரிய வேண்டுமானால் பார்ப்பனர்கள் அவரை வீரரென்றும், சமதர்மவாதி என்றும் செய்யும் பிரசாரத்தைத் தவிர வேறு எவ்வித உதாரணமும் காண முடியாது என்றே சொல்லுவோம்.

சமதர்ம சம்பந்தமாய் இதற்கு முன் பேசிய பலருடைய அபிப்பிராயத்தை சிற்சில சந்தர்ப்பங்களில் கிளிப்பிள்ளை போல் பேசி விட்டது ஒன்றைத் தவிர வேறு ஒரு காரியத்திலும் அவர் சமதர்மவாதி என்று சொல்லும்படி இதுவரை நடந்து கொண்டவரல்ல.

அவருடைய சமதர்மம் நடவடிக்கை, சர்க்காரிடம் காந்தியார் தான் இனி சட்டம் மீறுவதில்லை என்றும், சத்தியாக்கிரகம் செய்வதில்லை என்றும் வாக்குக் கொடுத்து விடுதலையாகி வந்த "ராஜியை" ஒப்புக் கொண்ட போதே நன்றாய் விளங்கிற்று.

அதை மறுக்க அவர் ஒரு இடத்தில் அது ராஜி அல்லவென்றும், மறுதடவை சண்டைக்கு தயாராவதற்கு ஓய்வெடுத்துக் கொள்ளுவது என்றும் சொல்லி அதன் பேரில் சர்க்கார் நடவடிக்கை எடுக்க இருந்ததை மறுபடியும் காந்தியார் தலையிட்டு அந்த வாக்குமூலத்தை மாற்றி வைக்க வேண்டி வந்தது. பிறகு அவருடைய ஞானத்தைப் பற்றியும் நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. தகப்பனார் எலும்பையும் மனைவியார் எலும்பையும் அவர்கள் "ஆத்மா மோக்ஷ"மடைய கங்கையில் கரைத்து கிரியை செய்தது ஒன்றே போதுமானது.

இந்தக் காரணங்களாலேயே மேல்நாட்டு சமதர்மவாதிகள் கூட்டத்திலிருந்து அவர் விலக்கப்பட்டார். இந்த வீரர் தகப்பன் பணக்காரராய் இருந்தார் என்பதற்காகவும், காந்தியாருக்கு வேண்டிய குடும்பஸ்தர் என்பதற்காகவும் இந்தியத் தேயிலையை விட அதிகமாக விளம்பரம் செய்யப்படுகிறார்.

தமிழ்நாட்டு இளைஞர் பலருக்கு வேறு போக்கிடம் இல்லாமல் போய்விட்டதாலும், காங்கிரசுக்கு அறிவாளிகளிடத்தில் இழிவு ஏற்பட்டு விட்டதாலும், சுயமரியாதைக் கட்சி பார்ப்பனர்களுக்கு எமனாய் போய்



RangaRakes tamilnavarasam.com

விட்டதாலும் இளைஞர்கள் பலர் ஜவஹர்லாலுக்கு ஜே போட்டு தேச பக்தர்களாக வேண்டியதாய் விட்டது. பார்ப்பனர்களும் அவரைக் காட்டி ஏமாற்ற வேண்டியதாய் விட்டது.

தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் போலவே ஜவஹர்லால் அவர்களும் வாயில் எவ்வளவு சமதர்மமும் பொது உடமையும் பேசினாலும் காரியத்தில் பார்ப்பனீயத்தை விட்டுக் கொடுப்பார் என்று எதிர்பார்ப்பது பயித்தியகாரத் தனமேயாகும்.

காங்கிரசை கஷ்ட நிலைமையில் இருந்து காப்பாற்றவே இது சமயம் ஜவஹர்லாலுக்கு காங்கிரஸ் வேஷம் போட்டு மேடையில் கொண்டு வந்து நிறுத்துகிறார்களே ஒழிய ஜவஹர்லாலுக்கும், அவர் வாயில் பேசும் கொள்கைக்கும், காங்கிரசுக்கும் கடுகளகாவது சம்பந்தம் இருக்கும் என்று யாராவது சொல்லமுடியுமா என்று கேட்கின்றோம்.

வேலை இல்லாத் திண்டாட்டத்தின் பலனாக தேசத்தில் பத்திரிக்கைகள் தாராளமாகப் பெருகிவிட்டன.

அனேகர் பத்திரிகையின் பேரிலேயே தங்கள் ஜீவனத்தையும், வாழ்க்கையும் நிர்மாணித்துக் கொண்டார்கள். இந்தக் கூட்டத்தாருக்கு மதம் தேசம் என்கின்ற இரண்டைத் தவிர வேறு வழியில் வாழவோ, பத்திரிக்கையை நடத்தவோ யோக்கியதை இல்லாமல் போய்விட்டது என்பதோடு, இந்த இரண்டுக்கும் பார்ப்பனர்களே வழிகாட்டிகளாக ஆகிவிட்டதால், அவர்கள் போட்ட தண்டவாளத்தின் மீதே மற்றவர்கள் பத்திரிகை அபிப்பிராயம் என்னும் ரயில் போக வேண்டியிருப்பதால் அவர்களுக்குப் பின் ஜவஹர்லால் இருந்துகொண்டு கோவிந்தாப் போடுவதைத் தவிர மற்றப்படி பத்திரிகைக்காரர்களுக்கு வேலையும் யோக்கியதையும் இல்லாமல் போய்விட்டது. ஆதலாலேயே ஜவஹர்லாலும் வீரராக விளம்பரப்படுத்தப்பட்டு விட்டார்.

ஆனால் இவர் காங்கிரசுத் தலைமை வகிக்க ஆரம்பித்த பிறகுதான் காங்கிரசிலுள்ள அபேதவாதிகளுக்கு காங்கிரசினிடம் சுத்தமாக நம்பிக்கை அற்றுப்போகும்படியான காலம் வந்து அவர்கள் காங்கிரசை விட்டே விலகும்படியான முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

வடநாட்டு சமதர்ம வாதிகள் காங்கிரசிலிருந்து விலகுகின்ற காலத்தில் தென்னாட்டு சமதர்ம வாதிகள் காங்கிரசில் அதிக நம்பிக்கை வைக்க ஆரம்பிப்பது; சமதர்மத்தின் தன்மையை தென்னாட்டு வாலிபர்கள் உணர்ந்த யோக்கியதையை விளக்குவதாகின்றதே ஒழிய மற்றபடி வேறில்லை.

எது எப்படி இருந்தபோதிலும் தோழர் ஜவஹர்லால் காங்கிரசில் தலைமை வகிப்பதினால் காங்கிரஸ் சற்று அதிகமான விளம்பரத்துக்கு பயன்படுமே ஒழிய யோக்கியமான காரியம் எதுவும் நடக்கப் போவதில்லை என்பதோடு



புரட்டும், பித்தலாட்டமும், சூழ்ச்சியும், அயோக்கியத்தனங்களும் இப்போதிருப் பதைவிட 1க்கு 1. ஆக பெருகும் என்பது மாத்திரம் நிச்சயமான காரியமாகும்.

உத்தியோகம் பதவி முதலியவைகளை பார்ப்பனர்கள் எப்படியாவது அடையவேண்டும் - மற்ற சமூகத்தாரை எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்பதே ஜவஹர்லால் தலைமையில் நடக்கப்போகும் காங்கிரசின் முடிவு என்பதை இப்போதே ஜோசியம் கூறிவிடுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 22.03.1936**



RangaRakes tamilnavarasam.com

# பிராணனை விட்டது

## மதம் மாறுவதற்கா?

## இந்து மதத்தில் இருப்பதற்கா?

நாசிக்கில் விச்சிராம் யாதவன் என்ற ஆதிதிராவிட சிறுவன் ஒருவன் தான் தோட்டியாய் இருப்பதில் அவமானமும், வெறுப்பும் அடைந்து தற்கொலை செய்து கொண்டான். இதை பார்ப்பனர்கள் ''அச்சிறுவன் மதம் மாறுவதற்கு இஷ்டப்படாமல் தற்கொலை செய்து கொண்டான்'' என்று எழுதி திரித்துக் கூறி இப்போது இந்து மதத்திலிருந்து மதம் மாறவேண்டும் என்கின்ற உணர்ச்சி தாழ்த்தப்பட்ட மக்களுக்குள் ஏற்பட்டிருப்பதை அடக்க அதை ஒரு சூழ்ச்சியாய்க் கொண்டிருக்கிறார்கள். இது அவர்களின் அயோக்கியத்தனத்தைக் காட்ட மற்றொரு உதாரணமேயாகும்.

விச்சிராம் யாதவன் என்கின்ற தோட்டிக்கு வயது 18. அச்சிறு வயதிலேயே அவனுக்கு தோட்டி வேலை பிடிக்கவில்லை என்பது இயற்கையேயாகும். அதற்காக அவனுக்கு வேறு மார்க்கமும் இல்லை. ஜாதி இழிவும், ஜாதி தொழில் கொடுமையும் நீங்குவதற்காக அச்சமூகத் தலைவர்கள் செய்த முயற்சிகள் எல்லாம் வீணாயின. அது சம்மதமாய் இந்துத் தலைவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் பொய்யாயின.

கடைசியாக அவர்கள் (இந்துத் தலைவர்கள்) தீண்டாதவர்கள் பேரால் பணம் வசூலித்து வயிறு வளர்க்க ஆரம்பித்ததையும், இனியும் பலர் அதை ஒரு ஜீவனோபாயமாகக் கொண்டு இருப்பதையும் பார்த்த பின்பு இனி இந்து மதத்தில் இருப்பது கூடாது என்று முடிவு செய்து கொண்டான்.

மதம் மாறுவதால் பயன் ஏற்படாது என்று இந்து மத விஷமக் காரர்களும், அயோக்கியர்களும் செய்த பிரசாரத்தையும் நம்பிவிட்டான்.

ஆகவே இந்த இழிவிலிருந்து நீங்க வேண்டுமானால் செத்துப் போனால்தான் முடியும் என்று கருதி உயிர் விட்டு விட்டான்.

மதம் மாறுவது குற்றம் என்று அச்சிறுவன் கருதி இருப்பானேயானால் அவன் உயிர்விட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை. அவன் குஷாலாக இந்து தோட்டியாகவே இருந்து கொண்டிருக்கலாமல்லவா? அவனை மதமாறும்படி யாரும் நிர்ப்பந்தப்படுத்தவில்லை என்பதோடு எந்த மதத்தாரும் அவனை அழைக்கவுமில்லை.



இந்து மதத்தில் தீண்டாதவனாய் இருப்பதும், தோட்டியாயிருப்பதும் மதம் மாறுவதைவிட மேலான காரியம் என்று அவன் கருதி இருப்பானே யானால் ஒருக்காலும் செத்து இருக்கமாட்டான், மற்றவர்களுக்கு மதம் மாற வேண்டாம் என்று எடுத்துச் சொல்லி பெரிய சாமியாராயிருப்பான். அப்படிக்கில்லாமல் மதம் மாறுவதை விட பிராணனை விடுவது மேல் என்று கருதினான் என்பது உண்மையானால் இப்போது அவனைப்போல் அனேகர் தற்கொலை செய்துகொண்டிருப்பார்கள்.

தீண்டப்படாதவர்களாய் தோட்டிகளாய் இருப்பதை விட உயிர் விடுவது மேல் என்று பலர் கருதுவதாலேயே அனேகர் பல கோடிப் பேர்கள் இந்த ஆயிரம் வருஷமாக வேறு மதம் மாறி சமூகத்தில் சுதந்திரமும் சுயமரியாதையும் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

மற்றும் பலர் இப்போது மதம் மாறவேண்டும் என்று தீர்மானித்து வருகிறார்கள்; மதம் மாறியும் வருகிறார்கள்.

கொச்சி, திருவாங்கூர் ராஜ்ஜியங்களில் தீயர், ஈழவர் சமூகத்தார் நேற்றுக்கூட மகாநாடு கூடி இந்து மதத்தில் இருந்து விலகுவது என்று தீர்மானித்து விட்டார்கள். நாசிக்கிலும் அனேக ஆதிதிராவிட சாமியார்கள் சாதுக்கள் ஆகியவர்கள் மகாநாடு கூடி மதம் மாறுவதாக தீர்மானித்து இருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும் கல் மனப் பார்ப்பனர்கள் இவற்றிற்கு போக்கிரித்தனமாகவும், விஷமத்தனமாகவும் வியாக்கியானம் செய்வதன் மூலம் மக்களை ஏய்க்கப் பார்க்கிறார்களே ஒழிய இக்கொடுமைக்கு எவ்வித பரிகாரமும் செய்ய முன் வந்தவர்கள் அல்லர்.

ஆகவே தீண்டாமை ஒழிய வேண்டுமானால் சுயமரியாதை உள்ளவர்கள் விச்சிராம் யாதவனைப் போல் தற்கொலை செய்து கொள்ள வேண்டும், தற்கொலை செய்துகொள்ள இஷ்டமில்லையானால் இந்துமதத்தை விட்டு தீண்டாமை இல்லாத மதம் புகவேண்டும். இரண்டும் இல்லாமல் தீண்டாதவனாய் பறையனாய், சக்கிலியாய், தோட்டியாய் இருந்து உயிர் வாழ்வது சுயமரியாதை அற்றதன்மை என்பதோடு பார்ப்பனர்களிடம் கூலி பெற்று மதம் மாறவேண்டாம் என்று தன் சமூகத்தாருக்கு சொல்லுவது தோட்டி வேலை செய்து ஜீவிப்பதைவிட இழிவான காரியம் என்று கூறுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 22.03.1936**



RangaRakes tamilnavarasam.com

# திருத்துறைப்பூண்டி - தஞ்சை ஜில்லா
# 5 வது சுயமரியாதை மகாநாடு

### ஆம் - ஆம் பொது உடமைப் பிரசாரம் நிறுத்திக்கொண்டேன்

### ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்துத் தீருவேன்

தோழர்களே!

சுயமரியாதை இயக்கம் மிக நெருக்கடியில் இருப்பதாகவும், சீக்கிரத்தில் செத்துப் போகும் என்றும் இங்கு சொல்லப்பட்டது.

இயக்கம் ஒன்றும் நெருக்கடியில் இல்லை என்பது என் அபிப்பிராயம். சிலருக்கு அவர்களின் சொந்த விருப்பு வெறுப்பை உத்தேசித்து அப்படித் தோன்றலாம். அதற்கு நான் காது கொடுக்க முடியாது. இந்த இயக்கம் ஆரம்பித்த காலம் முதற்கொண்டு அனேகர் தங்கள் சுயநலத்துக்கு சௌகரியமில்லாதது கண்டு இது போலவேதான் இயக்கம் நெருக்கடியில் இருக்கிறது, செத்துப்போய் விட்டது என்று சொல்லிக்கொண்டே போய்விட்டவர்களும், வெளியில் போய்விட்ட பின்பும் அவர்களால் கூடுமானவரை தொல்லைக் கொடுத்துக் கொண்டு இருந்தவர்களும் இருக்கிறவர்களும் திரும்பி வந்தவர்களும் பலர் உண்டு. அப்படிப்பட்டவர் களையும் அவர்களது விஷமங்களையும் பற்றி நான் சிறிதும் லக்ஷியம் செய்வதில்லை. அந்தப்படி நான் அலக்ஷியமாய் இருந்துவிட்டதால் இதுவரை இயக்கத்துக்கோ, எனக்கோ யாதொரு கெடுதியும் ஏற்பட்டு விடவில்லை. இயக்கம் போய்விட்டது என்று இன்னமும் சொல்லிக் கொண்டுதான் திரிகிறார்கள்.

இயக்கம் எங்கு போய் விட்டது. அவர்களை விட்டு விட்டுப் போய் விட்டது. அவ்வளவுதான்.

இப்போதும் சொல்லுகிறேன் இயக்கத்தின் மூலம் சுயநலம் அனுபவிக்கக் கருதியிருக்கும் எப்படிப்பட்டவர்களுக்கும் இயக்கத்தில் இடம் கிடைக்காது. அவர்கள் யாரானாலும் சரி, இயக்க வளர்ச்சியைவிட இயக்கத்தில் சுயநலம் கருதுபவர்களை கவனிப்பதே என் வேலை. அதனால் ஏற்படும் எதிர்ப்புகளை சமாளிக்கத் தயாராய் இருந்து கொண்டுதான் இப்படிச் சொல்லுகிறேன்.



எந்த இயக்கமும் அதிதீவிர கொள்கையில்லாததால் கெட்டுவிடாது. இயக்கத்தைத் தனிப்பட்ட மக்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொள்வதாலேயே கெட்டுப் போகும். இதுவரை அநேக இயக்கம் அதனாலேயே மறைந்து போய் இருக்கிறது. மற்றபடி யாருடைய எதிர்ப்பும், யாருடைய தொல்லையும் இருந்தாலும் இயக்கம் அதன் வேலையைச் செய்துதான் தீரும். இயக்கம் நெருக்கடியில் இருப்பதாய் இங்கு வருத்தப்பட்டவர்கள் எப்படி நெருக்கடியில் இருக்கிறது, இதனால் என்ன கெட்டுப் போய் விட்டது என்று எடுத்துக் காட்டியிருந்தால் எனக்கு அவர்கள் வார்த்தையில் உள்ள உண்மை புலப்பட்டு இருக்கும்.

தோழர்கள் தண்டபாணி, கண்ணப்பர், அய்யாமுத்து, ராமநாதன், தாவுத்ஷா முதலான பலர் சுயமரியாதை இயக்கம் செத்துப் போய் விட்டது என்று சொல்லிக்கொண்டுதான் சிலர் வெளியேறியும், சிலர் தாங்கள் இன்னமும் சுயமரியாதைக்காரர்கள் என்றும் சொல்லிக்கொண்டு தொல்லை கொடுத்து வந்தார்கள்; சிலர் வருகிறார்கள். இதனால் எந்தக்கொள்கை கெட்டுவிட்டது? என்ன நடவடிக்கை நின்று விட்டது?

இந்த மகாநாடு கூட்டியது பைத்தியக்காரத்தனம் என்று மகாநாடு கூட்டிய பிரமுகர்களுக்குத் தோன்றும்படி இன்று காலை முதல் இங்கு நடவடிக்கை நடக்கிறது. இது எனக்கு முன்னமேயே தெரியும். அதனாலேயே நான் இதற்கு வரவேண்டாம் என்று கருதி கடிதம்கூட எழுதிவிட்டேன். வந்தே தீரவேண்டுமென்று தந்தியும் கடிதங்களும் வந்தன. வந்த பிறகு ஏன் வந்தேன் என்றுதான் தோன்றுகின்றது. எங்கள் பெயர்களை விளம்பரம் செய்து ஆட்களைக் கூட்டி இம்மாதிரி இயக்கம் செத்துவிட்டது என்று மாய அழுகை அழுவதே மகாநாட்டின் வேலை என்றால் இனி மகாநாடுகள் கூட்டமால் இருப்பதுகூட நலமென்றே கருதுகிறேன்.

### ஏன் மாகாண மகாநாடு கூட்டவில்லை

இந்த லக்ஷணத்தில் மாகாண மகாநாடு ஏன் கூட்டவில்லை என்று என்மீது குறை கூறப்பட்டது. மகாநாடு இந்த லக்ஷணத்தில் இப்படிப்பட்ட ஆட்களை வைத்துக்கொண்டு எப்படி கூட்டமுடியும்? கூட்டுவதால் பிரயோஜனம் தான் என்ன? கூட்டாததால் என்ன கெட்டுவிடும்?

இதற்குமுன் கூட்டின 3 மகாநாடுகளும் பணக்காரர்களாலும் ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்களாலும் தான் கூட்டப்பட்டது. இந்த மகாநாடும் ஒரு பணக்காரரின் பெரிய பொருளுதவியின் மீதும் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களின் ஆதரவின் மீதும்தான் கூட்டப்பட்டது என்று காரியதரிசி சொன்னார். அப்படியிருக்க பணக்காரர்கள் தயவில் மகாநாடுகளைக் கூட்டி அவர்கள் நிழலில் இருந்துகொண்டு அவர்கள் சாப்பாட்டைச் சாப்பிட்டுக் கொண்டு அவர்களையே - அக்கட்சியையே வைது கொண்டிருப்பதனால் மகாநாடு எப்படிக்கூட்ட முடியும்?



RangaRakes tamilnavarasam.com

நாகையில் மாகாண மகாநாட்டைக் கூட்ட தோழர் காயாரோகணம் பிள்ளை அவர்கள் ஏற்றுக்கொண்டார். வேண்டிய ஏற்பாடும் செய்தார். முன் பணமும் கொடுத்தார். அப்படியிருக்க சில தோழர்கள் மகாநாட்டு நிர்வாகத்தில் சம்மந்தப்பட்டவர்களே அவரைக் கேட்காமல் மகாநாட்டுப் பந்தலில் சமதர்ம மகாநாடு கூடும் என்று பத்திரிகையில் விளம்பரம் செய்து விட்டார்கள். பிறகு பலர் அவரைக் கேட்க ஆரம்பித்த உடன் அவர் அம் முயற்சியை விட்டு விட்டதாகத் தெரிகிறது.

மற்றும் நாளையும் மகாநாடு கூட்டவேண்டுமானால் ஜஸ்டிஸ் கட்சியார் உதவியும் சில பணக்காரர்கள் உதவியும் வேண்டித்தான் இருக்கும். அப்படி இருக்க அவர்களை வைவதன் மூலம் வீரராகக் கருதி இருக்கிறவர்களின் வசவுக்குக் கட்டுப்பட்டு யார் தான் மகாநாடு கூட்டுவார்கள்? வைகின்றவர்களுக்கு யார் தான் ரயில் சார்ஜ் கொடுப்பார்கள்? என்பதை யோசித்துப் பாருங்கள். என்மீது குற்றம் சொல்லுவது யாருக்கும் எளிதுதான். ஆனால் இயக்கத்தில் வேறு எந்தத் தோழர் செய்கின்ற காரியத்தைவிட என் காரியம் என்ன குறைந்து போய் விட்டது என்று யோசித்துப் பாருங்கள்.

இயக்கம் என்றால் எவனோ ரயில் சார்ஜ் கொடுத்து, எவனோ விளம்பரம் செய்து, எவனோ கூட்டம் கூட்டி விட்டால் அதில் வந்து நின்று கொண்டு எல்லோரையும் பயங்காளி என்றும், கோழை என்றும், மந்திரிகள் மாய்கையில் மறைந்து விட்டவன் என்றும், சர்வாதிகாரி என்றும் ஒருவர் மற்றவரை வைதுவிட்டுப் போய் விடுவது அல்ல என்பதை நீங்கள் உணர வேண்டும். என்ன குறைந்தாலும் மாதம் 200, 300 ரூபாய் இயக்கத்துக்காகச் சொந்தப் பொருப்பில் செலவு செய்கிறேன். பல தடவை 1000, 2000 மொத்தமாக செலவு செய்துவருகிறேன். மாதம் 10 பிரசங்கங்களுக்குக் குறையாமல் பெரிதும் என் சொந்தச் செலவிலேயே பல தோழர்களை அழைத்துக் கொண்டு ஊர் ஊராய் கிராமம் கிராமமாகத் திரிந்து நோயுடனும், காயலாவுடனும், டாக்டர்கள் அபிப்பிராயங்களை லக்ஷியம் செய்யாமலும் பிரசாரம் செய்கிறேன். இதற்குமேல் மற்றவர்கள் சாதிப்பதோ மற்றவர்களுக்கு உள்ள பொறுப்போ இன்னது என்று எனக்கு விளங்கவில்லை.

இந்த இயக்கம் எந்தத் தனிப்பட்ட மனிதனும் வீரனாவதற்கும், வீரசொர்க்கம் போய்ச் சேரவும் ஏற்பட்டதல்ல. எனக்கு வீர சொர்க்கத்தில் நம்பிக்கை கிடையாது. வீரனாவதிலும் பயன் உண்டு என்று நம்பிக்கை கிடையாது. காந்திக்கு மேல் ஒருவன் வீரனாகவோ, மகாத்மாவாகவோ விளம்பரம் பெற முடியாது. ஆனால் அவரால் மனித சமூகத்துக்கு ஒரு காதொடிந்த ஊசி அளவு பயனும் ஏற்படவில்லை. ஏற்படப் போவதுமில்லை. வேண்டுமானால் அவருக்கும் அவர் சந்ததிக்கும் பெரிய மதிப்பு ஏற்பட்டு விடும். கோவிலும் ஏற்படும். ஆனால் நான் அப்படிப்பட்ட புகழை விரும்பவில்லை. எனக்குப் புகழ் வேண்டியதுமில்லை. புகழ் பெறுவதற்கு எவ்வளவு அயோக்கியத்தனம் செய்ய வேண்டுமென்பது நான் நன்றாய் அறிவேன். அத்துறையிலும் நான் இருந்து பார்த்துவிட்டுத் தான் இந்த ''இழிவு'' பெறும் வேலைக்கு மனப்பூர்த்தியாகவே வந்தேன். ஆதலால் நான் புகழ் பெறும் மார்க்கமோ, வீரப்பட்டம் பெறும் மார்க்கமோ அறியாதவனல்ல.

காங்கிரசில் உழைத்தபோது எனக்கும், என் குடும்பத்துக்கும் தகுதிக்கு மேற்பட்ட புகழ் கிடைத்தது.

அப்போது சில பதினாயிரக்கணக்கான ரூபாயில் புகழ் சம்பாதித்தேன். இப்போது பல பதினாயிரக்கணக்கான ரூபாய் செலவும் நஷ்டமும் அடைந்து இகழ்ச்சி அடைகிறேன்.

என்னவென்றால் 1922 வருஷத்திய சகல கட்சி மகாநாட்டில் காந்தியாரின் ஒத்துழையாமையைப்பற்றிக் கவலை கொண்டு லார்ட் ஆர்டிஞ்சு காந்தியாருக்கு என்னவேண்டும் என்று கேட்கும்படி ஒரு சர்வ கட்சி மகாநாட்டை பம்பாயில் கூட்டி கேட்டு வரும்படி செய்தார். அதில் சங்கரன் நாயர் தலைமை வகித்து காந்தியாரை ''உமக்கு என்ன வேண்டும்'' என்று கேட்டார். அப்போது காந்தியார் எனக்கு என்னவேண்டும் என்பதை **ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்மணிகளைக் கேட்டுப் பதில் சொல்லுகிறேன்** என்று சொன்னார். அந்த இரண்டு பெண்மணிகள் யார், என் மனைவியும், என் தங்கையும்தான். இது 1922ம் வருஷம் ஜனவரி மாதம் 19ந் தேதியிலோ 20ந் தேதியிலோ ஹிந்து பத்திரிகையில் இருந்தது. இதை திருச்சி டாக்டர் ராஜன் கத்தரித்து எனக்கு அனுப்பினார். இதற்கு மேல் எனக்கு இன்னும் என்னவேண்டும்? அதனால் பயனில்லை என்று உணர்ந்தேதான் தேசத்துரோகி, மதத்துரோகி, நாஸ்திகள், கோழை, சர்க்கார் தாசன் என்கின்ற பட்டம் கிடைப்பதானாலும் நாம் செய்யும் வேலையில் மக்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படவேண்டுமென்று கருதி சில திட்டங்களைக்கொண்டு சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்து அதில் என் இஷ்டப்படி உழைத்து வருகிறேன்.

இனியும் சாகும்வரை அந்தப்படியே உழைத்து வரத்தான் செய்வேன்.

### நான் பயந்துவிட்டது

நான் இப்போது சர்க்காருக்கு பயந்துவிட்டேன் என்றும், பொதுவுடமைப் பிரசாரத்தை விட்டு விட்டேன் என்றும் குறைகூறப்பட்டது. இதைப்பற்றி விஷமப் பிரசாரமும் செய்யப்பட்டு வருகிறது.

இந்தச் சமயத்தில் எனது கருத்தை தைரியமாகவும், விளக்கமாகவும் வெளியிடுகிறேன். தயவு செய்து கவனித்துக் கேட்கவேண்டுமாய்க் கோருகிறேன்.

நான் ரஷ்யாவுக்குப் போவதற்கு முன்பே பொதுவுடைமைத் தத்துவத்தை சுயமரியாதை இயக்கத்துடன் கலந்து பேசி வந்தது உண்மைதான். ரஷ்யாவில் இருந்து வந்தவுடனும் அதை இன்னும் தீவிரமாய்ப் பிரசாரம்


RangaRakes tamilnavarasam.com

செய்ததும் உண்மைதான். அதோடு மாத்திரமல்லாமல் தமிழ் நாட்டில் சுமார் 150 சங்கங்கள் ஆங்காங்கு ஏற்படும்படி செய்து அவைகள் ஒரு அளவுக்கு வேலை செய்து வரும்படி செய்ததும், அவைகளுக்கு நான் சில உதவிகள் செய்து வந்ததும் உண்மைதான். ஒன்றையும் மறைக்கவில்லை. ஆனால் சர்க்காரார் பொதுவுடைமை கொள்கைகள் சட்ட விரோதமானது என்று தீர்மானித்து நமது சுயமரியாதை இயக்கத்தையே அடக்கி ஒடுக்கி ஒழித்துவிட வேண்டும் என்று கருதி இருக்கிறார்கள் என்று உணர்ந்த பிறகும், அதனால் பல கஷ்ட நஷ்டம், தொல்லை ஆகியவை ஏற்பட்ட பிறகும், காங்கிரஸ்காரர்கள் சர்க்கார் அடக்குமுறைக்கு முகம் கொடுக்க முடியாமல் அவர்கள் பின்னடைந்து விட்டதைப் பார்த்தும், நம்முடைய தோழர்கள் சிலர் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதாலும், பலர் வெறும் வேஷ விளம்பரத்துக்கு அடிமைப்பட்டுவிட்டார்கள் என்பதை உணர்ந்ததாலும் எனக்கு புத்திசாலித்தனமாக சில காரியம் செய்யவேண்டியதாக ஏற்பட்டு விட்டது. அதுதான் பொதுவுடமைப் பிரசாரத்தை நிறுத்திக்கொள்ள வேண்டியது என்பதாக ஆகிவிட்டது.

அப்படி இல்லாமல் இருந்தால் சுயமரியாதை இயக்கம்கூட மறைந்து போயிருக்கும். இந்தப் பிரசாரம்கூட செய்ய முடியாமல் போயிருக்கும். எனக்கு இந்த 2, 3 வருஷத்தில் எவ்வளவு கஷ்டம் ஏற்பட்டது? தோழர் ஜீவானந்தம் எழுதிய வியாசத்தைப் பத்திரிகையில் போட்டதற்காக 2000 ரூபாய் ஜாமீன் கொடுத்தேன். கல்வியைப்பற்றி எழுதிய ஒரு கட்டுரைக்காக நானும் என் தங்கையும் சிறைப்பட்டோம். அபராதமும் கோர்ட் செலவுமாக ரூபாய் 2000க்கு மேல் செலவாகி விட்டது. தோழர் ஜீவானந்தம் அவர்களின் மற்றொரு மொழி பெயர்ப்புக்காக என் தமையனாரும் சிறைப்பட்டார். அதற்கும் ரூ.1000 வரை செலவு ஏற்பட்டது. பல புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. சுயமரியாதை இயக்கப்பத்திரிகை மற்றொன்றுக்கும் ஜாமீன் கேட்கப்பட்டு நின்றுவிட்டது. இதைப்பார்த்த பல தோழர்கள் ஓடி விட்டதுடன் துரோகம் செய்யவும் ஆரம்பித்தார்கள்.

இப்பொழுதும் நான் **ஒரு தினசரி நடத்த சகல** ஏற்பாடுகளும் செய்து கொண்டு சர்க்காரை அனுமதி கேட்டதில் பெருவாரியான தொகை ஜாமீன் கட்ட வேண்டுமென்று உத்திரவு வந்து விட்டது. இந்த நிலையில் சுயமரியாதை இயக்கத்தை ஒழித்து விட்டு நான் மாத்திரம் வீரனாக ஆவதற்கு ஜெயிலில் போய் உட்கார்ந்து கொள்ளுவதா? அல்லது பொதுவுடைமைப் பிரசாரத்தை நிறுத்தி வைத்துவிட்டு இயக்கத்தின் மற்ற திட்டங்களை நடத்துவதா என்று யோசித்துப்பாருங்கள். இதுதான் எனது உண்மை.

ஜெயிலில் எனக்கு என்ன கஷ்டம்? எ. கிளாசில் போட்டார்கள். இனியும் போடுவார்கள். 6 மாதமாவது ஜெயிலுக்குப் போனால்தான் என் உடம்பு இனியும் 2 வருஷத்திற்கு உழைக்க சௌகரியம் கொடுக்கும். நிற்க,



இயக்கத்திற்காக ஆரம்பமுதல் இந்த நிமிடம்வரை யாரிடத்திலாவது கால் அணா வசூல் செய்திருக்கிறேனா? அல்லது இயக்கத் தொண்டர்களுக்கு என் சக்தியனுசாரம் அவ்வப்போது உதவாமல் இருந்திருக்கிறேனா? என் குடும்பநிலை எவ்வளவு கஷ்ட நஷ்டத்திற்கும், கேட்டிற்கும் ஆளாகிவிட்டது உங்களுக்குத் தெரியாதா? ஆனாலும் எனது எஸ்டேட்டும் வருவாய்களும் எப்படி நாசமானாலும் அவற்றை லக்ஷியம் செய்யாமல் இயக்கத்திற்கு என்னால் கூடியதைச் செய்யாமல் இருந்ததே இல்லை. பார்ப்பனர் தொல்லையால், அரசாங்க தொல்லையால் எனது குடும்ப வருவாய் 100-க்கு 25 வீதமாய் விட்டது. இப்படி எல்லாம் ஆனது ஒருபுறமிக்க,

### யாரை நம்புவது?

இன்று எந்தத் தோழர்களை நம்பி நான் துணிந்து ஜெயிலுக்குப் போக முடியும்? ஒரு வருஷம் ஐரோப்பா கண்டத்திற்குப் போய் இருந்தேன். இயக்க நிர்வாக சபை அழிந்துவிட்டது. சென்ற வருஷம் 6 மாதம் ஜெயிலுக்குப் போனேன். மகாநாடு கூட்ட வேண்டியதில்லை என்று தீர்மானிக்கப்பட்டு பிரசாரம் நிறுத்தப்பட்டுவிட்டது. பொதுவுடமை என்று சொன்னவுடன் பணக்காரர்கள் பறந்துவிட்டார்கள்.

இந்த நிலையில் புத்திசாலித்தனமாய் காரியம் நடத்தாவிட்டால் இயக்கம் நடக்குமா? கடவுள் மதம் ஜாதி ஆகியவைகளால் மக்கள் அனுபவிக்கும் கொடுமையும் இழிவும் ஒழியவேண்டாமா? ஏதோ இரண்டொரு ஆட்கள் அதுவும் சுயநல விஷயமாய் அபிப்பிராயபேதம் கொண்ட ஆட்களின் விஷமப் பிரசாரத்துக்கு பயந்து கொண்டு நான் வீரனாய் விட்டால் இயக்கம் போகும் கதி என்ன? எப்படியோ போகட்டும் நம் கடமையை செய்வோம் என்பதை எல்லா சமயத்திலும் முட்டாள் தனமாய் நான் பின்பற்றுபவனல்ல ஆகின்ற அளவுக்கு காரியம் ஆகவேண்டும் என்று கருதுகிறேன். இது சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு அவர்கள் இஷ்டப்படி நடக்க வழியில்லாமல் இல்லை.

இப்போதும் நம் கொள்கைகளில் சமதர்மமோ, பொதுவுடமைத் தத்துவமோ இல்லை என்று சொல்ல முடியாது. சமதர்மத்துக்கும் பொதுவுடமைக்கும் தோழர் ஜீவானந்தமும் அவர்களது தோழர்களும்தான் பாஷ்யக்காரர்கள் என்பதை நான் ஒருநாளும் ஒப்புக்கொள்ள முடியாது.

ரஷ்யப் பொதுவுடமை எனக்கு நேரிலும் தெரியும். அப்படிப் பட்டவர்கள் ஏகாதிபத்தியத்துடனும், பணக்கார ஆட்சியுடனும் ராஜி செய்து கொண்டு கூடுமான அளவுதான் சமதர்மம் நடத்துகிறார்களே தவிர யாரோ ஒருவர் கோழை என்று சொல்வாரே என்று பயந்து கொள்ளவில்லை.

இவைகளையெல்லாம் உத்தேசித்தே சுயமரியாதை இயக்கத் திட்டம் இவ்வளவுதான் என்பதாக ஒரு வருஷத்துக்கு முன்பு (10-3-35ல்) வெளிப் படுத்திவிட்டேன். அதன் பிறகே தாராளமாய் வேலை செய்ய முடிகிறது.



RangaRakes tamilnavarasam.com

## இதையும் தடுத்தால்

நம் சுயமரியாதை இயக்கத்தின் இப்போதைய வேலையைக்கூட அரசாங்கத்தார் சட்டவிரோதம் என்று சொன்னால் அப்போது என்ன செய்வது என்று கேட்கிறார்கள். இதற்கு நான் தாமதமில்லாமலும் வெட்க மில்லாமலும் உடனே பதில் சொல்லுகிறேன். என்ன பதில் என்றால் உடனே இயக்கத்தை நிறுத்திவிட்டு பிறகு மேல்கொண்டு என்ன செய்வது என்று நம்பிக்கையுள்ள தோழர்களுடனும் பொறுப்புள்ள தோழர்களுடனும் கலந்து யோசிப்பேன். ஒன்றுமே செய்ய முடியாமல் போனால் அப்போது ஜெயிலுக்குப் போய் உட்கார்ந்து கொண்டு சுகமனுபவிப்பேன், வீரப்பட்டமும் பெறுவேன். சிறிது வேலை செய்ய இடமிருந்தாலும் ''புகழை''யும் ''வீரப்''பட்டத்தையும் தியாகம் செய்து விட்டு பயங்காளி, கோழை, அடிமை என்கின்ற பட்டங்களை மகிழ்ச்சியோடு வரவேற்று தலையில் சுமந்து கொண்டாவது வேலை செய்வேனே ஒழிய வீண் வீம்புக்கும் போலி விளம்பரத்துக்கும் இரையாக மாட்டேன். அறிவுள்ளவர்கள் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

இந்த அரசாங்கத்தை "I will mend or end" என்று சொன்ன காந்தியார் கூற்று என்ன ஆயிற்று?

''நாங்கள் 35 கோடி பேர்களும் நாய்களோ, ஈனப் பன்றிகளோ'' என்று சொன்ன தேசாபிமானிகள், தேசிய வீரர்கள் கதி என்ன ஆயிற்று?

ஆட்டிடையன் ஆடுகளை பட்டிக்குள் விரட்டுவது போல் இன்று காந்தியாரே ''தேசிய வீரர்களை'' சட்டசபைக்குள் போய் ராஜ பக்தியாயும், ராஜ விஸ்வாசமாயும், ராஜ சந்ததிகளுக்கும் ராஜாங்க சட்டங்களுக்கும் பக்தி விஸ்வாசமாய் இருப்பதாயும் சத்தியம் செய்து ''மானங்கெட்டு, மரியாதை கெட்டு'' திரியும்படி இப்போது விரட்டி அடிக்கவில்லையா?

அவ்வளவு கேவல நிலைக்கு நாம் இன்னும் போகவில்லை.

நமக்கு பார்ப்பான், பணக்காரன், அரசாங்கம் ஆகிய 3 எதிரிகள் உண்டு. மூன்று பேரையும் ஒரே காலத்தில் ஒழிக்கச் சட்டம் குறுக்கிடுமானால் முறையாக ஒவ்வொன்றாக ஒழிப்போம். இதற்காக நம்முடைய சுயநல வீரப்பிரதாபத்தில் கடுகளவாவது தியாகம் செய்ய வேண்டாமா? இதை உத்தேசித்தே என் தமையனாரை அரசாங்கத்தினிடம் ராஜத்துவேஷம் பரப்புவதில்லை என்று சொல்லி வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு விடுதலை அடையும்படி சொன்னேன். சர்க்காரின் நிலைமையையும் அவர்களது நடத்தையையும் சக்தியையும் யோசித்து ஒரு காரியத்தில் இறங்க வேண்டும். சர்க்கார் சக்தி லேசானதல்ல. உலகத்திலேயே சக்தியும், தந்திரமும் பொருந்திய சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்காராகும். மேடையில் கூப்பாடு போட நம்மை அனுமதித்து விட்டதாலேயே நாம் பெரியவர்கள் சர்க்கார் சின்னவர் என்று எண்ணிவிடக்கூடாது. எதிரியின் பலம் அறியாமல் வீரம் பேசுவது பொறுப்பை உணராததாகும். எப்பொழுது எதற்காக சர்க்காரோடு போராடுவோம் என்பது எனக்குத் தெரியும்.





காங்கிரசுக்காரர்கள் தொல்லையின் மீது சர்க்கார் கண்ணோட்டம் இருந்தபோது நம்முடைய பொதுவுடமைப் பிரசாரத்தை அவர்கள் அனுமதித்துக் கொண்டிருந்தார்கள். காங்கிரஸ் தங்களுடைய சட்ட மறுப்பையும், மறியலையும், எதிர்ப்பையும் விட்டுவிட்டு ராஜவிஸ்வாசப் பிரமாண சரணாகதிக்கு வந்த பின்பு நம்மீது கண் வைத்தார்கள்.

2, 3 கோடி ரூபாய் செலவு செய்து பல லக்ஷம் பேரை ஜெயிலுக்கு அனுப்பி புத்தி பெற்ற காந்தியாரையும் காங்கிரசையும் பார்த்தாவது நாம் புத்திசாலித்தனமாய் 4, 5 ஆயிரம் ரூபாய் செலவிலும், நாங்கள் எங்கள் குடும்பம் மாத்திரம் கெட்டு ஜெயிலுக்குப் போனதிலும் திருத்திக்கொள்ள முடியாவிட்டால் நாம் பைத்தியக்காரராகி விட மாட்டோமா? நம் தோழர் களின் யோக்கியதை யாருடையது எனக்குத் தெரியாது?

இயக்கத்தால் மனிதரானவர்களே தான் இன்று இயக்கத்தை செத்துப் போய் விட்டது என்கிறார்கள்.

## ஜஸ்டிஸ் கட்சி

ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிப்பதால் நமது யோக்கியதை போய்விட்டது என்பவர்கள் ஜஸ்டிஸ் கட்சி இல்லாதிருந்தால் அவர்களது யோக்கியதை எப்படியிருந்திருக்கும்? அவர்களுக்கு மேடை ஏது? என்று யோசித்துப் பார்க்கட்டும்.

ஜஸ்டிஸ் கட்சி இல்லாதிருந்தால் நம் அபிப்பிராயம் தெரிவிக்க இன்று இந்த மேடை கிடைத்திருக்குமா?

பார்ப்பான் பின்னால் கொடியைப் பிடித்துக்கொண்டு வந்தே மாதர கோஷமும், காந்திக்கு ஜே கோஷமும் போட்டால் ஒழிய பலருக்கு சாப்பாட்டிற்கு ஆவது வழி கிடைத்திருக்குமா? நம்மிடம் வீரம் பேசிக் கொண்டு நம்மைக் கோழைகள் என்று சொல்லிக்கொண்டு போனவர்களின் வாழ்க்கை இன்று எப்படி நடக்கிறது.

ஜஸ்டிஸ் கட்சியார் யாரிடம் பணம் வாங்கினார்கள்? யாரை ஜெயிலுக்கு அனுப்பினார்கள்? யார் நிழலில் அவர்கள் வாழ்கிறார்கள்? எந்த கொள்கையை விட்டுக்கொடுத்தார்கள்? அவரவர்கள் பணம் செலவு செய்து எலக்ஷனில் ஜெயிக்கிறார்கள், உத்தியோகம் அனுபவிக்கிறார்கள். மற்றப்படி அக்கட்சியின் கொள்கைகளை ஆட்சேபிக்கும் வீரர்கள் என் எதிரில் வரட்டும் பதில் சொல்லத் தயாராயிருக்கிறேன்.

ஜஸ்டிஸ் கட்சி இல்லாமல் இருந்தால் சு.ம. இயக்கம் இவ்வளவு சீக்கிரம் இவ்வளவு வேலை செய்ய முடிந்திருக்காது. அதை ஒழித்து

RangaRakes tamilnavarasam.com

விட்டாலும் சுயமரியாதை இயக்கம் வேலை செய்ய இவ்வளவு வசதியும் இருக்காது. அதன் தலைவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை.

அன்றியும் அத்தலைவர்களில் யாரும் காங்கிரஸ் தலைவர்களின் சர்வாதிகாரத் தலைவர் முதல் மற்ற எந்தத் தலைவர்கள் யோக்கியதைக்கும் இளைத்தவர்கள் அல்ல.

ஒரு அளவுக்கு அவர்கள் சமதர்ம வேலை செய்துவருகிறார்கள். நமது திட்டங்கள் சிலவற்றை ஒப்புக்கொண்டார்கள். மாமிசம் சாப்பிடுவதானால் எலும்பைக் கழுத்தில் போட்டுக்கொள்ள வேண்டுமா? என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள். அதுபோல் நமது சமதர்மமும், பொதுவுடமையும் போலி புலி வேஷம்போல் விளம்பரத்தில் காட்டுவதில் பயனில்லை. காரியத்தில் முறையாக நடந்து வருகிறது.

சர்க்கார் உத்திரவு மீறுவதே சமதர்மமாகி விடாது. உத்திரவு மீறினவர்களின் கதியை நாம் பார்த்துவிட்டோம்.

ஆரம்பத்தில் மேல் ஜாதி, கீழ் ஜாதி கூடாதென்று சு.ம. இயக்கம் ஆரம்பித்தோம். அதற்கு அநுகூலமாகவே ஏழை பணக்காரத்தன்மை கூடாதென்றோம். அதைத்தான் நாம் சமதர்மம், பொதுவுடமை என்றோம். சர்க்கார் பொதுவுடமை கூடாதென்றால் விட்டு விட்டு மேல் ஜாதி கீழ் ஜாதி கூடாதென்கின்ற வேலை செய்வதில் என்ன தடை இருக்கிறது.

மற்றும் மூடப்பழக்க வழக்கம் ஒழித்தல், மதத் தொல்லை ஒழித்தல் முதலிய காரியம் செய்வதற்கு மார்க்கமில்லாமல் போகவில்லை.

ஆதலால் எனது நிலை இன்னது என்பதை ஒருவாறு விளக்கி விட்டேன் என்று நினைக்கிறேன்.

குறிப்பு: *திருத்துறைப்பூண்டியில் 21, 22.03.1936 ஆகிய நாட்களில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட 5 - ஆவது சுயமரியாதை மாநாட்டில் 21.03.1936 இல் ஆற்றிய சொற்பொழிவு.*

குடி அரசு - சொற்பொழிவு - 29.03.1936



# ஈ.வெ.ரா. விளக்கம்

தோழர் ஈ.வெ.ரா. திருத்துறைப்பூண்டியில் தனது நிலைமையை விளக்கிக்காட்டச் செய்த உபன்யாசம் மற்றொரு புறம் பிரசுரித்திருக்கிறோம். இவ்வுபன்யாசம் சு.ம. தொண்டர்களில் சிலர் செய்துவரும் விஷமப் பிரசாரத்துக்கு தக்க சமாதானமாகுமென்று நம்புகிறோம்.

தோழர் ஈ.வெ.ரா. மீது சு.ம. தோழர்கள் சிலர் செய்து வரும் விஷமப் பிரசாரமெல்லாம் ஈ.வெ.ராமசாமி பொது உடமைப் பிரசாரத்தை நிறுத்திக் கொண்டார் என்பதும், ஈ.வெ.ராமசாமி மந்திரிகளுடன் குலாவுவதுடன் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கிறார் என்பதுமே யாகும்.

பொது உடமைப் பிரசாரத்தை நிறுத்திக்கொண்டதற்கு காரணம் முன்னமேயே கூறியிருக்கிறார்.

அதாவது அரசாங்கத்தார் பொதுவுடமைப் பிரசாரத்தை சட்ட விரோதமானதென்று தீர்மானித்துவிட்டதாலும், சு.ம. இயக்கம் தனது கொள்கைகளையும் திட்டங்களையும் சட்டத்துக்கு கட்டுப்பட்டு பிரசாரம் செய்து நிறைவேற்றிக் கொள்வதாக இருப்பதாலும் இப்போது சட்டத்தை மீறி பொதுவுடமைப் பிரசாரம் செய்வதற்கில்லை என்று வெளிப்படையாய்த் தெரிவித்து இருக்கிறார். அதோடு கூடவே சுயமரியாதை இயக்கத்தின் வேலைத் திட்டம் இன்னது என்பதுபற்றி 10.3.35ந்தேதி குடிஅரசில் விளக்கியும் இருக்கிறார். இதையே திருச்சி ஜில்லா சு.ம. மகாநாட்டிலும் விளக்கமாக எடுத்துக்கூறி இருக்கிறார்.

பொதுவுடமைப் பிரசார சம்பந்தமாக இதற்கு மேலும் சமாதானம் கூற முடியாது.

அப்படி இருக்க ஒவ்வொரு மகாநாட்டிலும் ஒரு கூட்டம் இதையே திருப்பி கூச்சல் போட்டு கலகம் விளைவிக்க முயற்சிப்பது ஒரு காலமும் நல்ல எண்ணத்தின் மீது செய்யப்படும் காரியம் என்று சொல்லிவிட முடியாது.

அடுத்தபடியாக ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளுடன் குலாவுவது என்பதைப் பற்றிய புகார் வெறும் அறியாமையால் ஏற்பட்ட கற்பனையின் மீது உண்டான அசூயையே தவிர வேறு ஒன்றுமில்லை.

மந்திரிகளைப்பற்றிய ஈ.வெ.ராவின் அபிப்பிராயம் குடிஅரசு படிப்பவர்களுக்கு விளங்காமல் போகாது. மற்ற பத்திரிகைகளிலும் அவ்வப்போது வந்திருக்கின்றன. மந்திரிகள் சு.ம. இயக்கத்துக்கு செய்த



RangaRakes tamilnavarasam.com

தீமைகள் பல ஒரு புறமிருக்க அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியையே எதிரிகள் முயற்சி இல்லாமலேயே ஒழிக்கும்படியான வேலைசெய்து வருவதைப் பற்றியும் அவ்வப்போது குறிப்பிட்டு வந்திருக்கிறார்.

ஆனால் மந்திரிகள் மீது சுமத்தப்படும் அரசியல் கொள்கைகள், வேலைகள் சம்மந்தப்பட்ட மட்டில் எதிரிகள் கூற்றைக் கண்டித்தும் பல சமயம் மந்திரிகள் கூற்றை ஈ.வெ.ரா. ஆதரித்தும் வருகிறார் என்றால் இது பார்ப்பனரல்லாதார் சமூக நலனை உத்தேசித்தே ஒழிய வேறில்லை.

மற்றப்படி ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிப்பது என்பது மாத்திரம் முழுதும் உண்மை. இதை அவர் எப்போதும் ஒப்புக்கொண்டு இருக்கிறார்.

ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்க வேண்டியது தமது கடமை என உணருவதாக சுமார் 15 வருஷமாகவே கூறி வருகிறார். அன்றியும் ஜஸ்டிஸ் கட்சி ஏழை மக்கள், தீண்டப்படாத மக்கள், சமூக வாழ்வில் பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியவர்களின் கட்சி என்பதாக உணர்கிறார். அந்த உணர்ச்சி மாறுபடும் வரையில் ஜஸ்டிஸ் கட்சியை அவர் ஆதரித்துத்தான் தீர வேண்டியிருக்கும்.

சு.ம. இயக்கம் ஏற்பட்டதும், அது பல கொள்கைகளைக் கொண்டு இருப்பதும் ஜஸ்டிஸ் கட்சி கொள்கைக்கு உதவி செய்வதற்காகவும் தானே ஒழிய வேறில்லை.

ஜஸ்டிஸ் கட்சியைப் பார்ப்பனரல்லாத மக்கள் பலர் சரியானபடி ஆதரிக்காததாலேயும், அக்கட்சி எந்த மக்களுக்காக பாடுபடுகின்றதோ அந்த மக்களிடம் போதிய நன்றி விஸ்வாசம் இல்லாததினாலேயும் அக்கட்சி இந்த மாதிரியாக தாழ்ந்த நிலையில் பேசவேண்டியதாக ஆகிவிட்டது.

ஜஸ்டிஸ் கட்சி என்றால் மந்திரிகளும், பல பணக்காரர்களும் தான் சில மக்கள் ஞாபகத்துக்கு வருகிறதே தவிர அதன் கொள்கைகள், அதுசெய்த வேலைகள் ஆகியவை அனேகருடைய ஞாபகத்துக்கு வருவதில்லை.

இதன் காரணம் பாமர மக்களின் அறியாமை ஒரு புறமிருந்தாலும் மற்றும் பலருக்கு உத்தியோக ஆசையும், பணத்தாசையும், ஏமாற்றத்தால் ஏற்பட்ட பொறாமையும் தவிர வேறில்லை என்பது நமது அபிப்பிராயம்.

மந்திரிகள் பெரிய உத்தியோகக்காரர்களா யிருக்கிறார்கள். அதன் பிரமுகர்கள் பலர் பெரும் பணக்காரர்களாய் இருக்கிறார்கள். போதாக்குறைக்கு இந்த இரு கூட்டத்தார்களும் கட்சி விஷயத்தில் யோக்கியமாய் நடந்து கொள்ளாமல் தாங்கள் சுயநலத்துக்கும், அதற்கு வேண்டிய சூழ்ச்சிக்குமே கட்சியின் பெரும்பாகத்தை பயன்படுத்திக் கொள்வதால் பலருக்குத் தானாகவே அக்கட்சியின் மீது துவேஷம் ஏற்படும்படி செய்து விடுகின்றது.

ஆனால் இவ்விரு கூட்டமும் அதாவது மந்திரி உத்தியோகமும், பணக்காரர்கள் ஆதிக்கமும் ஜஸ்டிஸ் கட்சிக்கு இன்றியமையாதது என்பதாக பலமுறை தோழர் ஈ.வெ.ரா. எடுத்துக்கூறி இருக்கிறார். காரணம் பணக்காரர்கள்



இல்லாவிட்டால் எலக்ஷனில் ஜெயிக்க முடியாது. ஜெயிக்காவிட்டால் அரசியல் நிர்வாகத்தை கைப்பற்ற முடியாது. ஆதலால் இந்த இரு கூட்டமும் அவசியமானதாகிறது.

இவர்கள் நாணயமாக நடக்கவில்லை என்பதை நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனாலும் தோழர்கள் சத்தியமூர்த்தியும் கல்யாண ராமய்யரும் போன்றவர்கள் எலக்ஷனில் வெற்றி பெற்று அரசாங்க நிர்வாகத்தைக் கைப்பற்றி ஆட்சி புரிவதை விட நாணயக் குறைவான மந்திரிகளும், சுயநலப் பணக்காரர்களும் அதிகமான கெடுதிக்காரர்களாக இருந்துவிட முடியாது என்போம்.

வெறும் பொறாமை ஒரு நன்மையையும் உண்டாக்கி விடாது. பணக் காரர்களின் இயற்கை குணம் இன்னது என்பது யாரும் அறியாததல்ல. யார் பணக்காரர்களானாலும் இப்படித்தான் இருப்பார்களே தவிர இதற்கு மேல் யோக்கியர்களாக இருந்துவிட முடியாது. இன்று காங்கிரசிலும் முழு சமதர்மத்திலும் இந்த யோக்கியதை உடன் தான் பல பணக்காரர்கள் இருந்து வருகிறார்கள்.

ஆனால் மந்திரிகளுடைய யோக்கியதை யார் பார்த்தாலும் இப்படித்தான் இருக்க முடியுமென்று சொல்லிவிட முடியாது. தோழர்கள் டாக்டர் சுப்பராயன், எஸ்.முத்தைய முதலியார் ஆகியோர்கள் மந்திரி பதவிகளானது கட்சிக்கு நன்றி விசுவாசமுள்ளதாக இருந்தது என்பதை நாம் மறைக்கவில்லை.

பெரிய அரசியல் பிரச்சினை, போட்டி, உள் கலகம், எதிரிகள் தொல்லை, அரசாங்கத்தின் ராஜதந்திரம், தங்கள் சுயநிலை ஆகியவைகளின் மத்தியில் மந்திரிகள் அரசியல் நிர்வாகம் செய்வது என்பது சுலபமான காரியம் என்று யாரும் நினைத்துவிட முடியாது. அன்றியும் மந்திரி பதவிகளுக்கு எவ்வித யோக்கியப் பொறுப்பான நிபந்தனையுமில்லாமல் லாட்டரிச் சீட்டு விழுவதுபோல் இருப்பதால் மந்திரிகளால் நாம் அடிக்கடி ஏமாற்ற மடைய வேண்டியதாகவும் ஏற்பட்டு விடுவதில் அதிசயமில்லை.

எப்படி இருந்த போதிலும் ஜஸ்டிஸ் கட்சியை அனாதரவு செய்யவோ, மந்திரிகளை கவிழ்க்கவோ சுயமரியாதை இயக்கம் ஒருப்பட முடியாது என்பதுடன் அவற்றை ஆதரிக்க வேண்டியதும் முக்கிய கடமையாகும் என்பதில் நமக்கு சிறிதுகூட தயக்கமில்லை.

மந்திரிகளுடன் தோழர் ஈ.வெ.ராமசாமி குலாவுகிறார் என்பவர்களில் பலருக்கு உள்ள முக்கியமானதும் சிலருக்கு ஒன்றே யானதுமான காரணம் ‘‘மந்திரிகள் ஈ.வெ.ராவுக்கு பணம் கொடுக்கிறார்கள்’’ என்று கருதி இருப்பது என்பதாக நாம் உணருகிறோம். இதுவும் மனிதனுடைய பேராசையில் ஏற்பட்ட கற்பனையின் பொறாமையேயாகும். தோழர் ஈ.வெ.ரா. இந்த 12 வருஷ காலமாக ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்து பிரசாரம் முதலியவை செய்து வருவதில் ஒரு ஒத்தை ரூபாயாவது எந்த மந்திரியிடமாவதிருந்து கட்சி வேலைக்கு என்றோ, பிரசாரத்துக்கு என்றோ, மற்ற எந்தக் காரியத்துக்கு



RangaRakes tamilnavarasam.com

ஆவது என்றோ கேட்கவோ வாங்கவோ வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்ததே கிடையாது என்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

அக்கட்சியினிடம் காட்டும் அபிமானமும், மந்திரிகளுக்கு பரிந்து பேசும் தன்மையும் சாதாரண மக்களுக்கு இந்த மாதிரி பணம் வாங்காமல் பேச முடியுமா அல்லது மந்திரிகள் பண உதவி இல்லாமல் ஈ.வெ.ரா.வுக்கு இவ்வளவு பிரசாரம் செய்ய முடியுமா என்றெல்லாம் தோன்றலாம். சிலருக்கு தாங்கள் வேண்டும் போதெல்லாம் ஈ.வெ.ரா. பணம் கொடுக்காததால் கோபித்துக் கொள்ளும் காரணமும், கொடுத்தது போதாமல் அயோக்கியத்தனமாய் விஷமப்பிரசாரம் செய்வதற்கு காரணமும் தோழர் ஈ.வெ.ரா. மந்திரிகளிடம் பணம் வாங்கிக் கொண்டு தங்களுக்கு பங்கு சரியாகக் கொடுக்கவில்லையே என்கின்ற குறைபாடே என்பதுகூட நமக்கு நன்றாய் விளங்குகிறது.

தோழர் ஈ.வெ.ரா. ஒரு சமயத்தில் வெளியிட்ட ஸ்டேட்மெண்டையே இங்கு குறிப்பிடுகிறோம். அதாவது **''இயக்கத்திற்கு என்றோ வேறு என்ன காரியத்துக்கு என்றோ நாளதுவரையில் எந்த மந்திரிகளிடமிருந்தும் மற்றும் இயக்கத் தலைவர்கள் என்பவர்களிடமிருந்தும் ஒரு காசும் வசூலித்ததில்லை''** என்று கூறியிருக்கிறார்.

திராவிடன் பத்திரிகை நடத்தும்போது ஜஸ்டிஸ் கட்சியார் பத்திரிகை நஷ்டத்திற்கு மாதம் மாதம் கொடுப்பதாக வாக்குக்கொடுத்த ரூபாயில் ஒரு காசு கூட கொடுக்கவேயில்லை. அதனால் சுமார் 20 - 30 ஆயிரத்துக்கு மேல் வெளியாரும், ஈ.வெ.ராவும் கை நஷ்டப்பட வேண்டிவந்தது. அதற்காக ஆதியில் பெரும் தொகை வாக்குக் கொடுத்த சில தோழர்கள் அக்காலத்தில் திராவிடனுக்கு சுமார் 3, 4 ஆயிரம் ரூபாய் மாத்திரமே கொடுத்தார்கள். இதைத் தவிர ஒருவரும் கொடுக்கவும் இல்லை. யாரையும் அவர் கேட்கவும் இல்லை.

டிசம்பர் மாதத்தில் 10 பிரசாரகர்களை தயார் செய்வதற்கும், அவர்களுக்கு ஒருமாத சாப்பாட்டிற்கும் போக்கு வரவு ரயில் சார்ஜுக்குமாக விருதுநகர் தொண்டர் மகாநாட்டுத் தீர்மானப்படி தோழர் வி.வி. ராமசாமி அவர்கள் வேண்டுகோளின் மீது பொப்பிலி ராஜா 300 ரூ அனுப்பினார்கள். 10, 13 தொண்டர்களின் 1 மீ° போதனைக்கும், சாப்பாடு ரயில் சார்ஜ் செலவுக்கும் இரண்டொரு இடங்களுக்கு பிரசாரத்துக்கு அனுப்புவதற்கும் செலவு செய்யப்பட்டது. அடுத்த மாதத்துக்கு அனுப்பும் விஷயத்தில் தோழர் ஈ.வெ.ரா. அவர்களே போதனா முறை பெற்றவர்களுக்கு வேலை கொடுப்பதாய் இருந்தால் தான் மேல்கொண்டு ஒரு பேட்ச்சுக்கு போதனா முறை யளிக்கலாம், இல்லாதவரை போதனாமுறையில் பிரயோஜனமில்லை என்று எழுதி நிறுத்தி விட்டார்.

மற்றப்படி கிரமமாய் கணக்குப் பார்த்தால் மந்திரிகளிடமிருந்து 100, 200 என்கின்ற கணக்கிலாவது ஈ.வெ.ராவுக்கு பணம் வரவேண்டி யிருப்பதாயும் மந்திரித்தனத்தை பாதுகாக்க பல நூறு ரூபாய் ஈ.வெ.ராவுக்கு செலவாகியும் அவர்கள் சொன்ன இடத்துக்குப் போகவும் அவர்கள்



கூப்பிட்டபோது செல்லவும் மற்றும் பல நூறு ரூபாய்கள் செலவாகியும் இருக்குமே ஒழிய ஒரு மந்திரியிடமும் பணம் வாங்கவுமில்லை எதிர் பார்க்கவும் இல்லை. உண்மையிலேயே சில தோழர் தவறுதலாய் கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகவே இதை எழுதுகிறோம்.

**யாரிடமும் பணம் வாங்காமலும், சுயநலத்துக்கு ஒரு காரியமும் செய்து கொள்ளாமலும் இருக்கிற ஒருவன் எப்போதும் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை என்பதோடு அவனுக்கு எவ்வித குறைவும் வராது** என்பது தோழர் ஈ.வெ.ராவின் முடிந்த முடிவாகும்.

இந்தக் காரணத்தாலேயே அவர் யாரையும் ''நான் சொல்லுகிறபடி கேட்டால் கேள் இல்லாவிட்டால் போ'' என்றும் ''நான் அப்படித்தான் செய்வேன்'' என்று சொல்லவும் தனது கொள்கையையும் இஷ்டத்தையும் யாருக்கும் அடிமைப்படுத்தாமல் இருக்கவும் முடிந்து வருகின்றது.

இந்த இயக்கம் தோழர் ஈ.வெ.ரா. வுக்கு ஒரு ஜீவன மார்க்கமோ, சுயநல லாபமோ, புகழுக்கோ என்று இல்லாமல் வெறும் பொதுநல காரியத்துக்காகவே அவர் நடத்துகிறார்.

அதுவும் அவரது ஜீவன் உள்ள வரை ஒரு நேர்மையும், பொதுநலப் பயனும் உள்ள ஏதாவது ஒரு வேலை செய்ய வேண்டுமே என்பதற்காகவே செய்கிறாரே ஒழிய மற்றப்படி இன்ன காரியத்தை சாதிப்பதற்காக கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதற்கோ அல்லது அதைச் செய்துதான் முடிக்க வேண்டும் என்கின்ற அவதாரத் தன்மைக்கோ, வீரத் தன்மைக்கோ அவர் அவ்வேலைகளைச் செய்யவில்லை.

அன்றியும் அவர் காரிய ''வீரரே'' தவிர கொள்கை வீரரல்ல. கொள்கை சொல்பவர்கள் வண்டி வண்டியாக இருக்கிறார்கள். கொள்கை களைக் கொண்ட புத்தகங்களும் ஏராளமாய் இருக்கின்றன. சிறிது காரியமாவது செய்ய சௌகரியமாயிருந்தால் செய்துவிட்டுப் போவதுதான் மேலே ஒழிய கொள்கைகளை மாத்திரம் சொல்லிவிட்டு ஜயிலுக்குப் போவது மேலானதாக ஆகிவிடாது என்கின்ற கருத்தும் கொண்டவர்.

ஆகையால்தான் காரியத்தில் சாத்தியமானதையே எவ்வளவோ எதிர்ப்புக்கும், தொல்லைக்கும் இடையில் செய்ய முயற்சிக்கிறார். இதற்கு பெயர் கோழை யென்றாலும், துரோகம் என்றாலும் அவருக்குக் கவலை இல்லை.

கோழை என்பது செய்வதற்கு சவுகரியமுள்ள காரியங்களை விட்டு விட்டு ஓடுவதேயாகும்.

துரோகம் என்பது மக்களுக்குத் தொல்லை கொடுத்து விட்டு சுயநலத் துக்காகப் பின் வாங்குவதாகும்.

இன்று அவருக்கு செய்வதற்கு சவுகரியமுள்ள காரியம் எதையும் விட்டு விட்டு அவர் ஓடவில்லை.



RangaRakes tamilnavarasam.com

இரண்டாவதாக யாரிடத்திலும் எவ்வித வாக்குறுதி கொடுத்தோ கடுகளவாவது தன் சுயநலத்துக்கு பிரதி பிரயோஜனமடைந்தோ வேறு எந்தவித சுயநல காரியத்துக்கோ ஆசைப்பட்டு பின் வாங்கி விடவில்லை.

ஆகையால் பாமர மக்கள் என்ன நினைப்பார்கள் என்றோ, பண்டித மக்கள் என்ன நினைப்பார்கள் என்றோ, கூட்டுத் தோழர்கள் என்ன நினைப்பார்கள் என்றோ பயந்து கஷ்டப்படுவது துணிவுடமையாகாது. கருத்தொரு மித்தவர்களுடன் கலந்து தொண்டாற்றுவதே துணிவுடமையும் அறிவுடமையுமாகும். கருத்தொருமித்தவர்களே அவரது உயிர்த்தோழர்கள். கருத்து வேறுபாடுடையவர்கள் மற்றவர்களே யாவார்கள் என்பதை கூறி இதை முடிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 29.03.1936**



# ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றி

ஜஸ்டிஸ் கட்சியார் என்ன நல்ல காரியங்கள் செய்தாலும் சரி அதை எதிர்ப்பதே பார்ப்பனர்களுடையவும், காங்கிரஸ்காரர்களுடையவும், தேசீயப் பத்திரிகைகளுடையவும் வாடிக்கையாக இருந்து வருகிறது. ஜஸ்டிஸ் கட்சியாராலும் ஜஸ்டிஸ் கட்சியார் ஆதரவு பெற்ற இதரர்களாலும் சென்னைச் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட அறநிலையப் பாதுகாப்பு மசோதா, விபசாரத் தடை மசோதா, பொட்டுக்கட்டுத் தடை மசோதா, இனாம் குடிகள் மசோதா போன்ற நல்ல மசோதாக்களையெல்லாம் பார்ப்பனர்களும் காங்கிரஸ் வாலாக்களும் தேசீயப் பத்திரிகைகளும் கட்டுப்பாடாக எதிர்த்து வந்திருப்பதை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். சென்னைச் சட்டசபையில் ஜஸ்டிஸ் கட்சியார் செய்யும் காரியங்களினால் நாட்டுக்கு நன்மையுண்டா இல்லையா என்பதை பார்ப்பனரும், காங்கிரஸ் கும்பல்களும் தேசீயப் பத்திரிகைகளும் கவனிப்பதே இல்லை. ஜஸ்டிஸ் கட்சியார் செய்யும் வேலைகளுக்கெல்லாம் குற்றம் கற்பித்து வகுப்புவாதிகள், தேசத்துரோகிகள், பிற்போக்காளர் என வசைமாரி பொழிவதே ஷை கூட்டத்தாரின் முக்கிய நோக்கம். இதை விளக்க சமீப காலத்தில் நடந்த ஒரு சம்பவம் போதுமானது.

சட்டசபைத் தேர்தல் தொகுதிகளையும், பிரதிநிதிகளை நிறுத்தும் முறைகளையும், வாக்களிக்கும் மாதிரியையும் நிர்ணயம் செய்ய பிரிட்டிஷ் சர்க்கார் நியமனம் செய்திருந்த ஹாமண்டு கமிட்டியார் சென்னை, பம்பாய், ஆமதாபாத் நீங்கலாக சென்னை பம்பாய் மாகாணங்களில் பல அங்கத்தினர் தொகுதிகளையும் குவியல் ஓட்டுமுறையையும் சிபார்சு செய்தார்கள். இது சென்னைச் சட்டசபை முடிவுக்கும், சென்னைச் சர்க்கார் யோசனைக்கும் முரணானது. சென்னை சர்க்காரும், சென்னைச் சட்ட சபையாரும், ஒரு அங்கத்தினர் தொகுதியையும் மாற்ற முடியாத ஒற்றை ஓட்டு முறையையுமே சிபார்சு செய்தார்கள். உண்மையான ஜனநாயக முறைக்கும், ஏழை அபேக்ஷகர்கள் நலத்துக்கும் ஒரு அங்கத்தினர் தொகுதியே பொருத்தமானது. மேலே கூறிய ஹாமண்டு கமிட்டி சிபார்சை உண்மையான ஜனநாயகவாதிகள் எல்லாம் கண்டித்தார்கள்.

கடைசியில் ஹாமண்டு கமிட்டி அறிக்கை சென்னை சட்டசபையில் பரிசீலனைக்கு வந்தபோது ‘‘பல மெம்பர்கள் தொகுதியின்றி ஒரு மெம்பர் தொகுதிகளே ஏற்படுத்த வேண்டுமென்றும், குவியல் ஓட்டு முறையின்றி



RangaRakes tamilnavarasam.com

மாற்றக் கூடாத ஒற்றை ஓட்டுமுறையே இருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தி ஜஸ்டிஸ் கட்சிப் பிரதம கொரடாவான திவான்பகதூர் அப்பாத்துரைப் பிள்ளை ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

தாமே இந்தியாவின் உண்மையான பிரதிநிதிகள் என்று பெருமை யடித்துக்கொள்ளும் காங்கிரஸ்கட்சியாரும், காங்கிரஸ்காரர்களின் வாலைப்பிடித்து அடுத்த தேர்தலில் வெற்றி பெறலாம் எனப் பகற்கனவு காணும் டாக்டர் சுப்பராயன் போன்றாரும் தோழர் அப்பாத்துரைப்பிள்ளை தீர்மானத்தை வன்மையாகக் கண்டித்துப் பேசினார்கள். கடைசியில் தீர்மானம் ஓட்டுக்கு விட்டபோது பெரும்பான்மையான ஓட்டுகளால் நிறைவேறியது.

அவ்வளவுதான், உடனே தேசீயப் பத்திரிகைகள் ஜஸ்டிஸ் கட்சியார் மீது வசை புராணம் பாடத் தொடங்கின. ''ஜஸ்டிஸ் கட்சி பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்ல. அது பொதுஜன ஆதரவை இழந்துவிட்டது. சர்க்கார் தயவினால் ஜஸ்டிஸ் மந்திரி சபை உயிரோடு இருந்து வருகிறது. எனவே சென்னைச் சட்டசபையில் அபிப்பிராயம் பொதுஜன அபிப்பிராயமாகாது'' என்றெல்லாம் தேசீயப் பத்திரிகைகள் கூறத் தொடங்கின. தேசீயத் தலைவர்கள் என்போரும் தேசீயப் பத்திரிகைகளுக்குப் பக்கப் பாட்டுப் பாடினர். ''சென்னைச் சட்டசபை அபிப்பிராயம் பொதுஜன அபிப்பிராயமல்ல. பல மெம்பர் தொகுதியையும் குவியல் ஓட்டு முறையையுமே சென்னை மாகாணத்தார் ஆதரிக்கிறார்கள்'' என்றெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் சுப்பராயனும், காங்கிரஸ் கட்சித் தலைவர் தோழர் ஸி.ஆர். ரெட்டியாரும் இந்தியா மந்திரிக்குத் தந்தியனுப்பினார்கள் லிபரல்களின் சார்பாக, மூன்றே முக்கால் நாழிகை சட்ட மந்திரியாகவிருந்த தோழர் டி.ஆர். வெங்கட்ராம சாஸ்திரியாரும் அம்மாதிரி ஒரு தந்தியனுப்பினாராம். அவர்களை ஆதரித்து தேசீயப் பத்திரிகைகளும் வெகு நீளமான தலையங்கங்களும் எழுதின.

ஆனால் திவான்பகதூர் அப்பாத்துரைப் பிள்ளை நிறைவேற்றிய தீர்மானம் ஜஸ்டிஸ் கட்சியார் ஆதரவை மட்டும் பெற்றதல்ல. டாக்டர் சுப்பராயனின் ஐக்கிய தேசீயக் கட்சி என்னும் அவியல் கட்சியில் ஒரு பிரபலஸ்தராயிருப்பவரும், கொஞ்ச காலம் டாக்டர் சுப்பராயனின் தோழ மந்திரியாகவிருந்து சைமன் கமிஷன் ஒத்துழைப்பை முன்னிட்டு ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தினால் தமது மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்து காங்கிரஸ்காரர்களுடையவும், தேசீயப் பத்திரிகைகளுடையவும், மதிப்பைப் பெற்றவருமான தோழர் எ. ரங்கநாத முதலியாரும், தோழர் அப்பாத்துரைப் பிள்ளை தீர்மானத்தை ஆதரித்திருக்கிறார். மற்றொரு ஐக்கிய தேசீயக் கட்சிப் பிரபலஸ்தரான தோழர் ஸி. பார்த்தசாரதி ஐயங்காரும் அதை ஆதரித்திருக்கிறார். இவை யாவற்றிற்கும் மேலாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் சத்தியமூர்த்தியும், ஒரு மெம்பர்



தொகுதியும் ஒற்றை ஓட்டு முறையுமே சிலாக்கியமானதென்று கூறியிருக்கிறார். உண்மை இவ்வாறானாலும் தேசீயப் பத்திரிகைகள் ஜஸ்டிஸ் கட்சியாரைத் திட்டிக்கொண்டே இருந்தன.

ஆனால் ஹாமண்டு கமிட்டி அறிக்கை இந்தியச் சட்டசபையில் விவாதத்துக்கு வந்தபோது தேசீயப் பத்திரிகைகளும், காங்கிரஸ்காரரும் டாக்டர் சுப்பராயனும் தலையைத் தொங்கப்போடும்படி நேர்ந்தது. ஹாமண்டு கமிட்டி அறிக்கையைப் பரிசீலனை செய்து முடிவு கூற இந்திய சட்ட சபையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அதில் மெம்பர்களாயிருந்தவர்கள் ஜஸ்டிஸ் கட்சியார் அல்ல. ''பிற்போக்காளரான'' ஜஸ்டிஸ் கட்சியார் மணமே இப்பொழுது இந்தியச் சட்டசபையில் இல்லையல்லவா, எனவே இந்திய சட்டசபை காங்கிரஸ் கட்சி உபதலைவர் பண்டித கோவிந்த வல்லப பந்த், காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு தலைவரும் அசெம்பளி காங்கிரஸ் கட்சித் தலைவருமான தோழர் புலாபாய் தேசாய், தோழர் சத்தியமூர்த்தி ராவ்பகதூர் எம்.ஸி. ராஜா, தொழிலாளர் தலைவர் என்.எம். ஜோஷி, தோழர்கள் நீலகண்டதாஸ், அசப் அலி, ஜின்னா, சர். கவாஸ்ஜி, ஜிஹாங்கீர் முதலியவர்களே அந்தக் கமிட்டியில் மெம்பர்களாயிருந்தார்கள்.

அவர்கள் ஹாமண்டு கமிட்டி சிபார்சுகளை பரிசீலனை செய்து

''சென்னை, பம்பாய், ஆமதாபாத் நகரங்கள் நீங்கலாக சென்னை, பம்பாய் மாகாணங்களில் பல மெம்பர்கள் தொகுதிகளை ஹாமண்டு கமிட்டியார் சிபார்சு செய்திருப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது''

என்று அபிப்பிராயப்பட்டு தேசீயப் பத்திரிகைகள் சென்னை காங்கிரஸ் தலைவர்கள், டாக்டர் சுப்பராயன், வெங்கட்டராம சாஸ்திரியார் போன்றவர்கள் வாய்க்கு இரும்புப் பூட்டு போட்டுப் பூட்டி விட்டனர். அம்மட்டோ? தோழர்கள் சத்தியமூர்த்தியும், எம். ஸி. ராஜாவும் ஜஸ்டிஸ் கட்சியாரைத் தாக்குவோருக்கு சவுக்கடி கொடுக்கிற மாதிரி அந்த அறிக்கையில் ஒரு குறிப்பும் எழுதி வைத்து விட்டார்கள்.

அதாவது, ''ஒரு மெம்பர் தொகுதிகள் வேண்டுமென்ற கொள்கையை நாங்கள் ஆதரிக்கிறோம், ஏழை அபேட்சகர்களுக்கு அவை அனுகூலமாக இருக்கும், வோட்டர்களுடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக் கொள்ளவும் அது உதவி புரியும். அதனால், தெளிவான ராஜீயக் கொள்கைகளையுடைய கட்சிகள் வேலை செய்ய சௌகரியம் ஏற்படும்'' என்று தோழர்கள் சத்திய மூர்த்தியும், எம்.ஸி. ராஜாவும் சந்தேகத்துக்கு இடமின்றிக் கூறிவிட்டார்கள். இப்பொழுது பிரிட்டிஷ் சர்க்காரரும், ஜஸ்டிஸ் கட்சியார் தீர்மானத்தின் முக்கியமான பகுதியை ஒப்புக் கொண்டு விட்டதாகத் தெரிய வருகிறது.

ஹாமண்டு கமிட்டியார் சிபார்சுகளைப் பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பிரிட்டிஷ் சர்க்கார் சமர்ப்பித்திருக்கும் மூன்று கவுன்சில் உத்தரவுகளின்



RangaRakes tamilnavarasam.com

நகல்கள் இப்பொழுது வெளியிடப்பட்டிருக்கின்றன. அவைகளின்படி சென்னை மாகாணத்தில் பிரதேச தொகுதிகள் எல்லாம் அநேகமாய் ஒரு மெம்பர் தொகுதியாகவே இருக்கும்.

ஒடுக்கப்பட்டவர்களுக்கு புனா ஒப்பந்தப்படி பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக 6 விசேஷ இடங்களில் மட்டும் இரு அங்கத்தினர் தொகுதிகள் இருக்கும்.

கூட்டுத் தொகுதிகள் குவியல் ஓட்டு முறையே கையாளப்படும்.

எந்த எந்த தொழிற் சங்கங்கள் ஓட்டுச் செய்யலாம் என்பதை அறிவிக்க கவர்னருக்கு பிரத்தியேக அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. குறைந்த பட்சம் இரண்டு வருஷங்களாவது வேலை செய்துள்ள தொழிற் சங்கங்கள் தான் பிரதிநிதித்துவத்துக்கு லாயக்கானவை. அத்தகைய சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

பட்டம் பெற்று 7 வருஷங்களான கலாசாலைப் பட்டதாரிகளும் செனட் அங்கத்தினர்களும் சர்வ கலாசாலைத் தொகுதிகளில் ஓட்டர்களாயிருப்பார்கள்.

ஆகவே ஜஸ்டிஸ் கட்சியாரின் முக்கியமான சிபார்சு பிரிட்டிஷ் சர்க்காரால் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது. பார்லிமெண்டும் ஒப்புக்கொள்வது நிச்சயம். இந்த வெற்றிக்காக ஜஸ்டிஸ் கடைசியாரை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறோம்.

சென்னை சர்க்கார் வகுத்திருக்கும் திட்டப்படி சென்னை மாகாணத்தில் 76 ஒரு மெம்பர் தொகுதிகளும், 35 இரு மெம்பர் தொகுதிகளும் இருக்கும்.

ஒரு மெம்பர்கள் ஒற்றை ஓட்டு முறை ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது. இரு மெம்பர் தொகுதிகளில் குவியல் ஓட்டு முறையே இருந்து வருமென்று தெரிகிறது. இரு மெம்பர் தொகுதிகளிலே ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதினால் ஒடுக்கப்பட்டவர்களின் உண்மையான பிரதிநிதிகள் தேர்தலில் வெற்றி பெறுவது வெகு கஷ்டமே. இதற்கு, புனா ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்த ஒடுக்கப்பட்டவர்களின் தலைவர்களைத்தான் ஒடுக்கப்பட்டவர்கள் குறைகூற வேண்டும்.

பொதுவாக பிரிட்டிஷ் சர்க்கார் செய்திருக்கும் சிபார்சு திருப்திகரமானதென்றே சொல்லவேண்டும்.

இந்த நிலைமையிலாவது தேசீயப் பத்திரிகைகளுக்கும், தேசீயத் தலைவர்களுக்கும் நற்புத்தி உதயமாகியிருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்றே தெரிகிறது. சென்னை சர்க்காரும், சென்னைச் சட்டசபையும், இந்தியச் சட்டசபையும், இந்திய சர்க்காரும், பிரிட்டிஷ் சர்க்காரும் ஒரு மெம்பர் தொகுதியையும் ஒற்றை ஓட்டு முறையையும் ஒப்புக்கொண்டு விட்டதினால், அவைகளை எதிர்த்தவர்கள் யோக்கியப் பொறுப்புடையார்களாயிருக்கும் பக்ஷத்தில் தாம் செய்த தவறை உணர்ந்து கன்னத்தில் போட்டுக்கொண்டு பச்சாதாபப்பட வேண்டியதே நியாயம். ஆனால் தேசீயப் பத்திரிகைகளோ இப்பொழுதும் ஊளையிட்டுக்கொண்டே இருக்கின்றன. டாக்டர் சுப்பராயன் கூட "என்ன செய்வது? என்னாலானவரைப் போராடினேன். வெற்றி கிடைக்கவில்லை. எனினும் இப்பொழுதும் நான் பல மெம்பர்கள் தொகுதியையும் குவியல் ஓட்டு முறையையுமே நான் ஆதரிக்கிறேன்" என்று கூறிக்கொண்டு இருக்கிறாராம். வாதத்துக்கு மருந்துண்டு; பிடிவாதத்துக்கு மருந்தேது? எனவே டாக்டர் சுப்பராயனையும் அவரது சகாக்களையும் அவர்கள் போக்கில் விட வேண்டியதுதான்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 29.03.1936**





RangaRakes tamilnavarasam.com

# மாம்ச ஆகாரமும் பார்ப்பனர்களும்

இந்து மதத்தில் பசு மிகவும் மேன்மையாகப் பாவிக்கப்படுகிறதென்றும், முக்கியமான தெய்வமென்றும், அதை வதை செய்வதால் இந்து மதத்திற்கு பெரும் பங்கமேற்படுகிற தென்றும், இந்துக்கள் பெரும் தடை செய்கின்றார்கள். பூர்வீக காலத்திலிருந்த இந்து மதத்திலேயே பசுவதை செய்வதை ஹலாலாக்கி வைத்திருந்தது மட்டுமல்லாமல் முஸ்லீம்கள் அவ்விறைச்சியை எவ்வாறு புசிப்பது அவர்கள் மார்க்கத்தில் கூடுமானதாயிருக்கின்றதோ அதே போல் இந்துக்களும் அம்மாமிசத்தை புசித்து வந்தனர் என்ற விஷயம் இந்து மத ஆராய்ச்சி நிபுணர்களின் ஆராய்ச்சியில் மறைந்திருப்பதன்று. இவ்வாறு இந்து மதத்தில் பசு வதை செய்வது சரியென்றும், பலி செய்யப் பட்ட பசுவின் மாமிசத்தை புசிக்கலாம் என்றும், இந்து வல்லாத மத ஆராய்ச்சி நிபுணர்கள் எத்தனையோ வியாசங்களைப் பிரசுரித்திருக்கின்றார்களே யாயினும் இன்றைக்கு வங்காள பிரபல பூர்வீக மத ஆராய்ச்சியில் இந்து நிபுணரான ராஜா ராஜேந்திரலால் மத்ரா எல்.எல்.டி., சி.ஐ.இ., அவர்களால் எழுதப்பட்ட ஓர் புத்தகத்தில் "இந்து ஆரியன்" என்ற மகுடம் சூட்டப்பட்ட 6-வது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கும் விஷயத்தை நாம் கீழே குறிப்பிடுகின்றோம்:-

அப்புத்தகத்தில் இந்துமதக் கோட்பாடுகள் எவ்வாறு போதிக்கப் பட்டு வந்திருக்கிறதென்பதை இதைப் படிக்கும் நண்பர்களுக்கு நன்கு புலனாகிவிடும். ஆனால் அவர் புத்தமதத்தைச் சார்ந்தவரோவென நீங்கள் நினைக்கக்கூடும். ராஜாசாகிப் அவர்கள் வங்காள வைஷ்ணவர். அவர் தம்முடைய மேலே கூறப்பட்ட புத்தகத்தில் பூர்வீக இந்துக்களின் மதக் கோட்பாடுகளை மிகவும் ஆராய்ச்சியுடன் வரைந்துள்ளார்.

அவர் கூறுவதாவது:-

"இப்பிரச்சினையின் மகுடமே என் தேச நண்பர்களில் பெரும் பான்மையோர்களின் மனதில் பெரும் வெறுப்பை யுண்டு பண்ணும். இமாலய பர்வதத்தைக் கடந்து வரும் ஆரியர்களின் மதக் கோட்பாடுகளை ஆராய்ச்சி செய்வதில் நமக்குக் கிடைக்கும் அத்தாட்சிகளே இவ்விஷயத்தில் விவாதிப்பதற்கு போதிய அத்தாட்சியாகும்.

பசு மாமிசத்தை உணவாக புசிக்கலாம் என்று நினைத்த வுடனேயே இந்துக்களின் மனம் புண்பட்டு விடுகிறது. ஆயிரக்கணக்கான இந்துக்கள்





தானென்ன? லட்சக்கணக்கான இந்துமதப் பற்றுடைய இந்துமத நிபுணர்களும் கூட பசு மாமிசம் என்ற பெயரையுங் கூட வாயால் சொல்ல அருவறுக் கிறார்கள். நம் நாட்டில் பசு வதை செய்யும் விஷயத்தில் பெருங் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு காலத்தில் உயிர்ப் பிராணிகளை அறுப்பதால் சில ஆத்மாக்கள் அமைதியாக இருந்தது மட்டுமல்லாமல், அவ்வாறு அறுக்கப்படுவது விருந்தினர்களுக்கெனக் கருதப்பட்டும் வந்தது. மேலும், இறந்து போன இந்துவுடன் ஓர் பசுவையும் சேர்த்து மயானக் கரையில் வைத்து எரிக்கப்பட்டு வந்தது. இவ்வந்தரங்கமான விஷயத்தை வெளியிடுவதன் நிமித்தம் இந்துக்களின் தற்போதைய கிளர்ச்சிகளை யுணர்ந்த இந்தியர்களுள் பெரும் ஆச்சரியத்தையும் கிளர்ச்சியையும் உண்டுபண்ணும். இவ்விஷயங்களை நான் எந்த கிதாப் (புத்தகம்) பிலிருந்து எடுத்திருக்கின்றேனோ அக்கிரந்தங்களில் எத்தகைய சந்தேகமும் அதிருப்தியும் கொள்ள முடியாது.

## புரொபசர் வில்சனின் ஆராய்ச்சி

என் தேச நண்பர்களில் யார் தக்க கல்வி கற்றிருக்கிறார்களோ அவர்கள் வேதங்களில் 'கோமேதம்' 'அஸ்வமேதம்' என்று பசுவையும் குதிரையையும் பலி கொடுக்கும் யாகங்கள் இருப்பதை நன்கு அறிவார்கள். அவ்யாகத்தின் தாத்பரியம் கால்நடை மிருகங்களை பலி செய்வதே. அவ்வாறு தக்க கல்வி கற்றவர்கள், பலி செய்ய வேண்டுமென்றிருப்பதை உதாரணமாக வரையப் பட்டிருக்கிறதெனக் கருதுகின்றார்கள். அவர்கள் அவ்வாறு மேற்பார்வையாகப் பார்த்து உதாரணமாகக் கூறப்பட்டிருக் கிறதெனக் கருதி விடுவதால் அதன் அந்தரங்கங்கள் மறைவாக இருந்து விடுகிறது. ஆதலின் அத்தகைய பலி அமுலில் கொண்டுவரப்பட்டதன்று என ஜனங்கள் கருதிக்கொள்ளுகிறார்கள். அதே போல் புரொபசர் வில்சன் அவர்கள் இவ்விஷயங்களை ஆராய்ச்சி செய்வதற்காக நாடி முதன் முதலாக ஆராய்ச்சி செய்ய ஆரம்பஞ் செய்தபோது அவருக்கும் இதன் அந்தரங்கங்கள் சரிவர விளங்காமல் அவரின் யோசனைக்கும் எட்ட வில்லையாயினும் அத்தகைய கல்வி நிபுணர்கள் போன்றவர்களின் பார்வைக்கும் அந்தரங்கங்கள் மறைந்திருப்பது முடியாத காரியமாகையால் அவர் மேகாவத் மொழி பெயர்ப்பின் ஓரிடத்தில் குறிப்பிடுவதாவது:-

கோமேதம், அஸ்வமேதம் எனப்படும் யாகங்களில் பசு குதிரை இவைகளை பூர்வீக காலத்தில் இந்துக்கள் பொதுவாக பலி செய்து வந்தனர். இந்தப் பலியானது உண்மையான பலியல்லவென்றும், பலியின் பாவனையாகச் செய்யப்பட்டதென்றும் கூறப்படுகிறது. அதாவது:-

பலியாக குறிப்பிடப்பட்ட ஒரு பசுவின் மீது ஏதாவது ஓர் அடையாளத்தைப் போட்டு அதை உயிரோடு விடப்பட்டு வந்தது. ஆனால் வேதங்களில் கூறப்பட்டிருக்கும் வாசகங்களும் இந்துக்கள் செய்யும்

RangaRakes tamilnavarasam.com

வேலைக்கு உதவியாகத் தெரியவில்லை. ஏனெனில், பசுவின் இரத்தம் கடலைப் போல ஆகவேண்டுமென்று கூறப்பட்டிருப்பதன் உண்மையான வியாக்கியானம் பசுவின் இரத்தத்தையே வெள்ளமாக ஓட்ட வேண்டு மென்பதேயன்றி பசு பலி யென்று வாயால் சொல்லி ஒரு குறியைப்போட்டு அப்பிராணிகளை வெளியில் ஓட்டி விடுவது பலியாகமாட்டாது. பசு பலி செய்ய வேண்டுமென எந்தப் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறதோ அப்புத்தகத்திலிருக்கும் வாக்கியத்தின் மொழிபெயர்ப்பு வருமாறு:-

## மாம்ச ஆகாரமும் பார்ப்பனர்களும்

''பசு சந்ததிகளின் இரத்தம் ஆறாகக் கிளம்பி ஓடிற்று.''

புரொபசர் அவர்கள் எவ்விஷயத்தில் அத்தாட்சிகள் காட்டுகின்றாரோ அவ்விஷயத்தில் ஜனங்கள் முன்னமே விவாதம் செய்திருக்கின்றார்களாயினும் பலி செய்ய வேண்டுமென வேதத்தில் கண்ட வாக்கியத்திற்கு இரத்தத்தை ஓட்டவேண்டுமென்றே பதில் கூறி இருக்கின்றார்கள். சிலர் அவ்வாக்கியத்திற்கு நேரான வியாக்கியானம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

## ரிஷிகள் விருந்தில் பசு மாமிசம்

வஸிஷ்ட ரிஷியானவர் விஸ்வாமித்திரர், ஜனகர், சத்தியானந்தர், ஜமதக்கினி முதலிய ரிஷிகள், சிநேகிதர் ஆகியவர்களுக்கு விருந்தளித்தார். அவ்விருந்திற்காக ஓர் கொழுத்த பெண் பசுக்கன்றை அறுத்தார். ஜமதக்கினிக்கு விருந்துக்குச் சொல்ல போயிருந்த வசிஷ்ட ரிஷி சாப்பாட்டின் இன்பத்தையும் அதன் திவ்ய வாசனைகளையும் கூறுகையில் அவர் கூறியதாவது:-

பசுக்கன்று அறுப்பேன், நெய் சாதம் சமைக்கப்படுகிறது. நீங்கள் ஓர் படித்த கல்விமான்; நானும் ஓர் படித்தவன்; ஆதலின் நீங்கள் என் விருந்துக்கு வந்து நாங்கள் சமைத்து வைத்திருக்கும் பசு மாமிசம், நெய் சாதம் இவைகளைச் சாப்பிட்டு எங்களுக்கு ஆசி கூறும்படியாக வேண்டுகிறேன்.

இவ்விஷயங்கள் பூராவும் ஓர் சரிதையிலிருந்து எடுக்கப்பட்டதில் எத்தகைய சந்தேகமும் கிடையாதாயினும், இத்தகைய விஷயங்களை ஓர் நிமிஷத்திற்காவது இட்டுக்கட்ட முடியாது என்பதும் திண்ணம். ஏனெனில் இவ்விஷயத்தைக் குறிப்பிட்டுள்ள சரிதையின் ஆசிரியருக்கு இதை படிக்கும் பொது ஜனங்களின் மனம் கொதிப்படையு மென்பது தெரிந் திருப்பதுடன், இல்லாததை இட்டுக்கட்டி இத்தகைய விஷயங்களை எழுதத் துணிய மாட்டார்.

## விருந்தாளிக்கு மரியாதை

கோல்புரூக் என்ற ஒருவர் ஹிந்து மதக் கோட்பாடுகளை மட்டும் ஓர் புத்தகமாக எழுதியிருக்கிறார். அவர் அப்புத்தகத்தில் கூறுவதாவது:-



பூர்வீக காலத்திலிருந்த ஹிந்துக்கள் தங்கள் வீட்டிற்கு யாராவதொரு விருந்தாளி வந்தால் அவருக்காக ஓர் பசுவை அறுப்பது பொதுவான வழக்கமாக இருந்தது. ஆதலின் அவருக்குப் பசுவை அறுப்பவர் என்று கூறப்படுகிறது.

இந்துக்களின் விவாக காலத்தில் பசுவை அறுப்பதற்காகச் சொல்லப் படும் மந்திர சம்பந்தமான விஷயங்களை கூறுகையில் அவர் கூறுவதாவது:-

நான் இவ்விஷயங்களை எந்தப் புத்தகத்திலிருந்து ஆராய்ச்சி செய்தேனோ அப்புத்தகத்தில் கூறுவதாவது, வரவேற்கத்தக்க விருந்தினர்களான கூர்த், புரோஹ்க், சன்யாசி, ராஜா, மாப்பிள்ளை, சினேகிதர், மற்றும் கௌரவிக்கத் தக்க விருந்தினர்கள் இவர்களுக்காக வேண்டி ஒரு பசுவைக் குறிபார்க்கப்பட்டு அறுப்பதற்காக வேண்டி கட்டிவிடுகின்றார்கள். ஆதலின் இவர்களுக்கு பசுவைக் கொல்லுகிறவர்களென்று கூறுகின்றார்கள்.

## மனுஸ்மிருதியில் பசு மாமிசம்

எக்காலத்திலுமே பசு மாமிசம் சாப்பிடலாமென மனுஸ்மிருதி அனுமதிக்கிறது. ஆனால் அதைச் சாப்பிடுவதற்கு முன் ஒரு துண்டைத் தேவதைகளுக் கென்றாவது, பெரியோர்களின் ஆத்மாக்களுக்கென்றாவது, விருந்தாளிக்கென்றாவது மனதில் ஞாபகம் செய்து கூப்பிட வேண்டும். மேலும் மனுஸ்மிருதியில் வரையப்பட்டிருப்பதாவது:- யாதொரு மனிதன் கிரயத்திற்காவது, இலவசமாகவாவது பசுமாமிசத்தை வாங்கி தேவர் களுக்காவது அல்லது ஆத்மாக்களுக்காவது ஸ்தோத்திரம் செய்த பிறகு அம் மாமிசத்தைச் சாப்பிடுவதில் எத்தகைய பிணியும் கிடையாது. (மனு 23-5)

ஆனால் மனுஸ்மிருதி பசு மாமிசத்தை ஓர் உணவாகக் கூறவில்லை யாயினும், மனிதன் சாப்பிடக்கூடிய உயிர்ப் பிராணிகளின் நாமங்களைக் கூறப்பட்டிருக்கும் அத்தியாயத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

முள்ளெலி, பெருச்சாளி, ஆமை, முயல் ஆகியவைகளை இந்து மத நிபுணர்கள் உண்ணலாமென வைத்திருக்கின்றார்கள். நான்கு கால் மிருகங்களில் ஒட்டகம் ஒன்று மட்டும் நீங்கலாக ஒரு பக்கத்தில் மட்டும் பல்லிருக்கக் கூடிய மிருகங்கள் எதானாலும் சாப்பிடலாம். (மனு 18-5)

மேலே கூறப்பட்ட நிபந்தனைப்படி பசுவும் அதில் சேர்ந்ததென்பதில் ஐயமில்லை. ஏனெனில் பசுவுக்கு ஒரே பக்கத்தில்தான் பற்களுண்டு என்பது மனு ஸ்மிருதியில் மறைவானதன்று, மனு பசுவைச் சாப்பிடக் கூடாதென்று விலக்கியிருந்தால் ஒட்டகத்தோடு சேர்த்துப் பசுவையும் கண்டிப்பாகச் சாப்பிடக் கூடாதென விலக்கியிருப்பார்கள். ஆனால் முன்பின் வாசகங்களைக் கவனிப்பது கொண்டு பசுவைச் சாப்பிடக் கூடாதென விலக்கவில்லை யென்று நாம் அர்த்தம் செய்து கொள்வது சரியான அத்தாட்சியாகமாட்டாது. ஆதலின் பிரமச்சாரியானவர் தம் வீட்டிற்கு திரும்பி வருவதற்காக குருவுக்கு சில காணிக்கைகள் கொடுக்கின்றார்கள். இவ் விஷயம் மனு ஸமிருதியில் தக்க ஆதாரமாக இருக்கிறது. அதில் எழுதியிருப்பதாவது:-



RangaRakes tamilnavarasam.com

பிரமச்சாரிகள் விவாகத்திற்கு முன் வேதங்களில் கூறப்பட்டிருக்கும் காணிக்கைகளைச் சேகரித்து புஷ்பங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட கம்பளத்தில் உட்கார்ந்து மார்க்கக் கோட்பாட்டின் படி குருவுக்கு ஒரு பசுவை வெகுமதியாக கொடுக்கவேண்டும். (மனு 6 - 3) அதன் பின்வரும் ஒரு வாசகத்தில் காணப்படுவது:- இராஜாக்கள் பிரபல விருந்தினர்களுக்காக இன்பமான சாதமும் பசு மாமிசமும் செய்யப்பட்டு வந்திருக்கின்றது.

### அஸ்வ மஹாபாரதம், ராமாயணம்

அஸ்வத் தமது அரச கட்டளையில் துவர்க்கமாகக் கூறுவதாவது:-

ஆதி காலத்தில் அவனுடைய பொங்குமடத்தில் லக்ஷக்கணக்கான உயிர்ப் பிராணிகள் உணவுக்காக அறுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் அவைகள் இன்னின்ன பிராணிகளென விவரமாகக் கூறப்படவில்லை. அவைகளின் விவரங்கள் தெரியாவிடினும் அவ்வாறு மாமிசம் சாப்பிடும் காலத்தில் அவர் ஆடுகளை மட்டும் போதுமென வைத்திருக்க மாட்டாரென நாம் ஊகித்துக் கொள்ள முடியும்.

மஹாபாரதம், ராமாயணம் இவைகளிலும் கோமேத யாகத்தைப்பற்றி கூறப்பட்டிருக்கிறது. கோமேத யாகமென்பது உயிர்ப் பிராணிகளை (குர்பானி) கொலை செய்வது. ஆனால் அதில் விஷயங்கள் விரிவாகக் கூறப்படவில்லை. பசுவின் மாமிசத்தை உணவைப் போல் சாப்பிட்டு வந்ததா இல்லையாவென்ற விவரமும் கூறப்படவில்லை.

### வைதீகத்தில் பசு மாமிசம்

ஈஸவி 500, 600 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட சர்க் சந்தவென்ற வைதீகப் புத்தகத்தின் ஒர் அத்தியாயத்தில் இவ்விஷயத்தை விரிவுரையாக கூறப்பட்டிருக்கிறது. அதில் ஓர் அத்தியாயத்தில் உணவு விஷயமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஓர் இடத்தில் காணப்படுவதாவது:- பசு, எருமை, பன்றி இவைகளின் மாமிசங்களை பிரதி தினந்தோறும் புசிக்கக் கூடாதென வரையப் பட்டிருக்கிறது.

மேலே கூறப்பட்ட விஷயங்களை நன்கு கவனிப்பது கொண்டு தெரிய வருவதாவது:-

அக்காலத்தில் ஹிந்துக்கள் பசு மாமிசம் சாப்பிட்டு வந்தார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனால் பசு மாமிசம் தக்க பலமுடைய வஸ்துவானதால் பிரதி நாட்கள் தோறும் சாப்பிடலாமென அனுமதிக்கப்படவில்லை. மற்றுமோர் இடத்தில் அக்கிரந்த கர்த்தாவானவர் கூறுவதாவது:- கர்ப்பமாக இருக்கும் பெண்களுக்குப் பசு மாமிசம் கொடுக்கவேண்டுமென்றும், அது பிரசவ காலத்திற்கு வேண்டிய பலத்தைக் கொடுக்கிறதென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.



மற்றும் சில வைதீகப் புத்தகங்களில் பல முறைகள் கூறப்பட்டிருக் கிறதாயினும் பசு மாமிசம் அறவே சாப்பிடக் கூடாதென எந்த வைதீகப் புத்தகத்திலும் காணப்படவில்லை. அஸ்மனா விஷபாவுடைய சில வைதீகப் புத்தகத்தில் கூறப்பட்டிருப்பதாவது:- ஓர் மனிதன் போதையாக இருந்து தெளிவு பெற்றபின் அவன் பசு இறைச்சி சாப்பிடுவதால் பெரும் அனுகூலங் களிருப்பதாக வரையப்பட்டிருக்கிறது.

### பசு மாமிச உப்புக்கண்டம்

குர்ஹீயா சூத்திரத்தில் பசு குர்பானியின் முறை ஓர் விதமாகக் கூறப் பட்டிருக்கிறது. அதற்கு சுடப்பட்ட பசு மாமிசம் உப்புக் கண்டம் எனக் கூறப்படுகிறது. அதற்காக வேண்டி பசுக்களில் நல்ல பசுவாகவும், கொழுத்த தாகவும் இருப்பதுடன் பாதரம் நிறமாகவும் இருக்கக் கூடாது. இவ்வாறு இந்தப் பசுவுக்கு பல நிபந்தனைகளுண்டு. அவ்வாறு குர்பானி செய்யப்படும் பசுவிற்கு எத்தனை நிபந்தனைகளிட்டிருக்கின்றார்களோ அத்தனை நிபந்தனைகளும் பொருந்திய ஓர் பசுங்கன்று கிடைத்தால் வெந்நீர் கொண்டு குளிப்பாட்டி அதை ரூரா (சுவாமி)வுக்கு வேண்டுதலைசெய்து கட்டிவைத்து வளர்த்து வருகின்றார்கள். அந்தக் கன்றுக்குப் பற்கள் பூராவும் முளைத்து குறிப்பிட்ட தவணை வந்தவுடன் குர்பானியின் மந்திரம் கிரிவுக்கள் தெரிந்த புர்ஹத் பிராமணனை அழைத்து அவர் படிக்க வேண்டிய மந்திரங்களைப் படித்து நெருப்பில் போட வேண்டிய வஸ்துக்களைப் போட்டு செய்ய வேண்டிய கிரியைகள் பூராவையும் செய்து முடித்துவிட்டு புது நூதனமாக தயார் செய்யப்பட்ட ஓர் இடத்திற்கு அந்தப் பசுவைக் கொண்டுபோய் பொதுவான சட்டப்படி அறுத்து அதன் ஈரலை எடுத்து ஓர் தட்டில் வைத்து 12 தேவதைகளின் நாமங்களைச் சொல்லிக்கொண்டே அந்தத் தட்டை நெருப்பில் வைத்து விடுகிறார்! அதன் பிறகு வைக்கோல் புற்களை விரித்து கொஞ்சம் அரிசிப் பொத்தலையும் பசு மாமிசத்தையும் வைத்து ரூரோவுக்கு பூஜை செய்கின்றார்கள். பூர்வீக காலத்தில் அவ்வாறு குர்பானி செய்யப்பட்ட பசுவின் எலும்பு, ஐவ்வு, தோல் இவைகளை நெருப்பில் போட்டு எரித்து சாம்பலாக்கப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு வந்த சம்பீதா ரிஷியானவர் அவ்வாறு நெருப்பில் போடப்படும் வஸ்துக்களில் பொது ஜனங்களுக்குப் பிரயோஜனம் தரக்கூடியதான தோலை நெருப்பில் போடுவதற்கு பதிலாக செருப்பாக தைத்து உபயோகப்படுத்திக் கொள்ளலாமென பொதுவாக உத்தரவு செய்து விட்டார். அவ்வாறு ரூராவுக்கு பூஜை செய்ததன் பிறகு பிராமண பூசாரியானவர் இடது பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டு நேராக எழுந்து நின்று ஏதோ சில மந்திரங்களைப் படித்துக்கொண்டே அறுக்கப்பட்ட பசுவின் இரத்தத்தை அவ்விடங்களிலிருக்கும் சாப்பங்களுக்கு சேர்க்கை செய்து விடுகிறார். இவ்வெல்லாக் கிரியைகளும் செய்து முடித்த பிறகு கடைசியாக (சுவிஸ்த்தாக்கிர்த்) என்ற ஒரு பூஜையும் செய்யப்படுகிறது. பிறகு அப்பசுவுடைய நெஞ்சு மாமிசத்தினின்றும் சுடுவதற்காகக் கொஞ்சம் மாமிசத்தை எடுத்துக் கொள்ளப்படுகிறது.



RangaRakes tamilnavarasam.com

அதன் பிறகு மீதியாயிருக்கும் அப்பசுவின் மாமிசத்தைப் பொதுவாக எல்லோரும் சாப்பிடலாமென்று சில சூத்திரங்கள் கூறுகின்றன. சில சூத்திரங்கள் அப்பசுவை குர்பானி செய்தவர்கள் மட்டும் சாப்பிடலாமெனக் கூறுகின்றன.

இவ்வாறு ஒரு மனிதன் குர்பானி செய்து விட்டால் அவனுக்கு வயது அதிகமாகிறதென்றும், செல்வந்தனாவானென்றும், நல்ல நிலைமையிலே இருப்பானென்றும், தன் மதத்தில் கௌரவமுடையவனாக இருப்பானென்றும், சந்ததிகள் அதிகமாகுமென்றும், கால் நடை மிருகங்கள் அவனுக்கு அதிகமாகு மென்றும், அவ் வேதத்தில் ஆசை காண்பிக்கப்பட்டிருக்கிறது. சகல தனவந்தர் களும் அவர்கள் வயதில் ஓர் விடுத்தமாவது இவ்வாறு குர்பானி செய்ய வேண்டியது முக்கியமென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வாறு குர்பானி செய்யப்பட்ட பசு மாமிசம் எவ்வாறு சமைக்கப்பட்டதென்ற விஷயம் விரிவாகக் கூறப்படாதது மிகவும் வருந்தத்தக்கதே. சமைக்கப்படும் முறை விவரமாக கூறப்படாவிடினும் அறுக்கப்பட்ட பசுவின் நெஞ்சு மாமிசத்திலிருந்து சுடுவதற்காக மாமிசம் எடுப்பதே அவர்கள் சமைக்கும் முறையை நன்கு விளக்கிக் காட்டுகிறது.

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - மார்ச்சு 1936**



# சுயமரியாதைக்காரரும் மதமும்

மதம் என்பது கடவுளாலும் கடவுள்களால் அனுப்பப்பட்டவர்களாலும் கடவுளை அடைவதற்கும், கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்மந்தத்தை விளக்குவதற்கும் ஏற்பட்டவைகள் என்பது ஒரு சாராரின் அபிப்பிராயம்.

மனிதன் நடந்து கொள்ள வேண்டியதற்கு ஆக ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள் - விதிகள் - திட்டங்கள் என்பதுதான் மதம் என்பது மற்றொரு சாராரின் அபிப்பிராயம்.

எப்படி இருந்தாலும் சுயமரியாதைக்காரர்கள் மதம் என்பதைப்பற்றி கொண்டுள்ள அதப்பிராயம் பலர் அறிந்ததேயாகும். நிர்ப்பந்தமான அல்லது மூடநம்பிக்கையானதும் பிரத்தியட்ச அனுபவத்திற்கும் சாத்தியத்துக்கும், மாறானதும் பகுத்தறிவிற்கும் ஆராய்ச்சி அல்லது விஞ்ஞானத்திற்கும் எதிரானதுமான காரியங்களையோ கருத்துக்களையோ ஆதாரங்களையோ ஏற்றுக்கொண்டு இருப்பதே மதம் என்றும், அது எதுவானாலும் அப்படிப் பட்ட மதங்களையே சுயமரியாதைக்காரர்கள் மறுக்கிறார்கள் என்பதோடு அம்மதங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

சாதாரணமாக இன்று இந்தியாவில் பெரும்பான்மையான அதாவது 100-க்கு 95 பேர்களுக்கு மேலாகவே உள்ள மக்களை ஆவாகனம் செய்து கொண்டிருக்கும் மதங்களாகிய இந்து மதமும் மற்றும் சீர்திருத்த மதங்கள் என்பவையாகிய இஸ்லாம், கிறிஸ்து, ஆரிய சமாஜம், பிர்மசமாஜம், முதலிய பல மதங்களும் நிர்ப்பந்தமான நம்பிக்கை (அதாவது நம்பித்தான் தீரவேண்டும் என்பது) அல்லது மூடநம்பிக்கை அல்லது கொள்ள முடியாததும் ஆதார மில்லாததுமான விஷயங்களில் நம்பிக்கை வைத்தல் ஆகியவைகளையோ அல்லது இவற்றில் சிலவற்றையோ கொண்டதாகத் தான் காணப்படுகின்றன.

சரீரம் வேறு, ஆத்மா வேறு என்றும், கடவுள் வேறு ஆத்மாவேறு என்றும், அது மனிதனுக்கும் கடவுளுக்கும் தொடர்புடையது என்றும் மனிதனையும் கடவுளையும் ஒன்று சேர்ப்பது என்றும், சரீரத்தின் கூட்டுறவால், அதன் தூண்டுதலால் ஆத்மா செய்த குற்றத்துக்கு கடவுளுடைய தண்டனைகள் ஆத்மாவுக்கு மாத்திரம் தான் கிடைக்கும் என்றும், இறந்த பிறகு அதாவது சரீரத்தை விட்டு ஆத்மா பிரிந்த பிறகு தீர்ப்பு நாளில் மறுபடியும் ஒரு சரீரத்தைப் பெற்று சித்திர புத்திரன் கணக்குப்படி தண்டனைகள் கண்டனைகள் அடையும் என்றும், செத்தவர்கள் மறுபடியும் பிறப்பார்கள் என்றும்,



RangaRakes tamilnavarasam.com

ஒரு ஆத்மாவுக்கு பல ஜன்மங்கள் உண்டு என்றும், அந்த ஜன்மங்கள் எல்லாம் ஆத்மாவும், சரீரமும் கலந்து இருந்த காலத்தில் செய்த காரியத்துக்கு ஏற்ற விதமாகக் கிடைக்கும் என்றும், இப்படி இன்னும் எவ்வளவோ விஷயங்களைக் கொண்டவைகளே இன்று செல்வாக்குள்ளதும் இந்நாட்டில் 100க்கு 95 பேர்களுடையதுமான மதங்களாய் இருக்கின்றன.

இப்படிப்பட்ட மதங்களைத் தான் சுயமரியாதைக்காரர்கள் ஒப்புக் கொள்வதில்லை. ஒப்புக் கொள்ளவும் முடியாது என்பதோடு இந்த மதங்களிலிருந்து மக்கள் விடுபட்டு அறிவுச் சுதந்திரவாதிகளாக - பகுத்தறிவுவாதிகளாக ஆக வேண்டும் என்பது சுயமரியாதைக்காரர்களின் முக்கிய லக்ஷ்யமாகும்.

அது போலவே உலக நடப்புக்கு ஏற்படும் நன்மை தீமைகளுக்கும், இன்ப துன்பங்களுக்கும் காரணகர்த்தாவாக கடவுள் என்கின்ற ஒரு வஸ்து இருக்கிறது என்பதையும், அது மக்கள் தீண்டப்படாதவர்கள் ஆவதற்கும், மக்களை மேல் ஜாதிக்காரர்கள், முதலாளிகள், அரசர்கள் என்பவர்கள் கொடுமைப்படுத்துவதற்கும் காரணமாயும் மனிதனுக்கு ஆக உலகில் உள்ள ஜீவராசிகள் ஆடு, மாடு, பன்றி, கோழி, பக்ஷிகள், மச்சங்கள் முதலாகியவைகள் சிருஷ்டிக்கப்பட்டது என்பதற்கும் காரண கர்த்தாவாயும் இருக்கிறது என்பதையும் சுயமரியாதைக்காரர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை என்பதோடு அப்படிப்பட்ட கடவுள் உணர்ச்சியை ஒழிக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

மற்றும், அக்கடவுளே எரிமலை, பூகம்பம், புயல்காற்று, வெள்ளக் கொடுமை ஆகியவைகளுக்கு கர்த்தாவாகவும் விஷஜுரம், தொத்து நோய், கொள்ளை நோய், குறை நோய், உளைமாந்தை ஆகிய வியாதிகளுக்கும், தேள், பாம்பு முதலிய விஷக்கிருமிகளுக்கும் புலி, சிங்கம், ஓநாய், நரி முதலிய துஷ்ட ஜெந்துக்களுக்கும், சிருஷ்டி கர்த்தாவாகவும் எலியைப் பூனை தின்பதற்கும், ஆட்டைப் புலி தின்பதற்கும், புழுப்பூச்சிகளை பட்சிகள் தின்பதற்கும், பட்சிகளை வேடர்கள் வேட்டையாடுவதற்கும் காரணகர்த்தாவாயும் இருக்கிற கடவுளையும் சுயமரியாதைக்காரர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை என்பதோடு அப்படிப்பட்ட கர்த்தாவையும் ஒழிக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

மேலும் வேறு எப்படிப்பட்ட கடவுளானாலும் அதை வணங்கினால், அதற்கு ஆகாரம், நகை, துணி, பெண்ஜாதி, வைப்பாட்டி முதலியவை வைத்து பூஜைசெய்தால், உயிர்பலிகொடுத்தால், இன்ன இன்ன மாதிரி தொழுதால், ஸ்தோத்திரித்தால் ஜபித்தால் மனிதன் செய்த எல்லா கெட்ட காரியங்களின் பாபங்களையும் மன்னித்துவிடுவார் என்கின்ற கடவுளையும் ஒப்புக் கொள்ளாததோடு அப்படிப்பட்ட கடவுளுணர்ச்சியையும் ஒழிக்க வேண்டும் என்றும் சொல்லுகின்றார்கள்.

கடவுளைப்பற்றிய மற்ற விஷயத்தை மற்றொரு சமயம் விவரிப்போம்.



மதம் என்னும் விஷயத்தில் மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்ட மதங்கள் இருக்கக்கூடாது என்பது தான் சுயமரியாதைக்காரர்களின் மத சம்பந்தமான அபிப்பிராயமாகும்.

ஏன் இதை முதலில் குறிப்பிடுகிறோம் என்றால் விவகாரங்களுக்கு வரும்போது ஒவ்வொரு மதக்காரரும் தங்கள் தங்கள் மதங்களுக்கு வெவ்வேறு தத்துவம் இருப்பதாகவும், சகலவிதமான பகுத்தறிவு பரீக்ஷைகளுக்கும் தங்கள் மதம் நிற்கும் என்றும் சொல்லி வாதாடும் போது சமயத்துக்குத் தகுந்தபடி பேசுவதால் நிலைமை கஷ்டத்திற்கு உள்ளாகிறது. ஆகையால் மதங்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் பல மதங்களுக்கும் உள்ள பொதுக் கொள்கைகளையே குறிப்பிட்டோம்.

மற்றும் மதம் என்னும் வார்த்தைக்கு பலவித அருத்தங்களும், கருத்துக்களும் சொல்லப்படுகின்றன.

உதாரணமாக ஒருவர் ''என்னுடைய மதம் யார் மனதையும் புண்படுத்தாமலும் யாருக்கும் என்னால் கூடிய நன்மை செய்வது தான்'' என்று சொல்லுகிறார்.

மற்றொருவர் ''என்னுடைய மதம் கடவுளைப்பற்றி கவலைப்படாத நாஸ்திக மதம் தான்'' என்கின்றார்.

மற்றொருவர் ''என்னுடைய மதம் கடவுள் இல்லை; ஆத்மா இல்லை. ஆனால் கர்மத்துக்குத் தகுந்த பலன் உண்டு'' என்பது தான் என்கிறார்.

மற்றொருவர் ''நான் கருதியிருக்கும் மதம் திமிர் அல்லது கொழுப்பு'' என்கிறார்.

மற்றொருவர் ''மதம் என்னும் வார்த்தைக்கு கொள்கை அல்லது கடமை'' என்பது தான் அர்த்தம் என்கிறார்.

மற்றொருவர் ''என்னுடைய மதம் விஞ்ஞானம்'' என்கிறார்.

மற்றொருவர் ''என்னுடைய மதம் மனித ஜீவ அபிமானம்தான்'' என்கிறார். மற்றொருவர் ''என்னுடைய மதம் பொதுவுடமை கொள்கை'' என்கிறார். இப்படியே இன்னும் பலவிதமாய் மதம் என்னும் வார்த்தைக்கு தனித்தனி கருத்துக்கள் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் அவைகளைப்பற்றி யெல்லாம் விவரிக்க வேண்டியதில்லை என்று கருதுகிறோம்.

ஆனால் முகப்பில் கூறிய இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் முதலிய மதங்களின் அஸ்திவாரம் ஒன்றுபோலவே இருந்தாலும் அதன் மேல் கட்டப்பட்ட கட்டடங்களில் வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

ஒருவன் உண்மையாகவே மதம் இல்லாமல் இருப்பது நாஸ்திகம் என்று கருதிக்கொண்டு ஏதாவது ஒரு மதத்தின் பேரால் உயிர் வாழ வேண்டியவனாய் இருக்கிறான்; ஆதலால் எப்படியாவது தான் நாஸ்திகன் என்று சொல்லப்படாமல் இருக்க வேண்டும். மற்றப்படி மதக்கொள்கைகள் எது எப்படி இருந்தாலும் தான் லக்ஷியம் செய்வதில்லை என்கின்ற கருத்தின் மீதே தனக்குள் எவ்விதக் கொள்கையும் இல்லாமல் ஒரு மதத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஏதோ ஒரு மத வேஷத்தைப் போட்டுக்கொண்டு இருக்க வேண்டியவனாக இருக்கிறான்.

மற்றும் பலரும் அதுபோலவே மதங்களுக்கு உள்ள செல்வாக்குக்கு பயந்து கொண்டு மத வேஷக்காரர்களாய் இருக்கிறார்கள். பரத்தில் மேன்மை அடைவதற்கு என்று சிலர் மதவாதிகளாய் இருப்பது போலவே இகத்தில் மேன்மை அடைவதற்கு என்று சிலர் மதவாதிகளாய் இருக்கிறார்கள்.

விளக்கமாய்ச் சொல்ல வேண்டுமானால் பணத்துக்கு ஆகவும், பெண்ணுக்கு ஆகவும், வயிற்றுப் பிழைப்புக்கு ஆகவும், உத்தியோகத்துக் காகவும் எத்தனையோ பேர் மதவாதிகளாகவும், மதமாற்றக்காரர்களாகவும் இருக்கிறார்கள்.

பொதுவாக பார்க்கப்போனால் கடவுள் ஏற்பட்ட வெகு காலத்துக்கு பிறகுதான் மதம் ஏற்பட்டு இருக்க வேண்டுமே ஒழிய கடவுளும் மதமும் இரட்டைப்பிள்ளைகள் போல் பிறந்தவைகள் அல்ல.

எப்படி இருந்தாலும் மதங்களானவை இன்று சடங்காகவும் வேஷமாகவும் இருக்கின்றனவே ஒழிய கொள்கையாகக் கூட எந்த மதமும் அனுபவத்தில் இருக்கவில்லை. புஸ்தகங்களில் பல கொள்கைகள் இருந்திருக்கலாம்; இன்னும் இருந்து கொண்டிருக்கலாம். காரியத்தில் அக் கொள்கைகள் பெரிதும் அமுலில் இல்லை.

ஆகவே அமுலில் இல்லாத கொள்கைகளைக் கொண்ட மதங்களில் எந்த மதம் மேலானது என்றோ, எந்த மதக் கொள்கை மேலானது என்றோ வாதிப்பதானது ஆகாயத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் கோட்டைகளில் எது பலமான கட்டடம் என்றும், எது வசிப்பதற்கு சவுகரியமானது என்றும் கேட்பதுபோல் தான் ஆகும்.

முதலாவதாக ஒரு மதத்துக்கு கொள்கைகள் எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி முடிவு செய்து கொள்ள வேண்டும்.

ஒரு கொள்கை நல்ல கொள்கை என்றால் அதற்கு இரண்டு சக்தி இருக்க வேண்டும்.

அது எல்லா மக்களுக்கும் ஒன்று போல் அனுபோகத்தில் சமமாக நடத்தக் கூடியதாக இருக்கவேண்டும். அதோடு கூடவே அக்கொள்கைகள் எல்லா மக்களாலும் எவ்வித நிர்ப்பந்தமும் இல்லாமல் தானாகவே பின்பற்றித் தீரவேண்டியதாகவும் இருக்க வேண்டும்.



இப்படிப்பட்ட தத்துவங்களைக் கொண்ட கொள்கையை இதுவரை எந்த பெரியவரும் கண்டுபிடிக்கவுமில்லை. எந்த மதமும் கொண்டிருக்கவும் இல்லை.

அது செய்தால் பாவம் இது செய்தால் மோக்ஷம் என்றும், அது செய்தால் லாபம் இது செய்தால் நஷ்டம் என்றும், அது செய்தால் தண்டனை இது செய்தால் தூக்கு என்றும், இப்படியாக பல நிர்ப்பந்தங்கள், பயம், தண்டனை கண்டனை ஆகியவைகளின் பாதுகாப்பால் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகளாகவும் அமுலில் கொண்டுவர எப்போதுமே முடியாததாகவும் அமுலில் கொண்டுவர மிகவும் கஷ்டப்பட வேண்டியதாகவும் மனிதனால் சாதாரணமாக செய்யக்கூடியதும் செய்வதற்கு ஆசையுண்டாக்கக் கூடியதும் அல்லாததாகவும் இருக்கக்கூடிய கொள்கைகளையேதான் எந்த மதமும் கொண்டிருக்கிறது.

எந்தக் கொள்கையாவது கடவுளால் உண்டாக்கப்பட்டதாகவோ அல்லது கடவுளுக்கு இஷ்டமானதாகவோ இருந்திருக்குமானால் அது மக்களுக்கு மிகவும் இஷ்டமானதாகவும், செய்வதற்கு மிகவும் ஆசை யுடையதாகவும், சுலபத்தில் செய்து முடிக்கக்கூடியதாகவும் இருந்திருக்க வேண்டாமா? கடவுளுக்கு இஷ்டமான கொள்கை மனிதனுக்கு கசப்பானதாகவும், பெரும்பான்மையோருக்கு செய்வதற்கு முடியாததாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன?

ஆகவே கடவுளின் பேரால் மதத்தின் மூலம் மத கர்த்தாக்களால் சொல்லப்பட்ட கொள்கைகள் என்பவை சொன்னவர்களுக்கு அவர்களது புத்தித்திறமையும், அக்காலத்துக்கு சரி என்று பட்ட கருத்துக்களையும் கொண்டவைகளே தவிர எந்தக் கொள்கையும் எந்தக் கடவுளாலும் சிருஷ்டிக்கப்பட்டதல்லவென்றே சுயமரியாதைக்காரர்கள் கருதுகிறார்கள்.

இன்றும் மதமானது மக்களின் கூட்டு வாழ்க்கையின் அவசியத்துக்கு ஏற்ற கொள்கைகளைக் கொண்டது என்பதுடன் அவை பகுத்தறிவுக்கு ஒத்ததாகவும், கால தேச வர்த்தமானத்துக்கு ஏற்ப திருத்திக் கொள்ளக் கூடியதாகவும், சகல மக்களுக்கும் பலன் ஒன்றுபோல் உண்டாகக்கூடிய தாகவும் இருக்கத்தக்க கொள்கைகள் கொண்டது என்றால் அதை சுயமரியாதைக்காரர்கள் மறுப்பதற்கு முன்வரமாட்டார்கள்.

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - மார்ச்சு 1936**



RangaRakes tamilnavarasam.com

# பட்டுக்கோட்டை பொதுக்கூட்டம்

**காந்தியும் காங்கிரசும் சாதித்ததென்ன?**

**சு.ம. இயக்கம்**

**மிருகமும் பக்ஷியும் மலமும் மூத்திரமும் கடவுளா?**

தோழர்களே!

தோழர்கள் பொன்னம்பலம், அழகிரிசாமி ஆகியவர்கள் பேசுகையில் நீங்கள் சிரித்து ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்தீர்கள்.

## நமது இழி நிலை

நமது கேவல நிலைமையையும், முட்டாள்தனத்தையும் நம்மைப் பார்ப்பனர்கள் எப்படி ஏமாற்றினார்கள் என்பதையும் விளக்கும்போது நமக்கு உண்மையான சுயமரியாதை உணர்ச்சி இருந்தால் சிரிப்பு வருமா? ஆத்திரமும், வெட்கமும் அல்லவா வரும்.

நமது இழிவானது நேற்று இன்று என்று இல்லாமல் ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்து வருவதால் நமது ரத்தம் வெட்கப்படுவதிற்கில்லாமல் இழிவிலேயே உறைந்து போய்விட்டது.

## புரட்சி வேண்டும்

மனிதனுக்கு வெட்கமும், ரோஷமும் ஏற்படுவதற்கு ஆகவே சுயமரியாதை இயக்கம் ஏற்படுத்தப்பட்டது. சுயமரியாதை இயக்கம் மனித சமூகத்தையே மாற்றி அமைக்க ஏற்பட்டதாகும். இந்தக் காரியம் ஒரு பெரும் சமூகப் புரட்சியால் ஏற்பட வேண்டியதே ஒழிய சிரிப்பு விளையாட்டில் ஏற்படக் கூடியதல்ல. இதற்காக அனேக தொல்லைகளை அனுபவிக்க வேண்டி வரும்.

அனேக காரியங்களில் மற்றவர்களால் நாம் துன்பமும், இழிவும் அடையாமல் நம்மாலேயே நாம் இழிவுக்கும், கீழ்நிலைமைக்கும் ஆளாகிவருகிறோம். நம்மை நாம் திருத்திக்கொள்ளாமல் நமக்குள் ஒரு பெரிய மனமாறுதல் ஏற்படாமல் நமது சமூகம் மாறுதலடைவதென்பது ஒருநாளும் முடியாத காரியமாகும்.



சமூகத்தில் மேல் ஜாதி, கீழ் ஜாதி, அடிமை ஜாதி என்பவைகள் இருப்பதோடு ஆண் பெண் தன்மைகளில் உயர்வு தாழ்வும் இருந்து வருகிறது. இவை தவிர ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி தன்மையும் இருந்து வருகிறது.

இவற்றுள் சில இயற்கையாக ஏற்பட்டதாகவும், சில முயற்சியால் செயற்கையாக ஏற்பட்டதாகவும், இவ்வளவுக்கும் காரணம் மனிதன் அல்ல வென்றும், சர்வ வல்லமையும் சர்வ வியாபகமும் பொருந்திய கடவுளால் ஏற்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. இவற்றையே மேல் நிலையில் உள்ளவனும் கீழ்நிலையில் உள்ளவனும் நம்பிக் கொண்டிருக்கிறான்.

## மூடநம்பிக்கை

இந்த மூடநம்பிக்கை தான் வெகுகாலமாக மனித சமூகத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படுவதற்கில்லாமல் தடுத்துக்கொண்டு வருகிறது.

சாதாரணமாக மனிதப் பிறவியில் கீழ் ஜாதி, மேல் ஜாதி அடிமை (பறை) ஜாதி என்பவை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்து வருகிறது. இதற்கு ஆக நாளதுவரை யாரும் எவ்வித முயற்சியும் செய்யவில்லை.

ஏனெனில் செய்யமுடியாதபடி அவனவன் நம்பிக்கையைச் செய்து கொண்டான்.

ஜாதி வித்தியாசங்களுக்கும், ஜாதிக்கொடுமைக்கும் கடவுள் காரணம் என்று எண்ணிய பிறகு யாரால் தான் பரிகாரம் செய்ய முடியும்? எந்த மனிதனும் மற்ற ஜாதியைப்பற்றி சந்தேகப்பட்டாலும் தன் ஜாதியைப்பற்றி நம்பிக்கை யாகவும், மேன்மையாகவும் கற்பித்துக்கொண்டு மற்றவர்களைத் தாழ்த்தி பெருமையடைகிறான். சாஸ்திரங்களில் மதங்களில் அவற்றிற்கு ஆதாரங்கள் கண்டுபிடிக்கிறான். புராணங்கள் எழுதி வைத்துப் பெருமையடைகிறான்.

இந்தக் குணம் பார்ப்பான் இடமாத்திரமல்ல; எல்லா ஜாதியாரிடமும் இருந்து வருகிறது.

ஜாதி பேதம் ஒழிவதை இழிவாய்க் கருதுகிறான். ஜாதிக் கலப்பை விவசாரித்தனமாக எண்ணுகிறான். இந்த மனப்பான்மை ஜாதி ஒழிப்புக்கு எமனாய் இருக்கிறது.

அஸ்திவாரத்தில் கையை வைத்து ஜாதிகளை ஒழிப்பதற்கு இன்று இந்த நாட்டில் சுயமரியாதை இயக்கம் தவிர வேறு எந்த இயக்கமும் இல்லை என்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள்.

திருவள்ளுவர், கபிலர், ராமானுஜர் முதலிய புராணக்காரர்களும் பிரம்மசமாஜம், ஆரிய சமாஜம் முதலிய மத சம்மந்தமான சில புது முயற்சிகளும், மற்றும் எத்தனையோ சீர்திருத்த முயற்சிகளும் எல்லாம்



RangaRakes tamilnavarasam.com

உண்மையறியாமலும், உலக மெப்புக்கும் தனிப்பட்ட சமூக சுயநலத்தை முன்னிட்டும் செய்யப்பட்ட காரியங்களே தவிர, மனித சமூகத்தில் பிறவியின் பேரால் உள்ள ஜாதிபேதம் அடியோடு ஒழியத்தக்க மாதிரிக்கோ, ஒழியும் படியாகவோ செய்த காரியங்கள் அல்ல.

இதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். தயவு செய்து நடுநிலையுடன் கவனியுங்கள். ஜாதி வித்தியாசம் ஒழிய வேண்டும் என்று செய்யப்பட்டு வந்த முயற்சிகளால் இதுவரை ஜாதி வித்தியாசங்கள் குறைந்ததா அதிகப்பட்டு வந்ததா என்று யோசித்துப்பாருங்கள். நாகரீகம் என்பதே புது புது ஜாதிகள் உற்பத்தி செய்வதாகத்தான் இருந்து வருகின்றது.

ஆதலால் ஜாதியை அடியோடு ஒழிக்க எவரும் முயற்சித்ததில்லை. மற்ற பலஜாதி மக்களின் முயற்சிகள் எப்படி இருக்கின்றன என்று பார்த்தாலோ அவர்களும் தாங்கள் எப்படியாவது மேல் ஜாதிக்காரர்கள் என்று மதிக்கப்பட வேண்டும் என்கிற முயற்சிகளாகவே இருக்கின்றன. ஜாதி இல்லாதவர்களும் கலப்பு ஜாதிக்காரர்களும் தாங்கள் ஒரு கலப்பற்ற ஜாதியை சொல்லிக் கொள்ள முடியாமல் போய்விட்டதே என்று வெட்கப்படுகிறார்களே ஒழிய, தங்களைப் பொறுத்தவரை ஜாதி ஒழிந்ததே என்று யாரும் திருப்தியடைவதில்லை. இந்த தொல்லைகள் அடியோடு ஒழிய வேண்டுமானால் சுயமரியாதை இயக்கத்தில்தான் இடமிருக்கிறது; சுயமரியாதை இயக்கத்தால்தான் முடியும். மற்றபடி எப்படிப்பட்ட சீர்திருத்தவாதியானாலும் காரியத்திற்கு உதவவே உதவான்.

உதாரணமாக ஆசார சீர்திருத்தம் என்னும் பேரால் இந்தியாவில் சுமார் 50 வருஷங்களுக்கு முன்பிருந்தே பல அறிஞர்கள், மகாராஜாக்கள், பெரும் பதவியாளர்கள் முதல் எத்தனையோ பேர்கள் பாடுபட்டார்கள். ஒருவராலும் ஒரு சிறு காரியமும் செய்யமுடியவில்லை.

### முந்திரிக்கொட்டை காந்தியார்

எல்லாவற்றிற்கும் மேல் முந்திரிக்கொட்டை மாதிரி தோழர் காந்தியார் புறப்பட்டார். ஜாதியைப் பற்றி பேசாமல் [பேசினால் பார்ப்பனர் நிஷ்ட்டூரம் வருமே என்று பயந்து] தீண்டாமையை ஒழிக்கிறேன் என்று புறப்பட்டார். 10, 15 வருஷம் விளம்பரம் பெற்றார். பல பல லக்ஷம் ரூபாய்கள் வசூல் செய்தார். இன்று வரையில் அவர் வாயில் ஜாதிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று ஒரு வார்த்தைகூட சொல்ல முடியாமல் போய்விட்டது. அதற்குப் பதிலாக ஜாதிகளை (வர்ணாச்சிரம முறையை) காப்பாற்ற வேண்டியது தனது கடமை என்று சொல்லிவிட்டார்.

காரணம் என்ன? தனது மகாத்மா பட்டம் நிலைக்க வேண்டுமானால் அவர் ‘‘ஜாதிகளை காப்பாற்றுகிறேன்’’ என்று சொல்லித்தானாகவேண்டும் என்கிற நிலைக்கு வந்து விட்டதேயாகும்.



சுயமரியாதை இயக்கம் துணிந்து சகல ஜாதியும் ஒழிந்துதான் ஆகவேண்டும் என்று சொல்லுவதற்கு காரணம் அது மனித சமூகத்தினிடமிருந்து எவ்வித பெருமையையும் மதிப்பையும் எதிர்பார்க்கவில்லை. ஜாதி ஒழிப்புக்கு தடையாகக்கொண்டு வந்து போடப்படும் எந்த முட்டுக் கட்டையையும் லட்சியம் செய்வதில்லை.

மேல் ஜாதிக்காரர்கள் என்பவர்களின் எவ்வித சூழ்ச்சித் தொல்லை யையும் சமாளிக்கத் தயங்குவதில்லை. இந்தக் காரணங்களாலேயே சுய மரியாதைக்காரர்களால் சிறிதளவாவது வேலை செய்ய சாத்தியமாகின்றது.

நாளதுவரை ஜாதி வித்தியாசம் இருக்கவேண்டும் என்பதற்கு எதிரிகளால் ஏதாவது ஒரு யோக்கியமான காரணம் சொல்லப்பட்டதா என்று யோசித்துப் பாருங்கள்.

### ஜாதி எப்படி உண்டாயிற்று

கடவுளால் ஜாதிகள் உற்பத்தி செய்யப்பட்டது என்பதும், மத சாஸ்திரங்களில் ஜாதிகள் இருக்கின்றன என்பதும் தவிர வேறு ஏதாவது சொல்லப்பட்டதா என்று யோசித்துப்பாருங்கள்.

சமீபத்தில் சென்னையில் ஒரு பார்ப்பனர் சங்கராச்சாரி என்ற பட்டத்தை உடையவர் மாத்திரம் ஜாதிக்கு இயற்கையில் ஆதாரமிருக்கிற தென்றும், பார்ப்பானையும் பறையனையும் அவனது ரத்தத்தை பரிசோதித்துப் பார்த்து கண்டுபிடித்து விடலாம் என்றும் சொன்னதாகப் பத்திரிகையில் பார்த்தேன்.

இதைத் தவிர வேறு யாரும் ஜாதி வித்தியாசத்துக்கு ஆதாரம் சொல்லவே இல்லை.

மற்றபடி அனேக ஜாதிகள் ஏற்பட்டதற்குக் காரணம் ஜாதி சங்கிரகம் என்னும் நூலில் வருணாச்சிரம முறைப்படி ஏற்பட்ட நான்கு ஜாதிகள் ஒன்றோடொன்று கலந்தும், மாறியும், கலப்பு முறையிலும், விவசாரித்தனத் தாலும் ஏற்பட்டவைகள் என்று கூறி இன்ன இன்ன ஜாதி கலந்து புணர்ந்ததால் இன்ன ஜாதி உண்டாகி இருக்கிறது என்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இது சங்கராச்சாரி என்பவர் கூறிய அயோக்கியத்தனத்தை விட மோசமான அயோக்கியத்தனம் என்றுதான் சொல்லவேண்டும்.

ஏனெனில் இன்று உள்ள சகல உட்ஜாதியும் விவசாரித்தனத்தால் ஏற்பட்டது என்றால் இதை யார் தான் சகிக்க முடியும்?

அன்றியும் இந்த இரண்டு காரியமும் இன்று அமுலில் இல்லை. ஜாதி மாறிய புணர்ச்சிகள் தினமும் லட்சக்கணக்காக நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அதன் மூலம் குழந்தைகள் பிறந்துகொண்டுதான் இருக்கின்றன.

இவைகளால் எவ்வித ஜாதியும் புதிதாய் உண்டாவதில்லை.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே இந்த தத்துவம் வருணாச்சிரம ஜாதியான நான்கு ஜாதியின் கீழ் வராதவர்களுக்கு பெரிய இழிவை உண்டாக்குவதற்கும் பயன்படக் கூடியதாய் இருக்கின்றதே தவிர மற்றபடி ஜாதி பிரிப்பதற்கோ, அதனால் ஏதாவது பயன் உண்டாவதற்கோ பயன்படுவதில்லை.

**சங்கராச்சாரி**

மற்றும் ரத்தத்தைக் கொண்டு ஜாதி கண்டுபிடித்து விடலாம் என்பதும் மற்ற மக்களின் சுயமரியாதை அற்ற தன்மையை ஆதாரமாகக் கொண்டு சொல்லப்படுவதே தவிர கேட்பவர்களுக்கு மானம், ஈனம், ரோஷம், அறிவு இருக்கும் என்று ஒருவன் கருதி இருந்தால் இவ்வளவு பெரிய அயோக்கியத் தனமான வார்த்தைகள் பேச இடமே இருந்திருக்காது. இந்தப்படி ஒரு சாதனம் இருக்குமானால் ரத்தத்தை பார்த்து பரீட்சிக்கக்கூடுமானால் அப்பரீக்ஷையின்படி அந்த சங்கராச்சாரியாரே ''கீழ்'' ஜாதியில் குறிக்கப்பட வேண்டியவராகி விடுவார் என்பதோடு இன்றைக்கு 100-க்கு 99 பார்ப்பனர்கள் கதியும் அப்படித்தான் ஆகவேண்டி வரும் என்று உறுதியாய்ச் சொல்லுவோம். ஏனெனில் உள் ஜாதிகள் ஏற்பட்டதற்குக் காரணம் கலப்புப் புணர்ச்சி என்று மற்றொரு சாஸ்திரம் சொல்லுவதேயாகும்.

**ஏழ்மைக்கு பரிகாரமில்லை**

இவை நிற்க, ஆண் பெண் உயர்வு தாழ்வு தன்மைகளும், முதலாளி கூலிக்காரன் தன்மைகளும் இதுபோலவே கடவுள் பெயரையும், மதத்தின் பெயரையும் சொல்லி ஏமாற்றுவதாலேயே ஏற்பட்டதே தவிர வேறில்லை.

பெண் மக்களின் நிலைமையும், கூலிக்கார ஏழை மக்களின் நிலைமையும் இன்று ஒரு மனிதனால் சகிக்கக்கூடியதாய் இருக்கிறதா என்பதை யோசித்துப் பாருங்கள். கடவுளும் மதமும் இல்லாதிருந்தால் இவர்கள் நிலைமைக்கு வேறு ஏதாவது சமாதானம் சொல்ல முடிந்திருக்குமா?

எந்த மகானாலும், எந்த அவதார புருஷனாலும் ஏழ்மைத் தன்மைக்கும், அடிமைத் தன்மைக்கும் நமது நாட்டில் பரிகாரம் சொல்லப்படவே இல்லை. மேலும் மேலும் ஏழ்மைக்கும், அடிமைக்கும் சாதகமான சாதனங்களே ஏற்பட்டு வருகின்றன.

இந்த இருபதாவது நூற்றாண்டில் கூட பழமையை எதாஸ்திதியைக் காப்பாற்ற பலமான முயற்சிகள் நடைபெறுகின்றதே ஒழிய அவற்றை மாற்றுவதற்கு எவ்வித முயற்சியும் இல்லை. ஆதலாலே தான் சுயமரியாதை இயக்கம் ஒன்றே தான் பழமைத் தொல்லைகளை ஒழித்து எதாஸ்திதித்து வத்தை அடியோடு அழிக்கவேண்டும் என்கின்றது.

**காங்கிரசு**

சுயமரியாதை இயக்கத்துக்கு விரோதம் எல்லாவற்றையும் விட காங்கிரசே யாகும். அது ஒரு மத பாதுகாப்பு ஸ்தாபனமே ஒழிய மற்றபடி



மனித சமூகத்துக்கு அதனால் கடுகளவு பிரயோஜனமும் ஏற்படப்போவ தில்லை என்பது உறுதி. இந்த நாட்டுக்கு இயற்கையாய் ஏற்பட வேண்டிய முற்போக்கைக்கூட காங்கிரஸ் தடுத்து தேசத்தை பின்னணிக்கு கொண்டு போய்விட்டது. மற்ற நாடுகளில் இந்த 20 வருஷத்தில் ஏற்பட்ட முற்போக்குகளில் 1000ல் ஒரு பங்குகூட நமது நாட்டில் ஏற்படவில்லை. ஒரு பணக்காரத்தன்மை கொண்ட ஆட்சியை மக்களுக்காக யாதொரு காரியமும் செய்யவிடாமல் இந்த நாட்டில் தடுத்து காப்பாற்றி வருவது நமது நாட்டு மத ஸ்தாபனமாகிய காங்கிரசேயாகும். காங்கிரசுக்கு ஜாதிமதச் சண்டை தவிர வேறு என்ன கொள்கை இருக்கிறது? வேறு என்ன வேலைதான் அது செய்து இருக்கிறது? என்று யோசித்துப் பாருங்கள்.

காந்தியார் காங்கிரசுக்குள் அடி வைத்தது முதற்கொண்டு ஜாதி மதச் சண்டைகளும், ஜாதி மத பாதுகாப்புகளும், ஜாதி மத உணர்ச்சிகளும் அல்லாமல் வேறு ஏதாவது ஒரு சிறு நன்மையாவது மக்களுக்கு ஏற்பட்டதாகச் சொல்ல முடியுமா? என்று கேட்கின்றேன்.

**காந்தித் திட்டம்**
**தீண்டாமை விலக்கு**

காந்தியார் 1920ல் மனித சமூக நன்மைக்கு என்று நான்கு திட்டங்கள் வகுத்தார். அதாவது தீண்டாமை விலக்கு, இந்து முஸ்லீம் ஒற்றுமை, மது விலக்கு, கதர் இந்த நான்கும் என்ன கதி அடைந்தது.

தீண்டாமை விலக்கு என்பது தீண்டாதவர்கள் என்பவர்கள் இந்து மதத்தை விட்டு விலகினால் ஒழிய தீண்டாமை விலகாது என்கின்ற நிலைமைக்கு வந்துவிட்டது. 1923ல் நான் இதை ஒரு காங்கிரஸ் கூட்டத்தில் சொன்னபோது என்னை எல்லோரும் வெறுத்தார்கள். 1928, 29-ல் நான் சொல்லும்போது சிலர் பொறுமை காட்டினார்கள்; சிலர் கஷ்டப்பட்டார்கள். ஆனால் அது இன்று இந்தியாவின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாய் முடிந்துவிட்டது. தீண்டாமை போக வேண்டுமானால் இந்து மதத்தில் இருந்துகொண்டு முடியாது; காங்கிரசிலும் முடியாது; காந்தியாராலும் முடியாது. இந்து மதத்தைவிட்டு வேறு மதத்திற்கு அதுவும் முஸ்லீம் மதத்துக்குப்போனால் தான் முடியும் என்கின்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இது சரியா தப்பா என்பது ஒரு புறமிருந்தாலும் காந்தியாரின் தீண்டாமை விலக்கு தத்துவம் இன்று இந்தியாவில் இந்த நிலையை உண்டாக்கிவிட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.

**இந்து முஸ்லீம் ஒற்றுமை**

அதுபோலவே இந்து முஸ்லீம் ஒற்றுமையும் இந்தியாவில் இந்து ராஜ்ஜியம் ஏற்படுவதா? முஸ்லீம் ராஜ்யம் ஏற்படுவதா என்கின்ற நிலைமைக்கு கொண்டு வந்துவிட்டது. 20 வருஷத்துக்கு முன் இந்துக்களுக்கும்



RangaRakes tamilnavarasam.com

முஸ்லீம்களுக்கும் இருந்த ஒற்றுமை கூட இன்று அடியோடு ஒழிந்துபோய் இந்து ராஜ்யத்தை விட பிரிட்டிஷ் ஆட்சியே மேல் என்று முஸ்லீம்களும், முஸ்லீம் ராஜ்யத்தை விட பிரிட்டிஷ் ஆட்சியே மேல் என்று இந்துக்களும் சொல்லும்படியான நிலைமை உண்டாகிவிட்டது.

தீண்டாமை ஒழிந்தாலொழிய சுயராஜ்ஜியம் ஏற்படாதென்றும், இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட்டாலொழிய சுயராஜ்யம் ஏற்படாதென்றும், தீண்டாமை ஒழியாமலும் இந்து முஸ்லீம் ஒற்றுமை இல்லாமலும் சுயராஜ்யம் கிடைத்தாலும் நான் ஏற்கமாட்டேன் என்றும் சொன்ன காந்தியார் இன்று பெரியதொரு கரணம் போட்டு தலைகீழ் மாற்றமடைந்து ''சுயராஜ்யம் வந்த பிறகுதான் இந்து முஸ்லீம் ஒற்றுமை தானாகவே ஏற்படும்'' என்றும் ''தீண்டாமையும் தானாகவே ஒழியும்'' என்றும் சொல்லிவிட்டார்.

இந்த மாதிரி அவர் சொன்ன பிறகே முஸ்லீம்களும், தீண்டாதவர்களும் ஒன்று சேர்ந்து ''சுயராஜ்யம் கிடைத்தால் நம் இரு சமூகமும் இந்துக்களால் அழுத்தப்பட்டுவிடும்'' என்று பயந்து ''எங்களுக்கு உரிய பங்கைக் கொடுத்துவிட்டு சுயராஜ்யப் பேச்சைப் பேசுங்கள்; இல்லாவிட்டால் சுயராஜ்யமே வேண்டாம்'' என்று சொல்ல வேண்டியவர்களாகி விட்டார்கள்.

இதன் பயனே இன்று தீண்டாதவர்கள் இந்துமதத்தை விட்டு விலகுவதும் முஸ்லீம் மார்க்கத்தில் போய்ச்சேருவதுமாய் ஆகிவிட்டது. தினம் தினம் பலர் சேர்ந்தும் வருகிறார்கள்.

இந்த இரண்டோடு அல்லாமல் தென்னாட்டில் பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதார் பிரச்சினை முற்கூறிய இரண்டு பிரச்சினைக்கும் சிறிதும் இளைத்ததாக இல்லாமல் வளர்ந்துகொண்டே வருகிறது.

இவை எல்லாம் எந்தக் காலத்தில் வெடித்து இரத்தக் களரியை உண்டாக்குமோ என்று ஒவ்வொரு நிமிடமும் பயப்படவேண்டியதாய் இருக்கிறதே தவிர, ஏதாவது ஒரு வழியில் சிறிதாவது அடங்கிற்று என்று சொல்லும்படியான மாதிரியில் இல்லை.

ஆகவே காந்தியார் அரசியல் போர்வையை போர்த்திக்கொண்டு மத இயல் வேலையைச் செய்துவரும் ஒரு கபட சன்யாசி என்றே முஸ்லீம்களும், இந்துக்களில் பார்ப்பனரல்லாதாரும், தாழ்த்தப்பட்ட மக்களும் உறுதியாய் நம்பிவிட்டார்கள். இதற்கு ஆதாரம் பார்ப்பனர்களும், இந்து மத வெறியர்களும் காந்தியாரை ஆதரிப்பதும் அவரை மகாத்மாவாக்குவதும் ஆகிய ஒன்றே போதுமானது.

## மதுவிலக்கு

மற்றப்படி காந்தியார் மதுவிலக்குப் பிரச்சினையில்தான் ஆகட்டும் எந்த அளவுக்கு வெற்றிப்பெற்றார் என்பதை யோசித்துப் பாருங்கள். மதுவிலக்கு மறியலுக்காக ஜெயிலுக்குப் போனோம். காந்தியார்



எதிர்பார்த்ததற்கு மேலாகவே ஜெயிலுக்குப் போனோம். எங்கள் குடும்பத்தில் மாத்திரம் சுமார் 1000க்கு மேற்பட்ட தென்னை மரங்கள் வெட்டி எறியப்பட்டன. குடும்ப சகிதம், மனைவி தங்கை சகிதம் மறியல் செய்தோம். மற்றும் பதினாயிரக்கணக்கான பேர்களை மறியல் செய்யும்படியும் செய்தேன். எல்லாம் ஏமாற்றமாய் முடிந்தது. அரசியல் காரியங்களுக்காக நம்மை ஏமாற்றிவிட்டதாக காந்தியாரே, அவரது பிரதம சிஷ்யர்களே பெருமை அடையும்படியாக ஆகிவிட்டது. மதுவிலக்குத் திட்டம் போடும் போது நமது நாட்டில் செலவான கள்ளு, சாராயத்தைவிட இப்போது அதிகமாகவே செலவாகின்றது.

கள்ளு, சாராயக் கடை வியாபாரிகள் வீட்டிலேயே காந்தியார் தங்கவும், அவர்களையே இன்று எலக்ஷன்களில் நிறுத்தி வெற்றியை உண்டாக்கிக் கொடுக்கவும் காங்கிரஸ் உழைக்கின்றது.

சர்க்காரால் செய்த மதுவிலக்குப் பிரசாரத்தையும் காங்கிரஸ் பழிகூறி ஒழித்து விட்டது.

கடைசியாக காந்தியாரும் காங்கிரசும் இப்போதுதான் தான் இதுவரை செய்துவந்த காரியங்கள் மறியல்கள் இது விஷயமாய் சர்க்கார் உத்திரவு முதலியவைகளை மீறியவைகள் எல்லாம் முட்டாள் தனம் என்று கருதி எந்த இடத்தில் தவறு செய்ததோ அந்த இடத்திற்கு வந்திருக்கிறது.

காந்தியாரின் இன்றைய நிலை 1916-ம் வருஷத்தில் இந்தியா எந்த நிலையில் இருந்ததோ அந்த நிலைக்குப் போயிருக்கிறது என்பதைத் தவிர வேறில்லை.

இந்த 20 வருஷ ஊக்கம், உழைப்பு, உணர்ச்சி ஆகியவை எல்லாம் அடியோடு பாழாக்கப்பட்டது. காந்தியார் இனி புதிதாக திட்டம் போட வேண்டிய நிலைக்கு வந்து மயக்கத்தில் இருக்கிறார்.

1916-ம் வருஷத்தில் இருந்த அரசியல் சுதந்திரத்தை விட இன்று மோசமாகவும், மக்களுக்கு வரி அதிகமாகவும், செலவு அதிகமாகவும் இருக்கிறதே தவிர காந்தியாலோ காங்கிரசாலோ கடுகளவாவது முற்போக்கு ஏற்பட்டதாகச் சொல்வதற்கில்லை.

## கதர்

கதர் விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் தோழர் காந்தியாரின் திட்டம் அடியோடு தோல்வி அடைந்து விட்டது, அவனவனுக்கு வேண்டிய உடை அவனவன் நூற்று நெய்து அணிந்துகொள்ள வேண்டுமென்பதே கதர் திட்டத்தின் தத்துவமாகும். அந்தப்படியே நானும் பிரசாரம் செய்து நானும் நூற்றுப்பார்த்தேன். லக்ஷாதிபதி தாய்மாரையும், மனைவிகளையும், மக்கள்களையும் நூற்கச் செய்தேன். கடைசியாக அக்கொள்கை மக்களை காட்டுமிராண்டித் தனமான காலத்துக்குக் கொண்டு போவதற்குச் செய்யப்படும்



RangaRakes tamilnavarasam.com

சூழ்ச்சியே தவிர பொருளாதாரத்துக்கும், வேறு தேச முன்னேற்றத்துக்கும் சிறிதும் சம்மந்தப்பட்டதல்ல என்பதை நன்றாய் உணர்ந்தேன். இன்று அதன் யோக்கியதையும் அப்படியே ஆகி விட்டது.

இன்று கதருக்குள்ள யோக்கியதை யெல்லாம் எலக்ஷனுக்கு ஒரு சூழ்ச்சியாகவும் சில தனிப்பட்ட ஆட்களுக்கு வயிற்றுப்பிழைப்புக்கு மார்க்கமாகவும், பகுத்தறிவும் சுயமரியாதையும் உடைய மக்களை காங்கிரசில் சேர்க்காமல் இருப்பதற்காகவும், சில அடிமைகளை வளர்ப்பதற் காகவும் ஒரு சாதனமாய் இருந்துவருகிறதல்லாமல் வேறு என்ன காரியத்துக்கு பயன்படுகின்றது என்று யோசித்துப் பாருங்கள்.

கெஜம் 2½ அணாவுக்கு கிடைக்கும் மில் துணிக்கு பதிலாக கெஜம் 12 அணா 14 அணா போட்டு கதர் வாங்கினாலும் அதற்கு ஈடாக்க முடியாத நிலையில் இருந்து வருவதும், 18 வருஷ காலமாக கோடிக்கணக்கான ரூ. செலவு செய்து பிரசாரம் செய்தும் இந்தியா முழுதும் 1000-க்கு ஒருவர் வீதம்கூட பெண்களில் 10000-க்கு ஒருவர் வீதம்கூட மக்கள் வாங்கிக் கட்ட அமலுக்கு கொண்டுவரமுடியாமல் இருக்கிறதென்றால் 10000-க்கு ஒரு பெண்கூட வாங்கிக்கட்ட உதவாமலும் முடியாமலும் இருக்கிறதென்றால் கதர் திட்டம் வெற்றியடைந்ததா என்று பாருங்கள்.

### உப்பு சத்தியாக்கிரகம்

உப்பு சத்தியாக்கிரகத்தின் யோக்கியதையும் உடும்பு வேண்டாம் கை விட்டால் போதும் என்கின்ற மாதிரியில் இர்வின் பிரபு இடம் மண்டி போட்டு இனிமேல் சத்தியாக்கிரகம் செய்வதில்லை என்று எழுதிக்கொடுத்து விட்டு ஜெயிலில் அடைபட்டுக்கிடந்தவர்களை மீட்டுக்கொண்டு வந்ததோடு முடிவடைந்தது.

ஆகவே காந்தியாரின் திட்டங்கள் எல்லாம் அடியோடு தோல்வி அடைந்தும் அவரது மகாத்மா பட்டம் மாத்திரம் இன்று கோவில்களுக்குள்ளும், தேர்கள் மீதும், திருவிழாக்களிலும் விளங்கும்படி பிரசாரம் செய்யப்பட்டு வருகிறதில் குறைவில்லை.

இந்த நிலையில் வாலிபர்கள் பலருக்கு காங்கிரஸ் மயக்கமும், காந்தி பைத்தியமும் இன்னும் இருந்து வருவதை நான் பார்க்கிறேன்.

தேர்தல்களுக்கு காந்தி பெயரையும், காந்தியார் பேரால் வசூலித்த பணத்தையும் கொடுத்து வாலிபர்களை ஏற்படுத்தி மதப் பிரசார முறையில் வேலை செய்வதின் பயனே இந்த மயக்கத்துக்கும், பைத்தியத்துக்கும் காரணம் என்பதே எனதபிப்பிராயம்.

இப்படிப்பட்ட மூட ஜனங்கள் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி குறைகூறுவதிலும், பழி சுமத்துவதிலும் அதிசயம் காணமுடியாது.



இந்த 10, 12 வருஷ காலமாய் சுயமரியாதை இயக்கம் செய்துவந்த வேலைகளை மக்கள் சரியானபடி உணராமல் சுயமரியாதை இயக்கம் நாஸ்திக இயக்கம், மதமற்ற இயக்கம் என்று பார்ப்பனர்கள் செய்யும் விஷமப் பிரசாரத்தைத்தான் தெரிந்துகொண்டிருக்கிறது.

### கடவுளும் மதமும்

கடவுளும் மதமும் உலகில் ஆயிரம் வருஷத்துக்கு முன் இருந்ததைவிட எவ்வளவோ மறைந்தும் மாறுதலடைந்தும் சீர்திருத்தம் பெற்று இருக்கிறது. கடவுளால் மதத்தினால் பிழைக்கும்படி வாழ்க்கை ஏற்படுத்திக் கொண்ட கூட்டம் தவிர - சமூகம் தவிர மற்ற இடங்களில் கடவுளும், மதமும் எவ்வளவோ குறைவடைந்து வருகின்றன.

உருவமில்லாத பெயரில்லாத கடவுள்கள் தோன்றிவிட்டன. மத சின்னமில்லாத மதங்கள் தோன்றிவிட்டன. இரண்டையும்பற்றி கவலைப் படாமல் தங்கள் தங்கள் வேலையை கவனிக்கும்படியான உணர்ச்சிகளும் தோன்றி விட்டன.

தங்களுக்கு அதைப்பற்றிய கவலை யில்லாமல் மற்றவனை ஏய்க்கவும், கட்டுப்படுத்தவும், அடிமையாக்கவும் மாத்திரமே இன்று கடவுளும் மதமும் வெகு மக்களால் கையாளப் படுகின்றதே ஒழிய வேறில்லை.

சகல துறைகளிலும் உலகம் முற்போக்கடைவது போலவே கடவுளிலும் மதத்திலும் கூட உலகம் முற்போக்கடைந்து வருகிறது. சுயமரியாதை இயக்கம் இந்த க்ஷணமே எல்லோரையுமே கடவுள் மத நம்பிக்கையை விட்டுவிடும்படி கட்டாயப்படுத்தவில்லை.

நமக்கு புரியாததும், நம்மால் அறிய முடியாததும் குணம், உருவம், சலனம் இல்லாததும் ஆன கடவுளைப்பற்றி சுயமரியாதை இயக்கத்துக்கும் கவலையில்லை.

மற்றபடி கடவுளைப்பற்றி தெரிந்துவிட்டதாகச் சொல்லுவதும் அதற்கு உருவம், பெயர், குணம், சலனம் ஏற்படுத்துவதும் அதன் மீது பொறுப்பைச் சுமத்துவதும் மனிதன் மற்றவர்களால் அடையும் கொடுமைக்கும், இழிவுக்கும் பொறுப்பாக்குவதுமான கடவுள் உணர்ச்சியையே சுயமரியாதை இயக்கம் குறைகூறுகிறது. மற்றும் கண்டதெல்லாம், நினைத்த தெல்லாம் கடவுள் என்கின்ற உணர்ச்சியையும் ஆயிரக்கணக்கான கடவுள்கள் உணர்ச்சியையும் ஒழிக்கவேண்டும் என்கின்றது.

இன்று ஒரு இந்துவால் எவை எவை எல்லாம் கடவுள் என்பதாக மதிக்கப்படுகின்றது என்றால் மரத்தில் ஒரு கூட்டம் கடவுளாக மதிக்கப்படு கிறது. புல் பூண்டுகளில் ஒரு கூட்டம் கடவுளாக மதிக்கப்படுகின்றது. மலத்தில் ஒரு கூட்டமும், பூச்சி புழுக்களில் ஒரு கூட்டமும், மிருகங்களில் பன்றி, நாய், கழுதை, மாடு முதலிய ஒரு கூட்ட மிருகமும், பக்ஷியில்



RangaRakes tamilnavarasam.com

கருடன், காக்காய், கோழி முதலிய ஒரு கூட்டமும், கல்லுகளிலும், மண்களிலும் ஒரு கூட்டமும், காகிதங்களிலும் எழுத்துக்களிலும் ஒரு கூட்டமும், மனிதர்களில் ஒரு கூட்டமும் இன்று மனிதனால் கடவுளாகப் பாவிக்கப்பட்டு பூஜை, வணக்கம், பலி முதலியவை செய்து ஏராளமான பொருள்கள் நாசமாக்கப் பட்டு வரப்படுகின்றது. இந்த முட்டாள் தனங்களையும் மோசடி கருத்துக்களையும் முதலில் ஒழிக்க வேண்டுமென்று தான் சு.ம. இயக்கம் சொல்லுகிறது.

இதை தைரியமாய் எடுத்துச் சொல்ல இன்று இந் நாட்டில் சுயமரியாதை இயக்கம் ஒன்றுதான் இருக்கிறது. அது இந்த மாதிரியான கடவுள் உணர்ச்சிகளை ஒழித்துத் தீருவதென்றே கங்கனம் கட்டிக்கொண்டு உயிர் வாழுகின்றது.

நாஸ்திக இயக்கம் என்று சொல்வதாலேயே அது பயந்துகொள்ளப் போவதில்லை. கடைசிவரை அது உழைத்துத்தான் தீரும். மதவிஷயத்திலும் இப்படித்தான் இருந்து வருகிறது. ஆகவே சுயமரியாதை இயக்கம் இன்னது என்றும் காங்கிரஸ் இயக்கம் இன்னது என்றும் உணர்ந்து உங்கள் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து பிறகு உங்கள் இஷ்டப்படி நடவுங்கள். விஷமப் பிரசாரத்துக்கும் ஏமாற்றும் பிரசாரத்துக்கும் ஆளாகாதீர்கள்.

*குறிப்பு: 23.03.1936 ஆம் நாள் திங்கட்கிழமை மாலை பட்டுக்கோட்டை போஸ்டாபீசுக்கு எதிரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் 24.03.1936 இல் முத்துப் பேட்டைக்கு அடுத்த புத்தகபுரம் கிராமத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் ஆற்றிய சொற்பொழிவின் விளக்கம்.*

**குடி அரசு - சொற்பொழிவு - 05.04.1936**



# வலங்கைமான் தேசீயம்

அண்ணாமலை சர்வகலா சங்க உப அத்யக்ஷர் தோழர் வலங்கைமான் ஸ்ரீனிவாச சாஸ்திரியாரைத் தென்னாடு நன்கறியும். அரசியலில் மிதவாதி யெனக் கூறிக்கொண்டு சாதாரண காலங்களில் காங்கிரசைத் தாக்குவதும் தேர்தல் காலங்களில் காங்கிரஸ்காரரை ஆதரித்துப் பிரசாரம் செய்வதும் அவரது பிறவிக்குணம். மிதவாதியான அவர் காங்கிரஸை ஆதரிக்கக் காரணம் என்ன? காங்கிரஸ் ஆதிக்கம் பார்ப்பனர் முன்னேற்றத்துக்கு உதவிபுரியக்கூடியதாயிருப்பதினாலேயே அவர் காங்கிரஸை ஆதரித்து வருகிறார். மேலும் ஜஸ்டிஸ்கட்சி யென்றால் அவருக்குப் பெரிய வெறுப்பு. ஜஸ்டிஸ் கட்சி வகுப்புவாதக் கட்சியாம். எனவே ஜஸ்டிஸ்கட்சி ஒழிய வேண்டுமாம். இவ்வாறு கூறும் தேசீயப் புலியான வலங்கைமான் சாஸ்திரியார் அண்ணாமலை சர்வகலா சங்கத்தில் நடத்துந் திருவிளையாடல், அவரது வகுப்புவாதத்தை நன்கு விளக்கக்கூடியதாயிருக்கிறது. அண்ணாமலை சர்வகலா சங்கத்தை பார்ப்பன மயமாக்குவதே அவரது நோக்கமாயிருந்து வருவது போல் தோற்றுகிறது. அதற்கு சமீபத்தில் அங்கு நடைபெற்ற நியமனங்களே அத்தாட்சி. மஹாமஹோபாத்தியாய குப்புசாமி சாஸ்திரியார் கௌரவ சமஸ்கிருதப் பேராசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறாராம். ஆனால் அவர் செய்யும் “கௌரவ” வேலைக்காக அவருக்குப் பிரதிபலன் வழங்கப்படுமா? வழங்கப்பட்டால் எவ்வளவு என்பனபோன்ற தகவல்கள் கிடைக்கவில்லை. அப்பால் டாக்டர் அசுவத நாராயணராவ் கெமிஸ்ட்ரி புரோபஸராக நியமிக்கப்பட்டிருக்கிறாராம். இந்த இரண்டு உத்தியோகங்களிலும் இதற்கு முன்னிருந்தவர்கள் பார்ப்பனரல்லாதாரே! இப்பொழுது பார்ப்பனர்களைத் தேடிப்பிடித்து நியமிக்கக் காரணம் என்ன? பார்ப்பனரல்லாதார் கிடையாமல் போய்விட்டார்களா?

மூன்றாவது சாஸ்திரியாரின் அந்தரங்கக் காரியதரிசியான வி.ஆர். வீரமணி அய்யர் சரித்திரப் பேராசிரியராக நியமிக்கப்பட்டிருக் கிறாராம். மேலும் அந்த உத்தியோகம் வீரமணி அய்யருக்காகவே நூதனமாக சிருஷ்டிக்கப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. நான்காவதாக தோழர் ராமாநுஜாச்சாரியார் தத்துவ சாஸ்திரப் பேராசிரியராகவும், தோழர் பார்த்தசாரதி கெமிஸ்ட்ரி டெமான்ஸ்ட்ரேட்டராகவும் நியமிக்கப் பட்டிருக்கிறார்களாம்.



RangaRakes tamilnavarasam.com

வகுப்புவாதத்தை வெறுக்கும் தோழர் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் தமது இனத்தாரையே அண்ணாமலை சர்வகலா சங்கத்தில் குவிப்பது பொருத்தமா யிருக்குமா? மேலும் சாஸ்திரியார் உப அத்யக்ஷரான பிறகு ஏற்பட்ட காலி ஸ்தானங்களுக்கும் புது ஸ்தானங்களுக்கும் பார்ப்பனர்களே கட்டுப்பாடாக நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம்.

ஆங்கிலப் பகுதியில் வேலை செய்யும் 8 ஆசிரியர்களில் 6 பேர் பார்ப்பனர்களாம். நூல் நிலையம் ஹாஸ்டல் குமாஸ்தாக்கள் வேலைகளும்கூட பார்ப்பனர்களே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். மேஸ்திரி உத்தியோகங் களிலும் பார்ப்பனர்களே அதிகமாக இருந்து வருகிறார்கள். தமிழ் ஆராய்ச்சி இலாகாவில் வேலைசெய்யும் மூவரும் பார்ப்பனர்களாம். தொல்காப்பியப் பொருளாராய்ச்சி மூலம் பார்ப்பனர் மனப்பான்மை எத்தகையது என்பதை தமிழுலகம் அறிந்துகொண்டுவிட்டது. எனவே இந்தப் பார்ப்பனர்கள் நடத்தும் தமிழராய்ச்சியினால் தமிழுக்கும் தமிழர்களுக்கும் ஏதாவது நன்மை உண்டாகுமா? ஒரு பார்ப்பனரல்லாத கோடீசுரர் வழங்கிய 40 லக்ஷ ரூபாய் நன்கொடையினால் உருப்பெற்ற ஒரு சர்வகலா சங்கம் இவ் வண்ணம் பார்ப்பன அக்கிரகாரமாக மாறி வருவதைத் தடுக்க வழியில்லையா? திருநெல்வேலி ஹிந்துக் கல்லூரிக்கு ஒரு லக்ஷம் ரூபாய் நன் கொடையளித்த தோழர் திரவியம் விதி யேற்படுத்தியதுபோல், ஒரு பார்ப்பனரல்லாத கோடீசுரர் கொடையால் தோன்றிய அண்ணாமலை சர்வகலா சங்கத்தில் பார்ப்பனரல்லாத ஆசிரியர்களையே நியமனம் செய்யவேண்டுமென்று ஒரு விதி ஏற்படுத்தினாற்றான் அண்ணாமலை சர்வகலா சங்கம் விருத்தியடையும்.

**குடி அரசு - கட்டுரை - 05.04.1936**



# காங்கிரஸ் புளுகு

பாமரமக்கள் காங்கிரசை அதிகமாக ஆதரிக்கும் பொருட்டு, காங்கிரஸ் மனப்பான்மையுடைய பத்திரிகை நிருபர்கள் தத்தம் மனோதர்மப்படி அடிக்கடி பத்திரிகைகளில் கயிறு திரிப்பதுண்டு. வெள்ளை அறிக்கை வெளிவந்த காலத்து, காந்தியாரை இந்தியா மந்திரி லண்டனுக்கு அழைக்கப் போவதாகவும், அவருடன் கலந்து, வரப்போகும் அரசியல் திட்டத்தை வகுக்கப்போவதாகவும் ஒரு கதை கட்டிவிடப்பட்டது. அப்பால், வைஸ்ராய் காந்தியை பேட்டி காணப் போகிறார், காந்தி சிம்லாவுக்குச் செல்லப் போகிறார் என்றெல்லாம் பல வெங்காய வெடிகள் கிளம்பின. இரண்டு வாரங்களுக்கு முன், எட்வர்டு மன்னர் பண்டித ஜவஹர்லாலைப் பேட்டி காண விரும்பியதாகவும் பண்டிதர் மறுத்து விட்டார் என்றும் ஒரு டெல்லிப் பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்தது. அதைப்பற்றிப் பலருக்கு சந்தேகம் ஏற்படவே அந்தச் செய்தி உண்மைதானென்று அந்த டெல்லிப் பத்திரிகை மீண்டும் ஊர்ஜிதம் செய்தது. ஆனால் பண்டித ஜவஹர்லால் அந்தச் செய்தியை இதுவரை ஆதரிக்கவோ மறுக்கவோ முன்வரவில்லை. சென்ற வாரத்தில் காந்தியாரும் புதிய வைஸ்ராய் லார்டு லின்லித்கோவும் சந்தித்துப் பேசுவதற்கு லார்டு ஹாலிபாக்ஸ் (பழைய லார்டு இர்வின்) ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதாகவும் இது சம்பந்தமாகக் கடிதப்போக்குவரத்துகள் நடந்து கொண்டிருப்பதாகவும் ஒரு செய்தி வெளிவந்தது. அந்தச் செய்தியை காங்கிரஸ் பத்திரிகைகள் எல்லாம் கொட்டை எழுத்துகளில் வெளியிட்டுப் பிரமாதப்படுத்தின. இப்பொழுது லார்டு ஹாலிபாக்ஸிடமிருந்து தமக்கு ஒரு விதமான கடிதமும் வரவில்லை யென்றும் அந்தச் செய்தி பூராவும் கட்டுக்கதை என்றும் காந்தியாரே மறுத்துக் கண்ணீர் வடிக்கிறார். இம் மாதிரிப் பொய்ச் செய்திகளினால் காங்கிரஸ் மதிப்பு எவ்வளவு காலத்துக்குக் காப்பாற்றப்படுகிறதோ தெரியவில்லை. கிராம தேவதைகளின் மீது ஆணை வைத்து ஓட்டுக் கொடுக்கும் அறிவாளிகள் இந்தியாவில் இருக்கும் வரை இம்மாதிரி அரசியல் பித்தலாட்டங்கள் நடந்து கொண்டுதானிருக்கும்.

**குடி அரசு - கட்டுரை - 05.04.1936**



RangaRakes tamilnavarasam.com

# எப்படி மறக்கமுடியும்?

இந்நாட்டில் ஆரியர் திராவிடர் என்கின்ற பிரிவும், இப்பிரிவினருள் ஒருவருக்கொருவர் காட்டும் வேற்றுமையுணர்ச்சியும், துவேஷத்தன்மையும் நாளுக்கு நாள் வலுத்துக்கொண்டே வருகின்றன.

இது எவ்வளவுதான் இன்று ஒருசுயநலக்கூட்டத்தினரின் பிரசாரங்களால் மறைக்கப்பட்டாலும் எவ்வளவுதான் இப்பிரிவினை கூடாது என்று ''இதோபதேசம்'' செய்யப்பட்டாலும் இந்தப் பிரிவு மற்றெல்லாப் பிரிவு களைவிட சரித்திர சம்மந்தமானதாகவும், முன் பின் பழிவாங்கித் தீரவேண்டிய உணர்ச்சியுடையதாகவும், இருந்து வளர்ந்து கொண்டே வருகிறது.

இப்பிரிவைப்பற்றி சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இன்று மனிதசமூகத்தில் உள்ள சகலவித பிரிவிலும் இந்த ஆரியர் (தமிழர் அல்லது) திராவிடர் என்கின்ற பிரிவே மிகக் கொடுமையுள்ளதாகவும், இவ்விரு பிரிவினரும் எந்தக் காலத்திலும் ஒன்றுபடுவதற்கில்லாத வேற்றுமையுடைய தாகவும் இருந்து வருகிறது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஏனெனில் பல்வேறு மதங்களின் பேரால் இந்திய மனித சமூகம் பிரிக்கப்பட்டோ பிரிவினைப்பட்டோ இருந்தாலும் அவைகளை யெல்லாம்விட இந்து மதத்தினர் என்பவர்களுக்குள்ளாகவே இருந்து வரும் இந்த ஆரியர் திராவிடர் என்கின்ற பிரிவானது எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒன்று படுத்தப்பட முடியாத மாதிரியாய் அமைந்தும் இருந்தும் வருவதேயாகும்.

உதாரணமாக இந்து சமூகம், முஸ்லீம் சமூகம், கிருஸ்தவ சமூகம் என்பவைகளுக்குள் ஒன்றுக்கொன்று இருந்துவரும் பிரிவுகள் எவ்வளவு பிரதானமாகவும், பெரியதாகவும் காணப்பட்டாலும் கூட அவை ஒரு சிறு மனமாறுதலால் அடியோடு மறைந்து ஒழிந்து போகும்படியானதாக இருக்கின்றன. ஆனால் இந்துக்கள் என்பவர்களுக்குள்ளாகவே ஆரியர் திராவிடர் என்றோ-பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்றோ இருந்துவரும் சமூகங்களுக்குள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பிரிவினை எப்படிப்பட்ட மனமாற்றத்தாலும் மாறுவதற்கோ மறைவதற்கோ வழியில்லாமல் பிறவி முதல் சாவுவரை இருந்தே தீரும்படியானதாக இருந்து வருகிறது. காரணம் என்னவென்றால் மற்ற மதப்பிரிவு மதபேதம் ஆகியவைகளுக்கு மனிதனுடைய உணர்ச்சிகள் அல்லது எண்ணங்கள் மாத்திரமே ஆதாரமாய் இருப்பதும்



ஆரியர் திராவிடர் அல்லது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற பிரிவுக்குப் பிறவியே காரணமாய் கற்பிக்கப்பட்டிருப்பதும் தான் முக்கிய காரணமாகும்.

மற்றும் மேல்கண்ட மத சம்மந்தமான பிரிவுகளுக்கு மக்களின் வேஷத்தில் ஏதோ சில வித்தியாசங்கள் மாத்திரம் கற்பிக்கப்பட்டிருக் கின்றதே அல்லாமல் ஒரு மதத்துக்கும் மற்றொரு மதத்துக்கும் புழங்கிக் கொள்வதில் எவ்வித வித்தியாசமும் ஆக்ஷேபணையும் இருப்பதில்லை. ஆனால் இந்து மதத்தில் உள்ள ஜாதி சம்மந்தமான பிரிவுகளில் பார்ப்பானுக்கும் பார்ப்பான் அல்லாதவனுக்கும் குறிப்பாக பார்ப்பானுக்கும் தீண்டப்படாதவன் என்பவனுக்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் - இருந்துவரும் பேதங்கள் அறிவும் ரோஷமும் உள்ள எந்த மனிதனும் சகிக்க முடியாத தன்மையில் இருந்து வருகின்றன என்பதுடன் அதை மாற்றுவது அல்லது தணிப்பது என்பது கூட மகா பாதகமான காரியமாய் கருதப்படுவது மாத்திரமல்லாமல் இப் பேதங்களுக்கும் நடப்புகளுக்கும் ''கடவுள்'' வாக்குகளாகவே ஆதாரங்களும் இருப்பதாகவும் கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

எனவே, ஆரியர் திராவிடர் என்கின்ற பிரிவானது மாற முடியாததும் மாற்ற முடியாததுமாக இருந்து வருகையில் அதை எப்படி ஒருவன் மறக்கவோ, மறைக்கவோ முடியும் என்று கேட்கிறோம். இதை நன்றாய் உணர்ந்து இந்த பிரிவின் பயனாய் பலனை அனுபவிக்கும் கூட்டத்தாராகிய ஆரியர்களே இந்தப் பிரிவினைக்காகத் துக்கப்படுவதாகவும், இந்தப் பிரிவினையைப்பற்றி யாரும் இனி பேசக்கூடாதென்றும், அதைப்பற்றி பேசுவது தேச நன்மைக்கும் மனித சமூக நன்மைக்கும் கேடு என்றும் மாய அழுகை அழுது மக்களை ஏய்க்கிறார்கள்.

உண்மையாகவே பார்ப்போமானால் இன்று இந்த ஆரியர் திராவிடர் அல்லது பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற பிரிவினை கூடாதென்றும், அது ஒழிக்கப்பட வேண்டும் என்றும், மனப்பூர்வமாக பாடுபடுபவர்கள் திராவிட மக்கள் என்னும் பார்ப்பனரல்லாதாரேயாகும்.

இந்தப் பிரிவினை இருந்துதான் ஆகவேண்டும் என்று பாடுபடுபவர்கள் ஆரியர் என்னும் பார்ப்பனர்களேயாகும்.

உதாரணம் வேண்டுமானால் சுலபத்தில் பார்த்துக் கொள்ளலாம். அதாவது வருஷந்தோறும் பார்ப்பனர்கள் பிராமண மகாநாடு, சநாதன மகாநாடு, வர்ணாச்சிரம தர்ம மகாநாடு, ஆரியர் தர்ம பரிபாலன மகாநாடு என்பதாகப் பல மகாநாடுகளை ஆங்காங்கு கூட்டுவித்து வேதங்களையும், மனுதர்மம் முதலிய சாஸ்திரங்களையும் காப்பாற்ற வேண்டும் என்றும், மனுதர்ம சாஸ்திரப்படி நடக்கவேண்டும் என்றும், வருணாச்சிரமங்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்றும் தீர்மானங்கள் செய்து வருவதுடன் மடாதிபதிகள் சங்கராச்சாரிகள் குருமார்கள் முதலியவர்களைக் கொண்டு பிரசாரங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.



RangaRakes tamilnavarasam.com

இவை மாத்திரமல்லாமல் இந்த பிரிவினைகளை அதாவது பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரிவினையை காட்டுவதற்கு ஆகவும், காப்பாற்றுவதற்காகவும் கோவில், குளம், சத்திரம், காப்பிக்கடை, ஓட்டல் முதலிய ஜனங்கள் அவசியமாயும் அடிக்கடியும் கூடும்படியாயும் உள்ள இடங்களில் பார்ப்பனர்களுக்கு என்று வேறு இடமும் பார்ப்பனரல்லாதார்க்கு என்று வேறு இடமும் ஒதுக்கப்பட்டு விளம்பர பலகை போட்டு பாதுகாத்து வரப்படுகிறது.

பார்ப்பனரல்லாதார்களோ இதற்கு நேர்விரோதமாக பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரிவு இருக்கக்கூடாதென்றும், அம்மாதிரி வித்தியாசமும் பிரிவும் இருப்பது நாட்டுக்கு மாத்திரம் கெடுதியல்லாமல் மனித சமூகத்தின் சுயமரியாதைக்கே கேடானது என்றும் சொல்லி வருகிறார்கள். பார்ப்பனரல்லாதார் கிளர்ச்சியும், அவர்களது கூட்டத் தீர்மானங்களும் இதை அனுசரித்தே வருகின்றன. இந்தப்படி பார்ப்பனரல்லாதார் செய்து வருவதில் இந்தப் பிரிவு அடியோடு ஒழிய வேண்டும் என்று சொல்லுவதில் குறிப்பாக எந்த எந்த காரியம் எந்த எந்த பழக்க வழக்கம் ஒழியவேண்டும் என்று சொல்லி அவைகளை எடுத்துக் காட்டி வருவதையே நமது பார்ப்பனர்கள் ஆரியர் திராவிடர் என்கின்ற பிரிவினை எது எதில் இருக்கிறது என்று எடுத்துக்காட்டுவதே கூடாது என்றும், அப்படிக் காட்டுவதையே ஆரியர் திராவிடர் என்று பிரிக்கிறதாக ஆகின்றதென்று அதற்கு பெயர் கொடுத்து அதை ஒரு பழியாகச் சொல்லி விஷமப் பிரசாரம் செய்தும் அம் முயற்சியையே அடக்கி ஒழிக்கப்பார்க்கிறார்கள்.

இன்று இத்தென்னாட்டில் ஆரியர் திராவிடர் என்கின்ற பிரச்சினையால் தென்னாட்டு மக்கள் இரண்டு துறையில் துன்பம் அனுபவிப்பதாகக் கருதி அத்துன்பத்தில் இருந்து விடுபடவே ஆரியர்-திராவிடர் அல்லது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஒன்று சமுதாய வாழ்க்கையில் மதம் என்பதை ஆதாரமாய் வைத்து பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார்களை இழிவும் கீழ்மையும் படுத்துதல்.

இரண்டு அரசியல் வாழ்க்கையில் தேசியம் என்பதை ஆதரவாய் வைத்துக்கொண்டு பார்ப்பனர், பார்ப்பனரல்லாத மக்களை அடக்கி ஒடுக்கி ஆதிக்கம் செலுத்துதல்.

இந்த இரண்டு துறையிலும் பார்ப்பனரல்லாத மக்கள் தாழ்த்தப்பட்டு இழிவடைந்திருப்பது மாற்றப்பட்டால் ஒழிய இந்த நாட்டில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரிவு உணர்ச்சியோ அல்லது ஆரியர், திராவிடர் என்கின்ற பிரிவு உணர்ச்சியோ ஒரு நாளும் மாறாது. மாறுவதற்கு அனுமதிப்பதும் ஒரு நாளும் நியாயமாகாது. ஏனெனில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரிவை ஆதியில் உண்டாக்கிக் கொண்டதின் பயனாய் பார்ப்பனர்கள் (ஜன சமூகத்தில் 100-க்கு 3 பேர்களாய் உள்ளவர்கள்)



தங்கள் ''கடவுளுக்கு'' சமமாய் மதிக்கப்படும் படியாய் செய்துகொண்டு உலக வழக்கிலும் சுவாமி என்று தங்களை மற்றவர்கள் அழைக்கும்படியும் செய்து கொண்டு பொருளாதாரத் துறையில் எல்லோருக்கும் மேலாகவே சுகபோகமாயும் இருந்துகொண்டு வருகிறார்கள். மற்ற 100-க்கு 97 மக்களாய் உள்ள பார்ப்பனரல்லாதார் என்பவர்களோ பெரும்பாலும் 100-க்கு 75 பேர்களுக்கு மேலாகவே சமூக வாழ்வில் இழிவான மிருகத்திலும் கடையாயும், பொருளாதாரத் துறையில் சரீரப் பிரயாசைப் படும்படியாகவும் பெரும்பான்மை மக்கள் பட்டினியினால் வாடி உலக சுக போகத்தை நினைக்கவும் அருகதை அற்றவர்களாகவும் செய்யப்பட்டிருக்கும் போது இந்த கொடுமையும் இழிவும் ஒழிக்கப்படாமல் பேத உணர்ச்சியை மாத்திரம் மறந்திருக்கும்படி எப்படித்தான் அனுமதிக்க முடியும் என்பது நமக்கு விளங்கவில்லை.

ஆரியர் திராவிடர் பிரிவு வேண்டாம் என்றும், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பேத உணர்ச்சி வேண்டாம் என்றும் இந்த 10, 20 வருஷகாலமாக பார்ப்பனர்கள் அதாவது சமூக இயலில் பிரதானப்பட்ட பார்ப்பனரும், அரசியலில் புகழும் தலைமையும் பெற்ற பார்ப்பனரும் கூப்பாடு போட்டும் குறைகூறியும் வந்திருக்கிறார்களே ஒழிய ஒரு பார்ப்பனராவது அப்பேத உணர்ச்சிக்கு ஆதாரமான காரியங்களில் ஒரு கடுகளவையாவது ஒழிக்கவோ மறைந்து போகும்படி செய்யவோ முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறார்களா என்று கேட்கின்றோம்.

பார்ப்பனரல்லாதார் கிளர்ச்சியின் பயனாய் - அதுவும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரிவில் கஷ்டமும் இழிவும் அடைந்து வருவதை விளக்கி விளக்கிக்காட்டி கூப்பாடுபோட்டு வந்ததின் பயனாய் ஏதாவது ஒரு சிறிதாவது அப்பேதக்கொடுமையில் இருந்து மீள வகை கண்டிருக்கக்கூடுமே ஒழிய மற்றப்படி எந்த விதத்திலும் வழியில்லாமலே கஷ்டப்பட்டு வருகிறார்கள்.

இன்னமும், இன்றும் பொது ஸ்தாபனங்களில் அதாவது ரயில்வே, கோவில், சத்திரம், குளம் முதலிய இடங்களில் கூட பார்ப்பனர் பார்ப்பனரல்லதார் பிரிவு பார்ப்பனர்களாலேயே ஏற்படுத்தப்பட்டு பார்ப்பனராலேயே காப்பாற்றப்பட்டு வருகிறது. இன்னமும் - நாளையும் பார்ப்பனர்கள் என்பவர்கள் ஆணும் பெண்ணும் பார்ப்பனரல்லாதார்களில் இருந்து பிரித்துக்காட்டும் படியான வேஷத்தையும் வேஷச் சின்னத்தையும் அணிந்து தங்களை பிரித்துக்காட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்த நிலையில் இருந்து கொண்டு இருக்கும் பார்ப்பனர்கள் மற்றவர்களைப் பார்த்து அதுவும் கஷ்டமும் இழிவும் அடைந்து கொண்டிருக்கின்றவர்களைப் பார்த்து பேத உணர்ச்சியை விட்டுவிடுங்கள் என்று சொன்னால் அதில் நாணயமோ யோக்கியமோ இருக்க முடியுமா என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

சமீப காலத்தில் பார்ப்பனர்களால் கூட்டப்பட்ட பல பிராமண மகா நாடுகளிலும், வருணாச்சிரம தர்ம பாதுகாப்பு மகாநாடுகளிலும் செய்யப்பட்ட தீர்மானங்களில் முக்கிய தீர்மானங்கள் என்னவென்று பார்ப்போமானால் முன் குறிப்பிட்டது போல் ''சனாதன தர்மத்தை காப்பாற்ற வேண்டும்'' என்றும் ''வருணாச்சிரம தர்மத்தை காப்பாற்ற வேண்டும்'' என்றும் ''மனுதர்ம சாஸ்திர திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரும்படி ஒவ்வொரு பார்ப்பனரும் நடந்து கொள்ள வேண்டு''மென்றுமே தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

சனாதன தர்மம், வருணாச்சிரம தர்மம், மனுதர்மம் என்றால் என்ன என்பது தெரியாதா என்று கேட்கின்றோம். மனுதர்மம் என்பதை கீழே உபதலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

இந்த மாதிரி நிலையில் பார்ப்பனர்கள் இருந்துகொண்டு ''மத உணர்ச்சி வேண்டாம்'' என்று நமக்கு புத்தி சொல்ல வருவதென்றால் இது ''நான் அப்படித்தான் அடிப்பேன் நீ அழுகக்கூடாது உடலைக்கூட அசைக்கக் கூடாது'' என்பது போன்ற நீதியாக இருக்கிறதா இல்லையா என்று கேட்கின்றோம்.

ஆகவே வரப்போகும் அரசியல் போட்டிகளில் பார்ப்பனரல்லாதார் ஒரு சமயம் தோல்வியடைந்து விட்டாலும்கூட இந்த மேல் கண்ட பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரிவினையை சகல துறைகளிலும் அழிந்து ஒழிந்து போகும்படி செய்ய வேண்டிய வேலைகளையாவது தக்கபடி கவனித்து வந்தால் அரசியல் துறை போட்டியில் வெற்றி ஏற்படுவதின் மூலம் கிடைக்கும் நன்மையைவிட கூடுதலான நன்மை கிடைக்கும் என்றே கருதுகிறோம்.

ஆகையால் பார்ப்பனரல்லாத மக்கள் பார்ப்பனரின் நீலிக் கண்ணீருக்கும், சூழ்ச்சி போதனைக்கும் ஆளாகாமல் எச்சரிக்கையாயிருக்க வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 05.04.1936**



# ஆரியர் – திராவிடர் என்கின்ற பிரிவை எப்படி மறக்க முடியும்?

''மநுதர்ம சாஸ்திரம்'' என்பது நமது மதத்திற்கே ஆதாரமாக கையாண்டு வருவதும், நடைமுறையில் அநுஷ்டிக்கப்பட்டு வருவதும், அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சிவில் கிரிமினல் சட்ட திட்டங்களால் அநுசரிக்கப்பட்டதுமாகும். அதில் உள்ள நீதிகளும், விதிகளும், எந்த விதமான ஒழுங்கு முறையில் முன்னோர்களால் சூழ்ச்சி செய்யப்பட்டு மக்கள் அடிமைப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை யாரும் உணர்ந்து கொள்ளுவது அவசியமாகும். ஆதிதிராவிட சமூகம் முதல், சகல அடிமைப்படுத்தப்பட்ட சமூகத்தார்கள் வரை இந்த மநுதர்மத்தை நீதியாகக் கொண்ட இப்படிப்பட்ட கொடுமையான இந்து மதத்தில் இருப்பதைவிட பிறமதத்தில் சேர்ந்து தங்களுக்கு விடுதலையைத் தேடிக்கொள்வது சரியா? பிசகா? என்பதையும், அல்லது இம்மாதிரியான அநீதியான சட்ட திட்டங்கள் அமைந்துள்ள ''இந்து'' மதத்திலேயே அடிமைப் பட்டாகிலும் வாழ வேண்டுமா என்பதையும் கீழ்வரும் மனுதர்ம விதிகளைப் படித்து முடிவு செய்து கொள்ளும்படி கோருகிறோம்.

1. ''பிராமண குலத்தில் பிறந்தவன் ஆசாரமில்லாதவனாயினும், அவன் நீதி செலுத்தலாம் - சூத்திரன் ஒரு போதும் நீதி செலுத்தலாகாது''. அத்தியாயம் 8, சுலோகம் 20.
2. ''சூத்திரர் நிறைந்த தேசம் எப்பொழுதும் வறுமையுடையதாயிருக்கும்''. அ.8. சு.22.
3. ''சூத்திரனாகவும், மிலேச்சனாகவும், பன்றியாகவும் பிறப்பது தமோகுணத்தின் கதி''. அ.8. சு.22.
4. ''ஸ்திரீகள் புணர்ச்சி விஷயத்திலும், பிராமணரைக் காப்பாற்றும் விஷயத்திலும் பொய் சொன்னால் குற்றமில்லை''. அ.8 சு.112.
5. ''நீதி ஸ்தலங்களில் பிரமாணம் செய்யவேண்டிய பிராமணனை சத்தியமாகச் சொல்லுகிறேன் என்று சொல்லச் செய்ய வேண்டும்; பிரமாணம் செய்ய வேண்டிய சூத்திரனைப் பழுக்கக் காய்ச்சின மழுவை எடுக்கச் சொல்ல வேண்டும்; அல்லது தண்ணீரில் அமிழ்த்த



RangaRakes tamilnavarasam.com

வேண்டும். சூத்திரனுக்கு கை வேகாமலும், தண்ணீரில் அமிழ்த்தியதால் உயிர்போகாமலும் இருந்தால் அவன் சொன்னது சத்தியம் என உணரவேண்டும்''. அ.8. சு.113 - 115.

6. ''சூத்திரன் பிராமணனைத் திட்டினால் அவனது நாக்கையறுக்க வேண்டும்''. அ.3. சு.270.

7. ''சூத்திரன் பிராமணர்களின் பெயர், ஜாதி இவைகளைச் சொல்லித் திட்டினால், 10 அங்குல நீளமுள்ள இரும்புத் தடியைக் காய்ச்சி எரிய எரிய அவன் வாயில் வைக்க வேண்டும்''. அ.8. சு. 271.

8. ''பிராமணனைப் பார்த்து 'நீ இதைச் செய்ய வேண்டும்' என்று சொல்லுகிற சூத்திரன் வாயிலும் காதிலும் எண்ணெயைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்''. அ.8. சு.272.

9. ''சூத்திரன் பிராமணனுடன் ஒரே ஆசனத்திலுட்கார்ந்தால் அவனது இடுப்பில் சூடு போட்டாவது அல்லது ஆசனப் பக்கத்தைச் சிறிது அறுத்தாவது ஊரை விட்டுத் துரத்த வேண்டும்.'' அ.8. சு.281.

10. ''பிராமணனைக் காப்பாற்றும் பொருட்டு பிராமணரல்லாதாரைக் கொன்றவனுக்கு பாவமில்லை.'' அ.8. சு.143.

11. ''சூத்திரன் பிராமணப் பெண்ணைப் புணர்ந்தால் அவனது உயிர் போகும் வரையும் தண்டிக்க வேண்டும்''.

''பிராமணன் கொலைக் குற்றம் செய்தாலும் அவனைக் கொல்லாமலும் எத்தகைய தண்டனைக்கும் ஆளாக்காமலும் பொருளைக் கொடுத்து அனுப்பிவிட வேண்டும்.'' அ.8. சு.380.

12. ''அரசன், சூத்திரனை பிராமணர் முதலிய உயர்ந்த சாதிக்கு பணிவிடை செய்யும்படி கட்டளையிடவேண்டும். சூத்திரன் மறுத்தால் அவனைத் தண்டிக்க வேண்டும்''. அ.8. சு.410.

13. ''பிராமணன் கூலி கொடாமலேயே சூத்திரனிடம் வேலை வாங்கலாம்; ஏனென்றால் பிராமணனுக்குத் தொண்டு செய்யவே கடவுளால் சூத்திரன் படைக்கப்பட்டிருக்கிறான்''. அ.8. சு.413.

14. ''பிராமணன் சந்தேகமின்றி சூத்திரன் தேடிய பொருளைக் கைப்பற்றலாம். ஏனென்றால் அடிமையாகிய சூத்திரன் எவ்விதப் பொருளுக்கும் உடையவனாகமாட்டான்''. அ.8. சு.417.

15. ''சூத்திரன் பொருள் சம்பாதித்தால், அது அவனுடைய எஜமானனாகிய பிராமணனுக்குச் சேரவேண்டுமேயன்றி சம்பாதித்தவனுக்குச் சேராது''. அ.9. சு.416.

16. ''பிராமணனால் சூத்திர ஸ்திரீக்கு பிள்ளை பிறந்தால் அப்பிள்ளைக்கு தந்தை சொத்தில் பங்கில்லை''. அ.8. சு.155.



17. ''பிராமணன் பொருளை அபகரித்த சூத்திரனை சித்திரவதை செய்து கொல்ல வேண்டும். ஆனால் சூத்திரனுடைய பொருளை பிராமணன் தன் இஷ்டப்படி கொள்ளையிடலாம்''. அ. 9. சு. 248.

18. ''பிராமணன் மூடனானாலும் அவனே மேலான தெய்வம்''. அ.9. சு.317.

19. ''பிராமணர்கள் இழி தொழில்களில் ஈடுபட்டிருந்தாலும் பூஜிக்கத்தக்கவர்கள் ஆவார்கள்''. அ.9. சு.313.

20. ''பிராமணனிடமிருந்து க்ஷத்திரியன் உண்டானவனாதலால் அவன் பிராமணனுக்குத் துன்பஞ்செய்தால், அவனை சூன்னியம் செய்து ஒழிக்க வேண்டும்''. அ.9. சு. 319, 320.

21. ''சூத்திரனுக்கு பிராமணப் பணிவிடை ஒன்றே பயன் தருவதாகும். அவன் பிராமணனில்லாத விடத்தில் க்ஷத்திரியனுக்கும், க்ஷத்திரியனில்லா விடத்தில் வைசியனுக்கும் தொண்டு செய்யவேண்டும். அதிகமான செல்வமும், பசுக்களும் வைத்திருக்கிறவன் பிராமணன் கேட்டுக் கொடுக்காவிட்டால் களவு செய்தாவது, பலாத்காரம் செய்தாவது அவற்றை பிராமணன் எடுத்துக்கொள்ள உரிமையுண்டு''. அ. 11. சு.12.

22. ''சூத்திரன் வீட்டிலிருந்து கேளாமலும் யோசிக்காமலும் தேவையான பொருளைப் பிராமணன் பலாத்காரத்தினால் கொள்ளையிடலாம்''. அ.11. சு.13.

23. ''யோக்கியமான அரசன் இவ்விதம் திருடிய பிராமணனைத் தண்டிக்கக் கூடாது'' அ.11. சு.20.

24. ''பெண்களையும், சூத்திரரையும் கொல்லுவது மிகவும் குறைந்த பாவமாகும்''. அ. 11. சு.66.

25. ''ஒரு பிராமணன் தவளையைக் கொன்றால் செய்ய வேண்டிய பிராயச்சித்தம் ஏதோ, அதைத்தான் சூத்திரனைக் கொன்றாலும் செய்ய வேண்டும்''. அ. 11. சு.131.

25. (அ) ''அதுவும் முடியாவிடில் வருண மந்திரத்தை 3 நாள் ஜெபித்தால் போதுமானது''. அ. 11. சு. 132.

26. ''க்ஷத்திரியன் இந்நூலில் (மநுதர்ம சாஸ்திரத்தில்) சொல்லப் பட்டபடி ராஜ்யபாரம் பண்ணுவதே தவமாகும். சூத்திரன் பிராமண பணி விடை செய்வதே தவமாகும்''. அ. 11. சு. 285.

27. ''சூத்திரன் பிராமணனுடைய தொழிலைச் செய்தாலும் சூத்திரனே யாவான்; பிராமணன் சூத்திரனுடைய தொழிலைச் செய்யின் பிராமணனே யாவான். ஏனெனில் கடவுள் அப்படியே நிச்சயம் செய்துவிட்டார்''. அ.11. சு.75.



RangaRakes tamilnavarasam.com

28. ''பிராமணரல்லாதவன் உயர்குலத்தோருடைய தொழிலைச் செய்தால், அரசன் அவனது பொருள் முழுவதையும் பிடுங்கிக் கொண்டு அவனை நாட்டை விட்டுத் துரத்திவிட வேண்டும்''. அ.10. சு.96.

29. ''சூத்திரன் இம்மைக்கும் மோட்சத்திற்கும் பிராமணனையே தொழ வேண்டும்''. அ. 10. சு.96.

30. ''பிராமணன் உண்டு மிகுந்த எச்சில் ஆகாரமும், கெட்டுப்போன தானியமும், சூத்திரனுடைய ஜீவனத்துக்குக் கொடுக்கப்படும்''. அ.10. சு.125.

31. ''சூத்திரன் எவ்வளவு திறமையுடையவனாகயிருந்தாலும் கண்டிப்பாய் பொருள் சேர்க்கக்கூடாது. சூத்திரனைப் பொருள் சேர்க்க விட்டால் அது பிராமணனுக்கு துன்பமாய் முடியும்''. அ. 10. சு.129.

32. ''மனுவால் எந்த வருணத்தானுக்கு இந்த மனுதர்ம சாஸ்திரத்தால் என்ன தர்மம் விதிக்கப்பட்டதோ, அதுவே வேத சம்மதமாகும். ஏனென்றால், அவர் வேதங்களை நன்றாய் உணர்ந்தவர்''. அ. 2 சு.7.

இன்னும் இவை போன்ற ஆயிரக்கணக்கான அநீதியானதும், ஒரு சாராருக்கு நன்மையும் ஒரு சாராருக்குக் கொடுமையும் செய்வதுமான விதிகள் மனுதர்மத்தில் நிறைந்திருக்கின்றன. சுருங்கச் சொல்லுங்கால், ''பிராமணன்'' என்ற வகுப்பாரைத் தவிர, வேறு எந்த வகுப்பாருக்கும் அதில் யாதொரு நன்மையும் இல்லை என்றே கூறலாம். ஆகையால் தோழர்களே! இந்நூலை ''மனுதர்மம்'' என்று கூறுவதா அல்லது ''மனு அதர்மம்'' என்று கூறுவதா? சற்று யோசித்து முடிவு செய்யுங்கள்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 05.04.1936**



# காங்கிரஸ் தலைவர் யோக்கியதை

தோழர் சி. ஆர். ரெட்டி ஜஸ்டிஸ் கட்சியால் விளம்பரம் பெற்றவர்; அதில் தனக்கு உத்தியோகமோ பதவியோ கிடைக்கவில்லை என்று அக் கட்சிக்கு தொல்லை கொடுத்தவர். பிறகு ஜஸ்டிஸ் கட்சியார் ஒரு (ஆந்திரா யூனிவர்சிட்டி வைஸ் சேன்ஸ்லர்) உத்தியோகம் கொடுத்தவுடன் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்தவர். அந்த உத்தியோகத்துக்கு காலாவதி ஆகப்போவதை அறிந்து, மறுபடியும் ஜஸ்டிஸ் கட்சியில் உத்தியோகம் கிடைக்காது என்கின்ற சந்தேகத்தின் மீது அதை தேசாபிமானம் காரணமாக ராஜினாமா கொடுத்து விட்டதாக விளம்பரம் செய்து கொண்டவர்.

காங்கிரஸ் உத்தியோகம் ஏற்கப்போகின்றது என்பதையும், காங்கிரசு எலக்ஷனில் வெற்றி பெறக்கூடும் என்பதையும் உணர்ந்த பிறகு காங்கிரசில் சேர்ந்துகொண்டதாக வேஷம் போட்டுக்கொண்டவர். பிறகு உத்தியோகம் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் வந்த உடன் முன் தேசாபிமானத்தின் காரணமாக ராஜினாமாச் செய்து உதறித்தள்ளி விட்டு விட்டுப்போன உத்தியோகத்தை இப்போது மறுபடியும் ஜஸ்டிஸ் கட்சி உதவியினாலேயே பெற்றுக்கொண்டு காங்கிரசைவிட்டு விட்டவர்.

ஆகவே காங்கிரஸ் பக்தியும் உத்தியோகங்களை ராஜினாமா செய்யும் தேசபக்தியும் காங்கிரஸ் தலைவர்களுக்கு எப்படி இருக்கிறது என்பதை இதிலிருந்தே உணர்ந்துகொள்ளலாம்.

இப்படிப்பட்ட தேச பக்தியையும் காங்கிரஸ் தலைவர்களையும் வெள்ளைக்கார அரசாங்கம் மதிக்கவில்லை என்றால் அது அரசாங்கத்தின் ஆணவமா அல்லது தேசாபிமானத்தின் அயோக்கியத்தனமா என்பதை வாசகர்களே யோசித்து ஒரு முடிவுக்கு வர வேண்டுகிறோம்.

**குடி அரசு - செய்தி விளக்கம் - 05.04.1936**



RangaRakes tamilnavarasam.com

# முத்தைய முதலியாருக்கு பாராட்டு

சென்னை மாகாண தொகுதி நிர்ணயக்கமிட்டித் தலைவராயிருந்த மாஜி மந்திரி தோழர் எஸ்.முத்தைய முதலியாரவர்களுக்கு சென்னை முதலியார் சங்கத்தார் சென்ற மார்ச்சு 29ந் தேதி ஒரு உபசார விருந்து நடத்தினார்கள். அப்பொழுது தோழர் செய்துள்ள தேசத்தொண்டுகளைப் பாராட்டிப் பேசப்பட்டன. முதலியார் மாகாணத் தொகுதி நிர்ணயக்கமிட்டித் தலைவராய் இருந்து செய்த சேவைகளை தென்னாட்டார் நன்கறிவர். ஒரு பிரதிநிதி தொகுதியை மாகாணக்கமிட்டியார் சிபார்சு செய்தனராயினும் ஹாமண்டு கமிட்டியார் பல மெம்பர் தொகுதிகளையே ஆதரித்தனர். எனினும் சென்னைச் சட்டசபை அபிப்பிராயத்தைத் தழுவி ஒரு பிரதிநிதி தொகுதியை பார்லிமெண்டு ஆதரித்து விட்டது. தமிழர் க்ஷேமத்துக்காக தோழர் முதலியார் பல நல்ல காரியங்கள் செய்திருக்கிறார். அவர் மந்திரியாகவிருந்த போது தான் வகுப்புவாரி வீதாசார உத்தியோக உத்தரவு பிறந்தது. பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கு அதனால் ஏற்பட்டிருக்கும் நன்மைகளை நாம் விளக்கிக் கூறத் தேவையில்லை.

குடி அரசு - செய்தி விளக்கம் - 05.04.1936



# இனாம் மசோதாவும் வைஸ்ராயும்

## நிராகரித்த காரணம் என்ன?

## ‘உரிமையைப் பறிமுதல்’ செய்கிறது என்பது ஒன்றே

**- உண்மை விளம்பி**

திருத்துறைப் பூண்டியில் நடந்த தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாட்டில் தோழர் கே.எம். பாலசுப்பிரமணியம் தன்னுடைய சொற்பொழிவில், ஜஸ்டிஸ் கட்சி நிறைவேற்றிய மசோதாவை வைஸ்ராய் அவர்கள் அங்கீகரிக்க மறுத்து நிராகரிக்கக் காரணம், வைஸ்ராய் இம்மசோதாவானது இனாம் தாரர்களின் உரிமைகளை (குடிவார உரிமை) பறிமுதல் செய்து இனாம் குடிகளுக்கு வழங்கும் தன்மையது என்று அபிப்பிராயப்பட்டதேயாகும் என்று கூறினார். இதை எதற்காக எடுத்துரைத்தார் எனின், ஜஸ்டிஸ் கட்சியும் கூடிய அளவு ஏழை மக்களுக்கு, Expro-priation (பறிமுதல்) என்ற முறையை சட்டபூர்வமாகக் கையாண்டு பிழைப்புவழி செய்து வந்துள்ளது என்பதை விளக்கவே. இது பலருக்குப் போதுமான அளவு பொதுவுடமை தத்துவத்தை புரட்சி மூலம் செய்யாத உப்புச்சப்பில்லாச் சட்டமாய்த் தோன்றலாம். ஆனால் இது Expropriatory Character (பறிமுதல் தன்மையை) கொண்டிலது என்று கூறுவது தவறாகும். இதைவிடத் தவறு, வைஸ்ராய் இந்த அபிப்பிராயத்தைக் கொள்ளவில்லை என்று கூறுவது.

அப்படியிருந்தும், அந்த மகாநாட்டில் சட்டம் பயின்ற தோழர் முத்துசாமி வல்லத்தரசு, வைஸ்ராய் தன் அங்கீகாரத்தை மறுத்ததற்குக் காரணம் பறிமுதல் தன்மையை இனாம் மசோதா கொண்டுள்ளது என்பது அல்ல என்று திருப்பித் திருப்பி வாதாடினார். இது விஷயத்தைச் சந்தேகமறத் தெரிய விரும்பும் தோழர்கள் 22-2-36 சனிக்கிழமை வெளிவந்த ‘இந்து’, ‘ஜஸ்டிஸ்’, ‘ மதராஸ் மெயில்’, ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ போன்ற ஆங்கிலப் பத்திரிக்கைகளைப் பார்த்தால் உண்மை விளங்கும். அதில் வைஸ்ராய் அவர்களின் கடிதம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதில் கீழக்கண்ட வாக்கியம் இருப்பதை அனைவரும் காணலாம்.

‘‘ your Excellency ....... I hereby signify to you that my reason for withholding my assent from the Madras Estates Land Act, is that .. ... I have reached the conclusion that the Act is **Expropriatory** in that it involves loss of Kudivaram of land etc ..’’



RangaRakes tamilnavarasam.com

‘‘நான் இந்த இனாம் மசோதாவிற்கு என் சம்மதியைக் கொடுக்க மறுப்பதற்குக் காரணம், இனாம்தாரர்களின் குடிவார உரிமையை இது பறிமுதல் செய்யும் தன்மையது என்ற முடிவிற்கு நான் வந்ததேயாகும்.’’

உண்மை இப்படியிருக்க, தோழர் வல்லத்தரசு எந்தப் பத்திரிகையைப் படித்து இதை மறுத்தாரோ தெரியவில்லை. அபிப்பிராயம் தவறுதலாயினும் அடிப்படையான விஷயங்கள் தவறாகா.

**குடி அரசு - கட்டுரை - 05.04.1936**



# லக்னோவில் ஏமாற்றுந் திருவிழா

**அல்லது**

# காங்கிரசின் கபட நாடகம்

காங்கிரஸ் மகாநாடுகள் என்பவை ஏமாற்றும் திருவிழாக்கள் என்றும், கபட நாடக நடிப்பு என்றும் 10, 12 வருஷ காலமாகவே கூறி வருகின்றோம். அதற்கு ஏற்பவே இன்று லக்னோவில் அவ்வேமாற்றத் திருவிழாவானது நாடக முறையில் நடைபெறுகிறது.

அந் நாடகத்திற்கு மூவர் முக்கியமானவர்களாகத் திகழ்கின்றனர்.

ஒன்று - சூத்திரதார் ஸ்தானத்தில் அமர்த்தப்பட்ட தோழர் காந்தியாராவார்.

இரண்டு - நாடகத்தின் முக்கிய பாத்திரம் ஆகிய தோழர் ஜவஹர்லால் ஆவார்.

மூன்று - அந்நாடகத்தின் கதாசிரியரும் உண்மையான சூத்திர தாருமான தோழர் ராஜகோபாலாச்சாரியாராவர்.

கதாசிரியராய் இருக்கும் தோழர் ராஜகோபாலாச்சாரியார் இந்திய மக்களின் முட்டாள் தனத்தையும், அவர்களது மூடபக்தியையும் சரியானபடி அளவெடுத்து அதற்கேற்றபடி மக்களை ஏமாற்றத்தக்க விதமாக கதை எழுத வல்லவர். அப்படிப்பட்டவரே உண்மை சூத்திரதாராக (டைரக்டராக) இருந்து நாடகம் நடத்தும்போது கதையின் நடிப்பு வெற்றிகரமாய் முடிவதில் யாருக்குத்தான் சந்தேகம் இருக்க முடியும்?

கதையின் முக்கிய நடிகரான தோழர் ஜவஹர்லால் அவர்கள் இன்று டாக்கீஸ் என்னும் சினிமாக்களுக்கும், சினிமா நடிகர்களுக்கும் இருக்கும் விளம்பரத்தை விட அதிக விளம்பரம் கொடுக்கப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறவர். டம்மி சூத்திரதாரான காந்தியாரோ ராஸ்புடீனையும் தோற்கடிக்கக்கூடிய திறமை பெற்றவர். இப்படிப்பட்டவர்கள் கூடி நடத்தும் கபட நாடகத்தில் யார் தான் ஏமாறாமல் இருக்க முடியும்?

ஆனாலும் இந்த மும்மூர்த்திகளுக்கும் காங்கிரசு என்பதற்கும் உள்ள அதாவது இருந்துவரும் சம்பந்தத்தை முதலில் விளக்குவோம்.

தோழர் காந்தியார் காங்கிரசின் நடத்தை தன்னால் சகிக்க முடியவில்லை என்றும், காங்கிரசிலுள்ளவர்களின் நடத்தை பெரிதும் தனக்கு பிடிக்க



RangaRakes tamilnavarasam.com

வில்லை என்றும், காங்கிரசின் நன்மைக்கு ஆகவே காங்கிரசை விட்டு விலகி இருக்க வேண்டியதாக இருக்கிறது என்றும், அந்தப்படி விலகி இருப்பது என்பதுகூட சாதாரணமாய் இல்லாமல் காங்கிரசில் ஒரு நாலு அணா மெம்பராகக்கூட இல்லாமல் விலகி இருக்கப் போவதாகவும் சொல்லிக் கொண்டு விலகிக் கொண்டவர்.

தோழர் ஜவஹர்லால் அவர்களுக்கும் காங்கிரசுக்கும் உள்ள தொடர்பு எப்படிப்பட்டதென்றாலோ, அவர் இன்று தலைமை வகிக்கும் ''இந்திய தேசிய காங்கிரசைப் பற்றியே'' காங்கிரசு முதலாளிமார்களின் அடிமைக் கூட்ட மென்றும், ஏகாதிபத்தியங்களின் ஒற்றர்கள் கூட்டமென்றும் கூறும் வெளிநாட்டு அபேதவாத ஸ்தாபனங்களில் அங்கத்தினரும், ரஷ்ய தேசத்தின் சுதந்திரத்துக்கு டால்ஸ்டாய் எப்படி முட்டுக்கட்டையாய் இருந்தாரோ அது போல் இந்தியாவின் உண்மைச் சுதந்திரத்துக்கு ''மலைபோல் ஒரு எருது படுத்திருக்கிறதே'' என்று சொன்னமாதிரி பெரியதொரு தடையாயும் முட்டுக் கட்டையாயும் காந்தியார் இருந்து வருகிறார் என்று சொல்லும்படியான பொது உடமை ஸ்தாபனங்களின் போர்வையைப் போர்த்திக் கொண்டுமிருப்பவர். மற்றும் இவர் காந்தியாருக்கு எழுதிய கடிதங்களிலும் நேரில் பேசியவைகளிலும், இருவருக்கும் பெரிய விளம்பரம் கிடைக்க சாதனமாய் இருந்த வார்த்தைகளைப் பற்றி எவரும் அறியாததல்ல.

அதாவது ''காங்கிரஸ் இந்திய ஏழை மக்களுக்கும், பாட்டாளி மக்களுக்கும் இதுவரை யாதொரு நன்மையும் செய்யவில்லை.''

''காங்கிரஸ் ஏழை விவசாயிகளையும், ஏழைத்தொழிலாளர்களையும் வஞ்சித்து வந்திருக்கிறது.''

''காங்கிரஸ் பயனற்றதும் முற்போக்குக்குத் தடையானதுமான ஜாதி மதங்களுக்கு ஆக்கமும் பந்தோபஸ்தும் அளித்து வந்திருக்கிறது.''

''இவை மாத்திரமல்லாமல் காங்கிரசானது பூமியுடைய ஜமீன்தாரர் களுக்கும் பணமுடைய முதலாளிகளுக்கும் ஒரு காப்பு ஸ்தாபனமாக இருந்து ஊழியம் புரிந்து வந்திருக்கிறது'' என்றெல்லாம் பட்டவர்த்தனமாய்ச் சொல்லி அதன் மூலமே ஒப்பற்ற வீரர் ஆனவர்.

மற்றப்படி தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களோ, யார் யாரோ ''தடுத்தும் கெஞ்சிக் கேட்டும்'' இணங்காமல் ஒரே கோபமாய் காங்கிரசிலிருந்து அதாவது காங்கிரஸ் வேலைகளில் இருந்து விலகி ஓய்வெடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னவர்.

இம்மூன்று முக்கியஸ்தர்கள் கதி இப்படி இருக்க,

மற்ற உப நடிகர்களில் முக்கியமானவரும் பல பார்ட்டில் சிறந்தவருமான தோழர் சத்தியமூர்த்தியாரைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. அப்படிச்



சொல்வதானாலும் எவ்வளவு குறைவாய்ச் சொல்லலாமோ அதுவே நன்மையாகும். அவருடைய தியாகமும் அவருடைய நாணயமும், அவருடைய ஒழுக்கமும், அவருடைய பேச்சும், அவருடைய உள்நடத்தையும், அவருடைய வெளி நடத்தையும் முதலாகியவைகளில் எதற்குத்தான் வருணனை வேண்டும் என்றோ அதிகப்படுத்திக் கூற இடமிருக்கிறதென்றோ சொல்ல முடியாது. அப்படிப்பட்டவர்தான் இன்று இந்த காங்கிரஸ் கபட நாடகம் என்னும் ஏமாற்றுந் திருவிழாவுக்கு ஒரு இரசமான பாத்திரராய் விளங்குகிறார்.

இதுபோலவே மற்ற அநேக நடிகர்களைப்பற்றி சொல்லவேண்டியது அவ்வளவு அவசியம் என்று தோன்றவில்லை.

இந்த நாடகம் பார்க்க வரும் நாடகப் பிரியர்களோ, அல்லது நாடக அபிமானிகளோ, அல்லது நாடக பக்தர்களோ ஆகிய தேசாபிமானிகள், தேசீயவாதிகள், தேசபக்தர்கள் என்பவர்களின் மேன்மைகளைப் பற்றியும் ஞானங்களைப்பற்றியும் நாம் விவரிக்க வேண்டுமானால் அவர்கள் நம் ஆழ்வராதிகள் நாயன்மார்கள் போன்ற அதாவது பக்தி ஒன்றே மோக்ஷ சாதனம் என்றும், பக்திக்கு ஆக எதையும் செய்யலாம் என்றும் உறுதி கொண்டிருக்கிறவர்களாவார்கள் என்று சொல்லுவதே போதுமானதாகும்.

ஆகவே இப்படிப்பட்ட முக்கிய நடிகர்கள் என்னும் தலைவர்களும், ஆழ்வார்கள் நாயன்மார்கள் போன்ற காங்கிரஸ் பக்தர்களும் பல லட்சக் கணக்கான ரூபாய் செலவில் அடிக்கடி இதுபோலவே கூடி செய்த காரியம் என்ன? செய்யப்போகும் காரியம் என்ன? என்பதுதான் நாம் இப்போது கவனிக்க வேண்டியது என்னும் ஆசையாலேயே இதை எழுதுகிறோம்.

இந்நிலையில் இவர்கள் எல்லாம் இதுவரையில் செய்ததைப் பற்றி விவரிக்க வேண்டியதில்லை என்று கருதுகிறோம். ஏனெனில் அதைப்பற்றி காங்கிரஸ்காரர்களே தங்களால் தேசத்துக்கு இதுவரை எந்த நன்மையும் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லுவதில்லை. ஏதாவது சொல்லுவதானால் ஏதோ ''ஒரு உணர்ச்சியை உண்டாக்கி விட்டு இருக்கிறோம்'' என்று மாத்திரமே சொல்லி விடுகிறார்களே ஒழிய காரியம் எதையும் எடுத்துக் காட்டுவ தில்லை. மற்றபடி வேறு எதைச் சொன்னாலும் அதாவது ஜெயிலுக்குப் போனோம், அடிபட்டோம் என்றெல்லாம் சொன்னால் உடனே அதனால் ஏற்படும் பயன் என்ன? என்றும் அப்படியெல்லாம் செய்ததை இப்பொழுது தப்பிதம் என்று உணர்ந்து அவற்றைக் கைவிட்டு விட்டு ராஜபக்திக்கும், ராஜ சேவைக்கும் பிரமாணம் செய்துவிட்டு போட்டி போட வந்துவிட்டீர்களே என்றும் பொது மக்கள் கேள்வி கேட்பதால் அதைப்பற்றியும் அதாவது தங்கள் ''தியாகத்தைப்'' பற்றியும் பேசாமல் இருக்கிறார்கள். ஆதலால் காங்கிரசு என்ன செய்தது என்ற கேள்வியில் நாம் பிரவேசிக்கவில்லை.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் இப்போது இனி என்ன செய்யப்போகின்றது என்பதை கவனிப்போம். இதை அறிய வேண்டுமானால் இதற்காக அதிகமாய்ச் சிந்தித்துப்பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை என்றே சொல்லுவோம்.

ஏனென்றால் காங்கிரசின் லக்ஷ்யமாக இன்று மூன்றே மூன்று விஷயங்கள் தான் இருக்கின்றன.

அவையாவனஃ-

1. சீர்திருத்தத்தை என்ன செய்வது?

2. வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை என்ன செய்வது?

3. பதவிகளை என்ன செய்வது?

என்பவைகளேயாகும்.

இம்மூன்றைப் பற்றியும் காங்கிரஸ் அபிப்பிராயம் என்ன என்பது பற்றி யாரையும் ஜோசியம் கேட்க வேண்டியதில்லை.

சீர்திருத்தத்தை உடைப்பது என்ற கொள்கை காங்கிரசுக்கு எலக்ஷன் பிரசாரத்துக்கு ஒரு சாதகமாய் இருந்தது என்பது தவிர, மற்றபடி அதை அடியோடு கை விட்டாகி விட்டது எப்படி என்றால் எலக்ஷன் பிரசாரத்தின் போது ''நாங்கள் சீர்திருத்தத்தை உடைத்து சுக்கலாக்கி அழித்து விடுகிறோம்; எங்களுக்கு ஓட்டுக்கொடுங்கள்; எங்களுக்கும் சர்க்காருக்கும் பெரியதொரு யுத்தம் நடக்கப்போகிறது; மற்றபடி உள்நாட்டு விவகாரத்தைப் பற்றி கவனிக்காதீர்கள்'' என்றும் சொல்லி ஓட்டுப் பெற்றார்கள். எலக்ஷன் முடித்து வெற்றி ஏற்பட்ட பிறகு சீர்திருத்தத்தை என்ன செய்வது என்பது அடியோடு கைவிடப்பட்டு விட்டார்கள் என்பதோடு மாத்திரமல்லாமல் ''ஜஸ்டிஸ் கட்சியார் சீர்திருத்தத்தை ஏற்று நடத்தி விடுவார்கள் ஆனதால் அவர்கள் அதிகாரம் கைப்பற்றாதபடி செய்ய நாம் சீர்திருத்தத்தை நடத்திக் கொடுக்க வேண்டும்'' என்கிறார்கள்.

அடுத்த இரண்டாவது விஷயமாகிய வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை அல்லது வகுப்பு தீர்ப்பு என்பது பற்றி காங்கிரஸ் நிலைமை தந்திரத்திலேயே தான் இருந்து வருகிறது.

எப்படி எனில் இப்போது இந்திய அரசியல் என்னும் சீட்டாட்டத்திற்கு முஸ்லீம்களே துருப்பு சீட்டாக இருந்து வருகிறார்கள். அவர்கள் சர்க்காருடன் சேர்ந்தால் சர்க்காருக்கு வெற்றியும், காங்கிரசுடன் சேர்ந்தால் காங்கிரசுக்கு வெற்றியும் என்கின்ற நிலையில் சர்க்காரே அவர்களை ஆக்கி வைத்திருப்பதால் முஸ்லீம்களின் வகுப்பு வாரி பிரதிநிதித்துவ உரிமையில் காங்கிரசு மூச்சுவிட முடியாமல் போய்விட்டது.

அன்றியும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையானது சென்னை மாகாணத்தை பொருத்தவரைதான் பார்ப்பனர்களுக்கு ஆக்ஷேபகரமுடையதாகவும், பார்ப்பன ஆதிக்கத்தை ஆட்டிவிடத்தக்கதாகவும் இருப்பதால் சென்னை மாகாண வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை மாத்திரமே ''அது தேசீயத்துக்கு விரோத'' மென்றும் மற்ற மாகாண வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை ''ஒற்றுமையை உத்தேசித்து அனுமதித்துத் தொலைக்க வேண்டிய'' தென்றும், ''அனுமதிக்காவிட்டாலும் ஆக்ஷேபிக்காமலாவது இருக்க வேண்டும்'' என்றும் சொல்லப்பட்டு விட்டது. அதற்கு ஏற்பவே இந்திய சட்டசபையில் அதைப் பற்றிய பேச்சே இந்த ஒன்றரை வருஷ காலமாக எழவில்லை. ஆகையால் வகுப்புவாரி முறையை ஒழிப்பது என்பதும் கைவிடப்பட்ட காரியமேயாகும். அது மாத்திரமல்லாமல் அதை தடுக்க இனி சுலபத்தில் எவராலும் முடியாது என்பதும் உறுதியான விஷயமாய்விட்டது.

மூன்றாவதான - பதவி ஏற்பதா வேண்டாமா என்கின்ற பிரச்சினையில் காங்கிரசுக்காரர்களுக்குள் சந்தேகம் ஒன்றும் கிடையாது. ஏனெனில் பதவி ஏற்பது என்கின்ற விஷயத்தில் காங்கிரஸ் பதவி ஏற்காவிட்டால் பிற்போக்காளர்கள் (ஜஸ்டிஸ் கட்சியாளர்கள்) பதவி ஏற்று தீமை செய்து விடுவார்கள் என்று சாக்குச் சொல்லி பதவி ஏற்பதாகவே தோழர் ராஜகோபாலாச்சாரியார் முடிவு செய்து கொண்டார். அதற்கு காந்தியாரையும் சரிப்படுத்திக் கொண்டார். ஆனால் அதை பெயரளவுக்கு முடிவு செய்யாமல் மறைவாய் வைத்திருக்க வேண்டிய அவசியமென்ன வென்றாலோ கிடைக்குமா கிடைக்காதா என்பது 100-க்கு 90 பாகம் சந்தேகப்பட வேண்டியதாகவே இருப்பதால்தான்.

ஆதலால் அதை மூடி வைத்து மக்களை ஏமாற்ற வேண்டியதாய் இருக்கிறது. தவிரவும் நம் நாட்டு மக்களின் முட்டாள் தனமானது ஒரு விஷயம் அசாத்தியமானது என்று தெரிந்தாலும் தீவிரமான, தியாகமான, கலகம், அடிதடி, கிளர்ச்சி ஆனதான காரியங்களைச் சொன்னால் தான் பாமர மக்கள் படியும்படியான நிலையில் இருப்பதால் ஓட்டுப் பெறும் வரையில் தீவிர கொள்கைகளைப் பேச வேண்டியது அவசியமாகிவிட்டது.

அதை உத்தேசித்தே மக்களை ஏமாற்ற இது சமயம் சிறிதாவது தீவிரமான கொள்கைகளைத் தேடிப் பிடித்து சொல்ல வேண்டியிருக்கிறது என்றாலும் அதையும் முடிவாய்ச் சொல்லி விட்டால் சென்னை மாகாணத்தில் கஷ்டம் ஏற்படுமாதலால் பதவி ஏற்பது என்பதைச் சென்னை மாகாண காங்கிரசு மகாநாடுகளில் அனுகூலமாக தீர்மானித்துக் கொண்டும் இந்திய காங்கிரசில் மாத்திரம் சந்தேகமாக வைத்துக்கொண்டும் மக்களை ஏமாற்ற வேண்டி இருக்கிறது. ஆகையால் பதவி ஏற்பு விஷயம் இப்போது முடிவு செய்ய வேண்டியதில்லை என்றுதான் காங்கிரசு முடிவு செய்யப்போகிறது.

இதற்காகவே அதிதீவிரவாதி என்று விளம்பரம் பெற்ற தோழர் ஜவகர்லாலை காங்கிரசுக்கு தலைவராக்கி உண்மையாகவே தங்களை அதி தீவிரவாதிகள் என்று நினைத்துக்கொண்டோ, அல்லது அதிதீவிர வாதிகள் என்று சொல்லப்படுவதில் வீரர் ஆகலாம் என்று கருதிக்கொண்டோ இருக்கிற





RangaRakes tamilnavarasam.com

பைத்தியக்காரர்களையும், விளம்பரப் பிரியர்களையும் ஏய்ப்பதற்காகவே அவரை தலைவராக்கி வைத்து இருக்கிறார் நமது ஆச்சாரியார்.

பண்டிதருக்கு தான் புத்தகத்தில் படித்திருக்கும் சில கொள்கையைப் பேசத்தான் தெரியும் என்பதோடு காரியத்தில் காந்தியார் சொல்படி நடப்பதைவிட வேறு வழியும் தெரியாது; கதியும் இல்லை.

ஆகையால் வந்த காசுக்கு வட்டம் இல்லை என்கின்ற முறையில் எட்டின பதவியை பெற்று கிடைத்த விளம்பரத்தை அடைந்து விடுவதோடு அவர் காரியம் முடியப்போகிறது.

ஆகவே இந்தக் காரியங்களால் - இந்த ஏமாற்றும் திருவிழாக்களால் - கபட நாடகங்களால் இந்திய நாட்டுக்கோ, அல்லது இந்தியாவின் 100-க்கு 75 பாகமாகிய ஏழைப் பாட்டாளி மக்களுக்கோ ஏற்படும் லாபம் என்ன என்பதுதான் யோசிக்கத்தக்கதாகும்.

அதிதீவிரக் கொள்கைகளைப்பற்றி பேசுவது நாகரீகமாய் போய்விட்டது. காரியத்தில் காங்கிரசில் உள்ள சமதர்மக்காரர்கள் என்ன செய்தார்கள், அல்லது என்ன செய்கிறார்கள் என்றாவது எவரும் கவனிப்பதில்லை.

காங்கிரஸ் சமதர்மக்காரர்கள் இன்று காங்கிரசிலிருக்கும் கராச்சி தீர்மானத்தை அறியாதவர்கள் என்றாவது சொல்லிவிட முடியுமா என்று பார்த்தால் எல்லாம் தெரிந்தேதான் காங்கிரசின் பெயரைச் சொல்லிக்கொண்டு காங்கிரசின் நிழலில் இருக்கிறார்கள்.

காங்கிரசின் நிழலில் இருக்கும் இப்படிப்பட்ட சமதர்மக்காரர்கள் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிப்பவர்களைப் பரிகாசம் செய்கிறார்கள் என்றால் அவர்களது சமதர்ம ஞானம் எவ்வளவு என்பதற்கு அது ஒன்றே அளவு கருவி என்னலாம்.

ஜஸ்டிஸ் கட்சியார் வேறு ஒன்றும் செய்யவில்லையானாலும் சமூக வாழ்வில் சமதர்ம சட்டம் இயற்றியுள்ளார்கள். மத இயலிலும் கோவில் சட்டம், சீர்திருத்தச் சம்மந்தமான சட்டம் இயற்றியுள்ளார்கள். பொருளாதாரத் துறையிலும் ஒரு அளவுக்காவது பறிமுதல் சட்டம் இயற்றினார்கள். இவற்றால் பெரியதொரு லாபம் இல்லை என்றாலும் இக் கொள்கைகள் ஜஸ்டிஸ் கட்சியாரால் ஒப்புக்கொள்ளப்பட்டு ஆதரிக்கவும் படுகிறது என்பதாகவாவது ஆகிவிடவில்லையா என்பதே நமது பிரச்சினை. இவைகளை யெல்லாம் மதிக்காவிட்டாலும்கூட காங்கிரசை விட எந்த வகையில் ஜஸ்டிஸ்கட்சி மோசம் என்று சொல்லிவிட முடியும் என்பது நமக்கு விளங்கவில்லை.

காங்கிரஸ்காரர்கள் தேர்தலுக்கு நிற்பதில்லையா? தேர்தலில் வெற்றிபெற்று விட்டால் மந்திரி பதவிகள் வகிக்க சம்மதிக்கமாட்டார்களா? மந்திரி பதவி கிடைத்தால் சம்பளம் பெறமாட்டார்களா? அப் பதவிகளில் அதிகாரம் இருந்தால் தங்கள் வகுப்பாருக்கும் அல்லது கட்சியாருக்கும் உத்தியோகம் பங்கிட மாட்டார்களா என்பவைகளைக் கவனித்தால் இரு கட்சிக்கும் என்ன வித்தியாசம் சொல்லக்கூடும் என்பது விளங்கவில்லை.

ஆகவே காங்கிரஸ் என்பதும் இன்று லக்னோவில் கூடும் கூட்டமும் ஏமாற்றுந் திருவிழா அல்லது கபட நாடகம் என்பதல்லாமல் வேறு இல்லை என்பதும் அதன் முக்கியஸ்தர்களான தோழர்கள் காந்தியார், ஆச்சாரியார், பண்டிதர் ஆகிய மூவர்களும் இந்த ஏமாற்றுந் திருவிழாவான நாடகத்துக்கு கதை ஆசிரியர் சூத்திரதார், முக்கிய பாத்திரம் ஆகியவை ஆனவர்களே தவிர வேறில்லை என்பதுமே நமதபிப்பிராயம்.

இதை ஆக்ஷேபிக்கிறவர்கள் ‘‘நீ மாத்திரம் யோக்கியமாய் வாழ்கின்றாயா?’’ என்று நம்மை கேள்வி கேட்டு விடுவதன் மூலம் திருப்தி அடையாமல் நாம் மேலே எழுதியவற்றில் எது பிசகு? எந்த வாக்கியம் ஆதாரம் இல்லாமல் எழுதப்பட்டது? என்பதை நடுநிலையில் இருந்து பார்த்து முடிவு செய்து கொள்ளும்படி வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 12.04.1936**


RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ்காரர் யோக்கியதை

வரப்போகும் அரசியலை நிராகரிப்பதாகக் கூறிக்கொண்ட காங்கிரஸ்காரர்கள், சீர்திருத்த சம்பந்தமான எத்தகைய வேலையிலும் பங்கு கொள்வதில்லையென்று முடிவுசெய்திருந்தார்கள். மாகாண தொகுதி நிர்ணயக் கமிட்டிகளிலும் அவர்கள் ஸ்தானம் வகிக்கவில்லை. சென்னை மாகாணத் தொகுதி நிர்ணயக்கமிட்டியில் தோழர் ஸி.ஆர். ரெட்டியாருக்கு சென்னை சர்க்கார் வெகு கண்யமாக ஸ்தானம் வழங்கியபோது, சீர்திருத்த சம்பந்தமான வேலைகளில் பங்கு கொள்வதில்லையென்று காங்கிரஸ் தீர்மானித்திருப்பதினால் மாகாணக் கமிட்டியில் ஸ்தானம் வகிக்க முடியா தென்று காரணம் கூறி, தமக்களித்த பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார்.

இப்பொழுது ஹாமண்டு அறிக்கை விஷயமாக காங்கிரஸ்வாலாக்கள் சர்க்காரோடு ஒத்துழைத்திருக்கிறார்கள். ஹாமண்டு அறிக்கையைப் பரிசீலனை செய்த கமிட்டியில் அசம்பிளி காங்கிரஸ் மெம்பர்கள் அங்கம் வகித்தார்கள். அந்தக் கமிட்டி அறிக்கையை அசம்பிளி ஆதரிக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தவரும் காங்கிரஸ் மெம்பரான தோழர் பந்துவே. இம்மாதிரி முன்னுக்குபின் முரணாக நடந்துகொள்ளும் காங்கிரஸ்காரருக்கு எள்ளத்தனையாவது நாணயமோ யோக்கியப் பொறுப்போ இருக்க முடியுமா? என்று கேட்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம்** - 12.04.1936



# பகுத்தறிவும் கடவுள் வாக்கும்

**வினா:-** மதம் என்றால் என்ன?

**விடை:-** உண்மையில் நம்பிக்கை.

**வினா:-** உண்மை என்றால் என்ன?

**விடை:-** ஏதேனும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிய பரிபூரணமான ஞானமே உண்மை.

**வினா:-** உண்மையில் நம்பிக்கை என்றால் என்ன?

**விடை:-** அப்பேர்ப்பட்ட பூரண ஞானம் வாழ்க்கையின் உயரிய லக்ஷ்யத்தைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானது என்ற நம்பிக்கையே உண்மையில் நம்பிக்கை எனப்படும்.

**வினா:-** உண்மையில் உள்ள நம்பிக்கையை எப்படி நிரூபித்துக் காட்டுவது?

**விடை:-** தன் உயர்வான - தெளிந்த - அறிவுக்குப் பொருத்தமாக நடப்பதினால் நிரூபித்துக் காட்டலாம்.

**வினா:-** உண்மை அல்லது பரிபூரண ஞானத்தை எப்படி அடைவது?

**விடை:-** அநுபவத்தினாலும், பயிற்சியினாலும் அடையலாம்.

**வினா:-** வேறு வழியில்லையா?

**விடை:-** இல்லை.

**வினா:-** மதத்தைப்பற்றி நீ கூறிய வியாக்கியானம் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட வியாக்கியானம் தானா?

**விடை:-** தெய்வ நம்பிக்கையும் தெய்வ அருளைப் பெற்ற மதாசிரியர்கள் வகுத்த விதிகளில் நம்பிக்கையுமே பொதுவாக மதம் என மதிக்கப்படுகிறது.

**வினா:-** தெய்வீகம் என்றால் என்ன?

**விடை:-** தெளிவாய் அறியப்பட்ட இயற்கை விதிகளுக்குப் புறம் பானவைகளெல்லாம் தெய்வீகமானவைகளே.

**வினா:-** அத்தகைய விஷயங்களில் நாம் கைக்கொள்ள வேண்டிய நிலை என்ன?



RangaRakes tamilnavarasam.com

**விடை:-** அவைகளை நாம் எதிர்க்கக்கூடாது. அவைகளைப் பற்றி தாராளமாக விவாதிக்க இடம் கொடுக்க வேண்டும்.

**வினா:-** இதர வழிகளில் அறிந்துகொள்ள முடியாத பல விஷயங்களை கடவுள் வாக்கான வேதங்கள் நமக்கு விளக்கிக் கூறவில்லையா?

**விடை:-** எத்தனையோ வேதங்கள் இருக்கின்றன. எனவே எந்த வேதம் உண்மையான கடவுள் வாக்கு என்பதை நாம் முதலில் நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும்.

**வினா:-** வேதங்களில் சிலவற்றைக் கூறுக.

**விடை:-** ஜொராஸ்டிரிய வேதம், பிராம்மண வேதம், பௌத்த வேதம், யூத வேதம், கிறிஸ்தவ வேதம், முகமதிய வேதம், மார்மண் வேதம்.

**வினா:-** இந்த வேதங்கள் எல்லாம் தெய்வ வாக்கென உரிமை பாராட்டுகின்றனவா?

**விடை:-** ஆம்.

**வினா:-** அந்த வேதங்கள் பரஸ்பரம் ஒன்றையொன்று கண்யம் செய்கின்றனவா?

**விடை:-** இல்லை. மாறாக ஒவ்வொன்றும் மற்றவை பொய்யென்று கண்டிக்கின்றன.

**வினா:-** அதை விளக்குக.

**விடை:-** "எனக்கு நிகராக உலகத்திலோ, சுவர்க்கத்திலோ யாருமில்லை. நானே பூரண ஞானம் பெற்ற புத்தன்" என்று புத்தர் கூறியிருக்கிறாராம்.

**வினா:-** வேறொரு உதாரணம் கூறுக?

**விடை:-** "நானே உண்மையான வழிகாட்டி; எனக்கு முன் வந்தவர்கள் எல்லாம் பொய்யர்கள், திருடர்கள், என்னையன்றி வேறு ஒருவருக்கும் என் பிதாவை அணுக முடியாது" என்று இயேசு கூறியிருக்கிறாராம்.

**வினா:-** இதை விட முக்கியமாக மதிக்கக்கூடிய ருசு வேறு ஏதாவதுண்டா?

**விடை:-** ஒவ்வொரு மதஸ்தரும் பிற மதஸ்தரை தம் மதத்துக்கு இழுக்க முயல்கிறார்கள்.

**வினா:-** மதமாற்றம் என்றால் என்ன?

**விடை:-** நாம் நம்புவது போல் பிறரும் நம்பும்படி செய்வதே மதமாற்றம்.

**வினா:-** அதன் நோக்கம் என்ன?



**விடை:-** நோக்கம் பலவாக இருக்கலாம். எனினும் அவற்றுள் முக்கியமானது நம்மைப் போல் மற்றவர்கள் நம்பாவிட்டால் நரக தண்டனை பெறுவார்கள் என்பதே.

**வினா:-** மேலே கூறப்பட்ட வேதங்களில் எது உண்மையானது?

**விடை:-** ஒன்றாவது முழுதும் மெய்யானதோ பொய்யானதோ அல்ல.

**வினா:-** அவற்றுள் எது பொய், எது மெய் என்று எவ்வாறு அறிவது?

**விடை:-** பகுத்தறிவினால் அறிந்து கொள்ளலாம்.

**வினா:-** அப்படியானால் வேதங்களை விடப் பகுத்தறிவு மேலானது என்று ஏற்படாதா?

**விடை:-** ஆம். ஏற்படத் தான் செய்யும்.

**வினா:-** அவ்வளவு உயர்வான பகுத்தறிவு நம்மிடம் இருக்கையில், மேலும் நமக்கு மதங்களும் வேதங்களும் வேண்டுமா?

**விடை:-** நமக்கு வேண்டாம். பகுத்தறிவுக்குப் பொருத்தமான வேதங்களைத்தான் ஒப்புக்கொள்ள முடியும்.

**வினா:-** ஒரு புஸ்தகத்தில் கடவுள் வார்த்தை அடங்கியிருப்பதாக நீ நம்பினால் அது பகுத்தறிவுக்குப் பொருத்தமாக இருந்தாலும் இல்லா விட்டாலும் நீ அதைப் பூரணமாக நம்ப வேண்டியது தானே?

**விடை:-** நம்பத் தேவை இல்லை.

**வினா:-** அது எப்படி?

**விடை:-** நான் குருட்டுத்தனமாக நம்பினால் அந்த நம்பிக்கைக்கு மதிப்பேயில்லை. கட்டாயத்தின் பேரில் நம்பினால் அது மனப்பூர்வமான நம்பிக்கையுமல்ல. பகுத்தறிவால் தூண்டப்பட்டு நான் நம்பினால் என் நம்பிக்கைக்குப் பாத்திரமானது என் பகுத்தறிவேயன்றி வேதமல்ல.

**வினா:-** இதற்கு ஒரு உதாரணம் கூறுக.

**விடை:-** பூமி பரப்பானது என்று எந்த வேதம் கூறினாலும் நாம் நம்பமாட்டோம். ஏனெனில் நமது அநுபவத்திலும் ஆராய்ச்சியிலும் பூமி பரப்பாக இருக்கவில்லை.

**வினா:-** பகுத்தறிவுப்படி தப்பானதையும் நம்ப வேண்டுமென்று வேதம் கட்டளையிட்டால் நீ கடவுள் வாக்கான வேதத்துக்குக் கீழ்ப்படிவாயா? பகுத்தறிவுக்குக் கீழ்ப்படிவாயா?

**விடை:-** பகுத்தறிவுக்கொத்தபடி நான் நடந்துகொள்ளாவிட்டால் நான் ஒழுக்கமுடையவன் ஆகமாட்டேன்.

**வினா:-** பகுத்தறிவு பொய் என்று கூறுவதை மெய் என்று நம்புவது சாத்தியமில்லையா?



RangaRakes tamilnavarasam.com

**விடை:-** சாத்தியமே அல்ல. பகுத்தறிவே மேலான ஆதாரம்; அதிகாரி. மெய்யானதை மெய்யென்று நம்பும்படி பகுத்தறிவைக் கட்டாயப்படுத்த யாருக்குமே அதிகாரமில்லை.

**வினா:-** பகுத்தறிவுக்கு முரணான விஷயங்களை எந்த வேதமாவது போதனை செய்கிறதா?

**விடை:-** ஆம். எல்லா வேதங்களும் போதனை செய்கின்றன.

**வினா:-** உதாரணம் கூறுக.

**விடை:-** படைப்புக் கதை.

**வினா:-** வேறொரு உதாரணம்.

**விடை:-** பிரளயக் கதை.

**வினா:-** மேலும் ஒரு உதாரணம்,

**விடை:-** மனிதன் சபிக்கப்பட்டு பாபியான கதை.

**வினா:-** அவைகளைப்பற்றி தற்காலத்திய அபிப்பிராயம் என்ன?

**விடை:-** வேதங்கள் கூறுகிறபடி மனிதன் சாபத்துக்கு உள்ளாக வில்லை; பிரளயம் உண்டாகவில்லை; கடவுள் பிரபஞ்சத்தைப் படைக்க வில்லை என இப்பொழுது நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது.

**வினா:-** வேதங்களில் உள்ள வேறு தப்புக்கள் எவை.

**விடை:-** சரித்திரப்படியும், விஞ்ஞான சாஸ்திரப்படியும் தப்பான பல விஷயங்கள் வேதங்களில் அடங்கியிருக்கின்றன. வேதங்களில் கூறப்பட்டவைகள் எல்லாம் பரஸ்பர முரணாக இருக்கின்றன. பாபகரமான பல விஷயங்களையும் வேதங்கள் போதனை செய்கின்றன.

**வினா:-** வேதங்களில் காணப்படும் இத்தகைய தப்புகளுக்குக் காரணம் என்ன?

**விடை:-** மனிதன் தப்புச் செய்யக்கூடியவன் தானே!

**வினா:-** அப்படியானால் வேதங்கள் எல்லாம் மனிதன் வகுத்தது தானா?

**விடை:-** வேதங்கள் மக்களின் அறிவும், அறியாமையும், நற்குணமும், துர்க்குணங்களும் அடங்கிய ஒரு நூலேயன்றி வேறல்ல.

**வினா:-** அப்படியானால் நாம் செய்ய வேண்டியது என்ன?

**விடை:-** நம்மிடமுள்ள ஒளி வழிகாட்டுகிறபடி நடக்க வேண்டும்.

**வினா:-** அது என்ன ஒளி?

**விடை:-** அதுதான் பகுத்தறிவு.



**வினா:-** பகுத்தறிவு நம்மை தப்பு வழியில் செலுத்தாதா?

**விடை:-** ஆம். செலுத்தக்கூடும்.

**வினா:-** அப்படியானால் அதை ஏன் நாம் பின்பற்ற வேண்டும்.

**விடை:-** ஏனெனில் அதைவிடச் சிறந்த வழிகாட்டி நமக்கு வேறில்லை.

**வினா:-** வேதங்களுக்கு ஜனங்கள் அதிக மதிப்புக் கொடுக்கக் காரணம் என்ன?

**விடை:-** வேதங்கள் இல்லையானால் ஒழுக்கங் கெட்டுவிடும் என்ற பயமே அதற்குக் காரணம்.

**வினா:-** அத்தகைய பயத்துக்கு ஏதாவது ஆதாரமுண்டா?

**விடை:-** இல்லவே இல்லை. வேதங்களின் பெயரால் எவ்வளவோ பயங்கர குற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மாறாக வேதங்களையே நம்பாத அநேகர் உத்தமர்களாக இருந்திருக்கிறார்கள்.

**வினா:-** எப்பொழுதாவது கடவுள் பிரத்தியட்சமாகி வேதத்தை அருளியதுண்டா?

**விடை:-** இல்லை. சுமார் 5000 வருஷங்களுக்கு முன் கடவுள் வேதத்தை அருளியதாகவே நம்பப்படுகிறது.

**வினா:-** அதற்கு முன் உலகத்தில் ஒழுக்கம் இருந்ததில்லையா?

**விடை:-** நிச்சயமாக ஒழுக்கம் இருந்தே வந்தது. அதற்குமுன் மக்களும் சமூகங்களும் தேசங்களும் இருந்தே வந்திருக்கின்றன.

**வினா:-** உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்தாருக்கும் கடவுள் தனித்தனி வேதம் அருளினானா?

**விடை:-** இல்லை. யூதர்களுக்கு மட்டும் கடவுள் வேதம் அருளியதாகவே பொதுவாக நம்பப்படுகிறது.

**வினா:-** அப்படியானால் உலக மக்களில் யூதர்கள் மட்டுந்தானா ஒழுக்கமுடையவர்கள்.

**விடை:-** இல்லவே இல்லை. கடவுள் மூலம் வேதம் பெறாத கிரேக்கர் பண்டுமிக்க நாகரீகம் உடையவர்களாக யிருந்திருக்கிறார்கள்.

**வினா:-** அதனால் விளங்குவது என்ன?

**விடை:-** வேதத்துக்கும் ஒழுக்கத்துக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை யென்பது அதனால் விளங்குகிறது.

**வினா:-** வேதங்களில்லையானால் ஒழுக்கம் கெட்டுவிடும் என்று போதிப்பதினால் நன்மை ஏற்படுமா?



RangaRakes tamilnavarasam.com

**விடை:-** ஏற்படாது. முதலில் வேதங்கள் இல்லையானால் ஒழுக்கம் கெடாது. இரண்டாவது வேதங்களில் ஜனங்களுக்கு நம்பிக்கை இல்லாமலாகி விட்டால் ஒழுக்கத்திலும் நம்பிக்கை இல்லாமலாகிவிடும்.

**வினா:-** மெய்யான விஷயங்களில் நம்பிக்கையை வலுப்படுத்துவது எப்படி?

**விடை:-** பிரதி பலனை எதிர்பாராமல் நன்மையானதைச் செய்வதி னாலும், விரும்புவதினாலும் வலுப்படுத்தலாம்.

**வினா:-** நல்லொழுக்கத்திற்கு வேறு தூண்டுதல்கள் எவை?

**விடை:-** முக்கியமான தூண்டுதல் சுயமதிப்பில் விருப்பம்; இரண்டாவது பிறநல விருப்பம்; மூன்றாவது கடமை உணர்ச்சி.

**வினா:-** கடமையைச் சரிவரச் செய்வது எப்பொழுதும் இன்பகரமாக இருக்குமா?

**விடை:-** கடமை ஒரு சோதனை என்றும், உத்தமர்களாக இருக்க வேண்டுமானால் நம்மையே நாம் தியாகம் செய்துவிட வேண்டும் என பழைய மதங்கள் போதனை செய்கின்றன.

**வினா:-** அத்தகைய மதபோதனையினால் விளையும் பயன் என்ன?

**விடை:-** அதனால் உத்தம வாழ்க்கை நடத்த ஜனங்கள் பயப்படு கிறார்கள். உத்தம வாழ்க்கையைப்பற்றி எண்ணும் போதும் பயமும் மனச் சோர்வுமே அவர்களுக்கு உண்டாகிறது.

**வினா:-** அவ்வளவுதானா?

**விடை:-** துஷ்டர்களுக்குத்தான் இந்த உலகத்தில் சந்தோஷமாக இருக்க முடியும் என்ற நம்பிக்கையும் பாமர மக்களுக்கு உண்டாகிறது.

**வினா:-** கடமை என்பதற்கு சரியான பொருள் என்ன?

**விடை:-** கடமை என்பது ஒரு சோதனை அல்ல. தியாகமுமல்ல. கடமை என்பது ஒற்றுமை, அழகு, மகிழ்ச்சி, சரீர மானச விதிகளை நாம் மீறும் போதுதான் நாம் ஆத்ம தியாகம் செய்து சோதனைக்கு உள்ளாகிறோம்.

**குடி அரசு - வினா விடை** - 19.04.1936



# காங்கிரஸ் கபட நாடக முடிவு

சென்ற வாரம் காங்கிரஸ் கூட்டம் என்பது ஏமாற்றுந் திருவிழா என்றும், அதன் நடவடிக்கைகள் கபட நாடகம் என்றும், அதற்கு முக்கிய பாத்திரங்கள் தோழர்கள் காந்தி, ராஜகோபாலாச்சாரி, ஜவஹர்லால் நேரு ஆகிய மூவர்கள் என்றும் விளக்கிவிட்டு அதன் பயன் இன்னதாகத்தான் இருக்கும் என்றும் எடுத்துக்காட்டியிருந்தோம்.

இப்பொழுது அவ்வேமாற்றுந் திருவிழா முடிவடைந்த பிறகு நாம் எழுதியது எவ்வளவு சரி என்பதும், கட்டுப்பாடாக பாமரமக்கள் எப்படி ஏய்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் நன்றாய் விளங்கும்.

தோழர் காந்தியார் பெயரளவில் அங்கு வந்து இருந்து கொண்டு, காரிய அளவில் தோழர் ராஜகோபாலாச்சாரியார் இஷ்டப்படியே எல்லாக் காரியங்களும் நடைபெற, ஆயுத அளவில் தோழர் ஜவஹர்லால் உதவியாயிருந்து காரியங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

இந்தக் காங்கிரசில் மூன்று விஷயங்கள் முக்கிய லக்ஷிய விஷயங்களாக பிரஸ்தாபிக்கப்படும் என்றும், அவை இன்ன கதிதான் அடையும் என்றும் சென்ற வாரமே பிரஸ்தாபித்திருந்தோம்.

அதாவது,

1. சீர்திருத்தத்தை என்ன செய்வது?
2. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை என்ன செய்வது?
3. மந்திரி பதவிகளை என்ன செய்வது?

மூன்று விஷயங்களிலும் தலைவர் ஜவஹர்லால் அவர்கள் மிக்க வீரமாகவும் தீரமாகவும் வாயில் மாத்திரம் பேசி இருக்கிறாரே ஒழிய காரியத்தில் அதற்கு நேர்மாறாக நடப்பதற்கே துணைபுரிந்து அந்தப்படியே காரியம் நிறைவேறுவதற்கும் ஏற்றபடி காரியக் கமிட்டியை நியமித்துக் கொண்டார்.

இதிலுள்ள தந்திரம் என்னவென்றால் ஜவஹர்லால் நேரு ஒரு சமதர்ம வீரர் என்ற பெயருக்கு பாதகமில்லாமலும், காங்கிரஸ் பணக்காரர்களுடையவும் பார்ப்பனர்களுடையவும் கையாயுதம் என்பதற்கு விரோதமில்லாமலும் நடந்து கொண்டதேயாகும்.

வகுப்பு தீர்ப்பை காங்கிரஸ் வார்த்தை அளவில் வெறுத்துத் தள்ளி விட்டு அது ஒழிவதற்கு வேலை செய்வதா இல்லையா என்பதை வழ வழ வென்றே பேசி வழ வழப்பாகவே விடப்பட்டு விட்டது.



RangaRakes tamilnavarasam.com

அதைப்பற்றி எவ்வித தீர்மானமும் செய்வதற்கு தைரியமில்லாமல் கோழைத்தனமாகவும், சூழ்ச்சித்தனமாகவும் விடப்பட்டு இருக்கிறது.

ஆனால் அதைப்பற்றி தலைமை உரையில் பேசும்போது பண்டிதர் சில உண்மையை மறைக்க முடியாமல் பேசியிருப்பதற்கு பாராட்டுகிறோம். அதென்னவென்றால்,

''இப்போதைய நிலைமையில் நமது ராஜீய வாழ்வில் நடுத்தர வகுப்பினரின் செல்வாக்கு அதிகமாக இருக்கும் வரையில் வகுப்பு வாதத்தை ஒழித்துவிட முடியாது'' என்று பேசியிருக்கிறார். அதோடு

''வகுப்பு தீர்ப்பு ஒழிய வேண்டியதுதான்; ஆனால் இப்போது வகுப்புத் தீர்ப்பு ஒழிய வேண்டுமென்று பேசி அதை ஒழிக்க முயற்சிப்பவர்களால் வகுப்புத் தீர்ப்பு ஒரு நாளும் ஒழியாது. அதற்கு பதிலாக அவர்களது முயற்சிகள் வகுப்புத் தீர்ப்பை நிரந்தரமாக இருக்கும்படிதான் செய்யும்''

''இந்த வகுப்பு பிரச்சினை ஒழிய காங்கிரஸ் செய்து வந்த முயற்சிகளை நான் ஏற்றுக்கொள்ள முடியாது''

''வகுப்பு பிரதிநிதித்துவம் ஒழிய வேண்டுமானால் சம்மந்தப்பட்ட வகுப்புகளின் பயத்தையும் சந்தேகத்தையும் ஒழிக்க வேண்டும். மெஜாரிட்டி வகுப்பாருக்கு தாராள புத்தி வேண்டும்'' என்று பேசியிருக்கிறார்.

ஆகவே வகுப்பு வாதத்துக்கு யார் காரணஸ்தர்கள் என்பதும், வகுப்புவாதம் ஒழியாமல் இருக்கும்படி யார் முட்டுக்கட்டை போடுகிறார்கள் என்பதும் இதிலிருந்து உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும்.

மற்றும் அவர் மத்திய வகுப்பார் என்று குறிப்பிட்டிருப்பது நமது பார்ப்பன ஆதிக்கத்தையே குறிப்பிடுவதாகவும் இருந்து வருகிறது. அதாவது ராஜீய வாழ்வில் அதிக செல்வாக்கு பெற்று இருப்பவர்களையே நடுத்தர வகுப்பார் என்றும், இவர்கள் ''பதவி உத்தியோகம் செல்வாக்கு ஆகியவற்றிற்காகவே உயிர் வாழ்பவர்கள்'' என்றும் பேசியிருக்கிறார்.

ஆதலால் வகுப்பு வாதம் சுலபத்தில் அடங்கக்கூடியதல்ல என்பதோடு அதற்குக் காரணமும் காங்கிரசாகவே இருக்கிறது என்பதைக் காட்டிவிட்டு அது ஒழிவதற்கு எந்த உபாயமும் சொல்லாமல் ஒரு இடத்தில் அவர்களோடு ஒத்து உழைக்க வேண்டுமென்றும், மற்றொரு இடத்தில் அவர்களோடு ஒத்து உழைக்கக்கூடா தென்றும் குழப்பத்துடனும், வழ வழப்புடனும் பேசி இருக்கிறார்.

இவர் பேச்சுத்தான் இப்படி இருக்கிறது என்றாலும் அது சம்பந்தமான காங்கிரஸ் தீர்மானமும் ஏதும் இல்லாமலும் மூடு மந்திரமாக - சூழ்ச்சியாக விட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த சூழ்ச்சியானது முஸ்லீம்களை ஏமாற்றி கைக்குள் போட்டுக் கொள்ளவும் பார்ப்பனரல்லாதாரை தோற்கடிக்கவுமே பயன்படுத்தப் போகிறது.



இனி அடுத்தப்படியாக அரசியல் சீர்திருத்தத்தை என்ன செய்வது என்பது. இது விஷயத்தில் தலைவர் பேச்சு மாத்திரம் வெகு வீர சூரத்தனம் பொருந்தியது தான்.

அதாவது ''சீர்திருத்தம் நமது சுயமரியாதைக்கு ஏற்றதல்ல, அது மிகவும் பிற்போக்கானது, அது அடிமை சாசனமாகும்'' என்று சொல்லி இருக்கிறார். அதோடு அரசியலை நிராகரிக்க வேண்டும் என்றும் தீர்மான அளவில் காரியம் செய்திருக்கிறார். ஆனால் காரிய அளவில் அது என்ன செய்யப்பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டியது முக்கிய கடமையாகும்.

காரியத்தில் இது என்ன கதி அடையும் என்பது சட்டசபையைப் பற்றியும், மந்திரி சபையைப்பற்றியும் செய்யும் தீர்மானத்தில் தான் அடங்கி இருக்கிறது.

சட்டசபை பிரவேசத்தை காங்கிரஸ் ஆதரித்துவிட்டது. ஜவஹர்லால் அவர்களும் அதை ஒப்புக்கொண்டுவிட்டார். சட்ட சபைகளை கைப்பற்ற வேண்டும் என்று காங்கிரஸில் தீர்மானமும் ஆகிவிட்டது.

ரயில் வண்டியில் உட்கார்ந்து கொண்டு ரயில்வண்டியை பஹிஷ்கரிப்பது போல் சீர்திருத்த சட்டப்படி ஏற்பட்ட சட்டசபையில் உட்கார்ந்துகொண்டு சட்டத்தில் கண்டபடி நடப்பதாகவும், சட்டத்துக்கு பக்தி காட்டுவதாகவும் பிரமாணம் செய்துவிட்டு சீர்திருத்தத்தை உடைக்கிறது என்றால் இது ''பௌர்ணமி அன்று அமாவாசை வரும்'' என்பது போல் இருக்கிறதே ஒழிய வேறில்லை.

ஆகவே சீர்திருத்தத்தை உடைப்பது என்பது வெளி வேஷமாகவும், பாமர மக்களை ஏய்ப்பதற்காகவும் செய்யப்பட்ட தீர்மானமே ஒழிய, காரியத்தில் அதை ஏற்று நடத்துவதே இரகசிய எண்ணமாய் இருக்கிறது. காரணம் காங்கிரசின் பேச்சைக் கேட்க பொதுஜனங்கள் இஷ்டப்படவில்லை என்பதுதான்.

ஏனெனில் காங்கிரசானது இன்று நாட்டில் ஒரு வேலையும் செய்ய முடியாமல் இருப்பது பற்றியும், காங்கிரசுக்கு நாட்டில் செல்வாக்கு இல்லை என்பது பற்றியும், நாட்டு மக்களிடம் செல்வாக்கு பெற காங்கிரஸ் ஒரு வேலையும் செய்யவில்லை என்பது பற்றியும் தலைவர் ஜவஹர்லால் அவர்கள் தனது பிரசங்கத்தின் முன் பகுதியில் வண்டி வண்டியாய் பேசி இருக்கிறார்.

அதாவது இன்று காங்கிரஸ் பலவீனமாய் இருப்பதற்கும் அது தோல்வி உற்று வருவதற்கும் காரணம் சொல்லிவரும் போது,

1. காங்கிரசை மத்திய வகுப்பார் (அதாவது பார்ப்பனர் ப-ர்.) தலைமை வைத்து நடத்துவது இருதலைக் கொள்ளியாகிவிடுகிறது.
2. மத்திய வகுப்பார் சீர்குலைந்ததால் பொதுஜனங்களிடம் இருந்து காங்கிரஸ் பிரிந்துகொள்ள வேண்டியதாயிற்று.



RangaRakes tamilnavarasam.com

3. பொது ஜனங்கள் தேவைகள் நமது லக்ஷியமாய் இல்லாமல் மத்திய வகுப்பார் காரியமாகவே காங்கிரஸ் நிர்வாகம் நடந்து வந்தது.

4. மத்திய வகுப்பார் தொல்லையாலேயே வகுப்புத் தொல்லைகள் ஏற்பட்டது.

5. பொது மக்கள் உணர்ச்சியை மதிக்கும்படி நாம் காங்கிரசை திருத்திக் கொள்ளவில்லை.

6. பொதுமக்கள் தேவைகள் காங்கிரசில் உருவான காலத்தில் காங்கிரசிலுள்ள மத்திய வகுப்பாருக்கு அது பிடிக்காமல் போய்விட்டது.

7. பொது மக்களுக்கும் காங்கிரசுக்கும் சம்மந்தமில்லாத மாதிரியில் காங்கிரஸ் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு இருந்திருக்கிறது.

8. காங்கிரசுக்கு பின்னால் இருந்து நடத்துகிறவர்கள் மத்திய தர வகுப்பார்கள்.

9. காங்கிரஸ் பொது ஜனங்களோடு கூடிப் பழகாமல் இருக்கிறது. ஏனென்றால் பொது ஜனங்கள் நிலையும் மத்திய வகுப்பார் நிலையும் ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாததாய் இருக்கிறது.

10. காங்கிரசின் பயனாய் ஏற்பட்ட காரியங்களும் இந்த மத்திய வகுப்பாரால் அடியோடு மக்கிப்போய் விட்டது. காங்கிரஸ் வேர் ஆட்டம் கொடுத்து விட்டது.

11. காங்கிரஸ் வெறும் கமிட்டிகளை அமைத்து ஆகாயகோட்டை கட்டி வந்தது.

12. காங்கிரசில் பழம் பெருக்காளிகள் வந்து புகுந்து தங்கள் சுயநலங்களை கவனித்துக் கொண்டார்கள்.

13. கட்சி பிரதிகட்சிகளும் மிக்க இழிவான காரியங்களும் நடந்து வந்தன.

14. சமய சஞ்சீவிகளுக்கு காங்கிரஸ் ஆயுதமாக ஆகிவிட்டது.

15. மான ஈன மில்லாதவர்களுக்கு காங்கிரசில் ஆதிக்கம் பெற இடமேற்பட்டது.

தேசத்தின் தேவைக்கேற்ப காங்கிரஸ் அமைப்பு இல்லாததால் காங்கிரசுக்கும், பொது ஜனங்களுக்கும் சம்மந்தமில்லாமல் போனதோடு காங்கிரஸ் பொதுஜனங்களுடையதாக இல்லாமல் போய்விட்டது என்றும் கடசியாக நன்றாய் விளங்கும்படி பேசியிருக்கிறார். (இந்த மத்திய வகுப்பார் என்பது பார்ப்பனர்கள் அல்லாமல் வேறு யார் என்பது இங்கு யோசிக்கத் தகுந்தது)

இந்த ரீமார்க்குகள் ராஜகோபாலாச்சாரி, சத்தியமூர்த்தி ஆகியவைகளை குறிவைத்தும் காந்தியாரின் முட்டாள்தனத்தை குறித்தும் வெளிப்படுத்தப் பட்டதாகும். இவற்றை நாம் மனமாற ஆதரிக்கிறோம்.

ஆகவே இந்தக் காரணங்களால் சட்டசபையை பஹிஷ்கரிக்கவோ பதவிகளை பஹிஷ்கரிக்கவோ சில ஆசாமிகளுக்கு மாத்திரம் முடியலாமே ஒழிய பொதுஜனங்களால் முடியாது என்று நன்றாய் விளங்கி விட்டதால் பஹிஷ்காரப் பேச்சை விட்டு விட்டு மக்களை வேறு வழியில் ஏமாற்ற வேண்டியதாகிவிட்டது.

காங்கிரசைப்பற்றி நம்மாலும், சுயமரியாதைக்காரர்களாலும் இந்த 10 வருஷ காலமாய் என்ன சொல்லி வரப்பட்டதோ அதேதான் இன்று தோழர் ஜவஹர்லால் தனது தலைமை உரையில் பச்சையாக பேசி இருக்கிறார். (இவைகள் காங்கிரஸ் தேசியப் பத்திரிகைகளில் அதுவும் பார்ப்பனப் பத்திரிகையில் சிறப்பாக தினமணியில் இருந்து குறிப்பிடப்பட்டவைகளாகும்.)

என்றாலும் காங்கிரஸ் விஷயத்தில் மக்களை மதவெறி போல் தேசீய வெறியும் மானங்கெடுவது தெரியாமல் ஆடச் செய்கிறது.

மற்றும் காங்கிரஸ் சமுதாயத் துறையில் யாதொரு வேலையும் செய்யவில்லை என்றும் சமுதாயத் துறையில் தோழர் ஜவஹர்லால் தன் அபிப்பிராயம் வேறு காங்கிரஸ் அபிப்பிராயம் வேறு என்றும் குட்டாகப் பேசி விட்டுவிட்டார்.

இவ்வளவும் செய்து விட்டு பதவி ஏற்பு விஷயத்தில் ஏதாவதொரு முடிவுக்கு வரும்படி காங்கிரசை நிர்ப்பந்தப்படுத்த இஷ்டமில்லாதவராகவே தலைமைப் பதவியை நடத்தியிருக்கிறார்.

இதற்குக் காரணம் தோழர் ராஜகோபாலாச்சாரியார் சூழ்ச்சியும் காந்தியார் நிர்ப்பந்தமுமே யாகும்.

பதவி ஏற்பை தள்ளிவைத்து பின்னால் முடிவு செய்யலாம் என்றால் என்ன அருத்தம் என்பது நமக்கு விளங்கவில்லை. மக்களை ஏமாற்றுவதல்லாமல் வேறு என்ன என்று கேட்கின்றோம்.

சட்டசபைக்குச் செல்லுவதற்கும் பதவி ஏற்பதற்கும் தோழர் ஜவஹர்லால் வித்தியாசம் கற்பிப்பது அவருடைய ராஜீய ஞானத்தையும், அபேதவாத ஞானத்தையும் இவ்வளவுதான் என்பதாக அளவு காட்டுகிறது என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறதே தவிர வேறில்லை.

பகிஷ்காரக்காரர்கள் சட்டசபையில் போய் என்ன செய்யமுடியும் என்பதை ஜவஹர்லால் அவர்களின் தகப்பனார் தோழர் மோதிலால் நேரு அனுபவ பூர்வமாய் விளக்கிக் காட்டியிருக்கிறார். அவரது மகன் இப்போது அதற்குமேல் வியாக்கியானம் செய்யப் புறப்பட்டது தகப்பனுக்கும் மகனுக்கும் உள்ள பேதமேயாகும். அதாவது தகப்பன் சாமி என்கின்ற தத்துவமேயாகும்.

வீணாக ஒரு காரியமுமில்லாமல் இந்த காங்கிரசானது திருவிழாப்போல் ஒரு கூட்டம் கூட்டி ஆரம்பம் முதல் கடைசி வரை தந்திரமும் சூழ்ச்சியுமே முக்கிய லக்ஷியமாகக் கொண்டு காரியங்கள் நடத்தப்பட்டிருக்கிறதல்லாமல் ஒருவரிடத்திலாவது உண்மையோ, நல்ல எண்ணமோ, உண்மையான பொதுநல நோக்கமோ இருந்ததாகச் சொல்ல முடியவில்லை.



RangaRakes tamilnavarasam.com

கடசியில் விளம்பர விஷயம். அதாவது அபேதவாதமும் பேசப் பட்டுவிட்டது. ஆனால் தீர்மானங்களில் அந்த வாசனைக்கே இடமில்லாமல் போய்விட்டது.

இதனால் பாமர மக்கள் ''காங்கிரசுக்கு ஜவஹர்லால் வந்து விட்டார். அபேதவாதம் பேசப்பட்டு விட்டது'' என்கின்ற பைத்தியக்காரத்தனமான பிதற்றலோடு ஏமாந்து விடுவார்கள் என்பது நிச்சயம்.

அபேதவாதத்தைப்பற்றி பேசும்போதும்,

''இந்திய சுதந்திரத்துக்கு ஆக நான் பாடுபடுவதன் காரணம் அந்நியர் நம்மை அடக்கி ஆளுவதை நான் சகிக்க முடியாமலிருப்பதுதான்''

என்றும் சொல்லிவிட்டு ''தேசத்தில் சமுதாய மாறுதலும் பொருளாதார மாற்றமும் ஏற்பட தேச சுதந்திரம் வேண்டும் என்றும், காங்கிரஸ் ஒரு அபேதவாத ஸ்தாபனம் ஆகவேண்டும்'' என்றும் பேசி இருக்கிறார்.

இம் மூன்றும் ஒன்றுக்கொன்று முரண்பாடானது என்பது ஆழ்ந்து சிந்திப்பவர்களுக்கு விளங்காமல் போகாது.

மற்றும் பேசும்போது ''இத்தேசத்தில் அபேதவாத எண்ணம் வளர வேண்டுமென்று நான் கூறுகிறேன். ஆயினும் காங்கிரசில் அதை பலவந்தமாகத் திணிக்க நான் ஆசைப்படவில்லை'' என்கிறார்.

''சுதந்திரப் போருக்கு இடையூறாக (அபேதவாதத்தை) திணிக்க விரும்பவில்லை'' என்கிறார். ஆகவே அபேதவாதம் வேறு, சுதந்திரப் போர் வேறு என்பது அவர் கருத்தென்று விளங்குகின்றது.

கடசியாக அபேதவாதத்துக்காக இப்போது ஒன்றும் செய்ய முடியா தென்றும், அந்த எண்ணத்தை மக்களுக்குள் புகட்டி வைத்தால் உலகப் புரட்சியின் போது பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் ஒப்புக் கொள்ளுகிறார்.

ஆகவே இந்தக் காங்கிரசினால் ஏதோ பெரியதொரு காரியம் ஏற்படப்போகிறது, காங்கிரசுக்கு புதிய ஜீவன் ஏற்படப் போகின்றது என்று நினைத்தவர்கள் இதற்கு மேல் ஏமாற்றமடைய முடியாது என்பதற்கு இணங்க **பொஸ்ஸ்ஸ்ஸென்று** போய்விட்டது என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை.

இனி தோழர் ஜவஹர்லால் அவர்கள் தனது வேலை நடப்பதற்கு காரியக் கமிட்டிக்கு அங்கத்தினர்களை நியமித்திருக்கும் பான்மையோ

''பயித்தியம் தெளிந்துவிட்டது உலக்கை எடுத்துக் கொடு கோவணம் கட்டிக் கொள்ளுகிறேன்'' என்ற மாதிரி பழைய வருணாச்சிரம உருவாரங் களையே நியமித்துக் கொண்டார். இது தோழர் எஸ். சீனிவாசய்யங்கார் சொல்லுகிற மாதிரி காந்தி கூட்டத்தாரே ஆதிக்கம் வகிக்கும்படி ஆகிவிட்டது.



இது ''ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டை தாப்பாள்'' என்பது போல் காங்கிரசானது முன்னிருக்கும் மோசமான நிலைமையை விட மோசமாக ஆளாகிவிட்டது என்று சொல்லுவதற்கு ஏற்றதானதோடு மற்றும் பாமர மக்களை ஏய்க்க அதிக சவுகரியம் பெற்றுவிட்டது என்பதல்லாமல் வேறு ஒன்றும் இல்லை என்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

இந்த நாடகத்தால் நமது வாலிபர்கள் பலர் ''நான் கெட்டுப்போகிறேன் பந்தயம் போடுகிறாயா?'' என்கின்ற மாதிரியாக கெட்டு பயனற்றுப் போவதுடன் தங்கள் சமூகத்துக்கும் பொதுவாக தாழ்த்தப்பட்ட பிற்பட்ட வகுப்பு மக்களுக்கும் துரோகிகளாகப் போகிறார்கள் என்பதையும் இப்போதே ஜோசியம் கூறுகிறோம்.

மற்ற விஷயம் பின்னால் விளக்குவோம்.

**குடி அரசு - தலையங்கம் - 19.04.1936**



RangaRakes tamilnavarasam.com

# மே தினக் கொண்டாட்டம்

சர்வ தேசங்களிலுமுள்ள தொழிலாளர்கள் ஆண் பெண் அடங்கலும் மே மீ 1-ந் தேதியை தொழிலாளர் தினமாகக் கொண்டாடுகிறார்கள்.

ரஷியாவில் தொழிலாளர் தங்களது ஓரளவு வெற்றியை நினைத்து வெற்றி தினமாகக் கொண்டாடுகிறார்கள்.

மற்ற தேசங்களில் தொழிலாளர் குறைபாடுகளை வெளிப்படுத்தி உலக அரசியலிலும், சமூக இயலிலும் தொழிலாளர்கள் சமத்துவமும் ஆதிக்கமும் பெறவேண்டுமென்று ஆசைப்பட்டு மே தினம் கொண்டாடுகிறார்கள்.

இந்தியர்களாகிய நாமும் சமூகத்துறையில் ஜாதி மத இழிவிலிருந்தும், பொருளாதாரக் கொடுமையில் இருந்தும் விடுதலை பெறவும், தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஊரிலும் ஆயிரக்கணக்கான மக்களைத் திரட்டி பொதுக்கூட்டம் கூட்டி நமது இழிவையும், கொடுமையையும் எடுத்துச் சொல்லி சகல மக்களுக்கும் சம உரிமையும், சம சந்தர்ப்பமும் கிடைக்கவேண்டுமென்று விளக்கிக் கொண்டாட வேணுமாய் வேண்டிக் கொள்ளுகிறேன்.

- **ஈ.வெ.ராமசாமி**

**குடி அரசு - அறிக்கை** - 19.04.1936



# மனிதன்

**வினா:-** மனிதன் என்றால் என்ன?

**விடை:-** பகுத்தறிவுள்ள ஒரு பிராணி.

**வினா:-** மனிதன் தோன்றி எவ்வளவு காலமாயிற்று?

**விடை:-** லட்சக்கணக்கான வருஷங்களாயிற்று.

**வினா:-** அவனுடைய பூர்வீகர் யார்?

**விடை:-** முலையுண்ணும் பிராணிகள்.

**வினா:-** அது உனக்கு எப்படித் தெரியும்?

**விடை:-** மக்கள் உறுப்புகளின் அமைப்பு, கலப்பு, வேலை முறை முதலியவைகளைக் கவனித்தால் மனிதனும் ஒரு பிராணிக்கு ஒப்பாகவே இருக்கிறான்.

**வினா:-** மனிதனுக்கும் பிராணிகளுக்கும் பொதுவாக இருக்கும் சில அம்சங்களை விளக்கிச் சொல்.

**விடை:-** மற்றப் பிராணிகளுக்கு இல்லாத தசை நாரோ, எலும்போ, உறுப்புகளோ மனிதனுக்கு இல்லவே இல்லை.

**வினா:-** இவ்வளவுதானா?

**விடை:-** மனித உடலும் மிருக உடலும் ஒரே மாதிரிப் பொருள் களாலேயே ஆக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு உடல்களிலும் ஒரே மாதிரியான அங்க அமைப்பே காணப்படுகின்றன. இரண்டு உடல்களும் ஒரே மாதிரியான ஜனன மரண விதிகளுக்கே கட்டுப்பட்டிருக்கின்றன.

**வினா:-** இதர பிராணிகளுக்கும் மனிதனுக்கும் ஏதாவது வித்தியாச முண்டா?

**விடை:-** அறிவிலும் ஒழுக்கத்திலும் மனிதன் மற்றப் பிராணிகளுக்கு மேலானவனாயிருக்கிறான்.

**வினா:-** வேறு வித்தியாசங்கள் உண்டா?

**விடை:-** பசிப்பிணியைத் தணிக்க மட்டுமே பிராணிகள் முயற்சி செய்கின்றன. மனிதன் தன் லட்சியங்களை அடைய முயல்கிறான்.

**வினா:-** வேறு ஏதாவதுண்டா?



RangaRakes tamilnavarasam.com

**விடை:-** தன் சந்ததிகளுக்கும் எதிர்காலத்தில் பிறக்கப் போகிறவர் களுக்கும் க்ஷேமமுண்டாகும்படி மனிதன் வாழ்ந்து உழைக்கிறான்; மிருகங்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிய உணர்ச்சியே இல்லை.

**வினா:-** மனிதனுக்கும் மிருகங்களுக்கு முள்ள சம்பந்தம் என்ன?

**விடை:-** அவன் மிருக வர்க்கத்திலிருந்து தோன்றினான். அல்லது மிருக வர்க்கத்திலிருந்து அபிவிருத்தியடைந்தான்.

**வினா:-** மனிதன் மிருக வருக்கத்திலிருந்து தோன்றி அபிவிருத்தி யடைந்தான் என்பதற்கு முக்கியமான ஆதாரமென்ன?

**விடை:-** மனிதக் கரு உயிர்பெறும் முன்பு பல நிலைமை அடை கின்றன. அப்பொழுது அதற்கு மீன்களுக்கு இருப்பது போன்ற மூச்சுக் கருவிகளும் வாலும், பெரிய கால் விரல்களும், உரோமம் அடர்ந்த உடலும், குரங்குக்கு உள்ளது போன்ற மூளையும் இருக்கின்றன.

**வினா:-** அதன் பொருள் என்ன?

**விடை:-** அந்த நிலைமையை எல்லாம் கடந்தே மனிதன் தற்கால உருவத்தை அடைந்தான் என்பதே பொருள்.

**வினா:-** தற்காலம் காணப்படும் மிருகங்களைப்போல் மனிதனும் ஒரு காலத்திலே மிருகமாயிருந்தான் என்று நீ கூறுகிறாயா?

**விடை:-** நெடுங்காலம் அவன் குரங்கைப் போலவும் கொரில்லாக் குரங்கைப் போலவும், பெரிய வாலில்லாக் குரங்கைப் போலவும் இருந்து வந்தான்.

**வினா:-** எந்தக் காலத்தில் அவன் அவ்வாறு இருந்தான்?

**விடை:-** திட்டமாகக் கூற முடியாது. ஒருகால் லக்ஷோபலக்ஷம் வருஷங்களுக்கு முன் இருக்கலாம்.

**வினா:-** அப்படியானால் மனிதன் பிரத்தியேகமாக சிருஷ்டிக்கப் படவில்லையா?

**விடை:-** இல்லை. அவன் கீழ்த்தரப் பிராணியாக இருந்து நாளா வட்டத்தில் முன்னேறினான்.

**வினா:-** மிருகம் மனிதனாக மாறுவதை யாராவது எப்பொழுதாவது கண்ணாரக் கண்டதுண்டா?

**விடை:-** இல்லை. இயற்கை இரகசியமாக வேலை செய்கிறது. குறிப்பிட்டுணர முடியாத பல பருவங்களைக் கடந்து காலக்கிரமத்தில் சிறுகச் சிறுக மனிதன் கீழ்த்தரப் பிராணியிலிருந்து முன்னேற்றமடைந்திருக்கிறான்.

**வினா:-** அவனது உடல் மட்டுந்தானா இவ்வாறு முன்னேற்றமடைந்து வளர்ச்சியடைந்திருக்கிறது?



**விடை:-** இல்லை. அவனது உடலைப்போலவே அவனது மனம் அல்லது பகுத்தறிவும் காலக்கிரமத்தில் சிறுகச் சிறுக முன்னேற்றமடைந்து வந்திருக்கிறது.

**வினா:-** எல்லாப் பிராணிகளும் முன்னேற்றமடைந்து ஏன் மனிதராக வில்லை?

**விடை:-** எந்தக் காரணத்தினால் காட்டாள ஜாதியாரெல்லாம் நாகரிக மக்களாகவில்லையோ அந்தக் காரணத்தினாலேயே மிருகங்கள் எல்லாம் மக்களாக முன்னேற்றமடையவில்லை.

**வினா:-** அந்தக் காரணம் எது?

**விடை:-** சாதகமான நிலை.

**வினா:-** அதை விளக்கிக் கூறு.

**விடை:-** தேவையே முன்னேற்றத்துக்கு அடிப்படை. சுகமாக வாழ முடியும்வரை மிருகங்களும் காட்டாளர்களும் அந்த நிலைமையிலேயே இருக்கின்றன. ஆபத்துகளினாலோ மரணத்தினாலோ பயமடையும் போதுதான் அவைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளப் புது மார்க்கங்களைக் கண்டுபிடிக்க முயல்கின்றன.

**வினா:-** இதைக் கொஞ்சங் கூட விளக்கிக்கூறு.

**விடை:-** சந்தர்ப்பங்கள் அல்லது நிலைமையத் தழுவியே மனிதன் அல்லது மிருகத்தின் வாழ்க்கை உருப்பெறுகிறது. சந்தர்ப்பங்கள் அல்லது நிலைமையில் மாற்றமேற்படும்போது மனிதன் அல்லது மிருகத்தின் நிலைமையிலும் மாற்றமேற்படுகிறது.

**வினா:-** மனித முன்னேற்றத்துக்கு முக்கியமாக உதவி புரிந்தது எது?

**விடை:-** ஜீவிதப் போராட்டமே மற்றவைகளை விட அதிகமாக உதவி புரிந்தது.

**வினா:-** மனித உற்பத்தியைப் பற்றி வேறு ஏதாவது அபிப்பிராய முண்டா?

**விடை:-** உண்டு. ஆறாயிரம் வருஷங்களுக்கு முன் கடவுள் மனிதனை நினைத்த மாத்திரத்தில் உத்தமனாக சிருஷ்டித்ததாக அநந்தம் பேர் நம்பி வருகிறார்கள்.

**வினா:-** உத்தமனாக சிருஷ்டித்தான் என்பதின் பொருள் என்ன?

**விடை:-** கடவுளைப் போலவே மனிதன் தோற்றுவிக்கப்பட்டானாம்.

**வினா:-** மனிதன் ஒரு காலத்து கடவுளைப்போல உத்தமனா யிருந்தானென்று உரிமை பாராட்டப்படுகிறதா?

**விடை:-** உரிமை பாராட்டப்படுவதாகத் தோன்றவில்லை.



RangaRakes

tamilnavarasam.com

**வினா:-** அப்படியானால் கடவுளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மனிதன் உத்தமன் அல்லவா?

**விடை:-** இல்லை.

**வினா:-** அப்படியானால் மனிதன் உத்தமனாக படைக்கப்பட்டான் என்று அவர்கள் ஏன் கூறுகிறார்கள்?

**விடை:-** ஒரு மனிதனுக்கு எவ்வளவு உத்தமனாக இருக்க முடியுமோ அவ்வளவு உத்தமனாக மனிதன் இருந்தான் என்றே அவர்கள் நம்புகிறார்கள் என நினைக்கிறேன்.

**வினா:-** இப்பொழுது அவன் ஏன் உத்தமனாக இருக்கவில்லை.

**விடை:-** கடவுள் கட்டளையை அவன் மீறியதனால் உத்தமத் தன்மையை இழந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

**வினா:-** உத்தமனான ஒருவன் எவ்வாறு குற்றம் செய்வான்?

**விடை:-** தன்னுடைய பெருமைக்காக அவன் குற்றம் செய்யும்படி சிருஷ்டி கர்த்தா அனுமதித்தாராம்.

**வினா:-** அப்படியானால் அவன் கடவுள் கட்டளையை மீறாமல் கட்டளைப்படியே தான் நடந்தானா?

**விடை:-** கடவுள் நோக்கத்தைப் பூர்த்தி செய்யுமாறு கடவுள் கட்டளைப்படியே அவன் நடந்தான்.

**வினா:-** மனிதன் வீழ்ச்சியடைந்ததினால் ஏற்பட்ட பலன்கள் எவை?

**விடை:-** எல்லா மக்களுக்கும் பாபம், துன்பம், மரணம் இவைகளே ஏற்பட்ட பலன்கள்.

**வினா:-** மனிதன் வீழ்ச்சியடைவதற்கு முன் உலகத்தில் தீமையே இருந்ததில்லையா?

**விடை:-** விஞ்ஞான சாஸ்திரப்படியும் பைபிலின்படியும் உலகத்தில் தீமை இருக்கத்தான் செய்திருக்கிறது. ஏனெனில் ஆதாம் பாவம் செய்யும்படி சாத்தான் தூண்டியதாக பைபிளில் கூறப்பட்டிருக்கிறது.

**வினா:-** சாத்தானைப் பற்றிய பொதுவான நம்பிக்கை என்ன?

**விடை:-** சாத்தான் கடவுளுக்கும் மனிதனுக்கும் பெரிய விரோதி என்று பொதுவாக நம்பப்படுகிறது.

**வினா:-** வேறு என்ன?

**விடை:-** கடவுள் நன்மைக்கு அதிகாரியாக இருப்பதுபோல் சாத்தான் தீமைக்கு அதிகாரியாக இருக்கிறானாம்.

**வினா:-** பேய் எப்பொழுது முதல் இருந்துகொண்டு வருகிறது?



**விடை:-** கடவுள் தோன்றியபோதே பேயும் தோன்றியிருப்பதாக சாமானிய ஜனங்கள் நம்புகிறார்கள்.

**வினா:-** மக்கள் பேயை நம்பக் காரணம் என்ன?

**விடை:-** மனித சமூகம் பாலிய தசையிலிருந்தபோது வெளிச்சத்துக்கும், இருளுக்கும், ஜீவனுக்கும், மரணத்துக்கும், அன்புக்கும், வெறுப்புக்கும் காரணம் கூறும் பொருட்டு நன்மை செய்ய ஒன்றும், தீமை செய்ய ஒன்றும் இருப்பதாகவும், அவை இரண்டுமே உலகத்தை அடக்கியாண்டு வருவதாகவும் நம்பிக்கொண்டது.

**வினா:-** பேய் கடவுளைப்போல் அவ்வளவு புத்திசாலியா?

**விடை:-** இல்லை. பெரிய தந்திரசாலியாம்.

**வினா:-** பேயின் ஜீவித நோக்கமென்ன?

**விடை:-** மக்களை கெட்ட வழியில் செலுத்திக் கெடுத்து கடவுள் வேலையை அழிப்பதே.

**வினா:-** பேய் இருந்துகொண்டு இருப்பதற்குப் பொறுப்பாளி யார்?

**விடை:-** பொதுவான நம்பிக்கை என்னவெனில் ஆதி மனிதனைப்போல் பேயும் உத்தமனாகவே இருந்ததாம். அது தானும் கடவுளாக வேண்டு மென்று எண்ணியதினால் அது சுவர்க்கத்திலிருந்து ஓட்டப்பட்டதாம்.

**வினா:-** கடவுள் அந்தப் பேயை ஏன் அழிக்கவில்லை?

**விடை:-** மனிதன் வீழ்ச்சியடைய எக்காரணத்தினால் கடவுள் அனுமதியளித்தானோ அக்காரணத்தினாலேயே கடவுள் பேயை ஒழிக்காமல் வைத்துக்கொண்டு இருக்கிறான்.

**வினா:-** அதன் பொருள் விளங்கச் சொல்லு?

**விடை:-** தன் பெருமையை நிலைநாட்டும் பொருட்டே கடவுள் பேயை உயிரோடு வைத்துக்கொண்டு இருக்கிறான்.

**வினா:-** எப்பொழுதும் ஒரு நரகமும் பேயும் இருந்து கொண்டு தானிருக்குமா?

**விடை:-** இருந்துகொண்டு இருக்குமென்று அநேகர் சொல்லுகிறார்கள்.

**வினா:-** பேய்களைப் பற்றிய இம்மாதிரிக் கதைகளை மக்கள் ஏன் நம்புகிறார்கள்.

**விடை:-** அவர்கள் பெற்றோர் நம்பியதினால் அவர்களும் நம்புகிறார்கள்.

**வினா:-** அந்த நம்பிக்கையைப்பற்றி நீ என்ன எண்ணுகிறாய்?



RangaRakes tamilnavarasam.com

**விடை:-** விஷயங்களை ஆராய்ந்து பாராதவர்கள் கூறும் அபிப்பிராயங்களுக்கும், கொண்டிருக்கும் நம்பிக்கைகளுக்கும் மதிப்பே இல்லை.

**வினா:-** பேய் நம்பிக்கையினால் ஏற்பட்ட பலன் என்ன?

**விடை:-** பேய் நம்பிக்கையினால் மக்கள் மூடபக்தியுடையவர்களாயும், சஞ்சலமுடையவர்களாயும், பயங்காளிகளாயும், குரூரர்களாயும் ஆகிவிடுகிறார்கள்.

**வினா:-** பேய் நம்பிக்கை எப்படி ஒழியும்?

**விடை:-** அறிவியக்கத்தினால் ஒழியும்

**வினா:-** உலகத்திலேயே மிகவும் பயங்கரமானது எது?

**விடை:-** பயந்தான்.

**வினா:-** ஏன்?

**விடை:-** பயம், ஹிருதயத்தையும் உடலையும் திமிராக்கி, தற்காப்புக்குள்ள சக்தியை அழித்துவிடுகிறது. தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள ஒருவனுக்கு சக்தியில்லாதாகும்போது அரசியல், சமயப் பூச்சாண்டிகளுக்கு அடிமைப்பட்டு விடுகிறான்.

**குடி அரசு - வினா விடை** - 26.04.1936



# கொச்சி சமஸ்தானத்தில் பிரசங்கம்

## வாலிபர்களே உலக முற்போக்குக்கும் உலக பிற்போக்குக்கும் காரணஸ்தர்கள்

அன்புள்ள தோழர்களே! கொச்சி ராஜ்ஜிய தீயர் வாலிப சங்கச் சார்பாக உங்களைப் பல ஆயிரக்கணக்கில் சந்திக்க நேர்ந்ததற்கு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உங்களுடைய அன்பும், உணர்ச்சியும் மிகுந்த ஆடம்பரமான வரவேற்புகளையும், புகழ் வார்த்தைகளையும் கண்டு நான் வெட்கமடைய வேண்டியவனாய் இருக்கிறேன். அவைகள் உண்மையிலேயே எனது தகுதிக்கு மேற்பட்டவையாகும். என்றாலும் என்னிடம் உங்களுக்கு உள்ள விஸ்வாசத்துக்கு நான் பெருமை அடைவதோடு எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வைக்கம் சத்தியாக்கிரகம்

வைக்கம் சத்தியாக்கிரகத்தைப்பற்றி பிரஸ்தாபித்தீர்கள். இளம் ஆண்களும் பெண்களும் ஏராளமாய் நிறைந்த இந்த கூட்டத்தையும் குதூகலத்தையும் பார்க்கும் போது வைக்கம் சத்தியாக்கிரகம் தானாகவே எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. வைக்கம் சத்தியாக்கிரகமே முதல் முதலாக உங்களையும் என்னையும் சந்திக்க வைத்தது என்பது மாத்திரமல்லாமல் அந்த சத்தியாக்கிரகமானது நம்மை ஒன்றாகக் கட்டி பிணைத்து விட்டது. அந்த வைக்கம் சத்தியாக்கிரகம் செய்த வேலைதான் இன்று இந்தியா பூராவுக்கும் சமுதாயத் துறையில் ஒரு புதிய உணர்ச்சியை கிளப்பிவிட்டு 100க்கணக்கான வருஷங்களில் கூட நடைபெற முடியாததும் எண்ணமுடியாததுமான காரியங்களையும், எண்ணங்களையும் உண்டாக்கி இருக்கிறது.

இன்றைய நம்முடைய செய்கைளுக்கும் எண்ணங்களுக்கும் கூட வைக்கம் சத்தியாக்கிரகம் ஒருபெரும் காரணமாகும். அது தீய சமுதாயத்தை மாத்திரமல்லாமல் மற்றும் வேறு எத்தனையோ சமுதாயத்துக்கு வெளிச்சத்தையும் சுயமரியாதையையும் கொடுத்துவிட்டது.



RangaRakes tamilnavarasam.com

**வாலிபர்கள்**

நிற்க, இந்த சந்தர்ப்பத்தில் வாலிபர்களைப்பற்றி சில வார்த்தைகள் பேசிவிட்டு மேலால் மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசுகிறேன். வாலிபர்களிடம் எனக்கு அதிக மதிப்பு உண்டு. வாலிபர்களிடம் எனக்கு உள்ள நம்பிக்கையே எனது தொண்டுக்கு ஆதாரமாய் இருந்து வருகிறது. வாலிபர்களிடம் நான் இடையறாமல் நெருங்கிப் பழகிவரும் பழக்கமே என்னை நான் இன்னமும் வாலிபனாக நினைத்துக்கொண்டு இருக்கச் செய்து வருகிறது. வாலிபர் நேசமும் அவர்களது கூட்டுறவும் எனக்கு இளமையை அளித்து வருகிறது என்றுகூட சொல்லுவேன்.

வாலிபர்களாலேயே உலகில் அபார காரியங்கள் ஆகிவருகின்றன. வாலிபர்கள் அனேக நன்மைக்கும் முற்போக்குக்கும் காரணமாய் இருக்கிறவர்கள்.

எனவே, வாலிபர்களுக்கு இவ்வளவு பெருமை இருந்தாலும் வாலிபர்களால் சில சமயங்களில் ஆபத்து நேர்ந்து வருவதுமுண்டு. ஏனென்றால் அவர்கள் சுலபத்தில் நெருப்புப் பற்றிக் கொள்ளத்தக்க வஸ்துக்கள் போன்றவர்கள். வாலிபர்கள் நல்ல காரியத்தில் பிரவேசித்தால் எப்படி அதிக நன்மை உண்டாவது நிச்சயமோ, அதுபோல் வாலிபர்கள் தீய காரியங்களில் பிரவேசித்தால் தீய காரியங்களும் சுலபத்தில் ஏற்பட்டு விடக்கூடும். அவர்கள் ஜாக்கிரதையாக கையாளப்பட வேண்டியவர்களாவார்கள் என்பதையும் நான் மூடி வைக்க இஷ்டப்படவில்லை. வாலிபர்கள் தாங்கள் பிரவேசிக்கும் காரியங்களை நன்றாய் ஆலோசித்துப் பார்த்து முடிவு செய்து கொண்டு பிறகு பிரவேசிக்க வேண்டும்.

சிறிது காலமாக வாலிபர்கள் சுயநலக்காரர்களுக்கும், பிற்போக்காளர்களுக்கும் சுலபமாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டு வருகிறதை நான் பார்த்தே இப்படிப் பேசுகிறேன். வாலிப ஆண்கள் கதியே இப்படியானால் வாலிப பெண்களைப் பற்றி பேச வேண்டுமா?

**பிரத்தியக்ஷ நிலை**

தோழர்களே! மனித சமூகத்தின் பிரத்தியக்ஷ நிலைமையை நாம் நன்றாய்ப் பார்க்கிறோம். மனித சமூகம் செல்வமாய் இருந்தாலும், தரித்திரமாய் இருந்தாலும், அறிவுடமையாய் இருந்தாலும், மூடத்தன்மையாய் இருந்தாலும், மேன்மையாய் இருந்தாலும், கீழ்மையாய் இருந்தாலும், பொதுவில் துக்கமும், கவலையும், அதிருப்தியும், அலைச்சலும் கொண்டதாகவேதான் இருந்து வருகிறது. இது இந்த நாட்டில் மாத்திரமல்ல. உலக முழுவதும் எந்த தேசத்திலும் மனிதன் என்றாலே துக்கத்துக்கும், கவலைக்கும், அதிருப்திக்கும் ஆளானவன் என்பதாகத்தான் இருந்து வருகிறது.

மனித சமூக சமுதாயத்துக்கு என்று பாடுபடுகின்றவர்கள் எவரும் இதற்கு இதுவரையில், எவ்வித முயற்சியும் செய்ததில்லை. எத்தனையோ பேர்கள் மனிதத் தன்மைக்கு மீறியவர்கள் என்பதாகப் பேர் பெற்றும், உலக மக்களால் வணங்கும்படியானவர்களாகியும் இதைப்பற்றி யாதொரு காரியமும் செய்தவர்களாகக் காணப்படவில்லை. இதைப்பற்றி சிந்தித்தவர்களாகக் கூடத் தெரியவில்லை. மற்றும் அதற்கு விரோதமாக மனித சமூகத்துக்கு துக்கமும், கவலையும், அதிருப்தியும், அலைச்சலும் இயற்கையென்றும் மனிதன் தனது முயற்சியால் அவைகளைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றும் தீர்ப்புக் கூறிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

பெரும்பான்மையான மக்களால் கருதப்படும், மதிக்கப்படும், தெய்வம், தெய்வசக்தி, தெய்வசக்தி பொருந்தியவர்கள், தெய்வாம்சம் பெற்றவர்கள், தெய்வ அவதாரங்கள் என்பவைகளாகக் கருதப்பட்டவர்களாலும் கூட இவற்றிற்கு நாளது வரை எவ்வித பரிகாரமும் செய்யப்படவில்லை.

இந்தக் காரியங்களில் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே எவ்வித முன்னேற்றமும் ஏற்படவே இல்லை.

**பயனற்ற வேலை**

பயனற்ற வேலையாகிய சமுத்திர அலையை எண்ணுவதில் போட்டி போடுவது போலவே பயனற்ற காரியங்களை உலக வாழ்க்கையாகக் கற்பித்துக் கொண்டு அவைகளில் போட்டி போடுவதையே மனித லக்ஷ்யமாய்க் கொண்டு சதா அதிலேயே ஈடுபட்டு மனிதன் சிறிதும் திருப்தியும் சாந்தியும் இல்லாமல் குறையினாலேயே மனம் நொந்து துக்கப்பட்டுக் கொண்டிருக்கிறான்.

இதற்குக் காரணம் என்ன என்பதை சிந்தியுங்கள். மனிதன் உலகிலுள்ள பிராணிகளையெல்லாம் விட விசேஷ அறிவு பெற்றவன். அப்படிப்பட்ட விசேஷ அறிவைப்பெற்ற காரணமாக இக்கஷ்டங்களையும் குறைகளையும் அனுபவிப்பது நியாயமாகுமா?

**நாட்டுக்குறை என்ன?**

நம் நாட்டை எடுத்துக்கொள்ளுங்கள் - இந்நாட்டுக்கு இயற்கை வளங்களில் என்ன குறைவு இருக்கிறது? நீர்வளம் நிலவளம் குறைவு என்றோ, கெடுதியானது என்றோ சொல்ல முடியுமா? மக்கள் அறிவுக்குத்தான் ஏதாவது குறை சொல்ல முடியுமா? அல்லது மனிதர்கள் மிருகப்பிராயத்தில் இருந்து இன்றுதான் மனிதப் பிராயத்துக்கு வந்தார்கள் என்று சொல்லி விட முடியுமா? ஒன்றும் இல்லையே. இப்படிப்பட்ட நிலையில் ஏன் பலகோடி மக்கள் தீண்டக்கூடாத - கிட்ட நெருங்கக்கூடாத ''இழிகுல'' மக்களாகவும், பலகோடி மக்கள் ஜீவனத்துக்கும் மார்க்கமில்லாத - வேலை கிடைக்காத மக்களாகவும், பல கோடி மக்கள் இரவும் பகலும் உழைத்து உழைத்து வஞ்சகர்களுக்கும் சோம்பேறிகளுக்கும் அழுதுவிட்டு பிள்ளை குட்டிகளுடன்


RangaRakes tamilnavarasam.com

அரைப்பட்டினி கிடக்கும் மக்களாகவும் இருக்கக் காரணமென்ன? யோசித்துப் பாருங்கள். இதற்கு எப்போதாவது எந்தப் பெரியோராவது மார்க்கமோ சமாதானமோ சொன்னதுண்டா? சமுதாய வேலையென்றோ, பொதுநல வேலையென்றோ அரசியல் வேலையென்றோ சொல்லப்படுவதானால் அது இக்குறைகளையும், கொடுமைகளையும், பேதங்களையும் சரிப்படுத்துவ தல்லாமல் வேறு எதைச் சொல்லுவது என்று கேட்கின்றேன்.

## தெய்வ சங்கற்பமா?

இவ்வளவு கொடுமைக்கும் குறைகளுக்கும் தெய்வ சங்கற்பம் என்கின்ற ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டால் போதுமானதாகிவிடுமா?

அப்படித்தான் சொல்வதானாலும் தெய்வ சங்கற்பம் தான் ஏன் இந்தப்படி இருக்கவேண்டும்? தெய்வ சங்கற்பம் என்று சொல்லுகின்றவர்கள் தாங்கள் சொல்லும் தெய்வத்தை முட்டாள் என்றோ, அயோக்கியன் என்றோ பலவீன - சக்தி அற்றவன் என்றோ சொல்லுவதனால் இந்தக்கூற்றுக்கு ஆதாரம் இருக்கலாம். இன்று எவனும் தான் கற்பித்துக் கொண்டோ, அல்லது உணர்ந்து கொண்டோ இருக்கும் தெய்வத்தை மகா மேதாவி என்றும், மகா நீதீவான் என்றும், சர்வசக்தி உடையவன் என்றும் கருதிக் கொண்டு இக்கொடுமைகளையும் இழிவுகளையும் துன்பமயங்களையும் தெய்வ சங்கற்பம் என்று சொன்னால் அதை முட்டாள்தன மென்றோ, அயோக்கியத்தன மென்றோ, சோம்பேறித்தன மென்றோ சொல்லாமல் வேறு என்ன சொல்லுவது என்று கேட்கின்றேன். தெய்வத்தின் காரியத்தால் மனித சமூகம் ஒட்டும் ஏன் துக்க மயத்தில், அதிருப்தி மயத்தில் இருக்க வேண்டும்? ஏன் ஒருவனை ஒருவன் இழிவுபடுத்தி அடிமைப்படுத்தி துன்புறுத்த வேண்டும்? இவைகளைப்பற்றி மனிதன் யோசித்துப் பார்க்க வேண்டாமா? இதை யோசித்து, இதற்கொரு காரணம் கண்டுபிடித்து அதை மாற்ற முயற்சிக்க வில்லையானால் மற்றபடி மனிதனுக்கு பகுத்தறிவு இருந்து என்ன பயன்? பெரியார்கள், அவதாரங்கள், தேவதூதர்கள் தோன்றி என்ன பயன்? பொதுநல சேவையோ, சமுதாய சேவையோ, பெரும் பெரும் தியாகமோ செய்து என்ன பயன்? இவையெல்லாம் குருடும் குருடும் சேர்ந்து குருட்டாட்டம் ஆடுவதுபோல் மூடனும் மூடனும் சேர்ந்து முட்டாள் ஆட்டம் ஆடுவது போலவே தானே முடிகிறது.

## வாலிபர் கடமை

இவைகளைப்பற்றி யோசிக்க வேண்டியதுதான் இன்றைய வாலிபர்களின் கடமையாகும். இதை யோசிப்பவர்கள்தான் மனித சமூக விடுதலைக்குப் பாடுபடுபவர்களாகும். ஆனால் இன்றைய விடுதலைப் பேச்சில் இந்த பிரஸ்தாபமே கிடையாது. இதற்கும் மனித சமூக முயற்சிக்கும் சம்மந்தமில்லையென்று முடிவுகட்டிவிட்ட பெரியார்கள்தான் விடுதலைப்



பேச்சைப் பேசி விளம்பரம் பெறுகிறார்கள். மூடமக்களும் இப்படிப் பட்டவர்களைத்தான் மதிக்கிறார்கள். அறிவில்லாமல் வெறும் ஆவேசம் மாத்திரம் உள்ள வாலிபர்களும் இப்படிப்பட்ட ''பெரியார்''களைத் தான் பின்பற்றி தங்கள் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்வதோடு உண்மையான விடுதலைக்கும் எமனாய் இருக்கிறார்கள்.

## தெய்வம்

சோம்பேறிகளும், வஞ்சகர்களும் மக்களை ஏமாற்றுவதற்காகவே மனிதர்களுடைய பொது குறைகளுக்கு தெய்வத்தைக் கற்பித்துக் காரணம் காட்டி வருகிறார்கள். தெய்வம் என்கின்ற கற்பனை மக்களின் மூடத்தனத்தினால் ஏற்பட்டது என்பது ஒரு சாரார் முடிவு. ஆனால் கொஞ்சம் அளவுக்கு அப்படி இருக்கலாம். பெரும்பாகம் தெய்வ கற்பனைக்கு ஏமாற்றும் தன்மையே காரணமாய் இருக்கவேண்டுமென்பது தான் எனது அபிப்பிராயம். இன்று இந்த நாட்டில் சிறப்பாக உங்கள் சமுதாயத்தின் முக்கிய லக்ஷியம் உங்கள் சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கும் இழிவுக் கொடுமை அதாவது தீண்டாமை, நெருங்காமை என்பவைகளை ஒழிக்க வேண்டும் என்பதே என்று நான் கருதுகிறேன். அதை நானும் ஆமோதிக்கிறேன். மற்ற எந்தப் பிரச்சினையும் விட இதுவேதான் உங்களுடைய முக்கியமானதும் ஒன்றேயானதுமான பிரச்சினையாக இப்போது இருக்க வேண்டும். இந்தப் பிரச்சினையை உலகில் வேறு எங்கும் இல்லாத கொடுமைகள் என்றுதான் சொல்லவேண்டும். எந்த பூமியை ஞான பூமி என்றும், புண்ணிய பூமி என்றும், தர்ம பூமி என்றும் சொல்லுகிறோமோ அந்த பூமியாகிய நமது இந்திய நாட்டில்தான் இந்த முட்டாள் தனமானதும் அயோக்கியதனமானதுமான கொடுமைகள் இருந்து வருகின்றன.

உலகில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு இந்தியாவில் தான் ஏராளமான கடவுள்களும், கடவுள் அவதாரங்களும், ஆழ்வார்களும், நாயன்மார்களும், ரிஷிகளும், முனிவர்களும், மகாத்மாக்களும் தோன்றி இருக்கிறார்கள். இன்றும் அம்மாதிரி பலர் இருந்து வருகிறார்கள். இவர்கள் இத்தனை பேர்களாலும் இந்த முட்டாள்தனமான அயோக்கியத்தனமான கொடுமைக்கு அதாவது தீண்டாமை என்னும் இழிவுக்கு ஒரு பரிகாரமும் செய்ய முடியவில்லை. தீண்டாமை ஆயிரக்கணக்கான வருஷங்களாய் இருந்து வருகின்றது.

எந்த தர்ம ராஜ்யமும் இதைப்பற்றி கவனித்து யாதொரு காரியமும் செய்யவில்லை. வேறு யாராவது இவ்விஷயத்தில் பிரவேசித்து ஏதாவது செய்ய முயற்சித்தால், அங்கு ஜாதியும் மதமும், தெய்வமும் வந்து குறுக்கே போடப்படுகிறது. தீண்டாமையைப்பற்றி மக்களை ஏமாற்றி அதை நிலை நிறுத்தத்தான் ஜாதி மத தெய்வ சம்மந்தமான தடைகள் ஏற்படுத்தப்படுகிறதே ஒழிய இவற்றின் பக்தி காரணமாக அல்லவே அல்ல. இதனாலேதான் நாம்



RangaRakes tamilnavarasam.com

தீண்டாமை ஒழிவுக்கு ஜாதியும், மதமும், தெய்வமும் ஒழிந்தாக வேண்டும் என்கின்றோம். இம் மூன்றும் ஒழியாமல் தீண்டாமை ஒழியப்போவதில்லை. தெய்வம் உள்ளவரை மதம் இருந்துதான் தீரும். மதம் உள்ளவரை ஜாதி இருந்துதான் தீரும். ஜாதி உள்ளவரை தீண்டாமை இருந்துதான் தீரும்.

இன்று தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடுவதாய்ச் சொல்லும் எவரும் ஜாதியையோ மதத்தையோ ஒழிக்க சம்மதிப்பதில்லை.

### காந்தியார்

தீண்டாமை ஒழிந்தாலொழிய சுயராஜ்ஜியம் வராது என்று சொன்ன காந்தியாரின் தன்மையை சற்று பகுத்தறிவோடு ஆராய்ந்து பாருங்கள்.

காந்தியார் தீண்டாமை போகவேண்டும் என்று மாத்திரம் சொல்லுகிறாரே ஒழிய எங்காவது ஜாதி ஒழிய வேண்டும் என்று ஒரு வார்த்தையாவது சொல்லியிருக்கிறாரா? அது மாத்திரமல்லாமல் அவர் எவ்வளவு துணிவாக ''ஜாதியைக் காப்பற்றுவதே எனது சுயராஜ்ஜியத்தின் லக்ஷியம்'' என்று சொல்லி வருகிறார் என்பதை யோசித்துப் பாருங்கள். அதாவது :-

''வருணாச்சிரம தர்மமே தனது சுயராஜ்யம்'' என்கிறார்.

''இந்து மதத்தைக் காப்பாற்றவும், வருணாச்சிரம தர்மத்தை காப்பாற்றவும்தான் நான் உயிர் வாழ்கின்றேன்'' என்கிறார்.

இப்படிப்பட்டவரால் தீண்டாமை ஒழிந்துவிடும் என்று மூட மக்கள் நம்பிக்கொண்டு அவரைப் பின்பற்றுகிறார்கள்.

டாக்டர் அம்பேத்கார் இதன் தந்திரத்தை உணர்ந்து கொண்டார். அதனால்தான் காந்தியாரால் தீண்டாமை ஒழியாது என்று சொன்னதோ டல்லாமல் இந்து மதத்திலும் தனக்கு விஸ்வாசமில்லை என்று சொல்லி இந்து மதத்தை விட்டுவிடுவதாகவும் சொல்லிவிட்டார். ஆனால் அவர் அரசியல்வாதியாகவும், அரசியலில் சில பதவிகள் எதிர்பார்க்கிறவராகவும் இருப்பதால் ஜாதி மத நம்பிக்கை இழந்துவிட்டதாகத் தெரிவித்தது போல் கடவுள் நம்பிக்கை இழந்துவிட்டதாகச் சொல்ல அஞ்சுகிறார்.

தீய சமுதாயமாகிய நீங்கள் தைரியமாய் ஜாதியும் மதமும் தெய்வமும் ஒழிக்கப்படவேண்டும் என்றும், இவற்றில் உங்களுக்கு சுத்தப்படி நம்பிக்கை இல்லை என்றும் தைரியமாயும் தாராளமாயும் சொல்லிவிட்டீர்கள்.

இந்தியா பூராவுக்கும் ஒரு சமுதாயமாகச் சேர்ந்து மொத்தத்தில் ஜாதி மத தெய்வ நம்பிக்கை இல்லையென்று சொன்னவர்கள் நீங்களேயாகும். அந்தப் பெருமை உங்களுக்கே உண்டு.

தமிழ்நாட்டில் சுமார் லட்சக்கணக்கான பேர்களுக்கு ஜாதியில் நம்பிக்கை இல்லாமலும் பதினாயிரக்கணக்கான பேர்களுக்கு மதத்திலும், தெய்வத்திலும் நம்பிக்கை இல்லாமலும் இருந்தாலும் ஒரு சமுதாயம்



பூராவும் ஜாதி மத தெய்வ நம்பிக்கை இல்லாதவர்கள் என்று சொல்லும் படியாக இல்லை. தமிழ்நாட்டில் நாடார் சமூகத்தாரில் அநேகருக்கு ஜாதி மத தெய்வ நம்பிக்கை கிடையாது.

### ஆலயப் பிரவேசம், மதமாற்றம்

இப்போது உங்களில் சிலர் ஆலயப் பிரவேச உரிமைக்கு ஆசைப் படுவதாகவும், சிலர் இந்து மதம் விட்டு கிறிஸ்து மதத்திற்குப் போக ஆசைப்படுவதாகவும் இவ்விரண்டுக்கும் கிளர்ச்சி நடப்பதாகவும் கேள்விப்பட்டேன். பத்திரிகைகளிலும் பார்க்கிறேன். இது மிகவும் துக்கமும் பரிதாபகரமுமான விஷயமாகும்.

ஈழவர்களோ மற்றும் தாழ்ந்த ஜாதியார் என்பவர்களோ ஆலய பிரவேசத்துக்கு ஆசைப்படுவது சிறிதும் சுயமரியாதை அற்ற விஷயமேயாகும். ஆலயத்தில் என்ன இருக்கிறது? அங்கு சென்றால் என்ன பயன் ஏற்பட்டு விடும்? வீணாக உங்கள் பணமும் உங்கள் நேரமும் பாழாவதல்லாமல் ஆலயத்தால் என்ன நேரிடப் போகிறது?

தமிழ்நாட்டில் நாடார் சமூகத்துக்கு சில ஜில்லாக்களில் ஆலயப் பிரவேசம் இல்லாததால் இன்று அவர்கள் எல்லாக் காரியங்களிலும் மற்ற சமூகத்தாரை விட முற்போக்கில் இருக்கிறார்கள். அவர்கள் தர்மங்கள் எல்லாம் கல்விக்கும் முற்போக்குக்குமாகவே செலவழிக்கப்பட்டு பல ''மேல் ஜாதி'' சமூகத்தைவிட மேல் அந்தஸ்தில் இருக்கிறார்கள். அவர்களால் பல பள்ளிக்கூடங்களும் ஆஸ்பத்திரிகளுமாக நடைபெறுகிறது. சம்பளமில்லாத ஹைஸ்கூல்கள் நடத்துகிறார்கள். ஆலயப்பிரவேசம் இருந்து இருந்தால் நாட்டுக்கோட்டை செட்டியார்கள் கதிதான் அவர்களும் அடைந்திருப்பார்கள். அதாவது ஏழை மக்களை சுரண்டவும் உலகுக்கு பயன் இல்லாமல் வாழவும் ஆயிருப்பார்கள். உங்களுக்கு ஆலயப் பிரவேசம் கிடைத்தால் நீங்களும் அந்த கதி அடைவதோடு என்றும் கீழ் ஜாதியாய் இருக்கப்போவது நிச்சயம். உங்களுக்கு பகுத்தறிவும் ஏற்படப்போவதில்லை. மனிதனுடைய முட்டாள் தனத்தை நிலை நிறுத்தவும் அயோக்கியர்களும் வஞ்சகர்களும் பிழைக்கவுந்தான் ஆலயங்கள் இருந்துவருகின்றன. ஆகையால் அதை நீங்கள் வன்மையாய் எதிர்க்க வேண்டும். நீங்கள் மதத்தையும், தெய்வத்தையும் அலட்சியம் செய்யவும் ஒழிக்கவும் ஆரம்பித்த பிறகே ஆலய விஷயத்தில் மேல் ஜாதிக்காரர்கள் என்பவர்கள் உங்களுக்கு அந்த உணர்ச்சியை ஊட்டி சிறிது இணங்கியும் வருகிறார்கள். அது உங்களை ஏய்க்கவே ஒழிய காப்பற்றவல்ல.

### கிறிஸ்து மதம்

அதுபோலவே தீயர்கள் கிறிஸ்து மதம் மாறுவது என்பதையும் நான் பலமாய் ஆட்சேபிக்கிறேன். தீண்டாதவர்கள் கிறிஸ்து மதம் மாறுவது என்பது குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்ளுவதேயாகும். கிறிஸ்து



RangaRakes tamilnavarasam.com

மதத்தால் தீண்டாமை ஒழியாது. அம்மதத்தில் இன்றும் தீண்டாதவர்கள் இருக்கிறார்கள். தீயர்கள் கிறிஸ்தவர்களானால் தீயர் என்கின்ற பெயர் சற்று நீளுமே ஒழிய அதாவது கிறிஸ்தவத் தீயர் என்றுதான் சொல்லப்படுமே யொழிய தீயர் என்கின்ற பெயர் போய்விடாது.

தனி சமுதாயமாய் இருப்பதன் மூலமும், மதத்தையும் தெய்வத்தையும் ஒழித்துவிடுவதன் மூலமும் தீண்டாமை ஒழியாது என்று கருதுகிறவர்கள் கிருஸ்து மதத்தில் சேருவதைவிட மகமதிய மதத்தில் சேருவது மேல் என்று சொல்லுவேன். அந்த மதத்தில் ஜாதி வித்தியாசமில்லை, அம்மதம் சிறிதாவது வீரமும் ஒற்றுமையும் உள்ள மதமாகும். சமூக வாழ்வில் உயர்வு தாழ்வு பேதம் கற்பிக்காத மதமாகும். உலகிலுள்ள மற்ற மதக்காரர்களை மிரட்டி நடுங்கச் செய்யும் மதமாகும்.

இந்து மதத்திலும் கிருஸ்துவமதத்திலும் உள்ள அளவு மூடநம்பிக்கையும், புரோகிதப்பிடுங்கல்களும் முஸ்லிம் மதத்தில் இல்லை. முஸ்லீம் சமூகம் பெருகினால் இந்து மத ஆதிக்கம் குறையும் - அரசியலிலும் சுதந்திரம் ஏற்படும். அரசாங்கமும் இந்துக்களும் முஸ்லீம்களைக் கண்டால் தான் பயந்து கொள்ளுகிறது. முஸ்லீம்களுக்கு அரசியலில் இரட்டைப்பங்கு கிடைத்திருப்பதின் காரணம் இதுவே. இந்துக்கள் கிளர்ச்சியை அரசாங்கம் லக்ஷியம் செய்வதில்லை. கிருஸ்தவர்களுக்கும் அரசாங்கம் பிச்சை கொடுப்பது போலவே உதவுகிறது. ஆனால் முஸ்லீம்கள் விஷயத்தில் அரசாங்கம் நடுங்குகிறது. காரணம் அவர்களது ஒற்றுமையும் கட்டுப்பாடுமேயாகும். ஆதலால் இந்து மதம் விட்டு வேறு மதத்துக்கு போக வேண்டுமானால் முஸ்லீம் மதமே மேலானது.

### சுயமரியாதை இயக்கம்

சுயமரியாதை இயக்கம் எந்த மதத்தையும் ஒப்புக்கொள்ளுவதில்லை. அது தெய்வத்தையும் ஒப்புக்கொள்ளுவதில்லை. இந்த கொள்கைகள் இன்று இந்தியாவில் சுயமரியாதை இயக்கத்தினிடம்தான் இருக்கிறது. ஆனாலும் தெய்வ நம்பிக்கையும் மத நம்பிக்கையும் உள்ளவர்களை அது புறக்கணிப்பதுமில்லை. பகுத்தறிவை உபயோகிக்க பூரண உரிமை கொடுக்கிறது. மூட நம்பிக்கை, குருட்டு பழக்க வழக்கம் ஆகியவைகளை ஒழிக்கவே அது பெரிதும் பாடுபடுகின்றது. இந்நாட்டில் உள்ள ஜாதிமத தெய்வ விஸ்வாசமற்ற தீய சமுதாயமும் சுயமரியாதை இயக்கமும் ஒன்றாக வேண்டும் என்றே ஆசைப்படுகிறேன். இங்கு ஆங்காங்கு சு.ம. இயக்க ஸ்தாபனங்களை ஏற்படுத்த வேண்டும்.

### அரசியல்

தாழ்த்தப்பட்டும், கொடுமைப்படுத்தப்பட்டும் இருக்கும் சமூகம் அரசியல் கிளர்ச்சியில் தலையிடக்கூடாது என்பதே எனது அபிப்பிராயம். எங்கள் நாட்டு அரசியல் செப்பிடு வித்தையேயாகும். ஒரு கூட்டத்தார் வயிற்றுப்பிழைப்புக்கும் ஆதிக்கத்துமாகவே அங்கு அரசியல் நாடகம் நடத்தப்படுகிறது.

இந்திய அரசியல் சர்வாதிகாரி தோழர் காந்தியாராவார். இவர் ஜாதி காப்பற்றுகிறவர் - வருணாச்சிரமம் காப்பாற்றுகிறவர், இந்து மதம் காப்பாற்றுகிறவர், தெய்வ கட்டளைப்படி நடப்பவர், ராமராஜ்ஜியம் கொண்டுவருபவர். இதன் பயனாகவே மகாத்மாவானவர். இவர் சர்வாதிகாரத் தன்மைக்கு உள்பட்ட அரசியலில் தாழ்த்தப்பட்ட கீழ்படுத்தப்பட்ட மக்களுக்கு கடுகளவு பயன் ஏற்படுமா? அவர் முயற்சியால் இதுவரை கடுகளவு பயனாவது ஏற்பட்டது என்று யாராவது சொல்ல முடியுமா?

இந்திய அரசியல் ஸ்தாபனத் தலைவர் பண்டித ஜவஹர்லாலை எடுத்துக்கொள்ளுங்கள். இவர் புஸ்தகப் பூச்சியேயாகும். புஸ்தகத்தில் படித்ததை ஒப்புவிப்பவர். காரியத்தில் அவருடைய ஞானம் தகப்பனாரையும் மனைவியாரையும் மோக்ஷத்துக்கு அனுப்ப அவர்களது எலும்புகளை கங்கையில் போட்டு சடங்கு செய்தவர். இவர்தான் சமதர்மவாதியாம்.

காந்தியார் ஜாதியைப் காப்பாற்றாவிட்டால் அவரது மகாத்மாப் பட்டம் பறந்துவிடும். பண்டித ஜவஹர்லால் எலும்பை கங்கையில் போடாவிட்டால் அவரது வீரப்பட்டம் பறந்துவிடும். பார்ப்பனர்கள் ஒருநாளில் இருவரையும் ஒழித்து சாதாரண ஆள்களாக ஆக்கிவிடுவார்கள்.

இந்த விளம்பர வேட்டை அரசியலில் நீங்கள் சிக்கினால் நசுங்குண்டு போவீர்கள் - நீங்கள் பிறர் பயன்படுத்திக் கொள்ளத்தான் ஆளாவீர்கள்.

### எதிரிகளோடு சேராதீர்கள்

அரசாங்கத்துக்கு எதிரியாய் இருப்பவர்களுடன் சேராதீர்கள். உங்களுக்கு வேண்டியது சமுதாய சுயமரியாதையேயாகும். அது அரசாங்கத்தாரால்தான் கொடுக்க முடியும். உங்களுக்கு உத்தியோகத்தில் பங்கும் வேண்டி இருக்கிறது. இந்த இரண்டிற்கும் அரசியல் ஸ்தாபனங்கள் காங்கிரசும் தேசீயமும் விரோதமானவை. ஆகவே அவை உங்கள் எதிரிகளாகும். அரசாங்கமோ இவ்விஷயங்களில் அனுகூலமாய் இருக்கிறது.

இன்றையதினம் தோழர் ஜவஹர்லால் அன்னிய அரசாங்கத்தை ஒழிக்க வேண்டுமென்று பேசுகிறார். அன்னிய அரசாங்கத்தை கூட்டி வந்தவர்கள் ஜவஹர்லால் ஜாதியார் என்பது அவர் அறியாததல்ல.

பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடம் ஜாதி மத விஷயங்களில் பிரவேசிக்கக் கூடாது என்று ஒப்பந்தம் வாங்கிக் கொண்டு சுதேச ராஜாக்களைக் காட்டிக் கொடுத்து துரோகம் செய்தவர்கள் ஜவஹர்லால் ஜாதியார்களேயாகும்.


RangaRakes tamilnavarasam.com

இப்பொழுதும் இந்த அரசாங்கத்தை ஒழிக்க முயற்சிப்பதின் காரணம் இந்த அரசாங்கம் ஜாதி மத விஷயத்தில் பிரவேசித்து சீர்திருத்தம் செய்ய புறப்பட்டதேயாகும்.

வரப்போகின்ற (கனவு காண்கின்ற) அரசாட்சியிலும் ஜாதிமதத்தைக் காப்பாற்றுவதாக ஒப்பந்தம் செய்து பார்ப்பனர்கள் பந்தோபஸ்து செய்து கொண்டார்கள். அதுதான் கராச்சிக் காங்கிரஸ் ஜீவாதாரமான உரிமையின் முக்கியாம்சமாகும். இதற்கு ஜவஹர்லால் மேலொப்பம் போட்டிருக்கிறார். இந்த மாதிரி புரட்டுகளுக்கு நீங்கள் ஆளாகாதீர்கள்.

எங்கள் நாட்டில் பல இழி மக்களுடைய நிலைமையும் கீழ்த்தர சுயநல மக்களுடைய நிலைமையும் பார்ப்பனர்கள் காலைக் கழுவி தண்ணீரைச் சாப்பிட வேண்டியிருப்பதால் அவர்கள் பார்ப்பனர்களுக்கு அடிமையாகவும் குலாம்களாகவும், அவர்களது மக்களாகவும் இருக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். உங்களுக்கு அந்த அவசியம் இல்லை. நீங்கள் ஜாதி, மதம், தெய்வம் ஆகியவைகளில் நம்பிக்கை அற்று உங்கள் சமுதாயத்துக்குள் அவர்களை தலைகாட்டாமல் அடிப்பதே உங்களுடைய உண்மையான சுதந்திரமாகும். அதுவே அரசியல் சுதந்திரமாகும். அதுவே முதல்தர சமதர்மமுமாகும்.

வாலிபர்களை நான் கேட்டுக் கொள்வதும், வாலிபர்களிடம் நான் எதிர்பார்ப்பதும் இதுதான். எந்தக் காரணம் கொண்டும் அரசியல் புரட்டிலும் காங்கிரஸ் செப்பிடு வித்தையிலும் கலந்து கொள்ளக் கூடாது என்பதே.

### திவான்

உங்கள் ஊர் திவானைப் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. நான் அதைப் பற்றிப் பேச ஆசைப்படவில்லை. ஒரு காரியம் மாத்திரம் சொல்லுகிறேன். திவான் சர். ஷண்முகம் அவர்கள் பெயரை நினைத்தாலே எங்கள் நாட்டுப் பார்ப்பனர் வயிற்றில் நெருப்புப் பற்றிக் கொள்ளுகிறது. அவர் ஒரு நாளைக்கு கவர்னர் ஆவார் என்பது பார்ப்பனர்களின் ஜோசியம். அதற்காக அவரை எப்படியாவது தட்டி விட வேண்டுமென்று கட்டுப்பாடாக பார்ப்பனர்கள் முயற்சிக்கிறார்கள். எங்கள் மாகாணத்தில் இரண்டு பேர் பார்ப்பனரல்லாதார் கவர்னராகி விட்டார்கள். ஒரு ''சாயபும் ஒரு நாயுடுவும்'' கவர்னராகிவிட்டார்கள். ஒரு ''செட்டியாரும்'' ஆகக்கூடும். இந்த ஸ்தானம் பார்ப்பனருக்கு கிடைக்கவில்லை, இனி கிடைப்பதும் லேசான காரியமல்ல. ஆதலால் அவர்கள் இந்த விஷமம் செய்து அவர் பெயரைக் கெடுக்க தமிழ்நாட்டிலிருந்து பார்ப்பன சக்தி இங்கு வந்து வேலை செய்கிறது. அவரது அரசியல் நிர்வாகம் எப்படியிருந்தாலும் அதைப் பற்றி நான் சிபார்சு பேசவில்லை. ஆனால் அவரது சமூக விஷயமான நிர்வாகம் உங்களுக்கு மிகவும் அனுகூலமானதாகவே இருக்கும். அதற்கு ஆகவே அவர் இங்கு அவர் தகுதிக்கு மிகவும் சிறியதான இந்த வேலையில் இருக்கிறார்.



ஆதலால் அது விஷயத்திலும் நீங்கள் பார்ப்பனர்களுடனோ மேல் ஜாதிக்காரர்கள் என்பவர்களுடனோ சேர்ந்து உங்களந்தஸ்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். அவருக்கு இங்கு இருக்கப்பிரியமில்லை. அவர் தன் தகுதிக்கு ஏற்ற மேல் உத்தியோகத்தில் கண் வைத்து கொண்டிருக்கிறார். சீக்கிரம் போய் விடக்கூடும். அதற்குள் குறைகளை நீக்கிக் கொள்ள முயற்சியுங்கள்.

*குறிப்பு:- கொச்சி சமஸ்தானத்தில் தீய வாலிபர் சமாஜங்கள் சார்பாக 19.04.1936 ஆம் நாள் எர்ணா குளத்தில் நடைபெற்ற தீய வாலிப சங்க 4 ஆவது மாநாடு, 20.04.1936 ஆம் நாள் ஒச்சன் துருத்தியில் நடைபெற்ற பொதுக்கூட்டம், 21.04.1936 ஆம் நாள் சேத்தன்மங்கலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம், 22.04.1936 ஆம் நாள் கிராங்கனூரிலும் திருச்சூரிலும் நடைபெற்ற பொதுக்கூட்டம் இவற்றில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.*

**குடி அரசு - சொற்பொழிவு - 26.04.1936**



RangaRakes tamilnavarasam.com

# பாண்டியன் – ராமசாமி அறிக்கை

## திருச்சியில் கூட்டம்

26-1-36ந் தேதி குடி அரசில் வெளியான பாண்டியன் - ராமசாமி அறிக்கையின் படி கூட்டப்படவேண்டிய கூட்டம் மே மாதம் 3-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை திருச்சியில் கூட ஏற்பாடு செய்திருக்கும் விஷயம் முன்னமேயே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி அக்கூட்டம் 3-5-36ந் தேதி திருச்சியில் தோழர்கள் டி.பி. வேதாசலம், கே.எ.பி. விஸ்வநாதம் ஆகியவர்கள் முயற்சியில் தென்னூர் பழனிச்சாமி பிள்ளை பங்களாவில் கூட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டம் ஒரு கூட்டத்தாருக்கு முக்கியமானதொரு கூட்டம் என்பதைப் பற்றி நாம் விவரிக்க வேண்டியதில்லை. பார்ப்பனரும் பார்ப்பனக் கூலிகளும் இதை பரிகசிக்கக்கூடும். அது அவர்களது ஜாதிப்புத்தியும் இழி சுபாவமுமாகும்.

பார்ப்பனரல்லாதார் சமூக முன்னேற்றத்திற்கு என்றே ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சியானது இந்த 20 வருஷ காலமாக தென் இந்தியாவில் எவ்வளவோ வேலை செய்து வந்திருக்கிறது. சமூகத் துறையில் இதுவரை எந்தக் கட்சியாரும் எந்த தனிப்பட்ட பெரியாரும் எந்த அரசாங்கமும் செய்திருக்காத - செய்ய நினைக்கவும் இல்லாத அளவு காரியங்களைச் செய்து ஒரு புரட்சியை உண்டாக்கி இருக்கிறது.

அதாவது இந்த பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தின் பயனாக பார்ப்பனரல்லாத சமூகத்தைச் சேர்ந்த மக்கள் கல்வி, உத்தியோகம், அரசியல், சமூக இயல்களில் சம்மந்தம் சில சந்தர்ப்பங்களில் ஆதிக்கம் முதலாகியவைகளில் முன்னேற்றம் அடைந்திருப்பதோடு பார்ப்பனரல்லாத மக்கள் என்று ஒரு சமூகம் தென்னிந்தியாவில் அனாமதேயமாய், அடிமையாய், இழிஜாதியாய், மிருகங்களிலும் கேவலமாய், மிருகப் பிராயமாய் இருந்தது மாறி இன்று அவர்களும் ஒரு சக்தியுள்ள மக்களாய் சுயமரியாதையில் உணர்ச்சி உள்ளவர்களாய் இருந்து வருகிறார்கள் என்று இந்தியாவுக்கும் உலகத்துக்கும் எடுத்துக் காட்டும்படி செய்திருக்கிறது.

சுருங்கச் சொல்ல வேண்டுமானால் பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்று ஒன்று ஏற்பட்டு இந்த 20 வருஷ காலமாய் இந்த நாட்டில் இவ்வளவு வேலை செய்திருக்கவில்லையானால் இன்று அரசாங்கத்திலோ, காங்கிரசிலோ, ஜஸ்டிஸ் கட்சியிலோ, சுயமரியாதை இயக்கத்திலோ, அல்லது ஸ்தல ஸ்தாபனங்களிலோ மற்றும் வேறுபல காரியங்களிலோ விளம்பரம் பெற்றும், பிரபலம் பெற்றும், ஆதிக்கம் பெற்றும் இருக்கும் பார்ப்பனரல்லாதார்கள் இன்றுள்ள இந்த நிலைமையில் இருந்திருக்க முடியுமா என்பதைக் கவனித்தால் அக்கட்சியின் பெருமையும் அது செய்துள்ள வேலையும் விளங்கும். உண்மையாகவே இன்று பார்ப்பனரல்லாதார் இயக்கம் இல்லையானால் இன்று தேச பக்தர்களாய் சுயமரியாதை வீரர்களாய், தாழ்த்தப்பட்ட சமூகத் தலைவர்களாய், சமதர்ம அபிமானிகளாய், பார்ப்பனரல்லாத சமூக பிரமுகர்களாய் பல துறைகளில், மேதாவிகளாய் இருந்து வரும் தோழர்களில் 100-க்கு 90 பேர்கள் (காந்தியார் இஷ்டப்படி அவரவர் வர்ணாச்சிரமத் தொழில் - பாரம்பரியமான தொழில் செய்ய வேண்டும் என்பது போல்) தாலூக்கா சேவகத்திலும் போலீசு கான்ஸ்டேபிளாயும், வாத்தியக்காரராயும், பறை அடிப்பவர்களாகவும், பாதரக்ஷை உற்பத்திக் காரராகவும் உப்பு மிளகாய் பேரீச்சம்பழம் உருண்டை தட்டம் விற்பவராகவும், தூதுவர்களாகவும், கை வண்டி, ரிக்ஷா வண்டி சாரதிகளாகவும் மற்றும் இப்படிப்பட்ட பல தொழில்காரர்களாகவும் இருந்து கொண்டு பார்ப்பானை பூஜித்து அவன் எச்சிலையை சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்க வேண்டும் என்பதை ஒழிக்காமலும் சிறிதும் தளர்ச்சி இல்லாமலும் அழுத்தம் திருத்தமாய் எடுத்துரைப்போம்.

இதற்கு என்ன ஆதாரம் என்று யாராவது கேட்பார்களேயானால் அதற்கு ஒரே ஒரு பதில்தான் சொல்லுவோம்.

அதாவது முதலிலே சொல்லப்பட்ட ஆட்கள் அல்லது இவர்களுக்கு (ஞாபகத்துக்கு வராத வரையில்) முன் உள்ள இவர்களது பல தலைமுறை முன்னோர்கள் என்ன காரணத்தால் என்ன தொழிலில் எப்படி வாழ்ந்து வந்தார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள் என்பதேயாகும்.

அப்படிப்பட்ட நிலையும் நிர்ப்பந்தமும் உள்ள மக்களின் சமூகத்துக்கு என்று ஏற்பட்ட இயக்கம் இந்த 20 வருட காலமாய் தனது வேலையை கூடிய வரையில் தைரியமாக செய்து வந்திருக்கிறது என்பதை நாம் முதலில் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

அப்படிப்பட்ட இயக்கம் இன்று சிறிது தளர்ச்சி அடைந்திருக்கிறது. சிறிது செல்வாக்கும் குறைந்து வருகிறது. பொது ஜனங்களிடத்தில் ஒரு அளவுக்கு அசூயையும் வெறுப்பையும் கூட பெற்று வருகிறது. இருந்தாலும் இவை யெல்லாம் எப்படிப்பட்ட இயக்கத்துக்கும் ஒவ்வொரு சமயங்களில் ஏற்படுவது இயற்கையேயாகும். அதிலும் ஒரு புரட்சிகரமான - மக்களின் சுயநலத்துக்கு ஏற்பட்ட கொள்கைகளுக்கு விரோதமான இயக்கத்துக்கு எதிர்ப்பும் தொல்லையும் தளர்ச்சியும் ஏற்படுவது ஒரு நாளும் அதிசயமாகாது.



RangaRakes tamilnavarasam.com

ஏனெனில் எப்படிப்பட்ட இயக்கமும் மக்களால் தான் நடத்தப்பட வேண்டியதாகும், மக்கள் யோக்கியதை சராசரி - பெரும்பாலும் எப்படிப்பட்டது என்பது நாம் அறியாததல்ல.

தனி உடைமை உலகில் - தனிப்பட்ட மக்கள் தங்கள் சுயநலத்துக்கு தனிப்பட்ட உணர்ச்சியாலேயே போட்டியோடு வாழும் முறை கொண்ட உலகில் கொள்கை, ஒழுக்கம், நீதி, நன்றி ஆகிய காரியங்களை எதிர்பார்ப்பது நெருப்பு குளிர்ந்திருக்க வில்லையே என்று விசனப்படும் முட்டாள் தனத்துக்கே ஒப்பானதாகும்.

ஆகவே இதுவரையிலாவது இந்த இயக்கம் எப்படி இந்த 20 வருஷமாய் வாழ்ந்து வந்தது என்றுதான் ஆச்சரியப்பட வேண்டுமே யொழிய இந்த 20-வது வருஷத்தில் ஏன் இப்போது மாத்திரம் தளர்ச்சி அடைந்து விட்டது - செல்வாக்கு குறைய நேரிட்டு விட்டது என்று யாரும் ஆச்சர்யப்பட வேண்டியதில்லை.

ஆதலால் இப்போது அவ்வியக்கத்தில் பிரதான்யம் சம்பாதித்துக் கொண்ட சிலரின் துரோகத்தால் - அலட்சியத்தால் - நன்றி கெட்ட தனத்தால் அவ்வியக்கம் தளர்வுற்றதானால் மற்ற மக்கள் அதைப் பார்த்து சிரித்துக் கொண்டு குறை கூறிக் கொண்டு இருப்பது என்றால் அது துரோகம் செய்த மக்களின் இழி செய்கையை விட மோசமான செய்கை - இழிவான செய்கை என்றே சொல்லுவோம்.

மேலே சொன்ன பிரமுகர்களான துரோகக்காரர்கள் துரோகம் செய்தாலும் அவ்வியக்கத்தில் இருந்து கொண்டே இருக்கிற அளவுக்காவது அவர்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவ்வியக்கத்தினாலேயே மனிதன் என்று மற்ற மக்களின் ஞாபகத்துக்கு வரவேண்டியவனாகி பின்பு அவ்வியக்கத்துக்கும் தனக்கும் சம்மந்தமில்லை என்று சொல்லி வெளியில் இருந்து கொண்டு வையும் பார்ப்பனரல்லாதார்கள் அதைவிட மோச மானவர்களாகவும் இழி பிறவிக்காரர்களாகவும் தான் மதிக்கப்பட வேண்டியவர்களாவார்கள். இப்படிப்பட்ட ஜனங்களில் அதாவது இன்று ஜஸ்டிஸ் கட்சியை குறைகூறும் மக்களில் 100-க்கு 99 பேர்களுடைய தனிப்பட்ட யோக்கியதையும் நாணயமும் அவர்களது ''ஜாதகமும்'' ''முன் பின் ஜன்மமும்'' நாம் அறியாததல்ல.

ஆகையால் இப்படிப்பட்ட இரண்டு கூட்டத்தின் துரோகத்தையும், நன்றி கெட்ட தனத்தையும், தொல்லையையும் சமாளித்து அந்த அதாவது பார்ப்பனரல்லாத இயக்கத்தை தற்காலம் உள்ள நிலையிலிருந்து தப்புவிக்கச் செய்து - காப்பாற்றி அது முன் ஜனங்களுக்கு செய்து வந்த நன்மையை மறுபடியும் செய்யும்படியாகச் செய்வதற்கே மேற்குறிப்பிட்ட 3-5-36ந் தேதி கூட்டம் கூட்டப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்ளவே இவற்றை எழுதுகிறோம்.



இந்த பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்கும் சுயமரியாதை இயக்கத்துக்கும் உள்ள சம்மந்தத்தையும், சம்மந்தமும் தொடர்பும் இருக்க வேண்டிய அவசியத்தையும் இதற்கு முன் பல தடவை நாம் விளக்கி இருக்கிறோம். ஒன்றையொன்று நேசிக்காவிட்டாலும் ஒன்றில்லாமல் ஒன்று வாழ்வது கஷ்டம் என்றும், அதாவது அவற்றின் கொள்கைகள் நிறைவேறப் பெறுவது அசாத்தியம் என்றும் தெரிவித்து வந்திருக்கிறோம்.

ஜஸ்டிஸ் கட்சியில் பலர் சுயமரியாதைக் கட்சியை வெறுக்கலாம், தூற்றலாம். ஆனால் இவர்களின் யோக்கியதை, நாணயம் அவர்களது பார்ப்பனரல்லதார் உணர்ச்சி நன்றியறியும் தன்மை லட்சியம் முதலியவை நாமும் பொது ஜனங்களும் நன்றாய் அறியாததல்ல.

அதுபோலவே சுயமரியாதைக்காரர்களிலும் சிலர் ஜஸ்டிஸ் கட்சியை வெறுக்கவும் சிலர் தூற்றவும் செய்யலாம். அதிலிருப்பது தங்களுடைய சுயமரியாதைக்கு கேடு என்றுகூட சொல்லலாம். அவர்களுடைய - அப்படிப்பட்டவர்களுடைய யோக்கியம், லக்ஷியம், நாணயம், வாழ்க்கையின் முன்பின் நிலை, பொறுப்பு, நன்றி அறியும் தன்மை, நடத்தையில் உள்ள கொள்கை முதலிய வெகு சங்கதிகளும் நமக்கும் பொது மக்களில் பலருக்கும் தெரியாததுமல்ல.

இந்த இரு கூட்டங்களின் வாழ்வுக்கு ஆகவே ஜஸ்டிஸ் கட்சியும் சுயமரியாதை இயக்கமும் தோன்றவில்லை. இது இழிவு படுத்தப்பட்ட கொடுமைபடுத்தப்பட்ட கோடிக்கணக்கான மக்களின் நன்மைக்கு ஆகவே - அவர்களின் மனிதத் தன்மைக்காகவே தோன்றி இரவும் பகலும் அதற்காக உழைத்து வரும் மக்களாலும், இயக்கங்களின் பேரால் எவ்வித சுயநலமும் வாழ்க்கை மார்க்கமும் தேடாத மக்களாலும் துவக்கப்பட்டு அதற்கு ஆகவே உயிர் வாழ்ந்து அதற்கு ஆகவே ஜீவனையும் வாழ்க்கையையும் தத்தம் செய்யும் ஆட்களின் முயற்சியாலேயே வாழ்ந்து வருகிறது.

ஜஸ்டிஸ் கட்சியும் சுயமரியாதைக் கட்சியும் ஒன்று சேரக் கூடாது என்று சொல்லியும், அவற்றை தனித்தனியே குற்றம் கூறியும் பிரசாரம் செய்தும் வரும் மக்கள் இரண்டு கூட்டத்திலும் இருப்பதானாலும் பொதுவாக பார்ப்பனரல்லாத அதாவது சமூகத்திலும் அரசியலிலும் பொருளாதாரத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களின் நன்மைக்கு ஆக உழைக்க வேண்டும் என்கின்றவர்களும் - தங்கள் ஓய்வு நேரங்களிலாவது குஷாலுக்கு ஆக இந்த வார்த்தை பேச வேண்டும் என்று கருதுகிறவர்களும் மற்றும் தாங்கள் சுகபோகங்களுக்கு இப்படிப்பட்ட இயக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றாவது நினைக்கிறவர்களும் ஆகிய எல்லோரும் இந்த சமயத்தில் சற்று கவலை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாம் மிகவும் வணக்கமாய் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

இயக்கத்தில் முக்கியமாய் உழைக்க வேண்டியவர்களும் அதன் பொறுப்பை வகிக்கவேண்டியவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதைப்



RangaRakes tamilnavarasam.com

பற்றி 25-1-36ந் தேதி அறிக்கையில் தோழர்கள் பாண்டியனும் ராமசாமியும் விளக்கி இருக்கிறார்கள். ஆதலால் குறிப்பிட்ட மே மாதம் 3-ந் தேதி ஞாயிற்றுக் கிழமையன்றைக்கு தென்னாட்டில் ஒவ்வொரு இடத்திலும் இருக்கிற - பார்ப்பனரல்லாதார் இயக்கத்திலும், சுயமரியாதை இயக்கத்திலும் அன்பும் கவலையும் கொண்ட மக்கள் பலர் திருச்சிக்கு வந்து நம் முன்னணி வேலையையும் பிரசார முறையையும் விளக்கி வகுத்து தொடர்ச்சியாய் காரியம் செய்ய உதவி அளிக்கவேண்டுமாய் வேண்டிக் கொள்கிறோம். கண்ணியமாய் அபிப்பிராய பேதமுள்ள தோழர்களை நாம் சிறிதும் குறைகூற முன்வரவில்லை என்றாலும் அவர்களுடைய கண்ணியமான தொல்லையில் இருந்து இவ்வியக்கங்கள் பாதுகாக்கப்படவேண்டிய முயற்சியை நாம் எடுத்துக் கொள்ளலாமல் இருக்க முடியாது என்பதை தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

கடசியாக நம் அதாவது பார்ப்பனரல்லாத வாலிபர்களுக்கு நாம் ஒன்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகின்றோம். வாலிபப் பருவம் அபாயகரமான பருவம். சுலபத்தில் நெருப்புப் பற்றிக் கொள்ளக்கூடிய வஸ்துப்போல் மிக பத்திரமாய் காப்பாற்றப்பட வேண்டிய பருவம். அப் பருவத்தை பொறுப்பற்ற, பயனற்ற, சுயநல, நிலையற்ற, தற்கால விளம்பர காரியங்களுக்கு அடிமைப் படுத்தி விடாமலும் பின்னால் சலிப்பும் துக்கமும் படவேண்டிய காரியங்களுக்குப் பந்தகப்படுத்தி விடாமலும் நன்றாய் ஆய்ந்து ஓய்ந்து பார்த்து அவசியமானதும் நிலையானதும், காரியத்தில் செய்யவும் பயனளிக்கவும் கூடியதுமான காரியத்துக்குப் பயன்படுத்த வேண்டுகிறோம்.

புதிய சீர்சிருத்தம் என்பது வெறும் உத்தியோகமயமும் பதவி மயமுமேயாகும். இந்நிலையில் பார்ப்பனரல்லாத ஏழை மக்கள் தொழிலாளி மக்கள் முதலியவர்களிடமிருந்து அரசியல் பேரால் கோடிக்கணக்காய் பொருள் பறித்து நாட்டுக்கு சமூகத்துக்கு யாதொரு பயனும் இல்லாத புல்லுருவி போலும் சமூகத்தை அழிக்கும் க்ஷயரோகக் கிருமி போலும் வாழ்ந்து வரும் பார்ப்பன சமூகமும் அவர்களது கால்களை அலம்பிக் குடித்து உயிர் வாழும் அவர்களது அடிமைகளும் அனுபவிக்கவும் வாழவும் விட்டு விட்டு அதைப் பார்த்துக் கொண்டு உயிர் வாழ்வது போன்ற இழி நிலையும் சுயமரியாதை அற்ற தன்மையும் உலகில் வேறு இல்லை என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

பார்ப்பனரல்லாதாரின் ஒவ்வொரு குடும்பத்திலும் இன்று 2,3,4 பிள்ளைகள் படிக்கின்றன. வயிற்றைக் கட்டி, வாயைக்கட்டி, வாழ்கையைச் சுருக்கி பிள்ளைகள் படிப்பிக்கப்படுகின்றன. எல்லாம் ஒரே ஒரு அதாவது அது சரியாய் இருந்தாலும் தப்பாய் இருந்தாலும் உத்தியோகம் என்னும் ஒரே ஒரு காரியத்தை உத்தேசித்தே (100க்கு 90 பிள்ளைகள்) படிப்பிக்கப்படுகின்றன.



இன்று இப்படிப்பட்ட குடும்பக்காரர்கள் தேசாபிமானம் - சமதர்ம வீரம் என்னும் பேர்களால் அவற்றின் போதையால் பார்ப்பனர்களே சீர்திருத்தத்தில் உள்ள உத்தியோகம் பதவி, அதிகாரம் ஆகிய எல்லாவற்றிலும் ஆதிக்கம் செலுத்த இடம் கொடுத்து விட்டால் பிறகு இக்குழந்தைகள், இக் குடும்பங்கள் இவர்களது பின் சந்ததிகள் ஆகியவைகளின் யோக்கியதை என்ன ஆவது என்பதையும் இச் சமூகம் மறுபடியும் தலையெடுக்க எத்தனை காலம் ஆகும் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

ஆகையால் ஒவ்வொரு முக்கிய பட்டணங்களில் ஸ்தலங்களில் உள்ள முக்கிய கவலை உள்ளவர்கள் ஒவ்வொருவரும் திருச்சி கூட்டத்திற்கு வர வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறோம்.

இக் கூட்டம் நடைபெறுவதற்கு திருச்சி தோழர்கள் கே.ஏ.பி. விஸ்வநாதம் அவர்களும், டி.பி.வேதாசலம் அவர்களும் வேண்டிய முயற்சி எடுத்துக் கொண்டு அவற்றிற்கு ஆன உதவி செய்து வருவதை நாம் மனமாரப் பாராட்டுவதோடு நமது நன்றி அறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 26.04.1936**



RangaRakes tamilnavarasam.com

# தோழர் டி.வி. பிரிவு

ஜஸ்டிஸ் கட்சி ஊழியர்களில் தலை சிறந்தவரான தோழர் டி.வி. சுப்பிரமணியம் சென்ற 21ந் தேதி செவ்வாய்க்கிழமை இரவு 9.20 மணிக்கு சென்னையில் காலமானதை யறிந்து வருந்துகிறோம். ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பமான நாள் முதல் இறக்கும் வரை கட்சிக்கு இடையறாத தொண்டாற்றியவர்களுள் தோழர் டி.வி.யும் ஒருவர். கட்சிக்கும் தனக்கும் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்த காலத்தும் அவர் கட்சியைக் காட்டிக் கொடுக்கவில்லை; கட்சியை விட்டுப் பிரியவுமில்லை. வசைமாரியையும், கல்மாரியையும், மண்மாரியையும் பொருட்படுத்தாமல் மேடையேறி வீரமுழக்கம் செய்வதற்கு அவருக்கு இருந்தது போன்ற நெஞ்சழுத்தம் அதிகப் பேருக்கு இருக்க முடியாது. கட்சிப்பிரசாரம் செய்ய தீரமும் திறமையும் உடைய ஊழியர்கள் ஏராளமாகத் தேவைப்படும் இக்காலத்தில் அவரது பிரிவு கட்சிக்கு நஷ்டமேயாகும்.

**குடி அரசு - இரங்கற் செய்தி** - 26.04.1936

# கிராமப் புனருத்தாரணப் புரட்டு

இப்பொழுது காங்கிரஸ்காரர்களும் சிறப்பாக காந்தியார், ஜவகர்லால் பண்டிதர் முதலியவர்களும் புதிய மார்க்கம் ஒன்று கண்டுபிடித்து இருக் கிறார்கள். தீண்டாமை, மதுவிலக்கு, இந்து முஸ்லீம் ஒற்றுமை, கதர் ஆகிய காரியங்கள் சுயராஜ்ஜியத்துக்கு மார்க்கம் என்று சொன்னவைகள் இப்பொழுது மக்களின் பகுத்தறிவு என்னும் சண்டமாருதத்தில் சிக்கி சின்னா பின்னப்பட்டுப் போயிற்று. இனி இவைகளின் பேரால் மக்களை ஏய்க்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. புதிய வழி அதாவது தீண்டாதவர்கள் முன்னேற்றம் என்பதும் ஒரு 20, 30 லக்ஷம் ரூபாய் சம்பாதிக்க முடிந்ததே ஒழிய மற்றபடி அது தீண்டாதவர்கள் இந்து மதம் விட்டு வேறு மதம் புகவேண்டியதுதான் மார்க்கம் என்னும் நிலைக்கு வந்துவிட்டது. இப்போது பார்ப்பனர்களுக்கு சமதர்ம வீரர் என்னும் பண்டித ஜவஹர்லால் நிழலில் வாழவேண்டியதைத் தவிர வேறு மார்க்கம் இல்லாமல் போய்விட்டது என்றாலும் புதிய முறையில் மக்களை ஏமாற்ற **கிராமப் புனருத்தாரணம்** என்கின்ற ஒரு புரட்டைக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அப்புரட்டை வெளியாக்க எழுதிய ஒரு வியாசம் அளவுக்குமேல் பெரியதாக ஆகி விட்டதால் அதை மே மாத பகுத்தறிவில் சுமார் 40 பக்கமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஆகவே மே மாத பகுத்தறிவை 10 பாரங்களாகப் பிரசுரித்திருக்கிறோம். ஆகையால் குடி அரசு சந்தாதாரர்கள் அபிமானிகள் ஒவ்வொருவரும் மே மாத பகுத்தறிவு பத்திரிகை ஒன்று வாங்கி வாசிக்க விரும்புகிறோம். அது ஒரு பெரிய ஆராய்ச்சி வியாசமாகும்.

ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டியதுமாகும்.

**குடி அரசு - வேண்டுகோள்** - 26.04.1936



RangaRakes tamilnavarasam.com

# மனித சமூக உறவு முறை

மக்கள் சமூகத்தில் சொந்தம் பாராட்டவும், சொத்துக்கள் அனுபவிக்கவும், கலவிகள் செய்யவும், உறவு முறை என்பதாக ஒரு நியதி ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

அந்நியதிக்கு எவ்வித கொள்கையும், ஆதாரமும் இல்லாமலும் உலகமெங்குமுள்ள மனித சமூகத்தில் ஒரே விதமான உறவு முறை அனுஷ்டிக்கப்படாமலும், தேசாச்சாரம், ஜாதியாச்சாரம், மதாச்சாரம், பழக்கம், வழக்கம் என்கின்ற பலவகையான மார்க்கத்தைப் பின் பற்றியே உறவு முறைகள் கையாளப்படுகின்றன; யாதொரு நியாயமும் காரணமும் சொல்லப்படாமலே பின்பற்றப்படுகின்றன. அவ்வளவோடு மாத்திரமல்லாமல் இம்முறைகள் சிறிதும் தவறாமல் மிகவும் ஜாக்கிரதையாய் கையாளப்பட வேண்டும் என்கின்ற நிர்ப்பந்தங்களுக்கும் ஆளாகியிருக்கின்றன.

ஆகவே, இவைகளையெல்லாம் பார்த்தால் உறவு முறைகள் என்பது அர்த்தமற்ற பழக்க வழக்கத்தில் கட்டுப்பட்டதாகவும், குருட்டு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகவுந்தான் காணப்படுகின்றனவே தவிர அவசியங்களை அறிந்து கொண்டதாகக் கருத முடியவில்லை.

உதாரணமாக, சகோதரர்கள் விஷயத்தில், ஆண் சகோதர உறவுக்கு ஒரு முறையும், பெண் சகோதர உறவுக்கு ஒரு முறையும் கையாளப்பட்டு வருகிறது. ஆண் சகோதரன் வயிற்றில் பிறந்த குழந்தைகளை தங்கள் தங்கள் குழந்தைகளாகவும், பெண் சகோதரி வயிற்றில் பிறந்த குழந்தைகளைத் தாங்கள் கலியாணம் செய்யத் தக்க பந்தத்துவம் உடையவர்களாகவும் இந்துக்களில் பெரும்பாலோர் கருதுகிறார்கள்.

முஸ்லீம் சமூகத்திலோ பெண் சகோதரி மகளை கலியாணம் செய்து கொள்ளுவது தகாது என்றும், சிறிய தகப்பனார், சிறிய தாயார் பெண்ணைக் கலியாணம் செய்வது தகும் என்றும் கருதப்படுகிறது.

சில சமுகங்களில் ஒரு வித ரத்தக் கலப்பும், முன் சம்பந்தமும் இல்லாதிருந்தாலும் குலங்கள் பெயரையும், கோத்திரங்கள் பெயரையும் பார்த்துக் கொண்டு அதன் பேரிலேயே கலவிக்கு - கலியாணத்துக்கு முறைகள் வைத்துக் கொள்ளப்படுகின்றன.

கிருஸ்துவர்கள் சமுக உறவுமுறை என்பதும் எவ்விதக் கட்டுப் பாட்டுக்கும் உடன்படாமல் கண்மூடித்தனமாய் ஏதோ ஒரு முறையைப் பின்பற்றப்படுவதாய் இருக்கின்றது.



வேறு நாடுகளில் தன் கூடப் பிறந்த சகோதரிகளையே, அதாவது சயாம் தேசத்தில் ஆரிய மதத்தைப் பின் பற்றுகின்ற அரசர்கள் தன் கூடப்பிறந்த தங்கையையே மணந்து கொண்டு கலவி செய்கிறார்கள். பவுத்த ராமாயணத்தில், ராமனுக்குச் சீதை உடன் பிறந்த தங்கை என்றும், அக்காலத்தில் ஆரியர்களில் ஒரே தாய் தகப்பன் வயிற்றில் பிறந்த அண்ணன் தங்கைகள் கலியாணம் செய்து கொள்ளும் வழக்கம் இருந்த தென்றும், அதை அனுசரித்தே தான் இப்போது சயாம் தேசத்தில் நடந்து வருகிறதென்றும் அறியக்கிடக்கின்றது.

மலையாள தேசத்தில் சில பாகங்களிலும், திபேத்து தேசத்திலும் ஒரு பெண் பல புருஷருக்கு மனைவியாய் இருக்கும் வழக்கம் இருந்து வருகிறது. நம்நாட்டில் ஒரு புருஷன் பல ஸ்திரீகளைக் கலியாணம் செய்து கொள்ளுகிறான்.

சில ஜாதிகளில் ஒரு குடும்பத்தில் மகனுக்குக் கட்டப்பட்ட பெண் தகப்பனுக்கும், கலியாணம் செய்து கொண்டவனுடைய மற்ற சகோதரர் களுக்கும் கலவிக்குரிய ஸ்திரீயாகக் கருதப்படுகிறாள்.

நம் நாட்டில் தாசி ஜாதி என்பவர்களிலும், மலையாளத்தில் நாயர் ஜாதி என்பவர்களிலும் குடும்ப சொத்துக்குப் பெண்களே உரிமையானவர்களாக இருக்கிறார்கள். மற்ற சமூகங்களில் குடும்ப சொத்துக்குப் பாத்தியஸ்தர்கள் ஆண்பிள்ளைகள் மட்டுந்தான் என்று கருதப்படுகின்றது.

இஸ்லாம் சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சொத்துரிமை அளிக்கப்பட்டு, பங்கில் வித்தியாசம் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பியர்களிலும் உறவு முறை, கலியாண முறை ஆகியவைகளில் இந்தியாவைவிட பல மாறுதல்களும் பல தலை கீழ் முறைகளும் இருக்கக் காண்கின்றோம். அத்தை மக்கள், சிற்றப்பன் மக்கள் ஆகியவர்களை ஒரே மாதிரியாக ('நெவ்யூ' - 'நெய்ஸ்')ப் பாவிக்கிறார்கள். அதுபோலவே சகோதரன் மக்களுக்கும், சகோதரி மக்களுக்கும் ஒரேவிதமான உறவு முறை கொண்டாடுகிறார்கள். அழைக்கும் முறையிலும் ஒரே முறை வைத்துத்தான் அழைக்கிறார்கள்.

சில தேசங்களில் பெண்கள் பாடுபட்டு சம்பாதித்து ஆண்களுக்குப் போடுகிறார்கள். அத்தேசங்களிலுள்ள ஆண்கள், இங்குள்ள பெண்களைப்போல, அலங்காரம் செய்துகொண்டு, பெண்களுடைய போகப் பொருளாய் வீட்டில் இருக்கிறார்கள்.

சில விடங்களில் விபசாரத்தனத்துக்காக பெண்களை நீக்கி வைக்கிறார்கள். வேறு சில விடங்களில் அதே போன்ற விபசாரத்தனத்துக்காக ஆண்களை நீக்கி வைக்கிறார்கள். சில விடங்களில் ஆண்கள் விபசாரத்தனத்தை குற்றமாகப் பாவிப்பதில்லை. இன்னுஞ் சில விடங்களில் பெண்கள் விபசாரத்தனமே குற்றமாகப் பாவிக்கப்படுகிறது. மற்றுஞ் சிலவிடங்களில் விபசாரத்தனம்



RangaRakes tamilnavarasam.com

எவ்வளவு இருந்தாலும் அதைப்பற்றிய பேச்சே யில்லாமல் இருந்து வருகிறது. சில வகுப்பார்கள் பெண்களைக் கலியாணமே செய்து கொள்வதில்லை.

சிலர் புருஷன் செத்தால் அதிகமாக அழுகிறார்கள்; ஆனால் பெண்சாதி செத்தால் அதிகமாகத் துக்கப்படுவதில்லை. வேறு சிலர் மனைவி செத்தால் அதிகமாக அழுகிறார்கள் புருஷன் செத்தால் அதிகமாகத் துக்கப்படுவதில்லை. அது போலவே சிலர் ஆண் குழந்தை செத்தால் அதிகமாக அழுகிறார்கள்; வெகு நாளைக்கு விசனப்படுகிறார்கள். ஆனால் அங்கு பெண் குழந்தைகள் மரணத்துக்கு அதிகம் கவலைப்படுவதில்லை. சில விடங்களில் பெண் குழந்தைகள் மரணத்துக்காக அடைகிற விசனமும் துக்கமும் ஆண் குழந்தைகள் சாவை முன்னிட்டு அவ்வளவாக அடைகிறதில்லை. பொதுவாய் சாவுக்காக துக்கப்படுவது என்பது பெரும்பாலும் வயது நிலைமை, இறந்தவர்களால் தங்களுக்கு ஏற்பட்ட - ஏற்படும் - பலாபலன் முதலியவைகளைப் பொருத்தே உண்டாவதாகயிருந்து வருகிறது.

ஆகவே கலவிக்கும், துக்கத்துக்கும், விபச்சாரத்துக்கும் சொத்துக்கும், கலியாணத்துக்கும் அகில உலக மனித சமூகம் முழுமைக்கும் பொருந்தும் படியான ஒரு முறையோ, வரையறையோ, காரண காரியங்களோ பொதுவாய் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

பழைய சரித்திரம் ஒன்றில், ஒரு தேசத்து அரச முறையில் அந்த அரசனுடைய (ராணி) பெண்சாதி இறந்துவிட்டால் உடனே அந்த அரசனின் மகள் ராணி (மனைவி)யாக ஆகிவிடுகிறாள் என்றும், அரசன் இறந்து விட்டால் உடனே மகன் ராஜ (புருஷ)னாக ஆகி விடுகிறான் என்றும், உண்மையான புருஷன் மனைவியாக ஆகிவிடுகிறார்கள் என்றும் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்த ஞாபகம் இருக்கிறது.

இவைகளையெல்லாம் யோசிக்கும்போது கலவி முறை என்பதும், சொத்து முறை என்பதும் பெரும்பாலும் தேசாச்சாரம், மதாச்சாரம் அல்லது ஜாதியாச்சாரம் பழக்க வழக்கம் முதலியவற்றைப் பொருத்திருக்கிறதே தவிர, வேறு நியாயமான - நிர்ப்பந்தமான - உலகமெங்கும் ஒரே வழி துறையான - காரண காரியமான முறை கிடையவே கிடையாது என்றுதான் யூகிக்க வேண்டி யிருக்கிறது. இது விஷயத்தில் மற்ற ஜீவன்களின் இயற்கை சுபாவங்களும் எவ்வித வரையறைக்குக் கட்டுப்பட்டதாகவும் காண முடிவதில்லை.

நமது பழங்காலப் புராணங்களைப் பார்த்தால் தான் பெற்ற மகளையும், தன்னை ஈன்ற தாயையும் புணர்ந்த கதைகள் பல இருக்கின்றன. முறையற்ற விபசாரத்தன சம்பந்தமான கதைகள் எண்ணிறந்தவைகளிருக்கின்றன. குருவின் மனைவி, சகோதரன் மனைவி ஆகியவர்களை கலவி செய்வது குற்றமாகக் கருதப்படவில்லை. பிள்ளைப் பேறுக்காக வேறு புருஷருடன் செய்யுங் கலவி குற்றமாகக் கருதப்படவில்லை. சில விடங்களில் சிஷ்யைகள் குருமார்களுடன் கலவி செய்வது குற்றமாகக் கருதப்படவில்லை.



சிலவிடங்களில் பிராமணர்களுடன் கலவி செய்வதைப் பிசகென்று கருதுவ தில்லை. கடவுள்கள் பக்த பெண்களிடம் கலவி செய்த கதை அனந்தம்.

பத்துப் பணத்துக்கு மிஞ்சின பதிவிரதை இல்லை என்றும், ஆணும் இடமும் கிடைத்தால் எந்தப் பெண்ணும் பதிவிரதையாய் இருக்க முடியாது என்றும் ''தர்ம சாஸ்திரம்'' கூறுகின்றன.

பெண் கதியே இப்படியானால் ஆண் கதியைப் பற்றி கூறவேண்டுமா?

ஆகவே இவ் விஷயங்களில் இன்னதுதான் சரி, இன்னது தான் தப்பு என்று குறிப்பிடுவதற்கில்லாமல் இருந்து வருகிறது. ஆனாலும் கலவிக்கான வைத்தியமுறைப்படியும், தேக தத்துவ முறைப்படியும் சில முறைகள் கற்பிக்கப்பட்டிருப்பதை குற்றமென்று சொல்ல இதுவரை எவரும் முற்பட வில்லை. ஆதலால் இதைப் பகுத்தறிவுள்ள மனிதன் ஒப்புக்கொண்டாக வேண்டும் என்றுஞ் சொல்லலாம்.

என்றாலும் கலவியைப்பற்றிய காரியங்களுக்கு பாவம், புண்ணியம், கடவுள் தண்டனை, மானம் என்பவைகள் பொருத்தமாகும்படியாக எவ்வித குறிப்பிட்ட ஒரே மாதிரியான முறையும் கண்டுபிடிக்க முடியாமலிருந்து வருகின்றதென்பது மேற்கண்ட விஷயங்களால் கருதவேண்டியிருக்கிறது.

இந்த உறவு முறை சம்பந்தம், கலவி சம்பந்த மாத்திரமல்லாமல் மற்றும் மனித ஒழுக்க சம்பந்தமான பல காரியங்களிலும் பாவ புண்ணியம் நிர்ணயிக்கவோ, நன்மை தின்மை நிர்ணயிக்கவோ முடியாமல், இதுபோலவே தேசத்துக்கு ஒரு முறை, மதத்துக்கு ஒரு தினுசு, வகுப்புக்கு ஒரு மார்க்கம், ஜாதிக்கு ஒருவிதம் என்பதாகத்தான் இருந்து வருகிறது.

ஆகவே இவ்விஷயங்களை எடுத்துக்காட்டி, மனிதன் எப்படி நடந்து கொள்ளுவதென்னும் கேள்விக்குப் பொது அறிவும் ஆராய்ச்சியுமுள்ள மனிதன் என்ன சொல்ல முடியும் என்று யோசிக்கும்போது 'சமயோசிதம்' என்பதைத் தவிர வேறு வழிகாட்டி இருப்பதாக அறிய முடியவில்லை என்பதற்காகவே இவ்வுறவு முறை விஷயத்தை உதாரணமாக எடுத்துக் காட்ட வேண்டியதாயிற்று.

(இக்கட்டுரை நகர தூதனுக்கு விசேஷ கட்டுரையாக எழுதப்பட்டதாகும்)

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - ஏப்ரல் 1936**



RangaRakes tamilnavarasam.com

# தர்மம் அல்லது பிச்சை

தர்மம் அதாவது ஏழைகளுக்கு பிச்சை இடுதல் முதல் மற்றவர்களுக்கு பலவித உதவிகள் செய்வது என்பது வரை அனேக விஷயங்கள் தர்மத்தின் கீழ் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்த மாதிரி தர்மத்தைப் பற்றி எல்லா மதங்களுமே முறையிடுகின்றன.

இந்து, முஸ்லீம், கிறிஸ்தவம் முதலிய மதங்களில் இந்த தர்மத்தை - பிச்சை கொடுத்தலை மிக நிர்ப்பந்தமாக கட்டாயப்படுத்தி சொல்லப்பட்டிருக்கிறது.

எப்படி எனில் தர்மம் கொடுக்காதவன் பாவி என்றும் அவன் நரகத்துக்கு போவான் என்றும், கடவுள் அவனை தண்டிப்பார் என்றும் இப்படியெல்லாம் பயமுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. இவை கடவுள் வாக்கெனவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்து மதம் என்பதில் தர்மத்தை 32 விதமாக கற்பித்து 32 தர்மங் களையும் ஒருவன் செய்ய வேண்டும் என்றும், அந்தப்படி செய்தால் அவனுக்கு இன்ன இன்ன மாதிரி புண்ணியம் கிடைக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதாவது, அறம் 32. ஒரு மனிதன் சத்திரம், படிப்பவர்களுக்கு சாப்பாடு, பக்தர்களுக்கு உணவு, பசுவுக்கு வாயுறை, கைதிகளுக்கு சாப்பாடு, இரப்பவர்களுக்கு பிச்சை, தின்பண்டம், அநாதிகளைக் காத்தல், பிள்ளைப்பேறுக்கு மருத்துவம் செய்தல், அனாதிப் பிள்ளைகளை வளர்த்தல், பிள்ளைகளுக்கு பால் வார்த்தல், அநாதிப் பிணம் சுடுதல், ஏழைகளுக்கு ஆடை கொடுத்தல், வழிப்போக்கர்களுக்கு சுண்ணாம்பு கொடுத்தல், வைத்தியம் செய்தல், வண்ணான் உதவல், நாவிதன் உதவல், கண்ணாடி காட்டுதல், காதோலை கொடுத்தல், கண்ணுக்கு மருந்து செய்தல், தலை முழுக்காட்ட எண்ணெய் தருதல், பெண்போகம் வேண்டுவோருக்கு போகப் பெண் உதவுதல், கஷ்டத்தில் சிக்குண்டவர்களுக்கு உதவி செய்து விடுவித்தல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், மடம் கட்டுதல், ரோட்டுப் போடுதல், சாலைமரம் வைத்தல், மாடு எருமை ஆகியவை தங்கள் தினவுகளை தீர்த்துக்கொள்ள சொறி கல் நடுதல், மிருகங்களைக் காத்தல், கக்கூசு கட்டல், விலை கொடுத்து உயிர் மீட்குதல், பெண்தானம் செய்தல்.

ஆகிய 32 தர்மங்கள் செய்ய வேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமை என்று சொல்லப்படுகிறது.



அதுபோலவே இஸ்லாம் மதம் என்பதிலும் அன்னியனுக்கு பிச்சைகொடுத்தாக வேண்டும் என்றும், அது ஒருவனுடைய வருஷ வரும்படியில் அவனது சிலவு போக மீதி உள்ளதில் 40ல் ஒரு பாகம் வருஷந்தோறும் பிச்சையாக பணம், சாப்பாடு துணி முதலியவைகளாய் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப்படி செய்யா விட்டால் மதத்துரோகம் என்றும் இந்தப்படி செய்யாதவன் இஸ்லாம் ஆகமாட்டான் என்றும் கூட கூறப்படுகிறது.

அதுபோலவே கிறிஸ்தவ மதத்திலும் தர்மம் கொடுக்க வேண்டியது மிக முக்கியமானதென்றும், தர்மம் செய்யாதவனுக்கு மோட்சமில்லை என்றும், உதாரணமாக ஒரு ஊசியின் காதோட்டை வழியாக ஒரு ஒட்டகம் நுழைந்தாலும் நுழையுமே ஒழிய பிச்சை கொடுக்காத பணக்காரன் ஒரு காலமும் மோட்சத்துக்கு போக மாட்டான் என்றும் சொல்லப்படுகிறது.

இந்தப்படிக்கு தர்மங்கள் செய்யவேண்டிய அவசியங்களை வற்புறுத்தி அந்த வற்புறுத்தல்களை பகவான் சொன்னான் ஆண்டவன் சொன்னான் என்று வேதங்கள் என்பவைகளிலும் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த தர்மங்கள் எல்லாம் இருக்கிறவர்கள் அதாவது செல்வவான்கள் இல்லாதவர்களுக்கு ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும் என்பது தான் இதன் தாத்பரியமாகும்.

செல்வவான்களுக்கு செல்வம் கடவுளால் கொடுக்கப்பட்டதாகும். ஆகையால் கடவுள் கொடுத்ததை கடவுளின் சிருஷ்டியாகிய - கடவுளின் பிள்ளைகளாகிய ஏழை மக்களுக்கு கொடுக்க வேண்டியது அவசியமாகும் என்பதே அந்த தாத்பரியத்தின் உள்கருத்தாகும். செல்வவான்களுக்கு கடவுள் செல்வங்களைக் கொடுத்தார் என்றால் செல்வமில்லாத ஏழை தரித்திரவான்களுக்கு செல்வமில்லாமல் செய்தது கடவுள் தான் என்பதை எந்த மதவாதியும், ஆஸ்திகனும் மறுக்க மாட்டான் என்றும், மறுக்க முடியாது என்றும் சொல்லுவேன்.

செல்வம் என்பது உலகத்தின் பொது சொத்து. அதை யார் உண்டாக்கி யிருந்தாலும் உலகத்தில் உள்ளவரை எந்த ஜீவனுக்கும் அது பொது சொத்தாகும். ஆனால் அந்த பொது சொத்தானது பலாத்காரத்தாலும், சூழ்ச்சியாலும், ஆட்சியாலும், கடவுள் பேராலும் ஒருவனுக்கு அதிகமாய்ப்போய் சேரவும் மற்றொருவனுக்கு சிறிது கூட இல்லாமல் தரித்திரம் பசி முதலியவை அனுபவிக்கவும் ஆன தன்மை உண்டாக்கப் படுகிறதே ஒழிய மற்ற எந்தக் காரணத்தாலும் எவனுக்கும் இல்லாமல் போக நியாயமே இல்லை.

ஆன போதிலும் கடவுளே ஒருவனை செல்வவானாக ஆக்கினார் என்றும், கடவுளே ஒருவனை ஏழையாக ஆக்கினார் என்றும் வைத்துக் கொள்வதானாலும் தர்மம் - பிச்சை கொடுக்கிற அதிகாரத்தை மாத்திரம் ஏன் பணக்காரனுக்கு கொடுத்து அவனுக்கு இஷ்டமிருந்தால் பிறத்தியானுக்கு



RangaRakes tamilnavarasam.com

பிச்சைபோட்டு மோட்சத்துக்கு போகும்படியும் அவனுக்கு இஷ்டமில்லை யானால் பிச்சை கொடுக்காமல் இருந்து நரகத்துக்கு போகும்படியும் எதற்காக கற்பிக்க வேண்டும் என்பது நமக்கு புலப்படவில்லை. அன்றியும் ஏதோ இரண்டொரு பணக்காரன் பிச்சை கொடுத்து தர்மம் செய்து மோட்சத்துக்கு போவதற்காகவும் பலர் பிச்சை கொடுக்காமல் இருந்து நரகத்திற்குப் போவதற்காகவும் எத்தனையோ கோடிக்கணக்கான பிச்சைக்காரர்களை ஏன் சிருஷ்டித்தார் என்பதும் நமக்கு விளங்கவில்லை. செல்வம் கடவுளால் உண்டாக்கப்பட்டதானால் ஏழையும் பணக்காரனும் கடவுளால் தானே உண்டாயிருக்க வேண்டும். இந்தப்படி ஒரு கடவுள் மூன்றையும் படைத்து ஏழைக்கும் பணக்காரனுக்கும் வாங்கும் கொடுக்கும் உத்தியோகம் கொடுத்து இதற்கு கணக்கு எழுதி வைத்து அவனவனுக்குத் தகுந்த மோட்ச நரகத்துக்கு அனுப்பும் வேலையில் கடவுள் ஈடுபட்டிருக்கிறார் என்றால் கடவுள் பக்தர்கள் கடவுளை பரம முட்டாளாகவும் பரிசுத்த மடையனாகவும் சிருஷ்டிக்கிறார்களா அல்லது கடவுளை பரம கருணாநிதியாகவும் பார பட்சமற்ற தந்தையாகவும் சிருஷ்டிக்கிறார்களா என்று கேட்கின்றேன்.

ஏழையை சிருஷ்டிப்பானேன் பணக்காரனை சிருஷ்டிப்பானேன்? ஏழையை பணக்காரனிடம் போய் கெஞ்சும்படி செய்வானேன்? பணக்காரன் தனக்கு இஷ்டமிருந்தால் கொடுப்பதும் இஷ்டமில்லாவிட்டால் கொடுக்காமல் ஆளைவிட்டு கழுத்தைப்பிடித்து தள்ளச் சொல்லுவதும் ஏன்? என்பவைகளை யோசித்துப்பார்த்தால் முதலில் இந்த தத்துவம் உண்மையாய் இருக்குமா என்பதே பெரிய சந்தேகமாய் இருப்பதோடு பரிசுத்த ஆஸ்திகத் தன்மையுடன் கடவுளை சிருஷ்டித்துப் பிரசாரம் செய்கின்ற மக்கள் எவ்வளவு முட்டாள் களாய் இருக்கிறார்கள் என்பதும் வெள்ளிடைமலையாகும்.

கடவுள் பார்த்து ஒரு உத்திரவில் அல்லது ஒரு சங்கல்பத்தில் எல்லாப் பொருளும் எல்லா மக்களுக்கும் பொதுவாய் இருக்கத்தக்கது என்று செய்துவிட முடியாதா? என்று கேட்பதோடு எல்லா ஜீவன்களையும் தானே சிருஷ்டித்து தானே நடத்துகிறவனாய் இருக்கிறபடியால் ஒன்றை ஒன்று துன்புறுத்தவோ ஒன்றை ஒன்று கொன்று தின்னவோ கூடாது என்று நிர்ணயித்து விட முடியாதா என்று கேட்கின்றேன். உண்மையாகவே ஒரு யோக்கியமான கடவுள் இருந்தால் இதை செய்திருக்க மாட்டாரா என்றும் கேட்கின்றேன்.

இந்தப்படி செய்வது முடியாத காரியம் என்று யாராவது சொல்லுவார் களானால் ரஷ்யாவில் லெனின் என்ற ஒரு மனிதன் இந்தப்படி உத்திரவு போட்டு பணக்காரரும், பிச்சைக்காரரும் இல்லாமல் செய்து விட்டாரே, இவர் கடவுளுக்கும் பெரியவரா? என்று கேட்கிறேன்.

ஆதலால் தர்மம் - பிறத்தியானுக்கு பிச்சை கொடுப்பது, மற்றவர் களுக்கு உதவுவது என்கின்ற முறைகள் எல்லாம் பணக்காரத் தன்மைக்கு அனுகூலமானதே தவிர - பணக்காரத் தன்மையை காப்பாற்ற ஏற்படுத்தப் பட்டதே தவிர, அவை ஒரு நாளும் ஏழைகளுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் அனுகூலமானதல்ல.



ஏனெனில் பிச்சை கொடுப்பது, மற்றவர்களுக்கு உதவி செய்வது என்கின்ற காரியங்களால்தான் இல்லாத ஏழை மக்களை - தரித்திரவாசிகளான மக்களைப் பிரித்தாள முடியும். ஏழை மக்கள் பிரிந்திருந்தால்தான் பணக்காரர்கள் வாழ முடியும். அன்றியும் பணக்கார மக்கள் மீது ஏழை மக்களுக்கு குரோதமும் வெறுப்பும் இல்லாமல் இருக்க வேண்டும் என்கின்ற காரியத்திற்காகவே தர்மம் என்பதும், ஜக்காத் என்பதும், பிச்சை என்பதும் கற்பிக்கப்பட்டதே ஒழிய பிச்சைக்காரர்களுக்கு உதவி செய்வதற்கோ அவர்களைக் காப்பாற்றுவதற்கோ ஏற்பட்டதல்ல.

பிச்சைக்காரர் இருப்பதும், அவர்கள் பிச்சை எடுப்பதும் ஜனசமூகத்துக்கு ஒரு பெரும் தொல்லையும் இழிவுமாகும் என்பதோடு ஒரு கடவுள் இருந்தால் அக் கடவுளுக்கு மிகுந்த அவமானமும் அயோக்கியத்தனமான காரியமுமாகும்.

இந்தக் கருத்தை வைத்தே திருவள்ளுவரும் ''பிச்சை எடுத்து வாழ வேண்டிய மனிதனை கடவுள் சிருஷ்டித்து இருப்பானேயானால் அக்கடவுள் இல்லை யென்றுதான் அருத்தம், அவன் இருந்தாலும் ஒழிய வேண்டியதே அவசியம்'' என்று சொல்லியிருக்கிறார்.

திருவள்ளுவர் நூலில் முன்னுக்குப்பின் முரண்கள் பல இருந்தாலும், அவர் ஒரு தனிஉடைமைக்காரரேயானாலும் இந்த ஒரு விஷயத்தில் தைரியமாய்ச் சொல்லியிருக்கிறார்.

ஆனாலும் இதற்கு முரணாக மற்றொரு இடத்திலும் சொல்லி இருக்கிறார். அதாவது ''தர்மம் செய்தவனையும் பாவியையும் பார்க்க வேண்டுமானால் பல்லக்கில் போகிறவனையும் பல்லக்கு சுமப்பவனையும் பார்'' என்று சொல்லியிருக்கிறார். ஆகவே இதிலிருந்து தர்மம் செய்ததி னாலேயே பல்லக்கில் போகும்படியான செல்வவானாகப் பிறந்தான் என்றும், தர்மம் செய்யாததினாலேயே பல்லக்குத் தூக்கும் தரித்திரனாகப் பிறந்தானென்றும் சொல்லுகிறார்.

அப்படியானால் ஏழை பணக்காரத்தன்மையை திருவள்ளுவர் ஆதரிக்கிறார் என்பதாக ஒரு புறத்தில் விளங்குகிறது. இந்த முரணும் மயக்கமும் ஏற்பட்டதற்குக் காரணம் இவருக்கு கடவுள் தன்மையில் ஆத்மார்த்ததில் இருந்த நம்பிக்கையேயாகும். கடவுள் தன்மை அதாவது ''மனிதத்தன்மைக்கு மீறின ஒரு சக்தி இருக்கிறது. அதற்கும் உலக நடவடிக்கைகளுக்கும் சம்மந்தம் உண்டு'' என்று எவன் கருதினாலும் அப்படிப்பட்டவன் முன்னுக்குப்பின் முரணாகவும், தனி உடமைக்காரனாகவும், உயர்வு தாழ்வை ஆதரிக்கிறவ னாகவும் இருந்துதான் தீருவான்.

எது எப்படி இருந்த போதிலும் உலகத்தில் மனித சமூகம் தொல்லை இல்லாமல் வாழ வேண்டுமானால் பிச்சை கொடுப்பதும் பிச்சை எடுப்பதும் சட்டவிரோதமான காரியமாய்க் கருதப்பட வேண்டும். அப்படியானால்தான் மனிதன் சுயமரியாதையோடு வாழ முடியும். பிச்சை கொடுக்கும் வேலையை



RangaRakes tamilnavarasam.com

சர்க்காரே ஏற்றுக்கொண்டு அதற்கு பணம் வேண்டுமானால் பணக்காரரிடம் இருந்து பிச்சை வரி என்று ஒரு வரியை கிருஸ்து சொன்ன கணக்குப்படியோ முகம்மது நபி சொன்ன கணக்குப்படியோ சர்க்கார் வசூலித்து அதற்கு ஒரு இலாக்கா வைத்து வினியோகிக்க வேண்டும். அந்தப் பிச்சையை சர்க்கார் தொழில்சாலைகள் வைத்து அதன் மூலம் பிச்சைக்காரர்களிடம் வேலை வாங்கிக்கொண்டு வினியோகிக்க வேண்டும். இந்தக் காரியத்துக்காக சர்க்கார் எந்த தொழில்சாலை வைக்கிறார்களோ அந்த மாதிரி தொழில்சாலையை மற்றவர்கள் வைக்காமல் தடுத்துவிட வேண்டும்.

இப்படிச் செய்தால் பணக்காரர்கள் ஏற்பட்டு நாசமாய்ப் போனாலும் பிச்சைக்காரர்கள் தொல்லையாவது இல்லாமல் போய்விடும். பணக்காரத் தன்மை ஆட்சியில்லாத தேசம் எதிலும் இந்தக் காரியம் சுலபமாய் நடத்தலாம்.

ஆகவே தர்மம் செய்வது அக்கிரமம் என்றும், ஜன சமூகத்துக்கு தொல்லை என்றும், பணக்காரர்களின் அயோக்கியத்தனங்களை மறைக்க ஒரு ஆட்சி என்றும் சொல்லுகிறேன்.

பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - ஏப்ரல் 1936



# இஸ்லாம் மார்க்கத்துக்கும் இந்து மதத்திற்கும் உள்ள ஒற்றுமை அற்ற தன்மை

**இஸ்லாம் மத ஒழுக்கம்**

1. மதுபானம் கூடாது.
2. சூதாடுதல் கூடாது.
3. விபசாரம் கூடாது.
4. வட்டி வாங்குதல் கூடாது.
5. போர் செய்தல் கூடாது.

**இந்து மத ஒழுக்கம்**

1. கடவுள்களுக்கு மது படைக்கவேண்டும். (ராமாயணம்)
2. அரசர்க்கு சூது உரியது. (பாரதம்)
3. கடவுள்களே விபசாரம் செய்திருக்கின்றன. (கிருஷ்ணன், முருகன்) விபசாரிகளை அனுமதிக்கின்றன. (தேவதாசிகள் முறை)
4. வட்டி வாங்குவது வருணாச்சிரம முறை. (வைசிய தர்மம்)
5. கடவுள்கள் யுத்தம் செய்திருக்கின்றன. யுத்தம் அரச நீதி, அரச தர்மம். (கந்தப்புராணம், பாரதம், ராமாயணம்)

மதக்கொள்கைகள், திட்டங்கள் ஆகியவைகளில் இந்து மதம், இஸ்லாம் மதம், கிருஸ்தவ மதம் ஆகிய மதங்கள் எல்லாம் ஒன்றே.

**கடவுள்**

இந்து மதத்தில் பல கடவுள்கள் உண்டு.

இஸ்லாம், கிறிஸ்து மதங்களில் ஒவ்வொரு கடவுள் தான் உண்டு.



RangaRakes tamilnavarasam.com

**கடவுள் சாயல்**

இந்துமதம் கடவுளை மனிதனாகவே மனித ரூபகமாகவே பாவிக்கிறது. இஸ்லாம்மதம் கடவுளை மனிதனாகக் கூறுகிறது. அதாவது கடவுளை ஆண்டவன் அவன் இவன் என்று சொல்லுகிறது.

**உலக சிருஷ்டி**

இந்து மதம் கடவுளால் உலகம் சிருஷ்டிக்கப்பட்டது என்று கூறுகிறது.

இஸ்லாம் மதமும் உலகம் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதென்றே கூறுகிறது.

**பாவ புண்ணியக் கணக்கு**

இந்து மதத்தில் மனிதனுடைய செய்கையை குறித்து வைத்து பாவ புண்ணியம் கணக்கு வைக்கப்படும். சித்திரபுத்திரன் எழுதி வைப்பார்.

இஸ்லாம் மதத்தில் மனிதனுடைய செய்கைகளைக் குறித்து பாவ புண்ணியம் கணக்கு வைக்கப்படும். இரண்டு தூதர்கள் எழுதி வைப்பார்கள்.

**சொர்க்க நரகம்**

இந்து மதத்தில் மனிதனுடைய பாவத்துக்கு நரகமும் புண்ணியத்துக்கு சொர்க்கமும் உண்டு.

இஸ்லாம் மதத்தில் மனிதனுடைய செய்கைக்கு பாவத்துக்கு நரகம், புண்ணியத்துக்கு சுவர்க்கமும் உண்டு.

**ஏழு நரகம்**

இந்துக்களுக்கு 7 நரகம் உண்டு.

இஸ்லாம்களுக்கு 7 நரகம் உண்டு.

**தூதர் பிசாசு**

இந்துக்களுக்கு தேவ தூதர்களும் பிசாசும் உண்டு.

இஸ்லாம் மதத்துக்கும் தேவ தூதர்களும் பிசாசுகளும் உண்டு.

**நான்கு வேதம்**

இந்துக்கள் வேதங்களுக்கு ரிக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என நான்கு பெயர்கள்.

இஸ்லாம் வேதத்துக்கு தைரத்து, ஜபூரு, இஞ்சிலு, குர்ஆன் என நான்கு பெயர்கள்.



**அவதார புருஷர்**

இந்துக்களுக்கு அவதார புருஷர்கள் தெய்வாம்ச புருஷர்கள் ஆகிய லக்ஷக்கணக்கான ஆழ்வார்கள், நாயன்மார்கள் உண்டு.

இஸ்லாம் மார்க்கத்துக்கும் லக்ஷக்கணக்கான தேவதூதர்கள், நபி மார்கள் ஆகியவர்கள் உண்டு.

**புண்ணிய ஸ்தலங்கள்**

இந்துக்கு புண்ணிய ஸ்தலங்கள் உண்டு.

இஸ்லாம் மார்க்கத்துக்கும் புண்ணிய ஸ்தலமுண்டு.

**பண்டிகை**

இந்துக்களுக்கும் பண்டிகை விரதாதிகள் உண்டு.

முஸ்லீம் மார்க்கத்துக்கும் பண்டிகை விரதங்கள் உண்டு.

**தொழுகை**

இந்துக்களுக்கும் தொழுகை, பிரார்த்தனை இவற்றிற்கு முறைகள், கணக்குகள் உண்டு.

இஸ்லாம் மார்க்கத்துக்கும் தொழுகை பிரார்த்தனை கணக்குகள் முறைகள் உண்டு.

**தான தர்மம்**

இந்துக்களுக்கும் தான தர்மங்கள் உண்டு.

இஸ்லாம் மார்க்கத்திலும் தான தர்மங்கள் உண்டு.

**விசேஷ நாள்**

இந்துக்களுக்கு விசேஷ நாள், ஓய்வு நாள் உண்டு.

இஸ்லாம் மார்க்கத்திலும் விசேஷ நாள் ஓய்வு நாள் உண்டு.

**மற்றவர்கள் மட்டமானவர்கள்**

இந்துக்கள், இந்து அல்லாதவர்களை மிலேச்சர்கள் என்கிறார்கள்.

இஸ்லாம் மதத்தில் இஸ்லாம் அல்லாதவர்களை காபர்கள் என்கிறார்கள்.

**உள் பிரிவு**

இந்து மதத்திலும் உள் பிரிவுகள் உண்டு.

இஸ்லாம் மதத்தில் உள் பிரிவினர்கள் உண்டு.



RangaRakes tamilnavarasam.com

**யுத்தம்**

இந்து மதத்தில் மத யுத்தம் நடந்திருக்கிறது.

இஸ்லாம் மதத்திலும் மத யுத்தம் நடந்திருக்கிறது.

**சடங்கு**

இந்து மதத்திலும் சடங்குகளும் மந்திரங்களும் உண்டு.

இஸ்லாம் மதத்திலும் சடங்குகள் மந்திரங்கள் உண்டு.

**செத்தவர் சரீரம்**

இந்து மதத்திலும் செத்தவர்களுக்கு சரீரம் கொடுக்கப்பட்டு விசாரணை நடக்கும்.

இஸ்லாம் மதத்திலும் செத்தவர்கள் எழுப்பப்பட்டு விசாரணை நடக்கும்.

**சமாதுக்கு கிரிகை**

இந்து மதத்திலும் இறந்து போன பிணத்துக்கு கிரிகைகள், மந்திரங்கள், மரியாதைகள் உண்டு.

இஸ்லாம் மதத்துக்கும் இறந்து போன பிணத்துக்கு கிரிகைகள், மந்திரங்கள், மரியாதைகள் உண்டு.

**சமாது வணக்கம்**

இந்துக்களுக்கும் சமாது வணக்கம் உண்டு.

இஸ்லாம்களுக்கும் சமாது வணக்கம் உண்டு.

**புனித ஸ்தலங்கள்**

இந்துக்களுக்கும் சிலர் புதைக்கப்பட்டதற்கு (அடக்கமானதற்கு) ஆக விசேஷ ஸ்தலங்கள் உண்டு.

இஸ்லாம்களுக்கும் சிலர் புதைக்கப்பட்டதற்காக விசேஷ ஸ்தலங்கள் உண்டு.

மேல்கண்ட அனேக விஷயங்களில் கிறிஸ்தவ மதமும் இதை அனுசரித்தேதான் இருக்கின்றது.

ஆகவே பொதுவாக மதம் என்றால் கடவுள், நல்வினை, தீவினை, பாவம், புண்ணியம், சொர்க்கம், நரகம் இறந்த பிறகு இவைகளை அனுபவித்தல் சடங்கு மந்திரங்கள் என்பவை இல்லாமல் எந்த மதமும் இருக்க முடிவதில்லை.



ஒருமனிதன் கடவுள் என்பதை ஒப்புக்கொண்டு சொர்க்க நரகம், நல்வினை, தீவினை, பாவம் புண்ணியம் ஆகியவைகளை ஒப்புக்கொள்ளா விட்டால் நாஸ்திகனாய் விடுகிறான்.

நல்வினை தீவினை என்பவைகளோ மதத்துக்கு ஒரு விதமாய் இருக்கிறது. இந்துவுக்கு கள் குடிப்பது பாவமல்ல. முஸ்லீம்களுக்கு கள் குடிப்பது பாவம். முஸ்லீமுக்கு மாட்டைக் கொல்வது - தின்பது பாவமல்ல. இந்துவுக்கு மாட்டைக் கொல்வது - தின்பது பாவமாகும்.

இதுபோல் இன்னும் அனேக விஷயம் உண்டு. ஆதலால் மதம் என்பது எல்லோருக்கும் ஒன்று போலவே இருந்தாலும் மத சம்பிரதாயம் வேறு வேறாய் இருந்து வருகிறது.

மத சம்பிரதாயங்களைப் பார்க்கும் போது சொர்க்க நரக விஷயத்தில் எல்லா மதங்களும் ஒன்றுபோல்தான் என்றும், நல்வினை தீவினை என்பதும், பாவ புண்ணியம் என்பதும் எல்லா மதத்திலும் கட்டுப்பாடுகள் என்றும், ஆனால் அந்த அந்த மதக்காரர்களின் காலதேசத்துக்கு தக்கபடி சௌகரியத்துக்கு தக்கபடி ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டவைகள் என்றும் விளங்கும்.

**குடி அரசு - கட்டுரை - 03.05.1936**



RangaRakes tamilnavarasam.com

# கடவுள்

**வினா:–** கடவுளைப்பற்றிப் பொதுவாக ஜனங்கள் கொண்டிருக்கும் கருத்துக்களை விளக்கிக் கூறு.

**விடை:–** கடவுள் வான மண்டலத்தையும், பூமியையும், அதிலுள்ள சகல சராசரங்களையும் படைத்தவன் என்று மக்களில் பெரும்பாலார் நம்புகிறார்கள்.

**வினா:–** அப்புறம்?

**விடை:–** கடவுள் சர்வஞானமுடையவனாம், யாவற்றையும் பார்க்கிறானாம். பிரபஞ்ச முழுதும் அவனது உடமையாம். சர்வ வியாபியாம்.

**வினா:–** கடவுள் ஒழுக்கத்தைப்பற்றி ஜனங்கள் என்ன சொல்லுகிறார்கள்.

**விடை:–** அவன் நீதிமானாம்; புனிதனாம்.

**வினா:–** வேறு என்ன?

**விடை:–** அவன் அன்பு மயமானவனாம்.

**வினா:–** கடவுள் அன்பு மயமானவனென்று ஜனங்கள் எப்பொழுதும் நம்புகிறார்களா?

**விடை:–** இல்லை. மக்கள் அறிவும் ஒழுக்கமும் உயர உயர கடவுள் யோக்கியதையும் விருத்தியடைந்து கொண்டே போகிறது.

**வினா:–** உன் கருத்தை நன்கு விளக்கிக் கூறு.

**விடை:–** காட்டாளன் கடவுள் ஒரு காட்டாளனாகவும், திருடனாகவும் இருந்தான். அராபித் தலைவன் கடவுளான ஜாப் ஒரு கீழ் நாட்டு யதேச்சாதிகாரியாக இருந்தான். யூதர்கள் கடவுள் போர் வெறியனாயும் பழிக்குப்பழி வாங்கும் குணமுடையவனாகவும் இருந்தான். கிறிஸ்தவர் கடவுளோ அற்பாயுளுடைய மக்கள் செய்யும் குற்றங்களுக்கு நித்திய நரக தண்டனை வழங்கக்கூடியவனாக இருக்கிறான்.

**வினா:–** கடவுளைப்பற்றிய வேறு அபிப்பிராயங்கள் என்ன?

**விடை:–** மக்கள் மனோ வாக்குக் காயங்களினால் செய்யும் காரியங்களில் அவன் சிரத்தையுடையவனாக இருக்கிறானாம்.

**வினா:–** ஏன்?



**விடை:–** அவனுக்கு விருப்பமான காரியங்களை நாம் செய்தால் பரிசளிக்கவும் விருப்பமில்லாத காரியங்களைச் செய்தால் தண்டனையளிக்கவும்.

**வினா:–** கடவுளுக்கு என்ன என்ன பெயர் வழங்கப்பட்டிருக்கின்றன?

**விடை:–** ஒவ்வொரு தேசத்தாரும் கடவுளை ஒவ்வொரு பெயரால் அழைக்கிறார்கள். கிரேக்கர்கள் ஜ்யூயஸ் என்றும், ரோமர்கள் ஜோவ் என்றும், பார்சிகள் ஆர்முஸ்ஜித் என்றும், ஹிந்துக்கள் பிரம்மம் என்றும், யூதர்களும் கிறிஸ்தவர்களும் ஜிஹோவா என்றும், முகமதியர் அல்லா என்றும் கடவுளை அழைக்கிறார்கள்.

**வினா:–** கடவுளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேறு பெயர்கள் எவை?

**விடை:–** பரம்பொருள், அனந்தன், மூலகாரணன், பரமாத்மா, நித்தியசக்தி, பிரபஞ்சம், இயற்கை, மனம், ஒழுங்கு முதலியன.

**வினா:–** ஆனால் ஜனங்கள் சொல்லும் கடவுள் ஒரே பொருளைத்தானா குறிக்கிறது?

**விடை:–** இல்லை. சிலர் கடவுளை ஒரு ஆளாக பாவனை செய்கிறார்கள். சிலர் ஒரு கருத்தெனக் கூறுகிறார்கள். வேறு சிலர் சட்டம் என்கிறார்கள். மற்றும் அறிய முடியாத ஒரு சக்தி என்கிறார்கள். ஒரு கூட்டத்தார் கடவுள் பூரணன் என்கிறார்கள். பின்னும் சிலர் ஜடப் பொருளும் மனமும் ஐக்கியப்படும் நிலையே கடவுள் என நம்புகிறார்கள்.

**வினா:–** மக்கள் எப்பொழுதும் ஒரே கடவுளில் நம்பிக்கை வைத்து வந்திருக்கிறார்களா?

**விடை:–** மக்களில் பெரும்பாலார் ஒரு கடவுள் அல்லது பல கடவுள்கள் இருப்பதாக நம்பியே வந்திருக்கிறார்கள்.

**வினா:–** ஒன்றுக்கு மேற்பட்ட கடவுளுண்டா?

**விடை:–** பல கடவுள்கள் உண்டென்றே பொதுவாக நம்பப்படுகிறது.

**வினா:–** பல கடவுள்களை நம்புகிறவர்களுக்கு என்ன பெயர் அளிக்கப்படுகிறது?

**விடை:–** பல கடவுளை நம்புவோர் பல தெய்வவாதிகள், ஒரே கடவுளை நம்புவோர் ஏக தெய்வவாதிகள்.

**வினா:–** சில பலதெய்வாதிகளின் பெயர் சொல்லு.

**விடை:–** எகிப்தியர், ஹிந்துக்கள், கிரேக்கர், ரோமர்.

**வினா:–** ஏக தெய்வ வாதிகள் யார்?

**விடை:–** யூதர்கள், கிறிஸ்தவர்கள், முகமதியர்.

**வினா:–** இவர்கள் எல்லாம் எப்பொழுதுமே ஏக தெய்வவாதிகளாக இருந்தார்களா?



RangaRakes tamilnavarasam.com

**விடை:-** இல்லை. ஆதியில் எல்லா ஜாதியாரும் பல தெய்வங்களையே வணங்கி வந்தார்கள்.

**வினா:-** பல தெய்வ வாதிகளின் கடவுள்கள் எவை?

**விடை:-** சூரியன், சந்திரன், ஆவிகள், நிழல்கள், பூதங்கள், பேய் பிசாசுகள், மிருகங்கள், மரங்கள், மலைகள், பாறைகள், நதிகள் முதலியன.

**வினா:-** இவைகள் எல்லாம் கடவுளாக நம்பப்பட்டதாய் உனக்கு எப்படித் தெரியும்?

**விடை:-** எப்படியெனில் ஜனங்கள் அவைகளை வணங்குகிறார்கள்; அவைகளுக்கு ஆலயங்கள் கட்டினார்கள்; விக்கிரகங்கள் உண்டு பண்ணினார்கள்; அவைகளுக்கு பூஜைகள் நடத்தினார்கள்.

**வினா:-** இந்த தெய்வங்கள் எல்லாம் ஒரே மாதிரி மகிமையுடையன வென்று ஜனங்கள் நம்பினார்களா?

**விடை:-** எல்லாக் கடவுள்களுக்கும் மேலான ஒரு கடவுளுக்கு அவை அடிமைகள் அல்லது சின்னங்கள் என்று அறிவாளிகளான சொற்பப் பேர் நம்பினார்கள்.

**வினா:-** அறிவில்லாதவர்களோ?

**விடை:-** அவைகளில் சில அதிக சக்தியுடையவை என்றும், சில கருணையுடையவை என்றும், சில அழகானவை என்றும், சில அதிக புத்தியுடையவை என்றும் நம்பினார்கள்.

**வினா:-** கடவுள் உற்பத்திக்கு அவர்கள் என்ன காரணம் கூறுகிறார்கள்.

**விடை:-** கடவுள் உற்பத்திக்குப் பலவிதமான காரணங்கள் கூறப்படுகின்றன.

**வினா:-** அவற்றுள் சிலவற்றை விளக்கு.

**விடை:-** முதற்காரணம், ஆதிகால மக்கள் அறிவில்லாதவர்களாக குழந்தைகளைப் போல் பயங்காளிகளாயும் இருந்தார்கள். எனவே தனக்கு அறியமுடியாதவைகள் மீது அவர்களுக்குப் பயமுண்டாயிற்று. கண்ணால் காணமுடியாத ஏதோ ஒன்றே பயத்தை உண்டு பண்ணுகிறதென்று நம்பினார்கள்.

இரண்டாவது:- மக்கள் பலவீனராயும், உதவியற்றவராயுமிருப்பதினால் அவர்களுக்கு உதவியளிக்கக்கூடிய சர்வ சக்தியுடையவொன்று இருக்க வேண்டுமென்று நம்பினார்கள்.

மூன்றாவது:- மனிதன் இயல்பாக நேச மனப்பான்மையுடையவன், பிறருடன் கலந்து பழகவே அவன் எப்பொழுதும் விரும்புகிறான். எனவே தன்னைச் சூழ்ந்திருக்கும் அறிய முடியாத சக்திகளை அறியவும், அவற்றுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளவும் விரும்புகிறான். இறுதியில் அறியமுடியாத சக்திகளைக் கடவுளாக உருவகப்படுத்திக்கொள்கிறான்.



நான்காவது:- தெய்வ நம்பிக்கைக்கு மரணமே முக்கிய காரணம்.

**வினா:-** அது எப்படி?

**விடை:-** நமக்கு உலகத்தில் சிரஞ்சீவியாக வாழமுடியுமானால் தெய்வங்களைப்பற்றியோ, தெய்வீக சக்திகளைப்பற்றியோ நினைக்கத் தேவையே உண்டாகாது. மரணம் உண்டு என்ற உணர்ச்சியினாலேயே மறு ஜென்மத்தைப்பற்றியும், பிறப்புக்கும் இறப்புக்கும் காரணமாக இருக்கும் ஒன்றைப்பற்றியும் யோசிக்க வேண்டியதாக ஏற்படுகிறது. பிராணிகளுக்கு மரணத்தைப்பற்றிய சிந்தனையே இல்லாததினால் கடவுளும் இல்லை.

**வினா:-** தெய்வங்களின் தொகை பெருகிக்கொண்டே இருக்கிறதா?

**விடை:-** இல்லை. அது குறைந்துகொண்டே போகிறது.

**வினா:-** ஏன்?

**விடை:-** மக்களது அறிவும் சக்தியும் வளர வளர தம்மைத் தாமே காப்பாற்றிக்கொள்ள முடியுமென்ற நம்பிக்கை விருத்தியடைகிறது.

**வினா:-** அறிவில்லாதவர் கடவுள்களை விட அறிவுடையோர் கடவுள் குறைவா?

**விடை:-** ஆம். நாகரிகமில்லாதவர்களே பல தெய்வங்களை வணங்குகிறார்கள்.

**வினா:-** ஏக தெய்வவாதிகள் நிலைமை என்ன?

**விடை:-** இப்பொழுதும் பெரும்பாலார் ஏக தெய்வ நம்பிக்கையுடையவர்களாகவே இருக்கிறார்கள்.

**வினா:-** கடவுள் நம்பிக்கையே இல்லாதவர்களும் இருக்கிறார்களா?

**விடை:-** ஆம். அதிகம் பேர் இருக்கிறார்கள்.

**வினா:-** அவர்கள் ஏன் கடவுளை நம்பவில்லை?

**விடை:-** பொதுஜனங்கள் சங்கற்பப்படியுள்ள கடவுள் நமது அறிவுக்கு அதீதமானதென்று அவர்கள் கூறுகிறார்கள்.

**வினா:-** கடவுள் உண்மையை நிருபித்துக் காட்ட முடியாதா?

**விடை:-** சிலர் முடியும் என்கிறார்கள்; சிலர் முடியாது என்கிறார்கள்.

**வினா:-** கடவுளுண்மைக்கு கூறப்படும் ஆதாரங்கள் எவை?

**விடை:-** முதல் ஆதாரம் காரண காரிய வாதம்.

**வினா:-** அதை விளக்கிக் கூறு.

**விடை:-** எதற்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும். எனவே பிரபஞ்சத்துக்கும் ஒரு கர்த்தா இருக்க வேண்டும். அந்த கர்த்தாவே கடவுள்.

**வினா:-** இது ஒரு பலமான வாதமல்லவா?



RangaRakes tamilnavarasam.com

**விடை:-** பலமான வாதந்தான், ஆனால் முடிவானதல்ல.

**வினா:-** ஏன்?

**விடை:-** யாவற்றிற்கும் ஒரு காரணமிருக்க வேண்டுமானால் கடவுளுக்கும் ஒரு காரணமிருக்க வேண்டுமே.

**வினா:-** கடவுள் அனாதியாக இருக்கக் கூடாதா?

**விடை:-** காரணமில்லாமலே கடவுளுக்கு இயங்க முடியுமானால் காரணமில்லாமல் காரியமில்லை என்ற வாதமே அடியற்று வீழ்ந்து விடுகிறது.

**வினா:-** அப்புறம்?

**விடை:-** காரணமின்றி அனாதி காலமாக கடவுள் இயங்க முடியுமானால், பிரபஞ்சமும் எக்காரணமுமின்றி அனாதிகாலமாக இயங்க முடியும்?

**வினா:-** கடவுளுக்கும் ஒரு காரணமுண்டு என சம்மதித்தால் என்ன நஷ்டம் வந்து விடப்போகிறது?

**விடை:-** அப்படியானால் அந்தக்காரணத்துக்கு மூலகாரணமென்ன வென்று ஆராய வேண்டியதாக ஏற்படும். அவ்வாறு ஆராயத் தொடங்கினால் முடிவே ஏற்படாது.

**வினா:-** வேறு வாதமென்ன?

**விடை:-** பூரணத்துவ வாதம்.

**வினா:-** அது என்ன? விளக்கிக் கூறு?

**விடை:-** அதாவது நாம் அபூரணராக இருந்தாலும் (குறைபாடுடை யவர்களா இருந்தாலும்) பூரணமான ஒரு பொருள் உண்டென்ற உணர்ச்சி நமக்கு இருந்துகொண்டு இருக்கிறது. அந்த உணர்ச்சி அந்தப் பூரணப் பொருளின் சாயல் என்று நம்பப்படுகிறது.

**வினா:-** அதனால் நாம் ஊகிக்க வேண்டியதென்ன?

**விடை:-** அந்த உணர்ச்சி நமது உள்ளத்து இருந்துகொண்டு இருப்பதினால் அதற்கு ஆதாரமாக ஒன்று இருக்க வேண்டுமென்றும், அதுவே கடவுள் என்றும் ஊகிக்க இடமிருக்கிறது.

**வினா:-** மேலும் கொஞ்சம் விளக்குக!

**விடை:-** ஒரு பூரண வஸ்துவின் பிரதிபிம்பம் நமது உள்ளத்துத் தோன்றவேண்டுமானால் அது உள்பொருளாக இருக்க வேண்டும். அது உள்பொருளாக இல்லையானால் பூரணமாக இருக்க முடியாது.

**வினா:-** அப்படியானால் முடிவு என்ன?

**விடை:-** கடவுளைப்பற்றிய உணர்ச்சி நமக்கு இருப்பதினால் கடவுள் ஒன்று இருக்கவேண்டும். அப்படி ஒன்று இல்லையானால் நமக்கு அந்த உணர்ச்சி ஏற்பட்டிருக்கவே செய்யாது என்பதுதான் முடிவு.



**வினா:-** இந்த வாதம் சரியானதுதானா?

**விடை:-** முதல்வாதத்தைப்போல இது அவ்வளவு உறுதியானதல்ல.

**வினா:-** ஏன்?

**விடை:-** பூரணத்துவம் ஒரு குணம். உண்மை ஒரு நிலைமை. அவை இரண்டும் சம்மந்தமற்றவை. ஒரு பெரிய பட்டணம் கடலில் ஆழ்ந்து கிடப்பதாகவோ, மேக மண்டலத்தில் மிதந்துகொண்டிருப்பதாவோ நமது உள்ளத்து ஒரு உணர்ச்சி ஏற்படலாம். ஆனால் அப்பேர்ப்பட்ட ஒரு பட்டணம் இருக்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அதுபோல ஒரு பூரண வஸ்துவைப்பற்றிய உணர்ச்சி நமக்கு இருப்பதினால் ஒரு பூரண வஸ்து இருக்க வேண்டுமென்ற கட்டாயமுமில்லை.

**வினா:-** வேறொரு உதாரணத்தினால் விளக்கிக் காட்டு.

**விடை:-** பூமி பரந்திருப்பதாக வெகுகாலம் மக்கள் நம்பிவந்தார்கள். அந்த உணர்ச்சி உலகத்தின் பிரதிபிம்பமாக இருக்க முடியாது. ஏனெனில் பரப்பான பூமி இல்லவே இல்லை.

**வினா:-** அப்படியானால் பூரண வஸ்துக்களும் அபூரண வஸ்துக்களும் நமது மனோ கற்பிதம் தானா?

**விடை:-** ஆம்.

**வினா:-** அடுத்த வாதம் என்ன?

**விடை:-** அடுத்தது உருவக வாதம்.

**வினா:-** அதை விளக்கு.

**விடை:-** வினாடி, நிமிஷம், மணி காட்டும் முறையில் ஒரு கடிகாரம் உருப்படுத்தப்பட்டிருப்பதினால் அது ஒரு நோக்கத்துடன் உண்டு பண்ணப் பட்டிருக்கிறதென்றும், அதற்கு ஒரு கர்த்தா இருக்க வேண்டுமென்றும் நாம் அறிகிறோம். அதுபோல உலகமும் ஒரு நோக்கத்தோடு சிருஷ்டிக்கப்பட்டிருப் பதினால் அதற்கு ஒரு கர்த்தா இருக்க வேண்டும். அந்த கர்த்தாவே கடவுள்.

**வினா:-** இந்த வாதம் எப்பேர்ப்பட்டது?

**விடை:-** கடிகாரத்தை உலகத்துக்கு உவமையாகக் கூற முடியாது. கடிகாரம் எதற்காக உண்டு பண்ணப்பட்டதென்று கூறிவிடலாம். ஆனால் உலகம் எதற்காக உண்டுபண்ணப் பட்டதென்று கூறுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

**வினா:-** பிரபஞ்ச அமைப்பு கடிகார அமைப்புப்போல அவ்வளவு தெளிவான தல்லவா?

**விடை:-** தெளிவாக இருந்தால் இரகசியங்களுக்கு இடமே இல்லை.

**வினா:-** கடிகாரத்தைப்பற்றி நாம் பூரணமாக அறிந்திருப்பது போல பிரபஞ்சத்தைப்பற்றி நாம் பூரணமாக அறியவில்லை யென்று நீ கூறுகிறாயா?



RangaRakes tamilnavarasam.com

**விடை:-** ஆம். கடிகாரத்தின் அமைப்பை நமக்குத் தெளிவாக விளக்கிக் கூற முடியும். பிரபஞ்ச அமைப்பைத் தெளிவாக விளக்கிக்கூற முடியாது.

**வினா:-** இந்த வாதத்தைப்பற்றி வேறு ஏதாவது சொல்ல வேண்டிய துண்டா?

**விடை:-** கடிகாரத்தைப் பார்த்தவுடன் அதை உண்டு பண்ணியவன் ஒருவன் இருக்கவேண்டுமென்று அறியலாமேயன்றி கடிகார உற்பத்திக்குக் காரணமான பொருள்களை யுண்டுபண்ணியவன் ஒருவன் இருக்க வேண்டு மென்றும் சொல்லமுடியாது.

**வினா:-** வேறு என்ன?

**விடை:-** உலகத்தை உண்டு பண்ணியவன் ஒருவன் உண்டென்று ஒப்புக்கொண்டாலும் உலகத்தை சிருஷ்டித்தவன் ஒருவன் இருப்பதாக நமக்கு ருசுப்படுத்த முடியாது.

**வினா:-** இம்மாதிரியான சங்கடங்கள் பல இருப்பதினால் பிரஸ்தாப விஷயத்தில் நாம் கைக்கொள்ள வேண்டிய நிலை என்ன?

**விடை:-** நாம் அந்தரங்க சுத்தியோடு ஆராயவேண்டும். பிடிவாதமாக எதையும் நம்பக்கூடாது. திறந்த மனத்தோடு உண்மையை அறிய முயல வேண்டும்!

**வினா:-** கடவுள் என்ற பெயரை நாம் எந்தப் பொருளில் வழங்க வேண்டும்?

**விடை:-** ஜீவகோடிகளின் உயர்ந்த லக்ஷயத்தைக் குறிக்கும் பொருளாகவே நாம் வழங்கவேண்டும்.

**வினா:-** அப்படியானால் சிலரின் தெய்வங்கள் உத்தமமானவை என்றும், சிலரின் தெய்வங்கள் மோசமானவை யென்றும் ஏற்படாதா?

**விடை:-** ஆம். நிச்சயமாக ஏற்படும். ஒவ்வொரு மனிதனும் அவனவன் லக்ஷயத்துக்கும் கடவுளுக்கும் அளவு கோலாக இருக்கிறான்.

**வினா:-** மேலும் கொஞ்சம் விளக்கு.

**விடை:-** நமது கண் பார்வை எட்டும் அளவுக்கே நமக்குப் பார்க்க முடியும். அதுபோல நமது மனோசக்திக்கு இயன்ற அளவிலே நமக்கு சிந்திக்கவும் விரும்பவும் முடியும்.

**வினா:-** அப்படியானால் கடவுளை சிருஷ்டித்தது யார்?

**விடை:-** ஒவ்வொருவனும் தன் கடவுளை சிருஷ்டித்துக் கொண்டான்.

**குடி அரசு - வினா விடை - 03.05.1936**



# அசம்பளியில் வெண்ணெய் வெட்டிகள்

**''அரசியல் என்பது யோக்கியமான வழியில் வாழ்க்கை நடத்தத் தகுதியற்றவர்களின் கடைசி வயிற்றுப்பிழைப்பு மார்க்கம்''** என்பதாக மேல்நாட்டு அறிஞர் ஒருவர் கூறியிருப்பது யாவரும் அறிந்ததே யாகும்.

அதை நமது நாட்டு பார்ப்பன தேசீய வாதிகள், தேசாபிமானத் தலைவர்கள் என்பவர்கள் மெய்ப்பித்துக்காட்டி விட்டார்கள். வக்கீல் வேலையிலும், வியாபாரத்திலும், தாசித்தொழிலிலும் பிரவேசிக்கின்றவர்களுக்கு எப்படி நாணயம், ஒழுக்கம், சத்தியம் முதலியவைகள் வேண்டியதில்லையோ - இருக்க முடியாதோ - இருக்கக்கூடாதோ அது போல் நமது தேச பக்த கூட்டங்களுக்கும், தேசீயத் தலைவர்களுக்கும் நாணயமும், ஒழுக்கமும், சத்தியமும் சிறிதுகூட இல்லாமல் போய் விட்டன. இவர்களுக்கு வேண்டிய தெல்லாம் எப்படி பாமர மக்களை ஏய்ப்பது, எந்த இழிவான காரியம் செய்தாவது ஸ்தானங்களைக் கைப்பற்றுவது என்கின்ற இரண்டு காரியங்களேயாகும்.

ஆதலால் நம் தேசீயத் தலைவர்கள் இந்த இரண்டு காரியங்களிலும் முதல் நெம்பர் கெட்டிக்காரர்களாகி இன்று அரசியலில் தலை சிறந்து விளங்குகிறார்கள். இந்தக்கூட்டத்தாரின் தேசாபிமானமும், தேசீய வெற்றியுமெல்லாம் பாமரமக்கள் சரியானபடி ஏய்க்கப்பட்டார்களா, அரசியல் பதவிகள் எல்லாம் தங்கள் வயிற்றுப்பிழைப்புக்கு பயன்படும்படி கைப்பற்றப்பட்டனவா என்பதை லக்ஷயமாய்க் கொண்டனவேயாகும்.

இதை நமது வாலிபர்களும் ஏழைப் பாமர மக்களும் உணராமல் ஏமாந்து போய் இந்த ஒழுக்கங்கெட்ட, நாணயங் கெட்ட பித்தாலாட்டக் கூட்டத்தாருக்கு அடிமையாகி தங்கள் சமூக நலனைக் கெடுத்து நாசமடைந்து வருகிறார்கள்.

இம்மாதிரியான பித்தலாட்டக் கொடுமையில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதே முக்கிய விடுதலை என்றும், மனிதனின் சுயமரியாதை என்றும் கருதி 10, 15 வருஷ காலமாகவே நாம் முயற்சித்து வருகிறோம். அம்முயற்சியைப் பார்ப்பன தேசீய வீரர்களும், தேசீயத் தலைவரும் தொடர்ந்து கட்டுப்பாடாய் குறைகூறி விஷமப் பிரசாரம் செய்து எதிர்த்து வருகிறார்கள். இவ்வெதிர்ப்புகளை அவர்களது அடிமையாய் இருந்தாலொழிய பிழைக்க முடியாது என்று கருதி இருக்கும் சில ஈனர்களும் ஆதரித்து வந்து பார்ப்பனரிடம் பாத தீர்த்தம் பெறுகிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

என்ன தான் குறைகூறி, எவ்வளவுதான் விஷமப் பிரசாரம் செய்து வந்தாலும் ஏதாவது ஒரு காலத்தில் உண்மை வெளிப்படாமல் போவதில்லை.

உதாரணமாக இந்திய சட்டசபை தேர்தலின் போது பார்ப்பனர்களும் அவர்களது அடிமைகளும் வெற்றிபெற பார்ப்பன தேச பக்தர்களும், பார்ப்பன தேசீயத் தலைவர்களும் செய்த காரியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல அரசியலைப் பற்றி மேனாட்டு அறிஞர் ஒருவர் சொன்னதற்கு மேலாகவே நடந்து காட்டினார்கள். அதனால் மக்கள் நன்றாய் ஏமாற்றப்பட்டார்கள்.

ஓட்டுப் போட்டு விட்டு வீடு திரும்புவதற்கு முன் வெள்ளைக்கார அரசாங்கம் ஆகாயக் கப்பலில் ஓடிவிடும் என்றும், அரிசியும் பருப்பும் அன்றாடம் தபாலில் விலையில்லாமல் வீடு வந்து சேரும் என்றும் தங்கள் அனுபவிக்கும் பூமிகளுக்கு சர்க்கார் வரியே செலுத்த வேண்டியதில்லை என்றும் கருதினார்கள். ஆனால் எலக்ஷன் நடந்து இன்றைக்கு ஒன்றரை வருஷ காலமாச்சுது. என்ன பலன் ஏற்பட்டது? ஒரு வளைந்த குண்டூசிக்காவது பயன்பட்டதா என்று பார்த்தால் ஒன்றும் இல்லை என்பதோடு அதை சிந்தித்துப் பார்க்கக்கூட நம் பாமர மக்களுக்கு புத்தியில்லையே என்று விசனப்பட வேண்டி இருக்கிறது.

மக்களின் ஒழுக்கத்தையும் புத்தியையும் கெடுக்க தேவதாசிகளும் கள்ளுக்கடைகளும் எப்படி இருக்கின்றனவோ அதுபோலவே நமது நாட்டின் மக்களின் ஒழுக்கத்தையும், புத்தியையும் மற்றொரு விதத்தில் கெடுக்க காங்கிரசும் தேசீய பத்திரிகைகளும் இருந்து வருகின்றன என்று சொல்ல வேண்டி இருக்கிறது. ஆதலால் இந்த ஸ்தாபனங்களுக்கும் அவைகளை ஆதரிக்கும் பத்திரிகைகளுக்கும் அழிவு காலம் ஏற்பட்டு நாணயமாயும், யோக்கியமாயும் நடைபெறும்படியான ஸ்தாபனங்களும் பத்திரிகைகளும் ஏற்பட்டாலொழிய மனித சமூகம் ஒரு நாளும் உருப்படப் போவதில்லை என்பது உறுதியாகும்.

அசம்பளி தேர்தலில் வெற்றி பெற்ற தோழர்கள் அசம்பளிக்கு சென்ற ஒவ்வொரு நிமிஷமும் தங்களை விளம்பரஞ் செய்துகொண்டார்கள். அவற்றிற்கு பார்ப்பனப் பத்திரிகைகள் அளவுக்கு மேற்பட்ட விளம்பரங்கள் கொடுத்தன.

1926, 27-ல் இக்கூட்டத்தார் சுயராஜ்ஜியக் கட்சியின் பேரால் அசம்பளியில் இருந்து கொண்டு செய்த தடபுடலுக்கு சமமாக, ஆகத்தக்க அளவு செலவு செய்து பார்த்தார்கள். ''சர்க்காருக்கு தோல்வி மேல் தோல்வி, காங்கிரசுக்கு வெற்றி மேல் வெற்றி'' என்று பறை முழக்கினார்கள். ''அரசாங்க மெம்பர்களின் வாய்கள் அடைக்கும்படியாக வீர கர்ஜ்ஜனை செய்தார்கள்.'' ''3 நாள், 4 நாள் தொடர்ந்து பேசினார்கள்'', ''அரசாங்க மெம்பர்கள் தலை குனிந்தார்கள்'', ''சத்தியமூர்த்தியின் வீரகர்ஜ்ஜனை, புலாபாயின் மேதாவித்தனம், அவினாசிலிங்கத்தின் ஆணித்தரமான கேள்விகள்'' என்றெல்லாம் கொட்டை எழுத்தில் போட்டார்கள். முடிவில் என்ன ஆயிற்று என்பதே அறிவாளிகள் யோசிக்கத்தக்க விஷயமாகும்.



நாடகத்தில் ராஜவேஷக்காரனும், மந்திரி வேஷக்காரனும், சேவுக வேஷக்காரனும் பேசும் சவடால்கள் போலவே முடிந்ததே தவிர வேறு என்னவாவது ஆயிற்று என்று யாராவது சொல்லமுடியுமா என்று கேட்கின்றோம்.

இந்திய சட்டசபைக்கு இந்த வாய்ப்பேச்சு வீணர்கள் சென்றதின் பயனாக, நடந்திருக்க வேண்டிய காரியங்கள் பல நல்ல காரியங்கள் நடக்க முடியாமல் போயின. சமூக சீர்திருத்த சம்பந்தமான சட்டங்கள் ஏதும் கொண்டு வரவோ, செய்யவோ முடியாமல் போயிற்று. இது பார்ப்பனர்களுக்கும், காந்தியாருக்கும் ஒரு வெற்றி என்று அவர்கள் மகிழலாம்.

தேசத்தின் அருமையான நேரமும், ஏழை மக்களின் ரத்தம் சிந்தி சம்பாதித்த பணமும் வெறும் நாசமாயின. 150 மெம்பர்களுக்கு நாள் ஒன்றுக்கு 20ரூபாய் என்றால் தினம் 3000 ரூபாய் தினப்படி ஆய்விட்டது. இவர்கள் ரயில் சார்ஜ் விஷயத்தில் 30 ஆயிரம் ரூபாய் போல் செலவு ஆகிவிட்டது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சம்பளமே இந்த 2, 3 மாதங்களுக்கும் லக்ஷக்கணக்கில் ஆகி இருக்கும். விளம்பரங்களுக்கு ஆகவும், கட்சி துவேஷத்துக்காகவும் விஷமத்தனத்துக்காகவும் கேட்கப்படும் அனாவசிய மானதும், கிருத்துருவமானதுமான கேள்விகளுக்குப்பதில் சேகரிப்பதற்கு லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவாகும். இவ்வளவும் போதாமல் கட்சி பிரதி கட்சி காரணமாய் சர்க்காருக்கு ஆள் பிடிப்பதற்காக பல உத்தியோகங்கள் பதவிகள் உற்பத்தி செய்வதிலும், வேறு விதமான அனுகூலம் செய்வதிலும் எவ்வளவோ செலவுகளும், அசௌகரியங்களும், அனுபவிக்க வேண்டி வரும். இவ்வளவு செய்தும் ஏற்பட்ட பலன் என்ன என்று கேட்கின்றோம்.

தோழர் புலாபாய் தேசாய் நல்ல கெட்டிக்கார வக்கீல் ஆனார், சத்திய மூர்த்தியார் பெயர் பெற்ற வாயாடி ஆனார், சில பச்சகானாக்கள் துப்பட்டிக்கு கொம்பு முளைத்ததுபோல் விளம்பரம் பெற்றார்கள்.

ஆனால் இவர்கள் அரசாங்க மெம்பர்களால் எவ்வளவு முட்டாள்கள் என்றும், தேசநலத்துக்கு விரோதமாய் வந்து விளம்பரத்துக்கு ஆக தேச நேரத்தையும் பணத்தையும் பாழாக்கினார்கள் என்றும் பட்ட வர்த்தனமாக வெளியாக்கப்பட்டு விட்டார்கள்.

இவை ஒருபுறமிருக்க, முக்கியமாக இக்கூட்டத்தார் இந்திய சட்ட சபைக்குச்செல்ல ஓட்டு வாங்கும்போது பொது மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளில் எதையாவது நிறைவேற்றினார்களா? அல்லது அப்படி ஒரு வாக்குறுதி கொடுத்ததையாவது ஞாபகப்படுத்திப் பார்த்தார்களா என்று யோசித்துப்பார்க்க வேண்டுகிறோம். வாக்குறுதிகளாவன:-

1. புதிய சீர்திருத்தத்தை உடைத்து உருவில்லாமல் ஆக்கி விடுகிறோம்.
2. ஒரு புதிய தேசீய சபையை கூட்டச்செய்து அதன்மூலம் இந்நாட்டு தேவைகளை நிர்ணயித்து அதை அமுலுக்குக் கொண்டுவருவது.
3. அடக்குமுறைச் சட்டங்களை ஒழித்து விடுகிறோம் என்று சொன்னார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இந்த காரியங்களில் எதையாவது செய்ய முடிந்ததா, செய்ய முயற்சித்தார்களா என்பதே முக்கிய கேள்வியாகும்.

முதலாவது காங்கிரஸ்காரர்கள் தங்களுக்கு போதிய பலமில்லாததால் வேறு இரண்டு மூன்று கூட்டத்தாருக்கு தாங்கள் நிபந்தனை இல்லாத அடிமைகள் ஆக வேண்டியவர்களானார்கள்.

அதாவது, வருணாச்சிரம மாளவியா கூட்டத்தாருக்கும் ''வகுப்புவாத'' ஜின்னா கூட்டத்தாருக்கும், முதலாளித்துவ மோடி கூட்டத்தாருக்கும் அடிமைகளாக வேண்டியவர்களானார்கள்.

இதனால் சீர்திருத்தத்தை உடைக்கவோ, வேறு ஒரு பொது பிரதிநிதித்துவக் கூட்டம் கூட்டவோ யோக்கியம் இல்லாமல் போய் விட்டதுடன், அடக்குமுறைச் சட்டங்களை ஒழிக்க இவர்களுக்கு வாயளப்பைவிட வேறு காரியம் செய்ய முடியாது என்பதும் வெளிப்பட வேண்டியதாயிற்று.

ஆகவே ஒரு அளவு தந்திரத்தாலும், தங்கள் கொள்கைக்கு விரோதமாக சில விட்டுக்கொடுக்கும் இழி தொழிலாலும் தாங்கள் இருப்பதாய்க் காட்டிக்கொண்டதைத் தவிர வேறு ஒரு காரியமும் செய்ய முடியாமல் போய்விட்டது.

சென்னை சட்டசபையில் உள்ள ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்களையும், மந்திரிகளையும் என்னவெல்லாம் குறைகூறினார்களோ அக்குறைகளுக் கெல்லாம் இந்திய சட்டசபையில் காங்கிரஸ்காரர்கள் ஆளானதோடு, காங்கிரஸ் மெம்பர்கள் ஜனப்பிரதிநிதிகள் அல்ல என்பதை கல்லின் மேல் எழுத்துப் போல் எழுதும்படியாக நடந்து கொண்டுவிட்டார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

சுமார் 50, 60 தீர்மானங்கள் வரை காங்கிரஸ்காரர்களால் நிறைவேற்றப் பட்டவைகளில் ஒன்றாவது சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்படாமல், அநேகமாய் எல்லாம் குப்பைத் தொட்டிகளில் போடப்பட்டன என்றால், காங்கிரசுக்காரர்கள் ஜனப்பிரதிநிதிகளாய் இருக்கத் தகுதி உடையவர்களா, அல்லது சுயமரியாதையுடையவர்களா என்று கேட்கின்றோம்.

சர். ஷண்முகத்தை ''தோற்கடித்த வீரர்'' தோழர் சாமி வெங்கடாசலம் செட்டியார் இன்று எங்கே இருக்கிறார்? அவரது மேல் விலாசம் என்ன? என்பது பூதக்கண்ணாடி வைத்துத் தேடவேண்டிய நிலைமையில் மறைந்து விட்டார். அவர் ஏழைப்பாட்டாளி மக்களுக்கு செய்த மகத்தான துரோகத்தைப் பற்றி ஒரு காங்கிரசுக்காரரோ, அல்லது ஒரு தேசீயப் பத்திரிகையோ வாயைக் கூடத் திறக்காமல் சாமி வெங்கடாசலத்தினிடம் பங்கு பெற்றுக் கொண்டன என்றால் ''தேசீய வாழ்க்கை என்பது யோக்கியமாய்ப் பிழைக்க முடியாத அயோக்கியர்களின் வயிற்றுப் பிழைப்பு வியாபாரம்'' என்பதை பச்சையாக ருஜூப்படுத்தி விட்டார்கள் என்றுதானே கருத வேண்டியிருக்கிறது.



ஆகவே இந்த ஒன்றரை வருஷ இந்திய சட்டசபை வேலை பொது மக்களின் பல லக்ஷ ரூபாய் பாழாகி, தொழிலாள ஏழை மக்களுக்குத் துரோகம் செய்து சில போலிகளும் போக்கில்லாதவர்களும் விளம்பரம் பெற்றார்கள் என்பதோடு முடிவடைந்துவிட்டது.

இதற்குப் பெரும்பாலும் காந்தியாரே பொறுப்பாளியாவார், காந்தி பெயரையும், காந்தியார் கும்பிடையும் காட்டியே இப்போலிகள் ஓட்டு வாங்கினார்கள்.

காந்தியாரின் தோல், வரவர காண்டாமிருகத்தின் தோலுக்கு ஒப்பாய் விட்டதால் அவருக்கும் இதைப்பற்றி யெல்லாம் லட்சியம் இல்லாமல் மகாத்மா பட்டத்தை மாத்திரம் காப்பாற்ற வேண்டியவராய் விட்டார்.

ஆகவே இனியாவது பொதுமக்களுக்கும் ஏழைப்பாட்டாளி மக்களுக்கும் புத்தி வந்து தேர்தல் காலங்களில் வயிற்றுப் பிழைப்பு வியாபார தேசீயத் தலைவர்களையும் - தேசீய பத்திரிகைகளையும் நம்பி மோசம் போகாமல் புத்தியாயும், மானமாயும் நடந்து கொள்ளமாட்டார்களா என்கின்ற ஆசையில் இதை எழுதுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 03.05.1936**



RangaRakes tamilnavarasam.com

# வேலூர் ஜில்லா போர்டுக்கு ஜே!
# அப்துல் ஹக்கீம்கு ஜே!!

சௌகார் அப்துல் ஹக்கீம் சாயபு அவர்கள் வேலூர் ஜில்லா போர்டின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார். அவர் கோடீஸ்வர செல்வவான், தாராளமாய் தர்மம் செய்யும் தயாளவான், கட்சி பிரதிகட்சி சார்பில்லாமல் தனக்கு தோன்றியபடி நடந்து கொள்ளுபவர் என்றாலும் பார்ப்பனர்களுக்கு மிகவும் வேண்டியவராயும் காங்கிரசுக்கு தாராளமாக கேட்டபோதெல்லாம் பணம் உதவிக் கொண்டும் இருந்து வந்தவர். ஜஸ்டிஸ் கட்சியில் பற்றில்லாதவராகவும் இருந்தவர்.

இப்படி இருந்தும் பாம்புக்கு பால் வார்த்த பயன்போல் பார்ப்பனர்கள் இவருக்கு தொந்திரவு கொடுக்க ஆரம்பித்து அவர் வேலூர் ஜில்லா போர்டுக்கு ஒரு மெம்பராகக்கூட வருவதற்கு இல்லாமல் செய்ய பலமாய் முயற்சித்து இவருக்கு போட்டியாக ஒரு முஸ்லீமை நிறுத்தி முஸ்லீம்களுக்குள் கட்சி உண்டாக்கினார்கள்.

தோழர் அப்துல் ஹக்கீம் அவர்கள் இவற்றையெல்லாம் லட்சியம் செய்யாமல் தன் இஷ்டப்படியே செய்ததுடன் ''நான் ஜஸ்டிஸ் கட்சி சார்பாகவே நிற்கிறேன், என்னை யார் என்ன செய்யக்கூடும்'' என்று வீரம் பேசினார். ''பல கூட்டங்களில் யார் என்ன செய்தாலும் நான் பிரசிடெண்டாய் வரப்போவது நிச்சயம்'' என்று பந்தயம் கட்டினார்.

காங்கிரசின் பேரால் நின்ற பலர் தங்கள் தேர்தல் செலவுகளுக்கு சாயபு அவர்களிடமே உதவி பெற்றார்கள். சிவிக்போர்ட் மெம்பர்களிலும் சிலர் வாய் பூசப்பட்டார்கள். இவ்வளவும் பெற்றுக்கொண்டு கடைசியில் சாயபை ஏமாற்றப்பார்த்தார்கள். கடைசியாக காங்கிரசுக்காரர்கள் என்பவர்களிலேயே 10 பேர்கள் சாயபு அவர்களை ஆதரிக்க ஓடிவிட்டார்கள். ஆகவே ''எவ்வளவு அயோக்கியனாய் இருந்தாலும் 4 அணா கொடுத்து கையெழுத்து போட்டு விட்டால் யோக்கியர்களாகி விடுவார்கள்'' என்று சொன்ன ஆச்சாரியாரின் வேதவாக்கு இன்று என்ன ஆயிற்று என்று கேட்கின்றோம்.

காங்கிரசுக்காரர்கள் எலக்ஷன்களில் செய்த இழி தொழில்களை நினைத்தால் நம் தேசத்திற்கு சுதந்திரம் வேண்டுமா, வருமா, இந்தியர் என்னும் பேரால் ஒரு சமூகம் இருக்க வேண்டுமா? என்று கூட எண்ண வேண்டிவரும்.



நிற்க, இதுவரை நடந்த ஜில்லா போர்டு தேர்தல்களில் எந்த ஜில்லா போர்டிலாவது உண்மையில் காங்கிரஸ்காரர்கள் ஜெயித்தார்கள் என்று சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

காங்கிரஸ்காரர்களின் இழி தொழில்கள், சூழ்ச்சிகள் ஆகியவைகள் வெளியாகப்பட்டதே யல்லாமல் காங்கிரஸ்காரர்கள் யார் ஜெயித்தார்கள் என்று தான் கேட்கின்றோம்.

திருநெல்வேலி தளவாய் முதலியாரும், திருச்சி தேவரும், திருப்பாப் புலியூர் ரெட்டியாரும், திருவண்ணாமலை முதலியாரும் காங்கிரசுக்கு 4 அணா கொடுத்திருந்தாலும் கதர்வேஷம் போட்டிருந்தாலும் இவர்கள் காங்கிரஸ் காரர்கள் என்று எந்த மூடனாவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம்.

4 அணா கொடுத்ததும், கையெழுத்துப் போடுவதும், கதர் வேஷம் போடுவதும்தான் காங்கிரஸ்காரர்களுக்கு அடையாளம் என்றால் இவர்களை யெல்லாம் காங்கிரசுக்காரர்கள் என்று நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். அப்படிக்கில்லாமல் காங்கிரசுக்கு ஏதாவது கொள்கைகள் இருக்கிறது, மெம்பர்கள் ஆவதற்கு ஏதாவது சட்டதிட்டங்கள் இருக்கிறது, அதன்படி நடந்தவர்கள் - நடப்பவர்கள் தான் காங்கிரசுக்காரர்கள் என்றால் இப்போது தலைவர்களாய் இருப்பவர்கள் காங்கிரசின் விரோதிகள் என்றே சொல்லுவோம். காங்கிரசின் தோல்விக்கும், பரிதாப நிலைக்கும் இந்த பிரசிடெண்டுகள் காங்கிரஸ் பிரசிடெண்டுகளாய் இருக்கிறார்கள் என்று சொல்லுவது ஒரு பிரத்தியக்ஷ உதாரணம் என்று கூடச் சொல்லுவோம்.

ஏனெனில் நேற்று வரை காங்கிரசுக்கு வெளிப்படையான எதிரிகளாய் இருந்தவர்களை சரணாகதி அடைந்து அவர்கள் கால்களுக்குள் புகுந்து அவர்களைக் கூடா ஒழுக்கத்தால் அதாவது கோயில்களுக்கு ஆட்கள் வருவதற்கு தாசி, வேசி, சதுர்க் கச்சேரிகள் வைத்து ஆட்களைப் பிடிப்பது போன்ற காரியங்கள் செய்து சுவாதீனப் படுத்திக் கொண்டு அவர்களைக் காங்கிரஸ் மெம்பர்கள் என்றும், காங்கிரஸ் வெற்றி என்றும் சொல்லிக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டால் பிறகு காங்கிரசுக்கு என்னதான் யோக்கியதை இருக்கிறது என்பது விளங்கவில்லை என்பதோடு எப்படியாவது பாமர மக்கள் ஏமாந்தால் போதும் என்பதல்லாமல் வேறு கொள்கை இல்லை என்பதும் விளங்குகிறது.

ஸ்தல ஸ்தாபனம் என்பது ஒரு ''குருட்டுக் கோமுட்டிக் கடை''யாக ஆகிவிட்டது. இதற்குத் தலைமை வகிப்பவர்கள் கடன்காரர்களாயில்லாத வர்களும், பொருளாதார நெருக்கடி இல்லாதவர்களும், தாட்சண்யத்தாலும் கெஞ்சுதலாலும் ஓட்டுப் பெறுபவர்களாய் இல்லாமல் தன்னுடைய யோக்கியதையாலேயே ஓட்டுப் பெறுகிறவர்களாகவும், இதன் பேரால் பணம் சம்பாதிக்க இஷ்டமில்லாதவர்களாகவும் இருக்க முடியாமலே போய்விட்டது.



RangaRakes tamilnavarasam.com

காங்கிரஸ் ஏற்பட்ட பிறகு, இந்த ஸ்தாபனங்கள் இத்துறைகளில் மிகமிக மோசமான நிலைமைக்கே போய் கொண்டிருந்தன என்றாலும் ஜஸ்டிஸ் கட்சியின் பயனாய் ஒரு அளவாவது கட்டுத்திட்டம் செய்ய முடிந்தது. இப்போது அடியோடு பாழாகக்கூடிய நிலைமைக்கு போய்க் கொண்டிருப்பதை ஒரு அளவுக்காவது வேலூர் ஜில்லா போர்டைப் பொறுத்தவரையாவது தடுக்க தோழர் ஹக்கீம் சாயபு அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார் என்று சொல்லுவோம்.

அவர் பணக்காரர், கடனில்லாதவர், இந்த பதவியின் பேரால் ஜீவனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லாதவர். இதிலிருந்து சம்பாதித்து கடன் கட்ட வேண்டியதில்லை. மெம்பர்கள் தயவுக்கு பல்லைக் காட்டிக்கொண்டு ஒவ்வொரு மெம்பர்களுக்கு ஒவ்வொரு கண்டிறாக்ட் கொடுத்து கெஞ்சிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. தனக்கு ஆகவேண்டி தன் வேலைக்காரன் பேருக்கோ, சொந்தக்காரன் பேருக்கோ கண்டிறாக்ட் எடுத்துப் பணம் சேர்க்க வேண்டிய அவசியமுமில்லாதவர்.

கூடியவரையில் சௌகார் சாயபு தேர்தலானது இன்று இந்த 25 ஜில்லா போர்டுகளில் இருக்கும் பிரசிடெண்டுகளை விட நாணயமானதும், யோக்கியமானதுமான கனவான் தேர்தல் என்றே சொல்லுவோம்.

அதோடு மாத்திரமல்லாமல் ஜில்லா போர்டில் இவருடைய காலாவதி ஆவதற்குள்ளாக அவருடைய சொந்தப் பணம் ஒரு லக்ஷ ரூபாயாவது செலவு செய்து நிர்வாகம் செய்வார் என்றும் சொல்லலாம்.

இப்படிப்பட்ட ஒரு நன்மையும் வெற்றியுமான காரியம் வேலூர் ஜில்லா போர்டுக்கு ஏற்பட்டதானது காங்கிரசின் தோல்வியினாலேயே என்பதைத் தெரியப்படுத்திக் கொண்டு வேலூர் ஜில்லா போர்டானது இப்படிப்பட்ட ஒரு நாணயஸ்தரைத் தலைவராக அடைந்ததற்காக அதைப் பாராட்டுகிறோம்.

[வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படியும் ஒரு முஸ்லீம் வந்ததானது அதுவும் ஜஸ்டிஸ் கட்சி சார்பாய் வந்ததானது அக்கட்சியின் நியாய உணர்ச்சியைக் காட்டுகிறது.]

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 03.05.1936**



# ஜின்னாவின் உபதேசம்

## சமூகமே முதலாவது

''முதலில் சமூக நன்மையை கவனிப்பவனாகவும், இரண்டாவதாக தேச நன்மையைக் கருதுபவனாகவும், மூன்றாவதாகவே சுயநன்மையைக் கருதுபவனாகவும் இருக்கிறவனையே தேர்தல்களில் தெரிந்தெடுங்கள்'' என்று தோழர் ஜின்னா அவர்கள் டெல்லி முஸ்லீம்கள் கூட்டத்தில் உபதேசம் செய்திருக்கிறார். அதையே நாமும் சொல்லுகிறோம். மனித சமூகத்துக்குப் பிறகு தான் தேசமாகும். பித்தலாட்டக்காரர்களும், பிழைக்க வேறு வழியற்றவர்களும் தான் மனிதன் மனிதனால் நாயிலும் கேடாக மதிக்கப்படுவதை மறந்து தேசத்தைப் பற்றி பேசுவான்.

இந்த நாட்டில் மனிதன் மற்றொரு மனிதனால் எவ்வளவு இழிவாய் கருதப்படுகிறான் என்பதை ஒரு மனிதன் உணருவானானால், அவனுக்கு கடுகளவு சுயமரியாதையாவது இருக்குமானால் அவன் மனித இழிவை போக்கத்தான் முதலில் பாடுபடுவான். முடியாவிட்டால் அந்த தேசத்தையே நெருப்பு வைத்து பொசுக்கவே பாடுபடுவானே ஒழிய கேவலம் தான் சொந்தப் பிழைப்புக்கு ஆக இவைகளை மறைத்துக் கொண்டு தேச பக்த வேஷம் போடமாட்டான். இதை உணர்ந்து தான் தோழர் ஜின்னா முதலாவது சமூகம் என்றார். இதை போலி தேச பக்தர்களும் கூலி தேசியவாதிகளும் கவனிப்பார்களா? ஒரு நாளும் கவனிக்க மாட்டார்கள்.

நாம் இதைச் சொன்னால் நம்மை சர்க்கார் தாசர்கள், தேசத்துரோகிகள் என்பார்கள். இதை ஜின்னா அவர்கள் சொன்னதால் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டியவர்களாகி விட்டார்கள். ஏனெனில் முஸ்லீம்கள் தங்களை யாராவது குறை கூறினால் அவர்களுக்கு வாயில் புத்தி கற்பிக்க மாட்டார்கள். உடனே குனிந்து நிமிருவார்கள். ஆதலால் வாய் மூடிக் கொண்டிருக்க வேண்டி இருக்கிறதோடு அவர்களுக்குள் புகுந்து அவர் சமூக நலனுக்கு முதல் இடம் கொடுத்து மற்றவர்களை ஒழிக்கப் பார்க்கிறார்கள். பார்ப்பனரல்லாத ''இந்து''க்களுக்கு இது புரிவதில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 03.05.1936**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரசுக்காரர்கள் பிரதிநிதிகளாவார்களா?

ஜனப்பிரதிநிதிகள் என்பவர்கள் ஜனங்களுக்குத் தெரிந்தவர்களாகவும், ஜனங்களிடம் உண்மையைச் சொல்லி ஓட்டுக் கேட்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஆனால் நமது காங்கிரஸ்காரர்கள் எலக்ஷனில் ''வெற்றி'' பெற்றார்கள் என்றாலும் ஜனங்களுக்குத் தெரிந்தவர்களா? ஜனங்களிடம் உண்மை பேசி ஓட்டுப் பெற்றவர்களா? என்பது கவனிக்கத்தக்கதாகும்.

காங்கிரசுக்காரர்கள் கொள்கை இன்னது என்று அநேக மக்களுக்குத் தெரியவே தெரியாது. உண்மையிலேயே காங்கிரசுக்கும் இன்னதுதான் எலக்ஷன் கொள்கை என்பதாக ஒன்று இல்லவே இல்லை.

1. காங்கிரசுக்காரர்கள் ஓட்டுக் கேட்பதை காந்திக்கு ஓட்டுப் போடுங்கள் என்பதாக கேட்பது.
2. ஜெயிலுக்கு (யாரோ) போனவர்கள் ஆதலால் (யாருக்கோ) ஓட்டுப் போடுங்கள் என்பது.
3. பொய்யையும் அன்னியர் மீது அநியாயப் பழிகளையும் கூறி ஓட்டுக் கேட்பது.
4. மூட நம்பிக்கையான மதப்பிரசாரம் செய்து அதை அரசியலுடன் பொருத்தி ஓட்டுக் கேட்பது.
5. பெண்களைத் தனிமையில் அனுப்பி முக்கியஸ்தர்களை வசப்படுத்துவது.
6. அபேக்ஷகர்கள் யார்? அவர்கள் யோக்கியதை என்ன? முன்பின் நடத்தை என்ன? என்பதை மூடிவைத்து ஓட்டு வாங்குவது.
7. தங்கள் அதிகாரத்திற்குச் சம்மந்தமில்லாத காரியங்களைச் செய்வதாகச் சொல்லி ஆசை காட்டி ஏமாற்றி ஓட்டு வாங்குவது.

இதுபோல் அனேகப் பித்தலாட்டங்களால் ஓட்டுப்பெற்றவர்கள் உண்மையான பிரதிநிதிகளாவார்களா? என்று கேட்பதோடு, யோக்கியமான அரசாங்கத்தார் இவர்களைப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளலாமா? என்றும் கேட்க வேண்டியிருக்கிறது.



காங்கிரஸ்காரர்கள் நடந்துகொண்டதாகவும் பேசியதாகவும் நாம் சொல்லும் மேல்கண்ட 7, 8 காரியங்களுக்கும் நம் வார்த்தைகளையே நம்பும்படி நாம் சர்க்காரைக் கேட்கவில்லை. அவர்களுக்கு உண்மை தெரிய வேண்டுமானால் எலக்ஷன் பிரசாரத்தில் காங்கிரஸ்காரர்கள் பேசியதையும் அவர்களது தனிப்பட்ட நடவடிக்கைகளையும் போலீஸ் ரகசிய இலாகா குறிப்புகளையும் C.I.D. சுருக்கெழுத்துக்காரர் எடுத்த பிரசங்கங்களையும், அக் கூட்டத்திற்கு வந்திருந்த மக்களின் யோக்கியதையும் காங்கிரஸ் மெம்பர்களைக் கமிட்டியில் வைத்தே அலசிப் பார்த்து உண்மை தெரிந்து கொள்ளும் படி வேண்டுகிறோம்.

ஆதலால் ஸ்தல ஸ்தாபனம் என்னும் பேரால் உபயோகமற்றச் ''சுதந்தரத்தை''க் கொடுத்துவிட்டு அதையும் யோக்கியதையும் பிரதிநிதித்துவமும் அற்ற ஆட்கள் வந்து நடத்தும்படி செய்துவிட்டு இந்திய மக்களை வேடிக்கை பார்ப்பதானது. மிகமிக அதர்மமான காரியம் என்று நம் அரசாங்கத்தாருக்கு எடுத்துக்காட்டாமல் இருக்க முடியவில்லை. ஏன் என்றால் ஏழைகள் வரிப்பணம் பதறப் பதற கொள்ளை போகின்றது, நாசமாகின்றது என்பதால் தான்.

**குடி அரசு - கட்டுரை - 03.05.1936**



RangaRakes tamilnavarasam.com

# நம்மவர் கோழைத்தனம்

தோழர் சுபாஷ் சந்திரபோஸைக் கைது செய்து, விசாரணையின்றிச் சிறையிலடைத்து வைத்திருப்பதை அழுத்தமாய்க் கண்டிப்பதாக ஒரு தீர்மானம் கொண்டுவர அனுமதி வேண்டுமென்று சென்னை நகரசபை மெம்பர் தோழர் தாமோதரம் நாயுடு ஏப்ரல் 28-ந் தேதி மாலை சென்னை நகரசபைக் கூட்டத்தில் ஒரு பிரேரணை கொண்டுவந்தார். இம்மாதிரிப் பிரேரணைகளுக்கு, நகரசபையில் பிரசன்னமாயிருக்கும் மெம்பர்களில் முக்கால்வாசிப் பேர் ஆதரவளித்தால்தான் சட்டப்படி அனுமதி கொடுக்க முடியும். ஆகவே மேயர் பிரேரணையை ஓட்டுக்கு விட்டார். 18 பேர் சாதகமாகவும், 7 பேர் பாதகமாகவும் ஓட்டுக் கொடுக்க 6 பேர் நடுநிலைமை வகித்தனர். எனவே பிரேரணை தோற்றுப் போய்விட்டதாக மேயர் தெரிவித்தார். உடனே தோழர் சக்கரை செட்டியார் எழுந்து சபையில் பிரசன்னமாயிருந்த அங்கத்தினர் 25 பேரில் 18 பேர் பிரேரணைக்குச் சாதகமாக ஓட் செய்திருக்கின்றனரென்றும், 25-ல் முக்கால்வாசிப் பேர்கள் என்பது 18¾ பேர்கள் என்றும், ஒரு நபரில் ¾ மனிதன் என்பது கருதக்கூடாத விஷய மென்றும் ஆதலின் பிரேரணைக்கு சபை அனுமதி கொடுத்து விட்டதாகவே கருதப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆனால் முக்கால்வாசிப் பேர் என்பது பாதிக்கு மேற்பட்டதென்றும், ஆதலின் அதை ஒன்றாகவே மதிக்க வேண்டு மென்றும், பிரேரணைக்கு சபை அனுமதி மறுத்து விட்டதென்றும் மேயர் அப்துல் ஹமீத்கான் கண்டிப்பாக முடிவு கூற பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

ஆனால் இந்தச் சிறு விதிகூட மேயராய் வர ஆசைப்படும் சக்கரை செட்டியாருக்கு தெரியாமல் போனது ஆச்சர்யமே.

நிற்க, தோழர் சுபாஷ்சந்திரபோஸை சர்க்கார் சிறைப்படுத்தியதும் விசாரணையின்றி சிறையிலடைத்து வைத்திருப்பதும் தவறேயாகும். சட்ட மறுப்பையும், புரட்சி இயக்கத்தையும் அடக்கிவிட்டதாகப் பெருமை பாராட்டிக்கொள்ளும் சர்க்கார் அவைகளை ஒழிப்பதற்கு உதவி புரிந்த சாதனங்கள் எல்லாம் தமது கையில் இப்பொழுதும் இருந்து வருகையில் தோழர் சுபாஷ் சந்திரபோஸை கைது செய்யத் தேவையே இல்லை. அவர் இந்தியாவுக்கு வந்த பிறகு சட்ட விரோதமான செயல்களில் ஈடுபட்டதாக சர்க்காருக்குத் தகவல் கிடைத்தால் எந்த நிமிஷத்தில் அவரைக் கைது செய்யவும் சர்க்காருக்கு முடியும். மேலும் அவரை சர்க்கார் கைது செய்யாதிருந்தால் அவர் காங்கிரஸ் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருப்பார். காங்கிரஸ்



தலைவர் அபேதவாதியாக விருந்தாலும், காங்கிரஸ் அவரைப் பின்பற்ற வில்லையென்பது லக்ஷ்மணபுரி முடிவுகளினால் தெளிவாகி விட்டது.

காங்கிரஸ்காரரில் பெரும்பாலார் பதவி மோகம் கொண்டிருப்பதினால் காங்கிரஸ் ராஜபக்தி ஸ்தாபனமாகவும், ஒத்துழைப்பு ஸ்தாபனமாகப் போவதும் உலகமறிந்த விஷயம். இந்நிலையில் காங்கிரஸ் காரியதரிசி ஆகவிருந்த சுபாஷ் பாபுவினால் கடுகளவு தொல்லையாவது விளையுமென்று சந்தேகப்படத் தேவை இல்லை.

தோழர் சுபாஷ்போஸ் சிறைவாசத்தைக் கண்டிக்குமுகத்தான் அசம்பிளி மெம்பர்கள் எல்லாம் ராஜினாமாச் செய்து விட்டு வெளியேறியிருந்தால் சென்னைச் சட்டசபை ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்கள் எல்லாம் உடன் வெளியேற வேண்டுமென்று நாமும் சிபார்சு செய்திருப்போம். அன்றி சென்னைச் சட்டசபையில் ஒரு கண்டனத் தீர்மானம் வந்திருந்தால் அதை ஆதரிக்குமாறு நாம் ஜஸ்டிஸ் கட்சியாரைக் கேட்டுமிருப்போம்.

ஆனால் சென்னை நகரசபைக்கும் கண்டனத் தீர்மானத்துக்கும் என்ன சம்மந்தம் என்பதுதான் நமது கேள்வி.

அரசியல் விஷயங்களுக்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் எத்தகைய சம்பந்தமுமில்லை. இது ஜஸ்டிஸ் கட்சியாரின் கொள்கை. பலாபலன்களை எதிர்பாராமல் அந்தக் கொள்கையைக் காப்பாற்ற வேண்டியதே ஜஸ்டிஸ் கட்சியார் என்று சொல்லிக் கொள்வோரின் கடமை. அம்மாதிரி உறுதியான கட்சிப்பற்றுடையோர்களாற்றான் கட்சிக்கு வலிமையும் பெருமையும் உண்டாக முடியும். ஆனால் சென்னை நகரசபையில் நடந்திருப்பதென்ன? ஒரு 4 அணா காங்கிரஸ்வாதி கொண்டுவந்த தீர்மானத்தை ஒரு வெகுநாளைய காங்கிரஸ்வாதியான மேயரே ஸ்தல ஸ்தாபன விதிகளுக்கு முரணானது என்று தைரியமாக நிராகரித்திருக்கிறார்.

அடிக்கடி கரணம்போடும் தோழர் சக்கரை செட்டியாரின் மழுப்பலில் மயங்கி மேயர் தோழர் அப்துல் ஹமீத்கான் பிரேரணைக்கு அனுமதி யளித்திருக்கலாம். சாமானியர் அவ்வாறே செய்திருப்பார்கள். ஆனால் நெஞ்சமுத்தமுடைய அமீத்கான் ஸ்தல ஸ்தாபன விதிகளுக்கே மதிப்பு கொடுத்தார். கட்சிப்பற்றுக்கோ, மலிவான வேஷப் பாராட்டுக்கோ மதிப்புக் கொடுக்கவில்லை.

ஆனால் தம் கட்சிக்கொள்கைப்படி அத்தீர்மானத்தை எதிர்க்கக் கடமைப் பட்ட ஜஸ்டிஸ் கட்சியாரோ பிரஸ்தாப விஷயத்தில் மிகவும் கோழைத்தனமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சிப் பேரைச் சொல்லிக்கொள்ளும் தோழர்கள் பாலசுந்தரம் நாயுடு, சி.பி. சுப்பிரமணியம், பார்த்தசாரதி நாயக்கர், வெங்கடசாமி நாயுடு, ஜானகி ராமசெட்டி, சிவசண்முகம் பிள்ளை, டாக்டர் நடேச முதலியார் ஆகிய 7 பேரும் நடுநிலைமை வகித்து கட்சிக் கொள்கையை அலட்சியம் செய்ததுடன் தமது கோழைத்தனத்தையும் காட்டிக்கொண்டது



RangaRakes tamilnavarasam.com

வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும். நெருக்கடியான சமயங்களில் கட்சிக் கொள்கைகளைக் கொலை செய்பவர்களே கட்சிக்குப் பேராபத்து விளைவிக்கக் கூடியவர்கள். ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகரும் சட்டசபை உதவித் தலைவருமான டாக்டர் நடேசமுதலியார் அவ்வாறு நடந்து கொண்டது ஒரு பொழுதும் ஆதரிக்கத்தக்கதே யல்ல. காங்கிரஸ்காரருக்கு பயந்து இவர்கள் நடுநிலைமை வகித்ததினால் இவர்களை தேச பக்தர்கள் என்று காங்கிரஸ்காரர் கூறப் போவதில்லை. வரப்போகும் நகரசபைத் தேர்தல்களில் இவர்களுக்குப் போட்டியாக ஆட்களை நிறுத்தத்தான் போகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியார் எல்லாம் தேசத்துரோகிகள், பிற்போக்காளர்கள் என்று பிரசாரம் செய்யத்தான் போகிறார்கள். தற்கால மிருப்பதுபோல் சென்னை ஜஸ்டிஸ்கட்சித் தலைவர்கள் மேலும் இருந்துகொண்டிருந்தால், அடுத்த நகரசபைத் தேர்தலில் இந்த ஏழு பேரும் தோல்வியுற்று மண் கௌவத்தான் போகிறார்கள்.

ஒருகால் தீர்மானம் நேர்மையானதென்று இந்த ஏழுபேருக்கும் தோன்றியிருந்தால் அவர்கள் அனைவரும் தீர்மானத்துக்கு ஆதரவாக தைரியமாக வோட்டளித்திருக்கலாம். அப்பொழுது தைரியசாலிகள் என்ற பெயராவது கிடைத்திருக்கும். நடுநிலைமை வகித்ததினால் கட்சிக்குத் துரோகம் செய்ததுடன் தமது பயங்காளித்தனத்தையும் காட்டிக்கொண்டு விட்டார்கள். அரசியலில், நடுநிலைமை ஒண்ணாம் நம்பர் பயங்காளித்தன மாகவே மதிக்கப்படுகிறது. இம்மாதிரி சமய சஞ்சீவித் தலைவர்கள் ஜஸ்டிஸ் கட்சியில் நிறைந்திருப்பதினாலேயே ஜஸ்டிஸ் கட்சி இன்று மேல் மூச்சு வாங்கிக்கொண்டு கிடக்கிறது. உறுதியான கட்சிப் பற்றில்லாதவர்கள் ஆயிரம் பேர் கட்சியிலிருப்பதைவிட அசைக்க முடியாத கட்சிப்பற்றுடையவர்கள் ஒரு சிலர் இருந்தாலும் கட்சிக்கு அவமானமாவது ஏற்படாமலிருக்கும்.

கடைசியாக ஒரு சிறு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறோம். சென்ற மேயர் தேர்தலின்போது மூன்று முஸ்லீம் காங்கிரஸ்வாதிகள் மேயர் பதவிக்குப் போட்டிபோட முன்வந்தனர். அவர்களுள் தோழர் அப்துல் ஹமீத்கானையே ஜஸ்டிஸ் கட்சியார் ஆதரிக்கவேண்டுமென்று கட்சித் தலைவர் பொப்பிலி ராஜா கட்டளையிட்டார். அதற்குக் காரணம் என்ன? தோழர் அப்துல் ஹமீத்கான் காங்கிரஸ்வாதியாக இருந்தாலும், நேர்மையும், மனவுறுதியும் உடையவர் என்று பொப்பிலி ராஜா நம்பியதே காரணம். பொப்பிலி ராஜா நம்பிக்கை நியாயமானதென்பதை தோழர் ஹமீத்கான் ஏப்ரல் 28ந் தேதி நடவடிக்கைகளினால் யோக்கியமாய் நடந்து சந்தேகமறக் காட்டி விட்டார். தோழர் ஹமீத்கானுக்குள்ள மனவுறுதி டாக்டர் நடேச முதலியாருக்கு இருந்திருந்தால் எவ்வளவோ அழகாக இருந்திருக்குமே!

குடி அரசு - கட்டுரை - 03.05.1936



# பார்ப்பனக் கிளர்ச்சி

சென்னை மாகாணத்திலே வருஷந்தோறும் எத்தனையோ பேர் கொலைக் குற்றத்துக்கும், கொள்ளைக் குற்றத்துக்கும் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் அதற்காக எந்த சமூகமும் ஒன்றாகத் திரண்டு புரளி செய்தது கிடையாது. பெயர் பெற்ற கருங்குழிப் பிரதேசப் பார்சல் வழக்கில் தோழர் ராமநுஜய்யங்காருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டபோது தென்னாட்டுப் பார்ப்பன சமூகம் ஒன்றாகத் திரண்டெழுந்தது. சென்னையில் பிரபலம் பெற்ற பார்ப்பன லாயர்கள் எல்லாம் அந்தக் கேசில் கவனம் செலுத்தலாயினர். ஹைக்கோர்ட்டு செஷன்சில் அவ்வழக்கு விசாரணை நடந்தது. மேல் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்ய விசேஷ அனுமதி வேண்டுமாம். பிரஸ்தாப வழக்கின் போக்குக்கு விசேஷ அனுமதியளிக்கவே இடமில்லையாம். எனினும் விசேஷ அனுமதியளிக்கும் அதிகாரமுடையவர் கிளர்ச்சி செய்யும் சமூகத்தைச் சேர்ந்தவராயிருந்ததினால் விசேஷ அனுமதியும் கிடைத்தது. ஹைகோர்ட் புல் பெஞ்சில் மீண்டும் வழக்கு விசாரணைக்கு வந்தது. ஹைக்கோர்ட்டு செஷன்ஸ் தீர்ப்பில் தலையிடத் தமக்கு அதிகாரமில்லையென்று புல் பெஞ்சு தீர்ப்பும் பிறந்தது. அப்பால் பிரிவி கௌன்சிலுக்கு அப்பீல் அனுமதி கோரப்பட்டது. அதற்கும் சென்னை ஹைக்கோர்ட்டார் அனுமதியளிக்கவில்லை. உடனே, பிரிவி கௌன்சிலுக்கே நேரடியாக விண்ணப்பம் செய்யப்பட்டது. பிரிவி கௌன்சிலும் கிளர்ச்சிக்காரருக்கு அனுகூலமாக முடிவு கூறவில்லை. அப்பால் சென்னை சர்க்காருக்கு எதிரிக்கு கருணை காட்டும்படி மனுச் செய்யப்பட்டது. அம்முயற்சியும் பலிக்கவில்லை. கடைசியில் வைஸ்ராய்க்கு விண்ணப்பம் செய்யப்பட்டு மரண தண்டனை ஆயுட்காலச் சிறைத் தண்டனையாக மாற்றப்பட்டிருக்கிறது. அதற்கிடையில் எதிரிக்கு சிறைச் சாப்பாடு பிடிக்கவில்லையென்றும், பழ உணவு வழங்க வேண்டுமென்றும் விண்ணப்பம் செய்யப்பட்டு சர்க்கார் அனுமதியின் பேரில் ராமானுஜய்யங்கார் பழ உணவு உண்டு வருவதாகவே நமது ஞாபகம். எதிரி பெரிய பணக்காரருமல்ல, ஜமீன்தாருமல்ல. லக்ஷக்கணக்காகச் செலவு செய்ய சக்தியுடையவர்களுக்குத்தான் விசேஷ அனுமதி பெறவும் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்யவும், பிரிவி கௌன்சிலில் விண்ணப்பம் செய்யவும், மாகாண கவர்னருக்கும் வைஸ்ராய்க்கும் கருணை மனு அனுப்பவும், வைஸ்ராயிடம் நேர்முகமாக வாதாட லாயர்களை அமர்த்தவும் முடியும். எனினும் எதிரி ஒரு பார்ப்பனராயிருந்ததினாலும் பார்ப்பன சமூகம் முழுதும் அவர்



RangaRakes tamilnavarasam.com

விஷயத்தில் அநுதாபம் காட்டியதினாலும், லக்ஷக்கணக்காக பீஸ் வாங்கும் பார்ப்பன லாயர்கள் அவருக்காக இனாமாய்ப் பேசவும் முயற்சி செய்யவும் முன் வந்ததினாலும் எந்தக் கொலைக் கேசிலும் உண்டாயிராத கிளர்ச்சியும் பரபரப்பும் தோழர் ராமாநுஜம் கேசில் உண்டாயிற்று. வைஸ்ராயிடம் விண்ணப்பம் செய்து கொண்டது மூலம் தோழர் ராமாநுஜத்தின் மரணதண்டனை ஆயுட்காலச் சிறைத்தண்டனையாக மாறியபிறகுதான் மரணதண்டனையை ரத்து செய்ய மாகாண கவர்னருக்கும் வைஸ்ராய்க்கும் அதிகாரமுண்டென்ற உண்மையை சாமானிய மக்கள் அறியலானார்கள்.

பார்ப்பனப் பத்திரிகைகளும் வக்கீல்களும் ஒன்று சேர்ந்து குய்யோ முறையோ என்று கூச்சல் போட்டுக்கொண்டு கிளர்ச்சி செய்ததினால் தோழர் ராமாநுஜம் வழக்கு அமிதமாக விளம்பரமுமாயிற்று. தோழர் ராமாநுஜம் விஷயமாக பார்ப்பனர் கிளர்ச்சி செய்ததையோ, அவரது மரண தண்டனை ஆயுட்கால தண்டனையாக மாறியதையோ இதர சமூகத்தார் ஆட்சேபிக்கவு மில்லை லக்ஷியம் செய்யவுமில்லை. ஆனால் தோழர் கோவை ரத்தினசபாபதி கவுண்டரின் சிறைவாச தண்டனையை வைஸ்ராய் ரத்து செய்ததைக் கண்டித்து பார்ப்பனப் பத்திரிகைகளும், பார்ப்பன லாயர்களும், பார்ப்பன மாஜி நீதிபதிகளும் கிளர்ச்சி செய்வது பெரிய ஆச்சரியமாகவே இருக்கிறது. தோழர் ராமாநுஜய்யங்கார் மரண தண்டனையை ஆயுட்காலச் சிறைவாச தண்டனையாக மாற்றிய வைஸ்ராய்தான் தோழர் ரத்தினசபாபதி கவுண்டரின் சிறைத் தண்டனையை ரத்து செய்திருக்கிறார். ராமாநுஜத்துக்கு நியாயம் வழங்கிய வைஸ்ராய் கௌண்டர் விஷயத்தில் மட்டுமா நியாய ரஹிதமாக நடந்துகொள்வார்?

தோழர் கவுண்டர் தண்டனை ரத்து செய்யப்பட்டதினால் எந்தப் பார்ப்பானுக்கு அல்லது பார்ப்பனப் பத்திரிகைக்கு என்ன கேடு வந்துவிட்டது? தோழர் கௌண்டர் தண்டனை ரத்து செய்யப்பட்டதினால் இந்தியாவைக் கடல் கொண்டுவிடப்போகிறதா? பார்ப்பன லாயர்களுக்கும், பார்ப்பனப் பத்திரிகைகளுக்கும் இவ் விஷயத்தில் இவ்வளவு ஆத்திரமுண்டாகக் காரணம் என்ன? தமது கேசின் போக்கை விளக்கி தோழர் கௌவுண்டர் வைஸ்ராய்க்கு மனுச் செய்தார். மனுவைப் பரிசீலனை செய்து வைஸ்ராய் தண்டனையை ரத்து செய்தார். இவ்வளவுதான் சங்கதி. வைஸ்ராய் செய்யும் எத்தனையோ முடிபுகளில் இதுவும் ஒன்றென எண்ணி சும்மாயிராமல் பார்ப்பன லாயர்கள் பத்திரிகைகளில் பத்திபத்தியாய் எழுதுவதும், கிளர்ச்சி செய்வதும், வைஸ்ராய் மீது குற்றம் சாட்டுவதும் குறும்புத்தனமா யில்லையா? தோழர் கௌவுண்டர் தண்டனை ரத்தானது ரத்தானதுதான். ஆயிரம் பார்ப்பன லாயர்கள் கிளர்ச்சி செய்தாலும் வைஸ்ராய் தீர்ப்புக்கு மாற்றமேற்படப் போவதில்லை. இது மூலம் தென்னாட்டு மக்கள் கற்றுக்கொள்ள வேண்டிய சில படிப்பினைகள் இருக்கின்றன. பார்ப்பனர்களின் ஜாதிப்பற்று பிரஸ்தாப விஷயத்தினால் நன்கு விளங்குகிறது. தோழர் கௌவுண்டர் வைஸ்ராய்க்குச் செய்து கொண்ட மனுவில் காங்கிரஸ்காரர் தூண்டுதலினால் ஒரு பார்ப்பன போலீஸ் இன்ஸ்பெக்டர் வழக்கு ஜோடித்ததாயும் பார்ப்பன ஜூரிகள் பிரமோஷனுக்கு அனுகூலமாக இருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தாராம். வைஸ்ராய் தீர்ப்பினால் தோழர் கௌவுண்டர் கூறிய காரணங்களை வைஸ்ராய் ஒப்புக்கொண்டு விட்டதாக ஏற்படுவதினால் இனி பார்ப்பன உத்தியோகஸ்தர்களுக்கு உத்தியோகம் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டதாம். பாருங்கள் பார்ப்பனர்களின் ஜாதிப்பற்றை! ஒரு பார்ப்பன இன்ஸ்பெக்டருக்காக இவர்கள் ஏன் இவ்வளவு பரிந்து பேச வேண்டும்? கிளர்ச்சி செய்ய வேண்டும்? கௌவுண்டர் கூறியவைகளையெல்லாம் வைஸ்ராய் நம்பினார் என்பதற்கு என்ன ஆதாரம்? தக்க காரணங்களில்லாமல் வைஸ்ராய் தண்டனையை ரத்து செய்வாரா? பருத்தி நூல்காரர் ஒப்புக் கொள்ளக்கூடிய முறையிற்றான் வைஸ்ராய் தீர்ப்புச் செய்ய வேண்டுமென்று ஏதாவது சட்டமோ சம்பிரதாயமோ இருக்கிறதா? உண்மையில் பார்ப்பனர் போடும் கூச்சல் வெகு வேடிக்கையாகவே இருக்கிறது. பார்ப்பனர் வால் பிடித்துத் திரியும் பார்ப்பனரல்லாதார் இது மூலமாவது பார்ப்பனர்களின் ஜாதிப்பற்றையும் குறும்பையும் அறிந்து கொள்வார்களா?

**குடி அரசு - கட்டுரை - 03.05.1936**



RangaRakes tamilnavarasam.com

# உஷார்! உஷார்!! உஷார்!!!

மறுபடியும் தென்னாட்டிற்கு (காங்கிரஸ் தலைவர்களை) வடநாட்டு ஆசாமிகளைக் கூட்டி வந்து உங்களை ஏய்க்கப் போகிறார்கள். இதைத் தவிர தென்னாட்டு பார்ப்பனர்களுக்கு இப்போது தேச சேவை வேறு கிடையாது.

தோழர்களே! ஏமாந்து விடாதீர்கள் - ஏமாந்து விடாதீர்கள்.

**குடி அரசு - பெட்டிச் செய்தி** - 03.05.1936



# பாண்டியன் – ராமசாமி அறிக்கைக் கூட்டம்

தலைவரவர்களே! தோழர்களே!!

எங்களுடைய ஒரு சிறு சாதாரண பத்திரிகை விளம்பர அழைப்பை மதித்து இன்று இங்கு இந்த வெயில் காலத்தில் சென்னை முதல் திருநெல்வேலி ஈறாக வெகு தூரத்தில் இருந்து இவ்வளவு பேர்கள் அதாவது 300, 400 பேர்கள் விஜயம் செய்திருப்பதற்கு நான் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இது எங்களுக்கு மிகவும் பெருமையும், நம்பிக்கையும் கொடுக்கக்கூடிய காரியமாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தக் கூட்டம் பார்ப்பனரல்லாதார் அதாவது தென்னிந்திய நலவுரிமைச் சங்க (ஜஸ்டிஸ்) இயக்கத்தின் சம்மந்தமாய் அழைப்பு அனுப்பி, அவ்வியக்கத்தின் நன்மைக்கு ஏற்ற காரியங்களைச் செய்யவே கூட்டப்பட்ட கூட்டம் என்பதை அறிக்கையில் இருந்து நீங்கள் எல்லோரும் அறிந்ததேயாகும்.

ஆனால் அவ்வியக்கத்திற்குச் சம்மந்தப்பட்டவர்கள் அதாவது அவ்வியக்கத்தின் பேரால் பட்டம் பதவி பெற்று, ஆயிரக்கணக்கான சம்பளங்களும், லக்ஷக்கணக்கான பணங்களும், பட்டங்களும் அனுபவித்தவர்களும், அனுபவிப்பவர்களும், அதனாலேயே பிழைப்பவர்களும், பெரு வாழ்வு வாழ்பவர்களும் ஆன பெருமான்கள் யாராவது இன்று இங்கு வந்திருக்கிறார்களா என்று பார்த்தால் இந்த 400 பேர்களில் ஒரு 4, 5 பேர்களாவது வந்திருப்பார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை.

ஆகவே அக்கூட்டத்தார்களுக்கு பார்ப்பனரல்லாதார் இயக்கத்தினால் வரும் லாபத்தை அடைவதைத் தவிர, மற்றபடி அந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கோ, அல்லது பொது ஜனங்களுக்கு பயன்படும்படிக்கு உழைப்பதற்கோ, அல்லது ஏதாவது உதவி செய்வதற்கோ எவ்வளவு கவலை இருக்கிறது என்பதை இதனால் நாம் உணர்ந்து கொண்டோம்.

பார்ப்பனரல்லாதார் இயக்கமானது இன்று பாமர ஜனங்களால் சரியாய் மதிக்கப்படாமல் இருப்பதற்கும், பல காரியங்களில் தோல்வியேற்படுவதற்கும் காரணம் என்ன என்பதும், அதற்குப் பொறுப்பாளிகள் யார் என்பதும் ஒருவாறு இப்போது உங்களுக்கு நன்றாய் விளங்குகின்றதல்லவா?



RangaRakes tamilnavarasam.com

உண்மையாகவே 1930ம் வருஷம் முதல் அதாவது இப்போதைய மந்திரிசபை ஏற்பட்ட காலம் முதல் இயக்கத்துக்காக பாமர மக்களிடம் பிரசாரமே கிடையாது என்பதுடன் சரியான பத்திரிகையும் கிடையாது என்றும் சொல்லுவேன். ஆனால் அது மக்களுக்கு எவ்வளவோ நன்மை செய்திருக்கிறது என்பதை நான் மறைக்கவில்லை. அதற்காக நன்றியும் செலுத்துகிறேன்.

எந்த இயக்கம் தான் ஆகட்டும், இயக்கத்தின் பேரால் சிலர் பணமும், பதவியும், பட்டமும் சம்பாதித்துக் கொண்டு இருப்பதை மாத்திரம் பலர் பார்த்துக் கொண்டு இருக்கவும், ஒரு கூட்டத்தார் பொறாமைப்பட்டு விஷமப் பிரசாரம் செய்து கொண்டு இருக்கவும் அதற்கு எவ்வித சாமாதானமும் சொல்லி பாமர மக்களை திருப்திப் படுத்தாமலும், இயக்கத்தால் ஏற்பட்ட உண்மையான நன்மைகளை எடுத்துக் காட்டாமலும் இருந்தால் அப்படிப்பட்ட இயக்கம் எவ்வளவு நல்ல காரியம் செய்திருந்த போதிலும் நாட்டில் வாழ முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். எவ்வளவு பொய்யான விவகாரமானாலும் எதிர் வியாஜ்யம் ஆடாவிட்டால் ஒரு தலைப்பக்ஷமாய் எக்ஸ்பார்டியாய்தானே தீர்மானமாகும். அது போலவே பிரசாரம் செய்யாத காரணமாகவே நமது இயக்கம் பொது ஜனங்களால் சரியானபடி மதிக்கப்படாமல் இருக்கிறது என்பதை உணர்ந்தே 2 வருஷ காலமாய் நாம் பிரசாரம், பிரசாரம் என்று தலையில் அடித்துக் கொண்டோம். அதைப் பதவியிலிருப்பவர்களும், பயனை அனுபவிப்பவர் களும், சிறிதும் லக்ஷயம் செய்தவர்களல்ல. இயக்கம் தங்களுடைய சொந்த சொத்தென்றும், மற்றவர்களுக்கு அதில் உரிமை இல்லை என்றும் கருதிக் கொண்டு நம்மை யெல்லாம் ஒரு தீண்டாதவர்கள் போலவே கருதி நடத்தினார்கள்.

இந்த இயக்கம் மந்திரிகளுக்கும் பதவி வேட்டைக்காரருக்கும் மாத்திரமே சொந்த மென்றும், அவர்களுக்காக மாத்திரமே இந்த இயக்கம் இருக்கிறது என்றும் நாங்கள் கருதி இருந்தால் இந்த இயக்கத்தை 10 வருஷத்திற்கு முன்பே சாகவிட்டு இருப்போம். இந்த இயக்கம் தாழ்த்தப் பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், ஏழை, தீண்டாத மக்களுக்கும் விடுதலை அளிக்கவே இருக்கிறது என்று நாங்கள் உண்மையாகவே கருதுகிறபடியால் பதவியாளர்களது கொடுமையையும், துரோகத்தையும், சூழ்ச்சியையும், அலக்ஷியத்தையும், அவமதிப்பையும் லக்ஷியம் செய்யாமல் இயக்கத்துக்காக உழைக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இயக்கப் பதவியாளர்கள் மற்றவர்களை பக்கத்தில் அணுகவிடாமலும், கீழே இறங்கி வந்து பாமர மக்களிடம் பிரசாரம் செய்யாமலும், சரியான பத்திரிகைகள் நடத்தாமலும் இருப்பதன் காரணம் இயக்கம் பரவி செல்வாக்குப் பெற்று விட்டால் வேறு யாராவது பங்குக்கு வந்துவிடுவார்களே என்கின்ற பயம் என்றுதான் நான் கருதுகிறேன்.

எப்படி இருந்தபோதிலும் நமக்கு உள்ள பொறுப்புகளை மனதார அலட்சியம் செய்து எதிரிகளுக்கு இடம் கொடுக்க நம் மனது சம்மதிக்காத தாலேயே நாமெல்லோரும் இன்று இங்கு கூடியிருக்கிறோம். இந்த 400 பேர்களிலும் தனியாக ஜஸ்டிஸ் கட்சியார் என்று சொல்லக் கூடியவர்கள் 10 பேர் இருக்கலாம். (இந்த சமயத்தில் ஒருவர் 2 அல்லது 3 பேர் தான் என்றார். அவர் யாரைக் குறிப்பிட்டுச் சொன்னாரோ அவரும் நாங்களும் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தவர்கள் என்று சொன்னார்கள்) ஆகவே இதிலிருந்து ஜஸ்டிஸ் கட்சியார் இக் கூட்டத்திற்கு வராவிட்டாலும் சுயமரியாதைக்காரர்கள் எல்லோரும் (ஏதோ இரண்டொருவர் தவிர) பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் பற்றும் கவலையும் உள்ளவர்கள் என்பது நன்றாய் விளங்குகின்றது.

சரியானபடி பிரசாரத்திற்கு ஏற்பாடு செய்யாததாலும் இயக்கத்துக்கு உழைத்துவரும் தொண்டர்களுக்கு சரியான வேலை கொடுக்க முடியாததாலும் அனாவசியமான அபிப்பிராய பேதங்களும், உள் கலகங்களும் நடக்க இடமேற்படுகிறதே ஒழிய, மற்றபடி பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்கு உழைக்க வேண்டியது சுயமரியாதைக்காரர்களுடைய வேலை அல்ல என்று யாரும் சொல்ல முடியாது.

நம் எதிரிகள் இப்போது நம்மைப் பற்றி அதிகமாகப் பழி கூறி மிக வேகமாக விஷமப் பிரசாரம் செய்யக் காரணம் சமீபத்தில் அதாவது ஒரு வருஷத்துக்குள் வரப்போகும் தேர்தல்களை உத்தேசித்தேயாகும். அதற்குள் நாம் கட்டுப்பாடாக எதிரிகள் விஷமங்களுக்கும், பொய்ப்புக்கும், பழிக்கும் சமாதானம் சொல்லாத பக்ஷம் தேர்தல்களில் பார்ப்பனரல்லாதார்கள் தோல்வி அடைந்து விடுவார்கள் என்பது உறுதியான காரியமாகும்.

ஆகையால் எது எப்படி இருந்த போதிலும் யார் அலட்சியமாய் இருந்த போதிலும் நாம் ஒரு கட்டுப்பாடான, தொடர்ச்சியான பிரசாரத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு ஆகவே இன்று இங்கு கூடி இருக்கிறோம். இன்று செய்யும் ஏற்பாடுகளை ஒவ்வொருவரும் மதித்து அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும்.

பத்திரிகை வேண்டும், பணம் வேண்டும்; தொடர்ந்து வேலை செய்ய தொண்டர்கள் வேண்டும். இவைகளுக்கு வேண்டிய மார்க்கம் செய்வதே இன்றைய வேலையாகும்.

ஆதலால் தயவு செய்து நீங்கள் எல்லோரும் இதற்கு தக்க வழி செய்ய உதவ வேண்டும் என்றும், அனாவசியமான அபிப்பிராய பேதங்களை மறந்து ஒத்து உழைக்க வேண்டும் என்றும் உங்களை பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தவிர எங்களுடைய அறிக்கையில் இந்த பிரசாரத்தை நடத்துகிற ஸ்தாபனத்தில் அங்கம் பெறுகிறவர் எவ்வித உத்தியோகமும் பதவியும் உள்ளவர்களாகவும், ஆசைப்படுபவர்களாகவும் இருக்கக்கூடாது என்று எழுதியிருந்தோம்.



RangaRakes
tamilnavarasam.com

பல முக்கியமானவர்களும் உண்மையானவர்களுமான தோழர்கள் அந்த அபிப்பிராயம் காரியத்துக்கு கெடுதியானதென்றும், அது அனுபவ சாத்தியமானதல்ல வென்றும், அதனால் எதிரிகளுக்கு இடம் கொடுத்ததாக ஆகிவிடும் என்றும், பார்ப்பனரல்லாதார் இயக்கம் சட்டமறுப்பாலோ, பஹிஷ்காரத்தாலோ காரியம் செய்வதல்ல வென்றும் சொல்வதால் நாங்கள் அதை ஒப்புக் கொண்டு எங்கள் அபிப்பிராயத்தை வலியுறுத்தாமல் விட்டு விடுகிறோம். மற்றவர்களும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை மனம் விட்டு சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

*குறிப்பு: 05.04.1936 ஆம் நாள் திருச்சியில் நடைபெற்ற பாண்டியன் - ராமசாமி அறிக்கைக் கூட்டத்தில் கூட்டம் ஆரம்பிக்கும் போது ஆற்றிய உரை.*

தோழர்களே!

இன்றையக் கூட்டம் எதிர்பாராத வெற்றியுடன் முடிவடைந்திருக்கிறது. இக்கூட்டத்திற்கு இவ்வளவு பேர்கள் வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

இக்கூட்டத்திற்கு வந்தவர்கள் எங்களுக்காகவோ, எங்கள் தாக்ஷண்ணியத்துக்காகவோ வந்தவர்கள் என்று நான் நினைக்கவில்லை. பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் சோர்வு நிலையை உணர்ந்து நம்மைப் போலவே சரி பங்கு கவலை கொண்டு இந்தச் சமயத்தில் ஒவ்வொருவரும் தங்களால் ஆனதைச் செய்ய வேண்டும் என்கின்ற உணர்ச்சியின் மீதே வந்திருக்கிறார்கள்.

இன்றைய கூட்ட நடவடிக்கையிலும், தீர்மானங்களிலும் எவ்வித கீச்சு மூச்சு சப்தம் கூட இல்லாமல் ஒரே அபிப்பிராயமாக சகல காரியமும் நடந்ததற்குக் காரணம், எங்கள் நடவடிக்கையும் தீர்மானங்களும் சிறிது கூட ஆக்ஷேபணைக்கு இடமில்லாமல் இருந்ததாலேயே என்று நான் நினைக்கவில்லை. இன்றைய நம் இயக்கத்தின் நிலைமையானது சண்டை போட யாருக்கும் ஆசை அளிக்கவில்லை. ஏனென்றால் இயக்கத்துக்கு செல்வாக்கு தளர்ந்திருக்கிறது, ஆதலால் எவ்வித அபிப்பிராய பேதத்தையும் காட்டாது எல்லோரும் ஒத்துழைத்து பழய நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்கின்ற கவலையும், பொறுப்பும், பெருந்தன்மையும் கொண்ட உணர்ச்சியே யாகும்.

மற்றும் இக்கூட்டம் எனக்கு மற்றொரு தைரியத்தையும் கொடுத்தது. அதாவது சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிப்பதால் சுயமரியாதை இயக்கத்தில் தீவிரமாய் வேலை செய்த தோழர்கள் மனம் வேறுபட்டு விட்டார்கள் என்றும், அதனால் இயக்கத்தில் பிளவு ஏற்பட்டு விட்டதென்றும், இயக்கத் தோழர்களை லக்ஷியம் செய்யாமல் நான் என்னிஷ்டப்படி ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிப்பதால் தோழர்களுக்கு என்னிடம் வெறுப்பு ஏற்பட்டு விட்டதென்றும், இதனால் சு.ம. இயக்கம் ஆடிப்போய் விட்டதென்றும் சிலர் பேசிக்கொண்டதும் எதிரிகளின் பத்திரிகைகள் இதை ஆயுதமாகக் கொண்டு விஷமப் பிரசாரம் செய்ததும் என் தகவலுக்கு வந்தது. அதைப்பற்றி நான் சிறிது யோசனை செய்ததும் உண்டு. அதாவது நான் ஏதாவது தப்பான வழியில் செல்கிறேனோ என்று தயங்கினேன். இன்றைய கூட்டத்தையும், இங்குள்ளவர்களது ஒருமனப்பட்ட அபிப்பிராயத்தையும், அவர்களது பொறுப்பையும், கவலையையும் பார்க்கும் போது நாம் செய்தது சரியென்றும், தொடர்ந்து ஊக்கத்துடனும் உறுதியுடனும் வேலை செய்ய வேண்டும் என்றும் எனக்குப் படுகிறது.

ஏனெனில் இன்றைய கூட்டத்தில் சுயமரியாதை இயக்கத்தின் முக்கியமான தோழர்கள் எல்லோரும் வந்திருக்கிறார்கள். வந்திருக்கிறவர்கள் எல்லாம் எங்கள் அறிக்கையை ஆதரிக்கிறார்கள் என்றே ஏற்படுகிறது. ஆகையால் இனி நம் எதிரிகள் சுயமரியாதைக்காரர்கள் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை ஆதரிக்கவில்லை என்று விஷமப் பிரசாரம் செய்ய முடியாது.

கமிட்டியில் முக்கியமாக பார்ப்பனரல்லாதார் இயக்கப் பிரமுகர்களையே நாம் தெரிந்தெடுத்திருக்கிறோம். அவர்கள் ஒத்துழைப்பு கிடைக்குமென்றே நம்புகிறோம். கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் நமக்கு இருக்கிற பொறுப்பை நாம் எந்தக் காரணம் கொண்டும் விட்டுவிட முடியாது.

ஒரு வாரத்துக்குள்ளாகவே நானும் தோழர்கள் பாண்டியனும், சி.டி.நாயகமும், வி.வி.ராமசாமியும் சுற்றுப் பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆங்காங்குள்ளவர்கள் கூடிய ஆதரவு காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**பத்திரிக்கை**

நமக்கு தமிழில் ஒரு தினசரி அவசியம். ஒரு வருஷத்துக்கு ஆவது நடத்தி ஆக வேண்டும். சர்க்காருக்கு மறுபடியும் எழுதினேன். கோயமுத்தூர் கலக்டர் இப்போது கடைசியாக 2000 ரூபாய் ஜாமீன் கேட்டிருக்கிறார். முன்னாலும் குடிஅரசுக்கு ஜாமீன் கட்டி இருக்கிறேன். கூடிய வரை பார்த்து விட்டுக் கட்டியாவது நடத்த வேண்டி இருக்கிறது.

40, 50 ஊர்களுக்கு 100-100 பத்திரிகை வீதம் 4, 5 ஆயிரம் பத்திரிகை அனுப்ப வசதி இருக்கிறது. ஆனால் பார்சல் செலவை ஏற்றுக் கொள்ள ஒவ்வொரு ஊரிலும் ஆட்கள் வேண்டும். வருஷத்துக்கு ஒரு ஊருக்கு 75 ரூபாய்க்கு மேலாகாது. இதற்கு ஆள் கிடைத்தால் மற்ற செலவுகள் வேறு வழிகளில் சரிப்படுத்திக் கொள்ளலாம். ஆகையால் பத்திரிகை விஷயம் எனக்கு ஞாபகத்தில் இல்லை என்றோ நான் முயற்சிக்காமலிருக்கிறேன் என்றோ யாரும் கருதக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.





RangaRakes tamilnavarasam.com

பட்டுக்கோட்டையில் அடுத்த மாதம் தொண்டர்கள் மகாநாடு நடக்கப்போகிறது. தொண்டர்கள் யாவரும் அவசியம் அங்குவரவேண்டும். மற்ற வேலைகளை அங்கு ஏற்பாடு செய்யலாம் என்று கருதுகிறேன்.

கடைசியாக நீங்கள் இன்று இத்தனை பேர்கள் வந்து ஒரு நல்ல முடிவுக்கு வர உதவியளித்ததற்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

குறிப்பு: *05.04.1936 ஆம் நாள் திருச்சியில் நடைபெற்ற பாண்டியன் - ராமசாமி அறிக்கைக் கூட்டத்தில் கூட்டம் முடிவடையும் போது ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு** - 10.05.1936



# பொய்! பொய்!!

## வெறுக்கத் தக்க இழிவான

# பொய்!!!

டாக்டர் அம்பத்கார் இன்னம் 10 வருஷத்துக்கு இந்து மதத்தை விட்டு விடும்படி பிரசாரம் செய்வதில்லை என்று காந்தியாரிடம் பிரமாணம் செய்து கொடுத்ததாக தேசிய (பார்ப்பன) பத்திரிக்கைகளில் வந்த செய்தி பொய்! பொய்!! முழுப்பொய்!!! என்று டாக்டர் அம்பேத்கார் தெரிவித்து விட்டார்.

**குடி அரசு - பெட்டிச் செய்தி** - 10.05.1936



RangaRakes tamilnavarasam.com

# காஞ்சீபுரம் தமிழர் மகாநாட்டுக்கு ஈ.வெ.ரா. வேண்டுகோள்

தோழர்களே! காஞ்சீபுரத்தில் ஜுன் மீ கடைசி வாரத்தில் 38-வது தமிழர் மாகாண மகாநாடு கூடப்போவதாக அறிகிறேன். அது விஷயமாய் எனக்கு வந்த கடிதங்களையும் குறிப்பாக தோழர் வி. ஓ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் எழுதிய கடிதத்தையும் பார்த்தேன்.

காஞ்சீபுரத்தில் 22-11-25-ந் தேதி கூட்டிய 31-வது மகாநாடுதான், அதுவும் எனது தோழர் திரு. வி. கல்யாணசுந்திர முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய மகாநாடுதான் என்னை காங்கிரசை விட்டு விரட்டி சுயமரியாதை இயக்கத் தொண்டையும் பார்ப்பனரல்லாதார் இயக்கத் தொண்டையும் செய்யும்படி செய்தது.

எதற்கு ஆக காஞ்சீபுரம் மகாநாட்டை விட்டு வெளியேறினேனோ அந்தக் காரியம் இப்பொழுது தமிழ் மக்களால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது என்றாலும் முழுதும் அது கை கூடுவதில் மற்றும் அனேக கஷ்டங்கள் இருந்து வருகின்றன. எதிரிகளின் எதிர்ப்பு முயற்சி ஓய்ந்தபாடில்லை. இதை அனேகர்கள் அதாவது காங்கிரசில் இருக்கும் பார்ப்பனரல்லாதார்களும் உணருகிறார்கள். ஆனால் பல காரணங்களால் அவர்களும் நானும் ஒத்து வேலை செய்ய முடியாமல் இருக்கிறது.

என்னைப் போலவே பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் அக்கரை கொண்டு பட்டமோ, பதவியோ, வருவாயோ எதிர்பார்க்காமல் சுயநலமற்று உழைக்கும் பல தோழர்கள் காங்கிரசில் இருக்கிறார்கள் என்பதை நான் மனப் பூர்வமாக உணர்ந்தும் முன் கூறியதுபோல் பல காரணங்களால் ஒத்துழைக்க முடியாமல் இருந்து வருவதை நான் உணர்கிறேன்.

ஆகவே இது விஷயமாய் எனக்குத் தோன்றுவதை நான் மகாநாடு கூட்டும் பிரமுகர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

காஞ்சீபுரம் 38 - வது தமிழர் மகாநாடு கூடும் சமயத்தில் 31-வது மகாநாடு கூடிய சமயத்தில் செய்தது போலவே சகல கட்சி பார்ப்பனரல்லாதார் மகாநாடு என்பதாக ஒன்று கூட்டுங்கள் என்று கேட்டுக் கொள்வதேயாகும். அதற்கு தோழர் எஸ். முத்தைய முதலியாரையோ, சி.எஸ். ரத்தினசபாபதி





முதலியாரையோ மற்றும் தங்களுக்கு பிடித்தவர்களையோ அல்லது அதற்கு ஆக ஏற்படுத்தும் வரவேற்புக் கமிட்டியார் இஷ்டப்படியோ ஒரு தலைவரை நியமித்து எல்லோருக்கும் அழைப்பு அனுப்புங்கள். அதில் கலந்து பேசி எல்லோருக்கும் திருப்திகரமான ஒரு முடிவை செய்து சகல கட்சிகளிலும் புகுத்தப்பாருங்கள். முடியாத பக்ஷம் என்ன செய்வது என்பதையும் எப்படி நாம் எல்லாம் சேர்ந்து தொண்டாற்றுவது என்பதையும் யோசிப்போம். இது அங்கீகரிக்கப்படுமானால் மேலால் எனது அபிப்பிராயங் களை விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

**ஈ.வெ.ராமசாமி**

**குடி அரசு - வேண்டுகோள் - 10.05.1936**

RangaRakes

tamilnavarasam.com

# ராஜினாமா சூழ்ச்சி
# காங்கிரஸ் ''கண்டிப்பு'' நாடகம்

வட ஆற்காடு ஜில்லா போர்டு தேர்தலில் காங்கிரஸ் தோல்வி உற்றதை மறைத்து பொது மக்கள் கண்களில் மிளகாய் பொடியைத் தூவ காங்கிரஸ் கண்டிப்பு முறையைக் கையாளப் போவதாக ஒரு நாடகம் நடிக்கப்படுகிறது.

காங்கிரசுக்கு எப்போதாவது ஒரு கண்டிப்போ, ஒழுங்கு முறையோ இருந்திருந்தால் இந்த கண்டிப்பு நாடகத்தைப் பார்க்க நாலு பேராவது வரக்கூடும். இன்று திடீரென்று ஏதோ தவறு ஏற்பட்டதாகவும், அதை அடியோடு அடக்கப்போவதாகவும் வேஷம் போடுவதானது தோழர் ஷண்முகம் தேர்தலில் ஏற்பட்ட துரோகத்துக்கு ஜஸ்டிஸ் கட்சியார் எடுத்துக் கொண்ட நடவடிக்கையைப் பார்த்து இது காப்பி அடிப்பதேயாகும். அதாவது மயிலைப் பார்த்து வான் கோழி ஆடுவது போலவேயாகும்.

திருநெல்வேலி ஜில்லாபோர்டு எலக்ஷனில் காங்கிரஸ் எந்தக் கண்டிப்பு முறையை எந்த ஒழுக்கத்தைக் கையாடிற்று.

காங்கிரசின் பேரால் இன்று வெற்றி பெற்ற ஜில்லா போர்டு மெம்பருக்கு பிரசிடெண்டு வேலை செய்து வைத்ததா, ஒழுங்கைப் பற்றியோ, கண்டிப்பைப் பற்றியோ பேச காங்கிரசுக்கு வெட்கமில்லையா? என்று கேட்கின்றோம்.

1. தளவாய் முதலியார் காங்கிரஸ் ரூல்படி காங்கிரஸ் மெம்பரா? அல்லது காங்கிரஸ் தலைவர்கள் சிவிக் போர்ட் மெம்பர்கள் ஆகியவர்களை விலைக்கு வாங்கிய முறைப்படி காங்கிரஸ் மெம்பரா?
2. அந்த தேர்தலில் காங்கிரஸ் நியமித்த தலைவருக்கு ஓட்டுப் போடாத மெம்பர்களைப் பற்றி காங்கிரஸ் என்ன கண்டிப்பு முறையைக் கையாடிற்று?
3. வேலூர் ஜில்லா போர்டு எலக்ஷனுக்கு கள்ளுக்கடை கண்டிராக்ட்தாரரை அபேட்சகராக காங்கிரஸ் நிறுத்த வில்லையா?
4. காங்கிரஸ் சிவிக் போர்ட் நியமனத்துக்கு விரோதமாக நின்ற காங்கிரஸ் அங்கத்தினர்களை காங்கிரஸ் என்ன செய்தது?
5. அந்தப்படி காங்கிரஸை மீறி நின்ற காங்கிரஸ்காரர்களை மறுபடியும் காங்கிரஸ் கெஞ்சி தங்கள் கட்சியில் சேர்த்துக் கொள்ள வில்லையா?



6. சௌகார் அப்துல் அக்கீம் சாயுபு அவர்கள் காங்கிரசுக்கு விரோதமாய் இருந்தும், தேர்தலில் காங்கிரசுக்கு விரோதமாய் வேலை செய்து இருந்தும், அவர் கதர் கட்டாதிருந்தும், அவர் காங்கிரசில் சேராதிருந்தும் இருக்க தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ''அப்துல் அக்கீம் சாயபுக்கு விட்டுக் கொடுங்கள்'' என்று சொன்னது எந்தக் கண்டிப்பையும் ஒழுக்கத்தையும் சேர்ந்தது?
7. திருவண்ணாமலை தோழர் ஷண்முக முதலியார் எந்த சட்டப்படி காங்கிரஸ் மெம்பர்? இப்படி இன்னம் எத்தனையோ கேள்விகள் கேட்கலாம்.

எனவே காங்கிரசு என்னும் பேரால் பார்ப்பனர்கள் தங்கள் இஷ்டம் போலெல்லாம் நடந்து கொண்டு அதை காங்கிரஸ் சட்டம் என்றும், கொள்கை என்றும் சொல்லிக் கொண்டு மக்களை ஏமாற்றுவதல்லாமல் இப்போது கண்டிப்பு பேச வந்து விட்டது ''குச்சுக்காரி கிராக்கியில்லாததால் கற்பு பிரசாரத்துக்கு விண்ணப்பம் போடுகிற மாதிரி'' இருக்கிறது.

இந்த தடவை வேலூர் ஜில்லா போர்டுக்கு தலைவராய் காங்கிரசால் நியமனம் செய்யப்பட்ட தோழர் டி.வி. கண்ணப்ப முதலியாரைப் பற்றி காங்கிரஸ் மெம்பர்களே வகுப்புவாதம் பேசி காங்கிரசின் பேரால் தெரிந் தெடுக்கப்பட்ட மெம்பர்களில் முதலியார் பட்டக்காரர்களே அதிகமாய் இருப்பதால் முதலியார் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் முதலியார்கள் கட்டுப்பாடாய் சௌகார் சாயபை ஆதரித்து விடுவார்கள் என்று பயந்தும் ஒரு டி.வி. கண்ணப்ப முதலியாரை தேர்ந்தெடுத்து நியமித்தார்களாம். இதுதான் வகுப்பு வாதமில்லாத காங்கிரசின் யோக்கியதை.

மற்றும் அக்கூட்டத்திலேயே ஒரு பார்ப்பனரும் முதலியாரல்லாத 2, 3 தோழர்களும் கண்ணப்ப முதலியாரை பிரசிடெண்டாக தெரிந்தெடுத்த பின் அவர் தலைமையின் கீழ் மெம்பராய் இருப்பது தாங்கள் சுயமரியாதைக்கு ஈனம் என்று பேசிக் கொண்டார்களாம்.

இது எப்படியோ இருக்கட்டும். ராஜினாமா பூச்சி காட்டுவது எதற்கு ஆக என்று கேட்கிறோம். ராஜினாமா பூச்சி காட்டுவது காங்கிரசின் வெகு நாளைய தந்திரம் என்பது நமக்குத் தெரியும்.

சட்டசபைகளில் ராஜினாமா நாடகம், வெளியேறும் நாடகம் எல்லாம் இன்றைய நேரு அல்ல இவர்கள் அப்பன் நேரு காலத்திலேயே நடித்துக் காட்டி பொக்கணமாய் போன விஷயம். அதை மறுபடியும் ஜில்லா போர்டில் காட்டுவது முட்டாள் தனம் என்று உணரும் காலம் உடனே வரும் என்று உறுதி கூறுவோம்.

தோழர் T.R. வெங்கிட்டராம சாஸ்திரியார் சட்ட மெம்பர் வேலையை சர். சி.பி. ராமசாமி பேச்சைக் கேட்டு ராஜினாமா செய்தார். என்ன நடந்தது? அதில் இளைத்து நீண்டு போன அய்யர் இன்னம் உடல் தேறாமல் என்ன என்னமோ உளறிக் கொட்டுவதோடு அவர் வாழ்க்கை சரி என்ற நிலைக்கு வந்தது.



RangaRakes tamilnavarasam.com

நிற்க, 26 பேர் ராஜினாமா செய்யாவிட்டால் காங்கிரஸ் அவர்களை என்ன செய்யக்கூடும்? தோழர் சேஷாசல செட்டியார் தனக்காகவும் தோழர் சீனிவாச ராவுக்காகவும் இந்த தேர்தலில் சுமார் 10 முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்தாராம். இவர்கள் ராஜினாமா செய்தால் ஓட்டருக்கும், பெட்ரோலுக்கும், கார்காரனுக்கும், கூலிகளுக்கும் இன்னம் ஒரு 10 ஆயிரம் ரூ அல்லது 15 ஆயிரம் ரூபாயாவது பிரேஸ் விழுகும். மற்றபடி ஜில்லா போர்ட் கட்டிடத்தில் ஒட்டிய ஒரு ஒட்டரைக் கூட்டைக் கூட அசைக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

ராஜினாமா செய்தபின் செய்யப் போகின்ற வேலை என்ன என்றும், அதனால் ஏற்படும் பயன் என்ன என்றும் காங்கிரஸ் எடுத்துக் காட்டியிருந்தால் அது புத்திசாலித்தனமாயிருக்கும். அதில்லாமல் பூச்சாண்டி காட்டினால் வாய்த் தவிடும் போய் நெருப்பும் அணைந்தது என்கின்ற மாதிரியில்தான் தானாகத் தேடித் தின்பதும் கெட்டு வாழ்க்கைப்படுவதும் கெட்டு தெருவில் நிற்க வேண்டியதல்லாமல் வேறில்லை.

ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து மனிதர்களாகி பெருமை அடைந்த ஆள்கள் ஒரு நாள் கூத்துக்கு மீசையை சிரைத்துக் கொண்டதுபோல் எலக்ஷனுக்காக காங்கிரசில் சேருகிறார்கள் அவர்களை என்ன செய்வது?

காங்கிரசுக்கு சுயமரியாதையோ, நாணயமோ இருக்குமானால் இப்படிப்பட்ட ஆள்களை வலிய அணைந்து பட்டம் கட்டுமா என்பதையும் யோசிக்க வேண்டாமா என்று கேட்கின்றோம். ஆகவே ராஜினாமா பூச்சாண்டிக்கு யாரும் பயப்பட வேண்டியதில்லை என்றும், காங்கிரசு யோக்கியமானதாகவும், நாணயமுள்ளதாகவும், ரோஷமுள்ளதாகவும் இருந்தால் 26 பேர்களையும் ராஜினாமா கொடுக்கச் செய்து பார்க்கட்டும் என்றும், அது முடியாவிட்டால் பார்ப்பன ''மித்திரன்'' சொல்வது போல் காங்கிரஸ் கமிட்டி சிவிக் போர்ட் எல்லாம் கலைக்கட்டும் என்றும், பிறகு நடப்பது என்ன என்பதை பார்க்கலாம் என்றும் காத்திருக்கிறோம். வேலூர் ஜில்லா போர்டு மெம்பர்கள் இந்தப் பூச்சாண்டிக்கு ஏமாந்து போகமாட்டார்கள் என்றும் எண்ணுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 10.05.1936**



# இழி தொழில்

**காந்தி கூட்டத்தாரின் அயோக்கியப் பிரசாரம்**

இந்தியாவில் உள்ள பத்திரிகைகள் பெரிதும் பார்ப்பன ஆதிக்கத்தில் இருப்பதால் அவர்கள் தங்களுக்கு அனுகூலமாக எவ்வித சேதிகளையும், விஷமத்தனமான காரியங்களையும் அடியோடு பொய்யாக கற்பித்து விஷமப் பிரசாரம் செய்து விடுகிறார்கள். அது பரவி மக்களுக்குள் செய்ய வேண்டிய விஷமங்களைச் செய்த பின் ஒரு அலட்சிய விஷயம் போல் மறுப்பு எழுதி தெரியாத ஏதோ ஒரு கோடியில் பலர் கண்களுக்கு தெரியாமல் பிரசுரித்து விட்டு யோக்கியர்கள் ஆகிவிடுகிறார்கள்.

இந்தப்படியான அயோக்கியப் பிரசாரத்தாலேயே காந்தியாரை மகாத்மாவாக்கியும், பண்டித மாளவியாவை தேச பக்தராக்கியும், பண்டித ஜவார்லாலை வீரராக்கியும், தமிழ் மக்களை ஏமாற்றியும் வாழ்ந்து வருகிறார்கள்.

காந்தியாரைப் பற்றியும், நேருக்களைப் பற்றியும் இப்பார்ப்பனர்கள் கட்டிவிட்ட புளுகு கொஞ்ச நஞ்சமல்ல. அப்புளுகுகளைப் பிரசாரம் செய்ய காலிகளுக்கும், கூலிகளுக்கும் காசு கொடுத்து உசுப்பிவிட்டதும் கொஞ்ச நஞ்சமல்ல.

காந்தியாரை ஜெயிலுக்குள் போட்டு பூட்டினால் வெளியில் வந்து விடுகிறார் என்றும், அதனாலேயே அவரை சர்க்கார் பூட்டுவதில்லையென்றும், அடிக்கடி விட்டு விடுகிறார்கள் என்றும் கட்டி விட்டார்கள். அவர் மூத்திரம் பன்னீர் வாடை அடிக்கின்ற தென்றும், சிலந்திப் பூச்சிகள் எல்லாம் காந்தியார் பெயரை இந்தியில் எழுதுகின்றன என்றும் காலிகளை விட்டு பேசச் செய்தார்கள்.

காந்தியாரை ராஜா கூப்பிட்டார், மந்திரி கூப்பிட்டார், வைசிராய் கூப்பிட்டார், வைஸ்ராய் வந்து காணப் போகிறார், முசோலினி கூப்பிடுகிறார் என்றெல்லாம் சிறிதும் மானம் வெட்கம் இல்லாத பொய்களை எழுதினார்கள். அசோசியேட் பிரஸ், யுனைட்டெட் பிரஸ் முதலியவற்றின் மூலம் வெளியாக்கினார்கள்.

ஜவஹர்லாலைப் பற்றியும் இதைவிட மோசமான இழிவான புளுகுகள் புளுகி புகழ்ந்தார்கள்.



RangaRakes tamilnavarasam.com

கடைசியாக **''அவைகளுக்கு ஆதாரம் இல்லை''** என்று ஒரு வரியில் எழுதினார்கள். என்றாலும் காங்கிரசில் பார்ப்பனர்களின் எச்சில் இலையில் சிந்திக்கிடப்பதைப் பொறுக்கித்தின்று ஜீவனம் நடத்தும் இழி மக்கள் இனியும் அம்மாதிரியே பிரசாரம் செய்து மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்கின்றார்கள்.

நிற்க, இவ்வாரத்தில் ''டாக்டர் அம்பேத்கார் இன்னம் பத்து வருஷத்துக்கு ஹரிஜனங்களை பிற மதத்துக்கு சேரும்படி பிரசாரம் செய்வதில்லை என்று காந்தியாரிடம் பிரமாணம் செய்து கொடுத்து விட்டார்'' என்று கொட்டை எழுத்துக்களில் 2, 3 கலம் தலைப்புக் கொடுத்து போட்டு விட்டு அதை மறுத்து அம்பேத்கார் கொடுத்த சேதியை அது போல் வெளியிடாமல் விஷமத்தனமாக இரண்டருத்தம் கொடுக்கும்படியான மாதிரியில் பிரசுரிப்பது எவ்வளவு ஈனத்தனமும், இழிமக்கள் செய்கையும் ஆகும் என்று கேட்கின்றோம்.

மானமுள்ள ஆயிரம் பேருடன் போராடலாம். மானமற்ற ஒருவனுடன் போராடுவது கஷ்டமான காரியம்.

அதுபோல் நம் பார்ப்பனர்களின் அயோக்கியத்தனத்துக்கும் மானமற்ற தன்மைக்கும் ஒரு அளவு இல்லாமல் போய்விட்டதால் அதோடு போராடுவது சிரமமாகத்தான் இருக்கிறது.

எவ்வளவு பெரிய ஒரு காரியத்தில் இம்மாதிரியான அயோக்கியத் தனங்கள் சிறிதும் வெட்கமில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது என்று பார்க்கும்படி வாசகர்களை வேண்டுகிறோம். இந்த சேதி வந்தவுடன் டாக்டர் அம்பத்காரைப் பற்றி மற்ற மக்கள் வெகு கேவலமாக நினைத்து விட்டார்கள். அம்பத்கார் சீர்திருத்த உலகில் செத்துவிட்டார் என்றே மக்கள் கருதி விட்டார்கள்.

அம்பத்காருக்கு இது மகத்தான அக்கிரமம் செய்ததாகும் என்பதில் என்ன சந்தேகம்?

இந்தக் கூட்டத்தார் அம்பத்கார் தூங்கும் போது கழுத்தறுக்க பயப்படுவார்களா என்பது யோசிக்கத்தக்க விஷயமாகும்.

காந்தி கூட்டத்தார் தங்கள் காரியத்துக்கு என்ன வேண்டுமானலும் செய்வார்கள், எவ்வளவு இழிவான காரியமும், துரோகமான காரியமும் செய்வார்கள் என்பதை இது ருஜுப்படுத்த வில்லையா?

ஆகவே இந்தியாவுக்கு மானமோ, சுயமரியாதையோ ஏற்பட வேண்டுமானால் இந்த மாதிரி காந்தி கூட்டத்தார் அழிந்து ஒழிந்தாக வேண்டும் என்கின்றதை தவிர வேறு விமோசனமில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 10.05.1936**



# ஆனந்தக் கூத்து

## ஈழுவ சமுதாயமும் இந்து மதமும்

திருவாங்கூர் கொச்சி சமஸ்தானத்திலும், பிரிட்டிஷ் மலபாரிலும் 23 லக்ஷம் ஜனங்கள் ஈழவர்கள் என்றும், தீயர்கள் என்றும் சொல்லப்படுவ தல்லாமல் அவர்கள் 5-வது ஜாதியாயும் பஞ்சமரில் பட்டவராயும் தீண்டத்தகாதவராயும் பாவித்து வரப்படுகிறது.

ஈழவ சமுதாயம் தீண்டத்தகாத வகுப்புபோல் கொடுமை செய்யப்பட்டு வந்தாலும் அச்சமூகம் இன்று சூத்திரர்கள் என்று தாங்களாகவே ஒப்புக் கொள்ளும் நாயர் சமுதாயத்துக்கும், பார்ப்பன சமுதாயத்துக்கும் அறிவிலும் ஆற்றலிலும் எள்ளளவும் குறைந்தவர்கள் அல்ல என்கின்ற நிலையில் இன்று இருந்து வருகிறார்கள். கல்வியிலும் நல்ல முற்போக்கடைந்து இருக்கிறார்கள். இதற்கு உதாரணம் வேண்டுமானால் திருவாங்கூர் ராஜ்ஜியத்தில் மகமதியருக்கு பள்ளிக் கூடத்தில் அரைச் சம்பளம் உண்டு. ஆனால் ஈழவருக்கு அரைச் சம்பளச் சகாயம் இல்லை. காரணம் என்னவென்றால் ஈழவர்கள் கல்வியில் பிற்பட்ட வகுப்பு அல்ல என்கின்ற காரணமே யாகும்.

அப்படிப்பட்ட ஈழவ சமூகம் வைக்கம் சத்தியாக் கிரகத்துக்குப் பிறகும், அவர்களது ஒப்பற்ற தலைவராகிய ஸ்ரீநாராயணகுருசாமியின் தீவிர சீர்திருத்த வேலைக்குப் பின்னும் இனி அரை நிமிஷம் தீண்டாத ஜாதியாகவோ, பஞ்சம ஜாதியாகவோ இருந்து உயிர் வாழக்கூடாது என்கின்ற உணர்ச்சி பெற்று பெரியதொரு கிளர்ச்சி செய்து வருகிறார்கள். என்றாலும் தமிழ் நாட்டில் தமிழ் மக்கள் முன்னேற்றத்திற்கும், கிளர்ச்சிக்கும் பார்ப்பனர்கள் எப்படி பெரியதொரு வியாதியாயும், கூற்றுவர்களாயும் இருக்கிறார்களோ அது போலவே திருவாங்கூரில் ஈழவர்களுக்கு நாயர்கள் முட்டுக்கட்டையாயும் எதிர்ப்பாயும் இருந்து வருகின்றார்களாம்.

தமிழ்நாட்டில் எப்படி தமிழ் மக்கள் பார்ப்பனர்கள் கொடுமை சகிக்கமாட்டாமல் இந்து மதத்தையும், ஜாதியையும் சிலர் கடவுள்களையும் கூட வெறுத்து விலகிவிட்டார்களோ அதுபோல் மலையாளத்தில் நாயர்கள் தொல்லையை சகிக்க மாட்டாமல் 23 லக்ஷ ஈழவர்களும் ஒரே அடியாய் மதத்தையும் கடவுளையும் விட்டு விலகிவிடத் தீர்மானித்து விட்டார்கள்.

இம்மாதம் 6, 7 - ந் தேதிகளில் திருவாங்கூர் சங்கனாச்சேரியில் கூடிய S.N.D.P. யோக மகாநாடுகளில் அதாவது 3 மகாநாடுகளிலும், வாலிப மகா



RangaRakes tamilnavarasam.com

நாட்டிலும், மத மகாநாட்டிலும், பொது மகாநாட்டிலும் ஒரே அடியாக 10000 பேர்களுக்கு மேல் ஆண்களும், பெண்களுமாய் கூடியுள்ள பெரிய கூட்டத்தில் ''இந்துமதம் மனித சமூக முன்னேற்றத்துக்கும், சுயமரியாதைக்கும் எதிராய் இருப்பதால் ஈழவ சமுதாயம் ஒட்டுக்கும் இந்து மதத்தை விட்டு விலகிவிட வேண்டும்''

என்று பெரிதொரு உற்சாகத்தோடு ஏகமனதாய் தீர்மானித்து விட்டார்கள். அவ்வளவோடு மாத்திரம் அல்லாமல்,

''ஈழவ சமுதாயத்தை ஏமாற்றி வஞ்சித்து அவர்களை பாமர மக்களாய் வைத்திருக்க, ஈழவருக்கு ஆலயப் பிரவேசம் கொடுக்க ஜாதி இந்துக்கள் என்பவர்கள் முன் வந்திருக்கிறபடியால் ஈழவர்கள் அதில் கலந்து கொள்ளக் கூடாது என்பதோடு கோவில்களுக்கும் போகக்கூடாது'' என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டார்கள்.

தமிழ் நாட்டில் ஈழவர்களை விட இழிவாகவும் கேவலமாகவும் கருதப்பட்டு கல்வி இல்லாமலும், உரிமை இல்லாமலும், கொடுமைப் படுத்தப்படும் ஆதி திராவிட மக்களில் சிலர் தங்கள் சுயநலத்தை உத்தேசித்து சமூக நலத்தையும், சுயமரியாதையையும் பறிகொடுத்து விட்டு இந்து மதத்தையும், கோவில்களையும் கட்டி அழுவது மாத்திரமல்லாமல் இந்து மத பிரசாரமும், கோவில் பிரசாரமும் செய்வதென்றால், இந்த ஆதி திராவிட சமூகத்துக்கும் ஈழவ சமூகத்துக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

இந்து மதத்தை ஒழிக்கவேண்டும் என்றும், இந்துமதம் மனித சுயமரியாதைக்கு எதிரானது என்பதோடு அயோக்கியர்களது சுயநலத்துக்கும், சோம்பேறிகளது வயிற்றுப் பாட்டிற்கும் ஏற்படுத்தப்பட்டதே தவிர அதில் யோக்கியமோ நாணயமோ இல்லை என்று வெகு காலமாகவே சொல்லி வருகிறோம்.

உதாரணமாக, தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் 1922ல் திருப்பூரில் கூடிய தமிழ் மாகாண காங்கிரஸ் மகாநாட்டில் இந்து மதத்தைக் குறை கூறி இராமாயணத்தையும், மனுதர்ம சாஸ்திரத்தையும் நெருப்பில் இட்டு பொசுக்க வேண்டும் என்று சொன்னதும்,

மற்றொரு சமயத்தில் தோழர் ராமசாமி நான் இந்துவாய் இருந்து சாகமாட்டேன் என்று சொன்னதும் யாருக்கும் ஞாபகமிருக்கும். ஆகவே, இந்த இரண்டு வார்த்தைகளையும் தைரியமாக முதல் முதல் இந்த நாட்டில் வெளிப்படையாகச் சொன்னதோடு மாத்திரமல்லாமல் அது சந்து பொந்து மூலை முடுக்குகளில் பிரசாரம் செய்து வந்ததும் தோழர் ஈ.வெ. ராமசாமியாகும். அதை ஆதரித்து நாம் எழுதி வந்ததும், பிரசாரம் செய்து வந்ததும் அந்தக் காலம் முதல் இதுவரை அனேகம் பேருக்கு ஆத்திரமாகவும் வருத்தமாகவும் இருந்து வந்தாலும், அதற்கு எதிராக எத்தனையோ பேர் பிரசாரம் செய்து



வந்திருந்தாலும் இன்று அந்த அபிப்பிராயம் எல்லா எதிர்ப்புகளையும் விஷமங்களையும் சூழ்ச்சிகளையும் சமாளித்து ஆண்மையோடும், சக்தியோடும் தலைதூக்கி இமயமலை முதல் கன்னியாகுமரி வரை மதத்தை ஒழி! கடவுளை ஒழி!! இந்து மதம் அயோக்கியர்களின் வயிற்றுப் பிழைப்பு மதம்!!! என்று 10000 பேர் 20000 பேர் உள்ள கூட்டத்தில் வீர கர்ஜ்ஜனை செய்யும்படியான நிலைமைக்கு வந்துவிட்டது.

காந்திகளும், மாளவியாக்களும், நேருக்களும் என்னதான் களிமண் உபதேசமும் , ஞானஸ்நான உபதேசமும் ஹரிஜன முன்னேற்ற வேஷமும் எலும்பை கங்கையில் போட்டு நபரை மோக்ஷத்துக்கு அனுப்பும் நாடகமும் செய்தாலும், நடத்தினாலும் இனி இந்து மதத்தைக் காப்பாற்றுவது என்பது வெள்ளரிக்காய்க்குப் பூண் போடும் வேலையாகத்தான் முடியுமே ஒழிய காரியத்தில் ஒன்றும் ஆகப்போவதில்லை.

கிறிஸ்துமதம் மேல்நாடுகளில் ஆட்டம் கொடுத்துவிட்டது. ஏழ்மையின் காரணமாக இந்து மதத்தின் கொடுமையின் காரணமாக உத்தியோக ஆசை பரிகாரமாக இந்தியாவில் கொஞ்சம் இருக்கிறது. அதுவும் ஏழைகளை வஞ்சித்து ஊரைக் கொள்ளையடித்த சில பணக்காரர்களின் பணங்களால் கிருஸ்துமதம் இருப்பதாக வாயால் சொல்லிக் கொள்ளப் படுவதல்லாமல் காரியத்தில் மதம் மேல் மூச்சு வாங்கிக் கொண்டிருக்கிறது.

ஐரோப்பாவிலும் கூட கிழக்கு கோடி ரஷ்யாவிலும், மேற்கு கோடி ஸ்பெயினிலும் செத்தே விட்டது. மத்திய ஐரோப்பாவில் பரிகாசத்துக்கு இடமாய் விட்டது. இப்போது இருப்பதாய் சொல்லும் கிருஸ்து மதம் அரசர்களையும், பணக்காரர்களையும் காப்பாற்றவும் ஜனநாயகத்தையும் ஏழைகள் விடுதலையையும் தடுக்கவும், ஏமாற்றவுமே ஐரோப்பாவில் (மதம்) இருந்து வருகிறதே அல்லாமல் வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தைக் காட்டவோ, அயோக்கியர்களை, கொடுமைக்காரர்களை நரகத்துக்கு அனுப்பவோ இல்லை. ஆகையால் தமிழ் நாட்டில் எப்படிப் பார்ப்பன ஆதிக்கம் கூலிகளின் கூப்பாடுகளால் இருக்கிறதோ அதுபோல் மதமும் சோம்பேறி வயிற்றுப் பிழைப்பாளர்களின் பிரசாரத்தால் தான் இருக்கிறது தவிர வேறில்லை.

உலக மனித சமுதாயம் முன்னேற்றமடைவதற்கு இந்து மதமும் கிருஸ்து மதமும் முதலில் ஒழிந்தாக வேண்டும் என்பதை இப்போதாவது இந்திய மக்களும், ஐரோப்பிய மக்களும் உணர்ந்ததற்கு நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

இதுவரை கிருஸ்தவ மத யோக்கியதைக்கு ஒரே ஒரு நற்சாக்ஷிப் பத்திரமிருந்து வந்தது. அதாவது அமெரிக்காவில் கிறிஸ்தவ நீக்கிறோவர்களை கிறிஸ்தவ ஐரோப்பியர்கள் எப்படி நடத்துகிறார்கள்? இந்தியாவில் கிறிஸ்தவ கோவில்களில் பற-பள்ள-சக்கிலியர் என்கின்ற கிருஸ்தவர்களை பாதிரிகள் எப்படி நடத்துகிறார்கள் என்பதே.



RangaRakes tamilnavarasam.com

இப்போது அபிசீனிய கிருஸ்தவர்களையும் அபிசீனிய கிருஸ்தவ நாடுகளையும், ஐரோப்பிய கிருஸ்தவர்களும் ஐரோப்பிய கிருஸ்தவ நாடுகளும் எப்படி நடத்திற்று என்கின்ற இரண்டாவது நற்சாக்ஷிப் பத்திரம் ஏற்பட்டு விட்டது. அம்மதம் ஒழிய வேண்டும் என்பதற்கு இவைகளை விட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்.

அதுபோலவே இந்து மதத்துக்கும் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளும் தாழ்த்தப்பட்ட மக்களிடத்தும் மற்றும் பார்ப்பனரல்லாத மக்களிடத்தும் பார்ப்பனர்கள் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்பதும், அவர்களை எப்படிக் கருதி எப்படி நடத்துகிறார்கள் என்பதும், இந்துமத வேத சாஸ்திரங்களில் அம்மதத்தைச் சேர்ந்த 100க்கு 97 மக்களின் நிலை எப்படி இருந்து வருகிறது என்பதும் மானமுள்ள சுத்த ரத்த ஓட்டமுள்ள ஜாதி மக்களுக்கு ஒரு நல்ல அத்தாட்சியாகும். அதோடு இப்போது அரசியல் சீர்திருத்த சமயத்தில் காந்தியார் வட்டமேஜை மகாநாட்டில் நடந்து கொண்டதும் பார்ப்பனர்கள் மற்ற ஜாதியார்களை வஞ்சிக்க எவ்வளவு சூழ்ச்சியான காரியம் செய்கிறார்கள் என்பதும் அடுத்த மாதத்தில் தமிழ் மக்களை ஏய்க்க தோழர்கள் மாளவியாவையும், காந்தியையும், நேருவையும் தமிழ்நாட்டுக்குக் கூட்டி வந்து எவ்வளவு மோசமும் துரோகமும் செய்ய உத்தேசித்து இருக்கிறார்கள் என்பதும் இரண்டாவது அத்தாட்சியாகும்.

ஆகவே மத விஷயமாக இந்த 10, 12 வருஷ காலத்திலேயே நாம் சொல்லி வந்ததெல்லாம் ருஜுவாகி பாமர மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்று இமயமலை முதல் கன்னியாகுமரி வரை இந்துமதம் ஒழிக்கப்பட வேண்டும் என்கின்ற கூச்சல் ஆகாயத்தை பிளந்து நிற்கிறது என்பதைப் பார்க்கும் போது நாம் ஆனந்தக் கூத்தாடாமல் இருப்பதற்கில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 10.05.1936**



# திருச்சி கூட்டம்

## I

திருச்சியில் பாண்டியன் - ராமசாமி அறிக்கைப்படி ஏற்படுத்தப்பட்ட கூட்டம் 3-5-36ந் தேதி நடந்து விட்டது. கூட்டத்துக்கு 400 பேர்கள் வந்திருந்தார்கள் என்றால் அவர்களது அறிக்கைக்கு எவ்வளவு மதிப்பு இருந்தது என்பது யாவருக்கும் விளங்கும். அக் கூட்டத்தில் பிரசாரத்தைப்பற்றி முக்கியமாய்ப் பேசி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஏற்பாடுகள் காரியத்தில் நடக்கவேண்டும். அதன் பிறகு தான் கூட்டத்தின் வெற்றியைப் பற்றி பேச யோக்கியதை உண்டு.

''ஆண்டிகள் மடம் கட்டுவது போல்'' என்று ஒரு பழமொழி சொல்லு வார்கள். அதாவது வாயில் பேசிவிட்டு காரியத்தில் அலட்சியமாய் இருப்பது என்பதற்கு இப்பழமொழி சொல்லப்படுவது. அப்படிப்போல் இக்கூட்ட நடவடிக்கையும் ஏற்பட்டு விடுமோ என்று பயப்படாமல் இருக்க முடியவில்லை.

ஐஸ்டிஸ் கட்சியார் பிரசாரத்துக்கு பல கூட்டம் போட்டார்கள். சட்டசபை எலக்ஷன் தோல்வியும், ஜில்லா போர்டு எலக்ஷன் தோல்வியும் ஏற்பட்டும் கூட அவர்களது பிரசார முயற்சி எருமை மாட்டின் மீது மழை பெய்வது போலவே இருந்து வருகிறது. நெல்லூர் கூட்டம், குண்டூர் கூட்டம், விருதுநகர் கூட்டம், பிரண்ட் சன் பார்க்குக் கூட்டம் என பல கூட்டம் கூடி விட்டது. ஒரு காரியமும் நடக்கவில்லை. எனவே வருஷா வருஷம் லட்சக் கணக்கான ரூபாய் வரும்படி உள்ள மந்திரிகளும், ஆயிரக்கணக்கான வரும்படி உள்ள காரியதரிசிகளும் அவர்கள் பெரியவர்கள் வீட்டு வரும்படி போல் அனுபவிப்பவர்களாலேயே ஆகாத காரியம், இயக்கத்தால் யாதொரு பலனும் அடையாமல் நஷ்டமும், கஷ்டமும், கெட்ட பேரும் சம்பாதித்தவர்களால் என்ன செய்ய முடியும் என்று ஒருவர் யோசித்தால் அது தப்பாகிவிடாது.

என்றாலும் பார்ப்பனரல்லாத வாலிபர்கள் இதில் தைரியமாய் முன் வந்து பிரமுகர்கள் என்பவர்களை நெருக்க வேண்டும். ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாத அபிமானிகள் தங்கள் தங்களால் கூடிய கவலை எடுத்து ஏதாவது ஒரு தொண்டு செய்ய முன் வரவேண்டும். பார்ப்பனரல்லாதார் இயக்க வேலை ஒரு எதிர் நீச்சல் வேலையைப் போல இருந்து வருகிறது.



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பன ஆதிக்கம் அரசியலில் வலுத்து இருப்பதால் மந்திரிகள் தங்கள் காரியத்தைத் தவிர வேறு காரியம் பார்க்க முடியாமல் பார்ப்பனர்களால் செய்யப்பட்டு விட்டதால் உழைப்பவர்களுக்கு உதவி இல்லா விட்டாலும் கேடில்லாமலாவது இருக்கும்படி பார்த்துக் கொள்ள ஆளில்லாமல் போய் விட்டது.

என்றாலும் திருச்சி கூட்டத்தில் நியமிக்கப்பட்ட கமிட்டித் தோழர்கள் தயவு செய்து சிறிதாவது திருச்சி தோழர்கள் முயற்சியை லட்சியம் செய்து தங்களால் கூடிய உதவி செய்து பிரசாரத்தை நடத்திக் கொடுக்க வேண்டுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 10.05.1936**



# சர்வகட்சி பார்ப்பனரல்லாதார் மகாநாடு

காங்கிரசில் இருக்கும் பார்ப்பனரல்லாதார் பலர் காங்கிரசில் உள்ள பார்ப்பனர்களின் நடத்தையும், நாணயமும், எண்ணமும் பிடிக்காமல் அதாவது காங்கிரசை பார்ப்பனர்கள் தங்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கை நலத்துக்கும் தங்கள் சொந்த பார்ப்பன சமூக நலத்துக்கும் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்றும், அக்காரிய சித்திக்கு ஆகவே மற்ற காங்கிரஸ் பார்ப்பனரல்லாதார் பெயர்களையும், பணங்களையும், தொண்டர்களையும், உழைப்புகளையும், ஆயுதமாக உபயோகித்துக் கொள்ளுகிறார்கள் என்றும், இந்த 20 வருஷ காலமாக எங்கும் கூப்பாடு எழுந்த வண்ணமாக இருந்து வருகிறது என்பது யாரும் அறியாததல்ல.

சுமார் 10, 12 வருஷங்களுக்கு முன்பாகவே தோழர் ஈ.வெ.ராமசாமி இதை உணர்ந்து அடியோடு காங்கிரசையும் பார்ப்பனரையும் விட்டு விலகி வந்து தனித்த முறையில் தன்னாலான தொண்டை தான் சரி என்று பட்ட காரியத்திற்கு பயன்படுத்தி வருகிறார் என்பதும் யாரும் அறியாததல்ல.

இப்பொழுது சமீபகாலத்தில் அதுவும் காங்கிரசுக்கு எங்கும் வெற்றி என்று சொல்லப்படும் காலத்திலும் தோழர்கள் கல்யாணசுந்தர முதலியார், வி.ஓ.சிதம்பரம் பிள்ளை, ராய சொக்கலிங்கம், தண்டபாணிபிள்ளை, வேதாரண்யம் காங்கிரஸ் காரியதரிசி, தியாகராஜஞானியார், சாமி ஷண்முகாநந்தம் முதலிய பல காங்கிரஸ் பிரமுகர்களும் காங்கிரசுக்காவே தங்களை தியாகம் செய்துகொண்ட பல தொண்டர்களும் அதுபோலவே காங்கிரசில் இருக்கும் பார்ப்பனரல்லாதார் நடத்தை முதலியவை பிடிக்காமல் கண்டித்தும், எதிர்த்தும், பேசியும், எழுதியும் வருவதோடு காங்கிரஸ் பார்ப்பனத் தலைவர்களை தனிப்பட்ட முறையில் கண்டித்துப் பேசி காங்கிரஸ் ஊழலையும், பார்ப்பனர் சூழ்ச்சிகளையும் பல வழிகளில் வெளியிட்டும் வந்திருக்கிறார்கள்.

இதன் பயனாகவே தோழர் கல்யாணசுந்திர முதலியார் காங்கிரசை பரிசுத்தம் செய்வதற்காக காங்கிரஸ் பற்றுக் கொண்ட பார்ப்பனரல்லாதாரைக் கொண்ட ஒரு கூட்டத்தைக் காஞ்சீபுரத்தில் கூட்டுவதாக விளம்பரம் செய்ததோடு மாத்திரமல்லாமல் காங்கிரசினிடம் அபிப்பிராய பேதம் கொண்ட பார்ப்பனரல்லாதார்களும் அதில் ஒத்துழைக்க வேண்டுமென்றும் தனித்தனியாகப் பல பார்ப்பனரல்லாத பிரமுகர்களுக்கு எழுதிக் கேட்டுக் கொண்டும் இருந்தார்.



RangaRakes tamilnavarasam.com

இதை நம்பியே தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் அதே சமயத்தில் ஒரு சர்வகட்சி பார்ப்பனரல்லாதார் மகாநாடு ஒன்று கூட்டினால் அதன் மூலம் பார்ப்பனரல்லாதார்கள் எல்லோரும் எவ்வளவு தூரம் ஒன்று கூடி உழைக்க முடியும் என்பதைக் கண்டுபிடித்து அந்த அளவுக்கு ஒற்றுமையாய் வேலை செய்வதின் பயனாய் தமிழ்நாட்டில் காங்கிரசின் பேரால் இருந்துவரும் பார்ப்பன ஆதிக்கத்தையும் சூழ்ச்சியையும் ஒருவாறு குலைக்கப் பார்க்கலாம் என்கின்ற ஆசையின் மீதே ஒரு சர்வகட்சி பார்ப்பனரல்லாதார் மகாநாடு கூட்டும்படி காஞ்சீபுரத்தில் காங்கிரஸ் மகாநாடு கூட்ட முயற்சித்த பிரமுகர்களையும் குறிப்பாக தோழர் திரு.வி.கல்யாணசுந்திர முதலியாரையும் கேட்டுக் கொண்டார். அதன்பயன் இப்போது காஞ்சீபுரத்தில் காங்கிரஸ் பார்ப்பனரல்லாதார் மகாநாடு கூட கூட்டப்படுவதில்லை என்கின்ற முடிவு ஏற்பட்டு விட்டதாகத் தோழர் திரு.வி.க. அவர்கள் மெயில் பத்திரிக்கைக்கு அனுப்பிய சேதியில் இருந்து தெரியவருகிறது.

அது மாத்திரமல்லாமல் இந்த காங்கிரஸ் பார்ப்பனரல்லாத பிரமுகர்களை நம்பி முன்னுக்கு வந்த பலருக்கும் அப்பிரமுகர்கள் மீது சிறப்பாகத் தோழர் கல்யாணசுந்திர முதலியார் அவர்கள் மீது மனக்கசப்பும் அவநம்பிக்கையும் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

அப்பிரமுகர்களில் தோழர் முதலியாரவர்களின் சொந்த நாணயத்தை பாதிக்கும்படியாகக்கூட கண்டித்தெழுதப்பட்ட பல கடிதங்களும் பத்திரிக்கையில் பிரசுரிக்கும்படி சேதிகளும் நமக்கு கிடைத்திருக்கின்றன. அவற்றை வெளியிட நாம் விரும்பவில்லை.

ஆனாலும் இம்மாதிரியாக தோழர் முதலியார் அவர்களால் அடிக்கடி சில அபிப்பிராயங்கள் வெளியிடப்படுவதும் அவற்றை நம்பி பலர் கலந்து கொள்வதும் பிறகு யாதொரு யோக்கியமான காரணமும் இல்லாமல் முதலியார் அவர்கள் பின் வாங்கிக் கொள்வதும் இவர்களை நம்பின பேர்களை தெருவில் தியங்க விட்டுவிடுவதுமான காரியம் ஏன் செய்யப்பட வேண்டும்? என்பது நமக்கு விளங்கவில்லை.

காங்கிரஸ் அனுபவமும் அங்குள்ள பார்ப்பனர்கள் யோக்கியதையும், அவர்களது சுயநல தந்திரமும் சூட்சியும், அடிக்கடி நம்மை ஏமாற்றி வருவதும் நாம் அறியாததல்ல. தோழர்கள் கல்யாணசுந்திர முதலியார் போன்ற காங்கிரஸ் பார்ப்பனரல்லாத பிரமுகர்களும் அறியாததல்ல.

இன்னும் விளக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் இவற்றை தோழர் ஈ.வெ. ராமசாமி அறிவதற்கு முன்னதாகவே முதலியார் போன்ற மற்ற பிரமுகர்கள் அறிந்ததேயாகும் என்றும் உறுதியாய் கூறலாம். என்றாலும் தோழர் ராமசாமி அவர்கள் உணர்ந்த உடன் அவர்களை விட்டு வெளியேறியதால் ஏதோ ஒரு சிறு அளவாவது தன் காலால் நின்று கொண்டு தன்னால் கூடியதை தன்னிஷ்டப்படி செய்ய முடிந்தது. இதனால் தனக்கு ஏற்படும் நல்ல பெயரையோ கெட்ட பெயரையோ லட்சியம் செய்யாமலும் இருக்க முடிந்தது.



ஆனால் மற்றவர்கள் என்ன காரணத்தாலோ அந்த தைரியம் கொள்ளாததால் பார்ப்பனர்களின் கூட்டுறவில் இருந்து விலகி இருப்பதாய் காட்டிக்கொள்ள முடியாத நிலைமையில் இருந்து வரவேண்டியதாய் ஏற்பட்டுவிட்டது.

இதற்கு ஏதாவது ஒரு காரணம் சொல்ல வேண்டுமானால் பார்ப்பனரல்லாத பிரமுகர்களில் ஒருவருக்கு மற்றவரிடம் நம்பிக்கை இன்மையும், துவேஷமும், போட்டியும், பொறாமைக் குணமும் தான் முக்கியமானது என்று சொல்ல வேண்டியிருக்கிறதே ஒழிய மற்றப்படி பொதுநல சேவையோ மக்கள் நலன் பற்றிய கொள்கைகளோ வேறு ஏதோ காரணமாக இருக்கலாம் என்று நம்மால் சொல்ல முடியவில்லை.

பார்ப்பன பிரமுகர்களுக்குள்ளும் ஒருவருக்கொருவர் போட்டியும், பொறாமையும், துவேஷமும், வெறுப்பும் இருந்தாலும் அவர்களுக்குள் ஒரு உத்தமமான குணம் இருந்து வருகிறது. அது என்னவென்றால் கொள்கையில் அபிப்பிராய பேதமே இருப்பதில்லை. இருந்தாலும் அது ஒற்றுமைக்கு இடையூறாய் இருப்பதுமில்லை. அதிலும் தங்கள் சமூக நலம் என்பதே முக்கியமான முதன்மையான லட்சியமாகவும் அதற்கு ஆக எத்தகைய தியாகமும் செய்ய தகுந்த உறுதியுமான உத்தம குணமும் இருந்து வருகிறது. நம்மிலோ பல பிரமுகர்கள் ஒருவேளை கூழுக்குப் போடும் உப்புக்கு நமது சமூக நலனை விட்டுக்கொடுக்கும் தன்மையும் எதை விற்றானாலும் நம் சுயநலமே பெரிதெனக்கருதும் சாமானிய குணமும் இருந்து வருகிறது.

இதற்கு உதாரணம் வேண்டுமானால் காங்கிரஸ் பார்ப்பனரல்லா தார்களை பார்ப்பனர்கள் எப்படி மதிக்கிறார்கள் அந்த மதிப்பை பார்ப்பன ரல்லாதார்கள் எப்படி சகித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதைப் பார்த்தாலே போதுமானது.

இது நிற்க மற்றொரு காரியத்தையும் உதாரணமாக கூறுவோம். தோழர் வரதராஜுலு நாயுடு அவர்கள் இந்திய சட்டசபை தேர்தலுக்கு ஒரு அபேக்ஷகராக நின்ற காலத்தில் 4 அணா கொடுத்து காங்கிரஸ் பாரத்தில் ஒரு கையெழுத்து போட்டிருந்தால் அவருக்கு ஒரு காசு செலவு கூட இல்லாமல் அந்த பதவி கிடைத்து இருக்கும். தோழர் ராமசாமி கூட பதவி வேண்டுமானால் காங்கிரசில் சேர்ந்து கொள்வதில் குற்றமில்லை என்றும் காங்கிரஸ் அபிப்பிராயத்துக்கும், தோழர் வரதராஜுலு அபிப்பிராயத்துக்கும் அதிக வித்தியாசமில்லை என்றும் கூட ஜாடை காட்டினார்.

ஆனால் தோழர் திரு.வி.கல்யாணசுந்திர முதலியார் அவர்கள் அதற்கு சம்மதிக்காதவராய் கண்டிப்பாய் வெளியில் இருந்தே அந்த பதவியை அடையலாம் என்றும் சொல்லி அதற்கு ஆக தானே கடைசிவரை கூட இருந்து உழைத்து வெற்றி தேடித்தர உதவுவதாயும் வாக்களித்தார். மற்றொரு பிரமுகரும் அப்படியே சொன்னார்.



RangaRakes tamilnavarasam.com

இதைப் பலரும் நம்பினார்கள். நாயுடுவும் நம்பினார். ஆனால் கடைசியில் நடந்தது என்ன? அவரை நடு ஆற்றில் விட்டு விட்டு எல்லோரும் ஓடிப்போனார்கள். இதை அறிந்தும், தோழர் ராமசாமிக்கு தான் நிற்பதானால் காங்கிரசில் சேராவிட்டாலும் அந்த ஸ்தானம் போட்டி இல்லாமல் பெறலாம் என்கின்ற உறுதி எதிர்க்கட்சி தலைவரால் தோழர் ராமசாமிக்கு ஜாடை காட்டப்பட்டும் இவைகளை லக்ஷியம் செய்யாமல் கடைசியாக தோல்வியில் தனக்கும் பங்கு இருக்கட்டும் என்பதற்காகவே அவர் மாத்திரம் தோழர் வரதராஜுலுவுடன் கடைசிவரை இருந்து வந்தார்.

இப்படி இன்னும் பல உதாரணங்கள் காட்டலாம். ஆனால் பார்ப்பன சமூகத்தில் மாத்திரம் இம்மாதிரியான சம்பவங்கள் தங்களுக்குள் ஒருவருக் கொருவர் ஏற்படுத்திக் கொள்ளுவது என்பது எதிர்பார்க்க முடியாததாகும்.

இப்போதும் தோழர் திரு.வி.க. அவர்கள் காஞ்சீபுரத்தில் 38வது தமிழர் மகாநாடு கூட்டுவது என்கின்ற பிரச்சினைக்கு முக்கிய காரண கர்த்தராய் இல்லாத பக்ஷம் அவ்வுத்தேசம் அந்த முறையில் வெளிவந் திருக்காதென்றே கருதலாம்.

அதை தோழர் ஈ.வெ.ராவும் நம்பி ஒரு வேண்டுகோளும் விடுத்திருக்கமாட்டார்.

கடைசியில் பொஸ்ஸென்று போய்விட்டது. அதற்குக் காரணம் இன்னது என்று உள் எண்ணம் கற்பித்து முதலியார் அவர்களைத் தாக்கி பல கடிதங்கள் வந்திருக்கின்றன. அவை எப்படியோ போகட்டும்.

இம்மாதிரி அடிக்கடி செய்வதால் பார்ப்பனரல்லாதார் பொதுநலத்துக்குக் கேடு எவ்வளவு ஏற்படக்கூடுமோ அதில் ஒரு அளவுக்காவது தோழர் முதலியார் அவர்களது நற்பெயரையும் பாதிக்காதா? என்றே பயப்படுகின்றோம்.

இது ஒருபுறமிருக்க தோழர் திரு.வி.க. அவர்களுக்கு பார்ப்பனர்கள் இடம் இருக்கும் துவேஷத்துக்கும் அவநம்பிக்கைக்கும் எல்லையே கிடையாது என்பதை நாம் தைரியமாய் சொல்லக்கூடும். ஆனால் அவர்களிடம் அவருக்கு பயமும் தாட்சண்யமும் அதுபோலவே எல்லையற்றதாகும்.

இந்தக் காரணத்தாலேயே துவேஷம் அதிகரித்திருக்கும் போது பார்ப்பனரை எதிர்க்க துணிவதும், நம் போன்றவர்களை உதவிக்கு அழைப்பதும் பயமும், தாட்சண்யமும் அதிகரிக்கும்போது ஒருவரையும் கலக்காமல் பின் வாங்கிக்கொள்வதுமாய் தொடர்ந்து நடந்து வருகிறது.

போனது போகட்டும், இப்பொழுதும் சர்வகட்சி பார்ப்பனரல்லாதார் கூட்டம் ஒன்று கூட்டப்படுமானால் அது எல்லோருக்கும் பயன்தரும் என்பதே நமதபிப்பிராயம்.

காங்கிரசை விட்டு விலகி வாழ முடியாத பார்ப்பனரல்லாதாருக்குக் கூட தங்களை சிறிதாவது சுயமரியாதையோடு வாழும்படி செய்வதற்கும்



பார்ப்பனரால் சுயமரியாதையுடன் நடத்தப்படுவதற்கும் இக்கூட்டம் பயன்படும் என்றே சொல்லுவோம். அன்றியும் அக்கூட்டத்தின் பயனாய் காங்கிரசு பார்ப்பனர்களுக்கும் காங்கிரசிலில்லாத உண்மையான பார்ப்பனரல்லாதார் நலம் கருது வோருக்கும் ஏதாவது ஒரு ராஜி ஏற்பட மார்க்கமேற்பட்டாலும் ஏற்படலாம்.

பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் வேற்றுமையாலும், தேசீயம் - வகுப்புவாதம் என்னும் வேற்றுமையாலும் நாட்டில் இருதரப்பிலும் அயோக்கியர்களுக்கும் சமய சஞ்சீவிகளுக்கும் நாணயமற்றவர்களுக்கும் தான் யோகத்தின் மேல் யோகம் அடிப்பதைத் தவிர வேறு என்ன பொது நன்மை ஏற்பட்டு வருகிறது என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

ஆகையால் பார்ப்பனத் தலைவர்களும் இதை யோசித்துப் பார்த்தார்களானால் அவர்களிலும் யோக்கியமாய் இருப்பவர்கள் ஏதாவது ஒரு அளவுக்கு இரங்கி வந்து நல்ல முடிவுக்கு வரக்கூடும்.

இந்தக் காரணங்களால் தோழர் திரு.வி.கல்யாணசுந்திர முதலியார் அவர்கள் மறுபடியும் புனராலோசனை செய்து பார்ப்பனரல்லாதார் காங்கிரஸ் கூட்டம் அதாவது 38 வது தமிழர் கூட்டம் கூட்டாவிட்டாலும் சர்வகட்சி பார்ப்பனரல்லாதார் கூட்டம் கூட்டவாவது முன்வருவார் என்று எதிர்பார்க்கிறோம்.

தோழர்கள் வரதராஜுலு நாயுடு, வி.ஓ.சிதம்பரம்பிள்ளை, மாசிலாமணி முதலியார் முதலியவர்கள் தங்கள் சம்மதத்தை மனப்பூர்வமாய் தெரிவித்து இருக்கிறார்கள். ஆதலால் முதலியாரவர்கள் பயப்படத் தேவையில்லை என்றே கருதுகிறோம்.

பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு ஆக என்று உழைக்கும் உண்மையான பல தோழர்கள் ஜஸ்டிஸ் கட்சி தலைவர்கள் என்பவர்களிடம் எவ்வளவோ இழிவும் சுயமரியாதைக் குறைவுமான பல சங்கடங்களை அனுபவித்துக் கொண்டுதான் வருகிறார்கள். அதையும் நாம் மறைக்கவில்லை. பதவியும் லாபமும் பெற்றவர்கள் எல்லாம் - பெற்றுக் கொண்டு இருப்பவர்கள் எல்லாம் ''ஜஸ்டிஸ் கட்சி இன்னமுமா இருக்கிறது செத்த பாம்பை எடுத்து எத்தனை நாளைக்கு ஆட்ட முடியும்'' என்றெல்லாம் கேட்பதைக்கூட சகித்துக் கொண்டு மறுபடியும் அப்படிப்பட்டவர்கள் பதவியும், பட்டமும், செல்வமும் பெறுவதற்கு ஆகவே உழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலும் இருக்கிறார்கள். இம்மகாநாடு கூட்டப்படுவதால் அவ்வித இழிவிலும் நிர்ப்பந்தத்திலும் இருந்தாவது விலக நம் போன்றவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படாதா என்பதற்காகவே சர்வகட்சி பார்ப்பனரல்லாதார் மகாநாடு கூட்ட ஆசைப்படுகிறோமே ஒழிய மற்றபடி அதனால் சுயநலமோ, சுயநல பெரிய லாபம் பெறவோ, பார்ப்பனரல்லாதார் இயக்கத் தலைவர்களின் மதிப்பைப் பெறவோ அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

இந்தப்படி எழுதுவதினாலேயே பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஏதோ நெருக்கடியில் இருப்பதாக யாரும் கருதிவிடக்கூடாது என்பதையும் நாம் வலியுறுத்துகிறோம்.

தோழர் ஈ.வெ.ரா. சுற்றுப்பிரயாணம் வாரத்துக்கு ஒரு தரம் தவறாமல் இருந்து வருவது யாவரும் அறிந்திருக்கலாம். சென்ற இடங்களில் எல்லாம் இருக்கும் உற்சாகமும், ஊக்கமும் ஆதரவும், ஆடம்பரங்களும், கூட்டங்களும், மற்ற காரியங்களும் பார்ப்பனர்களும் பத்திரிக்கைகளும் எவ்வளவு தான் மறைத்துத் திருத்திக்கூறினாலும் அவர்களை அறியாமலே அவர்களது பத்திரிகையில் வரும் சேதிகளாலும் மற்ற பத்திரிக்கைகளில் வரும் சேதிகளிலும் பார்த்து இருக்கலாம்.

ஆதலால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்கோ அக்கொள்கைகளுக்கோ ஒரு சிறு ஆதரவும் குறையவில்லை என்பதோடு ஊக்கமும் வேகமும் வளர்ந்து கொண்டுதான் போகின்றது என்றும் காங்கிரசின் யோக்கியதை வெளுத்து வருகிறது என்றும் சொல்லுவோம். தலைவர்களின் - பயன் அடைந்தவர்களின் - பதவியும், பட்டமும், செல்வமும் பெற்றவர்களின் துரோகமும், சுயநல சூழ்ச்சியும் மக்களை ஒன்று சேரவிடாமல் செய்யும் காரியங்களும், பிரசாரமின்மையும், தினசரி பத்திரிக்கை இன்மையும், எல்லாம் சேர்ந்து இன்று உள்ள உணர்ச்சியும், ஊக்கமும் பயன் தருவதற்கு இல்லாமல் செய்து வருகிறது என்பதைத் தவிர வேறில்லை.

ஆகவே காங்கிரஸ் பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் யோசித்து சர்வகட்சி பார்ப்பனரல்லாதார் மகாநாட்டை கூட்ட யோசிப்பார்கள் என்று ஆசைப்படுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 17.05.1936**



# நத்தானியல் தம்பதிகள் பிரலாபம்

வேலூர் ஜில்லாபோர்டு உபதலைவர் டாக்டர் நத்தானியேலும் அவரது மனைவியாரும் ஜில்லாபோர்டு மெம்பருமான தோழர் ஜூலியா நத்தானியேல் அம்மாளும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவருக்கு அனுப்பிய ராஜிநாமாக் கடிதம் வேறிடத்து வெளிவருகிறது. அதைப் படித்துப் பார்ப்பவர்களுக்கு டாக்டர் நத்தானியேல் தம்பதிகள் உள்ளம் எவ்வளவு தூரம் புண்பட்டிருக்கிறதென்பது விளங்காமல் போகாது. ஆரஅமர யோசியாமல் அவசரப்பட்டு காங்கிரசில் சேர்ந்து விட்டதைப் பற்றி டாக்டர் நத்தானியேல் வருந்துவதுடன் காங்கிரசில் சேர்ந்த அந்தப் பொல்லாத காலம் முதல் தான் மன அமைதியுடன் வாழ்ந்ததில்லையென்றும் கூறுகிறார். காங்கிரஸ் தலைவர்கள் என்போர் ஆசை வார்த்தை கூறி மயக்கித் தம்மை காங்கிரசில் சேர்த்ததையும் பிறகு ஒரு உதவியும் செய்யாது கை விட்டதையும், சிரமத்தையும், செலவையும், தொழில் நஷ்டத்தையும், கஷ்டத்தையும் மதியாது ஒரு மாத காலம் சுயமாக வேலை செய்து தேர்தலில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதையும் டாக்டர் நன்கு விளக்கியிருக்கிறார்.

வேலூர் ஜில்லாபோர்டு தேர்தலில் துரோகம் செய்தவர்களைக்கண்டு பிடிப்பது அசாத்தியமென்றும், எனவே காங்கிரஸ் பேரால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் எல்லாம் ராஜிநாமாச் செய்துவிட வேண்டுமென்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் தீர்மானம் செய்திருந்தாலும், துரோகம் செய்தவர்கள் யாராயிருக்கக்கூடுமென்பதையும் டாக்டர் நத்தானியேல் குறிப்பாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஜில்லாபோர்டு தலைவர் பதவிக்கு அபேக்ஷகரைத் தேர்ந்தெடுக்க கூடிய கூட்டத்தில் சென்னை மேயர் தோழர் அப்துல் ஹமீத்கான் பிரசன்னமாயிருந்து கூட்டத்தலைவர் கட்டளைப்படி தோழர் அப்துல் ஹக்கீம் ஸாஹிபுக்காகப் பரிந்து பேசியதையும் தோழர் ராஜகோபாலாச்சாரி அதை ஆதரித்ததையும், தாம் மட்டும் ஜில்லா போர்டு மெம்பராயிருந்தால் தோழர் அப்துல் ஹக்கீமுக்கே வோட்டுக் கொடுப்பேனெனக் கூறியதையும் டாக்டர் நத்தானியேல் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். தோழர் ராஜகோபாலாச்சாரி அவ்வாறு கூறியதாக பலர் ஏற்கெனவே பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்கள். அவைகளை மறுக்க தோழர் ராஜகோபாலாச்சாரியார் இதுவரை முன் வரவில்லை. அக்கூட்டத்தில் பிரசன்னமாயிருந்த டாக்டர் நத்தானியலே இப்பொழுது அதைப் பகிரங்கப் படுத்திவிட்டார். எனவே காங்கிரஸ் ''துரோகத்து''க்கு முதன் முதல் வித்துப் போட்டவர் தோழர் ராஜகோபாலாச்சாரியார் என்பதற்கு சந்தேகமே இல்லை.



RangaRakes tamilnavarasam.com

அப்பால், தோழர் ராஜகோபாலாச்சாரியார் சிபார்சையும் மதியாமல் அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கும் நாடகம் நடந்ததையும் தோழர் கண்ணப்ப முதலியாரும் வேறு ஒரு பார்ப்பனரும் போட்டி போட்டதையும் தோழர் முதலியாருக்கு 13-ம் அவரது எதிரிக்கு 12-ம் வோட்டுகள் கிடைக்க, ஒரு வோட்டு மிகுதியினால் தோழர் கண்ணப்ப முதலியார் தேர்ந்தெடுக்கப் பட்டதையும் உடனே அதைப் பலர் பகிரங்கமாக ஆட்சேபித்ததையும், ஜில்லாபோர்டு தலைவர் பதவிக்குத் தேவையான யோக்கியதாம்சங்கள் அவருக்கில்லையென்று பலர் வெளிப்படையாகக் கூறியதையும் டாக்டர் நத்தானியேல் விசதமாக விளக்கியிருக்கிறார். இந்நிலையில், தோழர் அப்துல் ஹக்கீமை ஆதரித்த காங்கிரஸ் மெம்பர்கள் தோழர் கண்ணப்ப முதலியாருக்கு எதிரிடையாக வோட்டுக் கொடுத்த அந்த 12 பேரில் தான் இருக்க வேண்டுமென்பதற்கு சந்தேகமே இல்லை. பத்துப்பேர் செய்த துரோகத்துக்கு - அந்தப் பத்துப் பேரை நிர்ணயம் செய்யப் போதுமான தகவல்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியாரிடம் இருக்கும்போது - 26 பேரும் கும்பலாக ராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று கூறுவது பெரிய அக்கிரமமாகும்.

நத்தானியேல் தம்பதிகள் கூறுவனவற்றைப் பார்த்தால் அவர்கள் ராஜிநாமாச் செய்யக் கடமைப்பட்டவர்களுமல்ல. எனவே அவர்களை காங்கிரஸ்காரர் தூற்றுவதும் பழிப்பதும் கண்டிக்கத்தக்க செயல்களாகும். ''இந்த துராத்மாக்கள் உதவியின்றி காங்கிரசுக்கு உயிர்வாழ முடியாதா?'' என்று தோழர் ஜுலியா நத்தேனியேல் அம்மையார் மனமுடைந்து கேட்கிறார். தோழர் ஜுலியா அம்மையார் எழுதிய ஆங்கில ராஜிநாமாக் கடிதத்தில் தம்மை ஹிம்சிக்கும் காங்கிரஸ்காரரை Miscreant என அம்மையார் அழைக்கிறார். Miscreant என்ற ஆங்கில பதத்துக்கு a Vile Wreatch (இழிவான பாதகன்) a detestable scoudrel (வெறுக்கத்தக்க போக்கிரி) என சேம்பரின் இருபதாவது நூற்றாண்டு ஆங்கில அகராதி பொருள் கூறுகிறது. பொதுவாக மாதர்கள் சாந்தகுணமுடையவர்கள். சாந்தகுணமுடைய மாதுக்கே வேலூர் காங்கிரஸ்காரர் Miscreant எனத் தோன்றவேண்டுமானால், அவர்கள் எவ்வளவு கேவலமாக நடந்திருக்க வேண்டுமென்பதை நாம் விளக்கத் தேவையில்லை. ராஜினாமாச் செய்தவர்களை, சென்னை அரை அணா, காலணா கந்தல் பத்திரிகைகள் பயமுறுத்துவதைப் பார்த்தால் இன்னும் என்ன என்ன கொடுமைகள் விளையுமோ தெரியவில்லை.

''காங்கிரஸ் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி மொழியில் கையெழுத்துப் போட்ட பின்பு, காங்கிரசை அலட்சியம் செய்வதென்றால் அதனால் ஏற்படும் பலன்களை அநுபவிக்காமல் தப்பிவிடமுடியாது. கடைசிவரையில் ஏமாற்றிவிடலாமென்று நினைப்பவர்களை காங்கிரஸ் சும்மாவிட்டுவிடாது. இதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளட்டும்'' என ஒரு சென்னை அரையணாக் கந்தல் பூச்சாண்டி காட்டுகிறது.



நத்தானியல் தம்பதிகள் ராஜிநாமாவைக் கண்டித்தெழுதும் ஒரு சென்னை காலணா கந்தல் ''இந்த இருவர்கள் (நத்தானியில் தம்பதிகள்) தொகுதியில் உள்ள வோட்டர்கள் இவ்விருவர்களையும் அஹிம்சா தர்ம முறையில் பகிஷ்காரம் செய்து பொது ஜன வாக்குக்குத் தலைவணங்கும்படி செய்ய வேண்டும்'' எனப் பாமர மக்களைத் தூண்டுகிறது. ஆனால் இந்தக் கந்தல் பத்திரிகைகளின் பூச்சாண்டிக்கு பயப்படுவ தென்றால் தென்னாட்டில் ஒருவருக்குமே உயிர் வாழ முடியாது.

எனவே காங்கிரஸ் "Miscreant" மூலம் யோக்கியர்களுக்குத் துன்ப முண்டாகாமல் பார்த்துக் கொள்வது சர்க்காருடையவும் யோக்கியப் பொறுப்புடையவர்களுடையவும் நீங்காக் கடமையாகும். அஹிம்ஸா முறை பகிஷ்காரத்தினால் காங்கிரஸ் மானம் கொஞ்சம் கூட கெடுமேயன்றி காங்கிரஸ் மதிப்பு உயர்ந்து விடாதென்பதையும் காங்கிரஸ்வாலாக்கள் உணர்ந்திருப்பார்களாக!

நத்தானியேல் தம்பதிகளைக் கண்டிக்கும் காங்கிரஸ் பத்திரிகைகளும் காங்கிரஸ் தலைவர்களும் அவர்களது ராஜிநாமாக் கடிதத்தில் காட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஏன் பதிலளிக்கவில்லை? எந்த அரசியல் கட்சிக்கும் கௌரவமளிக்காத பல விஷயங்கள் அந்த ராஜிநாமாக் கடிதங்களில் அடங்கியிருக்கின்றன. அவைகளை மறுக்க ஏன் இந்தப் பத்திரிகைகளும், தலைவர்களும் முன்வரவில்லை. நான் ஜில்லா போர்டு மெம்பராயிருந்தால் தோழர் அப்துல் ஹக்கீமுக்கே வோட்டுக் கொடுப்பேன் என்று கூறி காங்கிரஸ் கட்சி மெம்பர்களைத் தப்பு வழியில் திருப்பிய தோழர் ராஜகோபாலாச்சாரியாரை இந்தப் பத்திரிகைகளும் தலைவர்களும் ஏன் கண்டிக்க வில்லை? இவ் விஷயத்தில் தோழர் ராஜகோபாலாச்சாரியார் மௌனம் சாதிப்பதேன்? தேச மகா ஜனங்களே இதை நீங்கள் கவனியுங்கள்!

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 17.05.1936**



RangaRakes tamilnavarasam.com

# தற்கால அரசியல்

தலைவரவர்களே! தோழர்களே!!

இன்று தற்கால அரசியல் என்பது பற்றி நான் பேசுவேன் என்று நிகழ்ச்சிக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தற்கால அரசியல் என்பது நீங்கள் எல்லோரும் அறிந்ததேயாகும். அரசியல் என்கின்ற வார்த்தை புதிய வார்த்தை. நம் நாட்டில் முன் காலத்தில் அரசியல் என்கின்ற பிரஸ்தாபம் இருந்ததாக யாரும் சொல்ல முடியாது. அரசியல் என்று பேசுவதே தோஷமான காரியமாகும். ஏனென்றால் இந்துமத வேத ஆதாரப்படி அரசர்கள் கடவுள்களாவார்கள். அதாவது அரசன் விஷ்ணு அம்சம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எவ்வளவோ புராணங்களிலும் அரசர்களின் அநீதிக்காகப் பிரஜைகள் அரசியல் என்று பேர் வைத்து இயக்கம் உண்டாக்கி கிளர்ச்சி செய்ததாக ஒரு வார்த்தையும் காண முடியாது.

ஆதலால் அரசியல் என்கின்ற வார்த்தை மேல் நாட்டில் இருந்து நம் நாட்டிற்கு வந்ததாகும். மேல்நாட்டுக்கார மேதாவி ஒருவரே அரசியல் என்பது வடிகட்டின அயோக்கியர்களின் வயிற்றுப்பிழைப்புக்கு கடைசி மார்க்கம் என்று சொல்லி இருக்கிறார்.

அரசியல் என்கின்ற வார்த்தை எப்படி மேல்நாட்டில் இருந்து இறக்குமதி ஆயிற்றோ அதுபோலவே அரசியல் காரியங்களும் மேல் நாட்டிலிருந்தே இறக்குமதியாகி அந்த காரியங்களே நடந்து வருகின்றன. மற்ற நாட்டு அரசியல் லட்சியம் சுதந்திரம் என்று சொல்லப்பட்டால் நமது நாட்டு அரசியல் லட்சியம் சுயராஜ்யம் என்று சொல்லப்படுகிறது. இதை அயோக்கியத்தனத்துக்கு மேல் அயோக்கியத்தனம் என்றுதான் சொல்ல வேண்டும். அரசியல் என்பதே அயோக்கியத்தனம் என்றால் சுயராஜ்யம் என்பது அதைவிட மோசமானது என்றுதான் சொல்லவேண்டும்.

சுயராஜ்யம் என்ற வார்த்தைக்கு அர்த்தமே இல்லை. மோக்ஷம் என்ற வார்த்தை எப்படி அர்த்தமில்லாமல் வெறும் சூழ்ச்சியும், தந்திரமும் நிறைந்த வார்த்தையோ அதுபோல்தான் சுயராஜ்யம் என்கின்ற வார்த்தையும் இருந்து வருகிறது.

மோக்ஷம் என்கின்ற வார்த்தைக்கு சோம்பேறிகளும் அயோக்கியர்களும் ஆகிய புரோகிதர்கள் என்ன அருத்தம் சொல்லுகிறார்கள்? சுலபத்தில்



மக்கள் ஆசைப்படும்படியாகவும், சுலபத்தில் ஏமாறும்படியாகவும் பார்த்து அதற்கு அர்த்தம் சொல்லுகிறார்கள். அதாவது மோக்ஷத்தில் எல்லாம் தங்கமயமாய் இருக்கும் என்றும் ஊர்வசி முதலிய நல்ல பெண்கள் கிடைப்பார்கள் என்றும், காமதேனுவால் நல்ல ஆகாரம் கிடைக்குமென்றும், கற்பக விருக்ஷத்தால் மற்றும் வேண்டிய போக போக்கிய பொருள்களும் கிடைக்குமென்றும் சொல்லி மக்களுக்கு ஆசையூட்டுகிறார்கள். இந்த ஆசை மனிதனுக்கு ஏற்பட்ட பின்பு புரோகிதர்கள் வெகு சுலபத்தில் அதற்கு மார்க்கம் சொல்லிவிடுகிறார்கள். அதாவது "எனக்கு 4 அணா தக்ஷணை கொடுத்து என் காலில் விழுந்து கால் கழுவின தண்ணீரை சாப்பிட்டால் மோக்ஷத்திற்கு டிக்கட்டு கிடைக்கும்" என்று சொல்லுகிறார்கள். பேராசை பிடித்த முட்டாள்கள் அதுபோலவே நடந்து கொள்வதன் மூலம் புரோகிதர்களின் சோம்பேறிப் பிழைப்பையும் அயோக்கியத்தனத்தையும் ஆதரிக்கிறார்கள்.

அதுபோலவே அரசியல் என்னும் பேரால் வயிறு வளர்க்கும் சோம்பேறி அயோக்கிய அரசியல் புரோகிதர்கள் மக்கள் சுலபத்தில் ஏமாறும்படி சுயராஜ்யத்துக்கு அருத்தம் சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள்.

அதாவது சுயராஜ்யம் ராமராஜ்யம் என்றும், அரிசிபருப்பு சும்மா கிடைக்குமென்றும், பூமிகளுக்கு வரி இருக்காதென்றும், வானத்தில் இருந்து மழை வேண்டும் போதெல்லாம் பெய்யும் என்றும், ரயிலுக்கு சார்ஜ் இருக்கா தென்றும், தபால் தந்தி சும்மா அனுப்பலாம் என்றும் சொல்லுகிறார்கள். இதைக் கேட்கும் பேராசை பிடித்த மூட ஜனங்களும் மடையர்களும் நம்பிவிடுகிறார்கள். இந்த நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட்டு விட்டதை தெரிந்த அரசியல் புரோகிதர்கள் சுலபத்தில் சுயராஜ்யத்துக்கு மார்க்கம் சொல்லி விடுகிறார்கள்.

அதாவது காங்கிரசுக்கு கால் ரூபாய் கொடுத்து கையெழுத்து போட்டுவிட்டால் போதும் என்றும், அதுவும் செய்ய சக்தி அற்றவர்கள் எங்களுக்கு ஓட்டு கொடுத்தால் போதும் என்றும், அதுவே சுயராஜ்யத்திற்கு போகும் டிக்கட் ஆகிவிடும் என்றும் சொல்லி விடுகிறார்கள்.

இதனால்தான் அரசியல் என்பது வடிகட்டின அயோக்கியர்களின் கடசி வயிற்று பிழைப்பு மார்க்கம் என்பது உறுதியாகிறது.

உதாரணமாக இந்தியாவில் அரசியலின் பேரால் காங்கிரசு என்கின்ற ஸ்தாபனம் ஏற்பட்டு 50 வருஷங்கள் ஆயிற்று.

அதனால் ஏற்பட்ட நன்மை என்ன என்பதை யோசித்துப் பாருங்கள். காங்கிரசின் பேரால் மக்கள் ஏமாற்றப்பட்டார்கள், காங்கிரஸ் ஏற்பட்ட பின்பு மக்கள் உழைப்பில் இருந்து அதிக பாகம் வரியாக கொடுக்கப்பட வேண்டியதாயிற்று.



RangaRakes tamilnavarasam.com

அதன்பயனாய் சோம்பேறிகள் அயோக்கியர்கள், பிச்சையெடுத்து வயிறு வளர்த்த பார்ப்பனர்கள் ஆகியவர்கள் பெரும் பெரும் பதவியும் ஆயிரம் பத்தாயிரம் ரூபாய் மாத வருமானங்களும் அடைந்தார்கள் - அடைகிறார்கள் - இன்னும் அடைய முயற்சிக்கிறார்கள் என்பதல்லாமல் 50 வருஷ காங்கிரசால் ஏற்பட்ட பலன் இன்னது என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றேன்.

இதுதான் அரசியலின் பலன் என்றால் அரசியல் என்பது வடிகட்டின அயோக்கியர்கள் வயிற்றுப் பிழைப்பு என்பதில் என்ன தப்பு என்று கேட்கிறேன்.

நிற்க, சுயராஜ்யம் என்பதற்கு மற்றொரு வியாக்கியானம் சொல்லப் படுகிறது. அதாவது இந்தியா அன்னியனால் ஆளப்படுவதால் அது பர ராஜ்யமாய் இருக்கிறது என்று அன்னியராகிய வெள்ளைக்காரனை விரட்டி அடித்துவிட்டால் அதுவே சுயராஜ்யமாகிவிடும் என்றும் சொல்லுகிறார்கள்.

அப்படியானால் இந்தியா அன்னிய ராஜ்யமாய் இல்லாமல் இந்திய மக்களாலேயே ஆளப்பட்ட காலமாகிய ராமன், அரிச்சந்திரன் முதலியவர்களும் சேர, சோழ, பாண்டியன், நாயக்கன் ஆகியவர்களும் ஆண்ட காலத்தில் இல்லாத என்ன அக்கிரமும் கொடுமையும் கஷ்டமும் இழிவும் இந்த வெள்ளைக்கார ஆட்சியால் அதிகமாகி இருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா?

ராமன் காலத்து ஏழைகளும் கூலிகளும், அரிச்சந்திரன் காலத்து பறையனும், பார்ப்பன அயோக்கியத்தனமும், சேர, சோழ, பாண்டியன், காலத்து மனுநீதி ஆட்சியும் தான் இன்று இருக்கிறதே தவிர அதைவிட கொடுமையாக இன்று என்ன இருக்கிறது என்று உங்களைக் கேட்கிறேன்.

இந்திய சுயராஜ்யத்தில் வேதத்தின் விதிப்படி, மனுதர்ம சாஸ்திர நியதிப்படி அவனவன் அவனவன் வருணத்துக்கும் ஜாதிக்கும் தகுந்த தொழிலைச் செய்தாக வேண்டும். ஆனால் வெள்ளைக்கார பர ராஜ்யத்தில் அந்த நிபந்தனை இல்லை. குறைந்து வருகிறது. இதுதான் சுயராஜ்யத்துக்கும், பர ராஜ்யத்துக்கும் வித்தியாசம் என்பதல்லாமல் மற்றபடி வேறு என்ன கெடுதி சொல்லமுடியும்.

பழங்கால சுயராஜ்யத்துக்கு ஒரு பழமொழி உண்டு. **''நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்கு புல் சுமக்கும் வேலை போகாது''** என்பார்கள். இந்தப் பழமொழி பர ராஜ்யத்தில் பறந்தோடிவிட்டது. வெள்ளைக்கார ராஜ்யத்தில் தோழர் எம்.சி. ராஜா அவர்களும், என். சிவராஜு அவர்களும் இன்று வாத்தியார்களாய் மந்திரி சட்டசபை அங்கத்தினர்களாய் இருக்கிறார்கள். மற்றும் அனேக ''தோட்டிகள்'' சாமியார்களாகி விபூதி உத்திராக்ஷ தாரணர்களாகி விட்டார்கள்.

நாளைக்கு மந்திரிகளாய்க்கூட வரப்போகிறார்கள்.

இந்தக் காரியம் சுயராஜ்ய காலத்தில் இருந்ததா அல்லது சுயராஜ்ய காலத்தில் உண்டாகுமா என்று கேட்கிறேன்.



சுயராஜ்ய திட்டமாகிய கராச்சி பிரஜா உரிமை திட்டத்தில் ''ஜாதி மத வருணங்களையும் சாஸ்திர புராணங்களையும் ஜாதி தொழில்களையும் காப்பாற்றப்படும்'' என்று வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. புதிய சுயராஜ்யத்தில் மனிதன் இழிவும் பட்டினியும் நீங்கி சுயமரியாதையுடன் எல்லாரும் வாழ முடியுமா? என்று கேட்கின்றேன்.

காந்தியார் சுயராஜ்யம் வருணாச்சிரம ராமராஜ்யமாகும்.

ஜவஹர்லால் சுயராஜ்யம் யார் மனதையும் புண்படுத்தாத கோமுட்டித் தந்திரமாகும்.

இனி சத்தியமூர்த்தி, ராஜகோபாலாச்சாரியார் சுயராஜ்யத்தைப் பற்றி கேட்கவேண்டுமா?

ஆகவே சுயராஜ்யம் என்பது உள்ளபடியே அயோக்கியர்களும், தந்திரசாலிகளும், சோம்பேறிகளும் ஆதிக்கம் செலுத்தும் ராமராஜ்யமாகுமே யொழிய ஏழை மக்களுக்கும் இழிகுல மக்கள் என்பவர்களுக்கும் கடுகளவு லாபமும் இல்லை என்பதோடு இன்னமும் அதிக துன்பமும் தொல்லையும் உள்ள ராஜ்யமேயாகும்.

ஆகையால் இன்றைய அரசியலையோ சுயராஜ்யத்தையோ நாம் ஒப்புக் கொள்ள முடியாது.

### ஒரு கேள்வி

இந்த சமயத்தில் ஒருவர் ''அப்படியானால் நீங்கள் ஏன் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கிறீர்கள்''? என்று கேட்டார்.

நான் இந்தக் கேள்வியை வரவேற்கிறேன். நானே இதன் காரணத்தை முடிவில் சொல்ல இருந்தேன். இப்போது கேட்டுவிட்டது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகும்.

ஜஸ்டிஸ் கட்சியை நான் ஒரு அரசியல் கட்சியாக மதிக்கவில்லை. அது ஒரு சமுதாய சீர்திருத்தக் கட்சியாகும்.

ஜஸ்டிஸ் கட்சியானது சமூக சுதந்திரத்திற்கு ஆகவே ஆட்சி இன்ன விதமாய் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறதே ஒழிய இன்னார்தான் ஆட்சி புரிய வேண்டும் என்று சொல்லவில்லை.

அன்றியும் ஜஸ்டிஸ் கட்சியானது அரசியல் நிர்வாகத்தில் எல்லா ஜாதியாரும் மதத்தாரும் வகுப்பாரும் விகிதாச்சாரம் ஸ்தானம் வகிக்க வேண்டும் என்று சொல்லுகிறது.

அது வெள்ளைக்காரர்கள் இந்தியாவை விட்டுப்போய் விடவேண்டும் என்றோ, அவர்களுக்கு அரசியலில் சம்மந்தமே கூடாது என்றோ, இந்துவே ஆளவேண்டும் என்றோ, மற்ற ஜாதி மதத்துக்கு விகிதாச்சாரம் பதவி கொடுக்க முடியாது என்றோ சொல்லுவதில்லை.



RangaRakes
tamilnavarasam.com

ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆட்சியில் இன்ன இன்ன முறை இருக்க வேண்டும் என்கின்ற கொள்கைப் பிரச்சினையே ஒழிய இன்னார்தான் ஆளவேண்டும் என்கின்ற நபர் பிரச்சினை கிடையாது.

ஆகையால் நான் ஜஸ்டிஸ் கட்சியை ஒரு சீர்திருத்த இயக்கக்கட்சி என்று கருதுகிறேன். இந்த கொள்கைகளை காங்கிரஸ் ஒப்புக்கொள்ளுகிறதா? என்று கேள்வி கேட்டவர் சொல்லட்டும் என்று கேட்கிறேன்.

நிற்க, காங்கிரஸ் இதுவரை உத்தியோகப் பெருக்கத்துக்கும் பதவி அபகரிப்புக்கும் அல்லாமல் எந்தவித சமூக சீர்திருத்தத்திற்காகவாவது முயற்சி செய்கிறதா? அல்லது முயற்சி செய்தவர்களையாவது ஆதரித்து இருக்கிறதா? என்று கேட்கிறேன்.

சகலவித சீர்திருத்தத்திற்கும் காந்தி முதல் சத்தியமூர்த்தி வரை காங்கிரஸ் தலைவர்கள் முட்டுக்கட்டை போட்டே வந்திருக்கிறார்கள்.

குழந்தைகளைக் கல்யாணம் செய்ய வேண்டாம் என்றால் காங்கிரஸ் காரர்களே முட்டுக்கட்டை போடுவது விபசாரித்தனத்துக்கு என்று ஒரு ஜாதியும் அதை ஆதரிக்க ஒரு ஸ்தாபனமும் வேண்டாம் என்றால் அதற்கும் காங்கிரஸ்காரர்களே முட்டுக்கட்டை போடுவது.

கோவில்களை எல்லா ஜாதியாருக்கும் திறந்துவிட சட்டம் கொண்டு வந்தால் அதற்கும் காங்கிரசுக்காரர்களே முட்டுக்கட்டை ஆகிய இடையூறுகள் செய்து வந்திருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு அரசியல் ஸ்தாபனங்களில் இடம் இருக்கும்படி பிரிக்க வேண்டும் என்றால் அதற்கும் காங்கிரசுக்காரர்களே முட்டுக்கட்டை.

இம்மாதிரி எவ்வித சமூக சீர்திருத்தத்திற்கும் காங்கிரஸ் முட்டுக் கட்டையாகவே இருந்து வருகிறது. இதன் காரணம் என்ன? பார்ப்பனர்களின் உயர்வும் ஏக போக ஆதிக்கமும் போய்விடும் என்கின்ற பயமே.

ஆனால் ஜஸ்டிஸ் இயக்கம் அப்படி இல்லை. இதுவரை சென்னை மாகாணத்தில் ஏற்பட்ட சகலவித சமூக சீர்திருத்த சட்டங்களுக்கும் ஜஸ்டிஸ் கட்சியே காரணமாகவும் ஆதாரமாகவும் இருந்து வந்திருக்கிறது என்று சொல்லுவேன்.

இதுபோல் காங்கிரஸ் ஏதாவது ஒரு சமூக சீர்திருத்த சட்டத்துக்கு ஆதரவளித்தோ ஆதாரமாயிருந்தோ வந்திருக்கிறதா? என்று கேட்கிறேன்.

சமூக சீர்திருத்தமல்லாமல் சமூக சுதந்திரம் பேசப்படும் எவ்வித சுயராஜ்யமும், திருட்டு ராஜ்யம், அயோக்கியர்கள் ராஜ்யம் என்று சொல்லுவேன். அது காந்தியானாலும் ஜவஹர்லால் ஆனாலும் சத்தியமூர்த்தி ஆனாலும் ஒரே யோக்கியதை என்றுதான் சொல்லுவேன்.



இன்றைய அரசியல் நிர்வாகத்தில் இந்திய வைஸ்ராயாக லின்லித்கோ பிரபு போய் சத்தியமூர்த்தி வந்தால் என்ன? வில்லிங்டன் பிரபுபோய் காந்தியார் வந்தால் என்ன? இர்வின் பிரபு போய் ஜவஹர்லால் வந்தால் என்ன?

யார் வந்தாலும் நமக்கென்ன கவலை. பிராமணன் என்கின்ற ஒரு சோம்பேறி ஜாதியும், பறையன் என்கின்ற ஒரு பாட்டாளி ஜாதியும் மறைந்து சமமான மனிதர்கள் என்கின்ற ஒரே மனித ஜாதி இருந்து வருமா?

இதற்கு காந்தியோ, சத்தியமூர்த்தியோ, ஜவஹர்லாலோ ஒப்புக் கொள்ளுகிறார்களா என்று கேட்கின்றேன். ஜஸ்டிஸ் கட்சியார் ஒப்புக்கொள்ளு கிறார்கள். ஆகவேதான் காங்கிரசை அரசியல் பித்தலாட்டம் என்கிறேன்.

ஜஸ்டிஸ் கட்சியை சீர்திருத்தக் கட்சி என்கின்றேன்.

இதை ஆட்சேபிக்கிறவர்களை நான் அறைகூவி அழைக்கின்றேன்.

என்போல் உள்ளவர்கள் எங்கள் குடும்ப நிலையை பாழாக்கிக் கொண்டு சொந்தப்பணத்தை செலவு செய்து கொண்டு கட்சியின் பேரால் ஒரு காதொடிந்த ஊசியளவு பயனும் சொந்தத்துக்கு எதிர்பாராமல் ஏன் இந்த மாதிரி கிராமம் கிராமமாய் காயலாவோடு அலைகிறோம் என்பதை சுயநலமற்ற வாலிபர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். கூலிகளைப்பற்றி எனக்குக் கவலையில்லை.

மனித சமூக ஜீவாபிமானம் பிரதானமே ஒழிய பழமையைக் காப்பாற்ற உத்தியோகமும், பதவியும், அதிகாரமும் விரும்பும் அரசியலோ சுயராஜ்யமோ 2000 வருஷத்துக்கு முந்தின நிலைமைக்குப் போகும் தேசீயமோ, தேசபக்தியோ பிரதானமல்ல. அவைகளை ஒழித்தாக வேண்டும்.

வாலிபர்களே! நீங்கள் ஏதாவது மனித சமூகத்துக்கு உழைக்க வேண்டு மானால் பார்ப்பனர்களையும், பறையர்களையும் அடியோடு ஒழியுங்கள். அதுவே உங்களுடைய முக்கியமானதும் முதன்மையானதுமான வேலை.

பார்ப்பனர்களும் பறையர்களும் ஒழிந்தால் சூத்திரர்கள் தானாக ஒழிந்து விடுவார்கள். ஒரு சிறு பார்ப்பன பூண்டு இருந்தாலும் பறையனும் சூத்திரனும் இருந்துதான் இருப்பான்.

சுயமரியாதை இயக்கத்தின் முதல் வேலை பார்ப்பான் என்று ஒருவனும், பறையன் என்று ஒருவனும் இருக்கக்கூடாது என்பதே. அதுதான் எங்கள் சுயராஜ்யம், அதுதான் எங்கள் அரசியல், அதுதான் எங்கள் மூச்சு என்பதை உணருங்கள். அது இல்லாத மற்றதெல்லாம் அயோக்கியர்கள், வஞ்சகர்கள், மனித சமூகத் துரோகிகள் வாழ்க்கை என்று கருதுங்கள். சுய மரியாதைக் காரருக்கு ஜஸ்டிஸ் கட்சி ஒரு நல்ல ஆயுதமாகும். அதை உபயோகித்துக் கொள்ள யெவரும் தவறிவிடக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



RangaRakes
tamilnavarasam.com

அரசியல் சுயராஜ்யத்தை விட சமூக சுயராஜ்யம் ஆயிரம் மடங்கு மேலானது. இதில் புரட்டு பித்தலாட்டமில்லை, இதில் சுயநலம் இல்லை. ஏழை மக்கள் நலமும், ''இழி மக்கள்'' விடுதலையுமேயாகும்.

குறிப்பு: *13.05.1936 ஆம் நாள் இராஜபாளையத்தை அடுத்த தளவாய்புரத்தில் நடைபெற்ற தளவாய்புரம் சீர்திருத்த வாலிப சங்கத்தின் முதலாவது ஆண்டு விழாவில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 24.05.1936**



# சேலம் காலித்தனம்

சேலத்தில் 18-5-36ந் தேதியில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் சில காங்கிரஸ் தொண்டர்கள் ஜஸ்டிஸ் கட்சியையும், சுயமரியாதைக் கட்சியையும் ஈனத்தனமாய் வைது பிரசங்கம் செய்ததை சுயமரியாதைக்காரர்கள் பொறுமையுடன் கேட்டுக் கொண்டு நின்றிருக்கிறார்கள்.

அதற்கு காரணம் அத்தொண்டர்கள் மீது குற்றமில்லை என்றும், அவர்களை கூலி கொடுத்து ஏவி விட்டவர்கள் காரணம் என்றும், இந்தியாவின் வறுமை நிலைமையானது இம்மாதிரி இழிவான தொழிலாவது செய்து வயிறு வளர்க்க வேண்டி இருப்பதால் அதைப் பொறுத்துத்தான் ஆக வேண்டும் என்றும் கருதியிருந்ததேயாகும் என்று தெரிகிறது.

ஆனால் அதே மாதிரி தன்மையில் தோழர் சத்தியமூர்த்தி அவர்களும் பேசியதால் அவரை சில தோழர்கள் கேள்வி கேட்க வேண்டியவர்களானார்கள். காரணம் ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க வேண்டும் என்றும், அதன் தலைவர்கள் தேசத் துரோகிகள் என்றும் மற்றும் கேவலமாகவும் பேசியதேயாகும்.

இந்நிலைமையில் தோழர் சத்தியமூர்த்தியோ அல்லது அவர்களது கூலிகளோ ஆண்மையும், சுயமரியாதையும், வீரமும் உடையவர்களானால் கேள்விகளுக்கு தக்க விடையளித்திருக்க வேண்டும். விடையளிக்காவிட்டால் அம்மாதிரியான பேச்சுக்களை பேசாமலாவதிருந்திருக்க வேண்டும்.

அப்படிக்கில்லாமல் கூட்டத்தில் கேட்பவர்களுக்கு கொதிப்பு ஏற்படும்படியாக பேசிவிட்டு கேள்வி கேட்பவர்களை பலாத்காரத்தால் அடக்கிவிடுவது என்று நினைத்துக் கொண்டு காங்கிரஸ்காரர்கள் காரியம் நடத்துவார்களானால் இவர்களது சுயராஜ்யத்தில் உள்ள மோசடியும் துரோகமும் இன்னது என்று தெரிந்து கொள்ள வசதி ஏற்படுவதோடு, அந்த ஸ்தாபனமே அடியோடு மறைந்துபோகும்படி செய்ய ஒவ்வொருவனுக்கும் உரிமை உண்டு என்றே கருதுகிறோம்.

சேலத்தில் முன் இரண்டொருமுறை காங்கிரஸ்காரர்கள் செய்த கலவரத்துக்கு புத்தி கற்பிக்க ஏற்பட்ட சமயங்களில் காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்கள் பஹிரங்கமாக மன்னிப்பு கேட்டுக் கொண்டு தப்பித்துக் கொண்டது யாவரும் அறிந்ததேயாகும். இது போலவே மதுரை, வேலூர் முதலிய இடங்களிலும் காங்கிரஸ்காரர்களின் காலித்தனத்திற்கு புத்தி



RangaRakes tamilnavarasam.com

கற்பிக்க ஏற்பட்ட சமயங்களில் எல்லாம் காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்கள் மன்னிப்பு கேட்டுக் கொண்டதும் யாவரும் அறிந்ததேயாகும். இதே சத்திய மூர்த்தியாரும் ஒரு மன்னிப்பு அறிக்கை விட்டதும் யாவரும் அறிந்ததாகும்.

அப்படி இருக்க இப்போது மறுபடியும் அதே மாதிரி பேசுவதும், கேள்வி கேட்டவர்களைத் தாக்குவதும், காலித்தனம் செய்வது என்பதும் மகா கேவலமான கோழைத்தனமும் அயோக்கியத்தனமுமான காரியமுமாகும்.

காங்கிரஸ்காரர்கள் முன்னைய காலித்தனங்களின் போது மன்னிப்பு கேட்டுக்கொண்டிருக்கவில்லையானால் கேள்வி கேட்பவர்கள் ஜாக்கிரதை யுடனேயே வந்து கேள்வி கேட்டிருப்பார்கள்.

அப்படிக்கில்லாமல் இனி அப்படிச் செய்யமாட்டோம் என்று வாக்குறுதி கொடுத்து செய்ததற்காக வருத்தமும் தெரிவித்துக்கொண்டதால் இவர்கள் யோக்கியர்கள், சொன்னபடி நடந்து கொள்வார்கள் என்று கருதி ஜாக்கிரதையில்லாமலே வந்துவிட்டார்கள். இந்த நிலைமையை உணர்ந்த பேடிகள் கேள்விக்கு பதில் பலாத்காரம் தான் என்பதைக் காட்டிக் கொண்டார்கள். நாம் இதற்கு ஆக சிறிதும் வருத்தப்படவில்லை. கொள்கையில் நாணயத்தில் பலம் இல்லாமல் காலிகளின் உதவியால் அயோக்கிய பிரசாரம் எத்தனை நாளைக்கு நடக்கும் என்பது நமக்குத் தெரியும். பலாத்காரத்தால் வெற்றிபெற்றுவிடக்கூடுமானால் அது பார்ப்பனரல்லாதாருக்குத்தான் முடியும். பார்ப்பனரால் ஒருநாளும் முடியாது. கூலிகளுக்கு ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஒரு நாளைக்குப் புத்தி வந்துவிடும் என்பதை நாம் அனுபவத்தில் பார்க்கிறோம்.

ஆனால் காங்கிரசுக்காரர்களின் யோக்கியதையை சுயமரியாதைக்காரர்கள் உணர்ந்து இருந்தும் அவர்களது மன்னிப்பு வேண்டுகோளையும் வாக்குத் தத்தத்தையும் நம்பினதுதான் பைத்தியக்காரத்தனமாக ஆகிவிட்டது என்று கருத வேண்டியிருக்கிறது.

**சுதேசமித்திரன்**

சேலம் கூட்ட நடவடிக்கையைப்பற்றி மே மாதம் 20ந் தேதி சுதேசமித்திரன் பத்திரிகையில் ''நமது நிருபர்'' பேரால் வெளியிடப் பட்டிருக்கும் சேதியில் அதாவது 6வது பக்கம் 4வது கலம் கடசி வாக்கியத்தில்,

''சீமான் சத்தியமூர்த்தி பேசி முடிந்ததும் அக்கிராசனர் பேச ஆரம்பித்ததும் ஸ்ரீமான் சித்தய்யன் என்ற சுயமரியாதைக்காரர் ஒருவர் சில கேள்விகள் கேட்க எழுந்தார். அச்சமயம் 9-45 மணி இருக்கும். இவ்வளவு நேரத்துக்கு பின் கேள்விகேட்டு கூட்டத்தை இன்னும் நீடிப்பதை ஜனங்கள் ஆதரிக்கவில்லை. அச்சமயம் கூச்சல் ஏற்பட்டதைக்கண்டு அக்கிராசனர் கூட்டத்தை கலைத்துவிட்டார்.



கூட்டம் முடிந்ததும் சிலர் சீமான் சித்தையனையும் இன்னும் சிலரையும் தாக்கி அடித்தார்கள். போலீஸ்காரர்கள் வந்து இவர்களை வெளியேற்றி வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள்.

**வெளியேற்றிய போலீஸ்காரர்களுக்கும் சில இடங்களில் அடி விழுந்தது''** என்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

**தினமணி**

மற்றும் 20-5-36 தேதி தினமணி 2ம் பக்கம் 4வது கலம் மத்தியில் ''சத்தியமூர்த்திக்குக் கேள்விகளடங்கிய கடிதம் கொடுக்கப்பட்டது. தலைவர் கேள்வி கேட்பவனை மேடைக்கு வரும்படி அழைத்தார். **அவரை பலமாகத் தாக்கினார்கள்''** என்று எழுதி இருக்கிறது.

இதிலிருந்து என்ன விளங்குகிறது என்பதை வாசகர்கள் அறிய வேண்டுகிறோம்.

அதாவது காங்கிரஸ்காரர்கள் ஜஸ்டிஸ் கட்சியையும், சுயமரியாதைக் கட்சியையும் பற்றி பொய்யும் புளுகும் கூறி வசைபாடும் போதெல்லாம் பொறுமையாகவே கேட்டுக் கொண்டிருந்து யாதொரு கலவரமும் இல்லாமல் கூட்ட முடிவில் கேள்விகளை எழுதிக்கொடுத்து கேட்டு இருக்கிறார்கள் என்பதும், அதற்கு பதில் சொல்லாமல் கூட்டத்தை அக்கிராசனர் முடிவுரை கூட கூறாமல் முடித்துவிட்டு பலாத்காரத்தில் ஆரம்பித்துவிட்டார்கள் என்பதும் நன்றாய் புலப்படுகிறதா இல்லையா என்று கேட்கிறோம்.

ஆகவே தோழர் சித்தய்யனை வேண்டுமென்றே கெட்ட எண்ணத்தோடு மேடைக்கு அழைத்து அடித்து இருக்கிறார்கள் என்பது நன்றாய் விளங்குகிறது. இது ஆண்மையுள்ள மனிதர்கள் செய்யும் காரியமா? பேடி நாய்கள் செய்யும் காரியமா? என்பதை யோசிக்கும்படியும் இதை அனுமதித்த தலைவர் சத்தியமூர்த்தியார் எவ்வித தண்டனைக்கு யோக்கியதை உடையவராவார் என்பதையும் யோசித்துப் பார்க்கும்படி விரும்புகிறோம்.

இதற்கு முன்னும் இப்படி நடந்த பல செய்கைகளை நாம் பார்த்த பிறகே **''காலித்தனமும் பலாத்காரமும் காங்கிரஸ் கூலிகளுக்கு மாத்திரம் சொந்தமல்ல''** என்று எழுதி இருந்தோம். அதன் பிறகே காங்கிரஸ் மன்னிப்பு கேட்டுக் கொண்டதும் தோழர் சத்தியமூர்த்தி மேடையேறிப் பேச சவுகரியமும் ஏற்பட்டதுமாகும்.

ஆனால் அது காங்கிரஸ்காரர்களுக்கு உடனே மறந்து போய்விட்டது. இனியொரு தரமும் காலித்தனமும் பலாத்காரமும் காங்கிரசுக்காரர்களுக்கு மாத்திரம் சொந்தமல்ல என்று காட்டினால் தான் அவர்களுக்கு புத்திவரும் என்கின்ற நிலையை சேலத்தில் சத்தியமூர்த்தியார் கொண்டுவந்து விட்டுவிட்டார்.



RangaRakes tamilnavarasam.com

சேலம் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமலோ, அல்லது இனி சுயமரியாதைக் கட்சியையும், ஜஸ்டிஸ் கக்ஷியையும் பற்றி பேசிக்கொண்டோ இருக்கும்படியாக தோழர் சத்தியமூர்த்தியாரை அனுமதிக்கக்கூடாது என்றுதான் கருதவேண்டி இருக்கிறது.

பலாத்காரம் ஏற்பட்டாலும் அடிதடி நடந்தாலும் சத்தியமூர்த்தியாருக்கு ஒன்றும் ஏற்பட்டு விடாது என்றும், அவர் ஓடிவிடுவார் என்றும் அவர் மீது ஒரு அடி கூட படாது என்றும் நம்மவர்களே,,....... பார்ப்பனரல்லாத வாலிபர்களேதான் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு சாகவேண்டிவரும் என்றும் நமக்குத் தெரியும்.

இம்மாதிரி கஷ்ட நிலையை பார்ப்பனர்கள் உண்டாக்கிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். இதனாலேயே பொதுமக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். நாம் ஆரம்ப முதல் பலாத்காரம் கூடாது என்றும், கூட்டங்களில் குழப்பம் கூடாது என்றும், நம் கட்சியைப்பற்றி பேசும் சமயங்களில் மாத்திரம் அதுவும் கூட்டம் முடிவில் கேள்வி கேட்கலாம் என்றும் எழுதி வருகிறோம்.

அந்தப்படியே சுயமரியாதைத் தோழர்கள் நடந்து வருகிறார்கள். அப்படி இருந்தும் காங்கிரசுக்காரர்கள் பலாத்காரம் செய்தால் இனி நாம் என்ன செய்வது? பலாத்காரத்துக்கு அதுவும் பார்ப்பன கூலிகளின் பலாத்காரத்துக்கு வெற்றி ஏற்படும்படி விட்டுவிட்டு ஓடிப்போவதா? அல்லது இனி இப்படி நடவாதபடி அவர்களுக்குப் புத்தி கற்பிப்பதா? என்பதே முக்கிய பிரச்சினையாக ஆகிவிட்டது.

பொதுவாக சர்க்கார் இம்மாதிரி விஷயங்களில் தலையிட்டு இப்படிப் பட்டக் காரியங்கள் நடக்காதபடி தகுந்த எச்சரிக்கையான காரியங்கள் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். இதைப்பற்றிப் பலதடவை எழுதியிருக்கிறோம்.

இது விஷயத்தில் சர்க்கார் பொறுப்பற்றவர்களாய் போய்விட்டதால் புதுச்சேரி மாதிரி கையில் வலுத்தவன் காரியமாக ஆக இடம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். கையில் வலுத்தவன் காரியம் என்று ஆகுமானால் பார்ப்பனப் பூண்டு சித்திரத்தில் கூட இருப்பதற்கு அருகதையற்றதாகிவிடும் என்பதைப் பட்டவர்த்தனமாகச் சொல்லுவோம்.

போலீஸ் நீதி முதலிய இலாக்காக்களில் பார்ப்பன ஆதிக்கம் தலை சிறந்து விளங்குவதாலும், பார்ப்பனரல்லாத அந்த இலாக்காத் தலைவர்கள் நாட்களையும், பணங்களையும் எண்ணுகிற வேலையிலேயே ஈடுபட்டு இருப்பதாலும் பதிலுக்கு பதில் செய்யும் கைபலம் பயன்படாமல் போனாலும் போகலாம் என்று சிலர் கருதலாம். ஆனாலும் பார்ப்பனரல்லாதார் இதையே ஒரு பிரச்சினையாகக் கொண்டு விட்டால் கண்டிப்பாகப் பார்ப்பனப்பூண்டு மறைந்துவிடும் என்று பந்தயங் கூறுவோம்.



சகல மக்களுக்கும் சம நியாயம் வழங்க வேண்டும் என்று கருதுகின்ற நாம் சுயநலத்திற்கும் தன்னல ஆதிக்கத்திற்கும் பங்கம் வரும் என்று கருதுகின்ற மக்களால் ஏமாற்றப்படும் தொல்லையை சமாளித்துத்தான் ஆகவேண்டும் என்றும், அவர்கள் தொல்லை கொடுப்பது இயற்கைதான் என்றும் நாம் கருதுவதாலேயே இவைகளை சகித்துக்கொண்டே வருகிறோம்.

தோழர் ஈ.வெ. ராமசாமி எந்தக் கூட்டத்திற்கு சென்றிருந்தபோதும் அவரைக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் அளித்தே வந்திருக்கிறார். கேள்விகளை வரவேற்று பதில் சொல்லியே கூட்டங்கள் ஒழுங்காய் முடிவு பெற்றிருக்கின்றன.

''மடியில் கனமிருந்தாலொழிய வழியில் பயப்பட வேண்டிய அவசியமில்லை'' என்பது போல் யோக்கியமாக உண்மை நிலையை பேசுகிறவர்கள் எந்தக் கேள்விக்கும் பயப்பட வேண்டியதில்லை. பாமர மக்களை ஏமாற்றக் கருதி கண்டபடி உளறுகிறவர்களும் பொறுப்பில்லாமல் முட்டாள் தனமாய் பேசுகிறவர்களுமேதான் கேள்விக்குப் பயந்து கோழைகளாய் பேடித்தனமாக கூட்டத்தை முடித்துக் கொண்டு ஓடுவதும் பலாத்காரம் செய்வதுமான காரியத்தில் இறங்குவார்கள். எப்படி இருந்தாலும் இதன்பயனை காங்கிரஸ் தலைவர்கள் அனுபவித்துத்தான் தீருவார்கள்.

**குடி அரசு - தலையங்கம் - 24.05.1936**



RangaRakes tamilnavarasam.com

# சேலத்தில் சத்திய மூர்த்தியார் சவடால்

பதவி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைப்பற்றித் தோழர் சத்திய மூர்த்தி சேலம் மகாநாட்டில் பேசிவருகையில் ''பண்டித ஜவஹர்லால் சொல்லுவதை நான் ஆதாரமாய் எடுத்துக்கொள்ள முடியாது'' ''காந்தி அபிப்பிராயம் என்ன என்பது எனக்குத் தெரியாது'' ''ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்கு ஆக சிறை செல்லத் தயாராய் இருக்கிறேன்'' ''மந்திரி ஆகி மேட்டூர் தண்ணீரை சேலத்துக்கு கொண்டுவர வேண்டும்'' என்று பேசி இருக்கிறார். இது 20-5-36ம் தமிழ்நாடுவில் இருக்கிறது.

ஜஸ்டிஸ் கட்சி ஒழிவதற்கு ஆக ஒரு பார்ப்பனர் சிறை செல்லுவதாய் இருந்தால் பார்ப்பனப்பூண்டு ஒழிவதற்கு ஆக எத்தனை பார்ப்பனரல்லாத மக்கள் சிறைச் செல்லத் தயாராய் இருப்பார்கள் என்பதை சத்தியமூர்த்தி சாஸ்திரியார் அறியார் போலும்.

பார்ப்பன ஆதிக்கமானது மனித சமூகத்துக்கு சிறப்பாக பார்ப்பன ரல்லாத சமூகத்துக்கு செய்துவந்த கொடுமைக்கும் துரோகத்துக்கும் நிவர்த்திக்காக ஆயிரக்கணக்கான பார்ப்பன மக்கள் ஜெயிலுக்குப் போவது மாத்திரமல்லாமல் தூக்கு மேடைக்கு போனாலும் தகும் என்றும் தகுதியான காரியம் என்றும் சொல்லலாம்.

ஆனால் பார்ப்பனரல்லாத சமூகம் யோக்கியப் பொறுப்பும், பொறுமையும், சமத்துவ உணர்ச்சியும் கொண்டதாய் இருப்பதால் அதன் தலைவர்கள் மக்களுக்கு அப்படிப்பட்ட அபிப்பிராயம் உதிக்கவே முடியாமல் செய்து வருகிறார்கள். இதை அனுகூலமாகக் கொண்டு சில பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் இயக்கம் பேடித்தனமான இயக்கம் என்று கருதிக் கொண்டு தங்கள் கொடுமையையும் சூழ்ச்சியையும் மேலும் மேலும் காட்டி வருகிறார்கள். பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு.

இனிவரும் பார்ப்பனரல்லாதார் சமூக வாலிபர்களுக்கு பலாத்காரத்தில் இறங்கவும் பார்ப்பனர்களை ஒழிப்பதற்காகத் தூக்குமேடை செல்லுவதை அவசியமாகக் கருதவும் தோழர் சத்தியமூர்த்தியாரே எடுத்துக்காட்டி வழிகாட்டுகிறார் என்றே கருதவேண்டி இருக்கிறது.

ஜஸ்டிஸ் கட்சிக்கும் சத்தியமூர்த்தியார் கொள்கைக்கும் என்ன வித்தியாசம் என்று ஒரு விரலையாவது சுட்டிக் காட்டுவாரா?



மேலே காட்டப்பட்டபடி ஜவஹர்லால் கொள்கையை ஒப்புக் கொள்ளாதவர், காந்தியாரின் கொள்கை இன்னதென்றே தெரியாதவர், ஜெயிலுக்குப் போவதும், ஒத்துழையாமையும் சட்டமறுப்பும் கூடாது என்பவர், மந்திரி ஆகி மேட்டூர் தண்ணீரை சேலத்துக்கு கொண்டு வரவேண்டும் அதற்கு ஆக மந்திரி பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் சொல்லுகிறவர் ஆகியவர்க்கு ஜஸ்டிஸ் கட்சி கொள்கையில் எது விரோதம்? எதற்கு ஆக ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க வேண்டும்? என்று கேட்கிறோம்.

ஆகவே சத்தியமூர்த்தியாருக்கும் ஜஸ்டிஸ் கட்சியாருக்கும் உள்ள வித்தியாசம் எல்லாம் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பேதம் தவிர பார்ப்பனர்கள் - பிராமணர்கள் கடவுள் முகத்தில் பிறந்தவர்கள், பார்ப்பனரல்லாதார் - சூத்திரர்கள் கடவுளின் பாதத்தில் பிறந்தவர்கள் தீண்டாதார் ஜாதியார்கள் சண்டாளர்கள் என்பதல்லாமல் வேறு என்ன வித்தியாசம் என்று கேட்கின்றோம்.

சுயமரியாதை அற்ற பார்ப்பனரல்லாத வாலிபர்களுக்கும் பார்ப்பனர்களுக்கு கூலியாய் இருந்து தங்களது சமூகத்தைக் காட்டிக்கொடுத்து மானத்தை விட்டுக்கொடுக்கும் வாலிபர்களுக்கும் எதை விட்டுக்கொடுத்தாவது அதிகாரமும் பதவியும் சம்பாதிக்க வேண்டும் என்பவர்களுக்கும் வேண்டு மானால் சத்தியமூர்த்திக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும் பெரிய வித்தியாசமிருப்பதாக தோன்றலாம். ஆனால் சுத்த ரத்த ஓட்டமுள்ள சுயமரியாதை வாலிபர்களை நாம் இன்னம் ஒருமுறை கேட்கின்றோம். சத்தியமூர்த்திக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் என்ன வித்தியாசம் என்றும், எதற்காக ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க சத்தியமூர்த்தியார் ஜெயிலுக்கு போகவேண்டுமென்றும் யோசித்து பார்க்கும்படியும் அதற்கு யோக்கியமான சுயமரியாதை உள்ள பார்ப்பனரல்லாத வாலிபர்கள் என்ன பதில் செய்யவேண்டுமென்றும் கேட்கிறோம். ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்கு ஜெயிலுக்கு போவதென்றால் பலாத்காரம் செய்துவிட்டு ஜெயிலுக்குப் போவதாகத்தானே அருத்தம்.

தேர்தல் சமீபம் ஆக ஆக சத்தியமூர்த்திக்கு மூளைக் கொதிப்பு அதிகமாகின்றது. கூலிகளுக்கு அதிக உற்சாக மூட்டுகிறார். தலை, கால், கண் தெரியாமல் நடந்து கொள்ளுகிறார்கள். எப்படியானாலும் இதன் பயனையும் அனுபவிப்பார்கள் என்பதில் நமக்கு சந்தேகமில்லை.

குடி அரசு - துணைத் தலையங்கம் - 24.05.1936



RangaRakes tamilnavarasam.com

# தலைவர்களுக்கு புத்தி வருமா?

சென்னை கார்ப்பரேஷன் கௌன்சிலர் தோழர் எம். சுந்தரம் நாயுடு ஜஸ்டிஸ் கட்சியை விட்டுப் பிரிந்து விட்டதாகத் தெரிய வருகிறது. பிரிவதற்குள்ள காரணத்தை விளக்கி அவர் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:-

''ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பித்தது முதல் நான் அதில் அங்கத்தினராக இருந்து வந்திருக்கிறேன். கௌன்சில் வேலையைத் தவிர்த்து அதை (கட்சியை) ஒழுங்குபடுத்துவதற்கோ நல்ல தேசீய வழிகளில் அதைத் திருப்புவதற்கோ அதன் தலைவர்கள் கொஞ்சம் கூட இஷ்டப்படுவதாகத் தோன்றவில்லை. நகரத்தில் ஆதரிப்பவர்களோடோ அல்லது மற்ற இடங்களில் தங்களை ஆதரிப்பவர்களோடோ அவர்கள் சம்பந்தம் ஒன்றும் வைத்துக் கொள்வதில்லை. முக்கியமான தீர்மானங்களைச் செய்வதிலும் அவர்கள் கலப்பதில்லை. ஒரு அரசியல் கட்சி முறையில் யதார்த்தமாக வேலை செய்வதை அது நிறுத்திவிட்டது''.

தோழர் சுந்தரம் நாயுடு கூறியிருக்கும் மேல்காட்டிய அபிப்பிராயங்கள் முற்றிலும் சரியானவைகளாகும். ஜஸ்டிஸ் கட்சியின் தற்கால நிலைமையை படம் பிடித்ததுபோல் அவர் விளக்கிக் காட்டியிருக்கிறார். சென்ற அசம்பிளித் தேர்தல் காலத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்காக அந்தரங்க சுத்தியாக வேலை செய்த இரண்டொருவரில் தோழர் சுந்தரம் நாயுடுவும் ஒருவர். அவருக்கே கட்சி மீது இப்பொழுது வெறுப்புத் தோன்றியிருக்க வேண்டுமானால் அதற்கு ஜவாப்தாரிகள் கட்சித் தலைவர்களேயாகும். சென்னை நகர சபைக்கு சமீபத்தில் தேர்தல் நடைபெறப்போகிறது. காங்கிரஸ் கட்சியார் இப்பொழுதே வேலை செய்யத் தொடங்கிவிட்டார்கள். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களோ உண்பதும் உறங்குவதுமே போதுமென்று திருப்தி யடைந்திருக்கிறார்கள். கட்சியைப் பற்றிய சிந்தனையே அவர்களுக்கு இல்லை. சென்னை அசம்பிளிக்கு இப்பொழுது வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டு வருகிறார்கள். சென்னையிலும் வெளியூர்களிலும் வாக்காளர் பதிவு விஷயத்தில் காங்கிரஸ்காரர் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். சென்னையிலே காங்கிரஸ் தொண்டர்கள் முயற்சியினால் பிரதிதினமும் நூற்றுக்கணக்கான வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டு வருகிறார்களாம். ஜஸ்டிஸ் கட்சியாரோ ஒன்றும் செய்யவில்லை. மத்திய பிரசாரக் கமிட்டிக் காரியதரிசி தோழர் மதனகோபால நாயுடு, ஜஸ்டிஸ், விடுதலை பத்திரிகைகளில் வாக்காளர் பதிவு செய்ய வேண்டியதைப்பற்றி இரண்டு அறிக்கைகள் வெளியிட்டு விட்டுச் சும்மா இருக்கிறார். நம்மவர்கள் பூரணமான அரசியல் உணர்ச்சி பெற்றவர்கள் அல்ல. பிறர் தூண்டினாற்றான் அவர்கள் தத்தம் பெயர்களைப் பதிவு செய்ய முன் வருவார்கள். காங்கிரஸ்காரர் வாக்காளர் களுக்குத் தேவையான உதவிகள் எல்லாம் செய்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களோ படே ஆசாமிகள். பக்கத்து வீட்டுக்காரனிடம் பேசமாட்டார்கள். வீடு தேடிச் சென்றாலும் பேட்டி கொடுக்க மாட்டார்கள். இந்தக் காலத்திலே இப்பேர்ப்பட்ட ஆசாமிகளை வைத்துக் கொண்டு எந்தக்கட்சியையாவது நடத்த முடியுமா? இப்பேர்ப்பட்ட உணர்ச்சியற்ற தலைவர்களைக் கொண்ட கட்சியை யார்தான் கட்டி அழுவார்கள்? இப்பொழுது ஜஸ்டிஸ் கட்சி பேரால் சென்னை நகரத்துக்கு மூன்று பிரதிநிதிகள் சென்னைச் சட்டசபையில் வீற்றிருக்கிறார்கள். அவர்களுள் இருவர் கௌன்சில் சிக்கரிட்டரிகள். மாதா மாதம் 500-ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். ஒருவர் கௌன்சில் டிப்டி பிரசிடெண்டு. மாதம் 500-ரூபாய் சம்பளம். கட்சியின் பெயரால் வாங்கும் காசுக்காகவாவது இந்த மும்மூர்த்திகளும் கட்சி முன்னேற்றத்துக்காக சிறிதளவாவது வேலை செய்ய வேண்டாமா? தற்காலமிருப்பது போல் மேலும் அவர்கள் இருந்துகொண்டிருந்திருந்தால் அடுத்த தேர்தலில் அவர்கள் முறியடிக்கப்படுவது திண்ணம், திண்ணம். வேலை செய்யவேண்டிய காலத்து சும்மா இருந்துவிட்டு கடைசி காலத்து கட்சிப்பிரசாரம் செய்வது வீண் பணச்செலவேயாகும். சென்னை நிலைமை மிக மிக மோசமாகவே இருக்கிறது. சென்னையில் முனிசிபல் வார்டுகள் தோறும் ஒவ்வொரு கிளை ஸ்தாபிக்கவும் மெம்பர்கள் சேர்க்கவும் எத்தனையோ முறை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

ஆனால் தீர்மானப்படி ஒன்றுமே நடைபெறவில்லை. தற்கால சட்டசபை மெம்பர்களான டாக்டர் நடேசமுதலியார் தோழர்கள் சுந்தரராவ் நாயுடு, மதனகோபால் நாயுடு ஆகிய மூவரும் வசிக்கும் சேப்பாக்கம், புதுப்பேட்டை, ஜார்ஜ் டௌண் முதலிய பகுதிகளிலாவது கிளைச்சங்கங்கள் உண்டா? தொண்டர்கள் உண்டா? கட்சிப் பிரசாரம் உண்டா? இல்லை, இல்லை. இல்லை யென்றே எல்லாக் கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டியிருக்கிறது. கட்சியின் பேரைச் சொல்லிக்கொண்டு தேர்தல் காலத்து இவர்கள் எவ்வாறு வெளிவரப்போகிறார்களோ தெரியவில்லை. தோழர் சுந்தரம் நாயுடு ராஜிநாமாவைப் பார்த்த பிறகாவது இவர்களுக்கு உணர்ச்சி உண்டாகுமா! புத்தி வருமா?

**குடி அரசு - கட்டுரை - 24.05.1936**


RangaRakes
tamilnavarasam.com

# டாக்டர் அன்சாரி மரணம்

டாக்டர் அன்சாரி பிரிவு பொதுவாக தேசத்துக்கு பெரிய நஷ்டமே. சட்டமறுப்பு மூலம் சுயராஜ்யம் பெற முயல்வது முட்டாள்தனமென உணர்ந்த பின்னரும் நேர் வழியைப் பின்பற்ற காங்கிரஸ் தலைவர்கள் தயங்கிக் கொண்டிருந்தனர். தவறை ஒப்புக்கொள்வது அகௌரவமாகாதென உணர்ந்த டாக்டர் அன்சாரியோ துரபிமானத்துக்குக் கட்டுப்பட்டுப் பின்னடையவில்லை. தைரியமாக முன் வந்து சட்ட மறுப்புக் கொள்கையை மாற்றி சட்டசபை மூலம் வேலை செய்யப் பிரசாரம் செய்தார். காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு ஸ்தாபனத்துக்கும் அவரே காரணம். பார்லிமெண்டரி போர்டின் முதல் தலைவராயிருந்தவரும் அவரே. அசௌக்கியம் காரணமாக அரசியல் வாழ்வைத் துறந்ததாகக் கூறப்பட்டாலும் சுயநலக்காரர் சூழ்ச்சிகளினால் காங்கிரஸ் அலங்கோலப்பட்டு வருவதை யுணர்ந்தே அவர் ஓய்வெடுத்துக் கொண்டிருக்க வேண்டும். வகுப்புத் தீர்ப்பு உடைபடாமலிருப்பதற்கும் அவரே காரணம். காங்கிரஸ் ஹிந்து மெம்பர்கள் வகுப்புத் தீர்ப்பை ஆதரிக்கா விட்டாலும் டாக்டர் அன்சாரிக்குப் பயந்தே நடுநிலைமை வகித்து வருகின்றனர். முஸ்லீம்கள் க்ஷேமத்தை அவர் கண்ணும் கருத்துமாய்க் காப்பாற்றி வந்தார். வகுப்புத் தீர்ப்பை ஹிந்து மகா சபையாரும், வங்காள ஹிந்துக்களும் கட்டுப்பாடாக எதிர்த்து வரும் இக்காலத்து டாக்டர் அன்சாரி மறைந்தது வருந்தத்தக்கதே. அன்னார் சுற்றத்தாருக்கு நமது ஹிருதய பூர்வமான அநுதாபம் உரித்தாகுக!

**குடி அரசு - இரங்கற் செய்தி - 24.05.1936**



# ஈரோடு வர்த்தக குமாஸ்தாக்கள் சங்கம்

தோழர்களே! ஈரோடு வர்த்தகக் குமாஸ்தாக்களின் சங்கத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆசை எனக்கு நிரம்பவுண்டு. நான் எனது 11-வது வயதில் வியாபாரத் தொழிலுக்கு வந்தவன். எனது 42-வது வயதுவரை வியாபாரியாகவே இருந்தேன். ஈரோடு வர்த்தக சங்கம் 1916ம் வருஷம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. அதற்கு முன்பு இருந்தே அதில் தலைவனாக பல வருஷம் இருந்தேன்.

கடைசியாக நான் முனிசிபல் சேர்மென் ஆனதும், காங்கிரசில் சேர்ந்ததும்தான் எனது வியாபாரம் நிறுத்தப்பட்டதற்குக் காரணம். நான் ஏற்றுக்கொண்ட பொதுவேலைகளில் அதிகக் கவனம் செலுத்தியதாலேயே என் சொந்த வேலைகள் கவனிக்கப்படாமல் போய் விட்டன. ஆனபோதிலும் இந்த ஊர் வர்த்தகர்களிடமும் வர்த்தகக் குமாஸ்தாக்களிடமும் எனக்கு மிகவும் பற்றுதலும் மரியாதையும் உண்டு. நான் உள்ளூரிலேயே இருக்க முடியாததாலும் போதிய சாவகாசமில்லாததாலேயும் அடிக்கடி அவர்களுடன் கலந்து கொள்ள முடியாமல் போகிறது.

என்றாலும் இன்று இந்த அதாவது ஈரோடு வர்த்தகர்களும், வர்த்தகக் குமாஸ்தாக்களும் கலந்த இந்தப் பெரிய கூட்டத்தில் கலந்து கொண்டதை நான் ஒரு பெருமையாகவே நினைக்கிறேன். அதிலும் எனது நண்பர் தோழர் வி.வி. ஷண்முகம் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கும் வைபவத்தில் கலந்துகொள்வதில் மிகவும் பெருமையாக மகிழ்ச்சி அடைகிறேன். அவருக்குச் செய்யும் மரியாதையை எனக்குச் செய்வதுபோலவே கருதுகிறேன்.

தோழர் வி.வி.ஷண்முகம் அவர்கள் குடும்பம் எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் மிக்க செல்வந்தர்கள், நல்ல படிப்புள்ளவர்கள், பொது விஷயங்களிலும் ஊக்கமுள்ளவர்கள். ஒரு சகோதரர் பி.ஏ. வாசித்துத் தூத்துக்குடி பர்மை நடத்துகிறார். மற்றொரு சகோதரர் விருதுநகர் சேர்மெனாக இருக்கிறார். மற்றும் அனேக பொதுக்காரியங்களில் உழைக்கிறார். வருஷா வருஷம் இவர்கள் வியாபாரத்தில் ஏராளமான பணம் சம்பாதித்தாலும் பொதுக்காரியங்களில் அதிக ஊக்கம். ஆகையால் அவர்களை நீங்கள் வரவேற்று மரியாதை செய்து அவருடைய உபதேசங்களை பெறமுயற்சித்தது மிகவும் புத்திசாலித்தன காரியமாகும்.



RangaRakes tamilnavarasam.com

நிற்க, என்னுடைய முடிவுரையாகப் பேசுவதில் முக்கிய பாகமாக குமாஸ்தாக்களைப் பற்றிப் பேசுவது பொருத்தமானதென்று நினைக்கிறேன். நான் இந்த ஊரில் பிரபல வியாபாரியாயும், வியாபார சங்கத் தலைவனாகவு மிருந்த காலத்தில் என்னுடைய நெருங்கிய ஆப்தரான நண்பர்கள் குமாஸ்தாக்களாக இருந்தார்களே ஒழிய முதலாளிமார்களல்ல. எனக்காக வேண்டிய காரியங்களெல்லாம் ஈரோட்டிலுள்ள எல்லாக் குமாஸ்தாக் களிடத்திலிருந்தும் அடைந்து வந்தேன். ஆகையால் குமாஸ்தாக்களிடத்தில் எப்பொழுதுமே எனக்கு மதிப்பு அதிகம்.

குமாஸ்தாக்களெனப்படுபவர்கள் யார் என்பதை முதலில் உணர வேண்டும். அவர்கள் வருணாச்சிரம அடிமைகளல்ல. முதலாளிகளின் கூலிகளல்ல. முதலாளிகளின் உற்ற துணைவர்களாவர்கள். அடுத்த நிமிஷத்தில் முதலாளிகளாக வருபவர்கள். எப்படி எம்.ஏ.க்கு கீழ்படி பி.ஏ. இருக்கின்றதோ அதுபோல் முதலாளிக்கு முந்திய படியில் இருப்பவர்கள் குமாஸ்தாக்களேயாவார்கள்.

இப்பொழுது இந்த ஊர் முதலாளிமார்களை எடுத்துக் கொள்ளுங்கள். இதில் 100-க்கு 90 பேர்களுக்கு மேலாகவே குமாஸ்தாக்களாக இருந்தவர்களும் குமாஸ்தாக்களாக இருந்து முதலாளியானவர்களுடைய பிள்ளைகளுமேயாவார்கள். ஆதலால் குமாஸ்தாக்கள் என்பதை யாரும் இழிவாய்க் கருதிவிட முடியாது.

குமாஸ்தாக்களுக்கு மரியாதை ஏற்பட வேண்டுமானால் குமாஸ்தாக்கள் முதலில், தங்களைத் தாங்களே மரியாதை செய்து கொள்ள வேண்டும். தங்களைப்பற்றி தாழ்மையாய் நினைத்துக் கொள்ளக்கூடாது. குமாஸ்தாக்களை கவுரவமாகவும், தாராளமாகவும் முதலாளிமார்கள் நடத்தினால் அதற்குத் தகுந்த லாபமடைவார்கள்.

இந்த நாட்டில் குமாஸ்தாக்களின் நிலைமை மிக மோசமாகத்தானிருக்கிறது. அவர்களுக்கு ஓய்வு கிடையாது. காலை 6 மணிக்கு எழுந்து 7 மணிக்குக் கடைக்குப் போகவும் இரவு 10 மணிக்கு வீடு திரும்பவுமான நிலைமையிலிருக் கிறார்கள். ஒழுங்கான லீவ் கிடையாது. வாழ்க்கையில் பின் வாழ்க்கைக்கு ஒரு பந்தோபஸ்தும் கிடையாது. அவர்களுடைய உத்தியோகத்திற்கும் கால அளவுக்கு ஒரு ஜவாப்தாரித்துவம் கிடையாது. எப்பொழுது வேண்டுமானாலும் முதலாளிமார்கள் குமாஸ்தாக்களை வீட்டுக்கு அனுப்பிவிடலாம். அதற்குக் காரணம் ''வேண்டாமென்றால் வெளியில் போக வேண்டியது தானே'' என்பது தான். இந்த நிலையில் அவர்களுடைய வருமானமோ பெரும்பாலும் சாதாரண மனிதனின் ஜீவியத்திற்கே போதாமலிக்கிறது. இந்தக் காரணங்களிலேயே குமாஸ்தாக்கள் வருணாச்சிரம அடிமைகளாக இருக்க வேண்டியவர்களாகிறார்கள். ஒரு முதலாளி இடத்தில் ஒரு குமாஸ்தா விஸ்வாசத்துடன் 30 வருஷகாலம் உழைத்துவிட்டு வீட்டுக்குப் போவதா யிருந்தால் முதலாளிக்குப் பழைய பாக்கிக்காக பத்திரம் எழுதி கொடுத்துவிட்டு



போகவேண்டி இருப்பதும், அல்லது அதிக பத்துவளியை தள்ளிக் கொடுக்கும்படி கெஞ்சிவிட்டுப் போகவேண்டி இருப்பதும், வீட்டுக்குப்போய் பிள்ளைக்குட்டிகளின் வரும்படியை எதிர்பார்த்து நடைப் பிணங்களாய் இருக்க வேண்டியதாய்த் தான் முடிகிறது.

**சர்க்கார் உத்தியோகம்**

உத்தியோகத்தை விட வர்த்தக குமாஸ்தாக்களாக இருப்பது மேல் என்று தோழர் கேசவலால் சொன்னார். உத்தியோகத்தை இகழ்ச்சியாகவும் பேசினார். நான் அதை ஒப்புக்கொள்ள முடியாததற்கு வருந்துகிறேன்.

மாதம் 100 ரூபாய் சம்பளத்தில் இருக்கும் குமாஸ்தாவை 15 வருஷம் பொறுத்து முதலாளி வீட்டுக்குப் போ என்று சொன்னால் ஏன் என்று கேட்பதற்கு உரிமையில்லை. வேறு இடத்தில் வேலை கிடைக்கும் வரை சாப்பாட்டிற்கும் வழியில்லை.

30 வருஷம் உழைத்த பிறகும் வீட்டுக்குப் போகும் போது வெறுங் கையோடுதான் போக வேண்டும். ஆனால் 8 ரூபாய், 10 ரூபாய் சம்பளமுள்ள சர்க்கார் சேவகரை எடுத்துக் கொள்ளுங்கள். அவன் உத்தியோகத்துக்கு காரண்டியிருக்கிறது. அவன் வேலை செய்து நீங்கிய பின் பென்ஷன் இருக்கிறது. ஜில்லாபோர்டு, முனிசிபாலிட்டி ரயில்வே ஆகியவைகளில் பிராவிடண்ட் பண்டு இருக்கிறது. மேல்நாடுகளிலும் இப்படித்தான். வெள்ளைக்கார வியாபார ஸ்தலங்களிலும் இப்படித்தான். இந்தியாவில்தான் எந்தத் தொழிலுக்கும் தொழிலாளிகளுக்கும் நம்பிக்கையான வாழ்க்கைக்கு இடம் இல்லை. இது மிகவும் கொடுமையான விஷயம்.

**ஓய்வு**

தவிர குமாஸ்தாக்களுக்கு ஓய்வு வேண்டாமா? அநேக குமாஸ்தாக் களுக்கு தங்கள் பிள்ளை குட்டிகளையும், பெண் ஜாதியையும் வெளிச்சத்தில் பகல் காலத்தில் பார்க்கக்கூட நேரம் கிடையாது. பிள்ளைகள் எழுந்திருக்கு முன் கடைக்கு ஓடிவரவேண்டும். பிள்ளைகள் தூங்கின பிறகு வீட்டுக்குப் போகவேண்டும். இப்படித்தான் இருக்கிறது. லீவ் நாட்களும் கிடையாது. இது மிகவும் கொடுமையான - ஜீவஹிம்சையான காரியமாகும்.

மனித சமூகம் உள்ள நேரமெல்லாம் கஞ்சிக்கு ஆகவே உழைக்க வேண்டும் என்பது மிகவும் அவமானகரமும், இழிவுமான காரியமாகும். இது முதலாளிமார்களுக்கும் அரசாங்கத்திற்கும் கூட அநாகரீகமான காட்டு மிராண்டித்தனமான காரியமாகும்.

மேல் நாடுகளில் காலை 9 மணிக்குத் திறந்து 2 மணிக்கு மூடி 4 மணிக்குத் திறந்து 7 மணிக்கு மூடி விடவேண்டும். இது முனிசிபல் சட்டமாகும். இதற்கு விரோதமாய் மருந்து ஷாப்புகளும், ஓட்டல்களும் தவிர வேறு எந்தக் கடை



RangaRakes tamilnavarasam.com

திறந்திருந்தாலும் அக்கடைக்காரர்களை போலீசார்கள் பிராசிகூஷன் செய்து விடுவார்கள். வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை தவறாமல் கடைமூடி விடுவார்கள். குமாஸ்தாக்களுக்கு பிராவிடெண்ட் பண்டு, போனஸ் முதலியவை உண்டு.

இங்கு ஒன்றும் இல்லை. இந்த ஊரில் ஷராப் கடைக்காரர்களும் பல சரக்குக் கடைக்காரர்களும் மாதத்தில் ஒரு நாள் லீவு விடுகிறார்களாம். மண்டிக்கடைக்காரர்கள் இன்னமும் அப்படி செய்யாமல் இருப்பது அவர்களுக்கு அவமானகரமான காரியமாகும்.

குமாஸ்தாக்கள் சங்கம் ரிஜிஸ்டர் செய்ய வேண்டும். வர்த்தகர்கள் சங்கமும் ரிஜிஸ்டர் செய்ய வேண்டும். இருவர்களும் ஒத்து ஒரு ஏற்பாடு செய்யவேண்டும்.

குமாஸ்தாக்கள் குறைகளை கண்டிப்பாய் வியாபாரிகள் கவனிக்க வேண்டும். குமாஸ்தாக்களால்தான் முதலாளிகளாகிறார்கள். அப்படிப் பட்டவர்கள் 30 வருஷம் உழைத்துவிட்டு வீட்டுக்குப் போய் பிள்ளை குட்டிகள் வரும்படியை எதிர்பார்ப்பதும், பிள்ளை இல்லாதவர்கள் பிச்சை எடுக்க வேண்டி வருவதும் முதலாளிகளுக்குத்தான் இழிவாகும். குமாஸ்தாக்கள் கஷ்டத்துக்கு ஒரு கதை சொல்லுவதுண்டு.

**ஒரு கதை**

அதாவது ஒரு முதலாளி தன் மகளை ஒரு குமாஸ்தாவுக்கு கொடுத்தார். அந்த குமாஸ்தா மற்றொரு முதலாளி கடையில் குமாஸ்தாவாக இருந்தார். குமாஸ்தா காலை 6 மணிக்கு எழுந்து கடைக்குப் போவதும் பகல் சாப்பாடு தருவித்துக் கொள்வதும் இரவு 11 மணிக்கு வீட்டுக்கு வருவதும் வந்தவுடன் சாப்பிட்டுவிட்டு தூங்கப்போவதும் பெண்ஜாதியிடம் கொஞ்சவோ குலாவவோ கூட நேரமும் உற்சாகமும் இல்லாமல் இருப்பதுமாயிருந்தான். இதைப்பார்த்த முதலாளி மகள் இதை எப்படி தான் தகப்பனுக்கு தெரிவிப்பது என்று சமயம் பார்த்துக் கொண்டேயிருந்தாள். ஒருநாள் அவர்களது வீட்டுவாசலில் கட்டி இருந்த இரண்டு கன்றுக்குட்டிகள் ஒன்றின் மேல் ஒன்று கால்களைத் தூக்கிப் போட்டு குதித்து முட்டி விளையாடிக் கொண்டிருந்தன. இதைப்பார்த்த அந்த முதலாளி மகள் தகப்பனைக் கூப்பிட்டு அப்பா அப்பா இந்த கன்றுகுட்டிகளுக்கு ஒரு குமாஸ்தா வேலை செய்து வைத்துவிடு, அதன் திமிர் அடங்கிவிடும் என்றாள். இதைக்கேட்ட தகப்பன் யோசிக்கத் தொடங்கி உண்மையை அறிந்து பிறகு தன் குமாஸ்தாக்களையும் ஒழுங்காய் நடத்தி, தன் மருமகனையும் தன்னிடத்தில் வைத்துக்கொண்டான் என்று ஒரு கதை உண்டு. அதுபோல் நம் குமாஸ்தாக்கள் வாழ்க்கை இருந்து வருகிறதை யாரும் மறுக்க முடியாது.

வேலை செய்யும் நேரம் திட்டப்படுத்த வேண்டும். தோட்டிகளுக்குக் கூட வேலை நேர திட்டம் இருக்கிறது.



காலை 8 மணி முதல் மாலை 7 மணிக்குள் வியாபார வேலை தீர்ந்துவிட வேண்டும். 7 மணி அடித்தவுடன் கிளப்புகளுக்கோ, விளையாட்டு மைதானங் களுக்கோ, பார்க்குக்கோ போய்விட வேண்டும். தன் பெண்டு பிள்ளைகளுடன் போய் உலாவவும் விளையாடவும் வசதி செய்து கொள்ள வேண்டும். இது அவசியம் மனித சமூகத்துக்கு செய்ய வேண்டிய கடமையாகும்.

**நாணயம்**

குமாஸ்தாக்கள் நாணயமாய் இருக்கவேண்டும் என்று தோழர் வி.வி.ஷண்முகம் சொன்னார். நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் முதலாளிமார்களும் நாணயமாய் இருக்க வேண்டும். லாபத்தில் பங்கு கொடுக்க வேண்டும். குமாஸ்தாவின் நல்வாழ்க்கையின் பொறுப்பை முதலாளி ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த வழக்கம் முதலாளிகளிடம் இல்லை.

குமாஸ்தா திருடினால்தான் சீக்கிரம் முன்னுக்கு வரமுடிகிறது, பணம் சேர்க்க முடிகிறது. அல்லது முதலாளி டிஸ்மிஸ் செய்த காரணத்தால் வேறு சொந்தத்தில் கடை வைத்து சீக்கிரம் முதலாளியாக முடிகிறது.

அப்படி முதலாளி ஆனவர்கள் இந்த ஊரிலேயே இருக்கிறார்கள். அப்படி இருக்க வெறும் நாணயம் பேசி என்ன பயன்?

முதலாளிகள் நாணயம் எனக்குத்தெரியும். நானும் 30 வருஷ காலம் முதலாளியாய் இருந்தவன். என் தகப்பனார் 50 வருஷ காலம் முதலாளியாய் இருந்தவர். நாங்கள் திருடினது குமாஸ்தாக்கள் பார்த்துக்கொண்டும் உதவி செய்து கொண்டும் தான் இருப்பார்கள். 10 மனு சரக்கை 8 மனு என்று கூட சொல்லியிருக்கிறோம். மூட்டைக் கணக்கில் கூட திருடி இருக்கிறோம். ஒரு வண்டிக்காரன் 10 மூட்டை கொண்டு வந்தால் 8 மூட்டையை அவிழ்த்து கொட்டிவிட்டு 2 மூட்டையை உள்ளே கொண்டுபோய் மறைத்துக்கொண்டு இரண்டு காலிச் சாக்குகளை கொண்டு வந்து போட்டு 10 மூட்டை கொட்டினதாக கணக்குக்காட்டி 10 பைகளை ஒப்புவித்து விடுவோம். இப்படியே எல்லா வியாபாரிகளும் செய்வார்கள். இதனாலேயே கிராம விவசாய குடியானவர்கள் எல்லாம் பாப்பராகி கூலிகளானார்கள். இந்த முதலாளிமார்களிடம் பழகும் குமாஸ்தா எப்படி நாணயமாய் இருப்பான். இந்த திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அது தொழில் முறையாய் விடுகிறது. அதாவது தாசி கற்புப் போலவும், வக்கீல் ஒழுக்கம் போலவும் வியாபாரி நாணயமும் கேள்விக்கு இடமில்லாததாகி விடுகிறது.

அரசியலில் எப்படி அதிக அயோக்கியத்தனமுள்ளவர்களே தலைவர்களாகி விடுகிறார்களோ அதுபோல் அதிகம் திருடத் துணிந்த முதலாளியே பெரிய - கவுரவ - கெட்டிக்கார முதலாளியாகிறான்.

குமாஸ்தா திருடிவிட்டால் கிரிமினல் குற்றவாளி ஆகிவிடுகிறான்.



RangaRakes tamilnavarasam.com

ஆகையால் குமாஸ்தாக்கள் நாணயமாய் இருக்க வேண்டும் என்பதில் அருத்தமே இல்லை. குமாஸ்தாவை முதலாளி நன்மைக்காக முதலாளியே திருடச் சொல்லுகிறான். அத்திருட்டில ஒரு நேர்மையான பங்கு கொடுப்பதாய் இருந்தால் குமாஸ்தாவை திருடாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்ள உரிமை உண்டு.

திருட்டு இன்றைய தனிஉடமை உலகில் உலக சுபாவம். கையில் வலுத்தவனுக்குத்தான் நாணயம் ஒழுக்கம் என்று சொல்லிக்கொள்ள முடியும். இளைத்தவன் குற்றவாளியாகத் தான் இருக்க முடிகிறது.

முதலாளியும் குமாஸ்தாவும் வாழ்க்கைத் துணைவர்கள் போல வாழ வேண்டும். இருவருக்கும் ஒரே நியாயமிருக்க வேண்டும். முதலுக்கு ஆக அதிகப்பங்கு எடுத்துக் கொள்வதை நான் ஆக்ஷேபிக்கவில்லை.

நான் சொல்லுவது புதுமையாகத் தோன்றுமாதலால், அதிதீவிர முறையாகத் தோன்றுமாதலால் குமாஸ்தாமார்கள் அவசரப்படாமல் முதலாளிகளுக்கு இணங்கி படிப்படியாக முன்னேறப் பார்க்க வேண்டும். முதலாளிகளோடு சச்சரவு கூடாது.

நயத்திலும் பிறகு பயத்திலும் காரியம் சாதிக்கப் பார்க்க வேண்டும். முதலாளிகளும் ஒருபடி இறங்கி வந்து குமாஸ்தாக்களுக்கு உதவி செய்ய வேண்டும். என்னால் ஆனதை எப்போதும் குமாஸ்தாக்களுக்கு செய்ய காத்திருக்கிறேன்.

குறிப்பு: *ஈரோட்டில் 22.05.1936 ஆம் நாள் நடைபெற்ற ஈரோடு வர்த்தக குமாஸ்தாக்கள் சங்கக் கூட்டத்தில் ஆற்றிய தலைமையுரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 31.05.1936**



# வெற்றி! வெற்றி!!

வைக்கம் சத்தியாக்கிரகப்போர் கடைசியாக வெற்றி பெற்றுவிட்டது. திருவிதாங்கூரிலுள்ள எல்லாப் பொதுரஸ்தாக்களிலும், சத்திரங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் எல்லா ஜனங்களும் ஜாதி மத வித்தியாசமின்றிப் பிரவேசிக்கலாமென்று திருவிதாங்கூர் மகாராஜா உத்தரவு பிறப்பித்து விட்டதாகத் தெரிகிறது. சமீபகாலத்தில் திருவிதாங்கூரில் எத்தனையோ சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. தேவதாசி ஏற்பாட்டை முதன் முதலில் ஒழித்த பெருமை திருவிதாங்கூர் சமஸ்தானத்துக்கே உரியது. கப்பல் பிரயாணம் செய்த ஜாதி ஹிந்துக்களும் கூட ஆலயங்களில் பிரவேசிக்கக் கூடாது என்றிருந்த தடையும் நீக்கப்பட்டது. நாயர்களுக்கு மட்டும் பிரவேசனமளிக்கப்பட்டு வந்த சர்க்கார் பட்டாளத்தில் எல்லாச் சாதியாரும் சேர அனுமதியளிக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது அவர்ணர்களுக்கு சிவில் உரிமைகளை அளித்திருக்கும் திருவிதாங்கூர் மகாராஜாவைப் பாராட்டுகிறோம்.

**குடி அரசு - பெட்டிச் செய்தி - 31.05.1936**



RangaRakes tamilnavarasam.com

# கொச்சி மதம் மகாநாடு

தலைவரவர்களே! தோழர்களே!!

இன்று இங்கு கூட்டப்பட்டிருக்கும் மதம் மகாநாடு என்பதற்கு என்னையும் அபிப்பிராயம் கூறும்படி அழைத்திருக்கிறீர்கள்.

பல மதங்களைப் பற்றிய பல அபிப்பிராயக்காரர்கள் இப்போது இங்கு தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லிவிட்டார்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு மதத்தைப்பற்றி அதன் தலைவர்களால் உபதேசிக்கப்பட்ட தர்மங்களின் பெருமைகளை உங்களுக்கு விளக்கினார்கள். இந்த நிலையில் நான் பேசுவது உங்களுக்கு அவ்வளவு திருப்தி அளிக்குமோ என்று பயப்படுகிறேன். நான் எந்த மதத்தையும் ஆதரிப்பவனல்ல, எந்த மதத்தைப் பற்றியும் அதிகம் பாடுபட்டுப் படித்தவனுமல்ல. நான் எல்லா மதங்களையும், அந்தந்த மதக்காரர்களின் வாழ்க்கை நிலை மூலம் வெளியிலிருந்து அறிந்து அதைப்பற்றி மாத்திரமே அபிப்பிராயம் கொண்டிருக்கிறவன்.

இப்போது நமக்கு மதத்தைப்பற்றிய கவலையும், மத மகாநாடு கூட்டி யோசிக்க வேண்டிய அவசியமும் எதனால் ஏற்பட்டது? எதற்காக மதத்தைப் பற்றி பேசுகிறோம்? என்பவைகளை முதலில் முடிவு செய்து கொள்ள வேண்டும். நாம் மத மகாநாட்டில் எந்த மதத்தில் மோக்ஷம் சமீபத்தில் இருக்கிறது என்றோ, எந்த மதத்தில் நமது கொடிய அக்கிரமங்கள் சுலபத்தில் மன்னிக்கப்பட்டு விடும் என்றோ, எந்தக் கடவுள் நல்ல கடவுள் என்றோ பார்க்கப்போகிறோமா? அப்படியானால் எனக்கு இங்கு பேச்சே இல்லை. ஏனெனில் எனக்கு மோக்ஷத்திலோ, பாவ மன்னிப்பிலோ, கடவுள் ஆட்சியிலோ சிறிதும் நம்பிக்கை கிடையாது. ஆத்மா என்பதோ, ஜீவன் என்பதோ ஒன்று இருப்பதாக நான் நம்புபவனே அல்ல. அது விஷயத்தில் எல்லா மதமும் ஒன்றுபோல் தான் இருக்கிறது. உலகில் உள்ள சகல மதத்துக்கும் ஒரு சர்வ சக்தியுள்ள கடவுளும், மோட்சமும், நரகமும், ஆத்மாவும், ஜீவனும் உண்டு. பிரார்த்திப்பதின் மூலம் எல்லா மதத்திலும் பாவ மன்னிப்பு உண்டு. இவற்றில் ஒன்று பெரிது மற்றது சிறிது என்று சொல்வதற்கில்லை.

பாவ மன்னிப்பில் இந்துமதமே அதிக மேலான மதமாகும். எவ்வளவு அயோக்கியனானாலும், கொடுமைக்காரனானாலும் ஒரு தடவை ராமா என்றோ, சிவா என்றோ சொல்லிவிட்டால் சகல பாபமும் போய்விடும்



என்று சொல்லப்படுகிறது. அதுகூட வேண்டாம். ஒரு சிடுக்கை சாம்பல் நம்மை அறியாது நம்மீது பட்டிருந்தாலும் போதும். அதைவிட சீக்கிரமாகவும் சுலபமாகவும் மற்ற மதத்தில் பாவ மன்னிப்பு இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆதலால், ஆத்மார்த்தம், பாவமன்னிப்பு என்பதற்காக நமக்கு இப்போது மத விசாரணை தேவையில்லை.

பொதுவாக மதங்கள் யாரால் சிருஷ்டிக்கப் பட்டிருந்தாலும் அதனால் என்ன பலன் இருந்து வந்தாலும் இனி நாம் அவற்றை ஆதரிக்க முடியாது. அதை உண்டாக்கினவர்கள் பெரியவர்களாய், விவேகிகளாய், பரோபகாரிகளாய் இருந்திருக்கலாம். அவர்களிடத்திலும் எனக்கு சண்டையில்லை. அவரவர்கள் அவ்வக்கால நிலைமைக்கு ஏற்றபடி அனுகூலித்தவர்களாய் இருந்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு அவை ஒருவிதத்திலும் பிரயோஜனப்பட மாட்டா.

உலகப் பிரயாணத்தில் அந்தந்த காலத்துக்கு ஏற்ற கால அட்டவணையை (டைம் டேபிள்) பார்க்க வேண்டும். போன மாசத்து ரயில்வே கால அட்டவணையை (டைம் டேபிள்) கொண்டு மணி பார்த்து ரயிலுக்குப் போனால் ரயில் தவறிவிடும். இப்போது மாதத்துக்கு ஒரு கைட் ஏற்படுகிறது.

கிறிஸ்து நாதர் தான் ஆகட்டும், மகமது நபிதான் ஆகட்டும், ஸ்ரீ நாராயண குருஸ்வாமி தானாகட்டும் அந்தந்த காலத்துக்கு அவரவர்கள் சரியானவர்களாயிருக்கலாம்.

எப்போதைக்கும் எந்தெந்த காலத்துக்கும் அவர்கள் தான் வழிகாட்டிகள், அவர்கள் சொன்னதுதான் எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் என்றால் அதை நான் ஒத்துக்கொள்ள முடியாது. காலம் மாறி வருகிறது, அறிவும் ஞானமும் பெருகிவருகிறது. இனியும் அபாரமாய் மாறி வருகிறது. இந்த சமயத்தில் 5000 வருஷம் 2500 வருஷம் 2000 வருஷம் 1500 வருஷம் முந்திய விஷயங்களைப் பார்த்துக்கொண்டு அப்போது இருந்தவர்கள் சொன்னதை கேட்டுக்கொண்டு அவைகளில் எது மேல் எது கீழ் யார் பெரியவர் என்று பார்ப்பது பயனற்ற வேலை.

இந்து மதம் என்பது ஒன்று இல்லையானாலும் அதற்கு ஆக சொல்லப்படும் கொள்கைகள் மகா புராதனமானது. அதைவிட புத்தர் உபதேசம் சிறந்ததாக இருக்க நியாயம் உண்டு. ஐயாயிர வருஷத்து நிலையை விட 2500 வருஷத்து நிலை மேலானது தானே. அதைவிட கிறிஸ்து மதம் 2000 வருஷத்துக்கு முன் ஏற்பட்டது மேலானதாய் இருக்க நியாயமுண்டு. புத்தரை அனுசரித்தே சில கற்பனைகளை கிறிஸ்து அப்போதைக்கு அனுபவ சாத்தியமாய் சொல்லிப் போனார். அதைவிட மகம்மது மதம் 1500 வருஷங்களுக்கு முன் ஏற்பட்டது மேலானதாக இருக்கக்கூடுமல்லவா? மகமது நபி பாலைவன அக்கிரமங்கள் சகிக்க மாட்டாமல் புத்தர் சொன்னதையும் கிறிஸ்து சொன்னதையும் அலசிப்பார்த்து கால தேசத்துக்கு ஏற்ற மாதிரி திருத்தினார். இவர் அவர்கள் இருவரையும் விட மேலானவராய் இருக்கலாம்.



RangaRakes tamilnavarasam.com

கால்நடை வயதுக்கும் கட்டை வண்டி வயதுக்கும் ரயில் மோட்டார் வண்டி வயதுக்கும் ஒன்றுக்கொன்று மேலானதுதான். ஆனால், இன்று ஆகாயக் கப்பல் வயதில் நாம் இருந்து கொண்டு அதற்கு மேலான வழி தேடிக் கொண்டு இருக்கையில் கால்நடை நல்லதா கட்டை வண்டி நல்லதா என்று பார்ப்பது அறிவுடமையாகுமா? அந்தக்காலத்தில் அவர்கள் மேதாவிகளாய் இருந்திருக்கலாம். அந்தக்கால புத்திக்கும் மேதாவித்தனத்துக்கும் தக்கபடி வாழ்க்கைத்திட்டங்கள் ஏற்படுத்தி இருக்கலாம். அவ்வளவோடு அம் மதங்களுக்கும் அம்மதத் தலைவர்களுக்கும் மதிப்புக் கொடுப்பதுதான் சரி.

ஸ்ரீ நாராயண குரு சுவாமி போதனை கூட 1929 வருஷத்தோடு சரி. இப்போது அவர் இறந்து 6, 7 வருஷம் ஆகின்றது. இன்றைக்கும் ஒருவர் வந்து ஸ்ரீ நாராயணகுரு சுவாமி சொன்னபடிதான் நடக்க வேண்டும், அந்த மதம் தான் சிரேஷ்டம் என்றால் அதை என்னால் ஒப்புக்கொள்ளமுடியாது.

அவர் ஒரு ஜாதி, ஒரு மதம், ஒரு கடவுள் இருக்க வேண்டியதுதான் சரி என்று சொல்லிப்போனார். அன்று அதுவும் இந்துக்களுக்குத்தான் அது சரியாய் இருக்கலாம்.

ஏனெனில் பல மதம் பல ஜாதி பல கடவுள்களை உடையவர்களா யிருந்ததால் அவை மாறி ஒன்றாகட்டும் என்று சொல்லியிருக்கலாம்.

இன்று ஜாதியும், மதமும், கடவுளும், அடியோடு போகவேண்டும் என்று பேசிக்கொண்டு இருக்கிற காலத்தில் ஒரு ஜாதிக்கும் ஒரு மதத்துக்கும் ஒரு கடவுளுக்கும் தான் இங்கு என்ன வேலை? ஆதலால் நாராயணகுரு சுவாமி கொள்கையை நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா? இதற்கு ஆக நாராயண குருசுவாமியை குற்றஞ்சொல்லவில்லை. அந்தக் காலத்துக்கு அந்த கைட் செல்லும். இப்போது செல்லாது. அதன்படி பார்த்துப்போனால் ரயில் தவறிப்போகும் என்று தான் சொல்லுகிறேன்.

பல மதக்காரர்களும் இங்கு வந்து பேசியதைப் பார்த்து இரண்டொருவர் பரிகாசம் செய்தார்கள். மதக்காரர்கள் பேசியதில் என்ன தவறு இருக்கிறது?

ஈழவ சமுதாயம் என்பது ஒரு அழகான புத்தியுள்ள பணமுள்ள வாலிப பெண்போல் இருக்கிறது. அது இந்துமதம் என்னும் கொடிய துஷ்ட அயோக்கிய புருஷனால் அடித்து துன்புறுத்தி வெளியில் துரத்தப்பட்டு இப்போது தெருவில் நின்று தியங்குகிறது.

இந்த நிலையில் இப்படிப்பட்ட பெண்ணைப் பார்த்த ஒவ்வொருவரும் ஆசைப்படுகிறார்கள். இது இயற்கைதானே. ஒருவனுடைய பெண் ஜாதியாய் இருக்கும் பெண்ணைப் பார்த்தே மக்கள் ஆசைப்படுகிறார்கள் என்றால் கிடைத்தால் அனுபவிக்கலாம் என்று கருதுகிறார்கள் என்றால் வெளியில் அடித்து துரத்தப்பட்ட நிர்க்கதியான பெண்ணைப் பார்த்து ஒருவர் ஆசைப்படுவதில் என்ன தப்பு இருக்கிறது என்று கேட்கிறேன்.



நான் கிழவனாக 60 வயது கழிந்தவனாக இருந்தாலும் நல்ல புத்தி, பணம், அழகு, வாலிபம் இருந்தால் கவுரவத்திற்காவது நமக்கு பாரியாள் இருக்கட்டும் என்று தோன்றும். இது இயல்புதானே. அதுபோல் 25 லக்ஷம் ஈழவ சமூகம் இந்து மதத்தில் இருந்து வெளிப்பட்டுவிட்டால் அவர்கள் அத்தனைபேரும் நம் நம் மதத்துக்கு வரட்டும் என்று ஒவ்வொரு மதக்காரரும் கருதுவதில் என்ன பிழை இருக்கிறது?

இன்று சீக்கியரும், கிறிஸ்தவரும், மகமதியரும், புத்தரும் தங்கள் தங்கள் மதத்துக்கு வரும்படி கூறுகிறார்கள். நீங்களோ இந்து மதத்தை விட்டு விடுவது என்று தீர்மானித்தும் விட்டீர்கள்.

இனி என்ன செய்வது என்பதை யோசிக்க வேண்டும். உங்களில் சிலர் ஒருமதமும் வேண்டியதில்லை சுயமரியாதைக்காரராய் இருப்போம் என்கிறார்கள். மற்றும் சிலர் கிறிஸ்து மதத்தை ஆதரிக்கிறார்கள். சிலர் முஸ்லீம் மதத்தை ஆதரிக்கிறார்கள். சிலர் பவுத்த மதத்தையும், சிலர் சீக்கிய மதத்தையும் ஆதரிக்கிறார்கள். சிலர் மதம் மாறுவது அவமானம் என்கிறார்கள்.

இவற்றையெல்லாம் அடியோடு சரி என்றோ, தப்பு என்றோ சொல்லி விடமுடியாது. இவைகளை நாம் யோசித்துத்தான் ஆகவேண்டும். அதற்காகத்தான் நாம் இன்று இங்கு கூடி இருக்கிறோம்.

ஒரு மதமும் வேண்டாம் என்பது சரியான பேச்சு. நானும் அந்தக் கருத்துக் கொண்டவன். எனக்கு மதத்திலும், தெய்வத்திலும், தனத்திலும் கூட நம்பிக்கை இல்லை.

ஜாதி, மதம், தெய்வம், தனம் என்கின்ற நான்கு தத்துவமும் அழிந்தாக வேண்டும். அவை அழியாமல் மனித சமூகத்துக்கு சாந்தியும், திருப்தியும், சுகமும் கிடையாது, அந்த நிலை அடைந்துதான் ஆகவேண்டும். அதுவே எனது கொள்கை.

மதம் மக்களுக்கு அபினி (மது) என்றார் ஒரு பெரியார். ஆனால் நான் மதம் மக்களுக்கு விஷம் என்கின்றேன். மதக்காரனுக்கு சுயமரியாதையும் சுய அறிவும் இல்லை. மனிதனின் முற்போக்கையும் ஒற்றுமையையும் தடுத்து நிற்பது மதம். மனிதனுக்கு மற்ற ஜீவன்களைவிட அதிக புத்தி இருந்தும் மனிதன் அடிமையாய் இருப்பதற்குக் காரணம் மதம்.

ஆகையால் நான் எந்த மதத்திற்கும் விரோதிதான். மதங்கள் அழிய வேண்டும் என்கின்ற கருத்துடையவன் தான். ஆனால் இன்றைக்கு ஈழவருக்கு எது சாத்தியம், எது அவசியம், எதற்காக இங்கு கூடியிருக்கிறோம் என்பவைகளை யோசித்து பிறகு நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

ஈழவர்கள் இன்று இந்து மதத்தை விட்டு விட்டதாகத் தீர்மானித்ததும், வேறு மதத்தைப்பற்றி யோசிக்க முன் வந்ததும் ஆத்மார்த்தத்துக்கும் மோக்ஷத்துக்கும் அல்ல. கண்டிப்பாய் அல்ல. அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும்



RangaRakes tamilnavarasam.com

தீண்டாமை என்னும் கொடுமையில் இருந்து நீங்கி மனித சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கேயாகும். இதைப் பொறுத்தவரையில் தான் இப்போது பேசவேண்டும்.

அப்படி வாழ்வதற்கு சுயமரியாதை சமூகமாக மதம் இல்லாமல் ஜாதி இல்லாமல் இருக்கலாம் என்று சிலர் சொல்லுகிறார்கள். தலைவர் அய்யப்பன் அபிப்பிராயமும் அதுவேயாகும். அது சாத்தியமானால் எனக்கும் அதுவே சம்மதம். அது சாத்தியமில்லை என்று காணப்படுவதானால் அதற்கும் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டாமா?

மதம் இல்லாமல் கடவுள் இல்லாமல் ஒரு சமுதாயம் இன்று ரஷ்யாவில்தான் இருக்கிறது. வேறெங்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மற்ற இடங்களில் ஆங்காங்கு எங்கோ ஒன்று இரண்டு பேர் இருக்கலாம். ஆனால் மதம், தெய்வம் இல்லாமல் இருப்பவர்களுக்கு இன்று ரஷ்ய நாட்டைத் தவிர வேறு நாட்டில் சௌகரியம் இருக்காது.

இன்றைய பெரும்பான்மையான நாடுகள் தனி உடைமை நாடுகள். தனி உடமை முறை ஆட்சி உள்ள நாடுகளாகும். தனி உடமை முறையை ஆதரிக்கவே ஆட்சிக்கு மதமும் தெய்வமும் ஆதிக்கப்படுத்தப்பட்டிருக்கிறது. அரசாங்கம் மதத்தையும் தெய்வத்தையும் காப்பாற்றி அதன் அஸ்திவாரத்தின் மீதே ஆட்சி முறை கட்டப்பட்டிருக்கிறது. அதனால் மக்கள் வாழ்க்கை போட்டியில் இருக்கிறது. மனித வாழ்க்கைப் போட்டியில் கலந்து கொள்ளாமல் இருக்க ஈழவ சமுதாயம் ஒட்டுக்கும் சம்மதிக்கும் என்பதாக நான் நினைக்க முடியாது. ஏனெனில் மக்கள் எல்லோருமே தனி உடமைக்காரர்களாய் இருக்கிறார்கள். இன்று மதம் இல்லாதவனுக்கு சட்டசபையில் சாதாரண நிலையில் இடமில்லை. சில உத்தியோகங்கள் கூட இல்லை. ஒன்று இரண்டு இருக்கலாம். கொச்சி ராஜாவோ, திருவாங்கூர் ராஜாவோ கடவுள், மதம் இல்லாதவன் என்றால் பெரிய பாவியாக கருதுவார்கள். மக்களும் அப்படியே கருதுகிறார்கள். இவற்றையெல்லாம் லட்சியம் செய்யாதவர்கள் சுயமரியாதைக்காரர்களாய் இருக்கலாம்.

மதமும், கடவுளும் இல்லாததால் எனக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்பது எனது நிலையை உணர்ந்தவர்களுக்குத்தான் தெரியும். நானும் ஒரு அளவுக்குத் துறவியாயிருக்கத் தயாராயிருப்பதால் தான் முடிகிறது. அதுவும் அடியோடு பச்சையாய்ச் சொல்லிவிட முடிவதில்லை.

இன்னும் என்னைப்பற்றிய ஆதாரங்களில் மதம், ஜாதி, கடவுள் எல்லாம் இருந்து கொண்டு தான் இருக்கிறது. அடியோடு இல்லாமல் செய்வதற்கு வெகுதூரம் வாதாட வேண்டியிருக்கிறது.

இவை ஒருபுறமிருக்க உங்களுக்கு தீண்டாமை கொடுமை ஒழிய வேண்டும். அதற்காகவே இங்கு மதப்பேச்சு பேசுகிறோமே அல்லாமல் மற்றப்படி பகுத்தறிவு தன்மையை உத்தேசித்தோ, சுயமரியாதையை உத்தேசித்தோ, உலகப்பொது நலத்தை உத்தேசித்தோ இப்போது இங்கு பேச வில்லை.

ஆகையால் இந்தப் பிரச்சினையில் யுக்தி வாதத்தையும், பகுத்தறிவையும், சுயமரியாதைக் கொள்கையையும், பொது உடமைத்தத்துவத்தையும் ஒன்றாகப் போட்டு குழப்பக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்று ஈழவர்கள் என்ன செய்தால் அவர்கள் தீண்டப்படக் கூடியவர்கள், தெருவில் நடக்கக்கூடியவர்கள், பள்ளியில் சேர்ந்து படிக்கக் கூடியவர்கள், மற்றவர்களைப் போல் மனிதத்தன்மையுடையவர்கள் ஆவார்கள் என்பதே முக்கிய பிரச்சினை. ஆதலால் அதற்கு ஒரு வழி வேண்டும். இந்து மதத்தை விட்டுவிடுவதாலேயே இன்று மேல்கண்ட நிலைமை ஏற்பட்டு விடாது. சுயமரியாதைக்காரர்கள் ஆகிவிட்டதாலேயே தீண்டாமை, நெருங்காமை போய்விடாது.

ஒரு மதவேஷம் பூண்டால்தான் தீண்டாமையும், தெருவில் நடக்காமையும் ஒழிகிறது. பள்ளிக் கூடங்களில் சேர்த்துக் கொள்ளப்படு கிறது. அதுவும் எல்லா மத வேஷத்துக்கும் ஆவதில்லை. இஸ்லாம் மதவேஷத்துக்குத்தான் இன்று இந்திய நாட்டில் தெருவும் பள்ளிக்கூடமும் திறந்து விடப்படுகிறது. கிறிஸ்தவ மதத்தில் தீண்டாமை இருக்கிறது. சீக்கியமதம் எனக்குத் தெரியாது. இந்த நாட்டில் அதன் செல்வாக்கு எவ்வளவு இருக்க முடியும். பௌத்தமதம் தீண்டாமையை ஒழித்து விடவில்லை. ஆதலால் ஏதாவது ஒரு மதம் வேண்டுமானால், அடியோடு தீண்டாமை ஒழிய வேண்டுமானால் இஸ்லாம் மத வேஷம் போட்டுக் கொள்வது மேல் என்று கருதுகிறேன்.

மத நம்பிக்கைக்காக நான் சொல்ல வரவில்லை. வேறு காரியங்களைப் பொறுத்துப் பார்த்தால் அதிலும் சில அசௌகரியங்கள் இருக்கலாம். என்றாலும் இந்தியாவில் 8 கோடி முஸ்லீம்கள் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் அரேபியா, பாலஸ்தீனம், துருக்கி, ஆப்கானிஸ்தானத்தில் இருந்து வந்தவர்கள் அல்ல. நம்பிக்கை பிரதானமாகி முஸ்லீம்கள் ஆனவர்களும் அல்ல. கால தேச வர்த்தமானத்தால், கட்டாயப்படுத்தப்பட்டு முஸ்லீம்கள் ஆகி இந்த நாட்டில் சமூக சுதந்திரத்தோடு வாழுகிறார்கள்.

கிறிஸ்தவர்களும் அப்படித்தான் என்றாலும் மகமதியரை விட அதிகம் பேர் மனிதத்தன்மை இல்லாமல் கிறிஸ்தவ மதத்தில் வாழ்கிறார்கள். ஏனென்றால் வேஷக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவ மதத்தில் அதிகம் உண்டு. தீண்டாமை அனுசரிக்கிறவர்கள் வேஷக் கிறிஸ்தவர்கள் - சுயநலக் கிறிஸ்தவர்களே ஆவார்கள். தீண்டாமையை அனுபவிக்கும் கிறிஸ்தவர்களும் வேஷக் கிறிஸ்தவர்கள் - சுயமரியாதையற்ற கிறிஸ்தவர்களே ஆவார்கள். கிறிஸ்துவ மதத்தையோ இந்து மதத்தையோ சீர்திருத்தம் செய்து விடலாம் என்று எதிர்பார்க்க முடியாது. மார்ட்டின் லூதர் காரியம் 100க்கு 90 கிறிஸ்தவரிடம் பலிக்கவில்லை.





RangaRakes tamilnavarasam.com

கிறிஸ்தவ மதத்திலும் இந்து மதத்திலும் மதத்தின் பேரால் வயிறு வளர்க்க ஏற்பாடு செய்துகொண்ட சுயநல மக்கள் கூட்டம் உண்டு. அவர்கள் பூண்டு உள்ளவரை அந்த மதங்கள் சீர்திருத்தமடைய முடியாது.

பார்ப்பனர்களும் பாதிரிகளும் மதத்தினால் பெருமை அடைந்து பாடுபடாமல் குடும்பத்தோடு வயிறு வளர்க்கிறவர்கள். இவர்களது பெருமையும் சோம்பேறி வாழ்க்கையும் ஒழிய அவர்கள் சம்மதித்தால் ஒழிய அம் மதங்கள் சீர்திருத்தமடைய முடியாது. ஆனால் இப்போது அவர்கள் சாவு நிலைக்கு சென்றுகொண்டிருக்கிறார்கள். மேல்நாட்டில் மதம் எப்படி இருக்கிறது என்கின்றதை அறிந்தவர்களுக்குத்தான் நான் சொல்வது புரியும். கூலிக்கும் சுயநலத்துக்கும் பிரசாரம் செய்யும் புரோகிதர்களுக்கு இது புரியாது. புரிந்தாலும் அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

ஆதலால் தீண்டாமை ஒழியவும் இன்னமும் காலத்துக்குத் தகுந்த மாதிரி சீர்திருத்தமடையவும் சமூக வாழ்வில் சுயமரியாதையுடனும் வீரத்துடனும் வாழவும் இஸ்லாம் மதவேஷம் எவ்வளவோ மேலானது.

மத தர்மம் உண்மையான மத நம்பிக்கை என்பது அவரவர்கள் இஷ்டத்தைப் பொறுத்தது. அவனவன் பகுத்தறிவை பொறுத்தது. அதில் நான் இப்போது பிரவேசிக்கவில்லை. அன்றியும் ''சகல கஷ்டங்களையும், வாழ்க்கை அசவுகரியங்களையும் சகித்துக்கொண்டு சுயமரியாதையுடன் இருக்கிறேன்'' என்பவர்களையும் நான் வேறு மத வேஷம் போடும்படி சொல்வதில்லை. அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்கள் அப்படியே இருக்கட்டும்.

எப்படியானாலும் இன்று ஒரு விஷயத்தில் அபிப்பிராய பேதமில்லாமல் ஒரு முடிவுக்கு வந்துவிட்டோம். அதாவது இந்து மதம் ஈழவ சமுதாயத்துக்கு கேடான மதம் என்றும், அம்மதத்தில் இனி இருப்பதால் யாதொரு பயனும் இல்லையென்றும், மனிதன் மானத்தோடு மனிதத் தன்மையோடு வாழ முடியாது என்றும், ஆதலால் இந்து மதத்தை விட்டு விலகிவிட வேண்டும் என்றும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டோம். அது வரையில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியே.

இதை நான் 1926-ல் சொல்லி இருக்கிறேன். குடி அரசில் எழுதி இருக்கிறேன். 1926-ல் **''நான் இந்துவாய் இறக்கப் போவதில்லை''** என்று கூட்டத்தில் சபதம் செய்துமிருக்கிறேன். 1922-ல் நான் இந்துமத சாஸ்திரங்களை கொளுத்த வேண்டும் என்று காங்கிரஸ் மேடையிலேயே பேசினேன். 1927-ல் மனுதர்மம் முதலிய சாஸ்திரங்களை கொளுத்தினேன்.

அவைகளையெல்லாம் இப்போது 10-வருஷம் பொறுத்து இந்திய தீண்டாத சமூகத் தலைவர்களும் தீண்டாமைக்கு ஆட்பட்ட சமூகமும் சொல்லி அவற்றை தீர்மான மூலமாக செய்யும் காலம் வந்துவிட்டது.

அதே மாதிரியாக கடவுள் நம்பிக்கையும் சமீப காலத்தில் ஆட்டம் கொடுக்கப் போகின்றது என்கின்ற விஷயத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. பிறகு பணம் தனி உடமை விஷயத்திலும் இந்த கதியே ஏற்படும்.



ஆதலால் பிற்கால வாழ்வில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் மனிதன் புத்திசாலித்தனமாய் கால தேச வர்த்தமானத்துக்குத் தகுந்தபடி படிப்படியாய் அனுபவ சாத்தியமாய் நடந்து கொள்ள வேண்டும்.

காந்தி மதம் இங்கு பேசப்பட்டது. அது துருப்பு பிடித்த கொள்கையாக ஆகிவிட்டது. இனி அதற்கு யோக்கியதை உண்டாகப்போவதில்லை. அவர் கிறிஸ்துவுக்கு முந்தின காலத்துக்கு போகப் பார்க்கிறார்.

ஜவஹர்லால் நேரு விஷயமும் வெறும் அரசியலேயாகி விட்டது. தனக்கென்று கொள்கை இல்லை. எலும்புக்கு மோக்ஷம் கொடுக்கப்பார்க்கிறார். எப்படியாவது விளம்பர உலகில் காந்திக்கு அடுத்த பிரைஸ் வாங்க பார்க்கிறார். அந்தக் காரியங்களுக்கும் இன்று நாம் எதற்கு ஆக மத ''விசாரணை''ப் பேச்சு பேசுகிறோமோ அதற்கும் சம்பந்தமில்லை. ஆகையால் எதற்காக இந்துமதம் விடுகிறோம்?

மதம் இல்லாமல் தனி உடைமை உலகில் தனி உடமை ஆட்சியில் வாழமுடியுமா? முடியாவிட்டால் என்ன செய்வது? எது நல்லது? என்கின்ற காரியங்களை பிரத்தியட்ச அனுபவத்தையும் பகுத்தறிவையும் உபயோகித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள். நான் சொன்னவற்றை கண்மூடித்தனமாக நம்பி விடாதீர்கள்.

*குறிப்பு: 23, 24.05.1936 நாள்களில் கொச்சி மட்டாஞ்சேரி கேசவன் அரங்கில் நடைபெற்ற கொச்சி தீயர் சமுதாய மாநாடு, பெண்கள் மாநாடு, எல்லா மத மாநாடு இவற்றில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 31.05.1936**



RangaRakes tamilnavarasam.com

# சத்தியமூர்த்தியும் சமதர்மமும்

தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் ஆனைமலை ஐரோப்பியர் சங்கத்தில் ஐரோப்பியர் முன்னிலையில் பேசும் போது

''காங்கிரஸ் சமதர்மத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. காங்கிரஸ் சமதர்மத்துக்கு விரோதமானது, ஜவஹர்லாலை காங்கிரஸ் தலைவராக ஏற்றுக் கொண்டதானது அவருடைய தனிப்பட்ட முறையிலேயே ஒழிய, அவருடைய கொள்கைகளுக்காக அல்ல, சமதர்மம் பணக்காரர்களைப் பாதிக்கும், சமதர்மம் சமூக வேறுபாடுகளை ஒழித்துவிடும், ஏழைகளுக்கு எஜமானர்களாய் எவரும் இருக்க முடியாது, ஆதலால் காங்கிரஸ் சமதர்மத்தை ஆதரிக்காது, காங்கிரஸ் செல்வவான்களைக் காப்பாற்றும், வெள்ளைக்காரரோடு ராஜி செய்து கொள்ளும்'' என்பதாக பேசி இருக்கிறார்.

இதை 27-5-36ந் தேதி தாருல் இஸ்லாம் பத்திரிகை 2ம் பக்கம் 5, 6-வது கலத்தில் காணலாம்.

ஆகவே தமிழ்நாட்டு வாலிபர்களில் சிலர் காங்கிரசானது சமதர்மக் கொள்கையுடையதென்றும், சமூக வேற்றுமையை ஒழிக்கக்கூடிய தென்றும், சமதர்மக்காரரும் சமூக வேற்றுமையை ஒழிக்க வேண்டுமென்பவர்களும் காங்கிரசில் வந்து சேர வேண்டும் என்றும் சொல்லுவார்களேயானால் அவர்களை அறிஞர்கள் என்றோ யோக்கியர்கள் என்றோ எப்படி சொல்ல முடியும். தோழர் ஜவஹர்லாலை காங்கிரஸ் பிரசிடெண்டாக தெரிந்தெடுத்த போதே நாம் ஜவஹர்லாலைக் காட்டி வாலிபர்களையும், தேச மக்களையும், ஏழைகளையும் ஏமாற்ற காங்கிரஸ்காரர்கள் காந்தியார் உள்பட சூழ்ச்சி செய்கிறார்கள் என்று சொன்னோம். அது இப்போது தோழர் சத்தியமூர்த்தியார் வாக்காகவே ருஜுவாகிவிட்டது.

நம்நாட்டு காங்கிரஸ் தலைவர் நம்மிடம் வந்து பூரண சுயராஜ்யம் என்பதும், வெள்ளைக்காரரிடம் சென்று நீங்களும் நாங்களும் ராஜி செய்து கொள்ளலாம் என்பதும், சமூக வேற்றுமைகளை ஒழிப்பதில்லை என்பதும், ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றி அது பொதுவுடமை கட்சி என்பதும், சமூக வேற்றுமைகளை ஒழித்து எல்லா மக்களையும் சமமாக்க முயற்சிக்கிறது என்பதும் இப்படியாக பல **திருட்டுத்தனத்த சூழ்ச்சிகள் செய்து** வருவதைப் பொதுமக்கள் உணராமல் காங்கிரசு காங்கிரசு என்று கூப்பாடு போட்டால் இவர்களை என்ன என்று கூறுவது? செம்மறி ஆடுகள் என்றா அல்லது பார்ப்பனர்கள் கை கொழுக்கட்டைகள் என்றா? என்று நமக்கு விளங்கவில்லை.



உத்தியோகம் பதவி கூலி ஆகியவைகளுக்கு ஆசைப்பட்டு காங்கிரசின் பெயரைச் சொல்லிக் கொண்டு பார்ப்பனர்களின் கால்களுக்குள் நுழைபவர்களைப் பற்றி நாம் குறை கூறவில்லை.

ஆனால் ஜஸ்டிஸ் கட்சி தேசத் துரோகக் கட்சி யென்றோ, மக்களுக்கு விரோதமான கட்சியென்றோ, வெள்ளைக்காரர்களுக்கு உடந்தையான கட்சியென்றோ, உத்தியோக வேட்டைக் கட்சி யென்றோ யாராவது சொல்வார்களானால் அவர்களைத்தான் நாம் மடையர்கள் என்றோ, அல்லாவிட்டால் அயோக்கியர்கள், கூட்டி கொடுத்து வயிறு வளர்ப்பவர்கள், சமூகத் துரோகிகள் என்றோ கூறாமல் இருக்க முடியவில்லை. காங்கிரஸ்காரர்களைவிட, காங்கிரஸ் தலைவர்களை விட எந்த விதத்திலாவது ஜஸ்டிஸ் கட்சியும், ஜஸ்டிஸ் தலைவர்களும் கொள்கையில் மோசமென்றோ ஒழுக்கத்தில் நாணயத்தில் மோசமானவர்கள் என்றோ யாராவது சொல்ல முடியுமா?

உத்தியோகம் ஒப்புக் கொள்வது சீர்திருத்தத்தை நடத்திக் கொடுப்பது, வெள்ளைக்காரருடன் ராஜி செய்து கொள்வது, பணக்காரர்களை காப்பாற்றுவது, சமூக வேற்றுமைகளை காப்பாற்றி நிலைக்கச் செய்வது ஆகிய காரியங்கள் இன்றைய காங்கிரசில் திடமாக இருக்கும்போது இந்திய அரசியல் கட்சிகளில் காங்கிரசைவிட மோசமான கட்சி வேறு எது என்று கேட்கின்றோம்.

காங்கிரஸ் சமதர்மக்காரர்கள் இருக்கிறதாகச் சொல்லுவதெல்லாம் புரட்டு அல்லாமல் வேறு உண்மையிருக்க முடியுமா? என்று யோசிக்கும்படி வேண்டுகிறோம்.

தோழர் ஜவஹர்லால் அவர்களும் பம்பாய் வர்த்தகரிடம் சென்று தன்னுடைய சமதர்மமானது பகல் கொள்ளையடிக்கும் வர்த்தகர்களுக்கு எவ்விதத் தீங்கும் செய்யாது என்று வாக்குக் கொடுத்து அவர்களை காங்கிரசை ஆதரிக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்த நிலையில் தினம் ஒன்றுக்கு நல்ல வழியில் 2 அணா சம்பாதித்து வயிறு வளர்க்க முடியாத சோம்பேறிகளும், இழிமக்களும் மானம் வெட்கமில்லாமல் பார்ப்பனர்களுக்கு அடிமையாகி கூலி பெற்று பார்ப்பனரல்லாதார் இயக்கங்களையும், தலைவர்களையும், தோழர்களையும், இழிதனமாய் பேசுவதும், பலாத்காரம் செய்வதுமான காரியங்களில் ஈடுபடுவதானால் இவற்றை அடக்கவும், ஒழிக்கவும் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள், பதவியிலிருப்பவர்கள் முயற்சி எடுத்துத் தக்கப் பிரசாரம் செய்ய வேண்டாமா என்று கேட்டு இதை முடிக்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 31.05.1936**



RangaRakes tamilnavarasam.com

# ஜவஹர்லாலும் சமதர்மமும்

பண்டித ஜவஹர்லால் நேரு தலைவராய் இருப்பதால் தாங்கள் காங்கிரசில் சேருவதில்லை என்று பம்பாய் வர்த்தகர்கள் சொல்லி அறிக்கை வெளியிட்டதற்கு பதிலாக நேரு பம்பாய்க்கு ஓடிவந்து வர்த்தகர்களைக் கண்டு தனது சமதர்மம் இன்னது என்று சொல்லி வர்த்தகர்களுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

அதாவது தனது சமதர்மமானது ஒரு தேசத்தாரையோ, ஒரு சமூகத்தாரையோ, ஒரு கோஷ்டியாரையோ எவ்வித நிர்ப்பந்தமும் செய்வதல்ல வென்றும், ஆனால் நாளாவட்டத்தில் தமது அபிப்பிராயம் பொது ஜனங்களிடை பரவுமாறு செய்யலாம் என்று நம்பி இருப்பதுதான் என்றும் சொல்லி இருக்கிறார்.

மற்றும் ரகசியமாய் அவர்களுடன் பேசி ஏதேதோ வாக்குக் கொடுத்து இருக்கிறார். (21-5-36 தமிழ்நாடு முதல் பக்கம் 2, 3 கலம்) இதுதான் ஜவஹர்லால் சமதர்மமாகும்.

இதை அறியாமல் அனுபவமற்ற வாலிபர்கள் ஜவஹர்லாலை சமதர்ம வீரர் என்று கூப்பாடு போடுவதன் மர்மம் முட்டாள்தனமே யாகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 31.05.1936**



# பரிதாபம்

தோழர் சௌந்திரபாண்டியன் அவர்களின் இரண்டாவது மகன் 14 வயதுள்ள ராஜசேகரன் கொடைக்கானல் ஏரியில் விளையாடுகையில் தவறி தண்ணீரில் மூழ்கி இறந்து விட்டான் என்று கேட்டு விசனிக்கிறோம்.

ராஜசேகரன் தோழர் சௌந்திரபாண்டியன் அவர்களின் 4 புதல்வர்களிலும் இரண்டாவதவன். ஆனாலும் மிகவும் கெட்டிக்காரனும், புத்திசாலியும், நல்ல குணமும், ஜனங்களிடம் குஷாலாய் பழகும் குணமும் உடைய அபுரூபன். அப்படிப்பட்ட அவனைப் பறிகொடுத்த தாயார், தந்தையர், சுற்றத்தார்களுக்கும், நண்பர்களுக்கும் துக்கமும், விசனமும், பரிதாபமும் இல்லாமல் இருக்க முடியாது தான். ஆனால் துக்கமும் விசனமும் இருந்து என்ன பயன்? யாரால் இனி என்ன செய்யமுடியும்? துக்கப்படுவதில் பயனில்லை என்று சொல்லி தேற்ற முயற்சிக்கத்தான் மற்றவர்களால் முடியும். இயற்கையை நன்றாய் உணர்ந்த தோழர் பாண்டியன் குடும்பத்தாருக்கு எவருடைய தேறுதலும் அவசியமிருக்காது என்றே கருதுகிறோம்.

**குடி அரசு - இரங்கற் செய்தி - 31.05.1936**



RangaRakes tamilnavarasam.com

# சுயமரியாதை இயக்கம்

சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்த காலத்தில் பல பிரபல தோழர்கள் இவ்வியக்கத்தின் கொள்கைகளையாவது ஒப்புக்கொள்ளலாம் என்றாலும் அவ்வியக்கத்தின் பெயரை ஒப்புக் கொள்ள முடியாதென்றும், ஏனென்றால் சுயமரியாதை இயக்கம் என்று சொல்லும்போதே நமக்கு சுயமரியாதை இல்லையென்று ஒப்புக் கொண்டதாக ஆகிறதென்றும் ஆதலால் அந்தப் பெயரை எடுத்துவிட்டு வேறுபெயர் வைக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். பல சமாதானம் சொன்ன பிறகு ஒப்புக்கொண்டார்கள்.

இப்போது அந்தப்படி சொன்ன தோழர்களையே உங்களுக்கு சுயமரியாதை இருக்கிறதா? என்று கேட்க வேண்டியதாய் விட்டது.

உதாரணமாக பல பெரிய இலாகா தலைமை ஸ்தானங்களுக்கு பார்ப்பனரல்லாதார்களே தலைவர்களாயிருந்தும் அவர்கள் கீழுள்ள பார்ப்பனர்கள் எழுதி வைத்ததில் கையெழுத்துப்போட வேண்டியதைத்தவிர வேறு ஒரு காரியமும் செய்ய முடியாத நிலையில் இருந்து வருகிறார்கள்.

சென்னை மாகாணத்தில் ஏறக்குறைய 8 வருஷ காலமாக பார்ப்பன ரல்லாதவர்கள் தான் போலீஸ் இலாகாவில் தலைவர்களாக இருந்து வருகிறார்கள் என்றாலும் போலீஸ் அதிகாரம் பார்ப்பனர்களின் ஏகபோக பிதுரார்ஜிதச் சொத்தாக இருந்து வருகிறது. பார்ப்பனரல்லாத போலீசு சூப்ரண்டுகளும், சர்க்கில்களும், சப் இன்ஸ்பெக்டர்களும் நாள்களை எண்ணுவதிலும் சம்பளம் வாங்குவதிலும் கவலையாய் இருக்கிறார்களே ஒழிய, பார்ப்பனரல்லாதார் உலகம் எப்படி இருக்கிறது என்று கூட திரும்பிப் பார்ப்பதில்லை.

ஆனால் அவ்வுத்தியோகங்களில் உள்ள பார்ப்பனர்களோ பெரும்பாலும் பார்ப்பன ஆதிக்கத்துக்கு உழைப்பதும் காங்கிரசை காப்பாற்றுவதுமான வேலையில் தீவிரமாய் இருக்கிறார்கள்.

இதன் காரணம் பார்ப்பனரல்லாதார்களுக்கு சுயமரியாதை இல்லாதது என்பதல்லாமல் வேறு என்ன சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

பார்ப்பனரல்லாத இயக்கமும், சுயமரியாதை இயக்கமும் இல்லாமல் இருந்தால் போலீஸ் இலாகாவில் இன்று பார்ப்பனரல்லாதார் நிலை எப்படி



இருந்திருக்கும்? இவ்வளவு பேராவது அந்த இலாகாவில் இருந்திருக்க முடியுமா? என்பவைகளைக் கவனித்துப் பார்த்தால் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு தங்களுக்கு சுயமரியாதை இருக்கிறதா என்பது விளங்கும்.

மற்றும் சுயமரியாதைக் கூட்டங்களிலும், ஜஸ்டிஸ் கட்சி கூட்டங்களிலும் காங்கிரஸ்காரர்களும் கூலிகளும் வந்து கலகம் செய்வதும், காங்கிரஸ் கூட்டங்களில் காலிகள் சுயமரியதை இயக்கத் தலைவர்களையும் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களையும் ஈனத்தனமாகவும், இழிதன்மையாகவும் பொய்யும் பழியும் கூறி பேசுவதும் கேள்விகள் கேட்டால் பலாத்காரத்தை உபயோகிப்பதும், இவைகளுக்கு பெரும்பாலும் பார்ப்பன போலீஸ் நடத்தையே காரணமாய் இருப்பதும், இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று பல தடவை கூப்பாடு போட்டும் கவனிக்காமல் இருப்பதும் ஆகிய காரியங்கள் பார்ப்பனரல்லாதார்க்கு சுயமரியாதை இல்லை என்பதை ருஜுப்பிக்கிறதா இல்லையா என்று கேட்கின்றோம்.

ஏனெனில் சென்றவாரம் சேலத்தில் காங்கிரசின் பேரால் சில காலிகள் செய்த அட்டூழியங்களுக்கு சேலம் போலீசார் இடங் கொடுத்தவர்களாவார்கள் என்பதற்கு என்ன சந்தேகம் என்பது கேட்கவேண்டியிருக்கிறது.

சேலத்தில் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பார்ப்பனர், சப்இன்ஸ்பெக்டர் பார்ப்பனர், சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் மாத்திரம் பார்ப்பனரல்லாதார். நடவடிக்கை நடந்த இடத்துக்கு பக்கத்திலேயே போலீஸ் ஸ்டேஷன் இருந் திருந்தும் கொலைகள் நடக்கும்படியான கலவரம் காங்கிரஸ் கூட்டத்தில் நடப்ப தென்றால் இதற்கு யார் காரணமாய் இருக்கவேண்டும் என்று கேட்கின்றோம். சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் பார்ப்பனரல்லாதாராய் இருந்ததால் தானும் காங்கிரஸ் காலிகளிடம் அடிபட்டுக்கொண்டாவது சுயமரியாதைக்காரர்களையும், ஜஸ்டிஸ்காரரையும் அதிகமாக அடிபடாமலும் கொலை நடக்காமலும் காப்பாற்றி இருக்கிறார். இதைப் பார்ப்பனப் பத்திரிகைகளிலேயே பார்க்கலாம்.

ராசிபுரத்திலேயும் அதற்கு முந்திய வாரங்களில் பார்ப்பன போலீசாரால் தொல்லை விளைந்திருக்கிறது.

இவைகளையெல்லாம் கவனிக்க முடியாத மந்திரிகளும் போலீஸ் மெம்பர்களும் ஜஸ்டிஸ்கட்சியின் பெயராலேயே உத்தியோகம் பார்த்துக் கொண்டு மாதம் 4-ஆயிரம் ஐயாயிரம் பணம் பெறுகிறவர்கள் என்றால் இந்த சமூகத்துக்கு சுயமரியாதை இல்லை என்பதிலும் சுயமரியாதைக்கு ஆகவே, இன்னமும் பல வருஷங்களுக்கு இவ்வியக்கம் பாடுபடவேண்டி யிருக்கிறது என்பதிலும் என்ன ஆக்ஷேபம் இருக்கிறது என்று கேட்கின்றோம்.

சேலம் நடவடிக்கைக்கு சேலம் ஜில்லா அதிகாரியான கலைக்டராவது கவனிப்பார் என்றாலோ அவரும் 'புளிப்புக்கு அவளப்பனே' என்கின்ற மாதிரி பார்ப்பன கலைக்டரேயாவார். இந்தக் காரணங்களாலேயே சேலம்



RangaRakes tamilnavarasam.com

ஜில்லாவில் உள்ள சில்லறை பார்ப்பன அதிகாரிகளுக்கும் சிறப்பாக போலீஸ் அதிகாரிகளுக்கும் தைரியம் அதிகமாகி கலகங்கள் நடத்தப்பட ஆக்கமதிகரித்து வருகிறது.

கடைசிமுறையாக நாம் இதைச் சர்க்காருக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அதாவது பொதுக்கூட்ட விஷயங்களில் ஏதாவது ஒரு நியதி ஏற்படுத்தி காலித்தனம் நிகழாமல் இருக்கும்படி செய்ய சர்க்கார் முன்வராத பக்ஷம் கண்டிப்பாய் பொதுக்கூட்டங்களில் இனி கொலைகள் நடக்கும்படியான நிலைமை ஏற்படக்கூடும் என்பதையும் அப்படி ஏற்பட்டால் அதற்கு சர்க்கார் தான் பொறுப்பாளியாவர்கள் என்பதையும் வினயமாய் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

கூட்டங்களானது கொள்கையைப் பொறுத்தில்லாமல் வெறும் வகுப்பு உணர்ச்சியைக் கொண்டே பார்ப்பனர்கள் நடத்தி வருவதால் அதற்கு பார்ப்பன அதிகாரிகளின் நீதி நிர்வாகத் தன்மை உள் உளவாய் இருப்பதால் நாம் இம்மாதிரி தெரிவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இதை அரசாங்கத்தார் கவனித்து தக்கது செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர் தோழர் சத்தியமூர்த்தியவர்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவதாய் ஒப்புக் கொண்டு கேள்வி கேட்டவர்களை மேடைக்கு வரும்படி அழைத்து அடிக்கச் செய்திருப்பதும், போலீஸ்காரர்கள் அக்கூட்டத்தில் ஒருவர் கூட இல்லாதிருந்ததும், மற்றும் நமக்கு கிடைத்திருக்கும் சில தகவல்களும் கொண்டே நாம் இதை கவனிக்கும்படி அரசாங்கத்தாருக்கு எழுத நேர்ந்ததே ஒழிய மற்றப்படி வகுப்பு துவேஷம் கொண்டல்ல - கோழைத்தனம் கொண்டல்ல என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மற்றும் ராசிபுரம் நடவடிக்கையைப் பற்றி 5-3-36ந் தேதி குடியரசில் விளக்கிவிட்டு ஸ்தல அதிகாரிகள் கவனிக்க வேண்டும் என்றும் எழுதி யிருந்தோம். அப்படி இருந்தும் மேலும் அதே மாதிரி பல இடங்களில் நடப்பதாலும் மற்றொரு கட்சியாரும் இம்மாதிரி ஆகிவிட்டால் என்ன ஆகும் என்கின்ற பயத்தாலும் எழுத நேரிட்டது. ஆகையால் அரசாங்கத்தார் இதையாவது கவனிப்பார்கள் என்று நம்புகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 31.05.1936**



# கடவுள் கதை

## உலக உற்பத்தி ''சந்தேகந்தெளிய'' சம்பாஷணை

**- சித்திரபுத்திரன்**

**கதை சொல்லுகிறவன்:-** ஒரே ஒரு கடவுள் இருந்தார்.

**கதை கேட்கிறவன்:-** ஊம், அவர் எங்கே இருந்தார்?

**க.சொ:-** ஆரம்பத்திலேயே அதிகப் பிரசங்கமாய் கேட்கிறாயே. நான் சொல்லுவதை ஊம் என்று கேட்டால் தான் இந்தக் கதை சொல்ல முடியும்.

**க.கே:-** சரி, சரி சொல்லு, ஒரே ஒரு கடவுள். அப்புறம்?

**க.சொ:-** ஒரு நாள் உட்கார்ந்து கொண்டு என்ன செய்வது என்று யோசித்தார்.

**க.கே:-** சரி, எப்போ?

**க.சொ:-** பாரு மறுபடியும், இரட்டை அதிகப் பிரசங்கமாய் கேட்கிறாயே.

**க.கே:-** சரி, சரி. தப்பு சொல்லப்பா சொல்லு.

**க.சொ:-** உலகத்தை சிருஷ்டிக்கலாம் என்று முடிவு கொண்டார்.

**க.கே:-** (அதற்கு முன் உலகம் இல்லை போல் இருக்கிறது. உலகம் இல்லாமலே ஒரு நாள் உட்கார்ந்து கொண்டு யோசித்திருக்கிறார் போல் இருக்கிறது. அந்தரத்தில் உட்கார்ந்திருப்பார் பாவம்! என்று நினைத்துக் கொண்டு கொஞ்ச நேரம் பொறுத்து) சரி அப்புறம் (என்று சொன்னான்)

**க.சொ:-** என்ன இந்த மாதிரி நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேட்காமல் எங்கெங்கயோ யோசனையாய் இருக்கிறாயே.

**க.கே:-** இல்லை. நீ சொல்லுகிறபோதே சில சந்தேகம் தோன்றியன. அதைக் கேட்டால் கோபித்துக் கொள்ளுகிறாய், அதிகப்பிரசங்கி என்று சொல்லி விடுகின்றாய். ஆதலால் மனதிலேயே நினைத்து சமாதானம் செய்து கொண்டேன்.

**க.சொ:-** அப்படி யெல்லாம் சந்தேகம் கூட தோன்றக்கூடாது. கதை பாட்டி கதையல்ல; கடவுள் கதையாக்கும். இதை வெகு பக்தி சிரத்தையுடன் கேட்கவேண்டும். தெரியுமா?

**க.கே:-** சரி அப்படியே ஆகட்டும். சொல்லு பார்ப்போம்.

**க.சொ:-** எதிலே விட்டேன்? அது கூட ஞாபகமில்லை, உன் தொந்திரவினால்.



RangaRakes tamilnavarasam.com

**க.கே:-** சரி, கோபித்துக்கொள்ளாதே. நீ விட்டது எதிலே என்றா கேட்கிறாய்? இரு, யோசனை பண்ணிச் சொல்லுகிறேன்.

ஒரே ஒரு கடவுள் அவர் ஒரு நாள் உட்கார்ந்துகொண்டு என்ன செய்வது என்று யோசித்தார். உலகத்தை சிருஷ்டிக்கலாம் என்று எண்ணினார் என்பதில் விட்டாய். அதில் தொட்டுக்கொள். என்னை அதிகப்பிரசங்கி என்கிறாய் எனக்காவது ஞாபகமிருக்கிறது. மகா பக்தனாகிய உனக்கு மறந்து போகிறது பாவம். அப்புறம் சொல்லு.

**க.சொ:-** பாவம் என்ன எளவு, உன்னுடைய தொல்லையில் எதுதான் ஞாபகமிருக்கிறது. அப்புறம் என்ன பண்ணினார் என்பதுகூட மறந்து போய் விட்டது. யோசனை பண்ணி சொல்லுகிறேன் பொறு. (சற்று பொறுத்து) முதலில் வெளிச்சம் உண்டாகக் கடவது என்று சொன்னார்.

**க.கே:-** இருட்டில் உட்கார்ந்து கொண்டா இவ்வளவும் நினைத்தார்? பாவம் கடவுளுக்கு எவ்வளவு பிரயாசை நம்மால்? அவர் கருணாநிதி என்பதற்கு இதைவிட என்ன ருசுவு வேண்டும்.

**க.சொ:-** அதையெல்லாம் நீ தெரிந்து கொள்வதற்குத்தானே இந்தக்கதை சொல்லுறேன். இந்த மாதிரி கவனமாய்க் கேள்.

**க.கே:-** சரி, சரி சொல்லு, உடனே வெளிச்சம் உண்டாய் விட்டதாக்கும். கடவுளுக்கு ஏதோ போட்டி இருக்கும்போல் இருக்கிறது.

**க.சொ:-** என்ன போட்டி?

**க.கே:-** இல்லையப்பா, வெளிச்சத்தைத்தான் கடவுள் சிருஷ்டித்தார். அதற்குமுன் இருந்த இருட்டை எவனோ அயோக்கியப்பயன் கடவுளுக்குத் தொந்திரவு கொடுக்க வேண்டுமென்று போட்டிக்காக சிருஷ்டித்து விட்டு ஓடிப்போய் விட்டான் போலிருக்கிறது. கண்டால் நான் அவனை என்ன செய்வேன் தெரியுமா?

**க.சொ:-** தொலைந்து போகுது, அதைப்பற்றியெல்லாம் கவலைப் படாதே; சொல்வதைக் கேளு.

**க.கே:-** சரி சொல்லு.

**க.சொ:-** அப்புறம் மேடு பள்ளம் எல்லாம் சமன் ஆகவேண்டும் என்று கருதினார்; அதுபோலவே ஆயிற்று.

**க.கே:-** கடவுளுக்கு முன்னால் இருந்த மேடு பள்ளங்களை யெல்லாம் சமன் ஆகவேண்டும் என்ற சொன்னாராக்கும், அதெல்லாம் சமனாய் விட்டதாக்கும். கடவுள் நல்ல கடவுள். எவ்வளவு ஞானமும், கருணையும் உடைய கடவுள். மேடு பள்ளம் இருந்தால் நம்ம கதி என்ன ஆவது? இன்று போல் சமுத்திரமும், மலையும், குழியும், குன்றுமாகவல்லவா ஆகி இருக்கும். ஆதலால் கடவுள் நல்ல வேலை செய்தார்.



ஆனால் அப்புறம் எவனோ புறப்பட்டு மறுபடியும் பழயபடி இருட்டும், மேடும் பள்ளமும், குழியும், குன்றும் ஏற்படும்படி செய்து விட்டான் போலிருக்கிறது. இருக்கட்டும், அதைப்பற்றி கவலை இல்லை. கடவுள் செய்த நன்மைகளை நினைத்து மகிழ்ந்து அவருக்கு நன்றி செலுத்துவோம். அப்புறம் என்ன செய்தார்?

**க.சொ:-** அப்புறம் அதாவது வெளிச்சம் உண்டாகி மேடு பள்ளம் நிரவப்பட்ட பிறகு மறுபடியும் யோசித்தார்.

**க.கே:-** சரி, யோசித்தார்.

**க.சொ:-** அதற்குள் ஒருநாள் முடிந்து போய்விட்டது. அடுத்த நாள் அதாவது இரண்டாவது நாள் காற்று உண்டாகக் கடவது என்று சொன்னார்; உடனே காற்று உண்டாய் விட்டது.

**க.கே:-** பிறகு என்ன செய்தார்?

**க.சொ:-** அதற்கும் ஒரு நாள் ஆகிவிட்டது. பிறகு மூன்றாம் நாள் பூமி உண்டாகக் கடவது என்று நினைத்தார், பூமி உண்டாயிற்று. அன்றே சமுத்திரம், செடிகள் உண்டாகக் கடவது என்று நினைத்தார், உடனே சமுத்திரம் செடிகள் உண்டாயின.

**க.கே:-** பிறகு?

**க.சொ:-** இதற்குள் மூன்று நாள் முடிந்து விட்டது. நான்காம் நாள் உட்கார்ந்துகொண்டு யோசித்தார் யோசித்தார், ரம்ப கஷ்டப்பட்டு என்ன செய்வது என்று யோசித்தார்.

**க.கே:-** அய்யோ பாவம்; கடவுள் நமக்காக எவ்வளவு பாடுபட்டார், மனிதர்களுக்கு நன்றி விஸ்வாசம் இருக்கிறதா? போனால் போகட்டும், அப்புறம் என்ன செய்தார்? சொல்லு சீக்கிரம்.

**க.சொ:-** அப்புறம் நான்காம் நாள் ஒரு முடிவுக்கு வந்தார். என்ன முடிவுக்குத் தெரியுமா? சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் ஆகியவைகள் உண்டாக வேண்டும் என்று கருதி ஒரே அடியாய் இவ்வளவும் உண்டாகக் கடவது என்று சொன்னார், உடனே உண்டாகிவிட்டன.

**க.கே:-** சரி, சரி. இப்போது புரிந்தது; அந்தக் கடவுளின் பெருமை. நான் முன்பு சந்தேகப்பட்டதும், குறுக்கு கேள்வி போட்டதும் அதிகப் பிரசங்கித்தனம் என்பது வெளியாயிற்று.

**க.சொ:-** பார்த்தாயா, நான் அப்பொழுதே சொல்லவில்லையா? கடைசிவரை பொறுமையாய்க் கேட்டால், எல்லா சந்தேகமும் விளங்கிவிடும் என்று. எப்படி விளங்கிற்று? சொல்லு பார்ப்போம்.

**க.கே:-** அந்தக் கடவுளின் பெருமை எனக்கு எப்படி விளங்கிற்று என்றால், பூமி உண்டாவதற்கு முன்பே மேடு பள்ளத்தை யெல்லாம் சமன்



RangaRakes tamilnavarasam.com

செய்தது ஒன்று, மற்றும் சூரியன் பூமி ஆகியவை உண்டாவதற்கு முன்பே நாள்கள் கணக்கு எண்ணவும், முதல் நாள், இரண்டாம் நாள், மூன்றாம் நாள் கண்டுபிடிக்கவும் முடிந்ததுபார். இது எவ்வளவு அற்புதமான செய்கை. அப்புறம் மேலே சொல்லு. மிகவும் ருசிகரமாகவும் மஹிமை பொருந்திய தாகவும் இருக்கிறது இந்தக் கடவுள் கதை.

**க.சொ:-** அதற்குள் என்ன தெரிந்துகொண்டாய்? இன்னம் கேள். எவ்வளவு அதிசயமாயும் ருசியாயும் இருக்கும் பார். அப்புறம் ஐந்தாவது நாள் ஆயிற்று. மீன்களும் பட்சிகளும் உண்டாகக் கடவது என்றார்; உடனே ஆகிவிட்டன.

**க.கே:-** இத்தனை கோடி கோடி கோடி மீன்களும் ஒரே நாளில் ஆய்விட்டன என்றால் கடவுள் சக்தியும் பெருமையும் எப்படிப்பட்டது பார். அப்புறம்?

**க.சொ:-** அப்புறம்தான் விசேஷமான வேலை செய்கிறார். அதாவது ஆறாவது நாள் உட்கார்ந்து யோசித்து யோசித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வந்து மிருகங்களும் மனிதர்களும் உண்டாகக் கடவது என்றார். உடனே மிருகங்களும் மனிதர்களும் உண்டாகிவிட்டார்கள்.

**க.கே:-** அப்பாடா! கடவுள் வெகு பிரயாசைப்பட்டிருக்கிறாரே ஒரு வாரம் போல் 6 நாள் விடாமல் கஷ்டப்பட்டு வெளிச்சம், சமம், காற்று, பூமி, சமுத்திரம், செடிகள், சூரியன், நக்ஷத்திரம், சந்திரன், மீன்கள், பட்சிகள், மிருகங்கள், மனிதர்கள் ஆகிய எவ்வளவு பண்டங்களையும், ஜீவன்களையும் சிருஷ்டித்திருக்கிறார். என்ன கஷ்டம்? இதற்கு ஆக அவருக்கு களைப்பு இளைப்பு ஏற்படவில்லையா?

**க.சொ:-** ஓடாதே சொல்லுகிறேன் கேள். நமக்கு இருக்கிற புத்தி கடவுளுக்கு இருக்காதா? ஏழாவது நாள் ஓய்வு எடுத்துக்கொண்டார். அதனால் தான் இப்போது கூட ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாள் ஆகக் கருதப்படுகிறது.

**க.கே:-** சரி புரிஞ்சது. கடவுள் தயவினால் வேலை செய்யாதவன் கூட இப்பொழுது ஞாயிற்றுக்கிழமை ஓய்வெடுத்துக் கொள்ளுகிறான். கடவுள் எவ்வளவு கருணை உடையவர்? சரி. அப்புறம்.

**க.சொ:-** மனிதரை கடவுள் சிருஷ்டித்தாரென்றால் எப்படி சிருஷ்டித்தார் தெரியுமா?

**க.கே:-** அதை கேட்கவேண்டும் என்றுதான் நினைத்தேன். நீ அதை அதிகப் பிரசங்க கேள்வி என்று சொல்லிவிடுவாயே என்று விட்டு விட்டேன். ஆனாலும் நல்லவேளையாய் நீயே சொல்லப் புறப்பட்டுவிட்டால் அதுவும் அந்தக்கடவுள் செயலாகத்தான் இருக்கவேண்டும். சொல்லு, சொல்லு.

**க.சொ:-** முதல் முதலில் ஒரே ஒரு மனிதனை சிருஷ்டித்தார். பிறகு அவனுடைய விலாவிலிருந்து ஒரு எலும்பை எடுத்து அந்த எலும்பிலிருந்து



ஒரு பெண்ணை சிருஷ்டித்து இரண்டுபேரையும் ஷோக்காய் ஒரு நந்தவனத்தில் உலாவச் சொன்னார். அந்த நந்தவனத்தில் சில பழச்செடிகள் இருந்தன. அந்த பழச்செடிகளில் ஒரு பழச்செடியின் பழத்தை சாப்பிடக் கூடாது என்று கடவுள் அந்த ஆண் பெண் இருவருக்கும் சொல்லி வைத்தார். கடசியாக அந்த ஜோடி கடவுள் வார்த்தையைத் தட்டிவிட்டு பிசாசு வார்த்தையைக் கேட்டு அந்தப் பழத்தை சாப்பிட்டு விட்டது.

**க.கே:-** நில்லு, நில்லு. இங்கே எனக்கு கோபம் வருகிறது. அந்தக் கோபம் ஆறினால் தான் மேல்கொண்டு கதை கேட்க முடியும்.

**க.சொ:-** என்ன கோபம்?

**க.கே:-** அதெப்படி? அங்கே சாத்தான் வந்தான். அவனை யார் சிருஷ்டித்தது? மேல்படி 6-நாள் வேலையிலும் கடவுள் சாத்தானை சிருஷ்டிக்கவே இல்லையே. அந்தப்பயலை வேறு எந்தப் பயலோ சிருஷ்டித்தல்லவா கடவுளுடன் போட்டி போட அந்த நந்தவனத்துக்கு அனுப்பி யிருக்கவேண்டும்? அந்த பயலைக்கண்டு பிடித்து அவனுக்கு தகுந்த புத்தி கற்பிக்க வேண்டாமா? ஒரு சமயம் கடவுளும் தனது பெருந்தன்மையில் அந்த சாத்தானையும் அவனை சிருஷ்டித்த மற்றொரு சாத்தானையும் சும்மா விட்டிருப்பார். நமக்கு புத்தியும் ரோசமும் வேண்டாமா? அந்த சாத்தானையும் அவனைச் சிருஷ்டித்தவனையும் கண்டு பிடித்து தகுந்தபடி புத்தி கற்பிக்கா விட்டால் நமக்கும் மற்ற மிருங்களுக்கும் என்ன வித்தியாசம்? இதுதான் என்னுடைய ஆத்திரம். இதற்கு ஒரு வழி சொல்லு. எனக்கு கோபம் வந்து வந்து போகிறது.

**க.சொ:-** ஆத்திரப்படாதே. நான் சொல்வதை பூராவும் கேள். பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம்.

**க.கே:-** சரி, சொல்லித்தொலை, நமக்கென்ன மானமா, வெட்கமா, அறிவா என்ன இருக்கிறது? எவன் வந்து என்ன செய்தாலும் பொறுத்துக் கொண்டு சாமி மாடுமாதிரி தலையை ஆட்ட வேண்டியது தானே. அப்புறம்?

**க.சொ:-** அந்தப்பழத்தைச் சாப்பிட்ட இருவருக்கும் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன.

**க.கே:-** ஆளுக்கு ஒரு குழந்தையா?

**க.சொ:-** இரண்டுபேருக்கும் சேர்ந்து இரண்டு குழந்தைகள் பிறந்தன.

**க.கே:-** சரி அப்புறம் என்ன ஆச்சுது?

**க.சொ:-** என்ன ஆவது? பிசாசு பேச்சைக் கேட்டதால் பிறந்த பிள்ளை யோக்கியமாக இருக்குமா? அவைகள் ஒன்றோடொன்று சண்டை இட்டுக் கொண்டு இளையது மூத்ததைக் கொன்று விட்டது.

**க.கே:-** காலம் கலிகாலமல்லவா? மூத்தது மோளை, இளையது காளை. கொல்லாமல் இருக்குமா? அப்புறம்?



RangaRakes tamilnavarasam.com

**க.சொ:-** இளையவனைக் கடவுள் உன் அண்ணன் எங்கே என்று கேட்டார். இளையவன் எனக்குத் தெரியாது என்று சொன்னார். உடனே கடவுள் கோபித்துக்கொண்டு அந்த ஆதி ஆண் பெண் ஆகியவர்களிடத்தில் மறுபடியும் ஒரு குழந்தை உண்டாகும்படி செய்தார்.

**க.கே:-** எப்படியோ செய்தார், அப்புறம்?

**க.சொ:-** இதற்குள்ளாக கொச கொசவென்று குழந்தைகள் பெருகி விட்டன. இவைகள் எல்லாம் அயோக்கியர்களாக இருந்தன. இவைகளில் ஒன்று தவிர மற்றவைகள் எல்லாம் இறந்து போயின.

**க.கே:-** ஐயையோ! அப்புறம் கடவுள் என்ன செய்தார்?

**க.சொ:-** என்ன செய்தார். மிஞ்சின குழந்தையை ஒரு கப்பல் தயார் செய்யச் செய்து அதில் கடவுள் முன் உற்பத்தி செய்த பொருள்களையெல்லாம் ஏற்றிக்கொண்டு தண்ணீரில் மிதக்கச் சொன்னார். அந்தப்படியே மிதங்கினான். இந்த சந்தர்ப்பத்தில் பெரிய மழை பெய்து எங்கும் பிரளயமாக ஆகி உலகமே அழிந்து விட்டது. இந்தக் கப்பல் மாத்திரம் மிஞ்சிற்று. மீதியான கப்பலினாலும் அதிலிருந்தவர்களாலும் இப்பொழுது காணப்படுகிற உலகமும் அதிலுள்ள சகலமும் உண்டாயின.

**க.கே:-** அந்தக் கப்பலில் சந்திரன், சூரியன், நட்சத்திரம் முதலிய எல்லாம் ஏற்றப்பட்டு எல்லாம் முழுகிப் போச்சாக்கும்.

**க.சொ:-** ஆம் எல்லாம் அடியோடு முழுகிவிட்டன.

**க.கே:-** போதுமப்பா, இன்னம் இதற்கு மேல் சொன்னால் என்னால் கேட்க முடியாது. நல்ல தங்கமான கதை இது.

**க.சொ:-** சரி. அப்படியானால் இப்போது நிறுத்தி விட்டு மற்றொரு நாளைக்கு இன்னொரு கடவுளுடைய கதையை நான் சொல்லுகிறேன் நீ கேளு.

**பகுத்தறிவு (மா.இ.) - உரையாடல் - மே 1936**



# இராமனுக்கு சீதை தங்கை இராவணனுக்கு சீதை மகள் இராமனுக்கு நான்கு பெண்டாட்டிகள்

இராமாயணம் என்பது சூரிய குல அரசர்களின் சரித்திரங்களில் ஒன்று என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும் இராமாயணம் என்னும் பெயரால் பல நூற்றுக்கணக்கான இராமாயணங்கள் இருந்ததாகவும், நூறு கோடிக்கணக்கான சுலோகங்கள் இருந்ததாகவும், அவைகள் காலப் போக்கில் பல ''தெய்வீக காரணங்களால் மறைந்து போய் விட்டன'' வென்றும், ஆனாலும் இப்போது 24 விதமான இராமாயணங்கள் இருப்பதாகவும், அவற்றை தோழர் கோவிந்ததாஸ் அவர்கள் வட இந்தியாவிலுள்ள ஒரு மடத்தில் தாமே நேரில் பார்த்ததாகவும் தாம் எழுதிய ''இந்து மதம்'' என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

அதை அனுசரித்தே சென்னை மைலாப்பூர் ''ராமாயண விலாசம்'' என்னும் கிருகத்தில் உள்ள இராமாயணப் பிரசுர கர்த்தாவாகிய திரு. சி.ஆர். சீனிவாசய்யங்கார் பி.ஏ. என்பவரால் எழுதப்பட்டு 1928-ம் வருஷத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கும் ''இதர ராமாயணங்கள்'' என்னும் புஸ்தகத்தில் மேல்கண்ட விஷயங்கள் விளக்கப்பட்டு முதல் தடவையாக நான்கு இராமாயணங்கள் அதில் விவரிக்கப்பட்டு வெளியிடப் பட்டிருக்கின்றன. (அப்புத்தகத்தின் விலை ரூ 1.) அவையாவன:- ஜைன ராமாயணம், பௌத்த ராமாயணம், யவன ராமாயணம், கிறைஸ்த ராமாயணம் என்பவைகளாகும்.

இவற்றுள் யவன ராமாயணம், கிறைஸ்த ராமாயணம் ஆகியவைகள் பெரும்பாலும் இராமாயணக் கதையைப் போன்ற போக்கில் இருந்தாலும் கதைகளில் வரும் பாத்திரங்களின் பெயரும் மற்ற சில்லறை விஷயங்களும் பெரிதும் மாறுபட்டு அந்தந்த பாஷைக்கு ஏற்ற பெயர்களாக இருப்பதால் அதை நாம் இதில் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு உபயோகித்துக் கொள்ள விரும்பவில்லை.

ஆனால் மற்ற இரண்டும் அதாவது ஜைன பௌத்த ராமாயணங்கள் பெரிதும் கதைப் போக்கிலும் பெயர்களிலும் எல்லாம் பொருத்தமாக இருக்கின்றன. ஆனால் சில்லறை விஷயத்தில் மாத்திரம் பல விஷயங்கள் மாறுபட்டிருக்கின்றன.



RangaRakes tamilnavarasam.com

அதில் ஜைன ராமாயணம் என்பது இப்போதும் அடையாற்றுப் புத்தகசாலையில் வைக்கப்பட்டிருப்பதாக பதிப்பாசிரியரே எழுதியிருக்கிறார். அதில் தசரதன், ராவணன் முதலியவர்களுடைய சந்ததிக்கிரமம், பிறப்பு, வளர்ப்பு முதலியவைகளும் சிறிது வித்தியாசப்பட்டாலும், மூல புருஷனாகிய தசரதனை அப்படியே ஏற்றுக் கொண்டு அவனுக்கு நான்கு மனைவிகள் என்றும், அவர்களின் பெயர்கள் 1. அபாரஜிதை, 2. சுமத்ரை, 3. கைகேயி, 4. சுப்ரபை என்றும் குறிப்பிட்டு விட்டு கைகேயிக்கு தசரதன் கொடுத்த இரண்டு வரத்தையும் அப்படியே குறித்திருப்பதுடன், அபராஜிதைக்கு ராமன் பிறந்ததாகவும், சுமத்திரைக்கு லக்ஷ்மணன் பிறந்ததாகவும், கைகேயிக்கு பரதன் பிறந்ததாகவும், சுப்ரபைக்கு சத்துருக்கன் பிறந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இது போலவே சீதையை ஜனகராஜனுடைய மகள் என்றும், வில்லை வளைப்பவனுக்கு ஜனகன் சீதையைக் கொடுப்பதாக நிபந்தனை வைத்திருந்தானென்றும், ஆகவே, வில்லை வளைத்தே ராமன் சீதையை மணந்தான் என்றும், லக்ஷ்மணனுக்கு 18 பெண்சாதிகள் என்றும், பரதனுக்கு ஜனகனுடைய சகோதரரின் குமாரத்தி கொடுக்கப்பட்டா ளென்றும் சொல்லப் பட்டிருக்கின்றது.

மற்ற பட்டாபிஷேகக் கதையும் வால்மீகி ராமாயணத்தைப் போலவே இருந்தாலும் சிறு சிறு மாறுதல்களுடன், தபசு செய்ததற்காக சம்பூகன் வதைக்கப் பட்டதும் குறிக்கப்பட்டிருப்பதோடு இராமனுக்கு நான்கு பெண்சாதிகள் என்றும், அவர்களின் பெயர் 1 சீதை, 2 பிரபாவதி, 3 ரதினிபா, 4 ஸ்ரீதாமா என்பவர்கள் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரம் வால்மீகி இராமாயணத்திலும் கூட இருக்கிறது.

### பௌத்த ராமாயணம்

பௌத்த ராமாயணத்திலும், தசரத ராஜனுக்கு பதினாயிரம் மனைவிகள் என்றும், அவர்களில் மூத்தவளுக்கு ராமன் லக்ஷ்மணன் என்பவர்களான இரண்டு ஆணும், சீதை என்று ஒரு பெண்ணும் ஆக மூன்று குழந்தைகள் பிறந்தன என்றும் அடுத்த மனைவிக்கு பரதன் என்கின்ற ஒரு ஆண் குழந்தை மாத்திரம் பிறந்தது என்றும், அரசன் பரதனுக்குப் பட்டங் கொடுப்பதாய் இளைய மனைவிக்கு வாக்குக் கொடுத்திருந்தான் என்றும், ஆனால் அரசன் அந்தப்படி செய்யாமல் ராமனுக்குப் பட்டம் கொடுக்க ஏற்பாடு செய்தான் என்றும், இளைய மனைவி கட்டாயப்படுத்தினதால் பரதனுக்குப் பட்டம் கொடுத்து விட்டு ராமன், லக்ஷ்மணன், சீதை ஆகிய சகோதர சகோதரிகளை பரதன் கொன்று விடுவான் எனப் பயந்து காட்டுக்கனுப்பி விட்டான் என்றும், பரதன் தமயனைத் தேடிக் காட்டுக்குப் போய் ராமனையே பட்டத்தை ஒப்புக் கொள்ளச் சொன்னதாகவும், ராமன் தன் தகப்பனார் இறந்த பிறகுதான் தான் நாட்டுக்குத் திரும்பி வர முடியுமென்றதாகவும், அதுவரை அவனது பாதரட்சையையும் மற்ற சகோதர சகோதரிகளையும் அனுப்பும்படி பரதன்



கேட்டு வாங்கி அழைத்துவந்ததாகவும், பன்னிரண்டு வருஷமான பின் தசரதன் இறந்து போனதாகவும், பிறகு ராமன் அயோத்திக்கு வந்ததாகவும், வந்தவுடன் ஊர்ஜனங்கள் ராமனுடைய தங்கையாகிய சீதையை அவளது தமையனாகிய ராமனுக்குக் கலியாணம் செய்வித்து பட்டங் கட்டினதாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

இவைகளை மெய்ப்பிக்க தோழர் அய்யங்கார், அந்தக்காலத்தில் அண்ணனும் தங்கையும் கலியாணம் செய்து கொள்ளும் வழக்கம் உண்டு என்றும், எகிப்து தேச ராஜதர்மமே சகோதரியை மணப்பது தான் என்றும் இதை அறிந்து தான் ரிக்வேதம் 10-வது மண்டலத்தில் 10, 12 சுலோகங்களில் சகோதரியை மணப்பது கண்டிக்கப் பட்டிருக்கிறதென்றும், அதற்கு முன் அவ்வழக்கமிருந்து வந்ததற்கும் மேலும் ஆதாரமாக சூரியனும் அக்கினியும் தங்களது தங்கைகளையே மணந்து கொண்டிருக்கின்றார்கள் என்றும் எழுதியிருக்கின்றார்.

தோழர் சி.ஆர். சீனிவாசய்யங்கார் தாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த வால்மீகி ராமாயணம் பின் பகுதிக் குறிப்பு 431-ம் பக்கத்தில், சீதை தசரதனுடைய மகள் என்றும், அவளை தசரதன் ஜனகனுக்குத் தானம் கொடுத்தார் என்றும், அவள் பூமியில் பட்டால் பூமி இழுத்துக்கொள்ளும் என்றும், ஆதலால் பூமியில் விடாமல் காப்பாற்ற வேண்டுமென்ற நிபந்தனையுடன் தசரதன் கொடுத்தான் என்றும், தசரதன் இல்லாதபோது ஒரு நாள் சீதை பூமியின் மீது நின்றுவிட்டாள் என்றும், அதனால் அவள் பூமிக்குள் மறைந்து போய்விட்டாள் என்றும், பிறகு கொஞ்ச காலம் பொறுத்து ஜனகன் பூமியை உழும்போது சீதை பூமிக்குள்ளிருந்து கலப்பையில் தட்டுப்பட்டு ஜனகனால் எடுத்து வளர்க்கப்பட்டாள் என்றும், ஆனால் ஜனகனுக்கு அவள் தான் முன் வளர்த்து வந்த சீதை என்று தோன்றவில்லை யென்றும், ஆகவே அவளது தமையனாகிய ராமனுக்கே அவளைக் கலியாணம் செய்து கொடுத்து விட்டதாகவும் குறிப்பிட்டு விட்டு, இந்த விஷயம் வசிஷ்ட புராணத்திலும், ஸ்கண்டோத்திர புராணத்திலும் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அன்றியும் இதே தோழர் சீனிவாசய்யங்கார், 'எவனொருவன் தன்னுடைய தங்கையை மணம் செய்து கொள்ளுகின்றானோ அவனது மனைவியைத் தூக்கிக்கொண்டு போவதால் உனக்கு மரணமுண்டு' என்று ராவணனுக்கும் ஒரு காலத்தில் நாரதர் சாபம் கொடுத்திருந்ததாகவும், அந்தச் சாபத்தின் பலனாய் ராவணனானவன் ராமன் தன் தங்கையாகிய சீதையை மனைவியாக மணந்து கொண்ட விஷயம் தெரியாமல் சீதையை தூக்கிக்கொண்டு போனதாகவும், அதனாலேயே ராவணன் ராமனால் கொல்லப்பட்டதாகவும், ராவணனுக்கு உண்மையில் ராமன் தன் தங்கையைக் கட்டிக்கொண்டது தெரியாதென்றும், தெரிந்திருந்தால் சீதையைத் தொட்டிருக்க மாட்டான் என்றும், இந்த உண்மைகள் பார்க்கவ புராணத்தில் இருப்பதாகவும் மேற்கண்ட 431-ம் பக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கின்றார்.



RangaRakes tamilnavarasam.com

மற்றும் இதே தோழர் சீனிவாசய்யங்கார் அதற்குக் கீழேயே சீதை ராவணன் மகள் என்றும், அவள் பிறந்த காலதோஷத்தால் தகப்பனுக்கு (இராவணனுக்கு) ஆபத்து விளையும் என்று நாரதர் இராவணனுக்குச் சொன்னதாகவும் அந்தக் காரணத்தால் இராவணன் தன் மகளாகிய சீதையை ஒரு பெட்டியில் வைத்து சமுத்திரத்தில் கொண்டுபோய் எறிந்து விட்டதாகவும், அது ஜனகனது ராஜ்யத்தில் ஓடும் ஆற்றிலடித்துக்கொண்டு வரப்பட்டதாகவும், அதை ஜனகன் கண்டெடுத்து வளர்த்து ராமனுக்குக் கொடுத்ததாகவும், ராமனும் சீதையும் வனத்திலிருக்கும்போது ராவணன் சீதையைத் தன் மகள் என்று தெரியாமல் எடுத்துக்கொண்டு வந்து விட்டதாகவும், குறிப்பிட்டு விட்டு இந்த உண்மை மவுட்கலிய ராமாயணத்தில் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவைகள் உண்மையாய் இருக்கலாம் என்பதற்கு அவர் ஒரு யுக்தி காரணமும் சொல்லுகிறார். அதாவது, ''சீதையின் பிறப்பைப் பற்றியோ, அவளுடைய பழைய சந்ததியைப் பற்றியோ வால்மீகர் எங்கும் ஒரு வரிகூட எழுதவில்லை. ஆதலால் இந்தக் கூற்றுக்கள் உண்மையாக இருக்கலாம்'' என்கின்றார்.

எனவே சீதை தசரதனுக்கு மகள் என்பதற்கும், ராமனுக்குத் தங்கை என்பதற்கும் இதுவரை 4, 5 ஆதாரங்களும், ராவணனுக்கு மகள் என்பதற்கு இரண்டு ஆதாரங்களும் கிடைக்கின்றன. இன்னமும் மற்ற ராமாயணங்களில் என்னென்ன பந்தத்வங்களும் இருக்குமென்பது ஊகிக்கக்கூட வில்லை.

(இக்கட்டுரை ''ஆனந்த விகடன்'' அனுபந்தத்திற்கு எழுதப்பட்டதாகும்.)

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - மே 1936**



# கிராமப் புனருத்தாரணப் புரட்டு

Back to Nature இயற்கை வழிக்குத் திரும்பு! Back to the Village கிராமத்திற்குப் போ!! Support village industries குடிசைத் தொழிலை ஆதரி! என்கிற பல்லவிகளைத் தேச பக்தர்களில் பலர் இதுபோது பாடி வருகிறார்கள். B.A., M.A. பட்டதாரிகளுக்கெல்லாம் கிராமத்துக்குப் போய் எளிய வாழ்க்கையை யேற்றுக் கொள்ளும்படி உபதேசம் செய்யப்படுகிறது. படித்தவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கும் பாமரரின் தரித்திரத்தைப் போக்குவதற்கும் எல்லோரும் கிராமத்துக்குப் போய் எளிய வாழ்க்கையை ஏற்றுக் கொள்வது தான் சிறந்த மார்க்கம் என்று சொல்லப்பட்டு வருகிறது. கிராமப் புனருத்தாரணஞ் செய்வதற்காக தோழர் காந்தியார் அகில இந்திய கிராமக் கைத்தொழிற் சங்கம் என்பதாக (The All India Village Industries Association) ஒரு சங்கத்தைத் தோற்றுவித்திருக்கிறார். கவர்ன்மெண்டாரும் இந்த வேலையைச் செய்வதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கிவைத்திருக்கின்றனர்.

ஆனால் நாம் இந்த சந்தர்ப்பத்தில் இயற்கை வழிக்குத் திரும்புவதும், கிராமத்திற்குப் போவதும், எளிய வாழ்க்கையை ஏற்றுக் கொள்வதும் நாட்டு மக்களுக்கு நலந்தரக் கூடிய காரியங்களா? நடக்கக் கூடிய காரியங்களா? கிராமத்திலா நமது கதி மோக்ஷம்? என்கிற விஷயங்களைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

### பட்டினமா கிராமமா?

கிராமந்தோறும் மின்சார சக்திகளையும், ரேடியோ நிலையங்களையும், நாடு முழுதும் ஆகாய விமானப் போக்குவரத்து மார்க்கங்களையும் ஏற்படுத்த முயற்சிக்கும் ''சாத்தான்'' அரசாங்கத்தின் கிராம புனருத்தாரண நோக்கத்திற்கும், முறைக்கும் ஒவ்வொருவனும் அவனவனுக்கு வேண்டிய உணவையும் உடையையும் அவனவனே தயார் செய்து கொள்ள வேண்டும் என்கிற ''மகாத்மா'' காந்தியாரின் கிராமப்புனருத்தாரண நோக்கத்திற்கும் முறைக்கும், யாதொரு சம்பந்தமும் இருக்க முடியாது. இருவர் கொள்கை களுக்கும், அடிப்படைத் தத்துவங்களிலேயே, மலைக்கும் மடுவுக்கும் உள்ளது போன்ற வித்தியாசங்கள் இருக்கின்றன. அரசாங்கத்தின் கிராமப் புனருத்தாரண வேலையைப் பற்றி நாம் கவனிக்க தேவையில்லை. நாம் விரும்பினாலும் வெறுத்தாலும் இன்றைய நிலையில், அரசாங்கம் இது



RangaRakes tamilnavarasam.com

விஷயத்தில் நம் அபிப்பிராயத்தை மதிக்கப் போவதில்லை. ஆகையால் இங்கே நாம் ஆராய எடுத்துக்கொண்டது தேசபக்தர் என்பவர்களின் (காந்தியாரின்) கிராமப் புனருத்தாரண - கிராம சேவையைப் பற்றியேயாகும்.

காந்தியாரின் கொள்கைப்படி பட்டண வாசமும் நாகரீக வாழ்க்கையும் இயற்கைக்கு விரோதமானவை; மனிதனுக்கு கெடுதி செய்பவை; கிராம வாசமும் எளிய வாழ்க்கையும் இயற்கையோடொன்று பட்டவை; மனிதனுக்கு நன்மை செய்பவை; ஆகையால் எல்லோரும் கிராமங்களுக்குப் போனால் க்ஷேமம் அடையலாம் என்பது கருத்தாகும். கிராமவாசம் பட்டினவாசம் இரண்டில் எது சிறந்தது என்பதைக் கவனிப்பதற்கு முன் கிராம வாழ்க்கையின் மேன்மைக்கு முக்கிய காரணமாகச் சொல்லப்படும் அதன் தத்துவ பீடமான இயற்கை வாழ்க்கையைப் பற்றி முதலில் ஆராய்வோம்.

## இயற்கை என்பது என்ன?

இயற்கை வாழ்க்கை, இயற்கை வழி, இயற்கைச் சக்தி, இயற்கைச் சட்டம் என்று தாராளமாய்ச் சொல்லப்படும் போது, இயற்கை என்ற வார்த்தையின் தெளிவான அர்த்தம் என்ன என்பது கவனிக்கப் படுவதில்லை. ஆனால் அதன் அர்த்தத்தைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்த வேண்டியது இயற்கை வாழ்கையைப் பற்றிய இந்த ஆராய்ச்சிக்கு மிகவும் அவசியமாகும். ''இயற்கையைப் பின்பற்றி வாழ்க்கை நடத்து'' என்று சொல்லும்போது சாதாரணமாய்க் கவனிக்கப்படாத அர்த்தத்தை முதலில் கவனிப்போம்.

## இயற்கையின் விரிந்த பொருள்

ஒரு பொருளின் தோற்றம், குணம் அல்லது சக்தி, செய்கை, ஆகியவை எல்லாம் சேர்ந்த அதன் முழுத்தன்மையை அப்பொருளின் இயற்கையென்று பொதுப்படச் சொல்லலாம். தீயின் இயற்கை சுடுதல், எரிதல், புகைதல், ஒளிவிடுதல் முதலியன. நீரின் இயற்கை பள்ளம் நோக்கிப் பாய்தல், தன் சமநிலைக்குப் பரவுதல் முதலியன. இம்மாதிரியே எல்லாப் பொருள்களுக்கும் அவைகளுக்குள்ள சக்திகளின் (மனிதனால் கண்டு பிடிக்கப்பட்டதும் கண்டுபிடிக்கப்படாதனவும்) தொகுதியை அப்பொருள்களின் இயற்கை என்னலாம். ஒவ்வொரு பொருளுக்கும் வேறு வேறான இயற்கை இருப்பினும், அவ்வப்பொருளின் இயற்கையானது, கால தேச வேறுபாட்டால் மாறுபாடடையாமல், எவ்விடத்தும் எக்காலத்தும் ஒரே தன்மைத்தாய் இருக்கிறது. பொருள்களுக்குள்ள இயற்கைச் சக்திகள் வெளிப்பட்டு இயங்கும் முறையை அதனதன் சுபாவத்தை இயற்கை விதி அல்லது சட்டம் என்று சொல்லலாம். சூடு விரியச் செய்கிறது. குளிர் இறுகச் செய்கிறது. இதுபோன்ற இயற்கை விதிகளும் காலதேச வேறுபாட்டால் மாறுபாடடையாமல், எங்கும் எப்போதும் ஒரே மாதிரி நிகழக் கூடியவை. காற்றும் தண்ணீரும் இல்லாமல் பிராணிகள் உயிர்வாழ முடியாது என்பதும் ஓர் இயற்கை விதி. இவ்வாறே உலகில் உள்ள எல்லாப் பொருள்களின் எல்லாத் தன்மைகளும் எல்லாச் சக்திகளும்,



அவை இயங்கும் எல்லா விதிகளும் சேர்ந்தது இயற்கையென்று விரிந்த பொருள்கொண்டு பார்க்கும்போது எப்பொருளையும், எச்செய்கையையும் செயற்கை என்று சொல்ல முடியாது. செயற்கை அனைத்தும் இயற்கையே யாகும். ஏனெனில் இயற்கைக்குப் புறம்பான சக்தி செயற்கைக்கு ஏது? இயற்கைச் சக்திகளை ஏவி, இயற்கை விதிகளின் படி இயங்கச் செய்யத்தான் மனிதனால் முடியுமே தவிர, இயற்கையில் இல்லாத புதுச் சக்தியைப் பொருள் களுக்கு ஊட்டவோ, இயற்கை விதிகளுக்கு மாறாக அச்சக்திகளை இயங்கச் செய்யவோ, மனிதனால் முடியாது.

## இயற்கையும் செயற்கையும்

இயற்கைப் பொருள்களையும் இயற்கைச் சக்திகளையும் கொண்டு ஓர் குறிப்பிட்ட நோக்கத்தையடைய மனிதன் செய்யும் முயற்சியும், அம்முயற்சியின் பயனும் செயற்கையெனப்படுகிறது. ஆனால், காவேரிக் கரையிலிருந்த மரம் வெள்ளத்தில் மிதந்து வருவதற்கும், கடல்களைக் கடக்கக் கட்டப்பட்ட கப்பல்கள் தண்ணீரில் மிதந்து செல்வதற்கும் ஆதாரமான இயற்கை விதி ஒன்றே. உலை மூடியை எழுப்பும் நீராவிச் சக்திக்கும், ரயில் என்ஜினை இயங்குவிக்கும் நீராவிச் சக்திக்கும், அளவிலும், அமைப்பிலும் அன்றித் தன்மையில் என்ன வித்தியாசம்? காட்டில், தானே உதிர்ந்து மண்ணில் புதைந்த மாங்கொட்டையும் தோட்டத்தில் குடியானவன் கொண்டுபோய் ஊன்றிய மாங்கொட்டையும் முளைத்தெழுவது ஒரே விதமான இயற்கைச் சக்தியைக்கொண்டல்லவா? ஆகையால் செயற்கையெனப்படும் எல்லா வற்றிலும் மனிதன் செய்யும் முயற்சிகள் இயற்கைக்கு மாறுபட்டனவாகா. இன்ன பொருளை இன்ன நிலையில் வைப்பது, இன்ன வகையில் சேர்ப்பது, அல்லது இன்ன அளவில் பிரிப்பது ஆகிய காரியங்களினால், இன்ன சக்திகள், இன்ன வகையில் தோன்றி இன்ன விதிகளின்படி இயங்கும் என்கிற உண்மைகளைக் கவனித்தறிந்து தனக்குச் சாதகமான பலனை அளிக்கும்படி, அப்பொருளை, அத்தன்மையில் நிறுத்தவோ,. சேர்க்கவோ, பிரிக்கவோ செய்யும் முயற்சிகளை இயற்கைக்குப் புறம்பானவை என்று எப்படிச் சொல்லக்கூடும்? இவ்வாறு முயற்சிக்கும் மனிதனுடைய எண்ணங்களும், மனோ முயற்சியும், இதற்காக இவன் எடுத்துக் கொள்ளும் தேக முயற்சியும் கூட, இயற்கை சக்திகளுக்கும், இயற்கை விதிகளுக்கும் கட்டுப்பட்டே நிகழ்தல் கூடும் என்றால், எது இயற்கை? எது செயற்கை? எனவே, இயற்கை என்பதன் விரிந்த பொருளில் எதுவும் செயற்கையாதல் இல்லையாதலால், ரயில் எஞ்ஜினும், காந்திக்குல்லாயும் இயற்கையேயாதலால், விவசாயமும், கைத்தொழிலும் இயற்கையேயாதலால், ''இயற்கையைப் பின்பற்று; இயற்கை வழியைப் பின்பற்று'' என்று சொல்வதில் அர்த்தமே இல்லை. இயற்கைக்குப் புறம்பாகவோ இயற்கைக்கு மாறாகவோ, ஒரு நிமிஷங்கூட நடக்க முடியாத ஒருவனை, ''இயற்கையைப் பின்பற்று'' என்று சொல்வது, ''உயிர் வாழ வேண்டின் சதா சுவாசித்துக் கொண்டிரு'' என்று சொல்வது போலிருக்கிறது!



RangaRakes tamilnavarasam.com

## இரண்டாவது அர்த்தம்

'இயற்கை வழிக்குத் திரும்பு' என்று சொல்லும் போது தாங்கள் கொண்ட அர்த்தம், மேலே கூறிய விரிந்த எண்ணத்தில் அல்ல, வேறு அர்த்தத்தில் என்று தேச பக்தர்கள் சொல்லக்கூடும். மனிதனுடைய தூண்டுதல், ஏவுதல், முயற்சி முதலிய எவ்வித சம்பந்தமும் இல்லாமல், பொருள்கள் தாமாக இயங்குகின்ற தன்மை தான் நாங்கள் சொல்லும் இயற்கை. இந்தக் குறுகிய அர்த்தத்தின்படிதான், இயற்கை, நம் நடத்தைக்கும் வாழ்க்கைக்கும் வழி காட்டுகிறது, அதை அனுசரித்து வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று சொல்லுவதாகக் காந்தியார் சொல்லலாம். மனித சம்பந்தம் எதுவும் இல்லாமல், இயற்கையாக உள்ள நிலைமையும், மனித முயற்சியின்றித் தானாக நிகழும் நிகழ்ச்சிகளும், நியாயமும், காருண்யமும், தெய்வத் தன்மையும் வாய்ந்தவை யென்றும், பொருள்கள் தானாக இயங்கும் நெறி, உயர் நெறி, உண்மை நெறி, நீதி நெறி என்றும், மனிதனுடைய அறிவு கற்பிக்கும் நெறியும் ஒழுக்கமும், நீதியற்றவை, நேர்மையற்றவை யென்றும், ஆகையால் நாகரிக வாழ்க்கையும், விஞ்ஞான நெறியும், தள்ளத் தக்கவை யென்றும் சொல்லப்படும் வாதங்களை இனி ஆராய்வோம்.

## இயற்கை காட்டும் நியாயம்

மனித சம்பந்தமில்லாது தானாக நிகழும் காரியங்கள் எல்லாம், நியாயமானவை யென்றால், நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் நியாய விரோதமானதாகு மல்லவா? பிறந்த மேனியை மறைத்து வேட்டி கட்டிக் கொள்வது மயிரைச் சிரைத்துக் கொள்வது உணவைச் சமைத்து உண்பது முதலான ஒவ்வொரு காரியமும் இயற்கைக்கு விரோதமாகின்றது. இயற்கை காட்டும் வழியைப் பின்பற்றுபவன், உணவைப் பச்சையாகவே தின்ன வேண்டும்; குளிருக்கும், மழைக்கும் ஒதுங்குவதற்கு வீடு கட்டிக் கொள்ளக்கூடாது; சட்டை போட்டுக் கொள்ளக் கூடாது. ஆனால் மனிதன் இவற்றைச் செய்வதிலிருந்து இந்த அளவில், இயற்கையைத் தன் போக்கில் போக விடாமல் கட்டுப் படுத்துகிறான் அல்லவா? ஆகையால், தானாக இயங்கும் இயற்கையின் போக்கு நியாயமானதல்ல என்பதை இந்த அளவுக்கு ஒப்புக் கொண்டாக வேண்டும். இயற்கையின் சக்திகள் தானாக இயங்கும் நிலையில், மனிதனுக்குச் சகாயம் செய்வதில்லை.

## இயற்கையின் கொடுமை

நமக்கு இன்றியமையாது வேண்டிய மழைத் தண்ணீரை ஆறுகள் அடித்துக் கொண்டு போய் சாகுபடிக்கு உபயோகமில்லாதபடி சமுத்திரத்தில் சேர்க்கிறது. ஆற்று வெள்ளத்தை அணை கட்டித் தேக்கிக் கால்வாய் மூலம் நிலங்களுக்குப் பாய்ச்சிக் கொள்ளும் முயற்சி இயற்கையின் போக்குக்கு விரோதமாயினும் சிறப்புக்குரியதல்லவா? பெருங் காடுகளில் தானாகத் தோன்றுங் காட்டுத் தீ பரந்த பிரதேசங்களை நாசப்படுத்துவதுடன் அப்பிரதேசத்தில் வாழும் அனேக ஜீவப் பிராணிகளையும் உடன்கட்டை ஏறச் செய்கிறது. யாருக்கும் முன் எச்சரிக்கை செய்யாமல் எல்லா ஜோஸ்யர் களையும் ஏமாற்றித் திடீரென்று தோன்றும் பூகம்பங்களால் ஏற்படும் துன்பங்கள் அளவிடக் கூடியதா? தானாக உற்பத்தியாகி மனிதனுடைய அடக்குமுறைக்கு மீறி பெருகி வரும் விஷப் பூச்சிகளும், வியாதிக்கிருமிகளும் துஷ்ட ஜந்துக்களும் மனிதனுக்குச் செய்யும் துன்பங்கள் கொஞ்சமா? மேற்கூறிய கொடுமைகளை ஒரு தனி மனிதன் செய்தால், அச்செய்கையை நியாயமான தென்றோ, காருண்யமானதென்றோ, யாராவது சொல்லத்துணிவார்களா? ஆனால் ஆஸ்திகர்களையும் நாஸ்திகர்களையும், நல்லவர்களையும், கெட்டவர்களையும், அறிஞர்களையும், மூடர்களையும் வித்தியாசமின்றி ஒரே நிலையில் வைத்துத் தன்னுடைய யதேச்சாதிகார ஆட்சி புரியும் இயற்கை நெறியை உயர் நெறியென்றும் நீதிநெறியென்றும் நாம் ஒப்புக்கொள்ள முடியுமா? இந்த இயற்கைப் போக்கைத் தழுவி நாம் நடந்து கொள்ள முடியுமா? அப்படியன்றித் தன் போக்கில் இயங்கும் இயற்கை மனிதனால் அடக்கி ஆளப்படத் தகுதியுள்ளதே யன்றிப் பின்பற்றத் தகுதியுடையதல்ல என்று சொல்வதில் என்ன குற்றம்?

## உணர்ச்சியா அல்லது அறிவா? எதைப் பின்பற்றுவது?

நம்முடைய செய்கைகளுக்கெல்லாம் கர்த்தா, நமது எண்ணங்கள். நம்முடைய எண்ணங்கள், இருவகைகளில் உருக்கொள்கின்றன. இயல்பாக எழும் உணர்ச்சி பற்றியும், ஆராய்ந்து பார்க்கும் அறிவு பற்றியும் என்று இரண்டு விதங்களில் நம் எண்ணங்கள் எழுப்பப்பட்டு செய்கைக்குத் தூண்டு கின்றன. இவற்றுள் எவ்வகை எண்ணங்களை நாம் பின்பற்ற வேண்டும்? உணர்ச்சி பற்றி ஏற்படுபவைகளையா? அறிவு பற்றி ஏற்படுபவைகளையா? உணர்ச்சி பற்றி எழும் எண்ணங்கள் இயற்கையானவையாகும். அறிவு பற்றி எழும் எண்ணங்கள் இயற்கையின் போக்குக்கு மாறுபட்டவையாகும். இதை ஒரு உதாரணங்கொண்டு விளக்குவோம்.

பாதையில் ஒரு பணப்பை இருப்பதை வழிப்போக்கன் ஒருவன் பார்க்கிறான். பணப்பையின் தோற்றம் வழிப்போக்கன் மூளையில் உடனே சில உணர்ச்சிகளை உண்டாக்குகிறது. ''பெரிய பை - நிறையப் பணம் - எல்லாம் ரூபாய்கள் தானோ - பணக்காரனாகி விடலாம் - கஷ்டம் ஒழிந்தது'' என்று இம்மாதிரி உணர்ச்சிகள் உதித்து வழிப்போக்கன் மனத்தை உணர்ச்சி வசமாக்குகின்றன. இயற்கையா யெழுந்த இவ்வுணர்ச்சிகளைப் பின்பற்றி உடனே ஓடிப் பாதையில் உள்ள பையை எடுத்துக் கொள்வது இயற்கையைப் பின் பற்றுவதாகும். ஆனால் இயற்கையுணர்ச்சியைப் பின்பற்ற வொட்டாமல் தடுக்கிறது மூளையின் மற்றொரு சக்தியாகிய பகுத்தறிவு. ''பை நம்முடையதல்ல, சொந்தக்காரன் பக்கத்தில் இருக்கிறானா? -



RangaRakes tamilnavarasam.com

ரோட்டில் யாராவது வருகிறார்களா? - ஓரத்தில் உள்ள மரத்தருகில் ஒருவன் உட்காந்திருக்கிறானே - பையைப் பார்த்துக் கொண்டே இருக்கிறான் - அவன்தான் பையைப் பாதையில் வைத்துவிட்டு மலஜலங் கழிக்கிறான் - பைக்குடையவன் அவனாகத்தான் இருக்கலாம் - அவசரப்பட்டு என்ன பைத்தியக்காரத்தனம் செய்ய நினைத்தோம்'' என்ற எண்ணங்களைப் பகுத்தறிவு கிளப்புகிறது. முதலில் எழுந்த உணர்ச்சிகள் பகுத்தறிவின் நிதான புத்தியால் அடக்கப்பட்டு அவன் நடத்தையை நிர்ணயித்தது. முதலில் எழுந்த உணர்ச்சிகளைப் பின் பற்றி நடந்திருக்கலாமா? அல்லது அறிவைக்கொண்டு நிதானித்து நடந்தது சரியா? நிதானித்து அறிவைக் கொண்டு நடப்பது இயற்கை வழிக்கு மாறானதானாலும், உலகம் ஒப்புக் கொள்ளக் கூடியதல்லவா? இயற்கையுணர்ச்சிகளைப் பின்பற்றி நடப்பது எப்போதும் நியாயமானதாக இருக்காது. பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து இயற்கையுணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி நடப்பதையே உலகம் எப்போதும் சிலாகிக்கிறது.

## செயற்கையின் பெருமை

இயற்கைக்கு மாறாக, இயற்கையின் போக்கைக் கட்டுப்படுத்தி, மனிதனுடைய சௌகரியத்தையும் நன்மையையும் கோரி மனிதன் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் புகழத்தக்கவைகளாக இருக்கின்றனவே யன்றி யாராலும் இழிவு படுத்தப் படுவதில்லை. பெரிய ஆறுகள் இயற்கையில் பிரித்த இரண்டு கரைகளைச் சேர்க்கும் பாலத்தைக் கட்டுவது இயற்கைக்கு விரோதமாயினும் சிறப்புக்குரியதாகும். நிலத்தின் கீழ் உள்ள நீர் ஊற்றுக்களைக் கிணறுகள் மூலம் மனிதன் பயன்படுத்திக் கொள்வதை யார் கூடாதென்று சொல்ல முடியும்? ஆழத்தில் இயற்கை மறைத்து வைத்துள்ள உலோக வகைகளையும், இரத்தினங்களையும் தோண்டி யெடுப்பது புகழ்ச்சிக்குரியதல்லவா? சிவ சமுத்திரம், பாய்கரை நீர் வீழ்ச்சிகளைத் தூரத்திலிருந்து அவற்றின் இயற்கைத் தோற்றத்தைக் கண்டு, ஆகாச கங்கை யென்றும், ஆஸ்ரம வாசத்திற்குத் தகுதியான இடமென்றும், வர்ணித்த கவியும், ரிஷியும் அந் நீர்வீழ்ச்சிகள் ஒளித்து வீணாக்கி வந்த பெருஞ்சக்தியைக் கட்டுப்படுத்தி மனிதன் இட்ட வேலையைச் செய்யும் பணிப் பெண்ணாக மாற்றிக் கொடுத்த இன்ஜினீயரை விட எப்படி மேலானவர் ஆவார்கள்? இராஜபுதனப் பாலைவனத்தில் பளிங்குப் பாறையாக இருந்த இயற்கைப் பொருள் வெட்டப்பட்டு நாடுகடத்தப் பட்டு பல்லாயிரம் கைகளால் அடுக்க ஒரு தாஜ்மஹாலாக மாறிக் காட்சியளித்த போது அவ்வியற்கைப் பொருளின் பெருமை செயற்கை நிலையில் குறைந்தாவிட்டது?

## ஆகையால்

தானாக, மனித சம்பந்தமில்லாமல், இயங்குகின்ற நிலைமையில், இயற்கை யென்பது மனிதனால் பின்பற்றுவதற்கு தகாதது, யோக்கியதையற்றது.



மனிதனால் அடக்கப்பட்டு மாற்றிக் கொள்ளப் படவே தகுதியுள்ளது என்று இது வரை கூறியவற்றால் ஏற்படுகிறது. முதலில் எடுத்துக் கொண்ட விரிந்த அர்த்தத்தில் இயற்கையைப் பின் பற்றுவது அர்த்தமற்றது என்பதை மேலே விளக்கிக் காட்டினோம். மனிதன் இயற்கைப் பொருள்களையே யன்றித் தன்னுடைய இயற்கை இச்சைகளையும் உணர்ச்சிகளையும் கூடப் பின் பற்றக்கூடாது, அவற்றைத் தன் அறிவைக் கொண்டு அடக்க வேண்டு மென்றும், அறிவு கற்பிக்கும் நெறியே, ஞான நெறியே பின் பற்றத் தகுதி வாய்ந்தது என்றும் கண்டோம்.

இனி, இயற்கை வழியிலிருந்தும் அதிகம் மாறுபடாத கிராம வாழ்க்கைக்குப் போய் எளிய வாழ்க்கையை ஏற்றுக் கொள்வது நலம் தரும் என்று சொல்வதைக் கவனிப்போம்.

## மனிதன் இயற்கை

உடம்பெல்லாம் வாயாகவும், வயிறெல்லாம் பல்லாகவும் அமைந்து, உண்பதும் உறங்குவதும் தவிர்த்து வேறு தொழிலை யறியாத ஓரறிவு, ஈரறிவுப் பிராணிகள் கூடத் தனித்து வாழ்வதில்லை. தன் இனத்துடன் சேர்ந்து கும்பலாகவே வாழ்கின்றன. மூன்றறிவு, நான்கறிவு, ஐந்தறிவுகளை யுடைய மிருகங்கள், பறவைகள் முதலான பிராணிகளும் தனித்து வாழ்வ தில்லை; கூட்ட வாழ்க்கையையே விரும்பி நடத்துகின்றன. மனிதரிலும், தலை சிறுத்து, உடல் பெருத்துப் புலன் உணர்ச்சியன்றிப் போத உணர்வில்லாத அஞ்ஞானச் செல்வங்கள் கூடத் தனித்து வாழப் பிரியப்படுவதில்லை. அறிவுள்ள மனிதனோ, என்றும் தன் இனத்தின் கூட்டுறவையும் சங்க வாழ்க்கையையுமே விரும்புகிறான். ''இனிது இனிது ஏகாந்தம் இனிது'' என்ற அபிப்பிராயத்தை நாம் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அன்பின் வழியது உயிர் நிலை யாகையால், மனிதன் எப்பொழுதும் பிறர்க்கு அன்பு காட்டவும், பிறர் அன்பைப் பெறவும் ஆசைப்படுகிறான். மரணத்தின் பயங்கரமெல்லாம், இனிமேல் பிறர் அன்புக்குப் பாத்திரமாகி பிறர் அன்பைப் பெறவும், பிறரிடம் அன்பைச் செலுத்தவும் வசதி யில்லாமற் போகிறதே என்கிற காரணத்தாலேயே, ஏற்படுவதாகச் சொல்லலாம். பிற உயிர்களின் சம்பந்தத்திலிருந்து முற்றிலும் நீங்கி, ஏகாங்கியாக இருக்க வேண்டு மென்ற பயத்தை நினைத்தே உடலை விட்டு நீங்கும் உயிர், மோக்ஷ உலகை விரும்பாது நில உலகிலேயே மீண்டும் இருக்க ஆசைப்படுகிறது. இறந்தவர்களுடைய 'ஆவி' மறுபடியும் இவ்வுலக வாழ்வை விரும்பித் தாங்கள் முன் வாழ்ந்த இடங்களைச் சுற்றிக் கொண்டும், பிற உயிர்களைப் பற்றிக் கொண்டும் ''பேய் பிசாசு''களாகித் தங்களுடைய ஆசைகளைத் தீர்த்துக் கொள்கின்றன என்ற கொள்கையும், மனிதனுக்கு இயல்பாகவுள்ள சங்க வாழ்க்கை விருப்பத்தைக் காட்டுகிறது. தாங்கள் ஏற்படுத்தியுள்ள தண்டனைகளில் எல்லாம் தனியறையில் சிறை வைப்பது (Solitary Confinement) மிகவும் கொடியதென்று அரசாங்கங்கள் நினைப்பதிலும்



RangaRakes tamilnavarasam.com

உண்மையில்லாமலில்லை. இவற்றிலிருந்து மனிதன் எப்போதும் கூட்டமாக வாழவே விரும்புகிறான் என்கிற உண்மை விளங்குகிறதல்லவா?

## சமூக வாழ்வின் ஆரம்பம்

பிராணிகள் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாது வேண்டியவை (1) காற்று (2) தண்ணீர் (3) சாப்பாடு. இவற்றுள் காற்றில்லாமல் சில நிமிஷங்கள் கூட வாழ முடியாது. தண்ணீரில்லாமல் சில நாட்களுக்கு மேல் உயிரோடிருக்க முடியாது. இவ்விரண்டின் இன்றியமையாத் தன்மைக்குத் தக்கபடி, இவ்விரண்டு பொருள்களும் (காற்றும் நீரும்) எல்லாருக்கும் எளிதில் கிடைக்கக் கூடிய விதத்தில், யாவர்க்கும் பொது உடமையாய், எந்தப் பலவானாலும் தன்னுடைய தனி உடமையாக்கிக் கொள்ள முடியாத வகையில், உலகமெங்கும் இயற்கையாய் அமைந்துள்ளன. மூன்றாவதான, 'உணவு' முதல் இரண்டைப்போலப் பொது உடமையாயில்லாமல், மண்ணாசை கொண்ட மன்னராலும், பொன்னாசை கொண்ட மக்களாலும், ஆதியிலிருந்தே தனியுடமையாக்கிக்கொள்ளப் பட்டிருக்கிறது. உணவையும் பொது உடமையாக்கி எல்லார்க்கும் எளிதில் கிடைக்கும்படி செய்யவேண்டு மென்பது, அன்பின் வழிவந்த அறிவாளர் ஒவ்வொருவரும் ஆதி காலந் தொட்டுக் கொண்டுள்ள ஆசை கண்டு வந்த கனா. ''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகியற்றியான்'' என்றும் ''உறுபசியும் ஓவாப்பிணியும், செறுபகையும் சேராதியல்வது நாடு'' என்றும் வள்ளுவர் கூறிப் போந்தார். ''தனி ஒருவனுக்குணவிலையெனில் ஜகத்தினை அழிப்போம்'' என்றார் பாரதி. கனவை நனவாக்கி, உணவையும் பொதுவுடமையாக்கிப் பசியையொழித்து, மக்களுக்குள் ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் பகையையும் ஒழித்து ருஷ்யாவை, நாடாகச் செய்தார் லெனின்.

## நாடோடி வாழ்க்கை

ஓரிடத்திலிருந்து உழுது பயிர்செய்து தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களை உண்டாக்கிக் கொள்ளத் தெரியாத காலத்தில் மனிதன் எதைத்தின்று எப்படி வாழ்ந்தான்? - காடுகள் இருந்த இடங்களில் காய்கனி களைத் தின்று மரப் பொந்துகளிலும், மலைக்குகைகளிலும் வாழ்ந்து வந்தான்.

காய்கனி கிடையாத போது, காட்டில் உள்ள மிருகங்களையும் பக்ஷிகளையும் வேட்டையாடிப் பிடித்துத் தின்றிருந்தான். இவைகளுக்காகக் காடு காடாக வனம் வனமாக அலைந்து திரிந்தான். நீர் நிலைகளை யடுத்துத் தங்கி வந்தான். இவை யொன்றுங் கிடைக்காத இடங்களில் நரமாமிச பட்சணியாகவும் இருந்தான்.

மிருகங்களைப் பிடித்துக் கொன்று தின்றவன், நாளடைவில் அம்மிருகங்களைப் பழக்கி வளர்த்து அவற்றைக் கொல்லாமல், அவற்றின் பொருள்களிலிருந்து உணவையும், உடையையும் பெற்றுக் கொள்ளத்



தெரிந்தான். அக்காலத்தில் அவனுக்கு உணவையும், உடையையும் அளித்த மிருகங்களை வளர்க்க வேண்டி, மேய்ச்சல் காடுகளைத் தேடியலைந்து ஓரிடத்திலும் நிலைத்து வாழாமல் நாடோடி வாழ்க்கை நடத்தினான்.

## கிராமங்களின் தோற்றம்

பிறகு, உழுது பயிர்செய்யத் தெரிந்து கொண்டான். அக்காலத்தில் தான், மனிதன் ஒரு இடத்தில் நிலையாகத் தங்கி வாழ ஆரம்பித்தான். சாகுபடிக்குத் தகுதியான நிலவளமும், குடிப்பதற்கு தண்ணீர் எப்போதும் உள்ளதுமான இடத்தையே தான் தங்கி வசிப்பதற்கு ஏற்றதெனக் கண்டு, இவ்விரண்டு வசதிகளும் பொருந்திய இடங்களில் தங்கினான். மழைத் தண்ணீர் பள்ளம் படுகைகளில் தேங்கி நின்ற நீர்நிலைகளும், மேற்பரப்பில் ஓடும் ஆறுகளுமே, அந்தக்கால மனிதனுக்கிருந்த, தெரிந்த ஜலவசதிகள், நிலத்தின் கீழ் உள்ள ஊற்றுக்களை கிணறு தோண்டி உபயோகிக்க அவனுக்குத் தெரியாது. மழை நீரையும் ஆற்று வெள்ளத்தையும் குளங்களில் தேக்கி, மழையற்ற காலங்களில் உபயோகித்துக் கொள்ளவும் தெரியாது. வருஷ முழுவதும் வற்றாது ஓடும் ஆறுகளையே அவன் நம்பியிருந்தான். ஆகையால் தான் ஆறுகளை யடுத்தே மனிதன் குடியேறிப் பெருகினான். இப்போதுள்ள ஊர்களிலும், நகரங்களிலும் மிகப் பழமையானவைகள் எல்லாம் பெரிய ஆறுகளை அடுத்துள்ளவைகளாகும். காசி, பிரயாகை, பாடலிபுரம், காவிரிப் பூம்பட்டினம், உறையூர், மதுரை, கருவூர், நெல்லை, பேரூர் முதலிய பழைய ஊர்கள் எல்லாம் நதிக்கரை நகரங்களே யாகும். ஈரோடை, வெள்ளோடை, சிற்றோடை, பவானி, கீழ்வானி, மேல்வானி, ஆற்றூர், புனலூர், ஜலத்தூர், மதுக்கரை, மீன்கரை, ஓடத்துறை, நெல்லித்துறை முதலான ஊர்ப்பெயர்கள் அவ்வூர்கள் ஆதியில் தோன்றுவதற்குக் காரணமாயிருந்த ஜலவசதிகளைக் குறிக்கின்றனவல்லவா? இது போலவே, இப்போது ஊர்களாயிருந்த இடம் முன் பெருங்காடுகளாயிருந்து, மனிதன் அக்காடுகளை வெட்டி நாடாக்கின உண்மையையும், நமது நாட்டில் உள்ள பல ஊர்ப் பெயர்கள் தெரிவிக்கின்றன.

தென்னம்பாளையம், பனங்காட்டூர், புளியம்பட்டி, மாமரத்துப்பட்டி, விளாமரத்துப் பட்டி, வேலாம் பூண்டி, ஈஞ்சம் பள்ளி, எட்டிக் குட்டை, புங்கம்பாளையம், வேப்பம்பாளையம், முருங்கைத் தொழுவு, வாகைத் தொழுவு, நெரிஞ்சிப் பேட்டை, வாழைத் தோட்டம், முதலிய ஊர்ப்பெயர்கள் காடுவெட்டி நாடாக்கிய காலத்தில் அவ்விடங்களில் சிறப்பாய் இருந்த மரஞ்செடி தாவரங்களைக் குறிப்பிடுகின்றன. அது போலவே, புலியூர், சிங்கம் பேட்டை, நரிப்பட்டி, பன்றிமடை, கரடிமடை, மானுப்பட்டி முதலிய ஊர்ப்பெயர்கள் அக்காடுகளில் யதேச்சையாயிருந்த மிருகங்களை மனிதன் அழித்து ஊர் கட்டியதைக் குறிப்பனவாகும். நதிக்கரைகளில் ஊர்கள் உண்டாக்கிப் பெருகிய மனிதன், ஜனப்பெருக்கால், நதிகளை விட்டு மேட்டுப் பாங்கான நிலங்களிலும் குடியேறவேண்டிய அவசியம் ஏற்பட்டபோது,



RangaRakes tamilnavarasam.com

ஆறுகளைத் தவிர்த்து வேறு ஜலவசதியைக் காணமுயன்றான். நிலத்தைத் தோண்டிக் கீழ் உள்ள ஊற்றுக்களிலிருந்து நீர் எடுத்துக் கொள்ளத் தெரிந்தான். மேட்டுபாவி, பூலாங்கிணறு, வெள்ளக் கிணறு, கரடி பாவி, பருபாவி, கிணற்றுக்கடவு, பண்ணைக்கிணறு, அல்லிக் கேணி, கூவலூர் முதலிய ஊர்ப்பெயர்கள், மனிதன் கிணறு தோண்டத் தெரிந்து கொண்ட பின், ஆற்றங் கரைகளைவிட்டு, மேட்டுப் பிரதேசங்களில் குடியேறிய காலத்தில் தோன்றியவை என்று தெரிவிக்கின்றன. இவ்வாறு தோன்றிய குடியிருப்புகள் அங்குள்ள நீர்வளம் நிலவளத்திற்கேற்ப வளர்ந்து வந்தன. சிறு சிறு கூட்டங்களாய்ப் பரவி நாடெங்கும் குடியிருப்புகளை (கிராமங்களை) உண்டாக்கி வாழ்ந்த மக்களை, ஆட்பலமும், அறிவும் கொண்ட ஒருவன் அடக்கித் தலைவனாகித் தன் அதிகாரத்தையும், ஆட்சியையும் நிலைக்கச் செய்ய அங்கங்கே கோட்டை களைக் கட்டினான். இந்தக் கோட்டைகளையடுத்தும் ஊர்கள் தோன்றின. அரசனையண்டி அவனைக் காத்து, மற்றவர்களை அரசன் ஆணைக்கடங்கச் செய்யவும், மதத்தின் பெயரால் மக்களுக்கு ஒழுக்கம் கற்பிக்கவும் அங்கங்கே கோயில்கள் தோன்றின. இக்கோயில்களையடுத்தும் ஊர்கள் ஏற்பட்டன.

## கிராம சமூகம் பழைய நிலை

நாள் முழுதும் ஒரு முயலையோ, மானையோ பின் பற்றிக் காடு முழுதும் ஓடித்திரிந்து அதைக் கொன்று கொண்டு வந்து, காய்ந்த சுள்ளிகளைச் சேர்த்துச் சக்கிமுக்கி தட்டித் தீயுண்டாக்கி இறைச்சியை வாட்டித் தானும் தன் மனைவி மக்களும் தின்று மரத்தடியிலும், மலைக்குகையிலும் வாழ்ந்து வந்த மனிதன், விவசாயம் செய்யத் தெரிந்து கொண்ட பின் ஓரிடத்தில் தங்கி, விளைநிலத்திற்கருகில் வளைவு கட்டிக் கொண்டு வாழத் தொடங்கியபோது, இவனுக்கருகில் இவன் இனத்தார்களும் இவனைப்போலவே வளைவுகள் கட்டிக்கொண்டு வாழலாயினர்.

விவசாய வாழ்க்கையில் ஈடுபட்டு ஓரிடத்தில் நிலைத்து வாழ வாரம்பித்த போது, மனிதன் வாழ்க்கையில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. ஒரு குடியிருப்புக்குச் சுற்றிலுமுள்ள விளை நிலங்களை அக்குடியிருப்பில் தங்கிய பல குடும்பங்களும் தங்களுக்குள் பங்கிட்டு அவரவர் நிலத்திற்கு வரையறை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் வந்தது. ஆகையால் நிலம் தனி உடமையாக்கப் பட்டது. தனியுடமைக் கொள்கை ஏற்பட்ட பின் நாளடைவில் சிலர் அதிக நிலங்கள் பெறவும், சிலர் நிலம் இல்லாது போகவும் நேர்ந்ததில் ஆச்சரியம் இல்லை. பயிர்த்தொழில் செய்ய வேண்டியவன் வேறு தொழில்களைச் செய்ய போதிய சாவகாசமும் திறமையும், பயிற்சியும் பெற முடியாமற் போயிற்று. நிலம் இல்லாதவர்கள் வேலையற்றுப் போகவே, குடியானவனுக்கு வேண்டிய இதர பொருள்களையும் சௌகரியங்களையும் செய்து கொடுத்துக் குடியானவனிடமிருந்து தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஒரு கிராமத்தில் வசித்தவர்களில் பெரும்பாலானவர் பயிர்த்தொழிலைச் செய்தனர்.



இவர்களுக்கு வேண்டிய உடையைத் தயாரித்துக் கொடுக்கச் சேடன், சேணியன், கைக்கோளனும், உழவுக் கருவிகளைச் செய்து கொடுக்கத் தச்சன், கொல்லனும், பாத்திரம் செய்து கொடுக்கக் குயவன் கன்னானும், வீடு கட்டவும், கிணறு வெட்டவும் ஒட்டன், கொத்தனும், இலை தயாரித்துக் கொடுக்கவும், மாலை கட்டிக் கொடுக்கவும் ஆண்டி, பண்டாரமும், துணி வெளுத்துக் கொடுக்க வண்ணானும், க்ஷவரம் செய்து அழகு படுத்த நாவிதனும், அணிகலன் செய்து கொடுக்கத் தட்டானும், பண்ணை வேலைகளில் கடின வேலைகளைச் செய்யப் பள்ளர், சக்கிலியரும் என்று அவசியமான தொழில்களைச் செய்யச் சிலர் ஏற்படுத்தப் பட்டனர். கிராம வாழ்க்கை பின்னும் சிறிது நாகரிகப்பட்ட போது, குடியானவன் குடித்துக் களிக்கக் கள்ளும், மதுவும் தயாரித்துக் கொடுக்கச் சிலரும், கோவில்களும், பூசாரிகளும், தேவடியார்கள், சின்னமேளம், பெரிய மேளங்களும் தோன்றின. மேற்கூறிய அனைவரும் குடியானவன் தயவை எதிர்பார்த்து அவன் விளைவிப்பதில் பங்கு பெற்று வாழ்ந்து வந்தனர். இவ்வாறு சமூக வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாவற்றையும் தாங்களே தயாரித்துக் கொள்ளக் கூடிய வகையில் ஜனங்களும், தொழில்களும் ஏற்பட்டு, ஒவ்வொரு கிராமமும் ஒரு தனிப்பட்ட சமூகமாய் பிறர் தயவை எதிர்பாராமல் அக்காலத்திய கிராம வாழ்க்கை நடத்தப்பட்டு வந்தது. இன்றைய நிலையில் மீண்டும் இவ்வித கிராம வாழ்க்கைக்குத் திரும்புவது சாத்தியமான காரியமா? இவ்வித கிராமங்கள் பலவற்றால் ஆகிய ஒரு நாட்டை ஒருவன் கைப்பற்றி ஆட்சி செய்யும்போது, அவன் இந்தக் கிராம வாழ்க்கையின் அமைப்பைச் சீர்குலைக்காமல், மேலும் பலமாக்கி வைத்துத் தன் ஆட்சியை நிலை பெறுத்துவதற்குச் சாதகம் செய்து கொண்டான். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தலைவனை ஏற்படுத்தி அவன் மூலம் தனக்குத் தேவையான கப்பத்தை வாங்கிக் கொண்டு தன் கட்டளைப்படி நடந்து தனக்குதவிபுரிபவர்களுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் வரி நீக்கப்பட்ட விளைநிலங்களை ஊழிய இனாமென்றும், தேவதாயம், பிரம்மதாயம் என்றும் சாமிக்கும், பூசாரிக்கும், பிராமணருக்கும் கொடுத்து இவர்களைத் தன் ஆட்சிக்கு அரண்களாக்கிக் கொண்டான். **கிராம அமைப்பு முடி ஆட்சிக்கும், கொடுங்கோன்மைக்கும் சாதகமான அமைப்பு** என்பதைக் கண்டதினால், பழைய இந்து அரசர்கள் காலத்தில் இருந்த இவ்வமைப்புப் பின்னால் முகமதிய அரசர்களாலும், அதற்குப்பின் வந்த கிருஸ்தவ (இங்கிலீஸ்) அரசாங்கத்தாலும், அப்படியே காப்பாற்றப்பட்டு வருகிறது. மானியங்களும், இனாம்களும், பிரம்மதாயத்திற்கும் தேவதாயத்திற்கும் இன்றும் இருந்து வருகின்றன. சிறு சிறு கிராமங்களில் தனிப்பட்ட சமூகங்களாய் வாழ்ந்து வந்த மக்கள், இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன என்று கவலை கொள்ளாமல் இருந்ததில் ஆச்சரியமில்லை. கிராமவாசிகளுக்குத் தங்கள் கிராம எல்லைக்கு அப்பால் உள்ள எதைப்பற்றியும் அக்கரை இல்லை. விரிந்த மனப்பான்மையும், நாட்டுப் பற்றும், பொது உணர்ச்சியும் இவர்களுக்குள் ஏற்பட வசதிகள்



RangaRakes tamilnavarasam.com

இருக்கவில்லை. சண்டமாருதத்தால் கலக்கப்பட்டுக் கொந்தளிக்கும் கடலின் கரையோரங்களில், அலைகள் ஒதுக்கும் குப்பை கூளங்களும், பாசியும், நுரையும் படிந்து, சலனமற்றிருக்கும் உப்பங்கழிகளைப்போல, உலகில் நடக்கும் எவ்விதப் புரட்சிகளுக்கும் எட்டாது உணர்வற்று அசைவற்று இருந்து வந்தன நம் நாட்டுக் கிராமங்கள்.

## நிலைக்கச் செய்ய முடியுமா?

மிகப் பழமையானதும், எளிதில் உடைக்க முடியாததும், தொடர்ச்சியாக அரசாங்கங்களின் பாதுகாப்புப் பெற்று வந்ததுமான இந்தக் கிராம அமைப்பும், கிராம வாழ்க்கை முறையும், நாகரீக வளர்ச்சியால் நாளடைவில் சீர்குலைந்து சின்னா பின்னப்பட்டு இன்று அழிந்து ஒழிந்து போகும் நிலையில் இருக்கிறது. பலங்குன்றி, ஜீவநாடிகள் எல்லாம் அடங்கிக் குற்றுயிராயிருக்கும் இவ்வமைப்பையும் முறையையும், பலங் கொடுத்து உயிர்ப்பிக்கப் பல வைத்தியர்கள் முயற்சிக்கின்றனர். இந்த வைத்திய போர்டின் தலைவராக விளங்குகின்றார் தோழர் காந்தியார். தன்னுடைய உடலுக்கு தானே வைத்தியம் செய்து பல பல விதமான உணவுகளை உண்டு பட்டினி கிடந்தும் பரீக்ஷித்துப் பார்ப்பது போல், கிராமவாழ்க்கையைப் புனர் நிர்மாணம் செய்வதற்கும் பல மருந்துகள் பரீக்ஷிக்கப் படுகின்றன. 'நூற்போர் சங்கம்' என்ற ஊசி வழியாகக் 'கதர்' என்னும் மருந்து சென்ற பத்து வருஷங்களாக இஞ்செக்ஷன் செய்யப்பட்டு வருகிறது. கிராமக் கைத்தொழில் அபிவிர்த்தி சங்கம் என்கிற புது ஊசி ஒன்று இப்போது தயாரிக்கப்பட்டு, கருப்பட்டியும், விளக்கெண்ணெயும், இஞ்செக்ஷன் செய்யப்பட வேண்டும் என்று இப்போது தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இந்த வைத்தியம் நோயைத் தீர்க்குமா?

## கிராம வாழ்க்கையின் தற்கால நிலை

கிராமங்களைப் பிடித்திருக்கும் நோய் என்ன? எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம். கூலி கிடைக்காத குறை. வேலையும், கூலியும் கிடைக்காததால், கிராமங்களில் உள்ளவர் கிராமங்களை விட்டுப் பட்டணங்களுக்கும் பிற நாடுகளுக்கும் போய் வாழ வேண்டிய நிர்ப்பந்தம். இதனால் கிராமங்கள் நாளுக்கு நாள் மெலிந்து, சிறப்பிழந்து வருகின்றன. ஒவ்வொரு சென்ஸஸ் கணக்குப்படியும், கிராமாந்தரங்களில் வாழும் ஜனங்களின் தொகை குறைந்து கொண்டும், பட்டணங்களின் ஜனத்தொகை வளர்ந்து கொண்டும் வருகின்றன. கிராமங்களில் வசித்து வந்த உயர் ஜாதிக்காரர் என்பவர்களில் அநேகமாய் எல்லோரும் கிராமங்களை விட்டுப் பட்டணங்களில் குடியேறி விட்டனர். எங்கு பார்த்தாலும், கிராமங்களில் உள்ள அக்கிரகாரங்கள் எல்லாம் பாழடைந்து கிடக்கின்றன. பட்டணங்கள் ஒவ்வொன்றிலும் ''எக்ஸ்டென்ஷன்ஸ்'' என்கிற அக்கிரகாரப் புதூர்கள் ஏற்பட்டு வருகின்றன. கீழ் ஜாதிகள் என்போரிலும், விவசாயிகளைத் தவிர்த்த மற்றையோரில் பெரும்பாலோர், பெரிய ஆலைகள் உள்ள பட்டணங்களுக்குப் போய்க் கொண்டு வருகின்றனர்.



## பட்டணம் போவதேன்?

விவசாயத் தொழிலில் ஈடுபட்ட குடியானவர்களைத் தவிர, மற்ற ஜாதியார்கள் எல்லோரும், கிராமங்களை விட்டு பட்டணங்களுக்குப் போவதேன்? இன்றைய நிலையில், கிராமங்களில், விவசாயி ஒருவனுக்கே, தொழிலும், ஜீவனம் செய்ய மார்க்கமும் இருக்கிறது. மற்ற தொழிலாளி களுக்கும் சுக ஜீவனக்காரருக்கும் கிராமங்களில் பிழைக்கும் வழி இல்லை. வண்ணான், நாவிதன், புரோகிதன், பூசாரி, ஆண்டி, ஒட்டன், பள்ளன், சக்கிலியன் முதலானவர்களுக்கு ஓரளவு தொழில் இருக்கிறதாகச் சொன்னாலும், தச்சன், கொல்லன், தட்டான், கன்னான், குயவன், வாணியன், சேணியன், சேடன், கைக்கோளன் முதலான பலருக்குத் தங்கள் குலத் தொழிலைக் கிராமங்களில் நடத்தி அதன் மூலம் ஜீவனம் செய்ய இன்றைய நிலை இடம் கொடுப்ப தில்லை. குடியானவனுக்கு இவர்கள் உதவி தேவை இல்லை. ஆகையால் அவன் தன் விளைவில் இவர்களுக்குப் பங்கு கொடுப்பதை நிறுத்தி விட்டான்.

## கிராமக் கைத்தொழில் அழிவின் காரணங்கள்

சமீப காலம் வரை, குடியானவனுக்கு வேண்டிய சகல பொருள்களும் கிராமங்களில் உள்ள பரம்பரைத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்டு வந்தன. இன்று இப்பொருள்கள் எல்லாம் அனேகமாய் இயந்திர சாலைகளில் தயாரிக்கப்பட்டு வியாபாரிகளால் கடைகளிலும் சந்தைகளிலும் விற்கப்படு கின்றன. உழவுத் தொழிலுக்கு இன்றியமையாது வேண்டிய கலப்பை, ஏர்ச்சட்டம், பரம்புச் சட்டம், நுகம், தடி, உழுகோல் முதலிய மரச்சாமான் களைப் பெரும்பாலும் இன்றைய குடியானவன் தன் ஊரிலுள்ள தச்சனிடம் போய் வாங்கிக் கொள்வதை நிறுத்திவிட்டான். அடுத்துள்ள பட்டணத்திற்குப் போய் மரக்கடையில் வாங்கிக்கொள்கிறான். கொழு, கொத்து, அரிவாள், மண்வெட்டி முதலிய இரும்புச் சாமான்களை பட்டணக்கரையிலுள்ள இரும்புக் கடையில் வாங்குகிறானேயன்றி உள்ளூரில் உள்ள கொல்லனிடம் பெற முடிவதில்லை. இயந்திரசாலைகளில் செய்யப்படும் இரும்புச் சாமான்கள் அதிக நயமாகவும் மலிவாகவும் கிடைக்கின்றன. மரச் சாமான்களும் இயந்திரசாலைகளில் அறுவை செய்து, ரயில் மார்க்கமாக இறக்குமதி செய்யப்பட்டு, மரக்கடைகளில் மொத்தமாகத் தயார்செய்யப்படுவதால் விலை குறைவாகவும், பொருள் நயமாகவும் கிடைக்கின்றன. உழவுத் தொழில் கருவிகளின் நிலைமையே இப்படியானால், மற்ற பொருள்களைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. மில் துணிகள் மிகக் குறைந்த விலைக்குக் கிடைப்பதால், சேடன், சேணியன், கைக்கோளன் முதலியவர்களின் தொழில்கள் முடங்கிவிட்டன. ஷராப் கடைகளில், தேவையான பொன், வெள்ளி நகைகள் நாகரிகமாகத் தயாரிக்கப் பட்டு, எப்போதும் தயாரிலிருப்பதால், தட்டான் கிராமத்தை விட்டுப் பட்டணங்களில் உள்ள ஷராப்புக் கடைக்காரனிடம் கூலிக்கு வரவேண்டியதாயிற்று. பீங்கானும்



RangaRakes tamilnavarasam.com

அலுமினியப் பாத்திரமும், இயந்திரங்கள் மூலம் ஏராளமாய் உற்பத்தி செய்யப்பட்டு குறைந்த விலைக்குக் கிடைப்பதால், குயவன், கன்னான் முதலியவர்களின் தனிப்பட்ட தொழிலுக்குத் தேவையில்லாது போயிற்று. கூரைகளுக்குப் போடும் ஓடுகள் கூட, மலையாளத்தில் இயந்திரங்கள் மூலம் பெருவாரியாக உற்பத்தி செய்யப்பட்டு நாடெங்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறே எந்தப் பொருளை எடுத்துக் கொண்ட போதிலும், தனிப்பட்ட ஒரு கைத்தொழில்காரன், முன்போல் அதைச் செய்து இயந்திர உற்பத்திப் பொருளுடன் போட்டியாக விற்க முடியாத நிலையில், தன் தொழிலை விட வேண்டியவனாகி விட்டான். கிராமக் கைத் தொழில்கள் அழிந்ததற்கு முக்கியமான காரணம், இயந்திரப் பெருக்கமும் இயந்திர உற்பத்தியும் என்று சொல்லலாம். இயந்தரங்கள் மூலம், பொருள்கள் பெரு வாரியாக உற்பத்தி செய்யப்படுகின்றன. பெருந்தொகையாகத் தயாரிப்பதில் விலை குறைகிறது. விலை குறைவாயுள்ள இயந்தர உற்பத்திப் பொருளை, வாங்குபவன், ஆதரிக்கிறான். இயந்தரமும் கிராமக் கைத்தொழிலாளியும் போட்டிபோட்டதில், ரயிலுடன் போட்டி போட்டு ஓடிச்செத்த குதிரையைப் போல, கைத்தொழில்காரன் தோற்றுத் தன் தொழிலை இழந்தான்.

## இரண்டாவது காரணம்

போக்கு வரவுக்குரிய வசதிகள் முன்காலத்திற்கு இப்போது மிகமிக அதிகரித்து விட்டதும் கிராமக் கைத்தொழிலின் வீழ்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாகும். முன் காலத்தில் ஒரு கிராமத்துப் பொருள் அடுத்த கிராமத்திற்குப் போவது கூட மிகுந்த கஷ்டமானதாயிருந்தது. மிகவும் விலை பெற்ற, அல்லது, இன்றியமையாத பொருள்களை ஒரு நாட்டிலிருந்து வேறுநாட்டிற்குக் கொண்டு போகப்பட்டன. இன்றைய தினம் சர்வ சாதாரணமாய்க் கிடைக்கும் உப்பு ஒருகாலத்தில், உள் நாட்டு ஜனங்களுக்கு (சமுத்திரக் கரையிலிருந்து அதி தூரத்தில் உள்ளவர்களுக்கு) கிடைத்தற்கரிய பொருளாயிருந்தது. போக்கு வரவு சாதனங்களின் குறைவும் கஷ்டமும், கிராமக் கைத்தொழிலாளியின் கரடு முரடான சாமான்களை அதிக விலைக்கு விற்கத் துணை செய்தன. தற்காலத்தில் போக்குவரத்துக்குள்ள மிகுந்த வசதிகள், இயந்திர உற்பத்திப் பொருள்களை மூலை முடக்குகளில் எல்லாம் பரப்பிக் கிராமக் கைத்தொழில் காரன் வாழ்க்கையைக் கெடுத்து விட்டது. அழுகிற குழந்தைக்கு விளையாட்டுச் சாமான் கொடுத்து சமாதானப்படுத்தும் அன்பு, தாய்க்கு அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது. ஆனால் அதற்காக அன்று போல, தச்சனைத் தேடி, மரம் தேடிக்கொடுத்து, அவன் கேட்கிற கூலியும் கொடுத்து, ஒருவாரம் பத்துநாள் அவனிடம் நடந்து ஒரு மரப் பொம்மை வாங்கிக் கொடுக்கிற தாயார் இன்றில்லை. சந்தைக்குப் போகிறபோது, முக்கால் துட்டுக்கு ஒரு ஜப்பான் பொம்மை வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கிறாள். குழந்தையும் தச்சன் செய்த மரக்கட்டை பொம்மையை விடப் பகட்டான ஜப்பான் பொம்மையை அதிகப் பிரியமாக ஏற்றுக்கொள்கிறது.



## மூன்றாவது காரணம்

பண்டு தொட்டே, கிராமங்களில், கைத்தொழில்களுக்கும், தொழிலாளர் களுக்கும் இருந்து வந்த இழிவும், கிராமக் கைத்தொழில் க்ஷீணத்திற்கு ஒரு காரணமாகும். உழுதுண்டு வாழ்பவனே வாழ்பவன், மற்ற எல்லோரும் தொழுது உண்டு பின்னால் திரிபவர் என்கிற நிலைமைதான் கிராமங்களில் இன்றும் இருக்கிறது. பட்டணங்களில் எவன் எந்தத் தொழிலைச் செய்தாலும் கேட்பவன் இல்லை. சக்கிலியொருவன் காப்பிக்கடை வைப்பதைத் தடுக்க முடியாது. தற்போதுள்ள சமூக நிலையில், அவனுக்கு அது லாபகரமாக இருக்காது என்கின்ற பயத்தினால் அவன் வைப்பதில்லையே தவிர, நேர்முகமான தடையில்லை. ஆனால் கிராமத்தில், ஜாதியாசாரமும், குல ஆசாரமும் ஒருவன் தனக்கிஷ்டமான தொழிலைச் செய்வதற்குத் தடையா யிருக்கின்றன. கைத்தொழில்காரருக்கெல்லாம் பொதுவாகச் சில அவமரியாதை களும், இழிவுகளும் இருந்து வருகின்றன. சில ஜாதிகள் செருப்புப் போட்டுக் கொண்டு நடக்கக் கூடாது, குதிரையேறக் கூடாது, வண்டியேறக் கூடாது, வேஷ்டியை முழங்காலுக்குக் கீழே தொங்க விட்டுக் கட்டிக் கொள்ளக் கூடாது என்ற பல கொடுமைகள் இன்னும் அனேக கிராமங்களில் இருந்து வருகின்றன. இவ்வித நிர்ப்பந்தங்களுக்கடங்கித் தன் சுயமரியாதையை யிழந்து தொழில் செய்து கிராமங்களில் வாழ்வதை விடப் பட்டணங்களுக்குப் போவது மேல் என்று நினைத்து கிராமங்களை விட்டவர் பலர். பட்டணங்களில் தொழில் செய்வது லாபகரமும் ஆகும் என்று தெரிந்த பின் கிராமங்களில் இருக்க எந்தத் தொழிலாளியும் விரும்ப மாட்டான். ஈன ஜாதிகள் என்கிற இழிவைச் சுமந்து கொண்டு, ஈனத் தொழில் என்று ஏசப்படும் தொழிலைச் செய்து அரை வயிற்றுக்கும் போதாக் கஞ்சி குடித்துக் கிராமத்தில் வாழ்வதை விட, பட்டணம் வந்து, ஒரு சலவைச் சாலையையோ, 'பார்பர் ஷாப்' அல்லது, ''ஷேவிங் சலூன்'' என்ற காரியாலயத்தையோ ஏற்படுத்திக் கொண்டு, சுயமரியாதையுடன் தொழில் செய்வது மேல் என்று கிராமத்து வண்ணானும், நாவிதனும் பட்டிணத்திற்கு வருவதை யார் ஆக்ஷேபிக்க முடியும்? எனவே, கிராமங்களில் இன்னும், பலம் பெற்றிருக்கிற ஜாதிக்கட்டுப்பாட்டின் கொடுமை களும், இழிவுகளும், அனேக தொழிலாளிகளைக் கிராமங்களிலிருந்து துரத்தி விட்டன என்று சொல்வது சிறிதும் மிகையாகாது.

## அடிப்படையான காரணம்

கிராம அமைப்பின் அஸ்திபாரம் அசைந்து, கிராம வாழ்க்கை என்ற பழய கோபுரம் இடிந்து விழுவதற்கு நான்காவதாக ஒரு முக்கிய காரணம் உண்டு. அது என்னவென்றால், மேற்கத்திய (ஆங்கில) கல்வியும், அக்கல்வி போதிக்கப்படும் முறையும். சாத்தான் அரசாங்கத்தின் கொடுமைகளில் எல்லாம் மிகக் கொடுமையானது மேற்கத்திய கல்வி (Western education) இங்கிலீஷ் படிப்பு, என்று காந்தியார் சொல்கிறார். ஆனால் இந்த நாட்டு மக்கள், சமதர்ம ஆட்சிக்கு லாயக்காவதற்கும், நாகரீக மடைந்த மற்ற நாடுகளைப் போல்



RangaRakes tamilnavarasam.com

உயரிய வாழ்க்கை நடத்துவதற்கும் வேண்டிய ஆசையைக் கிளப்பி, ஜனங்களின் கண்களைத் திறந்து, தங்கள் தரித்திர வாழ்க்கையில் அதிருப்தியை உண்டாக்கி, இன்ப வாழ்க்கையில் மோஹத்தைக் கொடுத்து அவ்வாழ்க்கையை விரைவில் அடையத்தக்க பயிற்சியையும் கொடுத்து வருவது, இங்லீஷ் படிப்பும், ஆண் பெண், ஜாதி, மத, வித்தியாசமின்றி அது போதிக்கப்படும் முறையுமே என்பது மறுக்க முடியாத உண்மை. கிராமவாசிகளான குடியானவனையும் தொழிலாளியையும், பட்டிக்காட்டு முட்டாள்கள், காட்டுமிராண்டிகள்'' என்று இதுவரை ஏசி இழிவுபடுத்தி வந்த படித்த கூட்டத்தார், இன்றையதினம் ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று சொல்லியும் மேல் வரி எழுதிக் கொண்டு நடிக்கவும் ஏற்பட்ட நிர்ப்பந்த நிலைமை எப்படி வந்தது? இங்கிலீஷ் படிப்பும் அதன் விளைவாகிய சமத்துவ உணர்ச்சியும் பாமர ஜனங்களுக்குள் பரவியதா லல்லவா? சத்திரத்துச் சாப்பாடும் மடத்து நித்திரையும் தங்கள் பிறப்புரிமையாகக் கொண்டு வாழ்ந்த கூட்டத்தார்களே இன்றைய தினம் ''வீணில், உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்'' என்ற சமதர்ம தீர்க்கதரிசியாகிய பாரதியின் அதிதீவிரப் பொது உடமைத் தத்துவத்தை ஒப்புக் கொண்டவர்கள் போல் நடிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைமையும், மேற்கத்திய கல்வியின் விளைவால் அல்லவா?

ஒரு பட்டிக் காட்டில் தாழ்ந்த குலமென்பதிற் பிறந்த ஒரு சாமிக்கண்ணு, உலகம் மதிக்கத்தக்க ஒரு பேரறிஞராய் விளங்குவதற்கு இடமளித்தது, சாத்தான் அரசாங்கத்தின் மேற்கத்திய கல்வி முறையல்லவா? பழய தர்மப்படி, படிப்பதற்கு உரிமையில்லாத ''சூத்திர'' குலங்களிற்பிறந்த ஒரு சுப்பராயனும் ஒரு செங்கோடனும் ஷண்முகமும், முதல் மந்திரியாகவும், ஜில்லா கலெக்டராகவும், திவானாகவும் வர முடிந்தது தற்போதைய கல்வி முறையால் அல்லவா? நமது அம்பத்காரும், சிவராஜூம், சீனிவாசனும், இழி குலங்கள் என்று சொல்லப்படும் ஜாதிகளில் பிறந்தும், புகழ் பெற்றுக் கண்ணியமான கனவான்களாகவதற்குத் துணை நிற்பதெது? இவர்களைப் போன்ற அறிவாளிகள், பண்டைக்காலத்தில், ஒரு சம்பூகனாகவோ, சாத்தானாகவோ இருந்து அரச தண்டனைக்கும், சமூக நிந்தனைக்கும், ஆளாகி ஒழியவும், அல்லது ஒரு பிண்ணாக்கு சித்தனாகவோ, ஒரு பாம்பாட்டிச் சித்தனாகவோ, கல்லுளி சித்தனாகவோ மாறிச் சந்நியாசி வாழ்க்கையை மேற் கொள்ளவும் தானே முடிந்தது? ஆகையால், **இந்நாட்டில் சமத்துவ உணர்ச்சி பரவுவதற்கும், ஜாதி பற்றிய தொழில் முறைகள் கைவிடப்பட்டு, அறிவு பற்றியத் தொழிலை மாற்றிக் கொண்டு உயர்வடைவதற்கும் சௌகரியம் உண்டானதன் அடிப்படைக் காரணம், மேற்கத்திய (இங்கிலீஷ்) படிப்பும் அப்படிப்பு வித்தியாசமின்றி எல்லார்க்கும் போதிக்கப்படுவதுமேயாகும்.**

மேற்கூறிய காரணங்களால் கிராமக் கைத்தொழில்கள் சீர்குலைந்தன. கொஞ்ச நஞ்சம் உள்ள தொழிலாளிகளும் கிராமங்களை விட்டுப் பட்டணங்களில் குடியேறி வருகின்றனர். கிராமங்களில் தொழிலாளர் நிலை இப்படியாக, உழவுத் தொழிலிலேயே ஈடுபட்டுள்ள குடியானவர்களைப் பற்றியும் விவசாயக் கூலிகளைப் பற்றியும் இனிக் கவனிப்போம்.

## கிராமக் குடியானவன் நிலைமை

கிராமங்களில் உள்ள உழு நிலங்களில் பெரும்பாகம் அவற்றைச் சாகுபடி செய்யும் குடியானவன் கையிலிருந்து பட்டணங்களில் உள்ள வக்கீல்களுக்கும், பெருஞ் சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களுக்கும், சௌகார்களுக்கும், முதலாளிகளுக்கும் மாறிவிட்டன. மாறிக்கொண்டு வருகின்றன. சொந்த நிலம் உடைய குடியானவன் தொகை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. சொற்ப நிலம் உடையவனுக்கு உழவுத்தொழிலில் தன் குடும்பத்திற்குப் போதிய வருவாய் கிடைக்காததால், கடன் வாங்கி விரைவில் தனக்குள்ள சிறிது நிலத்தையும் இழந்து வருகிறான். குத்தகை அல்லது குடிவாரத்திற்குச் சாகுபடி செய்பவர் அதிகரித்து வருகின்றனர். இவர்கள் தங்கள் உழைப்பின் முழுப் பிரயோஜனத்தையும் அடைவதில்லை. பெரும் பகுதியை பட்டணங்களில், உண்டுகளித்திருப்போர்க்கு உரிமையாக்க வேண்டியவனாயிருக்கிறான். பெரிய மிராஸ்தார்கள் என்கிற குடியானவர்கள், கிராம வாழ்க்கையின் குறுகிய உணர்ச்சிகளால், தங்களுக்குள் குரோதங் கொண்டு கட்சி கட்டிக்கொண்டு, அற்ப விஷயங்களுக்கெல்லாம் வியாச்சியங்கள் தொடர்ந்து தங்கள் ஆஸ்திகளை வக்கீல்களுக்கும் நியாயஸ்தலத் தேவதைகளுக்கும் கொட்டி ஆண்டிகளாகின்றனர். கட்சியில்லாத கிராமம் சாதாரணமாய் நமது நாட்டில் இல்லை யென்றே சொல்லலாம். தாராள நோக்கமும், விரிந்த மனப்பான்மையும், நமது பட்டணங்களில் உள்ள அளவில் ஒரு சிறிது கூடக் கிராமங்களில் இல்லை. குறுகிய நோக்கமும், அவசரப் புத்தியும், மூர்க்கத் தன்மையும், கிராம வாழ்க்கையின் இன்றியமையாச் சிறப்புக்களாயிருக்கின்றன. கிராமங்களில் இத்தன்மைகளோடு விளங்கும் குடியானவர்கள் இல்லாவிட்டால், பட்டணங்களில் உள்ள வக்கீல்களுக்கும், நியாயஸ்தலங்களில் உள்ள தேவதைகளுக்கும் அவசியம் இருக்காது என்று சொல்வதில் தவறு ஒன்றுமில்லை. நிலங்களையுடைய குடியானவர்கள் தங்கள் அவிவேகத்தினாலும், பிடிவாதத்தினாலும், காலத்திற்கொப்ப மாற்றிக் கொள்ளுந் தன்மையில்லாததாலும், நாளுக்கு நாள் க்ஷீணித்து வருகின்றனர்.

**பண்ணையாட்கள்,** விவசாயக் கூலிகள் இவர்கள் நிலைமை இன்னும் பரிதாபகரமானது. காலை 5 மணிக்கெழுந்து பகல் முழுதும் உழைத்தாலும், இவர்கள் தரித்திரம் விடிவதில்லை. மூன்று பைசாவுக்கு சீமை யெண்ணெய் வாங்கி விளக்கேற்றிக் கொள்ளவும் வகையின்றி, அந்திப் பொழுதின் மங்கிய வெளிச்சத்தில் கஞ்சி குடித்து விட்டுப் பெண்டு பிள்ளைகளை விட்டு பண்ணாடியின் தோட்டத்துக் களத்திலும் பட்டிப் புழுதியிலும், பட்டி நாயுடன் படுத்துக் காவல் காக்க வேண்டியது பண்ணையாளின் வாழ்க்கை. பண்ணைகளில்



RangaRakes
tamilnavarasam.com

சேராது, கண்ட கூலிக்குப் போகும் கூலியின் நிலை கொஞ்சம் மேலானது என்றாலும், இவனுக்கு வருஷ முழுவதும் கூலி கிடைப்பதில்லை. கூலி தேடிப் பத்துமைல் பதினைந்து மைல்களுக்கப்பாலுள்ள பட்டணங்களுக்கு வரவேண்டியிருக்கிறது. இவன் மனைவி, ஒரு சுமை புல்லோ, விறகோ சுமந்து வந்து பட்டணத்தில் ஓரணா, இரண்டணாவுக்கு விற்று, உப்புப்புளி வாங்கிக் கொண்டு போக வேண்டியவளாக இருக்கிறாள். கிராமங்களிலிருந்து காய்கறி, தயிர், பால் முதலியவற்றைக் கொண்டு வந்து பட்டணங்களில் விற்று ஜீவனம் செய்பவர்கள், பட்டணங்களையடுத்துள்ள சுற்றுக்கிராமங்களில் வசிப்பவர்களில் பெரும்பாலானவராயிருக்கின்றனர். விவசாயத்தில் ஈடுபட்டுள்ள குடியானவர்கள், பண்ணையாட்கள், கூலிகள் முதலியவர்களின் வாழ்க்கை நிலை இவ்வாறிருக்கும் போது, இவ்விதக் கிராம வாழ்க்கைக்குப் போவதன் மூலம் நமக்குக் கதி மோட்சம் ஏற்படும் என்று சொல்வது எவ்வளவு வஞ்சகம்!! எவ்வளவு புரட்டு!!!

### பட்டண வாழ்க்கையின் சிறப்பு

கிராமங்களில் என்னென்ன குறைகளும் கொடுமைகளும் இருக்கின்றனவோ, அவைகளில் ஒன்றும் பட்டணங்களில் இல்லை.

1. ஜாதிக் கட்டுப்பாட்டின் கொடுமைகள் இல்லை. தனி மனிதன் சுதந்திரத்திற்கும், உரிமைக்கும் கிராமங்களில் உள்ள தடைகள் பட்டணங்களில் இல்லை.
2. படிப்புக்கும், வைத்திய உதவிக்கும் வசதிகள் இருக்கின்றன.
3. தொழில் முயற்சிக்கும் வளர்ச்சிக்கும் விரிந்த வசதியும், ஆதரவும் பட்டணங்களில் போல் கிராமங்களில் இல்லை.
4. அறிவு வளர்ச்சிக்கும், இன்ப நுகர்ச்சிக்கும் ஏற்ற வசதிகளும் சாதனங்களும் இருக்கின்றன.
5. உழைப்புக்குத் தக்க கூலி கிடைக்கிறது.
6. அறிவின் திறமைக்குத் தக்கபடி உயர்வடைய வசதிகள் அதிகம்.
7. எக்காரியத்துக்கும் எவனும் போட்டி போடலாம்.

மேற்கூறியபடி, சில கஷ்டங்கள் இன்மையும், பல சௌகரியங்கள் உண்மையும், பட்டணவாசத்தை மேன்மையுள்ளதாகவும், யாவரும் விரும்பத் தக்கதாகவும் செய்கின்றன. வாழ்க்கையில் முன்னேற்ற மடைய விரும்பும் ஒவ்வொருவனும், பெரிய பட்டணங்களில் தங்கி வாழவே விரும்புகிறான். **நூறு காந்திகள் கூடிப் பிரசாரம் செய்த போதிலும், இவ்வுலக சுக போகங்களை விரும்புகிறவனையும், இன்ப வாழ்க்கையின் ருசியறிந்தவனையும், அறிவை வளர்க்க விரும்புபவனையும், கிராமத்திற்குப் போகச் செய்ய முடியாது.** ‘‘கிராமத்திற்குப் போ’’ என்று உபதேசம் செய்கிறவன் எவனும் தன்னைப் பொறுத்தமட்டில் கிராமத்திற்குப் போய், பட்டிக்காட்டானாக, மங்கி, மழுங்கிப் போகச் சம்மதிக்கிறதில்லை. பிறர்க்கு மட்டும் உபதேசம் செய்ய முன் வருகிறான். காரணம் சுயநலம், பயம். பட்டிக்காட்டான் பட்டணத்திற்கு வந்து நாகரிக வாழ்க்கையின் ருசியறிந்து விட்டால், பிறகு அவன் திரும்பவும் பட்டிக் காட்டிற்குப் போய் வாழ விரும்ப மாட்டான். நாட்டுப்புற வாசிகளை இது வரை ஏமாற்றி வாழ்ந்து வந்த படித்த பட்டண வாசிகளின் சுகஜீவன வாழ்க்கைக்கு ஆபத்து வந்து விடும். ஏமாற்றப்படக் கூடியவர்களின் எண்ணிக்கை குறைந்தால், ஏமாற்றுகிறவர் வருத்தப்படுவது இயற்கை. எல்லோரும் நாகரிக வாழ்க்கைக்குப் போட்டி போட்டால் அவசியமான உணவுப் பொருள்களையும், உடைத்தாதுப் பொருள்களையும் உற்பத்தி செய்ய ஆட்கள் இல்லாமற் போய்விடும் என்ற பயமும் சிலருக்கிருக்கலாம்.

ஆனால், இந்த பயம் ஆதாரமற்றது. உழவன் வயற்புறத்தில், சேற்றிலும், வதியிலும் வசிக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. நகரங்களிலிருந்து கொண்டு நாகரிக வாழ்க்கை நடத்திக்கொண்டு, இப்போது செய்வதை விடச் சிறப்பாக விவசாயம் செய்ய முடியும்.

### ருசியறியாப் பூனைகள்

பாலுக்குச்சர்க்கரை போத வில்லை யென்பவனுக்கும், கூழுக்கு உப்பில்லை என்பவனுக்கும் உள்ள துக்கம் ஒரே தன்மையானது என்று சில பெரியோர்கள் சொல்லலாம். ஆனால் நாம் ஒப்புக் கொள்வதில்லை. அகில மெல்லாம் பிடித்து ஆகாயத்தையும் ஆட்கொள்ள முயற்சிக்கும் மேற்கத்தியவர் வருத்தமும், மண்ணிற் புழுவாய்க்கிடந்து வயிற்றுக்குண வில்லை யென்று அழுகின்ற நம் நாட்டவர் துக்கமும் ஒரே தன்மையது என்று எப்படிச் சொல்ல முடியும்? குடிக்கத் தண்ணீர் இல்லாதவன், சேறும் குப்பையும் நிறைந்த அழுக்குக் குட்டையைக் கண்டு பேரானந்தம் அடையலாம். ஏழ்மையின் இன்றியமையாப் பல ஜோலிகளையும் விட்டு, ஒரு குடம் தண்ணீருக்காக ஊர்ப் பொதுக் கிணற்றருகில் காத்துக்கிடந்து உயர்ஜாதிக்காரி யொருத்தி மனமிளகி ஒரு குடம் ஊற்றியதற்காக வாயார வாழ்த்திச் செல்லும் ஆதிதிராவிட சகோதரியின் திருப்திக்கும், பசியின் கொடுமையால் வைக்கோலையும் விரும்பிப் புசிக்கும் குதிரையின் திருப்திக்கும் வித்தியாச மென்ன? வேண்டுமென்றே மனிதப் பிறவியின் உயர் இலட்சியங்களையும், உரிமைகளையும் பறிமுதல் செய்து, மனிதனை மிருகத்தினும் கீழாக்கி வைத்துக் கொண்டு, எளிய வாழ்க்கையில் அவன் திருப்தியடைகிறான் என்று சொல்வதும், எளிய வாழ்க்கையே அவனுக்குப் பொருத்தமானது என்று உபதேசிப்பதும் யோக்கியமும் நியாயமும் ஆகுமா? ருசி யறியாத பூனை உரி உரியாய்த் தாண்டாது. தென்னாலிராமன் பூனை பாலைக் கண்டால் பயந்து ஓட்டம் பிடித்தது வாஸ்தவம். அதனாலேயே, பூனைகளுக்கெல்லாம்



RangaRakes tamilnavarasam.com

பால் ஆகாதென்று தீர்மானிப்பது நியாயமாகுமா? பாலின் ருசியையறிந்த பூனை, உரியில் பால் இருப்பதைத் தெரிந்து, பாலைக்குடிக்க முயலும் போது நாம் அதைத் தடுப்பது, பாலைப் பூனை குடிக்கக் கூடாது, நமக்கு வேண்டும் என்ற சுயநலத்தாலல்லவா? பூனை பால் குடிக்க வேண்டுமென்று நாம் நினைத்தால், அதற்குச் சிறிது ருசி காட்ட வேண்டும். தென்னாலி ராமனைப் போல சூடு போடக் கூடாது. பாமரர் நாகரிக வாழ்க்கை நடத்த வேண்டுமாயின், நாகரிக வாழ்க்கையின் சுகத்தை அவர்கள் ருசியறிய வேண்டும்.

## மூடுமந்திர மகிமை

பிரஞ்சு தேசத்தில் புரட்சி ஏற்படுவதற்கு முன், புரட்சிக்காரர்கள் இரகசியமாகக் கூடித் தங்கள் காரியாதிகளை நடத்தி வந்தனர். ஒரு சமயம், நாட்டுப் புறத்தில் கல் உடைத்து வாழும் ஒரு பாமரனைப் பாரிஸ் நகரத்திற்குப் புரட்சிக்காரர் கூட்டத்திற்குக் கூட்டிக்கொண்டு வர நேர்ந்தது. குறிப்பிட்ட ஒரு சம்பவத்தைக் குறித்து அப்பாமரன் விசாரிக்கப்பட்ட பின் அவனைத் திரும்பவும் நாட்டுப்புறத்தில் உள்ள அவன் கிராமத்திற்கு இரகசியமாகவே அனுப்பிவிடத் தீர்மானித்தார்கள். அப்போது அப்பாமரன், புரட்சிக்காரர் களிடம், தான் இன்னும் இரண்டு மூன்று நாட்கள் பாரீஸில் தங்கி அதன் காட்சிகளைக் காண விரும்புவதாகவும், மூன்றா நாள் நடைபெறப் போகும் அரசன் நகரப் பிரவேசக் காட்சியைக் காண விரும்புவதாகவும் அவர்களிடம் தெரிவித்தான். புரட்சிக்காரரில் ஒருவர், அப்பேதைக் கூலியின் ஆசையைத் தீர்த்து வைப்பதாகவும், தானே அவனை அம்மூன்று நாட்களும் வைத்துப் போஷிப்பதாகவும் ஒப்புக்கொண்டார். அப்போது மற்ற புரட்சிக்காரர் ஆக்ஷேபித்தனர். ''இவன் ஒரு பாமரன். அரசனைப்பார்க்க ஆசைப்படுகிறான். அரசனும், பிரபுக்களும், அழகிய பெண்களும் அலங்காரமாக ஊர்வலம் வருவதை இவன் கண்டால் மதி மயங்கி விடுவான். ஏதாவது உளறிக்கொட்டி நம்மைக் காட்டிக்கொடுத்தாலும் கொடுத்துவிடுவான். இவனை இங்கே வைத்திருப்பது ஆபத்தானது'' என்று சிலர் சொன்னார்கள். ஆனால் முதலில் ஒப்புக்கொண்ட புரட்சிக்காரர் சொன்னார்.

''நாய் முயலைப் பிடிக்கவேண்டுமானால், முதலில் அதற்கு முயலைக்காட்டி, ரத்தச் சுவையும் ஊட்டி, பின் உசுப்படுத்தியும் விட வேண்டும். அப்புறம் அது, தானே சென்று நாம் காட்டிய பொருளை வீழ்த்தி நம் காலடியில் சேர்க்கும். இம்மனிதன் நீங்கள் நினைக்கிற படி அவ்வளவு முட்டாளும் அல்ல. நம்மைக்காட்டிக்கொடுத்து விடுவான் என்று நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. வாயைத்திறந்தால், நமக்கு முன் இவனும் தூக்கு மேடையேற வேண்டுமென்பதை இவன் அறியாதவனல்ல. ஆகையால் இவனைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். என் வசம் ஒப்புவித்து விடுங்கள்'' என்று சமாதானஞ் சொல்லி அப்பாமரனை தன்னுடன் அழைத்துச் சென்று பாரிஸ் நகரின் அற்புத அலங்காரங்களையும், நாகரிக வாழ்க்கையின்





போக போக்கியங்களையும் இரண்டு நாள் சுற்றிக் காண்பித்து, மூன்றாம் நாள் அரசனும் அரசியும் நகர்ப்பிரவேசம் செய்யும் காட்சியையும் காண்பிக்க வேண்டி, அவனைக் கூட்டிக் கொண்டு போய் ஊர்வலம் வரும் பாதையோரத்தில் மேடான இடத்தில் வேடிக்கை பார்க்கக் கூடியுள்ள ஜனங்களுடன் நிறுத்தி, அரசர் பவனி வருவதைப் பார்க்கச் செய்தார். மின்னுகின்ற அங்கி தரித்த ராணுவ வீரர்களும், குதிரை வீரர்களும் முறுக்கிய மீசைகளுடனும் உறுவிய கத்திகளுடனும் சென்றனர். கில்ட் பூசிய கோச் வண்டிகளில் அலங்கார உடை தரித்த அழகிகளும், பிரபுக்களும், கொஞ்சிக் கொஞ்சிப் பேசிச் சென்றனர். ஜனங்கள் தங்கள் கஷ்டங்களை யெல்லாம் மறந்து சந்தோஷ ஆரவாரஞ் செய்தனர். நமது கூலிக்காரக் கொத்தனும், கண் குளிரக் கண்டு களித்தான். திறந்த கோச் வண்டியில் அரசனும், அரசியும் தோன்றியவுடன் எல்லோரும் ''கடவுள் அரசனைக் காக்க. அரசி நீடூழி வாழ்க'' என்று பெருத்த ஆரவாரஞ் செய்தனர். இந்த ஆரவாரத்தில் மெய் மறந்து சந்தோஷங்கொண்ட நாட்டுப் புறத்தான், கூடச் சேர்ந்து, ''அரசன் வாழ்க, அரசி வாழ்க, அரசனும் அரசியும் என்றென்றும் வாழ்க. பிரபுக்கள் வாழ்க, சேனா வீரர்கள் வாழ்க, எல்லோரும் வாழ்க'' என்று உறக்கக் கூவிக் கொண்டு கூத்தாடினான். அப்போது அவன் பக்கத்திலிருந்த புரட்சிக்கார நண்பர், புன்னகை செய்து, மெதுவாய் அவன் தோளைப் பற்றி அசைத்து ''தம்பி அரசன் போய் விட்டான் நாம் வீட்டுக்குப் போகலாம் வா'' என்று சாந்தமாகச் சொன்னார். கொத்தன் தன்னுடைய மித மிஞ்சிய உற்சாகத்தில் தன் நிலைமையை மறந்து கூத்தாடியதற்காகப் பெரிதும் வெட்கமடைந்தவனாய் ''ஐயா மன்னிக்க வேண்டும். நான் மதி மயங்கிப் போனேன். இனி மேல் ஜாக்கிரதையாக நடந்து கொள்வேன்'' என்று பணிவுடன் சொன்னான். அதற்கு அப்புரட்சிக்காரர் ''நண்பா, நீ வெட்கப்பட வேண்டியதில்லை. உன்னிலும் மேலான அறிவாளிகள் பலர் இம்மாதிரி ஆடம்பரங்களில் மயங்கிவிடுகிறார்கள். நீ மயங்கியதில் ஆச்சரியமில்லை. அரசனையும் பிரபுக்களையும் வாழ்த்துவதற்கு உன்னைப் போன்ற ஆவேசங் கொண்ட பாமரர் கூட்டம் இருப்பது, எங்களுக்கும் அனுகூலமே.''

**கொத்தன்:-** ''என்னைப் போன்றவர் இருப்பது உங்களுக் கெப்படி அனுகூலம்?''

**புரட்சிக்காரர்:-** ''உங்கள் கூப்பாட்டைக் கண்டு, இது என்றென்றைக்கும் சாஸ்வத மென்றும், உண்மையிலேயே ஜனங்கள் கஷ்டமின்றிச் சந்தோஷப் படுகிறார்களென்றும், இவர்கள் நினைத்துக் கொள்ளுகிறார்கள். தங்களுடைய அக்கிரம வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்துவதற்கு உங்கள் கூச்சல் இவர் களைத் தூண்டுகிறது. இப்பேதைகள் தங்கள் அந்திய காலம் சமீபத்தில் இருக்கிறதென்பதை உணர்ந்து கொள்ளாமற் போவதற்கும் உங்கள் ஆரவாரம் துணை செய்கிறது. ஆகையால் நீ வருத்தப்பட வேண்டியதில்லை. இப்போது நான் கேட்பதற்குப் பதில் சொல்.

RangaRakes tamilnavarasam.com

அழகாகச் சிங்காரிக்கப்பட்ட பல பொம்மைகளை உன் முன்னால் வைத்து அவற்றில் உனக்கிஷ்டமானதை எடுத்துக் கொள்ளும்படி சொன்னால், நீ எதை எடுப்பாய்? எல்லாவற்றிலும் அதிக அழகுள்ளதும், அதிக அலங்காரம் செய்யப்பட்டிருப்பதையும் அல்லவா?

**கொத்தன்:-** ஆம் அதிக அழகும் அலங்காரமும் உள்ளதைத்தான் எடுப்பேன்.

**புரட்சிக்காரர்:-** பல வர்ணங்கள் கொண்ட தோகைகளையுடைய பறவைகள் சிலவற்றை அவற்றின் கால்களைப் பிணைத்து, உன் முன் வைத்து உனக்கிஷ்டமான இறகுகளைப் பிடுங்கிக் கொள்ளும் படி சொன்னால், எந்தப்பட்சியின் இறகுகளை விரும்புவாய்? காக்கையின் இறகையா, கொக்கின் இறகையா, மயிலின் தோகையையா?

**கொத்தன்:-** மயிலின் தோகையைத்தான்.

**புரட்சிக்காரர்:-** சரி. இன்று, அலங்கரிக்கப்பட்ட பல பொம்மைகளையும், கண்ணைக் கவரும் தோகைகளையுடைய மயில்களையும் நீ பார்த்தாய். காலம் வரும் போது இன்று நீ கண்ட காட்சி பயன்படும். மனதைக் கவரும் எதிலும் ஊக்கத்துடன் கலந்து கொள்ளும் மனப்பான்மை உனக்கிருப்பதை நான் கண்டு கொண்டேன். இன்று அரசனை வாழ்த்திய நீ நாளை அரசனை வெறுத்து ஒழிக்கும் கூட்டத்திலும் இதே ஆர்வத்துடன் கலந்து கொள்வாய் என்று எனக்குத் தெரியும்?'' என்று சொல்லிக்கொண்டே அப் பட்டிக்காட்டுக் கொத்தனை அழைத்துச் சென்றார்.

பட்டிக்காட்டுப் பாமரரைப் பட்டணவாசம் செய்யும் பணக்காரர் மீதும், உயர் ஜாதிக்காரர் மீதும் உசுப்படுத்திவிடும் புரட்சிக்காரர் இன்று தமிழ்நாட்டில் இல்லை. ஆனால் பணக்காரருக்கும் உயர் ஜாதிக்காரருக்கும் காவலாளியாக விளங்கும் காந்தியாரின் காங்கிரஸும், தீண்டாமை விலக்குக் கமிட்டியும், இவ்வேலையைத் தாங்கள் அறியாமலே செய்து வருவது ஆச்சரியமல்லவா? மேடைகளில் சமத்துவ கீதங்கள் பாடி, சமத்துவம் பேசி, வாய்ச்சேவை செய்து வந்ததன் பலனாகக் காங்கிரஸ் கும்பலில் உள்ள பாமரர் மனத்தில் புதுப்புது உணர்ச்சிகள் எதிர்பாராவண்ணம் முளைத்து வேரூன்றிவிட்டன. காங்கிரஸ் மயில்களையும், அன்னங்களையும் மேடைக் கூட்டங்களில் கண்ட பாமரன் அவற்றின் தோகைமேல் மோகங்கொண்டு விட்டான். ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்'' என்று தினமும் கொட்டை கொட்டையாய் மேல் வரிச்சட்டம் போட்டுக்கொண்டு வெளிவரும் தேசீயப்பத்திரிக்கைகளைப் படிக்கும் பாமரன் யோசிக்க ஆரம்பித்து விட்டான். ஆதிதிராவிட சந்நியாசிகள் இழிவுக்குத் தலைகுனிய மாட்டேன் என்கின்றனர். பூனை பாலின் ருசியறிந்து கொண்டது, நாய் ரத்தச்சுவை கொண்டு விட்டது. இனிமேல் பூனையைப் பாலிலிருந்தும் நாயை முயலிலிருந்தும் பிரித்து



வைப்பது முடிகிற காரியமல்ல. வெள்ளாளன், பாலைக்குடித்து ருசியறிந்து விட்டால், பாலைக் கொடுக்க ஒப்ப மாட்டான் என்று தனக்குத் தேவை யில்லாத காலத்திற் கூட ''வெள்ளாளன் பாலைப்பிடுங்கி வேலியில் ஊற்று'' என்ற சாணக்கிய தர்மம் இனி நடக்காது. ஆனைமலை நீலகிரிக்கோ, கண்டி கொளும்புக்கோ, பினாங்கு சிங்கப்பூருக்கோ போய்ச் சிறிது பொருள் சேர்த்துக்கொண்டு வந்து, நாகரிக வாழ்க்கையின் ருசியையும் அறிந்துள்ள பறையன் தன் ஊருக்குத் திரும்பி வந்தவுடன், அவனைப் பழையபடி, பழைய சோற்றுத் தண்ணீர்க்கும், பாளைக்கம்புக்கும் நாள் முழுதும் பாடுபடும்படி செய்ய எந்தக் கவுண்டனாலும் இக்காலத்தில் முடியாது. நாகரிக வாழ்க்கையின் ருசியறிந்தவன், அநாகரிக வாழ்க்கைக்குத் திரும்ப மாட்டான். இவனைப் பார்த்து இவன் சுற்றமும் சமூகமும் முன்னேற முயல்கிறது. காலச் சக்கரத்தின் வேகத்தால் நாகரிக வாழ்க்கை இவ்விதம் நாட்டுப் புறங்களிலெல்லாம் பரவும் போது, கிராமப்புனருத்தாரணம் கிராம நிர்மாணம் செய்வது என்று சொல்லிக்கொண்டு, அநாகரிக வாழ்க்கைக்கு மக்களைத் தூண்டி எளிய வாழ்க்கையை ஏற்கும் படி பிரசாரம் செய்வது நலம் தரும் காரியமாகுமா?

### வருங்காலம்

**வருங்கால வாழ்வில், கிராமங்களுக்கு இடமே இல்லை.** பெரியவர்கள் சம்பாதித்த தென்று, ஓட்டைக் குச்சுகளைக் காப்பாற்றுவது பேதமை. பழைய மண் சுவரின் மேல் மச்சுக் கட்டுவதும் முடியாத காரியம். பழைய குச்சுகளைத் தரைமட்டமாக்கி விட்டுப் புதிய மாளிகைகளுக்கு அஸ்திவாரம் போடவேண்டும். **யார் என்ன முயற்சி எடுத்துக்கொண்ட போதிலும், கிராமங்கள் வெகு சீக்கிரத்தில் நசித்து ஒழிந்து போவது நிச்சயம்.** பெரிய நகரங்கள் தான் எங்கும் பெருகும்.

### ருஷியாவைப் பார்

புரட்சிக்குப் பின் ருஷியாவில் ஏற்பட்ட மகத்தான மாறுதல்களில் மிக முக்கியமானது, பட்டிக்காட்டு வாழ்க்கையை ஒழித்து நாடெங்கும் நகர வாழ்க்கையை ஏற்படுத்தியதாகும். இலட்சம் இரண்டு லட்சம் ஜனங்கள் வசிக்கக் கூடிய பெரிய பட்டணங்களை நாட்டின் பலபாகங்களில் நிர்மாணித்து, அவ்வப் பிரதேசத்தின் வசதிகளுக்கேற்ற இயந்திர சாலை களையும் ஏற்படுத்தி, சுற்றுப் பக்கத்தில் குக்கிராமத்தில் வசித்து வந்த மக்களை யெல்லாம் நகரங்களில் குடியேற்றி, இயந்திர சாதனங்களைக் கொண்டு தொழில் செய்யவும், நாகரிக வாழ்வின் நன்மைகளைப் பெறவும் செய்திருக் கின்றனர். இதன் பலனாக 100க்குப் பத்து பேர் கூட படிக்காதிருந்த நாட்டில் 10 வருஷங்களில் 100க்கு 99 பெயர் படித்தவர்களாகவும், அதற்கேற்ப வாழ்க்கை நிலைமை எல்லாத் துறைகளிலும் உயரவும் முடிந்தது கூட்டுப் பண்ணைகளில், இயந்திரக் கருவிகளைக் கொண்டு விவசாயம் செய்யப்



RangaRakes tamilnavarasam.com

படுவதன் மூலம் முன் இருந்ததை விடப் பத்து மடங்கு அதிகமான உணவுப் பொருள்களும், மற்ற பொருள்களும் விளைவிக்கப் பட்டு மக்களுக்குப் பஞ்சம், பசி யின்னதென்பது மறந்து போய்விட்டது. இயந்திர வாகனங்கள் ஏராளமாக இருப்பதால், 10, 15 மைல்களுக்கப்பால் உள்ள பண்ணைகளுக்குச் சிறிதும் கஷ்டமில்லாமற் போய் வேலை செய்து விட்டு மாலையில் நகரங் களுக்குத் திரும்பி வந்து நாகரிக வாழ்க்கையின் சகல சௌகரியங்களையும் அனுபவிக்கின்றனர். உழவன் மண்ணைக் கவ்விக் கொண்டு காத்துக்கிடக்கும் அநாகரிக நிலை மாறி விட்டது.

## இயந்திர சகாப்தம்

விஞ்ஞானத்தின் வெற்றிக் கொடியை ஏந்திச் செல்லும் இயந்திர யுகத்தின் சக்தியை எதிர்க்க யாரால் முடியும்? மனித சமூகத்திற்கு விஞ்ஞானம் அளித்துள்ள நன்மைகள் அளவிறந்தன. இயந்திரங்களால் மனிதன் அடையும் சௌகரியங்கள் எண்ணிறந்தன. சுருங்கச் சொல்லின், முன் யுகங்களில் அரசன் முதலான ஒரு சிலர் அனுபவித்து வந்த சுகங்களை இன்று பாமரர் பலரும் எளிதில் அனுபவிக்க முடிகிறது. ஆனால் விஞ்ஞான வளர்ச்சி சிறந்தோங்கும் மேற்கு நாடுகளில் இப்போது வேலையில்லாத் திண்டாட்டம் பொருளாதார நெருக்கடி முதலிய கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்றும், இயந்திரப் பெருக்கத்தினால் க்ஷேமம் இல்லை என்றும் சிலர் சொல்லக்கூடும். இவர்கள் மேற்கு நாடுகள் தற்போது அனுபவிப்பதாகச் சொல்லப்படும் கஷ்டங்களின் தன்மையையும் அதன் மூலகாரணத்தையும் சரியாக அறிந்து கொள்ள வில்லை என்று தான் நாம் சொல்லுவோம். இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தாலும், பொருளாதார நெருக்கடியாலும் அந்நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டம் நம் நாட்டிற் போல் வயிற்றுக் கில்லாத பட்டினிக் கஷ்டமல்ல. கூழுக்கு உப்பு இல்லை என்ற துக்கமல்ல. பாலுக்குச் சர்க்கரை போதவில்லை! என்ற கஷ்டந்தான். அதுவும் சிலருக்குத்தான் ஏற்பட்டிருக்கிறது. அங்கே ஏற்பட்டுள்ள இந்தச் சிறு கஷ்டமும், அந்நாட்டில் பழைய காலத்திலிருந்து வரும் சில பொருளாதாரக் கொள்கைகளினால் ஏற்பட்டனவே யன்றி வேறு காரணங்களினாலன்று. இயந்திர காலத்திற்குத் தக்கபடி இங்கிலாந்திலும், அமெரிக்கா முதலிய தனி உடமை நாடுகளிலும், அந்நாடுகளின் சமூக, பொருளாதாரக் கொள்கைகளில் போதுமான அளவு மாறுதல்கள் செய்து கொள்ளாததனாலேயே, மேற்கூறிய கஷ்டங்கள் இருக்கின்றன. இயந்திர காலத்திற்கேற்ற வகையில், சமூக, பொருளாதாரக் கொள்கைகளை வகுத்துக் கொண்டிருக்கும் ருஷியாவில் இவ்விதத் துன்பங்கள் தோன்றவில்லை. விஞ்ஞான வளர்ச்சியினாலும் இயந்திரப் பெருக்கத்தாலும் அந்நாட்டில் இன்பமேயன்றித் துன்பமில்லை. ஆகையால் ஆராய்ந்தறியாமலும், நாடுகளின் வேறுபட்ட நிலைமைகளை ஒப்பிட்டுப் பாராமலும், இயந்திரங் களையும், விஞ்ஞானத்தையும் குறை கூறுவது புத்திசாலித்தனமாகாது.

**செல்வநிலை யென்பது, வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் நேரமும் குறைந்து ஓய்வுக்கும் கலைப்பயிற்சிக்கும், இன்ப நுகர்ச்சிக்கும் வசதியும் நேரமும் மிகுந்துள்ள நிலைமையாகும்.** நாள் முழுதும் வேலை செய்ய வேண்டிய நிலை அடிமை நிலை. ஏழ்மை நிலை. அநாகரீக நிலை. குறிப்பிட்ட சிறிது நேரம் மட்டும் உழைத்து அதன் பயனாகத் தனக்கு வேண்டிய அனைத்தையும் அடையும் நிலைமை, நாகரிக நிலை - எஜமான் நிலை. விஞ்ஞானமும், இயந்திரமும், மனிதனை இவ்வுலகின் எஜமானனாக்கு கின்றன. ஆகையால் பழமையான நம் நாட்டில் விஞ்ஞானம் வளரவும் இயந்திரங்கள் பெருகவும் முயற்சிப்பது அறிவுடமையாகும்.

பட்டிக்காட்டு முட்டாளும், நாட்டுப் புறத்துக் காட்டுமிராண்டியும் முன்னேற்றமடைய ஒரே மார்க்கந்தான் உண்டு. **இவர்கள் எல்லோரும் பட்டண வாசம் செய்ய வேண்டும். கிராம வாழ்க்கையை விட்டு நாகரிக நகர வாழ்க்கை நடத்த வேண்டும்.**

இன்று கிராமவாசிகளுக்கு வேண்டிய தென்ன? இவர்களிடை எவ்வித பிரசாரம் தேவை? என்று பார்ப்போமானால், இந்நாட்டு மக்களிடை தொன்று தொட்டிருந்து வரும் ''நற்குணங்கள்'' எனப்படும் அடிமைக் குணங்களும், பழக்க வழக்கங்கள் எனப்படும் பைத்தியக்காரத் தன்மைகளும் ஒழிய வேண்டும். மேல் நாட்டவர்களிடம் இருக்கும் ''துர்க்குணங்கள்'' எனப்படும் சுதந்தர புத்தியும், உலோகாயத குணங்களும் ஏற்பட வேண்டும். வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம் என்று இவ்வுலக வாழ்வை இழிவு செய்யும் ஞானம் கூடாது. உள்ளது போதும் என்று எளிதில் வரும் திருப்தியும், தம்மின் மெலியாரைப் பார்த்து, தங்கள் செல்வம் எவ்வளவோ பெரிது என்று எண்ணியடையும் மகிழ்ச்சியும், முயற்சியைக் கொல்லும் கொடிய நற்குணங்களாதலால் கைவிடப் பட வேண்டும். மூட நம்பிக்கையால் ஏற்படும் பக்தியும், பக்திப் பெருக்கால் வரும் பயமும் மக்களை விட்டு ஓட்டப்பட வேண்டும். தன் சொந்த உரிமைகளைப் போற்றாத ஆண்மையற்ற சாந்தம் கூடாது. நம்முடைய கிராம ஜனங்களுக்குத் தங்கள் எளிய வாழ்க்கையில் அதிருப்தி வேண்டும். தங்களுடைய வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள ஆசை வேண்டும். தங்கள் முன்னேற்றத்துக்குள்ள தடைகளை உடைத்தெறிய தைரியம் வேண்டும். தாங்கள் யார்க்கும் தாழ்ந்தவர் அல்ல என்னும் தன்மதிப்புணர்ச்சி வேண்டும். இவ்வாறு தைரியமாகப் பிரசாரம் செய்யும் கிராம சேவகர்களே இப்போது தேவை. யானை பிடிக்க எண்ணி வேட்டைக்குப் போனவன் யானையே கொண்டு வருவான். குருவி வேட்டைக்குப் போனவன் வெறும் கையாகவும் வருவான். ரொம்ப அதிர்ஷ்ட மிருந்தாற்கூடக் குருவிக்கு மேல் ஒன்றும் கொண்டு வரமாட்டான்.

பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - மே 1936





RangaRakes tamilnavarasam.com

# பாண்டியன் – ராமசாமி சுற்றுப்பிரயாணம்

## திருநெல்வேலிக் கூட்டம்

### ஆச்சாரியார் – ராமசாமி சம்பாஷணை

தலைவர் அவர்களே! தோழர்களே!!

இயக்கத்தின் அவசியத்தைப்பற்றியும், அது செய்துள்ள வேலையைப் பற்றியும் அதனால் மக்களுக்கு ஏற்பட்ட நன்மையைப் பற்றியும் எல்லோரும் பேசிவிட்டார்கள். இனி நான் இக்கூட்டத்தில் நாம் செய்ய வேண்டிய காரியங்களைப்பற்றியே சிறிது பேசுகிறேன்.

தலைவர் தோழர் நாயகம் அவர்கள் தெரிவித்ததுபோல் திருச்சி மீட்டிங் தீர்மானப்படி மேல்கொண்டு அதுவிஷயமாய் நடைபெற வேண்டிய காரியங்களுக்கு ஆக இங்கு வந்திருக்கிறோம்.

இயக்கத்தின் பேரால் பதவியும் பட்டமும் பெற்று வாழும் பெரியார்கள் எங்களை லட்சியம் செய்யாவிட்டாலும் இந்நாட்டு பாமர மக்களும் வாலிபர்களும் கிராம ஏழை ஜனங்களும் எங்களை மதிக்கிறார்கள். எங்கள் வேலைக்கு ஆக்கமளிக்கிறார்கள் என்பது இம்மாதிரி கூட்டங்களாலேயே விளங்குகிறது. அந்த தைரியத்தின் மீதே நாங்கள் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களை சகித்துக்கொண்டு இந்த தொண்டில் ஈடுபட்டு இருக்கிறோம். திருச்சி மத்தியக் கமிட்டி தீர்மானப்படி ஜில்லாவுக்கு சுமார் 1500 ரூ. வசூலானால் போதுமானது. இது கூட செய்ய நம்மால் ஆகவில்லையானால் நம் செல்வவான்களின் யோக்கியதைக்கு வேறு ஒன்றும் உதாரணம் கூற வேண்டியதில்லை.

காந்தியாரோ, ராஜேந்திரபிரசாத்தோ, மற்றும் காங்கிரஸ் விளம்பரத்தில் எந்த ஆளோ வந்துவிட்டால் லட்சம், ஐம்பது ஆயிரம் என்று வசூலாகிவிடுகிறது. நம்மவர்களே அந்தப்பணங்களில் பெரும்பாகம் கொடுத்துவிட்டு அந்தப்பணத்தின் பயனாகவே வசவும், இழிவும், பழிப்பும் பெற்று வாழ்கிறார்கள். எதற்கு ஆக பணம் கொடுக்கின்றோம், அந்தப்பணம் என்ன ஆகின்றது என்கின்ற ஞானமே நம் செல்வவான்களுக்கு இருப்பதில்லை.

நாம் ஏதாவது ஒரு பெரிய அவசியத்துக்கு சிறு தொகை கேட்டாலும் அதற்கு என்னென்னெல்லாமோ வியாக்கியானமும் கேள்விகளும் புறப்படுகின்றன.



மத விஷயத்தில் புரோகிதர்களுக்கும் குருமார்களுக்கும் செலவு செய்வதுபோலவே பார்ப்பனர்களுக்கு காங்கிரஸ் விஷயமாகவும் முட்டாள் தனமாகச் செல்வத்தை அள்ளிக்கொடுத்து மானம் கெடுகிறார்கள்.

இந்த சிறு தொகைக்கு நானும் தோழர் பாண்டியன், நாயகம், ராமசாமி, வாலகுருவா ரெட்டியார் ஆகியவர்கள் இரண்டு தடவை இந்த ஊருக்கு வந்துவிட்டோம். வந்து எவ்வளவு கஷ்டப்பட்டோம். எங்களால் தோழர் ஈஸ்வரம்பிள்ளைவாளுக்கும் எவ்வளவு கஷ்டம்.

முன் தடவை வந்திருந்தபோது நாங்கள் பட்டபாட்டிற்கு அளவில்லை. நாங்கள் வந்த நாள் பகலில் 3 மணிக்கு சாப்பிட்டோம். பஸ்ஸில் பகல் பிரயாணத்தில் 3, 4 மணி நேரம் வெயிலில் அவஸ்தைப் பட்டோம்.

இராத்திரி பட்டினி கிடந்தோம். எங்களால் பிள்ளைவாளும் கஷ்டப் பட்டு பட்டினிகிடந்தார்.

நாங்கள் ஒரு விருந்துக்கு அழைக்கப்பட்டோம். அந்த விருந்துக்காரர் வந்து கூப்பிடுவார் கூப்பிடுவார் என்று இரவு 11 மணி வரை காத்திருந்து பிறகு நாங்களாகவே தூங்கிவிட்டோம். விருந்துக்காரர் நல்ல சமையல் செய்து வைத்துக் கொண்டு அவரும் காத்து இருந்து கோபத்துடன் சாப்பிட்டாராம். விருந்துக்காரரின் காரியக்காரரால் இந்த கதி ஏற்பட்டது.

அதுபோல் மற்றும் பல கஷ்டங்கள் அனுபவிக்கிறோம். உண்மையாகவே இந்த பிரசாரவேலை ஏற்றுக்கொள்ளாதிருந்தால் தோழர் பாண்டியன் அவர்களின் அருமைப்புதல்வன் ஏரியில் தவறி இறந்திருக்க மாட்டான். அவர் அன்று பழனிக்கு பிரசார காரியமாய் போய் விட்டதாலேயே பையனை ஒரு நண்பர் கூட்டிக்கொண்டு போக நேர்ந்ததும், காப்பாற்ற முடியாமல் போனதுமாகும். இந்த மாதிரி காரியங்களை நாங்கள் பொருட்படுத்தவில்லை. இனியும் எப்படிப்பட்ட கஷ்டம் வந்தாலும் பொருட்படுத்தப்போவதில்லை. ஆனால் இந்த கஷ்டங்கள் பயனுள்ள காரியத்துக்கு பயன்பட வேண்டாமா என்பதே எனது கவலை.

இந்த ஜில்லாவுக்கு இந்த காரியத்துக்கு எத்தனை தடவை வருவது? இந்த ஜில்லாக்காரர் இந்த இயக்கத்தால் பயன் அடையவில்லையா. திருநெல்வேலி ஜில்லாவில் மாத்திரம் 2 மந்திரிகள் அதுவும் ஒரு மந்திரி 3 வருஷம் மற்றொரு மந்திரி 6 வருஷம் பதவி வகித்தாய்விட்டது. இந்த ஜில்லாவிலேயே 2 இந்து மத பரிபாலன போர்டு கமிஷனர் மீ 800 ரூ. வீதம் 5, 5 வருஷம் அனுபவித்து ஆய்விட்டது.

இந்த ஜில்லாவில் இருந்தே ஒரு ஹைகோர்ட்டு ஜட்ஜும் நியமிக்கப் பட்டிருக்கிறார். இவர்கள் இந்த இயக்க அபிவிருத்திக்கு என்ன காரியம் செய் கிறார்கள்? ஆட்களை கண்டு பிடிப்பதே கஷ்டமான காரியமாய் இருக்கிறது.

''அவர்களுக்கு உத்தியோகமும் பணமும் வந்தால் எங்களுக்கு என்ன பிரயோஜனம்''? என்று ஒருவர் கேட்டார்.



RangaRakes tamilnavarasam.com

உங்களுக்கு பிரயோஜனமில்லாமல் இல்லை. உதாரணமாக மாஜி மந்திரி சிவஞானம் பிள்ளைவாள் மந்திரி வேலையில் சம்பாதித்த பணம் பூராவும் எலக்ஷனில் உங்களுக்கே கொடுத்துவிட்டார்கள். மற்ற மந்திரி முதலியவர்களும் எலக்ஷன் வந்தால் தெரியும். மற்றும் இந்த ஜில்லாக்காரர்களுக்கு தஞ்சை ஜில்லாப் பார்ப்பனர்களுக்குப்போல் உத்தியோகங்கள் தாராளமாய் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதெல்லாம் இந்த இயக்கத்தினால் அல்லாமல் வேறு என்ன? வெறும் தகுதியாலேயே ஏற்பட்டுவிட்டது என்று சொல்லிவிடமுடியுமா?

நான் இவற்றையெல்லாம் அடியோடு தப்பு என்று சொல்ல வரவில்லை. காந்தியாரின் ராமராஜ்யம் வந்தாலும் இப்படித்தான் நடக்கும். ஆனால் அது சமயம் வெறும் பார்ப்பனர்கள் பெயரை மாத்திரம் எழுதிப் போட்டு சீட்டு குலுக்கப்படும். இப்பொழுது கொஞ்சமானாலும் பார்ப்பனரல்லாதார் பெயரும் போட்டு சீட்டு குலுக்கப்படுகிறது. ஏதோ சில பெயர்களுக்கு மாத்திரம் பிரைஸ் விழுந்தாலும் இது திருநெல்வேலி ஜில்லாவுக்கே விழுகிறது என்று சொல்லுகிறேன்.

இன்றைய அரசியல் தத்துவமே - பிரச்சினையே இந்தப்பதவிப் போட்டியும் உத்தியோக வேட்டையுமேயாக இருப்பதால் பார்ப்பனர்களாகிய அதாவது நம் சமூக எதிரிகள் நமக்கு பலவித தொல்லைகளையும், துன்பங்களையும் கொடுத்து வருகிறார்கள்.

அதில் இருந்தும் மீள வேண்டாமா? அதற்குப் பதில் பிரசாரம் செய்து நம்மீது சுமத்தப்படும் பழிகளில் இருந்து நாம் மீள வேண்டாமா? போட்டி இருந்துதான் தீரும்; போரும் இருந்துதான் தீரும். தனி உடமை உலகில் இது இயற்கையேயாகும். ஆனால் அதை சமாளிக்க நாம் அவ்வப்போது முயற்சிக்காவிடில் நம் பின் சந்ததிகளின் கதி அதோகதி ஆகிவிடும். ஏன் தீண்டப்படாதவர்களாகவே ஆகிவிடும். பிறகு இப்போது மதத்தில் பார்ப்பனர் கால் கழுவின தண்ணீரை மோட்சத்துக்காக அருந்துவது போலவே அரசியலிலும் உத்தியோகத்திலும் பார்ப்பனன் கால் கழுவின தண்ணீரை சாப்பிடவேண்டியது மாத்திரம் அல்லாமல் இன்னமும் ஈனமான காரியம் கூட செய்து வாழ வேண்டி வந்துவிடும்.

இன்றைய நிலையில் மந்திரிகளை குற்றம் சொல்வதிலேயே நம் காரியம் ஆகிவிடாது. மந்திரிகள் நிலைமையும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. அவர்களுக்குப் போதுமான பலம் இல்லை. பொறாமையாலும் சுயநலத்தாலும் அவர்களை கவிழ்க்கப் பார்க்கிறவர்களுக்கு பலம் அதிகமாய் இருக்கிறது. ஆகவே அவர்கள் அந்த ஸ்தானத்தை பார்ப்பனர்களுக்கும் அவர்களது அடிமைகளுக்கும் காலி செய்து கொடுக்காமல் பார்த்துக்கொள்ளும் வேலையே சரியாய் இருக்கிறது. அவர்கள் ராஜிநாமா கொடுக்காமல் இருப்பதையே நாம் பாராட்ட வேண்டும். துணிந்து ராஜிநாமா கொடுத்து விட்டால் நம் கதி என்ன ஆவது, அந்த ஸ்தானத்துக்கு யார் வருவார்கள் என்பதை யோசித்து பாருங்கள்.



இம் மாத முதலில் திருவாங்கூர் தீயர் மகாநாட்டின் போது ஒரு தீர்மானம் வந்தது. அதாவது ஹைகோர்ட் ஜட்ஜி பதவியும் ஜில்லா ஜட்ஜி பதவியும் ஈழவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்றும் மகாராஜாவை கேட்டுக் கொள்வதாக தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டது. உடனே ஒரு ஈழவ வாலிபன் அதை எதிர்த்தான். காரணம் கூறும்படி தலைவர் கேட்டார். அதற்கு அந்த வாலிபன்,

''உத்தியோகம் வருவதாய் இருந்தால் நம்மில் முக்கியஸ்தர்களுக்குத்தான் அவ்வுத்தியோகம் வரும், அது கிடைத்தவுடன் அவ்வுத்தியோகஸ்தர் அந்த உத்தியோகத்தை காப்பாற்றிக்கொள்ளவும் நல்ல பிள்ளை என்று எதிரிகளிடம் பேர் எடுக்கவும் நம்மை காட்டிக் கொடுத்து நம் சமூக துரோகியாக கொஞ்சமும் பயப்படமாட்டார். அப்படியே இதுவரை சிலர் ஆகியும் விட்டார்கள்''

என்று சொன்னான். சபையோருக்கும் அது சரி என்றும் தோன்றிவிட்டது. பிறகு மகாநாட்டுத் தலைவர் அய்யப்பன் அவர்கள் அதற்கு மறுமொழியாக நம் பிறவி எதிரிகள் சமூகத்தில் உள்ள நம் சமூக அபி மானியை விட நமது சமூகத்தில் உள்ள சமூக துரோகியே மேலானவர், ஏனென்றால் எப்படியாவது அந்த ஒன்று இரண்டு ஸ்தானங்களிலாவது நம் எதிரிகள் இல்லாமல் செய்யக்கூடுமானால் அதுவே வெற்றியென்று சொன்னார். அதுபோல் நமக்கு நன்மை செய்யாவிட்டாலும் கெடுதி செய்கிறவர்களுக்கு இடம் கொடுக்காமல் இருக்கவாவது இவர்கள் மந்திரிகளாய் இருப்பது நமக்கு நன்மையாகும்.

தோழர் டி.ஆர். வெங்கிட்டராம சாஸ்திரி ஏதோ ஒரு சுயநலப் பார்ப்பனன் பேச்சைக் கேட்டுக்கொண்டு சட்ட மந்திரி பதவியை ராஜிநாமா செய்தார். பிறகு அவர் கதி என்ன ஆயிற்று? தான் ராஜிநாமா செய்தது தவறு என்று அவரே நினைத்து நினைத்து அழுதார். சங்கராச்சாரிகளும் அவரை ராஜிநாமா கொடுத்ததற்காக வைதார்கள். காங்கிரஸ் தலைவர்களும் ''நீர் ராஜிநாமா கொடுத்த காரணமே தென்னாட்டில் காங்கிரஸ் இவ்வளவு ஈன ஸ்திதிக்கு வந்து பார்ப்பனரல்லாதார்களை இத்தனை பேர்களை காங்கிரசில் சேர்க்க வேண்டியதாய் விட்டது'' என்று வருத்தம் தெரிவித்துக் கொண்டார்கள். தென்னாட்டுப் பார்ப்பனர்களுக்கு கீழ் நோக்க அது ஒரு டர்னிங் பாயின்ட் ஆகிவிட்டது.

ஆதலால் சத்தியமூர்த்தி போன்றவர்கள் மந்திரியாவதை விட அவர் மந்திரித்துவத்தின் கீழ் நாம் பிரஜைகளாய் இருந்து வாழும்படியான அவமானத்தைவிட இன்று உள்ள மந்திரிகள் எவ்வளவோ மேலானவர்கள் என்பதை நமது வாலிபர்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். வெறும் வீரம் ஒன்றுக்குமுதவாது. நமக்கு எதிர் பிரசாரத்துக்கு எவ்வித சாதனமும் இல்லை. பத்திரிகை இல்லை. நம் வாலிபர்கள் மனதில் நம் கட்சியைப் பற்றி நம்பிக்கை உண்டாக நாம் எவ்வித வேலையும் செய்யவில்லை. இந்தக் காரணங்களே நம் கட்சியில் கொள்கைப் பற்றுள்ளவர்கள் எல்லாம் எதிர்க் கட்சிக்குப் போகவேண்டி ஏற்பட்டுவிட்டது. இனியும் நாம் அப்படியே



RangaRakes
tamilnavarasam.com

இருந்தால் அனேகர் போய்விடுவார்கள். கொள்கை அபிப்பிராயத்தால் நம் கட்சியை விட்டு இதுவரை ஒரு குஞ்சுகூட எதிர்க்கட்சிக்கு போகவில்லை. நம் கட்சியில் இருந்தால் பதவி கிடைக்காது என்கின்ற பயத்தாலேயே அனேகர் கட்சியை விடவும் எதிரிகளாகிய காங்கிரஸ்காரர்களிடம் தஞ்சம் புகவும் செய்கிறார்கள். உதாரணமாக தோழர்கள் தேவர், குமாரசாமி முதலியார் ஆகியவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். இவர்களுக்கு கொள்கை வித்தியாசம் என்ன அழுகின்றது, இவர்கள் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தால் இந்தப் பதவி கிடைத்து இருக்குமா? கட்சி மாறிவிட்டாலும் நம் கொள்கைக்கு சிறிதாவது விரோதமாய் இருக்கிறார்களா?

ஆதலால் நம் கட்சிக்கு பலமும் செல்வாக்கும் ஏற்படும்படி செய்தால் ஒருவரும் கட்சியை விட்டு போகமாட்டார்கள். எல்லோரும் திரும்பி ஓடிவந்து விடுவார்கள். பார்ப்பனர்கள் கூட வந்து கெஞ்சுவார்கள். ஆதலால் பிரசாரத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். இதற்கு ஆக நாங்கள் ஜில்லா ஒன்று இப்போது 1500 ரூபாய்க்குள்ளாகத்தான் உத்தேச செலவு திட்டம் போட்டிருக்கிறோம். இதில் 1000 ரூபாயை 12 மாத பிரசாரத்துக்கும் 500 ரூபாயை ஆபீசு செலவுக்கும் 12 மாதம் பத்திரிகை நடத்தும் செலவுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். இதுகூட செய்ய நாம் தயாராய் இருக்கவில்லையானால் ஒரு தடவை நமது கட்சியை மூழ்கிப்போக விட்டுவிட வேண்டியதுதான். ஆனால் நம் மனம் சம்மதிக்காததினாலேயே இவ்வளவு தூரம் கஷ்டப்படு கிறோம். இதை நீங்கள் உணர வேண்டும்.

நாம் காங்கிரசுக்காரரிடம் வர்மமோ, துவேஷமோ வைத்து அவர்களை எதிர்க்கவில்லை. நாம் காங்கிரசுக்காரரை ஏன் நம் எதிரிகளாய் பாவிக்கின்றோம்? நம்முடைய லட்சியத்தை எதிர்ப்பதே அவர்களுடைய வேலையாய் இருப்பதால்தான். இப்போது நம் லட்சியம் 2. அதாவது ஒன்று வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம். இரண்டு சமூக சமத்துவ சீர்திருத்தம். இந்த இரண்டுக்கும் காங்கிரஸ் அனுகூலமாயிருந்தால் அரசியல் சீர்திருத்தத்தில் அவர்கள் காட்டும் பக்கத்தில் படித்துப் பார்க்காமலே கையெழுத்துப்போடத் தயாராயிருக்கிறோம். வெறும் காகிதத்தில் வேண்டுமானாலும் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கத் தயார். அரசாங்கத்தை எதிர்ப்பதில் நாம் கோழைகள் அல்ல. பார்ப்பனர்களைவிட ஒருபடி முன்னுக்கு நிற்போம். ஆனால் எதற்காக எதிர்க்கிறோம் என்பது விளங்க வேண்டும். பார்ப்பான் பிழைப்பதற்கு நாம் அரசாங்கத்தை எதிர்ப்பதா? சதா சர்வகாலம் அதனுடன் (காங்கிரசுடன்) போராடிக்கொண்டிருப்பதிலேயே நம் வாழ்நாள் கழிவது எனக்கு சலிப்பாகத் தான் இருக்கிறது.

**ஒரு கேள்வி:-** அப்படியானால் நீங்கள் ஏன் காங்கிரசில் வந்து சேரக் கூடாது? (என்று தோழர் பழனியாண்டி முதலியார் கேட்டார்)

**பதில்:-** காங்கிரசில் சேரக்கூடாது என்கின்ற விரதம் இல்லை. மகமதியர்களுக்குக் காங்கிரஸ் பிரதிநிதித்துவம் கொடுத்து ராஜி செய்து



கொண்டதுபோல் மற்ற சமூகத்துக்கும் அரசியலில் பிரதிநிதித்துவம் கொடுப்பதாகவும் சமூக வேறுபாடுகளை அழித்துச் சமத்துவம் ஏற்படுத்துவ தாகவும் ஒப்புக்கொண்டால் வந்து சேரத் தயாராயிருக்கிறோம். இதை நான் 12 வருஷ காலமாகச் சொல்லிவருகிறேன். இதை ஆக்ஷேபிக்க ஆக்ஷேபிக்க எதிர்ப்பும், துவேஷமும் அதிகமாய்தான் வளரும். அதை அடக்கிவிட இனி யாராலும் முடியாது. இதற்காகப் பல பார்ப்பனரல்லாத காங்கிரஸ் பிரமுகர்களுக்கும் கடிதம் எழுதினேன்.

**கேள்வி:-** தோழர் ராஜகோபாலாச்சாரியுடன் நீங்கள் குற்றாலத்தில் பேசினீர்களாமே. என்ன பேசினீர்கள்?

**பதில்:-** இங்கு எடுத்துச் சொல்லும்படியாக ஒன்றும் விசேஷப் பேச்சு கிடையாது. குற்றாலத்தில் என்னை ஒரு அவசரத்தில் சந்தித்தார். ஒருநாள் வருவதுதானே என்றார். ஆகட்டும் வருகிறேன் என்றேன். அந்தப்படி ஒருநாள் போனேன். பொதுவாகப் பேசிக்கொண்டிருந்தோம். அநேக விஷயங்களில் எங்களுக்குள் அபிப்பிராய பேதமிருப்பதாகத் தெரிய வில்லை. அவ்வளவுதான்.

**கேள்வி:-** முடிவு என்ன?

**பதில்:-** முடிவு இன்னது என்று விளக்குவதற்கு ஒன்றும் இல்லை.

**கேள்வி:-** காங்கிரசு தான் பிரதிநிதித்துவ சபை. அதனால் தான் நீங்கள் விரும்புவது கைகூடும். என்றைக்கு ஆனாலும் நீங்கள் ஒரு நாளைக்கு காங்கிரசில் வந்து சேரத்தான் போகிறீர்கள்.

**பதில்:-** அந்நிலை ஏற்பட்டால் நான் சந்தோஷப்படுவேன். காங்கிரஸ் அதற்கு தகுதியாகிவிட்டால் நமது இயக்கம் என்று தனியாய் இருக்க வேண்டிய அவசியம் கூட இருக்காது. ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரசில் சேரலாம் என்கின்ற தீர்மானம் கோயமுத்தூரில் செய்தது இன்னமும் அப்படியேதான் இருக்கிறது. ஆனால் காங்கிரஸ் அந்த நிலைக்கு வரவேண்டுமே.

**கேள்வி:-** நீங்கள் எல்லோரும் வந்து சேர்ந்து அந்தப்படி செய்யுங்களேன்.

**பதில்:-** நான் முயற்சித்தாய்விட்டது, முயற்சிப்பவர்களை நான் ஆக்ஷேபிக்கவில்லை. இந்த நிபந்தனைகளை காங்கிரஸ் பார்ப்பன தலைவர்கள் ஒப்புக்கொண்டால் ஒழிய முடியாது.

இவ்விஷயமாய் மற்றும் தோழர்கள் பி. வரதராஜுலு நாயுடு, கல்யாணசுந்திர முதலியார், வி.ஓ. சிதம்பரம் பிள்ளை ஆகியவர்களுக்கு எழுதினேன். அவர்களும் ஒப்புக்கொண்டார்கள்.

சமீபத்தில் பார்ப்பனரல்லாதார் எல்லோரும் கட்சிபேத மன்னியில் ஒன்றுகூடி ஒரு முடிவுக்கு வந்து பிறகு தோழர் ராஜகோபாலாச்சாரியாருடன் கலக்கலாம்.

இந்த கமிட்டி சம்மந்தமான வேலைகள் பூர்த்தியான பிறகு எல்லோரையும் ஒன்று சேர்க்க எங்களாலான முயற்சி செய்ய எண்ணி இருக்கிறோம்.



RangaRakes tamilnavarasam.com

பதவியே பிரதானம் என்று கருதுகிறவர்கள் நம்முடன் இல்லா விட்டாலும் பொது நன்மையை உத்தேசித்து பொது வாழ்வில் இருக்கிற மற்றவர்கள் ஏன் ஒன்று கூடக்கூடாது?

நிற்க, இப்பொழுது நமக்கு பணம் மாத்திரமே பிரதானமல்ல. ஆங்காங்குள்ள வாலிபர்களுக்குப் புதிய உணர்ச்சி உண்டாக வேண்டும். தைரியமாய் தியாகபுத்தியுள்ள பலர் கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கத் துணிந்து பிரசாரத்தில் இறங்கவேண்டும். இந்த பிரசாரத்தில் சுயமரியாதை இயக்க பிரசார கொள்கைகளையெல்லாம் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. கட்சிப்பெயர் சிலருக்கு பிடிக்கவில்லை என்றார்கள். அதைப் பற்றிக் கவலையில்லை. பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்பது தப்பல்ல. ஜஸ்டிஸ் என்பது பத்திரிகை பெயரே ஒழிய வேறில்லை.

காங்கிரசுக்காரருக்குள் - பார்ப்பனர்களுக்குள் இவ்வித அபிப்பிராய பேதம் கிடையாது. எந்தப் பெயர் இருந்தாலும் ''தலைவர் சொன்னால் சரி'' என்று ஒப்புக்கொள்ளுவார்கள். அவர்களுக்குள் கட்சி அபிப்பிராய பேதமும் இல்லை. காங்கிரசை பார்ப்பனர் இயக்கம் என்கின்ற ஒரே கருத்து மீது எல்லோரும் ஒன்று சேர்ந்து கொள்ளுகிறார்கள்.

காங்கிரசுக்காரர்கள் சமதர்மம் என்கிறார்கள் - சீர்திருத்தத்தை உடைக்க வேண்டும் என்கிறார்கள், பிரிட்டிஷ் சம்மந்தத்தை ஒழித்துவிட வேண்டும் என்கிறார்கள்.

இந்த மூன்றுக்கும் நேர் விரோதி என்று சொல்லி பிரிட்டிஷின் பேரில் கவிபாடி பட்டம், பதவி, பணம் சம்பாதித்த சீனிவாச சாஸ்திரியார் காங்கிரசை ஆதரிக்கிறார், காங்கிரசுக்கு வக்காலத்து பேசுகிறார், பார்ப்பன ரல்லாதார் இயக்கத்தைப் பற்றி விஷமப்பிரசாரம் செய்கிறார் என்றால் மற்ற பார்ப்பனர்களைப்பற்றி பேசவேண்டுமா?

ஆதலால் நம்மவர்களுக்கு அந்த புத்தி வேண்டும். பதவி மோக முள்ளவர்களுக்கு நல்ல புத்தி வராதுதான் என்றாலும் பதவியைப்பற்றி லட்சியமில்லாதவர்கள் இதைக் கவனித்துத் தங்கள் பின் சந்ததிகளின் நன்மையை உத்தேசித்து இந்த இயக்கத்துக்கு தங்களாலானதைச் செய்யுங்கள்.

பதவி ஆள்களுக்கும் ஒரு வார்த்தை சொல்லுகிறேன். இன்று 100, 200 கொடுத்து பிரசாரத்துக்கு உதவி செய்யத் தவறினால் நாளைத் தேர்தல்களில் 1000, 10000 அதிகமாய் செலவு செய்ய வேண்டிவரும் என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

*குறிப்பு: 31.05.1936 ஆம் நாள் திருநெல்வேலி, வண்ணாரப்பேட்டை காஸ்மாபாலிட்டன் கிளப்பில் நடந்த கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 07.06.1936**



# குற்றாலத்தில் சு.ம. திருமணம்

எனது மதிப்புக்கு உரிய தோழர் ஆச்சாரியார் அவர்களும் தோழர் முதலியார் அவர்களும் இத்திருமணத்தைப் பாராட்டிப் பேசியது எனக்கு மிகவும் பெருமையளிக்கத் தக்கதாகவே இருந்தது.

இதுவரை நான் எத்தனையோ திருமணத்தில் கலந்திருக்கிறேன்; பார்த்திருக்கிறேன்; தலைமை வகித்தும் இருக்கிறேன் என்றாலும் இன்றைய திருமணத்தில் நான் கலந்திருந்ததை உண்மையாகவே நான் பெருமையாக எண்ணுகிறேன். இத்திருமண முறை இப்பெரியார்களின் ஆமோதிப்பையும் ஆசியையும் பெற்றது உண்மையிலேயே எனக்குக் கிடைக்கக் கூடாத ஒரு சாதனம் கிடைத்தது போலவே இருக்கிறது. மணமக்களுக்கும் இந்த சந்தர்ப்பமானது ஒரு மறக்கக்கூடாததும், என்றும் ஞாபகத்தில் இருக்கக் கூடிய பெருமையானதுமான சம்பவமும் ஆகும். ஆதலால் அவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

எனது பணிவிற்குரிய ஆச்சாரியார் அவர்கள் நான் இத் திருமணத்துக்கு புரோகிதன் என்று சொன்னார்கள். இது தான் புரோகித முறையாகவும் புரோகிதத்துக்கு இவ்வளவு தான் வேலை என்றும் இருந்தால் நான் அந்த புரோகித பட்டத்தை ஏற்க தயாராய் இருப்பதோடு புரோகிதத் தன்மையை எதிர்க்கவுமாட்டேன். புரோகிதக் கொடுமையும் புரோகிதப் புரட்டும் பொறுக்க முடியாமல் இருப்பதாலும் அப்படி இருந்தும் அதற்கு செல்வாக்கு இருப்பதாலும் தான் புரோகிதத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் என்கின்றேன். மற்றபடி எனக்கு வேறு எண்ணம் இல்லை. இன்று நடந்த இந்த காரியங்கள் கூட இல்லாமல் திருமணங்கள் என்பவை நடக்க வேண்டும் என்பது எனது அவா. அப்படியே அநேக இடங்களில் நடக்கின்றன. ஆணும் பெண்ணும் ரிஜிஸ்டர் ஆபிசுக்கு போய் வாழ்க்கைத் துணைவர்களாகி விட்டோம் என்று சொல்லி கையெழுத்து போட்டுவிட்டு வந்துவிட்டால் போதும். அந்த வெறும் கையெழுத்துத் திருமணத்துக்கு இதைவிட அதிக மதிப்பும் நன்மையும் சுதந்திரமும் உண்டு. புருஷன் பல பெண்ஜாதிகளைக் கட்டிக் கொள்ள முடியாது, தொந்தரவு பண்ண முடியாது. ஆண் பெண் குழந்தைகளுக்கு சொத்தில் சரிபங்கு உண்டு.

நிர்வகிக்க முடியாத நிலை ஏற்பட்டால் ஆணோ, பெண்ணோ பிரிந்து இஷ்டமானால் வேறு கல்யாணமும் செய்து கொள்ளலாம். புரோகிதக்கூலி,



RangaRakes tamilnavarasam.com

தக்ஷணை, தாம்பூலம், சாப்பாடு, ஆடல், பாடல், ஆடம்பரம் ஆகிய செலவும் தொல்லையும் கிடையாது. இன்றுகூட நாம் இங்குக்கூடி இந்தக் காரியங்களாவது செய்வது இந்த வாழ்க்கை ஒப்பந்தத்துக்கு ஒரு விளம்பரத்துக்கு ஆகவே ஒழிய மற்றபடி இப்படிச் செய்தால் தான் கல்யாணமாகும் என்பதற்கு ஆக அல்ல. ஆகையால் வரவர இவைகள் கூட அவசியமில்லாத மாதிரி செய்து கொள்ள வேண்டும். சட்டங்களிலும் சீர்திருத்தங்கள் வேண்டும்.

மற்றும் ஆச்சாரியார் அவர்கள் நான் அவர்களை திருமணத்தை பாராட்டி வாழ்த்தும்படி கேட்டதை ஆசீர்வாதம் செய்யும்படி கேட்டதாகவும், அது கடவுளுக்குத்தான் உரிமை என்றும் சொன்னார். நான் கேட்டுக் கொண்டதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆச்சாரியார் பாராட்டுதலுக்கும் வாழ்த்துதலுக்கும் மதிப்பு உண்டென்று இப்போதும் கருதுகிறேன்.

இத்திருமண முறையை பெரியார் ஆச்சாரியார் ஆதரித்து விட்டதால் எனக்கு எவ்வளவோ தைரியம் ஏற்பட்டு விட்டது.

இத்திருமண முறைக்கு இன்று ஒரு பொது ஆமோதிப்பு ஏற்பட்டு விட்டதென்றும் அது இம்முறை பெருக ஒரு நல்ல ஆதரவு என்றும் சொல்லுவேன்.

இது நமக்கு ஒரு லாபகரமான காரியம் என்றே கருதுகிறேன். அதற்கு ஆக அவர்களுக்கு நான் மிகுதியும் கடமைப்பட்டவனேயாவேன்.

நிற்க, ஆசீர்வாதம் செய்யச் சொன்னேன் என்பதிலும் எனக்கு ஆக்ஷேபணையில்லை.

ஆனால் அதற்கு தான் தகுதியில்லை என்றும், கடவுள்தான் செய்ய வேண்டும் என்றும் சொன்னதற்கு நான் சொல்லக்கூடிய சமாதானம் என்னவென்றால் ஆச்சாரியார் அவர்கள் ஆசீர்வாதம் செய்வதற்கு தகுதி உடையவர்கள் என்றே சொல்லுகிறேன். அவர் போன்றவர்கள் இம் மண மக்கள் வாழ்க்கை நலத்தில் ஆசைகொண்டு ஆசி கூறிவிட்டால் அந்த ஆசி வீண் ஆசியாகவோ, கடவுள் ஆசியாவோ, தக்ஷணைக்கு ஆக செய்யும் ஆசியாகவோ ஆகிவிடுமா?

உதாரணமாக அரசியல் உலகில் ஒரு வைசிராய் ஒரு ஆசாமியைப் பார்த்து ''நீ முன்னேற்றமடைய தகுதி உடையவன், நீ முன்னேற்றமடைந்து பெரிய பதவிகளுக்கு வரவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்'' என்று ஆசி கூறுவாரேயானால் அந்த ஆளுக்கு அந்த ஆசி பயன்படுமா படாதா என்று யோசித்துப் பாருங்கள். வைசிராயானவர் அந்த ஆசாமிக்கு ஆபத்து வரும் காலத்தில் எல்லாம் தன்னால் கூடியதைச் செய்து தன் வாக்கு நிறைவேற முயற்சிப்பாரா இல்லையா என்று யோசித்துப்பாருங்கள். அதுபோல் ஆச்சாரியார் அவர்களால் ஆசிபெற்று விட்டால் மணமக்கள் வாழ்க்கையில் ஆச்சாரியார் அவர்கள் கண்காணிப்பும் கவலையும் இருந்துதான் தீரும். அதற்கு ஆகத்தான் தகுந்தவர்களிடம் ஆசிபெறவேண்டுமென்பது.



மற்றபடி கடவுள் ஆசி என்றால் அரை அணா வாங்கிக்கொண்டு தெருவில் போகின்றவன் யாதொரு பொறுப்பும் இல்லாமல் மணமக்கள் 16 மக்கள் பெற்று பெருவாழ்வு வாழவேண்டும் என்று சொல்லிவிடுவார்கள். கடவுள் கிருபையில் வாழவேண்டும் என்றும் சொல்லிவிடுவார்கள். அதனால் என்ன ஆகிவிடும்? 10, 12 குழந்தைகள் பெற்று அவைகள் கை முய் என்று பசியால் வாடி அழுதால் ஆசீர்வாதக்காரன் பக்கத்து வீட்டில் இருந்தால் என்ன சொல்லுவான். தன் ஆசீர்வாதத்தால் ஏற்பட்டதென்றோ, தனது பிரார்த்தனையில் கடவுள் கொடுத்தார் என்றோ எண்ணி உதவி செய்வானா? ''இதென்னடா எழவு பன்றி குட்டி போட்ட மாதிரி 10, 12 உருப்படிகள் பெற்று பக்கத்து வீட்டில் இருந்து கொண்டு நமக்கு வீண் தொந்திரவு கொடுக்கிறார். தூக்கமில்லை'' என்று வெறுப்புடன் இழித்துரைப்பான்.

ஆகையால் யாரும் ஆசீர்வாதம் செய்யலாம் என்பதும், கடவுள் மீது பழிபோடலாம் என்பதும் நியாயமாகிவிடாது. மணமக்களுக்கு ஆச்சாரியார் அவர்களது ஆசீர்வாதத்தை உண்மையாகவே பெருமையாய் கருதுகிறேன். ஆசீர்வாதம் என்றாலும், வாழ்த்து என்றாலும், ஆசி என்றாலும், ஆசைப் படுகிறேன் என்றாலும் கருத்து ஒன்றுதான். தனது ஆசையையும் நல்ல எண்ணத்தையும் தெரிவிப்பதேயாகும்.

தோழர் சிதம்பரநாத முதலியார் அவர்களும் இத்திருமணத்தை பாராட்டியதும் இங்கு விஜயம் செய்ததும் பாராட்டற்குரியதேயாகும்.

கடசியாக இவ்வளவு சுருக்கமுறையில் திருமணம் நடத்திக்கொள்ள முற்பட்ட மணமக்களுக்கும், அதை ஒப்புக்கொண்ட மணமக்கள் பெற்றோர்களுக்கும் இங்கு விஜயம் செய்த பெரியார்களுக்கும் நன்றிகூறி அமருகிறேன்.

*குறிப்பு: 31.05.1936 ஆம் நாள் குற்றாலம் காடல்குடி ஜமீன்தார் பங்களாவில் நடைபெற்ற சென்னை என்.டி. ஷண்முகம் (பட்டணம்பொடி) கம்பெனி நிறுவனர் என்.தங்கவேலு - மதுரை அய்யம்பாளையம் வணிகர் கே.எஸ். ராமசாமி அவர்கள் குமாரத்தி பூரணத்தம்மாள் திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 07.06.1936**



RangaRakes tamilnavarasam.com

# கோவை கேசும் பார்ப்பனீயமும்

இந்தியாவில் குறிப்பாக தென்னாட்டில் இந்த 20-வது நூற்றாண்டிலும், பார்ப்பனர்களின் ஆதிக்கம் மத இயலிலும், சமூக இயலிலும், அரசியலிலும் தலைதூக்கி விளங்குவதற்குக் காரணம் பார்ப்பனர்கள் பத்திரிகை உலகத்தை முற்றுகை போட்டு வெற்றியடைந்து சுவாதீனப்படுத்தி அடிமை கொண்டதேயாகும்.

இத்தென்னாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிரிடையாக எவராலும் பத்திரிகை நடத்துவது என்பது கொஞ்சமும் முடியாத காரியமாகவே ஆகிவிட்டது. ஏதாவது ஒன்று அரை பத்திரிக்கைகள் பார்ப்பனர்களை எதிர்த்து இருக்குமானால் அவற்றின் நிலையும் உயிருக்கு ஊஞ்சலாடும் தன்மையதாகவே இருந்து வரவேண்டியிருக்கிறது.

பத்திரிகை நடத்துவதில் கொடுமையையும், கல் நெஞ்சையும், நாணயக் குறைவையும், அதர்மத்தையும் காட்டுவதில் பார்ப்பனர்கள் சிறிது கூடத் தயங்குவதில்லை. உண்மையிலேயே இத்தமிழ்நாட்டில் இந்த 10 வருஷ காலமாய் குடி அரசு என்னும் பத்திரிகை ஒன்று இல்லாமல் இருந்திருக்குமானால் இன்று இத்தென்னாட்டு நிலை, ஏன்? இந்திய காங்கிரஸ் நிலை, அரசியல் சீர்திருத்த நிலை கூட வேறு விதமாகவே இருந்திருக்கும் என்று சொல்லுவதற்கு நாம் சிறிதும் பின்னடையவில்லை. உதாரணமாக இன்று காங்கிரஸ் கொள்கைகளில் உள் கருப்பொருள்களையும், தலைவர்களின் உள் எண்ணங்களையும் அவற்றால் மக்களுக்கு ஏற்படும் கெடுதிகளையும் குடி அரசு விளக்கமாக, நிர்வாணமாக தைரியமாய் எடுத்துக்காட்டி வருவதால் அவர்கள் குடி அரசுக்கு சமாதானம் சொல்லித் தீரவேண்டிய முறையில் தங்கள் கொள்கைகளையும் திட்டங்களையும் தந்திரமாய் அமைத்துக்கொள்ள வேண்டியதாகி விட்டது.

அதுமாத்திரமல்லாமல் சில சமயங்களில் ஒரு அளவுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதாகவும் ஏற்பட்டுவிடுகிறது. இதன் பயனாய் நிலைமைகள் எத்தனையோ விஷயங்களில் மாறுதலடைய வேண்டியதாகி விட்டதென்றாலும் அநேக விஷயங்களில் நமது நிலை மோசமாகிக்கொண்டு வருகிறது என்பதையும் மறைக்கவில்லை. ஏனென்றால் பார்ப்பனர்களால் நடத்தப்படும் பத்திரிகை மாத்திரமல்லாமல் பார்ப்பனரல்லாதார் என்பவர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளும் 100க்கு 95க்கு மேலாக பார்ப்பனர்களையும் பார்ப்பனப் பத்திரிக்கைகளையும் தங்கள் வழிகாட்டிகளாகக் கொண்டு



அவர்களுக்கு பின் தாளம் போடும் முறையிலேயே நடத்தப்பட்டு வருகின்றன. மற்றும் ''பார்ப்பனர்கள் குறை கூறினால் நம்மால் வாழ முடியாது-நமக்கு பத்திரிகை உலகில் இடம் கிடைக்க மாட்டாது'' என்கின்ற மன உறுதியுடனேயும் இருந்து வருகின்றன. இந்த நிலைமைதான் தென்னாட்டில் இன்னமும் பார்ப்பன ஆதிக்கம் இருந்து வர ஆக்கம் அளித்து வருகிறது.

அநேக மேடைகளிலும் மகாநாடுகளிலும் தோழர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் இந்த நாட்டில் பார்ப்பனரல்லாதார் வாழ்க்கை சுயமரியாதையுள்ள வாழ்க்கையாக ஆவதற்கு ஏதாவது ஒரு அறிகுறி காணவேண்டுமானால் அது முதலில் ''இந்து'' ''சுதேசமித்திரன்'' பத்திரிக்கைகளின் வீழ்ச்சியைப் பொறுத்த தேயாகும்'' என்று பல தடவை சொல்லி வந்திருப்பது யாவருக்கும் தெரிந்த விஷயமாகும். மற்றும் நாமும் எத்தனைக்கு எத்தனை அப்பத்திரிகைள் வீழ்ச்சி அடைகின்றனவோ அத்தனைக்கு அத்தனை பார்ப்பனரல்லாத மக்கள் நிலை மேல்நோக்கி விட்டதென்பதும், எத்தனைக்கு எத்தனை அப் பத்திரிகைகள் செல்வாக்கடைகின்றனவோ அத்தனைக் கத்தனை பார்ப்பன ரல்லாதார் சமூக நிலை இழிவு அடைய கீழ் நோக்கி விட்டதென்றும் அறியலாம் என்று சொல்லுவதுடன் இதுதான் இப்பரீக்ஷைக்கு நிர்ணயமான அளவு கருவி என்றும் பல தடவை சொல்லி வந்திருக்கிறோம். இவற்றிற்கு நாம் பல உதாரணங்கள் கூறலாம். தேர்தல் காலங்களில் அப்பத்திரிக்கைகள் எவ்வளவு கேவலமான முறைகளைக் கையாண்டு வந்திருக்கின்றன என்பதும் பார்ப்பனரல்லாத பிரமுகர்களைப்பற்றி சந்தர்ப்பா சந்தர்ப்பம் இல்லாமல் எவ்வளவு தூரம் வீண்பழி சுமத்தி தொல்லை விளைவித்து தலையெடுக்க வொட்டாமல் செய்து வந்திருக்கின்றன என்பதும் மற்றும் பொது நடப்புகளையும் அவை திரித்தும், பழித்தும், மறைத்தும், கற்பித்தும் பிரசுரித்து வந்திருக்கின்றன என்பதும் போதுமான உதாரணங்களாகும்.

இன்று உள்ள அரசியல், சமுதாய இயல் பிரச்சினைகளில் எந்தக்கட்சி மேலானது என்றோ எந்தக் கட்சி தீவிரமானதென்றோ, எந்தக் கட்சி பிற்போக்கான தென்றோ, அவ்வக்கட்சி கொள்கைகளை எடுத்துக்காட்டி வித்தியாசம் காட்ட முடியுமா என்று பார்த்தால் ஒரு வித்தியாசமும் இல்லை என்பதை நன்றாய் அறிந்திருந்தும் பார்ப்பனப் பத்திரிகைகள் பிரசாரமே ஒரு கட்சி மேல் என்றும் மற்றொரு கட்சி கீழ் என்றும் மக்கள் கருதும்படி செய்து வருகிறது.

மற்றும் தனிப்பட்ட மக்கள் விஷயத்தையே எடுத்துக்கொள்வோம். பொப்பிலி ராஜா, பனகால் ராஜா, சர்.பி. தியாகராய செட்டியார் போன்ற மாபெருந் தலைவர்களைப் பற்றி இந்து மித்திரன் பத்திரிக்கைகளும் அவர்களைப் பின்பற்றி வாழ வேண்டிய பத்திரிக்கைகளும் எப்படி எழுதி வந்தன. ஆனால் அதே பத்திரிகை அவர்கள் சமீபத்தில் கூட நிற்க தகுதியும், நாணயமும் அற்ற தோழர்கள் சத்தியமூர்த்தி சாஸ்திரியார், ஸ்ரீனிவாச சாஸ்திரியார் போன்றவர்களை எப்படி உயர்த்தி புகழ்ந்து கூறி விளம்பரம் கொடுத்து பெரிய மனிதர்களாக்கி வருகின்றன என்பது கொண்டும் உணரலாம்.



RangaRakes tamilnavarasam.com

தோழர் சீனிவாச சாஸ்திரியாருக்கு என்ன கொள்கையென்று யாராவது சொல்ல முடியுமா? அவரது நாணயம் இன்னது என்று யாரும் அறிய முடியாதா? காந்தியாரை கைதி செய்ய இடம் கொடுத்து பட்டம் பதவி பெற்றதும், தன்னை மிதவாதி என்று சொல்லிக்கொண்டு அரசாங்கத்துக்கு கவிபாடி மகாகனம் ஆனதும், நாட்டுக்கோட்டை ராஜாவுக்கு உதவி செய்து வெகுமானம் பெற்று வாழ்க்கை நடத்துவதும், இப்போது காங்கிரசை ஆதரிப்பதும், பார்ப்பனரல்லாதார் கட்சி முன்னுக்கு வருவதைப் பார்த்துக் கொண்டு இருக்கமுடியாது என்று சொல்வதும், கடசியாக இழவு வீட்டில் இருந்து கொண்டும் பார்ப்பனரல்லாத கட்சியைப்பற்றி விஷமத்தனாய்ப் பேசுவதும் ஆகிய காரியங்கள் அவர் செய்து வந்ததையும் வருவதையும் இந்து, மித்திரன் முதலியவை அறியாது என்று யாராவது சொல்லிவிட முடியுமா?

அதுபோலவே தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரியாரின் தன்மையைப் பற்றியும் சொல்லிக்காட்ட வேண்டியதில்லை. எவரும் அறியாததல்ல. இப்படி இருக்க இவ்விரு சாஸ்திரிகளுக்கும் ''இந்து'', ''மித்திரன்'' பத்திரிகைகளில் தினம் தினம் கலம் கலமாய் இடம் கொடுத்து விளம்பரம் தருவதல்லாமல் அவர்களால் கக்கப்படும் விஷங்களை பாமரமக்களுக்குள் புகுத்துகின்றன. அனேக பல முக்கியமான விஷயங்களையும் உண்மையான விஷயங்களையும் தைரியமாய் மறைக்கின்றன. மறைக்க முடியாவிட்டால் திரித்துக் கூறி விடுகின்றன.

இவைகள் எல்லாம் ஒருபுறமிருக்கட்டும், சமீபத்தில் இவ்வாரத்தில் நடந்த ஒரு விஷயத்தை வெளிப்படுத்த ஆசைப்படுகிறோம். அதை வெளிப்படுத்தவே தான் இவ்வளவு எடுத்துக்காட்டினோம். அதென்னவெனில் **தோழர் கோவை ரத்தினசபாபதி கவுண்டர் கேசில்** பார்ப்பனர்கள் நடந்து வந்த மாதிரியும், இன்று நடந்து வரும் மாதிரியும் இந்து அவற்றை ஆதரித்துச் செய்யும் அநீதியையும் பத்திரிகை ஒழுக்கக் கேட்டையும் எடுத்துக் காட்ட ஆசைப்படுவதேயாகும். தோழர் இரத்தினசபாபதி கவுண்டர் கேசானது அது பொய்யா மெய்யா அல்லது தப்பா சரியா என்பதைப் பற்றி நாம் இந்த சந்தர்ப்பத்தில் பேசுவதில்லை. ஆனால் அக்கேஸ் நடத்தப்பட்டதில் பார்ப்பனர்கள் எப்படி நடந்து கொண்டார்கள், அது முடிந்த பிறகும் பார்ப்பனர்கள் எவ்வளவு விஷத்தைக் கக்குகிறார்கள் என்பதைத் தெரிவிக்கவே எழுதுகிறோம்.

அக்கேசு கோயமுத்தூர் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் போர் அல்லது கோயமுத்தூர் காங்கிரஸ் ஜஸ்டிஸ் கட்சி போர் என்கிற தலைப்பிலேயே நடந்து வந்தது. உதாரணம் வேண்டுமானால் ஜஸ்டிஸ் கட்சியார் - அதாவது பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் தீவிரமாய் வேலை செய்து வந்தப் பிரமுகர்கள் ஒருபக்கமும் பார்ப்பனர்களும் அவர்களது



அடிமைகள் ஒரு பக்கமுமாக இருந்து கேஸ் நடத்தப்பட்டு வந்தது என்பதற்கு அந்த விவகாரத்தில் இருதரப்பிலும் சம்பந்தப்பட்ட சம்பந்தப்படுத்தப்பட்ட பெயர்களைக் கொண்டு அறியலாம்.

அக்கேஸ் மூலமாக கோவை பார்ப்பனரல்லாத தலைவர்கள் எல்லோரையும் அழுத்திவிடப் பெருமுயற்சி செய்யப்பட்டது. சிலர் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து கூட போலீஸ் தயவை சம்பாதிக்க வேண்டியவர்களானார்களாம்.

கடைசியாக செஷன் ஜட்ஜி அவர்களே கேசை விடுதலை செய்வதற்கு அனுகூலமாகவே ஜூரிகளுக்கு விஷயங்களை எடுத்துச் சொன்னதாகவும் தெரிகிறது. அப்படியெல்லாம் இருந்தும் வகுப்பு உணர்ச்சி முதலிய காரணமாகவே ஜூரிகளால் தண்டிக்கப்படலாயிற்று.

தண்டிக்கப்பட்டவர் விடுதலையாவதற்கு முயற்சி செய்தார். இந்நிலையில் தண்டனை போதாதென்றும் அதிக தண்டனை கொடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சியில் போராடப்பட்டது. அது பயன்படாமல் போயிற்று. பின் இந்த கட்சி பிரதி கட்சி காரணத்தாலேயும் பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதார் வகுப்பு துவேஷம் காரணமாயும் தான் தண்டனை அடைய நேரிட்டது என்று கருதிய தோழர் ரத்தினசபாபதி கவுண்டர் அவர்கள் தன்னை நிரபராதி என்று வைசிராய்க்கு தான் கண்ட உண்மையைக் காட்டி விண்ணப்பம் செய்து கொண்டார். வைஸ்ராய் அவர்கள் உண்மையை கண்டுபிடிக்க ரகசிய ஏற்பாடு செய்து விண்ணப்பத்தில் கண்ட விஷயத்தின் தன்மையை அறிந்தார். கவுண்டரை மன்னிக்க வேண்டும் என்று தோன்றிற்று. கவுண்டரை விடுதலை செய்து விட்டார். இதில் யாருக்கு என்ன முழுகிப் போய்விட்டது என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்து, சுதேசமித்திரன், தினமணி முதலிய பார்ப்பனப் பத்திரிகைகள் எல்லாம் கவுண்டரை விடுதலை செய்தது தப்பு என்று தலையங்கம் எழுதின.

தோழர்கள் T.R. வெங்கிட்டராம சாஸ்திரியார், வி.வி.சீனிவாசய்யங்கார் முதலிய பார்ப்பன பிரமுகர்கள் எல்லோரும் கவுண்டரை விடுதலை செய்தது தப்பு என்று பத்திரிகைகளுக்கு தினம் தினம் கலம் கலமாக வியாசங்கள் எழுதினார்கள்.

இக்கேசு விஷயத்தில் பார்ப்பனக் கொடுமை அவ்வளவோடு நின்று விடவில்லை. இவர்கள் வியாசங்களுக்கு பதிலாக எழுதப்பட்ட மற்றவர்கள் கட்டுரைகளை பிரசுரிக்கவும் மறுத்துவிட்டன.

அதாவது சிக்கந்திராபாத்தில் இருந்து ஒரு பார்ப்பனரல்லாத வக்கீல் திவான்பகதூர் ஏ.வேணுகோபால் அவர்கள் தோழர் வி.வி.சீனிவாசய்யங்கார் கூற்றுக்குச் சரியான பதில் எழுதி அதுவும் அய்யங்காருடைய வெறும் சட்ட சம்மந்தமான பிரச்சினைகளுக்கு மாத்திரம் சமாதானம் எழுதி அனுப்பப்பட்ட கட்டுரையை இந்து பத்திரிகை லட்சியம் செய்யவே இல்லை. பிறகு தோழர்



RangaRakes tamilnavarasam.com

ஏ. வேணுகோபால் அவர்கள் மறுபடியும் அக்கட்டுரை நகலை வைத்து ரிஜிஸ்டர் கடிதம் மூலம் இந்துவுக்கு அனுப்ப இந்து அதைப் பெற்றுக் கொண்டு அக்கட்டுரைக்கு இடமில்லை என்று சொல்லி அவற்றை வாப்பீசு செய்து விட்டது. இந்த கடித வர்த்தமானத்தையும் கட்டுரையையும் வேறுபக்கம் பிரசுரித்திருக்கிறோம். இந்து பத்திரிகையில் கவுண்டர் விடுதலைக்கு விரோதமாக தலையங்கம் எழுதவும் பல கட்டுரைகள் பல கலங்களில் பிரசுரிக்கவும் இந்துவுக்கு இடம் இருந்து வந்திருக்கிறது.

ஆனால் விடுதலைக்கு அனுகூலமாக வைசிராய் தீர்ப்பை நியாயப்படுத்தி எழுதப்பட்ட ஒரு கட்டுரைக்கு இடம் இல்லை என்றால் இந்துவுக்கு பத்திரிக்கையில் இடமில்லையா மனதில் இடமில்லையா என்பதை பொது ஜனங்கள் உணரவேண்டுமென்பதற்கு ஆகவே இதை எடுத்துக் காட்டுகிறோம்.

கட்டுரையாளரான திவான் பகதூர் வேணுகோபால் அவர்கள் தனது கட்டுரையை ஒரு தடவையில் போட இடமில்லையானால் இரண்டு தடவையாக பிரசுரிக்கலாம் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார். அப்படி இருந்தும் அக்கட்டுரை திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது என்றால் இந்து பத்திரிகையின் பத்திரிகை தர்மமும் அவர்களது பொதுநல நடு நிலைமையும் எப்படி இருக்கிறது என்று பாருங்கள்.

எந்த விஷயத்தையும் பிரசுரிக்கவும் மறுக்கவும் பத்திரிகை ஆசிரியருக்கு உரிமை உண்டு என்பதை நாம் மறுக்கவில்லை. அதற்கு எந்தக் காரணம் வேண்டுமானலும் சொல்லிக்கொள்ள ஆசிரியருக்கு உரிமை உண்டு. காரணம் சொல்லாமல் இருக்கவும் உரிமை உண்டு.

ஆனால் இப்படிப்பட்ட பத்திரிக்கைகள் தங்களை பொது நலத்துக்காக பாரபட்சமின்றி நடந்துகொள்ளும் பத்திரிக்கைகள் என்று சொல்லிக் கொள்ளும் உரிமையைக் கூட பொது ஜனங்கள் நம்பவேண்டுமா ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்பதுதான் நமது கேள்வியாகும்.

திவான்பகதூர் வேணுகோபால் வியாசம் இந்துவில் சுமார் 2½ கலம் அல்லது 2¾ கலம் வரலாம். இதற்கு இந்து பத்திரிக்கையில் 2 தடவையாகக்கூட பிரசுரிக்க இடமில்லையாம். ஆனால் தோழர் வி.வி. சீனிவாசய்யங்காருடைய கட்டுரைக்கு 11 கலங்கள் செலவழிக்கப்பட்டிருக்கிறது. தோழர் டி.ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியார் கட்டுரை 2 கலம் வரை செலவழிக்கப் பட்டிருக்கிறது. இந்துவின் தலையங்கத்துக்கு ஆகவும் ஒரு கலம் கொடுத்து நீண்ட தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப்படியான சுமார் 13, 14 கலம் கொண்ட அதுவும் ஒரு மனிதன் தண்டனையில் இருந்து விடுதலையானதை ஆட்சேபித்து வன்மம் காட்டும் வியாசங்களுக்குப் பதிலாக ''குற்றவாளி'' பக்கம் வெறும் சட்ட சம்பந்தமான சமாதானத்தை பிரசுரிக்கக்கூட இடம் இல்லை என்று இந்து பத்திரிகை சொல்லிவிட்டால் இந்த வழக்கு பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியில் நடந்திருக்கிறது என்றும் வகுப்பு உணர்ச்சி காரணமாகவே தண்டனை அடைய நேரிட்டது என்றும் கவுண்டர்



நினைத்ததிலும் அதை காட்டி தான் விடுதலை அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டதிலும் என்ன தப்பு இருக்கமுடியும் என்பதோடு என்ன ஆட்சேபணை இருக்க முடியும் என்று கேட்கிறோம்.

நாளைக்கு நமக்கு சுயராஜ்ஜியம் கிடைத்து இவர்கள் கைக்கு அதிகாரம் வந்து அப்போதும் இந்த பத்திரிக்கைகளே தேசீயப் பத்திரிக்கை களாக இருந்து வந்து இந்த தோழர்கள் டி.ஆர்.வியும், வி.வி.எஸ்.சும் நீதிபதிகளாகவோ நீதிவாதிகளாகவோ இருந்து விடுவார்களேயானால் நமது கதி என்ன ஆகும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

ஆகவே இந்து பத்திரிகை பார்ப்பனரல்லாத மக்கள் பலர் தேசீயப் பத்திரிகை என்றும் உண்மை சேதிப் பத்திரிகை யென்றும் சொல்லுவார் களேயானால் அவர்கள் எவ்வளவு மடையர்களாகவும் இல்லாவிட்டால் பார்ப்பன அடிமைகளாகவும் இருக்க வேண்டும் என்று கேட்கின்றோம்.

பார்ப்பனப் பத்திரிக்கைகள் சரசமாய் கிடைப்பதால் வாங்கி வாசிப்பதாக பல பார்ப்பனரல்லாதார் சொல்லுகிறார்கள். இவர்களை நாம் ஒன்று கேட்கின்றோம். அதாவது விஷம் சரசமாய் கிடைத்தால் வாங்கி சாப்பிடுவார்களா என்பதேயாகும். இந்து பத்திரிக்கையில் நமக்கு எப்படி கேடு வருகிறது என்றால் அதை நடுநிலைமை பத்திரிகையென்றும் தேசீயப்பத்திரிகை என்றும் அதில் காணப்படுவததெல்லாம் உண்மை என்றும் கருதுவதாலேயே நமது சமூகத்துக்குக் கேடு உண்டாகின்றது.

ஜஸ்டிஸ், விடுதலை, குடி அரசு முதலிய பத்திரிக்கைகளை பார்ப்பனர்கள் ஆதரிக்கிறார்களா? வாங்கிபடிக்கிறார்களா? வேறு ஒருவர் படிப்பதையாவது பொறுத்துக் கொண்டிருக்கிறார்களா என்று துருவிப் பார்க்கும்படி பார்ப்பனரல்லாதாரைக் கேட்கின்றோம். அதற்கு எவ்வளவு கெட்டபேர் சூட்டுகிறார்கள் என்பதையும் யோசித்துப்பாருங்கள்.

கடைசியாக இந்த அநீதிக்கு இந்த கொடுமைக்கு திவான் பகதூர் வேணுகோபால் அவர்கள் ஒரே ஒருபதில் தான் தன்னால் செய்ய முடிந்ததை செய்திருக்கிறார். அதாவது இந்து பத்திரிகை வாங்கிப் படிப்பதை நிறுத்தி விட்டார். இதனால் இந்து பத்திரிகைக்கு யாதொரு நட்டமும் ஏற்பட்டுவிடாது என்பது அதற்கு தெரிவதற்கு முன் நமக்குத்தெரியும். ஆனால் திவான்பகதூர் வேணுகோபாலுக்கு ஏற்பட்ட அவமானமும் தோழர் ரத்தினசபாபதிக் கவுண்டருக்கு ஏற்பட்ட கஷ்டமும் மற்ற மக்களுக்கும் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் இந்து பத்திரிகை வாங்கி படிக்கும் மற்ற பார்ப்பனரல்லாதாரும், சுயமரியாதை பெற்று திவான்பகதூர் போலவே நடந்து கொண்டால் பார்ப்பனப் பத்திரிகைகள் ஒழிந்து போகா விட்டாலும் சிறிதாவது திருத்த மடைந்து அவற்றின் கொடுமைகளும், தொல்லைகளும் குறையாதா என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 07.06.1936**



RangaRakes tamilnavarasam.com

# அரசியல் நிலைமை

### சேலம் விக்டோரியா மார்க்கட்டில் பிரசங்கம்

தோழர்களே!

இங்கு நாங்கள் இன்று பிரசங்கத்துக்காக வரவில்லை. தமிழ்நாடு பார்ப்பனரல்லாதார் இயக்கப் பிரசாரக் கமிட்டி வேலையாக வந்தோம். வந்த இடத்தில் எங்களைக் கேட்காமலே நோட்டீசு போடப்பட்டிருந்தது. இந்தத் தோழர்களுக்கு பயந்து பேசுவதற்கு ஒப்புக் கொள்ள வேண்டி வந்தது.

**பிரசாரம்**

தமிழ்நாட்டிற்கு பார்ப்பனரல்லாதார் கட்சி அதிகாரத்தில் இருந்தாலும் இயக்கப் பிரசாரம் சிறிதும் கூட நடைபெற வில்லை. பதவிகளில் இருக்கும் தலைவர்களுக்கு பிரசாரத்தைப் பற்றி கவலை இல்லை. பிரசாரத்தில் அவர்களுக்கு நம்பிக்கையும் இல்லை. சமய சஞ்சீவிகளுக்கு பிரசாரம் தேவையில்லை என்று ஒரு பழமொழி உண்டு.

அவர்களுக்கு எந்தக்கட்சி வலுக்கின்றதோ அந்தக் கட்சியில் சேர்ந்து தங்கள் காரியத்தை சாதித்துக் கொள்ளும் சக்தியும் குணமும் உண்டு.

ஆனால் பார்ப்பனரல்லாதார் சமூக நலனுக்கு நாம் அதிகமான பிரசாரம் செய்ய வேண்டியிருக்கிறது. நம் சமூக நலத்துக்கு நம் சமூகத்தவரே சிலர் எதிரிகளாகவும், எதிரிகளின் ஆயுதங்களாகவும் இருந்து நமக்கு எதிர்ப்பிரசாரம் செய்வதால் நமது பாமர மக்கள் ஏமாந்து போக நேரிடுகிறது. எதிர் விவகாரம் செய்யாவிட்டால் எவ்வளவு பொய்யும் அக்கிரமுமான வியாஜ்ஜியமாயிருந்தாலும் ஜெயித்து விடுமல்லவா? அதுபோல் நம் எதிரிகளின் சூழ்ச்சிகளும், விஷமங்களும் வெற்றி பெறுவதற்குக் காரணம் என்ன? நமது பிரசாரக் குறைவேயாகும்.

அதனாலேயே நாங்கள் பல அசௌகரியங்களுக்கிடையில் இவ்வேலையில் பிரவேசித்திருக்கிறோம். கட்சியினால் பட்டம், பதவி, பணம், செல்வாக்கு முதலியவை சம்பாதித்து வரும் மக்கள் கவனியாதிருப்பது எங்களுக்குத் தெரியும். அவர்கள் எங்களை அலட்சியமாயும், கேவலமாயும் கருதுவதும் எங்களுக்குத் தெரியும். இருந்த போதிலும் நாங்கள் அவர்களைப்



பற்றிக் கவனிக்க வேண்டியோ அவர்களை எதிர்பார்க்கவேண்டியோ உள்ள அவசியத்தில் இல்லை. பொதுமக்கள் நலத்தை கவனிக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். ஆதலால் நாங்கள் பல கஷ்டங்களுடன் இந்த சுற்றுப்பிரயாணம் செய்கிறோம்.

தோழர் பாண்டியன் குழந்தை அஜாக்கிரதையால் ஏரியில் முழுகி இறந்து இன்றைக்கு 10, 15 நாள் தான் ஆகிறது. அதைக்கூட லட்சியம் செய்யாமல் அவர் வந்து இருக்கிறார். 3வது வகுப்பிலும் மாட்டு வண்டியிலும் இரவு தூக்கம், பகல் ஓய்வு இல்லாமல் பிரயாணம் செய்கிறார். தோழர் வி.வி. ராமசாமி வீட்டில் மனைவியார் பிரசவ வேதனையைக்கூட லட்சியம் செய்யாமல் அது போலவே சுற்றுகிறார். அவர் வியாபாரத் தொழில் முதலியவை இது சமயம் எவ்வளவோ பாதிக்கப்படுகிறது. இப்பொழுது இந்தக் கூட்டத்தில் தோழர் போக்ஸ் துரையால் அவருக்கு கொடுக்கப்பட்ட தந்திக் கவரானது அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது என்கின்ற சேதியாகும். தோழர் சி.டி.நாயகம் அவர்கள் ரிடையர் ஆகி ஓய்வாய் இருக்க வேண்டிய காலத்தில், மற்றும் அவருக்கு குடும்பநிலை மிகவும் கவனிக்கப்பட வேண்டிய அவசரமுள்ள சமயத்தில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அலைகிறார். எனக்கு அப்படிப்பட்ட தொந்திரவோ, பெருமையோ ஒன்றும் இல்லா விட்டாலும் எனது தாயாரை மிக்க கஷ்ட நிலையில் விட்டு விட்டு ஒவ்வொரு நிமிஷமும் முடிவு தந்தியை எதிர்பார்த்துக் கொண்டு திரிகிறேன். தோழர் வி.வி. ராமசாமிக்கு இங்கு வந்த தந்தியை என் தாயார் முடிவு தந்திதானோ என்று நெஞ்சம் திக்கென்னும் உணர்ச்சியோடு வாங்கினேன். அது ஆண் குழந்தை பிறந்த தந்தி ஆனதால் அவர் வசம் கொடுத்துவிட்டேன்.

இந் நிலையில் நாங்கள் செய்யும் பிரசாரம் மனித சமூக நன்மையை உத்தேசித்து மாத்திரமல்லாமல் மக்களின் இழிவைப் போக்கிச் சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்க வேண்டும் என்கின்ற ஆசையையும் கவலையையும் கொண்டேயாகும். ஆதலால் எங்கள் வேலைக்கு நீங்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**தற்கால அரசியல் நிலை**

இன்று நான் அரசியல் நிலை என்பது பற்றி பேசுவேன் என்று குறிப்பிட்டிருக்கிறது. அரசியல் நிலையைப் பற்றி நான் என்ன பேசுவது? நீங்கள் பார்த்தும் கேட்டும் உள்ள விஷயத்தைப் பற்றித்தானே பேச வேண்டும். அதாவது சென்ற மாதத்தில் இதே இடத்தில் எனது நண்பர்களான தோழர்கள் சித்தய்யனும், நடேசனும், தமிழ்நாடு ஏஜண்டும் ஒரு கூட்டத்தாரால் அடியும் உதையும் பட்டதும் அதற்கு தூண்டுகோலாயிருந்த ஒரு தலைவர் தோழர் சத்தியமூர்த்தியார் அவர்கள் இந்த மாதத்தில் திருச்சியில் அதன் வட்டியுள்பட செருப்புகளும், அழுகை முட்டைகளும் அபிஷேகமாகும்படியான



RangaRakes tamilnavarasam.com

பாக்கியம் பெற்று ஓடி ஒளிந்து கதவு தாழ் இடும்படியான நிலைமை ஏற்பட்டதும் (இது இந்தியன் எக்ஸ்பிரசில் இருக்கிறது) ஆகிய காரியங்கள் தான் இன்றைய அரசியல் நிலைமையாய் இருக்கிறது.

இதைப்பற்றி நான் கவலை கொள்ளவில்லை. ஆனால் வெட்கப்படு கிறேன். ஆனாலும் இன்றைய அரசியல் நிலையில் இவையெல்லாம் முக்கிய இடம் பெற்றிருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. இதை நிறுத்த நம்மால் முடியாது. 1907ல் அதாவது 30 வருஷங்களுக்கு முன்பே நமது அரசியலில் செருப்புகளும், ஜோடுகளும் அதுவும் காங்கிரஸ் மகாசபை கூட்டத்திலேயே கோகலே, திலகர் பிரசன்னத்திலேயே செருப்பு ஜோடு பறந்ததென்றால் சித்தய்யனுக்கு அடி விழுவதும் சத்தியமூர்த்திக்கு செருப்பு பறப்பதும் அதிசயமென்றோ எதிர்பார்க்காததென்றோ அரசியலுக்கு விரோதமான தென்றோ யார்தான் சொல்ல முடியும்?

இன்றைய இந்திய அரசியல் தத்துவநிலை வேறு நாட்டிலோ அல்லது பிரிட்டிஷ் அரசாங்கம் இல்லாத இந்தியாவிலோ நடைபெறுமானால் இதுவரை பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார், இந்து-முஸ்லீம், மேல் ஜாதி - கீழ் ஜாதி என்பவைகளில் ஏதாவது ஒரு பிரிவு பூண்டற்றுப் போயிருக்கும் என்பதை மனதில் இருத்தவேண்டும்.

இந்த மாதிரி வகுப்பு சச்சரவு இல்லாத வெறும் அதிகாரம் கைப்பற்றும் சச்சரவை அரசியலாகக் கொண்ட மேனாடுகளிலும் இம்மாதிரி பலாத்காரம் சகஜமாய்க் காண்கின்றோம்.

வகுப்பு உணர்ச்சியுடன் கூடிய அரசியல் சச்சரவில் மேல் நாடு களிலும் கூட பலாத்காரத்தோடு மாத்திரம் இல்லாமல் கொலைகளும், சுட்டுக்கொள்பவைகளும் பார்க்கின்றோம். ஆனால் அரசியல் கிளர்ச்சிகளில் இது இயற்கையேயாகும்.

### வகுப்புணர்ச்சியே அடிப்படை

நமது அரசியல் கிளர்ச்சி என்பது என்ன? எந்த வகுப்பார் அதிகாரத்தை கைப்பற்றுவது என்பதுதானே ஒழிய வேறு எதை அடிப்படையாய்க் கொண்டிருக்கிறது.

உதாரணம் வேண்டுமானாலும் காந்தியும் - வட்டமேஜையும் என்கின்ற அத்தியாயத்தை திருப்பி பாருங்கள். அதில் என்ன இருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் உங்களுக்கு (இந்தியர்களுக்கு) என்ன வேண்டும் என்று கேட்க அழைத்தார்கள். இந்தியர்களாகிய நாம் அங்கு சென்று என்ன சொன்னோம்.

இந்துக்கள் சார்பாய் காந்தியார் ''எங்கள் பழய பழக்க வழக்கம் காப்பாற்றப்படவேண்டும்'' என்றார்.



இந்துக்களில் பார்ப்பனரல்லாதார் சார்பாய் சென்ற ஏ. இராமசாமி முதலியார், பாத்ரோ ஆகியவர்கள் ''நீங்கள் கொடுக்கப்போகும் சுதந்திரத்தில் எங்களுக்கும் எங்கள் விகிதாச்சாரமாவது கிடைக்க வேண்டு'' மென்று சொன்னார்கள்.

இந்துக்களில் தீண்டப்படாதார் என்கின்ற வகுப்புக்காக தோழர் அம்பேத்கார், ''எங்கள் வகுப்புக்கு இவ்வளவு என்று பிரித்து கொடுத்து விட்டு பிறகு எவ்வளவு சுதந்திரம் வேண்டுமானாலும் கொடுங்கள்'' என்று சொன்னார். வெள்ளைக்காரர்கள் பிரதிநிதிகள் ''நாங்கள் இந்தியாவில் பயமின்றி வாழும் படியான ஏற்பாடுகள் செய்துவிட்டு அதற்கேற்ற சுதந்தரங்கள் கொடுங்கள்'' என்று சொன்னார்கள்.

கிறிஸ்தவர்கள் பிரதிநிதியும் அப்படியே சொன்னார். முஸ்லீம் பிரதிநிதியாகிய தோழர் ஜின்னா என்ன சொன்னார்? ''எங்கள் நிலை இன்னதென்று ஏற்பட்டுவிட வேண்டும். எங்கள் சமூக பாதுகாப்புக்காக நான் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் இந்துக்களால் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டால் காந்தியார் காட்டிய இடத்தில் கையெழுத்து போடுகிறோம். அவரையே எங்கள் தலைவராகவும் ஒப்புக் கொள்ளுகிறோம். எங்கள் சமூகத்தின் பேரால் என்ன வேண்டுமானலும் செய்து கொள்ள அனுமதியளித்து வெற்றுக் காகிதத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறோம்''' என்று சொன்னார்.

இவற்றிற்கெல்லாம் காந்தியாரின் பதில் என்ன?

''இவர்கள் எல்லோரும் தேசத் துரோகிகள், இவர்கள் எல்லாம் சர்க்கார் கூலிகள், நான் ஒருவன் தான் தேசபக்தன். இந்தியாவில் உள்ள சகல மதஸ்தர்களுக்கும், சகல வகுப்பார்களுக்கும் நான்தான் ஏக தலைவன். நான் கேட்கும் சுயராஜ்யத்தைக் கொடுத்து விட்டால் பிறகு இவர்கள் விஷயத்தை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்''

என்று சொன்னதோடு மாத்திரமல்லாமல் ''இவர்களுக்கு என் சம்மதியில்லாமல் அரசியலில் பிரதிநிதித்துவம் கொடுத்தால் நான் தற்கொலை செய்து கொண்டு செத்துப்போவேன்'' என்று சபதம் கூறி விட்டு வந்தார். வட்டமேஜை அஷ்ட கோணல் மேஜையாயிற்று.

இந்த நிலை சிறிதுகூட மாற்றமடையாத நிலையிலேயே இன்று சீர்திருத்தம் என்பது வந்துவிட்டது. அதன்படி சட்டசபைகளுக்குப் போகவும், பதவிகளை ஏற்கவும் வட்டமேஜைக்கு சென்று இருந்த எல்லாகட்சியாரும் ஆசைப்பட்டு இப்போதிருந்தே போட்டியும், அடிதடியும், செருப்புப் பறப்புகளும் தீவிரமாக நடைபெறுகின்றன.

இன்றைய அரசியல் போராட்டத்தை முஸ்லீம்கள் ''இந்து முஸ்லீம்'' போராட்ட மென்கிறார்கள்.

ஆதி திராவிடர் ''மேல்ஜாதி கீழ் ஜாதி'' போராட்டமென்கிறார்கள்.

நாம் ''பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார்'' போராட்டமென்கிறோம்.



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனர்கள் சில கூலிகளையும் பேராசைக்காரரையும் சேர்த்துக் கொண்டு ''தேசபக்தர்கள் தேசத்துரோகிகள்'' போராட்ட மென்கிறார்கள். ஒருவரும் இந்தியர் - பிரிட்டிஷார் போராட்ட மென்று சொல்லுவதில்லை.

உதாரணமாக சத்தியமூர்த்தியார் செல்லுமிடங்களில் எல்லாம் பார்ப்பனரல்லாதார் கட்சியை வெட்டி 500 கெஜ ஆழத்தில் புதைப்பதே தனது வேலை என்கிறார்.

அதோடுகூட பார்ப்பனர்கள் பொதுமக்களை மத விஷயத்தில் ஏமாற்றி பணம் பறித்து வாழ்வது போல் இந்த போராட்ட விஷயத்தில் தேசாபிமானப் பேர் வைத்துக் கொண்டு பொதுமக்களை ஏமாற்றி பணம் பறித்து தங்கள் போரை பலமாய் நடத்துகிறார்கள்.

அவர்கள் சிறு கூட்டத்தார் பெருலாபம் கொள்ளையடிப்பதால் அதற்கு கேடு வரும்போது கட்டுப்பாடாய் வேலை செய்ய சவுகரியமிருக்கிறது. நாம் பெருங் கூட்டத்தாராய் இருப்பதாலும் நம்மிலும் பல பிரிவுகள் இருப்பதாலும் பெரும்பாலான மக்கள் கல்வி அறிவற்றவர்களாய் இருப்பதாலும் பதவி பெற்றவர்களும் படித்தவர்களும் மத விஷயத்தில் பார்ப்பனர்களுக்கு அடிமையாயும் சுயநலக்காரர்களாயும் இருப்பதாலும், தங்கள் யோக்கியதைக்கு மீறின அந்தஸ்துகளை இவர் அனுபவித்து விட்டதாலும், இனி எப்படியோ போகட்டுமென்றும், கவலையற்றும், ஒற்றுமையற்றும், கட்டுப்பாடற்றும் திரிவதோடு சமயத்திற்கு தகுந்தபடி நடந்து கொள்ளலாம் என்ற அலட்சியத்துடன் இருப்பதாலும் நமக்கு அச்சிறு கூட்டத்தாரின் எதிர்ப்பிலிருந்தும், விஷமத்திலிருந்தும் சூழ்ச்சியிலிருந்தும் தப்பித்துக் கொள்ள முடியவில்லை.

### தேசத்துரோகி யார்?

மற்றபடி நாம் எந்த விதத்தில் தேச துரோகிகள்? இந்த தேசத்துக்கு அன்னிய ஆட்சி யென்பதை அழைத்து வந்தவர்கள் யார்? அவர்களுக்கு இங்கு என்றும் நிலை பெரும்படியான ஆட்சிக்கு கட்டிடம் கட்டிக்கொடுத்து அவற்றிற்கு தூண்களாய் நின்றவர்கள் யார்? சரித்திரங்களை எடுத்துப் புரட்டிப் பாருங்கள்.

நாம் பார்ப்பனரல்லாதார் என்கின்ற முறையிலோ, ஆதிதிராவிடர் என்கின்ற முறையிலோ, முஸ்லீம்கள் என்ற முறையிலோ, இந்த தேசத்துக்கு துரோகம் செய்ததாக ஏதாவது ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்டட்டும், நாம் உடனே அதற்கு பிராயச்சித்தம் செய்து கொள்ளத் தயாராய் இருக்கிறோம்.

வெள்ளைக்காரர்களைத் தங்கள் தெய்வம் என்றும், விஷ்ணுவின் அம்சம் என்றும், அவர்களும் தாங்களும் ஒரே ஜாதி என்றும் அவர் முகச் சாயலும் தங்கள் முகச் சாயலும் ஒரேமாதிரி இருக்கிறது என்றும், அவர்களும் தாங்களும் ராஜியாய் போய் இந்த நாட்டில் நிரந்தரமாய் வாழவேண்டு மென்றும் நேற்று



வரையிலும் சொல்லிக் கொண்டிருந்த கூட்டத்தார்கள் யார்? பார்ப்பனர்களா? அவர்கள் ஒழிந்த மற்றவர்களா என்று யோசித்துப் பாருங்கள்.

இன்றுகூட பார்ப்பனர்கள் எப்படிப்பட்ட விடுதலை கேட்டாலும் சரி, அதற்கு ஆக என்ன தியாகம் செய்ய வேண்டுமானாலும் சரி, வெள்ளைக்காரப் பூண்டு இந்தியாவில் இருக்கக்கூடாது என்று தீர்மானித்தாலும் சரி எங்களுக்கு ஆக்ஷேபணை இல்லை. ஆனால் அதற்கப்புறம் நடப்பதென்ன? அதில் எங்கள் பங்கு என்ன? என்பதை மாத்திரம் சொல்லிவிடட்டும். நாங்களும் கையெழுத்துப் போடுகிறோம். அதற்கு ஆக பார்ப்பனர்கள் எத்தனை பேர் சாகிறார்களோ அதற்கு இரண்டு பங்கு உயிர் கொடுக்கின்றோம், பிறகு யார் தேச பக்தர்கள்? யார் கோழைகள், யார் தேசத்தை காட்டிக் கொடுத்து கக்கூசில் போய் ஒளிந்து கொள்பவர்கள்? என்று பார்க்கலாம். அதைவிட்டு விட்டு உண்மைக் காரணம் என்ன என்பதை மறைத்துவிட்டு எங்களை கோழைகள் என்றும் தேசத்துரோகி என்றும் சொல்லிவிடுவ தாலேயே எங்களை ஒழித்துவிடுவது என்று நினைத்தால் அது முடியுமா என்று தான் கேட்கின்றேன்.

### யார் கோழைகள்

தோழர் சத்தியமூர்த்தியை விட நான் எதிலும் பயந்தவன் அல்ல. அவர் ஒரு தடவை ஜெயிலுக்கு போயிருந்தால் நான் 7, 8 தடவை ஜெயிலுக்கு போயிருப்பேன். என் குடும்பமும் ஜெயிலுக்குப் போயிருக்கும். இத் தமிழ் நாட்டில் அரசியலில் கும்பல் கும்பலாக எதிர்வாதம் செய்யாமல் வலுவில் ஜெயிலுக்கு போவதற்கு வழிகாட்டினவன் நானும் என் குடும்பமுமாகும்.

அதுவும் சத்தியமூர்த்தி செல்வத்துக்கும், அவரது செல்வாக்குக்கும் அவர் பொது வாழ்வில் அடைந்திருக்கும் நிலைமைக்கும் நான் ஒன்றிலும் குறைந்தவனல்ல என்றாலும் அவர் ஏ கிளாஸ் கைதியாய் சிறையிலிருந்தார். நான் சி கிளாஸ் கைதியாய் மூத்திரச் சட்டியில் தண்ணீர் சாப்பிட்டுக் கொண்டு வேலை செய்து கொண்டு கோணிச் சாக்கில் படுத்துக் கொண்டு சிறையில் இருந்தேன்.

சென்ற வருஷம் எனக்குக் கிடைத்தத் தண்டனையின் போதுகூட எனக்கு சி கிளாஸ் கொடுக்க வேண்டும் என்று எனது ஸ்டேட்மெண்டிலேயே எழுதிக் கொண்டேன். அதை எனது தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தான் அடித்து விட்டார்கள்.

பிறகு எனக்கு ஏ கிளாஸ் கொடுத்தார்கள். ராஜமகேந்திரம் ஜெயிலில் எனக்கு கொடுத்த கட்டில், மேஜை, மெத்தை எல்லாவற்றையும் வேண்டாம் என்று வாபீஸ் செய்துவிட்டு சி கிளாஸ் கைதியாகவே இருந்தேன். சாப்பாடு மாத்திரம் டாக்டர் சிபார்சின் மீது கோதுமை ரொட்டி கிடைத்தது. மற்றபடி நான் ஜெயிலில் எந்த உயர் நிலையிலும் இருக்க இல்லை, சவுகரியம் அடையவும் இல்லை, ஜெயில் சட்டத்தை எந்த வழியிலும் மீறவும் இல்லை.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே நாங்கள் சத்தியமூர்த்தியாரை விடவோ, மற்ற யாரையும் விடவோ பாப்பர் என்றோ கோழை என்றோ கஷ்டத்துக்குப் பயந்தவர்கள் என்றோ யாரும் சொல்லிவிட முடியாது.

### பயனற்ற தியாகம்

காங்கிரஸ்காரர்கள் அடிபட்டார்கள், உதை பட்டார்கள், லக்ஷம் பேர் ஜெயிலுக்கு போனார்கள் என்றே வைத்துக் கொள்வோம். அதனால் ஏற்பட்ட பலன் என்ன என்று கேட்கின்றேன்.

இன்று அவை தப்பு என்று எண்ணவில்லை என்று சொல்வதானாலும் அதனால் பிரயோஜனமில்லை என்றும் அந்த மாதிரி ''தியாகத்தால்'' வெள்ளைக்காரர்கள் மனதை இளகச் செய்ய முடியவில்லை என்றும் இனி செய்யக்கூடாது என்றும் காங்கிரஸ் தீர்மானித்து விட்டதா இல்லையா என்று கேட்கின்றேன். காங்கிரஸ் 1933 ல் தீர்மானித்தால் பார்ப்பனரல்லாதார் இயக்கம் 1920லேயே இப்படித் தீர்மானித்தது. இதில் என்ன தப்பு சொல்ல முடியும்? இதனால் பார்ப்பனரல்லாதார் கோழைகளாகி விடுவார்களா? தேசத் துரோகிகளாகி விடுவார்களா?

### சம்பளம்

4000, 5000, 6000 சம்பளம் வாங்குவதைப் பற்றி குறை கூறப்படுகிறது. சம்பளம் வாங்குவதில் தப்பு என்ன? யார் வாங்குகிறார்கள்? பஞ்சாங்கக்காரனுடைய மகனும் முனிசிபாலிட்டி விளக்கில் படித்தவனுடைய மகனுமா, பிச்சை வாங்கி பிழைத்தவனுடைய மகனுமா வாங்குகிறார்கள்? பெரிதும் தகுந்த யோக்கியதை உடையவர்களே வாங்குகிறார்கள்.

இந்த சம்பளம் யார் கேட்டது? யார் ஏற்படுத்தியது? இவர்கள் வாங்காவிட்டால் அது பார்ப்பனர்களுக்கு போகாமல் ஏழை மக்களுக்கு பயன்படுமா? அல்லது பார்ப்பனர்கள் வாங்காமல் இருப்பதாக தக்க ஜாமீன் கொடுப்பார்களா? அப்படி ஆனால் இன்றே ராஜினாமா செய்யலாம்.

உண்மையைச் சொல்ல வேண்டுமானால் மந்திரிகளுக்கு மாதம் 5500 ரூபாய் சம்பளம் ஏற்படுத்தியது பார்ப்பனர்களே யாகும். அவர்களுடைய காங்கிரசேயாகும். (Nineteen) நைன்டீன் மிமோராண்டம் என்னும் 19 காங்கிரஸ் தலைவர்கள் கையொப்பமிட்டு பிரிட்டிஷாருக்கு அனுப்பிய காங்கிரஸ் அரசியல் திட்டத்தின் சாரமேயாகும்.

1920 வருஷத்துக்கு முன்னிட்ட காங்கிரசுகள் எல்லாம் 5500 ரூபாய் சம்பளம் கேட்டு ஆதரித்து விண்ணப்பம் போட்டிருக்கிறது. அதை இப்போது பார்ப்பனரல்லாதார் பெறுகிறார்கள். அவ்வளவுதானே ஒழிய அது பார்ப்பனரல்லாதார் இயக்கத் தீர்மானமல்ல. அப்படி இருந்தும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தார்கள் மாதம் 1000 ரூபாய் குறைத்துக் கொண்டார்கள். சர்கள் சி.பி. ராமசாமி அய்யர், சிவசாமி அய்யர், பி. ராஜகோபாலாச்சாரி, கே.சீனிவாசய்யங்கார், வி. கிருஷ்ணசாமி அய்யர் (ஒரு நாள் ஆன போதிலும்) டி.ஆர். வெங்கிட்டராம சாஸ்திரி ஆகியவர்கள் வாங்கிய சம்பளங்களும் அதற்கு மேற் போகாததுந்தானே ஒழிய வேறில்லை.

அப்படியிருக்க சம்பளத்தைப் பற்றி ஏன் இவ்வளவு பொறாமைப்பட வேண்டும்?

இவை அதாவது இந்தப்படியான சம்பளமும் உத்தியோகங்களும் பதவிகளும் பார்ப்பனர்கள் பார்த்தால் தேசாபிமானம், பார்ப்பனரல்லாதார் பார்த்தால் தேசத்துரோகம் என்று சொல்லுவதானால் அப்படிப்பட்ட தேசாபிமானத்தை வெட்டி சாய்த்து 1000 கெஜ ஆழத்தில் புதைத்தாக வேண்டும்.

### காங்கிரசால் என்ன முடிந்தது?

பார்ப்பனரல்லாதாரை வைது பழி சுமத்தி, சூழ்ச்சி செய்து இந்திய சட்ட சபைக்குப் பார்ப்பனர்களும் அவர்கள் அடிமைகளுமே போய் இருந்தும் அங்கு என்ன செய்ய முடிந்தது? அவர்கள் காரியத்துக்கு சிறிதாவது மதிப்புக் கொடுக்கப்பட்டதா?

அவர்களாவது மதிக்கப்பட்டார்களா? தோழர் சத்தியமூர்த்திக்கு அங்கு எவ்வளவு அவமானம் நடந்தது? என்ன செய்ய முடிந்தது? அப்படியிருக்க இனியும் ஸ்தல ஸ்தாபனங்களை கைப்பற்ற வேண்டும் என்பதின் கருத்து என்ன? அது அரசியலுக்காகவா? வகுப்பு ஆதிக்கத்துக்காகவா? என்று கேட்கின்றேன்.

### யார் வகுப்புவாதி?

வீணில் எங்களை ராக்ஷதர், அசுரர், தேசத்துரோகி, உத்தியோக வேட்டைக்காரர் என்று வைவதால் ஒரு காரியமும் ஆகிவிடாது. இன்றைய நிலை உள்ளவரை நாங்கள் எதற்கும் பயந்து ஏமாந்து போக மாட்டோம்.

வகுப்புவாதி என்று எங்களை பேசிவிடுவதாலேயே நாங்கள் எங்கள் சமூக நலனை விட்டுக்கொடுத்து விட முடியாது. பார்ப்பனர்கள் தங்களைத் தவிர மற்ற எல்லோரையும் முஸ்லீம், கிறிஸ்தவர்கள், ஆதி திராவிடர், நாம் ஆகிய எல்லோரையும் வகுப்புவாதிகள் என்கிறார்கள். எல்லாச் சமூகத்திலும் இரண்டொரு கூலிகளைச் சேர்த்துக் கொண்டு அவர்களை விட்டும் நம்மை வையச் சொல்லுகிறார்கள்.

இன்று காங்கிரசிலுள்ள பார்ப்பனரல்லாதார்களிலும் எனது தோழர் கல்யாணசுந்தர முதலியார் ஒருவர் தவிர மற்றவர்கள் எல்லோரும் வகுப்பு உரிமையை ஒப்புக் கொள்ளுகிறார்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். தோழர்கள் வரதராஜுலு, சிதம்பரம் பிள்ளை முதலியவர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆகையால் அந்தக் காரணம் வைத்து தேசாபிமானிகளையும், தேசத் துரோகிகளையும் பிரிப்பது தற்கொலையாகும்.



RangaRakes tamilnavarasam.com

இன்று இந்தியாவில் தலைசிறந்த வகுப்பு வாதிகள் பார்ப்பனர்களே யாகும். அவர்கள் வகுப்பு வாதத்தால் நமக்குள் இருக்கும் - நாம் அனுபவிக்கும் இழிவுகள் நீங்கவே நாம் வகுப்பு உரிமை கேட்கின்றோமே ஒழிய மற்றபடி வெள்ளைக்காரர்களுடைய கூலிகளாய் இருந்தல்ல.

காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்கள் காங்கிரஸ் பார்ப்பனர் ஸ்தாபனம் அல்லவென்றும், காங்கிரஸ் வகுப்பு ஆதிக்கத்துக்குப் பாடுபடும் வகுப்புவாத ஸ்தாபனம் அல்ல வென்றும் ருஜுப்பிக்கவேண்டுமானால் எல்லா வகுப்பாரையும் கூப்பிட்டு உட்காரவைத்து அவர்கள் பயத்தை நீக்க முயற்சித்து, முடியாவிட்டால் அவர்களுக்கு கேட்கும் உரிமை கொடுத்து எல்லோரிடத்திலும் கையெழுத்து வாங்கிக் கொண்டும் அல்லது அது வேண்டாம் என்றால் பார்ப்பனர்கள் மாத்திரம் ஒன்று சேர்ந்து நாங்கள் இந்த அளவுக்கு மேல் எந்த உரிமையும் அனுபவிப்பதில்லை என்று ஒப்புக் கொள்ளட்டும். நாம் ராஜியாய் போகத் தயாராய் இருக்கின்றோம். அதைவிட்டு விட்டு தேசத்துரோக பூச்சாண்டியால் இனி ஏமாந்து போகமாட்டோம். நாங்கள் தோல்வி அடைவதாய் இருந்தாலும் உரிமையை விட்டுக் கொடுக்க மாட்டோம். உயிர் போகும் வரை போராடியே தீருவோம்.

குறிப்பு: *09.06.1936 ஆம் நாள் சேலம் விக்டோரியா மார்க்கட் மைதானத்தில் சேலம் கௌன்சிலர் தோழர் வி.ஆர். பெருமாள் செட்டியார் தலைமையில் அரசியல் நிலைமை என்பது பற்றி ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 14.06.1936**



# பார்ப்பனரல்லாதார் இயக்கப் பிரசாரக்கமிட்டியின் சுற்றுப்பிரயாண திட்டம்

ஜஸ்டிஸ் கட்சியில் வறுமை நீங்குமா என்ற கேள்விக்கு பதில் அளிக்கையில் பேசியதாவது:-

இன்று இந்தியாவில் எந்தக் கட்சியாலும் வறுமை நீங்காது என்றும், வறுமை நீங்க காங்கிரசிலும் கூட திட்டம் இல்லை என்றும் இந்து சமூகத்தில் உள்ள ஜாதிப் பாகுபாடுகளே வறுமைக்கும், செல்வத்துக்கும் பெரும்பாலும் காரணமாய் இருக்கிறதென்றும், அது ஒழிக்கப்பட்டால் இன்றுள்ள இவ்வளவு வறுமை இருக்காதென்றும் வறுமை என்று சொல்லப்படுவது பெரும்பாலும் கீழ் ஜாதிக்காரர்கள் என்று சொல்லப்படுபவர்களுக்குள்தான் இருக்கிறது என்றும் உதாரணமாக பார்ப்பானையும், ''பறையனையும்'' எடுத்துக் கொள்ளுங்கள் என்றும் பார்ப்பான் எவனாவது வறுமையில் கஷ்டப்படு கிறானா? எவனாவது மூட்டை தூக்குகிறானா? சரீரக் கஷ்டமான வேலை செய்கிறானா? என்றும், பறையர்கள் முதலிய படிப்படியான கீழ்ஜாதிகள் என்பவைகள் எவ்வளவோ கஷ்டப்படுவதுடன் வறுமையால் படிப்பில்லாமல் வீட்டுவசதி, வயித்திய வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்றும், ஜாதி ஒழிந்தால் வறுமைகள் அநேகமாய் குறையும் என்றும், ஒரு அளவுக்கு செல்வமும் உழைப்பும் சமமாக பிரிக்கப்படும் என்றும், காங்கிரஸ் இந்த கொள்கைக்கு விரோதம் என்றும், காங்கிரஸ் திட்டத்திலும் காந்தீயத்திலும் ஜாதி ஒழிப்பு திட்டம் இல்லை என்றும், காந்தியார் ஒரு இடத்திலாவது ஜாதி பாகுபாடுகள் அடியோடு ஒழிந்தாக வேண்டுமென்று சொல்லவே இல்லை என்றும், காங்கிரசின் வறுமை நீக்கும் திட்டமெல்லாம் கதர்தான் என்றும், கதருக்கு இதுவரை 10 கோடி ரூபாய் பாழாயிருக்கலாம் என்றும், எப்படி எனில் 2 அணா துணிக்கு 10 அணா 12 அணா வீதம் விலைகொடுத்து வாங்கி கட்டியவர்களின் நஷ்ட பணம் எவ்வளவு இருக்கலாம் என்று பார்த்தால் விளங்கும் என்றும், அப்படியெல்லாம் செய்தும் கதர் நிர்வாகிகள்தான் கொள்ளைபோல் அதிக சம்பளம் பெற்று வாழ முடிந்ததே தவிர நூல் நூற்றவர்களுக்கு தினம் 1 அணாவுக்கு கூட விதியில்லை என்றும், அதுவும் ஏழை மக்களில் 100க்கு அரைப் பேருக்குக்கூட கிடைத்திருக்காது என்றும், அதுவும் நாளுக்குநாள் குறைந்து முன் இருந்ததில் 100க்கு 25 வீதம்தான்



RangaRakes tamilnavarasam.com

நடை பெறுகிறதென்றும், அதுவும் காங்கிரசினால் வயிற்றுப் பிழைப்பு நடத்துகிறவர்களாலும் காங்கிரசினால் தகுதிக்கு மேற்பட்ட பட்டம் பதவி வேட்டை ஆடுகிறவர்களாலும் தான் நிபந்தனையின் காரணமாய் கதர் மதிக்கத்தக்கதாய் விட்டதென்றும், ஆதலால் அதுவும் பயன்படாது என்பதோடு கதர் இன்று சாவதற்கு மேல்மூச்செடுக்கும் நிலையில் இருக்கிறது என்றும், இனி கொஞ்சகாலத்தில் கதரை பயித்தியக்கார ஆஸ்பத்திரி கண்காட்சியில் தான் பார்க்க முடியும் என்றும், தனி உடமை உள்ள வரை அடியோடு தரித்திரம் நீங்க முயற்சிப்பதும், வழி சொல்லுவதும் முட்டாள்தனமும் ஹம்பக்கும் தான் என்றும், ஜஸ்டிஸ் கட்சியின் சமுதாய வேலையின் பயனாகத்தான் ஒரு அளவுக்கு அதுவும் ஒரு கூட்டத்தார் வறுமையிலேயே இருக்க வேண்டும், ஒரு கூட்டத்தார் சோம்பேறிகளாய் இருந்து செல்வமும் போக போக்கியமும் அனுபவிக்க வேண்டும் என்று இருக்கும் கொடிய முறை மாறக்கூடும் என்றும் சொன்னார்.

**இரண்டாவது கேள்வி.**

மதம் கூடாது என்கின்ற நீர் ஆதிதிராவிடர்களுக்கு இஸ்லாம் மதத்தை ஏன் சிபார்சு செய்கிறீர் என்று கேட்டதற்கு பதில் சொன்னதாவது:-

ஆம். சிபார்சு செய்கிறேன் என்றும், இதைப்பற்றி நாள் கணக்கில் பேசி 100த்துக் கணக்கான கலம் கணக்கில் சமாதானம் எழுதி இருப்பதாகவும் இப்போதும் சொல்லத் தயார் என்றும் சொல்லி விளக்கியதாவது:-

''நான் ஜாதியால் கொடுமையடையாத சுயமரியாதைக்காரர்களையோ மேல்ஜாதிக்கார இந்துக்கள் என்பவர்களையோ மதம் மாறுங்கள் என்று கட்டாயப்படுத்துவதில்லை.

தாழ்ந்த வகுப்பார்கள் பறையர், சக்கிலியர், தோட்டிகள், பள்ளர்கள், புலையர், நாயாடிகள் என்பது முதலிய பெயர்களால் அழைக்கப்பட்டு அவர்களுக்கு ஜனசமூக உரிமை இல்லாமல் அடிக்கப்பட்டு தொடவோ, நெருங்கவோ, பார்க்கவோ கூட அனுமதிக்கப்படாமல் செய்து கல்வி இல்லாமல், வீடு இல்லாமல், பிழைப்புக்கு சராசரி மார்க்கத்துக்குக் கூட நெருங்க அனுமதியில்லாமல் கொடுமைப்படுத்தப்பட்டு நாயிலும், நாய் பன்றி மலத்திலும் கேடாய் மதிக்கப்படும் மக்களைப் பார்த்தே நீங்கள் மனிதத்தன்மை பெற வேண்டுமானால் இந்து மதம் என்பதை விட்டு விட்டு மகமதியர்கள் என்று சொல்லிக்கொள்ளுங்கள்; அதற்குத் தகுந்தபடி நடவுங்கள்'' என்று சொல்லுகிறேன் என்று சொன்னதோடு இதனால் சுயமரியாதைக்காரர் முதல் யாருக்கு என்ன நஷ்டம் என்பது விளங்கவில்லை என்றும், இக்கேள்வி கேட்பவர்கள் பெரும்பாலும் அறியாமையாலும் முஸ்லீம்களிடம் இருக்கும் துவேஷத்தினாலும்தான் கேட்கிறார்களே ஒழிய வேறில்லை என்றும், கண்டிப்பாக இந்தியாவில் தீண்டாமை ஒழிந்து மனித சமூகம் ஒற்றுமை அடையவேண்டுமானால் எல்லோரும் ஒரு மதமாக முதலில் ஆகித்தான் தீரவேண்டிவரும் என்றும், அதுவும் முஸ்லீம்களாக ஆனால் தான் முடியலாம் என்றும் ''ஆத்மார்த்தத்துக்காக மதம்'' என்றால் நாம் வாதாட வேண்டியதுதான் என்றும், மனித சமூகத்தில் பல மதங்களின் பேரால் இருக்கும் தொல்லையும், கொடுமையும் ஒழித்து அரசியல், பொருளியல், சமூக இயல் ஆகிய காரியங்களில் முன்னேற்றமடைய ஒரு மத வேஷம் அனுகூலிக்குமானால் அதற்காக அறியாமை காரணமாகவோ, துவேஷம் காரணமாகவோ, சுயநலம் காரணமாகவோ யாரும் முட்டுக்கட்டை போடக்கூடாது என்றும் சொன்னார்.

*குறிப்பு: 06.06.1936 ஆம் நாள் நாகையில் நடைபெற்ற ''பார்ப்பனரல்லாதார் பிரசாரக் கமிட்டி'' பொதுக் கூட்டத்தில் கேள்விகளுக்கு பதில் அளித்து பேசியது.*

**குடி அரசு - சொற்பொழிவு - 14.06.1936**



RangaRakes tamilnavarasam.com

# ''மெயி''லும் பார்ப்பனரும்

''மெயில்'' பத்திரிகையானது ஐரோப்பியர்களுடைய உரிமைகளை காப்பாற்ற நடத்தப்படும் பத்திரிகை என்பது பொதுஜனங்களது அபிப்பிராயம். ஆனால் அது அவ்வளவோடு நிற்காமல் இப்போது பார்ப்பனர்கள் உரிமையைக் காப்பாற்ற தீவிரமாய் புறப்பட்டு விட்டது.

இதன் முக்கிய காரணம் இன்னது என்பது நமக்கு புலப்படவில்லை.

ஜெர்மன் ஹிட்லர் எப்படி தன்னை ஆரியர் எனக் கருதிக் கொண்டாரோ அதுபோல் மெயில் ஆசிரியர் தன்னையும் ஆரியர் சந்ததி என்று கருதிக் கொண்டாரோ, அல்லது தென்னாட்டுப் பார்ப்பனர்களை தங்கள் சந்ததியார் என்று கருதிக் கொண்டாரோ என்னவோ என்று தான் சந்தேகிக்க வேண்டி இருக்கிறது.

எப்படியிருந்த போதிலும் எதற்கும் ஒரு அளவு உண்டு. என்ன காரணத்தால் மெயில் தன் அளவைக் கூட மீறிவிட்டதோ தெரியவில்லை.

ஏனென்றால் 6-ந் தேதி மெயில் பத்திரிகை உபதலையங்கம் ஒன்றில் ''வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை காங்கிரசுக்காரர் ஒப்புக் கொண்டால் ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரசில் சேர்ந்து விடுகிறோம்'' என்று தோழர் நடேச முதலியார் சொன்னதைக் கண்டித்து எழுதும் போது

''வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்றால் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் இல்லை என்பது தானே அருத்தம்'' என்று ''மெயில்'' எழுதியிருக்கிறது.

இந்தப்படி சொல்ல பார்ப்பனர்களுக்குக்கூட தைரியமில்லை, அப்படி இருக்க மெயிலுக்கு பார்ப்பனர்கள் இடம் இவ்வளவு கவலை வந்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதற்கு இவ்வளவு பெரிய வியாக்கியானம் செய்ததுபற்றி ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை.

மற்றும் இந்த வியாக்கியானம் பார்ப்பனர்கள் இடம் அபிமானம் வைத்து மெயில் செய்ததோ அல்லது காங்கிரசும் ஜஸ்டிஸ் கட்சியும் ஒன்றாகிவிட்டால் தங்கள் நிலைக்கு ஆபத்து வரக்கூடுமோ என்று பயந்து இந்த பாஷ்யத்தில் புகுந்ததோ என்பது நமக்கு விளங்கவில்லை.

தோழர் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஒரு சமயத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு வேறு ஒருமாதிரி வியாக்கியானம் தெரிவித்தார்.



''அதாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது நாட்டில் அறிவும் ஆற்றலும் உள்ள ஒரு கூட்டத்தாரைப் பின் தள்ளுவதாகும்'' என்றார்.

மற்றும் தோழர் சீனிவாச சாஸ்திரியார் சமீபத்தில் ஒரு எழவு வீட்டில் அழும்போது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தால் மகா மேதாவியான தோழர் எம்.ராமச்சந்திரராவ் பெரிய பதவிக்கு வந்திருக்கக் கூடியது தவறிவிட்டது என்றார்.

''எழவு வீட்டில் தாயாரை பெண்டுக்கு இழுப்பவன் கல்யாண வீட்டில் மதினியாரை சும்மா விடுவானா?'' என்று ஒரு பழமொழி உண்டு.

அதுபோல் எழவு வீட்டிலேயே பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை வைதவர் கல்யாண வீடாகிய மற்ற சமயங்களில் ஜஸ்டிஸ் கட்சிக்கு எவ்வளவு கேடு செய்திருப்பார் என்பதை நாம் தெரியப்படுத்த வேண்டியதில்லை.

எது எப்படி இருந்தாலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது பார்ப்பனர்களுக்கு கூற்றுவனாய் காணப்படுகிறது என்பதும், அதனாலேயே அவர்கள் அதை எதிர்க்கிறார்கள் என்பதும், வெளிப்படையாய் அந்த உண்மையைச் சொல்லி எதிர்க்க வீரமற்ற கோழைத்தனத்தாலேயே ''வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தேசீயத்துக்கு விரோதம்'' என்று கூறி அறிவற்ற மக்களை ஏய்ப்பது என்பதும், பார்ப்பனர் தயவில்லாமல் வாழமுடியாத மக்களும் பார்ப்பனர்களிடம் கூலி பெறும் அடிமைகளும் கூலிகளும் அதற்கு பின்தாளம் போடுகிறார்கள் என்பதும் உண்மை என்பது இதனால் விளக்கமாகிவிட்டது.

ஆனால் இதே மெயில் முன் ஒரு காலத்தில் வகுப்புவாரி பிரதி நிதித்துவத்தை ஆதரித்தும் உத்தியோகங்கள் எல்லாம் பார்ப்பனர்களே கொள்ளை கொண்டு வருகிறார்கள் என்றும், அப்படி கொள்ளை கொண்டும் அவர்களுக்கு நன்றி விஸ்வாசமில்லை என்றும், அது நன்றியற்ற ஜாதி என்றும் எழுதியதை மறந்து விட்டதானது நாம் ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியமடைய வேண்டிய விஷயமாகும்.

மெயில் எழுதியதற்கு ஆதாரம் வேண்டுமானால் காட்டத் தயாராய் இருக்கிறோம்.

அதாவது தோழர் சர். சி.பி. ராமசாமி அய்யரின் சட்ட மெம்பர் ஆயுள்காலம் தீர்ந்த உடன் தோழர் டி.ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியார் அந்த உத்தியோகத்துக்கு நியமிக்கப்பட்ட போது விஷப் பல்லை பிடுங்கியதுபோல் சட்ட மெம்பருக்கு அப்போது இருந்த போலீஸ் இலாகா நிர்வாகத்தைப் பிடுங்கி ஹோம் மெம்பராகிய சர். உஸ்மான் அவர்களுக்கு கொடுத்து விட்டவுடன் கோபித்துக் கொண்டு சி.பி. அய்யர் பேச்சைக் கேட்டு சாஸ்திரியார் ராஜினாமா கொடுத்துவிட்ட காலத்தில் மெயில் என்ன தலையங்கம் எழுதிற்று என்பதை ஞாபகப்படுத்திப் பார்த்தால் நன்றாய் விளங்கும் என்று சொல்லுவோம்.



RangaRakes tamilnavarasam.com

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டது முதல் பார்ப்பனர்களே அவ்வாட்சி நிர்வாகத்திலும் உத்தியோகங்களிலும் பெரிய பங்கு அனுபவித்து வந்திருக்கிறார்கள் என்றும், சென்னை அரசாங்கத்தில் நிர்வாக சபையில் இந்தியர்களை நியமிப்பது என்ற முறை ஏற்பட்டது முதல் சட்ட மெம்பர் ஸ்தானத்தில் பார்ப்பனர்களே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் இனி அப்படிச் செய்யாமல் பார்ப்பனரல்லாதாருக்கும் கொடுக்க வேண்டும் என்றும், அதற்கு ஆகவே பார்ப்பனரல்லாதார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கிறார்கள் என்றும் மற்றும் பார்ப்பனர்களை கண்டித்தும் எழுதியது இன்றும் தேடிப் பார்த்தால் கிடைக்கும்.

அப்படிக்கு இருக்க வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்றால் பார்ப்பனர்களுக்கு உத்தியோகமில்லை என்பது தானே பொருள் என்று இப்போது மெயில் கூறுவது தர்மமா, யோக்கியமா என்று கேட்கின்றோம்.

வேண்டுமானால் இப்படிச் சொல்லட்டும். அதாவது வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்றால் பார்ப்பனர்களுக்கு ஏகபோக ஆட்சி இல்லை என்று அருத்தம் என்று சொல்லட்டும். அதை நாம் ஒப்புக்கொள்கிறோம்.

முஸ்லீம்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுத்ததால் இந்துக்களுக்கு உத்தியோகம் இல்லை என்று ஆகிவிட்டதா? அல்லது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார்களுக்கு உத்தியோகத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பதாக இதுவரை 6, 7 வருஷ காலமாய் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்கியதால் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் இல்லாமல்போய் விட்டதா என்றும் ‘‘தீண்டப்படாதவர்’’களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்ததால் தீண்டக்கூடிய ஜாதியார்களுக்கு உத்தியோகம் இல்லை என்று ஆகிவிட்டதா என்பதையும் யோசித்துப் பார்த்தால் ‘‘மெயில்’’ தனது அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளும் என்றே நினைக்கிறோம்.

இந்தப்படியெல்லாம் மெயிலும் பார்ப்பனர்களும் கூடி பார்ப்பன ரல்லாதாரை பழி சுமத்துவதாலோ அல்லது இதை மாற்றி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேசத் துரோகம் என்றோ, தேசீயத்துக்கு விரோதமென்றோ கூறி பாமர மக்களை ஏய்க்கப் பார்ப்பதாலோ இனி வகுப்புவாரி பிரதிநிதித் துவத்தை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது என்பதே நமது அபிப்பிராயம்.

அதை யார் தொட்டாலும் சீறிக் கடிக்கக்கூடிய பலத்தையும் தைரியத்தையும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெற்றுவிட்டது.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு இவ்வளவு பலமும் செல்வாக்கும் ஏற்பட்டதெல்லாம் பார்ப்பனர்கள் அதை ஆட்சேபித்ததும், அவ்வுணர்ச்சியைக் கெடுக்க பல வித சூழ்ச்சிகள் செய்ததுமேயாகும். இனியும் கடசியாக நாம் ஒன்று சொல்லுவோம்.

அதாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை இனியும் பார்ப்பனர்கள் எதிர்ப்பார்களேயானால் கூடிய சீக்கிரத்தில் பார்ப்பனர்களே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கும் படியான நிலைமை வந்து விடும் - கட்டாயம் வந்துவிடும் - இப்போதே சில இடங்களில் வந்து விட்டது என்பதேயாகும்.



ஏனென்றால் ஆட்சேபிக்க ஆட்சேபிக்க மக்கள் கவனம் அதிலேயே செலுத்தப்பட வேண்டியதாகி உத்தியோகப் போட்டியே அரசியலாகி பெருங் கூட்டத்தார் காரியம் நிறைவேறிவிடும். பிரித்தாளும் சூழ்ச்சி இது விஷயத்தில் மாத்திரம் இனி செல்லாது.

ஆதலால் உண்மையான பொதுநலப்பற்றும் நல்ல அரசாட்சியும் விரும்புகிறவர்கள் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்கு முட்டுக்கட்டை போடுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு அரசியல் கிளர்ச்சி நடத்தாமல் யோக்கியமான காரியத்துக்கு நடத்தினால் நாமும் காலால் இடும் வேலையைக் கையால் - தலையால் செய்யக் காத்திருக்கிறோம்.

அப்படிக்கில்லா விட்டால் இருதரப்புக்களிலும் அயோக்கியர்களும் சமய சஞ்சீவிகளும் ஒரு வேளை கூழுக்கு எதையும் விற்பவர்களும் தான் தலைவர்களாகி கொள்ளை அடிப்பதையும் பொதுநலத்தைப் பாழாக்குவதையும் பார்த்துக் கொண்டும் அப்படிப்பட்ட காரியத்துக்கு உதவி செய்து கொண்டும் வாழ வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடும் என்று சொல்ல வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

மெயிலைப்பற்றி நாம் ஒன்றும் கவலைப்படவில்லை. அதன் கொள்கை நமக்கு தெரியாததல்ல. ஆல் பழுத்தால் அங்கு அத்தி பழுத்தால் இங்கு என்று சமயம் போல் நடந்து கொள்ள வேண்டிய கடமை உள்ளது.

ஆனால் மற்றவர்கள் அதாவது சிறிதாவது பொதுநல உணர்ச்சி உள்ளவர்கள், பொதுநலத்துக்கு ஆக உண்மையான தியாகம் செய்தவர்கள் இவ்விஷயத்தை யோசித்து ஒரு யோக்கியமான முடிவுக்கு வரும்படி வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 14.06.1936**



RangaRakes tamilnavarasam.com

# பாண்டியன், ராமசாமி பிரசாரக் கமிட்டி சுற்றுப்பிரயாண ஏற்பாடு

| | | | |
|---|---|---|---|
| நாளது | 21-ந் தேதி | - | கோபி |
| | 22-ந் தேதி | - | கோயமுத்தூர் |
| | 23-ந் தேதி | - | ஈரோடு |
| | 24-ந் தேதி | - | தஞ்சை |
| | 25-ந் தேதி | - | திருச்சி |
| | 26-ந் தேதி | - | திருச்சி |
| | 27-ந் தேதி | - | சேலம் |
| | 28-ந் தேதி | - | ராசீபுரம் |
| | 29-ந் தேதி | - | கடலூர் |
| | 30-ந் தேதி | - | சென்னை |

ஜூலை 1, 2 - ந் தேதிகளில் செங்கல்பட்டு ஜில்லாவுக்காக சென்னையில் உள்ள பிரமுகர்களைச் சந்தித்துப் பேசுவார்கள்.

| | | |
|---|---|---|
| 3-ந்தேதி | - | வேலூர் |
| 4-ந் தேதி | - | அம்பலூர் |

சந்தர்ப்பங்களை உத்தேசித்து ஜூலை மாதம் புரோகிராம் மாத்திரம் மாற்றப்படலாம்.

இந்தப்படி தோழர்கள் சௌந்திரபாண்டியன், ஈ.வெ.ராமசாமி, சி.டி.நாயகம், வி.வி.ராமசாமி முதலியவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். ஆங்காங்கும் மற்றும் அந்தந்த ஜில்லாக்களிலும் உள்ள இயக்கத் தோழர்கள் குறிப்பிட்ட இடங்களுக்கு வந்து வேண்டிய உதவி செய்ய வேண்டுகிறோம்.

**C.D. நாயகம்,**

**E.V. ராமசாமி**

**காரியதரிசிகள்.**

குடி அரசு - அறிவிப்பு - 14.06.1936



# நடந்த விஷயம் என்ன?

**ஈ.வெ.ரா. – சி.ஆர். சந்திப்பு**

தோழர் சி.ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் நானும் குற்றாலத்தில் கண்டு பேசிய விஷயம் தமிழ்நாடு பத்திரிகை உலகத்தில் மிகப் பிரமாதப் படுத்தப்பட்டு விட்டது.

என்னைச் சந்திக்கும் ஒவ்வொருவரும் முதலில் இந்த விஷயத்தை கேட்டு விட்டே மரியாதைக்கு விசாரிக்கும் க்ஷேம லாபங்களைக் கூட விசாரிக்கிறார்கள். சந்திக்க முடியாத அனேகம் பேர்கள் உள்ளத்திலும் இந்த எண்ணமே இருக்கும் என்பதில் ஆக்ஷேபணை இருக்க நியாயமில்லை.

ஆகையால் அதை விளக்கி விடுகிறேன். பத்திரிகை நிருபர்கள் பலர் என்னை விசாரித்தார்கள். நான் அது ஒன்றும் அவ்வளவு முக்கியமானதல்ல என்றே பதில் சொல்லிவிட்டேன். நிருபர்கள் சேதியில் 100க்கு 90 என் விஷயத்தைப் பொறுத்தவரை திரித்தும் பிசகாயும் மாற்றியுமே எனக்கு காணப்படுகின்றன. ஆதலால் நானே குறிப்பிட்டு விடுகிறேன். எங்கள் சம்பாஷணை ஒன்றும் உண்மையிலேயே அவ்வளவு குறிப்பிடக்கூடிய தல்ல. ஆனால் கவனிக்கக்கூடியதேயாகும்.

எனக்கு பொதுவாக தோழர் சி.ராஜகோபாலாச்சாரியாரிடம் எப்போதுமே மரியாதை உண்டு. அவருக்கும் என்னிடம் அன்பு உண்டு என்றே கருதிக் கொண்டிருக்கிறேன். அதாவது நான் அவரது அன்புக்கு பாத்திரமானவன் என்கின்ற கருத்தில்.

ஆச்சாரியாரைப்பற்றி அரசியல் விஷயத்தில் பொதுநல விஷயத்தில் எவ்வளவு மாறுபட்ட அபிப்பிராயங் கொண்டிருந்தாலும், கண்டித்துப் பேசியும் எழுதியும் வந்தாலும் தனிப்பட்ட விஷயத்தில் அவரை எனது மரியாதைக்கு உரியவர் என்றே கருதி இருக்கிறேன்.

நாங்கள் பொது வாழ்வில் நுழைவதற்கு முன் அவர் சேலம் சேர்மெனாயும் நான் ஈரோடு சேர்மெனாயும் இருக்கும் போதே எங்களில் ஒருவருக்கொருவர் நம்பிக்கையுள்ள மாதிரியில் நெருக்கமுள்ளவர்களாய் இருந்ததோடு இருவரும் சொந்த வாழ்க்கையை அலட்சியம் செய்து பொதுவாழ்வில் தலையிடுவது என்கின்ற அருத்தத்தின் மீதே சற்றேறக் குறைய ஒரே காலத்தில் இருவரும் சேர்மென் பதவியையும் மற்றும் உள்ள



RangaRakes tamilnavarasam.com

சில கவுரவ பதவிகளையும் ராஜினாமா செய்துவிட்டு தோழர் வரதராஜுலுவும் உள்பட நெருங்கி கலந்து இருந்தோம். பிறகு ஒத்துழையாமை ஆரம்பமான வுடன் நான் அவருடைய உள்ளத்தை கொள்ளை கொண்ட காதலி போலவே இருந்து வந்தேன்.

எங்களுக்குள் வெகுநாள் ஒத்துழையாமையில் அபிப்பிராய பேதமே இல்லாதிருந்தது. அவர் இஷ்டத்தை அறிந்து அதுவே என் அபிப்பிராயம் போல் காட்டி அவரை இணங்கச் செய்வதுபோல் ஒவ்வொரு விஷயத்திலும் நடந்து கொள்வேன். அதனாலேயே அனேகர் என்னைக் கண்டு விட்டே அவரைக் காணுவார்கள்.

அப்படிப்பட்ட நிலை வகுப்பு உணர்ச்சி காரணமாகவே இருவருக்கும் மாற்றமடைய நேரிட்டுவிட்டது. அதன் பிறகு பல சம்பவங்கள் ஏற்பட்டு விட்டன என்றாலும் அவரைக் காணும் போது என்னை அறியாமலே அவரிடத்தில் ஒரு மரியாதையும் பணிவும் ஏற்பட்டு விடுகின்றன.

அவரைக் காணும் போது எப்படி மரியாதையும் பணிவும் ஏற்படுகிறதோ அதுபோல் ஒரு பரிதாபமும் ஏற்படாமல் இருப்பதில்லை.

காரணம், எவ்வளவு பெரிய தியாகம் செய்தவர் அவ்வளவு தியாகமும் ஒரு பயனுமில்லாமல் போகும்படியாய் விட்டதே பாவம் என்று பரிதாபப்படுவதுண்டு. என்றாலும் அவருடைய ஒவ்வொரு வார்த்தையையும் இரண்டு மூன்று அர்த்தம் செய்து பார்க்காமல் நான் ஒரு முடிவுக்கு வருவதில்லை. நான் பிரிந்து விட்ட பிறகும் ஒரு சமயத்தில் சட்டசபைக்கு நிற்கும்படி என்னை வேண்டினார். இந்திய சட்டசபைக்கும் நான் நிற்பது நல்லது என்கின்ற ஜாடையும் காட்டினார். எனக்கு வெற்றி செலவில்லாமல் ஏற்படக்கூடும் என்கின்ற நம்பிக்கையும் உறுதியும் இருந்தும் இந்த ஸ்தானங்களுக்கு அவருடைய ஆதரவில் செல்வது எனது வாழ்வைக் கெடுத்து விடுமோ என்று அஞ்சியே மறுத்துவிட்டேன்.

இப்படியெல்லாம் இருந்தாலும் தற்கால அரசியல் புரட்டுக்களை நான் அறிந்திருப்பது போலவே ஆச்சாரியார் அவர்களும் அறிந்திருக்கிறார் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. இரு கட்சிகளிலும் பெரிதும் சமய சஞ்சீவிகளே பயன் அனுபவித்து விடுவதும் நாம் ஒருவரை ஒருவர் துவேஷித்து முன்னேற ஒட்டாமல் தடுத்துக் கொண்டு இருப்பதும் இந்த சந்தர்ப்பத்தில் பொது மக்கள் நலம் கொள்ளை போவதும் என்னைவிட நன்றாய் உணர்ந்திருக்கிறார் என்பதே என் அபிப்பிராயம்.

இந்த நிலையில் என்னை அவர் கோயமுத்தூர் ஜெயிலில் எதிர் பிளாக்கில் ஒரு கைதியாக சந்தித்தார். தோழர் சர். ஆர்.கே. ஷண்முகம் அவர்கள் என்னை ஜெயிலில் சந்தித்த அதட்டியினாலும் தோழர் ஆச்சாரியார் முயற்சியாலும் நான் ஆச்சாரியார் அறைக்குப் பக்கத்தில் அவருடைய சமையலறை சாப்பாட்டில் இருக்க நேர்ந்தது.



அப்பொழுதும் எங்கள் பழைய கதை ஞாபகத்துக்கு வந்ததுடன் இருவருக்கும் கண்களில் நீர் ததும்ப எங்கள் காதலைக் காட்டிக் கொண்டோம். எந்த கருத்தில் என்றால் எனக்கும் அப்படிப்பட்ட தலைவர் ஒருவர் கிடைக்கமாட்டார், அவருக்கும் என்னைப்போல ஒரு தொண்டன் கிடைக்க மாட்டான் என்கின்ற உணர்ச்சிக் கருத்தில் என்றே சொல்லலாம். முடிவில் இருவரும் சேர்ந்து முன்போல ஒத்து உழைக்க முடியுமா என்கின்ற விஷயமாகவே பேசிப் பேசி ஒத்து உழைக்க சந்தர்ப்பம் ஏற்படக்கூடும் என்கின்ற நம்பிக்கை மீதே ஜெயிலில் பிரிந்தோம்.

அதற்கு பிறகு ஒருதரம் சந்திக்க நேர்ந்தும் இருவரும் சரிவர அந்த அபிப்பிராயத்தை வலியுறுத்திக் கொள்ளவில்லை.

பிறகு சுமார் 20 மாதம் பொறுத்து நானும் தோழர்கள் பாண்டியன் முதலியவர்களும் குற்றாலத்தில் ஒரு நாள் ஸ்நானத்துக்கு போகையில் அங்கு நான்கு நாள் முன்னதாகவே சுகத்துக்காக போயிருந்த ஆச்சாரியார் அவர்கள் தன் ஜாகையிலிருந்தே என்னைக் கண்டார். பார்க்க வேண்டும் என்று சொல்லியனுப்பினார். அருவியில் குளித்துவிட்டு அவர் ஜாகைக்கு போனேன். அப்பொழுது மாலை 3 மணி இருக்குமாதலாலும் நானும் என் தோழர்களும் அதுவரை சாப்பிட வில்லையாதலாலும் ஆச்சாரியார் அவர்களிடம் அதிக நேரம் பேச சாவகாசமில்லை என்று சொல்லி அவசரமாய் விடை கேட்டேன். ''ஏன் ஒரு நாள் சாவகாசமாக இங்கு தங்குவது தானே'' என்றார். நான் இப்போது சாவகாசமில்லை என்றும் மற்றொரு நாள் வருவதாயும் சொன்னேன். அவசியம் வரவேண்டும் என்றார். ஆகட்டும் என்றேன். அந்தப்படியே 15 நாள் பொறுத்து மறுபடியும் குற்றாலம் சென்றேன். அது சமயம் அவர் ஒரு வனபோஜனத்துக்கு புறப்பட்டுக்கொண்டு வீட்டின் முன் வாசலுக்கு வந்துவிட்டார். என்னைக் கண்டதும் ஆசையாக வரவேற்று வன போஜனத்துக்கு அழைத்தார். நான் பின் சென்றேன். செல்லுகையில் வழியில் சிறிது முன்னாக சென்று கொண்டிருந்த நாங்கள் காதல் மிகுதியால் அர்த்தமற்ற வார்த்தைகளைப் பேசுவதுபோல் பல விஷயங்களை கலக்கிக் கலக்கி அங்கொன்று இங்கொன்றுமாக பேசிக் கொண்டே சுமார் 1½ மைல் நடந்தோம். சங்கேத இடம் சென்று மற்ற எல்லோருடனும் சேர்ந்து சம்பாஷித்தோம். பிறகு வீட்டுக்கு திரும்பி அன்று மாலையும் இரவும் கழித்தோம். தானாக வந்த விஷயங்களைப் பற்றித்தான் பேசினோமே ஒழிய குறிப்பாக எதையும் வருத்தி ஒன்றும் பேசவில்லை. இவைகளிலேயே அனேக விஷயங்கள் கலந்து கொண்டன.

முடிவு என்ன வென்றால் இன்றைய இரு கட்சி கிளர்ச்சிகளும் எங்களுக்கு பிடிக்கவில்லை என்பதும், சேர்ந்து இன்ன இன்ன காரியம் செய்தால் நாட்டுக்கும் சமூகத்துக்கும் நலன் ஏற்படும் என்பதும் பேசி ஒரு



RangaRakes tamilnavarasam.com

அபிப்பிராயத்துக்கு வந்த விஷயங்களாகும். அவரை விட எனக்கு இருவரும் கலந்து ஒற்றுமையாய் ஒரு வேலை செய்யக்கூடிய காலம் வராதா என்கின்ற ஆசை ததும்பி இருந்தது.

அவ்வளவு பெரிய விஷயம் பேச அந்த சந்தர்ப்பம் போதாது என்கின்ற எண்ணமும் இருந்தது.

ஆனால் சில விஷயங்களில் இருவருக்கும் நேர்மாறான அபிப்பிராயம் இருப்பதும் அது விஷயத்தில் ஒத்து வர முடியாதே என்று பயப்படக் கூடிய அம்சங்களும் வெளியாயிற்று.

எப்படி இருந்த போதிலும் ஒரு சமயத்தில் கூடுவோம் என்கின்ற நம்பிக்கை குறையவில்லை.

இவ்வளவுதான் நாங்கள் கலந்து பேசியதின் தத்துவமாகும்.

**ஈ.வெ.ரா.**

**குடி அரசு - துணைத் தலையங்கம்** - 14.06.1936



# காங்கிரசும் ஜவஹர்லாலும் பொது உடமையும்

இன்று காங்கிரசினுடைய முக்கிய வேலை வரப்போகும் தேர்தலில் காங்கிரசுக்காரர்கள் வெற்றி பெற வேண்டுமென்கின்ற ஒரே வேலைதான் என்பதைப் பற்றி யாருக்கும் சந்தேகம் இருக்குமென்று நாம் கருதவில்லை. ஆனால் வெற்றி பெற்ற பிறகு என்ன செய்வது என்பதில் காங்கிரஸ் கொள்கை இன்னது என்பதாக ஒருவருக்காவது விஷயம் விளங்கி இருக்கும் என்றோ, அல்லது மக்களுக்கு விளங்கும்படி காங்கிரஸ்காரர்கள் விளக்கி வருகிறார்கள் என்றோ சொல்லுவதற்கில்லை. கட்டுப்பாடாகவே பொது மக்கள் இவ் விஷயத்தில் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள்.

தேர்தல்களின் போது தேர்தல் பிரச்சினையாக இருப்பது ''காந்தி பெரியவர்'' என்பதும் அவர் ''மகாத்மா'' என்பதும் ஒரு அத்தியாயமாகவும் ''காங்கிரஸ்காரர்கள் ஜெயிலுக்குப் போனார்கள், அடிபட்டார்கள்'' என்பதும் ''பாரத மாதாவுக்கு ஜே'' என்பதும் இரண்டாவது அத்தியாயமாகவும், ''ஆதலால் காந்திக்கு ஓட்டுப்போடுங்கள், காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள்'' என்பது மூன்றாவது அத்தியாயமாகவும் இருந்து எலக்ஷன் பிரசாரம் செய்து வெற்றி உண்டாக்க முயற்சிப்பதாய் இருக்கிறதே ஒழிய வேறில்லை. இவ்வளவோடு தேர்தல் வேலையும் பதவி வேலையும் முடிந்து விடுகிறது.

உதாரணமாக காங்கிரஸ் சென்ற வருஷம் முன் இந்திய சட்டசபைக்குப் போட்டி போடும்போது வேறுவேறு பல விஷயங்களும் எலக்ஷன் பிரச்சினையாக சொல்லப்பட்டன என்றாலும் எலக்ஷன் நடந்து வெற்றி ஏற்பட்ட பிறகு அவை பொது ஜனங்களுக்குக்கூட ஞாபகமில்லாமல் போகும்படி பல்வேறு விஷயங்களைப்பற்றி ஜால வேடிக்கை செய்து ''இந்திய சட்டசபையில் காங்கிரசுக்கு வெற்றிமேல் வெற்றி'' என்று சொல்லி பிரசாரம் செய்து அந்தப்படியே பாமர மக்களை நம்பும்படியும் செய்தாய்விட்டது.

### ஸ்தல ஸ்தாபனம்

இவை ஒரு புறமிருந்தாலும் ஜில்லாபோர்டு, முனிசிபாலிடி ஆகிய விஷயங்களிலும் இதுபோலவே காங்கிரஸ் வெற்றி பெறவேண்டும் என்று பிரசாரம் செய்து காங்கிரசுக்கு வெற்றி ஏற்பட்டதாக ஆகியும், சுமார் 6, 7 ஜில்லா போர்டுகளும் 1, 2 முனிசிபாலிடிகளும் காங்கிரஸ் வசப்பட்டன



RangaRakes tamilnavarasam.com

என்று சொல்லப்பட்டும் இன்று உண்மை நிலையை பார்ப்போமானால் ''பழயபடியே தான் நிர்வாகம் நடக்கின்றது'' என்று சில போர்டுகளில் காங்கிரஸ் நிர்வாகிகள் ராஜினாமா செய்வதும்,

''மெம்பர்கள் மோசம் செய்துவிட்டார்கள். நம்பிக்கை துரோகம் செய்து விட்டார்கள்'' என்று சில போர்டுகளில் போர்டு காங்கிரஸ் அங்கத்தினர்கள் ராஜீனாமா செய்வதும்,

''போர்டு தலைவர்கள் யோக்கியமாய் நடந்து கொள்ளவில்லை'' என்று சில போர்டு மெம்பர்கள் காங்கிரஸ் கட்சி பதவியை ராஜினாமா செய்வதும்,

''சில போர்டை கலைத்துவிடவேண்டும்'' என்று போர்டிலுள்ள காங்கிரஸ் மெம்பர்களே தீர்மானம் செய்வதும்,

சில போர்டு காங்கிரஸ் பிரசிடெண்டு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர காங்கிரஸ் போர்டு மெம்பர்களே முயற்சிப்பதுமான காரியங்கள் நடந்து வருகின்றன.

## வேலூர்

இவற்றில் எல்லாவற்றையும் விட அதிக விசேஷமானதும் குறிப்பிடத்தக்கதுமான காரியம் என்னவென்றால், வேலூர் ஜில்லா போர்டு தேர்தலில் காங்கிரசின் பேரால் வெற்றி பெற்ற மெம்பர்கள் 26. பிரசிடெண்டு தேர்தலில் காங்கிரஸ் பேரால் நிறுத்தப்பட்ட பிரசிடெண்டுக்கு ஓட்டுக்கொடுத்தவர்கள் 15 பேர்கள், பாக்கி 11 பேர்கள் எதிர்கட்சிக்கு ஓட்டு செய்திருக்கிறார்கள்.

ஆனால் இந்த நடத்தையை கண்டிப்பதற்கு அறிகுறியாய் ராஜினாமா கொடுத்தவர்களோ 21 பேர்கள். இந்த 21 பேர்களில் காங்கிரஸ் பிரசிடெண்டுக்கு ஓட்டு செய்த 15-பேர்கள் போக எதிர்கட்சிக்கு ஓட்டு செய்யப்பட்ட 11 பேர்களில் 6-பேர்களும் கண்டிப்பதில் கலந்து ராஜினாமா செய்திருக்கிறார்கள்.

ஆகவே காங்கிரசுக்காரர்களின் நாணயத்துக்கு யாராலும் ஆட்சேபிக்க முடியாததும் பிரத்தியட்ச அனுபவமானதுமான உதாரணம் இதைவிட வேறு என்ன வேண்டும் என்பதும், இப்படிப்பட்ட நாணயக்குறைவான காரியங்கள் காங்கிரசுக்கு சகஜமாக இருக்கின்றது என்பதும் இதனால் நன்றாய் விளங்கவில்லையா என்று கேட்கின்றோம்.

இது போலவே மற்ற போர்டுகளிலும் காங்கிரசின் பேரால் வெற்றி பெற்றவர்கள் என்று சொல்லப்பட்டவர்களில் சில பேர்களில் பலரும் பல பேர்களில் சிலரும் இம்மாதிரியாகவே ''துரோகம்'' செய்து வந்திருக்கிறார்கள்.

இவற்றை எதற்காக எடுத்துக்காட்டுகிறோம் என்றால் காங்கிரஸ் ஒன்றுதான் நியாயமான உண்மையான ஜனப்பிரதிநிதி ஸ்தாபனம் என்றும்,



நாணயமான ஸ்தாபனம் என்றும் எவ்வளவு அயோக்கியனாயிருந்தாலும் காங்கிரசுக்கு வந்துவிட்டால் அவன் உடனே யோக்கியனாகவும் நாணயஸ் தனாகவும் ஆகிவிடுவான் என்றும் சொல்லி அயோக்கியர்களாகவே பொறுக்கி எடுத்து காங்கிரசில் சேர்த்த குணமும், அயோக்கியர்களுக்கு இன்று புகலிடம் காங்கிரசு தான் என்று சொல்லி பாவமன்னிப்பு டிக்கட்டு கொடுத்து வந்த தன்மையும் என்ன ஆயிற்று என்பதை விளக்குவதற்காகவும் உலகிலுள்ள விகிதாச்சார அயோக்கியர்கள் காங்கிரசிலும் இருக்கிறார்களே ஒழிய ஒரு அளவுக்காவது மற்ற ஸ்தாபனங்களை விட குறைந்த யோக்கியமான ஸ்தாபனம் அல்ல என்றும் மெய்ப்பிப்பதற்கு ஆகவே எடுத்துக் காட்டினோம்.

## காங்கிரஸ் கொள்கை

இவை நிற்க, இன்று காங்கிரஸ் மறுபடியும் ஸ்தல ஸ்தாபனங்களையும் சட்டசபைகளையும் கைப்பற்ற ஆசைப்படுவதற்கும் முயற்சிப்பதற்கும் ஆக செய்யும் காரியங்களில் காங்கிரசின் திட்டம் என்ன என்பது பற்றி இப்போது யோசித்துப் பார்ப்போம்.

காங்கிரஸ்காரர்களுக்குள்ளாகவே அதாவது சட்டப்படிக்கு அதிகாரம் பெற்ற தலைவர்கள் என்பவர்களுக்குள்ளாகவே ஆளுக்கு ஒரு அபிப்பிராயமும் தினத்துக்கு ஒரு அபிப்பிராயமும் சொல்லப்பட்டுவருவதும் அவர்களுக் குள்ளாகவே ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டு வருவதும் மற்றவர்களிடம் சமயத்துக்குத் தகுந்தபடி பேசிவருவதும் இன்று யாராவது இல்லையென்று சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

எல்லா இந்திய காங்கிரஸ் தலைவர் பண்டித நேரு பொது உடமை அபேதவாதம் ஆகியவைகளே தனது கொள்கை என மக்கள் நம்பும்படி பேசுகிறார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரோ ''அபேதவாதம் பொது உடமை ஆகியவைகளை அடியோடு ஒழிக்க வேண்டும்'' என்கின்றார்.

ஆனால் ''காங்கிரசின் லக்ஷியம் பூரண சுயேச்சை'' என்று தீர்மானத்தில் இருக்கிறது. ''பூரண சுயேச்சைக்கு அருத்தம் பிரிட்டிஷாருடைய ஆதிக்கம் - தொடர்பு இந்தியாவின் மீது இருக்கக்கூடாது என்பது தான்'' என்று எல்லா இந்திய காங்கிரஸ் தலைவர் ஜவார்லால் பண்டிதர் வியாக்யானம் சொல்லுகிறார். மற்றொரு பக்கம் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி சாஸ்திரியாரோ ''பார்லிமெண்டு கமிட்டி சட்டப்படி பூரண சுயேச்சை என்பதற்கு குடியேற்ற நாட்டு அந்தஸ்து'' என்று பாஷ்யம் சொல்லுகிறார், அதோடு கூட ''பிரிட்டிஷாரிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு பிரிட்டிஷ் ஆதிக்கத்தை அனுமதிப்பதும் அதில் அடங்கும்'' என்று பூரண சுயேச்சை என்பதற்கு வியாக்கியானம் சொல்லுகிறார்.



RangaRakes tamilnavarasam.com

வட்டமேஜை மகாநாட்டுக்கு இந்தியாவின் ‘‘ஏகப் பிரதிநிதி’’யாகச் சென்ற தோழர் காந்தியாரோ, ‘‘பூரண சுயேச்சையென்றால் அதன் சாரம் இருந்தாலும் போதும்’’ என்பது அருத்தம் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார்.

மற்றும் பழைய காங்கிரஸ் வாதிகளில் முக்கியமானவரான தோழர்கள் விஜயராகவாச்சாரியார் மாளவியா போன்றவர்கள் ‘‘பிரிட்டிஷ் சம்மந்தம் அடியோடு அறவே ஒழித்துவிடுவது என்பது இன்றைக்குக் கூடாத காரியம் என்றும் இன்னும் கொஞ்ச நாளைக்கு அவர்கள் இருக்கவேண்டும்’’ என்றும் அபிப்பிராயம் காங்கிரசில் சொல்லுகிறார்கள்.

## வெற்றி பெற்றபின் என்ன செய்வது?

இந்த வியாக்யான பேதங்கள் ஒருபுறமிருக்க இவ்வளவையும் லட்சியம் செய்யாமல் பொது ஜனங்கள் ஏமாந்து போவதன் மூலம் தேர்தல்களில் காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற்று சட்டசபைகளை கைப்பற்றி விட்டால் பிறகு என்ன செய்வது என்பதிலும் இன்று மறைக்க முடியாத மூன்று வித அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன.

1. சட்ட சபையை கைப்பற்றி, மந்திரி பதவியை ஏற்காமல் முட்டுக் கட்டை போட்டு சீர்திருத்தம் நடக்காமல் பார்க்க வேண்டும் என்பது.
2. சட்டசபையை கைப்பற்றி, மந்திரி சபையையும் கைப்பற்றி சீர்திருத்தங்களை உடைத்தெறிய வேண்டும் என்பது.
3. சட்டசபையைக் கைப்பற்றினால் மந்திரி சபையையும் கைப்பற்ற வேண்டும், மந்திரி பதவியை கைப்பற்றினால் சீர்திருத்தத்தை நடத்திக் கொடுத்தாக வேண்டும் என்பது.

இதைத் தவிர சில சாதாரண காங்கிரஸ்காரர்களும் காங்கிரஸ் பிரமுகர்களும் சட்ட சபைக்குள் போவதே சீர்திருத்தம் நடத்துவதுபோல் தான் ஆகும். ஆதலால் மந்திரி பதவி மறுப்பது என்பதோ சீர்திருத்தத்தை உடைப்பது என்பதோ பயன்படாததும் முடியாததுமான காரியமாகும் என்கிறார்கள்.

இவ்வளவு குளறுபடியில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் சத்திய மூர்த்தியார் ‘‘நான் மந்திரி ஆய்தீருவேன்’’ என்றும் ‘‘நான் மந்திரியானால் இன்ன இன்ன காரியம் உங்களுக்கு (ஜனங்களுக்கு ) செய்கிறேன். எனக்கு மந்திரியாக யோக்கியதை இல்லையா?’’ என்றும் தினந்தோறும் சொல்லிக் கொண்டே வருகிறார்.

காங்கிரசோ இவைகளுக்கெல்லாம் ஒரு விளக்கமான தீர்மானம் செய்யாமல் வழ வழா முறையில் ‘‘ஸ்தானங்களை கைப்பற்றிய பின்பு மாகாண காங்கிரஸ் கமிட்டிகளைக் கலந்து பிறகு மந்திரி பதவியைப்பற்றி பேசலாம்’’ என்று தீர்மானித்து இருக்கின்றது. அடுத்தாப்போல் தலைவர் பட்டத்துக்கு வரப்போகும் ஆச்சாரியார் ‘‘அதற்கு இப்போது என்ன அவசரம். ஸ்தானங்களை முதலில் கைப்பற்றுங்கள்’’ என்கின்றார்.



மாகாணங்களோ ஒவ்வொன்று ஒவ்வொரு விதமாகவும் ஒரே மாகாணம் பல விதமாகவும் அபிப்பிராயம் கூறுவதோடு மகாநாடுகளிலும் பலவித தீர்மானங்களை நிறைவேற்றி வருகின்றன.

ஆகவே இன்று தேர்தல்களுக்கு காங்கிரசினிடம் அரசியல் பிரச்சினை என்பது இன்னது என்பதாக இல்லாமலே ஸ்தானங்களையும் ஸ்தாபனங் களையும் கைப்பற்ற வேண்டும் என்கின்ற காரியம் மாத்திரம் பிரச்சினையாகவும் அதற்கு ஆதாரமாக ‘‘காந்தி பெரியவர், பட்டினி கிடந்தவர், காங்கிரசுக் காரர்கள் ஜெயிலுக்குப் போனவர்கள், அடிபட்டவர்கள், பாரத மாதாவுக்கு ஜே’’ என்கின்ற விஷயங்கள் மாத்திரமே பிரச்சினையாக இருக்கின்றன.

## அபேதவாதம்

தேர்தல் விஷயம்தான் இப்படி என்றாலோ மற்ற முக்கிய கொள்கைகள் விஷயத்திலாவது காங்கிரஸ் ஒரு கொள்கையில் இருக்கின்றதா என்று பார்த்தால் அதுவும் இன்று சிரிப்பாய் சிரிக்கும் விதமாகவே இருந்து வருகின்றது.

காங்கிரஸ் தலைவர் ஜவஹர்லால் காங்கிரசின் லட்சியம் பூரண சுயேச்சை என்றும், பூரண சுயேச்சை பெற்ற பின் அபேதவாதமே தனது கொள்கை என்றும் சொல்லுகிறார். அவருடைய கவுன்சிலுக்கு முக்கால் வாசிப்பேர்களை அபேதவாதத்துக்கு எதிரிகளாகவே பார்த்து நியமித்துக் கொண்டிருக்கிறார்.

மற்ற காங்கிரஸ் தலைவர்கள் தோழர்கள் ராஜேந்திர பிரசாத், பட்டேல், ஆனே, மாளவியா, விஜயராகவாச்சாரியார், ராஜகோபாலாச்சாரியார், சத்தியமூர்த்தி முதலியவர்கள் இன்று அபேதவாதம் முட்டாள்தனமானது என்று பிரசாரம் செய்து வருகிறார்கள்.

அப்படியானால் அபேதவாதக்காரரை காங்கிரஸ் தலைவராக ஏன் நியமித்தீர்கள் என்று கேட்டால் ‘‘அது அவருடைய (ஜவஹர்லாலுடைய) கொள்கைக்கு ஆக அல்ல, அவர் பெரிய மனிதனுடைய மகன் என்பதற்கு ஆகவும் அவர் செய்த தியாகத்துக்கு ஆகவும்’’ என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரே பதில் சொல்லுகிறார்.

இந்த நிலையில் இன்னம் 4, 5 மாதம் கழிந்தால் காங்கிரசுக்கு வேறு தலைவர் வரப்போகிறார். அது அனேகமாக தோழர் ராஜகோபாலாச்சாரியாராக இருக்கலாம். அவரது அபிப்பிராயம் எல்லோரும் அறிந்ததே.

தோழர் காந்தியாரும் இது விஷயத்தில் அபேதவாத எதிரிகளுக்கு உதவியாகவே இருந்து வருகிறார். ஆகவே எலக்ஷன், பதவி ஏற்பு, அபேதவாதம் ஆகியவை ஒன்றுக்கொன்று தம்மில் முரண்பட்டு ஒன்றோ டொன்று போர் புரிகின்றன. இது ஒரு புறமிருக்க தோழர் மாளவியா கூட்டத்தார் காங்கிரசில் இருந்து பிரிந்து வகுப்பு உணர்ச்சி காரணமாக வேறு கக்ஷி ஆரம்பித்து இருக்கிறார்கள். காங்கிரசுக்காரர்களோ வகுப்பு தீர்ப்பைப்



RangaRakes tamilnavarasam.com

பற்றி பேசினால் முஸ்லீம்களின் ஒத்துழைப்பு கிடைக்காமல் போய்விடும் என்கின்ற பயத்தினால் அதை (வகுப்பு தீர்ப்பை) அனுமதித்துக் கொண்டு சமயம் போல் நடக்க இடமிருப்பதாக காட்டி வருகிறார்கள்.

காங்கிரஸ் தலைவரோ ''வகுப்புத் தீர்ப்பைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால் வங்காளத்துக்கு செய்த வகுப்புத் தீர்ப்பு மாத்திரம் அநீதமான'' தென்றும் அதனால்தான் மிகவும் வருத்தப்படுவதாகவும் கூறுகிறார்.

இந்த நிலையில் பொது ஜனங்களிடையில் காங்கிரசில் பிளவு இருக்கிறது என்கின்ற அபிப்பிராயம் குடி கொண்டிருப்பதை மாற்ற வேண்டி தோழர் ஜவஹர்லால் வெளியிட்ட ஒரு அறிக்கையில் தனது அபேதவாதத்தின் உண்மை வேஷம் வெளிப்பட்டு விட்டது. அதில் அவர் கூறியிருப்பதாவது:-

''ருஷியாவின் பொருளாதாரக் கொள்கையை நான் நம்புகிறேன், ருஷியா அனேக விஷயங்களில் ஆச்சரியமான முன்னேற்றமடைந்திருக்கிறது, ஆனால் குருட்டுத்தனமாக ருஷியாவை நான் பின்பற்ற மாட்டேன், பொதுவுடமை என்ற ருஷிய சம்மந்தமான வார்த்தையை விட்டு அபேதவாதத்தை நான் வற்புறுத்துகிறேன்''.

''கதர் நமது பொருளாதாரப் பிரச்சினைக்கு முடிவான பரிகாரமாகாது.''

''நான் கூறும் **அபேதவாதம் இந்தியாவுக்கு எப்படிவரும் என்று சொல்ல முடியாது.** ஆனால் அபேதவாதத்தாலன்றி நமது ஏழ்மையை போக்க முடியாது.''

''ஆனால் அபேதவாதம் ஏற்படுவதற்கு முன் நமக்கு சுயேச்சை வேண்டும்.''

''எனக்கு பூரண ஜனநாயகத்தில் தான் நம்பிக்கை. இப்போது நான் ராஜீய ஜனநாயகத்துக்கே பாடுபடுகிறேன்.''

''நமது பிரச்சினைகளை ஜனநாயகத்தின் மூலம் தீர்ப்பதற்காக இந்த விஷயங்களை (அபேதவாத விஷயங்களை ப-ர்) நான் ஜனங்கள் முன் எடுத்துக் கூறுகிறேன். இதை ஒரு குற்றமாகக் கருதக் கூடாது.''

**''நான் அபேதவாதத்தை ஜனங்களிடம் பிரசாரம் செய்யவில்லை''**

**அது இந்தியாவுக்கு வரும்படி செய்ய என்ன செய்வது என்று சொல்ல முடியாது** என்பதாக முதலிலேயே சொல்லிவிட்டார்.

இந்த வாக்கியங்கள் 13-6-36ந் தேதி சுதேசமித்திரன் பத்திரிகையில் 21-வது பக்கத்தில் 1,2,3,4 நெம்பர் கலங்களில் இருக்கின்றன.

ஆகவே காங்கிரஸ் அபேதவாதமோ, ஜவஹர்லால் நேருவின் அபேதவாதமோ என்ன என்பதை இதிலிருந்து வாசகர்களையே விளங்கிக் கொள்ள விரும்புகிறோம்.



நிற்க, ''பொதுவுடமையோ அபேதவாதமோ சுதந்திரம் பெறுமுன் முடியாது (என்றும்) ஆதலால் முதலில் சுதந்திரம் பெற முயற்சிப்போம்'' என்றும் கூறுபவர்களின் கூற்றையும் சிறிது கவனிப்போம்.

இந்தியாவுக்கு சுதந்திரமில்லாமல் எப்படிப் பொதுவுடைமை வராதோ, அதுபோலவே இந்தியாவில் பார்ப்பானும் பறையனும் மேல் ஜாதியும் கீழ்ஜாதியும் ஒழியாமல் - அழியாமல் சுதந்திரம் வரமுடியுமா என்று கேட்கின்றோம்.

பார்ப்பன ஆதிக்கம் அழியாமல் இருக்க சுயராஜ்யம் வருவதாய் இருந்தால் கீழ்ஜாதிக்காரர்கள் என்பவர்கள் அப்படிப்பட்ட சுதந்திரம் இந்தியாவுக்கு வர அனுமதிக்க முடியுமா? அனுமதிக்கலாமா? என்று கேட்கின்றோம்.

''கீழ் ஜாதிக்காரர்கள் சம்மந்தம் கேட்டுக்கொண்டு ரஷ்யாவுக்கு பொதுவுடமை வரவில்லை'' என்று நமது சமதர்ம வீரர்கள் பதில் சொல்லக் கூடும். இது குதிரைக்கு குர்ரம் என்று தெலுங்கு பெயர் சொன்னவுடன் ஆனைக்கு அர்ரம் என்று சொல்லி தனக்கு தெலுங்கு வந்துவிட்டதாக பாவித்துக் கொண்ட பையனையே ஒக்கும். ரஷியாவில் ஏற்பட்ட நிலைமை இந்தியாவில் ஏற்படும் என்று நினைப்பது பெரியதொரு அறியாமையே ஆகும். இந்தியாவுக்கு ஏற்பட்டாலும் போதாது. இங்கிலாந்துக்கும் ஏற்பட வேண்டும். இங்கிலாந்துக்கு ஏற்பட்டாலும் போதாது. நேச தேசங்களுக்கும் ஏற்படவேண்டும். இதற்கு ஒரு உலக யுத்தம் வந்தாக வேண்டும். அப்படி ஒரு உலகயுத்தம் ஏற்பட்டாலும் அதில் பிரிட்டிஷுக்கு வெற்றி ஏற்படுத்திக் கொடுக்க இந்தியாவிலேயே 6 கோடி மக்கள் மாத்திரமல்ல 15 கோடி மக்களுடைய உயிரும் பல ராஜாக்களினுடையவும், ஜமீன்தார்களினுடையவும், முதலாளிகளினுடையவும் செல்வமும் காத்துக்கொண்டு இருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது.

பொதுஉடமை என்கிற வார்த்தை ஏழைகள் காதுக்கு இனிமைதான், அபேதவாதம் பேச்சுக்கு சிங்காரம் தான்.

ஆனால் ''அது எப்படி வரும் என்றும் அதற்கு என்ன செய்வது என்றும் தெரியவில்லையே'' என்று ஜவஹர்லாலே சொல்லுவதை ஞாபகப்படுத்திப் பாருங்கள். அதோடு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பலத்தையும் தந்திரத்தையும் இந்தியர்களின் பிரிவினையையும் பலமற்ற தன்மையையும் மடமையையும் கூட சேர்த்து யோசித்துப்பாருங்கள், நம் நாட்டில் மற்ற ஸ்தாபனங்களையும் சுயராஜ்யம், சுதந்திரம் என்கின்ற வார்த்தைகளையும் எப்படி சில சோம்பேறிகளும் வேலையற்றோர்களும் தங்களது வாழ்க்கைக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் பயன்படுத்திக் கொள்ளுகிறார்களோ அதுபோல் பொதுஉடமை என்கிற வார்த்தையையும், சமதர்மம் என்கின்ற வார்த்தையையும்



RangaRakes tamilnavarasam.com

பல ஆள்கள் பயன்படுத்திக்கொண்டு இந்நாட்டு செல்வமும் இந்நாட்டு பெண்களும் இப்பொழுதே எல்லோரும் பொது என்று கருதிவிடுவதன் மூலம் அந்தக் கொள்கைக்கே கேடு உண்டாக்கி வருகிறார்கள். இதனால் பணமுள்ளவன் என்று கருதிக் கொள்ளுகிற ஒவ்வொருவனும் தன் பணத்துக்கு சர்க்கார் தயவையும் காவலையும் எதிர்பார்க்கவும், நம் பெண்களுக்குக் கல்வியும் சுதந்திர சக்தியும் வாழ்வுக்கு சொந்த தொழிலும் இல்லாததால் அவர்கள் இன்னமும் ஒருவனுடைய சொத்தாகவே இருந்து வரவேண்டி யிருப்பதால் சுதந்திரக்காதல் என்கின்ற கொள்கைக்கு கேடு உண்டாகக் கூடியதாகவும் இருந்துவர வேண்டியதாகின்றது. இந்தக் காரணங்களினாலேயே பொதுவுடமை, சமதர்மம் என்னும் விஷயமாக வெறும் பிரசாரம் செய்வது கூட குற்றம் என்றும் அபாயம் என்றும் கருதுகிறவர்களுக்கு இடம் ஏற்பட்டு விடுகிறது. சர்க்காருக்கும் இதை அடக்க வேண்டும் என்று போலிச்சாக்கு உண்டாகிவிடுகிறது.

இன்றைய தனி உடமை உலகில் வெறும் ஆட்கள் என்பவர்கள் இதற்காகக் கோபித்துக் கொள்வதால் பயனில்லை. ஒரு தாசி சுதந்திர கற்பைப்பற்றிப் பேசினால் மக்கள் என்ன சொல்லுவார்கள். ஆளுக்கொரு கல்லெடுத்துப் போடுவார்களே ஒழிய பொறுமையாய் கேட்கக்கூட மாட்டார்களல்லவா? அதுபோலவே ஜீவனத்துக்கும் தொழிலுக்கும் மார்க்கமில்லாதவர்கள் பொதுஉடமைப் பிரசாரம் செய்தால் இன்றைய நிலைமையில் அதிகம் எதிர்ப்பு ஏற்படுவது என்பதிலும் கஷ்டம் ஏற்படுவது என்பதிலும் மக்கள் அபிப்பிராயத்தை சரியானபடி மதிக்கமாட்டார்கள் என்பதிலும் ஆச்சரியமில்லை.

எப்படி இருந்தாலும் எலக்ஷன் போட்டி காலத்தில் பதவியையும் அதிகாரத்தையும் கைப்பற்ற வேண்டும் என்று தேசீயத்தின் பேராலும் சமுதாயத்தின் பேராலும் நடக்கும் போட்டியில் கலந்து கொண்டு பொது உடமைப் பிரசாரமோ, சமதர்மப் பிரசாரமோ செய்வது என்பது ஒருநாளும் அறிவுடமையான காரியம் என்றோ, யோக்கியமான காரியம் என்றோ சொல்லிவிட முடியாது.

கைப்பற்றியதற்கு அப்புறம் என்ன செய்வது என்பதில் விளக்கமோ தெளிவோ இருந்தால் தான் எலக்ஷன் பிரசாரங்களில் இவற்றை கலக்கிக் கொள்வது ஒரு அளவுக்காவது இப்போது ஒப்புக்கொள்ளலாம். அப்படிக்கு இல்லாமல் இப்போது சட்டசபை ஓட்டு பெறுவதற்குச் செய்யப்படும் ஜவஹர்லால் போன்றவர்களின் அபேதவாதப் பிரசாரத்தை யாரும் கண்டிக்காமல் இருக்கமாட்டார்கள்.

அபேதவாதம் குற்றமென்று நாம் ஒருநாளும் சொல்லமாட்டோம். அதனால்தான் மனித சமூகத்துக்குள் ஒரு அளவாவது சாந்தியும் சமாதானமும் ஏற்படும் என்பதையும் நாம் வலியுறுத்துவோம். அது பிரசாரம் செய்யப்பட வேண்டிய காலம் எது என்பதையும் நாம் அறிவோம்.



ஆனால் அது சமூக விஷயத்தில் உள்ள கொடுமைகளைக் களையாமலோ - களைய முயற்சி செய்யாமலோ ஏற்பட்டுவிடும் என்பதை நாம் ஒருநாளும் ஒப்புக்கொள்ளமாட்டோம். அபேதவாதம் மாத்திரமில்லாமல் சுதந்திரம், சுயராஜியம் என்கின்ற வார்த்தைகளுக்கும் என்ன அருத்தம் இருந்தபோதிலும் கூட சமுதாயக் கொடுமைகள் அதுவும் பிறவி காரணமாய் இருந்துவரும் கொடுமைகள் நீக்கப்படாமல் அவ்வார்த்தைகளை உச்சரிப்பது கூட யோக்கியமான காரியம் என்று நாம் சொல்ல மாட்டோம்.

**குடி அரசு - தலையங்கம் - 21.06.1936**



RangaRakes tamilnavarasam.com

# தேச மக்களே உஷார்!

வரப்போகும் அரசியல் சீர்திருத்தம் இந்தியர் விரும்பும் அளவுக்கு முற்போக்கானதாயில்லை; மற்றும் பல குறைபாடுகளும் அதில் அடங்கியுள்ளன. எனினும் அரசியல் ஞானமுடையவர்கள் அதை ஒப்புக்கொண்டு அனுதாபத்துடன் அமல் நடத்தினால் மக்களுக்குப் பல நன்மைகள் செய்ய முடியுமென்றும் மேற்கொண்டு அதிகப்படியான உரிமைகள் பெற அடிகோலலாமென்றும் அனுபவ ஞானமுடைய அரசியல்வாதிகள் கூறுகிறார்கள். காங்கிரஸ்காரர் மதிப்பைப் பெற்றவரும் அசம்பிளியில் காங்கிரஸ் பெற்ற ''வெற்றி மேல் வெற்றி''களுக்கு உதவி புரிந்தவருமான தோழர் ஜின்னாவின் அபிப்பிராயமும் அனேகமாக இதுவேயாகும். ஆனால் பூரண சுயேச்சை வாதிகளும் ''கலப்பற்ற தேசபக்தி''யுடையவர்களுமான காங்கிரஸ்காரர்களோ, வரப்போகும் சீர்திருத்தம் வேண்டவே வேண்டாம் என்று கண்ணை மூடிக்கொண்டு கூறுகிறார்கள். அவ்வாறு அவர்கள் கூறுவதற்கு, மாகாண கவர்னர்களுக்கும் வைசிராய்க்கும் அதிகப்படியான விசேஷ அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருப்பதே காரணமாம். எவ்வளவு திறமையுடைய மந்திரிகளுக்கும் அந்த விசேஷ அதிகாரங்களை மீறி உருப்படியான வேலை செய்யவே முடியாதாம். ஆனால் வரப்போகும் சீர்திருத்தத்தில் அமோகமான விசேஷ அதிகாரங்கள் புகுத்தப்பட்டதற்கு காங்கிரஸ்காரர்களே காரணம் என்று ஸர்.டெஜ் பகதூர் சாப்ரு போன்ற விஷயமறிந்த அநுபவ அறிவாளிகள் கூறுகிறார்கள். அதன் உண்மை நிலை எப்படி இருந்தாலும் சரி; விசேஷ அதிகாரங்கள் அதி பயங்கரமானவை என்பதை காங்கிரஸ்காரர் எல்லாம் ஒப்புக்கொள்ளத்தான் செய்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் சத்தியமூர்த்தியோ வேறுவிதமாக அபிப்பிராயப்படுகிறார். அவர் இந்திய அரசியல் சட்டத்தை மிக ஜாக்கிரதையாகப் படித்துப் பார்த்தாராம். விசேஷ அதிகாரம் வெறும் ஓலைப்பாம்பாம். அதைக்கொண்டு ஒன்றுமே செய்ய முடியாதாம். சமஷ்டி அரசியல் ஏற்பட முடியாதபடி காங்கிரஸ்காரர் முட்டுக்கட்டை போடுவதைத் தடுக்க அந்த விசேஷ அதிகாரங்களுக்கு சக்தியே இல்லையாம். அப்படியானால் விசேஷ அதிகாரங்களைப் பார்த்து காங்கிரஸ்காரர் ஏக கூச்சல் போடக் காரணம் என்னவென்று சாமானிய ஜனங்கள் கேட்கலாம். இந்தக் கேள்விக்கு விடையளிக்கு முன் வேறொரு பம்பாய் காங்கிரஸ்வாதியான தோழர் கே.எம். முன்ஷி என்ன சொல்லுகிறார்



என்று பார்ப்போம். ''எவ்வளவு சக்தி வாய்ந்த தேசீயக் கட்சிக்கும் அரசியல் திட்டத்தை உடைக்க முடியாது. அதாவது சர்க்காரைத் திக்குமுக்காடச் செய்யவோ அரசியல் ஆர்ப்பாட்டமான மாறுதல்கள் செய்யவோ முடியாது. அந்தக் கட்சி ஆர்ப்பாட்ட மாறுதல்கள் செய்யும் ஆசையை அடக்கிக் கொண்டு உருப்படியான வேலைகளைச் செய்ய முற்பட வேண்டும். சக்தி சேகரிக்க வேண்டும். ஸ்திரத் தன்மையை வளர்க்க வேண்டும். அரசியலில் அன்றாட வேலைகளைச் செய்வதோடு கொஞ்சம் கொஞ்சமாக இலாக்காக்களைச் சீர்திருத்த வேண்டும். சிவில் சர்வீஸ்களைச் சமாளித்துக் கொண்டு கவர்னரை வெறும் பாவையாகப் பண்ணிவிட வேண்டும். இது சிரம சாத்தியமான காரியம். ரொம்பப் பொறுமையும், உழைப்பும் காட்ட வேண்டிய வேலை'' என தோழர் முன்ஷி கூறுகிறார். தோழர் சத்தியமூர்த்தி ஆர்ப்பாட்டப் பேச்சுகளுக்கும் தோழர் முன்ஷியின் புத்திசாலித்தனமான வார்த்தைகளுக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது பாருங்கள். சட்ட சபைக்குள் புகுந்து அரசியலை உடைத்து விடுவதாகக் கூறுவது ஒரு செம்புக்காசும் விலை பெறாத பைத்தியக்காரப் பேச்சு. பாமர மக்கள் அப்பேச்சைக் கேட்டு ஏமாறலாம்; வியப்படையலாம்; மூர்த்தி கூட்டத்தாரைக் கொண்டாடலாம். ஆனால் விவேகிகள் ஆதரிக்கவே மாட்டார்கள். அதனாலேயே, **''மந்திரி பதவி ஒப்புக்கொண்டு அரசியலை உடைத்தெறிவோம் என்று கூறுவது தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் வித்தை''** என காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் கூறுகிறார்.

மற்றும் சென்ற அசம்பிளித் தேர்தலின் போது சத்தியமூர்த்தி கோஷ்டியார் என்ன சொன்னார்கள். **''சட்டசபைக்குள் புகுந்து அரசியலைக் கவிழ்த்து பிரதிநிதித்துவ சபை கூட்டி எதிர்கால அரசியலை அமைப்போம்''** என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்கள் சட்டசபைக்குள் புகுந்து சுமார் இரண்டு வருஷமாயிற்று. பிரதிநித்துவ சபையைப் பற்றிய பேச்சையே காணவில்லை. இப்பொழுது தோழர் சத்தியமூர்த்தி என்ன சொல்லுகிறார் என்றால் ''புதிய அரசியலை அமல் செய்வது அசாத்தியமாகும்படி செய்ய முடியாவிட்டாலும் மிகச் சங்கடமாகும்படியான தோரணையில் சர்க்கார் நிர்வாகத்தை மந்திரிகள் நடத்தி, பரஸ்பர சம்மதத்தின் பேரில் புதிய அரசியல் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் நிர்ப்பந்தமான ஓர் நிலைமையை மந்திரிகள் உண்டாக்கிவிட முடியும்'' என தோழர் சத்தியமூர்த்தி வழவழவென்று பேசி மழுப்பப் பார்க்கிறார்.

தோழர் சத்தியமூர்த்தி மழுப்பலை நினைக்கும் போது சாமானியர் இல்லங்களில் பிரதி தினமும் நடைபெறும் புருஷன் பெண்டாட்டி சண்டைதான் நமது ஞாபகத்துக்கு வருகிறது. புருஷன் பசியோடு வீட்டுக்கு வருகிறான். சாப்பாடு தயாரில்லை. சீறி விழுந்து பெண்டாட்டியை அடிக்கிறான். அவள் கோபித்துக்கொண்டு தாய்வீடு செல்லப் புறப்படுகிறாள். அவள் தாய்வீடு சென்றால் வீடு குட்டிச்சுவர்தான். வேறுகதியில்லை.



RangaRakes tamilnavarasam.com

புருஷனே மனைவியைக் கெஞ்சி மன்றாடி சமாதானம் கூறி இருவரும் மறு நிமிஷம் ராஜியாய்ப் போய்விடுகிறார்கள். மந்திரி பதவி ஒப்புக்கொண்டு இம்மாதிரி கவர்னருடன் புருஷன் பெண்டாட்டிச் சண்டை போட்டு காங்கிரஸ்காரர் விரும்பும் பூரண சுயேச்சையை வெகு சுளுவில் பெற்று விடலாமென்று சாது சத்தியமூர்த்தி மனப்பால் குடிக்கிறார். அவரது இந்த பைத்தியகாரப் பேச்சுக்கு எவ்வளவு தூரம் மதிப்புக் கொடுக்கலாம் என்பதை தேச மக்களே நிதானம் செய்து கொள்ளட்டும்.

முன்னுக்குப்பின் முரணாகவும் சந்தர்ப்பத்துக்குத் தக்க படியும் பேசுவதில் காங்கிரஸ்காரரைப் போன்ற சமர்த்தர்கள் இல்லவே இல்லை. அசம்பிளித் தேர்தலின் போது வரப்போகும் அரசியல் சீர்திருத்தத்தைக் கண்ணெடுத்தும் பாரோம்; கையாலும் தொடோம் என்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அசம்பிளியில் அரசியல் சீர்திருத்தத்தைக் கண்டித்து கத்து கத்தென்று கத்தினார்கள். அவ்வாறு கத்தியவர்களில் தோழர் சத்தியமூர்த்தியும் ஒருவர். இப்பொழுது அவர் மந்திரி பதவியைக் கைப்பற்ற தவங்கிடக்கிறார். அவருடைய பேச்சு வங்காள காங்கிரஸ் தலைவர் தோழர் சரத்சந்திர போசுக்குக்கூடப் பிடிக்கவில்லை. ''புதிய அரசியல் திட்டத்தைப்பற்றி டில்லி அசம்பிளியில் சத்தியமூர்த்தி பேசியிருப்பதைப் போல் நான் பேசியிருப்பே னாயின் புதிய அரசியல் திட்டத்தின் கீழ் பதவி ஏற்பது அவசியமென்று ஒரே ஸ்தாயியில் பேச நான் மிகவும் வெட்கப்பட்டிருப்பேன்'' என அவர் கூறுகிறார். ஆனால் சத்தியமூர்த்தி கோஷ்டியாரிடம் வெட்கத்தையும் மானத்தையும் ரோஷத்தையும் எதிர்பார்க்க முடியாதென்பதை தோழர் சரத்சந்திர போஸ் அறியார் போலும்.

காங்கிரஸ்காரர் மந்திரி பதவி ஒப்புக்கொள்வதை நாம் ஆட்சேபிக்க வில்லை. மந்திரிபதவி ஒப்புக்கொண்டு அரசியலைக் கவிழ்த்து விடுவோம், மலையைப் பொடியாக்கிவிடுவோம், கடலை மடுவாக்கி விடுவோம் எனப் புலம்புவதையே நாம் ஆட்சேபிக்கிறோம். காங்கிரஸ்காரர் கடுகத்தனையாவது யோக்கியப் பொறுப்புடையவர்களானால், அசம்பிளித் தேர்தல் காலத்தில் ஆர்ப்பாட்டம் செய்தபடி, அரசியலைக் கவிழ்த்து பிரதிநிதித்துவ சபை கூட்டி எதிர்கால அரசியலை நிர்ணயம் செய்ய முற்பட வேண்டும். அவ்வாறு செய்ய ஆற்றலில்லாதவர்கள் மந்திரி பதவி ஒப்புக்கொண்டு ஏதேதோ சாதிக்கப் போகிறதாகக் கூறுவது வெறும் ஹம்பக் பேச்சாகும். காங்கிரஸ்காரருக்கு அரசியல் ஞானமும் இல்லை; திடமான கொள்கையுமில்லை, பாமர மக்களை ஏமாற்றி அவர்களுடைய ஆதரவைப் பெறும் பொருட்டு பகட்டாகவும், ஆடம்பரமாகவும் ஏதாவது ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருப்பார்கள். ''சட்ட சபைகள் மூலம் நாட்டுக்கு நன்மை செய்ய முடியும் என்று உணர நமக்கு 16 வருஷம் பிடித்தது'' என தோழர் பிரகாசமே பிரலாபிக்கிறார். இதனால் காங்கிரஸ்காரருக்கு அனுபவ ஞானம் கிடையாது என்பது புலனாகவில்லையா?



1920 முதல் நாளிது வரை காங்கிரஸ்காரர் கூறியுள்ளவைகளில் ஒரு சின்னக் காரியத்தையாவது சாதித்திருக்கிறார்களா? காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டதைப் பற்றி அவர்கள் வெகு பிரமாதமாகப் பேசிக் கொள்கிறார்கள். சூது வாதறியாத பாமர மக்கள் காங்கிரஸ் தலைவர்கள் பேச்சை நம்பி சட்ட மறுப்பில் ஈடுபட்டுப் பாழாய்ப்போவதைப் பார்க்கப் பொறாத ஒரு ''நல்லெண்ணமுடைய வைஸ்ராய், பாழும் சட்ட மறுப்பை நிறுத்துவதற்காகச் செய்த ஒரு யுக்தியே காந்தி-இர்வின் ஒப்பந்தம். அதனால் இந்திய அரசியல் அமைப்பில் ஒரு சுள்ளாணி கூட மாற்றப்பட வில்லை. மக்கள் உப்புக்காய்ச்சும் சுதந்திரமும் பெற்றுவிடவில்லை. 1920-ல் இருந்த நிலைமையிலேயே இந்தியா இன்று இருந்து வருகிறது. இதைப்பற்றி ராசீபுரம் மகாநாட்டுத் தலைவர் தோழர் சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைமையுரையில் வெகு ஆணித்தரமாக எடுத்துக்காட்டி யிருக்கிறார். ஆகவே இனி பொதுமக்கள் காங்கிரஸ்காரரை நம்பினால் மேலும் கீழான நிலைமையையே இந்தியா அடையும். எனவே அரசியல் ஆர்ப்பாட்டக்காரரின் மாய வலையில் சிக்காமல் தேசமக்கள் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 28.06.1936**



RangaRakes tamilnavarasam.com

# வேதம் அல்லது பைபில் விதிகள்

**வினா:-** பைபில் விதிகள் எவை?

**விடை:-** சமயாசாரியர்களால் தேவ வாக்கென மதிக்கப்படுவன வெல்லாம் பைபில் விதிகள் எனப்படும்.

**வினா:-** பைபில் விதிகள் ஆதி முதல் ஒரே மாதிரியாக இருந்து வந்திருக்கின்றனவா?

**விடை:-** இல்லை. ஆதிக்கிறிஸ்தவர்கள் எல்லாம் யூதர்களா யிருந்ததினால் பழைய ஏற்பாடே கடவுள் வாக்கு என்றும் கிறிஸ்து மதத்துக்கு அதுவே ஆதாரமென்றும் நம்பினார்கள்.

**வினா:-** இதைப்பற்றி அப்போஸ்தலகர்கள் என்ன சொன்னார்கள்?

**விடை:-** புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டைப்போல் முக்கியமான தென்று அவர்கள் நம்பவில்லை யென்றே தெரிய வருகிறது.

**வினா:-** பழைய ஏற்பாட்டுக்கு சமமான நிலையில் புதிய ஏற்பாடு எப்பொழுது மதிக்கப்பட்டது?

**விடை:-** யூதக் கிறிஸ்தவர்களுக்கும் இதர கிறிஸ்தவர்களுக்கும் தகராறு ஏற்பட்டதினால் கத்தோலிக்க திருச்சபை ஸ்தாபனமாயிற்று. மத சம்பந்தமான விஷயங்களில் முடிவு கூற கத்தோலிக்க திருச்சபைக்கே அதிகார முண்டென மதிக்கப்பட்டது. எனவே பொதுவாக கடவுள் வாக்கென மதிக்கக் கூடிய ஒரு நூலுக்குத் தேவையுண்டாயிற்று. உடனே பல வேத விதிகள் தொகுக்கப்பட்டன. கடைசியில் அவை புதிய ஏற்பாடாக உருப்பெற்றன.

**வினா:-** இந்தப் புதிய ஏற்பாடு எப்பொழுது உருவாயிற்று?

**விடை:-** இரண்டாவது நூற்றாண்டின் பின் பகுதியில்.

**வினா:-** ஆதிவேத விதிகளில் அடங்கிய புஸ்தகங்கள் எவை?

**விடை:-** ஜஸ்டின், டெர்ட்டுலியன், இரேனியஸ், ஆரிஜென் முதலிய பாதிரிமார் ஒவ்வொருவரும் தனித்தனியாக அப்புத்தகங்களைப் பற்றி ஒரு பட்டியல் வெளியிட்டார்கள்.

**வினா:-** முரோட்டரி வெளியிட்ட வேத விதிகள் எவை?



**விடை:-** அவை கி.பி 170-ல் வெளியாயிற்று. அதில் ஹிப்ரூக்களுக்கு பால் எழுதிய கடிதங்களும் பீட்டர், ஜான், ஜேம்ஸ் வகுத்த விதிகளும் அடங்கியிருக்கவில்லை.

**வினா:-** சிரியன் வேத விதிகள் எவை?

**விடை:-** அதில் பீட்டரின் இரண்டாவது கடிதமும், ஜான் எழுதிய மூன்றாவது கடிதமும் அப்போஸ்தலர்கள் சட்டங்களும் தேவ வாக்குகளும் அடங்கியிருக்கவில்லை.

**வினா:-** தகராறில் இருந்து வரும் இதர பைபில் நூல்கள் எவை?

**விடை:-** பால் கடிதங்கள், ஜேம்ஸ் கடிதங்கள், அப்போஸ்தலர்கள் சட்டங்கள் அடங்கிய புத்தகங்கள், பழைய ஏற்பாட்டிலுள்ள ஜாப் எஸ்தர் முதலியோர் வசனங்கள் முதலியன தகராறில் இருந்து வருகின்றன.

**வினா:-** லூதர் பைபில் என்றால் என்ன?

**விடை:-** தேவவாக்குகள் அடங்கிய புத்தகமும் ஜேம்ஸ் கடிதங்கள் மெய்யாகவே கடவுள் வார்த்தைகள் என்று லூதர் நம்பவில்லை.

**வினா:-** பைபில் விதிகளின் தற்கால நிலைமை என்ன?

**விடை:-** இங்கிலாந்து சர்ச்சு 39-வது விதி ஆறாவது பிரிவில் கூறப்பட்டிருப்பதாவது:- ''பழைய புது ஏற்பாட்டு விதிகள் சந்தேகமற்ற ஆதாரங்கள் என வேத நூல்களின் பெயரால் ஒப்புக் கொள்கிறோம்.'' ஆனால் இது தெளிவில்லாததாகவும் தப்பு வழியில் செலுத்தக் கூடியதாகவும் இருக்கிறது. ஏனெனில் புதிய ஏற்பாட்டில் ஆட்சேபிக்கப்படாத பகுதி எதுவும் இல்லவே இல்லை.

**வினா:-** கத்தோலிக்க பைபில் புராடஸ்டன்டு பைபிலுக்கும் பொருத்தமாக இருக்கிறதா?

**விடை:-** இல்லை. கத்தோலிக்க பைபிலில் கடவுள் வாக்காக மதிக்கப்படும் 72 புத்தகங்கள் அடங்கி யிருக்கின்றன.

**வினா:-** அது எப்படி?

**விடை:-** மத சம்பந்தமற்றவை என புராடஸ்டண்டுகள் நிராகரிக்கும் பலவற்றை கத்தோலிக்கர் தேவ வாக்கென நம்புகிறார்கள்.

**வினா:-** அந்தப் புஸ்தகங்களை கடவுள் வாக்கென மதியாதவர்களை கத்தோலிக்கர் எவ்வாறு நடத்துகிறார்கள்?

**விடை:-** டிரண்டில் கூடிய கத்தோலிக்கப் பாதிரி சங்கத்தார் அவர்கள் மீது ஒரு சாபம் பிறப்பித்திருக்கிறார்கள்.

**வினா:-** கத்தோலிக்க பைபில் எப்பொழுது மொழிபெயர்க்கப்பட்டது?



RangaRakes tamilnavarasam.com

**விடை:-** நான்காவது நூற்றாண்டில் செயிண்டு ஜெரோமால் அது மொழிபெயர்க்கப்பட்டதென நம்பப்படுகிறது.

**வினா:-** அந்த மொழிபெயர்ப்பின் பெயர் என்ன?

**விடை:-** அதற்கு லத்தீன் வல்கேட்டு என்று பெயர்.

**வினா:-** கத்தோலிக்க பைபில் எப்பொழுதாவது திருத்தி எழுதப்பட்டதா?

**விடை:-** ஆம், பாப்பரசர்கள் 5வது சிக்டஸ்ஸாலும் 8வது கிளமெண்டாலும் திருத்தி எழுதப்பட்டது.

**வினா:-** தற்கால புராடஸ்டண்டு பைபில் எப்பொழுது மொழி பெயர்க்கப்பட்டது?

**விடை:-** 1611-ல் இங்கிலாந்து அரசர் ஜேம்ஸ் காலத்து மொழி பெயர்க்கப்பட்டது.

**வினா:-** அதற்குப் பிறகு அது திருத்தப்பட்டதா?

**விடை:-** ஆம். 1884-ல் ஒரு புது மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது.

**வினா:-** ஜேம்ஸ் அரசர் காலத்து வெளி வந்த மொழி பெயர்ப்புக்கும் இதற்கும் ஏதாவது வித்தியாச முண்டா?

**விடை:-** ஆம், வித்தியாசமுண்டு.

**வினா:-** வித்தியாசங்கள் எவை?

**விடை:-** ஜான் J.V.7-ல் ''சுவர்க்கத்தில் மூவர் இருக்கிறார்கள். அவை பிதா, புத்திரன், தேவ ஆவி. அவை மூன்றும் ஒன்றே'' திருமூர்த்திக் கொள்கைக்கு ஆதாரமாகக் காட்டப்பட்ட இந்த வாக்கியம் புது மொழி பெயர்ப்பில் காணப்படவில்லை.

**வினா:-** வேறு வித்தியாச முண்டா?

**விடை:-** புது மொழிபெயர்ப்பில் மார்ஜினில் பொறிக்கப்பட்ட பல குறிப்புகளினால் இதுவரை மறுக்க முடியாத ஆதாரங்களாய் நம்பப்பட்ட வைகளைப்பற்றி சந்தேகங்கள் உண்டாகின்றன.

**வினா:-** ஒரு உதாரணம் கூறு.

**விடை:-** மார்க்கு எழுதிய சுவிசேஷத்தில் கடைசி அத்தியாயத்தில் பின் வருமாறு ஒரு குறிப்புச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ''மிகப் பழமையான இரண்டு கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளும் வேறு சிலவும் 9 வது வாக்கியத்திலிருந்து கடைசி வரை நிராகரித்து விட்டன'' மற்றும் பின் வருமாறு ஒரு குறிப்புச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ''வேத வாக்கியங்களில் பல பிரதி பேதங்களை மற்றும் சிலர் கூறுகிறார்கள்.''

**வினா:-** அவ்வாறு நிராகரிக்கப்பட்ட வாக்கியங்கள் மிக முக்கியமானவைகளா?



**விடை:-** ஆம்; அவை இயேசு உயிர்த்தெழுந்ததைப் பற்றியும் சுவர்க்கம் சென்றதைப்பற்றியும் நித்திய நரக தண்டனையைப் பற்றியும் கூறுகின்றன.

**வினா:-** அந்தக் குறிப்புகளினால் என்ன ஊகிக்கக் கிடக்கின்றன.

**விடை:-** மொழி பெயர்ப்பாளர் பல கையெழுத்துப் பிரதிகளிலிருந்து கடவுள் வார்த்தைகளைப் பொறுக்கி எடுத்தார்களென்று ஊகிக்க இடமிருக்கிறது.

**வினா:-** வெளிவந்துள்ள மொழி பெயர்ப்புகள் இவ்வளவு தானா?

**விடை:-** பிரமாணமாக ஒப்புக் கொள்ளப்பட்ட பைபில்கள் சரியல்ல வென்று நம்பி வேறு பல பண்டிதர்கள் பல மொழி பெயர்ப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

**வினா:-** புராடஸ்டண்டுகளும் கத்தோலிக்கரும் பைபிலை ஒரே மாதிரியாக மதிக்கிறார்களா?

**விடை:-** அவர்கள் இருவரும் ஒரே மாதிரியாக மதிக்கவில்லை.

**வினா:-** வித்தியாசத்தை விளக்கு.

**விடை:-** கடவுள் வார்த்தைக்கு மகிமையும் அதிகாரமும் கற்பிப்பது திருச்சபையே என்று கத்தோலிக்கர் நம்புகிறார்கள்.

**வினா:-** அதற்கு அவர்கள் கூறும் நியாயம் என்ன?

**விடை:-** அகஸ்தியன் வார்த்தைகளை அவர்கள் ஆதாரமாகக் காட்டுகிறார்கள். ''நான் அறிந்த விஷயங்களை விட அறியாத விஷயங்கள் பைபிலில் ஏராளமாக இருக்கின்றன'' என்று அவர் கூறியிருக்கிறாராம். ஒரு பாஷியகாரர் உதவியின்றி அவருக்கே கடவுள் வார்த்தைகளை உணர முடியாதானால் சாமானியருக்கு எப்படி முடியுமென்று கத்தோலிக்கர் கேட்கிறார்கள்.

**வினா:-** பைபிலுக்கு இதரர் கூறும் வியாக்கியானங்களை கத்தோலிக்கர்கள் நம்புகிறார்களா?

**விடை:-** அவர்கள் நம்பவில்லை.

**வினா:-** ஜனங்கள் பைபில் வாசிப்பதை அவர்கள் ஆதரிக்கிறார்களா?

**விடை:-** பிஷப்பின் அநுமதியின் பேரிற்றான் ஜனங்கள் பைபில் வாசிக்கலாமாம்.

**வினா:-** பைபிலைப் பற்றி புராடஸ்டண்டு கொள்கை என்ன?

**விடை:-** பைபில் சரியான கடவுள் வார்த்தை என்றும் அதை ஒவ்வொருவரும் வாசித்துப் பொருளுணர வேண்டு மென்றும் புராடஸ்டண்டுகள் கூறுகிறார்கள்.

**வினா:-** தவறு செய்யக் கூடிய மக்கள் தவறில்லாத பைபிலை எப்படி வாசித்துப் பொருளுணர முடியும்?



RangaRakes tamilnavarasam.com

**விடை:-** தேவ ஆவி உண்மைப் பொருளை எல்லோருக்கும் விளக்கிக் கூறுமென்று சொல்லப்படுகிறது.

**வினா:-** தேவ ஆவி எல்லோருக்கும் ஒருப் போலப் பொருளை விளக்கிக் கூறுகிறதா?

**விடை:-** இல்லவே இல்லை. பைபில் வாக்கியங்களுக்குப் பலதிறப் பட்ட பாஷியங்கள் இருக்கின்றன.

**வினா:-** ஞானஸ்தான விஷயத்தில் புராடஸ்டன்டுகளெல்லாம் ஒற்றுமையான அபிப்பிராயமுடையவர்களா யிருக்கிறார்களா?

**விடை:-** இல்லை.

**வினா:-** தேவ சங்கற்ப விஷயத்தை எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்களா?

**விடை:-** இல்லை.

**வினா:-** நித்திய நரக தண்டனையை எல்லாரும் நம்புகிறார்களா?

**விடை:-** இல்லை.

**வினா:-** பாவமன்னிப்பு எல்லாருக்கும் உடன்பாடுதானா?

**விடை:-** இல்லை.

**வினா:-** இயேசு தேவகுமாரன் என்று எல்லோரும் நம்புகிறார்களா?

**விடை:-** இவ்விஷயங்களைப் பற்றி யெல்லாம் தேவன் கூறியிருப்பதாக ஒப்புக் கொண்டாலும் இயேசு தேவ குமாரன் என்று எல்லோரும் நம்ப வில்லை.

**வினா:-** இவ்விஷயங்களைப் பற்றி தேவன் சந்தேகத்துக்கு இடமின்றிக் கூறியிருந்தால் கிறிஸ்தவர்களுக்குள்ளே அபிப்பிராய பேதமிருக்க இட முண்டா?

**விடை:-** இல்லை.

**வினா:-** அபிப்பிராய வித்தியாசமுடைய மத வாதிகளுக்குள் சமரசம் ஏற்பட வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

**விடை:-** பழைய வேத வாக்கியங்களை யெல்லாம் விளக்கி தேவன் மீண்டுமொரு முறை கூற வேண்டும்.

**வினா:-** பைபில் தேவ வாக்கு என்பதை ஆட்சேபிப்பதேன்?

**விடை:-** பைபில் தேவ வாக்காயிருந்தால் உண்மை ஒரு குலத்தாருக்கே உரியது என்று ஏற்பட்டு விடும்.

**வினா:-** வேறு ஆட்சேபணை யுண்டா?

**விடை:-** ஆராய்ச்சிக்கே தேவையில்லை யென்று ஏற்பட்டு விடும்; புது உண்மைகளை அடக்க பாதிரிமாருக்கு அதிகாரம் கிடைத்துவிடும்; விசால புத்தியுடையவர்களை அவர்கள் ஹிம்சிக்கத் தொடங்கி விடுவார்கள்.

**வினா:-** இதைப்பற்றி சரித்திரம் என்ன சொல்லுகிறது?



**வினா:-** அறிய வேண்டியவையெல்லாம் குர் ஆனில் அடங்கி யிருப்பதினால் அலக்சாண்டரியா நூல் நிலையத்தை எரித்துச் சாம்பலாக்க உமார் கட்டளையிட்டானாம். அதுபோலவே பைபிலில் எல்லா உண்மைகளும் அடங்கி யிருப்பதாக நம்பி கத்தோலிக்கர் கிரேக்க ரோம நாகரிகத்தை எதிர்த்துப் போராடி அடியோடு ஒழித்தார்கள். தற்காலத்து விஞ்ஞான சாஸ்திரிகளும் புது விஷயங்களைக் கண்டு பிடிப்பவரும் அவிசுவாசிகள் எனப் பழிக்கப்படுகிறார்கள்.

**வினா:-** இந்த திருஷ்டாந்தங்களினால் நாம் முடிவுகட்ட வேண்டியதென்ன?

**விடை:-** வேதங்கள் மக்கள் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டை என்றுதான் முடிவுகட்ட வேண்டும்.

**வினா:-** பைபிலைப் பற்றி ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இப்பொழுது எத்தகைய அபிப்பிராயம் இருந்து வருகிறது?

**விடை:-** அறிவு விளக்கம் பெறாத ஆதி கால மக்கள் எழுதிய நூல் என்ற அபிப்பிராயமே இருந்து வருகிறது.

**வினா:-** பைபிலை யாராவது தேவ வாக்கென மதிக்கிறார்களா?

**விடை:-** கல்வியறிவில்லாதவர்கள் மதிக்கிறார்கள்.

**வினா:-** பைபிலினால் உபயோகமென்ன?

**விடை:-** பைபில் வாக்கியங்களில் ஒப்புக்கொள்ளத்தக்கவைகளை ஒப்புக்கொள்ள வேண்டும். மற்றவைகளைத் தள்ள வேண்டும்.

**பகுத்தறிவு (மா.இ.) - வினா விடை - ஜூன் 1936**



RangaRakes tamilnavarasam.com

# ஆண் பெண் சமத்துவம்

ஆண் மக்கள் தங்களுடைய பெண் மக்களை அதாவது தாங்கள் மிகுதியும் மரியாதை செலுத்தும் தாய்மார்களாயிருந்தாலும் சரி, அன்பு செலுத்தும் சகோதரியாயிருந்தாலும் சரி, காதலுக்குரித்தான மனைவிகளா யிருந்தாலும் சரி ஒரே படியாக அவர்களைக் கேவலமாகவே எண்ணியும், மதித்தும் வருவது சகஜமாக இருந்து வருகிறது. நமது நாட்டில் வெகுகாலமாக இம்மாதிரி பெண்களை இழிவாகக் கருதப்படுவதற்கு நமது சாஸ்திரங்களும், பண்டிதப் பெரியோர்களும், முற்றும் துறந்த முனிவர்களென்று சொல்லப் பட்டவர்களும் ஒருவித காரணமுமின்றி பெண்களைக் கேவலமாக வர்ணித்து வந்ததோடு, பாரபக்ஷமாக ஏட்டிலும் எழுதிவைத் திருக்கின்றனர். இதைப் படிக்கும் மக்கள் சாதாரணமாக தங்கள் பகுத்தறிவைக் கொண்டே ஆராயாமல் தங்கள் பெண்மக்களைக் கேவலமாக நடத்தி வந்ததோடு அவர்களுக்கு எவ்விதத்திலும் சமத்துவம் ஏற்படாதபடி சட்ட திட்டங்களையும் செய்து அதைப் பழக்கத்திலும் கொண்டுவந்து விட்டார்கள். இந்தப் பழக்கமானது இந்தியர் ஒவ்வொருவருடைய மனதிலும் ஆழமாகப் பதிந்து விட்டது. சுயமரியாதை இயக்கத்தின் பலனால் மக்கள் சிறிது சிறிதாக உண்மையை உணர்ந்து வருகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஆண் பெண் சமத்துவத்தைப் பற்றி மேனாட்டு மனோதத்வ நிபுணர்கள் செய்யும் முடிவையும் நாம் பெரிதும் கவனிக்க வேண்டியது அவசியம்.

ஆடவர்கள் சாதாரணமாகப் பெண்களை ''பேதையர்க''ளென்று அழைப்பதில் எவரும் பின் வாங்குவதில்லை. அடுப்பங்கரையில் சட்டி சுரண்டும் அம்மையர்களைத்தான் இவ்வாறு கூறிவிடுகிறார்களென்றாலோ தற்கால படிப்புப் படித்து ஆண்களைப் போலவே பி.ஏ., எம்.ஏ., பட்டம் பெற்றவர்களையும் கூட ''எப்படியிருந்தாலும் பெண்புத்தி பின் புத்தி தானே; பேதமை என்பது மாதர்க்கணிகலன்'' என்று அலட்சியமாகக் கூறி விடுகிறார்கள்.

இதைப் போல் பாமர மக்கள் கூறுவதுதான் ஒருபுறமென்றால் படித்த ஆண்களும் இவ்வாறு கூறுவதற்கு கூச்சமடைவதில்லை. அவர்கள் கூறுவ தெல்லாம் என்ன? பெண்களுக்கு 'மூளையில்லை' என்பதுதான் பொதுவானது. இது மனிதனுடைய பழக்க வாசனையா, அல்லது இயற்கைவாசனையா என்று கூட நாம் சில சமயங்களில் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. என்றாலும் இது ஒரு அலட்சிய புத்தியினாலும், தற்பெருமையினாலும் நாளா வட்டத்தில்



நிலைபெற்று விட்ட ஒரு தப்பபிப்பிராயமென்றே கூறவேண்டும். இந்தக் காரணத்தினாலேயே அவர்களை அலட்சியம் செய்து சரியான கல்வியை அளிக்காமல் இருந்து விட்டார்களெனக் கூறலாம். பெண்கள் புத்தியில்லா தவர்களென்று பொதுவாகக் கருதப்படுவதால் ஒவ்வொரு ஆடவரும் தங்கள் பெண்டிர்க்கு எல்லா விஷயத்திலுமே தங்களுடைய ''புத்திசாலித் தனமான'' யோசனைகளைக் கூற முன் வந்து விடுகிறார்கள். சமைக்கின்ற வேலை முதற்கொண்டு வீட்டு வேலைகள் சகலமும் சேர்த்துப் பிள்ளை பராமரிப்பு வரையிலுங் கூட விஷயங்கள் தங்களுக்கு எந்த விதத்திலும் அனுபோகமில்லாதிருந்துங் கூட தங்களுக்கு அதிக புத்தியுண்டு என்கின்ற ஒரு தற்பெருமையினால் - எதையும் யூகித்து சொல்லக்கூடிய திறமை உண்டென்கின்ற அசட்டுத் தைரியத்தால் தங்கள் யோசனையைப் பெண் களுக்குக் கூற முன் வந்து விடுகிறார்கள். இந்த சம்பவமானது எந்தக் குடும்பத்திலும் சகஜமானதென்றாலும் அவர்கள் அப்படிக் கூறும் சந்தர்ப்பங்கள் நேரும்போதெல்லாம் குடும்பத்திற்குள் கொஞ்சம் ''முறு முறுப்பு'' ஏற்படாமல் போவதில்லை. சாதாரணமாக வீட்டிலுள்ள பெண்டிர் அந்த ''நிபுணத்தனமான'' யோசனையை எதிர்த்துக் கண்டிக்காமல் விடுவதில்லை. சில சமயம் ஆத்திரம் பொங்கி தாங்கள் எப்பொழுதும் காட்டும் அடக்கத்தையும் கூட மீறி ''நீங்கள் பேசுவது இன்னதென்றே புரியாமல் பேசுகிறீர்கள்; உங்கள் வேலையைப் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று கூடச் சொல்லி விடுவார்கள். ஆடவர் தற்பெருமைக்குச் சிறிது ஆட்டங்கொடுத்தாலும் தனது படிப்பை விடுவதில்லை. ஏனெனில் தன் பெண்ஜாதியைவிட இல்லை, மற்ற எந்தப் பெண்களையும் விடவே தனக்கு ''அதிகமான மூளை'' இருப்பதாகவே அவரது எண்ணம். அதோடு அதை ''நிரூபித்து'' காட்டக் கூட முடியுமென்று கூறுவார்கள். அதற்கு உதாரணங்களின் மேல் உதாரணம் எடுத்துக்காட்டுவார்கள். எது எப்படி யிருந்தாலும் இவர்கள் இம்மாதிரியாக தம் பெண் ஜாதிகளுக்கு குடும்ப விஷயத்தைப்பற்றி யோசனை கூறப்போகும் போதெல்லாம் ''முறுமுறுப்பு'' ஏற்படுவதற்குக் காரணந்தான் என்ன வென்று யோசித்தாலோ இவர் கூறும் 10 யோசனைகளில் $9\frac{7}{8}$ யோசனைகள் சரியாகயிருப்பதில்லை. ஆனால் இவர் யோசனை சரியென்று இவர் நிரூபிப்பதற்கு பேசுகின்ற பேச்சோ ஊரை வளைக்கும்; ஆடுகின்ற ஆட்டமோ சொல்ல முடியாது. மற்ற உப அங்கங் களுக்கும் குறைவிருக்காது. இருந்தும் என்ன பயன். சில சமயம் இவர் கூறப்புறப்படும் யோசனைகள் யாவுமே பிசகாய்ப்போய் விடுவதுண்டு.

ஆனால் அவர்கள் சச்சரவு எப்படியிருந்தாலும் இருந்து போகட்டும், மனோதத்வ நிபுணர்கள் இது விஷயமாக என்ன கூறுகிறார்களென்றாலோ பெண்டிர்க்கும் ''சரியான மூளை உண்டு'' என்கிறார்கள். இது உத்தேச மென்றோ, கிட்டத்தட்ட என்றோ, வேறு சித்தாந்தமென்றோ சொல்லி விட



RangaRakes tamilnavarasam.com

முடியாது. அவர்கள் நேரடியாகச் சோதித்துப் பார்த்து ஆராய்ந்தறிந்து கண்டறிந்த முடிவுண்மைகளாகும். அமெரிக்காவிலே ஒரு கல்லூரியிலுள்ள 115 ஆண்களையும், 111 பெண்களையும் எடுத்துக்கொண்டு அவர்களுடைய புத்தித்திறமையைப்பற்றி வெகு கவனமாக சோதனை செய்து பார்த்ததில் சராசரியாக பெண்களுக்கும் சரி, ஆண்களுக்கும் சரி, சமத்துவமாக 142 மார்க்குகள் கொடுத்தார்களாம். அதை விடுத்து பல பிரபல்யமான கல்லூரி களிலுள்ள எல்லோரையும் ஒன்று சேர்த்து மொத்தம் 3175 ஆண்களையும், 1575 பெண்களையும் சோதித்துப்பார்த்ததில் அவர்களுடைய கல்வித் திறமையானது 'ஏ' கிரேடு, 'பி' கிரேடு முதலிய இரண்டுமே சேர்த்து ஆண்களுக்கு 100க்கு 75.4 மார்க்குகள் என்றும், பெண்களுக்கு 100க்கு 75.2 மார்க்குகள் என்றும் முடிவிற்கு வந்தார்களாம். அமெரிக்காவில் ஹோர்வார்டு பல்கலைக்கழகமானது சற்று மேல் தரமான கல்லூரி. இதனுடைய மாணவர்களையும், உயர்தாராட்கிளிப் பெண் கல்லூரியிலுள்ள மாணவி களையும் சோதித்து சில மாதங்கள் அவர்களுடைய அறிவுத்திறமையை ஆராய்ந்து பார்த்ததில் ஒரு மாணவனும், ஒரு மாணவியும் மாத்திரம் முதல் தரமானவர்களென்று தேர்ந்தெடுக்கப்பெற்று அவர்களுக்கு 86% மார்க்குகள் நிர்ணயிக்கப்பட்டது. ஒரு ஹார்வார்டு மாணவர் எல்லோரையும் விட நிரம்பத் தாழ்ந்ததான 8% மார்க்கு வாங்கினதைப்பற்றி யாவரும் ஆச்சரியப்பட நேர்ந்தது. ஆனால் வெகு குறைந்த மார்க்குகள் வாங்கின பெண்மணிகள் மாத்திரம் 28% மார்க்குக்கு குறையாமல் வாங்கி யிருந்தார்கள். பொதுவாக எல்லோரையும் சேர்த்து சராசரி பார்த்தபொழுது மாணவர்களுக்கு 100க்கு 50.5 ஆகவும், மாணவிகளுக்கு சராசரி 100க்கு 55 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. இதில் பெண்களுக்கும் ஆண்களுக்கு மிடையே அறிவு, திறமை இவைகளில் அதிகமான வித்தியாசங்கள் இருக்கவில்லை என்பது திட்டமாகத் தெரிகிறது. மற்றும் அவரவர்களுக்கு இட்ட வேலைகளில் சிறிதும் ஏற்றத்தாழ்வு கூற முடியாதபடி திறமையாகவே நடத்தக்கூடிய ஆற்றல் உண்டென்று தெரிகிறது.

இப்பொழுது நாம் சாதாரணமாக உலகத்திலேயே உள்ள ஆண், பெண்களையும் எடுத்துக்கொண்டோமானாலும், திறமைசாலிகளான பெண்கள் சராசரியில் சமத்துவமாகவே தோன்றியிருப்பதாகக் கண்டு கொள்ளலாம். ஆண்களுக்குப் பிறகு எவ்வளவோ காலத்திற்குப் பின்னால் பெண்கள் தங்கள் சுதந்திரங்களைப் பெற்றிருந்தாலும் இந்தக் குறுகிய காலத்திற்குள் நல்ல புகழ்பெற்ற ஆசிரியைகளும், நடிகர்களும், பிரசங்கிகளும், வர்த்தகம் முதலான துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களும், எண்ணிக்கையில் கூடுமான வரையில் வீதாச்சாரத்திற்குக் குறையா தென்பது திண்ணம், இந்தியாவின் பெண்கள் சுதந்திரமோ வெகுகாலமாகத் தடுக்கப்பட்டிருந்தும் அவர்களிலும் புகழ் பெற்றவர்களும், அறிவிலும், ஆற்றலிலும், ஆண்களோடு சமத்துவமாக வைத்துப் போற்றக்கூடிய இயல் புடையவர்கள் எத்தனையோ பேர் இந்த குறுகிய காலத்திற்குள் தோன்றி யிருக்கிறார்களென்பதையும் கண்டு கொள்ளலாம்.

இதனால் ஆண்களுக்கும், பெண்களுக்கும் உள்ள சமத்துவமானது ஒரே தன்மையிலென்பதாக தவறுதலாகக் கொள்ளக்கூடாது. அவர்கள் ஆண்களுக்குச் சமத்துவமான துணைவர்களே ஒழிய, அதாவது தன்மையில் வேறுபட்டாலும் ஒவ்வொருவருக்குமுள்ள திறமையில் அவரவர்கள் சமத்துவமென்று சொல்ல வேண்டியிருக்கிறதே ஒழிய ஆண்களைப் போன்ற நகல்கள் என்று கூறுவதல்ல. இருபாலார்களுக்கிடையே அவசியமான வித்தியாசங்கள் உண்டு. அவர்களுடைய மனோ பாவத்தில் தெளிவாக வித்தியாசப் படுகிறார்களென்பதாக புரொபசர் எட்வர்ட்டி தான்டைட் என்ற மனோ தத்துவ சாஸ்திரி கூறுகிறார். பெண்களானவர்கள் பாஷா வித்வத்திலும், சடுதியான ஞாபக சக்தியிலும், கிரகிக்கும் தன்மையை யுடையவர்களென்றும், ஆண்களோ சரித்திர ஆராய்ச்சியிலும், உள் உணர்ச்சியிலும், திரேக பலத்திலும், ரசாயன சாஸ்திரங்களிலும் பெருமையாய் இருப்பதோடு நுணுக்கமான வேலைகளிலும் திறமைசாலிகள் என்றும் கூறுகிறார். ஒவ்வொரு பாலாருக்கும் இம்மாதிரியான, இயல்பான குணா குணங்கள் தனித்தனியாக இருக்கிறதென்பதை உணராமல் ஆண்களுக்குள்ள அறிவுத்திறமையில் பெண்கள் குறைவானவர்கள் என்ற முடிவுக்கு வருவதானது ஒரு பெரிய தவறு; ஒரு பிரபல விஞ்ஞான சாஸ்திரியானவர் விஞ்ஞான ஆராய்ச்சியைப் பற்றி வியாசம் தயாரிக்கும்போதெல்லாம் அடிக்கடி தன் பக்கத்திலுள்ள 13 வயதுடைய மகளை தனக்குச் சந்தேகமாய் இருக்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும் எழுத்துக் கூட்டுதலைக் கேட்டுக் கொண்டு எழுதுவாராம். இந்தப் பெண் சாதாரணமாகப் பள்ளி மாணவியாயிருந்தும் விஞ்ஞான கலை சம்பந்தமான வார்த்தைகளைக் கூட பிழையில்லாமலும் தயக்கமின்றியும் எழுத்துக் கூட்டிச் சொல்லும் வழக்கமுண்டாம். அப்படிச் சொல்லும் பொழு தெல்லாம் அந்தப் பெண் குழந்தையானது தனக்கு இருக்கும் ஞாபகசக்தி கூட தந்தையாருக்கு இல்லாதிருப்பதைப் பற்றி பெரிதும் வியப்புறுவாளாம்.

ஒவ்வொரு குடும்பத்திலும், வீட்டு ஆண்களுக்கு பாட்டனார் திதி எப்பொழுது, அமாவாசை எப்பொழுது, தான் ஊர் போய் வந்தது எப்பொழுது என்பதான வெகு சாதாரணமான விஷயங்களைக் கூட எந்தத் தேதியிலென்பது கூட ஆண் மக்களுக்கு ஞாபகம் வருவதில்லை. குடும்பத்தில் நடந்த எந்த சந்தர்ப்பங்களைப் பற்றியும் சரியானபடி எந்த தேதியில் நடந்தது என்று சொல்லவும் முடியாது. தன்னுடைய பவுண்டன் பேனாவை எங்காவது வைத்து விட்டு வீடெல்லாம் தேடித் திரிவார்கள். ஆனால் வீட்டிலுள்ள பெண்களோ எதுவாயிருந்தாலும் மறக்காமல் ஞாபகத்தோடு சொல்வதும், எடுத்துக் கொடுப்பதும், ஞாபகமூட்டுவதும் வெகு சகஜமான தென்பது



RangaRakes tamilnavarasam.com

யாவருக்கும் தெரிந்த விஷயம். மேனாட்டிலோ தற்சமயம் பெரும்பாலான பெண்கள் தங்கள் பாஷா ஞானத்தின் திறமையை யாவருக்கும் திடுக்கிடும் படியான விதத்தில் பிரத்தியட்சத்தில் காட்டி வருகின்றார்கள். முற்காலத்தில் எப்படி இருந்தது என்பதை இப்பொழுதும் நாம் கவனிக்க விட்டு விட்டே பார்த்தாலும் 100க்கு 30 பேர்கள் வரையில் உலகத்தில் புகழ் பெற்ற பேராசியர்களாய் இருப்பவர்கள் பெண்களென்றே சொல்ல வேண்டும். இங்கிலாந்தில் நூல் வல்லார்களெல்லாம் பெண்மணிகளே. பிரான்சில் எத்தனையோ நூலாசிரியர்களும் நடிக நாடகத்தில் பேர்போனவர்களும், அரசியல் நிபுணர்களும் பெண்களாக இருந்திருக்கின்றனர். இத்தாலியி லிருந்தும், ஜர்மனியிலிருந்தும் எவ்வளவோ சங்கீத சாகித்யத்தில் பேர் போனவர்களெல்லாம் தோன்றியிருக்கின்றனர். அமெரிக்காவில் எவ்வளவோ சமூக சீர்திருத்தத்தில் புகழ் பெற்ற பெண்களைக் காணலாம். இன்னும் அநேக தொழில்களிலும் ஈடுபட்டு இருக்கின்றார்களெனினும் சமூக சீர்திருத்தத்தில் முனைந்து நிற்பவர்கள் பெண்கள் தான் அதிகமெனலாம். வர வர அமெரிக்கப் பெண்கள் அரசியல் விஷயத்திலும் புகுந்து யாவருடைய போற்றுதலையும் பெற்று வருகின்றனர். சமீப காலத்திற்கு முன் தான் விஞ்ஞான சாஸ்திர வழிகளிலும் தங்களுக்குத் திறமையுண்டென்று பெண்கள் அறியத் தொடங்கினார்கள். சென்ற ஜனக் கணிதத்திலிருந்து விஞ்ஞான ரசாயன சாஸ்திர ஆராய்ச்சியிலும் முனைந்து நிற்கும் பெண்கள் 10 வருடங்களுக் குள்ளாக இரட்டிப்பாக அதிகரித்திருக்கின்றார்களென்று தெரிகிறது. இப்பொழுது அமெரிக்காவிலோ 10 வருடங்களுக்கு முன் 400 பேர் இருந்த விடத்தில் இப்பொழுது 3000 பெண்கள் பிளான் வரைவதில் திறமைசாலிகளாகவும், பெண் கல்லூரித் தலைவிகளாகவும் பேராசிரியர்களில் 10000க்கு மேற்பட்டவர் களும், 2000 ஜட்சுகளும், லாயர்களில் சுமார் 5000 வரையிலும் பெண்கள் இருப்பதாகவும் தெரிகிறது. பாங்கு உத்தியோகத்தில் முக்கிய ஸ்தானங்கள் வகித்து வருபவர்கள் மாத்திரம் 4000க்கு மேற்பட்டவர்களென்று தெரிகிறது. பெண்கள் டாக்டர்களாகவும், நர்சுகளாகவும், பாதிரிமார்களாகவும் எத்தனையோ 1000 பேர்கள் இருப்பதாகவும் தெரிகிறது. இவற்றை யெல்லாம் கொண்டு நாம் என்ன முடிவிற்கு வர முடிகிறதென்றால் அவர்களுக்கு எந்த விஷயங் களிலும் ஆண்களைப் போன்ற திறமை உண்டென்றும் ஆனால் அவர்களுக்கு முன்னிருந்த சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு அவர்களுடைய திறமையைக் காட்ட ஒட்டாதபடி செய்ததே ஒழிய அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப் பட்டால் அவர்களுடைய போக்கில் நல்ல திறமையைக் காட்டக் கூடுமென்பதாகவே நாம் கருத வேண்டி இருக்கிறது.

ஒரு காலத்தில் ஆண்களுடைய மூளையை விட பெண்களுடைய மூளை அளவில் சிறியதாக இருந்திருப்பதால் புத்தியில் பெண்கள் குறைந்தவர்கள் என்று கருதப்பட்டது. ஆனால், உடற்கூறு சாஸ்திரிகளும் மனோதத்துவ சாஸ்திரிகளும் மூளையினுடைய அளவில் உள்ள வித்தியாசத்தைக் கொண்டு



புத்தியை நிர்ணயிக்க முடியாதென்றும், பெரிய மூளைகளை விட சிறிய மூளைகளிலே தான் அதிலும் பெண்களுடைய மூளைகளிலே அதிகமான ''பிரைன் செல்கள்'' இருப்பதாகவும், செல்களுடைய எண்ணிக்கைக்கு தகுந்த விதத்திலே தான் புத்தியின் அளவும் இருக்கிறதென்றும், ஆதலால் சாதாரணமாகப் பெண்களும், ஆண்களும் சமத்துவமான அறிவு பலம் உடையவர்களென்று முடிவு கட்டி இருக்கின்றனர். ஆனால், ஆண்கள் எப்பொழுதும் தங்கள் மனைவிக்கு ''மூளை இல்லை'' யென்று அடிக்கடி ஏன் சொல்லுகிறார்களென்று யோசித்துப் பார்க்குமிடத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் மனப்போக்கும், குணப்போக்கும், உணர்ச்சிப்போக்கும் வித்தியாசப்பட்டு இருப்பதினாலேயே யென்பதை கவனிக்க வேண்டியது. இவற்றை அளவிடுவதற்கு நிபுணர் களாலேயே பெரிதும் கஷ்டமாயிருக்கிறது. அவர்களுக்கு உணர்ச்சியும், உற்சாகமும் புத்திப் போக்கு, மதாபிமானம், இரக்கம், பொறுமை, கூச்சம், நாணம் முதலியவைகளான குணங்கள் அதிகமாயிருந்து வருகின்றன. ஆண்களோ, சுயேச்சையிலும், தீவிரத்திலும் உள் உணர்ச்சியிலும், கேலிகளிலும் அதிகமான போக்குடையவர்களாய் இருந்து வருகிறார்கள். இந்த அளவு கூட சராசரி என்று தான் கொள்ள வேண்டி இருக்கிறதே ஒழிய தனித்தனியாகவும் கூற முடியவில்லை. ஏனெனில் சில ஆண்கள் குழந்தை களிடத்தில் பெண்களைவிட அதிகமான ஆர்வத்தைக் காண்பிக்கின்றனர். சில பெண்கள் ஆண்களைப் போல திடமும், தீவிரமுள்ளவர்களாகவு மிருக்கிறார்கள். பெண்களானவர்கள் ஒரு ஆசாமியினுடைய தோற்றத்தைக் கொண்டே நிர்ணயிக்க முற்படுகிறார்கள். ஆனால் ஆண்கள் உண்மை நிகழ்ச்சிகளைக்கொண்டே தங்கள் அபிப்பிராயங்களை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆண்களானவர்கள் ஒருவர் செய்த காரியத்தைக் கொண்டே அவர்களை மதிக்கின்றார்களே ஒழிய அவர்களுடைய குணாகுணங்களைக் கொண்டோ, அந்தரங்க நடவடிக்கைகளைப் பற்றியோ கவலைப்படுவ தில்லை. மனித ஸ்பாவத்தை சம்பந்தப்பட்டு எந்த விஷயங்களையும் பெண்களுக்கு யூகித்து உணர்வதற்கான நுட்ப அறிவானது ஆண்களை விட அதிகமாகவே இருக்கிறது. இதற்கு உதாரணமாக, ஒரு ஆணானவன் எவ்வளவுதான் தன் மனைவியோடு பழகி இருந்தாலும் அவளுடைய குணா குணங்களை சரிவர அறிந்து கொள்வதற்கு சக்தியில்லாமலிருக்க, ஒரு மனைவி தான் பழகிய புருஷனின் குணா குணத்தை சிறு காலத்திற்குள் அவனைப் பற்றி அவனே உணர்ந்திருப்பதைவிட அதிகமாக உணர்ந்திருக்கிறாள்.

எவ்வளவு காரணங்கள் இதைப்போல் சொன்னாலும் ஆண்களுக்கு மாத்திரம் பழக்க வாசனையால் ஏற்பட்ட ஒரு அபிப்பிராயமானது திருந்துவதற்கு வெகு நாட்கள் பிடிக்கும்போல் தோன்றுகிறது. இருந்தாலும் இதற்கு முக்கியமான காரணம் குடும்பத்தில் சச்சரவு ஏற்படாமல் சமாதானம் நிலவ வேண்டுமென்று பெண்கள் நினைத்துத் தங்கள் ஆண்மக்களுக்கு அடிக்கடி எந்த விஷயத்திலும் விட்டுக் கொடுத்து விடுவதினாலேயே



RangaRakes tamilnavarasam.com

பெண்களைப்பற்றி சர்வ சாதாரணமாக சமத்துவமில்லாதவர்களென்று எண்ணம் தோன்றுவதற்கு இடமாயிருக்கிறது. மேலும், அவர்கள் சுதந்திரத்தோடு தங்களுடைய சுய சம்பாத்திய முயற்சியினால் வாழ்ந்து காட்ட வேண்டுவதும் அவசியமாயிருக்கிறது. பெண்கள் தங்கள் ஜீவனத்திற்கு ஆண்களை எப்பொழுதும் எதிர்பார்த்து நிற்பதானது அவர்களை ஆண்களுக்கு சமத்துவ மானவர்களாய்ச் செய்ய முடியாமலிருக்கிறது. பெண்கள் அறிவுத்திறமையில் சமத்துவமானவர்களாயினும் புத்திப் போக்கில் மாத்திரம் மாறுபட்டவர்களாய் இருக்கிறார்களாதலால் அவர்கள் இருவரும் சமத்துவமானவர்களென்பதோடு இவர்கள் இருவருடைய குணாகுணங்களும் ஒத்து நின்று ஒரு காரியம் நடத்துவதாலேயே வாழ்க்கையும் இன்பமும் ஏற்பட முடியுமென்பதையும் திண்ணமாய் உணர வேண்டும்.

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - ஜூன் 1936**



# கடவுள் செயல்

## ஏழைகள் துயரம்

**இடம்** - கோயில்.

**பாத்திரங்கள்** - புரோகிதர்கள், ஏழை மக்கள், சாது.

ஆண், பெண், குழந்தைகள் ஆகியவர்கள் ஒரு கடவுள் விக்கிரகத்தின் முன் நின்று முறையிடுகின்றார்கள்:-

ஓ கடவுளே! பஞ்சம்! பஞ்சம்!! இதைப் பார்த்துக் கொண்டு சகித்து மௌனம் சாதிக்கும் கடவுளே தங்களை வணங்குகிறோம். எங்களைக் காப்பாற்றும், காப்பாற்றும்.

சதாகாலமும், தங்களையே தொழுகிறோம். ஆனால் தாங்கள் சிறிதும் செவி சாய்ப்பதில்லை.

''அதுவும் எங்கள் நன்மைக்கே'' என்று நம்பும்படி கற்பிக்கப்பட்டிருக் கிறோம். அவ்வாறே நாங்களும் நம்புகிறோம். நாங்கள் எப்பொழுதும் நம்புகிறவர்கள். யார் எதைச் சொன்னாலும் நம்புகிறோம். அப்படியெல்லாம் நம்பியும் இன்னும் பட்டினி கிடக்கின்றோம்.

தயவு செய்து எங்களைக் காப்பாற்றும்! கடவுளே காப்பாற்றும்! நாங்கள் - ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள், மிதிக்கப்படுபவர்கள், உம்முடைய மக்களாலேயே புறக்கணிக்கப்பட்டவர்கள், உணவற்றவர்கள், ரத்தமற்றவர்கள்.

குப்பைமேடுகளிலும், அழுக்கு மூலைகளிலும், குடிசைகளிலும் ஆடுமாடுகளைப்போல் சதா 'துன்பம்' என்னும் கருவிலேயே வளர்ந்து வருபவர்கள். ஆதரவற்றவர்கள். ஏனைய ஜனங்களால் வெறுத்து ஒதுக்கித் தள்ளப்பட்ட, பசிப்பிணியால் வாடிவதங்கும் அனாதைகள். எங்களைக் காப்பாற்றும்! கடவுளே காப்பாற்றும்.

(அருவருப்பும், அலட்சியமும் நிறைந்த ஒரு சிரிப்பு விக்கிரகத்தின் பின் புறமிருந்து கேட்கிறது)

**மீண்டும் ஏழை மக்கள்:-** எங்கள் நெஞ்சுலர்ந்திருக்கிறது. எங்கள் குழந்தைகளின் உதடுகளெல்லாம் காய்ந்திருக்கின்றன. இன்னும் சில இறந்து கொண்டிருக்கின்றன.



RangaRakes tamilnavarasam.com

எங்களுடைய குடிசைகளில் தானியமே கிடையாது, ஆனால் ஒரு சிலருடைய களஞ்சியங்களில் தானியங்கள் நிறைந்திருக்கின்றன. அவர்கள் விலைக்கு வாங்கி சேமித்து வைத்திருக்கிறார்கள். எங்களால் விலைக்கு வாங்க முடியாது; விலைகள் உயர்ந்து விட்டன. அந்தோ கஷ்டம் நாங்கள் என் செய்வோம்? எங்கள் கையில் காசில்லை. இதோ தங்களுக்கு புஷ்பங்கள் கொண்டுவந்திருக்கிறோம்.

**மற்றொருவர்:-** நான் வெறுங்கையோடு தான் வந்திருக்கிறேன்.

**ஒரு பெண்:-** இதோ நான் தேங்காய் பழம் கொண்டு வந்திருக்கிறேன். என் கையிலிருந்த காப்பை விற்றுத் தேங்காய் பழம் வாங்கினேன்.

**மீண்டும் ஏழைகள்:-** சதா துன்பம்! ஆண்டவனே பேசக் கூடாதா? நாங்கள் - ஏழைகளாகிய நாங்கள் - ஆதரவற்ற நாங்கள்... பசியால் மடிகின்ற நாங்கள், சதா காலமும் ஏன் துன்பத்திலும், கஷ்டத்திலும் அழுந்தித் தவிக்க வேண்டும். தாங்கள் வாயைந்திறந்து பேசக்கூடாதா? நாங்கள் அருகதை யற்றவர்களாக்கும். எல்லாம் தங்கள் சித்தம்.

**மறுபடியும் ஏழைகள்:-** ஆண்டவனே! எங்கள் ஆண்டவனே! நாங்கள் எதையும் சகித்துக் கொள்வோம். ஆனால் ஓ கடவுளே! எங்கள் குழந்தைகள் பசிப்பிணியால் மடிகின்றன. கொடுமை! அந்தோ கொடுமை! என்றென்றும் துன்பம் - எங்காவது தீப்பற்றிக்கொண்டால் எங்கள் குடிசைகளே அதிவிரைவில் பற்றிக்கொள்ளுகின்றன. காலரா முதலிய தொத்து நோய்களால் எங்களில் அநேகர் ஈக்களைப் போல் மடிந்து விடுகின்றனர். மழைவந்தால் எங்கள் குடிசைகள் ஒழுகுகின்றன. எங்கள் குழந்தை குட்டிகளெல்லாம் வெள்ளத்தில் மிதக்கின்றன. ஆற்றில் வெள்ளம் வந்து விட்டால் எங்கள் குடிசைகளை யெல்லாம் கங்காதேவி கமளீகரம் செய்து விடுகிறாள். அன்பான ஆண்டவனே! தங்களைத் திருப்திப் படுத்துகிறோம். எங்களைக் காப்பாற்றும், காப்பாற்றும்.

(விக்கிரகத்தின் பின்புறம் தங்க நாணயங்கள் விழுகின்ற சப்தம் கேட்கின்றது.)

இன்னும் எவ்வளவு காலம் கஷ்டப்படுவது, நாங்கள் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியது எங்கள் 'தலைவிதி' யாக்கும். அறிவாளிகளோ எங்களைப் பார்த்து நாங்கள் கஷ்டப்படத்தான் வேண்டுமென்கிறார்கள். எங்கள் எஜமானர்களும் அவ்விதமே கூறுகிறார்கள். முன் ஜென்மத்தில் செய்த வினையை இப்போது அனுபவிக்கிறோ மென்கிறார்கள். அது எங்கள் கர்மவினை என்கிறார்கள். அதையே அடிக்கடி சொல்லி வற்புறுத்துகிறார்கள்.

ஆனால் நல்ல வீடுகளில் யாதொரு வேலையும் செய்யாமல் பணக்காரர்களாய் சௌகரியமாய் வசித்து வருபவர்கள் வண்டி வண்டியாய்த் தானியங்கள் வாங்கி சேமித்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் முன் ஜென்மத்தில் நல்ல காரியங்கள் செய்திருப்பார்களாம். அந்த விதம் சொல்லியே எங்களை நம்பச் செய்கிறார்கள். நாங்களும் நம்புகிறோம்.



இந்த ஜென்மத்தில் அவர்கள் எந்த நல்ல காரியமும் செய்வதைக்காணோம். ஏன் அநேக காரியங்கள் செய்கிறார்கள். அவை நல்ல காரியங்களா? அல்ல.

ஆனால் செல்வவான்கள் கெட்ட செய்கைகள் செய்வார்களா? என்கிறார்கள். அப்படியானால் அவர்களிடமுள்ள தானியத்தில் எங்களுக்கு கொஞ்சம், கொஞ்சம் பகிர்ந்து கொடுத்தால் அது நன்மையான காரியமாகாதா? கட்டாயம் செய்வார்கள், கடவுள் சம்மதமிருந்தால் எல்லாம் அவர் விருப்பப்படிதானே நடக்கும், வறியராகிய நமக்கு அவருடைய சித்தம் மிகவும் கொடுமையான - சகிக்க முடியாத் துன்பத்தோடு கூடிய உருக்கக் கூடிய கஷ்டத் தோற்றத்தோடு வருகிறது அவரது சோதனையெல்லாம் அவரது சித்தம். ஆனால் நம்மீது செலுத்தும் சித்தத்தின் தோற்றமென்ன? காலரா, பிளேக், நெருப்பு, வெள்ளம், பஞ்சம் முதலிய இந்த தோற்றத் தோடேயே நம்மை ஆசீர்வதிக்கிறார்.

இவை மட்டுமா? வரிப்பழு, அதிக வேலை, தூசி, உஷ்ணம், கல்லுடைத்தல், பாரமான சுமைகளை தூக்கல், வியர்வை, களைப்பு, அபராதம், எஜமானனின் கடுங்கோபம், வசவு, தண்டனை இது போன்றன.

ஆனால் சிலருக்கு வேறுவிதமாய் தோற்றமளிக்கிறார். நல்ல காற்று, சுவையான உணவு, பெரிய வீடுகள், பட்டு மெத்தைகள், பிரகாசமான விளக்குகள், அசையாத வாகனங்கள், ஆடல் பாடல்கள், சிரிப்பு, சந்தோஷம் இவை முதலியன.

எப்படி இருந்தாலும் அவருடைய சித்தத்தை ஏற்று நாம் அநுபவிக்க வேண்டியதுதான். அவ்விதமே நாம் போதிக்கப்பட்டு வருகிறோம். ஒரு சிலர் ஏனையோர்க்கு இதை போதிக்கிறார்கள். எல்லோரும் அந்த ஒரு சிலரது சித்தப்படி அடங்கி நடக்க வேண்டும். ஏனெனில் அந்த ஒரு சிலரது சித்தம் கடவுளது சித்தமாகும். கடவுளே காப்பாற்றும்! எங்களைக் காப்பாற்றும்!!

(அக்கோவிலின் மற்றொரு பக்கம் நடைபெறும் ஒரு செல்வந்தர் விவாகம் - அங்கு நடக்கும் நடன சத்தம், கைகள் கொட்டும் சத்தம் காதைத் தொளைக்கிறது.)

பசி... பசி... எப்படிச் சுடுகிறது? பிள்ளை பெற்றவளுக்குத் தெரியும் பிரசவ வேதனை என்பது போல பசியை அநுபவித்தவர்களுக்கே அதன் வேதனை தெரியும். ஒரு சிலருக்கு அது தெரியவே தெரியாது. ஏனை யோருக்கு அது தெரியும், அதிக காலமாகத் தெரியும். பசியென்ற நெருப்பு வயிற்றைச்சுடுகிறது.

**மறுபடியும் ஏழைகள்:-** ஓ ஆண்டவனே! இப்போது ஒரு கைப்பிடி தானியமே வேண்டும். அதற்காகவே தங்களை வணங்குகிறோம்.

எங்களது பெண்களின் கண்ணீர் தங்கள் மனதை கரைப்பதில்லையா? எங்களது குழந்தைகளின் சோர்ந்த கண்கள் தங்கள் கருணையை ஈர்ப்ப



RangaRakes tamilnavarasam.com

தில்லையா? ரத்தம் வற்றிய அவர்களது உடல் தங்கள் கண்ணோட்டத்தை அழைப்பதில்லையா? உழைத்து ஒடிந்து போன அவர்களது சரீரம் தங்களது பெருமையைக் குறைப்பதில்லையா?

லட்சக் கணக்கானவர்கள் தாங்கள் தங்கள் சுயமரியாதை இழந்து மிருகங்களாகிக் கொண்டிருக்க தங்கள் சுயமரியாதையை நிலைநாட்ட இயலுமா? கஷ்டங்களெல்லாம் புண்ணியமானவையென்று அந்த ஒரு சிலர் சொல்லுகிறார்கள், கையால் அவர் கொடுக்கிற கஷ்டங்களுக்காக நாம் அவருக்கு வந்தனம் செலுத்த வேண்டுமாம். இது என்ன நியாயம்?

(வழக்கம்போல் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு பிராமண புரோகிதர்கள் உள்ளே வருகிறார்கள்.)

அதோ அவர்கள் வருகிறார்கள்; மோட்ச வீட்டின் திறவுகோல் அவர்களிடமே இருக்கிறது. அவர்கள் மிகுந்த அறிவாளிகள்.

**ஏழை மக்கள்:-** காப்பாற்றுங்கள்! எங்களைக் காப்பாற்றுங்கள்!

**புரோகிதர்கள்:-** இதென்ன ஒப்பாரி வைக்கிறீர்கள். நீங்களெல்லாம் என்ன மிருகங்களா? நிம்மதியான இந்த இடத்தை அசுத்தம் செய்கிறீர்கள். (விக்கிரகத்தை சுட்டிக் காட்டி) அதோ பாருங்கள், என்ன மௌனமாய், சாந்தமே உருக்கொண்டு விளங்குகிறார் பகவான்.

**ஏழைகள்:-** ஆண்டவனின் கோபத்தை சாந்தப் படுத்தவே நாங்கள் வந்திருக்கிறோம். அவரது கோபத்தினால் எங்கும் பஞ்சம்.

**புரோகிதர்கள்:-** நீங்கள் ஏன் வெறுங்கையோடு வந்திருக்கிறீர்கள்?

**ஏழைகள்:-** நாங்கள் துன்பம் நிறைந்த மனதுடன் வந்திருக்கிறோம். கடவுள் காணிக்கை செலுத்துகிறவர்களின் குறைகளையே கேட்பவர், நாங்கள் எங்கள் உயிரையே காணிக்கையாக கொண்டுவந்திருக்கிறோம். துன்பம் என்னும் புஷ்பத்தையும் கொண்டு வந்திருக்கிறோம்.

**புரோகிதர்கள்:-** அவருக்கு இவை தேவை யில்லை. பலருடைய துன்பத்தை அவர் பொருட்படுத்துபவரல்ல. சிலருடைய சந்தோஷமே திருப்தியளிக்கக் கூடியது. போங்கள் வெளியே. எவ்வளவு தைரியத்தோடு நீங்கள் இப்படிப் பேசுகிறீர்கள். மரியாதையாகத் திரும்பி விடுங்கள்.

**ஒருவர்:-** நான் ஒரு தேங்காய் கொண்டுவந்திருக்கிறேன்.

**புரோகிதன்:-** அஃதென்ன அற்பம்.

**ஓர் வயோதிகன்:-** நான் ஒரு ஆடு கொண்டுவந்திருக்கிறேன். கூட்டத்திலுள்ளவர்கள் (கோபத்துடன்) அந்த ஆடு திருடியது, அவன் எஜமானனிடம் திருடியது.

**வயோதிகன்:-** இல்லை! இல்லை! நான் அதை விலைக்கு வாங்கினேன்.

**ஒருவன்:-** உனக்கு அவ்வளவு பணமேது.



**வயோதிகன்:-** அது கடவுளுக்குத் தெரியும். என் மகளை விற்று அந்தப் பணத்திற்கே ஆடு வாங்கினேன். ஆட்டைப் பலியிடுங்கள், என் மகளைப் பலியிடுவதற்கு சமமாகும்.

**புரோகிதன்:-** ஒரு ஆடு - அவன் மகள், இரண்டிற்கும் என்ன வித்தியாசம்?

(விக்கிரகத்தின் பின் புறமிருந்து சத்தம்.)

''எல்லா ஏழைகளும் ஆடுகளே''

**புரோகிதன்:-** ஆட்டைக் கொல்லுங்கள். (ஆட்டை கொல்லப் போகும் அதே சமயம் ஒரு சாது உள்ளே வருகிறார்.)

**ஜனங்கள்:-** யார் அது? ஓ கோ! அவர்தான் கடவுளைப் பற்றி பக்திரசம் ஒழுகப் பாடிப் புகழ்ந்து எழுதிய பக்தர். அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது.

**சாது:-** கடைசியாக பைத்தியகாரனானதற்கு சந்தோஷிக்கிறேன். நாம் எல்லோரும் ஏன் கஷ்டப்பட வேண்டும், முட்டாள்கள்.

**ஜனங்கள்:-** நாங்கள் எல்லோரும் கஷ்டப்பட்டுத்தான் தீரவேண்டு மென்று எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். தாங்களும் கூட முன்னம் சொல்லி யிருக்கிறீர்கள், எழுதியிருக்கிறீர்கள்.

**சாது:-** அப்படியா... நான் என்னுடைய பாட்டுகளைச் சுட்டுக்கொளுத்தி விட்டேன். பொய்யும் முட்டாள்தனமும் மோசமும் நிறைந்த முந்திய நாட்களைப் புதைத்து விட்டேன். என் வீட்டின் மேல் மாடியில் உட்கார்ந்து கொண்டு, பசியினால் வாடுகின்ற உலகத்தைப்பார்த்து அது 'கடவுள் சித்தம்', 'கர்ம வினை' என்று புலமை நிறைந்த பாட்டுகள் பாடுவதும், மற்றவர்கள் மிகவும் தாழ்ந்த நிலையிலும், நோயினால் வீடில்லாமலும், கந்தையோடும், பசியோடும் வாடி வதங்குவதைப் பற்றி யோசிப்பதும், ஒரு சிலரது சௌக்கியமான வாழ்க்கைக்கு நேர் விரோதமாயிருப்பதும், கடவுளது அறிய முடியாத திருவிளையாடல்களில் ஒன்றென எண்ணியதும் எல்லாம் மோசமும் பொய்யுமேயாகும்.

கடவுளைப்பற்றி நான் அவ்வளவு புகழ்ந்தெழுதியதற்குக் காரணம் சௌக்கியமான வீட்டில் வசித்து வந்தேன். காலந்தவறாது கவலையின்றி உணவருந்தினேன். புஷ்பங்களும், பறவைகளும் அழகானவையென்று நினைக்க சாவகாசமிருந்தமையால் அவைகள் அழகானவை என்று எண்ணினேன். கடவுள் என்றால் என்ன? கவலையற்ற சாப்பாடும், அதன் பின்னர் ஏற்படுகிற வேலையின்மையும் சேர்ந்து உண்டாகிற முடிவே.

நீங்கள் பல நாள் பட்டினி கிடந்தீர்களானால் கடவுள் காற்றாய்ப் பறக்கிறார். கடவுள் என்பது செல்வந்தர்களது பொழுது போக்கு என்பதும் ஏழைகளை நசிப்பிக்க சவுகரியமுமான போதை வஸ்து என்பதும் எனக்கு இப்போது தெரிய வந்தது. அவர்களுக்கு உணவில்லை, கடவுளில்லை.



RangaRakes tamilnavarasam.com

ஓய்வில்லை, கடவுளில்லை என்ற இந்த உண்மைகளை, வறியனாகி, அதிக துன்பங்களை அனுபவித்த பிறகே நான் அறிந்து கொண்டேன்.

**ஓர் வயோதிக மாது:-** நான் ஏழை, எப்போதும் ஏழை. ஆனால் கடவுளைப்பற்றி எண்ணம் உண்டாகிக் கொண்டேயிருக்கிறது. சாகின்ற நிலையிலுங்கூட அந்த எண்ணம் உண்டாயிற்றே.

**சாது:-** அது இயற்கைதான். ஒருசிலர் ஏனையோரை கடவுள் என்ற மதுவை உண்ணும் கெட்ட பழக்கத்தில் ஆழ்த்தி விட்டார்கள். இறக்கப் போகும் மனிதனைக்கூட குடிக்காமல் தடுக்க இயலாது. இந்தக் கொடிய பழக்கத்தை விட ஒரே ஒரு மருந்துதானுண்டு. அது தான் ஞானம் - உணவு, ஒவ்வொரு மனிதனின் உரிமை என்ற ஞானம். ஒவ்வொருவரும் அந்த உணவுக்காக மண்டியிட்டு வணங்குதலாகாது. ஆனால் சண்டை யிட்டுப் பெற வேண்டுமென்ற ஞானம்.

**ஜனங்கள்:-** பெரியோர்களெல்லாம் அதற்காக வணங்கி, விரதமிருந்து தவமிருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களே.

**சாது:-** தெய்வ வணக்கம்.........மது.........ஆம் அதிக நாளாய் நாம் அந்த மயக்கத்தில் இருந்து விட்டோம். சகோதரர்களே! சகோதரிகளே! உண்மையாய்ச் சொல்லுங்கள். **நீங்கள் வாழ்நாளெல்லாம் தெய்வ வணக்கம் செய்கிறீர்களே கடவுள் எப்போதாவது செவிசாய்த்து உங்கள் முறையீட்டைக் கேட்டதுண்டா?** செல்வந்தர்கள் அதிகமாக கோவிலுக்குப் போவதையும் தெய்வத்தை வணங்குவதையும் பார்த்திருக்கிறீர்களா? அப்படிப் போனாலும் சகல ஆடம்பரங்களோடும் தங்களை ஏனையோர் நன்கு மதிக்க வேண்டும், கௌரவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடேயே போகிறார்கள் என்பதும் தாங்களறியீரா?

**புரோகிதர்கள்:-** அவனை (அந்த சாதுவை)ப் பிடித்து வெளியே தள்ளுங்கள். பைத்தியக்காரனைப் போல உளறுகிறான் அவன்.

**சாது:-** நாங்கள் பசியாய் இருக்கிறோம் உணவு வேண்டும். இந்தக் கல்லை (விக்ரகத்தை சுட்டிக் காட்டி) கேட்கிறோம். உம்மிடம் எங்களுக்குப் பேச்சில்லை.

**புரோகிதர்கள்:-** உன்னுடைய முட்டாள்தனத்தை யெல்லாம் அவிழ்த்து விடாதே, அதிகப்பிரசங்க மடையா, மரியாதையாகப் போய் விடு, இல்லாவிடில் போலீஸ்காரரைக் கூப்பிடுவோம். நீ கடவுளையும் எங்களையும் அவதூறாய்ப் பேசுகிறாய்.

**ஜனங்கள்:-** அந்தோ! அநியாயம், அவரைப் பிடித்துக் கைதியாக்கி அடைத்து விடுவார்களே.

**சாது:-** அறியாமையிலும், மூட நம்பிக்கையிலும் உழலும் உங்கள் சிறையைவிட வேறு சிறை இருக்க முடியுமா? புரோகிதர்களே! நீங்களும் உங்கள் கடவுளும் பேடிகள். சக்தியற்றவர்கள். உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. போலீஸ் உதவி கொண்டு உங்களையும் உங்கள் கடவுளையும் காப்பாற்றிக் கொள்ளப் பார்க்கிறீர்கள்.



**சாது:-** பசியால் வாடும் ஜனங்களே! புரோகிதர்கள் பரம்பரை ஜாலவித்தைக்காரர்கள். உங்களுடைய அறியாமையையும், மூட நம்பிக்கையையுமே கருவியாகக் கொண்டு அவர்கள் உங்களிடம் பணம் பறித்து உண்டு கொழுத்து வருகிறார்கள். இந்த ஜன்மத்தில் நன்மை செய்தால் அடுத்த ஜன்மத்தில் பலன் அநுபவிக்கலாம் என்கிறார்கள். முன் இறந்தவர்கள் யாராவது வந்து நம்மிடம் அதைப் பற்றிச் சொல்லியிருக் கிறார்களா? அல்லது நாமாவது அறிய முடிகிறதா? கிடையவே கிடையாது. இன்று கஷ்டப்படுகிற நமக்கு இன்றே பரிகாரம் கிடைக்க வேண்டும். இல்லையேல் அது மோசமும், முட்டாள் நம்பிக்கையுமே யாகும். அதை நீங்கள் ஏன் நம்பவேண்டும்?

**புரோகிதர்:-** நாங்கள் உன்னை சபிக்கிறோம்.

**சாது:-** புரோகிதர்கள் ஆசிர்வதிக்க அறியார்களே!

**புரோகிதர்:-** நீ அதிகம் பேசினால் கடவுள் உன்னைக் கொல்வார்.

**சாது:-** உமது கடவுளை நான் கொல்லுகிறேன் பார்.

(சாது ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து விக்கிரகத்தை உதைத்துத்தள்ள அதன் கீழ் தங்க நாணயங்கள் குவிந்து கிடக்கின்றன.)

**புரோகிதர்கள்:-** நாம் மோசம் போனோம், நமது ரகசியமெல்லாம் வெளியாய் விட்டன. நமது பிழைப்பே போய்விட்டது.

**சாது:-** (ஜனங்களைப்பார்த்து) இப்பொழுது உங்கள் கண்களினால் உண்மையைக் கண்டுணருங்கள். அதோ தங்க நாணயங்களைப் பாருங்கள்.

**ஜனங்கள்:-** ஆ என்ன ஆச்சரியம்! தங்க நாணயங்கள்!

**சாது:-** ஒவ்வொரு நாணயமும், நம்முடைய ரத்தத்தின் துளிகளாகும்.

நீங்கள் வணங்கிய விக்ரகத்தின் கீழ் என்ன இருக்கிறது? உண்மையை இப்போது அறிந்தீர்களா? (மனமுடைந்த சிரிப்புடன் எல்லோரும் வெளியே வருகின்றனர்.)

**பகுத்தறிவு (மா.இ.) - உரையாடல் - ஜுன் 1936**



RangaRakes tamilnavarasam.com

# அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அனுகூலித்தவர் | - | உதவி செய்தவர் |
| அசூயை | - | பொறாமை, அவதூறு |
| அதட்டியினால் | - | தாக்கத்தால், அழுத்தத்தால் |
| அதப்பிராயம் | - | மதிப்பு |
| அபுரூபன் | - | மிக அழகுள்ளவன் |
| அனந்தம் | - | அளவில்லாதது |
| அஷ்டகோணல் | - | எட்டுவிதமாய் திருகிக்கொண்டு |
| ஆசிக்கிறேன் | - | விரும்புகிறேன் |
| ஆவாகனம் | - | அக்கினிக்குப் பலி கொடுத்தல் (தன்வயப்படுத்திக்கொள்ளுதல்) |
| இதோபதேசம் | - | நல்லறிவுரை |
| இரண்டருத்தம் | - | இருபொருள்படும்படி |
| உப அத்யக்ஷரர் | - | துணைவேந்தர் |
| எதாஸ்திதித்துவம் | - | உள்ள நிலையே தொடர்வது, பழமையைப் பாதுகாப்பது |
| ஏகாங்கி | - | தனித்திருப்பவன் |
| கணங்களுக்கு | - | கூட்டத்திற்கு |
| கண்டனை | - | கண்டிக்கை |
| கண்யம் செய்கின்றனவா? | - | மதிக்கின்றனவா? |
| குச்சுக்காரத்தனம் | - | விபசாரத்தனம் |
| சங்கல்பம் | - | கொள்கை |
| சங்கேத இடம் | - | குறிப்பிட்ட இடம் |
| சங்கை | - | எண்ணம் |
| சம்பாஷித்தல் | - | உரையாடுதல் |
| சாய்க்கால் | - | செல்வாக்கு |
| சிடுக்கை | - | சிட்டிகை (பெருவிரலும் ஆள்காட்டி விரலும் சேர்ந்து எடுக்கும் அளவு) |
| சொக்கட்டானாட்டம் | - | சூதாட்டம் (பந்தயம் கட்டி விளையாடும் தாய விளையாட்டு) |
| சௌகார் | - | வடநாட்டு முதலாளி |
| தத்தம் | - | நீர்வார்த்துக் கொடுக்கும் கொடை |
| தியங்கவிட்டு | - | கலங்கவிட்டு |
| தின்மை | - | தீமை |
| நாசகாலன் | - | பொருளை அழிப்பவன், கொடியோன் |
| நாயாடிகள் | - | திருவிதாங்கூரில் உள்ள காட்டுச் சாதியார் |
| நிமித்தியம் | - | சகுனம் |
| நியாய ரஹிதமாக | - | நியாய விரோதமாக |
| நிர்தாக்ஷண்யம் | - | இரக்கமின்மை |
| பத்துவளி | - | ஊதியத்துக்கும் மேலதிகமாக வாங்கியுள்ள தொகை |
| பந்தகம் | - | அடமானம், சார்ந்திருத்தல், முடிச்சு |
| பச்சகானாக்கள் | - | கூத்தாட்டுச் சிறார்கள், சிறுபிள்ளைத் தனமானவர்கள் |
| பரத்தில் | - | மேல் உலகில் |
| பரதவிக்க | - | வருந்த |
| பரியந்தம் | - | எல்லை |
| பாரியாள் | - | மனைவி |
| பிரதான்யம் | - | முக்கியம், முதன்மை இடம் |
| பிரலாபம் | - | புலம்பல் |
| வர்மம் | - | உட்பகை |

# குடி அரசு

# 1936 –2

## பெரியாரின் எழுத்தும் பேச்சும்

## தொகுதி 23

பெரியார் திராவிடர் கழகம்
29 இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் – திருவான்மியூர்
சென்னை – 600 041

## பார்ப்பனர் யோக்கியதை

ஒடுக்கப்பட்ட மக்களின் சிவில் உரிமை சம்பந்தமான சில குறைபாடுகளை நீக்கும் பொருட்டு தோழர் எம்.ஸி. ராஜா இந்தியச் சட்ட சபையில் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார். அது மிகவும் மிதமான ஒரு மசோதா. பொதுஜன அபிப்பிராயம் அறியும் பொருட்டு அது பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. ஜில்லா கலைக்டர்களும் தமது ஜில்லாக்களிலுள்ள பொது ஸ்தாபனங்களுக்கு அந்த மசோதாவை அனுப்பி அபிப்பிராயமறிய முயன்று வருகிறார்கள். திருநெல்வேலி, மதுரை வக்கீல் சங்கத்தார் அந்த மசோதாவை ஆதரிக்க முடியாதென்று அபிப்பிராயம் கூறிவிட்டதாகத் தெரிகிறது. தென்னாட்டு வக்கீல் சங்கங்களில் பார்ப்பனர் ஆதிக்கம் பெற்றிருப்பது உலகப்பிரசித்தமான விஷயம். தேவகோட்டை வக்கீல் சங்கத்தில் பார்ப்பன வக்கீல்களுக்கென தனியாகத் தண்ணீர்ப் பானை வைத்திருப்பதையும், அந்தப் பானையில் பார்ப்பனரல்லாத வக்கீல்கள் தண்ணீர் எடுக்கக் கூடாதென்று தடையேற்படுத்தியிருப்பதையும் நாம் ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம். தேசீயக் கொடியேற்றுவதைப் பற்றியோ பள்ளிக்கூடங்களில் ஹிந்தி போதனை செய்வதைப்பற்றியோ தீர்மானங்கள் வந்திருந்தால் இந்தப் பார்ப்பன வக்கீல்கள் ஆதரித்துத் தமது ‘‘தேசபக்தியை’’க் காட்டிக்கொள்ள தயங்க மாட்டார்கள்.

ஒடுக்கப்பட்டவர்கள் குறைகளை நீக்கும் மசோதாவை ஆதரிப்பது தான் இந்தப்பார்ப்பன தேச பக்தர்களுக்கு முடியாத காரியமாயிருக்கிறது. இப்பேர்ப்பட்ட பார்ப்பனர்களின் ஆதிக்கம் மிகுந்த காங்கிரசையும் ஒடுக்கப்பட்டவர்களில் ஒரு சாரார் நம்பிக்கொண்டு இருக்கிறார்களே! ‘‘தினமணி’’ ‘‘சுதேசமித்திரன்’’ போன்ற தேசீயப் பத்திரிகைகளும் இந்த வக்கீல் பார்ப்பனர் செயலைக் கண்டிக்க முன்வரக் காணோமே.

**குடி அரசு - தலையங்கம் -** 05.07.1936

RangaRakes
tamilnavarasam.com

# ''தினமணி''க்கு சவால்

தென்னாட்டுப் பத்திரிகை யுலகத்தில் மழலைப்பருவங் கடவாதிருக்கும் ''தினமணி'' மூத்த பத்திரிகைகளைக் கிழடு தட்டிய பத்திரிகைகள் என்றும் விளக்கெண்ணெய், வெண்டைக்காய்ப் பத்திரிகைகள் என்றும் கேலிசெய்து தன்னைத்தானே விளம்பரப்படுத்தி வருவதைத் தென்னாட்டார் அறிந்திருக்கக் கூடும். மழலை உளறலை லக்ஷியம் செய்யலாமா எனப் பொறுப்புடையவர்கள் அடங்கியிருப்பதினால் ''தினமணி''யின் திமிர் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிறது. தமிழ்ப் பத்திரிகை உலகத்துக்குத் தானே சக்கரவர்த்தி என பாவித்துக்கொண்டு தலைகால் தெரியாமல் குதிக்கிறது. வசைபுராணம் பாடுவதில் தோழர் சத்தியமூர்த்தியையும் வென்றுவிடப் போட்டி போடுகிறது. ஜஸ்டிஸ் கட்சிக்குக் கருமம்செய்யத் தனக்கு இருந்து வரும் ஆவலையும் அடிக்கடி காட்டிக்கொள்கிறது. ஜுலை 2-ந் தேதி வெளிவந்த ''தினமணி''யில் ''நாயக்கரின் பாவனை'' என்ற தலைப்புடன் எழுதப்பட்டிருக்கும் உபதலையங்கத்தில் ''தினமணி''யின் ஆணவமும் அற்பத்தனமும் அறியாமையும் ஒருங்கே மிளிர்கின்றன. ஜுலை 1-ந் தேதி மாலை சென்னைப் பச்சையப்பன் கலாசாலை மைதானத்தில் தோழர் ஈ.வெ.ராமசாமி நிகழ்த்திய பிரசங்கத்தைக் கண்டித்து உப தலையங்கம் எழுதப் புறப்பட்ட ''தினமணி'' தோழர் நாயக்கரின் பிரசங்கத்தைப் பிரசுரம் செய்யவே இல்லை. அவரது பிரசங்கத்தைப் பிரசுரம் செய்து கண்டனத்தையும் வெளியிட்டிருந்தால் இரண்டையும் சீர்தூக்கி முடிவு காண பொது ஜனங்களுக்கு வசதி வாய்த்திருக்கும். அவ்வாறு செய்யவேண்டியதே பொறுப்பும் கண்ணியமும் வாய்ந்த பத்திரிகைகளின் கடமை. அவ்வாறு செய்யாமல் நாக்கில் நரம்பில்லை யென்றும், பைத்தியக்காரப் பேச்சென்றும் வசை புராணம் பாடுவது ''தினமணி''யின் சின்னப்புத்தியையே காட்டுகிறது. ''தினமணி'' பத்திரிகாசிரிய மண்டலத்தார் அநாமதேயப் பேர்வழிகளாயிருந்த காலத்திலேயே, தோழர் ஈ.வெ.ராமசாமி, ''இந்தியாவில் காங்கிரசுக்கு நிபந்தனை விதிக்கக்கூடிய சக்தி வாய்ந்தவர் ஒருவர் உண்டென்றால் அவரே ''மகாத்மாகாந்தி'' என ''தினமணி'' ஒப்புக்கொள்ளும் பெரியாரால், நன்கு மதிக்கப்பட்டவர் என்பதை ''தினமணி'' உணர்ந்திருந்தால் இவ்வளவு அற்பத்தனமாக எழுதியிருக்காது. கூட்டத்தில் யார் என்னென்ன கேள்வி கேட்டாலும் பதிலளிக்க வேண்டியதே பொதுக்கூட்டத்தில் பேச முன்வருவோரின் நீங்காக்கடமை. பொதுக்கூட்டங்களில் நாலு வார்த்தை





பேசியறியாத ''தினமணி'' ஆசிரியருக்கு இந்தச் சாதாரண விஷயம் தெரியாதிருந்தால் அதற்கு ஏனையோர் ஜவாப்தாரிகளல்ல. ''காங்கிரஸ்காரர் கேட்கும் கேள்விகளுக்குத்தான் பதிலளிப்பேன்; ஏனையோர் கேள்விகளுக்கு பதிலளிக்க மாட்டேன்'' எனக் கூறுவதும் மேடை மீது வந்து கேள்வி கேட்டால் பதிலளிக்கலாமென்று கூறி கேள்வி கேட்பவர்களை மேடைக்கு அழைத்து அடிப்பதும் தோழர் சத்தியமூர்த்தி போன்ற காங்கிரஸ் வீரர்களின் வழக்கம். பச்சையப்பன் மைதானக் கூட்டத்தில் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலாக தோழர் ஈ.வெ.ராமசாமி தமது கருத்தைத் தெரிவித்தார். இதனால் அவர் காங்கிரசில் சேரத் தவித்துக் கொண்டிருப்பதாகவோ, அல்லது காங்கிரசில் சேரத்தான் வேண்டுமென்று காங்கிரஸ் தலைவர்கள் வலியவந்து அழைக்க வேண்டுமென்று விரும்புவதாகவோ ஏற்படவே செய்யாது.

காங்கிரசிலே, ''தினமணி'' ஆசிரியர் தவங்கிடந்தாலும் பெற முடியாத ஒரு கண்ணியமான ஸ்தானம் வகித்திருந்த - காங்கிரஸ் சர்வாதிகாரியான காந்தியாரின் நன்மதிப்புக்குப் பாத்திரராயிருந்த - தோழர் ஈ.வெ.ராமசாமி, தாம் காங்கிரசிலிருந்து பிரிவதற்குள்ள காரணங்களை அப்பொழுதே விளக்கி கூறியிருக்கிறார். தம்மைப் போன்றவர்கள் சம்மந்தம் வைத்துக்கொள்ள முடியாதவாறு தற்கால காங்கிரஸ் அவ்வளவு சீரழிந்து கிடப்பதையும் அவர் பலமுறை விரித்துக்கூறியிருக்கிறார். அவரது குற்றச்சாட்டுகளுக்கு எந்தக் காங்கிரஸ் வாதியும் இதுவரை விடையளிக்க முன்வரவில்லை. குற்றச்சாட்டு களுக்குத் தக்க ஆதாரங்களுடன் விடையளிக்க முன்வராமல், சம்மந்தமற்ற விஷயங்களைக் கிளப்பி வசை புராணம் பாடுவதே அற்பமனம் படைத்த காங்கிரஸ் கூலிகளின் வாடிக்கையாக இருந்து வருகிறது. அந்த முறையை ''தினமணி''யும் பின்பற்றத் தொடங்கியிருப்பதைப்பற்றி நாம் ஆச்சரியப்பட வில்லை. காங்கிரஸ் புரட்டர்கள் புகழ்பாடி உயிர்வாழ வேண்டியிருக்கும் ஒரு பத்திரிகையிடம் யோக்கியப் பொறுப்பையோ, நேர்மையையோ எதிர்பார்க்க முடியாது. ''தினமணி'' யின் ஒன்றரைப் பத்தி கொண்ட உபதலையங்கத்தில் சிதறிக்கிடக்கும் வசைமொழிகளுக்கெல்லாம் விடையளித்து நமது பத்திரிகைப் பத்தியையும் அசுத்தப்படுத்த நாம் விரும்பவில்லை. அறியாமையினால் ''தினமணி'' கூறும் ஒரு மடத்தனமான விஷயத்தைப்பற்றி மட்டும் சில வார்த்தைகள் கூற விரும்புகிறோம். தோழர் ஈ.வெ.ரா. திட்டத்தை ஜஸ்டிஸ் கட்சியால் ஒப்புக் கொண்ட போதே தோழர் ராஜகோபாலாச்சாரியார் ''அது கராச்சித் திட்டத்தின் காபி'' எனக் குற்றம் சாட்டினார். அதற்கு ''யார் திட்டத்தை யார் திருடியது'' என மகுடமிட்டு ''குடி அரசு'' 1935 டிசம்பர் 1-ந் தேதி விடையளித்து விட்டது. தினசரிப் பத்திரிகை ஆசிரியர்களாயிருப்பவர்கள் முக்கியமான விஷயங்களைப்பற்றி மாகாண பத்திரிகைகளில் வெளிவரும் விஷயங்களை அறிந்திருக்க வேண்டும். சர்வஞானி ஆகி விட்டோம் என்ற அகம்பாவத்தினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ சகோதரப் பத்திரிகைகளின் அபிப்பிராயங்களை உணராமல் கன்னா பின்னா கத்துவது விவேகமுடைய பத்திரிகாசிரியர்களின் செயலல்ல.

RangaRakes tamilnavarasam.com

தோழர் ராஜகோபாலாச்சாரியாருக்கு அன்று ''குடி அரசு'' அளித்த விடையை 9 ஆம் பக்கத்தில் தருகிறோம். அதைப்படித்துப் பார்த்து விடையளிக்க ''தினமணி''க்கு ஆண்மை யுண்டா? விடையளிக்க ''தினமணி'' முன்வந்தால் திருடியது யார்? ஈ.வெ.ராவா காங்கிரசா என்பது ''தினமணி''யின் மரமண்டையிலும்கூட ஒருகால் நுழையக்கூடும். காங்கிரசில் சேர தோழர் ஈ.வெ.ரா. வகுத்த நிபந்தனைகளின் மர்மமும் விளங்கக்கூடும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 05.07.1936**



20 குடி அரசு

# பகுத்தறிவு

இரண்டாம் ஆண்டு பிறந்து விட்டது.

வருட சந்தா ரூ. 1—0—0

உடனே சந்தாதாரராகச் சேருங்கள்.

மானேஜர், "பகுத்தறிவு" ஆபிஸ், ஈரோடு.

இராமாயண ஆராய்ச்சி 4-காண்டங்கள் சேர்த்து ஒன்றாய் தருவிப்பவர்களுக்கு விலை ரூ. 1—0—0

"கர்ப்ப ஆட்சி" என்னும் புத்தகம் வெளிவந்து விட்டது!!!

விலை அணா 0-6-0 தபாற் செலவு அணா 0-2-0.

புராணங்கள்.

புது ராஷ்யா.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.



RangaRakes
tamilnavarasam.com

# பாண்டியன் – ராமசாமி பிரசாரக்கமிட்டி

## சேலத்தில் கூட்டம்

## பிரசாரக்கமிட்டி நியமனம்

''சென்றமுறை நாங்கள் இங்கு வந்தபோது பிரசாரத்துக்குப் பொருளுதவி செய்வதாக தலைவர்கள் வாக்குறுதியளித்தார்கள். எங்கள் முயற்சி வெற்றிபெறுமென்று நம்புகிறேன். சுற்று பிரயாண காலத்தில் நான் கண்ணுற்ற முக்கியமான காட்சி என்னவெனில் காங்கிரஸ் கூட்டங்களுக்குச் செல்வதைக் காட்டிலும் ஜஸ்டிஸ் கட்சி கூட்டங்களுக்கு ஜனங்கள் ஏராளமாக வருவதாகும். இதனால் பொதுஜன ஆதரவு நமக்கு அதிகமாக இருந்து வருவது புலனாகிறது. பிரசாரமில்லாததினாலேயே நமது கட்சி அயர்ச்சி யுற்றிருக்கிறது. தீவிரமாக பிரசாரம் செய்தால் ஜனங்கள் நமது கட்சி விஷயங்களில் சிந்தனை செலுத்துவது நிச்சயம். நமது தோல்விக்கு நமது பலவீனமே காரணம்; எதிரிகளின் வலிமையல்ல. எனவே நமது குறைபாடு களை யுணர்ந்து ஊக்கமாக உழைக்க எல்லோரும் முன்வரவேண்டும்''.

*குறிப்பு: 27.06.1936 ஆம் நாள் சேலம் போல்க்ஸ் பங்களாவில் நடைபெற்ற தமிழ்நாடு பார்ப்பனரல்லாதார் பிரசார மையக் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் குழு உறுப்பினர் தோழர் ஈ.வெ.ரா. பேசியது.*

**குடி அரசு - வேண்டுகோள் - 12.07.1936**



# பார்ப்பனரல்லாதார் இயக்கம்

## சுற்றுப்பிரயாணத்தில் செய்த உபன்யாசங்களின் சாரம்

தலைவர் அவர்களே! தோழர்களே!!

நாங்கள் ஒரு மாத காலத்துக்கு மேலாகவே தமிழ்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறோம். சென்னை நகரத்தைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் எங்களுக்கு போதிய ஆதரவும் ஒத்துழைப்பும் தந்து எங்களை உற்சாகப்படுத்தி வருகிறார்கள்.

### சென்னை

சென்னையில் தான் இயக்கப் பிரமுகர்கள் என்பவர்கள் எங்களை சிறிதும் சட்டை செய்யவில்லை. அவர்களுக்கு பயம் என்றே கருதுகிறோம். ஏனெனில் பிரசாரம் ஏற்பட்டால் பிறகு தங்களுக்கு மரியாதை இல்லாமல் போகுமே என்கின்ற பயமேயாகும். காலமெல்லாம் பட்டம், பதவி, பணம் பெற்று சுகமாக தூங்கிக் கொண்டு இருந்துவிட்டு சமயம் வரும்போது எப்படியோ தந்திரம் செய்து பார்ப்பனரல்லாத மக்களை ஏமாற்றி அது செய்கிறேன் இது செய்கிறேன் என்று வாயளந்து பதவிபெறும் வழக்கம் பட்டணத்தில் தான் இருந்து வருகிறது. ஆனால் இனி அது பலிக்காது என்று கருதுகிறேன்.

ஜனங்களிடத்தில் வந்து தாங்கள் செய்ததை சொல்லி எதிரிகளின் விஷமங் களை மறுத்துக் கூறினாலல்லது இனி தேர்தல்களில் வெற்றிபெற முடியாது.

மதராஸ் எந்த இயக்கத்திலுமே மோசமான தன்மையுடையது.

நான் காங்கிரசிலிருக்கும் போது கூட எங்கள் முதல்வேலை மாகாண காங்கிரஸ் ஸ்தாபனத்தை சென்னையை விட்டுக் கடத்திக்கொண்டு போனதோடு அவர்கள் தலைமைப் பதவிகளையும் பறித்துக் கொண்டதே யாகும். கிட்டத்தட்ட இரண்டு வருஷகாலம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஸ்தாபனம் என் வீட்டின் தாழ்வாரத்திலேயே இருந்தது. அந்தக் காலம்தான் தமிழ்நாடு காங்கிரஸ் வேலை இந்தியாவுக்கே வழிகாட்டியாய் இருந்தது.

### ஸ்தாபனத்தை சென்னையில் இருந்து மாற்ற வேண்டும்

அதுபோல் தென்னிந்திய நல உரிமை ஸ்தாபனம் இச்சென்னையை விட்டு வெளியூருக்கு கொண்டு போகப் பட்டால்தான் அது ஏதாவது உருப்படி ஆகமுடியும். நாங்கள் சென்னைக்கு வந்து இங்குள்ள நிலையைப்



RangaRakes tamilnavarasam.com

பார்த்தவரை ஒருவருக்கொருவர் குழி தோண்டும் வேலையில் ஈடுபட்டிருப் பதைத்தான் பார்க்க முடிந்தது. காரியம் செய்வதற்கு யாரையும் காணோம். சென்னை பிரமுகர்களுக்குப் பொது ஜனங்களிடம் நம்பிக்கை கிடையாது.

ஆனபோதிலும் நாங்கள் இவர்களுக்கு ஆக எதையும் எதிர்பார்க்க வில்லை. இயக்கத்தை இந்த மாகாணத்து பார்ப்பனரல்லாதார் மக்கள் எல்லோருக்கும் பொதுவானது என்று கருதுகிறோம். யாரோ சிலர் மாத்திரம் தங்கள் சொந்தத்துக்கு சுயநலம் அனுபவித்துக் கொள்ளுவதைப்பற்றி எங்களுக்கு கவலையில்லை. யாரோ சிலர் கட்சியின் நன்மையில் கவலை யில்லாமல் நன்றி விஸ்வாசமற்றவர்களாய் நடந்து கொள்வதில் ஒன்றும் முழுகிப் போய்விடாது.

### காங்கிரசை ஆதரித்தவர்கள் வருந்துகிறார்கள்

வரப்போகிற தேர்தலில் மதராஸ்காரர்களால் எவ்வளவு முட்டுக் கட்டை ஏற்பட்டாலும் நாம் வெற்றி பெறப்போகிறோம் என்பதில் எங்களுக்கு தைரியம் இருக்கிறது. பொது ஜனங்கள் உண்மை உணரக்கூடிய காலம் சமீபத்தில் வந்துவிட்டது. இப்போதே அவர்கள் காங்கிரசை இரண்டொரு தேர்தலில் ஆதரித்த குற்றத்தை உணர்ந்து விசனப்படுவதைப் பார்த்து வருகிறோம். இந்தச் சென்னையிலும் கூட சில நபர்கள் தோல்வி அடைய நேரிட்டாலும் அவசியம் பார்ப்பனரல்லாதாருக்கு தான் பெரும் வெற்றி ஏற்படும்.

இந்திய சட்டசபை தேர்தல்களிலும் ஜில்லா போர்டு தேர்தல்களிலும் தோல்வி ஏற்பட்டது என்று சொன்னாலும் அது நம் பிரசாரமில்லாக் குறையாலும், நம்மவர்களே ஒருவருக்கொருவர் துரோகம் செய்த தன்மையாலும், சிலர் சமயோசிதவாதிகளாய் விட்ட காரணத்தாலுமே தவிர பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் மீது ஏற்பட்ட குறைகளாலல்ல.

### பார்ப்பன ''வெற்றி''க்குக் காரணம்

அதுபோலவே காங்கிரசுக்கு வெற்றி ஏற்பட்டது என்று சொன்னாலும் பார்ப்பனர்களுடைய விடாமுயற்சியும், கட்டுப்பாடும், பத்திரிகை பிரசாரமும், சமூக அபிமானமும், துரோகம் செய்யாத குணமும், கூலிகளின் வேலையும் எல்லாம் சேர்ந்தே தவிர அவர்களது கொள்கைக்கு ஆக ஏற்பட்ட வெற்றி அல்ல என்பதே என் அபிப்பிராயம். இந்தக் காரணத்தால்தான் தலைவர்கள் இயக்க பிரமுகர்கள் என்பவர்களின் செய்கையில் ஏற்பட்ட தோல்விகளை மாற்றி வெற்றி பெறச் செய்யலாம் என்று முன் வந்திருக்கிறோம்.

### நம் கொள்கைகள்

நம்முடைய கொள்கைகள் மிக மேலானவை. மனித சமூகத்துக்கு இன்றியமையாதவை. வெறும் பொது நோக்கையே கொண்டவை.



அதனாலேயே இந்த இருபது வருஷ காலமாக அவை நிலைத்து இருப்பதுடன் நாளுக்கு நாள் பரவி வந்திருக்கிறது. நாம் எவ்வித ஆடம்பரமும் மக்கள் ஏமாறும்படியான போலிக்கிளர்ச்சிகளும் செய்யாமலேயே நம் இயக்கமும் கொள்கைகளும் வலிவு பெற்றுவருகின்றன.

### நிலை குலைந்த காங்கிரஸ்

ஆனால் காங்கிரஸ் ஆரம்பித்த காலம் முதல் சிறப்பாக ஒத்துழையாமை ஆரம்பித்த 1921-ம் வருஷம் முதல் வருஷத்துக்கு வருஷம் கொள்கை மாறுதல், ஒவ்வொன்றிலும் தோல்விகள், ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதங்கள், கொள்கைகளில் உள் கலகங்கள் முதலியவை நடந்த வண்ணமாகவே இருந்து வருகின்றன.

1921ஆூத்திய ஒத்துழையாமை திட்டங்களை சென்னைப் பார்ப்பனர்கள் அப்போது ஒப்புக்கொள்ளவே இல்லை. இதே தோழர்கள் சத்தியமூர்த்தியார் உள்பட இந்து, மித்திரன் பத்திரிகை உள்பட தோழர் சீனிவாசய்யங்கார் முதலிய பல பிரமுகர்கள் வரை எல்லோரும் அதை எதிர்த்து தொல்லை விளைவித்தே வந்தார்கள். அத்தொல்லைகள் பெற்ற குழந்தைதான் சுயராஜ்யக்கட்சி என்பதாகும். அதனால் காங்கிரஸ் ஒத்துழையாமைத் திட்டமும் நிர்மாணத்திட்டமும் பாழ்பட்டு நசுங்குண்டன. பிறகு காந்தியார் காங்கிரசிலிருந்து ஓய்வெடுத்தார்.

### சைமன் பஹிஷ்காரம்

ஒத்துழையாமையும் நிர்மாணத்திட்டமும் ஒழிந்தது என்று தெரிந்த உடன் மறுபடியும் சென்னை பார்ப்பனர்கள் முன்வந்து காந்தியாரை திரும்பவும் பயன்படுத்திக்கொண்டு சைமன் கமிஷனை பஹிஷ்கரிப்பது என்ற நாடகத்தை நடத்தினார்கள்.

மற்றொருபுறத்தில் நேரு முதலிய தலைவர்கள் ஆளுக்கொரு அரசியல் திட்டம் ஏற்படுத்தி காங்கிரசில் அரங்கேற்றி பார்லிமெண்டுக்கு சமர்ப்பித்தார்கள். அவைகள் குப்பைத் தொட்டிக்குப் போனவுடன் உப்பு சத்தியாக்கிரக நாடகத்தை நடத்தினார்கள். அது பொஸ்ஸென்று போனவுடன் இர்வின் காந்தி ஒப்பந்த நாடகத்தை நடத்தி கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று எழுதிக்கொடுத்துவிட்டு ஜெயிலில் இருந்து விடுதலை பெற்று வெளியானார்கள். அதன் பயனாய் காந்தியார் வட்டமேஜை மகாநாட்டுக்கு போய் காங்கிரசின் யோக்கியதையும் காந்தியாரின் யோக்கியதையும் இந்தியாவின் யோக்கியதையும் உலகமே அறிந்து சிரிக்கும்படியான நிலைமையை எய்தி மானங்கெட்டுத் திரும்பினார்கள். அதற்குப் பிறகும் ''நாங்கள் பயந்து ஓடவில்லை ஒண்ணுக்குப் போக மறைந்தோம்'' என்று சொல்லி தோழர் ஜவஹர்லால் வீரத்தைக் காட்டுவதற்கு ஆக மறுபடியும் ஒரு சட்டமறுப்பு ஆரம்பித்தார்கள்.



RangaRakes tamilnavarasam.com

## சட்டமறுப்பு நிறுத்தப்பட்டது

இதன் பயனே ''காங்கிரஸ் சட்டமறுப்பைக் கைவிட்டுவிட்டது'' என்று காங்கிரஸ் பச்சையாய் வெளிப்படையாய் தீர்மானம் செய்ய வேண்டி வந்தது. அந்தப்படி ஒரு தீர்மானமும் செய்தார்கள். அதனால் ஏற்பட்ட அவமானத்தையும் தோல்வியையும் மறைத்துக்காட்டி பாமர மக்கள் கண்களில் மிளகாய்ப் பொடிபோட காந்தியார் வில்லிங்டன் பிரபுவை காண பல தடவை முயற்சித்தார்; பலர் தூது நடந்தார்கள். வில்லிங்டன் பிரபு ஒரே அடியாய் காந்தியாருக்கு பேட்டி கொடுக்க மறுத்துவிட்டார்.

இவ்வளவு சிக்ஷைகள் ஏற்பட்ட பிறகே தோழர் காந்தியார் ''காங்கிரசின் நன்மைக்கு ஆகவே நான் காங்கிரசை விட்டு விலகுகிறேன்'' என்று சொல்லிவிட்டு வெளியில் வந்து காங்கிரசுக்கும் தமக்கும் சம்மந்தம் இல்லை என்றும் ''காங்கிரசில் நான் ஒரு நாலணா மெம்பராகக்கூட இல்லாமல் விலகிவிட்டேன்'' என்றும் உலகத்துக்கு வெளிப்படுத்தினார்.

## சட்டசபை பிரவேசம் ஆளுக்கு ஒரு அபிப்பிராயம்

இப்பொழுது ''பொதுவுடமை வீரர்'' ஜவஹர்லால் அவர்களை கதா நாயகனாக வைத்து சட்டசபை பிரவேசமும் மந்திரி பதவி ஏற்றலும் என்கின்ற நாடகம் நடக்கின்றது.

சட்டசபை பிரவேசத்துக்கோ மந்திரி பதவி ஏற்றலுக்கோ என்ன அவசியம்? அங்கு போய் என்ன செய்வது? என்கின்ற விபரங்களைச் சொல்லி பொது ஜனங்களிடம் ஓட்டுக் கேட்க இவர்களிடம் ஏதாவது சரக்கு இருக்கின்றது என்று யாராவது சொல்லமுடியுமா என்று பாருங்கள்.

சட்டசபைக்கு போவதைப்பற்றியும் போய் என்ன செய்வது என்பதைப்பற்றியுமே காங்கிரஸ் தலைவர்களுக்குள் அபிப்பிராய பேதம் பலமாக இருக்கிறது.

அதுபோலவே மந்திரி பதவிகளை ஏற்பதைப்பற்றியும் ஏற்றபின் என்ன செய்வது என்பதைப் பற்றியும் பலமான அபிப்பிராய பேதம் இருந்து வருகின்றது.

எல்லா இந்திய காங்கிரஸ் தலைவருக்கும் மாகாண காங்கிரஸ் தலைவருக்கும் சுயராஜ்ஜியம் என்பதிலேயே அபிப்பிராய பேதம் இருந்து வருகின்றது.

மாகாணத்துக்கு மாகாணம் தலைவர்களுக்குள்ளாகவும் அபிப்பிராய பேதம் என்பது மாத்திரமல்லாமல் ஒரே மாகாணத்தில் மகாநாட்டுக்கு மகாநாடு அபிப்பிராய பேதமான தீர்மானங்கள் நடைபெற்று வருகின்றன.



## இவர்களிடம் அதிகாரம் கொடுக்கலாமா?

இப்படிப்பட்ட கூட்டத்தார் இடம் புதிய சீர்திருத்தங்களையும் அதன் அமுல்களையும் கொடுத்தால் நாடு என்ன கதி ஆகும் என்பதை யோசித்துப் பாருங்கள். குரங்கு கையில் சிக்கின பூமாலையின் கதிதானேயாகும்.

''எலக்ஷன் நடந்த பிறகு நாம் என்ன செய்வது என்பதை யோசித்துக் கொள்ளலாம்'' என்று வேலைக் கமிட்டியிலும் காங்கிரஸ் கமிட்டியிலும் தீர்மானம் போட்டு காங்கிரஸ்காரர்கள் மக்களை ஏமாற்றுகிறார்கள்.

தங்களுக்கே இன்னது செய்வது என்று தெரியாதவர்களை வெளியில் சொல்ல தைரியமில்லாதவர்களை சட்டசபைக்கு அறிவுள்ள மனிதர்கள் அனுப்பலாமா என்று யோசித்துப்பாருங்கள்.

## சொன்னபடி நடக்காதவர்கள்

ஒரு காரியம் மாத்திரம் நான் உறுதியாய் சொல்லுவேன். அதாவது காங்கிரஸ்காரர்கள் சொன்னபடி நடந்து கொள்ள முடியாதவர்கள். இதுவரை அவர்கள் இந்த 15 வருஷ காலமாக ஒரு திட்டத்திலாவது ஒரு தேர்தலிலாவது அவர்களால் சொன்னபடி நடந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவர்களுடைய வேலைத்திட்டமும் கவலையும் எப்படி பொது ஜனங்களை ஏமாற்றுவது என்பதும் எதைச் சொன்னால் தேர்தலில் வெற்றிபெறலாம் என்பதுமேயல்லாமல் காரியத்திலும் அனுபவத்திலும் சாத்தியமான கொள்கைகளோ திட்டங்களோ அவர்களுக்கு கிடையாது. இதனாலேயே அவர்கள் ஒரு திட்டத்தை ஒரு வருஷத்துக்குக்கூட வைத்திருக்க முடியாமலும் ஒரு விதத்திலாவது சொன்னபடி நடந்துகொள்ள முடியாமலும் இருந்து வருகிறார்கள். இது காங்கிரஸ் தலைவர்களுடைய குற்றமென்று நான் சொல்ல வரவில்லை. மற்றென்னவென்றால் காங்கிரஸ் ஸ்தாபனம் என்னும் அந்த யந்திரத்தின் தன்மையேயாகும். அதற்கு ஏற்றாப்போல் நம் பொதுஜனங்களின் அறியாமையையும் கல்வி அற்ற தன்மையையும் பயன்படுத்திக் கொள்ள மத உணர்ச்சிபோல் காங்கிரஸ் உணர்ச்சியை ஊட்டிவிட்டதால் அவர்கள் இவ் விஷயத்தில் பகுத்தறிவை பயன்படுத்த இடமே இல்லாமல் போய்விட்டது.

இந்த நிலைமை காங்கிரஸ் யந்திரத்துக்கு மிக அனுகூலமாய் போய்விட்டதின் காரணமே அது ஒரு நிலையாகவும் நாணயமாகவும் அனுபவ சாத்தியமாகவும் இருக்க முடியவில்லை.

## ஜஸ்டிஸ் கட்சி

ஜஸ்டிஸ் கட்சி என்னும் தென் இந்திய நல உரிமைச் சங்கமாகிய பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் கொள்கையில் திட்டத்தில் ஏதாவது ஒரு பிசகு நடந்ததாக எடுத்துக்



RangaRakes tamilnavarasam.com

காட்டுங்கள் பார்க்கலாம். இந்த 20 ஷ காலமாக அவர்கள் கொள்கையில் என்ன மாறுதல் காண முடிந்தது. எதில் அவர்கள் தோல்வி அடைந்தார்கள்? எதில் அவர்கள் பின்னால் சென்றுவிட்டார்கள்? பொது ஜனங்களுக்கு அவர்கள் கொடுத்த வாக்கில் எதில் தவறினார்கள்? என்பவைகளை நன்றாய் யோசித்துக் கூறுங்கள். அதிகாரத்தில் பதவியில் இருப்பவர்கள் மீது பாமர மக்களுக்கு அதிருப்தி ஏற்படுவது சகஜம்தான்.

அதிலும் ஒரு கட்சியானது 15 ஷ காலம் அதிகாரத்தில் இருந்தால் எவ்வளவு எவ்வளவு பேர்களுடைய விரோதத்தையும் நிஷ்டூரத்தையும் அதிருப்தியையும் பெற்றிருக்கும் என்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

ஆதலால் பார்ப்பனர்கள் காங்கிரசின் பேரால் மக்களை ஏமாற்றியும் கூலிகளை விட்டு வையச்சொல்லி இருப்பதையும் பற்றி யாரும் ஏமாந்து விடாதீர்கள். ஜஸ்டிசார் அதிகாரத்தில் இருந்த காலத்தில் காங்கிரசுக்கு அனுகூலம் செய்யவில்லை என்றும் சர்க்காரோடு ஒத்துழைத்தார்கள் என்றும் குற்றம் கூறப்படுகிறது. குறிப்பிட்டு அது என்ன குற்றம் செய்தது என்று இதுவரை ஒருவருக்காவது எடுத்துச் சொல்ல ஆதாரம் இல்லை. பார்ப்பனர்களில் காங்கிரசுக்கு எவ்வளவு விரோதியானாலும் அவர்களை பார்ப்பனர்கள் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். தோழர் கனம் சீனிவாச சாஸ்திரியார் என்கின்ற பார்ப்பனர் காந்தியை ராஜத்துரோகி என்று சொல்லி கைதி செய்யுமாறு அரசாங்கத்துக்கு தைரியமும் உதவியும் செய்தவர். இன்று அவர் பார்ப்பனர்கள் வாயிலும் பத்திரிகைகளிலும் மகாகனம் சாஸ்திரிவாளாய் விளங்குகிறார். அவர் கெட்ட கேட்டுக்கு ஜஸ்டிஸ் கட்சியை வெட்டிப்புதைக்க வேண்டும் என்கிறார். சத்தியமூர்த்தியாரும் இவரும் இரட்டைப்பிள்ளை சகோதரர் போல் நடந்துகொள்ளுகிறார். இதுமாத்திரமா? தோழர் காந்தி வந்தாலும் சாஸ்திரியாரைப் போய் பேட்டி கண்டுவிட்டு அவர் வாயால் மகாத்மா காந்தி என்று சொல்லச் செய்துவிட்டு வருகிறார்.

### பார்ப்பனர் – அல்லாதார் போர்

ஆகையால் பார்ப்பனர்களில் ஒருவர் காந்தி துரோகியாகவும் காங்கிரஸ் துரோகியாகவும் தேசத் துரோகியாகவும் தேசத்தைக் காட்டிக் கொடுத்து பட்டம் பதவி பெற்றவராகவும் இருந்தால் அவரைப்பற்றி பார்ப்பனப் பத்திரிகைகளோ பார்ப்பனக் கூலிகளோ ஒன்றும் சொல்வதில்லை. சமூகத்திலும் அப்படிப்பட்டவரை பஹிஷ்கரிப்பதும் இல்லை. அதற்குப் பதிலாக பஹுமானப்படுத்துகிறார்கள்.

பார்ப்பனரல்லாதார்களில் யாராவது இம்மாதிரி செய்திருந்தால் எவ்வளவு இழிவுபடுத்தி இருப்பார்கள் என்பதை யோசித்துப்பாருங்கள்.



எதற்காக இவைகளைப்பற்றி பேசுகிறேன் என்றால் காங்கிரஸ்-ஜஸ்டிஸ் கிளர்ச்சிகள் என்பது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் போரே தவிர தேசாபிமானம், தேசத்துரோகம் என்பது அல்ல என்பதற்காகவே பேசுகிறேன்.

### காங்கிரஸ் திட்டங்கள்

காங்கிரசுக்காரர்கள் கூறும் பூரண சுயேச்சைக்கு என்ன அருத்தம் என்று பாருங்கள். தோழர் சத்தியமூர்த்தியார் ஆனைமலை பிரசங்கத்தில் பூரண சுயேச்சை என்பதற்கு குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்று பொருள் கூறவில்லையா? பிரிட்டிஷாருடன் சமாதானம் செய்துகொள்வதுதான் பூரண சுயேச்சையின் தத்துவம் என்று கூறவில்லையா?

சட்டசபைக்கு போவது மந்திரி பதவி ஏற்பதற்கு என்று சத்திய மூர்த்தியார் கூறவில்லையா? மந்திரி பதவி ஏற்றது சேலத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதற்காக என்று மூர்த்தியார் கூறவில்லையா?

மந்திரி பதவி ஏற்பது என்றால் அது பிரிட்டிஷ் ஆட்சியுடன் ஒத்துழைப்பதாகுமே ஒழிய பூரண சுயேச்சைக்கு மார்க்கமாகாது என்று காங்கிரஸ் தலைவர் ஜவஹர்லால் கூறவில்லையா?

ஆகவே சுயராஜ்யம் என்பதிலும் சுயேச்சை என்பதிலுமே எப்படிப்பட்ட சுயராஜ்யம், எப்படிப்பட்ட சுயேச்சை என்பதிலுமே இன்னமும் காங்கிரஸ் தலைவருக்கும் மாகாண காங்கிரஸ் தலைவருக்கும் நேர்மாறான அபிப்பிராய பேதத்தில் இருக்கும்போது ஜஸ்டிஸ்கட்சி சர்க்காருடன் ஒத்து உழைக்கின்றது என்றால் என்ன அருத்தம் என்று கேட்கின்றேன்.

### கராச்சி திட்டம்

கராச்சி திட்டத்திலாவது நியாயம் இருக்கிறதா என்று பாருங்கள். அதில் ஜாதி பாகுபாடுகளைக் காப்பாற்றுவதற்கு உத்தரவாதம் இருக்கிறது என்று பந்தயங்கட்டி கூறுகிறேன். இதை யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றேன். இந்த நிலையில் எனது திட்டங்களை சில அறிவிலிகள் கராச்சி திட்டம் என்று கூறுகிறார்களே, இது யோக்கியமா? என்று கேட்கின்றேன்.

அந்தப்படி எனது திட்டம் கராச்சி திட்டத்தில் இருந்து திருடியதாய் இருந்திருந்தால் அதைத் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ''ராமசாமி திட்டம் பொது உடமை திட்டம்'' என்று சர்க்காருக்கு எடுத்துக்காட்டி இருப்பாரா என்று கேட்கின்றேன்.

### ஜஸ்டிஸ் திட்டம்

ஜஸ்டிஸ் கட்சியாரின் திட்டம் சட்டப்படி கிளர்ச்சி செய்வதும் சுயராஜ்யம் பெறுவதும் அரசியலில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம்



RangaRakes tamilnavarasam.com

வழங்குவதும் என்று 20 வருஷங்களுக்கு முன்னையே வகுத்து இருக்கிறார்கள். இந்தக் கொள்கைக்குக் கட்டுப்பட்ட எவரும் அங்கத்தினராகலாம் என்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதில் இதுவரை ஒரு பார்ப்பனராவது வந்து சேரவில்லை.

சட்டத்திற்கு அடங்கிக் கிளர்ச்சி செய்து சுயராஜ்யம் பெறுவதே கொள்கையாகக் கொண்ட மிதவாதிகள் என்பவர்களில் கூட ஒருவரும் மெம்பராகவில்லை. இதனால்தான் ஜஸ்டிஸ்கட்சி என்பது பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்றும் மிதவாத பார்ப்பனரும் காங்கிரசை ஆதரிப்பதால் காங்கிரசை பார்ப்பனர்கள் இயக்கம் என்றும் சொல்லுகிறேன்.

### ஜஸ்டிஸ் இயக்கம் ஏற்பட்ட பிறகு

ஆனால் இந்தப் பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஏற்பட்ட பிறகுதான் நமது நாட்டில் பார்ப்பனரல்லாதார் நிலை அரசியலிலும், சமூக இயலிலும், பொருளாதார இயலிலும் சிறிதாவது முற்போக்கடைந்திருக்கிறது. இதற்கு புள்ளி விவரங்களை வேண்டுமானாலும் நான் காட்டக்கூடும். 1920-க்கு முன் உள்ள உத்தியோகம், படித்தவர்கள் எண்ணிக்கை, ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகிகள், வக்கீல்கள், பட்டதாரிகள், நீதி நிருவாக உத்தியோகஸ்தர்கள், ஹைகோர்ட்டு, கவர்னர் ஆலோசனை சபை முதலியவைகளின் அங்கத்தினர்கள் ஆகிய லிஸ்டைப் பாருங்கள். இப்போது உள்ளவர்களின் லிஸ்டைப் பாருங்கள், அப்பொழுது பார்ப்பனரல்லாதார் எத்தனை பேர்? இப்போது பார்ப்பனர் அல்லாதார் எத்தனை பேர்? என்று கணக்குப்போட்டுப் பாருங்கள். சும்மா பொறுப்பில்லாமல் பார்ப்பனரல்லாதார் இயக்கம் தேசத்துரோக இயக்கம் என்று சொல்லிவிட்டால் போதுமா என்று கேட்கின்றேன்.

இது எப்படியோ இருக்கட்டும் என்றே வைத்துக் கொள்ளுங்கள். இந்த பார்ப்பனரல்லாத இயக்கம் ஏற்பட்ட பின்பு பொது மக்களுக்கு அல்லது தேசத்துக்கு அதற்கு முன் இல்லாத எந்த கெடுதி புதிதாய் ஏற்பட்டது என்று யாராவது ஒரு விரலை விட முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள்.

அல்லது பார்ப்பனரல்லாதார் இயக்கம் இல்லாத எந்த மாகாணத்தை விடவாவது நமது மாகாணம் எதிலாவது பிற்போக்கடைந்திருக்கிறது என்றாவது யாராவது சொல்லமுடியுமா என்று பந்தயம் கூறிக்கேட்கின்றேன்.

### நமது மாகாணமே மேலானது

பல விஷயங்களில் மற்ற மாகாணத்தைவிட நமது மாகாணம் பார்ப்பனரல்லாதார் ஆட்சியால் முன்னணியில் இருக்கிறது என்று நான் புள்ளி விவரங்களை காட்டக்கூடும். ஆகையால் பார்ப்பனர்கள் சிலருக்கு முன் போல ஏகபோக உரிமை இல்லை என்பதற்காக பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை குறை கூறுவதால் பயன் என்ன என்று கேட்கிறேன்.



### காங்கிரசின் கதி

எங்களால் காங்கிரசை ஒன்றும் செய்ய முடியாது என்று காங்கிரஸ்காரர்கள் மனப்பால் குடிப்பதை மறந்துவிடும்படி எச்சரிக்கை செய்கிறேன்.

காங்கிரசைப் பொறுத்தவரை எங்களால் செய்யப்பட்ட காரியங்கள் என்னவென்றால் இந்த 10, 15 வருஷ காலமாக காங்கிரசின் சூழ்ச்சிகள் ஒரு துறையிலும் பலிதமாகாமல் செய்திருக்கிறோம். இன்றைய தினமும் சொல்லுகிறேன், காங்கிரசின் இன்றைய கதி என்ன என்று யோசித்துப் பாருங்கள். உபயதுல்லா, குப்புசாமி போன்றவர்கள் இஷ்டப்படி தரகு வியாபாரம் நடத்தத்தக்கதாய் காங்கிரஸ் இருந்து வரச் செய்துவிட்டோம். மேலும் அதன் கை கால்களைக் கட்டிப் போட்டு ஒரு மூலையில் உட்காரவைத்துவிட்டோம். அதாவது அதற்கு ஒரு கொள்கையும் இல்லாமல் செய்துவிட்டோம். எந்தக் கொள்கையையும் சொல்லிக்கொண்டு வெளிவருவதற்கு யோக்கியதையில்லாத மாதிரியில் அதன் வண்டவாளங்களை வெளிப்படுத்தி விட்டோம். நாளைக்கு வரப்போகும் சட்டசபை தேர்தலுக்கு காங்கிரஸ் எந்தப் பிரச்சினையைச் சொல்லி ஓட்டு கேட்கக்கூடும் என்று யோசித்துப்பாருங்கள்.

இப்பொழுதே கொள்கை விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் திக்கு முக்காடுகிறார்கள்.

மக்களுடைய முட்டாள்தனமும் கூலிகளுடைய காலித்தனமும் அல்லாமல் காங்கிரசுக்கு வேறு என்ன ஆதரவு இருக்கிறது என்று கேட்கிறேன்.

### காங்கிரசின் ஓட்டுப் பிரச்சினை என்ன?

ஒரு ஓட்டர் ஒரு காங்கிரஸ் அபேட்சகரைப் பார்த்து நீங்கள் ஓட்டுப் பெற்று வெற்றியடைந்தால் அங்கு சென்று என்ன செய்வீர்கள் என்று கேட்டால் ஜவஹர்லால் தானாகட்டும், சர்தார் தான் ஆகட்டும், ராஜாஜி தானாகட்டும் என்ன பதில் சொல்லுவார்கள்.

காந்திக்கு ஓட்டுப்போடுங்கள் என்பார்கள். காந்தியார் காங்கிரசில் இல்லையே என்றால் காங்கிரஸ் கட்டளைப்படி நடப்போம் என்பார்கள். காங்கிரஸ் கட்டளை என்ன என்றால் மகாத்மா உத்திரவுப்படி என்பார்கள். மகாத்மா எங்கே என்றால் பூத கண்ணாடி தேடுவார்கள்.

இந்த பரிதாபகரமான நிலையில் இன்று காங்கிரசை வைத்தது அதன் பித்தலாட்டங்களை தைரியமாய் வெளியாக்கும் நாங்கள் தான் என்று பெருமையாய்ச் சொல்லிக் கொள்ளுகிறோம்.

### ஜஸ்டிஸ் இயக்கம் இல்லாதிருந்தால்

ஜஸ்டிஸ் இல்லாவிட்டால் இந்தப் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார்களை மெத்தைப் படிக்கட்டுக்கு படிக்கல்லாய் மதித்து எங்கள் தலையில் கால்



RangaRakes tamilnavarasam.com

வைத்து நடந்து கொண்டிருப்பார்கள். ஆதலால் நாங்கள் என்ன செய்தோம் எதில் வெற்றி பெற்றோம் என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் காட்டவேண்டும் என்று கேட்கிறேன். நாங்கள் இல்லாதிருந்தால் பார்ப்பனரல்லாதார் கதி என்ன ஆயிருக்கும் என்பதற்கு பழைய சரித்திரத்தைப் படித்துப்பாருங்கள். தோழர் காந்தியார் மெல்ல மெல்ல வந்து கடசியாக வருணாச்சிரம தர்மத்தை காப்பாற்றவும் ராமராஜ்யத்தை ஏற்படுத்தவும்தான் நான் சுயராஜ்யம் கேட்கிறேன் என்று சொல்லி ராமாயண காலக்ஷேபமே மேடைப்பிரசங்கமாக இருக்கும்படி செய்துவிட வில்லையா என்று பாருங்கள். அப்படிப்பட்டவர் இன்று மூலையில் உட்கார்ந்திருக்க வேண்டிய நிலைமை யாரால் ஏற்பட்டது? நமது ஓயா-உண்மையான உழைப்பால் அல்லவா?

''காங்கிரசுக்கே வெற்றிமேல் வெற்றி'' ஏற்பட்டாலும் அவ்வெற்றிகள் எல்லாம் பார்ப்பனரல்லாதாருக்கே எப்படி வந்து சேர்ந்தது, நமது ஓயா உழைப்பாலல்லவா?

இப்படிப்பட்ட நாம் இந்த சந்தர்ப்பத்தில் ஓய்ந்து இருந்து விட்டோமானால் நமது இவ்வளவு நாளைய வேலையும் கெட்டுப்போகும் என்று பயந்தே நாங்கள் வந்திருக்கிறோம்.

ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் இதை கவனத்தில் வைத்து எங்கள் ஆசைகளை ஈடேற்றி வைக்க வேண்டுகிறோம்.

*குறிப்பு:- கோவை, தஞ்சை, திருச்சி, சேலம், ராசிபுரம், மதராஸ், வேலூர், நாட்டறம்பள்ளி, அம்பலூர் ஆகிய இடங்களில் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைப் பற்றி ஜூன் 22 முதல் ஜூலை 4 வரை ஆற்றிய சொற்பொழிவுகளின் சுருக்கம்.*

குடி அரசு - சொற்பொழிவு - 12.07.1936



# தஞ்சையில் சத்தியமூர்த்தியார்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் என்னுடைய தஞ்சை உபன்யாசத்துக்கு பதில் என்னும் தலைப்பில் அடியில் கண்டபடி பேசி இருப்பதாக சுதேசமித்திரன் பத்திரிகையில் பார்த்தேன். ஆனால் அதே விஷயம் மற்றும் வேறு சில சென்னை பத்திரிகைகளில் சிறிது விஷமத்தனமாகவும் அதாவது ராவணன், விபீஷணன் கதைகளை ஒப்பிட்டு பேசி இருப்பதாகத் தெரிகிறது. இவற்றுள் எதை உண்மையாய் வைத்துக் கொள்வதானாலும் சரி. இப்போதைக்கு எனது அபிப்பிராயத்தை தெரிவிக்க விரும்புகிறேன். சுதேசமித்திரனில் காணப்படுவதாவது:-

## வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

''ஸ்ரீமான் நாயக்கர் தன் பிரசங்கத்தில் காங்கிரஸ் வகுப்புவாரிப் பிரதி நிதித்துவத்தை ஒப்புக்கொண்டால் அவர் காங்கிரசில் சேரத் தயாராக இருப்பதாக கூறினாராம்... **ஸ்ரீமான் நாயக்கர் அபிப்பிராயத்தை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன்.** வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக காங்கிரஸ் எப்போதும் தேசமக்கள் யாராய் இருந்தாலும் யாவரும் சமஉரிமை அடைய வேண்டும் என்ற நோக்கத்தையே கொண்டுள்ளது. ஒரு சிறுபான்மை ஜாதியினரே உத்தியோகங்களை வகிப்பதை காங்கிரஸ் எப்போதும் ஆதரிக்காது. இவ்விஷயம் காங்கிரசால் யோசிக்கப்பட்டு இது சம்மந்தமாய் சீக்கிரத்தில் ஒரு அறிக்கை வெளியிடப்படும்'' என்று சொல்லி இருப்பதாயும்,

## சமூக சீர்திருத்த விஷயத்தில்

''சமூக சீர்திருத்த விஷயமாய் முதல் முதலில் திட்டத்தை காங்கிரஸ்தான் ஆரம்பித்தது'' என்று சொல்லிவிட்டு ''இந்திய சட்டசபைத் தேர்தலில் சமூக சீர்திருத்தவாதியாகிய திருச்சி டாக்டர் ராஜன் அவர்களுக்கு விரோதமாக பரம வைதீக ராஜாபகதூர் கிருஷ்ணமாச்சாரியாரை ஆதரித்த ஜஸ்டிஸ் கட்சியின் சமூக சீர்திருத்தமென்ன'' என்று கேட்டதாகவும் காணப்படுகிறது.

நான் காங்கிரசை கேட்டுக் கொண்டதற்கு உண்டு - இல்லை என்று இரண்டிலொரு அபிப்பிராயம் சொல்லாமல் ''ஜஸ்டிஸ் கட்சி ஏன் அப்படிச் செய்தது'' என்று கேட்பது எப்படி ஒழுங்கான சமாதானமாகும் என்று எனக்கு விளங்கவில்லை. இருந்தாலும் இதற்கும் முடிவில் பதில் சொல்லுகிறேன்.



RangaRakes tamilnavarasam.com

## கெடுக்கக்கூடாது

பிறகு ''ஜஸ்டிஸ் கட்சி இதுவரை இவைகள் விஷயமாய் செய்த காரியங்களை அழிக்காமல் இருக்கவேண்டும்'' என்று நான் கேட்டுக் கொண்டதற்கு பதிலாக,

''15 வருஷமாக ஜஸ்டிஸ்கட்சி அதிகாரத்தில் இருந்தபோது என்ன முக்கியமான காரியத்தைச் செய்தது. பொது ஜனங்களுக்கு விரோதமாக சர்க்காருக்கு அனுகூலமாக தாளம் போட்டது, நிலவரி விஷயமாக சர்க்காருக்கு சாதகமாய் இருந்தது, சத்தியாக்கிரக காலத்தில் தொண்டர்கள், அடிக்கப்பட்ட கொள்கையை ஜஸ்டிஸ் கட்சி ஆதரித்தது. இதையா அழிக்கக்கூடாது என்று நாயக்கர் பிரியப்படுகிறாரா என்பது சந்தேகமாய் இருக்கிறது. காங்கிரஸ் அதிகாரம் வைத்தவுடன் ஜஸ்டிஸ் கட்சியார் செய்த ஊழல்களை ஒழிப்பதே அதன் காரியம்'' என்று பேசி இருக்கிறார்.

## இவைகளுக்கு நம் சமாதானம்

தோழர் சத்தியமூர்த்தியார் நமது முதல் பிரச்சினையையாவது ஒப்புக் கொள்வதைப்பற்றி நாம் மிகவும் மகிழ்ச்சியே யடைகிறோம். ஆனால் இந்த 20 வருஷ காலமாக காங்கிரஸ் இவ்விஷயத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ விஷயமாக ஏன் கவலை செலுத்தவில்லை?

நாட்டில் இந்தியாவெங்கும் லாகூர் முதல் கன்னியாகுமரி வரை சீக்கியர், இந்துக்கள், முகமதியர், கிறிஸ்துவர் ஆகியவர்களும் இந்துக்களில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாத ஜாதியார்கள், தீண்டப்படாதவர் என்கின்ற பிரிவார்களும் சதா சர்வ காலமும் வகுப்புப் பிரச்சினை-வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்றே கூப்பாடு போட்டு வந்ததுடன் அதனால் அனேக பொது லட்சியங்களும் எவ்வளவோ பாதிக்கப்பட்டு காங்கிரசின்மீது பல வகுப்பு மக்களுக்கும் இதுகாரணமாகவே அவநம்பிக்கையும் வெறுப்பும் ஏற்பட நேர்ந்ததுடன் என்னைப் பொறுத்தவரையிலும் கூட பெரிதும் இதுகாரணமாகவே காங்கிரசிலிருந்து நான் விலகவும் நேர்ந்தது என்பதை யார் மறுக்கக்கூடும்? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இந்தியாவுக்கு முதல் தேவை என்பதை இனி யாராலாவது அல்லது வேறு எவ்வித தந்திரத்தாலாவது அழித்துவிடமுடியும் என்று கருதுவதற்கும் இடமில்லை. அன்றியும்,

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்று கூப்பாடு போடப்பட்ட பின்புதான் முஸ்லீம்கள், பார்ப்பனரல்லாதவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியவர்களில் ஒரு அளவுக்காவது அரசியலிலும் நிர்வாக பதவிகளிலும் மேல்தர கீழ்த்தர உத்தியோகங்களிலும் இடம்பெற ஏற்பட்டது என்பதையும் அச்சமூகத்தார்களும் சிறிதாவது மனிதத்தன்மையுடன் வாழ்கிறார்கள் என்பதையும் எவராலாவது மறுக்க முடியுமா?



மனித இயற்கையை எடுத்துக்கொண்டபோதிலும் எந்தக்காரணத்தை முன்னிட்டானாலும் சரி, ஒரு வகுப்பார் மேல்நிலையிலும் ஒரு வகுப்பார் கீழ்நிலையிலும் இருப்பதை ஒப்புக்கொள்ளவோ பொறுத்துக்கொண்டிருக்கவோ முடியாது என்றுதான் சொல்லுவேன்.

ஆகையால் இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அபிப்பிராயத்தை தோழர் சத்தியமூர்த்தியார் வரவேற்பதாகவும் ஒப்புக்கொண்டதாகவும் கூறியதானது ஒரு அளவுக்காவது நமக்கு மகிழ்ச்சியையும் பழய தோழர்களுடன் கலந்து ஒத்துழைக்க காலம் வரலாம் என்ற நம்பிக்கையும் தருகிறது. ஆனாலும் அதை காரியத்தில் செய்ய சம்மதிக்கிறார்களா என்பதை வெகு ஆசையோடும் கவலையோடும் எதிர்பார்க்க வேண்டியவனாய் இருக்கிறேன். இதை எவ்வளவு சீக்கிரத்தில் காங்கிரஸ்காரர்கள் இந்துக்களுக்கும் முஸ்லீம் களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் போலவோ அல்லது மூர்த்தியார் சொல்வதுபோல பொது அறிக்கையினால் சரிப்படுத்துவது போலவோ காரியத்தை முடித்து வைக்கிறார்களோ அவ்வளவுக்கு நான் நன்றியறிதலுள்ளவனாக இருப்பேன்.

இதுவிஷயமாகவே இதற்கு முன்னும் ஒரு தடவை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராய் இருந்த பெரியார் ஒருவர் என்னிடம் எழுத்து மூலமாக எழுதி வாங்கிக் கொண்டுபோய் காந்தியாருடையவும் காங்கிரசினுடையவும் சம்மதம் பெற்று அறிக்கை வெளியிடுவதாக மனமுவந்து கருணை அளித்தார். இதுவரையில் ஒன்றும் முடிவு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

## காங்கிரசின் மனப்பான்மை

நான் மற்றொரு விஷயத்தையும் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன். அதாவது காங்கிரஸ் இதை ஏற்றுக்கொள்ளுமா என்பதில் காங்கிரசின் மனப்பான்மைக்கு ஒரு உதாரணம் கூறாமல் இருக்க முடியவில்லை. அதாவது 1927-ல் சென்னையில் நடந்த எல்லா இந்திய காங்கிரஸ் மகாசபையின் போது தோழர் ஆர்.கே. ஷண்முகம் அவர்கள் மூலமாக அவர் பேராலேயே ஒரு தீர்மானம் அனுப்பி இருந்தோம். அத்தீர்மானத்தின் வாசகம் என்னவென்றால் ''இந்தியா சுயராஜ்யம் அடைவதற்கு ஜாதி பேதம் ஒழிய வேண்டியது அவசியம் என்பதை காங்கிரஸ் கொள்கைகளில் ஒன்றாக சேர்த்துக்கொள்ளவேண்டும்'' என்பது ஆக ஒரு தீர்மானம் அனுப்பப்பட்டது. அது வரவேற்புக் கமிட்டிக்கு காலத்திலேயே அனுப்பப்பட்டது. மற்றும் காங்கிரசின்போது தோழர்கள் டாக்டர் அன்சாரி, சரோஜினி அம்மாள் முதலியவர்கள் காஸ்மாபாலிட்டன் கிளப்புக்கு வந்து தோழர்கள் பனகால் ராஜாவையும், ஆர்.கே. ஷண்முகத்தையும், எ. ராமசாமி முதலியாரையும், என்னையும் சந்தித்துபேசி காங்கிரஸ் கூட்டத்துக்கு வரவேண்டும் என்றும் காங்கிரசில் சேரவேண்டும் என்றும் அழைத்தபோது இதே நிபந்தனைகளைச் சொன்னோம். அப்போது



RangaRakes tamilnavarasam.com

அவர்கள், இதை மிக சாதாரண விஷயமாகக் கருதி ‘‘இது விஷயத்தில் காங்கிரசுக்கு எவ்வித ஆட்சேபணையுமிருக்க நியாயமில்லை. ஆகையால் நீங்கள் காங்கிரசுக்கு வர தயாராய் இருக்க வேண்டியது. நான் மற்றவர்களுடன் ராத்திரிக்கு பேசி காலை பதில் சொல்லுகிறேன்’’ என்று சொன்னார்கள். அப்போது நான் அவர்களிடம் ‘‘உங்கள் முயற்சி பலிக்காது. கண்டிப்பாய் பலிக்காது’’ என்று சொன்னதோடு முதல் தவணையாக தோழர் ஆர்.கே. ஷண்முகம் அனுப்பியிருக்கிற தீர்மானத்தையாவது ஒப்புக் கொள்ளச் சொல்லுங்கள். நாங்கள் காலையில் காங்கிரஸ் கூட்டத்துக்கு வருகிறோம் என்று சொன்னேன். தோழர் சரோஜினியம்மாள் குதியாட்டம் போட்டுக்கொண்டு ‘‘இத்தீர்மானம் காங்கிரசில் நிறைவேறவில்லையானால் பார்ப்பனர்களைப் பற்றி நீங்கள் சொல்லுவதெல்லாம் உண்மையாகிவிடும். நானும் ஒரு கை பார்க்கிறேன்’’ என்று சொல்லிவிட்டுப் போனார். கடைசியாக என்ன நடந்தது என்றால் தோழர் ஷண்முகம் தீர்மானம் காஞ்சீபுரம் தீர்மானம் போலவே விஷயாலோசனைக் கமிட்டியிலேயே கொலை செய்யப்பட்டுவிட்டது என்பதைத்தான் உணர நேர்ந்தது. ஆகவே காங்கிரசுக்கு இந்த பார்ப்பனர்களிடம் எவ்வளவு சுதந்தரம் இருக்கிறது என்பது இதிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆனபோதிலும் என்னைப் பொறுத்தவரை என்னுடைய கூட்டு வேலைத் தோழர்கள் பலரைப் பொறுத்தவரை இவ் விஷயத்தில் நாங்கள் வாக்குத் தவறுவதில்லை என்று உறுதி கூறுகிறேன்.

### இரண்டாவதாக

சமூக சீர்திருத்த விஷயத்தில் மூர்த்தியார் தஞ்சை பேச்சில் வழவழ என்று பேசி இருப்பதாகத்தான் கருதுகிறேன். சமூக சீர்திருத்த விஷயத்தில் காங்கிரஸ் சட்டபூர்வமாக ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது எனது வேண்டுகோள். அதற்கு பதில் சொல்லாமல் கிருஷ்ணமாச்சாரியாரை ஜஸ்டிஸ் கட்சி ஏன் ஆதரித்தது என்று கேட்கிறார். இதற்கு சமாதானம் சொல்லுவதில் ஒரு கஷ்டமான நிலையில் என்னை தோழர் சத்தியமூர்த்தியார் கொண்டுவந்து விடுகிறார் என்று சொல்ல வேண்டி இருக்கிறது. ஆனாலும் எனது கடமையை நான் செய்கிறேன்.

### ஹம்பக் சீர்திருத்தவாதி

அதாவது தோழர் திருச்சி ராஜனைவிட ராஜாபகதூர் கிருஷ்ணமாச்சாரியார் இந்திய சட்ட சபைக்கு போவது மேலான காரியம் என்பது உண்மை சமூக சீர்திருத்தவாதிகளுடைய கருத்தாய் இருந்ததினால்தான் அதுசமயம் ஏதோ ஒரு சிலர் கிருஷ்ணமாச்சாரியாரை ஆதரித்தார்கள். எப்படி எனில் திருச்சி தோழர் ராஜன் சமூக சீர்திருத்தப் போர்வையைப் போட்டுக்கொண்டு மக்களை ஏமாற்றுகிறவர். சமூக சீர்திருத்த சட்டம் செய்வதை ஆக்ஷேபிப்பவர். தன்னை பொறுத்தவரை



வாய்க்கு ருசியான உணவு எங்கு கிடைத்தாலும் எதாயிருந்தாலும் புசிப்பதைத்தவிர அவரிடம் எவ்வித சீர்திருத்தமும் நான் காணவில்லை. பல கூட்டங்களில் சமூக சீர்திருத்தத்திற்கு சட்டம் செய்வது கூடாதென்றும், மக்களை கட்டாயப்படுத்தி எவ்வித சீர்திருத்தமும் செய்யக் கூடாது என்றும் பேசி வருணாச்சிரம தர்மிகளுக்கு மறைமுகமாக ஆதரவு அளித்து உறுதி கொடுத்து ஓட்டுக்கேட்டவர். இவரால் மக்கள் சுலபத்தில் ஏமாற்றப்பட்டு விடுவார்கள். மக்களின் முயற்சியும் கெட்டுவிடும். தோழர் டாக்டர் ராஜனை சீர்திருத்தவாதி என்று ஒப்புக்கொண்டால் நம் தலையில் நாமே மண்ணை வாரிப்போட்டுக் கொண்டவர்களாகி விடுவோம்.

தோழர் ராஜாபகதூர் ஆச்சாரியார் உண்மை பேசுகிறவர், பரம வைதீகி, பழய அழுக்கு மூட்டை. அவர் சட்டசபைக்கு போனால் அவரின் நிலை இன்னதென அறிந்து அவரை எதிரியாகவே கருதி அதற்கு வேண்டிய எதிர்ப்பு முறை கையாளலாம். பொது ஜனங்களை அவர் ஏமாற்ற முடியாது. அவரால் பொது ஜனங்களும் ஏமாந்து போகமாட்டார்கள். மற்றும் விழிப் பெய்துவார்கள். ஆதலால் அவர் சட்டசபைக்கு போவது ராஜன் போவதைவிட குறைவான கெடுதியைதான் உண்டாக்கும் என்று கருதி அப்படிச் செய்தார்கள். எனக்கும் கூட ஹம்பக்கான சினேகிதனை விட நேர்மையான எதிரிமேல் என்பதுதான் கொள்கையாக இருக்கிறது. ஆகையால் டாக்டர் ராஜனை ஆதரிக்காததிலிருந்தே ஒரு கூட்டத்தாரின் கொள்கையை பரீக்ஷித்தால் தோழர் சத்தியமூர்த்தி நியாயம் கண்டுபிடிக்க முடியாமல் ஏமாற்றப் பட்டுவிடுவார்.

சமூக சம்மந்தமாக பார்ப்பனரல்லாதாரால் கொண்டு வரப்படும் தீர்மானங்களை காங்கிரஸ் ஒப்புக்கொள்ளுகிறதா? என்பதுதான் எனது விண்ணப்பம். மற்றபடி காங்கிரசின் சமூக சீர்திருத்த தீர்மானம் என்ன என்பது நான் அறியாததல்ல. காங்கிரஸ் சமூக சீர்திருத்த விஷயமாக இந்த 50 வருஷமாக என்று தீர்மானம் எந்த சட்டசபைக்கு கொண்டு வந்து நிறைவேறிற்று? எந்த தீர்மானத்துக்கு ஆதரவளித்தது? என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரை நான் வணக்கமாய் கேட்கின்றேன். இன்னமும் பேசப் போனால் 1920ம் வருஷம் முதல் ஆச்சார சீர்திருத்த மகாநாடு என்று வெகு காலமாக காங்கிரசின் போது கூட்டப்பட்டு வந்த மகாநாடும் நின்றுவிட்டது. தீண்டாமை ஒழிந்தபின்பே சுயராஜ்யம் என்னும் கொள்கையும் எடுபட்டு விட்டது. ஆலயப்பிரவேச முயற்சியும் பின்வாங்கிக் கொள்ளப்பட்டது. இறுதியாக சமூக சீர்திருத்த விஷயமாய் பொதுமக்கள் சம்மதமில்லாமல்படி தீர்மானங்கள் கொண்டு வருவதும் சட்டம் செய்வதும் கூடாது என்றும் தலைவர்களாலேயே சொல்லப்பட்டுவிட்டது. இந்த நிலையில் சமூக சீர்திருத்த விஷயமாய் என்ன ஆதாரத்தைக் கொண்டு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காங்கிரசை ஆதரித்துப் பேசினார் என்பது எனக்கு விளங்கவில்லை.



RangaRakes tamilnavarasam.com

**மூன்றாவதாக ஜஸ்டிஸ் கட்சி செய்த காரியத்தை அழிக்கக் கூடாது என்பது**

ஜஸ்டிஸ் கட்சியார் இந்த 15 - ஷ காலமாக செய்த காரியத்தை காங்கிரஸ் ஆதிக்கத்துக்கு வந்தால் அழிக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொண்டதை தோழர் மூர்த்தியார் ஜஸ்டிஸ் கட்சி என்ன செய்தது என்று பரிகாசம் செய்திருக்கிறார். ஆனாலும் பாதகம் இல்லை. ஜஸ்டிஸ் கட்சி செய்த ஒரு சிலவற்றை சொல்லுகிறேன். அவற்றை கெடுக்காமல் இருக்கிறார்களா என்று தோழர் மூர்த்தியார் சொன்னால் போதும்.

முதலாவது உத்தியோகங்களில் எல்லா ஜாதி மத வகுப்பாருக்கும் பிரதிநிதித்துவமும் அரசியல் பிரதிநிதித்துவங்களிலும் விகிதாச்சார பிரதிநிதித்துவமும் ஏற்படுத்தி இருக்கிறது.

பொது ஸ்தலங்களில் ஜாதிமத பேதம் காட்டக்கூடாது என்ற சட்டம் செய்தது.

தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்கள் இன்று ஸ்தல ஸ்தாபனம் முதல் அரசியல் நிர்வாகம் உத்தியோகம் ஆகியவைகள் வரை எல்லாவற்றிலும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை ஏற்படுத்தியது.

உள்நாட்டு வைத்தியத்துக்கு ஆதரவு அளித்து கல்லூரி ஏற்படுத்தியது.

பிள்ளைகளுக்கு கட்டாய இலவசக் கல்விமுறை ஏற்படுத்தியது.

பள்ளிக்கூடத்தில் ஜாதி வித்தியாசம் பாராட்டக் கூடாது என்கின்ற உத்திரவு செய்தது.

ஸ்தல ஸ்தாபன உத்தியோகங்களில் எல்லா வகுப்புக்கும் பிரதிநிதித்துவம் அளித்தது.

தேவதாசி முறையை ஒழித்தது.

விபசாரக்குச்சுகளை ஒழித்தது.

விவசாயிகளின் கடன் பளுவை குறைத்தது.

தேவஸ்தான நிர்வாகமும் சொத்துக்கள் பரிபாலனமும் சரிவர நடக்கும்படியாக மேற்பார்வை பார்க்க அரசாங்கத்துக்கு உரிமை ஏற்படுத்தியது.

மேல்தர படிப்பு, குறிப்பிட்ட விஷயங்களுக்கு ஆக படிக்கும் படிப்பு ஆகியவைகளில் படிக்க ஆசையுள்ள சகல வகுப்பு மக்களுக்கும் இடம் கிடைக்கும்படி செய்தது.

பெண்மக்கள் படிக்க அதிகமான சவுகரியம் செய்தது.

பெண்மக்களுக்கு ஓட்டுரிமை, அரசியலில் பங்கு பெற வசதி ஆகியவை செய்தது.

குடிவார சட்டம், இனாம் பூமி சட்டம் முதலிய காரியங்கள் செய்தது.



இவைகள் எல்லாம் எல்லா பார்ப்பனர்களுடையவும் அதுவும் சிலவற்றுள் இன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஆகிய தங்களுடையவும் எதிர்ப்பின் மீது செய்யப்பட்ட காரியங்களாகும். இவைகளில் பல இந்துமத சம்பிரதாயத்துக்கு எதிரானவை என்றும் மகாராணி வாக்குத்தத்தத்துக்கு விரோதமானது என்றும் கூட சொல்லப் பட்டவையாகும். ஆகவே இந்தக் காரியங்களை காங்கிரசுக்காரர் அதிகாரத்துக்கு வந்தால் கெடுக்காமல் இருப்பார்களா என்று கேட்டால் அதற்கு சமாதானம் சொல்ல மூர்த்தியார் கடமைப்பட்டவரல்லவா என்று கேட்கின்றேன். அதைவிட்டு நம்மை பரிகாசம் செய்வதால் பயன் என்ன? இந்த நிபந்தனைகளை நாம் பயத்தின் மீது கேட்கின்றோமே ஒழிய இவை அனாவசியமாய் கேட்கும்படியான கேள்விகள் அல்ல என்று மனப்பூர்வமாய் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆகவே தஞ்சை பதிலில் தோழர் மூர்த்தியார் இவைகளுக்கு உண்டு இல்லை என்று ஒரு முடிவான விளக்கமான பதில் சொல்லாமல் ஜஸ்டிஸ்காரர் வரி குறைக்கவில்லையே அதையா என்றும், போலீசார் தொண்டர்களை அடித்ததை பார்த்துக் கொண்டிருந்தார்களே அதையா அழிக்கக் கூடாது என்றும் கேட்பது சரியான நாணயமான பதிலாகுமா என்று யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறேன்.

வரி குறைக்கும் வேலை, மந்திரிகளுடைய அதிகாரத்தில் இல்லை என்றும் அது சர்க்கார் பொதுஜனப் பிரதிநிதிகளுக்கு கொடுக்காமல் தங்கள் கைவசம் வைத்துக் கொண்ட அதிகாரம் என்றும் அதாவது ரிசர்வ்ட் - ட்ரான்ஸ்பர்ட் அல்லது ஒதுக்கப்பட்டது, மாற்றப்பட்டது என்று இருக்கும் இரு பாகத்தில் ரிசர்வ்ட்- ஒதுக்கப்பட்ட இலாகாவுக்கு சம்பந்தப்பட்ட தென்று பலமுறை சொல்லி வந்திருக்கிறேன். சட்டம் தெரியாத முட்டாள்களும் பொறுப்பில்லாத கூலிகளும், காலிகளும் இவ்விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சி மீது குறை கூறினால் அதை யெவரும் லட்சியம் செய்யமாட்டார்கள். ஆனால் அரசியல் ஞானம் பெற்றவரும் காங்கிரசில் பொறுப்புள்ள பதவி வகிப்பவரும் இனி மந்திரி ஆக வேண்டும் என்பவரும் ஒரு மாகாண காங்கிரஸ் ஸ்தாபனத்தில் தலைமை வகிப்பவருமான பெரியார் ஒருவர் இம்மாதிரி பேசினால் அதற்கு என்ன சொல்வது. சர்க்காருக்கு முட்டுக்கட்டை போடவோ சட்டங்களையும் ஒழுங்குகளையும் மதிக்காமல் நடந்து கொள்ளவோ ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரி பதவி ஏற்கவில்லை, அந்தப்படி சொல்லி பொது ஜனங்களிடம் அவர்கள் ஓட்டுப் பெறவும் இல்லை. ஆகையால் அவர்கள் மீது நிலவரி விஷயமாய் குறை கூறுவது நீதியும் வீரமுமான காரியமாகாது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

போலீசார் சட்டம் மீறியவர்களை தங்கள் உத்திரவை உதாசீனம் செய்தவர்களை அடித்தால் அதற்கு ஜஸ்டிஸ் மந்திரிகள் என்ன செய்வார்கள்? எல்லா மாகாணங்களிலும் அடித்தார்கள் அடிபட்ட பின்புதான் மக்களும் சட்டம் மீறுவது பயன்படாது என்பதை உணர முற்பட்டு அடியோடு நிறுத்தி



RangaRakes tamilnavarasam.com

சட்டத்திற்கு அடங்கி நடக்க ஆரம்பித்தார்கள் என்றாலும் அடிப்பதும் தண்டிப்பதும் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் கையிலா இருந்தது? அதுவும் சர்க்கார் தங்களுக்கு என்று ஒதுக்கி வைத்துக் கொண்ட இலக்காவைச் சேர்ந்ததாகும். ஜஸ்டிஸ் மந்திரிகள் தங்களால் கூடியதை சர்க்காருக்கு சொல்லிப் பார்ப்பார்கள், பிறகு அந்த இலாக்காத் தலைவர் செய்த முடிவுப்படிதான் காரியங்கள் நடந்து தீரும். சர்க்காரும் இன்ன காரியம் செய்தால் இன்ன தண்டனை என்று விளம்பரப்படுத்தி அல்லது உதாரணம் காட்டி விட்டுத்தான் அவர்கள் காரியங்களில் பிரவேசித்தார்களே ஒழிய நோட்டீசில்லாமல் வந்து புகுந்து அடித்து ஜெயிலுக்குள் போடவில்லை. அடிபட்டவர்களும் தாம் செய்யப்போகும் காரியத்துக்கு இன்னவிதமான அடியும் இப்படிப்பட்ட தண்டனையும் பலனும் கிடைக்கும் என்றும் அது எவ்வளவு வலிக்கும் எவ்வளவு கஷ்டமாய் இருக்கும் என்றும் தெரிந்துதான் அதில் இறங்கினார்களே ஒழிய வேறில்லை. இப்படிப்பட்ட நிலையில் துணிந்து வேண்டுமென்றே செய்த காரியத்துக்கு அதில் அதிகாரமும் சம்மந்தமும் இல்லாத ஜஸ்டிஸ் மந்திரிகள் உதவி செய்யவில்லை என்று பழி கூறுவது ஆண்மையா? நாணயமா? சுயமரியாதைக்கு ஏற்றதா? என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரை பணிவோடு கேட்கின்றேன்.

ஆகவே தோழர் சத்தியமூர்த்தியார் வெள்ளையாய் விளக்கமாய் மேலே நான் குறிப்பிட்ட காரியங்களைப் பொறுத்தவரை தங்கள் அபிப்பிராயம் சொல்லி அதை காங்கிரசு மூலம் ஒப்புக் கொள்ளச் செய்தால் அவர் தமிழ் மக்களுக்கு பெருத்த மகத்தான உதவி செய்தவராவார்; தன்னுடைய உண்மையான தேச பக்திக்கும் ஒரு ஞாபகஸ்தம்பம் நாட்டியவராவார்.

சில காலிகளும் எச்சிலைப் பத்திரிக்கைகளும் ''காங்கிரசை நிபந்தனை கேட்க இவன் யார்?'' என்று என்னை ஏளனம் செய்வதைப் பார்த்து வருகிறேன். மக்கள் எல்லோரும் காங்கிரசில் சேர வேண்டும் என்று கோரினவர்கள் - கோருபவர்கள் எல்லாம் மனிதர்களாய் இருந்திருப்பார் களானால் அவர்களில் எவருக்கும் இம்மாதிரி ஒரு குறிப்பிட்ட அல்லது தனிப்பட்ட மனிதனைப் பார்த்து காங்கிரசின் கொள்கையைப்பற்றி பேசவோ நிபந்தனையைப் பற்றி பேசவோ நீ யார் என்று கேட்க புத்தியே தோன்றி இருக்காது.

அதைவிட்டு ஞானமில்லாமல் பொறுப்பு இல்லாமல் மானமில்லாமல் எப்படியாவது எதை விற்றாவது வயிறு கழுவலாம் என்ற ஈன மக்களுக்கு இதைவிட வேறு கேள்வி கேட்க புத்தியோ விஷயமோ கிடைக்கமாட்டாது என்பதைத் தான் அவர்களுக்கு நான் பதில் சொல்லக்கூடும்.

இப்படிப்பட்ட மூடர்களுக்கும் இழிமக்களுக்கும் என்னை காங்கிரசுக்கு வரும்படி அழைத்து எனது நிபந்தனை என்ன என்று கேட்டவர்கள் பெயரைச் சொல்லுவதன் மூலம் மற்றொரு பதிலும் சொல்லுகிறேன்.



தோழர் காந்தியார் ஒரு விஷயத்தில் என்னைக் கூப்பிட்டு உனக்கு காங்கிரசினிடம் என்ன குறை?நீ தலைமை வகித்து நடத்துவதில் என்ன அசௌகரியம் என்று கேட்டார். அது சமயம் இப்படிக் கேட்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது என்று இப்போது கேட்பவர்களில் ஒருவரே பக்கத்தில் இருந்தார் என்று கூடச் சொல்லுகிறேன்.

மற்றும் தோழர் ராஜகோபாலாச்சாரியார் ஒருதரமல்ல பல தரம் நமது அபிப்பிராய பேதங்களை கூடுமானவரை ஒருவருக்கொருவர் சரிப்படுத்திக் கொண்டு ஒத்துழைக்க மார்க்கமில்லையா என்று மனம் கசிந்து கண்ணீர் விட்டுக் கேட்டார் என்று சொல்லுகிறேன். இப்போது இருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பல பிரசங்கங்களில் நாயக்கருக்கும் எனக்கும் அனேக விஷயங்களில் அபிப்பிராயப் பேதமில்லை. ஒன்று இரண்டு இருந்தால் அதை காங்கிரசில் வந்து வலியுறுத்தட்டும் என்று சொல்லியிருக்கிறார். இனி யார் என்னைக் கூப்பிட வேண்டும் என்று இந்தக் கூலிகள் நினைக்கிறார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. இப்படிப்பட்ட குட்டிகள் குலைப்பதெல்லாம் முடிவில் தாய் தலையில் விடிகின்றன.

மற்றும் ஒரு காலத்தில் தமிழ்நாடு காங்கிரஸிற்கே சர்வாதிகாரியாயிருந்த தோழர் சி.பி.சுப்பையா அவர்கள் ''உங்கள் கொள்கை பூராவையும் ஒப்புக்கொள்ளுகிறோம். நீங்கள் காங்கிரசை வந்து நடத்திக் கொடுங்கள்'' என்று வருந்திப் பல தடவை கூப்பிட்டார் என்று சொல்லுகிறேன்.

மற்றும் சென்ற வருஷம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு காரியதரிசியாய் இருந்த தோழர் வெங்கிடாசல ரெட்டியார் வீட்டுக்கு வந்து வருந்தி அழைத்தார் என்றும் சொல்லுகிறேன்.

மற்றும் தோழர் திரு.வி.க. அவர்களும் பொறுப்புள்ள அதிகாரமில்லாத வேறு பல முக்கியஸ்தர்களும் வந்து அழைத்ததை நான் எழுத வரவில்லை. என்னை மாத்திரமல்லாமல் என்னைப்போல் இன்னமும் ஆயிரக் கணக்கான பேர்களையும் அவர்கள் கூப்பிட்டிருக்கலாம். அவைகள் அவர்களது காங்கிரஸ் பக்தியைக் காட்டுகிறதே ஒழிய அவற்றால் எனக்கு ஒரு புதிய பெருமை அளிக்கவில்லை என்பதோடு நான் பெருமை பாராட்டிக் கொள்ளவுமில்லை என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஆகவே தேசத்தின் பேரைச் சொல்லிக் கொண்டு காங்கிரசின் பேரைச் சொல்லிக் கொண்டு வயிறு கழுவும் காலிகள் பொறுப்பும் மானமும் இல்லாமல் இம்மாதிரி அதிகப் பிரசங்கித்தனமாய் பேசுவதும் எழுதுவதும் கூடாது என்பதற்கு ஆகவே இவற்றை எழுதினேன். சற்று அதிகமாய் எழுதினதாகக் காணப்படலாம். வியாதிக்குத் தகுந்த சூடுபோட வேண்டிய அவசியத்துக்கு ஆகவே எழுதினேன்.

முடிவாக தோழர் மூர்த்தியாருக்கு ஒன்று விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.



RangaRakes tamilnavarasam.com

தமிழ்நாட்டுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளித்து விடுவது பாதகமில்லை என்று உண்மையாய் உணருவீர்களானால் சமூக சீர்திருத்தம் அவசியம்தான் என்று கருதுவார்களானால் எவ்வளவு சீக்கிரத்தில் அந்த காரியம் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அதைச் செய்யுங்கள்.

இல்லாவிட்டால் இந்த 16 வருஷமாக காங்கிரஸ் பட்ட கஷ்டங் களையும் - அடைந்த தோல்விகளையும் விட அதிகமாகத்தான் அடைய வேண்டியிருக்குமே தவிர சிறிது கூட குறைவுபடாது என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

**ஈ.வெ.ராமசாமி**

**குடி அரசு - தலையங்கம்** - 12.07.1936



# ''இரணியன் அல்லது இணையற்ற வீரன்''

இன்று நாடகம் நடத்திய தோழர் அர்ஜுனன் வெகுவீரமுடன் நடந்து கொண்டதைக் காண எனக்கும் இரணியனாக வேஷம் போடலாமா என்ற ஆசை என்னை அறியாமல் ஏற்படுகிறது. ஆனால் தாடி இருக்கிறதே என்று யோசனையைக் கைவிட்டேன். நாடகங்கள் எல்லாம் குறைந்தது 2-மணி நேரத்தில் முடிவு பெறவேண்டும். மத்தியில் பாட்டுக்களைக் கொண்டு வந்து நுழைப்பதால் கதையின் ஸ்வாரஸ்யம் குறைந்துபோகிறது; உணர்ச்சி மத்தியில் தடைப்படுகிறது. நாடகங்களில் இரண்டுவிதமுண்டு. ஒன்று பாட்டாக நடத்திக் காண்பிப்பது; மற்றொன்று வசன ரூபமாய் நடத்திக் காண்பிப்பது. வசன ரூபமாய் காண்பிப்பதைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். பல உபந்யாசங்கள் செய்வதைவிட இத்தகைய நாடகம் ஒன்று நடத்தினாலும் மக்களுக்கு உணர்ச்சியையும், வீரத்தையும் மனமாற்றத்தையும் ஏற்படுத்தி ஓர் கவர்ச்சியை உண்டாக்குகிறது. நம் எதிரில் நடந்த மாதிரிதான் ஆதியில் இரணிய நாடகம் இருந்திருக்க வேண்டும். ஆனால் அதை பார்ப்பனர்கள் தமக்குச் சாதகமாக திருத்தி உபயோகப் படுத்திக்கொண்டார்கள். பழைய நாடகங்களை நாம் சீர்திருத்திப் புதிய முறையில் நடத்திக் காண்பிக்க வேண்டும். நாடகங்களில் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். இந்த பழைய நாடகங்கள் மக்களை மூடர்களாயும், அர்த்தமற்ற கொள்கையுடை யவர்களாயும் செய்து இருக்கின்றன. நாடகத்தின் மூலம் அறிவு வளர இடமிருக்கிறது. நல்லதங்காள் கதை உலகம் அறிந்தது. நல்லதங்காள் மிகவும் கற்புடையவள் என்று கூறப்படுகிறது. வாழைப்பட்டையை விறகாய் வைத்து எரித்ததாகவும், மணலை அரிசியாகச் சமைத்ததாகவும், உயரத்தில் இருந்த மாங்கனியை கைக்கு கீழே தருவித்துக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. அவ்வளவு பதிவிரதைத் தன்மை வாய்ந்த ஒருவர் வாழ்ந்த நாட்டிலே 12 வருடகாலம் தொடர்ச்சியாய் மழை பெய்யாமல் பஞ்சம் ஏற்பட்டதென்றால் அவருடைய பதிவிரதத் தன்மை எவ்வளவு ஒழுக்கத்தில் இருந்து இருக்க வேண்டும் என்று நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள். (கூட்டத்தில் ஒரே சிரிப்பு; ஆரவாரம்) அதே போன்று குசேலர் சரித்திரம் பிரமாதமாய் நடத்திக் காண்பிக்கப்படுகிறது. பார்ப்பனர்கள் தாங்கள் பிச்சை ஏற்பதற்குச் சாதகமாய் அதை தெய்வீக கதையாய் சிருஷ்டித்துவிட்டு பாமர மக்களை ஏமாற்றுகிறார்கள். ஒருவனுக்கு 27 குழந்தைகள் இருந்துங்கூட அவன் தரித்திரனாய் இருந்தான் என்றால், பகுத்தறிவு உள்ளவன் எவனாவது நம்பமுடியுமா? வருடத்திற்கு ஒரு



RangaRakes tamilnavarasam.com

குழந்தை பெற்றால்கூட முதல் குழந்தைக்கு 27 வருடமாகிறது. 20 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் 6-7 இருக்கலாம். (கூட்டத்தில் ஒருவர் ஒரு முறைக்கு 4 குழந்தை பெற்று இருக்கலாம்) அப்படி இருந்தாலும் வயது வந்த பிள்ளைகள் கூலி ஜீவனம் செய்தாவது மேற்படி குடும்பத்தை ரக்ஷித்து இருக்காதா? இதை எல்லாம் யோசித்துப் பார்த்தால் ஏதாவது பொருள் இருக்கிறதா? இப்படியாக ஒவ்வொரு கதையும் பாமர மக்களின் அறிவை மழுங்கச் செய்வதாய் இருக்கின்றது.

ஆகையால், நாடகங்களை புதிய முறையிலே திருத்தி மக்களுக்குப் பயன்படும்படி செய்ய நாடகாசிரியர்கள் முன்வரவேண்டும். வெறும் சங்கீதமும், பாட்டும் வேண்டியதில்லை. கருத்து இருந்தால் போதும். இந்த நாடகம் சென்னையில் இரண்டுமுறை காண்பிக்கப்பட்டது. இந்த மாகாணத்தில் இதுவே மூன்றாம் முறை. இனி இம்மாதிரி நாடகங்களை நாடெங்கும் நடத்தினால் மக்கள் உணர்ச்சி பெற்று மூட நம்பிக்கைகளையும், அர்த்தமற்ற கொள்கைகளையும் உடைத்தெரிவார்கள். தோழர் அர்ஜுனன் தலைமையில் நடந்த இந்த நாடகத்தை நான் பாராட்டுகிறேன்.

*குறிப்பு:* *வாணியம்பாடியை அடுத்த அம்பலூரில் 04.07.1936 இரவு பாரதி சபையாரால் நடத்தப்பெற்ற ''இரணியன் அல்லது இணையற்ற வீரன்'' நாடகத்துக்கு தலைமையேற்று ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 19.07.1936**

# பாண்டியன் – ராமசாமி வேண்டுகோள்

தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஜில்லாவிலும், தாலூகாவிலும் பார்ப்பனரல்லாதார் மகாநாடுகள் கூட்ட ஆங்காங்குள்ள இயக்கத் தோழர்கள் முயற்சி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

W.P.A. **சௌந்திரபாண்டியன்**
**ஈ.வெ. ராமசாமி**

**குடி அரசு - அறிவிப்பு - 19.07.1936**


RangaRakes
tamilnavarasam.com

# எனது திட்டம்

தலைவரவர்களே! தோழர்களே!

ஜஸ்டிஸ் கட்சியின் வேலைத்திட்டம் என்று இப்போது என்னால் ஆமோதிக்கப்படும் வேலை தீர்மானமானது சுமார் 2 வருஷத்துக்கு முன்னமேயே என்னால் அக்கட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்திற்கு பல சரித்திரங்கள் உண்டு. இத்திட்டம் முதல் முதலில் எப்படி ஏற்பட்டது என்றால் தோழர்கள் காந்தியாரும் ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் நானும் ஒத்துழைக்க ஏதாவது சந்தர்ப்பம் ஏற்படக்கூடாதா என்ற பிரச்னை எழுந்த காலத்தில் என்னால் யோசித்து எழுதப்பட்டு ஷெயார்களில் ஒருவர் ஆமோதிப்பும் பெற்று காந்தியாருக்கு அனுப்பிக் கொடுக்கப்பட்ட திட்டங்களின் தத்துவமாகும். அவை ஏற்றுக் கொண்டதாக தோழர் காந்தியாரிடமிருந்து குறிப்பிட்ட காலத்துக்குள் பதில் வராததாலேயே ஜஸ்டிஸ் கட்சிக்கு சமர்ப்பித்தேன். அவர்கள் அவற்றை சில வார்த்தைத் திருத்தங்களுடன் ஒப்புக்கொண்டார்கள். அதன்பின் தான் இதே திட்டங்கள் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களால் இவை பொது உடமைத் தீர்மானங்கள் என்றும் ராமசாமியை தங்கள் கட்சியில் சேர்த்துக் கொள்ளுவதற்கு ஆக ஜஸ்டிஸ் கட்சியார் கொடுத்த விலை என்றும் சொல்லப்பட்டதாகும்.

மற்றும் பார்ப்பன தேசீயப் பத்திரிக்கைகளாலும் பார்ப்பனக் கூலிகளாலும் கராச்சி தீர்மானத்தில் இருந்து திருடிய தீர்மானங்கள் என்றும் சொல்லப்பட்டதுமாகும்.

இவை பொதுஉடைமைத் தீர்மானமானாலும் சரி, கராச்சித் திட்டத்தில் இருந்து திருடியது என்றாலும் சரி, அவற்றால் நமக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை லாபமேதான். ஏனெனில் காங்கிரஸ்காரர்கள் நமக்கு திட்டமில்லை என்றோ அல்லது நமது திட்டங்கள் பிற்போக்கானவை என்றோ சொல்ல முடியாதல்லவா? கராச்சி திட்டத்தை நாம் திருடிக்கொண்டோம் என்றால் அதன் அருத்தம் என்ன? அதாவது கராச்சி திட்டத்தை நாம் நமது திட்டமாகக் கொண்டுவிட்டோம் என்பதுதானே அருத்தம். அப்படி இருக்கும்போது காங்கிரஸ்காரர்கள் திட்டமும் நம்முடைய திட்டமும் ஒன்று என்றாவதோடு அரசியலில் காங்கிரஸ் திட்டம் என்பதற்கும் ஜஸ்டிஸ் கட்சி திட்டம் என்பதற்கும் வித்தியாசமில்லை என்பதை காங்கிரஸ்காரர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்று ஆகிவிடவில்லையா.



ஆனால் உண்மையிலேயே நமது திட்டங்களுக்கும் காங்கிரசு திட்டம் என்பதற்கும் உள்ள வித்தியாசம் 2 முக்கியமான வித்தியாசமாகும். காங்கிரஸ் திட்டத்தில் பழய புராணங்களையும் ஜாதி, மத வித்தியாசங்களையும் காப்பாற்றவும், அவரவர் ஜாதி ஆச்சாரங்களை அமுலில் நடத்திக் கொள்ள உரிமையும் காப்பாற்றிக் கொடுப்பதாக உத்திரவாதமளித்திருக்கிறது. இவற்றை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. ஒப்புக்கொள்வதானால் நாம் சூத்திரர்களாகவும் தீண்டாத ஜாதியாராகவும் இருக்க நாமே சம்மதித்துக் கொண்டவர்களாவோம். அன்றியும் வருணாச்சிரமத்தையும் பறையன் பிராமணன் என்கின்ற உயர்வு தாழ்வையும் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாவோம்.

இன்றைய காங்கிரசின் கிளர்ச்சியெல்லாம் ஷை பிராமணத்தன்மையையும் பறத்தன்மையையும் காப்பாற்ற இருந்துவருகிறதே ஒழிய பொதுவாக மனித சமூகத்திற்கு எவ்வித நன்மைக்கு ஆகவும் இல்லை என்று நான் 15 ஷூ காலமாக சொல்லி வருவதற்கு கராச்சி தீர்மானத்திலுள்ள இந்த தத்துவமே தான் காரணம். ஆகவே இவ்வளவு பெரிய வித்தியாசம் நமது திட்டத்துக்கும் கராச்சி திட்டத்திற்கும் இருக்கும்போது கராச்சி திட்டமும் நமது திட்டமும் ஒன்று என்று எந்தப் பைத்தியக்காரனாவது சொல்ல முடியமா?

அன்றியும் நமது திட்டத்தில் உள்ள விஷயங்கள் கராச்சி திட்டத்தில் இருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா? நமது திட்டத்தில் ''அரசியல் உத்தியோகங்கள் பிரதிநிதித்துவங்கள் இந்த மாகாணத்தில் உள்ள எல்லா வகுப்பார்களுக்கும் (அதாவது முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாத இந்துக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகிய வகுப்பார்களுக்கு) அவர்கள் ஜனத்தொகை பெருக்கத்துக்குத் தக்கபடி கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும்'' என்பது ஆக உள்ள திட்டம் காங்கிரஸ்காரர்களின் கராச்சி திட்டத்தில் இருக்கிறதா? என்று கேட்கின்றேன்.

ஆகவே காங்கிரசுக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் உள்ள ஒரே ஒரு வித்தியாசமெல்லாம் ஜாதி பேதங்கள் ஒழிக்கப்பட வேண்டியதும் அதுவரையில் வகுப்புகளின் அளவுக்குத் தகுந்தபடிதான் உத்தியோகமும் பிரதிநிதித்துவமும் இருந்து வரவேண்டும் என்பதுமேயாகும்.

இந்த இடத்தில் உங்களுக்கு ஒரு விஷயம் விளக்கவேண்டியவனாக இருக்கிறேன்.

அதாவது ''ஜாதிபேதம் ஜாதிப்பிரிவு ஆகியவை ஒழிய வேண்டும் என்று சொல்லுகின்ற நீங்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பது ஜாதியை காப்பாற்றுவது ஆகாதா'' என்று பார்ப்பன தேசீயப் பத்திரிக்கைகள் என்பனவும் அவர்களது கூலிப்பத்திரிக்கைகளும் கூலிகளும் எழுதவும் கேட்கவும் செய்கின்றார்கள். இவர்களுக்குள் சிலர் தெரிந்தே விஷமத்துக்கு ஆக கேட்பவர்களும் சிலர் விஷயம் புரியாமல் பார்ப்பனர்கள் சொல்வதை நம்பி கேட்பவர்களும் உண்டு.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் அதை விளக்கிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னவென்றால் இன்று கராச்சித் திட்டமோ, காந்தியாரோ அல்லது காங்கிரசின் கொள்கையோ ஆகியவைகளில் அமுலில் இருக்கும் எந்தக் கொள்கையிலும் திட்டத்திலும் ஜாதி பிரிவுகளையும் பேதங்களையும் அடியோடு ஒழித்து விடுவது என்கின்ற விஷயம் இல்லவே இல்லை.

பூரண சுயேச்சை பெற்ற இந்தியாவில் பறையனும் பிராமணனும் இருக்கமாட்டார்கள் என்றோ உண்பனை தின்பனைக்கும் கொடுப்பனை கொள்வினைக்கும் அருகதையற்ற ஜாதிமத பேதங்கள் இருக்காது என்றோ ஒரு வாசகம் இருந்திருக்குமானால் மாத்திரம் எதற்கு ஆக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் வகுப்புவாதமும் பேசவேண்டும் என்று கேட்க காங்கிரஸ்காரர்களுக்கு உரிமை உண்டு. ஜாதிமதத்தில் நடுநிலைமை வகித்து பழைய சாஸ்திர புராண தர்மங்களை காப்பாற்றிக் கொடுப்பதாக உத்திரவாதமளிக்கும் காங்கிரசினிடம் எங்கள் பங்கு என்ன? எங்கள் உரிமை என்ன? என்று ஒருவர் கேட்டால் அவர் எப்படி வகுப்புவாதியாகவோ தேசத்துரோகி ஆகவோ ஆகிவிடக்கூடும் என்பதை யோசித்துப்பாருங்கள்.

பார்ப்பனர்கள் வெகு ஜாக்கிரதையாக தங்கள் உயர்வைக் காப்பாற்றிக் கொள்வதற்கு காங்கிரசினிடம் உத்திரவாதம் பெற்றுக்கொண்டு நம்மிடம் வந்து நமது தாழ்வையும் இழிவையும் நாம் காப்பாற்றிக் கொள்வதாய் உத்திரவாதம் கொடு என்று நம்மை கேட்டால் நாம் அத்தனை பேரும் முட்டாள்களா? அல்லது வகுப்பு நலத்தை விற்று வயிறு வளர்க்கும் குச்சிக்காரி பிள்ளைகளா? அல்லது பார்ப்பனக் கூலிகளா? என்று யோசித்துப் பாருங்கள்.

நான் இந்த காங்கிரசினுடையவும் பார்ப்பனர்களுடையவும் யோக்கியதைகளை தெரியாமல்படிக்கு பேசுவதாக நீங்கள் யாரும் கருதிவிடாதீர்கள்.

காங்கிரசின் யோக்கியதைக்கு சென்னை காங்கிரசுக்கு தோழர் ஆர்.கே. ஷண்முகம் அவர்கள் அனுப்பிய ஜாதி வித்தியாசம் ஒழிப்பு தீர்மானம் என்ன கதி ஆயிற்று என்பதையும் பார்ப்பனர்கள் யோக்கியதைக்கு தோழர் டாக்டர் வரதராஜுலுவால் கிளர்ச்சி செய்யப்பட்ட குருகுல சமபந்தி போஜன தீர்மானம் என்ன ஆயிற்று என்றும் யோசித்துப் பாருங்கள்.

இந்த இரண்டு காரியங்களும் போதுமான ஆதாரமல்லவா என்று கேட்கின்றேன்.

இந்த நாட்டில் வாழும் கோடிக்கணக்கான பார்ப்பனரல்லாத மக்களுக்கு இன்று முதலில் ஜாதி ஒழிப்பதும் சமமாய் நடத்தப்படுவது மல்லாத வேறு சுயராஜ்யம் என்ன வேண்டி இருக்கிறது என்று யோசித்துப் பாருங்கள். அவற்றை ஒப்புக்கொள்ளாத காங்கிரசை ஒரு பார்ப்பனரல்லாதார் ஆதரிக்கிறார்கள் என்றால் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார்களை



சூத்திரன் என்றும் பார்ப்பனர்களின் வைப்பாட்டி மக்கள் என்றும் பார்ப்பனர்களின் அடிமை என்றும் சொல்லுவதை மெய்யென்று ஒப்புக்கொண்டதாகத்தானே அருத்தமாகிறதா அல்லவா என்றும் யோசித்துப்பாருங்கள்.

ஆகையால் நாம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்பது ஜாதி ஒழிய வேண்டும் என்பதற்கு எவ்விதத்திலும் முரணான காரியம் ஆகாது என்பதுடன் அதிலும் காங்கிரசை கேட்பது எப்படியும் எந்த விதத்திலும் தவறாகாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜாதிபேதங்கள் ஒழிவது சட்டத்தினால்தான் முடிய வேண்டுமே ஒழிய பொதுஜன சம்மதத்தில் என்றால் ஒரு நாளும் முடியவே முடியாது.

ஏனெனில் ஜாதி காரணமாக பாடுபடாமல் கடவுளையும் மோக்ஷத்தையும் காட்டி ஊரார் உழைப்பில் வயிறு வளர்க்கும்படியான சௌகரியம் இருக்கும்போது பலாத்காரத்துக்கோ அல்லது தண்டனைக்கோ அல்லாமல் எவனாவது ஜாதி ஒழிய சம்மதிப்பானா என்று கேட்கிறேன்.

ஆகவே சட்டத்தின் மூலம் ஜாதிகள் ஒழிகின்றபோது சட்டத்தின் மூலம் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை எடுத்துவிடுவது சிறிதும் சிரமமான காரியம் அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்றியும், காங்கிரஸ்காரர்கள் முயற்சிப்பதாலோ அல்லது சட்டத்தினாலோ வகுப்புகள் இல்லாமல் போகுமானால் பிறகு யாருக்கு நாம் பிரதிநிதித்துவம் கொடுக்கப்போகிறோம்? ஆகவே அது தானாகவே மறைந்துவிடும். ஆதலால் ஜாதி வகுப்புகள் உள்ளவரை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பதும் அதுவும் ஜாதியை காப்பாற்றுகின்ற காங்கிரசினிடம் கேட்பதும் குற்றமாகவோ, ஜாதியை காப்பாற்றியதாகவோ ஆகாது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நிற்க, நமது தீர்மானங்கள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் காங்கிரசுக் காரர்களால் எவ்வளவு குறை சொல்லக்கூடியதாய் இருந்தாலும் நமக்கு அதைப்பற்றி கவலை இல்லை. ஆனால் இன்று நமது பாமர மக்களுக்கு அவை தேவையானதும் போதுமானதும் தானா அல்லவா என்பதை யோசித்துப்பாருங்கள்.

நமது திட்டங்களால் விவசாயிகளின் நிலைமை காப்பாற்றப்படுகிறது.

லேவாதேவிக்காரர்களால் ஏற்படும் கொடுமை ஒழிக்கப்படுகிறது.

வக்கீல்களின் தொல்லையும், விவகாரங்களின் தொல்லையும் ஒழிக்கப்படுகின்றது.

வியாபாரிகள், தரகர்கள் கொள்ளையும் ஒழிக்கப்படுகின்றது.

யந்திர முதலாளிகளின் கொடுமைகளும், தொழிலாளர்களின் கஷ்டங்களும் ஒழியப்படுகின்றன.



RangaRakes tamilnavarasam.com

மற்றபடி கல்வி குறைவு, மதுபானக் கெடுதி, தீண்டாமை இழிவு ஆகியவைகள் நீங்குவதுடன் சகல ஜாதிமத வகுப்பு மக்களுக்கும் அரசியல் பிரதிநிதித்துவத்திலும் உத்தியோகங்களிலும் விகிதாச்சார உரிமை கிடைப்பதன் மூலம் சமநிலை ஏற்பட வசதி அளிக்கிறது.

வரிவிதிப்பு, நிர்வாகம், ஜன சமூகத்துக்கு அனுகூலமான கூட்டுறவு ஸ்தல ஸ்தாபன நிர்வாகம், சம்பளக் கொள்ளை ஆகியவைகளும் ஒழுங்காக மக்களுக்கு அனுகூலமான வழியில் நடைபெறத்தக்க வண்ணம் அமைந்திருக்கிறது.

இவைகள் அனுபவ சாத்தியமான முறையிலேயே கைகூடும் மாதிரியாகவும் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே நமது திட்டங்கள் எவ்வளவு தீவிர சமதர்ம வாதியும் ஒப்புக் கொள்ளக்கூடியதும் இதற்கு மேல் எந்த சமதர்மவாதியாலும் வகுக்கக் கூடாததுமான அவ்வளவு மேன்மையானதாகும்.

இவைகள் செவ்வனே வெற்றிபெறவேண்டுமானால் நமக்குள் ஒற்றுமையும் கட்டுப்பாடும் இருக்கவேண்டும். பார்ப்பனரல்லாத மக்களுக்குள் காங்கிரசின் விஷமும் பார்ப்பனர்களின் சூழ்ச்சியும் பரவாதிருக்குமானால் இந்த பதினைந்து வருஷ காலத்துக்குள்ளாக இன்னும் எவ்வளவோ பயனுள்ள காரியங்களைச் செய்திருக்கலாம். ஆனாலும் குற்றமில்லை. இனியாவது ஒற்றுமையாய் இருப்போமானால் வரப்போகும் சீர்திருத்தத்தைப் பயன்படுத்தி நல்ல வேலை செய்யலாம் என்றே கருதுகிறேன்.

நாம் பணக்காரர்களுக்கு அடிமை என்று காங்கிரஸ்காரர் சொல்லுகிறார்கள். எப்படிப்பட்ட காங்கிரசுக்காரர்கள் என்றால் தங்கள் வயிறு வளர்ப்புக்கு காங்கிரசுக்காரர்களிடமும் பார்ப்பனர்களிடமும் கூலிபெற்று நம்மைக் குரைக்கும் கூட்டத்தார்கள் தான் சொல்லுகிறார்களே ஒழிய தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு நாணயமான ஒரு மார்க்கத்தை வைத்துக்கொண்டு நம்மை அடிமை என்று சொல்லுகிறவர்கள் யாருமே இல்லை. ஆதலால் அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

பணக்காரர்களாய் இல்லாவிட்டால் எந்த தேர்தலிலும் வெற்றிபெற முடியாது. தேர்தல்களுக்கு ஆயிரம் பதினாயிரம் கணக்கில் செலவு செய்ய வேண்டும்; மோட்டார் வேண்டும்; ஏஜண்டுகள் வேண்டும்; பிரசாரம் வேண்டும். இவை பணக்காரர்களால்தான் முடியும். ஆதலால் பணக்காரர்களைப் பற்றி காங்கிரசார் பேசுவது முட்டாள்தனமும் அயோக்கியத்தனமுமான காரியமாகும்.

நாம் சர்க்காருக்கு உடந்தையாய் இருக்கிறோம் என்பதை நம்மீது காங்கிரஸ்காரர்கள் மற்றொரு குறை கூறுகிறார்கள். இதுவேண்டுமென்றே கூறப்படும் குறும்பான பழியாகும்.



சர்க்காருடன் சண்டைபோடும்படியான திட்டம் காங்கிரஸ்காரர் களிடமாவது ஏதாவது இருக்கிறதா என்று பாருங்கள். காங்கிரஸ்காரர்கள் காந்தி-இர்வின் ஒப்பந்தத்திலேயே சர்க்காருக்கு எவ்வித தொந்தரவும் கொடுப்பதில்லை என்றும், வட்டமேஜை மகாநாட்டுக்குப் போவதாகவும் ஒப்புக் கொண்டதோடு இப்போதும் முனிசிபாலிட்டி ஜில்லாபோர்டு ஆகியவைகளுக்குச் சென்று ராஜவிஸ்வாசப் பிரமாணமும், ராஜபக்திப் பிரமாணமும், சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடக்கும் பிரமாணமும் செய்த பிறகு இனி எந்த விதத்தில் இவர்களைவிட மற்றவர்கள் சர்க்காருக்கு உதவியாயிருக்கிறார்கள் என்று கேட்கின்றேன். காங்கிரஸ்காரர்கள் மந்திரி வேலை பெற்று நிர்வாகம் நடத்துவது என்றால் அது சர்க்காருக்கு உதவி அல்லவா என்று கேட்கிறேன். நாம் வேறு எந்த வழியில் உதவி செய்துவிட்டோம்?

ஆகையால் நம்மைப்பற்றி வேண்டுமென்றே காங்கிரஸ்காரர்கள் கூறும் விஷமக் கூற்றுகளுக்குச் செவிசாய்க்காது நமது இயக்க நன்மைக்கு ஆன வேலைகளைக் கவனிக்க வேண்டியது நமது கடமையாகும்.

*குறிப்பு: வாடிப்பட்டியில் நடந்த மதுரை ஜில்லா ஜஸ்டிஸ் மாநாட்டில் 12.07.1936 இல் ஆற்றிய சொற்பொழிவு.*

குடி அரசு - சொற்பொழிவு - 19.07.1936



RangaRakes tamilnavarasam.com

# டாக்டர் சுப்பராயனும் C.R. ஆச்சாரியாரும்

சென்னை காங்கிரஸ் கட்டிடத்தில் ஜஸ்டிஸ் கட்சியை வரப்போகிற தேர்தலில் முறி அடிப்பதற்கு தீவிரப் பிரசாரம் செய்யவேண்டும் என்று யோசனை செய்து காங்கிரஸ்காரர்கள் 11-7-36ந் தேதி தோழர் சத்தியமூர்த்தி தலைமையில் ஒரு கூட்டம் கூட்டினார்கள். அதற்கு முக்கிய பேச்சாளராக டாக்டர் சுப்பராயன் அவர்களும் தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் பேசி இருக்கிறார்கள்.

தோழர்கள் சுப்பராயனும் ஆச்சாரியாரும் பிரிந்து பிரிந்து ஒன்றுகூடி இருப்பது இது ஒரு பத்தாவது தடவை ஆக இருக்கலாம். இருவரும் தலைக்கு ஒரு லட்சியத்தை பிடிவாதமாகக் கொண்டவர்கள். அந்த லட்சியங்கள் தான் அடிக்கடி அவர்களை பிரிக்கவும் கூட்டவும் செய்து வருகிறது.

அதென்ன வென்றால் தோழர் சுப்பராயனின் லட்சியமெல்லாம் எப்படியாவது மந்திரி பதவி பெறவேண்டும் என்பதேயாகும். தோழர் ஆச்சாரியார் லட்சியமோ எப்படியாவது பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்த பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை அழிக்க வேண்டும் என்பதேயாகும்.

ஆகவே அரசியல் என்பது யோக்கியமற்றதும் நாணயமற்றதுமாகும் என மேல்நாட்டு அறிஞர் ஒருவர் கூறியதை மெய்ப்பிக்க இவ்விரு தோழர்களின் சேர்க்கையும் பிரிகையும் அவர்களது அரசியல் வாழ்க்கைகளுமே போதுமான ருஜுவாகும்.

தோழர் சுப்பராயன் அவர்கள் அரசியல் வாழ்க்கை ஆரம்பிக்கும்போது தோழர் ராஜகோபாலாச்சாரியரால் அக்ஷராப்பியாசம் செய்யப்பட்டவர். பிறகு ஜஸ்டிஸ் கட்சிக்கு பதவி கிடைக்கக்கூடும் என்று தெரிந்ததும் அதில் தாவி சட்டசபை புகுந்து ஜஸ்டிஸ் மந்திரிக்கு காரியதரிசியாய் இருந்தவர். பிறகு ஜஸ்டிஸ் கட்சி தோற்றுப் போகலாம் என்றும் வெற்றி பெற்றாலும் தனக்கு பெரும் பதவி கிடைக்காதென்றும் தோன்றிய உடன் அதிலிருந்து வெளிவந்து காங்கிரசை ஆதரித்தவர்.

1926-ல் ஜஸ்டிஸ் கட்சிக்கு மந்திரி பதவி ஏற்க போதிய பலமில்லாதபோதும் காங்கிரசில் மந்திரி பதவி ஏற்க தங்களுக்குள் கட்டுப்பாடில்லாமல் கலகம் விளைந்தபோதும் காங்கிரசின் தயவால் தோழர்கள் சி. விஜயராகவாச்சாரியார், சி. ராஜகோபாலாச்சாரியார் ஆகியவர்களால் மந்திரி ஆக்கப்பட்ட மூவரில் முதல்வராய் இருந்து கொண்டவர். பிறகு அந்த மந்திரி ஸ்தானங்களுக்கு பலம் குறைந்து சர்க்காரால் தாங்கள் வெளியாக்கப்படக் கூடும் என்று தெரிந்த உடன் சர்க்காருக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் நல்ல பிள்ளையாய் நடந்துகொள்ளுகிறேன் என்று உறுதி கொடுத்து காங்கிரசை வைது கொண்டும் சர்க்காரை ஆதரித்துக் கொண்டும் ஜஸ்டிஸ் கட்சிக்கு தாசராகவும் இருந்து முதல் மந்திரி பதவியை கடைசிவரை அனுபவித்து வந்தவர். இச்சமயத்தில் அவரால் பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கு ஏற்பட்ட நன்மைகளை நாம் மறக்கவில்லை. அதற்கு ஆக அவருக்கு நாம் எப்போதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அக்காலத்தில் பார்ப்பனர்களின் எதிர்ப்பும் தொல்லையும் அவருக்கு அதிகமாய் இருந்தது என்றாலும் துணிந்து அநேக நன்மையான காரியங்களைச் செய்திருக்கிறார். ஆனால் அவை அவ்வளவும் கொள்கைக்கு ஆகச் செய்ததாக இல்லாமல் கூலிக்கு ஆகச் செய்ததாகவே பின்னால் காட்டிக் கொண்டதானது மிகவும் வருந்தத்தக்க காரியமாகும். அதன் பயனாகவே அடுத்த தேர்தலில் பலவித கஷ்டம் ஏற்பட்டு மந்திரி பதவி கிடைப்பதற்கில்லாமல் போனவுடன் மறுபடியும் பார்ப்பனர்கள் தயவைப் பெற அன்று முதல் இன்றுவரை பாடுபட்டு பழயபடி மறுபடியும் தோழர் ஆச்சாரியாரின் ஜோதியில் கலந்து கொண்டார். அதனால் முன்பு தான் ஜஸ்டிஸ் கட்சியின் தாசராய் இருக்கும்போது என்ன என்ன செய்தாரோ என்ன என்ன பேசினாரோ அதற்கு விரோதமாய் இப்போது பேச முன் வந்துவிட்டார்.

ஆச்சாரியார் தனக்கு ஆழம் பார்த்து சொல்வதற்கு தோழர் சுப்பராயனை பயன்படுத்திக் கொள்ளத்தக்க நிலைமைக்கு சுப்பராயன் அவர்கள் துணிந்து இறங்கிவிட்டார்.

ஆச்சாரியாரும் தோழர் சுப்பராயனை முன்னோடும் பிள்ளையாக ஏற்றுக்கொண்டுவிட்டார். இந்த நிலையில் இருவரும் ஒன்றுகூடி காங்கிரஸ் கூட்டத்தில் பேசி இருப்பது மிகவும் பரிகாசமான காரியமாகும்.

தோழர் சுப்பராயன் பேசியிருப்பது என்னவென்றால் ''ஜஸ்டிஸ் கட்சி வகுப்பு உணர்ச்சி முறையில் வேலை செய்யும் அமைப்பை மாற்றிக் கொண்டது என்றாலும் வகுப்பு முறையிலிலேயே தான் வேலை செய்து வருகிறது. ஜனநாயக வளர்ச்சியை உத்தேசித்து வகுப்பு உணர்ச்சிகளை விட்டுவிட வேண்டும்''

''காங்கிரஸ் தேசத்துக்கு சேவை செய்திருக்கிறது என்றாலும் காங்கிரஸ் ஸ்தாபனங்களிலும் வகுப்பு உணர்ச்சி ஆரம்பித்திருக்கிறது. சுயேச்சைக்கு ஆக 20 வருஷ காலமாகப் போராடி வந்திருக்கும் காங்கிரஸ்காரர்கள் இந்த வகுப்புப் புண் பரவவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்'' என்று பேசியிருக்கிறார். மற்றும்,



RangaRakes tamilnavarasam.com

‘‘தேசத்திற்கு தியாகம் செய்தவர் வரப்போகும் தேர்தலில் சலுகை பெறவேண்டியது நியாயமே. ஆனபோதிலும் காங்கிரசில் சேரவிரும்பும் தேசீயவாதிகளையும் காங்கிரஸ் வரவேற்குமென்று நம்புகிறேன். அவர்களுக்கும் தேச சேவை செய்ய சமயம் அளிக்க வேண்டும்’’.

‘‘மந்திரி பதவி ஏற்பதே நலம். மந்திரி பதவி ஏற்றாலொழிய நிர்மாணத் திட்டத்தை நடத்தி வைக்க முடியாது. புதிய சட்டசபையில் காங்கிரஸ் நிச்சயமாக வெற்றிபெறும். உத்தியோகமேற்காவிட்டால் நம் கட்சியில் இருந்து சிலர் மாறிவிடுவார்கள். அதிகாரத்துக்கு வரும் கட்சி இவர்களில் சிலரை இழுத்துக்கொண்டு பலந்தேடிக்கொள்ளுவார்கள். ஆகவே காங்கிரஸ் மந்திரி பதவி ஏற்கவேண்டியது அவசியம்’’ என்று பேசியிருக்கிறார்.

அவருக்குப் பின் பேசிய தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் தனது பேச்சின் ஆரம்பத்தில் தோழர் சுப்பராயனை தட்டிக் கொடுக்கிறார். ஆனாலும் அவரை தேசபக்தர் என்று சொல்ல ஆச்சாரியாருக்கு நாவெழ வில்லை. இதுவிஷயத்தில் ஜாக்கிரதையாகவே பேசி தட்டிக்கொடுத்திருக் கிறார். அதாவது,

‘‘சுப்பராயன் இப்போதுதான் முதல் தடவையாக அசல் காங்கிரஸ் மேடையில் பேசுகிறார். அவர் காங்கிரஸ் அபிமானியாகவும் காங்கிரஸ் மெம்பராகவும் இருந்திருந்தாலும் இப்போதுதான் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்திருக்கிறார்’’.

‘‘அவர் தன்னைப்பற்றிப் பேசியதாக சிலருக்கு தோன்றி இருக்கலாம். (அதாவது தனக்கு ஒரு மந்திரி வேலை கொடுக்கவேண்டும் என்று ப-ர்) ஆனாலும் அதையும் உறுதியாகவும் நியாயமாகவும் பேசி இருக்கிறார். ஆகவே இனி அவர் உறுதியான காங்கிரஸ்காரரென்று சொல்லலாம். மந்திரி பதவிக்கு ஆக சுப்பராயன் காங்கிரசில் சேர்ந்ததாக நினைக்காதீர்கள்.’’

‘‘ஜஸ்டிஸ், காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளேதான் இருக்க வேண்டும். மூன்றாவது கட்சி வேண்டியதில்லை. மூன்றாவது கட்சித் தலைவர் தோழர் எஸ். முத்தையா முதலியார் தேசபக்தரேயாவார். அவர் ஆரம்பித்த மூன்றாவது கட்சிக்கு பதவி ஏற்க சந்தர்ப்பம் கிடைக்கப் போவதில்லை. இது எப்படியாவது ஒரு கட்சியுடன் கலந்துதான் தீரும்’’ என்று சொல்வதன் மூலம் தோழர் முத்தையா முதலியாரையும் காங்கிரசுக்கு கூப்பிடுகிறார்.

மேலும் பேசும்போதுஃ-

‘‘ஜஸ்டிஸ் கட்சியை ஒழித்து ஆகவேண்டும். அக்கட்சி மீது கோபமுள்ளவர்கள் எல்லோரும் காங்கிரசில் சேருங்கள். காங்கிரசில் வகுப்புவாதம் நுழையக் கூடாதுதான். ஆனபோதிலும் காங்கிரசு கங்கா நதி போன்றதாகையால் எவ்வளவு வகுப்புவாதம் வந்தாலும் அதை சரிப்படுத்தி விடும் - வகுப்புவாதம் இந்தியா எங்கும் இருக்கிறது. காங்கிரஸ் மந்திரி பதவி ஏற்றாலும் சில வாரங்களுக்குமேல் நீடிக்காது’’ என்று பேசி இருக்கிறார்.



ஆகவே இவர்கள் இருவரும் மற்றும் பலரும் பேசியிருப்பவைகளில் முக்கியமாய் காணப்படுவதெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியை எப்படியாவது ஒழிக்க வேண்டும், அதற்கு ஆக யாரை வேண்டுமானாலும் எப்படிப்பட்ட வகுப்பு வாதியையும் காங்கிரசில் சேர்த்துக் கொள்ளலாம் என்பதும், காரணம் என்ன வென்றால் ஜஸ்டிஸ் கட்சிக்கு வகுப்புவாதக் கட்சி என்பதும், அது அனுபவிக்கும் மந்திரி பதவிகளை எப்படியாவது கைப்பற்றவேண்டும் என்பதுமல்லாமல் வேறொன்றும் காணப்படவில்லை.

ஆச்சாரியார் ‘‘வகுப்பு வாதம் இந்தியா முழுவதிலும் தான் இருக்கிறது’’ என்று ஒப்புக்கொள்ளுகிறார். டாக்டர் சுப்பராயன் அவர்களும் மற்றும் இரண்டொருவரும் வகுப்புவாதம் காங்கிரசிலுமிருக்கிறது என்று பச்சையாகச் சொல்லிவிட்டார்கள். தோழர் ஆச்சாரியாரோ காங்கிரசிலிருக்கும் வகுப்பு வாதம் ஒன்றும் கெடுதி செய்யாது என்கிறாரே ஒழிய வகுப்புவாதம் காங்கிரசில் இல்லையென்று சொல்ல அவருக்கே தைரியம் இல்லை.

இவை ஒருபுறமிருக்கட்டும். ஜஸ்டிஸ்கட்சியைப் பற்றி இவ்வளவு ஆத்திரமும், துவேஷமும் உள்ள இவர்களுடைய பேச்சுக்களை எவ்வளவுதான் நாம் துருவித் துருவிப் பார்த்தாலும் ஜஸ்டிஸ்கட்சியினால் தேசத்துக்கு ஏற்பட்ட கெடுதி இன்னது என்று ஒருவராவது ஒரு காரியத்தையாவது எடுத்துச் சொல்லவில்லை என்பது மிகவும் குறிப்பாய் கவனிக்க வேண்டிய விஷயமாகும். அன்றியும் வகுப்புணர்ச்சி என்பதன் தத்துவமும் வகுப்புவாதம் என்பதின் தத்துவமும் என்ன என்று பார்த்தால் பார்ப்பனர்களுடைய ஏகபோக ஆதிக்கம் குறைவுபடுகின்றதே என்பதல்லாமல் மற்றபடி அதனால் தேசீயமோ தேசாபிமானமோ எப்படிப் பாதிக்கப்படும் என்பதும் விளங்காத காரியமாகும். அதைக்கூட யாரும் இதுவரை விளக்கவுமில்லை.

இந்நிலையில் தோழர் சுப்பராயன் அவர்களின் தேசியவாதமெல்லாம் தனக்கு ஒரு மந்திரி உறுதி என்று சொல்லிவிட்டால் நாளையத் தினமே அவர் ஜஸ்டிஸ் கட்சியில் சேருவதில் ஆட்சேபணை சிறிதுகூட இருக்கவே இருக்காது. அதுமாத்திரமல்லாமல் சர்க்காரில் ஏதாவது 2, 3 ஆயிரம் ரூபாய் சம்பளத்துக்கு குறைவில்லாத ஒரு உத்தியோகம் கொடுக்கப்படுவதா யிருந்தால் கூட 5 நிமிஷத்துக்குள் சர்க்காரின் மீது முன்பு கனம் சீனிவாச சாஸ்திரிகள் போன்றவர்கள் கவிபாடினது போல் கவிபாடுவதற்கும் ஆட்சேபணை இருக்காது. இவைகளை எல்லாம் தோழர் சுப்பராயன் அவர்களின் பழைய ஜாதகங்களைப் பார்த்துச் சொல்லுகிறோமே ஒழிய கற்பனையாலோ ஆருடத்தாலோ சொல்லுவதல்ல. அதற்கு இணங்கவே தோழர் சுப்பராயன் அவர்கள் பிரசங்கத்திலும் தொனிப்பதை பார்க்கலாம். அதாவது ‘‘காங்கிரசுக்காக தியாகம் செய்தவர்களுக்கே காங்கிரஸ் தேர்தலிலும் பதவிகளிலும் பயன் அனுபவிக்க உரிமை உண்டு என்றாலும் காங்கிரசில் சேர விரும்பும் (தன்னைப் போன்ற பலர்) தேசீயவாதிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்’’ என்று சொல்லி இருக்கிறார். ஆச்சாரியாரும்



RangaRakes tamilnavarasam.com

இதை சுப்பராயன் அவர்கள் தனக்காக பேசிக் கொண்டது என்றாலும் ஜாக்கிரதையாக பேசி இருக்கிறார் என்று சுட்டிக்காட்டினார். இதிலிருந்து டாக்டர் சுப்பராயன் கொள்கையும் அவருடைய தெய்வமும் மந்திரி ஆவது என்பது ஒன்றைத்தவிர வேறு ஒன்றுமே இல்லை என்பது நன்றாய் விளங்கும். இப்படிப்பட்டவர் ஜஸ்டிஸ் கட்சியை அதுவும் ஜஸ்டிஸ் கட்சிக்கு 2, 3 தடவை தாசானுதாசராக இருந்து பயன் அனுபவித்தவர் இன்று ஜஸ்டிஸ் கட்சியை வகுப்புவாதம் என்று குறை கூறுவதும் பார்ப்பனர்களுடன் கூடிக்கொண்டு தனது சமூகத்தை காட்டி கொடுப்பதும் என்றால் இதைப்பற்றி நாம் என்ன எழுதக்கூடும்? அவரது பழைய புராணங்களை புரட்டவேண்டியது தவிர வேறு ஒன்றும் இல்லை.

தோழர் ஆச்சாரியார் வகுப்பு வாதத்துக்கு பரிகாரம் இன்னது என்று சொல்லாமல் காங்கிரசுக்குள் வந்து சேர்ந்துவிட்டால் வகுப்புவாதம் பறந்து ஓடிப்போகும் என்று சொன்னால் அதன் அருத்தம் என்ன? என்று கேட்கின்றோம்.

காங்கிரசில் தாங்களே தலைவர்கள் என்பதும் காங்கிரசுக்குள் ஒருவன் வகுப்புவாதம் பேசினால் அவனைத் தேசத் துரோகி என்று வைது அடக்கி விடலாம் என்பதுமல்லாமல் வேறு என்ன அருத்தம் என்று யோசித்துப் பாருங்கள்.

காங்கிரசில் ஆதியில் இருந்த எத்தனையோ பேர் இன்று ஏன் வகுப்புவாதிகளாய் இருக்கிறார்கள்? காங்கிரசில் இருந்த சி.ஆர். ரெட்டியார் ஏன் ஒரு உத்தியோகம் கிடைத்தவுடன் அடிக்கடி காங்கிரசை விட்டுவிட்டு வகுப்புவாதக் கட்சிக்கு போய்விடுகிறார்? காங்கிரசில் இருந்த தோழர் முத்தய்ய முதலியார் ஏன் வகுப்புத் தீர்ப்பு எழுதினார்? மற்றும் காங்கிரசில் அதி தீவிர காங்கிரஸ் வாதிகளாய் இருந்த ஆர்.கே. ஷண்முகம், வரதராஜுலு, ஈ.வெ. ராமசாமி முதலியவர்கள் எல்லாம் ஏன் வகுப்புவாதிகள் ஆனார்கள்?

ஆகவே காங்கிரசுக்குள் ஒருவன் வகுப்புவாதியானால் அவன் வீரனாகவும் சுயமரியாதைக்காரனாகவும் இருந்தால் தைரியமாய் வெளியில் வந்து தன் காலில் நிற்க முயற்சிப்பதும் வீரமும், மானமும் இல்லாத மக்களுக்கு வகுப்புணர்ச்சி ஏற்பட்டாலும் காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கு அடிமையாய் இருந்து அவர்கள் பின் கவிபாடி வயிறு வளர்க்க வேண்டியதும் தான் இதுவரை அனுபவமாய் இருந்து வருகிறது. அந்தக் காரணத்தாலேயே பதவி வேட்டைக்கோ வயிறு வளர்ப்புக்கோ காங்கிரசில் வந்து சேருகிறவன் எவ்வளவு வகுப்பு வாதியாய் இருந்தாலும் நமக்கு அடங்கித்தான் கிடக்க வேண்டும் என்கின்ற தைரியத்தின் மீதே தோழர் ஆச்சாரியார் எப்படிப்பட்ட வகுப்புவாதியும் காங்கிரசுக்கு வந்தால் அடங்கிவிடுவான் என்று பந்தயம் கட்டி கூறியிருக்கிறார்.

பொதுவாக தோழர் ராஜகோபாலாச்சாரியார் இடமாவது வகுப்புவாதம் இல்லை என்று யாராவது சொல்ல முடியுமா என்ற யோசித்துப் பாருங்கள்.



அவர் ஒரு ''பிராமணர்'' அவர் வாழ்க்கை, வேஷம், மனோபாவம் எல்லாம் அதை அனுசரித்தே இருக்கிறதா இல்லையா? என்று பாருங்கள்.

அவரைப் பொறுத்தவரையில் ஏதாவது ஒரு விஷயத்தில் ''பிராமண''த் தன்மையை விட்டுவிட்டேன்'' என்று சொல்வதானாலும் இந்த நாட்டில் உள்ள பார்ப்பனர்கள் எத்தனை பேர்கள் வகுப்புணர்ச்சியை விட்டிருக்கிறார்கள்? பார்ப்பனரல்லாதார்களிலும் எத்தனை பேர் தங்கள் ஜாதி உணர்ச்சியை, ஜாதி தர்மம் என்பதை விட்டிருப்பார்கள்?

அதுபோலவே தீண்டப்படாத மக்கள் என்போர்களை எத்தனை பார்ப்பனரும், எத்தனை பார்ப்பனரல்லாதாரும் வகுப்புணர்ச்சி இல்லாமல் நடத்துகிறார்கள்? என்று சொல்லக்கூடும்.

ஆகவே வெகு காலமாக வெகு பிரயத்தனமாக இருந்து வரும் வகுப்புணர்ச்சித் தொல்லையை ஒழிக்க வகுப்பு சமத்துவம் அரசியலிலாவது கொடுங்கள் என்று கேட்டால் அப்படி கேட்பதுவே வகுப்புணர்ச்சி ஆகி விட்டால் மற்று வேறு எந்த வழியில் தான் வகுப்புக் கொடுமைகளும் வகுப்பு இழிவுகளும் தீர்க்கப்படுவது என்று ஆச்சாரியார் அவர்களைக் கேட்கின்றோம்.

அல்லது காங்கிரசுதானாகட்டும் இந்த 50 வருஷகாலமாக இந்த வகுப்பு பேத உயர்வு தாழ்வு தொல்லையையும் கொடுமையையும் ஒழிக்க ஏதாவது ஒரு முயற்சி செய்ததா என்றும் வணக்கமாய் கேட்கின்றோம். வகுப்பினால் பெருமையும் லாபமும் அடையும் மக்கள் வகுப்பினால் சிறுமையும் இழிவும் நட்டமும் அடையும் மக்களைப் பார்த்து வகுப்பு உணர்ச்சி வேண்டாம் என்றால் அதில் சிறிதாவது நாணயமோ யோக்கியமோ இருக்குமா என்று யோசித்துப் பாருங்கள்.

ஆகவே தோழர் ஆச்சாரியார் ஆகட்டும், வேறு யார் தானாகட்டும் வேறு எந்தப் பிரச்சினையின் மீதாவது ஜஸ்டிஸ் கட்சியை குறை கூறுவதானால் அதில் ஏதாவது உண்மை இருக்கிறதா என்று ஆராயப் புகலாம். அப்படிக்கு இன்றி வெறும் வகுப்புணர்ச்சி தான் ஜஸ்டிஸ் கட்சி மீது உள்ள குற்றம் என்றால் எப்பாடுபட்டாவது தமிழ் மக்கள் அந்தக் காரணத்துக்கு ஆகவே அதாவது ஜஸ்டிஸ் கட்சி வகுப்பு நீதி கொண்டிருப்பதற்கு ஆகவே ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்து அது வெற்றி பெறும்படி செய்யவேண்டியது கடமை என்று கூறுவோம்.

கடசியாக இன்றைய வகுப்புணர்ச்சி என்பது எந்த தேசீயத்தையும் தடைப்படுத்தி விடாது. எந்த சுயராஜ்யத்தையும் நிறுத்திவிடாது. தேசத்துக்கு பெரும் கேடாய் உளமாந்தை போன்று இருந்து வரும் பார்ப்பனீய ஆதிக்கத்தைத்தான் சமன்படுத்தும். ஆகையால் ஜாதியால் வகுப்பால் இழிநிலையில் தாழ்ந்த வகுப்பில் என்று இருக்கும் மக்கள் சுத்த ரத்த ஓட்டமும் மான உணர்ச்சியும் இருக்குமானால் பார்ப்பனீயத்தை தகர்த்தெரிய ஜஸ்டிஸ் கட்சியை ஆதரியுங்கள் என்று கூறி முடிக்கிறோம்.

குடி அரசு - தலையங்கம் - 19.07.1936



RangaRakes tamilnavarasam.com

# வெளிநாட்டிலுள்ள பார்ப்பனரல்லாத தோழர்களுக்கு வேண்டுகோள்

தோழர்களே!

பார்ப்பனரல்லாதார் இயக்கப் பிரசாரம் செய்வதற்காக ''தமிழ்நாடு பார்ப்பனரல்லாதார் இயக்கப் பிரசார மத்தியக் கமிட்டி'' என்ற பெயரால் ஒரு கமிட்டி ஏற்படுத்தி அப்பிரசாரத்திற்கு ஜில்லாக்கள் தோறும் நிதி வசூலித்து வருகிறோம். வசூல் செய்து முடிந்ததும் ஜில்லாக்கள் தோறும் பிரசாரம் செய்ய போகிறோம். ஒரு சிறு தமிழ் தினசரி பத்திரிகையும் துவக்க எண்ணியுள்ளோம்.

ஆதலால் கொளும்பு, பர்மா, சிங்கப்பூர், பினாங், ஜாவா, சுமத்திரா, கொச்சின், சைனா, டர்பன் ஆகிய வெளிநாடுகளிலுள்ள பார்ப்பனரல்லாத தோழர்கள் எங்கள் பிரசாரக் கமிட்டிக்கு உதவி செய்ய வேண்டுகிறோம். முக்கியஸ்தர்களாய் உள்ளவர்கள் முயற்சி எடுத்து பணம் வசூலித்து அனுப்ப விரும்புகிறோம். அந்தப்படி வசூலித்து அனுப்பப்படும் ஒவ்வொரு காசும் பார்ப்பனரல்லாதார் சமூகம் சுயமரியாதை பெறவும் பார்ப்பனீயம் அழிக்கப்படவும் பயன்படுத்தப்படும். அவ்விதம் உதவி செய்பவர்கள் டை கமிட்டி பொக்கிஷதார் விருதுநகர் (சேர்மன்) தோழர் வி.வி. இராமசாமி அவர்கள் பெயருக்கு செக்கு எழுதி ''குடி அரசு'' ஆபீஸ் மூலம் அனுப்பும்படி வேண்டுகிறோம். மூவார் தோழர்கள் இக்காரியத்துக்கு வழிகாட்டியிருப்பதை சென்றவாரக் குடி அரசில் பிரசுரித்திருக்கிறோம்.

தங்கள் ஆதரவுகளை எதிர்பார்க்கும்

**ஊ.பு.அ. சௌந்திரபாண்டியன்,**

**ஈ.வெ. ராமசாமி.**

குடி அரசு - அறிவிப்பு - 26.07.1936



# காங்கிரஸ் சூழ்ச்சி விளக்கம்

தோழர்களே! சமீபத்தில் வரும் அரசியல் சீர்திருத்தமானது எவ்வளவு தான் பயனற்றது என்றும் அதை உடைத்து எரியவேண்டும் என்றும் காங்கிரஸ்காரர்களாலும் மற்றும் பல தேசீயவாதிகள் என்பவர்களாலும் வாயினால் சொல்லப்பட்டாலும் காரியாம்சத்தில் எப்படியாவது சீர்திருத்தத்தின் கீழ்வரும் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்று ராஜவிஸ்வாசம், ராஜபக்தி, ராஜிய சட்டத்துக்கு கீழ்ப்படிந்து நடப்பதற்கு கட்டுப்படுதல் என்கின்ற காரியங்களுக்கு சர்க்காருக்கு சத்தியம் செய்து கொடுத்து மந்திரி பதவிகளை ஏற்று அதை அமுல் நடத்துவதென்றே சொல்லிக்கொண்டு இப்பொழுதிருந்தே எல்லா அரசியல் கட்சியாருள்ளும் போட்டிப் பிரசாரங்கள் நடந்துவருகின்றன.

இந்த லட்சணத்தில் இந்த கொள்கை உடைய காங்கிரஸ்காரர்கள் ஜஸ்டிஸ் கட்சி ராஜவிஸ்வாச கட்சியென்றும், அதை 500 கெஜ ஆழத்தில் வெட்டிப் புதைக்க வேண்டும் என்றும் சட்டசபைத் தேர்தல்களில் தங்களுக்கே ஓட்டுக்கொடுக்க வேண்டும் என்றும் அதிதீவிரமாய் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

இது ''அவன் கெடக்கிறான் குடிகாரன் எனக்கு இரண்டு சொப்பு கள்ளு ஊத்து'' என்று வெறிகாரன் சொல்லுவதுபோல் இருக்கிறது. காங்கிரஸ்காரர் என்பவர்களுக்கு இன்று மானம், வெட்கம், நாணயம், ஒழுக்கம், யோக்கியதை ஒன்றும் இல்லாமல் போய்விட்டது. ''வெட்கம் கெட்டவன் சொந்தக்காரன்'' என்பது போல எதை விற்றாவது சட்டசபைக்குப் போகவேண்டும், என்ன செய்தாவது மந்திரி ஆகவேண்டும் என்கின்ற ஒரு ஆசையே அவர்களுடைய மானம், வெட்கம், நாணயம் எல்லாவற்றையும் உதிர்த்துவிட்டு திரியும்படி செய்கிறது. சட்டசபைகள் மட்ட சபைகள் என்றும், கழுதைகளும் நாய்களும் தான் சட்டசபைக்கு போகும் என்று சொன்ன காங்கிரசுக்காரர்கள் இன்று சட்டசபைக்கு போகவேண்டும் என்று சொல்வதனால் ஒன்றா சட்ட சபை மட்டசபை அல்லாமல் இன்று உயர்ந்த யோக்கியதை உள்ள சபையாக ஆகி இருக்கவேண்டும், இல்லாவிட்டால் இவர்கள் மற்றவர்களைச் சொன்ன கழுதைகள், நாய்கள் என்கின்ற நிலையை அடைந்திருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் இவர்கள் எதற்கு ஆக சட்டசபைப் பித்துப்பிடித்து ஆடுகிறார்கள்? மந்திரி பதவிக்கு முள்ளின் மீது நின்று தவம் செய்கிறார்கள்? என்பதை யோசித்துப் பாருங்கள்.



RangaRakes tamilnavarasam.com

அன்னியர்களை காங்கிரஸ்காரர்கள் நாய் கழுதைகள் என்று சொன்னதை இவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட்டு அந்தப்பதவிகளுக்கு தாங்கள் போகவேண்டும் என்று ஆசைப்படுவதின் அருத்தம் என்ன? என்று பாருங்கள்.

அந்தக்காலத்தில் இவர்கள் சட்டசபைக்கு போவதற்கு யோக்கியதை இல்லாததினால், சீ அந்தப் பழம் புளிக்கும் என்றும், அதைச் சாப்பிடுகிறவன் நாய், கழுதை என்றும் சொல்லவேண்டி வந்தது. இப்போது பாமர மக்களுக்கு தாராளமாய் ஓட்டுகள் ஏற்பட்டிருப்பதால் அவர்களின் அறியாமையை ஆதாரமாய்க்கொண்டு அவர்களை ஏமாற்றி ஸ்தானங்களைக் கைப்பற்றி விடலாம் என்கின்ற தைரியத்தில் ஆசைவெட்கமறியாது என்பதுபோல் மற்றவர்களை தாங்கள் முன் சொன்ன ''கழுதை, நாய்கள்'' நிலைமைக்கு தாங்களே போக தைரியம் கொண்டுவிட்டார்கள்.

இந்த லட்சணத்தில் ''மந்திரி பதவிகளையும் அடைந்து ஆகவேண்டும் இல்லாவிட்டால் வங்காளக் குடாக் கடலில் விழுந்து சாகவேண்டும்'' என்கின்ற சபதம் எடுத்துக்கொள்ளக்கூடிய ஆத்திரத்தை காட்டுகிறார்கள். மந்திரி பதவி எதற்காக ஏற்க வேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள் என்பதை சற்று யோசித்துப் பாருங்கள். மந்திரி பதவிகளை ஏற்பதன் மூலம் மந்திரி பதவிகளை இல்லாமல் செய்துவிடுவதற்கு ஆகவாம். அதாவது மந்திரி பதவி ஏற்று சீர்திருத்தத்தை உடைத்தெரிவதாம். இதை எந்த மடையராவது நம்பமுடியுமா? ''கேழ்வரகைப் பிழிந்தால் நெய் ஒழுகும்'' என்றால் சொல்லுபவன் எவ்வளவுதான் அயோக்கியனாக இருந்தாலும் அதை நம்புகிறவன் எவ்வளவு மடையனாக இருக்க வேண்டும் என்பதைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

தாசித் தொழில்களை அடியோடு ஒழிக்கவேண்டும் என்றால் ஊரில் உள்ள தாசிகளை எல்லாம் நாமே வைத்துக்கொள்ளவேண்டும் என்று ஒரு விவசாரக்காரன் சொல்லுவதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கின்றேன். தாசிகளை ஒழிப்பவன் உள்ள தாசிகளையெல்லாம் தானே உபயோகப்படுத்திக்கொண்டு மற்றவர்களுக்கு இல்லாமல் செய்துவிடுவதன் மூலம் தாசிகள் எப்படி ஒழிந்து விடமுடியும்? அவர்களுக்கு சாப்பாட்டுக்கு கொடுத்துத்தானே ஆகவேண்டும்? இதனால் தாசிகளால் ஏற்படும் கெடுதி எப்படி ஒழிக்கப்பட முடியும்? அதை அனுசரித்துத்தான் காங்கிரஸ் தலைவர் தோழர் ஜவஹர்லால் நேரு அவர்கள் மந்திரி பதவி ஏற்று சீர்திருத்தத்தை உடைப்பது என்பது முட்டாள்தனமான காரியம் என்றும் மந்திரி பதவி ஏற்றால் சீர்திருத்தத்தையும் அரசாங்கத்தையும் நடத்திக் கொடுத்ததுபோல் ஆகும் என்றும் பந்தயம் கட்டி கூறிவருகிறார். அதற்கு சமாதானம் சொல்ல யோக்கியதை இல்லாத தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர்களும் அவர்களது அடிமைகளும் கூலிகளும் ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரி பதவி ஏற்றால் அது தேசத்துரோகம் என்றும், தாங்கள் மந்திரி பதவி ஏற்றால் அது தேசாபிமானம்



என்றும் உளறித் திரிகிறார்கள். இதன் கருத்து என்ன என்று யோசித்துப் பாருங்கள். பொது ஜனங்கள் முட்டாள்கள், மடையர்கள், பகுத்தறிவில்லாத களிமண் தலையர்கள் என்று கருதிக்கொண்டிருக்கிற அகம்பாவமல்லாமல் வேறு எந்த வகையில் அந்த வார்த்தைகள் யோக்கியமான வார்த்தைகளாகும் என்று நான் கேட்கின்றேன்.

காங்கிரஸ்காரர்களுக்கு இன்று அரசியல் திட்டம் என்ன என்று யோசித்துப் பாருங்கள். அதன் மூலம் அவர்களுக்கு அரசியல் ஞானம் இருக்கிறதா என்று யோசித்துப்பாருங்கள். இந்தியர்களுடைய சிறப்பாக இந்துக்களுடைய மதசம்பந்தமான குருட்டு நம்பிக்கைகளையும் மூடபக்தி களையும் தங்களுக்கு ஆதரவாய்க் கொண்டு மதபோதக்காரர்களுடைய பித்தலாட்ட முறைகளைப் பின்பற்றி மக்களை ஏமாற்றுகிறார்கள்.

உதாரணமாக அவர்கள் தேர்தலுக்கு நின்றால் காந்தியாருக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்பதும் காந்தியாரே கைகூப்பி கும்பிட்டு ஓட்டு கேட்பது மாதிரிப் பொம்மைப் படம் போட்டு ஊர்கோலம் விடுவதுமான பித்தலாட்டமே செய்கிறார்கள். நல்ல பொறுப்புள்ள அரசாங்கம் இருந்தால் எலக்ஷன் சட்டத்தின் கீழாகவே இந்த மாதிரியான காங்கிரஸ்காரர்களை ஜெயிலுக்கு அனுப்பி இனி தேர்தலுக்கு நிற்க இவர்கள் யோக்கியதையுடை யவர்கள் அல்ல என்று உத்திரவு போடுவார்கள்.

ஏனெனில் காந்தியாருக்கும் தேர்தலுக்கும் ஏதாவது சம்மந்தமுண்டா என்றும், காந்தியாருக்கும் காங்கிரசுக்கும் சம்மந்தம் இருக்கிறதா என்றும் யோசித்துப்பாருங்கள். காந்தி பெயர் சொல்லியோ காந்தியாருக்கு ஓட்டு என்று சொல்லியோ ஓட்டுப்பெற்று வெற்றியடைந்தவர்களை காந்தியார் நடத்தி அவர்களிடம் வேலை வாங்குவாரா என்று யோசித்துப்பாருங்கள்.

ஆகவே தேர்தல் காலங்களில் தேர்தல் கூட்டங்களில் காந்திக்கு ஜே என்ற கூப்பாடு போடுவதே அயோக்கியத்தனமல்லவா? இழிமக்கள் செய்கை அல்லவா என்று யோசித்துப்பாருங்கள். இப்படிப்பட்ட ஒழுக்கமற்ற, நாணயமற்ற கூட்டத்தை இனியும் எத்தனை நாளைக்கு பொதுமக்களை ஏமாற்றவிட்டுக்கொண்டிருப்பது என்று யோசித்துப்பாருங்கள். பொது ஜனங்கள் கவலையற்று இருப்பதாலேயே நாட்டில் அயோக்கியத்தனங்களுக்கு செல்வாக்கு ஏற்பட்டுவிடுகின்றது.

இந்த நாட்டில் காங்கிரஸ் ஆதிக்கத்துக்கு செல்வாக்கு உண்டாக பொது மக்கள் இடம் கொடுத்ததாலேயே அரசியல் வாழ்க்கை என்பது பச்சை கொள்ளைக்கூட்ட வாழ்க்கையாக ஆனதோடு மனித சமூகத்தில் நாணயக் குறைவும் மானமற்ற தன்மையும் வளர்ந்துவிட்டன. அனேக இளம் வாலிபர்கள் அயோக்கியத்தனத்தாலும் இழிதன்மையாலுமே வாழ்க்கை நடத்தும்படி ஆகிவிட்டனர்.



RangaRakes tamilnavarasam.com

காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்கள் எவ்வளவுதான் புத்திசாலிகள் என்றாலும் இந்த நிலைமைகளுக்கு அவர்கள் தான் ஜவாப்தாரிகள் என்பதிலிருந்து சிறிதுகூட தப்பித்துக்கொள்ள முடியாது. மனித சமூக வாழ்க்கை கடுகளவாவது பரிசுத்தப்பட வேண்டுமானால் அல்லது இன்றைய இழிதன்மையில் இருந்து சிறிதாவது மாற்றமடைய வேண்டுமானால் இந்த காங்கிரஸ் கிளர்ச்சி என்பதை 1000 - கஜ ஆழத்தில் புதைத்து அதன் தலைவர்கள் என்பவர்களை பச்சையாக வெளிப்படுத்தி ஆகவேண்டும்.

**பண வசூல்**

இவர்களால் பொதுமக்கள் பணம் கோடிக்கணக்காய் பாழாக்கப்பட்டு இருக்கிறது. நாணயமும் யோக்கியப் பொறுப்பும் இல்லாமல் வசூல் செய்யப்பட்டும் நாணயமும் யோக்கியப் பொறுப்பும் இல்லாமல் கையாடப்பட்டும் வந்திருக்கிறது. பண விஷயத்தில் உள்ள ஒழுக்கக்குறைவே காங்கிரஸ் விஷம் இவ்வளவு தூரம் மக்களுக்குள் ஒழுக்கக்குறைவு பரவ சௌகரியம் ஏற்படச் செய்துவிட்டது.

இதற்குக் காங்கிரஸ்காரர்கள் கோர்ட்டுக்கு போய் மான நஷ்ட வழக்கு தொடர்வதாகவும், காங்கிரசுக்கு பணம் கொடுக்காதவர்கள், காங்கிரசுக்காரர்கள் காங்கிரஸ் பணத்தைக் கையாடியதைப்பற்றியே பேசக்கூடாது என்றும் சமாதானம் சொல்லுகிறார்கள்.

ஆகவே இன்றையத்தினம் காங்கிரஸ்காரர்களின் நிலைமை பிரிட்டிஷ் சட்டக் கோர்ட்டு தீர்ப்பின் மூலம் யோக்கியர்களாகப் பார்ப்பதும் தங்களுக்கு கட்டுப்பட்ட தங்கள் அயோக்கியத்தனத்தால் ஏமாற்றப்பட்ட மூடர்கள் தவிர மற்றவர்கள் தங்கள் நாணயங்களைப் பற்றி பேசக்கூடாது என்கின்ற பேடித்தனமான வாதத்தினாலே தப்பித்துக்கொள்ள பார்ப்பது மல்லாமல் நாணயத்தாலோ நேர்மையாலோ ஒழுக்கத்தாலோ தப்பித்துக் கொள்ள முடியாத நிலைமையை அடைந்துவிட்டார்கள். காங்கிரஸ் பணத்தை அனுபவித்த - அனுபவிக்கிற ஒருவரே ''காங்கிரசுக்கு ஒரு காசு கூட கொடுக்காத போக்கிரிகளுக்கு காங்கிரஸ் பண நிர்வாகத்தைப்பற்றி கேட்க என்ன யோக்கியதை'' என்று கேட்பதோடு அப்படி கேட்பவர்கள் போக்கிரி என்றும் அயோக்கியர் என்றும் அவர்களுக்கு புத்தி கற்பிக்க வேண்டும் என்றும் பத்திரிகையில் வைது எழுதுகிறார்.

அப்படியானால் இவர்களை நாம் ஒன்று கேட்கலாமா? அதாவது ஜஸ்டிஸ் கட்சியில் மெம்பராக ஒரு கையெழுத்தாவது போடாத ஒரு அயோக்கியன் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி பேச என்ன யோக்கியதை உண்டு? இவனை செய்யக்கூடாத சிக்ஷை செய்து இவன் போன்ற இழி பிறப்பு மக்களுக்கு தக்க புத்தி கற்பிக்க வேண்டும் என்று சொல்வது நியாயமாகாதா? என்று ஏன் கேட்கக்கூடாது? சர்க்காருக்கு ஒரு காசு கூட



கந்தாயம் கொடுக்காத ஒருவன் சர்க்கார் வரிப்பணத்தைப் பற்றி கேட்பது யோக்கியமா என்று ஏன் கேட்கக்கூடாது? அது மாத்திரமல்லாமல் புதிய சீர்திருத்தம் வருவதற்கு ஒரு சிறிதுகூட அனுகூலஸ்தனாய் இல்லாத ஒருவன் - புதிய சீர்திருத்தத்திற்கு முட்டுக்கட்டை போட்ட ஒருவன் புதிய சீர்திருத்தத்தின் கீழ் சட்டசபை மெம்பராகவும், மந்திரியாகவும் வருவதற்கு ஆசைப்பட வெட்கமில்லையா, மானமில்லையா, உடம்பில் சுத்தமான ரத்த ஓட்டமில்லையா என்று கேட்பது நியாயமாகாதா? என்று கேட்கின்றேன். காங்கிரசில் நான் காரியதரிசியாய் இருக்கும்போது தோழர் வரதராஜுலு நாயுடு காங்கிரஸ் கமிட்டிக்கு தலைவராய் இருந்தபோது எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார் அதை இப்போது எனக்கு ஞாபகத்துக்கு வந்த அளவுக்கு நான் வெளியிடுகிறேன். அதாவது,

> ''அன்புள்ள நாயுடுகாரு அவர்களுக்கு வரதராஜுலு நமஸ்காரம். இவ்விடம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஆபீசில் இருக்கிற சிப்பந்திகள் பணம் கையாடிய விஷயத்தில் கைப்பிடியாய் சிக்கிக் கொண்டார்கள். காலில் விழுந்து கெஞ்சுகிறார்கள். அவர்கள் மேலால் வால் காட்டாமல் இருக்கட்டும் என்பதற்கு ஆக இப்பொழுது ஒன்றும் செய்யாமல் விட்டுவைத்திருக்கிறேன். இதை தாங்கள் அங்கீகரிப்பீர்கள் என்று நினைக்கிறேன்'' என்று எழுதியிருக்கிறார்.

அதுமாத்திரமல்ல, என்னைப் பொறுத்தவரை என் வீட்டார்கள் காங்கிரசுக்கு ஒன்றும் கொடுக்காதவன் என்று சொல்லிவிடமுடியாது. எங்கள் சக்தி அனுசாரம் பணம் கொடுத்தவர்களேயாகும். அதுவும் 100, 100 ரூபாய் நோட்டுகளாகத் வெள்ளித் தட்டில் வைத்து வெற்றிலை பாக்கு, பழம், தேங்காய் வைத்து தோழர்கள் ராஜகோபாலாச்சாரியார், தேவதாஸ் காந்தி ஆகியவர்கள் எங்களது வீட்டுக்கு வந்து பணம் கேட்டபோது அவர் காலடியில் தட்டத்தை வைத்து கும்பிட்டு கொடுத்தவர்களாவோம். மற்றும் காங்கிரசுக்கு பணம் பெரும் தொகையாய் வசூலித்துக் கொடுத்தவனுமாவேன். மற்றும் காங்கிரஸ் பத்திரிகைக்கு ஆக என்று ஆயிரக்கணக்கான ரூபாயில் பங்கு எடுத்துக்கொண்டவனுமாவேன். இவைகளுக்கு இன்னமும் ஆதாரங்கள் என்னிடமிருக்கின்றன.

ஆகவே என் போன்றவர்கள் காங்கிரஸ்காரர்கள் காங்கிரஸ் பணத்தைக் கையாடியதைப் பற்றி கேட்பது போக்கிரித்தனமும், அயோக்கியத்தனமும் ஆனால் அதைக் கையாடியவர்களின் நடத்தை அதை நியாயத் தவறுதலாய் பயன்படுத்தியவர்கள் நடத்தை என்ன ஆகும் என்று கேட்கின்றேன்.

எதற்கு ஆக காங்கிரஸ் பணத்தை ஆயிரம் பத்தாயிரமாய் பத்திரிக்கை காரர்களுக்கு அள்ளிக்கொடுப்பது என்று இப்போதும் கேட்கின்றேன்.

செலவுக்கு கணக்கு இருப்பதாலாயே விஷயம் முடிந்து விடுமா? அந்த செலவு சரியா தப்பா என்று யாரும் கேட்கக்கூடாதா? என்று கேட்கின்றேன்.



RangaRakes tamilnavarasam.com

காணாமல் போனது 10 ஆயிரம், ஆபீசில் திருடிக்கொண்டது 10 ஆயிரம், அதை மறைக்க பத்திரிக்கைகாரருக்கு லஞ்சம் 15000 என்று கணக்கு இருந்தால் கூட அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க வேண்டியதுதானா என்று கேட்கிறேன்.

இவைகள் எல்லாம் குட்டிகள் குலைப்பதாலேயே தாய்கள் தலையில் விழும்படி வெளியாக்க வேண்டி இருக்கிறது.

பொது ஜனங்கள் ஏமாற்றப்படாமல் பார்த்துக்கொள்ள ஏமாந்தவர் களுக்கும் முட்டாள்களுக்கும் மாத்திரம் தானா உரிமை உண்டு என்று கேட்கின்றேன்.

## எது வகுப்புக் கட்சி

நிற்க, பார்ப்பனர்கள் ஜஸ்டிஸ் கட்சியை வகுப்புக் கட்சி என்று பேசுகிறார்கள். தோழர் ராஜகோபாலாச்சாரியாரும் தோழர் சத்தியமூர்த்தியாரும் 11-ந் தேதி பேசிய காங்கிரஸ் மண்டபப் பேச்சில் ஜஸ்டிஸ் கட்சி வகுப்பு உணர்ச்சிக்கட்சியென்று பேசி இருக்கிறார்கள். இது வேதாளம் மறுபடியும் முருங்க மரத்தில் ஏறிக்கொண்டது என்கின்ற கதையாகத்தான் இருக்கிறது.

தோழர் சத்தியமூர்த்தியார் அவர்கள் தஞ்சையில் பேசியபோது வகுப்புவாரி பிரதிநிதித்துவ உரிமை கேட்கும் ராமசாமியை நான் வரவேற் கிறேன் என்றும், வகுப்பு வாத விஷயமாய் சீக்கிரத்தில் காங்கிரசிலிருந்து ஒரு அறிக்கை விடுவதன் மூலமாக அதை சரிப்படுத்துகிறேன் என்றும் சொல்லி விட்டு மறுபடியும் நாலு நாளையில் வகுப்புவாதம் பேசுவது விஷம் என்று சொன்னால் அது எப்படி யோக்கியமான பேச்சாகும்.

வகுப்புவாதம் யார் ஆரம்பித்தது? வகுப்புரிமை அளவுக்கும் தகுதிக்கும் மேல் யார் அனுபவிப்பது? வகுப்பு வாதம் பேச வேண்டிய அவசியம் யாரால் ஏற்பட்டது?

இந்தியாவில் வகுப்பு வாதம் பேசாத வகுப்பார் யார்? ஜாதியார் யார்? என்று சுட்டிக்காட்ட முடியுமா? சீக்கியர் பேசுகிறார்கள், பார்சிகள் பேசுகிறார்கள், நாட்டுக் கோட்டையார் பேசுகிறார்கள், பார்ப்பனர்கள் பேசுகிறார்கள், முஸ்லீம்கள் பேசுகிறார்கள், கிறிஸ்தவர்கள் பேசுகிறார்கள், மற்ற இந்தியர்களும் பேசுகிறார்கள். இன்னும் பேசப்போனால் காங்கிரசுக்காரர்களும் பேசுகிறார்கள் என்று கூட சொல்லுவேன். ராணுவம் இந்திய மயமாக வேண்டு மென்றால் அது வகுப்பு வாதமல்லவா? உத்தியோகங்கள் இந்திய மயமாக வேண்டு மென்றால் அது வகுப்பு வாதமல்லவா என்று கேட்கின்றேன்.

அவை இந்திய மயமாகும் போது எல்லாம் பார்ப்பன மயமாவதை பார்ப்பனரல்லாதார்கள் சம்மதிப்பார்களா?

இந்திய மயமாகும் போதும் எல்லாம் இந்துக்கள் மயமாவதை முஸ்லீம்கள் சம்மதிப்பார்களா?



எல்லாம் இந்திய மயமாகும் போது எல்லாம் மேல் ஜாதிக்காரர்கள் என்பவர்கள் மயமே ஆவதை கீழ் ஜாதிக்காரர்கள் என்பவர்கள் சம்மதிப்பார்களா?

அப்படி ஒன்றும் ஆகாமல் இருப்பதற்கு காங்கிரஸ் ஒரு மார்க்கம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டால் அது தேசத் துரோகமாகிவிடுமா?

## வங்காள வகுப்புவாதம்

காங்கிரசில் வகுப்பு வாதம் இல்லை என்பது உண்மையானால் மற்றெல்லா மாகாணத்திலும் வகுப்புத் தீர்ப்பை விட்டுவிட்டு ஆதிதிராவிடர்கள் வகுப்புத் தீர்ப்பை ஒரு ராஜியின் மீது ஒப்புக்கொண்டு வங்காள இந்து முஸ்லீம் வகுப்புத் தீர்ப்பு விஷயத்தில் மாத்திரம் தோழர்கள் ஜவார்லால், ரவீந்திரநாத் தாகூர் போன்றவர்கள் எல்லாம் இப்போது இவ்வளவு ஆத்திரம் காட்டுவது எதற்கு ஆக?

முஸ்லீம்கள் கை வலுத்துவிடுமே என்கின்ற பொறாமைதானே ஒழிய வேறு காரணம் என்ன?

வங்காள காங்கிரசுக்காரருக்கு சுயராஜ்யத்தை விட இந்து முஸ்லீம் வகுப்புத் தீர்ப்பை ஒழிப்பதுதான் முக்கியம் என்று இப்போது ஏன் அவர்கள் சொல்ல வேண்டும்? தென் இந்தியாவில் உள்ள பார்ப்பனர்கள் தோழர் ராஜகோபாலாச்சாரியார் உள்பட ஆதிதிராவிடர்கள் சம்மந்தமான வகுப்புத் தீர்ப்புக்கு கையொப்பமிட்டுவிட்டு பார்ப்பனரல்லாதார் வகுப்பு உரிமையைக் கேட்பதைப் பொறுத்து மாத்திரம் ''வகுப்பு உணர்ச்சி விஷம்'' என்று சொல்லுவானேன்?

பார்ப்பன வகுப்பு ஆதிக்கம் குறைந்துவிடுமே என்கின்ற ஆத்திரம்தானே அல்லாமல் அதில் தேசியம் என்ன இருக்கிறது என்று கேட்கின்றேன். ''ஜாதிமத வகுப்புகளை ஒழித்து இந்தியர் எல்லோரையும் ஒரே சமூகமாக்குவது'' என்கின்ற கொள்கையை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறதா என்று கேட்கிறேன். அப்படியானால் மாத்திரம் காங்கிரஸ் வகுப்புத் தீர்ப்பை தனது கொள்கைக்கு முட்டுக்கட்டையானது என்று சொல்லலாம். அப்படிக்கில்லாமல் ஜாதிமத வகுப்பு விஷயத்தில் நடுநிலைமை வகித்து அவனவன் வகுப்பு, மதம், கொள்கையை பின்பற்றி நடக்க சுதந்திரம் கொடுப்பதாக உத்திரவாதமளித்திருக்கிறபோது அவனவன் வகுப்புக்கு உள்ள அரசியல் உரிமை அளிப்பதில் ஏன் சூழ்ச்சி செய்ய வேண்டும்?

ஆதலால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை வகுப்பு உணர்ச்சி இயக்க மென்றும் தேசியத்துக்கு விரோதமான இயக்கம் என்றும் சொல்லுவது யோக்கியப் பொறுப்பற்ற காரியம் என்றே சொல்லுவேன்.



RangaRakes tamilnavarasam.com

### சம்பளப் பொறாமை

தனிப்பட்டவர்களின் சம்பளங்களைப் பற்றி பொறாமைப்படுவதில் பயன் இல்லை. சம்பள விஷயம் அடியோடு மாற்றப்படவேண்டும். அது விஷயத்தில் பொது ஜனங்களுக்கு உரிமையில்லாத மாதிரியில் அரசியல் தத்துவம் இருக்கிறது. அது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பலவற்றிற்கு காங்கிரசே காரணமாய் இருந்திருக்கிறது. அதை மாற்ற வேண்டுமானால் நமக்குள் ஒற்றுமை வேண்டும்.

நமது நாட்டில் உள்ள அரசியல் உத்தியோக சம்பளத்தில் பெரும்பாகம் கொள்ளை கொள்வது பார்ப்பனர்களேயாகும். உத்தியோகத்தில் உள்ள பார்ப்பனர்கள் சம்மதிப்பார்களே யானால் மற்றவர்கள் விஷயம் மிக அற்பமானதென்றும் சுலபத்தில் குறைத்துக்கொள்ளக்கூடியது என்றும் சொல்லுவேன்.

### ஜஸ்டிஸ் நிர்வாகம்

மற்றபடி ஜஸ்டிஸ் நிர்வாகத்தைக் குறைகூறுவதிலும் நாணயம் இல்லை என்றே சொல்லுவேன். சீர்திருத்தங்களின் கீழ் மற்ற மாகாணங்களில் இரட்டையாட்சியில் மந்திரிகள் செய்த வேலைகளுக்கு மேலாகவே ஜஸ்டிஸ் மந்திரிகள் செய்திருக்கிறார்கள் என்பதற்கு எத்தனையோ ஆதாரம் இருக்கின்றன.

ஆகையால் கை பலம், வாய் பலம், பிரசார பலம் ஆகியவைகளாலேயே ஒரு பெரிய சமூக இயக்கத்தை ஒழிக்கப் பார்ப்பது மற்றவனைக் கொல்வதற்கு ஆக வைத்திருக்கும் விஷத்தை தானே சாப்பிட்டுவிட்டது போல்தான் முடியப் போகிறது.

ஆதலால் பொறுப்புள்ள காங்கிரஸ்காரர்களோ பொதுநல சேவைக்காரர்களோ இம்மாதிரி கோணல் வழியில் வெற்றிபெறலாம் என்கின்ற குறுகிய புத்தியை விட்டுவிட்டு யோக்கியமான முறையில் ஒற்றுமைப்பட்டு விடுதலையும் சுதந்தரமும் அடைய பாடுபடவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். வெற்றி தோல்வியின் மூலம் வகுப்புணர்ச்சியை அடக்கி விடலாம் என்று நினைப்பது ஆகாயக் கோட்டையாகவே முடியும் என்று எச்சரிக்கை செய்கிறேன்.

*குறிப்பு: மதுரை ஜில்லாவில் 17.07.1936 உத்தமபாளையம் பொதுக் கூட்டத்திலும் 18.07.1936 பழனி தேவஸ்தானத்தின் முன்பாக நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 26.07.1936**



# காங்கிரசும் முஸ்லீம்களும்

காங்கிரசில் சில முஸ்லீம்கள் தீவிர உணர்ச்சி காட்டுவதாக காங்கிரஸ் பத்திரிக்கைகள் என்பனவற்றில் அடிக்கடி பிரஸ்தாபப்படுத்தப்படுகிறது.

உண்மையாகவே முஸ்லீம்கள் எப்படி இப்படிப்பட்ட காங்கிரசில் இருக்க முடியும் என்பது நமக்கு விளங்கவில்லை. பதவி மோகம் உள்ளவர்களும் காங்கிரசை தன் சொந்த சுயநல வாழ்க்கைக்கு ஆதார ஸ்தாபனமாய் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கருதுபவர்களும் காங்கிரசில் சேர்ந்து கொள்ளுவதில் ஆச்சரியமில்லை. காங்கிரஸ் பக்தராய் நடிப்பதில் ஆட்சேபணை இல்லை.

ஆனால், தன் காலில் நிற்கக்கூடிய சுதந்திர வாதிகளும் நடுநிலை வகிப்பவர்களும் தங்களது மதத்தையும் சமூகத்தையும் முதன்மையாய்க் கருதுபவர்களும் எப்படி காங்கிரசில் இருக்கிறார்கள் என்பதுதான் நமக்கு ஆச்சரியமாய் இருக்கிறது.

இணையில்லாத தேசீய வீரர்கள் என்று போற்றப்பட்ட தோழர்கள் மௌலானாக்கள், மகமதலி, ஷவ்கத்தலி ஆகிய இரு பெரியார்கள் ''நாங்கள் முதலில் முஸ்லீம் இரண்டாவதும் முஸ்லீம் மூன்றாவது தேசீய வாதிகள்'' என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படியிருக்க இன்று காங்கிரசின் முக்கிய சூழ்ச்சியானது முஸ்லீம்களின் ஆதிக்கத்தை எப்படியாவது தாழ்த்துவது என்றே குறிக்கொண்டிருக்கும்போது அதை எந்த முஸ்லீம்தான் மறக்க முடியும்.

இன்றைய அரசியல் பிரச்சினையின் உள் அந்தரங்கத்தை துருவிப் பார்த்தோமானால் இந்திய சுதந்தரத்தில் முஸ்லீம் ஆதிக்கமிருப்பதா இந்து ஆதிக்கமிருப்பதா என்பதே தலை சிறந்து விளங்குகின்றதைக் காணலாம்.

ஜனாப் ஜின்னா முதலிய முஸ்லீம் சமூகப் பிரமுகர்களும் முஸ்லீம் சமூக ஸ்தாபனமாகிய முஸ்லீம் லீக்கு பிரமுகர்களும் காங்கிரசினிடம் சம்மந்தம் வைத்துக்கொள்ள சில நிபந்தனை வைத்திருக்கிறார்கள். அந்த நிபந்தனைகளை காங்கிரசுக்காரர்கள் அலட்சியம் செய்துவிட்டார்கள். அதுமாத்திரமல்லாமல் வட்டமேஜை மகாநாட்டில் தோழர் ஜின்னா அவர்களின் நிபந்தனைகளை அலக்ஷயம் செய்த காந்தியார் பிரிட்டிஷாரிடம் ''எங்களுக்கு முதலில் சுயராஜ்யம் கொடுங்கள். அப்புறம் முஸ்லீம்களின் நிலையை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்'' என்று துணிவுடன் கூறினார்.



RangaRakes tamilnavarasam.com

அதன் பிறகே காங்கிரஸ் சம்மந்தமில்லாமல் முஸ்லீம் சமூக நன்மைக்குச் சில ஏற்பாடுகள் அரசாங்கத்தினிடம் செய்து கொண்டார்கள்.

காங்கிரஸ்காரர்களின் இன்றைய முக்கிய லட்சிய மெல்லாம் அந்த ஏற்பாடுகளை குலைப்பது என்றே வெளிப்படையாய்ச் சொல்லுகிறார்கள்.

உதாரணமாக காங்கிரஸ் வகுப்புத் தீர்ப்பை ஒப்புக்கொள்ளுவ தில்லை என்று தீர்மானித்துக்கொண்டிருக்கிறது. எந்த வகுப்புத் தீர்ப்பை என்றால் முஸ்லீம் வகுப்புத் தீர்ப்பு என்பதைத்தான் என்று பிரத்தியக்ஷமாய் சொல்லி இருக்கிறது.

சட்டசபையில் தங்களுக்கு பலமில்லாததால் வகுப்புத் தீர்ப்பை உடைக்க முடியாது என்கின்ற கருத்தின்மீது அந்தப் பேச்சை தற்காலீகமாக ஒத்திவைத்திருப்பதாகச் சொல்லிக்கொண்டு சர்க்காரை வகுப்புத் தீர்ப்பை மாற்றும்படி செய்ய நிர்பந்திப்பதற்காக முஸ்லீம்களின் சகாயத்தையே வேறு வழியாய் கோருகிறது. ஆனபோதிலும் காங்கிரஸ்காரர்களில் ஒரு பாகத்தாரே தோழர்கள் மாளவியா, ஆனே, மூஞ்சே, பாய் பரமானந்தம் போன்றவர்கள் இன்னமும் காங்கிரஸ்காரர்களாய் இருந்துகொண்டே முஸ்லீம் வகுப்புத் தீர்ப்பை குலைக்க வெளிப்படையாய் வேலை செய்கிறார்கள்.

அவ்வளவோடு இல்லாமல் இன்று வங்காளத்தில் முஸ்லீம் வகுப்புத் தீர்ப்பை ஒழிப்பதையே குறிப்பாகக் கொண்டு பெரியதொரு கிளர்ச்சி ஆரம்பித்திருக்கிறார்கள். அதை எல்லா இந்திய கிளர்ச்சி ஆக்கப் போகிறார்கள். காந்தியாரும் அதற்கு ஆசிகூறிவிட்டார். சில நாளைக்கு முன்பு கூட கல்கத்தா கார்ப்பரேஷனில் வகுப்பு உணச்சி காரணமாகவே எல்லா முஸ்லீம்களும் ராஜிநாமா செய்து வெளியேறியது யாரும் அறியாததல்ல.

இந்தப்படியாக மற்ற மாகாணங்களிலும் இந்து முஸ்லீம் வகுப்புச் சச்சரவுகள் இன்று மூண்டு எரிகின்றபோது தென் இந்திய முஸ்லீம்கள் மாத்திரம் தங்களுக்கே குழிதோண்டிக் கொள்ளும் மாதிரியில் காங்கிரஸ்காரர்கள் என்பவர்களோடு சேர்ந்து கொண்டு குதிப்பது என்றால் அது அறிவுடைமை யாகுமா என்று யோசித்துப் பார்க்க விரும்புகிறோம்.

16-7-36 - ந் தேதியில் கல்கத்தாவில் ஆல்பர்ட் ஹாலில் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர்கள் தோழர்கள் ராமானந்த சட்டர்ஜி, கோஸ்வாமி, சரத்சந்திர சட்டர்ஜி, டாக்டர் மூஞ்சே முதலியவர்கள் இருந்து, வகுப்பு தீர்ப்பு அக்கிரமம் என்றும் அதை ஒழிக்க வேண்டும் என்றும் மெஜாரிட்டி சமூகமாகிய முஸ்லீம் சமூகத்துக்கு மெஜாரட்டி ஸ்தானம் கிடைக்கும்படி சட்டம் செய்தது அக்கிரமம் என்றும் பேசியிருக்கிறார்கள்.

சரத்சந்திர சட்டர்ஜீ அவர்கள் வகுப்பு தீர்ப்பில் தங்கள் இலக்கியமும் கலைகளும் கெட்டுப்போகும், அதாவது மதத்துக்கு ஆபத்து ஆதலால் அதை ஒழிக்க வேண்டும் என்று பேசி இருக்கிறார்.



மற்றும் 14-7-36 -ல் கவி ரவீந்திரநாத் டாக்கூர் அவர்களே தலைமை வகித்து பிரமாண்டமான கூட்டம் கூட்டி அதில் அரசாங்கத்தையும் முஸ்லீம் சமூகத்தையும் மிரட்டி இருக்கிறார்கள்.

ஆனால், அதே கூட்டத்தில் வங்காளத்தில் முஸ்லீம் சமூகமே எண்ணிக்கையில் அதிகமென்பதை ஒப்புக்கொண்டு அவர்களுக்கு மெஜாரிட்டி ஸ்தானம் இருக்கும்படி வகுப்பு தீர்ப்பளித்தது மாத்திரம்தான் தப்பு என்று கருதுவதாகக் காட்டிக்கொண்டதுதான் ஆச்சரியமாகும்.

கவி ரவீந்தரர் மிரட்டுவதாவது,

''நமது சகோதர வகுப்பினருக்கு (முஸ்லீம்களுக்கு) திடீரென்று வந்துவிட்ட அதிர்ஷ்டத்தைப் பற்றி எனக்குப் பொறாமை இல்லை. ஆனால் சர்க்கார் சலுகை நின்றுவிட்ட பின்னால் என்ன விளையும் என்பதைப் பற்றித்தான் எனக்கு கவலையாக இருக்கிறது'' என்று பேசி இருக்கிறார்.

அதோடு மாத்திரமல்லாமல் இந்தப் போராட்டமே அதாவது முஸ்லீம்களின் வகுப்பு உரிமைப் போராட்டமே இப்போது சுயராஜ்ய போராட்டத்தைவிட முக்கியமானது என்று பலர் பேசியிருக்கிறார்கள். பழய வங்காளப் பிரிவினைப் போராட்டமாக ஆக்க வேண்டுமென்று ஆசைப் பட்டிருக்கிறார்கள். அதற்கு ஆகவே போராடப்போவதாகவும் உறுதிகாட்டி இருக்கிறார்கள். தேசீயப் பத்திரிகைக்காரர்களும் இதை ஆதரிக்கிறார்கள்.

இந்த சமயத்தில் ஒரு காரியத்தை யோசிக்க வேண்டுமாய் பொது ஜனங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். அதாவது இந்த வகுப்புத் தீர்ப்புத் தத்துவத்தைப் பற்றி இப்போது காங்கிரஸ்காரர்களுக்கு கவலை இல்லை என்பதை அவர்கள் பலவகைகளில் காட்டிக்கொண்டிருந்தும் பின்னை ஏன் இதை எதிர்க்கிறார்கள் என்றால் இந்துக்களைவிட முஸ்லீம்களுக்கு அதிக ஸ்தானம் வழங்கப்பட்டிருப்பதைப் பற்றியே என்பது ஒவ்வொருவரும் பேசியிருக்கும் பேச்சிலிருந்தே அறிகிறோம். அதிக எண்ணிக்கை உள்ளவர்கள் அதிக ஸ்தானம் அடைய வேண்டுமென்று கேட்பது தேசீயத்துக்கு விரோதமானால் 35 கோடி இந்துக்களை 4½ கோடி இங்கிலீஷ்காரர் ஆளுவதை எப்படி தப்பு என்று சொல்ல முடியும் என்று யோசித்துப்பார்க்க விரும்புகிறோம்.

அதிகமாய் உள்ள முஸ்லீம்களுக்கு குறைந்த ஸ்தானங்களை கொடுத்து கொஞ்சமாய் உள்ள இந்துக்களுக்கு அதிக ஸ்தானங்கள் கொடுத்தால் முஸ்லீம்களை இந்துக்கள் ஆதிக்கம் செலுத்துவது என்பதுதானே அதன் அருத்தம் என்று கூறுகிறோம்.

அவரவர்கள் எண்ணிக்கைக்கு தகுந்த ஸ்தானங்கள் பங்கு இல்லா விட்டால் இந்தியாவை வேறு யார் ஆண்டால்தான் என்ன என்று கேட்கின்றோம்.

வகுப்பு தீர்ப்பு இல்லாவிட்டால் என்ன கதி ஆவது என்பதை இந்துக்களில் பார்ப்பனரல்லாதாரும் முஸ்லீம்களும் வெகுகாலமாக அனுபவத்தில் பார்த்துத்தானே வந்திருக்கிறோம்.



RangaRakes tamilnavarasam.com

குறைந்த சமூகமாகிய பார்ப்பனர்கள் அதாவது 100க்கு மூன்று பேர்களாக உள்ளவர்கள் 100-க்கு 97க்கு மேல் உத்தியோகங்களையும் ஸ்தானங்களையும் கைப்பற்றி இருக்காவிட்டால் மதத்திலும், சமூகத்திலும் இவ்வளவு உயர்வுகள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்க முடியுமா என்பதை யோசித்தால் ஸ்தாபனங்கள் சுதந்திரத்துக்கும் உண்மையான சமத்துவ தேசீயத்துக்கும் அவசியமா இல்லையா என்பது விளங்கும்.

எண்ணிக்கைக்கு தகுந்தபடி ஸ்தானங்கள் வழங்கி வரப்பட்டு இருக்குமானால் இன்றைய 6 கோடி தீண்டப்படாத மக்கள் என்பவர்கள் நிலை இவ்வளவு கேடாக இருந்திருக்குமா என்பதை யோசித்துப் பார்த்தாலும் விளங்காமல் போகாது. இவ்வளவு தூரம் போவானேன். இந்த நாட்டில் இந்த 20 வருஷ காலமாக பார்ப்பனரல்லாதார் கட்சி என்பதாகவோ அல்லது பார்ப்பனர்கள் சொல்லுவது போல் ‘‘தேசத்துரோக’’க் கட்சி என்பதாகவோ ஒரு கட்சி ஏற்படாதிருந்திருக்குமானால் இன்று தென் இந்தியாவில் முஸ்லீம்களுடைய நிலை என்னவாக இருந்திருக்கும் என்பதை உணர்ந்தாலும் உண்மை விளங்காமல் போகாது.

ஆகவே இந்திய முஸ்லீம்கள் தாங்கள் சமூகநலத்துக்கு அனுகூலமாயிருப்பதும் தங்கள் சமூகத்தை மேல் நிலைக்கு கொண்டுவந்து அவர்களுடைய உண்மையான சக்தியையும் மேன்மையையும் காட்டக்கூடிய நிலைக்கு கொண்டு வந்ததுமான வகுப்பு உரிமையை ஒழித்து பழயபடி தாழ்த்தக்கூடிய நிலைமைக்கு கொண்டுபோகக்கூடிய போலித் தேசீயத்துக்காக விட்டுக்கொடுக்க சம்மதிக்கிறார்களா என்று கேட்கின்றோம். வகுப்புரிமை கேட்பதாலேயே ஒரு சமூகம் தேசத்துரோக சமூகமானால் அந்த தேசத் துரோகமே வகுப்புரிமையை மறுக்கும் தேசியத்தை விட மேல் என்பதுதான் நமது அபிப்பிராயமாகும். ஏனெனில் வகுப்புரிமை இல்லாதபோது இன்றைய நிலைக்குமேல் நாம் எவ்விதத்திலும் மேலான புத்தியிலோ, பதவியிலோ, சுயமரியாதை உணர்ச்சியிலோ நாம் இருந்துவிடவில்லை.

இன்று காங்கிரஸ்காரர்கள் தங்களுக்கும் இரண்டு முஸ்லீமாவது இருந்தால்தான் முஸ்லீம் சமூகத்தை ஏமாற்ற முடியும் என்று தோழர் உபயதுல்லா முதலியவர்களையெல்லாம் கூட தேசபக்த கூட்டத்தில் விளம்பரம் செய்யக் காரணம் இந்தியாவில் ஏற்பட்ட வகுப்புணர்ச்சி அல்லவா என்று கேட்கின்றோம்.

ஆகையால் முஸ்லீம் தோழர்கள் அதுவும் ஜீவனோபாயத்துக்கும் பதவி வேட்டைக்கும் அல்லாமல் உண்மையான பொதுநல நோக்கோடு இருக்கும் முஸ்லீம் தோழர்கள் வகுப்புரிமை இயக்கத்தில் சேரவேண்டுமா வகுப்புரிமையை மறுக்கும் இயக்கத்தில் சேரவேண்டுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 26.07.1936**



# இரு மசோதாக்கள்

**யார் வகுப்புவாதிகள்?**

**முன்னேற்றத்துக்கு யார் முட்டுக்கட்டை!**

**பார்ப்பனீயத்தின் விளைவு**

இந்தியாவில் இன்று இரண்டு வகுப்பார்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதில் சிறிது கூட விவகாரமே இருக்காது என்று கருதுகிறோம்.

அதாவது ஒன்று ஃ- பெண் மக்கள்.

இரண்டு ஃ- தீண்டப்படாத மக்கள் என்பவர்கள்.

இவ்விரு கூட்டத்தாரும் கல்வியில் 100க்கு ஒருவர் இருவர் கூட படித்தவர்கள் இருக்க மாட்டார்கள் என்று சொல்லத்தக்கதாகத்தான் இருக்கிறார்கள். செல்வத்திலோ பெண்களுக்கு சொத்துரிமையே கிடையாது. ஏனெனில் சட்டப்படியே பெண்களது வாழ்க்கை என்பது ஆண்களுக்கு அடிமை என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். பெண்கள் கற்று இருப்பதும் சொத்து வைத்திருப்பதும் மிக அருமையாகத்தான் இருக்கும்.

அதுபோலவே தீண்டப்படாதவர்கள் என்கின்றவர்கள் நிலையும் சமுதாய ஒழுங்குப்படியே மனிதத்தன்மை அற்றவர்கள் ஆவார்கள். அவர்கள் பிறவித் தொழிலாளிகள், செல்வம் சேர்க்க சந்தர்ப்பமும், சமசுதந்திரமும் இல்லாதவர்கள். சட்ட நிர்பந்தத்தினாலல்லாது படிக்கவோ அரசியல் ஸ்தானம் பெறவோ முடியாதவர்கள். இப்படிப்பட்ட இரு சமூகத்தாரையும் பற்றி அரசாங்கம் கவனித்ததல்லாமல் இதுவரை எந்த ஜனத் தலைவர்களும் பொது நல ஸ்தாபனங்களும் கவனிக்கவே இல்லை.

சமூகப் புரட்சி ஸ்தாபனமாகிய ஜஸ்டிஸ் கட்சி அதாவது பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஒன்று தோன்றி அதன் கிளர்ச்சியின் பயனாகவும் அது பார்ப்பனர்களுக்கும் காங்கிரசுக்கும் எதிராக அரசியலிலும் சமூக இயலிலும் சிறிது ஆதிக்கம் பெற்றதின் பயனாகவுமே இந்த இரு கூட்டத்தாருக்கும் இப்போது சிறிது காலமாய் பல நன்மைகள் ஏற்பட வசதி ஏற்பட்டிருக்கிறது.

அதாவது பெண்கள் அரசியலில் பங்கு பெறவும் ஓட்டர்களாகவும் ஸ்தானம் பெறவும் நிர்பந்தமாய் சில இடங்களில் படிக்கவும் சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

தீண்டப்படாதவர்கள் என்பவர்களும் அரசியலில் கலந்து கொள்ளவும் ஓட்டர்களாகவும், கண்டிப்பாய் சிலராவது உத்தியோகம் பெறவும் தெருவில் நடக்கவும், கிணறு, குளம், சாவடி ஆகியவைகளை பயன்படுத்திக்கொள்ளவும், பள்ளியில் சேர்ந்து படிக்கவுமான முதலிய சௌகரியங்களை சட்ட பூர்வமாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவை பெரிதும் சென்னை மாகாணத்தில் மாத்திரமே அதுவும் ஜஸ்டிஸ் கட்சி ஆதிக்கத்தில் இருந்த காரணத்தினாலேயே என்று சொல்லுவோம்.

இந்த சௌகரியங்களும் மற்ற மாகாணங்களில் சரியாக இல்லை என்பதோடு இனியும் அனேக சௌகரியங்கள் அவர்களுக்காகச் செய்ய வேண்டியிருக்கிறது.

இப்படியிருக்க இது விஷயத்தில் காங்கிரசுக்காரர்கள், தேசீயவாதிகள், சுதந்தரவாதிகள் என்பவர்களில் ஒருவராவது சட்டபூர்வமாய் எதுவும் செய்வதற்கு இதுவரை முயற்சிக்கவே இல்லை என்பதோடு அவர்களுக்கு சந்தர்ப்பமும் சௌகரியமும் இருந்தபோதெல்லாம் அலட்சியமாய் இருந்தது மாத்திரமல்லாமல் கூடுமானவரை எதிர்த்து முட்டுக் கட்டையாகவும் இருந்து வந்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் ஏதோ ஒரு சிறு அளவுக்கு பெண்கள் விஷயமாயும் தீண்டப்படாதார்கள் என்பவர்கள் விஷயமாயும் சில சௌகரியங்களுக்கு மாத்திரம் அதாவது பெண்களுக்கு சொத்துரிமை இருக்கவும் தீண்டப்படாதவர்கள் என்பவர்களுக்கு சமூக வாழ்க்கையில் சம சுதந்தரத்துக்கு இடையூறு இருக்கக்கூடாது என்பதற்கு ஆகவும் இரு சட்டங்கள் செய்ய முறையே தோழர்கள் தசமுக் அவர்களாலும் எம்.சி.ராஜா அவர்களாலும் இந்திய சட்ட சபைக்கு இரு மசோதாக்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தார் இவற்றைப்பற்றி பொதுஜன அபிப்பிராயம் கேட்டுவிட்டு இருக்கிறார்கள்.

இப்படிக் கேட்டு இருப்பதை நாம் தவறு என்றே சொல்லுவோம். ஏனெனில் ஒரு பிரஜையினுடைய சுதந்தரத்துக்கு ஆக மற்றொரு பிரஜையின் அதுவும் அப்பிரஜையுடைய பிறவி எதிரிகளின் சம்மதம் கேட்பதானது போகாத ஊருக்குத் தடம் கேட்பது போலவேயாகும். ஒருவருடைய செல்வத்தில் மற்றவர்களுக்கு சுதந்தரம் உண்டாக்கிக் கொடுக்க வேண்டுமானால் அப்பொழுது மற்றவர்களை கேட்கலாம். அப்படிக்கில்லாமல் ஒரு மனிதனுக்கு மனிதத்தன்மை அளிப்பதைப்பற்றி மற்ற மனிதனை அனுமதி கேட்பது நல்ல எண்ணமென்றோ நல்ல அரசாட்சியின் தன்மை என்றோ நாம் ஒருநாளும் சொல்லமாட்டோம். தனி உடமை உலகில் மக்கள் யாவரும் ஆணானாலும் பெண்ணானாலும் செல்வம் சொத்து வைத்திருக்கவும் பெறவும் அருகதையுடையவர்களேயாவார்கள். இது இன்றைய உலகில் எல்லா நாட்டிலும் இருந்து வரும் முறையேயாகும். அப்படி இருக்க



இந்தியாவில் மாத்திரம் இப்பொழுதுதான் இந்த விதி கவனிக்கப்படுகிறது. இந்த கால தாமதத்துக்கு பார்ப்பனீயமே காரணமாகும் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

தீண்டப்படாதார் என்பவர்களின் குறைகளும் 1000 வருஷத்துக்கு முன்பே அதாவது இந்து ஆட்சி - மனுதர்ம ஆட்சி ஒழிக்கப்பட்டு முஸ்லீம் ஆட்சி இந்த நாட்டுக்கு வந்த உடனே தீர்ந்திருக்க வேண்டிய விஷயமாகும். அப்படி இருந்தும் முஸ்லீம் ஆட்சியில் தங்கள் மதத்தைப் பெருக்கப் பாடுபட்டார்களே ஒழிய மனிதத் தன்மை இல்லாத மக்களுக்கு மனிதத் தன்மை சுதந்தரம் அளிக்க அவர்கள் சரியானபடி முயற்சித்திருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. ஆனால் தங்கள் மதத்தைப் பெருக்கும் விஷயத்தில் கவலை எடுத்ததின் மூலமாவது ஒரு அளவுக்கு பல கோடிக்கணக்கான மக்களின் இழிவும் அசௌகரியமும் ஒழிக்கப்பட்டது பற்றி பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

அதன்பின் இங்கிலீஷ் ஆட்சி வந்து 200 வருடங்கள் ஆகியும் இது வரையும் அவர்கள் இவ்விஷயத்தில் கவலை இல்லாமல் இருந்ததையும் நாம் அலட்சியப் புத்தியால் என்றோ நல்ல எண்ணத்தால் என்றோ ஒருநாளும் சொல்ல முடியாது. மதத்தைப் பெருக்கும் விஷயத்திலும் சரியானபடி நடந்துகொண்டார்கள் என்றும் சொல்லமுடியாது. ஏனெனில் 200 வருஷ காலத்துக்கு 50, 60 லட்சம் மக்களே இந்தியாவில் கிறிஸ்தவர்களாகி இருக்கிறார்கள். அதிலும் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆதலால் பிரிட்டிஷ் ஆட்சி தீண்டாமை ஒழிப்பதில் மத விஷயத்திலோ மனிதத்தன்மை விஷயத்திலோ இந்தியாவுக்கு செய்த நன்மை மிகமிகக் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும்.

இப்படிப்பட்ட நிலையில் மேல்கண்ட இரு தோழர்களும் கொண்டு வந்திருக்கும், மசோதாக்கள் இரண்டும் இந்திய மக்களால் பொன்னேபோல் போற்றி ஆதரிக்க வேண்டியது ஒவ்வொரு இந்தியனுடையவும் கடமையாகும். அப்படி இருக்க வழக்கம்போல் பார்ப்பனர்கள் இவ்விஷயத்தில் தங்கள் ஜாதிப்புத்தியைக் காட்ட முன்வந்துவிட்டார்கள். அதாவது ஊர்கள் தோறும் கூட்டம் கூட்டி எல்லா பார்ப்பனர்களும் ஒன்று சேர்ந்து இவ்விரு மசோதாக்களையும் கண்டித்துத் தீர்மானங்கள் செய்து அரசாங்கத்துக்கு அனுப்புகிறார்கள். இது நியாயமா என்று கேட்கின்றோம்.

பார்ப்பனர்கள் தாங்கள்தான் இந்தியாவுக்கு தர்மகர்த்தாக்கள் என்றும், பார்ப்பனர்கள் எல்லோருமே காங்கிரஸ்காரர்கள் தேசபக்தர்கள் என்றும், பார்ப்பனர்கள் தான் மனித சுதந்தரத்துக்கும் தேச விடுதலைக்கும் அன்னிய ஆட்சி ஒழிப்புக்கும் பாடுபடுபவர்கள் என்றும், வகுப்பு உணர்ச்சி இல்லாதவர்கள் என்றும், பார்ப்பனரல்லாத மக்கள் தேசத் துரோகிகள் வகுப்புவாதிகள் என்றும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஏழைமக்களுக்கும்



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனரல்லாதார்களே விரோதிகள் என்றும் இதுவரை சொல்லிக்கொண்டு வந்த பார்ப்பனர்கள் இப்பொழுது வெட்கமில்லாமல் தைரியமாய் இம்மாதிரி தோழர்கள் தசமுக் பெண்கள் சொத்துரிமை மசோதாவையும், எம்.சி. ராஜாவின் தீண்டாமை விலக்கு மசோதாவையும் எதிர்த்து கண்டிக்கிறார்கள் என்றால் இதைக் கவனிக்கும்படி பொது ஜனங்களை வேண்டுகிறோம்.

இந்த மசோதாக்களை ஆதரித்தோ பார்ப்பனர்களின் இவ்விஷமங்களை கண்டித்தோ இதுவரை ஒரு தேசிய பத்திரிகையாவது, ஒரு காங்கிரஸ் வாதியாவது பேச்சு மூச்சு கூட காட்டவில்லை.

இந்த சிறிய சீர்திருத்தத்துக்கு உடன்படாமல் எதிர்க்கும் இப்பார்ப்பனர் களும் மறைமுகமாய் இவர்களை ஆதரிக்கும் தேசீய பத்திரிகைகளும், காங்கிரஸ்காரர்களும் நாளை இந்தியாவுக்கு ''பூரண சுயேச்சை''யோ ராம ராஜ்யமோ வந்து விட்டால் எப்படி நடந்து கொள்ளுவார்கள் என்பதை யோசித்துப் பார்க்க விரும்புகிறோம்.

இத்தனை பார்ப்பனர்கள் மீட்டிங்கு கூடி அந்த மசோதாக்களை கண்டிப்பதை காங்கிரஸ்காரர்கள் பார்த்துக்கொண்டு இருந்தும் சிறிதாவது வாய்திறக்கிறார்களா என்பதை நினைக்கும்போது காங்கிரஸ் பார்ப்பனர்களின் ஆயுதம் என்பதும் காங்கிரசிலுள்ள பார்ப்பனரல்லாதார் அப்பார்ப்பனர்களின் குலாம்கள் என்பதும் கல்லின்மேல் எழுத்துப்போல் விளங்கவில்லையா என்று கேட்கிறோம்.

ஆகவே சுயநல வகுப்பார்களும் வகுப்புவாதிகளும் யார் என்று காங்கிரசில் இருக்கும் பார்ப்பனரல்லாதாரைக் கேட்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 26.07.1936**



# மருதையா பிள்ளைக்கும் மார்க்க சகாய தீக்ஷதருக்கும் சம்பாஷணை

**- கோமாளி யெழுதுவது**

**மருதையாபிள்ளை:-** வாங்கய்யா தீக்ஷதரே! சௌக்கியமா? ரொம்பநாளாக காணமே.

**மார்க்க சகாய தீக்ஷதர்:-** ஆமாம், என்ன செய்கிறது? பிழைக்கிறவழி பார்க்கவேண்டாமா?

**மருதையா:-** நீங்கள் என்ன பாடுபடவா போகிறீர்கள், யாரோ சம்பாதிக்கிறான், எப்படியோ உங்கள் காரியம் நோகாமல் நடந்து விடுமே, என்ன குறை?

**மார்க்க:-** பூர்வீகம் போல் எண்ணிக்கொண்டு ஒன்றுந் தெரியாதவர் போல் பேசறீர்களே.

**மருதையா:-** பூர்வீகமென்ன? நவீனமென்ன? எப்போதும் போலவேதான் உதயம் அஸ்தமனம் ஆகிக்கொண்டே வருகிறது. உமக்கு மாத்திரம் என்ன வித்யாசப்பட்டு காண்கிறதோ? எனக்கு ஒன்றும் தோணவே இல்லையே.

**மார்க்க:-** ஆமாம், உமக்கென்ன தெரியவேண்டி இருக்கிறது? எங்களைப்போல தூங்கி விழித்ததும் எங்கு கல்யாணம், எங்கு கருமாதி என்று வீடுவீடாக அலைந்தாலல்லவோ தெரியும். அப்படித்தான் அலைந்தாலும் முன் போல ஏதாவது மரியாதையுண்டா? இல்லாவிட்டாலும் தக்ஷணையாவது அணாக்கணக்கில் உண்டா? எல்லாம் வர வரக் கெட்டுப் போய்விட்டது. அந்த வயித்தெரிச்சலைக் கிளப்பாதேயும். வேறு ஏதாவது பேச்சிருந்தால் பேசுங்கோ.

**மருதையா:-** என்ன தீக்ஷதரே, மிக வருத்தமாகவும் சலிப்பாகவும் பேசுகிறீர்கள். ஏதாவது உங்களுக்கு வரவேண்டிய கடனை இல்லை என்று மறுத்து விடுகிறார்களா? அல்லது யாசிப்பது தவறு என்று அறிந்துகொள்ளுமாறு செய்கிறார்களா? எனக்கு ஒன்றும் புரியவில்லை.

**மார்க்க:-** கடனாவது இழவாவது - ஏதோ சுபா சுபங்களில் பிராமணனாயிற்றே என்று கொஞ்சமும் தற்கால ஜனங்கள் கவனிக்கிறதே



RangaRakes tamilnavarasam.com

இல்லை. தர்ம மில்லை; தக்ஷணை இல்லை; தாம்பூலமில்லை. வர வர மிகவும் கேவலமாகி விட்டது. என்னமோ விருதா செலவாக நினைத்து வருகிறார்களே ஒழிய இதற்கெல்லாம் பலாபலன் கிடைக்கு மென்பது தோணுகிறதே இல்லை. மகா மோசம். அதைக் கேட்க வேண்டாம்.

**மருதையா:-** அவனவன் வீட்டு நல்ல காரியம் கெட்ட காரியங்களில் உமக்கென்ன பங்கு? யார் முதலை யாருக்கு இல்லை என்கிறார்கள்? இதில் வரும் பலா பலனென்ன? மிகவும் வருத்தப்படுகிறீர்களே விபரம் விளங்கும்படிதான் சொல்லுங்களேன்.

**மார்க்க:-** அவர் காரியங்களில் பங்கில்லா விட்டாலும் என்னய்யா தான தர்மமில்லையா, புண்ய பாபமில்லையா? அவர் முதலானாலும் ப்ராம்மணா - சூத்ராள் இல்லையா, மேல் கீழில்லையா? பெண் பிள்ளைகள் கூட கேவலமாக துச்சமாக நினைத்து பேசற காலம் வந்துட்டதே! உமக்கொன்றும் தெரியாது போல் பேசரேளே, வயித்தெரிச்சலைக் கிளப்பரேளே.

**மருதையா:-** இன்னொருவனுடைய பாப புண்யத்தில் உமக்கென்ன கவலை, நீர் பிராமணனானால் மற்றவர்களுக்கென்ன, அவர் சூத்திரனானால் உமக்கென்ன? மனித வர்க்கத்தில் மேல் கீழ் என்ன? ''பெண் பிள்ளை கூட'' என சொல்கிறீர்களே, பெண்ணென்றால் கேவலமாக நினைத்துக் கொண்டீரா? இவ்வளவு வயித்தெரிச்சலை நீரே ஏன் உண்டாக்கிக் கொள்ள வேண்டும்? உம்ம அலுவலை நீர் கவனித்துக்கொண்டு போனால் உமக்கேன் இவ்வளவு வருத்தம் வருகிறது? இதற்கெல்லாம் காரணமே புலப்படவில்லை.

**மார்க்க:-** நீர் வயசானவராகவிருந்தும் நவீன ஜனங்களைப்போல பேசரேளே ஒழிய கொஞ்சமும் சாஸ்திர ஞானத்தோடு பேசறதில்லையே.

**மருதையா:-** எனக்கு சாஸ்திரக் கியானமுமில்லை; அதை நான் நம்புகிறதுமில்லை. உமக்கு எதாவது ஷை ஞானம் இருந்தால் விபரமாகவும் பகுத்தறிவுக்குப் பொருந்துமாறும் சொன்னால் நான் தெரிந்து கொள்ளுகிறேன்.

**மார்க்க:-** அப்படியானால் விபரமாக சொல்வதைக் கேளும். பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்கிற நான்கு வருணங்களுண்டு. அதில் பிராமணனுக்கு ஆறு தொழில் உண்டு. அவைகளாவன:- வேதம் வாசித்தல், வாசிப்பித்தல், யாகம் செய்தல், செய்வித்து வைத்தல், தானம் கொடுக்கல், யாசித்தல் என்கிறவைகளாகும். ஆகையால் அவர்களுக்கு யாரிடமாவது சென்று யாசிக்க நேரும் சமயங்களில் மற்றவர்கள் அப்பிராமணர்களுக்கு உபசாரத்துடன் அவர்களுக்கு வேண்டியவைகளை உதவ வேண்டும். பெண்கள் முதலிய துச்சமானவர்களை விட்டு பதில் சொல்லும்படி செய்யக்கூடாது.

**மருதையா:-** ஓஹோ! யாசிப்பவர்க்கு மரியாதையோடு உபசரிக்க வேண்டுமா? சரி சரி பெண்களை தாழ்மையாக நினைக்க வேண்டுமா பேஷ்! நன்றாக இருக்கிறது.



**மார்க்க:-** உமக்கிதெல்லாம் கேலியாக் காணலாம், அப்படி நினையாதேயும். சாஸ்திரத்தில் அதிதிகளை தெய்வமாக பாவித்துபசரிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பெண்களை மிகவும் கேவலமாகச் சொல்லி யிருப்பதாகச் சொன்னால் நம்பமாட்டீர். அதை வேணுமானால் அப்படியே சொல்லி விடுகிறேன் கேளும்.

**''நண்ணருங் கடுவெங் கூற்றரு கரகேழ்**
**பிறப் பிறப்புறு புலி நாகம்**
**திண்கரியரி மாவலகை திண்குறளி தீவளி**
**கோடி வெந்தேட்கள்**
**விண்ணிடியேறுகழு புழு குளவி வேதை செய்வன**
**வெலாந் திரண்டு**
**பெண்ணுருவெடுத்த.....''** என்றும்,

**ஆயிரநான்கு நூறொரு நான்கு பத்தொரு நான்(கு)**
**எட்டாவறையும்**
**நோய் கொளவரினுமமையுமந்தோவோர் நுண்**
**ணிடைப் பெண்ணலம் வேண்டேம்''**

என்றும் இன்னும் இதைப்பற்றி பலவாறாகச் சொல்லி இருப்பதை யெல்லாம் அறியாதவராகப் பேசறளே; என்ன சொல்கிறது.

**மருதையா:-** இவைகளெல்லாம் தன்னலக்காரரால் எழுதிவைத்துக் கொண்டு ஊரை ஏமாற்றி வருவதற்கு உபயோகப்படுத்தி வருகிற வழக்க மென்று எனக்குத் தெரிந்தது தான். இம்மாதிரி எல்லாம் இனி சொல்லாது ஒழுக்கமுள்ளவைகளைக் கைப்பற்றி அவைகளிலுள்ளதை மனதில் வைத்து நடந்து வாரும்.

**மார்க்க:-** ஆனால் ஒழுக்கமுள்ளதையும் பொதுநலக்காரர் அனுஷ்டிப் பதையும் நீர் தான் சொல்லுமே பார்ப்போம்.

**மருதையா:-** ஆனால் சொல்லுகிறேன் கேளும். அதாவது அழையாமல் கண்ட இடங்களுக்குச் செல்லக்கூடாது.. அப்படிப்போனால் *''திறந்து கிடக்கும் வாசல்தோறும் நுழைந்து திரியும் பதார்த்த''மாக பாவிக்கப்படுவீர். யாரிடமும் ஒன்றும் யாசிக்கக்கூடாது. அப்படி செய்வீர்களானால் உம்மை திருடனுக்குச் சமானமாக பாவிப்பார்கள். எப்படி எனில் திருடனும் தனக்குப் பாத்தியமில்லாத மற்றொருவன் முதலை தான் பெற இச்சிக்கிறான். யாசகனும் தனக்கு பாத்தியப்படாத மற்றொருவன் முதலை அடைய இச்சிக்கிறான். இதில் இன்னொருவன் முதலை இச்சிப்பதில் இருவருக்கும் பேதமென்ன விருக்கிறது? நீர் சொன்ன பெண்ணைப்பற்றி இழி சொற்களுக்கும் ஒரு பதில் சொல்லி விடுகிறேன்.

* திறந்து கிடந்த வாசல்தோறும் நுழைந்து திரியும் பதார்த்தம் = நாய்



RangaRakes tamilnavarasam.com

''கண்டு கேட்டுண்டுயிர்த்து ற்றறியுமைம் புலனும்
ஒண்டொடி கண்ணே யுள''

''உலகின் வாழ்க்கை செவ்வனே நடைபெறுதற்குத் தாயகமான பெண்கள் என்பவர்கள் இன்றியமையாதவர்கள்'' என்னும் சீரிய பொன்னுரைகளைக் கேட்டிலர் போலும்.

ஆகையால் இன்று முதல் ஏதாவது ஒரு நல்ல தொழிலைக் கடைப் பிடித்துச் ஜீவித்து வாரும். இந்தப் பழய சோம்பேறி வாழ்க்கைகளை இனி கனவிலும் நினையாதீர். உம்முடன் பழகின தோஷத்திற்கு இவைதான் நான் உமக்குச் சொல்லக்கூடும். நான் போய்வருகிறேன் நேரமாகிவிட்டது.

பகுத்தறிவு (மா.இ.) - உரையாடல் - சூலை 1936



# கற்பொழுக்கம்

நமது முன்னோர்கள் வாழ்ந்ததைவிடச் சிறப்பாக வாழக் கற்றுக் கொள்வதே நாம் நமது முன்னோர்களுக்குச் செய்யக் கூடிய மரியாதை என ஒரு பெரியார் கூறியிருக்கிறார். சமூக முன்னேற்றத்தைப் பற்றிய கருத்துக்கள் பலதிறப்பட்டனவாயிருக்கின்றன. முன்னோர்கள் முன்னேற்றத்தைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. மேனாட்டாரைப் போலவே கீழ்நாட்டாரும் முன்னேற்ற விஷயத்தில் அலட்சியமாகவே இருந்து வந்தனர். உண்பது உடுப்பது போன்ற புறத் தேவைகளிலே அவர்கள் அதிக கவனம் செலுத்தி வந்தனர். சீர்திருத்த உணர்ச்சியும் முன்னேற்ற உணர்ச்சியும் மிகச் சமீப காலத்திலே தோன்றின.

இப்பொழுதும் மிக்க ஆர்வமுடைய சீர்திருத்தவாதிகளும் கூட சில குறிப்பிட்ட துறைகளிலே சீர்திருத்தம் செய்ய விரும்புகின்றனர். சர்வ வியாபகமான சீர்திருத்தங்களை விரும்புவோர் மிகச் சிலரே.

உலக முழுதும் பொதுவாக இருந்து வரும் சமூக லட்சியம் என்னவெனில் நமது முன்னோர்களைப்போல வாழ்க்கை நடத்துவதே.

ஆனால் சமூக ஸ்தாபனங்கள் எல்லாம் குறைபாடுடையனவாகவே இருக்கின்றன. சீர்திருத்தம் தேவையில்லாத ஸ்தாபனங்களே இவ்வுலகத்தில் இல்லையென்று ஒப்புக்கொள்வதே உயர்வான லட்சியம். ஒழுக்கம் மக்களால் ஏற்படுத்தப்பட்டது என்பதை இப்பொழுது அநேகமாக எல்லாரும் ஒப்புக் கொள்கிறார்கள். பழமை விரும்பிகள் எப்பொழுதும் சீர்திருத்தத்தை எதிர்த்தே வருகிறார்கள். கற்பு அல்லது ஆண் பெண் ஒழுக்க விஷயமாகத் தற்காலம் இருந்து வரும் ஏற்பாடுகளே சரியானவை என்றும், அவைகளை மாற்றினால் சமூகமே அழிந்து விடுமென்றும் அவர்கள் வாதிக்கிறார்கள்.

எனவே, தற்காலம் அமலில் இருந்து வரும் ஆண் பெண் ஒழுக்க சம்பந்தமான ஏற்பாடுகளைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

### பலதிறப்பட்ட ஒழுக்கங்கள்

ஆனால் கற்புணர்ச்சி உலக முழுவதும் ஒரே சீராக இருக்கவில்லை. ஒரு தேசத்தில் நல்லொழுக்கமென மதிக்கப்படுவது வேறொரு தேசத்து கூடா வொழுக்கமாக எண்ணப்படுகிறது. எனவே முக்கியமான சிலவற்றைப் பற்றி மட்டும் இங்கு ஒரு சிறிது ஆராய்வோம். பொதுவாக பெண் புருஷனின்



RangaRakes tamilnavarasam.com

அடிமை என்றும், போகப்பொருள் என்றும், அவளைப் புருஷன் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்றும் உலக மக்கள் எல்லாம், ஒரு காலத்து நம்பியே வந்திருக்கின்றனர்.

ஆஸ்திரேலியாவிலே பெண்கள் அடிமைகளிலும் கடையராகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். புருஷர்கள் பெண்களை மிகக் கொடுமையாக நடத்தினார்கள்; மிருகத்தனமாக ஹிம்சித்தார்கள். பெண்கள் சுந்தரிகளாக இருந்து விட்டாலோ அவர்கள் பாடு அதோ கதிதான்.

ஆப்பிரிக்கப் பெண்கள் நிலைமையும் மிக்க பயங்கரமாகவே இருந்து வந்திருக்கின்றது. பெண் புருஷன் சொத்தாகவே இருந்து வந்திருக்கிறாள். தன்னிஷ்டப்படி அவளை உபயோகித்துக்கொள்ள புருஷனுக்குப் பூரண சுதந்தரம் இருந்து வந்திருக்கிறது.

ஹிமாலயப் பிரதேசத்திலுள்ள ஒரு ஜாதியார் திபெத்தியர் வழக்கத்தைப் பின்பற்றி வருகிறார்கள். பண்டங்களை விற்பது போல் அவர்கள் பெண்களை விற்பனை செய்து வருகிறார்கள். ஒரு பெண்ணுக்கு ஏக காலத்துப் பல புருஷர்கள் கணவன்மாராயிருந்து வருகிறார்கள். தகப்பன் புத்திரிகளை தாராளமாக விற்கிறான். அம்மட்டோ அவர்கள், தங்கள் மனைவிகளை யாருக்கு வேண்டுமானாலும் வாடகைக்கும் விடுகிறார்கள்.

நியூஜீலந்து வழக்கம் கொடியதாயிருப்பதுடன் விநோதமாகவும் இருக்கிறது. தந்தை தன் மகளையும், சகோதரன் தன் சகோதரியையும் வேறொருவனுக்கு விவாகம் செய்து கொடுக்கும்போது ''அவள் உனக்கு திருப்தியளிக்க வில்லையானால் அவளை நீ விற்றுவிடு, அல்லது கொன்றுவிடு, அல்லது தின்றுவிடு, நீயே அவளுக்கு எஜமான், அவளை உன் இஷ்டப்படி என்னவேண்டுமானாலும் செய்யலாம்'' என்று கூறுவார்களாம்.

காட்டாள ஜாதியார் பழக்க வழக்கங்கள் இவ்வாறாக, நாகரிக மக்கள் நிலைமை எவ்வாறு இருந்திருக்கிறதெனப் பார்ப்போம்.

ரோமாபுரியில் ஆதி காலத்திலே பெண் கணவன் குடும்பத்தின் பொதுச்சொத்தாக, பொது அடிமையாக மதிக்கப்பட்டுவந்தாள். காட்டோ என்ற நல்லொழுக்கமுடைய பெரியார் தன் மனைவி மரேஷியாவைத் தன் நண்பன் ஹார்ட்டன்சியக்கு இரவலாகக் கொடுத்து அவன் இறந்த பின்பு அவளைத் திரும்பப் பெற்றுக்கொண்டாராம். ரோமர் கலியாண முறை ஒரு அடிமை ஒப்பந்தமாகவே இருந்து வந்தது. பெண் தன் ஆயுட்காலம் முழுதும் கணவனது அடிமையாகவே மதிக்கப்பட்டு வந்தாள்.

ஆங்கிலப்பெண்கள் நிலைமையும் ஆதியில் மிக மோசமாகவே இருந்து வந்தது. புருஷன் தன் மனைவியை மனங்கொண்ட மட்டும் அடிக்கலாம்; ஆனால் பெருவிரலைவிடப் பருமனான தடியால் அடிக்கக் கூடாது. இந்தப் புராதன கொடிய வழக்கம் சில இடங்களில் இப்பொழுதும் வெகு அபூர்வமாக இருந்தே வருகிறது. பெண்களின் துயரத்தைக்



குறைக்கும் சட்டங்கள் தோன்றிய போதெல்லாம் பழமைவிரும்பிகள் மிக வன்மையாக எதிர்த்தே வந்தனர். அத்தகைய எதிர்ப்பு நெடுங்காலம் மிக வன்மையாக இருந்து வந்ததாயினும் காலஞ் செல்லச் செல்ல மாற்றங்கள் ஏற்பட்டே வந்தன.

தகப்பன் மகளைத் தீண்டுவதும் சகோதரன் சகோதரியைத் தொடுவதும் பயங்கர அநாசாரமான பாபச் செயலாக இப்பொழுது மதிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் கி.மு.66ல் அராபியாவிலே சகோதரர் சகோதரிகளையும், புத்திரர் தாய்மாரையும் பெண்டாண்டு வந்ததாக ஸ்ட்ராபோ என்பார் கூறுகிறார். வமிச விருத்திக்காக முறை கேடான புணர்ச்சி உலக முழுதும் அனுமதிக்கப்பட்டே வந்திருக்கிறது.

பிரம்மா தன் புத்திரியான சரஸ்வதியை மணஞ்செய்துகொண்டானாம். எகிப்திய தேவனான அம்மன் தன் தாயை மனைவியாக்கிக் கொண்டானாம். ஒடின் என்ற தேவன் தன் புத்திரி பிரிக்காவை மனைவியாக்கி கொண்டானாம். ஜுனு பிட்டர் தன் சகோதரி ஜூனோவை விவாகம் செய்து கொண்டான். இந்தியாவிலும் சில ஜாதியாருக்குள் சகோதரர் சகோதரிகளை மணந்து கொள்ளும் வழக்கம் இப்பொழுதும் இருந்தே வருகிறது.

ஒரு காலத்திலே ஆணும் பெண்ணும் தம் இஷ்டப்படி கண்டபடி புணர்ந்தே வந்தார்கள். ''ஒரு புருஷன் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளலாம். ஆனால் அவளைச் சேர எல்லாப் புருஷர்களுக்கும் உரிமையுண்டு'' என ஹாரடாட்டஸ் கூறியிருக்கிறார். லீசியார், எட்ரூஸ் காளர், சீரிட்டர், அத்தீனியர், லெஸ்பெயின்கள், எகிப்தியர் முதலியவருக்குள் பண்டு ஆண்களும் பெண்களும் தத்தம் இஷ்டப்படி வரையறையின்றிப் புணரும் வழக்கம் இருந்து வந்தது என பாச்சோபின் என்பார் தக்க ஆதாரங்களுடன் விளக்கிக் காட்டியிருக்கிறார். பெண்கள் பருவமடைந்த பிறகு ஏதேனும் ஒரு ஆலயத்துக்குச் சென்று ஏதேனும் ஒரு இளைஞனைத் தேடிப்பிடித்துக் கூடி கன்னிகழித்துக் கொள்ள வேண்டியது பாபிலோன் நகரத்திலே ஒரு புனிதமான மதச்சடங்காக மதிக்கப்பட்டு வந்தது. மெம்பிஸ், அர்மீனியா, டயர், சிடொன் முதலிய பிரதேசங்களிலும் இந்த அநாச்சாரம் இருந்து வந்திருக்கிறது. லிபியன் கன்னிப்பெண்கள் தனக்கு இஷ்டமானவரைக் கூடி சீதனத்துக்கு வேண்டிய பணத்தைச் சம்பாதித்தார்கள். விவாகத்துக்கு முன் அவர்களுக்கு புணர்ச்சி சுதந்தரம் இருந்து வந்தது. எனவே பல பேரைக் கூடி அதிக பணம் சம்பாதித்தவளையே எல்லோரும் மணக்க விரும்பினர். தாரசிய ஜாதியாருக்குள்ளும் இவ்வழக்கு இருந்து வந்ததாக ஹெராடாட்டஸ் கூறுகிறார். எகிப்திய ராஜகுமாரி ஒருத்தி விபசாரம் செய்து பணம் சம்பாதித்துத் தனக்கென ஒரு கோபுரம் 7(Pyramid) கட்டிக் கொண்டதாகவும் தெரியவருகிறது.

மார்குஸாஸ், பிலிப்பையன், பொலினீஷியத் தீவுகளிலுள்ள சில பிரதேசங்களிலும் ஆபிரிக்காவில் சில ஜாதியாருக்குள்ளும் பெண்களுக்கு



RangaRakes tamilnavarasam.com

இப்பொழுதும் புணர்ச்சிச் சுதந்தரம் இருந்தே வருகிறது. கலியாண தினத்தன்று பெண்ணின் பந்துக்களான புருஷர்கள் எல்லாம் அப்பெண்ணைக் கூடும் வழக்கம் பாலியரித் தீவுகளில் மிகச் சமீப காலம் வரை இருந்து வந்தது. சில ஜாதியார், எல்லாப் புருஷர்களுக்கும் ஒரு பெண்ணைச் சேர உரிமையுண்டென்பதற்கு அறிகுறியாக எல்லாருக்கும் பொதுவான ஜாதித்தலைவனோ குல குருவோ அப்பெண்ணைக் கூட அனுமதிக்கிறார்கள். மலையாளத்திலே ஒரு ஜாதியார் தம் மனைவிமாரின் கன்னி கழிக்க மத குருமாரை ஏற்படுத்துகிறார்கள். இந்தியாவின் அநேக பிரதேசங்களிலும் பெசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள சில தீவுகளிலும் இவ்வழக்கம் இப்பொழுதும் அநுஷ்டானத்திலிருந்து வருகிறது. செனிகாப்பியாவிலே ஜாதித் தலைவன் அந்தப் புண்ணிய கருமத்தை நடத்தி வருகிறான். சில பிரதேசங்களிலே கன்னி கழிக்க விக்கிரகங்களை உபயோகப்படுத்து கிறார்கள். இவ்வழக்கங்களைப் பின்பற்றியே, ஐரோப்பாவிலும் மத்திய காலம் வரை முதலில் புணரும் உரிமை குறிப்பிட்ட சிலருக்கு இருந்து வந்தது.

ஆண், பெண் ஒழுக்க ஏற்பாடுகளை நாம் நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் அவை யாவும் ஏதேனும் ஒரு முறையில் ஒரு மதக் கொள்கையைத் தழுவி நிற்பதைக் காணலாம். எனவே ஆண் பெண் ஒழுக்கக் கொள்கை களையும் ஆசாரங்களையும் நாம் பரிசீலனை செய்யும்போது அந்த விஷயம் மிகவும் சிக்கலான தென்பதையும் விசாலமான தென்பதையும் நாம் முக்கியமாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்; நம்முடைய ஒழுக்க முறையே மேலானதென்று கண்ணை மூடிக்கொண்டு முடிவு கட்டி விடலாகாது. மற்றக்கால ஆசாரங்களை நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் தான் நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டிய முறை புலனாகும்.

## பழைய ஏற்பாட்டு ஒழுக்கங்கள்

தற்காலக் கிறிஸ்தவ கற்பொழுக்கத் திட்டங்களுக்கு புதிய ஏற்பாட்டைத் தழுவிய பழைய ஏற்பாட்டு ஒழுக்க முறைகளும் அவைகளின் பாஷ்யங்களுமே ஆதாரமாகும். ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதை பழைய ஏற்பாடு ஆதரிக்கிறது. ''புருஷன் தனிமையாக இருப்பது நல்லதல்ல. நான் அவனுக்கு ஒரு வாழ்க்கைத் துணையை உண்டு பண்ணுவேன்'' என்று சொல்லி ஆணையும் பெண்ணையும் சிருஷ்டித்து கடவுள் ஜோடி சேர்த்ததாகப் பழைய ஏற்பாடு கூறுகிறது. மற்றும் ஆணையும் பெண்ணையும் கடவுள் ஆசீர்வதித்து ''நீங்கள் பெற்றுப் பெருகி உலகத்தை நிரப்புங்கள்'' என்று கட்டளையிட்டானாம். கிறிஸ்தவ ஒழுக்கங்களை வகுத்த ஆதிக்கிறிஸ்தவ ஞானிகள் பிரம்மச்சாரியத்தைப் பாராட்டிப் பேசியிருந்தாலும் கிறிஸ்து மதத்துக்கு ஆதாரமான ஹிப்ரு மதம் பிரம்மச்சரியத்தை ஆதரிக்கவில்லை. ஒருபுருஷன் பல பெண்களை மனைவியாகக் கொள்வதை பழைய ஏற்பாடு ஆதரிக்கிறது. ஆதாமின் ஏழாம் தலைமுறையானான லாமெத்து இரண்டு பெண்களை மணந்திருக்கிறான். தலைமைப் பூசாரி



ஒரே பெண்ணைத்தான் மணக்க வேண்டுமென்று பழைய ஏற்பாடு வற்புறுத்தியிருக்கிறது. அரசன் பல பெண்களை மணத்தல் கூடாதென்றும் கட்டளையிட்டிருக்கிறது. எனினும் பல அரசர்கள் அதை மதிக்கவில்லை. தாவீது அரசன் பல பெண்களை மணந்தான். சாலோமன் அரசனுக்கு 700 மனைவிமாரும் 300 வைப்பாட்டிகளும் இருந்தார்கள். ஆபிரகாம் தன் சிற்றப்பன் மகளை கலியாணம் செய்து கொண்டான். ஒருவன் இறந்தால் அவனது விதவையை அவன் தம்பி கலியாணம் செய்து கொள்ள வேண்டு மென்று லெவியட் சட்டம் வற்புறுத்துகிறது. ஆபிரகாம் தன் மனைவியின் வேலைக்காரியைக் கூடிப் பிள்ளை பெற்றான். ஜேக்கப் இரண்டு சகோதரிகளை மணந்து கொண்டதுடன் அவர்களுடைய வேலைக்காரிகளையும் வைப்பாட்டியாக வைத்துக்கொண்டான்.

## பெண்கள் நிலைமை

ஹிப்ரு சட்டப்படி மனைவி கணவனுக்கு அடிமையாகவே இருந்தாள். கணவன் மனைவியை ஹிம்சித்தால் சட்டப்படி அவளுக்குப் பரிகாரமில்லை. கணவனுக்கு மட்டும் விவாக விடுதலை உரிமையளிக்கப் பட்டிருந்தது. புருஷனுக்குப் பிடிக்காத பெண்ணை அவன் வீட்டை விட்டு விரட்டலாம். அவள் அப்பால் விருப்பமுள்ளவனைக் கூடி வாழலாம். கணவன் மனைவியை நீக்கும்போது தன் கைப்பட ஒரு அறிக்கை எழுதிவெளியிட வேண்டும்.

தந்தைக்குத் தன் குழந்தைகள் மீது பூரண அதிகாரம் இருந்து வந்தது. குழந்தைகளைக் கொல்லவும் கூட அவனுக்கு உரிமை இருந்தது. புத்திரிகள் மீதும் பூரண சுதந்தரம் இருந்து வந்தது. அவன் புத்திரிகளை விற்பனை செய்யலாம். விபசாரம் செய்யக்கூடாதென்று பத்துக் கற்பனையில் ஒரு விதி இருக்கிறது. மனைவி கணவன் சொத்தாகையினால் அவளைப் பிறர் உபயோகப்படுத்தக் கூடா தென்பதே அத்தடையின் கருத்து. ''ஒரு மனிதன் தன் அயலான் மனைவியோடாவது பிறன் மனைவியோடாவது விபசாரம் செய்தால் விபசாரம் செய்த ஆணுக்கும், பெண்ணுக்கும் மரண தண்டனை விதிக்க வேண்டும்'' என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு கன்னிப்பெண் வேறொரு பெண்ணின் கணவனோடு சேர்ந்தால் அவளுக்கு தண்டனை வழங்குவதைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. விபசாரம் ஒரு குற்றமென பழைய ஏற்பாடு விதித்திருந்தாலும் அக்காலத்து விபசாரம் தாராளமாக நடைபெற்றே வந்திருக்கிறது.

லாட் என்பான் வீட்டுக்கு இரண்டு விருந்தாளிகள் வந்தனர். அவர்களை வரவேற்று அவன் உபசாரம் செய்தான். ஆனால் அவ்விருந்தாளிகளை வெளியேற்ற வேண்டுமென்று ஊரார் கேட்டுக் கொண்டார்கள். எனினும் லாட் இணங்கவில்லை. அதிதிகளை விரட்டுவது மகா பாபமென எண்ணினான். எனவே அதிதிகளை ஊரார் தொந்தரவு செய்யாதிருந்தால் தன் இரண்டு புத்திரிகளையும் ஊராருக்கு வழங்கி விடுவதாக லாட்



RangaRakes tamilnavarasam.com

கூறினான். தன் புத்திரிகளின் கற்பை விட அதிதி சத்காரமே அவனுக்குப் பெரிதாகத் தோன்றிற்று. இதனால் அக்காலத்துப் பெண்களின் நிலைமை எவ்வளவு இழிவாக இருந்ததென்று விளங்கவில்லையா?

## புதிய ஏற்பாட்டு ஒழுக்க முறைகள்

கிறிஸ்துவின் உபதேசங்களைக் கேட்டால் நாம் கனவுலகத்தில் இருப்பது போலவே தோன்றும். ''ஒரு பெண்ணை காமக் கண்ணால் நோக்குபவன் மனத்தினால் வியபிசாரம் செய்கிறான்'' என்று கிறிஸ்து கூறுகிறார். ஆனால் இது அனுபவசாத்தியமான உபதேசமல்ல. மனத்தினால் விபசாரம் செய்கிறவர்களுக்கெல்லாம் சர்க்கார் தண்டனையளித்தால் உலக மக்கள் எல்லாம் சிறையில் அடைபடவேண்டியதுதான். விவாக விடுதலையைப் பற்றி கிறிஸ்துவின் உபதேசம் மிகவும் கண்டிப்பானதுதான். ''விபசார தோஷத்துக்கு ஆளாகாத பெண்களை விவாக விடுதலை செய்பவன் அவள் விபசாரம் செய்யும்படி தூண்டுகிறான். விவாக விடுதலைபெற்ற பெண்களை விவாகம் செய்கிறவனும் விபசாரம் செய்கிறவனாகிறான்'' எனக் கிறிஸ்து கூறுகிறார். இது உயர்வான லட்சியந்தான். ஆனால் அக்கால மக்களுக்கு அது பொருத்தமானதல்ல. இன்றும் ஆண்களும் பெண்களும் அதைப் பின்பற்ற முடியாத நிலையிலேயே இருக்கிறார்கள். மணவினைகள் சுவர்க்கத்தில் நடைபெற்றால் அவைகளை ரத்து செய்ய நமது நீதிஸ்தலங் களுக்கு ஒருகால் அதிகாரமில்லாது இருக்கலாம். ஆனால் மண்ணுலகத்தில் நடைபெறும் கலியாணங்களை ரத்து செய்ய நமது நீதி ஸ்தலங்களுக்கு அதிகாரமிருந்துதான் ஆகவேண்டும்.

மேலும் கிறிஸ்துவின் போதனை பழைய ஏற்பாடு முதல் ஆகமத்துக்கு முரணானதாகவே இருக்கிறது. இல்லறத்தை கிறிஸ்து பாராட்டவில்லை. எல்லாரும் இல்லற வாழ்க்கை நடத்த வேண்டுமென்று அவர் கூறவில்லை. பிரமச்சரியத்தையே அவர் ஆதரிக்கிறார். கிறிஸ்து உபதேசப்படி எல்லாரும் பிரமச்சாரிகளாயிருந்தால் வெகு சீக்கிரத்தில் உலகம் காலியாகிவிடுமென்று நாம் கூறவும் வேண்டுமா?

அது ஒரு பயங்காளித்தனமான போதனை. எனினும் அது உலகம் முழுதும் பரவியிருக்கிறது; அது பெண்ணுலகத்தை அவமதிக்கிறது; காதலைக் கேவலப்படுத்துகிறது. மனோ கற்பிதமான சுவர்க்கத்தையடையும் பொருட்டு ஆண்கள் எல்லாம் ஆண்மையை இழந்துவிட வேண்டுமென்று வற்புறுத்துகிறது. பெண்கள் எல்லாம் தேவாலயத்தில் மௌனமாக இருக்க வேண்டுமென்றும், புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றும் கணவன்மார் கட்டளைகளை மீறக்கூடா தென்றும் பால் கூறுகிறார். ஏனெனில் கிறிஸ்து ஆத்மாவின் ரக்ஷகனாயிருப்பது போல கணவன் மனைவியின் உடலின் ரக்ஷகனாயிருக்கிறானாம். ஆகவே, ஆதிக் கிறிஸ்தவர்கள் பெண்ணுலகத்தை அவமதித்தே வந்தார்கள். பிரம்மசரியத்தையே மேலானதாக மதித்தார்கள். இல்லறம் இரண்டாம் பக்ஷமாகவே மதிக்கப்பட்டது.



மற்றும், பெண் அசுத்தமானவள் என்றும், ஆண்களைத் தப்பு வழியில் செலுத்துகிறவள் என்றும், மக்கள் வீழ்ச்சிக்குக் காரணமானவள் என்றும் பழைய ஏற்பாடு கூறுகிறது. ''பெண்ணே! நீ நரகத்தின் வாயாய் இருக்கிறாய்'' என டெர்ட்டுலியன் கூறியிருக்கிறார். கலியாணம் ஒரு சாபத்தீட்டு என வேறொரு ஞானி கூறிகிறார். பெண் விரைவாக வளரும் ஒரு களையென்றும் அசுத்தமானவள் என்றும் 13-வது நூற்றாண்டில் வாழ்ந்த வேறொரு கிறிஸ்தவ ஞானி கூறியிருக்கிறார்.

பெண்ணுலகத்தை கிறிஸ்து மதம் மட்டும் இழிவாகக் கூறவில்லை. ''பெண்கள் அவமானத்துக்கு, இருப்பிடமானவர்கள் அவர்களைப் பார்க்கவும் கூடாது'' என ஹிந்துக்களின் மனுதர்மம் கூறுகிறது.

தத்துவமுறையில் பார்த்தால் தற்கால கிறிஸ்தவ ஒழுக்கத் திட்டங்கள் மிகவும் உயர்வானவை தான். ஆனால் அது அனுபவசாத்தியமானதல்ல. சுவர்க்க போகத்துக்காக ஆண் தன்மையை இழந்தவனே கிறிஸ்து மதக் கொள்கைப்படி மேலானவனாகக் கருதப்படுகிறான். இல்லறம் இரண்டாம் பக்ஷமாகவே கருதப்படுகிறது. விபசாரதோஷம் ஏற்பட்டால் தான் விவாக விடுதலையுண்டு. விபசாரத்துக்கு கிறிஸ்து மதத்திட்டத்தில் இடமே இல்லை. சுமார் 19 நூற்றாண்டுகாலம் இந்த ஒழுக்கத்திட்டம் அமலில் இருந்தே வருகிறது. ஆனால் அந்தத் திட்டத்தினால் ஏற்பட்ட பலன் என்ன என்பதையே நாம் இப்பொழுது முக்கியமாக கவனிக்க வேண்டும். சரியாக வேலை செய்யும் திட்டங்கள் எல்லாம் உத்தமமானவை என்று கூறப்படுவதுண்டு. கிறிஸ்தவ ஒழுக்கத்திட்டப்படி நடக்க கிறிஸ்தவர்கள் ஒரு சிறிதாவது முயன்றிருந்தால் அந்த திட்டத்துக்கு ஒருவாறு மதிப்புக்கொடுக்க வேண்டியது தான். ஆனால் அந்த லக்ஷ்யத்தையடைய நாம் முயலவே செய்யாது இருந்தால் அந்த லக்ஷ்யத்தில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று தான் முடிவு கட்டவேண்டும்.

அந்த லக்ஷ்யத்தை உயர்ந்த அறிவாளிகள் எல்லாம் எதிர்க்கிறார்கள். இந்திரிய நிக்கிரகம் அவ்வளவு உயர்வான சீலமல்லவெனக் கூறுகிறார்கள். ஏக பத்னி விரதம் விபசாரத்துக்கும் மற்றும் எண்ணற்ற முறைகேடான புணர்ச்சிக்கும் இடமளிக்கிறது. கிரியாம்சையில் அதனால் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறதென இனி ஆராய்ந்து பார்ப்போம்.

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - சூலை 1936**



RangaRakes tamilnavarasam.com

# யந்திரங்கள் வேண்டாமா?

''மனிதவர்க்கத்திற்கு யந்திரங்கள் விரோதி'' என்று நாம் கருதி இருந்த காலமும் அந்தப்படியே யந்திரங்களை எல்லாம் ''பிசாசு'' என்று பிரசாரம் செய்த காலமும் உண்டு. மனிதனின் இயற்கை முற்போக்கினுடையவும், அறிவு ஆராய்ச்சி வளர்ச்சியினுடையவும் தத்துவத்தை அறிந்த பிறகும் அவ்வளர்ச்சியை மேலும் மேலும் விரும்புகின்ற நிலையிலும், மக்களின் சரீர கஷ்டத்தை உணர்ந்து அதைக் குறைக்க வேண்டும் என்கின்ற ஆசையில் முயற்சி கொண்டிருக்கும் போதும் எந்த மனிதனும் யந்திரத்தை வெறுக்க முடியவே முடியாது. அன்றியும் கண்டுபிடித்தும் வரவேற்றுமே ஆகவேண்டும்.

ஏன் என்றால் மனித அறிவின் சுவாப அனுபவத்தைக் கொண்டும் ஆராய்ச்சியைக் கொண்டும் நாளுக்கு நாள் சுருக்க வழியை கண்டு பிடிப்பதே இயற்கையாகும். அது மாத்திரமல்லாமல் ஜீவன் சரீரப் பிரயாசையை குறைத்துக்கொள்ள ஆசைப்படுவதும் இயற்கையாகும். இந்த இரண்டு சுபாவ குணங்களும் யந்திரங்களைக் கண்டு பிடித்து கையாடித்தான் தீரும். ஆகவே அறிவும், ஆராய்ச்சியும் இல்லாத இடங்களில் தான் யந்திரங்கள் அருமையாய் இருப்பதும், அலட்சியமாய்க் கருதுவதுமாய் இருக்குமே தவிர, மற்ற இடங்களில் அதாவது பகுத்தறிவு, ஆராய்ச்சி முன்னேற்றமுள்ள இடங்களில் யந்திரத்தாண்டவமே அதிகமாயிருக்கும்.

வியாச ஆரம்பத்தில் நாம் குறிப்பிட்டதாகிய ''மனித வர்க்கத்திற்கு யந்திரங்கள் விரோதி'' யந்திரங்கள் ''பிசாசு'' என்று நாம் கருதியதாகக் குறிப்பிட்டதானது அறிவும், ஆராய்ச்சியும் கூடாது என்கின்ற எண்ணத்தின் மீதோ, இயற்கையோடு போராடவேண்டுமென்றோ, அல்லது மனிதன் சரீரத்தால் கஷ்டப்பட்டு, இம்சைப்பட்டுத்தான் ஆகவேண்டுமென்றோ கருதியல்ல. ஆனால் மற்றெதைக் கருதி அவ்வபிப்பிராயம் கொண்டோம் என்றால் ''யந்திரங்கள் பல பேர் பல நாள் செய்யும் காரியத்தை வெகு சில பேர் சில நாளில் செய்து விட்டால் மற்ற ஆள்களுக்கும் மற்ற நாள்களுக்கும் ஜீவனத்திற்கு - கூலிக்கு மார்க்கம் எங்கே? அதன் மூலமாய் ஏற்படும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு என்ன சமாதானம்?'' என்று சொன்னவர்களின் வார்த்தைகளை நம்பினதாலேயே தவிர வேறில்லை.

இந்தப்படியே இன்றும் இன்னும் அனேகர் நினைத்துக்கொண்டும், நம்பிக்கொண்டும் யந்திரங்களை ஆட்சேபித்து வெறுத்துப் பேசிக்கொண்டு



மிருக்கின்றார்கள் என்பதும் நமக்குத் தெரியும். ஆனால் இந்தப்படி எண்ணிக் கொண்டிருப்பதை நாம் அந்தக்காலத்திலும், இந்தப்படி இப்போது எண்ணிக்கொண்டிருக்கின்ற அநேகர் இப்போதும் தங்கள் தங்களைப் பொறுத்தவரை தங்கள் தங்கள் காரியத்திற்கு மனித சரீர வேலையை விட யந்திர வேலையையே விரும்பி அதை உபயோகித்தே தான் வந்தோம், மற்றும் வந்தார்கள், வருகிறார்கள்.

உதாரணமாக கால்கள் இருக்க, கட்டை வண்டிகள் இருக்க (கட்டை வண்டியும் இயந்திரம்தான். இருந்தாலும்) யந்திரத்தின் மூலமாய்த்தான் அதாவது ரயிலில் பிரயாணம் செய்தோம். யந்திரத்தின் மூலமாய்த்தான் மோட்டாரில் பிரயாணம் செய்தோம். யந்திர மூலமாய்த்தான் கப்பலிலும் பிரயாணம் செய்தோம். யந்திர மூலமாகவே ஆகாயக் கப்பலில் பிரயாணம் செய்தோம். அதையே இன்றும் எல்லா மக்களுடைய போக்குவரத்து சாதனமாக ஆக்கவும் ஆசைப்படுகின்றோம்; மற்றவர்களும் ஆசைப்படு கின்றார்கள். ஆகவே இவற்றையெல்லாம் மனிதத் தன்மையுடன் கூடிய குற்றமற்ற இயற்கை உணர்ச்சி என்றுதான் சொல்ல வேண்டுமே தவிர இது எவ்வித குற்றமுள்ளதும் அநியாயமானதும் அநேக ஆயிரக்கணக்கான பேரைப் பட்டினி போடக் காரணமான அக்கிரம காரியமென்றும் யாரும் சொல்லி இதற்காக யாரையும் கண்டிக்கவும் இவைகளை ஒழிக்கவும் முடியாது. ஜீவ சுபாவமே ஆசையின் உருவமாகும்.

ஆகவே யந்திரம் வேண்டாம் என்பது இயற்கையோடும் முற்போக்கோடும் அறிவு வளர்ச்சியோடும் பேராடும் ஒரு அறிவீனமான - பிற்போக்கான வேலையாகுமே தவிர மற்றபடி பயனுள்ள வேலையாகாது.

உதாரணமாக 10 மூட்டைகளை ஒரு வண்டியில் ஏற்றி முன்னே நான்குபேர் இழுத்துக்கொண்டும் பின்னே நான்கு பேர் தள்ளிக்கொண்டும் உடல் வெயர்க்க நெஞ்சொடிய மணிக்கு மூன்று மைல் தள்ளாடித் தள்ளாடி இழுத்துக்கொண்டு போவதும், அதே மாதிரியான 25 மூட்டைகளை ஒரு மோட்டார் லாரியில் ஏற்றி ஒரு மனிதன் நோகாமல் நாற்காலியில் உட்கார்ந்திருப்பது போல் உட்கார்ந்து கொண்டு சுக்கானை மாத்திரம் பிடித்துத் திருப்பிக் கொண்டு மணிக்கு 25 மைல் போவதுமான இரண்டு வேலைகளையும் எடுத்துக் கொண்டால் இவற்றுள் சுயமரியாதைக்கு, ஜீவகாருண்யத்திற்கு - மனித சமூகத்திற்கு - முற்போக்கிற்கு - மற்ற ஜீவன்களை விட மனிதனுக்கு பகுத்தறிவு என்பதாக ஒரு குணம் அதிகமாக உண்டு என்கின்ற ''உயர்'' குணத்திற்கு - எது ஏற்றது என்று கேட்கின்றோம்.

மற்றும் பாஷைகள் ஆதியில் எழுத்துக்கள் கூட இல்லாமல் சப்த ரூபமாய் இருந்ததும், பிறகு எழுத்துக்கள் ஏற்படுத்தப்பட்டதும், அவை கூரிய ஆணிகளால் ஏடுகளில் எழுதப்பட்டதும், பிறகு காகிதம் ஏற்பட்டதும், அதில் நாணலில் எழுதினதும், உருக்குத் தகடுகளில் எழுதினதும், பிறகு பௌண்டன் பேனாவில் எழுதினதும், டைப்பில் அடிப்பதும், அச்சடிப்பதும்,



RangaRakes tamilnavarasam.com

அந்த அச்சும் மணிக்கு 100 பிரதிகளாக இருந்து இப்போது 10000 பிரதிகள் வீதம் அச்சு அடிக்கும்படியானதும் அதுவும் 12 X 8க்குமாயிருந்த அகல காகிதத்தில் மாத்திரம் அடிக்கும்படியாயிருந்து இப்போது 60 X 40க்குமாக உள்ள பெரிய காகிதத்தில் அச்சடிக்கக் கூடியதானதுமான காரியங்கள் படிப்படியாய் விருத்தி ஆகியிருக்கின்றதை பார்த்துக் கொண்டும், அதன் பலன்களை அனுபவித்து கொண்டும், ஏதாவது ஒரு வகையில் ஒவ்வொருவரும் அதைச் செய்து கொண்டும் இருக்கின்றோம். இவையெல்லாம் யந்திர பலன்கள் அல்லவா? என்றும், இவற்றில் எது தள்ளுவதற்குரியது? என்றும், இவை இல்லாதிருந்தால் அவ்வளவு பேருக்கு எவ்வளவு நாளைக்கு வேலையிருக்கும் என்றும் கேட்கின்றோம்.

இது தவிர மற்றொரு உதாரணத்தைக் கவனிப்போம். சங்கராச்சாரி மடாதிபதி என்று சொல்லப்படும் ஆட்கள் ரயிலில் ஏறுவது நீசத்தனமென்றும், மாட்டு வண்டி, குதிரை வண்டி ஆகியவைகளில் ஏறுவது ஜீவ இம்சை யென்றும், கருதிக்கொண்டு மரக்கட்டையில் பல்லக்கு செய்து அதற்குத் தந்தம், வெள்ளி, தங்கம் முதலிய தகடுகள் போட்டு அதன் மீதுதான் ஏறி உட்கார்ந்து கொண்டு தண்டு 1க்கு 4 பேர் வீதம் 4 தண்டுக்கு 16 பேர் ம்கு ம்கு என்று முக்கிக் கொண்டு மணிக்கு 4 மைல் வீதம் தூக்கி ஓடுவதைப் பார்க்கின்றோம். இது யந்திர சம்மந்தமில்லாதது என்று வைத்துக்கொண்டாலும் (கண்டிப்பாய் பார்த்தோமானால் பல்லக்கு என்பதும் ஒரு யந்திரமேயாகும்) இந்த வாழ்வு காட்டுமிராண்டி உலக வாழ்வா? அல்லது நாகரிக உலக வாழ்வா? என்பதை யோசித்துப் பாருங்கள். மனிதன் தூக்குவதை விட்டு மாடோ, கழுதையோ, குதிரையோ, ஒட்டகமோ, யானையோ சுமப்பதாக வைத்துக் கொண்டாலும், அதுவும் அதற்கு சற்று அடுத்த காட்டு மிராண்டி வாழ்வா அல்லது நாகரீக - ஜீவகாருண்ய - வாழ்வா என்றும் கேட்கின்றோம்.

ஆகவே இவைகளிலிருந்து யந்திரம் மனிதனுக்கு அவசியமென்றும், சௌகரியமான தென்றும், ஜீவகாருண்யமுடையதென்றும், முற்போக்குக்கும் நாகரீகத்திற்கும் ஏற்றதென்றும், இயற்கை உணர்ச்சியில் பட்டதென்றும், அறிவு ஆராய்ச்சியின் பயனென்றும் ஒப்புக்கொண்டுதானாகவேண்டும்.

**ஆனால்**

ஆனால் முன் சொல்லப்பட்ட அதாவது ''யந்திரங்கள் பெருகுவதால் தொழிலாளிகளுக்கு வேலையில்லாமல் போய் ஜீவனத்திற்குக் கஷ்டப்பட வேண்டியதாகுமே?'' என்பதற்குச் சமாதானம் சொல்லியாகவேண்டும். இதற்கு பதிலாக நாம் அவர்களைக் கேட்பதென்னவென்றால்,

தொழிலாளி என்று ஒரு கூட்டம் ஏன் இருக்கவேண்டும்? முதலாளி என்று ஒரு கூட்டம் ஏன் இருக்க வேண்டும்? இது யாருடைய கட்டளை? என்ன அவசியத்தைப் பொறுத்தது? என்று அவர்களை நாம் முதலில் கேட்கிறோம்.



பிறகு பாடுபடுபவன், சோம்பேறி, கஷ்டப்படுபவன், சுகப்படுபவன், வேலை செய்பவன், வேலையின் பயனை அனுபவிப்பவன், ஏமாறுகிறவன், ஏமாற்றுகிறவன் என்பன போன்ற பிரிவுகள் மனித சமூகவாழ்க்கையில் இருக்கும்படியாகவே வாழ்க்கைத் திட்டத்தை வகுக்க வேண்டும் என்பதற்கு ஏதாவது அவசியம் ஆதாரமுமுண்டா என்பது நமது இரண்டாவது கேள்வியாகும்.

மனிதன் தொழில் செய்வது என்பது மனித வாழ்க்கையின் சௌகரியம் அல்லது தேவையின் அவசியம் என்பதிற்காகவா? அல்லது முதலாளி மிராசுதாரன், சோம்பேறி ஆகியவர்கள் வேலை செய்யாமல் சம்பாதிக்கவோ, பணம் சேர்க்கவோ வேண்டிய அவசியத்திற்காகவா என்பது மூன்றாவது கேள்வியாகும்.

இம்மூன்று கேள்விகளுக்கும் பதில் அறிந்தோமானால் வேலை என்பதும், வேலை இல்லாத் திண்டாட்டம் என்பதும் ஒருவனை ஒருவன் கொடுமைப்படுத்துவதுதான் இந்த முறைகள் என்பதும் விளங்கிவிடும்.

இவை ஒருபுறமிருக்க, வேலைகளின் கூலிகளை உயர்த்தி வேலை நேரத்தை குறைத்து, முதலாளிகளின் லாபத்தையும் குறைத்து, ஒரு வரையறை ஏற்படுத்தி, உள்ள நேரத்தையும் கூலியையும் எல்லா வேலைக்காரர் களுக்கும் பங்கு வரும்படியான ஒரு திட்டம் போடுவோமேயானால் அதாவது மோட்டார் பஸ்காரர்கள் யூனியன் வைத்து வருகின்ற பிரயாணிகள் சத்தத்தை உயர்த்தி கிடைத்த வாடகையை எல்லோரும் பங்கிட்டுக்கொள்வது போலச் செய்தால் வேலையில்லாத் திண்டாட்டம் தானாகவே ஒருவாறு ஒழிக்கப்பட்டு விடுமா இல்லையா என்று கேட்கின்றோம்.

நிற்க, இன்றைய வாழ்க்கை நிலைமையைப் பார்த்தால் மனிதன் வேலை செய்வதற்காகவே பிறருக்கு அடிமையாய் உழைப்பதற்காகவே பிறந்திருக்கிறானே யொழிய சுகப்படுவதற்கில்லை என்றும் ஆதலால் அவன் வேலை செய்வதற்காக ஒரு தொழில் கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டும் என்றும்தான் ஏற்படுகின்றது. இதுவும் தன் வயிற்றுக்கு வேண்டிய அளவு கூட கிடைக்க முடியாத கூலிக்கு முழு நேரத்தையும் செலவு செய்து பாடுபடவேண்டும் என்பதாகக் காணப்படுகிறது. இது பகுத்தறிவில்லாத மிருக வாழ்வை விட மிக மோசமான வாழ்வே யாகும். எப்படி எனில் அவற்றிற்காவது உத்திரவாதம் (ஒரு காரண்டி) இருக்கின்றது. அதாவது அதன் எஜமான் வயிறு நிறைய அதற்கு வேண்டிய ஆகாரம் கொடுக்கக் கட்டுப்பட்டிருக்கிறான். மனித வேலைக்காரனுக்கோ உத்திரவாதமே கிடையாது. இன்னும் பட்சிகள், காட்டுமிருகங்கள் ஆகியவைகளில் எதற்கும் எவ்வித வேலையும் செய்யாமல் வாழும் சௌகரியமிருக்கின்றது.

இப்படியிருக்க பகுத்தறிவு இருக்கும் காரணத்திற்காக மனிதன் 100க்கு 90 பேர் ஆகாரத்திற்கே வேலை செய்ய வேண்டியது என்பதும், அதுவும் காரண்டி இல்லாத அடிமையாயிருந்து வேலை செய்வது என்பதும்,



RangaRakes tamilnavarasam.com

அதுவும் சரியாய் கிடைக்காமல் பட்டினியாய் கஷ்டப்படுவது என்பதும் இயற்கைக்கு மாறுபட்ட ஒரு பெரிய அக்கிரமமாகும். ஆகவே வேலையில்லாக் கஷ்டம் ஏற்பட்டு ஜனங்கள் பட்டினி கிடந்து பரதவிக்க ஆரம்பித்தால்தான் ‘‘தங்களுக்கு பகுத்தறிவும் வன்மையும் இருந்தும் தாங்கள் முட்டாள் தனமாய் பாடுபடுவதும் தங்களைப்போன்ற பிறரால் ஏய்க்கப்படுவதும் ஏன்? என்கின்ற காரணத்தை உணர முடியும். உணர்ந்து சமநிலையை அடைய முயற்சிக்கவும் முடியும்.

அதைவிட்டுவிட்டு ‘‘முதலாளி, தொழிலாளி நிலைமையும், மிராஸ்தாரர், உழவன் நிலைமையும் உலக வாழ்க்கையின் சௌகரியத்திற்கு அவசியம்’’ என்பதாகச் சொல்லி அதுவும் ‘‘கடவுள் செயலால் முன்ஜன்மத்தின் கர்ம பயனால், தலை விதியால் ஏற்பட்டது’’ என்று சொல்லிக்கொண்டு அவற்றை நிலை நிறுத்திக்கொண்டே எவ்வளவு கூலி வாங்கிக்கொடுத்தாலும் மனித வர்க்கத்தினரில் பெரும்பான்மையானவர்களின் கவலையும், தொல்லையும், கொடுமையும் ஒழியவே ஒழியாது. எப்படியெனில் ஜாதி வித்தியாசத்தை வைத்துக்கொண்டு எவ்வளவு சமத்துவம் கொடுத்தாலும் அது எப்படி பயன்படாதோ, அதுபோலவே முதலாளி தொழிலாளி முதலிய பாகுபாடு களை வைத்துக்கொண்டு அவர்களுக்குக் கொடுக்கும் எவ்வித சுதந்தரமும் பயன்படாமலே போய்விடுவதோடு கீழ்நிலை மேல் நிலை என்பதும் மாற்றவே முடியாததாகிவிடும். ஏனெனில் தொழிலாளி, முதலாளி, உழவன், ஜமீன், மிராஸ்தாரன் என்பவைகளும் ஒருவித வருணாச்சிரம தர்மமே தவிர வேறல்ல. ஆச்சிரமங்கள் என்றாலே படிகள் - நிலைகள் என்பதுதான் கருத்தாகும்.

நமது நாட்டில் பிறவியிலேயே பல படிகள் இருப்பதாலும், அதனாலேயே நாம் சதா கஷ்டப்படுவதாலும் தொழில் வாழ்க்கையில் உள்ள படிகளை நாம் கவனிக்கவே நேரமும் ஞாபகமும் இல்லாதவர்களாய் இருக்கின்றோம். மனிதன் உண்மையான சமத்துவமடைய வேண்டுமானால் பிறவிப்படிகளையும் தொழில்படிகளையும் கடந்தவனாகத்தான் இருக்க வேண்டும். அவ்விரண்டு படிகளையும் ஒழித்த - அவ்விரண்டு படிகளும் ஒழிந்த நிலைதான் சமதர்ம நிலை என்று சொல்லப்படுவதாகும்.

நிற்க, இவற்றிற்கெல்லாம் முக்கியமாக இன்னொரு விஷயம் உண்டு. அதைச் சரியாக உணர்ந்து கவனித்தோமானால் மேல் கண்ட கஷ்டங் களைப்பற்றிய கவலைகள் கூட நாம் அதிகம்படவேண்டிய அவசியமிராது. அதென்னவெனில், யோசனையில்லாமல் கண்ட கண்டபடி ஜனத்தொகையை விர்த்தி செய்வதாகும். பிள்ளைகளைப் பெறுவதாகும். 2 ஏக்கர் பூமியுள்ளவன் 100 மாடுகளை வாங்கி வளர்ப்பானேயானால் எப்படி அவனால் அந்த மாடுகள் போதிய தீனி கிடைத்து ரக்ஷிக்கப்பட முடியாதோ அதுபோலவே மனித சமூகமும் தேவைக்கும் தன்னால் தாங்குவதற்கும், அதாவது காப்பாற்றக் கூடியதற்கும் அதிகமாகவும், தேசத்தின் கால நிலைமைக்கு மேலாகவும் பிள்ளைகளைப் பெற்று கஷ்டப்பட்டு தனது ஆகாரத்தில்



பங்கு கொடுத்து கடைசியில் இருவருக்கும் போதுமான ஆகாரமில்லாமலும், போதுமான ஆதரிப்பு இல்லாமலும் கஷ்டப் பட்டுக்கொண்டு இருப்பதை ஒழிக்காமல் வீணாய் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதில் என்ன பயன் என்பது முக்கியமாய் கவனிக்கத் தக்கதாகும்.

இந்திய நாட்டு நிலைமை நமக்குத் தெரிய சுமார் 40, 50 வருஷ காலமாகவே மக்களுக்கு ‘‘வேலையில்லாமல்’’ வெளிநாடுகளுக்குக் கூலியாகச் செல்வதே வழக்கமாக இருந்து வந்திருக்கின்றது. இது மாத்திரமல்லாமல் அடிக்கடி பஞ்சமும் கொள்ளை நோயும் வந்திருக்கின்றன. இது இந்த நாட்டு சுயமரியாதைக்கே மிகவும் கேடானதாகும். அளவுக்கும் சக்திக்கும் மீறி பிள்ளைகளைப் பெறுவதால் யாருக்கு என்ன லாபம்? என்று யோசிக்க வேண்டும்.

**‘‘உலகம் விருத்தியாக வேண்டாமா’’** என்கின்ற சொல் சுத்த முட்டாள் தனமானதும் சிறிதும் பொருளற்றதுமான சொல்லே ஒழிய அது ஒரு கவனிக்கத்தகுந்த சொல் அல்ல வென்பதே நமது அபிப்பிராயம். சம்போக விஷயங்களில் கவலையற்றும் முறட்டுத்தனமாயும் அளவுக்கு மீறியும் நடந்து கொள்வதால் மனிதர்களுக்கு ஏற்படும் வியாதிகளைப் போலவேதான், குழந்தைகள் ஏற்படுவதும் என்பதே தவிர அதற்கும் இதற்கும் சிறிதும் வித்தியாசமேயில்லை. சம்போக உணர்ச்சி இந்த உலகத்தில் உள்ள ஜீவ ஐந்துக்களில் மனிதனைத் தவிர வேறு எந்த ஜீவனுக்கும் குழந்தை பெறுவதற்காக என்கின்ற எண்ணத்தின் மீது தோன்றுவதே கிடையாது. மனிதன் பகுத்தறிவுக்காரன் என்கின்ற ஆணவத்தால் அவனுக்கு ஏற்படும் அனேக முட்டாள் தனமான செய்கைகளைப்போல் குழந்தைபெற வேண்டும் என்கின்ற முட்டாள்தனமும் ஏற்பட்டு அது ஒரு ஆசையாகி பிறகு அது ஒரு சொத்தாகி பிறகு ‘‘மோக்ஷத்திற்கு’’ உதவும் காரியமாகவுமாகி கடசியாய் வீண் கஷ்டமும் தொந்திரவும் பட்டு மற்றவர்களுக்கும் தொந்தரவு கொடுப்பதைத் தவிர வேறு ஒரு பயனும் இல்லாததாய் முடிந்து விடுகிறது.

மேலும் பிள்ளை பெறுவதினாலேயே மொத்த ஜன சங்கியையில் பகுதியான பெண்கள் சமூகம் அடிமையாகி அனேக ஆபத்துக்களுக்கும் வியாதிக்கும் உள்ளாகி அற்ப ஆயுளுடன் கஷ்டமும் படவேண்டியதாகி அவர்களது வாழ்வே மிக்க பரிதபிக்கத்தக்க வாழ்வாக முடிகின்றது. பெண் அடிமைக்கு காரணமே அவர்கள் பிள்ளை பெறுவதும், அதிலும் அதிகமான பிள்ளைகளைப் பெறுவதும், அதனால் உடல் நலிந்து பலவீனமுடையவர்கள் ஆவதும், பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தங்களுக்கே என்று கருதுவதால் சுதந்தரமும் வீரமும் இன்றி அடிமையாவதுமான காரியங்களுக்கு ஆளாக வேண்டியவர்களுமாகிறார்கள். பெண்கள் விஷயம் இப்படி இருப்பதோடு பொதுவில் வேலையில்லா கஷ்டத்தை நீக்கவும், மக்கள் கவலையும் தொல்லையும் கஷ்டமும் இல்லாமல் இருக்கவும் பிள்ளைப் பேற்றைக் குறைப்பது என்பது ஒரு தக்க வழியாகும்.



RangaRakes tamilnavarasam.com

ஒரு சமயம் இவையெல்லாம் யாருக்காவது பிடித்த மற்றதாகுமே யானால் வேறு இன்னம் ஒரே ஒரு வழிதான் உண்டு என்று சொல்லுவோம். அதென்ன வெனில் எவனொருவன் தன் தேவைக்கு மேல் சொத்தும் ஸ்திதியும் வைத்திருக்கின்றானோ அவனைக் குற்றவாளியாக்கி திருடனுக்கு உண்டான தண்டனையைக் கொடுப்பது என்கின்ற ஆட்சியை ஏற்படுத்துவதுதான்.

இந்த ஆட்சி ஏற்பட்டு விட்டால் பிறகு யாருக்கு வேலை இருந்தாலும் யாருக்கு வேலை இல்லாவிட்டாலும் ஜீவனம் சரியாகும். இதற்காக அதிக கவலையும் பட வேண்டியதில்லை. இந்தப்படிக்கெல்லாம் இல்லாமல் நாட்டுச் செல்வத்தையெல்லாம் ஒருவன் தன்னிடமே வந்து சேரும்படியான முறையை மனித வாழ்க்கைக் கொள்கைகளாக வைத்துக் கொண்டு பல பேர்கள் பட்டினி இருந்து கொண்டு இருப்பதும் ஏன் பட்டினியாய் இருக்கிறார்கள் என்று கேட்டால் வேலைகள் கிடைக்காததால் பட்டினியாய் இருக்கின்றார்கள் ஆதலால் யந்திரங்களையெல்லாம் ஒழித்து விட்டு கடப்பாறையும் சம்மட்டியும் வாங்கிக் கொடுத்து வேலை வாங்கவேண்டுமென்றும் சொல்வதானால் இது எவ்வளவு அக்கிரமமானதும் அயோக்கியத்தனமானதும், திருட்டுத்தனமானது மான காரியம் என்பது யோசித்தால் விளங்காமல் போகாது. ஆகையால் நாட்டுக்கும் முற்போக்குக்கும் மனித சமூக நாகரிக வளர்ச்சிக்கும் யந்திரங்கள் மிகவும் முக்கியமானது என்று சொல்வதோடு அவற்றின் மூலம் மக்கள் சரீரப்பிரயாசையில் இருந்து விடுதலையாக நினைப்பதுவும் இயற்கையும் அவசியமும் ஆனதென்றும் சொல்லுவதோடு எஜமான், வேலைக்காரன், முதலாளி, தொழிலாளி, ஜமீன்தாரன், குடியானவன் என்பவைகளான படிகள் நிலைத்திருக்க வேண்டுமானால் மாத்திரம்தான் ஒரு நாட்டுக்கு யந்திரம் எதிரியே ஒழிய மற்றபடி சமதர்மம் விரும்பும் நாட்டுக்கு யந்திரமே சரியான அவிழ்தமாகும் என்றும் தைரியமாய்ச் சொல்லுவோம்.

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - சூலை 1936**



# கிராம வாழ்க்கையும் - ஆசிரியர் கடமையும்

## கிராம சீர்திருத்தம் என்பது ஏமாற்று வார்த்தை

தோழர்களே! இன்று கொடுக்கப்பட்டிருக்கும் விஷயம் மிகவும் முக்கியமான விஷயம். இதைப்பற்றி ஒவ்வொருவரும் தங்கள் தங்களபிப் பிராயங்களைச் சொன்னார்கள். நான் தலைவர் என்கின்ற முறையில் முடிவுரையாக என் அபிப்பிராயத்தை கூறுகிறேன்.

நான் ஒரு எதிர் நீச்சக்காரன். என்ன காரணத்தாலோ நம் நாட்டு மக்களின் பெரும்பான்மையான அபிப்பிராயத்துக்கு நான் மாறுபட்டவனாக இருந்து வருகிறேன். பழமையைப் பாராட்டுவது நமது மக்களுக்கு ஒரு பெருமையாய்க் காணப்படுகிறது. நானோ பழமைப்பித்தை வெறுக்கிறவனாக இருக்கிறேன். அதனாலேயே நான் வெகு பேர்களால் வெறுக்கப்படுகிறேன். ஆனாலும் அறிவாளிகள் சீக்கிரம் என் பக்கம் திரும்பிவிடுவார்கள் என்கின்ற நம்பிக்கை இருக்கிறது.

கிராமமும் ஆசிரியரும் என்கின்ற பொருள் இன்றைய கூட்ட விஷயமாகும். அதைப்பற்றி மூவர் பேசினார்கள். அது சம்பந்தமாய் என் அபிப்பிராயத்தை தலைவர் முடிவுரை என்கின்ற முறையில் நான் பேசுகிறேன். ஆசிரியர்களை முதலில் எடுத்துக்கொள்ளுவோம்.

இன்றைய ஆசிரியர்களைப் பற்றி எனக்கு அதிக மதிப்புக் கிடையாது. அவர்கள் அறிவுக்கு முட்டுக்கட்டை ஆனவர்கள் என்பதே எனது அபிப்பிராயம். இந்த நாட்டில் யாருக்காவது கல்வி அவசியம் என்றால் அது ஆசிரியர்களுக்கே ஆகும். பயன் இல்லாததும் பொறுப்பில்லாததுமான பதவி ஒன்று இருக்கின்றது என்றால் அது ஆசிரியர் பதவியே ஆகும். எனது தோழர்களிலும் சிலர் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அறிவு உண்டு என்று நான் நினைத்திருக்கிறேன். ஆனால் அந்த அறிவை அவர்கள் ஆசிரியத் தன்மையில் பயன்படுத்த முடிவதில்லை. ஏனெனில் அவர்கள் படிப்புக்குப் பொறுப்பாளிகளும் அல்ல; பிள்ளைகளின் அறிவுக்குப் பொறுப்பாளிகளும் அல்ல. அவர்கள் கவலையும் பொறுப்பும் தங்கள் எஜமானர்களை திருப்தி செய்து வாழ்க்கை நடத்த வேண்டியது என்கின்ற



RangaRakes tamilnavarasam.com

ஒன்றேயாகும். ''பாப்பாத்தியம்மா மாடு வந்ததா பிடித்து கட்டிக்கொள்'' என்பதோடு மேய்ப்பவன் பொறுப்பு தீர்ந்துவிடுகிறது. அதுபோல்தான் இன்றைய உபாத்தியாயர்கள் பொறுப்பு. அவர்கள் மீது எனக்குள்ள வெறுப்பினால் நான் இப்படிச் சொல்லவில்லை. அவர்களை அந்த அளவுக்கே நிர்பந்தப்படுத்தி வைத்திருக்கும் ஆசிரியர் தன்மையையே நான் சொல்லுகிறேன். பரீக்ஷையில் பிள்ளைகள் தேரும் கணக்கைப் பாருங்கள். பிறகு அந்தப்படிப்பு எதற்கு பயன்படுகிறது என்கின்ற அனுபவத்தைப் பாருங்கள். அதற்கு ஏதாவது கேள்விமுறை இருக்கிறதா என்பதையும் பாருங்கள். இப்படிப்பட்ட பலனுக்கு காரணஸ்தர்களாய் இருக்கிற ஆசிரியர்களை எந்த அளவுக்கு நாம் மதிக்கக்கூடும். இங்கிலீஷ் ஆட்சி ஏற்பட்டு 200 வருஷமாகின்றது. இதுவரை 100க்கு 8 பேரே படிக்க முடிந்திருக்கிறது. அதிலும் பட்டணங்களை தள்ளிவிட்டு கிராமங்களை எடுத்துக் கொண்டால் எத்தனை பேர் படித்திருக்க முடியும். அதிலும் மேல்ஜாதிக்காரர்கள் பிரபுக்கள் என்கின்ற கூட்டத்தார்களை தள்ளிவிட்டால் கிராம பாமர மக்களில் 100க்கு 2 பேராவது படித்து இருக்க முடியுமா? படிப்பின் செலவு எவ்வளவு என்று பாருங்கள். இந்நாட்டில் ஒரு மனிதனுடைய சராசரி வரும்படிக்கு மேல் ஒரு மாணாக்கனுடைய படிப்புக்கு செலவு செய்ய வேண்டி இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது கல்வி நிலையைவிட ஆசிரியத் தன்மை நிலை மோசமாக இருக்கிறது.

கல்விக்கு எப்படி உத்தேசமே இல்லாமல் படிப்பதும், படிப்பிப்பதும் பிறகு படித்த கல்வியும் மனிதனுக்கு பெரும்பான்மையோருக்கு சஞ்சலத்துக்கும் துக்கத்துக்கும் பயன்படுகின்றதோ, அதுபோல் தான் ஆசிரியர் நிலையும் உத்தேசமே இல்லாமல் ஏற்பட்டு வெறும் வயிற்றுப் பிழைப்புக்கு ஆகவே ஒரு வியாபாரம் போலவும் ஒரு ஜீவனோபாய தொழில் முறை போலவுமே பயன்படுத்தப்பட்டு வருவதாகும். வியாபாரமும், தொழில் முறையும் என்றால் நாணயத்தை பிரதானமாக எண்ணாமல் லாபத்தையே பிரதானமாய் எண்ணும் காரியங்களாகும். ஆகவே இவர்கள் எப்படி மக்களுக்கு அல்லது அறிவுக்கு பொறுப்பாளியாவார்கள்? இவர்களிடம் எப்படி குழந்தைகளை ஒப்புவித்து பிற்கால வாழ்வின் கதியை நிர்ணயிக்க முடியும்?

எதற்கு ஆக கல்வி-படிப்பு என்கின்றோமோ, அதற்கு ஏற்ற ஆசிரியர்கள் மிகமிக அருமையாய் இருக்கிறது. ஆசிரியர்கள் என்கின்ற மனிதர்களைப் பற்றி நான் குறைகூறவில்லை. ஆசிரியத்தன்மை என்பதற்கு உள்ள யோக்கியதையைப் பற்றியே நான் சொல்லுகிறேன்.

நான் ஆசிரியரானாலும் சரி, மற்றும் வேறு ஆசிரியர்கள் ஆனாலும் சரி இவ்வளவுதான் முடியும். ஏனென்றால் ஆசிரியர்கள் தயார் செய்யும் நிலை அப்படிப்பட்டது. ஆசிரியர் தனக்கு ஏற்பட்ட உத்திரவுப்படிதான் கல்வி கற்பிக்க வேண்டியவர்களே ஒழிய, தங்களுக்குள்ள அறிவுப்படியோ



சக்திப்படியோ கற்பிக்கக் கூடாதவர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிர்பந்தத்தில் பட்டவர்களாய் இருக்கிறார்கள். ஆசிரியர் பரீக்ஷையென்பதே நிர்பந்தங்கள் பரீக்ஷையென்று சொல்லவேண்டுமே ஒழிய அறிவை உண்டாக்கும் கல்வியை போதிப்பதற்கு தகுதியாக்கும் பரீக்ஷை என்று சொல்லுவதற்கு இல்லை.

இந்த லக்ஷணத்தில் ஒரு ஆசிரியர் பழமைப் பித்தனாகவோ, ஜாதி மத வெறியனாகவோ இருந்துவிட்டால், பிள்ளைகளின் கதி அதோகதிதான். குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்ட மாதிரி புத்தி படிக்கப்போய் முட்டாள் தனத்தை ஏற்றுமதி செய்துகொண்டு வந்தது போலவே முடியும்.

ஆதலால் ஆசிரியர்கள் பயன்படக்கூடியவர்களாகயிருக்க வேண்டு மானால் அவர்கள் ஒரு அளவுக்காவது சுதந்தர புத்தியுள்ளவர்களாகவும் பகுத்தறிவுக்கு சிறிதாவது மதிப்புக் கொடுக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆசிரியரிடம் படிக்கும் பிள்ளைகளே பரீக்ஷை பாஸ் செய்யாவிட்டாலும் அறிவுடையவர்களாகவாவது ஆகலாம்.

ஆதலால் நான் முதல் ஆசிரியர்களையே கேட்டுக் கொள்ளுகிறேன். சுதந்தர புத்தியுடையவர்களாக இருங்கள். பகுத்தறிவை நேசியுங்கள். அதை கனம் பண்ணுங்கள். இரட்டை மனப்பான்மையை ஒழியுங்கள். அதாவது உங்கள் சொந்த அபிப்பிராயம் ஒன்று, உங்கள் மதத்துக்கு ஆகவோ, ஜாதிக்காகவோ பின்பற்றி நடப்பது வேறொன்று, பிள்ளைகளுக்கு போதிப்பது மற்றொன்று என்கின்ற மாதிரியான இரட்டை மனப்பான்மையை விட்டு ஒழியுங்கள்.

இப்படிச் செய்வதற்கு ரொம்ப தைரியம் வேண்டும். ஒரு அளவுக்கு கஷ்ட நஷ்டங்களை ஏற்கவும் தயாராய் இருக்க வேண்டும்.

### கிராம சீர்திருத்தம்

இனி கிராமம் என்பது பற்றி சில பேசுகிறேன்.

கிராமம் என்பது மிக பரிதாபகரமான காக்ஷியாகும். கிராம ஜனங்கள் நிலை மிகவும் பரிதாபகரமானதாகும். பட்டணத்துக்காகவே கிராமங்கள் இருந்து வருகின்றன. கிராம சீர்திருத்தம் என்பது பட்டணங்களில் வாழ்பவர்களின் சௌகரியத்துக்கு ஆக செய்யப்படும் காரியமேயாகும். கசாப்புக் கடைக்காரன் ஆட்டைப்பற்றி கவலை கொள்ளுவது போல்தான் பட்டணக்காரன் கிராமத்தைப் பற்றி கவலை கொள்ளுவதாய் இருக்கிறது. அரசியல் தானாகட்டும், சமூக இயல் தான் ஆகட்டும் எவ்வளவுதான் முற்போக்கடைந்தாலும் கிராமக்காரனின் நிலை ஒரே மாதிரிதான். அவன் பாடுபட்டு உழைத்து வஸ்துக்களை உண்டாக்க வேண்டியதும், அதன் பலனை பட்டணக்காரன் அனுபவிப்பதுமல்லாமல் வேறு என்ன நன்மை



RangaRakes tamilnavarasam.com

கிராமக்காரனுக்கு இருக்கிறது? கால்நடை வளர்ப்பைப்பற்றி கிராமவாசிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று ஒருவர் சொன்னார், கால்நடைகள் வளர்க்கப்பட்டால் கிராமத்துக்கு என்ன லாபம்? பட்டணத்தில் இருப்பவன்தான் பால், தயிர், மோர், நெய் நன்றாக சாப்பிடுவான். கிராமத்தான் சாதத் தண்ணீர் விட்டுத்தான் சாப்பிடுவான். அதுதான் உடலுக்கு பலம் தருமென்று அவன் கற்பிக்கப்பட்டிருக்கிறான். ஒரு கிராமத்தான் குழந்தை தனக்கு கொஞ்சம் நெய்விடும்படி கேட்டால் அவன் தாய்க்கு உடனே கோபம் வந்துவிடும். ''உனக்கு நெய்யை ஊற்றிவிட்டால் நாளைக்கு நெய்க்கார மாப்பிள்ளைக்கு என்ன ஊற்றுவது'' என்று கேட்பாள். (நெய்க்கார மாப்பிள்ளை என்றால் கிராமங்களில் சுற்றி நெய் வாங்கிக்கொண்டு போய் பட்டணங்களில் விற்கும் நெய் வியாபாரி) இவ்வளவு சிக்கனமாக கிராமத்தார்கள் பிழைத்தும் பயன் என்ன? மீத்து வைத்த பணங்களை வக்கீல்களும், போலீஸ்களும், ரிவினியு கிரிமினல் அதிகாரிகளும் கொள்ளை அடித்துக் கொண்டு போதாக்குறைக்கு அவர்களிடம் பாண்டு எழுதிக் கொள்ளுகிறார்கள்.

கிராமவாசிகளின் சௌகரியத்தைப் பாருங்கள். அவர்களுக்கு நல்ல தண்ணீர் கிடையாது, வெளிச்சம் கிடையாது, சுகாதாரம் கிடையாது, நாடகம் கிடையாது, சினிமா கிடையாது, பார்க்கு, சிங்காரத் தோட்டம் கிடையாது. அதிகாலையில் இருட்டில் போகவேண்டும், அந்தியில் இருட்டின பிறகு வீட்டுக்கு வரவேண்டும். அவனால் அரசன், வியாபாரி, லேவாதேவிக்காரன், மற்ற உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் பிழைக்கிறார்கள். அப்படிப்பட்டவனுக்கு பட்டணத்தில் வசிக்கும் ஒரு கக்கூசுக்காரன், தெருக் கூட்டி, மேஸ்திரி ஆகியவர்களுக்கு இருக்கும் சௌகரியமும் இல்லை. ஜாதிமுறையில் பறையன் என்றொரு ஜாதி வருணாச்சிரம முறையில் வகுத்திருப்பது போலவே கிராமம் கிராமத்தான் என்கின்ற இரண்டும் வாழ்க்கை முறையில் கீழ்ஜாதியார்கள் போல் வகுக்கப்பட்டிருக்கின்றன.

கிராமம் என்பதாக ஒன்று ஏன் இருக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியவில்லை. பட்டணத்தான் சௌகரியத்துக்கு என்பதல்லாமல் மற்றபடி கிராமம் எதற்கு என்பது எனக்கு விளங்கவில்லை. இப்படிப்பட்ட கிராமங்களை எல்லாம் அழித்துவிடவேண்டும், எல்லோரையும் பட்டணங்களுக்கு போகும்படி செய்யவேண்டும். அதுதான் கிராம சீர்திருத்தம் என்பேன். ''கிராமங்களுக்குப் போ'' என்பது இப்போது ஜன தலைவர்கள் என்பவர்கள் உபதேசமாக இருக்கிறது. இதில் ஏதாவது நாணயம் இருக்க முடியுமா? B.A.யும், M.A.யும் கிராமத்துக்குப் போய் மக்களுக்கு என்ன செய்யமுடியும்? கூடவே காப்பி, கோக்கோ, சிகரட்டு, பீடி, கிராமபோன், ரேடியோ கொண்டுபோனால் ஒழிய அங்கு அரை நிமிஷம் B.A., M.A.க்காரன் தங்க முடியுமா? இல்லா விட்டால் தலைவலி, உடல் வலி, தூக்கம் பிடியாமை, மூளை வேலை ஓடாமை என்கின்ற வியாதி வந்துவிடாதா? B.A., M.A.



படிப்புக்கும் கிராம முன்னேற்ற வேலைக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா. இவர்கள் கிராமத்துக்குப் போவதால் கிராமக்காரனுக்கு அதிக தொல்லையே அல்லாமல் இவனால் நல்லது என்ன ஆகக்கூடும்?

விவசாய விஷயத்தில் B.A., M.A.க்கு என்ன தெரியும்? கால்நடை விஷயத்தில் என்ன தெரியும்? சுகாதார விஷயத்தில் என்ன தெரியும்? இவன் சொன்னால் கிராமத்தான் கேட்க வேண்டாமா? அவன் புத்தி பழமையில் ஒட்டிக்கொண்டிருக்கும் போது B.A., M.A. யாருக்குச் சொல்லுவான்? சொன்னபடி கிராமத்தான் கேட்பதாயிருந்தாலும், அந்தப்படி செய்ய இருவருக்கும் பணம் முதலிய சாதன சௌகரியங்கள் எங்கே என்று பாருங்கள். கிராமங்களுக்கு போ என்பது ஒரு பித்தலாட்டமான சொல், அல்லது அர்த்தமற்ற சொல். கிராமத்தானுக்கு இருக்கும் பழமைப்பித்தும், மூடநம்பிக்கையும் ஒழிய வேண்டும்.

இன்றைய B.A., M.A.யும் மூடநம்பிக்கைக்காரனாகவே இருக்கிறான். பழமை பித்தனாகவே இருக்கிறான். பழமைப் பித்துதான் இன்று தேசியமாய் இருக்கிறது. அதை போதிப்பதிலேயே எல்லோரும் ஜனத்தலைவர்களாகி விடுகிறார்கள். இன்று கிராமப்புனருத்தாரண வேலையில் முதல் திட்டம் எல்லோரும் பனங்கருப்பட்டியும் கைக்குத்து அரிசியும் சாப்பிடவேண்டும் என்பதாகும். இதற்கு யார் ஒப்புவார்கள்? இத்தனை பேருக்கும் கைக்குத்து அரிசிக்கு எத்தனை பேர் குத்தவேண்டும்? ஆண் பிள்ளைகள் நெல் குத்துவார்களா? பெண்கள்தான் இனி நெல் குத்துவார்களா? பட்டணங் களிலுள்ள பெண்கள் முறத்தகலம் பட்டுக்கரை சீலையும், வைர நகைகளையும் பூட்டிக்கொண்டு ஆர்மோனியம், வீணை, சதுர்ப்பாட்டு, கதை காலக்ஷேபம் பழகிக்கொண்டு உல்லாசமாய் கேளிக்கையில் இருக்கும்போது கிராமத்து பெண்களை நெல்லுக்குத்தவும், கருப்பட்டி காய்ச்சவும் சொன்னால் அவர்கள் எப்படிக் கேட்பார்கள்? சில மூடங்கள் கேட்பதாகவே வைத்துக்கொண்டாலும் நாம் சொல்வது தான் யோக்கியமாகுமா?

கிராமத்தில் பிறந்ததற்கு ஆக நெல் குத்த வேண்டியதா என்று கேட்கின்றேன்.

ஒரு தோழர் கிராமக் கைத்தொழிலைப் பற்றி பேசினார். கிராமக் கைத் தொழில் என்று ஒன்று ஏன் இருக்க வேண்டும்? பட்டணத்துக்காரனுக்கு எந்திரத் தொழிலும், கிராமத்தானுக்கு கைத்தொழிலும் என்று யார் சிருஷ்டித்தார்கள்? ஏன் அப்படி சிருஷ்டிக்கவேண்டும்? ராட்டினம் சுற்றுவதும், தொடையில் கயிறு திரிப்பதும், மண்வெட்டியிலும், கோடாலியிலும், சுத்தியிலும், மண்வெட்டி, மரம் பிளந்து கல் உடைப்பதும்தான் கிராமத்தானுக்கு சொந்தமா இது தான் கிராம முன்னேற்றமா என்று கேட்கின்றேன். எவ்வித முன்னேற்ற முயற்சியும் இல்லாமல் பட்டணத்தான் எவ்வளவு கொள்ளை



RangaRakes tamilnavarasam.com

அடிக்கிறான். வியாபாரி, லேவாதேவிக்காரன், வக்கீல், வைத்தியன், அதிகாரி, உத்தியோகஸ்தன் ஆகியவர்களின் கொள்ளையை பாருங்கள். இதை ஒழிப்பதல்லவா கிராம முன்னேற்றமாகும். இந்தக் கூட்டத்தாரல்லவா கிராமங்களை கசக்கிப் பிழிகின்றவர்கள். இதைவிட்டுவிட்டு இந்த சாதாரண வாத்தியார்கள் அதிலும் கஞ்சிக்குப் போதாத ஏழை வாத்தியார்கள் மாதம் 15 ரூபாய்க்கு தாளம் போடும் இந்த வாத்தியார்கள் கிராமத்திற்குப் போய் என்ன செய்ய முடியும் என்று கேட்கின்றேன்.

ஏதாவது நீங்கள் கிராமத்துக்குப்போய் செய்ய வேண்டுமானால் அவர்களுடைய பழமைப்பித்தை ஒழியுங்கள் - மூடநம்பிக்கையை அகற்றுங்கள். அவர்களை பட்டணவாசிகள் எப்படி எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டி கண்விழிக்கச் செய்யுங்கள். தலைவிதியை மறக்கடித்து பகுத்தறிவை உண்டாக்குங்கள், அவர்களையெல்லாம் பட்டணங்களுக்கு குடிபோக விரட்டுங்கள். இவ்வளவு நீங்கள் செய்தால் அதுவே கிராம முன்னேற்றமான வேலையாகும். மற்றபடி நீங்கள் என்ன செய்தாலும் அது பயன்படாது. உங்களுக்கும் அதற்கு மேல் சக்தி இருக்காது. சௌகரியமும் சாதனமும் கிடையாது.

உதாரணமாக இராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு கிராமத்துக்குப் போயிருந்தேன். அங்கு மீட்டிங்குக்கு 400 பேர்கள் வந்திருந்தார்கள். அவர்களின் 375 பேர்களுக்கு நரம்புச் சிலந்தி நோய் இருந்தது. அந்த ஊர்க்கிணறு, கிணற்று தண்ணீர் மேலே வருவதைவிட மேலேயிருக்கும் தண்ணீர் கிணற்றுக்குள் சுலபத்தில் போகத் தகுந்த மாதிரியான மேயோ கிணறாகும். அதன் தண்ணீரை பரிசுத்தம் செய்ய யாருக்கும் புத்தி கிடையாது. உபாத்தியாயர் ஒருவர் இருந்தார். அவரும் காலில் கட்டுப்போட்டுக் கொண்டுதான் இருந்தார். நான் கேட்டதற்கு அவர் கவனிக்கிறதற்கு ஒருவருமில்லை நான் என்ன செய்ய முடியுமென்று பதில் சொன்னார். இவைகள் எல்லாம் அரசாங்கத்தை பொறுத்த வேலையே ஒழிய பொது ஜன சேவையால் ஆகக்கூடிய காரியமோ, ஒரு திண்ணைப் பள்ளிக்கூட வாத்தியாரால் ஆகக்கூடிய காரியமோ அல்ல. அரசாங்கத்தின் கையில் இருந்த பொறுப்பை ஜனத் தலைவர்கள் என்பவர்கள் பிடுங்கிக்கொண்டு தங்கள் சுயநலத்துக்கு பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

இவைகள் மாற்றமடைய வேண்டுமானால் பகுத்தறிவை மக்களுக்கு போதியுங்கள் என்பதுதான் எனது ஆசை. பகுத்தறிவு விஷயத்திலும் நீங்கள் அடிமைப்பட்டிருக்கிறீர்கள். அது விஷயத்தில் உங்கள் அறிவுப்படி நீங்கள் போதிக்க முடியாது. உங்கள் அறிவுப்படி நீங்கள் நடக்கவும் முடியாது என்கின்ற நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள். ஒரு உபாத்தியாருக்கு மூன்று புத்தி இருக்கின்றன.



அதாவது அவருக்கு சரியென்று தோன்றும் ஆராய்ச்சி புத்தி ஒன்று. பிள்ளைகளுக்கு இன்னபடிதான் கற்பிக்கவேண்டும் என்று படிப்பித்த நிர்பந்த புத்தி இரண்டு. தனக்கு தோன்றுகிறபடியும் தான் படிப்பிக்கிறபடியும் நடக்க முடியாத பழமைப்பித்தும் கட்டுப்பாட்டு நிபந்தனையும் கொண்ட கோழைப் புத்தி மூன்று. இந்த மூன்று புத்திகளுடன் நீங்கள் கிராமங்களை புனருத்தாரணமோ சீர்திருத்தமோ செய்வதென்றால் அது பயப்படக்கூடிய காரியம் தான். ஆனாலும் பகுத்தறிவை பயன்படுத்த தைரியம் கொண்டு விட்டால் இந்த கஷ்டங்கள் சுலபத்தில் ஒழிந்துபோகும் என்றே நினைக்கிறேன்.

*குறிப்பு:- 23.07.1936 இல் லண்டன் மிஷன் காம்பௌண்ட் பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற ஈரோடு லண்டன் மிஷன் போதனா முறை பாடசாலை லிட்டரரி சொசைட்டியின் கூட்டத்தில் ஆற்றிய தலைமை உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 02.08.1936**



RangaRakes tamilnavarasam.com

# சபாஷ் ஷண்முகம்!

தோழர் சர். ஆர்.கே. ஷண்முகம் அவர்களை தெரியாத மக்கள் தமிழ் நாட்டில் அருமையாகவே இருப்பார்கள். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் சர். ஷண்முகம் அவர்கள் இன்று தமிழ்நாட்டிலுள்ள தமிழ் மக்கள் எல்லோரிலும் முதன்மை பெற்று அதாவது அறிவு, ஆற்றல், செல்வம், பதவி, அதிகாரம், பட்டம், புகழ் யாவற்றிலுமே முதன்மை பெற்று விளங்குகிறார்.

இவரது வாலிப பருவத்திலிருந்தே இந்நிலைக்கு இவர் வருவாரென்று பொதுஜனங்கள் கருதி எதிர்பார்த்து வந்தார்கள். இவரது அறிவும் ஆற்றலும், மேன்மையும் பிரகாசிக்கப் படாமலும், வெற்றிபெறாமலும் இருக்க வேண்டு மென்று பலர் சிறப்பாக பார்ப்பனர் எல்லோரும், பார்ப்பனர்களைப் பற்றியே ‘‘மோட்சம்’’ புக இருந்த பார்ப்பனரல்லாத கோடாரிக் காம்புகளும் இவ்விரு கூட்டத்தினரது கூலிகளும் தங்களாலான சகலவித பிரயத்தனமும் செய்து பார்த்தார்கள். சர். ஷண்முகம் அவர்கள் இவர்கள் இத்தனை பேர்களது முட்டுக்கட்டைகளையும் தூசியத்திரமாக மதித்து வந்ததால், அடிக்கும் பந்து அடியின் பலத்துக்கு தகுந்தபடி உயர எழும்புவதுபோல் முட்டுக்கட்டை அதிகரிக்க அதிகரிக்க அவருக்கு செல்வமும் புகழும், பதவியும் பெருகிக் கொண்டே வந்திருக்கிறது.

இன்று தென்னாட்டுப் பார்ப்பனர்கள் வயிற்றில் அணைக்க முடியாத பொறாமை நெருப்பு ஒன்று எரிந்த வண்ணமாய் இருந்து வருகிறது. அது தோழர் ஷண்முகத்தின் புகழும் பதவியும் பற்றிய பொறாமைத் தீயேயாகும். பாஷாணத்தில் புழுத்த புழு எப்படி அந்தப் பாஷாணத்தையேதான் தின்றே வளர்ந்து பெருகுமோ அதுபோல் பார்ப்பனர்களின் விஷத்தை ஆகாரமாகக் கொண்டே தோழர் ஷண்முகம் மேன்மேலும் மேன்மை பெற்று வந்திருக்கிறார்.

சமீபத்தில் தோழர் மகாகனம் சீனிவாச சாஸ்திரி என்பவர் ஒரு எழவு வீட்டில் துக்கப்பேச்சு பேசும்போது ‘‘பாழும் பார்ப்பனரல்லாத இயக்கம் இல்லாதிருந்திருந்தால் காலஞ்சென்ற ராமச்சந்திரராவ் பெரியதொரு பதவிக்கு வந்து மக்களுக்கு பேருபகாரம் செய்திருப்பார்’’ என்று கூறினார். அதை நமது சர். ஷண்முகம் விஷயத்தில் நன்றாய் திருப்பிச் சொல்லலாம்.

அதாவது நமது பாழும் பார்ப்பனீய விஷமம் க்ஷயக்கிருமி போல் தமிழ்நாட்டில் தோன்றி தமிழ் மக்களுக்கு தொல்லை கொடுத்துவரவில்லை யானால் சர். ஷண்முகத்தின் அறிவினாலும், ஆற்றலினாலும் ஏற்படும் பயனை நம் தென்னிந்திய மக்கள் நன்றாய் இன்னும் எவ்வளவோ அனுபவித்து எவ்வளவோ மேன்மை பெற்று இருக்கலாம் என்று சொல்லலாம்.

ஆனால் அப்படி நாம்தான் அனுபவிக்கமுடியாமல் போய்விட்டதே தவிர ராமச்சந்திரராவ் ஏமாற்றமடைந்தது போல் சர். ஷண்முகம் சிறிதும் ஏமாற்றமடையவில்லை. நாம் அனுபவித்திருந்தால் எவ்வளவு அனுபவித் திருப்போமோ அதுபோலவே மற்ற நாட்டு மக்கள் அனுபவித்து வருகிறார்கள்.

தோழர் ஷண்முகம் இந்திய சட்டசபைக்கு போகக்கூடாது என்று பார்ப்பனர்கள் எல்லோருமே சேர்ந்து முட்டுக்கட்டை போட்டார்கள். ஒரு அளவில் பார்ப்பனர் அது சமயம் மனம் குளிர திருப்தியடையும்படி முட்டுக்கட்டை வெற்றிபெற்றது. ஆனால் அந்த முட்டுக்கட்டை என்றும் அணையாத நெருப்பை பார்ப்பனர்கள் வயிற்றில் கொஞ்ச நாளையிலேயே பற்ற வைத்துவிட்டது. அதாவது பார்ப்பனத் தொல்லையில் சூழ்ச்சியில் அவர் இந்திய சட்டசபைக்குத் தலைவராய் சிறிதுகாலம் இருப்பதுதான் கெட்டதே தவிர மக்களுக்கு அதைவிட அதிக நன்மை செய்யக்கூடியதான கொச்சி சட்டசபைத் தலைவர் பதவியோடு ஒரு சமஸ்தான ஆட்சித் தலைமையும் பெற்று மக்களுக்கும் மற்றவர்களால் சுலபத்தில் செய்ய முடியாத நன்மைகளும் வசதிகளும் ஏற்பட்டன.

சர். ஷண்முகம் கொச்சிக்கு போயிருக்க சந்தர்ப்ப மேற்பட்டிருக்க வில்லையானால் அவரது ராஜதந்திர பெருமையும் (துறைமுக விஷயத்தில் கொச்சிக்கு செய்த பேருபகாரம்) கொச்சி சமஸ்தானத்தின் பிரஜைகளில் ஒரு கூட்டத்தாரின் இழிவை நீக்கிய (வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்படுத்திய) பெருமையும் அவருக்கு ஏற்பட்டிருக்காது.

ஆதலால் எப்பொழுதுமே நம் பார்ப்பனர்களின் முட்டுக்கட்டையும் தொல்லையும் பார்ப்பனரல்லாதாருக்கு நன்மையே பயந்து வருகின்றதோடு அவர்களால் சுலபத்தில் இனி நமக்கு கெடுதி செய்ய முடியாமலே இருக்கும்படி ஆகிவிடுகிறது என்பதற்கு ஆகவே இதை எடுத்துக்காட்டினோம். இதுபோலவே தோழர் ஏ. ராமசாமி முதலியார் அவர்களுக்கும் மற்றும் சிலருக்கு பார்ப்பனர்கள் ஒவ்வொரு படியிலும் தங்களாலான முட்டுக்கட்டை போட்டே வந்தார்கள். அதுவும் அப்படியே முதலியாரையும் மற்றவர்களையும் மேன்மைப்படுத்தியே வந்திருக்கின்றது. பார்ப்பனர்கள் முட்டுக்கட்டை காரணமாகவே முதலியார் பெருமையை வெளிப்படுத்த சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுக்கொண்டே வருகின்றன.

மற்றும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்னும் விஷயத்திற்கும், பார்ப்பனர்களின் முட்டுக்கட்டைக்கு எல்லையே இல்லாதிருந்தது.

இது விஷயத்தில் பார்ப்பனர்கள் ஒழுக்கம். நாணயம், நாணம், மனிதத் தனம் ஒன்றுமே இல்லாமல் நடந்துகொண்டு வருகிறார்கள். நம்



RangaRakes tamilnavarasam.com

சமூகத்திலுள்ள கோடாலிக்காம்புகளைப் பிடித்தும் எவ்வளவோ விஷமங்களும் செய்து வருகிறார்கள். இவ்வளவும் என்ன பயனைக் கொடுத்தது என்று பார்த்தால் அவையும் அடிக்கும் பந்து மேலே கிளம்புவதுபோல் ஒவ்வொரு இலாக்காவிலும் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு தேசத்திலும் சண்டமாருதமும் காட்டுப்பிரவாகமும் நுழைவது போல் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நுழைந்து வருகின்றது.

இன்றும் இந்தியாவிலேயே பல முக்கிய மாகாணங்களில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நெருப்பு பற்றி எரிகிறது.

சுதேச சமஸ்தானங்களிலும் சுமார் 6, 7 வருஷத்துக்கு முதலிலேயே மைசூரில் ஏற்பட்டுவிட்டது.

இப்போது சர். ஷண்முகம் தலைவராய் இருக்கும் கொச்சி சமஸ்தானத்து அரசாங்கத்தில் ஏற்பட்டுவிட்டது.

கூடிய சீக்கிரம் திருவாங்கூரிலும் ஏற்படப் போகிறது.

இந்த சீர்திருத்த எலக்ஷன் தீர்ந்தவுடன் மற்ற மாகாணங்களிலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ நெருப்புப்பற்றி எரியப் போகிறது என்பது உறுதி. ஆயிரம் கோடாலிக் காம்புகளாலும் இது இனி அசைக்கப்படப்போவதில்லை.

கொச்சி அரசாங்கமானது திருவாங்கூரைப் போலவே பார்ப்பனக் கோட்டையாக இருந்த அரசாங்கமாகும். அங்கு தான் ஒரு காலத்தில் நாயர் பெண்கள் கூட (அதாவது மேல் ஜாதிக்காரப் பெண்கள் கூட) தங்கள் ஸ்தன்னியங்களை மறைத்துக்கொள்ளக் கூடாமலும் துணி போட்டு மூடக்கூடாமலும் இருக்கும்படி சட்டம் இருந்து வந்த தேசமாகும்.

கொச்சி தான் பார்ப்பனக் காளைகள் மேய வேலி இல்லாத தீவன (பெண்கள்) வனம் போல் இருந்து வர சௌகரியம் பெற்றிருந்த சமஸ்தானமுமாகும்.

மற்றும் அது மனித சமூகத்தில் அந்த சமஸ்தான இந்துக்களில் மெஜாரிட்டி பாகமான மக்களை தீண்டப்படாதவர்களாக்கி அவர்கள் தெருவில் நடக்கும்போது மற்றவர்கள் மீது தங்கள் நிழல் படக்கூடாது என்று தாங்களாகவே ஓ என்று கூவிக்கொண்டு நடக்கவேண்டும் என்கின்ற கொடுமை இருந்து வந்த சமஸ்தானமாகும். அப்படிப்பட்ட கொடுமையுள்ள நாட்டுக்கு சர். ஷண்முகத்தின் சேவை எவ்வளவு அவசியமாய் இருந்திருக்க வேண்டும் என்பதைக் கருதித்தான் பார்ப்பனர்கள் அவரை இந்திய சட்டசபைக்குப் போகாமல் தடுத்து அது பயனற்ற ஸ்தானமானதால் அதற்கு ஒரு பயனற்ற மனிதர் போனால் போதுமென்று கருதி சாமி வெங்கிடாசலத்தை அங்கு அனுப்பிவிட்டு கொச்சிக்கு தோழர் ஷண்முகம் போகும்படி செய்தார்களோ என்னமோ என்று நாம் கருதாவிட்டாலும் சர். ஷண்முகத்தை தடுத்ததற்கு ஆக நாம் பார்ப்பனர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.



தோழர் ஷண்முகம் கொச்சி திவானாவதற்கு முன் கொச்சியில் அரசாங்க உத்தியோகம் இருந்த நிலைமை கீழே குறிப்பிடுகிறோம்.

| வகுப்பு பெயர் | ஜனத்தொகை | உயர்ந்த உத்தியோகங்கள் வகுப்புவாரி வீதம் | | வருட சம்பள மொத்தம் | |
|---|---|---|---|---|---|
| | | நிரந்தர | ஆக்டிங் | நிரந்தர | ஆக்டிங் |
| கிறிஸ்தவர்கள் | 3,34,870 | 132 | 60 | 1,62,306 | 74,436 |
| தீயர்கள் | 2,76,649 | 16 | 18 | 15,360 | 9,768 |
| நாயர்கள் | 1,42,637 | 305 | 88 | 3,24,228 | 98,338 |
| தமிழ் பார்ப்பனர் | 21,754 | 336 | 76 | 3,67,218 | 62,290 |
| அம்பலவாசிகள் | 9,211 | 55 | 18 | 67,226 | 22,662 |
| க்ஷத்திரியர் | 2,122 | 11 | 3 | 17,280 | 2,280 |

இப்போது சர். ஷண்முகம் கொச்சி அரசாங்கத்தில் ஏற்படுத்தி வைத்திருக்கும் நிலைமை.

மொத்த உத்தியோகங்களில்

| | | |
|---|---|---|
| பார்ப்பனர்களுக்கு | 100 க்கு | 4 |
| நாயர்களுக்கு | ,, | 16 |
| ஈழவர்களுக்கு | ,, | 20 |
| புலையர்களுக்கு | ,, | 4 |
| இதர ஜாதி இந்துக்களுக்கு | ,, | 10 |
| இதரஜாதி இந்துக்களல்லாதவர்களுக்கு | ,, | 14 |
| ரோமோ-ரசியர்களுக்கு | ,, | 12 |
| லத்தீன் | | |
| கத்தோலிக்கர்களுக்கு | ,, | 6 |
| இதர கிறிஸ்துவர்களுக்கு | ,, | 6 |
| முஸ்லீம்களுக்கு | ,, | 6 |
| யூதர்,ஆங்கிலோ-இந்தியர் | | |
| முதலியவர்களுக்கு | ,, | 2 |

என்கின்ற கணக்கு வீதம் நமது மாகாண பிரிவு போலவே சட்ட மூலம் ஏற்படுத்திவிட்டார்.



RangaRakes tamilnavarasam.com

ஆகவே கொச்சி அரசாங்க உத்தியோகத்தில் சர். ஷண்முகம் வகுப்புவாரி பிரதிநிதித்துவ உரிமை ஏற்படுத்திவிட்டார். எனவே அவருக்கு கொச்சி அரசாங்கமும், கொச்சி பிரஜைகளும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஆதலால் அவருக்கு இந்த இரு கூட்டத்தவரும் இரண்டு சிலைகள் செய்து அரசாங்க சிலையைத் துறைமுகத்திலும், பிரஜைகளது சிலையை பட்டணத்தின் நடுவிலும் அல்லது சட்டசபைக்கு முன் பக்கமுள்ள மைதானத்திலும் வைத்து நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இவற்றை விட கொச்சி அரசாங்கமும் பிரஜைகளும் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களுக்கு சிறப்பாக ராஜாஜி (ராஜகோபாலாச்சாரி) யாருக்கு நன்றி செலுத்த கடமைப் பட்டிருக்கிறார்கள். ஏனென்றால் அவரது முயற்சி யாலேயேதான் சர். ஷண்முகம் கொச்சி திவானாக நேர்ந்தது. இல்லாதவரை இந்திய சட்ட சபைக்குத்தான் போயிருக்கக்கூடும்.

இனி பார்ப்பனர்கள் அவரை ஒழிக்க சகல முயற்சியும் செய்யப் போகிறார்கள் என்பது உறுதி. ஆனால் கடுகளவும் வெற்றிபெறமாட்டார்கள் என்பது அதைவிட உறுதி.

சபாஷ் ஷண்முகம்!

சர். ஷண்முகத்துக்கு ஜே!

பார்ப்பன விஷமத்துக்கும் ஜே! ஜே!!

**குடி அரசு - தலையங்கம் - 02.08.1936**



# ஈ.வெ.கிருஷ்ணசாமி, ஈ.வெ.ராமசாமி தாயார் தாயம்மாள் முடிவு

95 வயதுகாலம் சுகமே வாழ்ந்து, சுகமே இருந்து வந்த எனதருமைத் தாயார் சின்னத்தாயம்மாள் 28-7-36ந் தேதி செவ்வாய் நள்ளிரவு 12 மணிக்கு முடிவெய்தினார்.

அம்மையார் இந்திய மக்களின் சராசரி வாழ்வுக்கு 4 பங்கு காலம் அதிகமாகவே வாழ்ந்துவிட்டார். தானாக நடக்க இருக்க, மலஜலம் கழிக்க சௌகரியமுள்ள காலம் அவ்வளவும் வாழ்க்கை நடத்திவிட்டு சௌகரியம் குறைந்த 2 மணி நேரத்தில் முடிவெய்திவிட்டார்.

28ந் தேதி இரவு 9-30 மணிக்கு அம்மையிடம் அனுமதி பெற்றே ஜோலார்பேட்டை பிரசாரத்துக்குச் சென்றேன். 12 மணிக்கு ஆவி போக்கு வரவு நின்றுவிட்டது. காலை 9 மணிக்கு வந்து சேர்ந்தேன்.

சின்னத்தாயம்மாள் சேலம் டவுனுக்கு 3 மைலில் உள்ள தாதம்பட்டி என்கின்ற கிராமத்தில் ஒரு பிரபல செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். மிக்க செல்வமாய் வளர்க்கப்பட்டவர்.

உதாரணமாக தனது கிராமத்தில் புஷ்பவதி ஆனதற்கு சேலம் டவுனில் ஊர்வலம் விடத்தக்க தடபுடல் வாழ்க்கையில் இருந்தவர். ஈரோட்டில் ஏழைக் குடும்பத்தில் குழந்தைப் பருவத்திலேயே தகப்பனார் காணாமல் போன பிறகு ஒரு மிக ஏழ்மை வாழ்க்கை நடத்திய தாயாரால் காப்பாற்றப்பட்டவரும் பள்ளிக்கூடமே இன்னதென்று அறியாதவரும் 6 வயதிலேயே கூலி வேலை செய்யவும் 18 வயதில் கல் உடைப்பு வேலை செய்யவுமாய் இருந்து வந்தவரும் 25 வயதில் வண்டி வைத்து வாடகைக்கு ஓட்டப்போகிறவருமான வெங்கிட்ட நாயக்கருக்கு நெருங்கிய பந்து உறவு காரணமாக வாழ்க்கைப்படுத்தப்பட்டவர்.

அம்மை செல்வக்குடும்பத்தில் பிறந்து செல்வத்தில் வளர்ந்து வந்தவராய் இருந்தாலும், வெங்கிட்ட நாயக்கரை மணந்த பிறகு வெங்கிட்ட நாயக்கர் தரித்திர வாழ்வு அம்மையாரையும் பீடித்து அம்மையார் செங்கல், ஓடு முதலியவைகளை காளவாயிலிருந்து ஊருக்குள் கட்டிடம் கட்டுபவர் களுக்குக் கூலிக்குக் கூடைகளில் சுமந்து போட்டு தினம் 8 பைசா கூலி வாங்கி பிழைத்து வந்தவர். புருஷனுக்கு தினம் 2 அணா கூலியும் பெண் ஜாதிக்கு தினம் 0-0-8 பை கூலியுமாக சம்பாதித்து வந்தவர்.



RangaRakes tamilnavarasam.com

பிறகு புருஷனுக்குக் கல் சித்திர வேலையில் தினம் பகலில் 8 அணாவும் இரவில் 0-12-0 அணாவும் பெறக்கூடிய யோக்கியதையும் வேலைத் திறமையும் ஏற்பட்டபோது, அம்மையார் வெளிவேலைக்கு போகாமல் இருக்க நேர்ந்தது. ஆனபோதிலும் பின்னால் புருஷன் வண்டி ஓட்டிக் கொண்டு வெளியூர்களுக்குப் போவதைச் சகிக்காத அம்மையாரின் தகப்பனார் ஒரு சிறு தட்டுக்கடை வைத்துக் கொடுத்தார். அந்தக் கடை ஒரு வண்டிப் பேட்டையில் வைத்தால் தன்னுடன் தோழர்களாய் இருந்த வண்டிக்காரர்கள் தன்னிடம் சாமான் வாங்குவார்கள் என்று கருதி சட்டி பானை, அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய்ப் பொடி, விறகு முதலிய சக சாமக்கிரியை சாமானும் ஒருங்கே வைத்து வியாபாரம் செய்தார்கள். இந்த கடைக்கு வேண்டிய சகல சாமானும் அம்மையாரும் அம்மையாரின் மாமியாரான கெம்பு அம்மாளும் வீட்டில் தயார் செய்து கொடுத்து வருவார்கள். இந்த சமயம் 2, 3 குழந்தைகள் பிறந்து இறந்துவிட்டன. இந்த நிலையில் அந்தக் கடையில் நல்ல லாபம் கிடைத்ததாலும் பிறகு போட்டி ஏற்பட்டதாலும் அதை விடுத்து அந்தக் கடையை அப்படியே மற்றொருவனுக்கு விற்று விட்டு லாபப் பணத்தையும், கைமுதல் பணத்தையும் சேர்த்து ஈரோடு பஜார் ரோட்டில் ஒரு மளிகைக் கடை வைத்தார். அம்மையை கைப்பிடித்த சம்பவத்தால் கல்தச்சு வெங்கிட்டன் என்ற பெயர் மாறி, வண்டிக்கார வெங்கிட்ட நாயக்கனாகி, அதுவும் மாறி தட்டுக்கடை வெங்கிட்ட நாயக்கனாகி பிறகு அதுவும் மாறி மளிகைக்கடை வெங்கிட்ட நாயக்கரானார். அதில் 3 வருஷத்திலேயே மற்றவர்கள் பொறாமைப்படும்படியான லாபமடைந்தார். ஒரு சிறு குச்சு அதாவது கதவு இல்லாமல் தட்டி வைத்து இரவு முழுவதும் நாயை விரட்டிக் கொண்டிருக்க வேண்டிய குடிசை மாறி ஓட்டுவில்லை கட்டிட வீடும் 2 ஏக்ரா விஸ்தீரணமுள்ள நல்ல வயல் நிலமும் உடையவரானார். இது சமயம் தான் அம்மையாருக்கு முன் பிறந்த மூன்று குழந்தைகளும் இறந்துபோய் ''ஸ்தல யாத்திரைகள்'', ''தவங்கள் செய்து'' ''வரடி'' கல் சுற்றி, நிலத்தை வழித்து அதில் சாப்பாடு போட்டு பிசைந்து சாப்பிட்டு, சன்யாசிகளின் எச்சில் சாப்பிட்டு வரம் பெற்று ஈ.வெ.கிருஷ்ணசாமியையும், ஈ.வெ.ராமசாமியையும் பெற்று எடுத்த காலம் என்றாலும், அம்மையாருக்குள்ள பிள்ளை ஆசையால் மூத்த பிள்ளை ஒன்றே தனக்கு போதுமென்று கருதி அதற்கே தனது முலைப்பால் முழுவதும் கொடுக்க ஆசைப்பட்டு இளைய பிள்ளையாகிய ராமனை மற்றொரு குழந்தையில்லாத அம்மையாருக்கு அதாவது தன் புருஷனின் சிறிய தகப்பனார் மனைவியாகிய ஒரு விதவைக்கு ஒரு சிறு வீடும் சிறிது நிலமும் இருந்த காரணத்துக்கு ஆக அவர்களையே வளர்த்துக்கொள்ளும்படி இனாமாய்க் கொடுத்துவிட்டார்கள். அந்தக் காரணத்தாலேயே ராமன் (ஈ.வெ.ராமசாமி) பள்ளிக்கு அனுப்பாமல் தெருத்தெருவாய் சுற்றவும் கேள்வி கேப்பாடு இல்லாமல் அலையவும் ''கம்மநாட்டி வளர்ப்பது கழுதைக் குட்டிதான்'' என்ற பெயருக்கு ஏற்ப ஒரு உருவாரமாய் இருந்து வரவும் மூத்த பிள்ளை கிருஷ்ணசாமியை மிக



அருமையாய் செல்லமாயும் வளர்க்கவும் ஆன நிலையேற்பட்டது. ஆனால் இந்த சமயம்தான் அதாவது இந்த இரு குழந்தைகளும் பிறந்த சமயம் தான் வெங்கிட்ட நாயக்கருக்கு பெரிய செல்வம் பெருக சந்தர்ப்பமும் பெருகி வந்த காலமாகும். அதாவது கடசியில் சொன்ன மளிகை கடை வியாபாரமானது வலுத்துவிட்டது. வீடு, வயல், தங்க நகைகள் கேட்போர் மனமும், பார்ப்போர் கண்களும் திடுக்கிடும்படியான தோற்றமுமாய் இருந்ததால் எப்படியாவது அந்த மளிகைக்கடை நடக்கும் கட்டிடத்தை பிடுங்கிக் கொண்டால் தங்களுக்கு அந்த லாபம் கிடைக்குமென்று கருதி சிலர் அந்தக் கடையை கட்டடக்காரனிடம் அதிக வாடகை வைத்து கேட்க ஆரம்பித்தார்கள். அம்மையாரும் - புருஷனும் யோசித்து கடையை சகல சாமானுடனும் பாக்கியுடனும் ஒப்புக்கொள்ளுபவர்களுக்கு கொடுத்து விடுவதாய் விலை கூறினார்கள். அதற்கு ஏற்பட்ட போட்டியில் நல்ல விலை கிடைத்தது. அந்தப் பணத்தைக் கொண்டு உடனே ஒரு மண்டிக் கடை அதாவது மொத்த வியாபாரக் கடை (மூட்டைக் கணக்காய் விற்பது) வைக்க யோசித்தார்கள். உடனே நல்லதொரு கடை அமைந்தது. அங்கு மண்டிக்கடை வைத்தார். புருஷன் உடனே மண்டி வெங்கிட்ட நாயக்கரானார். சின்னத்தாயம்மைக்கும் மண்டி வெங்கிட்ட நாயக்கருக்கும் ஊரில் பணக்காரர் கூட்டத்தில் சேர்க்கத்தக்க பெயர் ஏற்பட்டதோடு எப்படியோ நாணயமும் ஏற்பட்டு விட்டது. தான் மிகவும் நாணயசாலி என்று காட்டிக்கொள்வதில் இருவர்களும் சமர்த்தர்கள். அந்த காலங்களில் பணம் படைத்தவர்களுக்கு பணம் போட்டு வைக்க பாங்கி இல்லாததால் நாணையத்தில் பேர்பெற்ற சின்னத்தாயம்மாளும் வெங்கிட்ட நாயக்கரும் ஒரு சேவிங் பாங்கி ஆகி விட்டார்கள். பணம் ஏராளமாய் தங்களிடம் டிபாசிட் வர ஆரம்பித்ததும் தங்கள் வியாபாரத்தை மிகவும் பெருக்கி விட்டார்கள். மண்டிவெங்கிட்ட நாயக்கர் தன் கடையில் வியாபாரம் செய்தால் சின்னத்தாயம்மாள் வீட்டில் நெல் குத்தும் கொட்டணம், துவரை உளுந்து உடைக்கும் வேலை, விளக்கெண்ணெய் காய்ச்சி ஊத்தும் வேலை முதலியவைகளில் வீட்டில் எப்போதும் 20, 30 பேர் வேலைசெய்யும்படியான தொழில் செய்து புருஷனைப் போலவே தானும் வருஷம் வருஷம் சிறிதாவது பணம் சம்பாதித்து புருஷனுக்கு கொடுத்தே வருவார்கள். பணம் சேர்ந்தவுடன் மத பக்தி, மதசின்னம், விரதம், நோன்பு, திதி முதலியவைகள் தானாகவே தேடி வருவது வழக்கமல்லவா? அதுபோல் அம்மையார் மிகவும் பக்தி உடையவரானார். விரதங்கள் அதிகமாய் அனுஷ்டிக்கத் தொடங்கினார். மண்டி வெங்கிட்ட நாயக்கருக்கும் நாமம் பலமாக பட்டை பட்டையாய்த் திகழ்ந்தது. இந்த மத்தியில் வீட்டில் செல்லமாய் வளர்க்கப்பட்ட மூத்த பிள்ளை கிருஷ்ணசாமியும் பாகவதராக ஆகிவிட்டார். இந்த சந்தர்ப்பத்தில் அதாவது மண்டி வைத்து மண்டிக்கடை நன்றாய் நடக்க ஆரம்பித்து சிறிது எதிர்பார்த்ததற்கு மேல் லாபம் வர ஆரம்பித்தவுடன் சின்னத்தாயம்மாள் சின்னப் பிள்ளை ராமனை (ஈ.வெ.ராமசாமியை) ஒரு சிறு சண்டை காரணமாக இனாமாக (தத்து)



RangaRakes tamilnavarasam.com

கொடுத்த அம்மாளிடமிருந்து பிடுங்கிக் கொண்டார்கள். ராமனை வளர்த்த அம்மாள் ஊர் பஞ்சாயத்து கூட்டினார். மண்டி வெங்கிட்ட நாயக்கருக்கு ஒன்றும் தட்டிச் சொல்ல முடியவில்லை. சின்னத்தாயம்மாள் ''2 கண்ணு தான் எனக்கு இருக்கிறது. இதில் ஒன்றைக் கொடுக்க முடியுமா? முடியாது போ'' என்று சொல்லிவிட்டார்கள். முடிவில் ராமனை சுமார் 9 வயதில் கைப்பற்றினாலும் அவன் விதவை வளர்த்த பிள்ளையாய் ஊர்சுத்தியாய் லோலாயாய் திரிந்ததால் படிப்பு இல்லை. அது மாத்திரமா இனிமேல் படிக்கவும் லாயக்கில்லாத சோதாவாய் ஆகிவிட்டான். இருந்த போதிலும் பள்ளியில் வைத்து வீட்டு வாத்தியார் வைத்துப் பார்த்தார்கள். வாத்தியாருடன் சண்டை, பிள்ளைகளுடன் பலாத்காரம், அடிதடி, கடசியாய் ''உபாத்தியாயரை வைவதில்லை'' ''பிள்ளைகளை அடிப்பதில்லை'' என்கின்ற வாசகம் ஆயிரம் தடவை ஐயாயிரம் தடவை ''தண்டக் காப்பி'' எழுதுவதே வேலையாய் இருந்ததால் ராமனைப் பள்ளிக்கு அனுப்புவதை நிறுத்திக் கொண்டு, மண்டிக்கடையில் அதாவது தரகு வியாபார இலாகாவில் மஞ்சள், மிளகாய் ஏலம் கூறும் வேலையில் போட்டார்கள். இருந்தாலும் ராமன் எங்கு வளர்த்த தாயிடம் போய்விடுவானோ என்று சின்னத்தாயம்மாள் சின்ன மகனுக்கு சிறிது சலுகை காட்டி பொய் அன்பாவது காட்டியே வருவார்கள்.

எப்படியோ பணம் சேர்ந்துகொண்டே வரும் இந்த சந்தர்ப்பம்தான் வெங்கிட்டநாயக்கர் என்ற பெயர் மாறி நாயக்கரானதும் சின்னத்தாயம்மாள் என்கிற பெயர் மாறி நாயக்கர் அம்மாள் என்கின்ற பெயர் ஏற்பட்டதுமாகும். அம்மையாருக்கு தெய்வ பக்தி கொழுந்து விட்டு எரியத் தொடங்கிவிட்டது நாயக்கரும் அம்மாள் சொன்னபடி ஆடியாகவேண்டும்.

பணத்தை அள்ளி இறைக்க ஆரம்பித்துவிட்டார்கள், கண்டவிடமெல்லாம் காடுமேடெல்லாம் கோவில், சத்திரம், சாவடி கட்ட ஆரம்பித்தார்கள். பார்ப்பனர்களின் புகழுக்கு அடிமைப்பட்டு பல குருமார்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். ஒவ்வொரு கல்யாணத்தின் போது ''தருமக் கல்யாணங்கள்'' செய்வார்கள். நன்றாய் இருக்கும் கோவிலுக்கும் கும்பாபிஷேகம் செய்வார்கள். நாயக்கர் (புருஷன்) ஏதாவது தட்டிச் சொன்னால் ''நீங்கள் பணம்கொடுக்க வேண்டியதில்லை. என் பணத்தில் செய்யுங்கள்'' என்று எடுத்தெறிந்தாற்போல் பேசிவிடுவார்கள். வீட்டில் வாரம் ஒரு காலக்ஷேபம் ராமாயண பாரத வாசகம், எங்கு திரியும் சந்நியாசிகளுக்கும் பாகவதர்களுக்கும் சதா சர்வகாலம் உலையில் நீர் கொதித்த வண்ணமாய் இருக்கும்படியான தண்டச் சோத்து சத்திரம் போல் வீட்டை நடத்தி வந்தார்கள்.

இந்த நிலையில் ஒரு விஷயம் குறிப்பிடத்தகுந்தது. இளைய மகன் ராமனிடம் எவ்வளவு அன்பு காட்டினாலும் அம்மையார் ராமன் தொட்ட சொம்பு, டம்ளர் ஆகியவைகளை கழுவியே வைப்பார்கள். ராமனை சமையல் வீட்டிற்குள் விடமாட்டார்கள். அப்பொழுதே அவன் ஜாதி கெட்ட பயலாய் விளங்கினான்.



ராமனுக்கு ஆகவே சமையல் வீட்டுக்குள் வேறு யாரும் நுழையக் கூடாது என்பார்கள். இந்த லக்ஷணத்தில் அம்மையார் மாமிசம் சாப்பிடமாட்டார். ராமனுக்கு தினமும் வேண்டும். ஆதலால் ராமனுக்குக் கல்யாணம் ஆன உடன் அவனுடைய ''அனாச்சாரத்துக்கு'' ஆகவே அம்மையார் ராமனை வேறு வைத்துவிட்டார்கள்.

சதா சர்வ காலம் தன் வயிற்றில் இப்படிப்பட்ட பிள்ளை ராமன் பிறந்ததற்கு துக்கப்பட்டுக்கொண்டே இருப்பார்கள்.

பொதுவில் சொல்லவேண்டுமானால், அம்மையார் பணத்தாசை இல்லாதவர்கள். நன்றாய் சம்பாதித்து நன்றாய் செலவு செய்தவர்கள். பார்ப்பனர்களுக்கு ஏராளமாய் அழுதவர்கள். அளவுக்கு மீறிய ஆச்சாரங்களை அருத்தமில்லாமல் பின்பற்றி வந்தார்கள். எத்தனையோ பேரைத் திருத்திய ராமனால் அம்மையாரிடம் தன் கொள்கையை சொல்லுவதற்குக் கூட தைரியம் ஏற்படும்படியாய் அம்மையார் இடம் கொடுக்கவில்லை.

கடைசி வயதில் கூட அம்மையாரைப் பார்க்க வந்தவர்களிடம் ''என் மகன் ராமனை சிறிது பார்த்துக்கொள்ளுங்கள். இளங்கன்று பயமறியாது என்பது போல் கண்டபடி திரிகிறான்'' என்று ஆவலாதி சொல்லியே வருவார்கள்.

ஒரு காலத்தில் மௌலானாக்கள் ஷவ்கத்தலி, மகமதலி அம்மையாரின் கையில் தங்கள் தலையை ஒட்ட வைத்து வாழ்த்தும்படி கேட்டபோது தன்னை அவர்கள் தொட்டுவிட்டதற்காக முகத்தைச் சுளித்துக்கொண்டார். இதை நான் வெளிப்படையாய் எடுத்துக்காட்டி கேலி செய்து அம்மையாரை மன்னிப்பு சொல்லும்படி செய்தேன். அதனால் அரசியல் தலைவர்கள் காந்தி முதல் யார் வீட்டுக்கு வந்தாலும் அவர்கள் எங்கு தன்னை தொட்டுவிடுவார்களோ என்று பயந்து ஒடுங்கி ஒரு மூலையிலேயே நின்றுதான் அவர்களுடன் பேசுவார்கள். மூடநம்பிக்கைகளுக்கும், குருட்டு அனாச்சாரங்களுக்கும் தாயகமாய் இருந்தாலும் 95 - வயது வாழ்ந்து முடிவெய்தி விட்டார்.

எனக்கு அவர் முடிவெய்தியது பற்றி உண்மையிலேயே மகிழ்ச்சி உண்டாயிருக்கிறது. அந்த அம்மாளுடைய கோரிக்கை எனக்கு ஒரு கல்யாணம் செய்து வைத்துவிட்டுச் சாகவேண்டுமென்பதே. எனது கோரிக்கை எனக்கு முன்னதாகவே அம்மையார் முடிவெய்திடவேண்டுமென்பதே. என் இஷ்டம் நிறைவேறிற்று.

மகிழ்ச்சி! மகிழ்ச்சி!! பூரண மகிழ்ச்சி!!!

**ஈ.வெ.ரா.**

குடி அரசு - இரங்கலுரை - 02.08.1936



RangaRakes tamilnavarasam.com

# விருதுநகரில் ஜஸ்டிஸ் கட்சிப் பொதுக்கூட்டம்

### அரசியல் பித்தலாட்டம்

ஒரு நாட்டு மக்கள் முன்னேற வேண்டுமானால் அரசியலில் கட்சி, பிரதிகட்சி இருக்க வேண்டியதும், அவை ஒன்றுடன் ஒன்று போராட வேண்டியதும் நியாயமும் இயற்கையுமேயாகும். ஆனால் அவ்வித போராட்டமானது நியாயமான முறையிலும் ஒருவரை ஒருவர் துஷ்பிரசாரம் செய்யாமலும் இருப்பதே வரவேற்கத்தக்க விஷயமாகும். ஒரு கட்சியை மற்றொரு கட்சி தாக்குவதும் துஷ்டப் பிரசாரம் செய்வதும் ஒரு நிமிஷமும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாத காரியமாகும். நமது மாகாணத்தைப் பொறுத்த வரையில் காங்கிரசானது ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி விஷமப் பிரசாரம் செய்வதையே தன் தொழிலாகக் கொண்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. சென்ற இந்திய சட்டசபை தேர்தலுக்குப் பின் ஜஸ்டிஸ் கட்சி அழிக்கப்பட்டு விட்டதாகவும், தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஒன்றுதான் இருப்பதாகவும் உண்மைக்கு மாறாக தோழர் சத்தியமூர்த்தி முதல் சாதாரணத் தொண்டர் வரை தொடர்ந்து பிரசாரம் செய்து வந்தார்கள். ஆனால், புதியதாக ஜனக்கட்சி ஆரம்பிக்கப்பட்டவுடன் தமிழ்நாட்டில் ஜஸ்டிஸ் காங்கிரஸ் என்ற இரண்டு கட்சிகள் இருப்பதாகவும், இந்நிலையில் மூன்றாவது கட்சிக்கு அவசியமில்லை என்று ஜஸ்டிஸ்கட்சியை ஒப்புக்கொண்டும் ஜனக்கட்சியை எதிர்த்தும் பேசுகிறார்கள். 500 கஜ ஆழத்தில் புதைக்கப்பட்ட ஜஸ்டிஸ் கட்சி இன்று எப்படித் தோன்றிற்று? இதைத்தான் காங்கிரசின் அரசியல் பித்தலாட்டம் என்று கூறுகிறேன்.

### காங்கிரஸ் மந்திரி சபை நிலைக்குமா?

ஜஸ்டிஸ் கட்சியார் சென்ற 14 வருஷகாலமாக நிர்வாக பதவிகளை ஏற்று அரசியல் பொறுப்புதாரிகளாக இருந்து வருகிறார்கள். அரசாங்கத்தை ஏற்று நடத்தும் எந்தக் கட்சியாருக்கும். மற்றக் கட்சிகளை விட பொறுப்பு அதிகம். அவர்கள் பேசுவதும் செய்வதும் மிகவும் ஜாக்கிரதையுடன் செய்யவேண்டும். அவர்கள் கூறும் வாக்குறுதி எல்லாம் கூடுமான வரை அவர்களால் நிறைவேற்ற முடிந்தவைகளாக யிருக்கவேண்டும். அப்படி யில்லாமல் ஜனங்களைக் கவர்ச்சி செய்வதற்காக வேண்டி வானத்தை வில்லாய் வளைப்போம், மணலைக் கயிறாய்த் திரிப்போம் என்று கூறினால் நாளடைவில் அக்கட்சியின் நிலைமைக்கே ஆபத்து ஏற்பட்டுவிடும். ஆகையால், நிர்வாகத்தை நமது மாகாணத்தில் நடத்த வந்த ஜஸ்டிஸ் கட்சியும் தன்னால் கூடிய வரையில் சாதிக்கக் கூடிய திட்டங்களைக் கூறி நிறைவேற்றிக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் புதிதாக தேர்தல் பிரசாரம் நடத்திவரும் காங்கிரசானது தான் போகுமிடங்களில் எல்லாம் ஸ்தலத்தில் உள்ள குறைபாடுகளுக்கெல்லாம் ஜஸ்டிஸ் கட்சிதான் காரணம் என்று கூறுகிறது. காலரா உள்ள ஊருக்குப் போனால் காலராவுக்குக் காரணம் ஜஸ்டிஸ் கட்சி என்றும், தண்ணீர்க் கஷ்டம் இருந்தால் அதற்கும் காரணம் ஜஸ்டிஸ் கட்சி என்றும் கூறுகிறார்கள். இயற்கையாக ஏற்படும் காலராவுக்கும் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லாவிட்டாலும், இரண்டையும் பிணைத்துத் திரித்துக் கூறுவதில் காங்கிரஸ் பின் வாங்குவதில்லை. தோழர் சத்தியமூர்த்தி அய்யர் மானா மதுரையில் பிரசங்கம் செய்யும்போது காங்கிரசுக்கு ஓட்டுச் செய்தால் வானத்திலிருந்து மழையை வருவித்து விடலாம் என்றும், சேலத்தில் பேசும்போது, காங்கிரசுக்கு ஓட்டுச் செய்தால் மேட்டூர் தண்ணீரைக் கொண்டு வந்து விடுவோம் என்றும் பேசுகிறார். இது சாத்தியமா? மேட்டூரை விட சேலம் உயர்ந்திருக்கும் போது மேட்டூரிலிருந்து எவ்வாறு கொண்டு வருவது? இது போல் பல சாத்தியமில்லாத வாக்குறுதிகளை பாமர ஜனங்களிடம் காங்கிரஸ்காரர் கூறிவருகிறார்கள். ஜஸ்டிஸ் மந்திரிகள் இதே விஷயங்களைப் பற்றி பேசுவதாயிருந்தால், பணமிருந்தால் வாய்க்கால் வெட்டி மானாமதுரைக்கு ஜலம் கொண்டு வருவோமென்று சொல்லுவார்கள். இதுதான் சாத்தியமாயிருந்தாலும், காங்கிரசின் வாக்குறுதியைப் போல் அவ்வளவு கவர்ச்சியுடையதாகத் தோன்றாது.

ஆகவே, மக்களின் ஆதரவு ஒரு வேளை காங்கிரசுக்கு அதிகமாகி, அவர்கள் சட்டசபைகளில் மெஜாரிட்டி கட்சியினராக வந்தாலும் அவர்களுடைய மந்திரி சபை அல்லது அவர்களுடைய ஆதரவைப் பெறும் எந்த மந்திரி சபையும் ஆறுமாத காலத்திற்கு மேல் நிலைத்திருக்க முடியாது என்று உறுதியாய்க் கூறுகிறேன். அவர்கள் அதிகாரத்திற்கு வந்த சில நாட்களிலெல்லாம் தேர்தல் வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன என்பது நிதர்சனமாகிவிடும். அவர்கள் செய்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை என்பதை அவர்களே உணர்வார்கள். ஆகவே ஜனங்களின் ஆதரவை இழந்து மந்திரிசபையும் கவிழ்க்கப்படவேண்டிய நிலைமை வந்துவிடும். இப்பொழுதே அவர்கள் வெற்றி பெற்றுள்ள ஸ்தல ஸ்தாபன நிர்வாகங்களில் அழுகல் நாற்றம் வீச ஆரம்பித்துவிட்டதே இதற்குப் போதிய சாட்சி.

### அவர்களின் திட்டம் என்ன?

1920 முதல் 1936 வரை காங்கிரஸ் அனுசரித்து வந்த கொள்கை என்ன? ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கை என்ன என்பதை நீங்கள் ஆராய்ச்சி



RangaRakes tamilnavarasam.com

செய்து பார்த்தால் இந்தப் பதினாறு வருடங்களில் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளையே காங்கிரஸ் காப்பியடித்துக் கொண்டு வருவது புலனாகும். இந்தக் காலவரைக்குள் எந்தக் கட்சி கொள்கைகளை சமயோசிதம் போல் மாற்றிக் கொண்டே வந்திருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும். செம்ஸ்போர்டு சீர்திருத்தம் அமுலுக்கு வந்த காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியார் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் வீதாச்சாரப்படி உரிமை வழங்க அரசாங்கத்தாருடன் போராடுவதே தங்கள் பிரதம கொள்கை என பிரசாரம் செய்து தேர்தலில் வெற்றியும் பெற்று மந்திரிசபையும் அமைத்தார்கள். அதன் மூலமாக ஜஸ்டிஸ்கட்சிக்கு ஒடுக்கப்பட்டவர்களின் உதவியும் முஸ்லீம்களின் உதவியும் கிடைக்க காங்கிரஸ்வாதிகள், தீண்டாமை ஒழிப்பும், இந்து முஸ்லீம் ஒற்றுமையும் தங்கள் திட்டங்களில் சேர்த்துக்கொண்டனர். அதற்கு மேலும் ஜஸ்டிஸ் கட்சிக்கு மக்களின் உதவி பெருகிக்கொண்டு பிராமணரல்லாதார் எல்லாத் துறையிலும் முன்னேறி வருவதைச் சகிக்க முடியாமல் காங்கிரஸ் பிராமணர்கள் பகிஷ்கார இயக்கத்தைத் தங்கள் திட்டத்தில் சேர்த்துக் கொண்டனர். பள்ளி பகிஷ்காரம், கோர்ட் பகிஷ்காரம், சட்டசபை பகிஷ்காரம் என்றனர். இதன் மூலம் பிராமணரல்லாதாரின் முற்போக்கைத் தடைப்படுத்தலாமென்று எண்ணி அதில் சிறிது வெற்றியும் பெற்றார்கள். அதை நம்பி ஜனங்கள் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டினர். தங்கள் தொழில்களையும், படிப்பையும் விட்டுவிட்டனர். என் சொந்த அனுபவத்தில் தெரிந்த வரை பலர் தங்கள் வாழ்க்கையையே பாழாக்கிவிட்டார்கள். முடிவு என்ன? காங்கிரஸ் நாளடைவில் தன் கொள்கையைத் தளர்த்திவிட்டது. 1923-ல் நடந்த தேர்தலில் எங்களுக்கு ஓட்டுக்கொடுங்கள் என்று கழுதையில் எழுதித் தொங்கவிட்டார்கள். அரசாங்கத்தார். இன்ன இன்ன காரியங்களைச் செய்து கொடுக்காவிட்டால், அவர்களுடன் ஒத்துழைக்க முடியாது என்று டம்பமாய் பிரசாரம் செய்தனர். இதைக் கண்டு அரசியல் ஞானமுள்ள ஜஸ்டிஸ் கட்சியினர் இவைகள் எல்லாம் சாத்தியமில்லாதவை என்று அப்பொழுதே கூறிக்கொண்டே வந்தனர். இப்பொழுது ஜஸ்டிஸ் கட்சியார் கூறியவை உண்மை என்று வெளிப்பட்டுவிட்டது. புதிய சீர்திருத்தம் அமுலுக்கு வரவிருக்கும் இப்பொழுது காங்கிரசார், சட்டமறுப்பைக் கைவிட்டுவிட்டோம் என்றும் அரசாங்கத்தாரை எதிர்ப்பதில்லை என்றும், சட்டசபைகளைக் கைப்பற்றித் தீரவேண்டும் என்றும், அதிலும் மந்திரிசபையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வரவேண்டியதாயிற்று. இந்த நிலைமையில் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களை பதவி வேட்டைக்காரர் என்றும் சர்க்கார் தாசர்கள் என்றும் கூறுவதில் அர்த்தம் என்ன?

## வட்டமேஜை மாநாட்டு அலங்கோலம்

முதலாவது வட்டமேஜை மகாநாடு நடந்துவந்தபோது அதைக் குலாம்கள் மகாநாடு என்று கூறி, அதற்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்து



ஜெயிலுக்கும் போனார்கள். அப்பேற்பட்டவர்கள் இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டில் தோழர் காந்தியே ஜெயிலுக்குப் போனவர்களை விடுவித்தால், தான் வட்டமேஜை மகாநாட்டுக்கு வரத் தயாராயிருப்பதாயும் ஒப்பந்தம் செய்துகொள்ள முன்வந்தார். அந்த ஒப்பந்தத்தில் இனி காங்கிரஸ்வாதிகள் சட்ட மறுப்பு செய்வதில்லை என்றும், மறியலும் செய்வதில்லை என்றும், வட்டமேஜை மகாநாட்டில் இதுவரை செய்ததைப் பற்றிப் பேசுவதில்லை என்றும் தோழர் காந்தி கை எழுத்திட்டார். இதையும் காங்கிரஸ்வாதிகள் தோல்வியென்று ஒப்புக்கொள்ளாமல் வெற்றி என்றே பிரமாதப்படுத்தி வந்தனர். இவ்வித இழிவான ஒப்பந்தத்தை ஜஸ்டிஸ் கட்சியார் செய்திருந்தால் காங்கிரஸ்வாதிகள் அரசியல் உலகத்தையே ஒரு கலக்கு கலக்கிவிடுவார்கள்.

## அம்பேத்காரிடம் சரணாகதி

வட்டமேஜை மகாநாட்டிற்கு முன் பொறுப்பற்ற அரசியல் கிளர்ச்சியை தோழர் காந்தி நடத்தி வந்த காலத்தில், தீண்டாமை ஒழிந்த பின்னும், இந்து முஸ்லீம் ஒற்றுமையேற்பட்ட பின்பும் வரும் சுயராஜ்யம்தான் நாங்கள் ஏற்றுக்கொள்வோம் என்று சொன்னார். ஆனால் வட்டமேஜை மகாநாட்டில் அம்பேத்கார் சார்பாக தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்சினைகளையும் ஜின்னா மூலமாக முஸ்லீம்கள் பிரச்சினையையும் தீர்த்துக்கொள்ள முடியாத காந்தியார், தீண்டாமை, இந்து முஸ்லீம் வேற்றுமை முதலியவைகள் குடும்ப விவகாரங்கள் என்றும், சுயராஜ்யம் முதலில் வந்துவிட்டால் இவைகளை எளிதில் தீர்த்துவிடலாம் என்றும் கூறி இந்தியாவிற்கு வெறுங் கையுடன் திரும்பினார்.

வட்டமேஜை மகாநாட்டில் அம்பேத்காரை தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ள மறுத்த காந்தியார், இந்தியா வந்தவுடன் அவரிடம் சரணாகதியடைந்து, அவருடன் பூனாவில் ஒப்பந்தமும் செய்துகொள்ள நேரிட்டது. முஸ்லீம்கள் சார்பாக ஜின்னாவின் சார்பான கோரிக்கைகளை காங்கிரஸ் எதிர்க்க சக்தி அற்று வகுப்புத்தீர்ப்பு விஷயத்தில் சுவரின் மேல் பூனைபோல் இருந்து கொண்டிருக்கிறது. முஸ்லீம்கள் என்றால் காங்கிரசுக்குப் பயம். முஸ்லீம்கள், தாழ்த்தப்பட்டவர்களும் தங்கள் உரிமையைப் பாதுகாக்கக் கோரியது போலவே பிராமணரல்லாதார் உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்று தோழர் பாத்ரோவும் தோழர் ராமசாமி முதலியாரும் வட்டமேஜை மகாநாட்டில் விரும்பினர். இதில் என்ன குற்றமிருக்கிறது? பிராமணரல்லாதார் விஷயத்தில் மட்டும் காங்கிரஸ் வழவழாவாயிருப்பதற்குக் காரணம் என்ன?

## உத்தியோக மேற்பு

காங்கிரஸ்காரர்கள் தங்கள் லட்சியம் பூரண சுயராஜ்யம் என்கிறார்கள். ஜஸ்டிஸ்கட்சியார் குடியேற்ற நாட்டந்தஸ்து என்று சொல்லுகிறார்கள். பூரண



RangaRakes tamilnavarasam.com

சுயராஜ்யம் என்றால் குடியேற்ற நாட்டந்தஸ்தைப் போன்றது தான் என்று சமீபத்தில் தோழர் சத்தியமூர்த்தி தமது ஆனைமலைப் பிரசங்கத்தில் கூறிவிட்டார். ஆகவே காங்கிரஸின் சுயராஜ்யத்திற்கும் ஜஸ்டிஸின் சுயராஜ்யத்திற்கும் என்ன வித்தியாசமிருக்கிறது?

உத்தியோகம் ஏற்கும் விஷயத்தில் நமக்கும் அவருக்கும் வித்தியாச மில்லை. ஆனால் காங்கிரஸ் உத்தியோகம் ஏற்பது என்றால் சீர்திருத்தத்தை உடைத்தெரிவதற்கு என்றும் ஜஸ்டிஸ் கட்சி ஏற்பது சீர்திருத்தத்தை நடத்துவதற்கு என்றும் கூறுகிறார்கள். இது முற்றிலும் ஏமாற்று. உத்தியோகம் ஏற்றுக் கொண்டுவிட்டால் சீர்திருத்தத்தை நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை. தோழர் சத்தியமூர்த்திக்கும் இது தெரியும். மந்திரி ராஜனின் வாடிப்பட்டிப் பிரசங்கத்திற்கு சிம்லாவிலிருந்து அவர் அனுப்பியிருக்கும் பதிலை, சீர்திருத்தத்தின் மூலமாக கூடுமானவரை ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காகவே நாங்கள் உத்தியோகம் ஏற்கவேண்டும் என்று கூறுகின்றோம் என்று கூறுவதிலிருந்து, அவர் சீர்திருத்தத்தை நடத்தத் தயாராகவிருப்பது புலனாகும். ஆகவே முட்டுக்கட்டை என்பதெல்லாம் ஹம்பக் என்பதுடன், உத்தியோக ஏற்பிற்கு காங்கிரசின் அனுமதியைப் பெறச் செய்யும் சூழ்ச்சியே யாகும்.

## ஜஸ்டிஸ் கட்சிக்குத் திட்டமில்லையா?

ஜஸ்டிஸ் கட்சிக்கு எந்தவிதமான வேலைத்திட்டமும் இல்லை என்றும், அது உத்தியோக வேட்டையாளர்களின் மண்டலம் என்றும் துஷ்டப்பிரசாரம் செய்யப்படுகிறது. அதே சமயத்தில் என்னுடைய திட்டத்தை விருதுநகர் மாநாட்டில் ஜஸ்டிஸ்கட்சியார் ஒப்புக்கொண்ட உடன் அவர்கள் காங்கிரசின் கராச்சித் திட்டத்தை திருடிவிட்டார்கள் என்று தோழர் ராஜகோபாலாச்சாரி புகார் கூறினார். உண்மையில் நாங்கள் எதையும் திருடவில்லையானாலும், திருடிக் கொண்டதாக வைத்துக்கொண்டால், அவர்களுடைய திட்டமும் எங்களுடைய திட்டமும் ஒன்று என்றும், எங்களுக்கு ஏதாவது திட்டம் இருக்கிறது என்றும் தானே அருத்தமாகிறது. அப்படியிருக்கையில் ஜஸ்டிஸ் கட்சி பிற்போக்கானது என்றும், அதற்கு எவ்வித திட்டமும் இல்லை என்றும் எப்படிக் கூறுவது?

## கட்சிக் கட்டுப்பாடு

காங்கிரஸில் கட்டுப்பாடு இருப்பதாகவும், வேறு கட்சிகளில் அவ்விதம் இல்லை என்றும் கூறப்படுகிறது, புதிய சீர்திருத்த விஷயத்தில் மாகாணங்கள் தோறும் காங்கிரசில் அபிப்பிராய பேதங்கள் இருப்பதும் ஒவ்வொரு மாகாணத்திலும் தலைவர்களிடத்தில் அபிப்பிராய பேதமிருந்து வருவதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். பண்டித ஜவஹர்லால் நேரு சமதர்மப் பிரசாரம் செய்கிறார். அவரைத்தவிர மற்றவர்களெல்லாம் அதை



எதிர்க்கிறார்கள். நமது மாகாணத்தில் தோழர் சத்தியமூர்த்தி, தோழர் ஜவஹர்லாலின் தியாகத்தை ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. பண்டித மோதிலால் நேருவின் தியாகத்திற்காகவே தோழர் ஜவஹரை காங்கிரஸ் தலைவராக்கினதாகக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலைமையில் தோழர் ஜவஹர்லால் நேருவை காங்கிரசின் தலைவராக தோழர் சத்தியமூர்த்தி அய்யர் ஒப்புக் கொள்ளுகிறாரா?

## திலகர் நிதி

திலகர் நிதி திருட்டைப்பற்றி விபரம் கேட்டால், தோழர் ஜவஹர்லால் நேரு, தேர்தலில் காங்கிரசை முறியடிப்பதற்காகவே இவ்வித துஷ்டப் பிரசாரம் செய்யப்படுவதாகவும். ஆகையால் திலகர் நிதிக்கு உதவி செய்யாதவர்கள் இதைப்பற்றி புகார் செய்ய உரிமையில்லை என்றும், அவ்விதம் செய்தால் கோர்ட்டுக்கு போக நேரிடுமென்றும் பயமுறுத்துகிறார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே வீழ்த்திவிடவேண்டும் என்று கூறும் வீரர், இவ்விதம் பயமுறுத்துவதானது அவர்களுடைய பலஹீனத்தையே காட்டுகிறது. திலகர் நிதிக்கு உதவி செய்யாதவர்கள் அதன் நிர்வாகத்தைப் பற்றி கேட்பதற்கு அருகதையற்றவர்கள் என்றால், அரசாங்கத்திற்கு ஒரு பைசா கந்தாயமும் செலுத்தாதவன், அரசாங்கத்தின் தீமையை எடுத்துச் சொல்ல எந்த வகையில் அருகதையாவான்? அதேபோல், ஜஸ்டிஸ் கட்சியைச் சேராத காங்கிரஸ்காரன், ஜஸ்டிஸ் கட்சியை குறைகூறித் திரிவது நியாயமா?

இவ்வாறு காங்கிரஸின் சரித்திரமானது முன்னுக்குப் பின் முரணான திட்டங்களையுடையதாகவும், அரசியல் நிர்வாக அனுபவமில்லாத அழிப்பு வேலையைக் கைகொண்டத் தலைவர்களை உடையதாகவும் இருக்கிறது. ஆனால் ஜஸ்டிஸ் கட்சியானது, தான் செய்த எல்லா வேலையிலும் காங்கிரஸின் தீவிர எதிர்ப்புகளுக்கிடையே பல நன்மைகளைச் செய்திருக் கிறது. காங்கிரஸ்வாதிகள் சட்டசபையில் தங்களுடைய வேலைத்திட்டம் என்ன என்பதை இன்னும் அறிவிக்க முடியாமல் தவிக்கின்றனர். பொதுஜனங்களின் மூலதார விஷயத்தில் சுதந்தரமளிப்பதற்கு ஏதுவாய் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உள்பட சகலஜாதி மதத்தினருக்கும் ஸ்தல ஸ்தாபனத்திற்குச் சொந்தமான ரோடு, கிணறு, பள்ளிக்கூடங்களில் சம அந்தஸ்தளிக்கும் அரசாங்க உத்தரவைப் போன்ற சீர்திருத்தங்களை, சட்டசபைகளில் செய்ய காங்கிரசுக்கு தைரியம் உண்டா? உத்தியோக ஏற்பு விஷயத்திற்கு அனுகூலமாக, கிராம மகாநாடுகளில் எல்லாம், பிரதானமாய் தீர்மானம் செய்யும் காங்கிரஸ், இந்திய சட்டசபையில் வரவிருக்கும் எம்.ஸி. ராஜா, தேஷ்முக் இவர்களின் சீர்திருத்த மசோதா விஷயங்களில் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்காமல் இருப்பதின் மர்மம் என்ன?

காங்கிரஸின் புரட்டுகளைப் பற்றியும், ஜஸ்டிஸ் கட்சியின் ஆக்க வேலைகளைப் பற்றியும் பிரசாரம் செய்வது எங்கள் கடமையென உணர்ந்து



RangaRakes tamilnavarasam.com

எங்கள் வேலையை நடத்தி வருகிறோம். இதை உணராமல் ஜனங்கள் இன்னும் காங்கிரசை நம்பி, காங்கிரஸ்வாதிகளைச் சட்ட சபைக்கு அனுப்பினால், அதன் பலா பலன்களையும் ஜனங்களே அனுபவிக்க நேரிடும். வேலூர் ஜில்லா போர்டு தேர்தலில் நடந்த விபத்து, சட்டசபைத் தேர்தலிலும் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது பொது ஜனங்கள் கடமையாகும்.

''விடுதலை''

*குறிப்பு:- 26.07.1936 ஆம் நாள் விருதுநகர் தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் ஆதரவில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 09.08.1936**



# ஸ்ரீநிவாச சாஸ்திரியார்

தி ரைட் ஹானரபிள் சாஸ்திரியார் என்று பெயர் வழங்கப்பெறும் தோழர் ஸ்ரீனிவாச சாஸ்திரியார் இப்போது காங்கிரஸ்காரர்களுடன் வெளிப்படையாய் சேர்ந்து கொண்டு பார்ப்பனரல்லாதார் இயக்கம் பிற்போக்கானதென்றும், அதை அடுத்தத் தேர்தலில் எப்படியாவது தோற்கடிக்கச் செய்யவேண்டும் என்றும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்கு நாட்டில் இடம் கொடுத்தால் பார்ப்பனர்கள் நிலை மிக மோசமாகிவிடும் என்றும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தாலேயே பல பார்ப்பனர்கள் பெரிய பதவிக்கும் அந்தஸ்துக்கும் போக முடியாமல் போய்விட்டதென்றும் கூறி பார்ப்பனர்களை நமக்கு எதிரியாக கிளப்பிவருகிறார்.

மற்றும் காங்கிரஸ் கொள்கைகளைப் பற்றி தனக்கு ஆட்சேபனை இல்லையென்றும், வேலைத்திட்ட நிபந்தனைகளில் மாத்திரம் சிறிது தளர்த்தி தன் போன்றவர் அதில் வந்து சேரும்படி செய்யவேண்டும் என்றும் காங்கிரசுக்கு விண்ணப்பம் போடுகிறார்.

இப்படிப்பட்ட சாஸ்திரியார் யார்? அவரது பூர்வோத்தரமென்ன? அவரது கொள்கை என்ன என்பவை முதலியவைகளை பொது ஜனங்கள் உணரவேண்டுமென்பது நமது ஆசை.

சாஸ்திரியார் ஒரு சாதாரண உபாத்தியாயராய் தனது வாழ்க்கையை ஆரம்பித்தவர், ஆங்கிலம் பேசுவதில் நல்ல உச்சரிப்பை உச்சரிக்கக்கூடியவர், பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ளுவதில் முந்துபவர், பார்ப்பன பத்திரிகைகளின் விளம்பரங்களால் பிரபலப்படுத்தப்பட்டவர். இந்த நிலையில் வடநாட்டு பிரபலஸ்தரும் அரசாங்கத்தாராலும், மக்களாலும் நன்கு மதிக்கப்பட்டவருமான கோகலே அவர்கள் தென்னாட்டுக்கு வந்த சமயத்தில் அவருடைய அறிமுகத்தை சம்பாதித்து அவரை வசப்படுத்தி, அவரது செல்வாக்கில் மதிப்புப் பெற்று, கடைசியாக அவரது மடமாகிய இந்திய ஊழியச் சங்க மடத்துக்கு தம்பிரானாகி சர்க்காருக்கு பிரதம சிஷ்யனாகி பிரிட்டிஷ் சர்க்காரின் சமஸ்தான கவிராயராகி உலகத்தின் மற்ற பாகங்களுக்கும் பிரிட்டிஷ் பிரசாரகராய்ச் சென்று மகாகனமாகி பல பதவிகள் அடைந்து, பணமும் ஒரு அளவுக்கு சம்பாதிக்கப் பெற்று அவற்றையெல்லாம் ஆதாரமாய்க் கொண்டு இன்று பச்சையாகப் பார்ப்பனப் பிரசாரம் செய்வதோடல்லாமல் பார்ப்பனரல்லாதார்



RangaRakes tamilnavarasam.com

இயக்கத்தையும் குறைகூறி வெள்ளைக்காரர்கள் உள்ளத்திலும் பார்ப்பனரல்லாதார் மீது துவேசம் ஏற்படும்படி விஷமப் பிரசாரமும் செய்து வருகிறவர். காங்கிரஸ் பார்ப்பனர்கள் இவரது பிரசாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவருக்குப் பெரியதொரு விளம்பரம் கொடுத்து பெருமைப்படுத்தி வருகிறார்கள்.

இவருடைய அரசியல் கொள்கை என்பது பெயருக்கு மிதவாதம் என்று சொல்லப்படும் என்றாலும், நல்லதொரு சமயத்தில் காந்தியாரை தேசத்துரோகியென்பதாகச் சொல்லி அவரை கைதி செய்வதற்கு அரசாங்கத்துக்கு யோசனை சொல்லி அரசாங்கம் காந்தியாரை கைதி செய்தது சரி என்று பொதுஜனங்களுக்கு படும்படி பிரசாரமும் செய்தார்.

அதற்குப் பிறகே அரசாங்கத்தார் அவருக்கு தென்னாப்பிரிக்கா ஏஜண்டு வேலை கொடுத்து மாதம் பல ஆயிரக்கணக்கில் சம்பளம் கொடுத்து வந்தார்கள். அது மாத்திரமல்லாமல் இவருக்கு மகாகனம் பட்டம் வருவதற்கே இந்த காரியங்கள் போன்றதே பெரிதும் உதவி அளித்தன.

மற்றும் இவருடைய யோக்கியதையைப் பற்றி தோழர் ஜவஹர்லால் அவர்கள் நன்றாய் விவரிக்கிறார். எப்படியெனில்,

''தோழர் ஸ்ரீனிவாச சாஸ்திரியார் அடிமைப்புத்தியை கற்பிப்பதிலும் கோள்மூட்டச் செய்வதிலும் சிறந்தவராவார்.''

''1917-ல் சாஸ்திரியார் பல வீரப்பேச்சுகள் பேசினார். பெசண்ட் அம்மையாரை சிறைப்படுத்திய உடன் ஆசாமி இருக்குமிடம் தெரியாமல் மறைந்துவிட்டார். இவர் காரியம் செய்யவேண்டிய சமயத்தில் நழுவி விடுவார். நெருக்கடியான சமயத்தில் அவரை நம்பவே கூடாது.''

''சாஸ்திரியார் ஐரோப்பாவில் காங்கிரசை இழிவாகவும் பிரிட்டிஷ் அரசாங்கத்தை மதிப்பாகவும் பேசி பிரசாரம் செய்தார். வட்டமேஜை மாநாட்டுக்குச் சென்ற சாஸ்திரியார், காங்கிரஸ் சார்பாக ஜெயிலுக்குச் சென்றவர்களையும் கஷ்டப்பட்டவர்களையும் வெகு கேவலமாகக் கண்டித்துப் பேசினார். இதற்கு ஆக நான் அவரை சந்தித்தபோது கேட்டதற்கு பிறகு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். இப்படி பேசியதற்கு காரணம் கூறும்போது தன்னை மறந்து அப்படிப் பேசிவிட்டதாகச் சொல்லி வருத்தப்பட்டார்.''

''எல்லா கட்சியாராலும் கண்டிக்கப்பட்ட வெள்ளை அறிக்கையை கிடைத்ததை பெற்று உபயோகப்படுத்திக் கொள்வது புத்திசாலித்தனம் என்று கல்கத்தா மிதவாத மாநாட்டில் தலைமை வகித்து பேசினார்.''

''இதனால் சர்க்கார் காங்கிரஸ்காரர்கள் சொல்வதை மதிக்க முடியாமல் போய்விட்டது.''

''அதன் பிறகும் பூனாவில் ஒரு முக்கியக் கூட்டத்தில் பேசும்போது பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுப்போய்விட்டால், இந்தியாவில் பெருத்த



கலகமும் தொல்லையும் நிகழும். ஆதலால் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் இருக்க வேண்டியது அவசியம் என்று சொன்னார். இப்படிப்பட்ட லட்சணத்தில், சாஸ்திரியாரும் மிதவாதிகள் எல்லாம் மிகத்தீவிரவாதிகள் என்று கருதப்படுகிறாராம். ஆகவே மிதவாதமென்பது எப்படிப்பட்டது என்பது பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை'' என்று எழுதியிருக்கிறார்.

(இவை ஜவஹர்லால் எழுதிய தன் சுயசரிதத்தில் காணலாம்.)

இந்த யோக்கியதை உள்ள சாஸ்திரியாரைப்பற்றி இன்று தேசீயப் பார்ப்பனர்கள் என்பவர்களும் தேசீயப் பத்திரிகை என்பவைகளும் இன்று ஆகாயமளாவப் புகழ்கின்றன. விளம்பரப்படுத்துகின்றன. ஆனால் இதே தேசீய பத்திரிகைகளும் தேசீயவாதிகளும் இதில் 100-ல் ஒரு பங்கு கெடுதியும் கெட்ட குணமுமில்லாத பார்ப்பனரல்லாத பிரமுகர்களை பழிக்கின்றன, தூற்றுகின்றன. சாதாரண ஒரு பொதுமனிதன் நடுநிலையுள்ள மனிதன் தோழர் ஏ. ராமசாமி முதலியாரையும் கனம் சீனிவாச சாஸ்திரியையும் கண்டால் அரசியல் விஷயம், பொதுவாழ்வு ஆகியவைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு யார் யோக்கியர், யார் நாணயஸ்தர், யார் விஷய ஞான முள்ளவர்கள் என்பதாகச் சொல்லும்படி கேட்டால் அவர் என்ன சொல்லக் கூடும். யாரால் நாட்டிற்கு அதிக கெடுதி இல்லை என்று கேட்டால் என்ன சொல்லக்கூடும்.

இன்று தோழர் கனம் சாஸ்திரியார் ஒரு நாட்டுக்கோட்டை செட்டியாரின் ஆதரவில் இருந்து கொண்டு, அவருக்கு வெள்ளைக்காரரிடம் ஆக வேண்டிய காரியங்களுக்கு தரகராய் இருந்துகொண்டு அண்ணாமலை யுனிவர்சிட்டி வைஸ்சான்சலர் பதவியைக் கைப்பற்றி அதை அக்கிரகாரமாக ஆக்கி அங்கு பார்ப்பன விஷத்தைக் கக்கி அந்த யுனிவர்சிட்டியால் பார்ப்பனரல்லாதாருக்கு தக்க நன்மையில்லாமல் செய்து வருகிறார். அங்குள்ள பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்கள் உத்தியோகஸ்தர் ஆகியவர்களின் நிலைமையை கஷ்டமாக்கி வருகிறார். இவருடைய தேச பக்திக்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்?

குடி அரசு - கட்டுரை - 09.08.1936



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ் நிர்வாகம் எங்கும் ஊழல்

## இப்போதுதான் புத்தி வருகிறது

காங்கிரஸ் 1920-ம் வருஷம் வரை அதாவது சட்ட ஒழுங்குக்கு கட்டுப்பட்டு நடந்து சீர்திருத்தம் பெறுவது என்கிற கொள்கையின் மீது கிளர்ச்சி செய்து பதவி அதிகாரம் முதலியவை பெறுவது என்கின்ற திட்டத்தில் வேலை செய்து வந்தவரை நிர்வாகம் அதிகமான ஊழல் இல்லாமல் நடந்துவரத் தக்கதாய் இருந்தது. ஆனால் அந்த நிருவாகம் பார்ப்பனரல்லாதார் இயக்க மூலம் பார்ப்பனரல்லாதார் கைக்கு மாறிய உடன் இனி சட்டப்படி ஒழுங்குக்கு கட்டுப்பாட்டு யோக்கியமான முறையில் கிளர்ச்சி செய்தால் தங்கள் கைக்கு நிர்வாகம் வரமுடியாது என்றும் தங்கள் வகுப்பார்களே ஏகபோகமாய் அனுபவிக்க முடியாது என்றும் கருதிய பார்ப்பனர்கள் காங்கிரசுக்கு புதிய கொள்கை ஏற்படுத்தி அதாவது சட்டம் மீறுவது, சட்டம் மறுப்பது, சர்க்கார் உத்திரவுகளை அலட்சியம் செய்வது முதலிய கொள்கைகளை ஆதரவாய் கொண்டு ஒழுங்கு விரோதமான முறைகளைக் கையாண்டு கிளர்ச்சி செய்வது என்பதற்கு ஏற்ற திட்டத்தில் கிளர்ச்சி செய்து வந்ததின் பயனாய் காங்கிரசில் கட்டுப்பாடு நாணயம் என்பன அடியோடு பறந்து விட்டதுடன் சூழ்ச்சியும், தந்திரமும், பொய்யும், ஏமாற்றுமே ஆட்சி புரியத் தொடங்கிவிட்டன. இதன் பயனாகவே காங்கிரசுக்கு யோக்கியமான மனிதர்களோ தொண்டர்களோ கிடைப்பதே அரிதாய்விட்டது.

காங்கிரசின் கீழ் நேரான கணக்கு வைக்கவோ, காங்கிரசுக்கு ஆக வசூல் செய்யப்பட்ட தொகைகள் நாணயமாய் கையாளப்படவோ முடியாமல் போனது ஒருபுறமிருந்தாலும், காங்கிரஸ் ஸ்தாபனத்தின் நிர்வாகமும் சிறிதும் கட்டுப்பாடும் ஒழுக்கமும் இல்லாமல் தலைவிரி கோலமாய் ஆளுக்காள் தலைவர்களாய் தடியெடுத்தவன் தண்டக்காரன் என்கின்ற முறையில் நடந்து வந்து பொதுஜனங்களின் ஒழுக்கத்தையும் நாணயத்தையும் கூட பாதிக்கும்படியான கேவல நிலைக்கு வந்துவிட்டது.

இவை ஒருபுறமிருந்தாலும் மத உணர்ச்சிபோல் புகுத்தப்பட்ட தேசிய உணர்ச்சி என்பதானது பாமர மக்களுடையவும், படித்த மக்களுடையவும் பகுத்தறிவைப் பாழ்படுத்தி பொதுத்தேர்தல்கள் சிலவற்றில் ஞானமில்லாமல் நடந்துகொள்ள வேண்டியதாய் ஏற்பட்டதின் பயனால் சில பொதுத் தேர்தல்களில் காங்கிரசுக்கு வெற்றி ஏற்பட்டு சில பதவிகளும் ஸ்தாபனங்களும் அவர்கள் கைக்கு போக நேர்ந்து விட்டது என்பது யாவரும் அறிந்ததாகும்.



அப்படி அவர்கள் கைப்பற்றிய ஸ்தாபனங்களும் ஸ்தானங்களும் அனேகமாய் ஒன்றுகூட பாக்கியில்லாமல் எல்லாமுமே ஊழலாகவும் கட்டுப்பாடும் ஒழுங்கும் இல்லாமலும், ஓட்டர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் லட்சியம் செய்யப்படாமலும் தலைவிரி கோலமாய் நடந்து ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தைப் பாழாக்குவதோடு ஸ்தல ஸ்தாபன உரிமைகளையும் பாழாக்கி வருகிறது.

தவிரவும் காங்கிரஸ்காரர்கள் இந்த 10, 16 வருஷ காலமாய் பஹிஷ்கார முறையிலும் அழிவு முறையிலும் சட்டமறுப்பு முறையிலுமே வேலை செய்துவந்தவர்களானதால் ஒழுக்கமும் கட்டுப்பாடும் அவர்களிடமிருப்பதற்கு ஞாயமில்லை என்பது ஒரு புறமிருக்க, காங்கிரசின் கொள்கையானது தகுதியான நபர்கள் அதில் இருக்க இடமில்லாமல் செய்துவிட்டதால், எப்படியோ நிர்வாகம் காங்கிரசார் கைக்கு வருவதாய் இருந்தாலும், தகுதியும், அனுபோகமுமுடையவர்கள் அவர்களுக்கு கிடைப்பதற்கு இல்லாமலேயே போய்விட்டது. இவற்றைப்பற்றியெல்லாம் நாம் அந்தந்த சமயங்களில் விரிவாய் எடுத்துச் சொல்லி எச்சரிக்கை செய்து வந்திருந்தும், காங்கிரஸ் தலைவர்கள் அவற்றைச் சிறிதும் இட்சியம் செய்யாமல் ''எப்படியாவது காங்கிரஸ் வெற்றி பெற்றது என்று ஆனால் போதும்'' என்று கருதி ஆங்காங்கு நடை பெற்ற தேர்தல்களில் காலிகளையும், கூலிகளையும் மான வெட்கத்துக்கு கட்டுப்பட்டு நடக்க தகுதியும் அனுபவமும் அவசியமும் இல்லாத ஆட்களையும் அந்த ஸ்தாபனங்களில் பங்கா இழுப்பதற்குக் கூட அமர்த்த தகுதியில்லாத ஆட்களையும் பிடித்து தேர்தலில் (ஏனென்றால் யோக்கியமும் தகுதியும் உடையவர்கள் அவர்களில் கிடைக்காததாலும் தகுதியும் அனுபவம் உள்ளவர்கள் காங்கிரசில் சேர மறுத்ததாலும்) நிறுத்தி தேர்தலில் அனேகவிதமான மனதறிந்த பொய்ப்பிரசாரமும், விஷமப்பிரசாரமும் செய்து ஓரளவுக்கு வெற்றிபெற்றார்கள் என்றாலும் இப்போது அவற்றின் பயனை அனுபவிக்கிறார்கள்.

இதன் பயனாய் காங்கிரசுக்காரர்களுக்கு யாதொரு கெடுதியும் இல்லை யென்றாலும் சில கூலிகளுக்கும் காலிகளுக்கும் அவர்கள் எதிர்பார்த்த பதவியும் பயனும் ஏற்பட்டது என்றாலும், அவற்றின் நிர்வாகம் பாழானதுடன் நாணயம் ஒழுக்கம் இல்லாமல் நடப்பதின் பயனாய் பொது மக்களுக்கும் எவ்வளவோ அசௌகரியங்களும் நஷ்டங்களும் ஏற்படுகின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்திய சட்டசபை தேர்தலும் ஜில்லாபோர்டு முனிசிபாலிட்டி தேர்தலும் வந்த காலத்திலெல்லாம் நாம் சட்டசபைக்கு யோக்கியர்களாய் பார்த்து நிறுத்த வேண்டும் என்றும் ஸ்தலஸ்தாபனங்களில் கட்சி வேற்றுமை பாராட்டாமல் தகுதியும் அனுபவ ஞானமும் ஒழுக்கமும் உள்ளவர்களையே பார்த்து நிறுத்த வேண்டும் என்றும் தலையால் அடித்துக்கொண்டோம். அப்பொழுது மிகவும் பொறுப்பும் அபாரஞானமும் வாய்ந்த தோழர்



RangaRakes tamilnavarasam.com

ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் கூட சிறிதும் யோசனையும் பொறுப்பும் இன்றி ஒரே வார்த்தையில் அவற்றிற்கு சமாதானம் சொல்லிவிட்டார்.

அதாவது மதவிஷயத்தில் ‘‘எப்படிப்பட்ட அயோக்கியனாகவும், பாதகனாகவும், சண்டாளனாகவும் இருந்தாலும் ஒரு தடவை **ராமா** என்று சொன்னவுடன் எப்படி அவ்வளவு இழிவும், பாதகமும், பாவமும் தொலைந்து அவன் மோட்சத்துக்கு அதிகாரியாய் விடுவானோ, அதுபோல் காங்கிரசிலும் ஒருவன் எவ்வளவு அயோக்கியனாகவும் மடையனவாகவும், காலியாகவும், கூலிக்காகவும், சுயநலத்துக்காக எதையும் விற்று வாழ்பவனாயும் இருந்தாலும் காங்கிரசுக்கு நாலணா கொடுத்து கையெழுத்துப் போட்டுவிட்டால் யோக்கியனாகி விடுவான், மேதாவி ஆகி விடுவான்’’ என்று சொல்லி கடைந்தெடுத்த அயோக்கியர்களையும், காலிகளையும் கூட சேர்த்து எலக்ஷன் போர் நடத்தி ஒரு அளவுக்கு வெற்றிபெற்றார்.

அப்படிப்பட்ட அந்த வெற்றியின் முரசு ஒருவாரமே ஒலித்தது. ஆனால் அதன் ஊழல் நாற்றம் இந்த ஒன்றரை வருஷகாலமாக இந்தியா பூராவையும் சூழ்ந்து ஒவ்வொரு காங்கிரசுக்காரனும் மூக்கைப் பிடித்துக் கொண்டு நடக்க வேண்டியிருப்பது மாத்திரமல்லாமல் கண்களையும் மூடிக் கொண்டு தலைக்கு முக்காடிட்டு முகத்தையும் மூடிக்கொண்டு நடக்க வேண்டியதாக ஆகிவிட்டது.

இப்பொழுதுதான் ‘‘ஹிந்து’’, ‘‘சுதேசமித்திரன்’’, ‘‘தமிழ்நாடு’’ போன்ற தேசீயப் பத்திரிகைகளுக்கும் கூட புத்திவந்து ‘‘வெற்றி கொஞ்சமாக இருந்தாலும் அதன் பயன் யோக்கியமானதாகவும் நாணயமானதாகவும் இருந்தால் போதும் என்றும் கட்சியையே பிரதானமாய் எண்ணாமல் யோக்கியதையையும், நாணயத்தையும் பிரதானமாய் கருதவேண்டும்’’ என்றும் உபதேசம் செய்யப் புறப்பட்டுவிட்டன.

கட்சித் தலைவர்களான தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் தோழர் சத்தியமூர்த்தியார் அவர்களும் கூட தாங்கள் அனுபவமில்லாமல் அவசரமாய் செய்துவிட்ட காரியங்களால் இவ்வித ஊழல்கள் நேர்ந்ததென்றும் இனி இந்த அனுபவத்தைக் கொண்டு ஜாக்கிரதையாய் நடந்துகொள்ள வேண்டும் என்றும் வெளிப்படையாகத் தெரிவித்துத் தங்கள் தவறுதல்களை ஒப்புக்கொண்டதோடு சமீபத்தில் நடக்கப்போகும் வேலூர் ஜில்லாபோர்டு மெம்பர்கள் தேர்தலுக்குக் காங்கிரசின் பேரால் யாரும் போட்டிபோடக் கூடாது என்று அதிகார தோரணையில் கட்டளை இட்டு விட்டார்கள்.

ஆனாலும் அந்தத் தேர்தல்களின் மூலம் வாழ்க்கை நடத்தும் காலிகளுக்கும், போலிகளுக்கும் இது தங்கள் ஜீவனோபாயத்தைத் தடுக்கும் கட்டளையாய் இருப்பதால் காங்கிரசின் பெயரைச் சொல்லி தேர்தல் நடத்தி வயிறு கழுவ வேண்டிய நிமித்தம் மறுபடியும் தேர்தலில் காங்கிரசின் பெயரை உபயோகிக்கப் பார்க்கிறார்கள். இதன் காரணம் என்னவென்றால் காங்கிரசுக்கு



மானமும் கட்டுப்பாடும் உடைய ஆட்கள் கிடைக்காமல் ஒரு வேளைக் கஞ்சிக்கு எதையும் விற்கும் காலிகளே அதிகமாய் கிடைக்கக்கூடியதாய் இருப்பதால் காங்கிரசில் ஒழுக்கமும் மானமும் காண்பது அரிதாய்விட்டது.

இதற்கு யார் என்ன செய்ய முடியும்? தோழர் ராஜகோபாலாச்சாரியார் ‘‘தலை’’விதியை அவர் செய்த கர்மத்தின் பயனை அனுபவிக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். தோழர் ராஜகோபாலாச்சாரியாரின் அபார மூளை சக்தி எப்படியும் ‘‘வெற்றி’’யை உண்டாக்கிவிடலாம். ஏனென்றால் அவர் ‘‘வெற்றி’’யில் கண்ணுள்ளவர்; அதற்கேற்ற மூளையுள்ளவர். ஆனால் அவ்வெற்றியின் பயன் தோல்வியைவிட கேடானதாகவும், ஊழலானதாகவும் முடிகின்றதே தவிர வேறில்லை. இதுவரை அப்படியே ஆகி வந்திருக்கிறது.

இந்திய சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்ற பின்பே காங்கிரசின் யோக்கியதை என்ன? என்பதும் காங்கிரஸ்காரர்கள் இந்திய சட்டசபைக்குப் போய் சாதிக்கக் கூடியது என்ன? என்பதும் பொதுமக்களுக்கு விளங்கியதோடு மறுதேர்தலுக்கு முகத்தைக் காட்டமுடியாதபடி சிலர் தேர்தல் மேடையிலிருந்து ஒழிந்து கொள்ள வேண்டியதாகவும் ஏற்பட்டுவிட்டது.

ஜில்லா போர்டு தேர்தல்களைப் பற்றியோவென்றால் காங்கிரஸ் வெற்றி பெற்ற எல்லா ஜில்லா போர்டு ஸ்தாபனங்களுக்கும் கமிட்டி நியமித்து அதன் ஊழல்களையும் கட்டுப்பாடற்ற தன்மைகளையும் விசாரித்து நீதி செலுத்த வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டியதாகிவிட்டன.

இந்த காரியங்கள் எல்லாம் காங்கிரசுக்காரர்களின் அனுபவமற்ற தன்மையையும் ஞானமற்ற தன்மையையும் ஒழுக்கமற்ற தன்மையையும் காட்டவில்லையா என்று கேட்கின்றோம்.

ஆனால் ஒரு விஷயத்தில் நமக்கு மகிழ்ச்சியே. அதாவது தோழர் சி.ராஜகோபாலாச்சாரியார் முதல் யோக்கியமான தென்று காட்டிக்கொள்ளும் தேசீயப்பத்திரிகைகள் வரையில் இந்தத் தவறுதல்களை ஒப்புக்கொண்ட விஷயத்தைப் பற்றியேயாகும்.

என்றாலும் இதிலும் நமக்கு ஒரு சந்தேகம். அதென்னவென்றால் இந்த தலைவர்களும், பத்திரிகைகளும் தங்களுக்கு உண்மையாகவே புத்தி வந்து இந்த தப்பிதங்களை ஒப்புக்கொண்டார்களா, அல்லது இப்பொழுது நேர்ந்து விட்ட ஊழல்களுக்கு பதில் சொல்ல முடியாமல் தப்பித்துக்கொள்ள மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கருதி தற்கால சாந்தியாக ‘‘தவறிவிட்டோம். இனிமேல் எங்களுக்கு புத்திவந்து விட்டது’’ என்று சொல்லுகிறார்களா என்பது நமக்கு விளங்கவில்லை.

சென்னைக் கார்ப்பரேஷன் தேர்தல் சம்பந்தமாக ஆட்களை சென்னைக் காங்கிரஸ் கமிட்டி பார்லிமெண்ட் போர்டார் என்பவர்கள் தெரிந் தெடுத்த விஷயம் இப்போது சென்னை மாகாணம் பூராவுமே சிரிப்பாய் சிரிக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

இதிலிருந்தே தோழர் ஆச்சாரியாரும் பத்திரிகைகளும் தங்களுக்கு புத்தி வந்தது என்று வார்த்தையில் காட்டிக்கொண்டார்களே தவிர காரியத்தில் காட்டிக்கொண்டவர்களாக இல்லவே இல்லை என்பது தெரிகிறது.

பொதுவாக சென்னையில் இருந்தும் வேறு சில இடங்களில் இருந்தும் வந்த தகவல்களின்படி பார்த்தால் பார்லிமெண்டு போர்டு மெம்பருக்கோ அல்லது அவர்களிடம் செல்வாக்கு இருக்கும் அங்கத்தினருக்கோ பணம் கொடுத்தால் எப்படிப் பட்டவர்களும் போர்டாரால் தெரிந்தெடுக்கப்பட்டு விடலாம் என்பதாக நினைக்க வேண்டி இருக்கிறது.

இதுபோலவே வேலூர் முதலிய இடங்களிலும் நடந்திருப்பதாகத் தெரிகிறது.

இதுபோன்ற காரியங்களில் பயனை அனுபவித்த பிறகும் இந்த மாதிரியான காரியங்கள் திரும்பத் திரும்ப நடப்பதானால் இவர்களுக்குப் புத்திவந்ததாக யார்தான் சொல்லக்கூடும்.

இதைப்பற்றி நாம் எழுதும்போது காங்கிரஸ் ஊழலாகிவிட்டதே என்கின்ற கவலை மீது நாம் எழுதவில்லை. அது ஊழலாகிவிட்டது என்று 10,12 வருஷங்களுக்கு முன்னமேயே உணர்ந்து கொண்டோம்.

பின்னை ஏன் அதைப்பற்றி எழுதுகிறோம் என்று சொன்னால் அந்த ஊழலின் தீங்கு பொதுவாழ்க்கையை எவ்வளவு தூரம் பாதிக்கின்றது என்பதையும் அதனால் பொது ஜனங்களுக்கு அரசாங்கத்தால் ஏற்பட வேண்டிய காரியங்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறது என்பதையும் எடுத்துக்காட்டுவதற்கு ஆகவே ஒழிய வேறில்லை.

ஆகையால் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் மற்றும் உண்மையில் கவலைகொண்ட பொதுநல சேவைத் தோழர்கள் யாராவது காங்கிரசில் இருந்தால் அவர்களும் சேர்ந்து மற்ற தேர்தல்கள் நெருங்குவதற்கு முன்பாகவே கலந்து ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்து இம்மாதிரி ஊழல்களும் காரியக் கெடுதிகளும் இனிமேல் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு தக்கது செய்ய முன்வருவார்களா என்று கேட்கின்றோம்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் ஜஸ்டிஸ் கட்சியையோ, பீபிள்ஸ் பார்ட்டியையோ அடுத்த தேர்தல்களில் தோற்கடித்துவிட (முடியாது) முடியும் என்றே வைத்துக்கொள்ளலாம். அதன் பிறகு என்ன செய்வது என்பதும் அதன்பிறகு என்ன ஏற்படும் என்பதும் அவ்வளவு சுலபத்தில் முடிவு செய்யக்கூடிய காரியமல்ல. மறுபடியும் வழுக்கி விழுகவேண்டியதுதான். ஒரு மைல் ஏறவும் 3 மைல் சறுக்கி கீழே வரவுமாய் இருந்தால் எப்பொழுது லட்சியத்தை அடைய முடியும். தேர்தல் வெற்றியேதான் நமது லட்சியமா? வெற்றியில் பயனென்ன என்று கருதவேண்டாமா?



இனி ஆச்சாரியார் பொதுஜனங்களிடம் முன்போல் பணம் பறிக்க முடியாது. பணக்காரன் தான் எலக்ஷனில் நிற்கமுடியும். ஏழைகள் ஸ்தாபனமென்று காங்கிரசை சொல்லிக்கொண்டு கோடிக்கணக்காய் பணம் வசூலித்து பாழாக்கப்பட்டுவிட்டது. அவ்வளவு பணத்திலும் ஒரு காசு கூட நாளை எலக்ஷனுக்கு பயன்படாமல் அடுத்த தேர்தலுக்கு காங்கிரசு சார்பாய் பணக்காரர்களையும், தந்திரக்கார பார்ப்பனர்களையும் தான் நிறுத்த வேண்டியதாய் இருக்கிறது. தந்திரக்காரப் பார்ப்பனன் காங்கிரசில் இருந்தால் என்ன? ஜஸ்டிஸிலோ, பீபிள்ஸ் பார்ட்டியிலோ இருந்தால் என்ன? எல்லாம் ஒன்று தானே. அதுபோல் பணக்காரனும் எதில் இருந்தால் என்ன, கால் ரூபாய் கொடுத்துக் கையெழுத்துப் போட்டதால் கருப்பு நாய் வெள்ளை நாய் ஆகிவிடுமா? சாயம் பூசி வைப்பதால் சாயம் எவ்வளவு நேரம் நிற்கும், அழிந்தாலும் மறைந்துவிடும்; உதிர்ந்தாலும் வேறு முளைத்துவிடும்.

ஆகையால் உண்மையான ஆட்கள் 100-க்கு 10 பேர் இருந்தாலும் அவர்களைக் கொண்டு உள்ளும் புறமும் நாணயமான போர்செய்தால் கட்டாயம் ஏழை மக்களுக்கு நன்மை உண்டாகலாம். ஆதலால் இனியாவது ஆச்சாரியார் கவனிப்பார் என்று கருதுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 09.08.1936**



RangaRakes tamilnavarasam.com

# உடைப்பதா அனுபவிப்பதா?

1937 ஏப்ரலில் அனுபவத்துக்கு வரப்போகும் சீர்திருத்தத்தை உடைப்பது என்பது காங்கிரஸ்காரர்களின் கொள்கை என்று சொல்லி மக்களை இதுவரை காங்கிரஸ்காரர்கள் ஏமாற்றி வந்தார்கள். அந்தப் பிரச்சினையை முக்கியமாய் வைத்தே காங்கிரஸ்காரர் இந்திய சட்டசபைக்கும் போனார்கள். ஆனால் அங்கு சென்று அது விஷயமாய் யாதொரு காரியத்தையும் செய்யாமல் தாங்கள் ஒரு கூட்டத்தார் இருக்கிறார்கள் என்று காட்டிக் கொள்வதற்கு ஆகவே அவர்களது முழுநேரமும் செலவிட வேண்டியதாய் விட்டது. அதே தன்மையின் மீது ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் சென்றார்கள். அங்கும் அவர்கள் இல்லாதிருந்தால் நன்றாய் இருந்திருக்கும் என்று காட்டிக் கொண்டார்களே தவிர ஒரு காரியமும் புதியதாய் செய்யவில்லை. அன்றியும் ஒருவரோடொருவர் போரிட்டவண்ணமாய் இருக்கிறார்கள். இனிவரப் போகும் சட்டசபைக்கும் நிற்கப்போகிறார்கள். ஆனால் நல்ல வேளையாய் அதற்கு என்ன கொள்கை? என்ன பிரச்சினையின் மீது நிற்பது? பொது ஜனங்களுக்கு என்ன வாக்குறுதி கொடுப்பது? அங்கு போய் என்ன செய்வது? என்கின்ற விஷயங்களில் இதுவரை யாதொரு முடிவும் இல்லாமல் ''பலசரக்கு கடைக்காரனுக்குப் பைத்தியம் பிடித்தது'' போல் (அதாவது ஒரு சாமானை எடுத்து மற்றொன்றில் கொட்டுவதும் அதை மற்றவர்கள் பிரித்து வைப்பதும் மறுபடியும் கொட்டிக் கலக்குவதுமான வேலை) கண்டபடி உளறிக் கொண்டிருப்பதே வேலையாய் இருந்து வருகிறார்கள். இப்போது காங்கிரசானது சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமானால் இனி உபயத்துல்லா, குப்புசாமி, கல்யாணராமய்யர் கம்பினியாரால் முடியாத காரியமாகிவிட்டது. இந்தக் கம்பினியின் யோக்கியதையை சிறு தேர்தலிலேயே கண்டுவிட்டார்கள். ஆதலால் இனி சுப்பராயன், நாடிமுத்து, ராமலிங்கம் போன்ற மந்திரி பதவி கொள்கை கம்பினியை பிடித்துதான் ஆகவேண்டும். அந்தக் கம்பினிக்கும் முட்டுக்கட்டை தகர்த்தெறிவது பதவி மறுப்பு ஆகிய விஷயங்களுக்கும் வெகுதூரம். ஏனெனில் அது தங்களுக்கு சிறிதாவது மானமிருப்பதாய் காட்டிக்கொள்ள வேண்டிய நிர்பந்தத்திலிருக்கும் கம்பினியாதலால் அது சுலபத்தில் சத்தியமூர்த்திக்கு ஜே போடுவதென்பது முடியாத காரியம்.

இந்தக் காரணங்களால் சென்னை மாகாண காங்கிரஸ் படிப்படியாய் முட்டுக்கட்டை, தகர்த்தெறிதல், பதவிமறுப்பு ஆகிய தந்திரங்களை சிறுகச்



சிறுக கைவிட்டே வந்து கடசியாக விதவை கர்ப்பம் ''கரைந்து'' ஒரே நாளில் சூதகக்கட்டியாய் மறைந்துவிட்டது போல் இப்போது தோழர் சத்திய மூர்த்தியார் அவர்கள் சிம்லாவில் இருந்து மந்திரி கனம் ராஜன் அவர்களின் பெரியகுளம் பேச்சுக்கு பதிலளிக்கும் முறையில் எழுதியனுப்பப்பட்ட சேதியில் உண்மையை கக்கிவிட்டார். அதாவது

(அது 25-7-36-ந் தேதி தினமணி என்கின்ற பத்திரிகையில் பக்கம் 5-ல் கலம் 3-ல் பிரசுரித்திருக்கிறபடி)

1. ''நாங்கள் மாகாண சட்டசபையில் மெஜாரிட்டியாக இருந்தால் இந்த அரசியலமைப்புக்கு பதிலாக யாவரும் ஒப்புக்கொள்ளும்படியான ஒரு அரசியலமைப்பைப் பெறுவதற்கும் (யாவரும் ஒப்புக்கொள்ளும் படியாய் ஒரு நாளும் முடியப்போவதில்லை - ப-ர்) அதற்கிடையில் (அது பெறும் வரை -ப-ர்)
2. **இந்த சீர்திருத்தத்தின் கீழ் முடிந்த அளவுக்கு ஜனங்களுக்கு நன்மை செய்வதற்கும்,**
3. ஜஸ்டிஸ் கட்சி போன்ற பிற்போக்கானதும் வகுப்புவாதத்தை அடிப்படையாகக் கொண்டதுமான கட்சிகளின் விஷமங்களை தடுப்பதற்கும் நாங்கள் பதவியேற்றுக் கொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறோம்''

என்று பதில் சொல்லியிருக்கிறார். ஆகவே இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் சீர்திருத்தத்தை ஏற்று நடத்துவதென்றும், அதனால் மக்களுக்கு எவ்வளவு நன்மை செய்யக்கூடுமோ அவ்வளவு செய்ய பயன்படுத்திக் கொள்வது என்றும் பச்சையாய் ஒப்புக்கொண்டு மந்திரி ஆசை உள்ளவர்கள் எல்லாம் காங்கிரசில் சேரவேண்டும் என்றும் ஜஸ்டிஸ் கட்சிக்கோ பீபிள்ஸ் பார்டிக்கோ போகக்கூடாது என்றும் முரசு அடித்துவிட்டார்கள் என்பதேயாகும்.

மற்றும் இந்த பேச்சுப்படி பார்த்தால் சீர்திருத்தத்தை என்ன செய்கின்றது என்கின்ற வரையில் ஜஸ்டிஸ் கட்சிக்கோ, பீபிள்ஸ் பார்டிக்கோ காங்கிரஸ் கட்சிக்கோ எவ்வித வித்தியாசமாவது இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் ஒரு வித்தியாசம் மாத்திரம் இருக்கிறது. அது என்ன வென்றால் வகுப்புவாதத்தை ஒழிக்கப்போகிறோம், தடுக்கப்போகிறோம் என்பதேயாகும்.

இந்த ஒரு விஷயத்தைக் கவனித்தால் உண்மைப் பார்ப்பனரல்லாதாராயும், முஸ்லீமாயும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராயுமிருக்கும் ஒவ்வொரு சிசுவும் காங்கிரசை அது பதவியேற்க முடியாமல் முறி அடித்துத் துரத்தியே ஆகவேண்டியிருக்கிறது.

ஏனெனில் இந்த மூன்று வகுப்பாரும் வகுப்புவாதம் பேசியே வகுப்புத் தீர்ப்பு பெற்று அனுபவித்து வருகிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

அதாவது முஸ்லீம்களுக்கும் தீண்டப்படாத வகுப்பு என்பாருக்கும் சீர்திருத்தத்திலேயே வகுப்பு உரிமை புகுத்தப்பட்டு இருந்து வருகிறது. பார்ப்பனரல்லாதார்கள் என்கின்ற கூட்டத்தாருக்கு மாகாண அரசாங்கத்தில் சில முறைகளின் மூலம் ஸ்தல ஸ்தாபன பிரதிநிதித்துவத்துக்கும் உத்தியோகப் பிரதிநிதித்துவக்கும் வகுப்பு உரிமை இருந்து வருகிறது. காங்கிரஸ்காரர்கள் பதவியேற்பது இதை ஒழிப்பதற்காகவே என்று சொன்னால் இதை உண்மையான சுத்த ரத்த ஓட்டமுள்ள மக்கள் யார்தான் சகித்துக்கொண்டு தங்கள் வகுப்புக்கும், சமூகத்துக்கும் துரோகம் செய்துவிட்டு பார்ப்பனர்கள் காலைக் கழுவ ஓடக்கூடும் என்று கேட்கின்றோம்.

வகுப்புவாதத்துக்கு இந்த முறை தவறு என்று சொல்வதானால் இவர்களாவது (காங்கிரஸ்காரர்களாவது) வேறு வழி காட்டட்டும். அதில்லாமல் அடியோடு வகுப்புரிமையை ஒழிப்பது என்றால் காங்கிரஸ் ஒழிவதுதான் நிச்சயமே ஒழிய வகுப்புரிமை வாதம் ஒரு நாளும் இந்தியாவில் ஒழியப் போவதில்லை. ஏனெனில் வகுப்புப் பிரிவையும், வகுப்பு பேதத்தையும் ஒழிக்கக் காங்கிரசே சம்மதிப்பதில்லை.

நிற்க, ஜஸ்டிஸ் கட்சி இதுவரை என்ன நன்மை செய்தது என்கின்ற விஷயத்தில் கனம் மந்திரி ராஜன் எடுத்துக்காட்டியிருக்கும் விஷயங்களை எல்லாம் தோழர் மூர்த்தியார் அப்படியே ஒப்புக்கொண்டுவிட்டார்.

அதாவது அதே 25-7-36-ந் தேதி தினமணியில் பக்கம் 5ல், கலம் 4ல் உள்ள மூர்த்தியார் பதிலில் ''எவ்வளவு பெரிய ஜாப்தா'' என்கின்ற தலைப்பில் கனம் மந்திரி ராஜன் கூறிய எல்லாவற்றையும் எடுத்துப்போட்டு ஒப்புக் கொண்டு 5வது கலத்தில் (அரசியல் சட்டத்தில் - ப-ர்)

''எவ்வளவு கட்டுப்பாடு இருந்த போதிலும் அவர்கள் (ஜஸ்டிஸ் கட்சியார்கள்) இன்னமும் அதிகமாய் செய்திருக்க முடியும்'' என்று சொல்லியிருக்கிறார்.

ஆனால் அதிகமாய் என்ன செய்து இருக்க முடியும் என்ன செய்திருக்க வேண்டும் என்பதைப் பற்றி ஒரு வரியாவது மூர்த்தியார் சொல்லவே இல்லை.

ஆகவே சீர்திருத்தத்தை ஏற்று நடத்துவது, தன்னால் கூடியவரை மக்களுக்கு நன்மை செய்வது என்பதிலும், இதுவரையில் செய்திருக்கும் காரியங்கள் என்பவைகளை மூர்த்தியாரே ஒப்புக்கொண்டதிலிருந்தும் காங்கிரஸ் கட்சியானது ஜஸ்டிஸ் கட்சிக்கு மாறானதாக இல்லை என்பது வெளிப்படை.

இப்படி இருக்க எந்த வகையில் ஜஸ்டிஸ்கட்சியை பிற்போக்கான கட்சி என்று மூர்த்தியாரோ அல்லது காங்கிரஸ் கூலிகளோ சொல்லுகிறார்கள் என்பது நமக்குப் புரியவில்லை.



மற்றும் காங்கிரசின் மூலாதாரக் கொள்கைகளின் விஷயத்திலும் பூரண சுயேச்சை என்பது குடியேற்ற நாட்டு அந்தஸ்துதான் என்றும், வெள்ளையருடன் ஒரு ராஜித்திட்டத்தை ஏற்படுத்திக் கொண்டே இந்த நாட்டில் சுயராஜ்யம் பெறுவது என்றும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் என்கின்ற முறையில் தோழர் மூர்த்தியார் ஆனைமலையில் வெள்ளைக் காரர்களுக்கு வாக்குறுதி கொடுத்திருப்பதாகத் தன் கையிலேயே எழுதிப் பத்திரிக்கைகளுக்கு சேதி அனுப்பியிருக்கும் அறிக்கையும் இருக்கும்போது, ''ஜஸ்டிஸார் வெள்ளையர்களுடன் கூட்டாளிகளாக இருக்க விரும்புகிறார்கள்'' என்று ஜஸ்டிஸ் கட்சியை சிம்லா பேச்சில் குறை கூறுவது யோக்கியமா? என்று கேட்கின்றோம்.

ஆகவே இந்த நிலைமையில் காங்கிரசுக்காரர்கள் சீர்திருத்தத்தை உடைக்கப் போகிறார்களா அல்லது ஏற்று நடத்தப்போகிறார்களா? என்பதையும், ஏற்று நடத்துவதில் ஜஸ்டிஸ்காரர்களை விட எந்த அம்சத்தில் முற் போக்காளர்களாய் இருக்கக்கூடும் என்பதையும், அவர்களது முக்கிய நோக்கம் எப்படியாவது மந்திரி பதவிகளைக் கைப்பற்றி இப்போது இருந்து வரும் வகுப்பு உரிமைகளை ஒழித்து ஒரே வகுப்பு அதாவது பார்ப்பன ஆட்சி ஆக்க வேண்டுமென்பதல்லாமல் வேறேதாவது உண்டா என்பதையும் பொதுமக்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமாய் விரும்புகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.08.1936**



RangaRakes tamilnavarasam.com

# தீண்டாமையும் இஸ்லாமும்

இந்து மதத்தில் தீண்டாமையானது பலமான இடம் பெற்றிருக்கிறது என்பதை எந்த இந்துவும் இதுவரை மறுக்கவே இல்லை. அப்படி மறுப்பவர்கள் தாங்கள் யோக்கியமான இந்துவா, இந்து சாஸ்திரங்களை புராணங்களை வேத சாஸ்திரங்கள் எனபவைகளை கடவுள் வாக்குகள். கடவுள் நடவடிக்கைகள் என்பவைகளை அப்படியே ஒப்புக்கொள்ளுபவர்களா அல்லது தங்களுக்கு இஷ்டமானபடி சமயத்துக்கு மக்களை ஏய்ப்பதற்கு ஆக பேசுபவர்களா? என்பதை முதலில் நாணயமாய் முடிவு செய்து கொள்ள வேண்டும். ஜாதி பேதங்களையும், தீண்டாமையையும் ஒழிக்க இந்து மதம் இடம் கொடுக்குமானால் இந்து மதத்துக்கும் இஸ்லாம் மதத்துக்கும் வேறு என்ன வித்தியாசம் இருக்கிறது என்று நாம் பந்தயம் கட்டி கேட்கின்றோம். மதத்தின் பேரால் வயிறு வளர்த்து மரியாதை சம்பாதித்துத் திரியும் சோம்பேறிகள், எல்லா மதங்களிலும் இருக்கலாம். அதனால் மத தத்துவ ஆதாரங்களின்படி தீண்டாமையும், ஜாதி வித்தியாசமும், பேதமும் இஸ்லாம் மதத்தில் இல்லை என்பதையும் இந்து மதத்தில் இருப்பதோடு அல்லாமல் அமுலிலும் மிக்க கொடுமையான தத்துவத்துடன் இருந்து வருகிறது என்பதையும் நாம் எங்கும் நிரூபிக்கமுடியும்.

இந்த நிலைமையில் தீண்டாதார் என்று இழிவாய் கருதப்படும் மக்கள் ஜாதிபேதத்தையும் தீண்டாமையையும் முக்கியத்துவமாய்க் கொண்ட இந்து மதத்தைவிட்டு அதில்லாத மதத்துக்குப் போவதால் என்ன கெடுதியென்று கேட்கின்றோம்.

முஸ்லீம் மதத்துக்கு போனால் உயர்ந்த முஸ்லீம் பெண் கொடுப்பானா? என்று ஒரு தலைவர் கேட்கிறார். ஆனால் இந்து மதத்தில் இருந்தால் மாத்திரம் இவர் தன் பெண்ணைக் கொடுக்கக்கூடுமா என்று நாம் கேட்டால் அது அதிகப் பிரசங்கித்தனமாய்விடும் என்று அஞ்சுகிறோம்.

பெண்கொடுப்பது வாங்குவது கர்னாடகக் காலம் ஆகப்போகிறது. புதிய உலகில் அவனவனுக்குப் பிடித்தது தானாகவே ஜோடி சேரப்போகிறது. அப்படியே சில இடங்களில் சேர்ந்தும் வருகிறது.



ஆனால் ஒரு தீண்டாதவன் முஸ்லீமானாலும் ஒரு கூட்ட தீண்டாதவர்கள் முஸ்லீம்களானாலும் அவர்களைப் பொறுத்தவரை தீண்டாமை அந்த நிமிடமே ஒழிந்துவிடுகிறது மாத்திரம் நேரில் பிரத்தியக்ஷத்தில் பார்த்து வருகிறோம்.

இஸ்லாம் மதத்தில் பெண்கள் மூடிபோட்டு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

அது மத சம்பிரதாயமல்ல. ஏனெனில் இந்து சமூகத்திலும் சிறிது பணமோ வலிமையோ சந்தேகமோ இருந்தால், பெண்கள் மூடித்தான் வைக்கப்படுகிறார்கள். இது பெண் அடிமையைப் பொறுத்ததாகும். தீண்டாமை, அதாவது ஆண் அடிமை தீர்ந்த உடன் பெண் அடிமை தீரப்போகிறது. அதற்காகப் போர் நடக்கப் போகிறது. அந்தக் காலம் வெகுதூரத்தில்இல்லை. ஆதலால் அதற்கும் இதற்கும் சம்மந்தம் வைப்பது தகுந்த நியாயம் சொல்ல முடியாத பயங்காளித்தனமே ஆகும்.

ஆதலால் இதுவரை தீண்டாமை விலக்குக்காக சமூக சீர்திருத்தக்காரர் களும், அரசியல் கிளர்ச்சிக்காரரும் செய்த சகலவித முயற்சிகளிலும் கிளர்ச்சிகளிலும் தோல்வியே அடைந்துவிட்டார்கள்.

அம்பேத்கார் உபதேசமே இப்போது தீண்டாமை ஒழிவதற்கு உண்மையான சாதனமாய் இருக்கிறது. சுமார் 6,7 கோடி பேர்கள் ஏற்கனவே அனுபவித்துப் பார்த்துவிட்டார்கள்.

தீண்டாதவர்கள் இஸ்லாமாகி-முஸ்லீமாகி மனிதர்களாவதுதான் யோக்கியமான மார்க்கம் என்று கூறுகிறோம்.

இதை ஆட்சேபிப்பவர்கள் தங்களால் இதுவரை இது விஷயத்தில் செய்யப்பட்ட காரியம் இன்னது, அதனால் ஏற்பட்ட பயன் இன்னது, அல்லது காந்தியார் ஈறான மற்ற சீர்திருத்தக்காரர்களால் ஏற்பட்ட காரியம் இன்னது என்று அனுபவரீதியாய் எடுத்துக்காட்டி ஆட்சேபிக்கத் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 09.08.1936**



RangaRakes tamilnavarasam.com

# பன்னிரண்டாவது ஆண்டு

**"குடி அரசு"** பத்திரிகைக்கு பதினோரு ஆண்டு நிரம்பி பன்னிரண்டாவது ஆண்டின் - பன்னிரண்டாவது மலரின் முதல் இதழாக இவ்வாரப் பத்திரிகை பிரசுரமாகின்றது.

''குடி அரசு'' இதுவரை அதாவது இந்த பதினொரு வருஷ காலமாக என்ன காரியம் செய்திருக்கிறது என்று கேட்கப்படுமானால் முதலில் ஒரு பதில் தைரியமாகச் சொல்லுவோம்.

சரியானாலும் தப்பானாலும் தனக்கு சரியென்று தோன்றியதை தயவு, தாக்ஷண்ணியம், பயம், பாரபட்சம் இல்லாமல் தைரியமாய் வெளிப்படுத்தி வந்திருக்கிறது.

மற்றொரு காரியம் என்ன வென்றால் பத்திரிகையில் வாசிப்பவர்களைப் பின்பற்றாமல் பத்திரிகையில் உள்ளதைப் பின்பற்றும்படி வாசகர்களை செய்து வந்திருக்கிறது.

உலகில் பத்திரிகைகள் இரண்டு விதம். அவை தமது வாழ்க்கைக்கு ஒரு வழி வேண்டுமென்று சுயநலம் கருதுபவர்களால் மக்களைப் பின்பற்றி நடத்தப்படும் பத்திரிகை ஒன்று.

மக்கள் சமூகத்தில் சில கொள்கைகளைப் பரப்ப வேண்டுமே என்று பொதுநலம் கருதுபவர்களால் ஒரு குறிப்பிட்ட லட்சியத்தையே பின்பற்றி நடத்தப்படும் பத்திரிகை மற்றொன்று.

முதலாவது தரம். பத்திரிகைகளுக்கு ஒரு குறிப்பிட்ட கொள்கை இருக்க முடியாது. தயவு, தாக்ஷண்ணியம், பயம், பாரபட்சம் ஆகியவை இல்லாதத் தன்மையில் இருக்க முடியாது என்பதோடு சமயத்துக்குத் தகுந்தபடி சரிப்படுத்திக் கொள்வதன் மூலம் அவைகளுக்கு எவ்வித கஷ்டமும், தொல்லையும், நஷ்டமும் இருக்க முடியாது.

ஆனால் இரண்டாவதாகக் குறிப்பிட்டதான அதாவது கொள்கைகளுக்காக நடத்தப்படும் பத்திரிகைகளுக்கு பல தொல்லையும், கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுவதோடு வெகு சுலபத்தில் எதிரிகள் ஏற்பட்டுக் கொண்டே இருப்பார்கள். இம்மாதிரி பத்திரிகைகள் பொதுஜன செல்வாக்குக்கு விரோதமாகவும் வேலை செய்யவேண்டி ஏற்பட்டு விடுவதால் பொதுஜனங்கள் ஆதரவும் இல்லாமல் இருக்க வேண்டியும் வரும். ஆதலால்



**உலகத்தார் உண்டென்பது இல் என்பான் - வையத்து**
**அலகையா வைக்கப் படும்**

என்னும் மூதுரைக் கேற்ப நமது ''குடி அரசு'' பத்திரிகையானது உலக மக்களின் சமுதாயத் துறையில், பழக்க வழக்கத்தில் பலஆயிரக்கணக்கான வருஷங்களாய் இருந்து வந்த நம்பிக்கைகளையும், எண்ணங்களையும், காரியங்களையும் முரட்டுத் தனமாய் எதிர்த்தும், மறுத்தும், கண்டித்தும், வைதும் எழுதி வந்ததில் எவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகி இருக்க வேண்டும் என்பதை வாசகர்களே சிறிது சிந்தித்துப் பார்த்தால் நன்றாய் விளங்கும்.

ஆரம்பத்தில் ''குடி அரசு'' தென்னாட்டில் செல்வாக்கும் ஒற்றுமையும், பலவிதத்தும் தந்திரமும் சூழ்ச்சித் திறமும்கொண்ட வகுப்பாராகிய பார்ப்பனர்களின் தொல்லையில் இருந்து மற்ற பார்ப்பனரல்லாத பொது மக்களை விடுதலை பெறச் செய்ய வேண்டும் என்னும் கொள்கைக்காகவே உழைத்தது. அதன் பயனாய் அப்பார்ப்பனர்களின் ஆயுதமாகிய வைதீக மென்னும் துறையில் புராணம், சாஸ்திரம், மதம், கடவுள் என்பனவாகி யவைகளின் புரட்டுகளை வெளியாக்கவேண்டிய காரியத்துக்கு உழைத்தது. அதோடு கூடவே பார்ப்பனர்களது லௌகீகம் என்னும் துறையில் காங்கிரஸ் தேசீயம் சுயராஜ்யம் என்னும் ஆயுதங்களின் புரட்டுகளையும் வெளியாக்க மிகவும் பாடுபட்டு வந்தது. இவ்விருவகைத் தொண்டின் பயனாய் ''குடி அரசு''க்கு பாமர மக்களாலும் படித்தவர்கள் என்பவர்களில் சுயநலவாதிகளாலும் சமயோசிதவாதிகளாலும் பெரிய கஷ்டமும் நஷ்டமும் தொல்லையும் தாங்க முடியாத நிலையில் அனுபவிக்க வேண்டி வந்தது. எப்படி எப்படியோ மகத்தான எதிர்ப்புகளுக்கிடையும் சொல்ல முடியாத கஷ்ட நஷ்டங்களிடையும் 11 வருஷ காலம் ''குடி அரசு'' வாழ்ந்து வந்து 12 வது வயதில் புகுந்துவிட்டது.

இந்த 11 வருஷ வாழ்வில் ''குடி அரசு'' சமூகத்துறையில் இதுவரை யாரும் தைரியமாய் வாயால் கூட சொல்லப் பயப்படும்படியான காரியங்கள் பல காரியத்தில் நடைபெறும்படியாகவும் மனப்பான்மையில் ஒரு பெரும் புரட்சி உணர்ச்சி உண்டாகும்படியாகவும் செய்து வந்திருக்கிறது. அரசியல் துறையிலும் காங்கிரசின் புரட்டை வெளியாக்க ''குடி அரசு'' செய்து வந்த வேலையானது கன்யாகுமரி முதல் இமயமலைவரை காங்கிரஸ்காரர்களை திக்குமுக்காடச் செய்து வந்திருப்பதுடன் காங்கிரசார் மக்களை ஏமாற்ற செய்து வந்த சூழ்ச்சிகள், தந்திரங்கள் ஒவ்வொன்றிலும் பக்கா தோல்வியே அடையும்படியாகச் செய்து தோழர் காந்தியார், ராஜகோபாலாச்சாரியார் போன்றவர்கள் கூட நிலைமையை சமாளிக்க முடியாமல் ''ராஜிநாமா'' செய்யும் படியும் ''ஓய்வு'' எடுத்துக் கொள்ளும்படியும் செய்து வந்திருக்கிறது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் அகில இந்திய காங்கிரஸ் கொள்கைகளையும் திட்டங்களையும் கூட நிர்ணயிக்கும்



RangaRakes tamilnavarasam.com

விஷயத்தில் பயப்படும் படியான நிலைமையை ''குடி அரசு'' உண்டாக்கி வந்திருக்கிறது என்று சொல்லலாம். இன்றைய காங்கிரசின் பரிதாபகரமான நிலைக்கு காரணம் ''குடி அர''சின் சளையா உழைப்பும் பின்வாங்கா முயற்சியுமேயாகும்.

அதுவும் ''குடி அரசு'' வின் கொள்கைக்கு ''குடி அரசு''வைவிட வேறு உதவிப் பத்திரிகை இல்லை என்கின்ற நிலையில் தன்னந்தனியாக இருந்தே இவ்வளவு காரியமும் செய்து வந்திருக்கிறது. இவ்வளவு காரியத்துக்கும் ''குடி அரசு'' ஆனது இந்த 11 வருஷ காலமாய் எவ்வளவோ கஷ்டமும், பொருளாதார நஷ்டமும் அடைந்து வந்திருந்தாலும், ஒரு ஒத்தைச் சல்லியாவது பொது ஜனங்களிடமிருந்து வரியோ, உதவித்தொகையோ கேட்காமலும் எதிர்பாராமலும் இருந்துகொண்டே இந்தக் காரியங்களை செய்து வந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இவ்வளவு பெரிய காரியங்கள் ''குடி அரசு'' பத்திரிகை செய்வதற்கும் அதன் கொள்கைகளைப் பரப்ப பிரசாரத்துக்கும் உதவி செய்துவந்த தோழர்கள் சிலர் உண்டு என்பதோடு அதனை ஆதரித்து வந்த வாசகர்களையும் நாம் மறந்துவிடவில்லை. அவர்களுக்கு ''குடி அரசு'' நன்றி செலுத்த கடமைப்பட்டதேயாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 16.08.1936**



# ராஜிநாமா நாடகம்

## வேறு என்ன செய்தால் வண்டவாளம் மறையும்?

தோழர் சி. ராஜகோபாலாச்சாரியாரவர்கள் காங்கிரஸ் கமிட்டிகளிலிருந்து ராஜிநாமா கொடுத்துவிட்டதாக 11-8-36உ ஒரு அறிக்கை வெளியிட்டு இருக்கிறார். அவ்வறிக்கையில்

''இன்றிலிருந்து சென்னையிலோ அல்லது வெளியிடங்களிலோ உள்ள எந்தக் காங்கிரஸ் கமிட்டி அலுவலகங்களுக்கும் எனக்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை என என் நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதிலிருந்து ஆச்சாரியார் அவர்கள் காங்கிரஸ் சம்மந்தத்திலிருந்தே விலகிக் கொண்டதாக அர்த்தமாவதில்லை. நிர்வாக பதவிகளிலிருந்து மாத்திரம் விலகிக் கொண்டதாக அர்த்தமாகிறது.

ஆனால் தோழர் காந்தியாரோ இரண்டு வருஷத்துக்கு முன்னதாகவே காங்கிரஸ் நிர்வாக சம்மந்தத்திலிருந்து விலகிக் கொண்டது மாத்திரமல்லாமல் காங்கிரசில் ஒரு நாலணா மெம்பராகக்கூட இருக்க இஷ்டமில்லை என்று விலகிக்கொண்டதாக விளம்பரப்படுத்தினார். அது சமயமும் அவரால் ராஜிநாமாவுக்கு காரணங்கள் காட்டப்பட்டதில் ''காங்கிரசிலுள்ள சிலர் நடந்து கொள்ளும் காரியம் தனக்குப் பிடிக்கவில்லை'' என்பதையும் ஒரு காரணமாய் காட்டினார் என்றாலும் காங்கிரஸ் பக்தர்கள் என்பவர்களுக்கும் காந்தியாருக்கும் நடந்த ''பிரிவு'' கட்டமானது நாடகங்களில் காட்டப்படும் பிரிவுக் காட்சிகள் போலவே நடந்ததுடன் அவற்றிற்கு ஏற்பட்ட விளம்பரங்கள் ராஜிநாமா விளம்பரத்தை விட அதிகமாகவே இருந்தது

என்றாலும் அதன் முடிவும் நாடகத்தில் பிரிவினையைக் காட்டும் போது ஒருவருக்கொருவர் சோகரசம் காட்டுவதில் போட்டிபோட்டு விட்டு நாடகம் கலைந்து வெளியில் வந்த பிறகு நாடக பாத்திரங்கள் ஒரே வீட்டில் கூட்டுத் தோழர்கள் போலவும் ஆண் பெண்ணாயிருந்தால் காதலி காதலன் போலவும், எப்படி வாழ்கிறார்களோ அப்படியே காந்தியாரை காங்கிரசில் சம்மந்தப்படுத்துவதும் காந்தியார் காங்கிரசில் சம்பந்தம் வைத்துக் கொள்ளுவதுமாயிருப்பதோடு அவற்றுள் நன்மை ஏற்பட்டால் காந்தியார் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளுவதும் தீமை ஏற்பட்டால் பொறுப்பில்



RangaRakes tamilnavarasam.com

இருந்து தப்பித்துக் கொள்ளுவதும் ஆகிய தந்திரங்களுக்கே அந்த காந்தியார் பிரிவு நாடகத்தின் பலன் பயன்பட்டு வருகிறது.

ஆனால் தோழர் காந்தியார் தனது பிரிவுக்கும் ராஜிநாமாவுக்கும் என்னதான் காரணம் சொல்லியிருந்தாலும் அவருக்கும் காங்கிரசுக்கும் இருந்து வந்த கொள்கையானது காந்தியார் விலகிக்கொண்டதாய்க் காட்டிக் கொள்வதன் மூலம் கொஞ்சமாவது காந்தியாரின் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடியதாய் இருந்தது. ஏனெனில் அவர் மதக் கொள்கைபோல் மதித்திருப்பதாகக் கூறிவந்த ஒத்துழையாமை, சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம் ஆகியவை அரசியலில் தோல்வி அடைந்த பிறகும் அக்கொள்கைகளை காங்கிரஸ் கொள்கையில் இருந்து எடுத்துவிட்ட பிறகும் தோழர் காந்தியார் எந்த முகத்தைக் கொண்டு காங்கிரசிலிருப்பார்? அல்லது தன்னை ஒரு காங்கிரஸ்காரன் என்று எப்படிச் சொல்லிக் கொள்வார்? என்பதை சுயமரியாதை உணர்ச்சியுடன் யோசித்துப் பார்த்தால் எப்படிப் பட்டவர்களுக்கும் அவர் ராஜிநாமா கொடுத்துவிட்டு விலகிக் கொண்டதாய் விளம்பரம் செய்ததும் அதற்கு ஆக காங்கிரஸ் பக்தர்கள் பிரிவு சோகம் காட்டி நடித்ததும் மிகமிக சரியான காரியம் என்றும் மிகவும் சாமர்த்தியமான காரியம் என்றும் தோன்றும்.

அதே நிலைதான் இன்று தோழர் ராஜகோபாலாச்சாரியாருக்கும் நேர்ந்து விட்டது. ஆச்சாரியார் அடியோடு காங்கிரஸ் சம்மந்தத்தில் இருந்து விலகிக் கொண்டதாய்க் குறிப்பிடவில்லை என்றாலும் அசம்பிளி தேர்தலில் வெற்றிபெற்ற தோழர் சாமி வெங்கிடாசல செட்டியாரின் கார்ப்பரேஷன் கண்டிராக்ட் சம்மந்தமும் அவர் அசம்பளியில் மோடி திருத்தத்துக்கு ஓட்டு செய்ததன் மூலம் தொழிலாளர்களுக்குத் துரோகம் செய்த தன்மையும் மற்ற மெம்பர்கள் தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றாத் தன்மையும் ஆகியவைகள் சேர்ந்து ஆச்சாரியாரை அப்போதே தலைகுனியும்படி செய்துவிட்டன.

ஏனென்றால் ஆச்சாரியாருக்கு அதுசமயம் ஏற்பட்ட கிப்பாத்தெல்லாம் சர்.ஷண்முகத்தைத் தோற்கடித்து சாமி வெங்கிடாசலத்துக்கு வெற்றி உண்டாக்கிய தந்திரத்தாலேயாகும்.

அதன் பிறகும் ஜில்லா போர்டு தேர்தல்களிலும், முனிசிபாலிட்டி தேர்தல்களிலும் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து அலட்சியம் செய்யப்பட்டவர்களும் தகுதியற்றவர்கள் என்று கருதப்பட்டவர்களுமாகப் பார்த்தே காங்கிரசில் சேர்த்து ஜஸ்டிஸ் கட்சியை தோற்கடிப்பதற்கு அவர்களை ஒரு ஆயுதமாகக் கொண்டு தேர்தல் போர் நடத்தி போலி வெற்றிக் கட்டிடம் கட்டிக்கொண்டே இருந்ததால் அப்போலிக் கட்டிடம் மணல் வீடு சரிவதுபோல் சரிய வேண்டிய தாய்விட்டது.

இவை மாத்திரமல்லாமல் அப்படிப்பட்ட தகுதியும் நாணயமும் அற்ற ஆட்களை காங்கிரசில் சேர்த்தபோது நம் போன்றவர்கள் அவர்களின் யோக்கியதையை எடுத்துக் காட்டியதற்கு சமாதானமாக ''எப்படிபட்ட அயோக்கியனும் காங்கிரசுக்கு நாலணா கொடுத்தால் யோக்கியனாய் விடுவான்'' என்றும், காங்கிரசிலும் வகுப்புவாதமில்லையா என்று கேட்டதற்கு ''இருந்தாலும் காங்கிரசுக்குள் ஒருவன் வந்து விட்டால் அவனது வகுப்பு வாதம் எப்படிப்பட்டதாய் இருந்தாலும் அதற்கு பலமிருக்கா'' தென்றும் ஒரு புதிய தீர்க்கதரிசனம் வெளியிட்டு எல்லோருடைய வாயையும் அடக்கினார்.

ஆகவே அசம்பளி தேர்தல் ''வெற்றி''யும் ஜில்லா போர்டு முனிசிபாலிட்டி ''வெற்றி''யும் அதன் எதிரொலியைக் காட்ட வேண்டியதாயிற்று.

அது மாத்திரமல்லாமல் அர்ச்சகர், புரோகிதர் ஆகியவர்கள் ஸ்தல புராணம் சொல்லுவது போல் ஆச்சாரியர் காங்கிரசைப் பற்றிக் கூறி வந்த காங்கிரஸ் பெருமைப் புராணம் அவ்வளவும் பொய்த்துப் போகும்படியாகத் தோழர்கள் டாக்டர் ராஜன், டாக்டர் சாஸ்திரியார் போன்ற பல ''அருமைத் தேச பக்தர்கள்'', ''மகா தியாகிகள்'' என்று விளம்பரப்படுத்தப்பட்ட பார்ப்பனர்கள் அனேகர் ஆரம்ப முதல் ஒவ்வொரு தேர்தல்களிலும் நடந்து கொண்ட நடவடிக்கைகளின் பயனாய் ஆச்சாரியார் மேலும் மேலும் தலையைக் கவிழ்த்துக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டதோடு நாளைக்கு பொது மக்களுக்கும் வெளி மாகாணங்களில் உள்ள தோழர்களுக்கும் என்ன பதில் சொல்லுவது? எப்படி அவர்கள் முகத்தில் விழிப்பது? என்கின்ற கஷ்டமான நிலைமை ஏற்பட்டு விட்டது.

ஆகவே தோழர் ராஜகோபாலாச்சாரியார் இப்போது ராஜிநாமா கொடுத்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆனால் அவர் இத்தனை நாளாக ராஜிநாமா கொடுக்காமல் காலம் தாட்டி சகித்துக் கொண்டு வந்தது தான் மிகவும் ஆச்சரியப்படத் தக்கதாகும் என்பதோடு உண்மையில் ஆச்சாரியாரோ காந்தியாரோ காங்கிரசை விட்டு விலகி விடவும் இல்லை; இவர்கள் விலகினார்கள் என்பதற்கு ஆக காங்கிரசின் எந்தச் சூழ்ச்சியும் தடைப் பட்டுவிடப் போவதுமில்லை. ஆனால் இவர்கள் காங்கிரசில் இருந்தால் பொது மக்கள் இவர்களை சுயமரியாதை அற்றவர்கள் என்று கூறி பரிகாசம் செய்வார்கள். அப்போது இப்படிப்பட்ட சுயமரியாதை அற்றவர்களால் நடத்தப்படும் காங்கிரசுக்கு ஒரு சொண்டு ஏற்படும்.

அன்றியும் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் இதுவரை காங்கிரஸ் கூட்டத்தில் நடந்து வந்த ஊழல்களோடு திருச்சி முனிசிபல் தலைவர் தேர்தல் ஊழல் மிகவும் நாறிப்போய் சகிக்க முடியாத நாற்றமெடுத்து விட்டதால் அதை மறைக்கவும் மக்கள் கவனத்தை அதிலிருந்து வேறு பக்கம் திருப்பவும் ஏதாவது தந்திரம் செய்ய வேண்டியதும் ஆச்சாரியாருக்கு மிகவும் அவசியமாகிவிட்டதானது ராஜிநாமாவுக்கு மற்றொரு காரணமாகும்.

ஆகவே தோழர் ஆச்சாரியார் தனது தந்திரங்களில் தோற்றுப்போனதை மறைக்கவும் திருச்சி தேர்தல் நாற்றத்தை மாற்றவும் ஏதாவது ஒரு காரியம்





RangaRakes tamilnavarasam.com

செய்யவேண்டிய அவசியத்துக்காக இந்த ராஜிநாமா நாடகம் அவசியம் நடித்துக் காட்ட வேண்டியதாகவே ஏற்பட்டுவிட்டது. எனவே ஆச்சாரியார் இதில் வெற்றி பெற்றுவிட்டார் என்றே சொல்லலாம். அதற்கு ஆக நாம் அவரைப் பாராட்ட வேண்டியதே.

எப்படியெனில் இப்பொழுது எங்கு பார்த்தாலும் காங்கிரஸ்காரர்களின் புரட்டுகளையும், அயோக்கியத்தனங்களையும்விட, ஐயோ ராஜாஜி ராஜிநாமா செய்துவிட்டாரே என்கின்ற ராஜிநாமா நாடகப் பேச்சு வலுத்து பித்தலாட்ட நாற்றத்தை அடக்கிவிட்டது. அதோடு பத்திரிகைக்காரர்களுக்கும் ஊழல்களுக்கும் அயோக்கியத்தனத்துக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லாமல் ''ஆச்சாரியார் ராஜிநாமாச் செய்துவிட்டாரே அவர் ராஜிநாமாச் செய்யவேண்டியதில்லையே தயவு செய்து புனராலோசனை செய்யும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்'' என்று எழுதிவருவதின் மூலம் பாமர மக்கள் கண்களில் மண்ணைப் போடவும் சௌகரியமாகி விட்டது.

ஆதலால் காங்கிரசுக்கு குறைவு ஏற்படாமல் இருப்பதற்கு ஆக காங்கிரஸ் நன்மையைக் கோரி இவர்கள் ராஜிநாமா செய்யவேண்டியது அவசியமும் கிரமமுமாய் விட்டது என்று சொல்லுவதில் அருத்தமில்லாமல் இல்லை.

தோழர் காந்தியார் விஷயத்தில் அவருடைய உண்மை என்பவைகளிலும் பொறுப்பிலும் நமக்கு சந்தேகம் உண்டு. ஆனால் தோழர் ராஜகோபாலாச்சாரியாரின் உண்மையிலும் அவருடைய பொறுப்பிலும் கவலை கொண்ட ஊக்கத்திலும் நமக்கு நம்பிக்கை உண்டு. ஆனால் அவை நமக்கு அனுகூலமானதா பிரதிகூலமானதா என்பது வேறு விஷயம். அது ஒரு கூட்டத்தாருக்கு அனுகூலமாகவும் மற்றொரு கூட்டத்தாருக்கு பிரதிகூலமாகவும் இருக்கலாம். அதாவது அவரது பொறுப்பு, உண்மை, கவலை கொண்ட ஊக்கம் ஆகியவை நமக்கு அனுகூலமாகக் காட்டி இருந்தால் நாம் அவரை எவ்வளவு தூரம் மெச்சி இருப்போமோ அவ்வளவு தூரம் மெச்சியே நம் எதிரிகளுக்கு காட்டப்பட்டதையும் கருதி நாம் அவரை நிர்ணயிக்க வேண்டும். மக்களை நிர்ணயிப்பவர்களுக்கு ஒரு குணம் வேண்டும். அதாவது தாங்கள் யாரை நிர்ணயிக்கிறார்களோ அவர்களது எண்ணம் நடவடிக்கை ஆகியவைகள் சுயநலத்துக்கு பயன்படத்தக்கதா அல்லது பிற நலத்துக்கு பயன்படத்தக்கதாயிருக்கிறா என்பதை நடுநிலைமையில் இருந்து பார்க்க வேண்டும். அப்படிப் பார்ப்போமானால் நமது ஆச்சாரியார் பொதுநலத்துக்கு ஆகவே தனது வாழ்வை ஒப்படைத்தவர். உண்மையான தியாகம் செய்து உண்மையில் பல கஷ்டங்களை அனுபவித்தவர். தமிழ் நாட்டில் காங்கிரஸ் தலைவர்கள் அல்லது காங்கிரஸ் ஊழியர்கள் என்று சொல்லப்படுபவர்களில் தோழர் ஆச்சாரியாரே தனது மேன்மையையும் பணம் வரும்படியையும் விட்டுக் கொடுத்து நஷ்டமும் கஷ்டமும் அனுபவித்தவர்களில் முதன்மையானவராவார். மற்றும் பெரும்பாலான விஷயங்களில் ஒரு கூட்டத்தாருடைய நன்மைக்கு



என்று தனது மனச்சாட்சியையும் நேர்மையையும் சிறிதும் லட்சியம் இல்லாமல் தியாகம் செய்தவர். எல்லா தியாகத்தை விட இது மிகவும் பெரிய தியாகமாகும் என்பது நமது அபிப்பிராயம். இது இருக்க-

மற்றபடி நமதுநாட்டில் காங்கிரசிலுள்ளவர்கள் என்பவர்களில் 100-க்கு 99 பேர்கள் காங்கிரசின் பேரால் யோக்கியதையும் பெருமையும் வாழ்க்கையில் நலன் பெற்றவர்களும் அனுபவித்தவர்களுமேயாவார்கள். இன்று காங்கிரசிலுள்ள தோழர்கள் சத்தியமூர்த்தியார் முதல் உபயதுல்லா குப்புசாமி கம்பெனியுள்பட மத்தியில் உள்ள எந்த மனிதரை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் வாழ்க்கை காங்கிரசில் சேர்வதற்கு முன் எப்படியிருந்தது? இப்போது எப்படியிருக்கிறது? என்பதை சிறிது யோசித்தாலும் விளங்காமல் போகாது.

டாக்டர் ராஜன் அவர்கள் வாழ்க்கையும் காங்கிரசின் சம்மந்தத்தின் பயனாகவே ஒன்றுக்கு மூன்று நான்காய் பெருகி இருக்கிறது என்று புள்ளி விவரங்களோடு காட்டுவோம் என்றால் மற்றவர்களைப் பற்றி யோசிப்பானேன்?

அதுபோல் தோழர் ஆச்சாரியார் நிலையை யோசித்தால் அவரது தியாகம் சுலபத்தில் விளங்கிவிடும். ஆனால் அப்படிப்பட்ட - ஒரு பெரிய நற்பயனை விளைவிக்க பயன்படுத்தவேண்டிய தியாகத்தை மிகக் குறுகின காரியத்துக்கு அதாவது ஒருசோம்பேறி வாழ்க்கைக் கூட்டத்தாருக்கு (பார்ப்பனர்களுக்கு) அனுகூலமாகப் பயன்படுத்தியதை புத்திசாலித்தனம் என்று யாரும் சொல்லமாட்டார்கள்.

அது மாத்திரமல்லாமல் அவ்வளவு பெரிய தியாகத்தைத் தாழ்த்தப்பட்ட மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியவர்களின் முற்போக்குக்குப் பயன்படுத்தி இருந்தால் ஆச்சாரியார் புத்தரின் ஸ்தானத்தை அடைந்திருக்கக் கூடும். அப்படிக்கில்லாமல் ஏற்கனவே தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் முற்போக்குக்கு தடை ஏற்படும்படியாக உபயோகப்படுத்தப் பட்டதானது புத்திசாலித்தனம் என்று யாரும் கூறிவிடமாட்டார்கள்.

ஆகவே ஆச்சாரியாரின் உண்மை உழைப்பையும் தியாகத்தையும் பிரயோகம் செய்த முறை தவறிவிட்டதே ஒழிய அவைகளின் உண்மையில் யாதொரும் குறையும் இல்லை என்பதே நமது அபிப்பிராயம்.

வகுப்புவாதம் பிடிக்கவில்லை என்று ஆச்சாரியார் அடிக்கடி கூறிவருவார். அது பார்ப்பனர்கள் மீதுள்ள அன்பினாலேயே ஒழிய உண்மையில் அல்ல என்பது நமது அபிப்பிராயம். அன்றியும் இந்த நாட்டில் மாத்திரம் அல்ல இந்தியாவிலேயே இயற்கையின் வளர்ச்சியால் ஏற்பட்ட வகுப்புவாதமானது தோழர் ஆச்சாரியார் போன்றவர்களின் அறிவும் ஆற்றலும் காந்தியார் போன்றவர்களின் சூழ்ச்சித் திறனும் தப்பான வழியில் செலுத்தப்பட்டதாலேயே அது நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறதே தவிர



RangaRakes tamilnavarasam.com

உண்மையில் வகுப்புவாதத்துக்கு இவ்வளவு பிரக்யாதியும் முக்கியஸ்தமும் ஏற்பட்டு இருக்க நியாயம் இல்லை. மேலும் வகுப்பு வாதத்தை ஒழிப்பதற்கு என்று இவர்களால் கையாளப்பட்ட எல்லா மார்க்கங்களும் கோணல் வழியாகவே இருந்ததினாலும், நாணயத்தை முக்கியமாய் கருதாத முறையிலும் பொது ஜனங்களை முட்டாள்கள் என்று கருதிய முறையிலும் முயற்சிகள் செய்ததாலும் வகுப்புவாதம் மேலும் மேலும் தாண்டவமாட இடமேற்பட்டு வரவேண்டியதாயிற்று, சரியாகவோ தப்பாகவோ அரசியல் பெருக்கத்திற்கு தக்கபடி வகுப்புவாதம் பெருகி வருகிறது. எப்படியோ அது (வகுப்புவாதம்) காங்கிரசிலேயே இன்று தாண்டவமாடுகின்றது. இனி அரசியலில் இடம் பெறாமல் இருக்கப்போவதில்லை. அது மாத்திரமில்லாமல் அது தடுக்கப்படுவதால் பொது வாழ்வில் நன்மையை விட தீமையே அதிகம் ஏற்படவும் போகிறது என்பது நமது உறுதி.

ஆகையால் தோழர் ஆச்சாரியார் வகுப்புவாதத்தை தடுக்காமல் அது மறைவதற்கு ஏதாவது ஒரு மார்க்கம் கண்டுபிடித்தாரானால் இம்மாதிரி ராஜிநாமா கொடுப்பதும் ஓய்வும் எடுக்க வேண்டியதுமான நாடக வாழ்க்கையின் அவசியம் ஒரு நாளும் ஏற்படாது என்பதோடு தேவர், டாக்டர் ராஜன், சாஸ்திரி போன்றவர்களும் இவ்வளவு மதிப்பிடக்கூடியவர்களாக ஆகவும் முடியாது என்று உறுதியாய்ச் சொல்லுவோம். இல்லையானால் அவர் **திரும்பவும் அரசியலுக்கு வந்தே தீர்வார், மறுபடியும் இம்மாதிரி ராஜிநாமா நாடகம் நடத்த வேண்டிய அவசியம் வந்தே தீரும் என்பதை தீர்க்கதரிசனம் போலவே சொல்லுவோம்.**

இந்த சமயத்தில் தோழர் ஸ்ரீனிவாசய்யங்காரை தலைவராக்க அவரது சிஷ்யர்கள் முயற்சிப்பதாய் தெரிகிறது. ஸ்ரீனிவாசய்யங்கார் வருவதில் நமக்கு ஆட்சேபணை இல்லை. அழைக்கும் சிஷ்யர்கள் சுயநலத்தில் பயன் ஒன்றும் பெறலாம்; சிலருக்கு நல்ல வேட்டைதான். ஆனால் பொதுவுக்கு பயன் ஏற்படப்போவதில்லை, இல்லை, இல்லை. காங்கிரசின் யோக்கியதை இன்றைய நிலைமையைவிட அதிக நாற்றத்துக்குத்தான் இடம்தரும், தரும், தரும். ஆள்வலுவில் நடக்கும் எந்த ஸ்தாபனத்துக்கும் இதுதான் கதி. ஆதலால் தமிழ்நாட்டில் உள்ள பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற வகுப்பு உணர்ச்சியை மறைக்க ஏதாவது மார்க்கம் செய்ய தைரியமும் சக்தியும் உடைய தலைவர் ஒருவர் வந்தாலொழிய அல்லது ஆச்சாரியார் அதற்கு மனப்பூர்வமாக நாணயமான வழியில் பாடுபட்டால் ஒழிய தமிழ்நாட்டில் எந்தக் காரியமும் நடைபெறப்போவதில்லை என்பதோடு இருதரப்பிலும் அயோக்கியர்களும், காலிகளும் தேசத்தின் பேரால் வகுப்பு மக்களின் பேரால் பயன் அனுபவித்துக் கொண்டு பொதுநலனைப் பாழாக்கி வரும் நிலைமை ஒரு நாளும் மாறப்போவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 16.08.1936**



# திருச்சி நீதி

டாக்டர் ராஜன் திருச்சி காங்கிரஸ் காரியக்கமிட்டியில் இருந்து விலகி காங்கிரசுக்கு எதிராய் முனிசிபல் தேர்தலுக்கு நின்றவர். தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஆக தனக்கு இஷ்டமில்லாத நிலையில் தன் மனச்சாட்சிக்கு விரோதமாய் காங்கிரசில் போலிக் கையெழுத்துப்போட்டு முனிசிபல் கவுன்சிலரானவர். இப்படிப்பட்ட இவருக்கு காங்கிரஸ் காரியக்கமிட்டியைப் பற்றி பேச என்ன நியாயம் உண்டு என்பது நமக்கு விளங்கவில்லை.

நிற்க, டாக்டர் ராஜனுக்கும் தோழர் தேவருக்கும் ஏற்கனவே சொந்த மனஸ்தாபம் இருப்பதாய் சேர்மென் தோழர் பொன்னய்யா அவர்களே தனது பேச்சில் சொல்லியிருக்கிறார்.

எனவே டாக்டர் ராஜன் தேவரிடம் உள்ள தனது சொந்த விரோதத்துக்கு ஆக பழி தீர்த்துக்கொள்ள காங்கிரசுக்குள் தேர்தலின்போது கையெழுத்துப் போட்டு வந்து புகுந்ததுமல்லாமல் முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்கும் உள்ள வகுப்பு மாச்சரியத்தை (அதுவும் கொஞ்ச காலமாக மறைந்து போயிருந்ததை) கிளப்பிவிட்டு கிறிஸ்தவர்களையும் கிளப்பிவிட்டு பார்ப்பனர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து முனிசிபல் தேர்தலில் தேவரை பழிதீர்த்துக் கொண்டிருக்கிறார்.

ஆகவே பார்ப்பனர்கள் தங்கள் சுயநலத்துக்கு ஆகவோ ஒருவரை கெடுப்பதற்காகவோ எப்படிப்பட்ட கூடாத காரியத்தையும் செய்வார்கள் என்பதற்கு ''தேசபக்தர்'' என்னும் டாக்டர் ராஜன் காரியமே போதுமான அத்தாட்சியாகும்.

டாக்டர் ராஜனை விட காலம் சென்ற வ.வே.சு. அய்யர் மிகவும் தேசியவாதி என்று விளம்பரப் படுத்தப்பட்டவர். அவர் யோக்கியதை குருகுலத் தகராறின் போது டாக்டர் வரதராஜுலு நாயுடுவால் வெளியாக்கப் பட்டுவிட்டது.

டாக்டர் ராஜனின் தேசபக்த தன்மை திருச்சி தேர்தலில் வெளியாயிற்று.

இனி டாக்டர் சாஸ்திரி என்பவரின் யோக்கியதையோ ''தனக்கு இல்லையானால் யாருக்கும் வேண்டாம்'' என்பதை பின்பற்றிவிட்டார்.

அதாவது இரண்டு பேருக்கு ஓட்டுச் செய்வதும் காங்கிரசுக்கு விரோதமாம் (தனக்கு ஓட்டு செய்வது தான் காங்கிரசுக்கு நன்மை என்பதுதான்



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனர் அபிப்பிராயம்) என்பதை டாக்டர் சாஸ்திரியார் காட்டிக்கொண்டார். இப்படிப்பட்ட யோக்கியர்கள் இந்தியாவின் 35 கோடி மக்களுக்கு சிறப்பாக சென்னை மாகாணத்தில் குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள 2½ கோடி மக்களுக்கு சுயராஜ்யம் வாங்கிக் கொடுப்பவர்களாம்.

இதைவிட ஒரு அதிசயமும் அவமானமுமான காரியம் என்னவென்றால் இவர்களை தலைவர்கள் என்றும், தியாகிகள் என்றும், தேசபக்தர்கள் என்றும், தேசியவாதிகள் என்றும் கூறி வாழவேண்டிய அவசியம் சில பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்பட்டிருக்கிறதே அதுதான் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த லட்சணத்தில் தோழர் சீனிவாசய்யங்காரை தலைவராகக் கொண்டு வரவேண்டுமாம். இதுவும் சில தமிழ்மக்கள் தமிழ் ரத்த ஓட்டமுள்ள மக்கள் என்பவர்களுடைய தவமாய் இருக்கிறது என்றால் நமது மக்கள் சுயராஜ்யம் என்பதில் எவ்வளவு ஈனத்தனத்தைப் புதைத்து வைத்திருக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி தேவை இல்லை.

ஆகவே ஒரு சிறு தேர்தலுக்கு ஆக திருச்சியில் மறுபடியும் இந்து முஸ்லீம் கலகத்தையும் இந்து கிறிஸ்தவர் என்கின்ற பிரிவையும் உண்டாக்கி வெற்றி பெற்றவர்களும் இந்த நெருக்கடியில் ஸ்ரீனிவாசய்யங்காரை கொண்டுவந்து புகுத்த பாடுபடுபவர்களும் இனி எந்தக் காரியந்தான் செய்யப் பாடுபடமாட்டார்கள் என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும் யோசிக்க வேண்டுமாய் விரும்புகிறோம்.

எனவே பார்ப்பன அகராதிப்படியும் காங்கிரஸ் கூலிகள் அகராதிப்படியும் காங்கிரஸ் கட்டுப்பாடு, தேசியம், தியாகம் என்பவைகளுக்கு தங்கள் சுயநலமும், பழிவாங்குதலும், வயிற்றுப்பிழைப்பு மார்க்கமும் அல்லாமல் வேறில்லை என்பதை திருச்சி நீதி நமக்கு விளக்கிவிட்டது.

**குடி அரசு - கட்டுரை - 16.08.1936**



# சாரதா சட்டத் திருத்த மசோதா

## லண்டனில் ஆதரவு

## பிரபலஸ்தர்கள் அறிக்கை

*லண்டன், ஆகஸ்டு 4.*

*இந்திய சட்ட சபையில் கொண்டு வரப்பட்டிருக்கும் சாரதா சட்டத் திருத்த மசோதாவை ஆதரித்து, பிரிட்டிஷ் காமண்வெல்த்து லீக் சார்பாக லார்டு லோதியன், வைகொண்டஸ் ஆஸ்டர் உள்ளிட்ட 9 பிரபலஸ்தர்கள் 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையில் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த திருத்த மசோதா மிகவும் அவசியமான தென்றும் தற்கால சாரதா சட்டத்தினால் அது விரும்பிய பலன் ஏற்படவில்லையென்றும் இந்தியச் சட்டசபை அந்த மசோதாவை கட்டாயம் நிறைவேற்றி வைக்க வேண்டுமென்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.*

**குறிப்பு :**

லண்டனில் இருக்கும் பிரபலஸ்தர்கள் சாரதா சட்ட திருத்த மசோதா விஷயத்தில் மிக்க சிரத்தை காட்டுகிறார்கள். ஆனால் இந்தியாவின் ஏக பிரதிநிதி ஸ்தாபனம் என்று கூறிக்கொள்ளும் காங்கிரஸோ, பிரஸ்தாப மசோதா விஷயமாக மௌனஞ் சாதித்தே வருகிறது. இப்பொழுது இந்திய சட்ட சபையில் ராவ் பகதூர் எம்.ஸி. ராஜாவின் ஒடுக்கப்பட்டோர் சிவில் உரிமைப் பாதுகாப்பு மசோதாவும், டாக்டர் தசமுகரின் மாதர் வார்சுரிமை மசோதாவும், பிரஸ்தாப சாரதா சட்டத் திருத்த மசோதாவும் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இந்த மூன்றும் சமூகச் சீர்திருத்த மசோதாக்கள். தென்னாட்டிலே மாதந் தவறாமல் காங்கிரஸ் மகாநாடுகளும் நாள் தவறாமல் காங்கிரஸ் பிரசாரக் கூட்டங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் ஷை மசோதாக்களை ஆதரித்து ஒரு தீர்மானமாவது நிறைவேற்றப்படவில்லை. பத்திரிகைகளில் அறிக்கை மேல் அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கும் தோழர் சத்தியமூர்த்தி கூட ஷை மசோதாக்களை ஆதரித்து ஒரு வரி கூட பத்திரிகைகளுக்கு எழுதவில்லை. ராவ்பகதூர் எம்.சி. ராஜாவின் மசோதாவை



RangaRakes tamilnavarasam.com

ஆதரிக்கிறீரா அல்லது எதிர்க்கிறீரா என ஒரு ஒடுக்கப்பட்ட சகோதரர் தோழர் சத்தியமூர்த்திக்கு எழுதிய ஒரு பகிரங்கக் கடிதத்துக்கும் தோழர் சத்தியமூர்த்தி இந்நிமிஷம் வரைப் பதிலளிக்கவில்லை. இத்தியாதி காரணங்களினால் காங்கிரஸ் வைதீகர் ஸ்தாபனம் - பார்ப்பனக் கோட்டை என்பது விளங்கவில்லையா?

**- ஆசிரியர்**

குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 16.08.1936



# காங்கிரசும் பார்ப்பனீயமும்

அகில இந்திய தேசியக் காங்கிரஸ் என்பது பார்ப்பனர்களின் கை ஆயுதமென்று நாம் இந்த பத்து பன்னிரண்டு வருஷகாலமாக கூறி வந்திருக்கிறோம்.

காங்கிரசில் மிக்க பக்தியுடனும் உண்மையான கவலையுடனும் ஊக்கத்துடனும் உழைத்து வந்த தோழர் ஈ.வெ.ராமசாமி போன்றவர்கள் இதை - அதாவது காங்கிரஸ் பார்ப்பன ஆதிக்கத்துக்கு ஏற்படுத்திக் கொண்ட ஸ்தாபனம் என்பதை - உண்மையாய், சந்தேகமற உணர்ந்ததினாலேயே காங்கிரசை விட்டு வெளியில் வந்து காங்கிரசின் மூலம், பார்ப்பனர்கள் ஆதிக்கம் பெறாமல் இருப்பதற்குத் தங்களாலான முயற்சிகள் எல்லாம் செய்து காங்கிரசையும் பார்ப்பனச் சூழ்ச்சிகளையும் தோற்கடித்தே வந்திருக்கிறார்கள்.

பார்ப்பனர்களும் காங்கிரசின் பேரால் பிழைக்கிறவர்களும் காங்கிரசின் சார்பில் நடக்கும் பத்திரிகைகளும் பூனையானது கண்ணை மூடிக் கொண்டு பாலைக் குடித்தால் உலகோர் கண்களும் மூடப்பட்டிருக்குமென்று கருதிக் கொள்ளும் பாவனை போல் இன்று பார்ப்பனர்கள் காங்கிரஸ் வளர்ச்சி பெற்றுவிட்டது, வெற்றிபெற்றுவிட்டது, வெள்ளைக்காரர்கள் கையிலிருந்து ராஜ்யம் பிடுங்கப்பட்டாய் விட்டது, அதோ சுயராஜ்ய தேவி தோன்றி விட்டாள், இதோ பாரதத் தேவி கைவிலங்கு உடைபட்டுவிட்டது என்பன போன்று புரோகித பாஷையில் மக்களை எவ்வளவுதான் ஏமாற்றி வந்தாலும் கடைசியாக அதனுடைய உண்மையான யோக்கியதை நாம் எதிர்பார்த்த அளவுக்கு மேலாகவே வெளியாகி வருவதை யாராலும் தடுக்க முடியவில்லை.

## இன்று காங்கிரஸ் யோக்கியதை

இன்று காங்கிரசின் யோக்கியதை இந்த பத்து வருஷத்துக்கு முன் இருந்தது போலவே மிகமிக இழிவான நிலைக்கு வந்துவிட்டது. காங்கிரஸ் தலைவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குள்ளாகவே

''நீ துரோகம் செய்து விட்டாய்''

''நீ காட்டிக் கொடுத்து விட்டாய்''

''நீ கட்டுப்பாட்டை மீறி விட்டாய்''

''நீ யோக்கியமாய் நடந்து கொள்ளவில்லை''

என்று ஆளுக்காள் கேட்டுக்கொள்ளுவதும் தொண்டர் கூட்டங்களில்



RangaRakes tamilnavarasam.com

''நீ திருடி விட்டாய்''

''நீ திருடி விட்டாய்''

''நீ என்னைத் தேர்ந்தெடுக்காதது அக்கிரமம்''

''நீ சூழ்ச்சி செய்து பதவி பெற்றாய்''

என்பது போன்ற சண்டையும் நிர்வாகக் கமிட்டிக்கும் பொது அங்கத்தினர்களுக்கும் ஒருவருக்கொருவர் நம்பிக்கையில்லாத் தீர்மானங்களும்,

ஒரு ''தலைவரை'' வீழ்த்தி மற்றொரு ''தலைவருக்கு'' முடிசூட்ட சூழ்ச்சிகள் என்பனவாகிய போராட்டங்கள் ஒருபுறமும்,

சர்வாதிகாரியாக இருந்தவருக்கும் (காந்தியாருக்கும்) சர்வாதிகாரி ஆகப் போவதாய் கருதி இருந்தவருக்கும் (பண்டிட் ஜவஹருக்கும்) அவர் அபிப்பிராயம் இவருக்கு பிடிக்காமலும், இவர் அபிப்பிராயம் அவருக்கு பிடிக்காமலும், ஒருவரை ஒருவர் பழங்கால பெண்மக்கள் போல் ஜாடை பேசி வைது கொள்வதும் ஆன நிலையில் இன்று காங்கிரஸ் இருந்து வருகிறது. இதில் எதை யாரால் மறுக்கக் கூடும் என்று கேட்கிறோம்.

## இன்று காங்கிரஸ் கொள்கைகள்

இவை ஒருபுறம் இருக்க கொள்கைகளிலும் தோழர் காந்தியார் கொள்கைக்கும், தோழர்கள் படேல், ராஜேந்திர பிரசாத் ஆகியவர்கள் கொள்கைக்கும், பண்டிட் ஜவஹர் கொள்கைக்கும் போட்டியும் வசவும் ஒருபுறமும், தோழர் சத்தியமூர்த்தி கொள்கைக்கும் வேலைக் கமிட்டி கொள்கைக்கும் அபிப்பிராய பேதமும், மூர்த்தியாருக்கும் பண்டித நேருவுக்கும் அடியோடு தலைகீழான அபிப்பிராய பேதமும் இருப்பதோடு அடுத்த சட்டசபை தேர்தலில் மந்திரி பதவி ஏற்பதா மறுப்பதா என்கின்ற சண்டையும், ஏற்றால் அரசியலை நடத்துவதா உடைப்பதா என்ற சண்டையும், உடைக்க முடியுமா என்று ஒருவர் கேட்பதும், நடத்த முடியுமா என்று மற்றவர் கேட்பதும், உடைப்பதானால் சட்டசபைக்கே போக வேண்டியதில்லை (ஏனென்றால் உடைக்க முடியாது) என்று ஒருவர் சொல்வதும், நடத்துவதானால் மந்திரி பதவி ஏற்கவே கூடாது, ஏனென்றால் அது தேசத் துரோகமும், சுயராஜ்யத்துக்கு முட்டுக்கட்டையும், அதிகார வர்க்கத்துக்கு அடிமைபட வேண்டியதுமாகும் என்று ஒருவர் கூறுவதும் இப்படியாக இன்னும் பல விதமாய் பலசரக்குக் கடைக்காரனுக்குப் பைத்தியம் பிடித்ததுபோல் நடந்து கொள்கிறார்கள்.

## 10 வருஷத்துக்கு முன்னும் இப்படியே

உண்மையிலேயே இதைவிட மோசமான நிலையில் காங்கிரஸ் 27, 28 வருஷங்களில் இருந்தபோது அந்த நிலையை சமாளிக்க சைமன் பகிஷ்கார நாடகமும் உப்பு சத்தியாக்கிரக நாடகமும் நடத்தியதின் மூலம்



ஒரு அளவுக்கு பாமர மக்களை ஏமாற்ற முடிந்த தென்றாலும் அவ்விரண்டிலும் பெரும் தோல்வி அடைந்ததின் பயனாய் சட்ட மறுப்பை நிறுத்திக் கொள்ளவும் சர்க்காருக்கு எழுதிக் கொடுக்கவும், பகிஷ்காரம் செய்த கமிஷனான சைமன் கமிஷன் ரிப்போர்ட்டின் பரிசீலனைக் கூடமாகிய வட்டமேஜை நடவடிக்கைக்குப் போய் கலந்து கொள்ளவும், அதிலும் தோல்விபெற்று வந்து காங்கிரசானது சட்ட மறுப்பையும் சட்ட மீறுதலையும் நிறுத்திக் கொண்டது என்று தீர்மானம் செய்ததுமான காரியங்கள் ஏற்பட்டதோடு இந்த அவமானத்தைத் தாங்க சக்தி இல்லாததால் காந்தியார் காங்கிரசிலிருந்து விலகிக் கொண்டதாக நடித்துக் கொள்ள வேண்டிய அளவுக்கு தோல்வி ஏற்பட்டு விட்டது.

## திட்டங்கள் தோல்வி

இவைகள் எல்லாவற்றையும் விட காந்தியாரின் முதல் திட்டங்களின் தீண்டாமை விலக்கும், இந்து முஸ்லீம் ஒற்றுமையும் காலங் குறிப்பிடாமல் தள்ளிப் போடவும், அதுவும் தீண்டாமை விலக்கும் இந்து முஸ்லீம் ஒற்றுமையும் ஏற்படாமல் சுயராஜ்யம் வராது என்று சொன்ன காந்தியாரின் திருவாக்கே சுயராஜ்யம் கிடைத்த பிறகுதான் தீண்டாமையை ஒழிக்கவும் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படுத்தவும் முடியும் என்று சொல்லவுமான நிலைமையும் ஏற்பட்டுவிட்டது.

## வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

இவற்றை எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தேசீயத்துக்கு விரோதம் என்றும் அது ஒருநாளும் ஒப்புக் கொள்ள முடியாது என்றும் சொன்ன காங்கிரசும் காந்தியாரும் வட்டமேஜை மகாநாட்டிலேயே ''சரித்திர சம்பந்தமான காரணங்கொண்டு முஸ்லீம்களுக்கு மாத்திரம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுக்கலாம்'' என்று ஒப்புக் கொண்டதும்,

தீண்டாப்படாதார் என்பவர்கள் விஷயத்தில் கண்டிப்பாய் வகுப்பு பிரதிநிதித்துவம் கொடுக்கக்கூடாது என்றும், ஸ்தானம் ஒதுக்கி வைப்பதைக் கூடச் சம்மதிக்க முடியாது என்றும், அப்படி மீறி ஏதாவது கொடுக்கப்படுமானால் ''நான் செத்துப்போவேன்'' என்றும் சொன்ன காந்தியாரே தீண்டப்படாதாரின் வகுப்புவாரி உரிமையை ஒப்புக்கொண்டு முறைகளை மாத்திரம் மாற்றி கிட்டத்தட்ட, ஒன்றுக்கு இரண்டு பங்காக ஸ்தானங்கள் கொடுத்து யாரை தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அல்ல என்று காந்தியார் சொன்னாரோ அவர்களையே தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக வலியக் கூப்பிட்டு ஏற்றுக்கொண்டு ராஜி செய்து கொள்ளவேண்டிய நிலையும் ஏற்பட்டுவிட்டது.

## 16 வருஷ நடவடிக்கை

இனி காங்கிரசுக்காரர்கள் அவர்களுடைய பதினாறு வருஷ ஆட்சியில் 3 கோடி ரூபாய் செலவில் 3 லட்சம் பேர் அடிபட்டும் சிறை சென்றதும்



RangaRakes tamilnavarasam.com

கஷ்டப்பட்டார்கள் என்று சொல்லப்படும் தியாகத்தாலும் எந்த காரியத்தில் எந்த அளவுக்கு வெற்றி பெற்றார்கள் என்று பார்த்தால் தாங்கள் முயற்சித்த எல்லாக் காரியங்களிலும் 100க்கு 99க்கு குறைவில்லாமல் தோல்வியும் அவமானமும் அடையவில்லை என்று சொல்ல முடியுமா என்று பந்தயம் கட்டிக் கேட்கின்றோம்.

இப்படிப்பட்ட காங்கிரஸ் ஸ்தாபனமும், அதன் தலைவர்கள், தொண்டர்கள் என்பவர்களும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களையும் சுயமரியாதைக் காரர்களையும் வேண்டுமென்றே மான வெட்கமில்லாத கூலிகளையும், வாழ்வுக்கு யோக்கியமான வழியில்லாத காலிகளையும் விட்டு கேவலமாகப் பேசச் செய்வதின் மூலமும் கூலிப் பத்திரிகைக்கு பிச்சை கொடுத்து அற்பத்தனமாக வைது எழுதச் செய்வதின் மூலமும் காங்கிரசின் பேரால் தங்கள் சுயநலத்துக்கு பயன் அடைந்து விடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டு அவ்வேலையில் இப்போது தீவிரமாக இறங்கிவிட்டார்கள்.

## மாய வெற்றி

இந்தக் காரியத்திலும் மற்றும் எந்தக் கொள்கையிலும் வெற்றி பெறாமல் தோல்வியும் அவமானமும் இதுவரை காங்கிரசானது அடைந்து வந்திருந்தும் கடைசி மூச்சாக மனதறிந்த பொய்யையும் யாவரும் வெறுக்கும் இழிகுணங்களையும் ஆயுதமாகக் கொண்டு அசம்பளி தேர்தலையும் ஸ்தல ஸ்தாபன தேர்தலையும் நடத்தி தற்கால வெற்றி என்னும் மாய வெற்றியை அடைந்தார்கள். அந்த மாய வெற்றியானது இன்று காங்கிரசை நாற வைத்து இந்தியா பூராவும் காங்கிரசையும் பல பிரமுகர்களையும் பற்றி காறி உமிழும்படியான நிலைமையை உண்டாக்கிவிட்டது எங்கும் சிரிப்பாய் சிரிக்கப்படுகிறது. இதைக் கண்டு ஆச்சாரியார் ஒரு புறம், அய்யர் ஒரு புறம், அய்யங்கார் ஒரு புறம், அம்மங்கார் ஒரு புறம், சாஸ்திரி ஒரு புறம், சர்மா ஒரு புறம் என்பதாக பார்ப்பனக் கூட்டம் ராஜிநாமா ராஜிநாமா என்னும் நெருப்பைக் கக்கிக் கொண்டு பிசாசுகள் போல் தமிழ்நாட்டில் தலைவிரித்தாடுகின்றன. காங்கிரஸ் பத்திரிகைகள் துரோகம் செய்பவர்களை கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டுமென்கின்கின்றன. கட்டுப்பாட்டுக்கு மீறியவர்களை கடுந் தண்டனை விதித்து புத்தி கற்பிக்க வேண்டும் என்கின்றன.

## தலைவர்கள்

தலைவர்கள் என்பவர்களோ ''அனுபோகமில்லாமலும் ஆராய்ச்சி இல்லாமலும் அவசரப்பட்டு செய்து விட்ட காரியங்களுக்காக நாம் வருந்துவதில் பிரயோஜனம் இல்லை. இனி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்'' என்று சொல்லிக் கொள்ள வேண்டியதாயிற்று. இதன் பயனாய் இனி வரப்போகும் தேர்தலுக்கு சில இடங்களில் காங்கிரசு போட்டி போடக்கூடாது என்று தலைவர்கள் சொல்லியிருந்தாலும் தேர்தல் கூலிகளாய் இருந்து காலித்தனம் செய்து வயிறு வளர்க்க வேண்டிய ஆட்கள் போட்டி



போடாவிட்டால் சோற்றுக்கு வழி என்ன என்று சொல்லிக் கொண்டு ''காங்கிரசு தேர்தலில் போட்டிபோட வேண்டும்'' என்று தீர்மானித்து பணம் வாங்கிக் கொண்டு ஆட்களை நிறுத்தி கூலிப்பிரசாரம் செய்யத் தொடங்குகின்றனர்.

சில இடங்களில் உள்ள குட்டித் தலைவர்கள் ''நிலைமை சரியாக இல்லாததால் போட்டி போடுவதில்லை'' என்று தீர்மானிக்கின்றனர். சில இடங்களில் உங்களுக்கு இவ்வளவு ஸ்தானம் எடுத்துக் கொள்ளுங்கள், எங்களுக்கு இவ்வளவு ஸ்தானம் கொடுங்கள் என்று ராஜிப் பிச்சைக்கு புறப்பட்டு விட்டனர்.

ஆகவே காங்கிரஸ் ஸ்தல ஸ்தாபனக் கொள்கையும் அது வெற்றி பெற்ற யோக்கியதையும் விளங்கிவிட்டன.

மற்றபடி காங்கிரசின் யோக்கியதை விளங்கவும் அதிலுள்ள ஆட்களின் நாணயம், நல்லெண்ணம் விளங்கவும் இனி என்ன பரீக்ஷை வேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

## ஜஸ்டிஸ் சுயமரியாதை கட்சிகளை வைவது

இந்த நிலையில் ஜஸ்டிஸ் சுயமரியாதை இயக்கங்களைப் பற்றி காலிகளும் கூலிகளும் குரைப்பதின் கருத்து என்ன? இவர்கள் குரைப்புக்கு ஆதாரம் என்ன என்பதைப் பற்றி சிறிது யோசிக்க விரும்புகிறோம்.

சென்ற வாரத்தில் அருப்புக்கோட்டையில் நடந்த ஒரு அரசியல் மகாநாடு என்பதில் அதன் தலைவர்கள் என்பவர்களில் ஒருவர் தனது உரையை வாசிக்கையில் ஜஸ்டிஸ் கட்சியை தேசத்துரோகக் கட்சி என்று ஆரம்பித்து அது செய்த துரோகம் என்று ஒவ்வொன்றாக சொல்லி வருகையில் ஜஸ்டிஸ் கட்சியார்

1. ''தீக்குச்சி வரி போட்டார்கள்.
2. வருமான வரி 2000 ரூபாய்க்கு இருந்ததை மாற்றி 1000க்கு வரிபோடும்படி செய்தார்கள்.
3. புகையிலைக்கு வரி போட்டார்கள்.
4. கந்தாயம் குறைக்கவில்லை.
5. தாலுகா போர்டை கலைத்து ஜில்லா போர்டை இரண்டாக்குகிறார்கள்.
6. பூமி வரி குறைக்கவில்லை.
7. சாமி இல்லை என்று சொல்லிவிட்டு கோவிலுக்கு போகிறார்கள்'' என்றெல்லாம் எழுதி படித்திருக்கிறார்கள்.

(இது 17-8-36-ந் தேதி தினமணி 4 வது பக்கம் 2வது கலத்தில் காணப்படுகிறது.)



RangaRakes tamilnavarasam.com

மற்றும் பல மகாநாடுகளிலும் பொதுக்கூட்டங்களிலும் இதுபோலவே முட்டாள்தனமாக பேசிவருகிறார்கள். இவற்றை பாமர மக்களும் சிலராவது நம்பிவிடுகிறார்கள்.

## காங்கிரஸ்காரர்களுக்கு அரசியல் ஞானம் இல்லை

காங்கிரசுக்காரருக்கு அரசியல் ஞானம் இல்லை என்பதற்கும், யோக்கியப் பொறுப்பும் நாணயமும் இல்லை என்பதற்கும் இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்.

தீக்குச்சி வரியும் வருமான வரியும் இந்தியா கவர்மெண்டைச் சேர்ந்தது, அங்கு ''மெஜாரிட்டியாய்'' இருப்பவர்கள் காங்கிரஸ்காரர்கள் ஆதலால் அதற்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் சம்மந்தமில்லை. இன்று அவர்கள் அசெம்பளியிலும் இல்லை. ஏதாவது ஒரு காலத்தில் இருந்திருந்தாலும் அவர்கள் மெஜாரிட்டியாய் இருந்ததும் இல்லை.

புகையிலைக்கு வரி போடவே இல்லை. சுங்கத்தை எடுத்ததால் சர்க்காருக்கு ஏற்பட்ட வரி நஷ்டத்தை வஜா செய்ய மக்களுக்கு தேவை யில்லாததும் கெடுதி தரத்தக்கதுமான புகையிலையை ஒழிப்பதற்கு அதை விரும்புகிறவர்களிடம் தண்டம் வசூலிப்பது போல் அதற்கு வரிபோட சென்னை சர்க்கார் சென்ற வருஷம் விரும்பினார்கள்.

அது ஒதுக்கப்பட்ட இலாக்காச் சம்மந்தமானது; ஜஸ்டிஸ் மந்திரிகளுக்கு இதன் மீது ஆதிக்கமில்லை; அப்படி இருந்தும் சர்க்காருக்கு தற்காலம் அந்த வரி போட வேண்டிய அவசியமில்லை என்பதை எடுத்துக் காட்டி புகையிலை வரியை நிறுத்திவிட்டார்கள்.

தாலூக்கா போர்ட்டை எடுத்ததற்கும் ஜில்லா போர்டை பிரித்ததற்கும் அதிகாரங்கள் சில குறைத்ததற்கும் ஜஸ்டிஸ் கட்சி மீது குறை கூறுகிறார்.

''தாலூக்கா போர்டு மாத்திரமல்ல, ஜில்லா போர்டு முனிசிபாலிட்டி எல்லாவற்றையுமே எடுத்து அதன் அதிகாரங்கள் பூராவையும் கலக்டர்களிடம் ஒப்படைத்து விடவேண்டும்'' என்று தோழர் ராஜகோபாலாச்சாரியாரே போன மாதம் சொல்லிவிட்டார். அப்போது வாலை அடக்கிக் கொண்டு இருந்த இந்த ஸ்தல ஸ்தாபன சுயராஜ்யவாதிகள் இப்போது ஜஸ்டிஸ் கட்சியைக் குரைப்பதின் கருத்து என்ன என்பது நமக்கு விளங்கவில்லை.

பணம் இல்லாததால் தாலூக்கா போர்டுகள் எடுக்கப்பட்டன என்பது யாவருக்கும் தெரியும். அப்போதே ஜில்லா போர்டுகளும் பிரிக்கப்படும் என்று சொல்லியே கலைக்கப்பட்டது. இப்போதும் பண சௌகரியம் பார்த்தே ஜில்லா போர்டுகள் பிரிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இதில் தப்பு எங்கே இருக்கிறது என்று கேட்கின்றோம்.



## ஜஸ்டிஸ் கட்சி பூமி வரி குறைத்தது

பூமி வரி (கந்தாயம்) குறைக்கவில்லை என்று யாராவது சொல்ல முடியுமா? 100க்கு 25 வீதம் குறைக்க வேண்டும் என்றே ஜஸ்டிஸ்காரர்கள் ஆசைப் பட்டார்கள். சர்க்காரார் வரவு செலவு சரிக்கட்டாது என்கின்ற காரணத்தால் அடியோடு குறைக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். கணக்குகள் பார்த்து சர்க்கரை வெகுதூரம் ஒப்பச் செய்து ராஜி முறையில் 12½ வீதமாவது குறைக்க சர்க்காரை ஒப்புக்கொள்ளும்படி செய்திருக்கிறார்கள். அதுவும் தங்களுக்கு அதிகாரமில்லாத இனத்தில் பிரவேசித்து இவ்வளவு செய்திருக்கிறார்கள்.

ஜஸ்டிஸ்காரர்கள் இவ்வளவாவது செய்தார்கள். ஆனால் காங்கிரசுக்காரர்கள் அசம்பிளியில் ஒருசிறு தூசி அளவு பயன்படும்படியான வரி குறைப்புக் காரியத்தைச் செய்தார்களா என்று கேட்கின்றோம்.

காங்கிரஸ்காரர்களால் எந்த வரி குறைக்கப்பட்டது? எந்த சட்டம் மாறுதலையடைந்தது? என்ன சட்டம் செய்யப்பட்டது? வீணாக அறிவும் அரசியல் ஞானமும் இல்லாமல் குரைப்பதில் பயன் என்ன என்பதை காங்கிரஸ் தலைவர்களும் உணராமல் அவர்களது கூலிகளையும் அடக்காமல், இம்மாதிரி அற்பத்தனமாகவும், முட்டாள்தனமாகவும் பேசும்படி செய்வதில் என்ன பயன் என்று கேட்கின்றோம். தேசீய பத்திரிகைகள் என்பவை கூட ஒன்று தவறாமல் இவ்வித தொழிலில் முக்கிய பங்கெடுப்பதும் நமக்குப் புரியவில்லை.

இவற்றிற்கு காரணம் எல்லாம் சுயராஜ்யத்துக்கு ஆக செய்வது என்று இருந்தால் இந்த முட்டாள்தனத்தையும், அற்பத்தனத்தையும் மன்னிக்கலாம். ஆனால் ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்கு என்று சொன்னால் இவைகள் எப்படி மன்னிக்கப்படும்.

இது பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற வகுப்பு பேதம் காரணமாக பார்பனர்கள் செய்யும் இழிவான காரியம் என்றே சொல்லுவோம்; முக்காலும் சொல்லுவோம். உதாரணங்களோடு புள்ளிவிவர ஆதாரங்களோடு சொல்லுவோம். அவையாவன ஃ-

1. அசம்பிளி தேர்தலில் தோழர்கள் ராஜகோபாலாச்சாரியாரும் சத்தியமூர்த்தியாரும் ஓட்டுப் பிரசாரம் செய்யும்போது ''இந்த தேர்தல்களில் காங்கிரசு ஓட்டுக்கேட்பதானது சர்க்காரோடு சண்டை பிடிக்கவே ஒழிய ஜஸ்டிஸ் கட்சியோடு போட்டி போடுவதற்கு அல்ல'' என்று ஓட்டுக்கேட்டு வாங்கிக்கொண்டு வகுப்பு வித்தியாசம் பாராமல் அனேகர் ஓட்டுச் செய்த பிறகு வெற்றிபெற்றவுடன் ஜஸ்டிஸ் கட்சியை 1000 கெஜ ஆழத்தில் வெட்டி புதைக்கவேண்டும் என்றால் இது பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் தகராறுக்கு காங்கிரசையும் சர்க்காரை ஒழிப்பது என்பதையும் பயன்படுத்திக்கொள்ளும் சூழ்ச்சியா அல்லவா என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

2. வகுப்புவாரி உரிமையை ஒப்புக்கொள்ளுகிற பார்ப்பனர்களையும் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படும் என்று ஜஸ்டிஸ் கட்சி தீர்மானித்த பிறகும் அதை வகுப்புத் துவேஷக் கட்சி என்று சொல்லுவது பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற கருத்தில் சதிசெய்யும் சூழ்ச்சியா அல்லவா என்று கேட்கின்றோம்.

3. தமிழ்நாடு காங்கிரசு தலைவர் ஆனைமலை வெள்ளைக்காரரிடம் சுயராஜ்யம் என்பதற்கு குடியேற்ற நாட்டு அந்தஸ்துதான் என்றும், பூரண சுயராஜ்யம் என்றாலும் வெள்ளைக்காரருடன் ராஜி செய்து கொண்டு நிர்வாகம் நடத்துவது தான் என்றும் ஆனைமலையில் தோட்டக்கார முதலாளிகளிடம் வாக்கு கொடுத்த பிறகும் அதே கொள்கையைக் கொண்டிருக்கிற ஜஸ்டிஸ் கட்சியை தேசத்துரோகக் கட்சியென்றும், பிற்போக்கான கட்சி என்றும் பார்ப்பனர்கள் சொல்லுவதனால் இது காங்கிரசுக்கு ஆகவா, பார்ப்பன ஆதிக்கத்துக்கு ஆகவா என்று யோசித்துப் பார்க்க விரும்புகிறோம்.

4. காந்தியார் அராஜகர் என்றும், நாட்டுக்கு கேடு செய்பவர் என்றும் சொல்லும் தோழர் மகாகனம் சீனிவாச சாஸ்திரியையும், அவர் கட்சியாகிய குடியேற்ற நாட்டந்தஸ்து கேட்கும் மிதவாதக் கட்சியையும், டி.ஆர். வெங்கட்டராம சாஸ்திரியார் ராஜவிஸ்வாச கொள்கையும் ஒத்துழைப்புக் கொள்கையும் கொண்ட மிதவாதக் கட்சியையும் பற்றி ஒன்றும் பேசாமல் அவர்களோடு ராஜி செய்து கொள்ளவும் முயற்சித்துக் கொண்டு ஜஸ்டிஸ் கட்சியை மாத்திரம் பிற்போக்குக் கட்சி, ராஜ விஸ்வாசக் கட்சி, சர்க்கார் தாசர் கட்சி என்றால் இதில் பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற வகுப்புத் துவேஷம் இல்லாமல் தேசியமோ, தேசாபிமானமோ வேறு ஏதாவதோ இருக்கிறதா என்று கேட்கின்றோம்.

5. காங்கிரசுக்காரர்களும் சட்டசபைக்குப் போவதும் அங்கு போய் ராஜ விஸ்வாசம், ராஜபக்தி, சட்டங்களுக்கு கீழ்ப்படிந்து நடத்தல் ஆகியவைகளுக்குப் பிரமாணம் செய்து விட்டுத் தாங்கள் மாத்திரம் தேசிய வீரர்கள் என்றும் ஜஸ்டிஸ்காரர்கள் (அதுபோல் செய்யும் பார்ப்பனரல்லாதார் கட்சியாரை) ராஜ பக்தர்கள் என்றும் பார்ப்பனர்கள் கூறுவது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற காரணம் அல்லாமல் மற்றபடி தேசபக்தியாலா, பாரதமாதா புத்திரர் என்ற சகோதர வாஞ்சையாலா என்று கேட்கின்றோம்.

இப்படி ஆயிரக்கணக்கான காரணங்கள் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆதலால் காங்கிரசானது பார்ப்பன ஆதிக்கத்துக்கு இருக்கும் ஸ்தாபனமே ஒழிய தேச நலத்துக்கோ, அரசியல் உரிமைக்கோ இல்லை என்பதை பொதுமக்கள் உணர வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 23.08.1936**



# 1926 – ஹூ நாடகமே இப்போதும்

## ''வெளியேறிய நேருவின் வீரமொழி''

1924-ம் வருஷம் காங்கிரசுக்காரர்கள் இன்றையப் பித்தலாட்டம் போலவே பித்தலாட்டம் செய்து இந்திய சட்டசபைக்குச் சென்று அங்கு ஒரு வேலையும் செய்ய முடியாமல் 3வருஷ காலம் இருந்துவிட்டு சட்டசபை காலாவதி முடிய ஒரு வாரம் இருக்கும் போது ''சட்டசபைகளை விட்டு வெளியேறுகிறோம்'' என்று சொல்லிக்கொண்டு ''வெளியில் வந்து'' விட்டார்கள் என்பது யாவரும் அறிந்திருக்கலாம்.

ஆனால் அந்த வெளியேறுகிற காலம் வரையில் சட்டசபை கமிட்டிகளில் அங்கம் பெற்றார்கள், பெரும் சம்பளம் பெற்றார்கள், சட்டசபை நடவடிக்கை களுக்கு விகிதாச்சார பங்கும் பெற்றார்கள். இவ்வளவும் பெற்று 3 வருஷம் வாழ்ந்துவிட்டு கடைசியாக போலி வெளியேற்றம் செய்தபோது தோழர் பண்டிட் மோதிலால் நேரு அவர்கள் என்ன சொன்னார் என்பதை சற்று யோசித்துப்பார்க்கும்படி இப்போது வெளியிடுகிறோம்.

### வெளியேறிய நேருவின் வீரமொழி

1. ''சர்க்காரை நாங்கள் பயமுறுத்தவில்லை.
2. சர்க்காருக்கு மகத்தான சக்தியும் அதிகாரங்களும் உண்டு.
3. சர்க்காரை எதிர்க்கும் பலம் எங்களுக்கில்லை.
4. தேசத்தில் உள்ள சமூக வேற்றுமையால் எங்களுக்குள் ஒற்றுமை இல்லை.
5. ஆதலால் சட்ட மறுப்புச் செய்ய எங்களால் ஆகாது.
6. இந்த நிலைமையில் சட்டசபைக்குப் போவது பயனற்ற காரியம்.
7. இவ்வளவு பலமுள்ள பெரிய சர்க்காரை வெளியேறுவதாலும் ஒழித்துவிட நாங்கள் முயற்சிக்கவில்லை.
8. நாங்கள் ஆசைப்பட்டாலும் நடக்கிற காரியமல்ல.
9. வெகுநாளைக்கு முன்னமே நாங்கள் வெளியேறி இருக்க வேண்டும்.
10. நாங்கள் சர்க்கார் தந்திரத்தால் ஏமாந்து உள்ளே வந்தோம்.
11. இனி நாங்கள் இங்கு இருப்பதில் சிறிதும் பிரயோஜனமில்லை.



RangaRakes tamilnavarasam.com

12. இந்த பொம்மை சபைகளில் எங்களுக்கு வேலை இல்லை.

13. தேசத்தின் மானத்தைக் காப்பாற்றவே வெளியில் போகிறோம்''.

என்று சொல்லி இருக்கிறார்.

இவை 21-3-26-ந் தேதி ''குடி அரசி''லும் அந்த வார இதர தினசரி பத்திரிக்கைகளிலும் வெளிவந்திருக்கின்றன.

இப்படிப்பட்ட இவர்கள் இப்போது சட்டசபைக்கு போகிறேன் என்பதிலும், அங்குபோய் சர்க்காருக்கு முட்டுக்கட்டை போடுவோம் என்பதிலும் அர்த்தமுண்டா என்று கேட்கின்றோம். சமதர்மத்தையும் பொதுஉடமையையும் பேசும் குட்டி நேரு அவர்கள் சட்டசபைக்குப் போய் சர்க்காரை சாதித்து விடலாம் என்பாரானால் இவருக்கு ராஜீயஞானம் இருக்கிறது என்று எப்படிச் சொல்ல முடியும்? இவருக்கு ராஜீய ஞானம் இருக்கிறது என்று சொல்லப்படுமானால் இவர் தந்தை பெரிய நேருவுக்கு ராஜீய ஞானம் இல்லை என்று தானே அர்த்தமாகும். ஆகவே இன்று காங்கிரசுக்காரர்கள் அரசியல் தத்துவத்தையோ தேச நலத்தையோ சிறிதும் லட்சியம் செய்யாமல் எப்படியாவது பார்ப்பனரல்லாதார் சமூகத்தை அரசியல் சம்மந்தத்தில் இருந்து துரத்தி அடித்து பார்ப்பனர் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்பதல்லாமல் வேறு குறிப்பு ஒன்றுமே இல்லை என்று உறுதி கூறுவோம்.

**ஸ்தல ஸ்தாபனங்கள்**

காங்கிரசுக்காரர்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் பிரவேசிப்பது கூடாது என்று பலநாள் பேசிவிட்டு பார்ப்பனரல்லாதாருக்குள் சில்லறை மனஸ்தாபம் ஏற்பட்ட உடன் இதுதான் சமயம் என்று அவர்களுக்குள் கட்சிகளை ஏற்படுத்தி ஒரு கூட்டத்தாரை சுவாதீனம் செய்து, அவர்களை காங்கிரசில் சேர்த்து, அவர்களுக்கு ஸ்தானங்கள் சம்பாதித்துக்கொடுத்து கலகம் உண்டாக்கியதன் பயனை இன்று காங்கிரசார் அனுபவிக்கிறார்கள். இப்பொழுது தான் காங்கிரசுக்காரர்களுக்கு ஞானம் உதித்ததுபோல் வேஷம் போட்டு,

''இனி ஸ்தல ஸ்தாபனங்களில் காங்கிரசுக்காரர்கள் பிரவேசிக்கக் கூடாது'' என்று பேசுகிறார்கள். இது முன்பு 1924ல் சுயராஜ்யக் கட்சி சட்டசபைக்குப்போய் அங்கு ஏமாற்றமடைந்த பின் வெளியேறினதாக நாடகம் நடித்தது போலவே முடிந்து இருக்கிறது. பண்டித மோதிலால் நேரு அவர்கள் 1926ல் ''வெளியேறிய'' போது சர்க்கார் இருந்த நிலைமையை விட, சீர்திருத்தம் இருந்த நிலைமையைவிட, மக்கள் சமூகம் இருந்த நிலைமையை விட, காங்கிரஸ் இருந்த நிலைமையைவிட இப்போது எந்த அம்சத்தில் எந்த நிலைமை மாற்றமடைந்திருக்கிறது என்று யோசித்தால் பார்ப்பனர்கள் எப்படியாவது பார்ப்பனரல்லாதார் சமூகத்தாரின் முன்னேற்றத்தை அடக்கி ஒழித்து ராமராஜ்யம் அல்லது இந்திய அரசர் காலத்திய நீதியையும் ஆதிக்கத்தையும் நிலை நாட்டி மேன்மைபெற முயற்சிக்கிறார்கள் என்பது யாருக்கும் விளங்காமல் போகாது.

குடி அரசு - துணைத் தலையங்கம் - 23.08.1936



# காங்கிரஸ் கட்டுப்பாடு

காங்கிரஸ் கட்டுப்பாடு கட்டுப்பாடு என்று புலம்பிக் கொண்டு காங்கிரஸ்காரர் வெகு கட்டுப்பாட்டுக்காரர்கள் போல் பறை அடித்துக் கொள்ளுகிறார்கள்.

காங்கிரசுக்காரர்கள் எதில் கட்டுப்பாடாக இருக்கிறார்கள் என்பதை பொதுமக்கள் உணரவேண்டுகிறோம்.

காங்கிரஸ் மெம்பர் முறையில் கட்டுப்பாடுண்டா?

கதரில் கட்டுப்பாடுண்டா?

மெம்பர்கள் சேர்ப்பதில் கட்டுப்பாடுண்டா?

அன்று; அன்று. அவசரத்துக்கு ஆள் பிடிப்பதுபோல் யாரையும் சேர்த்துக்கொள்கிறார்கள்.

மெம்பர்கள் நாணயத்தில் கட்டுப்பாடு இல்லை.

அதைப்பற்றி விசாரிப்பதில், கவலை கொள்ளுவதில் கட்டுப்பாடு இல்லை.

தோழர் டாக்டர் ராஜன் காங்கிரஸ் கட்டளையை மீறி நடந்துவிட்டு காங்கிரஸ் நன்மைக்கு ஆகவே மீறினேன் என்றார். டாக்டர் டி.எஸ்.எஸ்.சாஸ்திரியும் காங்கிரஸ் கட்டளையை மீறிவிட்டு காங்கிரஸ் நன்மையை உத்தேசித்தே அப்படி செய்தேன் என்கிறார்.

ஸ்தல காங்கிரஸ் கமிட்டி தலைவர், மேற்படி இருவரும் காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறிவிட்டார்கள் என்கிறார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வைஸ் பிரசிடெண்டும் காரியதரிசியும் டாக்டர் ராஜன் செய்தது அக்கிரமம் என்கிறார்கள்.

பத்திரிகைகள் எல்லாம் ஒரே அபிப்பிராயமாக டாக்டர்கள் ராஜனையும் சாஸ்திரியையும் குற்றம் சாட்டுகின்றன. அப்படி எல்லாம் இருந்தும் டாக்டர்கள் ராஜனும் சாஸ்திரியும் கட்டுப்பாட்டுப்படி நடந்ததாகவும் காங்கிரசின் நன்மைக்கு ஏற்ற காரியமே செய்ததாகவும் சொல்லுகிறார்கள்.

இதையெல்லாம் விட ஒரு அதிசயம் என்னவென்றால் காங்கிரஸ் கட்டளையை மீறி சேர்மென் ஸ்தானத்துக்கு அபேக்ஷகராய் நின்று வெற்றிபெற்ற தோழர் பொன்னையாவும் தான் கட்டுப்பாட்டுக்கு உடன்பட்டு



RangaRakes tamilnavarasam.com

கட்டுப்பாட்டின்படி நடந்ததாகவே சொல்லுகிறார். ஆகவே டாக்டர்கள் கட்டுப்பாட்டுக்கென்றே, சிறப்பாக பார்ப்பனர்கள் கட்டுப்பாட்டிற்கென்றே வேறு அகராதி இருப்பதாகத் தெரிகின்றது.

இனி என்ன செய்தால்தான் கட்டுப்பாட்டை மீறியதாகும் என்பது நமக்கு விளங்கவில்லை.

மனுதர்ம சாஸ்திரத்தில் எப்படி பார்ப்பனன் எவ்வளவு அயோக்கிய னாகவும், ஒழுக்கத்தையும் தர்மத்தையும் மீறியவனாகவும் இருந்தாலும் அக்காரணத்தால் அவன் பார்ப்பனத் தன்மையில் இருந்து விலகினவனாக மாட்டான் என்று கூறப்பட்டிருக்கிறதோ, அதேபோல் பார்ப்பனர் காங்கிரசில் எவ்வளவுதான் அக்கிரமமாக, அயோக்கியமாக, துரோகமாக நடந்து கொண்டாலும் காங்கிரஸ்காரராகவே, காங்கிரசுக்கு ஆக உயிர் வாழ்பவராகவே மதிக்கப்படுவார்கள் என்கின்ற தர்மம் இன்று காங்கிரசிலும் இருந்து வருகின்றது.

பார்ப்பனரல்லாத மக்களுக்கு சுயமரியாதையும் மானமும் அறிவும் ஏற்படும் வரை மதத்திலும் அரசியலிலும் மனுதர்மம்தான் தாண்டவமாடும் என்பதற்கு இது ஒரு பெரிய அத்தாட்சியாகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 23 .08.1936**



# பொள்ளாச்சி, கோவை சுற்றுப் பிரயாணம்

தலைவர் அவர்களே! தோழர்களே!

அடுத்த வருஷ ஆரம்பத்தில் அமுலுக்கு வரப்போகும் சீர்திருத்தத்தில் பல பதவிகளும், அதிகாரங்களும் கொழுத்த சம்பளங்களும் கிடைக்கப் போகின்றன என்பதில் சந்தேகம் வேண்டியதில்லை.

அவற்றை யார் அனுபவிப்பது என்பது பார்ப்பனர்கள் மாத்திரமா அல்லது எல்லா மத வகுப்பாரும் விகிதாச்சாரமா என்பதுதான் இப்போது அரசியல் கிளர்ச்சியாக இருந்து வருகிறது. அதிலும் இத்தனை நாள் மகா தியாகிகள் போல் நடித்து வந்த காங்கிரஸ்காரர்கள் இப்போது புது அரசியல் சீர்திருத்தம் வெளியானவுடன் எப்படியாவது அந்தப் பதவிகளைப் பெற்று அதிகாரம் செய்து சம்பளங்களை அடையவேண்டும் என்கின்ற ஆத்திரத்தில் தலைகால் தெரியாமல் குதிக்கிறார்கள்.

என்ன செய்தாவது எப்படி வேண்டுமானாலும் ஏமாற்றியாவது பதவி பெறவேண்டியது இன்று காங்கிரசின் ஜீவாதாரமான கொள்கையாக இருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் பதவி மோகத்தில் தங்களுடைய கொள்கை, நாணயம் எல்லாவற்றையும் காற்றில் பறக்க விட்டு விட்டு ‘‘பிசாசு’’கள் போல் பதவி ஆசைபிடித்து அலைகிறார்கள்.

உத்தியோகத்துக்கும் பதவிக்கும் சம்பளத்துக்கும் ஆசைப்பட யாருக்கும் உரிமை உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் நாணயத்துடன் ஆசைப்படவேண்டாமா என்றுதான் கேட்கிறேன். மத விகிதாச்சாரம், வகுப்பு விகிதாச்சாரம் பிரித்து அனுபவிப்பது என்று காங்கிரசுக்காரர்கள் ஒரு வார்த்தையில் ஒப்புக்கொள்ளுவதானால் காங்கிரசே இந்த நாட்டு அரசியல் கிளர்ச்சிக்கு தலைமை வகித்து நடத்துவதில் எனக்கு ஆக்ஷேபணை கிடையாது.

அல்லது மத பிரிவும் வகுப்பு பிரிவும் இந்தியாவில் இல்லாமல் போகும்படி சட்டம் செய்வோம் என்று காங்கிரஸ் ஒப்புகொள்வதா யிருந்தாலும் காங்கிரசே இந்திய மக்களுக்கு பிரதிநிதித்துவ சபையாய் இருப்பதில் எனக்கு ஆக்ஷேபணை இல்லை. அந்தப்படி இரண்டும் இல்லாமல் பல மதங்களையும் பல வகுப்புகளையும் காப்பாற்றுவதாய் வாக்கு



RangaRakes tamilnavarasam.com

அளித்துவிட்டு அவற்றில் மதம் காரணமாகவும் வகுப்பு காரணமாகவும் இருந்துவரும் உயர்வு தாழ்வுகளைப் போக்க சட்டம் செய்வதில்லை என்றும் உறுதிமொழி கூறிவிட்டு மதஉரிமை கூடாது, வகுப்பு உரிமை கூடாது என்றால் அது எப்படி யோக்கியமான காரியம் ஆகும்? என்று கேட்கிறேன். ''இது தேசீயத்துக்கு விரோதம்'' ''அது சுயராஜ்யத்துக்கு விரோதம்'' என்று சொல்லுவதாலேயே ஒவ்வொரு மதக்காரனும் வகுப்புக்காரனும் அரசியல் ஆதிக்கத்தையும் அதனால் வரும் பயனையும் அந்நிய மதக்காரனுக்கும் அந்நிய வகுப்புக்காரனுக்கும் விட்டுக் கொடுத்துவிட்டு ஏமாளியாய் இருப்பானா என்று கேட்கின்றேன். ஒரு நாட்டின் தேசீயத்துக்கு பல மதங்களும் பல வகுப்புகளும் பிரிவுகளும் இருப்பது விரோதமில்லை என்றால் பல மதங்களுக்கும் பல வகுப்புகளுக்கும் உரிமை இருப்பது மாத்திரம் எப்படி கெடுதியாய் விடும் என்று கேட்கின்றேன்.

தேசீயம் என்றால் உத்தியோகமும் பதவியும்தானா என்று சிலர் கேட்கிறார்கள். இவர்கள் தெரிந்து கேட்கிறார்களோ, தெரியாமல் கேட்கிறார்களோ என்பது ஒரு பக்கம் இருந்தாலும் இதுவரை நடந்துவந்த தேசீய கிளர்ச்சியில் உத்தியோகம், பதவி, சம்பளம் என்பவை அல்லாமல் வேறு என்ன இருந்தது? அல்லது வேறு என்ன கிடைத்தது? அல்லது வேறு எதற்கு ஆக தேசியக்கிளர்ச்சி பாடுபட்டது? பாடுபடப்பட்டது? என்று கேட்கின்றேன். காங்கிரசுக்கு வயது 50 ஆனாலும் எனக்கு காங்கிரசின் யோக்கியதை 30, 40 வருஷங்களாகவே தெரியும்.

காங்கிரசின் கோரிக்கையே உத்தியோகப் பிச்சையாகவும் சம்பளத்துக்கு கெஞ்சுவதாகவும் தான் இருந்துவந்தது. அதற்கு ஆக ராஜபக்தியும் ராஜவிஸ்வாசமும் இருப்பதாகவும் காட்டுவதாகவும் தீர்மானம் செய்வதுதான் காங்கிரசின் முக்கிய வேலையாய் இருந்துவந்தது. இன்றும் ஒவ்வொரு உத்தியோகத்திலும் ஒவ்வொரு பிரதிநிதித்துவத்திலும் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்தே தீரவேண்டி இருக்கிறது. இந்த யோக்கியதையில் இருந்துவந்த காங்கிரசுக்காரர்கள் இன்று மகா தியாகிகள்போல் நடிப்பதைக் கண்டு யார் ஏமாறக்கூடும்? இது தகப்பன் வீட்டுப் பெருமையை தமயனிடம் சொல்லும் முட்டாள் தனம் போன்றதேயாகும்.

உத்தியோகங்களிலும் பதவிகளிலும் நாம் - பார்ப்பனரல்லாதார் பங்கு கேட்க ஆரம்பித்த பிறகுதான் காங்கிரசுக்காரர் அது தேசீயத்துக்கு விரோத மென்றும் தேசத்துரோகம் என்றும் சொல்லி நம்மை ஏய்க்கப் பார்த்து அது முடியாமல் போனபின்பு இப்போது சிறிது காலமாய் பெரிய தியாகிகள்போல் நடித்து ஒத்துழையாமை என்றும், பஹிஷ்காரம் என்றும் பொதுஜனங்களை ஏமாற்றினார்கள். காங்கிரசுக்காரர்கள் எங்கே ஒத்துழையாமை செய்தார்கள்? எதை பஹிஷ்கரித்தார்கள்? என்பதை யோசித்துப்பாருங்கள்.

1922ல் ஒத்துழையாமை என்றார்கள். அப்போது பொது ஜனங்கள் செய்த தியாகம் என்பதைக்கொண்டு சிலர் சட்டசபை போகவும் மந்திரி



பதவி பெறவும் ஆசைப்பட்டார்கள். தேசத்தில் அவர்களுக்கு ஆதரவு இல்லாததால் காங்கிரசு பெயரால் அல்லாமல் சுயராஜ்யக்கட்சி என்று ஒரு கட்சி ஏற்படுத்திக்கொண்டு அதன் மூலம் முயற்சித்தார்கள். அதிலும் தோல்வி அடைந்த பிறகு சற்று அடங்கிக்கிடந்து மறு தேர்தல் வரும் சமயம் மறுபடியும் அதேபோல் சட்டமறுப்பு, சத்தியாக்கிரக வேஷம் போட்டார்கள். அதுவும் பயன்படாமல் போய்விட்டது. ஆகவே 1922 முதல் இதுவரை காங்கிரசின் பேராலும் ''அது செய்த தியாகத்தின்'' பேராலும் அவர்களுக்கு எதிலும் வெற்றி இல்லாமற் போனதோடு பொதுஜன ஆதரவும் இல்லாமலே போய்விட்டது. இப்போது பொதுஜன ஆதரவு இருக்கும் என்று கருதி சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம், பஹிஷ்காரம், எதிர்ப்பு, முட்டுக்கட்டை எல்லாவற்றையும் கைவிட்டு விட்டு நாங்கள் ஒரு காலத்தில் தியாகம் செய்தோமென்று சொல்லிக்கொண்டு மாஜி தியாகிகள் பேரால் ராஜவிஸ்வாசப் பிரமாணம் செய்து பதவி அடைய பார்க்கிறார்கள். இதற்கு நாம் ஏமாந்து விடக்கூடாது. ஏய்ப்பவர்களுக்கு இடம் கொடுப்பது என்பது சிறிதும் ஒப்புக் கொள்ளக்கூடாத காரியமாகும்.

ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி ஆகிய தேர்தல்களில் சிலர் பணச் செலவுக்கு பயந்தும் காங்கிரஸ் தொல்லையில் இருந்து தப்பித்துக்கொள்ள முயற்சித்தும் காங்கிரசின் பேரால் நின்று வெற்றிபெற்றதாலேயே காங்கிரசுக்கு தலைசுற்றும்படியான அகம்பாவமும் ஆணவமும் ஏற்பட்டுவிட்டது. அந்த அகம்பாவமும் மூன்றேநாளில் ஒடுங்கிவிட்டது. இன்று ஸ்தல ஸ்தாபன ''வெற்றி''யின் பயனாய் காங்கிரஸ்காரர்களின் காரியம் இந்தியா பூராவும் சிரிப்பாய்ச் சிரிக்கிறது.

இப்படிப்பட்ட காங்கிரசார் நம்மை குறைகூறுகிறார்கள். உண்மையிலேயே நம்மீது எவ்வித தப்பிதமும் சொல்ல இவர்களுக்கு வழி இல்லை. ஆனாலும் பாமரமக்களிடம் முட்டாள் தனமாக உளறுகிறார்கள். இதன் மூலம் காங்கிரசுக்காரருக்கு அரசியல் ஞானம் இல்லை என்பதை காட்டிக் கொள்ளத்தான் முடிந்ததே ஒழிய மற்றப்படி நம்மை சிறிதாவது அசைக்கக்கூட முடியாமல் போய்விட்டது.

காங்கிரசுக்காரர்களால் ஏற்படுத்தப்பட்ட பதவியையும் உத்தியோகத் தையும் சம்பளத்தையும் தான் ஜஸ்டிஸ் கட்சியார் பெறுகிறார்களே ஒழிய ஜஸ்டிஸ்கட்சியார் தாங்களாக தங்கள் சுயநலத்துக்கு என்று எதையும் உண்டாக்கிக் கொள்ளவில்லை.

காங்கிரசுக்காரர் உண்மையாகவோ (அல்லது தாங்கள் ஆசைப்பட்டாலும் தங்களுக்குக் கிடைக்கமாட்டாது என்று கருதி) பொய்யாகவோ தங்களால் நடத்த முடியாது என்றும், தாங்கள் ஏற்க மாட்டோம் என்றும் சொன்ன சீர்திருத்தத்தை ஏற்று தங்களால் கூடுமானவரை 15 வருஷ காலம் பொறுப்பேற்று நடத்தி இருக்கிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

ஜஸ்டிஸ்கட்சியார் அந்த சீர்திருத்தத்தை ஏற்க மாட்டேன் என்று சொல்லி இருந்தால் என்ன ஆயிருக்கும் என்பதை யோசித்துப்பாருங்கள். அப்பொழுதே மிதவாதிகள் என்கின்ற ஒரு கூட்டம் காங்கிரசில் சேராமலும் பஹிஷ்காரத்தை ஆதரிக்காமலும் சர்க்காருக்கு உதவி செய்து வந்ததோடு காந்தியாரையும் கைதி செய்து கடினமான அடக்குமுறை கொண்டு காங்கிரசை அடக்கும்படி சர்க்காருக்கு யோசனை சொல்லிவந்திருக்கிறார்கள். மற்ற மாகாணங்களிலும் ஜஸ்டிஸ்கட்சி இல்லாதிருந்தும் அங்கு மிதவாதிகள் சீர்திருத்தத்தை ஏற்று நடத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோலவே சென்னை மாகாணத்திலும் ஜஸ்டிஸ்கட்சியார் மந்திரிபதவி ஏற்காதிருந்தால் மிதவாதிகள் என்னும் பேரால் பார்ப்பனர்களே மந்திரிகளாகி இருப்பார்கள். இந்த பதினைந்து வருஷ காலத்தில் சர்வம் பார்ப்பன மயம் ஜகத் என்பதாக எல்லா உத்தியோகம், பதவி, பட்டம் சகலமும் பார்ப்பனர்களுக்கே போய் பார்ப்பனரல்லாதார், முஸ்லீம்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியவர்கள் நிலை அதோகதி ஆகி இருக்குமே ஒழிய சுயராஜ்யம் வந்திருக்குமென்பதோ, வெள்ளைக்காரர்கள் இந்தியாவைக் காலிசெய்துவிட்டு ஓடி இருப்பார்கள் என்பதோ அடியோடு அயோக்கியத்தனமான பேச்சேயாகும்.

சென்ற காரியம் எப்படியோ இருக்கட்டும் என்றாலும் இனி செல்லப் போகும் காரியங்களில் காங்கிரசு சாதிக்கப்போவது என்ன என்று கேட்கின்றேன்.

காங்கிரசுக்காரர்கள் வரப்போகும் சீர்திருத்த தேர்தலில் சட்டசபைக்கு போகவேண்டும் என்று மாத்திரம் தீர்மானித்துக் கொண்டார்களே தவிர அங்குபோய் என்ன செய்வது என்பதைக் கூற அவர்களுக்கு யோக்கியதை இல்லாமல் போய்விட்டது. ஏன், இவர்கள் நாணயஸ்தர்களானால் உள்ளது சொல்லலாமல்லவா? மூடிவைப்பானேன்? சட்டசபையில் போய் இன்னது செய்கிறோம் என்று சொல்லாமல் ஓட்டுக்கேட்பதென்றால் ஓட்டர்களை இவர்கள் எவ்வளவு கேவலமாய் மதித்து இருக்கிறார்கள் என்பது விளங்கவில்லையா? சட்டசபையில் காங்கிரசுக்காரர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது கூடத் தெரியாமல் ஓட்டர்கள் ஓட்டுச் செய்வார்கள் என்றால் அவர்கள் எவ்வளவு மூடர்களாகவும், சுயமரியாதை அற்றவர்களாகவும் இருக்கிறார்கள் என்று கருதியிருக்க வேண்டும் என்று கேட்கிறேன்.

காங்கிரசுக்காரர்களின் நாணயத்திலும் அரசியல் ஞானத்திலும் நம்பிக்கை வைத்து ஓட்டுச் செய்யலாம் என்றால் இந்த பதினைந்து வருஷ காலமாக காங்கிரஸ்காரர்கள் எந்த கொள்கையிலாவது திட்டத்திலாவது புத்திசாலித்தனமாகவோ நாணயமாகவோ நடந்தார்கள் என்று யாராவது சொல்லக் கூடுமா என்று பந்தயங்கட்டி கேட்கிறேன்.

ஆதி முதல் இவர்கள் கொள்கை என்ன ஆயிற்று? திட்டங்கள் என்ன ஆயிற்று? பொது ஜனங்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் என்ன ஆயிற்று? தேர்தல் காலங்களிலும் ஒவ்வொரு தேர்தலிலும் கொடுத்த வாக்குறுதி என்ன



ஆயிற்று? காங்கிரஸ் ஸ்தாபன விதிகள் என்னவாயிற்று? ஒரு வருஷத்தில் சுயராஜ்யம், பூரண சுயேச்சை, முட்டுக்கட்டை, பகிஷ்காரம் முதலிய பெரிய பெரிய வார்த்தைகள் சொல்லி மக்களை ஏய்த்து பணம் பிடுங்கினதுடன் மக்களுக்கு எவ்வளவு தொல்லை கொடுத்தார்கள்? அதனால் பொது மக்கள் பணம் எவ்வளவு நாசமாயிற்று? இவர்களுக்கு புத்திகற்பிக்க என்று அரசாங்கத்தில் நம் வரிப்பணம் எவ்வளவு வீணாயிற்று? இவைகளை யோசித்துப் பார்த்தால் காங்கிரசுக்காரர்களின் ஞானமற்ற தன்மையும், மக்களை ஏமாற்றும் தன்மையும் வெட்டவெளிச்சம் போல் விளங்கும். இப்படிப்பட்டவர்கள் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி விஷமப் பிரசாரம் செய்வது என்பது எவ்வளவு துணிகரமான காரியம் என்று பாருங்கள். அவர்களுடைய சகல ஆயுதங்களும் ஓய்ந்து போன பிறகு கூட்டத்தில் கலகம் செய்வதன் மூலம் தங்கள் வண்டவாளங்களை வெளியார் அறியாமல் செய்யப் பார்க்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரை நான் இந்த காலித்தனத்துக்கு பயப்படு கிறவனல்ல. காங்கிரஸ்காரர்களில் ஒவ்வொரு காலியின் யோக்கியதையும், கூலியின் யோக்கியதையும் எனக்கு நன்றாய்த் தெரியும். நானும் ஒரு காலத்தில் கூலிகொடுத்துப் பார்த்தவன்தான். இதற்கு பயந்து ஓடுவது என்பது இதுவரை எங்கும் நடக்கவே இல்லை. அவர்கள் காலித்தனம் செய்த இடங்களில் எல்லாம் தோல்வியே அடைந்திருக்கிறார்கள். காலிகளின் செய்கையின் பலனை அவர்களின் தலைவர்கள் என்பவர்கள் தான் அனுபவித்து வருகிறார்களே ஒழிய அவர்கள் மிஞ்சிவிட்டதாகவோ கெடுதி ஏற்பட்டதாகவோ சொல்லமுடியாது.

இங்கு இன்று கனம் மந்திரியார் விஜயம் செய்து தலைமை வகித்தும் இங்கு விஷமம் நடப்பதை போலீசார் அனுமதித்து வருகிறார்கள். பார்ப்பனர்கள் போலீஸ் ஆபீசர்களாய் இருக்கும் ஊர்களில் எல்லாம் அனேகமாய் இப்படித்தான் நடக்கின்றது. அதிலும் இன்று போலீசார் எவ்வளவு அலட்சியமாய் நடக்கிறார்கள் பாருங்கள். இனி பார்ப்பன ராஜ்யமாகிவிட்டால் நாம் இந்த நாட்டில் இருக்க முடியுமா? நமது வரிப்பணம் தான் அவர்களது சம்பளம். 2000, 3000 பேர் கூடியிருக்கும் இந்த கூட்டத்திற்கு ஒரு அதிகாரி கூட வராமல் அதுவும் அரசாங்க மந்திரியார் வந்திருக்கும் கூட்டத்துக்கு ஒருவர் கூட வரவில்லையானால் அவர்கள் மற்ற காரியங்களில் தங்கள் பொறுப்புகளை கவனிப்பார்களா என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். 2, 3 கோடி ரூபாய் பொதுமக்கள் பணம் பாழாக்கப்பட்டு 15 வருஷமாய் நடந்த அரசியல் கிளர்ச்சியின் பயனாய் காங்கிரஸ்காரர்கள் கற்றுக்கொண்ட பாடம் இக்காலித்தனம் தான் என்பதல்லாமல் வேறு ஒரு காரியமும் இல்லை.

இன்றும் கூட நான் சொல்லுகிறேன். காங்கிரஸ்காரர்கள் யாரானாலும் சரி, மேடையில் ஏறி பொதுஜனங்கள் முன்னால் காங்கிரசினால் இந்த 15 வருஷகாலமாக அரசியல் துறையிலாகட்டும், சமுதாயத் துறையிலாகட்டும்,



RangaRakes tamilnavarasam.com

பொருளாதாரத்துறையிலாகட்டும் இன்ன நன்மை ஏற்பட்டது என்று சொல்ல ஒருவருக்கும் யோக்கியதை இல்லை என்றே சொல்லுவேன். யாராவது சொல்லக்கூடியவர்கள் இருந்தால் வரட்டும் என்றே அறைகூவி அழைக் கிறேன். யாதொரு அரசியல் ஞானமும் இல்லாத வெறும் ஆட்கள் கூலியை வாங்கிக்கொண்டு மேடைஏறுவது, புராணம் படிப்பதுபோல் காந்தி எம்பெருமாள், முழங்கால் வேஷ்டிக்காரர், உலகம் போற்றும் உத்தமர், ஒண்ணுக்கு இருந்தால் பன்னீர் வாசம், ஜயிலில் அடைத்தால் வெளியில் வந்து விடுகிறார், டெல்லியில் மோட்டாரில் போனார், வைஸ்ராய் கை குவிக்கிறார், பட்டினி விரதம் இருந்தார் என்பன போன்ற வார்த்தைகளைச் சொல்லி மக்களை ஏய்ப்பதல்லாமல் அவரால் விளைந்த காரியம் இன்னது, அவர் புத்திசாலித்தனத்தால் கிடைத்த வெற்றி இன்னது என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றேன். பதில் சொல்ல யோக்கியதை யற்றவர்கள் காலிகளைத் தூண்டிவிட்டு ''நீ ஏன் தாடி வைத்திருக்கிறாய்'' என்று கேள்வி கேட்கச் சொல்லுவது, பிறகு அவன் மாட்டிக்கொள்வதானால் விட்டுவிட்டு ஓடிப்போவது ஆகிய இவைதான் காங்கிரஸ் பிரசாரமாய் இருக்கின்றதே ஒழிய நாணயமாய் யோக்கியமாய் பேசி பிரசாரம் செய்வதே காங்கிரஸ்காரரிடம் அருமையாகவே இருக்கிறது.

ஆகவே பொது மக்கள் எந்தக் கட்சியை ஆதரிப்பதானாலும் தங்கள் பகுத்தறிவை பயன்படுத்தி நடந்து கொள்ள வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

*குறிப்பு: 21.08.1936 இல் பொள்ளாச்சியிலும் 22.08.1936 இல் கோவையிலும் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 30.08.1936**



# காங்கிரஸ் தேர்தல் அறிக்கை

வருகிறது, வருகிறது, வரப்போகிறது, வரப்போகிறது என காங்கிரஸ் காரர்களால் பிரமாதமாக விளம்பரம் செய்யப்பட்ட தேர்தல் அறிக்கை கடைசியாக வந்தேவிட்டது. பெரிய தேச பக்தர்களும் அரசியல் ஞானிகளும் பாஷ்யகாரர்களும் வெகுநாள் மூளைக்கு வேலை கொடுத்து அவ்வறிக்கையைத் தயார் செய்தார்களாம். அவ்வாறு வருந்தி உருவாக்கப்பெற்ற அறிக்கையோ இன்னந் தெரியமுடியாத விகார ரூபமுடையதாயிருக்கிறது. அதன் திணை பால் முதலியவைகளை நிர்ணயம் செய்வது வெகு கஷ்டமாக இருக்கிறது. ''ஜஸ்டிஸ்'' திட்டத்தின் சாயல் ஒருபக்கம் சாடையாகத் தெரிகிறது. சோஷியலிஸ்டு மணமும் ஒருபக்கம் வீசுகிறது. எல்லா கட்சியாரையும் திருப்திப்படுத்தும் இந்திரஜால வித்தையும் அறிக்கை முழுதும் நேர்முகமாயும் மறைமுகமாகவும் தாண்டவமாடுகிறது.

சென்ற புதன்கிழமையன்று சென்னை காங்கிரஸ் மண்டபத்தில் கூடிய காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் தோழர் சத்தியமூர்த்தி பேசியபோது ''அதிதீவிர அபேதவாதியான பண்டித ஜவஹர்லால் முதல், பதவியேற்பதை ஆதரிக்கும் நான் வரையில் எல்லாரும் இந்த தேர்தல் அறிக்கையை ஆதரிக்கிறார்கள்'' எனப் பெருமையடித்துக் கொண்டிருக்கிறார். காங்கிரஸ்காரர் தற்பொழுது ஒரு நெல்லிக்காய் மூட்டை மாதிரி இருந்துவருகின்றனர். தற்கால காங்கிரஸ்வாதிகளை (1) அபேதவாதிகள், அபேதவாதத்தை எதிர்ப்போர், வெளிப்பார்வைக்கு அபேதவாதிகள் போல் நடிப்போர் (2) பூரண சுயேச்சை வாதிகள், குடியேற்ற நாட்டு அந்தஸ்துவாதிகள், (3) வரப்போகும் சீர்திருத்தத்தை எதிர்ப்போர், ஆதரிப்போர் (4) வகுப்புத் தீர்ப்பை ஆதரிப்போர், எதிர்ப்போர், (5) பதவி ஏற்பதை ஆதரிப்போர், எதிர்ப்போர் எனப் பல தினுசுகளாக பிரிந்து விடலாம். காங்கிரசுக்குள் பிளவில்லை யென்பதைக் காட்டிக் கொள்வதற்காக அவர்கள் எல்லாம் இப்பொழுது ஒற்றுமையுடையவர்கள் போல் பாவனை செய்துகொண்டாலும், செயலில் இறங்கத் தருணம் வரும் போது அவர்கள் எல்லாம் ஒத்துழைப்பார்கள் என்று நம்பமுடியுமா? தென்னாட்டு காங்கிரஸ் போக்கை அறிந்தவர்களுக்கு அந்தக் கூட்டத்தார் ஒத்துழைப்பது அசாத்தியமென்று விளங்காமல் போகுமா? எனினும் ஒரு மாரீச அறிக்கையை காங்கிரஸ் பிரகஸ்பதிகள் தயார் செய்திருக்கிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இந்திய மக்களை ஏய்ப்பதற்கு இதைவிட ஆடம்பரமான ஒரு அறிக்கையை எவருக்கும் தயார் செய்யவே முடியாது. இத்தகைய ஏமாற்று அறிக்கை தயார் செய்வதில் காங்கிரஸ் பிரகஸ்பதிகளே நிபுணர்கள் என்பதை அவர்களது எதிரிகளும்கூட ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

அறிக்கையை ஒருமுறை மேற்பரப்பாகப் பார்ப்பவர்களுக்குக்கூட அதைத் தயாரித்தவர்களுக்கு கடுகத்தனையாவது அனுபவஞானம் இல்லையென்பது நன்கு விளங்கும்.

''வெளியாட்களால் சுமத்தப்படுவதும், இந்திய மக்களின் பரிபூரண சுதந்திரத்தைக் குறைப்பதும், இந்தியாவின் அரசியல், பொருளாதார விவகாரங்களை கவனிக்கும் உரிமை முற்றிலும் இந்தியருடையதே என்பதை அங்கீகரிக்காததுமான எந்த அரசியலமைப்பையும் ஒப்புக்கொள்ள முடியாது''

என்று காங்கிரஸ் மகாசபை ஏற்கனவே தீர்மானித்திருக்கிறதாம்.

இதை உலகம் அறிந்துதான் இருக்கிறது; வரப்போகும் சீர்திருத்த அரசியலை வகுத்த பிரிட்டிஷாரும் அறிந்துதான் இருக்கிறார்கள். வரப்போகும் சீர்திருத்தத் திட்டம் காங்கிரஸ் லக்ஷ்யத்துக்குப் பொருத்தமற்றதானால் அவர்கள் செய்ய வேண்டியதென்ன?

அவர்களது லக்ஷ்யத்துக்குப் பொருத்தமான ஒரு திட்டத்தை தயார் செய்ய வேண்டியதே அவர்களது வேலை.

அந்த வேலையைச் சட்டசபைக்குள் சென்று செய்ய முடியாது. மந்திரி பதவிகளைக் கைப்பற்றினாலும் செய்ய முடியாது. ஏன்? வரப்போகும் அரசியல் திட்டம் கண்டிப்பான பாதுகாப்புகள் நிறைந்த சிக்கலான திட்டம் என காங்கிரஸ்காரர்களே கூறுகின்றார்கள்.

காங்கிரஸ் லட்சியத்தை நிறைவேற்றி வைக்கச் சக்தியில்லாத காங்கிரஸ் வாலாக்கள், தேச க்ஷேமத்துக்கு அநுகுணமாக உழைக்க முன் வருகிறவர்களை - ஏற்கனவே தேசத்துக்குப் பல நன்மைகள் செய்து அனுபவம் பெற்றவர்களை - அரசியல் வேலை செய்யும்படி விட்டு, மரியாதையாக ஒதுங்கிக் கொள்வதே யோக்கியப் பொறுப்பாகும்.

அப்படிச் செய்தால் மானம் போய்விடுமே - காங்கிரஸ் மாண்டுவிடுமே - உலகம் சிரிக்குமே - காந்தி பெயர் கெட்டுவிடுமே என்ற பொய்யான - அசட்டு அபிமானத்தினால் சுயராஜ்யம் கிடைத்த பிறகு செய்யப் போகிற வேலைகளை கிளிப்பிள்ளை மாதிரி பாமர மக்களுக்கு எடுத்துக் கூறி ஏமாற்ற முயல்வது யோக்கியப் பொறுப்பாகுமா!

அத்தைக்கு மீசை முளைத்தால் சிற்றப்பாதான்.

ஆனால் மீசை முளைக்க வேண்டுமே!



சுயராஜ்யம் கிடைத்த பிறகு காங்கிரஸ்காரர் கூறும் வேலைகள் மட்டுமல்ல, அவைகளைவிட இரட்டிப்புப் பங்கு வேலைகளையும் செய்துவிடலாம். சுயராஜ்யம் பெற வழி என்ன என்பதுதான் கேள்வி.

சட்டசபைகள் மூலம் சுயராஜ்யம் பெற முடியாதென்று காங்கிரஸ்காரர் கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள்.

எனவே, சுயராஜ்யம் பெற அவர்கள் வேறு வழி தேடவேண்டும். அது சாத்தியமில்லையானால் காங்கிரஸ் கடையை மூடிவிட்டு அவரவர்கள் பாட்டைப்பார்க்க வேண்டும். அனுபவ சாத்தியமில்லாத வேலைகளை செய்யப் போவதாய்க் கூறி பாமரமக்களை ஏமாற்றி நாட்டைக் குட்டிச் சுவராக்குவது மகா பாதகச் செயலாகும்; தேசத்துரோகம் மட்டுமல்ல ஜனத் துரோகமுமாகும். சுயராஜ்யம் கிடைத்தபிறகு அவர்கள் செய்யப்போவதாகக் கூறும் வேலைகளை **ஜஸ்டிஸ் கட்சியார்** வரப்போகும் சீர்திருத்தத்தை கொண்டே சாத்தியமான வரை செய்யக்கூடுமென்று கூறுகிறார்கள். காங்கிரஸ் திட்டத்தையும் ஜஸ்டிஸ் திட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அதன் உண்மை விளங்கும்.

உண்மையில் இரண்டு திட்டங்களுக்கும் பெரிய வித்தியாசமே இல்லை. வித்தியாசம் வகுப்பு விஷயம் ஒன்றில்தான்.

காங்கிரஸ்காரர் வகுப்புத் தீர்ப்பை எதிர்க்கிறார்கள்.

வேறொரு திருப்திகரமான திட்டம் ஏற்படும் வரை வகுப்புத் தீர்ப்பை ஜஸ்டிஸ் கட்சியார் ஆதரிக்கிறார்கள். மற்றபடி இரண்டு திட்டங்களுக்கும் பாராட்டக்கூடிய வித்தியாசங்களே இல்லை.

வித்தியாசம் ஏதாவது உண்டானால் அது பாஷை நடையிற்றான். காங்கிரஸ்காரர் பொதுமக்களை ஏய்க்கும் படாடோப நடையில் தமது திட்டத்தைத் தயார் செய்திருக்கிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சியார் காரியவாதிகளானதினால், பகட்டில்லாத- பொருளமைதியுடைய எளிய நடையில் தமது திட்டத்தை தயார் செய்திருக்கிறார்கள்.

சுயராஜ்யம் வந்தபிறகு காங்கிரஸ்காரர் செய்யப் போவதாக கூறும் காரியங்களை ஜஸ்டிஸ் கட்சியார் இப்பொழுதே செய்ய முடியுமென்று கூறுகிறார்களே அது சாத்தியமா? அவர்களை நம்பலாமா? எனச் சிலர் கேட்கக்கூடும். ஆம், அது ஆணித்தரமான கேள்விதான்.

அவர்களை நம்பலாமா? நம்பக்கூடாதா? அவர்கள் கூறுவது சாத்தியமா? என்பதை அவர்கள் இதுகாறும் செய்துள்ள வேலைகளைப் பரிசீலனை செய்து பார்த்து முடிவு செய்துவிடலாம்.



RangaRakes tamilnavarasam.com

அவர்கள் செய்த வேலைகள் சர்க்கார் ரிக்கார்டுகளில் இருக்கின்றன. அவைகளை எவருக்கும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. அவைகளை அறிய ஜோசியர்கள், பாஷ்யகாரர் உதவியும் தேவையில்லை.

சென்ற 15 வருஷ காலமாக அவர்கள் வாக்காளர்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றிவைக்க தவறியதே இல்லை. தற்கால அரசியல் அமைப்புப்படி செய்யமுடியாத காரியங்களைச் செய்வதாக அவர்கள் பொது மக்களிடத்தில் வீண் நம்பிக்கை உண்டு பண்ணவும் இல்லை. ஏமாற்ற வுமில்லை.

சுயராஜ்யம் நடத்த, நாட்டையும் மக்களையும் படிப்படியாகப் பக்குவம் செய்தால் பக்குவதசை யடையும் போது, சுயராஜ்யம் அழையாமலே வந்துவிடும் என்பது ஜஸ்டிஸ் கட்சியார் கொள்கை.

அந்தக் கொள்கைப்படியே அவர்கள் வேலை செய்து வருகிறார்கள்.

அவ்வாறு வேலை செய்ததினாலேயே மாகாண இரட்டையாட்சிக்கு பதிலாக மாகாண ஆட்சி கிடைத்திருக்கிறது.

அதில் பல பாதுகாப்புகள் இருப்பது மெய்யே. வரப்போகும் மாகாண சுய ஆட்சியை புத்திசாலிகளான ஜஸ்டிஸ் கட்சியார் நடத்தினால் ‘‘பாதுகாப்புகள்’’ தேய்ந்து மாய்ந்து போவது நிச்சயம்.

அப்பால் கலப்பற்ற மாகாண ஆட்சி வருவதும் உறுதி.

காங்கிரஸ்காரர் விரும்பும் சுயராஜ்யத்தை கொண்டுவர, ஆற்றலும் அரசியல் ஞானமும் உடைய அரசியல் கட்சி இந்தியாவில் ஒன்றுண்டானால், அது ஜஸ்டிஸ் கட்சியே என எந்த கோபுரத்தின் மீது நின்றும் நாம் உறுதிகூற தயாராயிருக்கிறோம்.

கத்தியின்றி, இரத்தமின்றி, கிளர்ச்சியின்றி, புரட்சியின்றி இந்தியர்கள் மனத்து ஜனநாயக உணர்ச்சியையும் சுதந்தர சுயமரியாதை யுணர்ச்சிகளையும் தோற்றுவித்த பிரிட்டிஷாரின் ஆதரவை இழக்காமலே ‘‘சுயராஜ்யம்’’ கொண்டுவர ஜஸ்டிஸ் கட்சியாருக்குத்தான் ஆற்றலுண்டென உறுதி கூறவும் தயாராயிருக்கிறோம்.

இந்தியாவில் தோன்றிய அரசியல் கட்சிகளில் காங்கிரஸ் கட்சி போன்ற மோசமான கட்சி இல்லவே இல்லை. காங்கிரஸ் தோன்றிய நாள் முதல் நாளிதுவரை கிளர்ச்சி செய்வதே அதன் வேலையாக இருந்து வந்திருக்கிறது.

காந்தியார் அரசியலில் புகும்வரை காங்கிரஸ், சட்டவரம்புக்கு வுட்பட்டுக் கிளர்ச்சி செய்து வந்தது. காந்தியார் பிரவேசித்தது முதல் சட்டவரம்பை மீறிக் கிளர்ச்சி செய்யத் தொடங்கிற்று.

காந்தி பிரவேசத்துக்கு முன் ‘‘பெட்டிஷனிங் பாடி’’ (மனுச் செய்யும் கூட்டம்) ஆகவிருந்த காங்கிரசாவது தன் கிளர்ச்சியின் பயனால் பார்ப்பனர் களுக்குச் சில பெரிய உத்தியோகங்களைத் தேடி கொடுத்தது.



காந்தி கைப்பற்றிய காங்கிரஸ் பல ‘‘தியாகங்கள்’’ செய்திருந்தாலும் அடைந்த பலன் பூச்சியமே. காந்தீய காங்கிரசைப்போல் முழுத் தோல்வி யடைந்த அரசியல் ஸ்தாபனம் உலகத்திலேயே இல்லை.

காந்தி காங்கிரசில் கால் வைத்தது முதல், போடப்பட்ட காங்கிரஸ் திட்டங்களில் ஒன்றாவது நிறைவேறவில்லை.

ஒரு கோடிரூபாய் அளித்தால் சுயராஜ்யம் தருவதாக பனியா காந்தி பேரம் பேசினார். அவர் கேட்டபடியே கொடுத்தோம். அவர் தந்தது என்ன?

ஒத்துழையாமை என்ன வாயிற்று? சட்டமறுப்பு என்ன வாயிற்று? சத்தியாக்கிரகம் என்ன வாயிற்று? பகிஷ்காரக் கதை என்ன வாயிற்று? உப்புப் போர் என்ன வாயிற்று? தீண்டாமையொழிப்பு என்னவாயிற்று? கிராமப் புனருத்தாரணம் என்ன வாயிற்று?

எல்லாம் முழுத் தோல்வி; சாமானியத் தோல்வியா? மானங்கெட்ட தோல்வி. ஆகவே அரசியலையே ‘‘காந்தி’’ தலைமுழுகிவிட்டார்; ஒரு நாலணாக் காங்கிரஸ்வாலாக இருக்கக்கூட அவர் விரும்பவில்லை. அவ்வளவுக்கு வீழ்ச்சியடைந்துவிட்டது. காங்கிரஸ் அரசியல் வேலை கண்ணாம்பூச்சி விளையாட்டல்ல; அரசியல் ஞானம் வேண்டும்; அனுபவம் வேண்டும்; பழக்கம் வேண்டும்; சகிப்புத்தன்மை வேண்டும்; நிதான புத்தி வேண்டும். ஆனால் இந்தச்சரக்குகள்தான் காங்கிரஸ்காரரிடமில்லை. எனவே அரசியல் வேலை செய்ய - முக்கியமாக ஆக்க வேலைகள் செய்ய அவர்களுக்கு லாயக்கில்லை. அதற்கு அவர்களது பூர்வ சரித்திரமே அத்தாட்சி. எனவே அவர்களது தேர்தல் அறிக்கையும் பயனற்றது. அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கும் திட்டங்களை அவர்களால் நிறைவேற்றி வைக்கவும் முடியாது.

‘‘காந்தி ஒரு லக்ஷயவாதி; பகற்கனவு காண்பவர்; மதக் கிறுக்கர் அதனாற்றான் காங்கிரஸ் வேலை குட்டிச்சுவராயிற்று. இப்பொழுது அவர் காங்கிரசில் இல்லை. தற்காலத் தலைவர்கள் அனுபவசாலிகள்; காரியவாதிகள்; சொன்னபடி நடத்த ஆற்றலுடையவர்கள். ஆகவே தேர்தல் அறிக்கையை நம்பலாம்’’ எனச் சிலர் சொல்லக்கூடும்.

ஆனால் ஆழ்ந்து நோக்கினால் தற்காலத்தவர்கள் காந்தியை விட மோசமானவர்கள் - செல்லாக் காசுகள் என்பது நன்கு விளங்கும்.

காந்தியார் குட்டு வெளிப்பட 15 வருஷத்துக்கு மேல் பிடித்தது. தற்காலத் தலைவர்கள் குட்டோ எட்டு மாதத்துக்குள் வெளிப்பட்டு விட்டது. ஸ்வராஜ்யம் பெறுவதற்கு ஸ்தல ஸதாபனங்களைக் கைப்பற்றுவது முதல் வேலை என்று தற்கால காங்கிரஸ் தலைவர்கள் திட்டம் போட்டார்கள். சில ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றவும் செய்தார்கள். முடிவு என்னவாயிற்று. ‘‘அப்பாடா! போதும் போதும்’’ என்று ஆகிவிட்டது. மேற்கொண்டு ஸ்தல



RangaRakes tamilnavarasam.com

ஸ்தாபனங்களைக் கைப்பற்ற வேண்டுமா? வேண்டாமா? என்று கூட ஆலோசிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. வேலூர் உபதேர்தலில் காங்கிரஸ்காரர் போட்டி போட வேண்டாமென்று தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியார் தீர்மானிக்கும் படியும் ஆகிவிட்டது. கோவை காங்கிரஸ் கமிட்டியார் ஜில்லா போர்டு தேர்தலில் கலந்துகொள்ளத் தேவையில்லை யென்றும் முடிவுகட்டி விட்டார்கள்.

கேவலம், ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் நடத்த யோக்கியதை யில்லாத தற்காலத் தலைவர்களா-சுயராஜ்யம்-அதுவும் கலப்படமற்ற பூரண சுயராஜ்யம் கொண்டு வரப்போகிறார்கள்?

கூரையேறிக் கோழி பிடிக்காத குருக்கள், வானம் கீறி வைகுண்டம் காட்டுவாரா! தென்னாட்டு மக்களே யோசித்துப் பாருங்கள்!

**குடி அரசு - தலையங்கம் - 30.08.1936**



# கழுவுக்கேற்ற கோமுட்டி நியாயமா?

காங்கிரஸ்பேரால் திருச்சி நகரசபைத் தலைவர் தேர்தலுக்கு நிறுத்தப்பட்ட தோழர் ரத்னவேலுத் தேவரை ஆதரியாத காங்கிரஸ் மெம்பர்கள் எல்லாம் ராஜிநாமாச் செய்துவிட வேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டியார் தீர்ப்புக்கூறி யிருக்கிறார்கள். ஆனால் நகரசபைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தோழர் பொன்னய்யா பிள்ளை, திருச்சி ஜனங்களைத் திருப்திப்படுத்துவதற்காக தாம் மெம்பர் பதவியையோ, தலைவர் பதவியையோ ராஜிநாமாச் செய்யப் போவதில்லையென்றும் வேண்டுமானால் காங்கிரசிலிருந்து விலகிவிட தயார் என்றும் மார் தட்டிக் கூறுகிறார். இதற்காக ஒரு காங்கிரஸ் தினசரி ஜஸ்டிஸ் கட்சி மீது பழி சுமத்துகிறது. ''ஸ்தல ஸ்தாபனங்களில் 15 வருஷங்களாக ஜஸ்டிஸ்கட்சி இருந்திருந்தும் ஸ்தல ஸ்தாபன ராஜீய வாழ்க்கை இவ்வளவு மோசமாயிருப்பது ஜஸ்டிஸ் கட்சியின் யோக்கியதையைக் காட்டுகிறது'' என அப்பத்திரிகை குருட்டுத்தனமாக எழுதியிருக்கிறது. ஸ்தல ஸ்தாபன விஷயங்களில் அரசியலைப் புகுத்தக் கூடாதென்பது ஜஸ்டிஸ் கட்சியார் கொள்கை. இதுவரை ஸ்தலஸ்தாபனத் தேர்தல்களில் ஜஸ்டிஸ்கட்சி பேரால் அபேட்சகர்கள் நிறுத்தப்படவுமில்லை. ''ஜஸ்டிஸ்'' கொள்கையை ஆதரிப்பவர்கள் தம் சொந்த ஹோதாவிலேயே நின்று வந்திருக்கிறார்கள். தவிரவும் திருச்சி திருவிளையாடல்களுக்குக் காரணஸ்தராயிருந்தவர்கள் ''ஜஸ்டிஸ்'' கட்சியாரல்ல காங்கிரஸ் பக்தர்களே. எனவே திருச்சி பழிக்கு ஜஸ்டிஸ் கட்சியைக் குறை கூறுவது கழுவுக்கேற்ற கோமுட்டி நியாயமாகவே இருக்கிறது.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 30.08.1936**



RangaRakes

tamilnavarasam.com

# சாக்கடை இன்ஸ்பெக்டர் சத்தியமூர்த்தி

தமிழ்மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் சத்தியமூர்த்தியின் தேசீயம், அவரது மூளை போலவே விசித்திரமானது; கோணல்மாணலானது. இங்கிலாந்திலிருந்து வரும் ஆங்கில கவர்னர்களுக்குப் பல்லாண்டு பாடலாம்; உபசாரப் பத்திரமளிக்கலாம்; ஆனால் ஒரு இந்திய கவர்னரைப் பாராட்டவோ, உபசரிக்கவோ கூடாதென்று அவர் சென்னைக் கார்ப்பரேஷனில் வெளுத்து வாங்கியதை இந்தியர்கள் மறந்திருக்கமாட்டார்கள். ஜஸ்டிஸ்கட்சி மீதுள்ள வெறுப்பினால் ஒருகால் அவர் அவ்வாறு உளறிக்கொட்டியிருக்கக் கூடும்; அதனால் அவருடைய தேசீயக் கற்புக்கு பங்கம் ஏற்பட்டுவிடாது எனப் பலர் எண்ணியிருக்கக்கூடும். ஆனால் அவரது பம்பாய்ப் பேச்சு அவரது உண்மைச் சுயரூபத்தை சந்தேகத்துக்கு இடமின்றி விளக்கிக் காட்டிவிட்டது. கடுகத்தனை இந்திய பற்றாவது அந்த ஆசாமிக்கு இல்லை யென்பதை அவரது பம்பாய்ப் பேச்சு நன்கு விளக்கிக் காட்டியிருக்கிறது. ''குடியாட்சியும் - தடியாட்சியும்'' என்னும் பொருள் பற்றி தோழர் சத்தியமூர்த்தி பம்பாயில் நிகழ்த்திய ஒரு பிரசங்கத்தின்போது அவர் வாந்தியெடுத்த சில அபிப்பிராயங் களைப் பார்த்து சுயமரியாதையுடைய இந்தியர்கள் கலக்கம் கொள்ளாமலும் கண்ணீர் வடிக்காமலும் இருக்கமாட்டார்கள். ''கடைசி பிரிட்டிஷ் சோல்ஜர் இந்தியாவிலிருந்து லண்டனுக்குக் கப்பலேறிய பிறகு, இந்திய ஊழல்களை ஒழிக்க 50 வருஷ காலம் பிடிக்கும்'' என தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரியார் திருவாய் மலர்ந்தருளினாராம். இவ்வளவு மோசமான வார்த்தைகள் எந்த தேசீயவாதி வாயிலிருந்தாவது வெளிவருமா?

மற்றும் ''இந்தியா முழுதும் - ஒவ்வொரு சமூகத்திலும் - ஒவ்வொரு துறையிலும் - ஊழல் நிறைந்தே இருக்கிறது. அதை மறைப்பதினால் இந்தியாவுக்கு நலனேற்படாது'' என்றும் அவர் செப்பினாராம். இந்தியர் அந்தஸ்து, பெருமை, சுயமரியாதை - சுத்தம், சுதந்தர தாகத்தைப்பற்றி கடற்கரைக் கூட்டங்களில் பிரசங்க மாரி பொழியும் சத்தியமூர்த்தியார் இவ்வாறு கூறுவது?

கடைசியாக ஜனநாயக ஆட்சிக்குள்ள நிலைமை இந்தியாவில் இல்லவே இல்லையென்றும் கண்டிப்பாகக் கூறிவிட்டாராம்.

ஜனநாயகத்துக்குத் தேவையான நிலைமை இந்தியாவில் இல்லை யானால் ''பூரண சுயராஜ்யந்தான் இந்தியர் லக்ஷ்யம்; அதற்குக் குறைந்த எந்த அரசியலமைப்பையும் இந்தியர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்'' என தோழர் சத்தியமூர்த்தியும் அவரது கோஷ்டியாரும் கூப்பாடு போடுவது ''ஹம்பக்'' தானே.



வாடிப்பட்டி ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டை கனம் மந்திரி ராஜன் திறந்து வைத்தபோது ''இரட்டையாட்சியை நாங்கள் வெற்றிகரமாக நடத்திவைத்து சுயராஜ்யம் நடத்த இந்தியர்களுக்கு ஆற்றலுண்டு என்பதை பிரத்தியட்சமாகக் காட்டியிருக்கிறோம். வரப்போகும் மாகாண ஆட்சியைத் திறம்பட நடத்தினால் மற்றும் அதிகப்படியான அதிகாரங்களை பிரிட்டிஷ் சர்க்கார் வழங்குவார்கள்'' எனப் பொருள்பட பேசினார். அது தோழர் சத்தியமூர்த்திக்குப் பிடிக்க வில்லை. கனம் மந்திரி ராஜன் இந்தியர்களை அவமதித்து விட்டதாகக் கூச்சல் போட்டார். இந்தியர்கள் என்ன பள்ளிப் பையன்களா பிரிட்டிஷாரிடம் சுயராஜ்யத் திறமையை காட்டுவதற்கு? சுயராஜ்யப் பரீட்சை நடத்த பிரிட்டிஷார் யார்? நம் நாட்டை ஆள நமக்கு உரிமையில்லையா? அந்நியரிடமிருந்தா நற்சாட்சிப் பத்திரம் பெறவேண்டும்? சீச்சீ! மந்திரி ராஜன் இந்தியர்களை ரொம்ப அவமதித்துவிட்டார்'' என்றெல்லாம் சென்னை காங்கிரஸ் மண்டபக் கூட்டத்தில் வெளுத்து வாங்கினார். சென்னையில் அவ்வாறு புலம்பிய சத்தியமூர்த்தி பம்பாயிலே ''இந்தியர்கள் கழிபட்டவர்கள்; ஆகாவழிகள்; ஜனநாயகம் நடத்த யோக்கியதையற்றவர்கள்'' என்றெல்லாம் பிதற்றி யிருக்கிறார். இப்படிப் புலம்பும் மூர்த்தியார் தாம் பெரிய தேசீயவாதி யென்றும் - பூரண சுயேச்சைவாலா என்றும் சொல்லிக்கொள்ளத் தயங்குவதுமில்லை. வாஸ்தவத்தில் தோழர் சத்தியமூர்த்தியைப் போன்ற உளறுவாயர்கள் சிலர் இந்தியாவில் இருப்பதினாலேயே ''சுயராஜ்யம் பெற இந்தியர்களுக்கு லாயக்கில்லை'' என்று சர்ச்சில் கோஷ்டியார் கூறுகிறார்கள். காமாலைக் கண்ணனுக்கு உலகம் முழுதும் மஞ்சள் மயமாகத் தோன்றுமாம். திலகர் நிதி, தீண்டாமை நிதி போன்ற பொது நிதிகளை ''ஸ்வாஹா'' செய்து வயிறு வளர்க்கும் கூட்டத்தைச் சேர்ந்த தோழர் சத்தியமூர்த்தி ''இந்தியாவிலே - எல்லா சமூகங்களிலும் - எல்லாத் துறைகளிலும்'' - ஊழல்களையும், குப்பைமேடுகளையும் காண்பதைப் பார்த்து ஆச்சரியப்படுவதற்குண்டா? ஆனால் தமது சொந்த அனுபவத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு ''இந்தியா முழுதும் ஊழல் மயம். ஜனநாயகத்துக்கு இந்தியா லாயக்கில்லை'' என்று புலம்புவது மூடத்தனம், விஷமத்தனம், தேசத்துரோகம் என்று கூறினால் அதை மறுக்க தோழர் சத்தியமூர்த்தியாருக்கு நாக்குண்டா!

இந்தியர் ஒழுக்கத்தைக் கண்டித்து கன்னி மேயோ எழுதியபோது இந்திய தேசபக்தர்கள் கொதித்தெழுந்தார்கள்; தேசீயப் பத்திரிகைகள் எல்லாம் கண்டித்தன; கூப்பாடு போட்டன. இப்பொழுது மேயோவைவிடக் கேவலமாக தோழர் சத்தியமூர்த்தி பேசியிருக்கிறார். ஆகவே குப்பைக்காரி, சாக்கடை இன்ஸ்பெக்டர் போன்ற பட்டப்பெயர்களை மேயோவுக்குச் சூட்டிய தேசபக்தர் களும் தேசீயப் பத்திரிகைகளும் குப்பைக்காரன் சத்தியமூர்த்தி, சாக்கடை இன்ஸ்பெக்டர் சத்தியமூர்த்தி என அவருக்குப் பெயர் சூட்ட தயார்தானா.

**குடி அரசு - கட்டுரை - 30.08.1936**



RangaRakes tamilnavarasam.com

# மத நம்பிக்கைக்கு சாவுமணி

உலகத்திலே எத்தனையோ, இயக்கங்களும் ஸ்தாபனங்களும் தோன்றி மறைந்துள்ளன; மறைந்து வருகின்றன. சில இயக்கங்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் ஒரு காலத்துத் தேவை ஏற்பட்டிருக்கலாம். அத் தேவை மறையும் போது அவை மறைவது இயல்பே. இந்தப் பொதுவிதிக்குக் கட்டுப்படாத இயக்கங்களோ ஸ்தாபனங்களோ உலகத்தில் இல்லவே இல்லை.

தற்பொழுது உலகம் முழுதும் மத நம்பிக்கை குறைந்து வருகிறது. ருஷியாவிலே மதம் அழிந்துவிட்டது; ஆலயங்கள் மறைந்துவிட்டன; புரோகிதர், பூசாரிகளும் ஒழிந்துவிட்டனர். அமெரிக்காவில் ஆலயங்கள் இருந்தாலும் ஆலய வழிபாடு செய்வோர் தொகை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றன. பாதிரிமார் செல்வாக்குக் குறைந்துவிட்டதாம். அறிவியக்கம் நாளுக்கு நாள் காட்டுத் தீப்போல் பரவி வருகிறதாம். துருக்கியிலும் மத ஆதிக்கம் ஒழிந்துவிட்டது. ராஜாங்கத்துக்கும் மதத்துக்கும் இருந்த தொடர்பு அறுபட்டு விட்டது. மதத்தின் ஸ்தானத்தைப் பகுத்தறிவு கைப்பற்றி விட்டது. இவ் வண்ணம் உலகம் முழுதும் மத நம்பிக்கை குறைந்துவரக் காரணமென்ன? காரணங்கள் இரண்டு; ஒன்று தேசீய சம்பந்தமானது; மற்றொன்று சதாசாரச் சார்புடையது.

மதக்கொள்கைகளும் நம்பிக்கைகளும் விஞ்ஞான சாஸ்திர உண்மைகளுக்கு முரண்பட்டவைகளாக இருக்கின்றன. எனவே விஞ்ஞான சாஸ்திரம் வளர வளர மத நம்பிக்கை குறைந்துகொண்டே வருகிறது. விஞ்ஞானத் துறையில் முன்னேற்றமடைந்த தேசங்களில் மத நம்பிக்கை முற்றிலும் கலகலத்துப்போய்விட்டது. இதை எவராலும் மறுக்கவே முடியாது. விஞ்ஞான உண்மைகளை எதிர்த்து நிற்க மத நம்பிக்கைகளுக்கு சக்தியில்லை. ருசுப்படுத்தப்படாத விஷயங்களை நம்ப மக்கள் தயங்குகின்றனர் - மறுக்கின்றனர். பிரபஞ்சத்தில் பல துறைகளில் பிரதி தினமும் நடைபெற்று வரும் ஆராய்ச்சிகள் எல்லாம் மத நம்பிக்கைகளை வேரறுக்கக் கூடியவைகளாகவே இருக்கின்றன. கிறிஸ்துமதச் செல்வாக்கு உச்சஸ்தானத்திலிருந்த காலத்திலே கிறிஸ்தமத எதிரிகள் தமது அபிப்பிராயங்களை வெளியிட அஞ்சினர். இன்றோ கிறிஸ்துமதம் பகிரங்கமாகத் தாக்கப்படுகிறது. கிறிஸ்து மதக்கொள்கைகள் சதாசாரத்துக்கு முரணானவை யென்று பகிரங்கமாகத் தாக்கப்படுகின்றன. ஏனைய மதங்களுக்கும் இக்கதியே



ஏற்பட்டிருக்கிறது. உண்மையில், ஒரு காலத்திலே வானமண்டலத்தில் பறந்துகொண்டிருந்த மதக்கொடி அற்று வீழ்ந்துவிட்டது.

எனினும் பழமை விரும்பிகள் - மதவெறியர்கள் லக்ஷியம் செய்ய வில்லை. ''ஆமாம்! ஆமாம்! மதத்தையும் கடவுளையும் எத்தனையோ பேர் எதிர்த்துப் பார்த்தார்கள். ஒன்றும் சாயவில்லை. நாஸ்திகம் புதியதல்ல. ஆஸ்திகம் தோன்றிய அன்றே நாஸ்திகமும் தோன்றியுள்ளது. கடைசியில் நாஸ்திகமே தோல்வியுற்றது. எனவே தற்கால மத எதிர்ப்பைப் பார்த்து எவரும் அஞ்சவேண்டியதில்லை. ஆஸ்திகத்தை நாஸ்திகம் வெல்லவே செய்யாது. ஆஸ்திகம் அழிவில்லாதது'' என அவர்கள் கூறித் திருப்தி அடைகிறார்கள்.

ஆனால் இவர்கள் உண்மை நிலையை அறிந்தவர்கள் அல்ல. பழங்கால நாஸ்திகத்துக்கும் தற்கால நாஸ்திகத்துக்கும் பெருத்த வித்தியாசமுண்டு. லோகாயதம் தோன்றிய காலத்திலே விஞ்ஞான சாஸ்திர உணர்ச்சியே தோன்றவில்லை. ''சூரியன் பூமியைச் சுற்றி வருகிறது. இராகு கேதுக்கள் சூரிய சந்திரர்களைச் சில குறிப்பிட்ட காலத்தில் விழுங்கிக் கக்குகின்றன. இரும்பைப் பொன்னாக்கலாம்; கல்பமுண்டு சிரஞ்சீவியாகலாம்'' என்பன போன்ற நம்பிக்கைகள் தாண்டவமாடிய காலத்திலே லோகாயதம் தோன்றியது. அத்தகைய லோகாயதத்தை - நாஸ்திகத்தை ஆஸ்திகர் வெகு சுளுவில் தோற்கடித்திருக்கக் கூடும். அக்கால நாஸ்திகர்களுக்கு விஞ்ஞான உண்மைகள் துணை நிற்கவில்லை. நுண்ணிய ஆராய்ச்சி முன் எதிர் நிற்காத யுத்தி வாதங்களினாலேயே அக்கால நாஸ்திகர் ஆஸ்திகரைத் தாக்கிவந்தனர். எனவே நாஸ்திகர் தோல்வியுற்றிருக்கலாம்.

நாஸ்திகரைத் தோற்கடித்த ஆஸ்திகர் எல்லாம் வஞ்சகர் என்றோ மோசக்காரர் என்றோ மூடர்கள் என்றோ நான் கூறவில்லை. அவர்கள் நம்பியபடி அவர்கள் நடந்துகொண்டார்கள். தெய்வ நம்பிக்கையின்றிப் பிரபஞ்சமே நசித்துவிடுமென்று அவர்கள் உணர்ந்திருந்தார்கள். எனவே அவர்கள் அக்காலத்துப் பெற்றிருந்த அறிவின் துணைகொண்டு ஆஸ்திகத்தை நிலைநாட்ட முயன்றனர். ஒரு பிரச்சினையை முடிவு செய்வதற்குத் தேவையான சாதனங்கள் எவையோ, அவை இல்லாதிருந்த காலத்திலேயே அவர்கள் அப்பிரச்சினையை முடிவு செய்தனர். பகுத்தறிவுப்படியும் சரித்திரீகமாகவும் முயன்றனர். ஆனால் அவர்களது விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான சரித்திர ஞானமோ விஞ்ஞானமோ அவர்களிடம் இருக்கவில்லை. எனவே பகுத்தறிவு முன் நிற்க முடியாத யுக்தி வாதங்களையும் கூடார்த்தச் சொற்றொடர்களையும் பகட்டு வாதங்களையும் காட்டி மதத்தை ஆதரிக்கத் துணிந்தனர். அவர்களாலானது அவ்வளவே, அதற்குமேல் நாம் அவர்களிடம் எதிர்பார்க்கவே முடியாது?

ஆனால் ஊகத்துக்கு நில்லாத முன்னோர் வாதங்களைக் காட்டி இக்கால ஆஸ்திகர்கள் உலகத்தை ஏமாற்றப் பார்ப்பதுதான் வெகு ஆச்சரியமாக



RangaRakes tamilnavarasam.com

இருக்கிறது. மதவிரோதிகளுக்கு உதவியான சாதனங்களை ''சப்ளை'' செய்வது விஞ்ஞான சாஸ்திரங்களின் நோக்கமல்ல; எனினும் மத விரோதிகளுக்குத் தேவையான தகவல்களை யளிப்பதே விஞ்ஞான சாஸ்திரிகளின் வேலையாக இருந்து வருவதாய்ப் பலர் நம்புகிறார்கள்.

விஞ்ஞான சாஸ்திரங்களின் உண்மையான நோக்கம் அறிவை வளர்ப்பதே; ருசுப்படுத்தக் கூடிய உண்மைகளை பகிரங்கப்படுத்துவதே; ஆனால் விஞ்ஞான உண்மைகள் பல மத உண்மைகளுக்கு முரண்படலாம்; ஆனால் இது இரண்டாம் பக்ஷமான பலன். விஞ்ஞானிகள் இதை லக்ஷியம் செய்வதில்லை. நேரடியான பலனே அவர்களுக்கு முக்கியம்; மறைமுகப் பலன்களை அவர்கள் மதிப்பதில்லை; அல்லது பிரமாதப்படுத்துவதில்லை. சாதாரண விஞ்ஞான உண்மைகளும் கூட மதத்துக்கு முரணாகவே இருக்கின்றன. எனவே மதத்தை யொழிக்கவே விஞ்ஞானிகள் முயல்வதாக சாமானியர் முடிவு கட்டி விடுகின்றனர். விஞ்ஞான சாஸ்திரிகள் கடும் உழைப்பாளிகள்; கருமமே கண்ணாயினர். காலத்தின் அருமையை அவர்கள் நன்கறிவார்கள் தம் கடமைகளையும் அவர்கள் நன்குணர்வார்கள். அவர்களது ஆராய்ச்சியில் மதவிரோதமான பல உண்மைகள் வெளியா கின்றன; ஆனால் அவைகளை அவர்கள் லக்ஷியம் செய்வதில்லை; ஏனையோரே லக்ஷியம் செய்கிறார்கள்; பீதியடைகிறார்கள்; கடவுளருளிய வேதங்களில் நம்பிக்கை வைத்தோர் நடு நடுங்குகிறார்கள். இயற்கையை நடுக்கத்துடன் ஆராய்ச்சி செய்ய விஞ்ஞான சாஸ்திரிகள் முயன்றபோதே எல்லாம் தலைகீழாக மாறத் தொடங்கியது. அக்காலத்திலே மதமே பிரபஞ்சத்திலே அரசு செலுத்தி வந்தது. பெரிய எதிர்ப்புகளுக்கிடையே - தடைகளுக்கிடையே - ஆராய்ச்சி வேலைகள் நடைபெற்று வந்தன.

இப்பொழுதோ பழைய ராஜா அடிமையாகி விட்டான். மதம் அறிவுக்கு அடிமைப்பட்டு விட்டது உண்மையாயினும் மதவாதிகள் அதை பகிரங்கமாக ஒப்புக்கொள்வதில்லை. அறிவியக்கவாதிகளை மதவாதிகள் இப்பொழுது எதிர்ப்பதில்லை; ஹிம்சிப்பதில்லை. எனினும் விஞ்ஞான உண்மைகள் மத உண்மைகளுக்கு முரணல்லவெனப் பாசாங்கு செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களின் ஆதியாகமம் பூகர்ப்ப சாஸ்திரத்துக்கு முற்றிலும் முரணானது. ஆனால் கிறிஸ்தவப் பாதிரிமார் சொல்வதென்ன? ''ஆதியாகமம் பூகர்ப்ப சாஸ்திரத்துக்குப் பொருத்தமானதே. பூகர்ப்ப சாஸ்திர உண்மைகளைத்தான் ஆதியாகமம் தெளிவாக விளக்கிக் கூறுகின்றன'' என பாதிரிமார் மழுப்புகிறார்கள். இவ்வளவாவது அவர்கள் ஒப்புக்கொள்ள முன் வந்தது அறிவியக்கத்துக்கு ஒரு பெரிய வெற்றியாகும். பூகர்ப்ப சாஸ்திரத்தையே ஒரு காலத்து எதிர்த்தவர்கள் இப்பொழுது இவ்வளவாவது ஒப்புக்கொள்வது பெரிய காரியமல்லவா! இதனால் விஞ்ஞான சாஸ்திரங்களை மதவாதிகள் ஒப்புக்கொள்வதாகவே ஏற்படுகிறது. ஆனால் அவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளவில்லை.



தீராப்பொறியாகவே ஒப்புக்கொள்கிறார்கள். அவர்கள் கூறுவது போல் கிறிஸ்தவ ஆகமம் பூகர்ப்ப சாஸ்திர உண்மைகளுக்கு அனு குணமாயில்லை. அனுகுணமாக இருப்பதாகக் கூறி, செத்து வரும் மத உணர்ச்சிக்கு - மத நம்பிக்கைக்கு - புத்துயிரளிக்கவே அவர்கள் முயல்கிறார்கள். விஞ்ஞான சாஸ்திர அறிவு பரவப்பரவ மத நம்பிக்கை ஒழிவது திண்ணம். ஒழியத் தொடங்கி விட்டது. ஏன்? ஒளியின் முன் இருள் நில்லாது. விஞ்ஞானம் ஒளி: மதம் இருள்.

**பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - ஆகஸ்ட் 1936**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரசும் வகுப்புவாதமும்

இந்தியாவில் காங்கிரஸ் என்பதாக ஒரு இயக்கம் ஏற்பட்ட பிறகே இந்தியாவில் வகுப்புவாதம் என்பதாக ஒரு உணர்ச்சி பல்வேறு மதஸ்தர்களுக்குள்ளும் பல்வேறு வகுப்பாருக்குள்ளும் ஏற்பட்டு அது நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது.

ஆதியில் காங்கிரசானது ஒரு ஐரோப்பிய ஐ. சி. எஸ். கனவானின் முயற்சியாலேயே ஏற்படுத்தப்பட்டது. அவர் பெயர் A.O. ஹியூம் என்பார்கள்.

### அப்படிப்பட்ட காங்கிரசின் கொள்கை

பிளவுபட்டுக் கிடக்கும் மக்களை ஒன்றுபடுத்துதல்,

சமூக கட்டுப்பாட்டிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் அரசியலிலும் இந்திய மக்களின் வாழ்கையை புதுப்பித்தல்,

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் என்றும் பிரிக்க முடியாத ஐக்கியத்தை ஏற்படுத்துதல் என்பனவாகும்.

### 1892 லேயே வகுப்புவாதம்

இந்தக்கொள்கைகளோடு ஏற்படுத்தப்பட்ட காங்கிரசில் அதுஏற்பட்ட 6,7 வருஷத்துக்குள் வகுப்பு உணர்ச்சிகள் ஏற்பட்டு அதாவது 1892-ம் ஷுத்திலேயே 1892-ம்ஷுத்து இந்திய கவுன்சில் ஆக்ட் என்னும் பேரால் ஒவ்வொரு வகுப்பாருக்கும் நியாயமான பிரதிநிதித்துவம் கொடுப்பதாகவும் பல ஸ்தாபனங்களுக்கும் சர்க்காரே நாமினேஷன் செய்ய அதிகாரம் வைத்துக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டு அரசாங்கத்தார் ஒரு சட்டம் செய்ய வேண்டிவந்தது.

### 1916ல் விகிதாச்சார வாதம்

இந்த சட்டம் ஏற்பட்டும் இந்துக்களிடம் முஸ்லீம்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போனதோடு காங்கிரசினால் ஏற்பட்ட பதவிகள் முஸ்லீம்களுக்கு சிறிதும் கிடைக்காமல் போனதால் 1906-ம் வருஷத்தில் முஸ்லீம்கள் தங்களுக்கு தங்கள் ஜன விகிதாச்சாரம் தனிப்பட்ட பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்க வேண்டியவர்களானார்கள். சர்க்காரார் அவ்வேண்டுகோளை ஒப்புக்கொண்டு முஸ்லீம்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம் தனித் தொகுதியின் மூலம் (அதாவது முஸ்லீம்கள் மாத்திரமே ஓட்டு செய்யும்படியான நிபந்தனையின் மீது) ஏற்படுத்தினார்கள்.



இவற்றின் பயனால் 1909 லேயே முஸ்லீம்களுக்கு தனித்தொகுதி மூலம் தனிப் பிரதிநிதித்துவம் கிடைத்தது விளங்கும்.

அப்படிக் கிடைத்ததும் போதுமானபடியாகவும் எல்லாத் துறைகளிலும் கிடைக்கக்கூடியதாயும் இல்லாததால், மறுபடியும் அதாவது 1916-ம் வருஷத்தில் முஸ்லீம்கள் காங்கிரசுடன் போராடி கிளர்ச்சி செய்ததின் பயனாய் அசம்பளி எலக்ஷனில் மொத்த அங்கத்தினர்களில் 3ல் ஒரு பாகம் முஸ்லீம்கள் தனித்தொகுதி மூலம் தேர்ந்தெடுக்கப்படவும், மாகாண சட்டசபைகளிலும் முஸ்லீம்களின் ஜனத் தொகைக்குத் தகுந்தபடி தனித் தொகுதி மூலம் மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படவும் காங்கிரசே ஒப்புக் கொண்டு அந்த ஒப்பந்தத்தை சர்க்காருக்கு தெரியப்படுத்தி அந்தப்படியே 1919 -ம் வருஷத்திய சீர்திருத்த சட்டத்திலும் விதி ஏற்படுத்தி இப்போது அமுலில் இருந்து வருகிறது. (இதற்குப் பெயர் லக்னோ பாக்ட் ஒப்பந்தம்)

### பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார்

இதை அனுசரித்துத்தான் பார்ப்பனரல்லாத இந்துக்களும் தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்களும் அந்த 1916-ம் வருஷம் முதல் கிளர்ச்சி செய்து வந்திருக்கிறார்கள். காரணம் காங்கிரசின் மூலம் வந்த பதவிகளும் பிரதிநிதித்துவங்களும் பெரிதும் பார்ப்பனர்களுக்கே கிடைக்கும்படியாகவும் மற்ற பெருங்குடி மக்களாகிய பார்ப்பனரல்லாதாருக்கு சிறிது கிடைப்பதும் மிகவும் கஷ்டமாய் விட்டதாலும் கிளர்ச்சி செய்யவேண்டியதாயிற்று. இப்படி யெல்லாம் இருக்க அதாவது சர்க்காரும் காங்கிரசும் முஸ்லீம்கள் விஷயத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒப்புக்கொண்டு அதுவும் தனித்தொகுதி மூலம் முஸ்லீம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஒப்புக்கொண்டு சுமார் 25 ஷு காலமாக அது அமுலிலும் இருந்து வரும்போது இன்று மாத்திரம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது எப்படி வகுப்புவாதம் ஆகும் என்றும் அது எப்படி தேசீயத்துக்கு விரோதமானதாகும் என்றும் நமக்கு புரியவில்லை.

### அப்பொழுதே ஏன் தடுக்கவில்லை?

உண்மையிலேயே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேசீயத்துக்கு விரோதமாக இருந்திருக்குமானால் இந்திய தேசீய காங்கிரசானது 1916-ம் வருஷத்தில் லக்னோவில் ஒப்புக் கொண்டிருக்குமா என்று யோசித்துப்பார்க்க விரும்புகிறோம். மேலும் 1909 -ல் மிண்டோ மார்லி சீர்திருத்தத்திலேயே வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவம் சேர்க்கப்பட்டிருக்கையில் அதைப்பற்றி காங்கிரஸ் அப்போது குறை கூறாதிருக்கக் காரணம் என்ன? என்றும் கேட்கின்றோம்.

ஆகவே காங்கிரசானது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரச்சினை ஏற்பட்ட பிறகுதான் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் வகுப்புவாதம் என்றும், தேசீயத்துக்கு விரோதம் என்றும் சொல்லத் தொடங்கி இருக்கிறதே தவிர வேறில்லை என்பதே நமது அபிப்பிராயம்.



RangaRakes tamilnavarasam.com

## 1919 –லும் காங்கிரஸ் ஒப்புக்கொண்டது

அப்படி இருந்தும் 1919-ல் காங்கிரஸ் பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் உத்தியோகங்களிலும் பிரதிநிதித்துவங்களிலும் 100க்கு 50க்கு குறையாமல் கொடுப்பதாக காங்கிரஸ் திட்ட விளம்பரத்தில் வெளியிட்டிருக்கிறதுடன் காங்கிரஸ் பார்ப்பனரல்லாதார் சங்கமாகிய சென்னை மாகாணச் சங்கம் என்பதிலும் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவ தீர்மானங்கள் செய்யப்பட்டு அதை காங்கிரஸ் தலைவர்கள் தோழர்கள் விஜயராகவாச்சாரியார், ராஜகோபாலாச்சாரியார் முதலியவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

## தேசீயவாதிகள் சங்கமும் ஒப்புக்கொண்டது

அது மாத்திரமா என்றால் சென்னை மாகாணத்தில் தேசீயவாதிகள் சங்கம் என்பதாக ஒரு சங்கம் 1920ம் வருஷத்தில் சௌந்திரிய மகாலில் கூட்டப்பட்ட காலத்தில் அங்கும் 100 க்கு 50க்கு கம்மி இல்லாமல் பார்ப்பனரல்லாதார்களுக்கு ஸ்தானம் கொடுப்பது என்றும் தீர்மானித்து தேசீய சங்க வேலைத் திட்டத்தில் விளம்பரப்படுத்தி இருக்கிறது.

இப்படி எல்லாம் இருக்கும் போது இன்று மாத்திரம் காங்கிரஸ்காரர்கள் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் என்றால் இவ்வளவு வேஷ அழுகை அழுவானேன் என்பது நமக்கு விளங்கவில்லை.

## இந்தியாவில் வகுப்புவாதம்

இந்தியாவில் ஜாதி மத வகுப்பு காரணமாக பிரிவு பட்ட மக்கள் பிணக்குப்பட்ட மக்கள் 1885 -ம் வருஷம் காங்கிரசு ஏற்படுத்தப்பட்ட காலத்திலேயே இருந்து இருக்கிறார்கள் என்பதற்கு அப்போதே ஏற்படுத்தப் பட்ட காங்கிரஸ் திட்டத்திலிருந்தே அறியலாம். அன்று முதல் இன்று வரை காங்கிரஸ்காரர்கள் அந்த பிரிவையும் பிணக்கையும் நீக்க எவ்வித சிறு முயற்சியும் எடுத்துக்கொண்டவர்கள் அல்ல. அதற்கு பதிலாக அநேக புதிய பிரிவினைகளை உண்டாக்கவே இடம் கொடுத்து வந்திருக்கிறார்கள் என்பதற்கு புள்ளி விவரங்கள் காட்டலாம்.

பஞ்சாபில் சீக்கியர் முஸ்லீம் தகராறு, வங்காளம் பம்பாய் ஐக்கிய மாகாணங்களில் இந்து முஸ்லீம் தகராறுகள், சென்னை பம்பாய் மத்திய மாகாணம் ஆகியவற்றில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் தகராறுகள், மலையாளம், திருவாங்கூர், கொச்சி தேசங்களில் இந்துக்கள் கிறிஸ்தவர்கள் - நாயர், ஈழவர் தகராறுகள் - மாப்பிள்ளைமார், நாயர்கள் என்பன போன்ற தகராறுகள் இருந்து வருகின்றன. இவை மாத்திரமா என்று பார்த்தால் ஆந்திரர், திராவிடர், மலையாளிகள், கர்னாடகர்கள் என்பன போன்ற தேசத் தகராறுகள் இருப்பதுடன் இன்னமும் பல உள் தகராறுகளும் இருப்பது நாம் அறியாததல்ல.



## காந்தியும் ஜவஹரும்

இவற்றை சரிப்படுத்த காங்கிரஸ் எடுத்துக்கொண்ட முயற்சி இன்னது என்று யாராவது ஒரு விரல் விட்டு எடுத்துக்காட்ட முடியுமா என்று கேட்கின்றோம்.

தோழர்கள் காந்தியாரும் ஜவஹர்லாலும் ''அந்நிய ஆட்சி இருப்பதால்தான் இம்மாதிரி வகுப்புவாதம் ஏற்படுகிறது என்றும் இது ஒழிந்துபோனால் வகுப்புவாதம் போகும்'' என்றும் இப்போது கூறுகிறார்கள். இவர்கள் இருவர் அபிப்பிராயங்களை மாத்திரம் ஏன் எடுத்துக்காட்டுகிறோம் என்றால் அரசியலில் இப்போது இவ்விருவர் பெயரே அதிகமாக விளம்பரப் படுத்தப் படுவதால் இவர்களைப்பற்றி கூறவேண்டியிருக்கிறது.

முன்னையவர் தோழர் காந்தியார் அரசியல் ஞானமும் முன்யோசனையும் இல்லாதவர். பின்னையவரான தோழர் ஜவஹர்லால் நேருவோ அனுபவ ஞானமில்லாத புஸ்தகப் பூச்சியே ஆவார்.

தோழர் காந்தியார் 1920-ல் ''இந்து முஸ்லீம் ஒற்றுமை இல்லாமல் சுயராஜ்யம் கிடைக்காது, கிடைத்தாலும் பெறமாட்டேன்'' என்று சொன்னவர் இன்று ''சுயராஜ்யம் வந்த பின்தான் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படும்'' என்று சொல்லுகிறார்.

அன்றியும் ஒற்றுமைக்காக என்று அவர் கொண்ட பட்டினி வேஷம் முதல் ஒவ்வொரு காரியங்களிலும் தோல்வியே அடைந்தார். தோழர் ஜவஹர்லாலும் வாயில் சில சமயம் சமதர்மம் பேசினாலும் காந்தியார் கூடவே பின் தாளம் போட்டவர்.

## வகுப்புவாதத்துக்கு உத்திரவாதம்

இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பிணக்கு வரவும் ஒற்றுமை ஏற்படாமல் இருக்கவும் காரணம் என்ன என்பதை தோழர்கள் காந்தி, நேரு இருவருமே கண்டு பிடிக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். கண்டு பிடித்திருந்தால் அவரவர் மதத்தையும் பழக்க வழக்கத்தையும் அனுபவ உரிமையையும் இவைகள் சம்பந்தமான சாஸ்திர ஆதாரங்களையும் சுயராஜ்ய சர்க்காரில் காப்பாற்றிக் கொடுக்கப்படும் என்று உத்திரவாதம் ஏற்றுக் கொண்டிருப்பார்களா? என்று யோசித்துப்பார்க்க விரும்புகிறோம்.

## இவ்வளவு மாத்திரமா?

1931 ம் வருஷத்திய காங்கரஸ் வேலைக் கமிட்டியானது பிரஜா உரிமை திட்டம் என்பவற்றில் ஒன்றாக

> ''இந்தியாவில் உள்ள ஒவ்வொரு வகுப்பார்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவரவர்களுடைய கலை, பாஷை, எழுத்து, கல்வி, தொழில், மத ஆச்சாரம், மத தர்மம் ஆகியவைகள் காப்பாற்றிக் கொடுக்கப்படும்''

என்கின்ற தீர்மானத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

மற்றும் ஒவ்வொரு சமூகத்துக்கும் உள்ள தனிப்பட்ட உரிமைகளையும் காப்பாற்றப்படும். ஒவ்வொரு சிறுபான்மை சமூகத்துக்கும் அரசியல் உரிமை காப்பாற்றப்படும் என்றும் உத்திரவாத மேற்றுக் கொண்டிருக்கிறது.

அதன் இங்கிலீஷ் வாசகத்தை அப்படியே கீழே குறிப்பிடுகிறோம். (இது காங்கரஸ் ஆதாரங்களில் இன்றும் இருக்கிறது)

1. The article in the constitution relating to Fundamental Rights, shall include a guarantee to the communities concerned of protection of their culture, languages, scripts, education, profession, practice, religion and religious endowments.
2. Personal laws shall be protected by specific provision to be embodied in the constitution.
3. Protection of political and other rights of minority communities in various provinces shall be the concern, and be within the jurisdiction of the Federal Government.

இவை அந்நிய அரசாங்கத்தாரால் ஏற்பட்ட பிரிவினை காப்புத் திட்டமா என்று தோழர் ஜவஹர்லாலை கேட்கின்றோம். அவரது ''சிஷ்யர்''களையும் கேட்கின்றோம்.

### பழய சுயராஜ்ய காலம்

இது எப்படியோ இருந்தபோதிலும் இந்தியாவில் அந்நிய அரசாங்கம் இல்லாமல் சுயராஜ்ய அரசாங்கம் இருந்த காலத்தில் தானே இந்தியா 56 தேசமாகவும், பாஷைவாரி தேசவாரியான ராஜாங்கமும், ஜாதிக்கு ஜாதி சதா குத்து வெட்டும் பாஷைக்கு பாஷை சதா கொள்ளையும் கொலையும், தேசத்துக்கு தேசம் சதா படையெடுப்பும் கலாபமும் நடந்த வண்ணமாய் இருந்தன என்பதை தோழர்கள் காந்தியாரோ நேருவோ ஆட்சேபிக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

### புரோகித பித்தலாட்டம்

குழந்தைக்கு தலைவலி என்றால் கிரகதோஷம் என்று புரோகிதனும், சாமி தோஷம் என்று அர்ச்சகனும் சொல்லி கொள்ளையடித்து குழந்தையை கொல்வதுபோல் இந்தியாவில் வகுப்புச்சச்சரவு வகுப்பு கொடுமை இருக்கிறது. இதற்கு ஒரு வழி சொல்லு என்றால் சுயராஜ்ய மில்லாததால் என்று காந்தியாரும் அந்நிய அரசரால் என்று நேருவும் சொல்லி மக்களை ஏமாற்றி தலைவர் பட்டம் பெற்று தேசத்தைப் பாழாக்குவதென்றால் இதை அறிவுள்ள யார்தான் பொறுத்திருக்க முடியும்? என்று கேட்கின்றோம். மற்றும் இவ்வளவு ஜாக்கிரதையாக ஒவ்வொரு வகுப்பாருக்கும் அவரவர்கள் மதம், பழக்க வழக்கம், ஆச்சார அனுஷ்டானம், தொழில் ஆகியவைகளைக் காப்பாற்ற உத்திரவாதம் ஏற்றுக்கொண்ட காங்கிரஸ் அந்தந்த வகுப்பாருக்கு பிரதிநிதித்துவம் கொடுப்பதில் மாத்திரம் என்ன மாட்டிக்கொண்டது என்பது நமக்கு விளங்கவில்லை.

இதை கேட்பதாலேயே நாம் வகுப்புவாதி, தேசத்துரோகி ஆகி விடுவதாய் இருந்தால் இதை எதிர்க்கும் இந்த நாட்டின் தேசீயவாதி களுக்கும் தேசாபிமானிகளுக்கும் என்ன பெயர் இட்டு அழைப்பது என்பது நமக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் சுயநலவாதி என்றோ சமூகத் துரோகி என்றோ தான் அழைப்பது பொருத்தமாக இருக்கலாம்.

### நாயுடு, ஜோசப்பு

சமீபத்தில் தோழர்கள் வரதராஜுலு நாயுடுகாரும் ஜார்ஜ் ஜோசப்பு அவர்களும் காங்கிரசில் சேர்ந்துவிட்டார்கள் என்றும் தோழர் கல்யாணசுந்திர முதலியார் அவர்கள் முன்னமே சேர்ந்துவிட்டார்கள் என்றும் ஆதலால் ஈ. வெ. ராமசாமியும் உடனே வந்து சேரவேண்டும் என்றும் சில தோழர்கள் விரும்புவதாக பத்திரிகையில் பார்த்தோம். இரண்டொரு பத்திரிகைகள் உபதலையங்கத்திலும் குறிப்பிட்டிருக்கின்றன.

தமிழ்நாட்டில் உள்ள எல்லா பத்திரிகைகளையும் எல்லா காங்கிரஸ் அபிமானிகளையும் ஒன்று கேட்கின்றோம்.

### ஏன் போனார்கள்? ஏன் வந்தார்கள்?

அதாவது மேல்கண்ட மூவரும் எதற்காக காங்கிரசை விட்டுப் போனார்கள்? எதற்காக காங்கிரசில் வந்து சேர்ந்தார்கள் என்பதற்கு விடையளிக்க முடியுமா என்பது தான்.

இதற்கு மற்றும் வேறு யாராவது விடையளிக்கக்கூடுமா என்றும் கேட்கின்றோம்.

### தோழர் முதலியார்

தோழர் முதலியார் அவர்கள் பழைய காலத்து சோடா பாட்டல் மாதிரி ஒருநாளும் ஒரு குறிப்பிட்ட கொள்கையின் மீது நின்று அறியாதவர். கொஞ்ச நாளைக்கு முன்பு காஞ்சீபுரத்தில் பார்ப்பனரல்லாதார் காங்கிரசு கூட்ட முயற்சித்தார். மறுபடியும் 4 நாளையில் யாரோ ராஜிநாமா கொடுத்து விட்டதால் பார்ப்பனரல்லாதார் காங்கிரசு கூட்ட வேண்டியதில்லை என்றார்.

மறுபடியும் 4 நாள் பொறுத்து தோழர் சத்தியமூர்த்தியார் தஞ்சைப் பேச்சில் ''தோழர் ராமசாமி கேட்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நியாயமான தென்றும் அதுவிஷயமாய் எல்லா இந்திய காங்கரஸ் கமிட்டி மூலம் ஒரு அறிக்கை வெளியிடுவதாகவும்'' கூறியதைப் பார்த்து தோழர் முதலியார் தனது பத்திரிகையில் தோழர் மூர்த்தியார் மீது கோபித்து



RangaRakes tamilnavarasam.com

வசவுமாலை சூட்டினார். ''நான் கூடாது என்கின்ற போது நீர் எப்படி அதை ஏற்றுக் கொள்ளலாம்'' என்கின்ற அகம்பாவ தொனியே அம்மாலையில் புஷ்பங்களாக பிணைக்கப்பட்டிருந்தது.

மற்றபடி நாயுடுகாரை பற்றியும் ஜோசப்புகாரைப்பற்றியும் நாம் என்ன சொல்ல முடியும்? அவர்கள் அரசியல் வாதிகள். தோழர் ராமசாமியோ சமூகவாதி. தோழர் ராமசாமிக்கு ராமாயணக் கதையில் இந்தியாவை 14 வருஷ காலம் செருப்பு அரசாட்சி செய்தது என்று காணப்படுவது போல் இந்தியாவை ஒரு ''கழுதை'' அரசாட்சி புரிந்தாலும் அவருக்குக் கவலை இல்லை. ஆனால் சர்வ சமூகமும் சமத்துவத்துடன் ஆளப்படவேண்டும் என்கின்ற கொள்கை வாதியாவார்.

அரசியல்வாதிகளான மேல்கண்ட கனவான்களோ இந்தியாவை இந்தியர்கள் ஆளவேண்டு மென்பார்கள், அல்லது இந்தியர் இஷ்டப்படி ஆளவேண்டு மென்பார்கள் அவ்வளவுதான். கொள்கைகளைப்பற்றி அவர்களுக்கு கவலை கிடையாது, இருக்குமானால் கராச்சித் திட்டத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்களா? அல்லது சகல வகுப்பாருடைய வகுப்பு பழக்க வழக்க உரிமையை ஒப்புக் கொண்டிருப்பார்களா? இரண்டையும் அவர்களுக்குக் கவனிக்க வேண்டிய அவசியமில்லாமல் செய்து விட்டது அவர்களுடைய அரசியல் வாதமே யாகும்.

## ஜோசப் கற்ற பாடம்

தோழர் ஜோசப்பு அவர்கள் ஒரு காலத்தில் மதுரை முனிசிபல் கவுன்சிலுக்கு காங்கிரசின் பேரால் நிறுத்தப்பட்டிருந்தார். மற்றொரு பார்ப்பனர் காங்கிரசு அல்லாதவராய் நின்று அவருடன் போட்டி போட்டார். காங்கிரஸ் பார்ப்பனர்கள் எல்லோரும் சேர்ந்து வேலை செய்து காங்கிரஸ் ஜோசப்பை தோற்கடித்து, காங்கிரஸ் அல்லாத பார்ப்பனரை ஜெயிக்க வைத்தார்கள். இது போன்ற இன்னும் பல அனுபவங்களும் அவருக்கு உண்டு. அப்படியே,

## நாயுடு கற்ற பாடம்

தோழர் வரதராஜுலு நாயுடுகாருக்கும் பல அனுபவங்கள் உள்ளதில் ஒரு சின்ன உதாரணம் கூறுவோம். 500ரூ செலவு செய்து சேலம் காங்கிரஸ் கமிட்டியை கைப்பற்றினார். அந்த கமிட்டியை பார்ப்பனர்கள் செல்லுபடியற்ற தாக்கி விட்டு தோழர் கே.வி. சுப்பராவ் கமிட்டியை ஒப்புக் கொள்ளப்பட்டது.

1000 ரூ போல் செலவிட்டு சேலத்தில் ஒரு காங்கிரஸ் கான்பரன்ஸ் பிரபல தேச பக்தர் தோழர் வி.ஒ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் தலைமையில் கூட்டப்பட்டது. அதையும் பார்ப்பனர்கள் காங்கிரஸ் மகாநாடு அல்லவென்று தீர்மானித்து விட்டார்கள்.



இவை மாத்திரமல்லாமல் கோவை ஜஸ்டிஸ் மகாநாட்டில் பார்ப்பனரல்லாதார் எல்லோரும் (ஜஸ்டிஸ் உள்பட) காங்கிரசில் சேருவது என்று தீர்மானம் செய்தபடி எல்லோரும் காங்கிரசில் சேரப் போனார்கள். அந்தக் காலத்தில் மெம்பர் சேர்க்கும் பாரங்கள் எல்லாம் பார்ப்பனர்கள் கைக்குப் போய் மெம்பராக சேருகிறவர்கள் விண்ணப்பம் போட வேண்டும் என்றும், விண்ணப்பம் தமிழ்நாடு கமிட்டி தலைவரால் அனுமதிக்கப்பட்ட பின்பு மெம்பர் பாரத்தில் கையெழுத்து வாங்கப்படும் என்றும் எழுதாத சட்டம் தாண்டவமாடிற்று. அதை மீறிச் செய்த காரியம் எல்லாம் தமிழ்நாடு காரியக் கமிட்டியில் அங்கீகரிக்கப்படாமல் போய்விட்டது. அதில் சில தான் தோழர் நாயுடுகார் கமிட்டிகளும் மகாநாடும் ஆகும்.

## ஈ.வெ. ராமசாமி

இன்றைய தினமும் காங்கிரசின் சூழ்ச்சிகளைப் பற்றியும் பார்ப்பனர்களின் தொல்லையைப் பற்றியும் தோழர் ஈ.வெ. ராமசாமி பயப்படவில்லை.

ஆனால் காங்கிரசின் கொள்கை இன்னது என்றும், காங்கிரஸ் ஆட்சியில் பல வகுப்பு மக்களின் நிலை இன்னது, அவர்களின் பிரதிநிதித்துவ உரிமை இன்னது என்றும் தெரிய வேண்டாமா என்பதுதான் அவரது கவலை.

## மந்திரி மோகம்

வரப்போகும் சீர்திருத்தத்தில் 7 பேருக்கு மந்திரி பதவி கிடைக்கலாம்.

அவற்றுள் ஒன்று சாயபு, ஒன்று தீண்டப்படாதார், ஒன்று கிறிஸ்தவருக்கும் கொடுத்தாக வேண்டும். தமிழ் நாட்டு பார்ப்பனருக்கு (தோழர் மூர்த்திக்கு) ஒன்று, ஆந்திர நாட்டுப் பார்ப்பனருக்கு (தோழர் பிரகாசத்துக்கு) ஒன்று மீதி 2 அல்லது அதிகமானால் மூன்று மந்திரி ஸ்தானங்கள் மீதி இருக்கும். இதில் பார்ப்பனரல்லாதார் இந்துக்களாகிய 100க்கு 60 க்கு மேற்பட்ட மக்களுக்கு எப்படிப் பங்கிட முடியும் என்று யோசித்தால் அந்த சமயம் காங்கிரசுக்காரர்களுக்குள் ஒரு பிளவு ஏற்பட்டு பழையபடி ஜஸ்டிஸ் அல்லது ஜனநாயகம் அல்லது கூட்டுக்கட்சி என்பன போன்றவைகள்தான் மந்திரிசபை அமைக்கக் கூடிய நிலைமைக்கு வரலாம். அந்த சமயம் இப்போது காங்கிரசில் சேரும் தோழர் சுப்பராயன் முதல்கொண்டு புதிய காங்கிரஸ்வாதிகள் நிலைமை என்ன ஆகும் என்பது கஷ்டமான பிரச்சினையாகத்தான் இருக்கிறது என்பதை புதிதாய் போய் சேரும் காங்கிரஸ்காரர்களுக்கு ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

## ஈ.வெ. ராவும் தயார்

இது எப்படியோ இருந்தாலும் தோழர்கள் நாயுடுகாரும் ஜோசப்புகாரும் கராச்சி பிரஜா உரிமைத் திட்டத்தையும் காங்கிரஸ் வேலைக்கமிட்டித் திட்டத்தையும் தெரிந்து அதை ஒப்புக் கொண்டுதான் காங்கிரசில் சேர்ந்தார்களா?



RangaRakes tamilnavarasam.com

அல்லது எதுவோ எப்படியோ போகட்டும் ஏதாவது ஒரு கட்சியில் சேர்ந்து தொலைய வேண்டுமே என்று கருதி சலிப்புடன் சேர்ந்தார்களா? என்பது நமக்கு புரியவில்லை. எப்படியானாலும் சரி இப்போது தோழர் ஈ.வெ. ராமசாமி காங்கிரசில் சேரத் தயார் தான். ஆனால் காங்கிரசு முஸ்லீம்களுக்கும் தீண்டப்படாதவர்கள் என்பவர்களுக்கும் மற்றும் சீக்கியர்கள் நாட்டுக் கோட்டையார் அவர்களுக்கும் சீர்திருத்தத்தில் அளித்திருக்கும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவப்படியும் உத்தியோகத்திலும் அந்தப்படியும் நமக்கும் ஒப்புக்கொண்டு ஜாதி மதவகுப்பு பேதங்களையும் வித்தியாசங்கள் முதலிய சமூகக் கொடுமைகளையும் ஒழிக்க சட்டம் செய்வதாகவும் ஒப்புக் கொள்வதானால் தான் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தோழர்கள் நாயுடுகாரும் ஜோசப்புகாரும் மற்றும் ராமசாமியை காங்கிரசுக்கு அழைப்பவரும் இது விஷயத்தில் சிறிது சிரமம் எடுத்து, கைகூடும்படி செய்து விட்டால் பெரிய உபகாரமான காரியமாகும். அப்படிக்கில்லாமல் ஏதோ ஒரு கூட்டத்தார் மாத்திரம்தான் அவர்கள் எப்படிப்பட்ட எண்ணக்காரர்களானாலும் தேச பக்தர்கள் போலவும் மற்றவர்கள் எப்படிப்பட்ட உண்மையானவர்களானாலும் தேசத் துரோகிகள் என்றும் சொல்லுவதானால் அந்த தேச பக்தர்கள் தேவதாசி என்கின்ற சொல்லுக்கு இன்று என்ன அர்த்தமோ அந்த அர்த்தத்துக்கு தான் உரிமையுடையவர்களாவார்கள்.

இந்த நாட்டில் சமுதாயத் துறையிலும் மதத்திலும் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனரல்லாதார்களுக்கும் இருக்கும் வித்தியாசமானது இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமோ அல்லது இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமோ இருக்கும் வித்தியாசத்தைவிட குறைந்ததல்ல.

ஆதலால் ஒரு கூட்டத்தாரின் பிரிவுக்கு ஒப்புக்கொண்ட வகுப்பு உரிமை மற்றக் கூட்டத்தாருக்கு ஒப்புக் கொள்வதில் என்ன ஆக்ஷேபணை என்பது நமக்கு விளங்கவில்லை.

தோழர் ஈ.வெ.ராமசாமி மந்திரி பதவியோ மற்ற ஏதாவது உத்தியோக பதவியோ எதிர்பார்த்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பதாய் யாரும் கருதிவிடக்கூடாது. தான் அவற்றிற்குத் தகுதியல்ல வென்றும், தனக்கு அவை தேவை இல்லை என்றும், அடைவதில்லை என்றும் எழுதிக் கொடுக்க எப்பவும் தயார். ஆதலால் அந்தக் கருத்தைக் கொண்டு இவற்றை கவனிக்காமல் பொது தேச சமூக நலத்தைக் கொண்டு கவனித்துப் பார்க்கும்படி தேச பக்தர்கள் - காங்கிரஸ்காரர்கள் என்பவர்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 06.09.1936**



# காங்கரஸ் நாடகம்

## போலி கட்டுப்பாடு

சென்னை சட்டசபையில் இனாம் மசோதா ஆலோசனைக்கு வந்தபோது அதை ஒத்திவைக்க வேண்டுமென்று வந்த தீர்மானத்தைப் பல காங்கரஸ் மெம்பர்கள் எதிர்த்தார்கள். தோழர் சுப்பராயன் (காங்கரஸ் மெம்பர்) அத்தீர்மானத்தை ஆமோதித்தார். ஆனாலும் காங்கரஸ் சபைதான் கட்டுப்பாடுள்ளதாம்.

### தடி அடி வாழ்த்து

காங்கரஸ் தொண்டர்கள் தடியடிபட்ட காலத்தில் போலீஸ் தலைமை உத்தியோகஸ்தரைப் பாராட்டிப் பேசிய தோழர் சுப்பராயன் இன்று காங்கரசுக்கு நண்பர், காங்கரஸ் தலைவர் ஆகிவிட்டார்.

ஆனால் ஜஸ்டிஸ் கட்சியை இந்த காரணத்துக்காக காங்கரஸ்காரர்கள் வைகிறார்கள். ஆனாலும் காங்கரஸ்காரர்களுக்குத்தான் நியாய புத்தி இருக்கிறதாம்.

### காங்கரஸ் அரசியல் ஞானம்

சீர்திருத்தத்தின்படி ஏற்படப்போகும் புதிய சட்டசபையில் புகுந்து சீர்திருத்தத்தை உடைத்து அது நடைபெறவொட்டாமல் செய்ய வேண்டும் என்கின்ற காங்கரஸ்வாதிகள் எந்த யோக்கியதையைக் கொண்டு இனாம் மசோதாவை சீர்திருத்தப்படி ஏற்படப்போகும் புதிய சட்டசபையில் நிறை வேற்றலாம் என்று சொல்லுகிறார்களோ தெரியவில்லை. ஆனாலும் காங்கரஸ்காரர்களின் அரசியல் ஞானம் இதுதானாம்.

### என்ன செய்யப் போகிறார்கள்?

இந்நிலைமையில் கட்டுப்பாட்டுக்கு விரோதமாய் நடந்த தோழர் சுப்பராயன் அவர்களை காங்கரசு என்ன செய்யப்போகிறது? ஆனாலும் காங்கரசில்தான் கட்டுப்பாடு இருக்கிறதாம்.

**குடி அரசு - கட்டுரை - 06.09.1936**



RangaRakes tamilnavarasam.com

# காங்கரஸ் ஆர்ப்பாட்டம்

வீண் ஆர்ப்பாட்டம் செய்வதில் பெயர் பெற்றவர்கள் காங்கரஸ்காரர். ஆனால் அந்த ஆர்ப்பாட்டம் கண்ணியமும் பொறுப்பும் வாய்ந்த பதவி வகிப்பவர்களுக்கு அவமதிப்பையுண்டு பண்ணக்கூடியதாயிருந்தால் அதை அறிவாளிகள் ஆதரிக்கவே மாட்டார்கள். இம்மாதம் 2-ந் தேதி இந்தியச் சட்டசபையில் காங்கரஸ்காரர் ஆடிய வெளியேற்ற நாடகமானது தலைவரை அவமதிக்கத்தக்கதாயும் அறிவாளிகள் வெறுக்கக் கூடியதாயும் இருக்கிறது.

பிரிட்டிஷ் ஜவுளியின் இறங்குமதி வரியைச் சட்டசபையைக் கலக்காது குறைத்துவிட்டது சம்பந்தமாக சர்க்கார் நடத்தையைப் பற்றி ஆலோசிப்பதற் காகச் சட்ட சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கோவை மெம்பர் தோழர் அவினாசிலிங்கம் செட்டியார் ஒரு அவசரப் பிரேரணை கொண்டுவந்தார். தோழர் செட்டியார் பேசியபிறகு எக்கட்சியிலும் சேராத ஸர். கஜ்னாவியும், ஐரோப்பிய மெம்பர் தோழர் ராம்ஸே ஸ்காட்டும் அவருக்குப் பிறகு எக்கட்சியிலும் சேராத ஸர்.ஆர்.எஸ். சர்மாவும் பிரேரணையை எதிர்த்துப் பேசினார்கள். அப்பால் தோழர் கிருஷ்ண காந்த மாளவியாவும் டாக்டர் ஜியாவுதீனும், காங்கரஸ் மெம்பர் பந்தும் பிரேரணையை ஆதரித்துப் பேசினார்கள். தோழர் பந்துவின் பேச்சுக்கு ஐரோப்பிய மெம்பர் தோழர் இ.எப். ஜேம்ஸ் பதிலளித்தார். அப்பால் தொழிலாளர் பிரதிநிதியான எஸ்.எம். ஜோஷி பேசினார். உடனே விவாதத்தை முடிக்கவேண்டுமெனப் பலர் கூறினர். அப்பால் சர்க்கார் மெம்பர்கள் யாராவது பேச விரும்புகிறார்களா என்று தலைவர் கேட்டு அவர்கள் பேசுவதற்கு அதுதான் தருணம் என்றும் குறிப்பிட்டார். அதன்பேரில் வர்த்தக மந்திரி ஸர். ஜாபருல்லாகான் எழுந்து விவாதத்தில் சொன்ன விஷயங்களுக்கு பதிலளித்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் காங்கரஸ் பிரதம கொறடாவான ஜனாப் அஸாப்அலி தலைவரிடம் சென்று மேற்கொண்டு காங்கரஸ் மெம்பர்கள் பேச விரும்பவில்லை யென்றும் பிரேரணையை வோட்டுக்கு விட்டுவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். வோட்டுக்கு விடும் விஷயம் விவாதப் போக்கைப் பொறுத்திருக்குமென்று தலைவர் தெரிவித்தார்.

ஸர். ஜாபருல்லா பேசி முடிந்ததும் தோழர் சத்தியமூர்த்தி தலைவரிடம் சென்று விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டு மென்றும் பிரேரணையை வோட்டுக்கு விடாமல் தடுக்கச் சர்க்கார் பொக்கிஷ மந்திரியைப் பேசும்படி கேட்கப்போவதாகவும் தெரிவித்தார்.



அப்பிரேரணையினால் பொக்கிஷ மந்திரியின் இலாகாவும் பாதித்திருப்பதினால் அவர் பேச விரும்பினால் அவருக்கும் சந்தர்ப்பமளிக்க வேண்டியிருக்குமென்று தலைவர் தோழர் சத்தியமூர்த்தியிடம் தெரிவித்தார். கடைசியில் விவாதத்துக்கு பதிலளிக்க பொக்கிஷ மந்திரி ஸர். ஜேம்ஸ் கிரிக் எழுந்தார். அப்பொழுது மணி 5.45. காங்கரஸ்கட்சித் தலைவர் தோழர் புலாபாய் தேசாய் எழுந்து பிரேரணையைப் பேசித் தீர்த்து விட இது ஒரு சூழ்ச்சியென்றும், ஸர்.ஜேம்ஸ் கிரிக் பேச விரும்பினால் முன்னாடியே பேசியிருக்க வேண்டு மென்றும் கூறி வெட்கம் வெட்கம் என்ற கோஷத்துடன் அசம்பிளியை விட்டு வெளியேறினார். ஏனைய மெம்பர்களும் அவரைப் பின் தொடர்ந்தார்கள். தோழர் தேசாய் சொன்னது சரிதானென்றும் ஆனால் பொக்கிஷ மாதிரி பேச விரும்பு வதினால் அவருக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டியது அவசியமென்றும் தலைவர் கூற பொக்கிஷ மந்திரி பேசத்தொடங்கி 6 மணியானவுடன் பிரேரணை பேசி முடிக்கப்பட்டது. இதுதான் காங்கரஸ் வெளியேற்ற நாடகத்தின் மர்மம்.

காங்கரஸ் மெம்பர்கள் சபையை விட்டு வெளியேறி தலைவரை அவமதித்ததோடு நில்லாமல் சில காங்கரஸ் கட்சி மெம்பர்கள் 3 அவமரியாதையான கடிதங்களையும் தலைவருக்கு அனுப்பினார்களாம். ஆகவே பிரஸ்தாப சம்பவத்தைப்பற்றி அசம்பிளித் தலைவர் கனம் ஸர். அப்துர் ரஹிம் அசம்பிளியில் வெளியிட்ட ஒரு அறிக்கையில் ''சபையோருக்குத் தலைவரிடம் நம்பிக்கை இல்லாவிட்டால் அதனை வற்புறுத்த வேறு முறையுண்டு. அம்முறையை அனுசரிக்காதவரை தலைவர் தீர்ப்பை அசம்பிளி சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ள விரும்பாவிட்டால் ஆர்ப்பாட்டம் எதுவும் செய்யாமலாவது கீழ்ப்படிய வேண்டும். இது பற்றிய விவாதத்தை நான் விரும்பவில்லை. மெம்பர்கள் இந்நிலையைப் பற்றி அமைதியாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறேன். அவர்களது அபிப்பிராயங்களைத் தெரிவிக்க அவர்களுக்குக் கூடிய சீக்கிரம் சந்தர்ப்பம் அளிக்கப்படும்'' எனக் குறிப்பிட்டார்.

மறுநாள், நிலைமையை அமைதியாகச் சிந்தித்துப் பார்த்து காங்கரஸ் கட்சித் தலைவர் தோழர் புலாபாய் தேசாய் ''அசெம்பிளியில் அன்று நாங்கள் வெளியேறியது ஒரு தவறை ஏக காலத்தில் கண்டிக்கும் பொருட்டேயாகும். தலைவர்மீது நம்பிக்கையில்லாததினால் நாங்கள் வெளியேறவில்லை. ஆனால் மொத்தத்தில் சம்பவத்தைக் கண்டிக்கும் மூலமாகவும் அதிலும் விசேஷமாக சர்க்காரின் நடத்தையைக் கண்டிக்கவும் தலைவர் தீர்ப்பினால் அடைந்த ஏமாற்றத்தை வெளிப்படுத்தவுமே வெளியேறினோம்'' என அசம்பிளியில் சமாதானம் கூறி காங்கரஸ் கூத்தை முடித்தாராம்.

**''தலைவர் தீர்ப்பினால் அடைந்த ஏமாற்றத்தை வெளிப்படுத்து வதற்காக, மெம்பர்கள் அசம்பிளியை விட்டுக் கும்பலாக வெளியேறியது''** தலைவரை அவமதித்ததாகுமா ஆகாதா என்பதை நிர்ணயம் செய்யும் பொறுப்பை சட்ட நிபுணர்களுக்கு விட்டுவிடுகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

பிரேரணையைப் பேசி முடித்து விடலாமென்று எண்ணிக்கொண்டு கடைசி நேரத்தில் பொக்கிஷ மந்திரி பேச எழுந்திருந்ததாகவே வைத்துக் கொண்டாலும் அது எப்படித் தவறாகும்? சட்ட நிபுணரான தோழர் புலாபாய் தேசாய் கோபித்துக்கொண்டது எவ்வாறு நியாயமாகும்? எனக் கேட்கிறோம்.

இந்தியச் சட்டசபைக்குச் சென்ற காங்கரஸ் மெம்பர்கள் ஆக்க வேலை செய்யும் நோக்கத்துடன் செல்லவில்லையென்பது உலகப் பிரசித்தமான விஷயம் பகிஷ்காரங்கள், சட்ட மறுப்புகள், உப்புப்போர், மறியல் முதலியன வெல்லாம் தோல்வியடைந்து காங்கரஸ்காரர்களுக்கு வெளியில் தலை நீட்ட முடியாமலானபோது சட்டமறுப்பை நிறுத்திவிட்டு சட்டசபைகளில் புகுந்து முட்டுக்கட்டை போட்டு சர்க்காரிடம் பழிக்குப்பழி வாங்கிவிடலா மென்று தீர்மானித்தார்கள். காங்கரஸ்காரர் அசம்பிளியில் சென்ற நாள் முதல் இதுவரை அந்தப் பழிக்குப்பழி வாங்கும் வேலையே நடந்து வருகிறது. உருவான வேலை ஒன்றையாவது அவர்கள் செய்ய வில்லை. சர்க்காருக்குத் தோல்வி மேல் தோல்வி என விளம்பரம் செய்து தமது கையாலாகாத்தனத்தையும் அரசியல் முட்டாள் தனத்தையும் மறைக்கும் பொருட்டு ‘‘தோல்விக்குமேல் தோல்வி’’ உண்டாக்கினார்கள். அத்தோல்விகள் எல்லாம் வெறும் காகிதத் தோல்விகளே. அந்த தோல்விகளினால் சர்க்காரின் சுள்ளாணிகூட அசையவில்லை. சர்க்கார் தன் போக்கில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அசம்பிளி கூடும் போதெல்லாம் சர்க்கார் தோற்கடிக்க வழி யென்னவென்றால் காங்கிரஸ்காரர் சூழ்ச்சி செய்தும், அச்சூழ்ச்சி களிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள சர்க்கார் மெம்பர்கள் முயல்வதும் ஒரு வாடிக்கையாகப் போய்விட்டது.

சர்க்கார் செயல்களில் குற்றம் காண்பதே காங்கரஸ்காரர் தொழிலாகப் போய்விட்டது. சர்க்கார் மெம்பர்களும் காங்கரஸ் மெம்பர்களைப்போல மனிதர்கள் தான், காங்கரஸ் மெம்பர்கள் குறும்புக்கு பதில் குறும்பு செய்ய சர்க்கார் மெம்பர்கள் முயன்று அது மன்னிக்கக்கூடிய ஒரு அரசியல் குற்றமே. ஆனால் அந்த குறும்புக்கு சட்ட ஆதரவுண்டு என்பதை மட்டுமே நான் கவனிக்கவேண்டும். தர்ம நியாயங்களை கவனிக்கத் தேவையே இல்லை. அரசியல் சதுரங்கத்தில் தர்ம நியாயங்களுக்கு இடமே இல்லை. சட்ட நியாயங்களுக்குத்தான் இடமுண்டு. அசம்பிளித் தீர்மானங்களை வைஸ்ராய் நிராகரிப்பது தர்ம நியாயப்படி தப்பாக இருக்கலாம்; சட்ட நியாயப்படி தவறல்ல; ஏன்? சந்தர்ப்பத்துக்கு தக்கபடி பிரயோகம் செய்து சர்க்காரைக் காப்பாற்ற தேவையான விசேஷ அதிகாரங்களை யெல்லாம் சட்டம் வைஸ்ராய்க்கு அளித்திருக்கிறது. அதுபோலவே முக்கியமான பிரேரணைகளை வோட்டுக்கு விடவொட்டாமல் பேசித் தீர்த்துவிடுவது தர்ம நியாயப்படி தவறாக இருக்கலாம்; ஆனால் சட்ட நியாயப்படி தவறல்ல, ஏன்? சட்டம் அதற்கு இடம் கொடுக்கிறது. பூரண சுயேச்சை நாட்டு பார்லிமெண்டுகளிலும் அந்தப் பேசித் தீர்க்கும் திருவிளையாடல் தாராளமாக நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. இம்மாதிரித் திருவிளையாடல்களுக்கு இடம் கொடுக்கும் சட்டங்களுக்குக் கட்டுப்பட்ட அசம்பிளியில் புகுந்து, வீண் ஆர்ப்பாட்டம் செய்வது



காங்கரஸ்காரரின் அரசியல் முட்டாள்தனத்தைக் காட்டுகிறது. தற்கால நிலைமையில் சர்க்காரை எதிர்த்து எதுவும் செய்ய முடியாதென்று கருதியே பழைய அசம்பிளி மெம்பர்கள், எதிர்க்க வேண்டிய காலத்து எதிர்த்தும் ஆதரிக்கவேண்டிய காலத்து ஆதரித்தும் விட்டுக்கொடுக்க வேண்டிய காலத்து விட்டுக் கொடுத்தும் ஜனங்களுக்குச் சொற்ப நன்மையாவது செய்து வந்தார்கள். சர்க்காரோடு போராடச் சென்ற காங்கரஸ் வீரர்கள் இதுவரை சாதித்ததென்ன? தபாற்கார்டு விலையில் ஒரு பைசாவையாவது குறைக்க முடிந்ததா? சட்டசபை ரிக்கார்டுகளைப் புரட்டிப் பார்த்தால் சர்க்காருக்குத் தோல்வி மேல் தோல்வி ஏற்பட்டிருப்பதைக் காணலாமே யொழிய ஜனங்களுக்கு ஏற்பட்ட நன்மைகளைப்பற்றி ஒரு வரியாவது காணமுடியாது.

நாளை, சர்க்கார் மெம்பர்கள் வீற்றிருக்கும் ஸ்தானத்தில் புலாபாய் தேசாயும் சத்தியமூர்த்தியும் ரெங்காவும் அவனாசிலிங்கமும் வீற்றிருக்கும்படி நேர்ந்தாலும் பிரேரணைகளைப் பேசித்தீர்க்கும் நாடகங்கள் நடைபெறத்தான் செய்யும். ஏன்? சட்டசபை நடவடிக்கைகளில் அதுவும் ஒரு முக்கியமான அமிசம். சோகரஸமும் ஹாஸ்யரசமும் இல்லாமல் ஒரு நாடகம் எப்படி ஸ்வாரஸ்யமாக இராதோ அப்படியே பேசித்தீர்க்கும் சீன் இல்லா விட்டால் சட்டசபை நடவடிக்கை களும் ஸ்வாரஸ்யமாக இருக்கமாட்டா. எனவே, ‘‘ஐயோ பேசித் தீர்த்துவிடப் போகிறார்களே!’’ என வாயிலும் வயிற்றிலும் அறைந்து கொள்கிறவர்கள் சட்டசபை ஐதீகங்களை அறியாத அடிமுட்டாள்கள் என்றே சொல்லவேண்டும்.

மேலும் பார்லிமெண்டரி முறைகளையும் கண்டனத் தீர்மானங்களையும் ஒத்திவைப்புத் தீர்மானங்களையும் பேசித் தீர்க்கும் திருவிளையாடல்களையும் நமக்குக் கற்பித்தவர்கள் ஸர். ஜேம்ஸ் கிரிக்கின் வமிசத்தாரே. நமது நாட்டு முனீச்வரர்களும், தர்ம சாஸ்திரகாரரும், கனபாடிகளும், தீக்ஷதர்களும், சாஸ்திரி களும் அல்ல. எனவே தாய் மாமனிடம் குலமும் கோத்திரமும் கேட்ட கதைபோல, நமக்குப் பாடம் கற்பித்தவர்களுக்கே நாம் டிமிக்கி காட்ட விரும்பினால் அவர்கள் இலேசில் விடுவார்களா? கொல்லத்தெருவில் ஊசி விற்கவா போகிறது?

காங்கரஸ்காரர் விரும்பும் பூரண ஸ்வராஜ்யம் வந்தாலும் இந்த நாடகம் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கும். ஏன்? ஸ்வராஜ்ய சர்க்காரிலும் எதிர்க்கட்சி இருக்கத்தான் செய்யும். கட்சிப் பிரதிகட்சிகள் உள்ள இடத்தில் தந்திரங்களும் சூழ்ச்சிகளும் இருந்துதான் வரும்.

தோழர் அவினாசிலிங்கம் பிரேரணையை 3 மெஜாரட்டி வோட்டினால் நிறைவேற்ற காங்கரசுக்கு பலமிருந்ததாம். எனினும் நமது பருப்பு வேகவில்லையே யென காங்கிரஸ்காரர் வருந்தலாம். என்ன செய்வது? இம்மாதிரி சந்தர்ப்பங்களில் எதிரிகளைத் தோற்கடிக்க சட்டசபைச் சட்டங்களில் பொடி வைத்திருக்கும் சட்ட நிபுணர்களைத்தான் அதற்காக நோகவேண்டும். ஸர். ஜேம்ஸ் கிரிக்கின் மீதும், சட்டசபைத் தலைவர் மீதும் முட்டிப் பயன் என்ன?

குடி அரசு - கட்டுரை - 06.09.1936



RangaRakes tamilnavarasam.com

# காங்கரஸ் அனுபவம்

## தொட்டது துலங்காது

ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் ஜில்லா போர்டு நிர்வாகங்களை ஏற்று நடத்திய காலத்தில் அவைகளின் நிர்வாகங்கள் ஒழுங்காகவும் குழப்ப மில்லாமலும் இருந்தமையால் அப்போது அவைகள் கலைக்கப்பட வேண்டும் என்று ஒருவரும் கூறியது கிடையாது. அப்படிச் சொல்வதற்கு அவசியமும் ஏற்பட இல்லை.

காங்கிரஸ்காரர்கள் ஜில்லா போர்டு நிர்வாகங்களைக் கைப்பற்றி நடத்திய சில காலத்துக்குள்ளாகவே அவர்கள் நிருவாகம் ஒழுங்காகச் செய்ய முடியாமையால் ஜில்லா போர்டுகளைக் கலைத்து விடவேண்டும் என்று தோழர்கள் சி. ராஜகோபாலாச்சாரியும், திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும் காங்கரஸ் சார்பாகவே சொல்ல முன்வந்து விட்டார்கள். ஆகவே, இதிலிருந்து காங்கரஸ்காரர்களின் நிர்வாகத் திறமையைப் பொது மக்கள் நன்குணர்ந்து கொள்வார்கள். காங்கரஸ்காரர்கள் எந்தப் பதவியைக் கைப்பற்றினாலும் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறாதென்பதற்கும், அவர்களுக்கு ஒழுங்காக நிர்வகிக்கத் திறமையில்லை யென்பதற்கும், காரணம் அவர்களுக்குள் கட்டுப்பாடு இல்லாததுதான் என்பதற்கும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

குடி அரசு - கட்டுரை - 06.09.1936



# காலித்தனம்

## காங்கிரஸ் ‘‘காப்பிரைட்டா?’’

‘‘கோடீசுர’’ சோஷியலிஸ்டும் அகில இந்திய காங்கரஸ் தலைவருமான பண்டித ஜவஹர்லால் நேரு இந்தியர்களின் சிவில் உரிமைகளைப் காப்பாற்ற ஒரு சங்கம் கண்டிருக்கிறார். அதற்கு ஆள் சேர்க்கும் பொருட்டு இந்தியா முழுதுமுள்ள பல திறப்பட்ட அபிப்பிராயமுடைய தலைவர்களுக்கெல்லாம் - அரசியல் வாதிகட்கெல்லாம் அவர் விண்ணப்பங்கள் அனுப்பினார். மகாகனம் ஸர். டெஜ்பகதூர் சாப்ரு, பம்பாய் ஸர். கவாஸ்ஜி ஜிஹாங்கீர், சென்னை ஸர். பி. சிவசாமி அய்யர் போன்ற பிரபலஸ்தர்கள் சோஷியலிஸ்டு பண்டிதரின் சிவில் உரிமைப் பாதுகாப்பு சங்கத்தில் சேர முடியாதென்று தக்க காரணங் களுடன் கண்டிப்பாக விடையளித்து விட்டார்கள்.

சட்டமறுப்புக் காலத்தில் மக்களின் சிவில் உரிமைகளுக்கு முட்டுக்கட்டை போட்ட காங்கரஸ் கூட்டத்தின் தலைவராயிருக்கும் பண்டித ஜவஹர்லால் சிவில் உரிமைப் பாதுகாப்புச் சங்கம் ஏற்படுத்தியிருப்பது பலருக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் அந்தச் சங்கத்தை ஸ்தாபித்த பண்டித ஜவஹர்லாலின் போக்கோ அவரது சங்க நோக்கத்துக்கு முரணானதாகவே இருக்கிறது. லக்ஷ்மணபுரியில் பாய்பரமானந்தர் ஒரு பிரசங்கம் செய்தபோது சட்ட மறுப்புக் காலத்தில் காங்கரஸ்காரர் ஒழுக்கங்கெட்ட பெண்களை அரசியல் போரில் ஈடுபடுத்தியதாகக் கூறினாராம். அவ்வளவுதான், அதற்கப்புறம் அவரால் பேசமுடியவில்லை. காங்கிரஸ்காரர் கலாட்டாச் செய்து கூட்டத்தைக் கலைத்துவிட்டார்கள்.

அப்பால் அவர் சில இடங்களில் பேச முயன்றபோதும் பல காங்கரஸ்வாலாக்கள் அநாவசியமான கேள்விகள் கேட்டுத் தொல்லை விளைத்தார்களாம். பாய்பரமானந்தர் கூறிய அவமதிப்பான மொழிகளை வாபீஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்கள். பாய்பரமானந்தர் இணங்கவில்லை. தாம் அபாண்டமாக எதையும் சொல்லவில்லையென்றும் தாம் சொன்னதை நிரூபிக்கத் தயாராயிருப்பதாயும் அவர் மார்தட்டிக் கூறினாராம். கூட்டத்தைக் கலைப்பதிலும் கலாட்டாச் செய்வதிலும் சமத்தர்களான காங்கரஸ்வாலாக்கள் இப்பொழுதும் பாய்பரமானந்தருக்குத் தொல்லை விளைவித்துக்கொண்டுதானிருக் கிறார்களாம். இவ்விஷயத்தை பண்டித ஜவஹர்லால் பார்வைக்கு



RangaRakes tamilnavarasam.com

கொண்டு வந்தபோது கூட்டத்தில் கேள்விகள் கேட்கவும் தமது அதிருப்தியைத் தெரிவிக்கும் யாவருக்கும் உரிமையுண்டென்று ''சிவில் உரிமை பக்தர்'' ஆன பண்டித ஜவஹர்லால் கூறிவிட்டாராம்.

சென்ற மாதம் 28-ந்தேதி புனாவில் லிபரல் கட்சியாரின் தேர்தல் பிரசாரம் ஆரம்பமாயிற்று. அப்பிரசார விழா ஆரம்பத்துக்காக பம்பாய் தலைவர் ஸர். கவரஸ்ஜி ஜிஹாங்கீரும் சென்றிருந்தார். கூட்டத்தை ஆரம்பித்து வைக்கும்போது காங்கரஸ் தேர்தல் பிரசார அறிக்கையைக் கண்டித்துப்பேசி, பண்டித ஜவஹர்லால் காங்கரசால் கெட்டுப்போன பிள்ளை என்று குறிப்பிட்டாராம். உடனே அழுகல் முட்டைகள் வீசப்பட்டனவாம். காகிதப்பந்துகள் எறியப்பட்டனவாம். யாரோ மின்சார விளக்குகளையும் அவித்து விட்டார்களாம். கடைசியில் கூட்டம் குழப்பத்தில் முடிந்ததாம். கூட்டத்தில் பேச நினைத்திருந்தவர்கள் ஏமாற்றமடைந்தார்கள்.

இச்செய்திகளை காங்கரஸ் பத்திரிகைகள் மிகப் பாராட்டி கொட்டை எழுத்துக்களில் பிரமாதமாகப் பிரசுரம் செய்திருக்கின்றன. தென்னிந்தியாவிலும் இம்மாதிரிக் கலாட்டாக்கள் நடப்பதுண்டு. தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித்தலைவர் தோழர் சத்தியமூர்த்தி பிரசன்னமாயிருந்த சேலம் காங்கரஸ் கூட்டத்தில் சுயமரியாதைத் தொண்டர் தோழர் சித்தையன் தாக்கப்பட்டதை தென்னாட்டார் அறிந்திருப்பார்கள். நாமக்கல் ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டின்போது காங்கரஸ்காரர்கள் ஒரு கழுதையை அலங்கரித்து ஊர்வலம் நடத்தியதையும் அப்பால் காங்கரஸ்காரர்களில் சிலர் மகாநாட்டு நிர்வாகிகளிடம் மன்னிப்புக் கேட்டுக் கழுதையை மீட்டுக் கொண்டு போனதையும் நமது வாசகர்கள் அறிந்திருக்கக்கூடும்.

காங்கரஸ் கூட்டங்களில் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களைப் பற்றி அவமரியாதையாகப் பேசுவதும் அவன் இவன் என ஒருமைப் பதங்களைப் பிரயோகம் செய்வதும் வாடிக்கையாக இருந்து வருகிறது. ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டங்களில் காங்கரஸ்காரர் கல்லெறிவதும் கலாட்டாச் செய்வதும் சர்வ சாதாரணமாக நடைபெற்று வருகின்றன. இவ்விஷயங்களை கவனித்தால் காங்கரஸ்காரர்களுக்குத்தான் பொதுக் கூட்டங்களில் பேசவும் பிரசாரம் செய்யவும் உரிமை யுண்டென்றும் ஏனைய கட்சியாருக்கு பேசவோ பிரசாரம் செய்யவோ உரிமையில்லை யென்றும் காங்கரஸ்காரர் எண்ணிக்கொண்டு இருப்பதுபோல் தோற்றுகிறது.

புனாக் கூட்டத்தில் பேசிய சர். கவாஸ்ஜி ஜிஹாங்கீர் ஒரு மிதவாதி. அரசியல் அனுபவம் உடைய ஒரு பழைய தலைவர். சோஷியலிஸ்டுக் கொள்கைகள் அவருக்குப் பிடிக்காதிருக்கலாம். எனவே சோஷியலிஸ்டு பிரசாரம் செய்யும் பண்டித ஜவஹர்லாலைக் கண்டித்து பேசினார். மிதவாதிகளைக் கண்டிக்க காங்கரஸ்காரருக்கு உரிமையுண்டானால் அபேதவாதிகளையோ காங்கிரஸ்காரர்களையோ கண்டிக்க மிதவாதிகளுக்கு உரிமையில்லையா! ஜவஹர்லாலைக் கண்டித்துப் பேசிய சர். கவாஸ்ஜி ஜிஹாங்கீர் சபா யோக்கியமல்லாத வாக்கியங்களையும் பிரயோகம் செய்யவில்லை. ஜவஹர்லால் காங்கரசால் கெட்டுப்போன பிள்ளை என்றாராம். இது ஒரு ஏச்சாகுமா? ஆட்சேபகரமான பதமாகுமா?

மிதவாதிகள் கூட்டத்தில் காங்கரஸ்காரருக்குப் பல்லாண்டு பாட வேண்டுமென்பது காங்கரஸ்காரர் விருப்பமா? தம்தம் கட்சி நோக்கங்களை விளக்கவும் எதிர்க்கட்சியார் திட்டங்களிலுள்ள ஊழல்களை எடுத்துக் காட்டவுமே ஒவ்வொரு அரசியல் கட்சியும் பிரசாரக் கூட்டம் கூட்டுகிறது. எனவே ஒரு கட்சி கூட்டும் பிரசாரக் கூட்டத்தை ஏனைய கட்சிகள் கலைப்பது மரியாதையாகுமா? யோக்கியப் பொறுப்பாகுமா?

இந்தியர்களுடைய பேச்சு சுதந்தரம், கூட்டச் சுதந்தரம் முதலிய சர்வ சுதந்தரங்களுக்குமாகப் போராடுவதாகக் கூறிக்கொள்ளும் காங்கிரஸ்காரர் இவ்வாறு அயோக்கியத்தனமாக நடந்து கொள்ளலாமா? காங்கரஸ் பெரிய ஸ்தாபனம், பழைய ஸ்தாபனம் என்று கூறப்படுவதினால் காலித்தனம் செய்ய காங்கரசுக்குத்தான் உரிமையுண்டென்பது காங்கரஸ்காரர் கருத்தா? இந்த அயோக்கியத்தனங்களைத் தடுக்க தேச மகாஜனங்களும் சர்க்காரும் தேவையான ஏற்பாடுகள் செய்யாவிட்டால் அரசியல் வாழ்வே - சுவையற்றதாகிவிடும் - பயனற்றதாகிவிடும். காலிகள் - கூலிகள் கை வலுத்துவிடும்.

**குடி அரசு - கட்டுரை - 06.09.1936**



RangaRakes tamilnavarasam.com

# இரண்டும் உண்மையே

2.9.36-ந் தேதி ''எது உண்மை?'' என்னும் தலைப்பில் ''ஜனநாயகம்'' பத்திரிகையில் ஒரு உபதலையங்கம் எழுதப்பட்டு அதில் தோழர் பாண்டியன் அவர்களும், தோழர் மந்திரி ராஜன் அவர்களும் கோவை ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் பேசிய பேச்சின் சுருக்கத்தை தனித்தனி எடுத்துப் போட்டு இவற்றுள் எது உண்மை என்று தெரிய ஆசைப்பட்டிருக்கிறது.

அதைக் காணும் பொதுமக்களில் சிலராவது மயக்கங்கொள்ளக் கூடுமாதலால் இரண்டும் உண்மையே என்று விளக்க ஆசைப்படுகிறோம்.

அதாவது தோழர் பாண்டியன் அவர்கள் கோவை மகாநாட்டுக் கூட்டத்தில் ஜில்லா ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களைப் பற்றி பேசுகையில் அவர் குறிப்பிட்டது என்னவென்றால் ''ஜில்லாக்களில் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களில் (Some) சிலர் நாங்கள் போனபோது எங்களைப்பற்றி லட்சியம் செய்யவில்லை.

சிறப்பாக சென்னையில் நாங்கள் போனபோது ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் சிறிதுகூட உதவி செய்யவில்லை, நாங்களே நோட்டீசு போட வேண்டியிருந்தது, நாங்களே பெஞ்சு நாற்காலி போடவேண்டியிருந்தது, நாங்களே விளக்குக்கு பணம் கொடுக்க வேண்டி வந்தது என்று பேசினார்.

இது சில இடங்களில் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் சிலரின் அற்ப புத்தியைக் காட்டிற்று என்று ஆகுமேயல்லாமல் பொதுஜனங்கள் ஆதரவு இல்லை என்று ஆகுமா என்பதை யோசிக்க வேண்டுகிறோம்.

இதற்கு விளக்கம் ஏற்கனவே தோழர் ஈ.வெ.ரா. சேலம் பேச்சில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

என்னவென்றால் ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் பட்டம், பதவி, பணம் சம்பாதித்துவரும் சிலருக்கு பிரசாரத்தில் நம்பிக்கை இல்லை என்றும், அவர்கள் சமயத்துக்குத் தகுந்தபடி நடித்து தங்கள் சுயநலத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதிலே கருத்துடையவர்கள் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

அதே மாதிரி சென்னையில் - பிரசாரக் கமிட்டி சென்றபோது ஒரு ஜஸ்டிஸ் பிரமுகர் என்பவர் சிறிதும் கவலையில்லாமல் இருந்ததோடு பொப்பிலி ராஜா அவர்கள் பிரசாரத்துக்காக கொடுத்த பணத்தையும் ஒழுங்காக செலவழிக்காமல் பாழாக்கிவிட்டு பிரசாரக் கமிட்டி பிரசாரத்தை குறை கூறியும் பேசினவருக்கு உடனே பெரியதொரு உத்தியோகம் கிடைத்துவிட்டது. அப்படிப்பட்ட சிலருக்கு இன்னமும் சில உத்தியோகங்கள் காத்துக்கொண்டுமிருக்கின்றன.

ஆகையால் தோழர் பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டது கட்சியின் பேரால் பயனடைந்து நன்றியறிதல் இல்லாதவர்களைக் குறிவைத்தே ஒழிய பொதுஜன ஆதரவைப்பற்றி அல்ல என்பது அவரது பேச்சிலேயே விளங்கும். தோழர் மந்திரி ராஜன் அவர்கள் கூறியதும் உண்மையே யாகும்.

அதாவது தோழர் ராஜன் அவர்கள் தனியாகவும் பிரசாரக் கமிட்டியாருடனும் சென்ற இடங்களில் எல்லாம் பொதுஜன ஆரவாரமும் ஆதரவும் ஏராளமாக இருந்தது என்பதோடு தோழர் மந்திரி குமாரசாமி செட்டியார் அவர்கள் சென்ற எல்லா இடங்களிலும் திருநாள்கள் போல் வரவேற்பும் ஆதரவும் இருந்தது என்பது எதிரிகளாகிய பார்ப்பனர்கள் பத்திரிக்கைகளைப் பார்த்தாலும் விளங்கும். ஆதலால் இரண்டும் உண்மையே என்பதை தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.09.1936**



RangaRakes tamilnavarasam.com

# ‘‘ஏழைப் பங்காளர்’’ சத்தியமூர்த்தி!

தீண்டாமையொழிப்பு காங்கரஸ் வாலாக்களுக்குக் கட்டிக் கரும்பாம். எளியோர் விடுதலை பால் சோறாம். கிரியாம்சையில் இவையாவும் வாய்ப்பந்தலாகவே இருக்கிறது.

700 மைல் தூரம் கால்நடையாக நடந்து பட்டினிப்பட்டாளம் கள்ளிக்கோட்டையிலிருந்து சென்னைக்குச்சென்றது. சட்டசபையில் நமது விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டுமென்பது அந்தப் பட்டாளத்தின் நோக்கம். ‘‘எதற்காக 700 மைல் தூரம் நடத்துவர வேண்டும்! ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும்! சட்டசபை மெம்பர்கள் மூலம் சமர்ப்பித்தால் போதுமே’’ என்றெல்லாம் சர்க்கார் காரணம் கூறிக்கொண்டார்களாம். சட்டசபை செல்ல பட்டாளம் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் ஏழைகளுக்காகப் பாடுபடும் காங்கரஸ் பிரதிநிதி - அதிலும் தமிழ் மாகாண காங்கரஸ் கமிட்டித்தலைவர் - தோழர் சத்தியமூர்த்தி என்ன செய்தார் தெரியுமா? உதவி வேண்டிய பட்டாளத்தின் வார்த்தைகளைத் தம் காதில் கூடப் போட்டுக்கொள்ள வில்லையாம். ‘‘உங்கள் கொள்கை எங்கள் கொள்கைக்கு மாறானது. காங்கரஸ் பேரால் உதவி செய்ய முடியாது. வேண்டுமானால் தர்மத்துக்காக ஒரு நாளைக்குச் சோறுபோடலாம். காங்கரஸ் மண்டபத்தில் தங்க இடம் தரலாம். சலாம் போய் வாருங்கள்’’ என ரத்னச் சுருக்கமாகப் பேசி முடித்துவிட்டாராம். பட்டினிப் பட்டாளத்தின் கொள்கை மாகாண காங்கரஸ் தலைவருக்கே பிடிக்கவில்லையானால் சென்னை சர்க்காருக்குப் பிடிக்கவா போகிறது? ஆனாலும் தோட்டி முதல் தொண்டமான் வரை இந்தியர் அனைவருக்கும் காங்கரஸே ஏக பிரதிநிதி ஸ்தாபனம் என்று சொல்லிக்கொள்ளப்படுகிறது. ஏழைகள் உதவி நாடிச் சென்றால் தமிழ் மாகாண காங்கரஸ் தலைவர் கையை விரிக்கிறார். அதைப்பார்த்து அழுவதா? சிரிப்பதா?

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.09.1936**



# மறுபடியும் வெளியேறும் நாடகம்

## இனிப் பலிக்காது!

காங்கரஸ்காரர்கள் பொதுஜனங்களை ஏமாற்றுவதற்காக புது எலக்ஷன் வரும்போதெல்லாம் அதாவது சட்டசபை காலம் காலாவதி ஆகும் போதெல்லாம் தாங்கள் சட்டசபை ஸ்தானத்தை லட்சியம் செய்யாதவர்கள் என்று காட்டிக்கொள்ளுவதற்காக சட்ட சபையைவிட்டு வெளியேறிவிட்டதாக வேஷம் போட்டு நாடகம் நடிப்பது வழக்கம். இந்த நாடகத்தை தோழர்கள் பெரிய மோதிலால் நேரு முதல் அநேகர் நடித்துப் பார்த்தாய் விட்டது? அப்படி இருந்தும் இப்போது வேறு வழியில் அதே நாடகத்தை நடத்த ஆரம்பித்துவிட்டார்கள். இதனாலெல்லாம் பொதுமக்கள் இனி ஏமாந்துவிடமாட்டார்கள்.

இனி காங்கரசுக்காரர் பொது ஜனங்களை ஓட்டுக் கேட்கப்போனால் இதுவரை நீங்கள் சட்டசபையில் சாதித்ததென்ன என்றும், எந்த தடவையாவது, எதிலாவது நீங்கள் வாக்கு கொடுத்தபடி நாணயமாய் நடந்தீர்களா என்றும் கேட்டு முகத்தில் கரியைத் தடவி அனுப்பப் போகிறார்கள் என்பது உறுதி.

**குடி அரசு - கட்டுரை - 06.09.1936**



RangaRakes tamilnavarasam.com

# காங்கரஸ்காரர் பித்தலாட்டம்

**ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை**

**காங்கரஸ் பேரால் அயோக்கியர் யோக்கியராகிவிடமாட்டார்கள்**

**ஆளின் யோக்கியதையைக் கவனித்து வோட்டுக் கொடுங்கள்**

தலைவரவர்களே தோழர்களே!

இன்று தேர்தலும் ஓட்டர்கள் கடமையும் என்பதாக பேச இக்கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி நான் முன்னமேயே அநேக தடவை பேசியிருக்கிறேன்.

தேர்தல்கள் வரும்போதெல்லாம் இந்த விஷயத்தைப்பற்றி பேசுவது சகஜமேயாகும். அதுபோலவே சென்னையில் இப்போது கார்ப்பரேஷன் எலக்ஷன் நடக்கப்போவதால் அதைப்பற்றி பேச ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது.

## தேர்தல்களுக்கும் கட்சிக்கும் சம்மந்தம் இல்லை

நான் எப்போதும் அதாவது காங்கிரசில் இருக்கும்போது முதலே தேர்தலைப்பற்றிப் பேசுவதாய் இருந்தால் குறிப்பாக ஸ்தல ஸ்தாபன தேர்தல்களைப் பற்றி பேசுவதாய் இருந்தால் **கட்சிகளைப் பற்றிக் கவனிக்க வேண்டாம் என்றும் ஆட்களின் தராதரங்களைக் கண்டு ஓட்டு செய்யுங்கள்** என்றும் ஓட்டர்களை கேட்டுக் கொள்ளுவது வழக்கம்.

இம்மாதிரியாக கேட்டுக் கொள்ளும் கூட்டங்களில் கட்சிகளைப்பற்றியும் நான் எப்போதாவது பேசியிருப்பேனேயானால் அது காங்கிரசுக்காரர்கள் கட்சிகளைப் பிரதானப்படுத்தி தங்கள் கட்சியே யோக்கியமான கட்சி என்றும், மற்ற கட்சிகள் குறிப்பாக ஜஸ்டிஸ் கட்சி தேசத்துரோகமான கட்சி யென்றும், கட்டுப்பாடற்ற கட்சியென்றும் கூறி அக்கட்சியிருப்பதாலேயே அக் கட்சியின் பேரால் நிற்பவர்களை இழிவுபடுத்தி பழி சுமத்திக் கூறி மக்களை ஏமாற்றச் செய்துவரும் சூழ்ச்சிக்கும் இழி தன்மைக்கும் பதிலளிக்கும் பொருட்டுத்தான் கட்சிகளைப் பற்றியும் நான் சில சமயங்களில் பேசி யிருப்பேனே ஒழிய வேறில்லை.



இன்று தேர்தல்களில் கட்சி தகராறுக்கும் கட்சித் தொல்லைக்கும் அதிகமாக இடம் ஏற்படுத்தினவர்கள் காங்கிரசுக்காரர்களேயாவார்கள். ஏனெனில் அவர்களுக்கு தங்கள் கட்சியின் பேரால் தேர்தல்களுக்கு நிறுத்தவும் கட்சியில் சேர்க்கவும் பெரிதும் யோக்கியமானவர்களும் தகுதியானவர்களும் வேண்டிய அளவு கிடைக்காததாலும், வெகு சாதாரண அதாவது பொது ஜனங்கள் மரியாதைக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமில்லாத ஆட்களையே காங்கிரஸ் பேரால் நிறுத்த வேண்டியிருக்கிறதாலும், காங்கிரஸ்காரர்களுக்கு தங்கள் கட்சி பேரால் நிற்கும் ஆட்களின் பெயர்களையும், யோக்கியதைகளையும், நாணயங்களையும், தகுதிகளையும் சொல்லி ஓட்டுக் கேட்க யோக்கியதை இல்லாததால் கட்சி பெயரையும் சொல்ல வேண்டியிருக்கிறது.

## காந்திக்கு ஓட்டுக் கேட்பது

மற்றும் காந்தியார் பெயரையும் வேறு யார் யாரோ எதற்காகவோ ஜெயிலுக்குப் போனதையும் சொல்லி ஓட்டு வாங்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

நமக்கு அப்படிப்பட்ட அவசியம் இல்லை. பெரிதும் தனிப்பட்ட நபர்களின் பெயர்களைச் சொல்லியே நாம் ஓட்டுக் கேட்கின்றோம். கட்சியின் பேர் சொல்ல வேண்டுமானாலும் நாம் தயாராகவே இருக்கிறோம். மற்ற எந்த கட்சிகளையும்விட நம்கட்சி இளைத்த கட்சி அல்ல என்றே சொல்லுவேன். நமது கொள்கை இன்றைய அரசியல், சமுதாய இயல், பொருளாதார இயல் ஆகியவற்றில் காங்கிரசுக்கோ அல்லது மற்ற எந்த கட்சிக்கோ சிறிதும் பின்னடைந்ததல்ல.

ஆதலால் நாம் அவசியமானால் கட்சிப் பேர் சொல்வதற்கும் பயப்பட வேண்டியதில்லை.

காங்கிரஸ்காரர்கள் தேர்தல்களில் காந்தியார் பெயர் சொல்லி ஓட்டுக் கேட்கிறார்கள். இது சிறிதுகூட யோக்கியப் பொறுப்பான காரியமாகாது என்றே சொல்லுவேன்.

ஏனெனில் காந்தியார் இன்று காங்கிரசில் ஒரு 4 அணா மெம்பராகக்கூட இல்லை. இந்த விஷயம் காங்கிரசுக்காரருக்கும் தெரியும். காந்தியாருக்கும் ஸ்தல ஸ்தாபன நடவடிக்கைக்கும் நிர்வாகங்களுக்கும் சிறிதும் சம்மந்தமில்லை. ஏனெனில் ஸ்தல ஸ்தாபன மெம்பர்களுக்கு தலைமை வகித்து அவர் ஸ்தல ஸ்தாபன காரியங்களை நடத்தப் போகிறதுமில்லை.

ஸ்தல ஸ்தாபன சம்மந்தமாய் காந்தியாரிடம் எவ்வித கொள்கையுமில்லை. ஆகவே அப்படிப்பட்டவர் பெயரைச் சொல்லி எப்படிப்பட்ட அயோக்கியருக்கும் ஓட்டு வாங்கிக் கொடுத்து ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் நடத்தப்படுவது



RangaRakes tamilnavarasam.com

என்றால் தோழர் ராஜகோபாலாச்சாரியார் சொன்னது போல் ஸ்தல ஸ்தாபனங்களை கலைத்துவிட்டு அதன் நிர்வாகத்தை சர்க்கார் வசம் ஒப்புவித்து விடுவதே மேலான காரியமாகும்.

### சர்க்கார் யோக்கியமாயிருந்தால்

உண்மையிலேயே சர்க்கார் நியாயமான சர்க்காராய் இருந்தால் இம்மாதிரி பித்தலாட்டம் செய்து ஓட்டர்களை ஏமாற்றி ஓட்டு வாங்கின மெம்பர்களை வெற்றி பெற்றதாக ஒப்புக் கொள்ளாமல் அப்படிப்பட்டவர்களின் தேர்தல்களை ரத்து செய்து விடுவதோடு அப்படி ஏமாற்றி ஓட்டு வாங்கியவர்களின் மீது கிரிமினல் நடவடிக்கை நடத்தி அவர்களை இனி என்றென்றும் தேர்தலுக்கு நிற்க லாயக்கில்லாதவர்களாக செய்து இருப்பார்கள். அது மாத்திரமல்லாமல் அப்படிப்பட்டவர்க்கு பித்தலாட்டப் பிரசாரம் செய்து ஓட்டு வாங்கிக் கொடுத்த பொலிட்டிகல் டவுட் என்னும் கூலித் தரகர்களிடமும் நல்ல நடவடிக்கைக்கு ஜாமீன் வாங்கி என்றென்றும் மேடை ஏற மார்க்கமில்லாமலும் செய்திருப்பார்கள்.

சர்க்கார் அப்படிக்கு இல்லாமல் இந்த மாதிரி ஆட்களை வைத்தே தங்கள் காரியம் சாதித்துக் கொண்டு போகிறவர்களாய் இருப்பதால் சரியான கவலை எடுத்துக் கொள்ளாமல் இருந்து வருகிறார்கள் என்று சொல்ல வேண்டி இருக்கிறது.

### ஜெயிலுக்கு போனதற்கு ஓட்டுக் கேட்பது

ஜெயிலுக்கு போனதற்காக ஓட்டுப் போட வேண்டுமென்று காங்கிரசுக்காரர்கள் பாமர மக்களை ஏமாற்றுகிறார்கள். அதுவும் யாரோ எப்பொழுதோ எதற்கோ ஜெயிலுக்கு போனதற்காக வேறு யாருக்கோ எதற்காகவோ ஓட்டு போட வேண்டுமென்கிறார்கள். இதுவும் ஒரு பித்தலாட்டமான காரியமேயாகும். ஜெயிலுக்கு போனவர்களில் பெரும் பான்மையோர்களின் யோக்கியதை எனக்குத் தெரியும். வடநாட்டிலும் வெகுபேருக்கு தெரிந்து கஞ்சிக்கு இல்லாதவர்களும் காலிகளுமே பெரிதும் ஜெயிலுக்குப் போயிருக்கிறார்கள் என்று வட நாட்டுத் தலைவர்கள் பலர் சொல்லி இருக்கிறார்கள். இன்றும் கஞ்சிக்கு மார்க்க மில்லாமலும் சோம்பேறியாய் இருந்தும் திரிகின்ற பிள்ளைகளைப் பார்த்தால் ''இங்கு ஏண்டா வீணாய் திரிகின்றாய், அநாவசியமாய் பொது ஜனங்களுக்கு ஏன் தொந்திரவு கொடுக்கின்றாய்? காங்கிரசுப் பேரைச் சொல்லி ஜெயிலுக்குப் போய் சௌக்கியமாய் காலம் தாட்டுவது தானே'' என்று பொது ஜனங்கள் பலர் சொல்லுவது சகஜமாய் இருக்கிறது.

ஆதலால் ஜெயிலுக்கு போனவர்கள் எல்லோரும் மகா யோக்கியர்கள் என்றோ, தியாகிகள் என்றோ ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்துக்குத் தகுதியானவர்கள் என்றோ அரசியல் ஞானம் உடையவர்கள் என்றோ சொல்லி விட



முடியுமா? அல்லது அங்கு அதிகக் கஷ்டப்பட்டார்கள் என்று கருதியாவது அதற்கு கூலியாக கார்ப்பரேஷன், ஜில்லாபோர்டு, சட்டசபை, அசம்பிளி வேலை மெம்பர்கள் கொடுத்து விட முடியுமா? நானும் காங்கிரசில் தலைவனாகவும், காரியதரிசியாகவும், நிர்வாக சபையில் முக்கிய பிரதிநிதியாகவும் இருந்திருக்கிறேன். அந்த காலத்தில் ஜெயிலுக்கு போனவர்களின் குடும்பங்களுக்கு காங்கிரசு பணத்தில் மாத மாதம் செக்கு கொடுத்திருக்கிறேன். போய்விட்டு வந்தவர்களுக்கும் அந்தச் சலுகையில் சம்பள உத்தியோகமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றும் பலர் அப்படித்தான் இருக்கிறார்கள். இதனால் எப்படி அவர்கள் எல்லோரும் பெரிய தியாகி களாகவோ அரசியல் ஞானிகளாகவோ ஆகிவிடுவார்கள்?

அன்றியும் அவர்களை தியாகிகள் என்றே வைத்துக் கொண்டாலும் அந்தப் பெயரைச் சொல்லி கார்ப்பரேஷனுக்கு ஓட்டுக் கேட்பது என்றால் இது ஒரு வியாபாரமா என்று கேட்கின்றேன்.

அதாவது ஜெயிலுக்கு போனதற்கு கூலியா?

### நிறுத்தப்பட்ட ஆட்களின் யோக்கியதை

இன்று காங்கிரசின் பேரால் நிறுத்தப்பட்டிருக்கும் நபர்களின் யோக்கியதைகளைப் பற்றி நானே எல்லாம் தெரிந்ததாக சொல்ல வரவில்லை. ஆனால் காங்கிரஸ் தோழர்களே சொன்னதையும் சொல்லுவதையும் 'சுதேசமித்திரன்', 'தினமணி', 'இந்து' முதலிய பார்ப்பனப் பத்திரிகைகளிலும் காங்கிரஸ் பத்திரிகைகளிலும் வந்திருக்கும் விஷயங்களையே பார்த்துக் கொள்ளுங்கள்.

அதிலும் திருப்தி இல்லையானால் குமரி முதல் வேங்கடம் வரை தமிழ்நாட்டில் காங்கிரசின் பேரால் நடந்த ஸ்தல ஸ்தாபன தேர்தல்களில் காங்கிரஸ் சார்பாய் வெற்றி பெற்ற ஆட்களில் 100க்கு 75 பேர்களுடைய யோக்கியதைகள் பற்றி காங்கிரஸ் பத்திரிகைகளிலேயே காணும் யோக்கியதையைக் கொண்டு தெரிந்து கொள்ளுங்கள்.

இந்த லட்சணத்தில் ஸ்தல ஸ்தாபனத்துக்கும் காங்கிரசுக்கும் என்ன சம்பந்தம் என்று இன்றும் உங்களை கேட்கின்றேன்.

### காங்கிரஸ் கொடி நாட்டுவது

''ஸ்தல ஸ்தாபனத் தேர்தலில் வெற்றி பெற்றால் கார்ப்பரேஷன் ரிப்பன் பில்டிங்கில் காங்கிரஸ் கொடி பறக்கவிடுவோம்'' என்று சொல்லுகிறார்கள். அக்கட்டடத்தின் மீது எந்த எழவு கொடி பறந்தால் தான் ஓட்டருக்கு என்ன லாபம்? காங்கிரஸ் கொடி பறப்பதினால் யூனியன் ஜாக் கொடி ஒழிந்து விட்டது என்று அர்த்தமா? பிரிட்டிஷார் சட்டமும் அவர்கள் ஆதிக்கமும் ஸ்தல ஸ்தாபனத்தின் மீது இல்லாமல் போய் விடும் என்று அர்த்தமா?



RangaRakes tamilnavarasam.com

கேவலம் ஒரு துணிக்கொடி பறப்பதால் என்ன காரியம் ஆகிவிடும்? இதை பாமர மக்களுக்குள் ஒரு மூடநம்பிக்கையைப் பரப்பும் யோக்கியப் பொறுப்பற்ற சூழ்ச்சி என்றுதான் சொல்லுவேன். உண்மையில் காங்கிரஸ் கொடியை பறக்க விடுவதானால் யூனியன் ஜாக் கொடி இந்தியாவில் இல்லாமல் இருக்க வேண்டும். அப்படிக்கு இல்லாமல் காங்கிரசுக்கொடி பறக்க விடுவேன் என்பது காங்கிரஸ்காரருக்கு அரசியல் ஞானமில்லாததையும் ஏமாற்று வித்தையில் பித்தலாட்டம் பேசுகிறார்கள் என்பதையும் தான் காட்டும்.

வாஸ்தவத்திலேயே காங்கிரசுக்காரருக்கு அரசியல் ஞானமில்லாததாலும் நிர்வாக அனுபோக மில்லாததாலும் இன்று அவர்கள் வெற்றி பெற்ற ஸ்தல ஸ்தாபன மெல்லாம் குச்சுக்காரிகள் வீடுகள் போலவே ஆகிவருகின்றன. எதில் பார்த்தாலும் கள்ளுக்கடை சண்டை போலவே நடவடிக்கைகள் இருந்து வருகின்றன. இவற்றை காங்கிரஸ் ரிப்போர்ட்களிலிருந்தே பார்க்கலாம். போதாக் குறைக்கு தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் ''ஸ்தல ஸ்தாபனங்களை கலைத்துவிட்டுச் சர்க்காரின் நேரடி ஆட்சிக்கு விட்டுவிட வேண்டும்'' என்று சொன்னதிலிருந்தே அறிந்து கொள்ளலாம். ஒரு சமயம் அவர் அதற்கு முன்னதாகவே அந்த அபிப்பிராயம் தான் கொண்டு இருப்பார் என்று கருதுவதானாலும், தோழர் சத்தியமூர்த்தியார் பம்பாயில் பேசியதிலிருந்து பார்த்துக் கொள்ளுங்கள்.

அதாவது ''இந்தியர்களுக்கு நிர்வாகத்திறமை போதாது, கட்டுப்பாடு இல்லை, நாணயமில்லை'' என்று சொல்லி இருப்பவைகளிலிருந்தே தெரிந்து கொள்ளுங்கள். மற்றும் இந்தியர்கள் நிர்வாகத்தில் லஞ்ச மயம் என்றும் சொல்லி இருக்கிறார். இவருக்கு இந்த அனுபவ ஞானம் எப்பொழுது எப்படி வந்தது? என்று யோசித்துப் பாருங்கள். இந்த ஒருவருஷ காலமாய் காங்கிரசுக்காரர் கைக்கு சில நிருவாகங்கள் போன பின்பு அவர்கள் நடத்தையில் இருந்து அறிந்து கொண்டதேயாகும். இந்த இருபது வருஷ காலமாக ஏன் இவர்கள் இப்படிச் சொல்லவில்லை? அப்பொழுது அவைகளின் ஆதிக்கம் ஜஸ்டிஸ்காரர்கள் கையில் இருந்ததால் இப்படிச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லாமல் இருந்தது.

### கண்டிறாக்ட் ராஜ்யம்

ஆனால் ஜஸ்டிஸ் கட்சியாரைப் பற்றி காங்கிரசுக்காரர்கள் சொன்ன குற்றம் எல்லாம் ஸ்தல ஸ்தாபனங்கள் கண்டிறாக்ட் ராஜ்யமாய் இருக்கிறது என்று மாத்திரம் சொல்லி வந்தார்களே ஒழிய அவர்களுக்கு நிர்வாகத் திறமை இல்லை என்று சொல்லவில்லை.

இப்பொழுது காங்கிரஸ் ஆட்சி வந்த பிறகாவது ஸ்தல ஸ்தாபனங்களில் கண்டிறாக்டர் ராஜ்யம் ஒழிந்து எல்லா வேலைகளும் டிபார்ட்டுமெண்டாராலேயே நடந்து வருகிறதா? என்று கேட்கிறேன்.



இன்றும் காங்கிரசுக்காரர் ஆதிக்கத்தில் உள்ள ஜில்லா போர்டுகள் சிலவற்றில் பிரசிடெண்ட் மெம்பர்கள் ஆகியவர்கள் சொந்தக்காரர்கள், குடும்பக்காரர்கள் பேரால் கண்டிறாக்ட் நடைபெறுகின்றது. அதுவும் எஸ்ட்டுமேட்டுக்கு 100க்கு 15, 20, 30 - பர்செண்டு குறைத்துக் கேட்ட கண்டிறாக்ட்டுகளை விட்டு விட்டு தங்கள் குடும்பத்துக்கும் சொந்தக்காரர் களுக்கும் உயர்ந்த தொகைக்கு கேட்டவர்களுக்கும் கண்டிறாக்ட் அனுபவ மில்லாதவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

சர்க்காருக்கு இது விஷயமாய் புகார்கள் போயும் இருக்கின்றன. புகார்காரர்கள் மீது காங்கிரஸ் பிரசிடெண்டுகள் ஒரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாமல் புகார் கூறியவர்களுக்கும் கொஞ்சம் கண்டிறாக்ட் கொடுத்து சரிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

### கார்ப்பரேஷனிலும் காங்கிரஸ் கண்டிறாக்ட் ராஜ்யம்

அவ்வளவு தூரம் போவானேன்? இச்சென்னையையே எடுத்துக் கொள்ளுங்கள். கார்ப்பரேஷனில் காங்கிரஸ் கவுன்சிலருக்கு கண்டிறாக்ட் இருக்கிறதா இல்லையா? என்று கேட்கின்றேன். ஆதாரத்தோடு வெளியிட்ட விஷயங்களுக்கு - ஒன்றரை லக்ஷம் துண்டு பிரசுரம் மூலம் வெளியிட்ட குற்றச்சாட்டுக்கு தோழர் சத்தியமூர்த்தியார், ராஜகோபாலாச்சாரியார், சாமி வெங்கிடாசலம் செட்டியார் முதல் யாராவது இதுவரை ஏதாவது பதில் சொல்லி இருக்கிறார்களா? தோழர் காந்தியாருக்கும் நகல் அனுப்பப்பட்டது. யாரும் இதுவரை மூச்சுக்கூடக் காட்டவே இல்லை. அதன் பயன் அந்த கண்டிறாக்ட் கவுன்சிலர் மேடையேறுவதற்குத்தான் யோக்கியதை இல்லாமல் செய்ததே தவிர அவர் இன்னமும் காங்கிரசு சார்பாக கார்ப்பரேஷனிலும் அசம்பளியிலும் இருந்து கொண்டுதான் இருக்கிறார். அவரை காங்கிரசிலிருந்து நீக்கவில்லை.

காங்கிரஸ் மெம்பர்களே எத்தனை பேர் ''யோக்கியர்களுக்கு காங்கிரசில் இடமில்லை'' என்று சொல்லிக் கண்டித்தும் வெளியேறியும் இருக்கிறார்கள்? என்பதை 'இந்து' 'மித்திரன்' பத்திரிகையை பாருங்கள்.

### புதிய ஆள் பிடிப்பது

இவைகளை எல்லாம் பார்த்தும் மற்றொரு கட்சியில் இருப்பதால் தங்கள் ஜபம் செல்லவில்லை; தங்கள் காரியம் ஆகவில்லை; தாங்கள் மதிக்கப்படவில்லை என்ற காரணத்தால் அக்கட்சிகளில் இருந்து வெளிவந்த ஆட்களை காங்கிரசில் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கு பதவிகள் அளிப்பதும், அவர்களை விட்டு நம்மை வையச் சொல்லுவதுமான கேவல செய்கை செய்தால் நாட்டில் எப்படி பொதுநலக் கட்சிகளும் ஸ்தாபனங்களும் யோக்கியதை அடைய முடியும் என்று கேட்கிறேன். இந்தியாவில் நாணயமான அரசியல் கட்சி இல்லை என்று தோழர்



RangaRakes tamilnavarasam.com

சத்தியமூர்த்தியாரே சொல்லுகிறார். காங்கிரசு கூட யோக்கியமான கட்சி அல்ல என்று அவரே ஒப்புக் கொள்ளுகிறார். இப்படி நடந்து கொண்ட காங்கிரசு எப்படி யோக்கியமான கட்சி ஆக முடியும்? பெரிதும் காங்கிரசுக்கு தேர்தல்களில் நிறுத்த புதிய ஆட்களே அதிலும் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து வெளிவர வேண்டிய வெளியாக்கப்பட்ட ஆட்களே தான் கிடைக்கிறார்கள் என்றால் (50 வருஷத்திய காங்கிரசுக்கு) தகுதி உள்ள ஆட்கள் காங்கிரசில் இல்லை என்றுதானே அருத்தமாகும்.

இப்படிப்பட்டவர்கள் ஏன் பொது ஸ்தாபனங்களுக்கு காங்கிரஸ் பேரால் போட்டி போட வேண்டும்? மற்ற கட்சிகளை ஏன் வைய வேண்டும்? என்று கேட்கிறேன்.

பொது ஜனங்களின் வரிப்பணத்தை நல்ல வழியில் பயன்படுத்த வேண்டிய ஸ்தாபனங்களை - சுயராஜ்யத்துக்கு நம்மை தகுதியாக்க கொடுத்திருக்கும் பரீட்சை ஸ்தாபனத்தை இம்மாதிரி பொறுப்பில்லாமல் இவ்வளவு பணம் காசு செலவு செய்து போட்டி போட்டு அங்கு போய் உட்கார்ந்து கொண்டு சங்கராச்சாரிக்கு வரவேற்பு அளிக்கலாமா? கவர்னருக்கு வரவேற்பு நிராகரிக்கலாமா என்கின்ற அற்ப விஷயங்களுக்காகச் சண்டை போடுவதில் நேரத்தை பாழாக்கி இதையே வெற்றி தோல்விக்கு அளவு கருவியாக்குவது என்றால் பொதுக் காரியம் எவ்வளவு தூரம் சின்னப் பிள்ளைகள் காரியமாக நடைபெறுகின்றன என்பதை யோசித்துப் பாருங்கள்.

ஒரு மாகாண கவர்னருக்கு அவரது ஆட்சியின் கீழ் இருக்கும் ஒரு ஸ்தாபனத்தில் வரவேற்பு அதுவும் மரியாதை சம்பிரதாயத்துக்கு நடந்து வரும் வரவேற்புக் கூட செய்வதில்லை என்று சொல்லிவிட்டு மறுபடியும் அவர் காலடியில் போய் ‘‘மேன்மை தங்கிய கவர்னர் பிரபுவே’’ என்று சொல்லுவதும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் என்று அதே ஸ்தாபன ரிக்கார்டுகளில் எழுதுவதும் என்றால் இவர்கள் எவ்வளவு அற்பர்கள் என்பதையும் எவ்வளவு அறிவற்றவர்கள் என்பதையும் யோசித்துப் பாருங்கள்.

இந்த அற்பத்தனமான காரியங்களுக்கு கவர்னர் தக்க பதிலளிக்கக் கருதினால் அது இந்த ஆட்களை சிறிதும் பாதிக்கப் போவதில்லை. ஆனால் அது பொது ஜனங்களை - வரி கொடுக்கும் ஏழைகளை பாதிக்கக்கூடும். அதனால்தான் காங்கிரசுக்காரர்கள் பொறுப்பற்றவர்கள் என்று நான் சொல்ல வேண்டியிருக்கிறது. இவர்கள் பேச்சைக் கேட்ட வெள்ளைக்காரர்கள் கவர்னரை மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்களாம்.

அன்றைய கூட்டத்தில் இருந்த வெள்ளைக்காரர்களும் மற்ற வெள்ளைக்காரர்களால் கண்டிக்கப்பட்டார்களாம்.

ஆனால் காங்கிரசுக்காரர்களுக்கு சாதாரண மரியாதை புத்திகூட வரவில்லை. அதற்கு ஆக இவர்களை எந்த தலைவர்களும் கண்டிக்கவுமில்லை.



இதே போல காங்கிரஸ்காரர்களில் ஒரு அம்மாள் கவர்னர் சபைக்கு வந்த போது மற்றவர்கள் - மற்ற காங்கிரஸ்காரர்கள் செய்த மரியாதை கூட செய்யாமல் உட்கார்ந்து கொண்டு இருந்தார்களாம். இதே மாதிரி அசெம்பிளியிலும் அகௌரவமான பலகாரியம் செய்தார்களாம். செய்து விட்டு பொய் சமாதானங்களைச் சொல்லி தப்பித்துக் கொள்ளவும் பார்க்கிறார்கள். இதனால் காங்கிரசுக்காரருக்கு யோக்கியமில்லை என்று விளங்கு வதோடு ஆண்மையும் இல்லை என்பதும் விளங்கவில்லையா? என்று கேட்கின்றேன்.

நேற்றுக்கூட இந்திய சட்டசபையில் கவர்னர் ஜனரல் பிரபுவின் ஒரு உத்திரவு வாசிக்கப்படும் போது காங்கிரசுக்காரர்கள் பூனை போல் கத்தினார்களாம். இவை எல்லாம் பெரிதும் அசோசியேட் பிரஸ் செய்திகளே தவிர எனது கற்பனை அல்ல. ஆகவே எவ்வளவு அற்ப புத்தி படைத்தவர்கள் காங்கிரசில் இருக்கிறார்கள் என்று பாருங்கள். நான் வெள்ளைக்காரரையோ சர்க்காரையோ கும்பிடும்படி சொல்லவில்லை. மனுஷத் தன்மையும் மரியாதையும் ஒழுங்கும் வேண்டாமா என்றுதான் கேட்கின்றேன்.

### காங்கிரசின் சிக்கனம்

மற்றும் காங்கிரசுக்காரர் மிகவும் மிகவும் சிக்கனக்காரர்களாம்.

ஜஸ்டிஸ்காரர்கள் மிக்க ஊதாரிகள் என்றும் காங்கிரசுகாரர்கள் சிக்கனக்காரர்கள் என்றும் மேடையில் பேசுகிறார்கள்.

இதற்கு ஒரு உதாரணம் பாருங்கள். நேற்று தோழர் சத்தியமூர்த்தியார் சிம்லாவில் ஒலிபரப்பும் கருவி மூலம் பேசிய பேச்சில் மாகாண கவுன்சிலர்களுக்கு ஆளுக்கு மீ 1 - க்கு 300 ரூபாயும் 200 - போல் படிச்செலவும் கொடுக்க வேண்டும் என்றும் இந்திய சட்டசபை (அசம்பளி) மெம்பருக்கு மீ 500 ரூ சம்பளமும் முன்னூறு ரூபாய் செலவும் கொடுக்க வேண்டும் என்றும் அதாவது வருஷ மெல்லாம் பெண்ஜாதியுடன் முதல்வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்யும்படியும், படி வேண்டும் என்றும் பேசி இருக்கிறார். இந்த யோக்கியர்கள்தான் மந்திரியானால் மீ 500 ரூ சம்பளத்துக்கு மேல் வாங்க மாட்டார்களாம். இதை யோசித்துப் பாருங்கள். தோழர் சி.ஆர்.ரெட்டியார் அவர்கள் காங்கிரசுக்காரர் என்ற ஹோதாவில் பெற்ற யூனிவர்சிட்டி வைஸ் சான்ஸ்லர் வேலைக்கு இன்றும் மாதம் 2000 ரூ சம்பளமும் 500 போல் படியும் பெற்று வருகிறார். அவரும் இதுவரை காங்கிரசில் ராஜிநாமாக் கொடுக்கவில்லை. காங்கிரசுக்காரர்களும் அவரை நீக்கவில்லை. இவ்வளவோடு மாத்திரமா? இதற்கு அவரிடத்தில் அதாவது இந்த மாதிரி காங்கிரசுக் கொள்கைக்கு விரோதமான காரியம் செய்ய அவரை அனுமதித்து அவரிடம் லஞ்சம் வாங்கிக் கொள்கிறார்களாம்.



RangaRakes tamilnavarasam.com

தோழர் சத்தியமூர்த்தியார் சொல்லுகிறபடி நடப்பதானால் நமது மாகாணத்திற்கு ஏற்பட்ட 250 மாகாண சட்டசபை மெம்பர்களும் ஆள் ஒன்றுக்கு மீ 300 ரூ சம்பளமும் 200 ரூ படியும் என்றால் மீ 1 க்கு 125000 ரூபாயாகிறது. வருஷம் 15 லக்ஷம் ரூ. ஆகவில்லையா என்று கேட்கின்றேன்.

அதுபோலவே இந்திய சட்டசபை மெம்பர்களுக்கும் ஆள் 1க்கு மீ 500 ரூ. சம்பளமும் 300 ரூ. படியும் என்றால் சுமார் 350 மெம்பர்களுக்கு மீ சுமார் 300000 ரூபாய் வீதம் வருஷம் 35 லட்சம் ஆகவில்லையா என்று கேட்கின்றேன். இது பொது ஜனங்கள் பணம் பாழாகின்ற ஊதாரி முறையா அல்லது சிக்கன முறையா என்று யோசித்துப் பாருங்கள். இந்தப்படி கொள்ளை அடிப்பவர்கள் தான் காங்கிரசு அகராதிப்படி தேச பக்தர்களும் தியாகிகளும் ஆவார்கள் என்று அர்த்தம் சொல்லப்படுகிறது.

ஜஸ்டிஸ்காரர்கள் இந்தப்படியெல்லாம் இதுவரை செய்யவே இல்லை. அவர்கள் நிர்வாகத்தில் இம்மாதிரியான ஆபாசமும் கொள்ளையும் அக்கிரமமும் இல்லவே இல்லை.

## ஓட்டுகளுக்காகப் பேசவில்லை

உங்களுடைய ஓட்டுகளுக்காக நான் இவற்றை எடுத்துச் சொல்ல இங்கு வரவில்லை. ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றி காங்கிரசார் குறை கூறுவதற்கும் அக்கட்சித்தலைவர்களை இழித்துக் கூறுவதற்கும் சமாதானம் சொல்லுவதற்கு ஆகவே இவற்றை எடுத்துச் சொல்லுகிறேன்.

காங்கிரஸ்காரர்கள் நான் போய் பேசிவிட்டு வந்த ஊர்களுக்குப் போய் ஜஸ்டிஸ்கட்சியாரைப் பற்றியும் என்னைப் பற்றியும் பேசியவற்றை நான் கேள்விப்பட்டேன். நான் சொன்னவற்றில் எதையும் மறுக்க அவர்களுக்கு யோக்கியதையில்லாமல் இழிதன்மையாய் பொய்யும் பழியும் சுமத்தி பேசி இழித்துக் கூறியிருக்கிறார்கள். அவற்றை காங்கிரஸ் தலைவர்கள் கண்டிப்பதே யில்லை.

அநேக அற்பர்கள் ஈனப்பிறவிகள் நான் காங்கிரசில் பணம் எடுத்துக் கொண்டதாக பேசியிருக்கிறார்கள். இந்த மாதிரியான அயோக்கியர்களை வைத்து கட்சிப் பிரசாரம் நடத்தினால் அக்கூட்டத்துக்கும் அக்கட்சிக்கும் அக்கட்சி தலைவர்களுக்கும் எப்படி மரியாதை ஏற்பட முடியும்? கூட்டத்தை கலைக்க பார்க்கிறார்கள், நம்ம கூட்டங்களில் வந்து அயோக்கியத்தனமாய் காந்திக்கு ஜே போடுகிறார்கள். இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டாமா?

வெள்ளைக்காரர்கள் இடம் சில பார்ப்பனர்களும் காங்கிரஸ் தலைவர்களும் சென்று நாம் அவர்களை கூட்டங்களில் வைவதாக கண்ணீர் வடித்தார்களாம். இது மாய அழுகை என்றே சொல்லுவேன்.



இவர்கள் நம்மை தேசத்துரோகிகள், வெள்ளையர்கள் தாசர்கள், தேசத்தை காட்டிக் கொடுத்தவர்கள் என்று சொன்னால் நாம் இவர்களை சமூகத்துரோகிகள், மனித சமூக விரோதிகள், வெள்ளையர்கள் சந்ததிகள், தேசத்தை கூட்டிக் கொடுப்பவர்கள் என்று சொல்லி இனி அவர்கள் அப்படிச் செய்யாமல் ஏன் தடுக்கக்கூடாது என்று கேட்கின்றேன். அவர்கள் நம் சமூகத்தை, நம் கொள்கைகளை, நம் நாணயத்தை, நம் சுயமரியாதையை எல்லாவற்றையுமே வைகிறார்கள். கூலிகளுக்குக் காசு கொடுத்து வையச் சொல்லுகிறார்கள். அப்படி இருக்கும் போது அதை எப்படி நிறுத்துவது என்று கேட்கின்றேன்.

ஆதலால் காங்கிரசுகாரர்கள் ரோஷமுடையவர்களானால் மற்றவர்கள் ரோஷத்துக்கு பங்கம் வரும்படி எந்தக் கூலியும் பேசாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அது இல்லாமல் கூலிகளுக்குக் கூலி கொடுத்து வையச் சொல்லிவிட்டு நாம் சமாதானம் சொன்னால் வெள்ளையர்களிடம் போய் வைகிறானே, வைகிறானே என்று அழுவதில் என்ன நாணயம் என்று கேட்கிறேன்.

## ஒரு சீட்டு – தொழிலாளர் பிரச்னை

கடசியாக ஒரு தோழர் தலைவர் மூலம் ஒரு சீட்டு அனுப்பி இருக்கிறார். அதில் பெயர் ஒன்றும் இல்லை. ஆன போதிலும் அச்சீட்டில் கண்ட விஷயங்களுக்கு பதில் சொல்லுகிறேன்.

''ஜஸ்டிஸ் கட்சி இதுவரை தொழிலாளிகளுக்கு செய்தது என்ன? இனிச் செய்யப்போவது என்ன?'' என்று அச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## தொழிலாளர் யார்?

நமது நாட்டில் தொழிலாளர்கள் நன்மை என்றால் என்ன? தொழிலாளர்கள் என்றால் யார்? என்பது மிகவும் சிக்கலான பிரச்சினையாகும். இப்போது இங்கு யந்திர சாலைகளில் வேலை செய்பவர்கள் தான் தொழிலாளர்கள் என்ற உரிமையைப் பாராட்டிக் கொள்ளுகிறார்கள்.

அவர்களுடைய சம்பள உயர்வு, வேலை நேரம் கம்மி ஆகியவற்றையே தொழிலாளர் நன்மை என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு சட்ட சபையிலோ, ஸ்தல ஸ்தாபனங்களிலோ சில ஸ்தானங்கள் கொடுத்து விட்டால் தொழிலாளர்கள் உரிமை நிறைவேறிவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவே விடுதலை அளித்துவிடாது. இன்னும் அனேக காரியம் ஆக வேண்டியிருக்கிறது.

யந்திர சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் இந்தியா பூராகிலும் உள்ள உண்மையான தொழிலாளர்களில் வீசம் பங்கு கூட ஆகமாட்டார்கள் என்பது எனது அபிப்பிராயம்.



RangaRakes tamilnavarasam.com

இந்தியாவில் உண்மையான தொழிலாளர்கள் என்பவர்கள் மண் வெட்டியிலும் கலப்பையிலும் வேலை செய்யும் விவசாயக் கூலிகளும், மூட்டை முடிச்சு சுமப்பவர்களும், வண்டி இழுப்பவர்களும், கட்டடம் கட்டும் வேலைக்காரர்களும், மற்றும் வெளுத்தல், சிரைத்தல், கூடை முறம் பின்னல், சட்டி பானை செய்தல், மரம் இரும்பு வேலை செய்பவர்கள் போன்ற சரீர வேலைக் கூலிக்காரர்கள் முக்கிய தொழிலாளிகள் ஆவார்கள்.

என்றாலும் அதைவிட முக்கிய தொழிலாளிகள் யார் என்றால் ஜாதியினால் - பிறவியில் மற்ற மக்களுக்கு அடிமை வேலை செய்பவர் என்று பிரித்து ஒதுக்கி, தாழ்த்தியும், இழிவு படுத்தியும் வைத்திருக்கும் தீண்டப்படாத மக்கள் என்பவர்களே இன்று உண்மையான தொழிலாளிகளாவார்கள். அதற்கடுத்தாற் போல் அடிமை என்றும் சூத்திரன் என்றும் கூறப்படும் பார்ப்பனரல்லாத சமூகமே தொழிலாளி வர்க்கமாக கருதப்பட்டு வருகிறது.

இந்த இரு சமூகத்தின் மேன்மையும் முன்னேற்றமும் தான் முதலாவதான தொழிலாளர் நன்மையான காரியமாகும். பிறகு நான் முதலில் கூறின விவசாயக் கூலி முதலிய சமுதாய மக்கள் வாழ்வுக்கு ஆக வேலை செய்யும் மற்ற கூட்டம் தான் இரண்டாவது தொழிலாளர்கள் கூட்டமாகும். அப்புறம் மூன்றாவது தான் யந்திர சாலைகளில் கூலியையும் நேரத்தையும் ஒப்பந்தம் பேசிக் கொண்டு வேலை செய்யும் தொழிலாளிகள் ஆகும்.

இன்று இந்த தொழிலாளிகளின் நிலைமை முன் கூறப்பட்ட முதலாவது இரண்டாவதான தொழிலாளிகளின் 100-க்கு 90 பேர்கள் நிலையைவிட மேலான நிலையேயாகும்.

இன்று அவர்களைப்பற்றி நினைப்பதற்கு ஜஸ்டிஸ் கட்சியை விட இந்தியாவிலேயே வேறு கட்சி இல்லை என்றே சொல்லலாம்.

### தொழிலாளர் விடுதலையே ''ஜஸ்டிஸ்'' கட்சி லக்ஷ்யம்

ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பமே பிறவியில் தொழிலாளியாகவும் இழி மக்களாகவும் கருதப்பட்டு தாழ்த்தி அழுத்தி வைத்திருக்கும் மக்களின் விடுதலைக்காக ஏற்படுத்தப்பட்டதே ஆகும். அந்த துறையில் அக்கட்சி இந்தியாவில் யாரும் செய்திராத அரும்பெரும் காரியத்தை செய்து இருக்கிறது.

இயந்திர சாலைத் தொழிலாளிக்கு ஆக செய்யப்படும் காரியத்தால் பொதுத் தொழிலாளர்களான 100க்கு 90 தொழிலாளிகளின் குறைகள் நீக்கப்பட்டுவிடமாட்டாது.

யந்திர சாலைத் தொழிலாளிகளின் நலம் என்பது அரசியல் காரியம் போல் தந்திரமானதாகத்தான் இருக்கிறது. இவர்கள் பெயரைச் சொல்லி இரண்டொரு ஆள் சட்டசபைக்குப் போகலாம்; இரண்டொரு ஆள் சோம்பேறியாய் வயிறு வளர்க்கலாம்; அல்லது 2 அணா 1 அணா கூலி உயர்த்தலாம்; கால்மணி அரைமணி நேரம் குறைக்கலாம். இதனால் சரீரத்தால் சதா பாடுபடும் நேரமும் கூலியும் நிஷ்கரிசையில்லாத மிருகங்கள் போன்ற உயிர்ப்பிணங்களுக்கு என்ன மார்க்கம் என்று கேட்கின்றேன்.

தொழிலாளிக்காக வேலை செய்பவன் முதலில் பிறவித் தொழிலாளிகளை விடுதலை செய்ய வேண்டும். அவர்கள் மனப்பான்மையில் இருக்கும் நாம் கீழானவர்கள் தொழில் செய்ய பிறப்பிக்கப்பட்டவர்கள் என்பது மாற்றப்பட வேண்டும். அதில்லாமல் தொழிலாளிகள் நன்மையை பேசுவது முதலாளிகளின் கூலித் தன்மையேயாகும்.

பொது உடமை கொள்கையின் கீழும் முதல் முதல் சரீர பிரயாசைத் தொழிலாளிகள் நன்மைதான் கவனிக்கப்படும். அதற்கு உதாரணமும் சோவியத் தேசத்தின் தேசியக் கொடி உருவம், கப்பரக் கத்தியும் சம்மட்டியுமாகும். ஆதலால் அப்படிப்பட்ட மக்களாகிய பார்ப்பனரல்லாதார் சமூகத்தைப் பற்றியும் தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகத்தைப் பற்றியும் ஜஸ்டிஸ் கட்சியார் எவ்வளவோ நன்மை செய்து வருகிறார்கள். அதற்கு ஆகவே அந்த கட்சியும் இருந்து வருகிறது. மற்ற தொழிலாளிகளுக்கும் அதாவது யந்திர சாலைத் தொழிலாளிகளுக்கும் காங்கிரஸ்காரர்கள் அதாவது தோழர் சத்தியமூர்த்தியாரும் சாமி வெங்கிடாசல செட்டியாரும் செய்து வரும் நன்மையை விட எத்தனையோ மடங்கு அதிகமாகவே செய்து வருகிறார்கள்.

ஆதலால் அவர்கள் ஜஸ்டிஸ் கட்சிக்கு உதவியாய் இருந்து பலம் சேர்த்துக் கொடுப்பார்களானால் இன்னும் அதிகமான காரியம் செய்வார்கள்.

*குறிப்பு:- 08.09.1936 ஆம் நாள் சென்னை நேப்பியர் பார்க்கில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி பொதுக்கூட்டத்தில் 'தேர்தலும் ஓட்டர்கள் கடமையும்' என்பது பற்றி ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 13.09.1936**


RangaRakes
tamilnavarasam.com

# தேசீயப் பத்திரிகைகளின் போக்கு

ஸர்.ஸி.பி. ராமசாமி அய்யர் திருவிதாங்கூர் திவானாக நியமிக்கப்பட்டு விட்டாராம். தேசீயப் பத்திரிகைகளும் செமி-தேசீயப் பத்திரிகைகளும் பத்தி பத்தியாய் அவரைப் பற்றி எழுதுகின்றன. சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் தேசீயம் என்றால் பிராமணீயம் என்றுதான் பொருள்.

எனவே ஒரு பார்ப்பனர் திவான் ஆனதைப்பற்றி பார்ப்பனப் பத்திரிகைகளும் செமி - பார்ப்பனப் பத்திரிகைகளும் ஆனந்தக் கூத்தாடுவதைப் பார்த்து ஆச்சரியப்படுவதற்கில்லை. ஸர்.ஸி.பி. திருவிதாங்கூர் திவான் ஆனதைப்பற்றி நாம் பொறாமைப்படவுமில்லை. ஏன்? அதைப்பார்த்துப் பொறாமைப் படக்கூடிய நிலையில் நாம் இப்பொழுது இல்லை. திவான் பதவியை விட பதின்மடங்கு பொறுப்பும் பெருமையும் வாய்ந்த பதவிகளை நம்மவர்கள் வகித்து வருகையில் - மேலும் வகிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் மிகுந்து வருகையில் - எவ்வளவு உயரிய பதவிகளை வகிக்கவும் நம்மவர்களுக்கு லாயக்குண்டு என்ற உண்மை வெளியாகி உறுதி பெற்று வருகையில், ஸர்.ஸி.பி. திருவிதாங்கூர் திவான் ஆனதைப்பற்றி நாம் பொறாமைப் படக் காரணமில்லை. மேலும் ஜில்லா கலக்டராயிருந்த பார்ப்பனர்கள் பரோடா போன்ற சமஸ்தானங்களில் திவான் உத்தியோகம் பெற்றிருக்கையில், சென்னை மாகாணச் சட்ட மந்திரியாகவும், இந்திய சர்க்கார் ஆக்டிங் சட்ட மந்திரியாகவும், ஆக்டிங் வர்த்தக மந்திரியாகவும் இருந்தவரும், வட்டமேஜை மகாநாட்டு ஆலோசனைக் கமிட்டி மெம்பராகவும் வெள்ளைக் காகித அறிக்கையைப் பரிசீலனைச் செய்ய மன்னர் மண்டலத்தார் நியமனம் செய்த கமிட்டித் தலைவராகவும் இருந்தவரும் மற்றும் பொதுவாழ்வில் முக்கிய ஸ்தானம் வகித்தவருமான ஸர்.ஸி.பி.க்கு திருவிதாங்கூர் திவான் பதவி அவ்வளவு பெரிய பதவி யென்று நாம் கருதவுமில்லை. மற்றும் அப் பதவியைப் பெற அவர் எவ்வளவோ காலம் தவம் கிடந்திருக்கையில் கொஞ்ச காலத்துக்கு முன்னாடியே அவருக்குக் கிடைக்கவில்லையே என்பது தான் நமது கவலை.

ஆனால் ஸர். ஷண்முகம் கொச்சி திவானாக நியமனம் பெற்ற பொழுது, திவான் பதவிக்கு லாயக்குடைய கொச்சிப்பிரஜைகளின் உரிமை அலக்ஷியம் செய்யப்பட்டு விட்டதென்று சென்னை ''ஹிந்து'' பத்திரிகை கிண்டலாக எழுதியது. ஆனால் ஸர்.சி.பி. விஷயத்தில் ''ஹிந்து'' பத்திரிகை



அந்த நியாயத்தை ஏன் மறந்து விட்டதோ தெரியவில்லை. ''திருவிதாங்கூர் திருவிதாங்கூர் வாசிகளுக்கே'' என்ற கிளர்ச்சி இப்பொழுதும் திருவிதாங் கூரில் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. திருவிதாங்கூர் ஹைக் கோர்ட்டு பிரதம நீதிபதி பதவிக்கு கொச்சி சமஸ்தானத்திலிருந்து ஒரு பார்ப்பன நீதிபதியை திருவிதாங்கூர் சர்க்கார் நியமித்ததைக் கண்டித்து திரு விதாங்கூர் சட்டசபையில் ஒரு கண்டனத் தீர்மானங்கூடக் கொண்டு வரப்பட்டது. அந்த நியமனம் மகாராஜா இஷ்டத்தைப் பொறுத்ததாகையால் அதைப் பற்றிச் சட்டசபையில் விவாதிக்கக்கூடாதென்று திவான்-பிரசிடெண்டு அந்தக் கண்டனத் தீர்மானத்தை நிராகரித்து விட்டார்! சாத்தியமானவரை எல்லா உத்தியோகங்களையும் லாயக்குடைய திருவிதாங்கூர் பிரஜைகளுக்கே கொடுக்க வேண்டும் என்ற கிளர்ச்சி சுமார் 60 வருஷகாலமாக திருவிதாங்கூரில் நடைபெற்றுக் கொண்டுதான் வருகிறது.

அந்தக் கிளர்ச்சி தாங்கமுடியாத எல்லையை அடைந்ததினால் தான் எம்.இ.வாட்ஸ் (இவர் திருவிதாங்கூரில் பிறந்து வளர்ந்து கடைசியில் ஆங்கிலேயராகி லண்டனில் பாரிஸ்டர் தொழில் நடத்தியவர்) என்ற ஆங்கிலோ இந்தியரையும் திவான் பகதூர் வி.எஸ். சுப்பிரமணியய்யரையும் ரீஜண்டு மகாராணியார் சேது லக்ஷ்மிபாய் திவான்களாக நியமித்தனர். இப்பொழுதும் திவான் பதவிக்குத் தகுதியுடையவர்கள் திருவிதாங்கூரில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். திருவிதாங்கூர் ஹஜூர் சீப்சிக்ரிட்டரியாக இருக்கும் டாக்டர் குஞ்ஞன் பிள்ளை சமஸ்தானத்தில் பல உத்தியோகங்கள் வகித்து அனுபவம் பெற்ற திருவிதாங்கூர் சுதேசி. இங்கிலாந்தில் உயர்தரக் கல்வி கற்று பல பட்டங்கள் பெற்றவர். பிரிட்டிஷ் இந்திய சர்க்கார் ஆதரவில் நடைபெறும் பல டிபார்டுமெண்டுக் கூட்டங்களில் பங்கு கொண்டு அனுபவம் பெற்றவர். மற்றும் அகில இந்தியப் புகழ்பெற்ற சர்தார் கெ.எம்.பணிக்கரும் ஒரு திருவிதாங்கூர் பிரஜையே. அவர் இப்பொழுது மன்னர் மண்டலக் காரியதரிசி என்ற பொறுப்பான பதவியில் இருக்கிறார். மற்றும் ஜினீவா சர்வதேச சங்கத்தில் ஒரு பொறுப்பான பதவி வகிக்கும் டாக்டர் பத்மநாப பிள்ளையும் ஒரு திருவிதாங்கூர் பிரஜையே. மைசூர் நிர்வாக சபை மெம்பராக இருந்து பென்ஷன் பெற்று இப்பொழுது திருவிதாங்கூர் சமஸ்தானம் கோட்டயத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் தோழர் மாத்தனும் திருவிதாங்கூர் பிரஜையே. மாஜி சென்னை நீதிபதியும் இப்பொழுது திருவிதாங்கூரில் தமது குடும்ப வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பவருமான டாக்டர் கிருஷ்ணர் பண்டாலையும் ஒரு திருவிதாங்கூர் பிரஜையே. தோழர்கள் மாத்தனும் பண்டாலையும் பென்ஷன் பெற்றவர் களானாலும் கிடுகிடு கிழவர்களாகிவிட வில்லை. தற்காலத் திவான் ஸர். ஹாபிஜல்லாவைப் போல் சக்தியுடையவர்களே. சென்னை சர்வகலா சங்க பொருளாதார புரபசரும் நிபுணருமான டாக்டர் மத்தாயியும் ஒரு திருவிதாங்கூர் பிரஜையே. இம்மாதிரியே யோக்கியதையுடைய



RangaRakes
tamilnavarasam.com

திருவிதாங்கூர் பிரஜைகள் திருவிதாங்கூரிலும் பிரிட்டிஷிந்தியாவிலும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ''திருவிதாங்கூர் திருவிதாங்கூர் வாசிகளுக்கே'' என்ற கிளர்ச்சி வலுப்பெற்றிருக்கும் இக்காலத்திலே, திவான் பதவிக்கு யோக்கியதையுடைய எத்தனையோ திருவிதாங்கூர் பிரஜைகள் இருக்கையில், ஸர். ஸி.பி. யை திவானாக்கியது ஒழுங்கா என சென்னை ''ஹிந்து'' வைக் கேட்கிறோம். ஸர். ஷண்முகத்தையோ, திவான்பகதூர் ராமசாமி முதலியாரையோ, டாக்டர் சுப்பராயனையோ திவானாக நியமித்திருந்தால் ''திருவிதாங்கூர் திருவிதாங்கூர் பிரஜைகளுக்கே'' என்ற நியாயத்தை ''ஹிந்து'' வற்புறுத்தாதிருக்குமா என்றும் கேட்கிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 13.09.1936**



# சுதேச சமஸ்தானமும் வகுப்புவாதமும்

வகுப்பு வாதமும் காங்கிரசும் என்பது பற்றிச் சென்ற வாரம் ''குடி அரசில்'' தலையங்கம் எழுதி இருந்தோம். அதன் முக்கிய கருத்தெல்லாம் பல மதம், பல ஜாதி, பல வகுப்பு என்பதாக பிரிவினையுள்ள மக்கள் அடங்கிய நாடு எந்த நாடாய் இருந்தாலும் அங்கெல்லாம் வகுப்புணர்ச்சிகளும், வகுப்பு வாதங்களும் இல்லாமல் இருக்காது என்பதும் வகுப்புணர்ச்சியை மதித்து ஏதாவது ஒரு வழியில் அதை சமாதானப்படுத்தி அடக்க முடியாமல் அதோடு போர் தொடுக்கும் வரையிலும் எரிகிற நெருப்பை பெட்றோல் எண்ணெய் ஊற்றி அவிக்கக் கருதும் மூடன் செய்கை போல் வகுப்பு வாதம் வளர்ந்து கொண்டே தான் வரும் என்பதுமேயாகும்.

அதோடு கூடவே வகுப்பு வாதம் இந்தியாவில் பல ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்னதாகவே வேறு பல பெயர்களால் இந்திய மக்களுக்குள்ளாகவே இருந்து வந்திருக்கிறது என்றும் அதன் காரணமாகவே மக்கள் சமூகத்துக்கு அடிக்கடி தொல்லையும், துன்பமும் ஏற்பட்டு வந்திருக்கின்றன என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

### வகுப்புவாதம் புதியதல்ல

இப்பொழுதும் இன்னும் சற்று விளக்கமாய் தெரியவேண்டுமானால் வேதகாலம் என்பதில் ஏற்பட்டிருந்த கருப்பர்கள், வெள்ளையர்கள் சண்டையும், சாஸ்திரங்களில் இருந்து வந்த பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்கின்றதாகிய வருணாச்சிரம தர்மமும், புராண காலங்களில் இருந்து வந்த தேவ அசுர யுத்தங்களும், தேவர்கள் - ராக்ஷதர்கள் யுத்தங்களும், சரித்திர காலத்தில் இருந்து வந்த ஆரியர் - திராவிடர் சண்டைகளும், முஸ்லீம்கள் படையெடுப்பும் முதலிய காரியங்கள் போதுமான ஆதாரம் என்றே சொல்லுவோம்.

இவைகள் மாத்திரமல்லாமல் சுமார் இந்தியாவின் 1000வருஷ ஆட்சியை எடுத்துக் கொண்டாலும் அரசியல் காரணம் அல்லாமல் வகுப்பு காரணமாகவே அரசியல் ஏற்பட்டும் நடைபெற்றும் வந்திருப்பதும் விளங்கும்.

ஒரு காலத்திலாவது வகுப்பு காரணமில்லாமல் கொள்கை காரணமாக கிளர்ச்சிகள் நடந்ததாகச் சொல்லுவதற்கு உண்மைச் சரித்திர ஆதாரம் எதுவுமே காண முடியாமல் இருக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

இப்படிப்பட்ட நிலையில் உள்ள இந்தியாவுக்கு இன்று மாத்திரம் ஒரு கூட்டத்தார் அதுவும் தாங்கள் அரசியலிலும் சமூக இயலிலும், பொருளாதார இயலிலும் உச்சஸ்தானத்தில் இருக்கின்றோம் என்ற காரணத்துக்காகவும், மற்றவர்களும் அந்த ஸ்தானத்துக்குப் போட்டி போட ஆரம்பித்து விட்டார்களே என்பதற்கு ஆகவும், அறிவும் உணர்ச்சியும் பெற்ற மற்றக் கூட்டத்தாரை அழுத்தவும் தலை எடுக்கவொட்டாமல் தடுக்கவும் கருதி, முன்னேற்றமடைய வேண்டும் என்று கருதுபவர்களையெல்லாம் வகுப்பு வாதம் வகுப்புவாதம், தேசத்துரோகம் தேசத்துரோகம் என்று குறைகூறுவதால் அடக்கி விடவோ தடுத்து விடவோ கூடுமா என்று கேட்கின்றோம்.

''50 வருஷ காலமாய் இந்திய மக்களுக்கு காங்கிரசானது தேசிய ஞானம் போதித்து வந்தும்'' இன்று ''இந்த 50 வருஷ காலமாய் இல்லாத வகுப்பு வாதம் தலைவிரித்து ஆடுகிறது'' என்றால் அது மக்களுக்கு தேசிய ஞானம் இல்லாத குறையா, அல்லது தவிர்க்க முடியாததும் தடுக்க முடியாததுமான வகுப்புவாதத்தின் இயற்கை வலிமையா என்று கேட்கின்றோம்.

முந்திய கட்டுரையில் ''சர்க்காருடைய தூண்டுதல்'' அல்லாமலேயே 1916ம் வருஷத்தில் காங்கிரஸ் முஸ்லீம்களுக்கு தனித்தொகுதி மூலம் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவம் கொடுக்க சம்மதித்து அரசாங்கத்தினிடம் ஒப்புக்கொண்டது என்கின்ற விஷயத்தை எடுத்துக்காட்டி இருக்கிறோம்.

### காந்தி ஆதரித்த வகுப்பு வாதம்

அப்படி 1916ம் வருஷம் ஒப்புக்கொண்ட காங்கிரஸ் இன்று அதே முஸ்லீம்களுக்கு அதே சர்க்காரால் கொடுக்கப்பட்ட வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி குறை கூறுவதும் சர்க்கார் மக்களைப் பிரித்தாள வேண்டி இம்மாதிரி வகுப்புத் தீர்ப்பு கொடுத்தார்கள் என்று குறைகூறுவதும் முரணான சங்கதியா அல்லவா என்று கேட்பதோடு காந்தியார் வட்டமேஜை மகாநாட்டில் ''சரித்திர சம்மந்தமான காரணங்களைக் கொண்டு முஸ்லீம்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டியதுதான்'' என்று ஒப்புக் கொள்வதும் இப்பொழுது காங்கிரஸ் வகுப்பு தீர்ப்பை ஏற்றுக்கொள்ளுவ தில்லை என்று சொல்லுவதும் இந்த மத்தியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு காங்கிரசும் தாழ்த்தப்பட்ட மக்களும் ராஜி பேசி வகுப்புவாரி உரிமை ஏற்படுத்திக் கொடுப்பதும், முஸ்லீம் வகுப்பு தீர்ப்பை காங்கிரஸ் ஒப்புக் கொள்ளவில்லை, ஆனாலும் அதற்கு எதிர் பிரசாரம் செய்யக்கூடாது என்று காங்கிரஸ் வேலைத்திட்டத்தில் காட்டிக் கொள்வதும், வகுப்புத் தீர்ப்புக் குறையைப் பற்றி அந்நிய அரசாங்கத்துக்கு விண்ணப்பம் போடுவது இழிவு என்றும் சுயராஜ்யம் வந்தால் வகுப்புத் தீர்ப்பு தானே ஒழிந்து விடும் என்றும் காங்கிரஸ் தலைவர் தோழர் ஜவஹர்லால் சொல்லுவதும், முஸ்லீம் வகுப்புத் தீர்ப்பை மாற்ற முடியுமா என்று அரசாங்கத்தாரைக் கேட்டால் அதற்கு இரு சமூகத்தாரும் ராஜியாகி ஒரு முடிவுக்கு வந்தால் அந்தக் காலத்தில் தான்



அதை மாற்ற முடியுமே தவிர மற்றபடி எந்தக் காரணத்தாலும் மாற்ற முடியாது என்று அரசாங்கத்தார் பதில் சொல்லுவதும், புதிய சீர்திருத்தம் வகுப்புத் தீர்ப்பை அடிப்படையாய்க் கொண்டிருப்பதால் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று இந்திய சட்டசபையில் தோழர் ஆனே தீர்மானம் கொண்டு வருவதும் இப்படியாக பல திருவிளையாடல்கள் வகுப்பு வாதத்தால் தினமும் நடந்தவண்ணமாயிருக்கின்றன.

அப்படி இருக்கும் போது சரித்திர காரணமாகவும் மதம், சாஸ்திரம் காரணமாகவும் வகுப்புக்கு வகுப்பு கீழ் மேல் என்றும், தீண்டவும், உண்ணவும், கொள்ளவும், கொடுக்கவும், அதீதப்பட்டது என்றும் சொல்லும்படியானதுமான வகுப்புகளுக்கு ஏன் வகுப்புரிமைகள் வழங்கக்கூடாது என்று தான் கேட்கின்றோம்.

அரசியல் சம்மந்தமான காங்கிரஸ் கிளர்ச்சிகளைப் பொறுத்த வரை வகுப்புரிமை கேட்கும் வகுப்பார்களுக்கு அதன் திட்டங்களில் ஏதாவது அபிப்பிராய பேதம் இருக்கலாமே ஒழிய அடிப்படையான கொள்கைகளில் காங்கிரசோடு மற்ற வகுப்புகளுக்கு எவ்வித பெரிய வித்தியாசமும் இருப்பதாக நமக்கு விளங்கவில்லை.

### வகுப்புவாதிகள் லக்ஷ்யம்

வெள்ளைக்காரர்களுடைய ஆதிக்கமே இந்தியாவில் இருக்கிறதைப் பற்றியோ, நாளைய தினமே போய் விடுவதைப்பற்றியோ வகுப்புரிமை கேட்கும் மக்களுக்கு அதிக விசாரமில்லை. அவர்கள் இருந்தாலும் போவதானாலும் நாம் பல வகுப்பாரும் இந்தியாவில் எப்படி வாழ்வது என்பதில்தான் முக்கியமாகக் கவலைப்பட வேண்டி இருக்கிறது.

ஏனெனில் காங்கிரசு இந்த நாட்டில் ஏற்பட்ட இந்த 50 வருஷ காலமாக ஒரே ஒரு வகுப்புதான் அதாவது பார்ப்பன வகுப்புதான் மேலும் மேலும் முன்னேற்றமடைந்து விருத்தி அடைந்திருக்கிறதே ஒழிய மற்ற சகல வகுப்பும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கூச்சலாலேயே சிறிதாவது முன்னேறவும் முன்னேறா விட்டாலும் தன் நிலையில் இருந்து கீழே போகாமலும் இருந்து வரவும் முடிந்திருக்கிறது. அப்படி இருக்கும் போது யார்தான் வகுப்பு உரிமையை கேட்காமல் இருக்க முடியும் என்று கேட்கின்றோம்.

ஆகையால் இந்த நாட்டுக்கு அரசியல் முன்னேற்றமோ சமூக இயல் முன்னேற்றமோ பொருளாதார இயல் முன்னேற்றமோ வேண்டியவர்கள் முதலில் இந்தந்த வகுப்பாருடைய வகுப்புரிமை ஒழுங்காக இருக்கிறதா என்று பார்த்து அதை சீர்திருத்திக் கொள்ள வேண்டியதே முக்கிய காரியமாகும்.

எந்த தேசத்தில் வகுப்புரிமைக்கு மற்றொரு வகுப்பாரால் தடையும் தொல்லையும் இருந்து வருகிறதோ, அந்த நாட்டில் உள்நாட்டுக் கலகம் வளர்க்கப்பட்டு வருகிறது என்பதும் வகுப்புரிமையை தடைப்படுத்தும்



RangaRakes tamilnavarasam.com

மக்களே தான் நாட்டின் முன்னேற்றத்துக்கும் ஒற்றுமைக்கும் விரோதிகளாக முட்டுக் கட்டையாளர்களாக இருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

### வகுப்புரிமையினால் எந்த நாடும் அழியவில்லை

வகுப்புரிமை அளித்த காரணத்தால் இதுவரை எந்த நாடும் கெட்டுப் போனதாக சொல்ல முடியாது.

### சுதேச சமஸ்தானங்களும் வகுப்புரிமையும்

உதாரணமாக இந்தியாவிலேயே நமது மாகாணத்துக்கு சம்பந்தப்பட்ட பல சுதேச சமஸ்தானங்களில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பல வருஷங்களாகவே கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது.

மைசூரிலும், திருவாங்கூரிலும் மற்றும் ஒவ்வொரு வகையில் இதர சமஸ்தானங்களிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டு ஆய்விட்டது.

### கொச்சியில்

சமீப காலத்தில் கொச்சியிலும் கொடுக்கப்பட்டாய் விட்டது. அதைப் பற்றி கொஞ்ச நாளைக்கு முன்பாக ''குடியர''சில் தலையங்கமே எழுதப் பட்டிருந்ததை நேயர்கள் பார்த்திருக்கலாம். இப்போது அதற்கு வேலைத் திட்டமும் போட்டாய் விட்டது. அதாவது கொச்சி அரசாங்கத்தில் 50 உத்தி யோகங்களுக்கு ஆட்கள் நியமிக்கப்படுவதாய் இருந்தால் அவற்றை வினியோகிக்கும் முறையில் சர்க்கார் இன்ன முறையைக் கையாள வேண்டும் என்று ஒரு வரிசைக் கிரமத்தை சமஸ்தான கெஜட்டு மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். கொச்சி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உத்தியோக வினியோகத்துக்கு ஆக கொச்சி பிரஜைகளை 1. பார்ப்பனர், 2. நாயர், 3. ஈழவர், 4. புலையர், 5. இதர ஜாதி இந்துக்கள், 6. இதர ஜாதி இந்துக்களில் பிற்பட்ட வகுப்பார், 7. கிறிஸ்தவர்கள், 8. முஸ்லீம்கள், 9. யூதர் ஆங்கிலேயர் என்கின்றபடி 9 வகுப்புகளாக பிரிக்கப்பட்டிருந்தாலும் அவற்றுள்ளும் முக்கிய வகுப்புகளைப் பிரித்து எந்த வரிசைக்கிரமத்தில் உத்தியோகம் கொடுத்து வருவது என்று திட்டம் ஏற்பாடு செய்திருக்கிறது.

### உத்தியோக வரிசைக் கிரமம்

1. ஈழவர்
2. ரோமோசிரியன் கிறிஸ்தவர்
3. நாயர்
4. முஸ்லீம்
5. இதர ஜாதி இந்து
6. ஈழவர்
7. பார்ப்பனர்
8. இதர இந்து பிற்பட்ட வகுப்பு
9. நாயர்
10. லேட்டின் கத்தோலிக்கர்
11. ஈழவர்
12. இதர இந்து
13. புலையர்
14. ரோமோசிரியன் கிறிஸ்தவர்
15. நாயர்
16. ஈழவர்
17. இதர ஹிந்து
18. இதர கிறிஸ்தவர்
19. ஜூஸ், ஆங்கிலோ இந்தியர்
20. ரோமன் சிரியன் கிறிஸ்தவர்
21. ஈழவர்
22. நாயர்
23. இந்து பிற்பட்ட வகுப்பு
24. லேட்டின் கத்தோலிக்கர்
25. இந்து பிற்பட்ட வகுப்பு
26. ஈழவர்
27. ரோமன் சிரியன் கிறிஸ்தவர்
28. நாயர்
29. முஸ்லீம்
30. இதர இந்து
31. ஈழவர்
32. தமிழ் பார்ப்பனர்



RangaRakes
tamilnavarasam.com

33. இந்து பிற்பட்ட வகுப்பு

34. நாயர்

35. இதர கிறிஸ்தவர்

36. ஈழவர்

37. இதர இந்து

38. புலையர்

39. ரோமோசிரியன் கிறிஸ்தவர்

40. நாயர்

41. ஈழவர்

42. லேட்டின் கத்தோலிக்க கிறிஸ்தவர்

43. இதர இந்து பிற்பட்ட வகுப்பு

44. முஸ்லீம்

45. ரோமன் சிரியன் கிறிஸ்தவர்

46. இதர இந்து பிற்பட்ட வகுப்பு

47. நாயர்

48. ஈழவர்

49. இதர கிறிஸ்தவர்

50. இதர இந்து பிற்பட்ட வகுப்பு

என்பதாக பிரித்து உத்திரவு இட்டு விட்டார்கள்

அதாவது, மொத்தத்தில் 100-ல் இந்துக்களுக்கு 68 வீதமும் கிறிஸ்தவர்களுக்கு 24 வீதமும், முஸ்லீம்களுக்கு 6 வீதமும், ஜூஸுக்கும் ஆங்கிலோ இந்தியருக்கும் 2 வீதமும் கொடுத்து இவற்றுள் உட்பிரிவுகளாகவும் 12 வகுப்புகளைப் பிரித்து அவைகளில் இந்துக்களுக்குள் 100-ல்

| | |
|---|---|
| பார்ப்பனருக்கு | 4 வீதமும், |
| நாயர்களுக்கு | 16 வீதமும், |
| ஈழவர்களுக்கு | 20 வீதமும், |
| இதர ஜாதி இந்துக்களுக்கு | 10 வீதமும், |
| பிற்பட்ட வகுப்பு இந்துக்களுக்கு | 14 வீதமும், |
| புலையர்களுக்கு | 4 வீதமும், |
| ஆக | 68 வீதமும், |

கிறிஸ்தவர்களில்

| | |
|---|---|
| ரோமன் சிரியன் கிறிஸ்தவருக்கு | 12 வீதமும், |
| லேட்டின் கத்தலிக்கு கிறிஸ்தவருக்கு | 6 வீதமும், |
| மற்ற மூன்று வகுப்பு கிறிஸ்தவருக்கும் | 6 வீதமும், |

உள்வகுப்பும் பிரித்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே கொச்சி சமஸ்தானத்தில் உள்ள முக்கியமான சகல வகுப்பும் உட்பிரிவு வகுப்பும் ஜன சங்கை விகிதாச்சார உத்தியோகங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டு விட்டதால் இனி சுலபத்தில் அந்த சமஸ்தானத்தில் வகுப்புச் சச்சரவு வரவோ வகுப்பு நலத்துக்காக இழிவான காரியம் செய்யவோ தேச, சமூக பொது நலனுக்கு எந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பார் விரோதமாய் இருக்கவோ அரசியலின் பேராலோ, சமுதாயத்தின் பேராலோ, எந்த வகுப்பாரும் பொது மக்களை ஏமாற்றவோ இடமில்லாமல் போய்விட்டது.

### நாம் கேட்பது

இதைத்தான் நாமும் அரசியலில் உத்தியோகத்திலும் பிரதிநிதித் துவத்திலும் விரும்புகிறோம்.

இந்தியாவில் பிரதிநிதித்துவத்தில் முஸ்லீம் சமூகத்தார் கிளர்ச்சியினால் ஒரு அளவு ஏற்பட்டு விட்டது என்றாலும் இந்துக்களில் மேல்ஜாதி உரிமை பாராட்டும் பார்ப்பனர்களுக்கும் கீழ் ஜாதியார் என்று ஒதுக்கப்பட்டிருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் அவ்வித பேதம் சமுதாயத்தில் ஒழிக்கப்படும் வரை பிரதிநிதித்துவம் வகுக்கப்படவேண்டும் என்கின்றோம்.

அது போலவே உத்தியோகத்திலும் பார்ப்பனரல்லாதார் கிளர்ச்சி காரணமாக மாஜி மந்திரி கனம் முத்தய்ய முதலியார் அவர்கள் முயற்சியால் முக்கிய மத, வகுப்புகளுக்கு பிரிவுவாரி உரிமை வகுக்கப்பட்டிருந்தாலும் அந்த வினியோக எண்ணிக்கை அநியாயத்தைப் போக்கவும் அக்கொள்கை நிலைத்திருக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறோம்.

இந்தப்படி செய்வதில் தேசீயத்துக்கோ தேச நலத்துக்கோ என்ன கெடுதி இருக்கின்றது என்பது நமக்கு விளங்கவில்லை.

### நிரந்தரமாய் அல்ல

அன்றியும் நாம் கேட்பதும் என்றும் நிரந்தரமாய் இருக்க வேண்டுமென்று கேட்கவில்லை. எதுவரை ஜாதிமத வகுப்புப் பிரிவும் வித்தியாசமும் இருக்கின்றதோ அதுவரை தான் பிரதிநிதித்துவ முறை அனுமதிக்க வேண்டு மென்றும் கேட்கின்றோம்.


RangaRakes tamilnavarasam.com

இதைப் பார்ப்பனர்கள் ஒப்புக்கொள்ள முடியாது என்பதற்கு காரணம் உண்டு. ஏனெனில் இந்த முறை ஏற்பட்டால் பார்ப்பன ஆதிக்க வாயில் மண் விழுந்துவிடும்.

எப்படியெனில் கொச்சியில் தோழர் கனம் திவான் சர். ஷண்முகம் அவர்கள் வகுப்புவாரி உரிமைத் திட்டம் ஏற்படுத்துவதற்கு முன்பு 21754 பேர்கள் ஜனத்தொகை கொண்ட பார்ப்பனர்கள் 412 உத்தியோகத்தில் வருஷம் 430000 நாலு லட்சத்து முப்பது ஆயிரம் ரூபாயும் அதாவது மொத்த ஜனத்தொகையில் 50 பேருக்கு ஒரு உத்தியோகமும், மொத்த ஜனத் தொகையில் ஆள் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதமும், 276500 பேர்கள் ஜனத் தொகை கொண்ட ஈழவர் சமூகத்துக்கு 34 உத்தியோகமும் அதுவும் 16 காயம் உத்தியோகமும் 18 ஆக்டிங் உத்தியோகமாகவும் அவற்றிற்கு வருஷ சம்பளம் 26128 ரூபாயும் அதாவது மொத்த ஜனத்தொகையில் 810 பேருக்கு ஒரு உத்தியோகமும் ஆள் ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு ஒரு அணா ஆறு (0-1-6) பைசா வீதமும் பெறும்படியான வித்தியாசம் ஒழிந்து பார்ப்பனர்களுக்கு அவர்கள் ஜனத்தொகை விகிதாச்சாரம் 100க்கு 2 வீதமும் ஈழவருக்கு அவர்கள் ஜனத்தொகை விகிதாச்சாரம் 100க்கு 20 வீதமும் உத்தியோகம் கிடைக்கும்படி செய்தால் பார்ப்பனர்கள் கதி என்ன ஆகும் என்று பாருங்கள்.

ஆகவே பார்ப்பனர்கள் இதை எதிர்க்கவேண்டியது தான். ஆனால் பார்ப்பனர்களுடன் எவ்வித சரீர சம்மந்தமோ, சமுதாய சம்மந்தமோ இல்லாத பார்ப்பனரல்லாத மக்கள் இதை ஏன் எதிர்க்கிறார்கள் என்பதுதான் நமக்கு விளங்கவில்லை.

### சர். ஷண்முகம்

கொச்சியில் திவான் கனம் சர். ஷண்முகம் இந்த ஏற்பாடு செய்யும்போது அந்த சமஸ்தானத்தில் ஒரு பிரஜை கூட இதை ஆக்ஷேபித்துப் பேசவே யில்லையாம். இதனால் கொச்சியிலுள்ள பிரஜைகளாகிய 12 லக்ஷம் மக்களும் தேசத்துரோகி என்றோ உத்தியோகத்துக்காக எதையும் விட்டுக் கொடுப்பவர்கள் என்றோ இந்திய தேசீயவாதிகள் என்பவர்களில் சில அயோக்கிய அற்ப ஈன ஜெந்துக்கள் குரைக்கின்ற மாதிரியே எவரும் கூறிவிட முடியாது.

தோழர் சர். ஷண்முகத்தை வகுப்புவாதி என்பதற்காக அவர் மீது பழி சுமத்தி காட்டிக் கொடுக்கும் வேலை செய்து சிலர் அவர்களைத் தோற்கடித்து ஒரு கார்ப்பரேஷன் கண்டிறாக்டருக்கும், தொழிலாளிகளை முதலாளிகளுக்குக் காட்டிக் கொடுத்து வாழும் ஒரு காங்கிரசுக்காரருக்கும் வெற்றி சம்பாதித்துக் கொடுத்தார்கள். அதனால் சர்.ஷண்முகம் யோக்கியதை சிறிதும் மங்கவில்லை. குன்றின்மீது இட்ட எலக்டிரிக் 100000 கேண்டில் பவர் விளக்கு போல்



ஜ்வலிக்கின்றது. ஆனால் அவரை தோற்கடிக்கச் செய்தவர் கைக்கு வளையலும், நெஞ்சுக்கு ரவிக்கையும் போட்டு முக்காடிட்டு மூலையில் உட்கார வைக்கப்பட்டிருக்கிறார்.

ஆகவே வகுப்பு வாதத்தின் பெருமையை என்ன என்று சொல்லுவது.

### பார்ப்பனருக்கு ஒரு வார்த்தை

இந்த சமயத்தில் பார்ப்பனர்களுக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகிறோம். எங்களில் சில அன்னக்காவடிகளையும் எச்சிக்கலைகளையும் சுவாதீனம் செய்து கொண்டு எங்களை வையச் செய்யாதீர்கள். தேச ஸ்தாபனங்களை தேசமக்கள் வரிப்பணத்தால் ஒழுக்கமாகக் கட்டுப்பாடாக - நாணயமாக நடத்தப் படவேண்டிய நிர்வாகங்களை அற்ப காரியங்களுக்கு ஆக அற்பர்களுக்கு கிடைக்கும்படி செய்து நல்ல அரசியல் நிர்வாகத்தையும் சமாதான வாழ்க்கையையும் பாழாக்காதீர்கள்.

பொது உடமை தேசமானாலும் கட்டுப்பாடும் நாணயமும் வேண்டும். அக்கட்டுப்பாடும் நாணயமும் என்பதற்கு என்ன தான் தாராள நோக்கத்துடன் வியாக்கியானம் செய்தாலும் பொதுஉடமைக் கொள்கை உறுதியுடன் நடக்கத்தக்க கட்டுப்பாடும் நாணயமும் என்று தான் சொல்லலாமே தவிர அந்நியன் சட்டைப்பையில் இருக்கும் பணத்தை திருடுவதும் கூலிக்கு குரைக்கும் கொள்கையும் பாமரப் பெண்களைச் சூறையாடி விற்கும் தன்மை போன்றதுமான காரியங்கள் கட்டுப்பாடும் ஒழுங்குமாகாது.

ஆதலால் பார்ப்பனர்களே, மண்குதிரையை நம்பி ''வாழ்க்கைப்படுவதும் கெட்டு, தேடித் தின்பதும் போய்'' வீணாய் சந்தியில் அலையும்படியான நிலைமையை அடையாதீர்கள் என்று எச்சரிக்கை செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இன்று காங்கிரசில் உள்ள எந்த நபர் நாளைக்கு ஜஸ்டிஸ் கட்சிக்கு கூப்பிட்டால் வரமாட்டார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அவர்களை சட்டை செய்பவர்கள் யார்?

ஆதலால் வீணாக ஒற்றுமைக்கும், கட்டுப்பாட்டுக்கும் ஒழுக்கத்துக்கும் முட்டுக்கட்டை போட்டு மனித சமூக நலத்தை - முற்போக்கை - சாந்தியை - நாணயத்தை ஒழுக்கத்தை பாழாக்காதீர்கள். வைவதும் காலித்தனம் செய்வதும் உங்கள் கூலிகளுக்கே சொந்தமென்று எண்ணி ஏமாந்து போகாதீர்கள்.

### ஆனாலும் வருந்துகிறோம்

நாய் கடித்தால் நாயைக் கடிக்க மாட்டார்கள்; ஆனால் நாய் வளர்ப்பவர்களை தண்டிக்காமல் விடமாட்டார்கள். அன்றியும் மல்லாந்து படுத்து எச்சில் உமிழ்ந்தால் மார்மேல்தான் விழும் என்பார்களே, அதுபோல்



RangaRakes tamilnavarasam.com

மற்றும் சிலர் விஷயத்தில் நம்மவர்கள் தானே நம்மை வைபவர்களாக இருக்கிறார்களே, அவர்களை திரும்ப வைவது நமக்கு மன வேதனை கொடுக்காதா என்று ஒரு அளவுக்கு பயப்படுகின்றோம்.

ஆன போதிலும் காங்கிரசுக்காலிகள் ஆங்காங்கு பல மகாநாடுகளிலும் கூட்டங்களிலும் பேசுவதும் வைவதும் கேள்விப்பட்ட வரையில் பத்திரிகைகளில் பார்த்த வரையில் அந்த பயத்தையும் அடியோடு விட்டுவிட வேண்டியது தான் என்கிற நிலைமைக்கு வர வேண்டியிருக்கிறதே என்று சிறிது வருந்துகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 13.09.1936**



# பிரஜா பிரதிநிதித்துவ சபை கூட்டுவதின் கருத்து

## எச்சரிக்கை! எச்சரிக்கை!!

காங்கிரசுக்காரர்கள் பொதுஜனப் பிரதிகள் கூட்டம் ஒன்றை கூட்ட வேண்டும் என்று சர்க்காரை கேட்டுக் கொள்ளுவதாக ஒரு தீர்மானம் இந்தியா சட்டசபைக்கு கொண்டு வரப்போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்களாம்.

அந்த தீர்மானத்தின் வாசகம் எப்படிப்பட்டது என்றால், சீர்திருத்தத்தில் உண்மையான அதிகாரம் இல்லையென்றும், வகுப்புத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்றும் ஆதலால் கூடாது என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

அரசியலில் வகுப்புகளைக் காப்பாற்றிக் கொடுப்பதாக பல வகுப்பு மக்களுக்கும் உத்தரவாத மேற்றுக் கொண்ட காங்கிரசானது அரசியலில் வகுப்புத் திட்டம் கூடாது என்று சொன்னால் அதில் ஏதாவது நாணயமிருக்க முடியுமா என்பதை யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம். இன்றைய காங்கிரசின் கிளர்ச்சியெல்லாம் ஒரு குறிப்பிட்ட வகுப்பாருடைய ஆதிக்கம் அரசியலிலும் தலைசிறந்து விளங்கவேண்டும் என்ற பார்ப்பனீயக் கிளர்ச்சியே ஒழிய யோக்கியமான அரசியல் கிளர்ச்சி அல்ல என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும் என்று கேட்கின்றோம்.

ஆதலால் இப்படிப்பட்ட பொதுஜனங்கள் பிரதிநிதித்துவக் கூட்டம் ஒன்று கூட்டப்படுவதானால் இந்தியாவில் உள்ள சகல வகுப்பாருக்கும் சகல கட்சி ஸ்தாபனங்களுக்கும் சரியான பிரதிநிதித்துவம் அதுவும் ஜனத்தொகைக்கு ஏற்ற பிரதிநிதித்துவம் கொடுத்துத் தான் கூட்டவேண்டும் என்றும், அதற்கு முன்னதாக அப்படிப்பட்ட சபை ஒன்று கூட்ட ஏற்பாடு செய்யும் முன் காங்கிரசுக்காரர்கள் அபிப்பிராயம் தான் மற்ற சபை யாருடையவும் வகுப்பாருடையவும் அபிப்பிராயமா என்றும் கேட்டுவிட்டே கூட்ட வேண்டும் என்று சர்க்காருக்கு எச்சரிக்கை செய்வதோடு, இந்த மாதிரியான சூழ்ச்சித் தந்திரத்தால் எல்லாம் இந்தியாவில் சமுதாயத்திலும் கல்வியிலும் பொருளாதாரத்திலும் அரசியல் சுதந்திரத்திலும் பிற்படுத்தப் பட்டிருக்கிற மக்களின் கண்களில் மிளகு பொடி போட்டு வாயில் மண்ணைப்போட்டு விட முடியாது என்று காங்கிரசுக்காரருக்கும் எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.09.1936**



RangaRakes tamilnavarasam.com

# வரப்போகிறார்கள‍ாமே!

தென்னாட்டில் காங்கிரசுக்குச் செல்வாக்கும் மதிப்பும் குறையும்போது வடநாட்டுத் தலைவர்களை அழைத்துக்கொண்டு ஊரூராய்ச் சுற்றி நிதி சேர்ப்பதும் காங்கரஸ் பிரசாரம் செய்வதும் தென்னாட்டுப் பார்ப்பனர்களின் வழக்கமாக இருந்து வருகிறது.

இன்று தென்னாட்டு காங்கரஸ் குடைசாய்ந்து கிடக்கிறது. தமிழ் மாகாண காங்கரஸ் காரியக்கமிட்டியார் ராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று காங்கரஸ்காரர்களே கிளர்ச்சி செய்கிறார்கள். தலைவரை வீழ்த்தவேண்டும் என்றும் ஒரு கிளர்ச்சி நடை பெற்று வருகிறது.

காங்கரஸ் ஆதிக்கம் பெற்ற ஜில்லா போர்டுகளில் எல்லாம் ஊழல்கள் நிறைந்து விட்டன. ஜில்லா போர்டுகளில் காங்கரஸ் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டிருக்கிறது.

காங்கரஸ்காரர்களின் ஜில்லா போர்டு நிர்வாகத்தைப் பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்டிருந்த கமிட்டியார் ''நிர்வாகம் ரொம்ப ரொம்ப ஒழுங்கு'' என அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். எனினும் அவ்வறிக்கையை காங்கரஸ்காரர்களே எதிர்க்கிறார்கள்.

வேலூர் ஜில்லாபோர்டு இடைத்தேர்தலில் காங்கரஸ் பேரால் அபேட்சகர்களாய் நிற்கக் கூட ஆட்கள் முன் வரவில்லை.

சென்னை நகரசபைத் தேர்தல் சம்பந்தமான ஊழல்களைக் கண்டிக்க ஒரு விசேஷ காங்கரஸ் கமிட்டியார் முயற்சி செய்து வருகிறார்கள். காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு எதிரிடையாக காங்கிரஸ்காரர்களே பிரசாரம் செய்து வருகிறார்கள்.

காங்கரஸ் சீரழிந்து மானங்கெட்டு மதிப்பிழந்து கிடப்பதற்கு இவ்வளவும் போதாவா!

இந்த நிலை மேலும் இப்படியே இருந்து கொண்டிருக்குமானால் வரப் போகும் பொதுத் தேர்தலில் காங்கரசுக்குச் சாவுமணி அடிக்கப் போவது உறுதி.

ஆகவே தென்னாட்டு காங்கரஸ் பிராமணர்கள் பண்டித ஜவஹர்லால், பாபு ராஜேந்திர பிரசாத், சர்தார் படேல் முதலியவர்களை தென்னாட்டுக்கு



வரவழைத்து பாமர மக்களை ஏமாற்ற ஏற்பாடு செய்து விட்டார்கள். இம்மாத இறுதியில் ராஜேந்திரரும் படேலும் வரப்போகிறார்களாம்.

அக்டோபர் முதல் வாரத்தில் பண்டித ஜவஹர்லால் வரப்போகிறாராம்.

இவர்கள் வருவதைப்பற்றியும் பிரசாரம் செய்வதைப் பற்றியும் நாம் கவலைப்படவில்லை. ஏன்? தென்னாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்யவும் பிரசாரம் செய்யவும் எல்லாருக்கும் உரிமை யுண்டு.

ஆனால் அவர்களது பொய்ப் பிரசாரத்தினால் தென்னாட்டார் ஏமாந்து விடக் கூடாதென்று இப்பொழுதே எச்சரிக்கை செய்வதுடன் காங்கரஸ்காரர் அட்டூழியங்களை ஜவஹர்லால் கம்பெனியார் பார்வைக்குக் கொண்டுவர தேவையான முயற்சிகள் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாடு காங்கரஸ் காரியக்கமிட்டியார் அட்டூழியங்களையும் அயோக்கியத்தனங்களையும் சென்னை காங்கரஸ்காரர் சிலர் பண்டித ஜவஹர்லாலுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். தோழர் ஜவஹர்லால் சென்னைக்கு வரும்போது அவரைப் பேட்டி கண்டு தென்னாட்டுக் காங்கரஸ்காரர் அயோக்கியத்தனங்களைத் தெரிவிக்க காங்கரஸ்காரர் சிலர் முயற்சி செய்வதாயும் தெரியவருகிறது. ஜவஹர் கம்பெனியார் சுற்றுப்பிரயாணம் செய்வதைப் பற்றியோ பிரசாரம் செய்வதைப் பற்றியோ நாம் அஞ்சவில்லை. ஆனால் சத்தியமூர்த்தி கம்பெனியாரின் வார்த்தைகளை ஜவஹர் கம்பெனியார் நம்பி உண்மை நிலையை உணராமல் ஏமாந்து போகும்படி தென்னாட்டார் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாதென்றே நாம் எச்சரிக்கை செய்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.09.1936**



RangaRakes tamilnavarasam.com

# பார்ப்பனரல்லாதார் இயக்கப் பிரசாரக் கமிட்டிக்கு அன்னோய் தமிழர்களின் உதவி

**ரூபாய் 117–11–8–க்கு ''செக்கு''**

**- அன்னோய் 12.9.36**

*தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கட்கு,*

*அன்பார்ந்த எமது தலைவரே! வணக்கம்.*

*''தமிழ்நாடு பார்ப்பனரல்லாதார் இயக்கப் பிரசார மத்திய கமிட்டி''யின் சார்பாக விடுத்துள்ள நுங்கள் வேண்டுகோளுக்கிணங்க இவண் வதியும் தமிழர்களாகிய நாங்கள் தோழர் வி.வி. ராமசாமி அவர்கள் பெயருக்கு ரூபாய், 117-11-8க்கு ''செக்'' ஒன்று இத்துடன் அனுப்புவித்துள்ளோம்; எங்களின் இச்சிறு பொருளுதவியை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வீர்களென நம்புகின்றோம். நிற்க,*

*தமிழ் நன்மக்களின் நலங்கருதி முனைந்து நின்று அருந் தொண்டாற்றும் தங்கட்கும் தங்களின் கூட்டுத் தோழர்களுக்கும் எங்களின் மனமார்ந்த நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதோடுகூட தங்களின் புனிதமான நன் முயற்சி பெற்றி பெற வேண்டுமாயும் மிக ஆசைப்படுகிறோம்.*

*''செக்'' கிடைக்கப் பெற்றமையை ''குடி அரசு'' வாயிலாகத் தெரிவிப்பீர்களென நம்புகின்றோம்.*

*இங்ஙனம்,*
*தங்கள் பால் அன்பும் மதிப்பும்மிக்குடைய*
*அன்னோய் தமிழர்கள்.*

குறிப்பு: பிராஞ்சிலாகாவைச் சேர்ந்த அன்னோய் தமிழ் தோழர்களுக்கு நமது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதோடு ஏனைய வெளிநாட்டுத் தோழர்களுக்கு வழிகாட்டியாக முன்வந்த ஷை தமிழர்களின் உதவித்தொகையின் ஒவ்வொரு காசும் பார்ப்பனரல்லாதார் நன்மையின் பொருட்டுச் செலவழிக்கப்படுவதால் அவர்கள் தம் உதவி என்றும் மறக்க முடியாததென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். செக்கை விருதுநகர் தோழர் வி.வி.ராமசாமி அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

(பத்திராதிபர்)

**குடி அரசு - பத்திராதிபர் குறிப்பு - 20.09.1936**



RangaRakes tamilnavarasam.com

# தற்கால அரசியல்

## தஞ்சை ஜில்லா சுற்றுப்பிரயாண பிரசங்கம்

## Dr. சுப்பராயன் கம்பெனிக்கு பதில்

தோழர்களே!

இந்தப் பக்கத்துக்கு சுமார் 3,4 மாதத்துக்கு முன் ஒரு தடவை வந்து பேசி இருக்கிறேன். இப்போது பட்டுக்கோட்டை தோழர் சிவராமகிருஷ்ணன் - ராஜலக்ஷ்மி திருமணத்திற்கு வந்த சந்தர்ப்பத்தில் இந்த ஜில்லா சுற்றுப் பிரயாணத்தில் சில பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்து இதில் தற்கால அரசியல் என்பது பற்றிப் பேசும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### பதவியும் சம்பளமுமே இன்றைய அரசியல்

தற்கால அரசியல் என்பதைப்பற்றிப் பேசுவது என்றால் அது நாம் அதாவது இந்தியர்களாகிய நாமும் (இந்தியர்களாகிய) நம்மில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற வகுப்பாரும் ஒருவரை ஒருவர் வைது கொள்வது தான் தற்கால அரசியலாக இருக்கிறது என்று சொல்ல வருத்தப்படுகிறேன். நம்மில் ஒருவரை ஒருவர் வைதுகொள்வதைத் தவிர மற்றபடி அரசியல் என்பதின் காரணமாய் கொள்கைகள் திட்டங்கள் என்பவற்றில் இந்தியர்களுக்குள் ஏதும் முக்கியமான வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. மேல் குறிப்பிட்டபடி வைது கொள்ளுகின்ற நம்மவர்களுக்குள்ளாகவே எத்தனை பேருக்கு அரசியல் ஞானமும், அரசியல் கொள்கையும், அரசியல் திட்டமும் தெரியும் என்றால் 100க்கு 5 பேருக்குக்கூட தெரியாதென்றே கருதுகிறேன்.

சாதாரணமாக இன்று ஒருவரை ஒருவர் வையத் தெரிவதும், வையத் துணிவு கொள்ளுவதும் தான் அரசியல் ஞானமாக இருந்து வருகிறது.

அரசியல் என்பதே இன்று உத்தியோகம், பதவி, பெருத்த சம்பளம் என்கின்ற மூன்றுக்குள்ளாகவே அடங்கிவிட்டது. அதைப்பெறுவதே அரசியல் முயற்சியாகவும் ஆகிவிட்டது. அதற்கு ஆகவே இந்த நாட்டில் பல திறப்பட்ட அரசியல் கட்சிகளும் சமூக வகுப்புக் கட்சிகளும் ஏற்பட்டு இருந்து வருகின்றன. இக்கட்சிகளுக்கு இருந்துவரும் பிரதானத்தன்மை யெல்லாம் எந்தக்கட்சியில் சேர்ந்தால் யாரை வைதால் உத்தியோகம் பதவி



சம்பளம் கிடைக்கும் என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இதைத்தவிர அரசியலைப் பற்றி என்ன சொல்ல இருக்கிறது என்று யோசித்துப்பாருங்கள்.

### தேசியத்தின் யோக்கியதை

தேசியம் என்பதின் லக்ஷணமும் இந்த யோக்கியதையைக் கொண்டது தான். அரசியல் என்பது உத்தியோகம், பதவி, சம்பளம் ஆகியவைகளைப் பொறுத்ததாய் இருந்தால் தேசியம் தேசபக்தி என்பது பெரிதும் வயிற்றுச் சோற்றுக்கு வழி செய்துகொண்டு பதவி உத்தியோகம் பெற ஆசைப்படுவர்களிடம் கூலி பெற்றுக்கொண்டு குலைப்பதே மகாபெரிய தேசியமாய் விளங்குகிறது. இந்த மாதிரி அரசியலும் தேசியமும் ஏழைப் பாட்டாளி மக்கள் தலையில் கையை வைத்து அவர்களது ரத்தம் வேர்வையாய்ச் சிந்த உழைக்கும் உழைப்பை கொள்ளை கொண்டு சோம்பேறிகளும் அயோக்கியர்களும் பொறுப்பற்ற காலிகளும் பிழைக்கத்தான் மார்க்கமாய் இருந்து வருகிறது.

தேசியமும் அரசியலும் வலுக்க வலுக்க ஏழைப் பாட்டாளி மக்களுக் குத்தான் கஷ்டமும் தொல்லையும் வளர்ந்து கொண்டே வருகிறது. பார்ப்பனர்களும் படித்த மக்கள் என்பவர்களுமாகிய சோம்பேறிக் கூட்டத்தார்களாலேயே இம்மாதிரி கஷ்ட நிலைமை இந்த நாட்டுக்கு ஏற்பட்டதே ஒழிய வேறு யாராலும் இல்லை.

இந்தமாதிரி சோம்பேறிக் கூட்டத்தாருக்கு எலும்பு போட்டு அவர்களை அடக்கி சுவாதீனம் செய்து கொண்டால் அரசியல் நிர்வாகம் இடையூறு இல்லாமல் நடத்த சர்க்காருக்கு அனுகூலமாக இருக்குமானதாலும் சர்க்காரின் உண்மையான கடமையைச் செய்யும்படி தூண்டவும் தொந்தரவு கொடுக்கவும் ஆளில்லாமல் போகுமாதலாலும் அரசாங்கத்தார் இவ்வித அரசியலுக்கும் தேசியத்துக்கும் உதவி செய்து உத்தியோகப் போட்டிக்கும், பதவிப் போட்டிக்கும் இடம் கொடுத்து சுகமாய் ஆட்சி நடத்தி வருகிறார்கள்.

ஏழைப்பாட்டாளி பாமரமக்களுக்கு இந்த சூழ்ச்சி விளங்குவதில்லை யாதலால் அவர்களும் ஏமாந்து போய் இந்தப் புரட்டும் ஏமாற்றமுமான கிளர்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

### சீர்திருத்தம்

சமீபத்தில் வரப்போகும் சீர்திருத்தம் என்பதில் ஜனங்களுக்கு அதாவது ஜனப்பிரதிநிதிகள் என்பவர்களுக்கு பெருத்த சம்பளமும், அதிகாரமும் உள்ள பல பதவிகள் கிடைக்கப்போகின்றன. அதற்காக இன்று அவற்றை அடைய ஆசைப்படுவர்களுக்குள் பெருத்த போட்டிக் கிளர்ச்சிகள் நடக்கின்றன. அப்போட்டிக் கிளர்ச்சிகள் சிறப்பாக நம் நாட்டில் இரண்டு கட்சிகளின் பேரால் நடக்கின்றன. அதாவது ஒன்று ஜஸ்டிஸ் மற்றொன்று காங்கிரஸ் என்பதாகும்.



RangaRakes tamilnavarasam.com

ஜஸ்டிஸ் கட்சி இந்த 16 வருஷ காலமாய் இந்த நாட்டில் பதவியில் இருந்து வந்த கட்சியாகும். காங்கிரஸ் கட்சியானது தங்களுக்கு அப்பதவிகள் கிடைக்காது என்று கருதி, சீ அந்தப்பழம் புளிக்கும் என்று நரி சொன்ன கதைப்போல் ''எங்களுக்கு யாதொரு பதவியும் வேண்டியதில்லை'' என்றும் ''பதவிகளில் யாதொரு பிரயோஜனமும் இல்லை'' என்றும் மக்களிடம் வெளிப்படையாய்ப் பேசிக்கொண்டே தந்திரத்தால் தங்களுக்கு ஏதாவது கிடைக்காதா என்று சூழ்ச்சி செய்து கொண்டே வந்த கட்சியாகும். காங்கிரஸ்காரர்களது ரகசிய சூழ்ச்சி இதுவரை பலிக்காததால் இப்போது வெட்கம் கிக்கத்தையெல்லாம் தூர மூட்டை கட்டி வைத்து விட்டு வெளிப்படையாகவே தங்களுக்கு பதவியும் உத்தியோகமும் வேண்டும் என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டுவிட்டார்கள். இதன் பயனாய் காங்கிரஸ்காரர்கள் யாரை எதை பதவி வேட்டைக்காரர் என்றும் உத்தியோக மோகம் என்றும் சொல்லி வந்தார்களோ அந்த வேலைக்கு இப்போது தாங்களே ஆளாகி பதவிகளைக் கைப்பற்றுவதே தங்களுடைய வேலைத்திட்டம் என்று கூட வெளிப்படையாய் சொல்லிக்கொண்டு வெளிவந்துவிட்டார்கள்.

சைத்தான் அரசாங்கமென்றும் இதிலுள்ள பதவியும் உத்தியோகமும் அடிமைத்தனம் என்றும் சுயமரியாதைக்கு விரோதமானதென்றும் சொல்லி தெய்வோபதேசம் செய்துவந்த தோழர் காந்தியாரே அதே சைத்தான் அரசாங்கத்தின் கீழ் இருக்கும் உத்தியோகங்களையும் பதவிகளையும் கைப்பற்ற ஆசி கூறி திரைமறைவில் இருந்து கொண்டு மார்க்கம் சொல்லிக் கொடுத்து வருகிறார்.

அரசாங்கம் பணக்கார ஆட்சி என்றும் இதில் பதவிபெறுவதும் உத்தியோகம் பார்ப்பதும் தேசத்துரோகம் என்றும் பணக்காரர்களுக்கு கூலிப்பணி செய்ததாகுமென்றும் ஏழை மக்களுக்கு பயனற்றதும் கெடுதி செய்யக் கூடியதென்றும் வெள்ளைக்காரரை அடியோடு இந்தியாவை விட்டு விரட்டிப் பொது உடமை ஆட்சியை ஏற்படுத்துவது தான் உண்மையான தேச சேவை என்றும் பேசி மக்களை மயக்கி விளம்பரம் பெற்ற வீரர் ஜவஹர்லால் பண்டிதரும் பதவிகளைக் கைப்பற்றித்தான் ஆகவேண்டும் என்று சொல்லி அதற்கு ஆக பதவி வேட்டைப் பிரசாரம் செய்து வருகிறார்.

இன்னம் 10 நாளில் நம்நாட்டிற்கும் வந்து பதவி வேட்டை ஆடப் போகிறார்.

### புது காங்கிரஸ் பக்தர்கள்

இந்த நிலைமை, அதாவது பதவி ஏற்கும் நிலைமை இன்று ஏற்பட்டவுடன் (காங்கிரசும் காந்தியாரும் பண்டிதரும் முன் பதவி பஹிஷ்காரம் பேசும்போது) அப்போது காங்கிரசை விட்டு ஓடிப்போனவர்களும் காங்கிரசை வேப்பங்காயைப்போல மதித்தவர்களுமான அனேக ஆசாமிகள் அதாவது தோழர்கள் சுப்பராயன், நாடிமுத்து பிள்ளை போன்றவர்கள்



எல்லாம் திடீரென்று தேசபக்த ஜன்மம் எடுத்து காங்கிரசில் சேர்ந்து கொண்டு இன்று நாக்கில் தண்ணீர் சொட்ட பதவி ஆத்திரம் பிடித்து அலைவதுடன் வெட்கத்தை துறந்து தைரியமாய் இன்று நம்மை அதாவது தாங்கள் குடி இருந்த வீட்டையே குற்றம் சொல்லி வைய வெளியில் புறப்பட்டுவிட்டார்கள். அவர்களைத் திருப்பி வைவதற்காக நாம் இன்று இந்தக் கூட்டங்கள் கூட்ட வில்லையானாலும் அவர்கள் நம்மை வைவதற்கு சமாதானம் சொல்லித்தீர நாம் இங்கு பேசவேண்டி இருக்கிறது.

சிறிதும் நாணயமும் யோக்கியப்பொறுப்பும் இல்லாமல் தோழர் நாடிமுத்து பிள்ளை அவர்கள் நேற்று பேராஊரணி மகாநாட்டில் ஜஸ்டிஸ் கட்சி தேசத்துரோகக்கட்சி என்றும், அக்கட்சியில் உள்ளவர்கள் அயோக்கியர்கள் என்றும் ஜஸ்டிஸ் கட்சியை அடியோடு ஒழித்து ஆகவேண்டும் என்றும் கூறினாராம். கூலிக்காக குலைத்து விட்டுப்போகின்ற காலிகளுடையவும் அன்னக்காவடிகளுடையவும் எச்சில் பொறுக்க அலைகின்றவர்களுடையவும் கூச்சலைப்பற்றி நான் இன்று கவலைகொள்ளவில்லை. ஆனால் நாடிமுத்துபிள்ளை, சுப்பராயன் போன்ற பொறுப்புள்ள பதவியை வகிக்கும் ஆசாமிகள் இம்மாதிரி பேசினால் அதை எப்படி அனுமதித்துக்கொண்டிருக்க முடியும் என்பதை யோசித்துப் பாருங்கள். (இச்சமயத்தில் பட்டுக்கோட்டையில் ஒருவர் ''யாரை வேண்டுமானாலும் பேசுங்கள், நாடிமுத்து பிள்ளையைப் பற்றி மாத்திரம் பேசாதீர்கள்'' என்றார்) நாடிமுத்து பிள்ளையை வைவதற்கு ஆக நாங்கள் இங்கு வரவில்லை. எங்களுக்கு வேறு பயனுள்ள வேலை எவ்வளவோ இருக்கிறது. ஆனால் நாடிமுத்துபிள்ளை பேராஊரணியில் பேசிய பேச்சுக்கு சமாதானம் சொல்ல இங்கு வந்திருக்கிறோம். இதைக்கூட சொல்லக்கூடாது என்று யாராவது தடுப்பதாய் இருந்தால் அது நாளைக்கு மற்றவர்களை வெளியில் தலைகாட்ட முடியாத மாதிரி செய்துவிடும் என்று எச்சரிக்க விரும்புகிறேன். ஆண்மையுள்ளவர்கள் தாங்கள் பேசியதற்கு பதில் சொல்ல மற்றவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுத்தால்தான் இந்த நாட்டில் சமாதானமாக பிரசாரங்கள் செய்யமுடியும். அதில்லையானால் ஒருவருக் கொருவர் தலைகாட்டாமல் வாழவேண்டிய நிலைமை தான் ஏற்படும்.

நேற்று தோழர் நாடிமுத்து அவர்கள் ஜஸ்டிஸ் கட்சி தலைவர்கள் அயோக்கியர் என்று பேசியிருக்கிறார். வந்து ருஜுவு செய்யட்டும் என்று அறைகூவி அழைக்கிறேன். யார் யார் அயோக்கியர் என்று சொல்லட்டும். அதன் தலைவர்கள் தியாகராய செட்டியார், நாயர் முதல் இன்று தலைவராய் உள்ள பொப்பிலிராஜா வரை எந்த தலைவர் என்ன அயோக்கியத்தனம் செய்தார்கள் என்று சொல்லட்டும். என்னால் முடிந்தால் நான் பதில் சொல்லுகிறேன் அல்லது நாடிமுத்து பிள்ளையுடன் நானும் சேர்ந்து கொள்ளுகிறேன். அதை விட்டு விட்டு பாமரமக்களைக் கூட்டி வைத்து வாயில் வந்தபடி உளருவது என்றால் அது ஒரு நாளும் யோக்கியமான காரியமாகாது என்று சொல்லுவதோடு அப்படிச் சொல்லுவது தங்களைத்தான் அயோக்கியர்களாக்கிவிடும் என்றும் கூறுகிறேன்.



RangaRakes tamilnavarasam.com

ஜஸ்டிஸ் கட்சி தேசத் துரோக கட்சி என்று சொல்லியிருக்கிறார். இதோ பாருங்கள் அது பத்திரிகையில் இருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சி என்ன துரோகம் செய்தது எடுத்துச் சொல்ல வேண்டாமா? அதில்லாமல் பார்ப்பனர்கள் சொல்லிக் கொடுத்ததை கிளிப்பிள்ளை போல் சொல்லுவது என்றால் பெரிய மனிதன் என்று கருதிக் கொண்டிருப்பவருக்கு பொறுப்பு இருக்க வேண்டாமா என்று கேட்கின்றேன்.

இந்த 16 வருஷ ஆட்சியில் ஜஸ்டிஸ் கட்சி செய்த தேசத் துரோகம் இன்னது என்று யாராவது யோக்கியமாக சொல்லட்டும் என்று அறை கூவி அழைக்கிறேன்.

ஜஸ்டிஸ் கட்சி இல்லாமல் இருந்திருந்தால் தோழர் நாடிமுத்து ஜில்லா போர்டு பிரசிடெண்டாயிருக்க முடியுமா என்று அவரையே கேட்கின்றேன்.

பார்ப்பனர்கள் பின்னால் தானே மூட்டை தூக்கிக்கொண்டு சாமி சாமி என்று அலைய வேண்டி வந்திருக்கும். இன்றையத் தினமும் நாடிமுத்து பிள்ளை அவர்களை பார்ப்பனர் சேர்த்துக் கொண்டதின் ரகசியம் என்ன? ஜஸ்டிஸ் கட்சியை வைய ஒரு ஆள் வேண்டும் என்பதற்கல்லாமல் ஜஸ்டிஸ் கட்சியால் அவர் அடைந்த யோக்கியதையை தாங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதல்லாமல், மற்றபடி இவருடைய அரசியல் ஞானத்தையும் புத்தி விசேஷத்தையும் தேசாபிமானத்தையும் மதித்தா என்று கேட்கின்றேன்.

தோழர் நாடிமுத்துப் பிள்ளை அவர்கள் ஜஸ்டிஸ் கட்சி பூமிவரி குறைக்கவில்லை என்று பேசியிருக்கிறார். அரசியல் ஞானமுள்ளவர்கள் பூமிவரி குறைக்கவில்லை என்பதை ஜஸ்டிஸ் கட்சி மீது குறையாய் சொல்லமாட்டார்கள். ஆனால் வேண்டுமென்றே பழி சுமத்தத்தான் இப்படிப் பேசுவார்கள். வரி விஷயம் இந்தியாவில் எந்த மாகாணத்திலும் மந்திரிகளுக்கு சம்மந்தமில்லை. போலீஸ், நீதி இலாக்காக்களைப் போல் சர்க்காருடைய சொந்த பொறுப்பில் இருக்கும் விஷயம். நிலவரி இன்று எந்த மாகாணங்களிலாவது குறைத்தார்கள் என்றோ குறைக்க முடிந்தது என்றோ யாராவது சொல்லட்டும். அதை விட்டு விட்டு பைத்தியக்காரத்தனமாய் உளறுவதில் என்ன பிரயோஜனம் என்று கேட்கின்றேன்.

கேட்பவர்கள் பாமர மக்களாய் இருப்பதால் என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்கின்ற பேடிகள் தைரியமே ஒழிய இதில் வீரத் தைரியம் ஒன்றும் இல்லை.

### சமய சஞ்சீவிகள்

ஏழைக் குடியானவர்களிடம் மிகவும் பரிதாபம் கொண்டவர்போல் பேசும் தோழர் நாடிமுத்து பிள்ளை அவர்கள் தனது குடிகளுக்கு எவ்வளவு விகிதாச்சாரம் தள்ளிக் கொடுத்தார் என்று சொல்லமுடியுமா?



### சமய சஞ்சீவிகளை நம்பாதீர்

இவருக்குத்தான் அதிக பூமி இருக்கிறதா? ஜஸ்டிஸ் கட்சியாருக்கு பூமி இல்லையா? யாரோ இரண்டு மூன்று பேர் சம்பளம் வாங்க ஜஸ்டிஸ் கட்சி மிராசுதார்கள் எல்லோரும் வரிகுறைக்க சம்மதிக்காமல் உயர்த்திக் கொள்ளுவார்களா? அல்லது சர்க்கார் குறைப்பதை வேண்டாமென்று சொல்லிவிடுவார்களா? கேப்பையில் நெய் வடிகிறது என்று சொன்னால் கேட்பவனுக்கு மதி வேண்டாமா? தோழர் சுப்பராயன் மந்திரியாய் இருக்கும்போது எவ்வளவு வரி குறைத்தார் என்று கருதி இப்போது நாடிமுத்து பிள்ளை அவருடன் குலாவுகிறார்? தோழர்களே! இந்த மாதிரி சமய சஞ்சீவிகள் பேச்சைக் கேட்காதீர்கள். உங்கள் புத்தியைக் கொண்டு ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ச்சி செய்து பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள்.

### நாடிமுத்து பிள்ளை தேசபக்தி

எப்படியாவது தனக்கு ஜில்லா போர்டுக்கும் சட்டசபைக்கும் ஓட்டு வேண்டும் என்பதுதான் நாடிமுத்து பிள்ளை அவர்களின் தேசபக்தியின் அரசியல் கொள்கையாகுமே ஒழிய மற்றபடி தேசபக்தி என்றால் ரூபாய்க்கு எத்தனை படி என்றுதான் கேட்பார். தகுதி உடையவர் என்று கருதினால் நீங்கள் குஷாலாய் அவருக்கு ஓட்டு செய்யுங்கள். கட்சிக்காக என்று ஏமாந்து போகாதீர்கள். ஜஸ்டிஸ் கட்சியை வைவதென்றால் அதற்காக ஓட்டு செய்யாதீர்கள். இவர் சாதித்தது என்ன, சாதிக்கப்போவது என்ன என்று தெரிந்து ஓட்டு செய்யுங்கள். எனக்கு அதைப்பற்றி கவலையில்லை.

### நாடிமுத்து ராஜ்யம் எந்த ராஜ்யம்?

ஜஸ்டிஸ் கட்சி கண்டிறாக்ட் ராஜ்யமென்று கூலிகள் கூப்பாடு போட்டார்கள். தோழர் நாடிமுத்து பிள்ளையின் சொந்த ராஜ்யம் (அதாவது அவரது ஜில்லா போர்டு) யாருடைய ராஜ்யமாய் இருக்கிறது? எல்லா வேலைகளையும் டிபார்டுமெண்டில் செய்கிறாரா? இவர் கொடுக்கும் கண்டிறாக்டுதாரர்கள் பூராவும் பரம்பரை கண்டிறாக்டரும் இவருக்கும் இவருக்குப் பின்னால் கைதூக்கும் மெம்பர்களுக்கும் சொந்தக்காரரும் கூட்டாளிகளும் சிப்பந்திகளும் இல்லாத கண்டிறாக்டு அனுபவசாலிகளா? ஆகவே நாடிமுத்து பிள்ளை நடப்புக்கு மோசமில்லாமலும் அனேக ஜில்லாக்களில் அவரைவிட மேன்மையாயும் தான் ஜஸ்டிஸ் கட்சி ராஜ்யம் நடத்தப்படுகிறது என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

### டாக்டர் சுப்பராயன்

டாக்டர் சுப்பராயன் அவர்கள் இப்போது ஒரு பெரிய தேச பக்தராய் நடிக்கிறார். நடிக்கட்டும் அவர் மந்திரியானால் எனக்கு மிகவும் சந்தோஷம்தான். அதில் எனக்கும் ஏதாவது பங்கு கிடைக்கலாம்.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் ஜஸ்டிஸ் கட்சியை ஏன் வையவேண்டும்? மந்திரிகள் ஏதாவது நாணயத் தவறுதலாய் நடந்தார்களா? கொள்கை மாற்றிக் கொண்டார்களா? இருந்தால் ஒரு விஷயமாவது எடுத்துச் சொல்லலாமல்லவா? டாக்டர் சுப்பராயன் மந்திரியாய் இருக்கும்போது ஜஸ்டிஸ் கட்சி தலைவருக்கு கீழ் படிந்து தான் ஆட்சி நடத்தினார். காங்கிரஸ்காரர்களுக்கு நாமத்தை சாத்தி விட்டு வந்து சைமன் கமிஷனை வரவேற்றார். சீர்திருத்தங்களுக்கு உதவி செய்தார். இவர் இப்போது சீர்திருத்தத்தை உடைப்பது என்கின்ற தந்திரக் காரருடன் சேருவதும் வகுப்புவாதம் கூடாது என்று சொல்லுவதும் யோக்கியமாகுமா?

டாக்டர் சுப்பராயன் மந்திரியாய் இருந்தபோதுதான் வகுப்பு வாதம் வீறு கொண்டிருந்தது. அவர்தான் தேர்தலில் தனித்தனி ஜாதிகளுக்கு இடம்வைத்து சட்டம் செய்தவர். அவர் காலத்தில் தான் உத்தியோகங்களும் தனி தனி ஜாதிக்கு விகிதாச்சாரம் ஏற்படுத்தப்பட்டது. அதற்காகத்தான் நான் இன்னமும் அவரிடம் நன்றியுள்ளவனாய் இருக்கிறேன்.

### பார்ப்பன சூழ்ச்சி

1930 ல் பார்ப்பனர்கள் டாக்டர் சுப்பராயன் மந்திரி சபையை கவிழ்க்க சூழ்ச்சி செய்து ஜஸ்டிஸ் கட்சிக்கு உதவி செய்தார்கள்.

''இந்து'', ''சுதேசமித்திரன்'' பத்திரிகைகள் 1930ல் புதிய மந்திரி சபை ஏற்படும்போது சுப்பராயன் கட்சிக்கு கொடுக்கக்கூடாது என்றும் ஜஸ்டிஸ் கட்சிக்கு கொடுக்க வேண்டும் என்றும் ஜஸ்டிஸ் கட்சிதான் சட்டப்படி ஒழுங்கான சபை என்றும் எழுதின.

அப்படிப்பட்ட இரு கூட்டமும் இன்று வெட்கமில்லாமல் குலாவுகின்றன. காங்கிரசுக்கோ பார்ப்பனர்களுக்கோ சிறிதும் யோக்கியமோ, நாணயமோ, வெட்கமோ கூட கிடையாது. எப்படியாவது பாடுபட்டுப் பார்ப்பனரல்லாதாரை தலை எடுக்கவொட்டாமல் அடித்து மனு காலப்படி பார்ப்பனரல்லாத ஆண்களையும் பெண்களையும் தங்களுக்கு அடிமையாகவும், தாசியாகவும் வைக்கவே அவர்களது முயற்சி காங்கிரஸ் என்கின்ற ஆயுதத்தைத் தங்கள் கைவசப்படுத்திக்கொண்டு தங்கள் இஷ்டப்படி எல்லாம் செய்கிறார்கள்.

### காங்கிரஸ்

காங்கரசானது ஆரம்பித்து சுமார் 30 வருஷம் வரை ஏராளமான உத்தியோகங்களை உற்பத்தி செய்து தாராளமாக சம்பளத்தை உயர்த்தி, வரிகளை உயர்த்தி அவற்றை பகல் கொள்ளைபோல் பார்ப்பனர்களே அனுபவிக்க இடம் கொடுத்து வந்தது. இந்த நாட்டில் இன்றுள்ள சம்பளக் கொள்ளைக்கும் உத்தியோக குவியலுக்கும் காங்கிரசே தான் காரணம். பார்ப்பனரல்லாதார் அதில் பங்கு கேட்டதற்கு ஆகத்தான் பார்ப்பனர்கள் திடீரென்று ஒரே நாளில் தேச பக்தர்களானார்கள். அதுவரை ராஜபக்தி,



ராஜவிஸ்வாசம், ராஜ சேவகம் ஆகியவைகள் தான் பார்ப்பனர்களின் வேதக் கட்டளையாக இருந்து வந்தது உத்தியோகம் புருஷலக்ஷணம் என்பதே அவர்களது பல்லவி.

### வகுப்பு உரிமை

முஸ்லீம்கள் 1895 முதல் தங்களுக்கு உத்தியோகம் விகிதாசாரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுவந்திருக்கிறார்கள். 1895ல் ஒருதரம் 1905ல் ஒருதரம் 1915ல் ஒருதரம் இந்தப்படி காந்தி காங்கிரசுக்கு முன்னாலேயே 35 வருஷ காலம் முஸ்லீம்கள் வகுப்பு வாதம் பேசி வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் கேட்டு அனுபவித்து வந்திருக்கிறார்கள். காங்கிரசே முஸ்லீம்களுக்கு ஜனசங்கைப்படி வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தனித் தொகுதியின் மூலம் கொடுக்க ஒப்புக்கொண்டு கொடுத்து வந்திருக்கிறது.

நாம் கேட்ட உடனேதான் பார்ப்பனர்கள் காந்தியாரைப்பிடித்து வந்து நம்மை ஏய்த்து ஒடுக்கப் பார்த்தார்கள். நல்ல வேளையாய் காந்தியாரின் ஜம்பம் இந்த 16 வருஷகாலமாக ஒன்றிலும் வெற்றி பெறவில்லை. அவருக்கு தோல்விமேல் தோல்வியே ஏற்பட்டது. ஏன் என்றால் அவருடைய சுயராஜ்யம் எல்லாம் பார்ப்பனரல்லாதார் தலையில் கையை வைக்க செய்த சூழ்ச்சியே ஒழிய சரக்கு ஒன்றுமே கிடையாது. இதை சர்க்கார் உணர்ந்து கொண்டு அவரை மூலையில் உட்கார வைத்துவிட்டார்கள்.

### காந்தி தோல்வி

1924 லேயே அவரது பகிஷ்காரமும் ஒத்துழையாமையும் அவராலேயே நிறுத்தப்பட்டு விட்டது யாவரும் அறிந்ததேயாகும். மறுபடியும் சைமன் கமிஷனை எதிர்க்க சில தந்திரம் செய்தார். அதுவும் படுதோல்வி அடைந்து சர்க்காருக்கு இனிமேல் இப்படி செய்வதில்லை என்று எழுதிக் கொடுத்துவிட்டு வெளியில் வந்தார்.

இவருடைய சபதங்கள் எல்லாம் தோல்வி அடைந்து ஒரு நிபந்தனையுமில்லாமல் யாரோ சிலர் விடுதலை செய்யப்படுவதற்கு ஆக வட்ட மேஜை மகாநாட்டுக்குப் போவதாய் ஒப்புக் கொண்டார்.

(இந்த சமயத்தில் ஒருவர் தஞ்சையில் ''உப்பு வாரிக் கொள்ள சர்க்கார் அனுமதி கொடுக்கவில்லையா'' என்று கேட்டார்) ஆம் அனுமதி கிடைத்தது. எத்தனை பேர் எத்தனை டன் வாரினீர்கள்? அதனால் யார் பயனடைகிறார்கள் என்று கேட்கிறேன். ஆகாயத்தில் கோட்டை கட்டிக்கொள்ள சர்க்கார் 4-மனை இடம் கொடுத்ததற்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கிறேன். தோழர் காந்தியார் வேண்டுமென்றே பாமர மக்களை ஏமாற்ற கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற பழமொழிபோல் செய்து கொண்ட பயனற்ற நிபந்தனையே ஒழிய அதனால் என்ன நன்மை விளைந்தது? என்று கேட்கிறேன்.



RangaRakes tamilnavarasam.com

இந்த காங்கிரசு கலைக்கப்பட்டாலொழிய அல்லது பார்ப்பன சூழ்ச்சி ஒழிக்கப்பட்டாலொழிய இந்திய ஏழை மக்களுக்கு பயன் இல்லை என்று உறுதியாகச் சொல்லுவேன். தற்கால சாந்தியாக சிலர் பணமில்லாமல் பதவி பெறலாம் என்றும், மந்திரி ஆகலாம் என்றும் காங்கிரசுக்காரராகவும் தேச பக்தர்களாகவும் காணப்படுகிறார்கள். ஆதலால் அவர்கள் பேச்சை நம்பி ஏமாந்து போகாதீர்கள். அவர்களது கூலிகள் பேச்சையும் நம்பி மோசம் போகாதீர்கள்.

உங்கள் பகுத்தறிவைக்கொண்டு உண்மை அறிந்து அதன்படி நடவுங்கள்.

குறிப்பு: *தஞ்சை மாவட்ட சுற்றுப்பயணத்தின் போது 11.09.1936இல் பட்டுக்கோட்டையிலும் 12.09.1936 இல் மாயவரத்திலும் 13.09.1936 இல் குற்றாலத்திலும் 14.09.1936 இல் பொறையாற்றிலும் 15.09.1936 இல் தஞ்சையிலும் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.*

**குடி அரசு - சொற்பொழிவு - 20.09.1936**



# ஜவஹர்லால் வருகை பார்ப்பனர் சூழ்ச்சி

தோழர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் அடுத்த மாதம் 5ந் தேதி தமிழ்நாட்டுக்கு நமது பார்ப்பனர்களால் அழைத்து வரப்படப் போகிறார். தமிழ்நாட்டில் 15 நாள் சுற்றுப்பிரயாணமும் செய்யப் போகிறார் ஏன்? எதற்காக? என்பதை நமது வாசகர்கள் அறியவேண்டியது முக்கிய விஷயமாகும்.

தோழர் ராஜேந்திரப்பிரசாத் அவர்கள் எதற்காக அழைத்து வரப்பட்டாரோ அதற்காகவே தான் தோழர் ஜவஹர்லாலும் அழைத்து வரப்படுகிறார்.

அதாவது ராஜேந்திர பிரசாத் அவர்கள் அழைத்து வரப்பட்டது நமது நாட்டில் அப்போது நடக்க இருந்த ஜில்லா போர்டு தேர்தல்களுக்கு மறைமுகமான பிரசாரம் செய்யவே என்பதை நாம் அப்போதே விளக்கி இருந்தோம்.

அதுபோலவே இன்று தோழர் ஜவஹர்லாலை அழைத்து வருவதும் அடுத்த மாதம் நடக்கப்போகும் சென்னை முனிசிபல் கார்ப்பரேஷன் தேர்தலுக்கு மறைமுகப் பிரசாரம் செய்வதற்கேயாகும்.

சென்னை கார்ப்பரேஷன் தேர்தலுக்கு நாமினேஷன் கொடுக்கப்பட வேண்டிய தேதி 2-10-36 ஆகும்.

சென்னை கார்ப்பரேஷன் எலக்ஷன் 23-10-36 தேதி ஆகும்.

தோழர் நேரு அவர்கள் தமிழ்நாட்டுக்கு வரும் தேதி 5-10-36 ஆகும்.

5-10-36 முதல் 23-10-36 வரை 15 நாள்களுக்கு தமிழ் நாட்டில் இருப்பதற்கு சுற்றுப் பிரயாணத்திட்டம் போடப்பட்டிருக்கிறது.

ஆகவே தோழர் ஜவஹர்லால் நேரு எலக்ஷன் பிரசாரத்துக்கு வருகிறார் என்பதற்கு ஏதாவது சம்சயமுண்டா என்று கேட்கிறோம்.

பண்டித நேரு தனது காங்கிரஸ் தலைவர் ஹோதாவில் சுற்றுப்பிரயாணம் வருகிறார் என்றால் அது தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் சாவகாசமுள்ள காலத்தில் வந்து காங்கிரஸ் பிரசாரம் செய்துவிட்டுப்போக வரலாம். ஆனால் இப்போது தலைவர்களும் தொண்டர்களும், மற்றும் காங்கிரஸ் பிரமுகர்களும் தேர்தலில் ஈடுபட்டு வெளியிடங்களில் உள்ள பிரசாரகர்கள் கூட சென்னைக்கு வந்திருக்கும் இந்த நெருக்கடியான சமயத்தில் நேரு அவர்களை சென்னைக்குக் கூட்டி வந்து தடபுடல் நாடகம் நடத்துவது என்றால் இதை தேர்தல் பிரசாரத்துக்கு என்று அல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்.



RangaRakes tamilnavarasam.com

தோழர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் வரவை தமிழ் மக்கள் இதே காரணம் சொல்லி பகிஷ்கரித்த காலத்தில் தோழர் பிரசாத் அவர்கள்

''எனக்கு இங்கு எலக்ஷன் பிரசாரம் நடப்பது தெரியவே தெரியாது இங்கு வந்த பிறகுதான் தெரிய வந்தது, எலக்ஷன் காலமாய் இருந்தால் நான் வந்திருக்கவே மாட்டேன்''

என்று சொன்னார். அப்படி இருந்தும் தமிழ்நாட்டில் பெரிதும் சென்னை முதல் அவர் சென்ற இடங்களில் எல்லாம் ''ராஜேந்திரபிரசாத் திரும்பிப்போ''

என்கின்ற கோஷத்துடன் 1000 க்கணக்கான மக்களால் பகிஷ்கரிக்கப்பட்டு அதுசமயம் பிரசாத் அவர்கள்

''இந்த பகிஷ்காரத்தின் காரணம் எனக்கு ஒன்றும் தெரியவில்லையே நான் எங்கே போவது? நான் பார்ப்பனன் அல்லவே'' என்று அழுது கண்ணீர் உதிர்த்துவிட்டே போனார். தோழர் பிரசாத் அவர்கள் திரும்பி தனது ஊருக்கு வண்டி ஏறும் போதுகூட ''சீக்கிரம் போங்கள்'' என்கின்ற வளைவுகளும் தட்டிகளும் ரயில்வே மேடை வரை துரத்திக்கொண்டே சென்றன.

அப்படியிருக்க நம் பார்ப்பனர்கள் இப்போதும் அதுபோலவே சென்னை கார்ப்பரேஷன் எலக்ஷனுக்குப் பண்டிதரை அழைத்து வந்து நமக்கு துன்பத்தையும் தொல்லையையும் விளைவிக்கப் போகிறார்கள். இப்போதே சில இடங்களில் கலகம் ஆரம்பமாகிவிட்டது. இன்றைய பத்திரிகைகளில் திருச்சி முனிசிபாலிடியில் பண்டிதர் வரவேற்பு விஷயமான தீர்மானத்தில் தகராறு ஏற்பட்டு அது இந்து முஸ்லீம் தகராறாக பரிணமித்ததோடு தலைவர் பக்கம் பாதரட்சை பறந்ததாகவும் காணப்படுகின்றது. இது அவமானத்துக்கான காரியம் தான்; அடாத காரியம்தான்; வருந்தத்தக்கது தான்.

ஆனால் வேலியில் போகும் ஓணானை காதுக்குள் விட்டுக்கொண்டு **குடையுது குடையுது** என்று சொன்னால் அதற்கு யார் என்ன செய்யக்கூடும் என்று கேட்கின்றோம்.

பண்டிதர் ஜவஹர்லால் தனிமையில் பொதுநல சேவைக்காரர்கள் கூட்டத்தில் சேர்க்கப்பட வேண்டியவர்தான். சில காரியங்களில் அவர் பார்ப் பனரேயாயினும் இன்றுள்ள சராசரி நாணயத்தில் - அவர் மேம்பட்டவரே யாவார். அப்படிப்பட்ட அவரின் வரவை பஹிஷ்கரித்து காட்ட வேண்டிய அவசியமில்லைதான்.

ஆனால் அவர் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களின் கையாளாக - தமிழ்நாட்டில் நடக்கும் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் போருக்கு பார்ப்பனர் பக்கத் தளகர்த்தராய் கொண்டு வரப்படுகிறார் என்றால் இவரை வரவேற்பது என்பது கொள்ளிக்கட்டையை எடுத்து தலையைச் சொறிந்து கொள்வது போலல்லவா என்று கேட்கின்றோம்.



தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள் நாமறிய இந்த 15,20 வருட காலமாகவே தமிழ்நாட்டில் பார்ப்பனர்களுக்கு அவமதிப்பு ஏற்பட்ட காலத்திலும், அவர்கள் சூழ்ச்சியும் நாணயமற்ற காரியங்களும் பலிதப்படாமல் வெளிப்பட்ட காலத்திலும், அவர்களுக்கு ஏதாவது ஒரு காரியம் மக்களது முட்டாள் தனத்தினால் ஆகவேண்டி இருக்கும் காலத்திலும் வடநாட்டில் ஏதாவது ஒரு ஆளைப்பிடித்து அவரை ஆகாயத்துக்கு தூக்கிவைத்து பிறகு அவரைக் கூட்டி வந்து ஆடம்பரம் செய்து காரியம் சாதித்துக்கொள்வதோடு அவர் பேரால் பணமும் வசூலித்துக்கொண்டு திருப்பி அனுப்பி விடுவது வழக்கம். இது மறுக்கமுடியாத உண்மை என்பதற்கு ஒரு உதாரணம் கூறுவோம்.

அதாவது தமிழ்நாட்டில் இருந்து எப்போதும் எந்த ஒரு தமிழ் நாட்டவரையும் வேறு எந்த மாகாணத்துக்கும் இந்தமாதிரி விளம்பரத்துக்கோ, அல்லது ஏதாவது ஒரு பிரசாரத்துக்கோ அழைத்துப்போனது என்பது அரிதாகவே இருக்கும் என்பதேயாகும். தோழர்கள் விஜயராகவாச்சாரியாரையோ, ராஜகோபாலாச்சாரியாரையோ, ஸ்ரீனிவாசய்யங்காரையோ, அதாவது சத்தியமூர்த்தியாரையோ, வேறு யாரையுமோ எங்கும் அழைத்துப் போனதாகவே நமக்கு ஞாபகமில்லை.

இது விஷயமாய் தோழர் சத்தியமூர்த்தியார் கூட ஒரு சமயத்தில் பேசி இருப்பது நமக்கு ஞாபகத்துக்கு வருகிறது. அதாவது ''வெளி மாகாணங்களில் இருந்து யார் யாரையோ நம் மாகாணத்துக்குக் கூட்டி வந்து பிரமாத ஆடம்பரங்களும் மரியாதைகளும் செய்து மிகப் பெரிய மனிதர்களாக்கி விடுகிறோம். ஆனால் நம் மாகாணத்தவர்களை வெளி மாகாணத்தார் யாரும் லட்சியம் செய்வதே இல்லை'' என்று பேசி இருக்கிறார். அதற்கு அந்தக் காலத்திலேயே நாம் தமிழ்நாட்டில் தமிழ் மக்களை ஏமாற்ற வேண்டிய அவசியம் நம் பார்ப்பனருக்கு இருப்பது போல் பிற மாகாணத்தாருக்கு இல்லை என்று பதில் கூறி இருக்கிறோம்.

ஆகவே இதுசமயம் தமிழ்நாட்டுக்குப் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களை அழைத்து வருவது உண்மையிலேயே தமிழ் மக்களை ஏமாற்றவும் அவர்கள் கண்களில் மிளகாய் பொடி போட்டு பார்ப்பனரல்லாதார் பணத்தை பதினாயிரக்கணக்கில் வசூலித்து அப்பணத்தைக் கொண்டு தேர்தல்களில் பார்ப்பனரல்லாதாரை தோற்கடித்து பார்ப்பனர்களும் பார்ப்பனப் பெண்மணிகளும் பார்ப்பனக் கூலிகளும் வெற்றி பெறச் செய்யும் சூழ்ச்சியே அல்லாமல் இதில் வேறு எவ்வித நாணயமும் உண்மையும் இல்லை என்று நிச்சயமாய்ச் சொல்லுவோம்.

இப்படிப்பட்ட சமயத்தில் யாரானாலும் பார்ப்பனரல்லாதாராகிய நாம் நமது வெறுப்பைக் காட்டிக்கொள்வதற்கு ஆகவும் பார்ப்பனரல்லாத மக்கள் ஏமாந்து பணத்தை அள்ளிக் கொடுக்காமல் இருப்பதற்கு ஆகவும் அவரை பஹிஷ்கரிக்க வேண்டியது மிகவும் அவசியமான காரியமாகும்



RangaRakes tamilnavarasam.com

என்பதே நமதபிப்பிராயமாகும். அந்த அபிப்பிராயத்தை பார்ப்பன பக்தர்களாகிய பார்ப்பனரல்லாத தோழர்களில் சிலர் சரியல்ல என்றும் கண்டித்தும் பேசியும், எழுதியும் பார்ப்பனர்களின் புன்சிரிப்புக்கும் முக விலாசத்துக்கும் ஆளாக முயற்சிப்பார்கள். அதைப்பற்றி நமக்கு கவலை யில்லை. அப்படியாவது அவர்கள் பிழைத்தாலும் நமக்கு சந்தோஷமே. ஆனால் அதுதான் கிடையாது. இந்தக் கூட்ட பார்ப்பனரல்லாதார்களுக்கு நம்மை வைது பழியை மூட்டைக் கட்டிக் கொள்ளுகிறார்களே அதுதான் மிச்சம். மற்றப்படி பார்ப்பனர்களால் ஒரு காதொடிந்த ஊசியளவு பயனும் ஏற்படப் போவதில்லை என்பதோடு அவர்கள் முன்வர முயற்சிக்கும் போது பெரிய கல்லைத் தூக்கிப்போட்டு ஒழித்து விடவே முயற்சிப்பார்கள். இதுவரை நாம் பார்ப்பனர்களிடம் கண்ட அனுபவத்தைக் கொண்டே இதை எழுதுகிறோம்.

உதாரணம் வேண்டுமானால் நாளை மாதம் சென்னையில் நடக்கப் போகும் கார்ப்பரேஷன் எலக்ஷன்களுக்கு நிறுத்தப்பட்டிருக்கும் ஆசாமிகள் யார் யார் என்று பார்த்தாலே இந்த உண்மை விளங்கிவிடும்.

ஆதலால் பண்டித ஜவஹர்லால் அவர்கள் இந்த சமயத்தில் தமிழ் நாட்டிற்கு அழைத்து வரப்படுவதானது பார்ப்பனர்களின் பக்கா சூழ்ச்சியே ஒழிய தேச பக்திக்கோ, ''சுயராஜ்யத்துக்கோ'' அல்ல என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 20.09.1936**



# கலகக்காரர்களுக்கு காங்கரசில் வெற்றி

சென்னை நகர சபைத் தேர்தலுக்கு அட்ஹாக் கமிட்டியார் காங்கரசில் அபேக்ஷகர்களைப் பொறுக்கி யெடுத்த தோரணையைக் கண்டித்து சென்னை காங்கரஸ்வாதிகள் கொஞ்ச நாளாகக் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். சட்ட மறுப்புக் காலத்தில் ஸ்பெஷல் காண்ஸ்டபிலாயிருந்தவர்களையும் வெகு சமீப காலம் வரை ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தவர்களையும் பாபு ராஜேந்திர பிரசாத்துக்கு உபசாரப் பத்திரம் அளிக்கவேண்டுமென்று சென்னை நகர சபையில் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது அதற்கு எதிரிடையாக வோட்டுக் கொடுத்தவர்களையும் அட்ஹாக் கமிட்டியார் அபேக்ஷகராக நிறுத்தியிருப்பதாய்க் கலகக்காரர்கள் கண்டித்து வருகிறார்கள். சென்ற இரண்டு மூன்று வாரங்களாகக் கண்டனக் கூட்டங்கள் சென்னையில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தன. அட்ஹாக் கமிட்டியார் பொறுக்கி யெடுத்த அபேட்சகர்களை ஆதரிப்பதற்காகக் கூடிய பிரசாரக் கூட்டங்களில் பலர் கேள்விமேல் கேள்விகள் கேட்க பிரசங்கிகளுக்குப் பதிலளிக்க முடியாமல் பல கூட்டங்கள் குழப்பத்தில் முடிந்தன. ''அயோக்கியர்கள்'' கையில் சிக்கிக்கொண்டு தவிக்கும் தமிழ் மாகாண காங்கிரசை மீட்பதற்காகச் சென்னையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் காங்கரஸ் அவசரக்கமிட்டியார், அட்ஹாக் கமிட்டி நியமனங்களைக் கண்டித்தும் தமிழ்நாடு காங்கரஸ் காரியக் கமிட்டி ராஜிநாமா செய்யவேண்டுமென்று வற்புறுத்தியும் இப்பொழுதும் பிரசாரம் செய்துகொண்டு தான் வருகிறார்கள். ஆனால் ''ஒரு பெரிய ஆந்திர நாட்டுத் தலைவர் அவரது முழுச் செல்வாக்கையும் உபயோகித்து கலகக்காரர்களுக்கும் அட்ஹாக் கமிட்டியாருக்கும் ராஜி செய்துவைக்க'' முயன்றதின் பயனாய் கலகக்காரர்களில் இரண்டுபேர் வெற்றி பெற்று விட்டதாகத் தெரிகிறது. அதாவது தோழர்கள் ஷாபி முகமதுவும் எ.ஆர்.ஸி. ஆச்சாரும் காங்கிரஸ் அபேக்ஷகர்களாக அட்ஹாக் கமிட்டியாரால் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டனர். இது கலகக்காரர்களுக்கு ஒரு வெற்றி என்பதற்கு சந்தேகமில்லை யானாலும் இந்த முடிவினால் ஏனைய கலகக்காரர்கள் திருப்தியடைவார்களா என்பதை எதிர் நிகழ்ச்சிகளிலிருந்துதான் அறிய வேண்டியதாக இருக்கிறது. அட்ஹாக் கமிட்டியாருக்கு இது ஒரு நல்ல சவுக்கடி என்பதற்கும் சந்தேக மில்லை. இதனால் சென்னைக் காங்கரஸ்காரர் பலரின் நம்பிக்கையை அட்ஹாக் கமிட்டியார் பெறவில்லை யென்பதும் புலனாகிறது. கட்டுப்பாடும்



RangaRakes tamilnavarasam.com

ஒழுங்கும் மிகுந்த காங்கரசில் இத்தகைய தகிடுதத்தங்கள் நடப்பது காங்கிரசுக்குப் பெருமையா சிறுமையா என்பதையும் காங்கிரஸ் பக்தர்களே நிதானம் செய்துகொள்ளட்டும்.

ஆனால் தோழர் சாது ஜனாப் தாவுத்ஷாவுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைப் பார்க்கும்போது நமக்கு மிக்க வயிற்றெரிச்சலாகவே இருக்கிறது. அகில இந்திய காங்கரஸ் கமிட்டிக்கு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட போதும் தோழர் தாவுத்ஷா ஏமாற்றப்பட்டார். தோழர் சத்தியமூர்த்தியின் வாக்குறுதியை நம்பி அகில இந்திய காங்கரஸ் கமிட்டிக்குத் தம்மை மெம்பராகத் தேர்ந்தெடுப்பார்கள் என்று தோழர் தாவுத்ஷா மனப்பால் குடித்தார். ஆனால் உபயதுல்லா போட்டிபோட முன் வந்தபோது ''இந்த தகராறை தாவுத்ஷாவும் உபயதுல்லாவும் தான் முடிவு செய்துகொள்ள வேண்டும், என்னால் இதில் தலையிட முடியாது'' எனத் தோழர் சத்தியமூர்த்தி கைவிரிக்கவே, தோழர் தாவுத்ஷா வேறு வழியின்றி தோழர் உபயதுல்லாவுக்கு விட்டுக்கொடுக்கும்படி நேர்ந்தது. இப்பொழுது தோழர் ஷாபி முகமதுவுக்கு விட்டுக்கொடுத்து இரண்டாம் முறையில் தோழர் தாவுத்ஷா ஏமாற்றமடைந்திருக்கிறார். மூன்றாவது ஏமாறவும் ஒரு கால் தேர்தலுக்குப் பின் மந்திரி பதவிகளுக்கு ஆட்களைப் பொறுக்கும்போது உண்டாகக் கூடுமோ என்னமோ.

பிரஸ்தாப தகராறைப்பற்றி தாவுத்ஷாவின் பத்திரிகையில் வெளிவந்திருக்கும் ஒரு கட்டுரையில் பல ருசிகரமான விஷயங்கள் வெளிவந்திருக்கின்றன.

அட்ஹாக் கமிட்டியாரால் பெரிய மேட்டு சூளை டிவிஷனுக்கு அபேட்சகராக நிறுத்தப்பட்டிருந்த தோழர் தாவுத்ஷாவுக்கு அந்த டிவிஷனில் பேராதரவு இருந்ததாம். கலகக்காரர் கிளர்ச்சியின் பயனாக அட்ஹாக் கமிட்டியார் மீண்டும் கூடி யாலோசித்து ஒரு பெரிய ஆந்திர நாட்டுத் தலைவர் தமது முழுச் செல்வாக்கையும் உபயோகித்து அட்ஹாக் கமிட்டியாருக்கும் தோழர் ஷாபி முகமதுவுக்கு ராஜி ஏற்படுத்த முயன்றாராம். இதற்கிடையே ஆந்திர மாகாண காங்கரஸ் கமிட்டியார் சில ஆலோசனை களைக் கூறி அட்ஹாக் கமிட்டியார் முடிவாக அபேக்ஷகர் ஜாபிதாவை வெளியிடு முன் காங்கரஸ் உறுதி மொழியில் கையொப்பமிட்டுக் கொடுத்த தற்கால கார்ப்பரேஷன் அங்கத்தினர்களை அவர்களது டிவிஷன்களுக்கே நிறுத்தவேண்டுமென்றும் வற்புறுத்தினார்களாம்.

பிறகு தோழர் சத்தியமூர்த்தி 25.8.36ல் சென்னைக்கு வந்ததும் ''சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு தோழர் ஷாபி முகமது அவர்களைப் பெரிய மேட்டு டிவிஷனுக்கு நிறுத்தி, தோழர் தாவுத்ஷா அவர்களை பெத்துநாயக்கன் பேட்டை டிவிஷனுக்கு மாற்றுவதென்றும்'' ஒப்புக்கொள்ளப்பட்டதாம்.

தோழர்கள் சத்தியமூர்த்தி, பிரகாசம் முதலியோர் வேண்டுகோளுக்கு இணங்கி பெத்துநாயக்கன் பேட்டையில் நிற்கவும் சம்மதித்தாராம். ஆனால் அவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்ட 26.8.36ந் தேதி இரவு தோழர்



ஷாபி முகமது அட்ஹாக் கமிட்டியின் நிபந்தனைகளை ஒப்புக்கொள்ள வில்லையென்றும் எனவே காங்கரஸ் அபேக்ஷகராக ஏற்றுக்கொள்வதில்லை யென்றும் தோழர் தாவுத்ஷாவை பெரிய மேட்டு டிவிஷனுக்கு நிறுத்தி அதை ஊர்ஜிதம் செய்வதென்றும் 27.8.36-ந் தேதி காலையில் முடிவு செய்து விட்டு தோழர் சத்தியமூர்த்தி சிம்லாவுக்குச் சென்றாராம்.

ஆனால் அட்ஹாக் கமிட்டியாருக்கும் தோழர் ஷாபி முகமது அவர்களுக்கும் மறுபடியும் ராஜிப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாயினவாம்.

**அது சம்பந்தமான எல்லா விவரங்களையும் வெளியிடுவது உசிதமாகாதாம்.**

இந் நிலையில் தோழர் தாவுத்ஷா 2.9.36ல் பட்டுக்கோட்டை மகாநாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றாராம். 8-ந் தேதி திரும்பி வந்தாராம். ஆனால் 4.9.36ல் அட்ஹாக் கமிட்டியார் தோழர் தாவுத்ஷாவுக்கு எழுத்து மூலமும் டெலிபோன் மூலமும் அழைப்பு அனுப்ப, அவருடைய பிரதிநிதிகள் காங்கரஸ் மண்டபத்துக்குச் சென்று தேர்தல் சம்பந்தமாக நடைபெறும் தகராறுகள் தோழர் தாவுத்ஷாவுக்குப் பிடிக்கவில்லை யென்றும் எனவே பெத்துநாயக்கன் பேட்டை டிவிஷனுக்கு நிற்க அவர் விரும்பவில்லை யென்றும் தெரிவித்தார்களாம். இதுதான் தோழர் தாவுத்ஷாவின் இரண்டாவது ஏமாற்றக் கதையின் சாரம்.

சாது தாவுத்ஷா தேர்தலில் கலந்து கொள்ள ஆதி முதலே சம்மதிக்க வில்லையாம். நண்பர்கள் வற்புறுத்தவே ''போனால் போகிறது'' என்று தேர்தலுக்கு நிற்க முன்வந்தாராம். எனவே அவரது காலை இப்படி வாருவது அட்ஹாக் கமிட்டியாருக்கு அடுத்த செயலா எனக் கேட்கிறோம்.

ஒரு ஏழை சத்திரத் திண்ணையில் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தானாம். அர்த்த ராத்திரி 12 மணிக்கு சத்திர மானேஜர் அவனைத் தட்டியெழுப்பி ''அப்பா உனக்குச் சாப்பாடு இல்லை'' என்று தெரிவித்து விட்டுப் போனாராம். தூங்கிக்கிடந்தவனைத் தட்டியெழுப்பிச் சாப்பாடு இல்லையென்றால் அவனுக்கு எவ்வளவு வயிற்றெரிச்சல் ஏற்பட்டிருக்கக்கூடும்? தோழர் தாவுத்ஷா பாடும் அந்தக் கதை மாதிரிதான் இருக்கிறது. என்ன செய்வது! அரசியல் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று. ''சேரிடம் அறிந்து சேர்'' என்று சொன்னாளே, அந்தக் கிழவி முழுப் பைத்தியகாரியல்ல.

ஆனாலும் இவ்விஷயத்தில் தோழர் தாவுத்ஷா அவ்வளவு சங்கடப்படவும் தேவையில்லை. ஏன்? அவர் புது காங்கரஸ் பக்தர்தானே. சென்னை நகரத்திலே தோழர் ஷாபி முகமதுதான் மிகமிக மூத்த முஸ்லீம் காங்கரஸ்வாதியாம். அப்படியானால் தலையிருக்கும்போது வாலாடுவது நியாயமாயிருக்காதல்லவா?

குடி அரசு - கட்டுரை - 20.09.1936



RangaRakes tamilnavarasam.com

# தென் ஜில்லாக்கள் ஜஸ்டிஸ் மகாநாடு

## திண்டுக்கல்

தோழர்களே!

தமிழ்நாட்டின் தென் ஜில்லாக்கள் சார்பாய்க் கூடும் இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் பெருமையை எனக்கு அளித்ததற்காக வரவேற்புக் கழகத்தாருக்கு நான் எனது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**நமது சங்கம்**

நமது தென் இந்திய நல உரிமைச் சங்கம் தோன்றி இன்றைக்கு கிட்டத்தட்ட 20 வருஷ காலமாகிறது. இதன் முக்கியக் கொள்கை:-

1. சட்ட ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப்பட்டு கிளர்ச்சி செய்து அரசியல் விடுதலை (அதாவது சுயராஜ்யம் என்பது) பெறுவதும்,
2. அரசியல் பிரதிநிதித்துவத்திலும் உத்தியோகங்களிலும் நம் நாட்டிலுள்ள எல்லா மதக்காரருக்கும் ஜாதிக்காரருக்கும் விகிதாச்சாரம் உரிமை வழங்குவதுமாகும். அதாவது சகல சமூகங்களுக்கும் சம சந்தர்ப்பம் அளிப்பதாகும்.

இந்தக் கொள்கையில் இருந்து இதுவரை நாம் சிறிதும் பிறழாமல் கொள்கைக்கு ஏற்ப நம்மால் கூடியதை சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் செய்து கொண்டு வந்திருக்கிறோம்.

நமது சங்க ஆரம்பத்தில் இந்திய அரசியலில் பிரதிநிதித்துவத்திலும் உத்தியோகங்களிலும் ஏகபோக உரிமைகள் அனுபவித்துக் கொண்டிருந்த பார்ப்பனர்கள் நீங்க, மற்ற எல்லா சமூகத்தார்களும் நமது சங்கத்தில் அங்கத்தினர்களாகலாம் என்கின்ற நிபந்தனை ஏற்படுத்திக் கொண்டிருந்தோம்.

ஏனெனில் பார்ப்பனர்களாகிய ஒரு கூட்டத்தார் நம்மை எத்துறையிலும் தலையெடுக்க வொட்டாமல் தாழ்த்தி வந்ததாலேயேயும் அவர்களின் நடவடிக்கைகளாலேயே நாம் இச்சங்கம் துவக்க வேண்டியவர்களா யிருந்ததாலும் நமது சங்கத்தில் அவர்களை நீக்கி வைக்க வேண்டியதாயிற்று.



ஆனால் இப்போது அரசியல் சம்மந்தப்பட்ட வரையில் அந்தத் தடையை நீக்கிவிட்டோம். மேல் கண்ட நமது கொள்கையை ஒப்புக் கொள்ளுகிற யாரும் இச்சங்கத்தில் அங்கத்தினராகலாம் என்ற விதிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

என்றாலும் இன்றுவரை ஒரு பார்ப்பனராவது நமது சங்கத்தில் அங்கத்தினராகவே இல்லை. பார்ப்பனரல்லாதாரே தான் நமது சங்கத்து அங்கத்தினர்களாயிருக்கிறார்கள். இதனால் நமது சங்கம் ஆரம்பத்தில் எப்படி பார்ப்பனரல்லாதார் சங்கமாக இருந்ததோ அதேபோல்தான் இன்றும் பார்ப்பனரல்லாதார் சங்கமாகவே இருந்து வருகிறது.

நமது சங்கம் ஏற்பட்டு கிட்டத்தட்ட 20 வருஷம் ஆயிருந்தாலும் சென்னை மாகாண அரசியலில் 15 வருஷ காலம் அதாவது மாண்டேகு செம்ஸ்போர்டு திட்டம் அமுலுக்கு வந்த காலம் முதல்கொண்டு அத்திட்டத்தின்படி ஜனப்பிரதிநிதிகளான மந்திரிகளுக்கு மாற்றப்பட்ட இலாகா என்பவைகளில் நாம் ஆதிக்கம் பெற்று அரசியல் நடத்தி வந்திருந்தாலும் நமது கொள்கைகளில் முழு வெற்றியும் அடைவதற்கில்லாமல் நாம் பல சங்கடங்களுக்கும் இடையூறுகளுக்கும் ஆளாகி வந்திருக்கிறோம்.

காரணம் என்னவென்றால் இரட்டை ஆட்சி என்பதில் நமக்கேற்பட்டுள்ள சங்கடம் ஒன்று, நாம் பல மதக்காரர்களுக்கும், பல ஜாதிக்காரர்களுக்கும் விகிதாச்சார உரிமை வழங்குவது என்ற கொள்கையை ஏற்படுத்திக் கொண்டிருப்பதால் இக்கொள்கையால் தங்கள் ஏகபோக உரிமையையும் அனுபவத்தையும் இழந்து மற்றவர்களைப் போலவே விகிதாச்சாரம் பெற வேண்டிவர்களான பார்ப்பனர்கள் தங்களால் கூடிய எல்லாத் தடைகளையும் தொல்லைகளையும் விளைவித்து நமது உத்தேசம் நிறைவேறாமல் தடுக்க வேண்டியவர்களாகிவிட்டதால் அவர்களுடைய தொல்லைக்கும் முட்டுக் கட்டைகளுக்கும் நாம் ஆளாக வேண்டியிருந்தது மற்றொன்று.

ஏற்கனவே பார்ப்பனர்கள் அதிகாரத்திலும் உத்தியோகத்திலும் தாராளமாய் அமர்ந்து இருந்த காரணத்தாலும் சமூகத்துறையிலும் அவர்கள் மேல் நிலை பெற்றிருந்தாலும் வாழ்க்கையிலும் அவர்களே நமக்கு வழி காட்டிகளாக அமர்ந்திருந்ததினாலும் அவர்களுடைய (பார்ப்பனர்களுடைய) எதிர்ப்பும் தொல்லையும் திடீரென்று பதவிக்கு வந்த நம்மால் சுலபத்தில் சமாளிக்க முடியாததாய் இருந்தது என்றால் இதில் யாதொன்றும் ஆச்சரியம் இருக்க இடமில்லையல்லவா?

அதோடு கூட நமது மக்களும் அதாவது பார்ப்பனர் ஒழிந்த மற்ற மக்களும் பார்ப்பனீயத்தின் பயனாய் போதிய கல்வியும் உலக ஞானமும் இல்லாமல் பெரும்பாலோர் சமூகத்துறையில் பார்ப்பனர்களுக்கு அடிமையாய் இருந்தது போலவே வாழ்க்கைத்துறையிலும் அவர்களுக்கு அடிமையாய் இருந்ததாலும் பார்ப்பனர்களை எதிர்ப்பது என்பதை ஒரு



RangaRakes tamilnavarasam.com

மதக் கட்டளையை மீறுவதுபோல் மதிப்பவர்களாய் இருந்ததாலும் சிக்கலான அரசியலில் இருந்து கொண்டிருக்கிற நமது கஷ்டம் இன்னும் அதிகமாய் இருந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

இந்த நிலையில் நாம் இந்த பதினைந்து வருஷ காலத்தில் அரசியல் பதவிகளை அடைந்து அதன்மூலம் நம்மால் கூடியதையெல்லாம் வெற்றிகரமாகவே செய்து வந்திருக்கிறோம் என்று சொன்னால் இதைக் கேட்பவர்கள் யாரும் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

## நமது நிலை

இன்னம் 5, 6 மாத காலத்துக்குள் புதிய சீர்திருத்தம் ஒன்று அமுலுக்கு வரப்போகிறது. அதற்கு ஆகவேண்டிய தேர்தல்கள் சீக்கிரத்தில் ஏற்படப் போகிறது. அதுபற்றிய பிரசாரங்கள் தனிப்பட்ட முறையிலும் கட்சி முறையிலும் இப்போது முதலே துவக்கமாய் விட்டன. கட்சி முறையில் இரண்டு முக்கிய கட்சிகள் பெரிதும் இப்பிரசாரத்தில் முன்னணியில் இருக்கின்றன. அவைகளில் ஒன்று காங்கிரசு என்னும் ஸ்தாபனத்தின் பேரால் பார்ப்பனர்கள் கக்ஷி, மற்றொன்று நம் கக்ஷி அதாவது தென்னிந்திய நல உரிமைச் சங்கம் அல்லது ஜஸ்டிஸ் கட்சி என்னும் பேரால் பார்ப்பனரல்லாதாராகிய நாம். ஆகவே பச்சையாய் சொல்ல வேண்டுமானால் பார்ப்பனரும் பார்ப்பனரல்லாதாராகிய நாமும் இன்று போட்டிப் பிரசாரம் செய்பவர்களாய் இருக்கிறோம். இப்போட்டி பிரசாரங்களில் பார்ப்பனர்கள் இதுவரை தாங்கள் நாட்டுக்கு செய்த காரியங்கள் இன்னதென்றோ தங்கள் கொள்கைகள் இன்னதென்றோ மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியாமல் இருப்பதால் நம்மைப்பற்றி எவ்வளவோ பொய்யும் புழுகும் சொல்லி விஷமப் பிரசாரம் செய்து வருவதை நாம் பிரத்தியக்ஷத்தில் பார்த்து வருகிறோம். நாமோ அவ்வளவுக்கும் சமாதானம் சொல்லி மீள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தேர்தலோ மிகவும் சமீபித்துக் கொண்டிருக்கிறது. ஆதலால் இந்த சமயம் நமக்கு மிகவும் நெருக்கடியான சமயம் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த சமயத்தில் நமக்குள் அதிகமான ஒற்றுமையும், தளரா ஊக்கமும், தாராளமான பணச்செலவும் வேண்டியதாக இருக்கிறது. இந்தக் காரியங்களுக்கு ஆகவே இன்று இந்த மகாநாடு அதாவது தென் ஜில்லாக்களின் மகாநாடு கூட்டப்பட்டதென்றே நான் கருதுகிறேன். இம்மகாநாட்டின் பயனாய் இத் தென்ஜில்லாக்களில் தீவிரமான பிரசாரங்கள் செய்யப்பட வசதி ஏற்படுமென்றே நினைக்கிறேன்.

நாம் பதவி ஏற்றது முதல் பொது ஜன நன்மைக்கு ஆக எவ்வளவோ காரியங்கள் செய்து வந்திருக்கிறோம். அதன் பயனாக நமது பார்ப்பனரல்லாத சமூகம் இந்த 20 வருஷ காலத்தில் எவ்வளவோ மேம்பாடு அடைந்து வந்திருக்கிறது. பார்ப்பனரல்லாதார்களில் பெரிய ஜமீன்தார்கள் முதல் சாதாரண ஏழைக் குடியானவர்கள், கூலிக்காரர்கள், தீண்டப்படாத வகுப்பார் என்பவர்கள் வரை எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கிறார்கள்.

அரசியல் துறையிலும் சமூக துறையிலும் மற்றும் மனிதத்தன்மைத் துறையிலும் பார்ப்பனரல்லாத மக்களாகிய நாம் இந்த 15, 20 வருஷத்தில் அடைந்திருக்கும் முற்போக்கையும் அதற்கு முன் சுமார் ஒரு ஐம்பது வருஷம் அல்லது நூறு வருஷத்தில் அடைந்திருந்த முற்போக்கையும் ஆதாரத்தோடு கவனித்து பார்த்தால் நமது கட்சியின் பயனாய் நாம் எவ்வளவு வேகமாய் முற்போக்கடைந்திருக்கிறோம் என்பது விளங்கும்.

குறிப்பாக காங்கிரசு என்ற ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டதில் இருந்து அதாவது நமது கட்சி ஏற்படுவதற்கு 30 வருஷங்களுக்கு முன் இருந்து பார்ப்பனரல்லாதார் சமூகம் தானாக ஏதோ கொஞ்ச நஞ்சம் முன்னேற்ற மடைந்து வந்ததும் தடைப்பட்டு வெறும் பார்ப்பனர்களே எதிலும் பயனடையும் படியாகவும் அரசியல் அடியோடு பார்ப்பனர்கள் வசமே ஆகி விடவும் சமூக இயலிலும் பழய மனு ஆட்சியே சிறிது சிறிதாக தலை தூக்கவும் சட்டங்களிலும் நியாயஸ்தலங்களிலும் மநுதர்மம் தலை சிறந்து விளங்கவுமான நிலைமையே ஏற்பட்டு வந்தது. இந்த ஆபத்தானதொரு சந்தர்ப்பத்தில் தான் பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஏற்பட்டு பார்ப்பன ஆதிக்கத்தை தடுத்ததோடல்லாமல் இவ்வளவு தூரம் நம் சமூகம் முன்னேற்றமடையவுமான காரியங்கள் செய்திருக்கிறது.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்பதாக ஒரு இயக்கம் நம் நாட்டில் தோன்றி இருக்கவில்லையானால் இப்போது முதல் இதுவரை நமது நிலைமை என்னமாய் இருந்திருக்கும் என்பதை சிறிது உங்கள் மனதில் சிந்தித்துப் பாருங்கள். நமது நிலை எப்படி இருந்திருக்கும் என்பதைப்பற்றி யோசிக்கு முன் இன்று நம்மவர்களில் சிலர் பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டு நம்மை வைகின்றார்களே அவர்களுடைய நிலைமை என்னமாய் இருந்திருக்கும் என்பதையே முதலில் யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறேன்.

சாதாரணமாக இன்று பார்ப்பனர் கூட்டங்களிலேயே அடிபடும் பார்ப்பனரல்லாதார் பெயர்களாகிய தோழர்கள் சுப்பராயன், நாடிமுத்து பிள்ளை முதல் காமராஜ நாடார், கிருஷ்ணசாமி பாரதி, உபயதுல்லா சாயபு என்று சொல்லப்படுபவர்கள் வரை இவர்களுடைய நிலைமை எவ்வளவு இருந்திருக்கும் என்பதை அவர்களையே யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறேன்.

## நம்மீது பழி

சுலபத்தில் நமது இயக்கத்தை பார்த்து தேசத்துரோக இயக்கம் என்றும் உத்தியோக வேட்டை இயக்கம் என்றும், வகுப்புவாத இயக்கம் என்றும் நம் எதிரிகளும் அவர்களது ஆட்களும் கூறுகிறார்கள்.


RangaRakes
tamilnavarasam.com

ஆனால் எந்த ஒரு தனிப்பட்ட வகுப்பார் சுயநலத்துக்கோ அல்லது எந்த ஒரு தனிப்பட்ட மனிதனின் சுயநலத்துக்கோ இவ்வியக்கம் இருந்து வருகிறது என்று யாராவது இதுவரை சொல்ல முடிந்ததா? அல்லது இந்த இயக்கக் கொள்கையின் பயனாகவோ நடத்தையின் பயனாகவோ நாட்டுக்கோ அல்லது பொது மக்களுக்கோ எந்த ஒரு நன்மையாவது தடைப்பட்டு விட்டதா? என்று தைரியமாய் கேட்கின்றேன்.

ஏதாவது ஒரு காரியம் தடைப்பட்டு இருக்குமானால் அது நமது எதிரிகளாகிய பார்ப்பனர்களின் ஏகபோக உரிமை சிறிது தடைப்பட்டிருக்கலாம். அதுவும் இது வரை இந்தப் பதினைந்து வருஷமாக நாம் எவ்வளவோ பாடுபட்டும் கிரமமான விகிதாச்சார நிலைமைக்கு வரவே இல்லை. இப்படிப்பட்ட இந்தக் கிளர்ச்சி காலத்திலும் கூட பார்ப்பனர்கள் உத்தியோகத்தில் 100க்கு 300 பங்கு 400 பங்கு அதிகமாகவே அடைந்து வருகிறார்கள். நம் இயக்கம் ஆரம்பித்த காலத்தில் அனேக இனங்களில் அவர்கள் 100க்கு 1000 பங்கு அதிகமாகவே அனுபவித்து வந்தவர்கள் இன்று நம் இயக்கத்தின் பயனாய் இந்த அளவுக்கு இறங்கி இருக்கிறார்கள். அதைத்தவிர மற்றபடி பார்ப்பனரல்லாதார் மக்களாகிய எல்லா வகுப்பாரும் தாராளமாய் ஏதோ சிறிது விகிதமாவது பெறுவதன் மூலம் பயனடைந்து வந்திருக்கிறார்கள் என்பதோடு சிறுபான்மை வகுப்புகள் என்கின்ற பிரிவுகள் சில தங்கள் விகிதாசாரத்துக்கு மேலாகக்கூட சில விஷயங்களில் பயன் அனுபவித்து வந்திருக்கின்றன என்று சொல்லலாம்.

ஆதலால் நமது இயக்கமானது எந்த துறையிலும் எவ்வித பொது நலத்தையும் கெடுத்துவிடவில்லை என்பதோடு பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கு பல நன்மைகளைச் செய்திருக்கிறது என்றும் கூசாமல் சொல்லுவேன்.

## உத்தியோக வேட்டை

உத்தியோக வேட்டைக்காரர்கள் என்று நம்மை பார்ப்பனர்கள் சொல்லுகிறார்கள். அவர்களால் (பார்ப்பனர்களால்) உத்தியோக வேட்டை ஆடலாம் என்று கருதுகிற சில பார்ப்பனரல்லாதாரும் நம்மை அப்படியே சொல்லுகிறார்கள். உத்தியோக வேட்டை ஆடுவதில் என்ன தப்பு இருக்கிறது என்பது எனக்கு விளங்கவில்லை. உத்தியோகம் என்பது நமது நாட்டு அரசியல் நிர்வாகத்துக்கு ஆக என்று ஏற்படுத்தப்பட்டவைகளாகும். அதற்கு கொடுக்கப்படும் சம்பளம் எவ்வளவு பெரிதானாலும் சிறிதானாலும் நமது மக்கள் வரிப்பணத்தில் இருந்து கொடுக்கப்படும் சம்பளமேயாகும். உத்தியோகம் பெறுவதே அரசியல் கிளர்ச்சியின் கருத்தாய் சமீப காலம் வரை இருந்தும் வந்திருக்கிறது.

பார்ப்பனரல்லாதார் கட்சி ஏற்படும் வரை அரசியல் கிளர்ச்சிக் காரர்களான காங்கிரஸ்காரர்களும் மற்ற அரசியல் கட்சிக்காரர்களும்



எல்லோருமே உத்தியோகம் அடைந்து வந்திருக்கிறார்கள். ''உத்தியோகம் புருஷ லக்ஷணம்'' என்பது காங்கிரசின் சுலோகமாகி இருந்து வந்திருக்கிறது. ஆகவே அரசியல் உத்தியோகங்களை அடைய ஒவ்வொரு தனி மனிதனும் ஆசைப்படுவதில் யார் என்ன தப்புச் சொல்ல முடியும்? ஒரு தனிப்பட்ட வகுப்பார் ஏகபோகமாய் உத்தியோகங்களை அடைந்து வந்ததாலும் அதற்கு கொழுத்த சம்பளங்கள் இருந்ததாலும் உத்தியோகத்துக்கு அதிகாரமும் பெருமையும் இருந்ததாலும் கிளர்ச்சி செய்வதன் மூலமே அவைகள் ஏற்படுபவைகளாகவும் அவை கிடைக்கக்கூடியதாகவும் இருந்ததாலும் அதற்காக நமது சமூகமும் கிளர்ச்சி செய்ய ஆரம்பிக்க வேண்டியதாயிற்று. கிளர்ச்சி இல்லாவிட்டாலும் அது எல்லா வகுப்பாருக்கும் கிடைக்கும் என்கின்ற நிலை இருந்திருந்தால் உத்தியோகங்கள் அடைவதையும் ஒரு கொள்கையாக நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கவே மாட்டோம்.

மற்றவர்களைப் போலவே அதாவது காங்கிரஸ்காரர்களைப் போலவே இன்னமும் அதிக உத்தியோகத்துக்கும் அதிகம் சம்பளத்துக்குமே பார்ப்பனர்களோடு சேர்ந்து ''தேசியக்கிளர்ச்சி'' செய்திருப்போம்.

## வகுப்புவாதம்

இப்போது நாம் ''எங்களுக்கும் உத்தியோகம் வேண்டாமா, நாங்களும் வரிகொடுக்கவில்லையா, நாங்களும் படிக்கவில்லையா'' என்று கேட்க ஆரம்பித்த பிறகுதான் உடனே பார்ப்பனர்கள் நம்மை உத்தியோக வேட்டைக்காரர்கள் என்று சொல்லுவது மாத்திரமல்லாமல் வகுப்புவாதிகள் என்றும் சொல்லுகிறார்கள். அதுவரையில் நமக்கு சந்தோஷமே. ஏனென்றால் அவர்கள் நம்மை எந்தத் தனிப்பட்ட வகுப்புவாதிகள் என்று சொல்ல முடியும். அவர்களை நாம் தனிப்பட்ட வகுப்புவாதிகள் என்கின்றோம். அதாவது பார்ப்பன நலத்துக்கு ஆகவே பாடுபடும் பார்ப்பன வகுப்புவாதிகள் என்கின்றோம். நாம் பல வகுப்புக்காரர்களாய் இருக்கிறோம். முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், தீண்டப்படாத மக்கள், பார்ப்பனர் அல்லாத ''இந்து''க்கள் என்பதாக பல வகுப்புக்காரர்களாகவும் இருந்துகொண்டு எல்லா வகுப்புக்கும் சேர்த்து உத்தியோகங்களையும் பிரதிநிதித்துவங்களையும் அதுவும் விகிதாசாரம் மாத்திரம் கேட்கின்றவர்களாகவும் இருக்கின்றோம். ஆகவே நம்மையாரும் எந்த ஒரு தனிப்பட்ட சுயநல வகுப்புவாதிகள் என்று சொல்ல முடியாத நிலைமையில் இருக்கின்றோம். ஆதலால் நம்மை ஒருவர் வகுப்புவாதி என்பதற்கு ஆக நாம் பயப்படவோ மறுக்கவோ வேண்டியதில்லை. பார்ப்பனர்கள் வகுப்புப் போல் மற்ற வகுப்புகளும் ஆகும்வரை நாம் வகுப்புவாதிகளாய் இல்லாவிட்டால் வகுப்பு துரோகிகளே யாவோம். வகுப்பு வாதம் பேசினால் தேசத்துரோகிகள் என்று கூப்பிடுவார்களே என்று நாம் சிறிதும் பயப்படக்கூடாது என்றே வேண்டிக்கொள்ளுகிறேன்.



RangaRakes tamilnavarasam.com

இந்தியர்கள் ஐரோப்பியர்கள் என்ற வகுப்புவாத அஸ்திவாரத்தின் மீதுதான் தேசியசபை என்னும் காங்கிரஸ் சபை ஏற்பட்டது. இந்துக்கள் முஸ்லீம்கள் என்கின்ற வகுப்புவாதத்தின் மீதுதான் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட்டது.

காங்கிரஸ் ஏற்பட்டது முதல் ஒவ்வொரு பத்து வருஷத்திலும் வகுப்புவாதம் ஏற்பட்டே வந்திருக்கிறது. 1885-ம் வருஷத்தில் காங்கிரசு ஏற்பட்டது என்று சொன்னாலும் 1895-ம் வருஷத்திலேயே முஸ்லீம்கள் சர்க்காரை வகுப்பு உரிமை கேட்டு பெற்றிருக்கிறார்கள்.

1906 லும் முஸ்லீம்கள் கிளர்ச்சி செய்து தனித்தொகுதி மூலம் தனிப் பிரதிநிதித்துவம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

1915 லும் முஸ்லீம்கள் கிளர்ச்சி செய்து காங்கிரஸ் தீர்மானம் மூலமே வகுப்பு பிரதிநிதித்துவம் தனித்தொகுதி மூலம் பெற்றிருக்கிறார்கள். அதுதான் லக்னோ பேக்ட் என்பது.

அதுதவிர 1924 லும் கூட தோழர் சி.ஆர்.தாஸ் அவர்களாலேயே பங்காள பேக்ட் என்னும் இந்து முஸ்லீம் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. 1932லும் இந்துக்களில் தீண்டப்படாத மக்கள் என்பவர்களுக்கும் மற்றவர்களுக்கும் காங்கிரசின் மூலமே வகுப்புரிமையும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் ஏற்பாடு செய்து கொண்டு அதை ஏற்றுக் கொள்ளும்படி அரசாங்கத்துக்கும் விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறது. அதுவும் தனித்தொகுதி மூலம் கிடைக்க வேண்டும் என்கின்ற கிளர்ச்சி அந்த வகுப்பாருக்குள் இன்றும் இருந்து வருகின்றது.

இப்படி எல்லாம் இருக்க நம்மை மாத்திரம் பார்ப்பனர்களும், அவர்கள் ஆசாமிகளும் வகுப்புவாதிகள் என்று சொல்லுவதென்றால் அதில் உண்மை இருக்கிறதா என்று கேட்கின்றேன். ஆதலால் நாம் நமது லக்ஷ்யத்தை அடையுமட்டும் இம்மாதிரி உத்தியோக வேட்டை வகுப்புவாதம் என்கின்ற பூச்சாண்டிகளுக்குப் பயப்படக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## தேசத்துரோகம்

நம்மை காங்கிரசுக்காரர்கள் தேசத்துரோகிகள் என்பதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா என்று பாருங்கள்.

தேசிய சபை, தேசாபிமான சபை என்பதான காங்கிரசின் யோக்கியதை என்ன என்று சற்று அறிந்து பாருங்கள்.

காங்கிரஸ்சபை ஒரு I.C.S. வெள்ளைக்காரர் முயற்சியால் ஏற்படுத்தப் பட்டதாகும். அவர் பெயர் A.O. ஹியூம் ஆகும். அவர் இந்தியர்களுக்கு உத்தியோகம் வேண்டுமானால் ஒரு ஸ்தாபனத்தின் மூலம் கேளுங்கள்



என்று முதலில் யோசனை கூறினார். அதற்காகவே அதாவது வெள்ளைக்காரர்கள் போல் உத்தியோகமும் சம்பளமும் பெறுவதற்காகவே காங்கிரஸ் ஏற்படுத்தப்பட்டது.

காங்கிரசின் கொள்கைகளோ,

1. பல வகுப்பு இந்திய மக்களையும் ஒன்று சேர்ப்பது.
2. எல்லாருடைய நன்மைக்காகவும் அரசியலிலும் சமூக இயலிலும் பாடுபடுவது.
3. **இந்தியாவும் இங்கிலாந்தும் என்றென்றும் பிரியாமல் இருக்கும்படி சேர்த்துக்கட்டி பிணைப்பது.**

இந்த ஸ்தாபனம்தான் தனிப்பெரும் தேசிய ஸ்தாபனமாம். இதே முதல் இரண்டு கொள்கையுடைய நமது ஸ்தாபனம் தேசத்துரோக ஸ்தாபனமாம். காங்கிரஸின் அப்பொழுதைய கொள்கையை விட்டு விடலாம்.

இன்று தானாகட்டும் காங்கிரசின் கொள்கை என்ன? நமது கொள்கை என்ன என்று பாருங்கள்.

காங்கிரசுக்காரர்கள் சட்டங்களை மீறாமல் கிளர்ச்சி செய்து ஸ்தல ஸ்தாபனங்களையும் சட்டசபைகளையும், மந்திரி பதவிகளையும் கைப்பற்ற வேண்டும் என்கிறார்கள். நாமும் அதே முறையில் தான் அவைகளை கைப்பற்ற வேண்டும் என்கின்றோம். அவர்களும் ஒவ்வொரு பதவியும் ஸ்தானமும் அடைந்தவுடன் சட்டத்திற்கு அடங்கி நடப்பதாகவும் ராஜ விஸ்வாசமாய் இருப்பதாகவும் ராஜாவுக்கும் அவர்பின் சந்ததிக்கும் பக்தி காட்டுவதாகவும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களுக்கு கீழ்ப் படிவதாகவும் பிரமாணம் செய்கிறார்கள். நாமும் அப்படியே செய்கிறோம்.

மந்திரி பதவி ஏற்று மக்களுக்கு நன்மை செய்வதாக கூறுகிறார்கள். நாமும் அப்படியேதான் செய்வதாக கூறுகிறோம்.

ஆனால் அவர்கள் மேல்கொண்டு சொல்லுவதெல்லாம் நம் கட்சியை அடியோடு ஒழிக்கப் போவதாய் கூறுகிறார்கள்.

நாமோ அது முடியாதென்றும் அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்றும் சொல்லுகிறோம்.

இதைத்தவிர காங்கிரசுக்கும் நமக்கும் அரசியல் கொள்கையில் என்ன வித்தியாசம் என்று பாருங்கள்.

காங்கிரஸ் தலைவர் தோழர் ஜவஹர்லால் நேரு அவர்கள் சட்ட சபைக்குப்போய் முட்டுக்கட்டை போட வேண்டும் என்றும் மந்திரிபதவி ஏற்கக் கூடாதென்றும் மற்றும் சிலர் மந்திரி பதவி ஏற்று சீர்திருத்தத்தை உடைக்க வேண்டும் என்றும் கூறுகிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இப்படிக் கூறுவது அசட்டுப் பேச்சு என்றும் சட்ட சபைக்குப் போவதன் மூலமோ மந்திரி முதலிய பதவிகள் ஏற்பதன் மூலமோ சர்க்காரை அசைக்க முடியாது என்று தோழர் மோதிலால் நேரு அவர்களே சொல்லிவிட்டு வெளியேறியிருக்கிறார்.

ஆகவே சீர்த்திருத்தத்தை உடைப்பதோ, முட்டுக்கட்டை போடுவதோ ஏமாற்று வித்தையே ஒழிய நாணயமானதோ புத்திசாலித்தனமானதோ ஆகாது என்று உறுதியாய்ச் சொல்லுவேன்.

## அதிதீவிரப் பேச்சு

1920 ல் காங்கிரசானது நமது இயக்கத்தை ஒழிப்பதற்கு என்று என்ன என்னமோ சூழ்ச்சிகள் செய்தது.

அதுமுதல் இதுவரை காங்கிரஸ் ஒன்றிலும் வெற்றி பெறவில்லை. அதி தீவிரமாக பேசுவதன் மூலம் பொதுமக்களை அவ்வப்போது ஏமாற்றுவதையே தனது லக்ஷயமாகக் கொண்டிருந்ததேயல்லாமல் ஞானத்தோடோ அல்லது பொறுப்போடோ ஒரு காரியமும் அதனால் செய்ய முடியவில்லை.

பார்ப்பனரல்லாதார் இயக்க கொள்கைகளையே காப்பியடித்து இந்து முஸ்லீம் ஒற்றுமை என்றும், தீண்டாமை விலக்கு என்றும், மதுவிலக்கு என்றும் மற்றும் சைமன் கமிஷன் பகிஷ்காரமென்றும் ஆர்ப்பாட்டம் செய்த தெல்லாம் தானே வெட்கமடையும்படியான நிலைமையில் இப்போது அவற்றைக் கைவிட வேண்டி வந்தது.

இந்து முஸ்லீம் ஒற்றுமை இன்று காங்கிரசிலும் நாட்டிலும் இந்து முஸ்லீம் போராகவே இருந்து வருகிறது.

தீண்டாமை விலக்கு தீண்டாதாருக்கும் காங்கிரசுக்கும் போர் ஏற்பட்டு தீண்டாதார் இந்துமதத்தில் இருந்தே பிரிந்து போவதை நிறுத்த தீண்டாதாருடன் ராஜி செய்து கொள்ள வேண்டியதாய் முடிந்தது.

மதுவிலக்கு விஷயமோ இனி மறியல் செய்வதில்லை என்று சர்க்காருக்கு எழுதிக்கொடுக்க வேண்டியதாயிற்று. சைமன் கமிஷன் பகிஷ்காரமோ வட்டமேஜை மகாநாட்டுக்குப்போய் சைமன் ரிபோர்ட்டை விட மோசமான திட்டத்தின் மீது விவாதித்துத் தீரவேண்டியதாயிற்று.

மற்றும் இவற்றையெல்லாம் விடப் பரிதாபகரமான விஷயம் என்ன வென்றால் இன்று காங்கிரசுக்காரர்கள் சட்டசபைக்குப்போய் இன்னது செய்கிறோம் என்று சொல்லி வோட்டுக் கேட்க ஒரு திட்டம் தயாரிக்கவோ, அல்லது தங்கள் தீர்மானத்தில் உள்ளதை தைரியமாய் வெளியில் எடுத்துச் சொல்லவோ முடியாத நிலைமையை அடைந்திருப்பதேயாகும். இந்த நிலையில் இருப்பவர்கள் நமக்கு கொள்கை இல்லை யென்றும் திட்டங்கள் இல்லை என்றும் பேசுவது என்பது எவ்வளவு தைரியமான நடத்தையாக இருக்க வேண்டும் என்று பாருங்கள்.



## நாம் செய்த வேலை

நாம் இந்த பதினாறு வருஷகாலத்தில் எவ்வித பகிஷ்காரப் பேச்சும், போலி வீரப்பேச்சும் பேசாமல் கண்ணியமாய் உண்மையைப் பேசி காங்கிரசுக்காரர்களால் நடத்த முடியாது என்றும் அடைய முடியாது என்றும் இருந்த அரசியலை ஏற்று அடைந்து மற்ற மாகாணக்காரர்கள் யாரும் செய்திருக்காத மாதிரி நன்றாக நடத்தி மக்களுக்கு நம்மால் கூடிய எவ்வளவோ நன்மை செய்திருக்கிறோம்.

நமது வேலைகள் பெரிதும் கிராமங்களிலேயே கிராமவாசிகளுக் காகவே செய்யப்பட்டிருக்கின்றன.

கிராம சீர்திருத்தம், கிராம போக்குவரவு வசதி, கல்வி வசதி, தண்ணீர் வசதி, கூட்டுறவு இயக்க விரிவு, நில அடமான பாங்கி, கிராமவாசிகள் கடன்கள் குறைத்தல் முதலிய காரியங்கள் செய்யப்பட்டிருப்பதோடு பட்டணங்களுக்கும் தண்ணீர் வசதி, மின்சார வசதி முதலியவைகளும் முன் 50 - வருஷங்களில் கூட நடத்தப்பட்டிருக்காத அவ்வளவு அதிகம் இந்த 15 - வருஷ காலத்தில் செய்யப்பட்டிருக்கிறது.

மற்றும் கிராம சீர்திருத்தத்திற்காக எவ்வளவோ அனுபவ சாத்திய மானதும் முன்னேற்றமானதுமான திட்டங்கள் போட்டு வைத்திருக்கிறோம்.

ஒவ்வொரு கிராமத்துக்கும் குழாய் தண்ணீரும். மின்சார வசதியும், நாடக சினிமாக் கொட்டகையும், நந்தவனமும், சுகாதாரமும் இன்னும் மேலான பள்ளிக்கூடமும், மோட்டார் பஸ் போக்குவரவும் இருக்கும்படி செய்ய வேண்டும் என்பது நமது கொள்கையாகவும், திட்டமாகவும் இருந்து வருகிறது.

ஆனால் கிராம முன்னேற்ற விஷயமாய் காங்கிரசுக்காரர்களின் அல்லது காந்திஜியின் திட்டம் என்ன என்று பாருங்கள்.

கைக்குத்து அரிசி சாப்பிடுதல், கருப்பட்டி உபயோகித்தல், விளக்கெண்ணெய் விளக்கு எரித்தல், கதர்நூல் நூற்றலால் கைத்தொழில் செய்தல் போன்ற காரியங்கள் செய்தல் என்கிறார்கள். இதற்காகப் பொது ஜனங்களிடமிருந்து இன்னம் பணம் வசூலிக்கப் போகிறார்களாம். அவர்கள் அதிகாரத்துக்கு வந்தால் பொது ஜனங்கள் வரிப்பணத்தில் இருந்தும் இந்த வேலைகள் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் போகிறார்களாம்.

ஆகவே இது ஒரு வருணாச்சிரமக் கொள்கையா இல்லையா என்று பாருங்கள்.

ஜஸ்டிஸ் கட்சி என்பவர்களாகிய நாம் கிராமங்களை பட்டணங்கள் போலவும் கிராம ஜனங்களை பட்டண ஜனங்கள் போலவுமே ஆக்கப் பாடுபடுகின்றோம். அதற்காக நமது மந்திரிகளும் நாமும் திட்டம் போட்டு வைத்திருக்கிறோம். ஏனென்றால் கிராமம் என்பதாகவே ஒன்று இருக்கக் கூடாது என்றும் எல்லா கிராமங்களும் சிறுசிறு பட்டணம் போலவே இருந்து



RangaRakes tamilnavarasam.com

பட்டணத்தில் உள்ள மக்கள் அனுபவிக்கும் ஒவ்வொரு அனுபவமும் கிராம மக்களுக்கும் இருக்கும்படி செய்யவேண்டும் என்றும், கிராம மக்களின் சரீர உழைப்பையும், அவர்கள் உழைப்பை பட்டண வாசிகள் உறிஞ்சுவதையும் எவ்வளவு தூரம் குறைக்க வேண்டுமோ அவ்வளவு குறைக்க வேண்டும் என்றும் கருதுகிறோம்.

காங்கிரசுக்காரர்கள் கிராமவாசிகளை பழைய கருப்பர்களாகவே வைத்து அவர்கள் பாடுபட்டு வெள்ளாண்மை செய்து பட்டணவாசிகளுக்கு அழுதுவிட்டு இருட்டு வீட்டில் கருப்பட்டித் தண்ணீர் குடித்துக்கொண்டு ராட்டினத்தைச் சுற்றிக்கொண்டிருக்க வேண்டியதும், பட்டணவாசிகள் கிராம வாசிகளுடைய பாட்டையும் வெள்ளாண்மையையும் அனுபவித்துக்கொண்டு ஆகாயக்கப்பலில் சஞ்சரித்துக் கொண்டிருக்க வேண்டியதும் என்றால் இது பிராமணன், சூத்திரன், பறையன் என்பதுபோல் இதுவும் ஒரு மாதிரி வருணாச்சிரம தர்மமா அல்லவா? என்று யோசித்துப்பாருங்கள். இது நிற்க, சமூகத்துறையிலும் நமது கட்சி செய்திருக்கும் முக்கிய வேலைகளைக் கவனித்துப்பாருங்கள்.

தேவஸ்தான நிருவாகத்திற்கு சட்டம் செய்திருக்கிறது. இதை நமது பார்ப்பனர்களும் அவர்களது ஆசாமிகளும் எவ்வளவுதான் பழித்துக்கூறி எதிர்த்து வந்தாலும் இதன் நலத்தை அறிந்து மற்ற மாகாணக்காரர்களும் இப்போது இதைப் பின்பற்ற ஆரம்பித்திருக்கிறார்கள்.

சாமிக்காக என்று பார்ப்பனரல்லாத வகுப்புகளின் சில வகுப்பு பெண்களை பொட்டுக்கட்டி விவசாரத்திற்கு விடும் தீய வழக்கத்தை சட்டம் செய்து அடியோடு ஒழித்தது.

வயிற்றுப் பிழைப்புக்கு ஆக விவசாரித்தனத்திற்கென்று பெண்கள் தனித்து வாழும் வாழ்க்கையையும் விவசார வியாபாரத்தையும் சட்டம் செய்து ஒழிக்கப்படுகிறது.

நாட்டு வைத்தியத்தை தற்கால முறையில் புனருத்தாரணம் செய்து அதன் மூலம் மக்களுக்கு அதிக சௌகரியம் ஏற்படும்படி செய்தது.

பொது வாழ்வில் பொது இடங்களில் தீண்டாமை பாராட்டக்கூடாது என்று சட்டங்களும், நிருவாக உத்திரவுகளும் செய்து தீண்டப்படாத மக்களுக்கு இருந்து வந்த பல அசௌகரியங்களையும், இழிவுகளையும் ஒழித்தது.

கல்வியில் பின்னடைந்த மக்களுக்கும், சிறப்பாகப் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தாராளமாய் கல்வி வசதி கிடைக்கும்படி செய்து அவர்களின் எண்ணிக்கையை 100க்கு 200, 300 மடங்குக்கு மேல் உயர்த்தி இருக்கிறது.

விவசாயிகள் விஷயத்திலும் ஒரு குறிப்பிட்ட பெருந்தொகை விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும்படியாகவும், உழுது பயிர் செய்யாத



மிராசுதார்களில் ஒரு கூட்டத்தார் விவசாயிகளின் மீது வீண் ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பதற்கு ஆகவும் இனாம் நில மசோதா என்று ஒரு மசோதாவுக்கு அஸ்திவாரமாய் இருந்து நிறைவேற்றி வைத்திருக்கிறது.

இன்னும் இதுபோன்ற எவ்வளவோ நன்மைகள் எவ்வளவோ எதிர்ப்பிற்கிடையில் ஜஸ்டிஸ் கட்சி செய்திருந்தும் அதுவும் காங்கிரஸ்காரர்கள் தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் அதனால் யாதொரு காரியமும் செய்யமுடியாதென்றும் தள்ளிவிட்ட சீர்திருத்தத்தை ஏற்று நாம் இவ்வளவு காரியம் செய்திருக்க, நம் கட்சி தனது அதிகாரத்தில் இல்லாததும் அதற்கு சிறிதும் சம்பந்தமில்லாததுமான காரியங்களைச் சொல்லி அதன் மீது வீண் பழி சுமத்தி பார்ப்பனர்களும் அவர்களுடைய ஆட்களும் காங்கிரசின் பேரால் ஜஸ்டிஸ் கட்சியை வைது பழிகூறி விஷமப்பிரசாரம் செய்து வருகிறார்கள்.

## நிலவரிப் பழி

இப்பொழுது காங்கிரசுக்காரர்கள் தஞ்சை ஜில்லாவிலும் மற்றும் இரண்டொரு நஞ்சை பூமி மிகுந்த ஜில்லாவிலும் ஜஸ்டிஸ் கட்சியார் நிலவரி குறைக்கவில்லை என்று பழி கூறித் திரிகிறார்கள். இது மிகவும் வெறுக்கத் தகுந்த விஷமப் பிரசாரமாகும். ஏனெனில் பூமி வரி விதிப்பதோ, குறைப்பதோ, கூட்டுவதோ ஆகிய விஷயங்கள் மந்திரிகளுடைய இலாக்காக்கள் அல்ல என்றும் அவைகள் சர்க்காரார் ஒதுக்கி வைத்துக்கொண்ட இலாக்காக்கள் என்றும் காங்கிரசுக்காரருக்கு தெரிந்திருந்தும் நாமும் அநேக தடவை எடுத்துச் சொல்லி இருந்தும் அவர்கள் இன்னும் இம்மாதிரி வீண் விஷமப் பிரசாரம் செய்கிறார்கள் என்றால் அவர்களது நாணயம் எப்படிப்பட்டது என்பதைப் பற்றி பொது ஜனங்களே தெரிந்து கொள்ள வேண்டியதுதான்.

## காங்கிரஸ் சாதித்தது என்ன?

இவைகள் ஒருபுறமிருக்கட்டும்.

இந்த 50-வருஷ காலமாகவாவது அல்லது உலகப் பெரியார் என்னும் காந்தியார் காங்கிரஸ் சர்வாதிகாரம் வைத்து நடத்திய இந்த 16 வருஷ காலத்திலாவது காங்கிரஸ் சாதித்தது என்ன என்று யாராவது ஒரு விரலை நீட்ட முடியுமா என்று பாருங்கள்.

நமது மாகாணத்தில் தான் நாமாகிய ‘‘தேசத்துரோக’’ கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சி இருந்து காங்கிரஸ்காரர்களுக்கு முட்டுக்கட்டை போட்டு வந்தோம் என்று அவர்கள் சொல்லக்கூடுமானாலும் ஜஸ்டிஸ் கட்சி இல்லாததும் காங்கிரஸ்காரர்களே ஆதிக்கம்பெற்று இருந்ததுமான மற்ற மாகாணங்களிலாகிலும் காங்கிரஸ்காரர்கள் மக்களுக்காகவோ நாட்டுக்காகவோ என்ன செய்தார்கள்?



RangaRakes tamilnavarasam.com

காங்கிரஸ்காரர்கள் நம்மை பொது ஜனங்களிடமிருந்து வசூலித்த வரிப்பணத்தை நாம் சரியாகச் செலவு செய்யவில்லை என்று கூறுகிறார்கள். இதற்கு பதில் மேலே சொல்லியிருக்கிறேன்.

ஆனால் காங்கிரஸ்காரர்கள் இந்த பதினைந்து வருஷங்களாக பொது ஜனங்களிடமிருந்து திலகர் நிதி, சத்தியாக்கிரக நிதி, கதர் நிதி, ஹரிஜன நிதி போன்ற பல நிதிகள் கோடிக்கணக்கில் வசூலித்தார்களே அந்த நிதிகளால் ஏற்பட்ட நன்மை என்ன? காங்கிரசுக்காரர்களுக்குள்ளாகவே அந்நிதி கையாளப்பட்ட நாணயத்தைப் பற்றிய புகார்களே இன்னமும் ஓயவில்லை.

நிதிகள் தான் தொலைந்து போகட்டும். கொள்கை மேல் கொள்கை, திட்டங்கள் மேல் திட்டமாக காங்கிரஸ் நாள் ஒரு கொள்கையும் பொழுதொரு திட்டமும் வகுத்து இடியைப் போல் கர்ஜித்து மின்னலைப்போல் மாற்றி மாற்றி அமைத்து பேசிய வீரப் பேச்சுகள் நடத்திய பஹிஷ்காரங்கள், சட்ட மறுப்புகள், மறியல்கள், சத்தியாக்கிரகங்கள், பட்டினிகள் ஆகியவைகள் எல்லாம் என்ன ஆயிற்று? காங்கிரஸ் பொதுமக்களுக்கு கற்றுக் கொடுத்த நாணயமோ ஒழுக்கமோ தான் என்ன? அதனிடத்தில் இருக்கும் கட்டுப்பாடும் தலைவர்களின் ஒற்றுமையும் தான் என்ன? இவைகளில் எதைப்பற்றியாவது இன்று காங்கிரஸ் இன்னது செய்தது, அதனால் இன்ன பலன் கிடைத்தது என்றாவது சொல்லமுடியுமா? என்று யோசித்துப் பாருங்கள்.

ஒவ்வொரு தேர்தல்கள் வரும் சமயத்திலும் காங்கிரஸ் ஒவ்வொரு புதிய தந்திரத்தைக் கையாண்டு வெற்றிமேல் வெற்றி காங்கிரசுக்கே வெற்றி என்றும் ஜஸ்டிஸ் கட்சி 500 கஜ ஆழத்தில் புதைக்கப்பட்டது என்றும் 1000 கஜ ஆழத்தில் புதைக்கப்பட்டது என்றும் கொட்டை எழுத்துப் பிரசாரம் செய்து வந்ததெல்லாம் என்ன ஆயிற்று? எந்த வெற்றியால் என்ன சட்டம் செய்தது? அல்லது எந்த வெற்றியில் எவ்வளவு வரி குறைக்க முடிந்தது? அல்லது சர்க்காரையோ சர்க்கார் நடத்தையையோ எந்த அளவுக்கு அசைக்க முடிந்தது? அல்லது மக்களுக்கு இன்ன நன்மைகள் ஏற்பட்டன என்று அவைகளில் எதையாவது சொல்ல அவர்களுக்கு யோக்கியதை இருக்கிறதா என்று பாருங்கள்.

சென்ற அசம்பளி தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் மெஜாரிட்டியாக வெற்றி பெற்றார்கள், அவர்களால் என்ன செய்ய முடிந்தது? ‘‘153 ‘வெற்றி பெற்ற’ தீர்மானங்கள்’’ குப்பைத் தொட்டிக்கு போகச் செய்ய முடிந்தது. அடக்கு முறை சட்டங்கள் என்ன ஆயிற்று? வீறுகொண்டு எழ முடிந்தது.

நமது தமிழ்நாட்டில் பல ஸ்தல ஸ்தாபனங்களில் சிறப்பாக ஜில்லா போர்டுகளில் காங்கிரஸ்காரர்கள் வெற்றிபெற்று பிரசிடெண்ட் பதவி பெற்று ஆதிக்கம் கொண்டார்கள். இதனால் என்ன செய்ய முடிந்தது? எங்கும் ஊழல், எங்கும் நாற்றம், எங்கும் அசுத்தம் என்று காங்கிரஸ்காரர்களே ஒருவருக்கொருவர் கூறிக்கொள்வதல்லாமல் எங்கு என்ன மாறுதல் நடந்தது என்று சொல்ல முடியும்? என்று கேட்கின்றேன்.



காங்கிரஸ் கட்டுப்பாடான சபை கட்டுப்பாடான சபை என்று தோழர் ஜவஹர்லால் முதல் ஒரே மூச்சாகக் கத்துகிறார்கள். எதில் கட்டுப்பாடு? மக்களை ஏமாற்றுவதில் கட்டுப்பாடான பொய் அல்லாமல் எந்தக் காரியத்தில் கட்டுப்பாடு என்று சொல்லமுடியும்? தேர்தல்களின் யோக்கியதையும் அதில் காங்கிரஸ்காரர் நடந்து கொண்டதும் பார்த்தாலே கட்டுப்பாடு விளங்கிவிடும்.

இப்படிப்பட்ட இவர்கள் இனியும் தேர்தலுக்கு நிற்கும் காரணம் என்ன என்பதும் இனியும் நம்மீது பழிகூறி நம்முடன் போட்டிபோடுவதின் காரணம் என்ன என்பதும் நமக்கு விளங்கவில்லை. இந்த லட்சணத்தில் வரப்போகும் சட்டசபை தேர்தலுக்குப் போட்டி போடவும் நம்மை அடியோடு முறியடிக்கவும் இப்போதே பார்ப்பனர்கள் யுத்த முஸ்தீபுகள் தயார் செய்கின்றார்கள். இவர்கள் வெற்றி பெறப்போவதாகவே வைத்துக் கொள்ளுவோம். இவர்கள் அங்கு செய்யப்போவது என்ன என்று யாருக்காவது தெரியுமா? அல்லது அவர்களாவது ஏதாவது விளங்கும்படியாய் சொல்லுகிறார்களா? ஒன்றுமே இல்லாமல் சட்டசபையைக் கைப்பற்ற வேண்டும், ஜஸ்டிஸ் கட்சியை முறியடிக்க வேண்டும் என்பதுதான் காங்கிரஸ் திட்டமாக இருக்கிறதே ஒழிய தாங்கள் அங்கு போய் செய்வது என்ன என்பதுபற்றி இன்றுவரை காங்கிரசுக்கு திட்டமே இல்லாமல் இருந்து வருகிறது.

காங்கிரஸ்காரர்களின் வெற்றியின் யோக்கியதையையும் வெற்றி பெற்ற பின் அவர்களால் செய்யப்பட்டதையும் அவர்கள் நடந்து கொண்டதையும் நேரில் பார்த்த நாம் இன்னமும் அவர்கள் ஒரு ஸ்தானமாவது கைப்பற்ற இடம் தரலாமா என்பது பற்றி நீங்களே யோசித்துப் பாருங்கள்.

இந்த மாதிரி காங்கிரஸ் வெற்றிபெற விடலாமா?

இந்த நிலையில் காங்கிரஸ் ஒரு சமயம் வெற்றி பெற்றுவிடுமேயானால் நமது நாடும் நமது சமூகமும் அரசியலிலும் சமுதாய இயலிலும் குறைந்த பக்ஷம் ஒரு நூற்றாண்டு நிலையாவது பின் தள்ளிப் போகவேண்டியதாய் விடும். பார்ப்பனர்களின் சுயராஜ்யம் என்பதில் கருத்தோ மக்களை பழய காலநிலைக்குக் கொண்டுபோய் பழமை முறைகள் காப்பாற்றப்பட்டுப் பார்ப்பனீய ஆதிக்கத்தை எல்லாத் துறைகளிலும் நிலை நிறுத்த வேண்டும் என்பதேயாகும். ஆதலால் தோழர்களே! நாம் மிக்க கவலையுடனும் ஜாக்கிரதையுடனும் வேலை செய்யவேண்டியவர்களாய் இருக்கிறோம். நமக்குள் எவ்வித பிளவும் இல்லாமல் ஒற்றுமையுடனும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

**நம் தலைவர்**

நமது தலைவர் பொப்பிலி ராஜா அவர்கள் மிக நெருக்கடியான சமயமாகிய இந்த 3, 4 வருஷ காலமாக வெகு அரசியல் ஞானத்துடனும், தைரியத்துடனும், வீரத்துடனும் நமது இயக்கத்தை ஏராளமான பணச்



RangaRakes tamilnavarasam.com

செலவுடன் நடத்தி வந்திருக்கிறாரா என்பதில் நம் யாருக்கும் சந்தேகமில்லை. அவரே நமது தலைவராயில்லாதிருக்கும் பக்ஷம் நம் கட்சி மிகவும் கஷ்டப்பட்டிருக்கும் என்று உண்மையாகச் சொல்லுகிறேன்.

மற்ற மந்திரிமார்களும் தங்களால் கூடுமானவரை கட்சி நன்மைக்கு ஆக எவ்வளவோ அசௌகரியங்களுக்கிடையில் பிரசார விஷயமாய் உழைத்து வந்திருக்கிறார்கள் என்பதையும் மிகைப்படுத்தாமல் கூறுகிறேன். பார்ப்பனரல்லாதார் பிரசாரக் கமிட்டியாரும் தக்கதொரு சமயத்தில் வெளி வந்து தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து பிரசாரம் செய்திருக்கிறார்கள். மற்ற ஜில்லாக்களிலும் உள்ள பிரமுகர்கள் கூடியவரை கட்சிக்கு ஆதரவளித்து வந்திருக்கிறார்கள் என்றாலும் செய்திருக்க வேண்டிய அளவு பிரசாரம் நாம் செய்யவில்லை என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம். நமது பாமர மக்கள் வெகு சுலபத்தில் பார்ப்பனர்கள் விஷமப் பிரசாரத்தாலும் அவர்களது பத்திரிகைகளாலும் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள். உதாரணம் வேண்டுமென்றால் இந்த இரண்டு வருஷ காலமாய் நடந்து வந்த தேர்தல்களே போதிய சாட்சியாகும். ஆதலால் தலைவர் அவர்களும் மற்றும் கனம் மந்திரிமார்களும் தயவு செய்து கவனித்து மாகாணமெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்து ஆங்காங்குள்ள பிரமுகர்களுக்குள் இருக்கும் அபிப்பிராய பேதங்களை மாற்றி நட்பு முறை உண்டாக்கவேண்டும். தகுந்த பிரசாரகர்கள் மூலமாகவும் துண்டு பிரசுரங்கள் மூலமாகவும் உண்மை நிலைமை விளங்கும்படி செய்யவேண்டும். குறைந்த விலையில் தாய் பாஷை தினசரிப் பத்திரிகைகள் ஏற்பாடு செய்து கிராமங்கள் எல்லாம் பரவச் செய்யவேண்டும். இந்தக் காரியங்கள் செய்யப்பட்டால் கண்டிப்பாக வெற்றி நம்முடையதேயாகும்.

ஆங்காங்குள்ள மற்ற தோழர்களும் கட்சி நலத்தை உத்தேசித்து தங்களால் கூடுமான உதவி செய்து பிரசாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கடைசியாக திண்டுக்கல் பிரமுகர்களும் சிறப்பாக வரவேற்பு கமிட்டி அக்கிராசனர் தோழர் சோலை நாடார் அவர்களும் மனமுவந்து முன்வந்து தென் ஜில்லாக்கள் சார்பாக இப்பெரிய மகாநாடு கூட்டி மக்களுக்கு இவ்வளவு பெரிய உற்சாகத்தை மூட்டி உதவி செய்ததற்கும் என் மனப்பூர்வமான நன்றியறிதலை மறுமுறையும் தெரிவித்துக் கொள்வதோடு எனது முன்னுரையை முடித்துக் கொண்டு மகாநாட்டின் காரியத்தை துவக்குகிறேன்.

*குறிப்பு :- திண்டுக்கல்லில் 27.09.1936 ஆம் நாள் நடைபெற்ற தென் மாவட்ட ஜஸ்டிஸ் மாநாட்டில் ஆற்றிய தலைமைச் சொற்பொழிவு.*

குடி அரசு - சொற்பொழிவு - 27.09.1936



## ஜவஹர்லாலுக்கு உபசாரம்

## எச்சரிக்கை! எச்சரிக்கை!!

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தோழர் ஜவஹர்லாலுக்கு கராச்சி முனிசிபாலிட்டி உபசாரப்பத்திரம் கொடுக்க மறுத்துவிட்டது. பம்பாய் முனிசிபாலிட்டியும் உபசாரப் பத்திரம் கொடுக்க மறுத்து விட்டது. கடைசியாக மதராசும் மறுத்து விட்டது. அவ்வளவுதானா என்று பார்த்தால் திருச்சியும் மறுத்தது.

தானாகக் கனியாத பழத்தை தடியாலடித்து கனியவைப்பது போல் காங்கிரஸ்காரர்கள் இப்போது மறுபடியும் அந்த முனிசிபாலிட்டிகளில் உபசாரப் பத்திரம் படிக்கச் செய்வதற்கு வாசல் வைத்த வீடு தோறும் அலைந்து திரிந்து 32 பற்களையும் காட்டி ''வரவேற்பு செலவை நாங்களே பொறுத்துக் கொள்ளுகிறோம்'' என்று கெஞ்சுகிறார்கள்.

ஜவஹர்லாலுக்கு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்காத முனிசிபாலிட்டிகள் ஒரு நல்ல பெருமையை இழந்து விட்டதாக பரிதாபக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

பார்ப்பனர்கள் மத விஷயங்களிலும் இப்படியே பார்ப்பானுக்கு பணங் கொடுக்காத கை உலக்கை என்றும், பார்ப்பான் உபதேசம் கேட்காத காது நிலைக்காது என்றும், பார்ப்பானைப் புகழாத வாய் நாவாய் என்றும் பிரசாரம் சேர்த்துப் பேசுவது வழக்கம். அதுபோலவே ஜவஹருக்கு வரவேற்பு கொடுக்காத ஊரையும் முனிசிபாலிட்டி ஜில்லா போர்டுகளையும் கேவலமாகப் பேசுகிறார்கள். ஆனால் அதே ஸ்தாபன மெம்பர்களை திரும்பத் திரும்ப கெஞ்சி உபசாரம் பெறப் பாடுபடுகிறார்கள்.

எதற்காக இவ்வளவு ஆத்திரம் என்பது தான் விளங்கவில்லை. மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம் என்பது சாதாரண 3ந்தர 4ந்தர மானமுள்ளவர்கள் பழமொழி. நமது காங்கிரசுக்காரருக்குப் 10ந்தர மானம் கூட கிடையாதாகையால் எப்படியாவது எதை விற்றாவது தங்கள் சுயநலம் பெறுவதையே கொள்கையாதலால் ஒருபக்கம் வீடுவீடாய், ஊர் ஊராய் அலைந்து கெஞ்சிக் கொண்டு மற்றொரு பக்கம் கண்டபடி மக்களைக் குலைத்து வருகிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

தேர்தல் காலங்களில் இந்நாட்டு பாமரமக்கள் கண்களில் மண் தூவுவதற்கு ஆக யாரையாவது பிடித்து இந்திரன் சந்திரன் என்று கூறி, விளம்பரம் செய்து இந்நாட்டுக்கு அழைத்து வருவதென்றால் இதை யார்தான் சகித்துக் கொண்டு அதற்காக வருபவர்களுக்கெல்லாம் உபசாரப் பத்திரமும் பணமும் கொடுத்துக்கொண்டிருக்க முடியும்?

நமது ஸ்தல ஸ்தாபனங்கள் பொறுப்பற்ற முறையில் நடைபெற இடம் கொடுக்கின்றது என்பதற்கு இது போன்ற காரியங்களே சரியான உதாரணங்களாகும்.

இனி தமிழ் நாட்டுக்குள் அனேகமாக மற்றும் பல இடங்களிலும் இந்த நிலைமைதான் ஏற்படும் என்பதையும் பஹிஷ்காரமும் முன்போலவே ஏன், அவற்றை விட அதாவது காந்தியார், பட்டேல், ராஜேந்திரபாபு முதலியவர்களுக்கு நடந்ததை விட மேலாகவே நடக்கும் என்பதையும் நமது பார்ப்பனர்கள் உணர்ந்து அதற்கேற்றபடி புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ள எதிர்ப்பார்க்கிறோம்.

தோழர் ஜவஹர்லால் தமிழ்நாட்டிற்கு எலக்ஷன் பிரசாரத்துக்கு வருகிறார் என்பது மாத்திரமல்லாமல் மேல்கொண்டு பண வசூலுக்கு ஆகவும் வருகிறார் என்பதை பொது மக்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுவதுடன் இதுவரை காங்கிரசுக்காரர்கள் இம்மாதிரி எத்தனை தடவை பணம் வசூலித்து இருக்கிறார்கள் என்பதையும் ஞாபகப்படுத்திப் பார்க்க வேண்டுமாய் வேண்டுகிறோம்.

ஒவ்வொரு தடவையிலும் லட்சக் கணக்காய் வசூலித்த பணங்கள் என்ன ஆயிற்று என்று பணம் கொடுத்தவர்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? பணத்தை வசூல் செய்வதும் வாயாடிகளுக்கும் காலாடிகளுக்கும் கொடுப்பதும் கள்ளுக்கடை மீன்கடை பாஷையில் பார்ப்பனரல்லாத மக்களையும் அவர்களது தலைவர்களையும் அற்பத்தனமாய் பேசச் சொல்லுவதுமல்லாமல் அப்பணங்களால் என்ன நன்மை ஏற்பட்டது?

இப்பொழுதும் தோழர்கள் ஆலச்யமய்யரும், கல்யாணராமய்யரும் போல் சட்டசபை மெம்பரும் ஜில்லா போர்டு மெம்பருமாக ஆக வேண்டுமானால் இந்த வசூல் பணங்களில் செலவு செய்வதும் தோழர்கள் அவினாசி லிங்கமும் சேஷாசல செட்டியாரும் போல் அசம்பளி மெம்பரும் ஜில்லா போர்டு மெம்பரும் ஆக வேண்டுமானால் அவரவர்கள் சொந்தப்பணம் முறையே 25 ஆயிரம் 15 ஆயிரம் செலவாவதுமாகத்தான் இருந்து வருகிறது. எப்படியோ இரண்டு பார்ப்பனர்கள் அதுவும் டிபாசிட்டு கட்டக்கூட சவுகரியமில்லாதவர்கள் சட்டசபைக்கும் போர்டுக்கும் புகுந்து விடுகிறார்கள்.



சில பார்ப்பனர்கள் எலக்ஷனில் நின்று தன் காசு செலவில்லாமல் வெற்றி பெறுவதோடு பணமும் மிச்சம் பிடித்துக் கொள்ளுகிறார்கள். இதுதான் தேசிய நிதி வசூலிப்பதின் தன்மையாக இருக்கிறது.

திலகர் நிதி கணக்கு கேட்டதற்கு இதுவரை காங்கிரசுக்காரர்களால் என்ன பதில் சொல்ல முடிந்தது?

மற்றும் சதுர் பாட்டுக் கச்சேரிகள் முதலிய கண் - காது - மெய் - காக்ஷி சாலைகள் வைத்து கொள்ளை அடித்த பணங்களுக்கு என்ன கணக்கு சொன்னார்கள் என்பதைப் பற்றி யெல்லாம் பாமர மக்கள் கவனிக்காமல் கண்மூடித்தனமாய் நடந்து கொண்டதின் பயனே மத இயலில் பார்ப்பனரல்லாத மக்கள் பாடுபடுவதும் பார்ப்பனர்களுக்கு அழுவதுமாய் வாழ்க்கை நடத்தப் படுகிறது போலவே பார்ப்பனரல்லாதார் பணங்கொடுப்பதும் உஞ்சவிருத்தி பார்ப்பான் தேர்தலில் வருவதுமாய் இருந்து வருகிறது.

என்னதான் சமதர்மமும் பொது உடமையும் பேசினாலும் ஜவஹர்லால் பார்ப்பனர் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

அவர் பூசையும் குங்குமப் பொட்டும் கங்கா ஸ்நானமும் பார்ப்பன கருமமும் திதியும் திவசமும் ஒவ்வொன்றிலும் எந்த பார்ப்பனருக்கும் விட்டவர் அல்ல என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

தோழர் ராஜேந்திரப் பிரசாத் அவர்களை பார்ப்பனரல்லாத மக்கள் பஹிஷ்கரித்த போது அவர் ''எனக்கு எலக்ஷன் நடப்பது தெரியாது, நானும் பார்ப்பனரல்லாதார்தானே, என்னை ஏன் திரும்பிப்போ என்று சொல்லுகிறீர்கள். நான் எங்கே போவது?'' என்று கேட்டார். ஆனால் தோழர் ஜவஹர்லாலை தமிழ்நாட்டு மக்கள் திரும்பிப் போ என்று சொல்லும் போது அவர் என்ன சொல்லப் போகிறாரோ தெரியவில்லை.

இவை ஒரு புறமிருக்க, திருச்சி முனிசிபாலிட்டி முதலில் வரவேற்பு தீர்மானத்தை யோசிக்கவே மறுத்துவிட்டு மறுபடியும் சில காங்கிரஸ்காரர் களுடைய ''பிரம்ம''ப் பிரயத்தனத்தால் அதுவும் வரவேற்புச் செலவை தாங்களே சொந்தத்தில் ஏற்றுக் கொள்ளுவதாகச் சொல்லி வரவேற்பு தீர்மானம் நிறைவேற்ற முயற்சிக்கப்பட்டு வெற்றி பெற்று விட்டதாகத் தெரிகிறது.

ஆனால் அதை யார் படிக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. சேர்மென் தோழர் பொன்னையா பிள்ளை அவர்களும், வைஸ் சேர்மென் கோபாலராவ் அவர்களும் காங்கிரஸ் கட்டளையை இரண்டு தடவை மீறினவர்கள். காங்கிரஸ் கட்டளையை மீறியே அந்த ஸ்தானங்களைப் பெற்ற தோடல்லாமல் காங்கிரஸ்காரர்கள் ராஜிநாமா கொடுக்க வேண்டும் என்று உத்திரவிட்டும் அவ்வுத்திரவை குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு விண்ணென்று நிமிர்ந்து நின்று கொண்டிருக்கும் ''காங்கிரஸ்



RangaRakes tamilnavarasam.com

துரோகிகள்'' ஆவார்கள். அப்படிப்பட்ட ''துரோகிகள்'' இடம் காங்கிரஸ் தலைவர் உபசாரம் பெற்றுக் கொள்ளப்போகிறாரா அல்லது காங்கிரசின் கட்டுப்பாட்டையும் கவுரவத்தையும் உத்தேசித்து திருச்சி முனிசிபல் வரவேற்பு வேண்டியதில்லை என்று சொல்லிவிடப் போகிறாரா, அல்லது ''சாம்பாரில் மலம் கலந்து விட்டது மேலாக இறுத்தாப் போல் வடிகட்டி விடு'' என்று ஆச்சாரக்காரர்கள் சொல்லுவது போல் சேர்மென், வைஸ்சேர்மென் நீங்கலாக வேறு யாரையாவது அதாவது தோழர் தேவர் போன்றவர்களைக் கொண்டு வரவேற்பு வாசிக்கச் சொல்லப் போகிறாரா, அல்லது இந்த எழவே வேண்டாம் ''நான் திருச்சிக்கே வரவில்லை'' என்று சொல்லிவிடப் போகிறாரா என்பது ஒரு போட்டிப் பரிசு போன்ற விஷயமாக இருக்கிறது.

எப்படி இருந்த போதிலும் நமக்கு ஒரு விஷயத்தில் திருப்தி ஏற்பட்டிருப்பதை மறைப்பதற்கு இல்லை. அதாவது ஏதோ ஒரு தனிப்பட்ட கூட்டத்தாரால் குருவாகக் கருதப்படுகின்ற ஒரு பார்ப்பனரை சங்கராச்சாரி ஆக்கி அவருக்கு உலக குரு என்று பெயர் வைத்து விளம்பரம் பண்ணி பல்லக்கில் சுமந்து பணம் பறிப்பது போல், ஏதோ ஒரு ஸ்தாபனத்துக்குத் தலைவர் என்பவரை இந்திய தலைவர் என்று கூப்பிட்டு விளம்பரம் செய்து ஊர்கோலம் செய்து பணம் வகுலிக்கப்போகும் ஒரு ஆசாமிக்கு வரவேற்பளிக்க மறுக்கும்படியானவர்களோ பகிஷ்கரிப்பவர்களோ ஆன ''தேசத்துரோகிகள்'', ''அபாக்கியவான்கள்'' இந்த இந்திய நாட்டில் சென்னை மாகாணத்தில் மாத்திரம் இல்லாமல் பம்பாய் மாகாணத்திலும், சிந்து மாகாணத்திலும் கூட இருக்கிறார்கள் என்றால் மற்றும் காங்கிரஸ்காரர்களே மெஜாரிட்டியாய் வெற்றி பெற்ற முனிசிபாலிட்டிகளிலுமே இருக்கிறார்கள் என்றால் ஏதோ ஒரு அளவுக்காவது நமக்கு கிடைக்கும் ''தேசத்துரோகப் பட்டத்தில்'' பங்கு கொள்ள வேறு மாகாணங்களும் காங்கிரஸ்காரர்களும் கிடைத்தனவே என்பதுதான் நமக்கு ஏற்பட்ட திருப்தியாகும்.

தோழர் ஜவஹர்லாலை பஹிஷ்கரிப்பவர்கள் எல்லாம் தேசத்துரோகி என்றும், பார்ப்பனர்களும் அவர்கள் பத்திரிகைகளும் கூலிகளும் கூவக்கூவ இந்தியாவில் கூடிய சீக்கிரம் ''தேசத்துரோகிகள்'' தான் 100க்கு 95 வீதம் பேர்களுக்கும் அதிகமாகப் போகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களே தமிழ்நாடு தலைவர் என்ற முறையில் ஆனைமலையில் வெள்ளைக்காரரிடம் தோழர் ''ஜவஹர்லால் கொள்கையை நாங்கள் ஒப்புக் கொள்வதில்லை'' என்றும் ''அவருடைய கொள்கைக்காக அவரை காங்கிரஸ் தலைவராக்கவில்லை'' என்றும் கல்லில் எழுதிய எழுத்துப்போல் பேசிவிட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அப்படிப் பட்ட சத்தியமூர்த்தியார் இன்றும் தேச பக்தராகவும் பாரதமாதாவின் அருந் தவப் புத்திரராகவுமே விளங்குவதோடு ஜவஹர்லாலையும் கூட்டி ஆட்டம் காட்டி பணமும் வசூலிக்கப் போகிறார்களே ஒழிய மற்றபடி அவர் எந்த



தேச பக்தர்களாலும் தேசீயப் பத்திரிக்கைகளாலும் தேசீயப் பிழைப்புக்காரர் களாலும் தேசத்துரோகியாகவோ அபாக்கியவானாகவோ அழைக்கப்படவில்லை. ஆகவே தேசத் துரோகம் என்றால் என்ன என்பதை இதிலிருந்தே நன்றாய் தெரிந்து கொள்ளலாம்.

வடநாட்டுப் பார்ப்பனர் ஒருவரும் தென்னாட்டுப் பார்ப்பனர் ஒருவரும் சேர்ந்து கொண்டு தமிழ்நாட்டு பார்ப்பனரல்லாதார் மக்களின் மானங்கெட்ட - அறிவு மழுங்கிய ஒரு கூட்டத்தாரின் உதவியைக் கொண்டு மூட மக்களை குரங்கு போல் ஆட்டப் போகிறார்கள்; ஏய்த்துப் பணம் பிடுங்கப் போகிறார்கள்; இதுதான் அகில இந்தியத் தலைவர் வரவேற்பு நாடகம் என்பதின் கருத்து.

ஆகவே தோழர்கள் இது விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமாய் எச்சரிக்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 27.09.1936**



RangaRakes tamilnavarasam.com

# மறுபடியும் தொல்லை

## தூது கோஷ்டிப் புரளி

இனாம்தார் மசோதா இரண்டாம் முறையும் சென்னைச் சட்டசபையில் நிறைவேறிச் சட்டமாகிவிட்டது. வைஸ்ராய் அனுமதி பெறவேண்டியதுதான் பாக்கி. வைஸ்ராய் அனுமதியளித்து விட்டால் ஐம்பது லக்ஷம் இனாம் குடிகளின் கஷ்டம் தீரும். நிர்ப்பயமாக உயிர்வாழ்வார்கள். ஆனால் இனாம்தார்கள் இனாம் குடிகளின் தலையில் கைவைக்க மேலும் என்ன வழியென்று பார்க்கப்போவதாகத் தெரிகிறது. இனாம்தார்களுடைய பிரதிநிதி கோஷ்டியார் கவர்னர் அவர்களைப் பேட்டி கண்டு முறையிட முயற்சி செய்தார்களாம். இனாம் மசோதா விஷயம் வெகுகாலமாகப் பொது ஜனங்கள் முன் இருந்து வந்திருப்பதினாலும் இந்த விஷயத்தை ஏற்கனவே நன்றாகச் சர்ச்சை செய்யப்பட்டிருப்பதினாலும் புதிதாக எந்த விஷயத்தையும் தெரிவிப்பதற்கில்லை யெனக் காரணங்கூறி கவர்னர் தூது கோஷ்டிக்கு அனுமதியளிக்க மறுத்து விட்டதுடன் இதர கோஷ்டிகளுக்கும் அனுமதியளிப்பதில்லை யென்று தெரிவித்துவிட்டாராம். இது இரண்டு பார்ப்பனப் பத்திரிகைகளுக்குப் பிடிக்கவில்லை. அவ்விரண்டு பத்திரிகைகளும் தேசீயப் பத்திரிகைகள்தான். ஏழை எளியோர் விடுதலையை தமது லக்ஷ்யமென தேசீய வாதிகளும் தேசீயப் பத்திரிகைகளும் கூறிக்கொண்டாலும் இனாம் குடிகள் மசோதா விஷயத்தில் மட்டும் தேசீயமும் மாயமாக மறைந்து போய்விட்டதாகவே தோன்றுகிறது. இதற்குக் காரணம் என்ன? இனாம் குடிகள் எல்லாம் பார்ப்பனரல்லாதாராயிருப்பதும் இனாம்தார்களில் பெரும்பாலார் பார்ப்பனர்களாயிருப்பதுவுமே காரணம். இந்த இனாம் மசோதாவைக் கவிழ்க்கப் பார்ப்பனர்கள் எவ்வளவோ கிளர்ச்சி செய்தார்கள்; பலிக்கவில்லை. கடைசியில் சட்டமாகப்போவதும் உறுதி. இந்த மசோதா சட்டமானதற்குக் காரணஸ்தராயிருந்தவர்கள் ஜஸ்டிஸ் கட்சியாரே. ஜஸ்டிஸ் கட்சியாரால் ஏழை மக்களுக்கு நன்மையுண்டானதாக ஒரு புகழ் தோன்றுவதை பார்ப்பனர்கள் எவ்வாறு சகித்துக் கொண்டிருப்பார்கள். ஆகவே மசோதா பொதுவுடமைத் தன்மை வாய்ந்ததென்று பூச்சாண்டி காட்டினார்கள். அந்தப் பூச்சாண்டியும் பலிக்கவில்லை. இப்பொழுது கவர்னரைப் பேட்டி கண்டு புரளி செய்ய முயன்றார்கள். மசோதா நன்கு விவாதிக்கப்பட்டிருப்பதினாலும் புதியதாக அறிய வேண்டியது எதுவும் இல்லாமலிருப்பதினாலும் பேட்டியளிக்க கவர்னர் விரும்பவில்லை.



இதனால் இனாம்தார்களுக்கு கவர்னர் ஏதோ அநீதி செய்து விட்டதாக சென்னைப் பார்ப்பனப் பத்திரிகைகள் கூறுகின்றன. இது தானா இந்திய கவர்னரை நாம் பெற்ற பலன் எனவும் ஒரு பத்திரிகை கிண்டலாக எழுதுகிறது.

தற்கால கவர்னர் இந்தியரானதினால் இனாம் மசோதா விஷயத்தை நன்கறிந்திருக்கிறார். எனவே அவரை ஏய்க்க முடியாது. இனாம்தார்கள் குறும்பையும் அவர் நன்கறிந்திருக்கிறார். ஆகவே அனுமதி மறுத்ததில் தப்பு எதுவும் இல்லை. கவர்னர் இந்தியராயிருப்பதினால் இந்தியர்களின் வம்பளப்பு களை யெல்லாம் அவர் காதில் வாங்க வேண்டுமென்ற கட்டாய மில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் -** 27.09.1936



RangaRakes tamilnavarasam.com

# ஆதாரமற்ற நம்பிக்கைகள்

ஒரு விஷயத்தை ஒருவன் கூறுகிறான் என்று வைத்துக்கொள்வோம். உடனே நாம் என்ன செய்கிறோம்.

''அது உனக்கு எப்படித்தெரியும்? அது உண்மையென்று நாங்கள் ஏன் நம்பவேண்டும்? அது உண்மை என்று நம்ப ஆதாரமென்ன?'' எனப் பொதுவாக மூன்று கேள்விகளைக் கேட்கிறோம்.

பிரதி தினமும் நாம் எத்தனையோ விஷயங்களை அறிகிறோம். அவைகளில் பலவற்றை நாம் கண்ணைமூடிக்கொண்டு நம்பிவிடுகிறோம். ''அது உண்மையா? உண்மை யென்பதற்கு ஆதாரமென்ன?'' என்பன போன்ற விஷயங்களை நாம் கவனிப்பதே இல்லை.

நமது நம்பிக்கைகளில் பலவற்றை ஆராய்ந்து பார்த்தால் அவற்றிற்கு ஆதாரமே இல்லையெனத் தோன்றா நிற்கும். ஒரு காலத்திலே ஒரு விஷயம் உண்மையென்று யாரோ ஒருவர் சொன்னார். அல்லது ஆராய்ந்து பாராமலே அதை நாம் உண்மையென நம்பிக்கொண்டோம். அல்லது அது உண்மையாகத்தான் இருக்குமென்று சுளுவில் நம்பிக்கொண்டோம்.

ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் நாம் முதலிலே கூறிய மூன்று கேள்விகளையும் கேட்டால் எந்த விஷயத்தின் உண்மையையும் நாம் அறிந்துகொள்ளலாம்.

உண்மையாராய்ச்சியில் தோல்வியடைந்த பிறகும் ஒரு விஷயத்தை நாம் உண்மையென நம்புவோமானால் அந்த நம்பிக்கை பகுத்தறிவுக்குப் பொருந்தாததென்றே ஏற்படும்.

யாரேனும் ஒருவரது இலேசான தூண்டுதலின் பேரில் முதலில் ஒரு விஷயத்தை உண்மையென நம்புகிறோம். அந்த நம்பிக்கை காலக் கிரமத்தில் வலுப்பெற்று விடுகிறது. இப்பொழுது அது நமது சர்வ சாதாரண நம்பிக்கைகளில் ஒன்றாகிவிட்டது. யாரோ ஒருவர், ஏதோ ஒரு இடத்தில், எப்போழுதோ ஒரு காலத்து ஒரு விஷயத்தை நம்மிடம் சொன்னார். அதை ஆராய்ந்து பாராமலே நாம் ஒப்புக்கொண்டு நம்பிவிட்டோம். நம்மிடம் கூறப்படுகிறவைகளைப் பற்றிக் கேள்வி கேட்கும் சக்தி நமக்குண்டாகாதிருந்த இளம் பருவத்திலேயே அந்த விஷயத்தை நாம் கேட்டிருக்கலாம். நமது உறுதியான நம்பிக்கைகளில் பல அப்பொழுது ஏற்பட்டவைகளாகும்.



நாம் பக்குவ தசையடைந்திருக்கும் இப்பொழுது அது உண்மையா அல்லவா என்று கேட்கக்கூட நாம் துணிவு கொள்வதில்லை. அது தெளிவான உண்மை யென்றே நமக்குத் தோன்றுகிறது. எனவே அதைப்பற்றிக் கேள்வி கேட்பதே பைத்தியக்காரத்தனம் என நாம் உணருகிறோம்.

ஒரு தீவிர வைஷ்ணவனையும், ஒரு தீவிர சைவனையும் இள வயதிலேயே இடம் மாற்றி வளர்த்தால் - அதாவது தீவிர வைஷ்ணவனை தீவிர சைவப் பெற்றோரும், தீவிர சைவனை தீவிர வைஷ்ணவப் பெற்றோரும் இளமை முதற்கொண்டே வளர்க்கும் படி செய்தால் அவர்களது பழக்க வழக்க நம்பிக்கைகள் எல்லாம் நேர்மாறாகவே அமையும். அவர்களில் ஒவ்வொருவனும் தனது நம்பிக்கையே - பழக்க வழக்கமே மெய்யென்று நம்புவான். சமயத் துறையில் மட்டுமன்றி இதர துறைகளிலும் இதே நிலைமையே ஏற்படும். பலதார மணம், சிசுஹத்தி, நரபலி, மாட்டுச் சண்டை, குத்துச் சண்டை, கோழிப் போர் முதலியவைகள் அமலில் இருக்கும் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு அவை தீயவை என்றே தோன்றா; சர்வ சாதாரணப் பழக்க வழக்கமாகவே தோன்றும். அவை அசாதாரணமான பழக்கங்கள் என்றோ ஒழுக்கத்துக்கு முரணான பழக்கங்கள் என்றோ தோன்றமாட்டா.

குற்றபரம்பரையினர் வாழும் நகரத்தின் ஒரு பகுதியிலே குற்ற பரம்பரையினர்க்கு இடையிலே, ஒருவர் வளர்ந்துவந்தால் அவருடைய பழக்க வழக்கங்கள் ஏனையோர் பழக்க வழக்கங்களுக்கு மாறுபட்டனவாகவே இருக்கும். ஒரு ஆங்கிலப் பெண்ணை ஒரு ரஷ்ய மாது ஸ்வீகாரம் செய்து ரஷ்ய குடும்பத்தில் ரஷ்ய பழக்க வழக்கப்படி வளர்த்தால், அவளுடைய பழக்க வழக்கங்களும் உணர்ச்சியும் ரஷ்ய போக்காக இருக்குமே ஒழிய, ஆங்கிலப் போக்காக இராது. இது போலவே நமது அநேக அதிதீவிர நம்பிக்கைகளுக்குக் கூட நமது வளர்ப்பு முறையே காரணமாகும்.

இளமைப்பருவம் கடப்பதுடன் புதுக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் குணமும் உண்மையில் நின்று விடுவதில்லை. நம்மையறியாமலே நமது வாழ்நாள் முழுதும் புதுப்புதுக்கருத்துக்களை பிரதிதினம் ஏற்றுக்கொண்டே இருக்கிறோம். இதற்கு பத்திரிகைகளும் விளம்பரங்களுமே காரணம். பொதுவாக அநேக விஷயங்களைப்பற்றி நுட்பமாகச் சிந்தனை செய்வதே இல்லை. நாம் பெரிதும் கிளிகள் மாதிரியே நடந்து வருகிறோம். பிறர் சொல்வதை நம்புகிறோம்; செய்வதைப் பின்பற்றுகிறோம். இளமைப்பருவம் கடந்தபிறகும் நாம் ஏற்கனவே பெற்றிருக்கும் கருத்துகளுக்குப் பொருத்தமான கருத்துகளைத்தான் ஒப்புக்கொள்ளுகிறோம்; மற்றவைகளை நிராகரிக்கிறோம்.

''எல்லோரும் அப்படியே சொல்கிறார்கள், அதனால் நம்புகிறோம்'' என்ற ரகத்தைச் சேர்ந்தவைகளுக்கு ஒரு தனியிடம் வகுக்கவேண்டியதுதான். அவை தெளிவான உண்மைகள் ஆகமாட்டா. அப்பேர்ப்பட்ட விஷயங்கள்



RangaRakes tamilnavarasam.com

ஒரு குறிப்பிட்ட தனிமனிதன் கூறியவைகளாயிருக்கமாட்டா. அவை யாரோ ஒருவராலோ பலராலோ கூறப்பட்டு பரம்பரையாய் நம்பப்பட்டு வந்தவைகளாக இருக்கலாம். அல்லது மக்களின் ஐதீக நம்பிக்கைகளாகவும் இருக்கலாம். அப்படியானால் அவை வார்சுரிமைப்படி நாம் பெற்ற சமூக (சொத்து) நம்பிக்கை களாகும். எனவே ஒரு நம்பிக்கை மிகவும் பழமையானது என்ற ஒரே காரணத்தினால் மட்டும் அது ஆதாரமுடைய உண்மையாகி விடமாட்டாது.

சந்தேகத்துக்கு இடமில்லாதபடி, வெளிப்பார்வைக்கு உண்மையாகத் தோன்றுபவைகள் விஷயத்தில் நாம் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

**''ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சிசெய்வதே ஆபாசமானது, அநாவசியமானது - துரோகமானது என்ற உணர்ச்சி மக்களுக்கு இருக்குமானால் அந்த விஷயம் பகுத்தறிவுக்கு முரணானது என்று தான் ஏற்படும்''**

**டிராட்டர்.**

''அது தெளிவான பொது உண்மை. அதைப்பற்றி சந்தேகம் கொள்வதோ ஆராய்ச்சி செய்வதோ அநாவசியம்'' என ஏற்படுமானால், மக்கள் அறிவு வளர்ச்சியின் சரிதம் முழுவதிலும் அப்பேர்ப்பட்ட தெளிவான பொது உண்மைகளே நிறைந்திருக்கின்றன. ஆராய்ச்சியில் அவை ஆதாரமற்றவை என்றும் வெளியாகியிருக்கின்றன. உதாரணமாக அடிமை வர்த்தகம் இயற்கையானது, நியாயமானது, இன்றியமையாதது என்றே வெகுகாலமாக நம்பப்பட்டு வந்தது. மக்களில் பல வகுப்பார் இயல்பாக அடிமைகளாகவே இருந்து வருகின்றனர். அடிமை வாழ்க்கையையே பெரிதும் விரும்புகின்றனர். அதைப்பற்றி சந்தேகங்கொள்ளவே இடமில்லை.

மற்றும் வட்டமாக அன்றி இதர முறைகளில் கிரகங்கள் சுற்றுகின்றன என்று நம்புவது வெகுகாலமாக அசாத்தியமாகவே இருந்து வந்தது. வட்டவடிவம் அல்லது மண்டலம் மேற்பார்வைக்கு ஒரு புரணமான உருவம்; எனவே கிரகங்கள் எல்லாம் வட்டமாகச் சுற்றுகின்றன என நம்புவதே இயற்கையானது; சாத்தியமானது. ஆனால் இந்த நம்பிக்கையை ஒழிக்க அநாதிகாலமாக நடந்து வந்திருக்கும் போராட்டம் சரித்திரத்திலேயே மிகவும் அற்புதமானதாகும்.

உணர்ச்சிக்கு ஹிருதயமே ஆதாரமென்றும் மூளை அல்லவென்றும் முன்னோர் நம்பி வந்தனர். இன்றோ பெரும்பாலார் மூளையின் உதவியினால் நாம் சிந்தனை செய்வதாகவே நம்புகிறார்கள். மூளையின் உதவியின்றி மனிதனுக்கு சிந்திக்கவே முடியாதென்றே தற்காலத்தவர்களில் பெரும்பாலார் கூறுகிறார்கள். எனினும் முன்னோர்கள் மாறாகவே நம்பினார்கள்.

பூமி பரப்பான தென்பது தெளிவான உண்மையாகத் தோன்றியதினால் வேறு விதமாக அபிப்பிராயப்படுகிறவர்கள் கேலி செய்யப்பட்டார்கள் - தூற்றப்பட்டார்கள்.



பளுவான பொருள்கள் இலேசான பொருள்களை விட விரைவாக விழுமென இரண்டாயிர வருஷகாலம் தடையின்றி நம்பப்பட்டு வந்தது. அதற்கு அரிஸ்டாட்டல் அபிப்பிராயமும் மேற்கோளாகக் காட்டப்பட்டது. உண்மை வேறு விதமானதென்று கலிலியோ நிரூபித்துக்காட்டும் வரை மக்கள் அவ்வாறே நம்பி வந்தனர். ஆராய்ந்து பாராமல் கண் மூடித்தனமாக நம்பப்படுபவைகள் எல்லாம் ஆதாரமுடைய உண்மைகளாகிவிட மாட்டா. அத்தகைய தப்பு நம்பிக்கைகளை உடைத்தெறிவதினாலேயே அறிவு வளர்ச்சி யடைகிறது.

சுயநலப்பற்றினால் பல நம்பிக்கைகள் அமலில் இருந்து வருகின்றன. தற்கால மனோ தத்துவ சாஸ்திரப்படி பார்த்தால் இவ்விஷயத்தில் சந்தேகத்துக்கே இடமில்லை. சில விஷயங்களை நம்புவது நமக்கு இலாபகரமா யிருப்பதினாலேயே அவைகளை நாம் நம்பி வருகிறோம். பொதுஜன மதிப்பைப் பெறுவதற்காகவும் நாம் பல விஷயங்களை நம்புகிறோம்; அல்லது நம்புவதாக பாவனை செய்கிறோம். ஆனால் அரசியல் அபிப்பிராயங்கள் உட்பட சகல அபிப்பிராயங்களும் சுயநலம் பற்றியவை என்றும் கூறிவிட முடியாது, எனினும் நம்பிக்கைகளுக்கும் அபிப்பிராயங்களுக்கும் சுயநலமும் ஒரு காரணம் என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது.

''சுயநலம்'' என்பது பொதுவாக, மக்களது ஜீவனோபாயத்துக்குரிய வழிகள், பணம் தேடுதல் முதலியவைகளையே குறிக்கும். ஆனால் சமூக வாழ்வில் ஒருவனுக்கு ஏற்படும் நலத்தையும் நாம் சுயநலத்தோடு சேர்க்கலாம். பொதுஜன மதிப்பைப் பெறும் பொருட்டும் நாம் பல விஷயங்களை நம்புவதாக அல்லது பாவனை காட்டுவதாக ஏற்கனவே கூறியிருக்கிறோம். இதுவும் சுயநலம் பற்றியதாகும். ஒருவனது வாழ்நாளின் வெற்றியே பொதுஜன மதிப்பைப் பொறுத்திருக்கிறது. சில ஸ்தாபனங்களையோ இயக்கங்களையோ ஆதரிப்பதினாலோ நடத்துவதினாலோ சிலருக்கு பொதுஜன மதிப்பும் வாழ்க்கை வெற்றியும் ஏற்படுகிறது. சமூக வாழ்வில் தாம் பெற்றிருக்கும் ஸ்தானம் அல்லது பதவிகள் காரணமாக சிலர் அனேக விஷயங்களை நம்ப வேண்டியதாக ஏற்படுகிறது. அவ்வாறு நம்பவில்லையானால் அவர்களுடைய மதிப்பும் ஒழிந்துபோகும்; வாழ்வும் கஷ்டமாகிவிடும்.

தனது இயல்பான குணத்துக்கு ஆதாரம் தேடும் பொருட்டும், தனது நிலைமையைக் காப்பாற்றும் பொருட்டும், தனது நடக்கை நியாயமென நிரூபிக்கும் பொருட்டும் சிலர் வேண்டுமென்றே சில விஷயங்களை அல்லது கொள்கைகளை நம்புகிறார்கள், அல்லது நம்பும்படி ஏற்படுகிறது. சோம்பேறி களும் பித்தலாட்டக்காரரும் கூட தமக்கு ஆதரவாக சில அபிப்பிராயங்களையோ கொள்கைகளையோ காட்டக்கூடும். நமது உபதேசிகளிலும் பிரசாரகர்களிலும் பெரும்பாலார் வாலிழந்த நரிக்கு ஒப்பானவர்களே.

வீண் அபிமானம் காரணமாகவும் பலர், ஆதாரமற்றவைகளை உண்மையெனநம்புவதுண்டு. ஆளையோ, சம்பவத்தையோ, ஸ்தாபனத்தையோ



RangaRakes tamilnavarasam.com

பற்றிய அபிமானத்தினாலும் துவேஷத்தினாலும் ஆதாரமற்றவைகளைப் பலர் மெய்யென நம்புவதுண்டு. சிறுவயதில் பெற்றோருக்கு அடங்கி நடக்காத பிள்ளைகள் பெற்றோர் அபிப்பிராயங்களுக்கு அல்லது நம்பிக்கைகளுக்கு முரணாகவே நடந்து வருகிறார்கள். அதுபோலவே பெற்றோரை நேசிக்கும் பிள்ளைகள் அவர்களது தப்பபிப்பிராயங்களையும் ஆதரிக்கின்றன, நம்புகின்றன.

வயதுவந்த பிறகு கொடிய பிணக்கினால் சிலருடைய அபிப்பிராயங்கள் மாறுபடுவதுண்டு. ஒருவன்பேரிலுள்ள பகை அவனது அபிப்பிராயங்களையும் பாதிக்கிறது. நம் எதிரிகளின் அபிப்பிராயங்களைத் தகர்த்தெறிவதில் நாம் பெரிய மகிழ்ச்சி கொள்வதில்லையா? அதுபோலவே ஒருவன் மீதுள்ள நட்பினாலும் அவனது அபிப்பிராயங்களை ஆதரிப்பதில் நாம் பெரிய மகிழ்ச்சியடைகிறோம்.

சிலர் காலப்போக்கையொட்டி சில அபிப்பிராயங்களையும் நம்பிக்கை களையும் ஆதரிப்பதுண்டு. ஆனால் காலப்போக்கு மாறுந்தோறும் நாம் அபிப்பிராயங்களை பொதுவாக மாற்றிக்கொள்வதில்லை. வெகு சீக்கிரத்தில் நமது மனோ நிலை உறுதியடைந்து விடுகிறது.

ஒரு அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டு விட்டால் அது அப்படியே நிலைத்து வருவதே சகஜமாக இருக்கிறது. ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட முறையில் சிந்தனை செய்வதினால் அம்மாதிரி செய்வதே சுளுவாகத் தோற்றுகிறது.

சிலர் கதை சொல்வதில் நிபுணர்களாயிருக்கிறார்கள். சிலர் ஒரு குறிப்பிட்ட அபிப்பிராயங்களை அல்லது வாதங்களை விளக்குவதில் சமர்த்தர் களாயிருக்கிறார்கள். ''கிராமபோன்'' மாதிரி வேலைசெய்யும் பல புருஷர்களும் பெண்களும் இருக்கிறார்கள். அவர்கள் பழங்கதைகளைத் திருப்பித் திருப்பிப் பேசிக்கொண்டே இருப்பார்கள். ஏதாவது ஒரு விஷயத்தைக் கிளப்பி விட்டால் போதுமானது. அவர்கள் அதைப்பற்றி மூச்சு விடாமல் பேசிக்கொண்டே இருப்பார்கள்.

பொதுவாக எல்லா நம்பிக்கைளும் அபிப்பிராயங்களும் அப்பேர்ப்பட்டவைகளே. சில காலங்களுக்குப் பிறகு அவை நமது உள்ளத்து உறைத்துவிடுகின்றன. இளமையாயிருக்கும் போது பழைய கருத்துகளை மாற்றிப் புதுப்புதுக் கருத்துகளை சம்பாதித்துக்கொள் கிறோம். வயது முதிர முதிர புதுக்கருத்துகளை நாம் அவ்வளவாக நாடுவதில்லை. நாம் பழமைக் களஞ்சியமாகி விடுகிறோம்.

பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - செப்டம்பர் 1936



# நாம் எதை நம்பலாம்? எக் காரணத்தால்?

தெளிவாகச் சிந்தனை செய்து பழகவேண்டியவர்கள் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. அதாவது

''நீ அதை உண்மையென நம்பக் காரணமென்ன?

அல்லது

நான் அதை உண்மையென நம்புவதற்கு ஆதாரமென்ன?'' என்பதே.

பெரும்பாலார் கொண்டிருக்கும் பெரும்பான்மையான அபிப்பிராயங் களுக்கு எத்தகைய ஆதாரமும் இல்லை என்பதை நாம் முக்கியமாக உணரவேண்டும். அவர்கள் அவைகளை ஏன் நம்புகிறார்கள் என்பதற்குக் காரணமே இல்லை; அவர்களுடைய அபிப்பிராயங்கள் சரியென நிரூபிக்க அவர்களுக்கு ஆதாரமும் காட்ட முடியாது. ''நீங்கள் அவ்வாறு ஏன் எண்ணுகிறீர்கள், அல்லது அவைகளை நம்புவதற்குக் காரணம் என்ன?'' எனக்கேட்டால் அவர்களுக்கு விடையளிக்க முடியாது. அவ்வாறு கேட்டால் அவர்கள் திகைப்படைவார்கள். அம்மட்டோ? அம்மாதிரிக் கேள்விகள் கேட்பதைப் பெரிய தொந்தரவாகவும் எண்ணுவார்கள். அல்லது மிகப் பிரயாசைப்பட்டு ஏதாவது ஒரு மாதிரிக் காரணங்களைக் கூறுவார்கள். ஆனால் அவை பகுத்தறிவுக்கு முரணானவை என்பதை நீங்கள் வெகு சுளுவில் அறிந்துகொள்வீர்கள்.

ஆதாரமில்லாமலும் ஆராய்ந்து பாராமலும் மக்கள் பல விஷயங் களைச் சுளுவாக நம்பி விடுவதைப்பற்றி ஏற்கனவே விளக்கியிருக்கிறோம். ஆராய்ச்சி யுணர்ச்சியில்லாதவர்களும் சோம்பேறிகளும் சுயமாக ஒரு பொழுதும் சிந்தனை செய்யாதவர்களும் - ஏற்கனவே தாம் கொண்டுள்ள அபிப்பிராயங்களுக்கு முரணாக இல்லாதிருப்பின் - பிறர் கூறுவனவற்றை யெல்லாம் அப்படியே நம்பி விடுவார்கள்.

ஆனால் நுட்ப புத்தியும் ஆராய்ச்சியுணர்ச்சியும் சுயமாகச் சிந்தனை செய்யும் பழக்கமும் உடையவர்கள் தமது நம்பிக்கைகளுக்கும் அபிப்பிராயங்களுக்கும் பகுத்தறிவுக்கும் பொருத்தமான ஆதாரமுண்டா எனப் பாராதிருக்கமாட்டார்கள். பகுத்தறிவுக்குப் பொருந்தாத அபிப்பிராயங் களை யெல்லாம் - விஷயங்களை எல்லாம் - அவர்கள் நிராகரித்து



RangaRakes tamilnavarasam.com

விடுவார்கள். பகுத்தறிவுக்குப் பொருத்தமானவைகளையெல்லாம் அவர்கள் நம்புவார்கள். அவ்வாறு நம்புவதினால் தமது பழைய அபிப்பிராயங்களையும் நம்பிக்கைகளையும் நிராகரிக்க வேண்டியதாக ஏற்பட்டாலும் அவர்கள் தயங்க மாட்டார்கள்.

''நீ எப்படியறிந்தாய்? அதை உனக்கு நிரூபிக்க முடியுமா? ஆதாரங்கள் எவை? நம்புவதற்குள்ள காரணங்களை நன்கு பரிசீலனை செய்து பார்த்தாயா?''

என்பன போன்ற கேள்விகளை இடையறாது கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். மற்றவர்களிடம் இக்கேள்விகளை வெகு சாதுரியமாகக் கேட்கவேண்டும். மற்றும் இக்கேள்விகளைப் பிறரிடம் கேட்பதற்குமுன் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே கேட்டுக்கொள்ளவும் வேண்டும்.

மற்றும் ஒரு விஷயம். ஒரு விஷயம் சரியானதென்று நமக்குத் திருப்தி ஏற்பட்டால் அதை எவ்வாறு விளக்குவது என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

கருத்துகள், அபிப்பிராயங்கள், நம்பிக்கைகள் முதலியவை எவ்வெக்காரணங்களால் நம்பவேண்டும் என்பது பின்னர் விளக்கிக் கூறப்படும். தம் பார்வைக்கு வரும் விஷயங்களை எவ்வாறு பரிசீலனை செய்து உண்மை காணவேண்டும் என்பதை வாசகர்களுக்கு ஒருவாறு விளக்குவதே நமது தற்கால நோக்கம்.

1. பிறர் முடிபினாலும்

2. நமது சொந்த முடிபினாலும்

அபிப்பிராயங்களும் நம்பிக்கைகளும் ஆதாரமுடையவை எனக் கொள்ளலாம். தாமாக ஆராய்ச்சி செய்து முடிபுக்கு வராமல், ஆராய்ச்சி செய்து ஒரு முடிபுக்கு வந்துள்ள பிறர் அபிப்பிராயங்களை நம்புவதற்குள்ள நிபந்தனைகளை கீழே விளக்கிக் கூறுவோம்.

அவைகளை விளக்கிக் கூறிய பிறகு சுயமாகச் சிந்தனை செய்வதையும் ஒரு முடிபுக்கு வருவதையும் பற்றி விளக்குவோம்.

## பிறர் முடிபை ஒப்புக்கொள்ளுதல்

பிறர் முடிபுகளை நாமாக ஆராய்ந்து பாராமல் ஒப்புக்கொள்வது பகுத்தறிவுப்படி நியாயமாகுமா! நாம் அவ்வாறு ஒப்புக்கொள்ளலாமா!

ஆம்! தாராளமாக ஒப்புக்கொள்ளலாம்; பிறர் ஆராய்ச்சியையும் முடிபையும் தமது ஆராய்ச்சியாகவும் முடிபாகவும் ஒப்புக்கொள்ளலாம்.

அறியப்பட்ட விஷயங்கள் எல்லாம் எல்லாருக்கும் தெரிந்தவைதான், அல்லது அறிய முயலுகிறவர்களுக்கெல்லாம் விளங்கக் கூடியவைகள் தான் என்று நம்பிய காலம் ஒன்றிருந்தது. ஆனால் அந்தக்காலம் மலையேறி விட்டது. இன்று அறியப்பட்டுள்ள விஷயங்களில் ஆயிரத்தில் ஒரு பகுதியை



அல்லது லக்ஷத்தில் ஒரு பகுதியைக் கூட ஒருவன் அறிந்துகொள்வது சாத்தியமல்ல. எனவே நாம் சொந்தமாக ஆராய்ந்து ஒரு முடிபுக்கு வரமுடியாத விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஏனெனில் அவ்விஷயங்களைப் பற்றி நாம் எதுவுமே அறியோம்.

ஏதேனும் ஒரு துறையில் இதுகாறும் வெளிவந்துள்ள உண்மைகளை நாமாகவே ஆராய்ந்து பார்த்து ஒப்புக்கொள்ள வேண்டுமானால் நாம் வாழ்நாள் முழுதும் செலவு செய்தாலும் முடியாது. பிரபஞ்ச அமைப்பைப்பற்றி வானசாஸ்திரிகளும் கணித சாஸ்திரிகளும் கூறியுள்ள உண்மைகளை யெல்லாம் நாமும் ஆராய்ந்து பார்த்து முடிபுகட்ட வேண்டுமானால் நம் வாழ்நாள் முழுதும் அம்முயற்சியில் ஈடுபடவேண்டியதாகவே ஏற்படும். மேலும் அத்தகைய ஆராய்ச்சியில் நாம் ஈடுபட்டாலும் பல விஷயங்களில் நாம் பிறர் முடிபுகளைத்தான் ஒப்புக்கொள்ளவேண்டியதாக வரும். பூகர்ப்ப சாஸ்திரிகள் - பிரகிருதி நூல் வல்லார் - உயிர் நூல் வல்லார் - மநோதத்துவ ஆராய்ச்சியாளர் - மனிதவர்க்க ஆராய்ச்சியாளர் - பிறமொழி நூல் மொழிபெயர்ப்பாளர் - பிறநாட்டு அரசியல் விஷய நிபுணர்கள் - இஸ்லாம் மத ஆராய்ச்சியாளர் - ஜப்பானிய சரித்திராசிரியர்கள் - சுகாதார நிபுணர்கள் - க்ஷயரோக நிபுணர்கள் - முதலியோர் கண்ட உண்மைகளை யெல்லாம் நாமும் ஆராய்ந்து முடிபுகாண எண்ணுவது சாத்தியமாகுமா! அவைகளை அப்படியே நம்புவதைத் தவிர வேறு வழியுண்டா! ஆகவே இத்தகைய விஷயங்களில் பிறர் முடிபுகளை ஒப்புக்கொள்வது தவறாகாது.

ஒரு துறையில் தற்காலம் வெளிவந்துள்ள அறிவுகளை - அல்லது உண்மைகளை யெல்லாம் அறியாத ஒருவன் - அவ்வுண்மைகளைக் காணப் பிறர் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்கள் என அறியாத ஒருவன் - இதுகாறும் அறியப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான உண்மைகளில் சிலவற்றைத் தான் அறிந்துள்ளதாக பாவித்துக்கொண்டு, இதுகாறும் அறியப்பட்டுள்ள உண்மைகளையெல்லாம் அவனும் ஆராய்ச்சி செய்யத் தொடங்குவது எவ்வளவு மதியீனம்? ஒரு பிரச்சினையைப் பற்றிய தகவல்கள் எவ்வளவுக்கெவ்வளவு சுருக்கமாக அவர்களுக்குக் கிடைத்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்தப் பிரச்சினை சுளுவான தென்று அவர்கள் நம்பிவிடுகிறார்கள். ஏதேனும் 10 விஷயங்களை நாம் அறிந்திருந்தால் அவைகளுக்குப் பொருத்தமான ஒரு கொள்கையை நிர்ணயம் செய்வது அவ்வளவு கஷ்டமானதல்ல. ஆனால் நமக்குத் தெரியாதவைகளும் - பிறர் அறிந்துள்ளவைகளுமான 5 லக்ஷம் விஷயங்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்படியானால் நாம் கண்ட கொள்கைகள் என்னவாகும். 10 விஷயங்களுக்குப் பொருத்தமான கொள்கை 10 ஆயிரம் விஷயங்களுக்குப் பொருத்தமாக இருக்குமா?

மற்றும் விஷயாராய்ச்சி செய்ய, விஞ்ஞான முறையில் பழக்கம் பெற்ற மனம் முக்கியமான தேவையாகும்; அந்த மனம் காரண காரிய ஆராய்ச்சியில் வெகு காலம் பழகி அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

அம்மாதிரி விஷயங்களில் பிறர் முடிவுகளை நாம் ஒப்புக்கொள்ளக் கூடாதுதான். பிறர் சித்தாந்தங்களை ஒப்புக் கொள்வதும் உசிதமல்ல.

நமக்கு வேண்டுவது பகுத்தறிவுக்குப் பொருத்தமான முடிபே. ஏனெனில் பகுத்தறிவுக்கொத்த முறையில் ஆராய்ச்சி செய்து கண்ட முடிபுகளை நமக்கு நிராகரிக்க முடியாது.

இதனாலேயே, ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் நாமாக ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவசியமில்லையென்றும் பிறர் முடிபுகளை ஒப்புக் கொண்டால் போதுமென்றும் ஏற்படுகிறது.

**நம்பத்தக்க பிறர் முடிபுகளை ஒப்புக்கொள்வது பகுத்தறிவுக்குப் பொருத்தமானதே.**

அவர்களது முடிவுகளுக்கு ஆதாரமாக உள்ளவைகளை நாம் ஆராயத் தேவையில்லை. எனினும் ஒரு ஆராய்ச்சி வேண்டியதுதான். எனவே அவர்களுடைய முடிபை நாம் ஆராயத் தேவையில்லை. முடிபு செய்தவர் களைப் பற்றி நாம் ஆராயவேண்டும். நமது ஆராய்ச்சியில் அவர்கள் சரியானவர்கள் எனத் திருப்தி ஏற்பட்டால் அவர்கள் முடிபுகளை தாராளமாக ஒப்புக் கொள்ளலாம். பிறர் முடிபுகள் நமக்குத் திருப்தியளிக்கா விட்டால் ஒன்றில் நாமாக ஆராய்ந்து பார்க்கவேண்டும்; அல்லது எத்தகைய முடிபையும் ஒப்புக் கொள்ளாமல் திறந்த மனத்துடன் இருக்க வேண்டும்.

பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - செப்டம்பர் 1936



# காங்கிரஸ் ஏற்பட்டது பிரிட்டிசாரை வாழ்த்தவே

## காங்கிரஸ் வருணாச்சிரமம் கோருகிறது

## ஜஸ்டிஸ் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கோருகிறது

தோழர்களே!

இன்று நமது மாகாணத்தில் காங்கிரஸ்காரர்கள் என்றும், ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் என்றும் இரண்டு கூட்டத்தார்கள் பிரமாதமாகவும் மிகவும் வேகமாகவும் பிரசார வேலைகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குள் பெரும்பாலும் எதைப்பற்றி சண்டை என்று நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

சீக்கிரம் நம் தேசத்தில் புதிய சீர்திருத்தங்கள் ஏற்படப் போகிறபடியால் அதற்காக சமீபத்தில் நடக்க விருக்கிற எலெக்ஷன்களில்தான் தான் வெற்றி பெறுவதற்காக ஒரு கட்சியானது மற்ற கட்சியின் மேல் குறைகூறுவது உண்மையென்று உங்களுக்கு அதிகம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. நம் தேசத்தில் ஒரு கட்சி மேல் மற்றொரு கட்சி துவேஷப் பிரசாரம் செய்து கொண்டிருக்கின்றது. துவேஷப் பிரசாரம் செய்வது என்ற கருத்து எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது. நான் துவேஷப் பிரசாரம் செய்ய வேண்டுமென்று உங்கள் முன் வரவில்லை.

நானும் காங்கிரஸில் இருந்தவன் தான். காங்கிரஸ் பார்ப்பனர்களுடன் நான் ஒத்துழைத்திருக்கிறேன். ஆகையால் இப்பொழுதும் கூட காங்கிரஸ்காரரைத் தாக்கிப் பேசுவதென்றால், என் மனதிற்கு மிகவும் சங்கடமாகத்தான் இருக்கிறது. அவர்கள் மீது குறைகூறவோ, பழிசுமத்தவோ நான் இங்கு வரவில்லை. ஆனால் அவர்கள் செய்யும் பொய்ப் பிரசாரத்திற்கும், சொல்லுகிற பழிகளுக்கும் பதில் சொல்லவேண்டும் என்கிற தன்மையிலேயே நான் இங்கு வந்திருக்கிறேன்.

இந்தத் திண்டுக்கல்லில் இந்தப் பார்ப்பனர்கள் எத்தனையோ கூட்டங்கள் கூட்டி எங்களை ஓயாமல் வைதுகொண்டு வருகிறார்கள். அவர்கள் எவ்வளவுதான் வைதாலும் நாங்கள் அவர்களை பதிலுக்கு



RangaRakes tamilnavarasam.com

வைவது என்பது இல்லாமல் அவர்களுக்கு பதில் சொல்லுவது என்கிற ஒரு வேலையோடு நின்று விடுகிறோம். அவர்கள் 10, 20 பேப்பர்களை வைத்துக் கொண்டு எங்களை தமக்குத் தோன்றுகிறபடியெல்லாம் திட்டுகிறார்கள்; பழி சுமத்துகிறார்கள். நாம் இதற்கெல்லாம் சரியான முறையில் பதில் சொல்லாமல் இருந்து விட்டால் பாமர ஜனங்கள் ஏமாந்து போகமாட்டார்களா?

நமக்குள் உண்மையான குற்றம் ஒன்றுமே இல்லை. நாம் கேட்கிற கேள்விகள் ஒன்றுக்குமே அவர்கள் ஒழுங்காய்ப் பதில் சொல்லமுடியாது. நாக்கில் நரம்பு இல்லாமல் கள்ளுக்கடையில் இருந்துகொண்டு வைவது போல் வைவது தான் அவர்கள் பிரசாரமா யிருந்து வருகிறது. காங்கிரஸ் தலைவர்கள் எல்லாரும் இதை ஆதரிப்பதுடன் தலையை ஆட்டி அங்கீகாரம் செய்கிறார்கள். இது மானங்கெட்ட முறை என்றும் பதிலுக்கு பதில் வருமென்றும் அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. நம் தலைவர்கள் ஊர்வலத்தில் இன்று அவர்கள் கழுதைகளின் கழுத்தில் அட்டைகளைக் கட்டி அந்த அட்டைகளில் பொப்பிலி என்று எழுதி விரட்டி விட்டார்கள். நாமக்கல்லிலும் அவர்கள் அப்படியே செய்தார்கள். நாம் அவைகளைப் பிடித்துக்கொண்டு வந்து கட்டினோம். அவைகளைக் கட்டிவைத்து ''கேளு கழுதையே கேள்; கேளு கழுதையே கேள்'' என்று பதில் சொல்ல வேண்டுமென்று எண்ணியிருந்தேன். அதற்குள் போலீஸ்காரர்களின் உதவியினாலும், மற்றவர்களது உதவியினாலும் காங்கிரஸ்காரர்கள் தங்கள் கழுதைகளை அவிழ்த்துக் கொண்டு போய் விட்டார்கள்.

அவர்கள் நம் தலைவர்களை தேசத்துரோகிகள் என்றும், உத்தியோக வேட்டைக்காரர்கள் என்றும் சொல்லித் திட்டுகிறார்கள். நாம் இப்படிப்பட்ட துவேஷப் பிரசாரத்திற்கு எவ்வளவு காலம் இடம் கொடுப்பது? எவ்வளவு காலம் பொறுத்துக் கொண்டிருப்பது?

அவர்கள் கழுதைகளின் கழுத்தில் பொப்பிலி என்று எழுதிக்கட்டினால் நமக்குக் கழுதைகள் அகப்படாதா? சத்தியமூர்த்தி என்று எழுதிக்கட்ட 10 கழுதைகள் அகப்படாதா? ஜவகர்லால் என்று எழுத 15 கழுதைகள் அகப்படாதா? காந்தி என்று எழுதிக்கட்ட 20 கழுதைகள் அகப்படாதா? அவர்களுடைய காலித்தனத்திற்கெல்லாம் வட்டிக்கு வட்டி போட்டு அடிக்கு அடியும் உதைக்கு உதையும் வசவுக்கு வசவும் கொடுக்க நமக்கு முடியாதா? நாம் இப்படிச் செய்தால் அவர்கள் நம்மை என்ன செய்துவிட முடியும்?

ஆனால் நாம் அப்படி செய்ய ஆரம்பித்துவிட்டால் ஐயோ ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் எங்களை வைகிறார்கள் என்று பெரிய கூச்சல் போடுவார்கள். வெள்ளைக்காரர்கள் வீட்டின் பின்புற வாசலில் நுழைந்து நம் மீது சாடி சொல்லுகிறார்கள்.

காங்கிரஸ்காரர்கள் தங்களுக்கும் பெரிய பதவிகள் வேண்டு மென்றும், பெரிய அதிகாரம் வேண்டுமென்றும் ஆசைப்படுகிறார்கள்.



அவர்களுக்கு அவைகள் வேண்டுமென்றால் நாம் அதை மறுக்கவில்லை. அவர்களுக்கும் உரிமை உண்டு. ஆனால் அவர்கள் அப்படி அதை பாமர மக்களிடம் எடுத்துச் சொல்லட்டுமே. இதை விட்டு விட்டு ''ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் உத்தியோக வேட்டைக்காரர்கள்; தேசத்துரோகிகள்; நாங்கள் எல்லாம், தேசபக்தர்கள் தேசாபிமானிகள்'' என்றால் இதையெல்லாம் எப்படிப் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்? இன்றைக்கு ஜஸ்டிஸ் கட்சியானது காங்கிரசை விட எதில் மோசமாய் போய்விட்டது? அவர்கள் தலைவர்கள் யோக்கியதையை விட நம் தலைவர்கள் யோக்கியதை எதில் குறைவு? அவர்கள் கொள்கையை விட நம் கொள்கை எதில் குறைந்து இருக்கிறது? இந்த இரு கட்சிகளுக்குள்ளும் எதில் வேற்றுமை இருக்கிறது என்று நீங்கள் ஆராய வேண்டும்.

நாம் சட்டசபைக்குப் போக வேண்டும், மந்திரி பதவி ஏற்றுக்கொள்ள வேண்டும், மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்கிறோம். அப்படியே காங்கிரஸ்காரர்களும் சட்டசபைக்குப் போகவேண்டும், மந்திரி பதவிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும், மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்கிறார்கள். ஆனால் எதில் இவர்களுக்குள் வித்தியாசம்?

ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் எல்லா சமூகத்தார்க்கும் அவரவர்கள் ஜனத் தொகைக்குத் தக்கபடி அதிகாரம் பதவி இவைகளில் விகிதாச்சாரம் கொடுக்கப்பட வேண்டும் என்கிறார்கள். இதைத்தான் காங்கிரஸ்காரர்கள் தேசத்துரோகம் என்கிறார்களே தவிர மற்றபடி வெள்ளைக்காரர்களிடம் நடந்து கொள்வதில் அவர்கள் இரகசியத்தில் கும்பிடு போடுகிறார்கள். நாம் வெளிப்படையாய் அவசியத்துக்கு ஏற்ற அளவு ஒத்து உழைக்கிறோம்.

மற்றும் காங்கிரஸ்காரர் தங்கள் கொள்கையில் அடிக்கடி மாறி மாறியும் பொய் சொல்லியும் ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். ஆனால் ஜஸ்டிஸ்காரர் ஆதியில் என்ன என்ன தங்கள் கொள்கைகள் என்று வெளியிட்டார்களோ அதையே சொல்லிக் கொண்டும், அதையேதான் செய்துகொண்டும் இருக்கிறார்கள். காங்கிரஸ்காரரின் அடிக்கடி மாற்றப்படும் கொள்கைகளிலும் தோழர்கள் சுப்பராயன் அவர்களுக்கு ஒரு கொள்கை; ராஜகோபாலாச்சாரியாருக்கு மற்றொரு கொள்கை; சத்தியமூர்த்திக்கு ஒரு கொள்கை; ஜவகர்லாலுக்கு ஒரு கொள்கை; காந்திக்கு மற்றொரு கொள்கை, ஜவகர்லால் காந்தியை ஒப்புக் கொள்வதில்லை, காந்திக்கும் ஜவஹர்லாலுக்கும் சத்தியமூர்த்திக்கும் கொள்கையில் வேற்றுமை. இவர்களெல்லாம் எதில் ஒற்றுமை என்றால் மற்ற எல்லாச் சமூகத்தாரையும் ஏமாற்றுவதில் மட்டும் தான்.

மற்ற கட்சியாரெல்லாம் தேசத்துரோகிகள் என்றும் அவர்களுக்கு வோட்டுகளைப் போடாமல் காங்கிரஸ்காரருக்கே வோட்டுப் போடுங்கள் என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். மற்றும் நாம் வகுப்பு வாதிகளாம்; ராஜபக்தர்களாம். இவர்கள் வகுப்பு வாதிகள் அல்லவா? ராஜ பக்தர்கள் அல்லவா?



RangaRakes tamilnavarasam.com

1885-ல் காங்கிரஸ் ஸ்தாபனமானது ஏற்பட்டது. அப்பொழுது முதல், அது ராஜபக்தி காட்டி வந்ததோடு தேசத்தின் நிர்வாகத்தில் இந்தியர்களுக்கு உத்தியோகம் வேண்டுமென்றும், அதிகாரத்தில் பங்கு பதவி வேண்டு மென்றும் வெள்ளைக்காரர்கள் பார்க்கும் உத்தியோகமும் வாங்குகிற சம்பளமுமே இந்தியர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்றும் வெள்ளைக்காரரைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு வந்ததும் அவர்கள் அப்படியே அடைந்து அனுபவித்துக்கொண்டு வந்ததும் வெள்ளைக்காரர்களே இந்த நாட்டில் இருந்து என்றென்றும் அரசு புரியவேண்டும் என்று சொன்னதும் நமக்குத் தெரியாதா? இந்தப்படி பெற்று இவர்கள் அனுபவித்தால் அது தேசபக்தி! தேசாபிமானம்! நாம் அனுபவித்தால் தேசத்துரோகமா? எ.ஒ. ஹியூம் என்ற வெள்ளைக்காரர் இந்தக் காங்கிரஸை ஏற்படுத்தி இந்த மாதிரியாக வெள்ளைக்காரரைக் கேட்டுக்கொள்ளும்படி தீர்மானம் செய்ய யோசனை கொடுத்ததையேற்றுக் கொண்டார்கள். காங்கிரசானது எந்தெந்தக் காலத்தும் பிரிட்டனும் இந்தியாவும் ஒன்றாய்ப் பிணைத்துக் கட்டினதுபோல் இருந்துகொள்ள வேண்டி விரும்புவதாகவும் முதல் கொள்கை ஏற்படுத்தினார்கள். அந்தப்படியே ஒவ்வொரு காங்கிரசிலும் ராஜவிஸ்வாசப் பிரமாணமும் காங்கிரஸ்காரர்கள் செய்து கொடுத்துக்கொண்டு வந்தார்கள். இதை ஈயர் புக் என்ற புஸ்தகத்திலும் காங்கிரஸ் சரித்திரம் என்ற புஸ்தகத்திலும் நீங்கள் படித்துத் தெரிந்து கொள்ளலாம், 1914-ம் ஷு சென்னையில் கூடிய காங்கிரசிற்கு நானும் 10 ரூபாய் கொடுத்து டெலிகேட்டாகப் போயிருந்தேன். அதுசமயம் சென்னை கவர்னராக இருந்த பெண்ட் பிரபு அவர்களும் காங்கிரசுக்கு அழைக்கப்பட்டிருந்ததால் அவரும் இடையில் வந்தார். அப்பொழுது சுரேந்திரநாத பானர்ஜியானவர் நடவடிக்கைகளை யெல்லாம் அப்படியே நிறுத்திவிட்டு ஏற்கெனவே பாஸ் செய்திருந்த ராஜவிஸ்வாசப் பிரமாணம் நிற்க, அதிகப்படியாக இருக்கவென்று, திரும்பவும் ராஜ விஸ்வாசத்தை தெரியப்படுத்துகிறதாக தீர்மானம் கொண்டுவந்து பிரமாதமான ஒரு பிரசங்கம் செய்தார். இப்பவும் கூட காங்கிரஸ்காரர்கள் சட்டசபைகளிலும் லோக்கல் போர்டுகளிலும் மெம்பர்களாக நுழைந்து அங்கம் வகிக்கிற பொழுது, தாம் இந்த அரசாங்கத்தின் சட்டங்களுக்கும் சட்டசபையின் சட்ட முறைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதாகவும், இந்த ராஜாவுக்கும் இந்த ராஜாவின் பின் வரும் சந்ததிகளுக்கும் - அதாவது பார்க்காமல் கொள்ளாமல் இனிமேல் பிறக்கப்போவதாக இருக்கிறவர்களுக்கும் ராஜவிஸ்வாசமாக இருப்பதாகப் பிர்ம முடிச்சைப் பிடித்துக் கொண்டு பிரமாணம் செய்து கொடுத்து விட்டுத்தானே உட்காருகிறார்கள். இந்தப்படி இவர்கள் பிரமாணம் செய்து சதா திட்டம் செய்து கொடுத்து பெரிய சம்பளங்கள், பதவிகள், அதிகாரங்கள் இவற்றை அனுபவித்தால் அது தேச பக்தி! தேசாபிமானம்! மற்றவர்கள் செய்தால் அது தேசத்துரோகமா? நமக்குப் பொய்ச் சத்தியம் பண்ணத் தெரியாது, அவர்கள் அப்படி சத்தியம் செய்தால் சுவர்க்கமும் மற்றவர்கள் செய்தால் அவர்களுக்கு நரகமும் வந்துவிடுமா?



ஜஸ்டிஸ் கட்சியின் மேல் வீண் துவேஷப் பிரசாரம் செய்கிறார்கள்; தூற்றுகிறார்கள். மந்திரிகள் 4000 ரூ. சம்பளம் வாங்கி எடுத்துக் கொள்ளுவதாகச் சொல்லுகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்ட பிறகு தான் இந்த சம்பளம் ஏற்பட்டதா அல்லது அதற்கு முன்னாலேயே இருந்ததா என்று யோசித்துப் பாருங்கள். காங்கிரஸ்காரர்கள் 1885-ம் வருஷம் முதல் 1910 அல்லது 1918 வரையில் கூட இந்தப்படி கேட்கவில்லையா? இந்த மாதிரி கேட்டுத்தானே கிருஷ்ணசாமி ஐயர், சி.பி. ராமசாமி ஐயர், சிவசாமி ஐயர், பி. ராஜகோபாலாச்சாரியார், ஸ்ரீனிவாச ஐயங்கார், வெங்கட்டராம சாஸ்திரியார் இவர்களெல்லாம் அனுபவித்தார்கள். இவர்கள் வேலை பார்த்தால் நாட்டை ''வெள்ளைக்காரருக்கு காட்டிக்கொடுக்கவில்லை. தேசாபிமானிகள்''. ஆனால், நாம் பார்க்கிறபோதுதான் தேசத்தைக் காட்டிக்கொடுத்துவிட்டோமாம்; தேசத் துரோகிகள் ஆய்விட்டோமாம். வெள்ளைக்காரருக்கு அடிமைகளாக ஆய்விட்டோமாம். இதென்ன அக்கிரமம் என்கிறேன். இவ்வளவுதானா?

இவர்கள் இப்படிப்பட்ட பெரிய பதவிகளை அடைந்து பெரிய சம்பளங்களை அனுபவித்ததால் அதற்காக இவர்களை தேசாபிமானிகள் என்று சொல்லி இவர்களுக்கு சிலைகள் கூட பீச்சில் வைக்கப்பட்டிருக்கின்றன. பட்டணம் பீச்சில் கிருஷ்ணசாமி ஐயர் சிலையைப் பாருங்களே! இந்தப் பார்ப்பனர்கள் தாங்கள் பெற்ற மகா பெரிய சம்பளங்களைக் கொண்டு தாங்களே வீடு வாசல் கட்டி சுகமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். மைலாப்பூர் அரண்மனைகள் தேசபக்தியால் ஏற்பட்டனவா? ஆனால் நம்முடைய மந்திரிகளின் செலவுகளைப் பாருங்கள்! உள்ள திட்டத்திற்கு 1000 ரூபாயை ஒவ்வொருவரும் குறைத்துக் கொண்டார்கள். ஒவ்வொருவரும் கட்சியின் பத்திரிகைக்கு தலைக்கு 1000 ரூபாய், 1200 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. பிரசார வேலைக்கு தலைக்கு 500 ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது. வருமான வரி மாதம் 400, 500 செலுத்த வேண்டியிருக்கிறது. மிச்சம் இருப்பதை எலெக்ஷனில் செலவு செய்துவிட்டு வேலை போன பின்பு வீட்டில் குந்திக்கொண்டு வக்கீல் வேலை செய்துதான் சாப்பிட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இல்லாவிட்டால் அவர்கள் சொந்த சொத்தில் சாப்பிடுவார்கள். காங்கிரஸ்காரர்கள் உத்தியோகங்கள் செய்து ஏகமாய் அனுபவித்து வருகிற பணத்தில் தேச பக்தி என்று முத்திரை போடப்பட்டு இருக்கிறதா? பொப்பிலி ராஜா அவர் வாங்குகிற 3300 ரூபாய் சம்பளத்தையும் ஜஸ்டிஸ் பேப்பருக்குக் கொடுத்துவிட்டு போதாமல் கையிலிருந்து இன்னம் 4000 ரூபாய் கட்சிக்காக செலவு செய்யவேண்டியதாக இருக்கிறது.

மந்திரியாக இருந்த சிவஞானம்பிள்ளை தான் ஏற்கெனவே வேலை பார்த்து வாங்கிக்கொண்டிருந்த பென்ஷனைக் கொண்டுதான், சாகும் அளவும் காலம் கழித்தார். முத்தைய முதலியார் எல்லாவற்றையும் எலெக்ஷனில் தொலைத்துவிட்டு வக்கீல் வேலை செய்து பிழைக்கிறார். முனிசாமி நாயுடு செத்துப்போனதும், பண முடிப்பு வசூல் பண்ணிக்கொடுத்து



RangaRakes tamilnavarasam.com

அவரது குடும்பத்தை பிழைப்பிக்க வேண்டி யிருந்தது. மந்திரியாக இருந்த கனம் சேதுரத்னம் ஐயர் வேலையைவிட்டதும் செலவுக்குப்பணம் போதாமல் கிரிமினல் கேஸில் மாட்டிக்கொண்டு எல்லாவற்றையும் தொலைத்துவிட்டார். காங்கிரஸ் பார்ப்பனர்களோ லட்சக்கணக்கில் அனுபவித்து பணம் சேர்த்து பத்திரமாய் வைத்துக்கொண்டு சுகமாக காலம் கழிக்கிறார்கள். இவர்களுடன் நாமும் சேர்ந்துகொண்டு, ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் உத்தியோக வேட்டைக் காரர்கள், தேசத்துரோகிகள் என்று கூச்சல் போட்டால் நம்மிலும் முட்டாள்கள் யார் இருக்க முடியும்?

காங்கிரஸ் ஏற்பட்டதே பிரிட்டிஷ்காரரை வாழ்த்துவதற்குத்தான். அதனுடைய முதல் திட்டமே ''நாங்கள் வெள்ளைக்கார ராஜாவிடத்திலும் அவருடைய குடும்பத்தாரிடத்திலும் பக்தியாகவும் விஸ்வாசமாகவும் நடந்து கொள்வோம்'' என்பதே. ஆனால் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் அவ்விதம் செய்தால் அதற்காக வெள்ளைக்காரர்களை வெறுக்கிறதுபோல் காங்கிரஸ்காரர்கள் பாசாங்கு செய்கிறார்கள். தாம் பெரிய ராஜத்துரோகிகள் போல் காட்டிக்கொண்டு பேசுகிறார்கள். பிறகு வெள்ளைக்காரர்கள் வீட்டுக்கும் கவர்னர் வீட்டுக்கும் போய், ''நாங்கள், அனுமார் ராமனிடம் எப்படி பக்தியாயும் அடிமையாயும் இருந்தாரோ அதைவிட 100 பங்கு அதிக பக்தியாயும் அடிமையாயும் நடந்துகொள்வோம்'' என்று சொல்லிக் கெஞ்சுகிறார்கள். நாம் இதற்கெல்லாம் எப்படி ஏமாந்து கொண்டிருக்க முடியும்?

இவர்களுடைய லெக்சர்களும் தீர்மானங்களும் கவர்ண்மெண்டை அசைக்க முடியாது. மோதிலால் நேருவானவர் சட்டசபையில் பிரமாதமாகப் பேசினார்; மேஜையைத் தட்டினார்; புஸ்தகத்தைத் தூக்கி எறிந்தார்; கடைசியாக அவர், ''நாம் இந்த கவர்ண்மெண்டை அசைக்க முடியாது. நமக்கு சட்ட சபைக்குள் வேலையே இல்லை. நம் வேலையெல்லாம் பொது ஜனங்கள் முன்புதான்'' என்று அரை மணிநேரம் பேசிவிட்டு வெளியேறினார். சீர்திருத்தச் சட்டங்களில் அப்படி பாதுகாப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. காங்கிரஸ்காரரான அவினாசிலிங்கம் செட்டியாரே காங்கிரசுக்குப் பயந்துதான் அப்படிப்பட்ட பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன'' என்று சொல்லி யிருக்கிறார். இவ்வளவு பாதுகாப்புகளை வைத்துக்கொண்டு நாம் கவர்ன்மெண்டை என்ன செய்துவிடமுடியும்? காங்கிரசின் எந்த ஒரு தீர்மானம் எங்கே அமுலுக்கு வந்தது? காங்கிரஸ்காரர்கள் வீணில் கத்திக் கொண்டிருப்பதைத் தவிர ஜனங்களுக்கு என்ன சாதித்ததாகச் சொல்ல முடியும்?
(தொடர்ச்சி 11.10.1936 குடி அரசு)

*குறிப்பு: 27.09.1936 ஆம் நாள் திண்டுக்கல்லில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 04.10.1936**



# ''தமிழ் நாடு''

''தமிழ்நாடு'' பத்திரிகையை தோழர் வரதராஜுலு நாயுடு அவர்கள் நிறுத்திவிடப்போவதாய் 26-9-36ந் தேதி தமிழ்நாடு பத்திரிகையில் தலையங்கம் எழுதி தன் கையெழுத்தையும் போட்டுவிட்டார். இது உண்மையாக இருக்குமோ அல்லது அவரது அரசியல் தந்திரங்களில் இதுவும் ஒன்றோ என்பது நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை.

எப்படியானாலும்சரி ''தமிழ்நாடு'' பத்திரிகை நிறுத்தப்பட்டு விடுமானால் தமிழ் மக்கள் தோல்விக்கும் பார்ப்பனர்கள் வெற்றிக்கும் இது ஒரு இமயமலை போன்ற பெரியதும் சூரிய வெளிச்சம் போன்ற நிச்சயமானதுமான உதாரணமாகும்.

இந்த நாட்டில் தமிழ் மக்கள் முயற்சிக்கும், அவர்கள் இதுவரை பாடுபட்டுச் செய்து வந்த வேலைக்கும் சிறிதாவது பயன் ஏற்பட்டதா என்று கண்டுபிடிக்க வேண்டுமானால் அது பார்ப்பனப் பத்திரிகைகளின் செல்வாக்கும் செலவாணியும் எவ்வளவு குறைந்து இருக்கிறது என்பதைக் கொண்டுதான் அளவுக் கணக்கு எடுக்க முடியும்.

அந்தப்படி பார்த்தால் பார்ப்பனரல்லாதார்களால் நடத்தப்படும் பத்திரிகைகள் எவ்வளவு முதல் வைத்து நடத்தப்படுபவைகளானாலும் வருஷா வருஷம் மலேயா, கொளும்பு, ரங்கூன் முதலிய இடங்களுக்குச் சென்று எவ்வளவுதான் பணங்கள் அரித்துக் கொண்டு வந்து நடத்துவதானாலும் பார்ப்பனர்களுக்கு எவ்வளவு தான் அடிமைப்பட்டு நடத்தினாலும் குருடர்களை செந்தாமரை கண்ணன் என்றும் மூடர்களை மகாபுத்திமான்களே என்றும், அயோக்கியர்களை உலகம் போற்றும் உத்தம சிகாமணிகளே என்றும், கோழைகளை பரிசுத்த வீரர்களே என்றும், சுய நல உருவங்களை மகாத் தியாகியே என்றும் கூறியும் எழுதியும் போற்றுதல் தொழிலுக்கும் புகழ்தல் தொழிலுக்கும் அடிமையாக பலவித ஒழுக்க ஈனமான ஆதரவுகள் பெற்றும் நடத்துவதாய் இருந்தாலும் நித்திய கண்டம் நிமிஷ கண்டம் என்கின்ற நிலையில்தான் பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகள் நடத்த முடிகிறது. ஒவ்வொரு வினாடியும் அவைகளுக்கு மங்களம் பாடவேண்டிய அவசியத்தில் தான் இருந்து வருகின்றன.

பார்ப்பனப் பத்திரிகைகளோ ஒன்றும் அஸ்திவாரமே இல்லாமலும் எவ்வித ஆதாரமும் இல்லாமலும் யாரோ ஒரு அனாமதேய அன்னக்காவடி



RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனர்களால் ஆரம்பிக்கப்பட்டாலும் கூட அது ஒரு ஆதார பிரதிநிதித்துவ பத்திரிகை போலவும் அடுத்த நிமிஷத்துக்கு வேண்டிய சாதனங்கள் இல்லாவிட்டாலும் எவ்வித கவலையோ அதிருப்தியோ இல்லாத நிலையிலும் நடந்து வருகின்றவைகளாகவும் இருந்து வருகின்றதைக் காணலாம். அதை மீறி ஏதாவது பத்திரிக்கை கொஞ்ச நாளைக்காவது நிறுத்தப்பட வேண்டியதாய் இருந்தாலும் தக்க லாபத்துடன் தான் பணம் மீதி செய்து கொண்டு நிறுத்தி நடத்தக்கூடியதாய் இருக்கக்கூடியதாய் இருக்குமே தவிர கை முதலோ, பெருமையோ, நாணயமோ கொள்கையற்று திண்டாடியோ நட்டமடைந்தோ நிறுத்தப்பட வேண்டியதாக ஏற்படுவதே இல்லை.

உதாரணமாக இந்த 15 ஷ காலத்தில் ''ஜஸ்டிஸ்'' பத்திரிக்கைக்கு சுமார் 3, 4 லக்ஷ ரூபாய் கைப்பொறுப்பு ஏற்பட்டிருக்கலாம் என்றாலும் இன்றும் பொப்பிலி ராஜா பொக்கிஷத்தில் கைவைக்காவிட்டால் பத்திரிகை ஆபீசு மூடப்பட வேண்டிய நிலையில் தான் இருந்து வருகிறது.

1933-ம் வருஷத்தில் ''ஜஸ்டிஸ்'' பத்திரிகை தீவாளி ஆகி நிறுத்தப்பட்டு ஐ.பி.க்கு வந்து கடன் கொடுத்தவர்களுக்கு 60, 70 ஆயிரம் ரூபாய் நட்டமேற்பட்டு மறுபடியும் பொப்பிலி ராஜாவால் பதினாயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டு ஈ.வெ.ராமசாமியால் ஆதியில் தனது அச்சு மிஷின் இலவசமாய் உதவப்பட்டு ''நியுடைம்ஸ்'' என்ற பத்திரிகையாக ''ஜஸ்டிஸ்'' மறுபிறவி எடுத்து இப்போதும் ஏதோ மந்திரிகள் உதவியால் வெள்ளைக்காரர்களுக்கு மாத்திரம் விஷயம் விளங்கினால் போதும் என்கின்ற நிலையில் தான் இருந்து வருகிறது.

பார்ப்பனரல்லாதார் இயக்க மற்றொரு பத்திரிக்கையாகிய ''திராவிடன்'' பத்திரிகையோ அதுவும் லக்ஷக்கணக்கான முதலை சாப்பிட்டுவிட்டு ஈ.வெ. ராமசாமி தலையிலும் பத்து இருபது ஆயிரம் ரூபாய்க்கு கையை வைத்துவிட்டு ரிசீவர் கைக்குப் போகவேண்டியதாகி நாட்டுக் கோட்டை செட்டியாரால் ஏலத்தில் எடுக்கப்பட்டு காங்கிரசிலும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திலும் மந்திரி வேலைக்கு வியாபாரம் பேசிக்கொண்டு பெயர் போர்டு பலகையும் ஒடிந்த மிஷினும் உருக்கவேண்டிய ஈயமுமாய் தியாகராய ஞாபகக் கட்டடத்தில் சிறைப்பட்டுக் கிடக்கின்றது. மற்றும் எதைப்பற்றிச் சொல்லவேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

10, 12 வருஷ காலமாய் நடந்துவந்த ''குடி அரசு''ம் டாக்டர்கள் கை விட்டுவிட்ட காயலாக்காரன் போலவே காலந்தாட்ட வேண்டி இருக்கிறது என்று தைரியமாய் சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறது. தாங்க முடியாத நஷ்டம் வந்து விடவும் இல்லை; நஷ்டம் அனுபவிக்க வேண்டிய நிலையிலும் இல்லை; அதனால் ஒரு நன்மையும் ஏற்பட்டு விடவில்லையே என்று ஏமாற்றமடைய வேண்டிய நிலையிலும் இல்லை. ஆனால் எத்தனை நாளைக்கு இந்த நன்றி கெட்ட, சுரணை அற்ற மக்களுடன் போராடிக்



கொண்டிருப்பதோடு எத்தனை துரோகிகளின் சதிகளை சகித்துக்கொண்டிருப்பது என்கின்ற சலிப்பில் உயிர்வாழவேண்டியதாய் இருக்கும் காரணமே ஆகும். ஆகவே மொத்தத்தில் பத்திரிக்கைகளின் நிலையைக் கொண்டு பார்த்தால் பார்ப்பனரல்லாத மக்களின் முயற்சி வெற்றி பெறவில்லை என்பதோடு ''தமிழ்நாடு'' நிறுத்தப்படுவதாலேயே தோல்விக் குறியும் தோன்றுகின்றது என்று நினைக்கவேண்டி இருக்கிறது என்பதைக் காட்டவே இவ்வளவு எழுதினோம்.

''தமிழ்நாடு'' பத்திரிகை விஷயத்தில் அது எப்படி நடத்தப்பட்டு வந்திருந்தாலும் ஆதியில் நம்மை எவ்வளவு வைதிருந்தாலும் நாம் அதனிடம் எவ்வளவு அதிருப்தி கொண்டிருந்தாலும் இந்த 6, 7 வருஷ காலமாக அதன் வளர்ச்சியிலும் வாழ்விலும் கவலைகொண்டே இருந்தோம். பார்ப்பனர் போலவே தங்களுக்குள் உள்ள வேறுவித அபிப்பிராயங்களை லட்சியம் செய்யாமல் இருப்பதுபோல் இருந்து பத்திரிக்கை வளர்ச்சிக்கு அதிக நன்மை செய்யாவிட்டாலும் அதன் மேன்மையில் ஆசைகொண்டே வந்தோம்.

பல சந்தர்ப்பங்களிலும் நமது காரியாலயத்தில் இருந்து ஒரு காலணா தினசரி வெளியாக்க வேண்டும் என்று ஏற்பட்ட சந்தர்ப்பங்களையும் சௌகரியங்களையும் ஏற்கனவே ஏற்பட்டு இருந்ததையும் எல்லாம் தடுத்தே வந்தோம். என்ன செய்தும் ''தமிழ்நாடு'' நிறுத்தப்பட வேண்டிய நிலைமையை எய்துகின்றது என்றால் அது தோழர் வரதராஜுலு நாயுடு தோல்வி மாத்திரமல்லாமல் பார்ப்பனரல்லாதார் தலை தூக்குவதை தாழ்த்தி விட்டது என்று தான் சொல்ல வேண்டும் என்று மறுபடியும் சொல்லுகிறோம். அதோடு கூட பார்ப்பனருக்கு விரோதமாய் இந்த நாட்டில் பத்திரிக்கை நடத்த முடியாது என்பதையும் கல்லில் எழுதுவதுபோல் ஆகிறது என்றும் சொல்ல வேண்டி இருக்கிறது.

தோழர் கல்யாணசுந்தர முதலியார் பார்ப்பனருக்கு பின் தாளம் போடுகிறார் என்றால் காற்றில்லாமல் வாழ்ந்தாலும் வாழலாம் பார்ப்பனர் தயவில்லாமல் அவர்களது முகவிலாச புன்சிரிப்பு இல்லாமல் வாழ முடியாது என்கின்ற நிலைமை அடைந்ததால் தான் என்று சொல்லவேண்டி இருக்கிறது. ''தேச பக்தன்'' தோழர் கல்யாணசுந்தர முதலியாரால் நடத்தப்படுகிற காலத்தில் அவர் பார்ப்பனரல்லாத பெரியார்களை வைகின்றதற்கே அவரது பேனாவை காலத்திலும் அகாலத்திலும் சந்தர்ப்பத்திலும் அசந்தர்ப்பத்திலும் பயன்படுத்திய காரணத்தால் முதல் முதல் தமிழ் நாட்டுக் காந்தி என்ற பட்டம் பெற்றவர் அவரேயானார். பிறகு சிறிது அதனால் ''சுதேசமித்திர''னுக்கு அசௌகரியம் ஏற்பட்டது என்று தெரிந்த உடனே அவரைக் களரியைப் பிடித்து உந்தி விட்டார்கள்.

இப்படி இன்னம் எவ்வளவோ உதாரணம் எடுத்துக் காட்டலாம்.

''தமிழ்நாடு'' நிற்பதானாலும் சரி, நடப்பதானாலும் சரி, அது கொள்கைகளுக்கு சதா திண்டாடிக் கொண்டே வந்தது என்றாலும் சரி,



RangaRakes tamilnavarasam.com

அதன் உண்மையான உழைப்பு ஒன்றை நாம் மறுப்பதற்கு இல்லை என்பதோடு அதற்கு நன்றி காட்டாமல் இருக்கமுடியாது என்றும் சொல்லுவோம். அதாவது பார்ப்பனரல்லாதார் சமூகக் குறைகளை நன்றாய் அறிந்திருந்தது, கோபம் வரும்போதெல்லாம் தயவு தாக்ஷண்யமில்லாமல் பார்ப்பனர்களை வெளியாக்கிற்று, மக்களுக்கு சிற்சில சமயங்களில் தைரியமூட்டி வந்தது, பார்ப்பனீயம் ஒழியவேண்டும் என்பதில் மாத்திரம் கொள்கை மாறாமல் கடைசி வரை இருந்து வந்தது. பார்ப்பனரல்லாத மக்களுக்கு கூடுமானவரை தாராள நோக்கத்துடன் விளம்பரம் கொடுத்து வந்தது. சுயமரியாதை இயக்கத்தை ஆதியில் எதிர்த்தபோதிலும் 5, 6 வருஷகாலமாக அது செய்ய வேண்டியதற்கு மேலாகவும் எதிர்பார்த்ததற்கு மேலாகவும் உதவிபுரிந்து வந்தது. இவற்றை நாம் மறக்கவே மாட்டோம். ''தமிழ்நாடு'' உண்மையாகவே நிறுத்தப்பட்டு போகுமானால் பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கு சரியான நட்டமே யாகும் என்பது நமது உண்மையான அபிப்பிராயமாகும்.

தோழர் நாயுடுகாரர் டிசம்பர் மாத ஆரம்பத்தில் ''தமிழ்நாடு'' நிறுத்தப்பட்டு விடும் என்று கூறுகிறார். 5, 6 வருஷகாலம் காங்கிரசைக் கண்டித்து வந்து கடைசி காலத்தில் காங்கிரசில் சேர்ந்த மூன்றாம்நாள் ''தமிழ்நாடு'' பத்திரிகையை நிறுத்திவிடப் போகிறேன் என்ற சன்மானத்தைப் பெற வேண்டியவரானார் என்றால் இவர் காங்கிரசில் சேர்ந்ததைப் பொது மக்கள் எவ்வளவு ஆதரிக்கிறார்கள் அல்லது இவரைக் காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு நம்புகிறார்கள் என்பதுதான் அதிலிருந்து கண்டு பிடிக்கத்தக்கதாகும். எல்லாவற்றையும் உத்தேசித்து நாம் ஒரு யோசனை கூறுகிறோம். அதாவது டிசம்பரில் நிறுத்தப்போகும் பத்திரிகையை (உண்மையாய் இருந்தால்) பிப்ரவரி 15-ந்தேதி வரையில் நடத்தி அப்புறம் அவசியமானால் நிறுத்துவதற்கு முடிவு செய்யும் படி வேண்டுகிறோம்.

ஏனெனில் பிப்ரவரி முதல் வாரத்தில் சட்டசபை எலக்ஷன் நடக்கிறது. பிப்ரவரி 15-ந் தேதி வாக்கில் முடிவு தெரிந்துவிடும். அப்போது பார்ப்பனரல்லாதார் கட்சி ஜெயித்தால் கண்டிப்பாக ''தமிழ்நாடு'' நிறுத்த வேண்டிய அவசியம் வராது. தோற்று விட்டாலோ ''தமிழ்நாடு'' பத்திரிகைக்கு வெகு கிராக்கியான தேவை இருக்கும்படியான நிலைமை ஏற்படும். அந்தச் சமயம் தமிழ்நாடானது ஒரு புரட்சி நடக்கும் நாடு போல் உற்சாகமும், உணர்ச்சியும், வேகமும் உள்ள நாடாய் இருக்கும். தோற்றவுடன் இப்போது பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைக்காரர்களாக இருப்பவர்கள் பார்ப்பனரல்லாதார் கட்சியில் பிரமுகர்களாகவும் தலைவர் களாகவும் இருக்கும் நிலை ஒழிந்து அக்கட்சியை நம் போன்றவர்களும் தோழர் வரதராஜுலு போன்றவர்களும் நடத்தும்படியான நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படலாம். வெற்றி ஏற்பட்டால் தான் நம் போன்றவர்களுக்கு மதிப்பும் வேலையும் நன்மையும் எழுச்சியும் இல்லாமல் போனாலும் போகலாமே ஒழிய தோல்வி (ஏற்படாது) ஏற்பட்டு விட்டாலோ ஒரு 5 வருஷ காலத்துக்குள் சென்ற 10 வருஷ கால முன்னேற்றம் ஏற்படும்படி காலச் சக்கரத்தை உருட்டிவிட முடியும் என்கின்ற நம்பிக்கையுடன் இருக்கிறோம்.





ஆதலால் கூட இரண்டே மாதம் பொறுத்துப் பார்த்து பிறகு அவரது முடிவை அமுல் நடத்தும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஜஸ்டிஸ் கட்சியார் தினசரி நடத்தப் போகிறார்களா என்பதை 100-க்கு 50 வீதம் நம்பிக்கையைத்தான் வைக்கக்கூடியதாயிருக்கிறதே தவிர எந்த முடிவுக்கும் 51 வீதம் நம்பிக்கை வைக்க தைரியமில்லை.

தோழர் நாயுடுகாரு அவர்கள் 2 மாத காலம் வைத்தது ஒரு சமயம் ஜஸ்டிஸ் கட்சி 3 பை பத்திரிகையும் வந்துவிட்டால் ''தமிழ்நாடு'' நிலைமை கஷ்டமாகி விடுமோ என்று நினைக்கிறாரோ என்பது சிலரின் ஹேஷ்யமாயிருக்கிறது.

அப்படியே ஏற்பட்டாலும் ஜஸ்டிஸ் கட்சி தோற்றால் மறுபடியும் பணம் போட்டு பத்திரிகை நடத்துபவர்கள் யார் என்பது போட்டிப் பரிசு போன்ற விஷயமே. ஆதலால் எவ்வளவோ கஷ்ட நஷ்டம், தொல்லை ஆகியவைகளுக்கு இடையில் இந்த 10 வருஷ காலம் நடந்துவந்த ''தமிழ்நாடு'' இனியும் ஒரு 4 மாதம் அதுவும் அவராகவே நடத்த ஏற்றுக் கொண்ட இரண்டு மாதம் தவிர மேற்கொண்டு 2 மாதகாலம் நடத்திப் பார்த்து அப்புறம் ஒரு முடிவுக்கு வரவேண்டுகிறோம்.

அதுவரை பார்ப்பனரல்லாதார்களில் யாரை வைதாலும் சரி, அந்தக் கட்சியை எப்படி வைதாலும் சரி. அதற்கெல்லாம் பூரா (லைசென்ஸ்) அனுமதிச் சீட்டுக் கொடுக்கிறோம். அதைப்பற்றி யாரும் வருத்தப்பட மாட்டார்கள் என்றும் உறுதி கூறுகிறோம் - நிறுத்தி விடுவது தமிழ் மக்களுக்கு நஷ்டமேயாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 04.10.1936**

RangaRakes tamilnavarasam.com

# இன்னுமா சந்தேகம்?

தோழர் ஜவஹர்லால் அவர்கள் தேர்தலுக்கும் பணம் வசூலித்து பார்ப்பனர்களுக்குக் கொடுக்கவும் வருகிறார் என்று சென்ற இரண்டு வாரமாக எழுதி வந்தோம். அதைப்பார்த்த ஒரு தோழர் நமக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். சென்னை கார்ப்பரேஷன் தேர்தல் இருக்கும்போதும் சில ஜில்லா போர்டு தேர்தல் இருக்கும் போதும் இந்த மாதிரி ஜவஹர்லால் அவர்களை பகிஷ்காரம் செய்வது வரவேற்புபத்திரம் மறுப்பது போன்ற காரியங்கள் நடக்குமானால் தேர்தல் பாதிக்கப்பட்டு விடாதா என்று கேட்கிறார்.

பிரசாரத்திற்கு தாராளமாய் அனுமதித்து பணம் வசூலுக்கும் இடந்தந்து ஒவ்வொரு முனிசிபாலிடியும் ஜில்லாபோர்டும் வரவேற்பளிக்கும் காரியத்துக்கு உதவி செய்து வந்தால் தேர்தலில் என்ன பலன் கிடைக்குமோ அதைவிட மோசமான பலன் ஒன்றுமே நமக்கு ஏற்பட்டு விடாது என்பதுதான் நமது பதிலாகும்.

நாம் முன் குறிப்பிட்டது போலவே தோழர் ஜவஹர்லால் எங்கேயோ இருந்துகொண்டு இங்கு தேர்தலில் நிற்கும் ஆட்களின் யோக்கியதைகளையும் தராதரங்களையும் உணராமலே காங்கிரசின் பேரால் நிறுத்தப்பட்ட ஆட்களுக்கே ஓட்டுப்போடுங்கள் என்று ''ஸ்ரீ முகம்'' அனுப்பி இருக்கிறார் என்றால் அவர் பார்ப்பனர் கையாளாய் பார்ப்பனப் பிரசாரத்துக்கு வருகிறார் என்பதற்கு என்ன ஆட்சேபணை என்று கேட்கின்றோம்.

காங்கிரசின் பேரால் ஒருவர் நிறுத்தப்பட்டு விட்டால் அவர் பெரிய நாணயஸ்தரும் ஒழுக்கமுடையவரும் மேதாவியும் பொது ஜன சேவைக்கு தகுந்தவர்கள் ஆய்விட்டார்கள் என்று அர்த்தமா? காங்கிரசில் சேராததாலேயே எப்படிப்பட்டவரும் பொதுநல சேவைக்கு அருகதை அற்ற அயோக்கியர்கள் என்று அர்த்தமா என்று கேட்கின்றோம்.

இன்று காங்கிரஸ் பேரால் அபேக்ஷகர்களாக்குபவர்களுக்கு என்ன பரீட்சை காங்கிரசில் இருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

தோழர்கள் உபயதுல்லா, கிருஷ்ணசாமி பாரதி, குப்புசாமி அண்டு கம்பெனியை கைக்குள் போட்டுக்கொண்டால், அவர்களை விலைக்கு வாங்கிக்கொண்டால் எப்படிப்பட்ட சாதாரண மனிதனும் காங்கிரஸ்காரனாகி ஜவஹர்லால் அவர்களால் அனுக்கிரகமும் ஆசியும் ஆதரவும் பெற்று விடக்கூடிய நிலையில் இல்லையா என்று கேட்கின்றோம். இதுவரை தமிழ் நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரியார்களில் 100-க்கு சில இடங்களில் 50 பேர்களுடைய யோக்கியதைகள் எப்படியாக இருந்து வருகின்றன என்று கேட்கின்றோம்.

காங்கிரஸ்காரர்களே அவர்களுக்கு எப்படிப்பட்ட நற்சாக்ஷிப் பத்திரங்கள் அளித்து வந்தார்கள் என்பது நாம் அறியாததா? அதிக தூரம் போக வேண்டியதில்லை. பெரிய தியாகிகள், தேச பக்தர்கள், தேசியவாதிகள் என்று அமிர்தாஞ்சனம் போல் விளம்பரம் பெற்றவர்களும் தனிப்பெருந் தலைவர் பட்டமும் சர்வாதிகாரப் பட்டமும் பெற்றவர்களுமான தோழர்கள் திருச்சி டாக்டர்கள் ராஜன், சாஸ்திரி கம்பினிகளின் கதி என்ன ஆயிற்று என்று கேட்கின்றோம். டாக்டர் ராஜன் காங்கிரஸ் கட்டளையை மீறினார்; துரோகப் பட்டம்பெற்றார்; காங்கிரஸ் பிரிவு கவுன்சிலான வேலை கமிட்டியாராலும் காங்கிரஸ் தலைவராலும் காங்கிரசிலிருந்து நீக்கப்பட்டார். அவருடைய நடத்தைக்கு ஆகவே தோழர் ராஜகோபாலாச்சாரியார் கோவித்துக்கொண்டு காங்கிரஸ் நிர்வாகத்தில் இருந்து விலகி அஞ்ஞாத வாசம் செய்கிறார். அப்படிப்பட்ட டாக்டர் ராஜன் மறுபடியும் திருச்சி முனிசிபல் அதே கவுன்சில் ஸ்தானத்துக்கு நின்றால் அவருக்கு போட்டியாக காங்கிரசுக்காரர்கள் ஆள் நிறுத்தக்கூடாது என்று தீர்மானம் செய்தார்கள் என்றால் காங்கிரசின் பேரால் ஆட்கள் நிறுத்துவதில் காங்கிரசுக்காரர்கள் எப்படிப்பட்ட ஒழுக்கத்தையும் நாணயத்தையும் பின்பற்றுகிறார்கள் என்பதற்கு ஏதாவது வேறு உதாரணம் வேண்டுமா என்று கேட்கின்றோம்.

சென்னையில் இவர்கள் எப்படிப்பட்ட ஆட்களை நிறுத்தி இருக்கிறார்கள் என்று பார்த்தால் காலித்தனத்தில் தீரர்களுக்கு முதல் பிரைசும், பார்ப்பனர்களுக்கு இரண்டாவது பிரைசும், பணம் கொடுத்தவர்களுக்கு மூன்றாவது பிரைசுமாக கிடைத்து வந்திருக்கிறது. இந்த மகாத்மாக்கள்தான் திருநெல்வேலி முதல் திருவேங்கடம் வரை ஒரு குறிப்பிட்ட கொள்கைக்காக நிறுத்தப்பட்டவர்களாம். அவர்களுக்கே ஓட்டு செய்யவேண்டுமாம்! புழுத்ததின் மீது மலங் கழித்த மாதிரி இந்த மகாத்மாக்கள் தேர்தலுக்கு நேரில் வந்து பிரசாரம் செய்யப் போவதோடு இதற்கு பணம் வேறு வசூலித்துக் கொடுக்க வருகிறார்களாம்.

இந்தமாதிரி காரியத்துக்கு வருபவரை வரவேற்று உபசரிப்பது பணம் கொடுப்பது என்றால் இவர்களுக்கு பெயர்தான் சுயமரியாதையுள்ள மக்கள் என்பதா என்று கேட்கின்றோம்.

வசவுக்கு பயந்து சிலர் பணம் கொடுக்கிறார்கள். மற்றும் சில காரியத்துக்கு சிலர் பணம் கொடுக்கிறார்கள்; கொடுக்கட்டும். ஆனால் அந்தப் பணம் எப்படி செலவழிக்கப்படுகிறது? என்ன ஆகிறது? அதனால் தொல்லை படுகிறவர்கள் யார்? என்றுகூட கவனிக்க வேண்டாமா என்று கேட்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 04.10.1936**





RangaRakes tamilnavarasam.com

# காலித்தனத்தின் வளர்ச்சி

காங்கிரஸ் காலித்தனத்துக்கு எல்லை இல்லாமல் போய்விட்டது.

தோலைக் கடித்து துருத்தியைக் கடித்து வேட்டை நாய் ஆகிவிட்டது என்பது போல் கூட்டங்களில் செருப்பும் முட்டையும் போட்டு வெளி முனிசிபாலிட்டிகளில் (திருச்சியில்) செருப்பும் முட்டையும் போட்டு இப்போது சென்னை கார்ப்பரேஷனிலேயே செருப்புகளும், முட்டைகளும் வந்து விழுக ஆரம்பித்து விட்டன.

ஆகவே இனி சென்னையைப் பொறுத்தவரை சட்டசபை மண்டபத்தில் வந்து விழுகவேண்டியதுதான் பாக்கி என்று சொல்ல வேண்டிய நிலைமையை எய்தி விட்டது.

காங்கிரசுக்காரர்கள் மகாத்மா என்பவர் தலைமையில் 3, 4 கோடி ரூபாய் செலவில் 40, 50 ஆயிரம் பேர் ஆண் பெண் அடங்க ‘‘அடி உதைபட்டு சிறை சென்று தியாகம் செய்த’’ தியாக புத்தியில் காங்கிரசால் படிப்பிக்கப்பட்ட படிப்பு கார்ப்பரேஷனில் மீட்டிங்கில் செருப்புகளும் அழுகல் முட்டைகளும் வந்து விழுந்த பெருமைதான்.

காங்கிரசுக்காரர்கள் இந்த இடங்களில் மாத்திரமல்லாமல் மற்றும் அநேக இடங்களிலும் மந்திரிகள் கூட்டங்களில் இப்படியே நடந்து வருகிறார்கள். நாமக்கல்லில் கழுதை கழுத்தில் அட்டை கட்டி ஓட்டினதும் திண்டுக்கல்லில் கழுதை கழுத்தில் அட்டை கட்டி ஓட்டினதும் சில இடங்களில் மந்திரிகளை அவமானப்படுத்தி கூட்டங்களில் செய்ததும் பொள்ளாச்சி திண்டுக்கல் கூட்டங்களில் தோழர்கள் அழகிரிசாமி பொன்னம்பலம் முதலியவர்கள் பேசும்போது முட்டைகள் எறிந்ததுமான காரியங்கள் காங்கரசு யோக்கியமான முறையில் வாழ முடியாது என்றும் வெற்றி பெற முடியாது என்றும் கருதும்படியான நிலையை அடைந்து விட்டதைத்தான் காட்டுகிறது. இவ்வளவுதானா என்றால் இதற்குமேல் போய் விட்டார்கள் என்பதற்கும் உதாரணங்கள் காட்டலாம்.

என்னவென்றால் பொள்ளாச்சிக்கு தோழர் ஈ.வெ. ராமசாமி, பொன்னம்பலம், டி.ஜி. வெங்கிடாசலம் ஆகியவர்கள் போனபோது கூட்டத்துக்கு தலைமை வகிக்க ஒத்துக்கொண்டிருந்த முனிசிபல் வைஸ்சேர்மென் அவர்களுக்கு ஒரு வசவும் பயமுறுத்தலும் கொண்ட கடிதம் எழுதி தபாலில்



அனுப்பினார்கள். அவர் அதை போலீசில் ஒப்படைத்து விட்டார். தோழர் ஈ.வெ. ராமசாமி 2 - ந் தேதி பொள்ளாச்சிக்குச் சென்ற உடன் ஒரு கடிதம் போஸ்டுமேன் கொண்டு வந்து கொடுத்தார்.

அந்தக்கடிதம் மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் படியும் ஆரம்பித்து விட்டார்கள். 1927, 28, 29 ஆகிய வருஷங் களில் இப்படிப்பட்ட கடிதங்கள் தினம்தோறும் வந்து கொண்டிருந்தன.

அதுபோலவே இப்போதும் ஆரம்பமாகி இருக்கிறது. இவற்றைக் கண்டு ஒரு வகையில் நாம் திருப்தி அடைகின்றோம். அதென்னவென்றால் பார்ப்பனர்கள் தங்கள் நிலை மோசமானதென்றும் இம்மாதிரியான அயோக்கியத்தனங்களாலும் இழிதன்மைகளாலும் அல்லாமல் தாங்கள் வாழமுடியாது என்றும் உள்ள நிலைமையை அடைந்து தாங்கள் அடையப் போகும் தோல்வியையும் தெரிந்து விட்டார்கள் என்பதேயாகும்.

குத்துவது, சுடுவது, செருப்பால் அடிப்பது என்பனபோன்ற காரியங் களால் பயமுறுத்தினால் அதற்கு ஆக யார்தான் பயந்து கொள்வார்கள். ஜெயிலுக்குப் போனவனும் போலீசாரால் அடிபட்டவனும் பெரிய தியாகியாகி பாக்கட்டில் இருந்த பணத்தை திருடியவனானாலும் தேசபக்தனாகி ஓட்டுகளை பெறும்போது செருப்பில் அடிபடுகின்றவர்கள் இனி எவ்வளவு பெரிய தியாகிகளாகவும் தேசபக்தர்களாகவுமாகி ஓட்டுப் பெறமாட்டார்கள் என்று கேட்கின்றோம்.

அதிகம் தடவை ஜெயிலுக்குப் போனவன் அதிக தேச பக்தர் ஆவது போல் அதிகம் தடவை செருப்பால் அடிபடுகிறவனும் அரும் பெரும் தேசபக்தராகிற காலம் வந்துவிட்டது போல் இருக்கிறது. தலைவர் ஸ்தானங்களுக்கும் தேசபக்த ஸ்தானங்களுக்கும் செருப்படி படுவதும் ஒரு யோக்கியதாபக்ஷமாகிவிடும் என்றுதான் எதிர்பார்க்க வேண்டிய நிலைமையில் இருக்கிறது நமது காங்கிரசின் திட்டங்கள்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 04.10.1936**



RangaRakes tamilnavarasam.com

# வரி குறைப்புக்கும் ஜஸ்டிஸ் மந்திரிகளுக்கும் சம்பந்தமென்ன?

இந்த மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சி இருந்ததினால் தாங்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை யென்றால் மற்ற மாகாணங்களில் இவர்கள் சாதித்தது என்ன? இவர்கள் என்னதான் தாக்கிப் பேசினாலும், முட்டுக்கட்டை போட்டாலும் மெஜாரிட்டி பாஸ் செய்தாலும் கவர்ன்மெண்டை ஒன்றும் அசைக்க முடியாது.

1923-24-ல் காங்கிரஸ் சட்டசபை பஹிஷ்காரப் போராட்டம் நடத்திய காலத்தில் கழுதைகள்தான் சட்டசபைக்குப் போகும் என்று அட்டையில் எழுதி கழுதை கழுத்தில் கட்டி ஜனக்கூட்டங்களின் முன் விரட்டினார்கள். நாய் கழுத்திலும் அப்படியே எழுதிக் கட்டி வாலில் டின்களையும் கட்டி விரட்டினார்கள். சட்டசபைகளையெல்லாம் கள்ளுக்கடை என்று சொன்னார்கள். தோழர் ராஜகோபாலாச்சாரியாரும் படம் எழுதி சட்டசபைகளைக் கள்ளுக்கடை போலவும், அப்பால் ஒரு கோவிலைக் காங்கிரஸ் போலவும் காட்டினார். இப்பொழுது அந்தக் கள்ளுக்கடை யெல்லாம் கோவிலாக ஆய்விட்டதா? அல்லது அவர்களே இந்தக் கழுதைகள் ஆய்விட்டார்களா? (சிரிப்பும் கரகோஷமும்)

நீங்கள் ஞாயமாகப் பேச விரும்புங்கள்; நானும் ஞாயமாகப் பேச விரும்புகிறேன். நமக்குள் ஏன் சண்டை என்றுதான் நான் சொல்லுகிறேன். நீங்களும் ஒத்துழைக்க வாருங்கள் நானும் ஒத்துழைக்கத் தயாராக வருகிறேன். அதை விட்டு விட்டு எடுத்ததற்கெல்லாம் தேசத்துரோகம் என்றால் நாம் இவர்களுடன் எப்படி ஒத்து வேலை செய்யமுடியும்?

1926-ல் ஜஸ்டிஸ் கட்சியானது தோற்றுப் போய்விட்ட காலத்தில் இவர்கள் Dr. சுப்பராயனையும் ரங்கனாத முதலியாரையும் ஆரோக்கியசாமி முதலியாரையும் பொய்க்கால் குதிரையாக்கி பொய்க்கால் கொடுத்து மந்திரிகளாக நிற்க வைத்து ஆதரவு செய்தார்கள். சைமன் கமிஷன் பஹிஷ்காரம் வந்தது. அந்த மந்திரிகளுக்குள் சண்டை ஏற்பட்டது. சுப்பராயன் சைமன் கமிஷனுக்கு ஆதரவு செய்தார். ரங்கனாத முதலியாரும் ஆரோக்கியசாமி முதலியாரும் வெளியேற வேண்டியதாயிற்று. அப்போது முத்தையா



முதலியாரானவர் காங்கிரஸ்காரர்கள் மந்திரிகளை ஆதரித்த செய்தியையும் தாலுக்கா போர்டு ஜில்லா போர்ட்டில் ஸ்தானங்கள் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் மந்திரிகளின் வீட்டு வாசலில் கெஞ்சிக்கொண்டு நின்றதையும் கண்டித்து எழுதி அவர்கள் இதற்கு என்ன ஜவாப் சொல்லப் போகிறார்கள் என்றும் கேட்டார். அப்போது காங்கிரஸ்காரர்கள் ''நாம் இந்த மந்திரி சபையை ஆதரிக்கா விட்டால் ஜஸ்டிஸ் கட்சியானது ஆட்சிக்கு வந்துவிடும்'' என்று பதில் சொன்னார்கள். டாக்டர் சுப்பராயன் தனக்கு ஆதரவு தரும்படியாக ஜஸ்டிஸ் கட்சியின் காலில் விழுந்தார். நாம் முத்தையா முதலியாரையும் சேதுரத்னம் ஐயரையும் மந்திரிகளாக்கி அவர்களை நம் இஷ்டப்படியெல்லாம் ஆட்டிவைத்து வேலை வாங்கினோம். சட்டசபையில் தமக்கு ஒரு காரியமும் நடக்காது என்று தாங்களே சொல்லிவிட்ட பிற்பாடு, காங்கிரஸ்காரர்கள் ''நாம் போகாவிடில் ஜஸ்டிஸ் கட்சியார் வந்து நுழைந்து விடுவார்கள்'' என்று சொல்லிவிட்டு நம்மை அயோக்கியர்கள் என்றால் நாம் இவர்களை அயோக்கியர்கள் என்று சொல்வதில் என்ன தப்பு? நாம் ஏன் இவர்களை அப்படி சொல்லக்கூடாது?

எலெக்ஷன்களில், ஜஸ்டிஸ் கட்சிக்காரரை வரி குறைக்கவில்லை என்றும், கைதிகளுக்கு மோர் கொடுக்கவில்லை யென்றும் சொல்லிக் கூச்சல் போடுகிறார்கள். இதெல்லாம் சண்டித்தனம். டயார்க்கி கவர்ண்மெண்டில் இந்த இலாக்காக்களெல்லாம் கவர்ண்மெண்டார் கையிலேயே இருக்கின்றன.

ஜஸ்டிஸ் கட்சியாரை தாலி அறுத்தார்கள் என்றும் சொல்லுகிறார்கள். அது ஞாயமா? மங்களூரில் ஒரு வெள்ளைக்கார மேஜிஸ்ட்ரேட் ஒரு பெண்ணுக்கு அபராதம் போட்டார், அவள் கொடுக்க பணமில்லை என்ற போது அவளுடைய கழுத்தில் தாலியைப் பார்த்ததும், அதை விற்று அபராதப் பணம் கட்டச் சொன்னார். அதற்காக ஜஸ்டிஸ் கட்சிக்காரரே கண்டித்து அரசாங்கத்தினிடம் தெரிவித்த போது அந்த மேஜிஸ்ட்ரேட், தான் அதை ஒரு நகை என்று எண்ணிக்கொண்டிருந்ததாகவும் அதனாலே தான் தெரியாமல் சொல்லிவிட்டதாகவும் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

ஜஸ்டிஸ் கட்சியார் வரியைக் குறைக்கவில்லை யென்றால் அது யோக்கியமான வார்த்தையா? ஏனென்றால் ஜஸ்டிஸ் கட்சியிலும் பல மிராசுதார்களும் லேண்ட் லார்ட்களும் இருக்கிறார்கள். ஆகவே தங்களுக்கே நஷ்டம் ஏற்படக்கூடிய விஷயங்களை இவர்கள் ஆதரிப்பார்களா என்ன? 2, 3 பேர் இந்த மந்திரி பதவியில் இருக்கவும் சம்பளம் வாங்கவும் தங்களுக்கு நஷ்டம் ஏற்படும்படி இவர்களை எல்லா மிராசுதார்களும் ஆதரிப்பார்கள் என்றா நினைக்கிறீர்கள்? கேழ்வரகில் நெய்வடிகிறது என்றால் கேட்பாருக்குப் புத்தி எங்கே போச்சு? இதை எந்த பைத்தியக்காரன் நம்புவான்.

திருவல்லிக்கேணியில் சத்தியமூர்த்தியாரின் மனைவியார் தெருவில் வீடுவீடாய்ப் போய் முந்தானையைக் கையில் பிடித்துக்கொண்டு, நீங்கள்



RangaRakes tamilnavarasam.com

என் புருஷனுக்கே வோட் போடுங்கள். நீங்கள் என் புருஷனுக்கு வோட் போடாவிட்டால் அவர் இறந்து விடுவார். நான் அமங்கிலி ஆகிவிடுவேன் என்று சொல்லி கஸ்தூரிபாய் அம்மையார் குருவாயூரில் ஓட்டு வாங்கின மாதிரி கெஞ்சி ஓட்டு வாங்கினாராம். தேர்தலில் ராமசாமி முதலியார் தோற்றார். அவருக்கு என்ன முழுகிப் போய்விட்டது? அவர் இன்னும் பெரிய பதவிக்குத்தான் போய்ச் சேர்ந்தார். ஷண்முகம் செட்டியார் தோற்றார். அவருக்கு என்னகுறை ஏற்பட்டுப்போயிற்று? அவர் ஒரு சுதேச ராஜாங்கத்திற்குத் திவானாகப்போய் அதனால் அந்த ராஜ்யத்திலுள்ள பார்ப்பனரல்லாதாருக் கெல்லாம் ஏராளமான நன்மைகள் செய்யும்படிதான் ஏற்பட்டது. சத்தியமூர்த்தியார் ஜெயித்து என்ன சாதித்தார்? சாமி வெங்கிடாசலம் செட்டியார் காங்கிரஸ் பேரால் நின்று வெற்றி பெற்று தன் கண்ட்ராக்ட்டை காப்பாற்றிக் கொண்டார். முதலாளிகளுக்கு துணை நிற்கிறார். இப்படிப்பட்ட காங்கிரஸ்காரர்களின் வெற்றியினால் எங்களுக்கு என்ன கெடுதி வந்து விட்டது? மற்றவர்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டு விட்டது? அவர்கள் யோக்கியதை தான் வெளியாயிற்று.

1926ல் காங்கிரஸ்காரர்களால் கொண்டு வரப்பட்டு ஆதரவு செய்யப்பட்ட மந்திரிகளை நாம் எப்படி நம்முடைய நன்மைக்கு உபயோகப்படுத்திக் கொண்டோமோ அப்படியேதான் நாம், இனியும் காங்கிரஸ்காரர் வந்தால் செய்வோம். அவர்களை நாங்கள் எங்களுக்குப் பணிய வைத்து வேலை செய்யச்சொல்லுவோம். மேலும் இனி டாக்டர் சுப்பராயன் முதல் மந்திரியாக (வரமாட்டார்) வந்தாலும் அவரை முன்போலவே பணிய வைக்க எங்களுக்கு முடியும். காங்கிரஸ்காரர்கள் சட்டசபையை விட்டு வெளியே போய் விடுவோம் என்றால் 20000 ரூபாய் 30000 ரூபாய் செலவு செய்துவிட்டு அங்கே போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறவர் உடனேயே இவர்களோடு வெளியே ஓடி வந்து விடுவாரா என்ன? அப்படி எந்த முட்டாளுமே செய்ய மாட்டான்.

இன்றைக்கு காங்கிரஸ் பத்திரிகைகள் எல்லாம் ஜில்லா போர்டுகளிலும் காங்கிரஸ்காரர்கள் வெற்றிபெற்று வந்துவிட்டதாக எழுதுகின்றன. திருநெல்வேலி ஜில்லாபோர்டில் 32 காங்கிரஸ்காரர்களில் 26 பேர் ஓட் செய்தார்கள், பாக்கி 6 பேர்கள் எங்கே? வட ஆற்காட்டில் 26 பேருக்கு 13 பேரோ 14 பேரோ வோட் செய்தார்கள். பாக்கி காங்கிரஸ் மெம்பர்கள் எங்கே? தென் ஆற்காட்டில் பகுதி மெம்பர்கள் விலகிவிட்டார்கள். திருச்சினாப்பள்ளி செய்தி உலகம் சிரிக்கவில்லையா? இவற்றாலெல்லாம் காங்கிரஸ்காரர்கள் யோக்கியதை இன்னதென்று வெளியாய்விட்டது. ஜவஹர்லால் காங்கிரஸ் பேரால் யார் நின்றாலும் வோட் போடுங்கள் என்கிறார். அவர்களது அடையாளமும் தெரியாது; ஒன்றும் தெரியாது. அவர்கள் யோக்கியர்களா அயோக்கியர்களா என்றும் நினைக்க வேண்டாமாம். காங்கிரஸ் பேரைச் சொன்னாலே வோட் போட வேண்டுமாம். இப்படி



யெல்லாம் ஏழை மக்களை ஏமாற்றுகிறார்கள்! உலகம் உள்ள பரியந்தம் இப்படி ஏமாற்றுகிறவர்களுக்கும் நமக்கும் கலகம் என்பது இருந்து கொண்டுதான் இருக்கும். இந்தமாதிரி ஏமாற்றுதல்களால் இவர்கள் ஏழைகளுக்கு ஒன்றும் நன்மை செய்ய முடியாது. ஜவஹர்லாலால்கூட காந்தியால்கூட இந்த ஏமாற்று வித்தையால் ஏழைகளுக்கு எவ்வித நன்மையும் செய்ய முடியாது. தங்களையே தாங்கள் ஏமாற்றிக் கொள்வதை அவர்கள் உணருவதில்லை. கீழேயிருக்கிறவர்கள் கீழே தான் இருப்பார்கள்; மேலே இருக்கிறவர்கள் மேலேதான் இருப்பார்கள். காந்தியானவர் ஏழைகளுக்கு உண்மையிலேயே நன்மையாக இருக்கக்கூடிய ஒரு திட்டத்தைத் தயார் செய்து அதன்படி செய்வதாகச் சொல்லட்டும். நாம் நம்முடைய வேலையை அவரிடத்திலேயே ஒப்பித்து விடுவோம். ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளைவிட அவர் என்ன சாதித்து விட முடியும்? அவர் ஆட்டுப்பாலும் ஆரஞ்சு பழமும் சாப்பிட்டுக்கொண்டு குஷனில் படுத்துக் கொண்டு தூங்குகிறார். அவர் ஏழைகள் குடிக்கும் கஞ்சி குடிக்கிறாரா? ஏழைகள் வசிக்கும் குடிசையில் வசிக்கிறாரா? வாயால் ஏழைமை பேசுவது; அனுபவத்தில் ராஜபோகம் அனுபவிப்பது! அவர் ஏழைகளுக்காக எதைத் தியாகம் செய்தார்? ஏழைகள் பேரால் எல்லாரும் ஏமாற்றுகிறார்கள்!

ஜவஹர்லால் சங்கதி நமக்குத் தெரியாதா? அவர் பம்பாய் வியாபாரிகள் முன்பு பேசுகையில் அவர்களுடைய நன்மைகளையெல்லாம் காப்பாற்றுவதாக ஒப்புக்கொண்டுவிட்டார். ''நான் சமதர்மம் என்றால் என்ன என்று தெரியாத ஜனங்களுக்குத் தெரியும்படியாக எடுத்துச் சொன்னதே யொழிய அதற்கேற்ற வேலைத் திட்டம் எங்களிடம் இல்லை'' என்று சொல்லி அவர்களிடம் சமாதானம் சொல்லிக் கொண்டார். காந்தியானவர் அரசாங்கத்தையும் ஜமீன்தார்களையும் காப்பாற்றுவதுதான் தன் வேலை என்று சொன்னார்.

சத்தியமூர்த்தி ஐயர் ஐரோப்பியர்கள் சங்கத்தில் பேசப் புகுமுன் பத்திரிகை ரிபோர்ட்டர்களையெல்லாம் வெளியில் போகச்சொல்லிவிட்டார். தான் வெள்ளைக்காரரிடம் பேசக்கூடிய அந்தரங்க வார்த்தைகள் எங்கே வெளியே பொது ஜனங்களுக்குத் தெரிந்து விடுமோ என்று பயந்து கதவுகளையெல்லாம் தாழ்ப்பாள் போடச் சொல்லிவிட்டு அவர் ''சுயராஜ்யம் என்றால் வெள்ளைக்காரர்களின் கீழ் அடங்கி வாழ்வதே அர்த்தம்'' ''பூரண சுயராஜ்யம் என்றால் குடியேற்ற நாட்டு அந்தஸ்தே அர்த்தம்'' ''ஜஸ்டிஸ் கட்சிக் காரர்களின் கொள்கைதான் எங்களுக்கு ஆகாது. அவர்கள் சமதர்மவாதிகள்'' என்று பதில் சொன்னார். இவை ''சுதேசமித்திரன்'' ''தினமணி'' ஆகிய பத்திரிகைகளில் வந்த வாக்கியங்கள். இவ்வளவு தகிடுதத்தத்திற்கும் பிறகு நம்மை தேசத் துரோகிகள் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

பிரபல பார்ப்பனராகிய விஜயராகவாச்சாரியார் வெளிநாட்டிற்குப் போயிருந்தபோது அரசர் விஷ்ணு அம்சம் என்று சொன்னார். ரங்காச்சாரியார், சீனிவாச சாஸ்திரியார், சி.பி. ராமசாமி ஐயர் இவர்களெல்லாம் வெளிநாடுகளில்



RangaRakes tamilnavarasam.com

சென்று வெள்ளைக்கார அரசர் விஷ்ணு அம்சம் என்று சொன்னார்கள். அதனால் ரங்காச்சாரியார் மகன் மூன்றாவது பாரம் படித்து டிக்கட் கலக்டர் வேலையிலிருந்தவர் திடீரென்று போஸ்டல் சூபெரெண் டெண்டெண்ட் வேலைக்குப் போனார். சீனிவாச சாஸ்திரியார் ரைட் ஆனரபில் ஆனார். அவர் மகனுக்கும் பெரிய வேலை வாங்கிக்கொடுத்தார். அவர்களெல்லாம் நம் தேசத்தைக் காட்டிக்கொடுத்ததை விட யார் அதிகமாக தேசத்தைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள்?

முன் காந்தி பகிஷ்காரப் போராட்டம் நடத்திய போது வைஸ்ராயானவர் இவரை என்ன செய்வதென்று மயங்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது சீனிவாச சாஸ்திரிதான் அவரைப் பிடித்து ஜெயிலில் போடவேண்டு மென்று வைஸ்ராய்க்குப் புத்தி சொன்னார். இதெல்லாம் எனக்குத் தெரியாதா? ஏன் பித்தலாட்டமாகப் பேசுவது என்று கேட்கிறேன். (தொடர்ச்சி 18.10.1936 குடி அரசு)

குறிப்பு: *27.09.1936 ஆம் நாள் திண்டுக்கல்லில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை. (04.10.1936 குடி அரசு தொடர்ச்சி)*

**குடி அரசு - சொற்பொழிவு - 11.10.1936**



# ஜவஹர்லால் நாடகம்

**சபாஷ் சென்னை!**

தோழர் ஜவஹர்லால் சென்னை விஜயமானது தற்போது நடக்க இருக்கும் முனிசிபல் கார்ப்பரேஷன் எலக்ஷன் பிரசாரத்துக்கும் இனியும் ஒரு மாதத்துக்குள் நடக்கும் சில ஜில்லா போர்டு எலக்ஷன் பிரசாரத்துக்கும் பிப்ரவரி முதலில் நடக்கப் போகும் சென்னை சட்டசபை எலக்ஷன் பிரசாரத்துக்கும் ஆக பயன்படுத்திக் கொள்ளவும் மற்றும் அப்பிரசாரங்களுக்கு ஆக பொதுஜனங்கள் இடம் இருந்து பணம் திரட்டிக்கொள்ளவுமே அல்லாமல் வேறொன்றுக்குமாக அல்ல என்று எழுதி இருந்தோம்.

இதற்கு முன்னும் இதுபோலவே சென்ற வருஷத்திலும் ஜில்லாபோர்டு தேர்தல்கள் மும்முரமாய் நடந்துகொண்டிருந்த காலத்தில் தோழர் ராஜேந்திர பிரசாத் அவர்களை அழைத்து வந்து நமது பார்ப்பனர்கள் தங்கள் பிரசாரத்துக்கு அனுகூலம் செய்துகொண்டதோடு பணமும் ஏராளமாக வசூலித்துக் கொண்டார்கள் என்பதும் யாவரும் அறிந்ததேயாகும்.

அதுபோலவே இந்திய சட்டசபைத் தேர்தல் இருந்த காலத்திலும் நமது பார்ப்பனர்கள் தோழர் காந்தியாரை அழைத்து வந்து பிரசாரத்துக்கு அனுகூலம் செய்து கொண்டார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே.

ஆனால் தோழர் காந்தியார் வந்தபோது எலக்ஷனைப்பற்றி தனக்குக் கவலையே இல்லை என்றும் ஹரிஜனங்களுக்கு ஆக வந்தேன் என்றும் சொல்லி ஏமாற்றி விட்டுப் போனார். தோழர் ராஜேந்திரபிரசாத் அவர்களோ தனக்கு இங்கு எலக்ஷன் நடப்பதே தெரியாது என்றும், தான் காங்கிரஸ் கொள்கைப் பிரசாரத்துக்கு வந்தேன் என்றும் சொல்லி ஏமாற்றி விட்டுப் போனார்.

இந்த சமயம் அந்த ஏமாற்றுதல்களுக்கு இடமில்லாமல் போனதால் மக்கள் இனி ஏமாற மாட்டார்கள் என்று தெரிந்து விட்டதால் தான் வந்த காரியத்தின் இரகசியத்தை ஜவஹர்லால் வெளிப்படையாய் ஒப்புக்கொள்ள வேண்டியதாகி விட்டது.

அதாவது நாம் சென்ற வாரம் எழுதியது போலவே இங்கு தான் எலக்ஷன் பிரசாரத்துக்கு ஆகவே வந்ததாகவும், ஆதலால் தோழர்கள் சத்தியமூர்த்தி, அண்ணாமலை, குப்புசாமி கம்பினியார் எப்படிப்பட்ட



RangaRakes tamilnavarasam.com

அயோக்கியர்களை நிறுத்தினாலும் நிறுத்தப்படுபவர்கள் ''குருடனானாலும் மொண்டி ஆனாலும்கூட ஆளைப்பார்க்காமல் ஓட்டு செய்யவேண்டும்'' என்றும் சொல்லுகிறார்.

இதற்குமுன் சகல தேர்தல்களிலும் காங்கிரசின் பேரால் நிறுத்தப்பட்ட ஆட்களில் 100க்கு 75 பேர்கள் போல் கட்டுப்பாட்டுக்கு கட்டுப்படாதவர் களாகவும் துரோகம் செய்தவர்களாகவும் ஆகி நாணயத் தவறுதலாகவும் அயோக்கியத்தனமாகவும் நடந்துகொண்டதின் காரணமாகவே தோழர் ராஜகோபாலாச்சாரியார் ராஜிநாமா கொடுத்தும் ''சுதேசமித்திரன்'', ''இந்து'', ''தமிழ்நாடு'' முதலிய பத்திரிகைகள் கட்சிகளை பார்க்கக் கூடாது என்றும் ஆட்களின் யோக்கியதையைப் பார்க்கவேண்டும் என்றும் எழுதிய பிறகும், தோழர் ராஜகோபாலாச்சாரி போன்றவர்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் காங்கிரஸ் போட்டி போடுவது சரி ஆகாது என்று யோசனை சொல்லியும் மற்றும் பல காங்கிரசுகாரர்களே ஸ்தல ஸ்தாபன வேலைகளைப் பொறுத்தவரை காங்கிரஸ் திட்டத்திற்கு வேலை இல்லை என்று சொல்லியும் தங்கள் தோல்விக்கு பரிகாரம் தேடிக்கொண்டு இருக்க, இப்போது மறுபடியும் காங்கிரசின்பேரால் முன் நிறுத்தப்பட்ட ஆட்களைவிட மோசமான ஆட்களை நிறுத்தி வைத்துக் கொண்டு இப்போது காங்கிரசின்பேரால் மொண்டியை நிறுத்தினாலும் குருடனை நிறுத்தினாலும் அலியை நிறுத்தினாலும் ஓட்டுப்போடவேண்டியது தான் என்று சொன்னால் இப்படிப்பட்ட தலைவர் என்பவருக்கு பொறுப்போ, ஞானமோ இருக்கிறதாக யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

இந்த லட்சணத்தில் இப்படிப்பட்ட நபர்களை நிறுத்தி காங்கிரஸ்காரர் போட்டி போடும் எலக்ஷனுக்கு பொது ஜனங்கள் பணம் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார் என்றால் பொது ஜனங்களை இந்தத் தலைவர் என்பவர் எவ்வளவு தூரம் அடிமுட்டாள் என்று கருதி இருக்கிறார் என்பது விளங்கவில்லையா என்று கேட்கின்றோம்.

இவற்றையெல்லாம் நன்றாய் ஆலோசித்தே நாம் ஜவஹர்லால் பண்டிதரைப் பஹிஷ்கரிக்க வேண்டியது அவசியம் என்று சொன்னோம்.

### பகிஷ்காரம்

அதற்கிணங்கவே சென்னைவாசிகள் ஜவஹர்லால் வந்திறங்கிய உடன் ''ஜவஹர்லால் திரும்பிப்போ'' ''பார்ப்பன கங்காணியே திரும்பிப் போ'' என்ற கோஷத்துடன் கறுப்புக் கொடி பிடித்து பஹிஷ்கரித்தது **சபாஷ் சென்னை** என்று சொல்லி பாராட்டக்கூடிய காரியமாகும்.

### பார்ப்பன பத்திரிகை கட்டுப்பாடு

கறுப்புக்கொடி பிடித்ததையும் திரும்பிப் போ என்ற கோஷத்தையும் சென்னை பார்ப்பனப் பத்திரிக்கைகளும் அவர்களுடைய அடிமைப்



பத்திரிக்கைகளும் வெகு கட்டுப்பாடாக மறைக்க முயற்சித்தன என்றாலும், சில பத்திரிக்கைகள் தன்னையும் அறியாமல் உண்மைகளை வெளிப்படுத்தி விட்டன. அதாவது ''சுதேசமித்திரன்'' 6ந்தேதி பத்திரிக்கை 7-வது பக்கம் 2-வது கலம் போலீஸ் தடியடி என்னும் தலைப்பின் கீழ் ''மூர்மார்க்கட்டுக்கு எதிரில் ஒரு தொண்டரை போலீசார் தடியடி அடிக்கவே'' என்று எழுதி இருக்கிறது.

### செருப்பு பறப்பு

மறுபடியும் அதே பாராவில் ''கூட்டத்தில் சிலர் கோபமடைந்து கற்களையும் செருப்புகளையும் எறிந்தனர். போலீசார் தடியாலடித்ததில் பலர் காயம்பட்டனர். ஒருவர் ஜனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டதாகச் சொல்லப்படுகிறது'' என்றும் எழுதி இருக்கிறது. மற்ற பத்திரிக்கைகளிலும் ''மெயில்'' பத்திரிக்கை

''சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு எதிரில் சிலர் கறுப்புக்கொடி பிடித்து கூட்டமாக வந்தார்கள். கூட்டத்தில் பலர் அதை பிடுங்க முயற்சித்தார்கள்''

என்று எழுதி இருக்கிறது. மற்றும் ''இந்து'' பத்திரிக்கையிலும் கறுப்புக் கொடி ஊர்வலம் நடந்ததாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ''ஜஸ்டிஸ்'' ''விடுதலை'', ''ஜனநாயகம்'' ஆகிய பத்திரிக்கைகளில் விபரமாய் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. அதை மற்றொரு பக்கம் காணலாம்.

மற்றும் ''ஊழியனி''லும் ''ஒரு சிலர் துக்கக் குறியை காண்பிக்கும் நன்னோக்கத்துடன் கறுப்புக்கொடி பிடித்து மூர்மார்க்கட்டுக்கு கிழக்கே வந்தார்கள்'' என்றும் ''நவசக்தி''யில்

''பண்டிதர் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்ததும் கறுப்புக்கொடி காணப்பட்டது'' என்றும் எழுதி இருக்கின்றன.

''தமிழ்நாடு'' மாத்திரம் கறுப்புகொடி பற்றி அடியோடு ஒன்றுமே குறிப்பிடவில்லை.

இந்த பத்திரிக்கைகள் இவ்வளவு கட்டுப்பாடாய் உண்மையாக நடந்த விஷயத்தை சரியாய் வெளியிடாமலும் சில அடியோடு மறைத்தும் திரித்தும் விட்டதின் கருத்து இந்த விஷயம் வெளியானால் மற்ற ஊர்களிலும் இதுபோலவே நடந்துவிடுமே என்று கருதி எல்லோரும் கூடிப்பேசி மறைத்துக் கொண்டார்கள் என்றாலும் நடக்க வேண்டியது நடந்து விட்டது என்பதோடு இனியும் நடப்பதும் இதனால் குந்தகப்படப் போவதில்லை என்றே சொல்லலாம். ஏனெனில்,

மற்ற சம்பவங்களையும் கல் விழுந்ததையும் செருப்பு விழுந்ததையும் கள்ளுக்குடம் உடைக்கப்பட்டதையும் குறிப்பிடும்போது பகிஷ்காரம் தானாக வெளியாகித் தீரவேண்டியதாய் விட்டது. ஆகவே பூனை கண் மூடி பால் குடித்த கதைபோல்தான் மறைத்த விஷயம் முடிவு பெற்று விட்டது.



RangaRakes tamilnavarasam.com

சுமார் 200 கறுப்புக்கொடிகளுக்கு மேலாகவே பிடிக்கப்பட்ட ஒரு பெரும் கூட்டம் ஊர்வலம் என்பதற்கு எதிரில் நின்று சென்ட்ரல் ஸ்டேஷனிலே இருந்தே ''ஜவஹர்லால் திரும்பிப்போ'' ''பார்ப்பன கங்காணியே திரும்பிப்போ'' என்ற கோஷத்துடன் பஹிஷ்கரித்திருந்தாலும் அக் கூட்டத்தை ஜவஹர்லால் தகவலுக்கு தெரியாமல் செய்ய பார்ப்பன வாலிபர்கள் பலர் பலாத்காரத்தில் இறங்கி கற்களை வீசி கொடிகளை பிடுங்க முயற்சித்தும் ஒன்றும் முடியாமல் பதிலுக்கு பதில் கற்களும் செருப்புகளும் பாணங்கள் போல் பறந்திருப்பதாகத் தெரிகின்றது. சில காங்கிரஸ் தொண்டர்களுக்கு தடிஅடியும் சில பார்ப்பனருக்கும் தொண்டர்களுக்கும் கல் அடியும் நடந்து ஜெனரல் ஆஸ்பத்திரிக்கும் சிலர் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் காணப்படுகின்றது. வழியில் சென்ற கள்ளுக் குடங்களும் உடைபட்டு பல தொண்டர்களுக்கு அபிஷேகமும் ஆனதாகத் தெரிகிறது. இந்த கலாட்டாவுக்கு காரணம் கறுப்புக்கொடியை பார்ப்பனர்கள் பிடுங்கி எறிய முயற்சித்ததே தவிர மற்றபடி காங்கிரஸ்காரர் அல்லாதவர்கள் நடத்தை அல்ல. எப்படி இருந்தாலும் இந்த விஷயத்தையே அடியோடு மறைப்பதற்காக ''கேட் மூடியிருந்ததால் குழப்பமும் கலகமும் ஏற்பட்டது'' என்று மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல் சில பத்திரிகைகள் எழுதி பொது ஜனங்கள் கண்களில் மண் போடப் பார்த்தன. ஆனாலும் மூர்மார்க்கட்டுக்கு எதிரில் கலவரம் நடந்தது என்று ''சுதேச மித்திரன்'' பத்திரிகை எழுதி இருப்பதால் மூர்மார்க்கட்டுக்கு பக்கத்தில் கேட்டுகள் அடைபட இல்லாததால் அதன் புரட்டை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.''

மற்றும் கறுப்புக் கொடியை காங்கிரஸ் தொண்டர்கள் பிடுங்கினதையும் அதனால் ஏற்பட்ட கலவரத்தால் போலீசார் சமாதானம் சொல்லி கேட்காததால் தடியடி பிரயோகம் ஆரம்பித்ததையும் அதைக்கண்டு பண்டிதர் ஜவஹர்லால் இறங்கி நடக்க ஆரம்பித்ததையும் அதற்குள் பார்ப்பனர் சமாதானம் சொல்லி கெஞ்சி மறுபடியும் அவரை வண்டியில் உட்கார வைத்ததையும் கொண்ட அனேக சம்பவங்கள் பார்ப்பனர்கள் தலையை தொங்க விட்டுக்கொள்ள வேண்டியதாகிவிட்டன.

**ஜவஹர் வண்டவாளம்**

இவை ஒரு புறமிருக்க ஜவஹர்லாலின் யோக்கியதையை சற்று ஆராய்வோம்.

ஜவஹர்லால் சென்னைக்கு வந்ததால் அவர் வண்டவாளம் இன்னது என்று வெளுத்துப் போய்விட்டது.

''மெயில்'' பத்திரிகை எழுதியபடி அவரை மக்கள் நினைத்துக் கொண்டிருந்ததற்கு நேர்மாறாகவே காணப்பட்டார் என்பது முழுதும் உண்மையாகிவிட்டது. பொதுவாக ஜவஹர் ஒரு அனுபவஞானமற்றவர் என்பதை நன்றாய் காட்டிக்கொண்டார் என்பதாக மற்ற ''நவசக்தி'', ''தமிழ்நாடு'' முதலிய பத்திரிக்கைகளும் எழுதிவிட்டன.



வக்கீல் தொழிலில் கொள்ளை அடித்த பணத்தால் - அவரது பெற்றோர்களின் பணத் திமிர் பிடித்த மனப்பான்மையால் செல்லப்பிள்ளையாக வளர்க்கப்பட்டவர்.

அதோடு கூடவே காந்தியாரின் சலுகையால் அளவு கடந்த விளம்பரப் படுத்தப்பட்டு வெறும் கம்பீரச் சனியனுக்கிடையே ஆணவத்துடன் வளர்ந்தவர்.

புஸ்தகப் படிப்பு அல்லாமல் அனுபவ அரசியல் ஞானம் சுட்டுப் போட்டாலும் புரிந்துகொள்ள முடியாதவர். சென்னையில் அவரது பேச்சுக்கள் முழுவதும் ஆணவமும் முட்டாள்தனமான உளறலும் நிறைந்து கிடந்தது என்பதைத்தவிர அனுபவ பூர்வமாக - பயன்படத்தக்கதாக - தற்காலப் போக்கில் செய்யக்கூடிய ஒரு வேலைத் திட்டமாக - அல்லது விளங்கக்கூடிய ஒரு கொள்கையாக ஒரு வார்த்தையாவது தேடி எடுக்க அருகதை அற்றதாகவே இருந்தது.

தன்னைத்தவிர மற்றவர்கள் எல்லோரும் முட்டாள்கள் என்பதே அவர் பேச்சிலும் மூச்சிலும் நிறைந்து வழிந்தது என்று தான் சொல்ல வேண்டும். இதை ''மெயில்'' பத்திரிகை தனது உபதலையங்கத்தில் நன்றாக விளக்கி விட்டது.

**ஆத்திர வசவு**

முதலாவது அவர் கண்ட கறுப்புக்கொடியின் ஆத்திரத்தைக்காட்ட பொதுக்கூட்டத்தில் ஜஸ்டிஸ் கட்சியை வைதிருக்கிறார். அதுவும் அறிவோடு வைய முடியாமல் போய்விட்டது. அதாவது ''இங்கு ஜஸ்டிஸ்கட்சி என்று ஒரு கட்சி இருந்ததாய் வெகுநாளைக்கு முன் கேள்விப்பட்டேன். இப்போது இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது'' என்றார்.

மறுபடியும் ''அடுத்தாப்போல் மறைகின்ற கட்சிகள் அதிகமாகச் சத்தம் போடும்'' என்கிறார்.

அப்படிப்பட்ட கட்சி எது என்று கருதிச் சொன்னார் என்று பார்த்தால் ஜஸ்டிஸ் கட்சி இருக்கிறதோ இல்லையோ என்று கருதிச் சொன்னாரா? அல்லது அதன் பஹிஷ்காரத்தை நேரில் பார்த்ததைக் கொண்டு ஆத்திர மடைந்து சொன்னாரா என்பது வெளிப்படும். நிற்க,

**சமதர்மப் பல்லவி**

சமதர்மமே சிறந்தது, அதுவே எல்லாவற்றிற்கும் மருந்து என்ற பல்லவியை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாடிக் கொண்டே இருந்தார். அதற்குத் தன்னிடத்தில் இப்போது யாதொரு திட்டமும் இல்லை என்றும் ஒப்புக் கொள்கிறார். மறுபடியும் சமதர்மப்பேச்சு நாடு சுயராஜ்யம் அடைந்த பின்பு தான் பேசமுடியும் என்கிறார். மறுபடியும் ஏழ்மைக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் மருந்து சுயராஜ்யம் என்கிறார்.



RangaRakes tamilnavarasam.com

''சுயராஜ்யம்''

தீண்டாமை சுயராஜ்யம் கிடைத்தால்தான் ஒழியும் என்கிறார்.

இப்படியாக உளறிக் கொட்டி இருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

சுயராஜ்ய நாடுகளிலும் ஏழ்மையும் வேலையில்லாத் திண்டாட்டமும் இருப்பதை இவர் அறியாதது இவன் ஞான சூன்யத்தையே காட்டுகிறது என்றுதான் சொல்லவேண்டியிருப்பதற்கு வருந்துகிறோம்.

சுயராஜ்யம் இருந்த காலத்தில் ஏற்பட்ட தீண்டாமையைத்தான் பிற ராஜ்யம் ஏற்பட்ட காலத்தில் சிறிது சிறிதாய் அழித்துவரப்படுகிறதே ஒழிய சுயராஜ்யம் இல்லாததால் தீண்டாமை ஏற்பட்டு விடவில்லை என்பதை பண்டிதர் உணரவில்லையோ அல்லது உணர்ந்தே பார்ப்பனக் கூலியாய் இருந்து மக்கள் கண்களில் மண்ணைப் போடப் பேசுகிறாரோ என்பது புரியவில்லை.

ஏழைகள் துயர் களைய சமதர்மமே வழி என்று சொல்லிவிட்டு சுயராஜ்யம் பெற்றால்தான் சமதர்மம் வரும் என்று சொல்லி தப்பித்துக் கொள்ளுகிறார்.

இப்போது உலகத்தில் சுயராஜ்யம், ஜனநாயகம், குடி அரசு என்பவைகள் உள்ள நாட்டில் எல்லாம் சமதர்மம் ஏற்பட்டு விட்டதா என்று கேட்கின்றோம். சுயராஜ்யம் இன்மையே சமதர்மத்துக்கு முட்டுக்கட்டையானால் சுயராஜ்யமுள்ள நாடுகளால் ஏன் சமதர்மம் ஏற்படவில்லை? என்று கேட்கின்றோம்.

ஆகவே சமதர்ம விஷயத்தில் தனக்கே புரியாத விஷயங்களைத் தட்டிப்பேச ஆளில்லாத இடத்தில் சண்டப்பிரசண்டமாய்க் கொட்டி குளறு கின்றார் என்றுதான் சொல்லவேண்டி யிருக்கிறது.

காங்கிரசைப் பலப்படுத்துங்கள் என்கிறார்.

காங்கிரஸ் ஏற்பட்டு 50 வருஷம் ஆயிற்று. ஜவஹரும் காந்தியாரும் காங்கிரசை 16 வருடங்கள் நடத்தியாய் விட்டது. 2, 3 கோடி ரூபாய் செலவாகி விட்டது. 10 ஆயிரக்கணக்கான வாலிபர்களைக் காலிப் பசங்களாக ஆக்கி ஆய்விட்டது. இவ்வளவு செய்தும்,

இன்றைய வரையில் காங்கிரசுக்கு கேவலம் தேர்தல்களுக்குக்கூட யோக்கியமான சுயமரியாதையுள்ள ஆட்கள் கிடைக்கவில்லை என்றால், கிடைத்த ஆட்களில் எல்லாம் 100க்கு 90 அயோக்கியர்களாக கிடைத்தார்கள் என்றால் காங்கிரசைப் பலப்படுத்தும் யோக்கியதை காந்தியாருக்கோ, ஜவஹருக்கோ, சத்தியமூர்த்தியாருக்கோ அல்லது அந்த ஸ்தாபனத்துக்கோ இருக்கிறதா என்று கேட்கிறோம்.

அந்நிய ராஜ்யத்தை - வெள்ளைக்கார ஆட்சியை ஒரு கடுகளவாவது அசைக்கவாகிலும் காங்கிரசினிடமோ, காந்தியாரிடமோ, ஜவஹர்லாலிடமோ ஏதாவது ஒரு கொள்கை இருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா



என்று கேட்கின்றோம். சுயராஜ்யம் என்பது ஒரு அர்த்தமற்ற வார்த்தை என்று ஜவஹர்லால் படத்திறப்பு விழாவாற்றப்பட்ட சி. விஜயராகவாச்சாரியார் அவர்களே சொல்லிவிட்டார். இதுவரை யாரும் அதற்கு பதில் சொல்லவில்லை.

இப்படி இருக்க இனியும் சுயராஜ்யம் சுயராஜ்யம் என்று மக்களை ஏமாற்றுவது யோக்கியமா?

## சீர்திருத்தம் உடைப்பது

சீர்திருத்தத்தை உடைக்க வேண்டியது தங்கள் கடமை என்று பேசுகிறார். உடைக்க முடியுமா? அதற்கு திட்டம் என்ன என்பதை ஜவஹர்லால் எங்காவது சொல்லி இருக்கிறாரா என்று பாருங்கள்.

சட்டசபைகளைக் கைப்பற்றினால் சீர்திருத்தம் எப்படி உடைக்கப்பட முடியும் என்று கேட்கிறோம். சட்டசபைக்கு உள்ள அதிகாரம் தெரிந்திருந்து தான் ஜவஹர் இப்படிப் பேசுகிறாரா அல்லது மக்களை ஏய்த்து தன்னை தலைவர் என்று அழைத்து ஊர்வலம் நடத்துகிற ஆட்களுக்கு ஓட்டு வாங்கி கொடுக்க இப்படி பேசுகிறாரா என்பதை பொது ஜனங்களே உணரட்டும் என்று விட்டுவிடுகிறோம்.

சட்டசபைக்கு போவது அடிமைத்தனம் என்று இவரே சொன்னார். இப்போது சட்டசபைக்குச் செல்லலாம், மந்திரி பதவி ஏற்கக்கூடாது என்கிறார்.

மந்திரி பதவி ஏற்பதானது ஒத்துழைப்பது, சர்க்காருக்கு அடிமை ஆவது என்கிறார்.

ஆனால் இவர் கூடவே நிழல் போல் திரிந்து மக்களை ஏமாற்றி வரும் மூர்த்தியார் ''பதவி ஏற்கவேண்டும். இதை மாற்றிக்கொள்ள என்னால் முடியாது'' என்று உடனுக்குடன் சொல்லி விடுகிறார். இவருக்கு பதில் சொல்ல ஜவஹர்லாலுக்கு தைரியம் இல்லை.

## காங்கிரஸ் கட்டுப்பாடு

இந்த லக்ஷணத்தில் காங்கிரசில் பலமான கட்டுப்பாடு இருக்கிறதாம். இன்னும் பலமான கட்டுப்பாடு வேண்டுமாம். இது ஒரு மானங்கெட்ட பல்லவியாகும். டாக்டர் சுப்பராயன் காங்கிரசுக்கு ''துரோகம்'' செய்தவர் என்று தீர்ப்பளிக்கப் பட்டவர். இப்போது சமீபத்தில் அவர் காங்கிரசில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்பது மாத்திரமல்லாமல் அவருக்கு மந்திரி வேலை கொடுப்பதாகவும் வாக்களிக்கப்பட்டாய் விட்டது. அடுத்த காங்கிரஸ் கமிட்டி தேர்தலில் அவரே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு தலைவராகவும் ஆக்கப்படப் போகிறார். அதற்காக இப்பொழுதிருந்தே ஏஜண்டுகள் வேலை செய்கிறார்கள்.



RangaRakes tamilnavarasam.com

எனவே காங்கிரசுக்கு கட்டுப்பாடு உண்டா? கட்டுப்பாடாவது ஒரு பக்கம் தொலைந்து போகட்டும், காங்கிரசுக்கு மானமாவது உண்டா என்று தான் கேட்கின்றோம்.

### புகார்கள்

தோழர் ஜவஹர்லால் பெரிய தலைவர் என்று கருதி காங்கிரஸ் தொண்டர்கள் 500 பேர் கையொப்பமிட்டு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி யோக்கியதையைப் பற்றியும் தலைவர் சத்தியமூர்த்தி யோக்கியதையைப் பற்றியும் அவருக்குள்ள கட்டுப்பாடும் ஒழுக்கமும் நாணையமும் அற்ற தன்மையைப் பற்றியும் புகார் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். அதை வாங்கி குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டார்.

காங்கிரசுக்கு தன் மனச்சாட்சிக்கும், கொள்கைக்கும், சமூகத்துக்கும் துரோகமாய் நின்று தொண்டாற்றின தோழர் தாவுத்சா சாயபு அவர்களை நட்டாற்றில் விட்டு விட்டு அவரிடமே தங்கள் சூழ்ச்சியைக் காட்டி உனக்கும் பெப்பெப்பே என்று கையை விரித்து விட்டார் தோழர் சத்தியமூர்த்தி. அதைப்பற்றி அவரும் ஒரு முழு நீளம் பிராது கொடுத்திருக்கிறார். திருச்சி முனிசிபாலிட்டியில் காங்கிரசுக்கு ''துரோகம்'' செய்த தலைவருக்கு காங்கிரஸ் மெம்பர்கள் உதவி செய்துகொண்டு இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் காங்கிரசுக்குக் கட்டுப்பாடாம்.

எனவே சிறு குழந்தைகள் பெரிய ஆள்களுக்குப் பூச்சாண்டி காட்டுவது போல் ஜவகர் தமிழ் நாட்டில் பூச்சாண்டி காட்டுகிறார். இதைப் பார்க்கிறபோது தோழர் மாளவியாவை மலையாளத்தில் கேட்கப்பட்ட கேள்வி ஞாபகத்தில் வருகிறது.

அதாவது ஒரு கூட்டத்தில் மாளவியாஜி ராமாயண சுலோகம் எடுத்துச் சொல்ல ஆரம்பித்தபோது கேரள தொண்டர்கள் ''மாளவியாஜீ! நாங்கள் ராமாயணத்தில் B.A., படித்திருக்கிறோம். எங்களிடத்தில் தாங்கள் A.B.C.D. கற்றுக்கொடுக்க நினைப்பது, உங்களுக்கு ரயில் சார்ஜுக்கு கொடுத்த பணம் வீணாவதல்லால் நேரக்கேடுமாகின்றது'' என்று சொன்னார்கள். அதுபோல ஜவஹர்லால் அவர்கள் தமிழ்நாட்டில் வந்து தமிழ் மக்களிடம் காங்கிரஸ் பெருமையையும் காங்கிரசு கொள்கையையும் காங்கிரசு கட்டுப்பாடும் பேசுகிறார் என்றால் இது அண்ணனிடம் தங்கை தகப்பன் வீட்டுப் பெருமை பேசுவதுபோல் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

காங்கிரசுக்கு தந்திரமும் சூழ்ச்சியும் ஏமாற்றுப் பிரசாரமும் சொல்லிக் கொடுத்தவர்கள் தமிழ் நாட்டவர்கள். அவர்கள் பித்தலாட்டத்தாலேயே காந்தியும் ஜவஹரும் மாளவியாவும் பட்டேலும் ஆகிய கம்பெனியார்கள் தலைவர்களாக முடிந்தது.



அப்படி இருக்க இங்கு வந்து தமிழரையே ஏமாற்றப் பார்த்தால் என்ன நடக்கும் என்பது ஜவஹருக்கு அனுபவ ஞானம் இல்லாமையால் விளங்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

நேற்று ஆனைமலை பிரசங்கத்தில் தோழர் சத்தியமூர்த்தியார் ஜவஹர்லாலைப் பற்றி சொன்னதை மக்கள் அதற்குள் மறந்திருக்க முடியுமா என்று யோசித்துப் பாருங்கள்.

''ஜவஹர்லால் கொள்கைக்காக அவருக்கு தலைமை ஸ்தானம் கொடுக்கவில்லை. அவர் குடும்ப தியாகத்துக்காக கொடுக்கப்பட்டது'' என்றார். மற்றும் ''ஜவஹர் கொள்கையை நான் ஒப்புக் கொள்ள வில்லை'' என்றார். ஆகவே தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர், ஜவஹர்லாலை எப்படி மதிக்கிறார் என்னமாய் நடத்துகிறார் என்பது இதிலிருந்து விளங்கும். காங்கிரசுக்கு (பார்ப்பனர்களுக்கு) யாராயிருந்தாலும் சரி, தங்கள் அடிமைகளாய் இருந்தால், தங்களுக்கு பயன்படுபவர்களாய் இருந்தால் அதுவரை தலைவர் என்றும் தேசபக்தர் என்றும் அழைக்கப்படுவதும் சமயம் தீர்ந்த உடனே காலை வாரி அடிப்பதும் பரம்பரை வழக்கம். ஆகவே ஜவஹர்லாலை ஆகட்டும், அல்லது குப்புசாமி கிருஷ்ணசாமி பாரதி கம்பெனியாரை ஆகட்டும் பார்ப்பனர்கள் விளம்பரப் படுத்துவதில் நமக்கு அதிசயமொன்று மில்லை.

### கொள்கை முரண்

தவிர இன்று இவ்வளவு பதினாயிரக்கணக்கான மக்களுக்கு ஞானோபதேசம் செய்கிற இதே ஜவஹர்லால் அவர்கள் காந்தி இர்வின் ஒப்பந்தத்தை ஏன் ஆதரித்தார் என்பதற்கு ஏதாவது சமாதானம் சொன்னாரா? அப்படி ஆதரித்தது நேர்மைதான் என்று சொல்ல வருவாரானால் இண்டர் நேஷனல் ஆண்டி இம்பீரியலிஸ்ட் அசோசியேஷனில் இருந்து அதாவது ஏகாதிபத்திய எதிர்ப்பு உலக சங்கத்தில் இருந்து இவரை ஏன் விலக்கினார்கள் என்பதற்கு காரணம் சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

நமது மக்களில் பெரும்பான்மையோருக்கு தங்கள் புத்தியைக் கொண்டு ஆலோசிக்கும் சக்தியை வளர விடாமல் செய்து விட்டதாலும் பார்ப்பனர் விளம்பரமே நமது நாட்டில் செல்வாக்குப் பெற்று விட்டதாலும் ஜவஹர்லால் போன்ற பொக்கு சரக்கெல்லாம் இவ்வளவு கிராக்கியாய் செலாவணியாக இடம் ஏற்பட்டுவிட்டது. ஜவஹர்லால் தனது சமதர்மத்துக்கு ஆளும் வகுப்பு என்று ஒன்றும் ஆளப்படும் வகுப்பு என்று ஒன்றும் இருக்கக்கூடாது என்பதுதான் அருத்தம் என்று சொல்லுகிறார்.

இதை ஒழித்துவிடுவது சுலபத்தில் முடியக்கூடியக் காரியமல்ல; அப்படி ஒழித்து விட்டாலும் உலகக் கஷ்டம் ஒழிந்துவிடாது என்று உறுதியாய்ச் சொல்லுவோம். மேல்நாடுகளில் இப்படி இரண்டு வகுப்பு இல்லை. அப்படி இருந்தும் மனித சமூகத்தின் கஷ்டம், ஏழ்மை விலகி விடவில்லை.



RangaRakes tamilnavarasam.com

ஆதலால் நாம் சொல்லும் சமதர்மம் அதுவல்ல. பாடுபடும் வகுப்பு என்று ஒன்றும் அந்தப்பாட்டின் பயனை அனுபவிக்கும் வகுப்பு என்று ஒன்றும் இருக்கக்கூடாது என்று சொல்லுகிறோம். அப்போதுதான் மனித சமூக ஏழ்மையும் குறையும் நீங்கும் என்கிறோம்.

அப்படியானால் முதலில் பார்ப்பனீயம் ஒழிய வேண்டும், தீண்டாமையும் ஒழிய வேண்டும். இதற்கு ஜவஹர்லால் ஒப்புக்கொள்ளுகிறாரா? ஒப்புக் கொண்டால் இவரது தலைமை ஸ்தானமும், தியாகப் பெருமையும் அரை நிமிஷம் பார்ப்பனர்கள் இடம் நிற்குமா என்று யோசித்துப் பாருங்கள்.

### பாஷை பரிகாசம்

மற்றும் பாஷை விஷயத்தில் தமிழ் பாஷையை பரிகசித்து தோழர் ஜவஹர் பேசினாராம். உண்மையில் கலப்பற்ற தமிழ் ரத்தம் தங்கள் உடலில் ஓடுகிறது என்று நினைத்துக் கொண்டு அங்கிருந்த பல தமிழ் மக்களும் பார்ப்பனர்கள் கூட சேர்ந்து சிரித்தார்களாம். அவர்களைப்பற்றி நாம் ஆச்சரியப்படவில்லை.

வேறு எந்த எந்த அருமையான இன்றியமையாத குணங்களையும் விற்றுவிட்டு பார்ப்பனர்கள் பின்னால் வாலைத் தூக்கி பிடித்துக்கொண்டு திரியும் கூலித்தமிழ் மக்களுக்கு தமிழ் பாஷையை குறைகூறினதற்கு ரோஷம், சொரணை வரும் என்று எந்த மூடன் தான் எதிர்பார்க்க முடியும்?

### இதுவும் ஒரு நன்மைக்கே

ஆகவே, மொத்தத்தில் ஜவஹர்லால் தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டுப் போவது நமக்கு ஒரு நன்மையான காரியம் என்றே கூறுவோம். எப்படி யெனில் தோழர் சத்தியமூர்த்தியார் எப்படி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு தலைவராயிருப்பது நமக்கு அனுகூலமோ, அதுபோல் ஜவஹர்லால் அவர்கள் காங்கிரஸ் தலைவராய் இருப்பதோடு வந்துவிட்டுப் போனது அனுகூலமானதேயாகும்.

ஒரு விஷயம், தோழர் சத்தியமூர்த்தி தனது வகுப்புநலத்தை எப்படிப் பட்ட முட்டாள்தனமான செய்கையிலும் பித்தலாட்டமான செய்கையிலும் கவனித்துகொள்ளுவார். நமது பண்டிதரோ தனது விளம்பரத்தைத்தவிர, ஆணவத்தைதவிர வேறெதையும் கவனிக்க அறியாதார். இதுதான் இருவருக்கும் உள்ள வித்தியாசம். மற்றவைகளில் இரண்டும் சரியான ஜோடியேயாகும்.

**குடி அரசு - தலையங்கம் - 11.10.1936**



# பார்ப்பனருக்கு சர்க்கார் உத்தியோகம் வேண்டுமா?

## வெள்ளையரிடம் பார்ப்பனர் சரணாகதி

### முஸ்லீம்கள் தீண்டாதவர்கள் பிரச்சினை

முதலில் ஜஸ்டிஸ் கட்சியார்தான் முகம்மதியர்களுக்கும், ஏழைகளுக்கும், தீண்டாதார்களுக்கும் வேலை செய்தார்கள். அதன் பிறகுதான் காந்தியும் அவர்களைப்போல் வேலை செய்ய ஆரம்பித்தார். காந்தியானவர் மகாத்மா ஆனபின் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படாமல் சுயராஜ்யம் வரமுடியாது என்றார். அப்படியே தீண்டாதாரிடம் தீண்டாமை ஒழிந்தால்தான் சுயராஜ்யம் வரும் என்றும், தீண்டாமை ஒழியாமல் சுயராஜ்யம் வராது என்றும் வந்தாலும் அது வேண்டாம் என்றும் சொன்னார். பிறகு வட்டமேஜை மகாநாட்டுக்குப் போனதும் சுயராஜ்யம் வந்தாலொழிய ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படாதென்றார். இந்த வார்த்தையைக் கேட்டதும் ஜனாப் ஜின்னாவுக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் ''சுயராஜ்ய கவர்ண்மெண்டில் எங்களுடைய நிலை இன்னது என்று சொல்லிவிட வேண்டு''மென்று கேட்டார். ஏனென்றால் காந்தியின் ராமராஜ்யமானது ஹிந்து ராஜ்யமாகத்தான் இருக்க முடியும் என்பது அவருக்குத் தெரியும். காந்தியார் எல்லாரையும் ஏமாற்றி விட முடியாதல்லவா? இவர்கள் ஒரு முடிவுக்கும் வராதது கண்டு இங்கிலீஷ் அரசாங்கத்தார் அந்தந்த சமூகத்திற்கும் ஞாயம் வழங்கினார்கள்.

அடுத்தபடியாக காந்தி தீண்டாதார் தலையில் கைவைக்கப் பட்டினி கிடந்தார். உடனே அம்பத்காரானவர், பயந்து போய் ''நாம் எவ்வளவோ பாவம் செய்து இப்படி தீண்டா வகுப்பில் பிறந்து விட்டோம். நமக்கு இன்னும் என்ன பாவம் வருமோ'' என்று காந்தியிடம் ஓடி ''பூனா பேக்ட்''-ல் கையெழுத்துப் போட்டார்.

இவர்கள் தீண்டாமையை விலக்குவதற்காக என்ன செய்துவிட்டார்கள்? அவர்களுக்கு எண்ணெயும் சோப்பும் கடலையும் பொரியும் பெப் பெர்மிண்ட்டும் கொடுத்து வருகிறார்கள். இதுதான் ஹரிஜன சேவையா? இதற்கு வாரம் ஒரு ரூபாய் செலவு. ஆனால் இதைக் கொடுக்கிறவருக்கு மாதம் 36 ரூபாய் சம்பளம்!



RangaRakes
tamilnavarasam.com

## வகுப்பு வாதம்

எந்த எலக்ஷனில் இவர்கள் வகுப்பு வாதத்தை நினைக்காமல் இருக்கிறார்கள்? இவர்கள் எந்தத் திட்டத்தில் முஸ்லீம்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் சீக்கியர்களுக்கும் வீதாசாரப் பிரதிநிதித்துவம் கொடுப்பதாக ஒப்புக் கொள்ளவில்லை? இவர்கள் பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் மட்டும் ஏன் கொடுக்க முடியாது என்று சொல்ல வேண்டும்? முஸ்லீம் கிறிஸ்தவர் நீங்கினால் மற்ற வகுப்பு பார்ப்பன வகுப்பு என்றே கருதுகிறார்கள். மற்றவர்களைப்பற்றி காங்கிரசுக்கு ஞாபகமே இல்லை. கூலி வேலைக்கும் காலி வேலைக்கும்தான் பார்ப்பனரல்லாதாரை சேர்த்துக் கொள்ளுகிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களாகிய நாம் பார்ப்பனர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் வீதாசாரப்படி பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிறோம். அத்துடன் ஸ்திரீகளுக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிறோம்.

காங்கிரஸ் பார்ப்பனர்கள் வெள்ளைக்காரனிடம் ''நீயும் நானும் மத்திய ஆசியாவிலிருந்து வந்தோம். நாமெல்லாம் ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள். நாங்கள் இங்கே இப்படி கங்கை சமவெளிக்கு வந்து குடி ஏறிவிட்டோம். நீங்கள் யூரல்மலை வழியாய் போய் மேற்கே குடியேறி விட்டீர்கள். இவ்வளவு தானேயொழிய மற்றப்படியாக நீங்களும் நாமும் தாயாதிகள் தான் ஆகையால் நாம் இருவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்'' என்று சொல்லுகிறார்கள். இவர்கள் வெள்ளைக்காரரிடம் இப்படிப் பேசி விட்டுப் பொது ஜனங்கள் முன்னிலையில் தாங்கள் வெள்ளைக்காரரிடம் சுயராஜ்யம் கேட்பதாகச் சொல்லுகிறார்கள். இவர்கள் நாளைக்கு சுயராஜ்யம் வேண்டும் என்றால் நாம் இன்றைக்கே சுயராஜ்யம் வேண்டும் என்று சொல்லுகிறோம். ஆனால் எல்லாப் போராட்டமும் முடிந்த பின்பு சுயராஜ்யத்தில் எங்கள் நிலை என்ன என்று கேட்டால் அவர்கள் அது தேசத்துரோகம் என்கிறார்கள். அவர்கள் வெள்ளைக்காரனிடம் ஓடிப்போய் ''நாங்கள் தானே உங்களுக்கு ஆதி முதல் உதவி செய்து உங்களை இந்தத்தேசத்தில் நிலைநிறுத்தி வைத்திருக்கிறோம். ஆகையால் நீங்கள் எங்களைக் காப்பாற்றுங்கள்'' என்று சொல்லுகிறார்கள்.

## உத்தியோக வேட்டை

நாம் நம் வரும்படியைச் செலவு செய்து - நமது வீட்டை விற்று - நம் சொத்தை விற்று - நம் மக்களைப் படிக்க வைக்கிறோம். ஆகையால் சர்க்கார் உத்தியோகங்களில் எங்களுக்கும் பங்கு தா என்றால், அது தேசத் துரோகமா? மாடு மேய்க்கிறவனுக்கும் பஞ்சாங்கம் பார்க்கிறவனுக்கும் நாம் உத்தியோகம் கொடு என்று கேட்கிறோமா? பரீக்ஷை என்ற **தெர்மா மீட்டரின்படி** எங்களில் யாருக்குக் கொடுக்கலாமோ அவர்களுக்கு கொடு என்று சொல்லுகிறோம்.



எங்கும் இவர்கள் நிலைமை எப்படி இருக்கிறது? இவர்களே எங்கும் சப் இன்ஸ்பெக்டர்கள், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள்; இவர்களே மேஜிஸ்ட்ரேட்டுகள்; இவர்களே தாசில்தார்கள்; முனிசீப்புகள்; கலெக்டர்கள்; 100க்கு 75 பேர் எல்லாம் இவர்களே இருக்கிறார்கள்! இதனால் தங்கள் வகுப்பை மேன்மைப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இவர்கள் காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கு சதா கூட்டங்களை நடத்திக் கொடுக்க உதவி செய்கிறார்கள். பார்ப்பன சப் இன்ஸ்பெக்டர்கள் காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கு சகல உதவியும் செய்து கொடுக்கிறார்கள். இவர்களுடைய சுயராஜ்யத்தில் நாம் கஷ்டங்களைத்தான் அனுபவிக்க முடியும். இவர்களுக்குத் தவிர வேறு ஒருவருக்கும் உத்தியோகமே கிடைக்காது. எல்லாம் அவர்களே அனுபவிப்பார்கள்!

## பார்ப்பனருக்கு உத்தியோகம் வேண்டியதில்லை

பார்ப்பனரல்லாத சிறுவர்களில் எவ்வளவோ பேர் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்துவிட்டு வேலைகள் அகப்படாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு பங்கா இழுத்துக் கொண்டும் செடிக்குத் தண்ணீர் ஊற்றுவதாக வேலை கேட்டுக் கொண்டும் அவஸ்தைப்படுகிறார்கள். ஆனால் அதுபோல் பார்ப்பனர்களுக்கு வேலை கிடைப்பதில் இவ்வளவு கஷ்டம் இருக்கிறதா என்று பாருங்கள். அவர்களுக்கு ஏற்கனவே ஜாதி காரணமாய் தாராளமாய் வேலை இருக்கிறது. கோவில்களில் இவர்களே இருக்கும்படி அமைத்துக் கொண்டார்கள். மோக்ஷ வாசலுக்கு டிக்கட் கொடுக்கும் வேலையும் இவர்களுடையதே, புரோகிதமும் இவர்களுடையதே, தர்மம் வாங்க யோக்கியதையும் இவர்களுக்கே, காப்பி ஹோட்டல்களெல்லாம் இவர்களுடைய தாகவே ஆய்விட்டன. பார்ப்பான் படிக்கு 40 இட்லி போட்டாலும் அங்குதான் போய் ½ அணாக் கொடுத்து வாங்குகிறோம். தமிழன் படிக்கு 8 இட்லி போட்டாலும் ஒருவனும் போய் ¼ அணாவுக்குக்கூட வாங்குவதில்லை. வாங்கித் தின்னமாட்டேன் என்கிறான்! இது சூத்திரன் கடை இட்லி என்று நம்மவனே சொல்லுகிறான்!

பார்ப்பனர்களில் உண்மையில் ஏழைகள் இல்லை. பஞ்சாங்கக்காரன் வீட்டில் போய்ப் பாருங்கள். அவன் வீட்டு ஸ்திரீகள் கழுத்தில் வைர நகைகள் அணிந்து கொண்டிருக்கிறார்கள்! அவன் வீட்டோடு ஒரு பெரிய குடியானவன் வீட்டை ஒப்பிட்டுப் பாருங்கள். அவ்விதம் பார்க்க முடியுமா? நாம் எத்தனை தலைமுறைக்கு இப்படி ஒருவழியுமில்லாமல் ஏமாந்து கிடப்பது? இப்போது அவர்கள் நம்மை உத்தியோக வேட்டைக்காரர்கள் என்று சொல்லுகிறார்களே என்று பயந்து ஓடுவதா? நமக்கு அறிவு இருந்தால் நாம் இந்தப் பார்ப்பனருடன் சேர்வதைவிட வெள்ளைக்காரருடன் தான் சேர்வோம்.

நம்மவன் பெரிய முதலாளியாக இருந்தாலும் அவன் காப்பி கடை கதவண்டை போய் வெளியே நின்று கொண்டு சாமி! சாமி! என்று கையை



RangaRakes tamilnavarasam.com

ஏந்திக் கொண்டு ஆருத்திரா தரிசனத்தில் விபூதி வாங்குவதுபோல் கத்துகிறான்! இந்த முதலாளியின் ஆளாக இருக்கக் கூடிய மோட்டார் ட்ரைவர் நேராக உள்ளே போய் சூடாக இட்லி தின்றுவிட்டு ராஜா மாதிரி வெளியே போகிறான்! எப்பொழுது நம்முடைய நிலை உயர்வது? எப்போது நம் சுயமரியாதை காப்பாற்றப்படுவது? அவர்களுக்கு இந்த மாதிரி கஷ்டம் உண்டா? ஆகவே பார்ப்பன சுயராஜ்யமும் நம் சுயராஜ்யமும் ஒன்றாய் இருக்க முடியுமா?

## ஜெயில் புரட்டு

இவர்கள் ஜெயிலுக்குப் போனோம் என்கிறார்கள். ஜெயிலுக்குப் போனால் என்ன கஷ்டம்? நான் ஜெயிலுக்குப்போன அந்த நாளில் மூத்திரச் சட்டியில்தான் தண்ணீர் குடிக்கவேண்டும். அந்த நாளில் நம்மவர்களுக்கு ஏ கிளாஸ் கிடையாது. நான் 6, 7 தடவை ஜெயிலுக்குப் போனவன்தான். இப்போது ஜெயில் வெகு சுகம். நான் இன்று ஜெயிலுக்குப் போனால் அதிக சுகமாக இருப்பேன். நான் இப்படி கஷ்டப்படுவதால் முன் இரண்டு தடவை சீக்கு ஆகிவிட்டேன். டாக்டர்கள் சும்மா இருந்து ஓய்வு எடுத்துக் கொள்ளும் படி சொன்னார்கள். நான் இப்பொழுது ஜெயிலுக்குப்போனால் ஓய்வு எடுத்துக் கொண்டு சுகமாகத்தான் இருப்பேன்.

சத்தியமூர்த்தி ஜெயிலுக்குப்போய் வந்த கதை உங்களுக்குத் தெரியாதா? போனவருஷம் சில பார்ப்பனர்களுடன் நான் ஜெயிலில் இருந்தேன். அங்கே அக்காரவடிசில் புளியோதரையெல்லாம் நாங்கள் தினமும் செய்து சாப்பிட்டோம். ஜெயிலில் என்ன கஷ்டம் என்கிறேன். காங்கிரஸ் காரர்களுக்கு சாப்பாட்டுக்கு வழி இல்லாவிட்டால் ஒரு கொடியைக் கையில் பிடித்துக் கொள்ள வேண்டியது; காந்திக்கு ஜே என்று கூச்சல் போட வேண்டியது; ஜெயிலுக்குப் போக வேண்டியது; போய் நன்றாய் அங்கே சாப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டியது என்கின்ற சவுகரியம் இருந்தது.

## காங்கிரஸ் யோக்கியதை

காங்கிரசானது 1885 முதல் 1936 வரையில் உண்மையாகவே ஏழைகளுக்கு என்ன நன்மை செய்தது? யாராவது சொல்லட்டுமே. எல்லாம் நஷ்டமும் கஷ்டமும் தான். ஆனால் நான் ஜஸ்டிஸ் கட்சியால் பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்லுகிறேன். அதனால் தேசத்தில் பார்ப்பனரல்லாத மக்களிடையில் அதிகம்பேர் படித்திருக்கிறார்கள். எத்தனையோ பேர்கள் உத்தியோகம் பெற்று அதனால் எத்தனையோ வகுப்புகள் முன்னுக்கு வந்திருக்கின்றன. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும் பெண்களும்கூட படித்து முன்னுக்கு வந்திருக்கிறார்கள். இப்பொழுது எவ்வளவோ பார்ப்பனரல்லாதார் வக்கீல்களாக இருக்கிறார்கள். பி.ஏ. பட்டம் பெற்றிருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரிகளாக



வருவதற்கு முன்பெல்லாம் பார்ப்பன இளைஞர்களே படிக்கவும் இப்படிப்பட்ட பட்டங்கள் பெறவும் வசதி இருந்தது. அதனால் அவர்களே 100க்கு 100 பேர் படித்தவர்கள் ஆனார்கள். இதையெல்லாம் நீங்களே ஆராய்ச்சி செய்து பார்த்துக் கொள்ளலாம்.

## போக்கிரித்தனம்

காங்கிரஸ்காரர்கள் காலிகளுக்குப் பணம்கொடுத்தும் கூலிகளை ஏவி விட்டும் என்னை காங்கிரசிலிருந்து பணம் எடுத்துக் கொண்டதாகச் சொல்லிக் கூச்சல் போடச் சொல்லுகிறார்கள். தட்டிப் பேச ஆள் இல்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டன் என்பது போல் இவர்கள் செய்கை இருக்கிறது.

நீ காங்கிரசிலிருந்து 5000 ரூ. எடுத்துக் கொண்டாய் என்கிறார்கள். நான் 5000 ரூ. எடுத்துக் கொண்டிருந்தால் அப்பொழுது சத்தியமூர்த்தி 10000 ரூபாயும் ராஜகோபாலாச்சாரி 20000 ரூபாயும் திருடி இருப்பார்கள். அதனால் தான் அவர்கள் அப்போதும் என்னை சும்மா விட்டு விட்டு இப்போதும் காங்கிரசுக்குக் கூப்பிடுகிறார்கள் என்று சொல்லவேண்டும். பின் ஏன் அவர்கள் அந்த நாளிலேயே என்னைக் கேட்கவில்லை? நான் காங்கிரஸ் பணத்தை எடுத்துக் கொண்டால் அதை வட்டியோடு கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அவர்கள் என்னிடம் வசூல் பண்ணிக் கொள்ள முடியாதா? என்னால் கொடுக்க வழியில்லாவிட்டால் இப்பவே சோலை நாடாரையும், சௌந்திர பாண்டியனையும் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கச் சொல்லுகிறேன். எப்பொழுது-எதில் என்று எந்தக் கழுதையாவது சொல்லட்டும்.

நான் காங்கிரஸ் பணத்தை எடுத்துக்கொண்டால் ராஜகோபாலாச்சாரி யாரும் காங்கிரஸ் பக்தர்களும் என்னை ஏன் காங்கிரசில் சேரும்படி இன்றும் கூப்பிடுகிறார்கள்? இதோ சத்தியமூர்த்தி முதலியவர்கள் பேசியதும், பத்திரிகையில் எழுதியதும், எனக்குக் கடிதம் எழுதினதும் பத்திரிகைகளைப் பாருங்கள். (கடிதம் பத்திரிகை படிக்கப்பட்டது) ''வரதராஜுலு நாயுடு காங்கிரசில் சேர்ந்து விட்டார்; கல்யாணசுந்தர முதலியார் காங்கிரசில் சேர்ந்துவிட்டார்; ஜியார்ஜ் ஜோசப் காங்கிரசில் சேர்ந்து விட்டார்; இனி ஈ.வெ.ராமசாமி நாயக்கர் தான் பாக்கி'' என்று சொல்லிக்கொண்டு அவர்கள் என்னைக் கூப்பிடுகிறார்கள். ஏன்? நான் இன்னும் ரூபாய் திருடி இவர்களுக்குப் பங்கு கொடுக்கவா?

## காலித்தனம்

எங்கள் கூட்டத்தில் இவர்கள் ஏன் காந்திக்கு ஜே என்று கூச்சல் போட வேண்டும்? இவர்கள் யோக்கியமும் நாணயமும் இல்லாமல் இருக்கிற பொழுது மற்றவர்கள் இவர்களிடத்தில் எப்படி யோக்கியமாயும் நாணயமாயும் நடந்து கொள்ள முடியும்? ''பொப்பிலிக்குக் கண் பெரியது; ஈ.வெ. ராமசாமி தாடி வைத்துக் கொண்டிருக்கிறான்; ராமசாமி முதலியார் தேசத் துரோகி;



RangaRakes tamilnavarasam.com

ஷண்முகம் செட்டி தேசத்துரோகி'' என்று இப்படி அவர்கள் நாணயமில்லாமல் பேசுகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியில் இன்ன குற்றம் இருக்கிறது என்று உண்மையாக எடுத்துச் சொன்னால் அது ஆண்மையாகும்.

டாக்டர் சுப்பராயனைவிட, தோழர் சத்தியமூர்த்தியைவிட, மோசமான ஆள் ஜஸ்டிஸ் கட்சியில் யார் இருக்கிறார்கள் சொல்லட்டும். பிறகு வேண்டுமானால் தோழர்கள் உபயதுல்லாவுக்கும் கிருஷ்ணசாமி பாரதிக்கும் மோசமானவர்கள் யார் என்று கேட்கலாம்.

கழுதை கழுத்தில் அட்டை எழுதிக் கட்டி நம் கூட்டத்தின் நடுவில் ஓட்டி விடுதல் கௌரவமுடையதா? கொஞ்சமும் யோக்கியம் இல்லை. அவர்கள் நம் கூட்டங்களில் கல்லையும் முட்டையையும் செருப்பையும் வீசினால் என்ன பிரயோஜனம்? நாம் கோழைகளா? அடிக்கு அடியும் உதைக்கு உதையும் கொடுக்க நம்மால் முடியாதா?

## செருப்படித் திருநாள்

சேலத்தில் ஒருவருக்கொருவர் இப்படி செருப்பால் அடித்துக் கொண்டதால் அது வழக்கத்துக்கு வந்து இப்பொழுது அங்கு செருப்படித் திருநாள் என்று திருவிழா நடக்கிறது. அதில் ஒருவரை ஒருவர் செருப்பால் அடித்துக்கொள்ளுகிறார்கள். அதுபோல் இனி அரசியலிலும் நேருக்கு நேர் செருப்படித் திருநாள் ஏற்பட்டு விடும்.

## காங்கிரசுக்கு வரத் தயார்

இன்றைக்கு உண்மையில் ஏழைகளின் கஷ்டங்களைச் சொல்லி முடியாது. அவர்களுடைய நலங்களை யாரும் கவனிப்பதில்லை. ஏழை மக்களை மேல் ஜாதியார் துன்புறுத்துவது சொல்ல முடியாததாக இருக்கிறது. நாம் இதையெல்லாம் கவனித்தே காங்கிரசையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றால் யோக்கியன் காங்கிரசுக்கு வராதபடி செய்து கொண்டார்கள். பார்ப்பனன் அடிமையைத் தவிர மற்றவனுக்கு அங்கு இடமில்லை. ஆனால் ஒரு கேள்வி. தேர்தல்களில் வெற்றிபெற்றால் எல்லாப் பதவிகளிலும் எல்லோருக்கும் வீதாச்சாரம் சமசந்தர்ப்பம் தருகிறோம் என்று அவர்கள் சொல்லட்டும். இது தேசத்துரோகம் என்று மிரட்டினால், என்ன முடியும்? எங்களை மிரட்டுவது போல் சாகிபை மிரட்டு; பெங்கால் முஸ்லீம்களைப் போய்மிரட்டு. உடனே பல்லை உடைத்துக் கையில் கொடுப்பார். அதனால் தான் அவருக்கு வீதாச்சாரம் கொடுக்க சரித்திர சம்மந்தமான காரணம் இருக்கிறதென்று காந்தியார் சொல்லுகிறார். நமக்குக் காரணம் இல்லையா? சாகிபைவிட எங்களுக்குத்தான் அதிக காரணம் இருக்கிறது. சாகிப்புக் கொடுக்க சரித்திர சம்பந்தமான காரணம் (Historical reason) இருக்கிற தென்றால் எங்களுக்கும் இருக்கிறது. சாகிப்பு வந்து 1000 வருஷம் ஆகிறதென்றால் நீ எங்களை 4000 வருஷமாய் சூத்திரன் (தாசிமகன்



வேசிமகன்) என்று சொல்லி ஒதுக்கி வைத்து விட்டாயே! சீக்கியர்க்கும் தாழ்த்தப்பட்டவர்க்கும்கூட வீதாச்சாரம் ஏற்படுத்தி ஆய்விட்டது. எங்களுக்கு மட்டும் ஏன் ஏற்படுத்த கூடாது? இது என்ன பித்தலாட்டம்! நாம் எத்தனை நாளைக்கு மூடர்களாக இருந்து கொண்டு இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருப்போம்! நாம் 100க்கு 97 பேர் இருந்தும் இன்னும் வீதாச்சாரம் பெறவில்லை யென்றால் அது தேசத்துரோகம் தான்.

ஒரு குடும்பத்தில் 2 பேர் பங்காளிகள் இருந்துகொண்டு ஒருவன் மற்றவனுக்கு வீதாச்சாரம் கொடுக்கவில்லை யென்றால் வக்கீலாயிருக்கிறவன் எல்லாவற்றையும் சாப்பிட்டு விட்டுப்போய் விடுகிறான். இந்த 2 பேரும் சண்டை போட்டுக்கொண்டு அழிந்து போவதைத் தவிர வேறு வழியில்லை. வீதாச்சாரம் கேட்பதற்காகக் காங்கிரஸ்காரர்கள் முட்டையையும் கல்லையும் செருப்பையும் எறிந்தால் அவர்கள் வட்டியுடன் அதற்கு பதில் பெற்றுத்தான் தீர்வார்கள். சைமன் கமிஷன் வந்த காலத்தில் எங்களை தேசத்துரோகிகள் என்று கூப்பாடு போட்டவர்களெல்லாம் திருவல்லிக்கேணியை விட்டு ஓட்டமெடுத்தார்கள். அப்படிக் கூப்பாடு போடுகிறவர்களை இனிமேலும் அப்படித்தான் அனுப்புவார்கள். எல்லா வகுப்பாருக்கும் இடம் தராமல் எல்லா வகுப்பாருக்கும் அவரவர்க்கும் உள்ள உரிமைகளைக் கொடுக்காமல் - தடங்கலெல்லாம் செய்து கொண்டு ''நாங்களும் நீயும் ஒரு தாய் வயிற்று மக்களானதால் எல்லாவற்றையும் நாங்கள் அனுபவித்தால் என்ன நீ அனுபவித்தால் என்ன'' என்று பேசி மக்களை ஏமாற்றாமல், ஒருவரோடொருவர் சமாதானமாயும் சமரசமாயும் வாழ உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன். (கரகோஷம்)

*குறிப்பு: 27.09.1936 ஆம் நாள் திண்டுக்கல்லில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரை. (04.10.1936, 11.10.1936 குடி அரசு தொடர்ச்சி)*

**குடி அரசு - சொற்பொழிவு - 18.10.1936**



RangaRakes tamilnavarasam.com

# கருப்புக்கொடி

சென்னை சுற்றுப் பிரயாணத்தில் பண்டிதர் ஜவஹர்லால் அவர்களுக்கு சென்ற இடங்களில் எல்லாம் பஹிஷ்கார பிரசுரங்கள் வினியோகங்களும் பல இடங்களில் கருப்புக் கொடிகள் பிடித்தலும் பல இடங்களில் ''பார்ப்பன கங்காணியே திரும்பிப்போ'' என்கின்ற கோஷமும் மற்றும் இதுபோன்ற பஹிஷ்காரக் குறிப்பும், அதிருப்திக் குறிகளும் நடந்த வண்ணமாகவே இருந்திருக்கின்றன.

இவற்றைப் பார்ப்பனப் பத்திரிகைகள் மறைத்தும் திரித்தும் கூறி வந்திருந்தாலும், எப்படியோ விஷயங்கள் வெளியாகி எல்லாப் பத்திரிகைகளும் அவற்றைத் தெரிந்தோ தெரியாமலோ, இஷ்டப்பட்டோ இஷ்டப் படாமலோ வெளிப்படுத்தி அவற்றின் மீது தங்களது அபிப்பிராயக் குறிப்புகளும் வெளியாக்கி விட்டன.

கருப்புக்கொடியானது, தமிழ் நாட்டில் பண்டிதர் ஜவஹர்லாலுக்கு மாத்திரம் பிடிக்கப்பட வில்லை. தோழர்கள் காந்தியார், ராஜேந்திரபிரசாத் முதலாகிய காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்களுக்கெல்லாம் பிடிக்கப்பட்டன. அவற்றின் காரணமும் அவ்வப்போதே சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது காங்கிரஸ் தலைவர்கள் இங்கு காங்கிரசின் பேரால் தெரிந்தோ தெரியாமலோ பார்ப்பனர்களுக்கு அனுகூலமாக பிரசாரம் செய்யவும், பணம் வசூலித்து பார்ப்பனர்களுக்கு கொடுத்து அவர்களின் விஷமப் பிரசாரத்துக்கு ஆக்கமளிக்கவும் வருகிறார்கள். ஆதலால் அவற்றிற்கு இடம் கொடுக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தக் காரணங்கொண்டே சற்றேறக்குறைய தமிழ்நாட்டில் உள்ள எல்லா சுயமரியாதைக்காரர்களும் பஹிஷ்கரித்து வந்திருக்கிறார்கள். அது போலவே இப்போது தோழர் ஜவஹர்லாலும் பார்ப்பனர் கையாளாகவே தமிழ்நாட்டுக்கு வந்தார். ஜஸ்டிஸ் கட்சியை வைதார். வழக்கம் போலவே அவரும் பஹிஷ்கரிக்கப்பட்டார். இதில் புதுமை காண யாருக்கும் இடமில்லை. ஆனால் தங்களை புதுமையாக்கிக் கொண்டவர்களுக்கு இவ்விஷயம் புதுமையாகக் காணப்படுவதில் ஆச்சரியமிருக்க நியாயமில்லை என்பதோடு அப்படிப்பட்ட புதுமைகளை அவர்களைத் தவிர மற்ற யாவரும் லக்ஷியமாய் கருதப் போவதுமில்லை.

நிற்க, கருப்புக் கொடியும் பகிஷ்காரமும் என்பது காங்கிரசுக்காரர்கள் கண்டுபிடித்ததென்றும் அதைப்பார்த்து மற்றவர்கள் காப்பி அடிக்கிறார்கள்



என்றும் எழுதி சிலர் பெருமையும் திருப்தியும் கொள்ளுகிறார்கள். அது உண்மையாகவே இருக்கட்டும். ஆனால் கருப்புக்கொடியும் பஹிஷ்காரமும் அவர்களுக்கென்றே ரிஜிஸ்டர் செய்யப்பட்டு விடவில்லை.

இஷ்டப்படாதவர்கள் எவரும் தங்களுக்கு இஷ்டப்படாத எவரையும் பஹிஷ்கரிக்க பிரிட்டிஷ் ஆட்சி சட்டம் குறுக்கிடவில்லை.

ஆதலால் அதை யார் மறுத்தாலும் பஹிஷ்காரம் செய்ய காங்கிரசுக் காரர்களுக்கு இருப்பது போன்ற உரிமை எவருக்கும் இருந்து வருகிறது.

இந்தியரை பஹிஷ்கரிப்பது ஒழுங்கல்ல என்பது சிலரது வாதமாய் காணப்படுகிறது. இந்தியர்களை பகிஷ்கரிக்கும் வேலையும், ''காங்கிரசுக்காரர்கள் தான் மற்றவர்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள்'' என்பதே அவர்களுக்கு நாம் அளிக்கும் பதிலாகும்.

சமதர்ம வீரரை பஹிஷ்கரிக்கக் கூடாது என்பது வேறு சிலரின் வாதம். இந்த வாதம் சமதர்மக்காரன் என்று தன்னை சொல்லிக் கொள்பவர்களும் சொல்லுகிறார்கள் என்பதோடு சமதர்மம் வந்தால் தங்கள் நிலைக்கே ஆபத்து என்று கூறுகிறவர்களும் சொல்லுகிறார்கள். பண்டிதரின் சமதர்மம் வெண்டைக்காய் சமதர்மமாகும். ''சமதர்மம் தான் எல்லாவற்றிற்கும் வழி'' என்று சொல்லுவதுடன் அவரது சமதர்மம் முடிந்து விடுகிறதே தவிர அதற்கு அவரது திட்டம் என்ன என்பதைப்பற்றி இதுவரை ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அன்றியும் தன்னிடம் சமதர்மத்துக்கு யாதொரு திட்டமும் இல்லை என்று வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டு விட்டார். அதோடு பணக்கார வியாபாரிகளுக்கும், பூமிக்கார ஜமீன்தாரர்களுக்கும் ''நான் சமதர்ம விஷயமாய் எவ்வித காரியமும் செய்யப் போவதில்லை'' என்று வாக்கும் கொடுத்து விட்டார். இந்நிலையில் அவரை எந்த வாயைக் கொண்டு சமதர்மவாதி என்று அழைப்பது என்பது நமக்கு விளங்கவில்லை.

பகுத்தறிவு வாதியை பஹிஷ்கரிக்கலாமா என்பது மற்றும் சிலரின் வாதம். பண்டிதரின் பகுத்தறிவுக்கு அவர் எலும்பை கங்கையில் போட்டு செத்துப் போனவர்களுக்கு மோட்சம் கொடுத்ததே சாட்சி போதாதா என்கிறோம்.

நமது நாட்டுக்கு வந்த ஒரு விருந்தாளியை பஹிஷ்கரிக்கலாமா என்பது இனி ஒரு சிலரின் ஆவலாதியாய் இருந்து வருகிறது. ஜவஹர் எந்த முறையில் யாருக்கு விருந்தாளி? நமக்கா? பார்ப்பனர்களுக்கா? விருந்து உண்டு போக வந்தாரா? தமிழ் மக்களை வைது விட்டுப்போக வந்தாரா? என்ன உத்தேசத்தில் என்ன காரியத்துக்காக வந்து திரிகிறார்? என்பவைகளை யோசித்துப் பார்த்தால் அவர் நமக்கு விருந்தாளியா பகையாளியா என்பது நன்றாய் விளங்கும்.

ஆகவே தோழர் ஜவஹர்லாலை தமிழ் மக்கள் பஹிஷ்கரித்தது மிகவும் சரி என்பதை யாவரும் உணரலாம்.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் காங்கிரசுக்காரர்கள் பஹிஷ்கரிக்கும் முறையில் நாம் பஹிஷ்கரிக்கவில்லை. காங்கிரஸ்காரர் பகிஷ்காரமானது பழஞ் செருப்பு வீசுவது, முட்டை எறிவது, கழுதை கழுத்தில் அட்டை கட்டி விரட்டுவது ஆகிய முறைகளைக் கொண்டதாகும். இந்த மூன்று காரியமும் இப்பொழுது சுயமரியாதைக்காரர் பஹிஷ்கரித்த முறையைவிட மிகவும் சௌகரியமும் சுலபமுமான காரியமேயாகும். ஆனாலும் மனிதத்தன்மையையும் வீரத்தையும் உத்தேசித்து சு.ம. காரர்கள் அக்காரியங்கள் கண்டிப்பாகக் கூடாது என்று நிர்ப்பந்தமாய் நிறுத்திவிட்டார்கள்.

அவர்கள் அப்படிச் செய்ய வேண்டுமென்று கருதியிருந்தால் காங்கிரஸ்காரர்களுக்கு கிடைக்கும் கழுதைகள், செருப்புகள், முட்டைகள் ஆகியவற்றைவிட அதிகமாகவே கிடைத்திருக்கும். ஆனால் சு.ம. காரர்களுக்கு பொறுப்பும், மனிதத் தன்மையும், மானமும் இருப்பதால் காணாமல் செய்து விட்டு கோழைப் பட்டம் சம்பாதித்துக்கொள்ள அவர்களுக்கு இஷ்டமில்லை.

ஆகையால் பகிஷ்காரத்தை நேர்மையாகவும் ஆண்மையாகவும், சாந்தத்துடனும் நடத்தினார்கள். கலகமேற்பட்டால் சர்க்காரார் பஹிஷ்காரத்தை நிறுத்தி விடுவார்கள் எனக் கருதி மிகவும் சாந்தத்துடனும் பொறுமையுடனும் நடத்தினார்கள். பார்ப்பனக் கூலிகளும் அடிமைகளும் தங்களாலான அளவுக்கு கலகமும் செய்தார்கள், மறைக்கவும் செய்தார்கள். ஆனாலும் அதைப்பற்றி நமக்கு கவலை இல்லை. ஆனால் பார்ப்பனரல்லாதார் என்று தங்களை கருதிக்கொள்ளும் சிலர் பஹிஷ்காரத்தை கண்டித்துப் பார்ப்பனரிடம் கூலி பெறுகிறார்களே இதைக் காணத்தான் நமக்கு பரிகாசமாய் இருக்கின்றது.

சமீப காலத்தில் சேலத்தில் சு.ம. தொண்டர்களை காங்கிரஸ் காலிகள் அடித்தார்கள்.

ஜஸ்டிஸ் கட்சி தலைவர்கள் செல்லுமிடங்களில் காங்கிரஸ் காலிகள் கூட்டங்களில் குழப்பம் செய்தார்கள். கழுதைகள் கழுத்தில் அட்டை கட்டி விட்டார்கள். கூட்டத்தில் முட்டைகளையும் செருப்புகளையும் வீசினார்கள். சென்னை கார்ப்பரேஷன் மீட்டிங்கில் தோழர் அலமேலு மங்கைத் தாயாரம்மாள் மீது முட்டை எறிந்து அந்தம்மாள் அவர்களின் உயர்ந்த சேலைகளை அசிங்கப்படுத்தினார்கள். அந்தம்மாள் பக்கம் செருப்பை எறிந்தார்கள்.

இதைப்பற்றி பார்ப்பனப் பத்திரிகைகளோ அவர்களது அடிமைப் பத்திரிக்கைகளோ வாய்திறக்கவில்லை. தங்களை சு.ம. வீரர்கள் என்று சொல்லிக் கொள்ளும் சமய சஞ்சீவிகளும் வாய் திறக்க வில்லை. அந்த அம்மாள் அவர்களே செருப்பையும் முட்டையையும் வீசிய காந்திக் குல்லாய் அயோக்கியனை கைப்பிடியாய் பிடித்துக்கொடுத்தும் நன்றியும் நாணயமுமற்ற மேயர் கவனியாமல் அயோக்கியனுக்கு உதவியாய் இருந்தார்.



ஆகவே இம்மாதிரி காரியங்கள் பதிலுக்கு பதில் செய்து கொண்டே போய் கையில் வலுத்தவன் ஜெயம் பெற்ற பிறகுதான் அடக்கப்பட முடியுமே அல்லாமல் வெறும் போலி வேதாந்தம் பேசுவதால் ஒழிந்துவிடும் என்று நாம் கருதவில்லை.

நிற்க, இதுவரை பஹிஷ்கரித்தவர்களை யெல்லாம் விட ஜவஹர்லாலை பகிஷ்கரித்தது மிகவும் சரியான காரியம் என்பதை ஜவஹர்லாலே தெளிவாய் காட்டிக்கொண்டார்.

பண்டிதர் ஜவஹர்லால் தமிழ் நாட்டிற்கு வந்தது **தேர்தல் பிரசாரத்துக்கும் பணம் வசூலிப்புக்கும் என்பதை நன்றாய் ஒப்புக் கொண்டார்.**

**அற்பத்தனமான முறையில் மற்ற கக்ஷிகளைப் பற்றி பேசினார். முன் வரிக்கு பின் வரி மனதறிந்த பொய் பேசி வருகிறார்.**

**கீழ்த்தர மக்கள் முறையில் பேசி வருகிறாரே ஒழிய கவுரவமுள்ள மக்கள் வாயில் வரும் பேச்சு பேசுவதில்லை.**

**சத்தியமூர்த்தியார், உபயதுல்லா சாயபு, குப்புசாமி முதலியார் பேச்சுகளுக்கும் ஜவஹர்லாலார் பேச்சுக்கும் ஏதும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியவில்லை.**

**பதில் சொல்ல முடியாத சமயத்தில் இழிமக்கள் போலவே வைது விட்டுத் தப்பித்துக் கொள்வது என்கின்ற இழி முயற்சியை கையாடி இருக்கிறார்.**

இவை மாத்திரம் அல்லாமல் ஜவஹர்லால் விஜயத்தால் பொதுவாக ஏற்பட்ட நன்மை என்ன என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

### வீர வசந்த ராயர்

வீர வசந்த ராயர் என்று ஒருவர் வரப்போகிறார் என்று சொன்னவுடன் தமிழ் மக்கள் நகரத்திலும் கிராமத்திலும் தங்கள் தங்கள் வீட்டு கதவுகளுக்கு நாமம் போட்டுவிட்டு கூட்டம் கூட்டமாய் தெருவில் நின்று ஓடி அலைந்தது கொஞ்சகாலத்துக்கு முன் தமிழ்நாட்டில் நடந்த சம்பவமாகும்.

ஆதலால் தமிழ்நாட்டு மக்களின் மூடத்தனத்தைக் கொண்டுதான் ஒரு மனிதனின் பெருமையை விளக்கவேண்டி இருக்குமானால் அம்மனிதனின் உண்மையான யோக்கியதை எவ்வளவாயிருக்கும் என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை.

கணித சாஸ்திரத்தில் பூஜ்ஜியத்துக்கு மதிப்பில்லை என்பது ஒரு விதி. அந்த விதியை பார்ப்பனப் பத்திரிகைகளும், பார்ப்பன நிருபர்களும் கையாண்டு விட்டார்கள். அதாவது எந்த ஊருக்கு ஜவஹர்லால் போனாலும் அங்கு 10000, 50000, 100000 பேர்கள் வந்திருந்தார்கள் என்று பெரிய



RangaRakes tamilnavarasam.com

எழுத்துகளில் போட்டு விட்டார்கள். உண்மை 10-ல் ஒரு பங்கு கூட இல்லை என்பது அந்தந்த ஊர் சேதி பத்திரிகையில் வந்திருப்பதை அந்தந்த ஊர்க்காரர்கள் பார்த்தால் விளங்கிவிடும்.

முதலாவது கருப்புக்கொடிக்குப் பயந்து ஒவ்வொரு ஊரிலும் ஜவஹர்லால் வரும் நேரத்தை குறிப்பாக குறிப்பிடாமலே வைத்துக் கொண்டார்கள். இரண்டாவது அவர் வரும் தடம் இன்னது என்பதில் ஒன்றைக்காட்டி மற்றொரு வழியில் அழைத்து வந்திருக்கிறார்கள். அந்தந்த ஊரில் 1 நிமிஷம், 2 நிமிஷம் கூட நிற்காமல் ஓட்டம் ஓட்டமாய் ஓடி இருக்கிறார்கள். தினம் 200 மைல் 300 மைல் என்று ஆகாயக்கப்பல் வேகத்தில் நடத்தி இருக்கிறார்கள். இந்த குறிப்பு இல்லா நேரத்தில் இந்த அவசரத்தில் இந்த வழி மாறி மாறி மக்களை ஏமாற்றி ஓடும் நிலையில் என்ன பேசி இருப்பார் என்ன நடந்திருக்கும் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

மொத்தத்தில் பார்க்கப் போனால் இவைகள் எல்லாம் பார்ப்பனர்கள் ஜவஹர்லாலுக்கு தமிழ் நாட்டின் நிலைமை அறியச் செய்யாமல் இருக்கச் செய்த சூழ்ச்சியே ஒழிய வேறில்லை. இவை ஒருபுறமிருக்க, ஜவஹர்லாலுக்கு ஏற்கனவே அறிவுக் கண் கிடையாது. அதோடு பார்ப்பனர்கள் செய்த அவசரக்கோலம் ஜவஹரின் காதையும் செவிடாக்கி விட்டது. ஜவஹர்லால் தமிழ்நாட்டின் உண்மை தெரிந்திருந்தால் தமிழ் மக்களுக்கு பெரிய நன்மை ஒன்றும் வந்துவிடப்போவதில்லை. தெரியாததினால் முழுகிப் போவதும் ஒன்றுமில்லை அது உலகறிந்த விஷயமாகும். ஆதலால் இது ஒத்தைக் காசைக்கொண்டு சூரியனை மறைக்கச்செய்த முட்டாள் தனம் போல்தான் முடிந்ததே தவிர பார்ப்பனர்களுக்கு எவ்வித வெற்றியும் ஏற்பட்டு விட்டதாகச் சொல்ல முடியாது. இதனால் பார்ப்பனர்களின் முயற்சி வீணாயிற்று என்பதோடு ஜவஹர்லாலின் யோக்கியதையும் வெளியாயிற்று என்றுதான் சொல்லவேண்டும்.

உதாரணமாக செட்டிநாட்டில் பிரதானப் பட்டணமாகிய தேவக்கோட்டையில் தோழர்கள் ஈபன், டாக்டர் மூர்த்தி நாயுடு முதலிய வக்கீல், டாக்டர் ஆகியவர்களே கருப்புக்கொடி ஏந்தி ஜவஹர்லாலை பஹிஷ்கரித்ததும், அதைப் பார்ப்பன போலீஸ் இன்ஸ்பெக்டரும், பார்ப்பன சப் மேஜிஸ்ட்ரேட்டும் தடுத்து கொடி பிடித்தவர்களை அரஸ்டு செய்யச் சொன்னதுமான பார்ப்பன ஆதிக்கக் காரியங்கள் மற்றொரு பக்கத்தில் காணலாம்.

மற்றும் தொழிலாளர்களும் சிறப்பாக பொன்மலை தொழிலாளர்கள் காங்கிரசை முதலாளிகள் ஆதிக்க ஸ்தாபனம் என்றும், காங்கிரஸ் இதுவரை தொழிலாளிகளுக்கு பல கெடுதிகள் செய்து வந்திருக்கிறதேயல்லாமல் நன்மை ஒன்றும் செய்யவில்லை என்றும் ஆதாரங்கள் காட்டி (ஜவஹர் லாலை) பகிஷ்கரித்திருப்பதையும் மற்றொரு பக்கம் காணலாம்.



இவ்வளவு பகிஷ்காரத்துக்கும் எதிர்ப்புக்கும் ஜவஹர்லாலின் பதில் ஒரே பல்லவியாகத்தான் இருந்து வந்திருக்கிறது. அதாவது, ''நீங்கள் ஜமீன்தார் பிரதிநிதிகளா? சர்க்கார் பிரதிநிதியா?'' என்பதேயாகும். இது ஒரு கோழைச் சமாதானமே தவிர ஆண்மைச் சமாதானமாக ஆகாது. ஏனெனில் எதிரிகளது காரியத்துக்கு சமாதானம் சொல்லி விட்டு பிறகு இப்படிச் சொன்னால் அது ஆண்மையாகலாம்.

இப்போதும் நாம் சொல்லுகிறோம். அதாவது ஜவஹர்லால் தமிழ் நாட்டில் இறங்கின நிமிஷம் முதல் தமிழ் நாட்டை விட்டு ரயிலேறும் நிமிஷம் வரை ஒரே மாதிரி பேச்சாக எல்லா ஊரிலும் ஒரு எழுத்துக் கூட மாற்றமில்லாமல் பேசியதையே பேசிவரும் அவரது பேச்சில் முக்கிய பல்லவியாகிய வேலையில்லாத் திண்டாட்டம், ஏழ்மை ஆகியவற்றைப் போக்க வந்திருப்பதாகச் சொல்லுவதை மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்கச் சொல்லும் சூழ்ச்சிப் பேச்சென்றே சொல்லுகிறோம்.

ஏனெனில் இவரிடம் அக்காரியங்களுக்கு திட்டம் என்ன இருக்கிறது என்று யோசித்துப் பார்க்க விரும்புகிறோம்.

வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் ஏழ்மைக்கும் மருந்து சமதர்மம் தான் என்கிறார். சமதர்மத்துக்கு இப்போது தன்னிடம் திட்டம் ஒன்றும் இல்லை என்று ஒரு இடத்திலும், சுயராஜ்ஜியம் கிடைத்த பிறகுதான் சமதர்மப் பேச்சு என்று மற்றொரு இடத்திலும், உலகப் புரட்சி வரும் போதுதான் சமதர்மம் ஏற்படலாம் என்று இன்னொரு இடத்திலும் இப்படியாக குளறிக் கொட்டி வருகிறார்.

வாஸ்தவத்தில் ஜவஹர்லால் உண்மை சமதர்மக்காரராய் இருந்தால் நமது பார்ப்பனர்கள் இத்தனை பேரும் அவரை சங்கராச்சாரி ஆக்கி இருப் பார்களா என்பதை யோசித்துப் பார்க்க விரும்புகிறோம்.

ஜவஹர்லால் அவர்களுக்கு அரசியல் ஞானமாவது இருக்கிறதா என்பதை அவரது சென்னை பேச்சு முதல் கடசி தென்னாற்காடு பேச்சு வரை அலசிப் பார்த்தால் மடையனுக்கும் விளங்கும்.

தான் ஒரு சாமியாடி போலும் மற்றவர்களை வாக்கு கேட்கும் அடி மண்டுகள் போலும் கருதிக்கொண்டு அறைத்த மாவை அறைப்பதுபோல் ஒரேமாதிரி எழுதிப் படிப்பவர் போல் படித்துக் கொண்டே போகிறார்.

ஒரு கேள்விக்குக்கூட பதில் சொல்லத்தெரியாமல் போன ஊர்களில் எல்லாம் கேள்வித்தாள்களை பார்த்துவிட்டு கசக்கி கீழே போட்டுவிட்டு வாய் குளறி இருக்கிறார். சில இடங்களில் கேள்விக்காரர்களை வைது அடக்கி விரட்டி இருக்கிறார்.



RangaRakes tamilnavarasam.com

அருப்புக் கோட்டை தோழர்கள் கேள்வியை பார்த்து விட்டு திடீரெனக் கோபித்து சு.ம. காரர்கள் பொய்யர்கள் என்று வைது பதில் சொல்லாமல் தப்பித்துக்கொண்டிருக்கிறார்.

சு.ம. இயக்கம் இருப்பதே தனக்கு தெரியாது என்று சொல்லுகிறார். கொளும்பிலும், திருநெல்வேலியிலும், நாகர்கோவிலிலும் 2 வருஷத்துக்கு முன் வந்திருந்தபோது அதைப் பாராட்டி பேசி இருக்கிறார். இவர் மாத்திரமல்லாமல் காந்தியார் முதல் சத்தியமூர்த்தி வரை ராஜகோபாலாச்சாரியார் உள்பட சு.ம. இயக்கத்தைப் பாராட்டி காங்கிரசோடு சேரும்படி கூப்பிட்டிருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் இருக்க சிறிதும் முன் பின் யோசனை இல்லாமல் காலிப் பிரசாரகர் போல் நடந்து கொண்டு காங்கிரசின் தலைமை ஸ்தாபனத்தின் மதிப்பை அடியோடு ஒழித்திருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது.

இம்மாதிரி போலி சமதர்மம் பேசி முட்டாள்கள் வாயால் சமதர்ம வீரப் பட்டம் பெறுவதைப் பார்க்கிலும், அயோக்கியர்களுக்கு போலி சமாதானத்துக்கு இடம் கொடுப்பதைப் பார்க்கிலும் நாணயமாக உண்மையையும் சாத்தியா சாத்திய சவுகரியத்தையும் சொல்லி யோக்கியமாய் நடந்து கொள்ளுவது உண்மையான வீரனின் செய்கை என்றே சொல்லுவோம்.

இவர் கூறும் சுயராஜ்யத்துக்கு ஆவது இவரிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

சட்ட சபைக்குப் போவதால் சுயராஜ்யம் கிடைத்து விடுமா?

இவர் தகப்பனாரே ''சட்டசபை மெனக்கெட்ட வேலை சபை'' என்று சொன்னாரே அதை மறந்து விட்டாரா? சுயராஜ்யம் என்றால் என்ன என்றாவது எங்காவது கூறி இருக்கிறாரா? ஒன்றும் இல்லாமல் தமிழ் நாட்டில் ஒரு பறவை பறந்துவிட்டுப் போய் விட்டார்.

**குடி அரசு - தலையங்கம்** - 18.10.1936

# கோபியில் நடந்தது என்ன?

தோழர் ஜவஹர்லாலுக்கு கோபியில் கருப்புக்கொடி பிடித்து பஹிஷ்கரித்ததைப் பற்றி காங்கிரஸ் பத்திரிகைகள் என்பவை அயோக்கியத் தனமாகத் திரித்துக் கூறி இருக்கின்றன.

பத்திரிகை நிருபர்கள் பெரிதும் பார்ப்பனர்கள் என்பதும் அவர்கள் இம்மாதிரி விஷயங்களில் 100க்கு 99-ல் அற்பத்தனமாகவே நடந்து கொள்ளுகிறார்கள் என்பதும் எவ்வளவு தான் கண்டித்தாலும் அவர்களுக்கு ரோஷம் என்பது மருந்துக்குக் கூட ஏற்படுவதில்லை என்பதும் நாம் இதற்கு முன் அனேக தடவை வெளியிட்ட காரியமாகும். ஆகவே கோபியில் நடந்த விஷயத்தில் சில பத்திரிகை நிருபர்கள் அயோக்கியத்தனமாய் நடந்து கொண்டதில் அதிசயமில்லை. ஆனால் ''மெயில்'' பத்திரிகை நிருபர் அடியோடு அது போல் நடந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் ''மெயில்'' பத்திரிகை சொந்தக்காரர் முழுப்பார்ப்பனர் அல்ல. ஆதலால் கேள்விக்கு பதில் சொல்லவேண்டி வருமே என்று பயந்து கொஞ்சமாவது உண்மை எழுதவேண்டியதாகி விட்டது.

அதாவது கோபியில் கருப்புக் கொடிபிடித்தவர்களை தோழர் ஜவஹர்லால் கூப்பிட்டதாகவும் கருப்புக்கொடி பிடித்தவர்கள் பயந்து கொண்டு நழுவி விட்டதாகவும் பல காங்கிரஸ் பத்திரிக்கைகள் என்பவைகள் எழுதி இருக்கின்றன. நிருபரில்லாத சில பத்திரிக்கைகள் அவற்றைப் பார்த்து காப்பி அடித்திருக்கின்றன.

ஆனால் ''மெயில்'' பத்திரிகை நிருபர் கருப்பு கொடி பிடித்தவர்களை பண்டிதர் ஜவஹர் கூப்பிட்டார். கருப்புக்கொடிக்காரர் வந்தார்; ஜவஹர் கேட்ட கேள்விக்கு பதிலளித்தார்'' என்று எழுதி இருக்கின்றார். (கோபியில் இருந்து வந்த சேதியையும் மற்றொருபுறம் பிரசுரித்திருக்கிறோம்.) ஆகவே இம்மாதிரி விஷயங்களில் பார்ப்பனப் பத்திரிக்கைகளும் அவற்றின் நிருபர்களும் எவ்வளவு யோக்கியமாய் நடந்துகொள்கிறார்கள் என்பதை பொது ஜனங்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமாய் விரும்புகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம்** - 18.10.1936



RangaRakes tamilnavarasam.com

# சிவில் ஜெயில் இல்லை

கடன் பட்டவர்களுக்கு ஜெயில் வாசம் விதிக்க இருக்கும் சட்டத்தை எடுத்துவிட வேண்டுமென்று நாம் வெகு காலமாக எழுதி வந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும்.

அதற்காக என்றே சிலர் சிவில் ஜெயிலுக்கு போனதும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும்.

இப்போதுதான் அந்த கிளர்ச்சிக்கு வெற்றி ஏற்பட்டது. அதாவது சென்ற வாரத்தில் இந்திய சட்டசபையில் கடன்காரர்களை ஜெயிலுக்கு பிடிக்கக்கூடாது என்று ஒரு சட்டம் செய்யப்பட்டு விட்டது.

ஆனால் அதில் பணம் வைத்துக்கொண்டு கொடுக்க மாட்டேன் என்றால் அப்படிப்பட்டவனுக்கு இந்த சட்டம் பயன்படாது என்று ஒரு நிபந்தனை கண்டிருக்கிறது.

அப்படிப்பட்டவர்கள் கடன்காரர்கள் என்பவர்களில் 100 -க்கு 10 பேர்கள்தான் இருக்கக்கூடும். அந்த 100 -க்கு 10 பேர்களிலும் ஒருவர் இருவர்தான் பணம் வைத்துக் கொண்டிருப்பதை கண்டுபிடிக்கப்படக் கூடியவர்களாக இருப்பார்கள்.

ஆதலால் அந்த நிபந்தனையில் அந்த சட்டம் பாதிக்கப்பட்டு விட மாட்டாது என்பது நமதபிப்பிராயமாகும்.

இந்த சட்டம் தப்பாக கையாளப்பட்டாலும் கூட பிரமாத குற்றமில்லை என்று கருதுகிறோம். ஏனெனில் வட்டிக்கு ஆசைப்பட்டு கண்டபடி கடன் கொடுத்து மக்களின் நாணயத்தையும் தகுதியையும் பாழாக்கும் லேவாதேவிக் காரர்களின் அட்டூழியம் ஒரு அளவுக்காவது ஒழியும் என்றே கருதி மகிழ்ச்சி அடைகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 18.10.1936**



# ஜவஹருக்கு பல ஸ்தல ஸ்தாபனங்களில் வரவேற்பில்லை

பண்டித ஜவஹர்லாலுக்கு தென்னாட்டிலுள்ள பல ஸ்தல ஸ்தாபனங்களில் வரவேற்பில்லை.

சென்னை கார்ப்பரேஷனில் முதலில் வரவேற்பளிப்பதில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது. பின் கோழி முட்டையும், செருப்புகளும் வீசி காலித்தனம் செய்து வரவேற்பளிப்பதெனத் தீர்மானம் செய்துகொள்ளப்பட்டது.

திருச்சியிலும் முதலில் வரவேற்பளிப்பதில்லையென முனிசிபாலிட்டியில் தீர்மானிக்கப்பட்டது. பின் அங்கும் காங்கிரஸ் காலிகள் செருப்புகளும் அழுகல் முட்டைகளும் எறிந்து காலித்தனம் செய்து வரவேற்பளிப்பதெனத் தீர்மானம் செய்துகொள்ளப்பட்டது.

மதுரை ஜில்லாபோர்டிலும் வரவேற்பளிப்பதில்லை யெனத் தீர்மானித்து விட்டது.

கிருஷ்ணகிரி யூனியன் போர்டில் வரவேற்புக் கொடுப்பதற்கு முயற்சித்தார்கள். ஆனால் அங்கு கொடுப்பதில்லை யென தீர்மானிக்கப்பட்டது.

ஈரோட்டிலும் வரவேற்பளிக்க முயற்சித்தார்கள். இங்கு அவர்களுக்கு பலமில்லை யென்று தெரிந்ததும் அந்த முயற்சியை நிறுத்திவிட்டார்கள்.

திண்டுக்கல்லிலும் வரவேற்பளிக்க முயற்சித்தார்கள். அங்கும் அவர்களுக்கு பலமில்லாததால் அம்முயற்சியும் நிறுத்தப்பட்டது.

விருதுநகர் முனிசிபாலிட்டியிலும் வரவேற்பில்லை. இதுபோல் இன்னும் பலவிடங்களில் வரவேற்பில்லை.

இம்மாதிரி வடநாட்டிலிருந்து வந்த எந்தத் தலைவருக்கும் நடக்கவில்லை. ஜவஹருக்கு மட்டும் ஏன் இப்படி நடந்ததென்றால் அவரது முட்டாள்தனமான நடத்தையாலே தான். இதுமட்டுமல்ல, இவர் சென்று விட்டுவந்த விடங்களிலெல்லாம் இவர் நடந்துகொண்டதைப் பற்றி பொது ஜனங்கள் மிகவும் வெறுப்பாகவும், இழிவாகவும் பேசுகிறார்கள். இவர் இப்போது தென்னாட்டிற்கு வந்து போவது ஒரு வகைக்கு நலமென்றே



RangaRakes tamilnavarasam.com

கருதுகிறோம். ஏனெனில் இவரைப் பற்றி ‘‘இந்திரன், சந்திரன்’’ என்று பார்ப்பனர்கள் புகழ்ந்து பாமர ஜனங்களை ஏமாற்றி வந்ததை தெரிந்துகொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டதே யாகும்.

ஆகையால் இனிமேலாவது பொதுஜனங்கள் காங்கிரஸ் பெயரால் பார்ப்பனர்கள் ஏமாற்றி வருவதைக் கண்டு ஏமாறாமலிருக்க வேண்டுமென்று எச்சரிக்கிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம்** - 18.10.1936



# பார்ப்பனரல்லாதார் பிரசாரக் கமிட்டிக்கு கோலாலம்பூர் விஸ்வலிங்கம் உதவி

பார்ப்பனரல்லாதார் மத்திய பிரசாரக் கமிட்டிக்கு நன்கொடையாக கோலாலம்பூர் தோழர் விஸ்வலிங்கம் அவர்கள் அனுப்பிய 10 ரூபாயும் வரப்பெற்றோம். ஷை தோழர் விஸ்வலிங்கம் அவர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னவரின் கட்சியபிமானத்தையும் பாராட்டுகிறோம். ஷை தொகையை மத்தியக் கமிட்டி பொக்கிஷதார் தோழர் வி.வி. ராமசாமி அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

**( ப - ர் )**

**குடி அரசு - பெட்டிச் செய்தி** - 25.10.1936



RangaRakes tamilnavarasam.com

# பண்டிதர் கேள்விக்கு பதில்

பண்டிட் ஜவஹர்லால் சுற்றுப்பிரயாணத்தில் சுயமரியாதைக்காரர்கள் பல இடங்களில் கருப்புக்கொடி பிடித்தும் பஹிஷ்காரம் செய்தும் நடத்தின ஆடம்பர ஊர்வலங்களில் முதலில் சில இடங்களில் அலட்சியமாய் கருதி துச்சமாய்ப்பேசினார் என்றாலும் அனேகமாக ஒவ்வொரு இடங்களிலும் அவர் கருப்புக்கொடியும் பஹிஷ்காரக் கோஷமும் நேரில் கண்டதால் நாகப்பட்டணத்தில் அதன் விபரத்தை ''நடு நிலையில்'' நின்று அறிந்து கொள்ள வேண்டிய அவசியத்திற்குள்ளானார். அது சமயம் கருப்புக்கொடி பிடிக்கப்படுவதினுடையவும் பகிஷ்காரத்தினுடையவும் காரணங்கள் கண்டறிந்து பண்டிதர் ஆதியில் தனது அறியாமையால் இரண்டொரு இடங்களில் துச்சமாய்ப் பேசினதற்கு ஆக மன்னிப்பும் கேட்டுக்கொண்டு சுயமரியாதை இயக்கத்தலைவர்கள் தனக்கு விளக்கவேண்டும் என்று 6 கேள்விகள் கேட்டிருக்கிறார். அக்கேள்விகள் ''மெயில்'' ''சுதேசமித்திரன்'' முதலிய ஆங்கிலம் தமிழ் பத்திரிக்கைகளில் காணப்படுகிறபடி,

1. **இந்த பஹிஷ்காரம் சுயமரியாதைக்காரர்கள் முன்னமே ஏற்பாடு செய்துகொண்டு செய்கிறார்களா?**
2. **இது சுயமரியாதைக்காரர்களின் பொது முறையா?**
3. **காங்கிரசைப்பற்றி சுயமரியாதைக்காரர்களின் நடைமுறை என்ன?**
4. **ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றி சுயமரியாதைக்காரர்களுடைய நடைமுறை என்ன?**
5. **சுதந்திரத்தைப் பற்றி சுயமரியாதைக்காரர்களின் அபிப்பிராயம் என்ன?**
6. **கருப்புக்கொடி பற்றியும் மரியாதை காட்டுவதுபற்றியும் சுய மரியாதைக்காரர்களின் நடைமுறை என்ன?**

என்று கேட்டு இருக்கிறார்.

அவைகளுக்கு நாம் விடையளிக்க வேண்டியது நமது கடமை என்றே கருதுகிறோம்.

ஆனால் பண்டிட் ஜவஹர்லால் அவர்களை அருப்புக் கோட்டையில் சுயமரியாதைக்காரர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல்



சுயமரியாதைக்காரர்களை பொய்யர்கள் என்று வைதார். பண்டிதர் சுய மரியாதைக்காரர்களுடைய எந்த கேள்விக்கு ஆக அப்படி யோக்கியப் பொறுப்பற்ற தன்மையில் வைதார் என்பதை வைத வார்த்தையை மாத்திரம் கொட்டை எழுத்தில் விளம்பரம் செய்த பத்திரிகைகாரர்கள் அந்தக் கேள்விகளையும் சின்ன எழுத்திலாவது போட்டு காட்டி இருப்பார்களானால் அப்பத்திரிகைகாரர்களுக்கு நேர்மையும் நாணயமும் இருக்கிறது என்று சொல்லலாம். அப்படிக்கில்லாமல்லாமல் வைத வார்த்தையை மாத்திரம் விளம்பரப்படுத்தினர்.

பார்ப்பனர்களிடமும் பார்ப்பன அடிமைகளிடமும் நாம் இதைவிட வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? இவர்களிடம் நேர்மையோ, மானமோ இருக்குமானால் அவர்கள் பார்ப்பனர்களாகவும் பார்ப்பன அடிமைகளாகவும் இருக்க ஒரு நிமிஷம் கூட சம்மதிக்க மாட்டார்கள். ஆதலால் அதை விட்டு விட்டு மற்ற விஷயங்களைப் பற்றி கவனிப்போம். அருப்புக்கோட்டை சு.ம. காரர்களுடைய கேள்விகள் ஆங்கிலத்தில் அச்சிட்டு பண்டிதரிடம் கொடுத்தபடி அப்படியே மற்றொரு பக்கம் பிரசுரித்திருக்கிறோம். அதற்கு தமிழ் மொழிபெயர்ப்பும் அதன் கீழே கொடுத்திருக்கிறோம். பண்டிதர் பதில் சொல்ல முடியாவிட்டாலும் பண்டிதரை ஆதரிக்கும் பத்திரிகைகளோ ஆசாமிகளோ யாராவது இப்பொழுதாவது பதில் சொன்னாலும் சரி என்றே அறைகூவி கேட்கின்றோம்.

பார்ப்பனரல்லாத பத்திரிக்கைகளாகிய ''தமிழ்நாடு'' ''நவசக்தி'' ''ஊழியன்'' முதலிய பார்ப்பன சிபார்சு பத்திரிக்கைகள் பதில் சொன்னாலும் சரி என்றே விரும்புகிறோம். சரியோ தப்போ தாங்கள் போட்டுக்கொண்ட வேஷத்துக்காக தங்களது சுதந்திர அறிவையும் ½ அணாவுக்கும், 1¼ அணாவுக்கும், 1½ அணாவுக்கும் விற்று விட்டு நடப்பதானால் அதில் நாம் குறுக்கிட ஆசைப்படவில்லை. ஆனால் தங்கள் நிலையை மறந்தாவது சில சமயங்களில் நேர்மையைப் பற்றியும் மானத்தைப்பற்றியும் இவர்கள் பேச வருவதினால் இவற்றை பிரஸ்தாபிக்க வேண்டி இருக்கின்றது.

**நிற்க, பண்டிதரின் முதல் கேள்விக்கு பதில் :–**

பஹிஷ்கார விஷயம் பண்டிதர் தென்னாட்டுக்கு பார்ப்பன கங்காணியாக ஓட்டுப் பிரசாரத்துக்கு வரவழைக்கப்படுகிறார் என்று தெரிந்த உடனேயே பண்டிதரை பஹிஷ்கரிக்க வேண்டியது தங்கள் கடமை என்று சுயமரியாதைக்காரர்கள் முடிவு செய்து கொண்டார்கள். ஆதலால் முன்னேற்பாடு என்று இல்லாவிட்டாலும் பண்டிதர் வருவதற்கு முன்பே தீர்மானிக்கப்பட்ட விஷயமாகும்.

இந்த பஹிஷ்காரம் பண்டிதருக்கு மட்டும் இல்லாமல் காந்தியாருக்கும் ராஜேந்திரருக்கும் சென்ற வருஷத்திலும் அதற்கு முந்தின வருஷத்திலும் செய்ததேயாகும். பகிஷ்கார முறையை காந்தியார் மெச்சி வடநாட்டுச்



RangaRakes tamilnavarasam.com

சுற்றுப் பிரயாணத்தில் புகழ்ந்து கூறி இருக்கிறார். எதற்காக இதைக் காட்டுகிறோம் என்றால் அவ்வளவு ஒழுங்காகவும் கண்ணியமாகவும் பஹிஷ்காரமும் கருப்புக்கொடியும் நடத்தப்பட்டன என்பதற்காகவும் அவர்கள் பண்டிதரைப் போல் கேவலமாகவும் இழிவாகவும் கருப்புக்காரரிடம் நடந்து கொள்ளவில்லை என்பதற்கு ஆகவும் காட்டப்படுகிறது.

ராஜேந்திரரும் கண்ணியமாகவே நடந்துகொண்டதோடு ''நான் ஒரு பார்ப்பனரல்லாதார் ஆச்சே, என்னை ஏன் பகிஷ்கரிக்கிறீர்கள்'' என்று கேட்டார். அதற்கு பதிலாக, ராஜேந்திரரே தாங்கள் பார்ப்பனரல்லாதார் ஆனாலும் பார்ப்பனர் ஆயுதமாக பார்ப்பனர் தேர்தலுக்கு ஓட்டுப்பிரசாரம் செய்ய வந்திருக்கிறீர் என்று சு.ம. காரர்கள் பதில் சொன்னார்கள். அதற்கு ராஜேந்திரர் ''எனக்கு இங்கு எலக்ஷன் நடப்பதே தெரியாது'' என்று பதில் சொன்னார்.

ஆனால் ஜவஹர்லாலோ ''நான் எலக்ஷன் பிரசாரத்துக்கே வந்திருக் கிறேன், காங்கிரசுக்கே ஓட்டுக்கொடுங்கள். நிற்கும் ஆள் மொண்டியானாலும் குருடனானாலும் ஓட்டுக் கொடுங்கள்'' என்றார்.

ஆகையால் பஹிஷ்காரம் செய்யவேண்டியது கடமை என்றும் முறை என்றும் சு.ம. காரர்கள் கருதினார்கள்.

### இரண்டாவது கேள்விக்கு பதில் :–

இப்படிப்பட்ட ஆசாமிகள் விஷயத்தில் பகிஷ்காரம் செய்ய வேண்டியது பொதுவான முறை என்று தான் சு.ம. காரர்கள் கருதுகிறார்கள்.

### மூன்றாவது கேள்விக்கு பதில் :–

காங்கிரசானது மேல் ஜாதிக்காரர், படித்தவர்கள், பணக்காரர்கள் ஆகியவர்களுக்கு நலனும் பாதுகாப்புமளிக்கும் சாதனம் என்றும், வருணாச் சிரமத்தை ஆதரிக்கும் ஸ்தாபனம் என்றும், பிற்பட்ட மக்களுக்கும் தீண்டப்படாத மக்களுக்கும் நன்மை செய்ய யாதொரு திட்டமும் இல்லாத ஸ்தாபனம் என்றும் (காங்கிரசைப் பற்றி) சு.ம. காரர்கள் கருதுகிறார்கள்.

### நான்காவது கேள்விக்கு பதில் :–

ஜஸ்டிஸ் கட்சியானது அரசியலில் பிரதிநிதித்துவத்திலும் உத்தியோகத்திலும் சகல மத வகுப்புகளுக்கும் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் அளிக்கக்கூடியது என்றும், சமூக இயலில் மதம், பழக்கவழக்கம் சாஸ்திரம் என்பவைகளை லக்ஷியம் செய்யாமல் சமூக வாழ்வில் சகல வகுப்புகளும் சமமாய் நடத்தப்பட வேண்டும் என்றும், கொள்கையையும் வேலை முறையையும் சமத்துவத்தையும் உடைய கட்சி ஆதலால் அதை அவ் வேலை முறைகளின் எதிரிகளாகிய பார்ப்பனர்கள் கெடுத்து விடாமல் இருக்க வேண்டுமென்று கருதி சு.ம. காரர்கள் தங்களால் கூடுமான அளவு ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்க வேண்டும் என்கின்ற கொள்கை உடையவர்கள்.



### ஐந்தாவது கேள்விக்கு பதில் :–

சுதந்திரம் என்கின்ற வார்த்தைக்கு பண்டிதர் என்ன அர்த்தம் கொண்டு அவ்வார்த்தையை உபயோகித்து வருகிறார் என்பது விளங்கவில்லை.

வெள்ளைக்காரர்களின் அரசியல் ஆதிக்கம் இந்நாட்டை விட்டு ஒழிக்கப்படுவது தான் சுதந்திரமே ஒழிய அதற்கப்புறம் என்ன நடக்கும் என்பதைப் பற்றி மூடு மந்திரமாகவோ, அல்லது கராச்சி தீர்மானப்படி பழய பழக்க வழக்கம் அதாவது பார்ப்பன பழக்கவழக்க உரிமையும் பறையன் பழக்க வழக்க உரிமையும் நிலைநிறுத்தப்படுவதாகிய வருணாச்சிரம முறை காப்பாற்றப்படும் என்கின்ற உத்திரவாதம் கொண்ட சுதந்திரமாகவோ இருக்குமானால் அப்படிப்பட்ட சுதந்திரத்தை தடுக்க சு.ம.க்காரர்கள் தங்களால் ஆனவரையும் பாடுபடுவார்கள். அப்படிக்கில்லாமல் பண்டிதர் கூறும் சுதந்திரத்தில் பார்ப்பான் என்று ஒரு ஜாதி முறையும் பறையன் என்று ஒரு ஜாதி முறையும் மற்றும் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்கின்ற பதங்களும் அரசியல் ஆதாரங்களிலோ சட்டத்திலோ அமுலிலோ காணப்படாத தத்துவம் கொண்ட சுதந்திரமாகவும் இருக்குமானால் அந்த சுதந்திரத்துக்கு ஆக பண்டிதரை விட ஒரு அடி முன்னணியில் இருக்க சு.ம.காரர்கள் தயாராய் இருக்கிறார்கள்.

### ஆறாவது கேள்விக்குப் பதில் :–

கருப்புக்கொடி பஹிஷ்காரமானது வந்திருக்கும் நபரை பிரதானமாய்க் கருதி அல்ல, அந்த நபரின் வருகையின் காரியம், காரணம், அவசியம் எது? என்ன? ஏன்? என்பவைகளைப்பற்றியதேயாகும்.

அதாவது இந்த நாட்டில் பார்ப்பனர்கள் காங்கிரசில் ஆதிக்கம் பெற்று இருக்கிறார்கள். வடநாட்டு பிரமுகர்களும் தலைவர்களும் இந்த நாட்டு பார்ப்பனர்களைத்தான் அறிந்திருக்கிறார்களே ஒழிய பார்ப்பனரல்லாதாரைப் பற்றி அறியா விட்டாலும் கெட்ட அபிப்பிராயம் கொண்டு இருக்கிறார்கள். எந்த வடநாட்டுத்தலைவரும் சுதந்திரமாக இங்கு வருவதில்லை. (வடநாட்டுப் பெரியார்களில் இந்த நாட்டுக்கு வந்தவர்களில் விவேகாநந்தரும் லாலா லஜபதியும் தான் சுதந்திர புத்தியோடு வந்து சுதந்திர புத்தியோடு அபிப்பிராயம் தெரிவித்துவிட்டுப் போனவர்கள்.) தவிரவும் காங்கிரசானது தன்னைத் தவிர மற்ற ஸ்தாபனங்களை தேசத்துரோக ஸ்தாபனம் என்றும் காங்கிரஸ் காரர்களும் தங்களை தவிர மற்றவர்களை தேசத்துரோகிகள் என்று கருதுகிறார்கள்.

இந்த நாட்டில் உள்ள பார்ப்பனரல்லாதார்களில் சிலர் செல்வவான் களாகவும் அதிகாரம் வகிப்பவர்களாகவும் இருந்தாலும் பார்ப்பன ஆதிக்கமானது அவர்களை அடக்கி ஒடுக்கி அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கே மிகவும் கஷ்டப்பட வேண்டிய நிலையில் வைத்து



RangaRakes tamilnavarasam.com

விடுகிறது. மற்றும் அப்படிப்பட்ட பார்ப்பனரல்லாதார் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தால் எவ்வளவுதான் நன்மை அடைந்தாலும் அதற்கு தகுந்த நன்றியும் விஸ்வாசமும் காட்ட முடியாமலும் செய்துவிடுகிறதோடு பலரை துரோகிகளாகவும் செய்து விடுகிறது. பார்ப்பனர்கள் செல்வாக்கானது பார்ப்பனரல்லாதாரில் பொதுவாழ்வில் ஈடுபடுகிறவனையும் பல தொல்லைகளுக்கும் பழிப்புகளுக்கும் ஆளாகும்படி செய்து அடக்கி ஒடுக்கி விடுகிறது. பத்திரிக்கைகள் நடத்துவது என்பதிலும் பார்ப்பனர்களுக்கு கூலியாகவோ அடிமையாகவோ இல்லாத பத்திரிக்கைகள் பெரிதும் நடைபெற முடியாதவைகளாகவும் ஆக்கிவிடப்படுகிறது. இந்தக் காரணங்களால் பாமர மக்களும் சுலபத்தில் ஏமாந்துபோய் தவறுதலாக அதாவது பார்ப்பனர்களின் ஆதிக்கத்துக்கு துணையாக இருக்கும்படியாக நடந்துவிடக் கூடுமாதலால் பார்ப்பனர்கள் பொதுமக்களை ஏய்க்க இம்மாதிரி வெளியிடங்களில் இருந்து ஆள்களைக் கூட்டி வந்து பிரசாரம் செய்யும் போதெல்லாம் சுயமரியாதைக்காரர்கள் கருப்புக்கொடி போன்ற பல காரியங்களால் பாமர மக்கள் பார்ப்பனர்களின் சூழ்ச்சியை உணரும்படி செய்யவேண்டியது என்பது முதலியவை கருப்புக் கொடியின் தத்துவமும் அதனின் அவசியமும் ஆகும்.

ஆனால் இதுவரை வடநாட்டில் இருந்துவந்த பிரமுகர்கள் தலைவர்கள் என்பவர் யாரும் பார்ப்பனரல்லாத தலைவர்களையோ பிரமுகர்களையோ அல்லது குறிப்பிட்ட ஏதாவது நபர்களையோ கூப்பிட்டனுப்பியாவது ''உங்கள் குறை என்ன'' என்று கேட்டவர்களே அல்ல. அதற்கு மாறாக அவர்களைக் குறை கூறி குற்றம் சாட்டி வைதுவிட்டே போயிருக்கிறார்கள். இந்த லக்ஷணத்தில் இந்நாட்டுப் பார்ப்பனரல்லாதாருக்கும் தாங்களே தலைவர்கள் என்றும் பிரதிநிதிகள் என்றும் வெட்கமில்லாமல் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதிலும் ஒரு ஆச்சரியமென்னவென்றால் பார்ப்பனர்களே முன் வந்து இப்படிச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

மரியாதை விஷயத்திலும் சுயமரியாதைக்காரர்களைப் பற்றி காந்தியாரே நற்சாக்ஷி பத்திரமளிக்கிறார்.

ஆதலால் சுயமரியாதைக்காரர்கள் தேச சுதந்திரத்தைவிட மக்கள் சமூக சுதந்திரம் பெரிதென்று கருதி அதற்கு விரோதியானவர்கள் அல்லது அதை அலக்ஷியமாய் கருதுபவர்கள் யாராயிருந்தாலும் பஹிஷ்கரிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் அப்படிப்பட்டவர்களுடைய ஆயுதங்களும் கையாள்களுமாய் வரவழைக்கப்படுகிறவர்களும் பஹிஷ்கரிக்கப்பட வேண்டியவர்கள் தான் என்றும் கொண்ட தத்துவம் கருப்புக் கொடியில் அடங்கி இருக்கிறது என்பதை வணக்கமாய் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 25.10.1936**



# அறிக்கை

சுயமரியாதைக்காரர்களில் காங்கிரஸ் சுயமரியாதைக்காரர் என்று ஒரு பிரிவு இருப்பதாகப் பத்திரிகைகளில் காணப்படுகிறது.

தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கம் என்று 10, 12 வருஷ காலமாய் இருந்துவரும் இயக்கத்தில் காங்கிரஸ் சுயமரியாதைக்காரர்கள் என்கின்ற சிலரோ, ஒருவரோ இல்லை; இருப்பதற்கு இதுவரை சுயமரியாதை இயக்கம் இடம் கொடுக்கவுமில்லை.

சுயமரியாதை இயக்கமானது காங்கிரசில் ஆதிக்கம் வகிக்கும் பார்ப்பனர்களுக்கு எதிராகவும் அவர்களது அரசியல், மத இயல், சமூக இயல் ஆதிக்கத்தை ஒழிப்பதற்காகவும் ஏற்பட்டதாகும்.

அதனாலேயே சுயமரியாதை இயக்கம் ஆரம்பத்திலிருந்தே காங்கிரசை எதிர்த்து அதன் ஆதிக்கத்தைத் தமிழ் நாட்டில் தலையெடுக்கச் செய்யாமல் இருப்பதற்காகப் போராடி வந்திருப்பதுடன் அதே கொள்கைகளைக் கொண்ட ஜஸ்டிஸ் கட்சியுடன் கூடி ஒத்துழைத்து வந்திருக்கிறது; ஒத்துழைத்தும் வருகிறது.

அன்றியும் அவ்வியக்கம் (சு.ம. இயக்கம்) இக்கொள்கைகளை ஒப்புக் கொண்டு அதற்கு ஆதரவளிக்கக் கூடியவர்களையே தன்னோடு சேர்த்துக் கொண்டும் அதற்கு மாறாக இருப்பவர்களையும் மாறான அபிப்பிராயம் கொண்டவர்களையும் நழுவ விட்டுக்கொண்டுமே வந்திருக்கிறது. இதற்கு ஆதாரம் ஆதி முதல் இதுவரை சு.ம. இயக்க நடவடிக்கைகளைக் கவனித்தால் விளங்கும்.

ஆதலால் சுயமரியாதை இயக்கத்தில் காங்கிரஸ் சுயமரியாதைக்காரர் என்பதாக ஒரு கூட்டம் இல்லை என்றும் இருக்க இடமில்லை என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் இன்றைய காங்கிரசானது சுயமரியாதை இயக்கத்துக்கு நேர் எதிரிடையான இயக்கமேயாகும்.

ஆதலால் சுயமரியாதைக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டு இந்த காங்கிரசை ஆதரிப்பது என்பது சுயமரியாதை இயக்கத்தை எதிர்ப்பதேயாகும் என்பது எங்களுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

W.P.A.**சௌந்திரபாண்டியன்,**

**ஈ.வெ. ராமசாமி.**

**குடி அரசு - அறிக்கை - 25.10.1936**



RangaRakes tamilnavarasam.com

## ஜவஹர்லால்

# வரவு செலவு

## ஜவஹர்லால் தேர்தலுக்கு நிற்காதது ஏன்?

## ''காங்கிரஸ்காரர்கள்தான் மூளையில்லாதவர்கள்''

## காங்கிரஸ் தலைவர் ''வந்தார்'' ''போனார்''

### உள்ளதும் போச்சு

காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லாலினது வரவால் ஜனங்களுக்கு ஒன்றும் பலனேற்படா விட்டாலும் ஜனங்களினுடைய நல்லபிப்பிராயத்தை யாவது இவர் பெற்றிருக்கலாம். அப்படியும் ஒன்றும் இல்லாமற் போனதோடு, ஜனங்கள் இவரைப் பற்றி இவர் வருவதற்கு முன் என்ன மதிப்பு வைத்துக் கொண்டிருந்தார்களோ அந்த மதிப்பும் இல்லாமல் போகும்படி நடந்துகொண்டார். அரசியல் சம்பந்தமாகவோ கட்சி சம்பந்தமாகவோ அவருடைய அபிப்பிராயங்கள் எப்படியிருந்தபோதிலும் ஜவஹர்லால் என்பதற்காக ஜனங்கள் கொஞ்சம் மரியாதை வைக்கும்படியான விளம்பரம் பெற்றிருந்தார். எப்படி என்றால் (தோழர் சத்தியமூர்த்தி சொன்னது போல்) இவருடைய தகப்பனாரை உத்தேசித்தேயாகும். அதனாலேயே இவரை முக்கிய புருஷர்களில் ஒருவராகவும் கருதி இருந்தார்கள். இவருக்கு இந்தியாவைத் தவிர மற்ற உலக அனுபவங்கள் இருக்குமென்றும் கருதியிருந்தார்கள். மற்றும் இவர் ஒரு உண்மையான உழைப்பாளியென்பதை இவருடைய எதிரிகள் கூட ஆட்சேபிக்கப் பயந்து வந்தார்கள். இவருடைய சமதர்ம அபிப்பிராயங்களைப் பார்த்தவர்கள் பொதுஜனங்களிடத்தில் இவருக்கு உண்மையான கவலை யிருக்கிறதென்றே கருதியிருந்தார்கள். அதனாலேயே மற்ற தலைவர்களை விட இவரைக் கொஞ்சம் விசேஷமாக மதித்தார்கள். ஆனால் இவருடைய தென்னிந்திய சுற்றுப் பிரயாணமானது மேல்கண்ட மதிப்புகளை அடியோடு மாற்றிக்கொள்ளும்படி செய்து விட்டதால் உள்ள மதிப்பும் போய்விட்டது.

### பண்டிதர் சமதர்மம்

அவருடைய சுற்றுப்பிரயாணமே ஒரு கெட்ட எடுப்பில் ஆரம்பிக்கப்பட்டது.



அதாவது ஒரு சமதர்மவீரர் வரும்போதே ஊரார் முதலில் ஒரு தனி ஸ்பெஷல் டிரெயினில் வந்ததும் உயர்ந்த ரோல்ஸ் ராய்ஸ் மோட்டாரில் பிரயாணம் செய்ததுமான தன்மையில் அவரது பிரயாணம் துவக்கப்பட்டதி லிருந்தே அவரது சமதர்மம் இன்னதென்பது விளங்கக்கூடியதாய் விட்டது.

### தொண்டர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் அவமதிப்பு

அவருடைய சுற்றுப் பிரயாணம் வளர வளர காங்கிரஸ் தொண்டர் களுக்கு அவமதிப்பை அதிகரிக்கச்செய்து கொண்டே வந்தது. ஏனென்றால் இவர் செல்லும் ஒவ்வொரு ஊரிலும் தொண்டர்களை வைவதே இவரின் முதல் வேலையாகி விட்டது. இவரைப் பார்க்க வேண்டுமென்று வந்த பொது ஜனங்களை ''ஆட்டுமந்தை''களென்றும் ''புத்தியில்லாத ஜனங்க''ளென்றும் வைவது இரண்டாவது வேலையாக இருந்தது. சுயமரியாதைக்காரரையும் ஜஸ்டிஸ் கட்சிக்காரரையும் வைவது மூன்றாவது வேலையாக இருந்தது. இவர் தங்கியிருந்த இடத்தில் இவரைப் பார்க்க வந்த வாலிபர்களையும் இவர் மதித்து இவரது ஞாபகார்த்தமாகக் கையெழுத்துக் கேட்ட மாணவர்களையும் பரிகாசமாகவும் இழிவாகவும் பேசுவது நான்காவது வேலையாயிருந்தது. கடைசியில் பார்ப்பனரல்லாதார் சமூகத்தையே வைதார். மொத்தத்தில் இவர் பார்ப்பனர்களைத் தவிர வேறு யாரையும் பாக்கி விடவில்லை.

### நாட்டு ஞானம் இல்லை

இது எதைக் காட்டுகிறதென்றால் இந்திய ஜனங்களைப் பற்றி ஜவஹர்லால் தெரிந்து கொண்ட யோக்கியதை எவ்வளவென்பதையும் தென்னிந்தியாவிலுள்ள அரசியல், சமுதாய இயல், சமூக நிலை ஆகியவை களைப்பற்றி இவருக்குள்ள அறிவு எவ்வளவு என்பதையும் தெளிவாய்க் காட்டிவிட்டது. முதல் கோணல் முற்றுங்கோணல் என்பதற்கிணங்க, இவரது பிரயாணம் எந்த லக்ஷணத்தில் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த லக்ஷணத்திலேயே முடிவு பெற்றது.

### தொழிலாளர் விஷயம்

திருச்சியில் தொழிலாளருடைய கூட்டத்தில் பேசுகிற பொழுது சமதர்ம வீரராகிய காங்கிரஸ் தலைவர் கொஞ்சங்கூட முன்பின் யோசனையில்லாமல், ''காங்கிரஸ் தொழிலாளருக்காக என்ன செய்யப் போகிறதென்பது எனக்குத் தெரியாது; ஆனதினால் உங்களுக்குச் சொல்லுவதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை'' என்று சொல்லிவிட்டார். மற்றும் இவர் பேசினதாக சென்ற சனிக்கிழமை ''இந்து''ப் பத்திரிகையில் வெளியாகியிருக்கும் ஒரு சேதியில் காணப்படுவதாவது:-

''நீங்கள் என்னைத் தொழிலாளர்கட்குக் காங்கிரஸ் என்ன செய்யப் போகிறதென்று கேட்கிறீர்கள். நான் காங்கிரஸல்ல; நான் எப்படி அதற்குப் பதில் சொல்ல முடியும்? ஒரு தனிப்பட்ட மனிதன் காங்கிரஸ் ஆக மாட்டான்.



RangaRakes tamilnavarasam.com

காங்கிரஸ் ஒரு பெரிய ஜனநாயக ஸ்தாபனம். அதில் எல்லா வகையான மக்களும் எல்லா விதமான அபிப்பிராயக் காரர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் இந்தியா விடுதலைபெற வேண்டும் என்பதில் மாத்திரம் ஒருமுகப்பட்ட அபிப்பிராயமுடையவர்களா யிருக்கிறார்கள். ஆனதினால் தொழிலாளர்கட்கு காங்கிரஸ் என்ன செய்யவேண்டுமென்று முடிவு செய்யுமென்பதை என்னால் இப்பொழுது சொல்ல முடியாது''

என்று சொல்லி இருக்கிறார். ஆகவே காங்கிரஸ் பிரசிடெண்டு வார்த்தை யிலிருந்தே காங்கிரஸ் தொழிலாளர்கட்கு என்ன செய்யக் கூடும் என்பதை தொழிலாளர்கள் தெரிந்துகொள்ளலாம்.

## ''நான் காங்கிரசல்ல; என்னைக் கேட்காதீர்கள்''

மற்றும் காங்கிரஸானது தொழிலாளர்களின் நிலைமையை விருத்தி செய்வதற்காகவும் அவர்களுடைய தினசரி வாழ்க்கையை உயர்ந்த திட்டத்துக்குக் கொண்டுவருவதற்காகவும் என்ன முறைகளை அனுசரிக்கப் போகிறது என்பதான கேள்விக்குப் பண்டித ஜவஹர்லால் என்ன சொல்லு கிறாரென்றால் ''அதைப்பற்றி என்னை யொன்றும் கேட்கக் கூடாது. நான் காங்கிரஸ் ஸ்தாபனமல்ல. ஆகையால் காங்கிரஸானது என்ன செய்யுமென்று நான் சொல்ல முடியாது. காங்கிரஸில் எவ்வளவோ பேர்களிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் நீங்கள் போய் காங்கிரஸ் தொழிலாளர்கட்கு என்ன நன்மையைச் செய்யுமென்று கேளுங்கள். அவ்விதம் கேட்ட பிற்பாடு, காங்கிரஸ் உங்களுக்கு இன்னதுதான் செய்யுமென்று நீங்களே உங்கள் சொந்த முடிவுக்கு வாருங்கள். நான் காங்கிரஸ் தலைவர் என்ற ஹோதாவில் என்ன சொல்லக் கூடுமென்றால் காங்கிரஸ் இன்னதுதான் உங்களுக்குச் சொல்ல முடியுமென்பது எனக்கு ஏதும் திட்டமாகச் சொல்லத் தெரியாது'' என்பதே.

இங்கிலீஷ்காரர் ஏகாதிபத்தியத்தை அடியோடு அழித்து இந்தியர்களுக்கு நன்மை உண்டு பண்ணுவதற்கு ஏற்பட்டிருக்கிற இந்திய நேஷனல் காங்கிரஸின் தலைவரென்பவரே இந்த மாதிரி தொழிலாளிகளுக்கு காங்கிரஸ் இன்னது செய்யுமென்பதில் தனக்கொன்றும் தெரியாதென்று ஒத்துக்கொண்டிருக்கிற தன்மையைக் கவனிக்கும்போது அது ஒரு பெரிய விபரீதமாகத்தானிருக்கிறது! காங்கிரஸானது தொழிலாளிகட்கு இன்ன அளவுக்குத்தான் நன்மை செய்ய வல்லமையுடையதென்றோ, இன்னதைத்தான் செய்யுமென்றோ கூட அவருக்கு ஒன்றும் தெரியவில்லை என்றால் பண்டிதரின் தொழிலாளர் அனுதாபம் எப்படிப்பட்டது என்று தொழிலாளர்கள் தான் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

## சட்டசபை

மற்றும் புத்தூர் மைதானத்தில் பண்டிதர் பேசும் போது ''காங்கிரஸ் அபேட்சகர்கள் சட்டசபை மூலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அடித்து வீழ்த்தி விடுவதற்காக சட்ட சபைக்குப் போவதால் வரப்போகும் சட்டசபைத் தேர்தலில் அவர்களையே ஆதரிக்கவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டிருக்கிறார். ஆனால் தன்னைப் பொறுத்தவரையில் அவர் சட்டசபை தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை என்று சொல்லுகிறார். சட்டசபைக்கு போவதன் மூலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒழித்துவிடக்கூடும் என்பதாகவோ, அல்லது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒழிக்க சட்ட சபைக்குப்போக வேண்டியது அவசியமென்றோ பண்டிதர் உண்மையாகவே நம்பி இருப்பாரேயானால் தான் ஏன் சட்டசபைக்கு போக இஷ்டப்படவில்லை என்கிறார் என்பது நமக்கு விளங்கவில்லை. காங்கிரஸ் பிரசிடெண்டு என்கின்ற முறையில் காங்கிரஸ் படைக்கு இவரே வழிகாட்டியாய் இருக்க வேண்டி இருக்க சட்டசபையில் மெம்பர்கள் செய்யும் போருக்கு இவர் முன்னணியில் இருக்க வேண்டி இருக்க, இவர் மறைந்துகொண்டு மற்றவர்களைப் பிடித்து தள்ளி முன்னால் விட்டு வேடிக்கை பார்ப்பது என்றால் இவர் எப்படி உண்மையான தலைவராகவோ வழிகாட்டியாகவோ இருக்க முடியும் என்பதை யோசித்துப் பார்த்தால், ஒன்றா, இவர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை தகர்க்க சட்டசபையே தான் சரியான ஸ்தாபனம் என்று கருதாமல் இருக்க வேண்டும், அல்லது சட்டசபை பிரவேசத்தில் அவருக்கு நாணயமான நம்பிக்கை இல்லாமல் இருக்க வேண்டும் என்றுதான் கருத வேண்டியிருக்கிறது.

## பார்ப்பனரல்லாதாரைப்பற்றி

தஞ்சாவூரில் தோழர் ஜவஹர்லால் பேசும்போது பார்ப்பனரல்லாதார் களைச் சமூகம் முழுவதையுமே சேர்த்து மிகவும் கேவலமாக இழிவுபடுத்திப் பேசி இருக்கிறார். பேசியது ஒரு சாதாரண அநாமதேய ஆளாகவோ அல்லது காலி கூலி என்று பேர் வாங்கினவராகவோ இருந்து பேசி இருந்தால் நாம் அதை லக்ஷியம் செய்யாமல் இருக்கலாம். ஆனால் காங்கிரஸ் சபைத் தலைவர் என்கின்ற முறையில் வந்த ஒருவர் - அதுவும் ஒரு பார்ப்பனர் ஒரு சமூகத்தையே இப்படி கேவலமாக பேசினால் அதை எப்படி நாம் கவனிக்காமல் விட முடியும்? ''மெயில்'' பத்திரிக்கையில் கண்டுள்ளபடி அவர் பேசியதாவது:- ''இந்த மாகாணத்தில் உள்ள பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற பேத பிரச்சினை வெகு அற்பமானது; பரிகாசத்திற்கிடமானது. அப்படி இருக்க ஜனங்கள் இந்த விஷயத்துக்காக வெறிபிடித்து ஒருவருக்கொருவர் மண்டையுடைத்துக் கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட வெறும் தலையர்கள் (''மூடர்கள்'') மண்டை உடைபடுவதில் நான் அனுகூலமாகவே இருப்பேன். ஏனெனில் இப்படிப்பட்டவர்கள் ஒழிந்து போவதே நாட்டுக்கு நன்மையாகும்'' என்று பேசி இருக்கிறார்.

## இதற்கு நமது பதில்

இதற்கு நாம் என்ன பதில் சொல்லுகிறோம் என்றால், ''அய்யா பண்டிதரே!


RangaRakes tamilnavarasam.com

இந்த நாட்டில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பிணக்கு இருப்பது வாஸ்தவம்தான். அது நீர் சொல்லுகிறபடி அற்ப விஷயமாகவோ மண்டை உடைத்துக்கொள்வதினால் ஒழிந்து போகத் தக்கதாகவோ இங்கு இல்லை. அது அனேக காலமாக இந்த நாட்டில் இருந்து கொண்டு மதத்திலும் சமூக வாழ்விலும் அரசியல் துறையிலும் ஆதிக்கம் செலுத்தி மக்கள் உழைப்பைத் தங்களுக்கே சொந்தமாக்கிக் கொண்டிருக்கும் பார்ப்பனீயத்தை ஒழிக்கும் வேலையில் முனைந்து நின்று அதற்கு (பார்ப்பனீயத்துக்கு) சாவுமணி அடிக்கும் நிலையை உண்டாக்கி விட்டது. இப்போது அதை சமாளித்துகொள்ளவும் அதற்கு உயிர்ப்பிச்சை அளிப்பதற்கும் ஆகவே உம்மை (பண்டிதரை) பார்ப்பனர்கள் இங்கு அழைத்து வந்து விஷமப் பிரசாரக் காரியம் நடத்து கிறார்கள். இதை நீங்கள் உணரவில்லையோ அல்லது உணர்ந்தே பார்ப்பனருடன் பார்ப்பனராய் ஆடுகிறீரோ தெரியவில்லை. அது எப்படி இருந்த போதிலும் இப்போது நீர் உம்முடைய கொள்கை என்று எதை எதை சொல்லுகிறீரோ அதைவிட ஒருபடி முற்போக்கானதும் முக்கியமானதுமான கொள்கையே பார்ப்பனரல்லாதார் இயக்கக் கொள்கையாய் இருந்து வருகிறது என்று உணருங்கள்'' என்பதேயாகும்.

## பண்டிதர் சுயராஜ்யம்

ஆனால், பண்டிதரே! நீர் கோரும் சுயராஜ்யம் வெள்ளையர் ஆட்சியை ஒழித்து கபில நிற ஆட்சி அதாவது பூணூல் ஆட்சி (பார்ப்பன ஆட்சி) ஆக்கப் பார்ப்பதே தவிர வேறில்லை என்பதை நன்றாய் உணரும். எங்களுக்கு உண்மையான சுயராஜ்யம் வேண்டும். அந்த விஷயத்தில் நாங்கள் இந்நாட்டில் உள்ள எல்லோரையும் விட ஆவலுள்ளவர்களாகவும் அதற்கு ஆக தகுதியான எந்த காரியத்தையும் செய்ய முன்னணியில் இருப்பவர்களாகவும் இருக்கிறோம்.

எங்களுக்கு வேண்டிய சுயராஜ்யம் இந்நாட்டில் உள்ள எல்லா வகுப்பாருக்கும் விடுதலை ஏற்பட்டு சகலரும் சம உரிமையையும் சம சந்தர்ப்பத்தையும் அடையத்தக்க சுயராஜ்யமே யாகும்.

இதற்கு விரோதமானவர்கள் ஒழியட்டும் என்று நீர் பிரசாரம் செய்வீரானால் அது உங்கள் சமூகமாகிய பார்ப்பன சமூகம் ஒழியச் செய்யும் பிரசாரமேயாகும். அதாவது தற்கொலைப்பிரசாரம் செய்கிறீர் என்றுதான் அருத்தம். அதைச் செய்வதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

## ஜெயிலில் சுதந்திரம்

காங்கிரஸ்காரர்கள் சுதந்திரம் பெற ஜெயிலுக்கு போனார்கள் என்கிறீர்கள். அவர்கள் ஜெயிலுக்கு போனது வாஸ்தவம்தான். ஆனால் அவர்கள் ஜெயிலுக்குப் போனதில் ''இனிமேல் ஜெயிலுக்கு வருவதில்லை'' என்று சொல்லி விட்டுத் தான் ஜெயிலில் இருந்து விடுதலை பெற்று



வெளிவந்தார்களே ஒழிய, இதுவரை யாருக்கும் எவ்வித விடுதலையும் வாங்கிக் கொண்டு வெளிவந்தவர்கள் அல்ல. அப்படி இருக்க இப்போதுதான் அவர்களுக்கு ஒரு புது புத்தி தோன்றி, சுதந்திரம் பெற ஜெயிலுக்கு போவதில் பிரயோஜனமில்லை என்பதை உணர்ந்து, சட்டசபைக்கு போக வேண்டுமென் கிறார்கள். நீரும் அதை ஆதரித்து பிரசாரம் செய்கிறீர்கள். இதைத்தான் பார்ப்பனரல்லாதாரும் ஆதி முதல் சொல்லிவருகிறார்கள். ஆனால் நீர் மாத்திரம் சட்ட சபைக்குப் போகப் போவதில்லை என்கிறீர். இதன் ரகசியம் ''சிதம்பர ரகசியமாய்'' இருக்கிறது. இது எப்படியோ ஆகட்டும். ஒன்றை மாத்திரம் உமக்கு ஞாபகப்படுத்தி விட்டு இதை முடிக்கிறோம்.

## பண்டிதரின் அப்பன்

அதாவது இதற்கு முன்பும் உம்மைவிட பெரியவர்களான உமது தகப்பனாரும் பெரியார் சி.ஆர். தாசும் மற்றும் பலரும் உம்மைப் போலவே சுதந்திரத்துக்கு ஆக ஜெயிலுக்குப் போய் ஜெயில் மூலம் சுதந்திரம் கிடைக்கமாட்டாது என்பதை உணர்ந்து வெளியில் வந்து, சட்டசபையில் முட்டுக்கட்டை போடுவது மூலம் சுதந்திரம் பெறலாமென்று கருதி சட்ட சபைக்கு போய் தங்களால் ஆனதை எல்லாம் செய்து பார்த்துவிட்டு தங்கள் முறைப்படி அங்கும் சுதந்திரம் பெற முடியாது என்று கருதி நடுத்தூக்கில் அதாவது காலாவதி வரையில் கூட இருந்து பார்க்க முடியாமல் வெளியில் வந்து விட்டார்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

இப்படி இருக்க, இப்போதும் நீர் சுதந்திரத்துக்குச் சட்ட சபைக்குப் போகிறேன். அங்கு போய் சீர்திருத்தத்தை உடைக்கிறேன் என்றும் பார்ப்பனரல்லாதார்கள் வெறும் தலையர்கள் என்றும் அவர்கள் ஒழிந்து போவதே மேல் என்றும் கூறுகிறீர்கள்.

## யார் வெறுந் தலையர்?

ஆகவே இதிலிருந்து ஒரு விஷயத்தை நன்றாய் யோசித்துப் பாரும். அதாவது உமது பெற்றோர்கள் வெறுந்தலையர்களா? நீர் வெறுந்தலையரா? அல்லது பார்ப்பனரல்லாதார் வெருந்தலையர்களா என்பதே.

**குடி அரசு - கட்டுரை - 25.10.1936**



RangaRakes tamilnavarasam.com

## காங்கிரஸ் சுயமரியாதைக்காரர் என்று சொல்லிக்கொள்ளுபவருக்கும் சுயமரியாதை ஜஸ்டிஸ்காரருக்கும் நடந்த

# சம்பாஷணை

**- அனாமதேயம் எழுதுவது**

**சு.ம. காங்கிரஸ்வாதி:-** தோழர் ஜவஹர்லால் ஒரு சமதர்ம வீரர் அவரை சு.ம.காரர் பஹிஷ்கரிக்கலாமா?

**சு.ம. ஜஸ்டிஸ்வாதி:-** ஜவஹர்லால் சமதர்ம வீரர் என்பதை உனக்காக வேண்டியே ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அவர் தோழர் ஈ.வெ.ராவைப் போலவே இப்போது நான் சமதர்மப் பிரசாரம் செய்ய வரவில்லை; காங்கிரஸ் பிரசாரம்தான் செய்ய வந்தேன் - செய்கிறேன் என்று சொன்னாரா இல்லையா?

**சு.ம.கா:-** அவர் எங்கே அப்படிச் சொன்னார்?

**சு.ம.ஜ:-** காங்கரஸ் தலைமைப் பிரசங்கம் முதல் சென்னை பிரசங்கம் வரை படித்திருந்தால் எங்கே சொன்னார் என்று கேட்டிருக்கமாட்டாய். சரி அப்படி சொல்லவில்லை என்றும் வைத்துக்கொள்ளுவோம். ஆனால் சமதர்மத்துக்கு என்னிடம் திட்டம் ஒன்றும் இல்லை என்றும் உலகப் புரட்சியோ மகா யுத்தமோ ஒன்று ஏற்பட்டால் தான் சமதர்ம சம்பந்தமாய் ஏதாவது செய்யலாமே ஒழிய மற்றப்படி இப்போது அதற்காக ஒன்றும் செய்வதற்கில்லை என்றும் சொல்லியிருப்பதையாவது ஒப்புக்கொள்ளுகிறாயா இல்லையா?

**சு.ம.கா:-** ஆம், அப்படிச்சொன்னால் சமதர்மம் வேண்டாம் என்று அருத்தமா?

**சு.ம.ஜ:-** அப்படியானால் சமதர்மம் வேண்டும் என்று இந்தியாவில் ஜவஹர்லால் மாத்திரம் தானா சொல்லுகிறார்? தோழர்கள் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், சர்.சி.பி. ராமசாமி அய்யர் முதல்கொண்டு சொல்லி இருக்கிறார்கள். லார்ட் வில்லிங்டன் கூட ஒரு சமயம் சமதர்மம் நல்லதுதான் என்று சொல்லி இருக்கிறார். யேசுவும், மகமது நபியுங் கீதையும் சமதர்மத்தை போதிப்பதாக மதக்காரர்கள் சொல்லுகிறார்கள். இவர்கள் எல்லாம் சமதர்ம வீரர்கள்தானா? இந்த மதங்களை யெல்லாம் வரவேற்க வேண்டியதுதானா?

**சு.ம.கா:-** ஆனால் ஜவஹர்லால் இப்படிப்பட்ட சமதர்மி என்றா சொல்லுகிறாய்?



**சு.ம.ஜ:-** அதற்கும் மேல் ஒரு டிக்கிரி அல்லது பத்து டிக்கிரி அதிகமாகவே வைத்துக்கொள். அதைப்பற்றி இப்போது நமக்கு வாதம் வேண்டாம். ஜவஹர்லால் தமிழ்நாட்டுக்கு எதற்காக வந்தார்? காந்தியாரும் ராஜேந்திர பிரசாதும் வந்த வேலை அல்லாமல் ஜவஹர்லால் வேறு என்ன காரியத்துக்கு வந்தார்? மக்களை என்ன செய்யும்படி சொல்லிப் போனார்? இதைச் சொல்ல மற்றப்படி ஜவஹர்லால் யாராய் இருந்தால்தான் என்ன?

**சு.ம.கா:-** அப்படியானால் மனிதனைப்பற்றி கவலை இல்லை என்கிறாயா?

**சு.ம.ஜ:-** நீதான் ஆகட்டுமே ஏதோ ஒரு மனிதனைக் கருதி அவனுடைய செய்கையை அலட்சியம் செய்துவிடுவாயா?

**சு.ம.கா:-** என்ன இருந்தாலும் ஜவஹர்லால் மற்ற தலைவர்களைப் போல் அல்ல; அவர் ஒரு உண்மையான வீரர்.

**சு.ம.ஜ:-** சரி, வீரர் என்றே வைத்துக்கொள். ஒரு வீரர் உங்கள் வீட்டின் மீது கல்லுப்போட்டாலோ அல்லது வீரர்கள் உன்னை வைதாலோ நீ விட்டு விடுவாயா?

**சு.ம.கா:-** அப்படி ஜவஹர்லால் என்ன செய்ய வந்தார்?

**சு.ம.ஜ:-** ஜவஹர்லால் எலக்ஷன் பிரசாரத்துக்கு வந்தார். காங்கிரஸ் பிரசாரத்துக்கு வந்தார். காங்கிரசின் பேரால் எப்படிப்பட்ட மனிதன் நிறுத்தப்பட்டாலும் அவனுடைய யோக்கியதா யோக்கியதையை கவனிக்காமல் அவன் மொண்டியானாலும், குருடனானாலும் செவிடனானாலும் அவனுக்கு ஓட்டுச் செய்யுங்கள் என்று சொல்ல வந்தார். காங்கிரசின் பேரால் நிற்பவன் தவிர மற்ற அபேட்சகர்கள் எல்லாம் தேசத்துரோகிகள், சர்க்கார் தாசர்கள் என்று தோழர்கள் சத்தியமூர்த்தி குப்புசாமி உபயதுல்லா அண்கோ சொல்லுவது போலவே சொல்ல வந்தார்.

மற்ற தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் போலவும் அவர்களது கூலிகள் போலவும் ஜஸ்டிஸ் கட்சியும் மற்ற காங்கிரஸ் அல்லாத கட்சிகளும் சர்க்கார் தாசர்கள், சர்க்கார் ஏஜண்டுகள் என்று சொல்லி வம்புச்சண்டை இழுக்க வந்தார். அப்படியே சொல்லியும் போட்டார். மற்றபடி எந்த விதத்தில் மற்றவர்களையெல்லாம் விட ஜவஹர்லால் வீரர், சூரர், மகா யோக்கியர் என்று சொல்லே பார்க்கலாம்.

**சு.ம.கா:-** ஜவஹர்லால் எவ்வளவு தியாகம் பண்ணினவர் என்பதை சிறிதுகூட நினைத்துப் பார்க்காமல் இப்படிப் பேசுகிறாயே இது நியாயமா?

**சு.ம.ஜ:-** நான் கேட்பதை விட்டு விட்டு என்ன என்னமோ உளறுகிறாய். ஜவஹர்லால் தியாகம் பண்ணினவர் என்றே வைத்துக் கொள். காந்தி தியாகம் செய்யவில்லையா? ராஜேந்திர பிரசாத் தியாகம் செய்யவில்லையா? இவர்களையெல்லாம் விட அதிகமாக ராஜகோபாலாச்சாரியார் தியாகம் செய்ய



RangaRakes tamilnavarasam.com

வில்லையா? அவர்களை யெல்லாம் நாம் வரவேற்றோமா? ஜவஹர்லாலுக்கு மாத்திரம் என்ன இவ்வளவு சிபார்சு என்பது எனக்கு விளங்கவில்லையே?

**சு.ம.கா:-** ஜவஹர்லால் சுயமரியாதைக்காரர்கள் கோரும் அறிவு இயக்கவாதி என்பது கூட தெரியாதா? காந்தியும், ராஜேந்திரரும் வருணாச்சிரம வாதிகள், மூடநம்பிக்கைக்காரர்கள். ஜவஹர்லால் பகுத்தறிவுவாதி. இதையாவது சு.ம.காரர்கள் கவனித்து இருக்க வேண்டும். கொஞ்சம் கூட யோசிக்காமல் பகிஷ்காரம் செய்துவிட்டீர்கள்.

**சு.ம.ஜ:-** அறிவு இயக்கவாதி என்றதினாலேயே எலக்ஷன் பிரசாரம் செய்து குருடனுக்கும், செவிடனுக்கும், மொண்டிக்கும், முடவனுக்கும் ஓட்டுப்போடும்படி சொல்லவந்தால் விட்டுவிடவேண்டியதுதானா? அப்படித்தான் ஜவஹர்லால் எந்த விதத்தில் பகுத்தறிவுவாதி?

தகப்பன் எலும்பையும் பெண்ஜாதி எலும்பையும் சுமந்து கொண்டுபோய் ஆற்றில் விட்டாரே அதனாலா?

புண்ணியஸ்தல யாத்திரை செய்கிறாரே அதனாலா?

மதுரை மீனாக்ஷி அம்மனுக்கு சமீபத்தில் போய் கும்பிட்டுவிட்டு வந்தாரே அதனாலா? பழனி பஞ்சாமிர்தம் வாங்கி மூட்டைகட்டிக் கொண்டாரே அதனாலா?

கதரை ஆதரிக்கிறாரே அதனாலா? காந்தியை ஆதரிக்கிறாரே அதனாலா? சட்ட சபைக்குப்போய் சீர்திருத்தத்தை உடைக்கிறேன் என்கிறாரே அதனாலா? எதில் அவர் பகுத்தறிவுவாதி?

ஏதோ வாயில் மதத்தையும் ஜாதியையும் பற்றி கண்டித்து நாலு வார்த்தை பேசிவிட்டால் புஸ்த்தகத்தில் எழுதிவிட்டால் அதனாலேயே அப்படிப்பட்டவர்கள் எல்லோரும் பகுத்தறிவு வாதிகளாய் விடுவார்களா? பகுத்தறிவு சமதர்மம் என்பதெல்லாம் உங்கள் வீட்டு புறகடையில் முளைத்து இருக்கும் கிள்ளுக்கீரை என்றா நினைத்துக்கொண்டிருக்கிறாய்? அப்படியானால் உலகத்தில் இருக்கிறவன் எல்லோரும் பகுத்தறிவு வாதிகள்தான். ஒவ்வொருவரும் அரிசி பருப்புத்தேடி பக்குவமாய் சமையல் செய்து இலையில் போட்டு பிசைந்து உருட்டி வாயில் போட்டு மென்று தின்கின்றார்களே ஒழிய ஆண்டவன் இருக்கிறான், அல்லா இருக்கிறான் என்று கருதி அவனே நம் வயிற்றை நிரப்பி விடுவான் என்று ஒருவரும் நம்பி மூட நம்பிக்கைக்காரர்களாக இருப்பதில்லை. ஆதலால் ஜவஹர்லால் மாத்திரம் பகுத்தறிவுகாரர் என்று சொல்லிவிட முடியாது. செய்கையில் காந்திக்கும் மற்ற தலைவர்கள் என்பவர்களுக்கும் மாறாக ஜவஹர்லாலிடம் என்ன பகுத்தறிவு காரியம் இருக்கிறது? அதைச் சொல்லே பார்ப்போம்.

**சு.ம.கா:-** இப்படிப் பார்த்தால் உலகில் ஒரு மனிதன் கூட பகுத்தறிவுவாதியாய் காணப்படமாட்டான்.



**சு.ம.ஜ:-** காணப்படாவிட்டால் போகட்டுமே, யாராவது காணப்பட வேண்டுமே என்று எவரையாவது ஒப்புக்கொள்ள வேண்டியது சடங்கா? சாஸ்திரமா? அதற்கு ஆக ஜவஹர்லாலை பகுத்தறிவுவாதி என்று ஒப்புக்கொள்ள வேண்டுமா? சாதாரண அறிவே அவருக்கு எவ்வளவு இருந்தது என்று அவரது சுற்றுப்பிரயாண பேச்சை அலசிப்பாரே! எங்கே போனாலும் பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் என்கின்ற பல்லவி. இதை ஒழிக்க சுயராஜ்யம் சுதந்திரம் வேண்டும் என்பது அனுபல்லவி. அதற்கு ஆக காங்கிரசுக்காரருக்கு ஓட்டுப்போடுங்கள் என்கிறது சரணம். இவை ஒன்றுக்கு ஒன்று பொருத்தமானதா?

**சு.ம.கா:-** ஏன் இவை நியாயமான பேச்சல்லவா?

**சு.ம.ஜ:-** எப்படி நியாயமாகும்? முதலாவது யாருக்கு வேலையில்லை? யார் பட்டினி?

பார்ப்பனர்கள் யாருக்காவது வேலை யில்லையா? பெரிய பெரிய சம்பளமுள்ள வேலைகள்தான் அவர்களில் 100க்கு (90 பேருக்கும் இருந்தும்) 100 பேருக்கும் இல்லையே என்கிறார்களே ஒழிய இன்றைக்கும் சகல பார்ப்பனருக்கும் மாதம் 15 ரூபாய்க்கு குறையாத சமையல் வேலை, காப்பிகடை வேலை, கோயில் பூசாரி வேலை, புரோகித வேலை முதல் எத்தனையோ வேலை காத்துக்கொண்டிருக்கின்றன. மற்றும் வியாபாரிகள், மில் முதலாளிகள், லேவாதேவிக்காரர்கள், மிராசுதாரர்கள், ஜமீன்தார்கள், வக்கீல்கள், டாக்டர்கள், ஆச்சாரி, குருமார்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்களுக்கு எங்கே பட்டினி? எங்கே வேலை இல்லாத் திண்டாட்டம்? ஒரு ஆளைக் காட்டே பார்ப்போம். இவர்களில் ஒவ்வொருவனும் அவனவன் யோக்கியதைக்கு மேலும் இருப்பதற்கு மேலும் சம்பாதிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறான். அவ்வளவுதானே ஒழிய, யார் பட்டினி? யாருக்கு வேலையில்லை?

படிக்காத மனிதன், கீழ் ஜாதிக்காரன், கைத்தொழிலாளி சரீரப்பாட்டாளி ஆகிய இந்தக் கூட்டத்தார்தான் பெரிதும் இன்று வேலையில்லாமலும் ஜீவனத்துக்கு போதுமானது இல்லாமலும் கஷ்டப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். இது இந்த நாட்டில் மாத்திரமல்ல. எந்த நாட்டிலும் இப்படித்தான் இருக்கிறது. (ரஷ்யாவில் மாத்திரம் இல்லை) அதற்காக ஜவஹர்லாலின் திட்டம் என்ன? சுயராஜ்யம் வந்தால் பட்டினி போய்விடுமா? வெளி தேசத்தார் ஆதிக்கம் போய்விடும்படியான சுதந்திரமே வந்தாலும் எல்லோருக்கும் வேலை கிடைத்து விடுமா?

இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ஜர்மனி இவை சுயராஜ்ய நாடல்லவா? சுதந்திர நாடல்லவா? அங்கு என்ன நடக்கின்றது? சுயராஜ்ய நாடான அபீசினியாவைப் பார், சுதந்திர நாடான ஸ்பெயினைப் பார், குடி அரசு நாடான சைனாவைப் பார். கண் மூடிக்கொண்டு புஸ்தகத்தை ஒப்புவிக்காதே. பிற்பட்ட வகுப்புக்கும் படிக்காதவனுக்கும் கீழ்ஜாதிக்காரனுக்கும்



RangaRakes tamilnavarasam.com

ஜவஹர்லாலோ, காந்தியோ, காங்கிரசோ பிரதிநிதியா அல்லது ஜின்னாவோ, ஜஸ்டிஸ் கட்சியோ, அம்பேத்காரோ பிரதிநிதியா எண்ணிப்பாரே.

இதுவரை காங்கிரசினால் நிறுத்தி வைக்கப்பட்ட ஆட்கள் யோக்கியதையையும் காங்கிரஸ் பார்ப்பனர்கள் யோக்கியதையையும் நீ அறியாததா? இவைகளை மாற்ற ஜவஹர்லால் என்ன மருந்து கொண்டு வந்தார்.

ஜமீன்தார் பிரதிநிதியா என்ற சு.ம.காரர்களைக் கேட்டார். தர்மபுரி ஜமீன்தார் நடேச செட்டியார் வீட்டில் விருந்தினராய் இருந்து சாப்பிட்டு வந்தார். ஜஸ்டிஸ்காரர்களை காங்கிரஸ் விரோதி என்றார். காங்கிரஸ் ''துரோகி'' டாக்டர் ராஜன் வீட்டுக்குப் போய் பேசிவிட்டு வந்தார். குமாரமங்கலம் ஜமீன்தார் காங்கிரஸ் மெம்பர் லக்ஷப் பிரபு நாடிமுத்துபிள்ளை காங்கிரஸ் மெம்பர், திருநெல்வேலி ஜமீன்தார் குமாரசாமி முதலியார் காங்கிரஸ் மெம்பர்கள்.

கோவை ராமலிங்கம் செட்டியார், ரத்தினசபாபதி முதலியார், ஆர்.கே. வெங்கடாசலம் செட்டியார், ஆவலப்பட்டி ஜமீன், அவனாசிலிங்கம் செட்டியார் இவர்கள் எல்லாம் காங்கிரஸ் மெம்பர்கள்.

போதாக்குறைக்கு புழுத்ததின் மீது மலம் விழுந்த மாதிரி சத்தியமூர்த்தி முதலிய வருணாச்சிரம தர்மிகளும் காங்கிரஸ் மெம்பர்கள்.

இப்படிப்பட்டவர்கள் தவிர மற்ற சில சம்பளக்காரர்கள்தான் ஏழை காங்கிரஸ் மெம்பர்கள். ஆகவே தலைவர் சர்வாதிகாரி ஆகியவர்களாக மேற்கண்ட கூட்டத்தார்கள் காங்கிரசுக்குப் போனால் எப்படி பட்டினி ஒழியும்? எப்படி வேலையில்லாக் கஷ்டம் ஒழியும்? நீதான் சொல்லே பார்ப்போம்.

இதிலிருந்தே ஜவஹர்லாலுக்கு பகுத்தறிவு இருந்தால் காங்கிரசுக்கு ஓட்டுக் கொடு ஆள்கள் யோக்கியதையை பார்க்காதே என்று சொல்லி இருப்பாரா? இந்த மாதிரி யோக்கியதை உள்ள காங்கிரசுக்கு ஓட்டுப் பிரச்சாரம் செய்யாதே! என்று சொன்னதில் உனக்கு என்ன வந்து மாட்டிக் கொண்டது என்பது எனக்கு விளங்கவில்லை. கேள்வி கேட்டால் கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாமல் சு.ம. காரர்கள் பொய்யர்கள் என்று கேவலமாய் பேசிவிட்டார்.

இப்பவும் சொல்லுகிறேன். ஜஸ்டிஸ்காரர்கள் சமதர்ம வீரர்கள் என்கிறேன். தைரியமாய் வருணாச்சிமத்துக்கு விரோதமாய் வேதம் சாஸ்திரத்துக்கு விரோதமாய் சட்டம் செய்தார்கள். சொத்துரிமையை பிடுங்கிக்கொள்ளலாம் என்று சட்டம் செய்து சோம்பேறிகளுடைய சொத்தைப் பிடுங்கி பாடுபடுகிறவர்களுக்கு சொந்தமாக்கி விட்டார்கள். கொஞ்ச அளவுக்காவது இம்மாதிரியான காரியம் துணிச்சலாக செய்து வழிகாட்டி விட்டார்களா இல்லையா?

இதைச் சொல்லியே காங்கிரசுக்காரர்கள் ஜஸ்டிஸ் கட்சியை வைகிறார்கள், விஷமப்பிரசாரம் செய்கிறார்கள்.



வெங்கிட்டராம சாஸ்திரியார் காங்கிரசை ஆதரிக்கிறார். அவர் ஜஸ்டிஸ் கட்சி பொதுவுடமை கட்சி என்று இந்த வாரமும் ''இந்து''வில் ''மெயிலில்'' எழுதினார். யார் சமதர்மவாதிகள் காரியத்தில் சொல்லே பார்ப்போம். உழுபவனுக்குத்தான் பூமி சொந்தமே தவிர பட்டாக்காரனுக்கு சொந்தமில்லை என்று ஒரு சட்டம் செய்வது என்றால் லேசான காரியமா? அதுவும் யாதொரு பிரதிப்பிரயோஜனமும் இல்லாமல் பறி முதல் செய்து விடலாம் என்று சொன்னார்களே அதற்கு என்ன சொல்லுகிறாய்?

**சு.ம.கா:-** சரி, மற்றொரு சமயம் பேசலாம். எனக்கு அஜீரணம் போல் வயிற்றைப் பிரட்டுகிறது. வெளியே போய்விட்டு வருகிறேன்.

**சு.ம.ஜ:-** மகாராஜனாய் போய்விட்டு வா. எலக்ஷன் பிரசாரத்துக்கு வந்த ஜவஹர்லாலை பகிஷ்காரம் செய்ததற்கு எலக்ஷனை அலட்சியமாய் கருதி எலக்ஷனை வெறுக்கும் வீரனான நீ கோவித்துக்கொள்கிறாயே, அதுவும் காந்திக்கும் ராஜேந்திரப் பிரசாத்துக்கும் கருப்புக் கொடியைத் தூக்கித் திரிந்துவிட்டு, அந்த வீரம்தான் எனக்கு சிரிப்பை உண்டாக்குகிறது. போய் விட்டுவா.

**குடி அரசு - உரையாடல் - 25.10.1936**



RangaRakes tamilnavarasam.com

# சம்பாஷணை

**- நாரதர்**

**ஓர் பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் ரெயிலில் போகும் போது நடந்த சம்பாஷணை**

(பார்ப்பனர் சாஸ்திரியார், பார்ப்பனரல்லாதார் கந்தையா)

**சாஸ்திரியார்:-** கந்தையா எங்கு போகிறீர்.

**கந்தையா:-** அது யார் சாஸ்திரியா?

**சாஸ்திரி:-** ஆம், ஆசீர்வாதம் (மார்பிற்கு நேரே உள்ளங்கையை வளைத்துக்கொண்டு)

**கந்தையா:-** நான் உம்மை ஆசீர்வாதம் கேட்கவில்லை. அது உமக்கே இருக்கட்டும், எது வரைக்கும் பிரயாணம்?

**சாஸ்திரி:-** என்ன இப்படிச் சொல்லிவிட்டீர்? பிராமணாள் ஆசீர்வாதம் இலகுவில் எல்லோருக்கும் கிடைக்குமா?

**கந்தையா:-** எனக்குப் பிராமணனென்றும், மற்றவர்களென்றும், ஆசீர்வாதமென்றும், சாபமென்றும் இருப்பதாகவும், அதன் பெயருக்குத் தக்கபடியான ஏற்றத்தாழ்வுகள் இருப்பதாகவும் நம்பிக்கையில்லை. அப்படியிருப்பதெனச் சொல்லுபவர்களையும், நம்புபவர்களையும் நான் பொருட்படுத்துவதுமில்லை.

**சாஸ்திரி:-** அப்படியானால் இதுவெல்லாம் உலகத்தில் எப்படி தொன்று தொட்டு நடந்து வருகிறது.

**கந்தையா:-** உலகம் என்று எதைச் சொல்லுகிறீர்? நீர் வசிக்கும் இடத்தையா? மற்றுமுள்ள 5 கண்டங்களின் நிலப்பரப்புகளையும் சேர்த்தா?

**சாஸ்திரி:-** மற்ற விஷயமெல்லா மெதற்கு? முதலில் நாம் வசிக்கு மிடத்தின் நடப்பைக் குறித்தே சொல்லும் பார்ப்போம்.

**கந்தையா:-** உலகமே இன்னதென்று அறியாத உமக்குப் பிராமணா ளென்றும், ஆசீர்வாத மென்றும் வீண் ஆராவாரமெதற்கு?

**சாஸ்திரி:-** நான் என்ன ஒன்றும் அறியாதவனென்று நினைத்துக் கொண்டீரோ?



**கந்தையா:-** உலகமே அக்கிரகாரத்துக்குள்ளிருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிற உம்மோடு ஏன் வீண் வாதம்.

**சாஸ்திரி:-** என்ன நீர் நம்மை நிரக்ஷரகுக்ஷி என்று நினைத்து விட்டீர் போலிருக்கிறது. நான் இந்த 20, 25 வருஷங்களாக எவ்வளவோ சிரமப்பட்டு வீடு வாசல், தாய் தகப்பன் முதலியவர்களை எல்லாம் விட்டு விட்டு தன்னந்தனியாக இருந்து காவிய நாடக அலங்காரம், வியாகரணம், தர்க்கம், மீமாம்சம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களை சாங்கோபாங்கமாக ஓதி பரீக்ஷையில் முதற்றரமாகத் தேரி பரிசுகளும் கூட பெற்று வித்வ சிகாமணி என்ற பட்டமும் பெற்றிருக்க இப்படி நினைத்து விட்டீரே.

**கந்தையா:-** உங்கள் வாசிப்பில் உலகத்துக்கு ஏதாவது இலக்கணம் சொல்லப்பட்டிருக்கின்றதா? அது விளங்கும் படி யாராவது கற்பித்திருக்கிறார்களா?

**சாஸ்திரி:-** உலகம் உலகம் உலகத்தையே கட்டியழுகிறீர். உலகத்தைப்பற்றி பூகோள ககோள சாஸ்திரங்களில் விசதமாகச் சொல்லி யிருக்கிறது. அதைப்பார்த்தால் எல்லாம் தெரிந்துவிடும். அதென்ன ஒரு காவியம் வாசிக்கும் சிறுவன் பார்த்தாலும் தெரிந்துவிடும். நீர் அதை ஒரு பிரமாதமாக நினைத்துக்கொண்டு வாதிக்கிறீரே.

**கந்தையா:-** நான் உமக்குத் தெரியுமா என்றுதானே கேட்டேன். எதிலிருக்கிறது, யாருக்கெல்லாம் தெரியும் என்று கேட்வில்லையே. நீர் தர்க்க சாத்திரமும், மற்ற சாத்திரமும், சாங்கோபாங்கமாக வாசித்த வித்வசிகாமணியாயிற்றே. இப்படித்தான் உம்ம சங்கதிகளிருக்கும். எதற்காக வீண் வாதம்? போதும் சும்மாயிரும்.

**சாஸ்திரி:-** என்னைய்யா இருக்க இருக்க மிகவும் கேவலமாக எண்ணி விட்டீர். தர்க்க சாஸ்திரத்தைப்பற்றி உமக்கென்ன தெரியும்? எல்லாவற்றையும் அலட்சியமாக நினைத்து விட்டீரே.

**கந்தையா:-** உம்முடைய தர்க்கமும், வியாக்யானமும், வேதாந்தமும், காவிய நாடகாலங்காரமும் எனக்கு வேண்டாம். அதையும், அதை வாசித்த உம்மையும் நீரே பெருமை பாராட்டிக்கொள்ளும். எனக்கு அவை ஒன்றும் வேண்டாம்.

**சாஸ்திரி:-** ஆனால் எதுதான் உமக்கு வேண்டியது?

**கந்தையா:-** மக்களுக்குள் ஏற்றத்தாழ்வை யுண்டாக்கி அவற்றால் சில சோம்பேறிக் கூட்டத்தார் வயிறு வளர்த்து வருவது முதலில் ஒழிந்து, எல்லோரும் ஒரு குடி மக்களென்ற உணர்ச்சியும் ஒற்றுமையும் வளர்ந்து வாழவேண்டும்.

**சாஸ்திரி:-** ஜாதி பேதமே கூடாதென்கின்றீரா?

**கந்தையா:-** ஆமாம் (அழுத்தம் திருத்தமாக)



RangaRakes tamilnavarasam.com

**சாஸ்திரி:-** ஓ, ஓ! நீர் தற்காலம் கலியின் மகிமையைக் காட்டி மெய்ப்பிக்க பிறந்த பாஷாண்ட மதத்தினரோ! சரி, சரி. உம்மோடு பேசியதற்கும், பார்த்ததற்கும் பிராயச்சித்தம் செய்து கொள்ளச் சொல்லியிருக்கிறது?

**கந்தையா:-** எதற்காக?

**சாஸ்திரி:-** நீங்கள் எல்லோரும் பூர்வ ஜென்மத்தில் சண்டாளர்களாக இருந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஒரு பார்ப்பனனைப் பார்த்து அவனையும், அவன் கஷ்டப்பட்டு வாசித்தவைகளையும் கேவலமாக நினைப்பீர்களா?

**கந்தையா:-** நீர் என்னை முன்ஜென்மத்தில் சண்டாளனென்று சொல்லும் சமயத்தில் எனக்குச் சுயமரியாதையும், பலமும், வீரமும் இருக்கும்போது அத்தகைய சொல்லையும் கேட்டு உம்முடைய விஷயத்தில் எனக்குக் கோபம் வராமல் பரிதாபமுண்டாகிறதே, இதற்கென்ன காரணம் என யோசித்தால் அந்தக்காலத்தில் நீர் எனக்குப் பிள்ளையாகப் பிறந்திருக்கலாம். புத்திர வாத்சல்யம் உம்முடைய விஷயத்தில் அனுதாபம் காட்டவேண்டி வருகிறது.

**சாஸ்திரி:-** என்னடா சூத்திரப்பயலே! என்னைச் சண்டாளனுக்கு மகனென்று சொல்லி விட்டதோடல்லாமல் என் விஷயத்தில் வாத்சல்யமாம், பரிதாபமாம், அநுதாபமாம். நீயா எனக்குத் தகப்பன்?

**கந்தையா:-** நான் தகப்பனானால் நானிறந்தால் என் சொத்தெல்லாம் உமக்குத்தானே சேரும். நீர் கலியாண மாகாமலிருந்தாலும், காயலானாலும், பட்டினி கிடந்தாலும் அவைகளைப்பற்றி எனக்குத்தானே அதிக கவலை? இப்படியிருக்கிற என் மீது உமக்கேன் இவ்வளவு வருத்தம்? என்னைச் சொன்னது போல் உம்மைச் சண்டாளனென்றும் சூத்திரனென்றும் இழிவையுண்டாக்கும் சொற்களையாவது பேத புத்தியையுண்டாக்கும் பதங்களையாவது சொன்னேனா? எதற்காகப் பொங்கி வழிகிறீர்?

(சாஸ்திரியார் பிறகு தன் குற்றத்தை யுணர்ந்து வருந்துவதாகச் சொல்லி தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.)

**பகுத்தறிவு (மா.இ.) - உரையாடல் - அக்டோபர் 1936**



# தீபாவளிப் பண்டிகை

இவ் வருஷத்திய தீபாவளிப் பண்டிகை சமீபத்தில் வரப் போகின்றது. பார்ப்பனரல்லாத மக்களே! என்ன செய்யப்போகின்றீர்கள்? ''அப்பண்டிகைக்கும் எங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை'' என்று சொல்லி விடப் போகின்றீர்களா? அல்லது அப்பண்டிகையைக் கொண்டாடப்போகின்றீர்களா? என்பது தான் ''நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்'' என்று கேட்பதின் தத்துவமாகும். நண்பர்களே! சிறிதும் யோசனை இன்றி யோக்கியப் பொறுப்பின்றி உண்மைத் தத்துவமின்றி சுயமரியாதை உணர்ச்சி இன்றி சுயமரியாதை இயக்கத்தின் மீது வெறுப்புக் கொள்ளுகின்றீர்களேயல்லாமல் மற்றும் சுயநலப் பார்ப்பனர் வார்த்தைகளையும், மூடப்பண்டிதர்களின் கூக்குரலையும், புராணப் புஸ்தக வியாபாரிகளின் விஷமப் பிரசாரத்தையும், கண்டு மயங்கி அறிவிழந்து ஓலமிடுகின்றீர்களே யல்லாமல் மேலும் உங்கள் வீடுகளிலும், அண்டை அயல்களிலும் உள்ள கிழங்களுடையவும், அழுக்கு மூட்டைகளுடையவும், ஜீவனற்ற தன்மையான ''பழைய வழக்கம்'' ''பெரியோர் காலம் முதல் நடந்து வரும் பழக்கம்'' என்கின்றதான வியாதிக்கு இடம் கொடுத்துக் கொண்டு கட்டிப்போடப்பட்ட கைதிகளைப்போல் துடிக்கின்றீர்களே யல்லாமல் உங்கள் சொந்தப் பகுத்தறிவைச் சிறிதுகூட செலவழிக்க சம்மதிக்க முடியாத உலுத்தர்களாய் இருக்கின்றீர்கள்.

பணத்தையும், மானத்தையும் எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கத் தயாராயிருக்கிறீர்கள். சுதந்தரத்தையும், சமத்துவத்தையும் எவ்வளவு வேண்டுமானாலும் விட்டுக்கொடுக்க தயாராயிருக்கின்றீர்கள். ஆனால் உங்கள் பகுத்தறிவைச் சிறிது கூட பயன்படுத்தத் தயங்குகிறீர்கள். அது விஷயத்தில் மாத்திரம் ஏன் வெகு சிக்கனம் காட்டுகின்றீர்கள்? இந்நிலையிலிருந்தால் என்றுதான் நாம் மனிதர்களாவது? பார்ப்பன ரல்லாதார்களில் சில பண்டிதர்கள் மாத்திரம் வயிறு வளர்த்தால் போதுமா? புராணப் புஸ்தக வியாபாரிகள் சிலர் மாத்திரம் வாழ்ந்தால் போதுமா? கோடிக்கணக்கான மக்கள் ஞானமற்று மானமற்று கால்வயிற்றுக் கஞ்சிக்கும் வகையற்று அலைவதைப் பற்றிய கவலை வேண்டாமா? என்று கேட்கின்றேன்.

புராண கதைகளைப்பற்றிப் பேசினால் கோபிக்கின்றீர்கள்; அதன் ஊழலை எடுத்துச்சொன்னால் காதுகளைப் பொத்திக்கொள்ளுகின்றீர்கள். ''எல்லாருக்கும் தெரிந்தது தானே; அதையேன் அடிக்கடி கிளறுகின்றீர்கள்? இதைவிட உங்களுக்கு வேறு வேலை இல்லையா?'' என்று கேட்கின்றீர்கள்.



RangaRakes tamilnavarasam.com

ஆனால் காரியத்தில் ஒரு நாளைக்கு உள்ள 60 நாழிகை காலத்திலும் புராணத்திலேயே மூழ்கி, மூச்சு விடுவது முதல் அதன்படியே செய்து வருகின்றீர்கள். இப்படிப்பட்ட மனிதர்கள் புராணப் புரட்டை உணர்ந்தவர் களாவார்களா? புராண ஆபாசத்தை வெறுத்தவர்களாவார்களா? நீங்களே யோசித்துப் பாருங்கள்.

பண்டித, பாமர, பணக்கார ஏழைச் சகோதரர்களே! இந்த மூன்று மாத காலத்தில் எவ்வளவு பண்டிகை கொண்டாடினீர்கள்? எவ்வளவு யாத்திரை செய்தீர்கள்? இவற்றிற்காக எவ்வளவு பணச் செலவும், நேரச்செலவும் செய்தீர்கள்? எவ்வளவு திரேகப் பிரயாசைப்பட்டீர்கள் என்பதை யோசித்துப் பார்த்தால் நீங்கள் புராணப்புரட்டை உணர்ந்து புராண ஆபாசத்தை அறிந்தவர்களாவீர்களா? வீணாய் கோபிப்பதில் என்ன பிரயோஜனம்? இந்த விஷயங்களை வெளியில் எடுத்து விளக்கிச்சொல்லுகின்றவர்கள் மீது ஆத்திரம் காட்டி அவர்களது கண்ணையும், மூக்கையும், தாடியையும், தலைமயிரையும் பற்றிப் பேசுவதால் என்ன பயன்? ''நீ ஏன் மலத்தில் மூழ்கி இருக்கின்றாய்'' என்றால் அதற்கு ''நீ தமிழ் இலக்கணம் தெரியாதவன்'' என்று பதில் சொல்லிவிட்டால் மலத்தின் துர்நாற்றம் மறைந்து போகுமா?

அன்பர்களே! சமீபத்தில் வரப்போகும் தீபாவளிப்பண்டிகையை பார்ப்பனரல்லாத மக்களாகிய நீங்கள் 1000க்கு 999 பேர்களுக்கு மேலாகவே எப்படிக் கொண்டாடப் போகின்றீர்கள். துணி தேவை இருக்கின்றவர்களும், தேவை இல்லாதவர்களும் பண்டிகையை உத்தேசித்து துணிவாங்குவது என்பது ஒன்று; மக்கள் மருமக்களை மரியாதை செய்வதற்கென்று தேவைக்கும், யோக்கியதைக்கும் மேலானதாகவும், சாதாரணமாக உபயோகப்படுத்துவதற்கு ஏற்றதல்லாததுவுமான துணிகள் வாங்குவது என்பது இரண்டு; அர்த்த மற்றதும் பயனற்றதுமான வெடிமருந்து சம்மந்தப்பட்ட பட்டாசு வகைகள் வாங்கிக் கொளுத்துவது மூன்று; பார்ப்பனர் உள்பட பலர் இனாம் பிச்சை என்று வீடு வீடாய் கூட்டங்கூட்டமாய்ச் சென்று பல்லைக்காட்டிக் கெஞ்சி பணம்வாங்கி அதை பெரும்பாலும் சூதிலும், குடியிலும், செலவழித்து நாடு சிரிக்க நடந்து கொள்வது நான்கு; இவற்றிற்காக பலர் ஊர்விட்டு ஊர் பிரயாணம் செய்து பணம் செலவழிப்பது ஐந்து; அன்று ஒவ்வொரு வீடுகளிலும் அமிதமான பதார்த்த வகைகள் தேவைக்கு மிகுதியாகச்செய்து அவைகளில் பெரும்பாகம் கண்டவர்களுக்குக் கொடுப்பதும் வீணாக்குவதும் ஆறு; இந்தச் செலவுகளுக்காகக் கடன் படுவது ஏழு. மற்றும் இதுபோன்ற பல விஷயங்கள் செய்வதன் மூலம் பணம் செலவாகின்றது என்பதும், அதற்காக கடன்பட வேண்டியிருக்கின்றது என்பதும் பட்டாசு வெடி மருந்து ஆகியவைகளால் அபாயம் நேரிட்டு பல குழந்தைகள் சாவதுமான விஷயங்களொரு புறமிருந்தாலும் மற்றும் இவைகளுக்கெல்லாம் வேறு ஏதாவது தத்துவார்த்தமோ சைன்ஸ் பொருத்தமோ சொல்லுவதானாலும்



தீபாவளி பண்டிகை என்றால் என்ன? அது எதற்காக கொண்டாடப்படுகிறது என்கின்ற தான விஷயங்களுக்கு சிறிதுகூட எந்த விதத்திலும் சமாதானம் சொல்ல முடியாது என்றே சொல்லுவோம். ஏனெனில் அது எப்படிப்பார்த்தாலும் பார்ப்பனியப் புராணக் கதையை அஸ்திவாரமாகக் கொண்டதாகத்தான் முடியுமே ஒழிய, மற்றபடி எந்த விதத்திலும் உண்மைக்கோ, பகுத்தறிவுக்கோ அனுபவத்திற்கோ சிறிதும் ஒத்ததாக இருக்க முடியவே முடியாது. பாகவதம் இராமாயணம், பாரதம் முதலிய புராண இதிகாசங்கள் பொய் என்பதாக சைவர்கள் எல்லாரும் ஒப்புக்கொண்டாய் விட்டது. கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவைகள் பொய் என்று வைணவர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டாய் விட்டது. இவ்விரு கூட்டத்திலும் பகுத்தறிவுள்ள மக்கள் பொதுவாக இவையெல்லாவற்றையும் பொய் யென்று ஒப்புக்கொண்டாய் விட்டது. அப்படி இருக்க ஏதோ புராணங்களில் இருக்கின்ற கதைகளைச் சேர்ந்த பதினாயிரக்கணக்கான சம்பவங்களில் ஒன்றாகிய தீபாவளிப் பண்டிகைக்காக மாத்திரம் மக்கள் இந்த நாட்டில் இந்தக் காலத்தில் இவ்வளவு பாராட்டுதலும், செலவு செய்தலும், கொண்டாடுதலும் செய்வதென்றால், அது எவ்வளவு பெரிய **மடத்தனம்** என்பதை வாசகர்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

தீபாவளிப்பண்டிகையின் கதையில் வரும் பாத்திரங்கள் 3. அதாவது நரகாசூரன், கிருஷ்ணன், அவனது இரண்டாவது பெண்சாதியாகிய சத்தியபாமை ஆகியவைகளாகும். எந்த மனிதனாவது கடுகளவு மூளையிருந்தாலும் இந்த மூன்று பேரும் உண்மையாய் இருந்தவர்கள் என்றாவது அல்லது இவர்கள் சம்மந்தமான தீபாவளி நடவடிக்கைகள் நடந்தவை என்றாவது, அவற்றிற்கும் நமக்கும் ஏதாவது சம்மந்தம் உண்டு என்றாவது, அதற்காக நாம் இந்தமாதிரியான ஒரு பண்டிகை தீபாவளி என்று கொண்டாட வேண்டுமென்றாவது ஒப்புக்கொள்ள முடியுமாவென்று கேட்கின்றோம்.

பார்ப்பனரல்லாதார்கள், தங்களை ஒரு பெரிய சமூகக்காரர்களென்றும் கலைகளிலும் ஞானங்களிலும் நாகரீகங்களிலும் தேர்ச்சி பெற்றவர்கள் என்றும் தட்டிப்பேச ஆளில்லாவிடங்களில் சண்டப்பிரசண்டமாய்ப் பேசி விட்டு எவனோ ஒரு மூடனோ அல்லது ஒரு அயோக்கியனோ ''காளை மாடு கன்றுப் போட்டிருக்கின்றது'' என்றால் உடனே ''கொட்டத்தில் கட்டி பால் கறந்து கொண்டுவா'' என்று பாத்திரம் எடுத்துக்கொடுக்கும் மடையர்களாகவே இருந்து வருவதைத்தான் படித்த மக்கள் என்பவர்களுக்குள்ளும் பாமர மக்கள் என்பவர்களுக்குள்ளும் பெரும்பாலும் காண்கின்றோமே ஒழிய ''காளைமாடு எப்படி கன்றுப் போடும்'' என்று கேட்கின்ற மக்களைக் காண்பது அரிதாகவே இருக்கின்றது. மற்றும் இம்மாதிரியான எந்த விஷயங்களிலும் கிராமாந்தரங்களில் இருப்பவர்களை விட பட்டணங்களில் இருப்பவர்கள் மிகுதியும் மூடத்தனமாகவும் பட்டணங்களில் இருப்பவர்களை விட சென்னை முதலான பிரதான பட்டணங்களில் இருப்பவர்கள் பெரிதும்



RangaRakes tamilnavarasam.com

மூட சிகாமணிகளாகவும் இருந்து வருவதை பார்க்கின்றோம். உதாரணமாக தீபாவளி, சரஸ்வதி பூஜை, தசரா, பிள்ளையார் சதுர்த்தி, பதினெட்டு, கிர்த்திகை முதலிய பண்டிகைகள் எல்லாம் கிராமாந்திரங்களை விட நகரங்களில் அதிகமாகவும் மற்ற நகரங்களைவிட சென்னையில் அதிகமாகவும் கொண்டாடுவதைப் பார்க்கின்றோம். இப்படிக் கொண்டாடும் ஜனங்களில் பெரும்பான்மையோர் எதற்காக, ஏன் கொண்டாடுகின்றோம் என்பதே தெரியாதவர்களாகவேயிருக்கின்றார்கள். சாதாரணமாக மூட பக்தியாலும், குருட்டுப் பழக்கத்தினாலும் கண்மூடி வழக்கங்களைப் பின்பற்றி நடக்கும் மோசமான இடம் தமிழ் நாட்டில் சென்னையைப் போல் வேறு எங்குமே இல்லை என்று சொல்லி விடலாம். ஏனெனில் இன்றைய தினம் சென்னையில் எங்கு போய் பார்த்தாலும் ஒவ்வொரு வீட்டுத்திண்ணையிலும் சரீரமில்லாத ஒருதலை உருவத்தை மாத்திரம் வைத்து அதற்கு நகைகள் போட்டு பூசைகள் செய்து வருவதும், வீடுகள் தோறும் இரவு நேரங்களில் பாரத இராமாயணக் காலக்ஷேபங்களும், பெரிய புராண திருவிளையாடல் புராணக் காலக்ஷேபங்களும் பொது ஸ்தாபனங்கள் தோறும் சதா காலக்ஷேபங்களும் நடை பெறுவதையும் இவற்றில் தமிழ் படித்த பண்டிதர்கள், ஆங்கிலம் படித்த பட்டதாரிகள், கௌரவப் பட்டம் பெற்ற பெரிய மனிதர்கள், பிரபலப்பட்ட பெரிய உத்தியோகஸ்தர்கள் மற்றும் பிரபுக்கள், டாக்டர்கள், சைன்ஸ் நிபுணர்கள், புரபசர்கள் முதலியவர்கள் பெரும் பங்கெடுத்துக் கொண்டிருப்பதையும் பார்க்கலாம். பார்ப்பனரல்லாதார்களில் இந்தக் கூட்டத்தார்கள் தான் ''ஆரியர் வேறு தமிழர் வேறு'' என்பாரும் ''புராணங் களுக்கும் திராவிடர்களுக்கும் சம்மந்தமில்லை'' என்பாரும் தீபாவளி வைணவப் பண்டிகை ஆனதால் சைவனுக்கு அதில் சம்பந்தமில்லை என்பாரும் பார்ப்பனரல்லாத சமூகத்தாருக்கு ''நாங்கள் தான் பிரதிநிதிகள்'' என்பாரும் மற்றும் ''திராவிடர்களின் பழைய நாகரீகத்திற்கு மக்களை அழைத்துச் செல்லவேண்டு'' மென்பாரும் பெருவாரியாக இருப்பார்கள். ஆகவே இது போன்ற ''படித்த'' கூட்டத்தாரிடம் அறிவு, ஆராய்ச்சி சம்மந்தமான காரியங்களை எதிர்பார்ப்பதைவிட, உலக அறிவுடைய சாதாரண மக்களிடம் எதிர்பார்ப்பதும், பிரசாரம் செய்வதும் பயன் தரத்தக்கதாகும்.

உதாரணமாக, ராமேஸ்வர தேவஸ்தானக் கமிட்டியாரின் ஒரு ரிபோர்ட் டில் மக்கள் ராமேஸ்வரத்திற்கு முந்திய வழக்கம் போல் இப்போது யாத்திரைக்கு வருவதில்லை என்றும் அதனால் வரும்படி குறைந்து விட்ட தென்றும், அதுபோலவே திருப்பதி மகந்து அவர்களின் ஒரு வருஷாந்திர ரிப்போர்ட்டில் அவ்வருஷம் திருப்பதிக்கு யாத்திரைக்காரர்கள் மிகக் குறைந்து போய் அதனால் கோவிலுக்கு முந்திய வருஷங்களைவிட பகுதி வரும்படிகூட எதிர்பார்க்க முடியாததாய் இருப்பதாகவும் குறிப்பிடப் பட்டிருப்பதனாலும், சங்கராச்சாரியார், ஜீயர் முதலிய மடாதிபதிகள் செல்லுகின்ற பக்கங்களில் எல்லாம் முன்போல் வரவேற்பு ஆடம்பரங்களும்



வரும்படியும் இல்லாமல் சீக்கிரம் சீக்கிரமாக சஞ்சாரத்தை முடித்துக் கொண்டு ஊர் திரும்புவதிலிருந்தும் பிராமண மகாநாடுகளும் சமயப் பத்திரிகைகளும் மூட்டை கட்டப்படுவதிலிருந்தும் ஒரு விதத்தில் பாமர மக்களிடை உண்மை உணர்ச்சி பரவி இருக்கின்றதென்பதை உணர முடிந்தாலும், வழிகாட்டிகளென்றும் தலைவர்களென்றும் பொது ஜனங்களின் தர்மகர்த்தாக்களென்றும் படிப்பாளிகள் என்றும் தங்களை சொல்லிக் கொள்ளுபவர்களுள் அநேகமாக சிறிது உணர்ச்சிகூடக் காணாமலிருப்பதால் அவர்களைப்பற்றி நாம் வருந்தாமல் இருக்க முடியவில்லை.

எப்படியானாலும் இந்த வருஷம் தீபாவளிப் பண்டிகை என்பதை உண்மையான தமிழ் மக்கள் திராவிடர்கள் என்பவர்கள் கண்டிப்பாய் அனுசரிக்கவோ கொண்டாடவோ கூடாது என்றே ஆசைப்படுகிறேன்.

அன்றியும் இத்தீபாவளிக் கதை எவ்வளவு பரிகாசத்திற்கு இடமா யிருக்கிறதென்பதையுணரும் பொருட்டு அதனையும் கீழே தருகிறேன்.

**தீபாவளியின் கதைச் சுருக்கம்**

ஆதிகாலத்தில் நரகாசூரன் என்று ஒரு அசுரன் இருந்தானாம். அவன் வராக அவதாரத் திருமாலுக்கும் பூமிக்கும் பிறந்தவனாம்.

அவன் தேவர்களை யெல்லாம் பலவாறு தூஷித்து இம்சித்து வந்தானாம்.

தேவர்கள் இதைப்பற்றி அவன் தகப்பனாகிய திருமாலிடம் முறையிட்டார்களாம்.

உடனே திருமால் நரகாசூரனைக் கொல்லுவதாக வாக்களித்தாராம்.

அதற்காக வேண்டி திருமால் கிருஷ்ணனாகவும் பூமி தேவி சத்தியபாமையாகவும் அவதாரமெடுத்து உலகத்துக்கு வந்து நரகாசூரனைக் கொன்று விட்டார்களாம்.

நரகாசூரன் சாகும்போது தான் செத்த தினத்தை உலகத்தார் கொண்டாடவேண்டுமென்று கேட்டுக் கொண்டானாம்.

கிருஷ்ணன் அப்படியே ஆகட்டுமென்று வாக்களித்தாராம்.

அதற்காகவேண்டி மக்கள் எல்லோரையும் கொண்டாடும்படி கடவுள் செய்து விட்டாராம்.

ஆதலால் நாம் கொண்டாடுகிறோமாம்; அல்லது கொண்டாட வேண்டுமாம்.

இதை நமது பகுத்தறிவுக்குப் பொருத்திப் பார்ப்போம்.

முதலாவது இந்தக் கதை உண்மையாய் இருக்கமுடியுமா?



RangaRakes tamilnavarasam.com

‘‘எல்லா உலகங்களையும் உண்டாக்கிய நான்முகனைப் பெற்றவரும், உலகங்களையெல்லாம் காத்து வருபவரும் தேவர்கள் தலைவருமாகிய திருமாலு’’க்கும் பூமி ‘தேவி’க்கும் (எப்படி குழந்தை பிறக்கும்? பூமி ‘தேவி’ என்றால் உலகம் அல்லவா? அப்படித்தான் பிறந்தவன்) அவன் எப்படி அசுரன் ஆனான்? அத்தகைய மேம்பாடுடைய கடவுளுக்குப் பிறந்தவன் எப்படி தீய செயல்களைச் செய்தான்? அப்படித்தான் செய்தாலும் அவனைப் பெற்றவனாகிய திருமால் தனது மகனைத் திருத்தாமல் ஏன் கொன்றான்? அப்படியிருந்தாலும் தானே வந்துதான் கொல்லவேண்டுமோ? மேற்படி நரகாசுரனைக் கொன்றபோது அவன் தாயாகிய பூமிதேவியும் சத்திய பாமையாகப் பிறந்து உடனிருந்ததாகக் கதை கூறுகிறது. என்னே தாயின் கருணை! இவள்தான் உலகத்தை யெல்லாம் காப்பாற்றுகிறாளாம்! உலக மக்கள் செய்யும் பாவங்களை யெல்லாம் பொறுத்துக் கொள்ளுகின்றாளாம்! ‘‘பொறுமையில் பூமிதேவிபோல்’’ என்று உதாரணத்திற்குக் கூட பண்டிதரும் பாமரரும் இந்த ‘‘அம்மையாரை’’ உதாரணமாகக் கூறி வருகின்றனரே! இத்தகைய பூமி தேவியார் தனது மகனைக் கொல்லும்போது தானும் உடனிருக்கவேண்டுமென்று திருமாலைக் கேட்டுக் கொண்டாராம்! என்னே தாயின் கருணை!!

தமிழர்களாகிய நம்மையே அசுரர்களென்றும் ஆரியராகிய பார்ப்பனர்கள் தாங்களே தேவர்களென்றும் கற்பித்துக் கதை கட்டியிருக்கிற தேவ-அசுரப் போராட்டத்தோடு சம்மந்தப்பட்டிருக்கிற இந்தக்கதையைத் தமிழ் மக்களாகிய நாமே கொண்டாடுகிறோம்! நாமே சிறந்த நாளாகக் கருதுகிறோம்! அந்தோ என் செய்வது? நம்மை ஏமாற்றி நம்மையே பழிக்கும் பார்ப்பனர் கட்டுக்கதையை உண்மையென நம்பி நாமே கொண்டாடி வீண் செலவு செய்வதென்றால் நமது சுயமரியாதையை என்னென்பது? நமது பகுத்தறிவை என்னென்று சொல்லுவது?

புராணங்களில் கண்டபடியே இந்தக் கதையை உண்மையென்று ஒப்புக்கொண்டு தமது பகுத்தறிவையிழந்து இந்தத் தீபாவளியைக் கொண்டாடும் நமது தமிழ் மக்களின் அறியாமையை என்னென்று கூறுவது?

சென்றது போக, இனிமேல் கொண்டாவது தீபாவளியை - அர்த்தமற்ற மூடப்பழக்கத்தை - நம் தலையில் நாமே மண்ணைப் போட்டுக்கொள்ளும் செயலைக்குறித்து ஒரு காசாவது, ஒரு நிமிஷ நேரமாவது செலவு செய்ய வேண்டாமென்று திராவிட மக்களாகிய உங்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

**- ஈ.வெ.ரா.**

குடி அரசு - கட்டுரை - 01.11.1936



# சாஸ்திரியாரே இதற்கு சர்வாதிகாரியாக வேண்டியதில்லை

### சுயராஜ்யம் வந்தாலே போதும்

மகா கனம் சாஸ்திரியார் பிரம்மஸ்ரீ ஸ்ரீனிவாச சாஸ்திரி அவர்கள் விழுப்புரம் பேச்சில் நான் சர்வாதிகாரி ஆனால் இன்ன இன்னது செய்வேன் என்று விளக்கியதில் சத்தியத்தைச் சொல்லிவிட்டார். அதற்கு ஆக அவரை நாம் பாராட்ட வேண்டும். தோழர்கள் ஜவஹர்லால் நேரு, ராஜகோபாலாச்சாரியார் ஆகிய பார்ப்பனர்களை விட கனம் சாஸ்திரியார் 1000 மடங்கு யோக்கியர் என்று சொல்லலாம்.

எப்படி யெனில் அவர் சர்வாதிகாரியானால் இந்தியாவில் ஒரே மதத்தை ஸ்தாபித்து விடுவேன், வகுப்புரிமையை எடுத்துவிடுவேன், தீண்டப்படாத மக்களுக்கு தனிக்கோவிலும், தனிப் பள்ளிக்கூடமும் கட்டி வைப்பேன், பெண்களுக்கு சம சொத்துரிமை அளிக்கமாட்டேன், ஹிந்தி பாஷையை இந்திய பாஷை ஆக்கி விடுவேன், சமூக சீர்திருத்த சம்மந்தமான காரியம் ஜனங்கள் சம்மதமில்லாமல் செய்யவிடமாட்டேன் என்று கூறி இருக்கின்றார். ஆனால் இதை இப்படியே நிர்வாணமாய்ச் சொல்லாமல் அதற்கு மூடிபோட்டு கழுத்தை மூடிக்குள் வைத்து பேசியிருக்கிறார்.

இந்தக் காரியங்கள் மாத்திரம் செய்ய வேண்டியதானால் சாஸ்திரியார் சர்வாதிகாரியாக ஆக வேண்டிய அவசியமில்லை என்பதே நமதபிப்பிராயம். தோழர்கள் காந்தியாரும் ஜவஹர்லாலும் கோரும் சுயராஜ்யம் வந்தாலே போதுமானது. எப்படியெனில் இந்தக் காரியங்களுக்காகத்தான் சுயராஜ்யம் கேட்கின்றோம் என்று இருவரும் வெளிப்படையாகவே சொல்லுகிறார்கள்.

வகுப்புத் தீர்ப்பையும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் தேசத்துரோகம் என்று காங்கிரஸ் தலைவரும் மாஜி தலைவரும் சொல்லும் காரணமுமே இதற்கு ஆகத்தான். இதைத்தவிர வேறு எதற்காக என்று கேட்கின்றோம்.

தோழர் காந்தியார் வட்டமேஜை மகாநாட்டில் பேசும்போது ‘‘சுயராஜ்யம் கொடுத்தால் வகுப்புவாதத்தை நான் அடக்கிவிடுகிறேன்’’ என்று சொன்னார். அதுவும் முஸ்லீம்கள் கேட்கும் வகுப்புரிமையை ஒடுக்கி விடுவேன் என்றார்.



RangaRakes tamilnavarasam.com

தோழர் ஜவஹர்லால் கராச்சியில் ''சுயராஜ்யம் வந்தால் அவரவர்கள் ஜாதிபழக்கவழக்கங்கள் காப்பாற்றி கொடுக்கப்படும்'' என்று சொன்னார்.

சமூக சீர்திருத்த சட்டங்கள் சட்டசபையில் செய்யக்கூடாது என்று காந்தியார் வெகுநாளைக்கு முன்பே சொல்லி சில மசோதா வாபீஸ் பெற்றாய் விட்டது. வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை 500 கஜ ஆழத்தில் புதைக்கவே சுயராஜ்யம் கேட்கின்றேன் என்று தோழர் சத்தியமூர்த்தியும் சிம்லா ரேடியோ முதல் அனேகம் பேச்சில் சொல்லி இருக்கிறார்.

சுயராஜ்யம் வருவதற்குமுன்பே ஹிந்தியை இந்திய பாஷை ஆக்க வேண்டும் என்றும் எல்லா சுயராஜ்யவாதிகளும் சுயராஜ்ய தமிழ்ப் பண்டிதர்களும் சொல்லுகிறார்கள்.

தீண்டப்படாதவர்களுக்கு தனிக்கோவில் தனிப் பள்ளிக்கூடம் கட்டும் வேலையை காந்தியாரும் அரிஜனசேவைக்காரரும் ஏற்று அதற்கு ஆக பொது ஜனங்களிடம் பல லக்ஷ ரூபாய் வசூலித்து வேலை செய்தும் வருகிறார்கள். சிதம்பரத்தில் ஒரு தீண்டப்படாதாரைப்பிடித்தே கோயில் கட்டச் செய்து அதற்கு அஸ்திவாரமும் காந்தியாரே போட்டுவிட்டுப் போயிருக்கிறார்.

ஆகவே இந்தக்காரியங்களுக்கு ஆக சாஸ்திரியார் சர்வாதிகாரி ஆக வேண்டும் என்று எதிர்பார்ப்பது அவருடைய அறியாமை என்றுதான் சொல்லுவோம். அதில்லாமலே இப்போதே சில நடந்து வருகின்றன. சில நடந்தாகி விட்டன. சில சுயராஜ்ய திட்டத்தில் குறிப்பிடப்பட்டுமிருக்கின்றன. இதிலிருந்து பார்ப்பனர் என்றால் தோழர் மாளவியா ஒரு மாதிரி, ஜவஹர்லால் வேறு மாதிரி, ராஜகோபாலாச்சாரியார் மற்றொரு மாதிரி, சாஸ்திரியார் இன்னொரு மாதிரி, சத்தியமூர்த்தி இனியொருமாதிரி இருப்பார்கள் என்று நினைத்தால் நாம் தான் முட்டாள்களாகுவோமே தவிர அவர்களில் யாரும் குற்றவாளியாகமாட்டார்கள். சம்மந்தரும் மாணிக்கவாசகரும் பிறந்த ஜாதியாகிய பார்ப்பன ஜாதி ஆளுக்கொரு விதமாய் இருக்குமென்று அறிவாளி எவன்தான் கருதுவான்? ''நரியைப் பரியாக்கி'' ராஜாங்கத்தை ஒழித்தவர் மாணிக்கவாசகர். ''துண்டுச் சீட்டை எதிர் நீந்தச் செய்து'' 8000 சமணர்களை கழுவேற்றியவர் சம்மந்தர். அந்த ஜாதியில் பிறந்த ஜவஹர், ராஜகோபாலாச்சாரி, ஸ்ரீனிவாச சாஸ்திரி, சத்தியமூர்த்தி ஆகியவர்கள் சுயராஜ்யமும் சுதந்திரமும் சம்பாதித்து பார்ப்பனரல்லாதார்களில் தங்களுக்கு அடிமைகளாகவும், கூலிகளாகவும் இல்லாத கோடிக்கணக்கான மக்களை ஒழித்துவிடப் போவதிலும் சாகும்வரை பார்ப்பனரல்லாதார் கூட்டத்தாருக்கு எதிரியாய் இருக்கப் போவதிலும் ஆச்சரியமோ சந்தேகமோ இருக்க முடியுமா? ஆதலால் இவர்கள் எல்லாம் இந்த - பார்ப்பனர்கள் எல்லாம் புண்ணிய ஆத்மாக்கள் அதாவது மகாத்மாவைவிட ஒருபடி மேலான ஆத்மாக்கள் என்று சொல்லப்படுவதில் ''பிழை'' என்ன இருக்கிறது?

குடி அரசு - கட்டுரை - 01.11.1936



# பட்டேல் வருகிறார் பணப்பை ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! ஜாக்கிரதை!!!

**பார்ப்பனர் – உஷார்!**

தென்னாட்டு மக்களிடம் காங்கிரஸ் பேரால் பணம் வசூலித்து பார்ப்பனப்பிரசாரம்செய்ய அப்பணத்தை பார்ப்பனர்களிடம் ஒப்புவித்து விட்டுப் போக இம்மாதத்தில் தோழர் பட்டேல் வரப்போகிறாராம். இதுவரை கொடுத்தது போதாமல் இன்னமும் பணம் கொடுத்து ஏமாந்த சோணகிரிகளாகப் போகின்றீர்களா? அல்லது உஷாராய் இருக்கப்போகிறீர்களா? என்று தமிழ்நாடு பார்ப்பனரல்லாத மக்களைக் கேட்கின்றோம்.

இதுவரை பார்ப்பனர்கள் பல ஆசாமிகளைக் கூட்டிவந்து எத்தனை தடவை எவ்வளவு லக்ஷ ரூபாய் தமிழ்நாட்டில் வசூலித்து இருக்கிறார்கள் என்பதைக் கவனித்துப்பாருங்கள். கல்யாணம், கருமாதி, கோவில், குளம், பண்டிகை, உற்சவம், பூணூல், கர்ப்பாதான முகூர்த்தம், வளகாப்பு, சஷ்டி பூர்த்தி முதலியவைகளுக்கு ஆக என்று அவர்கள் வசூலித்ததைப் பற்றியோ நீங்கள் வலியக் கொடுத்ததைப்பற்றியோ நாம் இங்கு இப்போது பிரஸ்தாபிக்கவில்லை. அந்த வகையில் தென்னாட்டில் மாத்திரம் 2½ கோடி தமிழ்மக்கள் பல 2½ கோடி ரூபாய்களை பாழாக்கி அவற்றில் பல 2½ கோடிகளுக்கு மேல் பார்ப்பனர்களுக்குப் போய்ச் சேரும்படி செய்கிறார்கள். அது ஒரு புறமிருக்க இப்போது ஒரு புது ''சனியன்'' காங்கிரஸ், சுயராஜ்யம், தேசியம், சமதர்மம், சுதந்திரம் என்கின்ற பெயர்களில் வருஷா வருஷம் பல லக்ஷம் ரூபாய்கள் பாழாகின்றனவே அதைப்பற்றியே சொல்லுகின்றோம்.

திலகர் நிதி வசூல் செலவு வகைகள் எவ்வளவு தவறுதலான முறையில் நடந்திருந்தாலும் அவைகளை லட்சியம் செய்யாமல் போனாலும் கூட அந்தப் பணங்களுக்கு என்ன பலன் ஏற்பட்டது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அக்ஷய பாத்திரமெடுத்துக் கொண்டு அலையவேண்டிய பார்ப்பனர்கள் இன்று ஐ.சி.எஸ். ஆனார்கள் என்பதைத் தவிர வேறு என்ன நடந்தது என்று யோசித்துப்பாருங்கள்.

கதருக்கு வசூலித்த பல லக்ஷ ரூபாய்கள் என்ன கதி அடைந்தது? அதனால் கதர் வேஷத்தால் ஊருக்கு நாலு இரண்டு பார்ப்பனர்கள்



RangaRakes tamilnavarasam.com

முனிசிபாலிட்டிக்கும் ஜில்லாபோர்டுக்கும் மெம்பராகிறார்கள். வேலையில்லாக் கஷ்ட காலத்தில் பல பார்ப்பனர்கள் கதரின் பேரால் வயிறுவளர்த்தார்கள் - வளர்க்கிறார்கள். இதைத் தவிர வேறு என்ன நடந்தது? கதருக்கு பணம் வசூலிப்பதற்கு முன் நமது நாட்டில் கதர் உற்பத்தி ஆகி கதர் பரவி இருந்த அளவில் பகுதியில் பகுதியாவது இன்று கதர் உற்பத்தி ஆயிற்று என்றோ, பரவி இருக்கிறது என்றோ சொல்ல முடியுமா என்று நீங்களே உங்கள் மனதில் கையை வைத்துப்பாருங்கள்.

பிறகு தீண்டாமை விலக்குக்கு பல லக்ஷ ரூபாய் வசூலிக்கப்பட்டது. அந்த பணம் என்ன ஆயிற்று? எலக்ஷன் செலவுக்கும் எலக்ஷனில் பார்ப்பனர் வெற்றி பெறவும் பயன்படுத்தப்பட்டது என்பதை யாராவது மறுக்க முடியுமா? உதாரணம் வேண்டுமானால் சொல்லுகிறோம்.

வடஆற்காட்டில் தோழர் கல்யாணராம அய்யர் என்கின்ற ஒரு பார்ப்பனர் சிறு வாத்தியார் வேலையில் இருந்து நீங்க வேண்டியவரானவர். அவருக்கு தீண்டாமை கமிட்டியில் அதைவிட அதிகச் சம்பளம்கொடுத்து நியமித்தார்கள். அவர் வட ஆற்காடு ஜில்லா போர்டுக்கு மெம்பராகவும், மற்ற மெம்பர்களுக்கு பிரசாரம் செய்யவும் பயன்படுத்திக்கொண்டார்கள். மற்றும் எத்தனையோ பேர்கள் தேர்தல் பிரசாரம் தீண்டாமை கமிட்டி சம்பளத்தில் செய்தார்கள். இந்த மாதிரி தமிழ்நாட்டிலும் ஆந்திர நாட்டிலும் மலையாள நாட்டிலும் தீண்டாமைக்கமிட்டி சம்பளக்காரர்கள் எத்தனை பேர் எலக்ஷனில் வேலை செய்யாதவர்கள், எலக்ஷனில் நிற்காதவர்கள், வெற்றி பெறாதவர்கள் என்று காங்கிரஸ் கணக்குக்காட்ட முடியுமா என்று கேட்கின்றோம்.

தோழர் ராஜன் தீண்டாமை கமிட்டி பிரசிடெண்டு என்கின்ற ஹோதாவின் தனது செல்வாக்கை எலக்ஷன்களுக்கு பயன்படுத்தி தீண்டாமை விலக்கு கமிட்டி சிப்பந்திகள் எலக்ஷன்களில் பிரசாரம் செய்து பல ஸ்தாபனங்களில் ஸ்தானம் பெற்றார். அவர் காங்கிரசுக்கு ''துரோகம்'' செய்த காரணத்தால் விலக வேண்டி வந்தாலும் கூட அந்த தலைமை ஸ்தானத்துக்கு மறுபடியும் அவரையே அழைத்தார்கள். அது பயன்படவில்லை. பிறகு மற்றொரு பார்ப்பனர் தான் தோழர் மதுரை வயித்தியநாதய்யர் தலைவராக ஆக்கப்பட வேண்டி இருந்ததே தவிர ஒருபார்ப்பனரல்லாதாரோ தீண்டாத வகுப்பைச் சேர்ந்தவரோ வர முடியவில்லை. ஏன்? தீண்டாமை விலக்குக்குக் காந்தியார் வசூலித்த பணம் பார்ப்பனருடையது என்கின்ற எண்ணமா அல்லது 10-ல் ஒரு பாகமாவது பார்ப்பனர் பணம் அதில் இருக்கிறது என்கின்ற எண்ணமா என்று யோசித்துப் பாருங்கள்.

விஷயம் தீண்டாமை விலக்குதல்

தீண்டாமைக்கு காரணஸ்தர்கள் பார்ப்பனர்கள்.

தீண்டாமையால் கஷ்டப்படுகிறவர்கள் பார்ப்பனரல்லாதார்கள்.



பணமும் பார்ப்பனரல்லாதாருடையது.

அந்த கமிட்டிக்கு தலைவர்கள் எல்லாம் பார்ப்பனர்கள்.

அந்த வேலை செய்யும் சம்பள சிப்பந்திகள் பெரிதும் பார்ப்பனர்கள்.

இந்த உண்மை அறிந்தபிறகு கூட தீண்டாமை விலக்குப் பணம் நாணயமான தத்துவத்தின்மீது யோக்கியமான முறையில் செலவழிக்கப் படுகின்றது என்று எந்த மூடன்தான் ஒப்புக்கொள்ள முடியும்? இது ஒரு புறமிருக்கட்டும்.

1920-ம் வருஷம் முதல் 1936-ம் வருஷம் வரை காங்கிரசும் அரிஜன கமிட்டியும் 30, 40-லக்ஷம் ரூபாய்களும் தீண்டாமை விலக்குக்காக செய்த வேலையின் பலனாக சில பார்ப்பனர்கள் அரசியலில் விளம்பரமும் ஸ்தாபனங்களில் ஸ்தானங்களும் பெற்றதல்லாமல் தீண்டாமை விலக்குக்கு என்ன நன்மை ஏற்பட்டது என்று கேட்கின்றோம். கிறிஸ்தவனாகவும் முஸ்லீமாகவும் ஆனவர்களில் சிலருக்கு தீண்டாமை விலகிற்று என்பதல்லாமல், ஜஸ்டிஸ் கட்சி அரசியல் ஆதிக்கத்தின் பயனாய் சட்ட மூலமாய் சில கொடுமைகள் நீங்கப்பட்டது என்பது அல்லாமல் மற்றபடி ஏற்பட்ட நன்மை என்ன என்று பார்ப்பனர்களையும் அவர்களது கூலிகளையும் கேட்கின்றோம்.

இனி இப்போதும் தேர்தலுக்கு ஆக பணம் வசூலிப்பதென்றால் என்ன செய்வதற்கு ஆக? பார்ப்பனரல்லாத மக்களிடம் தேர்தலுக்கு பணம் வசூல் செய்து பார்ப்பனர்களை அவர்கள் உரிமைக்கு மேல் 100-க்கு 400, 500 பங்கு அதிகமான பார்ப்பனர்களை நிறுத்தி சட்டசபை, ஸ்தல ஸ்தாபன சபை ஆகியவைகளை பார்ப்பன சபை, பார்ப்பன ஆதிக்க சபை என்று ஆக்குவதற்கு அல்லாமல் வேறு எதற்கு ஆக பணம் பயன்படுத்தப் போகிறது என்று கேட்கின்றோம்.

உதாரணமாக சென்னை கார்ப்பரேஷனுக்கு பார்ப்பன ஜன சமூக எண்ணிக்கைப்படி, 2 கவுன்சிலர்கள்தான் பார்ப்பனர்கள் வரலாம். பொதுப் பணத்தை கார்ப்பரேஷன் தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்தப்பட்டதின் பயனாய் தீண்டாமை விலக்குக் கமிட்டி மெம்பர்களும் சிப்பந்திகளும் வந்து பிரசாரம் செய்ததின் பயனாய் 40 ஸ்தானங்களில் 11 ஸ்தானங்கள் பார்ப்பனர்கள் அடைந்து விட்டார்கள்.

இந்தப் பார்ப்பனர்களில் பலர் எப்படி ஓட்டர் லிஸ்ட்டுக்கு வந்தார்கள் என்பதே கண்டுபிடிக்கமுடியாத காரியம். அப்படிப்பட்ட யோக்கியதை உடையவர்கள் வந்து விட்டார்கள். ஊர் ஆட்சி செய்ய என்பது ஒருபுற மிருந்தாலும் போதாக்குறைக்கு ஆல்டர் மென் என்று தேர்ந்தெடுக்கப்படும் 5 ஸ்தானங்களுக்கும் 2½ பார்ப்பனர்கள் தெரிந்தெடுக்கப்படப் போகிறார்களாம். அதாவது தோழர்கள் சத்திய மூர்த்தி அய்யர், பிரகாசம் பந்துலு, முத்துலக்ஷிமி



RangaRakes tamilnavarasam.com

ரெட்டியார், மற்றவர்கள் யாகூப் ஹாசன் சாயபு, மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆகிய இருவர்கள் தானாம். ஆகவே கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் பார்ப்பனர் ஏகபோகமாகவும் அதிகமாகவும் ஆதிக்கம் செலுத்தப் பயன்படுத்திக் கொள்ளுவதல்லாமல் வேறு எதற்குப் பயன்படுத்தப் படுகிறது என்று பாருங்கள். இந்த நிலையில் மறுபடியும் பணம் வசூல் செய்யவும் அதை தேர்தலுக்கு பயன்படுத்த பார்ப்பான் வசம் ஒப்படைக்கவும் தோழர் பட்டேல் அவர்கள் வருகிறார் என்றால் ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! ஜாக்கிரதை!!! என்று எச்சரிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 01.11.1936**



# கார்ப்பரேஷன் தேர்தலில் பார்ப்பனர் வெற்றி

சென்னைக் கார்ப்பரேஷன் தேர்தல் நடந்து முடிவும் வெளியாகிவிட்டது. காங்கிரசுக்கு 27 ஸ்தானமாம். அப்படியானால் மீதி எல்லாம் ஜஸ்டிஸ்கட்சிக்கே என்று வைத்துக்கொண்டாலும் ஜஸ்டிஸ் கட்சி கார்ப்பரேஷன் பொதுத் தேர்தலில் தோல்வியடைந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். காங்கிரஸின் வெற்றி உண்மையான வெற்றியா அல்லது மற்ற வெற்றிகளைப் போல் வெறும்கொட்டை எழுத்துச்சேதி வெற்றியா என்பது ஒரு புறமிருந்தாலும் பார்ப்பனர்களுக்கு நல்ல வெற்றி என்பதை யாரும் மறுக்கமுடியாது.

எழவானாலும் கல்யாணமானாலும் புரோகிதனுக்கு பலன் (வரும்படி) ஒரே மாதிரிதான் என்பது போல் பொய் வெற்றியானாலும் மெய் வெற்றி யானாலும் பார்ப்பனர்களுக்கு 11 ஸ்தானம் கிடைத்து விட்டது. ஆதலால் அவர்களுக்கு தேர்தலின் அரசியல் பின் விளைவு எப்படியானாலும் கவலைப்படத்தக்க காரியம் ஒன்றுமில்லை.

பார்ப்பன சமூகம் 100-க்கு 3 பேர் வீதம் ஜனத்தொகை கொண்டது. ஆதலால் அவர்கள் 40 ஸ்தானங்களில் 1½ ஒண்ணரை ஸ்தானத்துக்கே அருகதையுடையவர்கள். ஆனால் காங்கிரசு, தேசீயம், சுயராஜ்யம் என்ற கூப்பாடுகளின் பயனாய் 11 ஸ்தானங்களுக்கு குறையாமல் பெற்றுவிட்டார்கள். இந்த எண்ணிக்கை 100-க்கு 25 வீதத்துக்குமேல் ஆகின்றது. இனி நடக்கப்போகும் ஆல்டர் மென் தேர்தலிலும் 5-க்கு 3 வந்தே தீருவார்கள். எனவே பார்ப்பனர்கள் கூண்டோடு காங்கிரஸ், தேசியம், சுயராஜ்யம் என்று கத்துகிறார்கள் என்றால் பலனில்லாமல் வீணாகக் கத்தவில்லை. நல்ல அதுவும் அவர்களுடைய சமூக லாபத்தையே எதிர்பார்த்துத் தான் கத்துகிறார்கள் என்பதை இதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

ஆகையால் அவர்களை நாம் முட்டாள்கள் என்று சொல்லிவிட முடியாது. பார்ப்பனரல்லாதார் அவர்களுடன் சேர்ந்துபின் தாளம் போடு கின்றார்களே அந்த முட்டாள்தனத்தைப் பார்த்துதான் நாம் கவலைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். பார்ப்பனரல்லாதார்களில் பார்ப்பனர்களுக்கு ஓட்டுச் செய்பவர்கள் ஒரு சமயம் மூடர்களாக இருந்தாலும் இருக்கலாம். ஆனால் பார்ப்பனர்கள் வெற்றிபெற பிரசாரம் செய்தவர்களிலும் பத்திரிகையில் எழுதினவர்களிலும் பார்ப்பனரல்லாதாராக இருந்தவர்கள் எல்லோரும் முட்டாள்கள் என்று நாம் சொல்லிவிட முடியாது.



RangaRakes tamilnavarasam.com

அவர்களில் பெரும்பாலோர் பார்ப்பனக் கூலிகளாகவும் சமூகத்தைக் காட்டிக்கொடுத்து வயிறு வளர்த்துத் தீரவேண்டிய ஈன நிலையில் இருந்தவர்களாகவும்தான் இருந்திருக்க வேண்டுமே ஒழிய மூடர்கள் அல்ல. மற்றபடி இவர்கள் கூலிகள் அல்லாமல் சுதந்திரவாதிகளாகவோ உண்மையான தேசீய வாதிகளாகவே இருந்திருப்பார்களேயானால் தேர்தலுக்கு அபேட்சகர்களை தெரிந்தெடுத்து ஆட்களை நிறுத்தும்போதே இவர்கள் ''ஏன் இத்தனை பார்ப்பனரல்லாதாரைப் போடவில்லை?'' என்றோ, ''ஏன் இத்தனை பார்ப்பனர்களைப் போடுகிறீர்கள்?'' என்றோ ஏன் கேட்டிருக்கக் கூடாது?

இந்த பிரசாரப் பார்ப்பனரல்லாதாருக்கும் பத்திரிகைப் பார்ப்பன ரல்லாதாருக்கும் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி என்பதே இல்லாத அவ்வளவு பெரிய ''தேசீயவாதிகள்'' என்று யாராவது சொல்ல முடியுமா? அவரவர்கள் இஷ்டம் போல் ஏதாவது ஒரு காரியம் ஆகாத காலங்களில் அவரவர்களுக்கு வேண்டியவர்களுக்கு ஸ்தானங்கள் மரியாதைகள் கிடையாமல் போன காலங்களில் இவர்கள் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சி கொண்டும் உணர்ச்சியைக் கிளப்பி விட்டும் எழுதி கிளர்ச்சி செய்யவில்லையா? என்று கேட்கின்றோம்.

ஆகவே கூழுக்கு கவி பாடுகிற முறையில் தங்கள் சமூக உணர்ச்சியை விற்று இருக்கிறார்கள் என்பதல்லாமல் வேறு தகுந்த பார்ப்பனரல்லாதார் கிடைக்கவில்லை என்கின்ற காரணமா என்று வாசகர்களையே யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம்.

இதைப்பற்றி நாம் அதிகமாக கவலைப்பட இடமில்லை.

ஏனெனில் நம் நாட்டின் வாழ்க்கை நிலை இவ்வளவு தூரம் எட்டிவிட்டது. வாழ்க்கையின் சூத்திரக்கயிறு பார்ப்பனர்களிடம் சிக்கிவிட்டது.

ஆனால் இவற்றை உணர்ந்த சென்னை ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களில் சிலரின் யோக்கியதை இதைவிட மோசமாய் இருந்ததே இந்தத் தேர்தலின் முடிவுக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

சென்னை ஜஸ்டிஸ் கட்சித் தோழர்களுக்கு சகல உத்தியோகமும் வேண்டும், கட்சிக்காக பொதுவில் ஒரு காசும் செலவழிக்க மாட்டார்கள். அவ்வளவோடு அல்லாமல் முதல்தர கோழைகளாகவும் இருப்பார்கள். பிரசாரம் செய்வது என்றால் அவர்களுக்கு வேப்பங்காயைப்போல் தோன்றும். காந்தியைப்பற்றியோ காங்கிரசைப்பற்றியோ வேறு யாராவது குறைகூறிப் பேசினாலும் தங்களுக்கு ஓட்டு கிடைக்கமாட்டாதே, ''பாவம்'' வந்துவிடுமே என்று பயப்படும் வீரர்கள். இப்படிப்பட்ட கட்சி ''பிரமுகர்கள்'' வெற்றி பெறுவது என்றால் வெற்றி பெற்றால்தான் ஆச்சரியப்படவேண்டி யிருக்குமே ஒழிய தோல்வி பெறுவதில் ஆச்சரியமிருக்க இடமேது என்று கேட்கின்றோம்.

தமிழ்நாடு மத்திய பிரசாரக் கமிட்டியார் எவ்வளவோ அசௌகரியத்துடன் ஊர் ஊராய்ச் சுற்றி பிரசாரம் செய்துவிட்டு சென்னை நகர பிரசாரத்துக்கு



வந்திருந்த காலத்தில் அவர்களை ஏன் என்று கேட்க சென்னை ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் மீ 500, 1000, 5000 சம்பளம் பெற்ற, பெற்று வருகிற ''தியாகிகள்'' ஒருவராவது தங்கள் தலையைக் காட்டிக் கொள்ளக் கூட இஷ்டப்படவில்லை. சென்னை பொது பாமர மக்களுக்கிருந்த கவலையும் ஆத்திரமும் இந்த பிரமுகர்களுக்கு சிறிது கூட இல்லாமல் போய்விட்டது.

இதை நாம் எழுதுவது பிரசாரக்கமிட்டியை மரியாதை செய்யவில்லை என்பதற்கு ஆக அல்ல. ஆனால் பிரசாரத்தில் சென்னை ஜஸ்டிஸ் பிரமுகர்களுக்கு அதாவது சட்ட சபை மெம்பராகவும் கார்ப்பரேஷன் மெம்பராகவும் மந்திரிகள் காரியதரிசிகள் ஆகவும் இருந்து பயன் அனுபவித்தும் அனுபவிக்கவேண்டும் என்கின்ற ஆசையைக் கொண்டும் இருக்கும் பெரியார்களின் தன்மை எப்படிப்பட்டது என்பதையும் இப்படிப்பட்டவர்கள் எப்படி வெற்றி பெறக் கூடும் என்பதையும் இவர்கள் சம்மந்தம் வைத்துக் கொண்டு இருக்கும்கட்சி எப்படி உறுப்படி ஆகும் என்பதையும் பொது ஜனங்கள் அறியும் பொருட்டே எழுதுகிறோம். கட்சி தலைவர் மீது குற்றம் இல்லை தான். அவர் எலக்ஷன் செலவுக்கும் சுமார் (10000) பத்து ஆயிரம் ரூபாய்வரை செலவுக்கு கொடுத்தும் இருக்கலாம். ஆனால் எலக்ஷன் சமயத்தில் பணத்தை செலவு செய்து கொண்டு ஏதோ 2, 4 கூட்டம் போட்டு பேசுவதால் பணத்துக்கு கணக்கு காட்டுவதால் எலக்ஷன் காரியம் நடந்து விடுமா என்று கேட்கின்றோம். வீடு நெருப்புப் பிடித்துக்கொண்டு எரியும் போது கிணறு வெட்ட ஆரம்பித்தால் என்ன பயன் ஏற்படுமோ அதுபோல் தான் எலக்ஷன்போது பிரசாரம் செய்ய ஆரம்பிக்கும் காரியமாகும். சட்டசபை எலக்ஷன் தினத்து அன்றுதான் தினசரியும் வெளிவரலாம் போல் இருக்கிறது.


ஜஸ்டிஸ் கட்சிக்கு இன்று உள்ள பலம், செல்வாக்கு, அதன் பலன் அறியும் தன்மையுள்ள மக்கள் முதலியவை எல்லாம் சென்னை தவிர மற்ற வெளியிடங்களில் உள்ள நிலையை அனுசரித்துத்தானே ஒழிய மற்றப்படி சென்னையைப் பொறுத்த வரை அங்குள்ள ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்கள் பார்ப்பனர்களை யோக்கியர்களாக்கிவிடக் கூடியவர்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறதற்கு வருந்துகிறோம். ஏனெனில் பார்ப்பனர்கள் சகலத்தையும் விற்று தங்கள் ஜாதிக்குப் பாடுபடுகிறார்கள் என்றால் சென்னை ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் பலர் சகலத்தையும் விற்று தங்கள் குடும்பங்களுக்கு மாத்திரம் பாடுபடுபவர்கள் என்று சொல்ல வெட்கப்படுகிறோம்.

இவைகளையெல்லாம் யோசிக்கும்போது சென்னைக் கார்ப்பரேஷன் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி தோல்வி அடைந்தது என்கின்ற முடிவு அனுபவத்தில் உண்மையாய் இருக்குமானால் நாம் சந்தோஷப்பட வேண்டியதே தவிர துக்கப்பட இடமில்லை. ஏனெனில் சென்னைத் தோழர்களுக்கு சட்டசபை தேர்தலுக்காவது இது ஒரு நல்ல பாடம் ஆகலாம் என்கிற ஆசை காரணமாகவேதான்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 01.11.1936**



RangaRakes tamilnavarasam.com



R. No. M. 2041 "KUDI-ARASU"

# குடி அரசு

காங்கிரஸ் தர்மம்.

## கதர்த் தத்துவம்

நம் நாட்டு விடுதலை ஸ்தாபனம் என்று சொல்லப்படும் காங்கிரசானது 1920-ல் ஒரு புதிய மாறுதலை அடைந்தது.

அதாவது காங்கிரஸ் ஆரம்பம் முதல் 1920 வருஷம் வரை பிரிட்டிஷாரிடம் ராஜபக்தி ராஜ விசுவாசம் ஆகியவை காண்பித்து வெளி வியாபாரம், யந்திரத் தொழில் முறை முதலியவைகள் மூலமே பொருளாதாரமும், தொழில் விருத்தியும் தனது கொள்கையாய் கொண்டிருந்ததோடு அரசியல் முன்னேற்றம், சுதந்திரம் என்பவைகளுக்கு சர்க்கார் உத்தியோகங்கள் பெறுவதும் சர்க்கார் நியமனங்களை விரிவாக்கச் செய்வதும் ஆகிய இரண்டையே முக்கிய வேண்டுகோளாகவும் விண்ணப்பமாகவும் கொண்டிருந்தது.

முஸ்லீம்கள் இயக்கமும் பார்ப்பனரல்லாதார் இயக்கமும் தோன்றி காங்கிரஸ் பலனில் பங்குகேட்க ஆரம்பித்த பிறகே அனுபவத்துக்கும் அறிவுக்கும் ஆதாரங்களுக்கும் பொருத்தமற்ற சில கொள்கைகளை வைத்து அறிவுள்ள மக்களும் அனுபவ சாத்தியத்திற்கு உட்பட்டும் மற்ற இடங்களில் நடக்கும் நடப்புகளை கவனித்தும் செய்கையில் இறங்கும் மக்களும் காங்கிரசின் கிட்ட நெருங்குவதற்கு இல்லாத மாதிரியாகவும் உண்மையான பொதுநல கவலையுள்ள மக்களை விரட்டி அடிப்பதற்கு ஆகவுமான முறையில் கொள்கைகளை வகுத்து அவற்றையே தீவிர கொள்கையென்றும் அதி தீவிர கொள்கையென்றும் பெயர் சொல்லி பார்ப்பனர்கள் காரியத்தில் இறங்கினார்கள்.

இவற்றிற்கு காந்தியாரும் அவருடைய மந்த புத்தியும் காரணம் என்று ஒரு அளவு சொல்லப்பட்டாலும் நம் நாட்டுப் பார்ப்பனர்களே பெரிதும் அவற்றிற்கு ஆதார பூதமாய் இருந்து அந்த சூதுகளும் அவர்களது சுய நலங்களும் மக்களுக்கு விளங்காமல் இருக்கும்படி செய்தார்கள். இதனால் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட பயன் என்ன என்று கேட்கலாம்.

பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட பயன் எல்லாம் முன் கூறப்பட்ட முஸ்லீம் இயக்கமும் பார்ப்பனரல்லாதார் இயக்கமும் வெற்றி பெறாமல் இருப்பதற்கு ஒரு நல்ல சாதனமாக ஏற்பட்டதேயாகும்.



RangaRakes tamilnavarasam.com

எப்படியெனில் மேலே குறிப்பிட்ட அதாவது அறிவுக்கும் அனுபவத்துக்கும் முன் பின் நடப்புக்கும் சரிப்படாததான கொள்கைகளையோ திட்டங்களையோ காங்கிரசின் திட்டமாய் கொண்டதால் மேல்படி இரு சமூகத்தில் இருந்தும் தங்கள் சமூத்தை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கும் யோக்கியமும் உண்மை உழைப்பும் உள்ள மக்கள் காங்கிரசில் சேர முடியாமல் போய்விட்டதுடன் அந்தக் காரணத்தால் அவ்விரு ஸ்தாபனத்தையும் ஸ்தாபனத் தலைவர்களையும் அவர்களது கொள்கைகளையும் குறை கூறி அழிக்கவோ தடுக்கவோ விஷமப் பிரசாரம் செய்யவோ பார்ப்பனருக்கு அனுகூலம் ஏற்பட்டது.

**கதர்**

ஆகவே அப்படிப்பட்ட கொள்கைகளில் - திட்டங்களில் ஒன்றாகத்தான் இன்று கதர் இருந்து வருகிறது. ''கதர்-சுயராஜ்யத்திற்கு வழி, தேச பக்தர்களுக்கு அறிகுறி, ஏழைகளுக்கு ஆதரவளிப்பது, இந்திய பொருளா தாரத்துக்கு ஆஸ்பதமானது, குடிசைத் தொழிலில் சிறந்தது, இந்தியர்களுக்கு வரப்பிரசாதமான பொக்கிஷம்'' என்பது முதலிய பல காரணங்கள் கதருக்கு சொல்லப்பட்டு வந்திருக்கிறது.

இவை தவிர அதில் ஆத்மீக சம்மந்தமான பல கருத்துக்கள் இருப்பதாகவும் காந்தியாரால் சொல்லப்பட்டும் வந்திருக்கிறது. என்னவெனில் ''மன சாந்திக்கும் ஆத்மா மோக்ஷமடையவும் சத்தியத்தில் நம்பிக்கை ஏற்படவும்'' என்பவை போல் அனேக தத்துவார்த்தங்களும் கதருக்கும் ராட்டினத்துக்கும் சொல்லப்பட்டு வந்திருக்கிறது.

1920-ம் முதல் 1936-ம் வருஷம் வரை இந்த 16 வருஷ காலமாக கதருக்கு செய்யப்பட்ட பிரசாரமும் அதற்காகச் செலவழிக்கப்பட்ட பணமும் நிர்ப்பந்தமாக மக்களுக்குள் கதரை புகுத்துவதற்கு செய்யப்பட்ட காங்கிரஸ் சட்டதிட்டங்களும் எவ்வளவு என்பதை மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

காங்கிரஸ்காரருக்கு கதர் முக்கிய சின்னமென்றும் கதர் கட்டாதவர்கள் ஏழைகளின் நண்பர்கள் அல்லவென்றும், கதர் கட்டினவர்கள்தான் தேச பக்தர்கள் என்றும் மற்றவர்கள் தேசத்துரோகி என்றும் சொன்னது மட்டும் போதாமல் காங்கிரஸ் தேர்தலுக்கு நிற்கவும் காங்கிரஸ் தேர்தலுக்கு ஓட்டுக் கொடுக்கவும் கதர் கட்டினால்தான் அருகதை உண்டு என்றெல்லாம் கூட நிபந்தனைகளும் ஏற்படுத்தப்பட்டன.

இவ்வளவும் நடந்தும் இன்று கதரின் நிலை என்ன என்பதுதான் இப்போது யோசிக்கத்தக்கதாகும்.

1920 முதல் 1936-ம் ஞு வரை இந்த 16 வருஷ காலத்தில் மேல் கண்ட இவ்வளவு முயற்சிகள் செய்த பின்பும் இன்று கதரின் தத்துவத்தில்



காங்கிரசுக்காரர்களுக்குள் ஒரே அபிப்பிராயம் இருப்பதாகச் சொல்லு வதற்கில்லை. காங்கிரசுக்காரர்களுக்குள் ஒரே அபிப்பிராயம் இல்லாவிட்டாலும் காங்கிரஸ் தலைவர் என்பவர்களுக்குள்ளாகவே ஒருமனப்பட்ட அபிப்பிராயம் இல்லை. காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்களுக்குள் இல்லாவிட்டாலும் ஒரு உயிர் மூன்று சரீரமாய் விளங்குவதாகக் கருதப்படும் தோழர்கள் காந்தியார், ஜவஹர்லால் நேரு, ராஜகோபாலாச்சாரியார் ஆகிய மூன்று பேருக்குமே கதரைப் பற்றியும் கதரின் முக்கிய தத்துவத்தைப்பற்றியும் ஒரு மனப்பட்ட அபிப்பிராயம் இல்லை என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

காந்தியார் அபிப்பிராயத்துக்கும் பண்டிதர் ஜவஹர்லால் அபிப்பி ராயத்துக்கும் கதரைப் பற்றி ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத கருத்துக்கள் இருந்து வருகின்றன. பண்டிதர் **''கதர் பொருளாதார பிரச்சினையை தீர்த்துவிடாது, ஏழ்மையை ஒழித்து விடாது''** என்று சொல்லுவதோடு **யந்திரங்களை பஹிஷ்கரிக்க முடியாது** என்று ஸ்பஷ்டமாக சொல்லி வருகிறார். ஆனால் தற்காலம் ஏழைகளுக்கு பயன்படலாம் என்று சந்தேக பாஷையில் ஒரு வார்த்தை சொல்லி காந்திக்கு நல்ல பிள்ளை ஆகிறார். ஆச்சாரியார் அவர்களோ காந்தியாருக்கும் ஜவஹர்லாலுக்கும் நடுவில் நிற்கிறார். அதாவது கதரே ஏழைகள் கஷ்டத்தை போக்கவோ பொருளாதாரத்துறை கஷ்டத்தை நீக்கவோ முடியாது என்கிறார். அதோடு மாத்திரமல்லாமல் புதுப்பாளையம் ஆச்சிரம கதர் தொண்டுக்கு வேறு ஆள் வைத்து கைநழுவ விட்டு விட்டு சென்னைக்கு போய்விட்டார்.

இவர்கள் மூவர் நிலையோ மற்ற காங்கிரஸ் தலைவர்கள் நிலையோ, மற்றும் காங்கிரஸ்காரர்கள் நிலையோ எப்படியோ இருக்கட்டும். அந்தக் காரணத்தைக் கொண்டே நாம் கதரை மறுக்கவில்லை. பொதுப்பட பொருளாதாரத்தையும் தேசத்தையும் உத்தேசித்தே கதரின் யோக்கியதை என்ன என்பதைப்பற்றி சற்று விவரிப்போம்.

இந்தப் பத்து பதினாறு வருஷத்துக்கு முன் இருந்ததைவிட இன்று விலையிலோ துணியின் நயத்திலோ அல்லது அதன் வாளிப்பிலோ எதிலாவது கதர் முன்னேற்றமடைந்திருக்கிறதா? அல்லது அதை ஆதரிக்கிற மக்களோ பாவிக்கிற மக்களோ அதிகமானார்களா? அதன் உற்பத்தியாவது செலவாவது அதிகரித்ததா? என்று பார்ப்போமானால் ஒவ்வொரு துறையிலும் முன்னேறவில்லை என்பதோடு அது முன் இருந்த நிலையில் கூட இல்லாமல் பின்னடைந்து விட்டது - பின்னடைந்து வருகிறது என்று கூட சொல்லலாம். அப்படி இருக்க இப்போது இவ்வளவு அனுபவத்துக்குப் பின்னும் இந்தப் பொருளாதார நெருக்கடியான காலத்தில் இவ்வளவு முன்னேற்றமான விஞ்ஞான வேகத்தில் இன்றும் மக்களை கதர் வாங்கி கட்ட வேண்டும் என்று பிரசாரம் செய்வதின் கருத்து என்ன என்று கேட்கின்றோம்.



RangaRakes tamilnavarasam.com

தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டி தலைவர் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதில் ''கொஞ்சமாவது கதர் வாங்கி நாட்டு ஏழை மக்களுக்கு அன்னமளியுங்கள்''.

''மகாத்மாஜி தேசத்துக்கு அளித்த நிகரற்ற பொக்கிஷம் கதர்.''

''கதர் தான் காங்கிரஸ் ஒற்றுமைக்கு அறிகுறி.''

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

''கொஞ்சமாவது கதர் வாங்குங்கள்'' என்று சொல்லுவதிலிருந்து கதர் வாங்குவது இப்போது எவ்வளவு தூரம் நிறுத்தப்பட்டுப் போயிற்று என்பது ஒரு அளவுக்கு விளங்கும்.

மற்றப்படி ''கதர் தேசத்துக்கு நிகரற்ற பொக்கிஷம்'' என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்பது விளங்கவில்லை.

அர்த்தசாஸ்திரப்படி பொருளாதாரப்படி கணக்கு பார்த்தால் கதரால் எவ்வளவு பொருள் நஷ்டம் என்பது விளங்கும்.

முதலாவது பஞ்சு விஷயத்தில் பார்ப்போமானால் கதர்த்துணி எத்தனை கெஜம் உற்பத்தி ஆகிறதோ அத்தனை கெஜ எடைக்கும் சரிபகுதி பஞ்சு வீணாகிறது என்பதை காங்கிரஸ் பக்தர்களோ காங்கிரஸ் பொருளாதார நிபுணர்களோ சிறிதும் கவனிப்பதில்லை.

சர்க்காருக்காவது யோக்கியப் பொறுப்பு இருக்கும் பட்சம் கதர் உற்பத்திக்கு 144 போட்டோ அல்லது கிரிமினல் கோடில் ஒரு விதி விதித்தோ கதர் உற்பத்தியை அடக்கி மூலப்பொருள் நாசமாவதை நிறுத்தி இருப்பார்கள்.

நமது சர்க்காரார் நீதியைக் கொண்டு ஆட்சி புரிவதைவிட மக்களின் முட்டாள்தனத்தையும் அயோக்கியத்தனத்தையும் அனுமதித்துக் கொண்டு நடத்துவதே சுலபம் என்று கருதுவதாக இருப்பதால் இம்மாதிரி நாட்டு மூலப்பொருள் பாழாவதை அனுமதித்து வருகிறார்கள். பருத்திச்செடி பிடுங்குவதற்கு சிறிது நாள் தாமதப்பட்டு விட்டால் அதற்கு தண்டனை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஏனெனில் பருத்தியில் பூச்சி விழுந்து மற்ற பயிர்களைக் கெடுத்து பஞ்சின் உயர்வைக் கெடுத்து விடுகிறது என்கின்ற காரணம் சொல்லுகிறார்கள்.

ஆனால் கதர்க்காரர்கள் கதர் உற்பத்திசெய்வதால் சாதாரண காடாத் துணிக்கு 10 கஜத்துக்கு முக்கால் ராத்தல் அல்லது ஒரு ராத்தல் பஞ்சு பிடிப்பதாய் இருந்தால் கதர்த்துணிக்கு 10 கஜெத்துக்கு மூன்று ராத்தல் முதல் 4 ராத்தல் பஞ்சு பிடிக்கின்றது. இதனால் ஒன்றுக்கு இரண்டு பங்கான பஞ்சு கதருக்கு தேவை இருப்பதால் இப்போது காங்கிரசுக்காரரால் உற்பத்தி செய்யப்படும் கதரின் மூலம் எவ்வளவு ராத்தல் பஞ்சு நாசமாகின்றது என்பதை யோசித்துப் பார்க்கும்படி பொது மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.



ஒரு 5 முழ நீளமும் மூன்று முழ அகலமும் உள்ள கதர்வேஷ்டி 1 ராத்தல் இடை இருக்குமானால் காடா வேஷ்டியானால் ½ ராத்தலுக்கு உள்ளாகவே இடை இருக்கும். ஆதலால் ஒவ்வொரு வேஷ்டிக்கும் ½ ராத்தல் பஞ்சு நாசமாவதன் மூலம் பஞ்சு நாசமல்லாமல் வாங்குபவருக்கு விலை ஒரு கெஜத்துக்கு 4 அணாவுக்கு மேலாகவே நஷ்டமாகிறது.

துணியின் யோக்கியதையோ காடா 6 மாதத்துக்கு வந்தால் கதர் 3 மாதத்துக்குத்தான் வரமுடிகிறது.

விலையின் தன்மையோ காடா கெஜம் 3 அணா. ஆனால் கதர் கெஜம் 8 அணா 9 அணா ஆகிறது.

வேலையின் சுளுவோ மில் நூல் கெஜம் 0-0-6 பைசாவுக்கு நெய்யப்பட்டால் கதர் நெய்ய கெஜத்துக்கு 2 அணாவுக்கு மேல் கொடுக்க வேண்டி வருகிறது. அப்படிக் கொடுத்தாலும் நெய்பவனுக்கு வேலை கஷ்டம் கூலி குறைவுதான் ஏற்படுகிறது.

இத்தியாதி கஷ்ட நஷ்டங்களுடன் கதர் நெய்வதிலும் வாங்கிக் கட்டுவதிலும் பயன் என்ன என்பதை யாராவது விளக்கி இருக்கிறார்களா?

கிராமத்தில் வேலையில்லாமல் இருக்கும் ஏழைகளுக்கு தினம் முக்காலணா கூலி கிடைக்கிறதாம். கிராமத்தில் வேலையில்லாமல் இருக்கும் ஏழைகளுக்கு தினம் 9 பைசா கூலி கிடைக்க எத்தனை டன் பஞ்சை நாசமாக்குவது என்பதையும் 3 அணா துணிக்கு 9 அணா விலை கொடுத்து வாங்குவதன் மூலம் வாங்குபவர்கள் எத்தனை லக்ஷ ரூபாய் நஷ்டப்படுவது என்பதையும் சிறிதாவது யோசிக்க வேண்டாமா என்று கேட்கின்றோம்.

கதர் வரப்பிரசாத பொக்கிஷம் என்றால் என்ன அர்த்தம்? யாருக்கு பொக்கிஷம்? என்று யோசித்தால் சில ஆசாமிகள் அதாவது தேச பக்தர்கள் என்று சொல்லிக்கொண்டு திரியும் சோம்பேறி வகுப்பாருக்கு கதரின் பேரால் ஆளுக்கு 20, 30, 40, 50, 100 என்பதாக மாதச் சம்பளமும் பார்ப்பனர்களுக்கும் அவர்களது கூலிகளுக்கும் ஓட்டு வாங்கிக் கொடுக்க அடிமைச் சிப்பந்திகளும் தாராளமாய் கிடைக்கும்படியான பொக்கிஷமே அல்லாமல் மற்றபடி பொது மக்களுக்கோ வாங்குபவருக்கோ, நெய்பவருக்கோ, தேசத்துக்கோ, பொருளாதாரத்துக்கோ, மூலப் பொருளுக்கோ என்ன பொக்கிஷம் என்று கேட்கின்றோம்.

இதுவரை கதருக்கு செலவழித்த கோடிக்கணக்கான பணத்தைக் கொண்டு 5, 5 லக்ஷ ரூபாய் சுமாரில் 20 மில்கள் கட்டி இருக்கலாம். அவைகளில் இன்று கதர் நூற்பவருக்கு தினம் 0-0-9 ஒன்பது பை கொடுக்கும் 10000 ஆட்களுக்கோ அல்லது 20000 ஆட்களுக்கோ நூற்கும் வேலை கொடுப்பதை விட தினம் 4 அணா முதல் 12 அணா வரை கூலி கொடுக்கும் படியான சுமார் 20 ஆயிரம் ஆட்களை நியமித்து அவர்கள்



RangaRakes tamilnavarasam.com

மூலம் குடும்பத்துக்கு 5 ஜீவன் வீதம் ஒரு லக்ஷம் பேருக்கு வேலையும் தினம் முக்காலணா ஒரு அணா வீதம் கூலி கிடைக்கும்படியும் கொடுத்து ஒரு கோடி ரூபாய்க்கு சராசரி 100-க்கு 7½ வீதம் வருஷம் (750000) ஏழு லக்ஷத்து ஐம்பதினாயிரம் ரூபாய் லாபமும் சம்பாதித்து வருஷம் ஒரு புதிய மில் வைத்து வருஷம் 1500 குடும்பம் வீதம் பிழைக்கும் மாதிரியான நிலையை உயர்த்திக் கொண்டே போகலாம்.

இதனால் அதாவது இயந்திரத்தினால் ஒரு சமயம் கை நெசவுக்காரர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடுமே என்று கருதினால் கை நெசவாளிகள் அதிகமாய் இருக்கிற இடங்களிலேயே இந்த மில்லுகளை வைத்து அவர்களுக்கே இந்த வேலைகளைக் கொடுத்து ஒரு ஆள் தினம் 10 மணி நேரம் வேலை செய்வதற்கு பதிலாக ஒரு ஆள் தினம் 3 மணி நேரமே (காங்கிரஸ் மில்லுகளில்) வேலை செய்யவேண்டும் என்று திட்டம் ஏற்படுத்தி லாபத்தைக் குறைத்து கூலியை உயர்த்தி அதை மூன்றாகப் பிரித்து 3 பேருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தால் நூற்பவர்களுக்கு இன்று கிடைக்கும் முக்காலணாவுக்கு பதிலாக 2 அணா கிடைக்கக் கூடும் என்றும் நெய்பவருக்கு அடியோடு வேலை இல்லாமல் பட்டினி கிடப்பதற்கு பதிலாக தினம் 4 அணா கிடைக்கக்கூடும் என்றும் சொல்லலாம்.

**ஊரா? பாழா?**

இந்த மாதிரியான பொருளாதார கணக்கை கவனியாமலும், கவனித்து இருந்தாலும் அதைப்பற்றி கவலைப்படாமலும் தடபுடலாக ஜால வித்தைக்காரன் போல் ''இதோ இந்த கீரிப்பிள்ளை தோலுக்கும் பாம்பின் தோலுக்கும் உயிர் கொடுத்து இரண்டையும் சண்டை செய்யச் சொல்லுகிறேன்'' என்றும் ''இதோ இந்த மாங்கொட்டையை முளைக்க வைத்து இப்போதே மரமாக்கி பழம் தருகிறேன்'' என்றும் ''இதோ இந்த கல்லை ரூபாயாக்குகிறேன்'' என்றும் சொல்லுவதுபோல் சொல்லி கோடிக்கணக்கான ரூபாய்களை வசூலித்து இந்தப்படி இந்த பதினாறு வருஷமாய் பாழாக்கி விட்டு இன்றும் கதர் வரப்பிரசாத பொக்கிஷம் என்றால் இதென்ன ஊரா, பாழா என்றுதான் கேட்க வேண்டியிருக்கிறதுடன் இந்த அக்கிரமத்துக்கும் அயோக்கியத் தனத்துக்கும் கேள்வி கேப்பாடு இல்லையா என்றும் தான் கேட்க வேண்டி இருக்கிறது. மற்றபடி கதரில் என்ன ஒற்றுமை இருக்கிறது? கதர் கட்டி தேர்தலுக்கு நின்ற யோக்கியர்கள் நடந்துகொண்ட மாதிரியைப் பார்த்தாலே ஒற்றுமை யோக்கியதை விளங்கிவிடும்.

ஆகவே இனியாவது பொது ஜனங்கள் இந்த ஏமாற்றத்துக்கு கட்டுப்படாமல் விழித்து எழுந்து உங்கள் பணத்தைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள். காங்கிரஸ் வேஷதாரிகளுக்குத்தான் கதர் வேண்டி இருக்கிறது. அதுவும் இன்று எல்லா வேஷதாரிகளும் 100-க்கு 99 பேர் ஓட்டுக்கு ஆகவும் தங்களுக்கு ஆகாதவர்களை வைவதற்காகவும் ஓட்டு பிரசாரத்தின் மூலம்



வயிறு வளர்ப்பதற்கு ஆகவும் அல்லாமல் வேறு எதற்கு ஆவது கதர் கட்டி இருக்கிறார்களா என்று யோசித்துப்பாருங்கள். அப்படி அல்ல என்று யாராவது சொல்ல வருவார்களானால் அப்படிப்பட்டவர்கள் காங்கிரஸ் கதர் வாலாக்களுடைய மனைவி, மக்கள், சகோதரர், பெற்றோர்கள் முதலிய இவர்கள் வார்த்தைக்கு கட்டுப்பட்டவர்களுக்கும் இவர்கள் ஆதிக்கத்தில் காப்பில் இருப்பவர்களுக்கும் கதர் வாங்கிக் கொடுத்து இருக்கிறார்களா அல்லது அவர்களாவது கட்டி இருக்கிறார்களா என்று பாருங்கள்.

ஆகவே அடியோடு முட்டாள்தனமானதும் சூழ்ச்சியானதுமான கதர் விஷயத்தில் இந்த வருஷமாவது எல்லோரும் விழிப்பாய் இருங்கள்.

செம்மறி ஆடு போல் தலைகுனிந்து பார்ப்பன சூழ்ச்சிக்கு ஆளாகாதீர்கள்.

எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!!

**குடி அரசு - தலையங்கம் - 08.11.1936**



RangaRakes tamilnavarasam.com

# கணக்குத் தெரியவேண்டுமா?

**நம் நாட்டில் மூடர்களோ அல்லது பித்தலாட்டக்காரர்களோ மன தறிந்து மக்களை ஏமாற்றுபவர்களோ எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று தெரிய வேண்டுமானால் கதர் கட்டியிருப்பவர்களை சென்செஸ் எடுத்தால் விளங்கிவிடும்.**

குடி அரசு - பெட்டிச் செய்தி - 08.11.1936



# முஸ்லீம்களும் காங்கிரசும்

தோழர் தாவுத்ஷா சாயபு அவர்கள் முஸ்லீம்கள் பிரதிநிதியாக காங்கிரசில் இருப்பவர். அவர் மற்ற முஸ்லீம்களையும் காங்கிரசுக்கு வரும்படி அழைக்கிறவர். தோழர் சத்தியமூர்த்தியாரை அரசியல் குருவாகவும் தலைவராகவும் கொண்டு ஒழுகுகிறவர். எலக்ஷன் நடக்கும் ஊர்கள் தோறும் அழைப்பில்லாமலே சென்று காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரிப்பவர். இவ்வளவு மாத்திரமில்லாமல் ராமாயண பாரத காலக்ஷேபம் செய்வதில் பார்ப்பன சாஸ்திரிகளை விட ஒருபடி முன்னணியில் இருப்பவர்.

இப்படி எல்லாம் நடந்தும் பார்ப்பனர் தங்கள் பரம்பரை வழக்கம்போல் தோழர் தாவுத்ஷாவை சென்னை கார்ப்பரேஷன் எலக்ஷனில் கொடை கவிழ்த்தி விட்டார்கள். அவ்வளவோடு இல்லாமல் உலகம் அறிய பெரியதொரு அவமானத்தையும் உண்டாக்கி வைத்துவிட்டார்கள்.

கார்ப்பரேஷனுக்கு முஸ்லீம் பிரதிநிதியாக தோழர் தாவுத்ஷாவை ஒரு அபேட்சகராக ஏற்று அவரது பெயரை வெளியிட்டு உலகம் அறியச் செய்துவிட்டு கடசியாக மற்றொரு முஸ்லீமின் வசவுக்கும் கலகத்துக்கும் பயந்து தோழர் தாவுத்ஷாவை வெளியில் நெட்டித் தள்ளி விட்டு தோழர் ஷாபி மகமது சாயபு அவர்களை போட்டுவிட்டார்கள்.

தோழர் தாவுத்ஷா சாயபு தன்னை விலக்கி விட்டதற்கு ஏதாவது ஒரு நல்ல காரணமாவது சொல்லி பொது ஜனங்கள் முன்னிலையில் தனக்கு அவமானமில்லாமல் காப்பாற்றச் சொல்லிப் பார்த்தார். காங்கிரசுத் தலைவர் (பார்ப்பன மூர்த்தியார்) ஷாபி சாயப்புக்கு பயந்து கொண்டு அதுகூட செய்ய மறுத்து விட்டார். கடசியாக தாவுத்ஷா சாயபு எல்லா இந்திய காங்கிரஸ் தலைவருக்கு அப்பீல் செய்து இருக்கிறார். அப்பீல் நீதிபதி யார் என்பது சாயபுக்கு தெரியாதுபோல் இருக்கிறது. அவரும் ஒரு பூணூல் என்பதை மறந்தார் போலும். முடிவு என்ன? அசல் அநியாயம், அப்பீல் அதுவே காயம் என்று தான் ஆகப்போகிறது. ஆகவே கலகமும் கலாட்டாவும் செய்யத் தகுதியற்ற முஸ்லீம்களுக்கு காங்கிரசில் இடமில்லை என்பதை இனியாவது தோழர் தாவுத்ஷா சாயபு அறிந்து கொள்வாராக. இந்த சமயத்தில் மற்றொரு முஸ்லீம் தலைவர் இப்பார்ப்பனர்களால் எப்படி நடத்தப்பட்டார் என்பதையும் குறிப்பிடுகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

தோழர் எம். ஜமால் மகம்மது சாயபு ஒரு கோடீஸ்வரர். பார்ப்பனப் பத்திரிகைகளுக்கு பதினாயிரக்கணக்காக பணம் அழுதவர். பார்ப்பனர் பக்கமே சதா எதற்கும் கை தூக்குபவர். இன்றும் கூட தன்னைக் காட்டித்தான் ஒன்று இரண்டு முஸ்லீம்களையாவது காங்கிரசில் இழுக்க இடம் கொடுத்துக் கொண்டு இருக்கிறவர்.

இப்படிப்பட்ட இவர் ஒரு சமயம் இந்திய சட்டசபைக்கு (M.L.A.க்கு) ஒரு அபேக்ஷகராய் அதுவும் வியாபாரிகள் ஸ்தானத்துக்கு வியாபாரிகளின் பிரதிநிதியாக நிற்க முன்வந்தார். அது சமயம் ஒரு கோயமுத்தூர் பார்ப்பனரை ''இந்து'', ''சுதேசமித்திரன்'' கூட்டம் தூக்கிவிட்டு அதாவது தோழர் சி.வி. வெங்கிட்டரமணய்யங்காரை தூக்கிவிட்டு தோழர் ஜமால் மகம்மது அவர்களுக்கு விரோதமாய் போட்டி போட ஏற்பாடு செய்து விட்டார்கள். ஜமால் மகம்மது அவர்களுக்கு கண்விழி பிதுங்கும்படி செய்து விட்டார்கள். ராஜா சர். அண்ணாமலை செட்டியாருமே பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டார். அந்த சமயத்தில் ஏற்பட்ட மனக்கசப்புதான் இன்னமும் அவர்களுக்குள் இருந்து வருகிறது. அந்த சமயத்தில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் தகராறு சற்று கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்த பிறகு ஒரு வழியில் பார்ப்பனர்கள் அடங்கினார்கள். அப்போது தோழர் ஜமால் மகம்மதுக்கு பார்ப்பனர் - அல்லாதார் என்கின்ற உணர்ச்சிதான் சிறிது உதவி அளித்தது. அதனாலேயே அந்த சந்தர்ப்பம் தோழர் ஜமால் முகம்மது சாயபு அவர்களே பார்ப்பனர்களை எப்பவும் நம்பக்கூடாது என்று சொல்லும்படியான நிலைமை ஏற்பட்டது. பிறகு சமய சந்தர்ப்பங்களை அனுசரித்து அதை மறக்க வேண்டியதாயிற்று. அதுபோலவே தோழர் தாவுத்ஷா அவர்களும் சமய சந்தர்ப்பங்களை அனுசரித்து மறக்க வேண்டியவராவார் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 08.11.1936**



# ஈரோடு ரேஷனல் புக்ஸ் பப்ளிஷிங் சொசைட்டி (லிமிடெட்)

ஈரோடு ரேஷனல் புக்ஸ் பப்ளிஷிங் சொசைட்டி லிமிடெட்டின் ஜனரல்பாடி மீட்டிங்கு டிசம்பர் மாதம் முதல் தேதி மாலை 5 மணிக்கு ஈரோடு சொசைட்டி ஆபிசில் கூடும். அப்போது சொசைட்டியின் நிலையைப்பற்றியும் மேல் நடப்பைப்பற்றியும் யோசித்து முடிவு செய்யப்படும். மெம்பர்கள் வரவேண்டுமாய்க் கோரப்படுகிறார்கள்.

**ஈ.வெ.ராமசாமி**

பிரசிடெண்ட்

ஈரோடு

5.11.36

**குடி அரசு - அறிவிப்பு - 08.11.1936**



RangaRakes tamilnavarasam.com

# கருப்பு காங்கிரஸ்வாதிக்கும் வெள்ளை காங்கிரஸ்வாதிக்கும் சம்பாஷணை

**- சித்திரபுத்திரன்**

**கருப்பு காங்கிரஸ்வாதி:-** என்னப்பா முதலியார் பட்டத்தை விட வில்லையாமே?

**வெள்ளை காங்கிரஸ்வாதி:-** விடாவிட்டால் உனக்கென்ன இத்தனை ஆத்திரம்?

**க.கா.வா: -** இல்லை தேசாபிமானம் வேண்டாமா?

**வெ.கா.வா:-** என்ன தேசாபிமானம்? பட்டத்தைவிட்டால்தானா தேசாபிமானம்? பட்டத்தை விடவேண்டியது தேசாபிமான சின்னமா? இன்று காங்கிரசில் பட்டதாரிகள் யாருமில்லையா? சென்னைபட்டணத்தில் ராவ்பகதூர் பட்டம்விட்ட தோழர் ஓ. கந்தசாமி செட்டியார் இருக்கிறாரே அது போதாதா? C.I.E. பட்டம் விட்ட தோழர் S. சீனிவாசய்யங்கார் இருக்கிறாரே அது போதாதா? இவர்கள் தேசாபிமானத்துக்கு இன்று எவ்வளவு மதிப்பு இருக்கிறது பார்! இது உனக்கு தெரியாதா?

**க.கா.வா:-** சரி, பழய கதை பேசாதே, முதலியார் டைடிலை விட்டுவிடுகிறேன் என்று எழுதிக் கொடுத்துவிட்டு இப்போது விடவில்லையே அதற்காகத்தான் சொன்னேன்.

**வெ.கா.வா:-** எதற்காக முதலியார் டைடில் விடுகிறேன் என்று சொன்னார்? தேசாபிமானத்துக்காகவா? 4 அணா மெம்பர் பிளெஜ்ஜில் டைடிலை விடவேண்டும் என்று ஏதாவது இருக்கிறதா?

**க.கா.வா:-** 4 அணா பாரத்தில் இல்லாவிட்டால் என்ன? சட்ட சபைக்கு நிற்கிறவர்கள் டைடிலை விட வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்திருக்கிறதல்லவா?

**வெ.கா.வா:-** ஆம், சட்டசபைக்கு நின்றால்தானே! அதுவும் காங்கிரஸ் கேண்டிடேட்டாய் நின்றால் தானே!! ''நான் சேற்றில் இறங்கவுமில்லை செருப்பைக் கழட்டவும் இல்லை'' என்று ஒருவன் சொன்னால் அவன் தேசத்துரோகியா? முதலியார் காங்கிரஸ் சார்பாய் சட்டசபைக்கு நிற்கா விட்டால் பட்டம் எதற்காக விடவேண்டும்? அவர்தான் ''என்னை காங்கிரஸ் சார்பாய் நிறுத்தாதீர்கள்'' என்று காங்கிரஸ் கமிட்டிக்கு கடிதம் எழுதி விட்டாரே? பிறகு ஏன் அதைப்பற்றி பேசுகிறாய்?

**க.கா.வா:-** இல்லையப்பா, அவர் பட்டம் விட்டால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு எவ்வளவு கௌரவம் ஏற்படும் பார்.

**வெ.கா.வா:-** உங்கள் கௌரவம் போதுமே, ஓ. கந்தசாமி செட்டியார் விட்டதில் எவ்வளவு கௌரவம் வந்தது? இப்பொழுது அவர் எங்கிருக்கிறார், அவர் விலாசம் என்ன உனக்கு தெரியுமா? அப்படிமீறி வருகிற கௌரவம் ராமலிங்கம் செட்டியாரால் கமிட்டிக்கு வரட்டுமே. ஒரு ஜில்லாவில் இரண்டு பேர் பட்டம் விட்டு விட்டு ஒரு மந்திரி வேலைக்கு சண்டை பிடித்துக் கொள்ளுவானேன்?

**க.கா.வா:-** மந்திரி வேலைக்கா பட்டம் விடுவது?

**வெ.கா.வா:-** பின்னை எதற்கப்பா? சட்டசபை மெம்பர் வேலைக்கென்றே வைத்துக்கொள்ளேன்.

**க.கா.வா:-** என்னப்பா அப்படி சொல்லரே?

**வெ.கா.வா:-** பின்னை எதற்கு அப்பா? தேசாபிமானத்துக்கு பட்டம் விட வேண்டும் என்று இருந்தால் 4 அணா பாரத்திலேயே அந்த நிபந்தனை இருக்கும், இல்லாவிட்டாலும் காங்கிரஸ் தீர்மானத்திலாவது இருக்கும், அப்படி இல்லாமல் சட்டசபை அபேட்சகர்கள் பாரத்தில் மாத்திரம் அதுவும் நுழை வரியாய் எழுதி வாங்குகிறார்களே அது ஏன் உனக்குத் தெரியாதா?

**க.கா.வா:-** என்ன இருந்தாலும்...

**வெ.கா.வா:-** என்ன இருந்தாலும் என்கின்றது ஏனப்பா? ஒருத்தர் ஏமாறமாட்டேன் என்றால் அதற்குஆக கோபமா? இத்தனை ஆத்திரமா? காங்கிரஸ்காரர்கள் முதலியாருக்கு தொகுதி இன்னது என்றும் சொல்ல முடியாது; நேமிக்கிறார்களா இல்லையா என்றும் சொல்ல முடியாது. இந்த நிலையில் முதலியார் அனாவசியமாய் பட்டத்தை மாத்திரம் விட்டுப்போட்டு வாலறுந்த நரிமாதிரி நிரந்தரமான மூளி சின்னத்தோடு இருக்க வேணுமாக்கும். அதைப்பார்த்து நீங்கள் சிரிக்கவேணுமாக்கும். வேண்டாம் வேண்டாம். உங்களையே பார்த்து நீங்கள் சிரித்துக்கொள்ளுங்கள். சிரிப்பு வரவில்லை யானால் அழுது கொள்ளுங்கள். அவர் தலையில் கை வைக்காதீர்கள்.

**க.கா.வா:-** அதே நிபந்தனையில் ராமலிங்கம் செட்டியார் பட்டங்கள் விடவில்லையா?



RangaRakes tamilnavarasam.com

**வெ.கா.வாஃ-** ராமலிங்கம் செட்டியார் சங்கதி நமக்குத்தெரியாதா? அவர் எதையும் விடுவார் சந்தையும் அவருடையது, கொள்ளையும் அவருடையது. கேட்கிறவர்கள் யார்?

**க.கா.வாஃ-** அப்படி சொன்னால் எனக்கு விளங்கவில்லையே!

**வெ.கா.வாஃ-** காங்கிரஸ் என்றால் என்ன? யார்? அவனாசிலிங்கம் செட்டியார் தான் கோயமுத்தூருக்கு காங்கிரசு தலைவர்; அவர் ராமலிங்கம் செட்டியாருக்கு தம்பி. இருவரும் முதலியாருக்கு ஜென்மவிரோதிகள்; முதலியாரை ‘‘முண்டச்சி’’ ஆக்கவே பட்டம் சங்கதி உற்பத்தி பண்ணப்பட்டது; ஆதலால் செட்டியாருக்கு எப்படியும் ஒரு ஸ்தானம் ஒதுக்குவது உறுதி. அதுவும் அவர் எது கேட்கிறாறோ அது ஒதுக்கப்படும்; (ஆனால் கிடைக்குமோ இல்லையோ அது வேறு சங்கதி.)

முதலியார் விஷயத்தில் அப்படி இல்லையே? எதுகொடுத்தாலும் முதலியாருக்கு கிடைத்துவிடலாம். அதனாலே காங்கிரசில் ஒதுக்குவதையே அல்லவா நாமம் போடப்பார்த்தார்கள். நல்ல வேளையாய் தப்பித்துக் கொண்டார். அவர் சட்டசபை மெம்பர் ஆனாலும் சரி ஆகாவிட்டாலும் சரி, சாகும் வரைக்கும் சொட்டு இருக்கும்படியான ஏமாற்றத்தில் இருந்து தப்பி கொண்டார்.

**க.கா.வாஃ-** அப்படியா சங்கதி நல்ல வேளை எந்த சாமி புண்ணியமோ தப்பித்துக்கொண்டார். போகட்டும் போ. எனக்கு இந்தச் சூது தெரியாது.

**வெ.கா.வாஃ-** எந்த சாமி புண்ணியம், எல்லாம் நம்ப சாமி புண்ணியம் தான்.

மற்ற சங்கதி ஒன்றும் கேட்க வேண்டாம். எல்லாம் தானாக வெளி வரும்; கொஞ்சம்பொறு. முதலியார் தப்பித்துக்கொண்டாரே என்கின்ற ஆத்திரத்தில் கண்டபடி உளறப்போகிறார்கள். அதிலிருந்து அநேக சங்கதி தெரிந்து கொள்ளலாம்.

அரசியல் பிழைப்பில் நாணயம் பேச யாருக்கு உரிமை உண்டு? தோழர் சுப்பராயனை சேர்த்துக்கொள்ளவில்லையா? அரசியல்வாத நாணயம், வக்கீல் வாத நாணயம், வியாபாரி வாத நாணயம், தாசிவாத நாணயம் இவைகளுக்கு விலக்குவிதி உண்டு உனக்குத் தெரியாதா?

அப்படியும் முதலியார் விஷயத்தில் விலக்கு விதி ஒன்றும் வேண்டியதில்லை; அவர் பொது வாழ்வில் பொதுநல காரியம் பார்த்ததில் எவ்வளவோ பணம் நட்டப்பட்டு கடன்பட்டு தனது சொத்தை விற்று கடன் கட்டினார். ஜில்லா போர்டு பிரசிடெண்டு வேலை போனபிறகே கடன் இல்லாமல் சாப்பிடுகிறார். ஏதோ லக்ஷம் ஐம்பது ஆயிரம் சம்பாதித்தார்.

காந்தியை கைது செய்யச் செய்த சீனிவாச சாஸ்திரி இன்னம் பெரிய மனிதராக இல்லையா? காந்தியை முட்டாள் என்ற சத்தியமூர்த்தி அதாவது



ஆனைமலை பேச்சுக்காரர் இன்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இல்லையா? முதலியார் என்ன துரோகம் பண்ணினார்? டாக்டர் ராஜனாட்டவா? சாஸ்திரியாட்டவா வேலூர் காங்கிரஸ்காரராட்டவா தென் ஆற்காடு காங்கிரஸ்காரராட்டவா? அல்லது திருநெல்வேலிகாரராட்டவா? இன்னும் பேசப்போனால் காந்தி முதல் சத்தியமூர்த்தி வரையிலுமாட்டவா என்றுகூட கேட்பேன்.

காங்கிரசில் சேர்ந்தார். காங்கிரசில் இருக்கிறார். நீ என்னை சட்ட சபைக்கு நியமிக்க வேண்டாம் நான் பட்டம் விடவில்லை என்றார். இதில் என்ன ஓட்டை சொல்லே பார்ப்போம்.

**குடி அரசு - உரையாடல் - 15.11.1936**



RangaRakes tamilnavarasam.com

# மகன் செத்தாலும் மருமகள் ''முண்டை'' ஆக வேண்டும்

ஜஸ்டிஸ் கக்ஷி தலைவர்களிடம் பொறாமைப்பட்ட பெரியார்கள் சிலரின் வீரப்பிரதாபம் இன்று காங்கிரசின் சாதாரண ஆட்களின் வாலைப் பிடித்துக் கெஞ்சிக்கொண்டு திரியும்படியான நிலைமை ஏற்பட்டது பற்றி நாம் சந்தோஷப்படுவதா வெட்கப்படுவதா என்பது தெரியவில்லை. ஒரு காலத்தில் கோவை ஜில்லா பிரமுகர்கள் என்று சொல்லி முன்னணியில் இருந்து அரசியல் பூஜையில் முதல் தீர்த்தப்பிரசாதம் பெற்று வந்த பெரியார்கள் இன்று காங்கிரசில் பக்தர்கள் ஆன காரணத்தால் தோழர் சத்தியமூர்த்தியாரையும் அவனாசிலிங்கனாரையும் சுப்பய்யா முதலியாரையும் ''எனக்கு இன்ன தாலூகா கொடு'' ''எனக்கு இன்ன பிர்க்கா கொடு'' என்று கெஞ்சவும் அவனாசிலிங்கம் போன்றவர்கள் எல்லாம் ''அதுதான் கொடுப்பேன் வாங்கினால் வாங்கிக்கொள் இல்லாவிட்டால் போ'' என்று சொல்லவும் ''இதற்குத் தானா நான் காங்கிரசுக்கு வந்தேன்? என் யோக்கியதை என்ன? அந்தஸ்து என்ன'' என்று இந்தபக்தர்கள் கேட்கவும் அதற்கு அவனாசிலிங்கம் அவர்கள் நிமிர்ந்து உட்கார்ந்து தனது மார்பைப்பார்த்துக் கொண்டு ''உம்மை யாரய்யா வரச்சொன்னார்? போமே இப்பொழுது வேண்டுமானாலும்'' என்று சொல்லவும் இதைக் கேட்ட பக்தர்கள் ''உம்மைச் சொல்லி என்ன செய்வது நம்ம புத்தியைச் சொல்ல வேண்டும்'' என்று தன்னைத்தானே நொந்துகொண்டு புதிய ஞானம் உண்டாக்கி கொள்வதுமாக உள்ள ஒரு சீன் இனி எப்போதுமே பார்க்கக் கிடைக்காத அவ்வளவு அற்புதமான சீன் என்று சொல்லலாம். இவ்வளவுக்கும் இந்த கனவான்களுக்கு திருப்தி எல்லாம் ஜஸ்டிஸ் கக்ஷி ஒழியப்போகுதே அதுவே போதும் என்பதல்லாமல் வேறு ஒன்றும் இருப்பதற்கில்லை.

இது எப்படியோ இருந்துபோகட்டும், இதைப்பார்த்து நாமும் வேண்டுமானாலும் சிறிது சிரிக்கலாம். ஆனால் இந்தமாதிரி தோழர்கள் அவினாசிலிங்கம் சுப்பையா கோயமுத்தூருக்கும், தோழர் குப்புச்சாமி முதலியார், அண்ணாமலை முதலியார், சீனிவாசராவ், உபயத்துல்லா வட ஆற்காடுக்கும் தோழர் கிருஷ்ணசாமி பாரதி மதுரைக்கும் என்பதுபோல்



ஸ்தாபனங்கள் பிச்சை கொடுக்கின்ற பிரபுக்களாக அமைகிறது என்றால் இது சுயராஜ்ய தேசமா, சமதர்ம ராஜ்ய தேசமா, அல்லாவிட்டால் தன்னரசு சுதேச ராஜ்யமா என்பதுதான் கவனிக்கத்தக்கதாக இருக்கிறது.

''குடைநிழல் இருந்து குஞ்சர மூர்ந்தோர் நடைமெலிந்தோர் நண்ணினும் நண்ணுவர்''

''ஆறிடு மேடும் மடுவும் போலாம் செல்வம் மாறிடும் ஏறிடும்''

என்பதெல்லாம் பச்சையாய் பூதக் கண்ணாடியில் தெரிவதுபோல் தெரிகின்றது. இந்த லக்ஷணத்தில் தேசத்தின் அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்லும் பத்திராதிபர்கள் யோக்கியதையோ அப்பப்பா நினைக்கவே நடுங்குகிறது மனம். இதெல்லாம் நாம் சொல்வது சம்பந்தப்பட்ட எந்த ஆளையும் பார்த்தல்ல, அவர்களது பொறுப்பைப் பார்த்தேயாகும். ஆகவே இது ஒரு ''புரக்ஷி'' காலம் தான் என்பதில் சந்தேகமில்லை.

**குடி அரசு - கட்டுரை - 15.11.1936**



RangaRakes tamilnavarasam.com

# தண்ணி மயக்கமா? ஆணவ மயக்கமா?

தோழர் சத்தியமூர்த்திக்கு தலை கிறு கிறுத்து விட்டது. இடுப்பில் வேஷ்டி இருக்கிறதா இல்லையா - மகளா மனைவியா என்பவைகளை உணரக் கூடாத அளவு போதை ஏறிவிட்டது. இது தண்ணி போதையா? அல்லது சென்னை கார்ப்பரேஷன் எலக்ஷனில் 10, 15 பார்ப்பனர்கள் வெற்றிபெற்று விட்ட ஆணவ போதையா என்பது நமக்கு விளங்கவில்லை. அசம்பிளி தேர்தலில் பல பார்ப்பனர்கள் வெற்றி பெற்றவுடன் இதுபோன்ற போதை வெறி ஒரு 2, 3 மாத காலம் தலைவிரி கோலமாய் பீச்சாண்டி மாதிரி திரியும்படி செய்தது. பிறகு ஜில்லா போர்டுகளும் முனிசிபாலிட்டிகளும் நல்ல பாடம் கற்பித்து வெறியை இறக்கிவிட்டன. இப்போதும் அதுபோலவே தலைகால் தெரியவில்லை. தெரியவில்லை என்பது ஒருபுறமிருந்தாலும் பொது ஜனங்கள் கண்களில் மண்ணைப்போட்டு அடுத்த சட்டசபைத் தேர்தலில் ஏமாற்றுவதற்கு ஆக அதிக போதை ஏற்றிக்கொண்டு கண்டபடி உளறுகிறார்.

அவரது ஜாதிப்புத்தி போகவில்லை; போக்கிரித்தனமாக ராக்ஷதன், சூரன், அசுரன் என்று ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களை இழித்துக்கூறும் அற்பத்தனம் ஓய்ந்தபாடில்லை. அதாவது இவர் சேலத்தில் 6ந்தேதி ஒரு கூட்டத்தில் பேசும்போது ‘‘தென்னாற்காடு கும்பகர்ணனையும் திரு நெல்வேலி ராவணனையும் ஒழித்துவிட்டோம், இனி சேலம் நரகாசூரனை ஒழிக்கப்போகிறோம். ஜஸ்டிஸ் கட்சி தலையில் கல்லைப்போடவேண்டும். அதை ஒழிக்காவிட்டால் நான் உயிர் வாழ மாட்டேன், எனது ஜன்மம் சாபல்யமாகாது’’ என்று பேசி இருக்கிறார். இந்தமாதிரியாக பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரை இழிவு படுத்தும் அயோக்கியத்தனத்தை அடியோடு ஒழிக்கவே ஜஸ்டிஸ்கட்சி போராடி வருகிறது. இந்தப் போராட்டத்தின் நடுவில் பதவியோ அதிகாரமோ கிடைத்தால் அதையும் பெற்று இந்த பார்ப்பன அயோக்கியத்தனத்தை ஒழிப்பதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்கு ஆகத்தான் பதவிகளைப் பற்றி கவலை கொள்வதே ஒழிய மற்றபடி மந்திரி பதவியோ அரசாங்க அதிகாரமோ பெறுவதற்கு ஆகவே ஜஸ்டிஸ் கக்ஷி இன்று இருந்து வரவில்லை என்பதை யாவரும் அறிவார்கள்.

ஒரு சமயம் அதற்கும் ஆசைப்பட்டது என்று சொல்லுவதானாலும் அதையும் மறுக்க நாம் வரவில்லை. ஆசைப்படுவதாகவே வைத்துக் கொள்வோம். அதனால் கெடுதிஎன்ன? தேசத்துக்குத்தான் என்ன கெடுதி?



சமூகத்துக்குத்தான் என்ன கெடுதி? பதவிகளையும் அதிகாரங்களையும் ஆசைப்படாமலும் லக்ஷியம் செய்யாமலும் பார்ப்பனரல்லாதார் சமூகம் ஏமாந்த சோணகிரிகளாய் இதுவரை இருந்ததாலேயே மதத்தில் பார்ப்பனன் சங்கராச்சாரியாகி குருவாகி பார்ப்பனரல்லாதார் தோளில் சவாரி செய்வதுபோல் அரசியலில் சத்தியமூர்த்திபோன்றவர்கள் குருவாகி இன்று பார்ப்பனரல்லாதார் தோளிலேயே சவாரி செய்து ‘‘திக்கு விஜயம்’’ செய்கிறேன் என்கிறார்.

செல்லுமிடங்களில் எல்லாம் ‘‘ஜஸ்டிஸ்கக்ஷி செத்து விட்டது, நிஜமாகவும் செத்து விட்டது’’ என்கிறார்.

உடனே அதே நிமிஷத்தில் ‘‘ஜஸ்டிஸ்கட்சியை கொல்லாமல், ஒழிக்காமல் இருக்க மாட்டேன்; ஜஸ்டிஸ்கட்சியை ஒழிக்காவிட்டால் நான் செத்துப் போவேன்’’ ‘‘எனது ஜன்மம் சாபல்யமடையாது’’ என்கிறார். இவருடைய போதைவெறிக்கு இதுவே ஒரு பெரிய உதாரணமாகும். செத்துப்போன ஜஸ்டிஸ்கட்சியை கொல்லுவதற்கு இத்தனை பார்ப்பனர்களும் இத்தனை விபீஷணர்களும் இத்தனை அனுமார்களும் எதற்காக தோழர் சத்தியமூர்த்திக்குத் துணை வேண்டியிருக்கிறது என்று கேட்கின்றோம்.

அவர் சொல்லுவதில் ஒரு விஷயம் மாத்திரம் உண்மையும் நிச்சயமுமான காரியமாகும்.

அதென்னவென்றால் ஜஸ்டிஸ் கட்சி கொல்லப்படாவிட்டால் சத்தியமூர்த்தியார் சாக வேண்டியதுதான். தோழர் ராஜகோபாலாச்சாரியும் ஸ்ரீனிவாச சாஸ்திரியும் சொல்லுவது போல் ஜஸ்டிஸ் கட்சி ஒழிக்கப்படா விட்டால் அவர்கள் வங்காளக்குடாக் கடலில் விழுந்து சாகவேண்டியதுதான். அதனாலேயேதான் அவர்கள் (பார்ப்பனர்கள்) போராடுகிறார்கள். ஏனெனில் ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டது மந்திரி பதவிக்கும் அதிகாரத்துக்கும் சம்பளத்துக்கு மாத்திரமானால் பார்ப்பனர்கள் சந்தோஷமாக ஒவ்வொரு அதிகாரத்துடனும் ஒவ்வொரு பதவியுடனும் ஒவ்வொரு மங்கைப் பருவமுள்ள பெண்ணையும் வைத்து கன்னிகாதானமாக தாரை வார்த்து கொடுத்து விடுவார்கள்.

அடுத்தபடியாக ஜஸ்டிஸ் கட்சி ‘‘அரசாங்கத்தை தாங்குகின்றதே’’ என்ற கவலையும் அவர்களுக்கில்லை. ஏனெனில் அரசாங்கத்தை தாங்குவதற்கு எவரும் வேண்டியதில்லை என்பதும் ஜஸ்டிஸ் கட்சி தாங்குவதன் மூலமாகத்தான் அரசாங்கம் நிலைக்கக்கூடிய அவ்வளவு பலமற்ற அரசாங்கமல்ல பிரிட்டிஷ் அரசாங்கம் என்பதும் சத்தியமூர்த்திகளுக்கும் ராஜகோபால ஆச்சாரிகளுக்கும் ஸ்ரீனிவாசசாஸ்திரிகளுக்கும் நன்றாய்த் தெரியும்.

பிரிட்டிஷ் அரசாங்கமானது இன்று இந்த பார்ப்பனர்களையும் மற்றும் இவர்கள் போன்ற எத்தனையோ பேர்களையும் தாங்கிக்கொண்டிருக்கிறது



RangaRakes tamilnavarasam.com

என்பதை இந்தக் கூட்டத்தார் அறியாததல்ல. மற்றபடி ஏன் ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்கவேண்டும் இல்லாவிட்டால் சாகவேண்டும் என்று சொல்லுகிறார்கள் என்றால் ஜஸ்டிஸ் கட்சி இந்த பார்ப்பனர்களை சித்திரத்தில் எழுத ஒரு மாதிரி ஆசாமி கூட கிடைப்பதற்கு இடமில்லாமல் போன பின்பு தான் ஓய்வெடுப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டு உட்கார்ந்து இருக்கிறது. அதனாலேயே பார்ப்பனர்கள் தங்களை ஒழிக்க எண்ணினவர்களையும் தங்கள் பெண்டு பிள்ளைகளை சிறை வைத்தவர்களையும் அழைக்கும் - அழைப்பு முறையில் ராக்ஷதன், சூரன் அசுரன் என்கின்ற வாக்கியங்களால் அழைக்கிறார்கள்.

தோழர் சத்தியமூர்த்தியார் ராவணன் என்று நம்மை அழைப்பதில் நமக்கு கோபம் இல்லை; மகிழ்ச்சி தான். ஆனால் ராவணன் பார்ப்பனர்களை கருவறுக்கும் வேலையில் முனைந்திருந்தான் என்பதோடு மாத்திரம் கதை இருந்தால் நாம் அந்தப் பெயரை மகிழ்ச்சியோடு வரவேற்கலாம். ஆனால் ராவணன் மீது வேறு ஒருவிதமான பழி சுமத்தப்பட்டிருக்கிறது. அது உண்மையானாலும் பொய்யானாலும் இப்பொழுது பார்ப்பனர்களை கருவறுக்க வேண்டுமென்று எண்ணங் கொள்ளுகிற யாரும் அம்மாதிரி யாருடைய மனைவியையும் கவர்ந்து செல்லவில்லையே? கவர்ந்து செல்லக் கருதவு மில்லையே? இப்படி இருக்கும் போது அப்படிச் சொல்லுவது அயோக்கியத்தனம் அல்லவா என்றுதான் கேட்கின்றோம்.

உதாரணமாக ''திருநெல்வேலி ராவணனான'' ஈஸ்வரம் பிள்ளை எந்தப் பார்ப்பனன் அல்லது ஆரியர் வீட்டில் ராவணன் வேலை செய்தார்? அதை ருஜுப்பித்தல்லவா பிறகு ஒருவரை ராவணன் என்று அழைக்க வேண்டும்?

பார்ப்பனர்களை கருவறுக்க வேண்டுமென்றால் பார்ப்பனர் என்று பெயர் சொல்லிக் கொண்டிருக்கும் மக்களே இல்லாமல் போகும்படி செய்வது அல்ல என்பதை நன்றாய் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அந்தப்படி செய்ய முடியாது. முடியுமானாலும் அப்படிச் செய்யும் உத்தேசம் ஜஸ்டிஸ் கட்சிக்கு இல்லை. மற்றென்னவென்றால் பார்ப்பனர் என்று சொல்லிக் கொண்டு அடையும் உயர்வையும் அதற்குரிய சின்னங்களையும் அடியோடு ஒழிக்க வேண்டுமென்பது தான்.

அந்தக்காரியத்தை ஜஸ்டிஸ்கட்சி விட்டுவிடும் என்றோ அப்படிச் செய்வதிலிருந்து ஜஸ்டிஸ்கட்சியை சத்தியமூர்த்திகளாலோ மற்றும் அவர்கள் கூட்டங்களாலோ தடுப்பது என்பதோ ஒருநாளும் முடியாத காரியம் என்பதை நாம் தூக்குமேடையில் இருந்து கூறுவோம்.

மற்றும் ஜஸ்டிஸ்கட்சி செய்யப்போகும் இந்தக் காரியத்துக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை. அதற்கு ஆக ஜஸ்டிஸ் கட்சி பிரிட்டிஷ் அரசாங்கத்தை தாங்கவேண்டிய அவசியமும் இல்லை. இருப்பதாகச் சொல்லப்படுமானாலும் இந்த பார்ப்பனீயமும் ஒழிவதற்கு ஆகத்தான் பிரிட்டிஷ் அரசாங்கம் இருக்கட்டும் என்று சொல்லக் கூடியதாக ஏற்படலாம். இந்த முயற்சிக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் எதிர்ப்பாய் இருந்தால் அது இருப்பதைவிட போவது மேல் என்று குஷாலாய் ஜஸ்டிஸ் கட்சி சொல்லும்.

ஆகவே ஜஸ்டிஸ்கட்சி சாகப்போவதில்லை; மந்திரி பதவி போய் விட்டாலும் கூட அது செத்துப்போகவும் போவதில்லை. இன்னமும் சொல்ல வேண்டுமானால் மந்திரிபதவி இக்கட்சிக்கு விலக்கமுடியாத சனியன் என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறதே தவிர விலக்கக் கூடுமானால் ஜஸ்டிஸ் கட்சியின் உண்மைக் கொள்கை முயற்சிக்கு அனுகூலம் என்றே சொல்வோம். ஆனால் சுலபத்தில் ஜஸ்டிஸ் கட்சியை விட்டு மந்திரி பதவிகள் போய்விடும் என்று கருதி விடுவதற்கு ஒரு காரணமும் ஏற்பட்டு விடவில்லை.

அது எப்படி ஆனாலும் இன்று ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றியும் அதன் தலைவர்களைப் பற்றியும் இவ்வளவு கேவலமாகவும் இழி தன்மையாகவும் பேசுவது யோக்கியமா என்றும் இம்மாதிரி ''ஜஸ்டிஸ் கட்சி செத்துப் போய்விட்டது, ஜஸ்டிஸ்கட்சியை ஒழிப்பது எனது முதல் வேலை, ஜஸ்டிஸ் கட்சி ஒழியாவிட்டால் செத்துப் போவேன், ஜஸ்டிஸ் கட்சியை விட வெள்ளைக்காரரே மேல்'' என்பதாக வெல்லாம் குடிகாரன் வெறிகாரன் மாதிரி யுளரலாமா என்றும்தான் கேட்கின்றோம்.

**குடி அரசு - தலையங்கம் - 15.11.1936**



RangaRakes tamilnavarasam.com

# நாயக்கர்மார்கள் நாமஞ்சாத்தப்பட்டார்கள்

கோயமுத்தூர் ஜில்லாவில் கொங்கு வேளாளர்களுக்கு அடுத்த சமூகம் ஜனப் பெருக்கத்திலும் விவசாயத்திலும் இரண்டாவதாக விளங்கக்கூடியவர்கள் ஆந்திர நாயக்கர்மார் அதாவது கம்மநாயக்கர்மார் சமூகமாகும். இவர்கள் செல்வத்திலும் வியாபாரத்திலும் வேளாளர்களைவிட சிறிது குறைந்தவர்கள் அல்ல என்றே சொல்லலாம். பொள்ளாச்சி, உடுமல்பேட்டை, திருப்பூர், அவனாசி ஆகிய தாலூக்காக்களில் இவர்கள் குறிப்பிடத்தகுந்த ஜன சமூகமுள்ளவர்கள். இவ்வளவோடு மாத்திரமல்லாமல் காங்கிரஸ் கூப்பாட்டிலும் கதர் வேஷத்திலும் ஜெயிலுக்கு போனதிலும் அடிபட்டதிலும் பிழைப்பு இருப்பு முதலியவைகளை லக்ஷியம் செய்யாமல் காங்கிரஸ் காங்கிரஸ் என்று அலைந்ததிலும் இவர்கள் மற்ற எந்த சமூகத்தாரையும் விட குறைந்தவர்கள் அல்ல என்பது மாத்திரமல்லாமல் வேறு பல சமூகங்களை யெல்லாம் விட மேம்பட்டவர்கள் என்றும் சொல்லலாம்.

அப்படிப்பட்ட சமூகத்தார் இன்று காங்கிரஸ் பார்லிமெண்டரி கமிட்டியாரால் நாமம் சாத்தப்பட்டு விட்டார்கள். கோயமுத்தூர் ஜில்லாவில் அசம்பளிக்கு உள்ள 8 ஸ்தானங்களிலும் ஒன்றுக்குக்கூட நாயக்கர்களில் யாரையும் நியமிக்காமல் காங்கிரஸ்காரர்கள் பட்டை நாமம் சாத்திவிட்டார்கள்.

இன்று பெரிய நூல் மில் வைத்து நடத்துபவர்களில் சுமார் 10 மில்லுகள் வரை நாயக்கர்மார்கள் நடத்துகிறார்கள். தோழர் P.S.G. கங்கா நாயக்கர் முதலிய மில் முதலாளிகள் பலர் காங்கிரசில் வெகு காலமாய் இருந்து கொண்டு காங்கிரசுக்கு தாராளமாய் மற்றவர்களுக்கு அதாவது தோழர்கள் ராமலிங்கம் செட்டியார், வெள்ளியங்கிரி கவுண்டர், அவனாசிலிங்கம் செட்டியார் ஆகியவர்களுக்குச் சிறிதும் குறையாமலும் பின் வாங்காமலும் பணம், ஆள் முதலிய உதவி செய்து வந்தவர்கள். தோழர் வேலப்ப நாயக்கர் முதலியவர்கள் தங்கள் தொழிலை (மணியத்தை) பண்ணையத்தை விட்டு வந்து ஜெயிலுக்கு பல தடவை சென்றவர்கள். நாயக்கர்மார் சமூகத்தில் காங்கிரசை ஆதரிப்பவர்கள் அத்தனை பேரும் பெரிதும் இவர்களுக்காகவே காங்கிரசை ஆதரிப்பவர்களாவார்கள். இப்படி இருக்க, கோவை ஜில்லாவில் தோழர் அவனாசிலிங்கம் செட்டியாருக்கு ஒரு இந்திய M.L.A., தோழர் ராமலிங்கம் செட்டியாருக்கு ஒரு மாகாண M.L.A., தோழர் வெள்ளியங்கிரி கவுண்டருக்கு ஒரு அப்பர் சேம்பர் M.L.C., அவர் தம்பி



தோழர் பழனிச்சாமி கவுண்டருக்கு ஒரு ஜில்லா போர்டு பிரசிடெண்டு, மற்றும் அவருக்கே ஒரு மாகாண M.L.A., என்று இப்படி இரண்டு குடும்பமே உள்ளதையெல்லாம் பங்கிட்டுக் கொள்வதென்றால் இவர்கள் தேசாபிமானமும், தியாகமும் - சமதர்ம தீவிரமும் இந்த ஜில்லாவில் அவ்வளவு பெரியதா என்று கேட்கின்றோம். போன தடவை ஜில்லாபோர்டு பிரசிடெண்டு அண்ணன் என்றால் இந்தத் தடவை தம்பிதான் பிரசிடெண்டாக இருக்கவேண்டுமா? ஜில்லா போர்டு மெம்பர் வேலைக்கும் அண்ணனுக்கு ஒன்று தம்பிக்கு ஒன்று மாப்பிள்ளைக்கு ஒன்று மருமகனுக்கு ஒன்று என்று நான்கைந்தும் ஒரு வீட்டுக்கே போகவேண்டுமா? மற்ற வேளாளர்கள் அல்லது மற்ற ஜாதிக்காரர்கள் இருந்தால் போர்டு பாப்பராய்ப் போய்விடுமா? என்று கேட்கின்றோம்.

கொங்கு வேளாளர் ஜில்லா ஆனதால் இந்த ஜில்லாவில் கிடைக்கக் கூடிய ஸ்தானம் எல்லாம் வேளாளருக்கே வரவேண்டும் என்றாலும் அந்த ஒரு குடும்பம் தான் வேளாளக் குடும்பமா? மற்ற குடும்பங்கள் ஏதாவது குற்றம்பட்ட வேளாள குடும்பமா என்று கேட்கின்றோம்.

வகுப்பு உணர்ச்சி உண்டாக வேண்டும் என்பது தான் நமது அபிப்பிராயம். அப்படிப்பட்ட வகுப்பு உணர்ச்சியில்தான் ஒவ்வொரு வகுப்பும் முன்னுக்கு வரமுடியும் என்பது தான் நமது அபிப்பிராயம்.

ஆனால் வகுப்பு உணர்ச்சி கூடாது என்று காங்கிரசில் பார்ப்பனர்களுக்கு ஆயுதங்களாய் இருந்து கூப்பாடு போட்டுக் கொண்டு இரகசியத்தில் வகுப்புவாதம் பேசி கிடைப்பதையெல்லாம் தங்கள் இரு குடும்பத்துக்கே பங்கு போட்டுக்கொள்வது என்றால் இது என்ன தேசீயம்? இது என்ன காங்கிரசு என்று தான் கேட்கின்றோம். இவர்கள் இருவரும் அதாவது தோழர்கள் வெள்ளியங்கிரி கவுண்டரும் ராமலிங்கம் செட்டியாரும் மற்றவர்களை எப்படி வகுப்பு வாதம் கூடாது என்று சொல்லலாம் என்று கேட்கின்றோம்.

இந்த ஜில்லாவில் வேளாளர்கள் பெருந்தொகையாளர்கள் என்றும் அவர்கள் இந்த ஸ்தானங்களைப் பெற வேண்டும் என்றும் முதல் முதல் கிளர்ச்சி செய்து சிறிது கூட நினைத்தே இராத கனம் சங்கராண்டாம்பாளையம் பட்டக்காரர் அவர்களை சட்டசபை மெம்பராக ஆகச்செய்வதில் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டவர்களில் நாம் முதன்மையாக நின்றது யாரும் அறியாததல்ல. அதற்குப் பிறகே சட்டசபை ஸ்தானங்களை வேளாள கவுண்டர்மார்கள் மற்றவர்களுக்கு தானம் கொடுக்கக்கூடிய நிலையை அடைந்தார்கள் என்றுசொல்லலாம். அதாவது அந்தஉணர்ச்சி ஏற்பட அவ்வளவு பாடுபட்டோம். ஆனால் அதற்குப் பலன் இதுதானா? எல்லாம் ஒரே குடும்பம், அதுவும் அண்ணனுக்கும் தம்பிக்கும் மாப்பிள்ளைக்கும் மருமகனுக்கும் மாத்திரம் தானா? மற்ற வேளாளர்களுக்குப் பங்கு இல்லையா? என்று கேட்க வேண்டியிருக்கிறது.



RangaRakes tamilnavarasam.com

பங்கு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அது மற்ற வேளாளர்கள் பார்த்துக் கொள்ளட்டும்.

ஆனால் நாயக்கர்மார்கள் ''தலைஎழுத்து'' இவ்வளவுதானா என்று கேட்கின்றோம்.

அவனாசி கோயமுத்தூர் தாலூக்காக்களின் ஸ்தானத்தை ஏன் நாயக்கர்மார்களுக்கு விட்டுவிடக்கூடாது என்று கேட்கின்றோம்.

தோழர் வி.சி. பழனிச்சாமிக் கவுண்டர் அவர்களுக்கு ஜில்லாபோர்டு பிரசிடெண்டு ஒன்றுபோதாதா? அவர் தமையனார் கனம் வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்கள் அப்பர் சேம்பர் பார்ப்பதுகொண்டே தோழர் பழனிச் சாமிக் கவுண்டர் திருப்தி அடையக்கூடாதா என்று மறுபடியும் கேட்கின்றோம்.

காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டுதான் இந்த விஷயத்தில் என்ன யோக்கியமாக நடந்துவிட்டது என்று கேட்கின்றோம்.

வகுப்பு உரிமை கூச்சல் இவ்வளவு பலமாகக் கூப்பாடு போடுகின்ற காலத்திலேயே இப்படி ஏமாந்தவன் தொடையில் கயிறு திரித்துக்கொண்டு அதுவும் ஜனத்தொகையும் பிரபலமும் செல்வமும் அரசியல் ஞானமும் ஊக்கமும் கொண்ட நாயக்கர்மார்களுக்கே பட்டை நாமம் சாத்திவிட்டுப் போவதென்றால் மற்றபடி இந்தப் பார்ப்பனர்களுக்கு பயந்தோ அவர் வலையில் சிக்கியோ நாம் இந்த வகுப்பு உணர்ச்சியை மறக்க விட்டுவிட்டால் பின்னால் என்ன கதி ஆவது என்பதைப் பொது ஜனங்களே நினைத்துப் பார்க்கட்டும்.

ஆனால் நாயக்கர்மார்களுக்கு இந்தக் கதி வேண்டியதுதான். காங்கிரஸ் என்று மனதறிந்து பொய் வேஷம் போட்டுக் கொண்ட தோழர் வரதராஜுலு, நாயக்கருக்கு மோசம் செய்து விட்டு ஒரு செட்டியார் அதுவும் நேற்று வந்து காங்கிரஸ்வேஷம் போட்ட அரசியலில் பல்லுமுளைக்காத தவரத் தெரியாத ஒரு குழந்தைக்கு ஓட்டுப் போட்டு அவமானப்படுத்தி வேடிக்கை பார்த்த கூட்டம், தங்கள் சமூகம் பூராவுமே அவமானமேற்படும்படி செய்து கொண்டதில் அதிசயமொன்றுமில்லை.

**முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்** என்றாலும் இனியாவது புத்தி வந்துஉடனே ஒரு மகாநாடு கூட்டி காங்கிரஸ் கொடுமையை கண்டித்து கிளர்ச்சி செய்து தாங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்வார்கள் என்று நினைக்கின்றோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 15.11.1936**



# பட்டம் துறந்த பதி விரதைகள்

காங்கிரசின் பேரால் சட்டசபை தேர்தலுக்கு நிற்பவர்கள் தங்களுக்கு அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்ட பட்டங்களை துறந்துவிடவேண்டும் என்று ஒரு நிபந்தனை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு நாணயமானது என்பது நமக்கு இன்னமும் விளங்கவில்லை. இந்த நிபந்தனை சென்னை மாகாணத்துக்கு மாத்திரமா அல்லது இந்தியா பூராவுக்குமா அல்லது தோழர் ராமலிங்க செட்டியார், ரத்தினசபாபதி முதலியார் ஆகிய இருவர்களுக்கு மாத்திரமா என்பது விளங்கவில்லை.

தோழர் சுப்பராயன் அவர்கள் இன்னமும் அரசாங்க நியமனம் சில வகித்து வருகிறார். ஏதேதோ கமிட்டிகளுக்கு நியமிக்கப்பட்டு இருந்தார். காங்கிரசைச் சேர்ந்த வேறு சில அங்கத்தினர்களுக்கும் சில நியமனங்கள் இன்னும் இருக்கின்றன.

அதிக தூரம் போவானேன் திவான் பகதூர் பட்டம் துறந்த தோழர் மாஜி திவான்பகதூர் ராமலிங்க செட்டியார் அவர்களுக்கு சென்னை அரசாங்கத்தாரில் அதுவும் மந்திரிமார்களால் நியமனம் செய்த சில பதவிகள் இருக்கின்றன.

தோழர் சி.எஸ். ரத்தினசபாபதி முதலியார் அவர்களுக்கும் மந்திரிகளால் நியமனம் பெற்ற சில பதவிகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ராஜினாமா செய்யாமல் அந்த உத்திரவுகளை திருப்பி அனுப்பாமல் பட்டங்களை மாத்திரம் விட்டுவிட்டோம் என்றால் இதற்கு அர்த்தம் என்ன என்பது நமக்கு விளங்கவில்லை.

நாளைக்கு மந்திரி பதவி கிடைக்கும் என்றும் மந்திரி பதவி கேட்பதற்கு இதனால் ஒரு ''சட்ட பூர்வமான'' உரிமை ஏற்பட்டு விடும் என்றும் மனப்பால் குடித்துக்கொண்டு ஒரு இரவு கூத்துக்கு மீசையை சிறைத்துக் கொண்டது போல் பட்டங்களை துறந்துவிட்டேன் என்று சொல்லுவது சுத்த பைத்தியக்காரத்தனம் என்றே சொல்லலாம்.

இவ்விருவர்களும் சட்டசபை ஸ்தானங்களை எதிர்பார்த்து பட்டங்களை விடவில்லை என்பதை நாம் உண்மையாகவே ஒப்புக் கொள்ளுகிறோம். எப்படி எனில் இவ்விரு தோழர்களுக்கும் எப்படியானாலும் சட்டசபை ஸ்தானம் ஆளுக்கு ஒன்று கோவை ஜில்லாவில் தாராளமாய் கிடைக்கலாம். ஒரு சமயம் செட்டியார் பாடு சிறிது தகராறாய் இருக்கும் என்று சொன்னாலும் முதலியாருக்கு மூன்று இடங்களில் நிச்சயமாய் எதிர்பார்க்கலாம்.



RangaRakes tamilnavarasam.com

ஆதலால் இவர்கள் பட்டம் துறந்ததின் லக்ஷியம் மந்திரி வேலைக்கு ஆசைப்பட்டேதான் இருக்கவேண்டும் என்று கருதவேண்டி இருக்கிறது. இது அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டு அரசனும் புருஷனும் அதோடு போய் விட்டார்கள் என்கின்ற பழங்காலப் பெண்மக்கள் பழமொழிக்கே ஒப்பாகும்.

இது எப்படியோ ஆனாலும் இவர்கள் செய்கை புத்திசாலித்தனமான தென்றோ நாணையமானதென்றோ சொல்லமுடியாமைக்கு வருந்துகிறோம்.

ஏன் எனில் இப்பொழுது எதற்காக சர்க்கார் அளித்த பட்டத்தை வாபீஸ் செய்யவேண்டும்? நாளைக்கு இந்த சர்க்கார் முகத்தில் விழிக்க வேண்டாமா? அல்லது விழிப்பதில்லை என்கிற தீர்மானமா? அப்படியானால் சீர்திருத்தத்தை உடைக்க இவர்கள் சட்டசபைக்கு போகிறார்களா? மந்திரி பதவி கிடைத்தால் அதை இவர்கள் சர்க்காரை முறியடிக்க அதைப் பயன் படுத்துவார்களா? அல்லது காங்கிரஸ் நாளை சீர்திருத்தத்தை ஏற்று அதனால் கூடியவரை மக்களுக்கு நன்மை செய்வது என்கின்ற சத்தியமூர்த்தியார் கொள்கை நிறைவேறினால் இவர்கள் பட்டம் துறந்தது என்ன ஆவது?

தவிர, சர்க்காரிடம் இவர்கள் பட்டம் வாங்கிக் கொண்டதின் கருத்து என்ன? அதற்கு விரோதமாக இப்போது நாட்டில் என்ன ஏற்பட்டு விட்டது? சர்க்கார் அப்போது செய்யாத கொடுமை என்ன இப்போது செய்தார்கள்? அல்லது இப்போது புதிதாக சர்க்கார் நடத்தையில் ஏற்பட்ட தாங்கமுடியாத கெடுதி என்ன? என்பவைகளை கவனிக்க வேண்டாமா? அல்லது உலகில் வேறு புத்திசாலிகள் எவரும் இதை கவனிக்க மாட்டார்களா? என்று கேட்கின்றோம்? ஒரு சிறு சந்தர்ப்பத்தை சமாளிக்க முடியாமல் பலவீனப்பட்டு இம்மாதிரி மூளை குழம்பி நடந்துகொள்கிற இவர்கள் எப்படி ஒரு ஜனசமூகத்துக்கு பிரதிநிதியாக யோக்கிய முடையவர்களாவார்கள் என்பதை பொது ஜனங்கள் யோசிக்கவேண்டியது மிகவும் முக்கியமான காரியமாகும்.

சர்க்காரை ஏமாற்றின இவர்கள் சர்க்காருக்கும் இவர்களுக்கும் இருந்து வந்த நிலையை இவ்வளவு சீக்கிரத்தில் முடித்துக் கொண்டவர்கள் இனி காங்கிரசில் தான் இவர்கள் யோக்கியமாய் இருப்பார்கள் என்பதற்கு ஆதாரம் என்ன? அல்லது பொது ஜனங்களிடமும் ஒரு நிர்ணயமாய் நடந்து கொள்வார்கள் என்பதற்கு இடம் தான் எங்கே என்றும் கேட்கவேண்டியிருக்கிறது.

இந்த இரண்டு பைத்தியக்காரர்கள் மாதிரி எந்தப் பார்ப்பனராவது நடந்து இருக்கிறார்களா என்பதைப் பொது ஜனங்கள் சிந்தித்து பார்க்க வேண்டுமாய் வேண்டுகிறோம்.

தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் புத்திசாலியாய் இருந்தால் இதே சமயத்தில் இவ்விரு பைத்தியக்காரர்கள் வகிக்கும் சர்க்கார் நாமினேஷன் பதவிகளையும் பார்சல் செய்து அனுப்பும்படி கேட்கவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

குடி அரசு - துணைத் தலையங்கம் - 15.11.1936



# கள்ளனை குள்ளன் ஏமாற்ற முடியவில்லை

**போடுங்கள் விடலாம் :: ::**

**:: :: விடுங்கள் போடலாம்**

காங்கிரசின் பேரால் அபேக்ஷகர்களை நிறுத்துவதற்கு நிறுத்தப்படும் அபேக்ஷகர்கள் பட்டதாரிகளாய் இருக்கக் கூடாது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் ஒரு தீர்மானம் ஒரு வாரத்துக்கு முன் தான் செய்து கொண்டார்கள்.

இப்படி இவர்கள் செய்து கொண்டதானது மொத்தத்தில் இந்திய மாகாணங்கள் பூராவுக்கும் ஏற்பட்டதல்ல.

அன்றியும் இது அகில இந்திய காங்கிரஸ் செய்துகொண்ட தீர்மானமும் அல்ல. இன்றைய காங்கிரசின் பொது கொள்கையுமல்ல.

காங்கிரசினிடத்தில் இன்றைய தினம் எந்தவிதமான ஒத்துழையாமை முறையோ சட்ட மறுப்பு முறையோ பகிஷ்கார முறையோ எதுவும் இல்லை. அவைகளையெல்லாம் நிறுத்திவிட்டு சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடப்பதாக பாட்னா காங்கிரசில் தீர்மானம் ஏற்பட்டிருக்கிறது.

மற்ற தேர்தல்கள் விஷயத்திலும் காங்கிரசானது இதுவரை பட்டம் பதவி முதலியவைகளை விட வேண்டும் என்கின்ற எந்த விதமான கொள்கையையும் அனுசரிக்க இல்லை.

கள்ளு சாராயக்கடை வியாபாரிகளையும் கண்டிறாக்டர்களையும் உற்பத்தி செய்வதற்கு உடந்தைக்காரர்களையும் உற்பத்தி செய்யும் சொந்தக்காரர்களையும் பல காங்கிரஸ் தேர்தலுக்கு தெரிந்தெடுத்து எலக்ஷனில் வெற்றிபெற உதவி செய்திருக்கிறார்கள்.

கதருக்கு விரோதமாய் சீமை ஜவுளி வியாபாரிகளையும் சுதேசியத்துக்கு விரோதமாய் அயல்நாட்டு சாமான் வியாபாரிகளையும் காங்கிரசில் நிறுத்தி வெற்றி வாங்கிக் கொடுத்தும் இருக்கிறார்கள்.

இதுபோல் இன்னமும் எவ்வளவோ காரியங்கள் காங்கிரசின் ஜீவாதாரமான கொள்கை என்பவைகளுக்கே விரோதமாக உள்ள காரியங்கள் செய்தவர்கள் - செய்து கொண்டு இருக்கிறவர்கள் ஆகியவர்களை எல்லாம்



RangaRakes tamilnavarasam.com

காங்கிரசில் சேர்த்து அவர்களுக்கு காங்கிரசின் பேரால் பதவிகள் கிடைக்கும்படி செய்துவிட்டு இப்பொழுது திடீரென்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு மாத்திரம் இந்த பட்ட பஹிஷ்கார கவலை எப்படி உண்டாயிற்று? ஏன் உண்டாயிற்று என்பது மிகவும் கூர்மையாய் யோசிக்க வேண்டிய காரியமாகும்.

அதுவும் கோயமுத்தூர் ஜில்லாவில் தமிழ்நாடு பார்லிமெண்டரி போர்டு கூடுகிற வரையில் அதாவது 4.11.36-ந் தேதி வரையில் இந்த விஷயத்தைப் பற்றி யாதொரு உத்தேசமும் முடிவும் இல்லாமல் அன்றைய தினமும் திடீரென்று பட்டதாரிகளிடம் ''அப்படி ஒன்றும் நேராது என்றும் தேசத்துக்காக எவ்வளவு பெரிய தியாகம் வேண்டுமானாலும் செய்யத் தயாராய் இருக்கிறோம் என்று சொல்லிவிட்டால் பாமர ஜனங்களுக்கு காங்கிரசினிடம் ஒரு மயக்கம் ஏற்பட வசதி இருக்கும் என்றும் பட்டதாரி களுக்குச் சொல்லி ''பட்டம் விட வேண்டுமென்றாலும் விடத் தயாராய் இருக்கின்றோம்'' என்று எலக்ஷன் அபேக்ஷகர்கள் விண்ணப்ப அச்சு பாரத்தில் ஒரு வரி எழுதி கையெழுத்து போடும்படி செய்து பிறகு பட்டம் விட்ட பிறகுதான் உங்களை தெரிந்தெடுப்பதோ இல்லை என்று சொல்லுவதோ இரண்டில் ஒன்று முடிவு செய்யப்படும் என்று சொல்லி பட்டதாரிகளுக்கு உத்திரவு அனுப்புவது என்றால் காங்கிரசின் கட்டுப்பாடான கொள்கையும் நாணயப் பொறுப்பும் எவ்வளவு என்பதை பொதுஜனங்களே நிர்ணயித்துக் கொள்ளலாம். நிற்க,

இம்மாதிரியான நிலையில் கோயமுத்தூர் காங்கிரஸ் கமிட்டியின் யோக்கியதையைப் பற்றியும் சிறிது தெரிந்து கொண்டால் பின்னால் வரும் விஷயம் முழுவதும் விளக்க சௌகரியமாய் இருக்கும் என்று கருதி சிறிது கூறுவோம்.

கோயமுத்தூரில் காங்கிரசுக்கு தோழர்கள் கே. சுப்பிரி, சி.பி. சுப்பய்யா ஆகியவர்களே பிரமுகர்கள். சமீபத்தில் தோழர் அவனாசிலிங்கம் செட்டியார் காங்கிரசில் சேர்ந்து ஒரு தடவை ஜயிலுக்கும் போய்விட்டு வந்தவர். அதற்கு கூலியாக தனது ஆச்சிரமத்துக்கு பல ஆயிரம் பணமும் இந்திய சட்டசபை பதவியும் சம்பாதித்துக்கொண்டவர். ஆகவே அவரைப் பொறுத்தவரை காங்கிரஸ் வரவு செலவு நேர் என்றே சொல்லிவிடலாம்.

தோழர் சி.பி. சுப்பையா அவர்களோ சகல துறையிலும் காங்கிரசுக்கு வருவதற்கு முன் இருந்ததைவிட அவர் எந்த சந்தர்ப்பத்திலும் நினைத்திருக்க முடியாத மேல் அந்தஸ்து அடைந்துவிட்டார். ஆகவே அவர்தான் காங்கிரசுக்கு இன்னமும் பாக்கியாய் இருக்கலாமே தவிர அவருக்கு காங்கிரசால் ஒன்றும் பாக்கிவர வேண்டியதிருக்காது.

இனி தோழர் சுப்பரியோ காங்கிரசிலிருந்து அவர் ஒன்றும் லாபம் அடையவில்லை. காங்கிரசில் இருந்து அவருக்கு பாக்கி வரவேண்டியது உண்டு என்றே வைத்துக்கொண்டாலும் அவர் பார்ப்பனர் ஆதலால்



அவர்கள் காங்கிரசுக்கு உழைக்க கடன் பட்டவர்கள். ஏனெனில் காங்கிரஸ் பார்ப்பனர் ஆட்சிக்கே உழைப்பது ஆனதால் கடமையை செய்தார், இன்னும் செய்யக் காத்திருக்கிறார்.

ஆகவே கோயமுத்தூர் காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்கள் இப்படிப்பட்டவர்கள் என்பது ஒருபுறம் இருக்க, கோயமுத்தூர் காங்கிரஸ் கமிட்டி தலைவரும் பார்லிமெண்டரி கமிட்டி போர்டு மெம்பரும் ஆன தோழர் அவனாசிலிங்கம் செட்டியார் குடும்பத்துக்கும் தோழர் சி.எஸ். ரத்தினசபாபதி முதலியாருக்கும் உள்ள சம்மந்தம் இந்து முஸ்லீம் மதங்களுக்கு உள்ள சம்மந்தம் போன்றது.

அதாவது முஸ்லீம் மதம் இந்துக்கள் கடவுள்களை உடைத்தால் புண்ணியம் என்றும் இந்துக்கள் கடவுள்களாக வழங்கும் பசுக்களை சாப்பிடுவது ஆகாரம் என்றும் கருதுவதாகும்.

இந்து மதமோ முஸ்லீம்களை மிலேச்சர்களாகக் கருதுவதாகும்.

அதுபோல் எப்படியாவது கோயமுத்தூர் ஜில்லாவில் தோழர் ரத்தினசபாபதி முதலியாரை ஒழித்தால் ஒழிய தோழர் ராமலிங்கம் செட்டியார் தலையெடுக்க முடியாது. அதாவது மந்திரியாக முடியாது என்று கருதும் குடும்பமாகும். அதுபோலவே தோழர் ரத்தினசபாபதி முதலியாரும் அவர்கள் சினேகிதர்களும் எப்படியாவது ராமலிங்கம் செட்டியார் மந்திரியாகக்கூடாது என்று கருதுவதோடு தோழர் ராமலிங்கம் செட்டியார் கோயமுத்தூர் ஜில்லாவுக்கே ஒரு சாபக்கேடு என்று எதுபோல் என்றால் இந்துமதத்துக்கு தீண்டாமைக் கொள்கை எப்படி ஒரு சாபக்கேடோ அதுபோல் என்று கருதிக்கொண்டிருக்கிறவர்கள்.

இந்த இரு கூட்டத்தின் ஜன்மத் துவேஷத்தின் காரணமாக தோழர் முதலியார் காங்கிரசில் அடைக்கலம் புகுந்தார்.

தோழர் செட்டியார் அதை பின்பற்றினார்.

செட்டியார் தம்பி தோழர் அவனாசிலிங்கம் செட்டியார் ஏற்கனவே காங்கிரசில் தலைவர் குழாத்தில் இருக்கிறதால் அவர் சலுகை தோழர் ராமலிங்கம் செட்டியாருக்கு இயற்கையாகவே கிடைத்தது. இந்த சலுகையின் ஆதரவு கொண்டு செட்டியார் முதலியாரை மூலை சேர்த்துவிடலாம் என்று நினைக்க சுலபத்தில் இடமேற்பட்டு விட்டது. இந்த நினைப்பு பெற்ற பிள்ளைதான் பட்டதாரிகள் பட்டம் விட வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியோ அல்லது தமிழ்நாடு பார்லிமெண்டு போர்டோ தீர்மானித்த தீர்மானமாகும்.

எப்படி எனில் பட்டம் விட வேண்டுமென்றால் முதலியார் காங்கிரசை விட்டு ஓடிப்போவார் என்று கருதியது ஒன்று.



RangaRakes tamilnavarasam.com

ஒருசமயம் அப்படி ஓடிப்போகாவிட்டாலும் பட்டம் விட்ட பிறகு காங்கிரசில் அவரை சட்டசபைக்கு நியமனம் செய்யாமல் விட்டு விடுவதன் மூலமோ அல்லது அவருக்கு கிடைக்க முடியாத ஒரு தொகுதியில் தள்ளி விடுவதன் மூலமோ அவரை ஒழித்துவிடலாம் என்று முடிவு செய்து கொண்ட ''சகுனி'' யாலோசனை இரண்டு.

இந்த இரண்டு யோசனையில் முதல் யோசனையில் முதலியார் உறைத்து நின்றார். அதாவது ''காங்கிரஸ் பட்டம் விட வேண்டுமென்று தீர்மானித்தால் நான் விட்டு விடுகிறேன் எனக்கு ஒரு தொகுதி கொடுங்கள்'' என்று எழுதிக் கொடுத்துவிட்டார்.

இதன்மேல் காங்கிரஸ்காரர்கள் யோக்கியர்களாய் இருந்தால் ''உம்மை இன்ன தொகுதிக்கு நிறுத்த நியமனம் செய்யப்பட்டு இருக்கிறது. ஆதலால் நீர் அந்த தொகுதி ஏற்றுக் கொண்டு நிற்கப் பிரியப்படுவதாய் இருந்தால் உம்முடைய பட்டத்தை விட்டு விட்டு நிற்க வேண்டியது'' என்றும் அல்லது அவருக்கு கொஞ்சமாவது தயவு காட்டுவதானால் ''இதற்கு உம்முடைய இஷ்டத்தை தெரிவிக்க வேண்டியது'' என்றும் தாக்கீது அனுப்பி இருக்கலாம்.

அப்படிக்கு ஒன்றும் இல்லாமல் ''உம்மை காங்கிரசின் சார்பாக நிறுத்தலாமா வேண்டாமா என்று நாங்கள் யோசனைக்கு எடுத்துக் கொள்ளுவதற்கு முன்னமேயே நீர் இது கிடைத்த 2 நாளைக்குள் உம்முடைய பட்டத்தை விட்டு விட்டு உமக்கு சர்க்கார் அளித்த சன்னதை வைசிராய்க்கு வாபீஸ் செய்துவிட்டு தெரிவிக்க வேண்டும்'' என்றும் அந்த வாபீஸ் கடிதம் இன்ன மாதிரி இருக்க வேண்டும் என்றும் வாசகம் டிக்டேட் செய்து நோட்டீஸ் அனுப்பி இருந்தார்கள்.

இந்த நோட்டீசைப் பார்த்ததும் முதலியாருக்கு கொஞ்சம் சந்தேகம் தோன்றி பட்டணத்துக்கு ஓடி தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களை ''என்னை எந்தத் தொகுதிக்கு போடுகிறீர்கள்? தயவு செய்து சொல்லுங்கள்'' என்று கேட்டார். சத்தியமூர்த்தியார் ''அதெல்லாம் சொல்ல முடியாது, நீர் முதலில் பட்டத்தை விட்டு விட்டு வந்த என்னை பாரும்'' என்று உத்திரவு போட்டார். தோழர் முதலியார் உடனே ஒரு ஓய்வெடுத்துக்கொண்ட தலைவரிடம் போய் வாக்குப்பெறக் கருதினார். அவர் காங்கிரசுக்கும் பட்டங்களுக்கும் சம்மந்தமில்லை என்றாலும் தமிழ்நாடு தலைவர்கள் அபிப்பிராயத்தில் நான் பிரவேசிப்பதற்கில்லை. அவர்களை நம்பித்தான் நடக்க வேண்டும் என்ற சொல்லி விட்டார் போலும்.

இதற்குள் தகுந்த நம்பிக்கை உள்ள இடத்தில் இருந்து எப்படியோ ஒரு இரகசிய சேதி வெளியில் முட்டி விட்டது.

அதாவது முதலியாரிடம் பட்டம் வாப்பீஸ் ஆதாரம் பெற்றுக்கொண்டு அவரை நிறுத்த முடியவில்லை என்றோ அல்லது காங்கிரசில் சேராத பட்டக்காரர்கள் எல்லையில் எங்காவது போட்டு அவருக்கு ஸ்தானம் இல்லாமல் செய்து விடலாம் என்றோ தோழர்கள் ராமலிங்க செட்டியார் அவனாசிலிங்கம் செட்டியார் ஆகியவர்கள் கருதி இருப்பதாயும் இதை டாக்டர் சுப்பராயன் ஆட்சேபித்துக் கொண்டிருப்பதாயும் தெரிகிறது என்ற சேதி.

அதற்கேற்றாப்போல் தோழர் ராமலிங்கஞ் செட்டியாரைப் பொறுத்தவரை அவருக்கு அவருடைய தாலூக்காவையே கொடுத்து அதில் வேலை செய்ய அனுமதியும் வாயில் கொடுத்து விட்டு கோயமுத்தூர் டவுனையும் தோழர்கள் சுப்ரி அல்லது சுப்பய்யா ஆகிய இருவர்களில் ஒருவருக்கு என்றும் சொல்லி விட்டு அந்த டவுன் எலக்ஷனுக்கும் செலவுக்கு பணம் ஒரு பகுதி முதலியார் முன் பணம் கொடுக்கவேண்டும் என்றும் சொன்னதால் தோழர் செட்டியாருக்கு ஆனந்தம். பழம் நழுகிப் பாலில் விழுந்ததாய் கருதிக்கொண்டு முதலியாருக்கு ஸ்தானம் இல்லாவிட்டால் (செட்டியார்) தான் மந்திரியாக வந்து ஆய்விட்டது என்று கருதி, உடனே தனது பட்டத்தையும் துறந்து விட்டதாக வைசிராய் பிரபுக்கும் சத்தியமூர்த்தி 'பிரபு'க்கும் எழுதிவிட்டார்.

இந்த நிலையில் முதலியாரின் தோழர்கள் பலர் முதலியாரைப் பிடித்து உங்களுக்கு காங்கிரசின் பேரால் ஸ்தானம் இல்லாமல் போனலும் போகட்டும், பட்டத்தை விட்டு பயித்தியக்காரராகி விடாதீர் என்று அவருடைய குமாரர் முதல் கொண்டு மடக்கிக்கொண்டார்கள். முதலியார் பாடு திண்டாட்டமாகி விட்டது. இருதலைக்கொள்ளியில் அகப்பட்ட எறும்பு போல் துடித்து விட்டார். கடசியாக காங்கிரசுக்கு **''தயவு செய்து என்னை நியமிக்காதீர்கள், அபேட்ச விண்ணப்பத்தை வாபீஸ் பெற்றுக்கொள்ளு கிறேன்''** என்று கடிதமும் எழுதி விட்டார். இதனால் முதலியாரை அடியோடு ஒழித்து மூலையில் தள்ளிவிட்டோம் என்று நிர்வாணமாய் குதித்தவர்கள் தலைக்கும் மூடி போட்டுக்கொள்ளவேண்டியதாய்விட்டது.

ஆகவே கோயமுத்தூர் காங்கிரஸ் நாடகத்தை சுருக்கமாக ஒரு வாக்கியத்தில் சொல்லவேண்டுமானால் முதலியாரை பட்டத்தையும் விடும்படி செய்து சட்டசபை மெம்பரும் இல்லாமல் செய்துவிட சிலர் எண்ணினார்கள். முதலியாரோ தனக்கு ''தொகுதி இன்னது என்று தீர்மானித்து தன்னை அபேட்சகராக நியமித்த பின்தான் பட்டத்தை விடுவேன்'' என்று சொன்னார். இதற்கு காங்கிரஸ் சம்மதிக்கவில்லை. ''அப்படியானால் நான் காங்கிரஸ் அபேட்சகராய் நிற்க ஆசைப்படவில்லை'' என்று முதலியார் சொல்லி விட்டார். ஆகவே **''கள்ளனை குள்ளன் ஏமாற்ற முடியவில்லை.''**

**குடி அரசு - கட்டுரை - 15.11.1936**





RangaRakes
tamilnavarasam.com

# பட்டேல் வருகிறாராம்!

## பத்து லக்ஷம் வேண்டுமாம்!!
## யார் வீட்டு சொத்து!!! எதற்காக!!!!

தோழர் பட்டேல் தமிழ் நாட்டுக்கு வருவதாகவும் அவருக்கு 10 லட்சம் ரூபாயாவது வசூலித்துக்கொடுக்க வேண்டும் என்றும் அதை அவர் தமிழ் நாட்டு காங்கிரஸ் கமிட்டிக்கே கொடுத்து விட்டுப் போவார் என்றும் அந்தப் பணங்கள் சட்டசபை தேர்தலுக்கு செலவிடப்படுமென்றும் காங்கிரஸ் அறிக்கை கூறுகிறது.

சட்டசபை தேர்தலுக்கு 10 லட்சமோ அல்லது 5 லட்சம் தானாகட்டும் எதற்கு ஆகவேண்டும்? பணக்காரர்கள் கூடாது என்று காங்கிரஸ்காரர்கள் கூப்பாடு போடுவது எதற்கு? குமாரராஜா பணக்காரர் என்றும் பொப்பிலி ராஜா ஜமீன்தார் என்றும் ஆத்திரப்படுவது எதற்கு? பணத்தால் காரியம் சாதித்துக் கொள்ளுகிறார்கள் என்றும் ஒழுக்கத்தால் கொள்கையால் ஜெயிப்பதில்லை என்றும் சொல்லுவதால்தானே அப்படிச் சொல்லப்படுகிறது.

அப்படியானால் காங்கிரஸ்காரர்கள் 10 லக்ஷ ரூபாய் வாங்கினால் என்ன செய்யப் போகிறார்கள்? ஒரு லக்ஷத்துக்கு 100 ஆயிரம் ரூபாய். 10 லக்ஷத்துக்கு ஆயிரம் ஆயிரம் ரூபாய் ஆகிறது. சென்னை மாகாண சட்டசபைக்கு 250 மெம்பர்கள் இருப்பார்கள். இவர்களில் 126 மெம்பர்கள் ஜெயித்தால் காங்கிரஸ் வெற்றி பெற்றதாக கருதப்படும். ஆகவே இந்த 126 பேர்களின் தேர்தலுக்கு பத்து லக்ஷ ரூபாய் பங்கிட்டால் தேர்தல் ஒன்றுக்கு 8 ஆயிரம் ரூபாய் செலவாகும். இவற்றுள் சிலர் போட்டி இல்லாமல் வரலாம். சிலர் தங்கள் சொந்த பணச் செலவில் வரலாம். பாக்கி சுமார் 70 பேர்களுக்காவது பணம் செலவிட வேண்டி வந்தால் ஆள் ஒன்றுக்கு 10000, 20000 செலவழிக்க வேண்டும் என்பதும் இந்த பணத்தைக் கொண்டு பார்ப்பனர்களை கொண்டு வந்து நிரப்பிக்கொள்ளலாம் என்பதும் அல்லாமல் பணம் கேட்பதின் அருத்தம் என்ன? மற்றொருபுறம் ஜஸ்டிஸ் பணக்காரனைப்பற்றி ஆத்திரப்படுவதின் கருத்து என்ன என்று கேட்கிறோம். தேர்தலில் தேர்தல் ஒன்றுக்கு 10, 20 ஆயிரம் ரூபாய் செலவழித்து வெற்றிபெற நினைத்தால் அவ்வெற்றி பணத்துக்கு சொந்தமானதா காங்கிரசுக்கும் கொள்கைக்கும் சொந்தமானதா? என்று கேட்கின்றோம்.



தோழர் ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் பட்டம் விட்டு காங்கிரஸ் பேரால் நிற்பதற்கு பயப்பட்டதற்கு காரணமே பட்டம் விட்டு விட்டு தன் செலவை தானே போட்டுக்கொண்டு மற்றொரு பார்ப்பனர் தேர்தலுக்கு 2500 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று காங்கிரசுக்காரர்கள் கேட்டதேயாகும். தோழர் ராமலிங்கம் செட்டியாருக்கு சொந்தத்தில் நல்ல பெயர் இல்லாததினாலும் நண்பர்கள் இல்லாததாலும் தனக்கே நம்பிக்கை இல்லாததாலும் பட்டம் விட்டு 10000 ரூ. வேண்டுமானாலும் கொடுத்து தன் செலவையும் போட்டுக் கொள்ள துணிந்தார்.

இந்நிலையில் காங்கிரசுக்காரர் லஞ்சம் ஒழிக, பணத் திமிர் ஒழிக, பணத்தினால் காரியம் சாதிக்கலாம் என்கின்ற ஆணவம் ஒழிக என்று கூவுவதில் நாணயமோ ஒழுக்கமோ இருக்கிறதா என்று கேட்கின்றோம்.

நம்மக்கள் - பார்ப்பனரல்லாத மக்கள் எலக்ஷன் செலவுக்கென்று எதற்காக பட்டேல் பைக்கு பணம்கொடுப்பது என்பது விளங்கவில்லை. பார்ப்பனரல்லாதார்களில் பணக்காரர்கள் தான் நிற்கக்கூடும். நின்றால் அவர்கள் எக்கட்சியானாலும் தங்கள் சொந்த பணம்தான் செலவு செய்து தீர்வார்கள். அவர்களுக்கு பொதுப் பணம் பயன்படப் போவதில்லை. வசூலுக்கோ பார்ப்பனர் பணம் கொடுக்கப்போவதும் இல்லை. ஆகையால் பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாதாரிடம் பட்டேலைக் காட்டி பணம் வசூலித்து நிறைய பார்ப்பனர்களை அதுவும் உண்மையாகவே உபாதானப் பார்ப்பனர்களை சட்டசபைக்கு நிறுத்தி இந்தப் பணத்தை செலவுசெய்து வெற்றிபெற்று 30, 40 (பேர்களையாவது) ஸ்தானங்களாவது பார்ப்பனர்களாக வருவதற்கே இந்த பட்டேல் பண வசூல் சூழ்ச்சியாகும். அதையும் தோழர் சத்தியமூர்த்தியார் பச்சையாய் சொல்லிவிட்டார்.

''தேர்தலில் தேசபக்தர்களை நிறுத்தி ஜஸ்டிஸ்காரரோடு போட்டி போட தேர்தல் செலவுக்கு 10 லக்ஷ ரூ. வேண்டும்'' என்று சொல்லி விட்டார். பார்ப்பனரல்லாதார் எந்தக் கட்சியாய் இருந்தாலும் சரி. இந்த அறிக்கைக்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்? மூட்டைக் கட்டிக் கொடுத்து பார்ப்பனர் பின் வாலைப் பிடித்து அன்னக்காவடிகளுக்கும், உஞ்சவிருத்தி உபாதானத்துக்கும் ஜே போடப் போகிறீர்களா? அல்லது உங்கள் மானத்தை காப்பாற்றப் போகிறீர்களா? தோழர்கள் சுப்பராயனையும், ராமலிங்கம் செட்டியாரையும் பின்பற்றாதீர்கள். அவர்களுக்கு சட்டசபையும் மந்திரி பதவியும்தான் தெய்வமும், மதமும், மோட்சமும் ஆகும். அவர்கள் எதையும் செய்வார்கள். சத்தியமூர்த்திக்கு பாத பூஜை செய்து தீர்த்தப் பிரசாதம் பெறுவார்கள். மற்றவர்களுக்கு என்ன முட்டு என்று கேட்கிறோம்.

பணம் கேட்டால் யார் தேடிக்கொடுத்தது? யார் அப்பன் வீட்டு சொத்து? எனத்துக்கு கேட்கிறாய் என்று கேளுங்கள்.

குடி அரசு - கட்டுரை - 22.11.1936



RangaRakes tamilnavarasam.com

# தளவாய் குமாரசாமி முதலியாரும் காங்கிரசும்

தளவாய் குமாரசாமி முதலியார் கவர்னருக்கு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்ததற்கு ஆக அவரை காங்கிரஸ்காரர்கள் விலக்கப் போகிறார்களாம், தேசத்துரோகி என்று கூப்பிடுகிறார்களாம், அவரை ராஜினாமா கொடு என்கிறாராம் சத்தியமூர்த்தியார். கவர்னர் இந்த மாகாணத்துக்கு ராஜப்பிரதிநிதி. அவர் ஆதிக்கத்தில் ஸ்தல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவருடைய ஆட்சிக்கு - அரசருக்கு - அரசர் சட்டத்திற்கு உட்பட்டதே ஸ்தல ஸ்தாபனங்களாகும். இந்த நிலையில் கவர்னர் பிரபு ஒரு ஸ்தலத்துக்கு வந்தால் அவருக்கு மரியாதை செய்யக் கூடாது என்பது போக்கிரித்தனமே ஒழிய வேறில்லை. ஸ்தல ஸ்தாபனம் அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஸ்தல ஸ்தாபனத்திற்குள் கால் வைக்கும் போதே பிரம்ம முடியைப் பிடித்துக் கொண்டு ராஜாவுக்கும், சட்டத்துக்கும், ராஜா பரம்பரைக்கும் பக்தியாய் விஸ்வாசமாய் கட்டுப்பட்டு நடக்கிறேன் என்று பிரமாணம் செய்துவிட்டுத்தான் உள்ளே போகிறார்கள். இந்த நிலையில் ஒரு ராஜப் பிரதிநிதிக்கு மரியாதை செய்வதில்லை என்றால் எப்படி நியாயமாகும்?

அப்படியாவது காங்கிரஸ் கொள்கையில் இது ஒரு திட்டமாக இருக்கிறதா? அநாவசியமாய் திருச்சி, மதுரை முதலிய முனிசிபாலிட்டிகளை கவிழ்த்ததுபோல் வீண் தொல்லைகளை விளைவித்துக் கொள்ளவே இந்த மாதிரி குறும்பு செய்கிறார்கள். இவர்களது குறும்பே இன்று முனிசிப்பாலிட்டி களுக்கு கமிஷனர்களை கொண்டு வந்தது, நாளைக்கு ஜில்லா போர்டுக்கும் வரச் செய்யப் போகிறது.

தினம் ''மேன்மைபொருந்திய கவர்னர் பிரபு அவர்கள் ஆலோசனை சபை மெம்பர்களுக்கு'' என்று கடிதப்போக்குவரத்திலும் அவர்களது கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதிலும், அவர்களுக்கு விண்ணப்பம் போடுவதிலும் குறைவில்லை.

இந்நிலையில் பகிஷ்கரிப்பது என்றால் எதை என்று கேட்கின்றோம்.

யோக்கியம், நாணயம், மரியாதை ஆகியவைகளை பகிஷ்கரிப்ப தல்லாமல் இதில் வேறு என்ன பகிஷ்காரம் இருக்கிறது என்று கேட்கின்றோம்.



எப்படியாவது பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாத மக்களில் தகுதியும் யோக்கியதையும் உள்ள மக்களை மூலையில் உட்கார வைக்க கட்டுப்பாடாய் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறில்லை. ஆதலால் தளவாய் குமாரசாமி முதலியார் இப்பார்ப்பன சூழ்ச்சிக்கு ஏமாறாமல் தப்பிக்கொண்டதற்குப் பாராட்டுகிறோம்.

**குடி அரசு - கட்டுரை - 22.11.1936**



RangaRakes tamilnavarasam.com

# பொப்பிலியும் நேருவும்

தோழர் நேரு அவர்கள் பொப்பிலிக்குச் சென்றபோது, பொப்பிலியில் வரவேற்பு இல்லையென்றும், பொப்பிலி ராஜாவின் இடத்தில் நேருவுக்கு பேச இடம் கொடுக்கவில்லை என்றும் இவர் யாருடைய தனி வீட்டிலேயோ இருந்து பேசும் போது பொப்பிலி ராஜாவின் சின்னங்கள் அப்பேச்சுகள் மற்றவர்கள் காதில் விழாமல் செய்து விட்டன என்றும் பார்ப்பனப் பத்திரிகைகள் ஓலமிடுகின்றன. அதற்கு ஆக பொப்பிலி ராஜாவைக் குறைகூறுகின்றன. இச்சம்பவங்கள் மிகைபடுத்திக் கூறப்பட்டவை என்று தக்க இடத்தில் இருந்து தகவல் கிடைத்திருக்கிறது என்றாலும் நாம் அதை உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை.

பார்ப்பனப் பத்திரிகைகளும் அவர்களது கூலிகளும் கூறுவது அவ்வளவும் உண்மை என்றே வைத்துக்கொள்ளுவோம். காங்கிரஸ் நடத்தைக்கும் ஜவஹர்லால் யோக்கியதைக்கும் இச்சம்பவங்களில் எது தகுதி அற்றது என்று உசாவுகிறோம்.

காங்கிரசுக்காரர்கள் இதற்கும் தகுதி ஆனவர்கள், இன்னும் அதிகமான காரியத்துக்கும் தகுதியானவர்கள் என்று ''நெருப்பின் மீது'' நின்று மெய்ப்பிப்போம். மாட்டுச்சாமிக்கு புல்லும், பருத்திக்கொட்டையும் வைத்து ஆராதனை செய்வார்கள். நாய்ச்சாமிக்கு மலமும், கசுமலமும் வைத்து ஆராதிப்பார்கள். நல்ல குதிரையை சவுக்கு வீசி ஓட்டுவார்கள். எருமைக் கடாவை லத்தி தடி கொண்டு மொத்தி ஓட்டுவார்கள். இவற்றில் காங்கிரசுக்காரர்கள் எதற்குத் தகுதி என்று தங்கள் மனதில் கைவைத்துப் பார்க்கட்டும். கார்ப்பரேஷன் கவுன்சில் மீட்டிங்கில் ஒரு காங்கிரஸ்காரர் அதுவும் காந்தி குல்லாய் போட்ட காங்கிரஸ்காரர் ஒரு ஜஸ்டிஸ் கட்சி மாது (அலமேலு மங்கைத் தாயாரம்மாள் அவர்கள்) மீது பழய செருப்பையும், அழுகல் முட்டையையும் வீசி எறிந்தார். சேலத்தில் சித்தையன் முதலிய சுயமரியாதைக்காரர்களை சத்தியமூர்த்தியார் முன்னிலையில் காங்கிரஸ்காரர் நன்றாய் உயிர்போகும்படி அடித்தார்கள். தோழர் ஈ.வெ. ராமசாமி பொள்ளாச்சியில் பேசும்போது காங்கிரசுக்காரர்கள் முட்டைவீசினார்கள். செருப்பாலடிப்பதாயும் கத்தியால் குத்துவதாயும் கடிதம் எழுதினார்கள்.

மற்ற இடங்களிலும் அவர்கள் செய்த அயோக்கியத்தனங்களும், இன்னமும் ஜஸ்டிஸ் சுயமரியாதைக் கூட்டங்களில் காங்கிரசுக்காரார் செய்யும், அற்பத்தனமும் இழி பிறப்புத்தனமும் ஏட்டிலடங்காது. நேற்று விருதுநகரில் தோழர் ஈ.வெ. ராமசாமி பேசும்போது சிறு பையன்கள் வசம் கொடிகள் கொடுத்து கூட்டத்தை சுற்றிச் சுற்றி கூப்பாடு போடச் சொன்னார்கள்; பக்கத்தில் ஒரு கூட்டத்தை போட்டுக்கொண்டு தங்கள் கூட்டத்தில் கூட்டமில்லா விட்டாலுங் காலிப்பசங்களை அதிகமாய்ச் சேர்த்து கைதட்டும்படி செய்தார்கள். மறுநாள் காங்கிரஸ் கூட்டத்திற்கு தோழர் ஜோசப் அவர்கள் வருகிறார் என்று தெரிந்ததால் அவர்கள் கூட்டத்துக்கு இடையூறு சிறிது கூட இருக்கக்கூடாது என்று அன்று ஜஸ்டிஸ்காரர்கள் கூட்டம் போடவே இல்லை. அடுத்த நாள் தோழர் ஈ.வெ. ராமசாமிக்காக ஜஸ்டிஸ்காரர்கள் கூட்டம் போட்டிருக்க, அன்று திடீரென்று பக்கத்தில் ஒரு கூட்டம் போட்டு ஒரு 10, 15 பேர்கள் மாத்திரம் அவர்கள் கூட்டத்தில் இருந்தும் சதா கைத்தட்டி தொல்லை விளைவித்தார்கள். சில்லறைப் பசங்கள் கொடிபிடித்து வி.வி. ராமசாமி வீழ்க, ஜஸ்டிஸ் கட்சி வீழ்க என்று கத்தினார்கள். அந்த சமயத்தில் உதைபிடித்திருந்தால் அந்த பசங்கள் பஜ்ஜி ஆகி இருப்பார்கள். ஏனென்றால், ஜஸ்டிஸ் கூட்டத்தில் அவ்வளவு பிரமாண்டமான கூட்டம் இருந்தது. ஆனால் தோழர் ஈ.வெ. ராமசாமி அந்தக் காலிப்பசங்கள் கூட்டம் பக்கத்தில் வந்தபோதெல்லாம் தன் பிரசங்கத்தை நிறுத்தி நிறுத்தி அவர்கள் போன பின்பே அவர் பேசி வந்தார். மக்களையும் சமாதானப்படுத்தி வந்தார். சாதாரண நிலையில் இச்செய்கை அடிதடி கலகத்தை உண்டாக்காமல் இருக்காது. இவை போலீசுக்கும் தெரியும். அவர்களும் வேடிக்கை பார்த்தார்கள். இவைகளுக்கு பதில் கொடுக்க ஜஸ்டிஸ்கட்சிக்கு சக்தி இல்லை என்று சொல்லிவிட முடியுமா? பணமும், காலிகளும் அவர்களுக்கு கிடைக்கமாட்டாவா? இப்படிப்பட்ட யோக்கியர்களுக்கும் அவர்கள் தலைவர்களுக்கும் பொப்பிலியில் இவ்வளவுடன் போனதற்கு அவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.

பண்டிதர் யோக்கியதையையே எடுத்துக்கொள்ளுவோம். அவர் தமிழ் நாட்டில் எப்படி நடந்துகொண்டார்? சுயமரியாதைக்காரர்கள் பொய்யர்கள் என்று சொன்னார். இதைப் பார்ப்பனக் கூலிகள் கொட்டை எழுத்தில் போட்டு மகிழ்ந்தார்கள். ஏன் என்றால் திரும்பச் சொல்லுவதால் அவர்களுக்கு அவமானமில்லாத அவ்வளவு கீழ்ஜாதிகளாக, கீழ் மக்களாக அமைந்து விட்டார்கள்.

யார் பொய்யர்கள்? பண்டிதர் ஜவஹர்லால், அவங்கப்பன் மற்றும் பலர் பொய்யர்கள் என்று சொல்ல ஆதாரம் கிடைக்காது என்று யாரும் கருதிவிடக் கூடாது. மரியாதைக்கு ஆக திருப்பிச் சொல்லவில்லை. மற்றும் பண்டிதர் ஜஸ்டிஸ்கட்சியைப்பற்றி என்ன சொன்னார்? தமிழ்நாட்டு கீழ் ஜாதி காலிப் பசங்கள் கூலிக்கு குலைக்கும் வார்த்தைகளை அதாவது ஜஸ்டிஸ்கட்சி தேசத்துரோகக் கட்சி, சர்க்கார் தாசர் கட்சி, நக்கிப்பொறுக்கும் கட்சி, காட்டிக் கொடுக்கும்கட்சி என்பது போல் பண்டிதரும் கேவலமாகப்



RangaRakes tamilnavarasam.com

பேசினார். எந்த யோக்கியதை கொண்டு பண்டிதர் எதிர்க்கட்சியாரிடம் மரியாதை எதிர்பார்க்கிறார் என்பதும் எந்த யோக்கியதை கொண்டு பார்ப்பனப் பத்திரிகையும், அவர்களது கூலி பத்திரிகையும், பண்டிதருக்கு மரியாதை செய்யவில்லை என்று சொல்லுகின்றன என்பதும் நமக்கு விளங்கவில்லை.

திண்டுக்கல்லில் கழுதை கழுத்தில் அட்டை கட்டி பொப்பிலி என்று எழுதின யோக்கியர்களுக்கு பதில் சொல்ல வேண்டுமானால் பொப்பிலியில் ஜவஹருக்கு என்ன செய்திருக்க வேண்டும் என்பதை சத்தியமூர்த்தியாரையும் அவரது கூலிகளையும், கூலிப் பத்திரிகைகளையும் வினவுகிறோம்.

ஜவஹர்லால் அவர்களை பொப்பிலியில் பேசவிட்டிருந்தால் என்ன பேசியிருப்பார்?

பொப்பிலியை அயோக்கியத்தனமாக வைது இருப்பார். அவர் தலைமை வகித்து நடத்தும் கட்சியை கேவலமாகப் பேசியிருப்பார். இப்படிப்பட்ட யோக்கியருக்கு பொப்பிலியில் பண்டிதருக்கு ஆலாத்தி எடுக்கவில்லை என்று எதிர்பார்க்கவும் எழுதவும் வெட்கமில்லையா? என்று கேட்கிறோம்.

''மூக்கரையா மூக்கரையா ஒரு கரும்பு கொடு'' என்று ஒரு கரும்புக் கடைக்காரனைக் கேட்டால் அவன் கரும்புக் கட்டோடு கொடுப்பானா அல்லது ஒரு கரும்பை உருவி ஓட ஓட, ஒடிய ஒடிய இருத்துவானா என்று யோசித்துப்பாருங்கள். புதுக்கோட்டையில் பண்டிதரை உள்ளே கால் வைக்கக் கூடாது என்றார்களே அவர்களை இந்த வீரர்கள் என்னசெய்து விட்டார்கள்?

பாண்டிச்சேரியில் பண்டிதரைப் பார்க்க முடியாது என்று சொல்லி விட்டார்களே இந்த சூரர்கள் என்ன செய்துவிட்டார்?

உலக ஏகாதிபத்திய எதிர்ப்பு சங்கத்தில் சங்கக் கொள்கைக்கு துரோகம் செய்துவிட்டார் என்று பண்டிதரை அச்சங்கத்தார் சங்கத்திலிருந்தே நீக்கி விட்டார்களே அதற்கு இந்த வீராதி வீரர்கள் என்ன செய்துவிட்டார்கள்?

மரியாதை கொடுத்து மரியாதை வாங்கத் தெரியாதவர் செல்லுமிடங்களில் எல்லாம் அவமரியாதை அடையவேண்டியது விஞ்ஞான விதியாகும்.

அதற்கு ஆக பொப்பிலி ஊரைப்பற்றியோ பொப்பிலி ராஜாவைப் பற்றியோ குறை கூறுவது கோழைத்தனமே ஒழிய வேறில்லை.

உண்மையில் அப்படி ஒன்றும் அவமரியாதையாக பொப்பிலியில் நடக்கவும் இல்லையாம்.

**குடி அரசு - கட்டுரை - 22.11.1936**



# சமதர்மமும் முதலியாரும்

தோழர் கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் 13-11-36ந் தேதி ''நவ சக்தி''யில் நாயக்கர் என்ற தலைப்பில் ஈ.வெ. ராமசாமியை சில கேள்விகள் கேட்டு சில புத்திமதி கூறியிருக்கிறார். அதற்காக முதலியாருக்கு நன்றி செலுத்தி விடையளிப்போம்.

தோழர் முதலியார் அவர்கள் சர்.கே.வி. ரெட்டி நாயுடும், சர். மகம்மது உஸ்மானும், குமாரராஜா முத்தைய செட்டியாரும் செட்டிநாட்டில் சமதர்மத்தைத் தாக்கிப் பேசி இருக்கிறார்கள் என்றும் இம்மூவர் பேச்சைப் பார்த்த பின்பு ராமசாமியாரே நீர் ஜஸ்டிஸ் கட்சியிலேயே இருக்கப்போகிறீரா? அப்படியானால் உம்மை நம்பிய இளைஞர் நிலை என்ன? என்றும் கேட்டிருக்கிறார். ஆகவே இந்த மூன்று விஷயம் பதிலளிக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது.

அதற்கு நாம் மகிழ்ச்சியோடு விடை பகருகிறோம். இக்கேள்விகள் கேட்டதை நல்லதொரு சமயத்தில் நமக்கு செய்யாமல் செய்த உதவி போல் கருதி விடை பகருகிறோம்.

இந்த இடத்தில் தோழர் முதலியார் அவர்கள் பிரயோகித்திருக்கும் சமதர்மம் என்பதற்கு பொருளென்ன? கடவுள், மோட்சம், ஆத்மா என்கின்ற விஞ்ஞானத்துக்கு அதீதப்பட்ட வார்த்தைகள் போன்ற வார்த்தையாய் சமதர்மம் என்ற வார்த்தையையும் கருதி பிரயோகித்திருக்கிறாரா? அல்லது நம் போன்ற எளிய அறிவுள்ளவர்களுக்கும் புரியும்படியான வார்த்தை என்று கருதி பிரயோகித்திருக்கிறாரா? என்பது எனது முதல் விடையாகும். இதை முதலியார் கருணை இருந்தால் அதை அடுத்த முதல் சந்தர்ப்பத்தில் விளக்கித் தர விழைகின்றோம். அது நிற்க.

விவகார முறையில் விடை பகருகிறோம்.

சமதர்மம் வேண்டாம் என்கின்ற ரெட்டியாரும், செட்டியாரும், சாயபும் ஜஸ்டிஸ் கட்சியில் இருப்பதால் உண்மை சமதர்மிகள் என்பவர்களுக்கு ஜஸ்டிஸ் கட்சியில் இடமில்லாமல் போகவேண்டியதுதான் என்பது முதலியார் அவர்களின் முடிந்த முடிவானால் காங்கிரசில் தோழர்கள் காந்தியார், படேல், ராஜேந்திரர், சத்தியமூர்த்தியார், ஆச்சாரியார், ஜார்ஜ் ஜோசப், ஜமால் மகம்மது, தாவுத்ஷா முதலியவர்கள் சமதர்மத்தைப்பற்றிப்



RangaRakes tamilnavarasam.com

பேசுவதும் தோழர் நேரு சமதர்மத்தைப் பற்றிப் பேசுவதும், தோழர்கள் மாசானி, ரங்கா, பிரகாஸ் முதலியவர்கள் சமதர்மத்தைப்பற்றிப் பேசுவதும் ஆன கருத்துக்களின்படி இவர்கள் எல்லோரும் காங்கிரசில் இருக்க இடமுண்டா என்று அறிய ஆசைப்படுகிறோம். அதையும் முதல் அவசர சந்தர்ப்பத்தில் முதலியார் அவர்கள் விளக்குவார் என்று நம்புகிறோம்.

**சத்தியமூர்த்தியார்**

சத்தியமூர்த்தியார் என்றால் திருமயம் பஞ்சாங்க புரோகிதப் பார்ப்பனர் வம்ச சத்தியமூர்த்தியார் என்று நாம் இப்பொழுது பிரஸ்தாபிக்க வில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் - தமிழ்நாடு காங்கிரஸ் தொண்டர்களும் பிரமுகர்களும் கைகட்டி வாய்பொத்தி தலை குனிந்து வணங்கும் தலைவர் சத்தியமூர்த்தி அவர்கள் ஆனைமலையில் காங்கிரஸ் தலைவர் என்கின்ற முறையில் வெள்ளைக்கார முதலாளிமார்கள் முன் சமதர்மத்தைப் பற்றியும், காங்கிரஸ்கொள்கையைப்பற்றியும், பேசின பேச்சுக்களை நமது மதிப்பிற்குரிய தோழர் முதலியார் அவர்கள் கண்டும் கேட்டும் காய்ந்தும் தீய்ந்தும் உள்ளாரே, அங்ஙனமிருக்க, அந்த முதலியாருக்கு இன்னமும் காங்கிரசில் இருக்க இடம் இருந்தால் எப்படி இருந்தது என்பதை உகந்தருளினால் தோழர் ராமசாமியாரைக் கடாவும் கடாவுக்கு விடை கிடைக்கலாம் என்று விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

அன்றியும், முதலியார்வாள் தமது எந்தக் கொள்கையை சிறிதாவது விட்டுக்கொடுக்காமல் காங்கிரசில் இருந்து காங்கிரஸ் தலைவர்களை ஆதரித்து வருகிறார் என்பதை அறிய விழைகின்றோம்.

காங்கிரசில் காந்தியார் கொள்கைகளில் எது இன்று காங்கிரஸ் கொள்கையாக இருந்துவருகிறது என்பதையும் காந்தியார் காங்கிரசில் தாம் இருப்பது தகுதி அல்ல என்று கருதி நாலணா மெம்பராகக்கூட இல்லாமல் வெளிப் போந்திருக்க, காந்தியடிகளை வழிகாட்டியாக - உபதேசமூர்த்தியாகக் கொண்ட முதலியார்வாள் எந்த விதமான ஆதாரத்தின் மீது காங்கிரசில் இருந்து கொண்டு காந்தியைப் புகழ்ந்து ஏற்றிப்போற்றி ஆதரித்துக்கொண்டு இருக்கிறார் என்பது விளக்கப்பட்டால் ராமசாமியார் ஜஸ்டிஸ் கட்சியில் இருப்பதற்கு இடம் உண்டா இல்லையா என்பது விளங்காதா? என்று கருதுகிறோம்.

காந்தியார் அவர்களை சத்தியமூர்த்தி அவர்களும் போற்றுகிறார், நேரு அவர்களும் போற்றுகிறார், இர்வின் பிரபும் போற்றினார் மற்றும் சிலரும் போற்றுகிறார்கள். அவர்களைப் பற்றி வேண்டியதில்லை. ஆனால் முதல் மூவர் போற்றுவது போல்தான் முதலியார் அவர்களும் காந்தியாரைப் போற்றுகிறாரா அல்லது வேறு காரணங்களுக்காகவா, அல்லது ஒவ்வொருவர் போற்றுதல் காரணங்களிலும் சிறிது சிறிது எடுத்துச் சேர்த்தா என்பதை



முதலியார் அவர்கள் உண்மையாய் நினைவிருத்திக்கொண்டால் ராமசாமியாருக்கு ஜஸ்டிஸ் கட்சியில் இடம் உண்டா இல்லையா என்பது தெளியலாம் என்று கருதுகிறோம்.

இப்படி இன்னம் அனேக விஷயங்கள் முதலியாரின் தெளிவுக்கு உதவியாக எடுத்துக் காட்டலாம்.

எனினும் விவகார முறையை விடுத்து அதாவது கனல் வாதம் புனல் வாதம் விடுத்து உண்மை விளக்கம் முறையில் சிறிது தெளிவிக்க விரும்புகிறோம்.

ராமசாமியார் சமதர்மத்தில் கருத்துக் கொண்டவர். ஆர்வங் கொண்டவர். அதுவே இன்று காணும் மனித சமூகக் குறைகள் பெரும்பாலான வற்றிற்கும் மருந்து என்பதை முடிந்த முடிவாகக் கொண்டவர். ஆனால் சமதர்மம் பொருளாதார சமதர்மம் என்றாலும், அரசியல் சமதர்மம் என்றாலும், சமுதாய சமதர்மம் என்றாலும், தேசீய சமதர்மம் என்றாலும் வார்த்தை வேறுபாடுகள், திட்ட வேறுபாடுகள், செய்முறை வரிசைக் கிரம வேறுபாடுகள் ஆகிய பல சமதர்மம் என்பதோடு சதா போரிட்டுவருகின்றன என்பதை முதலியார் அவர்கள் ஒப்புக்கொள்வார் என்றே கருதுகிறோம். அதை ''நவ சக்தி'' தலையங்க குறிப்புகளிலும் காண்கிறோம்.

ராமசாமியின் சமதர்மம், காந்தியாரின் சமதர்மம், நேருவின் சமதர்மம், ரஷ்யாவின் சமதர்மம், ஜர்மனியின் சமதர்மம், ஸ்பெயினின் சமதர்மம், இந்தியாவின் பழய சமதர்மம் என்பன போன்ற பல சமதர்மம் நபர், இடம், காலம் ஆகியவைகளையும் கொண்டு சமதர்மம் விவாதப் போரிட்டு வருகின்றது என்பதும் முதலியார் அவர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள் என்றே கருதுகிறோம்.

இவைகள் தவிர எந்த இயல் சமதர்மமானாலும் எந்த நபர் சமதர்மமானாலும் எந்த தேச எந்த கால சமதர்மமானாலும் இடம், பொருள், ஏவல் ஆகியவைகளை பொறுத்துத்தான் கையாட வேண்டியதாகுமே தவிர எல்லா விடத்தும் எந்நேரமும், எந்நிலையிலும் ஒரே மாதிரி கையாளுவதென்பது அறிஞர் கடன் அல்ல என்பதையும் முதலியார் அவர்கள் அனுமதிப்பார்கள் என்றே கருதுகிறோம்.

ஆகவே தயவு செய்து முதலியார் அவர்கள் ராமசாமியார் சமதர்மத்தை விட்டுவிட்டார் என்றோ, ராமசாமியார் சமதர்மத்துக்கு ஜஸ்டிஸ் கக்ஷியில் இடமில்லை என்றோ கருதாமல் இருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

ராமசாமியார் சமதர்மக்காரர்தான். ஆனால் அவரது சமதர்மம் காரல் மார்க்சைப் பார்த்தோ, ஏஞ்சல்ஸைப் பார்த்தோ, ரஷியாவைப் பார்த்தோ, லெனினைப் பார்த்தோ ஏற்பட்டதல்ல என்பதையும் அல்லது அவர்களிடம் இருந்து கற்றுக்கொண்டவை அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



RangaRakes tamilnavarasam.com

அன்றியும் ராமசாமியின் சமதர்மம் வயிற்றுப்பிழைப்புக்கோ மேடைப் பிரசாரத்துக்கோ, தலைமைப் பதவிக்கோ ஊர்மெப்புதலுக்கோ ஏற்பட்டதல்ல என்பதையும் முதலியார் அவர்கள் உணர வேண்டுகிறோம்.

அன்றியும் ராமசாமியாரின் சமதர்மமானது ஜஸ்டிஸ் கக்ஷியையோ காங்கிரசையோ இளைஞர்களையோ முதியோர்களையோ செல்வ ராஜாக்களையோ காவடிகளையோ லட்சியம் செய்தோ நம்பியோ பிரசாரம் செய்யவோ அமுலுக்குக் கொண்டுவரச் செய்யவோ வேண்டியதுமல்ல.

அன்றியும் இன்று ராமசாமியார் தனது சமதர்மத்தை நடத்துவது சமதர்ம பூமியில் இருந்தோ பொதுஉடைமை ஆக்ஷியிலிருந்தோ நடத்துவதாகக் கருதிக் கொண்டிருக்கும் நபரும் அல்ல. மற்றும் ராமசாமி தனது சமதர்மத்துக்கு எந்த நபருடைய நற்சாக்ஷி பத்திரத்தையோ ஆமோதிப்பையோ எதிர்பார்த்து நடத்தவேண்டியவரும் அல்ல.

அதற்கு ஆக சங்கமோ ஸ்தாபனமோ குறிப்பிட வேண்டும் என்கின்ற கவலை கொண்டவரும் அல்ல.

மற்றென்னவென்றால் தன் புத்தியையே தன் வலிமையையே தன் பொறுப்பையே நம்பி தன் காலில் நிற்கக்கூடிய தன்மையிலேயே நடக்கிறவர்.

அதற்கு அவருக்கு துணைவர்கள் யாராவது உண்டு அல்லது வேண்டும் என்று ஏற்பட்டால் ''குணம் குடி கொடி கொண்டால் உயிருக்கு உயிர்தான், இல்லாவிட்டால் என்னமோ'' என்கின்ற மாதிரி தன்னை நம்பி தன்னை அடைந்து தனது கொள்கையை கமா, புள்ளி மாறுதல் இல்லாமல் ஒப்புக் கொள்ளுகிறவர் எவரோ அவரே துணைவர், அவரே நண்பர், அவரே தோழர். மற்றவர் யாரானாலும் உலக சுபாவத்துக்கு நண்பனே கூட்டாளியே அல்லாமல் உண்மைக்கோ சமதர்ம முயற்சிக்கோ அல்ல என்பது அவர் கருத்து.

வாலிபர் தேவையானால் ஈசல் புற்றில் இருந்து வருவது போல் வேண்டும்போது உண்டாக்கிக் கொள்ள அவருக்குத் தெரியும். அவர் எந்த வாலிபருக்கும் எவ்வித வாக்குத்தத்தமும் கொள்கை உறுதியும் கொடுத்து எப்போதும் யாரையும் அழைத்ததில்லை. சேர்த்ததுமில்லை. வாலிபர் வருவதும் போவதும் சர்வ சாதாரணமான காரியமே தவிர ஒரு ''ஆத்ம'' சக்தியாலோ ''மகாத்மா'' சக்தியாலோ என்று அவர் கருதுவதில்லை.

வாலிபர்கள் என்றால் யார்? அவர்கள் பொறுப்பு என்ன? எதுவரை வாலிபப் பருவமோ வாலிபப் புத்தியோ நிற்கும்? அவர்களால் எந்த நிலையில் காரியம் செய்து கொள்ளலாம்? எந்த நிலையில் வாலிபர்களால் காரியம் கெட்டுவிடும்? என்பது ராமசாமி தனது வாலிப பருவத்தில் இருந்தே தனது வாலிப அனுபவத்திலிருந்தே அறிந்ததேயாகும்.



ராமசாமி செல்வப்பிள்ளை - காலிப் பிள்ளை - பிரபுப்பிள்ளை - பொது நல சேவைப்பிள்ளை - தேசபக்த வீரப்பிள்ளை, தேசத் துரோகப்பிள்ளை - வாலிபர்கள் துரோகப்பிள்ளை என்பதான பல நிலைகளிலும் இன்று இருக்கிற தன்மையில் - பதவியில் நிலையில் இருந்துதான் வந்திருக்கிறாரே ஒழிய நிலைமாறிய போது பதவி மாறியோ பதவி மாறிய போது நிலைமை மாறியோ போவதான நிலையை அவர் ஒரு போதும் அடைந்ததேயில்லை.

ஆகையால் ராமசாமியாருக்கு கட்சியோ உலகோர் என்ன சொல்வார்கள் என்கிற கவலையோ வாலிபர்கள் என்ன நினைப்பார்கள் என்கின்ற லட்சியமோ சிறிதும் இல்லை.

தலைமை ஸ்தானம் வேண்டுமானால் தான் உண்டாக்கிக் கொள்வாரே தவிர தன்னை இன்னொருவன் தலைவனாக்கும்படி ஒரு நாளும் செய்து கொள்ளமாட்டார். அத்தலைமையின் கீழ் அரை நிமிஷமும் இருக்கவு மாட்டார். உலகோர் என்ன சொல்வார்கள் என்பதில் உலகோர் இன்ன விதம் சொல்லவேண்டும் என்று உலக அபிப்பிராயத்தை தான் உண்டாக்க முயற்சிப்பாரே ஒழிய உலக அபிப்பிராயம் இப்படி இருக்கிறதே என்று சிறிதும் கருத மாட்டார்.

மனிதன் கொஞ்சநாள் வாழ்வதானாலும் தன்னை நம்பி தன் காலில் நின்று தன் இஷ்டம் போல் இருந்து சாவதே சுயமரியாதை என்று கருதி இருக்கும் அவர் ''உமக்கு கட்சியில் இடம் எங்கே?'' ''உம்மை நம்பினவர்கள் கதி என்ன?'' என்பதற்காக கவலைப்படுவாரா? ஏங்குவாரா? என்பதை முதலியார் அவர்கள் சாவதானமாய் இருந்து சிந்திக்க கெஞ்சுகிறோம்.

இன்று உண்மையிலேயே ஜஸ்டிஸ் கட்சியில் சமதர்மத்துக்கு இடம் இல்லாமல் போய் விட்டதினால் ராமசாமியின் சமதர்மத்துக்கோ பொது சமதர்மத்துக்கோ என்ன கெடுதி என்பது விளங்கவில்லை.

இனி ஒரு 2, 3 மாதத்தில் ஜஸ்டிஸ் கட்சி நிலை இன்னது என்று தெரிந்துவிடப் போகிறது. அதுபதவிக்கு வரும். வராவிட்டாலும் சரி, அதற்குப்பிறகு சமதர்மத்தை பிரசாரம் செய்வதில் தடை என்ன இருக்கிறது? என்றும், அப்புறம் வாலிபர்கள் உண்டாகமாட்டார்களா என்றும் கேட்கின்றோம்.

எந்த வாலிபனிடமும் எந்த கூட்டு வேலைக்காரனிடமும் ராமசாமி தனது சமதர்மத்துக்கு ஒப்பந்தம் பேசி ஒரு காதொடிந்த ஊசியளவு பயனும் பெற்றுக் கொள்ளவில்லை. ராமசாமி எத்தனையோ பல சமதர்ம வாலிபருக்கு சோறு, உடை, செலவுக்கு காசு அவர்கள் குடும்பச் செலவுக்கு 25, 50, 100, 500, 1000 பணம் கொடுத்து மாதக்கணக்காய் வருடக்கணக்காய் சாப்பாடு போட்டு வளர்த்தி இருக்கலாமே தவிர ஒரு வாலிபரிடமாவது கூட்டுத் தோழர்களிடமாவது ராமசாமிக்கு என்று ஒரு சிறு உதவியும் பெற்று இருக்கமாட்டார். ஆதலால் ஒரு வாலிபரையும் அவர் மோசம் செய்யவில்லை.



RangaRakes tamilnavarasam.com

இரண்டு காரியம் இல்லாதவன் உலகில் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை என்பதை முதலியாருக்கு சமர்ப்பிக்கிறோம்.

1. தன் வாழ்வுக்கு எந்த நிலையிலும் மற்றொருவனை எதிர்பார்க்கக் கூடாது.
2. தன் சுயநலத்துக்காக என்று எந்தக் காரியத்தையும் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது - எதிர்பார்க்கக் கூடாது.

இப்படிப்பட்டவன் எந்த கொள்கைக்கும் எந்த கட்சிக்கும் எந்த வாலிபனுக்கும் பயப்பட வேண்டியதில்லை.

இப்படிப்பட்டவன் நிமிஷத்துக்கு ஒரு கொள்கை சொல்லலாம், நிமிஷத்துக்கு ஒரு கட்சியையும் ஆதரிக்கலாம், எதிர்க்கலாம், யாரையும் வெளியே போ, உள்ளே வா என்று கூப்பிடலாம். ஆனதால் ராமசாமி சமதர்மம் யாரை எதிர்பார்த்தும் இருக்காது; அவர் உள்ளவரை மறையாது.

உண்மையாகவே உள் சிரத்தையுடன் மனம் கனிந்து முதலியாரை ஒன்று கேட்கிறோம். அதாவது தமிழ் நாட்டில் உண்மையான சமதர்மவாதி யார்? சமதர்ம வாலிபர் யார்? அவர்களின் சொந்த அந்தஸ்து, நடவடிக்கை, நாணையம், உறுதி ஆகியவைகள் என்ன? அனுபவம் என்ன? அவற்றில் எதில் ராமசாமியார் குறைந்திருக்கிறார் என்பதுதான்.

நமக்கு அனேக சமதர்மவாதிகள் தெரியும். நாடகத்தில் குச்சிக்காரிகள் சந்திரமதி, சீதை வேஷம் போட்டு நடிப்பது போலவும், நாடகத்தில் குடிகாரர்களும், காலிகளும், சாதுக்கள், முனிவர்கள், தர்மராஜாக்கள் முதலியோர் வேஷம் போட்டு நடிப்பது போலவும் மேடையில் ஒருவிதமாகவும் மற்றவர்களிடம் ஒருவிதமாகவும் தனி சொந்த நடத்தையில் ஒருவிதமாகவும் நடிப்பது சமதர்மம் என்றால் அதை ராமசாமியார் எவ்வளவு மதிப்பார் என்பதை முதலியாரே அறிந்து கொள்ள வேண்டும். மேடையில் பணக்காரனை ஜமீன்தாரனை வையலாம். மேடை விட்டிறங்கியவுடன் அவர்களுக்கு விரோதமான பணக்காரனை செலவுக்கு பணம் கேட்கலாம். சாப்பாட்டு நேரம் வரை அப்பணக்காரன் வாயிலில் காவல் காத்திருக்கலாம். இவர்கள் தான் சமதர்மவாதிகள் என்றால் அச்சமதர்மம் வாழ வேண்டுமா? அவர்கள் கூட்டுறவை ராமசாமியார் லட்சியம் செய்ய வேண்டுமா? என்று கேட்கின்றோம். இந்திய தேசம் இன்று தனி உடமை தேசம். உடமைக்கு இருக்கும் மதிப்பு ஓடிப்போகவில்லை. எந்த விதத்திலோ ஏதோ ஒரு பணக்காரனின் வெளிப்படையான தயவில்லாமல் பெரும்பான்மையான சமதர்மிகள் இன்று வாழ முடியவில்லை. சமதர்மிகளுக்குள் இன்று வரும் சண்டையும் சமதர்மிகள் மற்றவர்களை வையும் காரியமும் பெரிதும் பணம் காரணமாகவே என்பதை உள்ளூர்ந்து பார்த்தால் முதலியார் அவர்கள் நன்றாய் அறியலாம்.



ஆகையால் இன்று சமதர்மத்துக்கு ஏற்பட்டிருக்கும் இழிவை ஒழிப்பதற்கு ஆகவாவது இன்று ராமசாமி போன்றார் கொஞ்ச நாளைக்கு அந்தப் பேச்சை விட்டு வைத்திருப்பதே மேல். நிற்க,

பொருளாதார விஷயமாய் இல்லாவிட்டாலும், சமுதாயத் துறையில் ஜஸ்டிஸ்கட்சி ஏதாவது சமதர்ம வேலை செய்யவில்லையா என்பதையும், அதுவும் காங்கிரஸ் 50 வருஷமாய் செய்யாத வேலையும் 35 வருஷமாய் நினைக்காத வேலையையும் செய்திருக்கிறதா இல்லையா? என்று கேட்கின்றோம்.

ஜஸ்டிஸ்கட்சி என்றால் முதலியார் அவர்கள் தோழர் பொப்பிலி ராஜாவையும், முத்தைய செட்டியாரையும், ராஜனையும், உஸ்மானையும் பார்த்து காயக்கூடாது என்பதை முதலியார் உணரும் நாளே ஜஸ்டிஸ் கட்சியின் யோக்கியதையையும் அதன் பயனையும் உணரும் நாளாகும்.

அவர்கள் வருவார்கள் போவார்கள், தோல்வி அடைவார்கள் வெற்றி பெறுவார்கள், மறிப்பார்கள். ஆனால் ஜஸ்டிஸ் கட்சி அதாவது அக்கொள்கை ஒருநாளும் மறையாது. அதன் அடிப்படை கொள்கை ராமசாமியின் சமதர்மத்தின் முக்கிய பாகமாகும்.

அக்கொள்கையை ராமசாமி ஒரு நாளும் விடமாட்டார். ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து ராமசாமி விலகலாம், விலகக்கூடிய காலம் சீக்கிரம் அதுவும் வெகு சீக்கிரம் வரலாம், காங்கிரசில் புகுதலாம். இந்த காரியங்கள்வேறு, ராமசாமியின் கொள்கைவேறு. அதுதான் ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பித்தவர்களின் கொள்கை. அதை நடத்துவதே சமுதாய சமதர்மம். அதுவே பொருளாதார சமதர்மம் கொண்டுவந்து விடும். அதற்கு இந்த வாலிபர்கள் அதாவது முதலியார் கருதி இருக்கும் வாலிபர்கள் போதாது.

காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் வெற்றிபெறுவதே சமதர்மத்துக்கு அடையாளம் என்கிறார் முதலியார். இன்னம் யாராவது இப்படிச் சொல்லலாம். குப்புசாமி, உபயதுல்லா, கிருஷ்ணசாமி பாரதி கூட்டம் சொல்லலாம். முதலியார் அவர்கள் இன்னமும் அந்தப் பள்ளிக்கூடத்தில் இருப்பது விசனப்படக் கூடியதேயாகும். இனி நாடு பட்டம், பதவி, பணம் முதலியவற்றில் கவனம் செலுத்தாது என்கிறார். இதிலிருந்து முதலியார் எந்த உலகத்தில் இருந்து எழுதுகிறார் என்று கவலைப்பட வேண்டியிருக்கிறது.

தோழர் சத்தியமூர்த்தியார், டாக்டர் சுப்பராயன், தேவர் ஆகியவர்கள் முழங்காலுக்கு மேல் வேஷ்டி கட்டி ஆரஞ்சிப் பழரசமும் ஆட்டுப் பாலும் குடித்துக்கொண்டு ராட்டினம் சுற்றவா காங்கிரசில் இருக்கிறார்கள்? அல்லது சமதர்மம் கொண்டு வரவா காங்கிரசில் இருக்கிறார்கள்? என்று வணக்கமாய்க் கேட்கிறோம்.



RangaRakes tamilnavarasam.com

இந்த நாட்டில் பார்ப்பனன் வாழ்வு குலையாமல் பணக்காரன் வாழ்வு குலைவது சுலபமல்ல. பணத்தினாலேயே அதுவும் பணத்தை லக்ஷம் பத்து லக்ஷம் கோடி என்று வசூலித்து கூலி கொடுப்பதாலேயே காங்கிரசு நடக்கிறது என்பதை முதலியார் உணராமல் இருப்பார் என்று எந்த மூடனும் நம்ப மாட்டான். முதலியார் ஒரு சமயம் அறியாமலிருப்பாரானால் பட்டேல் வருகிறார் பத்து லக்ஷம் வேண்டும் என்ற காங்கிரஸ் தலைவர்கள் அறிக்கையைப் பார்க்கட்டும்.

பணம் காரணமாகவே தோழர்கள் குமாரசாமி முதலியார், டாக்டர் சுப்பராயன், நாடிமுத்து பிள்ளை, ராமலிங்கம் செட்டியார் முதலியவர்கள் காங்கிரசில் இருக்கிறார்களே ஒழிய கொள்கையிலோ ஒழுக்கத்திலோ தேச பக்தியிலோ என்று அவர் உரை எழுதின திருவிளையாடல் புராணத்தின் மீது ‘‘ஆணை’’யாக சொல்லுவாரா என்று கேட்கிறோம்.

ஆகையால் **ராமசாமிக்கு சமதர்மம் தெரியும். எப்போது பிரசாரம் செய்வது, எப்படி செய்வது என்பதும் அவருக்குத் தெரியும்.**

முதலியாரே பார்த்து பயந்து, தோழரே நாயக்கரே வேண்டாம், இவ்வளவு வேண்டாம் என்று அன்பால் கெஞ்சி கருணையால் தாடையை பிடிக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

சமதர்மத்தின் பிறவி எதிரிகளான பார்ப்பனர்க்கு கையாளாய் கூலியாய் இருந்து சமதர்ம சித்திக்கு அதிக தூரம் ஏற்படுத்துவதை விட கூடியவரை சமீபமாக நிலைமையை நாட்டை மக்களை செய்யலாம் என்பதே இன்றைய ராமசாமி தொண்டு. ஆகவே முதலியார் பொறுத்தருள்வாராக.

**குடி அரசு - கட்டுரை - 22.11.1936**



# திருவாங்கூர் பிரகடனம்

திருவிதாங்கூர் அரசாங்கமானது தனது ஆதிக்கத்துக்கு உட்பட்ட கோவில்களை தாழ்த்தப்பட்ட மக்கள் உள்பட சகல வகுப்பு இந்துக்கள் என்பவர்களும் சென்று வணங்கலாம் என்று அனுமதி அளித்து அரச பிரகடனம் பிறப்புவித்துவிட்டது.

அந்த ராஜ்யமானது வைதீகப் பித்தும் வருணாச்சிரமக் குரும்பும் கொண்ட ராஜ்யமாகும். விவேகாநந்தர் அந் நாட்டை ஒரு பைத்தியக்காரர்கள் ஆஸ்பத்திரி என்று சொன்னார். தோழர்கள் லஜபதிராய் அவர்களும், காந்தியாரும், பண்டித ஜவஹரும் அந்நாட்டிற்குச் சென்றிருந்த காலையில் அவர்கள் கோவிலுக்குள் போக அனுமதிக்கப்படவில்லை.

அந் நாட்டின் தீட்டின் தன்மையானது மனிதனை மனிதன் கண்ணால் பார்ப்பதினாலும், நிழல் மேலே படுவதினாலும், பேசுவதினாலும் ஒட்டிக் கொள்ளக்கூடிய அவ்வளவு கொடுமையான தன்மையது என்று சொல்லலாம். அதோடு இன்ன இன்ன ஜாதி இவ்வளவு இவ்வளவு தூரத்தில் இருக்க வேண்டும் என்ற தூர வித்தியாசமும் உண்டு. கீழ் ஜாதியார் என்பவர்களுக்கு எப்படி இவ்வளவு இழிவும் கொடுமையும் உண்டோ அதேபோல் அந்நாட்டில் மேல் ஜாதியார் என்பவர்களுக்கும் உயர்வும் சௌகரியங்களும் போக போக்கியங்களும் உண்டு. அதாவது,

ஒருவன் பார்ப்பான் என்று சொல்லிக்கொள்ளுவானானால் அவனுக்கு ஆயுள் உள்ள அளவும் அரசாங்க சத்திரங்களில் அப்பளம், வடை பாயாசத்துடன் சாப்பாடு கிடைக்கும். சாப்பாடு மாத்திரமல்லாமல் பெண்கள் விஷயத்திலும் பார்ப்பனன் என்பவர்களுக்குக் குறையே இருக்காது. பார்ப்பானுக்குப் பெண் விஷயத்தில் உள்ள சௌகரியத்திற்கு இரண்டொரு உதாரணம் கூறலாம். அதாவது ஒரு மலையாளியைப் பார்த்து ஒரு நம்பூதிரிப் பார்ப்பான் ‘‘அடே சுகுமார உன் பாரியை மிகுந்த சவுந்திரவதி என்று கேள்விப்பட்டேன். அது உண்மையா?’’ என்றால், ‘‘அவடத்திய கடாக்ஷத்தால் ஆமாம் சுவாமிகளே’’ என்று பதில் சொல்லுவதும் அதற்கு அந்தப் பார்ப்பனன்,

‘‘அப்படியானால் நாம் அவாளை அனுபவித்துப் பார்க்க வேண்டாமா’’ என்றால் ‘‘பாக்கியம் பாக்கியம்’’ என்று கூறிக்கொண்டு ஆனந்தக் கடலில் மூழ்கி குதியாட்டம் போட்டுக்கொண்டு ஓடோடிப் போய் பாரியாளை



RangaRakes tamilnavarasam.com

அழைத்து வந்து பார்ப்பானிடம் ஒப்புவித்து ''அவடத்திய சவுகரியம் போல் அனுப்பிக் கொடுக்கலாம்'' என்று சொல்லிவிட்டு திரும்பிக் கூடப் பார்க்காமல் போவதும், மற்றும் பெரிய வீடு பாரம்பரியமாய் பெருமை உள்ள குடும்பம் என்பவைகளில் உள்ள பெண்கள் தங்கள் பார்ப்பனர்களை கணவனாகக் கொள்வதிலும் சொல்லிக்கொள்வதிலும் பெருமை அடைவதும் அப்பார்ப்பனர்கள் தங்களுக்கு புருஷனாய் இருப்பதற்காக மீ சம்பளம் 100, 200 என்பதாக ராயல் குடும்பம் என்பது வரையில் கொடுப்பதும் வழக்கமாகவும் பெருமையாகவும் இருந்து வந்த நாடாகும். இப்போது மற்ற எல்லாத் துறைகள் போலவே இதிலும் சில மாறுதல் இருக்கலாம்.

மற்றும் பார்ப்பனர் சாப்பிட்ட எச்சில் இலைகளை அரசாங்கம் கண்டிராக்ட் விடுவதும் கண்டிராக்டில் எடுத்தவர் இலை ஒன்றுக்கு காலணாவுக்கு குறையாமல் அரையணா ஒரு அணாவுக்கு விற்பதுமான ராஜ்யமாகவும் இருந்தது. அப்படிப்பட்ட சுயமரியாதையும் மனிதத் தன்மையும் பகுத்தறிவும் குறைந்திருந்த அந்த நாடானது அந்நாட்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட சுயமரியாதை உணர்ச்சியின் காரணமாக இப்போது ஒரு பெரும் புரட்சிகரமான சேதியையும் செய்கையையும் கேட்கவும் பார்க்கவுமான தன்மை ஏற்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் இந்த திருவாங்கூர் அரச பிரகடனத்தைக் கண்ட பலர் இப்பிரகடனம் ஏற்படக் காரணமாய் இருந்தது வைக்கம் சத்தியாக்கிரகம் என்பதாகக் கருதுகின்றனர் - எழுதுகின்றனர் - பேசுகின்றனர். அதோடு கூடவே சிலர் தோழர் ஈ.வெ. ராமசாமியையும் பாராட்டி பேசியும் எழுதியும் நேரில் கடிதங்களும் எழுதுகிறார்கள்.

மற்றும் ஒரு சிலர் இதற்கு காங்கிரசு தான் காரணம் என்றும் காந்தியார் அனுமதி அளித்ததென்றும் பலவிதமாக எழுதி மக்களை மயக்குகின்றார்கள். திருவாங்கூர் பிரகடனத்துக்கு காங்கிரசோ, காந்தியாரோ, வைக்கம் சத்தியாக்கிரகமோ சிறிதும் சம்மந்தமில்லை என்பதை முதலில் மக்கள் உணர வேண்டுகிறோம். இப்பிரகடனம் மனித சமூகத்துக்கோ நாட்டுக்கோ நன்மையா தீமையா என்பது ஒரு பெரிய கேள்வி என்பதாய் இருந்தாலும் நம்மைப் பொறுத்தவரை இப்பிரகடனம் மனித சமூகத்துக்கு - இந்திய நாட்டுக்கு சிறப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகத்துக்கு ஒரு விதத்தில் கேட்டை விளைவிக்கக்கூடியது என்பதே நமது அபிப்பிராயம். இது ஒரு புறமிருக்கட்டும். இப்போது மக்கள் இப்பிரகடனத்தை ஒரு நன்மையாகவும் பெருமையாகவும் கருதுவதாலேயே அரசியல் வாழ்வுக்காரர்களும் அரசியல் பத்திரிகைகளும் இதை காங்கிரசினாலும் காந்தியாலும் ஏற்பட்ட பயன் என்று சொல்லி பொய்ப் பெருமையை காங்கிரசுக்கு சம்பாதித்துக் கொடுக்கப் பார்க்கிறார்கள்.



முதலாவது வைக்கம் சத்தியாக்கிரகத்துக்கும் காந்தியாருக்கும் சம்பந்தம் இல்லை என்பதை மக்கள் உணர ஆசைப்படுகிறோம். வைக்கம் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டதானது தோழர்கள் டி.கே. மாதவன், கே. அய்யப்பன் முதலிய ஈழவ சமூக சீர்திருத்தத் தலைவர்களால் திடீரென்று துவக்கப்பட்டதாகும். அதில் தோழர்கள் கே.பி. கேசவமேனன், ஜார்ஜ் ஜோசப்பு முதலிய அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டார்கள். திருவாங்கூர் சர்க்கார் ஒரே அடியாக எல்லா பிரமுகர்களையும் ஆரம்பித்த உடனே கைதிசெய்து விட்டார்கள். சத்தியாக்கிரகத்தை நடத்த ஆளில்லாமல் போய்விட்டது. தோழர்கள் ஜார்ஜ் ஜோசப்பும், கே.பி. கேசவமேனன் அவர்களும் ''நிலைமை மோசமாகி விட்டதால் நீங்கள் உடனே வந்து சத்தியாக்கிரக தலைமையை ஏற்று நடத்தாவிட்டால் பெருத்த அவமானத்துக்கு இடம் ஏற்படும்'' என்று தந்தியும் கடிதமும் ஆளும் தோழர் ஈ.வெ. ராமசாமிக்கு அனுப்பினார்கள். தோழர் ஈ.வெ.ரா. தன் சொந்த முறையிலேயே உடனே சென்றார். அதன்பிறகு காந்தியார் ராஜகோபாலாச்சாரியார் ஆகியவர்கள் அதற்கு பூரண அனுமதி அளிக்காமல் சில ஆக்ஷேபணைகள் கிளப்பினார்கள். கடசியாக ஈ.வெ.ரா. பிடிவாதத்தின் மீதும் சத்தியாக்கிரகம் எல்லா இந்திய விஷயமாகிவிட்ட பிறகும் சத்தியாக்கிரகத்தில் தாங்களும் கலந்திருப்பதாக காட்டிக் கொண்டார்கள். வைக்கம் சத்தியாக்கிரகம் கூடாது என்று ஆச்சாரியாரும் காந்தியாரும் எழுதிய கடிதங்கள் தமிழ்நாடு பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. மற்றும்,

தோழர் காந்தியார், தோழர் ஜார்ஜ் ஜோசப்பை மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வெளியேறும்படி சொன்னதற்கும் ஆதாரங்கள் இருக்கின்றன. சத்தியாக்கிரகத்துக்கு பண உதவி செய்து நடத்த வந்த சீக்கியர்களை வெளியேறும்படி சொன்னதற்கும் ஆதாரங்கள் உண்டு. இம்மாதிரி இன்னும் பலவித தொல்லை கொடுத்து வந்தார்கள். இது விஷயங்களை எல்லாம் அப்போதைய ''தமிழ்நாடு'' வாரப் பத்திரிகையில் நன்றாய்க் காணலாம்.

இந்த நிலை ஒருபுறமிருக்க வைக்கம் சத்தியாக்கிரகம் நடக்கும் ரோட்டைப் பொறுத்ததே தவிர கோவிலைப் பொருத்ததல்ல என்று காந்தியார் அப்போது 100 தடவை வெளிப்படுத்தி அப்பொழுது ''அரசாங்கத்தாருக்கு வைக்கம் சத்தியாக்கிரகத்துக்கும் கோவில் பிரவேசத்திற்கும் சம்மந்தமில்லை'' என்று வியக்தமாகச் சொல்லப்பட்டு வாக்குறுதியும் கொடுக்கப்பட்டது. இந்தியா பூராவிலுமே வைக்கம் சத்தியாக்கிரகம் ஒன்றுதான் அதுவும் சுதேச மன்னர் ராஜ்யத்தில் ஜெயித்தது என்றாலும் அது எந்த விதத்திலும் இந்த கோயில் பிரவேச பிரகடனத்திற்கு சம்பந்தம் இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாய் கூறுவோம். அதிலும் காந்தியாருக்கும் கோவில் பிரவேச கூட்டத்திற்கும் சிறிது கூட சம்மந்தமில்லை என்பதற்கும் ஆதாரங்கள் பல கூறலாம்.



RangaRakes tamilnavarasam.com

தோழர் காந்தியார் எந்த சீர்திருத்தமும் அதுவும் கோவில் நுழைவு ''சீர்திருத்தம்'' சட்டத்தின் மூலம் செய்யக் கூடவே கூடாது என்று சொன்னவர்.

சமீபத்தில் இந்திய சட்டசபையில் இந்த ரங்கய்யர் கோவில் நுழைவு மசோதாவை கொலை செய்தவர். மற்ற இந்திய சட்டசபை மெம்பர்களுக்கும் அப்படிப்பட்ட மசோதாவோ வேறு எந்த சமூக சீர்திருத்த சம்பந்தமான மசோதாவோ சட்டசபைக்குக் கொண்டுவரக்கூடாது என்றும் சொன்னவர். காங்கிரஸ்காரர்களும் தோழர் ஆச்சாரியார், சத்தியமூர்த்தியார், டாக்டர் ராஜன் ஆகியவர்களும் சீர்திருத்தத்திற்கு எவ்வித சட்டமும் கூடாது என்றவர்கள்.

சீர்திருத்த காரியங்களுக்கு சத்தியாக்கிரகம் செய்யக்கூடாது என்றும் சொன்னவர்கள்.

இப்படிப்பட்ட நிலையில் உள்ள காந்தியாரும் காங்கிரசும் காங்கிரஸ் தலைவர்களும் வைக்கம் சத்தியாக்கிரகமும் திருவாங்கூர் கோவில் நுழைவு பிரகடனத்துக்கு காரணம் என்றோ, சம்மந்தம் உண்டு என்றோ சொல்ல யாராவது வருவார்களானால் அவர்கள் இழி தன்மைக்கும் அல்லது அறிவீனத்துக்கும் வருந்தவேண்டியதே அல்லாமல் வேறில்லை. இதுவிஷயமாய் ''தலைவர்கள்'' நடத்தை பற்றி இன்னும் அனேக ரகசியங்கள் உண்டு. அதை இப்போதும் வெளியிட நாம் விரும்பில்லை.

ஆனால் ''இந்தப்பிரகடனத்துக்கு ஒன்றுமே காரணம் இல்லையா? திடீரென்று அரசருக்கோ திவானுக்கோ தோன்றிய ஞானோதயமா?'' என்று சிலர் கேட்கலாம். காரணம் உண்டு என்பதாகவே பதில் கூறுவோம். அந்த பதில் என்னவென்றால் இப்பிரகடனத்துக்கு ஆக மகாராஜாவை வாழ்த்தி பாராட்டி வரும் விஷயங்களைப் பார்த்தால் அக்காரணம் என்ன என்பது விளங்கிவிடும் என்பது ஒன்று.

அதாவது அனேகமாக பெரும்பாலும் ஒவ்வொரு வாழ்த்துதலிலும் பாராட்டுதலிலும் ''இந்துமதத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியான சமயத்தில் மகாராஜா இந்த பிரகடனத்தின் மூலம் உதவி செய்து இந்து மதத்தைக் காப்பாற்றினார்'' என்பது மிளிர்கின்றதைப் பார்க்கலாம்.

ஆகவே, இந்து மதத்திற்கு இன்று ஏற்பட்ட நெருக்கடி என்ன? இத்தனைநாள் இல்லாத நெருக்கடி இப்போது என்ன வந்துவிட்டது? என்பவைகளை யோசித்துப்பார்க்கும்படி வாசகர்களை வேண்டுகிறோம். ''புத்தர், சமணர், முஸ்லீம்கள் ஆகியவர்கள் காலத்தில் நால்வர், ராமானுஜர் செய்தது போல்'' என்று பலர் பாராட்டுதல்களில் குறிப்பிட்டிருக்கிறார்களே இதன் இரகசியமென்ன? இவற்றிற்கு காரணங்கள் கண்டு பிடித்தால் அந்தக் காரணங்கள்தான் இந்த பிரகடனத்துக்கு காரணம் என்று சொல்லுவோம். களிமண்ணு மாளவியா பண்டிதர் இப்போது ஏன் பேசவில்லை? சனாதனப் புலிகளின் வாய் ஏன் புளிஇட்டு அடைக்கப்பட்டு விட்டது? மகாகனம் சாஸ்திரியின் சர்வாதிகாரக் கனவுகள் எங்கே போயின? ''சோஷியல் ரிபார்மர்'' பத்திராதிபர் தோழர் கே. நடராஜன் போன்றவர்களின் சூழ்ச்சி உபாயம் இப்போது எங்கே தூங்குகிறது? ஆகவே இந்தப் பதில்களில் தான் திருவாங்கூர் பிரகடனத்தின் பிறப்பு - அஸ்திவாரம் - கர்ப்பதானம் இருக்கிறது என்போம்.

அதென்ன வென்றால் அதுதான் ''இந்து மதம் ஒழிய வேண்டும், கோவில்கள் இடிபட வேண்டும், எல்லோரும் முஸ்லீம்களாக வேண்டும், நாஸ்திகமே பரவவேண்டும்'' என்ற பிரசாரமும் அனேக மகாநாட்டுத் தீர்மானங்களும் ஈழவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்களது மகாநாட்டு தீர்மானமும் இவர்களில் பலர் முஸ்லீம்களாகவும், கிறிஸ்தவர் களாகவும், சீக்கியர்களாகவும், மதம் மாறினதும் அம்பேத்கார் வெடிகுண்டும் சுயமரியாதைக்காரர்களின் டம் டம் குண்டும் இதற்கு முன்னின்றவர்கள் பிரசாரங்களும் முதலாகியவைகளே யாகும்.

அன்றியும் உண்மையிலேயே கோயில், இந்துமதம் முதலியவை ஒழியவேண்டும் என்பவர்களுக்கு இந்த பிரகடனம் விரோதமானது தான். அதனால்தான் மகாராஜாவை பாராட்டினவர்கள் பெரும்பாலோர் ''நல்ல சமயத்தில் இந்து மதத்தைக் காப்பாற்றினீர்கள்'' என்று பாராட்டினார்கள். என்ன நல்ல சமயம் என்றால் இந்துமதம் ஒழியப்போகிற சமயத்தில் என்பது தவிர வேறு என்னமாய் இருக்கும்? சிலர் பொறுப்பில்லாமலோ வீண் ஜம்பமாகவே பெருமை பேசிக்கொள்ளலாம். ''இந்து மதத்தை அழிக்க யாராலும் ஆகாது'' என்று பேசலாம். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களின் சுயமரியாதையில் வெகு சங்கதி ஆடிப்போய்விட்டது.

கோவில் பிரவேசம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று 1928ல் தோழர் ஈ.வெ. ராமசாமி தேவஸ்தான கமிட்டி பிரசிடெண்டாய் இருந்த காலத்திலேயே அவர் போர்டில் தீர்மானிக்கப்பட்டது. அதனால் பிறகு கோயில் பிரவேசம் செய்தவர்கள் சர்க்காரால் தண்டிக்கப்பட்டதும் ஹைகோர்ட்டில் விடுதலையானதும் பிறகுசட்டம் ஏற்பட்ட பிறகுதான் அது செய்யப்பட வேண்டுமென்று கருதி சட்டம் செய்ய முயற்சித்ததும் காந்தியார் சத்தியமூர்த்தியார் போன்றவர்கள் சட்டம் கூடாது என்று தடுத்ததும் சாரதா சட்டம் போன்றதற்கே காங்கிரஸ் தலைவர் தோழர் சத்தியமூர்த்தி ''என் மகளுக்கு சாரதா சட்டத்தை மீறி சிறுவயதில் கல்யாணம் செய்து நான் ஜெயிலுக்கு போகப்போகிறேன்'' என்று சொல்லி பொது ஜனங்களை கிளப்பி விட்டதுமான காரியங்களுக்கு பிறகுதான் கோவில்கள் இடிக்கப்படவேண்டும் - இந்துமதம் அழிக்கப்படவேண்டும் - முஸ்லீம் மார்க்கத்தில் சேரவேண்டும் என்பவையான பிரசாரம் பலமாய் தொடங்கப் பட்டது என்பதும் யாவரும் உணர்ந்ததேயாகும்.

அவைகளை தொடங்கினவர்கள் பொதுஜனங்களால், தங்கள் கூட்டத்தாரால், தங்களை பின்பற்றுபவர்களால் எவ்வளவுதான் மதத்துரோகி,





RangaRakes tamilnavarasam.com

தேசத்துரோகி, அரசாங்க அடிமை பயங்காளி கீழ் நோக்குக்காரர் என்றெல்லாம் வையப்பட்ட போதிலும் பாமர ஜனங்களிடம் செல்வாக்கு இழந்த போதிலும் அதன் பலன்கள் மாத்திரம் இன்று திருவிதாங்கூர் கோவில் கதவு திறக்கப்படக்கூடிய நிலைக்கும் மற்றும் பல பழக்கவழக்கங்கள் பிடிவாதங்கள் ஒழியக்கூடிய நிலைக்கும் கொண்டு வந்து விட்டன.

இப் பிரகடனத்தில் பலவித சூழ்ச்சிகள் இருந்தாலும் இருக்கலாம். எப்படியோ ஆகட்டும், சூழ்ச்சி வெற்றி பெறட்டும். அதையும் அனுகூலமாய் பயன்படுத்திக்கொள்ள நாம் அதைரியப்படவில்லை. என்றாலும் 5, 6 வருஷத்துக்கு முன் இந்து சாஸ்திரங்கள் ஸ்மிருதிகள் என்பவைகளுக்கு விரோதமாய் எப்படி பெண்களுக்கு புஷ்பவதியான பிறகு தான் கல்யாணம் செய்யவேண்டுமென்று சட்டம் செய்யப்பட்டதோ அதேபோல் இப்போது துருப்பிடித்த செல்லரித்த ஆகமங்களுக்கு விரோதமாய் எல்லா (தாழ்த்தப்பட்ட) வகுப்பாருக்கும் கோவில் நுழைவு உண்டு என்று பிரகடனம் போட்டதும் அதை சத்தியமூர்த்தி உள்பட அதாவது தன் மகளை ''புஷ்பவதி ஆகு முன் கல்யாணம் செய்து ஜெயிலுக்குப் போய் சாரதா சட்டத்தை ஒழிப்பதற்கு உயிரை விடுவேன்'' என்று சௌரியம் கூறிய சத்தியமூர்த்தி உள்பட ராஜாவையும் (மந்திரியை) திவானையும் பாராட்டுவதுமான காரியம் ஏற்பட்டு விட்டது பெரிய காரியம் என்றும் இது ஒரு புரக்ஷி காரணமானது என்றும் மக்களுக்கு இனி எவ்வித புரக்ஷியும் செய்யலாம் - செய்தால் முடியும் என்று கருதும்படியானதுமான காரியம் என்றும் கூறுவோம். அன்றியும் இப்போது கோவில் பிரவேசத்தைப் பற்றி நாம் ஆச்சரியமோ மகிழ்ச்சியோ அடையவில்லை. ஆனாலும் இந்துமத ஆதாரங்களில் தீ வைக்கப்பட்டதற்கும் அத்தீய்க்கு பார்ப்பனர்களே இன்று ஆகுதி செய்வதற்கும் நாம் மகிழ்ச்சியும் தைரியமும் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

தோழர் சர்.சி.பி. ராமசாமி அய்யர் சீர்திருத்தத்திற்கு சட்டம் செய்ய ஒருப்படாதவர் என்பது யாவரும் அறிந்ததேயாகும். இதை அவர்தான் இந்திய சட்டசபை தேர்தலுக்கு நிற்கும்போது கும்பகோணத்து வருணாச்சிரமி களுக்கு சொன்ன பதிலில் விளக்கியிருக்கிறார். அவர்பார்த்து இப் பிரகடனத்தை நிறுத்தி இருந்தால் நிறுத்தி இருக்கக் கூடுமானாலும் அவருடைய போட்டி நண்பர் தோழர் சர். ஷண்முகம் செட்டியார் ஓடுகிற ஓட்டத்தில் பஞ்சாமிர்தம் சாப்பிடுவது போல் கொச்சி ராஜ்யத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ பிரகடனம் செய்யச் செய்துவிட்டார். அதனால் 100க்கு 45, 50, 75 வீதம் உத்தியோகம் பெற்றுவந்த பார்ப்பனர்கள் 100க்கு 2 வீதமே பெறும்படியாகவும் 100க்கு 2 வீதம் கூட பெறக்கூடாமல் இருந்த ஈழவர்கள் 100க்கு 22 பெறும்படியாகவும் செய்து ஒரே அடியாய் நல்ல பேர் வாங்கிவிட்டார்.

இதை எந்தப் பார்ப்பானும் தேசியவாதியும் பாராட்டவில்லை. ஆனாலும் உள்ளூர 10 லக்ஷக்கணக்கான மக்களின் உள்ளத்தில் அன்பு உருவமாய் ஊசலாடிக்கொண்டு இருக்கும் பேற்றை அடைந்துவிட்டார். இதை உண்மையில் கண்ட தோழர் ராமசாமி அய்யர்தான் ஏதாவது செய்து ஒரு நல்ல பெயரை வாங்கவேண்டாமா என்பது முள்ளு முனையில் இருந்து தவம் செய்யவேண்டிய தேவை போல் இருந்துவந்தது மற்றொரு காரணமாகும்.

இவற்றையெல்லாம்விட மற்றொரு காரணம் அதுவும் சரியான காரணம் என்னவென்றால் திருவாங்கூர் ராஜ்யம் சுமார் 45 லக்ஷம் ஜனத் தொகை கொண்டது. இதில் கிட்டத்தட்ட 20 லக்ஷம் கிறிஸ்தவரும், 4, 5 லக்ஷம், முஸ்லீம்களுமாக இப்போதே தோட்ட விஸ்தீரணத்தில் பகுதிக்குமேல் கிணறு என்பது போல் திருவாங்கூர் (இந்து மகாராஜா) பிரஜைகளில் பகுதிக்கு மேல் வேறு மதக்காரர்களாக இருக்கிறார்கள். மீதி உள்ள இந்துக்கள் என்பவர்களும் சுற்று (பாம்பேரி) கட்டிடம் இல்லாத கிணறு நாளுக்கு நாள் ஓரம் இடிந்து சரிந்து கிணறே தோட்டமெல்லாம் விழுந்துவிடுவதுபோல் மக்கள் நாளுக்கு நாள் வேறு மதத்தில் சேர ஆரம்பித்து விட்டார்கள். வேறு மதத்தில் சேர இஷ்டமில்லாதவர்கள் இந்து மதத்தையே அடியோடு விட்டுவிட தீர்மானித்து விட்டார்கள். சகல மதக்காரர்களும் லக்ஷம் இரண்டு லக்ஷம் ரூபாயுடன் மதமாற்ற வியாபாரம் அங்கு ஆரம்பித்து விட்டார்கள்.

இந்த நிலை இப்படியே இருந்தால் நாளைக்கு மகாராஜாவின் பாடே அவர் எந்த மதம் என்பது திண்டாட்டமாய்விடும் நிலைமை ஏற்படலாம். ராஜ்யம் கிறிஸ்து அல்லது முஸ்லீம் ராஜ்யமாகக்கூட ஆகிவிடலாம். ஆகவே தனது பிரஜைகள் பகுதியாவது இந்துக்களாய் இருக்கட்டுமே என்கின்ற ஆசையே இந்தப் பிரகடனத்துக்கு கல்லுப் போன்ற உறுதியான காரணமாகும்.

ஆகையால் இப்படிப்பட்ட பிரகடனத்தை அதற்கு எதிரிகளாய் இருந்த காந்தியாராலும் காங்கிரசாலும் பார்ப்பன தலைவர்களாலும் ஏற்பட்டது என்று சொல்லுவது அறிவீனம் என்றே சொல்லுவோம். தங்களுக்கு இது விஷயத்தில் போதிய அறிவு இருக்கிறது, நன்றாய் ஆராய்ந்து பார்த்துத்தான் சொன்னோம் என்று யாராவது சொல்வாரானால் மற்றபடி அதை மாற்றி வடிகட்டின அயோக்கியத்தனம் என்று சொல்ல மடிகட்டி நிற்கிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 22.11.1936**



RangaRakes tamilnavarasam.com

# சிதம்பரம் சிதைவு

தோழர் வி.ஒ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் முடிவெய்தி விட்டார். தனக்கு இயங்கும் சக்தி இருந்து ஓடி ஆடி உசாவித் திரியும் காலமெல்லாம் தனக்கு சரியென்று தோன்றிய வழிகளில் உழைத்துவிட்டு ஒடுக்கம் ஏற்பட்டவுடன் அடக்கமாகி விட்டார். இது மக்கள் வாழ்க்கையின் நியாயமான நிலையே யாகும்.

மிக்க மந்தமான காலத்தில் அதாவது மனிதன் பொதுநலம் என்றால் மத சம்மந்தமான காரியம் தவிர வேறு ஒன்றும் இல்லை என்றும், அரசியல் என்றால் அது தெய்வீக சம்மந்தமானது என்றும், எப்படி எனில், கூனோ குருடோ, அயோக்கியனோ, கொள்ளைக்காரனோ, ஒருவன் புருஷனாய் அமைந்துவிட்டால் பெய்யெனப் பெய்யும் மழை என்பதற்கு இலக்காகவும், பின் தூங்கி முன்னெழுபவள் போலவும் இருப்பதுதான் பெண்ணின் கற்புக்கு குறியென்றும் அக்கூட்டு தெய்வீக சம்மந்தமாய் ஏற்பட்டதென்றும் சொல்வது போல் அரசன் எப்படிப்பட்டவனாய் இருந்தாலும் ஆக்ஷி எப்படிப்பட்டதாய் இருந்தாலும் அரசனை விஷ்ணுவாய்க் கருதி ஆக்ஷியை வேதக் கோட்பாடாகக் கருதி வாழவேண்டும் என்று இருந்த பார்ப்பனீய ஆதிக்க காலத்தில் மற்றும் தண்டனை, சிறை என்பவைகள் மகா அவமானகரமாகவும், மகா இழிவாகவும், மகா கொடுமையாகவும் துன்பமாகவும் இருந்த காலத்தில் தென்னாட்டில் முதல் முதல் வெளிவந்து அரசனை எதிர்த்து அரசியலை இகழ்ந்து துச்சமாய் கருதி தண்டனையை அடைந்து சிறைக் கொடுமையை இன்பமாய் ஏற்று கலங்காமல் மனம் மாறாமல் வெளிவந்த வீரர்களில் முதன்மை வரியில் முதன்மை லக்கத்தில் இருந்தவராவார் நமது சிதம்பரம். அதன் பலன் எப்படியோ ஆனாலும் அவராலேயே அனேக பார்ப்பனரல்லாத மக்கள் உண்மை வீரர்களாகவும் சுயநலமற்றவர்களாகவும் வெளிவர முடிந்தது.

தோழர் சிதம்பரம் ஒரு பார்ப்பனராய் இருந்திருப்பாரானால் லோகமானியர், முனீந்திரர், சிதம்பரம் கட்டம், சிதம்பரம் உருவச் சிலை, சிதம்பர நாதர் கோவில், சிதம்பரம் பண்டு, காங்கிரஸ் மண்டபங்களில் காங்கிரஸ் பக்தர் வீடுகளில் சிதம்பரம் கழுத்து சிலை, சிதம்பரம் உருவப்படம் இருக்கும் படியான நிலையை அடைந்திருப்பார். ஆனால் அவர் பிள்ளை அதுவும் சைவப் பிள்ளையானாலும் ''சூத்திரப் பிள்ளை''



ஆனதால் அவர் வாழ்வு அவருக்கே அவ்வளவு மகிழ்ச்சியை கொடுக்காமல் இருந்தது என்பதோடு அவருக்காக ஏற்படுத்தப்பட்ட பண்டுகூட வெளியிட யோக்கியதை இல்லாததாய் இருந்து வருகிறது.

சிதம்பரம் பிள்ளையின் அனுபவத்தை மற்ற தேசாபிமான பார்ப்பன ரல்லாதாரும் அறியட்டும் என்பதற்காகவே இதைக் குறிப்பிட்டோம்.

அரசியல் உலகம் அவர் இறங்கின காலத்தில் ஒரு விதமாகவும் இப்போது ஒரு விதமாகவும் இருக்கிறபடியால் ஒரு அளவுக்கு பார்ப்பனரல்லாத தேச பக்தர்களைப்பற்றி ஆறுதல் அடைகிறோம். எப்படியெனில், பார்ப்பனரல்லாத தேசபக்தர்களை பார்ப்பனர் ஒரு அளவுக்காவது வேஷத்துக்காகவாவது அணைத்துத்தீர வேண்டிய நிலையில் வேறு பல இயக்கங்கள் நிர்ப்பந்தித்துக் கொண்டிருப்பதால் அதிகம் பயப்பட வேண்டியதில்லை.

ஆகையால் சிதம்பரம் பிள்ளையை ஒரு உதாரணமாகக் கொண்டு மற்ற தேசபக்தர்கள் அதற்கேற்றபடி நடந்து கொள்வார்களாக.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 22.11.1936**



RangaRakes tamilnavarasam.com

# கிராம சீர்திருத்தம் என்பது புரட்டு

## கிராமங்கள் அழியவேண்டும்

### முன்னுரை

தோழர்களே!

கிராம உத்தியோகஸ்தர்கள் ஸ்பெஷல் டெக்ஸ்ட் பயிற்சி சாலையின் 6-வது ஆண்டு விழாவிற்குத் தலைமை வகிக்கும்படியான கௌரவத்தை எனக்கு அளித்ததற்கு நான் இதன் முக்கியஸ்தர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நீங்கள் முதலில் எதிர்பார்த்தபடி இவ்வாண்டு விழாவிற்கு ஒரு ரெவின்யூ அதிகாரி தலைமை வகித்திருந்தால் மிகவும் பொருத்தமாய் இருந்திருக்கும். ஏதோ எதிர்பாராத காரணத்தால் அவர்கள் வர முடியாமல் போனதால் எதிர்பாராத நிலைமையில் என்னைத் திடீரென்று பிரேரேபித்து விட்டீர்கள். உங்கள் ஆண்டு விழாவில் பேசுவதற்கு எனக்கு மிகவும் ஆசைதான். நான் இதை ஒரு நல்ல சந்தர்ப்பமாகவும் கருதுகிறேன். ஆனால் ஒரு உபன்யாசகராய் இருந்தால் எவ்வளவு சுதந்திரமாய்ப் பேசுவேனோ அவ்வளவு தலைவன் என்கின்ற முறைமையில் பேசுவதற்கு முடியாது. ஏனெனில் தலைமை வகிப்பவருக்கு சில பொறுப்புகளும் கடமைகளும் உண்டு. உபன்யாசகர்களின் சொற்பொழிவுகளையும் அபிப்பிராயங்களையும் தலைவர் மறுக்கவோ கண்டிக்கவோ செய்வது தர்மமாகாது.

ஏனெனில் தலைவர் முடிவுரை கூறியபின் உபன்யாசகர்களுக்கு சமாதானம் சொல்ல சந்தர்ப்பமில்லை அல்லவா?

அன்றியும் நீங்களும் சில நிர்ப்பந்தங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாவீர்கள். ஆகையால் நான் இப்போது பேசப்போகும் உபன்யாசகர்களின் அபிப்பிராயங்களைத் தழுவி சில வார்த்தைகள் பேசி விட்டு என் அபிப்பிராயமாக சில வார்த்தை முடிவுரையில் சொல்லிவிட்டு இவ்விழாவை முடிவுக்குக் கொண்டு வருகிறேன்.

### முடிவுரை

தோழர்கள் கரூர் கே. வேலாயுதம் அவர்கள் ''கிராம முன்னேற்றத்துக்கு ஆன வழி'' என்பது பற்றிப் பேசினார்.



பிறகு இந்த ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல் தோழர் துரைசாமி பிள்ளை அவர்கள் ''கிராமக் கல்வி'' என்பது பற்றிப் பேசினார். இருவர் பேசியதும் ஏறக்குறைய எல்லாம் என் அபிப்பிராயத்தை தழுவுவதேயாகும். அவர்கள் இரண்டு முக்கிய விஷயங்களைப் பற்றியும் நன்றாய் கையாண்டு இருக்கிறார்கள். அவற்றிலிருந்து நானும் பல விஷயங்களைக் கற்றுக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னால் அது மிகையாகாது. கிராமாதிகாரிகளும் ஆரம்ப ஆசிரியர்களும் என்பது பற்றி நான் சில வார்த்தைகள் சொல்லவேண்டும் என்றும் என்னை கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

ஆனால் நான் தலைவன் என்கின்ற முறையில் உபன்யாசகர்களை அறிமுகப்படுத்தி விட்டு உபன்யாசகர்களை எடுத்துக்கொண்ட விஷயத்துக்குள்ளும் குறிப்பிட்ட நேரத்துக்குள்ளும் பேசும்படி பார்த்துக்கொள்ளுவதே தலைவரின் நியாயமான கடமையாகும்.

ஆகையால் எல்லாவற்றையும் கவனித்து, நான் பேசவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்ப்பதையும் சேர்த்து முடிவுரையாக சில வார்த்தை பேசுகிறேன். அவற்றை நீங்கள் ஒருவருடைய அபிப்பிராயமாகக் கொள்ளவேண்டுமே ஒழிய ஒரு உபதேசமாகக் கொள்ளாதீர்கள் என்று உங்களை முதலில் கேட்டுக்கொள்கிறேன்.

தோழர்களே!

கிராமாதிகாரிகளும் ஆரம்ப ஆசிரியர்களும் ஆகிய இரு கூட்டத்தார்கள் அவர்களது தொழிலின் காரணமாக அடிமைகளேயாவார்கள். ஏனெனில் இருவர்களும் அரசியல் முறைப்படி இரு இலாக்காவின் கடசி தர அடிமைகள்.

விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் கிராமாதிகாரிகள் ''தலைவிதி'' தாசீல்தார், ரிவின்யூ டிவிஷன் ஆபீசர் முதலியவர்களுடைய பேனா முனையில் அடங்கி உள்ளதாகும். இந்த கிராமாதிகாரிகளுடையது மாத்திரமல்லாமல் இவர்களது பின் சந்ததிகளுடைய ''தலைவிதி''யும் அது போன்றதேயாகும். கிராமாதிகாரிகள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு முறிச் சீட்டு எழுதிக்கொடுத்த அடிமை என்று சொன்னால் மறுப்பதற்கு போதிய காரணங்கள் கிடையாது. அது போலவே ஆரம்ப ஆசிரியர்கள் தலையெழுத்தும் இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல், ஜில்லா போர்ட் பிரசிடெண்ட், சேர்மென் ஆகியவர்கள் கை பேனா முனையில் தான் இருக்கிறது என்பது என் அபிப்பிராயம். இவர்களுக்கு அளிக்கப்படும் நற்சாட்சிப் பத்திரங்கள் எல்லாம் நல்ல நிபந்தனை இல்லாத அடிமைகளா என்பதைப் பொருத்ததே தவிர இவர்களின் நடத்தையையோ சாமார்த்தியத்தையோ பொருத்தது என்று அடியோடு சொல்லிவிட முடியாது.

ஆனால் இவர்கள் மேல் அதிகாரிகளால் யோக்கியமாய் கையாளப் படுவார்களேயானால் இவர்களும் நல்ல யோக்கியர்களாகவும் கெட்டிக்காரர்



RangaRakes tamilnavarasam.com

களாகவும் அமைவார்களானால் இவர்களால் ஜன சமூகத்துக்கு எவ்வளவோ நன்மை செய்ய வசதி இருக்கிறது. இவர்களது நிலைமை அடிமைத் தன்மையானது என்றாலும் இவர்களது பதவி நல்ல பொறுப்பும் பயனும் உள்ளது என்பதை நான் அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லுவேன் - இவர்கள் புது உலகத்தை சிருஷ்டிக்கலாம். கிராமாதிகாரி என்பவர் கிராம மக்களுக்கு தகப்பனார் ஆவார். சிட்டி பாதர் City Father என்பது போல் இவர்கள் Village Fathers வில்லேஜ் பாதர்ஸ் ஆவார்கள். அதுபோலவே ஆரம்ப ஆசிரியர்களும் பிள்ளைகளுக்கு வெளிச்சத்தை கொடுத்து அந்த வெளிச்சத்திலேயே வாழ்நாள் முழுதும் நடக்கும்படி செய்யக் கூடிய ஒரு உயர்ந்த தச்சன் ஆவார்கள். இவர்கள் இருவர்களும் இன்றைய உலக வாழ்வில் ஒரு முக்கியமான ஸ்தானம் வகிப்பவர்களாவார்கள்.

தோழர் வேலாயுதம் அவர்கள் இவ்விருவரும் கிராமத்தை எந்த எந்த வழியில் முன்னுக்குக் கொண்டு வரலாம் என்பதைப்பற்றி பலவழிகள் சொன்னார்கள் என்றாலும் நானும் ஒரு வழி சொல்லுகிறேன். அந்த ஒரே வழியின் மூலம் தான் கிராமங்களை முன்னுக்கு கொண்டுவரலாமே ஒழிய மற்ற எந்த வழிகளாலும் கிராமங்களை முன்னுக்குக் கொண்டு வர முடியாது என்பது என் அபிப்பிராயம்.

## கிராம முன்னேற்றம்

அந்த வழி என்ன வென்றால் நாட்டில் கிராமங்களே இல்லாமல் செய்து விடுவது தான். ஏனெனில் கிராமம் என்பது ஒரு வித வருணாச்சிரம தர்ம முறையில் கீழான ஜாதிக்கு சமமாய் இருப்பது. மேல் ஜாதியானுக்கு உழைத்துப்போட வேண்டியது எப்படி கீழ் ஜாதியானின் கடமையாக இருந்து வருகின்றதோ அதாவது கீழ்ஜாதியான் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் ஜாதி முறையில் கட்டுப்பட்டு இருப்பதின் காரணமாகவே எப்படி கீழ் ஜாதியான் என்பவன் உழைப்பவனாகவும் மேல் ஜாதியான் என்பவன் அவ்வுழைப்பை அனுபவிப்பவனாகவும் தானாகவே இருந்துவர முடிகின்றதோ அது போலவே பட்டணங்கள் மேல் ஜாதியாகவும் கிராமங்கள் கீழ்ஜாதியாகவும் இருந்து வருகின்றன. எப்படி கீழ் ஜாதிக்காக எவ்வளவு தான் பாடுபட்டு அவர்கள் முன்னேற்றத்துக்கு ஆக நாம் எவ்வளவுதான் உழைத்தாலும் அவர்கள் அடியோடு ஜாதிமதத்தை விட்டு விட்டு வேறு மதத்திற்கு போய்விட்டால் ஒழிய அவர்களது கீழ்ஜாதித் தன்மை ஒழிவதில்லையோ அதுபோல் மேல்ஜாதித்தன்மையும் ஒழிவதில்லையோ அது போலவேதான் கிராமங்கள் அடியோடு ஒழிந்து கிராமவாசி என்கின்ற மதம் மாறி பட்டணவாசி நகர வாசி என்கின்ற மதக்காரன் ஆனால் ஒழிய கிராமவாசி கஷ்டம் ஒழியப்போவதில்லை.

ஆதலால் கிராம அதிகாரிகளும் ஆரம்ப ஆசிரியர்களும் கிராம முன்னேற்றம் என்னும் துறையில் ஏதாவது உழைக்க வேண்டும் என்கின்ற ஆசை



இருந்தால் அவர்கள் கிராம ஜனங்களையெல்லாம் நயத்திலோ பயத்திலோ பட்டணங்கள் நகரங்கள் ஆகியவைகளுக்குத் துரத்திவிடுவதேயாகும்.

கிராம முன்னேற்றம் என்றால் என்ன? கிராம ஜனங்களுடைய முன்னேற்றம் என்பதேயாகும்.

கிராம ஜனங்கள் முன்னேற்றம் என்றால் என்ன? கிராம ஜனங்களுடைய சவுக்கியமேயாகும்.

கிராம ஜனங்களுடைய சவுக்கியம் என்றால் என்ன? கிராம ஜனங்கள் பட்டணத்தில் உள்ள ஜனங்கள் அடைகின்ற சௌகரியங்களையும் சுகங்களையும் அடையவேண்டும் என்பதாகவே ஆக வேண்டும் அல்லவா?

அப்படிக்கில்லாமல் கிராமத்துக்கு இட்டேரி போட்டு ஒரு கிணறு வெட்டிக்கொடுத்து ஒரு பள்ளிக்கூடம் கட்டிவைத்து கம்பு இப்படி விதைக்கிறது, சோளம் இப்படி அறுக்கிறது, விறகு இப்படி உடைக்கிறது, ஆடுமாடு இப்படி மேய்க்கிறது, பால் வெண்ணெய் இப்படி எடுத்து நகரத்துக்காரனுக்கு கொண்டு வந்து கொடுத்துவிட்டு போவது, சாணி இப்படி சேகரம் செய்வது, எருமுட்டை இப்படித் தட்டுவது, ஏர் இப்படி உழுவது, களை இப்படி எடுப்பது, தண்ணீர் இப்படிப் பாய்ச்சுவது, இப்படி அறுப்பது, அறுத்து பட்டணத்தானுக்கு இப்படிக் கொண்டுவந்து சேர்ப்பது என்பன முதலியவைகளை கிராம மக்களுக்குச் சொல்லிக்கொடுத்தால் போதுமா?

அதுபோலவே கைத்தொழில் விஷயத்திலும் இப்படிப் பஞ்சு அரைப்பது, இப்படிப் பஞ்சு கொட்டுவது, இப்படி ராட்டினத்தில் நூல் நூற்பது, இப்படி நூல் கொண்டுவந்து பட்டணத்தில் விற்றுவிட்டு உப்பு, மிளகாய், கடுகு, மிளகு, சீரகம் வாங்கிக்கொண்டு போவது என்பன போன்றவை சொல்லிக் கொடுத்தால் போதுமா?

இவற்றால் எல்லாம் கிராமவாசி சினிமா பார்க்க முடியுமா? நல்ல துணிமணி மேல்சட்டை போட முடியுமா? பார்க்கில் உலாவ முடியுமா? அவன் பெண்டு பிள்ளை S.S.L.C. இல்லாவிட்டாலும் தாய் பாஷையில் கையெழுத்துப் போடவாவது கற்றுக்கொள்ள முடியுமா? அல்லது கிராமவாசிகளுக்கு இந்த உரிமை, மனுவோ ''கடவுளோ''பிறவியிலேயே கொடுக்கவில்லையா? சூத்திரன், முதல் மூன்று வருணத்தானுக்கு உழைக்கவே பிறந்தான், சூத்திரன் பணம் வைத்துக்கொண்டிருந்தால் பலாத்காரமாய் மேல்ஜாதிக்காரன் பிடுங்கிக் கொள்ளலாம் என்கின்ற மனுதர்ம சாஸ்திரம் போல் கிராமவாசி பட்டணவாசிக்கு உழைத்துப் போடவே பிறந்தான், கிராமவாசி பணம் வைத்துக் கொண்டிருந்தால் வக்கீலும் வியாபாரியும் லேவாதேவிக்காரனும் ''கழுத்தைத்திருகி'' பிடுங்கிக் கொள்ளலாம் என்று ஏதாவது, கினு சாஸ்திரம் இருக்கிறதா?

கிராமவாசியை மனிதன் என்று இன்று யாராவது மதிக்கிறார்களா? அவர்களின் வாழ்க்கை மிருக வாழ்க்கையை விட வேறு வழியில் மாற்றம் இருக்கிறதா?



RangaRakes tamilnavarasam.com

இன்று இந்தியாவில் 100க்கு 8 பேர் படித்து இருக்கிறார்கள் என்றால் அந்த 8 பேர் யார்? கிராமவாசிகளுள்படவா விகிதாச்சாரம்? அவர்களிலும் 100க்கு 8 பேர் படித்து இருக்கிறார்கள்? மேல் ஜாதிக்காரர்கள் 100க்கு 100பேர், பட்டண வாசிகள் 100க்கு 50 அல்லது 60 பேர் ஆக இந்தக் கூட்டத்தாரின் எண்ணிக்கைப் பெருக்கத்தால்தான் எல்லா மக்களுக்கும் இந்தியாவில், 100க்கு 8 வீதம் கணக்கு ஆகிறதே தவிர கிராம வாசிகள் 100க்கு 2, 3 பேர் கூட படித்து இருக்கவில்லை.

ஒரு கிராமம் என்றால் ஒரு பணக்காரன் ஆதிக்கமும், மற்ற மக்களை அவன் அடக்கி ஆளுவதும் அந்த பணக்காரன் பட்டணத்தான்களுக்கு அடிமையாகி மற்ற கிராம ஜனங்களை அரித்துக் கொண்டு வந்து கொடுப்பதும் என்பதல்லாமல் வேறு என்ன நிலையில் கிராமம் இருக்கிறது என்று பாருங்கள்.

கிராமநிலை குப்பை மேடு, கக்கூஸ் ஜலதாரைநாற்றம், தரித்திரக்குச்சுகள் நோய் உருவங்கள், முட்டாள்தனமும் மூடநம்பிக்கையும் தாண்டவம் என்பவை போன்றவை அல்லாமல் வேறு என்ன காணமுடிகின்றது என்று நீங்களே யோசித்துப்பாருங்கள். நமது நாட்டு வரிகள் முழுவதும் கிராமவாசிகள் உழைப்பையே அஸ்திவாரமாய்க் கொண்டதாகும். அவர்களை நாம் மனுஷ வர்க்கத்தில் சேர்ப்பதில்லை. ஆனால் அவர்களுக்காகவே பாடுபடுகிறோம் என்று வேஷம் போட்டு நாம் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுகிறோம். நமது சுயராஜ்யத்தாலோ, நமது பூரண சுயேச்சையாலோ, சமூக முன்னேற்றத்தாலோ, ராமராஜ்யத்தாலோ கிராமவாசிகளுக்கு ஏற்படும் நன்மை என்ன? இதுவரை ஏற்பட்டதென்ன என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். இந்திய காங்கிரஸ் சர்வாதிகாரியான அல்லது சூஸ்தரதாரியான தோழர் காந்தியாரின் கிராம முன்னேற்ற திட்டம் என்ன என்று பாருங்கள்.

''கிராமவாசிகள் பெட்டிகளில் வெள்ளி நாணையம் இருக்கக்கூடாது'' என்று காந்தியார் பல தடவை சொல்லிஇருக்கிறார். நெல்லுக் குத்த வேண்டும், கருப்பட்டி காய்ச்ச வேண்டும், ராட்டினம் நூற்க வேண்டும் என்பது போன்ற திட்டங்கள் மூலம் 1000 வருஷத்துக்கு முன்னால் இருந்த உலகத்துக்கு போகச் சொல்லுகிறார். இதனால் கிராமம்தான் ஆகட்டும் கிராமவாசிதான் ஆகட்டும் எப்படி முன்னுக்கு வரமுடியும்? என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். நகரத்தில் பட்டணத்தில் இருக்கிற ஒரு தொழிலாளிக்கோ வீதி கூட்டுபவனுக்கோ உள்ள சவுகரியம் அனுபவம் கிராமாந்தர மிராசுதாரனுக்கு இல்லை என்றால் நீங்கள் நம்பவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

யந்திரசாலைத் தொழிலாளிகளைப்பற்றி பிரமாதமாகப் பேசுகிறோம்; அவர்கள் நன்மையே உலக நன்மை என்று பிரசாரம் செய்கிறோம். அவர் களாலேயே உலகம் இருக்கிறது என்று சொல்லுகின்றோம். யந்திரசாலைத் தொழிலாளிகளின் உழைப்பைவிட கிராமவாசிகள் உழைப்பு கொஞ்சமானதா? அல்லது யந்திரசாலைத் தொழிலாளிகளால் நாட்டுக்கு ஏற்படுகின்ற



நன்மையைவிட கிராமவாசிகளால் ஏற்படும் நன்மை குறைந்ததா? என்று யோசித்துப்பாருங்கள். ஆனால் அவர்கள் நிலைமையையும் கிராமவாசிகளின் நிலைமையையும் சிறிது ஒத்திட்டுப் பாருங்கள், கிராம வாசிகள் நிலை எவ்வளவு பரிதாபகரமானது என்று பாருங்கள்.

என்றாலும் ஒரு விஷயத்தில் நான் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். என்னுடைய ஆசை தானாகவே நிறைவேறி வருகிறது. அதாவது கிராமங்கள் தானாகவே அழிந்து வருகின்றன. கிராம ஜனங்கள் பட்டணங்களுக்குத் தானாகவே குடி ஏறி வருகிறார்கள். இந்த 25 வருஷத்தில் பழைய கிராமங்கள் ஒன்றுக்கு பகுதி ஆகிவிட்டன. பட்டணங்கள் ஒன்றுக்கு ஒன்றரை இரண்டு பங்குகூட ஜனப்பெருக்கம் ஆகி பெருத்துவிட்டன.

உதாரணமாக இந்த ஈரோட்டை எடுத்துக்கொள்ளுங்கள். 1910ல் (16000) பதினாறு ஆயிரம் ஜனங்கள் ஈரோட்டில் இருந்தார்கள். 1920ல் 22 ஆயிரம் ஜனங்கள் ஆனார்கள். 1930ல் 34 ஆயிரம் ஜனங்கள் ஆனார்கள். 1936ல் இப்போது கிட்டத்தட்ட (40000) நாற்பது ஆயிரம் ஜனங்கள் ஆகி இருப்பார்கள்.

இதுபோலவே நமது ஜில்லாவிலேயே கோயமுத்தூர், திருப்பூர், பொள்ளாச்சி முதலிய நகரங்கள் இரட்டிப்பு ஆகிவருகின்றன. இந்த ஜனங்கள் எங்கிருந்து உற்பத்தி ஆனார்கள்? சொல்லுங்கள் பார்க்கலாம். கிராமங்கள் காலி ஆகிவருகின்றன. கிராம ஜனங்களுக்கு பட்டண வாசத்தில் மையல் ஏற்பட்டுவிட்டது. இனி அதைத் தடுக்க யாராலும் ஆகாது என்பதை மனதில் வையுங்கள்.

ஒரு சமூகம் முன்னேற்றம் அடைந்தது என்றால் அந்த சமூகத்தில் எப்படி கீழ் ஜாதி ஈன ஜாதி மக்கள் என்பவர்கள் இருக்கக் கூடாதோ அதுபோலவே ஒரு நாடு முன்னேற்றம் அடைந்தது என்றால் அந்த நாட்டில் கிராமங்கள், பட்டிகள், தொட்டிகள் இருக்கக்கூடாது என்பது என் கருத்து. நாடெல்லாமே நகரங்களாய் இருக்க வேண்டும். சூரியன், சந்திரன், தென்றல் எப்படி எல்லோருக்கும் பொதுவோ அப்படியே பொதுவாழ்க்கை போக்கியங்கள் எல்லோருக்கும் பொதுவாய் இருக்க வேண்டும்; ''பட்டணத்தில் இருப்பதால் மாத்திரம் தான் அனுபவிக்க முடிகின்றது, கிராமத்தில் இருப்பதால் அனுபவிக்க முடிகிறதில்லை'' என்கின்ற நிபந்தனை இருக்கக்கூடாது.

சமதர்மம் ஓங்கும் நாடுகளில் கிராமம் என்பதாக ஒன்று இல்லை. வேண்டுமானால் ஒரு நகரத்தில் 25 லக்ஷம் பேர் இருக்கலாம், மற்றொரு நகரத்தில் 250 பேர் இருக்கலாம். பாடும் அனுபவமும் இருவருக்கும் ஒரே மாதிரி தான். இந்த சௌகரியம் செய்ய பொது உடமையோ, சமதர்மமோ, சட்ட மறுப்போ, ஒத்துழையாமையோ, பூரண சுயேச்சையோ தேவை இல்லை; ஜனப்பிரதிநிதிகள் ஜனத்தலைவர்கள் யோக்கியர்களாக இருந்தால் போதும். அவர் அப்படி இல்லாவிட்டாலும் ஆரம்ப ஆசிரியர்களும்



RangaRakes tamilnavarasam.com

கிராம அதிகாரிகளுமாவது இந்த வேலை செய்தால் போதும். நீங்கள் ஒருவரும் செய்யாவிட்டாலும் இயற்கை செய்யப்போகிறது; செய்து கொண்டு இருக்கிறது. அதை தடுக்காமல் இருந்தாலும் போதும்.

**கல்வி**

கல்வியைப்பற்றி தோழர் துரைசாமி பிள்ளை அவர்கள் பேசினதைக் கேட்டீர்கள்.

நமது நாட்டு கல்விக்கு லட்சியமே இல்லை. நமது வாழ்வுக்கே லட்சியமில்லை என்பதோடு சுயநலப் போட்டியும் பேராசையுமே ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் அடிமைப் படுத்திக்கொண்டிருக்கிறது என்றால் கல்விக்கு என்ன லட்சியம் இருக்கப் போகிறது? என்ன படிப்பது? என்பதை எத்தனை பண்டிதர்கள் கல்வியில் பெரிய பட்டம் பெற்ற மேதாவிகள் உணர்ந்திருக்கிறார்கள்?

ஏதோ படிப்பது, என்னமோ வாய்ப்பது, வாய்த்ததை பிடித்துக்கொண்டு சப்புச் சப்பென்று சப்பி அதன் உயிரை வாங்கி கடைசியில் ''ஓய்வு'' எடுத்து சாவது என்பதல்லாமல் இன்றைய கல்விக்கு என்ன லட்சியமோ மரியாதையோ பயனோ இருக்கிறது என்று யோசித்துப்பாருங்கள்.

எல்லா மக்களுக்கும் கல்வி பரவுவது நம் நாட்டில் பொது உடமைக் கொள்கை பரப்புவது போன்ற அவ்வளவு கஷ்டமான காரியமாய் இருக்கிறது.

''எல்லோருக்கும் உள்ள சொத்துக்களை சரியாய் பங்குபோட்டுவிட்டால் அப்புறம் பணக்காரன் ஏழை இருக்கமாட்டானே, உலகம் ஒழுங்காய் நடவாதே'' என்று சொல்லிகின்ற வாதம் தான் இன்று கல்விக்கும் ரகசியத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது. ஏனென்றால் ''எல்லாரும் படித்துவிட்டால் பிறகு முட்டாள் யார், புத்திசாலி யார் என்கின்ற பேதமே இல்லாமல் போய்விடுமே, படித்தால் பாடுபடாமல் வாழ்க்கை நடத்தும் சவுகரியம் போய்விடுமே'' என்று கருதியே கல்வியை இந்த நாட்டில் இவ்வளவு மோசமாக்கிவிட்டார்கள். மேல் நாடுகளில் கல்விக்கு இப்படிப்பட்ட நிர்ப்பந்தம் கிடையாது; யாவருக்கும் ஒரு அளவு கல்வி சுதந்திரமாய் நிர்ப்பந்தமாய் வினியோகிக்கப்படுகிறது?

மற்றும் இங்கு கல்வி பிழைப்பிற்கு வழியே தவிர அறிவுக்கு வழியல்ல என்கின்ற தன்மையில் வந்தவிட்டதால் கல்வி இவ்வளவு பூஜ்ஜியமாகப் போய்விட்டது. ஆதலால் எல்லா மக்களுக்கும் கல்வி பரவ வேண்டுமானால் கிராமங்களை ஒழித்தாலே போதுமானது. பட்டண வாழ்க்கையே ஒருவிதமான கல்வி ஸ்தாபனம் என்று சொல்லலாம். கிராம வாழ்க்கையே ஒரு விதமான மௌடீக ஸ்தாபனம் என்றும் சொல்லலாம்.

பட்டண வாசம் அறியாமையைப் போக்குவது மாத்திரமல்லாமல் ஏழ்மையையும் போக்கும், நோயையும் கூட போக்கும் என்று சொல்லலாம்.



ஆகவே மக்களின் இன்றைய பெருவாரியான குறைகளுக்கு கிராம வாசம் ஒரு காரணமாகும் என்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள்.

தோழர்களே! முடிக்கப்போகிறேன். கிராமாதிகாரிகளுக்குப் பரீக்ஷை என்று இம்மாதிரி ஒரு ஸ்தாபனம் வைத்து பயிற்சி கொடுத்து வருவது மிகவும் பாராட்டத்தக்கதும் பயன்படத்தக்கதுமான காரியம். இதைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

கிராமாதிகாரிகளும் உபாத்தியாயர்களும் அரசியலில் சம்மந்தப் படாதீர்கள். உங்களுக்கும் அரசியலுக்கும் சம்மந்தமில்லை. உங்களுக்குக் கஷ்டம் வந்தால் சர்க்கார்தான் காப்பாற்றவேண்டும். அவர்கள் தயவிலேயே இருக்க வேண்டியவர்களாவீர்கள். நீங்கள் ஒரு அளவுக்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்களே ஆவீர்கள். சில கிராமாதிகாரிகள் என் பேச்சைக் கேட்டு அரசியலில் தலையிட்டு வேலை போய் உள்ளூரில் போட்டி ஏற்பட்டு 4000, 5000 செலவு செய்து நியூ ஜெண்ட்கிராண்ட் வைத்து மன்னிப்பு எழுதிக் கொடுத்து தப்பவேண்டியதாயிற்று. உங்களுக்கு கோர்ட்டோ விசாரணையோ ஒன்றும் கிடையாது. மேல் அதிகாரிகளின் இஷ்டம்தான். ஆகையால் நீங்கள் கிராமாதிகாரிகளாகவோ உபாத்தியாயர்களாகவோ இருக்கும் வரை உங்கள் வேலைகளைக் காப்பாற்றிக்கொள்ளுவதில் கவலையாயிருங்கள். உங்கள் ஒப்பந்தம் எஜமானுக்கு கீழ்ப்படிந்திருப்பதுதான். அந்த ஒப்பந்தத்தைக் காப்பாற்றிக்கொள்ளுவதில் உங்கள் உத்தியோகத்தின் பெரும் பகுதியை செலுத்துங்கள்.

ஒரு போலீசுக்காரனுக்கு ஒரு சூப்பிரண்டு ஒருவனை தடியால் அடிக்கும்படி உத்திரவு செய்தால் அந்த போலீசுக்காரன் அடிப்பது நியாயமா அநியாயமா அது ''தேசீயமா'' ''பரதேசீயமா'' என்று யோசிக்கலாமா? யோசித்தால் நாணையத்தையும் கடமையையும் செய்ததாகுமா? ஒப்பந்தப்படி நடக்க வேண்டாமா? அதுபோல் தான் உங்கள் நிலையும் என்பதை எப்போதும் மனதிலிருத்துங்கள்.

மற்றுமொருமுறை என்னை நீங்கள் தலைவராகத் தெரிந்தெடுத்ததற்கு நன்றி செலுத்திவிட்டு நான் சொன்னவைகள் என்னுடைய அபிப்பிராயம் என்றும் அதை நீங்கள் நன்றாக ஆலோசித்துப் பார்த்து தள்ளுவதை தைரியமாய் தள்ளி, கொள்ளுவது உண்டானால் உங்கள் சௌகரியம், சந்தர்ப்பம் ஆகியவைகளை கவனித்து கொள்ளுங்கள் என்றும் கேட்டுக் கொண்டு எனது முடிவுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*குறிப்பு: 31.10.1936 ஆம் நாள் ஈரோடு கிராம உத்தியோகஸ்தர்கள் பயிற்சி சாலையின் 6-ஆவது ஆண்டு விழாவில் தலைமையேற்று ''கிராம அதிகாரிகளும் ஆரம்ப ஆசிரியர்களும்'' என்ற பொருள்பற்றி ஆற்றிய உரை.*

குடி அரசு - சொற்பொழிவு - 22.11.1936



RangaRakes tamilnavarasam.com

# ஐவர் அறிக்கை வெறும் புரட்டு

தோழர்கள் ஜவஹர்லால், பட்டேல், ராஜேந்திர பிரசாத், அப்துல் கபூர்கான், ஜம்நாலால் பஜாஜ் ஆகிய ஐவர்கள் காங்கிரசுக்கு அபேட்சகர்கள் நிறுத்தும் விஷயத்தில் யோசனை கூறுகிறார்கள். அதாவது

''இதற்கு முன் காங்கிரசுக்கு விரோதமாயிருந்தவர்கள் வரப்போகும் மாகாண அசெம்பளிக்கு அபேட்சகர்களாக சில காங்கிரஸ் கமிட்டி தெரிந்தெடுத்திருக்கிறது''

என்று குறிப்பிட்டு உண்மையை ஒப்புக்கொண்டு விட்டு இனி அப்படிப்பட்டவர்களை தெரிந்தெடுக்கக்கூடாது என்றும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

இந்த எச்சரிக்கை மாகாண அசெம்பளிக்கு மாத்திரமாய் இருக்கும் என்றுதான் கருதவேண்டியிருக்கிறது. ஏனெனில் அந்தப்படி குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியே வைத்துக்கொண்ட போதிலும் டாக்டர் சுப்பராயன் போன்றவர்களை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் அசெம்பளிக்கு நிறுத்துவது இந்த அறிக்கைப்படி யோக்கியமாகுமா என்று கேட்க ஆசைப்படுகிறோம்.

ஏனெனில் டாக்டர் சுப்பராயன் அவர்கள் காங்கிரசுக்கு விரோதமாய் வேலை செய்தவர்கள் கூட்டத்தில் சேர்ந்தவர் என்பது மாத்திரமல்லாமல் காங்கிரசுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தவர் என்று காங்கிரஸ்காரர்கள் சமீப காலம் வரை கூப்பாடு போட்டு வைது கொண்டிருந்திருக்கிறார்கள். இப்படி இருக்கும்போது அவரை காங்கிரசு சார்பாக நிறுத்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்திருந்தால் அதை இந்த தலைவர்களும் ஒப்புக் கொள்வதானால் இந்த அறிக்கை யோக்கியமான அறிக்கை என்று சொல்லுவதா அல்லது பொதுஜனங்களை ஏமாற்றுவதற்காக அதாவது பொதுஜனங்கள் முன்னிலையில் தாங்கள் யோக்கியர்கள் என்று காட்டிக் கொள்ளுவதற்கு ஆக செய்யப்பட்ட பித்தலாட்ட அறிக்கை என்று சொல்லுவதா என்பது நமக்கு விளங்கவில்லை. மற்றும் இதுவரை ஸ்தல ஸ்தாபனங்களுக்கு காங்கிரஸ் சார்பாய் நிறுத்தப்பட்ட அபேட்சகர்களில் 100-க்கு 90 பேர்கள் இந்த மாதிரி அதாவது காங்கிரசை வைதுகொண்டும்



அதற்கு நேர் விரோதமாய் வேலை செய்து கொண்டும் இருந்தவர்களே ஒழிய மற்றபடி காங்கிரசுக்கு உழைத்தவர்களோ காங்கிரஸ் கொள்கையில் இருந்தவர்களோ என்று யாரும் சொல்ல முடியாது.

ஆகவே இதுவரை காங்கிரஸ் ஜெயித்தது என்று சொல்லப்பட்டு வந்ததெல்லாம் பொது ஜனங்களுக்கு கணக்கு காட்டவே ஒழிய மற்றபடி காங்கிரசின் உண்மையான பலத்தை காட்டுவதற்கு அல்ல என்பதே நமது அபிப்பிராயம். இனியும் காங்கிரஸ் வெற்றிபெற வேண்டுமானால் இந்த மாதிரி காரியத்தால் தான் காட்ட முடியுமே ஒழிய மற்றபடி உண்மையான காங்கிரஸ் கொள்கைக்காரர்கள் என்பவர்களோ, காங்கிரஸ்காரர்கள் என்பவர்களோ 100க்கு 10 வீதம் கூட வெற்றிபெற முடியாது என்று சபதம் கூறுவோம்.

**குடி அரசு - கட்டுரை - 29.11.1936**



RangaRakes tamilnavarasam.com

# செட்டி நாட்டில் சமதர்மம்

செட்டிநாட்டு வாலிபர்களுக்கு இன்று ஒரு புதிய ஞானம் உதயமாகி இருக்கிறது. அதாவது ''பணக்காரர்கள் ஆணவம் அடக்கப்பட வேண்டும்'' என்பது. இவர்களை நாம் ஒன்று கேட்கின்றோம். என்னவென்றால்,

இன்று செட்டிநாட்டில் 96 கிராமத்தில் உள்ள செட்டியார் பிள்ளைகளுக்கும் தங்கள் தங்களைப் பொறுத்தவரை பணக்காரர்கள் என்பதல்லாமல் வேறு வகையில் யோக்கியதை உள்ள வாலிபர்கள் எத்தனை பேர்? ஏழை மக்களுக்கு அனுகூலமாய் இருந்து வாழ்க்கை நடத்துகிறவர்கள் எத்தனை பேர்? இவர்கள் இத்தனை பேரும் இன்று வாழ்வதும், உடமை வைத்திருப்பதும் எதனால்? எந்த மாதிரியான திருப்பணியில் என்பதேயாகும். பணக்காரர்களை வையும் பத்திரிகைக்காரர்களும் பணக்காரர்கள் வாயல் கடந்து பல்லைக் காட்டிப் பெற்றுவந்த பணங்களாலும் பிடித்துவந்த சந்தாதாரர்களாலும் நடைபெறும் பத்திராதிபர்களேயல்லாமல் தங்களது கொள்கை பலத்தால்-தாங்கள் எழுதுந் திறந்தால் செல்வாக்குப் பெற்று தன் காலில் நிற்கும் தகுதியில் இருப்பவர்களா? என்று கேட்கின்றோம்.

ராஜா சர். அண்ணாமலைக்கு பத்து கார் இருந்தால் தனக்கு ஒரு கார் இருப்பவர்களும் மற்றவருக்கு 10 லக்ஷமிருந்தால் தங்களுக்கு இரண்டு லக்ஷம் ஒரு லக்ஷம் 50 ஆயிரம் இருப்பவர்களும் மேலவனைப் பார்த்து பொறாமைப்படும் கீழவனும் என்று சொல்லத் தக்கவர்கள் அல்லாமல் ஏழை எளியவர்கள் என்கின்ற கூட்டத்தில் சேர்ந்தவர்கள் யார்? எளிய வாழ்க்கையில் வாழ்பவர்கள் யார் என்று கேட்கின்றோம்.

பணக்காரர்கள் ஒழிக்கப்பட வேண்டியது என்பதிலும் அவர்கள் ஒரு காலத்தில் ஒழியத்தான் போகிறார்கள் என்பதிலும் நமக்கு மலைப்பு இல்லை. ஆனாலும் செட்டியார் பிள்ளைகள் ''பணக் கொழுப்பு'', ''பணத்திமிர்'' என்று பேசுவது தன்னை அறியாத்தனம் என்றுதான் சொல்ல ஆசைப்படுகிறோம். எப்படியோ ஒரு வழியில் தங்கள் தங்களையே கேவலப்படுத்திக்கொள்ள தக்க ஒரு புது உணர்ச்சி அச்சமூகத்தில் தோன்றியதற்கு நாம் மகிழ்ச்சியடைய வேண்டியதேயாகும்.



ஆனால் இந்த உணர்ச்சி இனியும் எத்தனை நாள் பொறுத்து செட்டியார் பிள்ளைகளை மண்வெட்டி எடுக்கவும் கோடாலி எடுக்கவுமான சரீரப் பிரயாசை வேலை அதாவது உண்மை உழைப்பாளி நிலைக்கு கொண்டு வந்து விடுமோ, அல்லது எவரும் பொறாமை அதாவது பெரிய பணக்காரனைப் பார்த்து சின்னப் பணக்காரன் காய்ந்து தீய்ந்து விழுகும் உணர்ச்சியாகி மங்கிவிடுமோ என்று பார்ப்போம்.

**குடி அரசு - கட்டுரை - 29.11.1936**



RangaRakes tamilnavarasam.com

# காலித்தனம்

காங்கிரசுக்கு கொள்கையற்று நாணையமற்று செலவுக்கு பணமும் அற்றுப்போன பின்பு அது தனது உயிர் வாழ்வுக்கு காலித்தனத்தையே குறையா பொக்கிஷமாய்க் கருதி இருக்கிறது என்பதை சமீப தேர்தல்களில் அவர்கள் நடந்துகொண்ட மாதிரிகளால் நன்றாய் உணர்ந்து கொண்டோம்.

இது விஷயமாய் சர்க்காருக்கும் முன்பு பல தடவைகளில் வலியுறுத்தி பத்திரிகைகளில் எழுதி இருக்கிறோம். சர்க்கார் சிறிதும் கவனித்ததாக தெரியவில்லை.

சமீபத்தில் மந்திரிகள் சென்ற இடங்களிலும் தேர்தல் கூட்டங்கள் நடந்த இடங்களிலும் தேர்தல்கள் நடந்த இடங்களிலும் காங்கிரசுக்காரர்கள் நடந்துகொண்ட காலித்தனங்கள் சர்க்காரார் அறிந்திருக்கமாட்டார்கள் என்று யாராலும் சொல்லி விட முடியாது.

அதிகாரிகள் பெரும்பாலோர்கள் பார்ப்பனர்கள் ஆனதினாலும் குறிப்பாக போலீஸ் இலாக்கா பார்ப்பன ஆதிக்கமாய் இருந்து வருவதாலும் காங்கிரஸ் பார்ப்பன ஆதிக்க ஸ்தாபனமானதினாலும் காங்கிரசுக்காரருக்கு காலித்தனம் செய்ய வசதியும் தைரியமும் அதிகமாக இருந்து வருகிறது என்று கருதவேண்டி இருக்கிறது.

ராமநாதபுரம் ஜில்லாவில் விருதுநகர் தேர்தலிலும் தேர்தல் கூட்டங்களிலும் காலிகள் செய்த அட்டகாசத்திற்கு அளவே இல்லை என்பதோடு எல்லாப் பொறுமைகளும் தீர்ந்து போக வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டது.

சிறு பையன்களைப் பிடித்து கொடிகளை கொடுத்து எதிர் அபேட்சகர்களை வையச் சொன்ன காட்சி மிகவும் சகிக்கக் கூடாதாகவே இருந்திருக்கிறது என்று தெரிகிறது.

கூட்டங்களில் அவர்களைக் கொண்டு தொல்லையும் கலவரமும் செய்த காட்சியும் கடுமையான பொறுமை காட்டாமல் இருந்திருந்தால் கொலைகளே நடந்திருக்கும்படியான நிலையை உண்டாக்கின.

இவற்றை சர்க்காரார் கவனியாமலிருப்பதன் இரகசியம் இன்னது என்று நமக்கு இன்னும் விளங்கவில்லை.



ஆகையால் இனியாவது அரசாங்கம் சற்று கவலை கொண்டு கூட்டங்களிலும் தேர்தல்களிலும் காலித்தனம் நடைபெறாமல் இருப்பதற்கு ஏதாவது முயற்சி செய்வார்கள் என்று எண்ணுகின்றோம்.

**குடி அரசு - கட்டுரை - 29.11.1936**



RangaRakes tamilnavarasam.com

# கட்சித் துரோகம்

ஜஸ்டிஸ்கட்சியின் உப்பைத் தின்றவர்களில் பெரும்பாலோருக்கு நன்றி விசுவாசம் அறியும் இயந்திரம் அழிந்துபோவதாகத் தெரிகிறது.

கடலூர் ஜில்லாபோர்ட் பிரசிடெண்டாய் இருந்த தோழர் சீதாராம ரெட்டியார் அவர்களின் ஒவ்வொரு மயிர்க்காலும் ஜஸ்டிஸ் உப்பைத் தின்றே ஊறியதாகும். அவர் தனது தகுதிக்கு பலபாகம் மேற்பட்ட பயன்களை அக்கட்சி மூலம் அடைந்தார். கடசியாக மீ ஆயிரக்கணக்கான சம்பளமுள்ள உத்தியோகமும் 4, 5 வருஷங்களாக ஏன்? 6, 7 வருஷங்களாக அனுபவித்து வந்தார். அப்படிப்பட்டவர் உத்தியோகம் வாய்தா தீர்ந்த எட்டாம் நாளே ஜஸ்டிஸ்கட்சிக்கு எதிர்க்கட்சியில் சேர்ந்து பார்ப்பனர்களுக்கு அடிமையாகி பட்டத்தையும் விட துணிந்து ஜஸ்டிஸ்கட்சியை ஒழிக்க முயற்சித்து மடிகட்டி நிற்கிறார். காங்கிரசில் காங்கிரசுக்கு விரோதமாய் இருந்தவர்களை சேர்க்கக் கூடாது, அபேட்சகர்களாய் நிறுத்தக்கூடாது என்று ''ஐவர்'' அறிக்கை இருந்தும் நேற்றுவரை காங்கிரசை வைதுகொண்டு அதன் எதிர்க்கட்சியில் இருந்து வந்த ஒரு உத்தமரை - அதுவும் தான் உப்புத் தின்று வளர்ந்து வந்த கட்சிக்கு துரோகம் செய்துவிட்டு வந்த ஒரு ''பெரியாரை'' எப்படிச் சேர்த்துக்கொண்டார்கள் என்று பார்த்தால் காங்கிரஸ் யோக்கியதையும் மாஜி ராவ்பகதூர் ஜஸ்டிஸ் தூண்கள் யோக்கியதையும் விளங்கும்.

**குடி அரசு - கட்டுரை - 29.11.1936**



# சமதர்மம்

சமதர்மிகளுக்கு ஜஸ்டிஸ் கட்சியில் இடமுண்டா? என்பது தோன்ற தோழர் திரு.வி.க. முதலியார் அவர்கள் தமது ''நவசக்தி'' தலையங்கத்தில் குறிந்திருந்ததற்கு விடையாய் சென்றவாரக் ''குடி அரசி''ல் ''சமதர்மமும் முதலியாரும்'' என்னும் தலைப்பில் சில குறிப்புகள் எழுதி இருந்ததை வாசகர்கள் உணர்ந்திருப்பார்கள்.

இவ்வார ''நவசக்தி''யில் தோழர் திரு.வி.க. முதலியார் அவர்கள் ''சமதர்மிகளுக்கு ஒரு விண்ணப்பம்'' என்னும் தலைப்பில் நீண்ட குறிப்புகள் பல தலையங்கமாகவே குறிப்பிட்டிருக்கிறார். அவற்றை வாசகர்களின் தெளிவுக்காக மற்றொரு பக்கம் பிரசுரித்திருக்கிறோம்.

அவற்றில் பல விஷயம் சமதர்மக்காரர்கள் என்பவர்கள் ஞாபகத்திலிருத்த வேண்டியவை உள்ளன எனினும் அவற்றில் தலையாயவை ஃ-

''சமதர்மிகள் என்று தங்களைக் கருதிக்கொள்ளுவோர் சிலர் கனவு உலகில் வசிப்பவராகக் காணப்படுகிறார். பல்வேறு காலங்களில் பலவேறு காரணம் பற்றி பலவாறு எழுதிய நூலை மட்டும் படித்து இந்தியாவின் இயற்கை நிலை, மக்கள் நிலை முதலியவற்றை யோராது மனம் போனவாறு சிலர் பேசுவதாலும், எழுதுவதாலும் இந்தியாவுக்கு எவ்வழியிலும் நல்ல பயன் விளையாது. இவர்கள் எழுத்தும் பேச்சும் உண்மை சமதர்மிகளுக்கு இடருஞ் செய்யும். புத்தக உலகம் வேறு; இயற்கை உலகம் வேறு. இவ்வுண்மையை இளஞ் சமதர்மிகள் உணர்ந்து நடப்பது ஒழுங்கு''.

''நமது நாட்டுக்குரிய சமதர்மம்................... ஜாதி, மதம், நிறம், மொழி, நாடு முதலிய வேற்றுமைகளைக் களைவது. பொருளாதார சமதர்மத்தை அறிவுறுத்துவது......''

''இளஞ் சமதர்மிகள் கால தேச வர்த்தமான நிலையைக் கருதிச் சேவை செய்வார்களாக''

என்பவைகளாகும். மற்றும் பலவும் கவனிக்கத் தக்கவைகளே.

இந்தியாவில் உழைப்பாளி சுக போகி என்கின்ற இரண்டு வகுப்புகள் இருக்கின்றன. அவையே பெரிதும் ஏழை பணக்காரன் என்பதாகப் பரிணமிக்கச் செய்கின்றன.



RangaRakes tamilnavarasam.com

உண்மையான சமதர்மத்துக்கு ஒருவன் உழைப்பதானால் அவன் முதலில் உழைக்கும் வகுப்பு ஒன்று, (உழைப்பின் பயனை அனுபவித்துக் கொண்டு) சுக போகியாய் இருக்கும் வகுப்பு ஒன்று என்று இருப்பதை ஒழிக்க வேண்டியதேயாகும். அடியோடு கல்லி எறிய வேண்டியதேயாகும். இதைச் செய்யும் வரையில் எவ்வித பொருளாதார சமதர்மத் திட்டமும் அரை வினாடி அளவும் நிலைக்காது என்பதை சமதர்மம் பேசுவோர் - நினைப்போர்- ஆசைப்படுவோர் மனதிலிருத்த வேண்டும்.

பணக்காரனை மாத்திரம் குறைகூறும் சமதர்மம் வெறும் பொறாமைச் சமதர்மமேயாகும்.

ஏன் அப்படிச் சொல்லுகிறோம் என்றால் இந்திய சமூக அமைப்பானது பிறவியின் காரணமாகவே ஏழையையும் பணக்காரனையும் அல்லது உழைப்பாளியையும் சுகபோகியையும் உண்டாக்கி இருக்கிறது.

உதாரணமாக இன்றைய சுகபோகிகள் எல்லாம் மேல் ஜாதிக்காரர்களாகவும் பாட்டாளிகள் அல்லது உழைப்பாளிகள் எல்லாம் கீழ் ஜாதிக் காரர்களாகவும் இருப்பதைக் காணலாம்.

அதுபோலவே பணக்காரர்களும் பெரிதும் மேல் ஜாதிக்காரர்களாகவும், ஏழைகள் பெரிதும் கீழ் ஜாதிக்காரர்களாகவும் ஜன சங்கைப் பொதுவில் இருப்பதைக் காணலாம்.

இந்தப்படியாக இருப்பதற்கு முக்கிய காரணமாய் இருக்கும் பிறவி ஜாதிப் பாகுப்பாட்டை உடைத்து நொறுக்காமல் எப்படி சமதர்மத்தை - பொருளாதார சமதர்மத்தைத்தான் ஆகட்டும் ஏற்படுத்தவோ நிலைக்கச் செய்யவோ முடியும் என்பதை யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம்.

இன்றைய தினம் ஏதோ ஒரு அரசன் மூலமோ அல்லது ஒரு சர்வாதிகாரியின் மூலமோ இந்தியாவில் பொருளாதார சமதர்மப் பிரகடனம் ஏற்பட்டு விட்டதாகவே வைத்துக் கொள்ளுவோம். அந்தப்படியே கணக்குப் பார்த்து இந்திய மக்கள் எல்லோருக்கும் இந்தியப் பொருள்களை பங்கிட்டுக் கொடுத்து விட்டதாகவே வைத்துக் கொள்ளுவோம்.

பிறகு நடப்பதென்ன?

என்பதை யோசித்தால் என்ன விளங்கும்? மறுபடியும் பழய நிலையே ஏற்படுவதற்கு ஆன காரியங்கள் நிகழ்ந்து கொண்டே போய் ஒரு சில வருடங்களுக்குள் பொருளாதார உயர்வு தாழ்வுகள் தானாகவே பழயபடி ஏற்பட்டு விடும் என்பதில் சிறிதும் ஆக்ஷேபணை இருக்காது.

ஏனெனில் பிரகடனத்தால் பொருளாதார சமதர்மம் தான் செய்யப்படுமே ஒழிய அதுவும் தற்கால சாந்தியாய் அல்லாமல் சமூக சமுதாய சமதர்மம்



ஏற்பட இடமில்லை. அது பிறவியின் பேராலேயே தளுங்கிவிடும். அது தனது காரியத்தை எப்படிப்பட்ட பொருளாதார சமதர்மத்திலும் செய்து கொண்டுதான் இருக்கும்.

அதுவும் மதத்துக்கும் ஜாதிக்கும் பெயர்போன இந்திய மக்களுக்குள் - கல்வி அறிவற்று மூடநம்பிக்கையில் ஆழ்த்தி வைக்கப்பட்டிருக்கும் இந்திய பாமர மக்களுக்குள் பிறவி பேதம் நீக்கப்படாதவரை எப்படிப்பட்ட பொருளாதார சமதர்மமும் கடுகளவு மாற்றத்தையும் உண்டாக்கிவிடாது.

உதாரணமாக நாட்டுக் கோட்டையார்கள் 10 லக்ஷக்கணக்கான பணம் சேகரித்தும் அவர்களது சேகரம் பெரிதும் கோவில் கட்டவும் சடங்கு செய்யவும் ''மேல்'' ஜாதியாகக் காட்டிக் கொள்வதிலுமே பெரும் பாகம் பாழாகி கூடிய சீக்கிரம் சாதாரண நிலைக்கு வரத்தக்க வண்ணம் சரிந்து கொண்டிருக்கிறதைப் பார்க்கிறோம்.

மற்றும் பார்ப்பனரல்லாதார் சமூகத்தில் பலர் கீழ் ஜாதிக்காரர்கள் என்பவர்கள் எவ்வளவு செல்வம் தேடியபோதிலும் ஜாதிமத சம்பிரதாயம் காரணமாக அடிக்கடி சருக்கி விழுந்துகொண்டு தான் இருக்கிறார்கள். அவ்வளவோடு மாத்திரமல்லாமல் சமூகத்தில் தாழ்ந்த நிலையில் தான் இருக்கிறார்கள். செல்வவான்களாய் கோடீஸ்வரர்களாய் இருந்தும் கீழ்ஜாதிக்காரர்களாய்தான் இருந்து வருகிறார்கள்.

சமதர்ம வாசனையே சிறிது கூட இல்லாதவர்களும் சமதர்மத்துக்கு பிறவி எதிரிகளாய் இருப்பவர்களுமான பார்ப்பனர்கள் எவ்வளவு ஏழைகளாகவும், எவ்வளவு பாப்பர்களாகவும், எவ்வளவு சோம்பேறிகளாகவும், உழைக்காதவர்களாகவும் இருந்தாலும் மக்களின் சராசரி வாழ்க்கையை விட மேலாகவும் மனித சமூகத்தில் மேல் நிலையை உடையவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

இதனாலேயே பார்ப்பனர்கள் சமுதாய சமதர்மக்காரரைக் கண்டால் காய்ந்து விழுவதும் சமுதாய சமதர்ம இயக்கங்களை ஒழிக்க சூழ்ச்சி செய்வதுமாய் இருப்பதோடு பொருளாதார சமதர்மக்காரர்கள் என்பவர்களை வரவேற்பது போலவும் பொருளாதார சமதர்ம ஸ்தாபனங்களை ஆதரிப்பவர்கள் போலவும் காட்டிக் கொள்ளுகிறார்கள்.

ஏனெனில் வெறும் பொருளாதார சமதர்மம் பார்ப்பனனை ஒன்றும் செய்து விடாது; மேலும் பார்ப்பானுக்கு பொருளாதார சமதர்மம் அனுகூல மானதேயாகும். எப்படியெனில் இப்போது அவனால் பிச்சை வாங்கப்படும் நபர்கள் ஒரு பங்காய் இருந்தால் பொருளாதார சமதர்மத்தில் பார்ப்பானுக்கு பிச்சை கொடுக்கும் நபர்கள் 10 பங்காக ஆகிவிடுவார்கள். அப்போது அவனுக்கு (பார்ப்பானுக்கு) சமதர்மத்தில் பிரித்துக் கொடுக்கும் சொத்துக்கள் தவிர மற்றும் ஜாதி மத சடங்குகள் காரணமாக அதிகப் பிச்சையும் சேர்ந்து



RangaRakes tamilnavarasam.com

ஒவ்வொரு பார்ப்பனனும் ஒவ்வொரு சங்கராச்சாரி, மடாதிபதி ஆக சுலபத்தில் மார்க்கம் ஏற்பட்டு விடும். இந்த நிலை மறுபடியும் வெகு சீக்கிரத்தில் பழைய நிலை அதாவது இன்றைய நிலையை உண்டாக்கி விடும்.

இதனால் தான் தோழர் முதலியார் அவர்களும் **''நமது நாட்டுக்குரிய சமதர்மம், ஜாதி மதம் வேற்றுமைகளைக் களைவது''** என்று குறித்திருக்கிறார் என்று கருதுகிறோம்.

இந்தியாவில் ஜாதியும் மதமும் சிறப்பாக ஜாதி ஒரு கடுகளவு மீத்தப்பட்டாலும் எப்படிப்பட்ட சமதர்மமும் நிமிட நேரத்தில் கவிழ்ந்து போகும் என்பதை சமதர்மிகள் என்பவர்கள் கருத்திலிருத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

இரண்டையும் ஏககாலத்தில் ஏன் செய்யக் கூடாது? என்பது சிலருக்கு வினாவாய் இருக்கலாம். இரண்டையும் ஏககாலத்தில் செய்வது என்றால் நாடும் தகுதி இல்லை, அரசியலும் தகுதி இல்லை என்பதோடு அவை இரண்டும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டால் எதிர்ப்புக்கு பலம் அதிகமாகிவிடும் என்பதோடு செய்பவர்களுக்கும் சக்தி குறைந்துவிடும் என்று கூறுவோம். நமது அரசியல் ஜாதி மதத்தையே பெரிதும் ஆதாரமாய்க் கொண்டிருக்கிறது. பொருள் இரண்டாவதேயாகும்.

மற்றும் சமுதாய சமதர்மத்துக்கு அதாவது ஜாதிகளை ஒழிப்பதற்கு என்றால் பணக்காரன் சேருவான். ஏனெனில் எவ்வளவு பணக்காரனாய் இருந்தாலும் 100க்கு 99 பேர் ''கீழ் ஜாதிக்காரர்''களாகவே இன்று இருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் சேருவார்கள். பணக்காரனை ஒழிக்க பார்ப்பான் சேர மாட்டான். சேருவதாய் இருந்தாலும் ஜாதி இருப்பதன் பலனாக மறுபடியும் பணக்காரனை உண்டாக்கிக் கொள்ளலாம் என்று கருதியே சூழ்ச்சித் திறமாய்ச் சேருவான்.

ஆதலால் உண்மையான நாணையமான சமதர்மக்காரர்கள் இன்று பணக்காரனுடன் போராடிக் கொண்டிருப்பதை விட்டு விட்டு ஜாதியை ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, பார்ப்பானை ஒழிக்கும் காரியத்தில் ஈடுபட்டு பார்ப்பனீயம் ஒழிக்கப்பட முயற்சிக்க வேண்டியது முதற் கடமையாகும் என்பது நமது அபிப்பிராயம்.

மற்றபடி தோழர் ஜவஹர்லால் பேரால் நடைபெறும் சமதர்மமாகிய அதாவது ''சமதர்மத்துக்கு ஏகாதிபத்தியம் ஒழிய வேண்டும், அதற்கு இந்திய ஆட்சியில் இருந்து இங்கிலீஷ்காரர் விரட்டி அடிக்கப்பட வேண்டும்'' என்று கூறுவதாகிய சமதர்மம் வெறும் வாய்ப்பேச்சு சமதர்மம் என்றுதான் கூறுவோம். ஏனெனில் இன்றைய நிலையில் அது ஒரு நாளும் முடியாத காரியமாகும். அதிலும் இன்றைய காங்கிரஸ்காரர்களால் அந்நிய ஆட்சி இந்தியாவில் இருந்து ஒழிக்கப்படும் என்பது எப்போதும் முடியவே முடியாத காரியம். இதை ஸ்தம்பத்தில் எழுதி நாட்டி வைக்காலம்.



அந்நிய ஆட்சி ஒழிந்த நாடுகள் நிலையை அறிவதற்கு அபிசீனியா, ஸ்பெயின் முதலிய நாடுகளின் சம்பவங்களே போதுமானது. நமது நாடு 1008 ஜாதி கொண்டது. நமது சேனா பலத்துக்கோ 100 க்கணக்கான சமையல் அறைகள் வேண்டும். வீம்பு பேசலாம், போலி வீரம் பேசலாம், காரியத்தில் சாத்தியம் பேசுவதே அறிவுடைமையாகும். ஐரோப்பா நாடுகள் சுதந்திர நாடுகள், சுயராஜ்ய நாடுகள், குடி அரசு நாடுகள் ஆகியவைகளாய் இருந்தும் ஒவ்வொரு நிமிஷமும் திகீர் திகீர் என்று அந்நிய ராஜ்ய படையெடுப்புக்கு பயந்து நடுங்குகின்றன.

இந்தியாவோ பிறவி அடிமை நாடு; 100-க்கு 97 மக்களை அடிமை யாகவும் கீழ் மக்களாகவும் பிறவியில் கொண்ட நாடு; இந்து முஸ்லீம் போருக்கு சதா சர்வகாலம் நெருப்பும் - பஞ்சும் போல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டிய நாடு. ஐரோப்பியர்கள் இந்தியாவை விட்டு விலகுவதாய் இருந்தால் இந்தியா முஸ்லீம் நாடு ஆவதற்கோ இந்துக்கள் நாடு ஆவதற்கோ எல்லோரும் சம்மதிக்க வேண்டும். அப்படி இல்லையானால் இரண்டு சமூகத்திய பாமர மக்களும் அவர்களது பெண்களும் சின்னாபின்னப் படுவதற்கு தயாராய் இருக்கவேண்டும். பம்பாயைப் பார்க்கலாம், லாகூரைப் பார்க்கலாம், மலையாளத்தைப் பார்க்கலாம், இன்னம் பல ஊர்களைப் பார்க்கலாம். இதற்கு என்ன காப்பு காங்கிரஸ் செய்திருக்கிறது? ஒரு உபயத்துல்லா சாயபும், ஒரு ஷாபி முகமது சாயபும், ஒரு தாவுத்ஷா சாயபும் முஸ்லீம்களுக்கு பிரதிநிதியாய் உறுதி கொடுத்தால் போதுமா? ஒரு குப்புசாமியும், ஒரு கிருஷ்ணசாமி பாரதியும் ஒரு சுப்பையாவும் இந்துக்களுக்கு உறுதி கொடுத்தால் போதுமா? நமது அஹிம்சை ''மகாத்மாக்கள்'' காந்தியும் கபூர்கான் சாயபும் கத்தி முன்னிலையிலும் குண்டர்கள் முன்னிலையிலும் எவ்வளவு நேரம் இருப்பார்கள்? ரத்தம் சிந்துவதை காண சகிக்காமல் தபசுக்கு போய்விட மாட்டார்களா? போகவிட்டால்தான் என்ன? இவர்கள் பேச்சை எவ்வளவு பேர்கள் கேட்பார்கள்? சத்தியமூர்த்தியாரும், ஜவஹர்லாலும் எவ்வளவு செல்வாக் குடையவர்கள் என்பது நாம் அறியாததா? அல்லது எவ்வளவு வீரர்கள் என்பது நாம் அறியாததா? பண்டிதரின் தென்னாட்டு சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிக் குறிப்பை நேராக தைரியமாக வெளியிட முடியாமல் திருட்டுத்தனமாய் அதுவும் ஜாமம் ஜாமமாய் சுற்றிவிட்டு வந்தவர்கள் என்பது நாம் அறியாததா? கலவரம் ஏற்பட்டால் தாழ்ந்த ஜாதியார் என்பவர்களை மேல் ஜாதியார் என்பவர்கள் கள்ளு போதையேற்றி பலி கொடுத்துப் பார்ப்பார்கள்; காரியம் முடியாவிட்டால் காட்டிக்கொடுத்து விட்டு எதிரிகளின் காலுக்குள் நுழைந்து விடுவார்கள். இவைகள் தானே நமது இந்தியாவின் பண்டைப் பெருமையாய் விளங்குகின்றன.

இந்தியாவுக்கு இந்திய மக்களுக்கு நன்மை வேண்டுமென்று கருதுகிறவன் இந்தியன் என்கின்ற நிலையில் இந்திய நிலை என்பதை



RangaRakes tamilnavarasam.com

உணர்ந்து அதற்கு ஏற்றபடி நடக்கவேண்டுமே ஒழிய மேல்நாட்டைப் பற்றி படித்து விட்டு புஸ்தகப் பூச்சியாய் இருப்பது வீண் பிரயாசையேயாகும். மேல்நாட்டு சமுதாய நிலைபோல் நம்நாட்டு சமுதாய நிலை ஆகும்போது மேல்நாட்டு முறைகளை கையாளுவது பொருத்தமுடையதாகும். அப்படிக்கில்லாமல் ''குருடன் ராஜ விழி விழிக்கப் பார்ப்பது'' என்பதுபோல நாம் இந்திய பறையன், சக்கிலி, பிராமணன் சூத்திரன் என்கின்றவர்கள் உள்ள ஊரில் பொருளாதார சமதர்மம், மார்க்கிசம், லெனினிசம் என்று பேசுவது வெறும் வேஷமும் நேரக்கேடுமேயாகும் என்று கூறுவோம்.

ஆதலால் இன்று சமதர்ம வாலிபர்கள் தயவுசெய்து கொஞ்ச நாளைக்காவது பணக்காரனை வைவதை மறந்துவிட்டு ஜாதியை ஒழிக்கும் வேலையில் ஈடுபட்டு சமுதாய சமதர்மத்தை உண்டாக்கவும் சமுதாயப் புரட்சிகளை உண்டாக்கவும் பாடுபடுவார்களாக. எதிர்பாராத சம்பவங்களால் நிலைமை அனுகூலமாய் இருக்கும் சமயம் பொருளாதாரத்தைப் பற்றியும் யோசிப்போமாக.

**குடி அரசு - தலையங்கம் - 29.11.1936**



# பட்டேல்

தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள் (பார்ப்பனர்கள்) தோழர் பட்டேல் அவர்களை அழைத்து வந்து அவர் பேரால் பணம் வசூலித்து அதைத் தாங்கள் கைப்பற்றி காலிகளுக்கும் கூலிகளுக்கும் கொடுத்து காலித்தனம் செய்வதின் மூலம் தேர்தலில் வெற்றி பெறவே தோழர் பட்டேலை அழைத்து வரப் போகிறார்கள்.

தமிழ் மக்கள் இக்காரியம் கைகூடாதபடி செய்யக் கடமைப் பட்டவர்களாவார்கள்.

ஆதலால் ஊர்கள் தோறும் பட்டேல் பகிஷ்காரக் கமிட்டி ஏற்படுத்தி அதன்மூலம் அவரது வரவை தமிழ் மக்கள் பஹிஷ்கரிக்கிறார்கள் என்று காட்டவேண்டியதுடன் மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்காமலும் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியதும் நியாயமாகும்.

கமிட்டி விபரம் தெரிந்தவுடன் துண்டுப் பிரசுரங்கள் முதலியன அனுப்பிக் கொடுக்கப்படும்.

**குடி அரசு - வேண்டுகோள் - 29.11.1936**



RangaRakes tamilnavarasam.com

# பொப்பிலியில் என்ன நடந்தது?

பொப்பிலியில் தோழர் ஜவஹர்லால் வந்தபோது அங்கு பொப்பிலி அரசரின் ஆட்களால் கலவரம் நடந்ததாக பார்ப்பனப் பதர்கள் கட்டுக் கட்டிவிட்டு நாடு எங்கும் பரப்பி விட்டார்கள். அதை மறுத்து வந்த செய்திகளுக்கு சரியான இடம் கொடுக்காமல் அற்பத்தனமாயும் அயோக்கியத்தனமாயும் சில பத்திரிக்கைகாரர்கள் நடந்து கொண்டார்கள் என்றாலும் நாம் சென்ற வாரம் கூறியது போல் அங்கு காங்கிரஸ்காரர்தான் அயோக்கியத்தனமாய் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பது பின்வந்த சேதியால் விளங்கி விட்டது.

அதாவது பொப்பிலியில் அன்று ஏதோ ஒரு விசேஷநாள் ஆனதால் வழக்கம்போல் உற்சவம் நடைபெற்று விக்கிரக ஊர்வலம் நடந்திருக்கிறது. அதற்கு ஆகவே யானை, கொடி, தப்பட்டை முதலிய ஊர்வலச் சின்னங்கள் விக்கிரகத்துடன் ஊர்வலம் வந்திருக்கின்றன.

அது சமயத்தில் பண்டிதர் கூட்டமும் இருந்ததால் - அதுவும் ஊர்வலம் வரும் வழியில் இருந்ததால் பண்டிதரின் பிரசங்கத்துக்காக எவ்வளவோ நேரம் ஊர்வலம் காத்திருந்தும் அதை காங்கிரஸ்காரர்கள் கண்ணியம் செய்யாமல் போக்கிரித்தனமாக நடந்து கொண்டதோடு பத்திரிக்கைகளும் கூலிகளும் தங்களுக்கு அனுகூலமாய் இருக்கிறார்கள் என்கின்ற மமதையால் கண்டபடி பொய்யாகவும் அயோக்கியத்தனமாகவும் கதை கட்டி விட்டார்கள்.

இதிலிருந்தாவது காங்கிரசின் யோக்கியதையையும் அவர்கள் பத்திரிக்கைகளின் யோக்கியதைகளையும் பொது மக்கள் உணர்ந்து கொள்வார்களாக.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 29.11.1936**



# சம்பளக் குறைப்பு

சென்னைக் கார்ப்பரேஷனில் உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறைக்க திட்டம் கொண்டுவந்து காங்கிரஸ்காரர்கள் நிறைவேற்றி இருப்பதாகத் தெரிய வருகிறது.

அவர்கள் சம்பளம் குறைக்க கருதி இருக்கும் உத்தியோகங்கள் ஐந்திலும் இப்பொழுது பார்ப்பனரல்லாதாரே இருந்து வருகிறார்கள். சம்பளம் குறைந்தால் பார்ப்பனரல்லாதார் தானே பாதிக்கப்படுவார்கள் என்கின்ற தைரியத்தின் மீதே காங்கிரஸ்காரர்கள் சம்பளம் குறைத்திருக்கிறார்கள் என்றாலும் எந்தக் காரணத்தை முன்னிட்டானாலும் அரசாங்கத்தார் அந்தச் சம்பளக் குறைப்பை ஏற்று காங்கிரஸ்காரர் குறிப்பிட்டதுபோல் குறைத்து விடுவதே புத்திசாலித்தனமானது என்று கூறுவோம்.

இந்தியாவின் இன்றைய வறுமைப் பிணி, கல்வியில்லாக் குறைப்பிணி, மற்றும் பல பிணிகள் என்பவற்றிற்கு மூலகாரணம் பார்ப்பனீயமே என்றாலும் இந்த சம்பளக் கொள்ளையும் அதற்குச் சமமானதென்றே கூறுவோம்.

சம்பளம் குறைந்தால் ஒழுக்கமும் நீதியும் சம நிலையும் ஏற்பட வசதி உண்டு என்பது நமது அபிப்பிராயம்.

அன்றியும் இன்றைய சம்பள முறை கூட்டுக் கொள்ளை. அதுவும் சட்டபூர்வமான கூட்டுக் கொள்ளை என்று கூறுவோம்.

ஆதலால் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர், தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் திட்டத்தை ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாக இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் சம்பளங்களைக் குறைக்க சம்மதங் கொடுக்கும்படி வேண்டுகிறோம். கவர்னர் பிரபு அதை அனுமதிக்க மறுத்தால் அதையும் வெளியிட்டு விட விரும்புகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 29.11.1936**



RangaRakes tamilnavarasam.com

# கவர்னர் வரவேற்பும்

## திருநெல்வேலி ஜில்லா போர்டும்
## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தடபுடல்
## மூர்த்திக்கு ஓர் சட்டம் – தளவாய்க்கோர் சட்டமா?

## காங்கிரசிலும் மனுநீதியா?

## சிதம்பரப் பார்ப்பான் செய்தால் கப்சிப்
## திருநெல்லை முதலியார் செய்தால் கடபடாவா?
## இந்த ஏமாற்று இன்னும் எத்தனை நாளைக்கு?

திருநெல்லைக்கு கவர்னர் இம்மாதம் 16-ந் தேதி வந்தார். திருநெல்வேலி ஜில்லா போர்டு, கவர்னருக்கு வரவேற்பு பத்திரம் வாசிக்க வேண்டுமென்று தீர்மானித்திருந்தது. போர்டின் எந்த தீர்மானத்தையும் நிறைவேற்றி வைப்பது போல இத்தீர்மானத்தையும் நிறைவேற்றி வைக்க வேணடியது பொறுப்புள்ள தலைவரின் கடமை. அதில் அறிவுள்ளவருக்குள், சதி ஆலோசனை யில்லாதாருக்குள் அபிப்பிராய பேதமிருக்க முடியாது.

அதுவே சரியான வழியென்று நமது மாபெருந் தலைவரும், பாரத மாதாவின் வீர புத்திரரும், சுயநலமின்மைக்கு ஓர் அறிகுறியாய் வாழ்க்கை நடத்தியவரும், சுதந்திர போராட்டத்திலே உயிரிழந்தவரும், சத்தியமூர்த்தி அய்யர் ஜெயில் வாழ்விற்குப் பயந்து திருவல்லிக்கேணியில் ஒளிந்து கிடந்த காலையில் சிறைச்சாலை சென்றவருமாகிய காலஞ்சென்ற தோழர் வி. ஜே. பட்டேலே காண்பித்திருக்கிறார். அவர் அசம்பிளிக்கு காங்கிரசின் பேரால் தெரிந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் கட்சிக்கு உபதலைவராகவும் இருந்தார். காங்கிரஸ் கட்சியின் ஆதரவாலேயே, சர்க்கார் போட்டிக்கும் எதிராய் அசம்பிளி தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேர்தலானவுடன் அவர் என்ன சொன்னார்? நான் இனிமேல் ஓர் கட்சியையும் சார்ந்தவனல்லேன். எக்கட்சி கட்டுப்பாட்டுக்கும் அடங்கியவனல்லேன் என்றார். சொன்னதோடு நின்றாரில்லை; செய்கையிலும் காட்டினார். அசம்பிளியில் வைசிராய் பேச வரும்பொழுது காங்கிரசார் வெளியேற வேண்டும் என்பது காங்கிரஸ் விதி. அப்படியே மோதிலால் நேரும் மற்றவர்களும் வெளியேறுவார்கள். ஆனால் பட்டேல் அசம்பளியில் இருந்து வைசிராயை மரியாதையாய்



வரவேற்பார். அம்மட்டோ! சில வருடங்களுக்குப் பின் காங்கிரஸ், சட்டசபைகளில் யாதொரு பயனுமில்லை, காங்கிரஸார் எல்லோரும் வெளியேறவேண்டும் என்று தீர்மானித்தது. எல்லாரும் வெளியேறினார்கள். சட்ட சபையிலிருப்பது வீணென்று தீர்மானித்த பிறகும் பட்டேல் அசம்பிளி தலைவராகவேயிருந்தார். ஏன்? அதுதான் தலைவர் பதவியேற்ற எவரும் நடக்கவேண்டிய முறை. அதைச் சரியென்று மகாத்மா காந்தி, நேரு போன்ற மாபெரும் தலைவர்களும் ஒப்புக்கொண்டார்கள். பட்டேலாவது, நேருவாவது நமது அய்யரை விட தேசபக்தியிலும், காங்கிரஸ் பக்தியிலும் குறைந்தவர்களா? இல்லையே!

ஆனால், மகா மேதாவியென்று தன்னைத்தானே மதித்த சத்தியமூர்த்தி அய்யரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, ஜில்லா போர்டு தலைவர் வரவேற்பு பத்திரம் வாசித்துக்கொடுத்தல் கூடாது என்று ஒரு பெரிய உத்திரவு போட்டுவிட்டது; அதற்கு கடுமையான தண்டனையும் விதித்து விட்டது. என்ன? ''பொது வாழ்வில் மூக்கறுபட்டுப்போமாம்''. மூக்கறுக்கும் தொழிலில் வேலையில்லா மூர்த்தி யிறங்கிவிட்டார். அதற்குத் "தினமணி'' பத்திராதிபரும் கத்திப் பெட்டி தூக்கி பின் தொடர்ந்து விட்டார். ''நண்பர்களே மூக்கு ஜாக்கிரதை'' ஜாக்கிரதை போனால் தலை முடியுடனாவது நிற்கட்டும்.

இப்படிச் செய்வதற்கு அய்யரும் அவரது கூலிகளும், தோழர் பட்டேலை விட, மகாத்மா காந்தியை விட, பண்டித மோதிலால் நேருவை விட எதில் உயர்ந்தவர்கள்? தேசபக்தியிலா, தேசத் தொண்டிலா, தேசத்திற்காக பட்ட கஷ்டத்திலா, ராஜீய ஞானத்திலா, யோக்கியதையிலா, எதில்? ஒன்றிலு மில்லையே? அல்லது இவர்கள் சொல்வது தான் காங்கிரஸ் விதியா? அந்த விதிதான் இதுவரை கைப்பற்றப்பட்டு வந்திருக்கிறதா? காங்கிரஸ் விதிகளை மீறினவர்களுக்கெல்லாம் மூக்கறுத்தாய்விட்டதா? எத்தனை பேருக்கு இன்று மூக்கில்லை? இவைகளைக் கவனிப்போம்.

இதுவரையும் ''தாலி அறுத்த மூர்த்தியா''யிருந்து இன்று மூக்கறுக்கும் மூர்த்தியாய் மாறின சத்தியமூர்த்தி அய்யரின் யோக்கியதை தான் என்ன? காங்கிரசின் விதிகளை விட காங்கிரசின் கொள்கை தான் முக்கியமென்று ராஜீயக் குழந்தைகளும் அறியும், காங்கிரசின் கொள்கை (Creed) பூர்ண சுதந்திரம் பெறுதல் என்பது காங்கிரசில் நாலு அணாக் கொடுத்து கையெழுத்துப் போட்ட ஒவ்வொருவருக்கும் தெரியும். விதிகள் என்று சொல்லப்படுகிறவைகளை மீறுகிறவர்களுக்கு மூக்கறுபட வேண்டுமானால், கொள்கையையே இல்லையென்று சொல்லுகிறவர்களுக்கு பொது வாழ்வில் மரண தண்டனை யல்லவோ இடவேண்டும்? அதைத்தானே செய்தார் சத்தியமூர்த்தி ஆனைமலையில். ஆனைமலை ஐரோப்பிய சங்கத்தில் காங்கிரசின் நோக்கம் குடியேற்ற அந்தஸ்துதான், பூரண சுதந்திரமில்லை யென்று முக்காலும் மூன்று முறை ஆணையிட்டுக்கொடுத்தாரே, இதை விட



RangaRakes tamilnavarasam.com

காங்கிரசுக்கு என்ன துரோகம் வேண்டும்? கொள்கையை ஒப்புக்கொள்ளாத ஒருவன் காங்கிரசில் நாலணா மெம்பருக்கும் லாயக்கு இல்லையே? காட்டிக்கொடுக்கும் இவருக்கு இன்னும் தலைவர் பதவியா? இவர் மூக்கு அறுபடவில்லையே! மூக்கில் கண்ணாடியும் துலங்குகிறதே!

கவர்னருக்கு, ஜில்லா போர்டின் தீர்மானத்தை மதித்து வரவேற்பு வாசிப்பது காங்கிரசுக்கு கேவலமானால், கவர்னர் வரும்போது சட்ட சபையிலிருப்பது கேவலமானால், சுயநலத்திற்காக, மந்திரி பதவி கிடைக்காதாவென்ற ஏக்கத்திற்காக, ஒரு காங்கிரஸ் வாதி அதுவும் ஓர் மாகாணத் தலைவர் பல்லெல்லாம் தெரியக்காட்டி மிகப் பணிவுடன் வேண்டி அதே கவர்னரை பேட்டிக் காணப்போவது காங்கிரசிற்கு கேவலமல்லவா? கவர்னரைப் பேட்டி காணும் விதம் தெரியுமா? அவருடைய காரியதரிசிக்கு ''ஐயா தயைகூர்ந்து எனக்கு கவர்னரிடம் உத்திரவு வாங்கிக்கொடுங்கள்'' என்று எழுத வேண்டும். இந்த நாள் இத்தனை மணிக்கு பேட்டி கொடுக்க கவர்னர் இசைந்துள்ளார் என்று காரியதரிசியிடமிருந்து பதில் வரும். அன்று அந்நேரத்திற்கு முன்பாகவே கவர்னர் மாளிகையில் காத்து நிற்க வேண்டும். இது காங்கிரசுக்கும், தலைவருக்கும் மரியாதைபோலும்! ஆனால் அது சுயநலத்திற்கு அல்லவா? அதுவும் பார்ப்பனரின் சுயநலத்திற்கல்லவா? ஆகையால் காங்கிரஸ் மனுநீதியின்படி சரியாகத்தான் இருக்க வேண்டும் போலும்! இத்தோடு நின்றாரா? ''மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்'' என்ற பொன்மொழியையும் மறந்து காங்கிரசின் எதிரியாகிய பொப்பிலி ராஜாவையும் பேட்டி கண்டாராமே! அதை அவரே சொல்லிக்கொள்ளுகிறாரே! மூர்த்தி, யாரையும் பேட்டி காணலாம்; எதுவும் செய்யலாம். தளவாய் மாத்திரம் வரவேற்பு பத்திரம் வாசிக்கக்கூடாதா?

சத்தியமூர்த்தி அய்யர் சிம்லாவிலும் டெல்லியிலும் காலை சந்தியா வந்தனம் செய்ததும் கவர்ன்மெண்டு மெம்பர்களை தரிசிக்கப்போவது தானே வழக்கமாம்; எல்லாரும் சொல்லுகிறார்களே! ஆனால் அவர் இல்லை என்று சொல்லலாம்; நாம் நம்பத் தயாரில்லை. ஏனெனில் இவருக்கு அசத்தியமூர்த்தி அய்யர் என்ற பட்டம் கிடைத்துவிட்டது. ''சத்தியமூர்த்தி பொய்யன் இல்லையென்று கோர்ட்டில் நடவடிக்கை எடுக்கட்டும்'' என்று ''ஜஸ்டிஸ்'' பத்திரிகை அறைகூவி அழைத்ததே, இதுவரை ஒன்றும் செய்யவில்லையே! அது காணாதென்று சுதந்திரத்தாகம் ததும்பும் பத்திரிகையாகிய ''சுதந்தரசங்கி''ன் பத்திராபதிபரும் தேசிய வீரருமாகிய சங்கு கணேசன் அவர்கள் நாலுநாட்களுக்கு முன்பாக ''இச் சிறு சங்கதிக்கும் பொய்யா'' என்று கேட்டார்களே! பதிலில்லையே! ஆகையால் இல்லை யென்று ரூபிக்க வேண்டுமானால் ஒரு கவர்ன்மெண்ட் மெம்பராவது சர்டிபிக்கட் கொடுக்கவேண்டும்.

சரி, யோக்கியதை நேர்மை என்பதே தெரியாத தலைவர் தான் போகட்டும், மற்றவர்களும், மற்ற விதிகளும் என்னாயிற்று?



காரைக்குடியில் பட்டதாரிகளுக்கு காங்கிரசில் இடமில்லை என்று தீர்மானித்த பிறகு, திவான் பகதூர் ரத்தினசபாபதி முதலியாருக்கும், ராவ்சாகிப் கச்சாபகேச முதலியாருக்கும் காங்கிரசில் என்ன வேலை? சத்தியமூர்த்தி அய்யருக்கு மந்திரி பதவிக்கு ஓட்டுக்கொடுப்பதற்காகவா?

சித்தூர் ஜில்லா போர்டிற்கு காங்கிரஸ்காரர் ஓட்டு காணாமல் கடவுளும் ஓட்டுக்கொடுத்து தலைவரான சி.ஆர். ரெட்டியார், அதற்கு அடுத்த வாரம், மகாத்மா படமொன்று போர்டில் காங்கிரஸ் மெம்பர்கள் சொந்தச் செலவில் வைப்பது என்று கொண்டுவந்த தீர்மானத்தை அனுமதிக்க மாட்டேனென்றாரே. ஆக்டிங் கவர்னருக்கு ஏகோப உபசாரம் செய்தாரே என்ன ஆயிற்று? அவர் சற்று அறிவுள்ளோர் அடங்கிய ஆந்திர காங்கிரசைச் சார்ந்தவர், போகட்டும்.

தமிழ்நாட்டில் மூக்கறுபட்டோர் கணக்கென்ன? சென்னை கார்ப்பரேஷன் மேயர் ஹமீத்கான், ரயில்வே ஸ்டேஷன்களில் போலீஸ் கமிஷனருக்கு முன்னதாகவே போய் நின்று கவர்னர்களை வரவேற்பதுவும் ரயிலில் ஏற்றுவதுமாயிருந்தாரே என்ன ஆயிற்று? காங்கிரசின் பேரால் காங்கிரசின் வெற்றி என்ற முழக்கத்துடன் கவுன்சிலரானது தான் கைமேல் கிடைத்த பலன்.

தென்னாற்காடு ஜில்லாபோர்டு தலைவர் சீமான் ரெட்டியார், ''ஜில்லா போர்டு நிர்வாகத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் தலையிடுவது அதிகப் பிரசங்கித்தனம் என்றாரே'' அவர் மூக்கு இருக்கிறதா, போய்விட்டதா?

சிதம்பரத்திலே திருச்சபையிலே நடராஜப்பெருமான் முன் தவமிருந்து சத்தியமூர்த்தி அய்யர், அவருடைய பார்ப்பன சகோதரர் ஜடா வல்லபரை காங்கிரசின் பேரால் முனிசிபல் சேர்மனாக்கினாரே அவர் சென்ற மாதம் அழகான டுவீட்டு சூட்டுடன் கவர்னருக்கு வரவேற்பு அளித்து கைகுலுக்கி குலாவினாரே அதற்கேன் கேள்வியில்லை? கூச்சலில்லை? மூக்கறுக்க கத்தி தீட்ட வில்லை? அன்று ''தினமணி'' செத்துக்கிடந்ததா? மூர்த்தி மந்திரி பதவி மோகத்தில் மதிமயங்கிக் கிடந்தாரா? ஆனைமலையில் ஐரோப்பியர் முன் பூர்ண சுதந்திரம் வேண்டாமென்று சொன்னது பார்ப்பன சூழ்ச்சியோடு சேர்ந்த சூழ்ச்சிதானே. சிதம்பரம் பார்ப்பான் செய்தால் கப்சிப், திருநெல்வேலி முதலியார் செய்தால் கடபடாவா? அதுவும் போகட்டும். நமது ஜில்லாவில்தான் என்ன ஒழுங்கு?

ஜில்லாபோர்டு தலைவர் பதவிக்காக காங்கிரசில் கையெழுத்திட்டு எலக்ஷன் இல்லாமல் மெம்பரான தோழர் சின்னக்கண்ணுப்பிள்ளையவர்களும், மற்றும் ஐவர்களும் எலக்ஷன் முடிந்து பத்து நாட்களுக்குள் கட்சி மாறினார்களே என்ன ஆயிற்று? அன்னவர்களின் ஆப்த நண்பர் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவர் என்ன செய்தார்? எத்தனை கூட்டத்தில் கண்டனம் செய்தார்?

இந்த கவர்னர் வரவேற்புத் தீர்மானம் வரும்பொழுது போர்டு காங்கிரஸ் கட்சித்தலைவர் தோழர் குப்புசாமி அய்யர் என்ன செய்தார்?



RangaRakes tamilnavarasam.com

எதிர்த்தாரா? இல்லையே! சள சள என்று பேசும் நாவடக்கமேயில்லாத அவர் அன்று நாவடக்கியிருந்ததின் மர்மமென்ன? கதர் குல்லாயும் சட்டையும் போட்டு அலங்காரமாய் முதல் சீட்டில் இருந்த அவர், கவர்னர் வரவேற்புக்கு எதிர் எத்தனை பேர் என்று பிரசிடெண்டு கேட்கும்போது அவரது கை, வீரத்துடன் கதர் குல்லாவிற்கு மேல் வரவேண்டியிருக்க, சட்டைப்பைக்குள் போய் ஒழிந்ததேன்? இவரை என்ன செய்தார்கள்? வேறொன்றுமில்லா விட்டாலும் தலைவர் பதவியை விட்டாவது நீக்கினார்களா? அன்று வரவேற்பு இல்லை என்று காங்கிரஸ் முறைப்படி செய்யாமல் சும்மாயிருந்த அய்யர் தலைவரை விட்டு விட்டு ஒழுங்குப்படி நியாயப்படி வரவேற்பு வாசிக்கப்போகும் முதலியாரின் பேரில் ஏன் இக்கோபம்? அய்யரின் குற்றத்தை மறைப்பதற்குத்தானே!

சங்கரன் கோவில் மெம்பர் தோழர் அம்பலவாணபிள்ளை காங்கிரஸ் கட்டளையை மீறனாரென்றும், ஜஸ்டிஸ் கட்சியுடனேயே ஓட்டுச் செய்கிறாரென்றும், உட்காருவது கூட எதிரிகளுடன் உட்காருகிறாரென்றும் குற்றஞ்சாட்டியதின் மேல் தமிழ்நாடு கமிட்டியாரே அவரை ஜில்லாபோர்டு மெம்பர் பதவியை ராஜினாமா செய்யச்சொல்லி கட்டளையிட்டார்களே! இன்றைக்கும் அவர் மெம்பர் தானே? தமிழ்நாட்டுக் கமிட்டியை நிராகரித்து ''போடா பொட்டைக்கண்ணா'' என்றுசொல்லித்திரிகிறவருக்கு கைமேல் என்ன பலன் தெரியுமா? ஜில்லா கமிட்டித் தலைவரின் பேருதவியால், வேசிப்பூர் காங்கிரசுக்கு பிரதிநிதியாகவும் தமிழ்நாடு கமிட்டியில் மூர்த்தி அய்யருடன் சம மெம்பராகவும் ஆய்விட்டார். இனம் இனத்தோடு சேரவேண்டியதுதானே!

நமது டவுன் காங்கிரஸ் பிரபலர் மிட்டாய்க்கடை லாலா தெரியுமல்லவா, சினிமா ஒன்றும் நடத்தினாரே! மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் இறந்ததற்காக சினிமாவை அடைத்து தனது ராஜவிசுவாசத்தை காட்டிக்கொண்டார், அதில் தப்பிதமென்ன? அவருடைய குருக்கள் தலைவர்கள் அண்ணாக்களெல்லாம் கதர் குல்லா தலையில் தாங்கி ராஜ விசுவாசப் பிரமாணம் செய்வதற்கு இது அடுத்தபடி தானே? ஆனால் கமலா நேரு, டாக்டர் அன்சாரி போன்ற பெரியோர் பிரிவாற்றாமையை எவ்வாறு காட்டினார்? சினிமாவை நடத்தியா? அடைத்தா? என்று யோசித்துப்பாருங்கள். அம்மட்டா, இம்மாதம் மற்ற சினிமாக்களைப் போல இதற்கும் லைசன்ஸ் தகராறு வந்தவுடனே என்ன நடந்தது தெரியுமா? கதர் கொடியைக் காணோம். தேசீயக்கொடி திடீரென்று மறைந்து வந்ததையா பிரிட்டீஸ் ஏகாதிபத்தியக்கொடி (Union Jack) முதல் வகுப்பு நாற்காலிகளுக்கு மேலும் இரண்டாவது வகுப்பு நாற்காலிகளுக்கு மேலும். ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை. லைசென்ஸ் ரத்தாயிற்று. கெட்டுப்போனதென்ன? காங்கிரஸ் கொடுத்தது கைமேலே பலன். அவர்தான் நமது நகருக்கு புது அசம்பிளி தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராம். ஒரு சந்தேகம், தேர்தல் போது நமது லாலா தேசீயக்கொடி பிடிப்பாரா, யூனியன் ஜாக் பிடிப்பாரா?



எல்லாம் தொலையட்டும், லாலாவும், அம்பலவாணரும் எப்படியும் போகட்டும். நமது ஜில்லா காங்கிரஸ் தலைவரும், மாஜி சர்வாதிகாரியுமான தோழர் கூத்தர் நமக்கு நடந்து காட்டும் நல்வழியென்ன? சில நாட்களுக்கு முன் முனிசிபாலிட்டி தண்ணீர் தீர்வை பிரச்சினையில் எவ்வாறு நடந்துகொண்டார்? ஜில்லா காங்கிரஸ் கமிட்டியும் அவர் இல்லத்திலே, அது தான் சாவடி ஹாலிலே அன்னாரின் தலைமையிலே கூடி இந்த தண்ணீர் தீர்வை பிரச்சினையில் காங்கிரஸ் கலந்துகொள்ளக் கூடாதென்று தீர்மானித்ததே! ''தினமணியும்'' கொட்டை எழுத்தில் பிரசுரித்ததே. அதற்கு இவர் செய்த மரியாதை என்ன? காங்கிரசின் பேரைச்சொல்லி, காங்கிரஸ் தொண்டர்களை உபயோகித்து கலாட்டா செய்தாரே! மற்றும் இரு தலைவர்களே அதற்கு எதிரிடையாய் நின்றார்களே! என்னாயிற்று? இவரின் மூக்கை இவரே அறுத்துக்கொண்டாரா? மூக்கும் நீளம் தானே கொஞ்சமாவது அறுத்துக்கொள்ளக்கூடாதா? இவரை தலைவர் பதவியை விட்டு விலக்க வேண்டாமா? அவசரப்படேல்; அவரே விலகப்போகிறார் என்று ஒரு சிட்டுக்குருவி சொல்கிறது. நன்னாளும் நற்சமயமும் தான் பார்க்கிறாராம். ஏனென்று கேட்டதாம் நமது குருவி. சொன்னாராம் பிள்ளை அவர்கள். ''பெருமையும் புகழும் நாடி வந்தேன், காங்கிரசிற்கு அவை கிடைத்தது; சர்வாதிகாரியானேன். இந்த ஜில்லா மட்டுமல்ல, மற்ற ஜில்லாவிலும் காங்கிரஸ் பிளசர் காரில் சுற்றினேன், காந்தியும் நேருவும் வந்தார் என் வீட்டிற்கு. ஜில்லா போர்டிற்கு வந்த காங்கிரஸ் மெம்பர்கள் எல்லாம் என் தயவால் தான் வந்தார்கள் என்ற ஜம்பமும் அடித்தாய்விட்டது. ஆனால் காலம் மாறுகிறது, பெருமையும் புகழும் போய் சிறுமையும் சிரமும் வரும்போல் தெரிகிறது. செக்ஷன் 144-ஆம், ஜாமீனாம் என்னமோ பேசுகிறார்கள். பக்கத்து ஜில்லாவில் காங்கிரஸ் தொண்டர்களுக்கும் சமயம் தெரியவில்லை. கவர்னர் வரும்போது தலைவர் வீட்டிலாவது கருப்புக்கொடி வேண்டாமா என்கிறார்கள். சீக்கிரம் நழுவ வேண்டியது தான்.'' சிட்டுக்குருவி சொல்வதின் உண்மை சீக்கிரம் விளங்கிவிடும்.

கவனித்தீர்களா! சகோதரர்களே! எத்தனை அய்யர்கள், தலைவர்கள் மூக்கு போன பின் முதலியார் மூக்குக்கு ஆபத்து வரவேண்டும். முதலியார் அவர்கள் பயப்பட வேண்டாம். தங்கள் மூக்குப் போகுமுன், தங்கள் தலைவர் அசத்தியமூர்த்தியின் சிரசே போய் ஆகவேண்டும். ஆனால் எத்தனை நாளைக்கு இந்த ஏமாற்றம்? பார்ப்பனரல்லாத மக்களே விழியுங்கள்!

குடி அரசு - கட்டுரை - 29.11.1936



RangaRakes tamilnavarasam.com

# அசட்டுத்தனமா? அயோக்கியத்தனமா?

பார்ப்பனரல்லாதாருக்கு மதிப்புக் கொடுக்கும் விஷயத்தில் ''தேசீய'' 'ஹிந்து'வுக்கு இருந்துவரும் வெறுப்பு பல முறை இப்பத்திரிகையில் வெட்ட வெளிச்சமாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அபேதவாதப் பத்திரிகையான ''இந்தியன் எக்ஸ்பிரசு''க்கும் அம்மாதிரியான வெறுப்புத் தோன்றியிருப்பதைப் பார்த்து ஆச்சரியப் படுகிறோம்.

சென்னை கோக்கலே மண்டபத்தில் நடைபெற்ற சென்னை பிலிம்லீக் மகாநாட்டில் பேசிய பம்பாய்த் தலைவர் ஸர். பிரோஸ் சேத்னா, அம்மகாநாட்டுக்குத் தலைமை வகித்த ஸர். கே.வி. ரெட்டி நாயுடுகாரு அவர்களைப் பாராட்டிப் பேசுகையில் சென்னை ஆக்டிங் கவர்னர் பதவியை அவர் வெகு திறமையாக நிர்வகித்து அகில இந்தியப் புகழ்பெற்று விட்டதாகக் குறிப்பிட்டார். ஆனால், இந்த விஷயத்தை வழக்கப்படி ''தேசீய'' தினசரியான ''ஹிந்து''வும் அபேதவாத தினசரியான ''இந்தியன் எக்ஸ்பிரசு''ம் பிரசுரம் செய்யவே இல்லை. யோக்கியப் பொறுப்புள்ள எந்தப் பத்திரிக்கையும் இம்மாதிரி செய்திகளை மறைக்கவே செய்யாது. கட்சி வித்தியாசம் பாராட்டாமல் சகல கட்சிச் செய்திகளையும் பிரசுரம் செய்யவேண்டியதே பொறுப்பு வாய்ந்த பத்திரிகைகளின் கடமையென, பண்டித ஜவஹர்லால் சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது ஒரு பத்திரிகைக்கு அனுப்பிய செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், பிரஸ்தாப விஷயம் கட்சி சம்பந்தமானதுமல்ல. ஒரு பெறுப்பு வாய்ந்த தலைவர் மற்றொரு இந்தியப் பிரமுகரைப் புகழ்ந்து பேசிய பேச்சை அந்த இரண்டு பத்திரிகைகளும் அமுக்கி விட்டது மிகவும் கேவலமான செயலாகும். தேசீயமும், சமதர்மமும் பேசும் அப்பத்திரிகைகள் உண்மையில் வகுப்புவாதப் பத்திரிகைகளாக இருப்பதை தேச மக்கள் இப்பொழுதாவது உணர்வார்களாக!

**''விடுதலை''**

**குடி அரசு - கட்டுரை (மறு பிரசுரம்) - 29.11.1936**



# தர்மம் என்றால் என்ன?

மனித வாழ்க்கையில் தர்மம் என்கின்ற வார்த்தை பெரிதும் உபயோகப் படுத்தப்படுகிறது. ஆனால் அதற்குப் பொருள் பலர் பலவிதமாக சொல்லியும் எழுதியும் வருகிறார்கள். ஆனால் சாதாரணமாக தர்மம் என்பதற்குப் பொருள் கூறும்போது தர்மம் என்பது ஒரு மனிதனின் கடமைக்கும், மனிதனின் இயற்கைத் தன்மைக்கும், ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடம் செய்யவேண்டிய உதவிக்கும், மற்றும் ஒரு மனிதன் ஆத்மார்த்த சாதனம் என்னும் நலமடைவதற்கு செய்ய வேண்டிய கடமை என்பதற்கும், பொதுவாக இயற்கையென்பதற்கும் உபயோகப்பட்டு வருவதோடு பெரும்பாலும் பிச்சைக்காரர்களும் சோம்பேறிகளும் ஏமாற்றுக்காரர்களும் பிழைப்பதற்கும் ஒரு சாதனமாக உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. எது எப்படியிருந்த போதிலும் நான் அதை நீங்கள் எந்த வழியில் உபயோகப் படுத்துகிறீர்கள் என்று கருதுகிறேனோ அதைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லுகிறேன்.

அதாவது ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு செய்கிற உதவியை தர்மம் என்று கருதி அதையே உங்கள் கடமையாகவுங்கொண்டு நடந்து வருகிறீர்கள் என்பதாகவே நினைத்து அதைப்பற்றியே சில வார்த்தைகள் சொல்லுகிறேன். ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்குச் செய்யும் உபகாரம் -கடமை என்பது காலதேச வர்த்தமானத்துக்கேற்றவாறு அவ்வப்போது மாறுதலடையக்கூடிய ஒரு தன்மையுடையதேயல்லாமல் மற்றபடி தர்மம் என்பது ஏதோ ஒரு காலத்தில் யாராலோ யாருக்கோ குறிப்பிடப்பட்டு அதேபடிக்கு நடந்து கொண்டிருக்கவேண்டியது அல்ல வென்பதை உணர்ந்து கொண்டால் தான் நாம் உண்மையான தர்மம் செய்தவர்கள் ஆவோம் என்பதோடு நமது தர்மமும் மக்களுக்கும் நாட்டிற்கும் பயன்படக் கூடியதாகும். அப்படிக்கில்லாமல் நமது பெரியோர்கள் செய்து வந்தார்கள், முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள், அவதாரங்களும் ஆச்சாரிகளும் எழுதிவைத்தார்கள், வெகு காலமாக நடந்து வருகிறது, அநேகம் பேர்களும் செய்து வருகிறார்கள் என்கின்றதான காரணங்களை வைத்துக்கொண்டு கண்மூடித் தனமாக அதன் பலா பலன்களைக் கவனியாமல் செய்து கொண்டிருப்பது வீண் வேலையாகும்.

ஏனெனில் ஒரு காலத்தில் தருமம் என்று சொல்லப்படுவது மற்றொரு காலத்தில் முட்டாள்தனமாகத் தோன்றப்படுவதை நேரில்



RangaRakes tamilnavarasam.com

பார்க்கிறோம். உதாரணமாக ஒரு மனிதன் கஷ்டப்பட்டு சம்பாதித்து பணம் சேகரித்து அவற்றைப் பார்ப்பனர்கட்கு அள்ளிக்கொடுத்து ஆசீர்வாதம் பெறுவது மனிதனுடைய கடமையான தர்மம் என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் அவை இன்றைய தினம் சுத்த மூடத்தனம் என்றும் ஏமாந்த தனம் என்றும் தோன்றி விட்டது. அதுபோலவே ஏழைகளை ஏமாற்றிக் கொடுமைப்படுத்திச் சம்பாதித்த பணத்தைக்கொண்டு கோயில் கட்டுவது, மோட்சத்தில் இடம் சம்பாதித்துக்கொள்வதற்காகச் செய்யப்படும் தர்மம் என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் இப்போது அதை முட்டாள்தனமென்றும், தேசத்திற்கு கெடுதியை விளைவிக்கத்தக்கதான தேசத்துரோகமென்றும் தோன்றி அநேகர்களுக்கு பள்ளிக்கூடம், தொழிற்சாலை, வைத்தியசாலை முதலியவைகட்கு உபயோகப்படுத்த வேண்டியது முக்கியமான தர்மம் என்று தோன்றி விட்டது. ஒரு காலத்தில் மூன்று வேளை குளித்து நான்கு வேளை சாப்பிட்டு விட்டு சாம்பலையும் மண்ணையும் பூசிக்கொண்டு உத்திராட்சத்தையும் துளசி மணியையும் உருட்டுவது தர்மமென்று நினைக்கப்பட்டது. ஆனால் இப்போது அது திருடர்களுடையவும் சோம்பேறிகளுடையவும் வேலையென்று நினைத்து அப்படிப்பட்ட மனிதர்களிடம் வெறுப்பு ஏற்பட்டு இரண்டு வேளையும் உடலை வருத்திக் கஷ்டப்பட்டு சாப்பிடுகிறவர்களிடம் இரக்கமும், அன்பும், நம்பிக்கையும் ஏற்பட்டு விட்டது. ஒரு காலத்தில் கள்ளையும் சாராயத்தையும் குடிக்கக்கூடியதாகவும், ஆட்டையும் எருமையையும் பலியாக சாப்பிடக் கூடியதாகவும் உள்ள குணங்கள் கற்பிக்கப்பட்ட சாமி என்பதை கும்பிட்டுக்கொண்டு அவைகளை அதற்கு வைத்துப் படைத்துக்கொண்டு தாங்களும் சாப்பிடுவது கடவுள் வணக்கத் தருமமென்று கருதப்பட்டு வந்தது. இப்பொழுது அவைகள் காட்டுமிராண்டித்தன மென்று உணர்ந்து மக்களுக்கு உணர்த்தப்பட்டு வருகிறது. மற்றும் ஒரு கூட்டத்தாருக்கு ஆடும் பன்றியும் தின்பது தருமமாகயிருக்கிறது. இன்னொரு கூட்டத்தாருக்கு மாடு தின்பது தருமமாக இருக்கிறது; பன்றி தின்பது அதர்மமாக இருக்கின்றது. வேறொரு கூட்டத்தாருக்கு எந்த ஜெந்துவையும் சாப்பிடுவது தருமமாக யிருக்கிறது. பிறிதொரு கூட்டத்தாருக்கு எந்த ஜெந்துவையானாலும் சாப்பிடுவது அதர்மமாயிருக்கிறது.

ஒரு மதக்காரருக்கே மதக் கொள்கைப்படி கள்ளு சாராயம் குடிப்பது தர்மமாயிருக்கிறது. வேறொரு மதக்காரருக்கு அவைகளைத் தொடுவது அதர்மமாயிருக்கிறது. ஒரு கூட்டத்தாருக்கு மனிதனை மனிதன் தொடுவது தீட்டாகக் கருதப்படுகிறது. இன்னொரு கூட்டத்தாருக்கு யாரைத் தொட்டாலும் தீட்டில்லை என்று சொல்லப்படுகிறது. அதுபோலவே விவாக சம்பந்தமுறையிலும் ஒரு கூட்டத்தார் அத்தை பெண்ணை மணக்கிறார்கள். மற்றொரு கூட்டத்தார் சித்தப்பன் பெரியப்பன் பெண்ணை மணக்கிறார்கள். பிறிதொரு கூட்டத்தார் சிறிய தாயார் பெண்ணை மணக்கிறார்கள். இனியொரு கூட்டத்தார் மாமன் பெண்ணை



மணக்கிறார்கள். ஒரு வகுப்பார் தங்கையை மணக்கிறார்கள். வேறொரு கூட்டத்தார் யாரையும் மணந்து கொள்கிறார்கள். மற்றொரு கூட்டத்தார் விபசாரத் தனத்தை வெறுக்கிறார்கள். இன்னொரு கூட்டத்தார் விபசாரத்தனத்தை தங்கள் குல தருமமாகக் கொள்ளுகிறார்கள். வேறொரு கூட்டத்தார் பார்ப்பனர்களை யோக்கியமற்றவர்களென்று வெறுக்கிறார்கள். மற்றொரு கூட்டத்தார் பார்ப்பனர்களைப் புணருவது மோட்ச சாதனம் என்று கருதுகிறார்கள். இப்படி எத்தனையோ விதமாக ஒன்றுக்கொன்று விபரீதமான முறைகள் தருமமாகக் காணப்படுகிறது. மேலும் இதுபோலவே சாஸ்திர விஷயங்களிலும் ஒரு காலத்தில் மனித சமூகத்திற்கு கடவுளால் அளிக்கப்பட்ட தருமமென்று சொல்லுகிற மனுதர்ம சாஸ்திரம் வெகு பக்தி சிரத்தையோடு பின்பற்றப்பட்டு வந்தது. இப்போது அது சுயநலக்காரர்களின், சூழ்ச்சிக்காரர்களின் அயோக்கியத்தனமான செய்கையென்று நெருப்பு வைத்துக்கொளுத்தப்படுகிறது. இது போலவே காலத்திற்கும் தேசத்திற்கும் அறிவிற்கும் தகுந்தபடி தருமங்கள் மாறுவது சகஜமாகயிருக்கிறது.

ஆகையினால் தருமமென்கிற விஷயத்தில் மிக அறிவைச் செலுத்தி உலகத்தை யெல்லாம் நன்றாய் ஆராய்ந்தறிந்து மிக்க அவசியமென்றும் பயன் படத்தக்கது எதுவென்றும் தெரிந்து செய்வது தான் உண்மையான தருமமாகும்.

- ஈ.வெ.ரா.

பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - நவம்பர் 1936



RangaRakes tamilnavarasam.com

# நில அடமான பாங்கியும் நிர்வாகமும்

நில அடமான கடன்களுக்கென்று சர்க்கார் பொது ஜனங்களுடைய வரிப்பணத்திலிருந்து பணம் எடுத்து நில அடமான பாங்கிக்கு முதலாகக் கொடுத்து நிலச் சொந்தக்காரர்களுக்குக் கடன் கொடுத்து குடியானவர்களை அதிக வட்டிக்கடன் தொல்லையிலிருந்து விடுவிக்க ஏற்பாடு செய்திருப்பது யாவரும் அறிந்ததேயாகும்.

அதன் மூலம் உண்மையாகவே சில குடியானவர்களுக்கு சௌகரியமும் ஏற்பட்டு வருவதை யாரும் அறிந்திருக்கலாம்.

ஜஸ்டிஸ் கட்சியாருடைய பல திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். அதாவது தோழர் ஈ.வெ. ராமசாமியால் ஜஸ்டிஸ் கட்சியின் வேலைத் திட்டம் என்று சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களில் ''விவசாயிகளுடைய கடன்களைக் குறைப்பதும் இனி கடன் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதுமான காரியங்கள் செய்யப்படும்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அத்திட்டங்களில் சில அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தாலும் இந்த விவசாயிகள் கடன் மசோதா சமீபத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதற்காக ஏற்கனவே ஏராளமான பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் இப்போது மறுபடியும் (2500000) இருபத்தைந்து லக்ஷ ரூபாய் ஒதுக்கி வைக்க வேண்டும் என்று ஜஸ்டிஸ் கட்சி மந்திரி கனம் ராஜன் அவர்கள் முயற்சித்து இவ்வார சட்டசபையில் அரசாங்கத்தில் இருந்து பணமும் ஒதுக்கப்பட்டாய் விட்டது. இப்பணம் ஒதுக்குவதற்கு நடந்த வாக்குவாதங்கள் மிகவும் கவனிக்கத்தக்கதாகும். என்னவெனில்,

நில அடமான பாங்கு இலாகா பார்ப்பனமயமாயிருக்கிறதென்றும், அதிலுள்ள பார்ப்பனரல்லாதார்கள் பெயரளவில் பார்ப்பனரல்லாதார்கள் ஆனாலும் காரியத்தில் பார்ப்பன பக்தர்களேயாகும் என்றும், அதற்கு ஒதுக்கப்படும் பணம் பார்ப்பன ஆதிக்கத்துக்கே பெரிதும் பயன்படும் என்றும், கடன்கொடுக்கும் காரியத்தை அரசியல் கட்சி நலத்துக்கு பயன்படுத்திக் கொள்ளப்படுகிறதென்றும் குறைகூறி அப் பணத்தை நிபந்தனை இல்லாமல் கொடுக்கக் கூடாது என்று ஜஸ்டிஸ்கட்சி அங்கத்தினர்கள் வலியுறுத்தினார்கள்.

அதன் பயனாய் மந்திரி கனம் ராஜன் அவர்கள் நில அடமான பாங்கி காரியதரிசி பதவிக்கு ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தரை (டிப்டி





கலைக்கட்டரை) நியமித்துக்கொள்ள நில அடமான பாங்குகாரர்கள் சம்மதித்தால் மாத்திரமே இந்தப் பணம் கொடுக்கப்படும் என்று வாக்களித்து கிராண்டை பாசாக்கிக்கொண்டார்.

தோழர் ஈ.வெ. ராமசாமியார் ஜஸ்டிஸ் கட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். அதாவது ''கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு இன்னமும் அதிகமான அதிகாரங்கள் கொடுத்து அவற்றின் நிர்வாகத்திற்கு பொறுப்பாளியாக சர்க்கார் உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டும்'' என்பதாகும்.

கூட்டுறவு ஸ்தாபனங்கள் எவ்வளவு நன்மை பயக்கும் படியான தன்மையைக் கொண்டவையானாலும் அதைக் கைப்பற்றுகிறவர்கள் பெரிதும் அரசியல் கட்சி நலத்துக்கு பயன்படுத்தி பக்ஷபாதம் முதலியவை செய்து ஸ்தாபனங்களின் கருத்து முழுவதும் நிறைவேறாமல் செய்துவிடு கிறார்கள். அனேக பட்டணங்களில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் பார்ப்பனர்களால் கைப்பற்றப்பட்டு மானிய சொத்துப்போல் ஒரு வகுப்பாரே ஏகபோகமாய் பயன் அனுபவிக்கும்படியாயும் ஸ்தல ஸ்தாபனம் முதலிய தேர்தல்களுக்கு தங்களுக்கு அனுகூலமாய் இருக்கும்படியும் செய்து கொள்ளுகிறார்கள். உதாரணமாக சென்ற அசெம்பிளி தேர்தல்களில் இரண்டொரு ஸ்தாபனங்கள் கோவாப்ரேட்டிவ் ஸ்தானம் தங்கள் ஆதிக்கத்தில் இருந்த காரணமாகவே வேறு யாதொரு தகுதியும் இல்லாதவர்கள் வெற்றி பெற முடிந்தது. தேர்தல்களுக்கு இந்த இயந்திரத்தை தயவு தாக்ஷண்ணியம் இல்லாமல் பயன்படுத்திக்கொள்ளப்பட்டதானது மிகவும் வெளிப்படையான காரியமாகும். இதைப்பற்றி ''குடி அரசி''ல் முன்னமேயே பல தடவை குறிப்பிட்டிருக்கிறோம். ஆதலால் கோவாப்ரேட்டிவ் ஸ்தாபனங்களின் டைரெக்டர்கள் பொதுஜன பிரதிநிதிகள் என்பவர்களாய் இருந்தபோதிலும் காரியதரிசிகள் கண்டிப்பாய் சர்க்கார் அதிகாரிகளாகவே இருக்கவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். அதை ஜஸ்டிஸ் கட்சியார் ஒப்புக் கொண்டதுபோல் காரியத்திலும் செய்ய முன் வந்ததிற்கு நாம் மிகுதியும் மகிழ்ச்சி அடைகிறோம்.

கோவாப்ரேட்டிவ் இலாக்கா மந்திரி கனம் ராஜன் அவர்கள் இந்த முறை ஒரு சமயம் ஜனநாயகத்துக்கு விரோதமோ என்று மயங்கினார் என்றாலும் முனிசிபாலிட்டிகளுக்கு கமிஷனர் போட்டிருப்பதுபோலவும், பஞ்சாயத்து ஆபீசர்கள் ஹெல்த் ஆபீசர்கள் முதலியவர்கள் சர்க்காரால் நியமிக்கப்பட்டு சர்க்காருக்கு பொறுப்பாளிகளாய் இருப்பதால் எப்படி ஜனநாயத்தன்மை கெட்டுப்போகவில்லையோ அதுபோலவும் கூட்டுறவு இலாக்காவுக்கு சர்க்கார் நிர்வாக அதிகாரிகளை நியமிப்பதால் ஜனநாயகத்தன்மை கெட்டுவிடாதென்று தோழர் சி.டி. நாயகம், எம்.எல்.சி. அவர்கள் எடுத்துக்காட்டியதுடன் ஏற்கனவே ஜஸ்டிஸ்கட்சியார் தோழர் ஈ.வெ. ராமசாமி திட்டத்தை ஏற்றுக்கொண்டிருப்பதையும் ஞாபகமூட்டி மந்திரியாரை திருப்தி செய்தார்.

RangaRakes tamilnavarasam.com

இக்காரியங்கள் சில தேசபக்தர்களுக்கு பிற்போக்கான முறையாய் காணப்படலாம். ஆனால் தேசபக்தர்கள் என்கின்ற கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் பலர் கூட்டுறவு இலாக்காவில் நடந்துகொண்ட யோக்கியதைகளை உத்தேசித்தே இம்மாதிரி செய்யவேண்டியேற்பட்டதே ஒழிய பிற்போக்கான காரியம் செய்ய வேண்டியதற்காகவல்ல என்பதை பொதுஜனங்கள் உணர்வார்களாக.

கூட்டுறவு, நில அடமானம், வீடு கட்டுதல், நிலம் திருத்துதல், யந்திரசாலை வைத்தல் முதலிய காரியங்களுக்குப் பணம் கடன் கொடுத்தல் ஆகியவைகளுக்கு இலாக்காக்கள் ஏற்படுத்தி அவற்றை சர்க்காராரே தங்கள் சிப்பந்திகள் மூலம் நேரிட நிர்வாகம் செய்து வருவார்களானால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஏழ்மைத் தன்மையையும் ஒரு அளவுக்கு நீக்க தாராளமாய் வசதி ஏற்படலாம். ஆனால் இப்பொழுதோ கூட்டுறவு முதலிய இலாக்காக்கள் நிர்வாகத்தைக் கைப்பற்றுபவர்களின் பெருமைக்கும் அவர்களது அரசியல் பிரதிநிதித்துவ காரியங்களின் வெற்றிக்குமே பயன்படுத்தப்படுகின்றன.

ஆதலால் இந்தக் குறை ஒருவாறு நீங்க இப்போதாவது ஜஸ்டிஸ் கட்சியார் தைரியமாய் நில அடமான பாங்கி நிர்வாகத்துக்கு சர்க்கார் உத்தியோகஸ்தரை காரியதரிசியாய் போடத் துணிந்ததற்குப் பாராட்டுகிறோம். மற்ற பாங்கிகளுக்கும் இது போல் ஏற்படுத்த சட்டம் கொண்டு வருவார்களாக.

**குடி அரசு - கட்டுரை - 06.12.1936**



# திருவாங்கூர் ஆலயப் பிரவேச உரிமை

தலைவரவர்களே! தோழர்களே!

திருவாங்கூர் மகாராஜா அவர்கள் தனது சகல இந்து பிரஜைகளுக்கும் ஜாதி வித்தியாசமில்லாமல் இந்து பொதுக்கோவில்கள் எல்லாவற்றிலும் பிரவேசிக்க அனுமதி அளித்ததைப் பாராட்ட இக்கூட்டம் கூட்டப்பட்டது என்றாலும் எனக்கு முன் பேசியவர்கள் பலர் இந்த மாதிரி உத்திரவு இப்போது திருவாங்கூரில் வெளியாவதற்கு 12வருஷங்களுக்கு முன் நானும் எனது மனைவியாரும் இருந்து வைக்கத்தில் நடத்தி வெற்றிபெற்ற சத்தியாக்கிரகமே முக்கிய காரணமென்று சொன்னார்கள். பல பத்திரிகைகளும் அந்தப்படி எழுதி இருக்கின்றன.

ஆனால் நான் அதை ஒப்புக்கொள்ள முடியாது. நானும் ஒரு அளவுக்கு காரணஸ்தனாய் இருக்கலாம் என்றாலும் வைக்கம் சத்தியாக்கிரகம் மூலம் என்பதை ஒப்புக்கொள்ள முடியாது. சத்தியாக்கிரகம் காரணம் அல்ல வென்றால் மற்ற எந்த விதத்தில் நானும் காரணமாய் இருக்கலாம் என்று கூறுகிறேன் என்பதாக நீங்கள் கேட்கலாம்.

சத்தியாக்கிரகத்துக்கு உலகில் மதிப்பில்லை, அதை சண்டித்தனம் என்றுதான் நானே கருதிவிட்டேன். சத்தியாக்கிரகம் நடத்தப்பட்ட விஷயங்களில் 100-க்கு 5 கூட வெற்றி பெறவில்லை. ஏதாவது பெற்று இருந்தால் நம் எதிரிகள் சண்டித்தனமும் தொல்லையும் பொறுக்கமாட்டாமல் இசைந்து வந்ததாயிருக்கலாம்.

ஆதலால் திருவாங்கூர் மகாராஜா இந்த உத்திரவு போட கருணை கூர்ந்ததற்கு காரணம் தற்சமயம் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையேயாகும்.

என்னைப்பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். மற்ற வெளியூர்க் காரர்களை விட உள்ளூர்க்காரர்களாகிய உங்களுக்கு என்னை நன்றாகத் தெரிய வசதி உண்டு என்று கருதியே அப்படிச் சொல்லுகிறேன்.

எனக்கு கோவில், குளம், மதம், சாமி, பூதம் போன்றவைகள் ஒன்றும் பிடிக்காது என்பதும் அவற்றைப் பற்றி நான் கவலைப்படுவது மில்லை என்பதும் நீங்கள் அறிந்ததே. அதனாலேயே இந்த ஊர் பொது ஜனங்களிடம் எனக்கு அவ்வளவு செல்வாக்கும் கிடையாது. சுமார் 15-20



RangaRakes tamilnavarasam.com

வருஷங்களுக்கு முன் இந்த ஊரில் அனேக வீடுகளுக்கு நான் வராவிட்டால் கல்யாணங்கள் முகூர்த்த நேரம் தவறிக்கூட ¼ மணி ½ மணி காத்திருக்கும். அது போலவே பிணங்கள் கூட வெளியேறாமல் காத்திருக்கும். அவ்வளவு பொது ஜன செல்வாக்குப் பெற்றிருந்தவனாகிய நான் இன்று ஒரு கிராமப் பஞ்சாயத்து தேர்தலுக்கு நின்றால் கூட கட்டின பணம் கிடைக்குமா என்பது சந்தேகம் தான். (அப்படி அல்ல என்ற சப்தம்) அது எப்படியோ போகட்டும். இன்று எனக்கு மக்களிடத்தில் ஏதோ ஒரு இயக்க சம்மந்தமான நட்பு தவிர மற்றபடி உலக வழக்கமான பொதுஜன நட்பு எனக்கு இல்லை என்பது எனக்குத் தெரியும். ஏன் அப்படி சொல்லுகிறேன் என்றால் அநேக துறைகளில் பொது ஜன அபிப்பிராயத்துக்கு மாறான அபிப்பிராயம் சொல்லி எதிர் நீச்சல் நீந்திக்கொண்டு இருக்கிறேன். அப்படி இருந்தால் எப்படிப்பட்டவர்களுக்கும் இந்தக் கதிதான். ஆனால் இப்படி இருந்தும் சிறிதாவது சமாளித்துக்கொண்டு இருக்கிறேன். மற்றவர்களில் அனேகருக்கு இதுகூட சாத்தியப்படாமல் அடிக்கடி கரணம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுவேன்.

ஜாதி, மதம், கோவில், குளம், சாமி, பூதம் கூடாது என்று நான் சொல்லுவதால் அவற்றினிடம் எனக்கு ஏதாவது தனிப்பட்ட துவேஷமா? நான் ஏதாவது எதிர் மதக்காரனா? அல்லது தீண்டாத ஜாதியா? என்றால் அப்படி ஒன்றும் இல்லை. நான் 22 வருஷம் தேவஸ்தான கமிட்டியில் முக்கியஸ்தனாகவும் தலைவனாகவும் இருந்திருக்கிறேன். என் அபிப்பிராயம் எப்படி இருந்தாலும் அனேக கோவிலுக்கு திருப்பணி செய்திருக்கிறேன். எனது பெற்றோர்களும் செய்திருக்கிறார்கள். இதே எதிரில் தெரியும் இந்த அம்மன் கோவில் நான் முன்னின்று கட்டி வைத்ததல்லவா? மற்றும் இவ்வூர் பிரபல கோவில்களில் எங்கள் தாயார் தகப்பனார் பெயர் போட்டிருக்கிறதல்லவா? அப்படி இருக்க நான் ஏன் இப்படிச் சொல்லுகின்றேன்? அவற்றால் ஏற்படும் கெடுதிகளை அறிந்தேதான்.

கோவில் பிரவேசத்திற்கு இந்த ஊர் தேவஸ்தான கமிட்டியில் நான்தான் - என் தலைமையில் தான் முதல் முதல் ஒரு தீர்மானம் நிறைவேற்றினேன். அதை அமுலுக்கு கொண்டு வந்ததில் கோயில் பிரவேசம் செய்த சில தாழ்த்தப்பட்டவர்களையும் தோழர் ஈஸ்வரன் அவர்களையும் சர்க்காரில் தண்டித்தார்கள். அப்பீலில் விடுதலை ஆயிற்று என்றாலும் அந்த தீர்மானம் கேன்சில் செய்ய வேண்டியதாகவும் ஏற்பட்டுவிட்டது. அதனாலேயே நான் தேவஸ்தான கமிட்டியில் ராஜினாமா செய்தேன். அதற்கப்புறமே சாமியையும் கோவிலையும் மதத்தையும் அடியோடு அழிக்க துணிந்தேன். காரியம் வெற்றி பெற்றதோ இல்லையோ அது வேறு விஷயம். அதன் பயனாய் பல கோவில்களுக்கு வரும்படி குறைந்தது. சில சாமிகளுக்கு மதிப்பும் குறைந்தது. திருப்பதி ராமேஸ்வரம் டிரஸ்டிகள் வரும்படி குறைந்து விட்டதாக ரிபோர்ட்டு செய்தார்கள். கொச்சி



திருவாங்கூரில் 10 லக்ஷக்கணக்கான மக்கள் தாங்கள் நாஸ்திகர்கள் என்றும் சகல மதத்தையும் சிறப்பாக இந்து மதத்தை விட்டுவிட வேண்டுமென்றும் தீர்மானம் செய்தார்கள். பதினாயிரக்கணக்கான பேர் கிறிஸ்து முஸ்லீம் சீக்கிய ஆரிய சமாஜம் முதலிய மதங்களுக்கு பாய்ந்தார்கள். திருவாங்கூர் பிரஜைகளில் ஏறக்குறைய பகுதிக்கு மேற்பட்டவர்கள் ஏற்கனவே கிறிஸ்துவர்களாகவும் முஸ்லீம்களாகவும் இருக்கிறார்கள் என்பதோடு இப்போதும் கும்பல் கும்பலாய் மதம் மாற ஆரம்பித்தார்கள். எனது பிரசாரத்தின் பலனாய் நான் ஜாதிமத ஜனங்களிடை செல்வாக்கு இழந்து மதிப்பு இழந்து வர நேருகிறது என்றாலும் மேல் கண்ட பலன்கள் இந்நாட்டில் இதற்கு முன் என்றும் இருந்ததை விட அதிகமாக ஏற்பட ஆரம்பித்து விட்டதால் பொது ஜனங்களிடை என் மீது எவ்வளவு ஆத்திரம் இருந்தாலும் ஏதாவது ஒரு வழியில் நாஸ்திகத்தையும் கோவில் குள வெறுப்பையும் மாற்றி இந்துக்கள் மதம் மாறுவதையும் நிறுத்தித் தீரவேண்டிய அவசியம் மகாராஜாக்கள் முதல் சாதாரண பார்ப்பனர்கள் வரை ஏற்பட்டு விட்டது. நானோ அல்லது என்னைப் போன்ற யாராவது ஒருவரோ தனது சுயநலத்தையும் தனது செல்வாக்கையும் இழந்து பொதுஜன வெறுப்பையும் ஏற்க தயாராய் இருந்திருக்காத வரையில் இந்த மாறுதல் அதுவும் புரட்சி போன்றது ஒன்று ஏற்பட்டிருக்க முடியவே முடியாது என்பதை வேண்டுமானால் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதுவும் இப்படிப்பட்ட புரட்சி ஏற்பட்டும் சாஸ்திரிகளும் ஆச்சாரிகளும் வர்ணாச்சிரமக்காரர்களும் இந்த புரட்சியை வாய் வார்த்தையிலாவது கூட்டோடு ஆதரிக்க வெளிவரவும் முடியாது.

ஆதலால் இந்த உத்திரவுக்கு காரணம் வைக்கம் சத்தியாக்கிரகம் அல்லவென்றும் கடவுளையும் கோவிலையும் மதத்தையும் ஒழிக்கப் புறப்பட்ட சிலருடைய முயற்சியும் திருவாங்கூர் மகாராஜாவினுடைய ஒப்பற்ற விவேகமும் சாமர்த்தியமும் என்றுதான் சொல்லுவேன். இந்த உத்திரவினால் சாமி தரிசனம் செய்ய கீழ் ஜாதியார் என்பவர்களுக்கு இடம் கிடைத்து விட்டது என்பதல்ல எனது திருப்திக்கு காரணம். மேல் ஜாதி கீழ் ஜாதிக்கும் தீண்டாமைக்கும் ஒரு அளவுக்கு ஆதரவாக சாமியும் கோவிலும் ஒரு தூணாய் இருந்தது திருவாங்கூரைப் பொறுத்த வரையிலாவது இடிந்து விட்டதல்லவா என்கின்ற திருப்தி தான்.

மதம் என்கின்ற தூணும் இடிந்து விழுந்தாலொழிய தீண்டாமையும் மேல் ஜாதி கீழ் ஜாதியும் நம் நாட்டில் ஒழியவே ஒழியாது என்பது தான் எனது அபிப்பிராயம். அதற்கு ஆகவே கீழ்ஜாதிக்காரர்கள் என்பவர்களை முஸ்லீம் மதத்தில் சேருங்கள் என்று சொல்லிவருகிறேன். அதனால் இந்து மதத்துக்கு கேடு என்று கருதினால் இந்துமத தர்மகர்த்தாக்கள் ஜாதியை ஒழிக்கட்டுமே. மகாராஜா உத்திரவுபோல் ஒரு உத்திரவு போடட்டுமே. ஒரு சட்டம் கொண்டு வரட்டுமே. யார் வேண்டாம் என்கிறார்கள்?



RangaRakes tamilnavarasam.com

ஜாதி காப்பாற்றப்பட வேண்டும். பொது ஓட்டலில் ரயிலில் இருக்கிற வித்தியாசம்கூட ஒழியப்படாது என்று சொல்லிக்கொண்டும் ஒழிக்க சட்டம் கொண்டு வராமலும் இருந்து கொண்டும் மதம் கெட்டுப்போகிறது என்றால் இதில் நாணயமேது? ஜாதி ஒழிவதற்கு ஆக தீண்டாமை ஒழிவதற்கு ஆக ஒருவன் வேறு மதத்துக்கு போனால் மதம் வேண்டாம் என்பவர்களுக்குத் தான் ஏன் ஆத்திரம் வரவேண்டும்? இவர்கள் ஆத்திரத்தால் என்ன காரியம் நடக்கும்? ஒன்றுமே நடவாது. இந்தியா கூடிய சீக்கிரத்தில் முஸ்லீம் ஆதிக்கத்துக்கு வரப்போகிறது. பார்ப்பன ஆதிக்கத்துக்கு அதாவது இந்து ஆதிக்கத்துக்கு குழி தோண்டி ஆய்விட்டது. முஸ்லீம் ராஜ்யம் இந்தியாவில் விரிவு அடையப் போகிறது.

அரசியலிலும் முஸ்லீம்கள் ஆதிக்கம் விரிவடைந்து வருகிறது. பொருளாதாரத்திலும் அவர்களே மேன்மை அடைந்து வருகிறார்கள். இந்த ஊரை எடுத்துக் கொள்ளுங்கள் 10, 20 வருஷத்துக்குள் முஸ்லீம்கள் எவ்வளவு முன்னுக்கு வந்து விட்டார்கள். எங்கும் அவர்கள் எண்ணிக்கைக்கு மேல் பதவி வகிக்கிறார்கள். இதெல்லாம் எதனால்? அச்சமூக ஒற்றுமையினால். அவர்கள் தங்கள் சமூகத்துக்குள் ஒருவரை ஒருவர் அமுத்த நினைப்பதில்லை. ஒருவருக்கு வரும் கஷ்டத்தை - இழிவை தங்கள் சமூகத்துக்கே வந்ததாய் கருதுகிறார்கள். இதை அவர்கள் மதம் போதிக்கிறது. மற்றபடி சாமியைப்பற்றி மோக்ஷத்தைப்பற்றி நாம் கவலைப்படாதவர்களானாலும் இந்த அருமையான ஒற்றுமை குணத்திற்கு அவர்கள் பாராட்டப்பட வேண்டாமா? அதன் பயனை அவர்கள் அடைய வேண்டாமா?

ஆதலால் இந்தியா ஒற்றுமையடைய - இந்தியா சுயமரியாதை அடைய ஜாதி பிரிவு பார்ப்பனீயம் ஒழிய வேண்டும்; அல்லது முஸ்லீம் ஆதிக்கம் ஏற்பட வேண்டும். இரண்டும் இல்லாவிட்டால் நம் கதி அதோ கதிதான். ஆதலால் இந்த பிரகடனத்துக்கு மகாராஜாவையும் ஜாதிமத ஒழிப்புக்கு முயற்சித்தவர்களையும் பாராட்ட வேண்டியது நமது கடமையாகும்.

*குறிப்பு: 15.11.1936 ஆம் நாள் ஈரோடு காரை வாய்க்கால் மைதானத்தில் ஈரோடு பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்தாரால் நடத்தப் பெற்ற பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 06.12.1936**



# சுயமரியாதை இயக்கம்

சுயமரியாதை இயக்கம் என்ன காரணத்துக்கு ஆக ஆரம்பிக்கப்பட்டது என்பதும் அக் காரணத்தை இதுவரை சு.ம. இயக்கம் ஆதரித்து வந்திருக்கிறதா அல்லது மாறிவிட்டதா என்பதும் வாசகர்கள் அறிந்ததேயாகும். ஆனாலும் அதைப்பற்றி சிறிது மறுபடியும் எடுத்துக்கூறுவது மிகையாகாது என்றே கருதுகிறோம்.

பார்ப்பனரல்லாத மக்கள் சமூகத்துறையிலும் அரசியல் துறையிலும் பார்ப்பனர்களால் ஏய்த்து அடிமைப்படுத்தப்பட்டு சுயமரியாதை உணர்ச்சியில்லாமல் தாழ்ந்து கிடப்பதை மாற்றி அவர்களை எப்படியாவது பார்ப்பன ஆதிக்கத்தில் இருந்து விடுபடச் செய்ய வேண்டும் என்கின்ற நோக்கத்தை முக்கியமாய்க் கொண்டே ஆரம்பிக்கப்பட்டதாகும். மற்றும் பல நோக்கங்களும் இருக்கலாம்.

இந்த நோக்கத்தில் ஈடுபட்டு உழைத்ததில் ஆரம்ப முதல் ஜஸ்டிஸ் கட்சியின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் ஏற்றே நடந்து வந்திருப்பதுடன் அரசாங்கத்தின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் கூட அவசியம் நேர்ந்த போதெல்லாம் ஏற்று நடந்து வந்திருக்கிறது.

இவற்றால் ஏற்பட்ட பயன்கள் என்ன என்பதைப்பற்றி இந்த வியாசத்தில் நாம் விவரிக்க முன் வரவில்லை.

சுயமரியாதை இயக்கம் ஆரம்பகாலம் முதல் ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு துறையிலும் காங்கிரசை எதிர்த்தும் பார்ப்பன ஆதிக்கத்தை வெறுத்தும் வந்திருப்பதுடன் சு.ம. இயக்கத்தில் பார்ப்பனர்கள் அங்கத்தினராவதற்கு தடையும் விதிக்கப்பட்டிருக்கிறது. சு.ம. இயக்கத்தின் முக்கியமெல்லாம் சமூகத்துறையில் பார்ப்பனீயத்தை அழிப்பதை எப்படி ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டு வந்ததோ அதேபோல் அரசியலிலும் காங்கிரசைத் தாக்கி அதன் ஆதிக்கத்தை ஒழிக்க ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு மூச்சும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது என்பது சு.ம.காரர்கள் மாத்திரமல்லாமல் மற்றும் எவரும் உணர்ந்ததேயாகும்.

சைமன் கமிஷனை வரவேற்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பெண்மக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்றும், வகுப்புவாரி பிரதிநிதித்துவ



RangaRakes tamilnavarasam.com

முறை அனுசரிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது முதல் சென்ற மாதம் பண்டிட் ஜவஹர்லாலை பகிஷ்கரித்தது வரை காங்கிரசின் ஒவ்வொரு நிலையையும் எதிர்த்தே வந்திருக்கிறது. இதனால் சு.ம.காரர்கள் நாஸ்திகர்கள் என்றும் தேசத்துரோகிகள் என்றும் அழைக்கப்பட்டார்கள். காங்கிரசும் தன்னால் கூடுமானவரை சுயமரியாதை இயக்கத்துக்கு விரோதமாகவே அதன் சகல ஆயுதங்களையும் பயன்படுத்தி வந்திருக்கிறது.

இந்த நிலையை பூரணமாய் உணர்ந்தே காங்கிரசிலிருந்த பலர் சு.ம. இயக்கத்துக்கு வந்து சேர்ந்ததும் சு.ம. இயக்கத்தில் இருந்த பலர் காங்கிரசில் போய்ச் சேர்ந்ததுமான காரியங்கள் நடந்திருக்கின்றன.

ஆகவே இவற்றை பொது மக்கள் அறியாததல்ல என்பதே நமது நம்பிக்கை.

இந்நிலையில் இன்றும் சில சு.ம. காரர்கள் காங்கிரசில் சேர்ந்தும் காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்தில் காங்கிரசுக்கு ஆதரவாய் பிரசாரம் செய்தும் அப்பிரசாரங்களில் ஜஸ்டிஸ் கட்சியையும் சு.ம. இயக்கத்தையும் இகழ்ந்து கூறியும் வருவதுடன் காங்கிரஸ் சார்பாய் சில தேர்தல் ஸ்தானங்களுக்கு அபேட்சகர்களாய் இருக்க முயற்சிப்பதாயும் சேதிகள் வருகின்றன.

இவற்றைப்பற்றி நாம் ஆச்சரியப்படவில்லை. இப்படிப்பட்ட நிலை இன்று நேற்று அல்லாமல் இயக்க ஆரம்ப காலம் முதல் கொண்டே நடந்து வந்திருக்கிறது. இது நமது இயக்கத்துக்கு மாத்திரமல்லாமல் ஜஸ்டிஸ் கட்சிக்கும் இதுபோலவே இந்த 15 வருஷ காலமாகவே நடந்து வந்திருக்கிறது. காங்கிரசுக்கும் நடந்து வந்திருக்கிறது. ஆதலால் அரசியலை வாழ்வுக்கு ஆதாரமாய்க் கொண்டவர்கள் உள்ளவரையில் இக்காரியங்களுக்கு அனுமதி அளித்துத்தான் தீர வேண்டும். இப்படிப்பட்டவர்களால் பொது ஜனங்கள் ஏமாந்து போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது தான் தவிர்க்க முடியாத நமது கடமையாகும். அதென்னவென்றால் இன்று பல பத்திரிகைகளில் ''சு.ம.காரர்கள் காங்கிரசில் சேர்ந்துவிட்டார்கள்'' என்றும் ''சு.ம. இயக்கத் தலைவர் நடத்தை பிடிக்காமல் சிலர் காங்கிரசுக்கு வந்து விட்டார்கள்'' என்றும் எழுதுவதுடன் சு.ம. இயக்கமே காங்கிரசில் கலந்துவிட்டது போலவும் கருதும்படி விஷமத்தனமாகவும் சில பத்திரிகைகளில் எழுதி பாமர மக்களை ஏய்க்கிறார்கள். அதனால் சிற்சில சமயங்களில் இயக்க முயற்சிக்கு கெடுதி உண்டாக இடமேற்படுகிறது. ஆதலால் அதைப்பற்றி எழுத வேண்டியிருக்கிறது.

சு.ம. இயக்கத்துக்கும் காங்கிரசுக்கும் உள்ள முரண்களில் முக்கிய முரண் சு.ம. இயக்கம் ஜாதிப் பிரிவுகளை ஒழிக்க வேண்டும் என்றும் அரசியல் பிரதிநிதித்துவம் உத்தியோகம் ஆகியவைகளில் ஜாதி மதம் உள்ள வரை ஜாதி மத வகுப்பு எண்ணிக்கைக்கு தகுந்தபடி பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.



இந்தக் காரியங்களுக்கு மாறாகவே இன்று காங்கிரஸ் வேலை செய்து வருகிறது. காங்கிரசின் உயிர் வாழ்வுக்கு அவசியம் வகுப்புகளை காப்பாற்றவும் வகுப்பு உரிமைகளை ஒழிக்கவுமான காரியமே ஆகையால் அந் நிலையில் இருந்து காங்கிரஸ் மாறுகிறவரை அல்லது தனது நிலையில் இருந்து சு.ம. இயக்கம் மாறுகிறவரை காங்கிரசும் சு.ம. இயக்கமும் இரண்டு நேர்கோடுகளே யாகும். ஒன்றுக்கொண்டு சம்மந்தம் ஏற்பட இடமே இருக்க நியாயமில்லை. இந்த இரு லட்சியங்களையும் ஜஸ்டிஸ் கட்சி ஒப்புக்கொண்டு அதற்கு ஆகத் தன்னாலான காரியத்தை செய்து வந்ததாலும் செய்து வருவதாலும் ஜஸ்டிஸ் கட்சியினிடம் சு.ம. இயக்கம் சம்மந்தம் வைத்திருக்கிறது.

இந்த இரண்டு காரியமும் தங்களுடைய லட்சியம் அல்ல என்று கருதுகின்ற எவருக்கும் சு.ம. இயக்கத்தில் இடமில்லை. இடம் ஏற்பட்டால் அது நாணயக் குறைவான முறையின் சம்பாத்தியமும் வினியோகமுமேயாகும்.

இந்த இரண்டு காரியத்துக்கு ஆக சு.ம. இயக்கம் ஏகாதிபத்தியமோ அந்நிய ஆட்சியோ அல்லது வேறு எதுவோ ஆனாலும் அவற்றுடன் அவசியம் ஏற்படும் போதெல்லாம் ஒத்துழைத்தும் ஆதரித்தும் தான் தீரும். இந்த இரண்டு காரியமும் வெற்றிபெறாமல் சு.ம. இயக்கம் அரசாங்கத்தாரோடு போரிடவோ அல்லது அரசாங்கத்தைக் கவிழ்க்கவோ ஒருநாளும் சம்மதியாது. மற்றும் இந்த இரண்டு காரியங்களுக்கு விரோதமாய் இருக்கும் எந்த ஸ்தாபனமும் சு.ம. இயக்கத்துக்கு விரோதமானதே என்பது நமது தாழ்மையான அபிப்பிராயம்.

மற்றொரு விஷயம் கூட சொல்லுவோம். அதாவது தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் சொன்னது போலவே நாமும் சொல்லுவோம்.

சத்தியமூர்த்தியார் என்ன சொன்னார் என்றால் ''அபேதவாதிகள் என்பவர்கள் எனது விரோதியே யாவார்கள், காங்கிரசின் விரோதியே ஆவார்கள்'' என்பதாகக் கூறினார். அதுபோல் தான் நாமும் மற்றொரு விஷயத்தில் கூறுவோம். அதாவது ஜாதிப் பிரிவு ஒழிப்பதற்கும் அது உள்ளவரை வகுப்பு வாத பிரதிநிதித்துவத்துக்கும் எவன் விரோதியோ அவனெல்லாம் சு.ம. இயக்கத்துக்கும் விரோதி என்றே சொல்லுவோம்.

இதற்கு மாறாக ஏதாவது சு.ம. இயக்கத்தில் ஏற்படுமானால் அது எது அதிக கெடுதி? எது குறைந்த கெடுதி என்கின்றதைப் பொறுத்துத்தான் இருக்குமே ஒழிய விட்டுக்கொடுப்பதற்கு ஆக ஒரு நாளும் ஏற்பட்டுவிடாது.

சு.ம. இயக்கம் தனிப்பட்ட ஒரு சமதர்ம இயக்கத்தில் சேரக்கூடாதா என்று சிலர் கேட்கலாம். சேரலாம் என்றே பதில் கூறுவோம். ஆனால் வகுப்புகள் ஒழியும் வரை **வகுப்புவாரி** சம உரிமைகளுக்கு இணங்கிவரக்கூடிய சமதர்ம இயக்கமாய் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களே தங்களை சு.ம. சமதர்ம வாதிகள் என்று அழைத்துக் கொள்ளக்கூட உரிமையுடையவர் களாவார்கள். அதில்லாமல் சு.ம. சமதர்மவாதிகள், சு.ம. காங்கிரஸ்காரர்கள்,



RangaRakes tamilnavarasam.com

சு.ம. தேசீய வாதிகள் என்று சொல்லிக்கொள்வதெல்லாம் ஏமாற்று வித்தை அல்லது நாணையக் குறைவான காரியம் அல்லது அறியாத்தனம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இதை ஏன் எழுதுகிறோம் என்றால் இந்தமாதிரியான பெயர்களைக் கண்டு பொது ஜனங்கள் ஏமாந்து போகக்கூடாது என்பதற்கு ஆகவே எழுதுகிறோம்.

சு.ம. இயக்கம் ஒரு குறிப்பிட்ட கொள்கையையே அடிப்படையாகக் கொண்டது. அதற்கு ஆக வேண்டி ''ஒரு குண்டு'' இருக்கிறவரையிலும் அது போராடியே தீரும். மற்றும் அது தனக்கு போதிய ஆதரவு இருக்கிறது, எதிரிகளின் தொல்லை நமது முயற்சியைக் கெடுக்காது, நம்மைக் காட்டிக் கொடுப்பதற்கு ஆள் இல்லை, அதனால் நமக்கு இடையூறு உண்டாகிவிடாது என்றெல்லாம் விளங்கும்வரை அரசாங்கத்தாரோடு முரண்பாடு செய்துகொள்ள முயற்சிக்காது என்பதையும் பட்டவர்த்தனமாகத் தெரிவித்துவிடுகிறோம்.

இதன் மத்தியில் அவசியம் நேர்ந்தால் அது தனிப்பட்ட முறையில் தனிநபர்கள் காரியமாய் இருக்க நேருமே அல்லாமல் இயக்கத்தின் கொள்கையாக இருக்க இன்றைய நிலையில் முடியவே முடியாது.

தோழர்கள் டி.என். ராமன் அவர்களும், டி.எஸ்.எஸ். மணியம் அவர்களும் ''விடுதலை''யில் (குடி அரசில் மற்றொரு பக்கம் பிரசுரித் திருக்கிறது) எழுதி இருப்பதுபோல் தங்கள் தங்கள் சொந்த தனிப்பட்ட சுயநலங் காரணமாகவும் வெறுப்பு விருப்பு காரணமாகவும் பல மாஜி சுயமரியாதை தோழர்கள் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றியும் அதன் உழைப்பாளிகளைப் பற்றியும் செய்துவரும் விஷமப் பிரசாரங்களுக்கு மக்கள் இடம் கொடுக்காமல் எவ் விஷயத்தையும் ஆர அமர பொறுமையாய் யோசித்து ஒரு துறையில் இறங்கி பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கு தங்கள் தங்களால் ஆன தொண்டை ஆற்ற வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 06.12.1936**



# பட்டேல் ஜாக்கிரதை!

## BEWARE OF PATEL!

நமது பார்ப்பனர்கள் தோழர் பட்டேல் அவர்களை கூடிய சீக்கிரம் தமிழ்நாட்டுக்கு அழைத்து வர ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

எப்படியாவது பணம் சம்பாதித்துத் தீரவேண்டும் என்பதும் அதை செலவு செய்து எப்படியாவது பார்ப்பனர்களை சட்ட சபைக்கு வரும்படி செய்து பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தை தடுத்து ஒழித்து பழயபடி ''சூத்திரன்'' ஆக்கி பார்ப்பன ஆட்சியை நிலை நிறுத்த வேண்டும் என்பதுமே நமது பார்ப்பனர்களுக்கு முக்கிய தவமாக ஆகிவிட்டது.

பார்ப்பனரல்லாதார்களில் யாரையாவது காங்கிரசில் சேர்த்து காங்கிரஸ் மூலம் எந்த தேர்தலுக்கு நிறுத்துவதானாலும் காங்கிரசுக்கு முதலில் இவ்வளவு என்று பணம் கொடுத்து விட்டு தங்களது செலவும் தாங்களே போட்டுக்கொண்டு காங்கிரசால் நிறுத்தப்படும் பார்ப்பனரின் தேர்தல் செலவுக்கும் பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்கப்படுகிறது.

பார்ப்பனர் யாராவது தேர்தலில் நிறுத்தப்படுவதாய் இருந்தால் அந்தப் பார்ப்பனருக்கு இந்த நிபந்தனைகள் ஒன்றும் கிடையாது. அவருடைய தேர்தல் செலவுக்கு ஒதுக்கி வைத்த (என்று மற்றவர்களுடைய) பணத்தில் - கொடுக்கப்பட்ட பணத்தில் மீதி செய்து தனித்த முறையில் அந்த அபேட்சக பார்ப்பனர் சொத்து சேர்த்துக் கொள்ளவும் முடிகிறது.

மற்றும் பல இடங்களில் தேர்தலுக்கு நிறுத்தி வைப்பதற்கென்று நிற்பவர்களிடம் காங்கிரஸ் விதிப்படி வாங்கும் பணம் தவிர அதிகப்படியாக தயவு பயன்படுத்த என்றும், தனிப்பட்டவர்கள் நன்மைக்காக என்றும் பணம் வசூலித்துக்கொள்ளப்படுகின்றது. இதற்கு ஆதாரம் வேண்டுமானால்

''காங்கிரஸ் தொண்டில்'' இறங்கி ஜில்லா பிரமுகர்களாகவும் ஜில்லா தலைவர், காரியதரிசிகளாகவும் ஆன அனேகம் பேர்களுக்கு ''காங்கிரஸ் சேவை''யின் பயனாய் ஏராளமாகப் பணம் சேர்ந்திருப்பதை பார்க்கலாம்.

தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரியார் அவர்கள் நிலையையே சற்று யோசிப்போம். அவர் வக்கீலாக இந்த 16 வருஷத்தில் எத்தனை வழக்குகளுக்கு போயிருக்கக் கூடும்? இதற்கு எத்தனை ரூபாய் பீசு வரும்படி வந்திருக்கும்? பீசு வரும்படிக்கு எத்தனை ரூபாய் வருமான வரி கொடுத்திருக்கக்கூடும்?



RangaRakes tamilnavarasam.com

இன்று அவருக்கு சொத்து எவ்வளவு இருக்கும்? அவரது 2-வது வகுப்பு பிரயாணத்துக்கு எந்த வகையில் பண வருவாய்? என்பவைகளை ஊடுருவிப் பார்த்தால் காங்கிரசு பக்தர்களும் அவர்களது பணநிலை எப்படி சேர்ந்தது என்பதும் நன்றாய் விளங்கும்.

மற்றும் தெரியவேண்டுமானால் மற்ற ஜில்லாக்களையும் எடுத்துக் கொள்ளுவோம். தோழர் குப்புசாமி முதலியார் காங்கிரசுக்கு வரும்போது அவரது நிலை என்ன? அதன் பிறகு அவர் என்ன வியாபாரம் செய்தார்? இப்போது அவருக்கு இருக்கும் பண நிலை எவ்வளவு? இது எப்படிச் சேர்ந்தது? இதற்கு ஆதாரமோ கணக்கு வழக்கோ உண்டா? என்பவைகளை மேல்வாரியாகக் கவனித்தாலும் காங்கிரஸ் பக்தர்களும் பண நிலையும் என்கின்ற விபரம் நன்றாய் விளங்கும். இன்னும் எத்தனை ஜில்லாக்களை வெளிப்படுத்த வேண்டுமானாலும் தயாராய் இருக்கிறோம். ஆனால் வாசகர்கள் மூளைக்கு விருந்தளிக்க வேண்டும் என்பதற்கு ஆகவே சிலவற்றை அவர்களையே சிந்தித்துப் பார்க்கும்படி விட்டு விடுகிறோம்.

இந்த மகா உத்தமர்கள் மூலம் ''தேசீயப்பணியாற்றவும்'' ''பாரதமாதாவின் விலங்கை உடைத்தெறியவும்'' என்னும் பித்தலாட்டத்தின் பேரால் தென்னாட்டில் இன்னமும் லக்ஷக்கணக்காக பணம் வசூலித்து கொடுத்து விட்டுப்போக பட்டேல் வருகிறார் என்றால் அவரை வரவேற்பதா பஹிஷ்கரிப்பதா என்பதை பகுத்தறிவுடனும் சுயமரியாதையுடனும் யோசித்துப் பார்க்கும்படி தமிழ் மக்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

எங்காவது பார்ப்பனன் சத்திரங்கட்டி அன்னதானம் செய்திருப்பதை யாராவது பார்த்திருக்கிறோமா? பார்ப்பான் கோவிலோ, குளமோ, மண்டபமோ, சாவடியோ கட்டி பொதுஜனங்களுக்கு விட்டதாக யாராவது பார்த்திருக் கிறோமா? எங்காவது பார்ப்பான் பள்ளிக்கூடம் கட்டியோ பள்ளிப் பிள்ளைகளுக்கு உதவி செய்தோ பொதுமக்களைப் படிப்பித்திருப்பதை யாராவது பார்த்திருக்கிறோமா? வேண்டுமானால் பார்ப்பனர்கள் நன்மைக்கு ஆக மாத்திரம் என்று எங்காவது மற்றவர்கள் இடம் மிக்க பொருள்பறித்து ஏற்பாடு செய்து தன் பெயரை எழுதிக் கொள்ளுவான். தன் பெயரை விளம்பரப்படுத்திக்கொள்ளுவான். உதாரணமாக தோழர்கள் வி. கிருஷ்ணசாமி அய்யர், சர்.பி.எஸ். சிவசாமி அய்யர் முதலிய படித்த - ''தலைவர்''களான (பார்ப்பனரல்லாதாராலேயே) பெரும்பொருள் சம்பாதித்த கனவான்கள் செய்த தருமங்கள் என்பவைகள் கூட பார்ப்பனர்கள் என்பவர்களுக்கு மாத்திரமே பயன்படக்கூடியதாயும் பார்ப்பனர் என்பவர்களுக்கு மாத்திரமே உத்தியோகம் இருக்கக்கூடியதாகவும் இருக்கிறது என்றால் மற்ற பார்ப்பனர்களைப்பற்றி யோசிக்க நேரத்தை செலவழிக்க வேண்டுமா என்று கேட்கின்றோம்.

இப்படிப்பட்ட சமூகத்தார் நடத்தும் காங்கிரசுக்கு அதாவது அவர்களது ஆதிக்கத்தை உயர்த்தி மற்றவர்கள் ஆதிக்கத்துக்கு உலை வைக்கும்



முயற்சி ஸ்தாபனத்துக்குப் பார்ப்பனரல்லாதார் பணம் உதவுவது என்றால் இதில் மானமோ அறிவோ எப்படி இருக்க முடியும் என்றுதான் கேட்கின்றோம்.

தோழர் பட்டேல் பகற்கொள்ளை அடிப்பதற்கே வருகிறார். கொள்ளை அடித்த பொருளை பார்ப்பனருக்கு அழுகவும் பார்ப்பன தாசர்கள் சொத்து சேர்க்கவும் பயன்படுத்த உதவவே வருகிறார்.

**தோழர்களே பட்டேல் ஜாக்கிரதை!**

Beware of Patel!

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.12.1936**



RangaRakes tamilnavarasam.com

# சர்க்காரின் ஞானோதயம்

பிரசாரக் கூட்டங்களில் காங்கிரஸ்காரர்கள் மற்ற கட்சியார்களை அற்பத்தனமாகவும், அயோக்கியத்தனமாகவும் பேசுவதைப்பற்றியும், காங்கிரஸ்காரர்கள் அல்லாத மற்றவர்கள் கூட்டங்களில் காங்கிரஸ் காலிகளும், பல கஞ்சித் தொட்டிக் கூலிகளும் கல்லெறிதல், செருப்பு வீசுதல், அழுகல் முட்டைகள், அசிங்கப் பண்டங்கள் வீசுதல், அனாவசியமாய் மற்றவர்கள் கூட்டங்களில் ''காந்திக்கு ஜே'' ''சத்தியமூர்த்திக்கு ஜே'' என்பது போன்ற முட்டாள்தனமான மொழிகளைக் கூவி தொல்லைப்படுத்துதல், பள்ளிக்கூடத்து பிள்ளைகள் கையிலேயும், தெருவில் பிச்சையெடுக்கும் எச்சிலைப் பையன்கள் கையிலேயும் கொடிகளைக் கொடுத்து பிரசங்கங்கள் நடக்கும்போது கூட்டத்தைச் சுற்றியும், கூட்டத்து நடுவிலும் கூச்சல் போடும்படி செய்தல் ஆகிய பல காரியங்கள் தொடர்ச்சியாய், கட்டுப்பாடாய் நடந்து வந்ததை ''குடி அரசு'' மூலம் புள்ளி விபரங்களோடு பல தடவைகளில் எடுத்துக் கூறி வந்திருக்கிறோம். அதை ஆதரித்தே காங்கிரஸ் பத்திரிகைகளும் தங்களது இம்மாதிரியான காலித்தனங்களில் தங்கள் வெற்றியைக் காண்பிப்பதின் மூலம் தெரிந்தோ தெரியாமலோ ''ராமசாமி கூட்டத்தில் குழப்பம்'' ''ஜஸ்டிஸ் கட்சி கூட்டம் கலவரத்தில் முடிந்தது'' ''விளக்குகள் உடைபட்டன'' ''கல்லுகளும் செருப்புகளும் எறியப்பட்டன'' ''அழுகல் முட்டைகள் வீசப்பட்டன'' ''ராமசாமிக்கு அடி'' ''சௌந்திரபாண்டியனுக்கு அடி'' என்றெல்லாம் கொட்டை யெழுத்துக்களில் எழுதி மகிழ்ந்து காலித்தனங்கள் நடந்ததை மெய்பித்துக்கொண்டே வந்தன.

மற்றும் அதிகாரிகளும் சிற்சில இடங்களில் பார்ப்பனர்களாக உள்ளவர்கள் காங்கிரசுக்கு ஆதரவு காட்டி வந்ததையும், காங்கிரசுக்கு விரோதமானவர்களுக்கு தொல்லை கொடுத்து வந்ததையும் மேல் அதிகாரிகளுக்கு விண்ணப்பம் மூலமாகவும் நேரிலும் தெரிவிக்கப்பட்டு வந்தன. இவ்வளவு நடந்தும் இதுவரையிலும் அரசாங்கம் எவ்வித பயன் தரத்தக்க நடவடிக்கையும் கையாளாமல் இருந்ததுபற்றி நாம் அரசாங்கத்தை சலித்துக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

அதனாலேயே சென்றவாரத்துக்கு முந்தினவாரம் இது சம்மந்தமாய் அரசாங்கத்துக்குக் கண்டித்து எழுதி சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நேரிலும் தகவல் கொடுத்தோம். அவை இப்பொழுதாவது ஒரு அளவுக்கு அரசாங்கத்தாரால் கவனிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய ஒரு அளவுக்கு ஆறுதல் அடைகிறோம்.



நிற்க, காலித்தனத்தின் மூலம் எலெக்ஷன் வெற்றி தோல்விகளைப் பார்த்துக்கொள்ளலாம் என்று வெளிப்படையாய் ஏற்பட்டுவிடுமானால் இன்றுள்ள ஸ்தானங்களெல்லாம் எந்த தேர்தலிலானாலும் போட்டியில்லாமல் ஜெயித்துவிட முடியுமென்று எவ்வித உறுதியும் கூற நம்மால் முடியும். ஏனெனில் காங்கிரஸ்காரர்கள் கூலியும் பதவியும் கொடுத்து ஆள்களைச் சேர்த்து காலித்தனம் செய்யச் செய்ய வேண்டும். மற்ற கட்சிக்கு அவ்வித நிர்ப்பந்தம் எதுவுமில்லை. தடை செய்யாமலிருந்தாலே காங்கிரஸ் காலித்தனத்தை விட நூறு மடங்கு செய்யச் செய்வதற்கான சௌகரியங்களுண்டு. இதை உத்தேசித்தேதான் தோழர் பொப்பிலி ராஜா அவர்கள் திருச்செங்கோடு ஜஸ்டிஸ் மகாநாட்டின் திறப்புவிழா ஆற்றிய சொற்பொழிவில் வியக்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதாவது ''காங்கிரஸ்காரர்கள் காலித்தனத்தையே தங்கள் வெற்றி பெறும் ஆயுதமாகக் கருதி இருக்கிறார்கள். நாங்களும் அப்படியே கருத ஆரம்பித்தோமானால் காங்கிரஸ்காரர்களைவிட நூறு மடங்கு மேன்மையாகவும் பயன் தரத்தக்கதாகவும் செய்யச் செய்ய முடியும்'' என்பதை விளங்கப் பேசி இருக்கிறார். அதன் பிறகு செட்டி நாட்டு ராஜா சர் அண்ணாமலை அவர்கள் கூட்டத்தில் சிலர் செய்த காலித்தனமும் தோழர் சௌந்திர பாண்டியன் அவர்கள் கூட்டத்தில் நடந்த காலித்தனமும் படம் பிடித்தாற்போல் அதிகாரிகளுக்கு விளக்கப்பட்டு விட்டது. இவ்வளவு ஆன பிறகே சர்க்காருக்குக் கொஞ்சமாவது தோன்றி அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முன் வந்தது ஒரு அளவுக்காவது புத்திசாலித்தனமானதாகும்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 06.12.1936**



RangaRakes tamilnavarasam.com

# காங்கிரஸ் தலைமைப் பதவி

இந்திய தேசீய காங்கிரசின் தலைமைப்பதவிக்கு தோழர் ஜவஹர்லாலின் மோகமானதுமான அவமானத்தைக்கூட கவனிக்க முடியாமல் செய்துவிட்டது.

சமதர்மத்தை பிரசாரம் செய்வதில்லை என்றும், பதவி ஏற்பு மறுப்பை பிரசாரம் செய்வதில்லை என்றும் வாக்குகொடுத்து தலைவர் பதவியை கேட்க வேண்டிய அளவுக்கு துணிந்துவிட்டார்.

''என்னை தலைவனாக தேர்ந்தெடுத்தால் எனது கொள்கையை நீங்கள் ஒப்புக்கொண்டதாக அர்த்தமல்ல, சமதர்மத்தை அனுமதித்ததாக அர்த்தமல்ல, பதவி மறுப்பை ஏற்றுக்கொண்டதாக அர்த்தமல்ல'' என்று தானாகவே அறிக்கை விட்டிருக்கிறார்.

சென்னை பார்ப்பனர்கள் தோழர் ஜவஹர்லால் தலைவராகக் கூடாது என்று எவ்வளவோ தந்திரங்கள் செய்தார்கள். ஜவஹர்லாலின் யோக்கியதையற்ற தன்மையை தயவு தாக்ஷண்ணியமில்லாமல் வெளிப்படுத்தினார்கள். அவருக்கு தலைமைப்பதவி தகாது என்றும் இது சமயம் அவர் கூடாது என்றும் எவ்வளவோ எழுதினார்கள். கடசியாக காந்தியார் எங்கு ஜவஹர்லால் விறைத்துக்கொண்டால் தன்னைத் தூக்கி கீழே போட்டுவிடுவாரோ என்று பயந்து மற்ற இரு அபேக்ஷகர்களையும் பின் வாங்கிக்கொள்ளும்படி செய்துவிட்டார். அதனால் பண்டிதருக்குதான் தலைமைப்பதவி கிடைக்கலாம் என்று கருதும்படியான நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது.

2, 3 வருஷங்களுக்கு முன்பாகவே தோழர் சி.ஆர். ஆச்சாரியாருக்குக் கிடைத்திருக்க வேண்டிய இந்தப் பதவி இப்பொழுது கூட கிடைக்காமல் மூன்றாந் தடவையாக ஒரு வெத்தி வேட்டுக்கு போய் சேருகிறது. அதுவும் அரசியல் உலகில் செல்வாக்கில்லாத நபருக்கு போய்ச் சேரப்போகிறது. இவையெல்லாம் காங்கிரசின் பொறுப்பற்ற தன்மையைத்தான் காட்டுகிறதே ஒழிய அதன் பொறுப்பையோ புத்திசாலித்தனத்தையோ காட்டவில்லை.

பண்டிதர் தேர்தலில் இருந்து வடநாட்டுப் பார்ப்பனர் தென்னாட்டுப் பார்ப்பனர் என்கின்ற பிரிவு உணர்ச்சி ஒன்று புதிதாக உற்பத்தியாக இடமேற்பட்டும் விட்டது.



பொதுவாக சொல்லவேண்டுமானால் காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு ஆசைப்பட்டு பாடுபட்டவர்களில் தோழர் எஸ். சீனிவாசய்யங்கார் கூட 2வது மூன்றாவதாக ஆகத்தக்க வண்ணம் தோழர் ஜவஹர்லால் பிரயத்தனப்பட்டு அறிக்கை மேல் அறிக்கை வேண்டுகோள் மேல் வேண்டுகோள் விட்டு நயம் காட்டி பயம் காட்டி கொள்கைகள் என்பவற்றை விட்டுக்கொடுக்க இசைந்து பதவி பெற்றுவிட்டார். ''பதவி மோகமற்ற'' ஸ்தாபனத்தின் தலைவர் யோக்கியதையைப் பாருங்கள்.

**குடி அரசு - கட்டுரை - 06.12.1936**



RangaRakes tamilnavarasam.com

# கோவில் பிரவேசம்

திருவாங்கூர் கோவில் பிரவேச பிரகடனம் தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களால் பரீட்சை பார்க்கப்பட்டாய் விட்டது. அதாவது தோழர் ஆச்சாரியார் சுமார் 40 புலையர்களுடன் திருவனந்தபுரம் பத்மனாபஸ்வாமி ஆலயம் என்பதற்குள் பிரவேசித்து உள் பிரகாரம் முதலியவற்றிற்குள் நுழைந்து விக்கிரகத்தைத் தொட்டுப்பார்த்துவிட்டு வந்துவிட்டதாகவும் யாரும் எவ்வித தடையும் செய்யவில்லை என்றும் பத்திரிகைகளுக்கு சேதி விடுத்திருக்கிறார்.

இது இவ்வளவும் உண்மையாய் இருக்குமா என்பது சுலபத்தில் ஒப்புக் கொள்ளக் கூடிய காரியமல்ல என்றாலும் தோழர் ஆச்சாரியார் கூறுவதினால் அவை உண்மையாய்த்தான் இருக்க வேண்டும் என்று கருதுகிறோம்.

அப்படியே உண்மையாய் இருக்குமானால் தோழர் ஆச்சாரியார் கூறுகிறபடி இது ஒரு புரட்சியான மாறுதல் என்பதில் ஆட்சேபணை இல்லை.

இதனால் தோழர் ஆச்சாரியார் கூறுவது போல் ரத்தக்களரி இல்லாமல் பெரும் புரட்சிகரமான காரியங்கள் நடைபெறலாம் என்பதற்கும் அதிக நம்பிக்கை வைக்க இடமுண்டாய்விட்டது.

ஆனால் இந்தக் கோவில் பிரவேசத்தால் ஆதிதிராவிட மக்களுக்கு - கீழ்ப்படுத்தி வைத்திருந்த மக்களுக்கு ஏற்பட்ட காரியமான லாபம் என்ன என்பதை யோசித்தால் அவர்களது முன்னேற்றத்துக்கு ஆன முயற்சிகள் அடைக்கப்பட்டு போய்விட்டன என்பது தான். எப்படி எனில் இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் சமுதாயத்துறையில் அடிமைப்படுத்தப்பட்டு ஒடுக்கி கொடுமையாய் வைக்கப்பட்டிருந்த காரணம் பொருளாதாரத் துறையில் தாங்கள் கீழ் நிலையில் இருப்பதால்தான் என்று கருதி பொருளாதார விடுதலைக்கு நேரே பாடுபட்டு வந்தார்கள். ஆனால் இந்த காரியத்தால் அவர்களது சமூகக் கொடுமை ஒரு அளவுக்கு நீங்கி விட்டதாக அவர்கள் உணர நேரும் போது தங்களது பொருளாதாரக் கொடுமைக்கு காரணம் இன்னது என்பதை உணரமுடியாமல் கடவுள் பேரிலும் தலைவிதி பேரிலும் பழியைப் போட்டு விட்டு உறங்கிக் கிடக்க நேரிட்டு விடுமே என்பதுதான்.

குடி அரசு - கட்டுரை - 06.12.1936



# சுயமரியாதைத் திருமணமும் வைதீகத் திருமணமும்

## புரோகிதத்தின் லக்ஷணம் என்ன?

தோழர்களே!

இன்று இங்கு நடந்த திருமண ஒப்பந்தத்தை கேட்டதோடு அதன் வினைமுறைகளையும் பார்த்தீர்கள். இதைத்தான் இன்று பலர் சுயமரியாதைத் திருமணம் என்று சொல்லுகிறார்கள். மற்றும் சிலர் சீர்திருத்த திருமணம் என்றும் சொல்லுகிறார்கள். இரண்டும் ஒன்றுதான். எப்படிச் சொன்னாலும் சரி, வயது வந்த ஒரு பெண்ணும், ஒரு ஆணும் வாழ்க்கையில் பிரவேசிப்பதற்கு ஆக தங்களுக்குள் செய்து கொள்ளும் ஒப்பந்த வினையைத்தான் இன்று நாம் திருமணம் என்கிறோம்.

அந்த வினைகள் பல விதமாக செய்யப்பட்டு வருகின்றன. அத்தனை விதங்களுக்கும் ஆதாரமோ அவசியமோ என்ன என்பதற்கு யாராலும் காரணம் சொல்ல முடியாவிட்டாலும் ஏதோ பழக்க வழக்கம் என்று சொல்லிக் கொண்டு தங்கள் கௌரவங்களையும் நினைத்துக்கொண்டு என்ன என்னமோ செய்து வருகிறார்கள்.

உலகில் மக்கள் வாழ்க்கையில் உள்ள ஒவ்வொரு துறையிலும் மாற்றம் ஏற்பட்டு வருவதுபோல் இத்திருமணம் என்கின்ற முறையிலும் காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்து பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. மற்றும் பல துறைகளிலும் அனாதியான பழக்க வழக்கம் என்பவைகளிலும் கூட அறிவு விசாலத்தை முன்னிட்டும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

மற்றும் பல துறைகளில் வெறும் மாறுதலை விரும்பியே பல பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. இவை உலக இயற்கையே யாகும். ஏதோ ஒரு விதத்தில் மாறுதல்கள் ஏற்படுவது தள்ள முடியாத காரியமாகும். இந்த உண்மையை நமது வாழ்க்கையையும் அனுபவத்தையையும் ஞாபகப் படுத்திப் பார்த்தால் அதன் விபரம் பூராவும் நமக்கு நன்றாய்விளங்கும்.

நாம் மாறுதல்களுக்கு கட்டுப்பட்டவர்களும் அடிமைப்பட்டவர்களும் ஆசைப்பட்டவர்களும் ஆவோம்.



RangaRakes tamilnavarasam.com

ஆதலால் அந்த மாறுதலேதான் அதுவும் அறிவு ஆராய்ச்சி ஆகிய காரணங்களைக் கொண்டுதான் இந்தத் திருமணமுறையில் காணப்படுகிற மாறுதல்கள் ஏற்பட்டவைகளாகும்.

திருமணங்களை இப்போது பெரும்பாலும் ஒரு நாளில் முடித்து விடுவது என்பது பெரும்பாக மக்களுக்குள் அதுவும் அறிவாளிகளான மக்கள் என்பவர்களுக்குள்ளாகவே ஒப்புக்கொண்ட விஷயமாகி விட்டது. அதோடு சடங்கு முதலியவைகளும் கூட பெரிதும் சவுகரியத்திற்கு ஏற்றபடி நழுவவிட்டும் மாற்றியும் அமைத்துக்கொண்டாகி விட்டது. நகை உடை ஆகியவைகளும் முன்பு சமயத்துடனும் சடங்குடனும் பிணைத்திருந்ததெல்லாம் இப்போது விடுவிக்கப்பட்டு சௌகரியம்போல் அமைத்துக் கொள்ளப்பட்டு விட்டது. பெரிதும் பாமரத்தன்மை உள்ள வகுப்புகளில்தான் ஏதோ பல பிடிவாதங்களை காண்கின்றோமே அல்லாமல் மற்றபடி அனேக விஷயங்கள் திருத்தி அமைத்துக் கொள்ளப்பட்டு வருகின்றதை காண்கின்றோம். எப்படியோ மக்கள் மாறுதல்களை விரும்பவும் சகிக்கவும் வந்து விட்டார்கள். ஆனால் அவை வெறும் மாறுதல்களுக்கு ஆகவே இல்லாமல் அறிவுக்கும் அனுபவ சவுகரியத்திற்கும் ஒத்ததாக இருக்க வேண்டும் என்பது தான் நமது ஆசை. அது தான் இன்று நமது தொண்டும் ஆகும். இந்தத் திருமணத்தில் நாம் காணும் மாறுதல்கள் அதை அனுசரித்தன என்று தான் உங்களிடம் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

இத்திருமணத்தில் நீங்கள் என்ன மாறுதல் காண்கிறீர்கள்?

புரோகிதன் இல்லை; அது ஒரு முக்கிய மாறுதல். ஆனால் புரோகிதன் எதற்கு? புரோகிதன் என்றால் என்ன? என்பது முதலில் யோசிக்கத்தக்கதாகும். இன்று புரோகிதன் என்பவனுக்கு உள்ள லட்சணம் எல்லாம் முதலில் அவன் பெரிய ஜாதிக்காரனாக இருக்கவேண்டும். அவனுடைய நடத்தை தன்மை முதலியவைகளைப்பற்றி நமக்கு கவலையில்லை. பெரிதும் நமக்கு தெரியாத பாஷையில் அவசியம் புரியாத சடங்குகளைச் செய்யச் சொல்லி பணம் வசூலித்துக்கொண்டு போகிறவனையேதான் இன்று புரோகிதன் என்கின்றோம். மற்றும் அவன் காலில் நாமும் மணமக்களும் விழுந்து கும்பிடுகிறோம்; அவனை சாமி என்று அழைக்கிறோம். இவற்றைத் தவிர புரோகிதனுக்கு வேறு லக்ஷணம் சொல்லுங்கள் பார்க்கலாம். அல்லது வேறு பயனையாவது சொல்லுங்கள் பார்க்கலாம். இந்தப் புரோகிதன் நமக்கு எதற்கு என்று உங்களில் எத்தனைப் பேருக்குத் தெரியும்? அவன் நமது தமிழ் மக்கள் திருமணங்களில் எந்தக் காலத்தில் வந்து கலந்து கொண்டான் என்று உங்களுக்குள் யாருக்காவது தெரியுமா? அவனால் வகுக்கப்பட்ட சடங்குகள் மந்திரங்கள் முதலியவை எதற்கு ஆக எப்போது என்ன அவசியத்தின் மீது ஏற்பட்டதென்று உங்களுக்கு யாருக்காவது தெரியுமா? உங்கள் பழய இலக்கியங்கள் பழய ஆதாரங்கள் என்று சொல்லப்படுபவைகளில் இந்த புரோகிதனுக்கும் சொற்களுக்கும் அவன் சடங்குகளுக்கும் ஏதாவது



ஆதாரங்கள் இருக்கின்றனவா? ஆகவே புரோகிதம் என்பது ஏதோ உங்கள் பழக்கம் அல்லது முன்னோர்கள் நடந்த வழி என்பது அல்லாமல் வேறு எந்த அவசியத்தைக் கொண்டது என்று யோசித்துப் பாருங்கள். ஆதலால் இங்கு புரோகிதன் இல்லாத ஒரு மாறுதலானது ஒன்றும் பிரமாத மாறுதல் அல்ல என்பதோடு அவனில்லாததால் எவ்வித குறையும் ஏற்பட்டு விடவில்லை என்பதையும் உணருகிறீர்கள்.

மற்றொரு மாறுதல் மணமக்களின் ஒப்பந்தம் என்பதில் நிகழ்ந்ததாகும். அதாவது பழய முறைப்படி செய்யப்படும் மண ஒப்பந்தத்தில் எஜமான் அடிமை ஒப்பந்த வாசகம் இருக்கும். அதாவது ஆணுக்கு பெண் அடிமை, பெண்ணுக்கு ஆண் எஜமான் என்பதும், பெண்ணை ஆண் எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்பதும், அதற்கெல்லாம் பெண் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பதுமான அடிமை முச்சலிக்காவே ஒப்பந்தத்தில் மிளிரும்.

ஆனால் இந்த திருமண ஒப்பந்தத்தில் இருவரும் சமம் என்றும் வாழ்க்கை இன்ப துன்பங்களிலும் போக போக்கியங்களிலும் இருவருக்கும் சம உரிமை உண்டு என்றும் குறிப்பிட்ட சமத்துவபாவம் மிளிரும். இந்த மாறுதல் அவசியமா இல்லையா என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். உங்கள் மனைவிமார்களை நினைத்துக்கொண்டே யோசிக்காதீர்கள். உங்களுடைய செல்வப் பெண் குழந்தைகளையும் அன்பு சகோதரிகளையும் மனதில் கொண்டு யோசித்துப்பாருங்கள். உங்கள் தாய்மார் சுதந்திரவாதிகளா யிருந்தால் நீங்கள் எப்படி இருந்திருப்பீர்கள் என்பதையும் யோசித்துப் பாருங்கள். இன்று உலகில் கீழ் ஜாதியார் என்பவர்களுக்கு சம சுதந்தரம் வேண்டும் என்று போராடுகிறோம். அரசாங்கத்தினிடமிருந்து விடுதலை பெற்று சுதந்திரமாய் வாழவேண்டுமென்று போராடுகிறோம். அதே போராட்டத்தை நமது தாய்மார்கள் விஷயத்திலும் நமது சகோதரிகள் விஷயத்திலும் நமது பெண் குழந்தைகள் விஷயத்திலும் கவனிக்க வேண்டாமா? நமது வாழ்க்கைத் துணைகளிடத்திலும் கவனிக்கப்பட வேண்டாமா? அந்தப்படி கவனிக்கப்பட வேண்டும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்களானால் அதற்கு இந்த சந்தர்ப்பத்தைவிட வேறு சந்தர்ப்பம் எது என்று கேட்கின்றேன். இத்திருமணத்தை சீர்திருத்த மணம் என்றும் வைதீக மணம் என்றும் சொல்லாமல் இது ஒரு சுயமரியாதை மணம் என்றும் நாஸ்திக மணம் என்றும் சொல்லப்படுவதற்கு அந்த இரண்டு காரியங்களில் ஏற்பட்ட மாறுதல்கள் தான். அதாவது புரோகிதம் இல்லாததாலேயே நாஸ்திகம் என்றும் பெண்ணுக்கு சம சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்பதாலேயே சுயமரியாதை திருமணம் என்றும் சொல்லப்படுகிறது. அந்தப்படி சொல்லப்படுவதற்கு ஆக நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. திருமணங்களில் ஆஸ்திக நாஸ்திகத்துக்கு இடமே இல்லை. நாஸ்திகம் அவரவர்கள் உணர்ச்சி - ஆராய்ச்சிதிறன் ஆகியவைகளைக்



RangaRakes tamilnavarasam.com

கொண்டதே தவிர அது ஒரு குணமல்ல - ஒரு கக்ஷி அல்ல; ஒரு மத மல்ல. ஆகையால் இத் திருமணமுறை மாறுதல்களில் நாஸ்திகத்திற்கு இடமில்லை. கடவுள் நம்பிக்கைகாரர்கள் இந்த இடத்தில் கடவுள் இல்லை என்று சொல்லிவிட முடியுமா? கடவுள் நம்பிக்கைக்காரர்கள் இந்த திருமணம் கடவுள் சித்தமில்லாமல் நடைபெற்றது என்று சொல்லிவிட முடியுமா? என் போன்றவர்கள் அப்படி சொல்லுவதானாலும் எந்த கடவுள் நம்பிக்கைக்காரராவது அதை நம்ப முடியுமா? ஆதலால் இதில் நாஸ்திகத்தை புகுத்துவது சரியல்ல. புரோகிதன் இல்லாததே நாஸ்திகம் என்றால் அவன் இல்லாமல் நாம் செய்யும் மற்ற அனேக காரியங்கள் நாஸ்திகம் என்று தான் அருத்தம். ஆதலால் அதையும் நாம் லக்ஷியம் செய்ய வேண்டியதில்லை. மற்றொரு விஷயமான ஆண் பெண் சமத்துவம் என்கின்ற சுயமரியாதை சிலருக்கு பிடிக்கவில்லையானால் நாம் அதைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. ஆண் பெண் சமத்துவமாய் பாவிக்கப்பட்டு சமத்துவமாய் நடத்தப்படுவதாய் இருந்தால் தான் இம்மாதிரி வாழ்க்கை ஒப்பந்தங்கள் அதாவது திருமண காரியங்கள் இருக்கவேண்டுமே ஒழிய அப்படி இல்லாவிட்டால் பெண்கள் ‘‘திருமணம்’’ இல்லாமல் தனித்து வாழ்வதே மேல் என்று சொல்லுவேன். எதற்காக ஆணுக்கு பெண் அடிமையாக இருக்க வேண்டும்? இஷ்டப்படா விட்டால் என்ன செய்யமுடியும்? அதற்கு என்ன நிர்ப்பந்தம் செய்ய யாருக்கு பாத்திய முண்டு? ஆகையால் வேறு எந்த காரியங்களில் மாறுதல் இல்லாவிட்டாலும் இந்த வாழ்க்கை சுதந்திரத்தில் சமசுதந்திரம் என்பது ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும். சுயமரியாதை இயக்கத்தின் முதல் லட்சியமே அதுவாகும். ஆதலால் அது விஷயத்தில் உள்ள - ஏற்படப்போகும் மாறுதலை மக்கள் வரவேற்றுத்தான் ஆக வேண்டும்.

மற்றபடி இத்திருமணத்தில் உள்ள மாறுதல் செலவு சுருக்கம் என்பது. இதையெல்லோரும் ஒப்புக்கொள்ளுவீர்கள் என்றே நினைக்கிறேன். இந்தியாவின் பொருளாதார நிலையைப்பற்றி கண்ணீர் வடிக்காத அரசியல்வாதிகள் கிடையாது. அதை நம்பி கோவிந்தா போடாத பாமர மக்களும் கிடையாது. அது உண்மையாய் இருக்குமானால் இந்த மாதிரி ஒரு 5 நிமிஷ காரியத்துக்கு ஆக - 4 வரி ஒப்பந்த வார்த்தைக்கு ஆக ஆயிரக்கணக்காகவும் பதினாயிரக்கணக்காகவும் செலவழிக்க அனுமதிக்கப் படலாமா என்று கேட்கிறேன். இப்படி செலவு செய்வது கிரிமினல் குற்றமாகாதா என்று யோசித்துப் பாருங்கள். இந்தியாவில் ஒரு ஆளுக்கு ஒரு நாளைக்கு இரண்டு அணா வரும்படி என்கிறார்கள். அப்படியானால் தினம் நான்கு அணாவே வரும்படி உள்ள ஒரு ஜோடிக்கு - இந்த வாழ்க்கைத் துணை ஒப்பந்தத்திற்கு எவ்வளவு ரூபாய் செலவழிப்பது. குறைந்தது 250 ரூபாய் செலவானாலும் 1000 நாளைய வரும்படி செலவழிக்கப்படுகிறதா இல்லையா என்று பாருங்கள். இந்த வழக்கம் இது வரை அனுமதிக்கப்பட்டிருப்பதிலிருந்தே இந்த நாட்டில் பொறுப்புள்ள சீர்திருத்தக்காரரோ, பொருளாதார துணைவர்களோ, நல்ல அரசியல்





தலைவர்களோ, ஜீவகாருண்யமுடையவர்களோ, தேசீயவாதிகளோ இல்லை என்று அருத்தமாகவில்லையா? நான் ஒரு நிமிஷம் அரசனாய் இருந்தாலும் முதல் முதல் இம்மாதிரியான பொருள் விரையத்தை தடுக்கவே தூக்கு தண்டனை நிபந்தனையுடன் சட்டம் செய்வேன். இம்மாதிரியான பொருள் நஷ்டம் தான் இன்று இந்தியாவுக்கு பிடித்த பெரும்பிணி என்று சொல்லுவேன். சம்பாதனை மார்க்கங்கள், பொருள் உற்பத்தி மார்க்கங்கள் நாளுக்கு நாள் அருகிக்கொண்டு போகின்றன. செலவு மார்க்கங்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகின்றன. நமது மக்கள் வாழ்க்கைக்கு பொருளாதார கணக்கு வரவு செலவுத் திட்டமே கிடையாது. அப்படிப்பட்ட நாடு எந்தக் காலத்திலும் எந்த ஆட்சியினும் பொருளாதார சவுக்கியத்தை உண்டாக்கவே முடியாது. நமது திருமணங்கள் மாத்திரமல்லாமல் நமது தெய்வங்களின் திருமணங்கள் நமக்கு பெரியதொரு கழுத்தறுப்பாகும். மற்றவை நம் வாழ்க்கை சடங்கு முறைகள், ஜாதி ஆச்சார முறைகள் ஆகியவைகளில் உள்ள பொருளாதாரக் கொடுமையாகும். இவைதவிர பாடுபட ஒருவன், பயன் அடைய ஒருவன், உட்கார்ந்து சாப்பிட ஒருவன் என்கின்ற முறை நமது பொருளாதாரத்தை எவ்வளவு பாதிக்கிறது என்பதை நாம் உணருவதில்லை. ஆகையால் இம்மாதிரி திருமணங்களில் மக்களின் சராசரி வரும்படியில் ஒரு 10 நாள் அல்லது 15 நாள் வரும்படிக்கு மேல் செலவு செய்ய அனுமதிக்கவே கூடாது. மற்றும் நாள் சுருக்கமும் ஒரு மாறுதலாகும். இதை இன்று வைதீக ஜாதியான பார்ப்பனர் முதல் ஒப்புக்கொண்டு விட் டார்கள். ஆதலால் அந்த மாறுதல் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதே யாகும்.

இன்னும் பல மாறுதல் செய்ய வேண்டியதும் உண்டு. அவை தம்பதிகள் தங்களில் தெரிந்தெடுத்துக்கொள்ள வேண்டியதும், தக்க பொருத்தம் இருக்க வேண்டியதும் தக்க வயதும் தொழிலும் ஏற்பட்ட பின் மணத்தில் இறங்க வேண்டியதும் மற்றும் பல காரியங்களும் உண்டு.

*குறிப்பு: 06.12.1936 ஆம் நாள் திருப்பூரில் நடைபெற்ற எஸ்.ஆர். சுப்பிரமணியம் - சென்னியம்மாள் திருமணத்திலும் 09.12.1936 ஆம் நாள் நடைபெற்ற துரைசாமி - லட்சுமிபாய் அம்மாள் திருமணத்திலும் தலைமைவகித்து ஆற்றிய சொற்பொழிவு.*

**குடி அரசு - சொற்பொழிவு - 13.12.1936**

RangaRakes tamilnavarasam.com

# பட்டேல் வருகிறாராம் எதற்கு?

தோழர் பட்டேல் அவர்கள் தமிழ்நாட்டுக்கு பணம் வசூலுக்கு ஆக அடுத்தவாரம் வரப்போகிறார் என்றும், அவருக்கு தாராளமாய் பணம் உதவ வேண்டும் என்றும் தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் கோடு கட்டிய அறிக்கை வெளியிட்டு வருகிறார். சென்ற வாரம் தலைவரான தோழர் முத்துரங்க முதலியாரும் அறிக்கை வெளியிட்டு விட்டார்.

பட்டேல் அவர்களுக்கு பணம் எதற்காக வேண்டும்? வசூலித்த பணத்தை அவர் என்ன செய்யப்போகிறார்? இதுவரை தமிழ்நாட்டில் தோழர்கள் காந்தியார் முதல் பல பேர் வந்து பல தடவைகளில் பொது ஜனங்களிடமிருந்து வசூலித்த பணங்கள் என்ன ஆயிற்று? மற்றும் 1920-ம் வருஷம் தமிழ்நாட்டில் திலகர் சுயராஜ்ய நிதி என்னும் பேரால் வசூலிக்கப்பட்ட ஒரு கோடி என்னும் பெரு நிதி என்ன ஆயிற்று? என்பன போன்ற விஷயங்கள் ஒன்றையும் யோசிக்காமல் காங்கிரஸ்காரர்கள் கேட்கும்போதெல்லாம் பணம் அள்ளிக் கொடுத்துக்கொண்டிருப்பது என்றால் நமது மக்களுக்கு புத்தியோ சுயமரியாதை உணர்ச்சியோ இருக்கின்றது என்று யாராவது சொல்லமுடியுமா? திலகர் சுயராஜ்ய நிதியைப்பற்றி பெரியதொரு ஆவலாதி வட நாட்டுப் பத்திரிகைகளில் எழுந்து அவற்றிற்கு சரியான பரிகாரம் சொல்ல காங்கிரசுக்காரர்களுக்கு யோக்கியதை இல்லாமல் போய் கடசியாக ''கணக்கு கேட்கின்றவர்கள் மீது கேசு போடவேண்டும்'' என்று காங்கிரஸ் தலைவரும் ''திலகர் சுயராஜ்ய நிதிக்கு பணம் கொடுக்காதவர்கள் அதைப்பற்றிய கணக்கு கேட்க யோக்கியதை கிடையாது'' என்று காங்கிரசிடம் கூலி பெற்ற பத்திரிக்கைகாரர்களும் எழுதிவிட்டார்கள். அது சம்மந்தமான விவகாரம் இன்னமும் திலகருடைய மருமகப்பிள்ளைக்கும் காங்கிரசுக்கும் நடந்து கொண்டே இருக்கின்றன.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை திலகர் சுயராஜ்யநிதி எப்படி கையாளப்பட்டது, அதில் பார்ப்பனர்களுக்கு எவ்வளவு கொள்ளை கிடைத்தது என்பது பற்றி ''குடி அரசி''ல் புள்ளி விவரங்களோடு சில குறிப்புகள் அப்போதே வெளியிடப்பட்டிருக்கின்றன.

அவற்றில் முக்கியமான அய்ட்டங்கள் பத்திராதிபர்களுக்கு ஆயிரம் பதினாயிரமாக அதாவது ''சுயராஜ்யா''வுக்கு 10000-மும் ''தேச பந்து''க்கு 2000-மும் ''ஜெயபாரதி''க்கு பல ஆயிரமும் என்று கொடுக்கப்பட்ட பணங்களைப்பற்றியும் கதர் வேலைக்கு ஆக என்று பல பார்ப்பனர்களுக்கு



கொடுக்கப்பட்ட பணங்கள் வசூல் செய்யாமல் செலவு எழுதி தள்ளிவிட்ட விபரமும் முன்னமேயே வெளிப்படுத்தப்பட்டாய் விட்டன.

மற்றபடி கதர் நிதி என்று தோழர் காந்தியாரே நேரில் வந்து வசூல் செய்து இங்குள்ள பார்ப்பனர்களிடம் ஒப்படைத்துவிட்டுப்போன பல லக்ஷக்கணக்கான ரூபாய்களும் ஹரிஜன இலாக்கா என்று ஒன்று ஆரம்பித்து அதற்கு பார்ப்பனர்களையே முக்கிய நிர்வாகஸ்தர்களாக ஆக்கி வேலை இல்லாத பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் கொடுத்து அதன் மூலமே அப்பணம் பெரிதும் செலவழிக்கப்பட்டதோடு அந்த ஆசாமிகள் தேர்தல் பிரசாரம் செய்யவும் அந்த ஆசாமிகள் தேர்தலுக்கு நிற்கவுமான காரியத்துக்கு பயன்படுத்தவுமான வேலைக்கு செலவாக்கப்பட்டதும் தோழர் காந்தியாரே சென்ற மாதத்தில் ''ஹரிஜன்'' பத்திரிக்கையில் ஹரிஜன இலாக்கா சிப்பந்திகள் யோக்கியமாய் நடந்து கொள்ளவில்லை என்று கண்டித்தும் இனிமேல் அதற்கு ஆக பொது ஜனங்களை தான் கேட்கப் போவதில்லை என்றும் எழுதியதும் அதை பல காங்கிரஸ் பத்திரிக்கைகள் வெளியிட்டதும் யாரும் அறியாததல்ல.

அதுபோலவே கதர்நிதியும் கதர் இலாக்கா நிர்வாகத்தில் பார்ப்பனர்களுக்கு வேலையும் ஆளுக்கு 100, 200 என்பதாக சம்பளமும் கொடுத்து வந்ததின் மூலமும் அப்பணங்கள் பெரிதும் செலவழிக்கப்பட்டதோடு கதர் அபிவிருத்தி என்பது நாளுக்கு நாள் கதர் செலவாவது குறைவாகவும் விலை அதிகமாகவும் ஆக நேர்ந்ததும் அதனால் வேறு யாரும் கதர் உற்பத்தி செய்யக்கூடாதபடி நிபந்தனை போட்டு ஏகபோக ஆதிக்கம் செலுத்துவதும் அதன் முக்கிய சிப்பந்திகளாய் இருந்தவர்கள் அந்த செல்வாக்கில் சட்ட சபைக்கும் முனிசிபாலிட்டிக்கும் ஜில்லா போர்டுகளுக்கும் மெம்பர்களாக முயற்சித்து வெற்றி பெறுவதும் அல்லாமல் வேறு கண்ட பயன் என்ன என்பது எவரும் அறியாததல்ல. இப்படி ஒரு வருஷத்தில் சுயராஜ்யம் என்றும், ஏழைகளுக்கு உணவு என்றும் தீண்டாமை ஒழிப்பதற்கு என்றும் வசூலித்த பணங்கள் பார்ப்பனர்கள் பிழைக்கவும் அவர்கள் பதவி பெறவுமான காரியங்களுக்கு பயன்பட்டன என்பதல்லாமல் வேறு பயன் ஏற்படவில்லை என்பது நாம் சொல்லாமலே யாவரும் அறிந்த விஷயமாகும். மற்றும் காங்கிரசின் பேரால் தாசிகளைக் கொண்டும், விவசாரிகளைக் கொண்டும் சதிர்க் கச்சேரி, பாட்டுக் கச்சேரி, நாடகம், கண்காட்சி என்பன போன்ற பல வேடிக்கைகள் வைத்து அவை மூலமும் லட்சக்கணக்கான ரூபாய்கள் பொது ஜனங்களிடம் வசூலித்து அவைகளையும் பார்ப்பனர்களுக்கே போய்ச் சேரும்படியாக பாழாக்கி அனேக விஷயங்களில் வரவு செலவு கணக்கு கூட வெளியில் காட்டாமல் தங்களுக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் கலகம் செய்து கொண்டு சந்தி சிரிக்கும்படி நடந்துகொண்டதும் யாரும் அறியாத தல்ல.

இந்தப்படியும் பல தடவை பலவழிகளில் பல லட்சக்கணக்கான பணம் வசூலித்ததோடு காங்கிரஸ் கான்பரன்ஸ் முதலிய மகாநாடுகள்



RangaRakes tamilnavarasam.com

நடத்தியதன் மூலமும் ஏராளமான பணம் மீதியானதையும் ஒரு சமூகத்தாரே தின்று ஏப்பம் விட்டு விட்டு பல விஷயங்களில் திருப்தி அற்ற தப்பு கணக்கும் வெளியிட்டு விட்டு இனியும் பணம் வசூல் பண்ணப்போகிறோம், எல்லோரும் பணத்தை கொடுங்கள் என்றால் இது எவ்வளவு தைரியமான பகல் கொள்ளைக் காரியம் என்று கேட்கின்றோம்.

இந்த விஷயங்கள் எப்படியோ போகட்டும். இப்போது பட்டேலின் பேரால் வசூல் செய்யப்படும் பணம் எதற்கு ஆக என்று யோசித்து பாருங்கள். தேர்தல் செலவுக்காம். யாருடைய தேர்தல் செலவு என்று சொல்லுகிறார்கள் என்றால் தேச பக்தர்கள் தேர்தல் செலவுக்காம். தேசபக்தர்கள் என்பவர்கள் யார் என்பதை இதுவரை காங்கிரசுக்காரர்கள் தேர்தலுக்கு நிறுத்திய தேச பக்தர்கள் என்பவர்களைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். ஏறக்குறைய 100க்கு 90 பேர் பார்ப்பனர்களையே நிறுத்தி இருக்கிறார்கள். சென்னை கார்ப்பரேஷனில் காங்கிரஸ்காரர் நிறுத்திய பார்ப்பனரல்லாத தேச பக்தர்கள் என்பவர்கள் தங்கள் கைப்பணத்தில் இருந்து செலவுக்கு போட்டுக் கொண்டார்கள். பார்ப்பன தேச பக்தர்களுக்கு ஏறக்குறைய ஒருவர் இருவர் தவிர மற்ற எல்லா பார்ப்பன தேசபக்தர்களுக்கும் பொதுப்பணமே செலவழிக்கப் பட்டிருக்கின்றன. இதிலும் பல பார்ப்பன அபேக்ஷகர் மீதம் செய்து கொண்டார்கள். இதுபோலவே தான் இனியும் தமிழ்நாட்டில் தமிழ் மக்களிடம் வசூலிக்கப்படும் பணங்கள் பார்ப்பனர்களின் எலக்ஷன் செலவுக்கு ஆகவே செலவழிக்கப்படப் போகின்றன.

அதை வெளிப்படையாகவே தோழர் சத்தியமூர்த்தியார் சொல்லியே தான் இப்போது பணம் கேட்கிறார். தோழர் சத்தியமூர்த்தியார் இப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு தலைவராக இல்லாவிட்டாலும் செகரட்டரி என்கின்ற முறையிலும் பார்லிமெண்டரி போர்ட் தலைவர் என்ற முறையிலும் அவரே அப்பணத்திற்கு எஜமானராய் இருக்கப்போகிறார். எப்படி எனில் பட்டேல் அவர்கள் வசூலித்த பணத்தை இங்கேயே கொடுத்துவிட்டுப் போகப் போகிறாரே ஒழிய ஒரு காசு கூட கொண்டு போகப்போவதில்லை.

ஆகையால் நமது கையைக்கொண்டே நமது கண்ணைக் குத்திக் கொள்வதுபோல் முட்டாள்தனமாகப் பணத்தைக் கொடுத்துவிட்டு பிறகு அது நமக்கு இந்தக் கெடுதி செய்தது, அந்தக் கெடுதி செய்தது என்று வருத்தப்படுவது பெரிதும் முட்டாள் தனமே யாகும். அப்படித்தான் ஆகட்டும், தேர்தலுக்கு ஏதாவது லட்சியமுண்டா என்று யோசித்துப்பார்க்க விரும்புகிறோம். தேர்தல் லட்சியமெல்லாம் மூர்த்தியின் ஆனைமலைப் பேச்சில் இருக்கிறது. மற்றும் ஜஸ்டிஸ் கட்சியை 500 கெஜ ஆழத்தில் புதைக்க வேண்டும் என்பது.

ஆகவே சுத்த ரத்த ஓட்டமுள்ள பார்ப்பனரல்லாதார் இதற்கு ஒரு காசாவது கொடுக்கலாமா?

குடி அரசு - கட்டுரை - 13.12.1936



# அடுத்த மந்திரி சபை நிலை

''பந்தியில் உட்காரவே அனுமதி இல்லாமல் இருக்கும்போது இலை ஓட்டையாய் இருப்பதைப்பற்றி சொல்லுவதில் பயன் என்ன?'' என்று ஒரு பழமொழி உண்டு. அதன் பொருள் என்னவென்றால் ஒரு மனிதன் ஒரு சாப்பாட்டு பந்தியில் உட்கார்ந்து சாப்பிடுவதற்கு தகுதி உடையவனல்ல என்று கருதி வெளியில் தள்ளப்படும்போது இலை ஓட்டையாய் இருக்கிறது என்று ஆவலாதி சொல்வதில் ஏதாவது புத்திசாலித்தனம் இருக்க முடியுமா என்பதே யாகும்.

அதுபோலவே நமது காங்கிரஸ்காரர்கள் இன்று மந்திரி பதவி ஏற்க வேண்டும் என்று ஒரு கூட்டமும், ஏற்கக்கூடாது என்று ஒரு கூட்டமும், ஏற்றால் ஒரு முட்டுக்கட்டை போடவேண்டும் என்று ஒரு கூட்டமும், ஏற்றால் சீர்திருத்தத்தை உடைக்கவேண்டும் என்று ஒரு கூட்டமும், உடைக்க முடியாது என்று ஒரு கூட்டமும், மரியாதையாய் ஏற்று உத்தியோகங்களையும் பதவிகளையும் ஒப்புக்கொண்டு தங்களால் கூடியதை ஜன சமூகத்துக்குச் செய்யவேண்டும் என்று ஒரு கூட்டமும் ஆக இப்படியாக பலவித அபிப்பிராயங்களைச் சொல்லி சண்டை போட்டுக்கொண்டும் மகாநாடுகளில் தீர்மானங்கள் கொண்டுவந்து வாதப் பிரதிவாதம் செய்து நிறைவேற்றிக் கொண்டும் இருக்கிறார்கள்.

இது முன் சொன்ன பழமொழிபோல் தான் இருக்கிறது. எப்படி யெனில் காங்கிரசுக்காரர்கள் மெஜாரிட்டியாய் சட்டசபை ஸ்தானங்களை கைப்பற்றுவார்களா? கைப்பற்ற முடியுமா? என்பது ஒரு புறமும், கைப்பற்றினாலும் மந்திரி பதவி கிடைக்கும்படியான அளவுக்கு இவர்களுக்கு பலம் ஏற்படுமா என்பது ஒரு புறமும், அதுவும் சீர்திருத்தத்தை உடைக்கும் மனப்பான்மை உள்ளவர்கள் காங்கிரசில் மெஜாரிட்டியாய் இருப்பார்களா என்பது ஒரு புறமும் சந்தேகமாகவும் சில விஷயங்களில் முடியாது என்பது சந்தேகமறவும் இருக்கும்போது இப்போது மந்திரி பதவியை ஆசை காட்டி தாங்கள் அதிகாரம் வகிக்கப்போவதைச் சொல்லி மக்களை மயக்க வீண் மெனக்கெட்ட வேலை செய்வது புத்திசாலித்தனமான காரியமாகுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

இன்றுள்ள நிலையில் எந்தக் காரணம் கொண்டும் காங்கிரஸ்காரர்கள் மந்திரிசபை அமைக்கும்படியான மெஜாரிட்டி எண்ணிக்கையுடன்



RangaRakes tamilnavarasam.com

சட்டசபைக்கு வரமாட்டார்கள் என்பது அனேகமாய் உறுதி என்றே சொல்லி விடலாம். எப்படி யெனில் சட்டசபை அமைப்பு அப்படிப்பட்டது. சட்ட சபைக்கு மொத்தம் 215 மெம்பர்கள் என்றாலும் அவர்களில் 116 பேர்கள் தவிர மற்ற 99 மெம்பர்கள் தனித்தொகுதிக்காரர்களே யாவார்கள். அதாவது:-

தாழ்த்தப்பட்டவர்களில் 30, முஸ்லீம்களில் ஒரு பெண் உள்பட 29, கிறிஸ்தவர்களில் ஒரு பெண் உள்பட 9, இந்தியப் பெண்கள் 6, ஐரோப்பியர்கள், ஆங்கிலோ இந்திய தோட்டக்காரர், ஐரோப்பிய வியாபாரிகள் 9, ஜமீன்தார்கள் 6, தொழிலாளிகள் 6, இந்திய வியாபாரிகள் நகரத்தார் உள்பட 2, மலைவாசி 1, கலாசாலை தொகுதிக்கு 1 ஆக 99 ஸ்தானங்கள். இந்த 99 ஸ்தானங்களில் ஒரு 10 அல்லது 15 கூட காங்கிரசுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்பதோடு கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள், ஆதி திராவிடர்கள் ஆகியவர்கள் சங்கங்கள் காங்கிரசின் பேரால் நிற்கக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டிருக்கின்றன.

அப்படியே பத்தோ பதினைந்தோ பெறுவதாய் இருந்தாலும் இவற்றுள் கண்டிப்பாய் 80 ஸ்தானங்கள் காங்கிரசுக்கு கிடையாது என்று இப்போதே சொல்லி விடலாம். 215க்கு 108 ஸ்தானங்கள் பெற்றால் தான் மொத்தத்தில் காங்கிரஸ்காரர்கள் மெஜாரிட்டியாக வந்ததாக கருதப்படுமே யல்லாமல் மற்ற தனித்தனிக் கக்ஷிகளைவிட 1, 2 அதிகமாய் தாங்கள் பெற்றுவிடுவதால் காங்கிரஸ் மெஜாரிட்டி என்று ஆகிவிடாது. ஏனெனில் மொத்த 215 ஸ்தானங்களில் காங்கிரஸ்காரர்கள் எத்தனைபேர், காங்கிரஸ் அல்லாதவர்கள் எத்தனைபேர் என்று தான் கணக்குப் பார்ப்பார்களே ஒழிய எந்தக்கட்சி அதிகம் என்று பார்க்க மாட்டார்கள். அப்போது 108 பேர்கள் காங்கிரஸ்காரர்கள் இருக்கவேண்டும். ஆதலால் தனித்தொகுதிகளில் காங்கிரசில் சேராதவர்கள் எண்ணிக்கை 80 போய்விட்டால் பாக்கி இருக்கும் 135 - ஸ்தானங்களில் காங்கிரஸ் 108-ஸ்தானங்கள் கைப்பற்றி ஆகவேண்டும். அதாவது 5ல் 4 பாகம் கைப்பற்றியாக வேண்டும். இது சுலபத்தில் முடியக் கூடிய காரியமல்ல. இப்போதே காங்கிரசுக்காரர்களுக்கு ஜில்லா தோறும் பொது தொகுதிகளில் பகுதிக்குக்கூட ஆள்கள் கிடைப்பது கஷ்டமாய் இருக்கிறது.

உதாரணமாக கோயமுத்தூர் ஜில்லாவை எடுத்துக் கொண்டால் தோழர் டி.எ.ராமலிங்கம் செட்டியாருக்கு ஒரு ஸ்தானம் ஒதுக்கி இருக்கிறார்கள். மற்றவை இன்னமும் நிஷ்கரிஷை செய்ய முடியவில்லை. செட்டியார் அவர்கள் ஸ்தானமும் ஜெயிப்பார்களா என்பது 100-க்கு 75 பாகம் சந்தேகம் தான். ஏனெனில் எதிர்ப்போட்டிக்காரர் 40ஆயிரம் 50ஆயிரம் செலவழிக்க துணிந்து விட்டார். ஜாதி அபிமானம் வேறு தாண்டவமாடுகின்றது.

அவருடைய தொகுதியில் கொங்குவேளாளருக்கும் கம்ம நாயக்கர்மார் களுக்கும் தான் போட்டி நடக்கும். மற்ற ஜாதிக்காரர்கள் வந்தால் இருவரும் ஒன்று சேர்ந்து கொள்ளுவார்கள். ஆகையால் செட்டியார் ஜெயிப்பது சந்தேகம்.



இது தவிர மற்ற திருச்சி ஜில்லாவை எடுத்துக்கொண்டால் அங்கும் தோழர் தேவரைத்தவிர வேறு ஆள் கிடைப்பது கஷ்டமான காரியமாய் இருக்கிறது. தேவருடன் போட்டி போடும் ஆளும் சுமார் 10, 15 ஆயிரம் ரூபாய் செலவழிக்கத் துணிந்து நிற்கிறார். அங்கும் டவுனில் காங்கிரசுக்கு எவ்வளவு மதிப்பு என்பது நாம் எழுதி தெரிந்துகொள்ள வேண்டிய அவசியத்தில் யாரும் இல்லை.

சேலத்தில் தோழர் சுப்பராயன் அவர்களைத் தவிர வேறு ஆள்கள் அந்த ஜில்லாவில் சட்டசபைக்கு நிற்கக்கூடியவர்கள் காங்கிரசுக்கு கிடையாது. தோழர் சுப்பராயன் அவர்களுக்கும் அவர்கள் சொந்த ஜனங்களுக்குள்ளாகவே போட்டியும் அதிருப்தியும் பலமாக இருக்கிறது.

வட ஆற்காடு ஜில்லாவில் தோழர்கள் அண்ணாமலை குப்புசாமிகள்தான் இதுவரை அபேட்சகர்களாகக் கிடைத்திருக்கிறார்கள். தோழர் வி.எம்.ராமசாமி முதலியார் அவர்கள் பயந்து கொண்டிருக்கிறார். வட ஆற்காடு ஜில்லாவில் ஒரு ஐயாயிரம் ஆறு ஆயிரம் ரூபாய் செலவு செய்ய ஒரு அபேட்சகர் முன் வந்து விட்டால் அவரை எதிர்க்க காங்கிரசில் அபேட்சகர் கிடைப்பது கஷ்டமாக இருக்கும்.

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களும் இது போல்தான் இருக்கின்றன. மதுரைக்கு மாத்திரம் இதுவரை சுமார் 4½ பார்ப்பனர்களை அபேட்சர்களாக காங்கிரஸ்காரர்கள் பிரஸ்தாபித்து இருக்கிறார்கள். அங்கு பார்ப்பனரல்லாதார் அபேட்சகர்களாக வரக்கூடியவர்கள் நூற்றுக் கணக்காக இருந்தும் காங்கிரசுக்கு ஒருவர் கூடக் கிடைக்கவில்லை. வலைபோட்டுத் தேடி ஓய்ந்தாய்விட்டது.

ராமநாதபுரத்தில் தோழர் குமார ராஜா பேர் அடிபடுகின்றது. அவருடைய இந்திய சட்டசபை ஸ்தானம் ராஜினாமா ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகுதான் அபேட்சகராய் நிற்க முடியும். அதுவும் 5000 அல்லது 10000 ரூபாயுடன் ஒருவர் போட்டி போட்டால் தோழர் ராஜா நிற்பாரா என்பதே சந்தேகம்.

திருநெல்வேலி ஜில்லாவுக்கு இன்னமும் யார் பேரும் பிரஸ்தாபிக்க முடியவில்லை. தளவாய் அவர்கள் இப்பொழுதே காங்கிரசுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டார். தோழர்கள் எக்கினேஸ்வர சர்மாவும் கூத்த நயினார் பிள்ளை அவர்களும் வண்டி வாடகை கொடுத்தால்தான் ஓட்டுப்போடவே வெளியேறுவார்கள். ஆகவே அந்த ஜில்லாவுக்கு ஆள்களை இனிமேல் குயவன் சூளையில் உற்பத்தி செய்ய வேண்டியதாய் இருக்கிறது.

தஞ்சை ஜில்லாவில் தோழர் நாடிமுத்துபிள்ளை ஒரு ஸ்தானத்துக்கு துணிந்து நிற்பார். அதுவும் மந்திரி வேலைக்கு வாக்களித்திருப்பதினால்தான். மற்ற ஸ்தானங்களுக்கோ அய்யர்மார்களைத் தான் பிடிக்க வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

தென் ஆற்காட்டில் ஜஸ்டிஸ் கட்சியால் தின்று கொழுத்து உருவமான ஒரு முந்திரிக் கொட்டை ரெட்டியார் பட்டம் விட்டு விட்டு தலையை நீட்டிக் கொண்டிருக்கிறார். அவரை ஒரு ஸ்தானத்துக்கு வைத்துக்கொள்ளலாம். மற்ற ஸ்தானத்துக்கு காங்கிரசின் பேரால் நிற்க ஆள் கிடைப்பது கஷ்டம். ஜில்லா போர்டில் வெற்றி பெற்ற ரெட்டியார்களும் படையாச்சிகளும் டிமிக்கி கொடுத்து விட்டார்கள்.

செங்கல்பட்டுக்கு நமது தோழர் முத்துரங்க முதலியார் நிற்பார் என்பது உறுதி. மற்ற ஸ்தானங்களுக்கு ஆள் கிடையாது.

இவ்வளவுக்கும் கிடைப்பதானாலும் இனியும் ஒன்று இரண்டு ஆள்கள் கிடைப்பதாகவே வைத்துக்கொள்ளலாம். என்றாலும் இவைகள் மெஜாரிட்டி ஆகிவிடுமா என்பதோடு ஆந்திர தேச நிலவரம் என்ன என்று பார்த்தால் ‘‘வேட்டை ஆடினதில் 3 வெடி போட்டதில் 2 குண்டு குறிதவறி விட்டது. ஒன்று வெடிக்கவே இல்லை’’ என்பது போல் அவ்விடத்திய நிலையும் மிகவும் மோசம் என்று தான் சொல்லவேண்டி இருக்கிறது. கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தபூர் ஜில்லாக்களுக்கு காங்கிரஸ்காரர்களுக்கு சும்மா கவுரவத்துக்கு நிறுத்துவதற்குக் கூட அபேக்ஷகர்கள் பெயர் கிடைக்கவில்லை.

விசாகப்பட்டணமோ ‘‘பொப்பிலி ராஜ்யம்’’ என்று ஏற்கெனவே காங்கிரஸ்காரர்கள் சொல்லி விட்டார்கள்.

கோதாவரி, கிருஷ்ணா, நெல்லூர் ஆகிய ஜில்லாக்களில் பார்ப்பனர்கள் கம்மா - ரெட்டி முதலிய தகராறுகளில் காங்கிரஸ் பேரால் நிற்க பார்ப்பனர்கள் தவிர பார்ப்பனரல்லாதார்களில் அபேட்சகர்கள் கிடைப்பது அரிதாய் விட்டது.

தமிழ்நாட்டிலாவது காங்கிரசுக்கு ஏதோ சில ஆள்கள் பார்ப்பன ரல்லாதாரில் இருக்கிறார்கள் என்றாலும் ஆந்திராவில் அது கூடக்கிடையாது. சுற்றிச்சுற்றி தோழர்கள் பட்டாபி, பிரகாசம், நாகேஸ்வரராவ், காளேஸ்வரராவ், புலுசு சாம்பமூர்த்தி என்கின்ற பந்துலுகள், அய்யர்கள் கூட்டங்களே தவிர மற்றபடி வேறு ஆள்கள் மிகவும் அபூர்வமாய்ப் போய்விட்டது. சில ரெட்டியார்கள் காங்கிரஸ் பேரால் குதியாட்டம் போட்டுக்கொண்டு இருந்தார்கள். அவர்களும் இப்போது முக்கியமானவர்கள் காங்கிரசை விட்டு விட்டார்கள்.

ஆகவே சென்னை மாகாணத்தின் நிலை காங்கிரசுக்காரர்கள் ஒரு 50, 60 ஸ்தானம் கைப்பற்றுவது என்பது கூட மிகவும் கஷ்டமான காரியமாகத் தான் இருக்கும்; அதுவும் பதவி ஏற்றுக்கொள்வதில்லை என்று சொல்லி விட்டால் ஒரு 10 ஸ்தானம் கிடைப்பது கூட காங்கிரசுக்கு அருமையாகத்தான் போய்விடும். வெறும் பார்ப்பனரும் குப்புசாமி கம்பெனியும் தான் மீதியிருக்கும்.



ஆகவே எந்த விதத்திலும் காங்கிரஸ்காரர்கள் மொத்தத்தில் 110 ஸ்தானங்கள் சம்பாதித்து மெஜாரிட்டி ஆகி மந்திரி சபை நியமிக்கும் அந்தஸ்துக்கு வருவார்கள் என்று நினைப்பது அமாவாசையன்றைக்குப் பூரண சந்திரோதயம் ஏற்படும் என்பது போல் தான் முடியும். இதற்குள் பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற பிளவு காங்கிரசில் காட்டுத் தீபோல் பரவிக்கொண்டிருக்கிறது. மந்திரி சண்டைக்கு இப்போது இருந்தே ஆயுதங்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றன. யாருக்கு மந்திரி வேலை கிடைத்துவிட்டாலும் தோழர் சத்தியமூர்த்தி அவர்களுக்கு மாத்திரம் மந்திரி வேலை இல்லை என்பதை இப்போதே காங்கிரஸ் பக்தர்கள் கல்லில் எழுதி வைத்துக்கொண்டார்கள்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் துறவும் தவமும் இனியும் நீண்டு அவை அஞ்ஞாத வாசத்தில் முடியும் போலிருக்கிறது.

ஆதலால் காங்கிரஸ் முயற்சி முடிவில் ஊரை ஏமாற்றி பணம் வசூலித்ததும், வாலிபர்களை ஏமாற்றி காலித்தனத்துக்கு உசுப்படுத்திவிட்டதும் பெண்களை ஏமாற்றி மக்களை மயக்கச்சொன்னதும், ஏமாந்த சோணகிரிகளை ஏமாற்றி பட்டம் பரிவட்டம் விடச்சொன்னதும் தான் மீதி ஆகப்போகிறதே தவிர முடிவில் காரியம் ஆகப்போவது ஒன்றும் இல்லை என்று இப்போதே எழுதி வைத்துக்கொள்ளலாம்.

எலக்‌ஷன் முடிந்த உடன் கவர்னர் காங்கிரசுக்கு எத்தனை பேர் வந்தார்கள்? காங்கிரசு அல்லாதவர்களில் எத்தனை பேர் வந்தார்கள்? என்று தான் கேட்கப் போகிறாரே ஒழிய சத்தியமூர்த்தியாரே எத்தனை பேர் உங்கள் ஆட்களும் அடிமைகளும் என்று கேட்கப்போவதில்லை.

அப்போது எப்படியோ காங்கிரஸ் அல்லாதவர்கள் தான் மெஜாரிட்டியாய் இருக்கப்போகிறார்கள். கவர்னர் பிரபு அவர்கள் (காங்கிரஸ் அல்லாதவர்களை) எல்லாம் ஒன்று சேர்த்து ஐரோப்பியருக்கு ஒரு மந்திரி, தாழ்த்தப்பட்டவருக்கு ஒரு மந்திரி, முஸ்லீம்களுக்கு ஒரு மந்திரி ஆக மூன்று மந்திரி போக மீதி நான்கோ ஐந்தோ நீங்கள் தீர்மானித்துக் கொள்ளுகிறீர்களா நான் தீர்மானிக்கட்டுமா என்று கேட்கப்போகிறார். அதிலும் எப்படியாவது பொப்பிலி ராஜாவுக்கு ஒரு மந்திரி பதவியும் செட்டி நாட்டு குமாரராஜாவுக்கு ஒரு மந்திரி பதவியும் கண்டிப்பாய் கிடைத்துவிடும். ஆகவே மூன்றும் இரண்டும் கூடி ஐந்து போக பாக்கி மூன்று ஸ்தானங்கள் மீதி கட்சி பலத்துக்கோ அல்லது ஜாதி பலத்துக்கோ ஆள் பலத்துக்கோ கொடுக்கப் பட்டுவிடும். இந்த 8 மந்திரிகள் எப்படியும் சட்டசபையில் எப்போதும் மெஜாரிட்டியாகவே இருந்துவரத் தக்கவர்களாக ஆகி விடுவார்கள்.

இந்த நிலை தெரிந்த உடன் காங்கிரசுக்காரர்கள் சீ அந்தப்பழம் புளிக்கும் என்கின்ற மாதிரியில் பதவி மறுப்பு, சீர்திருத்த உடைப்பு, முட்டுக் கட்டை ஆகிய நாமாவளி சொல்லிக்கொண்டு வெளியில் நின்று பஜனை



RangaRakes tamilnavarasam.com

பாடி மறுபடியும் பிச்சைக்கு வரப் போகிறார்கள். இதற்குள் காங்கிரஸ்காரர்களில் சிலர் ஏதோ ஒரு நொண்டிச் சாக்கை சொல்லிக்கொண்டு ஒவ்வொருவராய் காங்கிரசில் இருந்து விலகி சுயேச்சைவாதியாகி மற்ற கட்சிகளின் அனுதாபிகளாகி ஆதரவாளர்களாகி வெட்கம் எல்லாம் தீர்ந்த உடன் ஜஸ்டிஸ்கட்சி ஜோதியில் இரண்டறக் கலந்துவிடப் போகிறார்கள். இதுதான் நடக்கக்கூடுமே தவிர காங்கிரஸ்காரர்கள் மெஜாரிட்டி வந்து கோட்டைக்குள் புகுந்து காங்கிரஸ் கொடியை பறக்கவிட்டு காரியதரிசிகளையும் கவர்னரையும் கதர் கட்டச் சொல்லப் போகிறோம் என்பதும் போலீஸ்காரர்களை தலை வணங்கச் சொல்லப்போகிறோம் என்பதும் பட்டாளத்தை திருப்பிச் சுடச் சொல்லப் போகிறோம் என்பதும் வெட்டி அளப்பும் ஏதோ சில பார்ப்பனர்களையாவது சட்ட சபைக்குள் நுழையச் செய்யும் சூழ்ச்சியுமேயாகும்.

ஆதலால் ஆங்காங்குள்ள சொந்த செல்வாக்குள்ளவர்களும் சொந்த பணவசதி யுள்ளவர்களுமான பார்ப்பனரல்லாதார்கள் இந்த தோழர் சத்தியமூர்த்தி கூட்டத்தாரின் பித்தலாட்டங்களுக்கு ஆளாகி மானங்கெடாமல் சுயமரியாதை இழக்காமல் ஜாக்கிரதையாய் இருந்து தங்கள் சொந்தத்தில் சுயேச்சையில் நின்று வெற்றிபெற வேண்டுமாய் யோசனை கூறுவதுடன் பின்னால் ஏமாந்துவிட்டோமே இனி எப்படி கட்சி மாறி அவமானமடைவது என்று வருத்தப்படாமல் இருக்க எச்சரிக்கை செய்கிறோம்.

மற்றும் வீணாக நமது பணத்தை 10000, 150000, 200000 என்று செலவு செய்து நாம் ஆலாய்ப் பறந்து அவதிப்பட்டு ஓட்டு சம்பாதித்து ஸ்தானம் பெற்று ''திருப்பதிக்குப் போயும் பறத்தாசன் காலில் தானா விழுக வேண்டும்?'' என்கின்ற வைதீக பழமொழிப்படி இந்தப் பார்ப்பனர்கள் பின்னாலும் அவர்களுடைய கூலிகள் பின்னாலும் கபாத்து பழக வேண்டுமா என்பதையும் நிதானமாய் சொந்த புத்திகொண்டு ஆராய்ந்து பார்க்கும்படி வேண்டுகிறோம்.

**குடிஅரசு - தலையங்கம் - 13.12.1936**



# தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள்

தோழர் சத்தியமூர்த்திக்கு தமிழ் நாட்டில் எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பது பாமர மக்களுக்குத் தெரியாது. பார்ப்பனர்களும் பார்ப்பன பத்திரிக்கைகளும் சத்தியமூர்த்தி அவர்களை வேண்டுமென்றே தூக்கி வைத்து அவரது இழிகுணங்களை மறைத்து விளம்பரம் செய்கின்றதினால் அவர் அரசியல் உலகில் லக்ஷியம் செய்ய வேண்டியவராய் இருக்கிறார். சத்தியமூர்த்தியாருக்கு வடநாட்டில் எங்கும் செல்வாக்குக் கிடையாது. ஆந்திராவிலும் மலையாளத்திலும் இவரை லக்ஷியம் செய்கிறவர்களே கிடையாது. அரசாங்கத்தாரும் இவர் விஷயத்தில் கொண்டுள்ள அபிப்பிராயத்துக்கு உதாரணம் வேண்டுமானால் அசம்பளி நடிவடிக்கையின் போது அரசாங்க மெம்பருக்கும் சத்தியமூர்த்தியாருக்கும் நடந்த ஒரு விவாதத்தில் ''என்னைப்பற்றி நீங்கள் ஏதாவது தெரிந்து வைத்திருக்கிறீர்களா?'' என்று அரசாங்க மெம்பரை மூர்த்தியார் கேட்டபோது ''உம்மைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டிய அவ்வளவு முக்கியமான மனிதர் நீர் என்று நான் கருதவில்லை'' என்று அரசாங்க மெம்பர் பதில் சொன்னார். இதை அப்போதே ''குடி அரசி''லும் குறிப்பிட்டிருந்தோம். மற்றபடி தமிழ்நாட்டில் மூர்த்தியாருக்கு எவ்வளவு மரியாதையும் செல்வாக்கும் இருந்து வந்தது என்பதற்கு அவர் சென்ற இடங்களில் எல்லாம் நடந்த மரியாதையைக் கொண்டே தெரிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட மரியாதை, கவுரவம் ''உள்ள'' ஒருவர்தான் தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராயிருந்தார். அதுவும் தோழர் ராஜகோபாலாச்சாரி அவர்களால் பட்டம் சூட்டப்பட்டு ஒவ்வொரு நிமிஷமும் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறார்.

காங்கிரசின் எதிர்க்கட்சியாருக்கெல்லாம் தோழர் சத்தியமூர்த்தி காங்கிரஸ் கமிட்டி தலைவராய் இருப்பதே ஒரு தைரியமாயும் ஆறுதலாயும் தங்களுடைய வெற்றிக் குறிப்பாயும் இருந்தது. ஏனெனில் அவர் தைரியமாக உண்மையை வெளியிட்டு விடுவார். காங்கிரசின் பித்தலாட்டத்தையும் போலித்தனத்தையும் தெரிந்தோ தெரியாமலோ வெளியிட்டு விடுவார். அன்றியும் காங்கிரசு ஒரு கூட்ட சுயநலக்காரர்களுடைய ஸ்தாபனம் என்பதையும் அதற்கு ஆதாரமெல்லாம் முட்டாள்களுடைய பணமும் முரடர்களுடைய காலித்தனமும்தான் என்பதையும் அடிக்கடி வெளிப்படுத்தி விடுவார். இந்தக்



RangaRakes tamilnavarasam.com

காரணங்களால் காங்கிரசின் எதிரிகளுக்கும் காங்கிரசை வெளியாக்க வேண்டியவர்களுக்கும் இவரால் அதிக சவுகரியம் ஏற்பட்டு இருந்தது.

உதாரணமாக அவர் ஆனைமலை ஐரோப்பியர்களிடம் பேசின பேச்சு எவ்வளவோ உண்மைகளைக் கக்கி விட்டது. அதாவது, ‘‘பூரண சுயராஜ்யம் என்பது வெள்ளைக்காரர்களோடு ராஜி செய்துகொண்டு வாழ்வது’’ என்றும், ‘‘சீர்திருத்தத்தை ஏற்று நடத்திக்கொடுப்பதே தங்கள் கொள்கை’’ என்றும், ‘‘தோழர் ஜவஹர்லால் அபிப்பிராயத்துக்கும் காங்கிரசுக்கும் சம்பந்தமில்லை’’ என்றும், ‘‘அவரது தகப்பனார் பெருமைக்கும் தியாகத்துக்கும் ஆகவே அவர் தலைவராக்கப்பட்டார்’’ என்றும் விளக்கமாகச் சொல்லிவிட்டார். இந்தப்படி மற்றும் பல சந்தர்ப்பங்களிலும் உண்மை பேசிவிடுகிறார். இந்தக் காரணங்களால் அவர் பல காங்கிரஸ் வாதிகளுக்கு பிடிக்கவில்லை என்பது ஒரு புறமும் மற்றும் அவர் பல சமயங்களில் அற்பத்தனமாய் நடந்துகொள்ளுவதும் பார்ப்பன ஆதிக்கத்துக்கு இரகசியமாகக்கூட இல்லாமல் வெளிப்படையாய் பலம் சேர்ப்பதும் இவைகளை யெல்லாம் விட அவர் பணம் சம்பாதித்துக்கொண்ட முறையைப் பார்த்து வெறுப்பும் பொறாமையும் கொண்டதுமான பல காரியங்கள் அவரை கவிழ்த்துவிட்டன.

சென்றவாரம் வேலூரில் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாக சபையில் முதலாவதாக அவரது தலைமைப் பட்டத்தை பிடுங்கிக்கொண்டார்கள். அதுவும் எதிர் அபேக்ஷகருக்கு இரண்டு பங்கு ஓட்டும் இவருக்கு ஒரு பங்கு ஓட்டும்தான் கிடைத்திருக்கின்றன. பெரிதும் பார்ப்பனர்கள் எல்லாம் மூர்த்தியாருக்கும் பார்ப்பனரல்லாதார் எல்லாம் முத்துரங்கனாருக்கும் ஓட்டுப் போட்டிருப்பதாய் தெரிகிறது.

அடுத்தாற்போல் காரியதரிசி பதவிக்கும் போட்டி பலமாக ஏற்பட்டதால் தான் தோல்வி அடைந்து விடுவோம் என்ற கருதி பயந்து ஓடும்போது அங்குள்ளவர்கள் ஏதோ தயவுக்காக பரிதாபப்பட்டு அவருக்கு ஒரு ஸ்தானம் போட்டியில்லாமல் அதுவும் சென்னை விஷயத்தைப் பொறுத்தமட்டில் என்று கூட்டுக் காரியதரிசி ஆக்கினார்கள். இதை கீழ் நோக்கிய பதவி என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் ஒரு ஸ்தாபனத்திற்கு தலைவராய் இருந்தவர் அதே ஸ்தாபனத்திற்கு பெருமித ஓட்டுகளால் தோல்வி அடைந்து அதற்குக் கீழ்ப்பட்ட காரியதரிசியாய் வரவே பாடுபட்டு தயவில் பெறுவது என்றால் அது கீழ் நோக்கிய பதவி என்று அல்லாமல் வேறு என்ன என்று சொல்லுவது?

நிற்க, தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் இருந்திருந்தால் தோழர் சத்தியமூர்த்திக்கு இந்த மாதிரியான பரிதாபகரமான நிலை வந்தேயிராமல் தடுத்து ஆட்கொண்டிருப்பார். இவரை ஆதரிக்கப்போக அவர் நிலையும் மிக்க மோசமாய் போய்விட்டதால் அவர் விலாசம் தெரிவிக்காமல் மறைந்து கொண்டார்.



**பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார்**

இது ஒரு புறமிருக்க, காங்கிரஸ் நிர்வாகசபை தேர்தலிலும் தமிழ்நாடு காரியக் கமிட்டியில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் வாதம் தலைசிறந்து கடசியாக 20 ஸ்தானத்திற்கு பார்ப்பனர்கள் 4, 5 பேரே தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

மற்றும் பல ஸ்தானங்களின் தேர்தல்களிலும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி தாண்டவம் ஆடிக்கொண்டே இருந்திருக்கிறது.

அவ்வளவு ஸ்தானங்கள் பார்ப்பனரல்லாதாருக்கு கொடுக்கப்பட்டும் பெரிதும் எப்படிபட்ட ஆட்கள்தான் அவர்களுக்கு கிடைக்க முடிந்தது என்பது அந்தப் பெயர்களைப் பார்த்தாலே விளங்கிவிடும்.

இந்த நாட்டில் காங்கிரசுக்கு உள்ள செல்வாக்கை அதை ஆதரிக்கும் மக்களின் தரத்தை அறிய ஒரு அளவு கருவி வேண்டுமானால் இந்த பெயர்களையும் நபர்களையும் கவனித்து தெரிந்துகொள்வதன் மூலம் நன்றாய் தெரிந்துகொள்ளலாம். இதில் ஒரு விசேடம் என்னவென்றால் வேலூரில் மகாநாடு நடந்து மாகாண நிர்வாக சபை முதலிய ஸ்தாபனங் களுக்கு தேர்தல் நடந்தும் வேலூர் ஜில்லா சர்வாதிகாரிகளான தோழர்கள் குப்புசாமி உபயதுல்லா முதலிய பண பக்தர்கள் எந்த ஸ்தானத்துக்கும் தெரிந்தெடுக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறார்கள். ஒரு சமயம் இப்பொழுதுதான் இவர் போன்றவர்களின் யோக்கியதையை காங்கிரஸ் பக்தர்கள் தெரிந்து கொண்டதாய் காட்டிக்கொள்ள சமயம் ஏற்பட்டதோ என சந்தேகிக்கின்றோம்.

ஜஸ்டிஸ் கட்சி என்ன செய்தது என்று காங்கிரசிலுள்ள சில பார்ப்பனரல்லாத தோழர்களுக்கு விபரம் விளங்க வேண்டுமானால் ஜஸ்டிஸ் கட்சி இல்லாதிருந்திருக்குமானால் ஜஸ்டிஸ் கட்சி இல்லாமல் போனால் தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாக சபையிலும் மற்றும் பல ஸ்தானங்களிலும் இந்த பேர்வழிகள் அங்கம் பெற்றிருக்க முடியுமா என்பதையும் ஜஸ்டிஸ் கட்சி இல்லாத காலத்தில் இவர்களது நிலை எப்படி இருந்தது என்பதையும் கொண்டு உணர்ந்து கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 13.12.1936**



RangaRakes tamilnavarasam.com

# பள்ளத்தூர், கோட்டையூரில் பிரசங்கம்

தோழர்களே!

நான் இங்கு உங்கள் முன் ஜில்லாபோர்டு தேர்தல் என்பது பற்றி பேசுவேன் என்பதாக நோட்டீசில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னுடைய பேச்சு ஜில்லா போர்டு தேர்தலுக்கு பயன்படுமா என்பது எனக்கே சந்தேகம். நான் இங்கு ஜில்லாபோர்டு தேர்தலைப்பற்றி பேசுவதில் அபேக்ஷகர்களைப் பற்றிப் பேசி யாருக்காவது ஓட்டுப்போடுங்கள் என்று சொல்லப்போவதில்லை.

ஜில்லா போர்டு பிரஸ்தாப அபேக்ஷகர்களில் ஒருவரைத்தான் எனக்குத் தெரியும். அதாவது தோழர் சி.வி.சி.டி. வெங்கிடாசலம் செட்டியார் அவர்களைத் தெரியும். மற்றொரு அபேக்ஷகரை எனக்குத் தெரியாது. பார்த்ததும் இல்லை. அவரைப்பற்றிய குணங்களும் எனக்குத் தெரியாது. இந்த நிலையில் நான் அபேக்ஷகர்களின் தகுதியைப்பற்றி எப்படிப்பேச முடியும்? மற்றும் இருவரும் கிட்டத்தட்ட சரிசமானமான பணக்காரர்களாம். ஆகையால் பணக்காரர்கள் ஒழிய வேண்டும் என்று பேசுவதற்கும் இதில் இடமில்லை.

அன்றியும் இருவரும் லேவாதேவியில் பணம் சம்பாதிக்கிறவர்கள் தானாம். ஆதலால் லேவாதேவிக்காரர்கள் ஒழியவேண்டுமென்று பேசுவதற்கும் இதில் இடமில்லை. லஞ்சம் ஒழியவும் இதில் இடமில்லை. வெளிப்படையாகவே லஞ்சங்கள் தாண்டவமாடுகின்றன. ஒரு கட்சிப் பணம் சிறிது ஓட்டர்களுக்கு அதிகமாகப் போகலாம். மற்றொரு கட்சிப்பணம் சிறிது காலிகளுக்கும் பிரசார ஜீவனக்காரர்களுக்கும் காலித்தனமாய் பேசுகிறவர்களுக்கும் அதிகமாய்ப் போகலாம். இரண்டில் எது நல்லது என்றால் காலிகளுக்கும் வசவுக்காரர்களுக்கும் பணம் போவதைவிட ஓட்டர்களுக்குப் போவது நல்லது. ஜில்லா போர்டு பணம் ஓட்டர்களுடையது. மெம்பர்களுக்கு நிற்பவர்களுடைய பணமும் பெரிதும் ஏழை ஓட்டர்களது பணம் தான். ஆகவே ஓட்டர்களை மோசம் செய்து காலிகள் அடித்துக்கொண்டு போவதை தடுத்தாக வேண்டும். பணத்துக்காகத் தடுக்காவிட்டாலும் இம்மாதிரி வாழ்வில் காலித்தனம், வசவு, கூலிப் பிரசாரம், பொய், பழி, பித்தலாட்டம், ஏமாற்றம் ஆகிய பிரசாரங்கள் ஒழிக்கப்படவேண்டும். என்னுடைய முக்கிய ஆசை சுயராஜ்யம் சமதர்மம் என்கின்ற பித்தலாட்டங்கள் ஒழிக்கப்படுவதற்கு முன் அவை நிஜமாக இருந்தாலும்கூட அவை ஏற்படுவதற்கு முன் காலித்தனம் ஒழிக்கப்பட



வேண்டும். காலித்தனத்துக்கு இடமுள்ள நாட்டில் சுயராஜ்யமும் நடக்காது சமதர்மமும் நடக்காது. சிலர் சமதர்மம் என்றாலே காலித்தனமும் கூலி வசவும் தான் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். இது நாட்டுக்கு - மனித சமூகத்துக்கு பெருங் கெடுதி. இந்த காலித்தனத்தைப் பார்த்தபின் ராணுவச் சட்ட ஆக்ஷி மக்களுக்கு மேல் என்று எனக்குப் படுகிறது.

பொது உடமைத் தேசமாகிய ரஷியாவில் காலித்தனம் தலைகாட்ட முடியாது. பச்சை தேசிய நாடாகிய ஹிட்லர் ஆக்ஷியில் காலித்தனம் கிடையாது. எப்பேர்ப்பட்ட நாடானாலும் கட்டுப்பாடும் அமைதியும் ஒழுங்கும் வேண்டும். அதில்லாத நாட்டை அழித்துவிட வேண்டியதுதான்.

ஜர்மனியில் ஹிட்லரைப் பற்றி ஒரு வார்த்தை சொன்னால் உடனே சுட்டுவிடுகிறார்கள். ரஷியாவில் அரசாங்கத்தைப்பற்றி ஒருவார்த்தை சொன்னால் உடனே தண்டனை. அந்த சுதந்திர - தேசிய பொதுவுடமை தேசங்களில் கட்டுப்பாடும் ஒழுக்கமும் அவ்வளவு தாண்டவமாடும் போது இந்த ''அடிமை'' நாட்டில் கட்டுப்பாடு வேண்டியதில்லை, காலித்தனத்தில் வாழவேண்டும் என்றால் அரை நிமிஷமும் நான் சம்மதிக்க முடியாது.

சில செட்டிப்பிள்ளைகள் காந்திக் குல்லாய் போட்டுக்கொண்டு பணக்காரன் ஒழிய, ராஜா சர் ஒழிய என்று கூப்பாடு போட்டதைப் பார்த்தேன். கூலிகொடுத்து கூப்பாடு போடச் சொல்லுவதையும் பார்த்தேன். இதனால் பணக்காரர்கள் ஒழிந்து போகமாட்டார்கள். மிகவும் பத்திரமாய் விடுவார்கள். கூப்பாடு போடுகிற செட்டிப்பிள்ளைகள் அன்னக்காவடிகள் அல்ல; இன்சால் வெண்டுகள் அல்ல; மண்வெட்டியாலும் கோடாலியாலும் பிழைக்கிறவர்கள் அல்ல. அவரவர்கள் வீடு வாசல் பெண்டு பிள்ளை நகை, வாழ்க்கைத் திமிர் எல்லாம் எனக்குத் தெரியும். ஊரார் உழைப்பில் வயிறு வளர்க்கின்ற ஒரு வருணாச்சிரமக்காரர்கள் தான். ராஜா சர்க்கு 50 லக்ஷம் இருந்தால் கூப்பாடு போடுகின்ற பலருக்கு பல லக்ஷம் இருக்கின்றன. இன்று ராஜா சர் செட்டியார் மீது ஏவி விடப்பட்ட ஆட்களே நாளைகூட 2 அணா அதிகமாகக் கொடுத்தால் உங்கள் வீட்டின் முன்புறம் நின்றுகொண்டு உங்களை பெண்டு பிள்ளைகளுடன் ஒழிய என்று கூப்பாடுபோடுவார்கள். நீங்கள் சாணி எடுத்துப்போடச் செய்தால் நாளை உங்கள் மீது மலம் எடுத்துப்போடச் செய்யச்செய்ய முடியும். இனி நான்கு தடவை இப்படி நடந்தால் உங்கள் பெண்டு பிள்ளைகளுக்கு பந்தோபஸ்து கிடைக்கமாட்டாது; ஜாக்கிரதை. உங்களால் நாளை உழைத்து சாப்பிடமுடியாது. வேடிக்கையாய் இந்த காரியத்தில் இறங்கிவிட்டீர்கள். வயிற்று வளர்ப்புப் பத்திரிகையை பார்த்து ஏமாந்து போகாதீர்கள், வயிற்றுப்பிழைப்பு கூலிகளின் பிரசங்கத்தில் மயங்கி விடாதீர்கள். நான் சொல்வதெல்லாம் நடந்து கொண்டே வந்திருக்கின்றன.

ராஜா சர் இல்லாதிருந்தால் உங்கள் சமூகம் என்ன கதி அடைந்திருக்கும்? உங்களுக்கு உள்ள பெருமை யாரால்? நீங்கள் என்போல் வெறும் ஆளாய்



RangaRakes tamilnavarasam.com

திரிய தைரியங்கொண்டால் ராஜா சர் ஒழிக என்று கூவுங்கள். ராஜா சர்கள் ஒழிந்தால் உண்மையில் நான் அதிக சந்தோஷப்படுவேன். அவர்களை எப்படி ஒழிப்பது என்பதில் என் கவலையும் முயற்சியும் யோசனையும் இன்னமும் நீங்கவில்லை. ஆனால் நாகப்பசெட்டியார் உயருவதற்கு ராஜா சர் ஒழிக என்றால் இது கூலிக்கூப்பாடு என்பது விளங்கவில்லையா? ராஜா சர்களும், நாகப்பர்களும், குட்டி ராஜா சர்களும், குட்டி நாகப்பர்களும் எல்லாம் ஒழிந்தால்தானே பணக்காரர்கள் ஒழிய முடியும்? இந்த ஒரு பணக்காரர் ஒழிந்தால் மற்றொரு உஞ்சவிர்த்திகாரர் பணக்காரர் ஆகிவருகிறாரே அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? தோழர் சத்தியமூர்த்தியாருக்கு ஏது இவ்வளவு பணம்? தோழர் குப்புசாமிக்கு ஏது இவ்வளவு பணம்? மற்றும் சில ''பணக்காரர் ஒழிப்புக்காரர்''களுக்கு ஏது நெய்யும் பிரியாணியும் சாப்பாடும் என்பவைகளை யோசியுங்கள்.

பணக்காரர் ஒழிக, ராஜா சர்கள் ஒழிய என்கின்ற கொள்கை ஒருவேளை சோத்துக்கும் 4 ரூ. கூலிக்கும் விற்கப்பட்டு மற்றொரு பணக்காரன் ஜெயிக்க வேண்டுமென்று கூப்பாடு போடுவதானால் அந்தக் கூப்பாட்டுக்கு இடம் கொடுக்கலாமா என்று யோசித்துப்பாருங்கள். இரண்டு பணக்காரர் பணத்திமிரினாலோ அல்லது பணம் சம்பாதித்து பெருமை அடையவோ சண்டை போட்டுக்கொண்டால் இங்கு காந்திக்கும் கதருக்கும் காங்கிரசுக்கும் சமதர்மத்துக்கும் காலிகளுக்கும் கூலிகளுக்கும் என்ன வேலை என்று கேட்கின்றேன். ஜஸ்டிஸ் கட்சி ஒழிய வேண்டும் என்று சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்று கேட்கின்றேன்.

காங்கிரசின் பேரால் பணக்காரரை ஏன் நிறுத்த வேண்டும்? அது தெரிந்தும் பணக்காரன் ஒழிய என்று ஏன் கூப்பாடு போடவேண்டும்?

ஜில்லா போர்டு வேலைக்கு யாரும் ஆசைப்படலாம். யாருக்கும் பாத்தியமுண்டு. யாருடைய எந்த கட்சியாருடைய தாய் தகப்பனாரோ, பெண்டு பிள்ளையோ பாடுபட்டுச் சம்பாதித்த பொருள் அல்ல. ஆற்றிலே ஜலம் போகிற மாதிரி எல்லோருக்கும் பங்கு உண்டு. இதில் காங்கிரசுக் காரனுக்கு மாத்திரம் என்ன சொந்தம்? காந்திக்கு மாத்திரம் என்ன சொந்தம்? ஜஸ்டிஸ்காரனுக்கு ஏன் பாத்தியமில்லை? ஜஸ்டிஸ் கட்சிக்காரன் வரிப்பணம் ஜில்லாபோர்டு பண்டில் இல்லையா? ஜஸ்டிஸ் கட்சிக்காரன் சட்டமும் உழைப்பும் ஜில்லாபோர்டு ஸ்தாபன உற்பத்தியில் இல்லையா? ஜில்லா போர்டு சட்டத்தில் காங்கிரஸ்காரன் மாத்திரம் செய்யக்கூடியதாகவோ நாகப்ப செட்டியார் மாத்திரம் செய்யக்கூடியதாகவோ என்ன காரியம் இருக்கிறது?

*குறிப்பு: 12.12.1936 இல் பள்ளத்தூரிலும் கோட்டையூரிலும் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம்.*

குடி அரசு - சொற்பொழிவு - 20.12.1936



# சமூக சீர்திருத்தமும் அரசியலும்

## காங்கிரஸ் என்றால் என்ன?

தோழர்களே!

சமூக சீர்திருத்தமும் அரசியலும் இரண்டும் ஒன்றேயாகும். நமது நாட்டில் சமூக உயர்வால் ஒரு கூட்டம் மக்கள் பாடுபடாமல் வயிறு வளர்க்கத் தக்கபடி சமூகம் அமைக்கப்பட்டதாலும் அரசியலை அந்த சமூக உயர்வுக்காரர்களே கைவசப்படுத்திக்கொண்டதாலும் சமூக சீர்திருத்தத்தை அடியோடு விட்டுவிட்டு சமூக சீர்திருத்தத்துக்கு சம்பந்தப்படாத அரசியலைப் பற்றி பேசிக் காலம் கழித்து வருகிறார்கள். சமூக சீர்திருத்தமில்லாத அரசியல் சிலரின் சுயநலத்துக்குத்தான் பயன்படுமே தவிர வேறு ஒன்றுக்கும் பயன்படாது. இந்த நாடு சுமார் ஆயிரம் வருஷத்துக்கு முந்தியே சமூக சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்க வேண்டியதாகும். அந்தப்படி செய்யப் பட்டிருக்குமானால் இன்று இந்தியா, உலகில் ஒரு நாகரீகமுள்ள மக்கள் அடங்கிய நாடாக ஆகி இருக்கும். இந்தியாவில் இன்று உள்ள கீழ் ஜாதி மேல் ஜாதி கொடுமை இருந்திருக்காது. அந்நிய ஆட்சியும் இந்தியாவுக்கு அரை நிமிஷம்கூட வேண்டி இருக்காது.

ஆனால் இன்று இந்தியா ஒரு காட்டுமிராண்டி நிலையில் இருக்கிறது. இங்கு கூடியுள்ள மக்கள் ஆளுக்கு ஒரு வேஷம் கொண்டு இருக்கிறார்கள்; ஆளுக்கு ஒரு ஜாதிப்பேரும் கொண்டு இருக்கிறார்கள். உடையில் பேதம், அணியில் பேதம், குறியில் பேதம், மதத்தில் பேதம், உண்பன தின்பன கிடையாது; கொடுப்பன கொள்வன கிடையாது. ஒவ்வொருவனும் அவனவன் பழமையைப் பேசி பெருமையடைகிறான். வீணாக சமயத்துக்கும் ஜாதிக்கும் சண்டை போடுகிறான். தன்னை அந்நியன் கீழ் ஜாதி என்று கூப்பிடுவதை சகித்துக்கொண்டு மற்றவனை கீழ் ஜாதி என்று கூப்பிடுவதில் திருப்தியும் பெருமையும் அடைகிறான். இதுதான் மூட மக்கள் என்பதற்கு அடையாளமாகும்.

தன்னை வேறு ஜாதியான் என்று பிரித்து காட்டுவதில் ஒவ்வொரு வனுக்கும் ஆசை இருக்கிறது. தேச ஒற்றுமையும். சமத்துவமும் விடுதலையும் பேசுகிறவன் கூட குடுமி ஒரு மாதிரி வைத்துக்கொள்ளுகிறான்; வேஷ்டி சேலை ஒரு மாதிரி கட்டிக்கொள்ளுகிறான்; பூணூல் ஒரு மாதிரி போட்டுக் கொள்ளுகிறான்; பொட்டு ஒருமாதிரி வைத்துக் கொள்ளுகிறான். இவர்களை எல்லாம் எந்தக்கணக்கில் சேர்த்துகிறீர்கள்?



RangaRakes tamilnavarasam.com

இந்தக்கூட்டத்தார் இந்தியர்களுக்கு விடுதலையும் சுதந்திரமும் தேடிக் கொடுப்பார்கள் என்று அநேக முட்டாள்கள் நம்புகிறார்கள். அனேக மடையர்கள் அவர்களைப் பின்பற்றுகிறார்கள்.

ஜாதி என்பதற்கு ஆணும் பெண்ணும் தகுதி அற்ற ஜோடியாய் வாழ்கின்றனர். வாழ்க்கை லட்சியம் ஜாதி மதத்தைக் காப்பாற்றுவது என்றே கருதுகிறார்கள். இதுவரை இந்தியாவில் தோன்றிய பெரியார்கள் என்பவர்களில் அனேகர் ஜாதி மதத்தைக் காப்பாற்றுவதில் ஈடுபட்டார்களே ஒழிய மக்களை ஒன்றுபடுத்த முயற்சிக்கவில்லை. காந்தியாரை மகாத்மா என்கிறார்கள்; அவர் ஜாதியை ஒன்றாக்கச் சம்மதிக்கிறாரா? மதத்தை ஒன்றாக்க சம்மதிக்கிறாரா? அவருடைய எந்த திட்டத்திலாவது ஒன்றாக்கும் வாசனை இருக்கிறதா? இந்திய மக்களுக்கு தங்களையே பிரதிநிதிகள் தர்மகர்த்தாக்கள் என்று சொல்லிக் கொள்ளும் மக்களாவது ஜாதி மதப் பிரிவுக்கு ஏதாவது வகை செய்கிறார்களா?

நேற்று திருவாங்கூர் ராஜா கோவிலை திறந்து விட்டுவிட்டதற்கு ஆக காந்தியார் முதல் ''உயர்ந்த'' பார்ப்பனர் வரை பாராட்டினார்கள். அப்படி பாராட்டினவர்கள் பிரிட்டிஷ் ராஜ்யத்தில் என்ன செய்ய முயற்சித்தார்கள்?

அரசியலை உடைக்கிறோம், சீர்திருத்தத்தை உடைக்கிறோம், பிரிட்டிஷ் சர்க்காரை விரட்டுகிறோம் என்று சொல்லுகிறவர்கள் ஜாதியை உடைக்கட்டுமே, மதத்தை அழிக்கட்டுமே, கோவில் கதவுகளை உடைக்கட்டுமே பார்க்கலாம். வாயாலாவது பேசட்டுமே பார்க்கலாம். இதற்கு வெள்ளைக் காரனுடைய தயவோ அரசியல் உதவியோ வேண்டியதில்லையே. அப்படி இருக்க அதை மூடி வைத்து விட்டு காந்தி முதல் ஒவ்வொருவரும் ஜாதி மத வேஷம் போட்டு மக்களைப் பிரித்து மேல் கீழ் ஆக்கி வைத்து விட்டு சுயராஜ்யம் பெறுகிறேன் என்பது புரட்டா நாணையமா என்று பாருங்கள். நமக்கு சர்க்காரால் என்ன தொல்லை இருக்கிறது? வரி வாங்குகிறான்; சம்பளம் கொடுக்கிறான்; தன்னுடைய வியாபாரத்தை நடத்திக் கொள்கிறான்; அதை தடுக்க நம்மால் ஆகவே ஆகாது. நாம் ஜாதிச் சண்டை போட்டுக்கொண்டு ஜாதிப் பிரிவை வைத்துக்கொண்டு என்ன காரியம் செய்யமுடியும்? வெள்ளைக்காரனிடம் துப்பாக்கி பிரங்கி இருக்கின்றன. நம்மிடம் ஜாதிச் சண்டை இருக்கிறது. வியாபாரமோ ராட்டின யந்திரம் வைத்து வெள்ளைக்காரன் வியாபாரத்தை நிறுத்தப் பார்க்கிறோம். இதெல்லாம் வீண் மைனாப் பிடிக்கும் வித்தையே ஒழிய யோக்கியமான பயனுள்ள காரியம் ஆகாது. ஜாதி ஒழிக்கப்பட்டு பறையன் பார்ப்பான் என்கின்ற பிரிவு அழிக்கப்பட்டால் ஒழிய இந்தியர்கள் மனிதர்கள் என்று சொல்லிக்கொள்ள உரிமையற்றவர்களே என்பது என் கருத்து. பணக்காரர்களை ஒழித்து, ஏழை பணக்காரர்களை ஒன்று படுத்துகிறேன் என்று சில வீணர்கள் கூப்பாடு போடுகிறார்கள். மூடமக்கள் அதை நம்பி கூடவே கோவிந்தா





போடுகிறார்கள். ஒரு காசு பெறாத பார்ப்பான், பறையன் என்பதையும், நாயுடு, முதலி, தேவர், மறவர், நாடார் என்பதையும் ஒன்றுபடுத்த முடியாத தைரியமில்லாத, இஷ்டமில்லாத ஆட்கள் பணத்தை சொத்தை எப்படி ஒன்று படுத்தி சமத்துவப்படுத்த முடியும் என்பதை யோசித்துபாருங்கள்.

மனிதன் திருடுகிறான், பொய் பேசுகிறான், பாடுபடாமல் வயிறு வளர்க்கப்பார்க்கிறான். இவனை மக்கள் இகழ்வதில்லை; ஜாதியை விட்டு தள்ளுவதில்லை. ஆனால் ஜாதிவிட்டு ஜாதி சாப்பிட்டால், கல்யாணம் செய்தால் ஜாதியை விட்டு தள்ளிவிடப்படுகிறான். இந்த மக்களில் ஒழுக்கம், நாணயம் எப்படிப்பட்டது என்று பாருங்கள்.

ஆதலால் சமூக சீர்திருத்தத்தின் முக்கியம் நாம் உணருகிறவரை நமது மக்கள் சுதந்திரத்தின் முக்கியமோ சுயமரியாதையின் முக்கியமோ தெரியாதவர்கள் கவலையற்றவர்கள் என்று தான் அருத்தம்.

**அரசியல்**

நிற்க, அரசியலைப் பற்றி சிறிது பேசும்படி கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறேன். இந்த ஊர்க்காரர்கள் பெரிதும் காங்கிரசுக்காரர்கள் என்று தெரிகிறது. அநேகம் பேர் கதர்கட்டி இருக்கிறார்கள். அதுவே ஒரு வைராக்கியத்தைக் காட்டக்கூடிய அறிகுறியாகிவிட்டது. அப்படிப்பட்டவர்கள் முன் அரசியலைப்பற்றி பேசுவது என்றால் எனக்கு பயம்தான். ஆனால் ஒன்று சொல்லுகிறேன். நான் சொல்வதைக் கேட்டு ஆத்திரப்படக் கூடாது. முதல் முதல் இங்கு வந்திருக்கிறேன், பொறுமையாய்க் கேளுங்கள்; உங்கள் கேள்விகளை எவ்வளவு வேண்டுமானாலும் கேளுங்கள். பதில் சொல்லி விட்டே இங்கிருந்து அசைகிறேன். முரட்டுத்தனம் செய்தால் நான் நிறுத்திக் கொள்ளுகிறேன். உங்கள் தேசாபிமானமும் காங்கிரசும் எப்படிப்பட்டது என்று அளந்து கொள்ளுகிறேன். உங்கள் அபிப்பிராயத்துக்கு மாறுபட்டவன் பேசக்கூடக்கூடாது என்றால் உங்கள் சுதந்திரத்தின் யோக்கியதையும் தெரிந்து கொள்ளுகிறேன். வெள்ளைக்காரர்கள் ஆட்சியில் வெள்ளைக்காரனை கண்டிக்க இடம் கொடுத்து இருக்கிறார்கள்.

இந்தியர்கள் பெறப்போகும் ஆட்சியில் அதன் யோக்கியதையைப் பற்றிக் கூட பேசக்கூடாது என்றால் இந்தியர்கள் சுயராஜ்யத்தை விட ஆயிரம் பங்கு வெள்ளைக்காரரின் ஆட்சியே மேல் என்பது எனது அபிப்பிராயம். நான் செல்லுமிடங்களில் சுயராஜ்யக்காரர்கள் காங்கிரசுக்காரர்கள் - காந்தியாட்கள் இவர்களின் யோக்கியதையை உணர்ந்துதான் வருகிறேன்.

இந்தக் கூட்டத்தார் ஒழிவதே இந்தியாவுக்கு பூரண விடுதலை என்பது எனது அபிப்பிராயம். இந்த அபிப்பிராயம் எனக்கு பலப்பட்டு வரும்படியாகத்தான் காங்கிரசுக்காரர்களும் காந்தி சிஷ்யர்களும்

RangaRakes tamilnavarasam.com

கதர்க்காரர்களும் நடந்து வருகிறார்கள். பள்ளத்தூரில் நன்றாகப் பார்த்தேன்; விருதுநகரில் பார்த்தேன். நான் வெறும் காலிகள் நடத்தையைப் பார்த்து சொல்லவில்லை.

ஜவஹர்லால், சத்தியமூர்த்தி முதலியவர்கள் நடத்தையையும் பேச்சையும் கொண்டே சொல்லுகிறேன்.

ஆகையால் நீங்கள் விஷயம் உணர வேண்டுமானால் பொறுமையாய் கேளுங்கள்; மனதில் ஞாபகமாய் இருத்துங்கள். உங்கள் தலைவர்கள் - வீரர்கள் வரும்போது அவைகளுக்கு சமாதானம் கேளுங்கள். மறுபடியும் நீங்கள் கூப்பிடுகிறபோது நான் வருகிறேன், நீங்கள் சொல்வதைக் கேட்கிறேன்; அதற்கு சமாதானம் சொல்லுகிறேன். இல்லாவிட்டால் உங்களுடன் சேர்ந்து கொள்ளுகிறேன். காலித்தனத்தை மாத்திரம் அனுமதிக்கமாட்டேன்.

ஆகவே, தோழர்களே! காங்கிரஸ் என்றால் என்ன? அரசியல் என்றால் என்ன? சுயராஜ்யம் என்றால் என்ன? பொருள் தெரியாமல் வைத்து மக்களை ஏமாற்றுகிறார்கள். காங்கிரஸ் என்றால் கூட்டம் என்று பெயர். இது உத்தியோகம் பெறுவதற்கு ஆக சுமார் 50 வருஷத்துக்கு முன்பு படித்தவர்கள் ஏற்படுத்தினது. படித்தவர்கள் சர்க்காரிடத்தில் உத்தியோகம் பெறவும் அதற்குப் பதிலாக பாமர மக்களுக்கு இவர்கள் ராஜ பக்தி கற்றுக்கொடுத்து ராஜ விஸ்வாசம் உண்டாக்கவும் ஏற்படுத்தப்பட்டதாகும். அதுவும் வெள்ளைக்காரன் சொல்லிக்கொடுத்த உபாயமாகும்.

ஏனெனில் வெள்ளைக்காரன் 50, 60 வருஷங்களுக்கு முன் உத்தியோகங்களை படிப்பு காரணமில்லாமல் பெரிய குடும்பம் பெரிய வம்சம் என்று பொறுக்கி எடுத்து கொடுத்து வந்தான். சம்பளமும் அதிகாரமும் இருந்ததால் சில மேல் ஜாதிக்காரர்கள் படித்தவர்கள் ஆசைப்பட்டு போட்டி போட்டார்கள். அதற்கு ஆக ஒரு வெள்ளைக்கார ஐ.சி.எஸ். உத்தியோகஸ்தர் இந்த தோது சொல்லிக்கொடுத்தார்.

அதாவது ''இந்தியர்கள் அரசியலில் முன்னேற்றம் அடைய வேண்டியது, இந்தியாவும் பிரிட்டிஷும் என்றென்றும் இணைபிரியாமல் இரண்டறக் கலந்துகொள்ள வேண்டியது''. இதுதான் காங்கிரசின் கொள்கை. இதற்கு இணங்க காங்கிரஸ் ராஜ விஸ்வாச தீர்மானத்தை செய்து அதை பள்ளிக்கூடம், கோவில், சடங்கு ஆகியவைகளில் கலக்கி மக்களுக்கு கற்பித்து வந்தது. அவற்றில் ஒன்றுதான் அரசன் விஷ்ணு அம்சம் என்று வேதத்தில் இருப்பதாக பார்ப்பனர்கள் போதித்து வந்ததாகும். அதன்படியே ராஜ விஸ்வாசம் பெருகினதோடு உத்தியோகமும் சம்பளமும் பெருகி அதற்கு ஏற்றபடி வரியும் பெருகி வந்தது. இதைக்கண்டு முஸ்லீம்கள் ஆசைப்பட்டு முஸ்லீம் சங்கமேற்படுத்தி தங்கள் ஜனத்தொகைக்கு தக்க விகிதாச்சாரம் பெற்று விட்டார்கள்; கிறிஸ்துவர்களும் அதுபோலவே



பெற்று விட்டார்கள். இந்துக்கள் பங்கை பார்ப்பனர்களே அடைந்து வந்தார்கள். காங்கிரசில் பாடுபட்ட நாயர், தியாகராயர் முதலியவர்கள் பலதடவை பார்ப்பனர்களால் தோல்வியுற்ற பிறகு முஸ்லீம்களைப்போல் பார்ப்பனரல்லாதார் சங்கம் ஏற்படுத்தி தங்கள் விகிதாச்சாரம் பங்குகேட்க ஆரம்பித்தார்கள். அதனால் பார்ப்பனர்களின் ஏகபோக உரிமை குறைவாயிற்று. அதைக் காப்பாற்றவே பார்ப்பனரல்லாதாரில் காந்தியை பிடித்து மகாத்மாவாக்கி அவர் பெயரைப் பிரபலப்படுத்தி நம்மை ஏமாற்றுகிறார்கள். நமக்கு கஷ்டம் வரும்படியான கொள்கைகளை வாயளவில் ஏட்டளவில் காங்கிரசில் போட்டுக்கொண்டு நமது வாலிபர்களையும் சில கூலிகளையும் பிடித்து நம்மைத் தொல்லைப் படுத்துகிறார்கள். இதுதான் அரசியல். உங்களுக்கு அரசியல் எ.பி.சி.டி. தான் சொன்னேன். இது சரியா தப்பா என்பதை தெரிந்துகொள்ளுங்கள். பிறகு இன்னமும் பாக்கி சொல்லுகிறேன்.

சுயராஜ்யம் என்பதில் ஒன்றும் இல்லை. வெறும் வார்த்தைதான். சுயராஜ்யம் இதுவரை ஒரு தேசத்திலும் பட்டினியையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிக்கவில்லை. நான் பந்தயம் கூறுகிறேன். ஜவஹர்லால் பார்ப்பனர் என்பதை மறந்து விடாதீர்கள். எந்த ஊரிலாவது சுயராஜ்யம் பட்டினியை நீக்கி இருந்தால் நான் எல்லோருக்கும் முன்பாக சுயராஜ்யத்தில் கையெழுத்து போடுகிறேன்.

அது வெற்று வேட்டு. ஏமாந்து விடாதீர்கள். வெள்ளைக்காரனை விரட்டி விடுவது சுயராஜ்யமானால் கதரால் காந்தியால் வந்தே மாதர கூப்பாட்டால் முடியுமா? பட்டாளத்துக்கும் குண்டுக்கும் பதில் சொல்ல முடியுமா? நாம் ஒருவரை ஒருவர் நம்புகிறோமா? காங்கிரசில் உள்ள ஜாதிச் சண்டை உங்களுக்குத் தெரியாதா? நம்மை சரிசமமாய் கருதாதவனுடன் நான் கலந்து வேலை செய்ய முடியுமா? நீங்களே யோசித்துப் பாருங்கள்.

**ஸ்தல ஸ்தாபனம்**

ஸ்தல ஸ்தாபனத்தைப்பற்றி கேட்கிறீர்கள். இது மற்றொரு பித்தலாட்டம். நமக்கு அதில் உள்ள சுதந்திரம்,

1. மக்கள் 1000, 10000 செலவு செய்து பதவிபெற வேண்டியது, பிறகு அந்தப்பணத்தை வட்டியுடன் சம்பாதித்துக் கொள்ளவேண்டியது.
2. பெருமை அடைய வேண்டியது.
3. கண்டவர்கள் பொறுக்கித் தின்ன விட்டு வேடிக்கை பார்க்க வேண்டியது. இதுதான் என் அனுபவம்.

இன்றைய ஸ்தல ஸ்தாபனங்கள் சர்க்காரால் நிர்வகிக்கப்பட்டால் அரை வரிசை செலவு மீதியாகும். அதற்கு நான் ஜவாப்தாரி, நான் அங்கம் வகிக்கும் ஈரோடு முனிசிபாலிட்டியில் கவுன்சிலர்கள் கண்ணியமுள்ளவர்கள்.



RangaRakes tamilnavarasam.com

அதிலேயே 100 க்கு 50 ரூ. பாழாகின்றது. கவலை இல்லை; பொறுப்பு இல்லை. சிங்கங்களும், புலிகளும், நரிகளும், நாய்களும் தின்கின்றன. மற்றதை சொல்லுவானேன்?

இதை தோழர் ராஜகோபாலாச்சாரியாரும், சத்தியமூர்த்தியாரும் ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

உடனே கலைக்க வேண்டியது ஜில்லா போர்டுகள் என்று பம்பாயில் சத்தியமூர்த்தியார் பேசினார். நான் 20 வருஷமாக பேசிவருகிறேன்.

ஸ்தல ஸ்தாபனம் மக்களுக்குள் கட்சி, பேராசை, ஒழுக்க ஈனம் முதலிய கெட்ட குணங்களை கற்பிக்கிறது. ஆனால் இன்று ஜனங்களுக்கு அதில் மோகம் இருக்கிறது. பணம் சம்பாதிக்கலாம், பதவி பெறலாம், அதிகாரம் செய்யலாம், கவுரவம் அடையலாம். இன்னும் பலவும் உண்டு. இதை யார்தான் வேண்டாம் என்பார்கள்?

ஆகவே தோழர்களே மறுமுறை வரும்போது இன்னும் விளக்கமாகப் பேசுகிறேன்.

குறிப்பு: *14.12.1936 ஆம் நாள் கழுகுமலை குருவிகுளத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய உரை.*

**குடி அரசு - சொற்பொழிவு - 20.12.1936**



# காங்கிரஸ் சுயராஜ்யம்

## காலித்தனத்தில் முடிந்தது

காங்கிரஸ்காரர்கள் இந்திய அரசியலில் தங்கள் கொள்கைகளை யெல்லாம் கைவிட்டு விட்டார்கள், பஹிஷ்காரங்களை வாக்குறுதிகளை பிரமாணங்களை எல்லாம் காற்றில் பறக்கவிட்டார்கள். புது புது - புரியாத கொள்கைகளையெல்லாம் சொல்லிப் பார்த்தார்கள். பாமர மக்களை ஏமாற்ற விஞ்ஞான சாஸ்திர முறைப்படி எத்தனையோ தந்திரங்கள் செய்து பார்த்தார்கள். பழங்கால ராம ராஜ்யம் முதல் தற்கால நாகரீக பொது உடமை ராஜ்யம் என்பதுவரை பேசித் தீர்த்தார்கள். வருணாச்சிரமத்தை ஆதரிப்பது - புனருத்தாரணம் செய்வது என்பது முதல் சகல சமூக சீர்திருத்தம் ஆச்சார சீர்திருத்தம் எல்லாம் பேசினார்கள். கதர் என்றும் அரிசன சேவை என்றும், கிராமப் புனருத்தாரணம் என்றும் எவ்வளவோ கிளை இயக்கங்கள் கண்டு அவைகள் மூலம் பணம் பறித்தார்கள். சட்டத்தை மீறுவது, அரசாங்கத்தை ஒழிப்பது, அந்நியர்களை விரட்டி அடிக்கும் சுயராஜ்யம் சம்பாதிப்பது என்று சொல்லி கும்பல் கும்பலாக ஜயிலுக்கு ஆட்களை அனுப்பினார்கள்.

கடசியாக சட்டம் மீறுவதில்லை, உத்திரவுகளை அலட்சியம் செய்வதில்லை என்று சர்க்காருக்கு எழுதிக்கொடுத்தார்கள். இவைகள் ஒன்றும் பலியாமல் போகவே ராஜவிஸ்வாச பிரமாணமும் சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதாக சத்தியமும் செய்து சட்டசபைகளுக்குள்ளும் நுழைந்து பார்த்தார்கள். அவர்களால் ஆனதெல்லாம் செய்தார்கள். உலகத்தில் மற்ற நாடுகளில் நடந்த - நடக்கும் முறைகளையும் கடன் வாங்கி காப்பி அடித்துப் பார்த்தார்கள். என்னசெய்தும் ''எண்ணெய்ச் செலவே ஒழிய பிள்ளை பிழைக்கப் போவதில்லை'' என்கின்ற பழமொழிப்படி இந்தப் பதினாறு வருஷ காலமாய் ஒரு காரியமும் செய்ய முடியாமல் ஒரு பயனும் ஏற்படாமல் போனதால் இப்போது கடைசியாக காலித்தனத்தை இறுதி ஆயுதமாகக் கையாண்டு பார்த்து விடுவது என்கின்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். இத்தனை பித்தலாட்டங்களை வெளிப்படுத்தி அடக்கிய சர்க்காருக்கு அதுவும் ''அஹிம்சை''யையும் ''சத்தியாக்கிரகத்தை''யும் அடக்கி மன்னிப்பு வாங்கிய சர்க்காருக்கு காலித்தனத்தை அடக்க முடியாது என்று யாருமே நினைக்கமாட்டார்கள். ஆனால் கலவரங்கள் ஏற்படுவதால் தங்கள் தோல்வி மறக்கப்பட்டு விடும் என்று கருதியோ அல்லது தாங்கள்



RangaRakes tamilnavarasam.com

சீக்கிரத்தில் முதுகு காட்டி ஓடப்போவதற்கு இப்போதே ஒரு சாக்கு தேடி வைத்துக்கொண்டால் தங்கள் மானம் தங்குவதற்கு சௌகரியம் ஏற்படும் என்று கருதியோ காங்கிரஸ்காரர்கள் பொது ஜனங்களிடை இருந்து வசூலித்த பணத்தையும் பெரிதும் காலிகளுக்கே கொடுத்து காலித்தனத்தை வளர்த்து இன்று அதையே சுயராஜ்யமாகச் செய்து வருகிறார்கள்.

சமீபத்தில் விருதுநகரிலும், செட்டிநாட்டிலும் நடந்த காலித்தனங்கள் காங்கிரஸ் பத்திரிகைகள் மூலமே உணர்ந்திருக்கலாம். போலீஸ்காரர்கள் சாதாரண தன்மையில் நிலைமையை சமாளிக்க தங்களால் கூடுமான முயற்சியெல்லாம் செய்துபார்த்தார்கள். சில்லறை விஷமக்காரர்களையும் சில காலிகளையும் மாத்திரம் அதட்டி பார்த்தார்கள். பயனில்லாமல் போகவே சிலரை போலீஸ் காவலில் வைத்துப்பார்த்தார்கள். அதுவும் பயனில்லாமல் போயிற்று. காங்கிரஸ்காரர்கள் ஒவ்வொன்றுக்கு சட்டம் கேட்கவும் காலிகளுக்கு போதையேற்றி உசுப்படுத்தி விடவுமான காரியம் செய்ததால் அவர்களுக்கு பயம் விட்டு போலீசாரையே கண்டபடி பேசவும் போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரில் நூற்றுக்கணக்கான பேர் நின்று கூப்பாடு போடவும் போலீசு சூப்பிரண்டு முதலிய அதிகாரிகளை நேரிலேயே அலட்சியமாய் கேலி பரிகாசமாய் பேசவுமான நிலைமையும் ஏற்படும்படி செய்து விட்டார்கள். இவ்வளவு அக்கிரமங்களையும் போலீசார் பொறுமையோடு பொறுத்து இருந்ததுடன் செட்டிநாட்டு ராஜா அவர்களும் போலீசாரையும் மற்றும் தனது வகையாரையும் கெஞ்சிக்கெஞ்சி பலாத்காரம் சிறிதும் உபயோகப்படுத்தாமலேயே நிலைமையை சமாளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டும் வந்திருக்கிறார் என்றாலும் கடசியாக ரிசர்வ் போலீசு பட்டாளம் தருவிக்காமலும் தடி அடிப் பிரயோகம் செய்து காட்டாமலும் நிலைமையை சமாளிக்க முடியாமலே காங்கிரசு தலைவர்கள் என்பவர்கள் செய்து விட்டார்கள்.

சிறு பையன்களையும் அநாதி பிள்ளைகளையும் வீடுகளில் பெற்றோர் வார்த்தைக்கு அடங்காமல் 10 ரூபாய் வாங்கி 100 ரூபாய்க்கு நோட்டு எழுதிக் கொடுத்து வாங்கிக்கொண்டு குடி கூத்தியில் வாழ்க்கையை நிர்ணயித்துக் கொண்டு திரிகின்றவர்கள் வரை கதர் வேஷ்டி, கதர் குல்லாய், கொடி ஆகியவைகளுடன் கூட்டம் கூட்டமாக தெருவில் நடந்துகொண்டு அதுவும் செட்டிநாட்டு ராஜா வீட்டுக்கு முன்புறம் நின்றுகொண்டு ராஜா சர் ஒழிக, பணக்காரர் ஒழிக, சர்க்கார் அடிமை ஒழிக, ஜஸ்டிஸ் கட்சி ஒழிக என்கின்ற நாமாவளியை சொல்லிக்கொண்டு கூப்பாடு போடுவதுமான காட்சி கண்கொண்டு பார்க்க முடியாததாகவே இருந்தது. மற்றும் கூட்டங்களில் பேசும்போதும் தோழர் சத்தியமூர்த்தி முதல் ஒவ்வொரு காங்கிரசுக்காரரும் காலிகளுக்கு உற்சாகம் உண்டாக்கும் விதமாகவே பேசுவதும் எதிர்க் கூட்டங்களின் பக்கத்தில் கூட்டம்போட்டு கூச்சல் போடுவதும் கூட்டத்தில் இருக்கும் ஆட்களை ஒவ்வொருவராக ஆள்விட்டு இழுத்துக்கொண்டு போவதும் கூட்டத்துக்கு ஆட்கள் வராமல் தூரத்தில் நின்று கொண்டு வருகிறவர்களை தடுத்து திருப்பி அனுப்புவதும் சாணி உருண்டைகளை வீசுவதும் கற்களையும் சேறுகளையும் வீசுவதுமாக துணிந்து இன்னது செய்வது என்று அறியாதவர்களாகி கண்டபடி ஆடித் தீர்த்துவிட்டார்கள்.

பள்ளத்தூர் சர்க்கிளில் அபேட்சகர்கள் இருவரும் பணக்காரர்களே ஒழிய ஒருவர் மாத்திரம் பணக்காரர் மற்றவர் ஏழை என்று சொல்லிவிட முடியாது. ஒருவருக்கு அதாவது ராஜா சர் மாப்பிள்ளை தோழர் சி.வி.சி.டி. வெங்கிடாசலம் செட்டியார் சொத்துக்கு பெரிதும் விட்டவர் என்று சொல்லிவிட முடியாத நிலையில் தான் எதிர் அபேக்ஷகர் தோழர் நாகப்ப செட்டியார் நிலையையும் சொல்லலாம். அவருக்கு பிரசாரகர்களாக தோழர்கள் ஜீவானந்தம், நீலாவதி அம்மையார் - ராமசுப்பிரமணியம், ராய சொக்கலிங்கம் முதலிய ''பணக்காரர்களின் விரோதிகள்'' என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் கூட அங்கு வந்து ஆசை தீர பணக்காரர்களை வைவது என்னும் பேரால் ராஜா சர் அவர்களை வைதுவிட்டு போயிருக்கிறார்கள் என்றால் மற்றவர்கள் தோழர் திருவண்ணாமலை அண்ணாமலை கம்பெனியார் எவ்வளவு பேசி இருப்பார்கள் என்பதை நாம் விவரிக்க வேண்டியதில்லை. இன்னும் சரியான விபரங்களை ''மெயில்'' பத்திரிகையிலும் ''இந்து'' ''தினமணி'' பத்திரிகையிலும் பார்க்கலாம்.

12-ந் தேதி இரவு பள்ளத்தூர் கூட்டத்தில் தோழர் ஈ.வெ.ராமசாமி பேசிக்கொண்டிருக்கும்போது சாணி உருண்டைகள் மார்புக்கு நேராகவே வந்து விழுந்து சால்வையில் மொத்தையாய் ஒட்டிக்கொண்டன. அவற்றை யெடுத்துக் காட்டிக் கொண்டிருக்கும்போது தோளிலும் வயிற்றிலும் இடுப்பிலும் ஒன்றின்பின் ஒன்றாய் வந்து கல்லுகள் விழுந்தன. ஒரு பெண்ணின் காதில் ஒரு கல் விழுந்தது. தோழர் எஸ். ரங்கநாதன் அவர்கள் தலையில் பொறிக்கு பக்கமாக ஒரு கல் விழுந்து உடனே புடைத்து விட்டது. ஒரு சிறு பையன் தலையில் ஒரு கல் விழுந்து ரத்தம் வடிந்தது, அவன் கூவென்று கத்தினான். இவ்வளவு அனுபவித்துக்கொண்டு கலங்காமல் தோழர் ஈ.வெ. ராமசாமி பேசிக்கொண்டும் மற்ற ஆள்களை சமாதானப் படுத்திக்கொண்டும் இருக்கும்போது கற்கள் மழைபோல் பொழிய ஆரம்பித்து விட்டன. உடனே கூட்டத்தை முடிக்கும்படி தோழர் ராமசாமியை ராஜா சர் ஆட்கள் கட்டாயப் படுத்தியதோடல்லாமல் இழுத்துப்போய் மோட்டார்காரில் உட்கார வைத்து ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள். இதில் உள்ள ஒரு முக்கிய விசேஷம் என்னவென்றால் நான்கே போலீஸ்காரர்கள் தான் அங்கு இருந்தார்கள். அவர்கள் தங்கள் மீது கல் விழுகாமல் பார்த்துக்கொள்வதில் அதிக கவனமாய் இருந்ததுதான். பிறகு போலீஸ் ஸ்டேஷனில் இருந்து போலீஸ்காரரும் டிப்டி சூப்பரண்டும் வந்து நேரில் கற்கள் விழுவதை பார்த்தபிறகே கூட்டத்தை தடிகொண்டு கலைக்க உத்திரவிட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.



RangaRakes tamilnavarasam.com

இதையறிந்த ராஜா சர் செட்டியார் மறுநாள் கூட்டம் போட வேண்டாம் என்று சொல்லிவிட்டாராம். காங்கிரஸ்காரர்கள் கூட்டமும் ஊர்வலமும் வசவு பஜனையும் வழக்கம் போல் நடந்திருக்கின்றன. 13-ந் தேதி தந்தி கொடுத்து மதுரையில் இருந்து ரிசர்வ் போலீசுகாரர்கள் 40, 50 பேர்கள் தருவிக்கப்பட்டிருக்கிறார்கள். ராஜா சர் செட்டியார் வசமும் அது சமயம் சுமார் 100 பேர்கள் வரை இருந்தும் கண்டிப்பான உத்திரவின் பயனாய் அவர்களால் ஒரு பயனும் ஏற்பட முடியாமல் போய்விட்டது. 14-ந் தேதி தேர்தலில் ஓட்டுகள் ஒழுங்காக பதிவு செய்ய ஏற்பாடு செய்த பிறகே ஓட்டர்கள் தாராளமாய் வெளியில் வரவும் இஷ்டப்படி ஓட்டுப் போடவும் முடிந்ததே ஒழிய மற்றபடி பந்தோபஸ்து இல்லையானால் ஓட்டிங் இடத்திலும் சில கொலைகள் நடத்திருக்கக்கூடும்.

இம்மாதிரி ஆன நிலையில் ஜனநாயகம், சுயராஜ்யம், பணக்காரர் ஒழிப்பு என்கின்ற காரியத்துக்கு ஏதாவது இடம் உண்டா என்று யோசித்து பார்க்க விரும்புகிறோம். இந்த ராமநாதபுரம் ஜில்லா தேர்தலில் இந்த சென்ற 15 நாளில் இருகட்சிக்கும் எல்லாம் சேர்ந்து (200000) இரண்டு லக்ஷ ரூபாய் செலவாகி இருக்கலாம். யாரோ வீம்பு பேசி இரண்டு செட்டியாருக்கும் மாட்டி விட்டுவிட்டார்கள். செலவுகள் தாராளமாய் செய்யப்பட்டன. காலித்தனங்கள் தாராளமாய் நடத்தப்பட்டன. கடசியாக ஏதோ ஒரு கட்சி ஜெயித்தது. அவ்வளவுதானே ஒழிய, இதில் காந்தியோ காங்கிரசோ கொள்கையோ ஜெயித்தது என்றோ, இனியும் எப்போதாவது ஜெயிக்க முடியும் என்றோ சொல்ல முடியுமா என்பதை யோசித்துப்பார்க்கும்படி வேண்டுகிறோம்.

வைது கூப்பாடு போட்டவர்களில் 100 க்கு 70 பேர் ராஜா சர் மாப்பிள்ளை ஜெயித்தார் என்ற உடன் அவர் வீட்டிற்கு உடனே வந்து வெற்றிலை பாக்கு சந்தனம் வாங்கிக்கொண்டு க்ஷேம சமாச்சாரம் விசாரித்து ''காங்கிரசு என்றால் என்ன காலித்தனம் தானே'' என்று சொல்லுபவர்களும் நாமினேஷன் சிபார்சுக்கு பல்லைக் கெஞ்சினவர்களுமாகத்தான் இருந்தார்களே ஒழிய மானத்தையோ கொள்கையையோ கவனித்தவர்கள் ஒருவரைக்கூட கண்டு பிடிக்க முடியவில்லை.

ஆகவே இந்த முறையை இனியும் விட்டுக் கொண்டே இருந்தோமானால் நாட்டுக்கோ, பட்டினி கஷ்டம் ஒழியவோ, பணக்காரன் ஒழியவோ, சுயராஜ்யம் பெறவோ பொது உடமை ஏற்படவோ முடியுமா என்பதை வாசகர்களையே யோசித்துப் பார்க்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 20.12.1936**



# பட்டேல் சுற்றுப்பிரயாணமும் பணம் வசூலும்

தோழர் பட்டேல் பணம் வசூலித்துப் பார்ப்பனர்களின் தேர்தல் சிலவுக்காக ஒப்படைத்து விட்டுப் போகவே தமிழ்நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார். அதனாலேயே அவருக்குப் பணம் கொடுக்கக்கூடாது என்றும், மக்கள் உஷாராய் இருக்க வேண்டும் என்றும் எழுதினோம். ஆனால் அவரை பகிஷ்கரிக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தவில்லை. அப்படியிருந்தும் பல இடங்களில் பகிஷ்கரித்ததாகவும், கருப்புக்கொடி பிடித்துத் தங்கள் அதிருப்தியைக் காட்டிக்கொண்டதாகவும் தோழர் பட்டேல் அவர்களே பேசியிருப்பதாகப் பார்ப்பனப் பத்திரிகைகளில் பார்த்தோம்.

என்றாலும் அதைப்பற்றி நாம் மகிழ்ச்சி அடையவில்லை. ஆனால் அவர் நடந்து கொண்ட மாதிரியையும், பேசிய மாதிரியையும் கவனித்தால் தோழர் பட்டேல் பகிஷ்காரம் செய்யப்பட்டிருக்க வேண்டியவரேயாவார் என்பது நன்றாய் விளங்கும்.

அது ஒருபுறமிருக்க தென்னாட்டு மக்கள் பணம் கொடுக்கும் விஷயத்தில் இந்தத்தடவை மிகவும் ஜாக்கிரதையாகவே இருந்திருக்கிறார்கள். சென்னையில் மாத்திரம் சுமார் ரூ.5000 போல் வசூலாகி இருப்பதாகவும், மற்ற எல்லா இடங்களிலும் 6, 7 ஆயிரத்துக்குள்ளாகவேதான் வசூலாகி இருப்பதாகவும் பார்ப்பனப் பத்திரிகைகள் மூலமே தெரிய வருகின்றது.

அதுவும் சென்னையில் குஜராத்திக்காரர்களும், பார்ப்பனர்களும்தான் மொத்தமாய் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

மற்ற ஊர்களிலும் நாம் கொடுக்கவேண்டாம் என்று சொன்னதற்காக நம்மிடம் பொறாமை உள்ளவர்கள் நமது பேச்சு வெற்றி ஆகிவிட்டால் நமக்கு யோக்கியதை வந்து விடுமே என்கின்ற ''அபிமான''த்தின் மீது ஏதோ காலும், அரையும், ஒன்றுமாகச் சேர்த்து 10, 18, 20, 40 என்கிற முறையிலேயே பெரிதும் பண முடிப்பு வழங்கி இருக்கிறார்கள்.

மற்றபடி இந்தத் தடவை அவர்களுக்குப் பொதுமக்கள் நல்ல புத்தி கற்பித்ததற்கு மகிழ்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.



RangaRakes tamilnavarasam.com

இந்தப் பணங்கள் எதற்காக செலவழிக்கப் போகின்றன என்பதைப் பற்றி நாம் எழுத வேண்டியதில்லை. பார்ப்பன ஆதிக்கத்துக்காகப் பார்ப்பன அபேக்ஷகர்களுக்குத்தான் பெரிதும் செலவிடப்போகின்றன என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே மோட்சத்துக்காக என்று நம்மிடம் பார்ப்பனர்கள் வசூலிப்பது போலவே சுயராஜ்யத்துக்காக என்றும், பணம் பறிப்பதில் தீரர்கள் ஆகிவிட்டார்கள். நம்முடைய முட்டாள்தனம்தான் இன்னமும் மாறாமல் இருந்து வருகிறது.

இனியாவது பார்ப்பனரல்லாத மக்கள் அறிவு பெற்றுப் பார்ப்பன சூழ்ச்சி வெற்றிபெறாமல் போகிறபடி செய்வார்களாக.

**குடி அரசு - கட்டுரை - 27.12.1936**



# சட்டசபை வேட்டை

சென்னை சட்டசபையாகிய லெஜிஸ்லேட்டிவ் அசம்பிளி தேர்தலுக்கு காங்கிரஸ் மடிகட்டி நிற்கிறது. ஜஸ்டிஸ்கட்சியும் மடிகட்டி நிற்கிறது. மற்றும் பல கட்சிகளும் சில தனிப்பட்ட நபர்களும் மடிகட்டி நிற்கின்றார்கள். எல்லோருக்கும் ஆசைப்பட உரிமையுண்டு. எல்லோரும் அதன் பயனை அனுபவிக்கவும் உரிமையுடையவர்களே ஆவார்கள். ஏனென்றால் சட்ட சபையில் செய்யும் வேலை எதுவானாலும் இந்நாட்டு மக்கள் எல்லோரையும் பற்றியதாகும். அதற்கு ஏற்படும் செலவு அவ்வளவும் இந்நாட்டு மக்களின் உழைப்பால் சம்பாதிக்கப்பட்டு கொடுக்கப்பட்ட வரிப்பணத்தைப் பொருத்ததேயாகும். ஆதலால் செல்வவான், ஏழை, படித்தவன், படிக்காதவன், மேல் ஜாதி கீழ் ஜாதி என்கின்றதான எவ்வித பிரிவு தடையும் இல்லாமல் எல்லோருக்கும் சம்மந்தப்பட்டதும் உரிமையுடையதுமேயாகும். ஆனால் ஒரு கூட்டத்தாரோ, ஒரு ஜாதியாரோ, ஒரு கட்சியாரோ, தங்களுக்குத்தான் உரிமையுண்டென்றும், தாங்கள் தான் தகுதி உடையவர்கள் என்றும் சொல்லி தனி பாத்தியம் கொண்டாடுவதும் மற்ற ஒரு கூட்டத்தாரை உரிமையற்றவர்கள் என்றும், தகுதியற்றவர்கள் என்றும் சொல்லி வைவதும், தடுப்பதுமான காரியத்தை யார் செய்தாலும் அதை ஆக்ஷேபிக்காமலோ அம்முயற்சியை ஒழிக்காமலோ இருக்க முடியவில்லை.

இதையேன் சொல்லுகின்றோமென்றால் காங்கிரஸ்காரர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் ஒரு கூட்டத்தார் இப்போது இந்த சட்டசபை தேர்தலில் தாங்கள் தான் நிற்க உரிமையுடையவர்கள் என்றும், தாங்கள் தான் மெம்பர்களாகத் தகுதி உடையவர்கள் என்றும் மற்றவர்கள் தகுதி அற்றவர்கள் என்றும் சொல்லி பிரசாரம் செய்து வருவதால் அதை ஆக்ஷேபித்து மறுக்க வேண்டிய அவசியத்திற்கு ஆகவே இதைப்பற்றி எழுதுகிறோம்.

சட்டசபைக்குப் போகிறவர்கள் யாராய் இருந்தாலும் அவர்கள் அங்கு சென்று தாங்கள் செய்யப்போகும் வேலை என்ன என்பதையும், சட்ட சபையைப் பற்றினவரை தங்களுடைய கொள்கை என்ன என்பதையும் நாணயமாகவும், யோக்கியமாகவும் ஓட்டர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டவர்களாவார்கள். சட்ட சபைக்குச் செல்லுபவர்களின் வேலையையும், கொள்கையையும் நன்றாகத் தெரிந்து கொண்டே ஓட்டர்களும் ஓட்டு செய்யக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இந்த இரண்டு குணமும் இல்லாத அபேட்சகர்களும், ஓட்டர்களும் இருப்பார்களானால் அவர்கள் அரசியலைப் பொருத்தவரையில் பூமிக்குப் பாரமான மாம்சபிண்டங்கள் என்று சொல்ல வேண்டியவர்களே யாவார்கள். இன்று சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் தாங்களே சட்டசபைக்குப் போக உரிமையுடையவர்கள் என்றும், தங்களைத்தவிர வேறு யாருக்கும் ஓட்டர்கள் ஓட்டு செய்யக்கூடாதென்றும் சொல்லுவதோடு தாங்கள் சட்டசபைக்குச் செல்வதானது தங்களைத் தவிர உள்ள மற்ற கட்சியை அதாவது ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்காகவும், ஜஸ்டிஸ் கட்சியார் சட்டசபைக்குப்போகாமல் தடுப்பதற்காகவும் சட்டசபைக்குப் போகிறோம் என்கின்றார்கள். மற்றபடி தங்களுக்கு வேறு எவ்வித கொள்கையோ, தகுதியோ இருப்பதாக அவர்கள் இதுவரை சொல்லவே இல்லை. சிற் சில சமயங்களில் சட்டசபையில் போய் என்னசெய்வது என்பதை இனிமேல் அதாவது தேர்தல் முடிந்த பிறகு தீர்மானிக்கப்போவதாய் சொல்லுகிறார்கள். சிற்சில சமயங்களில் சட்ட சபைக்குப் போய் சுயராஜியம் பெரும் நாளைத் துரிதப்படுத்தப் போவதாய் சொல்லுகிறார்கள். சிற்சில சமயங்களில் சட்ட சபையில் சுயராஜியம் பெற முடியாது என்றும், சட்டசபைக்கு ஆதாரமான புதிய சீர்திருத்தத்தை உடைத்து சர்க்காரை திக்குமுக்கலாடச் செய்யப்போகிறோம் என்றும் சொல்லுகிறார்கள்.

இவ்வளவோடு மாத்திரமல்லாமல் சட்டசபைத் தேர்தல் முடிந்து அங்கத்தினர்களான பிறகு அரசியலை நடத்தும் பொறுப்புகளை வகிக்கும் படியான மந்திரி பதவிகளை வகிக்கும் விஷயத்திலும் காங்கிரஸ்காரர்கள் எவ்வித அபிப்பிராயமும் சொல்லாமல் மந்திரிபதவியை ஏற்றாலும் ஏற்போம். மறுத்தாலும் மறுப்போம். ஏற்றபிறகு அரசியல் சட்டப்படி நடந்தாலும் நடப்போம். அல்லது எதிர்த்து அரசியல் சட்டத்தை உடைத்தாலும் உடைப்போம் என்று ஒரு பொறுப்பும், ஒரு ஜவாப்தாரித்தனமும் இல்லாதவர்களாகவே பேசுகிறார்கள்.

சட்டசபைக்குப் போவது என்பதும் அங்கு மந்திரி பதவி ஏற்று அதை உடைப்பது என்பதும் விளையாட்டுக் காரியமல்ல என்பதும் லேசில் செய்யக் கூடிய காரியம் அல்ல என்பதும் நாம் விவரித்துச் சொல்லவேண்டியதில்லை. சட்டசபை தேர்தல் என்பதில் ஒவ்வொரு தனி நபர் தேர்தல் ஒன்றுக்கு சராசரி 10 ஆயிரம் ரூபாயுக்கு குறையாமல் செலவு செய்து பெறவேண்டிய ஸ்தானமாகும். இதுபோலவே அரசியல் மந்திரிபதவி சபை என்பதும் மாகாணம் ஒன்றுக்கு சராசரி மீ 50 ஆயிரம் ரூபாய் ஒரு லக்ஷ ரூபாய் என்பதான செலவைக் கொண்டது என்பதும் யாரும் அறியாததல்ல.

சட்டசபை கூட்டங்கள் நடக்கும் காலத்தின் பணச் செலவும் நாள் ஒன்றுக்கு மாகாணம் ஒன்றுக்கு 4000, 5000 ரூபாய் வீதம் செலவாகக்கூடிய காரியமே தவிர வேறல்ல. இன்னும் மற்ற செலவுகள் எவ்வளவோ உண்டு.



இவ்வளவு பணச் செலவும் நடத்தி இப்படி பொருப்பில்லாமல் பேசுபவர்களை மெம்பர்களாகக் கொண்ட நமதுநாடு எப்படிப்பட்ட நாடு என்று பார்ப்போமானால் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு சராசரி வருமானம் 0-1-6 ஒன்றரை அணாவோ, 0-2-0 இரண்டு அணாவோ கிடைப்பதுகூட கஷ்டமான காரியம் என்று சொல்லும்படியானதும், விவசாயிகளாய் இருப்பவர்கள் தங்கள் விவசாய விளைபொருள்களின் பயனைக்கொண்டு சர்க்கார் வரி கட்டுவதே கஷ்டமாய் இருக்கிறதே என்று கூக்குரலிடும் படியானதுமான நாடு என்பதை யாரும் மறுக்க முடியாது.

எனவே இப்படிப்பட்ட பணச் செலவும், கஷ்டமும் உள்ள சட்டசபை மெம்பர் ஸ்தானங்களையும் அரசியல் பதவிகளையும் இம்மாதிரி அதாவது **''அங்குபோய் என்ன செய்வோம் என்பது எங்களுக்கே தெரியாது, அதற்காக இப்போது எங்களிடத்தில் ஒரு திட்டமும் இல்லை, உடைப்போமோ, நடத்துவோமோ இப்போது சொல்லமுடியாது, கூனோ, குருடோ, மொண்டியோ, முடமோ, மிருகமோ, பிண்டமோ யாரை நாங்கள் நிறுத்தினாலும் நீங்கள் ஓட்டுப்போட வேண்டும்''** என்று பொருப்பில்லாமல், கவலையில்லாமல் பேசுகிறவர்கள் அந்த ஸ்தானங்களை அடைய மக்கள் ஓட்டு செய்வது என்றால் இதை யார்தான் புத்திசாலித்தனமான காரியம் என்றோ, யோக்கியபொருப்பை உணர்ந்த காரியம் என்றோ சொல்லக்கூடும் என்று கேட்க ஆசைப்படுகிறோம்.

தவிரவும் காங்கிரஸ்காரர்கள் மற்ற கட்சியாரை அதாவது ஜஸ்டிஸ் கட்சியாரை ஒழிக்க வேண்டும் என்று சொல்லுவதற்காவது ஏதாவது சரியான காரணம் சொல்லுகிறார்களா என்று பார்த்தால் அதுவும் பொறாமையைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது ''ஜஸ்டிஸ்கட்சி சர்க்காரை ஆதரிக்கிறது, சீர்திருத்தத்தை ஏற்று நடத்துகிறது, வகுப்புவாதம் பேசுகிறது'' என்கின்ற மூன்று ''குறை''களை கூறுகிறார்கள். இவற்றை குறையென்று யாராவது சொல்ல முடியுமா என்பதை முதலில் யோசிக்கவேண்டும்.

இந்த நாட்டில் இன்று சர்க்காரை ஆதரிக்காமலோ, சர்க்காருடன் ஒத்துப் போகாமலோ ஒரு காரியமும் நம்மால் செய்யமுடியவில்லை. சர்க்கார் என்றால் நமது வரிப்பணம், பட்டாளம், பீரங்கி, துப்பாக்கி, போலீசு, ஜெயில் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. இவற்றை அலட்சியமாய் இதுவரை யாரும் கருதியதில்லை. கருதினவர்களும் யாதொரு காரியத்தையும் சாதித்துவிடவும் இல்லை.

காங்கிரசே இவற்றை ஒருகாலத்தில் அலட்சியமாய் கருதிற்று என்று சொல்லப்பட்டாலும் இன்று அப்படி கருதியதால் ஒரு காரியமும் சாதிக்கக் கூடவில்லை என்ற முடிவுக்கு வந்து இனி பட்டாளத்தையோ, ஜெயிலையோ, போலீசையோ அலட்சியமாய்க் கருதுவதில்லை என்று சர்க்காருக்கு எழுதிக்



RangaRakes tamilnavarasam.com

கொடுத்துவிட்டு வந்து சட்டசபைக்குள்ளும், ஸ்தல ஸ்தாபனங்களுக்குள்ளும், ராஜவிஸ்வாசப் பிரமாணமும், சட்டத்திற்கு கீழ்படியும் பிரமாணமும் செய்து அரசாங்க ஸ்தாபனத்துக்குள்ளும் அரசாங்க சீர்திருத்தத்திற்குள்ளும் நுழைய மடிகட்டி நிற்கிறது. இந்நிலையில் ஜஸ்டிஸ் கட்சி அரசாங்கத்தை ஆதரிக்கின்றது என்றால் இதற்கு ஏதாவது அருத்தம் உண்டா என்று யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டுகிறோம். மற்றபடி ஜஸ்டிஸ் சீர்திருத்தத்தை ஏற்று நடத்துகிறது என்பதிலும் குற்றம் என்ன சொல்லக் கூடும்?

காங்கிரசானது 1920-ம் வருஷத்தில் இப்போது அமுலில் இருக்கும் சீர்திருத்தத்தை போராதது என்றும், தகுதி அற்றது என்றும், அதிருப்திகரமானது என்றும் சொல்லி அரசியலின் சகல சம்மந்தத்தையும் பஹிஷ்கரித்துப் பார்த்தாய் விட்டது. பிறகு சீர்திருத்தத்தை உடைக்கச் சட்ட சபைக்குப் போவதாய்ச் சொல்லி தாஸ், நேரு, லஜபதி, மாளவியா போன்ற பெரியார்கள் சட்டசபைக்கு மெஜாரிட்டியாய் போய் தங்களால் ஆனதை யெல்லாம் செய்து பார்த்தாய் விட்டது. சென்னை மாகாணத்தில்தான் ஜஸ்டிஸ் கட்சியார் இருந்து கொண்டு காங்கிரஸ் வேலையை தடுத்துவிட்டார்கள் என்று காங்கிரஸ்காரரால் சொல்லப்படுவதானாலும் பஞ்சாப், வங்காளம், மத்திய மாகாணம் முதலிய ''பாரதத்தாயின்'' நேத்திரமும், இருதயமும் போன்றதான தேசீய வீரர்களும், அருந்தவப் புத்திரர்களும் மகா தியாக உருவங்களும் இருந்த நாடுகளில் - ஜஸ்டிஸ் கட்சி வாசனையே இல்லாத நாடுகளில் காங்கிரஸ்காரர்களால் எந்த அளவுக்கு முட்டுக்கட்டை போட்டு சீர்திருத்தத்தை உடைத்து அரசாங்கம் நடைபெற முடியாமலோ, அரசாங்கத்தார் கீழே இரங்கி வரும்படியாகவோ செய்ய முடிந்தது என்று கேட்கின்றோம்.

ஆகவே இந்த 16 வருஷ காலமாய் காங்கிரஸ்காரர்கள் அரசியலில் ஞானமும், பொருப்பும் கடுகளவும் இல்லாமல் பொது ஜனங்களின் முட்டாள்தனத்தையும், மூடநம்பிக்கைகளையும் தங்கள் ஆயுதங்களாகக் கொண்டு தங்களால் கூடுமானவரை ஆடிப்பாடி குதித்துக் கும்மாளம் போட்டுவிட்டு சிறிதும் பொருப்பும் மானமும் இல்லாமல் ஒரு வருஷத்தில் சுயராஜ்யம் வாங்கிக் கொடுப்பதாய்ச் சொல்லி ஒரு கோடி இரண்டு கோடி, ரூபாய்கள் வசூல்செய்து ஒரு லட்சம், இரண்டு லட்சம் பேரை ஜெயிலுக்கு அனுப்பியும் கட்டுக்கடங்காமல் காலித்தனமாய் திரியச் செய்தும் சகல முயற்சியிலும் படுதோல்வி அடைந்த காந்தியாரே காங்கிரசில் ஒழுக்கமில்லை, நாணையமில்லை, நான் காங்கிரசை விட்டு வெளியேபோய் காங்கிரசுக்கு மேன்மை உண்டாக்கப்போகிறேன் என்று சொல்லி ராஜினாமா கொடுத்துவிட்டு ஓடிப்போய் காங்கிரசுக்கு காக்ஷியாளராய் வருகிறேன் என்பதும், பிரிட்டிஷ் அரசாங்கத்தை ஒழித்துவிடப் போகிறோம் நீங்கள் மாத்திரம் இந்த ஒரு தேர்தலுக்கு ஓட்டுக் கொடுத்தால் போதும் என்ற ராஜகோபாலாச்சாரியார் ஒவ்வொரு தேர்தலிலும் சொல்லி மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்கி கடைசியாக காங்கிரசுக்குக் கட்டுப்பாடும், நாணையமும் உண்டாவதற்காக ஆக நான் காங்கிரஸ் நிர்வாகத்தில் இருந்து விலகி நிற்கிறேன் என்று சொல்லி ஏமாற்றிவிட்டுப் போய் உட்கார்ந்து கொண்டு மறுபடியும் இந்த ஒருதடவை மாத்திரம் ஓட்டு செய்யுங்கள் இல்லாவிட்டால் வங்காளக்குடாக் கடலில் விழுந்து சாகவேண்டி வரும் என்று சொல்வதுமாய் இருக்கும்போது ஜஸ்டிஸ்காரர்கள் சீர்திருத்தத்தை நடத்திவிட்டு இனியும் அதிக சீர்திருத்தங்கள் கொடுங்கள் என்று கேட்பதில் என்ன தப்பு என்று யோசித்துப்பார்க்கும்படி வேண்டுகிறோம்.

### வகுப்புவாதம்

மற்றபடி ஜஸ்டிஸ்காரர்கள் வகுப்புவாதம் பேசுகிறார்கள் என்பதில் ஏதாவது அருத்தம் இருக்கிறதா என்று கேட்கின்றோம். இந்தியா என்றாலே வகுப்புவாதம் என்பதல்லாமல் வேறு ஏதாவது பொருள் இருக்கிறதா என்று கேட்கின்றோம். இந்தியாவில் பல மதம், பல ஜாதி, பல உள் வகுப்புகள் நிறைந்திருக்கின்றன. இதில் கட்டுப்படாத மனிதன் யாருமே கிடையாது. காந்தியாரும் தன்னை இந்து என்றும், சனாதன வர்ணாச்சிரம இந்து என்றும், இந்து மதத்தின் சனாதன வர்ணாச்சிரமத்தைக் காப்பாற்றவே மூச்சு விடுகிறேன் என்றும் சொல்லி வருவதை யாரும் மறுக்க முடியாது. தோழர்கள் மௌலானாக்கள் முகமதலி, ஷவுக்கத்தலி, அஜ்மால்கான், அன்சாரி, அப்துல்கலாம் ஆசாத், மகமதலி ஜின்னா போன்ற தேசிய வீரர்களும் ஒப்பற்ற தேசபக்தர்கள் ஒவ்வொருவரும் தங்களைப்பற்றி ''நான் முதலாவது முஸ்லீம், இரண்டாவது முஸ்லீம், அப்புரம் மூன்றாவதுதான் இந்தியன்'' அதாவது எனக்கு முதல் லக்ஷியம் முஸ்லீம் மார்க்கம், இரண்டாவது லக்ஷியம் முஸ்லீம் சமூகம், மூன்றாவது லக்ஷியம் தான் இந்தியா தேசம் என்று சொல்லி இருப்பதும் இனியும் சொல்லி வருவதும் யாராவது மறுக்கக் கூடுமா என்று கேட்கின்றோம்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களும், சத்தியமூர்த்தியார் அவர்களும் ''எனக்கு உச்சிக் குடுமையும், பூனூலும், பஞ்சகச்சமும், வர்ணாச்சிரம தர்மமும், கீதையும், மனு தர்ம சாஸ்திரமும், உப நிஷத்தும், புராணமும், ஆகமமும்தான் முதல் லட்சியம், பார்ப்பன வகுப்பின் நன்மை இரண்டாவது லட்சியம், அப்புரம் தான் தேசாபிமானம் என்பது மூன்றாவது லட்சியம்'' என்று காட்டி வரவில்லையா என்று கேட்கின்றோம்.

### தேசிய கொடி

மற்றும் ஒப்பற்றதும், உயிருக்குச் சமானமானதுமான ''தேசியக்கொடி'' என்பதில் என்ன விளங்குகிறது? சிகப்பு, பச்சை, வெள்ளை ஆகிய வர்ணங்கள் அதாவது வர்ணதர்மம் தான் விளங்குகிறது. என்ன என்றால் சிகப்பு வர்ணம் இந்துக்களைக் குறிப்பது, பச்சை வர்ணம் முஸ்லீம்களைக் குறிப்பது, வெள்ளை வர்ணம் மற்ற வேறு பல மதக்காரர்களையும், வகுப்புக்காரர்களையும் குறிப்பது என்பதாக வியாக்கியானம் சொல்லப்படவில்லையா என்று





RangaRakes tamilnavarasam.com

கேட்கின்றோம். 1910ம் வருஷத்திலேயே இந்திய சட்டசபையில் முஸ்லீம்களுக்கு இவ்வளவு ஸ்தானங்கள் கிறிஸ்தவர்களுக்கு இவ்வளவு ஸ்தானங்கள் என்று அவரவர் ஜனத்தொகைக்குத் தக்கபடி பிரிவு ஏற்பட்டு அதை காங்கிரசும் எவ்வித ஆக்ஷேபணையும் இல்லாமல் ஒப்புக்கொண்டு காங்கிரஸ் கொள்கையிலும், திட்டத்திலும் லக்னோ பேக்ட் என்பதாக இடம் கொடுத்து தீர்மானங்கள் செய்துகொண்டதா இல்லையா என்று பழைய ஆதாரங்களைப் புரட்டிப் பார்க்கும்படி வேண்டுகிறோம்.

1932 ல் தோழர் காந்தியார் இந்தியத் தீண்டப்படாத மக்கள் என்னும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய ஜனத்தொகை எண்ணிக்கைக்குத் தக்கப்படி எண்ணிக்கை கொடுத்து அச் சமூகத்தாரிடம் ராஜி பேசி முடித்துக் கொண்டு அந்த முடிவை அரசாங்கமும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்துக்கு காங்கிரசும், இந்திய தேசியத் தலைவர்களும் இரு சமூகப் பிரமுகர்களும் விண்ணப்பம் செய்து கொள்ளவில்லையா என்று கேட்கின்றோம்.

இவற்றால் எல்லாம் உடைந்துவிடாத சீர்திருத்தமும், கெடாத தேசீயமும், ஜஸ்டிஸ் கட்சி சீர்திருத்தத்தை நடத்திக்கொடுப்பதாலும் மற்ற சமூகங்களுக்கும் உரிமை வழங்க வேண்டும் என்று கேட்பதாலும் தானா இந்திய தேசீய விடுதலை தடை பட்டுப்போகும்? என்று கேட்கின்றோம்.

காங்கிரசானது 1885ம் வருஷத்தில் துவக்கப்பட்டதற்கு காரணமே இந்தியர்களுக்கு அரசாங்கத்தில் அதிகமான பதவிகள் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தானே ஒழிய இந்தியர்களுக்கு சுயராஜ்யம் கொடுக்கவோ, பூரணசுயேச்சை ஏற்படுத்தவோ அல்ல என்பதை நாம் எங்கிருந்தும் ருஜூப்பிக்கத் தயாராய் இருக்கிறோம். இந்தியர்களுக்கு அரசாங்கத்தில் பெரிய உத்தியோகம் சம்பாதிப்பது என்பது மாத்திரம் அல்லாமல் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி என்றென்றும் நிலைக்கச் செய்து இரண்டு தேசத்தையும் ஒன்றாகக்கட்டி பிணைப்பது என்பதும் காங்கிரசின் முக்கிய கொள்கையாக இருந்து வந்தது என்பதையும் எப்பவும் ருஜூப்பிக்கத்தயாராய் இருக்கிறோம். காங்கிரசின் முக்கிய தீர்மானமே ராஜவிஸ்வாசப் பிரமாணமும், பிரிட்டிஷ் ஆட்சி என்றென்றும் இந்தியாவின் மீது இருக்கவேண்டும் என்றும் கடவுளை வேண்டிக் கொள்ளும் தீர்மானமும், ராஜ வாழ்த்துத் தீர்மானமுமாக இருந்தது என்பதை 1920ம் வருஷம் வரையில் இருந்து வந்தது என்பதையும் மெய்ப்பிக்கவும் ஆதாரம் காட்டவும் தயாராய் இருக்கிறோம்.

இன்றும் கூட தோழர்கள் காந்தியார், ஜவஹர்லால், பட்டேல் மற்றும் தேர்தல் பிரசாரம் செய்யும் சமதர்ம வீரர்கள் தேர்தலுக்கு சமதர்மத்தின்மீது நிற்கும் சமதர்ம வாதிகள் தோழர் ரங்கா உள்பட இந்த பிரிட்டிஷ் ஆட்சிக்கு விஸ்வாசமாய் இருப்பதாகவும், பிரிட்டிஷ் அரசரிடமும், அரச பின் சந்ததி இடமும் பக்தியாய் இருப்பதாகவும், பிரிட்டிஷ் அரசியல் சட்டத்திற்கு கீழ்ப்படிந்து நடப்பதாகவும் பிரமாணம் அதுவும் அவரவர்கள் இஷ்ட



தேவதையை வேண்டி பிரமாணம் செய்து விட்டு ஸ்தானத்தில் அமரவே அந்தப்படி பிரமாணத்தின்படி நடந்து கொள்ளவே சட்ட சபைக்கோ, ஸ்தல ஸ்தாபனத்துக்கோ செல்லுகிறார்கள் என்பதையும் யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

இப்படிப்பட்ட நிலையில் காங்கிரஸ்காரர்கள் ஜஸ்டிஸ் கட்சியை வைவதிலும், சட்ட சபையில் முட்டுக்கட்டை போட்டு அரசியலையோ சீர்திருத்தத்தையோ உடைப்பது என்பதிலும் கடுகளவாவது நாணயமோ அறிவோ இருக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

சென்னை மாகாணத்தைப் பொருத்தவரை காங்கிரசின் பேரால் செய்யப்படும் காரியங்கள் இந்நாட்டுப் பார்ப்பன ஆதிக்கத்துக்காகச் செய்யப்படும் காரியங்கள் என்றும் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்துக்காகச் செய்யப்படும் முயற்சிகளை ஒழித்து இந்நாட்டில் ‘பிராமணர்’ ‘சூத்திரர்’ என்கின்ற இரண்டு வகுப்பை நிலை நிறுத்தி மனு ஆட்சியை கொண்டுவர முயற்சிக்கும் காரியங்கள் என்றும், குறிப்பாக பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் முயற்சியால் பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் தீண்டப்படாத மக்கள் என்பவர்கள் உள்பட ஒவ்வொரு முக்கிய வகுப்புக்கும் ஏற்பட்டிருக்கும் வகுப்புப் பிரதிநிதித்துவத்தையும், வகுப்பு உரிமையையும் ஒழிக்கவே சூட்சி செய்யப்படுகின்றதென்றும் நாம் இந்த 10, 12 வருஷங்களாகவே சொல்லி வருகின்றபடியே இன்றும் சொல்லுகின்றோம்.

ஆகவே இன்றைய தேர்தல் போரில் பார்ப்பனரல்லாத மக்கள் காங்கிரசின் பேரால் சொல்லப்படும் பொய் பித்தலாட்டமான பேச்சுகளுக்கும், செய்யப்படும் காலித்தனமான காரியங்களுக்கும், கோடாலிக் காம்புகளுடைய கூலி விஷமப் பிரசாரங்களுக்கும் யாரும் ஏமாந்துவிடாமல் இரண்டு கட்சியின் உண்மை யோக்கியதைகளையும் உள் எண்ணங்களையும் முன் பின் நடத்தைகளையும் நன்றாய் உணர்ந்து பிறகு தங்கள் தங்கள் ஓட்டுகளை பயன்படுத்தும்படி வேண்டுகிறோம்.

**குடி அரசு - தலையங்கம் - 27.12.1936**



RangaRakes tamilnavarasam.com

# தேசிய பத்திரிகைகளின் யோக்கியம்

காங்கிரஸ் பத்திரிகைகள் என்பது பார்ப்பனர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளேயாகும். ''இந்து'', ''சுதேசமித்திரன்'', ''தினமணி'', ''ஜெயபாரதி'' முதலிய பத்திரிகைகள் பார்ப்பன ஆதிக்கத்தில் நடைபெறுகின்றன என்பதை நாம் சொல்லி யாரும் அறியவேண்டிய நிலைமையில் இல்லை.

இந்த பத்திரிகைகளின் நேர்மையற்ற விஷமப் பிரசாரமே இன்று நாட்டில் மக்கள் பெரிதும் உண்மை உணரமுடியாமல் போவதோடு ஏமாந்து போவதற்கும் இடம் ஏற்படுகிறது.

சமீபத்தில் சென்னையில் நடந்த ஷெடியூல் வகுப்பார் தேர்தலில் தாழ்த்தப்பட்ட வகுப்பு தொகுதிக்கு காங்கிரஸ் சார்பாக தோழர் பாலகிருஷ்ண பிள்ளை அவர்கள் நின்றார். ஜஸ்டிஸ் சார்பாக தோழர் ஜே. சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் நின்றார். காங்கிரஸ் அபேக்ஷகருக்கு 117 ஓட்டுகளும், ஜஸ்டிஸ் அபேக்ஷகருக்கு 1057 ஓட்டுகளும் கிடைத்து காங்கிரஸ் அபேக்ஷகர் கட்டின பணம் இழக்கக்கூடிய படுதோல்வி அடைந்திருக்கிறார். இதை வெளியிட்ட காங்கிரஸ் பத்திரிகைகள் காங்கிரஸ் அபேக்ஷகர் தோற்றார் ஜஸ்டிஸ் அபேக்ஷகர் வெற்றிபெற்றார் என்று எழுதும் யோக்கியமான காரியத்தை கைக்கொள்ளவே இல்லை. முடிவை மாத்திரம் தான் வெளியிட்டன. ஆகவே தேசிய பத்திரிகைகளின் நேர்மையை பொது மக்கள் உணர்ந்துகொள்ள இது ஒரு தக்கசமயம் என்பதற்காகவே இதை எடுத்துக்காட்டுகிறோம்.

**குடி அரசு - துணைத் தலையங்கம் - 27.12.1936**



# சட்டசபை உடைப்பது மெய்யா?

காங்கிரஸ்காரர்கள் ராஜாங்க சபைக்கு (ஸ்டேட் கவுன்சிலுக்கு) ஆட்களை நிறுத்தினார்கள். அங்குபோய் சட்டசபையை உடைக்கவோ, சீர்திருத்தத்தை உடைக்கவோ ஏதாவது இடம் இருக்கிறதா என்று கேட்கிறோம். வெறும் பதவிவேட்டை அல்லாமல் அதில் வேறு நாணையம் இருக்கிறதா என்று கேட்கின்றோம். சென்னை மாகாணத்தில் ஸ்டேட் கவுன்சிலுக்கு இரண்டுபேரைத்தான் நிறுத்த காங்கிரசுக்கு முடிந்தது. மற்ற இரண்டு ஸ்தானங்களுக்கு ஆள் கிடைக்கவில்லை. அதுவும் ஒரு வருணாச்சிரம சவுக்கார் சேட்டையும், ஒரு ஆந்திர பார்ப்பனரையும் தான் நிறுத்த முடிந்தது. அவர்கள் இருவரும் காங்கிரஸ் அல்லாதார் பெற்று வெற்றிபெற்ற ஓட்டை விட மிகக்குறைந்த ஓட்டுபெற்று 3வது 4வது நபர்களாய் வெற்றி பெற்றார்கள். ஆகவே நாட்டில் அறிவாளிகளில் அரசியல் நிர்வாக அனுபவம் பெற்ற மக்களிடத்தில் காங்கிரசுக்கு உள்ள மதிப்பு எவ்வளவு என்பதற்கும் காங்கிரஸ்காரர்கள் சட்டசபைகளில் செய்யப்போகும் முட்டுக்கட்டை யோக்கியதை எப்படிப்பட்டது என்பதற்கும் இந்த ராஜாங்கசபைத் தேர்தல் ஒரு எடுத்துக்காட்டாகும்.

**குடி அரசு - கட்டுரை - 27.12.1936**



RangaRakes tamilnavarasam.com

# கல்யாண விடுதலை

ஆண் பெண் கல்யாண விஷயத்தில் அதாவது புருஷன் பெண்ஜாதி என்ற வாழ்க்கையானது நமது நாட்டில் உள்ள கொடுமையைப் போல் வேறு எந்த நாட்டிலும் கிடையவே கிடையாது என்று சொல்லலாம். நமது கல்யாண தத்துவம் எல்லாம் சுருக்கமாகப் பார்த்தால் பெண்களை ஆண்கள் அடிமையாகக் கொள்ளுவது என்பதைத் தவிர வேறு ஒன்றுமே அதில் இல்லை. அவ்வடிமைத்தனத்தை மறைத்து பெண்களை ஏமாற்றுவதற்கே சடங்கு முதலியவைகள் செய்யப்படுவதோடு அவ்வித கல்யாணத்திற்கு தெய்வீகக் கல்யாணம் என்பதாக ஒரு அர்த்தமற்ற போலிப் பெயரையும் கொடுத்து பெண்களை வஞ்சிக்கின்றோம்.

பொதுவாக கவனித்தால் நமது நாடுமாத்திரமல்லாமல் உலகத்திலேயே அநேகமாய் கல்யாண விஷயத்தில் பெண்கள் மிக்க கொடுமையும், இயற்கைக்கு விரோதமான நிர்ப்பந்தமும் படுத்தப்படுகிறார்கள் என்பதை நடுநிலைமையுள்ள எவரும் மறுக்கமுடியாது. ஆனால் நமது நாடோ இவ்விஷயத்தில் மற்ற எல்லா நாட்டையும் விட மிக்க மோசமாகவே இருந்து வருகிறது.

இக்கொடுமைகள் இனியும் இப்படியே நிலைபெற்று வருமானால் சமீபகாலத்திற்குள்ளாக அதாவது ஒரு அரை நூற்றாண்டுகளுக்குள்ளாக கல்யாணச் சடங்கும், சொந்தமும் உலகத்தில் அநேகமாய் மறைந்தே போகும் என்பதை உறுதியாய்ச் சொல்லலாம். இதை அறிந்தே மற்ற நாடுகளில் அறிஞர்கள் பெண்கள் கொடுமையை நாளுக்கு நாள் தளர்த்திக்கொண்டு வருகின்றார்கள். நம் நாடு மாத்திரம் குரங்குப்பிடியாய் பழய கருப்பனாகவே இருந்து வருகின்றது. ஆதலால் தலைகீழ் முறையான பெண்கள் கிளர்ச்சி ஒன்று நமது நாட்டில் தான் அவசரமாய் ஏற்பட வேண்டியிருக்கின்றது.

செங்கல்பட்டில் கூடிய மகாநாட்டில் பெண்களுக்கும், ஆண்களுக்கும் தங்கள் தங்கள் கல்யாண விடுதலை செய்து கொள்ள உரிமை இருக்க வேண்டும் என்பதாக ஒரு தீர்மானம் செய்யப்பட்டவுடனும் சென்னையில் கூடிய பெண்கள் மகாநாட்டில் கல்யாண ரத்துக்கு ஒரு சட்டம் வேண்டும் என்று தீர்மானித்த உடனும் உலகமே முழுகிவிட்டதாக சீர்திருத்த வாதிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்பவர்கள் உட்பட பலர் கூக்குரலிட்டார்கள். ஆனால் செங்கல்பட்டு தீர்மானத்திற்குப் பிறகு வெளிநாட்டிலும், இந்தியாவிலும் பல விடங்களில் கல்யாண ரத்துச் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ருஷ்யாவில் கல்யாணமே தினசரி ஒப்பந்தம்போல் பாவிக்கப்பட்டு வருகிறது.



ஜர்மனியில் புருஷனுக்கும், பெண்ஜாதிக்கும் இஷ்டமில்லையானால் உடனே காரணம் சொல்லாமலே கல்யாணத்தை ரத்து செய்துகொள்ளலாம் என்பதாக சட்டம் கொண்டுவரப்பட்டது யாவருக்கும் தெரிந்த விஷயமாகும். சமீபத்தில் பரோடா அரசாங்கத்தாரும் கல்யாண ரத்துக்குச் சட்ட சபையில் சட்டம் நிறைவேற்றி விட்டார்கள். மற்ற மேல்நாடுகளிலும் இவ்விதச் சட்டங்கள் இருந்து வருகின்றன. நமது நாட்டில் மாத்திரம் இவ்விஷயம் சட்டம் செய்வதில் கவனிக்கப்படாமலிருந்து வருகின்றதானது மிகவும் அறிவீனமான காரியம் என்றே சொல்லவேண்டும். சாதாரணமாக தென்னாட்டில் பத்திரிகைகள் மூலம் அனேக புருஷர்கள் தங்களது பெண்ஜாதிகளின் நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்டு கொலைகள் செய்ததாக தினம் தினமும் செய்திகள் வெளியாவதைப் பார்த்து வருகின்றோம்.

சில சமயங்களில் ஒரு பெண்ஜாதியின் நடவடிக்கை சந்தேகத்திற்கு பல கொலைகள் நடந்ததாகவும் பார்க்கின்றோம். தெய்வீக சம்மதமான கல்யாணங்கள் இப்படி முடிவடைவானேன் என்பதைப்பற்றி தெய்வீகத்தில் பிடிவாதமுள்ள எவருக்குமே யோசிக்கப் புத்தியில்லை. பெண்கள் உலகம் முன்னேற்றமடைய வேண்டுமானால், அவர்களுக்கும் மனிதத்தன்மை ஏற்பட வேண்டுமானால் ஆண்களுக்கும் திருப்தியும், இன்பமும், உண்மையான காதலும், ஒழுக்கமும் ஏற்பட வேண்டுமானால் கல்யாண ரத்துக்கு இடம் அளிக்கப்பட வேண்டியது முக்கியமான காரியமாகும். அப்படிக்கில்லாதவரை ஆண், பெண் இருவருக்கும் சுதந்திர வாழ்க்கைக்கு இடமே இல்லாமல் போய்விடும்.

நமது ''சீர்திருத்தவாதிகள்'' பலர், ஒரு மனிதன் இரண்டு பெண்டாட்டி களைக் கட்டிக்கொள்வதைப்பற்றி மாத்திரம் குடி முழுகிப்போய்விட்டதாகக் கூச்சல் போடுகின்றார்கள். இவர்கள் எதை உத்தேசித்து இப்படிச் கூச்சல் போடுகின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. மதத்தை உத்தேசித்தா? அல்லது பகுத்தறிவை உத்தேசித்தா? அல்லது பெண்கள் நலத்தை உத்தேசித்தா? அல்லது மனித சுதந்திரத்தை உத்தேசித்தா? என்பது நமக்குச் சிறிதும் விளங்கவில்லை. அல்லது மனித ஒழுக்கத்தை உத்தேசித்து இப்படிப் பேசுகின்றார்களா என்பதும் விளங்கவில்லை.

நிற்க, ஒரு பெண்ஜாதிக்கு மேல் மனிதன் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது என்று சொல்லுபவர்களை நாம் ஒன்று கேட்கின்றோம். அதென்னவெனில், கல்யாணம் என்பது மனிதன் இன்பத்துக்கும், திருப்திக்குமா? அல்லது சடங்குக்காகவா? என்று கேட்பதோடு இஷ்டமில்லாத, ஒற்றுமைக்கு இசையாத, கலவிக்கு உதவாத ஒரு பெண் எந்தக் காரணத்தினாலோ ஒருவனுக்குப் பெண்ஜாதியாக நேர்ந்துவிட்டால் அப்போது புருஷனுடைய கடமை என்ன என்று கேட்கின்றோம். அதுபோலவே ஒரு பெண்ணுக்கும் அப்படிப்பட்ட ஒரு புருஷன் அமைந்துவிட்டால் அப் பெண்ணின் கதி என்ன என்றுதான் கேட்கின்றோம். கல்யாணம் என்பது தெய்வீகமாகவோ,



RangaRakes tamilnavarasam.com

பிரிக்க முடியாததாகவோ உண்மையில் இருக்குமாயின் அதில் இவ்வித குணங்கள் ஏற்பட முடியுமா என்பதை யோசித்தாலே தெய்வீகம் என்பது முழுப் புரட்டு என்பது எப்படிப்பட்ட மனிதனுக்கும் புரியாமல் போகாது. ஆகவே நமது நாட்டிலும் மற்ற நாடுகளில் இருப்பதுபோன்ற கல்யாண ரத்துக்குச் சட்டம் சமீபத்தில் ஏற்படாமல் போகுமாயின் கல்யாண மறுப்புப் பிரசாரமும் கல்யாண ஆன புருஷர்களுக்கும் பெண்களுக்கும் பலதாரப் பிரசாரமும்தான் செய்யவேண்டி வரும். அன்றியும் இது சமயம் ஒன்றுமைக்கும், திருப்திக்கும், இன்பத்திற்கும் உதவாத பெண்களை, உடைய புருஷர்கள் கண்டிப்பாக தைரியமாக முன் வந்து தங்களுக்கு இஷ்டமான பெண்களை திரும்பவும் மணம் செய்துகொள்ளத் துணிய வேண்டும் என்றும் தூண்டுகின்றோம். ஏனெனில் அப்படி ஏற்பட்டால்தான் தெய்வீகம் என்கின்ற பெயரைச் சொல்லிக்கொண்டு புருஷர்களுக்கும், பெண்களுக்கும் சம்மதமும் முன் பின் அறிமுகமும் இல்லாமல் செய்யப்பட்டுவரும் கல்யாணங்களில் மக்கள் அடையும் துன்பம் ஒழிபட முடியும். மனிதன் ஏன் பிறந்தானோ ஏன் சாகிறானோ என்பது வேறு விஷயம். ஆதலால் அது ஒரு புறமிருந்தாலும் மனிதன் இருக்கும்வரை அனுபவிக்க வேண்டியது இன்பமும் திருப்தியுமாகும். இதற்கு ஆணுக்கு பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் முக்கிய சாதனம்.

அப்படிப்பட்ட சாதனத்தில் இப்படிப்பட்ட துன்பத்திற்கிடமான இடையூறு இருக்குமானால் அதை முதலில் களைந்தெறிய வேண்டியது ஞானமுள்ள மனிதனின் கடமையாகும். மனித ஜீவகோடிகளின் திருப்திக்கும், இன்பத்திற்கும் வேலை செய்பவர்கள் இதையே செய்ய வேண்டும். அப்படிக்கில்லாமல் ''ஏதோ கல்யாணம் என்பதாகச் செய்து கொண்டோமே, செய்தாய் விட்டதே, எப்படி இருந்தாலும் சகித்துக் கொண்டுதானே இருக்க வேண்டும்'' என்று கருதி துன்பத்தையும், அதிருப்தியையும் அனுபவித்துக்கொண்டிருப்பதும், அனுபவித்துக் கொண்டிருக்கச் செய்வதும், மனிதத்தன்மையும், சுயமரியாதையும் அற்ற தன்மையுமேயாகும் என்பதே நமதபிப்பிராயமாகும்.

**- ஈ.வெ.ரா.**

பகுத்தறிவு (மா.இ.) - கட்டுரை - டிசம்பர் 1936

# அருஞ்சொல் பொருள்

| | | |
|---|---|---|
| அதிதி | - | விருந்தினர், புதியவர் |
| அவடத்திய கடாஷத்தால் | - | அவ்விடத்து பெரும் அருளால் |
| அவிழ்தம் | - | மருந்து |
| அக்ஷராப்பியாசம் | - | எழுத்துப்பயிற்சி (முதன் முதலாக எழுதக் கற்றுத் தருதல்) |
| ஆகுதி | - | அக்கினியில் மந்திரபூர்வமாகச் செய்யும் ஓமம் |
| உஞ்சவிருத்தி | - | அரிசிப் பிச்சை யெடுத்து நடத்தும் வாழ்க்கை |
| உபாதானம் | - | அரிசிப் பிச்சை |
| உளமாந்தை | - | கடு நோய், உட்புண் |
| கபாத்து | - | போர்வீரர்கள் பயிலும் உடற்பயிற்சி |
| கலாபம் | - | கலகம் |
| காட்டுப் பிரவாகம் | - | காட்டாற்று வெள்ளம் |
| காலாடிகள் | - | தொழிலற்றுத் திரிவோர்கள் |
| கூடார்ந்த | - | உட்கருத்து, மறைபொருட்கருத்து |
| கொட்டணம் | - | நெற்குற்றுகை |
| சண்ட மாருதம் | - | பெருங்காற்று |
| சதாசாரம் | - | நல்லொழுக்கம் |
| சந்தியா வந்தனம் | - | காலை, உச்சி, மாலைகளில் வேதமந்திரங்களால் செய்யும் வழிபாடு |
| சம்சயம் | - | அய்யம், சந்தேகம் |
| சன்னது | - | விருது, பட்டம் |
| சாங்கோபாங்கமாக | - | முழுமையாக |
| சிக்ஷை | - | தண்டனை, |
| சொண்டு | - | குழிவு, செருக்கு |

RangaRakes tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| தியங்க | - | கலங்க |
| திரேகப்பிரயாசை | - | உடலுழைப்பு |
| துரபிமானம் | - | வீண்செருக்கு, வெறுப்பு |
| தூஷணம் | - | பழிப்பு |
| நாதனற்று | - | தலைவர் இல்லாமல் |
| நிர்த்தாரணம் | - | நிலையிடுகை, அழிதல், சிதைதல் |
| பச்சகானாக்கள் | - | கூத்தாட்டுச் சிறார்கள் |
| பஞ்சேந்திரியம் | - | மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் அய்ம்பொறிகள். |
| பரகிய | - | பிறனுக்கு உரியவள் |
| பரிமளிக்க | - | சிறக்க |
| பாதாரவிந்தம் | - | பாதத் தாமரை |
| பாஷியம் | - | விளக்கவுரை |
| பிதுரார்ஜ்ஜிதம் | - | முன்னோர் தேட்டை |
| பிரசன்னம் | - | மகிழ்ச்சி |
| புழுத்தம் | - | புழு |
| புனருத்தாரணம் | - | மீண்டும் நிலை நிறுத்துகை. |
| யாதாஸ்து | - | அறிக்கை |
| யோக்கியதாபக்ஷமாய் | - | தகுதி பற்றிய மதிப்பு |
| ராஜாளி | - | கழுகு (பெரிய வகை) |
| லாகிரி | - | போதை |
| லொட்டை | - | தாழ்ந்தது |
| வாக்குத்தத்தம் | - | உறுதிமொழி கூறல் |
| வாசா கைங்கரியம் | - | வெறும் பேச்சு |
| விசனித்தல் | - | துயருறுதல் |
| விமலம் | - | சிவாகமம் இருபத்தெட்டனுள் ஒன்று |
| வியர்த்தம் | - | வெளிப்படை |
| விவகரித்தல் | - | விரித்துக் கூறுதல், வழக்காடல் |

| | | |
|---|---|---|
| விரக வேதனை | - | காதலர்க்குப் பிரிவாலுண்டாகும் துன்பம் |
| ஹானி | - | கேடு |
| சன்னதம் | - | ஆவேசம், கோபம், வீறாப்பு |
| தத்தம் | - | நீர்வார்த்துக் கொடுக்கும் கொடை |
| தியங்கவிட்டு | - | கலங்கவிட்டு, மயங்கவிட்டு, சோர்வெய்த விட்டு |
| துக்கித்தல் | - | துயருறுதல் |
| துவம்சம் | - | அழிவு |
| துராக்கிருத | - | பலவந்தக் கற்பழிப்பு |
| தேவதா | - | தெய்வம், பேய் |
| தோதாக | - | வசதியாக |
| நரமேத யாகம் | - | மாந்தரைக் கொன்று செய்யும் வேள்வி |
| நிஷ்டூரம் | - | கொடுமை |
| பகிர் | - | வெடிப்பு |
| பரமார்த்தம் | - | உண்மைப் பொருள், மேலான பொருள், கடவுள் தொடர்பான |
| பரிகரிக்க | - | நீக்க |
| பரியந்தம் | - | எல்லை |
| மிருகாதி | - | விலங்கு வகைகள் |
| வன்மனம் | - | கன்னெஞ்சு |
| வாச்சியனை | - | வாசகத்தின் பொருளை |
| வாசா கோசரம் | - | சொற்கெட்டாதது |
| வாசிட்டம் | - | வாய்ச் செய்தி |
| விசாரம் | - | கவலை |
| வியர்த்தமாக்கி | - | பயனற்றதாக்கி, பொருளற்றதாக்கி |
| வியாகூலம் | - | துயரம் |
| வியாஜ்யம் | - | வழக்கு |
| ஜாபிதா | - | பட்டியல் |

ஞாபகஸ்தம்பம் - நினைவுத் தூண்
டயார்க்கி கவர்ண்மென்ட் - இரட்டை ஆட்சி
தவரத் தெரியாத - தவழ்ந்து போகத் தெரியாத
தாயாதி - ஒரு குடியில் பிறந்த உரிமைப் பங்காளி
நிர்ப்பயம் - பயமில்லாமல்
நிரக்ஷரகுக்ஷி - எழுத்தறிவற்றவன்
நிஷ்டூரம் - கொடுமை,
பலிதமாகாமல் - பலிக்காமல், வெற்றி பெறாமல்
பரதவிக்க - வருந்த
பரியந்தம் - எல்லை, வரைக்கும்
பஹுமானம் - பாராட்டு, பரிசு, வெகுமானம்
பாரியாள் - மனைவி
பிரக்யாதி - புகழ்
பிரசங்கி - பேச்சாளர்
பிரஸ்தாபிக்க முடியவில்லை - அறிவிக்க முடியவில்லை
புரணமான - தோன்றுகின்ற, மயக்கமான
பெற்றி - பெருமை
மாரீச - ஏமாற்று
முட்டு - தடை, குறைவு
முச்சலிக்கா - உடன்படிக்கைப் பத்திரம்
வதியும் - தங்கியிருக்கும்
வஜா - நிலவரி தள்ளுபடி
வாத்சல்யம் - அன்பு, பாசம்
வாயல் - பக்கம்
விசதமாக - விரிவாக
விபசாரக் குச்சுகள் - விபச்சார விடுதிகள்
ஸ்தன்னியங்கள் - தனங்கள், மார்பகங்கள்

வனபோஜனம் - காடுகளுக்குள் இயற்கைச் சூழலில் இருந்து உண்ணும் விருந்து
விடுத்தமாவது - தடவையாவது
விசிதமாக - வெளிப்படையாக
3000த்துச் சில்வானம் - 3000த்துச் சொச்சம்
க்ஷய ரோகம் - காசநோய்
ஸ்தாயி - குரல் அளவு
ஜக்காத் - இஸ்லாத்தில் அய்ந்து கடமைகளுள் ஒன்று (தருமம் செய்தல்)
ஜூரிகள் (Jury) - நீதிமன்றத்தில் நடுவர்களுக்கு உதவியாயிருப்பவர்கள்
ஹலாலாக்கி - மதத்தால் தடைசெய்யப்பட்டது

மடிசஞ்சிகள் - சனாதன பார்ப்பனர்கள்
மனவாள்ளு - எங்களவர்கள், நம்மவர்கள்
வஜா - நிலவரி தள்ளுபடி
ரெய்ன்ஸ் கயிறு - கடிவாளக் கயிறு
வாசா கைங்கரியம் - வெறும் பேச்சு
வானர சைன்யம் - குரங்குப்படை
ஜம்புலிங்கம் - அந்த நாளில் வாழ்ந்த ஒரு கொள்ளைக்காரன்
ஜலதாரை - நீரோட்டம், சாக்கடை
ஸ்தம்பம் - நினைவுத்தூண்
யாக மெக்ஞாதிகள் - யாகம், யக்கும் முதலியவை

ஸ்பஷ்டமாக - தெளிவாக
விருதா செலவு - வீணான செலவு

| | |
|---|---|
| நிரியாண காலம் | இறப்பு காலம் |
| நிர்த்தாரணம் | நிலையிடுகை |
| பந்துத்துவம் | உறவு |
| பராதீனப்பட்டதற்கு | தன் சொத்தை பிறர் வயப்பட விடுதல் |
| பாரபட்சம் | ஒருதலை சார்பு |
| பாஷ்யம் | விரிவுரை |
| பிரவாகம் | பெருவெள்ளம் |
| பிரயாசை | பெரு முயற்சி, வருந்தி உழைத்தல் |
| புகிது புகிதாக | புதிது புதிதாக |
| புத்திராபிவிர்த்தி | பிள்ளை பெறுதல் |
| முச்சலிகை | பிணை ஆவணம், உடன்படிக்கை |
| ரிஷிபாரூடராய் | காளை வாகனராய், காளை மீதேறி |
| வம்ச பாரம்பரியமாக | வழிவழியாக, பரம்பரை பரம்பரையாக |
| விதாயம் | ஏற்பாடு, வழிவகை |
| வியக்தமாக | வெளிப்படையாக |
| வியாக்யானம் | விளக்கவுரை |
| ஜீவனோபாயம் | வாழ வழி தேடல் |
| ஸ்மரித்தல் | நினைத்தல் |
| ஸ்லேத்துமம் | சளி மிகல், கோழை அதிகமாக கட்டி இருத்தல் |

| | |
|---|---|
| பிரதிக்கினை | சூளுரை, உறுதிமொழி |
| பிரத்தியக்ஷத்தில் | நடைமுறையில், வெளிப்படையாக |
| பிரத்தியக்ஷ பிரமாணம் | நேரடி சான்று, வெளிப்படையான சான்று |
| பிரஸ்தாபம் | அறிவித்தல், விளம்பரப்படுத்தல் |
| பூசுரர் | பூமியில் வாழும் தெய்வம் ( பார்ப்பனர் ) |
| பூளவாக்கு | யோக்கியதை, தரம், நேர்மை |
| ரசாபாசம் | சீர்கேடு, சுவைக்கேடு |
| வஜா | தள்ளுபடி ( வரிதள்ளுபடி ) |
| வித்தியா இலாக்கா | கல்வித்துறை |
| விக்கினம் | இடையூறு, தீது |
| வித்தியாப் பியாசவரி | பள்ளியில் சேர்க்கும் போது பார்ப்பனர்க்கு கொடுக்கும் வரி |
| லபிக்கும்படி | கிட்டும்படி |
| ஜட்கா வண்டி | குதிரை வண்டி |
| ஜலாதாரம் | நீராதாரம் |
| ஸ்திதி | நிலை, பதவி |
| நிஷ்டூரம் | கொடுமை |
| நேர்ச்சை | நேர்த்திக் கடன் |
| பாதராவிந்தம் | பாதத் தாமரை, காலடி |
| பாலாரிஷ்டம் | குழந்தைப்பருவ தொடர் நோய் |
| பிராக்கு | இன்னொரு செய்தியில் கவனத்தை செலுத்துதல் |
| மிரவணை | ஊர்வலம் |

| | | |
|---|---|---|
| கியாதி | – | புகழ் |
| சிட்சை | – | தண்டனை, பயிற்சி |
| சிசு போஷண சாலை | – | குழந்தைகள் காப்பகம் |
| சிலா சாசனம் | – | கல்வெட்டு |
| பிர பாவம் | – | மேன்மை, கீர்த்தி |
| விக்கினம் | – | இடையூறு, தீது |

| | | |
|---|---|---|
| தட்டப்பிச்சை | – | தட்டேந்தி பிச்சை (கோவில்களில் தட்டுகாசு) |
| நிதம்பம் | – | அல்குல் |
| நியமுகம் | – | நியமனம் |
| நிர்த்தாரணம் | – | நிலையிடுகை |
| பத்ததி | – | ஒழுங்கு, வழிகாட்டும் நூல் |
| பர்த்தி | – | இட்டு நிரப்புதல், இணை, ஒப்பு |
| பிரக்யாதி | – | புகழ்பெற்ற |
| புனருத்தாரணம் | – | மீணிலை நிறுத்தம், மறு சீரமைப்பு |
| மனோராஜியம் | – | மன விருப்பெண்ணம் |
| முகாலோபணம் | – | முகம் பார்த்தல், முக தரிசனம் |
| லௌகீக ஞானம் | – | உலகியல் அறிவு |
| வாசஸ்தானம் | – | இருப்பிடம் |
| ஸ்பஷ்டமாக | – | தெளிவாக |
| க்ஷீணதிசை | – | நலிவு |
| ஹத்து | – | வரையறை, எல்லை, அத்து |
| முறைதலை | – | நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தில் திருமணத்திற்கு முன்பும் பின்பும் பெரும் பொருட்செலவில் செய்யப்படும்சடங்குகள் |
| மூளாவண்ணம் | – | விதண்டா வாதம், பிறர்கூறுவதை மறுத்து தன்கொள்கையை நாட்டாது வீணே கூறும் வாதம் |

| | | |
|---|---|---|
| ஆஸ்பதமான | – | இடமான, பற்றுக்கோடான |
| ஆனந்த பாஷ்யம் | – | ஆனந்தக் கண்ணீர் |
| தாரதம்மியம் | – | ஏற்றத் தாழ்வு |
| மூர்த்தண்ணியமாக | – | ஊக்க மிகுதி |
| யாதாஸ்து | – | அறிக்கை, குறிப்பு |
| யாதாஸ்து | – | அறிக்கை, குறிப்பு |
| விருத்தாப்பியம் | – | முதுமைக்காலம் |
| வேறது | – | வாய்ப்பு |
| பர்த்தி | – | இணை, ஒப்பு, நிரப்பல் |
| பிரக்யாதி | – | நன்கு அறியப்படுதல், கீர்த்தி, |
| தாத்பர்யம் | – | பொருள், விளக்கம் |
| உபதானம் | – | அரிசிபிச்சை |
| தற்பித்து | – | பயிற்சி |
| சரீரப் பிரயாசை | – | உடலுழைப்பு |
| முகாலோபம் | – | முகம் காட்டல், முகம் பார்த்தல் |
| கிரீடை | – | விளையாட்டு |
| பத்ததி | – | ஒழுங்கு, வழக்கம் |

| | | |
|---|---|---|
| மூலைவிதி | – | தலைவிதி |
| வர்த்தமானம் | – | நிகழ்காலம், தற்கால நிகழ்வுகள் |
| விதாயம் | – | முடிவு |
| யதாபிரியர்கள் | – | பழமைவாதிகள், மாற்றம் விரும்பாதோர் |
| ஜட்கா வண்டிக்காரர் | – | குதிரை வண்டிக்காரர், (பணமில்லாதவர்கள் ) |
| 3 ஆவது பாரம் | – | Third Form, 8 ஆம் வகுப்பு |

| | | |
|---|---|---|
| அசார்சமாய் | - | ஈடுபாடு காட்டாமல், கவலையற்று |
| அமரிக்கை | - | அமைதி |
| ஆதிக்யம் | - | தலைமை |
| இடை | - | எடை |
| உதாரத்தன்மை | - | பெருங்கொடைத் தன்மை |
| உத்திரணி | - | பஞ்ச பாத்திரக் கரண்டி, தீர்த்தம், எடுத்தற்குரிய சிறுகரண்டி |
| ஐஸ்வர்யம் | - | செல்வம் |
| கனப்படவில்லை | - | இறுமாப்படையவில்லை |
| கியாதி | - | புகழ் |
| கெண்டி | - | கமண்டலம் |
| சிக்ஷித்து | - | தண்டித்து |
| சுயகாரிய சித்திபெற | - | தன் காரியம் கைகூட |
| தர்க்கிக்கப்படுதல் | - | விவாதித்தல் |
| தற்பித்து | - | பயிற்சி, தகுதியாக்கல் |
| தனிகர் | - | செல்வர் |
| தியங்கும்படி | - | கவலையடையும்படி |
| திரவிய சகாயம் | - | பொருளுதவி |
| நிர்த்தாக்ஷண்யம் | - | இரக்கமின்மை |
| நிஷ்டூரம் | - | கொடுமை, வெறுப்பு |
| பத்ததி | - | ஒழுங்கு |
| பலவைகளை | - | பலவற்றை |
| பாஷ்யம் | - | விளக்கவுரை |
| புனருத்தாரணம் | - | மீணிலை நிறுத்தம் |
| முடத்தெங்கு | - | கோணலாக வளர்ந்த தென்னை |
| முச்சலிக்கை | - | உடன்படிக்கை |
| ரக்ஷிப்பது | - | காப்பாற்றுவது |
| வதிந்து | - | தயங்கி |
| வியக்தமாய் | - | பெருமையாய் |
| வியாகூலம் | - | கவலை |
| அந்தகாரம் | - | இருள், இருட்டு |
| இகபர சாதனம் | - | இவ்வுலக மறுவுலக துணை |
| ஒடை அடித்தல் | - | காளைகளின் ஆண்மை நீக்கத்துக்காக விதர்களை நசுக்கி உடைத்தல் |
| ஓதாவில் | - | தோரணையில், முறையில் |
| கோபிசந்தனம் | - | வைணவரின் ஒருவகை நெற்றிக்குறி |
| சக்கரை கட்டுதல் | - | சர்க்கரை பொட்டலம் கட்டுதல் |
| சாங்கோ பாங்கமாக | - | முழுமையாக |
| சுணங்குகள் | - | நாய்கள் |
| தாத்பர்யம் | - | பொருள், விளக்கம் |
| தெய்வ எத்தனம் | - | கடவுள் ஏற்பாடு |
| தொந்திரை | - | தொந்திரவு |
| பாஷியம் | - | விளக்கம், உரை |
| புதுக்கோட்டை அம்மன் காசு | - | சிறு மதிப்புள்ள நாணயம், 320 புதுக் கோட்டை அம்மன் காசுகள் = 1 ரூ |
| புனருத்தாரணம் | - | மறுசீரமைத்தல் |
| முடத்தெங்கு | - | |
| வந்தனோபசாரம் | - | நன்றிகூறல் |
| விகல்பம் | - | மனமாறுபாடு, வேறுபாடு |
| ஸ்தம்பம் | - | தூண் |
| ஆக்கர் | - | திரிந்துகொண்டே துணி முதலிய விற்போன் |
| காலகாஸ்பதம் | - | கலகத்துக்கான இடம் |
| சதித்து | - | அழித்து, வஞ்சித்து |
| சர்வ வியாபகம் | - | எங்கும் பரவி நிற்பது |
| பக்ஷாதாபம் | - | இரக்கம் |
| மடிசஞ்சி | - | புல் அல்லது கம்பளியாலான பை |
| விருத்தாந்தம் | - | வரலாறு |
| ஸ்மரணை | - | ஞாபகம் |